மத்தேயு - முன்னுரை

காலம்

கி.பி. 37-ஆம் ஆண்டில் யூதேயாவில் இந்த சுவிசேஷம் எழுதப்பட்டது.

ஆசிரியர்

மத்தேயு. மறுபெயர் லேவி. அல்பேயுவின் குமாரன். யாக்கோபுவின் சகோதரன். (லூக்கா 6:16) ஆயக்காரன். இயேசுவின் பன்னிரெண்டு சீஷர்களில் ஒருவன். (மத் 9:9; மத் 10:3; மாற்கு 2:14-15; மாற்கு 3:18; லூக்கா 5:27-29; லூக்கா 6:12-16; அப் 1:13). பதினைந்து வருஷங்களாக யூதேயாவிலே பிரசங்கம் பண்ணினான். அதன்பின்பு எத்தியோப்பியாவிற்கும். பிற தேசங்களுக்கும் சென்று இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தைத் தொடர்ந்து செய்து வந்தான். (அப் 2:43) இவன் இரத்தச்சாட்சியாக மரிக்கவில்லை.

மையக்கருத்து

இயேசு கிறிஸ்து யூதருடைய இராஜா. உலக இரட்சகர். இந்த சுவிசேஷம் விசேஷமாக இஸ்ரவேல் ஜனத்தாருக்கு எழுதப்பட்டது.

மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் காணப்படும் விசேஷித்த காரியங்கள்

குழந்தைப்பருவம்

1. சாஸ்திரிகளின் வருகை (மத் 2:1-15)
2. இரண்டு வயதிற்குட்பட்ட ஆண் பிள்ளைகள் கொல்லப்படுதல் (மத் 2:16-18)
3. எகிப்திற்கு ஓடிப்போதல் (மத் 2:13-15)
4. எகிப்திலிருந்து திரும்பி வருதல் (மத் 2:19-23)

பத்து உவமைகள்

1. களைகள் (மத் 13:24-30)
2. மறைந்திருக்கும் பொக்கிஷம் (மத் 13:44)
3. முத்து (மத் 13:45)
4. வலை (மத் 13:47)
5. இரக்கமில்லாத ஊழியக்காரன் (மத் 18:23-35)
6. வேலையாட்கள் (மத் 20:1-16)
7. இரண்டு குமாரர் (மத் 21:28-32)
8. கலியாண விருந்து (மத் 22:1-14)
9. பத்து கன்னிகைகள் (மத் 25:1-13)
10. தாலந்துகள் (மத் 25:14-30)

அற்புதங்கள்

1. மீன்வாயில் வெள்ளிப்பணம் (மத் 17:24-27)
2. இரண்டு குருடருக்குப் பார்வை கிடைத்த அற்புதம் (மத் 20:30-34)

சம்பாஷணைகள்

1. மலைப்பிரசங்கம் (மத் 5:1-7:29)
2. வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே (மத் 11:28-30)
3. வீணான வார்த்தைகள் (மத் 12:36-37)
4. இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன் (மத் 16:17-19)
5. உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றம்செய்தால் (மத் 18:15-35)
6. தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும். (மத் 21:43)
7. வேதபாரகர், பரிசேயர் ஆகியோரைப் பற்றிய காரியங்கள் (மத் 23:1-33)
8. ஒருகல்லின்மேல் ஒருகல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப் போகும். (மத் 24:1-25:46)
9. நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள். (மத் 28:18-20)

மத்தேயு - முன்னுரை

இயேசுவின் பாடுகளின்போது நடைபெற்ற காரியங்கள்

1. மத் 27:3-11
2. மத் 27:19
3. மத் 27:52-53
4. மத் 27:62-64
5. மத் 27:65-66
6. மத் 28:2

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 28

வசனங்கள் - 1,071

கேள்விகள் - 177

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள் - 25

புதிய தீர்க்கதரிசனங்கள் - 47

வரலாற்றைக் குறிக்கும் வசனங்கள் - 815

பொருளடக்கம்

I. இயேசு கிறிஸ்துவின் ஊழிய காலத்திற்கு முந்திய நிகழ்ச்சிகள்

1. இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாறு - (1:1)
2. இயேசுவின் முன்னோர்கள்
   (1) இராஜாக்கள் அல்லாத 14 வம்சங்கள் - (1:2-5)
   (2) இராஜாக்களாக இருந்த 14 வம்சங்கள் - (1:6-11)
   (3) இராஜாக்கள் அல்லாத 14 வம்சங்கள் - (1:12-16)
   (4) ஆபிரகாமிலிருந்து இயேசு கிறிஸ்து வரையிலும் - யூத மார்க்கத்து முன்னோர்கள் - (1:17)
3. இயேசு கிறிஸ்துவின் கன்னிகைப் பிறப்பு - (1:18-25)
4. கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகள் - (2:1-12)
5. இயேசு கிறிஸ்துவின் குழந்தைப் பருவம்
   (1) எகிப்திற்குப் பிரயாணம் - (2:13-15)
   (2) பிள்ளைகள் கொல்லப்பட்டார்கள் - இயேசுவைக் கொல்வதற்கு நடந்த முதலாவது சதி - (2:16-18)
   (3) எகிப்திலிருந்து திரும்பி வருதல் - (2:19-23)

II. யோவான் ஸ்நானனின் ஊழியம்

1. மூன்று அம்ச செய்தி - (3:5-6)
2. யோவான் ஸ்நானனின் எளிய வாழ்வு - (3:4)
3. ஊழியத்தின் வெற்றி - (3:5-6)
4. பதிமூன்று அம்சச் செய்தி - (3:7-12)

III. இயேசுவின் ஊழிய ஆயத்தம்

1. தண்ணீர் ஞானஸ்நானம் - (3:13-15)
2. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் - (3:16-17)
3. சோதனை - (4:1-11)

IV. இயேசு கிறிஸ்துவின் ஊழியமும் உபதேசமும்

1. கலிலேயாவில் ஊழியத்தை ஆரம்பிக்கிறார் - (4:12)
2. நாசரேத்தில் உள்ளவர்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ளவில்லை - கப்பர் நகூமிற்குச் செல்கிறார் - (4:13-16)
3. இராஜ்ஜியத்தைப் பற்றி பிரசங்கம் பண்ணுகிறார் - (4:17)
4. பேதுரு, அந்திரேயா ஆகியோரின் அழைப்பு - (4:18-20)

மத்தேயு - முன்னுரை

5. யாக்கோபு, யோவான் ஆகியோரின் அழைப்பு - (4:21-22)

6. கலிலேயாவிற்கு இரண்டாவது பிரயாணம் - (4:23-25)

7. மலைப்பிரசங்கம்

(1) முன்னுரை - (5:1-2)

(2) பாக்கியவான்கள் - (5:3-12)

(3) விசுவாசிகளின் ஒப்புமை - (5:13-16)

(4) கிறிஸ்து நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுவதற்காக வந்தார் - (5:17-18)

(5) இராஜ்ஜியத்தின் பிரமாணங்கள்

(அ) மோசேயின் பிரமாணங்களும் இராஜ்ஜியத்தின் பிரமாணங்களும் - (5:19-20)

(ஆ) இராஜ்ஜியத்தின் பிரமாணங்களுடைய சிறப்பு அம்சம்

(i) கொலை செய்யாதிருப்பாயாக - (5:20-22)

(ii) ஒப்புரவாதலும் ஜெபமும் - (5:23-24)

(iii) நியாயாதிபதியினிடத்தில் வழக்கு - (5:25-26)

(iv) விபசாரம் செய்யாதிருப்பாயாக - (5:27-30)

(v) மனைவியைத் தள்ளிவிடுவதும் மறுபடியும் திருமணம் செய்வதும் - (5:31-32)

(vi) ஆணையிடுதல் - (5:33-37)

(vii) கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் - (5:38-42)

(viii) அன்பு கூருதல் - (5:43-48)

(ix) தர்மம் செய்தல் - (6:1-4)

(x) ஜெபம் - அந்தரங்கத்திலிருக்கிற பிதாவிடம் - (6:5-6)

(xi) பிதாவின் சர்வ வியாபகம் - (6:7-8)

(xii) மாதிரி ஜெபம் - (6:9-13)

(xiii) ஜெபம் - பதில் பெறுவதற்கு நிபந்தனை - (6:14-15)

(xiv) உபவாசம் - (6:16-18)

(6) விசுவாசிகளுக்கு எச்சரிப்புக்கள்

(அ) பூமியிலே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம் - (6:19-21)

(ஆ) இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது - (6:22-24)

(இ) கவலைப்படுவதினால் பயனில்லை - (6:25-34)

(ஈ) உன் கண்ணிலிருக்கிற உத்திரம் - (7:1-5)

(உ) பரிசுத்தமானதைக் கவனமாகக் கையாளவேண்டும் - (7:6)

(ஊ) பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்கிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பார் - (7:7-11)

(எ) தங்கச்சட்டம் - மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள் - (7:12)

மத்தேயு - முன்னுரை

(ஏ) இடுக்கமான வாசல் வழியும் விசாலமான வாசல் வழியும் - *(7:12-14)*

(ஐ) கள்ளத்தீர்க்கதரிசிகள் - *(7:15-20)*

(ஒ) தேவனுடைய சித்தத்தைச் செய்யாமல் கர்த்தாவே, கர்த்தாவே என்று கூறுவது - *(7:21-23)*

(ஓ) கன்மலையின்மேல் அஸ்திபாரமும் மணலின்மேல் அஸ்திபாரமும் - *(7:24-29)*

8. இயேசு குஷ்டரோகியைச் சுத்தமாக்குகிறார் - *(8:1-4)*

9. நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன் குணமானான் - *(8:5-13)*

10. பேதுருவின் மாமி சொஸ்தமானாள் - *(8:14-15)*

11. பிசாசுகளைத் துரத்தினார் - பிணியாளிகள் எல்லாரையும் சொஸ்தமாக்கினார் - *(8:16-17)*

12. சீஷத்துவத்திற்குப் பரீட்சை - *(8:18-22)*

13. இயேசு பெருங்காற்றை அமைதிப் படுத்துகிறார் - *(8:23-27)*

14. இயேசு பிசாசு பிடித்திருந்த இரண்டு பேரைச் சொஸ்தமாக்குகிறார் - *(8:28-34)*

15. கப்பர்நகூமிற்குத் திரும்பி வருகிறார் - திமிர்வாதக்காரனைக் குணப்படுத்துகிறார் - *(9:1-8)*

16. மத்தேயு அல்லது லேவியின் அழைப்பு - *(9:9)*

17. பரிசேயருக்குப் பதிலுரைகள் - *(9:10-13)*

18. யோவான் ஸ்நானனின் சீஷர்களுக்குப் பதிலுரை - *(9:14-15)*

19. வஸ்திரம், துருத்திகள் ஆகியவற்றின் உவமை - *(9:16-17)*

20. பெரும்பாடுள்ள ஸ்திரீ குணமடைகிறாள் - மரித்த சிறுபெண்ணை இயேசு உயிருடன் எழுப்புகிறார் - *(9:18-26)*

21. இரண்டு குருடரைக் குணமாக்குகிறார் - *(9:27-31)*

22. ஊமையனைக் குணப்படுத்துகிறார் - பரிசுத்த ஆவியானவருக்கு எதிராக முதலாவது தூஷணம் - *(9:32-34)*

23. கலிலேயாவிற்கு மூன்றாவது முறையாக பிரயாணம் - *(9:35-38)*

24. பன்னிரெண்டு சீஷர்களின் அபிஷேகம்

(1) சீஷர்களுக்கு அதிகாரம் கொடுக்கிறார் - *(10:1)*

(2) அப்போஸ்தலர்களின் பெயர்கள் - *(10:2-4)*

(3) முதலாவது ஊழிய ஸ்தலம் - *(10:5-6)*

(4) செய்தியும் வல்லமையும் - *(10:7-8)*

(5) வேலையாள் தன் ஆகாரத்திற்குப் பாத்திரனாயிருக்கிறான் - *(10:9-10)*

(6) ஊழியக்காரர்களை ஏற்றுக் கொள்கிறவர்கள் - *(10:11-13)*

(7) ஊழியக்காரர்களை ஏற்றுக் கொள்ளாதவர்கள் - *(10:14-15)*

(8) கலிசேஷத்திற்கு வரும் எதிர்ப்பைப் பற்றிய முன்னறிவிப்பு

(அ) ஜெபாலயத் தலைவர்களின் பகை - *(10:16-17)*

(ஆ) அதிபதிகளின் பகை - *(10:18-20)*

(இ) உறவினர்களின் பகை - *(10:21)*

(ஈ) உலகத்தின் பகை - *(10:22-23)*

(9) கிறிஸ்துவோடு சமம் - (10:24-25)

(10) மாய்மாலத்திற்கு எதிரான எச்சரிப்பு - (10:26-27)

(11) மனுஷ பயத்திற்கு எதிரான எச்சரிப்பு - (10:28-33)

(12) சுவிசேஷத்திற்கு வரும் எதிர்ப்பு பற்றி மறுபடியும் முன்னறிவிக்கப்படுதல் - (10:34-36)

(13) சீஷர்களின் பரிசோதனை - (10:37-39)

(14) சிறிய சேவைகளுக்கும் வெகுமதி அளிக்கப்படும் - (10:40-42)

25. கலிலேயாவிற்கு நான்காவது பிரயாணம் - (11:1)

26. யோவான் ஸ்நானன் இயேசுவிடம் கேட்ட கேள்வி - (11:2-3)

27. இயேசு வார்த்தைகளால் பதில் கூறாமல் கிரியைகளால் பதில் கூறுகிறார் - (11:4-6)

28. யோவான் ஸ்நானனைப் பற்றி இயேசு கூறிய சாட்சி - (11:7-15)

29. இயேசு அவிசுவாசத்தைக் கடிந்து கூறுகிறார் - (11:16-19)

30. விசுவாசியாத பட்டணங்கள்மீது வரும் நியாயத்தீர்ப்பை இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (11:20-24)

31. சத்தியத்தின் எளிமைக்காக இயேசு களிகூருகிறார் - (11:25-27)

32. வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் அழைப்பு - (11:28-30)

33. இயேசு ஓய்வுநாட்களுக்கும் ஆண்டவராக இருக்கிறார் - (12:1-8)

34. ஓய்வுநாளில் இயேசு சூம்பின கையையுடைய மனுஷனைச் சொஸ்தமாக்குகிறார் - (12:9-13)

35. இயேசுவைக் கொலைசெய்யும்படி நடைபெற்ற முதலாவது ஆலோசனை - (12:14)

36. திரளான ஜனங்களைச் சொஸ்தமாக்குகிறார் - (12:15-21)

37. குருடும் ஊமையுமான ஒருவனைச் சொஸ்தமாக்குகிறார் - (12:22-23)

38. பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான இரண்டாவது தூஷணம், பிரிந்த ராஜ்யம் - (12:24-30)

39. மனுஷருக்கு மன்னிக்கப்படாத பாவம் - (12:31-32)

40. இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும் - (12:33-37)

41. யோனாவின் அடையாளம் - (12:38-40)

42. இயேசு யூதர்களைக் கடிந்து கூறுகிறார் - (12:41-42)

43. இஸ்ரவேலைப் பற்றிய தீர்க்கதரிசனம் - (12:43-45)

44. இயேசுவின் உறவினர்கள் - (12:46-50)

45. பிரசங்கம் - பரலோக இராஜ்ஜியத்தின் இரகசியங்கள்

(1) இடம் - கலிலேயாக்கடல் - (13:1-2)

(2) விதைக்கிறவனைப் பற்றிய உவமை - (13:3-9)

(3) இயேசு உவமைகளாகப் பேசியதற்கு காரணம் - (13:10-17)

(4) விதைக்கிறவனைப் பற்றிய உவமையின் விளக்கம் - (13:18-23)

(5) கோதுமை, களைகள் ஆகியவற்றின் உவமை - (13:24-30)

(6) கடுகு விதையின் உவமை - (13:31-32)

மத்தேயு - முன்னுரை

(7) புளித்தமாவின் உவமை - (13:33)

(8) இயேசு உவமைகளாகப் பேசியதற்குக் காரணம் - (13:34-35)

(9) கோதுமை, களைகள் ஆகியவற்றின் உவமை பற்றிய விளக்கம் - (13:36-43)

(10) புதைத்திருக்கிற பொக்கிஷத்தின் உவமை - (13:44)

(11) விலையுயர்ந்த ஒரு முத்தின் உவமை - (13:45-46)

(12) மீன்களைச் சேர்த்து வாரிக் கொள்ளும் [illegible] உவமை - (13:47-48)

(13) மீன்களைச் சேர்த்து வாரிக் கொள்ளும் வலையின் உவமையின் விளக்கம் - (13:49-50)

(14) வீட்டெஜமானாகிய மனுஷனின் உவமை - (13:51-52)

46. நாசரேத்தில் இயேசு - இந்த ஊரிலுள்ள ஜனங்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ள மறுத்து விடுகிறார்கள் - (13:53-58)

47. ஏரோதுவின் குற்ற மனச்சாட்சி - யோவான் ஸ்நானனின் சிரச்சேதம் - (14:1-12)

48. இயேசு மறுபடியும் கலிலேயாவின் வழியாகப் பிரயாணம் செய்கிறார் - வியாதியஸ்தராயிருந்தவர்களைச் சொஸ்தமாக்குகிறார் - (14:13-14)

49. ஐயாயிரம்பேருக்கு அற்புதமாகப் போஜனம் கொடுக்கிறார் - (14:15-21)

50. இயேசு தண்ணீரின்மீது நடக்கிறார் - பேதுருவால் தண்ணீரின்மீது நடக்க முடியவில்லை - (14:22-33)

51. இயேசு கெனேசரேத்து நாட்டில் பிணியாளிகள் எல்லாரையும் சொஸ்தமாக்குகிறார் - (14:34-36)

52. இயேசு வேதபாரகரையும் பரிசேயரையும் கடிந்து கொள்கிறார் - (15:1-9)

53. மனுஷனைத் தீட்டுப்படுத்தும் காரியம் - பாவங்கள் ஆத்துமாவை அழிக்கும் - (15:10-20)

54. சீரோபேனிக்கேயா ஸ்திரீயின் குமாரத்தியை இயேசு குணப்படுத்துகிறார் - (15:21-28)

55. கலிலேயாவில் இயேசு வியாதியஸ்தர்கள் அனைவரையும் சொஸ்தப்படுத்துகிறார் - (15:29-31)

56. நான்காயிரம் பேருக்கு அற்புதமாகப் போஜனம் கொடுக்கிறார் - (15:32-39)

57. இயேசு பரிசேயரைக் கடிந்து கொள்கிறார் - (16:1-5)

58. பரிசேயர், சதுசேயர் என்பவர்களின் புளித்த மாவைப் பற்றிய விளக்கம் - (16:6-12)

59. பேதுருவின் அறிக்கை - (16:13-16)

60. புதிய ஏற்பாட்டு சபையைக் குறித்து இயேசுவின் அறிவிப்பு - (16:17-18)

61. பரலோக இராஜ்யத்தின் திறவுகோல்களைப் பேதுரு பெறுகிறான் - (16:19-20)

62. இயேசு தமது மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் முற்குறித்துக் கூறுகிறார் - (16:21)

63. இயேசுவும் பேதுருவும் ஒருவரையொருவர் கடிந்து கொள்கிறார்கள் - (16:22-23)

64. சீஷத்துவத்திற்குப் பரீட்சை - ஆத்துமாவின் மதிப்பு - (16:24-25)

65. இரண்டாம் வருகையை முற்குறித்துக் கூறுகிறார் - (16:26-27)

66. மறுரூபமாதலை முற்குறித்துக் கூறுகிறார் - (16:28)

67. மறுரூபமாதல் - வரப்போகும் இராஜ்ஜியத்திற்கு ஒரு முன்னோட்டம் - (17:1-9)

மத்தேயு - முன்னுரை

68. யோவான் ஸ்நானனும், எலியாவும் - (17:10-13)

69. வல்லமையில்லாத சீஷர்களும் சர்வ வல்லமையுள்ள கிறிஸ்துவும் - (17:14-18)

70. ஜெபமும் உபவாசமும் - (17:19-21)

71. இயேசு தமது மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் குறித்து மறுபடியும் முற்குறித்துக் கூறுகிறார் - (17:22-23)

72. வரிப்பணம் - மீனின் வாயில் வெள்ளிப்பணம் - (17:24-27)

73. சீஷத்துவத்தைப் பற்றிய உபதேசம்

(1) மாம்சமான மனுஷனின் பிரதான கேள்வி - (18:1)

(2) இயேசுவின் பதிலுரை - (18:1-4)

(3) விசுவாசிகளுக்கு உலகத்திலிருந்து இடறல்கள் - (18:5-7)

(4) இடறல் உண்டாக்கும் சரீர உறுப்புக்கள் - (18:8-9)

(5) எல்லோருக்கும் எச்சரிப்பு - (18:10)

(6) காணாமல்போன ஆடு - (18:11-14)

(7) விசுவாசிகளின் ஒழுக்கக் கட்டுப்பாடு - (18:15-17)

(8) விசுவாசிகளுக்குக் கொடுக்கப்படும் வல்லமை - (18:18)

(9) ஒன்றுகூடி ஜெபிப்பதின் வல்லமை - (18:19)

(10) ஸ்தலசபைகளின் எளிமையும் கிறிஸ்தவ ஆராதனையும் - (18:20)

(11) மன்னிப்பின் பிரமாணம் - (18:21-22)

(12) மன்னிப்பு - இரக்கமில்லாத ஊழியக்காரனைப் பற்றிய உவமை - (18:23-35)

74. இயேசு திரளான ஜனங்களைச் சுகமாக்குகிறார் - (19:1-2)

75. மனைவியைத் தள்ளிவிடுவது, மறுவிவகாரம் பண்ணுவது ஆகியவை பற்றிய பிரமாணம் - (19:3-9)

76. மனைவியைத் தள்ளிவிடுவதினால் ஏற்படும் விளைவுகள் - (19:10-12)

77. இயேசு சிறுபிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார் - (19:13-15)

78. மிகுந்த ஆஸ்தியுள்ள வாலிபன் - (19:16-22)

79. ஐசுவரியவான்களுக்கு எச்சரிப்பு - (19:23-26)

80. நித்திய இராஜ்ஜியத்தில் அப்போஸ்தலர்களுக்கு உரிய இடம் - (19:27-28)

81. முழுமையாக ஒப்புக் கொடுத்தவர்களுக்கு வெகுமதிகள் - (19:29-30)

82. தாழ்மை - திராட்சைத்தோட்டத்து வேலையாட்களைப் பற்றிய உவமை - (20:1-16)

83. இயேசு தமது மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் மறுபடியும் முற்குறித்துக் கூறுகிறார் - (20:17-19)

84. யாக்கோபு, யோவான் ஆகியோரின் மாம்ச சுபாவம் - (20:20-23)

85. மற்ற பத்துப் பேரின் மாம்ச சுபாவம் - (20:24-28)

86. இயேசு இரண்டு குருடரை சொஸ்தமாக்குகிறார் - (20:29-34)

87. வெற்றிப்பவனி - (21:1-11)

88. தேவாலயத்தின் சுத்திகரிப்பு - (21:12-16)

89. கனிகொடாத அத்திமரத்தை இயேசு சபிக்கிறார் - (21:17-20)

90. சந்தேகப்படாமல் விசுவாசமுள்ளவர்களாக இருக்க வேண்டும் - (21:21-22)

மத்தேயு - முன்னுரை

91. இயேசுவின் அதிகாரத்தைக் குறித்துக் கேட்கப்பட்ட கேள்வி - *(21:23-27)*

92. இரண்டு குமாரர்களைப் பற்றிய உவமை - *(21:28-32)*

93. வீட்டெஜமானைப் பற்றிய உவமை - *(21:33-46)*

94. கலியாண விருந்தைப் பற்றிய உவமை - *(22:1-14)*

95. வரிக்காசைப் பற்றிய உவமை - *(22:15-22)*

96. உயிர்த்தெழுதலைப் பற்றிய கேள்வி - *(22:23-33)*

97. பிரதான கற்பனையைப் பற்றிய கேள்வி - *(22:34-40)*

98. இயேசு பரிசேயரிடம் கேள்வி கேட்கிறார் - *(22:41-46)*

99. பரிசேயரின் குணங்கள் - *(23:1-7)*

100. பரிசேய உபதேசத்திற்கு எதிரான எச்சரிப்புக்கள் - *(23:8-12)*

101. பரிசேயர்மீது எட்டு "ஐயோ"க்கள் -

(1) தேவனுக்கு விரோதமாகக் கிரியை செய்து பரலோகத்தைப் பூட்டிப் போடுகிறார்கள் - *(23:13)*

(2) ஒடுக்குகிறார்கள் - மாய்மாலக் காரர்கள் - *(23:14)*

(3) ஆத்துமாக்களை அழித்துப் போடுகிறார்கள் - *(23:15)*

(4) பொய்யான ஆணையிடுகிறார்கள் - *(23:16-22)*

(5) வெளிவேஷம் போடுகிறார்கள் - *(23:23-24)*

(6) தவறான சுத்திகரிப்புக்கள் - *(23:25-26)*

(7) சுயநீதி - *(23:27-28)*

(8) பெருமை - *(23:29-33)*

102. கிறிஸ்தவர்கள் துன்பப்படுத்தப் படுவார்கள் என்று இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - *(23:34-36)*

103. இயேசு எருசலேமிற்காக அழுகிறார் - *(23:37-39)*

104. இயேசு ஒலிவமலையில் கூறிய தீர்க்கதரிசனம்

(1) எருசலேமின் அழிவை முற்குறித்துக் கூறுகிறார் - *(24:1-2)*

(2) மூன்று முக்கியமான கேள்விகள் - *(24:3)*

(3) கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு அடையாளங்கள்

(அ) எட்டு அடையாளங்கள் - யூதர்களின் வருத்தங்கள் - *(24:4-8)*

(ஆ) இஸ்ரவேலின் வருத்தங்களின்போது எட்டு அடையாளங்கள் - *(24:9-14)*

(இ) பாழாக்குகிற அருவருப்பு - *(24:15)*

(ஈ) அந்திக்கிறிஸ்துவிடம் இஸ்ரவேல் தோற்றுப்போதல் - *(24:16-20)*

(உ) மகா உபத்திரவம் - *(24:21-22)*

(ஊ) மகா உபத்திரவத்தின்போது நடைபெறும் ஆறு அடையாளங்கள் - *(24:23-26)*

(4) கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நடைபெறும் விதமும் காலமும் - *(24:27-31)*

(5) அத்திமரத்தைப் பற்றிய உவமை - *(24:32-33)*

(6) இந்தத் தீர்க்கதரிசனத்தின் எல்லா அடையாளங்களும் ஒரு சந்ததியில் சம்பவிக்கும் - *(24:34-35)*

(7) அவருடைய வருகையின் குறிப்பிட்ட காலம் அறிவிக்கப் படவில்லை - *(24:36)*

மத்தேயு - முன்னுரை

(8) கிறிஸ்துவின் வருகை துன்மார்க்கருக்கு அழிவைக் கொண்டு வரும் - (24:37-39)

(9) அர்மகெதோன் - சிலர் ஏற்றுக் கொள்ளப்படுவார்கள் - சிலர் கைவிடப்படுவார்கள் - (24:40-42)

(10) வீட்டெஜமானைப் பற்றிய உவமை - (24:43-44)

(11) உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரனைப் பற்றிய உவமை - (24:45-51)

(12) பத்துக் கன்னிகைகள் பற்றிய உவமை - (25:1-13)

(13) தாலந்துகளைப் பற்றிய உவமை - (25:14-30)

(14) கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது தேசங்கள்மீது நியாயத் தீர்ப்பு - (25:31-46)

105. இயேசு தமது மரணத்தை மறுபடியும் முற்குறித்துக் கூறுகிறார் - (26:1-2)

106. இயேசுவைக் கொல்வதற்குச் சதியாலோசனை - (26:3-5)

107. இயேசுவின்மீது அபிஷேகம் - (26:6-13)

108. இயேசுவைக் காட்டிக் கொடுக்க யூதாஸ் ஒப்புக்கொள்கிறான் - (26:14-16)

109. பஸ்காவிற்கு ஆயத்தம் - (26:17-19)

110. கடைசி பஸ்கா

(1) தாம் காட்டிக்கொடுக்கப்படப் போவதை இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (26:20-25)

(2) கர்த்தருடைய பந்தி - (26:26-30)

(3) தம்மைப் பேதுரு மறுதலிக்கப் போவதை இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (26:31-35)

V. கிறிஸ்துவின் பாடுகள்

1. கெத்செமனே தோட்டத்தில் இயேசுவின் துக்கமும் வியாகுலமும் - (26:36-46)
2. இயேசுவைக் கொல்வதற்கு முயற்சி - காட்டிக்கொடுக்கப்படுவதும் கைதுபண்ணப்படுவதும் - (26:47-56)
3. இயேசுவின் வழக்கு விசாரணையும் பரியாசமும் - (26:57-68)
4. பேதுரு மறுதலிக்கிறான் - (26:69-75)
5. இயேசுவைப் பிலாத்துவிடம் அனுப்புகிறார்கள் - (27:1-2)
6. யூதாஸ் நான்றுகொண்டு செத்துப் போகிறான் - (27:3-10)
7. பிலாத்துவிற்கு முன்பாக இயேசு - (27:11-14)
8. இயேசுவிற்கு தண்டனையும் பரபாசிற்கு விடுதலையும் - (27:15-26)
9. இயேசுவின் சிரசின்மீது முள்முடி - (27:27-32)
10. இயேசுவைச் சிலுவையில் அறைகிறார்கள் - (27:33-44)
11. இயேசுவின் மரணம் - (27:45-56)
12. இயேசுவின் சரீரத்தை அடக்கம் பண்ணுகிறார்கள் - (27:57-61)
13. கல்லுக்கு முத்திரைபோட்டு இயேசுவின் கல்லறையைப் பத்திரப்படுத்துகிறார்கள் - (27:62-66)

VI. உயிர்த்தெழுந்த பின்பு இயேசுவின் ஊழியம் -

1. உயிர்த்தெழுதலுக்கு கர்த்தருடைய தூதனின் சாட்சி - (28:1-7)
2. உயிர்த்தெழுதலுக்கு ஸ்திரீகளின் சாட்சி - (28:8-10)
3. உயிர்த்தெழுதலுக்கு காவல்சேவகரின் சாட்சி - (28:11)
4. இயேசுவின் உயிர்த்தெழுதல்மீதுள்ள விசுவாசத்தை அழிப்பதற்கு சதியாலோசனை - (28:12-15)
5. இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு சீஷர்களின் சாட்சி - (28:16-17)
6. பிரதான கட்டளை - (28:18-20)

மத்தேயு - தொகுப்புரை

1 அதிகாரம்

I. இயேசு கிறிஸ்துவின் ஊழிய காலத்திற்கு முந்திய நிகழ்ச்சிகள் - (மாற்கு 1:1; லூக் 1:1; யோவான் 1:1)

1. இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாறு

மத் 1:1 ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசு கிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு:

புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து என்னும் பெயர் 569 தடவைகள் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்து தேவகுமாரன். முப்பதாவது வயதில் இயேசு கிறிஸ்து அபிஷேகிக்கப்பட்டார். (மத் 3:16; யோவான் 3:34; ஏசா 11:1; ஏசா 42:15-5; ஏசா 61:1; அப் 10:38) இயேசுவைத் தேவன் ஆண்டவரும், கிறிஸ்துவுமாக்கினார். (அப்2:36) கிறிஸ்து - அபிஷேகிக்கப்பட்டவர் என்னும் பெயர் எபிரெய மொழியில் மேசியா (Mashiyach) என்று அழைக்கப் படுகிறது. (தானி 9:24-26; யோவான் 1:41; யோவான் 4:25)

கிறிஸ்து (Christ) - Χριστός - Christos - 5547

பெயர்ச்சொல் - கிறிஸ்து

"அபிஷேகிக்கப்பட்டவர்" (Anointed)

மேசியா (Anointed) - מָשִׁיחַ - maw-shee'-akh - 4899

ஆண்பால் பெயர்ச்சொல் - மேசியா, அபிஷேகம் பெற்றவர், அபிஷேகம் பண்ணப்பட்டவர்

"ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரன்" - இயேசு கிறிஸ்து ஆபிரகாமின் சந்ததியிலிருந்து வந்தவர். (மத் 1:2-16; ரோமர் 9:5) வாக்குத்தத்தத்தின் பிரகாரமாக இயேசு கிறிஸ்து ஆபிரகாம், தாவீது ஆகியோரின் குமாரன். (ஆதி 12:1-3; கலா 3:6-22; ஏசா 11:1; மத் 22:41-46; 2தீமோ 2:8)

மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் இயேசு கிறிஸ்து ஒன்பது இடங்களில் தாவீதின் குமாரன் என்று அழைக்கப்படுகிறார். (மத் 1:1; மத் 9:27; மத்12:23; மத் 15:22; மத் 20:30-31; மத் 21:9,15; மத் 22:42). இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாற்றில் தாவீது மிகவும் முக்கியமானவர். அவர் ஒரு இராஜா, ஒரு தீர்க்கதரிசி.

2. இயேசுவின் முன்னோர்கள் - (லூக் 3:23-38; 1நாளா 1:1-4:23)

(1) இராஜாக்கள் அல்லாத 14 வம்சங்கள்

மத் 1:2 ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றான்; ஈசாக்கு யாக்கோபைப் பெற்றான்; யாக்கோபு யூதாவையும் அவன் சகோதரரையும் பெற்றான்;

மத் 1:3 யூதா பாரேசையும் சாராவையும் தாமாரினிடத்தில் பெற்றான்; பாரேஸ் எஸ்ரோமைப் பெற்றான்; எஸ்ரோம் ஆராமைப் பெற்றான்;

மத் 1:4 ஆராம் அம்மினதாபைப் பெற்றான்; அம்மினதாப் நகசோனைப் பெற்றான்; நகசோன் சல்மோனைப் பெற்றான்;

மத் 1:5 சல்மோன் போவாசை ராகாபினிடத்தில் பெற்றான்; போவாஸ் ஓபேதை ரூத்தினிடத்தில் பெற்றான்; ஓபேத் ஈசாயைப் பெற்றான்;

1. ஆபிரகாமின் வரலாறு (ஆதி 11:26-25:11)
2. ஈசாக்கின் வரலாறு (ஆதி 21:1-35:29)
3. யாக்கோபின் வரலாறு (ஆதி 25:24-50:14)
4. யூதாவும், அவன் சகோதரரும் (ஆதி 29:16-30:24; 1நாளா 2:1-4)

"பாரேசு" - (1நாளா 2:4-12; ரூத் 4:13-22) பாரேசிலிருந்து ஈசாய் வரையிலும் உள்ள வம்ச வரலாறை நாம் மத் 1:3-5 ஆகிய வசனங்களில் வாசித்தறியலாம்.

மத்தேயு - தொகுப்புரை

1 அதிகாரம்

"தாமார்" - இயேசுவின் வம்சவரலாற்றில் நான்கு ஸ்திரீகளின் பெயர்கள் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. அவர்களில் ராகாபும் ரூத்தும் புறஜாதி ஸ்திரீகள். தாமாரும் பத்சேபாளும் யூத ஸ்திரீகள். இவ்வாறாக இயேசு கிறிஸ்துவின் வம்சவரலாற்றில் யூத ஸ்திரீகளும், புறஜாதி ஸ்திரீகளும் வருகிறார்கள். ராகாப் ஒரு வேசி (யாக் 2:25). தாமாரும், பத்சேபாளும் விபச்சாரம் பண்ணியவர்கள் (ஆதி 38; 2சாமு 11:1-5). ரூத் சுத்தமான ஸ்திரீ (ரூத் 3:11).

ஒரு ஸ்திரீ பெற்றாள் என்று கூறும்போது அவள் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தாள் என்று பொருள்படும். ஒரு புருஷன் பெற்றான் என்று சொல்லும்போது அவன் தந்தையானான் என்று பொருள்படும். புதிய ஏற்பாட்டில் இந்தக் கிரேக்க சொல் இவ்விரண்டு பொருள்படுமாறும் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (மத் 1:16, மத் 1:20; கலா 4:24, லூக்கா 1:13)

பெற்றான் (begat) -γεννάω - gennaoo - 1080

வினைச்சொல் - பெறு, பிறந்திரு, உண்டாயிரு, எழும்பு, ஜநித்திரு (ஜெனம் ஜெநிப்பி)

"ராகாப்" யோசு 2:1-24; யோசு 6:25; யாக் 2:25

(2) இராஜாக்களாக இருந்த 14 வம்சங்கள்

மத் 1:6 ஈசாய் தாவீது ராஜாவைப் பெற்றான்; தாவீது ராஜா உரியாவின் மனைவியாயிருந்தவளிடத்தில் சாலொமோனைப் பெற்றான்.

மத் 1:7 சாலொமோன் ரெகொபெயாமைப் பெற்றான்; ரெகொபெயாம் அபியாவைப் பெற்றான்; அபியா ஆசாவைப் பெற்றான்.

மத் 1:8 ஆசா யோசபாத்தைப் பெற்றான், யோசபாத் யோராமைப் பெற்றான், யோராம் உசியாவைப் பெற்றான்.

மத் 1:9 உசியா யோதாமைப் பெற்றான்; யோதாம் ஆகாசைப் பெற்றான்; ஆகாஸ் எசேக்கியாவைப் பெற்றான்.

மத் 1:10 எசேக்கியா மனாசேயைப் பெற்றான்; மனாசே ஆமோனைப் பெற்றான்; ஆமோன் யோசியாவைப் பெற்றான்.

மத் 1:11 பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போகுங்காலத்தில், யோசியா எகொனியாவையும் அவனுடைய சகோதரரையும் பெற்றான்.

"தாவீது ராஜா" - மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் தாவீதின் வம்சவழி சாலொமோன் மூலமாக ராஜரீக வம்சமாக இருக்கிறது. தாவீதிற்கு நாத்தான் என்று இன்னும் ஒரு குமாரன் உண்டு (2சாமு 5:14). லூக்கா 3:23-38-இல் தாவீதின் வழி நாத்தான் மூலமாக விளக்கப்படுகிறது. யோசேப்பு ஏலியின் குமாரன்.

இயேசு கிறிஸ்துவைப் பற்றிய தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றுவதற்கு இவ்விரண்டு வம்சவழியும் தேவையானவை. கர்த்தர் எகொனியாவைச் சபித்தார். தாவீதின் அரியாசனத்தில் அவனுடைய சந்ததியில் யாரும் அமர்ந்து எருசலேமை ஆளுகை செய்ய மாட்டார்கள் (எரே 22:24-30).

கர்த்தர் தாவீதிடம் அவனுடைய குமாரனாகிய சாலொமோன் மூலமாக அவனுடைய ஆட்சி என்றென்றும் நிலைத்திருக்கும் என்று வாக்குப் பண்ணினார் (2சாமு 7).

இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேற வேண்டுமாயின், தாவீதின் குமாரனாகிய இயேசு கிறிஸ்து நாத்தான் மரியாள் ஆகியோரின் வம்சவழியில் வரவேண்டும். யோசேப்பின் மூலமாக இயேசு கிறிஸ்து தாவீதின் ராஜரீக வம்சத்தில் வருகிறார் (லூக்கா 1:32-33; ஏசா 9:6-7, வெளி 5:5, வெளி 22:16).

இயேசு கிறிஸ்து யோசேப்பிற்கு நியமிக்கப் பட்டிருந்த கன்னி மரியாளின் வயிற்றில் உற்பத்தியானவர் ஆகையினால், யோசேப்பின் குமாரன் என்று இயேசு அழைக்கப்படுகிறார். இயேசு கிறிஸ்து யோசேப்பின் குடும்பத்தில் முதலாவது பிறந்தவர். இதன் மூலமாக இயேசு தாவீதின் சிம்மாசனத்திற்கு ராஜரீக வாரிசு ஆகிறார்.

மத்தேயு - தொகுப்புரை

1 அதிகாரம்

"உரியாவின் மனைவி" - பத்சேபாள் (2சாமு 11; 1இராஜா 1:11-31)

"ரெகொபெயாம்" - (1இராஜா 11:43-12:24)

"அபியா" - (1இராஜா 14:31-15:8)

"யோசபாத்" (1இராஜா 15:23-24; 1இராஜா 22:2-50)

"யோராம்" - (2இராஜா 8:16-24)

"உசியா" - 2இராஜா 15:1-7 யோராமிற்கும் உசியாவிற்கும் இடையில் மூன்று இராஜாக்கள் ஆட்சி புரிந்தார்கள். இந்த வம்ச வரலாற்று அட்டவணையில் அவர்களுடைய பெயர்கள் குறிப்பிடவில்லை.

1 அகசியா (2இராஜா 8:25-26)

2 யோவாகாஸ் (2இராஜா 12:1)

3 அமத்சியா (2இராஜா 14:1-2)

இயேசு கிறிஸ்துவின் இராஜரீக வம்சவரலாற்றிற்கு இவர்களின் பெயர்கள் தேவையில்லை.

"யோதாம்" - (2இராஜா 15:32-38)

"ஆகாஸ்" - (2இராஜா 16:1-20)

"எசேக்கியா" - (2இராஜா 18:1-20:20)

"மனாசே" - (2இராஜா 21:1-18)

"யோசியா" - (2இராஜா 22:1-23:30)

"எகொனியா" - (2இராஜா 24:6-16) எகொனியாவிற்கும் யோசியாவிற்கும் இடையே இரண்டு இராஜாக்கள் ஆட்சி புரிந்தார்கள். யோவாகாஸ், யோயாக்கீம் (2இராஜா 23:31-24:6). இவர்களுடைய பெயர்களும் இந்த வம்ச அட்டவணையில் குறிப்பிடப்படவில்லை. இவனுக்கு அடுத்தபடியாக சிதேக்கியா ஆட்சி புரிந்தான். இவனோடு யூத சாம்ராஜ்யம் முடிவு பெறுகிறது. (2இராஜா 24:6-25:30)

(3) இராஜாக்கள் அல்லாத 14 வம்சங்கள்

மத் 1:12 பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போன பின்பு, எகொனியா சலாத்தியேலைப் பெற்றான்; சலாத்தியேல் சொரொபாபேலைப் பெற்றான்.

மத் 1:13 சொரொபாபேல் அபியூதைப் பெற்றான்; அபியூத் எலியாக்கீமைப் பெற்றான்; எலியாக்கீம் ஆசோரைப் பெற்றான்.

மத் 1:14 ஆசோர் சாதோக்கைப் பெற்றான்; சாதோக்கு ஆகீமைப் பெற்றான்; ஆகீம் எலியூதைப் பெற்றான்.

மத் 1:15 எலியூத் எலெயாசாரைப் பெற்றான்; எலெயாசார் மாத்தானைப் பெற்றான்; மாத்தான் யாக்கோபைப் பெற்றான்.

மத் 1:16 யாக்கோபு மரியாளுடைய புருஷனாகிய யோசேப்பைப் பெற்றான்; அவளிடத்தில் கிறிஸ்து என்னப்படுகிற இயேசு பிறந்தார்.

"சலாத்தியேல்" (1நாளா 3:17-19; எஸ்றா 3:2; எஸ்றா 5:2)

"அபியூத்" - இவனுடைய பெயரிலிருந்து யோசேப்பின் பெயர் வரையிலும் ஒன்பது பேர் வருகிறார்கள். இவர்களுடைய பெயர்கள் வேதாகமத்தில் வேறெங்கும் காணப்படவில்லை.

"யோசேப்பு" - வேதாகமத்தில் யோசேப்பு என்னும் பெயரில் 11 பேர் இருக்கிறார்கள். இவர்கள் 5 பேர் பழைய ஏற்பாட்டில் வருகிறார்கள் (ஆதி 30:24; எண் 13:7; 1நாளா 25:2; எஸ்றா 10:42; நெகே 12:14). இன்னும் 6 பேர் புதிய ஏற்பாட்டில் வருகிறார்கள் (மத் 1:16; மத் 27:57; லூக்கா 3:24,26,30; அப் 1:23).

"மரியாள்" - யோசேப்பின் மனைவி. இயேசுவின் தாய். இயேசு தவிர இன்னும் நான்கு குமாரர்களுக்குத் தாய். யாக்கோபு, யோசே, சீமோன், யூதா ஆகியோரும் மரியாளின் குமாரர். மரியாளுக்கு மூன்று குமாரத்திகள் பிறந்திருக்கலாம் (லூக்கா 8:19)

1 அதிகாரம்

(4) ஆபிரகாமிலிருந்து இயேசு கிறிஸ்து வரையிலும் - யூத மார்க்கத்து முன்னோர்கள் - லூக் 3:23-38

மத் 1:17 இவ்விதமாய் உண்டான தலைமுறைகளெல்லாம் ஆபிரகாம் முதல் தாவீது வரைக்கும் பதினாலு தலைமுறைகளும்; தாவீதுமுதல் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப்போன காலம் வரைக்கும் பதினாலு தலைமுறைகளும்; பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப்போன காலமுதல் கிறிஸ்து வரைக்கும் பதினாலு தலைமுறைகளுமாம்.

ஆபிரகாம் முதல் இயேசு கிறிஸ்து வரையிலும் 42 தலைமுறைகளின் பெயர்கள் மத்தேயு சுவிசேஷத்தில் கூறப்பட்டிருக்கிறது. இவை தவிர இந்த சுவிசேஷத்தில் கூறப்பட்டிராத மேலும் சில தலைமுறைகளும் இயேசுவின் வம்சவரலாற்றில் உள்ளன (மத் 1:8,11)

3. இயேசு கிறிஸ்துவின் கன்னிகைப் பிறப்பு - (ஆதி 3:15; ஏசா 7:14, 9:6-7; லூக் 1:26-56; 2:1-39 யோவான் 1:14; ரோமர் 8:3 கலா 4:4; 1தீமோ 3:16; எபி 1:5-6, 2:6-9, 14-16

மத் 1:18 இயேசுகிறிஸ்துவினுடைய ஜெநநத்தின் விவரமாவது: அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவர்கள் கூடிவருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது.

மத் 1:19 அவள் புருஷனாகிய யோசேப்பு நீதிமானாயிருந்து, அவளை அவமானப்படுத்த மனதில்லாமல், இரகசியமாய் அவளைத் தள்ளிவிட யோசனையாய் இருந்தான்.

மத் 1:20 அவன் இப்படிச் சிந்தித்துக் கொண்டிருக்கையில், கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக் காணப்பட்டு: தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே; அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது.

மத் 1:21 அவள் ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்.

மத் 1:22 தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது.

மத் 1:23 அவன்: இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்கு, தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்.

மத் 1:24 யோசேப்பு நித்திரைதெளிந்து எழுந்து, கர்த்தருடைய தூதன் தனக்குக் கட்டளையிட்டபடியே தன் மனைவியைச் சேர்த்துக்கொண்டு;

மத் 1:25 அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெறுமளவும் அவளை அறியாதிருந்து, அவருக்கு இயேசு என்று பேரிட்டான்.

"மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில்" எபிரெயருடைய வழக்கத்தின் பிரகாரம் "நியமிக்கப்படுதல்" என்பது திருமணத்தின் சட்டபூர்வமான ஓர் அங்கம். நியமிக்கப்பட்டதை முறிக்க வேண்டுமானால் அதற்காகத் தள்ளுதற்சீட்டைத் தரவேண்டும். நியமிக்கப்படும்போது அதற்குரியவர்கள் ஒப்பந்தப் பத்திரங்களில் கையெழுத்திடுவார்கள். இந்த ஒப்பந்தத்தில் நிச்சயிக்கப்படும் நாள், திருமணநாள் எல்லாமே குறிப்பிடப்பட்டிருக்கும். (ஆதி 29:18; உபா 20

"பரிசுத்தஆவியினாலே" - (லூக்கா 1:35, யோவான் 1:14; பிலி 2; எபி 2

1 அதிகாரம்

நீதிமான் (just) - δικαιος - dikaios - 1342

பெயர்ச்சொல் - நீதிமானான் நீதியுள்ளவன் நியாயமானவன் உண்மையுள்ளவன் (மத் 13:49)

"அவளை அவமானப்படுத்த மனதில்லாமல்" - யூதருடைய பிரமாணத்தின் பிரகாரம் நியமிக்கப்பட்டிருப்பவர் தவறு செய்யும்போது அவருக்கு மிகுந்த அவமானம் உண்டாகும் அவருக்கு மரண தண்டனை கொடுக்கப்படும். (உபா 22:23-28)

"இரகசியமாய் அவளைத் தள்ளிவிட யோசனையாயிருந்தான்" - எல்லோருக்கும் தெரியும் விதத்தில் தனக்கு நியமிக்கப்பட்டவளைத் தள்ளிவிடுவதற்குப் பதிலாக யோசேப்பு அவளை இரகசியமாகத் தள்ளி விடலாம் என்று யோசனை பண்ணினான். (உபா 24:1-4)

"கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக் காணப்பட்டான்" - காபிரியேல் என்னும் தூதன் (லூக்கா 1:26) கர்த்தருடைய தூதன் யோசேப்பிற்கு நான்கு முறை தரிசனமானான் (மத் 1:20,24 மத் 2:13,19)

"சொப்பனம்" - சுவிசேஷங்களில் 6 இடங்களில் சொப்பனத்தைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. இந்த ஆறுமே மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் வருகிறது. (மத் 1:20 மத் 2:12,13,19,22 மத் 27:19)

தீர்க்கதரிசன எண் - 1

"அவள் ஒரு குமாரனைப் பெறுவாள் அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக, ஏனென்றால் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" (மத் 1:21) இந்தத் தீர்க்கதரிசனம் மத் 1:25 இல் நிறைவேறிற்று.

"அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக" வேதாகமத்தில் 7 பேருக்கு அவர்கள் பிறப்பதற்கு முன்பாகவே பெயரிடப்பட்டது.

1. இஸ்மவேல் (ஆதி 16:11)
2. ஈசாக்கு (ஆதி 17:19)
3. சாலொமோன் (1நாளா 22:9)
4. யோசியா (பிறப்பதற்கு 325 வருஷங்களுக்கு முன்பாக. 1இராஜா 13:2 2இராஜா 22:1)
5. கோரேஸ் (பிறப்பதற்கு 175 வருஷங்களுக்கு முன்பாக ஏசா 44:28-45:1)
6. யோவான் ஸ்நானன் (லூக் 1:13,60-63)
7. இயேசு (மத் 1:21)

"இயேசு" - புதிய ஏற்பாட்டில் இயேசு என்னும் பெயர் 983 தடவைகள் வந்திருக்கிறது. தேவகுமாரனுக்கு இந்த உலகத்தில் வழங்கப்படும் பெயர் இயேசு என்னும் பெயர் கிரேக்க மொழிச்சொல். இதற்கு இணையான எபிரெய பெயர் "யோசுவா". யோசுவா அல்லது இயேசு என்பதற்கு இரட்சகர் அல்லது இரட்சிப்பாக இருக்கும் தேவன் என்று பொருள்.

யோசுவா - יְהוֹשׁוּעַ - yeh-ho-shoo'-ah- 3091

ஆ.பெ.சொ - யோசுவா

யெகோவா இரட்சிக்கிறார்

இரட்சி - σώζω - sozo - 4982

வினைச்சொல் - இரட்சி, சொஸ்தமாகு, ஆரோக்கியம் அடை, சுகமடை, தப்பிப்போ, இரட்சிக்கப்படு. பாவத்திலிருந்து இரட்சிக்கப்படுதல் (மத் 1:21 எபி 7:25) ஆபத்திலிருந்து இரட்சிக்கப்படுதல் (மத் 14:30 மத் 27:42) ஆவிக்குரிய போராட்டத்திலிருந்து இரட்சிக்கப்படுதல் (யோவான் 12:27, 1தீமோ 4:16), வியாதியிலிருந்து சொஸ்தமாதல் (யாக் 5:15) நரகத்திலிருந்து தப்புவிக்கப்படுதல் (யோவான் 3:16-18, மாற்கு 16:16) அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்படுதல் யூதா 1:5

மத்தேயு - தொகுப்புரை

1 அதிகாரம்

பாவம் 'αμαρτία - hamartia - 266

பெண்பால் வினைப்பெயர் பாவம் தோல்வி

அ. பாவச் செயல் (1 கொரி. 15:17)

ஆ. பாவத்தில் மூழ்கியிருத்தல் எப்பொழுதும் பாவத்தில் இருத்தல் (யோவா 1:21,29; ரோமா 5:1)

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 1

'இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள் அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள்' - (மத் 1:23; ஏசா 7:14)

"அவளை அறியாதிருந்தான்" - எபிரெய வழக்குச்சொல் குடும்ப உறவில் ஈடுபடாமல் இருத்தல் உடல் உறவு கொள்ளாமல் இருத்தல் என்று பொருள்படும் (ஆதி 4:1,17,25; ஆதி 19:5)

"அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெறுமளவும் மரியாள் இயேசுவைத் தவிர மேலும் நான்கு குமாரர்களைப் பெற்றாள் (லூக்கா 8:19) அவர்களுடைய பெயர் யாக்கோபு, யோசே, சீமோன், யூதா (மத் 13:55)

மத்தேயு - தொகுப்புரை

2 அதிகாரம்

4. கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகள் - (நாளா 12:32 தானி 1:17-20, 2:10-11, 21-29,47; 4:18-27)

மத் 2:1 ஏரோதுராஜாவின் நாட்களில் யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே இயேசு பிறந்தபொழுது, கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்து,

மத் 2:2 யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்துகொள்ள வந்தோம் என்றார்கள்.

மத் 2:3 ஏரோதுராஜா அதைக் கேட்டபொழுது, அவனும் அவனோடுகூட எருசலேம் நகரத்தார் அனைவரும் கலங்கினார்கள்.

மத் 2:4 அவன் பிரதான ஆசாரியர் ஜனத்தின் வேதபாரகர் எல்லாரையும் கூடிவரச்செய்து: கிறிஸ்துவானவர் எங்கே பிறப்பாரென்று அவர்களிடத்தில் விசாரித்தான்.

மத் 2:5 அதற்கு அவர்கள்: யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே பிறப்பார்; அதேனென்றால்,

மத் 2:6 யூதேயா தேசத்திலுள்ள பெத்லகேமே, யூதாவின் பிரபுக்களில் நீ சிறியதல்ல; என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும் பிரபு உன்னிடத்திலிருந்து புறப்படுவார் என்று, தீர்க்கதரிசியினால் எழுதப்பட்டிருக்கிறது என்றார்கள்.

மத் 2:7 அப்பொழுது ஏரோது சாஸ்திரிகளை இரகசியமாய் அழைத்து, நட்சத்திரம் காணப்பட்ட காலத்தைக் குறித்து அவர்களிடத்தில் திட்டமாய் விசாரித்து:

மத் 2:8 நீங்கள் போய், பிள்ளையைக் குறித்துத் திட்டமாய் விசாரியுங்கள்; நீங்கள் அதைக் கண்டபின்பு, நானும் வந்து அதைப் பணிந்துகொள்ளும்படி எனக்கு அறிவியுங்கள் என்று சொல்லி, அவர்களைப் பெத்லகேமுக்கு அனுப்பினான்.

மத் 2:9 ராஜா சொன்னதை அவர்கள் கேட்டுப் போகையில், இதோ, அவர்கள் கிழக்கிலே கண்ட நட்சத்திரம் பிள்ளை இருந்த ஸ்தலத்திற்குமேல் வந்து நிற்கும்வரைக்கும் அவர்களுக்கு முன் சென்றது.

மத் 2:10 அவர்கள் அந்த நட்சத்திரத்தைக் கண்டபோது, மிகுந்த ஆனந்த சந்தோஷமடைந்தார்கள்.

மத் 2:11 அவர்கள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து, அதைப் பணிந்துகொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள்.

மத் 2:12 பின்பு, அவர்கள் ஏரோதினிடத்திற்குத் திரும்பிப் போகவேண்டாமென்று சொப்பனத்தில் தேவனால் எச்சரிக்கப்பட்டு, வேறு வழியாய்த் தங்கள் தேசத்திற்குத் திரும்பிப் போனார்கள்.

"யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே" எருசலேமிற்குத் தெற்கே 5 மைல் தொலைவில் பெத்லகேம் இருக்கிறது. இது மீகா 5:2 இல் கூறப்பட்டிருக்கிற தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம்.

"சாஸ்திரிகள்" - இந்த சாஸ்திரிகள் எந்த தேசத்திலிருந்து வந்தார்கள் என்பதும் எத்தனை சாஸ்திரிகள் வந்தார்கள் என்பதும் தெரியவில்லை. கிழக்கு தேசத்தில் இவர்கள் தீர்க்கதரிசனம் கூறுகிறவர்களாகவோ சொப்பனங்களுக்கு அர்த்தம் சொல்லுகிறவர்களாகவோ ஆவி வழிபாடு செய்கிறவர்களாகவோ இருக்கலாம். (தானி 2:2,48; தானி 4:9)

2 அதிகாரம்

சாஸ்திரிகள் (wise men) - μάγος - magos - 3097

ஆண்பால் பெயர்ச்சொல் - சாஸ்திரி மாயவித்தைக்காரன்

"யூதருக்கு ராஜா" - இயேசு கிறிஸ்து பிறந்த காலத்தில் யூதருக்கு ஒரு இராஜா பிறப்பார் என்றும் அவர் உலகம் முழுவதையும் ஆளுகை செய்வார் என்றும் ஒரு பொதுவான எதிர்பார்ப்பு ஜனங்கள் மத்தியில் இருந்தது. தானியேலும் இயேசு கிறிஸ்துவின் வருகையைக் குறித்து தீர்க்கதரிசனமாகக் கூறுகிறான் (தானி 9:24-26). இயேசு கிறிஸ்து ஆளப்பிறந்தவர். அவருடைய இரண்டாம் வருகைக்குப் பின்பு அவர் இந்த உலகத்தை நித்திய காலமாக ஆட்சி புரிவார் (லூக்கா 1:32-33; யோவான் 18:37; ஏசா 9:6-7; வெளி 11:15; வெளி 22:1-5)

"கிழக்கே அவருடைய நட்சத்திரம்" - (எண் 24:15-19)

"ஏரோதுராஜா" - ஏரோதுராஜா அந்திபேத்தரின் (Antipater) குமாரன். இவன் இதுமேய தேசத்தான் (Idumean). இவனுடைய தாயின் பெயர் சிப்ரோஸ் (Cyprus). இவள் அரேபிய தேசத்து ஸ்திரீ.

கி.மு. 47-ஆம் ஆண்டு ஜூலியஸ் சீசர் யூதேயாவின் ஆளுநராக அந்திபேத்தரை நியமித்தான். ஏரோது 25 வயது ஆனபோது கலிலேயாவிற்கு ஆளுநர் ஆனான். அதன் பின்பு, கி.மு. 37 இல் ஏரோது யூதேயாவிற்கு இராஜாவானான். யூதருடைய தேவாலயத்தை ஏரோது கட்டினான் (யோவான் 2:20). கி.மு. 4 இல் ஏரோது மரணமடைந்தான். அவனுடைய இராஜ்யம் பிரிக்கப்பட்டது.

ஏரோதுவின் குமாரனாகிய ஏரோது அந்திபாஸ் கலிலேயாவையும் பெரேயாவையும் கி.மு. 4 முதல் கி.பி. 39 வரையிலும் ஆட்சி புரிந்தான் (லூக்கா 3:1-2). யோவான் ஸ்நானனைச் சிரச்சேதம் பண்ணியவன் இவனே (மத் 14:1).

ஏரோது இராஜாவின் மற்றொரு குமாரனாகிய அர்கெலாயு யூதேயாவையும் சமாரியாவையும் ஆட்சி புரிந்தான் (மத் 2:22). இவனுடைய பெயர் பிலிப்பு என்று மத் 14:3-இல் கூறப்பட்டிருக்கிறது.

அர்கெலாயுவிற்கு பின்பு கி.பி. 37-ஆம் ஆண்டு முதலாம் ஏரோது அகிரிப்பா ஆட்சிக்கு வந்தான். ஏரோது இராஜா ஆட்சி புரிந்த எல்லா மாநிலங்களையும் கி.பி. 41-இல் தன் ஆளுகையின்கீழ் கொண்டு வந்தான். அப் 12-ஆம் அதிகாரத்தில் இவனைப் பற்றி குறிப்பு உள்ளது. இவனுக்குப் பின்பு இரண்டாம் ஏரோது அகிரிப்பா ஆட்சிக்கு வந்தான் (அப் 25:13; அப் 26:32)

"பிரதான ஆசாரியர்" - 24 பிரிவுகளுக்குத் தலைவர்கள் (நாளா 24). சங்கத்தின் தலைவர்கள் (அப் 5:21). இந்தச் சங்கம் ஆலோசனைச் சங்கம் (Sanhedrin) என்று அழைக்கப்பட்டது.

"வேதபாரகர்" - வேதாகமத்தில் 20 இடங்களில் வேதபாரகரைப் பற்றி குறிப்புள்ளது. பூர்வகாலத்தில் இவர்கள் ராஜாக்களுக்குக் காரியதரிசிகளாகப் பணிபுரிந்தார்கள் (2சாமு 8:17; 2சாமு 20:25; 2இராஜா 12:10; 2இராஜா 22:3-12). பின்பு, வேத வாக்கியங்களைப் பிரதி எடுப்பதற்கும், வியாக்கியானம் பண்ணுவதற்கும் இவர்களைப் பயன்படுத்தினார்கள். எல்லா ஆவணங்களையும் இவர்கள் பாதுகாக்க வேண்டும். இஸ்ரவேலின் சட்டங்கள் இவர்களுக்கு நன்றாகத் தெரியும். இவர்கள் வழக்கறிஞர்களாகவும் பள்ளி ஆசிரியர்களாகவும் பணிபுரிந்தார்கள் (எஸ்றா 7:6-21; நெகே 8:1-13; மத் 23:2-34; மாற்கு 9:11; மாற்கு 14:43; மாற்கு 15:1; லூக்கா 5:17; லூக்கா 22:66; லூக்கா 23:10; அப் 4:5; அப் 5:34; 1தீமோ 1:7)

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 2

"யூதேயா தேசத்திலுள்ள பெத்லகேமே, யூதாவின் பிரபுக்களில் நீ சிறியதல்ல; என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும் பிரபு உன்னிடத்திலிருந்து புறப்படுவார்" (மத் 2:6; மீகா 5:2)

மத்தேயு - தொகுப்புரை

2 அதிகாரம்

"என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும் பிரபு" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையிலிருந்து நித்திய காலமாக அவர் இஸ்ரவேலையும், மற்ற தேசங்களையும் ஆளுகை செய்வார். (ஏசா 9:6-7; தானி 2:44-45; தானி 7:13-14,27; சக 14; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 20:1-15; வெளி 22:4-5)

"இஸ்ரவேல" - இஸ்ரவேல ஜனத்தையும் யூத ஜனத்தையும் குறிக்கும்.

"நீங்கள் போய், பிள்ளையைக்குறித்துத் திட்டமாய் விசாரியுங்கள்; நீங்கள் அதைக் கண்ட பின்பு, நானும் வந்து அதைப் பணிந்துகொள்ளும்படி எனக்கு அறிவியுங்கள் என்று கூறி சாஸ்திரிகளை ஏரோது அனுப்பினான். ஆனால் அவன் சொன்ன பிரகாரம் அவர்கள் போகவில்லை. அவர்கள் தீர்க்கதரிசனத்தைப் பின்பற்றாமல் நட்சத்திரத்தைப் பின்பற்றினார்கள். நட்சத்திரம் அவர்களை இயேசு பிறந்த இடமான நாசரேத்திற்கு அழைத்துச் சென்றது. (மத் 2:9)

"அவர்கள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டார்கள்" - இயேசு கிறிஸ்து மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார். இது பெத்லகேமில் இருந்தது. ஆனால் சாஸ்திரிகளோ நாசரேத்திலுள்ள ஒரு வீட்டிற்கு வந்தார்கள். இயேசு கிறிஸ்து பிறந்து இரண்டு வருஷங்களுக்குப் பின்பு சாஸ்திரிகள் இயேசுவைப் பணிந்து கொள்ள வருகிறார்கள். இயேசு கிறிஸ்து பிறந்து 41 நாட்களுக்குப் பின்பு காத்தரிடத்தில் அவரை பிரதிஷ்டை பண்ணினார்கள் (லூக்கா 2:7,21-39). அதன்பின்பு இயேசு நாசரேத்தில் வளர்ந்து வந்தார்.

"சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்துகொண்டார்கள்" - தேவனை மட்டுமே நாம் ஆராதிக்க வேண்டும். இந்த வசனத்தில் இயேசு கிறிஸ்துவின் தெய்வ தத்துவம் வலியுறுத்தப்படுகிறது. (வெளி 19:10; வெளி 22:8-9; லூக்கா 2:13)

"சொப்பனத்தில் தேவனால் எச்சரிக்கப்பட்டார்கள்" - புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டிருக்கும் 6 சொப்பனங்களில் இது இரண்டாவது சொப்பனமாகும். (மத் 1:20)

5. இயேசு கிறிஸ்துவின் குழந்தைப் பருவம்

(1) எகிப்திற்குப் பிரயாணம்

மத் 2:13 அவர்கள் போனபின்பு, கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் யோசேப்புக்குக் காணப்பட்டு: ஏரோது பிள்ளையைக் கொலைசெய்யத் தேடுவான்; ஆதலால் நீ எழுந்து பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்கு ஓடிப்போய், நான் உனக்குச் சொல்லும் வரைக்கும் அங்கே இரு என்றான்.

மத் 2:14 அவன் எழுந்து இரவிலே பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு, எகிப்துக்குப் புறப்பட்டுப்போய்,

மத் 2:15 ஏரோதின் மரணபரியந்தம் அங்கே இருந்தான். எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன் என்று தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தரால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.

தீர்க்கதரிசன எண் - 2

"ஏரோது பிள்ளையைக் கொலைசெய்யத் தேடுவான்...." (மத் 2:13) - இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

இயேசு கிறிஸ்து ஸ்திரீயின் வித்து. அவர் சாத்தானின் தலையை நசுக்குவார். மனுஷருக்கு இரட்சிப்பைக் கொடுப்பார் என்னும் காரியங்கள் சாத்தானுக்கு நன்றாகத் தெரியும். (ஆதி 3:15; 1யோவான் 3:8) ஆகையினால், இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையிலே மரித்து தன்னை பலியிடுவதற்கு முன்பாகச் சாத்தான் இயேசுவைப் பலமுறை கொலைபண்ணுவதற்கு முயற்சி பண்ணினான். (மத் 26:3; கொலோ 2:14-17; 1பேதுரு 2:24)

2 அதிகாரம்

"இரவிலே" - நாசரேத்திலே சாஸ்திரிகள் வந்து இயேசுவைப் பணிந்து கொண்டவுடன் உடனடியாக நடைபெற்ற காரியம் அவர்கள் பெத்லகேமில் இருந்திருப்பார்கள் என்றால் எகிப்திற்குப் போவதற்கு முன்பாக அவர்களால் நாசரேத்திலுள்ள ஒரு வீட்டில் குடியிருந்திருக்க முடியாது. (லூக்கா 2:39) சாஸ்திரிகள் ஏரோதின் கட்டளைப் பிரகாரம் பெத்லகேமிற்குச் சென்றார்கள் என்று வேதத்தில் குறிப்பிடப்படவில்லை. நட்சத்திரம் அவர்களை மாட்டுத் தொழுவத்திற்கு அழைத்துச் சென்றது என்றும் வேதம் கூறவில்லை.

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 3

"எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன்" - மத் 2:15 (ஓசி 11:1)

(2) பிள்ளைகள் கொல்லப்பட்டார்கள் - இயேசுவைக் கொல்வதற்கு நடந்த முதலாவது சதி - மத் 26:3)

மத் 2:16 அப்பொழுது ஏரோது தான் சாஸ்திரிகளால் வஞ்சிக்கப்பட்டதைக் கண்டு, மிகுந்த கோபமடைந்து, ஆட்களை அனுப்பி, தான் சாஸ்திரிகளிடத்தில் திட்டமாய் விசாரித்த காலத்தின்படியே, பெத்லகேமிலும் அதின் சகல எல்லைகளிலுமிருந்த இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண் பிள்ளைகளையும் கொலை செய்தான்.

மத் 2:17 புலம்பலும் அழுகையும் மிகுந்த துக்கங்கொண்டாடலுமாகிய கூக்குரல் ராமாவிலே கேட்கப்பட்டது. ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது, அவைகள் இல்லாதபடியால் ஆறுதலடையாதிருக்கிறாள் என்று,

மத் 2:18 எரேமியா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது அப்பொழுது நிறைவேறிற்று.

"வஞ்சி" - ஏரோதின் கட்டளைப் பிரகாரம் சாஸ்திரிகள் பெத்லகேமிற்குச் செல்லவில்லை. அவர்கள் ஏரோதை வஞ்சித்தார்கள். ஏரோதின் தீய நோக்கம் அவர்களுக்குத் தெரிந்திருந்தது. வஞ்சித்தல் என்னும் இதே சொல் மத் 27:29-31; லூக்கா 18:32 ஆகிய வசனங்களிலும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

வஞ்சி (mocked) - ἐμπαίζω - **empaizoo** - 1702

வினைச்சொல் - வஞ்சி, பரியாசம் பண்ணு

"தான் சாஸ்திரிகளிடத்தில் திட்டமாய் விசாரித்த காலத்தின்படியே.....இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண்பிள்ளைகளையும் கொலை செய்தான்" - சாஸ்திரிகள் இயேசுவை அவர் சிறுபிள்ளையாக "பைதியோன்" ஆக இருந்தபோது கண்டார்கள். சிறுபிள்ளை என்பதன் கிரேக்க சொல் "பைதியோன்" (paidion) (மத் 2:9) பிறந்த குழந்தையைக் குறிக்கும் கிரேக்கச்சொல் "பிரபோஸ்" (brephos). மேய்ப்பர்கள் இயேசு பிறந்தபோது அந்த குழந்தையை "பிரபோஸ்" ஆக கண்டார்கள் (லூக்கா 2:16).

சிறுபிள்ளை (young child) - παιδίον - **paidion** - 3813

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பாலகன், சிறுபிள்ளை

குழந்தை (babe) - βρέφος - **brephos** 1025

பால் வேறுபாடற்றப் பெயர்ச்சொல் - பிள்ளை, குழந்தை

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 4

"புலம்பலும் அழுகையும் மிகுந்த துக்கங்கொண்டாடலுமாகிய கூக்குரல் ராமாவிலே கேட்கப்பட்டது. ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது, அவைகள் இல்லாதபடியால் ஆறுதலடையாதிருக்கிறாள்" - (மத் 2:18; எரே 31:15)

மத்தேயு - தொகுப்புரை

2 அதிகாரம்

ராமா எருசலேமிலிருந்து 5 மைல் தூரத்தில் இருந்தது. ஏரோது பெத்லகேமைச் சுற்றிலும் 10 மைல் தூரத்திலுள்ள 2 வயதிற்குட்பட்ட எல்லா ஆண்பிள்ளைகளையும் கொலை செய்தான். எருசலேம் பட்டணமும் இந்தத் தூரத்திற்குள் வருகிறது.

(3) எகிப்திலிருந்து திரும்பி வருதல் - (லூக் 2:39; ஓசி 11:1)

மத் 2:19 ஏரோது இறந்தபின்பு, கர்த்தருடைய தூதன் எகிப்திலே யோசேப்புக்குச் சொப்பனத்தில் காணப்பட்டு,

மத் 2:20 நீ எழுந்து, பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு இஸ்ரவேல் தேசத்துக்குப் போ; பிள்ளையின் பிராணனை வாங்கத்தேடினவர்கள் இறந்துபோனார்கள் என்றான்.

மத் 2:21 அவன் எழுந்து பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு இஸ்ரவேல் தேசத்துக்கு வந்தான்.

மத் 2:22 ஆகிலும், அர்கெலாயு தன் தகப்பனாகிய ஏரோதின் பட்டத்துக்கு வந்து, யூதேயாவில் அரசாளுகிறான் என்று கேள்விப்பட்டு, அங்கே போகப் பயந்தான்; அப்பொழுது, அவன் சொப்பனத்தில் தேவனால் எச்சரிக்கப்பட்டு, கலிலேயா நாட்டின் புறங்களிலே விலகிப்போய்,

மத் 2:23 நாசரேத்து என்னும் ஊரிலே வந்து வாசம்பண்ணினான். நசரேயன் என்னப்படுவார் என்று, தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.

"கர்த்தருடைய தூதன் எகிப்திலே யோசேப்புக்குச் சொப்பனத்தில் காணப்பட்டான்" - யோசேப்பிற்கு சொப்பனத்தில் தூதன் மொத்தம் 4 முறை வந்தான். அவற்றுள் இது மூன்றாவது முறையாகும். (மத் 1:20; மத் 2:13)

"இஸ்ரவேல் தேசம்" - மத் 2:20-21 ஆகிய வசனங்களில் இஸ்ரவேல் தேசம் என்று இரண்டு முறை அழைக்கப்பட்டிருக்கிறது. அப் 10:39-இல் யூதருடைய தேசம் என்று அழைக்கப்படுகிறது. யூதரும் இஸ்ரவேலரும் ஒரே ஜனமே. மற்ற கோத்திரத்தாரும் அறியப்பட்டிருந்தார்கள் (மத் 19:28; அப் 26:7; யாக் 1:1)

"அவன் எழுந்து பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு இஸ்ரவேல் தேசத்துக்கு வந்தான்" - யோசேப்பு தேவனுடைய எல்லா கட்டளைகளுக்கும் அப்படியே கீழ்ப்படிந்தான். அவன் தேவபக்தியுள்ளவன். நீதிமான். கர்த்தருக்குப் பூரணமாகக் கீழ்ப்படிகிறவன்.

"கலிலேயா" - சமாரியாவின் வடக்குப்பகுதி

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 5

"நாசரேத்து என்னும் ஊரிலே வந்து வாசம்பண்ணினான். நசரேயன் என்னப்படுவார் என்று தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது" (மத் 2:23) உரைக்கப்பட்டது இந்தத் தீர்க்கதரிசனத்தை எந்த தீர்க்கதரிசியும் எழுதி வைக்கவில்லை.

3 அதிகாரம்

II. யோவான் ஸ்நானனின் ஊழியம் - (11:2; மாற்கு 1; லூக் 3 யோவான் 1:6,15,19; 3:23)

1. மூன்று அம்ச செய்தி

மத் 3:1 அந்நாட்களில் யோவான்ஸ்நானன் யூதேயாவின் வனாந்தரத்தில் வந்து,

மத் 3:2 மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான்.

மத் 3:3 கர்த்தருக்கு வழியை ஆயத்தப் படுத்துங்கள் அவருக்குப் பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டென்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்டவன் இவனே.

"யோவான்" - சகரியா எலிசபெத் ஆகியோரின் குமாரன் (லூக்கா 1:5-20,39-80)

"ஸ்நானன்" - ஞானஸ்நானம் கொடுக்கிறவன் (யோவான் 1:31)

"யூதேயாவின் வனாந்தரத்தில் பிரசங்கித்தான்" தீர்க்கதரிசனத்தின் ஒரு பகுதி பிரசங்கம் பண்ணுதல் (1கொரி 14:3) யோவான் ஸ்நானன் பெரிய தீர்க்கதரிசி (மத் 11:9-11) அவன் பல காரியங்களை முன்னறிவித்தான் (மத் 3:2-3,11-12; யோவான் 1:29-33 யோவான் 3:30)

யோவான் ஸ்நானனின் உபதேசங்கள்

1. மனந்திரும்புதல் (மத் 3:2-8; மாற்கு 1:4
2. பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது (மத் 3:2
3. தீர்க்கதரிசனம் (மத் 3:3-12; யோவான் 1:15-34)
4. தண்ணீர் ஞானஸ்நானம் (மத் 3:11, யோவான் 1:31)
5. மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிதருதல் (மத் 3:8; லூக்கா 3:8
6. தேவபக்தி (மத் 3:3-10; மத் 14:4
7. வரப்போகிற கோபாக்கினை (மத் 3:7 லூக்கா 3)
8. பெருமைக்கு எதிராக (மத் 3:9 லூக்கா 3:7)
9. அறப்புதங்கள் (மத் 3:9; லூக்கா 3:8)
10. பரலோகமும், நரகமும் (மத் 3:10-12 லூக்கா 3)
11. பரிசுத்த ஆவியில அபிஷேகம் (மத் 3:11; யோவான் 1:33)
12. கிறிஸ்துவின் முதலாம வருகை (மத் 3:11; யோவான் 1:29)
13. கிறிஸ்துவின இரண்டாம் வருகை (மத் 3:12; லூக்கா 3:17)
14. பாவத்தின நியாயத்தீர்ப்பு (மத் 3:10 லூக்கா 3)
15. இரட்சிப்பு (லூக்கா 3:6, யோவான் 1:29
16. பிறர்மீது அன்பாக இருப்பது (லூக்கா 3:11)
17. தொழிலில் நேர்மை (லூக்கா 3:13
18. நீதி (லூக்கா 3:14)
19. இயேசு - தேவ ஆட்டுக்குட்டி (யோவான் 1:29
20. இயேசு - பரிசுத்தஆவியில் அபிஷேகம் பண்ணுகிறவர் (மத் 3:11; மாற்கு 1:8; லூக்கா 3:16, யோவான் 1:33)
21. இயேசு - தேவனுடைய குமாரன் (யோவான் 1:34
22. இயேசு - பாவங்களைச் சுமக்கிறவர் (யோவான் 1:29
23. மனுஷனுடைய தகுதியினமை (யோவான் 1:27)

3 அதிகாரம்

24 இயேசு - மணவாளன் (யோவான் 3:29)

25 இயேசுவின் மாட்சிமை (யோவான் 3:30)

26 பரலோகத்திலிருந்து இயேசு (யோவான் 3:31-36)

27 இயேசுவை மறுதலித்தல் (யோவான் 3:32)

28 இயேசு - சத்தியம் (யோவான் 3:30-36)

29 இயேசு - அபிஷேகிக்கப்பட்டவர் (யோவான் 3:34)

30 இயேசு - தேவனுடைய சுதந்தரவாளி (யோவான் 3:35)

"பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" - (மத் 4:17; மத் 13:11)

"ஏசாயா" (Esaias) - புதிய ஏற்பாட்டில் 21 இடங்களில் இந்தப் பெயர் வருகிறது. (மத் 3:3; மத் 4:14, மத் 8:17; மத் 12:17 மத் 13:14, மத் 15:7; லூக்கா 3:4; லூக்கா 4:17 யோவான் 1:23, யோவான் 12:38-41 அப் 8:28-30; அப் 28:25; ரோமர் 9:27-29, ரோமர் 10:16,20, ரோமர் 15:12)

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 6

"கர்த்தருக்கு வழியை ஆயத்தப் படுத்துங்கள், அவருக்குப் பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம்" - (மத் 3:3, ஏசா 40:3; மல் 3:1)

2. யோவான் ஸ்நானனின் எளிய வாழ்வு - (மாற்கு 1:6; மத் 11:8)

மத் 3:4 இந்த யோவான் ஒட்டகமயிர் உடையைத் தரித்து, தன் அரையில் வார்க் கச்சையைக் கட்டிக் கொண்டிருந்தான்; வெட்டுக்கிளியும் காட்டுத் தேனும் அவனுக்கு ஆகாரமாயிருந்தது.

"ஒட்டகமயிர்" - 2இராஜா 1:8 தீர்க்கதரிசிகள் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மிகவும் முரடான வஸ்திரங்களை அணிந்தார்கள். இப்பேர்ப்பட்ட வஸ்திரங்கள் தீர்க்கதரிசிகளுக்கு அடையாளம். (சக 13:4, மத் 11:8)

"தன் அரையில் வார்க்கச்சையைக் கட்டிக்கொண்டிருந்தான்" - ஏழைகள் மட்டுமே அரையில் வார்க்கச்சைகளைக் கட்டுவார்கள். ஐசுவரியவான்கள் அரையில் மெல்லிய வஸ்திரங்களையும் பொன்னாலும் வெள்ளியாலும் அலங்கரிக்கப்பட்ட கச்சைகளையும் கட்டுவார்கள்.

"வெட்டுக்கிளியும் காட்டுத் தேனும்" - சுத்தமான உணவு (லேவி 11:22) வெட்டுக்கிளிகளை உலர வைத்து, உப்பிட்டு, தேனோடு சேர்த்து உண்பது ஏழைகளின் உணவுப் பழக்கம்.

3. ஊழியத்தின் வெற்றி - (மாற்கு 1:5; லூக் 3:7-15; யோவான் 1:19-28)

மத் 3:5 அப்பொழுது, எருசலேம் நகரத்தாரும், யூதேயா தேசத்தார் அனைவரும், யோர்தானுக்கு அடுத்த சுற்றுப்புறத்தார் யாவரும் அவனிடத்திற்குப் போய்,

மத் 3:6 தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

"ஞானஸ்நானம் பெற்றார்கள்" - முழுகுதல் லூக்கா 16:24, வெளி 19:13 யோவான் 13:26 பாடுகளில் மூழ்கியிருத்தல் (மத் 20:22-23; லூக்கா 12:50) அடக்கம் பண்ணுதல் (ரோமர் 6:3-7 கொலோ 2:12)

ஞானஸ்நானம் பெறு (baptized) - βαπτίζω - baptizoo - 907

வினைச்சொல் - முழுக்கு, கழுவு, ஞானஸ்நானம் பெறு, ஞானஸ்நானம் கொடு, ஸ்நானம் பண்ணு, கைகழுவு,

கழுவு - βάπτω baptoo 911

வினைச்சொல் - கழுவு

3 அதிகாரம்

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் ஏழு விதமான ஞானஸ்நானங்கள்

1 யோவான் ஸ்நானனின் தண்ணீர் ஞானஸ்நானம் (மத் 3; மாற்கு 1 லூக்கா 3; லூக்கா 7:29-30, யோவான் 1:31-33; யோவான் 3:23-26. யோவான் 10:40; அப 1:5; அப 11:16, அப 19:3

2 தண்ணீரில் கிறிஸ்துவின் ஞானஸ்நானம் (யோவான் 3:22 யோவான் 4:1-2

3 பாடுகளின் ஞானஸ்நானம் லூக்கா 12:50

4 மேகத்திலும். கடலிலும் ஞானஸ்நானம் (1கொரி 10:2

5 தண்ணீரில் விசுவாசிகளின் ஞானஸ்நானம் (மத் 28:19, மாற்கு 16:16; அப 2:38-41 அப 8:12-16,36-38; அப 9:18; அப 10:47-48; அப 16:15,33; அப 18:8 அப 19:5, அப 22:16; 1கொரி 1:13-17, 1பேதுரு 3:21

6 கிறிஸ்துவிற்குள்ளும், அவருடைய சரீரத்திற்குள்ளும் ஞானஸ்நானம் (ரோமர் 6:3-7; 1கொரி 12:13 கலா 3:27, கொலோ 2:12)

7 பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் (மத் 3:11,14; மத் 20:22-23; மாற்கு 1:8; மாற்கு 10:38-39 லூக்கா 3:16; யோவான்1:33; யோவான் 7:37-39; அப 1:5; அப 11:16, அப 19:2-3)

விசுவாசிகள் எடுக்க வேண்டிய ஞானஸ்நானம்

1 கிறிஸ்துவிலும் அவருடைய சரீரத்திற்குள்ளும்ஒருவர்மனந்திரும்பி புதிதாய் பிறக்கும்போது எடுக்க வேண்டிய ஞானஸ்நானம் இது ஒரே ஞானஸ்நானம் என்று அழைக்கப் படுகிறது (எபே 4:5) இந்த ஞானஸ்நானம் மட்டுமே ஒரு ஆத்துமாவை இரட்சிக்கும் அந்த ஆத்துமாவைக் கிறிஸ்துவின் சரீரத்திற்குள் கொண்டு வரும்.

2 ஒருவர் இரட்சிக்கப்பட்ட பின்பு எடுக்கும் தண்ணீர் ஞானஸ்நானம். (மத் 3:11)

3. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம். தெய்வீக வல்லமையடைய பெற்றுக் கொள்வதற்காக விசுவாசி இந்த ஞானஸ்நானம் பெறவேண்டும் தண்ணீர் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பாகவே (அப 10:44-48) அல்லது தண்ணீர் ஞானஸ்நானம் எடுத்த பின்போ (அப 1:4-8 அப 2:1-11 அப் 8:12-21; அப 19:1-7) ஒரு விசுவாசி பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்வார்

கிறிஸ்துவிற்குள்ளும் அவருடைய சரீரத்திற்குள்ளும் நமக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறவர் பரிசுத்த ஆவியானவர் (1கொரி 12:13)

பரிசுத்த ஆவியில் நமக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறவர் இயேசு கிறிஸ்து (மத் 3:11 யோவான் 1:31-33)

ஊழியக்காரர்கள் நமக்கு தண்ணீரில் ஞானஸ்நானம் கொடுக்கிறார்கள் (மத் 28:19)

4. பதினொன்று அம்சச் செய்தி

மத் 3:7 பரிசேயரிலும் சதுசேயரிலும் அநேகர் தன்னிடத்தில் ஞானஸ்நானம் பெறும்படி வருகிறதை அவன் கண்டு: விரியன் பாம்புக் குட்டிகளே வருங்கோபத்துக்குத் தப்பித்துக் கொள்ள உங்களுக்கு வகைகாட்டினவன் யார்?

மத் 3:8 மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்

மத் 3:9 ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லிக்கொள்ள நினையாதிருங்கள், தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்

மத்தேயு - தொகுப்புரை

3 அதிகாரம்

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் ஏழு விதமான ஞானஸ்நானங்கள்

1 யோவான் ஸ்நானனின் தண்ணீர் ஞானஸ்நானம் (மத் 3; மாற்கு 1 லூக்கா 3; லூக்கா 7:29-30, யோவான் 1:31-33; யோவான் 3:23-26, யோவான் 10:40; அப 1:5; அப 11:16, அப 19:3

2 தண்ணீரில் கிறிஸ்துவின் ஞானஸ்நானம் (யோவான் 3:22 யோவான் 4:1-2

3 பாடுகளின் ஞானஸ்நானம் லூக்கா 12:50

4 மேகத்திலும், கடலிலும் ஞானஸ்நானம் 1 கொரி 10:2

5 தண்ணீரில விசுவாசிகளின ஞானஸ்நானம் (மத் 28:19, மாற்கு 16:16; அப 2:38-41 அப 8:12-16,36-38; அப 9:18; அப 10:47-48; அப 16:15,33; அப 18:8 அப 19:5, அப 22:16; 1கொரி 1:13-17, 1 பேதுரு 3:21

6 கிறிஸ்துவிற்குள்ளும், அவருடைய சரீரத்திற்குள்ளும் ஞானஸ்நானம் (ரோமர் 6:3-7; 1கொரி 12:13 கலா 3:27, கொலோ 2:12)

7 பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் (மத் 3:11,14, மத் 20:22-23; மாற்கு 1:8; மாற்கு 10:38-39 லூக்கா 3:16; யோவான்1:33; யோவான 7:37-39; அப 1:5; அப 11:16, அப 19:2-3)

விசுவாசிகள் எடுக்க வேண்டிய ஞானஸ்நானம்

1 கிறிஸ்துவிலும் அவருடைய சரீரத்திற்குள்ளும்ஒருவர்மனந்திரும்பி புதிதாய் பிறக்கும்போது எடுக்க வேண்டிய ஞானஸ்நானம் இது ஒரே ஞானஸ்நானம் என்று அழைக்கப் படுகிறது (எபே 4:5) இந்த ஞானஸ்நானம் மட்டுமே ஒரு ஆத்துமாவை இரட்சிக்கும் அந்த ஆத்துமாவைக் கிறிஸ்துவின் சரீரத்திற்குள் கொண்டு வரும்.

மத் 3:10 இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது; ஆகையால், நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்.

மத் 3:11 மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன் எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்

மத் 3:12 தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால சுட்டெரிப்பார் என்றான்

"பரிசேயர்" யூதமார்க்கத்தில ஒரு பிரிவினர் மிகவும் வைராக்கியமானவர்கள் வேத வசனங்களைத் தங்களுடைய பாரம்பரியத்தின் பிரகாரமாகவும் கட்டளைகளின் பிரகாரமாகவும் வியாக்கியானம் செய்வார்கள் இவர்கள் கிறிஸ்துவின் விரோதிகள் (மத் 15:2, மத் 23:1-33; மாற்கு 7:8-13, லூக்கா 11:42, கலா 1:14 பிலி 3:4-6)

"சதுசேயர்கள்" யூதமார்க்கத்தில ஒரு பிரிவினர் மார்க்கத்தீவிரவாதிகள் தேவ தூதர்கள் பிசாசுகள் உயிர்த்தெழுதல ஆகியவை இல்லை என்கிறவர்கள் (மாற்கு 12:18 அப 4:1 அப 5:15-17 அப 23:8)

"விரியன்பாம்புக்குட்டிகளே" - சாதாரண பாம்புகள் அல்ல 4 அங்குல நீளமும், மிகவும் மெல்லியதாகவும் இருக்கும். கல் இடுக்குகளிலும் மணல்களிலும் புதைந்திருக்கும் கொடிய விஷம் உள்ளவை, (ஆதி 49:17; யோபு 20:16, ஏசா 59:5, அப 28:3)

மத்தேயு - தொகுப்புரை

3 அதிகாரம்

"மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள் - மனந்திரும்புதல் என்பது வாயினால் அறிக்கை பண்ணுவது மட்டுமல்ல வெளித்தோற்றத்தில் விசுவாசியைப்போல் இருந்தால் போதாது. நாம் உண்மையிலே மனந்திரும்பியிருக்கிறோம் என்பதை நிரூபிப்பதற்கு அதற்கேற்ற கனிகளை நமது ஆவிக்குரிய ஜீவியத்தின் மூலமாக வெளிப்படுத்த வேண்டும். லூக்கா 3:8-14 லூக்கா 19:8; 2கொரி 5:17; 2கொரி. 7:9-11)

தீர்க்கதரிசன எண் - 8

"இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது. ஆகையால் நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்" (மத் 3:10-12

இந்தத் தீர்க்கதரிசனத்தில் மூன்று அம்சங்கள் உள்ளன அவையாவன

1 நியாயத்தீர்ப்பு (மத் 3:10, மத் 7:15-23)

2 பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் (மத் 3:11; அப 1:4-8; அப 2:1-39 அப் 11:14-18

3 இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை (மத் 3:12; மத் 13:30, 39-43, 49-50, மத் 25:31-46)

"மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்" - இது தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறிக்கிறது. தண்ணீர் ஞானஸ்நானத்தின் மூலமாக இரட்சிப்பு வராது. இயேசு கிறிஸ்துவால் மட்டுமே ஒரு பாவியை மன்னித்து இரட்சிக்க முடியும்.

தண்ணீர் ஞானஸ்நானம் பாவமன்னிப்பு தராது என்பதற்குக் காரணங்கள்

1 "என்று" "unto" - இதன் கிரேக்கச்சொல் (eis). மாற்கு 1:4. லூக்கா 3.3; அப் 2:38 ஆகிய வசனங்களில் "இதனால், இதன் காரணத்தினால்" (because of, by reason of, on account of) என்று மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. "இதே நோக்கத்திற்காக" (for this same purpose) (ரோமர் 9:17 கொலோ 4:8), இந்த காரணத்திற்காக (for this purpose) (அப 26:16; 1யோவான் 3:8), "இதற்காக" (for that intent) (அப 9:21) என்று பொருள் படுகிறது. அதாவது "மனந் திரும்புதலுக்கென்று" என்னும் வாக்கியம் "மனந்திரும்புதலுக்காக" என்று பொருள்படும்

நோக்கி (unto) - εἰς - eis - 1519

முன்னிடைச்சொல் - நோக்கி, மூலம்

2 மனந்திரும்புதற்கு நாம் பாவஅறிக்கை செய்ய வேண்டும். இந்த அறிக்கையை நாம் தண்ணீரில் ஞானஸ்நானம் எடுப்பதற்கு முன்பாகவே செய்ய வேண்டும். (மத் 3:8,11; மாற்கு 1:5, லூக்கா 3:8-14)

3 விசுவாசிகள் மட்டுமே மனந்திரும்பிய பின்பு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து தண்ணீரில் ஞானஸ்நானம் பெற வேண்டும். (மத் 28:19, மாற்கு 16:16; அப் 2:28,41, அப 8:12-13,37, அப் 16:14-15,31-33; அப் 18:8 அப் 19:1-7)

சில வேளைகளில் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் பெற்ற பின்பு தண்ணீர் ஞானஸ்நானம் எடுக்கலாம். (அப 9:17 8 அப 10:44-48)

4 இயேசு கிறிஸ்து ஒரு பாவமும் செய்யவில்லை. ஆனாலும் தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார் இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு

3 அதிகாரம்

1 நீதியை நிறைவேற்ற வேண்டும் (மத் 3:15)

2 இஸ்ரவேலுக்கு வெளிப்படுத்த வேண்டும் (யோவான் 1:31)

5 தண்ணீர் ஞானஸ்நானம் என்பது மரணம், அடக்கம்பண்ணப்படுதல் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் அடையாளம் மட்டுமே (1பேதுரு 3:21)

6 இரட்சிப்பிற்கு தண்ணீர் ஞானஸ்நானம் தேவையில்லை (2கொரி 1:13-21)

7 இயேசு கிறிஸ்துவின் திருஇரத்தத்தில் நாம் வைக்கும் விசுவாசமே நமக்கு பாவமன்னிப்பு தரும். (மத் 26:28, ரோமர் 3:24-25; ரோமர் 4:1-25 ரோமர் 5:1-11; ரோமர் 8:2, ரோமர் 10:4-10, 1கொரி 15:1-5; எபே 1:7; எபே 2:8-9; கலா 3:19-29 யோவான் 3:16; அப் 10:43, அப் 13:38-39 1கொரி 1:18-21 1யோவான் 1:9 1யோவான் 5:1)

8 பழைய ஏற்பாட்டில பரிசுத்தவான்களும் யோவானும், லூக்கா 1:15,41 46,67, லூக்கா 2:25-38 ஆகிய வசனங்களில் குறிப்பிடப்பட்டோரும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் பெற்றவர்கள் அவர்கள் தண்ணீர் ஞானஸ்நானம் இல்லாமலேயே இரட்சிக்கப்பட்டார்கள்

9 தண்ணீர் ஞானஸ்நானம் இல்லாமலே கிறிஸ்து பாவிகளை இரட்சித்தார் (மத் 9:1-7 லூக்கா 7:36-50; லூக்கா 18:9-14 லூக்கா 19:1-9 லூக்கா 23:43 யோவான் 4:49-53 யோவான்7:31, யோவான் 8:30-31 யோவான் 11:45; யோவான் 12:11,42, அப் 3:1-11,16; அப் 4:10-12)

10 மாம்சத்தின் அசுத்தங்களைத் தண்ணீர் ஞானஸ்நானம் கழுவாது (1பேதுரு 3:21)

"அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்" (யோவான் 7:37-39 அப் 1:4-8

"தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது" (லூக்கா 3:17

"அவியாத அக்கினி" - (மத் 8:12 மத் 13:42-50; மத் 18:8-9; மத் 24:51, மத் 25:41,46; மாற்கு 9:43-49; வெளி 14:9-11; வெளி 20:11-15; வெளி 21:8 ஏசா 66:22-24)

III. இயேசுவின் ஊழிய ஆயத்தம் - (மாற்கு 1:9; லூக் 3:21; யோவான் 1:31)

1. தண்ணீர் ஞானஸ்நானம்

மத் 3:13 அப்பொழுது யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவைவிட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார்

மத் 3:14 யோவான் அவருக்குத் தடை செய்து: நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்றான்

மத் 3:15 இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது இடங்கொடு; இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான்

"நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க நீர் என்னிடத்தில் வரலாமா என்றான்" இயேசு கிறிஸ்துவினால் யோவான் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் பெறவேண்டுமென்று விரும்பினான் யோவான் 1:31-34 யோவான் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டான் (லூக்கா 1:15) கிறிஸ்து மகிமை அடையும் வரையிலும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் கொடுக்கப்படவில்லை (யோவான் 7:37-39 அப் 1:4-8 அப் 2:33-34; அப் 11:16)

"எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது" கிறிஸ்துவையும் யோவானையும் தேவன் அனுப்பினார் அவர்கள் எதற்காக அனுப்பப்பட்டார்களோ அந்த நோக்கங்களை நிறைவேற்ற வேண்டும்.

3 அதிகாரம்

2. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் - (20:22; மாற்கு 1:10; லூக் 3:22; 4:18; யோவான் 1:32, 33; அப் 10:38; ஏசா 11:2; 42:1; 61:1; வெளி 1:4; 3:1; 5:6)

மத் 3:16 இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது. தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார்.

மத் 3:17 அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது.

"இயேசு ஞானஸ்நானம் பெற்று ஜலத்திலிருந்து கரையேறினவுடனே" (மத் 3:16) "அவர் ஜலத்திலிருந்து கரையேறினவுடனே" மாற்கு 1:10 "பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங்கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறின பொழுது .." (அப் 8:38-39) ஆகிய வாக்கியங்கள் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுப்பதை வலியுறுத்துகின்றன.

"இவர் என்னுடைய நேசகுமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன்" இயேசு கிறிஸ்துவைத் தேவன் தமது சொந்த குமாரனாக அங்கீகாரம் பண்ணுகிறார் (மத் 17:5; யோவான் 12:28; எபி 1:1-4)

4 அதிகாரம்

3. சோதனை - மாற்கு 1:12 லூக் 4:1 எபி 2:9-18 4:14 5:9)

மத் 4:1 அப்பொழுது இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டார்.

மத் 4:2 அவர் இரவும் பகலும் நாற்பது நாள் உபவாசமாயிருந்தபின்பு, அவருக்குப் பசியுண்டாயிற்று.

மத் 4:3 அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து: நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான்.

மத் 4:4 அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்.

மத் 4:5 அப்பொழுது பிசாசு அவரைப் பரிசுத்த நகரத்திற்குக் கொண்டுபோய், தேவாலயத்து உப்பரிகையின்மேல் அவரை நிறுத்தி:

மத் 4:6 நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும்; ஏனெனில், தம்முடைய தூதர்களுக்கு உம்மைக்குறித்துக் கட்டளையிடுவார், உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறது என்று சொன்னான்.

மத் 4:7 அதற்கு இயேசு: உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே என்றார்.

மத் 4:8 மறுபடியும், பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து:

மத் 4:9 நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, [redacted] பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான்.

மத் 4:10 அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்.

மத் 4:11 அப்பொழுது பிசாசானவன் அவரை விட்டு விலகிப்போனான். உடனே தேவதூதர்கள் வந்து அவருக்குப் பணிவிடை செய்தார்கள்.

"இயேசுபிசாசினால் சோதிக்கப்படுவதற்கு" - தேவன் ஆதாமைச் சோதித்ததுபோல பிசாசு இயேசு கிறிஸ்துவைச் சோதித்தான் (ஆதி 3:6 1யோவான் 2:15-17 1கொரி 15:45)

"இரவும் பகலும் நாற்பதுநாள்" - யோவான் 1:19-2:1 ஆகிய வசனங்கள் கூறப்பட்டிருக்கிறகாரியங்களநடைபெறுவதற்கு முன்பாக நாற்பது நாள் உபவாசம் இருக்கிறது

நாற்பது நாட்கள் உபவாசம் பண்ணியவர்கள்

1 மோசே (உபா 9:9,18,25 உபா 10:10)

2 யோசுவா (யாத் 24:13-18 யாத் 32:15-17)

3. எலியா (1இராஜா 19:7-18)

4. இயேசு (மத் 4:1-11; லூக்கா 1:1-22

"பின்பு, அவருக்குப் பசியுண்டாயிற்று" ஒருசில நாட்கள் உபவாசம் பண்ணியபிறகு பசி வராது. முதலில் பசிக்கும். பின்பு பசிக்காது. நாற்பது நாட்கள் சென்ற பின்பு மறுபடியும் பசியுண்டாகும். அந்நாட்களில் சரீரத்திலுள்ள எல்லா விஷங்களும் வெளியேறும். நமது மூச்சுக்காற்று சிறுபிள்ளையின் சுவாசத்தைப் போன்று நறுமணத்துடன் இருக்கும். சாதாரண சரீர ஆரோக்கியத்தில் இருக்கிற யாரும் எவ்வித பிரச்சனைகளும் இல்லாமல் நாற்பது நாட்களுக்கு உபவாசம் இருக்க முடியும். பசியுண்டான பிறகு சாப்பிடாமல் இருப்பது பட்டினியாயிருப்பதாகும். நீண்ட நாட்கள் உபவாசம் இருக்கிறவர்கள் தண்ணீரைப் பருகிக்கொள்ளலாம். உபவாசம் முடிந்தபின்பு உடனடியாக அதிகளவு உணவு உட்கொள்ளக் கூடாது. உணவு உட்கொள்வதைச் சிறிது சிறிதாகக் கூட்டிக் கொள்ள வேண்டும்.

மத்தேயு - தொகுப்புரை

4 அதிகாரம்

"எழுதியிருக்கிறதே" - இயேசு கிறிஸ்து அபிஷேகம் பண்ணப்பட்ட பிறகு கூறிய முதலாவது வாக்கியம். இயேசு கிறிஸ்து சோதிக்கப்படுவதில் இரண்டு பிரிவுகள் உள்ளன. ஒவ்வொன்றிலும் மூன்று சோதனைகள் வரும். முதலாவது மூன்று சோதனைகள் லூக்கா 4:1-13-இல் நாம் வாசிக்கலாம். அதன்பின்பு "சிலகாலம் பிசாசு அவரைவிட்டு விலகிப் போனான்". அடுத்த மூன்று சோதனைகளை மத் 4:1-11 ஆகிய வசனங்களில் நாம் வாசிக்கலாம். இந்த சோதனைக்குப் பின்பு இயேசு கிறிஸ்து பிசாசானவனை "அப்பாலே போ சாத்தானே" என்று கூறி துரத்திவிட்டார். அதன்பின்பு பிசாசு இயேசுவைச் சோதிக்க வரவில்லை.

"மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" - உபா 8:3-ஆவது வசனத்தின் மேற்கோள்.

"தேவாலயத்து உப்பரிகை" - தரையிலிருந்து 700 அடி உயரமுள்ள இடம்.

"தம்முடைய தூதர்களுக்கு உம்மைக்குறித்துக் கட்டளையிடுவார். உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள்" - சங் 91:11-12 ஆகிய வசனங்களை முழுவதுமாக மேற்கோளாகக் கூறுவதற்குப் பதிலாக அரைகுறையாகவும் தவறாகவும் இங்கு பிசாசானவன் மேற்கோளாகக் கூறுகிறான்.

"உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக" - உபா 6:16 ஆவது வசனத்தின் மேற்கோள்.

"உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும்" - சாத்தான் இந்த உலகத்தின் அதிபதி (யோவான் 8:44; யோவான் 12:31; யோவான் 14:30; 2கொரி 4:4; எபே 2:1-3; 1யோவான் 5:19).

"நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால்" - என்னை ஆராதனை செய்து, எனக்குக் கீழ்ப்படிந்து, என்னை மகிமைப்படுத்தவேண்டும் என்று பொருள்படும்.

"உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக" - உபா 6:13-ஆவது வசனத்தின் மேற்கோள்.

பிசாசு இயேசுவைச் சோதித்த விதங்கள்

1. உமது அற்புத வல்லமைகளைப் பயன்படுத்தி என்னுடைய கட்டளைகளின் பிரகாரம் உமது சாதாரண அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும்.

2. நீர் தேவனுடைய குமாரன் என்பதைத் தேவனுடைய விசேஷித்த பாதுகாப்பை வெளிப்படுத்தி நிரூபித்துக் காண்பியும்.

3. இந்த உலகத்தில் எனக்குள்ள அதிகாரம் செல்வாக்கு ஆகியவற்றை நீர் பயன்படுத்தி எனக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

IV. இயேசு கிறிஸ்துவின் ஊழியமும் உபதேசமும் - (4:12-26; மாற்கு 1:14; லூக் 4:14; யோவான் 1:35)

1. [redacted] ஊழியத்தை ஆரம்பிக்கிறார் - (மாற்கு 1:14; லூக் 4:14)

மத் 4:12 யோவான் காவலில் வைக்கப்பட்டான் என்று இயேசு கேள்விப்பட்டு, கலிலேயாவுக்குப் போய்,

"யோவான் காவலில் வைக்கப்பட்டான்" - (மத் 11:1-14)

2. நாசரேத்தில் உள்ளவர்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ளவில்லை. கப்பர்நகூமிற்குச் செல்கிறார் - (லூக் 4:28)

மத் 4:13 நாசரேத்தை விட்டு, செபுலோன் நப்தலி என்னும் நாடுகளின் எல்லைகளிலிருக்கும் கடற்கரைக்கு அருகான கப்பர்நகூமிலே வந்து வாசம்பண்ணினார்.

4 அதிகாரம்

மத் 4:14 கடற்கரையருகிலும் யோர்தானுக்கு அப்புறத்திலுமுள்ள செபுலோன் நாடும் நப்தலி நாடும் ஆகிய புறஜாதியாருடைய கலிலேயாவிலே

மத் 4:15 இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள் மரண இருளின் திசையில் இருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது என்று.

மத் 4:16 ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.

"கப்பர்நகூம்" - பழைய ஏற்பாட்டில் இந்த ஊரின் பெயர் குறிப்பிடப்படவில்லை (மத் 1:23)

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 7

"இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள் மரண இருளின் திசையில் இருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது (மத் 4:14-16, ஏசா 9:1-2)

"நப்தலி" - (ஆதி 49:21; யோசு 19:32)

வெளிச்சம் (light) - φῶς - phoos - 5457

பால வேறுபாடற்ற பொதுச்சொல் பிரகாசம். வெளிச்சம் (underived and absolute light—the opposite of all darkness) குறிப்பாக தேவனையும், (1தீமோ 6:16, 1யோவான் 1:5) கிறிஸ்துவையும் (யோவான் 1:4-10) குறிக்கும் சொல்

3. **இராஜ்ஜியத்தைப் பற்றி பிரசங்கம் பண்ணுகிறார்** - (மத் 4:23; 10:7; 24:14, மாற்கு 1:15)

மத் 4:17 அதுமுதல் இயேசு, மனந்திரும்புங்கள் பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்

"மனந்திரும்புங்கள்" - வேதாகமத்தில் மனந்திரும்புங்கள் என்பது மிகவும் முக்கியமான சத்தியம். ஆதி 6:6 வசனத்திலிருந்து வெளி 16:11 வசனம் வரையிலும் மனந்திரும்புங்கள் என்னும் வாக்கியம் 110 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

"மனந்திரும்புங்கள்" என்னும் வாக்கியத்தின் மூலபாஷைச் சொற்கள்

1 மனஸ்தாபப்படு (to sigh) - נָחַם - naw-kham' - 5162

வினைச்சொல் - மனஸ்தாபமாயிரு, மனஸ்தாபப்படு, ஆறுதல் அடை, மனம்மாறு, தேற்றப்படு, பொறு, பரிதாபங்கொள், பரிதபி, துக்கம் ஆறு, மனம்பிடி, பிரியப்படு, தேற்று, ஆறுதல்செய், ஆறுதல் சொல்லு, தேற்றரவாயிரு, தேற்றரவுபண்ணு, ஆற்று, ஆறுதலாகஇரு, தேற்றரவு, பரிதாபப்படு (breathe strongly, to be sorry) (ஆதி 6:6; யாத் 13:17, யோபு 42:6, யோனா 3:9)

2 திரும்பு (to turn back) - שׁוּב - shoob - 7725

வினைச்சொல் - திரும்பு, திரும்பப்போ, திரும்பவா, பின்வாங்கு, திரும்பு வா, அளி, மனந்திரும்பு, சாய், மாற்று, ஆறு, மாறு, நீங்கு, வருத்திக்கொள், வற்றிப்போ, தணி, புரள், விலகு, தீர், தீர், மறுபடியும்போ, விடு, திரும்பிச்சேர், அழைத்துக்கொள், திரும்பப்பண்ணிவிடு, வை, செல், திரும்பக்கிடை, சீர்ப்படு, திரும்ப சீர்ப்படு, திரும்ப முன் போலிரு, பின்செல், விலகிப்போ, உட்திரு, கொண்டுவா, தள்ளப்படு, சரிக்கட்டு, பின்னிட்டுப்போ, திரும்பிவிடு, கூடு, கிடை, திரும்பவிழு, பின்னிடை, யாகும், திருப்பப்படு, மாற்றாட்டம் பண்ணு, இன்னமும், திரும்புகிறவர், வரவு, கெடு, நடு, அலையவிடு, பிடுங்கு, தேற்று, திருத்துகிறவன், திரும்பவும், தா, திருப்பப் போடும்படிசெய், அனுப்பிவிடு, திரும்ப அனுப்பு, திரும்பப்பண்ணு, திருப்பிக்கொள், திருப்பிக் கொண்டு வந்தவன், திரும்பவை, செலுத்து, திரும்பச் சோத்துக் கொள், பலனளி, நீக்கிவிடு, முடக்கிக்கொள்,

4 அதிகாரம்

விலக்கு. கொண்டு போ பாவநிவர்த்தி செய் கொடுத்துவிடு. சேர் திரும்ப அழைத்துவா எவ்விதத்திலும். முடக்கு மறுமொழி சொல் திரும்பத் தன் வசமாக்கிக்கொள் திரும்ப அழை மறுஉத்தரவுகொடு. திரும்பச்சொல்லு. மறுமொழியாகச் சொல்லு. மறு திரும்ப எடு. காப்பாற்று. திரும்ப எழுப்பு. திரும்ப போடு திரும்ப அழைத்துக்கொண்டுவா தப்பவி. கிடைக்கும்படி செய். திரும்பிக் கொண்டுவா.கொடு.மறி.திரும்பப்பவி. மறுபடியும் அழைத்துப்போ மறுபடியும் வை. கொண்டுவந்திரு சாக்குச் சாக்கட்டு. தெரிவி. எடுத்துக்கொள் திரும்பப்போகட பண்ணு வாங்கு திரும்ப நிறுத்து. எடு திரும்ப பிடி மறுமொழி. அறுப்பு தடைபண்ணு. எழுப்பு. மறுஉத்தரவு, கொடுக்க ஏவு ஒப்புக்கொடு. மறுஉத்தரவு சொல்லு. பிரதியுத்தரமசொல், மழுக்கப் போடு திரும்பச் சீரப்படுத்து. மறுபடியும் அழைப்பி. உருட்டு குளிரப்பண்ணு. தடு. திரும்பக் கட்டளையிடு திரும்ப நடத்திக் கொண்டுபோ உத்தரவு சொல் திரும்ப உள்ளேவாங்கிக் கொள் திரும்ப அழைத்துப்போ ஆறுதல் செய். ஆகப்பண்ணு. திரும்பக்கொண்டு வா திரும்பப்பாடு (இராஜா 8:47 எசே 14:6)

3 இரக்கம் (regret) - נֹחַם - no'-kham - 5164

ஆண்பால் பெயர்ச்சொல் - இரக்கம் மனதுருக்கம் (ஓசி 13:14)

4. பரிதாபம் (compassion) - נִחוּם - nee-khoom', nee-khoom' - 5150

ஆ.பெ.சொ - ஆறுதல், பரிதாபம் (ஓசி 11:8)

5 மனந்திரும்பு (to change the mind) μετανοέω metanoeoo 3340

வினைச்சொல் - மனந்திரும்பு, மனஸ்தாபப்படு, பாவத்தைக் குறித்த நமது எண்ணத்தை மாற்றுதல் (to change the attitude toward sin) (லூக்கா 13:3)

6 மனம் மாறாமலிரு - μεταμέλομαι metameloma**ı** - 3338

வினைச்சொல் - மனஸ்தாபப்படு. மனம் மாறாமலிரு (to regret consequences of sin, not the cause) (மத் 27:3; 2கொரி 7:8)

7 மனம் மாறுதல் (change of mind) - μετάνοια - metanoia - 3341

பெண்பால் பெயர்ச்சொல் - மனந்திரும்புதல் மனஸ்தாபப்படுதல் மனம் மாறுதல் (real change of mind and attitude toward sin and its cause, not merely the consequences of it) (மத் 3:8,11; மத் 9:13; லூக்கா 24:47)

பரலோக இராஜ்ஜியம் சமீபித்திருக்கிறது

இந்தவாக்கியத்திருக்குபரலோகத்திலிருந்து ஆளுகை செய்யப்படும் இராஜ்ஜியம் என்று பொருள் தேவனுடைய இராஜ்ஜியத்தை மறுபடியும் ஸ்தாபிப்பது தேவனுடைய நோக்கம். இயேசு கிறிஸ்து இந்த இராஜ்ஜியத்தை ஆளுகை செய்வார் தேவனுடைய இராஜ்ஜியம் என்னும் சத்தியம் மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் மட்டுமே காணப்படுகிறது. இந்த சுவிசேஷம் யெகோவாவை இராஜாவாகச் சித்தரிக்கிறது பரலோக இராஜ்ஜியம் என்பது காலங்களைக் குறிக்கும் ஒரு வாக்கியம். பூமியில் மேசியாவின் இராஜ்ஜியத்தை இந்த வாக்கியம் குறிக்கும். யோவானும், இயேசுவும் இந்த இராஜ்ஜியத்தைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள் (மத் 3:2; மத் 4:17, மத் 10:7) ஆனால் ஜனங்கள் இதை ஏற்றுக் கொள்ளவில்லை ஆகையினால் இயேசு கிறிஸ்து மறுபடியும் வந்து இந்த இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கும் வரையிலும் இக்காலம் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது (மத் 11:12,20-24 மத் 27:22-25 லூக்கா 19:11-27; அப் 1:6-7; அப் 3:19-26

4 அதிகாரம்

நாம் இப்போது கிருபையின் காலத்தில் இருக்கிறோம். (மத் 13:11-17, 30 38-43,47-50) இராஜ்ஜியத்தைப் பற்றிய உவமைகள் இக்காலத்திற்குரியவைகள். இயேசு கிறிஸ்து மறுபடியும் பூமிக்கு வரும்போது தமது இராஜ்ஜியத்தை நித்தியகாலமாக ஸ்தாபிப்பார் (மத் 25:31-46; வெளி 11:15; வெளி 19:11-20:10; சக 14 ஏசா 9:6-7; தானி 2:44-45; தானி 7:13-27 லூக்கா 1:32-33)

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது அவர் பூமியில் 1000 வருஷம் ஆளுகை செய்வார். அப்போது கலகக்காரர்கள் எல்லோரையும் அடக்கி அழிப்பார் (வெளி 20:1-10; வெளி 21:1-22:5 1கொரி 15:24-28; எபே 1:10)

பரலோக இராஜ்ஜியத்தைப் பற்றிக் கூறப்படும் காரியங்களைத் தேவனுடைய இராஜ்ஜியத்திற்கும் கூறலாம்.

4. பேதுரு, அந்திரேயா ஆகியோரின் அழைப்பு - (மாற்கு 1:16; லூக் 5 யோவான் 1:40)

மத் 4:18 இயேசு கலிலேயாக் கடலோரமாய் நடந்துபோகையில், மீன்பிடிக்கிறவர்களாயிருந்த இரண்டு சகோதரராகிய பேதுரு என்னப்பட்ட சீமோனும், அவன் சகோதரன் அந்திரேயாவும், கடலில் வலைபோட்டுக் கொண்டிருக்கிறபோது அவர்களைக் கண்டு:

மத் 4:19 என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார்.

மத் 4:20 உடனே அவர்கள் வலைகளை விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்.

"கலிலேயாக் கடல்" - திபேரியாக்கடல், கெனேசரேத்துக்கடல் என்று மறுபெயர்களும் இதற்கு உண்டு. இதிலுள்ள தண்ணீர் சுத்தமாக இருக்கும் (லூக்கா 5:1; யோவான் 21:1; யோசு 12:3; யோசு 13:27; உபா 3:17)

"அவன் சகோதரன் அந்திரேயாவும், கடலில் வலைபோட்டுக்கொண்டிருந்தார்கள்" - இயேசு கிறிஸ்துவின் முதலாவது சீஷன் (யோவான் 1:35-42) தன்னுடைய சகோதரன் பேதுருவை இயேசு சீஷனாக அழைக்கும் வரையிலும் அவன் மீன்பிடித்துக் கொண்டிருந்தான் (மத் 4:18; மாற்கு 1:17), பன்னிரெண்டு சீஷர்களில் ஒருவன் (மத் 10:2; மாற்கு 3:18; லூக்கா 6:14 அப் 1:13) அந்திரேயாவைப் பற்றி மாற்கு 1:29; மாற்கு 13:3; யோவான் 6:8; யோவான் 12:22 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. வரலாற்றின் பிரகாரம் இவன் ரூபன் கோத்திரத்தைச் சேர்ந்தவன். சித்தியா (Scythia) என்னும் இரஷ்ய தேசத்துப் பகுதியில் கர்த்தருக்கு ஊழியம் செய்தான். இவனை அங்கு கல்லெறிந்தார்கள். கிரேக்கம், அல்லது சித்தியாவில் அந்திரேயா சிலுவையில் அறையப்பட்டான் என்று வரலாறு கூறுகிறது.

"என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" - சுவிசேஷ ஊழியம் செய்வது மீன்களைப் பிடிப்பதற்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டிருக்கிறது. பின்னே வாருங்கள் என்பது சீஷத்துவத்தைக் குறிக்கும் வாக்கியம் (2இரா 6:19)

"உடனே அவர்கள் வலைகளை விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்" - தங்களுடைய சொத்துக்களை, தாங்கள் நம்பியிருந்த உபகரணங்களை விட்டுவிட்டு, இயேசுவிற்குப் பின்சென்றார்கள். தங்கள் ஜீவியத்தில் கர்த்தருக்கு முதலிடம் கொடுத்தார்கள் (மத் 19:27-30; லூக்கா 14:33)

5. யாக்கோபு, யோவான் ஆகியோரின் அழைப்பு - (மாற்கு 1:19; லூக் 5:10)

மத் 4:21 அவர் அவ்விடம் விட்டுப் போகையில், வேறே இரண்டு சகோதரராகிய செபெதேயுவின் மகன் யாக்கோபும், அவன் சகோதரன் யோவானும் தங்கள் தகப்பன் செபெதேயுவுடனே படவிலிருந்து தங்கள் வலைகளைப் பழுதுபார்த்துக் கொண்டிருக்கிறபோது, அவர்களைக் கண்டு, அவர்களையும் அழைத்தார்.

மத் 4:22 உடனே அவர்கள் படவையும் தங்கள் தகப்பனையும் விட்டு, அவருக்குப் பின் சென்றார்கள்.

4 அதிகாரம்

"யாக்கோபு" (James, Jacob) - இவன் யோவானின் சகோதரன் செபெதேயுவின் மகன் (மத் 4:21; மத் 20:20; மாற்கு 1:19 லூக்கா 5:10-11) பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் ஒருவன். (மத் 10:2, மாற்கு 3:17; லூக்கா 6:14; அப் 1:13) இயேசு கிறிஸ்துவிடம் மிகவும் நெருக்கமாக இருந்த மூவரில் ஒருவன் (மாற்கு 5:37; மத் 17:1-8 மத் 26:36-46, மாற்கு 13:3-4; லூக்கா 9:54 யோவான் 21:1-14) அப்போஸ்தலர்களில் இரத்தச்சாட்சியாக முதலாவது மரித்தவன் அப் 12:1-2 வரலாற்றின் பிரகாரம் தன் தந்தை வழியில இவன் லேவி கோத்திரத்தான் தன் தாயார் வழியில யூதா கோத்திரத்தான் இவனும் பேதுருவும் இருந்தபோதில சிறிது காலம் ஊழியம் செய்ததாகவும். பின்பு ஸ்பெயின் தேசத்தில ஊழியம் செய்ததாகவும் வரலாறு கூறுகிறது.

6. கலிலேயாவிற்கு இரண்டாவது பிரயாணம் - (மாற்கு 1:38; லூக்கா 4:42; மத் 4:12, 9:35)

மத் 4:23 பின்பு இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில உபதேசித்து ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து. ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார்

மத் 4:24 அவருடைய கீர்த்தி சீரியா எங்கும் பிரசித்தமாயிற்று. அப்பொழுது பலவித வியாதிகளையும் வேதனைகளையும் அடைந்திருந்த சகல பிணியாளிகளையும் பிசாசு பிடித்தவர்களையும் சந்திர ரோகிகளையும், திமிர்வாதக்காரரையும் அவரிடத்தில கொண்டுவந்தார்கள் அவர்களைச் சொஸ்தமாக்கினார்

மத் 4:25 கலிலேயாவிலும், தெக்கப்போலி யிலும், எருசலேமிலும், யூதேயாவிலும் யோர்தானுக்கு அப்புறத்திலும் இருந்து திரளான ஜனங்கள் வந்து, அவருக்குப் பின்சென்றார்கள்

"இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்தார்" - பிரயாணம் செய்து சுவிசேஷ ஊழியம் செய்த முதலாவது மிஷினெரி இயேசு கிறிஸ்துவே. (மத் 9:35 மாற்கு 6:6) தமது ஊழியத்தில் இயேசு கிறிஸ்து மூன்று காரியங்களைச் செய்தார் அவையாவன

1 உபதேசித்தார்

2 ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்

3 ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார் (மத் 9:35; அப் 10:38)

சொஸ்தமாக்கு (healing) - θεραπεύω - therapeuoo - 2323

வினைச்சொல - சொஸ்தமாக்கு. குணமாக்கு சௌக்கியமாக்கு. ஆரோக்கியமாக்கு பணிவிடைகொள் (to wait upon menially, to relieve of disease)

"சீரியா பத்து பட்டணங்கள் கொண்ட மாவட்டம். இதன் தலைநகரம் தமஸ்கு

வியாதி (diseases) - νόσος - nosos - 3554

பெண்பால் பெயர்ச்சொல் - வியாதி, நோய் - வியாதி (disease) (மத் 4:24, மாற்கு 1:34; லூக்கா 4:40, லூக்கா 6:17; லூக்கா 9:1; அப் 19:12) நோய் (sickness) (மத் 4:23 மத் 8:17, மத் 9:35. மத் 10:1; மாற்கு 3:15) பலவீனம் (infirmity) (லூக்கா 7:21)

இந்த வசனத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்கச் சொல்லிற்கும், மத் 4:23, மத் 9:35, மத் 10:1 ஆகிய வசனங்களில் பயன்படுத்தப் பட்டிருக்கும் "மலாக்கியா" (malakia) என்னும் சொல்லிற்கும் வேறுபாடு உண்டு

4 அதிகாரம்

நோய் (infirmity) - μαλακία - malakia - 3119

பெண்பால் பெயர்ச்சொல் நோய்

பிசாசு அசுத்த ஆவிகள்

சந்திரரோகி (lunatick) - σεληνιάζομαι seleeniazomai 4583

பெயர்ச்சொல் சந்திரரோகி

இந்தச் சொல் இந்த வசனத்திலும் மத் 17:15-இலும் மட்டுமே வருகிறது இந்த வியாதிக்கும் சந்திரனுக்கும் தொடர்பு உண்டு பௌர்ணமி அல்லது அமாவாசை ஆகிய நாட்களில் இந்த வியாதி தாக்கும்

சந்திரன் (moon) - σελήνη - seleenee - 4582

பெண்பால் பெயர்ச்சொல் - சந்திரன்

திமிர்வாதக்காரன் (paralyzed) - παραλυτικός - paralytikos - 3885

பெயர்ச்சொல் திமிர்வாதக்காரன் மத் 4:24 மத் 8:6 மத் 9:2 மாற்கு 2:3-9 லூக்கா 5:24 லூக்கா 5:18 அப் 8:7 அப் 9:33

5 அதிகாரம்

7. மலைப்பிரசங்கம் - (5:1-7:29)

(1) முன்னுரை

மத் 5:1 அவர் திரளான ஜனங்களைக் கண்டு மலையின்மேல் ஏறினார். அவர் உட்கார்ந்தபொழுது அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்தார்கள்.

மத் 5:2 அப்பொழுது அவர் தமது வாயைத் திறந்து அவர்களுக்கு உபதேசித்துச் சொன்னது என்னவென்றால்:

"திரளான ஜனங்கள்" - தேவன் ஒரு ஊழியத்தைக் கனப்படுத்தும்போது அந்த ஊழியத்தின் மூலமாக திரளான ஜனங்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். திரளான ஜனங்கள் கூடுவது தேவனுடைய அநுக்கிரகம். வேதாகமத்திலே மலைகளில் 6 தடவைகளும், பிற இடங்களில் 7 தடவைகளும் திரளான ஜனங்கள் கூடிவந்ததாக நாம் வாசிக்கிறோம்.

"மலை" - எந்த மலை என்று குறிப்பிடப்படவில்லை. லூக்கா 6: 7 (49) ஆவது வசனங்களில் கூறப்பட்டிருப்பது சமமான இடத்தில் ஜனங்கள் கூடிவந்தார்கள் என்பதாகும்.

"உட்கார்ந்தார்" - கிழக்கு தேசங்களில் ஆசிரியர்கள் உட்கார்ந்திருந்து உபதேசம் பண்ணுவார்கள் (மத் 9:10; மத் 13:1, மத் 15:29, மத் 18:2; மத் 24:3; மத் 26:55; மாற்கு 3:32, மாற்கு 4:1; மாற்கு 9:35, மாற்கு 12:41, யோவான் 6:3; யோவான் 8:2) ஜனங்கள் அவர் உட்கார்ந்த விதத்தைப் பார்த்து ஆச்சரியப்படாமல் அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகள் கிருபை நிறைந்ததாக இருந்ததினால் ஆச்சரியப்பட்டார்கள்.

(2) பாக்கியவான்கள் - (லூக் 6:20)

மத் 5:3 ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.

மத் 5:4 துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்.

மத் 5:5 சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்.

மத் 5:6 நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்.

மத் 5:7 இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.

மத் 5:8 இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.

மத் 5:9 சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.

மத் 5:10 நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.

மத் 5:11 என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்.

மத் 5:12 சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே.

பாக்கியவான்கள்

1. ஆவியில் எளிமையுள்ளவர்கள் (மத் 5:3; மத் 11:28-30; சங் 51:17; ஏசா 57:15; ஏசா 66:2)

2. துயரப்படுகிறவர்கள் (மத் 5:4; ஏசா 61:2; லூக் 4:9; 2கொரி 7:9-11)

3. சாந்தகுணமுள்ளவர்கள் (மத் 5:5; மத் 11:29; சங் 37:11; 1பேதுரு 3:4)

4. நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் (மத் 5:6; சங் 34:10; சங் 42:1-3; சங் 63:1; சங் 84:2; யோவான் 7:37-39)

5 அதிகாரம்

5 இரக்கமுள்ளவர்கள் (மத் 5:7; மத் 18:27; 1பேதுரு 3:8)

6 இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் (மத் 5:8; பிலி 4:8; 1தீமோ 1:5; 1தீமோ 3:9; 1தீமோ 5:22; 1பேதுரு 1:22)

7 சமாதானம் பண்ணுகிறவர்கள் (மத் 5:9; ரோமர் 14:19; 1கொரி 13)

8 நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் கர்த்தர் நிமித்தம் பலவித தீமையான மொழிகளையும் அவர்களபேரில் பொய்யாய்ச் சொல்லி துன்பப்படுத்தப் படுகிறவர்கள் (மத் 5:10-12; மத் 10:16-28; 1கொரி 13; 1பேதுரு 3:14-17; 1பேதுரு 4:3-19)

தீர்க்கதரிசன எண் - 4

"பரலோகராஜ்யம் அவர்களுடையது..." (பேதுரு 5:3-12) இந்தத் தீர்க்கதரிசனங்களில் எட்டு வாக்குத் தத்தங்கள் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இது பூரணமாக நிறைவேறும்.

"பசிதாகமுள்ளவர்கள் வலுவான வாஞ்சையுடையவர்கள் என்னும் பொருளைத் தரும் எபிரெய வழக்குச்சொல் (யோவான் 7:37)

சுத்தம் (clean) - καθαρός - katharos – 2513

மெய்யான - சுத்தமுள்ள, தூய்மையான, சுத்தமாயிருக்கிற, சுத்த (யோவான் 13:11) நாம் மறுபடியும் பிறக்கும்போது நமது இருதயம் சுத்தமடைகிறது. (2கொரி 5:17; 1யோவான் 1:9; 1யோவான் 2:29; 1யோவான் 3:5-10; 1யோவான் 5:1-4,18; எபே 4:24; 2தெச 2:13)

"சந்தோஷப்பட்டு, களிகூருங்கள் பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்" - (அப் 5:41; அப் 16:25; 1பேதுரு 4:13)

(3) விசுவாசிகளின் ஒப்புமை - (மாற்கு 4:21; லூக் 8:16; 11:33)

மத் 5:13 நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப்போனால் எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப் படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப் படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது.

மத் 5:14 நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; [illegible] இருக்கிற பட்டணம் மறைந்திருக்க மாட்டாது.

மத் 5:15 விளக்கைக் கொளுத்தி மரக்காலின் கீழ் வைக்காமல் விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும்.

மத் 5:16 இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.

"உப்பானது சாரமற்றுப்போனால்" - உப்பு உணவைப் பாதுகாக்கிறது. உணவிற்குச் சுவை தருகிறது. உப்பைப் பயன்படுத்தாமல் வெயிலிலும், காற்றிலும், மழையிலும் கவனியாமல் விட்டுவிட்டால் அது தனது சாரத்தை இழந்துவிடும். சாரமற்ற உப்பினால் ஒரு பிரயோஜனமுமில்லை. (மாற்கு 9:50; லூக்கா 14:34-35)

"உலகத்துக்கு வெளிச்சம்" - விசுவாசிகள் இந்த உலகத்திற்குத் தெய்வீக வெளிச்சமாக இருக்கிறார்கள். மனுஷர் மத்தியிலே தேவனைப் பிரதிபலிக்கிறார்கள்.

உலகம் (world) - κόσμος - kosmos 2889

ஆண்பால் பெயர்ச்சொல் - உலகம், அலங்கரிப்பு, லௌகிகம்

5 அதிகாரம்

"விளக்கு" - வேதாகம நாட்களில மெழுகுவர்த்தியிருந்ததாகத் தெரியவில்லை அக்காலத்தில் மண், செம்பு இரும்பு. பித்தளை வெள்ளி. பொன் ஆகியவற்றால விளக்குகளைச் செய்தார்கள் அதில எண்ணெய ஊற்றி, திரியை வைத்து விளக்கை எரிய வைத்தார்கள் (யாத் 25: 31-35; யாத் 30:27) ஒலிவ எண்ணெயை விளக்கு எரிப்பதற்கும் சமையல் செய்வதற்கும். சரீரங்களில பூசிக்கொள்வதற்கும பயன்படுத்தினார்கள (யாத் 25:6; யாத் 27:20; யாத் 29:2,23)

விளக்கு (candle) - λύχνος - lychnos - 3088

ஆங்கில பெயர்சொல - விளக்கு

மரக்கால் (bushel) - μόδιος - modios - 3426

ஆங்கில பெயர்சொல் - மரக்கால் - நான்குபடி பிடிக்கும் அளவு

"விளக்குத்தண்டு" இந்த தண்டின்மீது விளக்கை ஏற்றிவைப்பார்கள இதிலுள்ள ஒரு குழியில தேவையான அளவு எண்ணெய ஊற்றப்பட்டிருக்கும்

"மனுஷர் உங்கள நற்கிரியைகளைக் கண்டு. பரலோகத்திலிருக்கிற உங்கள பிதாவை மகிமைப்படுத்த வேண்டும்" மனுஷர் மத்தியிலே நாம் செய்யும் எல்லா நல்ல காரியங்களுக்கும் ஒரு நோக்கம் உண்டு. பரலோகத்திலுள்ள பரமபிதாவை எல்லோரும் மகிமைப்படுத்த வேண்டும். அதுவே நாம் செய்யும் நற்கிரியைகளின நோக்கம். (யோவான 14:12-15; யோவான 15:7-8, தீத்து 2:14, வெளி 4:11)

தேவனை மகிமைப்படுத்தும் காரியங்கள்

1 சரீர சுகமாதல் (மத் 9:8; மத் 15:31; லூக்கா 5:25-26. லூக்கா 13:13, அப் 4:21

2 சரீரம் உயிர்த்தெழுதல் (யோவான் 11:4

3 கிறிஸ்துவின் மீட்பின் கிரியை (யோவான் 13:31-32

4 ஜெபத்திற்குப் பதில் கிடைத்தல் (யோவான் 14:13)

5 அதிக கனி கொடுத்தல் (யோவான் 15:8)

6 தேவனுடைய வேலையை நிறைவுசெய்தல் (யோவான் 17:4)

7 புறஜாதியாரின் இரட்சிப்பு (அப 13:48)

8 புறஜாதியார் மத்தியில் அற்புதங்கள் (அப 21:20)

9 வரங்களைமுறையாகப் பயன்படுத்துதல் (1பேதுரு 4:10-11)

10 துதி செலுத்துதல (சங் 50:23)

11 நற்கிரியைகள் (மத் 5:16 (பேதுரு 2:12)

12 இரத்தச்சாட்சிகள் (யோவான் 21:19

13 சுத்தமான சரீரங்கள் (1கொரி 3:16-17; 1கொரி 6:19-20)

13 கிறிஸ்தவ வேலை (2கொரி 9:13

14 சுதந்தரம் (2கொரி 9:13)

(4) கிறிஸ்து நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுவதற்காக வந்தார் - (ரோமர் 10:4)

மத்5:17 நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்க தரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள், அழிக்கிறதற்கு அல்ல நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்

மத் 5:18 வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் நியாய பிரமாணத்திலுள்ள தெல்லாம் நிறைவேறுமளவும் அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின உறுப்பாகிலும ஒழிந்து போகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன

5 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 5

"நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்க தரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள்...." (மத் 5:17-19) - இந்தத் தீர்க்கதரிசனத்தில மத் 5:17-18 ஆகிய வசனங்கள் நிறைவேறியுள்ளன. மத் 5:19-ஆவது வசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

"அழித்தல்" - மத் 26:61-இல கூறப்பட்டிருக்கிற பிரகாரமாக "இடித்துப் போடுதல்" (Pull down) என்று பொருள்படும்

"நியாயப் பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும்" - இயேசு கிறிஸ்து இந்த வாக்கியத்தை 15 தடவைகள் பயன்படுத்தியிருக்கிறார் மத் 5:17-18 மத் 7:12, மத் 11:13 மத் 12:5 மத் 22:40 மத் 23:23; லூக்கா 10:26; லூக்கா 16:16-17; லூக்கா 24:44; யோவான் 7:19-23; யோவான் 8:17; யோவான் 10:34 யோவான் 15:25

நிறைவேற்று (fulfil) - πληρόω - pleerooo - 4137

வினைச்சொல - நிறைவேற்று நிரப்பு, முடி, பூரணமாயிரு (to satisfy, expire, and to end by fulfilling like other prophecies when fulfilled) (மத் 1:22, மத் 2:15,17,23; மத் 4:14, மத் 8:17, மத் 12:17, மத் 13:35)

"வானமும் பூமியும் ஒழிந்து போனாலும்" வானமும் பூமியும் அக்கினியினால் பரிசுத்தமாக்கப்படும் புதுப்பிக்கப்படும் எபி 1 10 12 எபி 12:25-29 2பேதுரு 3: 10-13; ரோமர் 8:21-24; வெளி 21:1) அவை நித்தியகாலமாக இருக்கும் (பிர 1:4; சங் 72:17, சங் 89:36-37; சங் 104:5) பழையவை ஒழிந்துபோயின கிறிஸ்துவில எல்லாம் புதிதாயின என்பதுபோன்று இருக்கும். (2கொரி 5:17-18)

ஒழிந்துபோ (pass) παρέρχομαι - parerchomai - 3928

வினைச்சொல் - கடந்துப்போ, ஒழிந்துபோ, நீங்கு, நீங்கிப்போ, விட்டுவிடு, அகன்றுபோ

"ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது" - மெய்யெழுத்தின் மேலும் கீழும் வைக்கப்படும் புள்ளிகள் எழுத்தின் உறுப்புக்கள் எனப்படும் சீனாய் மலையில் கர்த்தர் மோசேக்கு கொடுத்த பிரமாணங்கள் நிறைவேற்றுப் அவைகள் முடிந்துபோயிற்று கிறிஸ்துவில் அவை எல்லாம் பழையதாயிற்று. இயேசு கிறிஸ்து புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தியிருக்கிறார் 2கொரி 3:6-15 அப 15:5-29; கலா 3:19-25; கலா 4:21-31 கலா 5:1-5:18; எபே 2:15; கொலோ 2:14-17 எபி 7:11-28; எபி 8:6-13; எபி 9:1-22; எபி 10:1-18; ரோமர் 10:4)

(5) இராஜ்ஜியத்தின் பிரமாணங்கள் - (5:17-6:18)

(அ) மோசேயின் பிரமாணங்களும் இராஜ்ஜியத்தின் பிரமாணங்களும்

மத் 5:19 ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதான தொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோக ராஜ்யத்தில எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்; இவைகளைக் கைக் கொண்டு போதிக்கிறவனோ, பரலோக ராஜ்யத்தில பெரியவன் என்னப்படுவான

மத் 5:20 வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன

"கற்பனைகள்" - புதிய உடன்படிக்கையின் கற்பனைகள் பழைய உடன்படிக்கையைப் போன்றே முக்கியமானவை. (யாக் 2:10 புதிய உடன்படிக்கையில 1050க்கும் மேற்பட்ட கட்டளைகள் உள்ளன

"பரலோகராஜ்யத்தில் பெரியவன்" (லூக்கா 7:28)

5 அதிகாரம்

"பரலோகராஜ்யம்" - (மத் 4:17)

"வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதி" - மத் 12:22-30; மத் 15:1-14; மத் 16:12; மத் 23:1-33; லூக்கா 11:39-54 லூக்கா 18:9-14; ரோமர் 10:1-4; கலா 1:14; கலா 2:14; பிலி 3:2-6 ஆகிய வசனங்களில் அவர்களுடைய சுயநீதி கூறப்பட்டிருக்கிறது.

(ஆ) இராஜ்யியத்தின் பிரமாணங்களுடைய சிறப்பு அம்சம் - (5:21-38)

(i) கொலை செய்யாதிருப்பாயாக

மத் 5:21 கொலை செய்யாதிருப்பாயாக என்பதும், கொலைசெய்கிறவன் நியாயத் தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும் பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

மத் 5:22 நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக் கொள்பவன் நியாயத் தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான்.

"கொலை செய்யாதிருப்பாயாக" யாத் 20:13 உபா 5:17

"கொலைசெய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்" இது உரைக்கப்பட்ட கட்டளை எழுதப்படவில்லை

"நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" - இயேசு கிறிஸ்து புதிய உடன்படிக்கையைக் கூறும்போது அதிகாரத்துடன் பேசுகிறார் (மத் 7:29, மத் 26:28, யோவான் 1:17)

"நியாயமில்லாமல் கோபித்துக் கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்" - கோபிப்பதற்கு நியாயம் இருந்தாலும் நாம் நமது கோபத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். எபே 4:26 ஆவியின் கனியில் சாந்தம் இச்சையடக்கம், நீடிய பொறுமை ஆகியவை முக்கியமானவை (கலா 5:22)

"வீணன்" (Raca) - ராகா என்பது அராமாயிக் மொழிச்சொல். ஒன்றும் பிரயோஜனமற்றவன், துன்மார்க்கன் என்று பொருள்படும். (scoundrel, wicked rascal)

"ஆலோசனைச்சங்கம்" (Sanhedrin) - ஆலோசனைச் சங்கத்தில 71 நியாயாதிபதிகள் இருப்பார்கள் பிரதான ஆசாரியர் இவர்களுக்குத் தலைவர் ஒவ்வொரு ஜெபாலயத்திலும் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட நியாயாதிபதிகளைக் கொண்ட ஆலோசனைசங்கம் இருந்தது.

மூடன் (fool) - μωρός - mooros - 3474

மொரட் - மூடனான, புத்தியில்லாத, மதிகேடான பைத்தியமான புத்தியீனமான (wicked reprobate, destitute of all spirituality)

நரகம் (hell) - γέεννα - geenna - 1067

பெண்பால் பெயர்சொல் - நரகம்

பள்ளத்தாக்கு (Valley) - גיא - gah'ee, gah'ee - 1516

பொதுப் பெயர்ச்சொல் - பள்ளத்தாக்கு

இன்னோம் (Hinnom) - הִנֹּם - hin-nome' - 2011

ஆ.பெசொ - இன்னோம்

இன்னோமின் பள்ளத்தாக்கு

இந்தப் பள்ளத்தாக்கு எருசலேமிற்கு அருகில் உள்ளது. காற்றைச் சுத்தப்படுத்துவதற்காக அங்கு எப்போதும் அக்கினி எரிந்து கொண்டிருக்கும் (ஏசா 30:33; எரே 7:31-32; எரே 19:6-14; 2இராஜா 23:10)

5 அதிகாரம்

துன்மார்க்கர் நித்திய தண்டனை அனுபவிக்கும் நரகத்தையும் இச்சொல் குறிக்கும். (மத் 5:22,29,30; மத் 10:28 மத் 18:9; மத் 23:15,33; மாறு 9:43-47 லூக்கா 12:5; யாக் 3:6

அக்கினிக்கடலையும் நரகம் என்னும் சொல் குறிக்கும். (வெளி 19:20 வெளி 20:13-15; வெளி 21:8)

அவியாத அக்கினி (மத் 8:12, மத் 13:42,50; மத் 22:13; மத் 24:51 மத் 25:30; லூக்கா 3:17)

நித்திய அக்கினி (மத் 25:41,46, வெளி 14:9-11; வெளி 19:20; வெளி 20:10-15; வெளி 21:8, ஏசா 66:22-24)

(ii) ஒப்புரவாகுதலும் இணக்கமும் - லூக் 12:58

மத் 5:23 ஆகையால், நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில்,

மத் 5:24 அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்து விட்டுப்போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து.

"அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப்போய் முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து" - இது ஒவ்வொரு விசுவாசிக்கும் நியமிக்கப் பட்டிருக்கும் கட்டளை (மத் 18:15-17,21-35)

"பலிபீடம்" - வேதாகமத்தில் பலிபீடம் என்னும் சொல் 433 இடங்களில் வந்திருக்கிறது. புதிய ஏற்பாட்டில் மட்டும் 24 இடங்களில் பலிபீடம் என்னும் சொல்லைக் காணகிறோம். பலிபீடம் என்பதற்குப் பலி செலுத்தும் இடம் அல்லது தேவனை நாம் சந்திக்கும் இடம் என்று பொருள் கர்த்தருக்கும் விசுவாசிக்கும் நடுவிலே ஒரு பலிபீடம் இருக்க வேண்டும். (மத் 5. 23-24, எபி 13:10; ரோமர் 12:1-3)

(iii) நியாயாதிபதியினிடத்தில் வழக்கு

மத் 5:25 எதிராளி உன்னை நியாயாதிபதியினிடத்தில் ஒப்புக்கொடாமலும், நியாயாதிபதி உன்னைச் சேவகனிடத்தில் ஒப்புக்கொடாமலும், நீ சிறைச்சாலையில் வைக்கப்படாமலும் இருக்கும்படிக்கு, நீ உன் எதிராளியோடு வழியில் இருக்கும் போதே சீக்கிரமாய் அவனுடனே நல்மனம் பொருந்து.

மத் 5:26 பொருந்தாவிட்டால், நீ ஒரு காசும் குறைவின்றிக் கொடுத்துத் தீர்க்குமட்டும் அவ்விடத்திலிருந்து புறப்படமாட்டாய் என்று, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.

"எதிராளி" - சட்டத்தின் பிரகாரமாக நம்மை எதிர்க்கிறவன் ரோமப் பேரரசின் சட்டத்தின் பிரகாரம் எதிராளி ஒருவனை நியாயாதிபதிக்கு முன்பாக நிறுத்த முடியும் (மத் 18:28-30) தன்னுடைய வழக்குகளை நியாயாதிபதிக்குக் கொண்டுபோவதற்கு முன்பாகவே வழியிலே அவனோடு ஒப்புரவாகிவிட்டால் அதாவது சமாதானம் ஆகிவிட்டால் நியாயாதிபதியிடம் போகவேண்டிய அவசியம் இராது நியாயாதிபதியும் நம்மைச் சேவகனிடத்தில் ஒப்புக்கொடுக்க மாட்டார் சிறைச்சாலையிலும், நம்மை வைக்க மாட்டார்கள் (லூக்கா 12:58-59)

"ஒரு காசும் குறைவின்றிக் கொடுத்துத் தீர்க்குமட்டும்" - கடன் சம்பந்தமான வழக்குகளில் இப்போபட்ட காரியம் நடைபெறும்.

(iv) விபசாரம் செய்யாதிருப்பாயாக

(15:19; 19:18; கலா 5:19

மத்5:27 விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப் பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்

5 அதிகாரம்

மத் 5:28 நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ் செய்தாயிற்று.

மத் 5:29 உன் வலது கண் உனக்கு இடறலுண்டாக்கினால் அதைப் பிடுங்கி எறிந்துபோடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும் உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப் போவது உனக்கு நலமாயிருக்கும்.

மத் 5:30 உன் வலதுகை உனக்கு இடறலுண்டாக்கினால் அதைத்தறித்து எறிந்துபோடு, உன் சரீரம் முழுவதும் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும் உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப் போவது உனக்கு நலமாயிருக்கும்.

"விபசாரஞ் செய்யாதிருப்பாயாக" - (யாத் 20:14, உபா 5:18)

"ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று" மனதில் ஒரு காரியத்தைத் தீவிரமாக யோசித்துக் கொண்டிருப்பது அந்தக் காரியத்தை நடைமுறையில் செய்வதற்கு சமம் (யாக 1:13-16) நமது இருதயத்தில் நாம் சிந்தித்துக் கொண்டிருக்கும் காரியமே நமது நடைமுறையில் செயல்படுத்தப்படும். கிரியைகளைப் போலவே சிந்தையும் சில சமயங்களில் ஆபத்தானவை (சங் 16:7 மாற்கு 7:9-23)

"உனக்கு இடறலுண்டாக்கினால்" - உன்னை உன் ஆவிக்குரிய ஜீவியத்திலிருந்து விழச்செய்யுமானால் உன் ஆத்துமாவைக் கெடுத்துப் போடுமானால் என்று பொருள்படும்

"அதைப் பிடுங்கி எறிந்துபோடு" நம்முடைய ஆத்துமாவிற்கு இடறலாக இருக்கும் காரியங்களிலிருந்து நாம் பிரிந்து வரவேண்டும். பிரச்சனைகளை எப்போதும் தழுவிக் கொண்டிருக்கக்கூடாது.

"உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப் படுவதைப்பார்க்கிலும் உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும்" - ஆண்டவர் இயேசு கிறிஸ்து நரகத்தின் உபாதையை இந்த வசனத்தில் விளக்குகிறார் நரகம் அவியாத அக்கினி அங்கு அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும். நரக அக்கினியிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு சுவிசேஷத்தில் எளிய வழிமுறை ஒன்று கூறப்பட்டிருக்கிறது. நமது பாவங்களை நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடம் அறிக்கை செய்யும்போது நாம் மறுபடியும் சிருஷ்டிக்கப் படுகிறோம். கிறிஸ்துவில் நாம் புது சிருஷ்டியாகும்போது நரக அக்கினியிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். நமது அவயவங்களைப் பிடுங்கி எறிந்துபோடுவதைவிட இது மிகவும் சுலபமான வழி. (2கொரி 5:17-18 கலா 5:16-26; ரோமர் 6:16-23, ரோமர் 8 1-13; 1யோவான் 1:7; 1யோவான் 2:29 1யோவான் 3:6-10; 1யோவான் 5:1-5,18 மத் 18:8-9)

"உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும்" - இந்த வாக்கியம் இரண்டு முறை பயன்படுத்தப் பட்டிருக்கிறது. நரகத்திற்கு முழுச் சரீரமும் போகும் நரகத்தில் சரீரம் முழுவதும் வேதனையை அனுபவிக்கும் (மத் 5:29-30 மத் 10:28 லூக்கா 12:5 வெளி 20:11-15

"நரகம்" - இந்த வசனப்பகுதியில் மூன்று முறை நரகம் என்னும் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது மத்5:22,29,30 மத் 18:8-9; மாற்கு 9:43-48, ஏசா 66:24

(v) மனைவியைத் தள்ளிவிடுவதும் மறுபடியும் திருமணம் செய்வதும் - (19:3-9 லூக் 16:18

மத் 5:31 தன் மனைவியைத் தள்ளி விடுகிற எவனும் தள்ளுதற்சீட்டை அவளுக்குக்கொடுக்கக்கடவன் என்று உரைக்கப்பட்டது.

மத் 5:32 நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் வேசித்தன முகாந்தரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன், அவளை விபசாரஞ்செய்யப் பண்ணுகிறவனாயிருப்பான் அப்படித் தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான்

5 அதிகாரம்

"தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவனும், தள்ளுதற்சீட்டை அவளுக்குக் கொடுக்கக் கடவன்" - (உபா 24:1-4 ஏசா 50:1; எரே 3:8)

தள்ளுதற்சீட்டைக் கொடுப்பது என்பது விவாகரத்தைக் குறிக்கும் யூதர்கள் இந்த அர்த்தத்தில்தான் இந்த வாக்கியத்தை புரிந்து கொள்வார்கள். வேசித்தனம் பண்ணியதற்காக விவாகரத்து பண்ணலாம் கர்த்தர் வேசித்தனத்தை அருவருக்கிறார் தள்ளுதற் சீட்டைக் கொடுத்த பின்பு, திருமண உறவு தள்ளுபடியாகிறது. (உபா 24:1-4)

தள்ளிவிடு (put away) - ἀπολύω - apolyoo - 630

வினைச்சொல் - தள்ளிவிடு, அனுப்பிவிடு, போகவிடு விடுதலை செய், விடுதலை பண்ணு, விடுதலையாக்கு, விட்டுப்போ புறப்பட்டுப்போ - விடுதலைபண்ணு (to loose) (மத் 18:27); விடுதலையாக்கு (release) (மத் 27:15-26); அனுப்பிவிடு (let go) (லூக்கா 14:4), விடுதலை பண்ணு (set at liberty) (அப 26:32); அனுப்பிவிடு (send away) (மத் 14:15-23); அனுப்பிவிடு (dismiss) (அப 15:30); தள்ளிவிடு (put away) (மத் 1:19, மத் 5:31-32, மத் 19:3-9; மாற்கு 10:2-12; லூக்கா 16:18); தள்ளிவிடு (divorce) (மத் 5:32)

"தள்ளுதற்சீட்டு" யூதருடைய வழக்கத்தின் பிரகாரம் திருமண உறவை முறித்துக் கொள்வதற்காகச் சட்டப்படி எழுதப்படும் ஆவணம் (மத் 5:31; மத் 19:7 உபா 24:1-3, ஏசா 50:1; எரே 3:8; மாற்கு 10:4, மத் 19:1-12, மாற்கு 10:2-4; 1கொரி 7)

"வேசித்தனம்" வேதாகமத்தில வேசித்தனம் என்பது பல பொருளுடையது அவையாவன

திருமணமானவர்கள் அல்லது திருமணமாகாதவர்கள் செய்யும் விபச்சாரம் (மத் 5:32; மத் 19:9, 1கொரி 7:2 1கொரி 10:8; 1தெச 4:3; வெளி 9:21) விபச்சாரம் (1கொரி 5:1; 1கொரி 10:8) விக்கிரகாராதனையும் விக்கிரகாராதனையின் ஒரு பகுதியாக விபச்சாரம் பண்ணுவதும் (2நாளா 21:11, ஏசா 23:17; எசே 16:15,26,29, அப 15:20,29; அப 21:25; வெளி 2:14-21 வெளி 14:8; வெளி 17:2-4; வெளி 18:3-9 வெளி 19:2) சரீரப்பிரகாரமான வேசித்தனம் (யோவான் 8:41; 1கொரி 6:13-18) ஆவிக்குரிய வேசித்தனம் எசே 16:15,26,29 வெளி 17:2-4 வெளி 18:3-9; வெளி 19:2) சுயபுணர்ச்சியும் ஆண்புணர்ச்சியும் கொரி 6:9-11; எபி 12:16; யூதா 1:6-7 ரோமர் 1:24-29; 2கொரி 12:21; கலா 5:19 எபே 5:3; கொலோ 3:5) ஒரு சிலர் வேசித்தனம் (fornication) என்பது திருமணமாகாதவர்கள் செய்யும் உடலுறவுப் பாவம் என்று கூறுகிறார்கள்

"விபச்சாரம்" - ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் திருமணச் சட்டத்திற்கு புறம்பாக நடைபெறும் உடலுறவு இது திருமணமானவர்களுக்கும் பொருந்தும் திருமணமாகாதவர்களுக்கும் பொருந்தும் வேதத்தில் 69 இடங்களில் இந்தப் பாவத்தைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது அவற்றுள் இரண்டு வசனங்கள் மட்டுமே ஆவிக்குரிய விபசாரத்தைப் பற்றிப் பேசுகிறது. (எரே 3:3-12; எசே 16:37) விபசாரமும், வேசித்தனமும் ஒன்றல்ல வேசித்தனம் பொதுவான பொருளுடையது விபசாரம் பாலுறவு பாவத்தை மட்டும் குறிக்கும். எல்லா விபச்சாரமும் வேசித்தனமே. ஆனால் எல்லா வேசித்தனமும் விபச்சாரமாகாது.

வேசித்தனம் (fornication) πορνεία - porneia - 4202

பெண்பால் பெயர்ச்சொல் வேசித்தனம், வேசிமார்க்கம்

(vi) ஆணையிடுதல் - (யாக் 5:12, சங் 15:4; 76:11)

மத் 5:33 அன்றியும், பொய்யாணை இடாமல், உன் ஆணைகளைக் கர்த்தர் முன்னிலையாய்ச் செலுத்துவாயாக என்று பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்

5 அதிகாரம்

மத் 5.34 நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; பரிச்சேதம் சத்தியம் பண்ணவேண்டாம்; வானத்தின்பேரில சத்தியம்பண்ணவேண்டாம், அது தேவனுடைய சிங்காசனம்

மத் 5.35 பூமியின்பேரிலும் சத்தியம்பண்ண வேண்டாம், அது அவருடைய பாதபடி; எருசலேமின் பேரிலும் சத்தியம்பண்ண வேண்டாம் அது மகாராஜாவினுடைய நகரம்

மத் 5.36 உன் சிரசின்பேரிலும் சத்தியம் பண்ணவேண்டாம், அதின் ஒரு மயிரையாவது வெண்மையாக்கவும் கறுப்பாக்கவும் உன்னால கூடாதே.

மத் 5.37 உள்ளதை உள்ளதென்றும் இல்லததை இல்லதென்றும சொல்லுங்கள் இதற்கு மிஞ்சினது தீமையினால உண்டாயிருக்கும்

"பொய்யாணையிடாமல உன் ஆணைகளைக் கர்த்தர் முன்னிலையாய்ச் செலுத்துவாயாக" - லேவி 19:12 எண் 30:2, உபா 23:21

பொய்யாணையிடு (forswear) - ἐπιορκέω - epiorkeoo - 1964

வினைச்சொல் - பொய்யாணையிடு

"பொய்யாணையிடு" -வானத்தின் பேரிலும், பூமியின பேரிலும் நமக்கு உரிமையில்லாத எந்த காரியத்தின பேரிலும் ஆணையிடுவது தவறு (மத் 5: 33-37; யாக் 5:12 ஆனாலும் சத்தியத்தைப் பேசுவதும் கர்த்தருக்குப் பொருத்தனை [illegible] சரியானதே (மத் 5:33 எபி 6:16 ஆதி 22:16, ஆதி 28:20

(vii) **கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்** - (மத் 18:21; லூக் 6:29; 17:1)

மத் 5.38 கண்ணுக்குக் கண் பல்லுக்குப் பல் என்று, உரைக்கப் பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள

மத் 5.39 நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு

மத் 5.40 உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு

மத் 5:42 ஒருவன் உன்னை ஒரு மைல தூரம்வரப் பலவந்தம்பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ

மத்5:42 உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக்கொடு.உன்னிடத்தில் கடனவாங்க விரும்புகிறவனுககு முகங்கோணாதே.

"கண்ணுக்குக் கண் பல்லுக்குப் பல" - (யாத் 21:24; லேவி 24:20, உபா 19:21

"தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்" - இந்த ஆலோசனையை நம் ஆண்டவர் இயேசு கிறிஸது எல்லா விசுவாசிகளுக்கும் கொடுக்கிறார நமது ஆவிக்குரிய ஜீவியத்தில மூன்று அடிப்படைத்தத்துவங்கள் காணப்பட வேண்டும். அவையாவன,

1. எதிர்த்து நிற்கக்கூடாது (மத் 5.39 ரோமர் 12:14)
2. எதிர்பார்ப்பதைவிட அதிகமாகச் செய்ய வேண்டும். (மத் 5:40-41
3. அன்புடனும், தாராளமனதுடனும் இருக்க வேண்டும் (மத் 5:42

"ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம்வரப் பலவந்தம்பண்ணினால அவனோடு இரண்டு மைல் தூரம் போ" - ரோமபேரரசின் காலத்தில் இராஜாவின் சுமைகளை யாரை வேண்டுமானாலும் கட்டாயப்படுத்தி, சுமக்க வைக்க முடியும். முடியாது என்று யாரும் கூறக்கூடாது இராஜாவின் வேலையைச் செய்ய மறுப்பது மன்னிக்கமுடியாத குற்றம். (மத் 27:32; மாற்கு 15:21)

மத்தேயு - தொகுப்புரை

5 அதிகாரம்

"உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு. உன்னிடத்தில் கடன்வாங்க விரும்புகிறவனுக்கு முகங்கோணாதே" - நாம் நமது குடும்பத்தையும் பராமரிக்க வேண்டும் மற்றவர்களுக்கும் அன்புடன் உதவி புரிய வேண்டும் (1தீமோ 5:8 லூக்கா 6:38; 2கொரி 9:6-8 1யோவான் 3:17)

(viii) அன்பு கூருதல் - (லூக் 6:27 யோவான் 13:34; 15:9; 17:26)

மத் 5:43 உனக்கடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்

மத் 5:44 நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள் உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள் உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள் உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்

மத் 5:45 இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள் அவர் தீயோர் மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்

மத் 5:46 உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால், உங்களுக்குப் பலன் என்ன? ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்கள் அல்லவா?

மத் 5:47 உங்கள் சகோதரரை மாத்திரம் வாழ்த்துவீர்களானால் நீங்கள் விசேஷித்துச் செய்கிறது என்ன? ஆயக்காரரும் அப்படிச் செய்கிறார்கள் அல்லவா?

மத் 5:48 ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள்

"உனக்கடுத்தவனைச் சிநேகிப்பாயாக" - (லேவி 19:17-18; மத் 22:39; லூக்கா 10:27)

"உன் சத்துருவைப் பகைப்பாயாக" - (யாத் 17:14-16; உபா 7:1-2; உபா 23:3-6)

மத்தேயு 5:44-இல் கூறப்பட்டிருக்கிற [redacted]

1 உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்

2 உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்

3 உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்

4 உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்

புதிய ஏற்பாட்டில் இதைத் தவிர இன்னும் 1,050 கட்டளைகளுக்கு மேல் உள்ளன. விசுவாசிகள் இவைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். பழைய ஏற்பாட்டின் 10 கட்டளைகள் மட்டுமே முக்கியமானவை என்று நினைக்கக்கூடாது.

"ஆயக்காரர்" - வரிவசூல் பண்ணுகிறவர் வேதாகமத்தில் 17 இடங்களில் ஆயக்காரரைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. யூதர்கள் ஆயக்காரரை வெறுத்தார்கள் அவர்கள் அநியாயமாக வரிவசூலிப்பதாக அவர்கள்மீது குற்றம் சுமத்தினார்கள் அவர்களைப் பாவிகளாகக் கருதினார்கள் (மத் 9:10-11 மத் 11:19 மத் 21:31-32) ஆயக்காரரில் அநேகர் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள் (லூக்கா 3:12, லூக்கா 7:29) மத்தேயு ஆயக்காரரில் ஒருவர் அவர் இயேசுவின் அப்போஸ்தலர் ஆனார் (லூக்கா 5:27-29 லூக்கா 19:1-10)

பரிபூரணம் (perfect) τέλειος teleios 5046

மத்தேயு - தொகுப்புரை

5 அதிகாரம்

பெயரடை - பூரண, பரிபூரணமான நிறைவான, தேறின, உத்தமமான (complete in conformity to God's laws)

விசுவாசிகளிடம் காணப்பட வேண்டிய குணாதிசயங்கள்

1 ஆவியில் எளிமையுடனும் தாழ்மையுடனும் நீதியின்மேல் பசிதாகமுடனும், இருதயத்தில் சுத்தமுடனும் இரக்கமுடனும் கிருபையுடன் இருக்க வேண்டும் (மத் 5.3-12

2 உப்பாகவும், விளக்காகவும் இருக்க வேண்டும். (மத் 5.13-16)

3 சத்தியத்தைக் கைக்கொண்டு உபதேசிக்க வேண்டும். (மத் 5.17-19)

4. மாயமாலம், கபடம் ஆகியவை இருக்கக் கூடாது (மத் 5.20-24)

5 சமாதானம் பண்ண வேண்டும் (மத் 5.9,25-26

6 ஆசை இச்சைகளிலிருந்து விலகியிருக்க வேண்டும் (மத் 5.27-30)

7 குடும்பத்தைப் பராமரிக்க வேண்டும் (மத் 5.31-32)

8 உண்மையுள்ளவராக இருக்க வேண்டும் (மத் 5.31-37)

9 தீமைக்கு எதிர்த்து நிற்கக்கூடாது (மத் 5.38-41)

10 பிறரை நேசிக்கிறவராகவும், நல்ல சுபாவம் உள்ளவராகவும் இருக்க வேண்டும் (மத் 5.38-47

11 இயேசு கிறிஸ்துவைப் போல பூரண சற்குணராக இருக்க வேண்டும் (மத் 5.48)

இவை எவ்வாறு சாத்தியமாகும்

1 புதிய பிறப்பு (2கொரி 5.17, 1யோவான் 2.29; 1யோவான் 3.5-10, 1யோவான் 5.1 4.18

2 ஆவியில் நடந்து ஜீவிப்பது (ரோமர் 8.1-15; கலா 5.16-26

3. ஆவிக்குரிய ஆயுதங்களை முறையாகப் பயன்படுத்துவது (2கொரி 10.5-7, எபே 6.10-18; கொலோ 2.6-10, கொலோ 3.3-10; 2தீமோ 2.21

6 அதிகாரம்

(ix) **தர்மம் செய்தல்** – (5:42; 6:1; 19:21, லூக் 11:41; 12:33)

மத் 6:1 மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; செய்தால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை.

மத் 6:2 ஆகையால் நீ தர்மஞ்செய்யும் போது, மனுஷரால் புகழப்படுவதற்கு, மாயக்காரர் ஆலயங்களிலும் வீதிகளிலும் செய்வதுபோல, உனக்கு முன்பாகத் தாரை ஊதுவியாதே; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மத் 6:3 நீயோ தர்மஞ்செய்யும்போது, உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு, உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக்கடவது.

மத் 6:4 அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்.

"எச்சரிக்கையாயிருங்கள்" – இந்த வாக்கியம் பழைய ஏற்பாட்டில் 29 தடவைகளும், புதிய ஏற்பாட்டில் 28 தடவைகளும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன (மத் 11:29)

எச்சரிக்கையாயிரு (Take heed) - προσέχω - prosechoo - 4337

வினைச்சொல் - எச்சரிக்கையாயிரு, கவனி, செவிகொடு, ஜாக்கிரதையாயிரு (to hold the mind, pay strict attention to, and apply one's self to) (அப் 5:35; அப் 8:6,10; 1தீமோ 4:1; லூக்கா 21:34, எபி 2:1)

"தர்மம்" – தர்மம் மனமிரங்கி செய்யப்படவேண்டிய காரியம்.

தர்மம் செய்யும்போது நாம் கவனிக்க வேண்டிய காரியங்கள்

1. தர்மம் பண்ணும்போது இருதயத்தில் எளிமைபுடனும் (மத் 6:1-4) உதாரத்துவமாகவும் (உபா 15:7 ரோமர் 12:8) சந்தோஷமாகவும் (2கொரி 9:7) கொடுக்க வேண்டும்.

2. தர்மம் பண்ணும்போது நாம் அதில் சந்தோஷமாயிருக்க வேண்டும் (லேவி 25:35; உபா 15:7-11 ஏசா 58:7; மத் 5:42; லூக்கா 11:41 2கொரி 9:5; 1தீமோ 6:18)

3. தர்மம் பண்ணுவதற்குப் பலன் உண்டு. (உபா 14:28-29; உபா 15:10; மத் 10:42; மத் 19:21; லூக்கா 12:33)

4. தர்மம் பண்ணுவதற்கு எடுத்துக் காட்டுக்கள் (லூக்கா 19:8; அப் 9:36; அப் 10:2; 2கொரி 8-9)

"பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலன் உண்டு" - நாம் செய்யும் ஒவ்வொரு நற்கிரியையும் சரியான நோக்கத்தோடு தேவநாம மகிமைக்காகவும் ஜனங்களின் பிரயோஜனத்திற்காகவும் செய்யும்போது கர்த்தர் நமக்குப் பலன் தருவார் (மத் 5:12 மத் 6:1,18; மத் 10:41-42; மத் 16:27 மாற்கு 9:41 லூக்கா 6:23,35 ரோமர் 14:10-11; 1கொரி 3:8-15, 1கொரி 9:17-18; 2கொரி 5:10 கொலோ 2:18; கொலோ 3:24, 2தீமோ 4:14, எபி 10:35; எபி 11:26; 2பேதுரு 2:13, வெளி 11:18; வெளி 22:12)

"மாயக்காரர்" – மாயமாகச் செய்கிறவர்கள். இவர்கள் உள்ளத்தில் உண்மையான அன்பு இராது. வேஷதாரிகள். சுய பெருமைக்காரர்கள். விளம்பரப் பிரியர்கள். பொது இடங்களில் தாம் செய்து எல்லோரும் தங்களைப் புகழ வேண்டுமென்று விரும்புகிறவர்கள் (மத் 22:18; மத் 23:28, மத் 24:51; மாற்கு 12:15)

"அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்தார்கள்" மற்றவர்களுடைய புகழ்ச்சியே இவர்களுக்குக் கிடைக்கும் பலன். பரலோகத்திலிருக்கிற கர்த்தரிடமிருந்து இவர்களுக்கு ஒரு ஆசீர்வாதமும் வராது.

6 அதிகாரம்

"உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக்கடவது" - யூதர்களுடைய சமுதாய பழக்கவழக்கத்தில் உண்மையான தாழ்மையைக் குறிக்கும் வழக்குச் சொல்

(x) ஜெபம் - அந்தரங்கத்திலிருக்கிற பிதாவிடம் - (லூக் 11:1; 18:1 யோவான் 14:12 15:7)

மத் 6:5 அன்றியும் நீ ஜெபம் பண்ணும் போது மாயக்காரரைப் போலிருக்க வேண்டாம். மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள் அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்

மத் 6:6 நீயோ ஜெபம்பண்ணும்போது உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து உன் கதவைப் பூட்டி அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு. அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்

"நீயோ ஜெபம்பண்ணும்போது உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து உன் கதவைப்பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு" காத்திடம் நாம் ஏறெடுக்கும் விண்ணப்பங்களுக்கு பதில் கிடைக்க வேண்டுமென்றால் நமது ஜெபத்தில் இந்தப் பழக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும். (மத் 7:7 11)

அறைவீடு (closet) ταμεῖον

tameion 5009

பாலவேறுபாடற்ற பெயர்ச்சொல் அறைவீடு, பண்டகசாலை (storehouse, or room for privacy or retirement; secret chamber) (மத் 6:6; மத் 24:26, லூக்கா 12:3,24)

"அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்" - நாம் அந்தரங்கமாக மற்றவர்களுக்கு உதவி புரியும்போது நமது பரலோக பிதா நமக்கு வெளியரங்கமாகப் பலனை அளிப்பார் (மத் 10:40-42)

(xi) பிதாவின் சர்வ வியாபகம் - (மத் 2:25 11:25 ரோமர் 1:33)

மத் 6:7 அன்றியும் நீங்கள் ஜெபம் பண்ணும் போது, அஞ்ஞானிகளைப் போல வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள் அவர்கள் அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள்

மத் 6:8 அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள் உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்

மத்தேயு 5-7 ஆகிய அதிகாரங்களில் தேவனைப் பற்றி கூறப்பட்டிருக்கிற சத்தியங்கள்

1 தேவனைத் தரிசிக்க முடியும். மத் 5:8

2 சமாதானம் பண்ணுகிறவர்களைத் தேவன் நேசிக்கிறார் (மத் 5:9

3 பரமண்டலங்களில் தேவன் வாசம் பண்ணுகிறார் (மத் 5:16,34-48, மத் 6:9)

4 மனுஷருடைய நற்கிரியைகளினால் தேவன் மகிமைப்படுகிறார் (மத் 5:16

5. அவர் தீயோரையும், நல்லோரையும் ஆசீர்வதிக்கிறார் (மத் 5:45

6 தேவன் பூரண சற்குணர் (மத் 5:48

6 அதிகாரம்

7 தேவன் கீழ்ப்படிதலுக்கு வெகுமதி அளிக்கிறார் (மத் 6:1-6:18)

8 அவர் சர்வஞானி (மத் 6:4,6,8,18,32)

9 எல்லா பாவங்களையும் மன்னிக்கிறார் (மத் 6:12-15

10 கீழ்ப்படிகிற அனைவருக்கும் அவர் பிதாவாக இருக்கிறார் (மத் 5:44-48 மத் 6:4,6 8-15,33 மத் 7:7-11,13-23)

11 அவர் மாயமாலத்தை வெறுக்கிறார் (மத் 6:1-8,16-18; மத் 7:1-5)

12 அவர் எல்லா ஜெபங்களையும் கேட்கிறார் (மத் 6:6,33 மத் 7:7-11)

13 தேவன் ஒரு ராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பார் பூமியில் அவருடைய சித்தம் நிறைவேறும். (மத் 6:10,33)

14 அவருடைய பராமரிப்பு அனைவருக்கும் உரியது. மத் 6:11-25

15 தேவன் தீமையினின்று இரட்சித்துக் கொள்வார் (மத் 6:13,33; மத் 7:11)

16 முழு இருதயத்தோடு செய்யப்படும் சேவையை அங்கீகரிப்பார் (மத் 6:24)

17 அவர் நித்திய பிதா (மத் 7:7-11)

18 அவர் எல்லோரையும் நியாயந்தீர்ப்பார் (மத் 7:21-23)

(xii) மாதிரி ஜெபம் - (லூக் 11:2)

மத் 6:9 நீங்கள் ஜெபம் பண்ணவேண்டிய விதமாவது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.

மத் 6:10 உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக.

மத் 6:11 எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்.

மத் 6:12 எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.

மத் 6:13 எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே ஆமென் என்பதே.

பரமண்டல ஜெபத்தில் கூறப்பட்டிருக்கிற [redacted]

1 உறவு - எங்கள் பிதாவே

2 அங்கீகாரம் - பரமண்டலங்களில் இருக்கிறவர்

3 போற்றுதல் - உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக

4 எதிர்பார்ப்பு - உம்முடைய ராஜ்யம் வருவதாக

5 பொருத்தனை - உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக

6 முழு உலகத்திற்கும் - பூமியிலே

7 உறுதி - பரலோகத்திலே செய்யப்படுகிறது போல

8 விண்ணப்பம் - எங்களுக்குத்தாரும்

9 நிச்சயம் - இன்று

10 தேவை - எங்களுக்கு வேண்டிய ஆகாரம்

11 தவறுக்கு வருந்துதல் - எங்களுக்கு மன்னியும்

12 கடமை - எங்கள் கடன்கள

6 அதிகாரம்

13 மன்னிப்பு - நாங்கள் மன்னிக்கிறது போல

14 அன்பும், இரக்கமும் - எங்கள் கடனாளிகள்

15. வழிநடத்துதல் - வழிநடத்தும்

16 பாதுகாப்பு - சோதனைக்கு உட்படப் பண்ணாமல

17 இரட்சிப்பு - எங்களை இரட்சித்துக் கொள்ளும்

18 நீதி - தீமையினின்று

19 விசுவாசம் - இராஜ்யம் உம்முடையது

20 தாழ்மை - வல்லமையும் உம்முடையது

21 பக்தி - மகிமையும் உம்முடையது

22 நித்தியம் - என்றென்றைக்கும்

23 உறுதிப்பாடு - ஆமென்

பரமண்டல ஜெபத்தில முதல மூன்று விண்ணப்பங்கள கர்த்தரைப் பற்றியவை. இறுதியில வரும் 4 நான்கு விண்ணப்பங்கள மனுஷனைப் பற்றியவை

"உம்முடைய ராஜ்யம் வருவதாக" விசுவாசிகள் தேவனுடைய இராஜ்யம் பூமிக்கு வரவேண்டுமென்றும், கிறிஸ்துவின இரண்டாம் வருகைக்காகவும் ஜெபம் பண்ண வேண்டும் (சக 14: வெளி 11:15 வெளி 19:11-20:10, மத் 25:31-46)

தேவனுடைய சித்தத்தைப் பற்றிய சத்தியங்கள்

1 உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக (மத் 6:10)

2 நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது (யோவான் 4:34)

3 எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே தேடுகிறேன் (யோவான் 5:30)

4 கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள் (எபே 5:17)

5. மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள் (எபே 6:6)

6 தேவனுடைய சித்தத்தின் பிரகாரம் ஜீவிக்க வேண்டும் (1பேதுரு 2:11-17)

7 எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், தேவனை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார் (1தீமோ 2:4 2பேதுரு 3:9)

8 நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம இன்னதென்று பகுத்தறியத் தக்கதாக உங்கள மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் (ரோமர் 12:2)

9 நீங்கள பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது (1தெச 4:3-4 1கொரி 3:16-17: 1கொரி 6:19-20)

10 நீங்கள என்னிலும், என வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும் (யோவான 15:7)

"எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்" ஆண்டவரே தீமை எங்களை மேற்கொள்ளக்கூடாது தீமையிலிருந்து எங்களை மீட்டுக் கொள்ளும்.

(xiii) **ஜெபம் - பதில் பெறுவதற்கு நிபந்தனை** - (மத் 7:7, 17:20, 18:18 21:22, மாற்கு 9:23, 11:22, யோவான் 15:7)

மத் 6:14 மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார்

6 அதிகாரம்

மத் 6:15 மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்.

(xiv) உபவாசம் - (மத் 9:15; 17:21, லூக் 5:33)

மத் 6:16 நீங்கள் உபவாசிக்கும்போது, மாயக்காரரைப்போல முகவாடலாயிராதேயுங்கள்; அவர்கள் உபவாசிக்கிறதை மனுஷர் காணும்பொருட்டாகத் தங்கள் முகங்களை வாடப்பண்ணுகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மத் 6:17 நீயோ உபவாசிக்கும்போது, அந்த உபவாசம் மனுஷருக்குக் காணப்படாமல், அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்படியாக, உன் தலைக்கு எண்ணெய் பூசி, உன் முகத்தைக் கழுவு.

மத் 6:18 அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்.

"முகவாடல்" தங்கள் முகங்களில் சாம்பலைப் பூசிக்கொள்ளுதல்.

"அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்தார்கள்" மனுஷர்கள் இவர்களைப் புகழுவார்கள். இதுவே இவர்களுக்குக் கிடைக்கும் பலன். இவர்களுக்குக் கர்த்தருடைய ஆசீர்வாதம் இல்லை.

(6) விசுவாசிகளுக்கு எச்சரிப்புக்கள் - (6:19-7:29)

(அ) பூமியிலே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம் - (13:22; 19:16; லூக் 12:15, 1தீமோ 6:17)

மத் 6:19 பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்.

மத் 6:20 பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை.

மத் 6:21 உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.

"பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்கள்" - கிழக்கு தேசத்து நாடுகளில் ஆடை, ஆபரணங்கள், பொன், வெள்ளி, போர் ஆயுதங்கள் ஆகியவற்றைப் பொக்கிஷங்களாகச் சேர்த்து வைத்தார்கள். உலோகங்கள் துருப்பிடித்துப் போகும். திருடர்கள் பொக்கிஷங்களைத் திருடிச் சென்றுவிடுவார்கள்.

"பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்" பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைப்பது என்பது தேவனுக்கு நம்மைப் பிரதிஷ்டை பண்ணுவதும், தேவையுள்ள ஜனங்களுக்கு உதவி புரிவதும் ஆகும். நாம் கொடுக்கும் ஒரு கலசம் தண்ணீர்கூட கர்த்தருடைய பார்வையில் மிகவும் அருமையானது. கர்த்தர் இதற்கும் பலனளிப்பார் (மத் 10:41,42).

"அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை" பரலோகத்தில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. அங்கே பூச்சிகளின் பிரச்சனை இல்லை. உலோகங்கள் துருப்பிடிக்காது. திருடர் பயம் அங்கில்லை. எல்லாருடைய இருதயமும் பயமின்றி இருக்கும்.

6 அதிகாரம்

"உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்" - கொலோ 3:1-4 ஆகிய வசனங்களில் நமக்கு பவுல் இவ்வாறு ஆலோசனை கூறுகிறார் "நீங்கள் கிறிஸ்துவுடனேகூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள் பூமியிலுள்ளவைகளை அல்ல மேலானவைகளையே நாடுங்கள் ஏனென்றால் நீங்கள் மரித்தீர்கள் உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. நமமுடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும் போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்

(ஆ) இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது - (லூக் 16:9; யாக் 1:5 எபி 10:38

மத் 6:22 கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது. உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும்

மத் 6:23 உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும் இப்படி உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்!

மத் 6:24 இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது. ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான் அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டைபண்ணுவான்; தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது.

விளக்கு (light) **λύχνος** lychnos - 3088

ஆண்பால் பெயர்ச்சொல் - விளக்கு - எண்ணெய் ஊற்றப்பட்ட விளக்கு சிறிது நேரம் எரிந்து, பின்பு அணைந்துவிடும்.

விளக்கு (light) (மத் 6:22 லூக்கா 11:34; லூக்கா 12:35, யோவான் 5:35 2பேதுரு 1:19

வெளி 21:23) விளக்கு (candle) (மத் 5:15; மாற்கு 4:21; லூக்கா 8:16 லூக்கா 11:33,36; லூக்கா 15:8 வெளி 18:23; வெளி 22:5

கெட்டது (evil) - πονηρός - poneeros - 4190

பெயரடை - கெட்டது, தீமையான துன்மையான (wicked, diseased, blind, full of evil, as in) (மத் 20:15 மாற்கு 7:21-23; ரோமர் 1:29-32 கலா 5:19-21 யூதருடைய வழக்கத்தில பொறாமைக்காரன் துஷ்டன் ஆகியோருடைய கண்களைக் கெட்ட கண் என்பார்கள் அவர்களுடைய கண் பார்வையே மற்றவர்களுக்குத் துன்பத்தை உண்டாக்கும் என்பது யூதருடைய நம்பிக்கை

"அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்" - (யோவான் 3:19-21 2கொரி 4:4 எபே 5:11)

"இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது" இது இயலாத காரியம். ஒருவனைப் பகைப்பான் மற்றவனைச் சிநேகிப்பான் நாம் தேவனுக்கும் சாத்தானுக்கும் ஊழியம் செய்ய முடியாது. பரிசுத்தத்திற்கும் பாவத்திற்கும் நாம் பங்காளிகளாக முடியாது. பிசாசிற்கு ஊழியம் செய்கிறவர்களுக்கு நரகம் நிச்சயம் (மத் 25:41, லூக்கா 14:26, 1யோவான் 3:8

(இ) கவலைப்படுவதினால் பயனில்லை - (லூக் 12:22, பிலி 4:6 1பேதுரு 5:7

மத் 6:25 ஆகையால் என்னத்தை உண்போம் என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும் என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன் ஆகாரத்தைப்பார்க்கிலும் ஜீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா?

6 அதிகாரம்

மத் 6:26 ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள் அவைகள் விதைக்கிறதுமில்லை அறுக்கிறதுமில்லை. களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை. அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார் அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா?

மத் 6:27 கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்?

மத் 6:28 உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள் அவைகள் உழைக்கிறதுமில்லை நூற்கிறதுமில்லை.

மத் 6:29 என்றாலும், சாலொமோன் முதலாய் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போல் உடுத்தியிருந்ததில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்

மத் 6:30 அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்கு தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால் உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா?

மத் 6:31 ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள்

மத் 6:32 இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள் இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்

மத் 6:33 முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.

மத் 6:34 ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள் நாளையத் தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுபோதும்

தேவனுக்கும் உலகபொருளுக்கும் - உலகபொருள் என்பது உலக ஐசுவரியத்தைக் குறிக்கும் தூக்கா (6:9-13

நாம் கவலைப்படக்கூடாது என்பதற்குக் [redacted]

1 ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவன் விசேஷித்தது (மத் 6:25)

2 உடையைப் பார்க்கிலும் சரீரம் விசேஷித்தது (மத் 6:25)

3 பௌதீக பொருட்களைப் பார்க்கிலும் மனுஷர் விசேஷித்தவர்கள் (மத் 6:25)

4 பறவைகளை விட மனுஷர் விசேஷித்தவர்கள் (மத் 6:26)

5 கவலைப்படுகிறதினாலே சரீரத்தை மாற்ற முடியாது (மத் 6:27

6 காட்டுப்புஷ்பங்களைப் பார்க்கிலும் மனுஷர் விசேஷித்தவர்கள் (மத் 6:28-30)

7 எல்லை சிருஷ்டிக்கும் தேவனுடைய பராமரிப்பு உண்டு (மத் 6:26-32

8 கவலைப்படுவதினால் பிரயோஜனம் இல்லை கவலைப்படுதல் பாவம் (மத் 6:33-34)

கவலைப்படுதலின் அபாயங்கள்

1 பாவமானது பயத்தை உண்டாக்கும்

2 மற்ற தீமைகளுக்குக் காரணமாக இருக்கும் நோய

மத்தேயு – தொகுப்புரை

6 அதிகாரம்

3 பிரச்சனைகளைக் கடன்வாங்கும். இதைத் திரும்ப அடைக்கமுடியாது.

4 நடக்காத காரியத்திற்காகவும், நடக்க முடியாத காரியத்திற்காகவும் மனதில் பயத்தை உண்டாக்கும்

5. பிரச்சனை, வருத்தம், மரணம் ஆகியவற்றை உண்டாக்கும்

6 நாளைக்காக நாம் கடனாக வாங்கும் பாரச்சுமைகளை மற்றவர்கள் சுமக்க வேண்டும்

7 கவலைப்படும் பாரம் நம்மை அற்ப ஆயுசில் கொன்றுபோடும்

8 மனக்குழப்பமும், தற்கொலையும் உண்டாகும்.

9 கவலைப்படுதல் நம்மீது இரக்கம் காண்பிக்காமல் நமது சவக்குழியைத் தோண்டும்.

10 கவலைப்படும் நேரம் வீணாய்ப் போகிறது. இதை நல்ல காரியங்களுக்காகப் பயன்படுத்தலாம்

11 கர்த்தரிடத்தில் நாம் வைக்கும் விசுவாசத்தையும், நம்பிக்கையையும் நமது சமாதானத்தையும் கவலை திருடும்

12 மற்றவர்களுக்கு நமது கவலை இடறுவதற்கு ஏதுவான கல்லாக இருக்கும்

13 தேவனுக்கு அவமரியாதையை உண்டு பண்ணும்

14 நாளைக்காகக் கவலைப்படுவதால் இன்றைக்கும் நிம்மதியாக இருக்க முடியாது.

15 கர்த்தரை நம்புகிறவர்கள் கவலைகளில் சிக்கிக்கொள்ள மாட்டார்கள்

16 கர்த்தருடைய பிள்ளைகள் தங்களுக்கு வரும் பிரச்சனைகளைச் சந்தோஷமாக ஏற்றுக் கொள்வார்கள்

17 நாம் கவலைப்படுவதினால் நமக்கு பரலோகபிதா இருந்தும், நாம் ஒரு அனாதையைப்போல வாழுவதற்கு சமம்

18 கவலைப்படுவது தேவனுக்கு எதிராகவும் மனுஷனுக்கு எதிராகவும் செய்யும் பாவம்.

19 கவலைப்படுவது தன்னுடைய மனதையும் மற்றவர்களுடைய மனதையும் துன்புறுத்தும்

20 கவலைப்படுவது மதியீனமானது. நமக்கு நடக்கப் போவதை நாம் கவலைப் படுவதினால் தடுத்து நிறுத்த முடியாது. நமக்கு பிரச்சனைகள் வந்தாலும் கர்த்தரிடத்தில் நம்பிக்கையோடு ஜீவிப்போம் என்றால் கர்த்தர் நமது பிரச்சனைகளிலிருந்து நம்மை விடுவிக்க வல்லவராக இருக்கிறார்

"முழம்" - 18 அங்குல நீளம் (லூக்கா 12:25)

"சரீர அளவு" - (லூக்கா 2:52 லூக்கா 19:3; எபே 4:13)

"சாலொமோன் முதலாய் தன் சகல மகிமையிலும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை" (1இராஜா 9:14-28; 1இராஜா 10:10, 2நாளா 9:13-28)

"அடுப்பு" கிழக்கு தேசத்து ஜனங்கள் விறகுகளாலும் புல்லுகளாலும் சமையல் பண்ணும் அடுப்புகளை எரிப்பார்கள் காட்டுப்புல் முக்கிய எரிபொருள் (1இராஜா 17:10; சங் 58:9)

அற்பவிசுவாசிகளே

1 ஜீவனைக்குறித்து கவலைப்படுகிறார்கள் (மத் 6:30)

2 பயப்படுகிறவர்கள் (மத் 8:26

3. அற்புதங்களை விசுவாசியாதவர்கள் (மத் 14:31)

4 போஜனத்தைக் குறித்துக் கவலைப் படுகிறவர்கள் (மத் 16:6-12

மத்தேயு - தொகுப்புரை

6 அதிகாரம்

"அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்" - புறஜாதியாருக்கு அவர்களுடைய வயிறு தான் தெய்வம். தங்களுடைய மாம்சத்தின் இச்சைப் பிரகாரம் அவர்கள் தங்கள் தெய்வங்களை ஆராதிக்கிறார்கள். ஜீவியத்தின் பெருமை, கண்களின் இச்சை ஆகியவை அஞ்ஞானிகளை ஆட்கொள்ளுகிறது. (யோவான் 2:15-17)

"தேடுங்கள்" - வாஞ்சையோடு தேடிப்பாருங்கள் லூக்கா 15:8; லூக்கா 17:33

"தேவனுடைய இராஜ்யம்" - புதிய ஏற்பாட்டில் பரலோக இராஜ்யம் என்னும் வாக்கியம் 33 இடங்களில் வருகிறது. ஆனால் தேவனுடைய இராஜ்யம் என்னும் வாக்கியம் மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் 5 இடங்களில் மட்டுமே வருகிறது. (மத் 6:33 மத் 12:28 மத் 19:24 மத் 21:31,43)

"நீதி" - (ரோமர் 3:26)

"நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்" இன்றுபோலத் தான் நாளையும் இருக்கும் ஆகையினால் நாளைக்காகக் கவலைப்படுவதினால் எவ்வித பிரயோஜனமுமில்லை. அந்தந்த நாளுக்குத் தேவையானதை நம் ஆண்டவர் தருவார் என்று விசுவாசத்தோடு ஜீவிக்க வேண்டும். வருங்காலத்தைக் குறித்த சிந்தையோடு இருப்பது தவறல்ல. ஆனால் வருங்காலத்தைக் குறித்த கவலை விசுவாசிகளிடம் இருக்கக்கூடாது. (மத் 6:25)

7 அதிகாரம்

(ஏ) உன் கண்ணிலிருக்கிற உத்திரம் - (லூக் 6:41; யோவான் 7:24; 8:7)

மத் 7:1 நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்.

மத் 7:2 ஏனெனில் நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்.

மத் 7:3 நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?

மத் 7:4 இதோ, உன் கண்ணில் உத்திரம் இருக்கையில், உன் சகோதரனை நோக்கி: நான் உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்துப்போடட்டும் என்று நீ சொல்லுவதெப்படி?

மத் 7:5 மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு; பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய்.

"நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்" நாம் நம்மிடத்தில் மட்டுமே குற்றம் காணவேண்டும். நமது இருதயத்தை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். பிறருடைய காரியங்களில் தலையிட்டு, மற்றவர்களை ஆராய்ச்சி பண்ணக்கூடாது. நம்மை நாமே ஆராய்ந்து பார்க்கும்போது நம்முடைய பாவங்கள் உணர்த்தப்படும், தேவனுடைய சமூகத்தில் நாம் பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ளலாம்.

நாம் மற்றவர்களை எப்படி நியாயம் தீர்க்கிறோமோ அப்படியே நாமும் தீர்க்கப்படுவோம். "நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்."

துரும்பு (mote) - κάρφος - karphos - 2595

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - துரும்பு (a twig, straw, chaff, or any particle of dust) (மத் 7:3; லூக்கா 6:41)

உத்திரம் (beam) - δοκός - dokos - 1385

பெண்பால் பெயர்ச்சொல் - உத்திரம் (wooden beam) (மத் 7:3; லூக்கா 6:41)

"மாயக்காரனே" - லூக்கா 13:15; யோபு 20:4-5; யோபு 27:8; நீதி 11:9

(உ) பரிசுத்தமானதைக் கவனமாகக் கையாள வேண்டும்

மத் 7:6 பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள்; உங்கள் முத்துக்களைப் பன்றிகள்முன் போடாதேயுங்கள்; போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து, திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும்.

"பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள்" சத்தியத்திற்கு எதிராக கலகம் பண்ணுகிறவர்களிடம் சத்தியத்தை வலியுறுத்தக்கூடாது. பரிசுத்தமான காரியங்களில் குற்றம் கண்டு பிடிக்கிறவர்களிடத்திலும் தூஷணமான காரியங்களைப் பேசுகிறவர்களிடத்திலும் பரிசுத்தமானவற்றைக் கொடுக்கக்கூடாது.

7 அதிகாரம்

"நாய்கள்" உருவகமாகப் பயன்படுத்தப் பட்டிருக்கிற இடங்கள்

1 வேசிப்பணையம் (உபா 23:18)

2 ஏமாற்றுதல் (1சாமு 17:43; 1சாமு 24:14; 2சாமு 9:8; 2சாமு 16:9; 2இராஜா 8:13)

3 சாத்தானின் வல்லமை (சங் 22:20)

4 துன்மார்க்கர் (சங் 22:16; சங் 59:6,14)

5 கள்ளத்தீர்க்கதரிசி (ஏசா 56:10; பிலி 3:2)

6 ஏமாற்றும் ஜனங்கள் (மத் 7:6; வெளி 22:15)

7 மூடர் (நீதி 26:11)

8 புறஜாதியார் (மத் 15:26-27; மாற்கு 7:27-28)

9 பின்மாறிப் போனவர்கள் (2பேதுரு 2:20-22)

"பன்றிகள்" உருவகமாகப் பயன்படுத்தப் பட்டிருக்கிற இடங்கள்

1 மதிகேடாய் நடக்கிற ஸ்திரீ (நீதி 11:22)

2 ஏமாற்றும் ஜனங்கள் (மத் 7:6)

3 பின்மாறிப் போனவர்கள் (2பேதுரு 2:20-22)

(ஊ) **பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்கிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பார்** – (6:25; லூக் 11:5-18)

மத் 7:7 கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.

மத் 7:8 ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்.

மத் 7:9 உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா?

மத் 7:10 மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா?

மத் 7:11 ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?

கேள் (Ask) - αἰτέω - aiteoo - 154

வினைச்சொல் - கேள், வேண்டிக்கொள், விண்ணப்பம் பண்ணு (to ask) (யோவான் 15:7; மத் 21:22; யாக் 1:5-8; 1யோவான் 3:22; 1யோவான் 5:14-16), கேள் (to crave) (மாற்கு 15:43), கேள் (to beg) (மத் 27:58), கேள் (to desire) (மாற்கு 11:24), கேள் (to requre or demand) (லூக்கா 1:63; 1கொரி 1:22; லூக்கா 12:48; 1பேதுரு 3:15)

இரட்சிக்கப்பட்டிருக்கிற நாம் கர்த்தருடைய பிள்ளைகள், தேவனுடைய சுதந்தரவாளிகள். தமது குடும்பத்தில் கர்த்தர் நமக்கு ஒருசில சிலாக்கியங்களைக் கொடுத்திருக்கிறார். அவற்றை நாம் தேவனிடம் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம். மத் 7:7-11 ஆகிய வசனங்களில் 5 இடங்களில் "கேளுங்கள்" என்னும் வாக்கியம் வருகிறது. நாம் தேவனிடத்தில் கேட்பதைப் பெற்றுக்கொள்வோம் என்பது தேவனுடைய சித்தம். (சங் 2:8; சங் 34:9-10; சங் 84:11; மாற்கு 11:24; யோவான் 15:7,16)

மத்தேயு - தொகுப்புரை

7 அதிகாரம்

"தேடுங்கள்" - முழு இருதயத்தோடு நாம் தேடவேண்டும் (உபா 4:29; 2நாளா 7:14, 2நாளா 11:16; 2நாளா 15:2; நீதி 8:17, லூக்கா 15:8; கொலோ 3:1; எபி 11:6, யாக் 1:5-8; 1பேதுரு 3:11)

"தட்டுங்கள்" - ஜெபத்திற்குப் பதில் கிடைக்க வேண்டுமென்றால் நாம் கேட்கவேண்டும், தேடவேண்டும், தட்ட வேண்டும் (லூக்கா 11:5-13; லூக்கா 18:1-8) நாம் விரும்புவதைத் தேவனிடம் கேட்கிறோம். நாம் இழந்துபோனதைத் தேடுகிறோம். நமக்கு தேவையானதைத் தருமாறு தேவனிடம் தட்டுகிறோம். தேவனிடத்தில் நாம் நம்பிக்கையுடனும், தாழ்மையுடனும் கேட்க வேண்டும். மிகுந்த கவனத்தோடு தேடவேண்டும். உண்மையான மனதுடனும் நீடிய பொறுமையுடனும் தட்ட வேண்டும். (லூக்கா 11:1-8)

"கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்ளுகிறான். தேடுகிறவன் கண்டடைகிறான். தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்" இது கர்த்தருடைய பிரமாணம். நாம் பெற்றுக் கொள்ளவில்லையென்றால் கேட்கும் நம்மிடம் விசுவாசம் குறைவாக இருக்கலாம். ஏனோதானோவென்று கவனமில்லாமல் தேடலாம். (யாக் 1:5-8, எபி 11:6 லூக்கா 11:5-13, லூக்கா 18:1-8)

நமது அவிசுவாசத்தினால் நமது விண்ணப்பங்களுக்குப் பதில் கிடைப்பதில்லை. (மத் 17:17-21; யாக் 1:5-8 எபி 11:6) தவறான உபதேசத்தினாலேயே ஒருவனுக்குள் அவிசுவாசம் முளைக்கிறது. (ரோமர் 10:17) தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு அளவேயில்லை (சங் 34:9-10; சங் 84:11; சங் 91:1-12 மத் 17:20, மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24, யோவான் 15:7,16)

"திறக்கப்படும்" - கிழக்கு தேசத்திலுள்ள வீடுகளில் கதவு அடைக்கப்பட்டிருக்கும். வீட்டிற்குள் போகவேண்டுமென்றால் அந்த வீட்டின் கதவைத் தட்ட வேண்டும். வீட்டிற்குள் இருப்பவர் கதவைத் தட்டுபவரிடம் அவரைப் பற்றிய விவரங்களைக் கேட்பார். அந்த நபர் வீட்டிற்குள் வரவேண்டுமென்று வீட்டுக்காரர் நினைத்தால் மட்டுமே கதவு திறக்கப்படும். (லூக்கா 11:5-8)

"தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிற அவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?" - பொல்லாத தகப்பன்மார்கள் தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்கிறார்கள். தங்களால் முடிந்த எல்லா நன்மைகளையும் செய்கிறார்கள். பிள்ளைகளும் பெற்றோர்களிடமிருந்து தங்களுக்குத் தேவையான எல்லாவற்றையும் பெற்றுக் கொள்கிறார்கள். உணவு, உடை, மற்றும் தேவையான எல்லா பொருள்களையும் உலகப்பிரகாரமான தந்தைமார்கள் தங்கள் பிள்ளைகளுக்குத் தாராளமாகக் கொடுக்கிறார்கள். அவர்களே இப்படிக் கொடுக்கும்போது நம்மீது கரிசனையுள்ள நமது பரலோகபிதா நமது தேவைகளை அறிந்திருக்கிறவர். நிச்சயமாகவே நமக்குத் தேவையானவற்றை கொடுப்பார். கர்த்தரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. தம்மிடத்தில் வேண்டிக்கொள்கிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரைக் கொடுப்பார் என்று லூக்கா கூறுகிறார் (லூக்கா 11:13)

"நன்மையானவைகள்" ஆபத்துகளிலிருந்து விடுதலை, தீமையிலிருந்து பாதுகாப்பு, சரீர சுகம், வாழ்வில் வளம், சந்தோஷம், சமாதானம் இவை எல்லாமே நன்மையானவைகளே. இவற்றை நமது பரலோகபிதாவிடம் நாம் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம். கர்த்தர் நமது தேவைகளைச் சந்திக்க விரும்புகிறார் (மத் 7:7-11)

(எ) தங்கச்சட்டம் - மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள் - (லூக் 6:31)

மத் 7:12 ஆதலால் மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப் பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம்.

7 அதிகாரம்

"இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம்" - மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள் மத் 7:1-12 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற மொத்த உபதேசத்தின் மையக்கருத்து இதுதான்

(ஏ) இடுக்கமான வாசல் வழியும் விசாலமான வாசல் வழியும் - 6:24; 7:24; லூக் 6:47)

மத் 7:13 இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள் கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும் வழி விசாலமுமாயிருக்கிறது. அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்

மத் 7:14 ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும் வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்

"இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள், கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது" லூக்கா 13:24 27 ஆகிய வசனங்களை ஒப்பிடவும் இரண்டு வழிகளில் போவதற்கான காரணங்கள் உபா 30:15. இராஜா 18:21, 2பேதுரு 2:2,15) அவன் போய்ச் சேரும் இரண்டு இட[redacted] (மத் 25:46. யோவான் 5:28 29 கலா 6:7 8 மனந்திரும்புவதினால் பாவமன்னிப்பு பெற்று நித்திய அழிவிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் லூக்கா 13:1 5 யோவான் 3:16 20 அப் 3:19 1யோவான் 1:9) பாவம் ஆத்துமாவை அழிக்கும் (ஆதி 2:17, எசே 18:4 ரோமர் 8:12-13

"இடுக்கமான வாசல்வழி"- மத் 7:12-இல் கூறப்பட்டிருக்கிற தங்கச்சட்ட வாக்கியத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படிதல் கர்த்தருடைய சமுகத்தில் பாவங்களுக்கு மனந்திருந்தி, ஆவிக்குரிய ஜீவியம் ஜீவிப்பது.

"விரிவும், விசாலமுமாயிருக்கிற வழி" - துன்மார்க்கரின் கண்ணியுமில்லாத பாவமான ஜீவியம். சுயநல ஜீவியம். பிறருடைய பொருளை இச்சித்து ஜீவிப்பது. மத் 7:12-ல் கூறப்பட்டிருக்கிற உபதேசத்திற்குக் கீழ்ப்படியாமல் ஜீவிப்பது.

"கேட்டுக்குப் போகிற வாசல்" - இந்த வழியில் ஜீவிப்பது முடிவில் அழிவில் கொண்டுபோய்விடும். முடியும்போதுதான் இந்தப் பாதை அழிவுக்கு நேரானது என்பது தெரியும். (ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13. கலா 5:19-21; கலா 6:7-8; எபி 9:27) இந்த வாசல் வழியாகப் போனாலும், ஒருவன் தனது பாவமான ஜீவியத்தை உணர்ந்து கர்த்தரிடத்தில் மனந்திரும்பி வந்தால் அவன் கேட்டுக்குப் போகாமல் நித்திய ஜீவனை அடைவான் (அப் 26:18

"ஜீவனுக்குப் போகிற வாசலைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்" - இடுக்கமான வழி ஜீவனுக்குப்போகிறது இந்த வழி நெருக்கமாக இருக்கிறது நமது ஜீவியத்தை நித்திய ஜீவனுக்கு நேராக வழி நடத்தும் பாதை. இதில் ஒருசிலர் மட்டுமே நடந்து போகிறார்கள் (யோவான் 6:27 யோவான் 10:1-28 யோவான் 15:1-8

(ஐ) கள்ளத்தீர்க்கதரிசிகள் - 24:4,24

மத் 7:15 கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள், அவர்கள் ஆட்டுத் தோலைப் போர்த்துக் கொண்டு உங்களிடத்தில் வருவார்கள் உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்

மத் 7:16 அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள் முட்செடிகளில் திராட்சப் பழங்களையும் முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா?

மத் 7:17 அப்படியே நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும் கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும்.

மத் 7:18 நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்கமாட்டாது.

7 அதிகாரம்

மத் 7:19 நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்

மத் 7:20 ஆதலால், அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்

"கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்" - உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள் (1யோவான் 4:1)

கள்ளத்தீர்க்கதரிசிகளைச் சோதித்தறியும் வழிகள்

1 அவர்களுடைய வெளியரங்கமான நடத்தையினால் (மத் 7:15; மத் 5:20; மத் 6:1-24; மத் 23:1-33; 2தீமோ 3:5)

2 அவர்களுடைய உள்ளான சுபாவங்களினால் (மத் 7:15; மத் 5:22,28; மத் 23:25-28; மாற்கு 7:21-23)

3 அவர்கள் கொடுக்கும் கனிகளினால் (மத் 7:16-20; மத் 23:1-24; 2கொரி 11:13-15; பிலி 1:15-17; பிலி 3:3,17-19)

4 அவர்களுடைய உபதேசங்களினால் (மத் 7:16-20; மத் 12:33-37; மத் 15:1-9; மத் 16:12; மத் 23:1-33; 1தீமோ 4:1-6; 1தீமோ 6:3-5; 2தீமோ 3:1-8; 2தீமோ 4:1-4; 2பேதுரு 2)

5 தேவனுடைய சித்தத்தைச் செய்வதாகக் கூறி அதைச் செய்யாமல் இருப்பதினால் (மத் 7:21; மத் 5:20; மத் 23:1-33)

6 பிசாசின் கிரியைகளை அவர்கள் செய்வதினால் (மத் 7:22; மத் 24:24; அப் 8:9-13; அப் 13:6-13; அப் 16:16-24; 2கொரி 11:13-15; 2தெச 2:8-12; வெளி 13:1-18; வெளி 16:13-16; வெளி 19:20)

7 அவர்களுடைய முடிவு (மத் 7:23; மத் 25:41,46; 2கொரி 11:13-15; வெளி 19:20; வெளி 20:10-15)

"அப்படியே நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்; கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும்" - பாவி பாவமான காரியங்களைச் செய்வான் நீதிமான் நற்கிரியைகளைச் செய்வான் ஒரு மனுஷன் ஒரே சமயத்தில் பாவியாகவும் பரிசுத்தவானாகவும் இருக்க முடியாது ஒன்று அவன் பாவியாக இருப்பான் அல்லது பரிசுத்தவானாக இருப்பான் (மத் 7:24; ரோமர் 6:16-23; ரோமர் 8:13)

"நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்" - விசுவாசியின் ஜீவியத்தில் ஆவியின் கனி வெளிப்பட வேண்டும். ஆவியின் கனி வெளிப்படாத ஜீவியம் நல்ல கனிகொடாத மரத்தைப்போன்றது அப்படிப்பட்டவர்கள் வெட்டப்பட்டு அக்கினியிலே போடப்படுவார்கள் என்னும் ஆவிக்குரிய எச்சரிப்பு நமக்குள் எப்போதும் இருக்க வேண்டும் (யோவான் 15:1-8)

(௯) தேவனுடைய சித்தத்தைச் செய்யாமல் கர்த்தாவே, கர்த்தாவே என்று கூறுவது - (லூக் 13:22-30)

மத் 7:21 பரலோகத்திலிருக்கிற என் பிதாவினுடைய சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை

மத் 7:22 அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள்

7 அதிகாரம்

மத் 7:23 அப்பொழுது நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்.

தீர்க்கதரிசன எண் - 6

"கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை................" (மத் 7:21-23) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. வெள்ளை சிங்காசன நியாயதீர்ப்பின்போது இது நிறைவேறும். (வெளி 20:11-15; அப் 17:31)

"பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" - நாம் பரலோக இராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமானால் "நான் கர்த்தரிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன். அவருடைய இரட்சிக்கும் கிருபை என்னை இரட்சிக்கும்" என்று வாயால் சொன்னால் மட்டும் போதாது. பரலோகத்திலிருக்கிற பிதாவின் சித்தத்தின்படி செய்ய வேண்டும். இப்படிச் செய்கிறவன் மட்டுமே பரலோக இராஜ்யத்தில் பிரவேசிப்பான். (மத் 7:21; 1பேதுரு 4:18; எபி 12:14; யாக் 1:19-27; ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13)

"பரலோக இராஜ்யம்" - (மத் 4:17; மத் 19:24)

"அந்நாளில் அநேகர்" - அநேகர் நரகத்திற்குப் போவார்கள். (மத் 7:13,22; மத் 20:16) ஒருசிலரே இரட்சிக்கப்படுவார்கள். (மத் 7:14; மத் 22:14; லூக்கா 13:23-30)

"கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா?" - என்று கூறி அநேகர் நரகத்திற்குத் தப்பிக்கப் பார்ப்பார்கள். ஆனால் உண்மையிலேயே அவர்கள் இந்தக் காரியங்களைச் செய்தார்களா என்று இங்கு கூறப்படவில்லை.

(௭) கன்மலையின்மேல் அஸ்திபாரமும் மணலின்மேல் அஸ்திபாரமும் - (7:13; லூக் 6:47-49)

மத் 7:24 ஆகையால் நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்.

மத் 7:25 பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை; ஏனென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது.

மத் 7:26 நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான்.

மத் 7:27 பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதினபோது, அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்.

மத் 7:28 இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்தபோது, அவர் வேதபாரகரைப்போல் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியால்,

மத் 7:29 ஜனங்கள் அவருடைய போதகத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்.

மத்தேயு - தொகுப்புரை

7 அதிகாரம்

"இவைகளின்படி செய்கிறவன் எவனோ" - கர்த்தருடைய வசனத்தைக் கேட்டால்மட்டும் போதாது. அவற்றிற்குக் கீழ்ப்படிய வேண்டும். அவைகளின்படி செய்ய வேண்டும். அவன் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டினவனைப்போல இருப்பான். அவன் புத்தியுள்ளவன். கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டும் அவைகளின்படி செய்யாதவன் புத்தியில்லாதவன். தன் வீட்டை மணலின்மேல் கட்டியவனுக்கு ஒப்பானவன்.

"பெருவெள்ளம்" - கிழக்கு தேசங்களில் மழைக்காலத்தில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும். சூறாவளிக்காற்று அடிக்கும். வலுவான கட்டிடங்களைக்கூட காற்றும் வெள்ளமும் அழித்துப்போடும்.

வெள்ளம் **(flood)** - **ποταμός** - **potamos** - 4215

ஆண்பால் பெயர்ச்சொல் - வெள்ளம், நதி, ஆறு, நீரோட்டம். வெள்ளம் **(flood)** (மத் 7:25-27, வெளி 12:15-16); ஆறு **(river)** (யோவான் 7:38, வெளி 22:1-2); ஓடை **(stream)** (லூக்கா 6:48-49, சங் 42:7)

"வேதபாரகர்" - (மத் 2:4

8 அதிகாரம்

8. இயேசு குஷ்டரோகியைச் சுத்தமாக்குகிறார் - (மாற்கு 1:40, லூக் 5:12)

மத் 8:1 அவர் மலையிலிருந்து இறங்கினபோது, திரளான ஜனங்கள் அவருக்குப் பின்சென்றார்கள்.

மத் 8:2 அப்பொழுது குஷ்டரோகி ஒருவன் வந்து அவரைப் பணிந்து: ஆண்டவரே! உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் என்றான்.

மத் 8:3 இயேசு தமது கையை நீட்டி அவனைத் தொட்டு: எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார்; உடனே குஷ்டரோகம் நீங்கி அவன் சுத்தமானான்.

மத் 8:4 இயேசு அவனை நோக்கி: இதை நீ ஒருவருக்கும் சொல்லாதபடி எச்சரிக்கையாயிரு. ஆயினும் அவர்களுக்குச் சாட்சியாக நீ போய் ஆசாரியனுக்கு உன்னைக் காண்பித்து, மோசே கட்டளையிட்ட காணிக்கையைச் செலுத்து என்றார்.

"திரளான ஜனங்கள் அவருக்குப் பின்சென்றார்கள்" - கர்த்தருடைய வல்லமையினால் ஊழியம் செய்யும்போது திரளான ஜனங்களுக்கு ஆசீர்வாதமாகக் கர்த்தர் நம்மைப் பயன்படுத்துவார். திரளான ஜனங்கள் நம்மிடம் வருவார்கள்.

"குஷ்டரோகி ஒருவன் வந்து அவரைப் பணிந்து கொண்டான்" - இயேசு கிறிஸ்து அவனுடைய மரியாதையையும் ஆராதனையையும் அங்கீகரித்தார் (யாத் 4:6, மத் 15:25).

"ஆண்டவர்" - புதிய ஏற்பாட்டில் 367 இடங்களில் இயேசு "ஆண்டவர்" என்று அழைக்கப்படுகிறார். சுவிசேஷங்களில் 133 இடங்களிலும், அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் 84 இடங்களிலும், மற்ற புஸ்தகங்களில் 150 இடங்களிலும் இயேசு "ஆண்டவர்" என்று அழைக்கப்படுகிறார். இயேசு தம்மை ஆண்டவர் என்று அழைத்தார் (மத் 7:21-22; மத் 21:3). தீர்க்கதரிசிகள் இயேசுவை ஆண்டவர் என்று கூறினார்கள் (ஏசா 40:3=மத் 3:3; மல் 3:1=மாற்கு 1:2; லூக்கா 2:27). தூதர்கள் இயேசுவை ஆண்டவர் என்று அழைத்தார்கள் (லூக்கா 2:11). பரிசுத்த ஆவியானவரும் கர்த்தரும் இயேசுவை ஆண்டவர் என்று அழைத்தார்கள் (சங் 110:1-5; மத் 22:43-45; மல் 3:1; அப் 2:36). கர்த்தரும் ஆண்டவரும் அருகில் உட்கார்ந்திருப்பதாக நாம் வாசிக்கிறோம் (சங் 110:1-5; மத் 22:43-45).

"உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும்" - நோயாளியைக் குணப்படுத்துவது கர்த்தருடைய சித்தம். ஒரு காரியம் கர்த்தருக்குச் சித்தமானது என்று தெளிவாகத் தெரிந்த பின்பும் ஆண்டவரிடம் "கர்த்தாவே இந்த காரியம் உமக்குச் சித்தமானதா?" என்று கேள்வி கேட்டுக் கொண்டிருக்கக்கூடாது. சந்தேகம் நமது ஜெபத்திற்கு பதில் கிடைப்பதைத் தடை செய்து விடும். தேவனிடத்தில் நம்பிக்கை வைப்பவர்கள் எல்லோருமே "தேவனால் எல்லாம் கூடும்" என்று விசுவாசிக்கிறார்கள். ஆனால் ஒருசிலர் மட்டுமே தேவன் கிரியை செய்வார் என்று எதிர்பார்க்கிறார்கள். கர்த்தருக்குச் சித்தமான காரியங்களைத் தமது பிள்ளைகள் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பது தேவனுடைய சித்தம் (மத் 7:7-11; மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 15:7,16; எபி 11:6; யாக் 1:5-8; 1யோவான் 3:20-22; 1யோவான் 5:14; லூக்கா 5:12).

"இயேசு தமது கையை நீட்டி அவனைத் தொட்டார்" - இயேசு 8 இடங்களில் வியாதியஸ்தர்களைத் தொட்டு குணமாக்கினார் (மத் 8:3,15; மத் 9:29; மத் 17:7; மத் 20:34; மாற்கு 1:41; மாற்கு 7:33; லூக்கா 5:13; லூக்கா 7:14; லூக்கா 22:51). பல வியாதியஸ்தர்கள் இயேசுவைத் தொட்டு சொஸ்தமானார்கள் (மத் 9:21; மத் 14:36; மாற்கு 3:10; மாற்கு 5:28; மாற்கு 6:56; மாற்கு 8:22; லூக்கா 6:19).

மத்தேயு - தொகுப்புரை

8 அதிகாரம்

"எனக்குச் சித்தமுண்டு" - தம்மை நம்பி தம்மிடத்தில் வருகிற யாரையும் இயேசு கிறிஸ்து புறம்பே தள்ளுவதில்லை. "எனக்குச் சித்தமில்லை, உன்னை சொஸ்தமாக்க மாட்டேன்" என்று இயேசு யாரிடமும் கூறவில்லை. (மத் 7:7-11; மத் 17:20 மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24 யோவான் 14:14-15; யோவான் 15:7,16 யாக் 1:5-8)

"உடனே குஷ்டரோகம் நீங்கி அவன் சுத்தமானான்" - இயேசு கிறிஸ்து சொஸ்தமாக்கும்போது அந்தச் சுகமாதல் உடனடியாக நடைபெறுகிறது. சிறிதுசிறிதாக வியாதியஸ்தர் சொஸ்தமானார்கள் என்று வேதத்தில் எங்கும் கூறப்படவில்லை. யோவான் 4:52, மாற்கு 8:23-25 ஆகிய வசனங்களை ஒருசிலர் எடுத்துக்காட்டாகக் கூறி, சில சமயங்களில் சொஸ்தமாதல் உடனடியாக நடைபெறாது என்று தேவையில்லாத விவாதம் பண்ணுகிறார்கள். இந்த இடங்களில்கூட வியாதியஸ்தர்கள் ஒரு மணிநேரத்திற்குள் குணமானார்கள்.

இதை நீ ஒருவருக்கும் சொல்லாதபடி எச்சரிக்கையாயிரு என்று இயேசு கூறியதற்குக் காரணங்கள்

1 இயேசு தமது ஊழியத்தின் ஆரம்ப காலத்தில் அவசரப்பட்டு தமது கர்த்தத்துவத்தை வெளிப்படுத்தவும் நிரூபிக்கவும் விரும்பவில்லை. இதனால் ஏற்படும் வீண் விவாதங்களை ஆரம்பத்தில் தவிர்க்க விரும்பினார். தமது சீஷர்களிடம்கூட தமது கிரியைகளைப் பிறருக்கு அறிவிக்க வேண்டாமென்று தடைபண்ணினார் (மத் 16:13-20). தீர்க்கதரிசிகள் முன்குறித்த காரியங்களை இயேசு ஆரம்பமுதலே செய்து வந்தார். ஆனாலும் ஆரம்பத்தில் தமது கர்த்தத்துவத்தை வலியுறுத்தவில்லை. (மத் 11:1-6)

2 நியாயப்பிரமாணத்தை இயேசு கிறிஸ்து நிறைவேற்ற விரும்பினார். மோசே கட்டளையிட்ட பிரகாரம், ஜனங்கள் சாட்சி பகர வேண்டுமென்றும் இயேசு விரும்பினார் (லேவி 14:4,10,21-22). குஷ்டரோகிகள் தேவாலயத்திற்குச் சுகமான பின்பு தான் செல்ல முடியும். அங்குள்ள ஆசாரியர்கள் குஷ்டரோகிகள் குணமான விதத்தை அறிந்து கொள்வார்கள். இயேசு கிறிஸ்து மேசியா என்பது வார்த்தையினால் மட்டும் அல்லாமல் குஷ்டரோகிகள் குணமான கிரியையினாலும் தெளிவாக விளங்கும். மேசியாவால் மட்டுமே குஷ்டரோகிகளைச் சொஸ்தமாக்க முடியும் என்று யூதமார்க்கக் குருமார்கள் நம்பினார்கள்.

3 இயேசு பிரபலியமடைவதை விரும்பவில்லை. தேவையற்ற விளம்பரத்தில் இயேசுவிற்குப் பிரியமில்லை. ஜனங்கள் இயேசுவை இராஜாவாக்க வேண்டுமென்று விரும்பினார்கள் (யோவான் 6:15-2). இயேசு வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்கின பின்பு "இதை நீ ஒருவருக்கும் சொல்லாதபடி எச்சரிக்கையாயிரு" என்று மத் 8:4, மாற்கு 8:26,30; லூக்கா 5:14, லூக்கா 8:56; லூக்கா 9:21 ஆகிய வசனங்களில் கூறியபடி தமது ஊழியத்தின் பின்பகுதியில் யாரிடமும் கூறவில்லை.

4 ஒரு வியாதியஸ்தன் பூரணமாகக் குணமடைந்த பின்பு தான் சொஸ்தமானதைக் குறித்துப் பிறரிடம் சாட்சி பகரவேண்டும். இந்த முறைமையை இயேசு கடைப்பிடிக்க விரும்பினார். ஒருவன் சொஸ்தம் அடையாமலேயே, தான் சொஸ்தமடைந்து விட்டதாகச் சாட்சி கூறுவது சரியாக இராது.

"மோசே" - புதிய ஏற்பாட்டில் மோசேயின் பெயர் 80 இடங்களில் வருகிறது. அவற்றில் இது முதலாவது. குறிப்பு: லேவியராகமம் புஸ்தகத்தை மோசே எழுதினார் என்பதற்கு இதுவும் ஒரு சான்று. (லேவி 14:4-32)

8 அதிகாரம்

9. நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன் குணமானான் - (லூக் 7:1-10)

மத் 8:5 இயேசு கப்பர்நகூமில் பிரவேசித்தபோது, நூற்றுக்கு அதிபதி ஒருவன் அவரிடத்தில் வந்து,

மத் 8:6 ஆண்டவரே! என் வேலைக்காரன் வீட்டிலே திமிர்வாதமாய்க் கிடந்து கொடிய வேதனைப்படுகிறான் என்று அவரை வேண்டிக்கொண்டான்.

மத் 8:7 அதற்கு இயேசு: நான் வந்து அவனைச் சொஸ்தமாக்குவேன் என்றார்.

மத் 8:8 நூற்றுக்கு அதிபதி பிரதியுத்தரமாக: ஆண்டவரே! நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல; ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்.

மத் 8:9 நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும், எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற சேவகருமுண்டு; நான் ஒருவனைப் போவென்றால் போகிறான், மற்றொருவனை வாவென்றால் வருகிறான், என் வேலைக்காரனை இதைச் செய்யென்றால் செய்கிறான் என்றான்.

மத் 8:10 இயேசு இதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு, தமக்குப் பின்செல்லுகிறவர்களை நோக்கி: இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மத் 8:11 அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து, பரலோக ராஜ்யத்தில் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள்.

மத் 8:12 ராஜ்யத்தின் புத்திரரோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

மத் 8:13 பின்பு இயேசு நூற்றுக்கு அதிபதியை நோக்கி: நீ போகலாம், நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது என்றார். அந்த நாழிகையிலே அவன் வேலைக்காரன் சொஸ்தமானான்.

"நூற்றுக்கு அதிபதி" - 100 போர் வீரர்களுக்குத் தலைவன். ரோமருடைய சேனையில் இது 60-ஆவது படைப்பிரிவு ஆகும்.

"திமிர்வாதம்" (palsy) - A paralytic (மத் 4:24)

கொடிய வேதனை - δεινῶς - **deinoos** - 1171

வினையடை - கொடிய, கொடிய வேதனை (excessively, terribly) (லூக்கா 11:53)

"ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்" இயேசு கிறிஸ்துவினுடைய வல்லமையில் நூற்றுக்கதிபதி பரிபூரண நம்பிக்கை வைத்திருந்தான். அவன் ஒரு தளபதி. அவன் ஒரு வார்த்தை சொன்னால் அவனுடைய போர்வீரர்கள் எல்லோருமே அவனுக்குக் கீழ்ப்படிந்து செயல்படுவார்கள். இயேசு கிறிஸ்துவிற்குப் பிசாசுகள்மீது அதிகாரம் உள்ளது என்பதை நூற்றுக்கதிபதி நம்பினான். ஆகையினால் ஆண்டவரிடம் ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான் என்று விசுவாசத்தோடு கூறுகிறான். நமக்கும் இப்படிப்பட்ட விசுவாசம் தேவை.

இயேசு ஆச்சரியப்பட்ட இரண்டு காரியங்கள்

1. புறஜாதியாரின் விசுவாசம் (மத் 8:10)
2. யூதரின் அவிசுவாசம் (மாற்கு 6:6)

மத்தேயு - தொகுப்புரை

8 அதிகாரம்

"இஸ்ரவேலர்" - யூத ஜனங்கள் மத் 10:5

தீர்க்கதரிசன எண் - 7

"அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து......" (மத் 8:11-12) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை ஆயிர வருஷ அரசாட்சியில இது நிறைவேறும். (மத் 25:31-46)

"பரலோக இராஜ்யம்" - மத் 4:17 மத் 19:24

"ராஜ்யத்தின் புத்திரர்" - யூதர்கள் - இராஜ்யம் யூதர்களுக்கு முதன்முதலாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது. (யோவான் 1:12)

"புறம்பான இருள்" - (மத் 13:42)

"நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக் கடவது" - இது விசுவாசத்தின் பிரமாணம். (மத் 8:13; மத் 9:29; யாக் 1:5-8, எபி 11:6, மாற்கு 11:22-24

10. பேதுருவின் மாமி சொஸ்தமானாள் - (மாற்கு 1:29 லூக் 4:38)

மத் 8:14 இயேசு பேதுருவின் வீட்டிலே வந்து, அவன் மாமி ஜுரமாய்க் கிடக்கிறதைக் கண்டார்.

மத் 8:15 அவர் அவள் கையைத் தொட்டவுடனே ஜுரம் அவளைவிட்டு நீங்கிற்று; அவள் எழுந்திருந்து அவர்களுக்குப் பணிவிடை செய்தாள்.

"பேதுருவின் மாமி" - பேதுரு திருமணமாகாத அண்ணகர் என்று ஒரு சிலர் கூறுகிறார்கள் இது தவறு. இந்த மாமி யார்? பேதுருவினுடைய மனைவியின் தாய். (1கொரி 9:5)

"அவர் அவள் கையைத் தொட்டவுடனே ஜுரம் அவளைவிட்டு நீங்கிற்று" - (மத் 8:15)

11. பிசாசுகளைத் துரத்தினார் - பிணியாளிகள் எல்லாரையும் சொஸ்தமாக்கினார் - (மாற்கு 1:32 லூக் 4:40)

மத் 8:16 அஸ்தமனமானபோது, பிசாசு பிடித்திருந்த அநேகரை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்; அவர் அந்த ஆவிகளைத் தமது வார்த்தையினாலே துரத்தி, பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கினார்.

மத் 8:17 அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.

"பிணியாளிகளெல்லாரையும்" - (மத் 13:58)

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 8

"அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார்" (மத் 8:17; ஏசா 53:4)

ஏற்றுக்கொள் (took) - λαμβάνω - lambanoo - 2983

வினைச்சொல் - எடுத்துக்கொள் ஏற்றுக்கொள், பெற்றுக்கொள், அடை, கொண்டுவா, வாங்கு, பிடித்துக்கொள், பண்ணு, தெரிந்துகொள், வருவித்துக் கொள் கைவசப்படுத்து, செய், வைத்துக்கொள் சேர்த்துக்கொள் கொண்டுபோகும்படியாக எடுத்தல் அகற்றுதல் (to take in order to carry away; to remove) (மத் 8:17, மத் 5:40)

சும (to bear) - βαστάζω - bastazoo - 941

வினைச்சொல் - சும, சகி, கொண்டு போ, சுமந்துகொள், சுமந்துவா, எடுத்துக்கொள், தாங்கு, தூக்கிக்கொள் - அகற்ற வேண்டும் என்னும் எண்ணத்தோடு தூக்குவது அல்லது சுமப்பது (to bear or lift with the idea of removal) (மத் 8:17; லூக்கா 7:14)

8 அதிகாரம்

சும (to bear) נָשָׂא - nas-say' - 5375

வினைச்சொல் - பெரிய, உயர்ந்த, உச்சரி, சுட்டெரி, வாங்கு, அடித்துக்கொண்டுபோ, விவாகம்பண்ணு, விவாகஞ்செய், துக்கங்கொண்டாடு, நீக்கு, ஒப்பாரி சொல்லு, ஏந்திக்கொண்டுபோ, மன்றாடு, உரத்தசத்தமிடு, விழி, காய், தூக்கு, எடுபட்டுப்போ, பக்தாகமாயிரு, பார், எழும்பு, எடு, ஓங்கு, செலுத்து, பாவிடு, விளைவி, ஆணையிட்டுக்கொடு, அகற்றிவிடு, எடுத்துக்கொள், பிடித்துக் கொள், சும, தாங்கு, இரட்சி, அநுக்கிரகம் பண்ணு, ஆணையிடு, கொண்டுவா, தீர்த்துக்கொள், எழுப்பு, எழும்புதலடை, எழு, மன்னித்துவா, சுமத்து, கர்வங் கொள்ளப் பண்ணு, கொண்டுபோகப் பண்ணு, கொள், உயர்த்து, வாங்கு, தொகையேற்று, விவாகம்பண்ணு, எடுத்துக்கொண்டுபோ, கிடை, என், தண்டிக்கப்படு, ஒப்புக்கொடு, சகி, மதி, உயர்த்தூக்கு, ஏறெடு, வழங்கு, சொல், சத்தமிடு, கொண்டுபோ, உயரஎடுத்துக் கொள், விடு, அழை, புகழ், ஏற்று, முகதாட்சிணியம் பண்ணு, ஏற்றுப்படு, எடுத்துவா, பொறுத்திரு, செலுத்து, பெறு, பிடுங்கு, மன்னி, பிரகாசிக்கப்பண்ணு, உயர்த்து, மன்னித்தருள், பாடு, வெளிச்சங் காட்டு, கிளம்பப்பண்ணு, தயவாயிரு, போடு, வழங்கு, ஏற்றுக்கொள், எண்ணப்படு, முகதாட்சிணியம் செய், பிரசன்னமாக்கு, தூக்கிக் கொண்டுவா, கூக்குரலிடு, முகமாரா வரப்பண்ணு, ஆவலாயிரு, பிடித்திரு, பிடி, தாரி, கட்டு, உள்ளாகு, எண்ணிக்கையுள்ளவனாயிரு, கனமான மன்னிக்கப்படு, கனம், பொருந்து, தூக்கிவரப்படு, மேன்மை பாராட்டு, உயர்த்தப்படு, சுமக்கப்படு, உயர்ந்தவனை ஓங்கல், உயரம், உதவிசெய், உன்னதம், கொடுக்கப்படு, உதவியாயிரு, துணைநில், சுமரப்பண்ணு, மேட்டிமையாகு, நிமிர்ந்துநில், மேன்மையடை, உயர்ந்திரு, பாவத்தின் கடனைச் சுமத்தல், ஒருவருடைய வியாதியைத் தன்னுடைய வியாதிபோன்று சுமப்பது **(to bear, to take the debt of sin and sickness upon one's self, and carry it as his own)** (ஏசா 53:4; லேவி 5:17, லேவி 16:22; லேவி 20:19-20; லேவி 24:15)

அவர் நமது நோய்களைச் சுமந்தார் (ஏசா 53:4 மத் 8:17) நம்முடைய பாடுகளில் நமக்கு உதவி புரிய வேண்டும் என்பதைவிட நமது பாடுகளிலிருந்து நம்மை விடுவிக்க வேண்டும் என்பதே இயேசு கிறிஸ்துவின் நோக்கம். சிறிது காலம் நமது நோய்களைச் சுமந்து விட்டு அதன்பின்பு அந்த வேதனைகளை நம்மிடம் திருப்பித் தரமாட்டார் நமது நோய்களை நம்மை விட்டு அகற்றுவார் (ரோமர் 8:17-24 1பேதுரு 2:24)

நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்பது நமது ஆவிக்குரிய நோய்களை மட்டுமே குறிக்கும் என்று ஒரு சிலர் கூறுகிறார்கள் ஆனால் இயேசு கிறிஸ்து நமது சரீர நோய்களைச் சுமந்தார் நமது ஆத்துமாவிற்கு இரட்சிப்பைக் கொடுப்பதைப்போல நமது சரீரத்தையும் சொஸ்தமாக்கி இரட்சிக்கிறார் (ரோமர் 8:11, 17-24 பிலி 3:21 எபே 5:27

இயேசு கிறிஸ்து நமது பாவங்களை அகற்றுவதுபோலவே நமது நோய்களையும் குணமாக்குகிறார் (ஏசா 6:10; ஏசா 61:1, மத் 13:15; யோவான் 10:10) அவருடைய தழும்புகளால் நாம் குணமாகிறோம் **(With His stripes we are healed)** (ஏசா 53:5 மத் 8:17; 1பேதுரு 2:24)

"பெலவீனங்கள்" **(infirmities)** - சரீரத்தில் பெலவீனம், சிந்தையில் பெலவீனம் சரீர வியாதி ஆகியவற்றைக் குறிக்கும். இவையெல்லாவற்றையுமே இயேசு கிறிஸ்து சிலுவையில் சுமந்து ஏசாயா 53 ஆவது அதிகாரத்தை நிறைவேற்றினார் எல்லா பெலவீனங்களும் வியாதியல்ல ஆனால் வியாதிகள் பெலவீனத்தைத் தரும் (லூக்கா 5:15; லூக்கா 7:21, லூக்கா 8:2, லூக்கா 13:11-12; யோவான் 5:5 ஆசாரியர்களுக்குப் பெலவீனம் இருந்தது (எபி 5:2 எபி 7:28 அவர்கள் சரீரப்பிரகாரமாக ஆரோக்கியமாக இருந்தார்கள் ஆனாலும் பெலவீனமாக இருந்தார்கள் (லேவி 21:17-24

எல்லா பரிசுத்தவான்களுமே ஏதாவது சில காரியங்களில் பெலவீனமானவர்களாக இருப்பார்கள் (ரோமர் 8:26 இந்தப் பெலவீனம் சரீர வியாதியைக் குறிக்கும் என்று கூறமுடியாது (ரோமர் 14:1-2, ரோமர் 15:1)

8 அதிகாரம்

பவுலுக்குச் சரீரத்தில பாடுகளினால பெலவீனம் இருந்தது. (2கொரி 11: 24-30, 2கொரி 12:5-10; கலா 4:13) அவனுடைய சரீரத்தில் வியாதியிருந்ததாகக் குறிப்பு எதுவும் இல்லை பவுலின் சரீரத்தில இருந்த முள் என்பது சாத்தானின் தூதனைக் குறிக்கும் அவன் பவுலுக்கு அடிகளையும் கல்லெறிகளையும் கிடைக்கச்செய்தான் (2கொரி 12:7

சரீரம், ஆத்துமா, ஆவி. விசுவாசம் திறமை ஆகிய எதிலுமே பெலவீனம் இருக்க முடியும் அஸதினாய (astheneia) என்னும் "கிரேக்கச்சொல்லே" பெலவீனம் வியாதி என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

பலவீனம் (weakness) - ἀσθένεια - astheneia - 769

பெண்பால பெயர்ச்சொல் - பலவீனம் (weakness) (1கொரி 2:3, 1கொரி 15:43; 2கொரி 12:9 2கொரி 13:4; எபி 11:34) பிணி வியாதி (infirmity) (ரோமர் 6:19 ரோமர் 8:26; 2கொரி 11:30, எபி 4:15, எபி 5:2; எபி 7:28)

"நோய்" - வேதாகமத்தில நோய் என்பது சரீர வியாதியையே குறிக்கும் (உபா 28:59 உபா 29:22; மத் 8:17; மாற்கு 3:15) ஆவிக்குரிய வியாதியைக் குறிப்பதாக வேதத்தில குறிப்பு எதுவுமில்லை

12. சீஷத்துவத்திற்குப் பரீட்சை (10 37 16:24

மத் 8:18 பின்பு, திரளான ஜனங்கள் தம்மைச் சூழ்ந்திருக்கிறதை இயேசு கண்டு, அக்கரைக்குப் போகக் கட்டளையிட்டார்

மத் 8:19 அப்பொழுது, வேதபாரகன் ஒருவன் வந்து, போதகரே! நீர் எங்கே போனாலும் உம்மைப் பின்பற்றி வருவேன் என்றான்

மத் 8:20 அதற்கு இயேசு நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை என்றார்

மத் 8:21 அவருடைய சீஷர்களில் வேறொருவன் அவரை நோக்கி, ஆண்டவரே! முன்பு நான் போய், என் தகப்பனை அடக்கம்பண்ண எனக்கு உத்தரவு கொடுக்க வேண்டும் என்றான்

மத் 8:22 அதற்கு இயேசு: மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும், நீ என்னைப் பின்பற்றி வா என்றார்

"மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை" - (யோவான் 1:51)

"என் தகப்பனை அடக்கம்பண்ண எனக்கு உத்தரவு கொடுக்க வேண்டும்" - இது ஒரு சாக்குப்போக்கு மரித்தவரைப் பொதுவாக மரித்த நாளிலேயே அடக்கம்பண்ணுவது [illegible].

"மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணட்டும்" - ஆவிக்குரிய ரீதியாக மரித்தோர்கள் சரீரப்பிரகாரமாக மரித்தோரை அடக்கம்பண்ணட்டும் எபே 2 1தீமோ 5:6)

13. இயேசு பெருங்காற்றை அமைதிப் படுத்துகிறார் - (லூக் 8:22, மாற்கு 4:35)

மத் 8:23 அவர் படவில் ஏறினபோது அவருடைய சீஷர்கள் அவருக்குப் பின் சென்று ஏறினார்கள்

மத் 8:24 அப்பொழுது படவு அலைகளினால மூடப்படத்தக்கதாய்க் கடலில் பெருங்காற்று உண்டாயிற்று. அவரோ நித்திரையாயிருந்தார்

மத் 8:25 அப்பொழுது அவருடைய சீஷர்கள் வந்து அவரை எழுப்பி: ஆண்டவரே! எங்களை இரட்சியும், மடிந்துபோகிறோம் என்றார்கள்

8 அதிகாரம்

மத் 8:26 அதற்கு அவர்: அற்பவிசுவாசிகளே! ஏன் பயப்படுகிறீர்கள் என்று சொல்லி; எழுந்து, காற்றையும் கடலையும் அதட்டினார்; உடனே, மிகுந்த அமைதல் உண்டாயிற்று.

மத் 8:27 அந்த மனுஷர்கள் ஆச்சரியப்பட்டு: இவர் எப்படிப்பட்டவரோ, காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்றார்கள்.

பூமியதிர்ச்சி (earthquake) - σεισμός - seismos - 4578

ஆண்பால் பெயர்சொல்: பெருங்காற்று, பூமியதிர்ச்சி (மத் 24:7; மத் 27:54; மத் 28:2; மாற்கு 13:8; லூக்கா 21:11; அப் 16:26; வெளி 6:12; வெளி 8:5; வெளி 11:13,19; வெளி 16:18)

சுழல்காற்று (tempest) - λαῖλαψ - lailaps - 2978

பெண்பால் பெயர்சொல்: சுழல்காற்று (மாற்கு 4:37; லூக்கா 8:23; 2பேதுரு 2:17)

"காற்றையும் கடலையும் அதட்டினார்; உடனே, மிகுந்த அமைதல் உண்டாயிற்று" - இந்தப் பெருங்காற்றிற்குக் காரணமானவன் சாத்தான். அவன் இயேசுவைக் கொல்ல முயற்சி பண்ணினான். (எபே 2:2) தேவன் இந்தக் காற்றை அனுப்பியிருந்தார் என்றால் இயேசு அதைக் கடிந்து கொள்ளமாட்டார் (மத் 8:24,26)

14. இயேசு பிசாசு பிடித்திருந்த இரண்டு பேரைச் சொஸ்தமாக்குகிறார் - (மாற்கு 5:1-16; லூக் 8:26-36)

மத் 8:28 அவர் அக்கரையிலே கெர்கெசேனர் நாட்டில் வந்தபோது, பிசாசு பிடித்திருந்த இரண்டுபேர் பிரேதக் கல்லறைகளிலிருந்து புறப்பட்டு, அவருக்கு எதிராக வந்தார்கள்; அவர்கள் மிகவும் கொடியராயிருந்தபடியால் அந்த வழியாக ஒருவனும் நடக்கக் கூடாதிருந்தது.

மத் 8:29 அவர்கள் அவரை நோக்கி: இயேசுவே, தேவனுடைய குமாரனே, எங்களுக்கும் உமக்கும் என்ன? காலம் வருமுன்னே எங்களை வேதனைப்படுத்த இங்கே வந்தீரோ என்று கூப்பிட்டார்கள்.

மத் 8:30 அவர்களுக்குக் கொஞ்ச தூரத்திலே அநேகம் பன்றிகள் கூட்டமாக மேய்ந்து கொண்டிருந்தன.

மத் 8:31 அப்பொழுது பிசாசுகள்: நீர் எங்களைத் துரத்துவீரானால், நாங்கள் அந்தப் பன்றிகூட்டத்தில் போகும்படி உத்தரவு கொடும் என்று அவரை வேண்டிக்கொண்டன.

மத் 8:32 அதற்கு அவர்: போங்கள் என்றார். அவைகள் புறப்பட்டு, பன்றிக்கூட்டத்தில் போயின; அப்பொழுது பன்றிக்கூட்டமெல்லாம் உயர்ந்த மேட்டிலிருந்து கடலிலே பாய்ந்து ஜலத்தில் மாண்டுபோயின.

மத் 8:33 அவைகளை மேய்த்தவர்கள் ஓடி, பட்டணத்திலே சென்று, இந்தச் சங்கதிகள் எல்லாவற்றையும், பிசாசு பிடித்திருந்தவர்களுக்குச் சம்பவித்தவைகளையும் அறிவித்தார்கள்.

மத் 8:34 அப்பொழுது, அந்தப் பட்டணத்தார் யாவரும் இயேசுவுக்கு எதிர்கொண்டுவந்து, அவரைக் கண்டு, தங்கள் எல்லைகளைவிட்டுப் போகும்படி அவரை வேண்டிக் கொண்டார்கள்.

8 அதிகாரம்

"அக்கரையிலே கெர்கெசேனர் நாடு" - கப்பர்நகூமின் எதிர்ப்புறம் (மத் 8.5,8.28)

கொகெசேனருடைய பட்டணம் என்பது கதரேனர் பட்டணம் அல்ல கதரேனருடைய பட்டணத்தில் இயேசு கிறிஸ்து பன்னிரெண்டு சீஷர்களை அழைத்த பின்பு பிசாசு பிடித்த ஒருவனை மட்டும் குணமாக்கினார் மாற்கு 5:1 20 லூக்கா 8:26-40

"பிரேதக்கல்லறைகள்" அக்காலத்தில் குகைகளில் பிரேதக்கல்லறைகளை வெட்டி வைத்திருப்பார்கள் ஊருக்கு வெளியே துரத்தப்பட்டவர்கள் இங்கு வந்து அடைக்கலம் புகுவது வழக்கம்

"இயேசுவே தேவனுடைய குமாரனே எங்களுக்கும் உமக்கும் என்ன" - பிசாசுகளுக்கு இயேசு கிறிஸ்துவைப் பற்றியும் அவரால் தங்களுக்கு என்ன செய்ய முடியும் என்பது பற்றியும் நன்றாகத் தெரியும் (அப 19:15)

"பன்றிக்கூட்டமெல்லாம் உயர்ந்த மேட்டிலிருந்து கடலிலே பாய்ந்து ஜலத்தில் மாண்டுபோயின" - (லூக்கா 8.32

முதல் முறையாக ஒரு பட்டணத்தார் எல்லோருமாகச் சேர்ந்து இயேசுவை ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தப் பட்டணம் கொகெசேனருடைய பட்டணமாக இருக்கலாம். (மத் 11:20-24; மத் 23.37-39 யூதருடைய பிரமாணத்தின் பிரகாரம் பன்றி ஒரு அசுத்தமான மிருகம். (மத் 11:20-24, மத் 23.37 39) அதற்காக அவர்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ளவில்லை. இயேசுவைச் சுத்தமான நீதியான காரியங்களுக்காக யாருமே புறக்கணிக்க இல்லை. (யோவான் 3:18-20)

9 அதிகாரம்

15. கப்பர்நகூமிற்குத் திரும்பி வருகிறார் - திமிர்வாதக்காரனைக் குணப்படுத்துகிறார் - (மாற்கு 2:1; லூக் 5:17; யோவான் 2:12)

மத் 9:1 அப்பொழுது, அவர் படவில் ஏறி, இக்கரைப்பட்டு தமதுடைய பட்டணத்திற்கு வந்தார்.

மத் 9:2 அங்கே படுக்கையிலே கிடந்த ஒரு திமிர்வாதக்காரனை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்; இயேசு அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி: மகனே, திடன்கொள், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார்.

மத் 9:3 அப்பொழுது, வேதபாரகரில் சிலர்: இவன் தேவதூஷணம் சொல்லுகிறான் என்று தங்கள் உள்ளத்தில் சொல்லிக்கொண்டார்கள்.

மத் 9:4 இயேசு அவர்கள் நினைவுகளை அறிந்து: நீங்கள் உங்கள் இருதயங்களில் பொல்லாதவைகளைச் சிந்திக்கிறதென்ன?

மத் 9:5 உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று சொல்வதோ, எழுந்து நடவென்று சொல்வதோ, எது எளிது?

மத் 9:6 பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும் என்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்றார்.

மத் 9:7 உடனே அவன் எழுந்து, தன் வீட்டுக்குப் போனான்.

மத் 9:8 ஜனங்கள் அதைக்கண்டு ஆச்சரியப்பட்டு, மனுஷருக்கு இப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்தவராகிய தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

"தம்முடைய பட்டணம்" - இயேசு கிறிஸ்துவினுடைய தலைமைச் செயலகம் (மத் 4:13; மத் 8:5)

"திமிர்வாதக்காரன்" - **(palsy) A paralytic** (மத் 4:24)

"படுக்கை" - இந்தப் படுக்கையைச் சுற்றி வைத்து ஒருவர் ஓரிடத்திலிருந்து மற்றொரிடத்திற்குச் சுமந்து செல்ல முடியும் (மாற்கு 2:3; லூக்கா 5:18; யோவான் 5:8-12; அப 5:15)

"இயேசு அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டார்" - விசுவாசத்தைக் காண முடியும். (மாற்கு 2:5; லூக்கா 5:20; அப 14:9) அவிசுவாசத்தையும் காணமுடியும் (மாற்கு 6:6; மாற்கு 16:14)

"உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது" - மத் 1:21 இந்த வசனத்தில் முதன் முறையாக நிறைவேறுகிறது. தண்ணீர் ஞானஸ்நானம் எடுப்பதற்கு முன்பாகவோ அல்லது தண்ணீர் ஞானஸ்நானம் எடுக்காமலேயோ ஆண்டவரால் மனுஷருடைய பாவத்தை மன்னிக்க முடியும் என்பதற்கு இந்த வசனம் ஒரு சான்று. பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டுமானால் சில சடங்குகளைக் கையாளவேண்டும் என்று சிலர் உபதேசம் பண்ணுகிறார்கள். அது தவறான உபதேசம். (மத் 9:2,22; மாற்கு 5:34; மாற்கு 10:52; லூக்கா 7:36-50; லூக்கா 8:48; லூக்கா 18:9-14; லூக்கா 19:1-9; லூக்கா 23:43; யோவான் 4:49-53; யோவான் 7:31; யோவான் 8:30-31; யோவான் 11:45; யோவான் 12:11,42; அப 3:1-16; அப 4:12; அப் 10:43; அப 11:14; அப 15:9)

9 அதிகாரம்

"உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று சொல்வதோ எழுந்து நடவென்று சொல்வதோ, எது எளிது?" - இந்தக் கேள்வியை இன்றும் சிலர் பிரச்சனையாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இயேசுவின் காலத்தில் இயேசுவால் வியாதியைக் குணப்படுத்த முடியும் என்று ஜனங்கள் நம்பினார்கள். ஆனால் ஒருவனுடைய பாவத்தை மன்னிப்பதற்கு இயேசு கிறிஸ்துவிற்கு அதிகாரம் இல்லை என்றார்கள். இயேசு பாவத்தை மன்னிப்பதாகக் கூறுவது தேவதூஷணம் என்பது அந்த காலத்து ஜனங்களின் எண்ணம்.

இக்காலத்தில் நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. இயேசு கிறிஸ்து பாவங்களை மன்னிப்பார் என்று எல்லோரும் நம்புகிறார்கள். ஆனால் அவர் நோய்களைக் குணப்படுத்துவார் என்று கூறும்போது பலர் அதை நம்ப மறுக்கிறார்கள். இது தேவதூஷணம் என்றே கூறுகிறார்கள்.

தேவனால் நோய்களைக் குணப்படுத்த முடியுமா? என்றால் முடியும் என்கிறார்கள். அவர் குணப்படுத்துகிறாரா என்றால் அவர் இப்பொழுது குணப்படுத்துவதில்லை என்கிறார்கள்.

இயேசு கிறிஸ்து மாறிவிட்டாரா? புதிய ஏற்பாட்டுக் காலத்தில் நோய்களைக் குணப்படுத்தியவர் நமது காலத்தில் குணப்படுத்தமாட்டாரா? அவருடைய அன்பு மாறிவிட்டதா? அவருடைய அன்பு மாறவில்லை. அவருடைய வல்லமையும் மாறவில்லை. நாம் மாறிவிட்டோம். நமது விசுவாசமும் மாறிவிட்டது. புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டிருக்கிற காரியங்களை முழுமையாக விசுவாசித்துச் செயல்படுவதுதான் ஊழியம் (மத் 28:20 மாற்கு 16:15-20, யோவான் 14:12-17; அப் 1 1கொரி 12 யாக் 5:14-16)

இயேசு கிறிஸ்துவால் சரீரத்தையும் சொஸ்தமாக்க முடியும், ஆத்துமாவையும் இரட்சிக்க முடியும் (மாற்கு 16:17-18; யோவான் 14:12-15; யோவான் 15:16. யோவான் 16:23-26; அப் 3:16; அப் 4:12)

இயேசு கிறிஸ்து பிதாவின் சித்தத்தின் பிரகாரம் ஊழியம் செய்தார். சரீரத்தைச் சொஸ்தமாக்கி, ஆத்துமாவை இரட்சிப்பது பிதாவின் சித்தம். கிறிஸ்து அந்த ஊழியத்தை இன்றும் எவ்வித மாற்றமுமின்றி செய்து வருகிறார் (மத் 7:7-11 லூக்கா 11:9-13)

அதிகாரம் (power) - ἐξουσία - exousia - 1849

பெண்பால் பெயர்ச்சொல் - அதிகாரம், வல்லமை, ஆதீனம்

தேவனுடைய நாம மகிமைக்காக தேவனுடைய சார்பாக அவருடைய வல்லமையைப் பயன்படுத்தும் அதிகாரம். பூமியிலே தேவனுடைய சித்தத்தையும் கிரியையும் செய்வதற்கு இயேசு கிறிஸ்துவிற்குப் பூரண அதிகாரம் இருந்தது (மத் 9:6; மத் 4:23-24; மத் 8:17; மத் 10:1-8; மாற்கு 1:27; லூக்கா 4:36 லூக்கா 10:19; யோவான் 5:27; யோவான் 17:2). இப்பொழுது இயேசு கிறிஸ்துவிற்கு வானத்திலும் பூமியிலும் அதிகாரம் உள்ளது (மத் 28:18 எபே 1:20-23; கொலோ 2:9-17; எபி 1:3 எபி 7:25; 1பேதுரு 3:22). தமது அதிகாரத்தை ஆண்டவர் இயேசு கிறிஸ்து தமது பிள்ளைகளோடு பகிர்ந்து கொள்வதாக வாக்குப்பண்ணுகிறார் (மத் 18:18)

16. மத்தேயு அல்லது லேவியின் அழைப்பு - (மாற்கு 2:13, லூக்கா 5:27)

மத் 9:9 இயேசு அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப்போகையில், ஆயத்துறையில் உட்கார்ந்திருந்த மத்தேயு என்னும் ஒரு மனுஷனைக் கண்டு: எனக்குப் பின்சென்றுவா என்றார்; அவன் எழுந்து அவருக்குப் பின்சென்றான்.

17. பரிசேயருக்குப் பதிலுரைகள் (மாற்கு 2:15-17; லூக் 5:30-32

மத் 9:10 பின்பு அவர் வீட்டிலே போஜனபந்தியிருக்கையில், அநேக ஆயக்காரரும் பாவிகளும் வந்து, இயேசுவோடும் அவர் சீஷரோடுங்கூடப் பந்தியிருந்தார்கள்.

மத்தேயு – தொகுப்புரை

9 அதிகாரம்

மத் 9:11 பரிசேயர் அதைக் கண்டு அவருடைய சீஷர்களை நோக்கி: உங்கள் போதகர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனம் பண்ணுகிறது என்னவென்று கேட்டார்கள்.

மத் 9:12 இயேசு அதைக் கேட்டு: பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை.

மத் 9:13 பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்று போய்க் கற்றுக்கொள்ளுங்கள்; நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார்.

"அவர் வீட்டிலே போஜனபந்தியிருக்கையில்" - இது மத்தேயுவின் வீடு. (லூக்கா 5:27-30)

"ஆயக்காரர்" - (மத் 5:46)

"பாவிகள்" - யூதர்கள் ஒரு சில ஜனங்களைப் பாவிகள் என்று பிரித்து வைத்திருந்தார்கள். இவர்கள் தங்கள் பாவ ஜீவியத்தில் வெளியரங்கமாக ஜீவித்து வந்தவர்கள். யூதமார்க்கத்தில் இவர்களுக்கு நம்பிக்கை இல்லை, யூதமார்க்கத்து பிரமாணங்களைக் கடைப்பிடிப்பதும் இல்லை. பாவிகள் ஆயக்காரரோடு சேர்த்து ஒன்பது இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். (மத் 9:10-13, மத் 11:19, மாற்கு 2:15-16, லூக்கா 5:30, லூக்கா 7:34, லூக்கா 15:1) தேவன் பாவிகளுடைய ஜெபத்தைக் கேட்க மாட்டார் என்பது யூதர்களுடைய நம்பிக்கை. (யோவான் 9:31) புறஜாதிகள் எல்லோரையும் யூதர்கள் பாவிகள் என்றே கருதினார்கள். (கலா 2:15-17) கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாதவர்களைப் புதிய ஏற்பாடு பாவிகள் என்று கூறுகிறது. (ரோமர் 3:19-23, ரோமர் 5:12-21)

"பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை" - இயேசு கிறிஸ்து பாவிகளை இரட்சிப்பதற்கு வந்தார். நீதிமான்களை இரட்சிப்பதற்கு வரவில்லை. (மத் 9:12-13, ரோமர் 5:8, 1தீமோ 1:15)

"பலியையல்ல இரக்கத்தையே விரும்புகிறேன். நீதிமான்களையல்ல பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்" - ஓசி 6:6, 1சாமு 15:22 ஆகிய வசனங்களிலிருந்து மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. நமது இருதயங்களில் பலிகளை விட இரக்கங்களைத் தேவன் அதிகமாக எதிர்பார்க்கிறார். நாம் பாவிகளோடு இருப்பதினால் அசுத்தமானவர்களாக இருக்கிறோம் என்னும் எண்ணம் நம்மிடத்தில் இருக்குமானால் நமது பலியினால் பிரயோஜனம் எதுவுமில்லை. இயேசு கிறிஸ்து பாவத்தை வெறுக்கிறார். ஆனால் பாவியையோ நேசிக்கிறார்.

18. யோவான் ஸ்நானனின் சீஷர்களுக்குப் பதிலுரை - (மாற்கு 2:18-20; லூக் 5:33-35)

மத் 9:14 அப்பொழுது, யோவானுடைய சீஷர் அவரிடத்தில் வந்து: நாங்களும் பரிசேயரும் அநேகந்தரம் உபவாசிக்கிறோமே, உம்முடைய சீஷர் உபவாசியாமலிருக்கிறதென்னவென்று கேட்டார்கள்.

மத் 9:15 அதற்கு இயேசு: மணவாளன் தங்களோடிருக்கையில் மணவாளனுடைய தோழர் துயரப்படுவார்களா? மணவாளன் அவர்களை விட்டு எடுபடும் நாட்கள் வரும், அப்பொழுது உபவாசிப்பார்கள்.

"யோவானுடைய சீஷர் அவரிடத்தில் வந்தார்கள்" - இந்த வசனத்தில் யோவானின் சீஷர்கள் முதல் முறையாக இயேசுவிடம் வந்த குறிப்பு உள்ளது. அவர்கள் மறுமுறை இயேசுவிடம் வந்தது மத் 11:1-15 ஆகிய வசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தீர்க்கதரிசன எண் - 8

"மணவாளன் அவர்களை விட்டு எடுபடும் நாட்கள் வரும்" - (மத் 9:15) - இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

9 அதிகாரம்

"மணவாளனுடைய தோழர்" - திருமண விழாவின்போது இவர்கள் மணவாளனுடன்கூட இருப்பார்கள் மணவாளன் மணவாட்டியின் வீட்டிற்குச் சென்று மணவாட்டியை அழைத்து வரும்போது இந்தத் தோழர்களும் மணவாளனோடு உடன் செல்வார்கள் திருமண விருந்து ஏழு நாட்கள் நடைபெறும். ஸ்திரீயானவள் முப்பது நாட்களுக்கு மணவாட்டியாக இருப்பாள் (யோவான் 17:12)

"மணவாளன் அவர்களை விட்டு எடுபடும் நாட்கள் வரும். அப்பொழுது உபவாசிப்பார்கள்" - (லூக்கா 24:50-51, அப் 1:9-11)

19. வஸ்திரம், துருத்திகள் ஆகியவற்றின் உவமை - (மாற்கு 2:21; லூக் 5:36)

மத் 9:16 ஒருவனும் கோடித்துணியைப் பழைய வஸ்திரத்தோடே இணைக்க மாட்டான் இணைத்தால், அதினோடே இணைத்த துண்டு வஸ்திரத்தை அதிகமாய்க் கிழிக்கும் பீறலும் அதிகமாகும்.

மத் 9:17 புது திராட்ச ரசத்தைப் பழந்துருத்திகளில் வார்த்துவைக்கிறதும் இல்லை வார்த்து வைத்தால் துருத்திகள் கிழிந்துபோம், இரசமும் சிந்திப்போம் துருத்திகளும் கெட்டுப்போம். புது ரசத்தைப் புது துருத்திகளில் வார்த்துவைப்பார்கள் அப்பொழுது இரண்டும் பத்திரப்பட்டிருக்கும் என்றார்

"கோடித்துணி" தைக்கப்படாத புதிய துணி எளிதில் கிழிந்துவிடக்கூடியது.

புதிய (new) - νέος - neos - 3501

பொருள் - புது, இளைய, வாலிபரான, புதிதான, புதிய, இளவயதுள்ள

"பழந்துருத்திகள்" - பழைய துருத்திகளில் திராட்சை ரசத்தை வார்த்து வைக்க மாட்டார்கள் பழந்துருத்திகள் பலவீனமாக இருக்கும். திராட்சை இரசம் வார்க்கப்படும்போது துருத்திகள் கிழிந்துபோகும். பழந்துருத்திகளில் திராட்சரசத்தை வார்த்து வைப்பதற்கு முன்பாக துருத்திகளைத் தண்ணீரில் ஊறவைப்பார்கள் துருத்திகளின்மீது எண்ணெய் தேய்ப்பார்கள் இதனால் துருத்தி கிறவு விழுந்து ஒழுகாது. திராட்சைரசத்தை வார்த்து வைக்கும்போது புதிய இரசங்களைப் புதிய துருத்திகளில் வார்த்து வைப்பது வழக்கம். புதிய துருத்தி என்னும் வாக்கியத்தில் புதிய என்னும் சொல்லின் கிரேக்கச் சொல் கைனோஸ் (kainos).

புதிய (new) - καινός - kainos - 2537

பொருள் - புது, புதிய, நவமான, புதிதான

புதிய இரசம் புதிய துருத்தி என்பது பாவிகள் இரட்சிக்கப்படுவதையும் அவர்கள் புதிய ஜீவனைப் பெற்றுக் கொள்வதையும் குறிக்கும். (மத் 9:10-13, 2கொரி 5:17-18 எபே 4:23-24; கொலோ 3:10; ரோமர் 12:2

20. பெரும்பாடுள்ள ஸ்திரீ குணமடைகிறாள் - மரித்த சிறுபெண்ணை இயேசு உயிருடன் எழுப்புகிறார் - (மாற்கு 5:21; லூக் 8:40)

மத் 9:18 அவர் இவைகளை அவர்களுக்குச் சொல்லிக் கொண்டிருக்கையில் தலைவன் ஒருவன் வந்து அவரைப் பணிந்து, என் மகள் இப்பொழுதுதான் மரித்துப்போனாள் ஆகிலும் நீர் வந்து அவள்மேல் உமது கையை வையும், அப்பொழுது பிழைப்பாள் என்றான்

மத் 9:19 இயேசு எழுந்து தம்முடைய சீஷரோடுகூட அவன் பின்னே போனார்

மத் 9:20 அப்பொழுது, பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ

9 அதிகாரம்

மத் 9:21 நான் அவருடைய வஸ்திரத்தை மாத்திரம் தொட்டால் சொஸ்தமாவேன் என்று தன் உள்ளத்தில் எண்ணிக் கொண்டு, அவர் பின்னாலே வந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்.

மத் 9:22 இயேசு திரும்பி, அவளைப் பார்த்து: மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். அந்நேரம் முதல் அந்த ஸ்திரீ சொஸ்தமானாள்.

மத் 9:23 இயேசுவானவர் தலைவனுடைய வீட்டிலே வந்து, தாரை ஊதுகிறவர்களையும் இரைகிற ஜனங்களையும் கண்டு,

மத் 9:24 விலகுங்கள், இந்தச் சிறு பெண் மரிக்கவில்லை, நித்திரையாயிருக்கிறாள் என்றார். அதற்காக அவரைப் பார்த்து நகைத்தார்கள்.

மத் 9:25 ஜனங்கள் வெளியே துரத்தப்பட்ட பின்பு, அவர் உள்ளே பிரவேசித்து, அந்தச் சிறுபெண்ணின் கையைப் பிடித்தார்; உடனே அவள் எழுந்திருந்தாள்.

மத் 9:26 இந்தச் சங்கதி அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று.

யவீரு என்னும் தலைவன் செய்த காரியங்கள்

1. இயேசுவிடம் தனிப்பட்ட வந்தான் (மத் 9:18)
2. இயேசுவைத் தாழவிழுந்து பணிந்து கொண்டான் (மாற்கு 5:22)
3. இயேசுவிடம் வருந்திக் கேட்டுக் கொண்டான் (மாற்கு 5:23)
4. தன்னுடைய விசுவாசத்தை வெளிப்படுத்தினான் (மத் 9:18)

"இப்பொழுதுதான் மரித்துப் போனாள்" - யவீரு வீட்டை விட்டுக் கிளம்பும்போது அவனுடைய மகள் மரித்துக் கொண்டிருந்தாள். இப்போது அவள் மரித்துப்போனாள்.

"இயேசு எழுந்து, தம்முடைய சீஷரோடுகூட அவன் பின்னே போனார்" - இயேசு விரும்பி இருந்தால் மத் 8:13, மத் 15:28; யோவான் 4:50-54 ஆகிய வசனங்களில் நாம் வாசிக்கிற பிரகாரம் தூர இருந்தே அந்தச் சிறுமியைச் சொஸ்தமாக்க அவரால் கூடும். ஆனாலும் யவீரு கேட்டுக் கொண்டபிரகாரமாக அவனோடு கூட அவனுடைய வீட்டிற்குப் போனார். தம்முடைய சீஷர்களுக்கு ஊழியத்தைப் பற்றிக் கற்றுக் கொடுப்பதற்காகவும், தமது முன்மாதிரியை அவர்களுக்குக் காண்பிப்பதற்காகவும் இயேசு இவ்வாறு செய்திருக்கலாம்.

"அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்" - (லூக்கா 8:4)

> ஓரம் (hem) - κράσπεδον - kraspedon - 2899
>
> பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - ஓரம், தொங்கல் (மத் 9:20, மத் 14:36; மத் 23:5; மாற்கு 6:56, லூக்கா 8:44, எண் 15:38-41, உபா 22:12, மத் 23:5)

"இயேசு திரும்பினார்" தமது வஸ்திரத்தைத் தொட்டவுடனேயே அதை அவர் தமது ஆவியிலே உணர்ந்தார். மனுஷர்களைப் பற்றியும், அவர்களுடைய வியாதிகளைப் பற்றியும் இயேசு கிறிஸ்துவிற்கு நன்றாகத் தெரியும். அவர் ஆவியானவரின் வரங்கள் எல்லாவற்றையுமே பெற்றிருந்தார் (1கொரி 12, ஏசா 11:2, ஏசா 61:1)

"உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" - சுவிசேஷப் புஸ்தகங்களில் ஏழு இடங்களில் இந்த வாக்கியத்தை வாசிக்கிறோம். (மத் 9:22 மாற்கு 5:34; மாற்கு 10:52, லூக்கா 7:50; லூக்கா 8:48, லூக்கா 17:19, லூக்கா 18:42)

9 அதிகாரம்

இயேசு கிறிஸ்துவின் வஸ்திரத்தின் ஓரம் நீல நிறத்தினால் ஆனது. வஸ்திரத்தின் ஓரத்திலுள்ள நீல நிறம் தேவனுடைய வார்த்தையைக் குறிக்கும். ஒரு சில மார்க்கத் தலைவர்கள் நீண்ட வஸ்திரத்தை அணிந்திருப்பார்கள். வஸ்திரத்தின் ஓரத்தில் நீலநிறமும் இருக்கும். ஆனால் அவர்களுடைய ஜீவியம் தங்கள் வஸ்திரத்திற்கு ஏற்றபடி இராது.

இயேசு கிறிஸ்து தேவனுடைய வார்த்தையின் பிரகாரம் ஜீவிக்கிறார். அவருடைய வஸ்திரத்தின் ஓரத்திலுள்ள நீலநிறம் அவர் ஒரு உண்மையான தேவமனுஷன் என்பதை வெளிப்படுத்துகிறது. அவரிடத்தில் மாய்மாலம் எதுவும் இல்லை. உடன்படிக்கையின் பிரகாரம் எல்லா இஸ்ரவேலரையும் தேவனுடைய வார்த்தை குணமாக்கும் (சங் 105:37; சங் 107:20). இதை அந்த ஸ்திரீ பூரணமாக நம்பினாள். இந்த விசுவாசத்தினால்தான் இயேசு கிறிஸ்துவின் வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்.

தமது வஸ்திரத்தின் ஓரத்தை அந்த ஸ்திரீ தொட்டவுடன் அந்த ஸ்திரீயின் விசுவாசமும், அவளுடைய எதிர்பார்ப்பும் இயேசு கிறிஸ்துவிற்குப் பரிபூரணமாகத் தெரிய வந்தது. ஆகையினால்தான் இயேசு அவளைப் பார்த்தவுடனே "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" என்று கூறினார்.

இயேசு கிறிஸ்துவின் வார்த்தை அவளுடைய சரீரத்தில் உடனடியாகக் கிரியை செய்தது. 12 வருஷமாக அவளுக்கு இருந்த உதிரப்போக்கு உடனடியாக நின்றுபோனதை அவள் அறிந்து கொண்டாள் (மாற்கு 5:29).

"தாரை ஊதுகிறவர்களையும் இரைகிற ஜனங்களையும்" - மரித்தோர்களுடைய வீடுகளில் சில சடங்குகளைச் செய்வார்கள். தாரை ஊதுகிறவர்களை அழைத்து வந்து அதை ஊதச்செய்வார்கள். ஒப்பாரி வைக்கிற ஸ்திரீகளைக் கூலிக்கு அமர்த்தி அவர்களை ஒப்பாரி பாடச்சொல்வார்கள் (எரே 9:17-21; எரே 48:36; ஆமோ 5:16). மிகவும் ஏழையானவனுடைய வீட்டிலும்கூட யாராவது மரித்துப்போனால் அங்கு இரண்டு தாரை ஊதுகிறவர்களும், ஒப்பாரி பாடுகிற ஒரு ஸ்திரீயும் குறைந்தபட்சமாக இருப்பார்கள்.

"மரிக்கவில்லை, நித்திரையாயிருக்கிறாள்" - நீங்கள் நினைப்பதுபோல அவள் நம்பிக்கையில்லாமல் மரித்துப்போகவில்லை. நான் அவளை உயிருடன் எழுப்புவேன்.

"ஜனங்கள் வெளியே துரத்தப்பட்ட பின்பு" - அங்கு ஏளனப்பேச்சுக்காரர்கள் இருந்தார்கள். ஒரே சந்தடியாக இருந்தது. அவர்கள் துரத்தப்பட்டால்தான் விசுவாசம் கிரியை நடப்பிக்கும். அற்புதம் நடைபெறும் என்பதற்காக அவர்கள் துரத்தப்படவில்லை. அவர்கள் சந்தடி பண்ணிக் கொண்டிருந்தார்கள். அந்த இடத்தில் ஒரு அமைதியையும் பக்தியான சூழ்நிலையையும் கொண்டு வரவேண்டுமென்பதற்காக அந்த ஜனங்கள் வெளியே துரத்தப்பட்டார்கள்.

"அவள் எழுந்திருந்தாள்" - மரித்தவள் உயிரோடு எழும்பினாள். வேதாகமத்தில் பத்து இடங்களில் மரித்தோர் உயிரோடு எழுப்பப்பட்ட அற்புதங்களை நாம் வாசிக்கிறோம். இயேசு கிறிஸ்து மரித்துப்போன மூவரை உயிரோடு எழுப்பினார் (மத் 9:25; லூக்கா 7:14; யோவான் 11). மற்றவர்கள் மரித்துப்போன மேலும் ஏழு பேரை உயிரோடு எழுப்பினார்கள் (1 இராஜா 17:22; 2 இராஜா 4:34; 2 இராஜா 13:20-21; யோவான் 21:10; மத் 12:40; அப் 9:40; அப் 14:20; அப் 20:10).

21. இரண்டு குருடரைக் குணமாக்குகிறார் - (20:29; மாற்கு 10:46; லூக் 18:35)

மத் 9:27 இயேசு அவ்விடம் விட்டுப் போகையில், இரண்டு குருடர் அவர் பின்னே சென்று: தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிட்டார்கள்.

மத் 9:28 அவர் வீட்டிற்கு வந்தபின்பு, அந்தக் குருடர் அவரிடத்தில் வந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி: இதைச் செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களா என்று கேட்டார். அதற்கு அவர்கள்: ஆம் விசுவாசிக்கிறோம், ஆண்டவரே என்றார்கள்.

9 அதிகாரம்

மத் 9:29 அப்பொழுது அவர்களுடைய கண்களை அவர் தொட்டு: உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது என்றார்.

மத் 9:30 உடனே அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டது. இதை ஒருவரும் அறியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்று இயேசு அவர்களுக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார்.

மத் 9:31 அவர்களோ புறப்பட்டு, அத்தேசமெங்கும் அவருடைய கீர்த்தியைப் பிரசித்தம் பண்ணினார்கள்.

"அவர் வீட்டிற்கு வந்தபின்பு" - இயேசு கிறிஸ்து மத்தேயுவின் வீட்டிற்கு திரும்பவும் வந்தபின்பு (மத் 9:10;18,23,27-28)

"அவர்களுடைய கண்களை அவர் தொட்டார்" - (மத் 8:3)

"உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது" - விசுவாசத்தின் பிரமாணம் (மத் 8:13)

கண்டிப்பாய்க் கட்டளையிடு (straitly charged) - ἐμβριμάομαι - embrimaomai - 1690

வினைச்சொல் - கண்டிப்பாய்க் கட்டளையிடு, கண்டிப்பாய் சொல்லு (sternly enjoin; to charge at risk of displeasure) தம்மைப் பற்றிய காரியங்களை முடிந்த வரையிலும் தமது சத்துருக்களை விளம்பரம் பண்ணாமல் இருக்க வேண்டுமென்று இயேசு விரும்பினார் (மத் 8:4)

"அவர்களோ புறப்பட்டு, அத்தேசமெங்கும் அவருடைய கீர்த்தியைப் பிரசித்தம் பண்ணினார்கள்" - இயேசு கிறிஸ்து மத் 9:30 இல் கூறியிருக்கிற காரியங்களை அவர்கள் புரிந்து கொள்ளவும் இல்லை அதற்கு முக்கியத்துவம் தரவும் இல்லை

22. ஊமையனைக் குணப்படுத்துகிறார் - பரிசுத்த ஆவியானவருக்கு எதிராக முதல்வது தூஷணம் - (12:24,31)

மத் 9:32 அவர்கள் புறப்பட்டுப் போகையில், பிசாசுபிடித்த ஊமையான ஒரு மனுஷனை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்.

மத் 9:33 பிசாசு துரத்தப்பட்ட பின்பு ஊமையன் பேசினான். ஜனங்கள் ஆச்சரியப்பட்டு: இஸ்ரவேலில் இப்படி ஒருக்காலும் காணப்படவில்லை என்றார்கள்.

மத் 9:34 பரிசேயரோ: இவன் பிசாசுகளின் தலைவனாலே பிசாசுகளைத் துரத்துகிறான் என்றார்கள்.

"அவர்கள் புறப்பட்டுப் போகையில்" - (மத் 9:9-10;18,27-28,32)

"பிசாசுபிடித்த ஊமையன்" - பிசாசு ஒருவனை ஊமையாக்குகிறது

"இவன் பிசாசுகளின் தலைவனாலே பிசாசுகளைத் துரத்துகிறான்" - பரிசுத்த ஆவியானவருக்கு எதிராகக் கூறப்பட்ட முதலாவது தேவதூஷணம். இயேசு கிறிஸ்துவை அவர்கள் எதிர்ப்பதை வெளிப்படையாகக் காண்பிக்கிறார்கள். அறிந்தும், வேண்டுமென்றும், ஒளிக்கு எதிராக பாவம் செய்கிறார்கள் (யோவான் 3:19-20; மத் 12:31-32)

23. கலிலேயாவிற்கு மூன்றாவது முறையாகப் பிரயாணம் - (4:12,23; லூக் 4:42)

மத் 9:35 பின்பு, இயேசு சகல பட்டணங்களையும் கிராமங்களையும் சுற்றி நடந்து, ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி, அவர்களைச் சொஸ்தமாக்கினார்.

9 அதிகாரம்

மத் 9:36 அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால் அவர்கள்மேல் மனதுருகி

மத் 9:37 தம்முடைய சீஷர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்.

மத் 9:38 ஆதலால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக் கொள்ளுங்கள் என்றார்

"ஜெபஆலயங்களில் உபதேசித்து ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி அவர்களைச் சொஸ்தமாக்கினார்" - இயேசு கிறிஸ்துவின் மூன்று அம்ச ஊழியம்.

1 உபதேசித்தார்

2 பிரசங்கித்தார்

3 சகல வியாதிகளையும் சகல வியாதிகளையும் நீக்கி, ஜனங்களைச் சொஸ்தமாக்கினார் மத் 4:23-24 அப் 10:38

உபதேசி (Teaching) - διδάσκω didaskoo - 1321

வினைச்சொல் - உபதேசி, போதி, பிரசங்கி, போதகம் பண்ணு, உபதேசம் பண்ணு, கற்றுக்கொடு **(to instruct; deliver a discourse; to impart knowledge; instill doctrine into another, to explain)**

இயேசு கிறிஸ்து மிகச்சிறந்த உபதேசியார் அவருடைய உபதேசங்களைக் கேட்டு ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள் ஜனங்கள் தம்மிடம் கேள்வி கேட்பதையும் இயேசு அனுமதித்தார் ஜனங்களுடைய சந்தேகங்களெல்லாம் தீர வேண்டும்.

அவர்கள் தெளிவடைய வேண்டும் என்பதே இயேசு கிறிஸ்துவின் நோக்கம் (மத் 13:51; மாற்கு 8:11 மாற்கு 12:34 லூக்கா 2:46, லூக்கா 23:9)

பிரசங்கி (Preaching) - κηρύσσω - keerysso - 2784

வினைச்சொல் - பிரசங்கி, பிரசங்கம் பண்ணு, பிரசித்தம் பண்ணு, கூறு **(to herald as a public crier; proclaim)**

வேதாகமத்தில் உபதேசம் பண்ணுதல் என்னும் சொல் 166 இடங்களில் வருகிறது இவற்றில் பாதி பழைய ஏற்பாட்டிலும், மீதி புதிய ஏற்பாட்டிலும் உள்ளது. ஆனால் பிரசங்கம் பண்ணுதல் என்னும் சொல் பழைய ஏற்பாட்டில் 5 இடங்களில் மட்டுமே காணப்படுகிறது புதிய ஏற்பாட்டிலோ 138 இடங்களில் உள்ளது

பிரசங்கம் பண்ணுவதினால் ஜனங்களைச் சத்தியத்திற்கு நேராக அழைக்கிறோம் உபதேசம் பண்ணுவதினால் ஜனங்களுக்குச் சத்தியத்தைத் தெளிவுபடுத்துகிறோம் ஒவ்வொரு பெற்றோரும் தங்களுடைய குடும்பத்தில் சத்தியத்தை உபதேசிப்பவராக இருக்க வேண்டும். (உபா 4:1-14. உபா 11:19

"சொஸ்தமாக்கினார்" - வியாதிகளையும் நோய்களையும் சொஸ்தமாக்குவது இயேசு கிறிஸ்துவின் ஊழியம். (மத் 9:23-24 மத் 9:35 லூக்கா 4:16-21 யோவான் 10:10; அப் 10:38) தம்முடைய ஊழியக்காரர்களும் இந்த ஊழியத்தைச் செய்ய வேண்டுமென்று இயேசு கட்டளை கொடுத்திருக்கிறார் (மத் 10:1-8, மத் 28:20, மாற்கு 3:15 மாற்கு 6:7-13, மாற்கு 16:15-20 லூக்கா 9:2, லூக்கா 10:9, யாக் 5:14-16)

"சகல வியாதிகளையும், சகல நோய்களையும்" (யாக் 13:58

"இயேசு அவர்கள்மேல் மனதுருகினார்" மனதுருக்கம் கர்த்தருடைய சுபாவம். விசுவாசிகளிடமும் மனதுருக்கம் இருக்க வேண்டும். தேவையுள்ள ஜனங்களைக் காணும்போதும் அவதியுறும் ஜனங்களைக் காணும்போதும் நமது இருதயம் இளகவேண்டும். மனது உருக வேண்டும் அவர்களுக்கு விடுதலையைக் கொடுக்க வேண்டுமென்று நமது உள்ளத்தில் ஒரு வாஞ்சை உண்டாக வேண்டும்.

9 அதிகாரம்

இயேசு கிறிஸ்து பாடுகளை அனுபவிக்கும் ஜனங்களைக் காணும் போதெல்லாம் அவருடைய மனது உருகிறது. ஒன்பது இடங்களில் இயேசுவின் மனதுருக்கத்தைக் குறித்து நாம் வாசிக்கிறோம் (மத் 9:36; மத் 14:14; மத் 15:32; மத் 20:34; மாற்கு 1:41; மாற்கு 5:19; மாற்கு 6:34; மாற்கு 8:2; லூக்கா 7:13).

“தொய்ந்து போனவர்கள்” - ஜனங்கள் களைத்துப்போயிருக்கிறார்கள். மேய்ப்பர்கள் கைவிட்டதினால் பல இடங்களுக்கும் அலைந்துதிரிந்து வாடிப்போயிருக்கும் ஆடுகளைப்போல இருக்கிறார்கள். பரிசேயரும், வேதபாரகரும் ஜனங்களைப் புறக்கணித்து விட்டார்கள். பாடுகளை அனுபவிக்கும் ஜனங்கள் சபிக்கப்பட்டவர்கள் என்று கூறி, அவர்களை ஒதுக்கி வைத்துவிட்டார்கள் (யோவான் 7:49). கைவிடப்பட்ட ஜனங்களைப் பார்த்து இயேசு மனதுருகுகிறார்.

“மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல” - இரட்சிக்கப்படாதவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போன்றவர்கள் (சங் 119:176; ஏசா 53:6-7; எரே 50:6; மத் 10:6; லூக்கா 15:4-6). இரட்சிக்கப்பட்டவர்கள் ஒரு காலத்தில் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல இருந்தார்கள். ஆனால் இப்பொழுதோ இயேசு கிறிஸ்து அவர்களுக்கு நல்ல மேய்ப்பராக இருக்கிறார் (மத் 10:16; மத் 26:31; யோவான் 10:1-29; யோவான் 21:16-17; எபி 13:20; 1பேதுரு 2:25).

“அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்” - கிறிஸ்துவின் ஊழியம் அறுவடையின் ஊழியத்திற்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது (லூக்கா 10:2; யோவான் 4:35).

“அறுப்புக்கு வேலையாட்கள்” - சுவிசேஷ ஊழியத்தை இயேசு கிறிஸ்துவைப்போலவும், ஆதித்திருச்சபையாரைப் போலவும் செய்வதற்கு ஆட்கள் கொஞ்சமாக இருக்கிறார்கள்.

மத்தேயு - தொகுப்புரை

10 அதிகாரம்

24. பன்னிரெண்டு சீஷர்களின் அபிஷேகம் (மாற்கு 3:13 லூக் 6:12; 9:1; மாற்கு 6:7)

(1) சீஷர்களுக்கு அதிகாரம் கொடுக்கிறார்

மத் 10:1 அப்பொழுது, அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷர்களையும் தம்மிடத்தில் வரவழைத்து, அசுத்த ஆவிகளைத் துரத்தவும், சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்.

"அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷர்களையும் தம்மிடத்தில் வரவழைத்தார்" - இயேசு கிறிஸ்து தேவனுடைய சித்தத்தைத் தெரிந்து கொள்கிறதற்காக இரவு முழுவதும் ஜெபம் பண்ணிய பின்பு, பன்னிரெண்டு சீஷர்களைத் தெரிந்தெடுத்தார் (மாற்கு 3:13; லூக்கா 6:12-16)

"அசுத்த ஆவிகளைத் துரத்தவும் சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்" இதுவே வல்லமையின் இரகசியம். கர்த்தர் கொடுக்காமல் யாரும் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது. கர்த்தர் கொடுத்த பின்புகூட நாம் விசுவாசத்தினால் அதைக்காத்துக் கொள்ளவில்லையென்றால் நம்மிடத்தில் அந்த அதிகாரம் தங்காது. (யோவான் 3:27, ரோமர் 8:25)

(2) அப்போஸ்தலர்களின் பெயர்கள் (மாற்கு 3:16-19; லூக் 6:14-16; அப் 1:13-26)

மத் 10:2 அந்தப் பன்னிரண்டு அப்போஸ்தலருடைய நாமங்களாவன: முந்தினவன் பேதுரு எனப்பட்ட சீமோன், அவன் சகோதரன் அந்திரேயா, செபெதேயுவின் குமாரன் யாக்கோபு, அவன் சகோதரன் யோவான்,

மத் 10:3 பிலிப்பு, பர்த்தொலொமேயு, தோமா, ஆயக்காரனாகிய மத்தேயு, அல்பேயுவின் குமாரன் யாக்கோபு, ததேயு என்னும் மறுநாமமுள்ள லெபேயு,

மத் 10:4 கானானியனாகிய சீமோன், அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ் காரியோத்து என்பவைகளே.

"முந்தினவன் பேதுரு எனப்பட்ட சீமோன்" - நான்கு இடங்களில் அப்போஸ்தலர்களின் பெயர்கள் வரிசையாக அட்டவணை கொடுக்கப் பட்டிருக்கிறது. இவை அனைத்திலும் சீமோன் பேதுருவின் பெயரே முதலாவது வருகிறது. (மத் 10:2 மாற்கு 3:16; லூக்கா 6:14, அப 1:13)

"அவன் சகோதரன் அந்திரேயா" - (மத் 4:18)

"செபெதேயுவின் குமாரன் யாக்கோபு" - (மத் 4:21)

"அவன் சகோதரன் யோவான்" - யோவான் சுவிசேஷம், 1,2,3 யோவான் நிருபங்கள், வெளிப்படுத்தின விசேஷம் ஆகியவற்றை எழுதினவன்.

"பிலிப்பு" - (லூக்கா 6:14)

"பர்த்தொலொமேயு" பிலிப்புவின் சகோதரன் நாத்தான்வேலின் மூதாதையருடைய பெயர் (யோவான் 1 45 51; யோவான் 21:2) பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் ஒருவன் (மத் 10:3, மாற்கு 3:18; மாற்கு 6:14, அப் 1:13) வரலாற்றின் பிரகாரம் சீரியா, பிரிக்கியா, இந்தியா ஆகிய தேசங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணினான். அதன்பின்பு இவனைச் சிலுவையில் தலைகீழாகத் தொங்கவிட்டு, அடித்துக் கொன்றார்கள். ஆர்மேனியாவில் அஸ்திகாஸ் இராஜா இவனைச் சிரச்சேதம் பண்ணினான் என்றும் வரலாறு கூறுகிறது.

"தோமா" இந்தியாவில் இரத்தச்சாட்சியாக மரித்தவன்.

"மத்தேயு" ஆயக்காரன்.

"அல்பேயுவின் குமாரன் யாக்கோபு" (லூக்கா 24:10)

10 அதிகாரம்

"ததேயு என்னும் மறுநாமமுள்ள லெபேயு" - (மத் 10:3; மாற்கு 3:18; லூக்கா 6:16 அப் 1:13; யோவான் 14:22). பெர்சியாவில ஊழியம் செய்தான் என்றும் அங்கிருந்த புறஜாதி ஆசாரியர்கள் இவனை அடித்துக் கொன்று விட்டார்கள் என்றும் வரலாறு கூறுகிறது.

"கானானியனாகிய சீமோன்" - (லூக்கா 6:15

"இயேசுவைக் காட்டிக்கொடுத்த யூதாஸ்காரியோத்து" - (யோவான் 6:71)

(3) முதலாவது ஊழிய ஸ்தலம்

மத் 10:5 இந்தப் பன்னிருவரையும் இயேசு அனுப்புகையில் அவர்களுக்குக் கட்டளையிட்டுச் சொன்னது என்னவென்றால், நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும்.

மத் 10:6 காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள்

"புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும் சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும் யூதர்கள் மத்தியில் மட்டும் ஊழியம் செய்யுமாறு இயேசு இவர்களை முதலாவதாக அனுப்பினார் (மத் 10:5-6; யோவான் 1:11, ரோமர் 1:16) அதன்பின்பு இயேசு பரமேறுகையில் முழு உலகத்திற்கும் சுவிசேஷத்தை அறிவிக்குமாறு கட்டளையிட்டார் (மத் 28:19-20 மாற்கு 16:15-20, லூக்கா 24:47; அப் 1:8)

"இஸ்ரவேல் வீட்டார்" - யூதர்கள் (லூக்கா 7:3; யோவான் 1:11,19, யோவான் 3:1; அப் 2:5; அப் 10:39, அப் 11:19; ரோமர் 1:16) 200 இடங்களில் யூதர்களைப் பற்றிய குறிப்பு இருக்கிறது புதிய ஏற்பாட்டில் 78 இடங்களில் யூதர்கள் இஸ்ரவேலர் என்று அழைக்கப் படுகிறார்கள் (ரோமர் 3:9,29; ரோமர் 9:24; 1கொரி 10:32 1கொரி 12:13) யூதர் என்பது இஸ்ரவேலின் எல்லா கோத்திரத்தாரையும் குறிக்கும். (மத் 19:28; அப் 26:7; யாக் 1:1; வெளி 7:4, வெளி 21:12)

(4) செய்தியும் வல்லமையும் - (மாற்கு 3:13; 6:7; லூக் 6:12; 9:1)

மத் 10:7 போகையில், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கியுங்கள்

மத் 10:8 வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள் குஷ்டரோகிகளைச் சுத்தம் பண்ணுங்கள் மரித்தோரை எழுப்புங்கள் பிசாசுகளைத் துரத்துங்கள் இலவசமாய்ப் பெற்றீர்கள் இலவசமாயக் கொடுங்கள்

"பிரசங்கியுங்கள்" இயேசு கிறிஸ்து தாம் பிரசங்கித்த செய்தியையே தமது சீஷர்களும் பிரசங்கிக்கவேண்டுமென்று அவர்களுக்குக் கூறினார் (மத் 10:1-8 மாற்கு 3:14-15; மாற்கு 6:7-13; லூக்கா 9:6, லூக்கா 10:1-20)

"பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" - (மத் 4:17; மத் 19:24)

"இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாயக் கொடுங்கள்" - சில ஜனங்கள் இலவசமாயக் கொடுக்காமல் இருப்பதற்குக் காரணம் அவர்கள் இலவசமாகப் பெற்றுக் கொள்ளவில்லை

(5) வேலையாள் தன் ஆகாரத்திற்குப் பாத்திரனாயிருக்கிறான்

மத் 10:9 உங்கள் கச்சைகளில் பொன்னையாவது வெள்ளியையாவது செம்பையாவது

10 அதிகாரம்

மத் 10:10 வழிக்காகப் பையையாவது, இரண்டு அங்கிகளையாவது, பாதரட்சைகளையாவது, தடியையாவது தேடிவைக்கவேண்டாம்; வேலையாள் தன் ஆகாரத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான்.

"உங்கள் கச்சைகளில் பொன்னையாவது, வெள்ளியையாவது, செம்பையாவது தேடி வைக்கவேண்டாம்" - தேவனுடைய அழைப்பிற்குக் கீழ்ப்படிவதற்கு முன்பாக நமது பராமரிப்பிற்காக எதையும் சேர்த்து வைக்க வேண்டியதில்லை. தேவனுடைய அழைப்பை ஏற்றுக் கொண்டு அதற்குக் கீழ்ப்படியும்போது கர்த்தர் நம்மைப் பராமரிப்பார். அதிகமான பாதரட்சைகளையும், அதிகமான அங்கிகளையும் தேடி வைத்த பின்பு கர்த்தருக்கு ஊழியம் செய்யலாம் என்று காத்திருக்கக்கூடாது. நம்மை அழைத்தவர் உண்மையுள்ளவர். அவர் நம்மைக் கைவிடமாட்டார். நம்மை போஷித்து வழிநடத்துவார். நம்மைப் பராமரிப்பார் என்னும் விசுவாசம் நம்மிடம் இருக்க வேண்டும். (மத் 10:9-10)

"கச்சை" - நம்முடைய முக்கியமான பொருட்களை வைத்துக் கொள்வதற்குப் பயன்படும் பைகள்.

"பை" (script) மேய்ப்பரின் பை. தனக்குத் தேவையான பொருட்களை மேய்ப்பன் இதில் எடுத்துச் செல்வான்.

"இரண்டு அங்கிகளையாவது, பாதரட்சைகளையாவது, தடியையாவது தேடி வைக்கவேண்டாம்" நம்மை அலங்கரிப்பதற்காக அல்லது நம்மைப் பராமரிப்பதற்காக ஏராளமான காரியங்களைச் சேர்த்து வைப்பதில் நமது காலத்தைச் செலவு செய்யக்கூடாது. (லூக்கா 9:3; மாற்கு 6:8)

"வேலையாள் தன் ஆகாரத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான்" - இது கர்த்தர் தமது ஊழியக்காரருக்குக் கொடுக்கும் வாக்குத்தத்தம். தமது ஊழியக்காரர்களைக் கர்த்தர் போஷிப்பார். நம்மை அபிஷேகம் பண்ணினவர் நம்மைப் பராமரித்து வழிநடத்துவார். (லூக்கா 8:3; 1கொரி 9:6-16; கலா 6:6; எபி 7:1-10)

(6) ஊழியக்காரர்களை ஏற்றுக் கொள்கிறவர்கள்

மத் 10:11 எந்தப் பட்டணத்திலாவது கிராமத்திலாவது நீங்கள் பிரவேசிக்கும்போது, அதிலே பாத்திரமானவன் யாரென்று விசாரித்து, நீங்கள் புறப்படுமளவும் அவனிடத்தில் தங்கியிருங்கள்.

மத் 10:12 ஒரு வீட்டுக்குள் பிரவேசிக்கும்போது, அதை வாழ்த்துங்கள்.

மத் 10:13 அந்த வீடு பாத்திரமாயிருந்தால், நீங்கள் கூறின சமாதானம் அவர்கள்மேல் வரக்கடவது; அபாத்திரமாயிருந்தால், நீங்கள் கூறின சமாதானம் உங்களிடத்திற்குத் திரும்பக்கடவது.

"பாத்திரமானவன்" - நல்ல பண்புடையவன். கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவன். ஊழியக்காரன் ஒருவனுடைய வீட்டில் தங்கும்போது அந்த வீட்டில் தங்குவதினால் தேவநாமம் தூஷிக்கப்படாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும்.

"நீங்கள் புறப்படுமளவும் அவனிடத்தில் தங்கியிருங்கள்" - தங்குவதற்காக வீடுவீடாக அலைய வேண்டாம். நோக்கமில்லாமல் ஊர் ஊராகச் சுற்றித்திரிய வேண்டாம். (லூக்கா 10:7) காலத்தைத் திட்டமிட்டு ஜெபம் பண்ணுங்கள். வேதவசனங்களைத் தியானியுங்கள். கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள். வீடுவீடாகச் சுற்றித்திரிந்தால் நாம் தேவையில்லாத காரியங்களைப் பேசிப் புறங்கூறுகிறவர்களாக இருப்போம். விருந்துகளிலும் கேளிக்கைகளிலும் அதிகளவில் பங்குபெற்று தேவனுடைய அபிஷேகத்தைச் சிறிதுசிறிதாக இழந்து போவோம்.

"நீங்கள் கூறின சமாதானம் அவர்கள்மேல் வரக்கடவது" நீங்கள் ஒரு வீட்டை வாழ்த்தும்போது கர்த்தர் அந்த வீட்டை ஆசீர்வதிப்பார். அந்த வீட்டிலுள்ளவர்களுக்கு ஆசீர்வாதம் உண்டாகும்.

10 அதிகாரம்

(7) ஊழியக்காரர்களை ஏற்றுக் கொள்ளாதவர்கள் – (லூக் 10:10)

மத் 10:14 எவனாகிலும் உங்களை ஏற்றுக் கொள்ளாமலும், உங்கள் வார்த்தைகளைக் கேளாமலும் போனால், அந்த வீட்டையாவது பட்டணத்தையாவது விட்டுப் புறப்படும்போது, உங்கள் கால்களில் படிந்த தூசியை உதறிப் போடுங்கள்.

மத் 10:15 நியாயத்தீர்ப்பு நாளிலே அந்தப் பட்டணத்திற்கு நேரிடுவதைப் பார்க்கிலும் சோதோம் கொமோரா நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

"உங்கள் கால்களில் படிந்த தூசியை உதறிப் போடுங்கள்" - யூதர்கள் புறஜாதி தேசத்திலுள்ள தூசிகளை அசுத்தமாக எண்ணினார்கள் (எசே 45:1 ஆமோ 7:17) கால்களில் படிந்த தூசியை உதறிப்போடுவது என்பது தேவன் அவர்களைப் புறக்கணித்து விட்டார் என்பதற்கு அடையாளம் (மாற்கு 6:11, லூக்கா 9:5; 13:51)

தீர்க்கதரிசன எண் - 9

"சோதோம் கொமோரோ நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும்." (மத் 10:15-26) - மத் 10:15,23,26 ஆகிய வசனங்களில் உள்ள காரியங்கள் இன்னும் நிறைவேறவில்லை. மத் 10:16-22,24-25 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற காரியங்கள் நிறைவேறியுள்ளன இன்னும் நிறைவேறி வருகின்றன.

"நியாயத்தீர்ப்பு நாளிலே அந்தப் பட்டணத்திற்கு நேரிடுவதைப்பார்க்கிலும் சோதோம் கொமோரோ நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும்" நரகத்தில் கொடுக்கப்படும் தண்டனை எந்த அளவிற்கு கடுமையானதாக இருக்கும் என்பதை இந்த வசனம் விளக்குகிறது. (மத் 11:22; மத் 12:41; மத் 23:14; மாற்கு 6:11; மாற்கு 12:40; லூக்கா 10:14; லூக்கா 11:31-32; லூக்கா 20:47; வெளி 20:11-15)

"நியாயத்தீர்ப்புநாள்" - (அப் 17:31 வெளி 20:11-15)

(8) ஊழியக்காரருக்கு வரும் எதிர்ப்பைப் பற்றிய முன்னறிவிப்பு (வசனம் 34)

(அ) ஜெபாலயத் தலைவர்களின் பகை

மத் 10:16 ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறது போல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன்; ஆகையால் சர்ப்பங்களைப் போல வினாவுள்ளவர்களும் புறாக்களைப் போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்.

மத் 10:17 மனுஷரைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் உங்களை ஆலோசனைச் சங்கங்களுக்கு ஒப்புக்கொடுத்து, தங்கள் ஜெப ஆலயங்களில் உங்களை வாரினால் அடிப்பார்கள்.

"ஓநாய்கள்" - மாயமாலக்காரர்கள் கள்ளத்தீர்க்கதரிசிகள் பேராசைபிடித்த அதிகாரிகள் ஆகியோருக்கு ஓநாய் அடையாளம்.

"சர்ப்பங்கள்" - சர்ப்பம் யாரையும் நேரடியாகத் தாக்காது. உடல் முழுவதும் விஷம் நிறைந்தது. மறைந்திருந்து தாக்கும். ஆனால் புறாக்களோ கபடற்றவை. பழங்காலத்தில் சூது, சாதுரியம், ஞானம் ஆகியவற்றிற்குச் சர்ப்பங்களை அடையாளமாக சொல்வார்கள் (ஆதி 3:1 2கொரி 11:3) சாத்தான் சர்ப்பத்தைப் போல மாயமாலக்காரன் (மத் 23:33, வெளி 12:9)

"மனுஷரைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" - (மத் 7:16)

"அவர்கள் உங்களை ஆலோசனைச் சங்கங்களுக்கு ஒப்புக்கொடுத்து, தங்கள் ஜெப ஆலயங்களில் உங்களை வாரினால் அடிப்பார்கள்" நீதிமன்றங்களிலும், ஆலோசனைச் சங்கங்களிலும் விசுவாசிகளுக்குப் பிரச்சனைகள் இருக்கும். (மத் 10:17-18) எல்லா ஜெபாலயங்களிலும் ஆலோசனைச் சங்கங்கள் இருக்கும். ஒவ்வொரு சங்கத்திலும் 3 முதல் 23 புருஷர்கள் வரையிலும் ஆலோசனைக்காரர்களாக இருப்பார்கள்.

மத்தேயு - தொகுப்புரை

10 அதிகாரம்

எல்லா வழக்குகளையும் இவர்களே விசாரிப்பார்கள் இவர்களுடைய விசாரிப்புக்குப் பின்பே, வழக்குகள் சனகெரிப் எனப்படும் பெரிய நீதிமன்றத்திற்குச் செல்லும் ஆலோசனைச் சங்கங்கள் விசுவாசிகளைப் புறம்பே தள்ளும். (யோவான் 9:22) வாரினால் அடிக்கும் (லூக் 25:3, 2கொரி 11:24) கல்லால் அடித்துக் கொல்லும் (லூக் 22:24, யோவான் 8:5, அப் 7:58, அப் 14:19)

(ஆ) அதிபதிகளின் பகை

மத் 10:18 அவர்களுக்கும் புறஜாதியாருக்கும் சாட்சியாக என்னிமித்தம் அதிபதிகளுக்கு முன்பாகவும், ராஜாக்களுக்கு முன்பாகவும் கொண்டு போகப்படுவீர்கள்

மத் 10:19 அவர்கள் உங்களை ஒப்புக் கொடுக்கும் போது, எப்படிப் பேசுவோம் என்றும், என்னத்தைப் பேசுவோம் என்றும் கவலைப்படாதிருங்கள் நீங்கள் பேச வேண்டுவது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும்

மத் 10:20 பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்

"எப்படிப் பேசுவோம் என்றும் என்னத்தைப் பேசுவோம் என்றும் கவலைப்படாதிருங்கள்" (மத் 6:25)

"நீங்கள் பேசவேண்டுவது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும்" - (மாற்கு 13:11, லூக்கா 21:13-15)

"உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்" (யோவான் 3:34)

இ) உறவினர்களின் பகை

மத் 10:21 சகோதரன் தன் சகோதரனையும், தகப்பன் தன் பிள்ளையையும் மரணத்துக்கு ஒப்புக் கொடுப்பார்கள் பெற்றாருக்கு விரோதமாகப் பிள்ளைகள் எழும்பி அவர்களைக் கொலைசெய்வார்கள்

"சகோதரன் தன் சகோதரனையும் தகப்பன் தன் பிள்ளையையும் மரணத்துக்கு ஒப்புக் கொடுப்பார்கள் பெற்றாருக்கு விரோதமாகப் பிள்ளைகள் எழும்பி அவர்களைக் கொலை செய்வார்கள்" - சுவிசேஷத்தின் மூலமாக ஜனங்கள் மத்தியிலே பிரிவினை உண்டாகிறது சிலர் வெளிச்சத்தையும், சிலர் இருளையும் தெரிந்தெடுப்பதே இந்தப் பிரிவினைக்குக் காரணம் (யோவான் 3:18-21, 2கொரி 2:16-17, 2கொரி 4:2-4)

(ஈ) உலகத்தின் பகை

மத் 10:22 என் நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள் முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்

மத் 10:23 ஒரு பட்டணத்தில் உங்களைத் துன்பப்படுத்தினால் மறுபட்டணத்திற்கு ஓடிப்போங்கள் மனுஷகுமாரன் வருவதற்குள்ளாக நீங்கள் இஸ்ரவேலுடைய பட்டணங்களை எல்லாம் சுற்றி முடியாதென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்

"முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்" முடிவுபரியந்தம் என்பது நம்முடைய ஜீவியத்தின் முடிவுபரியந்தம் என்றும் மத் 24:14 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் இந்த காலத்தின் முடிவுபரியந்தம் என்றும் பொருள்படும்.

10 அதிகாரம்

"ஒரு பட்டணத்தில உங்களைத் துன்பப்படுத்தினால்" - நமக்குத் துன்பம் வரும்போது அந்தத் துன்பத்தில நாம பின்பற்ற வேண்டிய மாற்று வழிகளையும் ஆண்டவர் நமக்குக் கூறுகிறார் சான்றாக மத் 10:16-18 ஆகிய வசனங்களில எச்சரிப்புக்களும். மத் 10:19-20 ஆகிய வசனங்களில அவற்றுக்கு மாற்று வழியும் உள்ளன அதுபோலவே மத் 10:21-22 ஆகிய வசனங்களில எச்சரிப்புக்களும், மத் 10 23-26 ஆகிய வசனங்களில அவற்றிற்கு மாற்று வழிகளையும் இயேசு கிறிஸ்து கூறியிருக்கிறார்

"மறுபட்டணத்திற்கு ஓடிப்போங்கள்" - ஒரு பட்டணத்திலிருந்து ஒரு ஊழியக்காரர் ஓடிப்போவதினால அவர் கோழையோ அல்லது மோளையோ அல்ல. அது ஞானமான செயல் சுவிசேஷப் பிரபல்யத்திற்கு இது உதவி புரியும். துன்மார்க்கரின் கண்ணிகளிலிருந்து நாம தப்பி பலருக்குச் சத்தியத்தை அறிவித்து தொடர்ந்து ஊழியம் செய்யலாம். ஒரு ஊழியக்காரர் துன்பப்படுத்தப்படும் இடத்தில தொடர்ந்து தங்கியிருந்து கொலைசெய்யப் படுவாரானால், அவருடைய ஊழியம அவருடைய மரணத்தோடு முடிந்து விடும் அவரால மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்க முடியாது.

"மனுஷகுமாரன வருவதற்குள்ளாக நீங்கள இஸ்ரவேலுடைய பட்டணங்களையெல்லாம் சுற்றி முடியாது" - இது சத்தியமான வாக்கியம் இயேசு கிறிஸ்துவின இரண்டாம் வருகைக்கு முன்பாக இஸ்ரவேல் பட்டணங்கள எல்லாவற்றிலும் சுவிசேஷத்தை அறிவித்து சுற்றி முடிக்க முடியாது. ஆதித்திருச்சபை உலகத்திற்கு முழுவதுமாக சுவிசேஷத்தை அறிவிக்கவில்லை கிபி 70 ஆம் ஆண்டில ஆதிகாலக் கிறிஸ்தவர்கள துன்புறுத்தப்பட்டதும், எருசலேம் அழிக்கப்பட்டதும் இதற்கு முக்கியமான காரணம். (லூக்கா 21:20-24; அப 8:1-4; அப் 9:1-4, அப 11:19-21, அப் 12:1) திருச்சபை இன்னும் பூரணமாக முழு உலகத்திற்கும் சுவிசேஷத்தை அறிவிக்கவில்லை ஆயிர வருஷ அரசாட்சி வரையிலும் இந்தப் பிரச்சனை தொடரும் ஏசா 2:1-4 ஏசா 11:9, ரோமர் 11:25-29; சக 12:10-13:1)

நிறைவேற்று (gone over) - τελειόω - teleioo - 5048

வினைச்சொல் - முடி, தேறு, நிறைவேற்று, பூரணப்படுத்து

(8) கிறிஸ்துவோடு சமம் - லூக் 6:40

மத் 10:24 *சீஷன்* தன் போதகனிலும், வேலைக்காரன் தன் எஜமானிலும் மேற்பட்டவனல்ல.

மத் 10:25 *சீஷன்* தன் போதகனைப போலவும் வேலைக்காரன் தன் எஜமானைப போலவும் இருப்பது போதும வீட்டெஜமானையே பெயல்செபூல என்று சொன்னார்களானால அவன் வீட்டாரை அப்படிச் சொல்வது அதிக நிச்சயமல்லவா?

"*சீஷன்* தன் போதகனிலும், வேலைக்காரன் தன் எஜமானிலும் மேற்பட்டவனல்ல" - கிறிஸ்துவின ஊழியக்காரர்கள இயேசு கிறிஸ்துவைவிட மேன்மையடையலாம என்று எதிர்பார்க்கக்கூடாது கிறிஸ்து மட்டுமே கர்த்தரும் ஆண்டவருமாக இருக்கிறார் (அப 2:36)

"*சீஷன* தன போதகனைப்போலவும், வேலைக்காரன தன எஜமானைப்போலவும் இருப்பது போதும்" - ஒரு சீஷனுடைய வாழ்வில அவன் தன் போதகனைப்போல உயரலாம். (யோவான 13:16 யோவான 14:12-15; யோவான 17:18 யோவான 20:21) விசுவாசிகளும் கிறிஸ்துவைப்போல ஆகவேண்டும். இதன பொருள இயேசு கிறிஸ்துவின குணாதிசயங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். (1கொரி 11:1) இயேசுவைப போன்று உயர்ந்துவிட்டதாக யாரும பெருமைப்படக்கூடாது.

நாம் எத்தெந்த வழிகளில் இயேசுவைப் போல ஆகவேண்டும்

1. நீதியில் (1யோவான் 3:7, யோவான் 15:10-14; 1கொரி 1:30, எபே 1:4; எபே 5:27)

10 அதிகாரம்

2 உலகக்காரியங்களிலிருந்து விடுதலை பெறுவதில் (யோவான் 17:14-16; ரோமர் 12:1; யாக் 4:4 1யோவான் 2:15)

3 சுயத்தைச் சிலுவையில் அறைவதில் (ரோமர் 6; கலா 2:20)

4 புதிய ஜீவனில் ஜீவிப்பதில் (ரோமர் 6 கலா 5:16-26; எபே 4:1-24)

5 உபத்திரவங்களைச் சகித்துக் கொள்வதில் (மத் 10:25 யோவான் 15:18-20; மாற்கு 10:30)

6 கிரியைகளில் (யோவான் 14:12 மாற்கு 9:23; மாற்கு 16:17-18 மத் 17:20; மத் 21:22)

7 ஆவியின் கனியில் (கலா 5:22-23 யோவான் 13:34; யோவான் 15:11-13)

8 தேவனுடைய ஊழியத்திற்காக வேறுபிரிக்கப்பட்டு இருப்பதில் (யோவான் 10:36; யோவான் 17:17-19 யோவான் 20:21)

9 வெளிச்சத்தில் நடப்பதில் (1யோவான் 1:7)

10 தேவனோடு ஐக்கியமாக இருப்பதில் (யோவான் 17:11,21-23)

11 மற்றவர்களுக்காகப் பாடு அனுபவிப்பதில் (1பேதுரு 2:21-23 1பேதுரு 3:18; 4:1 பிலி 3:10)

12 ஜீவியத்திலும், நடக்கையிலும் (1யோவான் 2:6; 1யோவான் 4:17)

13 சோதனைகளைச் சகித்துக் கொள்வதில் (எபி 2:18; எபி 4:14-16; யாக் 1:2,12)

14 தேவனுடைய பரிபூரணத்தை வெளிப்படுத்துவதில் (யோவான் 3:34; யோவான் 7:37-39; யோவான் 14:12; எபே 3:19)

"பெயல்செபூல்" (Beelzebub) - பெலிஸ்திய தேவதை. ஈக்களின் தெய்வம். (2இராஜா 1:2) யூதர்கள் இதை பீலசிபப என்று மாற்றினார்கள். குப்பை மேட்டுத் தெய்வம். பிசாசுகளின் தலைவன் (மத் 12:24-32; மாற்கு 3:22 லூக்கா 11:15-19)

(10) மாய்மாலத்திற்கு எதிரான எச்சரிப்பு – (லூக் 12:1-3)

மத் 10:26 அவர்களுக்குப் பயப்படாதிருங்கள்; வெளியாக்கப்படாத மறைபொருளும் இல்லை. அறியப்படாத இரகசியமும் இல்லை.

மத் 10:27 நான் உங்களுக்கு இருளிலே சொல்லுகிறதை நீங்கள் வெளிச்சத்திலே சொல்லுங்கள்; காதிலே கேட்கிறதை நீங்கள் வீடுகளின்மேல் பிரசித்தம் பண்ணுங்கள்.

"அவர்களுக்குப் பயப்படாதிருங்கள் வெளியாக்கப்படாத மறைபொருளும் இல்லை அறியப்படாத இரகசியமும் இல்லை" - மனுஷனுக்குப் பயப்படக்கூடாது. சத்தியத்தை மறைக்கக்கூடாது. சத்தியத்தை வெளிச்சத்திலும், வீட்டின் கூரைமீதும் தைரியமாகப் பேசவேண்டும் (மத் 10:26,27 லூக்கா 12:1-3)

"வீடுகளின்மேல்" - கிழக்கு தேசங்களில் வீடுகளில் கூரை தட்டையாக இருக்கும். ஜனங்கள் அதன்மீது குடும்ப விழாக்களைக் கொண்டாடுவார்கள். முக்கியமான அறிவிப்புகளையும், வீட்டின் மேல்மாடியில் கூறுவார்கள் (உபா 22:8; யோசு 2:6; நியா 16:27; நெகே 8:16; 2சாமு 11:2; 2இராஜா 23:12; ஏசா 15:3; அப் 10:9)

(11) மனுஷ பயத்திற்கு எதிரான எச்சரிப்பு – (லூக் 12:4-12)

மத் 10:28 ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்.

10 அதிகாரம்

மத் 10:29 ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா? ஆயினும் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல் அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது.

மத் 10:30 உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது.

மத் 10:31 ஆதலால் பயப்படாதிருங்கள்; அநேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்.

மத் 10:32 மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன்.

மத் 10:33 மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்.

"ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்" மனுஷருக்குப் பயப்பட வேண்டாம் என்று கூறும் இரண்டாவது கட்டளை. மனுஷனால் நமது சரீரத்தை மாத்திரமே கொல்ல முடியும். நமது ஆத்துமாவை ஒன்றும் செய்ய முடியாது. (லூக்கா 12:4-12)

அழி (destroy) ἀπόλλυμι apollymi 622

வினைச்சொல் - கொலை செய், அழி, கெடு, கொல், சங்கரி - கொல் (to kill) (மத் 2:13; மத் 12:14) அழி (torment) மத் 8:29 மாற்கு 1:24 அழி (மறை) (மாற்கு 2:22); இழந்து போகச்செய் (lose மத் 10:6,39,42) இழந்துபோ சுஷங் பாளற் யோவான் 17:12 2கொரி 4:3 அழிந்துபோ perish or die) (மத் 8:25 அழித்துப்போடு (to ruin) (மத் 9:17

நரகம் (hell) - γέεννα - geenna - 1067

பெண்பால் பெயர்சொல் - நரகம் (லூக்கா 12:5) - நரகத்தில் துன்மார்க்கனின் சரீரங்களும் ஆத்துமாக்களும் பாடுகளை அனுபவிக்கும்.

காசு ἀσσάριον - assarion - 787

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - காசு - ரோமருடைய நாணயம்

"உங்கள் பிதாவின் சித்தமில்லாமல் - பரலோகப் பிதாவிற்குத் தெரியாமல் (மத் 10:29-30)

"பயப்படாதிருங்கள் அநேகம் அடைக்கலான் குருவிகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்" - இந்த அதிகாரத்தில் 3 இடங்களில் இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது. (மத் 10:26-31

தீர்க்கதரிசன எண் - 10

"மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ ...." (மத் 10:32-36) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

(12) **சுவிசேஷத்திற்கு வரும் எதிர்ப்பு பற்றி மறுபடியும் முன்னறிவிக்கப்படுதல்** - (வசனம் 16-33 லூக் 12:11-49)

மத் 10:34 பூமியின்மேல் சமாதானத்தை அனுப்ப வந்தேன் என்று எண்ணாதிருங்கள்; சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்பவந்தேன்.

மத் 10:35 எப்படியெனில், மகனுக்கும் தகப்பனுக்கும், மகளுக்கும் தாய்க்கும், மருமகளுக்கும் மாமிக்கும் பிரிவினையுண்டாக்க வந்தேன்.

மத் 10:36 ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே.

10 அதிகாரம்

"பட்டயம்" - (மத் 10:21 லூக்கா 12:49-53)

"மகனுக்கும் தகப்பனுக்கும் மகளுக்கும் தாய்க்கும், மருமகளுக்கும் மாமிக்கும் பிரிவினையுண்டாக்க வந்தேன்" - மேசியா வரும்போது பூமியில் சமாதானம் இராது. குடும்பத்தில் ஒற்றுமையிராது. பிரிவினை உண்டாயிருக்கும் என்று யூதமார்க்கத் தலைவர்கள் நம்பினார்கள். கிறிஸ்து இந்த வசனத்தில் இவ்வாறு கூறுவதினால் தாமே மேசியா என்பதை வலியுறுத்துகிறார் (மீகா 7:5-6, லூக்கா 5:32)

(18) சீஷர்களின் பரிசோதனை - (8:18 - 6:24)

மத் 10:37 தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல; மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல.

மத் 10:38 தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல.

மத் 10:39 தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் காப்பான்.

"என்னிலும் அதிகமாய்" - முதலாவது கற்பனை மீறப்படுகிறது. (மத் 19:29, மத் 22:37, லூக்கா 14:26-27)

"எனக்குப் பாத்திரன் அல்ல" - இந்த வாக்கியம் 3 முறை வலியுறுத்தி கூறப்பட்டிருக்கிறது. (மார்க்கு 10:37-38)

இயேசு கிறிஸ்துவின் சீஷருக்குப் பரீட்சைகள்

1 உலக உபத்திரவம் (மத் 10:25 யோவான் 15:18)

2 பயமில்லாமல் பிரசங்கம் பண்ணுதல் (மத் 10:26-27)

3 பயமில்லாமல் பிரதிஷ்டை பண்ணுதல் (மத் 10:28)

4 பயமில்லாத விசுவாசம் (மத் 10:29-31 எபி 11)

5 கிறிஸ்துவைக் குறித்துத் தைரியமாகச் சாட்சி பகருதல் (மத் 10:32-33)

6 குடும்பத்தில் உபத்திரவம் (மத் 10:34-36; மத் 19:29)

7 தேவனுக்கு முதலிடம் கொடுத்தல் (மத் 10:37; மத் 22:37)

8 அனுதினமும் சிலுவையைச் சுமத்தல் (மத் 10:38; லூக்கா 9:23)

9 கிறிஸ்துவைப் பின்பற்றுதல் (மத் 10:38 யோவான் 10:27)

10 தன்னைத் தானே வெறுத்தல் (மத் 10:39; ரோமர் 8:1-13)

"தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல" (மாற்கு 8:34 லூக்கா 9:23; யோவான் 10:26)

மத்தேயு 10:39-42 ஆகிய வசனங்களில் நான்கு தீர்க்கதரிசன வாக்குத்தத்தங்கள் கூறப்பட்டிருக்கிறது. இவை தற்காலத்தில் நிறைவேறி வருகின்றன. கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பு நாளின்போது இவை முழுவதுமாக நிறைவேறும். (ரோமர் 4:10, 2கொரி 5:10)

"தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் காப்பான்" - தன்னுடைய சொந்த முயற்சியினால் தன் ஜீவனைக் காத்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறவன் அதை இழந்துபோவான். தன்னுடைய சரீரத்தின் பாவமான காரியங்களை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கிறவன் தன் ஜீவனைக் காத்துக் கொள்வான் (ரோமர் 8:12-13; கலா 5:16-26)

10 அதிகாரம்

(14) சிறிய சேவைகளுக்கும் வெகுமதி அளிக்கப்படும் - (12:36; 16:27 ரோமர் 14:10; 1கொரி 3:11 2கொரி 5:10)

மத் 10:40 உங்களை ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக் கொள்ளுகிறான் என்னை ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக் கொள்ளுகிறான்

மத் 10:41 தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக் கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான் நீதிமான் என்னும் நாமத்தினிமித்தம் நீதிமானை ஏற்றுக் கொள்ளுகிறவன் நீதிமானுக்கேற்ற பலனை அடைவான்

மத் 10:42 சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்

ஏற்றுக்கொள் (receiveth) - δέχομαι - dechomai - 1209

விணைச்சொல் - ஏற்றுக்கொள் ஏந்திக்கொள், வாங்கு, அங்கீகரி **(accept, approve, embrace, give ear to)** (2கொரி 8:17; 2கொரி 11:4)

ஜனங்கள் ஊழியக்காரனை ஏற்றுக் கொள்ளும்போது, அவர் உபதேசம் பண்ணும் சத்தியத்தையும் அங்கீகரிப்பார்கள் இயேசு கிறிஸ்துவைப் பற்றிப் பிரசங்கம் பண்ணும் ஊழியக்காரரை ஜனங்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்றால் அவர்கள் இயேசு கிறிஸ்துவையும் ஏற்றுக் கொள்வார்கள் ஜனங்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள விருப்பமில்லாதவர்கள் என்றால் இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரரையும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்

"தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான் நீதிமான் என்னும் நாமத்தினிமித்தம் நீதிமானை ஏற்றுக்கொள்ளுகிறவன் நீதிமானுக்கேற்ற பலனை அடைவான்" - ஒரு கள்ளத்தீர்க்கதரிசியை நல்ல தீர்க்கதரிசி போன்று ஏற்றுக் கொள்வதினாலோ, துன்மார்க்கனை நீதிமான்போல ஏற்றுக் கொள்வதினாலோ நமக்குப் பிரயோஜனமில்லை. கள்ளத் தீர்க்கதரிசிகளையும் துன்மார்க்கரையும் ஏற்றுக் கொள்கிறவர்கள் அவர்களுடைய பாவங்களில் பங்காளிகளாக இருப்பார்கள் (2 யோவான் 1:9-11) நாம் எல்லா மார்க்கப் போதகர்களையும் ஏற்றுக் கொள்ளக்கூடாது கர்த்தருடைய மெய்யான ஊழியக்காரர்களை மட்டுமே ஏற்றுக் கொள்ள வேண்டும் யாரையாவது ஏற்றுக்கொண்டு, ஆண்டவர் என்னை ஆசீர்வதிக்கவில்லையே என்று புலம்பக்கூடாது நாம் செய்யும் தவறுகளுக்கு ஏற்ப நாம் நியாயம் தீர்க்கப்படுவோம் அவர்களுடைய கனிகளினால் அவர்களை அறிவீர்களே என்று ஆண்டவர் நமக்கு தெளிவாகக் கூறியிருக்கிறார் (மத் 7:15-20) இயேசு கிறிஸ்துவின் பெயரைச் சொல்லி வருபவருக்கு பொருளாதார உதவியும் இதர வசதிகளும் செய்து கொடுப்பதற்கு முன்பாக அந்த ஊழியக்காரரைப் பற்றி நிதானித்து ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

"சிறியர்" - சிறுபிள்ளைகள், புதிய விசுவாசிகள் ஆகியோரைக் குறிக்கும் (மத் 18:1-14; மாற்கு 9:42 லூக்கா 17 யோவான் 13:33; கலா 4:19 1யோவான் 2:1,12-18,28, 1யோவான் 3:7,18, 1யோவான் 4:4 1யோவான் 5:21

"சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான்" இயேசு கிறிஸ்துவின் மெய்யான ஊழியக்காரர்களுக்கு சிறிய உதவிகளை நல்ல மனதோடு செய்யும்போது ஆண்டவர் நிச்சயமாகவே நம்மை ஆசீர்வதிப்பார் (மத் 6:1)

11 அதிகாரம்

25. கலிலேயாவிற்கு நான்காவது பிரயாணம் - (லூக் 8:1; மத் 4:23)

மத் 11:1 இயேசு தம்முடைய பன்னிரண்டு சீஷர்களுக்கும் கட்டளைகொடுத்து முடித்தபின்பு, அவர்களுடைய பட்டணங்களில் உபதேசிக்கவும் பிரசங்கிக்கவும் அவ்விடம் விட்டுப் போனார்.

"இயேசு தம்முடைய பன்னிரண்டு சீஷர்களுக்கும் கட்டளைகொடுத்தார்" - இயேசு கிறிஸ்து தமது சீஷர்களுக்குக் கொடுத்த கட்டளை இக்காலத்தில் உள்ள எல்லா விசுவாசிகளுக்கும் பொருந்தும். (மத் 28:20)

26. யோவான் ஸ்நானன் இயேசுவிடம் கேட்ட கேள்வி - (லூக் 7:19-23)

மத் 11:2 அத்தருணத்தில் காவலிலிருந்த யோவான் கிறிஸ்துவின் கிரியைகளைக் குறித்துக் கேள்விப்பட்டு, தன் சீஷரில் இரண்டுபேரை அழைத்து:

மத் 11:3 வருகிறவர் நீர்தானா, அல்லது வேறொருவர் வரக்காத்திருக்கவேண்டுமா என்று அவரிடத்தில் கேட்கும்படி அனுப்பினான்.

"காவல்" - (மத் 4:12; மத் 11:2; மத் 14:3-12; மாற்கு 1:14; மாற்கு 6:17-27; லூக்கா 3:20; யோவான் 3:24)

"வருகிறவர் நீர்தானா அல்லது வேறொருவர் வரக்காத்திருக்கவேண்டுமா?" யோவான் காவலில் இருந்தபோது இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் கேட்க விரும்பிய கேள்வி. சிறைச் சாலைக்குப் போவதற்கு முன்பாகவும், இப்போதும் இயேசுவைக் குறித்து அவனுடைய மனநிலையில் மாற்றங்கள் ஏற்பட்டதைக் காண்கிறோம். (மத் 3; லூக்கா 3; யோவான் 1:15-36; யோவான் 3:22-36)

"வருகிறவர் நீர்தானா" - பரிசுத்த வேதாகமத்தில் முன்னறிவிக்கப்பட்டிருக்கிறவர் நீர்தானா (ஆதி 3:15; ஆதி 49:10; எண் 24:17-19; உபா 18:15-19; ஏசா 7:14; ஏசா 9:6-7; ஏசா 11:1; ஏசா 61:1)

27. இயேசு வார்த்தைகளால் பதில் கூறாமல் கிரியைகளால் பதில் கூறுகிறார் - (லூக் 7:22)

மத் 11:4 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் கேட்கிறதையும் காண்கிறதையும் யோவானிடத்தில் போய் அறிவியுங்கள்;

மத் 11:5 குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது.

மத் 11:6 என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான் என்றார்.

"நீங்கள் கேட்கிறதையும் காண்கிறதையும் யோவானிடத்தில் போய் அறிவியுங்கள்" - யோவானுடைய கேள்விக்கு இயேசு கிறிஸ்து தமது கிரியைகளின் மூலமாகப் பதில் கூறுகிறார். மேசியாவைக்குறித்து முன்னறிவிக்கப்பட்ட காரியங்களை இயேசு கிறிஸ்து நடப்பித்தார் (ஏசா 35:5-6; ஏசா 61:1). இயேசுவே மேசியா என்பதை அவருடைய கிரியைகள் நிரூபித்தன (யோவான் 5:36; யோவான் 9:3-4; யோவான் 10:25,37-38; யோவான் 14:10; யோவான் 15:24; அப் 10:38). இயேசு கிறிஸ்துவிற்காக ஊழியம் செய்யக் கூடியவர்கள் எல்லோருக்குமே கர்த்தர் இந்த சிலாக்கியங்களை அருளுகிறார் (மத் 10:1-8; மாற்கு 6:7-13; மாற்கு 16:17-20; லூக்கா 9:6; லூக்கா 10:1-20; லூக்கா 24:49; யோவான் 7:37-39; யோவான் 14:12-15; யோவான் 15:16; அப் 1:1-8; அப் 2:43; அப் 3:6; அப் 4:30; அப் 5:12-16; அப் 6:3-10; அப் 8:1-17; அப் 9:17,34; அப் 15:12)

11 அதிகாரம்

"பாக்கியவான்" - மத் 5:3-11 ஆகிய வசனங்களுக்குப் பின்பு "பாக்கியவான்" என்று வரும் முதலாவது வசனம் இந்த வசனம் தவிர மத்தேயு சுவிசேஷத்தில் மேலும் பல வசனங்களில் பாக்கியவானைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. (மத் 13:16 மத் 14:19; மத் 16:17; மத் 21:9; மத் 23:39 மத் 24:46; மத் 25:34; மத் 26:26)

"என்னிடத்தில் இடறலடையா திருக்கிறவன்" - இயேசு கிறிஸ்துவிடத்திலும் அவருடைய உபதேசத்திலும் இடறலடையாமல் இருக்கிறவன் பலர் இயேசு கிறிஸ்துவில் இடறலடைந்தார்கள். (லூக்கா 4:22,28, யோவான் 6:66; யோவான் 7:30-44. யோவான் 8:19-44

28. யோவான் ஸ்நானனைப் பற்றி இயேசு கூறிய சாட்சி - (லூக் 7:24

மத் 11:7 அவர்கள் போனபின்பு, இயேசு யோவானைக்குறித்து ஜனங்களுக்குச் சொன்னது என்னவென்றால்: எதைப் பார்க்க வனாந்தரத்திற்குப் போனீர்கள்? காற்றினால் அசையும் நாணலையோ?

மத் 11:8 அல்லவென்றால், எதைப் பார்க்கப் போனீர்கள்? [illegible] வஸ்திரந்தரித்த மனுஷனையோ? மெல்லிய வஸ்திரந் தரித்திருக்கிறவர்கள் அரச மாளிகைகளில் இருக்கிறார்கள்.

மத் 11:9 அல்லவென்றால், எதைப் [illegible] போனீர்கள்? தீர்க்கதரிசியையோ? ஆம், தீர்க்கதரிசியைப் பார்க்கிலும் மேன்மையுள்ளவனையே என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மத் 11:10 அதெப்படியெனில்: இதோ, நான் என் தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன்; அவன் உமக்கு முன்னே போய், உமது வழியை ஆயத்தம் பண்ணுவான் என்று எழுதிய வாக்கியத்தால் குறிக்கப்பட்டவன் இவன்தான்.

மத் 11:11 ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான்ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை; ஆகிலும், பரலோக ராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறானென்று உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன்.

மத் 11:12 யோவான்ஸ்நானன் காலமுதல் இதுவரைக்கும் பரலோகராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது; பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக் கொள்ளுகிறார்கள்.

மத் 11:13 நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசிகள் யாவரும் யோவான் வரைக்கும் தீர்க்கதரிசனம் உரைத்ததுண்டு.

மத் 11:14 நீங்கள் ஏற்றுக்கொள்ள மனதாயிருந்தால், வருகிறவனாகிய எலியா இவன்தான்.

மத் 11:15 கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்.

"காற்றினால் அசையும் நாணலையோ?" - பாலஸ்தீன தேசத்தில் யோர்தான் நதிக்கரையில் நாணற்புல் அதிகமாகவும் அடர்த்தியாகவும் வளர்ந்திருக்கும். அவை 20 அடி உயரம் வரையிலும் வளர்ந்து பசுமையாக இருக்கும். மற்றப் புற்கள் கருகிப்போயிருந்தாலும் இவை எப்போதும் செழித்து வளரும். பறவைகளும் விலங்குகளும் நாணற்புற்களின் நிழலில் வந்து தங்கும். (யோபு 40:21) இந்த வசனத்தில் "காற்றினால் அசையும் நாணல்" என்பது எபிரெய வழக்குச்சொல். நிலையில்லாமல் நேரத்திற்கு ஒரு பேச்சைப் பேசும் மனுஷனைக் குறிப்பதற்கு எபிரெயர்கள் இந்த வாக்கியத்தைப் பயன்படுத்துவார்கள். அதுவுடன் சொல்வது ஒன்று செய்வது ஒன்றாக முரண்படுவோரைக் குறிப்பதற்கும் இந்த வாக்கியத்தைப் பயன்படுத்துவார்கள். யோவான் ஸ்நானனைப் பொருத்தவரையில், அவன் எதை விசுவாசித்தானோ அதையே கூறினான், அதையே செய்தான். தனது விசுவாசத்தில் உறுதியாக இருந்தான்.

11 அதிகாரம்

"மெல்லிய வஸ்திரம்" - கிழக்கு தேசத்தில் பட்டு நூல்களினால் செல்வந்தர்கள் மெல்லிய வஸ்திரங்களை அணிந்திருப்பார்கள் ஆனால் யோவான் ஸ்நானன் எளிமையான தோற்றமுடையவன் மெல்லிய வஸ்திரத்திற்குப் பதிலாக ஒட்டக மயிரால் ஆன கனமான முரடான வஸ்திரம் தரித்திருந்தான் (மத் 3:4)

"தீர்க்கதரிசியைப் பார்க்கிலும் மேன்மையுள்ளவன் - தீர்க்கதரிசிகள் முன்குறித்த காரியங்களை யோவான் ஸ்நானன் கண்டு கிரியை செய்தான் (யோவான் 1:[illegible]-34; யோவான் 1:[illegible])

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 9

"இதோ, நான் என் தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன் அவன் உமக்கு முன்னே போய், உமது வழியை ஆயத்தம் பண்ணுவான்" - (மத் 11:10, மல 3:1)

"யோவான்ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன்" - (லூக்கா 7:28)

"பரலோக ராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறான்" (மத் 4:17 மத் [illegible])

"யோவான்ஸ்நானன் காலமுதல் இதுவரைக்கும்" இயேசுகிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் பரலோக ராஜ்யத்தைப் பற்றி உபதேசம் பண்ணியதுபோன்று யோவான் ஸ்நானனும் பரலோகத்தைப் பற்றி உபதேசம் பண்ணும் ஊழியத்தைச் செய்தான் (மத் 3:2; மத் 4:17, மத் 10:7, மத் 11:12)

பலவந்தம்பண்ணு (suffereth)

βιάζω biazoo 971

வினைச்சொல் · பலவந்தம்பண்ணு

(to use force, to force one's way into a thing)

யோவான் ஸ்நானன் தீர்க்கதரிசன வாக்கியங்களின் அடிப்படையில் பரலோக ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கம் பண்ணினான் ஆனால் இயேசு கிறிஸ்துவோ பரலோக இராஜ்யத்தைக் குறித்து வெளிப்படையாக பிரசங்கம் பண்ணுகிறார் இயேசுவின் பிரசங்கத்தைக் கேட்கும் ஜனங்கள் பரலோக இராஜ்யத்தைக் குறித்துத் தெளிவடைகிறார்கள் எப்படியாவது அந்த இராஜ்யத்தில் பங்குபெற வேண்டுமென்று வைராக்கியமாக இருக்கிறார்கள் பலவந்தம் பண்ணியாவது பரலோகஇராஜ்யத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது அவர்களுடைய விருப்பம் (மத் 11:12 லூக்கா 16:16) தங்களுடைய பாவங்களை விட்டுவிட்டு சாத்தானுடைய அதிகாரத்திலிருந்து விடுதலையாகி, இந்த உலகக் கவலைகளிலிருந்து பிரிந்து வந்து தேவனுடைய இராஜ்யத்தை எப்படியாவது பெற்றுக் கொள்ள வேண்டுமென்று வைராக்கியமாக இருக்கிறார்கள் இந்தச் சுவிசேஷத்திற்குத் தங்களுடைய குடும்பத்தார் எதிர்ப்பு தெரிவிக்கும்போது தங்களுடைய விசுவாசத்தில் உண்மையான சாட்சிகளாக நிற்கிறார்கள் (மத் 10:34-39)

"யோவான் வரைக்கும்" - யோவான் ஸ்நானனின் ஊழியம் வரைக்கும் என்று பொருள்படும். தீர்க்கதரிசன ஊழியத்தின் முடிவைக் குறிப்பிடாது

"வருகிறவனாகிய எலியா இவன்தான்" - ஆவியிலும் வல்லமையிலும் எலியாவை இயேசு கிறிஸ்து பிரதிபலித்தார் (லூக்கா 1:17) எலியாவின் ஆள்தத்துவம் பண்பை இயேசு பிரதிபலிக்கவில்லை (யோவான் 1:21) அவன் இனிமேல் வரவேண்டும். (மல 4:5,6 சக 4:11-14; வெளி 11:3-11

"கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்" - வேதாகமத்தில் இந்த வாக்கியத்தை இயேசு கிறிஸ்து மட்டுமே கூறியிருக்கிறார் 15 தடவைகள் கூறியிருக்கிறார் 7 தடவைகள் பூமியில் கூறியிருக்கிறார் (மத் 11:15 மத் 13:9,43; மாற்கு 4:9,23, மாற்கு 7:16 லூக்கா 8:8; லூக்கா 14:35) 8 தடவைகள் பரலோகத்தில் கூறுகிறார் (வெளி 2:7,11,17,29; வெளி 3:6,13,22; வெளி 13:9)

11 அதிகாரம்

29. இயேசு அவிசுவாசத்தைக் கடிந்து கூறுகிறார் – (லூக் 7.30)

மத் 11:16 இந்தச் சந்ததியை யாருக்கு ஒப்பிடுவேன்? சந்தைவெளிகளில் உட்கார்ந்து, தங்கள் தோழரைப் பார்த்து,

மத் 11:17 உங்களுக்காகக் குழல் ஊதினோம், நீங்கள் கூத்தாடவில்லை; உங்களுக்காகப் புலம்பினோம், நீங்கள் மாரடிக்கவில்லை என்று குறைசொல்லுகிற பிள்ளைகளுக்கு ஒப்பாயிருக்கிறது.

மத் 11:18 எப்படியெனில், யோவான் போஜனபானம் பண்ணாதவனாய் வந்தான்; அதற்கு அவர்கள்: அவன் பிசாசுபிடித்திருக்கிறவன் என்றார்கள்.

மத் 11:19 மனுஷகுமாரன் போஜனபானம் பண்ணுகிறவராய் வந்தார்; அதற்கு அவர்கள்: இதோ, போஜனப்பிரியனும் மதுபானப்பிரியனுமான மனுஷன், ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன் என்கிறார்கள். ஆனாலும் ஞானமானது அதன் பிள்ளைகளால் நீதியுள்ளதென்று ஒப்புக்கொள்ளப்படும் என்றார்.

"இந்தச் சந்ததியை யாருக்கு ஒப்பிடுவேன்?" - யூதர்கள் முரண்டு பிடிக்கும் பிள்ளைகளைப் போன்றவர்கள். கலியாணங்கள், அடக்க ஆராதனைகள் நடனங்கள் ஆகிய எவற்றிலும் யூதர்கள் பங்குபெறவே மாட்டார்கள். (மத் 11:18) இயேசு கிறிஸ்து கூறிய எல்லா உபதேசங்களையும் அவர்கள் மறுத்தார்கள் எதிர்த்து நின்றார்கள்.

"இந்தச் சந்ததி" - சுவிசேஷங்களில் இந்த வாக்கியம் 16 இடங்களில் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. எல்லா இடங்களிலுமே மனுஷருடைய ஆயுசு நாளை மட்டுமே இது குறிக்கிறது. ஒரு குறிப்பிட்ட இனத்தை இந்த வாக்கியம் குறிப்பிடவில்லை. (மத் 11:16; மத் 12:41-42; மத் 23:36, மத் 24:34; மாற்கு 8:12 மாற்கு 13:30 லூக்கா 7:31; லூக்கா 11:30-32,50-51 லூக்கா 17:25; லூக்கா 21:32) இயேசு கிறிஸ்து குறிப்பிட்டிருக்கும் ஒரு சில சந்ததிகள் "விபச்சார சந்ததியார்" **(evil, adulterous)** (மத் 12:39,45; மத் 16:4, மாற்கு 8:38; லூக்கா 11:29) "விசுவாசமில்லாத மாறுபாடுள்ள சந்ததி" **(faithless and perverse)** (மத் 17:17; மாற்கு 9:19; லூக்கா 9:41) பேதுரு மாறுபாடுள்ள சந்ததியைப் **(untoward)** பற்றிக் கூறுகிறான் (அப் 2:40)

"தோழர்" - நண்பர்கள் (மத் 20:13, மத் 22:12; மத் 26:50)

"யோவான் போஜனபானம் பண்ணாதவனாய் வந்தான்; அதற்கு அவர்கள்: அவன் பிசாசுபிடித்திருக்கிறவன் என்றார்கள்" - யோவான் ஸ்நானன் எல்லா சமுதாயக் காரியங்களிலிருந்தும் விலகியிருந்தான் (லூக்கா 1:80) இயேசு கிறிஸ்துவைப் போல பல சமுதாய நிகழ்ச்சிகளில் யோவான் கலந்து கொண்டதற்கு ஆதாரம் எதுவும் இல்லை (மத் 3:15 மத் 9:10 லூக்கா 7:36; லூக்கா 22:15 யோவான் 2) ஜனங்களிடத்திலிருந்து பிரிந்து வனாந்தரத்தில் வாழ்ந்தான். அவனை யாருமே ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இயேசு கிறிஸ்துவோ "போஜனபானம் பண்ணுகிறவராய் வந்தார்; அதற்கு அவர்கள்: இதோ, போஜனப்பிரியனும் மதுபானப் பிரியனுமான மனுஷன், ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன் என்கிறார்கள்"

"போஜனப்பிரியனும் மதுபானப்பிரியனுமான மனுஷன் ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன்" - இயேசு கிறிஸ்துவைப் பற்றி அவருடைய விரோதிகள் தவறாகக் கூறிய குற்றச்சாட்டு. அவர் போஜனப்பிரியர் மதுபானப் பிரியர் என்பதற்கு வேதத்தில் சான்று எதுவுமில்லை.

11 அதிகாரம்

"ஞானமானது அதன் பிள்ளைகளால் நீதியுள்ளதென்று ஒப்புக்கொள்ளப்படும்" - எது நீதியான காரியம், எது அநீதியான காரியம் என்பது தேவனுடைய பிள்ளைகளுக்குத் தெரியும். ஆனால் இவர்களோ மாயமாலக் காரர்கள். தேவனுடைய பிள்ளைகள் எதைச் சொன்னாலும் இவர்கள் எதிர்க்கிறார்கள். தங்களுடைய பாவமான கிரியைகளை நியாயமானவை என்று நிரூபிக்க முயற்சி பண்ணுகிறார்கள். ஆகையினால் இவர்கள் சத்தியத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. தேவனுடைய பிள்ளைகளோ சத்தியத்தை ஏற்றுக் கொள்கிறார்கள் (மத் 11:18)

30. விசுவாசியாத பட்டணங்கள்மீது வரும் நியாயத்தீர்ப்பை இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (லூக் 10:12)

மத் 11:20 அப்பொழுது, தமது பலத்த செய்கைகளில் அதிகமானவைகளைச் செய்யக் கண்ட பட்டணங்கள் மனந்திரும்பாமற்போனபடியினால் அவைகளை அவர் கடிந்துகொள்ளத் தொடங்கினார்.

மத் 11:21 கோராசினே! உனக்கு ஐயோ, பெத்சாயிதாவே! உனக்கு ஐயோ, உங்களில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் தீருவிலும் சீதோனிலும் செய்யப் பட்டிருந்ததானால், அப்பொழுதே இரட்டுடுத்திச் சாம்பலில் உட்கார்ந்து மனந்திரும்பியிருப்பார்கள்.

மத் 11:22 நியாயத்தீர்ப்புநாளிலே உங்களுக்கு நேரிடுவதைப்பார்க்கிலும் தீருவுக்கும் சீதோனுக்கும் நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மத் 11:23 வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே, நீ பாதாளபரியந்தம் தாழ்த்தப்படுவாய்; உன்னில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் சோதோமிலே செய்யப்பட்டிருந்ததானால், அது இந்நாள் வரைக்கும் நிலைத்திருக்கும்.

மத் 11:24 நியாயத்தீர்ப்புநாளிலே உனக்கு நேரிடுவதைப்பார்க்கிலும், சோதோம் நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

தீர்க்கதரிசன எண் - 11

"அப்பொழுது, தமது பலத்த செய்கைகளில் அதிகமானவைகளைச் செய்யக் கண்ட பட்டணங்கள் மனந்திரும்பாமற்போனபடியினால் அவைகளை அவர் கடிந்துகொள்ளத் தொடங்கினார் .... (மத் 11:20-24) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. இந்தத் தீர்க்கதரிசனம் கடைசி நியாயத்தீர்ப்பின் போது நிறைவேறும். (வெளி 20:11-15)

யாரிடத்தில் அதிகமாகக் கொடுக்கப் படுகிறதோ அவர்களிடத்தில் அதிகமாக எதிர்பார்க்கப்படும். ஒரு மனுஷனுக்கு சத்திய வசனம் அதிகமாகப் பிரசங்கம் பண்ணப்படும் போது அவன் தன் பாவக்கிரியைகளைக் குறித்து அதிகமாகக் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். ஆகையினால் இயேசு கிறிஸ்து தமது பிரசங்கங்களைக் கேட்டு தாம் செய்த அற்புதங்களைக் கண்ட பட்டணத்தார் மனந்திரும்பாமற்போனபடியினால் அவர்களைக் கடிந்து கொள்கிறார்.

"தமது பலத்த செய்கைகளில் அதிகமானவைகள்" இயேசு கிறிஸ்து தமது ஊழியத்தை ஒரு குறிப்பிட்ட பகுதியில் அதிகமாகச் செய்திருக்கிறார்.

"மனந்திரும்பாமற்போனபடியினால்" அற்புதங்களும் நியாயத்தீர்ப்புகளும் கடின இருதயம் கொண்ட பாவிகளை அசைக்கவில்லை. அவர்கள் மனந்திரும்பாமற் போகிறார்கள் (வெளி 9:20-21)

"கோராசின்" இந்தப் பட்டணம் எங்கிருக்கிறது என்று சரியாகத் தெரியவில்லை. இது பெத்சாயிதாவிற்கு அருகில் இருக்க வேண்டும். அல்லது கலிலேயாவின் வடகிழக்கு கடற்கரைப் பகுதியில் இருக்க வேண்டும்.

"பெத்சாயிதா" லூக்கா 9:10

"தீருவும் சீதோனும்" - பெனிக்கேயாவின் மத்தியதரைக் கடற்பகுதியில் அமைந்துள்ள இரண்டு பட்டணங்கள் (1இராஜா 5:1)

11 அதிகாரம்

"அப்பொழுதே இரட்டுடுத்திச் சாம்பலில் உட்கார்ந்து மனந்திரும்பியிருப்பார்கள்" - சுவிசேஷச் செய்தியானது பலவேறு விதமான ஜனங்களுடைய உள்ளத்தில் எவ்வாறு கிரியை செய்கிறது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

"இலகுவாயிருக்கும்" - நியாயத்தீர்ப்பினுடைய தண்டனையின் அளவு (மத் 10:15)

"நியாயத்தீர்ப்புநாள்" - (அப 17:31 வெளி 20:11-15)

"கப்பர்நகூம்" - கலிலேயாவின் வடக்கு ஓரத்திலுள்ள பட்டணம். இயேசு கிறிஸ்துவின் முக்கியமான ஊழியஸ்தலம். (மத் 4:13; மத் 17:24-27; மாற்கு 1:21-45; மாற்கு 2:1-6; மாற்கு 9:33; லூக்கா 4:31 லூக்கா 7:1-10; லூக்கா 10:15 யோவான் 4:46-53; யோவான் 6:17-25,59)

"வானபரியந்தம் உயர்த்தப்படுதல்" - திரளான ஆசீர்வாதங்களையும் ஏராளமான செழுமையையும் குறிக்கும் வாக்கியம்

இந்தப் பட்டணங்கள் எ[illegible] தற்காலத்தில் இல்லை. ரோமப்போராக இந்தப் பட்டணங்கள் எல்லாவற்றையும் அழித்துப்போட்டது

பாதாளம் (hell) - ᾅδης - hadees - 86

ஆணபால் பெயர்சொல் - பாதாளம் இறந்தவர்கள் பாதாளத்தில் தற்காலிகமாகத் தங்கும் இடம் (லூக்கா 16:23)

31. சத்தியத்தின் எளிமைக்காக இயேசு களிகூருகிறார் - லூக் 10:21

மத் 11:25 அந்தச் சமயத்திலே இயேசு சொன்னது: பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தின படியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்.

மத் 11:26 ஆம், பிதாவே! இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது.

மத் 11:27 சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான்; குமாரனும், குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர வேறொருவனும் பிதாவை அறியான்.

"பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே!" - (யோவான் 4:21,24)

"இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து பாலகருக்கு வெளிப்படுத்தினீர்" - கல்விமான்கள் கல்விபெருமையுடையவர்கள் தங்களுடைய அறிவு புத்தியினால் தேவனுடைய சத்தியத்தை ஏற்றுக் கொள்ளாமல் மறுதலிப்பார்கள் ஆகையினால் தேவனுடைய சத்தியம் ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைக்கப்பட்டது (ரோமர் 1:18-32; 2கொரி 4:1-4 1கொரி 1:18-21; 1கொரி 2:1-16) சுவிசேஷச் செய்தியானது அதைக் கேள்விப்பட்டு, அதை விசுவாசித்துக் கீழ்ப்படிவோருக்கு மட்டுமே வெளிப்படுத்தப்படுகிறது. (1கொரி 3:1-3; எபி 5:12-6:1 1பேதுரு 2:1-2) இப்படிச் செய்வது தேவனுடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருக்கிறது. மத் 11:26 ஏசா 29:9 மத் 13:11-16; 1கொரி 1:18-21)

"சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது" - இயேசு கிறிஸ்துவின் தெய்வத்துவத்தையும் திரித்துவத்தில் அவருடைய அங்கத்தையும் இந்த வசனம் உபதேசம் பண்ணுகிறது (யோவான் 5:17-27 வெளி 1:1 மத் 28:18 யோவான் 17:1-5 கொலோ 1:16-18)

"பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான் குமாரனும் குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர வேறொருவனும் பிதாவை அறியான்" - பிதாவைக் குமாரனைத்தவிர வேறு யாரும் முழுமையாக அறியவில்லை. (யோவான் 1:18)

11 அதிகாரம்

32. வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் அழைப்பு

மத் 11:28 வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

மத் 11:29 நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.

மத் 11:30 என் நுகம் மெதுவாயும் என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்.

"வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" - இயேசு கிறிஸ்து எல்லா மனுஷருக்கும் பொதுவாக விடுக்கும் முதலாவது அழைப்பு. அவருடைய கடைசி அழைப்பு "ஆவியும், மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத் தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன்" (வெளி 22:17)

வருத்தப்படு (labour) - κοπιάω - kopiaoo - 2872

வினைச்சொல் - உழை, வருத்தப்பட்டு பாரஞ்சும, பிரயாசப்படு, இளைப்படை, பாடுபடு (to feel fatigue, to work hard, toil. Any weary, hard worker can find rest) (எபே 4:28)

சுமத்து (heavy laden) - φορτίζω - phortizoo - 5412

வினைச்சொல் - சுமத்து (to carry a load; to overburden with ceremony) (மத் 11:28; லூக்கா 11:46)

மோசேயின் பிரமாணம் ஜனங்களுக்கு மிகவும் கடினமானவை. பரிசேயர்கள் அந்தப் பிரமாணங்களின்மீது இன்னும் நூற்றுக் கணக்கான உபபிரமாணங்களைச் சேர்த்து ஜனங்களுக்கு அதை மேலும் கடினமாக்கினார்கள். பிரமாணத்தின் ஒவ்வொரு சிறு பகுதியையும் கடைபிடிக்க வேண்டுமென்று வலியுறுத்தினார்கள்.

"இளைப்பாறுதல்" - ஆத்துமாவில் வருத்தமுடையவர்கள், வியாதியஸ்தர்கள், கடினமான பாரங்களைச் சுமப்பவர்களுக்கு இளைப்பாறுதல் தேவை. இயேசு கிறிஸ்து இவர்களுக்கு இளைப்பாறுதல் தருவதாக வாக்குப்பண்ணுகிறார் (மத் 11:28-29; ஏசா 28:9-11; எபி 3:11-4:18; எபி 4:1-11; வெளி 14:13)

[redacted] ஏற்றுக் கொள்ளவேண்டியவை

1. கிறிஸ்துவின் நுகத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். (மத் 11:29)
2. அனுதினமும் சிலுவையைச் சுமக்க வேண்டும். லூக்கா 9:23
3. உலகக்கவலை இருக்கக்கூடாது (மத் 6:25)
4. என்னத்தை உடுத்துவோம் என்று கவலைப்படக்கூடாது (மத் 6:31)
5. திருவிருந்தில் பங்குபெறவேண்டும் (1கொரி 11:24)
6. சவாபுத வாக்கத்தைத் தரித்துக் கொள்ள வேண்டும் (எபே 6:13)
7. நம்மைப் பற்றி எச்சரிப்புடன் இருக்க வேண்டும்.
   - (1) நாம் தானம் செய்யும் விதம் (மத் 6:1-4)
   - (2) நாம் எதைக்கேட்கிறோம் (மாற்கு 4:24)
   - (3) நாம் எப்படிக்கேட்கிறோம் (லூக்கா 8:18)

மத்தேயு - தொகுப்புரை

11 அதிகாரம்

(4) நாம் எதன்மீது ஆசைப்படுகிறோம் (லூக்கா 12:15)

(5) நாம் எப்படி மன்னிக்கிறோம் (லூக்கா 17:3-4)

(6) நாம் எவ்வளவு புசிக்கிறோம் (லூக்கா 21:34-36)

(7) நாம் சபையை எவ்வளவு பராமரிக்கிறோம் (அப். 20:28; கொலோ 4:17)

(8) நாம் கிறிஸ்துவில் எவ்வளவு கட்டப்பட்டிருக்கிறோம் (1கொரி 3:10-15; 2கொரி 5:10; ரோமர் 14:10)

(9) நமது சுதந்தரத்தை எவ்வாறு பயன்படுத்துகிறோம் (2கொரி 8:9-13; ரோமர் 14:1-15:3)

(10) விழாதபடி எச்சரிக்கையாயிருக்க வேண்டும் (1கொரி 10:12-13)

(11) ஒருவரையொருவர் அழித்துவிடாதபடி எச்சரிக்கையாயிருக்க வேண்டும் (கலா 5:15; எபே 4:31-32)

(12) பின்வாங்கிப்போகாதவாறு எச்சரிக்கையாயிருக்க வேண்டும் (எபி 3:12)

(13) நம்முடைய தவறுகளுக்காக வரும் பாடுகளை எவ்வாறு எடுத்துக் கொள்கிறோம் (1பேதுரு 2:20-21)

(14) ஒளியில் எவ்வாறு நடக்கிறோம் (2பேதுரு 1:19; 1யோவான் 1:7)

"என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்" - மத் 11:28-30 ஆகிய வசனங்களில் இயேசு கிறிஸ்து மூன்று கட்டளைகளைக் கூறியிருக்கிறார். அவையாவன:

1. என்னிடத்தில் வாருங்கள் (மத் 11:28)
2. என் நுகத்தை ஏற்றுக் கொள்ளுங்கள் (மத் 11:29)
3. என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள் (மத் 11:29)

"நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்" - மத் 11:28-30 ஆகிய வசனங்களில் இயேசு கிறிஸ்துவைப் பற்றி நான்கு காரியங்கள் கூறப்பட்டிருக்கிறது. அவையாவன:

1. நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் (மத் 11:28)
2. நான் சாந்தமும் மனத் தாழ்மையுமாய் இருக்கிறேன் (மத் 11:29)
3. என் நுகம் மெதுவாயிருக்கிறது (மத் 11:30)
4. என் சுமை இலகுவாயிருக்கிறது (மத் 11:30)

விசுவாசிகள் பெற்றுக் கொள்ளும் காரியங்கள்

1. கிறிஸ்துவோடு ஐக்கியமும் நித்திய ஜீவனும் (மத் 11:28; யோவான் 17:2-3)
2. வருத்தத்திலிருந்து விடுதலை (மத் 11:28)
3. அதிகமான பாரங்களிலிருந்து விடுதலை (மத் 11:28)
4. ஆத்துமாவிற்கு இளைப்பாறுதல் (மத் 11:28-29; எபி 4)
5. இயேசு கிறிஸ்துவிடமிருந்து கற்றுக் கொள்ளும் சத்தியம், ஞானம், அறிவு (மத் 11:29; யோவான் 14:6; 1கொரி 1:30)
6. மெதுவான நுகம் அல்லது பொறுப்பு (மத் 11:29-30; அப் 15:10; கலா 5:1)
7. இலகுவான சுமை (மத் 11:30; சங் 55:22)

12 அதிகாரம்

33. இயேசு ஓய்வுநாட்களுக்கும் ஆண்டவராக இருக்கிறார் - (மத் 2:23; லூக் 6:1-5)

மத் 12:1 அக்காலத்திலே, இயேசு ஓய்வுநாளில் பயிர்வழியே போனார்; அவருடைய சீஷர்கள் பசியாயிருந்து கதிர்களைக் கொய்து தின்னத் தொடங்கினார்கள்.

மத் 12:2 பரிசேயர் அதைக்கண்டு, அவரை நோக்கி: இதோ, ஓய்வுநாளில் செய்யத்தகாததை உம்முடைய சீஷர்கள் செய்கிறார்களே என்றார்கள்.

மத் 12:3 அதற்கு அவர்: தாவீதும் அவனோடிருந்தவர்களும் பசியாயிருந்த போது செய்ததை நீங்கள் வாசிக்கவில்லையா?

மத் 12:4 அவன் தேவனுடைய வீட்டில் பிரவேசித்து, ஆசாரியர் தவிர வேறொருவரும் புசிக்கத்தகாத தேவசமுகத்து அப்பங்களைத் தானும் தன்னோடிருந்தவர்களும் புசித்தார்களே.

மத் 12:5 அன்றியும், ஓய்வுநாட்களில் ஆசாரியர்கள் தேவாலயத்தில் ஓய்ந்திராமல், ஓய்வுநாளை வேலைநாளாக்கினாலும், குற்றமில்லாதிருக்கிறார்கள் என்று நீங்கள் வேதத்தில் வாசிக்கவில்லையா?

மத் 12:6 தேவாலயத்திலும் பெரியவர் இங்கே இருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மத் 12:7 பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்று அறிந்தீர்களானால், குற்றமில்லாதவர்களை நீங்கள் குற்றப்படுத்தமாட்டீர்கள்.

மத் 12:8 மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார் என்றார்.

"அக்காலத்திலே இயேசு ஓய்வுநாளில் பயிர்வழியே போனார்; அவருடைய சீஷர்கள் பசியாயிருந்து, கதிர்களைக் கொய்து தின்னத் தொடங்கினார்கள்" - இயேசு கிறிஸ்து ஜெபாலயத்திற்குப் போய்க்கொண்டிருந்தார் (மத் 12:9). தோட்டத்தின் வழியாகப் போவதற்கு அனுமதியுள்ள பாதைகள் அக்காலத்தில் இருந்தன. அத்துடன் அவர்களுக்குப் பசி இருந்தால், தோட்டத்துப் பயிர்களைச் சாப்பிடும் அனுமதியும் அவர்களுக்கு உண்டு (உபா 23:24,25).

"ஓய்வுநாள்" - (அப 15:24).

"கதிர்" - கோதுமைக் கதிர் (யோவான் 12:24; சங் 65:13).

"பரிசேயர் அதைக்கண்டார்கள்" - இயேசு கிறிஸ்துவிடம் ஏதாவது தவறு கண்டுபிடிக்க வேண்டும் என்பதுதான் பரிசேயருடைய எண்ணம். ஆகையினால் அவர் போகும் இடங்களிலெல்லாம் அவரையும் அவருடைய சீஷர்களையும் கூர்ந்து கவனித்து வந்தார்கள். அவரைக் குற்றப்படுத்துவதற்கு ஏதாவது காரணம் கிடைக்குமா என்று அவருடைய பிரசங்கத்தையும் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

"ஓய்வுநாளில் செய்யத்தகாததை உம்முடைய சீஷர்கள் செய்கிறார்களே" - யூதருக்கு ஓய்வுநாள் பிரமாணம் மிகவும் கடுமையானது. இந்தப் பிரமாணத்தின் பிரகாரம் ஜனங்களுக்குப் ஏராளமான நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. ஓய்வுநாள் பிரமாணத்தில் 39 உட்பிரிவுகள் உள்ளன. ஒருவன் ஓய்வுநாளுக்கு ஊழியக்காரன் ஆகிவிட்டால் அவனுடைய ஜீவியம் ஓய்வுநாளுக்கு அடிமையாகிவிடும். இயேசு கிறிஸ்து ஓய்வுநாளை விட மனுஷருடைய தேவைகளைச் சந்திப்பது மிகவும் முக்கியமானது என்று வலியுறுத்தினார். பரிசேயர் இதைத் தேவதூஷணம் என்று கூறினார்கள் (மத் 23:23).

"தேவனுடைய வீடு" (யாத் 25:30; லேவி 24:5; மாற்கு 2:26).

"ஆசாரியர்" - மற்ற நாட்களை விட ஓய்வுநாட்களில் யூதர்கள் அதிகமான பலிகளைச் செலுத்தினார்கள் (எண் 28:9-10). யூதர்களின் விருத்தசேதனமும் மற்ற முக்கியமான சடங்குகளும் ஓய்வுநாளிலேயே நடைபெற்றன (யோவான் 7:22-23; லூக்கா 13:15).

12 அதிகாரம்

"ஓய்வுநாளை வேலை நாளாக்கினாலும் குற்றமில்லாதிருக்கிறார்கள்" - ஓய்வுநாளை மற்ற நாளைப்போல ஒரு சாதாரணமான நாளாகவே கருதவேண்டும் (அப 24:6)

"தேவாலயத்திலும் பெரியவர்" - மத் 2:41-42 ஆவது வசனங்களில இயேசு கிறிஸ்து தம்மைப் பற்றிக் கூறுவதுபோலவே இங்கும் தம்மைப் பற்றிக் கூறுகிறார்

அறிந்திரு (known) - γινώσκω - ginooskoo - 1097

வினைச்சொல் - அறிந்திரு உணர்ந்திரு, தெரிந்துகொள் (to know by experience or effort)

"பலியையல்ல இரக்கத்தையே விரும்புகிறேன்" - மத் 9:13

"மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார்" - ஆண்டவராக இருக்கிற இயேசு கிறிஸ்துவிற்கு எந்தப் பிரமாணத்தையும் அகற்றவோ, அல்லது சோதிக்கவோ அதிகாரம் உண்டு

34. ஓய்வுநாளில் இயேசு சூம்பின கையையுடைய மனுஷனை சொஸ்தமாக்குகிறார் - (மாற்கு 3:1 லூக் 6:6)

மத் 12:9 அவர் அவ்விடம் விட்டுப்போய், அவர்களுடைய ஜெப ஆலயத்தில் பிரவேசித்தார்

மத் 12:10 அங்கே சூம்பின கையையுடைய மனுஷன் ஒருவன் இருந்தான் அப்பொழுது, அவர்மேல் குற்றஞ்சாட்டும் படிக்கு, ஓய்வுநாளில் சொஸ்தமாக்குகிறது நியாயமா என்று கேட்டார்கள்

மத் 12:11 அதற்கு அவர், உங்களில் எந்த மனுஷனுக்காகிலும் ஒரு ஆடு இருந்து, அது ஓய்வுநாளில் குழியிலே விழுந்தால், அதைப் பிடித்துத் தூக்கிவிடமாட்டானோ?

மத் 12:12 ஆட்டைப்பார்க்கிலும் மனுஷனானவன் எவ்வளவோ விசேஷித்திருக்கிறான் ஆதலால், ஓய்வுநாளிலே நன்மைசெய்வது நியாயந்தான் என்று சொன்னார்

மத் 12:13 பின்பு அந்த மனுஷனை நோக்கி: உன் கையை நீட்டு என்றார் அவன் நீட்டினான் அது மறுகையைப்போல சொஸ்தமாயிற்று

"ஓய்வுநாளில் சொஸ்தமாக்குகிறது நியாயமா" - ஓய்வுநாளின் நோக்கத்தை யூதர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவும் இல்லை. அதைப் புரிந்து கொள்ள அவர்களுக்கு விருப்பமும் இல்லை (மத் 12:12; மாற்கு 2:27; மாற்கு 3:4)

35. இயேசுவைக் கொலைசெய்யும்படி நடைபெற்ற முதலாவது ஆலோசனை - (மத் 26:3)

மத் 12:14 அப்பொழுது பரிசேயர் வெளியே போய், அவரைக் கொலைசெய்யும்படி அவருக்கு விரோதமாய் ஆலோசனை பண்ணினார்கள்

"பரிசேயர் வெளியே போய், அவரைக் கொலைசெய்யும்படி அவருக்கு விரோதமாய் ஆலோசனைபண்ணினார்கள்" பரிசேயர் ஏரோதியரோடு சேர்ந்து கொண்டு இயேசுவை எவ்வாறு கொலை பண்ணலாம் என்று ஆலோசனை பண்ணினார்கள் (மாற்கு 3:6; மத் 26:3)

36. திரளான ஜனங்களைச் சொஸ்தமாக்குகிறார் - (மாற்கு 3:7 லூக் 6:17 13:58)

மத் 12:15 இயேசு அதை அறிந்து அவ்விடம் விட்டு விலகிப்போனார் திரளான ஜனங்கள் அவருக்குப் பின்சென்றார்கள் அவர்களெல்லாரையும் அவர் சொஸ்தமாக்கி,

மத் 12:16 தம்மைப் பிரசித்தம்பண்ணாதபடி அவர்களுக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார்

12 அதிகாரம்

மத் 12:17 ஏசாயா தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது. அவன் உரைத்ததாவது.

மத் 12:18 இதோ, நான் தெரிந்துகொண்ட என்னுடைய தாசன், என் ஆத்துமாவுக்குப் பிரியமாயிருக்கிற என்னுடைய நேசன் என் ஆவியை அவர்மேல் அமரப் பண்ணுவேன் அவர் புறஜாதியாருக்கு நியாயத்தை அறிவிப்பார்

மத் 12:19 வாக்குவாதம் செய்யவுமாட்டார் கூக்குரலி டவுமாட்டார்; அவருடைய சத்தத்தை ஒருவனும் வீதிகளில் கேட்பதுமில்லை

மத் 12:20 அவர் நியாயத்திற்கு ஜெயங் கிடைக்கப் பண்ணுகிறவரைக்கும் நெரிந்த நாணலை முறிக்காமலும் மங்கிஎரிகிற திரியை அணைக்காமலும் இருப்பார்

மத் 12:21 அவருடைய நாமத்தின்மேல் புறஜாதியார் நம்பிக்கையாயிருப்பார்கள் என்பதே.

"அவ்விடம் விட்டு விலகிப்போனார்" இயேசு கோழைத்தனத்தினால் விலகிப்போக வில்லை ஜனங்களை இரட்சிக்க வேண்டுமென்னும் தமது நோக்கம் நிறைவேற வேண்டுமென்பதற்காகவே அவ்விடம் விட்டு விலகிப்போனார்

"அவர்களெல்லாரையும் அவர் சொஸ்தமாக்கினார்" - (மத் 13:58)

"தம்மைப் பிரசித்தம்பண்ணாதபடி அவர்களுக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார்" (மத் 8:4)

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 10

"இதோ, நான் தெரிந்துகொண்ட என்னுடைய தாசன், என் ஆத்துமாவுக்குப் பிரியமாயிருக்கிற என்னுடைய நேசன்" - (மத் 12:17-21, ஏசா 42:1-4)

மேசியாவைப் பற்றி நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள்

1. தேவனுடைய தாசன் (மத் 12:18
2. தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர் (மத் 12:18)
3. தேவன் இவர்மீது பிரியமாக இருந்தார் (மத் 12:18)
4. தேவனால் அபிஷேகிக்கப்பட்டவர் (மத் 12:18)
5. நீதியான நியாயாதிபதி (மத் 12:18
6. வாக்குவாதம் செய்யமாட்டார் கூக்குரலிட மாட்டார் (மத் 12:19
7. வெற்றியுள்ள ஊழியம் (மத் 12:20-21

"வாக்குவாதம் செய்யவுமாட்டார், கூக்குரலிடவுமாட்டார் அவருடைய சத்தத்தை ஒருவனும் வீதிகளில் கேட்பதுமில்லை" - தமக்கு ஆதரவாக இயேசு கிறிஸ்து கூட்டத்தைக் கூட்டி தம்மைப் பாதுகாத்துத் தமது விரோதிகளை எதிர்க்க மாட்டார் கலகத்தைத் தூண்டிவிட மாட்டார்

"நெரிந்த நாணலை முறிக்காமலும் ..... இருப்பார்" - இந்த வாக்கியம் நாணல் புல்லினால் செய்த கிராமத்து இசைக்கருவியைக் குறிக்கும் இது எளிதில் முறிந்துபோகும். மேய்ப்பர்கள் இதுபோன்ற இசைக்கருவிகளை அழித்துப் போடாமல் பழுதுபார்த்துப் பயன்படுத்துவார்கள்

"அவர் நியாயத்திற்கு ஜெயங்கிடைக்கப் பண்ணுகிறவரைக்கும் மங்கிஎரிகிற திரியை அணைக்காமல் இருப்பார்" எண்ணெய் ஊற்றப்பட்ட விளக்கில் திரி எரிந்து கொண்டிருக்கும். எண்ணெய் தீர்ந்தபிறகு திரி எரியாமல் புகைய ஆரம்பிக்கும். மறுபடியும் எண்ணெய் ஊற்றினால் மட்டுமே அந்தத் திரி எரியும். தேவைப்பட்டால் மட்டுமே இயேசு கிறிஸ்து தமது விரோதிகளை அழிப்பார் தமது ஊழியத்தை நிறைவேற்றும் [illegible]யிலும் அவர் தமது முயற்சியைக் கைவிடுவதுமில்லை தோல்வியுறுவதுமில்லை.

12 அதிகாரம்

37. குருடும் ஊமையுமான ஒருவனைச் சொஸ்தமாக்குகிறார்

மத் 12:22 அப்பொழுது, பிசாசு பிடித்த குருடும் ஊமையுமான ஒருவன் அவரிடத்தில் கொண்டுவரப்பட்டான். குருடும் ஊமையுமானவன் பேசவுங் காணவுந்தக்கதாக அவனைச் சொஸ்தமாக்கினார்

மத் 12:23 ஜனங்களெல்லாரும் ஆச்சரியப் பட்டு, தாவீதின் குமாரன் இவர்தானோ? என்றார்கள்

"தாவீதின் குமாரன் இவர்தானோ?" - மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் இயேசு கிறிஸ்து 9 இடங்களில் தாவீதின் குமாரன் என்று அழைக்கப்படுகிறார் (மத் 1:1)

38. பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான இரண்டாவது தூஷணம் - (மத் 9:32) பிரிந்த ராஜ்யம் (மாற்கு 3:22; லூக் 11:15)

மத் 12:24 பரிசேயர் அதைக்கேட்டு, இவன் பிசாசுகளின் தலைவனாகிய பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்துகிறானேயல்லாமல் மற்றப்படியல்ல என்றார்கள்

மத் 12:25 இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து, அவர்களை நோக்கி, தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப்போம் தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்தப் பட்டணமும் எந்த வீடும் நிலைநிற்க மாட்டாது.

மத் 12:26 சாத்தானைச் சாத்தான் துரத்தினால் தனக்கு விரோதமாகத் தானே [illegible] செய்கிறதாயிருக்குமே, அப்படிச் செய்தால் அவன் ராஜ்யம் எப்படி நிலைநிற்கும்?

மத் 12:27 நான் பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்தினால், உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்? ஆகையால், அவர்களே உங்களை நியாயந் தீர்க்கிறவர்களாயிருப்பார்கள்

மத் 12:28 நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே.

மத் 12:29 அன்றியும், பலவானை முந்திக் கட்டினாலொழிய பலவானுடைய வீட்டுக்குள் ஒருவன் புகுந்து அவன் உடைமைகளை எப்படிக் கொள்ளையிடக் கூடும்? கட்டினானேயாகில், அவன் வீட்டைக் கொள்ளையிடலாம்.

மத் 12:30 என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான் என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்

"பெயெல்செபூல்" - (மத் 10:25)

"இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்தார்" - அறிவை உணர்த்தும் வரத்தையும், ஆவிகளைப் பகுத்தறியும் வரத்தையும் இயேசு கிறிஸ்து பயன்படுத்தினார் (1கொரி 12:10; அப் 5:1-11; யோவான் 2:25, மத் 9:4

"சாத்தானைச் சாத்தான் துரத்தினால் தனக்கு விரோதமாகத் தானே பிரிவினை செய்கிறதாயிருக்குமே" - சாத்தான் பிசாசுகளின் மூலமாக மனுஷருக்கு வியாதியைத் தருகிறான் (அப் 10:38, லூக்கா 13:11-16) ஆகையினால் மனுஷரில் உள்ள வியாதிகளை அவன் சொஸ்தமாக்க மாட்டான் அவ்வாறு சொஸ்தமாக்கினால் அவன் தன்னைத்தானே துரத்துவதுபோல இருக்கும்.

புறஜாதி மார்க்கங்களிலுள்ள வாக்குத் தத்தங்களைச் சிலர் நம்பி, அந்நிய தெய்வங்கள் தங்களுடைய வியாதிகளைச் சொஸ்தமாக்கும் என்று நினைக்கிறார்கள் சாத்தான் இப்படிப்பட்ட அந்நிய மார்க்கங்களோடு பங்காளியாக இருக்கிறான் மனுஷரை வஞ்சிப்பதற்காக சாத்தானே அந்நிய மார்க்கங்களை ஸ்தாபித்தவன் இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைக்காமலும் கல்வாரி சிலுவையில் இயேசு கிறிஸ்துவின் பாவநிவாரண பலியை அறிவிக்காமலும் சாத்தான் வியாதியைச் சொஸ்தமாக்குகிறான் இவ்வாறு சொஸ்தமானவர்கள் சாத்தானின் உபதேசம்

12 அதிகாரம்

சரியானது என்று நினைத்து அந்நிய மார்க்கங்களைப் பின்பற்றுகிறார்கள் அவர்கள் இயேசுவை மறுதலிக்கிறார்கள் பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட வேண்டிய அவசியமில்லையென்று தங்களுடைய ஆத்தும இரட்சிப்பை அசட்டைபண்ணுகிறார்கள்

இப்பேர்ப்பட்டவர்களுடைய ஆத்துமாவைச் சாத்தான் வஞ்சிக்கிறான் அவர்களுடைய ஆத்துமா சீரழிந்துபோகும். இவர்களுடைய சரீரங்களுக்குள் பிசாசு தங்களுக்கு இஷ்டமானபடி புகுந்துகொள்ளும் வெளியேறும். (மத் 12:43-45) கடைசி நாட்களில் சாத்தான் பிசாசுகளுக்கு அதிகாரம் கொடுத்து மனுஷரை வஞ்சிப்பான் (மத் 24:24; 2தெச 2:8-12 வெளி 13:2; வெளி 16:13-16. வெளி 19:20)

"உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்?" - பரிசேயர்கள் பிசாசுகளைத் துரத்தினார்கள் யோசபஸ் என்னும் திருச்சபை வரலாறு ஆசிரியர் பரிசேயரைப் பற்றி இவ்வாறு எழுதி வைத்திருக்கிறார் (அப் 19:13) தம்மைப் பற்றிக் குற்றஞ்சுமத்துபவர்களை அமைதிப்படுத்துவதற்காக இயேசு கிறிஸ்து இந்த வாக்கியத்தைப் பயன்படுத்தினார் பரிசேயர்களும் அவர்களுடைய சீஷர்களும் பிசாசுகளைத் துரத்தினால் அவர்களும் பிசாசுகளின் பிள்ளைகளாகத்தானே இருப்பார்கள் (மத் 12:27-28)

இயேசு கிறிஸ்து தேவனுடைய ஆவியினாலேயே பிசாசுகளைத் துரத்தினார் என்பதற்கு ஆதாரங்கள்

1 சாத்தானுடைய இராஜ்யம் பிரிந்திருக்க வில்லை இயேசு கிறிஸ்து அவனுடைய இராஜ்யத்தை அழிக்கிறார் என்றால் அது சாத்தானுடைய வல்லமையினால் நடைபெறும் காரியமல்ல தேவனுடைய ஆவியினாலே நடைபெறும் காரியம். (மத் 12:25-26)

2 இயேசு சாத்தானைப் பிசாசுகளின் ஆவியினால் துரத்துவதாகப் பரிசேயர்கள் குற்றஞ்சுமத்துகிறார்கள் அதே பரிசேயர்களும் பிசாசுகளைத் துரத்துகிறார்கள் அவர்களுடைய குற்றச்சாட்டுகளின்படி பரிசேயர்களும் பிசாசுகளின் ஆவியினாலேயே சாத்தானைத் துரத்துகிறார்கள் (மத் 12:27)

3 தன்னைவிடப் பலவீனமானவன் தன்னை மேற்கொள்வதற்கு சாத்தான் அனுமதிக்க மாட்டான் இயேசு கிறிஸ்துவிற்கு முன்பாக சாத்தானுக்கு ஒரு அதிகாரமும் இல்லை சாத்தான் பலவீனமானவனாகவும் உதவியற்றவனாகவும் இருக்கிறான் இயேசு கிறிஸ்து தேவனிடமிருந்து வந்திருக்கிறவராகையினால், அவர் சாத்தானைவிட வல்லமையானவர் (மத் 12:28-29)

"என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்" - இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிறேன் என்று சொல்கிறவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற பரீட்சை (மத் 6:24, 7) தேவனும் சாத்தானும் ஒத்துப்போகமுடியாது ஒரு மனுஷனால் தேவனுக்கும் சாத்தானுக்கும் ஊழியம் செய்ய முடியாது (மத் 6:24; ரோமர் 6:16-23)

"என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்" ஆடுகளுக்கு உதவி புரிய விரும்புகிறவன் ஆடுகளைக் கூட்டிச்சேர்ப்பான ஆடுகளைச் சிதறடிக்கிறவன் திருடன் அவன் தன்னுடைய சொந்த ஆதாயத்திற்காக ஆடுகளைத் திருடவும், அழிக்கவும் வந்திருக்கிறான் (மத் 7:15-20, அப் 20:28-30; ரோமர் 16:17, கலா 1:6-9, பிலி 1:14-18 பிலி 3:17-19 2பேதுரு 2

39. மனுஷருக்கு மன்னிக்கப்படாத பாவம் - (மாற்கு 3:28; லூக் 12:10, எபி 6:4; 10:26

மத் 12:31 ஆதலால், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் எந்தப் பாவமும் எந்தத் தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப் படும், ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப் படுவதில்லை

12 அதிகாரம்

மத் 12:32 எவனாகிலும் மனுஷ குமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப படும்; எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை

"ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப படுவதில்லை - மனுஷருடைய எல்லாப பாவங்களையும், எல்லாத் தூஷணங்களையும் இயேசு கிறிஸ்து மன்னிப்பார் ஆனால பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாக யாராவது கிரியை செய்தாலும் தூஷண வார்த்தை பேசினாலும் அவர்களுக்கு மன்னிப்பில்லை (மத் 1:21; மத் 12:31 1யோவான் 1:7-9; 1யோவான் 3:5)

பாவம் (sin) - ʽαμαρτία - hamartia - 266

பெண்பால் வினைப்பெயர் - பாவம் தோல்வி

அ பாவச் செயல (1கொரி. 15:17)

(ஆ) பாவத்தில் மூழ்கியிருத்தல எப்பொழுதும் பாவத்தில இருத்தல (யோவா 1:21 (ரோம 3:1 யோவான 1:29

தூஷணம் (blasphemy) βλασφημία - blaspheemia - 988

பெண்பால் பெயர்சொல் - தூஷணம்

தூஷணம் (blasphemy) - βλάσφημος - blaspheemos - 989

பெயரடை - தூஷணம், தூஷிக்கிற

1 தூஷணமான வார்த்தைகளைப் பேசுதல் (Speak evil of) (யூதா 1:8; எபே 4:31

2 தர்க்கம் பண்ணுதல் (Rail) (1தீமோ 6:4; 2பேதுரு 2:11)

3 தூஷித்தல் (Revile) (மத் 27:39

4 தூஷித்தல் (Defame) (1கொரி 4:13)

5 புறங்கூறுதல் (Slander) (ரோமர் 3:8)

6. அவமதித்தல் (Insult by blasphemy) (மத் 12:31)

"எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப படுவதில்லை" - தேவதூஷணம் என்பதற்குத் தெளிவான விளக்கம் இங்கு கொடுக்கப பட்டிருக்கிறது. பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளைச் சாத்தானுடைய கிரியைகளோடு ஒப்பிட்டுப் பேசுவதே தேவதூஷணம் பரிசுத்த ஆவியானவருடைய கிரியைகளை அவமதித்துப பேசுவதும் தேவதூஷணமே ஆகையினால யாராவது தெரிந்தும் வேண்டுமென்றும் பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாகப பேசுவது தேவதூஷணமாக இருக்கும் அதற்கு இம்மையிலும் மன்னிப்பில்லை மறுமையிலும் மன்னிப்பில்லை. (எபி 6:4-9; எபி 10:26-31 1தீமோ 1:13)

இம்மை (world) - αἰών - aioon - 165

ஆண்பால பெயர்சொல இம்மை காலம், உலகம், பிரபஞ்சம், அநாதி, சதா காலங்கள

(அ) என்றென்றைக்கும் அதாவது கடந்த காலத்தில - யோவான 6:5 8 0:32

(ஆ) ஒரு குறிப்பிட்ட காலம் அதாவது இம்மை அல்லது மறுமை - மத். 12:32, மாற். 10:30

இயேசு கிறிஸ்துவின் முதல்வருகைக்கும், இரண்டாம் வருகைக்கும் இடைப்பட்ட காலம். (மத் 24:14,29-31; வெளி 19:11-21 ஆயிர வருஷ அரசாட்சியின் காலம். (வெளி 19:11-20:15; சக 14, தானி 2:44-45, தானி 7:13-27; எபே 1:10)

12 அதிகாரம்

40. இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும் - யாக் 3 1பேதுரு 3:10

மத் 12:33 மரம் நல்லதென்றால் அதின் கனியும் நல்லதென்று சொல்லுங்கள்; மரம் கெட்டதென்றால் அதின் கனியும் கெட்டதென்று சொல்லுங்கள்; மரமானது அதின் கனியினால் அறியப்படும்.

மத் 12:34 விரியன்பாம்புக் குட்டிகளே, நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க, நலமானவைகளை எப்படிப் பேசுவீர்கள்? இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்.

மத் 12:35 நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான்; பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக் காட்டுகிறான்.

மத் 12:36 மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மத் 12:37 ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய், அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார்.

"மரமானது அதின் கனியினால் அறியப்படும்" - நல்லமரம் நல்ல கனியைக் கொடுக்கும்; கெட்ட மரம் கெட்ட கனியைக் கொடுக்கும். நல்ல தீர்க்கதரிசி நல்ல உபதேசங்களைக் கூறுவார்; கள்ளத்தீர்க்கதரிசிகள் கள்ள உபதேசங்களைக் கூறுவார். அவர்களுடைய கனிகளினால் நாம் அவர்களை அறிந்து கொள்ளலாம். (மத் 7:16)

"விரியன்பாம்புக் குட்டிகளே" விரியன்பாம்பு விஷமுள்ளது. பொல்லாதவர்கள் விஷமுள்ள பாம்புகளையும் அவற்றின் குட்டிகளையும் போன்றவர்கள். பாம்புக் குட்டிகளும் விஷமுள்ளவை. (மத் 3:7; மத் 23:33; லூக்கா 3:7 யாக் 3:8 18)

"இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்" - இருதயம் தீமையினால் நிறைந்திருக்கும்போது துன்மார்க்கனுடைய வாயின் வழியாகத் தீமையான காரியங்களும் பொல்லாங்கான காரியங்களும் நிரம்பவழியும். நல்ல மனுஷனுடைய இருதயத்திலிருந்து நல்லவைகள் வெளிவரும். பொல்லாத மனுஷனுடைய இருதயத்திலிருந்து பொல்லாதவைகள் வெளிவரும்.

தீர்க்கதரிசன எண் - 12

"மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும் .... (மத் 12:36-37) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. (வெளி 20:11-15)

வீணான (idle) - ἀργός - argos - 692

பொரட - வீணான, சும்மா, சோம்பேறி, சோம்பலுள்ள (unprofitable, useless) (மத் 12:36; மத் 20:3,6; 1தீமோ 5:13) மெதுவாக (slow) (தீத்து 1:12) வெறுமையாக (barren) (2பேதுரு 1:8)

"நியாயத்தீர்ப்பு நாள்" (அப் 17:31; வெளி 20:11-15)

வார்த்தைகள் (words) - λόγος - logos - 3056

ஆண்பால் பெயர்ச்சொல் - சொல், சொல்லுதல், வார்த்தை, கணக்கு, காரியம், புத்தி, ஞானம், வசனம், சங்கதி, பேச்சு, உபதேசம், கீர்த்தி, யோசனை, வாக்கியம் (அப் 13) வார்த்தைகள் மிகவும் முக்கியமானவைகள். அவை நமக்கு வெகுமதியைக் கொடுக்கும். அல்லது நம்மைக் குற்றவாளியாகத் தீர்க்கும் (யாக் 3:2)

12 அதிகாரம்

41. யோனாவின் அடையாளம் - (லூக் 11:29)

மத் 12:38 அப்பொழுது வேதபாரகரிலும் பரிசேயரிலும் சிலர் அவரை நோக்கி: போதகரே, உம்மால் ஒரு அடையாளத்தைக் காண விரும்புகிறோம் என்றார்கள்

மத் 12:39 அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: இந்தப் பொல்லாத விபசாரச் சந்ததியார் அடையாளத்தைத் தேடுகிறார்கள் ஆனாலும் யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை

மத் 12:40 யோனா இரவும் பகலும் மூன்றுநாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்ததுபோல மனுஷகுமாரனும் இரவும் பகலும் மூன்றுநாள் பூமியின் இருதயத்தில் இருப்பார்

"உம்மால் ஒரு அடையாளத்தைக் காண விரும்புகிறோம்" - சுவிசேஷங்களில் 6 இடங்களில் இயேசு கிறிஸ்துவிடம் ஜனங்கள் அடையாளங்களைக் கேட்பதாக நாம் வாசிக்கிறோம். (மத் 12:38; மத் 16:1 மத் 24:3, லூக்கா 11:16; யோவான் 2:18, யோவான் 6:30

தீர்க்கதரிசன எண் - 13

"இந்தப் பொல்லாத விபசாரச் சந்ததியார் அடையாளத்தைத் தேடுகிறார்கள் ____" (மத் 12:39-42) - மத் 12:39-40 ஆகிய வசனங்களில் உள்ள தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. மத் 12:41-42 ஆகியவை நியாயத்தீர்ப்பு நாளில் நிறைவேறும். (வெளி 20:11-15, அப 17:31)

"பொல்லாத விபசாரச் சந்ததியார்" - (மத் 11:16

"யோனா தீர்க்கதரிசியின் அடையாளம்" - இயேசு கிறிஸ்து யோனா தீர்க்கதரிசியின் வரலாற்றை அங்கீகரித்திருக்கிறார் என்பதற்கு இது ஒரு சான்று. (யோனா 1:17

"பெரிய மீனின் வயிறு" - திமிங்கலத்தின் வயிறு 100 அடி நீளமும், 40 அடி சுற்றளவும் உடையது. சில திமிங்கலங்களின் எடை ஒரு லட்சம் கிலோ வரையிலும் இருக்குமாம்

"பூமியின் இருதயம்" - பாதாளம் (எபே 4:7-11) (சங் 16:10; அப 2:27 1 பேதுரு 3:19; எபி 2:14-15, லூக்கா 16:23,26)

42. இயேசு யூதர்களைக் கடிந்து கூறுகிறார் - (லூக் 11:31; மத் 11:20

மத் 12:41 யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு நினிவே பட்டணத்தார் மனந்திரும்பினார்கள் இதோ யோனாவிலும் பெரியவர் இங்கே இருக்கிறார் ஆதலால் நியாயத்தீர்ப்பிலே நினிவே பட்டணத்தார் இந்தச் சந்ததியாரோடெழுந்து நின்று இவர்கள் மேல் குற்றஞ்சுமத்துவார்கள்

மத் 12:42 தென்தேசத்து ராஜஸ்திரீ பூமியின் எல்லைகளிலிருந்து சாலொமோனுடைய ஞானத்தைக் கேட்க வந்தாள் இதோ சாலொமோனிலும் பெரியவர் இங்கே இருக்கிறார் ஆதலால் நியாயத்தீர்ப்பிலே அந்த ராஜஸ்திரீ இந்தச் சந்ததியாரோடெழுந்து நின்று இவர்கள்மேல் குற்றஞ்சுமத்துவாள்

"நினிவே பட்டணத்தார் குற்றஞ்சுமத்துவார்கள்" யோனா 3:1-10 யோனா 4:11; லூக்கா 11:32)

"யோனாவிலும் பெரியவர் இங்கே இருக்கிறார்" இயேசு கிறிஸ்து பெரியவர்

1. தேவாலயத்திலும் பெரியவர் (மத் 12:6
2. யோனாவிலும் பெரியவர் (மத் 12:41, லூக்கா 7:28; லூக்கா 11:32
3. சாலொமோனிலும் பெரியவர் (மத் 12:42; லூக்கா 11:31

12 அதிகாரம்

"தென்தேசத்து ராஜஸ்திரீ" - (1இராஜா 10:1-13; 2கொரி 9:1-12 லூக்கா 11:31)

43. இஸ்ரவேலைப் பற்றிய தீர்க்கதரிசனம் - (லூக் 11:24)

மத் 12:43 அசுத்த ஆவி ஒரு மனுஷனை விட்டுப் புறப்படும்போது வறண்ட இடங்களில் அலைந்து இளைப்பாறுதல் தேடியும் கண்டடையாமல்;

மத் 12:44 நான் விட்டுவந்த என் வீட்டுக்குத் திரும்பிப்போவேன் என்று சொல்லி; அங்கே வந்து, அந்த வீடு வெறுமையாகவும், பெருக்கி, ஜோடிக்கப் பட்டதாகவும் இருக்கக்கண்டு,

மத் 12:45 திரும்பிப்போய், தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னோடே கூட்டிக்கொண்டுவந்து உட்புகுந்து, அங்கே குடியிருக்கும்; அப்பொழுது அந்த மனுஷனுடைய முன்னிலைமையிலும் அவன் பின்னிலைமை அதிக கேடுள்ளதாயிருக்கும்; அப்படியே இந்தப் பொல்லாத சந்ததியாருக்கும் சம்பவிக்கும் என்றார்.

"அசுத்த ஆவி ஒரு மனுஷனை விட்டுப் புறப்படும்போது, வறண்ட இடங்களில் அலைந்து, இளைப்பாறுதல் தேடியும் கண்டடையாமல்" அசுத்த ஆவியை இயேசுவின் நாமத்தில் துரத்துவிவலையென்றால் அது தனக்கு இஷ்டம்போல ஒரு மனுஷனுக்குள் வரும். தன் இஷ்டம்போல அவனை விட்டுப் புறப்பட்டுபோகும். பல இடங்களுக்கு அலைந்து திரியும். மறுபடியும் அவனுக்குள் வரும். (மத் 12:29)

"நான் விட்டுவந்த என் வீட்டுக்குத் திரும்பிப்போவேன்" இந்த வசனத்தில் அசுத்த ஆவிக்கு ஆள்தத்துவப் பிரதிச் சுட்டுப்பெயர் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பிசாசுகளின் குணாங்களை இது விளக்குகிறது.

தீர்க்கதரிசன எண் - 14

"அப்படியே இந்தப் பொல்லாத சந்ததியாருக்கும் சம்பவிக்கும்" - (மத் 12:45) இந்தத் தீர்க்கதரிசனம் அப் 2:23; அப் 4:17 அப் 5:17; அப் 7:54; அப் 13:45; அப் 14:19, 1தெச 2:15-16 ஆகிய வசனங்களில் நிறைவேறியிருக்கிறது. இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, பின்பு, பின்மாற்றம் போனவனுடைய நிலைமையும் பரிதாபமாக இருக்கும். (2பேதுரு 2:20-22)

44. இயேசுவின் உறவினர்கள் - (மாற்கு 3:31; லூக் 8:19)

மத் 12:46 இப்படி அவர் ஜனங்களோடே பேசுகையில், அவருடைய தாயாரும் சகோதரரும் அவரிடத்தில் பேச வேண்டுமென்று வெளியே நின்றார்கள்.

மத் 12:47 அப்பொழுது ஒருவன் அவரை நோக்கி: உம்முடைய தாயாரும் உம்முடைய சகோதரரும் உம்மோடே பேசவேண்டுமென்று வெளியே நிற்கிறார்கள் என்றான்.

மத் 12:48 தம்மிடத்தில் இப்படிச் சொன்னவனுக்கு அவர் பிரதியுத்தரமாக: என் தாயார் யார்? என் சகோதரர் யார்? என்று சொல்லி,

மத் 12:49 தம்முடைய கையைத் தமது சீஷர்களுக்கு நேரே நீட்டி: இதோ, என் தாயும் என் சகோதரரும் இவர்களே!

மத் 12:50 பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான் என்றார்.

"அவருடைய சகோதரர்" (லூக்கா 8:19)

"வெளியே நின்றார்கள்" வீட்டிற்கு வெளியே நின்றார்கள் (மத் 13:1)

"உம்மோடே பேசவேண்டுமென்று வெளியே நிற்கிறார்கள்" இயேசு கிறிஸ்துவிற்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்று நினைத்து அவரைத் தங்கள் வீட்டிற்கு அழைத்து கொண்டு போக வந்திருந்தார்கள் (மாற்கு 3:21-31)

12 அதிகாரம்

"சகோதரனும் சகோதரியும் தாயும்" - உறவினர்கள் (relatives) (ஆதி 14:16; ஆதி 29:12); பிறர் (neighbors) (உபா 23:7); இஸ்ரவேலர் (any Israelite) (லேவி 19:17; உபா 22:1-4; எரே 34:9); எந்த மனுஷனும் (any man) (ஆதி 9:5; 1யோவான் 3:15); உடனாளி (a companion) (2சாமு 1:26). விசுவாசிகள் ஒருவரையொருவர் அழைத்துக் கொள்வதற்கு பயன்படுத்தும் வாசகம் (It is a fraternal epithet among Christians) (அப் 9:17; அப் 21:20; 1கொரி 7:12; 2கொரி 2:13; எபி 2:11-12; 1பேதுரு 1:22)

13 அதிகாரம்

45. பிரசங்கம் – பரலோக இராஜ்ஜியத்தின் இரகசியங்கள் – (மத் 13)

(1) இடம் – கலிலேயாக்கடல்

மத் 13:1 இயேசு அன்றையதினமே வீட்டிலிருந்து புறப்பட்டுப்போய், கடலோரத்திலே உட்கார்ந்தார்.

மத் 13:2 திரளான ஜனங்கள் அவரிடத்தில் கூடிவந்தபடியால், அவர் படவில் ஏறி உட்கார்ந்தார்; ஜனங்களெல்லாரும் கரையிலே நின்றார்கள்.

"வீட்டிலிருந்து புறப்பட்டுப்போய், கடலோரத்திலே உட்கார்ந்தார்" - மத் 13:1-35 ஆகிய வசனங்களை எல்லா ஜனங்களுக்கும் கடலோரத்தில் பொதுவாக உபதேசம் பண்ணினார். மத் 13:36-52 ஆகிய வசனங்களை வீட்டில் தம்முடைய சீஷர்கள் மத்தியில் தனிமையாகப் பேசினார் (மத் 4:13, மத் 9:28)

(2) விதைக்கிறவனைப் பற்றிய உவமை

(மாற்கு 4:1, லூக் 8:4)

மத் 13:3 அவர் அநேக விசேஷங்களை உவமைகளாக அவர்களுக்குச் சொன்னார்: கேளுங்கள், விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான்.

மத் 13:4 அவன் விதைக்கையில், சில விதை வழியருகே விழுந்தது; பறவைகள் வந்து அதைப் பட்சித்துப்போட்டது.

மத் 13:5 சில விதை அதிக மண்ணில்லாத கற்பாறை இடங்களில் விழுந்தது; மண் ஆழமாயிராததினாலே அது சீக்கிரமாய் முளைத்தது.

மத் 13:6 வெயில் ஏறினபோதோ, தீய்ந்துபோய், வேரில்லாமையால் உலர்ந்துபோயிற்று.

மத் 13:7 சில விதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தது; முள் வளர்ந்து அதை நெருக்கிப்போட்டது.

மத் 13:8 சில விதையோ நல்ல நிலத்தில் விழுந்து, சிலது நூறாகவும், சிலது அறுபதாகவும், சிலது முப்பதாகவும் பலன் தந்தது.

மத் 13:9 கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றார்.

உவமைகளைப் பற்றிய விளக்கம்

1. கிரேக்க மொழியில் "பேரபோல்" (**parabole**) என்னும் சொல் தமிழில் உவமை என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இந்தச் சொல்லுக்குப் பல பொருள்கள் உள்ளன. ஒப்புமை (**a comparison**) (மாற்கு 4:30); அடையாளம் (**figure**) (எபி 9:9; எபி 11:19); பழமொழி (**proverb**) (லூக்கா 4:23); விளக்கம் (**illustration**) (மத் 13:3,10,13,18,24,31-36,53; மத் 15:15, மத் 21:33,45; மத் 22:1; மத் 24:32)

2. உவமைகள் சத்தியத்தை விளக்கும். ஏற்கெனவே ஜனங்களுக்குத் தெளிவாகத் தெரிந்திருக்கும் காரியங்களோடு ஒப்பிட்டு இந்த உவமை கூறப்படும். இதன் மூலமாக ஜனங்கள் சத்தியத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்வார்கள்.

3. மற்றவர்களைக் கடிந்து கொள்ளும்போது வார்த்தைகளை நேரடியாகப் பேசினால் அவர்களுடைய மனது புண்படும். உவமை மூலமாக மற்றவர்களைக் கடிந்து கொள்ளும்போது அவர்களுக்கு அதிக பாதிப்பு இராது. (2 சாமு 12)

4. உவமைகளால் ஒரு காரியத்தை விளக்கும்போது கேட்போருக்கு ஆர்வம் மிகுதியாகும். இன்னும் அதிகமாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்னும் விருப்பம் அதிகரிக்கும். (மத் 13:10-17, 2 சாமு 12)

13 அதிகாரம்

5 ஒரு சத்தியத்தை உவமையின் மூலமாக விளக்கும்போது உவமைக்கு அதிக முக்கியத்துவம் தராமல் சத்தியத்திற்கே முக்கியத்துவம் தரவேண்டும் சத்தியம் உண்மையானது. உவமை சத்தியத்தை விளக்கும் விளக்கவுரை மட்டுமே

6 ஒரு சத்தியத்தை உவமைகளால் விளக்கும்போது அந்த உவமைகளின் வரலாற்றுப் பின்னணிகள் சூழ்நிலைகள் கூறப்படும் காலம் ஆகிய அனைத்தையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் அவற்றையும் புரிந்து கொள்ள வேண்டும்.

7 உவமையாகக் கூறப்படும் வார்த்தைகளுக்கு ஆவிக்குரிய வியாக்கியானம் தரக்கூடாது. உவமையால் விளக்கப்படும் சத்தியத்திற்கு மட்டுமே ஆவிக்குரிய வியாக்கியானம் தரவேண்டும்.

8 உவமைக்கும். சத்தியத்திற்கும் இடையிலுள்ள ஒற்றுமைகளை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்

9 ஒரு சத்தியம் உவமையால் விளக்கப்படுவது தேவைப்படும்போது மட்டுமே உவமையைப் பயன்படுத்த வேண்டும் பல சத்தியங்கள் உவமை இல்லாமலேயே தெளிவாக விளங்கும்

10 இயேசு கிறிஸ்து தாமே வியாக்கியானம் பண்ணுவதற்குரிய வழிமுறைகளை வகுத்துத் தந்திருக்கிறார் வேத வாக்கியத்திற்கு பூரணமாக வியாக்கியானம் பண்ணுவது எப்போதுமே தவறு

உவமை (parables) παραβολή parabolee 3850

பொருள்: பொய்ச்சொல் உவமை. ஒப்பனை, பழமொழி, பாவனை

உவமை எண் - 1

"விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான்" - மத் 13:18-23 ஆகிய வசனங்களில் விதைக்கிறவனைப் பற்றிய உவமை விளக்கப்பட்டிருக்கிறது. இது கிருபையின் காலத்தை வர்ணிக்கிறது. தேவனுடைய வார்த்தையை ஏற்றுக் கொள்கிற ஜனங்களுடைய இருதயங்கள் பலவேறு விதமானவை. இருதயங்களில் வித்தியாசம் இருப்பதுபோலவே, அவர்கள் மூலமாக வெளிவரும் ஆவியின் கனியிலும் வித்தியாசம் இருக்கும் (மத் 13:24-30, 36-43)

"வழியருகே" - வேலியில்லாத தோட்டத்திற்கு அருகேயுள்ள நடைபாதை. எல்லோரும் அதில் நடந்து செல்வதினால் அந்த நிலமே இறுகிப்போயக் கடினமாக இருக்கும்.

"நல்ல நிலம்" - கற்களும், முட்களும் அகற்றப்பட்ட விளைநிலம் நன்றாக உழுது ஆயத்தம் பண்ணப்பட்ட நிலம் விதை விதைத்தவுடன் அது வளர்வதற்கு நிலம் பக்குவமாக இருக்கிறது.

"கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக் கடவன்" (மத் 13:9)

(8) இயேசு உவமைகளாகப் பேசியதற்கு காரணம் - (மாற்கு 4:10; லூக் 8:9)

மத் 13:10 அப்பொழுது, சீஷர்கள் அவரிடத்தில் வந்து: ஏன் அவர்களோடே உவமைகளாகப் பேசுகிறீர் என்று கேட்டார்கள்

மத் 13:11 அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: பரலோகராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது அவர்களுக்கோ அருளப்படவில்லை

மத் 13:12 உள்ளவன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும் பரிபூரணமும் அடைவான் இல்லாதவன் எவனோ அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்.

மத்தேயு - தொகுப்புரை

13 அதிகாரம்

மத் 13:13 அவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாயும், உணர்ந்து கொள்ளாதவர்களாயும் இருக்கிறபடியினால் நான் உவமைகளாக அவர்களோடே பேசுகிறேன்

மத் 13:14 ஏசாயாவின் தீர்க்கதரிசனம் அவர்களிடத்தில் நிறைவேறுகிறது. அதாவது: காதாரக்கேட்டும் உணராதிருப்பீர்கள்; கண்ணாரக் கண்டும் அறியாதிருப்பீர்கள்

மத் 13:15 இந்த ஜனங்கள் கண்களினால் காணாமலும் காதுகளினால் கேளாமலும் இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படியாக, அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது. காதால் மந்தமாய்க் கேட்டு, தங்கள் கண்களை மூடிக் கொண்டார்கள் என்பதே.

மத் 13:16 உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும் அவைகள் பாக்கியமுள்ளவைகள்

மத் 13:17 அநேக தீர்க்கதரிசிகளும் நீதிமான்களும் நீங்கள் காண்கிறவைகளைக் காணவும் நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் விரும்பியும், காணாமலும் கேளாமலும் போனார்களென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்

இயேசு கிறிஸ்து உவமைகளைப் பயன் படுத்தியதற்குக் காரணங்கள்

1 ஜனங்கள் மத்தியில ஆர்வத்தை ஏற்படுத்தி, சத்தியத்தை வெளிப்படுத்துவதற்காக (மத் 13:10 11,36)

2 ஆர்வத்தோடு கேட்பவர்களுக்கு புதிய சத்தியத்தை அறிவிப்பதற்காக (மத் 13:11 12, 16-17)

3 ஏற்கெனவே தெரிந்து வைத்திருக்கும் காரியங்களோடு ஒப்பிட்டு இரகசியங்களை வெளிப்படுத்துவதற்காக (மத் 13:11)

4 கலகக்காரர்களுக்குச் சத்தியத்தை அவர்கள் புரிந்து கொள்ளாதவாறு மறைப்பதற்காக (மத் 13:11-15)

5 சத்தியத்தை நேசிக்கிறவர்களுக்கும் இன்னும் அதிகமாக சத்தியத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறவர்களுக்கும் அதிகமான சத்தியங்களை உபதேசம் பண்ணுவதற்காக (மத் 13:12)

6 சத்தியத்தை விரும்பாமல் அதை விரோதிக்கும் ஜனங்களிடமிருந்து சத்தியத்தைத் தனியே பிரித்துச் செல்வதற்காக (மத் 13:12)

7 தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றுவதற்காக (மத் 13:14-17,35)

"இரகசியங்கள்" - முன்பு இரகசியமாகவும் மறைபொருளாகவும் இருந்தவை இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளுக்குத் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது இயேசு கிறிஸ்துவின் சத்தியத்தை ஏற்றுக் கொள்கிறவர்களுக்கு எதுவுமே மறைபொருளாயிராது. (மத் 13:9, 2கொரி 4:3-4)

"பரலோகராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படி அவர்களுக்கு அருளப்படவில்லை"

நாம் ஜீவிக்கும் காலத்தில களையும், பயிரும் சேர்ந்திருக்கிறது. நல்ல நிலமும், மோசமான நிலமும் சேர்ந்தேயிருக்கிறது நீதிமான்களும் துன்மார்க்கரும் சேர்ந்தேயிருக்கிறார்கள் இக்காலத்தின் முடிவில இவர்கள் பிரிக்கப்படுவார்கள் துன்மார்க்கர் நரகத்திற்கு அனுப்பப்படுவார்கள் நீதிமான்களோ தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்வார்கள் (மத் 13:40 43,49-50; மத் 25:31-46; மத் 4:17 மத் 19:24, வெளி 20:7 சக 14)

மத்தேயு – தொகுப்புரை

13 அதிகாரம்

"உள்ளவன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும். பரிபூரணமும் அடைவான்" - விசுவாசிகள் அறிவிலும், ஞானத்திலும் விருத்தியடைவார்கள். தேவனைப் பற்றிய இரகசியங்கள் விசுவாசிகளுக்கு அதிகமாக வெளிப்படுத்தப்படும். அவர்கள் வெளிச்சத்தைக் கண்டடைந்து வெளிச்சத்தில் நடப்பார்கள். அவிசுவாசிகளோ அறியாமையில் மூழ்கி, இருளில் நடப்பார்கள் (ரோமர் 1:18-32; தீத்து 1:15; 1யோவான் 1:7; யோவான் 3:16-20)

"இல்லாதவன் எவனோ அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்" - மனுஷனுடைய அவிசுவாசத்தினாலும் இருதயத்தின் கலகக் குணத்தினாலும் இவர்களுக்கு இப்படிப்பட்ட பரிதாபமான சூழ்நிலை வரும். இது சாத்தானின் கிரியை (மத் 13:15,19; 2கொரி 4:3-4)

"அவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாயும், உணர்ந்து கொள்ளாதவர்களாயும் இருக்கிறார்கள்" - அவர்களால் காண முடியும். ஆனால் காண மறுக்கிறார்கள். அவர்களால் கேட்க முடியும் ஆனால் கேட்க மறுக்கிறார்கள். அவர்களால் புரிந்து கொள்ள முடியும். ஆனால் சத்தியத்தை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். தங்களுடைய சொந்த மார்க்கங்களையும், பாரம்பரிய பழக்கவழக்கங்களையும் விட்டுவெளியேற அவர்களுக்கு மனமில்லை. ஒளியில் நடந்து புதிய ஜீவனைப் பெற்றுக் கொள்ள அவர்களுக்கு ஆர்வம் இல்லை (மத் 13:11)

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன வசனம் - 11

"காதாரக்கேட்டும் உணராதிருப்பீர்கள்; கண்ணாரக்கண்டும் அறியாதிருப்பீர்கள். ......" (மத் 13:14-15; ஏசா 6:9-10, யோவான் 12:39-40; அப் 28:25)

"இருதயம் கொழுத்திருக்கிறது" - இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்கக் கூடாதவாறு அவர்கள் இருதயம் கொழுத்து அடைபட்டுக் கிடக்கிறது. தங்கள் கண்களினால் அவர்கள் காணவில்லை. காதுகளினால் கேட்கவில்லை. இருதயத்தினால் உணரவில்லை. ஆகையினால் மனந்திரும்பவில்லை. (மத் 13:15)

கொழுத்திரு (waxed gross) - παχύνω - pachynoo - 3975

விளைச்சொல் - கொழுத்திரு (to make fat, stupid, insensible, inattentive, dull, and callous) (மத் 13:15; அப 28:27)

விசுவாசிக்கிறவர்களுக்குத் தேவனுடைய ஆசீர்வாதங்கள்

1. மனந்திரும்புதலும் புதிய சிருஷ்டியும் கர்த்தரோடு நடப்பதும் (சங் 19:7, சங் 51:13; மத் 18:3; லூக்கா 22:32 அப 3:19; யாக் 5:19-20)
2. சரீர சுகமாதல், இயேசு கிறிஸ்துவிற்குள் புதிய ஆரோக்கியம் (சங் 91; சங் 103:3; மத் 8:17, ஏசா 53; ரோமர் 8:11 1பேதுரு 2:24, 3 யோவான் 1:2, யாக் 5:14-16 மாற்கு 16:17-18 யோவான் 14:12-15; யோவான் 15:7,16

"உங்கள் கண்கள் காண்கிறதினால் அவைகள் பாக்கியமுள்ளவைகள்" - (மத் 5:3; மத் 11:6)

"உங்கள் காதுகள் கேட்கிறதினால் அவைகள் பாக்கியமுள்ளவைகள்" - (மத் 11:15)

இயேசு கிறிஸ்துவின் உபதேசங்களை நாம் ஆர்வத்தோடு கேட்கவேண்டும். ஆண்டவர் இயேசு கிறிஸ்து தமது வார்த்தையைக் கேட்பதைப் பல வசனங்களில் வலியுறுத்திக் கூறியிருக்கிறார் (மத் 13:9, 13:23)

13 அதிகாரம்

(4) விதைக்கிறவனைப் பற்றிய உவமையின் விளக்கம் - மாற்கு 4:13 லூக் 8:11

மத் 13:18 ஆகையால் விதைக்கிறவனைப் பற்றிய உவமையைக் கேளுங்கள்

மத் 13:19 ஒருவன் ராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டும் உணராதிருக்கும் போது பொல்லாங்கன் வந்து அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதைப் பறித்துக்கொள்ளுகிறான், அவனே வழியருகே விதைக்கப்பட்டவன்

மத் 13:20 கற்பாறை இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்டு, உடனே அதைச் சந்தோஷத்தோடே ஏற்றுக் கொள்ளுகிறவன்,

மத் 13:21 ஆகிலும் தனக்குள்ளே வேரில்லாதவனாய், கொஞ்சக் காலமாத்திரம் நிலைத்திருப்பான்; வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைவான்

மத் 13:22 முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்கிறவனாயிருந்தும், உலகக்கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால், அவனும் பலனற்றுப் போவான்

மத் 13:23 நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ, வசனத்தைக் கேட்கிறவனும் உணருகிறவனுமாயிருந்து, நூறாகவும் அறுபதாகவும் முப்பதாகவும் பலன் தருவான் என்றார்

"பொல்லாங்கன்" - பிசாசு (மத் 13:38-39)

"உடனே" (anon) விரைவாக அதிசீக்கிரமாக

"கொஞ்சக்காலமாத்திரம் நிலைத்திருப்பான் வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைவான்" - இரட்சிக்கப்பட்டவன் பின்மாற்றிப்போவதற்கு வாய்ப்புள்ளது என்பதை விளக்கும் வசனம் (லூக்கா 8:13; யோவான் 15:1-6 ரோமர் 8:12-13; கலா 1:6-8; கலா 5:4,19-21 கலா 6:7-8; 2கொரி 11:3-4; 1தெச 3:8 1தீமோ 5:11-15; 2தீமோ 2:12; யாக் 5:19-20 1யோவான் 3:8; எபி 3:6,12-14; எபி 6:4-12 எபி 10:26-29; எபி 12:15; 2பேதுரு 2:20-22 வெளி 3:5; வெளி 22:18-19

"உபத்திரவம்" (tribulation) - (அப் 14:22; ரோமர் 5:3; 2தீமோ 3:12

"துன்பம்" (persecution) - (சங் 10:2)

"உலகக்கவலை" (care of this world) - (லூக்கா 21:34)

"ஐசுவரியத்தின் மயக்கம்" (deceitfulness of riches) - (லூக்கா 18:24)

"நல்ல நிலம்" - (மத் 13:8)

"பலன் தருவான்" - தேவனுடைய பிள்ளைகள் கனிதரவேண்டும் கனி தருவது நிலத்தின் தன்மையைப் பொருத்தும் அது முறையாக பராமரிக்கப்படும் விதத்தைப் பொருத்தும் அமையும். (யோவான் 15:1-8

(5) கோதுமை, களைகள் ஆகியவற்றின் [illegible]

மத் 13:24 வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: பரலோக ராஜ்யம் தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது.

மத் 13:25 மனுஷர் நித்திரைபண்ணுகையில், அவனுடைய சத்துரு வந்து, கோதுமைக்குள் களைகளை விதைத்து விட்டுப் போனான்.

மத் 13:26 பயிரானது வளர்ந்து கதிர்விட்ட போது, களைகளும் காணப்பட்டது.

13 அதிகாரம்

மத் 13:27 வீட்டெஜமானுடைய வேலைக்காரர் அவனிடத்தில் வந்து: ஆண்டவனே, நீர் உமது நிலத்தில் நல்ல விதையை விதைத்தீர் அல்லவா? பின்னை அதில் களைகள் எப்படி உண்டானது என்றார்கள்.

மத் 13:28 அதற்கு அவன்: சத்துரு அதைச் செய்தான் என்றான். அப்பொழுது வேலைக்காரர்: நாங்கள் போய் அவைகளைப் பிடுங்கிப்போட உமக்குச் சித்தமா? என்று கேட்டார்கள்.

மத் 13:29 அதற்கு அவன்: வேண்டாம், களைகளைப் பிடுங்கும்போது நீங்கள் கோதுமையையுங்கூட வேரோடே பிடுங்காதபடிக்கு, இரண்டையும் அறுப்புமட்டும் வளரவிடுங்கள்.

மத் 13:30 அறுப்புக்காலத்தில் நான் அறுக்கிறவர்களை நோக்கி: முதலாவது, களைகளைப் பிடுங்கி, அவைகளைச் சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக் கட்டுங்கள்; கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள் என்பேன் என்று சொன்னான் என்றார்.

"வேறொரு" - இதுவரையிலும் மத் 13:3-35 ஆகிய வசனங்களில் இயேசு கிறிஸ்து கூறிய மூன்று உவமைகளும் வீட்டிற்கு வெளியே எல்லா ஜனங்களுக்கும் பொதுவாகக் கூறப்பட்டவை.

தீர்க்கதரிசன எண் - 15

"பரலோகராஜ்யம் தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த [illegible] ஒப்பாயிருக்கிறது." மத் 13:24-30,36-43) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது முழுவதுமாக நிறைவேறும் (மத் 25:31-46, மத் 4:17, மத் 19:24

உவமை எண் - 2

"பரலோகராஜ்யம் தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது..." (மத் 13:24

"சத்துரு வந்து, கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப் போனான்" - கிழக்கு தேசங்களில் இப்பேர்ப்பட்ட பழக்கம் உள்ளது. ஒருவர் வயலில் நன்றாக விதை விதைத்திருக்கும்போது அவனுடைய விரோதியானவன் இரவு வேளையிலே அவனுடைய நிலத்தில் களைகளை விதைத்துவிட்டுப் போய்விடுவான். நல்ல பயிர் வளரும்போது களைகள் அதிகமாக வளர்ந்து நிலத்தைப் பாழாக்கிவிடும். நல்ல பயிர்களையும் வளரவிடாது. இவ்வாறு பாழாக்கப்பட்ட நிலத்தைத் திருத்துவதற்கு பல வருஷங்கள் ஆகும்.

களை (tares) - ζιζάνιον - zizanion - 2215

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - களை

"போனான்" - களைகளை விதைத்த சத்துருவிற்குத் தான் விதைத்த களை முளைக்குமா என்னும் சந்தேகமே அவனுடைய உள்ளத்தில் இல்லை. களைகள் நிச்சயமாக முளைக்கும். நிலம் பாழாகும் என்று தன்னுடைய தாக்கிரியைக் குறித்து நம்பிக்கையோடே போனான். சத்திய வசனம் என்னும் நல்ல விதையை விதைக்கும் நமக்கும் நாம் விதைத்த விதை முளைக்கும் என்னும் நம்பிக்கை நம்முடைய இருதயங்களில் உறுதியுடன் இருக்க வேண்டும்.

"இரண்டையும் அறுப்புமட்டும் வளரவிடுங்கள்" கோதுமையும் களையும் சேர்ந்தே வளரும். காலத்தின் முடிவு வரையிலும் நீதிமான்களும் துன்மார்க்கரும் இந்த உலகத்தில் சேர்ந்தேயிருப்பார்கள் (மத் 13:39-43,49-50) பின்பு இருவரும் பிரிக்கப்படுவார்கள் (மத் 24:29 - 51, மத் 25:31-46)

13 அதிகாரம்

(6) கடுகு விதையின் உவமை - (மாற்கு 4:30; லூக் 13:18)

மத் 13:31 வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: பரலோக ராஜ்யம் கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் நிலத்தில் விதைத்தான்

மத் 13:32 அது சகல விதைகளிலும் சிறிதாயிருந்தும், வளரும்போது சகல பூண்டுகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதின் கிளைகளில் வந்து அடையத்தக்க மரமாகும் என்றார்

"பரலோகராஜ்யம்" - (மத் 4:17; மத் 19:24)

தீர்க்கதரிசன எண் - 16

"பரலோகராஜ்யம் கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் நிலத்தில் விதைத்தான்" (மத் 13:31-33) - இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறி வருகிறது.

உவமை எண் - 3

"பரலோகராஜ்யம் கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் நிலத்தில் விதைத்தான்" (மத் 13:31)

கடுகு விதை பரலோக இராஜ்யத்தைக் குறிக்கிறது. சிறிய ஆரம்பமாக இருந்தாலும் அது அதிக வளர்ச்சி பெற்று, பலருக்கும் அடைக்கலம் தரும் ஸ்தலமாக இருக்கும். (மாற்கு 4:31; லூக்கா 13:19; லூக்கா 17:6; மத் 13:32; மத் 17:20; மத் 13:4,19,32,39,47; மத் 24:24)

(7) புளித்தமாவின் உவமை - (லூக் 13:20)

மத் 13:33 வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: பரலோக ராஜ்யம் புளித்தமாவுக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு ஸ்திரீ எடுத்து, முழுவதும் புளிக்கும் வரைக்கும், மூன்றுபடி மாவிலே அடக்கிவைத்தாள் என்றார்

உவமை எண் - 4

"பரலோக ராஜ்யம் புளித்தமாவுக்கு ஒப்பாயிருக்கிறது..." (மத் 13:33)

"புளித்தமா" - புளித்தமா என்பதற்குப் பலவேறு அர்த்தங்கள் உள்ளன: பாவம் (sin) (1கொரி 5:6-8; கலா 5:9); துர்உபதேசம் (false doctrines) (மத் 16:6-12; மாற்கு 8:15-21), மாய்மாலம் (hypocrisy) (லூக்கா 12:1)

இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கிற ஸ்திரீக்கு இரண்டு விதமாகப் பொருள் கூறலாம்

1. அசுத்தம், அவிசுவாசம், துன்மார்க்கம், ஆகியவற்றிற்கு அடையாளமானவள் (புல 1:17) இது தவிர வேறு பல பொருள்களும் இந்தப் பிரிவில் கூறலாம். வேசித்தனம் (harlotry) (எசே 16:15,22,26,28-59; எசே 23:1-49; எசே 36:17; ஓசி 1:2; ஓசி 2:2-17; ஓசி 3:1; வெளி 17), துன்மார்க்கம் (wickedness) (சக 5:5-11; வெளி 17:5), கள்ளமார்க்கம் (false religion) (வெளி 17)
2. ஸ்திரீக்கு தலைவன், நீதிமான் என்றும் பொருள் கூறலாம். இஸ்ரேல் (Israel) (ஆதி 37:9-10; வெளி 12; எசே 16), இரண்டு உடன்படிக்கைகள் (two covenants) (கலா 4:21-31), நீதியும், பரிசுத்தமும் (righteousness and purity) (2கொரி 11:2; வெளி 19:7-8) மாவு என்பது தேவனுடைய வார்த்தையைக் (the Word of God) குறிக்கும் (மத் 4:4; யோவான் 6:47-63)

13 அதிகாரம்

பரலோகராஜ்யத்தைப் பற்றிய உபதேசங்களிலும், திட்டங்களிலும் கள்ள உபதேசங்களும், வேத வசனங்களுக்குப் புறம்பான திட்டங்களும் கலந்துவிட்டன (லூக்கா 18:8; 1தீமோ 4:1-8; 2தீமோ 3:5 2தீமோ 4:3-4; 2பேதுரு 3:3-4)

"முழுவதும் புளிக்கும் வரைக்கும் மூன்றுபடி மாவிலே அடக்கிவைத்தாள்" - கள்ள உபதேசங்கள், கள்ளமார்க்கங்கள் துன்மார்க்கர்கள் எல்லோருமே தேவனுடைய வார்த்தைக்குப் பின்னால் ஒழிந்துகொள்ளப் [illegible].

படி (measures) - σάτον - saton - 4568

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - படி (ஆதி 18:6)

(8) **இயேசு உவமைகளாகப் பேசியதற்குக் காரணம்** - (மத் 13:10, மாற்கு 4:10, லூக் 8:9)

மத் 13:34 இவைகளையெல்லாம் இயேசு ஜனங்களோடே உவமைகளாகப் பேசினார்; உவமைகளினாலேயன்றி அவர்களோடே பேசவில்லை.

மத் 13:35 என் வாயை உவமைகளினால் திறப்பேன்; உலகத்தோற்றமுதல் மறைபொருளானவைகளை வெளிப்படுத்துவேன் என்று தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.

"உவமைகளினாலேயன்றி, அவர்களோடே பேசவில்லை" - இயேசு கிறிஸ்து இந்தக் குறிப்பிட்ட சம்பாஷணையில் இந்த உவமைகளைப் பேசினார். மற்ற இடங்களில் அவர் மேலும் பல உவமைகள் கூறியதை நாம் வாசிக்கிறோம்.

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 12

"என் வாயை உவமைகளினால் திறப்பேன் உலகத்தோற்றமுதல் மறைபொருளானவைகளை வெளிப்படுத்துவேன்" - (மத் 13:35; சங் 78:2)

உலகத்தோற்றம் (foundation) - καταβολή - katabolee - 2602

பெண்பால் பெயர்ச்சொல் - உலகத்தோற்றம், உண்டாதல், அஸ்திபாரம்

தோற்றம் (to cast) - καταβάλλω - kataballoo - 2598

வினைச்சொல் - தோற்றம், தள்ளு, போடு

உலகம் (world) - κόσμος - kosmos - 2889

ஆண்பால் பெயர்ச்சொல் - உலகம், அலங்கரிப்பு, லௌகிகம்

பூமி (earth) - γῆ - gee - 1093

பெண்பால் பெயர்ச்சொல் - தேசம், நாடு, பூமி, நிலம், தரை, பூலோகம், கரை, மண்

அஸ்திபாரம் போடு (founding) - θεμελιόω - themelioo - 2311

வினைச்சொல் - அஸ்திபாரம் போடு, நிலைபெறு, நிலைநிறுத்து

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் (2கொரி 4:9 வெளி 12:10 மத் 13:35 மத் 25:34 லூக்கா 11:50 யோவான் 17:24 எபே 1:4, எபி 4:3 எபி 9:26 எபி 1:10 1பேதுரு 1:20 வெளி 13:8; வெளி 17:8, ஆதி 1:2 2பேதுரு 3:5-7; சங் 104:5-9, எரே 4:23-26, ஏசா 14:12-14; எசே 28:11-17, லூக்கா 10:18)

மத்தேயு - தொகுப்புரை

13 அதிகாரம்

(9) கோதுமை, களைகள் ஆகியவற்றின் உவமை பற்றிய விளக்கம் - (மத் 13:18)

மத் 13.36 அப்பொழுது இயேசு ஜனங்களை அனுப்பிவிட்டு வீட்டுக்குப் போனார் அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து, நிலத்தின் களைகளைப்பற்றிய உவமையை எங்களுக்கு வெளிப்படுத்த வேண்டுமென்று கேட்டார்கள்

மத் 13.37 அவர் பிரதியுத்தரமாக நல்ல விதையை விதைக்கிறவன் மனுஷகுமாரன்

மத் 13.38 நிலம் உலகம்; நல்ல விதை ராஜ்யத்தின் புத்திரர் களைகள் பொல்லாங்கனுடைய புத்திரர்

மத் 13.39 அவைகளை விதைக்கிற சத்துரு பிசாசு. அறுப்பு உலகத்தின் முடிவு. அறுக்கிறவர்கள் தேவதூதர்கள்

மத் 13:40 ஆதலால், களைகளைச் சேர்த்து அக்கினியால் சுட்டெரிக்கிறது போல, இவ்வுலகத்தின் முடிவிலே நடக்கும்.

மத் 13:41 மனுஷகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார், அவர்கள் அவருடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து.

மத் 13:42 அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள் அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்

மத் 13.43 அப்பொழுது, நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள் கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்

"பிசாசு" - சத்துரு (மத் 13:25,28,39; லூக்கா 10:19, அப் 13:10)

உலகம் (world) αἰών aioon 165

ஆண்பால் பெயர்ச்சொல் - காலம், உலகம், பிரபஞ்சம், அநாதி, சதாகாலங்கள்

(அ) என்றென்றைக்கும் அதாவது கடந்த காலத்தில் - யோவான் 6.5; 80,32

(ஆ) ஒரு குறிப்பிட்ட காலம் அதாவது இம்மை அல்லது மறுமை - மத் 12.32 மாற் 10.30

உலகத்தின் முடிவு (மத் 12.32; மத் 13.39-40,49; மத் 24.3; மத் 28:20, இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இந்தக் காலம்முடிவுபெறும். (மத் 24:29-31; மத் 25.31-46; வெளி 19 11-21; சக 14:1-5) அதைத் தொடர்ந்து வரும் காலம். (ஆதி 8:22; ஆதி 9:12; பிர 1:4 சங் 104:5; ஏசா 9:6-7; தானி 7:13-14, வெளி 11:15; வெளி 21.3-22:5

"களைகளைச் சேர்த்து அக்கினியால் சுட்டெரிக்கிறதுபோல இவ்வுலகத்தின் முடிவிலே நடக்கும்" - இந்த வசனம் தேசங்களின் நியாயத்தீர்ப்பைக் குறிக்கிறது (மத் 25.31-46; தானி 7.9) களைகள் சுட்டெரிக்கப்படும். அதே சமயத்தில் இயேசு கிறிஸ்துவோடு சொந்தமாகாத கிளைகளும் எரிக்கப்படும். (மத் 8:12; மத் 13:40-43,49-50 மத் 24.31; மத் 25:41-46; யோவான் 15:6

"அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்" "நரகத்தைப் பற்றிய ஒரு வர்ணனை பற்கடிப்பு என்பது தாங்கமுடியாத வேதனையைக் குறிக்கும் (மத் 13:42,50; வெளி 9:2, மத் 13.50, மத் 8:12; மத் 22:13; மத் 24.51, மத் 25.30, லூக்கா 13:28)

"நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள்" நீதிமான்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்வார்கள் (வெளி 1:5-7; வெளி 5:10, வெளி 11:15; வெளி 20:4-6, வெளி 22:4-5, மத் 25.31-46; சக 14) சூரியன் எவ்வளவு பிரகாசமாக இருக்கிறதோ அதைப்போன்று நீதிமான்களும் பிரகாசிப்பார்கள் (மத் 5:5 மத் 25.35; லூக்கா 12.32; ரோமர் 8:17, தானி 7:18,22,27; வெளி 21:7)

13 அதிகாரம்

(10) புதைத்திருக்கிற பொக்கிஷத்தின் [redacted]

மத் 13.44 அன்றியும், பரலோகராஜ்யம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது. அதை ஒரு மனுஷன் கண்டு, மறைத்து, அதைப்பற்றிய சந்தோஷத்தினாலே போய், தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று அந்த நிலத்தைக் கொள்ளுகிறான்

தீர்க்கதரிசன எண் - 17

"அன்றியும், பரலோகராஜ்யம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது, அதை ஒரு மனுஷன் கண்டு, மறைத்து அதைப்பற்றிய சந்தோஷத்தினாலே போய், தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று அந்த நிலத்தைக் கொள்ளுகிறான்" - (மத் 13:44) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறியிருக்கிறது. இன்னும் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

உவமை எண் - 5

"பரலோகராஜ்யம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது. ..." (மத் 13:44)

"பரலோகராஜ்யம்" - (மத் 4:17; மத் 19:24)

இஸ்ரவேல ராஜ்யம் பொக்கிஷத்தை போன்றது. (சங் 135:4, யாத் 19:5; மல 3:17) தனனுடைய அழைப்பின்பிரகாரம் நடந்து கொள்ளாததினால் பூமியில் புதைக்கப் பட்டிருக்கிற பொக்கிஷத்தைப் போல இருக்கிறது. (ரோமர் 9-11) இந்த உலகமே நிலம். (மத் 13:38) இயேசு கிறிஸ்துவே பொக்கிஷத்தைக் கண்டுபிடிக்கிற மனுஷர் (மத் 13:34,37, யோவான் 1:11-12, மத் 23:37-39) அவர் தமது பரலோக மேன்மையை விட்டுவிட்டு பாவிகளை இரட்சிப்பதற்காக இவ்வுலகத்திற்கு மனுஷனாக வந்தார் (பிலி 2:5-8, 2கொரி 8:9, தீத்து 2:14; எபி 12:1-2) பொக்கிஷம் கண்டுபிடிக்கப்பட்டாலும் இன்னும் பூமிக்குள்ளேயே இருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது அவர் இந்த பொக்கிஷத்தைப் பற்றிக்கொள்வார் (ரோமர் 11:25-29 லூக்கா 2:24 லூக்கா 1:32-33; ஏசா 9:6-7

(11) விலையுயர்ந்த ஒரு முத்தின் [redacted]

மத் 13:45 மேலும், பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது

மத் 13:46 அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்

தீர்க்கதரிசன எண் - 18

"பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று அதைக் கொள்ளுகிறான்" - (மத் 13:45-46) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறியிருக்கிறது இன்னும் நிறைவேறிக்கொண்டிருக்கிறது.

உவமை எண் - 6

"பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது" (மத் 13:45)

பொக்கிஷத்தைப் பற்றிய உவமையில நிலம் கொள்ளப்படுகிறது. பொக்கிஷம் கொள்ளப்பட்ட நிலத்திற்குள் மறைந்திருக்கிறது. அதைப் பூமியிலிருந்து வெளியே எடுக்க வேண்டும். முத்தைப் பற்றிய உவமையிலோ முத்து கொள்ளப்படுகிறது.

(12) மீன்களைச் சேர்த்து வாரிக் கொள்ளும் வலையின் உவமை

மத் 13:47 அன்றியும், பரலோகராஜ்யம் கடலிலே போடப்பட்டு, சகலவிதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது.

13 அதிகாரம்

மத் 13:48 அது நிறைந்தபோது அதைக் கரையில் இழுத்து உட்கார்ந்து, நல்லவைகளைக் கூடைகளில் சேர்த்து, ஆகாதவைகளை எறிந்து போடுவார்கள்.

தீர்க்கதரிசன எண் - 19

"பரலோகராஜ்யம் கடலிலே போடப்பட்டு, சகலவிதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது... (மத் 13:47-50) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இது நிறைவேறும். (மத் 25:31-46)

உவமை எண் - 7

"பரலோகராஜ்யம் கடலிலே போடப்பட்டு சகலவிதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது" - (மத் 13:47)

"சகலவிதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலை" - உலகம் முழுவதும் சுவிசேஷ ஊழியம் நடைபெற்று வருகிறது. பரலோக இராஜ்யத்தில் ஆத்துமாக்கள் சேர்க்கப்பட்டு வருகிறார்கள். வலைகளில் மீன்கள் இருப்பதுபோல ஆத்துமாக்கள் வருகிறார்கள். ஆனாலும் அந்த வலைக்குள் நல்ல மீன்களும் ஆகாத மீன்களும் இருக்கும். நல்லவைகளை கூடைகளில் சேர்த்து, ஆகாதவைகளை எறிந்துபோடுவார்கள். களைகளும் கோதுமையும் சேர்க்கப்பட்டு இறுதியில் களைகள் சுட்டெரிக்கப்படுவது போன்று இக்காரியம் நடைபெறும். இதுபோலவே நீதிமான்கள் தேவனுடைய ராஜ்யத்தில் சேர்க்கப்படுவார்கள். துன்மார்க்கர் நரகத்திற்குத் தள்ளப்படுவார்கள். (மத் 13:36-43,49-50)

(13) மீன்களைச் சேர்த்து வாரிக் கொள்ளும் வலையின் உவமையின் விளக்கம் - (மத் 13:18,36)

மத் 13:49 இப்படியே உலகத்தின் முடிவிலே நடக்கும். தேவதூதர்கள் புறப்பட்டு, நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைப் பிரித்து,

மத் 13:50 அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றார்.

(14) வீட்டெஜமானாகிய மனுஷனின் [redacted]

மத் 13:51 பின்பு, இயேசு அவர்களை நோக்கி: இவைகளையெல்லாம் அறிந்து கொண்டீர்களா என்று கேட்டார். அதற்கு அவர்கள்: ஆம், அறிந்து கொண்டோம், ஆண்டவரே என்றார்கள்.

மத் 13:52 அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: இப்படியிருக்கிறபடியால், பரலோகராஜ்யத்துக்கடுத்தவைகளில் உபதேசிக்கப்பட்டுத் தேறின வேதபாரகன் எவனும் தன் பொக்கிஷத்திலிருந்து புதியவைகளையும் பழையவைகளையும் எடுத்துக்கொடுக்கிற வீட்டெஜமானாகிய மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான் என்றார்.

"பரலோக ராஜ்யத்துக்கடுத்தவைகளில் உபதேசிக்கப்பட்டுத் தேறின வேதபாரகன்" இயேசு கிறிஸ்து தமது சீஷர்களை வேதபாரகராக வர்ணிக்கிறார் (மத் 2:4)

உவமை எண் - 8

"தன் பொக்கிஷத்திலிருந்து புதியவைகளையும் பழையவைகளையும் எடுத்துக்கொடுக்கிற வீட்டெஜமானாகிய மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்" பரலோகராஜ்யத்தைப் பற்றிய உவமையில் பழையவைகளையும் புதியவைகளையும் பார்க்கிறோம். விசுவாசிகள் மத்தியிலே பழைய உபதேசங்களும், புதிய உபதேசங்களும் கலந்திருக்கின்றன. கிறிஸ்துவே வீட்டெஜமான். (மத் 13:3,24,31,37-45)

13 அதிகாரம்

"புதியவைகளையும், பழையவைகளையும்" - இது யூதர்களுடைய வழக்குச்சொல் அதிகம், ஏராளம், தாராளம் ஆகிய பொருளைத் தரும் வழக்குச் சொல். இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் சத்தியத்தில் தெளிவாக இருக்க வேண்டும். எல்லா சத்தியங்களையும் அறிந்திருக்க வேண்டும். மற்றவர்களுக்கு சத்தியத்தை எடுத்துக்கூறும் ஆற்றல் இருக்க வேண்டும்.

48. நாசரேத்தில் இயேசு - இந்த ஊரிலுள்ள ஜனங்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ள மறுத்து விடுகிறார்கள் - (மாற்கு 6:1; லூக் 4:16)

மத் 13:53 இயேசு இந்த உவமைகளைச் சொல்லி முடித்தபின்பு, அவ்விடம் விட்டு

மத் 13:54 தாம் வளர்ந்த ஊரிலே வந்து, அவர்களுடைய ஜெப ஆலயத்திலே அவர்களுக்கு உபதேசம்பண்ணினார். அவர்கள் ஆச்சரியப்பட்டு: இவனுக்கு இந்த ஞானமும் பலத்த செய்கைகளும் எப்படி வந்தது?

மத் 13:55 இவன் தச்சனுடைய குமாரன் அல்லவா? இவன் தாய் மரியாள் என்பவள் அல்லவா? யாக்கோபு யோசே சீமோன் யூதா என்பவர்கள் இவனுக்குச் சகோதரர் அல்லவா?

மத் 13:56 இவன் சகோதரிகளெல்லாரும் நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா? இப்படியிருக்க, இதெல்லாம் இவனுக்கு எப்படி வந்தது? என்று சொல்லி,

மத் 13:57 அவரைக்குறித்து இடறலடைந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி: தீர்க்கதரிசி ஒருவன் தன் ஊரிலும் தன் வீட்டிலுமேயன்றி வேறெங்கும் கனவீனமடையான் என்றார்.

மத் 13:58 அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் அவர் அங்கே அநேக அற்புதங்களைச் செய்யவில்லை.

மத்தேயு 13-ஆவது அதிகாரத்தில் பரலோகராஜ்யத்தைப் பற்றி இயேசு கிறிஸ்து கூறியிருக்கிற உவமைகள்

1. கேட்கிறவர்களின் பிரிவுகள் (மத் 13:3-9,18-23)

2. நல்லதும் கெட்டதும் கலந்திருப்பது (மத் 13:24-30,37-43)

3. அதிக வளர்ச்சி (மத் 13:31-32)

4. சத்தியத்தில் கலப்பு (மத் 13:33)

5. இஸ்ரவேலின் தற்கால நிலைமை (மத் 13:44)

6. தேவனுடைய இராஜ்யத்தில் சபை (மத் 13:45)

7. சத்தியத்தினால் உலகம் முழுவதும் ஏற்படும் விளைவு (மத் 13:47)

8. பழைய, புதிய சத்தியங்கள் (மத் 13:52)

"தாம் வளர்ந்த ஊரிலே" - நாசரேத் (மத் 2:23; மாற்கு 6; லூக்கா 4:16)

"பலத்த செய்கைகள்" - இயேசு கிறிஸ்துவின் வல்லமை. 11 இடங்களில் இயேசு கிறிஸ்துவின் வல்லமையைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. (மத் 11:20-23; மத் 13:54-58; மத் 14:2, மாற்கு 6:2-14; லூக்கா 10:13; லூக்கா 19:37)

"தச்சனுடைய குமாரன்" - இயேசு கிறிஸ்து தச்சனுடைய குமாரன் அல்ல. தேவகுமாரன் (மத் 1:18-25; லூக்கா 1:33-35; யோவான் 3:16)

"மரியாள்" - புதிய ஏற்பாட்டில் ஆறு மரியாள்களைப் பற்றி வாசிக்கிறோம்.

1. இயேசுவின் தாயார்

2. மகதலேனா மரியாள் (லூக்கா 8:2; லூக்கா 24:10)

3. லாசருவின் சகோதரி (மத் 26:7; லூக்கா 10:39-42; யோவான் 11; யோவான் 12:3)

4. யாக்கோபுவின் தாயார் (யோவான் 19:25; மத் 27:56; மாற்கு 15:40)

13 அதிகாரம்

5. மாற்குவின் தாயார் (அப 12:12)

6. பவுலின் உதவியாள் (ரோமர் 16:6)

இவர்களைத்தவிர பழைய ஏற்பாட்டில இரண்டு பேருக்கு மரியாள் (மிரியாம) என்றும் பெயர் கொடுக்கப்பட்டிருந்தது. (யாத் 15:20; 1நாளா 4:17

வேதாகமத்தில் "யோசே" (Joses) என்னும் பெயருடையவர்கள்

1 இயேசுவின் சகோதரன் (மத் 13:55 மாற்கு 6:3

2 அல்பேயு-மரியாள் ஆகியோரின் குமாரன், இயேசுவின தாயாகிய மரியாளின சகோதரி (மத் 27:56 மாறகு 15:40 47

3. பர்னபா (அப 4:36

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிற சீமோன்கள்

1 சீமோன பேதுரு (மத் 10:2)

2 கானானியனாகிய சீமோன் (மத் 10:4 மாற்கு 3:18, லூக்கா 6:15; அப 1:13

3 இயேசுவின சகோதரன (மத் 13:55 மாற்கு 6:3

4 நாயீன ஊரானாகிய சீமோன (லூக்கா 7:36-50)

5 பெத்தானியாவிலுள்ள குஷ்டரோகி மத் 26:6

6 யூதாஸ்காரியாத்தின் தகப்பன (யோவான் 6:71, யோவான் 12:4 யோவான் 13:2,26)

7 சீரேனே ஊரானாகிய சீமோன் (மத் 27:32; மாற்கு 15:21 லூக்கா 23:26)

8 மாயவித்தைக்காரனாகிய சீமோன் (அப 8:9-24)

9 தோல்பதனிடுகிறவனாகிய சீமோன் (அப 9:43; அப 10:6-32)

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிற யூதாக்கள்

1 இயேசுவின் சகோதரன், யூதா நிருபத்தை எழுதியவன் (மத் 13:55 மாறகு 6:3 யூதா 1:1

2 யாக்கோபின் சகோதரன், லாபேயு ததேயு என்னும் மறுநாமம் கொண்ட அப்போஸ்தலன் (லூக்கா 6:16; மத் 10:3; மாற்கு 3:18 யோவான் 14:22; அப் 1:13)

3 யூதா ஸ்காரியோத் (யோவான் 6:71)

4 கலிலேயா ஊரானாகிய யூதா (அப 5:37)

5. தமஸ்கு ஊரானாகிய யூதா (அப 9:11

6 பார்சபா (அப 15:22-32)

"சகோதரிகள்" - இயேசு கிறிஸ்துவிற்கு நானகு சகோதராகள இருநதாாகள இரணடுககும மேறபட்ட சகோதரிகள இருநதிருககலாம். (லூக்கா 8:19

இடறலடை (offended) σκανδαλίζω - skandalizoo - 4624

வினைச்சொல் - இடறலடை, இடறலுண்டாக்கு (scandalized, stumbled) (மத் 13:41,57

"தீர்க்கதரிசி ஒருவன தன் ஊரிலும் தன் வீட்டிலுமேயன்றி வேறெங்கும் கனவீனமடையான்" - (மாற்கு 6:4, லூக்கா 4:24; யோவான் 4:44

13 அதிகாரம்

"அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் அவர் அங்கே அநேக அற்புதங்களைச் செய்யவில்லை" - ஜனங்களுக்கு அவிசுவாசம் இருந்தால் இயேசுவிற்கு அற்புதம் செய்யும் வல்லமை குறைந்துபோகும் என்று பொருள்கூறக்கூடாது. அவர்களுக்கு அவிசுவாசம் இருந்ததினால் இயேசு கிறிஸ்துவிடம் வியாதியஸ்தர்களை விசுவாசத்தோடு கொண்டு வரவில்லை. இயேசு கிறிஸ்துவால் குணமாக்கமுடியாத எந்த வியாதியும் இல்லை. ஜனங்கள் அவிசுவாசமாக இருக்கும்பொழுது இயேசு கிறிஸ்துவின் குணமாக்கும் வல்லமை குறைந்து போகாது. எல்லோரையும் குணப்படுத்தினார் என்னும் வாக்கியத்தை நாம் பல வசனங்களில் வாசிக்கிறோம்.

(மத் 4.23-24; மத் 8.14-18 மத் 9.35 மத் 11.5; மத் 12.15; மத் 14.14 35-36 மத் 15.30; மத் 19.2; மத் 21.14. மாற்கு 1.32-35.39 மாற்கு 3.10 மாற்கு 6.5.56 லூக்கா 4.40 லூக்கா 5.15.17 லூக்கா 6.17-19 லூக்கா 7.21-23 லூக்கா 9.11 லூக்கா 17.17; அப 10.38)

"அநேக அற்புதங்கள்" - (மத் 9.8, 13.54)

14 அதிகாரம்

47. ஏரோதுவின் குற்ற மனச்சாட்சி - யோவான் ஸ்நானனின் சிரச்சேதம் - (மாற்கு 6:14 லூக் 9:7-9)

மத் 14:1 அக்காலத்தில், காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோது இயேசுவின் கீர்த்தியைக் கேள்விப்பட்டு,

மத் 14:2 தன் ஊழியக்காரரை நோக்கி: இவன் யோவான்ஸ்நானன்; இவன் மரித்தோரிலிருந்து எழுந்தான்; ஆகையால் இவனிடத்தில் பலத்த செய்கைகள் விளங்குகிறது என்றான்.

மத் 14:3 ஏரோது தன் சகோதரனாகிய பிலிப்புவின் மனைவி ஏரோதியாளினிமித்தம் யோவானைப் பிடித்துக் கட்டி காவலில் வைத்திருந்தான்.

மத் 14:4 ஏனெனில், நீர் அவளை வைத்துக்கொள்வது நியாயமல்லவென்று யோவான் அவனுக்குச் சொல்லியிருந்தான்.

மத் 14:5 ஏரோது அவனைக் கொலைசெய்ய மனதாயிருந்தும், ஜனங்கள் அவனைத் தீர்க்கதரிசியென்று எண்ணினபடியால் அவர்களுக்குப் பயந்திருந்தான்.

மத் 14:6 அப்படியிருக்க, ஏரோதின் ஜென்மநாள் கொண்டாடப்படுகிறபோது, ஏரோதியாளின் குமாரத்தி அவர்கள் நடுவே நடனம்பண்ணி ஏரோதைச் சந்தோஷப்படுத்தினாள்.

மத் 14:7 அதினிமித்தம் அவன்: நீ எதைக் கேட்டாலும் தருவேன் என்று அவளுக்கு ஆணையிட்டு வாக்குக்கொடுத்தான்.

மத் 14:8 அவள் தன் தாயினால் ஏவப்பட்டபடியே, யோவான்ஸ்நானனுடைய தலையை இங்கே ஒரு தாலத்திலே எனக்குத் தாரும் என்று கேட்டாள்.

மத் 14:9 ராஜா துக்கமடைந்தான்; ஆகிலும் ஆணையினிமித்தமும், பந்தியில் கூட இருந்தவர்களினிமித்தமும், அதைக் கொடுக்கக் கட்டளையிட்டு,

மத் 14:10 ஆள் அனுப்பி, காவற்கூடத்திலே யோவானைச் சிரச்சேதம்பண்ணுவித்தான்.

மத் 14:11 அவனுடைய சிரசை ஒரு தாலத்திலே கொண்டுவந்து சிறு பெண்ணுக்குக் கொடுத்தார்கள்; அவள் அதைத் தன் தாயினிடத்தில் கொண்டுபோனாள்.

மத் 14:12 அவனுடைய சீஷர்கள் வந்து உடலை எடுத்து அடக்கம்பண்ணி, பின்பு போய் அந்தச் சங்கதியை இயேசுவுக்கு அறிவித்தார்கள்.

"ஏரோது" - ஏரோது அந்திப்பா (மத் 2:3)

"காற்பங்கு தேசாதிபதி" - ஒரு தேசத்தின் நான்கில் ஒரு பகுதியை ஆளுகிறவர். பிறகாலத்தில் ஆளுநர்களுக்கு காற்பங்கு தேசாதிபதி என்னும் பெயர் வழக்கத்தில் வந்தது.

காற்பங்கு தேசாதிபதி (tetrarch) - τετράρχης - tetrarchees - 5076

ஆண்பால் பெயர்ச்சொல் - காற்பங்கு தேசாதிபதி

நாலாம் (fourth) - τέταρτος - tetartos - 5067

பெயரடை நாலாம்

அதிபதி (ruler) ἀρχή archee 746

பெண்பால் பெயர்ச்சொல் அதிபதி, ஆதி, ஆதிமுதல், ஆரம்பம் முதல், அதிகாரமுள்ளவர்கள், அதிகாரம், துரைத்தனம், துவக்கம், மூலஉபதேசம், உலகமுண்டானது முதல், உலகத்தை சிருஷ்டித்தது முதல்.

"இவன் மரித்தோரிலிருந்து எழுந்தான்" குற்ற உணர்வுடைய ஏரோது கூட யோவானைப் பற்றி நல்ல எண்ணம் கொண்டிருந்தான்.

14 அதிகாரம்

"ஏரோதியாள்" - இவள் முதலாவதாக பிலிப்புவின் மனைவி. பின்பு ஏரோதின் மனைவியானாள். ஏரோது இராஜாவின் மகனான அரிஸ்தோபுலஸ் (Aristobulus) என்பவனின் குமாரத்தி. ஏரோதியாளுக்கும் பிலிப்புவிற்கும் ஒரு குமாரன் பிறந்தான். அவன் பெயர் சாலோமே (Salome). அதன்பின்பு ஏரோதியாள் பிலிப்புவை விட்டுவிட்டு அவன் சகோதரனான ஏரோதைத் திருமணம் செய்து கொண்டாள். ஏற்கெனவே ஏரோது அராபிய தேசத்து இராஜாவான அரிதாசின் (Aretas) குமாரத்தியைத் திருமணம் செய்திருந்தான். ஏரோது தற்போது இவளைத் தள்ளிவைத்து விட்டு ஏரோதியாளைத் திருமணம் செய்து கொண்டான். இதனால் கோபமடைந்த அராபிய தேசத்து இராஜாவான அரிதாஸ் ஏரோதின்மீது படையெடுத்து அவனுடைய இராணுவத்தை முழுவதுமாகச் சங்காரம் பண்ணினான். யோவான் ஸ்நானனைச் சிரச்சேதம் பண்ணியதற்காக ஏரோதின்மீது விதிக்கப்பட்ட நியாயத்தீர்ப்பினாலேயே இவ்வாறு நடைபெற்றது என்று யோசேப்பஸ் (Josephus) என்னும் வரலாற்று ஆசிரியர் எழுதியிருக்கிறார்.

"நீர் அவளை வைத்துக்கொள்வது நியாயமல்ல" - ஏனெனில் ஏரோதியாள் பிலிப்புவின் மனைவி. பிலிப்பு ஏரோதின் சகோதரன். ஒருவனுடைய சகோதரனின் மனைவியை வைத்துக்கொள்வது நியாயமல்ல. (லேவி 18:6,16; லேவி 20:21)

இராஜாக்கள்மீது குற்றஞ்சுமத்திய தேவனுடைய ஊழியக்காரர்கள்

1 ஆபிரகாம் பார்வோன்மீது குற்றம் சுமத்தினான் (ஆதி 12:10-20)

2 ஆபிரகாம் அபிமெலேக்கின்மீது குற்றம் சுமத்தினான் (ஆதி 20)

3 ஈசாக்கு அபிமெலேக்கின்மீது குற்றம் சுமத்தினான் (ஆதி 26:6-16)

4 மோசே பார்வோன்மீது குற்றம் சுமத்தினான் (யாத் 10:24-29)

5 பிலேயாம் பாலாக்மீது குற்றம் சுமத்தினான் (எண் 24:10-11)

6 ஒரு தீர்க்கதரிசி யெரொபெயாம்மீது குற்றம் சுமத்தினான் (1இராஜா 13:4)

7 மிகாயா ஆகாப்மீது குற்றம் சுமத்தினான்

8 எலியா நாகமான்மீது குற்றம் சுமத்தினான் (1இராஜா 22:6-28)

9 அனானி ஆசாவின்மீது குற்றம் சுமத்தினான் (2நாளா 16:7-11)

10 சகரியா யோவாஸ்மீது குற்றம் சுமத்தினான் (2நாளா 24:20-22)

11 அசரியா உசியாமீது குற்றம் சுமத்தினான் (2நாளா 26:16-21)

12 உரியா யோயாக்கீம்மீது குற்றம் சுமத்தினான் (எரே 26:20-24)

13. எரேமியா சிதேக்கியாமீது குற்றம் சுமத்தினான் (எரே 32:1-5)

14. யோவான் ஸ்நானன் ஏரோதின்மீது குற்றம் சுமத்தினான் (மத் 14:3)

"அவர்களுக்குப் பயந்திருந்தான்" - ஏரோதுவிற்கு இரண்டு பக்கங்களிலிருந்து பிரச்சனை. யோவான் ஸ்நானனுடைய பிரசங்கத்தைக் கேட்டிருந்ததினால் அவன் தேவனுக்குப் பயந்தான். அதே சமயத்தில் தனது பதவி போய்விடுமோ என்று ஜனங்களுக்கும் பயந்தான். முடிவில் தேவனைவிட ஜனங்களுக்கே அதிகமாகப் பயந்து யோவான் ஸ்நானனைச் சிரச்சேதம் பண்ணினான்.

"ஏரோதின் ஜென்மநாள் கொண்டாடப்படுகிறபோது" - இராஜாக்களுக்குப் பிறந்தநாளும் ஆட்சியில் அமர்ந்த நாளும் ஜென்மநாளாகவே கொண்டாடப்பட்டது (ஓசி 7:5; 1சாமு 13:1). ஜென்மநாளைச் சந்தோஷமாகக் கொண்டாடுவார்கள். இந்நாளில் பெரிய இராஜாக்கள் தங்களிடம் யார் எதைக்கேட்டாலும் அன்பளிப்பாகத் தருவார்கள் (எஸ் 5:3; எஸ் 7:3).

"நீ எதைக்கேட்டாலும் தருவேன் என்று அவளுக்கு ஆணையிட்டு வாக்குக்கொடுத்தான்" - இப்பேர்ப்பட்ட கொண்டாட்டமான நாட்களில் இராஜாக்கள் தருவேன் என்று கூறுவதை ஆணையிட்டு வாக்குக்கொடுப்பது வழக்கம்.

14 அதிகாரம்

"அவள் தன் தாயினால் ஏவப்பட்டபடியே: யோவான்ஸ்நானனுடைய தலையை இங்கே ஒரு தாலத்திலே எனக்குத் தாரும்" என்று கேட்டாள் - ஏரோதின் மனச்சாட்சியை யோவான் ஸ்நானனின் பிரசங்கம் கலக்கிற்று. யோவான் ஸ்நானனிடமிருந்து தானும், ஏரோதும் விடுதலை பெறவேண்டுமென்று ஏரோதியாள் நினைத்தாள். ஆகையினால் யோவான் ஸ்நானனைச் சிரச்சேதம் பண்ணுவதற்குச் சதிபண்ணினாள். யோரோம் (Jerome) என்னும் வரலாற்று ஆசிரியர் இதைப் பற்றி எழுதும்போது யோவான் ஸ்நானன் சிரச்சேதம் பண்ணப்பட்ட பிறகு, அவனுடைய நாக்கை ஏரோதியாள் தனியாக வெளியே இழுத்து, அதைக் கத்தியால் குத்தினாள் என்று எழுதியிருக்கிறார்.

தாலம் (charger) - πίναξ - pinax - 4094

- தாலம், பாத்திரம் - ஆணபால பெயர்சொல் (a wooden platter) (மத் 14:8,11; மாற்கு 6:25,28; லூக்கா 11:39)

"ராஜா துக்கமடைந்தான்" - தரியு இராஜாவின் துக்கத்தை ஒப்பிட்டு வாசிக்கவும். (தானி 6:14-16)

"ஆள் அனுப்பி, காவற்கூடத்திலே யோவானைச் சிரச்சேதம் பண்ணுவித்தான்" - யோவான் 18 மாதங்கள் சிறைச்சாலையில் இருந்தான். யோவான் கூறிய பல காரியங்களை ஏரோது கேட்டு அவற்றிற்குக் கீழ்ப்படிந்திருந்தான். (மாற்கு 6:20)

"அவள் அதைத் தன் தாயினிடத்தில் கொண்டுபோனாள்" - தாயைப்போல பிள்ளை, நூலைப்போல சேலை என்னும் பழமொழிக்கேற்ப நடந்து கொண்டாள்.

48. இயேசு மறுபடியும் கலிலேயாவின் வழியாகப் பிரயாணம் செய்கிறார் - வியாதியஸ்தராயிருந்தவர்களைச் சொஸ்தமாக்குகிறார் - (லூக் 9:11)

மத் 14:13 இயேசு அதைக் கேட்டு, அவ்விடம் விட்டு, படவில் ஏறி, வனாந்தரமான ஓர் இடத்துக்குத் தனியே போனார்; ஜனங்கள் அதைக் கேள்விப்பட்டு, பட்டணங்களிலிருந்து கால்நடையாய் அவரிடத்திற்குப் போனார்கள்.

மத் 14:14 இயேசு வந்து, திரளான ஜனங்களைக் கண்டு, அவர்கள்மேல் மனதுருகி, அவர்களில் வியாதியஸ்தர்களாயிருந்தவர்களைச் சொஸ்தமாக்கினார்.

"இயேசு அதைக் கேட்டு, அவ்விடம் விட்டு, படவில் ஏறி, வனாந்தரமான ஓர் இடத்துக்குத் தனியே போனார்" - யோவான் ஸ்நானன் சிரச்சேதம் பண்ணப்பட்டதினால் ஜனங்கள் மத்தியில் குழப்பம் உண்டாயிருந்திருக்கும். யோவானின் சீஷர்கள் ஏரோதுவிற்கு எதிராகக் கலகம் பண்ணியிருந்திருப்பார்கள். தங்களுடைய கலகத்தில் அவர்கள் இயேசுவையும் இணைத்துக் கொள்ள விரும்பியிருக்கலாம். இந்தக் கலகத்தில் தம்மை இணைத்துக் கொண்டால் தமது விரோதிகளுக்குத் தம்மீது குற்றம் சுமத்துவதற்கு ஒரு காரணம் கிடைக்கும் என்பது இயேசுவிற்கு நன்றாகத் தெரியும். தமக்கு எதிராக அவர்கள் அதைப் பயன்படுத்தி தமது ஊழியத்தைத் தடைபண்ணக்கூடாது என்பதில் இயேசு கிறிஸ்து மிகுந்த அக்கறையோடு இருந்தார். ஆகையினால் யோவான் ஸ்நானன் சிரச்சேதம் பண்ணப்பட்ட செய்தியைக் கேள்விப்பட்ட பிறகு இயேசு கிறிஸ்து அவ்விடம்விட்டு வேறொரு இடத்திற்குச் சென்றார். வெகுதூரம் செல்லவில்லை. அருகிலுள்ள வனாந்தரமான இடத்திற்குச் சென்று அங்கு தமது ஊழியத்தைத் தொடர்ந்தார்.

"ஜனங்கள் அதைக் கேள்விப்பட்டு, பட்டணங்களிலிருந்து கால்நடையாய் அவரிடத்திற்குப் போனார்கள்" - இயேசு படவில் ஏறிப்போனார். ஆனால் ஜனங்களோ பாதையிலுள்ள அந்தக் கடலின் கிழக்குப் பகுதியிலிருந்து வடக்குப்பகுதி வரைக்கும் கரையைச் சுற்றி நடந்தே போனார்கள்.

14 அதிகாரம்

"இயேசு அவர்கள்மேல் மனதுருகினார்" - (மத் 9:36; மத் 2:6; லூக்கா 10:33 லூக்கா 15:20; எபி 5:2; 1யோவான் 3:17)

49. இயேசு ஐயாயிரம்பேருக்கு அற்புதமாகப் போஜனம் கொடுக்கிறார் - (மாற்கு 6:32 லூக் 9:11; யோவான் 6:1)

மத் 14:15 சாயங்காலமானபோது அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து: இது வனாந்தரமான இடம் நேரமுமாயிற்று, ஜனங்கள் கிராமங்களுக்குப் போய்த் தங்களுக்கு போஜனபதார்த்தங்களைக் கொள்ளும்படி அவர்களை அனுப்பிவிடவேண்டும் என்றார்கள்

மத் 14:16 இயேசு அவர்களை நோக்கி: அவர்கள் போகவேண்டுவதில்லை; நீங்களே அவர்களுக்குப் போஜனங் கொடுங்கள் என்றார்

மத் 14:17 அதற்கு அவர்கள்: இங்கே எங்களிடத்தில் ஐந்து அப்பமும் இரண்டு மீன்களுமேயல்லாமல் வேறொன்றும் இல்லை என்றார்கள்

மத் 14:18 அவைகளை என்னிடத்தில் கொண்டு வாருங்கள் என்றார்

மத் 14:19 அப்பொழுது, அவர் ஜனங்களைப் புல்லின்மேல் பந்தியிருக்கக் கட்டளையிட்டு, அந்த ஐந்து அப்பங்களையும், அந்த இரண்டு மீன்களையும் எடுத்து வானத்தை அண்ணாந்துபார்த்து ஆசீர்வதித்து, அப்பங்களைப் பிட்டுச் சீஷர்களிடத்தில் கொடுத்தார் சீஷர்கள் ஜனங்களுக்குக் கொடுத்தார்கள்

மத் 14:20 எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள்; மீதியான துணிக்கைகளைப் பன்னிரண்டு கூடை நிறைய எடுத்தார்கள்

மத் 14:21 ஸ்திரீகளும் பிள்ளைகளும் தவிர, சாப்பிட்ட புருஷர்கள் ஏறக்குறைய ஐயாயிரம் பேராயிருந்தார்கள்

"சாயங்காலம்" - யூதருக்கு இரண்டு சாயங்காலங்கள் உண்டு. ஒன்று மாலை 3 மணி. அது அந்திப்பலி செலுத்தும் நேரம். மற்றொன்று மாலை 6 மணி. சூரியன் அஸ்தமிக்கும் நேரம். இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கிற சாயங்காலம் என்பது மாலை 3 மணியாகும். மத் 14:23-இல் இந்நாளின் இரண்டாவது மாலைப்பொழுது பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

"நீங்களே அவர்களுக்குப் போஜனங் கொடுங்கள்" - எலிசா 100 பேருக்குப் போஜனம் கொடுத்தான் (2இரா 4:42-43) இயேசு கிறிஸ்துவோ ஆயிரக்கணக்கான ஜனங்களுக்குப் போஜனம் கொடுத்தார் (மத் 14:21; மத் 15:38; லூக்கா 9:10-17 யோவான் 6:6-10)

"அவைகளை என்னிடத்தில் கொண்டு வாருங்கள்" - அதிகாரத்தோடு கூறப்பட்ட கட்டளை (மத் 17:17; மத் 21:2)

"வானத்தை அண்ணாந்துபார்த்து" - கண்களை மூடி இயேசு கிறிஸ்து ஜெபம் பண்ணியதாக வேதவசனங்களில் ஆதாரம் எதுவும் இல்லை. 6 இடங்களில் அவர் தமது கண்களைத் திறந்தவாறே ஜெபம் பண்ணினார் (மத் 14:19; மாற்கு 6:41 மாற்கு 7:34; லூக்கா 9:16; யோவான் 11:41 யோவான் 17:1)

"ஆசீர்வதித்தார்" - ஒவ்வொரு முறை போஜனம் பண்ணுவதற்கு முன்பாகவும், தேவனை ஸ்தோத்தரிப்பது யூதருடைய வழக்கம். (மத் 15:36; மாற்கு 6:41 மாற்கு 8:6; யோவான் 6:11; 2கொரி 10:16)

"அப்பங்களைப் பிட்டார்" - எபிரெய தேசத்தில் அப்பம் மெல்லியதாகச் சுடப்பட்டிருக்கும். அதைப் பிட்டுப் பங்கிட வேண்டும். அப்பத்தைப் பிட்டல் என்பதற்குப் போஜனம்பண்ணுதல் என்னும் பொருளும் உண்டு. (லூக்கா 24:35; அப் 2:42,46; அப் 20:7; அப் 27:35; 2கொரி 10:16; 2கொரி 11:24

"கூடை நிறைய" யூதர்கள் எங்கு சென்றாலும் தங்களோடு கூடைகளை எடுத்துச் செல்வது வழக்கம். ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடியிருந்த இடத்தில் போதுமான அளவு கூடைகள் இருந்திருக்கும் (மத் 16:9)

14 அதிகாரம்

50. இயேசு தண்ணீரின்மீது நடக்கிறார் - பேதுருவால் தண்ணீரின்மீது நடக்க முடியவில்லை - (மாற்கு 6:45; யோவான் 6:16)

மத் 14:22 இயேசு ஜனங்களை அனுப்பி விடுகையில், தம்முடைய சீஷர்கள் படவில் ஏறி, தமக்கு முன்னே அக்கரைக்குப் போகும்படி அவர்களைத் துரிதப்படுத்தினார்.

மத் 14:23 அவர் ஜனங்களை அனுப்பி விட்டபின்பு, தனித்து ஜெபம்பண்ண ஒரு மலையின்மேல் ஏறி, சாயங்காலமான போது அங்கே தனிமையாயிருந்தார்.

மத் 14:24 அதற்குள்ளாகப் படவு நடுக்கடலிலே சேர்ந்து, எதிர்காற்றாயிருந்தபடியால் அலைகளினால் அலைவுபட்டது.

மத் 14:25 இரவின் நாலாம் ஜாமத்திலே, இயேசு கடலின்மேல் நடந்து, அவர்களிடத்திற்கு வந்தார்.

மத் 14:26 அவர் கடலின்மேல் நடக்கிறதைச் சீஷர்கள் கண்டு, கலக்கமடைந்து, ஆவேசம் என்று சொல்லி, பயத்தினால் அலறினார்கள்.

மத் 14:27 உடனே இயேசு அவர்களோடே பேசி: திடன்கொள்ளுங்கள், நான்தான், பயப்படாதிருங்கள் என்றார்.

மத் 14:28 பேதுரு அவரை நோக்கி: ஆண்டவரே! நீரேயானால் நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும் என்றான்.

மத் 14:29 அதற்கு அவர்: வா என்றார். அப்பொழுது, பேதுரு படவை விட்டிறங்கி, இயேசுவினிடத்தில் போக ஜலத்தின்மேல் நடந்தான்.

மத் 14:30 காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு, பயந்து, அமிழ்ந்துபோகையில்: ஆண்டவரே, என்னை இரட்சியும் என்று கூப்பிட்டான்.

மத் 14:31 உடனே இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து: அற்பவிசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய் என்றார்.

மத் 14:32 அவர்கள் படவில் ஏறினவுடனே காற்று அமர்ந்தது.

மத் 14:33 அப்பொழுது, படவில் உள்ளவர்கள் வந்து: மெய்யாகவே நீர் தேவனுடைய குமாரன் என்று சொல்லி, அவரைப் பணிந்துகொண்டார்கள்.

"இயேசு ஜனங்களை அனுப்பிவிடுகையில் தம்முடைய சீஷர்கள் படவில் ஏறி, தமக்கு முன்னே அக்கரைக்குப் போகும்படி அவர்களைத் துரிதப்படுத்தினார்" - சீஷர்கள் படவில் ஏறி அக்கரைக்குச் செல்ல வேண்டும். அக்கரையில் தான் ஏரோது யோவான் ஸ்நானனைச் சிரச்சேதம் பண்ணினான். இதனால் ஏற்பட்ட குழப்பமும் கலக்கமும் அக்கரையில் அதிகமாக இருந்தது. ஆகையினால் இயேசு இல்லாமல் தனியாகப் போவதற்கு சீஷர்கள் கலக்கமுற்றிருக்கலாம். ஏற்கெனவே சீஷர்கள் நடுக்கடலில் பெருங்காற்றில் சிக்கி, அவதிப்பட்டிருக்கிறார்கள் (மத் 8:23-26). அதைப் பற்றிய நினைவு அவர்களுக்கு மனச்சோர்வைத் தந்திருக்கலாம்.

"தனித்து உலகக்காரியங்களை விட்டு தேவனோடு தனித்து ஜெபம் பண்ணுவதும், வேதவாக்கியங்களைத் தியானிப்பதும் விசுவாசிகளுக்கு ஆசீர்வாதமான அனுபவமாக இருக்கும். இயேசு கிறிஸ்து பல முறை தனித்து ஜெபம் பண்ணினார் (மாற்கு 1:35; மாற்கு 6:47; லூக்கா 9:18,56; யோவான் 6:15).

இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தில் தெய்வீக வல்லமை அதிகமாக வெளிப்பட்டதற்கு தேவனோடு அவர் தனித்து ஜெபம் பண்ணியதே காரணம். இந்த வல்லமையினால்தான் அவர் சாத்தானை ஜெயித்தார். ஜெபத்தின் மூலமாகவே அவர் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொண்டார் (லூக்கா 3:21). தம்முடைய அன்றாட கிரியைகளுக்குத் தேவைப்படும்

14 அதிகாரம்

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை ஜெபத்தின் மூலமாகவே பெற்றுக் கொண்டார். விசுவாசிகளும் இதே முன்மாதிரியைக் கையாண்டு தெய்வீக வல்லமையைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பது இயேசு கிறிஸ்துவின் உபதேசம். (லூக்கா 11:13; லூக்கா 24:49; அப் 1:14; அப் 8:15; எபே 6:10-18 யூதா 1:20-24

"இரவின் நாலாம் ஜாமத்திலே" - யூதருடைய முறைமையின்படி இது அதிகாலை 3 மணி முதல் 6 மணிக்கு உட்பட்ட நேரம்.

"இயேசு கடலின்மேல் நடந்தார்" - இது ஒரு முக்கியமான அற்புதம். இதற்கு முன்பு எந்த மனுஷனும் கடலின்மீது நடந்ததில்லை.

தண்ணீர் அற்புதங்கள்

1 தண்ணீர்களின் சிருஷ்டிப்பு (யோபு 38:8-30)

2 பர்வதங்களின்மேல் தண்ணீர் நின்றது (ஆதி 1:2; சங் 104:5-6 2பேதுரு 3:5-7

3 தண்ணீரைப் பிரித்தல் (ஆதி 1:6-10 சங் 104:7-9

4. நோவாவின் ஜலப்பிரளயம் (ஆதி 6-8)

5 ஆகாருக்கு வனாந்தரத்தில் தேவன் தண்ணீர் அளித்தார் (ஆதி 21:14-21)

6 தண்ணீர் இரத்தமாக மாறுதல் யாத் 7:17-25)

7 தண்ணீர்கள்மேல், ஆரோன் கையை நீட்டி தவளைகளை வரச்செய்தான் (யாத் 8:1-5

8 தவளைகள், தண்ணீர்களில் மட்டும் இருக்கும்படிச் செய்தல் (யாத் 8:6-11)

9 சிவந்த சமுத்திரம் உறைந்துபோதல் (யாத் 14:21 15:8)

10 சிவந்த சமுத்திரம் உருகி ஓடியது (யாத் 14:26-31)

11 தண்ணீரை மதுரமாக மாற்றுதல் (யாத் 15:23-26)

12 கன்மலையிலிருந்து தண்ணீர் வரப் பண்ணுதல் (யாத் 17:1-6

13 மறுபடியும் கன்மலையிலிருந்து தண்ணீர் வரப்பண்ணுதல் (எண் 20:7-11)

14 யோர்தானைக் கடக்க, தண்ணீரைக் குவியலாகச் செய்து, உலர்ந்த தரையாக மாற்றுதல் (யோசு 3)

15 சிம்சோனுக்கு, பள்ளத்தைப் பிளக்கப் பண்ணி தண்ணீரை வரவழைத்துக் கொடுத்தல் (நியா 15:19

16 கர்த்தரிடத்திலிருந்து வந்த அக்கினி வாய்க்காலிலிருந்த தண்ணீரை நக்கிப்போட்டது (1இராஜா 18:38

17 எலியா, தன் சால்வையினால் தண்ணீரை அடித்து அதை இரண்டாகப் பிரித்து, உலர்ந்த தரையாக மாற்றுதல் 2இராஜா 2:8

18 எலிசா, எலியாவின் சால்வையினால் தண்ணீரைப் பிரித்து, உலர்ந்த தரையாக மாற்றுதல் (2இராஜா 2:14

19 தண்ணீரை உப்புப் போட்டு ஆரோக்கிய மாக்குதல் (2இராஜா 2:19-22)

20 யோசபாத்திற்குப் பள்ளத்தாக்கிலே தண்ணீர் அளித்தல் (2இராஜா 3:16-20)

21 மோவாபியர்கள், தண்ணீரை இரத்தம்போல் சிவப்பாகக் காணுதல் (2இராஜா 3:21 27

22 யோர்தான் நதியின் தண்ணீரால் நாகமான் குணமாதல் (2இராஜா 5:1-19)

23. இரும்புக் கோடாரியைத் தண்ணீரில் மிதக்கப்பண்ணுதல் (2இராஜா 6:1-7

மத்தேயு - தொகுப்புரை

14 அதிகாரம்

24 பிசாசுகள் நுழைந்த பன்றிக் கூட்டங்கள் கடலிலே பாய்ந்து ஜலத்தில் மாண்டுபோதல். (மத் 8.32)

25. இயேசு கடலின்மேல் நடந்து வருதல் (மத் 14.22-33)

26 கடலிலிருந்து பிடித்த மீனின் வாயிலிருந்து வெள்ளிப்பணத்தை எடுத்தல் (மத் 17:24-27)

27 காற்றை நிற்கப் பண்ணி அமைதல் உண்டாக்குதல் (மாற்கு 4.35-41)

28 வலை கிழிந்துபோகத்தக்கதாக மிகுதியான மீன்களைப் பிடித்தல் (லூக்கா 5.1-11)

29 தண்ணீரைத் திராட்சரசமாக மாற்றுதல் (யோவான் 2.1-11)

30 பெதஸ்தா குளத்து தண்ணீரினால் வியாதியஸ்தர்கள் குணமாக்கப்படுதல் (யோவான் 5.1-4)

31 படவு, உடனடியாகக் கரையைச் சேருதல் (யோவான் 6.21)

32 மறுபடியும், திரளான மீன்கள் அகப்படுதல் (யோவான் 21.3-11)

33 சமுத்திரத்தில் மூன்றிலொருபங்கு இரத்தமாக மாறுதல் (வெளி 8.8-9)

34. தண்ணீரில் மூன்றிலொருபங்கு எட்டியைப்போலக் கசப்பாக மாறுதல் (வெளி 8.10-11)

35. சமுத்திரம் முழுவதும் இரத்தமாக மாறுதல் (வெளி 16.3)

36. ஆறுகள், இரத்தமாக மாறுதல் (வெளி 16.4-7)

37 ஐபிராத் நதி வற்றிப்போதல் (வெளி 16.12)

38 ஆயிர வருஷ நதியின் சிருஷ்டிப்பு (எசே 47)

"அவர் கடலின்மேல் நடக்கிறதைச் சீஷர்கள் கண்டு, கலக்கமடைந்து, ஆவேசம் என்று சொல்லி, பயத்தினால் அலறினார்கள்" - கிரேக்க மொழியில் "பேந்தாம்" (phantom) என்னும் சொல் தமிழில் "ஆவேசம்" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தை இந்த வசனத்திலும் மாற்கு 6.49-ஆவது வசனத்தில் மட்டுமே வருகிறது. பல தேசங்களில் இரவு வேளைகளில் கடல்தேவதைகள் வரும் என்பது புறஜாதியாரின் நம்பிக்கை. இது வரும்போது கப்பல் உடைந்துபோகும் என்பதற்கு ஓர் அறிகுறி என்று புறஜாதியார் பயத்தில் அலறுவார்கள்

ஆவேசம் (phantom) - φάντασμα - phantasma - 5326

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - ஆவேசம்

"இயேசுவினிடத்தில் போக பேதுரு ஜலத்தின் மேல் நடந்தான்" - இயேசுவின்மீது தனது பார்வை இருந்த வரையிலும் அவன் கடலின்மீது நடந்தான். தன் பார்வையை இயேசுவைவிட்டு அகற்றிவிட்டுப் பெருங்காற்றைப் பார்த்தபோது அவனுக்குப் பயம் உண்டாயிற்று. தண்ணீரில் அமிழ்ந்துபோனான்

பலமாயிருக்கிற (boisterous) - ἰσχυρός - ischyros - 2478

பெயரடை - வல்லவராயிருக்கிற, பலவானுடைய, பலமாயிருக்கிற, பலமுள்ள, பலத்த, வல்லமையுள்ள (மத் 12:29; லூக்கா 11:22)

அமிழ்ந்துபோ (sink) - καταποντίζω - katapontizoo 2670

வினைச்சொல் அமிழ்ந்துபோ (மத் 18.6)

"இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்தார்" - இயேசு தண்ணீரின்மீது நிற்கிறார். தண்ணீரின்மீது நிற்பதே ஓர் அதிசயம். தண்ணீரில் நின்றுகொண்டு பேதுருவைப் பிடிப்பது மற்றும் ஒரு அதிசயம்.

"அற்பவிசுவாசியே" - (மத் 6.30

மத்தேயு – தொகுப்புரை

14 அதிகாரம்

"ஏன் சந்தேகப்பட்டாய்" - சந்தேகப்படுதல் என்பதைக் குறிப்பதற்குக் கிரேக்க மொழியில் பல சொற்கள் உள்ளன.

சந்தேகப்படு (doubt) - διστάζω distazoo - 1365

வினைச்சொல் - சந்தேகப்படு மத் 28:17

இருமனமுள்ள (double-minded) - δίψυχος - dipsychos - 1374

பெயரடை - இருமனமுள்ள (யாக் 1:8; யாக் 4:8)

தயங்கு (hesitate) - διακωλύω - diakoolyoo - 1254

வினைச்சொல் - தயங்கு, சந்தேகப்படு, தடைசெய் (மத் 21:21; மாற்கு 11:23; ரோமர் 4:20; ரோமர் 14:23; யாக் 1:6; அப் 10:20; அப் 11:12)

நாம் ஜெபிக்கும்போது கர்த்தர் நமக்குப் பதில் கொடுப்பாரா அல்லது கொடுக்கமாட்டாரா என்று சந்தேகப்படக்கூடாது. கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை நாம் நம்பவேண்டும். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் ஜெபிக்க வேண்டும். சந்தேகப்படாமல் விசுவாசத்தோடு கர்த்தரிடத்தில் நமது விண்ணப்பங்களை ஏறெடுக்கும்போது அவர் நமக்கு நிச்சயமாகவே பதில் கொடுப்பார்.

"காற்று அமர்ந்தது" - மற்றும் ஒரு அற்புதம். படவிலிருந்த சீஷர்களுக்கு இயேசுவே மேசியா, தேவனுடைய குமாரன் என்பதை இந்த அற்புதங்களெல்லாம் நிரூபித்துக் காண்பித்தன.

"மெய்யாகவே நீர் தேவனுடைய குமாரன் என்று சொல்லி, அவரைப் பணிந்து கொண்டார்கள்" - ஜனங்கள் தம்மை ஆராதிப்பதை இயேசு கிறிஸ்து பல இடங்களில் அங்கீகரித்திருக்கிறார். இது அவருடைய தெய்வத்துவத்தை நிரூபிக்கிறது (மத் 2:2,11; மத் 8:2; மத் 9:18; மத் 14:33; மத் 15:25; மத் 18:26; மத் 28:9,17; மாற்கு 5:6; லூக்கா 24:52; யோவான் 9:38). மனுஷருடைய ஆராதனையை அவர் அங்கீகரிக்கவில்லை என்றால் அவர் சிருஷ்டிகராக இல்லாமல், ஒரு சிருஷ்டியாகவே இருப்பார் (வெளி 19:10; வெளி 22:8-9).

"நீர் தேவனுடைய குமாரன்" - இரண்டாம் முறையாக மனுஷர் இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரன் என்று அங்கீகரிக்கிறார்கள் (யோவான் 1:49). பிசாசுகளும் இயேசுவைத் தேவகுமாரன் என்று அறிக்கையிட்டன (மத் 8:29; மத் 16:16; மத் 27:54).

51. இயேசு கெனேசரேத்து நாட்டில் பிணியாளிகள் எல்லாரையும் சொஸ்தமாக்குகிறார் - (மாற்கு 6:53)

மத் 14:34 பின்பு, அவர்கள் கடலைக் கடந்து, கெனேசரேத்து நாட்டில் சேர்ந்தார்கள்.

மத் 14:35 அவ்விடத்து மனுஷர் அவரை இன்னார் என்று அறிந்து, சுற்றுப்புறமெங்கும் செய்தி அனுப்பி, பிணியாளிகளெல்லாரையும் அவரிடத்தில் கொண்டுவந்து,

மத் 14:36 அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் அவர்கள் தொடும்படி உத்தரவாகவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டார்கள்; தொட்ட யாவரும் சொஸ்தமானார்கள்.

"கெனேசரேத்து நாடு" நல்ல விளைச்சல் நிலம் உள்ள தேசம். கலிலேயாவின் வடக்குப் பகுதியிலும், யோர்தான் நதியின் மேற்குப் பகுதியிலும் அமைந்துள்ள நாடு. இது 4 மைல் நீளமும், 2 மைல் அகலமும் உடையது. நல்ல பழவர்க்கங்கள் இந்தப் பூமியில் விளையும்.

மத்தேயு - தொகுப்புரை

14 அதிகாரம்

"அவ்விடத்து மனுஷர் அவரை இன்னார் என்று அறிந்தார்கள்" - அவர்கள் இயேசு கிறிஸ்துவையும், அவருடைய தெய்வீக வல்லமையையும் அறிந்தார்கள். ஆகையினால் சுற்றுப்புறமெங்கும் செய்தி அனுப்பி, பிணியாளிகளெல்லாரையும் அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்.

"வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் அவர்கள் தொடும்படி" - (மத் 8:3; 9:20)

"சொஸ்தமானார்கள்" - முழுவதுமாகக் குணமடைந்தார்கள். பூரணமாக இரட்சிக்கப்பட்டார்கள். இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்கச்சொல் டையோசோஸோ (diasozo). இந்தச் சொல்லுக்கு "பூரணமாகுதல்" என்று பொருள். 8 இடங்களில் இச்சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எல்லா இடங்களிலுமே இது சரீர வியாதி சொஸ்தமாவதையே குறிக்கும். (மத் 14:36; லூக்கா 7:3; அப் 23:24; அப் 27:43; அப் 28:1,4; 1பேதுரு 3:20)

சாதாரண முழுமையாதல் அல்ல. பரிபூரணமான முழுமையாதல். இயேசு கிறிஸ்து ஒருவனைச் சொஸ்தமாக்கும்போது அவனை அரைகுறையாகச் சொஸ்தமாக்கமாட்டார். பரிபூரணமாகச் சொஸ்தமாக்குவார். இந்த விசுவாசம் நமக்குள் ஆழமாய் பதிந்திருக்க வேண்டும். நமது விசுவாசத்தின்படி நமக்கு ஆகக்கடவது என்று இயேசு கிறிஸ்து கூறியிருக்கிறார் (மத் 8:13). நம்மிடத்தில் அரைகுறை விசுவாசம் காணப்படுமாயின் நமது சுகமாகுதலும் அரைகுறையாகவே இருக்கும்.

சொஸ்தமாக்கு (healed) - διασώζω - **diasoozoo** - 1295

வினைச்சொல் - சொஸ்தமாக்கு, குணமாக்கு, பத்திரமாய் கொண்டுபோ, காப்பாற்று, தப்புவி **(to be saved throughout or completely healed)**

15 அதிகாரம்

52. இயேசு வேதபாரகரையும் பரிசேயரையும் கடிந்து கொள்கிறார் - மாற்கு 7:1

மத் 15:1 அப்பொழுது, எருசலேமிலிருந்து வந்த வேதபாரகரும் பரிசேயரும் இயேசுவினிடத்தில் வந்து:

மத் 15:2 உம்முடைய சீஷர்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தை ஏன் மீறி நடக்கிறார்கள்? கைகழுவாமல் போஜனம் பண்ணுகிறார்களே என்றார்கள்.

மத் 15:3 அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: நீங்கள் உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை ஏன் மீறி நடக்கிறீர்கள்?

மத் 15:4 உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்றும், தகப்பனையாவது தாயையாவது நிந்திக்கிறவன் கொல்லப்படவேண்டும் என்றும், தேவன் கற்பித்திருக்கிறாரே.

மத் 15:5 நீங்களோ எவனாகிலும் தகப்பனையாவது தாயையாவது நோக்கி: உனக்கு நான் செய்யத்தக்க உதவி எது உண்டோ, அதைக் காணிக்கையாகக் கொடுக்கிறேன் என்று சொல்லி, தன் தகப்பனையாவது தன் தாயையாவது கனம்பண்ணாமற் போனாலும், அவனுடைய கடமை தீர்ந்ததென்று போதித்து,

மத் 15:6 உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்கி வருகிறீர்கள்.

மத் 15:7 மாயக்காரரே, உங்களைக் குறித்து:

மத் 15:8 இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது.

மத் 15:9 மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார்.

"வேதபாரகர்" - மத் 2:4

"பரிசேயர்" - (மத் 3:7)

"எருசலேம்" - (யோசுவா 18:28)

"முன்னோர்களின் பாரம்பரியம்" - நியாயப்பிரமாணம் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகள் ஆகியவற்றைவிட வேதபாரகருடைய எழுத்துக்கள் யூதருக்கு முக்கியமானவை. முன்னோர்களின் வார்த்தைகள் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைவிட முக்கியமானவை என்பது யூதருடைய உபதேசம். யூதருடைய இலக்கியங்களில் இப்பேர்ப்பட்ட உபதேசங்கள் ஏராளமாக உள்ளன.

"கைகழுவாமல் போஜனம் பண்ணுகிறார்களே" - எந்த மார்க்கத்திலும் இது சாதாரண குற்றம்தான். ஆனால் இயேசுவைக் குற்றப்படுத்துவதற்காக வேதபாரகரும் பரிசேயரும் இந்தச் சிறிய காரியத்தைக்கூட பெரிது பண்ணினார்கள் (மத் 15:1-9)

"நீங்கள் உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை ஏன் மீறி நடக்கிறீர்கள்" - இயேசுவின் சீஷர்கள் முன்னோரின் பாரம்பரியத்தை மீறி நடந்தார்கள் என்பது வேதபாரகர் பரிசேயர் ஆகியோரின் குற்றச்சாட்டு. இயேசு கிறிஸ்து அவர்களுக்குப் பிரதியுத்தரமாக அவர்களும் தேவனுடைய கற்பனையை மீறி நடப்பதாகக் குற்றம் சுமத்துகிறார். அவர்கள் தேவனுடைய வார்த்தையைவிட மனுஷருடைய பாரம்பரியத்திற்கு அதிக முக்கியத்துவம் தருகிறார்கள் (மத் 16:6-12; மத் 23:1-36; மாற்கு 3:1-6; மாற்கு 7:1-13; யோவான் 5:10-16). யூதர்களுடைய இந்தத் தவறை பவுலும் கடிந்து கூறுகிறார் (கலா 1:13-14; கொலோ 2:8; 1தீமோ 1:4; 1தீமோ 6:20; 2தீமோ 2:14-16; தீத்து 1:14; தீத்து 3:9)

"உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக" பெற்றோருக்கு மரியாதை கொடுத்து, அவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அத்துடன் அவர்களை ஆதரித்துப் பராமரிக்க வேண்டும். (யாத் 20:12; யாத் 21:17; உபா 5:16; உபா 27:16; சங் 23:22; 1தீமோ 5:17)

15 அதிகாரம்

"தகப்பனையாவது தாயையாவது நிந்திக்கிறவன் கொல்லப்பட வேண்டும்" - (யாத் 21:17; லேவி 20:9; உபா 27:16)

"அதைக் காணிக்கையாகக் கொடுக்கிறேன்" - இது யூதருடைய பழக்கம். பிள்ளைகள் பெற்றோரைப் பராமரிக்க வேண்டும். இது யூதருடைய பிரமாணம். அவ்வாறு பராமரிக்கவில்லையென்றால் அது பிரமாணத்தை மீறும் செயலாகும். இது ஒரு பாவம். இந்தப் பாவத்திலிருந்து விடுதலை பெறுவதற்காக அவர்கள் இதற்குரிய காணிக்கையை ஆசாரியரிடம் செலுத்தலாம். சிறிய தொகையைக் காணிக்கையாகச் செலுத்திவிட்டு, பெற்றோரைப் பராமரிக்கும் பொறுப்பிலிருந்து விடுதலை பெறலாம். அதன்பின்பு பெற்றோர் படும் கஷ்டங்களுக்குப் பிள்ளைகள் பொறுப்பாக மாட்டார்கள். ஆனால் இயேசு கிறிஸ்து இந்த முறைமையை அங்கீகரிக்கவில்லை. பிள்ளைகள் பெற்றோருக்கு மரியாதை கொடுத்து, கீழ்ப்படிந்து அவர்களைப் பராமரிக்க வேண்டும் என்பது இயேசுவின் உபதேசம்.

காணிக்கை (gift) - δῶρον - dooron - 1435

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - காணிக்கை, ஈவு, வெகுமதி

மத் 5:23-24, மத் 8:4, மத் 23:18-19; மாற்கு 7:11, லூக்கா 21:4, எபி 5:1; எபி 8:3-4; எபி 9:9 எபி 11:4

"மாயக்காரர்" - (யோபு 27:8, மத் 6:2)

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 13

"இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது" - (மத் 15:8; ஏசா 29:13)

"மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்" - இன்றைய உலகத்தில் ஏராளமான மார்க்கங்கள் உள்ளன. அவற்றில் பல மனுஷருடைய கற்பனைகளே. அந்த மார்க்கங்களில் தங்கள் சொந்த கற்பனையையே உபதேசம் பண்ணுகிறார்கள். ஆகையினால் அந்த மார்க்கமும் வீணானது. அவர்களுடைய ஆராதனையும் வீணானது.

53. மனுஷனைத் தீட்டுப்படுத்தும் காரியம் - பாவங்கள் ஆத்துமாவை அழிக்கும் - (மாற்கு 7:14; கலா 5:19)

மத் 15:10 பின்பு அவர் ஜனங்களை வரவழைத்து, அவர்களை நோக்கி: நீங்கள் கேட்டு உணருங்கள்.

மத் 15:11 வாய்க்குள்ளே போகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது, வாயிலிருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்றார்.

மத் 15:12 அப்பொழுது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து: பரிசேயர் இந்த வசனத்தைக் கேட்டு இடறலடைந்தார்கள் என்று அறிவீரா என்றார்கள்.

மத் 15:13 அவர் பிரதியுத்தரமாக: என் பரம பிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும்.

மத் 15:14 அவர்களை விட்டுவிடுங்கள், அவர்கள் குருடருக்கு வழிகாட்டுகிற குருடராயிருக்கிறார்கள்; குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியிலே விழுவார்களே என்றார்.

மத் 15:15 அப்பொழுது, பேதுரு அவரை நோக்கி: இந்த உவமையை எங்களுக்கு வெளிப்படுத்தவேண்டும் என்றான்.

மத் 15:16 அதற்கு இயேசு: நீங்களும் இன்னும் உணர்வில்லாதவர்களாயிருக்கிறீர்களா?

மத் 15:17 வாய்க்குள்ளே போகிறதெல்லாம் வயிற்றிலே சென்று, ஆசனவழியாய்க் கழிந்துபோம் என்பதை நீங்கள் இன்னும் அறியவில்லையா?

15 அதிகாரம்

மத் 15:18 வாயிலிருந்து புறப்படுகிறவைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டுவரும், அவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்

மத் 15:19 எப்படியெனில், இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும் கொலை பாதகங்களும் விபசாரங்களும், வேசித்தனங்களும் களவுகளும், பொய்ச்சாட்சிகளும் தூஷணங்களும் புறப்பட்டுவரும்

மத் 15:20 இவைகளே மனுஷனைத் தீட்டுப் படுத்தும் கைகழுவாமல் சாப்பிடுகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது என்றார்

"நீங்கள் கேட்டு உணருங்கள்" - தேவன் நம்மிடம் எதிர்பார்க்கும் ஒரே காரியம் இதுதான் வேதவாக்கியம் தெளிவாக உள்ளது கேட்கிறவன உணர்ந்துகொள்வான நாம வேதவாக்கியங்களை நமது காதுகளினால கேட்டு நமது இருதயங்களில அதற்குக் கீழ்ப்படிய வேண்டும்.

"வாய்க்குள்ளே போகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது, வாயிலிருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும் - எந்தப் போஜனமும் மனுஷனைத தீட்டுப்படுத்தாது. (ரோமர் 14:1-6,17-23, கொலோ 2:14-17; 1கொரி 8:8 தீமோ 4:1-8) மதுபானங்கள், போதைப் பொருட்கள் ஆகியவை சரீரத்தைப் பாதிக்கும். ஆத்துமாவையும் அழித்துப்போடும். (மத் 15:17, 19-20)

தீர்க்கதரிசன எண் - 20

"என் பரம பிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும்" - (மத் 15:13) கள்ளத்தீர்க்கதரிசிகளின நியாயத்தீர்ப்பைப் பற்றி இந்த வசனம் கூறுகிறது (மத் 7:21; வெளி 20:11-15

"வேரோடே பிடுங்கப்படும்" புறஜாதி மார்க்கத்தலைவர்களும், அவர்களுடைய உபதேசங்களும் அழிக்கப்படும். மத் 7:21)

"அவர்களை விட்டுவிடுங்கள், அவர்கள் குருடருக்கு வழிகாட்டுகிற குருடராயிருக்கிறார்கள் குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியிலே விழுவார்களே" - பரிசேயர்களும், அவர்களுடைய சீஷர்களும் தேவனுடைய பிரமாணங்களுக்கு வேண்டுமென்றே தங்களுடைய கண்களை மூடிக்கொள்கிறார்கள் ஜனங்கள் தங்களைப் போற்றவேண்டும் புகழவேண்டும் என்பதற்காகத் தேவனுடைய பிரமாணங்களை ஒதுக்கி வைத்துவிட்டு மனுஷரைப் பிரியப்படுத்தும் பிரமாணங்களை உபதேசம் பண்ணுகிறார்கள் இதனால் இவர்களும் அழிந்துபோவார்கள் இவர்களைப் பின்பற்றுகிறவர்களும் அழிந்து போவார்கள் (மத் 15:12-14; மத் 23:16-26; லூக்கா 6:39; யோவான் 12:40; ரோமர் 2:19 ரோமர் 11:7,25; 2கொரி 3:14, 2கொரி 4:4 ஏசா 56:10)

ஆசனவழி (draught) - ἀφεδρῶν - **aphedroon** - 856

ஆங்கில பெயர்ச்சொல் - ஆசனவழி **place for physical waste, sewer** (மத் 15:17 மாற்கு 7:19)

மனுஷனைத் தீட்டுப்படுத்தும் காரியங்கள்

1 பொல்லாத சிந்தனைகள் - மனுஷருடைய தாக்கங்கள் (லூக்கா 9:46) கற்பனைகள் (ரோமர் 1:21) சந்தேகப்படுதல (ரோமர் 14:1, 1தீமோ 2:8) விவாதம் பண்ணுதல (பிலி 2:14) சிந்தனைகள் (மத் 15:19, மாற்கு 7:21 லூக்கா 2:35 லூக்கா 5:22 லூக்கா 6:8 லூக்கா 9:47; லூக்கா 24:38, 1கொரி 3:20; யாக் 2:4

2 கொலைபாதகங்கள் (மத் 15:19, மாற்கு 7:21 மாற்கு 15:7, லூக்கா 23:19-25; ரோமர் 1:29, அப் 9:1; கலா 5:21; வெளி 9:21

3 விபச்சாரங்களும், வேசித்தனங்களும் (மத் 5:32)

4 களவுகள் (மத் 15:19; மாற்கு 7:21

5 பொய்ச்சாட்சிகள் (மத் 15:19, மத் 26:59; மாற்கு 10:19, ரோமர் 13:9; அப் 6:13; 1கொரி 15:15

15 அதிகாரம்

6 தூஷணங்கள் மாற்கு 7:19-21; ரோமர் 1:29-32 1கொரி 6:9-11 கலா 5:19-21; எபே 4-5 கொலோ 3:5-10

சிந்தனை (imagination)

διαλογισμός - dialogismos - 1261

ஆண்பால் பெயர்ச்சொல - சிந்தனை யோசனை தர்க்கம் குற்றமாய நிர்ணயித்தல (evil thoughts, reasonings, debatings, and other intellectual rebellions against God)

54. சீரோபேனிக்கேயா ஸ்திரீயின் குமாரத்தியை இயேசு குணப்படுத்துகிறார் - மாற்கு 7:24

மத் 15:21 பின்பு இயேசு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு தீரு சீதோன பட்டணங்களின திசைகளுக்குப் போனார்

மத் 15:22 அப்பொழுது அந்தத் திசைகளில குடியிருக்கிற கானானிய ஸ்திரீ ஒருத்தி அவரிடத்தில வந்து. ஆண்டவரே, தாவீதின குமாரனே எனக்கு இரங்கும். என மகள பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள என்று சொல்லிக கூப்பிட்டாள

மத் 15:23 அவளுக்குப் பிரதியுத்தரமாக அவர் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை அப்பொழுது அவருடைய சீஷர்கள வந்து இவள் நம்மைப் பினதொடர்ந்து கூப்பிடுகிறாளே இவளை அனுப்பிவிடும் என்று அவரை வேண்டிக்கொண்டார்கள்

மத் 15:24 அதற்கு அவர். காணாமற் போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பட்டேனே யன்றி. மற்றபடியல்லவென்றார்

மத் 15:25 அவள் வந்து. ஆண்டவரே. எனக்கு உதவிசெய்யும் என்று அவரைப் பணிந்து கொண்டாள்

மத் 15:26 அவர் அவளை நோக்கி: பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து. நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நலலதலல என்றார்

மத் 15:27 அதற்கு அவள் மெய்தான் ஆண்டவரே ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலி ருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே என்றாள்

மத் 15:28 இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக. ஸ்திரீயே. உன் விசுவாசம பெரிது நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார் அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள

"திசைகள்" - எலலை, இது கடறகரையைக் குறிக்காது யூதருடைய தேசத்தின எலலையைக் குறிக்கும்

திசை (coasts) - μέρος - meros - 3313

பால வேறுபாடறற பெயர்ச்சொல திசை பகுபுறம் கண்டம்

"கானானிய ஸ்திரீ" மததேயு எழுதின சுவிசேஷத்தில 24 ஸ்திரீகளின பெயர்கள குறிப்பிடப்படவிலலை மத் 8:14 மத் 9:18.20 மத் 12:42 மத் 13:33 மத் 14:6 மத் 15:22 மத் 18:25 மத் 20:20 மத் 25:1-3 மத் 26:7.69.71 மத் 27:55 8 ஸ்திரீகளின பெயர்கள குறிப்பிடப்பட்டிருக்கிறது. (மத் 13:55.6.18 மத் 14:6 மத் 27:56 மத் 28:1)

"தாவீதின குமாரன" (மத் 1:1)

"கொடிய வேதனைப்படுகிறாள்" பிசாசின பிடியினால மிகவும் அவதிப்படுகிறாள பிசாசு வலுவாகப் பிடித்திருக்கிறது. (மத் 15:22 மத் 17:15 மத் 21:40 இந்தக் காரியமும் மத் 8:6 இல கூறப்பட்டிருக்கிற காரியமும் வெவவேறானவை

வேதனைப்படுகிறாள் (vexed)

δαιμονίζομαι

daimonizomai 1139

மத்தேயு - தொகுப்புரை

15 அதிகாரம்

விணைச்சொல் - பிசாசு பிடித்திரு பிசாசினால் வேதனைப்படு (to be controlled by a demon, demonized) (மத் 4:24 மத் 8:16,28-33; மத் 9:32; மத் 12:22 மாற்கு 1:32; மாற்கு 5:15-18 லூக்கா 8:36; யோவான் 10:21)

"அவர் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை" - இந்த வேளையில் அந்த ஸ்திரீக்கு அவளுடைய விசுவாசத்தை வெளிப்படுத்துவதற்கும், அவளுடைய விண்ணப்பத்தை முழுமையாக வேண்டிக்கொள்வதற்கும் அவளுக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கலாம்.

"அப்பொழுது அவருடைய சீஷர்கள் வந்து: இவள் நம்மைப் பின்தொடர்ந்து கூப்பிடுகிறாளே, இவளை அனுப்பிவிடும் என்று அவரை வேண்டிக்கொண்டார்கள்" - தேவனுடைய ஊழியம் என்பது கிருபை நிறைந்தது. மனதுருக்கமுள்ளது. தேவனுடைய இரக்கத்தையும் கிருபையையும் மனதுருக்கத்தையும் ஜனங்களுக்கு அறிவிப்பதே தேவனுடைய ஊழியம். தேவஊழியம் செய்கிறவர்களிடம் இப்போப்பட்ட பண்பு காணப்பட வேண்டும் (மத் 8:17, யோவான் 10:10; 1யோவான் 3:8 1பேதுரு 2:24)

"காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றபடியல்ல" - தேவனுடைய திட்டத்தின் பிரகாரம் இரட்சிப்பு புறஜாதியாருக்கு வருவதற்கு முன்பாக யூதருக்கே முதலாவது வருகிறது. (யோவான் 4:22, மத் 10:6; ரோமர் 1:16) தேவன் இதே ஆசீர்வாதத்தைப் புறஜாதியாருக்கும் திட்டமிட்டு வைத்திருக்கிறார் (மத் 21:43 யோவான் 10:16; ரோமர் 1:16; ரோமர் 9:24-33, அப் 15:13-18; எபே 3:1-11)

"காணாமற்போன ஆடுகள்" - தேவனை விட்டுப் பிரிந்து பாவத்தில் சிக்கியிருப்பவர்கள். (மத் 10:6)

"ஆண்டவரே, எனக்கு உதவிசெய்யும் என்று அவரைப் பணிந்து கொண்டாள்" - இயேசு கிறிஸ்துவின் பாதத்தில் கானானிய ஸ்திரீ விழுந்து, அவருடைய இரக்கத்திற்காக கெஞ்சுகிறாள்

கானானிய ஸ்திரீ ஏறெடுத்த ஜெபத்தின் அம்சங்கள்

1. சுருக்கமானது
2. தாழ்மையானது
3. பக்தியுள்ளது
4. தேவையுள்ளது
5. ஆர்வமுள்ளது
6. மரியாதையுள்ளது
7. ஆராதனையுள்ளது
8. விடாமுயற்சியுடையது
9. தீர்மானம் உடையது
10. கிறிஸ்துவில் முழு விசுவாசம் உடையது

நல்லது (good) - καλός - kalos - 2570

பொருள் - நல்ல, நலமாயிருக்கிற நன்மை, யோக்கியமான, சிறந்த (right, good, proper) மாற்கு 7:27 கலா 4:18; ரோமர் 14:21.

"பிள்ளைகளின் அப்பம்" - தேவனுடைய ராஜ்யத்தில் யூதர்களே முதலாவது புத்திரர் (மத் 8:12) அவர்களுடைய அப்பம் என்பது மேசியாவின் மூலமாக வரும் ஆசீர்வாதங்கள். சரீரம், ஆத்துமா, ஆவி, ஆகியவற்றின் இரட்சிப்பு, பாவம், வியாதி, பிசாசுகள், சாத்தானின் அந்தகார சக்திகள் ஆகியவற்றிலிருந்து விடுதலை இவை இயேசு கிறிஸ்துவின் ஆசீர்வாதங்களாகும். இந்த ஆசீர்வாதங்கள் யூதருக்குச் சுதந்தரமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால்தான் இயேசு கிறிஸ்து பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல என்றார் (மத் 7:7-11; மத் 17:20, மத் 21:22, மாற்கு 9:23; மாற்கு 11:22-24, லூக்கா 11:1-13; லூக்கா 18:1-14, யோவான் 14:12-15; யோவான் 15:7,16, 1யோவான் 3:21-22; 1யோவான் 5:14-15

15 அதிகாரம்

"நாய்க்குட்டிகள்" - 4 இடங்களில் மட்டுமே இந்தச்சொல் வருகிறது (மத் 15:26,27 மாற்கு 7:27,28) யூதர்கள் புறஜாதியாரை நாய்க்குட்டிகள் என்று அழைத்தார்கள் இயேசு கிறிஸ்து இந்த வாக்கியத்தை பயன்படுத்தாமல் அவர்களுடைய வழக்குச்சொல்லைக் கூறுகிறார் (1சாமு 17:43; 2சாமு 3:8; 2சாமு 9:8 2இராஜா 8:13 மத் 7:6) கிழக்குத் தேசத்தில் நாய்கள் வீடுகளில் பராமரிக்கப்படுவதில்லை நாய்க்குட்டிகள் என்னும் சொல் யாருடைய மனதையும் புண்படுத்தக்கூடிய சொல் அல்ல புறஜாதியார்கள் தேவனுடைய உடன்படிக்கைக்குப் புறம்பானவர்கள் என்னும் கருத்தைக் கூறும் யூதருடைய வழக்குச்சொல் ஆகும்.

நாய்க்குட்டி (little dog) - κυνάριον - kynarion - 2952

பால்வேறுபாடற்ற பெயர்ச்சொல் - நாய்க்குட்டி

"மெய்தான் ஆண்டவரே ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே" - தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்வதற்குப் பிரமாணத்தின்படி தான் தகுதியற்றவள் என்பதைக் கானானிய ஸ்திரீ அங்கீகாரம் பண்ணுகிறாள் ஒரு எஜமான் தன் பிள்ளைகளுக்கு அப்பத்தைக் கொடுப்பார் அப்போது கீழே விழும் அப்பத்தின் துணிக்கைகளை அங்குள்ள நாய்கள் தின்னும் அதுபோல தனக்கும் இரங்கி, எப்படியாவது தன் மகளைக் குணப்படுத்த வேண்டுமென்று இயேசு கிறிஸ்துவிடம் மன்றாடுகிறாள் நாய்க்குட்டிகள் கீழேவிழும் துணிக்கைகளைச் சாப்பிடுவதினால் பிள்ளைகளுக்கு அப்பம் கிடைக்காமல் போகாது அவர்களுக்கும் ஏராளமாக அப்பம் உள்ளது.

"ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது" - கானானிய ஸ்திரீயின் விண்ணப்பத்தை இயேசு கிறிஸ்துவால் ஒதுக்கி வைக்க முடியவில்லை அவளுடைய விண்ணப்பத்திற்குப் பதில் கொடுத்தார் இந்த விவாதத்தின் இறுதியில் கானானிய ஸ்திரீயின் மகள் ஆரோக்கியமடைந்தாள் அவள் சொஸ்தமானாள் தேவனுடைய பிள்ளைகளும் சொஸ்தமாக முடியும். (மத் 7:9-11; மத் 6:30; மத் 14:31; மத் 16:8) உன் விசுவாசம் பெரியது என்று இயேசு இரண்டு இடத்தில் மட்டுமே கூறியிருக்கிறார் (மத் 8:10-13; மத் 15:28)

"நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது" - இந்த வாக்குத்தத்தம் எல்லா விசுவாசிகளுக்கும் உரியது நாம் விசுவாசிக்கிறபடி தேவன் நமது தேவைகளைச் சந்திப்பார் (மத் 15:28)

55. கலிலேயாவில் இயேசு வியாதியஸ்தர்கள் அனைவரையும் சொஸ்தப்படுத்துகிறார் - (மாற்கு 7:31)

மத் 15:29 இயேசு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, கலிலேயாக் கடலருகே வந்து ஒரு மலையின்மேல் ஏறி, அங்கே உட்கார்ந்தார்

மத் 15:30 அப்பொழுது, சப்பாணிகள் குருடர், ஊமையர், ஊனர் முதலிய அநேகரை, திரளான ஜனங்கள் கூட்டிக் கொண்டு இயேசுவினிடத்தில் வந்து அவர்களை அவர் பாதத்திலே வைத்தார்கள்; அவர்களை அவர் சொஸ்தப்படுத்தினார்

மத் 15:31 ஊமையர் பேசுகிறதையும் ஊனர் சொஸ்தமடைகிறதையும், சப்பாணிகள் நடக்கிறதையும், குருடர் பார்க்கிறதையும் ஜனங்கள் கண்டு, ஆச்சரியப்பட்டு, இஸ்ரவேலின் தேவனை மகிமைப்படுத்தினார்கள்

15 அதிகாரம்

"அவர்களை அவர் பாதத்திலே வைத்தார்கள்" - வியாதியஸ்தன் தான் சொஸ்தமாகுமாறு செய்யவேண்டிய காரியம் இதுதான். தேவனிடத்திலிருந்து பதில் கிடைக்க வேண்டுமென்றால் நாமும் இதைத்தான் செய்ய வேண்டும். நாம் இயேசு கிறிஸ்துவின் பாதத்தருகே வரவேண்டும் (1பேதுரு 5:7) இயேசுவின் பாதத்திற்கு வந்தவர்கள் யாருமே தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெறாமல் திரும்பிப் போனதில்லை.

"அவர்களை அவர் சொஸ்தப்படுத்தினார்" - (மத் 13:58)

"இஸ்ரவேலின் தேவனை மகிமைப் படுத்தினார்கள்" - வியாதியஸ்தர்கள் பரிபூரணமாகக் குணமானார்கள். அவர்களுடைய கவலைகள், கண்ணீர்கள் எல்லாம் தீர்ந்துபோயிற்று. உள்ளத்தில் சந்தோஷமும், சமாதானமும், சரீரத்தில் ஆரோக்கியமும் உண்டாயிற்று. ஆகையினால் அவர்கள் மிகுந்த ஆச்சரியப்பட்டு இஸ்ரவேலின் தேவனை மகிமைப்படுத்தினார்கள் (அப் 10:38; யோவான் 10:10; லூக்கா 13:16) தேவன் குணமாக்கும்போது பரிபூரணமாகக் குணமாக்குகிறார். அவர் யாரையும் அரைகுறையாகவோ, தவணைமுறையிலோ சொஸ்தமாக்குவதில்லை.

56. நாலாயிரம் பேருக்கு அற்புதமாகப் போஜனம் கொடுக்கிறார் - (மாற்கு 8:1 மத் 14:15)

மத் 15:32 பின்பு, இயேசு தம்முடைய சீஷர்களை அழைத்து: ஜனங்களுக்காகப் பரிதபிக்கிறேன், இவர்கள் என்னிடத்தில் மூன்றுநாள் தங்கியிருந்து சாப்பிட ஒன்றுமில்லாதிருக்கிறார்கள்; இவர்களைப் பட்டினியாய் அனுப்பிவிட எனக்கு மனதில்லை, வழியில் சோர்ந்து போவார்களே என்றார்.

மத் 15:33 அதற்கு அவருடைய சீஷர்கள்: இவ்வளவு திரளான ஜனங்களுக்குத் திருப்தியுண்டாகும்படி வேண்டிய அப்பங்கள் இந்த வனாந்தரத்திலே நமக்கு எப்படி அகப்படும் என்றார்கள்.

மத் 15:34 அதற்கு இயேசு: உங்களிடத்தில் எத்தனை அப்பங்கள் உண்டு என்று கேட்டார். அவர்கள்: ஏழு அப்பங்களும், சில சிறு மீன்களும் உண்டு என்றார்கள்.

மத் 15:35 அப்பொழுது அவர் ஜனங்களைத் தரையில் பந்தியிருக்கக் கட்டளையிட்டு,

மத் 15:36 அந்த ஏழு அப்பங்களையும், அந்த மீன்களையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, பிட்டுத் தம்முடைய சீஷர்களிடத்தில் கொடுத்தார்; சீஷர்கள் ஜனங்களுக்குப் பரிமாறினார்கள்.

மத் 15:37 எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள்; மீதியான துணிக்கைகளை ஏழு கூடை நிறைய எடுத்தார்கள்.

மத் 15:38 ஸ்திரீகளும் பிள்ளைகளும் தவிர, சாப்பிட்ட புருஷர் நாலாயிரம் பேராயிருந்தார்கள்.

மத் 15:39 அவர் ஜனங்களை அனுப்பிவிட்டு, படவில் ஏறி, மகதலாவின் எல்லைகளில் வந்தார்.

"ஜனங்களுக்காகப் பரிதபிக்கிறேன்" - (மத் 9:36)

"ஸ்தோத்திரம் பண்ணி, பிட்டு" (மத் 14:19)

கூடை (basket) σπυρίς spyris 4711

வேறு பொருள் - கூடை, பெரியகூடை (மத் 16:10, மாற்கு 8:8,20; அப் 9:25)

"மகதலா" - கலிலேயா கடற்கரையிலுள்ள ஒரு பட்டணம். கப்பர்நகூமிலிருந்து தெற்கு திசையில் 10 மைல் தூரத்திலுள்ளது.

16 அதிகாரம்

57. இயேசு பரிசேயரைக் கடிந்து கொள்கிறார் - (மாற்கு 8:10 லூக் 12:54)

மத் 16:1 பரிசேயரும் சதுசேயரும் அவரைச் சோதிக்கும்படி அவரிடத்தில் வந்து, வானத்திலிருந்து ஓர் அடையாளத்தைத் தங்களுக்குக் காண்பிக்கவேண்டும் என்று கேட்டார்கள்.

மத் 16:2 அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: அஸ்தமனமாகிறபோது, செவ்வானமிட்டிருக்கிறது, அதினால் வெளிவாங்கும் என்று சொல்லுகிறீர்கள்.

மத் 16:3 உதயமாகிறபோது, செவ்வானமும் மந்தாரமுமாயிருக்கிறது, அதினால் இன்றைக்குக் காற்றும் மழையும் உண்டாகும் என்று சொல்லுகிறீர்கள். மாயக்காரரே, வானத்தின் தோற்றத்தை நிதானிக்க உங்களுக்குத் தெரியுமே, காலங்களின் அடையாளங்களை நிதானிக்க உங்களால் கூடாதா?

மத் 16:4 இந்தப் பொல்லாத விபசார சந்ததியார் அடையாளம் தேடுகிறார்கள்; யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை என்று சொல்லி, அவர்களை விட்டுப் புறப்பட்டுப்போனார்.

மத் 16:5 அவருடைய சீஷர்கள் அக்கரை சேர்ந்தபோது, அப்பங்களைக் கொண்டுவர மறந்துபோனார்கள்.

"பரிசேயரும் சதுசேயரும் அவரைச் சோதிக்கும்படி அவரிடத்தில் வந்து, வானத்திலிருந்து ஓர் அடையாளத்தைத் தங்களுக்குக் காண்பிக்கவேண்டும் என்று கேட்டார்கள்" - இயேசு கிறிஸ்துவை ஏதாவது ஒரு குற்றத்தில் சிக்கவைத்துப் பிடிக்க வேண்டுமென்பதே பரிசேயர், சதுசேயர் ஆகியோருடைய நோக்கம்.

"வானத்திலிருந்து ஓர் அடையாளம்" - (மத் 12:38 யோவான் 2:11)

"உதயமாகிறபோது செவ்வானமும் மந்தாரமுமாயிருக்கிறது" - வானம் மந்தாரமாக இருந்தால் மழை வரும் என்று நிதானிக்கிறோம். வானத்தைப் பரிசேயராலும் சதுசேயராலும் நிதானிக்க முடிகிறது. ஆனால் தீர்க்கதரிசன அடையாளங்களை அவர்களால் நிதானிக்க முடியவில்லை. மேசியாவின் காலம், மேசியாவின் ஊழியம், அவர் செய்யும் அற்புதங்கள் ஆகியவற்றை அவர்களால் நிதானிக்க முடியவில்லை. இயேசு கிறிஸ்துவிலும் யோவானிலும் பல தீர்க்கதரிசனங்கள் நிறைவேறிற்று. இந்தக் காலங்களின் அடையாளங்களைப் பரிசேயரும் சதுசேயரும் நிதானிக்கவில்லை.

"மாயக்காரரே" - (யோபு 27:8, மத் 6:2)

"வேறே அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப் படுவதில்லை" - (மத் 11:16)

தீர்க்கதரிசன எண் - 21

"யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப் படுவதில்லை" (மத் 16:4) இயேசு கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (மத் 12:40; 1கொரி 15:3-8)

"யோனா தீர்க்கதரிசியின் அடையாளம்" - இரண்டாம் முறையாக இந்த அடையாளம் கூறப்பட்டிருக்கிறது. (மத் 12:40)

16 அதிகாரம்

58. பரிசேயர், சதுசேயர் என்பவர்களின் புளித்த மாவைப் பற்றிய விளக்கம் - (மாற்கு 8:1)

மத் 16:6 இயேசு அவர்களை நோக்கி, பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் புளித்த மாவைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்றார்

மத் 16:7 நாம் அப்பங்களைக் கொண்டுவராதபடியால் இப்படிச் சொல்லுகிறார் என்று அவர்கள் தங்களுக்குள்ளே யோசனைபண்ணிக் கொண்டார்கள்

மத் 16:8 இயேசு அதை அறிந்து, அற்பவிசுவாசிகளே, அப்பங்களைக் கொண்டுவராததைக் குறித்து நீங்கள் உங்களுக்குள்ளே யோசனை பண்ணுகிறதென்ன?

மத் 16:9 இன்னும் நீங்கள் உணரவில்லையா? ஐந்து அப்பங்களை ஐயாயிரம்பேருக்குப் பகிர்ந்ததையும் மீதியானதை எத்தனை கூடை நிறைய எடுத்தீர்கள் என்பதையும்,

மத் 16:10 ஏழு அப்பங்களை நாலாயிரம் பேருக்குப் பகிர்ந்ததையும் மீதியானதை எத்தனை கூடை நிறைய எடுத்தீர்கள் என்பதையும் நீங்கள் நினைவுகூராமலிருக்கிறீர்களா?

மத் 16:11 பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் புளித்த மாவுக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்று நான் சொன்னது அப்பத்தைக்குறித்துச் சொல்லவில்லை என்று நீங்கள் உணராதிருக்கிறது எப்படி என்றார்

மத் 16:12 அப்பொழுது, அவர் அப்பத்தின் புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென்று சொல்லாமல் பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் உபதேசத்தைக்குறித்தே அப்படிச் சொன்னார் என்று அறிந்து கொண்டார்கள்

"புளித்த மாவைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" - (மத் 7:15-16)

"பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் புளித்த மாவு" - அவர்களுடைய தவறான உபதேசங்கள் (மத் 16:12; மத் 13:33)

"அற்பவிசுவாசிகளே" - (மத் 6:30)

கூடை (basket) - κόφινος - kophinos - 2894

ஆண்பால பெயர்ச்சொல் - கூடை (handbasket) (மத் 14:20; மத் 16:9; மாற்கு 6:43; மாற்கு 8:19; லூக்கா 9:17; யோவான் 6:13) இரண்டு விதமான கூடைகள் இந்தக் கூடை வேறு மத் 15:37-ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிற கூடை வேறு

59. பேதுருவின் அறிக்கை - (மாற்கு 8:27; லூக் 9:18; யோவான் 6:67)

மத் 16:13 பின்பு, இயேசு பிலிப்புச் செசரியாவின் திசைகளில் வந்தபோது, தம்முடைய சீஷரை நோக்கி: மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார்

மத் 16:14 அதற்கு அவர்கள், சிலர் உம்மை யோவான்ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும், வேறு சிலர் எரேமியா அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள்

மத் 16:15 அப்பொழுது அவர் நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார்

மத் 16:16 சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்

16 அதிகாரம்

"பிலிப்புச் செசரியாவின் திசைகள்" - கப்பர்நகூமிற்கு 25 மைல் தூரத்திலுள்ள பட்டணம். இந்தப் பட்டணத்திற்கு "பனேயாஸ்" (Paneas) என்று வேறொரு பெயரும் உண்டு. ஏனெனில் இங்கு புறஜாதி தெய்வமான "பான்" (Pan) தெய்வத்திற்கு ஒரு கோயில் கட்டப்பட்டிருக்கிறது. ஏரோது ராஜா இந்தக் கோயிலை மறுபடியும் புதுப்பித்துக் கட்டினான். அத்துடன் சீசருக்கும் இங்கு ஒரு கோயில் கட்டினான். இத்துரேயாவின் காற்பங்கு தேசாதிபதியாகிய பிலிப்பு இந்தக் கோயிலை விஸ்தாரம்பண்ணினான். இந்தப் பட்டணத்திற்கு செசரியா என்று பெயர் கொடுத்தான். தன்னுடைய பெயரையும், சீசருடைய பெயரையும் இணைத்து பிலிப்பி செசரியா என்று இந்தப் பட்டணத்திற்குப் பெயர் சூட்டினான். இந்தப் பட்டணத்தின் பழங்காலப்பெயர் தாண் (Dan) (ஆதி 14:14) லாயீஷ் (Laish) (நியா 18:7)

"மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள்" - தமது சீஷர்கள் தம்மைக் குறித்து என்ன நினைக்கிறார்கள் என்ன கூறுகிறார்கள் என்று இயேசு கிறிஸ்து தெரிந்து கொள்ள விரும்பினார் (மத் 16:15 லூக்கா 9:18) விசுவாசிகளிடத்தில் இயேசு கிறிஸ்துவைக் குறித்து தெளிவான சிந்தை இருக்க வேண்டும். ஏனெனில் இக்காலத்தில் பலவேறு விதமான மாக்கப்பிரிவினைகள் உள்ளன. அவர்கள் இயேசு கிறிஸ்துவைக் குறித்து பலவேறு விதமான உபதேசங்களைக் கூறுகிறார்கள். நாம் இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் கூறும்போது "ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று நமது இருதயத்தின் ஆழத்திலிருந்து முழு மனதோடும் முழு பலத்தோடும், முழு இருதயத்தோடும் கூறவேண்டும்.

"யோவான்ஸ்நானன்" - (மத் 3

மத் 14:3 12

"எலியா" (Elias) - எலியா, எரேமியா ஆகியோரின் கிரேக்கச்சொல்

"நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" - இதுஒரு விசுவாச வாக்கியம். நாம் மறுபடியும் இயேசு கிறிஸ்துவில் பிறந்திருக்கிறோம், புதிய ஜீவனைப் பெற்றிருக்கிறோம் என்பதை இந்த விசுவாச அறிக்கை உறுதிபண்ணும் (1யோவான் 5:1)

"குமாரன்" - பிதாவுடன் இயேசு கிறிஸ்துவிற்குள்ள உறவைக் காண்பிக்கிறது. திரித்துவத்தில் பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவருமே வெவ்வேறு ஆள்தத்துவம் உடையவர்கள் என்பதை இந்த வசனம் விவரிக்கிறது.

இயேசு கிறிஸ்துவின் குமாரத்துவத்திற்குச் சாட்சிகள்

1. தேவன் "என் நேசகுமாரன்" - "My beloved Son" (மத் 3:17; மத் 17:5)
2. இயேசு "தேவகுமாரன்" "I am the Son of God" (யோவான் 10:36)
3. பிசாசுகள் (மத் 8:29; லூக்கா 4:41);
4. காபிரியேல் (லூக்கா 1:32-35);
5. சீஷர்கள் (மத் 14:33);
6. நூற்றுக்கதிபதி (மத் 27:54)
7. பேதுரு (மத் 16:16; யோவான் 6:69);
6. யோவான் ஸ்நானன் (யோவான் 1:34);
7. மார்த்தாள் (யோவான் 11:27);
8. மாற்கு (மாற்கு 1:1);
9. எத்தியோப்பிய அதிகாரி (அப் 8:26-38);
10. நாத்தான்வேல் (யோவான் 1:49);
11. பவுல் (அப் 9:20; கலா 2:20);
12. யோவான் (யோவான் 20:31)
13. அனைவரும் "தேவகுமாரன்" என்றார்கள் "The Son of God."

மத்தேயு - தொகுப்புரை

16 அதிகாரம்

14. யோவான் "ஒரேபேறான குமாரன்"
"the only begotten Son"
"பிதாவின் குமாரன்"
"the Son of the Father"
(யோவான் 1:18; யோவான் 3:16-18; 1யோவான் 4:9; 2யோவான் 1:3)

சாத்தான், பரிசேயர் மேலும் அநேகர் இயேசு கிறிஸ்துவைத் தேவகுமாரன் என்று புரிந்து வைத்திருந்தார்கள் (மத் 4:3-6, மத் 27:40-43; யோவான் 19:7)

"தேவகுமாரன்" என்னும் வாக்கியம் 47 இடங்களிலும், "ஒரேபேறான குமாரன்" என்னும் வாக்கியம் 5 இடங்களிலும் "என் குமாரன்" என்னும் வாக்கியம் 8 இடங்களிலும், "குமாரன்" என்னும் வாக்கியம் 34 இடங்களிலும், "அவருடைய குமாரன்" என்னும் வாக்கியம் 24 இடங்களிலும் வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிற ஜீவனுள்ள நபர்களும், காரியங்களும்

1 தேவன் (உபா 5:26, தானி 6:20,26, மத் 16:16)

2 கிறிஸ்து (எபி 7:25; வெளி 1:18)

3 வார்த்தை (1பேதுரு 1:23)

4 சிருஷ்டிகள் - விலங்குகள் ஆதி 1:21-28; ஆதி 2:19)

5 சிருஷ்டிகள் - கேருபீன்கள் (எசே 1)

6 ஆத்துமா (ஆதி 2:7; 1கொரி 15:45)

7 ஜந்துகள் (ஆதி 7:4,23)

8 அப்பம் (யோவான் 6:51)

9 பலி (ரோமர் 12:1-2)

10 வழி (எபி 10:20; யோவான் 14:6)

11 கற்கள் (1பேதுரு 2:4-5)

12 ஊற்றுக்கள் (வெளி 7:17)

13. நம்பிக்கை (1பேதுரு 1:3

14 தண்ணீர்கள் (யோவான் 4:10-, யோவான் 7:37-39

60. புதிய ஏற்பாட்டு சபையைக் குறித்து இயேசுவின் அறிவிப்பு -

மத் 16:17 இயேசு அவனை நோக்கி, யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான் மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்

மத் 16:18 மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன் பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை

"மாம்சமும் இரத்தமும்" - ஆவிக்குரிய காரியங்களை மாம்சத்தால் புரிந்து கொள்ள முடியாது. பரலோகக் காரியங்கள் ஆவிக்குரியவை. பரலோகப் பிதாவினால் மட்டுமே ஆவிக்குரிய காரியங்களை வெளிப்படுத்திக் காண்பிக்க முடியும் (1கொரி 15:50 கலா 1:16; எபே 6:12; எபி 2:14

தீர்க்கதரிசன எண் - 22

"மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன் நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன் பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன் பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்" (மத் 16:18-19) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

பேதுரு (Peter) Πέτρος - Petros
4074

ஒர் ஆணின் பெயர் - பேதுரு

16 அதிகாரம்

"இந்தக்கல்" - இது கிறிஸ்துவைக் குறிக்கும். யோவான் 2:19; யோவான் 6:53-58 பேதுருவைக் குறிக்காது. இயேசு கிறிஸ்து மட்டுமே சபையின் அஸ்திபாரமாக இருக்கிறார். அவர் அசைக்க முடியாத கல் (1கொரி 3:11; ஏசா 28:16; சங் 118:22) பேதுரு கிறிஸ்துவின் சபையைக் கட்டுகிற ஊழியக்காரர்களில் ஒருவர் எபே 2:20-22; 1பேதுரு 2:4-5 1பேதுரு 5:1-8 பேதுருவின் கிரேக்கச்சொல் பெத்ரோஸ் (Petros) இங்கு கூறப்பட்டிருக்கிற கல் பெத்ரா (petra) என்பது கன்மலை

கல் (rock) - πέτρα - petra - 4073

பெண்பால் பெயர்ச்சொல் - கன்மலை, கல், கற்பாறை

"கட்டுவேன்" கிறிஸ்துவின் சரீரமாகிய சபையைக் கட்டுதல் சபையிலுள்ள விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய போஜனம் கொடுத்தல் விசுவாசிகளைச் சீஷராக்குதல். சபையைக் கட்டி எழுப்புதல். (எபே 1:20-23; எபே 2:20-22, எபே 4:13, எபே 5:25-32; 1கொரி 3:9 1கொரி 12:13-31; கொலோ 1:18-24 1பேதுரு 2

கட்டு (build) - οἰκοδομέω oikodomeoo - 3618

வினைச்சொல் - பக்தி, விருத்தியடை, துணிவுகொள், கட்டு

"என் சபை" - ஒரே ஒரு சபை இது கிறிஸ்துவின் சரீரமாகிய சபை இரட்சிக்கப்பட்ட எல்லா விசுவாசிகளும் இந்தச் சபையில் இருக்கிறார்கள் (1கொரி 12:13, எபே 2:20-22; எபே 4:13; அப் 15:13-18

61. பரலோக இராஜ்ஜியத்தின் திறவு கோல்களைப் பேதுரு பெறுகிறான் - (மத் 18:18

மத் 16:19 பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்.

மத் 16:20 அப்பொழுது, தாம் கிறிஸ்துவாகிய இயேசு என்று ஒருவருக்கும் சொல்லாதபடிக்குத் தம்முடைய சீஷர்களுக்குக் கட்டளையிட்டார்.

"பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்" - இந்த வாக்குத்தத்தம் பேதுருவிற்கு மட்டும் என்று கூறப்படாமல் எல்லா விசுவாசிகளுக்கும் வாக்குத்தத்தமாகக் கூறப்பட்டிருக்கிறது (மத் 17:20; மத் 18:18 மத் 21:22 மாற்கு 9:23 மாற்கு 11:22-24 மாற்கு 16:15-20, லூக்கா 10:19 யோவான் 14:12-15 யோவான் 15:7,16 அப் 1:4-8; அப் 2:38-39, அப் 5:32 1கொரி 12)

"பரலோகராஜ்யத்தின் திறவுகோல்கள்" திறவுகோல்கள் என்பது அதிகாரத்தின் அடையாளம். (ஏசா 22:22 வெளி 3:7) இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்வதற்கு அதிகாரமும் வல்லமையும் என்று பொருள்படும். மத் 18:18 மத் 16:15-20; யோவான் 14:12-15

கட்டப்படும் காரியங்கள்

1. சங்கிலிகளால் மனுஷர் (மத் 12:29, மத் 14:3; மத் 22:13; மாற்கு 5:3, அப் 9:2,14,21)

2. களைகள் கட்டுகளாகக் கட்டப்படும் (மத் 13:30)

3. சாத்தானின் வல்லமையினால் மனுஷர் (லூக்கா 13:16)

16 அதிகாரம்

4 பொறுப்புகளினால் மனுஷர் (அப் 20:22)

5 திருமண உடன்படிக்கையில் மனுஷர் (ரோமர் 7:2; 1கொரி 7:27,39)

6 சங்கிலிகளால் சாத்தானும் அவனுடைய தூதர்களும் (வெளி 9:14; வெளி 20:2)

7 சங்கிலிகளால் மிருகங்கள் (மத் 21:2)

8 தேவனுடைய வல்லமையினால் மனுஷர் (மத் 16:19; மத் 18:18)

கட்டவிழ்க்கப்படும் காரியங்கள்

1 பலவீனங்கள் (லூக்கா 13:12-16; மாற்கு 7:35)

2 சங்கிலிகளிலிருந்து சாத்தானும் அவனுடைய தூதர்களும் (வெளி 9:14; வெளி 20:3,7)

3 சங்கிலிகளிலிருந்தும் சிறைச்சாலைகளிலிருந்தும் மனுஷர்கள் (அப் 16:26; அப் 22:30; அப் 24:26)

4. பாவத்திலிருந்து மனுஷர் (வெளி 1:5)

5 கட்டுகளிலிருந்து மனுஷர் (அப் 2:24)

6 திருமண உடன்படிக்கைகள் (1கொரி 7:27)

7 சாத்தானுடைய வல்லமைகள் (1யோவான் 3:8)

8 விலங்குகள் (மாற்கு 11:2-4)

9 சாபத்திலிருந்து பூமி (2பேதுரு 3:10-13; ரோமர் 8:21)

10 தேவனுடைய வல்லமையினால் மனுஷர் (மத் 16:19; மத் 18:18)

62. இயேசு தமது மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் முன்குறித்துக் கூறுகிறார் - (17:22; 20:17; 26:1, மாற்கு 8:31; 10:32; லூக் 9:22,44; 18:31)

மத் 16:21 அதுமுதல் இயேசு, தாம் எருசலேமுக்குப்போய், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பல பாடுகள் பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளிலே எழுந்திருக்கவேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத் தொடங்கினார்

தீர்க்கதரிசன எண் - 28

"தாம் எருசலேமுக்குப்போய், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பல பாடுகள் பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளிலே எழுந்திருக்கவேண்டும்" - (மத் 16:21) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தில் மேசியா ஏற்றுக் கொள்ளப்படாமல் மறுதலிக்கப்படுவது ஒரு பகுதி. இயேசு கிறிஸ்து மறுதலிக்கப்படுவதைக் குறித்து 4 இடங்களில் கூறப்பட்டிருக்கிறது (மத் 16:21; மத் 17:22; மத் 20:17,28)

63. இயேசுவும் பேதுருவும் ஒருவரையொருவர் கடிந்து கொள்கிறார்கள் - (மாற்கு 8:32-33)

மத் 16:22 அப்பொழுது பேதுரு அவரைத் தனியே அழைத்துக்கொண்டுபோய்: ஆண்டவரே, இது உமக்கு நேரிடக் கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை என்று அவரைக் கடிந்துகொள்ளத் தொடங்கினான்

மத் 16:23 அவரோ திரும்பி, பேதுருவைப் பார்த்து: எனக்குப் பின்னாகப்போ சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்; தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய் என்றார்

16 அதிகாரம்

"எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய. தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய்" - இயேசு இதைப பேதுருவிடம் கூறுகிறார் அதே சமயத்தில் இதைச் சாத்தானிடமும் கூறுகிறார் இதேபோன்ற எடுத்துக்காட்டுக்கள் வேதத்தில மேலும் சில இடங்களில கூறப்பட்டிருக்கிறது. (ஆதி 3:15; ஏசா 14:4-27; எசே 28:11-19)

64. சீஷத்துவத்திற்குப் பரீட்சை - ஆத்துமாவின் மதிப்பு - மாற்கு 8:34-38; லூக் 9:23)

மத் 16:24 அப்பொது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப பின்பற்றி வர விரும்பினால, அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப பின்பற்றக்கடவன

மத் 16:25 தன ஜீவனை ரட்சிகக விரும்புகிறவன அதை இழந்து போவான; என்னிமித்தமாகத் தன ஜீவனை இழந்து போகிறவன அதைக கண்டடைவான

65. இரண்டாம் வருகையை முன்குறித்துக் கூறுகிறார் - (மத் 24:3-25, 46, வெளி 19:11)

மத் 16:26 மனுஷன உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக கொண்டாலும், தன ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?

மத் 16:27 மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின மகிமைபொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார அப்பொழுது, அவனவன் கிரியைக்குத் தக்கதாக அவனவனுக்குப பலனளிப்பார

தீர்க்கதரிசன எண் - 24

"மனுஷ குமாரன் தம்முடைய பிதாவின் மகிமைபொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார் அப்பொழுது, அவனவன் கிரியைக்குத்தக்கதாக அவனவனுக்குப பலனளிப்பார் இங்கே நிற்கிறவர்களில் சிலர் மனுஷகுமாரன் தம்முடைய ராஜ்யத்தில் வருவதைக் காணுமுன் மரணத்தை ருசிபார்ப்பதில்லை என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொலலுகிறேன்" - (மத் 16:27-28, மத் 16:27 ஆவது வசனம் இன்னும் நிறைவேறவிலலை மத் 16:28-ஆவது வசனம் நிறைவேறிற்று.

"தம்முடைய பிதாவின் மகிமை" - மகிமைக்கு முன்பாகப பாடுகளைப பற்றிப பொதுவாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் (மத் 16:21-27; ரோமர் 8:18; கொலோ 3:4 1பேதுரு 1:11) கிறிஸ்து தமது இரண்டாம் வருகையில பாடுகளோடு வராமல மகிமையோடு வருவார் (தானி 7:13-14, சக 14; மத் 24:29-31; மத் 25:31-46 வெளி 19:11-21)

"தம்முடைய தூதரோடுங்கூட வருவார்" - (மத் 13:41; மத் 24:31; மத் 25:31, 2தெச 1:7

"அவனவன கிரியைக்குத்தக்கதாக அவனவனுககுப் பலனளிப்பார்" - இயேசு கிறிஸதுவின இரண்டாம் வருகையினபோது தேசங்கள் நியாயந்தீர்க்கப்படும் (மத் 25:31-46) மரித்துபோன நீதிமானகள இதற்கு முன்பாகவே, நியாயந்தீர்க்கப்படுவார்கள் (1கொரி 3:11-15, ரோமர் 14:10; 2கொரி 5:10) துனமாக்கள இதற்கு ஆயிரம் வருஷங்களுக்குப பினபு நியாயந்தீர்க்கப்படுவாகள் (வெளி 20

"கிரியைக்குத்தக்கதாக" - ஆண்டவர் நம்மை நம்முடைய வயதுக்குத்தக்கதாகவோ, நமது கலவி, செலவம் அந்தஸ்து, புகழ்ச்சி ஆகியவற்றிறகுத் தக்கதாகவோ, நியாயந்தீர்க்க மாட்டார நமது கிரியைக்குத்தக்கதாக நம்மை நியாயந்தீர்ப்பார

16 அதிகாரம்

66. மறுரூபமாதலை முன்குறித்துக் கூறுகிறார் – (மாற்கு 9:1; லூக் 9:27; 2பேதுரு 1:16)

மத் 16:28 இங்கே நிற்கிறவர்களில் சிலர் மனுஷகுமாரன் தம்முடைய ராஜ்யத்தில் வருவதைக் காணுமுன் மரணத்தை ருசிபார்ப்பதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

“இங்கே நிற்கிறவர்களில் சிலர் மனுஷகுமாரன் தம்முடைய ராஜ்யத்தில் வருவதைக் காணுமுன் மரணத்தை ருசிபார்ப்பதில்லை” இயேசு கிறிஸ்து மறுரூபமடைந்ததைக் கண்ட சீஷர்களை இது குறிக்கும் (மத் 17:1-8; 2பேதுரு 1:16-18).

17 அதிகாரம்

67. மறுரூபமாதல் - வரப்போகும் இராஜ்ஜியத்திற்கு ஒரு முன்னோட்டம் - (மாற்கு 9:1; லூக் 9:27; 2பேதுரு 1:16)

மத் 17:1 ஆறுநாளைக்குப்பின்பு, இயேசு பேதுருவையும் யாக்கோபையும் அவனுடைய சகோதரனாகிய யோவானையும் கூட்டிக்கொண்டு தனித்திருக்கும்படி உயர்ந்த மலையின் மேல் போய்,

மத் 17:2 அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார்; அவர் முகம் சூரியனைப் போலப் பிரகாசித்தது, அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப்போல வெண்மையாயிற்று.

மத் 17:3 அப்பொழுது மோசேயும் எலியாவும் அவரோடே பேசுகிறவர்களாக அவர்களுக்குக் காணப்பட்டார்கள்.

மத் 17:4 அப்பொழுது பேதுரு இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நாம் இங்கே இருக்கிறது நல்லது; உமக்குச் சித்தமானால், இங்கே உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக, மூன்று கூடாரங்களைப் போடுவோம் என்றான்.

மத் 17:5 அவன் பேசுகையில், இதோ, ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள்மேல் நிழலிட்டது. இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்; இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று.

மத் 17:6 சீஷர்கள் அதைக் கேட்டு, முகங்குப்புற விழுந்து, மிகவும் பயந்தார்கள்.

மத் 17:7 அப்பொழுது, இயேசு வந்து அவர்களைத் தொட்டு: எழுந்திருங்கள், பயப்படாதேயுங்கள் என்றார்.

மத் 17:8 அவர்கள் தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்க்கையில், இயேசுவைத் தவிர வேறொருவரையும் காணவில்லை.

மத் 17:9 அவர்கள் மலையிலிருந்து இறங்குகிறபோது, இயேசு அவர்களை நோக்கி: மனுஷகுமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும் வரைக்கும் இந்தத் தரிசனத்தை ஒருவருக்கும் சொல்லவேண்டாம் என்று கட்டளையிட்டார்.

"ஆறுநாளைக்குப்பின்பு" - மத் 16:28 ஆவது வசனத்தில் முன்னறிவிக்கப்பட்டுள்ள காரியத்தின் நிறைவேற்றம்.

"இயேசு பேதுருவையும் யாக்கோபுவையும் அவனுடைய சகோதரனாகிய யோவானையும் கூட்டிக்கொண்டு தனித்திருக்கும்படி உயர்ந்த மலையின்மேல் போனார்" - ஓய்வு எடுப்பதற்காக இயேசு கிறிஸ்து தமது சீஷர்களை இவ்வாறு தனியாக அழைத்துச் செல்வது வழக்கம் (மத் 26:37; மாற்கு 5:37)

"மறுரூபமானார்" - உருவத்தை மாற்றுதல் என்பது இதன் பொருள் (to change the form) இந்த வாக்கியம் இந்த வசனத்திலும் இதனுடன் மாற்கு 9:2; ரோமர் 12:2; 2கொரி 3:18 ஆகிய வசனங்களிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது தவிர மோசே (யாத் 34:29-35) ஸ்தேவான் (அப் 6:15) ஆகியோரின் மறுரூபமாதலையும் நாம் ஒப்பிட்டு வாசிக்கலாம்.

மறுரூபமாகு (transfigured) - μεταμορφόω - metamorphooo - 3339

வினைச்சொல் - மறுரூபமாகு, மறுரூபப்படு

"மோசே" - இந்த நாளுக்கு 1,700 வருஷங்களுக்கு முன்பாகவே மோசே மரித்துவிட்டார். அவருடைய சரீரம் அழிந்துபோயிருக்கும். (உபா 34) யூதா (9) பரதேசிலிருந்து அவர் அழைத்துவரப்பட்டிருக்கலாம். (லூக்கா 16:23) மரணமடைந்தபின்பு உயிர்த்தெழுதல் வரையிலும் ஆத்துமா பாதாளத்தில் இருக்கும். அது முழு உணர்வோடும், வஸ்திரங்கள் அணிந்தவையாகவும் இருக்கலாம். (வெளி 6:9-11; எபி 12:23; சங் 16:10) இயேசு கிறிஸ்துவே மரித்தோரில் முதற்பலனானவர் ஆகையினால் இந்த இடத்தில் மோசே உயிர்த்தெழுந்த சரீரத்தில் வந்திருப்பதற்கு வாய்ப்பில்லை. (1கொரி 15:20-23)

17 அதிகாரம்

மோசேயும், எலியாவும் மறுரூபமலையில் இயேசுவோடு பேசுகிறவர்களாக காணப்பட்டதனால் விளங்கும் சத்தியங்கள்

1 நியாயப்பிரமாணம் ஒழிந்துபோயிற்று. (மத் 11:11-13; லூக்கா 16:16 கலா 3:19-25; கலா 4:21-31 2கொரி 3:6-15; கொலோ 2:14-17)

2 மேசியாவின் பாடுகளைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள் நிறைவேறிற்று. (லூக்கா 24:25-27,44-45 யோவான் 1:45; அப் 13:29-41)

3 கிறிஸ்துவே மேசியா தேவனிடமிருந்து வந்தவர் தேவனுக்கும் மனுஷனுக்கும் இடையில ஒரே மத்தியஸ்தர் (அப 3:22-23; எபி 1:1-2; 1தீமோ 2:5)

4 மரித்துப்போன ஆத்துமாக்கள் உண்மையானவை, உணர்வுடையவை (லூக்கா 16:19-31; வெளி 6:9-11 எபி 12:23; எபே 4:8-10)

5 ஆத்துமா மரிக்காது (1பேதுரு 3:4, 1பேதுரு 4:6; சங் 16:10 லூக்கா 20:38

6 இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, வெகுமதிகள், தண்டனைகள் (மத் 16:27, மத் 24:29-25:46)

7 சரீர உயிர்த்தெழுதல் (மத் 17:9 யோவான் 5:28-29; 1கொரி 15; வெளி 20:4-15)

8 வருங்கால நித்திய இராஜ்ஜியம் உண்மையானது (மத் 16:28; மத் 17:1-9, வெளி 5:10, வெளி 11:15 வெளி 20:4-10

"எலியா எலியா இன்னும் மரிக்கவில்லை மானிட சரீரத்தில பரலோகத்தில் சுமார் 3000 வருஷங்களாக உயிரோடு ஜிவிக்கிறான் (2இராஜா 2; மல் 4:5-6, சக 4:11-14, வெளி 11:3-11)

கூடாரம் (abernacles) σκηνή - skeenee 4633

பெண்பால் பெயர்ச்சொல் - கூடாரம், வீடு, வாசஸ்தலம் (shade, booth, tabernacle) (மத் 16:4; லூக்கா 9:5 லூக்கா 9:33; அப 7:43-44,

"ஒளிபுள்ள ஒரு மேகம் அவர்கள்மேல் நிழலிட்டது" - தேவனுடைய பிரசன்னத்தைக் காணும்படியாக ஒரு காணக்கூடிய அடையாளம். (யாத் 13:21-22; யாத் 14:19-24, யாத் 16:10; யாத் 19:9,16; யாத் 24:15-18 யாத் 34:5)

பரிசுத்த வேதாகமத்தில் "சத்தம்" என்ற சொல்லின் பயன்பாடுகள்

1 கர்த்தருடைய சத்தம் (ஆதி 3:8-10; சங் 29; வெளி 10:3-4). மனுஷருக்குக் கர்த்தருடைய சத்தம் தெரிவாகக் கேட்டது (ஆதி 3:8-10; யாத் 19:19 உபா 4:12; 1இராஜா 19:12-13 ஏசா 6:4-8; எசே 1:24-28; எசே 8:18 எசே 9:1; எசே 10:5, எசே 43:2 தானி 10:6-9; மத் 3:17; மத் 17:5, யோவான் 12:28 அப் 10:13 வெளி 1:10-18; வெளி 10:3-8

2 உன் மனைவியின் வார்த்தை (ஆதி 3:17)

3 உன சகோதரனுடைய இரத்தத்தின சத்தம் (ஆதி 4:10)

4 எக்காள சத்தம் (யாத் 19:19

5. ஜெயதொனியின சத்தம் (யாத் 32:18

6 அபஜெயதொனியாகிய சத்தம் (யாத் 32:18)

7 ஆணையின் சத்தம் (லேவி 5:1

8 இஸ்ரவேலின சத்தம் (எண 21:3

9 தகப்பன் சொல் (உபா 21:18

10 தாயின் சொல் (உபா 21:18

11 யூதாவின் சத்தம் (உபா 33:7

12 மனிதனுடைய சொல் (யோசு 10:14

மத்தேயு - தொகுப்புரை

17 அதிகாரம்

13. ஒடுக்குகிறவனுடைய சத்தம் (யோபு 3:18)

14. சிங்கத்தின் கெர்ச்சிப்பு (யோபு 4:10)

15. அழுகிறவர்களின் ஓலம் (யோபு 30:31)

16. களிப்பும் துதியுமான சத்தம் (சங் 42:4)

17. தூஷிக்கிறவனுடைய சத்தம் (சங் 44:16)

18. கெம்பீரசத்தம் (சங் 47:1)

19. சத்துருவினுடைய கூக்குரல் (சங் 55:3)

20. பாம்பாட்டிகள் ஊதும் சத்தம் (சங் 58:5)

21. ஜெபத்தின் சத்தம் (சங் 66:19)

22. கீதசத்தம் (சங் 98:5)

23. பெருமூச்சின் சத்தம் (சங் 102:5)

24. வார்த்தையின் சத்தம் (சங் 103:20)

25. குமுறலின் சத்தம் (சங் 104:7)

26. இரட்சிப்பின்கெம்பீரசத்தம் (சங் 118:15)

27. போதகரின் சொல் (நீதி 5:13)

28. குருவியின் சத்தம் (பிர 12:4)

29. காட்டுப்புறாவின் சத்தம் (உன் 2:12)

30. கூக்குரலின் சத்தம் (ஏசா 65:19)

31. பிள்ளை பெறுகிற குமாரத்தியின் சத்தம் (எரே 4:31)

32. களிப்பின் சத்தம் (எரே 7:34)

33. மகிழ்ச்சியின் சத்தம் (எரே 7:34)

34. மணவாளனின் சத்தம் (எரே 7:34)

35. மணவாட்டியின் சத்தம் (எரே 7:34)

36. கர்த்தருடைய நாளின் சத்தம் (செப 1:14)

37. தீர்க்கதரிசிகளின் சத்தம் (அப் 13:27)

38. பிரதான தூதனுடைய சத்தம் (1தெச 4:16)

39. தூதர்களுடைய சத்தம் (வெளி 5:11)

40. பெரு வெள்ளத்து இரைச்சலைப் போன்ற சத்தம் (வெளி 1:15 வெளி 14:2; வெளி 19:6

41. பலத்த இடிமுழக்கம் (வெளி 14:2 வெளி 19:6 வெளி 10:3-4

42. சுரமண்டலங்களை வாசிக்கிற ஓசை (வெளி 14:2

43. பாடகர்களின் சத்தம் (வெளி 14:2

44. திரளான ஜனக்கூட்டம் இடுகிற ஆரவாரம் (வெளி 19:1)

45. திரளான ஜனங்கள் இடும் ஆரவாரம் (வெளி 19:6)

தேவனுடைய சப்தத்தைக் கேட்டவர்களுக்கு எடுத்துக்காட்டானவர்கள்

1. ஆதாம் (ஆதி 3:8-10)
2. ஆபிரகாம் (ஆதி 18; ஆதி 22:18, ஆதி 26:5)
3. மோசே (யாத் 3; அப 7:31)
4. இஸ்ரவேல் (யாத் 19:19, உபா 4:12,33,36; (உபா 5:23-28
5. எலியா (1இராஜா 19:12-13)
6. ஏசாயா (ஏசா 6:4-6
7. எசேக்கியேல் (எசே 1:24, எசே 8:18 எசே 9:1; எசே 10:5; எசே 43:2
8. தானியேல் (தானி 10:6-9
9. பேதுரு (அப 10:13; 2பேதுரு 1:17-18
10. யாக்கோபு (மத் 17:5)

மத்தேயு - தொகுப்புரை

17 அதிகாரம்

11 யோவான் (வெளி 1:10-12; வெளி 4:1 வெளி 10:3-8; வெளி 21:3)

12 பவுல் (அப் 9:3-7)

மனுஷருடைய சத்தத்தைத் தேவன் கேட்டதற்கு எடுத்துக்காட்டுகள்

1 இஸ்மவேல் (ஒரு பிள்ளையின் சத்தத்தையே தேவன் முதன்முதலாகக் கேட்டார்) (ஆதி 21:17)

2 இஸ்ரவேல் (எண் 20:16; எண் 21:3 உபா 26:7)

3 யோசுவா (யோசு 10:14)

4 மனோவா (நியா 13:9)

5 எலியா (1இராஜா 17:22)

6 யோனா (யோனா 2:2)

7 இயேசு (யோவான் 12:28)

"சீஷர்கள் அதைக் கேட்டு, முகங்குப்புற விழுந்து, மிகவும் பயந்தார்கள்" தேவனைச் சந்திக்கும் மனுஷர்கள் எல்லோருமே செய்யக்கூடிய காரியம் இதுதான் (யோபு 42:5-6; ஏசா 6; தானி 8:18, தானி 10:5-11, அப் 9:4, வெளி 1:17)

"மனுஷகுமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும்வரைக்கும்" இந்த வசனத்தில் "எக்" (ek) என்னும் கிரேக்கச்சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவும், அவருடைய பரிசுத்தவான்களும் மரணத்திலிருந்து உயிர்த்தெழுவதை மட்டுமே இந்த முன்னிடைச்சொல் குறிக்கும். மரித்த பரிசுத்தவான்கள் முதலாவது எழுந்திருப்பார்கள் அதன்பின்பு, ஆயிர வருஷ அரசாட்சி இருக்கும். மரித்த துன்மார்க்கர் ஆயிர வருஷ அரசாட்சிக்காலம் முழுவதிலும் மரித்தவர்களாகவே இருப்பார்கள் (வெளி 20:4-6,11-15

புதிய ஏற்பாட்டில் பல வசனங்களில் மரித்தோர் உயிர்த்தெழுதல் பற்றிய குறிப்பு காணப்படுகிறது (மத் 17:9; மாற்கு 6:14,16, மாற்கு 9:9-10; மாற்கு 12:25; லூக்கா 9:7, லூக்கா 16:31; லூக்கா 20:35, லூக்கா 24:46; யோவான் 2:22, யோவான் 12:1,9,17; யோவான் 20:9 யோவான் 21:14; அப் 3:15; அப் 4:2,10 அப் 10:41; அப் 13:30,34; அப் 17:3,31 ரோமர் 4:24; ரோமர் 6:4,9,13 ரோமர் 7:4; ரோமர் 8:11 ரோமர் 10:7,9; ரோமர் 1:4 1கொரி 15:12,20; கலா 1:1; எபே 1:20 எபே 5:14; கொலோ 1:18; கொலோ 2:12 1தெச 1:10; 2தீமோ 2:8; எபி 11:19 எபி 13:20; 1பேதுரு 1:3,21)

இயேசு கிறிஸ்துவே மரித்தோரிலிருந்து முதலாவது உயிர்த்தெழுந்தவர் இனிமேல் நாம் எல்லோருமே மரித்த பின்பு உயிர்த்தெழுவோம். (வெளி 20:4-6)

இதிலிருந்து (from) - ἐκ - ek - 1537

முன்னிடைச்சொல் - இல், ஆல், இதிலிருந்து, விட்டு, இடத்தில், முதல், தரம், இல்லாமல், ஆறாம் வேற்றுமையுடன் உடைய, இனி கொண்டு, புறம்பே, முதற்கொண்டு, ஒடு, வழியாய், தொடங்கி

69. யோவான் ஸ்நானனும், எலியாவும் - (மாற்கு 9:11-13, மத் 11:14, லூக் 1:17; யோவான் 1:17-21 மல் 4:5-6

மத் 17:10 அப்பொழுது, அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: அப்படியானால் எலியா முந்தி வரவேண்டும் என்று வேதபாரகர் சொல்லுகிறார்களே, அதெப்படியென்று கேட்டார்கள்

மத் 17:11 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: எலியா முந்திவந்து எல்லாவற்றையும் சீர்ப்படுத்துவது மெய்தான்

மத் 17:12 ஆனாலும், எலியா வந்தாயிற்று என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; அவனை அறியாமல் தங்கள் இஷ்டப்படி அவனுக்குச் செய்தார்கள்; இவ்விதமாய் மனுஷகுமாரனும் அவர்களால் பாடுபடுவார் என்றார்

17 அதிகாரம்

மத் 17:13 அவர் யோவான் ஸ்நானனைக்குறித்துத் தங்களுக்குச் சொன்னார் என்று சீஷர்கள் அப்பொழுது அறிந்துகொண்டார்கள்

"அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி...கேட்டார்கள்" - இயேசுவோடு மறுரூபமலைக்குச் சென்ற மூன்று சீஷர்கள மட்டுமே இயேசுவிடம் இந்தக் கேள்விகளைக் கேட்டார்கள் (மத் 17:1)

தீர்க்கதரிசன எண் - 25

"எலியா முந்திவந்து எல்லாவற்றையும் சீர்படுத்தவது மெய்தான ஆனாலும் எலியா வந்தாயிற்று என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத் 17:11-12) - இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேற்றிறு.

"அவனை அறியாமல தஙகள இஷ்டப்படி அவனுக்குச் செய்தார்கள" - இது யோவானஸ்நானனைக குறிககும் காரியம அவன எலியாவின ஆவியோடும வல்லமையோடும் வந்தான (மத் 17:13 லூக்கா 1:17, ஏசா 40:3, மல 3:1)

69. வல்லமையில்லாத சீஷர்களும் சர்வ வல்லமையுள்ள கிறிஸ்துவும் - (மாற்கு 9, லூக் 9)

மத் 17:14 அவர்கள் ஜனங்களிடத்தில வந்தபோது ஒரு மனுஷன அவரிடத்தில வந்து, அவர் முனபாக முழங்காலபடியிட்டு

மத் 17:15 ஆண்டவரே என மகனுக்கு இரங்கும், அவன சந்திரரோகியாயக கொடிய வேதனைபபடுகிறான அடிக்கடி தீயிலும் அடிக்கடி ஜலத்திலும் விழுகிறான்

மத் 17:16 அவனை உம்முடைய சீஷர்களிடத்தில் கொண்டுவந்தேன் அவனைச் சொஸ்தமாக்க அவர்களால் கூடாமற்போயிற்று என்றான்

மத் 17:17 இயேசு பிரதியுத்தரமாக, விசுவாசமில்லாத மாறுபாடுள்ள சந்ததியே, எதுவரைக்கும் நான் உங்களோடு இருப்பேன்? எதுவரைக்கும் உங்களிடத்தில் பொறுமையாயிருப்பேன்? அவனை என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்றார்

மத் 17:18 இயேசு பிசாசை அதட்டினார்; உடனே அது அவனை விட்டுப் புறப்பட்டது; அந்நேரமே அந்த இளைஞன் சொஸ்தமானான்

"அவர்கள் ஜனங்களிடத்தில வந்தபோது" - கிறிஸ்து பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகிய நாலவரும் மறுநாள் மறுரூபமலையிலிருந்து வந்தபோது (மத் 17:1,10, லூக்கா 9:37)

"ஒரு மனுஷன் அவரிடத்தில வந்து அவர் முனபாக முழங்காலபடியிட்டான்" - இது பழங்காலத்து பழக்கம ஒருவருடைய தயவு நமக்கு தேவைபெனறால அவர் முனபாக முழங்காலபடியிட்டு, நமது தாழ்மையை வெளிப்படுத்தி, நமது கோரிக்கையை பணிவோடு கேட்கும் வழக்கம் (யாத 4:2)

"சந்திரரோகி" - இதுபோன்ற வியாதி அமாவாசையிலும பௌர்ணமியிலும் வரும் சந்திரரோகி வியாதியுடையவர்கள இவ்விரண்டு நாட்களிலும் அதிக வேதனைகளை அனுபவிப்பார்கள சந்திரனுடைய தோற்றத்தினாலும் மறைவினாலும் ஏற்படக் கூடிய காலமாறுதலால இந்த வியாதி வருவதாக ஜனங்கள பொதுவாக நினைக்கிறார்கள ஆனால இது சாத்தானின தந்திரம் இந்த வியாதி பிசாசின கிரியையே அவன ஜனங்களைத் திசை திருப்பி, இந்த வியாதிககு சந்திரனே காரணம் என்று ஜனங்களைப் பொய்யாக நம்ப வைத்திருக்கிறான (மத் 17:18; மாற்கு 9:17, லூக்கா 9:38)

சந்திரரோகி (lunatick)

σεληνιάζομαι

seleeniazomai - 4583

பெயர்ச்சொல் - சந்திரரோகம்

"கொடிய வேதனைப்படுகிறான்" (மத் 15:22)

17 அதிகாரம்

"அடிக்கடி தீயிலும், அடிக்கடி ஜலத்திலும் விழுகிறான்" - பிசாசு இந்தச் சிறுவனைக் கொல்வதற்கு முயற்சி பண்ணுகிறது. அவனைத் தீயிலும், ஜலத்திலும் தள்ளிற்று. அந்தக் குடும்பத்தில் அவனைப் பற்றிய மரணபயம் உண்டாயிற்று.

"உம்முடைய சீஷர்கள்" - ஒன்பது சீஷர்கள் - மறுரூபமலையின் அடிவாரத்தில் இருந்த சீஷர்கள் (மத் 17:1)

"அவனைச் சொஸ்தமாக்க அவர்களால் கூடாமற்போயிற்று" - இயேசு கிறிஸ்துவிற்கு பிசாசுகளின்மீது அதிகாரம் உண்டு. அந்த அதிகாரத்தை அவர் தமது பிள்ளைகளுக்கும் கொடுத்திருக்கிறார். நாம் இந்த அதிகாரத்தை விசுவாசத்தோடு பயன்படுத்த வேண்டும் (மாற்கு 16:17-18; லூக்கா 10:19; யோவான் 14:12)

"விசுவாசமில்லாத மாறுபாடுள்ள சந்ததியே, எதுவரைக்கும் நான் உங்களோடு இருப்பேன்? எதுவரைக்கும் உங்களிடத்தில் பொறுமையாய் இருப்பேன்?" இந்த வசனம் சீஷர்களையும் குறிக்கும் (மத் 17:20) அந்தச் சிறுவனின் தந்தையையும் குறிக்கும் (மாற்கு 9:17-24) சீஷர்களைக் குற்றப்படுத்திய வேதபாரகரையும் குறிக்கும் (மாற்கு 9:16)

"அவனை என்னிடத்தில் கொண்டு வாருங்கள்" - இது இயேசு கிறிஸ்துவின் அதிகாரமுள்ள வார்த்தை. தேவனிடத்தில் அவர் பரிபூரண நம்பிக்கை வைத்திருந்தார்.

"இயேசு பிசாசை அதட்டினார்" - இயேசு பிசாசை அதட்டினார். சந்திரனை அதட்டவில்லை. இந்தச் சிறுவனுக்கு இந்த பிரச்சனையைக் கொடுப்பது பிசாசுதானே தவிர சந்திரன் அல்ல. (மத் 4:23-24; மத் 10:1, 8, யோவான் 10:10; அப் 10:38)

70. ஜெபமும் உபவாசமும் - (மாற்கு 9:28)

மத் 17:19 அப்பொழுது, சீஷர்கள் இயேசுவினிடத்தில் தனித்துவந்து, அதைத் துரத்திவிட எங்களால் ஏன் கூடாமற் போயிற்று என்று கேட்டார்கள்.

மத் 17:20 அதற்கு இயேசு: உங்கள் அவிசுவாசத்தினாலே தான்; கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால், நீங்கள் இந்த மலையைப் பார்த்து, இவ்விடம் விட்டு அப்புறம்போ என்று சொல்ல அது அப்புறம் போம்; உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மத் 17:21 இந்த ஜாதிப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமே யன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப் போகாது என்றார்.

"அதைத் துரத்திவிட எங்களால் ஏன் கூடாமற்போயிற்று" - சீஷர்கள் தங்களுடைய உண்மையான நிலைமையைப் புரிந்து கொள்கிறார்கள். தங்களுடைய தோல்விக்கு என்ன காரணம் என்பதை ஆராய்ந்து பார்க்க மனப்பூர்வமாக முன்வருகிறார்கள்.

"உங்கள் அவிசுவாசத்தினாலேதான்" - இயேசுவின் பதில் எளிமையானது. அதே சமயத்தில் முழுமையானது. நம்முடைய ஊழியங்களில் தோல்விகள் வருவதற்கும், பிசாசுகளைத் துரத்தமுடியாமற்போவதற்கும், ஜெபத்திற்கு பதில் கிடைக்காமல் இருப்பதற்கும் அவிசுவாசமே காரணம். தேவனுடைய வாக்குத்தத்தம் எல்லோருக்கும் உரியது. இதில் நிபந்தனை என்னவென்றால், நாம் கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டும். நம்மிடத்தில் தேவனைப் பற்றியும் அவருடைய வல்லமையைப் பற்றியும் அவிசுவாசம் இருக்கக்கூடாது. (மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 14:12-15; யோவான் 15:7,16; எபி 11:6; யாக் 1:5-8)

"விசுவாசம் உங்களுக்கு இருந்தால்" - நம்மிடத்தில் விசுவாசம் இருந்தால் நமக்குக் காரியம் வாய்க்கும். விசுவாசம் இல்லையென்றால் ஒரு காரியமும் வாய்க்காது.

மத்தேயு - தொகுப்புரை

17 அதிகாரம்

"கடுகுவிதையளவு - கடுகுவிதை அளவில் சிறியது. ஆனால் சுத்தமானது. ஆற்றல் உடையது. கலப்படம் இல்லாதது. நமது விசுவாசமும் கலப்படமில்லாமல் சுத்தமாக இருக்க வேண்டும் அப்பேர்ப்பட்ட விசுவாசம் மலையைக்கூட அப்புறம்போக வைக்கும்

"இந்த மலை" - மறுரூபமலை - (மத் 17:17; மாற்கு 11:22-24; லூக்கா 17:6 கொரி 13:2

"உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது" - தமமுடைய பிள்ளைகளின் நன்மைக்காக தேவன் தமது வார்த்தையின் மூலமாக வாக்குத்தத்தம் பண்ணியிருக்கும் காரியங்கள் (சங் 34:10; சங் 84:11 மத் 7:11; மாற்கு 11:22-24, யோவான் 14:12-15, யோவான் 15:7,16)

"இந்த ஜாதிப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ விதத்தினாலும் புறப்பட்டுப்போகாது" - பிசாசுகள் பலவிதம் அவைகளின் வல்லமையும் பலவிதம். அவற்றை விரட்டும்போது நாம் ஜெபத்தோடும் உபவாசத்தோடும் விரட்ட வேண்டும் (யோவான் 3:34

71. இயேசு தமது மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் குறித்து மறுபடியும் முன்குறித்துக் கூறுகிறார் - (16:21; மாற்கு 9:30, லூக் 9:44

மத் 17:22 அவர்கள் கலிலேயாவிலே சஞ்சரிக்கும்போது இயேசு அவர்களை நோக்கி: மனுஷகுமாரன் மனுஷர் கைகளில் ஒப்புக் கொடுக்கப்படுவார்

மத் 17:23 அவர்கள் அவரைக் கொலை செய்வார்கள் ஆகிலும் மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்திருப்பார் என்றார் அவர்கள் மிகுந்த துக்கமடைந்தார்கள்

தீர்க்கதரிசன எண் - 29

'மனுஷகுமாரன் மனுஷர் கைகளில் ஒப்புக் கொடுக்கப்படுவார் அவர்கள் அவரைக் கொலைசெய்வார்கள் ஆகிலும் மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்திருப்பார்" - (மத் 17:22-23) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இயேசு கிறிஸ்துவின் பாடுகளைக் குறித்த இரண்டாவது அறிவிப்பும் அவர் காட்டிக் கொடுக்கப்படப்போவதைப் பற்றிய முதலாவது குறிப்பும் (மத் 16:21)

72. வரிப்பணம் - மீனின் வாயில் வெள்ளிப்பணம் - (22:15 மாற்கு 12:13; லூக் 20:19,

மத் 17:24 அவர்கள் கப்பர்நகூமில் வந்தபோது வரிப்பணம் வாங்குகிறவர்கள் பேதுருவினிடத்தில் வந்து: உங்கள் போதகர் வரிப்பணம் செலுத்துகிறதில்லையா என்று கேட்டார்கள் செலுத்துகிறார் என்றான்

மத் 17:25 அவன் வீட்டிற்குள் வந்தபோது, அவன் பேசுகிறதற்கு முன்னமே இயேசு அவனை நோக்கி: சீமோனே உனக்கு எப்படித் தோன்றுகிறது? பூமியின் ராஜாக்கள் தீர்வையையும் வரியையும் தங்கள் பிள்ளைகளிடத்திலோ, அந்நியரிடத்திலோ யாரிடத்தில் வாங்குகிறார்கள் என்று கேட்டார்

மத் 17:26 அதற்குப் பேதுரு: அந்நியரிடத்தில் வாங்குகிறார்கள் என்றான் இயேசு அவனை நோக்கி: அப்படியானால் பிள்ளைகள் அதைச் செலுத்தவேண்டுவதில்லையே.

மத் 17:27 ஆகிலும், நாம் அவர்களுக்கு இடறலாயிராதபடிக்கு, நீ கடலுக்குப்போய், தூண்டில்போட்டு, முதலாவது அகப்படுகிற மீனைப் பிடித்து அதின் வாயைத் திறந்துபார், ஒரு வெள்ளிப்பணத்தைக் காண்பாய், அதை எடுத்து எனக்காகவும் உனக்காகவும் அவர்களிடத்தில் கொடு என்றார்

"அவர்கள் கப்பர்நகூமில் வந்தபோது" - மறுரூபமலையிலிருந்து கப்பர்நகூமிற்கு.

17 அதிகாரம்

வரிப்பணம் (tribute) - διδραχμον - didrachmon - 1323

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - வரிப்பணம் - ஒவ்வொரு யூதரும் ஒவ்வொரு வருஷமும் தேவாலயத்திற்குச் செலுத்த வேண்டிய வரி. யாத் 30:13; 2இராஜா 12:4; 2நாளா 24:6-9

"செலுத்துகிறார்" - கிறிஸ்து யூதமார்க்க முறைமையின்படி செலுத்த வேண்டிய எல்லா வரிகளையும் செலுத்தினார். அரசாங்கத்தின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து ஜீவித்தார். இது நமக்கு ஒரு முன்மாதிரியான காரியம் (ரோமர் 13:1-8)

"அவன் பேசுகிறதற்கு முன்னமே இயேசு அவனை நோக்கி" - பேதுரு என்ன பேசப்போகிறான் என்று இயேசுவிற்குத் தெரியும். ஆகையினால் அவன் கேட்பதற்கு முன்பாகவே இயேசு பதில் கூறுகிறார்.

வரி (tribute) - κῆνσος - keensos - 2778

ஆண்பால் பெயர்ச்சொல் - வரி

"அப்படியானால் பிள்ளைகள் அதைச் செலுத்தவேண்டுவதில்லையே" - இந்த வரி தேவாலயத்திற்காக வசூலிக்கப்பட்டது. ஜனங்கள்தான் இந்த வரியைச் செலுத்த வேண்டும். தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்து இந்த வரியைச் செலுத்த வேண்டியதில்லை. தம்மைப்போலவே தம்முடைய சீஷர்களும் தேவாலயத்தின் ஆசாரியர்களைப்போல இருக்கிறார்கள். ஆகையினால் அவர்களும் வரி செலுத்தவேண்டியதில்லை. இவ்வாறு இயேசு கூறிவிட்டு, தாமும் தம்முடைய சீஷர்களும் அவர்களுக்கு இடறலாய் இருக்கக்கூடாது என்று கூறி வரிசெலுத்துவதற்குச் சம்மதம் தெரிவித்தார் (மத் 17:26 - 27)

"வெள்ளிப்பணம்" - இது ஒரு அற்புதம். மீனின் வாயில் ஏற்கெனவே வெள்ளிப்பணம் இருந்தாலும் அந்தப் பணம் அந்த மீனின் வாயில் இருக்கிறது என்பதைக் கூறுவதும் ஒரு அற்புதம்தான். கர்த்தர் நமது தேவைகளைச் சந்திப்பார். நம்மைப் பராமரிப்பார். தம்மையே சார்ந்திருக்கும் தமது பிள்ளைகளை அவர் ஒருபோதும் கைவிடமாட்டார் (மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 14:12-15; யோவான் 15:7,16). ஆவியின் வரங்கள் மூலமாக இயேசு கிறிஸ்து ஏற்கெனவே செய்த காரியங்களை விசுவாசிகள் செய்கிறார்கள். இயேசு கிறிஸ்துவும் அவற்றை ஆவியின் வரங்களினாலேயே நடப்பித்தார் (1கொரி 1:7; 1கொரி 12:1-11; 1கொரி 13:1-3; யோவான் 14:12)

வெள்ளிப் பணம் (piece of money) - στατήρ - stateer - 4715

ஆண்பால் பெயர்ச்சொல் - வெள்ளிப் பணம்

18 அதிகாரம்

73. சீஷத்துவத்தைப் பற்றிய உபதேசம்

(1) மாம்சமான மனுஷனின் பிரதான கேள்வி - (மத் 20:20,24 மாற்கு 9:33; லூக் 9:46; 22:24)

மத் 18:1 அவ்வேளையிலே சீஷர்கள் இயேசுவினிடத்தில் வந்து, பரலோக ராஜ்யத்தில் எவன் பெரியவனாயிருப்பான் என்று கேட்டார்கள்

"பரலோகராஜ்ஜியத்தில எவன் பெரியவனாயிருப்பான்" - இந்தக் கேள்வி ஊழியர்கள மத்தியில இன்றும் பிரபலமாக இருக்கிறது. ஊழிய ஸ்தாபனங்களின வளர்ச்சி, பணபலம் அதிகாரம் கூட்டங்களுக்கு ஆள சேர்வது ஆகியவற்றை அடிப்படையாக வைத்து எந்த ஊழியக்காரர் பெரியவர் என்று ஜனங்கள ஒருவரையொருவர் எடைபோட்டுப் பார்க்கிறார்கள நாம் மனந்திரும்பி பிள்ளைகளைப்போல ஆகவேண்டும அப்போது தான பரலோகராஜ்ஜியத்தில பிரவேசிக்க முடியும். (மத் 18:3-4, மத் 20:20-28 மத் 23:8-11 மாற்கு 9:34-37 லூக்கா 9:46-48 லூக்கா 22:24-27) இவ்வுலக ராஜ்ஜியத்தில பெரியவனாக இருக்க வேண்டுமென்றால அதற்குத் தேவைப்படும் தகுதிகள வேறே பரலோக ராஜ்ஜியத்தில நுழைவதற்கு தேவைப்படும தகுதிகள வேறே உலக ராஜ்ஜியத்தைப் பார்ப்பதுபோல நாம் பரலோக ராஜ்ஜியத்தைப் பார்க்கக்கூடாது. (மத் 4:17)

(2) இயேசுவின் பதிலுரை - (மாற்கு 9:33, லூக் 3:1; 4:5-10; லூக் 9:46; 22:24 யோவான் 13:3 17)

மத் 18:2 இயேசு ஒரு பிள்ளையைத் தமமிடத்தில அழைத்து, அதை அவர்கள நடுவே நிறுத்தி.

மத் 18:3 நீங்கள் மனந்திரும்பி பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்

மத் 18:4 ஆகையால் இந்தப் பிள்ளையைப் போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோக ராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான்

"நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல ஆகாவிட்டால பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள்" - முதலாவது உயிர்த்தெழுதலில பங்குபெறுகிறவர்கள மட்டுமே இயேசு கிறிஸ்து இந்த பூமியை ஆளுகை செய்யும்போது இராஜாக்களாகவும் ஆசாரியர்களாகவும் இருப்பார்கள (ரோமர் 8:17-18; 1கொரி 4:8 1கொரி 6:2-3 2தீமோ 2:12; வெளி 1:6; வெளி 5:10 வெளி 20:4-6 வெளி 22:4-5 ஆயிர வருஷ அரசாட்சியில இரட்சிக்கப் படாதவர்கள இருப்பார்கள அவர்கள் ஆளுகை செய்வதில்லை. தேவனுடைய ராஜ்ஜியத்தை அவர்கள் சுதந்தரிக்கவும் மாட்டார்கள (ஏசா 2:2-4 ஏசா 65:20 ஏசா 66:19-2 சக 8:23; சக 14:16-21, வெளி 20:7-10

"மனந்திரும்பி" செல்லும் பாதையிலிருந்து முழுவதுமாக திரும்புதல் தேவனோடு புதிய பாதையில நடத்தல (சங் 19:7; சங் 51:13, லூக்கா 22:32, அப் 3:19; யாக் 5:19)

"பிள்ளைகளைப் போல்" - சிறுபிள்ளைகளுக்கு உலக ஆசையோ, பண ஆசையோ பதவி ஆசையோ இராது விசுவாசிகளும், சிறுபிள்ளைகளைப்போல உலக ஆசைகளில சிக்கிக்கொள்ளாதவாறு இருக்க வேண்டும். (மத் 23:5-12

"பரலோகராஜ்யத்தில பிரவேசிக்க மாட்டீர்கள" இந்த உலக ராஜ்ஜியத்தில துன்மார்க்கரும் நீதிமான்களும கலந்திருக்கிறார்கள வயலில் கோதுமையும் களையும் சேர்ந்திருப்பதுபோல இருக்கிறார்கள ஆனால் பரலோக ராஜ்ஜியத்திலோ நீதிமான்கள் மட்டுமே இருப்பார்கள் பரலோக ராஜ்ஜியத்திற்குள் நுழைவதற்கு முதலாவது தகுதி இயேசு கிறிஸ்துவைத் தன்னுடைய சொந்த ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக் கொள்ள வேண்டும். தன பாவங்களுக்காக மனந்திருந்தி, இயேசு கிறிஸ்துவின இரட்சிப்பை பெற்றுக் கொள்ள வேண்டும். (மத் 13:11, யோவான் 3:3)

18 அதிகாரம்

"எவனோ" – யாரெல்லாம் (Whosoever) வேதாகமத்தில் 183 இடங்களில் இந்தச் சொல்லை வாசிக்கிறோம் பழைய ஏற்பாட்டில 73 தடவைகளும் புதிய ஏற்பாட்டில 10 தடவைகளும் இந்தச் சொல வருகிறது. மனுஷனுடைய சுயாதீன சித்தத்திற்கு இந்த வாக்கியம் முக்கியத்துவம் தருகிறது. மனுஷன் தான் செய்யும் காரியத்திற்குத் தானே பொறுப்பு வகிக்கிறான்

தன்னுடைய சுயாதீன சித்தத்தின் பிரகாரம் ஒரு நபரை அல்லது ஒரு காரியத்தை ஏற்றுக்கொள்ளவோ அல்லது புறக்கணிக்கவோ மனுஷனுக்கு அதிகாரம் உள்ளது கீழே கொடுக்கப்பட்டிருக்கிற காரியங்களில் மனுஷன் தன் சுயாதீன சித்தத்தைப் பயன்படுத்தித் தீர்மானம் பண்ணுகிறான்

1 தேவன் (மத் 12:50, மாற்கு 3:35)

2 கிறிஸ்து (மாற்கு 8:34, 1யோவான் 3:6,10; 1யோவான் 4:15 யோவான் 5:1 2யோவான் 1:9)

3 பரிசுத்த ஆவியானவர் (மத் 12:31-32)

4. வார்த்தை (மத் 5:19, 1யோவான் 2:5)

5 சாத்தான் (ரோமர் 6:16-23)

6 பாவம் (யோவான் 8:34 1யோவான் 3:4-15

7 சட்டங்கள் (ரோமர் 13:2)

8 இரட்சிப்பிற்குத் தேவனுடைய நிபந்தனைகள் (யோவான் 3:15வி20 யோவான் 4:14; அப் 2:21; அப் 10:43; ரோமர் 9:33 ரோமர் 10:9வி13 வெளி 22:17

"இந்தப் பிள்ளையைப் போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோகராஜ்யத்தில பெரியவனாயிருப்பான் - இந்த உலகராஜ்ஜியத்தில் தன்னை உயர்த்துகிறவனே பெரியவனாயிருப்பான் ஆனால சுவிசேஷம் உலகக்காரியங்களுக்கு நேரெதிரானது. சுவிசேஷம் தாழ்மையை வலியுறுத்துகிறது. உலகம் பெருமையை மதிக்கிறது. பரலோக ராஜ்ஜியத்தில் தன்னைத் தாழ்த்துகிறவனே பெரியவனாயிருப்பான் (லூக்கா 14:11 லூக்கா 18:14; யாக் 4:6,10 1பேதுரு 5:3-7 பிலி 2:1-3)

(3) விசுவாசிகளுக்கு உலகத்திலிருந்து இடறல்கள் – (மாற்கு 9:42; லூக் 17:1; யோவான் 15:18)

> மத் 18:5 இப்படிப்பட்ட ஒரு பிள்ளையை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக் கொள்ளுகிறான்

> மத் 18:6 என்னிடத்தில விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில ஒருவனுக்கு இடறல உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில எந்திரக்கல்லைக் கட்டி சமுத்திரத்தின ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்.

> மத் 18:7 இடறல்களினிமித்தம் உலகத்துக்கு ஐயோ, இடறல்கள் வருவது அவசியம், ஆனாலும் எந்த மனுஷனால இடறல வருகிறதோ அவனுக்கு ஐயோ

"இப்படிப்பட்ட ஒரு பிள்ளையை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக்கொள்ளுகிறவன என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்" ஒரு விசுவாசிக்குச் செய்யப்படும் நலல உதவிகள் கர்த்தருக்கே செய்யப்படும் காரியமாக இருக்கும். கர்த்தர் அவர்களுக்குப் பலனளிப்பார் கர்த்தரிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ அவனைக் கர்த்தர் தண்டிப்பார்

18 அதிகாரம்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன்" - ஒரு விசுவாசிக்கு இடையூறு பண்ணுகிறவன் இரட்சிக்கப் பட்டிருக்கும் ஒரு விசுவாசி பின்வாங்கிப் போவதற்குக் காரணமாக இருக்கிறவன்.

"இந்தச் சிறியர்" - சிறியர் என்பது எல்லா விசுவாசிகளையும் குறிக்கும். சிறுபிள்ளைகள் என்பது பக்குவப்பட்ட விசுவாசிகளைக் குறிக்கும்.

"எந்திரக்கல்" - 18 அங்குலம் விட்டமும் 3 அங்குலம் கனமும் உடைய கல். சீரியர், கிரேக்கர், எகிப்தியர் ஆகியோர் குற்றவாளிகளுக்குத் தண்டனை கொடுப்பதற்காக அவர்கள் கழுத்தில் இந்தக் கல்லைக்கட்டி நடுக்கடலில் போட்டு விடுவார்கள். குற்றவாளி மூச்சுத்திணறி இறந்துபோவான் (லூக்கா 17:2)

தீர்க்கதரிசன எண் - 27

"இடறல்களினிமித்தம் உலகத்துக்கு ஐயோ, இடறல்கள் வருவது அவசியம், ஆனாலும் எந்த மனுஷனால் இடறல் வருகிறதோ, அவனுக்கு ஐயோ..." (மத் 18:7-9) இந்தத் தீர்க்கதரிசனத்தில் மத் 18:7 ஆவது வசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. மத் 18:8-9 ஆவது வசனங்கள் நியாயத்தீர்ப்பின் போது நிறைவேறும். (வெளி 20:11-15; அப் 17:31)

"எந்த மனுஷனால் இடறல் வருகிறதோ" - இடறல் கொடுக்கிற மனுஷன் துன்மார்க்கன். கெட்ட ஊற்று நல்ல தண்ணீரைத் தராது. (யாக் 3:11)

(4) **இடறல் உண்டாக்கும் சரீர உறுப்புக்கள்** - (மத் 5:29; மாற்கு 9:43-48)

மத் 18:8 உன் கையாவது உன் காலாவது உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைத் தறித்து எறிந்துபோடு; நீ இரண்டு கையுடையவனாய், அல்லது இரண்டு காலுடையவனாய் நித்திய அக்கினியிலே தள்ளப்படுவதைப் பார்க்கிலும், சப்பாணியாய், அல்லது ஊனனாய், நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்.

மத் 18:9 உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்துபோடு; இரண்டு கண்ணுடையவனாய் எரிநரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும், ஒற்றைக்கண்ணனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்.

எரிநரகம் (hell) - γέεννα - geenna - 1067

பெனால் பெயர்சொல் - நரகம் (மத் 5:22,29,30; மத் 7:19; மத் 8:12; மத் 10:28; மத் 11:23; மத் 13:30, 40-42, 49-50; மத் 16:18; மத் 18:8-9; மத் 22:13; 23:15; மத் 24:51; மத் 25:30-46)

(5) **எல்லோருக்கும் எச்சரிப்பு** - (மத் 5:23; 38-42; லூக் 17:1)

மத் 18:10 இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமூகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

"தேவதூதர்கள்" ஒவ்வொரு விசுவாசிக்கும் தேவதூதர்கள் ஊழியம் செய்கிறார்கள் (எபி 1:14; சங் 34:7

18 அதிகாரம்

"அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமூகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள்" - சமூகத்தைத் தரிசிப்பது என்பது அவருடைய சமூகத்தில் நிற்பது என்னும் பொருளைத்தரும் வழக்குச் சொல் (எஸ் 1:14; 2இராஜா 14:8) எல்லா விசுவாசிகளும் ஒரு காலத்தில் தேவனுடைய சமூகத்தில் நித்திய காலமாக இருந்து அவரைத் தரிசிப்பார்கள் (வெளி 22:4-5)

(6) காணாமல்போன ஆடு - லூக் 15:3, 19:10

மத் 18:11 மனுஷகுமாரன் கெட்டுப்போனதை ரட்சிக்க வந்தார்

மத் 18:12 உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது? ஒரு மனுஷனுக்கு நூறு ஆடுகளிருக்க, அவைகளில் ஒன்று சிதறிப்போனால் அவன் மற்றத் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் மலைகளில் விட்டுப்போய்ச் சிதறிப் போனதைத் தேடாமலிருப்பானோ?

மத் 18:13 அவன் அதைக் கண்டுபிடித்தால், சிதறிப்போகாத தொண்ணூற்றொன்பது ஆடுகளைக் குறித்துச் சந்தோஷப்படுகிறதைப் பார்க்கிலும் அதைக்குறித்து அதிகமாய்ச் சந்தோஷப்படுவான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்

மத் 18:14 இவ்விதமாக, இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல

"மனுஷகுமாரன் கெட்டுப்போனதை ரட்சிக்க வந்தார்" - (லூக்கா 5:32)

"இவ்விதமாக, இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல" - எல்லாரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்பது தேவனுடைய சித்தம். (1தீமோ 2:4; 2பேதுரு 3:9; யோவான் 3:16 இரட்சிக்கப்படுவதற்கு தேவன் வகுத்துள்ள நியதிகளைப் பின்பற்றுவோர் அனைவரும் இரட்சிக்கப்படுவார்கள் (யோவான் 3:16-20 ரோமர் 1:16; ரோமர் 10:9-10; எபே 2:8-9 1யோவான் 1:9)

(7) விசுவாசிகளின் ஒழுக்கக் கட்டுப்பாடு - (மத் 5:23 1கொரி 5:1; 1தீமோ 5:20)

மத் 18:15 உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால் அவனிடத்தில் போ, நீயும் அவனும் தனித்திருக்கையில் அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக் கொண்டாய்.

மத் 18:16 அவன் செவிகொடாமற் போனால் இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டுபோ

மத் 18:17 அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், அதைச் சபைக்குத் தெரியப்படுத்து, சபைக்கும் செவிகொடாதிருப்பானானால், அவன் உனக்கு அஞ்ஞானியைப்போலவும், ஆயக்காரனைப்போலவும் இருப்பா

"சகோதரன்" - சக விசுவாசி.

சபையின் கட்டுப்பாடு பண்ணும் விதம்

1 நமக்கு நாமே எல்லா பிரச்சனைகளையும் தீர்த்துக் கொள்ள வேண்டும். (மத் 18:15; மத் 5:23-26, லூக்கா 17:3-4; லேவி 19:17

2 இரண்டு அல்லது மூன்று சாட்சிகளினால் நம்முடைய காரியம் உறுதிபண்ணப்பட வேண்டும். (மத் 18:16; 2கொரி 13:1; உபா 17:6, உபா 19:15)

18 அதிகாரம்

3. சபையில் தீர்மானம் பண்ணும் போது அது கண்டிப்புடனும், நீதியாகவும் இருக்க வேண்டும். மனந்திரும்புவதற்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும் மனந்திரும்பாத பட்சத்தில் சபையை விட்டுவிலக்கி வைக்கலாம் (மத் 18:17) மனுஷர் மன்னிக்கவில்லையென்றால் கர்த்தரும் மன்னிக்க மாட்டார் (மத் 6:14-15 மத் 18:21-35; மாற்கு 11:25-26, ரோமர் 16:17

புதிய ஏற்பாட்டுப் பிரமாணத்தின் பிரகாரம் ஒரு விசுவாசியைச் சபையை விட்டு தள்ளிவைக்கும் சூழ்நிலைகள்

1 பாவம் யோவான் 1:29 மத் 18:15-17)

2 வேதவாக்கியத்திற்கு மாறான கள்ள உபதேசம் (ரோமர் 16:17)

3 கிறிஸ்துவை வெறுத்தல் 1கொரி 16:22

4 கீழ்ப்படியாமையும், தாறுமாறான நடத்தையும் (2தெச 3:6,14-15)

5 தேவதூஷணம் (1தீமோ 1:19-20 1தீமோ 4:1-8, 2தீமோ 3:5, 2தீமோ 4:1-4

6 துர்உபதேசம் தீத்து 3:10 1தீமோ 6:3-5

7 ஆத்துமாவை அழிக்கும் பாவங்கள் (1கொரி 5:9-13 1கொரி 6:9-11 கலா 5:19-21, மாற்கு 7:21-23 ரோமர் 1:18-32, கொலோ 3:5-10 1தீமோ 6:3-5

பாவம் (sin) - ἁμαρτία hamartia - 266

பெண்பால் வினைப்பெயர் பாவம் தோல்வி

(அ) பாவச் செயல் (1கொரி 15:17

(ஆ) பாவத்தில் மூழ்கியிருத்தல். எப்பொழுதும் பாவத்தில் இருத்தல் (யோவா 1:21), (ரோம. 3:9

"அஞ்ஞானி புறஜாதியான் இந்த வசனத்திலும் மத் 6:7 ஆவது வசனத்திலும் மட்டுமே இந்த வாக்கியம் வருகிறது இவர்களிடத்தில் தேவ அன்பை வெளிப்படுத்த வேண்டும். இந்த நபரைக் கிறிஸ்துவிற்காக ஆதாயப்படுத்துவதற்கு அவரிடத்தில் ஆவிக்குரிய காரியங்களைக் கூறலாம் ஆயினும் அவர் மனந்திரும்பி வரவேண்டும் அப்போது நாம் அவரை மன்னித்து ஏற்றுக்கொள்ளலாம். (மத் 6:14-15 மத் 18:21-35; 2கொரி 2:6-11; கலா 6:1)

அஞ்ஞானி (heathen) - ἐθνικός - ethnikos - 1482

பெயரடை - அஞ்ஞானியான

"ஆயக்காரன்" - (மத் 5:46)

(8) விசுவாசிகளுக்குக் கொடுக்கப்படும் வல்லமை - (மத் 17:20; 21:22 மாற்கு 9:23; லூக் 24:49 யோவான் 14:12; 15:5,16; 20:23 அப 1:8; 1கொரி 12:7-11

மத் 18:18 பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும் பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்

(9) ஒன்றுகூடி ஜெபிப்பதின் வல்லமை (மாற்கு 11:22 யோவான் 15:7,16, 16:23)

மத் 18:19 அல்லாமலும், உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக் கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்

18 அதிகாரம்

"அல்லாமலும்" - மறுபடியும் "again" means "once more" மத் 18:18 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிற சத்தியம் திரும்பவும் வலியுறுத்தப்படுகிறது. "பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்" இந்த வசனத்தில் இந்தக் காரியம் "உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக் கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும்" என்று வேறு விதமாகக் கூறப்பட்டிருக்கிறது.

(10) ஸ்தலசபைகளின் எளிமையும் கிறிஸ்தவ ஆராதனையும் -

மத் 18:20 ஏனெனில் இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்

"இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" - இரண்டு சாட்சிகள் அல்லது மூன்று சாட்சிகள் சேர்ந்து ஒருவனுடைய குற்றத்தை உறுதி பண்ணலாம் (மத் 18:16-17). அதேவேளையில் இருவர் அல்லது மூன்றுபேர் தேவனுடைய சமூகத்தில் ஒருமித்து ஜெபம்பண்ணி தேவனுடைய பதிலைப் பெற்றுக் கொள்ளலாம். இரண்டுபேர் அல்லது மூன்றுபேர் ஒருமனப்பட்டு இருக்கும்போது அதுவே சபையாகிறது. அங்கே தேவனுடைய பிரசன்னம் இருக்கிறது.

"அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" இயேசு கிறிஸ்துவின் சர்வவியாபகத்தையும், சர்வ வல்லமையையும் சர்வஞானத்தையும் குறிக்கிறது. அவருடைய தேவத்துவத்தை இந்த வாக்கியம் வலியுறுத்துகிறது.

(11) மன்னிப்பின் பிரமாணம் - (6:14; மாற்கு 11:25; லூக் 17:4

மத் 18:21 அப்பொழுது, பேதுரு அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனைதரம் மன்னிக்க வேண்டும்? ஏழுதரமட்டுமோ என்று கேட்டான்.

மத் 18:22 அதற்கு இயேசு: ஏழுதரமாத்திரம் அல்ல, ஏழெழுபது தரமட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன்.

"நான் மன்னிக்க வேண்டும் - (மாற்கு 11:25; ரோமர் 12:19; எபே 4:32

"ஏழெழுபதுதரமட்டும்" - 490 தடவைகள் அல்லது எண்ணிலடங்காத தடவைகள்

(12) மன்னிப்பு - இரக்கமில்லாத ஊழியக்காரனைப் பற்றிய [redacted]

மத் 18:23 எப்படியெனில், பரலோக ராஜ்யம் தன் ஊழியக்காரரிடத்தில் கணக்குப் பார்க்கவேண்டுமென்றிருந்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது.

மத் 18:24 அவன் கணக்குப்பார்க்கத் தொடங்கினபோது, பதினாயிரம் தாலந்து கடன்பட்டவன் ஒருவனை அவனுக்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள்.

மத் 18:25 கடனைத்தீர்க்க அவனுக்கு நிர்வாகம் இல்லாதபடியால், அவனுடைய ஆண்டவன் அவனையும் அவன் பெண்ஜாதி பிள்ளைகளையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, கடனைத் தீர்க்கும்படிக் கட்டளையிட்டான்.

மத் 18:26 அப்பொழுது, அந்த ஊழியக்காரன் தாழ விழுந்து, வணங்கி: ஆண்டவனே! என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்றான்.

18 அதிகாரம்

மத் 18.27 அந்த ஊழியக்காரனுடைய ஆண்டவன் மனதிரங்கி அவனை விடுதலை பண்ணி கடனையும் அவனுக்கு மன்னித்துவிட்டான்

மத் 18.28 அப்படியிருக்க, அந்த ஊழியக்காரன் புறப்பட்டுப்போகையில் தன்னிடத்தில் நூறு வெள்ளிப்பணம் கடன்பட்டிருந்தவனாகிய தன் உடன்வேலைக்காரரில் ஒருவனைக் கண்டு, அவனைப் பிடித்து, தொண்டையை நெரித்து, நீ பட்ட கடனை எனக்குக் கொடுத்துத்தீர்க்க வேண்டும் என்றான்

மத் 18.29 அப்பொழுது அவனுடைய உடன்வேலைக்காரன் அவன் காலிலே விழுந்து, என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்று, அவனை வேண்டிக் கொண்டான்

மத் 18.30 அவனோ சம்மதியாமல் போய், அவன் பட்ட கடனைக் கொடுத்துத் தீர்க்குமளவும் அவனைக் காவலில் போடுவித்தான்

மத் 18.31 நடந்ததை அவனுடைய உடன் வேலைக்காரர் கண்டு, மிகவும் துக்கப்பட்டு, ஆண்டவனிடத்தில் வந்து, நடந்ததையெல்லாம் அறிவித்தார்கள்

மத் 18.32 அப்பொழுது, அவனுடைய ஆண்டவன் அவனை அழைப்பித்து, பொல்லாத ஊழியக்காரனே, நீ என்னை வேண்டிக்கொண்டபடியினால் அந்தக் கடன் முழுவதையும் உனக்கு மன்னித்துவிட்டேன்

மத் 18.33 நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன்வேலைக்காரனுக்கு இரங்க வேண்டாமோ என்று சொல்லி,

மத் 18.34 அவனுடைய ஆண்டவன் கோபமடைந்து அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான்

மத் 18.35 நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால் என் பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார்

"பரலோகராஜ்யம்" - (மத் 4:17 மத் 19.24)

மத்தேயு எழுதின சுவிசேஷத்தில்

இந்த சுவிசேஷத்தில் 48 உவமைகள் உள்ளன இந்த உவமைகளில் "இரண்டு" என்னும் எண்ணிற்கு முக்கியத்துவம் உண்டு. பழைய வஸ்திரம் புதிய வஸ்திரம் என்னும் இரண்டு வஸ்திரங்கள் பழைய துருத்தி புதிய துருத்தி என்னும் இரண்டு துருத்திகள்

1 சாரம் (மத் 5:13)

2 விளக்கு (மத் 5:14-15)

3. பொக்கிஷம் (மத் 6:19-21)

4. சிருஷ்டி (மத் 6.26)

5. உடை (மத் 6.28-29)

6 கண் இடையூறு (மத் 7.3-5)

7 மிருகம் (மத் 7:6)

8 தந்தை (மத் 7:7-11)

9 வழி (மத் 7:13-14)

10 மரமும் கனிகளும் (மத் 7:15-20)

11 அஸ்திபாரம் (மத்7:24-29)

12 பிரிவு (மத் 9:11-13)

13 மணவாளன் (மத் 9:15)

14 வஸ்திரம் (மத் 9:16)

18 அதிகாரம்

15 துருத்தி (மத் 9:17)

16. உபதேசம் பண்ணுகிறவர் (மத் 10:16)

17 குருவி மத் 10:29-31)

18 ஜனங்கள் (மத் 11:7-9)

19 பிள்ளைகள் (மத் 11:16-19)

20 ஞானிகள் (மத் 11:25)

21 வல்லமையின் ஆதாரம் (மத் 12:29)

22 அடையாளம் (மத் 12:40; மத் 16:1-5)

23 பிசாசு பிடித்தல (மத் 12:43-45)

24 விதை (மத் 13:24-43

25 மீன (மத் 13:47-50)

26 சத்தியம் (மத் 13:52

27 நாற்று (மத் 15:13-14)

28 தீட்டு (மத் 15:11-20)

29 உபதேசங்கள் (மத் 16:6-12)

30 சிறுபிள்ளை (மத் 18:3-10)

31 ஆடு (மத் 18:11-14)

32 ஊழியக்காரன் (மத் 18:23-35)

33 வேலையாள் (மத் 20:1-16)

34 குமாரன் (மத் 21:28-32)

35 வீட்டெஜமான் (மத் 21:33-46)

36 விருந்தினர் (மத் 22:1-14)

37 மார்க்கம் (மத் 23:25-28)

38 சர்ப்பம் (மத் 23:33)

39 வயது (மத் 24:37-39)

40 மனுஷர் (மத்24:43-44

41 வேலைக்காரன் (மத் 24:45-51)

42 கூாவம் (மத் 25:1-13)

43 வியாபாரி (மத் 25:14-30)

வேதாகமத்தில் உவமை என்பது பொதுவான பொருளில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது உவமையின் வெவ்வேறு பயன்பாடுகள்

1 சாதாரண ஒப்பீடு (simple comparison) (மத் 24:31-32

2 ஒப்புமை எதிர்வினை (obscure similitude or dark saying) (மத் 15:11-15; சங் 78:2, நீதி 1:6

3 தொடர் உருவகம் (simple allegory) (மத் 13)

4 முதுரை, சாலபுரை (a maxim or wise sentence) (1இராஜா 4:32)

5. உபதேசம் (a discourse) (யோபு 27:1, யோபு 29:1)

6 முதுமொழி (an adage) (லூக்கா 4:23, லூக்கா 6:39)

7 உருவகம் (a type) (எபி 9:9, எபி 11:19)

கணக்குபார் (take account) - συναίρω - synairoo - 4868

வினைச்சொல கணக்குப்பார், கணக்குக்கேள மத் 18:24, மத் 25:19.

தாலந்து (talents) - τάλαντον talanton 5007

18 அதிகாரம்

பால்வேறுபாடற்ற பெயர்ச்சொல - தாலந்து - பொன்னையும் வெள்ளியையும் அளக்கும் அளவு. கிரேக்கருடைய முறைமையின் பிரகாரம் ஒரு தாலந்து வெள்ளி அல்லது பொன் என்பது பல லட்சரூபாய் மதிப்புடையதாகும்

காசு (pence) - δηνάριον deenarion - 1220

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பணம், காசு - ஒரு நாள் சம்பளம்

"உபாதிக்கிறவர்கள - சிறைச்சாலைக் காரர்கள் கைதிகளை அடைத்து வைத்து அவர்களைச் சித்திரவதை பண்ணுகிறவர்கள்

"நீங்களும் அவனவன் தன தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய மன்னியாமற்போனால் என பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார்" - இந்த உவமை மன்னிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. இயேசு கிறிஸ்து நமது பாவங்களுக்காக நம்மைத தண்டியாமல நம்மை மன்னித்திருக்கிறார அதுபோலவே, மற்றவர்கள் செய்யும் பாவங்களை நாமும் மன்னிக்க வேண்டும்

இந்த உவமையில் நான்கு காரியங்கள் உள்ளன

1 இராஜாவும் அவனுடைய ஊழியக்காரரும்

2 ஊழியக்காரனும் ஊழியக்காரனுடைய ஊழியக்காரனும்

3 இராஜாவும், அவனுடைய ஊழியக்காரரும்

4 ஆவிக்குரிய வியாக்கியானம்

1. இராஜாவும், அவனுடைய ஊழியக்காரரும் (மத் 18:23-27)

(1 கணக்குப்பார்த்தல் (மத் 18:23-24)

(2) பெரிய கடன்தொகை (மத் 18:24

(3) திருப்பிச் செலுத்த நிர்வாகம் இல்லை (மத் 18:25)

(4) தண்டனை அறிவிக்கப்படுதல் (மத் 18:25)

(5) மன்னிப்பு கோரப்படுவதும், மன்னிக்கப் படுவதும் (மத் 18:26

(6) இராஜாவின் மனதிரக்கம் (மத் 18:27)

(7) கடன் மன்னிக்கப்படுதல் (மத் 18:27)

2. ஊழியக்காரனும், ஊழியக்காரனுடைய ஊழியக்காரனும் (மத் 18:28-30)

(1) புதிய விடுதலை (மத் 18:28

(2) கணக்குப்பார்த்தல் (மத் 18:28

(3) சிறிய கடன்தொகை (மத் 18:28

(4) கடனைத் திருப்பிச் செலுத்த நிர்வாகம் இருந்தது மத் 18:28

(5) நியாயத்தீர்ப்பு அறிவிக்கப்படுதல (மத 18 3[illegible]

(6) இரக்கம் கோரப்படுதல (மத் 18:29

(7) இரக்கம் காணபிக்கப்படவில்லை (மத் 18:28-30)

3. இராஜாவும், அவனுடைய ஊழியக்காரரும்

(1) உடன் ஊழியக்காரரின் அறிவு

(2) உடன் ஊழியக்காரரின் மனதுருக்கம்

(3) உடன் ஊழியக்காரரின் அறிக்கை (மத் 18:31)

(4) கணக்குப்பார்த்தல் (மத் 18:32

(5) இரக்கமில்லாத குணத்திற்குத் தண்டனை (மத் 18:32 33

(6) இராஜாவின கோபம் (மத் 18:34

(7) தீர்ப்பு அறிவிக்கப்படுகிறது (மத் 18:34

18 அதிகாரம்

4. ஆவிக்குரிய வியாக்கியானம்

(1) தேவன் பாவிகளை மனதிரங்கி இரட்சிக்கிறார் (மத் 18:23-27,35 மத் 12:31-32 1யோவான் 1:9)

(2) இரட்சிக்கப்பட்டவர்கள் மற்ற விசுவாசிகளுடைய தவறுகளை மன்னிக்க வேண்டும் மத் 18:26-30,35, மத் 5:38-48; மத் 7:12; ரோமர் 12:9-21, 1கொரி 13)

(3) நமது சகோதரரை நாம் மன்னிக்கவில்லையென்றால் நமது ஆண்டவர் நம்மை மன்னிக்க மாட்டார் (மத் 18:35 மத் 6:14-15 மாற்கு 11:25-26 எபே 4:32

"மனப்பூர்வமாய்" பாவம் செய்யும் ஆசையும் நீதிமானாக இருக்க வேண்டும் என்னும் ஆவலும் நமது இருதயத்திலிருந்தே வருகிறது. (மத் 15:18-19 மாற்கு 7:23-24, அப் 8:37 ரோமர் 10:6-10 2தீமோ 2:22, எபி 4:12)

19 அதிகாரம்

74. இயேசு திரளான ஜனங்களைச் சுகமாக்குகிறார் -

மத் 19:1 இயேசு இந்த வசனங்களைச் சொல்லி முடித்த பின்பு, அவர் கலிலேயாவை விட்டு யோர்தானுக்கு அக்கரையான யூதேயாவின் எல்லைகளில் வந்தார்.

மத் 19:2 திரளான ஜனங்கள் அவருக்குப் பின் சென்றார்கள்; அவ்விடத்தில் அவர்களைச் சொஸ்தமாக்கினார்.

"இயேசு இந்த வசனங்களைச் சொல்லி முடித்த பின்பு" - மத் 17:24-18:35 ஆகிய வசனங்களிலுள்ள வார்த்தைகளைக் கூறிய பின்பு.

"யூதேயாவின் எல்லைகள்" - யோர்தானுக்குக் கிழக்குப் பகுதியிலுள்ள யூதேயாவின் எல்லைகள். இயேசு கிறிஸ்து எருசலேமிலே இந்த உலகத்தின் பாவங்களுக்காகப் பாடுபடவும் மரிக்கவும் பிரயாணம் செய்கிறார். அதற்காக அவர் எரிகோ வழியாக எருசலேமிற்குப் பிரயாணம் பண்ணுகிறார் (மத் 20:17).

"யோர்தானுக்கு அக்கரை" - யோர்தான் நதிக்கரையிலுள்ள பிரதேசம். இது யூதேயாவிற்கும், பெரேயாவிற்கும் இடையிலுள்ள எல்லைப்பகுதி.

"அவர்களைச் சொஸ்தமாக்கினார்" - (மத் 13:58)

75. மனைவியைத் தள்ளிவிடுவது, மறுவிவகாரம் பண்ணுவது ஆகியவை பற்றிய பிரமாணம் - (மத் 5:31, மாற்கு 10:1; லூக் 16:18; ரோமர் 7:1-3; 1கொரி 7)

மத் 19:3 அப்பொழுது, பரிசேயர் அவரைச் சோதிக்கவேண்டுமென்று அவரிடத்தில் வந்து: புருஷனானவன் தன் மனைவியை எந்த முகாந்தரத்தினாலாகிலும் தள்ளி விடுவது நியாயமா என்று கேட்டார்கள்.

மத் 19:4 அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும்,

மத் 19:5 இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான், அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும் நீங்கள் வாசிக்கவில்லையா?

மத் 19:6 இப்படி இருக்கிறபடியினால், அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார்.

மத் 19:7 அதற்கு அவர்கள்: அப்படியானால், தள்ளுதற்சீட்டைக் கொடுத்து அவளைத் தள்ளிவிடலாமென்று மோசே ஏன் கட்டளையிட்டார் என்றார்கள்.

மத் 19:8 அதற்கு அவர்: உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடலாமென்று உங்கள் இருதயகடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார்; ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை.

மத் 19:9 ஆதலால் எவனாகிலும் தன் மனைவி வேசித்தனஞ் செய்ததினிமித்தமேயன்றி அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால் அவன் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான்; தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

"பரிசேயர் அவரைச் சோதிக்க வேண்டுமென்று" இயேசு கிறிஸ்துவை ஏதாவது ஒரு கண்ணியில் சிக்கவைக்க வேண்டுமென்று பரிசேயர் முயற்சி பண்ணினார்கள் (மத் 26:3)

"தள்ளிவிடுவது" புருஷன் தன் மனைவியை விவகாரத்து பண்ணுவது. (மத் 5:31)

19 அதிகாரம்

"எந்த முகாந்தரத்தினாலாகிலும்" - பரிசேயர் தாங்கள் கேட்கும் கேள்வியை மிகவும் வினயமாகக் கேட்கிறார்கள் பழைய ஏற்பாட்டுப் பிரமாணத்தின் பிரகாரமாக வேசித்தனம் மட்டுமே புருஷன் மனைவியைத் தள்ளி விடுவதற்கு முகாந்தரமாக இருந்தது. (உபா 24:1-4) ஆனால் இங்கு பரிசேயர் "எந்த முகாந்தரத்தினாலாகிலும்" புருஷன் மனைவியைத் தள்ளிவிடலாமா என்று கேள்வி கேட்கிறார்கள் இன்றைய தினமும் யூதர்கள் மத்தியில் இது மிகப்பெரிய பிரச்சனையாக இருக்கிறது. யூதமார்க்கத் தலைவர்கள் உபா 24:1-4 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பழைய ஏற்பாட்டுப் பிரமாணத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள் தற்காலத்தில் ஏராளமான முகாந்தரங்களுக்காக புருஷன் தன் மனைவியைத் தள்ளிவிடுவதற்கு அனுமதி கொடுக்கிறார்கள்

"ஆதியிலே மனுஷனை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார்" - (ஆதி 1:26-28, ஆதி 2:21-25) இது தேவனுடைய வார்த்தை. ஆனால் ஒரு சிலர் தங்களை அறிஞர்கள் என்று கூறிக்கொண்டு மனுஷன் குரங்கிலிருந்து தோன்றியவன் என்று குழறுபடி பண்ணுகிறார்கள்

"அவர்கள் இருவராயிராமல் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள் ஆகையால் தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக் கடவன்" திருமணம் செய்யும் புருஷனையும் மனைவியையும் கர்த்தரே இணைப்பதாக பலர் கூறுகிறார்கள் ஆகையினால் கர்த்தர் தங்களுக்கு நியமித்து வைத்திருக்கும் புருஷனையோ, அல்லது மனைவியையோ விவாகம் பண்ணுவதற்குத் தங்களுக்கு உரிமை இருக்கிறது என்று விவாதம் பண்ணுகிறார்கள். சட்டப்படியாக நடைபெறும் எல்லா திருமணங்களையுமே தேவன் அங்கீகரிக்கிறார் அதேசமயத்தில் திருமண வேளையில் புருஷனும். மனைவியும் கூறும் வாக்குறுதிகளுக்கு அவர்களே பொறுப்பு ஏற்க வேண்டும் (ரோமர் 13:1-10)

"தள்ளுதற்சீட்டைக் கொடுத்து, அவளைத் தள்ளிவிடலாமென்று மோசே ஏன் கட்டளையிட்டார்" - (மத் 5:31, மாற்கு 10:4

"உங்கள் மனைவிகளைத் தள்ளி விடலாமென்று உங்கள் இருதயக் கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார்" - தள்ளுதற்சீட்டைப் பற்றி மோசே கூறியுள்ள பிரமாணம் இதுதான் " " (உபா 24:1-4) வேசித்தன முகாந்தரத்தினால் தள்ளுதற்சீட்டைக் கொடுக்கலாம். மோசே இதை அனுமதிக்கவில்லையென்றால் ஆண்களுடைய துன்மார்க்கமான தீவினைகளினாலும் கொடுமைகளினாலும் பெண்கள் துன்புறுத்தப் படுவார்கள் கொடுமைப்படுத்தப்படுவார்கள் ஆகையினால்தான் மோசே தள்ளுதற்சீட்டை அனுமதித்தார்

"ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை" - பரிசேயருடைய கேள்விக்கு இயேசு கிறிஸ்து மிகவும் நேர்த்தியாய்ப் பதில் கூறினார் மோசேயின் பிரமாணத்தை இயேசு மேற்கோளாகக் காட்டினாரே தவிர தமது காலத்தில் இருந்த யூதமார்க்கத்து பிரமாணங்களைத் தமக்கு ஆதாரமாகக் கூறவில்லை இருதயக்கடினமும். தள்ளுதற்சீட்டும் தேவனால் உண்டானவை அல்ல இயேசு கிறிஸ்துவினுடைய இராஜ்ஜியத்தில் இருதயக் கடினமுடையவர்கள் பங்குபெறமாட்டார்கள் அவருடைய நித்திய ஆளுகையிலும் இப்போது பட்டவர்களுக்கு எந்தப் பங்கும் இல்லை. (ஆதி 8:22, ஆதி 9:12; ஏசா 59:20, லூக்கா 1:32-33, வெளி 11:15; வெளி 22:4-5, தானி 7:13-14

"எவனாகிலும் தன் மனைவி வேசித்தனஞ் செய்ததினிமித்தமேயன்றி அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால் அவன் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான்" ஒரு ஸ்திரீ வேசித்தனம் செய்தாள் என்று நிரூபிக்கப் பட்டால் அவளைத் தள்ளிவிடலாம். அவ்வாறு நிரூபிக்கப்படாமலேயே அவளுடைய புருஷன் வேறொருத்தியை விவாகம் பண்ணினால் புருஷன்மீதுதான் குற்றம். அவன் விபச்சாரம் செய்கிற குற்றம் புரிகிறான் பிரச்சனை இத்துடன் முடியவில்லை. தள்ளிவிடப்பட்டவளை யாராவது விவாகம் பண்ணினால் அவன்மீதும் குற்றம் சுமருகிறது அவனும் விபச்சாரம் செய்கிற குற்றம் புரிகிறான்

19 அதிகாரம்

இது கர்த்தருடைய பிரமாணம். பரிசேயருக்கு இது மகிழ்ச்சியான பதில் அல்ல. அவர்களுக்கு மட்டுமல்ல, எப்படியும் வாழலாம் எத்தனை மனைவிகளை வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம் என்றும் ஆசை உடையவர்களுக்கும் இயேசுவின் பிரமாணம் மகிழ்ச்சியானதல்ல. "எந்த முகாந்தரத்தினாலாகிலும்" ஒரு புருஷன் தன் மனைவியைத் தள்ளிவிடக்கூடாது.

"தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்" - காரணங்கள்

1 திருமணம் தெய்வீக நியமனம் (மத் 19:4,6,8)

2 திருமணம் தெய்வீக கட்டளையின்படி நடைபெறுகிறது (மத் 19:5-6)

3 ஆதாமும், ஏவாளும் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு முன் மாதிரியானவர்கள் (மத் 19:8)

4 திருமணம் ஒரு புருஷனையும் ஒரு ஸ்திரீயையும் ஒரே மாம்சமாக்குகிறது. இதனால் தங்களுடைய சந்தோஷம் வருத்தம், எல்லாவற்றிலும் இவர்கள் பங்காளிகளாக இருக்கிறார்கள் மத் 19:5-6

5 திருமணம் முறிந்துபோகும்போது அவர்களுடைய பிள்ளைகளுக்குப் பல பிரச்சனைகள் வரும். இதனால் அந்தப் பிள்ளைகளும் பெற்றோருடைய கவனிப்பு இல்லாமல் பாவஜீவியத்தில் விழும் வாய்ப்பு அதிகரிக்கிறது. (மத் 19:9,மாற்கு 7:21 ரோமர் 1:29-32)

6 திருமணம் முறிவதினால் பல தீய விளைவுகள் உண்டாகும். இதனால் ஆக்கினைத்தீர்ப்புகள் வரும் (மத் 19:9; கலா 5:19-21 1கொரி 6:9,10)

7 இருதயக்கடினத்தைச் சுவிசேஷம் ஏற்றுக் கொள்ளவில்லை. பிறர்மீது அன்புகூர வேண்டுமென்பதே தேவனுடைய பிரமாணம். (2கொரி 5:17-18; எபே 4:24, கலா 5:24

தள்ளுதற்சீட்டைக் கொடுப்பதற்குப் புதிய ஏற்பாடு அங்கீகரிக்கும் காரணங்கள்

1 வேசித்தனம் (மத் 19:9; மத் 5:32, நீதி 2:16-20; நீதி 6:24-26 நீதி 7:5-23; நீதி 9:13-18; நீதி 11:22 நீதி 30:20-23)

2 கிறிஸ்துவையும் சுவிசேஷத்தையும் வேண்டுமென்றே விலக்கிவிட்டுப் பிரிந்துபோதல். (1கொரி 7:12-15)

"தள்ளிவிட்டு விவாகம் பண்ணுகிறவன் அல்லது விவாகம் பண்ணுகிறவன் விபச்சாரம் செய்கிறார்கள்" - வேசித்தன முகாந்தரத்தினால் மட்டுமே தள்ளுதற்சீட்டைத் தரவேண்டும். வேறு எந்தக் காரணத்திற்காகத் திருமண உறவை முறித்தாலும் அது குற்றமே. அவ்வாறு வேறு காரணங்களுக்காகத் திருமண உறவை முறித்துவிட்டு அதன் பின்பு வேறு திருமணம் செய்கிறவர் ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் அவர் விபசாரம் பண்ணுகிறார் (மத் 5:32; 1கொரி 7:12-15

79. மனைவியைத் தள்ளி விடுவதினால் ஏற்படும் விளைவுகள் - (மத் 5:32 மாற்கு 10:10; லூக் 16:18)

மத் 19:10 அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: மனைவியைப் பற்றி புருஷனுடைய காரியம் இப்படியிருந்தால் விவாகம் பண்ணுகிறது நலமல்ல என்றார்கள்

மத் 19:11 அதற்கு அவர் வரம் பெற்றவர்களே தவிர மற்றவர்கள் இந்த வசனத்தை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்

மத் 19:12 தாயின் வயிற்றிலிருந்து அண்ணகர்களாய்ப் பிறந்தவர்களும் உண்டு;

19 அதிகாரம்

மனுஷர்களால் அண்ணகர்களாக்கப்பட்டவர்களும் உண்டு. பரலோக ராஜ்யத்தினிமித்தம் தங்களை அண்ணகர்களாக்கிக் கொண்டவர்களும் உண்டு; இதை ஏற்றுக்கொள்ள வல்லவன் ஏற்றுக் கொள்ளக்கடவன் என்றார்

"மனைவியைப் பற்றி புருஷனுடைய காரியம் இப்படியிருந்தால், விவாகம் பண்ணுகிறது நல்லதல்ல" - திருமண வாழ்வு சந்தோஷமானதாக இருக்க வேண்டும் ஏதாவது சில காரணங்களுக்காக அவர்களுடைய மணவாழ்வில் சந்தோஷமும் சமாதானமும் இராது. அவர்களுக்கு அதிருப்தியே இருக்கும் என்ற சூழ்நிலை இருக்குமென்றால் அவர்கள் திருமணம் செய்து பின்பு பிரிந்துபோவதற்குப் பதிலாகத் திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பது நலம்

"வரம்பெற்றவர்களே தவிர மற்றவர்கள் இந்த வசனத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்" - திருமணம் செய்து கொள்வது ஆசீர்வாதம் திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பது குற்றமல்ல.

"அண்ணகர்கள்" அலிகள் ஆண்மையற்றவர்கள், காயடிக்கப்பட்டவர்கள்

அண்ணகர்களின் பிரிவுகள்

1 பிறவியிலேயே ஆண்மையற்றவர்களாக பிறந்தவர்கள். (மத் 19:12, உபா 23:1)

2 அரண்மனையின் அந்தப்புரங்களில ராணிகளுக்கும். அரண்மனை ஸ்திரீகளுக்கும் காவல் காப்பதற்காகக் காயடிக்கப்பட்டவர்கள் (மத் 19:12; 2இராஜா 20:18; எரே 29:2; எரே 34:19; எரே 41:16; ஏசா 56:4, அப் 8:27-39)

3 தேவனுடைய ராஜ்யத்திற்காக அறுவை சிகிச்சை மூலமாகத் தங்களை அண்ணகர்களாக ஆக்கிக் கொண்டவர்கள். (மத் 19:12)

"இதை ஏற்றுக்கொள்ள வல்லவன் ஏற்றுக்கொள்ளக் கடவன்" - அண்ணகர்களாக வாழமுடியும் என்று தீர்மானம் பண்ணுகிறவர்கள் அண்ணகர்களாக வாழலாம்.

77. இயேசு சிறுபிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார் – (மாற்கு 10:13, லூக் 18:15)

மத் 19:13 அப்பொழுது, சிறு பிள்ளைகளின் மேல் அவர் கைகளை வைத்து ஜெபம் பண்ணும்படிக்கு அவர்களை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்; கொண்டுவந்தவர்களைச் சீஷர்கள் அதட்டினார்கள்

மத் 19:14 இயேசுவோ, சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங் கொடுங்கள் அவர்களைத் தடை பண்ணாதிருங்கள் பரலோகராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது என்று சொல்லி,

மத் 19:15 அவர்கள்மேல் கைகளை வைத்து பின்பு அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப் போனார்

"சிறு பிள்ளைகளின் மேல் அவர் கைகளை வைத்து ஜெபம்பண்ணும்படிக்கு அவர்களை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்" இது யூதருடைய பழக்கம். யூதமார்க்கத்தலைவர்கள் தங்கள் பகுதிக்கு வரும்போது தங்களுடைய சிறுபிள்ளைகளைப் பெற்றோர் அவர்களிடம் அழைத்துச் சென்று தங்கள் பிள்ளைகள்மீது கைகளை வைத்து ஆசீர்வதிக்கும்படியாகவும் அவர்களுக்காக ஜெபம் பண்ணும்படியாகவும் கொண்டு வருவார்கள்

"சீஷர்கள் அதட்டினார்கள்" இயேசு கிறிஸ்துவின் காரியங்களில் சீஷர்கள் மறுபடியுமாகத் தலையிடுகிறார்கள் (மத் 15:23; மத் 16:22, லூக்கா 9:49-50,53-56) ஆனால் இயேசுவோ சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள் அவர்களைத் தடைபண்ணாதிருங்கள் என்று சொன்னார்

19 அதிகாரம்

"பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது" - கணக்கு ஒப்புவிக்கக்கூடிய பக்குவம் இல்லாதவர்களே சிறுபிள்ளைகள் எந்த வயதில் அவர்களுக்குப் பொறுப்பு வரும் என்று தெளிவாகத் தெரியவில்லை ஆகையினால் சிறுவர்களும் இரட்சிக்கப்பட்டு தேவனுடைய ராஜ்ஜியத்தில் சுதந்தரிக்கமுடியும் (மத் 18:1-10 மத் 19:14)

"அவர்கள்மேல் கைகளை வைத்தார்" - ஒரு நபரை ஆசீர்வதிப்பதற்கு அவர்கள்மீது கைகளை வைத்து ஆசீர்வதிக்க வேண்டும். இது இரண்டு ஏற்பாடுகளிலும் காணப்படுகிற பழக்கம். (மாற்கு 16:18)

78. மிகுந்த ஆஸ்தியுள்ள வாலிபன் - மாற்கு 10:17, லூக் 18:18)

மத் 19:16 அப்பொழுது ஒருவன் வந்து அவரை நோக்கி: நல்ல போதகரே, நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்யவேண்டும் என்று கேட்டான்.

மத் 19:17 அதற்கு அவர்: நீ என்னை நல்லவன் என்று சொல்லுவானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே; நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள் என்றார்.

மத் 19:18 அவன் அவரை நோக்கி: எவைகளை என்று கேட்டான். அதற்கு இயேசு: கொலை செய்யாதிருப்பாயாக, விபசாரஞ்செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக,

மத் 19:19 உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக, உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பவைகளையே என்றார்.

மத் 19:20 அந்த வாலிபன் அவரை நோக்கி: இவைகளையெல்லாம் என் சிறுவயது முதல் கைக்கொண்டிருக்கிறேன்; இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன என்றான்.

மத் 19:21 அதற்கு இயேசு: நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது, பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றிவா என்றார்.

மத் 19:22 அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்டபொழுது, துக்கமடைந்தவனாய்ப் போய்விட்டான்.

"நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்யவேண்டும்" - எந்த நன்மையும் செய்து யாரும் நித்திய ஜீவனை அடையமுடியாது. இரட்சிப்பு தேவன் நமக்குத் தரும் இலவசமான ஈவு. நமது பாவங்களை இயேசு கிறிஸ்துவிடம் அறிக்கையிட்டு, இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும்போது அவர் நமது பாவங்களை மன்னிக்கிறார். நாம் நித்திய ஜீவனை அடைவோம். இது மட்டுமே வழி. வேறு வழி இல்லை. நன்மை செய்வதில் தவறில்லை. அது நல்லதுதான். ஆனால் நன்மை செய்வதினால் நித்திய ஜீவனை அடையலாம் என்று எண்ணக்கூடாது (யோவான் 3:16-20, எபே 2:8-9; 1தீமோ 3:5, 1யோவான் 1:9, ரோமர் 10:9-10)

போதகர் (Master)

διδάσκαλος - didaskalos - 1320

ஆண்பால் பெயர்ச்சொல் - வேதபாரகன், வேதகர், போதகர், குரு (**teacher**) (லூக்கா 9:38)

"நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால் போய், உனக்கு உண்டானவைகளை விற்று தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும், பின்பு என்னைப் பின்பற்றிவா" - பூரண சற்குணனாய் இருக்க விரும்புகிறவர்கள் முதலாவதாக இந்த உலகத்தின்மீதுள்ள ஆசையை விட்டுவிட வேண்டும். உலக நீதியையும் விட்டுவிட வேண்டும்.

19 அதிகாரம்

நமது நம்பிக்கை தேவன்மீதும் அவருடைய நீதியின்மீதுமே இருக்க வேண்டும். இந்த உலகத்திலுள்ள நமது சம்பத்துக்கள் எல்லாவற்றையும் தேவையுள்ளோருக்குக் கொடுத்துவிட்டு இயேசு கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டும்.

79. ஐசுவரியவான்களுக்கு எச்சரிப்பு - (6:19; மாற்கு 10:23; லூக் 18:24)

மத் 19:23 அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஐசுவரியவான் பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிதென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மத் 19:24 மேலும் ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும் ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

மத் 19:25 அவருடைய சீஷர்கள் அதைக் கேட்டு மிகவும் ஆச்சரியப்பட்டு, அப்படியானால், யார் இரட்சிக்கப்படக்கூடும் என்றார்கள்.

மத் 19:26 இயேசு, அவர்களைப் பார்த்து: மனுஷரால் இது கூடாததுதான், தேவனாலே எல்லாம் கூடும் என்றார்.

"ஐசுவரியவான் பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிது" - (லூக்கா 12:15; 18:24) அரிது என்றால் பிரவேசிக்க முடியாது என்று பொருளல்ல. பிரவேசிப்பது கடினம் என்றே பொருள்படும்.

"ஒட்டகம்" - தன் முதுகின்மீது கனமான பாரத்தை ஏற்றியிருக்கும் ஒட்டகம்.

"ஊசியின் காது" - இது யூதருடைய வழக்குச்சொல். மிகவும் கடினமான செயல் அல்லது நடைபெறுவதற்கு வாய்ப்பில்லை என்னும் பொருளைத் தரும் வாக்கியம். பட்டணத்து மதில்களில் பெரிய வாயில்கள் இருக்கும். ஒவ்வொரு பெரிய வாயிலிலும் ஒரு சிறிய வாசல் இருக்கும். அதற்கு ஊசியின் காது என்று பெயர். அந்தச் சிறிய வாசல் வழியாகச் சுமையை ஏற்றிச்செல்லும் ஒட்டகம் நுழையும்போது மிகவும் சிரமப்பட்டுத்தான் உள்ளே போகும். ஒட்டகத்தின்மீதுள்ள சுமையை இறக்கி வைத்துவிட்டால் ஒரு வேளை அது குனிந்து முழங்காலபடியிட்டு, தவழ்ந்து இந்த சிறிய வாசல் வழியாக உள்ளே போகமுடியும்.

தேவனுடைய ராஜ்யமும், பரலோகராஜ்யமும்

தேவனுடைய ராஜ்யம் என்பது இந்த உலகத்தின்மீதும் தேவனுடைய தெய்வீக அதிகாரத்தைக் குறிப்பிடும். இதில் பரலோக ராஜ்யமும் அடங்கும். வேதாகமத்தில் தேவனுடைய ராஜ்யம் என்னும் வாக்கியம் 70 இடங்களிலும், பரலோகராஜ்யம் என்னும் வாக்கியம் 33 இடங்களிலும் வருகிறது. தேவனுடைய ராஜ்யத்தின் ஒரு பகுதியே பரலோகராஜ்யம். ஆகையினால் இவ்விரண்டிற்கும் பல ஒற்றுமைகள் உள்ளன. ஆனாலும் இவ்விரண்டிற்குமிடையே சில வேற்றுமைகளும் உண்டு.

பரலோகராஜ்யத்திற்கும் தேவனுடைய ராஜ்யத்திற்கும் இடையிலுள்ள வேறுபாடுகள்

1. மேசியா ராஜாவாக இருக்கிறார் __தேவன் ராஜாவாக இருக்கிறார் (யோவான் 18:37; வெளி 20:6) (1கொரி 15:28)

2. பரலோகத்திலிருந்து ஆளுகை செய்கிறார் வானத்திலும் பூமியிலும் ஆளுகை செய்கிறார் (யோவான் 18:36; தானி 7:14) (சங் 103:19)

3. பூமியின்மீதும் மட்டும் __பரலோகத்திலும் வானத்திலும் (யோவான் 18:37, வெளி 5:10) (1கொரி 15:28

மத்தேயு – தொகுப்புரை

19 அதிகாரம்

4 வரையறுக்குட்பட்ட வாய்ப்புக்கள் வாய்ப்புக்களுக்கு வரையறையில்லை (சக 14:9) (வெளி 4:11; வெளி 5:11)

5. அரசியல் ரீதியானது—ஆவிக்குரியது (ஏசா 9:7; தானி 7:14) (ரோமர் 14:17)

6 வருங்காலத்திற்குரியது—கடந்தகாலம் நிகழ்காலம், வருங்காலத்திற்குரியது (மத் 6:10; 2தீமோ 4:1) (சங் 90:2)

7 கிறிஸ்துவின்கீழ் ஆளுகை நடைபெறுகிறது—தேவனே சர்வ ஆளுநர் (சங் 103:19) (சங் 2:6; லூக்கா 1:32-33)

8 கிறிஸ்துவிற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது—கொடுக்கப்படவில்லை (சங் 10:16) (தானி 7:13-14; லூக்கா 1:32)

9 இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் ஆரம்பமாகிறது. இப்பொழுது நடைபெறுகிறது (சங் 90:2) (சக 14; 2தீமோ 4:1)

10 பரலோகத்தின்கீழ் மட்டும்—எல்லா இடங்களிலும் (சங் 103:19) (தானி 7:27; வெளி 11:15)

11 பூமிக்குரிய பூதமுறைமை—பரலோகத்திற்குரிய தேவமுறைமை (தானி 9:7; லூக்கா 1:33) (வெளி 5:11)

12 பூமியில் எல்லா கிரகங்களிலும் (வெளி 11:15) (வெளி 5:13)

13 பூமிக்குரிய தலைநகரம். பரலோகத்திற்குரிய தலைநகரம் (தானி 2:3; சக 14) (எபி 12:22)

14 குறிப்பிட்ட வருஷத்திற்கு மட்டும்—நித்தியகாலம் (2கொரி 15:24-28) (எபே 3:11)

15 துவக்கமுண்டு—நித்தியமானது, முடிவில்லை (2தீமோ 4:1; மத் 6:10) (சங் 90:2)

16 இப்போது இரட்சிக்கப்படாதவர்கள் இருக்கிறார்கள் இரட்சிக்கப்பட்டவர்கள் மட்டுமே இருப்பார்கள் (மத் 13:38-50) (யோவான் 3:3)

17 வெளிப்படையான அடையாளங்களுடன் வரும். அமைதியாக வரும் (மத் 24:29-31; மத் 25:31-46; 2தெச 1:7-10; யூதா 1:14; சக 14:1-5; தானி 7:13-14; வெளி 19:11-21) (லூக்கா 17:20; ரோமர் 14:17; 1கொரி 4:20)

18 மாம்சமும், இரத்தமும் உடையவர்கள் சுதந்தரித்துக் கொள்வார்கள் ... உயிர்த்தெழுந்த மகிமையடைந்த பரிசுத்தவான்கள் சுதந்தரித்துக் கொள்வார்கள் (சங் 37:11; மத் 5:5; மத் 25:34; தானி 7:18,28; எபே 4:3:7) (ரோமர் 8:17; 1கொரி 15:50-58; வெளி 21:7)

"மனுஷரால் இது கூடாததுதான் தேவனாலே எல்லாம் கூடும்" - மனுஷனால் ஒரு ஏழையையோ அல்லது ஒரு ஐசுவரியவானையோ இரட்சிக்க முடியாது ஆனால் தேவனால் இரு பிரிவினரையும் இரட்சிக்க முடியும். ஐசுவரியவான்களும் இரட்சிக்கப்பட முடியும் ஆயினும் அவர்களுக்கு இரட்சிப்பு கடினமாயிருக்கும் ஏனெனில் அவர்கள் தங்களுடைய இருதயங்களை உலக ஐசுவரியங்களின்மீது பதித்து வைத்திருப்பார்கள் உலக ஆடம்பரங்களை விட்டுவிட்டு இயேசுவைப் பின்பற்றி வருவது ஐசுவரியவான்களுக்குக் கடினமான காரியம். (கொலோ 3:1; 1தீமோ 6:9-10,17; 1யோவான் 2:15)

80. நித்திய இராஜ்யத்தில் அப்போஸ்தலர்களுக்கு உரிய இடம் - (லூக் 22:28)

மத் 19:27 அப்பொழுது, பேதுரு அவரை நோக்கி: இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே, எங்களுக்கு என்ன கிடைக்கும் என்றார்

19 அதிகாரம்

மத் 19:28 அதற்கு இயேசு: மறுஜென்மகாலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் போது, என்னைப் பின்பற்றின நீங்களும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந் தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின்மேல் வீற்றிருப்பீர்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

தீர்க்கதரிசன எண் - 28

"மறுஜென்மகாலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும்போது என்னைப் பின்பற்றின நீங்களும் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின்மேல் வீற்றிருப்பீர்கள் (மத் 19:28-30) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. மத் 19:27 ஆவது வசனத்தில் பேதுரு அவரை நோக்கி: "இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே, எங்களுக்கு என்ன கிடைக்கும்" என்று ஒரு கேள்வி கேட்டான். இதற்குரிய பதில் மத் 19:28-30 ஆகிய வசனங்களிலும் மத் 20:1-16 ஆகிய வசனங்களிலும் உள்ளது.

மறுஜென்மம் (regeneration)
παλιγγενεσία
palingenesia 3824

பெண்பால் பெயர்ச்சொல்

மறுஜென்மம் (renewing again, the restitution of all things) (தீத்து 3:5)

"மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும்போது" - இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகையின்போது தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார் (மத் 24:29-31; மத் 25: 31-46).

"என்னைப் பின்பற்றின நீங்களும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந் தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின் மேல் வீற்றிருப்பீர்கள்" - இயேசு கிறிஸ்துவோடு அப்போஸ்தலர்களும் (லூக்கா 22:30) எல்லா பரிசுத்தவான்களும் (வெளி 20:4-6) ஆளுகை செய்வார்கள்.

81. முழுமையாக ஒப்புக் கொடுத்தவர்களுக்கு வெகுமதிகள் - (மாற்கு 10:28; லூக் 18:28-30)

மத் 19:29 என் நாமத்தினிமித்தம் வீடுகளையாவது சகோதரரையாவது சகோதரிகளையாவது தகப்பனையாவது தாயையாவது மனைவியையாவது பிள்ளைகளையாவது நிலங்களையாவது விட்டவன் எவனோ அவன் நூறத்தனையாய் அடைந்து நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்.

மத் 19:30 ஆகிலும், முந்தினோர் அநேகர் பிந்தினோராயும், பிந்தினோர் அநேகர் முந்தினோராயும் இருப்பார்கள் என்றார்.

"அவன் நூறத்தனையாய் அடைவான்" (மாற்கு 10:30; லூக்கா 18:30)

"நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்" - (யோவான் 6:27)

"முந்தினோர் அநேகர் பிந்தினோராயும், பிந்தினோர் அநேகர் முந்தினோராயும் இருப்பார்கள்" - (மத் 20:16)

20 அதிகாரம்

82. தாழ்மை - திராட்சத்தோட்டத்து வேலையாட்களைப் பற்றிய உவமை

மத் 20:1 பரலோகராஜ்யம் வீட்டெஜமானாகிய ஒரு மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் தன் திராட்சத்தோட்டத்துக்கு வேலையாட்களை அமர்த்த அதிகாலையிலே புறப்பட்டான்

மத் 20:2 வேலையாட்களுடன் நாளொன்றுக்கு ஒரு பணம் கூலி பேசி, அவர்களைத் தன் திராட்சத்தோட்டத்துக்கு அனுப்பினான்

மத் 20:3 மூன்றாம் மணிவேளையிலும் அவன் புறப்பட்டுப்போய், கடைத்தெருவிலே சும்மா நிற்கிற வேறு சிலரைக் கண்டு:

மத் 20:4 நீங்களும் திராட்சத்தோட்டத்துக்குப் போங்கள், நியாயமானபடி உங்களுக்குக் கூலி கொடுப்பேன் என்றான்; அவர்களும் போனார்கள்

மத் 20:5 மறுபடியும், ஆறாம் ஒன்பதாம் மணிவேளையிலும் அவன் போய் அப்படியே செய்தான்

மத் 20:6 பதினோராம் மணிவேளையிலும் அவன் போய், சும்மா நிற்கிற வேறு சிலரைக் கண்டு: நீங்கள் பகல் முழுவதும் இங்கே சும்மா நிற்கிறதென்ன என்று கேட்டான்

மத் 20:7 அதற்கு அவர்கள்: ஒருவரும் எங்களுக்கு வேலையிடவில்லை என்றார்கள். அவன் அவர்களை நோக்கி: நீங்களும் திராட்சத்தோட்டத்துக்குப் போங்கள், நியாயமானபடி கூலி பெற்றுக்கொள்வீர்கள் என்றான்

மத் 20:8 சாயங்காலத்தில், திராட்சத்தோட்டத்துக்கு எஜமான் தன் காரியக்காரனை நோக்கி: நீ வேலையாட்களை அழைத்து, பிந்திவந்தவர்கள் தொடங்கி முந்திவந்தவர்கள் வரைக்கும் அவர்களுக்குக் கூலிகொடு என்றான்

மத் 20:9 அப்பொழுது பதினோராம் மணிவேளையில் வேலையமர்த்தப்பட்டவர்கள் வந்து ஆளுக்கு ஒவ்வொரு பணம் வாங்கினார்கள்

மத் 20:10 முந்தி அமர்த்தப்பட்டவர்கள் வந்து, தங்களுக்கு அதிக கூலி கிடைக்கும் என்று எண்ணினார்கள்; அவர்களும் ஆளுக்கு ஒவ்வொரு பணம் வாங்கினார்கள்

மத் 20:11 வாங்கிக்கொண்டு, வீட்டெஜமானை நோக்கி:

மத் 20:12 பிந்திவந்தவர்களாகிய இவர்கள் ஒருமணி நேரமாத்திரம் வேலை செய்தார்கள்; பகலின் கஷ்டத்தையும் வெயிலின் உஷ்ணத்தையும் சகித்த எங்களுக்கு இவர்களைச் சமமாக்கினீரே என்று முறுமுறுத்தார்கள்

மத் 20:13 அவர்களில் ஒருவனுக்கு அவன் பிரதியுத்தரமாக: சிநேகிதனே, நான் உனக்கு அநியாயஞ்செய்யவில்லை, நீ என்னிடத்தில் ஒரு பணத்துக்குச் சம்மதிக்கவில்லையா?

மத் 20:14 உன்னுடையதை நீ வாங்கிக்கொண்டுபோ, உனக்குக் கொடுத்ததுபோலப் பிந்திவந்தவனாகிய இவனுக்கும் கொடுப்பது என்னுடைய இஷ்டம்.

மத் 20:15 என்னுடையதை என் இஷ்டப்படி செய்ய எனக்கு அதிகாரமில்லையா? நான் தயாளனாயிருக்கிறபடியால் நீ வன்கண்ணனாயிருக்கலாமா என்றான்

மத் 20:16 இவ்விதமாக, பிந்தினோர் முந்தினோராயும் முந்தினோர் பிந்தினோராயும் இருப்பார்கள்; அழைக்கப்பட்டவர்கள் அநேகர் தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர் என்றார்

20 அதிகாரம்

உவமை எண் - 9

"பரலோகராஜ்யம் வீட்டெஜமானாகிய ஒரு மனுஷருக்கு ஒப்பாயிருக்கிறது" - (மத் 20:1) நம்மை நாமே தாழ்த்த வேண்டும். நமக்குத் தேவன் கொடுத்திருக்கும் ஆசீர்வாதத்தில் திருப்தியாக இருக்க வேண்டும் ஆகிய சத்தியங்கள் இந்த உவமையில் வலியுறுத்தப் படடிருக்கிறது. மத் 19:29-30; மத் 20:16

"அதிகாலை" - யூதருடைய முறைமையில ஒரு நாளை அதிகாலை, மூன்றாமமணி வேளை என்று சில பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள அந்தப் பிரிவின் விவரம்

அதிகாலை - 6.00 மணி - காலை

மூன்றாம்மணி வேளை - 9.00 மணி - காலை

ஆறாம்மணி வேளை 12.00 மணி மத்தியம்

ஒன்பதாம் மணிவேளை 3.00 மணி மாலை

பதினொறாம் மணிவேளை 5.00 மணி மாலை

பணம் (penny) - δηνάριον deenarion - 1220

பால் வேறுபாடற்ற பெயர்சொல் - பணம், காசு

"கடைத்தெரு" - வேலையில்லாத மனுஷர் இங்கு கூடிவருவார்கள வேலை கொடுப்பவர்கள இங்கு வந்து தங்களுடைய வேலைக்குத் தேவையான ஆட்களைத் தெரிந்தெடுத்து, அழைத்துச் செல்வார்கள

"நியாயமானபடி கூலி பெற்றுக்கொள்வீர்கள்" - காலை 6.00 மணி வேளையில மட்டுமே வேலை செய்வதற்கு ஒரு பணம் கூலி என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. மற்ற நேரங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களுக்கு "நியாயமானபடி கூலி பெற்றுக்கொள்வீர்கள்" என்றே கூறப்பட்டது. மத் 19:27 ஆவது வசனத்தில பேதுருவின் கேள்விக்கு இந்த வசனம் பதில் கூறுகிறது.

"சாயங்காலம்" - மாலை 6.00 மணி. அந்த நாளுக்குரிய கூலி மாலை 6.00 மணி அளவில் எல்லா வேலையாட்களுக்கும் வழங்கப்படும். (லேவி 19:13; உபா 24:14-15)

"பதினோராம் மணிவேளை" - மாலை 5.00 மணிக்கு வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களுக்கும் ஒரு பணம் கூலியாகக் கொடுக்கப்பட்டது. (மத் 20:2) ஆனால இவர்களுக்கு ஒரு பணம் கூலியாக கொடுக்கப்படும என்று எந்த வாக்குறுதியும் கொடுக்கப்படவில்லை நியாயமானபடி கூலி பெற்றுக்கொள்வீர்கள என்று மட்டுமே கூறி இவர்களை வேலைக்கு அமர்த்தினார்கள்

"முந்தி அமர்த்தப்பட்டவர்கள வந்து தங்களுக்கு அதிக கூலி கிடைக்கும் என்று எண்ணினார்கள்" - மாலை 5.00 மணிக்கு வேலைக்கு வந்தவர்களுக்கு ஒரு பணம் கூலியாகக் கிடைத்தது. இவர்கள அதிகாலையில காலை 6.00 மணிக்கே வேலைக்கு வந்தவர்கள ஆசையினால தங்களுக்கு ஒரு பணத்தை விட அதிகமாகக் கூலி கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்கள் ஆனால இவர்களுக்கும் ஒரு பணம் மட்டுமே கூலியாகக் கிடைத்தது.

"வீட்டெஜமானை நோக்கி. முறுமுறுத்தார்கள்" - ஒரு பணத்திற்கு வேலைக்கு வருவதாக இவர்கள் ஏற்கெனவே சம்மதித்திருந்தார்கள ஆனால் இந்த ஒப்பந்தத்தை அவர்கள மறந்துவிட்டார்கள் பிந்தி வந்தவர்களுக்கு அதிகமாகக் கொடுக்கப் பட்டதினால தங்களுக்கும் அதிகமாகக் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்கள ஆனால வீட்டெஜமான் தான ஏற்கெனவே கொடுப்பதாக ஒப்புக்கொண்ட பிரகாரம் அவர்களுக்கு ஆளுக்கு ஒரு பணம் மட்டுமே கொடுத்தான்

20 அதிகாரம்

இதில் அவர்களுக்குத் திருப்தியில்லை ஆகையினால் அவர்கள் வீட்டெஜமானைப் பார்த்து "பிந்திவந்தவர்களாகிய இவர்கள் ஒருமணி நேரமாத்திரம் வேலைசெய்தார்கள் பகலின் கஷ்டத்தையும் வெயிலின் உஷ்ணத்தையும் சகித்த எங்களுக்கு இவர்களைச் சமமாக்கினீரே" என்று முறுமுறுத்தார்கள்

தீர்க்கதரிசன எண் - 29

"பிந்தினோர் முந்தினோராயும் முந்தினோர் பிந்தினோராயும் இருப்பார்கள்" - மத் 20:16 இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேற வில்லை

"பிந்தினோர் முந்தினோராயும் முந்தினோர் பிந்தினோராயும் இருப்பார்கள்" - மத் 20:16 மத் 19:30; மத் 23:12, லூக்கா 14:11 ஆகிய வசனங்கள் "தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான் தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்னும் வசனத்தின் கருத்தோடு ஒத்திருக்கிறது. இந்த உவமைக்கு பல விளக்கங்களை கொடுக்கிறார்கள்

திராட்சைத்தோட்டம் - சபை

வேலைக்காரர்கள் - விசுவாசிகள்

வெவ்வேறு வேளைகள் - விசுவாசிகளின் திறமை, வயது மற்றும் வேற்றுமைகள்

ஒருபணம் கூலி இரட்சிப்பு

இந்த உவமைக்கு வேதபண்டிதர்கள் வேறொரு வியாக்கியானமும் தருகிறார்கள் முந்தினோர் என்பது யூதர்களையும் பிந்தினோர் என்பது புறஜாதியாரையும் குறிக்கும் என்பது வேறொரு வியாக்கியானம்

"அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர்" - எல்லோருமே இரட்சிக்கப்படுமாறு அழைக்கப் படுகிறார்கள் (மத் 11:28; யோவான் 3:16 வெளி 22:17) ஆனால் ஒருசிலர் மட்டுமே இரட்சிக்கப் படுகிறார்கள் (மத் 7:13-14, லூக்கா 13:23-30)

33. இயேசு தமது மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் மறுபடியும் முன்குறித்துக் கூறுகிறார் - (மத் 16:21; மாற்கு 10:32; லூக் 18:31)

மத் 20:17 இயேசு எருசலேமுக்குப் போகும் போது வழியிலே பன்னிரண்டு சீஷரையும் தனியே அழைத்து.

மத் 20:18 இதோ, எருசலேமுக்குப் போகிறோம் மனுஷகுமாரன் பிரதான ஆசாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும் ஒப்புக் கொடுக்கப்படுவார் அவர்கள் அவரை மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து

மத் 20:19 அவரைப் பரியாசம் பண்ணவும், வாரினால் அடிக்கவும் சிலுவையில் அறையவும் புறஜாதியாரிடத்தில் ஒப்புக் கொடுப்பார்கள் ஆகிலும் மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார் என்றார்

தீர்க்கதரிசன எண் - 30

"இதோ, எருசலேமுக்குப் போகிறோம், மனுஷகுமாரன் பிரதான ஆசாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும் ஒப்புக் கொடுக்கப்படுவார் அவர்கள் அவரை மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து அவரைப் பரியாசம் பண்ணவும் வாரினால் அடிக்கவும், சிலுவையில் அறையவும் புறஜாதியாரிடத்தில் ஒப்புக்கொடுப்பார்கள் ஆகிலும் மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார்" (மத் 20:18-19) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இயேசு கிறிஸ்துவின் பாடுகளை அறிவிக்கக்கூடிய வசனம்.

20 அதிகாரம்

இந்தத் தீர்க்கதரிசனம் இயேசு கிறிஸ்து அனுபவிக்கப்போகிற பாடுகளை முன்னறிவிக்கிறது. மத் 16:21 மத் 17:22 ஆகிய வசனங்களில் பத்து பாடுகள் முன்னறிவிக்கப்பட்டுகிறது. அத்துடன் இந்த வசனம் மேலும் நான்கு பாடுகளை முன்னறிவிக்கிறது.

1. அவர் புறஜாதியாரிடத்தில் ஒப்புக் கொடுக்கப்படுவார்
2. அவரைப் பரியாசம் பண்ணுவார்கள்
3. அவரை வாரினால் அடிப்பார்கள்
4. அவரைச் சிலுவையில் அறைவார்கள்

"அவரைப் பரியாசம் பண்ணவும் வாரினால் அடிக்கவும் சிலுவையில் அறையவும் புறஜாதியாரிடத்தில் ஒப்புக்கொடுப்பார்கள்" - இயேசு கிறிஸ்து பல பாடுகளை அனுபவித்து சிலுவையில் மரித்தார். இயேசு கிறிஸ்துவின் இரத்தப்பழி யூதர்களின்மீதும் புறஜாதியார் மீதும் சுமரும். (அப் 2:23,36; அப் 3:14-15; அப் 4:27)

"மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார்" - (லூக்கா 9:22)

84. யாக்கோபு, யோவான் ஆகியோரின் மாம்ச ஜெபம் - (மத் 18:1, மாற்கு 10:35)

மத் 20:20 அப்பொழுது செபெதேயுவின் குமாரருடைய தாய் தன் குமாரரோடு கூட அவரிடத்தில் வந்து, அவரைப் பணிந்துகொண்டு உம்மிடத்தில் ஒரு விண்ணப்பம் பண்ணவேண்டும் என்றாள்

மத் 20:21 அவர் அவளை நோக்கி: உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். அதற்கு அவள்: உம்முடைய ராஜ்யத்திலே என் குமாரராகிய இவ்விரண்டு பேரில் ஒருவன் உமது வலது பாரிசத்திலும், ஒருவன் உமது இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி அருள் செய்யவேண்டும் என்றாள்

மத் 20:22 இயேசு பிரதியுத்தரமாக: நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா என்றார். அதற்கு அவர்கள்: கூடும் என்றார்கள்

மத் 20:23 அவர் அவர்களை நோக்கி: என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்; ஆனாலும், என் வலது பாரிசத்திலும் என் இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி என் பிதாவினால் எவர்களுக்கு ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கே யல்லாமல் மற்றொருவருக்கும் அதை அருளுவது என் காரியமல்ல என்றார்

"செபெதேயுவின் குமாரருடைய தாய்" - சலோமே (மத் 27:56 - மாற்கு 15:40)

"உம்முடைய ராஜ்யத்திலே என் குமாரராகிய இவ்விரண்டு பேரில் ஒருவன் உமது வலது பாரிசத்திலும் ஒருவன் உமது இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி அருள் செய்யவேண்டும்" - சலோமே தன்னுடைய இரண்டு குமாரர்களுக்கும் இயேசு கிறிஸ்துவின் இராஜ்யத்தில் உயர்ந்த இடம் வேண்டுமென்று விரும்புகிறாள் (மத் 20:21-22; மாற்கு 10:35). ராஜாக்களுடைய அரண்மனையில் விசேஷமானவர்களுக்கு இவ்வாறு உயர்ந்த ஆசனங்கள் கொடுக்கப்படும். (1இராஜா 2:19; சங் 45:9; சங் 80:17) ஆனால் இயேசு கிறிஸ்துவோ பிதாவின் வலதுபாரிசத்திற்கு உயர்த்தப்பட்டிருக்கிறார் (மாற்கு 14:62; மாற்கு 16:19; அப் 2:34; எபி 1:3; எபி 12:2; 1பேதுரு 3:22)

"நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை" - இன்று அநேகர் இப்படித்தான் ஜெபம் பண்ணுகிறார்கள். தாங்கள் என்ன கேட்கிறோம் என்பது அவர்களுக்கே தெரியவில்லை. தன்னைத்தான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான் என்பது இயேசு கிறிஸ்துவின் உபதேசம். ஆனால் அவரிடமே போய் தன்னுடைய பிள்ளைகளை உயர்த்துமாறு இந்தத் தாய் கேட்கிறாள். (மத் 18:1-10; மத் 20:16; மத் 20:24-28; மத் 23:12; லூக்கா 22:24-27)

20 அதிகாரம்

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் பன்னிரெண்டு விதமான பாத்திரங்கள்

1 துன்மார்க்கர் மீதான நியாயத்தீர்ப்பான பாத்திரம் (சங் 11:6; சங் 73:10; சங் 75:8; எரே 49:12)

2 இரட்சிப்பு, ஆசீர்வாதத்தின் பாத்திரம் (சங் 16:5; சங் 23:5; சங் 116:13)

3 தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரம் (ஏசா 51:17-22; எரே 25:15-28; வெளி 14:10; வெளி 16:19)

4 தேற்றரவின் பாத்திரம் (எரே 16:7)

5 பாபிலோன் கர்த்தருடைய கையிலுள்ள பொற்பாத்திரம் (எரே 51:7; வெளி 18:6)

6 புறஜாதியார்களால் இஸ்ரவேல் மீதான ஆட்கொள்ளுதலான பாத்திரம் (புல 4:21; எசே 23:31-33; ஆப 2:16; சக 12:2)

7 அசுத்தம், ஏமாற்றுதலின் பாத்திரம் (மத் 23:25-26; லூக்கா 11:39)

8 மேசியாவின் பாடுகளாகிய பாத்திரம் (மத் 20:22; மாற்கு 10:38; யோவான் 18:11)

9 மரணமாகிய பாத்திரம் - மேசியா சிலுவையில் மரிப்பதற்கு முன் தோட்டத்தில் இயேசுவை கொல்ல சாத்தான் முயற்சி பண்ணினான் (மத் 26:39,42; மாற்கு 14:36; லூக்கா 22:42)

10 கிறிஸ்துவின் இரத்தமாகிய போஜன விருந்தின் பாத்திரம் ஆசீர்வாதத்தின் பாத்திரம் (மத் 26:27-28; மாற்கு 14:23; லூக்கா 22:20; 1கொரி 10:16,21; 1கொரி 11:25-28)

11. பேய்களுடைய பானபாத்திரம் - சாபத்தின் பாத்திரம் (1கொரி 10:21)

12 அசுத்தம் நிறைந்த பாத்திரம் (வெளி 17:4)

இவைதவிர, 21 இடங்களில் சாதாரண பாத்திரங்களைப் பற்றி குறிப்பு உள்ளது (ஆதி 40:11-21; ஆதி 44:2,12-17; 2சாமு 12:3; 1இராஜா 7:26; 1நாளா 28:17; 2நாளா 4:5; நீதி 23:31; ஏசா 22:24; எரே 35:5; எரே 52:19; மத் 10:42; மாற்கு 7:4-8; மாற்கு 9:41)

"நான் பெறும் ஸ்நானம்" - ஆவியானவரின் ஞானஸ்நானம் (ஏசா 11:2; ஏசா 42:1-7; ஏசா 61:1-2; மத் 3:16; மத் 12:28; லூக்கா 3:21; லூக்கா 4:18; யோவான் 1:31-33; யோவான் 3:34; அப 10:38) இந்த வாக்கியம் தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறிக்காது. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைக் குறிக்கும். இயேசு கிறிஸ்து இனிமேல் பல பாடுகள் வழியாகக் கடந்து செல்வார். அது பாடுகளின் ஞானஸ்நானம் (லூக்கா 12:50). இந்த வாக்கியம் பாடுகளின் ஞானஸ்நானத்தையும் குறிக்காது.

"அவர்கள் கூடும் என்றார்கள்" - அறிவுத்திறனாகவும் சுய பெருமைக்காகவும் சுய கௌரவத்திற்காகவும் தங்களால் கூடுமென்று இக்காலத்தில் அநேகர் கூறுகிறார்கள். இதேபோலத்தான் அன்று சீஷர்கள் கூறினார்கள்.

தீர்க்கதரிசன எண் - 31

"என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்; ஆனாலும், என் வலது பாரிசத்திலும் என் இடது பாரிசத்திலும் உட்காருகிறதற்கு எவர்களுக்கு என் பிதாவினால் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கே யல்லாமல், மற்றொருவருக்கும் அதை அருளுவது என் காரியமல்ல" (மத் 20:23) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"பிதாவினால் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிறது" குமாரனுக்கு இல்லாத ஒரு சில உரிமைகள் பிதாவிற்கு உண்டு (மாற்கு 13:32; அப 1:7; யோவான் 8:28)

20 அதிகாரம்

85. மற்ற பத்துப் பேரின் மனக்கசப்பாகும் - (மத் 18:1; மாற்கு 10:41)

மத் 20:24 மற்றப் பத்துப்பேரும் அதைக் கேட்டு, அந்த இரண்டு சகோதரர் பேரிலும் எரிச்சலானார்கள்.

மத் 20:25 அப்பொழுது, இயேசு அவர்களைக் கிட்டவரச்செய்து: புறஜாதியாருடைய அதிகாரிகள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், பெரியவர்கள் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரஞ்செலுத்துகிறார்கள் என்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

மத் 20:26 உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன்.

மத் 20:27 உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்.

மத் 20:28 அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்.

"மற்றப் பத்துப்பேரும் அதைக் கேட்டு அந்த இரண்டு சகோதரர் பேரிலும் எரிச்சலானார்கள்" சகோதரர் மத்தியில் எரிச்சலையும், விரோதத்தையும், கோபத்தையும், பொறாமையையும் உண்டாக்குவது சாத்தானுடைய கிரியை. இதுவரையிலும் சீஷர்கள் ஒற்றுமையாக இருந்தார்கள். இப்போது பத்து சீஷர்களுக்கு இரண்டு சீஷர்கள்மீது எரிச்சல் வந்துவிட்டது. சாத்தான் அப்போஸ்தல ஊழியத்தின் ஒற்றுமையைப் பிளவுபடுத்தப் பார்க்கிறான்.

"புறஜாதியாருடைய அதிகாரிகள் இறுமாப்பாய் ஆளுகிறார்கள்" - புறஜாதியாருடைய அதிகாரிகள் கொடுமைப்படுத்துவார்கள். சர்வாதிகாரிபோல நடந்துகொள்வார்கள். இவை பரிசுத்த ஆவியானவரின் கிரியை அல்ல. (பிலி 2:1-2; 1பேதுரு 5:1-9)

"உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால் அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கடவன்" - தேவனுடைய ராஜ்யத்தில் இது மிகவும் முக்கியமான உபதேசம். எக்காலத்திற்கும் பொருந்தும் உபதேசம்.

"பணிவிடைக்காரன்" - ஒருவருடைய கட்டளையை நிறைவேற்றுகிறவன். பலவேறு பணிவிடைக்காரர்களைப் பற்றி நாம் வேதாகமத்தில் வாசிக்கிறோம்.

1. இராஜாவின் பணிவிடைக்காரர்கள் (மத் 22:13)
2. பந்தியில் பணிவிடைக்காரர்கள் (யோவான் 2:5,9)
3. அரசாங்கத்து அதிகாரிகள் (ரோமர் 13:4)
4. சபையில் சேவைபுரிகிறவர்கள் (மத் 23:11; மாற்கு 9:35; ரோமர் 16:1)
5. சபையின் மூப்பர்கள் (பிலி 1:1; 1தீமோ 3:10-13; அப் 6:1-7)
6. ஊழியம் செய்யும் இயேசு கிறிஸ்து (ரோமர் 15:8; கலா 2:17; மத் 4:23-24; மத் 9:35; அப் 10:38)
7. சபையின் ஊழியக்காரர்கள் (மத் 20:26; மாற்கு 10:43)
8. சுவிசேஷப் பிரசங்கியார்கள் (1கொரி 3:5; 2கொரி 3:6; எபே 3:7; கொலோ 1:23,25; 1தெச 3:2)
9. தேவனுடைய ஊழியக்காரர்கள் (யோவான் 12:26; 2கொரி 6:4-10; 2கொரி 11:23; எபே 6:21; கொலோ 1:7; கொலோ 4:7; 1தீமோ 4:6)

20 அதிகாரம்

10 சாத்தானுடைய ஊழியக்காரர்கள் 2கொரி 11:15

பணிவிடைக்காரன் (minister) διάκονος - diakonos - 1249

ஆண்பால் அல்லது பெண்பால் பெயர்சொல் - பணிவிடைக்காரன் ஊழியக்காரன் வேலைக்காரன் ஊழியஞ்செய்கிறவன், உதவிக்காரர்

"ஊழியக்காரன் - மற்றவருடைய சித்தத்திற்குத் தன்னைப் பூரணமாக அர்ப்பணித்துக் கொண்டவன் வேதாகமத்தில் பலவேறு ஊழியக்காரர்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது இதன்பொருள் சுயாதீன அடிமை என்பதாகும்

1 மனுஷருடைய அடிமைகள் (கலா 3:28 எபே 6:8; கொலோ 3:11 வெளி 6:15)

2 இராஜாவின் வேலைக்காரர்கள் மத் 18:23-26; மத் 22:1-14 லூக்கா 15:17-22

3 அதிகாரிகள் (யோவான் 18:18)

4 பாவத்திற்கு அடிமையாக இருக்கும் பாவிகள் (யோவான் 8:34. ரோமர் 6:16-22, 2பேதுரு 2:19)

5 கிறிஸ்துவின் சீஷர்கள் (மத் 10:24-25, ரோமர் 6:16-22; வெளி 19:5)

6 தேவனுடைய ஊழியக்காரரான கிறிஸ்து (பிலி 2:7; ஏசா 42:1; ஏசா 52:13

7 மோசேயும், எல்லாத் தீர்க்கதரிசிகளும் எபி 3:5; வெளி 10:7; வெளி 11:18 வெளி 15:3

8 எல்லா ஊழியக்காரர்களும் மூப்பர்களும் (மத் 20:27; மாற்கு 10:44; ரோமர் 1:1; கலா 1:10; யாக் 1:1, 2பேதுரு 1:1; யூதா 1:1)

ஊழியக்காரன் (servant) δοῦλος - doulos - 1401

பெயர்ச்சொல் - வேலைக்காரனாகிய, ஊழியக்காரனாகிய, அடிமையாயிருக்கிற

ஒருவர் தேவனுடைய ஊழியக்காரராக இருந்தாலும் பணிவிடைக்காரராக இருந்தாலும் அவர் தன்னைத் தானே தாழ்த்தி கிறிஸ்துவிற்காக ஊழியம் செய்ய வேண்டும். தேவனுடைய பிள்ளைகளை அதிகாரம் செலுத்தக்கூடாது. தேவ அன்போடும் மனதுருக்கத்தோடும் தேவனுடைய பிள்ளைகளுக்கு ஊழியம் செய்ய வேண்டும். (1பேதுரு 5:1-4 மாற்கு 9:35)

தீர்க்கதரிசன எண் - 82

"மனுஷகுமாரனும் ஊழியங் கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" - (மத் 20:28 இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேற்றுறு

மீட்கும் பொருள் (ransom) - λύτρον - lytron - 3083

பால் வேறுபாடற்ற பெயர்சொல் - மீட்கும் பொருள் (redeeming price of man)

இயேசு கிறிஸ்து நம்மை மீட்பதற்காக மீட்பின் கிரயத்தைச் செலுத்தியிருக்கிறார் இதனால் நாம் கீழ்ப்படுத்தப்பட்டிருக்கிற காரியங்களிலிருந்து மீட்கப்பட்டிருக்கிறோம்.

1 மரணம் (யாத் 21:30, சங் 49:7-9, ஓசி 13:14; 1கொரி 15:51-58

2 வியாதி (யாத் 30:12-16, யோபு 33:14-30; 2கொரி 6:19

3. பாவம் (மத் 20:28, மத் 26:28, மாற்கு 10:45; 1பேதுரு 2:24; எபே 1:7

4. சத்துரு (எரே 31:11; ஏசா 35:10, ஏசா 51:10; 1தீமோ 2:26)

20 அதிகாரம்

"அநேகர்" - இயேசு கிறிஸ்து அநேகரை மீட்கும்படியாக அவரே மீட்கும்பொருளானார் (ஏசா 53; மத் 26.28; யோவான் 6.51 யோவான் 10.11,15; யோவான் 11.50-52 ரோமர் 4.25; ரோமர் 5. 6-11; ரோமர் 14.15 1கொரி 5.7; 1கொரி 8.11; 1கொரி 15.3; 2கொரி 5.14-21; கலா 1.4; கலா 2.20-21 எபே 5.2,25; 1தெச 5.9; 1தீமோ 2.6; எபி 2.9-18; எபி 9.15,26,28; எபி 10.5-23 1பேதுரு 2.21-24; 1பேதுரு 3.18; 1பேதுரு 4.1 யோவான் 3.16; வெளி 5.8-10)

இரட்சிப்பின் உபதேசம்

ஒருவர் நியாயப்பிரமாணத்தை மீறும்போது அவர் பாவம் செய்கிறார். பாவத்தின் சம்பளம் மரணம். தாம் செய்த பாவத்தின் நிமித்தமாக அவர் மரணம் அடையவேண்டும். இதிலிருந்து இந்த நபர் தனது சொந்த முயற்சியினால் விடுதலை பெற முடியாது. ஆகையினால் தனது விடுதலைக்காக உதவி செய்யக்கூடிய ஒருவருடைய தயவு அவருக்குத் தேவைப்படுகிறது. அவ்வாறு இந்த பாவியை மீட்கக்கூடியவரையே இரட்சகர் என்கிறோம். தன் பாவத்திலிருந்து இந்த பாவி மீட்கப்படுவது இரட்சிப்பு எனப்படுகிறது.

பாவியை மீட்பதற்காக இரட்சகர் கிரயம் செலுத்த வேண்டும். இது இரட்சிப்பின் கிரயம் அல்லது மீட்கும் பொருள் (ransom) எனப்படுகிறது. நியாயப்பிரமாணத்தில் நியமிக்கப்பட்டிருக்கிற கிரயத்தைச் செலுத்த வேண்டும்.

சாத்தான் மனுஷனைத் தேவனுக்கு எதிராகக் கலகம்பண்ண வைத்தான். இதன்மூலமாக மனுஷன் தேவனுடைய பிரமாணத்தை மீறினான். இதற்காக பாவத்தின் சம்பளமாக மரணதண்டனை அவனுக்குக் கொடுக்கப்பட்டது. மரணதண்டனை அனுபவிக்கும் மனுஷனால் இந்தத் தண்டனையிலிருந்து விடுதலை பெறுவதற்குத் தேவையான கிரயத்தைச் செலுத்த முடியாது. பாவத்திலிருந்து அவனால் விடுதலை பெற்றுசந்தோஷமாக வாழமுடியாது.

தேவன் எந்த நோக்கத்திற்காக மனுஷனைச் சிருஷ்டித்தாரோ அந்த நோக்கம் மனுஷனில் நிறைவேறவில்லை. தேவனே தமது தயவினாலும் தெய்வீகத் திட்டத்தினாலும் இவனுடைய பாவத்திலிருந்து இவனை மீட்க வேண்டும்.

பாவத்தில் விழுந்துவிட்ட மனுஷனை மீட்பதற்காக தேவன் தெய்வீகத் திட்டம் ஒன்றை வைத்திருக்கிறார். தேவனோடு மனுஷன் ஒப்புரவாவதற்கு ஓர் உபாயத்தை உண்டுபண்ணியிருக்கிறார். இதன் மூலமாக தேவனுடைய பரிசுத்தமும் நியாயப்பிரமாணமும் எதிர்பார்க்கும் நிபந்தனைகளை தேவதயவினால் மனுஷனால் நிறைவேற்ற முடிகிறது.

மனுஷனை மீட்பதற்காகத் தேவன் தமது ஒரேபேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பினார். அவர் மனுக்குலத்தின் பாவத்திற்காக மரித்தார். மூன்றாம்நாளில் தேவன் இயேசு கிறிஸ்துவை உயிரோடு எழுப்பினார். இயேசு கிறிஸ்துவின் பாவநிவாரண மரணத்தின் மூலமாக மனுஷனுக்கு இரட்சிப்பு உண்டாயிருக்கிறது.

பாவநிவாரண பலிக்கு எடுத்துக்காட்டுக்கள்

1. பழைய ஏற்பாட்டின் எல்லா பலிகளும் (எபி 9.7-28; எபி 10.5-23; எபி 11.4; ஆதி 22.8-13; யாத் 12.3; லேவி 1.4; லேவி 16.21-22)
2. முதலாவது பிறந்த பிள்ளைகளுக்காக லேவியர்கள் (எண் 3.12,41,45; எண் 8.18)
3. பொனதத்திற்காக ஆகாப் (1இராஜா 20.42)
4. இயேசு கிறிஸ்து

99. இயேசு இரண்டு குருடரை சொஸ்தமாக்குகிறார் - (9.27; மாற்கு 10.46; லூக் 18.35)

மத் 20.29 அவர்கள் எரிகோவிலிருந்து புறப்பட்டுப்போகையில், திரளான ஜனங்கள் அவருக்குப் பின்சென்றார்கள்.

20 அதிகாரம்

மத் 20.30 அப்பொழுது வழியருகே உட்கார்ந்திருந்த இரண்டு குருடர் இயேசு அவ்வழியே வருகிறார் என்று கேள்விப்பட்டு ஆண்டவரே தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிட்டார்கள்

மத் 20.31 அவர்கள் பேசாதிருக்கும்படி ஜனங்கள் அவர்களை அதட்டினார்கள் அவர்களோ ஆண்டவரே, தாவீதின் குமாரனே எங்களுக்கு இரங்கும் என்று அதிகமாய்க் கூப்பிட்டார்கள்

மத் 20.32 இயேசு நின்று அவர்களைத் தம்மிடத்தில் அழைத்து, நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்றிருக்கிறீர்கள் என்றார்

மத் 20.33 அதற்கு அவர்கள் ஆண்டவரே, எங்கள் கண்களைத் திறக்கவேண்டும் என்றார்கள்

மத் 20.34 இயேசு மனதுருகி, அவர்கள் கண்களைத் தொட்டார் உடனே அவர்கள் பார்வையடைந்து, அவருக்குப் பின்சென்றார்கள்

21 அதிகாரம்

87. வெற்றிப்பவனி - (மாற்கு 11:1; லூக் 19:28; யோவான் 12:12; சக 9:9)

மத் 21:1 அவர்கள் எருசலேமுக்குச் சமீபமாய்ச் சேர்ந்து, ஒலிவமலைக்கு அருகான பெத்பகேயுக்கு வந்தபோது, இயேசுவானவர் சீஷரில் இரண்டுபேரை நோக்கி:

மத் 21:2 உங்களுக்கு எதிரே இருக்கிற கிராமத்துக்குப் போங்கள்; போனவுடனே, அங்கே ஒரு கழுதையையும் அதனோடே ஒரு குட்டியையும் கட்டியிருக்கக் காண்பீர்கள்; அவைகளை அவிழ்த்து, என்னிடத்தில் கொண்டு வாருங்கள்.

மத் 21:3 ஒருவன் உங்களுக்கு ஏதாகிலும் சொன்னால், இவைகள் ஆண்டவருக்கு வேண்டுமென்று சொல்லுங்கள்; உடனே அவைகளை அனுப்பிவிடுவான் என்று சொல்லி, அவர்களை அனுப்பினார்.

மத் 21:4 இதோ, உன் ராஜா சாந்தகுணமுள்ளவராய், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறிக்கொண்டு, உன்னிடத்தில் வருகிறார் என்று சீயோன் குமாரத்திக்குச் சொல்லுங்கள் என்று,

மத் 21:5 தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது.

மத் 21:6 சீஷர்கள் போய், இயேசு தங்களுக்குக் கட்டளையிட்டபடியே செய்து,

மத் 21:7 கழுதையையும் குட்டியையும் கொண்டுவந்து, அவைகள்மேல் தங்கள் வஸ்திரங்களைப் போட்டு, அவரை ஏற்றினார்கள்.

மத் 21:8 திரளான ஜனங்கள் தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள்; வேறு சிலர் மரக்கிளைகளைத் தறித்து வழியிலே பரப்பினார்கள்.

மத் 21:9 முன் நடப்பாரும் பின்நடப்பாருமாகிய திரளான ஜனங்கள்: தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர், உன்னதத்திலே ஓசன்னா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள்.

மத் 21:10 அவர் எருசலேமுக்குள் பிரவேசிக்கையில் நகரத்தார் யாவரும் ஆச்சரியப்பட்டு, இவர் யார்? என்று விசாரித்தார்கள்.

மத் 21:11 அதற்கு ஜனங்கள்: இவர் கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து வந்த தீர்க்கதரிசியாகிய இயேசு என்றார்கள்.

"அவர்கள் எருசலேமுக்குச் சமீபமாய்ச் சேர்ந்தார்கள்" - இயேசு கிறிஸ்து எருசலேமிற்கு இரண்டு முறை வந்தார். இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கிற காரியம் மாற்கு 11:1-3, லூக்கா 19:28-35, யோவான் 12:12-15 ஆகிய வசனங்களுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு நடைபெற்றது.

"பெத்பகேயு" - அத்திப்பழங்களின் வீடு என்று பொருள். பெத்தானியாவிலிருந்து எருசலேம் செல்லும் பாதையில் ஒருமைல் தூரத்தில் உள்ள பட்டணம்.

தீர்க்கதரிசன எண் - 83

"உங்களுக்கு எதிரே இருக்கிற கிராமத்துக்குப் போங்கள்; போனவுடனே அங்கே ஒரு கழுதையையும் அதனோடே ஒரு குட்டியையும் கட்டியிருக்கக் காண்பீர்கள்; அவைகளை அவிழ்த்து என்னிடத்தில் கொண்டு வாருங்கள். ஒருவன் உங்களுக்கு ஏதாகிலும் சொன்னால், இவைகள் ஆண்டவருக்கு வேண்டுமென்று சொல்லுங்கள்; உடனே அவைகளை அனுப்பிவிடுவான்" (மத் 21:2-3) - இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 14

"உன் ராஜா சாந்தகுணமுள்ளவராய், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறிக்கொண்டு, உன்னிடத்தில் வருகிறார் என்று சீயோன் குமாரத்திக்குச் சொல்லுங்கள்" - (மத் 21:4; சக 9:9)

21 அதிகாரம்

"திரளான ஜனங்கள் தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள்; வேறு சிலர் மரக்கிளைகளைத் தறித்து வழியிலே பரப்பினார்கள்" - வஸ்திரங்களை வழியில் விரிப்பதும், மரக்கிளைகளைத் தறித்து வழியிலே பரப்புவதும் யுத்தகாலத்தில் வெற்றி பெற்ற இராஜாவிற்கும் அவனுடைய சேனைக்கும் கொடுக்கப்படும் வரவேற்பு. ஜனங்கள் இராஜாவையும் அவனுடைய வெற்றியையும் கொண்டாடும் விதமாக இவ்வாறு செய்வது வழக்கம். (2 இராஜா 9:13)

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 15

"தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்; உன்னதத்திலே ஓசன்னா" - (சங் 118:25-26; மத் 21:9)

ஓசன்னா என்பது எபிரெயச்சொல். இதற்கு இரட்சியும், இப்பொழுது உதவி புரியும் என்று பொருள். கூடாரப்பண்டிகை ஏழுநாட்கள் அனுசரிக்கப்படும். அப்பொழுது அனுதினமும் ஒருமுறை "ஓசன்னா" என்று ஜனங்கள் கூறுவார்கள். பலிபீடத்தைச் சுற்றிலும் ஜனங்கள் மரக்கிளைகளைக் கைகளில் ஏந்திய பிரகாரமாகச் சுற்றி வந்து "ஓசன்னா" என்று கூறுவார்கள். இவ்வாறு ஏழு நாட்களுக்குத் தினமும் ஒருமுறை சுற்றிவருவார்கள். எட்டாவது நாளில் ஜனங்கள் ஏழு முறை பலிபீடத்தைச் சுற்றுவார்கள். அது "மஹா ஓசன்னா" என்று அழைக்கப்படுகிறது. இந்த வசனத்தில் ஜனங்கள் ஓசன்னா என்று ஒலியிடுகிறார்கள். தங்கள் விரோதிகளிடமிருந்து இயேசு கிறிஸ்து தங்களை இரட்சிப்பார் என்று எதிர்பார்த்து, "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்; உன்னதத்திலே ஓசன்னா" என்று ஆர்ப்பரித்தார்கள். ஆனால் இதே ஜனங்கள் ஐந்து நாட்களுக்குப் பின்பு "இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறையும்" என்று ஆர்ப்பரித்தார்கள்.

ஆச்சரியப்படு (moved) - σείω - seiō - 4579

வினைச்சொல் – அதிர், திடுக்கிடு, அசைவுபண்ணு, அசைக்கப்படு (be agitated), அதிர்ச்சி (quake) (மத் 27:51) குலுக்கு shake (மத் 28:4; எபி 12:26; வெளி 6:13)

"இவர் யார்?" - என்று விசாரித்தார்கள். இந்தக் கேள்விக்கு அவர்களுக்குப் பதில் தெரிந்திருந்தால் சிலுவையில் மரிக்கப்போகிறவர் இவர்தான் என்பதைப் புரிந்திருப்பார்கள்.

88. தேவாலயத்தின் [illegible] சுத்திகரிப்பு – (மாற்கு 11:15; லூக் 19:45)

மத் 21:12 இயேசு தேவாலயத்தில் பிரவேசித்து, ஆலயத்திலே விற்கிறவர்களும் கொள்ளுகிறவர்களு மாகிய யாவரையும் வெளியே துரத்தி, காசுக்காரருடைய பலகைகளையும் புறா விற்கிறவர்களின் ஆசனங்களையும் கவிழ்த்து,

மத் 21:13 என்னுடைய வீடு ஜெபவீடு எனப்படும் என்று எழுதியிருக்கிறது. நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்றார்.

மத் 21:14 அப்பொழுது, குருடரும் சப்பாணிகளும் தேவாலயத்திலே அவரிடத்தில் வந்தார்கள்; அவர்களைச் சொஸ்தமாக்கினார்.

மத் 21:15 அவர் செய்த அதிசயங்களையும், தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா என்று தேவாலயத்திலே ஆர்ப்பரிக்கிற பிள்ளைகளையும், பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் கண்டு, கோபமடைந்து,

மத் 21:16 அவரை நோக்கி: இவர்கள் சொல்லுகிறதைக் கேட்கிறீரோ என்றார்கள். அதற்கு இயேசு: ஆம், கேட்கிறேன்; குழந்தைகளுடைய வாயினாலும் பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர் என்பதை நீங்கள் ஒருக்காலும் வாசிக்கவில்லையா என்றார்.

21 அதிகாரம்

"காசுக்காரர்" - ஆதார் மாதம் (Adar) (மார்ச் மாதம்) பதினைந்தாம் தேதி ஒவ்வொரு யூதரும் தேவாலயத்திற்கு வரியனாம் செலுத்த வேண்டும். (மத் 17:24-27) ஒவ்வொரு பட்டணத்திலும் இந்த வரியை வசூலிப்பதற்கு ஆயக்காரர்கள் இருப்பார்கள். பண்டிகைக்குப் பலதேசங்களிலிருந்து யூதர்கள் வருவார்கள். அந்தந்த தேசங்களிலிருந்து கொண்டுவரும் பணத்தை யூதருடைய பணமாக மாற்றித் தருகிறவர்கள் "காசுக்காரர்" என அழைக்கப்பட்டார்கள். புறதேசத்துக் காசுகளில் புறஜாதி தெய்வங்களின் உருவங்கள் பதிக்கப்பட்டிருக்கும். ஆகையினால் அவற்றை யூதர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. அந்தக் காசுகளைக் கொடுத்து யூதருடைய நாணயமாக கட்டாயம் மாற்றியே ஆகவேண்டும். இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் காசுக்காரர்கள் கொள்ளை லாபம் சம்பாதித்தார்கள்.

"புறா விற்கிறவர்கள்" - புறாக்களைக் காணிக்கையாக செ[illegible] வழக்கம் இருந்தது. லேவி 14:22 தேவாலயத்தில் புறாக்களை விற்கிறவர்கள் இருந்தார்கள்.

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 16

"என்னுடைய வீடு ஜெபவீடு எனப்படும்" - ஏசா 56:7, எரே 7:11 மத் 21:13

"அவர்களைச் சொஸ்தமாக்கினார்" தேவாலயத்தில் யூததேசத்து ஜனங்களும் புறதேசத்து ஜனங்களும் கூடியிருந்தார்கள். அவர்களுக்கு நடுவே இயேசு கிறிஸ்து தமது தெய்வீக வல்லமையை வெளிப்படுத்தினார். தாமே மேசியா என்பதை வலியுறுத்துவதற்காக இந்த அற்புதங்களை யெல்லாம் செய்தார். தேவாலயத்தில் தவறான காரியங்கள் நடக்கக்கூடாது என்பதை ஜனங்களுக்குக் காண்பிப்பதற்காகக் காசுக்காரர்களையெல்லாம் துரத்தினார். அதேசமயத்தில் தேவனுடைய ஆலயத்தில் தெய்வீக வல்லமை வெளிப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காக இயேசு கிறிஸ்து குருடர்களையும், சப்பாணிகளையும் சொஸ்தமாக்கினார்.

"அவர் செய்த அதிசயங்களையும் தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா' என்று தேவாலயத்திலே ஆர்ப்பரிக்கிற பிள்ளைகளையும், பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் கண்டு, கோபமடைந்தார்கள்" இயேசு கிறிஸ்து செய்த அற்புதங்களை அவருடைய சத்துருக்கள் கண்டார்கள். யூதர்கள் மேசியாவை மறுதலிக்கப்போகிறார்கள் (லூக்கா 19:41-44) இது மிகப்பெரிய பாவம். இந்தப் பாவத்தை யூதர்கள் சீக்கிரமாகவே செய்யப்போகிறார்கள். இயேசு கிறிஸ்து செய்த இந்த அற்புதம் தாமே மேசியா என்பதை இஸ்ரவேலருக்குக் காண்பிப்பதற்காக அவர் எடுத்துக் கொண்ட கடைசி முயற்சி.

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 17

"குழந்தைகளுடைய வாயினாலும் பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர்" - சங் 8:2 மத் 21:16

89. கனிகொடாத அத்திமரத்தை இயேசு சபிக்கிறார் - (மாற்கு 11:12; லூக் 13:6)

மத் 21:17 அவர்களை விட்டு நகரத்திலிருந்து புறப்பட்டு, பெத்தானியாவுக்குப் போய், அங்கே இராத்தங்கினார்.

மத் 21:18 காலையிலே அவர் நகரத்துக்குத் திரும்பி வருகையில் அவருக்குப் பசியுண்டாயிற்று.

மத் 21:19 அப்பொழுது வழியருகே ஒரு அத்திமரத்தைக் கண்டு, அதினிடத்தில் போய், அதிலே இலைகளையன்றி வேறொன்றையுங் காணாமல்: இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருக்கக் கடவது என்றார். உடனே அத்திமரம் பட்டுப்போயிற்று.

மத் 21:20 சீஷர்கள் அதைக் கண்டு, இந்த அத்திமரம் எத்தனை சீக்கிரமாய்ப் பட்டுப்போயிற்று! என்று சொல்லி ஆச்சரியப்பட்டார்கள்.

"பெத்தானியாவுக்குப் போனார்" - தேவன் தெரிந்தெடுத்த இடத்திற்கு மட்டுமே இயேசு கிறிஸ்து போனார் (1இராஜா 9:3, 2இராஜா 21:7)

"அங்கே இராத்தங்கினார்" ஒருவேளை லாசருவோடு தங்கியிருந்திருக்கலாம். அங்கு அவர் ஓய்வுநாளை ஆசரித்திருக்கலாம்.

"காலையிலே" - பெத்தானியாவில் ஓய்வுநாளுக்குப் பின்பு (மத் 21:17 யோவான் 12:1-11)

"அவர் நகரத்துக்குத் திரும்பி வருகையில்" - எருசலேமிற்கு இரண்டாம் முறையாக வருகிறார் (லூக்கா 19:45

21 அதிகாரம்

"அவருக்குப் பசியுண்டாயிற்று" - இயேசு கிறிஸ்துவின் மனுஷ தத்துவத்திற்கு அடையாளம். (மத் 4:2; மத் 21:18 மாற்கு 2:25; மாற்கு 11:12; லூக்கா 4:2)

"அதிலே இலைகளையன்றி வேறொன்றையுங் காணாமல்" - அத்திப்பழங்களைப் பறிக்கவில்லையென்றால் இரண்டு பழக்காலங்களுக்கு நடுவில்கூட அத்திமரத்தில் அத்திப்பழங்கள் இருக்கும் மாற்கு 11:13

"இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருக்கக்கடவது" - விசுவாசத்தினால் என்ன செய்ய முடியும் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு (மத் 17:20; மாற்கு 11:23)

"உடனே அத்திமரம் பட்டுப்போயிற்று" - பட்டுப்போன அத்திமரத்தை மறுநாள் கண்டுபிடித்தார்கள் (மாற்கு 11:20) தாம் சொன்னதைச் செய்யக்கூடிய வல்லமை கிறிஸ்துவிற்கு உண்டு விசுவாசிகள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்து இந்த வல்லமையை வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார் (மத் 21:21-22, மாற்கு 11:22-24; யோவான் 14:1-15, யோவான் 15:7,16

90. சந்தேகப்படாமல் விசுவாச முள்ளவர்களாக இருக்க வேண்டும் - (மாற்கு 11:20; எபி 11:6, யாக் 1:5, மத் 17:20)

மத் 21:21 இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் சந்தேகப்படாமல் விசுவாசமுள்ளவர்களாயிருந்தால் இந்த அத்திமரத்திற்குச் செய்ததை நீங்கள் செய்வதுமல்லாமல் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொன்னாலும் அப்படியாகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்

மத் 21:22 மேலும், நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் என்றார்

"நீங்கள் சந்தேகப்படாமல் விசுவாசமுள்ளவர்களாயிருந்தால்" - மூன்று இடங்களில் இந்தக் காரியம் வலியுறுத்தப் பட்டிருக்கிறது. (மத் 17:20; மத் 21:21 மாற்கு 11:23; லூக்கா 17:6) பொதுவாக நமக்கு மலையை அகற்றக்கூடிய தேவையோ அல்லது மரங்களைச் சபிக்கக்கூடிய தேவையோ இருக்காது. ஆனாலும் நம்மிடம் சந்தேகப்படாத விசுவாசம் வேண்டும். விசுவாசம் தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்தும். (மத் 17:20; மாற்கு 9:23; 1கொரி 13:2)

"இந்த மலை" - ஒருவேளை இது ஒலிவமலையாக இருக்கலாம் இயேசு கிறிஸ்து தமது கடைசி நாட்களில் அநேகமுறை இந்த மலையின் வழியாக நடந்துபோனார் இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையோடு தொடர்புடுத்தி 12 இடங்களில் இந்த மலை குறிப்பிடப்பட்டிருக்கிறது (மத் 21:1 மத் 24:3 மத் 26:30; மாற்கு 11:1; மாற்கு 13:3 மாற்கு 14:26 லூக்கா 19:29,37 லூக்கா 21:37; லூக்கா 22:39 யோவான் 8:1 இயேசு கிறிஸ்து பரமேறிய மலையும் இதுதான் (அப் 1:12) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம்வருகையின் போது சகரியா 14:4-இல் ஒலிவமலையைப் பற்றி நாம் இவ்வாறு வாசிக்கிறோம். "அந்நாளிலே அவருடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற ஒலிவமலையின்மேல் நிற்கும் அப்பொழுது மகா பெரிய பள்ளத்தாக்கு உண்டாகும்படி ஒலிவமலை தன் நடுமையத்திலே கிழக்கு மேற்காய் எதிராகப் பிளந்துபோம். அதினாலே ஒரு பாதி வடபக்கத்திலும் ஒரு பாதி தென்பக்கத்திலும் சாயும்" ஒலிவமலை எருசலேமின் கிழக்குப் பகுதியில் இருக்கிறது. இதன் வழியாக கிழக்கு தேசத்திலிருந்து பெரும்பாதை செல்கிறது. ஒலிவமலைக்கு "நாசமலை (Mount of Corruption) (2இராஜா 23:13) என்னும் மறுபெயரும் உண்டு

"இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொன்னாலும் அப்படியாகும்" - ஒரு விசுவாசி தேவனிடத்தில் விசுவாசமாக இருக்கும்பொழுது அவருடைய விசுவாச வார்த்தைக்கு அதிக வல்லமை உண்டு தேவனும் அவர் மூலமாக கிரியை நடப்பிப்பார்

மத்தேயு - தொகுப்புரை

21 அதிகாரம்

தேவனிடம் ஜெபத்திலே கேட்க வேண்டிய காரியங்கள்

1 தேவனுடைய உதவி (2நாளா 20:4)

2 வரப்போகிற காரியங்கள் (ஏசா 45:11)

3 பழைய வழிகள் (எரே 6:16)

4 ஆவிக்குரிய மழை (சக 10:1)

5 தேவைகள் (சங் 23:1; சங் 34:9-10; சங் 84:11; மத் 6:8)

6 நற்காரியங்கள் (மத் 7:7-11)

7 எதையாகிலும் (மத் 18:19; யோவான் 14:14; 1யோவான் 5:14)

8 எதுவும் (மத் 21:22; யோவான் 14:13; யோவான் 15:16; யோவான் 16:23; 1யோவான் 3:22)

9 பரிசுத்த ஆவியானவர் (லூக்கா 11:9-13)

10 உமக்குச் சித்தமானது (மாற்கு 11:24; யோவான் 15:7)

11 ஞானம் (யாக் 1:5-8)

12 ஜீவன் (1யோவான் 5:16)

91. இயேசுவின் அதிகாரத்தைக் குறித்துக் கேட்கப்பட்ட கேள்வி - (மாற்கு 11:27, லூக் 20:1)

மத் 21:23 அவர் தேவாலயத்தில் வந்து, உபதேசம் பண்ணுகையில் பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் அவரிடத்தில் வந்து: நீர் எந்த அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறீர்? இந்த அதிகாரத்தை உமக்குக் கொடுத்தவர் யார்? என்று கேட்டார்கள்

மத் 21:24 இயேசு பிரதியுத்தரமாக: நானும் உங்களிடத்தில் ஒரு காரியத்தைக் கேட்கிறேன்; அதை எனக்குச் சொல்லுவீர்களானால் நானும் இன்ன அதிகாரத்தினாலே இவைகளைச் செய்கிறேனென்று உங்களுக்குச் சொல்லுவேன்

மத் 21:25 யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ? மனுஷரால் உண்டாயிற்றோ? யாரால் உண்டாயிற்று? என்று கேட்டார். அதற்கு அவர்கள்: தேவனால் உண்டாயிற்றென்று சொல்வோமானால், பின்னை ஏன் அவனை விசுவாசிக்கவில்லை என்று நம்மைக் கேட்பார்

மத் 21:26 மனுஷரால் உண்டாயிற்றென்று சொல்வோமானால் ஜனங்களுக்குப் பயப்படுகிறோம்; எல்லாரும் யோவானைத் தீர்க்கதரிசியென்று எண்ணுகிறார்களே என்று தங்களுக்குள்ளே ஆலோசனை பண்ணி,

மத் 21:27 இயேசுவுக்குப் பிரதியுத்தரமாக: எங்களுக்குத் தெரியாது என்றார்கள். அப்பொழுது அவர்: நானும் இன்ன அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறேனென்று உங்களுக்குச் சொல்லேன் என்றார்

"அவர் தேவாலயத்தில் வந்து உபதேசம் பண்ணுகையில், பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் அவரிடத்தில் வந்தார்கள்" - இவர்கள் இயேசுவிடம் தவறான நோக்கத்தில் வந்தார்கள். இப்பேர்ப்பட்ட நோக்கத்தோடு மனுஷர் யாரும் இயேசு கிறிஸ்துவிடம் வரக்கூடாது (மத் 11:28-30)

"எங்களுக்குத் தெரியாது" - பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் இயேசு கிறிஸ்துவின் கேள்விக்கு இவ்வாறு பதில் கூறினார்கள். பொய் சொன்னார்கள். ஆகையினால் இயேசு கிறிஸ்து இவர்களுக்கு எந்த பதிலும் சொல்லவில்லை. யோவான் ஸ்நானனை இயேசு கிறிஸ்துவின் முன்னோடியாக ஏற்றுக் கொண்டால் இயேசு கிறிஸ்துவையும் மேசியாவாக ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் வரும். ஆகையினால் அவர்கள் இந்தப் பிரச்சனையில் சிக்கிக்கொள்ள விரும்பவில்லை.

92. இரண்டு குமாரர்களைப் பற்றிய உவமை -

மத் 21:28 ஆயினும் உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது? ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள்; மூத்தவனிடத்தில் அவன் வந்து: மகனே, நீ போய் இன்றைக்கு என் திராட்சத் தோட்டத்தில் வேலைசெய் என்றான்

மத்தேயு - தொகுப்புரை

21 அதிகாரம்

மத் 21:29 அதற்கு அவன் மாட்டேன் என்றான்; ஆகிலும், பின்பு அவன் மனஸ்தாபப்பட்டுப் போனான்

மத் 21:30 இளையவனிடத்திலும் அவன் வந்து, அப்படியே சொன்னான் அதற்கு அவன் போகிறேன் ஐயா என்று சொல்லியும் போகவில்லை

மத் 21:31 இவ்விருவரில் எவன் தகப்பனுடைய சித்தத்தின்படி செய்தவன் என்று கேட்டார் அதற்கு அவர்கள் மூத்தவன்தான் என்றார்கள் அப்பொழுது, இயேசு அவர்களை நோக்கி, ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்

மத் 21:32 ஏனென்றால், யோவான் நீதிமார்க்கமாய் உங்களிடத்தில் வந்திருந்தும், நீங்கள் அவனை விசுவாசிக்கவில்லை, ஆயக்காரரும் வேசிகளுமோ அவனை விசுவாசித்தார்கள் அதை நீங்கள் கண்டும், அவனை விசுவாசிக்கும்படியாகப் பின்பாகிலும் மனஸ்தாபப்படவில்லை என்றார்

உவமை எண் - 10

"ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள்" இந்த உவமை இரண்டு குமாரர்களைப் பற்றியது. பிரதான ஆசாரியர்களும் மூப்பர்களும் சுய நீதி யுடையவர்கள் மார்க்கச்சடங்குகளில் தேறின வர்கள் ஆயினும் இவர்களுக்கு முன்பாகவே பாவிகள் இரட்சிக்கப்படுவார்கள் என்பதை இந்த உவமை விளக்குகிறது. (மத் 21:23,31)

"மாட்டேன் என்றான்; ஆகிலும், பின்பு அவன் மனஸ்தாபப்பட்டுப்போனான்" - இந்த வசனம் பாவிகளைக் குறிக்கிறது. இவர்கள் சத்தியத்தை முதலாவது ஏற்க மறுக்கிறார்கள் ஆயினும் தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பி பின்பு தேவனுடைய சித்தத்தைச் செய்கிறார்கள் மத் 21:31)

"போகிறேன் ஐயா என்று சொல்லியும் போகவில்லை" - இது மாயக்காரரைக் குறிக்கிறது. பரிசேயர்கள் சுயநீதியுடையவர்கள் தேவனுக்காக எல்லாவற்றையும் செய்வோம் என்கிறார்கள் ஆனால் அவருக்காக இவர்கள் ஒன்றும் செய்ய மாட்டார்கள் (மத் 21:31)

தீர்க்கதரிசன எண் - 84

"ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள்" - (மத் 21:31) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. மத் 21:28-30 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற உவமையின் விளக்கம் இதுதான்

"ஆயக்காரர்" - (மத் 5:46)

"தேவனுடைய ராஜ்யம்" - (மத் 19:24

"யோவான் நீதிமார்க்கமாய் உங்களிடத்தில் வந்திருந்தான்" - மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் யோவான் ஸ்நானன் 24 இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறான் (மத் 3:1-14; மத் 4:12; மத் 9:14; மத் 11:2-18 மத் 14:1-10; மத் 16:14; மத் 17:13, மத் 21:25-32)

"நீதிமார்க்கம்" - நீதியை அறிவித்து இயேசு கிறிஸ்துவிற்கு வழியை ஆயத்தம் பண்ணும் மார்க்கம். (மத் 3:3-15; மத் 14:4, லூக்கா 1:15-17; லூக்கா 3:1-18

93. வீட்டெஜமானைப் பற்றிய உவமை - (மாற்கு 12:1, லூக் 20:9

மத் 21:33 வேறொரு உவமையைக் கேளுங்கள் வீட்டெஜமானாகிய ஒரு மனுஷன் இருந்தான், அவன் ஒரு திராட்சத்தோட்டத்தை உண்டாக்கி, அதைச் சுற்றிலும் வேலியடைத்து, அதில் ஒரு ஆலையை நாட்டி, கோபுரத்தையும் கட்டி, தோட்டக்காரருக்கு அதைக் குத்தகையாக விட்டு, புறதேசத்துக்குப் போயிருந்தான்

மத் 21:34 கனிகாலம் சமீபித்தபோது, அதின் கனிகளை வாங்கிக்கொண்டு வரும்படி தன் ஊழியக்காரரைத் தோட்டக்காரரிடத்தில் அனுப்பினான்

21 அதிகாரம்

மத் 21:35 தோட்டக்காரர் அந்த ஊழியக்காரரைப் பிடித்து, ஒருவனை அடித்து, ஒருவனைக் கொலைசெய்து, ஒருவனைக் கல்லெறிந்து கொன்றார்கள்.

மத் 21:36 பின்னும் அவன் முந்தினவர்களிலும் அதிகமான வேறே ஊழியக்காரரை அனுப்பினான்; அவர்களையும் அப்படியே செய்தார்கள்.

மத் 21:37 கடைசியிலே அவன் என் குமாரனுக்கு அஞ்சுவார்கள் என்று சொல்லி, தன் குமாரனை அவர்களிடத்தில் அனுப்பினான்.

மத் 21:38 தோட்டக்காரர் குமாரனைக் கண்டபோது: இவன் சுதந்தரவாளி, இவனைக் கொன்று, இவன் சுதந்தரத்தைக் கட்டிக் கொள்வோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டு,

மத் 21:39 அவனைப் பிடித்துத் திராட்சத் தோட்டத்திற்குப் புறம்பே தள்ளிக் கொலைசெய்தார்கள்.

மத் 21:40 அப்படியிருக்க, திராட்சத் தோட்டத்தின் எஜமான் வரும்போது அந்தத் தோட்டக்காரரை என்ன செய்வான் என்று கேட்டார்.

மத் 21:41 அதற்கு அவர்கள்: அந்தக் கொடியரைக் கொடுமையாய் அழித்து, ஏற்ற காலங்களில் தனக்குக் கனிகளைக் கொடுக்கத்தக்க வேறே தோட்டக் காரரிடத்தில் திராட்சத் தோட்டத்தைக் குத்தகையாகக் கொடுப்பான் என்றார்கள்.

மத் 21:42 இயேசு அவர்களை நோக்கி: வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக் கல்லாயிற்று, அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது என்று நீங்கள் வேதத்தில் ஒருக்காலும் வாசிக்கவில்லையா?

மத் 21:43 ஆகையால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத்தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்.

மத் 21:44 இந்தக் கல்லின்மேல் விழுகிறவன் நொறுங்கிப்போவான்; இது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப்போடும் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

மத் 21:45 பிரதான ஆசாரியரும் பரிசேயரும் அவருடைய உவமைகளைக் கேட்டு, தங்களைக் குறித்துச் சொல்லுகிறார் என்று அறிந்து,

மத் 21:46 அவரைப் பிடிக்க வகைதேடினார்கள்; ஆகிலும் ஜனங்கள் அவரைத் தீர்க்கதரிசியென்று எண்ணின படியினால் அவர்களுக்குப் பயந்திருந்தார்கள்.

உவமை எண் - 11

"வீட்டு எஜமானாகிய ஒரு மனுஷன் இருந்தான்" தேவனுடைய இராஜ்யத்தைப் பிரஸ்தாபப்படுத்தும் ஊழியத்தைக் கர்த்தர் யூதரிடம் ஒப்படைத்திருந்தார். ஆனால் அவர்கள் அதைச் சரியானபடி செய்யவில்லை. ஆகையினால் அந்த ஊழியத்தைத் தேவன் அவர்களிடமிருந்து எடுத்து புறஜாதியாரிடம் கொடுத்துவிட்டார் (மத் 21:43-46). இந்த வசனங்களில் கூறப்பட்டிருக்கும் உவமை இந்தக் கருத்தையே வெளிப்படுத்துகிறது.

"கோபுரம்" காவல்காரர்கள் காவல்காக்கும் உயர்ந்த மேடை. (ஏசா 1:8, ஏசா 5:2)

"குத்தகை" - குத்தகைக்கு விடுவது மூன்று வகைப்படும். அவையாவன

1. வேலையாட்களுக்கு விளைச்சலில் ஒரு பகுதி கொடுக்கப்படும்.

2. வேலையாட்களுக்கு சம்பளம் பணமாகக் கொடுக்கப்படும்.

3. எஜமானுக்கு விளைச்சலில் ஒரு பகுதி பொருளாகவோ அல்லது பணமாகவோ கொடுக்கப்படும்.

21 அதிகாரம்

குத்தகை ஒவ்வொரு வருஷமும் விடப்படலாம். சில குத்தகை ஆயுட்காலத்திற்கும் உரியது. சில குத்தகை பரம்பரை பரம்பரையாகத் தொடரும். இந்த வசனங்களில் கூறப்பட்டிருக்கிற குத்தகை யானது பரம்பரையாகத் தொடர்ந்து வருகிறது.

"அதற்கு அவர்கள் அந்தக் கொடியவரைக் கொடுமையாய் அழித்து ஏற்ற காலங்களில் தனக்குக் கனிகளைக் கொடுக்கத்தக்க வேறே தோட்டக் காரரிடத்தில் திராட்சத்தோட்டத்தைக் குத்தகையாகக் கொடுப்பான் என்றார்கள் - இவர்கள் கூறிய பதில் இந்த உவமையை அவர்கள் நன்றாகப் புரிந்து கொண்டார்கள் என்பதைக் காண்பிக்கிறது. தேவன் இந்தப் பூமிக்குத் தம்முடைய ஊழியக்காரர்களில் பலரை அனுப்பினார். யூதர்கள் அவர்களைக் கொன்றுபோட்டார்கள். கடைசியாகத் தேவன் தமது ஒரேபேறான இயேசு கிறிஸ்துவையே அனுப்பினார். இந்த உவமையின் பிரகாரம் அவர்கள் இயேசு கிறிஸ்துவையும் கொன்று போடுவார்கள் என்பது தெரியவருகிறது. வீட்டெஜமான் தோட்டக்காரரை அழித்துப் போடுவார். அதோடு ஏற்ற காலங்களில் தனக்குக் கனிகளைக் கொடுக்கத்தக்க வேறே தோட்டக்காரரிடத்தில் திராட்சத்தோட்டத்தைக் குத்தகையாகக் கொடுப்பார் (மத் 21:42-46)

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 18

"வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக் கல்லாயிற்று" (சங் 118:22; மத் 21:42) இந்தத் தீர்க்கதரிசனம் இயேசு கிறிஸ்துவைக் குறிக்கும். யூதர்கள் அவரை ஆகாதவர்கள் என்று தள்ளிவிட்டார்கள். அதன்பின்பு, அவரைத் தங்கள் மேசியா என்று ஏற்றுக்கொள்வார்கள் (மத் 23:37-39; ரோமர் 11:25-29

"அது கர்த்தராலே ஆயிற்று" - இந்தக் காரியங்கள் எல்லாவற்றையும் கர்த்தர் முன்னறிந்து இருந்தார். இந்தத் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றத்தைக் கர்த்தரே ஆளுகை செய்கிறார் (யோவான் 3:16; ரோமர் 8:32)

"அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது" கர்த்தருடைய மீட்பின் திட்டம் மிகவும் ஆச்சரியமானது (ரோமர் 11:33, எபே 3:16-19, 1பேதுரு 1:10-12

தீர்க்கதரிசன எண் - 85

"தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத்தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும். இந்தக் கல்லின் மேல் விழுகிறவன் நொறுங்கிப் போவான். இது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப் போடும்" - (மத் 21:43-44) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

ஜனங்கள் (nation) - ἔθνος - ethnos - 1484

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - ஜனங்கள், அஞ்ஞானிகள், புறஜாதியார் ராஜ்யம், புறதேசத்தார் (race), சுவிசேஷ ஊழியத்தில் யூதருடைய இடங்களை எடுத்துக் கொள்ளும் புறஜாதி ஜனங்கள் (அப் 13:46-49; அப் 15:13-18; ரோமர் 10:19-11:26)

"இந்தக் கல்லின்மேல் விழுகிறவன் நொறுங்கிப்போவான். இது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப்போடும்" இயேசு கிறிஸ்துவின் கிருபையின்மீது யாரெல்லாம் விழுகிறார்களோ அல்லது யாரெல்லாம் ஒப்புக்கொடுக்கிறார்களோ அவர்களுடைய இருதயம் நொறுங்கிப்போகும். கடினமாக இராது. (சங் 34:18; சங் 51:17; சங் 47:3) இயேசு கிறிஸ்துவின் கிருபையையும் இரக்கத்தையும் மறுதலிக்கிறவர்கள் நசுங்கிப்போவார்கள். முழுவதுமாக அழிந்துபோவார்கள்.

நசுக்கிப்போடு (crushed) - λικμάω - likmaoo - 3039

வினைச்சொல் - நசுக்கிப்போடு, சிதறிப்போ, பதரைப்போல காற்றில் சிதறிப் போதல் (மத் 21:44; லூக்கா 20:18) யூதர்கள் எங்கும் சிதறிப்போனதை இந்த வார்த்தை குறிப்பிடும் (லூக்கா 21:24) நசுக்கிப்போடும் என்பது முழுவதுமாக அழித்துப்போடும். முழுமையான தோல்வியைத் தரும் என்று பொருள்படும். (ஏசா 8:9; எரே 50:2; தானி 2:35,44,45

21 அதிகாரம்

"பிரதான ஆசாரியரும் பரிசேயரும் அவருடைய உவமைகளைக் கேட்டு, தங்களைக் குறித்துச் சொல்லுகிறார் என்று அறிந்தார்கள்" இயேசு கிறிஸ்து கூறிய உவமை பிரதான ஆசாரியரையும் பரிசேயரையும் பற்றியது என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. ஆகையினால் அவரைப் பிடிக்க வகைதேடினார்கள். ஆயினும் ஜனங்களை நிமித்தம் பயந்தார்கள்

மத்தேயு – தொகுப்புரை

22 அதிகாரம்

94. கலியாண விருந்தைப் பற்றிய உவமை – (லூக் 14:16-24)

மத் 22:1 இயேசு மறுபடியும் அவர்களோடே உவமைகளாய்ப் பேசிச் சொன்னது என்னவென்றால்.

மத் 22:2 பரலோகராஜ்யம் தன் குமாரனுக்குக் கலியாணஞ்செய்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது.

மத் 22:3 அழைக்கப்பட்டவர்களைக் கலியாணத்திற்கு வரச்சொல்லும்படி அவன் தன் ஊழியக்காரரை அனுப்பினான், அவர்களோ வர மனதில்லாதிருந்தார்கள்

மத் 22:4 அப்பொழுது அவன் வேறு ஊழியக்காரரை அழைத்து: நீங்கள் போய், இதோ, என் விருந்தை ஆயத்தம் பண்ணினேன், என் எருதுகளும் கொழுத்த ஜெந்துக்களும் அடிக்கப்பட்டது. எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது. கலியாணத்திற்கு வாருங்கள் என்று அழைக்கப்பட்டவர்களுக்குச் சொல்லுங்களென்று அனுப்பினான்

மத் 22:5 அழைக்கப்பட்டவர்களோ அதை அசட்டைபண்ணி, ஒருவன் தன் வயலுக்கும் ஒருவன் தன் வியாபாரத்துக்கும் போய்விட்டார்கள்

மத் 22:6 மற்றவர்கள் அவன் ஊழியக்காரரைப் பிடித்து, அவமானப்படுத்திக் கொலை செய்தார்கள்

மத் 22:7 ராஜா அதைக் கேள்விப்பட்டு, கோபமடைந்து, தன் சேனைகளை அனுப்பி, அந்தக் கொலைபாதகரை அழித்து, அவர்கள் பட்டணத்தையும் சுட்டெரித்தான்

மத் 22:8 அப்பொழுது, அவன் தன் ஊழியக்காரரை நோக்கி: கலியாண விருந்து ஆயத்தமாயிருக்கிறது அழைக்கப்பட்டவர்களோ அதற்கு அபாத்திரராய்ப் போனார்கள்

மத் 22:9 ஆகையால், நீங்கள் வழிச்சந்திகளிலே போய், காணப்படுகிற யாவரையும் கலியாணத்திற்கு அழைத்துக் கொண்டு வாருங்கள் என்றான்

மத் 22:10 அந்த ஊழியக்காரர் புறப்பட்டு, வழிகளிலே போய், தாங்கள் கண்ட நல்லார் பொல்லார் யாவரையும் கூட்டிக்கொண்டு வந்தார்கள் கலியாணசாலை விருந்தாளிகளால் நிறைந்தது.

மத் 22:11 விருந்தாளிகளைப் பார்க்கும்படி ராஜா உள்ளே பிரவேசித்தபோது கலியாண வஸ்திரம் தரித்திராத ஒரு மனுஷனை அங்கே கண்டு,

மத் 22:12 சிநேகிதனே, நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய் என்று கேட்டான்; அதற்கு அவன் பேசாமலிருந்தான்

மத் 22:13 அப்பொழுது, ராஜா பணிவிடைக்காரரை நோக்கி, இவனைக் கைகால்களைக் கட்டிக் கொண்டுபோய், அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்கள் என்றான்

மத் 22:14 அந்தப்படியே, அழைக்கப்பட்டவர்கள் அநேகர் தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர் என்றார்

"இயேசு மறுபடியும் அவர்களோடே உவமைகளாய்ப் பேசிச் சொன்னார்" தேவாலயத்தில் இயேசு கிறிஸ்து மூன்று உவமைகளை யூதருக்குக் கூறினார் அவையாவன

1. இரண்டு குமாரர் (மத் 21:28-32)
2. திராட்சைத்தோட்டம் (மத் 21:33-46)
3. ராஜாவின் குமாரனுடைய கலியாணம் (மத் 22:14)

உவமை எண் - 12

"தன் குமாரனுக்குக் கலியாணஞ்செய்த ஒரு ராஜா" - ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தைப் பற்றி வெளி 19:7-10 ஆகிய வசனங்களில் நாம் வாசிக்கிறோம். ஆனால் இந்தக் கலியாண விருந்து ஒரு இராஜாவினுடைய மகனின் கலியாண விருந்து.

22 அதிகாரம்

"அப்பொழுது அவன் வேறு ஊழியக்காரரை அழைத்து, கலியாணத்திற்கு வாருங்கள் என்று அழைக்கப்பட்டவர்களுக்குச் சொல்லுங்களென்று அனுப்பினான்" - யூதருடைய வழக்கத்தின் பிரகாரம் விருந்தினருக்கு இரண்டு அழைப்புக்கள் கொடுக்கப்படுவது வழக்கம். முதலாவது அழைப்பு திருமணத்திற்கு முன்பாகவே கொடுக்கப்படும். இரண்டாவது அழைப்பு திருமண விருந்து ஆயத்தமான பின்பு கொடுக்கப்படும். (எஸ் 5:8, எஸ் 6:14 லூக்கா 14:16-17)

"மற்றவர்கள் அவன் ஊழியக்காரரைப் பிடித்து, அவமானப்படுத்தி, கொலை செய்தார்கள்" - இதுபோலவே தேவனுடைய தீர்க்கதரிசிகளை இஸ்ரவேலர்கள் கொலை செய்தார்கள் (லூக்கா 11:47-51 லூக்கா 13:34, அப் 7:51) ராஜா கொலைபாதகரை அழித்ததுபோலவே தேவன் இவர்களையும் நியாயந்தீர்ப்பார் (மத் 22:7 லூக்கா 21:20-24)

"கலியாண விருந்து ஆயத்தமாயிருக்கிறது, அழைக்கப்பட்டவர்களோ அதற்கு அபாத்திரராய்ப் போனார்கள்" - மத் 22:5-7 ஆவது வசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிற கொலை பாதகரை இந்த வசனம் குறிக்கும். யூதமார்க்கத் தலைவர்கள் ராஜாவால் விருந்துக்கு அழைக்கப்பட்டவர்களைப் போன்றவர்கள். அவர்கள் அழைக்கப்பட்டிருந்தும் அபாத்திரராய்ப் போனார்கள் (அப் 13:46)

"நீங்கள் வழிச்சந்திகளிலே போய், காணப்படுகிற யாவரையும் கலியாணத்திற்கு அழைத்துக் கொண்டு வாருங்கள்" அழைக்கப்பட்டவர்கள் அபாத்திரராய்ப் போனதினால் வழிச் சந்திகளில் காணப்படுகிற நல்லோர் பொல்லார் யாவரையும் அழைத்து வருமாறு ராஜா தன் ஊழியக்காரரை அனுப்புகிறான். அதுபோலவே ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும் எல்லாப் பாவிகளையுமே மனந்திரும்புமாறு அழைக்கிறார் (மத் 13:38,48) இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம் யூதர்களுக்கு மட்டும் என்று வரையறுக்கப்படவில்லை (யோவான் 1:11 மத் 10:6 மத் 15:24) இஸ்ரவேல் புத்திரர் இயேசு கிறிஸ்துவைப் புறக்கணித்ததினால் அவர்களோடு தாம் செய்துகொண்ட உடன்படிக்கையைத் தேவன் நிறைவேற்ற வேண்டியதில்லை. ஆகையினால் தற்போது இயேசு கிறிஸ்து உலகம் முழுவதிலுமுள்ள எல்லா ஜனங்களையுமே இரட்சித்து தமது ராஜ்யத்தில் சேர்த்து வருகிறார் (யோவான் 3:16 ரோமர் 1:16 2கொரி 12:13)

"அந்த ஊழியக்காரர் புறப்பட்டு, வழிகளிலே போய், தாங்கள் கண்ட நல்லோர் பொல்லார் யாவரையும் கூட்டிக்கொண்டு வந்தார்கள்" - வழியிலே போகிறவர்களுக்கு இது மிகவும் ஆச்சரியமாக இருந்திருக்கும். விருந்து கொடுக்கிறவர் ராஜா. அவருடைய அரண்மனைக்கு சாதாரண நாட்களில் இவர்களால் உள்ளேயே போகமுடியாது. ராஜாவின் ஊழியக்காரர்கள் இவர்களைத் துரத்தி விடுவார்கள். ஆனால் இப்போதோ அதே ஊழியக்காரர்கள் வழியில் போகும் ஜனங்களை ராஜா ஆயத்தம்பண்ணியிருக்கும் கலியாண விருந்தில் கலந்து கொள்ளவருமாறு அழைக்கிறார்கள்.

ராஜா தனது விருந்து சாலையை விருந்தினர்களால் நிறைக்க விரும்பினார். ஏழை பணக்காரர் வித்தியாசமில்லாமல் எல்லோரையும் விருந்திற்கு அழைத்தார். விருந்தில் பங்கு பெறுகிறவர்களுக்கு நல்ல வஸ்திரம் வேண்டும். அதையும் ராஜாவே தனது சொந்த செலவில் கொடுத்தார். தன்னுடைய வஸ்திரங்களை விருந்துக்கு வந்தவர்களுக்கு இலவசமாகக் கொடுத்தார். ராஜா கொடுக்கும் அன்பளிப்பை ஏற்றுக் கொண்டு, அந்த வஸ்திரத்தை அணிந்து, விருந்தில் பங்குபெறுவது ராஜாவிற்கும் கௌரவம். ராஜா கொடுக்கும் விருந்திற்கும் ஒரு கௌரவம். விருந்தில் பங்குபெறுகிற எல்லோருக்குமே கௌரவம்.

"விருந்தாளிகளைப் பார்க்கும்படி ராஜா உள்ளே பிரவேசித்தார்" விருந்தாளிகள் விருந்து உண்ணும்போது அக்காலத்து வழக்கத்தின்படி விருந்து நன்றாக நடைபெறுகிறதா என்பதை விருந்து கொடுக்கிறவர் வந்து பார்ப்பார் (லூக்கா 14:10)

"கலியாண வஸ்திரம்" - ராஜா கலியாண விருந்துக்கு வந்திருக்கும் எல்லோருக்குமே வஸ்திரத்தைக் கொடுத்திருக்கிறார். அந்த வஸ்திரத்தை ஏற்க மறுப்பதும், அல்லது வஸ்திரத்தை வாங்கிக்கொண்டு அதை அணியாமல் இருப்பதும் ராஜாவிற்கு அவமரியாதை ஆகும். வெளி 19:7,8 ஆகிய வசனங்களில் பரிசுத்தவான்களின் மெல்லிய வஸ்திரத்தைக் குறித்து நாம் வாசிக்கிறோம்.

22 அதிகாரம்

"அவன் பேசாமலிருந்தான்" - ராஜா அன்பளிப்பு கொடுத்திருக்கிறார் அதை அவன் வாங்கியிருக்கிறான் ஆனாலும் வஸ்திரத்தை இவன் தரிக்கவில்லை ஆகையினால் இவனால் சாக்குப்போக்கு எதுவும் சொல்லமுடியவில்லை

"இவனைக் கைகால்களும் கட்டிக் கொண்டுபோய், அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்கள்" - தன்னையும் தன் விருந்தையும் அவமானப்படுத்திய அந்த மனுஷனை ராஜா தண்டிக்க விரும்பினான் அவன் செய்தது ராஜாவிற்கு எதிரான குற்றம் ராஜா இலவசமாகக் கொடுத்ததை அவன் ஏற்றுக்கொள்ளவில்லை இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதவர்களும் இதுபோலவே தண்டிக்கப்படுவார்கள் (மத் 8:12; மத் 11:20-24, மத் 13:40-50, மத் 24:51; மத் 25:41-46)

"அழைக்கப்பட்டவர்கள் அநேகர் தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர்" - இயேசு கிறிஸ்து எல்லா ஜனங்களையுமே அழைக்கிறார் ஆனால் ஒருசிலர் மட்டுமே இரட்சிக்கப் படுகிறார்கள் (மத் 20:16)

95. வரிக்காசைப் பற்றிய உபதேசம் - (மாற்கு 12:13, லூக் 20:19)

மத் 22:15 அப்பொழுது, பரிசேயர் போய், பேச்சிலே அவரை அகப்படுத்தும்படி யோசனை பண்ணி

மத் 22:16 தங்கள் சீஷரையும் ஏரோதியரையும் அவரிடத்தில் அனுப்பினார்கள். அவர்கள் வந்து, போதகரே, நீர் சத்தியமுள்ளவரென்றும், தேவனுடைய மார்க்கத்தைச் சத்தியமாய்ப் போதிக்கிறவரென்றும், நீர் முகதாட்சிணியம் இல்லாதவரானபடியால் எவனைக் குறித்தும் உமக்குக் கவலையில்லையென்றும் அறிந்திருக்கிறோம்

மத் 22:17 ஆதலால் உமக்கு எப்படித் தோன்றுகிறது? இராயனுக்கு வரிகொடுக்கிறது நியாயமோ அல்லவோ? அதை எங்களுக்குச் சொல்லும் என்று கேட்டார்கள்

மத் 22:18 இயேசு அவர்கள் துர்க்குணத்தை அறிந்து, மாயக்காரரே, நீங்கள் என்னை ஏன் சோதிக்கிறீர்கள்?

மத் 22:19 வரிக்காசை எனக்குக் காண்பியுங்கள் என்றார் அவர்கள் ஒரு பணத்தை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்

மத் 22:20 அப்பொழுது அவர், இந்தச் சுரூபமும் மேலெழுத்தும் யாருடையது என்று கேட்டார்

மத் 22:21 இராயனுடையது என்றார்கள் அதற்கு அவர் அப்படியானால் இராயனுடையதை இராயனுக்கும் தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார்

மத் 22:22 அவர்கள் அதைக்கேட்டு ஆச்சரியப்பட்டு அவரை விட்டுப் போய்விட்டார்கள்

"அப்பொழுது பரிசேயர் போய், பேச்சிலே அவரை அகப்படுத்தும்படி யோசனை பண்ணி தங்கள் சீஷரையும் ஏரோதியரையும் அவரிடத்தில் அனுப்பினார்கள்" - இந்தச் சந்தர்ப்பத்தில் மூன்று பிரிவினர்கள் இருக்கிறார்கள்

1 ஏரோதியர்

2 சதுசேயர்

3. பரிசேயர்

ஏரோதியர் - ஏரோது ராஜாவின் கொள்கைகளைப் பின்பற்றும் அரசியல் பிரிவினர் இதில் ஏரோதின் குடும்பத்தினரே அதிகமாக இருந்தார்கள் (மாற்கு 3:6) இவர்களுடைய உபதேசத்தின்படி எல்லோரும் ரோம சாம்ராஜ்யத்திற்குக் கட்டுப்பட வேண்டும். தங்களுக்கு அனுகூலம் இருக்குமென்றால் தாங்கள் பின்பற்றி வரும் மார்க்கக்கொள்கைகளுக்குக் கீழ்ப்படியாமல் அவற்றை ஒதுக்கி வைத்து விடலாம். இந்த வேளையில் ஏரோது எருசலேமில் இருந்தான் அவனுடைய வேலைக்காரர்களாகிய ஏரோதியர்களும் அங்கு அவனோடுகூட இருந்தார்கள்

சதுசேயர் - இவர்களும் இயேசுவிடம் கேள்வி கேட்டார்கள் ஆனால் தங்கள் கேள்விகள் மூலமாக இவர்களால் இயேசுவைக் குற்றப்படுத்த முடியவில்லை. (மத் 3:7, மத் 22:23-33)

22 அதிகாரம்

பரிசேயர் - இவர்களும் இயேசுவிடம் கேள்வி கேட்டார்கள் ஆனால் இயேசுவோ இவர்கள் வாயை அடைத்துவிட்டார் (மத் 22 34-46) இயேசு கிறிஸ்து 23-ஆவது அதிகாரத்தில் உவமைகள் மூலமாக இவர்களைக் கடிந்து கொள்கிறார் ஆனால் இவர்களோ தங்களைத் தாழ்த்தி இயேசு கிறிஸ்துவிடம் ஒப்புக் கொடுப்பதற்கு மனதில்லாமல் இருக்கிறார்கள் தங்களுடைய சத்துரு ஆலோசனையில் ஏரோதியரையும் பங்காளிகளாகச் சேர்த்துக் கொள்கிறார்கள் இதுவரையிலும் மார்க்கக் காரியங்களைப் பற்றி இயேசுவிடம் கேள்வி கேட்டவர்கள் இப்போது அரசியல் ரீதியாகக் கேள்வி கேட்கிறார்கள் (மத் 22:17)

போதகர் (Master) - διδάσκαλος - didaskalos - 1320

ஆண்பால் பெயர்ச்சொல் - வேதபாரகன், வேதகர், போதகர், குரு (teacher) (லூக்கா 9:38)

பரிசேயரின் சீஷரும் ஏரோதியரும் இயேசு கிறிஸ்துவிடம் நான்கு காரியங்களைக் கூறினார்கள் அவையாவன

1 போதகரே நீர் சத்தியமுள்ளவர்

2 நீர் தேவனுடைய மார்க்கத்தைச் சத்தியமாய் போதிக்கிறவர்

3 நீர் முகதாட்சிணியம் இல்லாதவர்

4 எவனைக்குறித்தும் உமக்குக் கவலையில்லை

சத்தியமுள்ளவர் (truthful) - ἀληθής - aleethees - 227

பெயரடை - சத்தியமுள்ள உண்மையுள்ள, மெய்யான, நிஜம் உள்ளபடி உண்மையான, நிஜந்தர

(அ) உண்மையான காரியங்கள் (யோவான் 8:13)

(ஆ) உண்மையான நடிகன் (மத் 22:16) (without reserve, sincere, truthful, frank, honest, genuine, and true)

சத்தியம் (truth) - ἀλήθεια - aleetheia 225

(அ) பொய் (அல்லது) தவறு என்பதன் எதிர்மறை (மாற்கு 5:33)

(ஆ) கிறிஸ்தவ மார்க்கத்தின் சாரம் (அல்லது) உபதேசம்

(இ) உண்மையானது (பிலி 1:18) (without pretence, falsehood, or deceit; with sincerity of mind and purpose; without hypocrisy and lust for personal gain)

வரி (tribute) - κῆνσος - keensos - 2778

ஆண்பால் பெயர்ச்சொல் - வரி

"இயேசு அவர்கள் துர்க்குணத்தை அறிந்தார்" - இயேசு கிறிஸ்துவிற்கு ஆவிகளைப் பகுத்தறியும் வரம் உள்ளது மனுஷன் முகத்தைப் பார்த்தாலும் கர்த்தர் அவனுடைய இருதயத்தைப் பார்த்து அவனை அறிந்து கொள்வார் (ஏசா 11:2 யோவான் 2:25; யோவான் 3:34)

ஒரு பணம் (penny) - δηνάριον - deenarion - 1220

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பணம் காசு

"இராயனுடையதை இராயனுக்கும் தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள்" இயேசு கிறிஸ்து தமது தெய்வீக ஞானத்தை இங்கு வெளிப்படுத்துகிறார் இராயனுக்குரியதை இராயனுக்குச் செலுத்த வேண்டும். அதேசமயத்தில் தேவனுக்குரியதைத் தேவனுக்குச் செலுத்த வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. இராயனுக்கு வரி செலுத்த வேண்டாம் என்று கூறியிருந்தால் ஏரோதும் ஏரோதியரும் இயேசு கிறிஸ்துவை விரோதியாகப் பாவிப்பார்கள் அதேவேளையில் இராயனுக்கு வரிசெலுத்த வேண்டும் என்பதை மட்டும் இயேசு வலியுறுத்திக் கூறினால், யூதர்கள் அவரை வெறுப்பார்கள் இயேசு ஞானமாகப் பதில் கூறினார் தேவனுடைய ஞானம் வெளிப்பட்டது ஜனங்கள் அதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு அவரை விட்டுப்போய் விட்டார்கள்

22 அதிகாரம்

99. உயிர்த்தெழுதலைப் பற்றிய கேள்வி - (மாற்கு 12:18 லூக் 20:27)

மத் 22:23 உயிர்த்தெழுதல் இல்லை என்று சாதிக்கிற சதுசேயர் அன்றைய தினம் அவரிடத்தில் வந்து,

மத் 22:24 போதகரே, ஒருவன் சந்தானம் இல்லாமல் இறந்துபோனால், அவனுடைய சகோதரன் அவன் மனைவியை விவாகம் பண்ணி, தன் சகோதரனுக்குச் சந்தானம் உண்டாக்கவேண்டும் என்று மோசே சொன்னாரே.

மத் 22:25 எங்களுக்குள்ளே சகோதரர் எழுபேர் இருந்தார்கள்; மூத்தவன் விவாகம் பண்ணி, மரித்து, சந்தானமில்லாததினால் தன் மனைவியைத் தன் சகோதரனுக்கு விட்டுவிட்டுப்போனான்.

மத் 22:26 அப்படியே இரண்டாம் மூன்றாம் சகோதரன் முதல் ஏழாம் சகோதரன் வரைக்கும் செய்தார்கள்.

மத் 22:27 எல்லாருக்கும் பின்பு அந்த ஸ்திரீயும் இறந்துபோனாள்.

மத் 22:28 ஆகையால், உயிர்த்தெழுதலில் அவ்வெழுபேரில் எவனுக்கு அவள் மனைவியாயிருப்பாள்? அவர்கள் எல்லாரும் அவளை விவாகம் பண்ணியிருந்தார்களே என்று கேட்டார்கள்.

மத் 22:29 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் வேத வாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள்.

மத் 22:30 உயிர்த்தெழுதலில் கொள்வனையும் கொடுப்பனையும் இல்லை, அவர்கள் பரலோகத்திலே தேவதூதரைப்போல இருப்பார்கள்.

மத் 22:31 மேலும் மரித்தோர் உயிர்த்தெழுதலைப்பற்றி: நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருக்கிறேன் என்று, தேவனால் உங்களுக்கு உரைக்கப்பட்டிருக்கிறதை நீங்கள் வாசிக்கவில்லையா?

மத் 22:32 தேவன் மரித்தோருக்குத் தேவனாயிராமல், ஜீவனுள்ளோருக்குத் தேவனாயிருக்கிறார் என்றார்.

மத் 22:33 ஜனங்கள் இதைக் கேட்டு, அவருடைய போதகத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்.

"ஒருவன் சந்தானம் இல்லாமல் இறந்துபோனால், அவனுடைய சகோதரன் அவன் மனைவியை விவாகம் பண்ணி, தன் சகோதரனுக்குச் சந்தானம் உண்டாக்கவேண்டும் என்று மோசே சொன்னாரே" - (உபா 25:5)

"எங்களுக்குள்ளே சகோதரர் எழுபேர் இருந்தார்கள்; மூத்தவன் விவாகம் பண்ணி, மரித்து, சந்தானமில்லாததினால் தன் மனைவியைத் தன் சகோதரனுக்கு விட்டுவிட்டுப் போனான்" - யூதமார்க்கத்தலைவர்களுடைய உபதேசத்தின் பிரகாரம் ஒரு ஸ்திரீக்கு இந்த வாழ்வில் இரண்டு புருஷர்கள் இருந்தால் அடுத்த வாழ்வில் அவளுடைய முதலாவது புருஷனே அவளுக்குப் புருஷனாக இருப்பான்.

"நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள்" இயேசு கிறிஸ்துவிடம் இப்போது பேசுகிறவர்கள் சதுசேயர்கள். அவர்கள் உயிர்த்தெழுதல் இல்லை என்று சாதிக்கிறவர்கள். ஆனாலும் அவர்கள் இயேசு கிறிஸ்துவிடம் உயிர்த்தெழுதலையும், மறுவாழ்வையும் குறித்து கேள்வி கேட்டு, இயேசுவைத் தங்கள் கண்ணியில் சிக்க வைக்க முயற்சி பண்ணுகிறார்கள் (மத் 22:23). ஆகையினால்தான் இயேசு கிறிஸ்து அவர்களிடம் நீங்கள் வேதவாக்கியங்களையும் அறியவில்லை, தேவனுடைய வல்லமையையும் அறியவில்லை என்று கூறுகிறார். உயிர்த்தெழுதலில் ஆண்களும், பெண்களும் திருமணம் செய்து கொள்வதில்லை.

22 அதிகாரம்

"பரலோகத்திலே தேவதூதரைப்போல இருப்பார்கள்" - உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள் தேவதூதரைப்போல மரிப்பதில்லை ஆகையினால் தங்களுடைய வம்ச விருத்திக்காக அவர்கள் திருமணம் செய்ய வேண்டிய தேவையில்லை

"நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாயிருக்கிறேன்" - யாத் 3:6,16 ஆகிய வசனங்கள் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. மோசேயின் ஆகமங்கள் மட்டுமே வேதவாக்கியம் என்று சதுசேயர் கூறுகிறார்கள் இயேசு கிறிஸ்து தமது தேவத்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக இந்த வாக்கியத்தைப் பயன்படுத்துகிறார்

"ஜீவனுள்ளோர்" - சரீரம் மரிக்கிறது. ஆனால் ஆவியும் ஆத்துமாவும் மரிப்பதில்லை ஏசா 14:9 மத் 17:3 லூக்கா 16:19-31 லூக்கா 23:43 லூக்கா 20:38; 2கொரி 4:18; 2கொரி 5:8, எபே 4:8-10; பிலி 1:21-24; எபி 12:22-23 1பேதுரு 3:4, 1பேதுரு 4:6; வெளி 6:9-11)

97. பிரதான கற்பனையைப் பற்றிய கேள்வி - (மாற்கு 12:28 லூக் 10:27)

மத் 22:34 அவர் சதுசேயரை வாயடைத்தார் என்று பரிசேயர் கேள்விப்பட்டு, அவரிடத்தில் கூடிவந்தார்கள்

மத் 22:35 அவர்களில் நியாயசாஸ்திரி ஒருவன் அவரைச் சோதிக்கும்படி

மத் 22:36 போதகரே, நியாயப்பிரமாணத்திலே எந்தக் கற்பனை பிரதானமானது என்று கேட்டான்

மத் 22:37 இயேசு அவனை நோக்கி: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக.

மத் 22:38 இது முதலாம் பிரதான கற்பனை

மத் 22:39 இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால் உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே.

மத் 22:40 இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுவதும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்றார்

"அவர் சதுசேயரை வாயடைத்தார்" - தம்முடைய விசுவாசிகளுக்கும், இயேசு கிறிஸ்து இப்பேர்ப்பட்ட ஞானத்தைத் தருவதாக வாக்குப்பண்ணியிருக்கிறார் (லூக்கா 21:15; யோவான் 14:12; அப் 7:10 1கொரி 12:8; யாக் 1:5

"நியாயசாஸ்திரி" - வேதவாக்கியங்களில் வல்லவர்கள் வேதபாரகர்கள் புதிய ஏற்பாட்டில் 8 இடங்களில் இவர்களைப் பற்றிய குறிப்பு உள்ளது. (மத் 22:35 லூக்கா 7:30 லூக்கா 10:25 லூக்கா 11:45-52; லூக்கா 14:3; தீத்து 3:13

போதகர் (Master) - διδάσκαλος - didaskalos - 1320

ஆண்பால் பெயர்ச்சொல் - வேதபாரகன், வேதகர், போதகர், குரு (teacher) (லூக்கா 9:38

"நியாயப்பிரமாணத்திலே எந்தக் கற்பனை பிரதானமானது" வேதவாக்கியத்தில் 248 கற்பனைகள் இருப்பதாக நியாயசாஸ்திரிகள் கணக்கிட்டிருக்கிறார்கள் இவை நேர்மறையானவை. இவைதவிர 365 எதிர்மறைக் கற்பனைகள் இருப்பதாகவும் அவர்கள் கூறுகிறார்கள் ஆக மொத்தம் 613 கற்பனைகள் வேதவாக்கியங்களில் உள்ளன என்பது இவர்களுடைய கணக்கு. 248 என்பது ஒரு மானிட சரீரத்திலுள்ள 248 அவயவங்களைக் குறிக்கும். 365 என்பது ஒரு வருஷத்தின் 365 நாட்களைக் குறிக்கும். பத்து கற்பனைகள் எபிரெய மொழியில் எழுதப்பட்ட போது அதில் 613 எழுத்துக்கள் இருந்தன 613 என்பது பத்து கற்பனைகளிலுள்ள 613 எழுத்துக்களைக் குறிக்கும்.

இந்த 613 கற்பனைகளில் சில மிகவும் முக்கியமானவை சில ஓரளவு முக்கியமானவை. என்று யூதர்கள் தரம் பிரித்திருந்தார்கள் யூதருடைய இந்தப் பாரம்பரிய நம்பிக்கையை இயேசு கிறிஸ்து அங்கீகரிக்கிறாரா? என்பதைச் சோதிப்பதற்காக நியாயசாஸ்திரி இயேசுவிடம் இந்தக் கேள்வியைக் கேட்டான்

22 அதிகாரம்

"உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக" - உபா 6:5; உபா 10:12 உபா 30:6 ஆகிய வசனங்களிலிருந்து மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

தேவன்மீது நாம் காண்பிக்கும் அன்பு மூன்று இடங்களிலிருந்து வரவேண்டும் அவையாவன

1. இருதயம் - உள்ளான எல்லா பிரியங்கள்
2. ஆத்துமா - எல்லா மனச்சாட்சிகள்
3. மனது - எல்லா சிந்தனைகள்

"உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" - லேவி 19:18 ஆவது வசனத்திலிருந்து மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப் பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது" இவ்விரண்டு கற்பனைகளும் தெய்வீக வெளிப்பாட்டின் மொத்த அம்சமாகும். இதுவே மனுஷருக்கு நியமிக்கப் பட்டிருக்கிற மொத்த பொறுப்பு, மனுஷர் நிறைவேற்ற வேண்டிய மொத்த கடமை

98. இயேசு பரிசேயரிடம் கேள்வி கேட்கிறார் - (மாற்கு 12:35 லூக் 20:39

மத் 22:41 பரிசேயர் கூடியிருக்கையில் இயேசு அவர்களை நோக்கி

மத் 22:42 கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் அவர் யாருடைய குமாரன்? என்றுகேட்டார் அவர் தாவீதின் குமாரன் என்றார்கள்

மத் 22:43 அதற்கு அவர் அப்படியானால், தாவீது பரிசுத்த ஆவியினாலே அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்கிறது எப்படி?

மத் 22:44 நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கி போடும் வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்று கர்த்தர் என் ஆண்டவரோடே சொன்னார் என்று சொல்லியிருக்கிறானே

மத் 22:45 தாவீது அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்க, அவனுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி என்றார்

மத் 22:46 அதற்கு மாறுத்தரமாக ஒருவனும் அவருக்கு ஒரு வார்த்தையும் சொல்லக் கூடாதிருந்தது. அன்றுமுதல் ஒருவனும் அவரிடத்தில் கேள்விகேட்கத் துணியவில்லை.

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 19

"நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப்போடும் வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும்" - (சங் 110:1; மத் 22:44) புதிய ஏற்பாட்டில் 7 தடவைகள் இந்த வாக்கியம் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (மத் 22:44; மாற்கு 12:36 லூக்கா 20:42; அப் 2:34, 1கொரி 15:25 எபி 1:13; எபி 10:13) ஆயிர வருஷ அரசாட்சியின் முடிவில் எல்லா சத்துருக்களும் இயேசு கிறிஸ்துவின் பாதபடியில் அடக்கிப்போடப் படுவார்கள் (1கொரி 15:24-28 எபே 1:10, வெளி 20-22

"தாவீது அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்க அவனுக்கு அவர் குமாரனா யிருப்பது எப்படி?" - அவர் தேவன் ஆகை யினால் தாவீதுடைய ஆண்டவர் அவர் தாவீதுடைய குமாரன்.ஏனென்றால் தாவீதின் வம்ச வழியில் வந்த மரியாள் மூலமாக வந்தவர் (லூக்கா 1:34-35; லூக்கா 3:23-38

"அதற்கு மாறுத்தரமாக ஒருவனும் அவருக்கு ஒரு வார்த்தையும் சொல்லக் கூடாதிருந்தது. அன்றுமுதல் ஒருவனும் அவரிடத்தில் கேள்வி கேட்கத் துணியவில்லை" இயேசு அவர்களுடைய வாயை அடைத்தார் அவர்கள் இயேசுவின் ஜீவனுக்கு எதிராக சதியாலோசனை பண்ணினார்கள் அவர்களுடைய இருதயம் திருக்கும், கபடமும் உள்ளது. அவர்களால் இயேசு கிறிஸ்துவிற்கு முன்பாக நாம் மாயமான இருதயத்தோடு தொடர்ந்து நிற்க முடியவில்லை இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு இந்தக் காரியம் நடைபெற்றது.

23 அதிகாரம்

99. பரிசேயரின் குணங்கள் - (மத் 23:1-33; மாற்கு 12:38 லூக் 18:9; 20:45)

மத் 23:1 பின்பு இயேசு ஜனங்களையும் தம்முடைய சீஷர்களையும் நோக்கி:

மத் 23:2 வேதபாரகரும் பரிசேயரும் மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள்;

மத் 23:3 ஆகையால், நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிறயாவையும் கைக்கொண்டு செய்யுங்கள்; அவர்கள் செய்கைகளின்படியோ செய்யாதிருங்கள்; ஏனெனில், அவர்கள் சொல்லுகிறார்கள், சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள்.

மத் 23:4 சுமப்பதற்கரிய பாரமான சுமைகளைக் கட்டி, மனுஷர் தோள்களின்மேல் சுமத்துகிறார்கள்; தாங்களோ ஒரு விரலினாலும் அவைகளைத் தொடமாட்டார்கள்.

மத் 23:5 தங்கள் கிரியைகளையெல்லாம் மனுஷர் காணவேண்டுமென்று செய்கிறார்கள்; தங்கள் காப்புநாடாக்களை அகலமாக்கி, தங்கள் வஸ்திரங்களின் தொங்கல்களைப் பெரிதாக்கி,

மத் 23:6 விருந்துகளில் முதன்மையான இடங்களையும், ஜெபஆலயங்களில் முதன்மையான ஆசனங்களையும்,

மத் 23:7 சந்தைவெளிகளில் வந்தனங்களையும், மனுஷரால் ரபீ, ரபீ, என்று அழைக்கப்படுவதையும் விரும்புகிறார்கள்.

மாய்மாலக்காரரின் சுபாவங்கள்

1 போதகருக்குரிய மரியாதையை எதிர்பார்க்கிறார்கள் (மத் 23:2)

2 அவர்கள் சொல்லுகிறார்கள், சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள் (மத் 23:3)

3 மற்றவர்களுக்குப் பெரிய வேலை கொடுக்கிறார்கள் தாங்கள் ஒரு வேலையும் செய்வதில்லை. (மத் 23:4)

4 மனுஷருடைய புகழ்ச்சியை விரும்புகிறார்கள் (மத் 23:5)

5 தங்கள் மார்க்கப் பாரம்பரியத்தின்படி நடக்கிறார்கள் (மத் 23:5)

6 விருந்துகளில் முதன்மையான இடங்களை நாடுகிறார்கள் (மத் 23:6)

7 ஜெபாலயங்களில் முதன்மையான ஆசனங்களை விரும்புகிறார்கள் (மத் 23:6)

8 மனுஷர் தங்களைப் புகழ வேண்டுமென்று விரும்புகிறார்கள் (மத் 23:7)

9 தங்களுக்குப் பெரிய பட்டங்கள் வேண்டுமென்று விரும்புகிறார்கள் (மத் 23:7)

10 சத்திய மனுஷனையும் அவர்களுடைய ஜீவனையும் கொள்ளையிடுகிறார்கள் (மத் 23:13)

11 சத்தியத்தையும் ஜீவனையும் புறக்கணிக்கிறார்கள் (மத் 23:13)

12 விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப் போடுகிறார்கள் (மத் 23:14)

13 பார்வைக்காக நீண்ட ஜெபம் பண்ணுகிறார்கள் (மத் 23:14)

14 ஒருவனைத் தங்கள் மார்க்கத்தானாக ஆக்குவதற்கு பிரயாசப்படுகிறார்கள் ஆனால் தேவனிடத்தில் யாரையும் வழிநடத்துவதில்லை. (மத் 23:15)

15 தங்களுடைய மார்க்கத்தார் ஆனவர்களை மாய்மாலத்தில் பழக்குகிறார்கள் தேவனுடைய வார்த்தையை உபதேசிப்பதில்லை. (மத் 23:15)

16 அவர்கள் சத்தியத்திற்குக் குருடராக இருக்கிறார்கள் (மத் 23:16-22)

மத்தேயு - தொகுப்புரை

23 அதிகாரம்

17 தங்கள் சுய ஆதாயத்திற்காகவும் தங்கள் சுய மகிமைக்காகவும் ஊழியம் செய்கிறார்கள். (மத் 23:16-22)

18 கொசு இல்லாதபடி வடிகட்டுகிறார்கள் ஆனால் ஒட்டகத்தை விழுங்குகிறார்கள் (மத் 23:23-24)

19 வெளிப் புறத்தைச் சுத்தமாக்கு கிறார்கள் ஆனால் அவர்களுடைய உட்புறம் அசுத்தமாக இருக்கிறது. (மத் 23:25-26)

20 மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறார்கள் ஆனால் தங்கள் ஜீவியத்திலும் நடத்தையிலும் மாயமும் அக்கிரமும் நிறைந்தவர்களாக இருக்கிறார்கள் (மத் 23:27-28

21 தங்கள் முற்பிதாக்களை விட தாங்கள் பெரிய நீதிமான்கள் என்று காண்பிக்க விரும்புகிறார்கள் மத் 23:29-33

“நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிறயாவையும் கைக்கொண்டு செய்யுங்கள் அவர்கள் செய்கையின் படியோ செய்யாதிருங்கள்” தேவனுடைய வார்த்தை யாரிடமிருந்து வந்தாலும் அதற்குக் கீழ்ப்படியலாம். மாயக்காரர் தேவனுடைய வார்த்தையை உபதேசம் பண்ணினாலும் அந்த வார்த்தைக்குக் கீழ்ப்படிவதில் எந்தத் தவறும் இல்லை. ஏனெனில் அது தேவனுடைய வார்த்தை ஆனால் நாம் அவர்களைப்போல ஜீவிக்கக் கூடாது. அவர்கள் நன்றாகச் சொல்வார்கள் ஆனால் சொன்னபடி நடந்துகொள்ள மாட்டார்கள்

“சுமப்பதற்கரிய பாரமான சுமைகளைக் கட்டி மனுஷர் தோள்களின்மேல் சுமத்துகிறார்கள்; தாங்களோ ஒரு விரலினாலும் அவைகளைத் தொடமாட்டார்கள்” - அழிவுக்கு நேரான பாதையில் மார்க்கத்தலைவர்கள் ஜனங்களை வழிநடத்துகிறார்கள் மார்க்கத்தைப் பின்பற்றுவது தவறல்ல ஆனால் அதை ஒரு விளம்பரத்திற்காகப் பின்பற்றுவது தவறுதான் மனுஷர் காணவேண்டுமென்று நாம் நற்கிரியைகளைச் செய்யக்கூடாது அவற்றை தேவநாம மகிமைக்காகவே செய்ய வேண்டும்.

“தங்கள் கிரியைகளையெல்லாம் மனுஷர் காணவேண்டுமென்று செய்கிறார்கள்” - மற்றவர்கள் தங்கள் கிரியைகளைக் காணவேண்டும் என்பதற்காக மாயக்காரர்கள் பல காரியங்களைச் செய்கிறார்கள் வெளிவேஷத்திற்கும் வெளி அலங்காரத்திற்கும் அதிக முக்கியத்துவம் தேவையில்லை. உள்ளான அலங்காரமே மகிமை பெறும்

“காப்புநாடாக்கள்” (phylacteries) தோலினால் செய்த சிறிய சதுரப் பெட்டி யாத் 13:1-10; உபா 6:4-9; உபா 11:13-21 ஆகிய வசனங்கள் இதில் எழுதப்பட்டிருக்கும் இவற்றைப் புருஷர்கள் கைகளிலும் நெற்றியிலும் அணிந்திருப்பார்கள் பொது ஜனங்கள் விசேஷித்த ஜெபநாட்கள் மட்டும் காப்பு நாடாக்களை அணிவார்கள் ஆனால் பரிசேயர்களோ காப்புநாடாக்களை எப்போதும் அணிந்திருப்பார்கள் அவற்றின் அளவும் பெரிதாக இருக்கும் மற்றவர் காண வேண்டுமென்பதாக பெரிய காப்பு நாடாக்களைச் செய்து அணிவார்கள் அவர்கள் வசனங்களை அதில் எழுதி வைத்திருந்தாலும் அவர்களுடைய நோக்கம் தவறானது. தங்களுக்குப் பெருமை சேர வேண்டுமென்பதற்காகவே இதைச் செய்கிறார்கள் தேவநாம மகிமைக்காக மட்டும் நாம் கிரியை செய்ய வேண்டும் நமது சொந்த நாமத்தை மகிமைப்படுத்த முயற்சி பண்ணக்கூடாது. பரிசேயர்கள் இதை மாயமாலமாகவும், பிசாசுகளைத் துரத்தும் கருவியாகவும் பயன்படுத்தினார்கள்

“வஸ்திரங்களின் தொங்கல்கள்” (மத் 9:20)

“விருந்துகளில் முதன்மையான இடங்கள்” - மரியாதைக்குரிய இடங்கள் (மாற்கு 12:39, லூக்கா 20:46)

“ஜெபஆலயங்களில் முதன்மையான ஆசனங்கள்” - உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாகப் போடப்பட்டிருக்கும் இருக்கைகள் மூப்பர்களுக்கும் வேதபாரகர்களுக்கும் இவை ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தன சபையாரைப் பார்க்கும் பிரகாரமாக இந்த ஆசனங்கள் இருக்கும். (மாற்கு 12:39; லூக்கா 11:43)

23 அதிகாரம்

ரபீ" – போதகருக்குக் கொடுக்கப்படும் பட்டம் (யோவான் 3:2; லூக்கா 9:38) பரிசேயர் இந்தப் பட்டத்தை மிகவும் விரும்பினார்கள் (மத் 23:7) ஆலோசனைச் சங்கத்தார் ஒருவர்மீது தங்களுடைய கைகளை வைத்து அவரை ரபீயாக அங்கீகரிப்பார்கள் வேதவாக்கியங்களை மற்றவர்களுக்கு உபதேசம் பண்ணுவதற்கு அதிகாரம் கொடுக்கும்விதமாகவும், வேதவாக்கியங் களைத் தியானிப்பதற்காகவும் அவருக்கு ஒரு திறவுகோலும், புஸ்தகத்தோடு கூடிய மேஜையும் கொடுக்கப்படும். ரபீ அந்தத் திறவுகோலை தன்னுடைய பெருமைக்காக எப்போதும் அணிந்திருப்பார் ரபீ மரிக்கும் போது அவருடைய திறவுகோலையும் அவரோடு சேர்த்துப் புதைத்து விடுவார்கள் யூதர்கள் யோவானை ரபீ என்றார்கள் யோவான் (3:26) அவர்கள் இயேசுவையும் ரபீ என்று அழைத்தார்கள் (யோவான் 1:38,49; யோவான் 3:2; யோவான் 6:25) ஆனால் இவர்கள் இருவருமே ரபீயாக பிரதிஷ்டை பண்ணப்படவில்லை (யோவான் 20:16)

100. பரிசேய உபதேசத்திற்கு எதிரான எச்சரிப்புகள் – (மத் 5:20;6:1-18; லூக் 18:9-14

மத் 23:8 நீங்களோ ரபீ என்றழைக்கப் படாதிருங்கள், கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார் நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்

மத் 23:9 பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள்; பரலோகத்திலி ருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாயிருக்கிறார்

மத் 23:10 நீங்கள் குருக்கள் என்றும் அழைக்கப்படாதிருங்கள், கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக்கிறார்

மத் 23:11 உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்

மத் 23:12 தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்

போதகர் (Master) - καθηγητής - **katheegeetees** - 2519

ஆண்பால் பெயர்ச்சொல் - போதகர், குரு **(leader, guide)** (மத் 23:10)

"நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக் கிறீர்கள்"- நீங்கள் எல்லோருமே ஒன்றுதான் யாரும் உயர்ந்தவன் என்றோ தாழ்ந்தவன் என்றோ இல்லை. (1பேதுரு 5:1-6)

பிதா (father) - προπάτωρ - **propatoor** - 3962

ஆண்பால் பெயர்ச்சொல் - தகப்பன் பிதா, முன்னோர் **(generator, nearest ancestor, founder of a race)**

ஆலோசனைச் சங்கத்தின் அங்கத்தினர் களைப் பிதாக்கள் என்று அழைத்தார்கள் (அப் 7:2; அப் 22:1) கிறிஸ்தவ விசுவாசியின் மதத்தில் இந்தப் பழக்கம் இல்லை வேதாகமத்தில் 244 இடங்களில் தேவன் பிதா என்று அழைக்கப்படுகிறார் 140 இடங்களில் உலகப்பிரகாரமான தகப்பன்மார்களை இந்தச் சொல் குறிப்பிடுகிறது. விக்கிரகாராதனை செய்த ஆசாரியர்கள் பிதாக்கள் என்று அழைக்கப் பட்டார்கள் (நியா 17:10) ஆபிரகாமைப் பிதா என்று அழைத்தார்கள் (ரோமா 4:1,18

"குருக்கள்" (Master) - (மத் 23:8 இயேசு கிறிஸ்து மட்டுமே நமக்கு குரு. தேவனுக்குரிய மகிமையை நாம் மனுஷருக்குத் தரக்கூடாது. கிறிஸ்துவே சபையின் தலைவர் எபே (20:23 கொலோ 1:18,24)

"உங்களில் பெரியவனாயிருக்கிறவன்" - (மத் 18:1)

ஊழியக்காரன் (servant) - διάκονος **diakonos** 1249

ஆண்பால் அல்லது பெண்பால் பெயர்ச்சொல் – பணிவிடைக்காரன், ஊழியக்காரன் வேலைக்காரன், ஊழியஞ்செய்கிறவன், உதவிக்காரர் - (மத் 20:26)

23 அதிகாரம்

"தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்" - இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தின் பிரகாரம் மனுஷர் யாருமே தங்களை உயர்த்தக்கூடாது. தாழ்மை உடையவர்களாக இருக்க வேண்டும். தாழ்மையுள்ளவர்களுக்குத் தேவன் கிருபை அளிக்கிறார் பெருமையுள்ளவர்களுக்கோ தேவன் எதிர்த்து நிற்கிறார் (நீதி 16:18, லூக்கா 14:11; லூக்கா 18:14)

101. பரிசேயர்மீது எட்டு "ஐயோ"க்கள் - (லூக் 6:24-26; 11:42)

(1) தேவனுக்கு விரோதமாகக் கிரியை செய்து பரலோகத்தைப் பூட்டிப் போடுகிறார்கள்

மத் 23:13 மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ மனுஷர் பிரவேசியாதபடி பரலோகராஜ்யத்தைப் பூட்டிப் போடுகிறீர்கள் நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை. பிரவேசிக்கப் போகிறவர்களைப் பிரவேசிக்க விடுகிறதுமில்லை

"மனுஷர் பிரவேசியாதபடி பரலோக ராஜ்யத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள்" - வேதபாரகரும், பரிசேயரும் மாயக்காரர்கள் அவர்கள் தவறான உபதேசங்களைப் போதிக்கிறார்கள் இதனால் அவர்களாலும் பரலோக ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியவில்லை மற்றவர்களையும் பிரவேசிக்க விடுவதில்லை

(2) ஒடுக்குகிறார்கள் - மாய்மாலக் காரர்கள்

மத் 23:14 மாயக்காரராகிய வேதபாரகரே' பரிசேயரே' உங்களுக்கு ஐயோ, பார்வைக்காக நீண்ட ஜெபம்பண்ணி, விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப் போடுகிறீர்கள் இதினிமித்தம் அதிக ஆக்கினையை அடைவீர்கள்

"விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப் போடுகிறீர்கள்" விதவைகளின் சொத்துக்களை அபகரித்தல் அல்லது கொள்ளையிடுதல். (2 தீமோ 3:5 9)

"நீண்ட ஜெபம்" - யூதமார்க்கத்தலைவர்கள் சில வேளைகளில் மூன்று மணி நேரம் ஜெபிப்பார்கள் ஒரு நாளுக்கு மூன்று தடவை நீண்ட ஜெபம் ஏறெடுப்பார்கள் (மத் 6:5-9)

(3) ஆத்துமாக்களை அழித்துப் போடுகிறார்கள்

மத் 23:15 மாயக்காரராகிய வேதபாரகரே' பரிசேயரே! உங்களுக்கு ஐயோ ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும் படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள் அவன் உங்கள் மார்க்கத்தானானபோது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள்

"ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள்" - இந்த வாக்கியம் யூதருடைய வழக்குச்சொல் ஒருவனைத் தன்னுடைய மார்க்கத்தானாக்கும்படி எல்லா விதமான முயற்சியும் பண்ணுதல் என்பது இதன் பொருள் இவர்கள் மனுஷரைத் தேவனிடத்தில் வழிநடத்தாமல் தங்களிடமே வழிநடத்துகிறார்கள்

மார்க்கத்தமைந்தவன் (proselyte) - προσήλυτος - proseelytos - 4339

பொருள் - வேறுமார்க்கத்தான், வேறு மார்க்கத்தமைந்தவன், ஒரு மார்க்கத்தில் புதிதாகச் சேர்ந்தவன், புறஜாதி மார்க்கத்திலிருந்து யூதமார்க்கத்தை ஏற்றுக்கொண்டவன் (அப் 2:10; அப் 6:5, அப் 13:43

யூதமார்க்கத்தமைந்தவர்களில் இரண்டு பிரிவினர்கள் இருந்தார்கள் அவர்கள்

1 நீதியின் பிரகாரமாக யூதமார்க்கத்தமைந்தவர்கள் இவர்கள் விருத்தசேதனம் பண்ணிக் கொள்வார்கள் மோசேயின் பிரமாணங்களைக் கைக் கொள்ளப் பொருத்தனை செய்து கொள்வார்கள் யூதமார்க்கத்தின் எல்லா பழக்கவழக்கங்களையும் கடைப் பிடிப்பார்கள்

மத்தேயு - தொகுப்புரை

23 அதிகாரம்

2 வாசல்களில் இருக்கிற யூத மார்க்கத்தமைந்தவர்கள் யாத் 20:10 உபா 5:14, உபா 24:16-21) இவர்கள் இஸ்ரவேல் ஜாதியார் மத்தியில வசித்து வந்தார்கள் விருத்தசேதனம் பண்ணுவதில்லை ஆனால நோவாவின் எழு ஆலோசனைகளை இவர்கள் கடைபிடித்தார்கள் அவையாவன: விக்கிரகாராதனை தேவதூஷணம் கொலை பண்ணுதல கற்பின்மை. திருடுதல கலகம பண்ணுதல மாம்சத்தையும இரத்தத்தையும் பயன்படுத்துதல

"நரகத்தின் மகன் - நரகத்திற்குப போகுமாறு நியமிக்கப்பட்டிருக்கிறவர்கள் (யோவான் 17:12 லூக்கா 12:5)

நரகம் (hell) - γέεννα - geenna - 067

பெண்பால பெயர்சொல - நரகம

(4) பொய்யான ஆணையிடுகிறார்கள்

மத் 23:16 குருடரான வழிகாட்டிகளே' உங்களுக்கு ஐயோ, எவனாகிலும் தேவாலயத்தினபேரில சத்தியம பணணினால அதினால ஒன்றுமில்லை யென்றும். எவனாகிலும் தேவாலயத்தின பொன்னினபேரில சத்தியம்பணணினால அவன கடனாளியென்றும் சொல்லுகிறீர்கள

மத் 23:17 மதிகேடரே, குருடரே' எது முக்கியம்? பொன்னோ. பொன்னைப பரிசுத்தமாக்குகிற தேவாலயமோ?

மத் 23:18 மேலும், எவனாகிலும் பலி பீடத்தினபேரில் சத்தியம் பணணினால அதினால ஒன்றுமில்லையென்றும் எவனாகிலும் அதினமேல இருக்கிற காணிக்கையின பேரில சத்தியம் பணணினால, அவன கடனாளியென்றும் சொல்லுகிறீர்கள

மத் 23:19 மதிகேடரே குருடரே' எது முக்கியம்? காணிக்கையோ காணிக்கையைப் பரிசுத்தமாக்குகிற பலிபீடமோ?

மத் 23:20 ஆகையால், பலி பீடத்தின்பேரில் சத்தியம் பண்ணுகிறவன் அதின்பேரிலும் அதின்மேலுள்ள எல்லாவற்றின்பேரிலும் சத்தியம்பண்ணுகிறான்

மத் 23:21 தேவாலயத்தின்பேரில் சத்தியம் பண்ணுகிறவன் அதின்பேரிலும் அதில் வாசமாயிருக்கிறவர்பேரிலும் சத்தியம் பண்ணுகிறான்

மத் 23:22 வானத்தின்பேரில சத்தியம் பண்ணுகிறவன் தேவனுடைய சிங்காசனத்தின்பேரிலும் அதில் வீற்றிருக்கிறவர் பேரிலும் சத்தியம் பண்ணுகிறான்

"எது முக்கியம்? பொன்னோ பொன்னைப பரிசுத்தமாக்குகிற தேவாலயமோ?" - பொருத்தனை செய்தால அதை நிறைவேற்ற வேண்டிய கடமை இல்லையென்று பரிசேயர்கள நினைத்தார்கள மத் 23:16,18 ஆனால இயேசு கிறிஸ்துவோ பொருத்தனை செய்தால அதைச செலுத்தவேண்டியது அவசியம் என்று வலியுறுத்தினார் நாம் செய்யும் பொருத்தனையைவிட தேவாலயம் பெரியது. பலிபீடத்தினமீது வைக்கப்படும் பலியை விட பலிபீடம் பெரியது (மத 23:17 19 22)

(5) வெளிவேஷம் போடுகிறார்கள்

மத் 23:23 மாயக்காரராகிய வேதபாரகரே' பரிசேயரே உங்களுக்கு ஐயோ நீங்கள ஒற்றலாமிலும் வெந்தயத்திலும் சீரகத்திலும் தசமபாகம செலுத்தி, நியாயப்பிரமாணத்தில கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள இவைகளையும் செய்யவேண்டும் அவைகளையும் விடாதிருக்கவேண்டுமே.

மத் 23:24 குருடரான வழிகாட்டிகளே கொசுயில்லாதபடி வடிகட்டி, ஒட்டகத்தை விழுங்குகிறவர் களாயிருக்கிறீர்கள்

"மாயக்காரர்" (யோபு 27:8 மத் 6:2

23 அதிகாரம்

தசமபாகம்

மோசேயின் பிரமாணத்திற்கு முன்பாக தசமபாகம் செலுத்துதல்

மோசேக்கு 430 வருஷங்களுக்கு முன்பாகவே தசமபாகம் செலுத்தும் வழக்கம் இருந்தது. (ஆதி 14:20; ஆதி 28:22 எபி 7:8-11

மோசேயின் பிரமாணத்தின்படியாக தசமபாகம் செலுத்துதல்

1 கர்த்தருடைய கட்டளை (லேவி 27:30 மல 3:10)

2 தசமபாகம் செலுத்துவதன் நோக்கம்

(1) லேவியருக்காக (எண் 18:21-24)

(2) ஆசாரியருக்குத் தசமபாகத்தில் தசமபாகம் (எண் 18:26; நெகே 10:37 நெகே 12:44

(3) ஏழைகளுக்கும் ஊழியக்காரர்களுக்கும் மூன்று வருஷங்களில் ஒருமுறை தசமபாகத்தில் தசமபாகம் (உபா 14:27-29 உபா 26:12-14)

(4) தேவனுடைய ஆலயத்தின் பண்டகசாலைக்கு (மல் 3:10)

(5) தேவனை மகிமைப்படுத்துவதற்காக (நீதி 3:9-10)

3 ஒவ்வொரு வருஷமும் பண்டிகையின் மற்ற காணிக்கைகளோடு தசமபாகத்தையும் கொண்டு வரவேண்டும். (உபா 12:6 7, உபா 14:22-26)

4 தசமபாகம் கர்த்தருக்குரியது. (லேவி 27:30-34; மல் 3:8)

5 தசமபாகத்தை எங்கு கொண்டு வரவேண்டும் (2நாளா 31:12; நெகே 10:38; நெகே 12:44; நெகே 13:5,12, மல் 3:8)

6 தசமபாகத்திற்குக் கடன்பட்டால் அதற்கு 20 சதவீதம் கூடுதலாகச் செலுத்த வேண்டும். (லேவி 27:31

7 தசமபாகத்தை மாற்றினால் இதையும் மாற்றப்பட்டதையும் சேர்த்துச் செலுத்த வேண்டும். (லேவி 27:33

புதிய ஏற்பாட்டில் தசமபாகம்

1 கிறிஸ்து உபதேசம் பண்ணினார் (மத் 23:23; மத் 11:11-14 லூக்கா 11:42 லூக்கா 16:16, மத் 5:20- லூக்கா 18:11-12; மத் 10:10 லூக்கா 10:7-8)

2 பவுல் உபதேசம் பண்ணினார்

(1) கோவில்களைக் கொள்ளையிடக் கூடாது (லேவி 27 மல 3:8-10, ரோமர் 2:22

(2) உபதேசியார்கள் செலுத்த வேண்டும். (கலா 6:6)

(3) ஊழியக்காரர்களுக்கு ஆதாரவாக தேவன் நியமித்திருக்கிறார் (1கொரி 9:7-14. 1தீமோ 6:17-18

(4) தேவன் தங்களை ஆசீர்வதிப்பதற்கு விசுவாசிகள் தசமபாகம் செலுத்த வேண்டும் (1கொரி 16:2)

(5) மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவம் நித்தியமானது. ஆபிரகாமின் பிள்ளைகள் அதனால் ஆதரிக்கப்பட வேண்டும். (எபி 6:20 எபி 7:1-11,17,21)

(6) ஆபிரகாமின் பிள்ளைகள் அவனுடைய பாதைகளில் விசுவாசத்தோடு நடக்க வேண்டும். (ரோமர் 4:12 எபி 7

(7) தசமபாகம் செலுத்துதல் தேவனுக்குக் கீழ்ப்படிவதற்கும் தேவனுடைய ஆசீர்வாதங்களுக்கு நன்றி சொல்வதற்கும் அடையாளம். (ரோமர் 4:12, 1கொரி 9:7-14; 1தீமோ 6:17-18, எபி 7:6-10; ஆதி 14:20 உபா 8:10-20; நீதி 3:9-10 மல் 3:8-10

மத்தேயு - தொகுப்புரை

23 அதிகாரம்

தசமபாகம் செலுத்துவதினால் உண்டாகும் ஆசீர்வாதங்கள்

1. கீழ்ப்படிவதினால் வரும் ஆசீர்வாதங்கள்
2. தேவனுடைய பண்டகசாலை நிரம்பியிருக்கும் (மல் 3:10)
3. தேவனுடைய ஊழியக்காரர்கள் குறைவில்லாமல் இருப்பார்கள் (நெகே 13:10 மல 3:8-10 1கொரி 9:7-14; 1தீமோ 5:17-18)
4. ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் உலக ஆசீர்வாதங்களும் வரும (2நாளா 31 நெகே 13 நீதி 3:9-10 மல 3:8-10)

தசமபாகம் செலுத்தியவர்களுக்கு எடுத்துக்காட்டுக்கள்

1. ஆபிரகாம் (ஆதி 14:20; எபி 7:1-11)
2. யாக்கோபு (ஆதி 28:22)
3. ஆபிரகாமில் லேவி (எபி 7:9)
4. எசேக்கியாவும் இஸ்ரவேலும் 2நாளா 31)
5. நெகேமியாவும் இஸ்ரவேலும் நெகே 13)
6. மாயக்காரர் (மத் 23:23 லூக்கா 11:42, லூக்கா 18:12)
7. விசுவாசிகள் 1கொரி 9:7-14 1கொரி 16:2 2கொரி 7:11 2கொரி 8:1-15 கலா 6:6. 1தீமோ 5:17-18, எபி 7)

தசமபாகம் செலுத்துவதற்குப் பதிலாக வேறு எதையாவது செய்யலாம் என்று புதிய ஏற்பாட்டில் எந்த வசனமும் கூறவில்லை

"ஒற்தலாம்" - நறுமணமுள்ள செடி

"வெந்தையம்" - சமையலுக்குப் பயனபடும் பொருள்

"சீரகம்" - சமையலுக்குப் பயனபடும் பொருள்

"விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டு விட்டீர்கள்" - மார்க்கபிரகாரமான சடங்குகளை விட தேவனுடைய நீதியும், இரக்கமும் விசுவாசமுமமுக்கியமானவை. தசமபாகம்செலுத்தி விட்டு எப்படியும் நாம் ஜீவிக்கலாம் என்று நமக்கு இஷ்டமானபடி ஜீவிக்கக்கூடாது.

"இவைகளையும் செய்யவேண்டும் அவைகளையும் விடாதிருக்கவேண்டும்" - தசமபாகம செலுத்துவதை இயேசு கிறிஸ்து அங்கீகரித்திருக்கிறார் நியாயபிரமாணத்தில் தசமபாகத்தைப பற்றிக் கூறப்பட்டிருப்பதனால் அது பழைய ஏற்பாட்டுப பிரமாணம் புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் தசமபாகம் செலுத்த வேண்டியதில்லை என்று கருதக்கூடாது (மத் 11:11-13 லூக்கா 16:16 ஆகையினால் நாம தசமபாகமும் செலுத்த வேண்டும் ஆவிக்குரிய ஜீவியமும் ஜீவிக்க வேண்டும்

"கொசுயில்லாதபடி வடிகட்டி, ஒட்டகத்தை விழுங்குகிறவர்களாயிருக்கிறீர்கள்" - ஒரு பூச்சி கூட நமக்குள் போய்விடக்கூடாது என்று மிகுந்த எச்சரிப்போடு வடிகட்டு கிறோம ஆனால சமயம கிடைத்தால ஒட்டகததையே விழுங்கி விடுகிறோம

(6) தவறான சுத்திகரிப்புக்கள்

மத் 23:25 மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, போஜன பானபாத்திரங்களின் வெளிப்புறததைச் சுததமாக்குகிறீர்கள் உட்புறததிலோ அவைகள் கொள்ளையினாலும் அநீதத்தினாலும் நிறைந்திருககிறது.

மத் 23:26 குருடனான பரிசேயனே போஜன பானபாத்திரஙகளின வெளிப்புறம் சுததமாகும்படி அவைகளின உட்புறத்தை முதலாவது சுததமாககு.

"போஜன பானபாத்திரஙகளின வெளிப்புறததைச் சுத்தமாக்குகிறீர்கள் உட்புறததிலோ அவைகள் கொள்ளையினாலும் அநீதத்தினாலும் நிறைந்திருக்கிறது" - மாக்கச்சடஙகுகளின பிரகாரமாக பரிசேயாகள் தஙகளை வெளிப்புறமாகச் சுத்தப்படுத்தி அலங்கரித்தாாகள் அதற்கு ஏற்ற பிரகாரமாக நீணட அங்கிகளை அணிந்து கொணடார்கள் ஆனால் அவாகளுடைய இருதயமாகிய உட்புறமோ மகா கேடுள்ளதாக இருக்கிறது அது கொள்ளையினாலும் அநீதத்தினாலும் நிறைந்திருக்கிறது (மத் 15:18-20, மாற்கு 7:19-21, லூக்கா 4:28

23 அதிகாரம்

"குருடன்" - மார்க்கத்தலைவர்களின் குருட்டுத்தன்மையைக் குறிப்பதற்கு இயேசு கிறிஸ்து பத்து இடங்களில் இந்த வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார் (மத் 15:14; மத் 23:16-26; லூக்கா 6:39; யோவான் 9:40; வெளி 3:17) இந்த அர்த்தத்தில் வேறு சிலரும் இந்தச் சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் (ரோமர் 2:19; ரோமர் 11:7; 2கொரி 3:14; 2கொரி 4:4; 2பேதுரு 1:9) ஒளியை ஏற்றுக் கொள்ளாதவர்கள் இருட்டில் குருடரைப் போன்று இருப்பார்கள். (1யோவான் 1:7; 1யோவான் 2:11; யோவான் 3:19-20) இவர்கள் குருடராக இருக்க வேண்டுமென்று தாங்களே தீர்மானம் பண்ணிக் கொண்டவர்கள் (யோவான் 8:39-41; யோவான் 12:40; மத் 13:14-16) பரிசேயர் குருடராக இருப்பதோடு மட்டுமல்லாமல் மற்றவர்களையும் ஆவிக்குரிய குருடராக்குகிறார்கள் (மத் 8:12; மத் 25:30-46)

(7) சுயநீதி

மத் 23:27 மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ! வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள்; அவைகள் புறம்பே அலங்காரமாயக் காணப்படும்; உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும்.

மத் 23:28 அப்படியே நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள்; உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத் தினாலும் நிறைந்திருக்கிறீர்கள்.

"வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள், அவைகள் புறம்பே அலங்காரமாயக் காணப்படும் உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும்" பஸ்கா பண்டிகைக்கு ஒரு மாதத்திற்கு முன்பு கல்லறைகளை வெள்ளையடிப்பார்கள் அசுத்தத்தைத் தொடாமல் இருப்பதற்கு எல்லா மனுஷருக்கும் எச்சரிப்பாக கல்லறைகளுக்கு வெள்ளையடிக்கப்படும். (எண் 19:16) வெள்ளையடிப்பது தவிர மேலும் பல வழிகளில் கல்லறைகளை அழகுபடுத்தினார்கள் (மத் 23:29)

"அப்படியே நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள் உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள்" - ஒருசிலரை வெளித்தோற்றத்தை வைத்துப் பார்க்கும்போது பக்திமான் போலவும், நீதிமான் போலவும் விசுவாசிகள்போலவும் இருப்பார்கள் ஆனால் அவர்களுடைய ஜீவியத்திலோ ஆவியின் கனி வெளிப்படாது அவர்களுடைய இருதயத்தில் துன்மார்க்கமான சிந்தனைகள் நிறைந்திருக்கும் (1சாமு 16:7; 2கொரி 10:7; 2தீமோ 3:5; 1பேதுரு 3:3)

(8) பெருமை

மத் 23:29 மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, நீங்கள் தீர்க்கதரிசிகளின் கல்லறைகளைக் கட்டி, நீதிமான்களின் சமாதிகளைச் சிங்காரித்து:

மத் 23:30 எங்கள் பிதாக்களின் நாட்களில் இருந்தோமானால் அவர்களோடே நாங்கள் தீர்க்கதரிசிகளின் இரத்தப்பழிக்கு உட்பட்டிருக்க மாட்டோம் என்கிறீர்கள்.

மத் 23:31 ஆகையால் தீர்க்கதரிசிகளைக் கொலை செய்தவர்களுக்குப் புத்திரராயிருக்கிறீர்கள் என்று உங்களைக்குறித்து நீங்களே சாட்சிகளாயிருக்கிறீர்கள்.

மத் 23:32 நீங்களும் உங்கள் பிதாக்களின் அக்கிரம அளவை நிரப்புங்கள்.

மத் 23:33 சர்ப்பங்களே, விரியன்பாம்புக் குட்டிகளே! நரகாக்கினைக்கு எப்படித் தப்பித்துக்கொள்வீர்கள்?

மத்தேயு - தொகுப்புரை

23 அதிகாரம்

"மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ" - மத்தேயு 23-ஆவது அதிகாரத்தில் எட்டுவிதமான பாவங்களைச் செய்தவர்களைப் பார்த்து இயேசு கிறிஸ்து ஐயோ என்று கூறுகிறார் (மத் 23:13-29).

1 மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோக ராஜ்யத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள்; நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்கப் போகிறவர்களைப் பிரவேசிக்கவிடுகிறதுமில்லை. (மத் 23:13)

2 மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, பார்வைக்காக நீண்ட ஜெபம்பண்ணி, விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப் போடுகிறீர்கள்; இதினிமித்தம் அதிக ஆக்கினையை அடைவீர்கள் (மத் 23:14)

3 மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள்; அவன் உங்கள் மார்க்கத்தானான போது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள் (மத் 23:15)

4 குருடரான வழிகாட்டிகளே! உங்களுக்கு ஐயோ, எவனாகிலும் தேவாலயத்தின் பேரில் சத்தியம் பண்ணினால் அதினால் ஒன்றுமில்லை யென்றும், எவனாகிலும் தேவாலயத்தின் பொன்னின்பேரில் சத்தியம் பண்ணினால் அவன் கடனாளியென்றும் சொல்லுகிறீர்கள் (மத் 23:16-22)

5 மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தையத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப் பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள்; இவைகளையும் செய்ய வேண்டும், அவைகளையும் விடாதிருக்க வேண்டுமே (மத் 23:23-24)

6 மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, போஜன பான பாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள்; உட்புறத்திலோ அவைகள் கொள்ளையினாலும் அநீதத்தினாலும் நிறைந்திருக்கிறது. (மத் 23:25-26)

7 மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள்; அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும் (மத் 23:27-28)

8 மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, நீங்கள் தீர்க்கதரிசிகளின் கல்லறைகளைக் கட்டி, நீதிமான்களின் சமாதிகளைச் சிங்காரித்து, எங்கள் பிதாக்களின் நாட்களில் இருந்தோமானால், அவர்களோடே நாங்கள் தீர்க்கதரிசிகளின் இரத்தப் பழிக்கு உடன்பட்டிருக்கமாட்டோம் என்கிறீர்கள் (மத் 23:29-30).

"எங்கள் பிதாக்களின் நாட்களில் இருந்தோமானால் அவர்களோடே நாங்கள் தீர்க்கதரிசிகளின் இரத்தப்பழிக்கு உடன்பட்டிருக்கமாட்டோம்" இவர்களுடைய முற்பிதாக்களைவிட இவர்கள் மிகவும் மோசமானவர்கள். இவர்கள் மேசியாவையும், அவருடைய சீஷர்களையும் அவரைப் பின்பற்றியவர்களையும் கொலை பண்ணினார்கள் (மத் 23:34-36)

"சர்ப்பங்களே, விரியன்பாம்புக் குட்டிகளே! நரகாக்கினைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வீர்கள்?" தப்பித்துக் கொள்ள முடியாது. சர்ப்பங்களும், விரியன்பாம்புக்குட்டிகளும் நரகாக்கினைக்கு நியமிக்கப்பட்டவை ஆக்கா 12:5

23 அதிகாரம்

102. கிறிஸ்தவர்கள் துன்பப்படுத்தப் படுவார்கள் என்று இயேசு முன் குறித்துக் கூறுகிறார் - (10:17)

மத் 23:34 ஆகையால் இதோ தீர்க்கதரிசிகளையும் ஞானிகளையும் வேதபாரகரையும் உங்களிடத்தில் அனுப்புகிறேன்; அவர்களில் சிலரைக் கொன்று சிலுவைகளில் அறைவீர்கள்; சிலரை உங்கள் ஆலயங்களில் வாரினால் அடித்து, ஊருக்கு ஊர் துன்பப்படுத்துவீர்கள்;

மத் 23:35 நீதிமானாகிய ஆபேலின் இரத்தம் முதல் தேவாலயத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே நீங்கள் கொலை செய்த பரகியாவின் குமாரனாகிய சகரியாவின் இரத்தம் வரைக்கும், பூமியின்மேல் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தப்பழியெல்லாம் உங்கள்மேல் வரும்படியாக இப்படிச் செய்வீர்கள்.

மத் 23:36 இவைகளெல்லாம் இந்தச் சந்ததியின்மேல் வருமென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

தீர்க்கதரிசன எண் - 38

"இதோ தீர்க்கதரிசிகளையும் ஞானிகளையும் வேதபாரகரையும் உங்களிடத்தில் அனுப்புகிறேன்; அவர்களில் சிலரைக் கொன்று சிலுவைகளில் அறைவீர்கள்; சிலரை உங்கள் ஆலயங்களில் வாரினால் அடித்து, ஊருக்கு ஊர் துன்பப்படுத்துவீர்கள்" - (மத் 23:34-39) இந்தத் தீர்க்கதரிசனத்தில் மத் 23:34-36 ஆகிய வசனங்கள் நிறைவேறியுள்ளன. மத் 23:37-39 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

"பூமியின்மேல் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தப்பழியெல்லாம் உங்கள்மேல் வரும்படியாக இப்படிச் செய்வீர்கள்" - தேவன் தமது ஒரேபேறான குமாரனை நமக்காக அனுப்பினார். இவர்கள் அவரை ஏற்றுக் கொள்ளாமல் சிலுவையில் அறைந்து கொலைசெய்தார்கள். தேவனுடைய இரக்கத்தினால் வெளிப்பட்ட எல்லா அடையாளங்களையும், அற்புதங்களையும் காணாதவாறு தங்களுடைய கண்களை மூடிக்கொண்டார்கள். ஆகையினால் இவர்கள் மீது இரத்தப்பழிகள் வரும். இதுவரையிலும் இல்லாத அளவிற்கு இவர்கள் மிகவும் கடுமையாக நியாயந்தீர்க்கப்படுவார்கள்.

"பரகியாவின் குமாரனாகிய சகரியா" - இந்தப் பெயர் சகரியா தீர்க்கதரிசியைக் குறிக்கும். (சக 1:1) வேறொரு சகரியாவைப் பற்றிய குறிப்பு 2நாளா 24:20-21 ஆகிய வசனங்களில் வாசிக்கிறோம். இவன் யோய்தாவின் குமாரன்.

103. இயேசு எருசலேமிற்காக அழுகிறார் - லூக் 13:34; 19:41; 2:42

மத் 23:37 எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும் வண்ணமாக, நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று.

மத் 23:38 இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்.

மத் 23:39 கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும், இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

"எருசலேமே எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே" - இஸ்ரவேலுக்காக இயேசு கிறிஸ்து தமது இருதயத்தின் ஆழத்திலிருந்து விண்ணப்பம் பண்ணுகிறார்.

"உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று" - மனுஷனே தன்னுடைய முடிவிற்குக் காரணமானவன், பொறுப்புடையவன் (வெளி 22:17)

மத்தேயு - தொகுப்புரை

23 அதிகாரம்

"இதோ உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்" - இந்த வாக்கியம் தேவாலயத்தையும், இஸ்ரவேல் தேசத்தையும் குறிக்கும் (2சாமு 7:5,18-19) இரண்டுமே பாழாக்கிவிடப்படும். ஆனாலும் இரண்டுமே திரும்பக் கட்டப்படும். தானியேலின் 69 ஆவது வாரத்தின் முடிவில் இஸ்ரவேல் தேசம் பாழாக்கிவிடப்பட்டது. (தானி 9:27)

தேவாலயம் பாழாக்கிவிடப்படுவதற்குக் காரணங்கள்

1. அவர்களுடைய பாவங்கள்
2. யூதமார்க்கம் தொடர்வதற்கான வாய்ப்புக்களை அகற்றுதல்
3. நியாயப்பிரமாணம் முடிவுக்கு வருதல் யூதருடைய மார்க்கம் ஒழிந்து கிறிஸ்தவ மார்க்கம் தோன்றுதல்

"கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும்" இயேசு கிறிஸ்துவை நாம் மறுபடியும் காண்போம். யூதர்களும் காண்பார்கள். அவர்கள் சந்தோஷமாக இயேசு கிறிஸ்துவைத் தங்கள் மேசியாவாக ஏற்றுக் கொள்வார்கள் (சக 12:10-13:1, ஏசா 66:7-8, ரோமர் 11:25-29). யூதர்கள் ஏற்கெனவே "கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்" என்று கூறியிருக்கிறார்கள் (மத் 21:9, சங் 118:26).

24 அதிகாரம்

104. இயேசு ஒலிவமலையில் கூறிய தீர்க்கதரிசனம் - (மத் 24-25 மாற்கு 13, லூக் 21)

(1) எருசலேமின் அழிவை முன்குறித்துக் கூறுகிறார் - (மத் 24:37; மாற்கு 13:1)

மத் 24:1 இயேசு தேவாலயத்தை விட்டுப் புறப்பட்டுப்போகையில், அவருடைய சீஷர்கள் தேவாலயத்தின் கட்டடங்களை அவருக்குக் காண்பிக்க அவரிடத்தில் வந்தார்கள்.

மத் 24:2 இயேசு அவர்களை நோக்கி: இவைகளையெல்லாம் பார்க்கிறீர்களே, இவ்விடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப் போகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

"இயேசு தேவாலயத்தை விட்டுப் புறப்பட்டுப்போகையில்" - இயேசு கிறிஸ்து இந்தத் தீர்க்கதரிசனத்தைத் தேவாலயத்திற்கு வெளியே ஒலிவமலையில் கூறினார் (மத் 24:3). ஆனால் லூக்கா 21 ஆவது அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து தேவாலயத்தை விட்டுப் புறப்படுவதற்கு முன்பாக தேவாலயத்திலேயே கூறினார் (லூக்கா 21:1,27-28).

"தேவாலயத்தின் கட்டடங்கள்" - ஏரோது ராஜாவின் தேவாலயம். சுமார் 500 சதுர கெஜம் பரப்பளவு உள்ளது. வெள்ளைச் சலவைக் கற்களால் கட்டப்பட்டது. பழங்கால அற்புதங்களில் ஏரோதுவின் தேவாலயமும் ஒன்று.

தீர்க்கதரிசன எண் - 37

"இவ்விடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போகும்" - (மத் 24:2) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. ரோமர்கள் கி.பி. 70 இல் எருசலேமை அழித்தார்கள். அப்போது தேவாலயமும் அழிந்துபோயிற்று. (தானி 9:26, லூக்கா 21:20-24)

"ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போகும்" - யோசேப்பஸ் (Josephus) என்னும் திருச்சபை வரலாற்று ஆசிரியர் தேவாலயத்தின் கற்களைப் பற்றி எழுதியிருக்கிறார். அதிலுள்ள கற்களில் சில 94 அடி நீளமுள்ளவை. பத்தரை அடி உயரமும் 13 அடி அகலமும் உடையவை. அந்தத் தேவாலயத்தில் 162 தூண்கள் இருந்தன. 52 அடி உயரமுள்ள மண்டபங்களை அவை தாங்கிப் பிடித்திருந்தன. தேவாலயத்திலுள்ள எல்லா கற்களும் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு இடிக்கப்பட்டது. மீகா 3:12-இல் கூறப்பட்ட தீர்க்கதரிசனம் முழுமையாக நிறைவேறிற்று. "சீயோன் வயல்வெளியைப்போல உழப்பட்டு, எருசலேம் மண்மேடுகளாய்ப்போம், ஆலயத்தின் பர்வதம் காட்டுமேடுகளாய்ப்போம்."

(2) மூன்று முக்கியமான கேள்விகள் - (மத் 13:3; லூக் 21:7)

மத் 24:3 பின்பு, அவர் ஒலிவமலையின்மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்து வந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும் உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்லவேண்டும் என்றார்கள்.

"அவர் ஒலிவமலையின்மேல் உட்கார்ந்திருந்தார்" - ஒலிவமலையின்மேல் உட்கார்ந்து பார்க்கும்போது தேவாலயத்தின் முழு வடிவமும் தெளிவாகத் தெரியும்.

"சீஷர்கள் அவரிடத்தில் தனித்துவந்தார்கள்" - லூக்கா 21 ஆவது அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து எல்லா ஜனங்களுக்கும் மத்தியில் பேசினார். ஆனால் இங்கே தமது சீஷர்களிடம் மட்டும் தனித்துப் பேசுகிறார் (மத் 24:3).

சீஷர்கள் இயேசுவிடம் கேட்ட கேள்விகள்

1. எருசலேம் எப்போது அழிக்கப்படும்? இதற்கு மத்தேயு பதில் கூறவில்லை. இதற்குரிய பதிலை லூக்கா எழுதின சுவிசேஷத்தில் நாம் வாசிக்கலாம். (லூக்கா 21:12-24)

மத்தேயு - தொகுப்புரை

24 அதிகாரம்

2 உம்முடைய வருகைக்கு அடையாளம் என்ன? இதற்குரிய பதில மத் 24:4-26, 37-39 ஆகிய வசனங்களில் உள்ளது.

3 உமது வருகையின்போது என்ன நடைபெறும்? இதற்குரிய பதில மத் 24:27-31,40-51; மத் 25:1-46 ஆகிய வசனங்களில் உள்ளது.

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு அடையாளங்கள்

1 வஞ்சனைகள் (மத் 24:4-5,11,24)

2 கள்ளக்கிறிஸதுக்கள் (மத் 24:5,23-26)

3 யுத்தங்களும், யுத்தங்களைப் பற்றிய செய்திகளும் மத் 24:6-7)

4 பஞ்சங்கள் (மத் 24:7; வெளி 6:5-6)

5 கொள்ளைநோய்கள் (மத் 24:7, வெளி 6:8)

6 பூமியதிர்ச்சிகள் (மத் 24:7 வெளி 6:12-17)

7 தேவனுடைய பிள்ளைகளுக்கு உபத்திரவங்கள் மத் 24:9 மாற்கு 13:9,13

8 இடறல்கள் (மத் 24:10, மத் 18:1-10)

9 காட்டிக்கொடுக்கப்படுதல் (மத் 24:9 மாற்கு 13:12

10 பகை (மத் 24:10; 2தீமோ 3:1-9)

11 கள்ளத்தீர்க்கதரிசிகள் (மத் 24:11,24 வெளி 13

12 அக்கிரம மிகுதி (மத் 24:12)

13 அன்பு தணிந்துபோதல் (மத் 24:12-13; 2தீமோ 3)

14 சுவிசேஷ ஊழியம் பிரபலியம் (மத் 24:14

15 பாழாக்குகிற அருவருப்பு (தானி 9:27 மத் 24:15; 2தெச 2:4; வெளி 13)

16 யூதேயாவில் புதிய யூததேசம் (எசே 37 தானி 9:27; மத் 24:9,15-26)

17 யூதருடைய புதிய தேவாலயம் (தானி 8:9-13 தானி 9:27 தானி 11:45 மத் 24:15,26,2தெச 2:4;வெளி 11:1-2

18 மூன்றரை வருஷங்களுக்கு மஹா உபத்திரவம் (தானி 12:1; மத் 24:21 வெளி 12:1-19:21)

19 இரத்தச்சாட்சிகள் (மத் 24:9,22, தானி 8:24; வெளி 7:9-17;வெளி 11:7 வெளி 15:2-4; வெளி 20:4-6

20 யூதேயாவிலிருந்து யூதர்கள் ஓடிப்போதல் (சங் 60:4-8; ஏசா 16:1-5; எசே 20:33-38; தானி 11:40-45 ஓசி 2:14-16; மத் 24:16-21 வெளி 12:6,14)

21 சாத்தானுடைய வல்லமை அதிகரித்தல் (மத் 24:24; 2தெச 2:8-12, வெளி 13 வெளி 16:14; வெளி 19:20

22 குடிவெறி (மத் 24:38 லூக்கா 17:28 லூக்கா 21:34)

23 பாலிய பலாத்காரங்கள் (மத் 24:38, லூக்கா 17:27)

24 உணர்வின்மை (மத் 24:39

இயேசு கிறிஸ்துவின் வருகை பரோசியா (**Parousia**) என்று அழைக்கப்படுகிறது. இது ஒரு கிரேக்கச்சொல் காணக்கூடிய விதத்தில் தோன்றுதல் மறுபடியும் தோன்றுதல் என்பது இதன் பொருள்

வருகை - **παρουσία** - **parousia** - 3952

பெண்பால் பெயர்ச்சொல் வருதல், தோற்றம், சமீபமாயிருத்தல்

மத்தேயு - தொகுப்புரை

24 அதிகாரம்

இயேசு கிறிஸ்துவின் வருகைகள்

1 சபை எடுத்துக்கொள்ளப்படுதல் (Rapture) மத்திய ஆகாயத்திற்கு பரிசுத்தவான்களை எடுத்துக் கொள்வதற்காக இயேசு கிறிஸ்து வருவார். இந்த வருகையில் அவர் பூமிக்கு வராமல் மத்திய வானத்திற்கு மட்டுமே வருகிறார் (யோவான் 14:1-3; 1கொரி 15:23,51-58; 1தெச 2:19; 1தெச 3:13; 1தெச 4:13-17; 1தெச 5:23; 2தெச 2:1,7-8; யாக் 5:7-8; 1யோவான் 2:28)

2 இரண்டாம் வருகை. இயேசு கிறிஸ்து தமது பரிசுத்தவான்களோடு ஆளுகை செய்வதற்காக பூமிக்கு வருவார் (Second coming) (மத் 24:3,27-51; மத் 25:31-46; யூதா 1:14; வெளி 19:11-21; சக 14:1-5)

(3) கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு அடையாளங்கள்

(அ) எட்டு அடையாளங்கள் - யூதர்களின் வருத்தங்கள் - (மாற்கு 13:5; லூக் 21:8; வெளி 6-9)

மத் 24:4 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

மத் 24:5 ஏனெனில், அநேகர் வந்து என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள்.

மத் 24:6 யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்; இவைகளெல்லாம் சம்பவிக்கவேண்டியதே. ஆனாலும், முடிவு உடனே வராது.

மத் 24:7 ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும்.

மத் 24:8 இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்.

தீர்க்கதரிசன எண் - 38

"ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்..." (மத் 24:4-25:46) இந்தத் தீர்க்கதரிசனத்தில் மத் 24:27-51 மத் 25:1-46 ஆகிய வசனங்கள் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையிலும் நித்தியத்திலும் நிறைவேறும்.

"ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" - விசுவாசிகள் எப்போதும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். சாத்தான் தேவபிள்ளைகளை எப்படி வஞ்சிக்கலாம் என்று வழிபார்த்துக் கொண்டிருக்கிறான். ஆகையினால் இதற்கு எச்சரிப்பாக வேதத்தில் பல வசனங்கள் கூறப்பட்டிருக்கிறது. (மத் 24:4-5,11,24; லூக்கா 21:8; 1கொரி 6:9; 1கொரி 15:33; கலா 6:7; எபே 5:6; 2தெச 2:3)

"இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்" - மத் 24:4-7 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற எட்டு அடையாளங்களும் வேதனைகளுக்கு ஆரம்பமேயல்லாமல் முடிவு அல்ல

வேதனைகள் (sorrows) - ὠδίν - oodin - 5604

பெண்பால் பெயர்சொல் - வேதனை உபாதி, பிரசவவேதனை (birth pangs) (கலா 4:19,27; 1தெச 5:3; வெளி 12:2) உபத்திரவக்காலத்து வேதனை(tribulation) (மத் 24:15-21; ஏசா 66:7-8; எரே 30:4-7; தானி 7:21; தானி 8:9-14,24; தானி 9:27; வெளி 12)

(ஆ) இஸ்ரவேலின் வருத்தங்களின்போது எட்டு அடையாளங்கள்- (மாற்கு 13:9)

மத் 24:9 அப்பொழுது உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக்கொடுத்து, உங்களைக் கொலைசெய்வார்கள்; என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள்.

24 அதிகாரம்

மத் 24:10 அப்பொழுது, அநேகர் இடறலடைந்து, ஒருவரையொருவர் காட்டிக்கொடுத்து ஒருவரையொருவர் பகைப்பார்கள்

மத் 24:11 அநேகங் கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள்

மத் 24:12 அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம்.

மத் 24:13 முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்

மத் 24:14 ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்

"என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள்" - புறஜாதியார் எல்லோருமே யூதர்களைப் பகைப்பார்கள்

முடிவு (end) - τέλος - telos - 5056

பாலவேறுபாடற்ற பெயர்ச்சொல்

முடிவு, அழிவு, அந்தம், தொந்தரவு விலகிப்போதல், ஒரு காரியத்தின் முடிவு, மத் 24:6,14) இரண்டு காலங்களின் இணைப்பு (மத் 13:39,40,49 மத் 24:3 மத் 28:20 எபி 9:26) டேலோஸ (telos) என்னும் கிரேக்கச்சொல் ஜீவியத்தின் முடிவையும், காலத்தின் முடிவையும் குறிக்கும்

இரட்சிக்கப்படுவான் (saved) σώζω

sozoo - 4982

வினைச்சொல் - இரட்சி, சொஸ்தமாகு, ஆரோக்கியம் அடை, சுகமடை, தப்பிப்போ, இரட்சிக்கப்படு (மத் 1:21)

சுவிசேஷம் - εὐαγγελίζω

euangelizoo - 2097

வினைச்சொல் - சுவிசேஷம் பிரசங்கி, நற்செய்தி அறிவி, பிரசங்கி, சுவிசேஷம் அறிவி

செப்துவஜிந்த் பழைய ஏற்பாட்டில் சுவிசேஷம் என்னும் வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிற விதம்

1 எந்த நற்செய்தியும் (1சாமு [illegible]:9 2சாமு 1:20 1நாளா 10:9

2 தேவனுடைய கிருபை (சங் 40:10 சங் 96:2)

3 மேசியாவின் ஆசீர்வாதங்கள் (ஏசா 40:9 ஏசா 61:1

புதிய ஏற்பாட்டில் சுவிசேஷம் என்னும் வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிற விதம்

1. தேவனுடைய ராஜ்யமும், பரலோக ராஜ்யமும் (மத் 4:23, மத் 9:35, மத் 24:14; மாற்கு 1:14)

2 தேவன் (ரோமர் 1:1 ரோமர் 15:16

3 இயேசு கிறிஸ்து (மாற்கு 1:1, ரோமர் 1:16 ரோமர் 15:29 1கொரி 9:12-18

4 இரட்சிப்பு (மாற்கு 16:15 லூக்கா 4:18 எபே 1:13)

5 தேவனுடைய கிருபை (அப 20:24

6 சமாதானம் (ரோமர் 10:15, எபே 6:15

7 வாக்குத்தத்தங்கள் எபே 3:6, எபி 8:6

8 சத்தியம் (எபே 1:13 கொலோ 1:5

9 விசுவாசம் (பிலி 1:27)

10 நம்பிக்கை கொலோ 1:23

11 நித்தியம் (2தீமோ 1:10

24 அதிகாரம்

12 புதிய உடன்படிக்கையின் பொதுவான ஆசீர்வாதங்கள் (மாற்கு 16:15 கலா 3:9, கலா 3:8)

சுவிசேஷம் ஒன்றே. மத்தேயுவிலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரையிலும் உள்ள செய்தியே சுவிசேஷம். இதற்கு யூதரும், புறஜாதியாரும் கீழ்ப்படிய வேண்டும் (மத் 28:20; அப் 1:1-2; ரோமர் 10:12 1கொரி 12:13; கலா 3:28; எபே 2:11-22 எபே 3:5-11)

ராஜ்யத்தின் சுவிசேஷம் என்பது வரப்போகிற ராஜ்யத்தையும் குறிக்கும் அதே சமயத்தில இரட்சிப்பையும் கிறிஸ்துவின் நற்செய்தியினால் வரும் எல்லா ஆசீர்வாதங்களையும் குறிக்கும். (மத் 6:33 மத் 13:1-50 மத் 18:1-35 மாற்கு 1:14-15 யோவான் 3:3-5 அப் 8:12 அப் 20:25 அப் 28:23,31 ரோமர் 14:17 2கொரி 4:20 2கொரி 6:9 கொலோ 1:13

பூலோகம் (world) - οἰκουμένη - oikoumenee - 3625

பெண்பால் பெயர்சொல் பூலோகம், உலகம், பூமி, பூச்சக்கரம்

உலகம் (world) - αἰών - aioon - 165

ஆண்பால் பெயர்சொல காலம் உலகம், பிரபஞ்சம் அநாதி சதாகாலங்கள்

(அ) என்றென்றைக்கும் அதாவது கடந்த காலத்தில் - யோவான் 6:5; 8:0.32

(ஆ) ஒரு குறிப்பிட்ட காலம் அதாவது இம்மை அல்லது மறுமை - மத். 12:32, மாற். 10:30

உலகம் (world) - κόσμος - kosmos - 2889

ஆண்பால் பெயர்ச்சொல் - உலகம் அலங்காரிப்பு, லௌகிகம்

"ஜாதிகள்" (nations) - ஜாதிகள் என்பது ஒவ்வொரு தேசத்திலுமுள்ள ஒவ்வொரு தனிமனிதர் என்று பொருள்படாது. ஏனெனில் ஆயிர வருஷ அரசாட்சி வருமவரையிலும் பலர் சுவிசேஷத்தைக் கேள்விப்பட மாட்டார்கள் (ஏசா 2:2-4 ஏசா 11:9 ஏசா 66:19-21; சக 8:23)

"அப்போது முடிவு வரும்" - எல்லா ஜாதிகளுக்கும் ராஜ்யத்தின் சுவிசேஷம் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும். இயேசு கிறிஸ்து ஆரம்பித்த சுவிசேஷ ஊழியம் பிரசங்கம் பண்ணுதல் உபதேசம் பண்ணுதல் நோயாளிகளைக் குணமாக்குதல் ஆகியவை சுவிசேஷ ஊழியத்தில் அடங்கும் ஆதித்திருச்சபையாரும் இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தைத் தொடர்ந்து செய்து வந்தார்கள் (மத் 4:23-24; மத் 9:35; லூக்கா 4:18 1கொரி 4:20) பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரி கடைசிக் காலத்தில் தாராளமாகப் பொழியும். அப்போது புதிய ஏற்பாட்டின் சுவிசேஷ ஊழியம் முழுமையாக நடைபெறும் (அப் 2:16-21)

(இ) பாழாக்குகிற அருவருப்பு - (தானி 9:27; மாற்கு 13:14

மத் 24:15 மேலும், பாழாக்குகிற அருவருப்பைக் குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே வாசிக்கிறவன் சிந்திக்கக் கடவன் நீங்கள் அதைப் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும்போது

"மேலும் பாழாக்குகிற அருவருப்பைக் குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே" - மத் 24:15-ஆவது வசனத்திலிருந்து வரும் தீர்க்கதரிசனம் கடைசி மூன்றரை வருஷங்களில் நடைபெறும். தானியேல் 70 ஆவது வாரத்தைப் பற்றியும் அந்திக் கிறிஸ்துவின் வருகையைப் பற்றியும் தீர்க்கதரிசனமாகக் கூறியிருக்கிறான் அவன் யூதேயாவிற்கு வந்து தனது தலைநகரமாக எருசலேமையும் தனது கூடாரமாக யூதருடைய தேவாலயத்தையும் கைப்பற்றிக் கொள்வான் (தானி 9:27, தானி 11:40-45, தானி 12:1,7; 2தெச 2:4; வெளி 11:1-2, வெளி 12:1-17; வெளி 13:1-18

24 அதிகாரம்

"பாழாக்குகிற அருவருப்பு" - இந்தக் காலத்தின் கடைசி மூன்றரை வருஷங்களில எருசலேமிலுள்ள கர்த்தருடைய தேவாலயத்தில அந்திக் கிறிஸ்துவின் சொரூபம இருக்கும். இதுவே பாழாக்குகிற அருவருப்பு எனப்படுகிறது. (தானி 8:9-14; தானி 9:27 தானி 11:45; தானி 12:11; வெளி 13:1-18 வெளி 14:9-11; வெளி 20:4-6)

(ஈ) அந்திக்கிறிஸ்துவிடம் இஸ்ரவேல் தோற்றுப்போதல் - (மாற்கு 13:15)

மத் 24:16 யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள்

மத் 24:17 வீட்டின்மேல இருக்கிறவன் தன வீட்டிலே எதையாகிலும் எடுப்பதற்கு இறங்கா திருக்கக்கடவன

மத் 24:18 வயலில இருக்கிறவன தன வஸ்திரங்களை எடுப்பதற்குத் திரும்பாதிருக்கக்கடவன

மத் 24:19 அந்நாட்களிலே கர்ப்பவதிகளுக்கும் பால் கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ

மத் 24:20 நீங்கள ஓடிப்போவது மாரிகாலத்திலாவது, ஓய்வு நாளிலாவது, சம்பவியாதபடிக்கு வேண்டிக் கொள்ளுங்கள

"யூதேயாவில இருக்கிறவர்கள மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள்" யூதேயாவிற்கு அந்திக் கிறிஸ்து வந்து அவன தேவாலயத்தைக் கைப்பற்றும்போது இஸ்ரவேல ஜனங்கள யூதேயாவிலிருந்து ஓடிப்போவார்கள் தானி 9:27; தானி 11:40-45

"மலைகள்" ஏதோம், மோவாப் ஆகிய மலைகளைக் குறிக்கும் இவை அந்திக் கிறிஸ்துவிடமிருந்து தப்பித்துக் கொள்ளும். (வெளி 12:6,14)

"வீட்டின்மேல் இருக்கிறவன் தன் வீட்டிலே எதையாகிலும் எடுப்பதற்கு இறங்காதிருக்கக்கடவன்" - யூதேயாவிலிருந்து ஓடிப்போகிறவர்கள் காலம்தாழ்த்தாமல் விரைந்து தப்பியோடி விடவேண்டும். காலம் தாமதித்தால அந்திக்கிறிஸ்து அவர்களை ஆட்கொள்வான் ஆகையினால் தப்பியோடும்போது தங்களுடைய பொருட்களைத் தேடி எடுத்துக்கொண்டு மெதுவாகப் போகலாம் என்று இறுமாப்பாய இருக்கக்கூடாது.

"அந்நாட்களிலே கர்ப்பவதிகளுக்கும் பாலகொடுக்கிறவர்களுக்கும் ஐயோ" - இஸ்ரவேல ஜனங்கள் யூதேயாவிலிருந்து தப்பி ஓடும்போது கர்ப்பவதிகளுக்கு மிகுந்த சிரமமாக இருக்கும் சாதாரணமாக கர்ப்பிணிகளால நடக்கக்கூட முடியாது அப்படிப்பட்டவர்கள் இந்தக் காலத்தில ஓடவேண்டிய நிர்ப்பந்தத்தில இருப்பார்கள் பாலகொடுக்கிற தாய்மார்கள் கூட தங்கள் குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு அந்திக்கிறிஸ்துவிற்குத் தப்பி ஓடவேண்டும்

"நீங்கள் ஓடிப்போவது மாரிகாலத்திலாவது ஓய்வுநாளிலாவது சம்பவியாதபடிக்கு வேண்டிக்கொள்ளுங்கள" - மாரிகாலம் என்பது குளிர்காலம் குளிர்காலத்தில பிரயாணம பண்ணுவதற்கு அதற்குரிய ஆயத்தம தேவை குளிரைத் தாங்கக்கூடிய வஸ்திரங்கள இருந்தாலதான அவர்களால சமாளிக்க முடியும் குளிர்காலத்தில பிரயாணம் பண்ணுவது மிகவும கடினம். இதற்கு ஆயத்தம் செய்வதினால காலம் தாமதம் ஏற்படும். அப்போது அந்திக்கிறிஸ்து இவர்களைப் பிடித்துக்கொள்ளுவான கர்த்தருடைய பிரமாணத்தின பிரகாரம், ஓய்வுநாளில அவர்கள ஒரு மைல் தூரம் மட்டுமே பிரயாணம் பண்ண முடியும். அவர்கள் ஓடிப்போவது ஓய்வுநாளாக இருக்குமென்றால அவர்கள ஒருமைல தூரம் மட்டுமே பிரயாணம் பண்ணுவார்கள ஏதோம மலைக்கும் மோவாப மலைக்கும் அவர்களால் தப்பியோட முடியாது (அப 1:12) இவர்கள் ஒருமைல தூரமே பிரயாணம் பண்ணியிருப்பார்கள என்றால் அந்திக்கிறிஸ்து அவர்களை அங்கு பிடித்துக்கொள்வான்

24 அதிகாரம்

(உ) மகா உபத்திரவம் – (தானி 12:1; மாற்கு 13:19; வெளி 12:19)

மத் 24:21 ஏனெனில் உலகமுண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும் இனி மேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது [redacted]யிருக்கும்.

மத் 24:22 அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை; தெரிந்துகொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும்.

"உலகமுண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனி மேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்" - கடைசி மூன்றரை வருஷத்தில் மிகுந்த உபத்திரவம் உண்டாயிருக்கும். ஆகையினால் இக்காலம் மகா உபத்திரவக்காலம் என அழைக்கப்படுகிறது. இது மகா உபத்திரவக்காலத்தின் ஆரம்பம் எரே 30:4-7; தானி 9:27; தானி 11:40-45; தானி 12:1,7,11; வெளி 7:14; வெளி 11:1-19:21

"அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால் ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை" - மூன்றரை வருஷம் என்பது 1260 நாட்களாகும். உபத்திரவம் எல்லா நாட்களும் நடைபெறாமல் அந்த நாட்கள் குறைக்கப்படும். (தானி 12:7; வெளி 11:1-3; வெளி 12:6,14; வெளி 13:5)

"தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்" - யூதர்கள். இந்த வாக்கியம் சபையைக் குறிக்காது என்று வேதபண்டிதர்களில் சிலர் கூறுகிறார்கள். இதற்காக அவர்கள் கூறும் காரணங்கள்

1. இயேசு யூதருக்குப் பதில் கூறுகிறார் (மத் 24:3; மத் 25:31-46; அப் 1:6)
2. கள்ளக்கிறிஸ்துக்கள் இஸ்ரவேலில் இருந்தார்கள் (மத் 24:5,23-26)
3. யூதமார்க்கத்திற்கு எதிரான உபதேசங்கள் (மத் 24:9)
4. இஸ்ரவேலின் துன்பம் (மத் 24:8)
5. பாழாக்குகிற அருவருப்பு யூதருக்கு மட்டுமே பொருந்தும் (மத் 24:15)
6. யூதருடைய தேவாலயம் (மத் 24:15)
7. இஸ்ரவேல் ஜனங்கள் தப்பியோடுதல் (மத் 24:16)
8. யூதருடைய ஓய்வுநாள் (மத் 24:20)
9. மகா உபத்திரவம் (மத் 24:21)
10. யூதர்கள் மட்டுமே கூட்டிச்சேர்க்கப்படுவார்கள் (மத் 24:31)
11. இஸ்ரவேல் ஜனங்களை மீட்பதற்காக இயேசு கிறிஸ்து வருகிறார் (சக 14; மத் 24:29-31; மத் 25:31-46)
12. இஸ்ரவேலமீது நடப்பித்த கிரியைகளின் அடிப்படையில் தேசங்களின் நியாயத்தீர்ப்பு இருக்கும் (மத் 25:31-46)
13. இஸ்ரவேலின் மீட்பின்போது முறகுறிக்கப்பட்ட காரியங்கள் (எசே 39:17-22; மத் 24:28; லூக்கா 17:34-37; வெளி 19:17-21)
14. இதற்கு முன்பாக சபை எடுத்துக்கொள்ளப்படும்.

(ஊ) மகா உபத்திரவத்தின்போது நடைபெறும் ஆறு அடையாளங்கள் – (மாற்கு 13:21)

மத் 24:23 அப்பொழுது, இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ, அங்கே இருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால், நம்பாதேயுங்கள்.

மத் 24:24 ஏனெனில், கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்.

24 அதிகாரம்

மத் 24:25 இதோ முன்னதாக உங்களுக்கு அறிவித்திருக்கிறேன்

மத் 24:26 ஆகையால், அதோ வனாந்தரத்தில் இருக்கிறார் என்று சொல்வார்களானால் புறப்படாதிருங்கள் இதோ அறைவீட்டிருக்குள் இருக்கிறார் என்று சொல்வார்களானால் நம்பாதிருங்கள்

"அப்பொழுது, இதோ கிறிஸ்து இங்கே இருக்கிறார் அதோ அங்கே இருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால் நம்பாதேயுங்கள்" - அப்பொழுது என்பது மத் 24:15-21 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் மகா உபத்திரவ நாட்களைக் குறிக்கும்

"பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்" - உபத்திரவக் காலத்தில் சாத்தானின் வல்லமை வெளிப்படும். அவனும் அற்புதங்களைச் செய்வான் (தானி 8:24; 2தெச 2:7-12; வெளி 13:1-18 வெளி 16:13-16; வெளி 19:20)

"தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்" யூதர்களில் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் (மத் 24:22)

"வனாந்தரத்தில் இருக்கிறார்" தன்னை கிறிஸ்து என்று கூறிக்கொள்கிறவர்கள் அங்கே இருப்பதாகவும் இங்கே இருப்பதாகவும் கூறுவார்கள் (மத் 24:23)

"அறைவீடு" - (தானி 11:45; 2தெச 2:4. வெளி 13

(4) **கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நடைபெறும் விதமும் காலமும்** - (தானி 7:13; சக 14:1-5; மத் 25:31 மாற்கு 13:24, லூக் 17:22; 21:25 2தெச 1:7, 2:8; யூதா 14; வெளி 1:7, 19:11)

மத் 24:27 மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறது போல மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும்

மத் 24:28 பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும்.

மத் 24:29 அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே சூரியன் அந்தகாரப்படும் சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும் நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும் வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்.

மத் 24:30 அப்பொழுது மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதை பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்

மத் 24:31 வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார் அவர்கள் அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒருமுனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள்

"மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும்" இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை இந்த வசனம் விளக்குகிறது.

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் வேளை

1 உபத்திரவம் முடிந்தவுடனே (மத் 24:29, மத் 25:31; வெளி 11:1-19:21

2 ஆயிர வருஷ அரசாட்சியின் ஆரம்பத்தில் (வெளி 19:11-21, வெளி 20:1-10)

3 மூன்றரை வருஷங்கள் அந்திக்கிறிஸ்து ஆளுகை செய்த பின்பு (வெளி 13:5, வெளி 19:11-21, 2தெச 2:7-8

4 இந்தக் காலத்தின் முடிவில (மத் 13:38-43,47-50, மத் 24:3,29-31; மத் 25:31-46

24 அதிகாரம்

5 பத்து இராஜ்ஜியங்கள் எழும்பியிருப்பார்கள் (தானி 2:44-45; தானி 7:23-24; வெளி 13:1-18; வெளி 19:11-21)

6 லோத்தின் நாட்களிலும், நோவாவின் நாட்களிலும் இருந்ததைப் போன்று துன்மார்க்கம் பெருகியிருக்கும் நாட்களில். (மத் 24:37-51; லூக்கா 17:22-27; 2தீமோ 3:1-13; 2தீமோ 4:1-4; 2பேதுரு 2; யூதா)

7 சபைக் காலத்திற்கும் பின்பு (2தெச 2:7-8; அப் 15:13-18; யூதா 1:14; சக 14:5)

8 எருசலேம் சேனைகளால் சுற்றி வளைக்கப்பட்டு, அதன் பாதிப் பட்டணம் எடுத்துக்கொள்ளப்படும் போது (சக 14:1-5,14-21; யோவேல் 3)

9 மரித்த நீதிமான்கள் உயிர்த்தெழுந்த பின்பு, துன்மார்க்கர் உயிர்த்தெழுவதற்கு ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு (வெளி 20:1-15; சக 14:5; யூதா 1:14)

10 வெளி 4-19 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கிறவை நிறைவேறிய பின்பு (வெளி 19:11-21; வெளி 20:1-10)

11 ஆயிர வருஷ அரசாட்சிக்கு முன்பு சாத்தான் கட்டப்பட்டிருக்கிற போது. (வெளி 20:1-7)

12 இஸ்ரவேல ஜனங்கள் கூடிச்சேர்க்கப்பட்டு இரட்சிக்கப்பட்ட பின்பு, இயேசு கிறிஸ்து தாவீதின் சிங்காசனத்தில் அமர்ந்து இஸ்ரவேலை நித்திய காலமாக ஆளுகை செய்ய ஆரம்பிக்கும்போது. (ஏசா 9:6-7; ஓசி 3:4-5; லூக்கா 1:32-33; எசே 16:23-28; எசே 37:16-28)

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை எப்படியிருக்கும்?

1 மின்னலைப்போல (மத் 24:27)

2 அறிவோடு (மத் 24:38-51; மத் 25:31-46; 1தெச 5:2; 2தெச 1:7-10; 2தெச 2:8; யூதா 1:14-15; சக 14; வெளி 19:11-21)

3 காணக்கூடிய விதமாக (மத் 24:29-31; 2தெச 1:7-10; வெளி 1:7; வெளி 19:11-21; சக 14)

4 வெளிச்சத்தோடும், அக்கினியோடும் (2தெச 1:7-10; 2தெச 2:8; எசே 38:17-21; மல் 4:1-6)

5. வைராக்கியத்தோடும் கோபத்தோடும் (வெளி 14:14-20; வெளி 19:11-21; யூதா 1:14-15; 2தெச 1:7-10)

6 வல்லமையோடும் மகிமையோடும் (மத் 16:27; மத் 24:27-31; மத் 25:31-46)

7 பரிசுத்தவான்களோடும் தூதர்களோடும் (சக 14:5; மத் 24:29-31; மத் 25:31-46; 1தெச 1:7-10; யூதா 1:14; வெளி 17:14; வெளி 19:14)

8 மேகங்கள் நடுவில (மத் 24:29-31; மத் 26:64; வெளி 1:7; தானி 7:13-14)

9 நியாயாதிபதியாகவும் இராஜாவாகவும் (வெளி 19:11-21; ஏசா 11; சக 14; மத் 25:31-46)

10 திருடனைப்போல (1தெச 5:2-4; வெளி 16:15)

வருகை (coming) - παρουσία - parousia - 3952

பெண்பால் பெயர்ச்சொல் – வருதல், தோற்றம், சமீபமாயிருத்தல்

"பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும்" – அர்மெகெதோனில் யுத்தம் நடைபெறும். அப்போது இயேசு கிறிஸ்து தமது சத்துருக்களைச் சங்காரம் பண்ணுவார். அவர்களுடைய மரித்த சரீரங்களைப் புசிப்பதற்காக கழுகுகள் அங்கே வந்து கூடும். (யோபு 39:30; எசே 39:17-22; லூக்கா 17:34-37; வெளி 19:17-21) இந்த யுத்தத்திற்கு முன்பாகவே சபை எடுத்துக்கொள்ளப்பட்டு விட்டது. இயேசு கிறிஸ்து இன்னும் மரித்து அடக்கம்பண்ணப்பட்டவராக இல்லை. அவர் உயிர்த்தெழுந்து விட்டார். அவர் இன்றும் ஜீவிக்கிறவர். இயேசு கிறிஸ்துவின் பரிசுத்தவான்களும், நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வார்கள். அர்மெகெதோனின் யுத்தம் ஆகாயத்தில் நடைபெறாது. பூமியில நடைபெறும். (எசே 39:17; வெளி 19:11-21)

24 அதிகாரம்

"சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும். நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும். வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்" - (வெளி 6:12)

"அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும்" - மகா உபத்திரவக் காலம் முடிந்தவுடன் நடைபெறும் காரியம். (மத் 24:29-31; மத் 25:31-46)

"பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்" - எருசலேமிலும் அதற்கு அருகிலுமுள்ள ஜனங்கள் இயேசு கிறிஸ்துவின் வருகையைக் காண்பார்கள். எருசலேம் பட்டணத்தைப் பிடிப்பதற்காக அதைச் சூழ்ந்து கொண்டிருக்கும் சேனைகளும் இயேசுவைக் காண்பார்கள் (சக 14:1-5; வெளி 1:7). பலர் இயேசு கிறிஸ்து பூமிக்கு வந்து சகல ஜாதிகளையும் ஆளுகை செய்யும் வரையிலும் அவரைக் காண்பதில்லை. கர்த்தருடைய பரிசுத்தவான்கள் பூமி முழுவதும் சென்று இயேசு கிறிஸ்துவோடு பூமியை ஆளுகை செய்வார்கள். அப்போது ஜனங்கள் இயேசு கிறிஸ்துவிடம் வருவார்கள். (ஏசா 2:2-4; ஏசா 52:7; ஏசா 66:19-21; சக 8:23)

"மனுஷகுமாரன் வருவதைக் காண்பார்கள்" - இயேசு கிறிஸ்து வருவதை ஜனங்கள் தங்கள் சொந்தக் கண்களால் காண்பார்கள். அவருடைய வருகை காணக்கூடிய விதமாக இருக்கும். இது காணமுடியாத ஆவிக்குரிய காரியமல்ல. (சக 14:1-5; 2தெச 1:7-10; வெளி 19:11-21)

"வானத்தின் மேகங்கள்மேல் வருவார்" - உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து நாற்பது நாட்களுக்குப் பின்பு, வானத்தின் மேகங்கள் நடுவே எடுத்துக் கொள்ளப்பட்டார். எப்படி எடுத்துக்கொள்ளப்பட்டாரோ அப்படியே வானத்தின் மேகங்கள்மேல் திரும்பி வருவார். (தானி 7:13-14; அப் 1:9-11; வெளி 14:14-16)

"வல்லமை" - இயேசு கிறிஸ்து திரும்பி வரும்போது வல்லமையோடு வருவார். சாத்தானின் சேனைகளையும், பிசாசுகளையும், அவனுடைய தூதர்களையும் ஒரே நாளில் அழிக்கக்கூடிய வல்லமையோடு வருவார். (ஏசா 24:21-23; யோவே 2; சக 14; 2தெச 1:7-10; யூதா 1:14; வெளி 19:11-21; வெளி 20:1-3)

"மிகுந்த மகிமை" - (மத் 25:31; 2தெச 1:7-10; 2தெச 2:8)

"தூதர்கள்" - இயேசு கிறிஸ்து பூமிக்குத் திரும்பி வரும்போது அவரோடு தூதர்களும் கூடவருவார்கள் (2தெச 1:7-10). அவர்கள் இஸ்ரவேல் ஜனங்களைக் கூட்டிச் சேர்ப்பார்கள் (உபா 30:4; ஏசா 11:11-12). கோதுமை மணியிலிருந்து களைகளைத் தனியாகப் பிரிப்பார்கள். (மத் 13:36-50)

"எக்காளசத்தம்" - இஸ்ரவேல் ஜனங்கள் கூட்டிச்சேர்க்கப்படும்போதெல்லாம் எக்காளம் ஊதப்படும். (யாத் 19:13-19; லேவி 25:9; 1சாமு 13:3; 2சாமு 2:28) இந்த எக்காளம் ஏசா 18:3; ஏசா 27:13; சக 9:14 ஆகிய வசனங்களில் முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த எக்காளமும், வெளி 8:2-6 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற ஏழு எக்காளங்களும் வெவ்வேறானவை. நீதிமான்கள் உயிர்த்தெழும் போது கேட்கும் எக்காள சத்தமும் இந்த எக்காள சத்தமும் வெவ்வேறானவை. (1தெச 4:16; 1கொரி 15:51-58)

"தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்" - யூதர்களில் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் (மத் 24:22)

"நாலுதிசைகள்" - பூமியின் நான்கு திசைகள் (ஏசா 11:12; வெளி 7:1-3; வெளி 20:8)

(5) அத்திமரத்தைப் பற்றிய உவமை - (மாற்கு 13:28; லூக் 21:29)

மத் 24:32 அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள். அதிலே இளங்கிளை தோன்றி, துளிர்விடும்போது வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள்.

மத் 24:33 அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்.

உவமை எண் - 13

"அத்திமரத்தினால் ஒரு உவமை" - மத் 24-25 ஆகிய அதிகாரங்களில் இயேசு கிறிஸ்து 5 உவமைகளைக் கூறியிருக்கிறார். அத்திமரத்தின் உவமை அவருடைய வருகை சமீபம் என்பதை அறிவிக்கிறது. (மத் 24:32-33)

24 அதிகாரம்

"அத்திமரம்" - அத்திமரம் யூதருடைய தேசத்தைக் குறிக்கும் என்று சிலர் கூறுகிறார்கள். அத்திமரத்தைப் பற்றிய உவமையிலிருந்து நாம் தெரிந்து கொள்ளும் காரியம் என்னவென்றால் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு அடையாளமாகக் கூறப்பட்டிருக்கிற காரியங்கள் நடைபெறும்போது அவருடைய வருகை சீக்கிரமாக இருக்கும் என்பதே.

"அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்" - இந்த வசனமும் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையையே குறிக்கிறது. சபை எடுத்துக் கொள்ளப்படுவதை இது குறிக்கவில்லை. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குத்தான் வேதாகமத்தில் நாம் அடையாளங்களை வாசிக்கிறோம். (பிலி 3:20-21 தீத்து 2:13) சபை எடுத்துக் கொள்ளப்படுவதற்கும் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கும் இடையில் ஏழு வருஷ கால இடைவெளி இருக்குமென்று வேதபண்டிதர்கள் கூறுகிறார்கள். மத்திய ஆகாயத்திலே இயேசு கிறிஸ்து தமது பரிசுத்தவான்களைச் சந்தித்து தம்மோடு அவர்களைப் பரலோகத்திற்கு அழைத்துச்செல்வார் (1தெச 2:19;1தெச 3:13; வெளி 19:7) பரலோகத்திற்கு இயேசுவோடு சென்ற பரிசுத்தவான்கள் அங்கு அவரோடு சில காலம் இருப்பார்கள். அதன்பின்பு இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது அவர்கள் இயேசுவோடு பூமிக்குத் திரும்பி வருவார்கள் (சக 14:5 யூதா 1:14, வெளி 19:11-21)

(6) இந்தத் தீர்க்கதரிசனத்தின் எல்லா அடையாளங்களும் ஒரு சந்ததியில் சம்பவிக்கும் - (மாற்கு 13:30; லூக் 21:32-33)

மத் 24:34 இவைகளெல்லாம் சம்பவிக்கு முன்னே இந்தச் சந்ததி ஒழிந்து போகாதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மத் 24:35 வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை.

"இவைகளெல்லாம் சம்பவிக்குமுன்னே இந்தச் சந்ததி ஒழிந்துபோகாது" - இந்தச் சம்பவங்கள் நடைபெறும்போது பூமியில் இருக்கும் சந்ததியைக் குறிக்கும். இவை எல்லாமே ஒரே சந்ததியில் தொடர்ச்சியாக நடைபெறும் என்று தெரிகிறது. (மத் 11:16)

"ஒழிந்துபோம்" - இந்த வார்த்தைக்கு இரண்டு விதமாகக் கருத்துக் கூறுகிறார்கள். ஒன்று இந்த வானமும், பூமியும் முற்றிலுமாக அழிந்துபோகும். மற்றொரு வியாக்கியானம் இந்த வானமும் பூமியும் மாற்றமடையும் அல்லது புதுப்பிக்கப்படும். இதற்கு இவர்கள் கூறும் காரணங்கள் என்னவென்றால் வானமும் பூமியும் நித்தியமானவை (சங் 72:5-17; சங் 89:3-37; சங் 104:5 பிர 1:4) அவை மாற்றமடையும். (எபி 1:10-12 எபி 12:25-28 ரோமர் 8:21-23) அக்கினியினால் புடமிடப்படும் (2பேதுரு 3:5-13) இந்தப் பூமி புதுப்பிக்கப்படும். வெளி 21:1

ஒழிந்துபோம் (Pass Away) - παρέρχομαι - parerchomai - 3928

வினைச்சொல் - கடந்துபோ, ஒழிந்துபோ, நீங்கு, நீங்கிப்போ, விட்டுவிடு, அகன்றுபோ

(7) அவருடைய வருகையின் குறிப்பிட்ட காலம் அறிவிக்கப்படவில்லை - (மாற்கு 13:34; அப் 1:7)

மத் 24:36 அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்.

"அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்" இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை எப்போது என்பது எந்த மனுஷனுக்கும் தெரியாது. தேவதூதருக்கும் தெரியாது. இயேசு கிறிஸ்துவிற்குமே தெரியாது (மாற்கு 13:32) அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா மட்டுமே அறிவார் (அப் 1:7) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை இந்த நாளில் இருக்குமென்று சிலர் ஒரு குறிப்பிட்ட நாளைக் கணிக்கிறார்கள். இதற்கு வேதவசனங்களின் அடிப்படையில் எந்தவித ஆதாரமும் இல்லை.

24 அதிகாரம்

(8) கிறிஸ்துவின் வருகை துன்மார்க்கருக்கு அழிவைக் கொண்டு வரும் - லூக் 17:22 (தெச 5:3; யூதா 14)

மத் 24:37 நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும்

மத் 24:38 எப்படியெனில், ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள்வரைக்கும், ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண்கொண்டும் பெண் கொடுத்தும்,

மத் 24:39 ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டு போகுமட்டும் உணராதிருந்தார்கள்; அப்படியே மனுஷகுமாரன் வருங் காலத்திலும் நடக்கும்.

"நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும்" (ஆதி 6:4) நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள் வரையிலும் ஜனங்கள் பாவம் செய்துகொண்டிருந்தார்கள். அப்படியே இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போதும் இருக்கும். ஆயிர வருஷ அரசாட்சிக்கு முன்பாகவே இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை இருக்கும் (வெளி 19:11-20:10) ஆயிர வருஷ அரசாட்சியிலும் பாவம் தொடரும் (ஏசா 65:20-25, எபே 1:10; வெளி 20:7-10) எல்லா பாவங்களையும் அழிப்பதும் கலகத்தை அடக்குவதுமே ஆயிர வருஷ அரசாட்சியின் நோக்கம் (1கொரி 15:24-28)

"ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக் கொண்டுபோகுமட்டும் உணராதிருந்தார்கள் அப்படியே மனுஷகுமாரன் வருங்காலத்திலும் நடக்கும்" - அனைவரையும் ஜலப்பிரளயம் வாரிக்கொண்டது (லூக்கா 17:27) அதாவது அழிக்கப்பட வேண்டியவர்கள் அழிந்து போனார்கள். நோவாவும் அவனுடைய குடும்பத்தாரும் பாதுகாக்கப்பட்டார்கள். அதுபோலவே இயேசு கிறிஸ்துவின் வருகையின்போது அவர் சிலரை அழித்துப் போடுவார். வேறு சிலரை ஆயிர வருஷ அரசாட்சியில் பலுகிப்பெருகுமாறு பூமியில் விட்டு விடுவார் (சக 14:16-21, ஏசா 2:2-4, ஏசா 66:19-21; வெளி 20)

(9) அர்மகெதோன் - சிலர் ஏற்றுக் கொள்ளப்படுவார்கள் - சிலர் கைவிடப்படுவார்கள் - (எசே 39:2, சக 14:16; லூக் 17:26; 21:34, வெளி 19:21)

மத் 24:40 அப்பொழுது, இரண்டுபேர் வயலில் இருப்பார்கள்; ஒருவன் ஏற்றுக் கொள்ளப்படுவான், ஒருவன் கைவிடப் படுவான்

மத் 24:41 இரண்டு ஸ்திரீகள் எந்திரம் அரைத்துக் கொண்டிருப்பார்கள்; ஒருத்தி ஏற்றுக்கொள்ளப்படுவாள், ஒருத்தி கைவிடப்படுவாள்

மத் 24:42 உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள்

"அப்பொழுது இரண்டுபேர் வயலில் இருப்பார்கள்; ஒருவன் ஏற்றுக் கொள்ளப் படுவான், ஒருவன் கைவிடப்படுவான்" - "அப்பொழுது" என்பது சபை எடுத்துக் கொள்ளப்படுவதைக் குறிக்காது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிக்கும். (மத் 24:29-31; மத் 25:31-46

"இரண்டு ஸ்திரீகள் எந்திரம் அரைத்துக் கொண்டிருப்பார்கள், ஒருத்தி ஏற்றுக் கொள்ளப்படுவாள், ஒருத்தி கைவிடப் படுவாள்" - ஜலப்பிரளயம் ஜனங்களை அழிப்பதுபோல இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போதும் பலர் அழிந்துபோவார்கள் (மத் 24:40; லூக்கா 17:27). அர்மகெதோன் யுத்தத்தில் மாண்டுபோனவர்களின் சடலங்களைப் புசிப்பதற்காக கழுகுகள் வட்டமிட்டு கூடிவரும். (மத் 24:28; லூக்கா 17:34-37, எசே 39:17-22; வெளி 19:17-21)

ஜலப்பிரளயத்தில் எல்லோரும் அழிக்கப் படவில்லை. நோவாவும், அவனுடைய குடும்பத்தாரும் அழிக்கப்படாமல் காப்பாற்றப் பட்டார்கள். அதுபோலவே அர்மகெதோன் யுத்தத்தில் எல்லோரும் சங்காரம் பண்ணப்படமாட்டார்கள். இயேசு கிறிஸ்து பூமியை ஆளுகை செய்யும்போது ஒரு கூட்டம் உயிரோடு வைக்கப்பட்டிருப்பார்கள் (சக 14:16-21; மத் 25:34,46, ஏசா 2:2-4, ஏசா 66:19-21; வெளி 20:4-10)

24 அதிகாரம்

"உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிற படியினால் விழித்திருங்கள்" - விசுவாசிகள் எப்போதுமே விழித்திருக்கிறவர்களாய் இருக்க வேண்டும் அசந்து விடக்கூடாது. சாத்தான் கெர்ச்சிக்கிற சிங்கம்போல எவனை விழுங்கலாம் என்று சுற்றிச் சுற்றிவருகிறான் (மத் 24:39-42)

(10) வீட்டெஜமானைப் பற்றிய உவமை - (லூக் 12:39)

மத் 24:43 திருடன் இன்ன ஜாமத்திலே வருவானென்று வீட்டெஜமான் அறிந்திருந்தால், அவன் விழித்திருந்து, தன் வீட்டைக் கன்னமிட வொட்டானென்று அறிவீர்கள்

மத் 24:44 நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார் ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்

உவமை எண் - 14

"திருடன் இன்ன ஜாமத்திலே வருவானென்று வீட்டெஜமான் அறிந்திருந்தால் அவன் விழித்திருந்து தன் வீட்டைக் கன்னமிட வொட்டானென்று அறிவீர்கள்" - மத்தேயு 24-25 அதிகாரங்களில் நாம் வாசிக்கும் இரண்டாவது உவமை இயேசு கிறிஸ்துவின் வருகையின்போது விசுவாசிகள் ஆயத்தமாக இருக்க வேண்டும் என்பதை இந்த உவமை வலியுறுத்துகிறது. (மத் 24:43-44)

(11) உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரனைப் பற்றிய உவமை - (லூக் 12:35,41)

மத் 24:45 ஏற்றவேளையிலே தன் வேலைக்காரருக்குப் போஜனங் கொடுத்து அவர்களை விசாரிக்கும்படி எஜமான் வைத்த உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரன் யாவன்?

மத் 24:46 எஜமான் வரும்போது அப்படிச் செய்கிறவனாகக் காணப்படுகிற ஊழியக்காரனே பாக்கியவான்

மத் 24:47 தன் ஆஸ்திகள் எல்லாவற்றின் மேலும் அவனை விசாரணைக் காரனாக வைப்பானென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்

மத் 24:48 அந்த ஊழியக்காரனோ பொல்லாதவனாயிருந்து, என் ஆண்டவன் வர நாள் செல்லும் என்று தன் உள்ளத்திலே சொல்லிக்கொண்டு,

மத் 24:49 தன் உடன்வேலைக்காரரை அடிக்கத் தொடங்கி, வெறியரோடே புசிக்கவும் குடிக்கவும் தலைப்பட்டால்

மத் 24:50 அந்த ஊழியக்காரன் நினையாத நாளிலும் அறியாத நாழிகையிலும் அவனுடைய எஜமான் வந்து

மத் 24:51 அவனைக் கடினமாய்த் தண்டித்து மாயக்காரரோடே அவனுக்குப் பங்கை நியமிப்பான் அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்.

உவமை எண் - 15

"ஏற்றவேளையிலே தன் வேலைக்காரருக்குப் போஜனங்கொடுத்து அவர்களை விசாரிக்கும்படி எஜமான் வைத்த உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரன் யாவன்?" - மத்தேயு 24-25 அதிகாரங்களில் நாம் வாசிக்கும் மூன்றாவது உவமை. இயேசு கிறிஸ்துவின் வருகையின்போது உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்பதை இந்த [redacted] வலியுறுத்துகிறது. (மத் 24:45-51)

"பாக்கியவான்" - மத் 5:3

"அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்" - மத் 13:42

25 அதிகாரம்

(12) பத்துக் கன்னிகைகள் பற்றிய [illegible]

மத் 25:1 அப்பொழுது பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும்

மத் 25:2 அவர்களில் ஐந்துபேர் புத்தியுள்ளவர்களும், ஐந்துபேர் புத்தியில்லாதவர்களுமாயிருந்தார்கள்

மத் 25:3 புத்தியில்லாதவர்கள் தங்கள் தீவட்டிகளை எடுத்துக்கொண்டு போனார்கள், எண்ணெயையோ கூடக் கொண்டுபோகவில்லை

மத் 25:4 புத்தியுள்ளவர்கள் தங்கள் தீவட்டிகளோடுங்கூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் கொண்டுபோனார்கள்

மத் 25:5 மணவாளன் வரத் தாமதித்த போது, அவர்கள் எல்லாரும் நித்திரை மயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள்

மத் 25:6 நடுராத்திரியிலே: இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று.

மத் 25:7 அப்பொழுது, அந்தக் கன்னிகைகள் எல்லாரும் எழுந்திருந்து, தங்கள் தீவட்டிகளை ஆயத்தப் படுத்தினார்கள்

மத் 25:8 புத்தியில்லாதவர்கள் புத்தியுள்ளவர்களை நோக்கி: உங்கள் எண்ணெயில் எங்களுக்குக் கொஞ்சங் கொடுங்கள், எங்கள் தீவட்டிகள் அணைந்துபோகிறதே என்றார்கள்

மத் 25:9 புத்தியுள்ளவர்கள் பிரதியுத்தரமாக: அப்படியல்ல, எங்களுக்கும் உங்களுக்கும் போதாமற்போகாதபடி, நீங்கள் விற்கிறவர்களிடத்திற் போய், உங்களுக்காக வாங்கிக் கொள்ளுங்கள் என்றார்கள்

மத் 25:10 அப்படியே அவர்கள் வாங்கப்போனபோது மணவாளன் வந்துவிட்டார்; ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடேகூடக் கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள்; கதவும் அடைக்கப்பட்டது.

மத் 25:11 பின்பு, மற்றக் கன்னிகைகளும் வந்து: ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்குத் திறக்கவேண்டும் என்றார்கள்

மத் 25:12 அதற்கு அவர்: உங்களை அறியேன் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்

மத் 25:13 மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்

"அப்பொழுது பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும்" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நடைபெறும் காரியத்தை விளக்குவதற்காக இயேசு கிறிஸ்து இந்த உவமையைக் கூறுகிறார் (மத் 25:3,27-31,33,36,39-51) இந்த அதிகாரத்தில் "அப்பொழுது" when, then ஆகிய கூட்டுச்சொற்களை நாம் வாசிக்கிறோம். (மத் 25:15 28)

"பரலோகராஜ்யம்" (kingdom of heaven) - இது சபையைக் குறிக்காது

உவமை எண் - 16

"பரலோகராஜ்யம் பத்து கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கிறது" (மத்தேயு 24-25 அதிகாரங்கள்) இயேசு கிறிஸ்துவின் வருகையின்போது விழிப்புள்ளவர்களாக இருக்க வேண்டுமென்பதை இந்த உவமை வலியுறுத்துகிறது (மத் 25:13)

"பத்துக்கன்னிகைகள்" - பத்து வாலிப ஸ்திரீகள் இவர்கள் 2000 வருஷத்திற்கு முன்பு திருமணம் செய்து கொண்ட ஒரு ஸ்திரீயின் சிநேகிதிகள் (மத் 25:1,5-10)

மத்தேயு - தொகுப்புரை

25 அதிகாரம்

"புத்தியில்லாதவர்கள் தங்கள் தீவட்டிகளை எடுத்துக்கொண்டுபோனார்கள் எண்ணெயையோ கூடக் கொண்டுபோகவில்லை" - இவர்கள் புத்தியில்லாதவர்கள் ஏனெனில் தங்களோடு அதிகப்படியான எண்ணெயைத் தனியாக எடுத்துச்செல்லவில்லை. தீவட்டிகளில் எண்ணெய் வற்றிப்போனால் மறுபடியும் எண்ணெய் ஊற்றினால்தான் எரியும். அதற்குரிய ஆயத்தம் இவர்களிடம் இல்லை. மத் 25:1-4

"புத்தியுள்ளவர்கள் தங்கள் தீவட்டிகளோடுங்கூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் கொண்டுபோனார்கள்" - இவர்கள் புத்தியுள்ள கன்னிகைகள். தங்கள் தீவட்டிகளோடு அதிகப்படியான எண்ணெயையும் தங்களோடு எடுத்துச் சென்றார்கள்.

"மணவாளன் வரத் தாமதித்தபோது அவர்கள் எல்லாரும் நித்திரைமயக்கமடைந்து தூங்கி விட்டார்கள்" - நடு இரவு வேளை எல்லோருக்கும் நித்திரை மயக்கமாக இருந்தது. மற்றவர்களைப் போலவே இவர்களும் தூங்கிவிட்டார்கள்.

"நடுராத்திரி" யூதருடைய திருமணச் சடங்குகள் மாலை வேளையில் ஆரம்பிக்கும். நடு இரவு வரையிலும் திருமணச் சடங்குகள் நடைபெறும். இந்தத் திருமணத்தில் மணவாளன் வருவதற்கு தாமதமாயிற்று. உரிய நேரத்தில் மணவாளனால் வரமுடியவில்லை. ஆகையினால் மணவாளன் நடுராத்திரியிலே வருகிறான்.

"மணவாளன் வருகிறார் அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று" இதுவும் யூதருடைய திருமணச்சடங்கில் ஒரு வழக்கம். மணவாளன் தன் வீட்டிலிருந்து புறப்படும் வேளையிலிருந்தே அவனுடைய தோழர்கள் வழி நெடுக "மணவாளன் வருகிறார்" என்று சந்தோஷமாக ஆர்ப்பரித்துக் கொண்டே செல்வார்கள். மணவாட்டியின் வீடு வரையிலும் சந்தோஷமாக சத்தமிட்டுக் கொண்டே வருவார்கள். அவர்களுடைய சத்தம் தான் இந்த வசனத்தில் கேட்கிறது.

"அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள்" - மணவாளனை வரவேற்பதற்காக மணவாட்டி தன்னுடைய தோழிகளில் சிலரை ஏற்கனவே தெரிந்து வைத்திருப்பாள். அவர்கள் மணவாளனை வரவேற்பதற்காக எதிர்கொண்டு போக வேண்டும். (மத் 25:1,6,10)

"அப்பொழுது அந்தக் கன்னிகைகள் எல்லாரும் எழுந்திருந்து தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தினார்கள்" - மணவாளனுடைய தோழர்களின் சத்தத்தைக் கேட்டபோது தீவட்டிகளைப் பிடித்திருந்த கன்னிகைகள் தங்கள் தூக்கத்தை விட்டு எழுந்திருந்தார்கள். தீவட்டிகளை ஆயத்தப்படுத்தினார்கள். அவர்கள் தூங்கிக்கொண்டிருந்த சமயத்தில் அவர்களுடைய தீவட்டிகளில் எண்ணெய் இருந்தது. இப்பொழுதோ தீவட்டிகள் தொடர்ந்து எரிய மேலும் எண்ணெய் தேவைப்படுகிறது. ஐந்து கன்னிகைகளிடம் மட்டுமே எண்ணெய் இருக்கிறது. இவர்கள் புத்தியுள்ளவர்கள். மீதி ஐந்து கன்னிகைகளிடம் எண்ணெய் இல்லை. இவர்கள் புத்தியில்லாதவர்கள்.

புத்தியில்லாதவர்கள் புத்தியுள்ளவர்களை நோக்கி: உங்கள் எண்ணெயில் எங்களுக்குக் கொஞ்சம் கொடுங்கள். எங்கள் தீவட்டிகள் அணைந்துபோகிறதே என்றார்கள்.

"எண்ணெய்" - தீவட்டிக்கு தேவைப்படும் எண்ணெய். ஒருசிலர் எண்ணெயைப் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் என்று கூறுகிறார்கள். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை வாங்கவோ விற்கவோ தங்களுக்குள் விருப்பப்பட்டால் பகிர்ந்து கொள்ளவோ முடியாது. ஆகையினால் எண்ணெய் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைக் குறிக்காது என்று சிலர் கூறுகிறார்கள். ஆதி 28:18; 2 இராஜா 4:1-6; லூக்கா 7:46; லூக்கா 16:6

"மணவாளன் வந்துவிட்டார் கதவும் அடைக்கப்பட்டது" யூதருடைய திருமண வீடுகளில் கதவுகள் அடைக்கப்பட்டிருக்கும். அழைக்கப்படாதவர்கள் வீட்டிற்குள் வரமுடியாது. ஒருவேளை திருடர்களுடைய பயத்தினால் இப்படி கதவுகள் அடைக்கப்பட்டிருக்கலாம்.

25 அதிகாரம்

மணவாளன், மணவாட்டி, கன்னிகைகள் - இந்த உவமையிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய சத்தியங்கள்

1 இயேசு கிறிஸ்துவைத் தங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்கிறவர்கள் அனைவருமே தேவனுடைய பிள்ளைகளாகிறார்கள். இரட்சிக்கப் பட்டவர்களுக்குள் வேறு பாடில்லை (மத் 13:38-49; மத் 18:3; யோவான் 3:3-5; 2கொரி 5:17-18; ரோமர் 6:7,18,22; ரோமர் 8:1-13; கலா 5:19-24; எபே 4:24; 1யோவான் 2:29; 1யோவான் 3:8-10; 1யோவான் 5:1-4,18; எபி 12:14)

2 இந்த உவமையில எண்ணெய என்பது பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைக் குறிப்பிடாது. (மத் 25:8)

3 இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள் (யோவான் 3:5; ரோமர் 8:9-16) இரட்சிப்பு வேறு, பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் வேறு. இவ்விரண்டுமே வெவ்வேறு அனுபவங்கள் (லூக்கா 11:13; யோவான்7:37-39; யோவான் 14:16-17; அப் 1:4-8; அப் 2:38-39; அப் 5:32; அப் 8:15-16; அப் 19:1-6)

4 உபத்திரவக் காலம் ஆரம்பமாவதற்கு முன்பாகவே சபை எடுத்துக் கொள்ளப் படும்

5 இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்வதற்கு தேவையான வல்லமை பெற்றுக் கொள்வதற்காக பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் விசுவாசிகளுக்கு அருளப்படுகிறது. (லூக்கா 24:49; யோவான் 7:37-39; யோவான் 14:12; அப் 1:4-8)

6 ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தில் எல்லா விசுவாசிகளுமே பங்குபெறுவார்கள். சபை எடுத்துக் கொள்ளப்படும்போது எல்லா விசுவாசிகளும் எடுத்துக் கொள்ளப்படுவார்கள்

7 புதிய எருசலேமில் பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களும், புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களும் இருப்பார்கள் (வெளி 21:2,9-10) (எபி 11:10-16; எபி 13:14; யோவான் 14:1-3

8 உபத்திரவக்காலத்தில்கூட கிருபையின் கதவுகள் யூதருக்கும் புறஜாதியாருக்கும் அடைக்கப்படுவதில்லை. உபத்திரவக் காலத்திலும் திரளான ஜனங்கள் இரட்சிக்கப்படுவார்கள் (அப் 2:16-21; வெளி 7:9-17; வெளி 12:17; வெளி 15:2-4; வெளி 20:4-6)

(18) தாலந்துகளைப் பற்றிய உவமை -
(மத் 16:27; லூக் 19:11)

மத் 25:14 அன்றியும், பரலோகராஜ்யம் புறத்தேசத்துக்குப் பிரயாணமாய்ப் போகிற ஒரு மனுஷன், தன் ஊழியக்காரரை அழைத்து, தன் ஆஸ்திகளை அவர்கள் வசமாய் ஒப்புக்கொடுத்ததுபோல இருக்கிறது

மத் 25:15 அவனவனுடைய திறமைக்குத் தக்கதாக, ஒருவனிடத்தில் ஐந்து தாலந்தும், ஒருவனிடத்தில் இரண்டு தாலந்தும், ஒருவனிடத்தில் ஒரு தாலந்துமாகக் கொடுத்து, உடனே பிரயாணப்பட்டுப் போனான்

மத் 25:16 ஐந்து தாலந்தை வாங்கினவன் போய், அவைகளைக் கொண்டு வியாபாரம் பண்ணி, வேறு ஐந்து தாலந்தைச் சம்பாதித்தான்

மத் 25:17 அப்படியே இரண்டு தாலந்தை வாங்கினவனும், வேறு இரண்டு தாலந்தைச் சம்பாதித்தான்

மத் 25:18 ஒரு தாலந்தை வாங்கினவனோ போய், நிலத்தைத் தோண்டி, தன் எஜமானுடைய பணத்தைப் புதைத்துவைத்தான்

மத் 25:19 வெகுகாலமானபின்பு அந்த ஊழியக்காரருடைய எஜமான் திரும்பிவந்து, அவர்களிடத்தில் கணக்குக் கேட்டான்

மத்தேயு - தொகுப்புரை

25 அதிகாரம்

மத் 25:20 அப்பொழுது, ஐந்து தாலந்தை வாங்கினவன், வேறு ஐந்து தாலந்தைக் கொண்டுவந்து: ஆண்டவனே, ஐந்து தாலந்தை என்னிடத்தில் ஒப்புவித்தீரே; அவைகளைக் கொண்டு, இதோ, வேறு ஐந்து தாலந்தைச் சம்பாதித்தேன் என்றான்.

மத் 25:21 அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்.

மத் 25:22 இரண்டு தாலந்தை வாங்கினவனும் வந்து: ஆண்டவனே, இரண்டு தாலந்தை என்னிடத்தில் ஒப்புவித்தீரே; அவைகளைக்கொண்டு, இதோ, வேறு இரண்டு தாலந்தைச் சம்பாதித்தேன் என்றான்.

மத் 25:23 அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்.

மத் 25:24 ஒரு தாலந்தை வாங்கினவன் வந்து: ஆண்டவனே, நீர் விதைக்காத இடத்தில் அறுக்கிறவரும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவருமான கடினமுள்ள மனுஷன் என்று அறிவேன்.

மத் 25:25 ஆகையால், நான் பயந்துபோய், உமது தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன்; இதோ, உம்முடையதை வாங்கிக்கொள்ளும் என்றான்.

மத் 25:26 அவனுடைய எஜமான் பிரதியுத்தரமாக: பொல்லாதவனும் சோம்பனுமான ஊழியக்காரனே, நான் விதைக்காத இடத்தில் அறுக்கிறவனென்றும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவனென்றும் அறிந்திருந்தாயே.

மத் 25:27 அப்படியானால், நீ என் பணத்தைக் காசுக்காரர் வசத்தில் போட்டுவைக்க வேண்டியதாயிருந்தது; அப்பொழுது நான் வந்து என்னுடையதை வட்டியோடே வாங்கிக்கொள்வேனே, என்று சொல்லி,

மத் 25:28 அவனிடத்திலிருக்கிற தாலந்தை எடுத்து, பத்துத் தாலந்துள்ளவனுக்குக் கொடுங்கள்.

மத் 25:29 உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்; இல்லாதவனிடத்திலிருந்து உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்.

மத் 25:30 பிரயோஜனமற்ற ஊழியக்காரனாகிய இவனைப் புறம்பான இருளிலே தள்ளிப்போடுங்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றான்.

உவமை எண் - 17

"அன்றியும் பரலோகராஜ்யம் புறதேசத்துக்குப் பிரயாணமாய்ப் போகிற ஒரு மனுஷன், தன் ஊழியக்காரரை அழைத்து தன் ஆஸ்திகளை அவர்கள் வசமாய் ஒப்புக்கொடுத்ததுபோல இருக்கிறது" (மத்தேயு 24-25 அதிகாரங்கள் இயேசு கிறிஸ்துவின் வருகையின்போது ஞானமுள்ளவர்களாகவும் உண்மையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டுமென்பதை இந்த உவமை வலியுறுத்துகிறது. (மத் 25:14-30 - மத் 4:17 மத் 19:24

"தாலந்து" நமது பொருளாதார வழக்கத்தின்படி இது சுமார் ஒரு இலட்ச ரூபாய்க்கு மேற்பட்ட தொகையாகும்.

"அந்த ஊழியக்காரருடைய எஜமான் திரும்பிவந்து அவர்களிடத்தில் கணக்குக் கேட்டான்" மத் 18:23-24 ஆகிய வசனங்களிலும் இயேசும் எஜமான் கணக்கு கேட்பதைக் குறித்து வாசிக்கிறோம்.

"ஆண்டவனே" இந்த உவமையில் கூறப்பட்டிருக்கிற எஜமான் இந்த வாக்கியம் இயேசு கிறிஸ்துவைக் குறிக்காது. மத் 25:14

25 அதிகாரம்

"கடினமுள்ள மனுஷன்" - தன் எஜமானைக் குற்றப்படுத்துகிறான் தனது சோம்பற்தனத்தைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிடுமாறு கூறுகிறான்

"நீர் விதைக்காத இடத்தில அறுக்கிறவரும், தெளிக்காத இடத்தில சேர்க்கிறவருமானவர்" - சோம்பேறி மற்றவர்களைக் குறித்து இப்படித்தான் நினைக்கிறான் மற்றவர்கள் எல்லாம் திறமைசாலிகள் ஆகையினால அவர்களுக்கு எல்லாக் காரியமும் கைகூடி வருகிறது வாழ்வில வளம்பெறுகிறார்கள் ஆனால தான் மட்டும் ஒன்றுமில்லாதவனாக இருப்பதாக நினைக்கிறான் இந்தச் சோம்பேறி ஒருவேலையும் செய்வதில்லை

"பயந்துபோனான்" - சோம்பேறி பயப்படுவான் எந்த முயற்சியும் எடுக்கமாட்டான் ஏதாவது புதிதாக ஒன்றைச் செய்தால நஷ்டம் வருமோ என்று பயந்து ஒன்றுமே செய்யமாட்டான்

"நான் விதைக்காத இடத்தில அறுக்கிறவனென்றும், தெளிக்காத இடத்தில சேர்க்கிறவனென்றும் அறிந்திருந்தாயே சோம்பேறி எஜமானைப் பற்றி நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறான் ஆகையினால இவன நம்பிக்கையோடு முயற்சி பண்ணியிருக்க வேண்டும் ஆனால இவனோ தனக்கு கொடுக்கப்பட்ட தாலந்துகளைப் புதைத்து வைத்துவிடுகிறான

சோம்பலுள்ள வேலைக்காரனின் சுபாவங்கள்

1. நன்றியில்லாதவன (மத் 25:18)
2. தவறு புரிகிறவன் (மத் 25:18,24)
3. நீதியில்லாதவன (மத் 25:18)
4. மற்றவர்களிடம் குற்றம் கண்டு பிடிப்பான, மற்றவர்களமீது குற்றம் சுமத்துவான் (மத் 25:24)
5. தான் செய்வது நியாயமானது என்று சாதிப்பான் (மத் 25:24)
6. பயப்படுவான் (மத் 25:25)
7. துன்மார்க்கன் (மத் 25:26

சோம்பலுள்ள வேலைக்காரனுக்கு தண்டனை

1. கடிந்துகொள்ளப்பட்டான் (மத் 25:26)
2. தன்வாயின் வார்த்தையினாலேயே நியாயந்தீர்க்கப்பட்டான் (மத் 25:26
3. நம்பிக்கைக்குரியவனாக நடந்து கொள்ளாததினால் நியாயந்தீர்க்கப பட்டான் (மத் 25:27)
4. அவனிடத்தில ஒப்படைக்கப்பட்டிருந்த தாலந்துகள் அகற்றப்பட்டன (மத் 25:28-29)
5. தன்னுடைய எஜமானின் பணியிலிருந்து நிரந்தரமாக அகற்றப்பட்டான் (மத் 25:30 மத் 13:42)

"பிரயோஜனமற்ற ஊழியக்காரன்" - இவனும் மற்றவர்களைப போல ஊழியக்காரனதான அவர்களோ பிரயோஜனமுள்ளவர்கள ஆனால இவனால ஒரு பிரயோஜனமும் இல்லை பிரயோஜனமற்ற ஊழியக்காரன (மத் 25:14,19,30)

(14) கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது தேசங்களமீது நியாயத்தீர்ப்பு - சக 14 வெளி 19:11

மத் 25:31 அன்றியும் மனுஷகுமாரன தமது மகிமைபொருந்தினவராய்ச சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தினமேல வீற்றிருப்பார

மத் 25:32 அப்பொழுது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள் மேய்ப்பனானவன் செம்மறி யாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப பிரிக்கிறதுபோல அவர்களை அவர பிரித்து

மத் 25:33 செம்மறியாடுகளைத் தமது வலதுபக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார

மத்தேயு - தொகுப்புரை

25 அதிகாரம்

மத் 25:34 அப்பொழுது, ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்.

மத் 25:35 பசியாயிருந்தேன், எனக்குப் போஜனம் கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக் கொண்டீர்கள்;

மத் 25:36 வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன், என்னைப் பார்க்கவந்தீர்கள் என்பார்.

மத் 25:37 அப்பொழுது, நீதிமான்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உமக்குப் போஜனங்கொடுத்தோம்? எப்பொழுது உம்மைத் தாகமுள்ளவராகக்கண்டு உம்முடைய தாகத்தைத் தீர்த்தோம்?

மத் 25:38 எப்பொழுது உம்மை அந்நியராகக் கண்டு உம்மைச் சேர்த்துக்கொண்டோம்? எப்பொழுது உம்மை வஸ்திரமில்லாதவராகக் கண்டு உமக்கு வஸ்திரங்கொடுத்தோம்?

மத் 25:39 எப்பொழுது உம்மை வியாதியுள்ளவராகவும் காவலிலிருக்கிறவராகவும் கண்டு, உம்மிடத்தில் வந்தோம் என்பார்கள்.

மத் 25:40 அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரராகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்.

மத் 25:41 அப்பொழுது இடதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்.

மத் 25:42 பசியாயிருந்தேன், நீங்கள் எனக்குப் போஜனங்கொடுக்கவில்லை; தாகமாயிருந்தேன், நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை;

மத் 25:43 அந்நியனாயிருந்தேன், நீங்கள் என்னைச் சேர்த்துக் கொள்ளவில்லை; வஸ்திரமில்லாதிருந்தேன், நீங்கள் எனக்கு வஸ்திரங் கொடுக்கவில்லை; வியாதியுள்ளவனாயும் காவலிலடைக்கப் பட்டவனாயும் இருந்தேன், நீங்கள் என்னை விசாரிக்க வரவில்லையென்பார்.

மத் 25:44 அப்பொழுது அவர்களும் அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, உம்மைப் பசியுள்ளவராகவும், தாகமுள்ளவராகவும், அந்நியராகவும், வஸ்திரமில்லாதவராகவும், வியாதிப்பட்டவராகவும், காவலிலடைக்கப் பட்டவராகவும் நாங்கள் எப்பொழுது கண்டு, உமக்கு உதவி செய்யாதிருந்தோம் என்பார்கள்.

மத் 25:45 அப்பொழுது அவர் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ, அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்.

மத் 25:46 அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்.

"மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது" - ஆயிர வருஷ அரசாட்சியின் முடிவில் நடைபெறப்போகும் காரியம். (மத் 24:29-31; வெளி 19:11-21)

25 அதிகாரம்

"மகிமை" - (மத் 24:30; 2தெச 1:7-10, 2தெச 2:8)

"சகல பரிசுத்த தூதரோடுங்கூட"- (மத் 24:31)

"தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார்" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது நடைபெறும் காரியம். (மத் 24:29, மத் 25:31,34,37,41 44,45, மத் 19:28; எரே 14:21)

"சகல ஜனங்களும்" - எல்லா தேசங்களிலுமுள்ள எல்லா தனிநபர்களையும் இந்த வாக்கியம் குறிக்காது. பலர் இயேசுவை அறியாமல் இருப்பார்கள் (ஏசா 2 ஏசா 66:19-21; சக 8:23) இயேசு கிறிஸ்து தமது ராஜ்யத்தை ஸ்தாபனம் பண்ணவரும்போது இஸ்ரவேலுக்கு துன்பம் விளைவித்த ஜனங்களை நியாயந்தீர்ப்பார் (மத் 25:31-46) துன்மார்க்கரின் நியாயத் தீர்ப்பு இனிமேல் வரும். (வெளி 20:11-15)

"மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்களை அவர் பிரிப்பார் பகலில் செம்மறியாடுகளும் வெள்ளாடுகளும் ஒன்றாக மேயும் ஆனால் இரவு வேளையிலோ மேய்ப்பர்கள் அவற்றை வெவ்வேறாகப் பிரித்து கொட்டில்களில் அடைப்பார்கள் (மத் 13:39-50)

"வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப் பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்" ராஜ்யத்தை யாரெல்லாம் சுதந்தரிப்பார்கள் என்பதை இந்த வசனம் கூறுகிறது. (தானி 7:9-14,22; வெளி 11:15) சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள் (சங் 37:11, மத் 5:5)

"உலகம் உண்டானது முதல்"-(மத் 13:35)

"மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்" இஸ்ரவேல் தேசத்திற்கு ஜனங்கள் என்ன செய்தார்களோ அதன் அடிப்படையில் அவர்களுக்கு வெகுமதியோ அல்லது தண்டனையோ கொடுக்கப்படும். இது கர்த்தர் ஆபிரகாமோடு செய்துகொண்ட உடன்படிக்கை. (ஆதி 12:1-3)

"என் சகோதரர்" - இயேசு கிறிஸ்துவின் மாம்சத்தின் பிரகாரமாக அவருடைய சகோதரர்கள் (மத் 10:6; யோவான் 1:11 ரோமர் 9:5)

"சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்" - நித்திய அக்கினியை அடைவதற்காக சிலர் சபிக்கப்பட்டு அக்கினிக்கடலுக்கு அனுப்பப் படுவார்கள் (மத் 25:41,46; மத் 13:39-50 மத் 24:51; வெளி 14:9-11 வெளி 19:20 வெளி 20:10) மரித்த துன்மார்க்கர் எல்லோருமே நரகத்திற்கு அனுப்பப்படுவார்கள் (வெளி 20:4-6,11-15)

"பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினி" - நித்திய அக்கினி சாத்தானுக்கும் அவனுடைய தூதர்களுக்கும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறது (யோவான் 16:20) மனுஷர்கள் அங்கு போகவேண்டிய கட்டாயம் இல்லை ஆயினும் மனந்திரும்பமாட்டேன் என்று பாவத்தில் வைராக்கியமாக ஜீவிப்போருக்கு வேறு வழியேயில்லை அவர்கள் நரகத்திற்குப் போவார்கள் சாத்தானோடு நித்திய காலமாக இருப்பார்கள் (மத் 25:41,46)

நித்திய (everlasting) - αἰώνιος - aioonios 166

பொருள் - நித்திய

(அ) துவக்கமோ அல்லது முடிவோ இல்லாத, அநாதி ரோம 16:25

(ஆ) துவக்கம் இல்லாத ரோம 14:25

(இ) முடிவு இல்லாத

மத்தேயு – தொகுப்புரை

25 அதிகாரம்

நித்தியமான காரியங்கள்

1 தேவன் (ரோமர் 1:20; ரோமர் 16:26)

2 பரிசுத்த ஆவியானவர் (எபி 9:14)

3 ஜீவன் (மத் 19:16,29; மத் 25:46
யோவான் 3:16,36; ரோமர் 6:22)

4 இரட்சிப்பு (எபி 5:9

5 மீட்பு (எபி 9:12

6 சுதந்தரம் (எபி 9:15)

7 சுவிசேஷம் (வெளி 14:6)

8 உடன்படிக்கை (எபி 13:20)

9 இராஜ்யம் (2பேதுரு 1:11)

10 மகிமையும், வல்லமையும் (1தீமோ 6:16

11 ஆறுதல் (2தெச 2:16)

12 மகிமை (2தெச 1:10; 1பேதுரு 5:10)

13 உயிர்த்தெழுந்த சரீரங்கள் (2கொரி 5:1

14 காணாதவைகள் (2கொரி 4:18)

15. வாசஸ்தலங்கள் (லூக்கா 16:9

16 அழிவு (2தெச 1:9)

17 நியாயத்தீர்ப்பு (எபி 6:1-2

18 ஆக்கினை (மாற்கு 3:29)

19 அக்கினி (மத் 18:8; மத் 25:41; யூதா 1:7

20 தண்டனை (மத் 25:46)

26 அதிகாரம்

105. இயேசு தமது மரணத்தை மறுபடியும் முன்குறித்துக் கூறுகிறார் – (மத் 16:21)

மத் 26:1 இயேசு இந்த வசனங்களையெல்லாம் சொல்லி முடித்தபின்பு, அவர் தம்முடைய சீஷரை நோக்கி:

மத் 26:2 இரண்டு நாளைக்குப்பின்பு பஸ்கா பண்டிகை வருமென்று அறிவீர்கள்; அப்பொழுது, மனுஷகுமாரன் சிலுவையில் அறையப்படுவதற்கு ஒப்புக்கொடுக்கப்படுவார் என்றார்.

"இயேசு இந்த வசனங்களையெல்லாம் சொல்லி முடித்தபின்பு" - இத்துடன் இயேசு கிறிஸ்துவின் பொதுவான ஊழியம் நிறைவு பெறுகிறது. அவருடைய பாடுகளின் காலம் இதிலிருந்து ஆரம்பமாகிறது. (மத் 26:1-27:66)

தீர்க்கதரிசன எண் - 89

"மனுஷகுமாரன் சிலுவையில் அறையப்படுவதற்கு ஒப்புக்கொடுக்கப்படுவார்" - (மத் 26:2) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"பஸ்கா பண்டிகை" - எகிப்தில் ஆரம்பமாயிற்று. எகிப்தியரின் தலைச்சன் பிள்ளைகள் சங்காரம் பண்ணப்பட்டபோது யூதர்கள் தங்கள் வீடுகளில் பஸ்கா பண்டிகையை ஆசரித்தார்கள் (யாத் 12) நிசான் மாதம் 14-ஆம் தேதி பஸ்கா பண்டிகை துவங்குகிறது. இத்துடன் புளிப்பில்லா அப்பப்பண்டிகையும் 8 நாட்களுக்கு நடைபெறும். எகிப்தில் அடிமைகளாக இருந்த இஸ்ரவேலர்கள் விடுவிக்கப்பட்டதை நினைவுகூரும் விதமாக புளிப்பில்லா அப்பப்பண்டிகையை யூதர்கள் கொண்டாடினார்கள். (லேவி 23; யாத் 23:14)

"சிலுவையில் அறையப்படுதல்" - சிலுவை மரத்தில் ஒரு நபரை ஆணிகளால் அறைதல். புதிய ஏற்பாட்டில் 46 இடங்களில் இந்த வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பழங்காலத்தில் பொனீஷியர்களிடம் (Phoenicians) குற்றவாளிகளைச் சிலுவையில் அறைந்து கொல்லும் வழக்கம் இருந்தது. கிரேக்கரும் ரோமாபுரியாரும் அவர்களிடமிருந்து இந்தப் பழக்கத்தை தங்கள் நாடுகளுக்கும் கொண்டு வந்தார்கள். மிகவும் கொடிய குற்றவாளிகளையும் அடிமைகளையும் துன்புறுத்திக் கொல்வதற்காகச் சிலுவையில் அறையும் தண்டனையைக் கொடுத்தார்கள். கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் கான்ஸ்டான்டைன் (Constantine) காலம் வரையிலும் சிலுவையில் அறையும் வழக்கம் இருந்தது.

சிலுவையில் அறை (crucified) - σταυρόω - stauroo - 4717

வினைச்சொல் - சிலுவையில் அறை

சிலுவையில் அறைதல்

1. உலகத்தின் பாவங்களுக்காக இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறைதல் (மத் 26:2; மத் 27:22-44; 1கொரி 1:23; கலா 3:13; 1பேதுரு 2:24)

2. இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுவோரை சிலுவையில் அறைதல் (மத் 23:34; யோவான் 21:18)

3. நமது பழைய மனுஷனைக் கிறிஸ்துவோடு சிலுவையில் அறைதல் (ரோமர் 6:6; கலா 2:20)

4. பாவத்தைச் சிலுவையில் அறைதல் (கலா 2:20; கலா 5:24)

5. விசுவாசிகளுக்கு உலகமும், உலகத்திற்கு விசுவாசிகளும் சிலுவையில் அறையப் படுதல் (கலா 6:14)

6. மறுதலித்துப்போனவர்கள் தேவனுடைய குமாரனை மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறார்கள் (எபி 6:6)

106. இயேசுவைக் கொல்வதற்குச் சதியாலோசனை – (மத் 2:16; 12:14; மாற்கு 3:6; மாற்கு 14:1; லூக் 4:28; லூக் 22:1; யோவான் 5:16; 7:30, 44; 8:59; 10:31; 11:47-53)

மத் 26:3 அப்பொழுது, பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் ஜனத்தின் மூப்பரும், காய்பா என்னப்பட்ட பிரதான ஆசாரியனுடைய அரமனையிலே கூடிவந்து

மத்தேயு - தொகுப்புரை

26 அதிகாரம்

மத் 26:4 இயேசுவைத் தந்திரமாய்ப் பிடித்துக் கொலைசெய்யும்படி ஆலோசனைபண்ணினார்கள்

மத் 26:5 ஆகிலும் ஜனங்களுக்குள்ளே கலகமுண்டாகாதபடிக்குப் பண்டிகையிலே அப்படிச் செய்யலாகாது என்றார்கள்

அரமனை (palace) - αὐλή - aulee - 833

பெண்பால பெயர்ச்சொல் - [illegible] முற்றம், தொழுவம், பிரகாரம் (மத் 26:58,69; மாற்கு 14:54,66; மாற்கு 15:16; லூக்கா 11:21; யோவான் 18:15) பிரகாரம் (court) (வெளி 11:2) மண்டபம் (hall) (மாற்கு 15:16; லூக்கா 22:55)

"காய்பா" - அன்னாவின் மருமகன் (யோவான் 18:13) இயேசு கிறிஸ்துவைக் குறித்துத் தீர்க்கதரிசனம் கூறியவன் (யோவான் 11:49-51; யோவான் 18:14) இயேசு கிறிஸ்துவின் வழக்கை விசாரித்தவன் (மத் 26:2-3,57,63-65; யோவான் 18:24-28) பேதுருவின் வழக்கையும், மற்ற அப்போஸ்தலர்களின் வழக்குகளையும் விசாரித்தவன் (அப் 4:1-22) இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்து இரண்டு வருஷங்களுக்குப்பின்பு விட்டேலியஸ் (Vitellius) என்பவன் சீரியாவின் ஆளுநரானான். இவன் பிலாத்துவையும், காய்பாவையும் பதவியிலிருந்து அகற்றிவிட்டான். இயேசு கிறிஸ்துவைக் கொலைசெய்ததற்காக மனசாட்சியில் குத்தப்பட்ட காய்பா கி.பி. 35-ஆவது வருஷத்தில் தற்கொலை செய்து கொண்டு மரித்துப்போனான் என்று யோசேபஸ் என்னும் திருச்சபை வரலாற்று ஆசிரியர் எழுதியிருக்கிறார்

107. இயேசுவின்மீது அபிஷேகம் - (மாற்கு 14:3; லூக் 7:36; யோவான் 12:1)

மத் 26:6 இயேசு பெத்தானியாவில் குஷ்டரோகியாயிருந்த சீமோனின் வீட்டில் இருக்கையில்,

மத் 26:7 ஒரு ஸ்திரீ விலையேறப்பெற்ற பரிமளதைலமுள்ள வெள்ளைக்கல் பரணியைக் கொண்டு வந்து, அவர்போஜனபந்தியிலிருக்கும் போது, அந்தத் தைலத்தை அவர் சிரசின்மேல் ஊற்றினாள்

மத் 26:8 அவருடைய சீஷர்கள் அதைக் கண்டு விசனமடைந்து, இந்த வீண்செலவு என்னத்திற்கு?

மத் 26:9 இந்தத் தைலத்தை உயர்ந்த விலைக்கு விற்று, தரித்திரருக்குக் கொடுக்கலாமே என்றார்கள்

மத் 26:10 இயேசு அதை அறிந்து, அவர்களை நோக்கி: நீங்கள் இந்த ஸ்திரீயை ஏன் தொந்தரவுபடுத்துகிறீர்கள்? என்னிடத்தில் நற்கிரியையைச் செய்திருக்கிறாள்

மத் 26:11 தரித்திரர் எப்போதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள்; நானோ எப்போதும் உங்களிடத்தில் இரேன்

மத் 26:12 இவள் இந்தத் தைலத்தை என் சரீரத்தின்மேல் ஊற்றினது என்னை அடக்கம்பண்ணுவதற்கு எத்தனமான செய்கையாயிருக்கிறது

மத் 26:13 இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்

"குஷ்டரோகி" - பெத்தானியாவில் இயேசு சொஸ்தமாக்கிய குஷ்டரோகியாக இருக்கலாம்.

வெள்ளைக்கல் பரணி (alabaster box) - ἀλάβαστρον - alapastron 211

பால்வேறுபாடு இல்லாத பெயர்ச்சொல் - வெள்ளைக்கல் பரணி (அல்லது) வெள்ளைக்கல் பரணியால் செய்யப்பட்ட பேழை, பரணி

26 அதிகாரம்

"பரிமளதைலம்" – விலையுயர்ந்த தைலம். (யோவான் 12:3, 5)

"அந்தத் தைலத்தை அவர் சிரசின்மேல் ஊற்றினாள்" - கடைசி வாரத்தில் இரண்டு அபிஷேகங்கள்

1 லாசருவின் வீட்டில் – பஸ்காவிற்கு ஆறு நாட்களுக்கு முன்பு (யோவான் 12:1-8)

2 குஷ்டரோகியாகிய சீமோனின் வீட்டில் - பஸ்காவிற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு (மத் 26:7-13; மாற்கு 14:3-9)

"நானோ எப்போதும் உங்களிடத்தில் இரேன்" - திருவிருந்தில் அப்பமும் ரசமும் பரிமாறப்படுகிறது. அப்பம் இயேசு கிறிஸ்துவின் சரீரத்திற்கு அடையாளம். இயேசு கிறிஸ்து சரீரப் பிரகாரமாக நம் மத்தியில் இப்போது இல்லை. அவர் பரலோகத்தில் பிதாவின் வலதுபாரிசத்தில் அமர்ந்திருக்கிறார். இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகையின்போது இந்தப் பூமிக்கு வருவார் (மத் 24:29-31; வெளி 19:11-21; யூதா 1:14; சக 14:1-21) திருவிருந்தில் பரிமாறப்படும் அப்பமும் ரசமும் இயேசு கிறிஸ்துவின் பிட்கப்பட்ட சரீரத்திற்கும் சிந்தப்பட்ட இரத்தத்திற்கும் அடையாளம் (அப் 2:42-46; அப் 20:7,11; 1கொரி 10:16-17; 1கொரி 11:23-28)

தீர்க்கதரிசன எண் – 40

"இவள் இந்தத் தைலத்தை என் சரீரத்தின்மேல் ஊற்றினது என்னை அடக்கம் பண்ணுவதற்கு எத்தனமான செய்கையாயிருக்கிறது."

(மத் 26:12-13) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேற்றிற்று, நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

108. இயேசுவைக் காட்டிக் கொடுக்க யூதாஸ் ஒப்புக்கொள்கிறான் - (மாற்கு 14:10; லூக் 22:3)

மத் 26:14 அப்பொழுது, பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ்காரியோத்து என்பவன் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய்:

மத் 26:15 நான் அவரை உங்களுக்குக் காட்டிக் கொடுக்கிறேன், நீங்கள் எனக்கு என்ன கொடுக்கிறீர்கள் என்றான். அவர்கள் அவனுக்கு முப்பது வெள்ளிக்காசைக் கொடுக்க உடன்பட்டார்கள்.

மத் 26:16 அதுமுதல் அவன் அவரைக் காட்டிக்கொடுப்பதற்குச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தான்.

"முப்பது வெள்ளிக்காசு" - ஒரு அடிமையின் விலை. (யாத் 21:32)

109. பஸ்காவிற்கு ஆயத்தம் - (மாற்கு 14:12; லூக் 22:7)

மத் 26:17 புளிப்பில்லாத அப்பப் பண்டிகையின் முதல்நாளிலே சீஷர்கள் இயேசுவினிடத்தில் வந்து: பஸ்காவைப் புசிப்பதற்கு நாங்கள் எங்கே உமக்கு ஆயத்தம் பண்ணச் சித்தமாயிருக்கிறீர் என்று கேட்டார்கள்.

மத் 26:18 அதற்கு அவர்: நீங்கள் நகரத்திலே இன்னானிடத்திற்குப் போய்: என் வேளை சமீபமாயிருக்கிறது, உன் வீட்டிலே என் சீஷரோடேகூடப் பஸ்காவை ஆசரிப்பேன் என்று போதகர் சொல்லுகிறார் என்று அவனுக்குச் சொல்லுங்கள் என்றார்.

மத் 26:19 இயேசு கற்பித்தபடி சீஷர்கள் போய், பஸ்காவை ஆயத்தம் பண்ணினார்கள்.

"புளிப்பில்லாத அப்பப்பண்டிகையின் முதல்நாளிலே சீஷர்கள் இயேசுவினிடத்தில் வந்து: பஸ்காவைப் புசிப்பதற்கு நாங்கள் எங்கே உமக்கு ஆயத்தம் பண்ணச் சித்தமாயிருக்கிறீர் என்று கேட்டார்கள்" - பஸ்கா புசிப்பதற்கான ஆயத்தம். (மத் 26:18-19) பேதுருவும், யோவானும் தேவாலயத்திற்குப் பஸ்கா ஆட்டுக்குட்டியோடு சென்று பஸ்கா பலி செலுத்தியிருப்பார்கள். பஸ்கா போஜனத்தில் புளிப்பில்லாத அப்பம், திராட்சைரசம், கசப்பான கீரை ஆகியவை பரிமாறப்படும்.

26 அதிகாரம்

"பஸ்காவை ஆசரிப்பேன்" - இயேசு கிறிஸ்து பஸ்கா போஜனத்தைப் புசித்தார் என்பதற்கு இந்த வசனத்தை சான்றாகக் கூறலாம் பஸ்காவைப் பற்றி வேதத்திலிருந்து நாம் தெரிந்து கொள்ளும் காரியங்கள்

1. பண்டிகையின் முதலாவது நாள் (மத் 26:17)
2. நாங்கள் எங்கே உமக்கு ஆயத்தம் பண்ணச் சித்தமாயிருக்கிறீர் (மத் 26:17)
3. பஸ்காவை ஆசரிப்பேன் (மத் 26:18)
4. அவர்கள் பஸ்காவை ஆயத்தம் பண்ணினார்கள் (மத் 26:19)
5. அவர்கள் அமர்ந்து பஸ்கா போஜனம் பண்ணினார்கள் (மத் 26:20-21)
6. அவர்கள் போஜனம்பண்ணுகையில (மத் 26:26)
7. நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன (லூக்கா 22:15)
8. தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லை (லூக்கா 22:16)
9. அவர்கள் போஜனம் பண்ணிக் கொண்டிருக்கையில் (யோவான் 13:2)
10. அவர் போஜனத்தை விட்டெழுந்தார் (யோவான் 13:4)

"உன் வீட்டிலே என் சீஷரோடேகூடப் பஸ்காவை ஆசரிப்பேன்" - பஸ்கா பண்டிகையின்போது எருசலேமிற்கு இஸ்ரவேல ஜனங்கள் பல ஊர்களிலிருந்தும் வருவார்கள் எருசலேம் ஊரார் அவர்களை அன்போடு வரவேற்று, தங்களுடைய வீடுகளிலே தங்க வைப்பார்கள் அவர்களுடைய பஸ்காவைப் புசித்த பின்பு பஸ்கா ஆட்டுக்குட்டியின் தோல்களையும் சடங்குகளில் பயன்படுத்திய பாத்திரங்களையும் அந்தந்த வீட்டுக்காரர்களிடம் இலவசமாகக் கொடுத்துச் செல்வது வழக்கம்.

"இயேசு கற்பித்தபடி சீஷர்கள் போய், பஸ்காவை ஆயத்தம் பண்ணினார்கள்" - பேதுருவும், யோவானும் பஸ்கா ஆட்டுக் குட்டியைத் தேவாலயத்திற்கு எடுத்துச் சென்று பலியிட்டார்கள் (லூக்கா 22:8) இந்தச் சடங்குக் காரியங்கள் மாலை 3.00 மணியளவில் நடந்திருக்கலாம். அதன்பின்பு பலியிடப்பட்ட பஸ்காவை அக்கினியில் சுட்டு கசப்பான கீரையோடு அவர்கள் புசித்தார்கள் (யாத் 12:8)

110. கடைசி பஸ்கா - (மாற்கு 14:17 லூக் 22:14; யோவான் 13)

(1) தாம் காட்டிக்கொடுக்கப்படப் போவதை இயேசு முன்குறித்துக் கூறுகிறார்

மத் 26:20 சாயங்காலமானபோது பன்னிருவரோடுங்கூட அவர் பந்தியிருந்தார்

மத் 26:21 அவர்கள் போஜனம் பண்ணுகையில் அவர் உங்களிலொருவன் [redacted] காட்டிக் கொடுப்பான் என்று மெய்யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேன என்றார்

மத் 26:22 அப்பொழுது, அவர்கள் மிகவும் துக்கமடைந்து, அவரை நோக்கி: ஆண்டவரே, நானோ, நானோ? என்று ஒவ்வொருவராய்க் கேட்கத் தொடங்கினார்கள்

மத் 26:23 அவர் பிரதியுத்தரமாக: என்னோடேகூடத் தாலத்தில் கையிடுகிறவனே என்னைக் காட்டிக் கொடுப்பான்

மத் 26:24 மனுஷகுமாரன் தம்மைக் குறித்து எழுதியிருக்கிறபடியே போகிறார்; ஆகிலும், எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக்கொடுக்கப் படுகிறாரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ; அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும் என்றார்

மத் 26:25 அவரைக் காட்டிக்கொடுத்த யூதாசும் அவரை நோக்கி: ரபீ, நானோ? என்றான்; அதற்கு அவர்: நீ சொன்னபடிதான் என்றார்

26 அதிகாரம்

"சாயங்காலமானபோது பன்னிருவரோடுங்கூட அவர் பந்தியிருந்தார்" - பந்தியிருந்தார் என்பது தரையில் அமர்ந்து, போஜனம் பண்ணுவதைக் குறிக்கும். பஸ்காவை நின்று கொண்டுதான் புசிக்க வேண்டும் என்று பிரமாணம் எதுவும் இல்லை. கானானுக்குள் பிரவேசித்த பின்பு அவர்கள் பஸ்காவை நின்று கொண்டு புசிக்க வேண்டிய அவசரம் எதுவுமில்லை. தற்காலத்தில் யூதர்கள் பஸ்காவை ஆசரிக்கும்போது ஆசனங்களில் அமர்ந்து போஜனம் பண்ணுகிறார்கள். இனிமேலும் அவர்கள் அடிமைகள் அல்ல. விடுதலையாக்கப்பட்டவர்கள். ஓய்வாகவும் அமைதியாகவும் இருக்கிறோம் என்பதைக் காண்பிப்பதற்காக அமர்ந்து போஜனம் பண்ணுகிறார்கள்.

"அவர்கள் போஜனம் பண்ணுகையில்" - பஸ்கா போஜனம் பண்ணும்போது பந்தியில் அமர்ந்திருக்கும் ஒவ்வொருவருக்கும் ஒரு பாத்திரத்தில் தனித்தனியாக திராட்சரசம் பரிமாறப்படும். ஒருவர் ஆசீர்வாதம் கூறுவார். அதன்பின்பு, அனைவரும் திராட்சரசம் பருகுவார்கள். பருகிய பின்பு, புளிப்பில்லாத அப்பமும், கசப்பான கீரைகளும், பஸ்கா ஆடும், அவருக்கு கொண்டுவரப்படும். தங்களுடைய ஜீவியத்தில் தேவன் கொடுத்திருக்கும் ஏராளமான ஆசீர்வாதங்களுக்காகவும், ஒவ்வொரு விருந்தினருக்கும் கர்த்தர் போஜனம் கொடுத்திருப்பதற்காகவும் ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுப்பார்கள். அதன்பின்பு இரண்டாம் முறையாக எல்லோரும் பாத்திரத்திலுள்ள திராட்சரசத்தைப் பருகுவார்கள். யாத் 12:26-27 ஆகிய வசனங்களை வாசித்து, பஸ்கா பண்டிகையின் அர்த்தத்தை ஒருவர் விளக்கிக் கூறுவார். விளக்கம் கொடுத்த பின்பு அனைவரும் சங்கீதம் 113, 114 ஆகியவற்றைப் பாடுவார்கள். மறுபடியும் ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுப்பார்கள். இதன் பின்பு பஸ்கா போஜனத்தைப் புசிப்பார்கள். போஜனம் பண்ணிய பிறகு மூன்றாம் முறையாக பாத்திரத்திலுள்ள திராட்சரசத்தைப் பருகுவார்கள். பருகிய பின்பு, சங்கீதம் 115, 118 ஆகியவற்றை பாடுவார்கள். மத் 26:30, மாற்கு 14:26 ஆகிய வசனங்களில் இந்தக் காரியங்களே கூறப்பட்டிருக்கிறது.

தீர்க்கதரிசன எண் - 41

"உங்களிலொருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் ......" (மத் 26:21-24) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"மனுஷகுமாரன் தம்மைக்குறித்து எழுதியிருக்கிறபடியே போகிறார்" - இந்த வாக்கியம் இயேசு கிறிஸ்துவின் மரணத்தைக் குறிக்கிறது. தமது மரணத்தை அவர் பலமுறை முன்னறிவித்திருக்கிறார் (மத் 16:21)

"எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக்கொடுக்கப்படுகிறாரோ அந்த மனுஷனுக்கு ஐயோ, அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும்" - யூதாஸ்காரியோத்து நரகத்திற்குப் போவான் என்பதன் விளக்கம் (யோவான் 17:12; சங் 69:22-28; சங் 109:6-20)

(2) கர்த்தருடைய பந்தி - (மாற்கு 14:22; லூக் 22:19; 1கொரி 11:23)

மத் 26:26 அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார்.

மத் 26:27 பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள்.

மத் 26:28 இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது.

மத் 26:29 இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள்வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

26 அதிகாரம்

மத் 26:30 அவர்கள் ஸ்தோத்திரப் பாட்டைப் பாடினபின்பு ஒலிவமலைக்குப் புறப்பட்டுப்போனார்கள்

தீர்க்கதரிசன எண் - 42

"நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது." (மத் 26:26-29) மத் 26:26-28 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. இயேசு கிறிஸ்து வரும்போது அவருடைய ராஜ்யத்தில் மத் 26:29 ஆவது வசனம் நிறைவேறும்.

"இது என்னுடைய சரீரமாயிருக்கிறது" - இயேசு கிறிஸ்து அப்பத்தைப் பிட்டார் அது அவருடைய சரீரத்திற்கு அடையாளம். அதுபோலவே அவருடைய சரீரமும் பிட்கப்படும் வாரினால் அடிக்கப்பட்ட பின்பு அவருடைய சரீரத்தைப் பார்க்கும்போது மனுஷகுமாரன் சரீரம்போல இராது. "மனுஷனைப் பார்க்கிலும் அவருடைய முகப்பார்வையும், மனுபுத்திரரைப் பார்க்கிலும் அவருடைய ரூபமும் இவ்வளவு அந்தக்கேடு அடைந்தபடியினாலே, அவரைக் கண்ட அநேகர் பிரமிப்படைந்தார்கள்" (ஏசா 52:14) அப்பம் புளிப்பில்லாதது. அப்பத்தில் புளிப்பு இருக்கக்கூடாது. புளிப்பு பாவத்தைக் குறிக்கும் தேவகுமாரனிடத்தில் பாவமே காணப்படவில்லை. (மத் 13:33)

"புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" திராட்சரசம் இயேசு கிறிஸ்து சிந்திய இரத்தத்திற்கு அடையாளம். திராட்சைப் பழத்திலிருந்து தண்ணீர் சேர்க்காமல் தயாரிக்கப்பட்ட திராட்சப்பழ ரசம் (மத் 26:29). இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை (எபி 9:22; லேவி 17:11) இரத்தம் இல்லாமல் உடன்படிக்கையும் இல்லை. (யாத் 24:8 எபி 9:20) கல்வாரி சிலுவையில் கிறிஸ்துவானவர் சிந்திய திருஇரத்தமே நமது பாவங்களுக்குப் பரிகாரம். இயேசு கிறிஸ்துவை நமது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும்போது கிறிஸ்துவின் இரத்தம் நமது சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும். (மாற்கு 14:24; லூக்கா 22:20; யோவான் 6:53-56; யோவான் 19:34; அப் 20:28; ரோமர் 3:24-25; ரோமர் 5:9; 1கொரி 10:16, 1கொரி 11:25; எபே 1:7; எபே 2:13-16, கொலோ 1:14-20 எபி 9:12-15; எபி 10:19-29, எபி 12:24; எபி 13:12,20; 1பேதுரு 1:2,18-23 1யோவான் 1:7; 1யோவான் 5:6, வெளி 1:5-6, வெளி 5:9, வெளி 7:14; வெளி 12:11)

"புது உடன்படிக்கை" - இந்தப் புது உடன்படிக்கையைத் தீர்க்கதரிசிகள் முன்னறிவித்தார்கள் (ஏசா 49:8; ஏசா 55:3; ஏசா 61:8; எரே 31:31-33; எரே 32:40 எசே 37:26) மோசேயின் பிரமாணத்திற்குப் பதிலாக இந்தப் புதிய உடன்படிக்கை நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (2கொரி 3:6-15 கலா 3:13-25; கலா 4:21-31 கொலோ 2:14-17; எபே 2:14-15; எபி 7:11-28, எபி 8:8-13; எபி 9:1-24, எபி 10:1-23

உடன்படிக்கை (covenant) - διαθήκη - diatheekee - 1242

பெண்பால் பெயர்ச்சொல் - உடன்படிக்கை, ஆணை ஏற்பாடு, சாசனம்

புதிய ஏற்பாட்டில் இந்தச் சொல் உடன்படிக்கை (covenant) என்றும் (லூக்கா 1:72; அப் 3:25; அப 7:8 ரோமர் 9:4; ரோமர் 11:27; கலா 3:15,17, கலா 4:24; எபே 2:12; எபி 8:6-10; எபி 9:4; எபி 10:16,29; எபி 12:24; எபி 13:20) ஏற்பாடு (testament) (மத் 26:28; மாற்கு 14:24; லூக்கா 22:20; 1கொரி 11:25; 2கொரி 3:6,14; எபி 7:22 எபி 9:15,17,20; வெளி 11:19) என்றும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

"அநேகருக்காக" அநேகருடைய பாவங்களைப் போக்குவதற்கு இயேசு கிறிஸ்து தமது இரத்தத்தைச் சிந்தினார் இதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கிற கிரேக்கச் சொல் ஏஸ் (eis)

அதற்காக (for) - εἰς - eis – 1519

முன்னிடைச்சொல் - நோக்கி, மூலம்

"இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம்பண்ணுவதில்லை" உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களோடு இயேசு கிறிஸ்து போஜனம் பண்ணுவார் (மாற்கு 14:25, லூக்கா 22:16,18,30; லூக்கா 24:42-43 வெளி 2:7,17; வெளி 19:9

26 அதிகாரம்

(3) தம்மைப் பேதுரு மறுதலிக்கப் போவதை இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (மாற்கு 14:27 லூக் 22:31, யோவான் 13:36)

மத் 26:31 அப்பொழுது, இயேசு அவர்களை நோக்கி: மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும் என்று எழுதியிருக்கிறபடி இந்த இராத்திரியிலே நீங்கள் எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள்.

மத் 26:32 ஆகிலும் நான் உயிர்த்தெழுந்த பின்பு, உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போவேன் என்றார்.

மத் 26:33 பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக: உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறலடையேன் என்றான்.

மத் 26:34 இயேசு அவனை நோக்கி: இந்த இராத்திரியிலே சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

மத் 26:35 அதற்குப் பேதுரு: நான் உம்மோடே மரிக்க வேண்டியதாயிருந்தாலும் உம்மை மறுதலிக்க மாட்டேன் என்றான்; சீஷர்கள் எல்லாரும் அப்படியே சொன்னார்கள்.

தீர்க்கதரிசன எண் - 43

"மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும்." (மத்26:31-32) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேற்று.

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 20

"மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும்" (மத் 26:31, சக 13:7)

தீர்க்கதரிசன எண் - 44

"இந்த இராத்திரியிலே சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய்" - மத் 26:34 இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இயேசு கிறிஸ்து இந்தத் தீர்க்கதரிசனத்தை மேலுமசில சமயங்களில் கூறியிருப்பார் என்று வேதபண்டிதர்கள் கருதுகிறார்கள் (யோவான் 13:38 லூக்கா 22:34, மத் 26:30-35 மாற்கு 14:26-32)

V. கிறிஸ்துவின் பாடுகள்

1. கெத்செமனே தோட்டத்தில் இயேசுவின் துக்கமும் வியாகுலமும் - (மாற்கு 14:32 லூக் 22:39; யோவான் 18:1)

மத் 26:36 அப்பொழுது, இயேசு அவர்களோடே கெத்செமனே என்னப்பட்ட இடத்திற்கு வந்து, சீஷர்களை நோக்கி: நான் அங்கே போய் ஜெபம்பண்ணுமளவும் நீங்கள் இங்கே உட்கார்ந்திருங்கள் என்று சொல்லி,

மத் 26:37 பேதுருவையும் செபெதேயுவின் குமாரர் இருவரையும் கூட்டிக்கொண்டு போய், துக்கமடையவும் வியாகுலப்படவும் தொடங்கினார்.

மத் 26:38 அப்பொழுது, அவர்: என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது; நீ[redacted] இங்கே தங்கி, என்னோடேகூட விழித்திருங்கள் என்று சொல்லி,

மத் 26:39 சற்று அப்புறம்போய், முகங்குப்புற விழுந்து: என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்.

மத் 26:40 பின்பு, அவர் சீஷர்களிடத்தில் வந்து, அவர்கள் நித்திரைபண்ணுகிறதைக் கண்டு, பேதுருவை நோக்கி: நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக்கூடாதா?

26 அதிகாரம்

மத் 26:41 நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளது தான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்

மத் 26:42 அவர் மறுபடியும் இரண்டாந்தரம் போய்: என் பிதாவே இந்தப் பாத்திரத்தில [redacted] பானம்பண்ணினாலொழிய இது என்னை விட்டு நீங்கக்கூடாததாகில் உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்

மத் 26:43 அவர் திரும்ப வந்தபோது அவர்கள் மறுபடியும் நித்திரை பண்ணுகிறதைக் கண்டார். அவர்களுடைய கண்கள் மிகுந்த நித்திரைமயக்கம் அடைந்திருந்தது.

மத் 26:44 அவர் மறுபடியும் அவர்களை விட்டுப் போய், மூன்றாந்தரமும் அந்த வார்த்தைகளையே சொல்லி ஜெபம்பண்ணினார்

மத் 26:45 பின்பு அவர் தம்முடைய சீஷர்களிடத்தில் வந்து: இனி நித்திரைபண்ணி இளைப்பாறுங்கள்; இதோ மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிற வேளை வந்தது.

மத் 26:46 என்னைக் காட்டிக் கொடுக்கிறவன் இதோ, வந்துவிட்டான், எழுந்திருங்கள், போவோம் என்றார்

"கெத்செமனே" - தோட்டம். எருசலேமிலிருந்து கீதரோன் பள்ளத்தாக்கின் அருகில் உள்ளது. பட்டணத்தின் மதில் சுவரிலிருந்து 200 கெஜம் தூரத்தில் உள்ள தோட்டம். (யோவான் 18:1) கெத்செமனே என்பதற்கு "எண்ணெய் ஆலை" என்று பொருள். இயேசு கிறிஸ்து எருசலேமில் இருக்கும்போது ஜெபம் பண்ணுவதற்காக அவர் அங்கு விரும்பிச் செல்வது வழக்கம். (லூக்கா 22:39; யோவான் 18:2) யோசேப்பு, அல்லது நிக்கொதேமு அல்லது எருசலேமில் இயேசுவைப் பின்பற்றிய ஒருவருடைய தோட்டமாக இருக்கலாம். (யோவான் 19:38-39)

பேதுருவையும் செபெதேயுவின் குமாரர் இருவரையும் கூட்டிக்கொண்டுபோய், துக்கமடையவும் வியாகுலப்படவும் தொடங்கினார்" - இவர்கள் இயேசு கிறிஸ்து மறுரூபமானதைக் கண்டார்கள் (மத் 17:1-8) இப்போது அவருடைய துக்கத்தையும் வியாகுலத்தையும் காண்கிறார்கள் (லூக்கா 22:44,53)

"இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" - இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் மரிப்பதற்கு முன்பாகவே சாத்தான் அவரைக் கொல்வதற்குச் சதி பண்ணுகிறான். ஆகையினால் இயேசு தமது சரீரத்தைப் பிதாவிடம் ஒப்புக்கொடுக்கிறார். பிதா அவருடைய ஜெபத்தைக் கேட்டு, மரணத்திலிருந்து மீட்கிறார் (எபி 5:7; லூக்கா 22:43-44) இயேசு கிறிஸ்து சிலுவையில் மரிப்பதற்கு முன்பாக அவருடைய ஜீவியத்தின் ஏதாவது ஒரு காலத்தில் அவர் மரித்திருப்பார் என்றால் தேவனுடைய மீட்பின் திட்டம் தோல்வியடைந்திருக்கும். கிறிஸ்து கல்வாரி சிலுவைக்குச் செல்ல வேண்டும். சாத்தானின் வல்லமைகளை நசுக்க வேண்டும். சாத்தானின்மீதும் அவனுடைய அந்தகார சக்திகளின்மீதும் ஜெயம்பெற வேண்டும் (கொலோ 2:14-17; 1பேதுரு 2:24) இந்த வியாக்கியானம் தவிர மத் 26:42 ஆவது வசனம் சிலுவையின்மீது அவருடைய மரணத்தின் பாத்திரத்தையும் குறிக்கலாம்

"ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது" மாம்சத்தைச் சிலுவையில் அறைய வேண்டும். தேவனுடைய சித்தத்திற்கு மாம்சத்தைக் கட்டுப்படுத்தி ஒப்புக்கொடுக்க வேண்டும். ஆவி உற்சாகத்தோடு கிறிஸ்துவிற்குக் கீழ்ப்படியும். மாம்சத்தைக் கட்டுப்படுத்துவது மிகவும் முக்கியம். (1கொரி 9:27; கொலோ 3:5; ரோமர் 8:12-13)

26 அதிகாரம்

"மூன்றாந்தரமும் அந்த வார்த்தைகளையே சொல்லி ஜெபம்பண்ணினார்" - இயேசு கிறிஸ்து தமது ஜீவியத்தில் இந்த இடத்தில் மட்டுமே ஒரே காரியத்தைத் திரும்பத்திரும்பக்கூறி ஜெபம் பண்ணுகிறார். தமது ஜீவனைக் குறித்து தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையிலுள்ள போராட்டத்தின் நிமித்தமாக இயேசு இந்த ஜெபத்தைத் திரும்பத்திரும்ப ஏறெடுத்திருக்கலாம் (எபி 5:7)

தீர்க்கதரிசன எண் - 45

"இதோ மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிற வேளை வந்தது..........." மத் 26:45-46) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"வேளைவந்தது" - இந்த உலகத்திற்கு இயேசு கிறிஸ்து வந்ததன் நோக்கத்தை நிறைவேற்றும் வேளை வந்துவிட்டது. மனுக்குலத்தை மீட்பதற்காகவே இரட்சகர் இயேசு வந்தார். அவருடைய நோக்கம் நிறைவேறப் போகிறது. (மாற்கு 14:41 லூக்கா 22:14; யோவான் 2:4. யோவான் 7:30; யோவான் 8:20; யோவான் 12:23,27 யோவான் 13:1, யோவான் 17:1)

2. இயேசுவைக் கொல்வதற்கு முயற்சி - காட்டிக்கொடுக்கப்படுவதும் கைதுபண்ணப்படுவதும் - (மாற்கு 14:43, லூக் 22)

மத்26:47 அவர் இப்படிப் பேசுகையில் பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் வந்தான், அவனோடேகூடப் பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் அனுப்பின திரளான ஜனங்கள் பட்டயங்களையும்தடிகளையும் பிடித்துக் கொண்டு வந்தார்கள்

மத் 26:48 அவரைக் காட்டிக் கொடுக்கிறவன் நான் எவனை முத்தஞ் செய்வேனோ அவன்தான் அவனைப் பிடித்துக்கொள்ளுங்கள் என்று அவர்களுக்கு அடையாளம் சொல்லியிருந்தான்

மத் 26:49 உடனே, அவன் இயேசுவினிடத்தில் வந்து, ரபீ, வாழ்க என்று சொல்லி, அவரை முத்தஞ் செய்தான்

மத் 26:50 இயேசு அவனை நோக்கி: சிநேகிதனே என்னத்திற்காக வந்திருக்கிறாய் என்றார். அப்பொழுது, அவர்கள் கிட்டவந்து, இயேசுவின்மேல் கைபோட்டு, அவரைப் பிடித்தார்கள்

மத் 26:51 அப்பொழுது இயேசுவோடிருந்தவர்களில் ஒருவன் கைநீட்டித் தன் பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனைக் காதற வெட்டினான்

மத் 26:52 அப்பொழுது, இயேசு அவனை நோக்கி: உன் பட்டயத்தைத் திரும்ப அதின் உறையிலே போடு, பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்து போவார்கள்

மத் 26:53 நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக்கொண்டால், அவர் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்ப மாட்டாரென்று நினைக்கிறாயா?

மத் 26:54 அப்படிச் செய்வேனானால், இவ்விதமாய்ச் சம்பவிக்கவேண்டும் என்கிற வேதவாக்கியங்கள் எப்படி நிறைவேறும் என்றார்

மத் 26:55 அந்த வேளையிலே இயேசு ஜனங்களை நோக்கி: கள்ளனைப் பிடிக்கப் புறப்படுகிறது போல, நீங்கள் பட்டயங்களையும் தடிகளையும் எடுத்துக்கொண்டு என்னைப் பிடிக்க வந்தீர்கள்; நான் தினந்தோறும் உங்கள் நடுவிலே உட்கார்ந்து தேவாலயத்தில் உபதேசம் பண்ணிக்கொண்டிருந்தேன்; அப்பொழுது நீங்கள் என்னைப் பிடிக்கவில்லையே.

மத் 26:56 ஆகிலும் தீர்க்கதரிசிகள் எழுதியிருக்கிற வசனங்கள் நிறைவேறும்படி இவைகளெல்லாம் சம்பவிக்கிறது என்றார். அப்பொழுது, சீஷர்கள் எல்லாரும் அவரை விட்டு ஓடிப் போனார்கள்

26 அதிகாரம்

"தடிகள்" – (மத் 26:55; மாற்கு 14:43,48; லூக்கா 22:52

"ரபீ, வாழக" – சமாதானம் உண்டாவதாக என்று வாழத்தும் வாழ்த்துரை (மத் 27:29 மத் 28:9; மாறகு 15:18; லூக்கா 1:28; யோவான் 19:3, 2 யோவான் 10-)

"அவரை முத்தஞ்செய்தான்" – துரோகச்செயலுக்கு "யூதாவின் முத்தம்" (Judas kiss) என்றொரு வழக்குச்சொல உள்ளது. இயேசு கிறிஸதுவின் கூடவே இருந்தவன் அவரையே காட்டிக் கொடுக்கிறான் நிறகிறேன் என்று நினைக்கிற விசுவாசிகளுக்கு யூதாவின செயல் ஓர் எச்சரிப்பு (அப் 1:25; மத் 01-20; மாறகு 6:7-13

"சிநேகிதனே" – இயேசு அவனோடு அவனைச் சிநேகிதனே என்று அழைக்கிறார் அவனுடைய துரோகச்செயல தெரிந்தும் அவனமீது அனபாக இருக்கிறார் சிநேகிதன எனறும் சொல இந்த வசனததிலும் மேலும் சில வசனஙகளில் மட்டுமே வருகிறது. (மத 11:16, மத் 20:13; மத் 22:12) இயேசு கிறிஸது யூதாசை ஒதுக்கித் தளளிவிட வில்லை அவன நானறுகொணடு சாகாமல இயேசு கிறிஸதுவிடம் வந்து தனனை மனனித்து விடுமாறு விணணப்பம் பணணியிருந்தால ஆணடவர இயேசு கிறிஸது நிசசயமாகவே அவனை மனனித்திருப்பார அவர இரக்கத்தில ஐசுவரியவான பேதுருவும் மற்றவர்களும் தவறுகளைச் செயது விட்டு இயேசுவிடம் திரும்பி வந்து மனனிப்பை பெற்றுக் கொள்ளவில்லையா (சங் 41:9; சங் 55:12 14

"இயேசுவோடிருநதவர்களில் ஒருவன கைநீட்டித் தன பட்டயத்தை உருவி. பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனைக் காதற வெட்டினான" இது பேதுருவைக்குறிக்கும். (யோவான் 18:10

"பனனிரணடுலேகியோனுக்கு அதிகமான தூதர்" – லேகியோன் என்றால் 6000 பேர் பனனிரெனடு லேகியோன் என்பது 72,000 தூதரைக் குறிக்கும் ஏசாயா 37:36 இல் நாம் வாசிக்கிற பிரகாரம் ஒரு தூதன் ஒரே இரவில் 185,000பேரைச் சங்காரம்பணணக் கூடியவன்

"அப்பொழுது, சீஷர்களெல்லாரும் அவரை விட்டு ஓடிப்போனார்கள்" – (சக 13:7; மத் 26:31)

3. **இயேசுவின் வழக்கு விசாரணையும் பரியாசமும்** – (மாற்கு 14:53, லூக் 22:63; யோவான் 18:12,19,

மத் 26:57 இயேசுவைப் பிடித்தவர்கள் அவரைப் பிரதான ஆசாரியனாகிய காய்பாவினிடத்திற்குக் கொணடு போனார்கள்; அங்கே வேதபாரகரும் மூப்பரும கூடிவந்திருந்தார்கள்

மத் 26:58 பேதுரு, தூரத்திலே அவருக்குப பின்சென்று, பிரதான ஆசாரியனுடைய அரமனைவரைக்கும் வந்து, உள்ளே பிரவேசித்து, முடிவைப பார்க்கும்படி சேவகரோடே உடகார்ந்தான்

மத் 26:59 பிரதான ஆசாரியரும் மூப்பரும சங்கத்தார் யாவரும் இயேசுவைக் கொலை செய்யும்படி அவருக்கு விரோதமாய பொயச்சாட்சி தேடினார்கள

மத் 26:60 ஒருவரும் அகப்படவில்லை. அநேகர் வந்து பொயசசாட்சி சொல்லியும அவர்கள் சாட்சி ஒவ்வவில்லை. கடைசியிலே இரணடு பொயசசாட்சிகள வந்து.

மத் 26:61 தேவனுடைய ஆலயத்தை இடித்துப்போடவும மூன்று நாளைக்குள்ளே அதைக் கட்டவும என்னாலே ஆகும் என்று இவன சொன்னான என்றார்கள

மத் 26:62 அப்பொழுது, பிரதான ஆசாரியன் எழுந்திருந்து, அவரை நோக்கி: இவர்கள் உனக்கு விரோதமாய்ச் சாட்சிசொல்லுகிறதைக் குறித்து நீ ஒன்றும் சொல்லுகிற தில்லையா என்றான

மத் 26:63 இயேசுவோ பேசாமலிருந்தார அப்பொழுது, பிரதான ஆசாரியன் அவரை நோக்கி: நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன்பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன் என்றான்

26 அதிகாரம்

மத் 26:64 அதற்கு இயேசு: நீர் சொன்னபடிதான்; அன்றியும் மனுஷகுமாரன் சர்வவல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்களென்று, உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

மத் 26:65 அப்பொழுது பிரதான ஆசாரியன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, இவன் தேவதூஷணம் சொன்னான்; இனிச் சாட்சிகள் நமக்கு வேண்டியதென்ன? இதோ, இவன் தூஷணத்தை இப்பொழுது கேட்டீர்களே.

மத் 26:66 உங்களுக்கு என்னமாய்த் தோன்றுகிறது என்று கேட்டான். அதற்கு அவர்கள்: மரணத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்றார்கள்.

மத் 26:67 அப்பொழுது, அவருடைய முகத்தில் துப்பி, அவரைக் குட்டினார்கள்; சிலர் அவரைக் கன்னத்தில் அறைந்து,

மத் 26:68 கிறிஸ்துவே, உம்மை அடித்தவன் யார்? அதை ஞானதிருஷ்டியினால் எங்களுக்குச் சொல்லும் என்றார்கள்.

"அங்கே வேதபாரகரும் மூப்பரும் கூடிவந்திருந்தார்கள்" - சேவகர்களும் தேவாலயத்து அதிகாரிகளும் இயேசு கிறிஸ்துவை எப்படியும் பிடித்துக் கொண்டு வருவார்கள் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். இயேசு கிறிஸ்துவின்மீது ஏதாவது பொய்க் குற்றம் சுமத்தி அவரைக் கொலை செய்ய வேண்டுமென்பதே இவர்கள் நோக்கம்.

பேதுருவின் பின்மாற்றம்

1 பெருமைபட்டான் (மத் 26:33; நீதி 16:18)

2 இயேசுவிடம் மறுத்துப் பேசினான் (மத் 26:33-35)

3 ஜெபிப்பதற்குப் பதிலாகத் தூங்கினான் (மத் 26:40)

4 தன் மாம்சத்தை அடக்கத்தவறினான் (மத் 26:41)

5 தன் மாம்சத்தின் வல்லமையை நம்பினான் (மத் 26:51)

6 கிறிஸ்துவை விட்டுவிட்டு ஓடிப் போனான் (மத் 26:56)

7 தூரத்தில் பின்தொடர்ந்தான் (மத் 26:58)

8 ஆண்டவருடைய சத்துருக்களோடு அமர்ந்தான் (மத் 26:58)

9 நம்பிக்கையை இழந்து சோர்வாக இருந்தான் (மத் 26:58)

10 மனுஷருக்குப் பயந்தான் (மத் 26:69-74)

11 பொய்கூறினான் (மத் 26:69-74)

12 சபித்தான் (மத் 26:69-74)

பேதுரு தம்மை மறுதலிப்பான் என்பதை இயேசு கிறிஸ்து முன்னறிவித்தார். அதுடன் அவன் மறுபடியும் தம்மிடம் திரும்பி வருவான் என்றும் கூறினார் (லூக்கா 22:31-34)

பேதுரு மறுபடியும் இயேசு கிறிஸ்துவிடம் திரும்பி வந்தான் என்பதற்கு ஆதாரங்கள்

1 அவன் மறுபடியும் பிறந்தான் (யோவான் 5:1 - மத் 16:16, யோவான் 6:68-69)

2 தன் பாவங்களிலிருந்து அவன் கழுவப்பட்டான். தேவனுடைய வார்த்தையைக் கைக்கொண்டான் (யோவான் 13:10, யோவான் 15:3; யோவான் 17:6)

3 பரலோகத்தில் அவனுடைய பெயர் எழுதப்பட்டிருக்கிறது (லூக்கா 10:20)

4 அவன் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொண்டான் (யோவான் 17:1-3)

5 அவன் ஆவிக்குரிய வெளிப்பாடுகளைப் பெற்றுக் கொண்டான் (மத் 16:16)

மத்தேயு - தொகுப்புரை

26 அதிகாரம்

6 அவன் கிறிஸ்துவில் இருந்தான் (யோவான் 15:1-6)

7 அவன் உலகத்திலிருந்து இரட்சிக்கப்பட்டான் (யோவான் 17:14-16)

8 அவன் தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டான் அவன் மற்றவர்களுக்குத் தண்ணீர் ஞானஸ்நானம் கொடுத்தான் (யோவான் 3:22; யோவான் 4:1-2)

9 பேதுரு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் பெற்றிருந்தான் (மத் 10:20)

10 எல்லா வியாதிகளின்மீதும், பிசாசுகளின் மீதும் அவனுக்கு அதிகாரம் இருந்தது. (மத் 10:1-8)

11 கர்த்தருடைய வார்த்தையைப் பிரசங்கம் பண்ணினான் வியாதியஸ்தர்களைக் குணப்படுத்தினான் (மாற்கு 6:7-13, லூக்கா 9:6)

12 பரிசுத்த ஆவியானவரின் வரங்களைப் பெற்றிருந்தான் (சங் 51:7-13 ரோமர் 11:48-24, கலா 1:6, கலா 4:19 கலா 5:4; கலா 6:1; யாக் 5:19-20 வெளி 2:4-5,16,21-26; வெளி 3:3,15-16)

அரமனை (palace) - αὐλή aulee - 833

பெண்பால் பெயர்ச்சொல் - அரமனை முற்றம், தொழுவம், பிரகாரம்

"பிரதான ஆசாரியர்" - 24 ஆசாரிய வகுப்பிற்குத் தலைவர்கள் (1நாளா 24:3-19 2நாளா 8:14, 2நாளா 26:20; 2நாளா 35:4; எஸ்றா 43:28)

"மூப்பர்" குடும்பத்தின் தலைவர்களும் கோத்திரங்களில் வயது முதிர்ந்தவர்களும் (யாத் 3:16-18, யாத் 4:29; யாத் 12:21; எண் 11:16,25) ஆலோசனைச் சங்கத்தில் இவர்களே ஜனங்களின் பிரதிநிதிகள்

"சங்கத்தார்" - ஆலோசனைச் சங்கத்தில் பிரதான ஆசாரியரும், மூப்பரும் அங்கத்தினராக இருந்தார்கள். அந்த தேசத்தின் உச்சநீதிமன்றமாக ஆலோசனைச் சங்கம் செயல்பட்டது. முக்கியமான வழக்குகளை மட்டும் இங்கு விசாரிப்பார்கள் ஆலோசனைச் சங்கத்தில் 71 அங்கத்தினர்கள் இருப்பார்கள் இவர்களுக்குத் தலைவரும் உபதலைவரும் உண்டு உபதலைவர் வழக்குகளை விசாரித்து நடத்துவார் தலைவர் ரோமாபுரி அரசுக்கு வழக்கின் விவரம் குறித்து கணக்கு ஒப்புவிப்பார்

"அவருக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி தேடினார்கள்" - இயேசுவிடம் அவர்களால் எந்தக் குற்றமும் காணமுடியவில்லை ஆகையினால் அவருக்கு எதிராகக் குற்றம் சுமத்துவதற்கு உண்மையான சாட்சிகள் யாரும் கிடைக்கவில்லை. ஆகையினால் பொய்ச் சாட்சியைத் தேடினார்கள் யூதருடைய ஆலோசனைச் சங்கத்தில் நீதியில்லை நீதியில்லாத நீதிமன்றமாக செயல்பட்டது தங்களுடைய சொந்த விருப்பங்களுக்காகக் கர்த்தருடைய பிரமாணத்தையே மாற்றிக் கூறுகிறார்கள் (யாத் 20:16)

"ஒருவரும் அகப்படவில்லை; அநேகர் வந்து பொய்ச்சாட்சி சொல்லியும் அவர்கள் சாட்சி ஒவ்வவில்லை" - பொய்ச்சாட்சிகள் யாரும் கிடைக்கவில்லை சாட்சி சொன்னவர்களும் முரண்பட்டு சாட்சி சொன்னார்கள்

"இயேசுவோ பேசாமலிருந்தார்" - நீதியில்லாத நீதிமன்றத்திலே இயேசுகிறிஸ்து பேசாமல் இருந்தார் இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர் மௌனமாகச் செயல்படுகிறார் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாகவும் இது நடைபெறுகிறது. (ஏசா 53:7)

ஆணையிட்டுக்கேள் (adjure) - ἐξορκίζω - exorkizoo - 1844

வினைச்சொல் - ஆணையிட்டுக்கேள்

"தேவனுடைய குமாரன்" மேசியா தேவனுடைய குமாரன் என்பதை ஆலோசனைச் சங்கத்தார் அங்கீகரிக்கிறார்கள் (யோவான் 8:40)

தீர்க்கதரிசன எண் - 46

"மனுஷகுமாரன் சர்வவல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்கள்" மத் 26:64 இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

26 அதிகாரம்

"சர்வவல்லவருடைய வலதுபாரிசத்தில வீற்றிருப்பார்" - மாற்கு 16:19 அப 2:33 எபி 1:3 எபி 12:2

"வானத்தின் மேகங்கள் மேல் வருவார்" - (தானி 7:13; மத் 24:29-30; வெளி 1:7)

"அவருடைய முகத்தில துப்பினார்கள்" - ஒருவருடைய முகத்தில துப்புதல அவருக்குக் கொடுக்கப்படும் மிகப்பெரிய அவமரியாதை (எண் 12:14; உபா 25:9; யோபு 30:10 மத் 27:30; மாற்கு 15:19; யோவான் 19:3)

4. பேதுரு மறுதலிக்கிறான் - (மாறகு 14:66; லூக் 22:54; யோவான் 8:15,25

மத் 26:69 அத்தருணத்தில பேதுரு வெளியே வந்து அரமனை முறறத்தில உட்கார்ந்திருந்தான் அப்பொழுது வேலைக்காரி ஒருத்தி அவனிடத்தில வந்து, நீயும் கலிலேயனாகிய இயேசுவோடேகூட இருந்தாய எனறாள்

மத் 26:70 அதறகு அவன, நீ சொலலுகிறது எனக்குத் தெரியாது எனறு எலலாருக்கும முனபாக மறுதலித்தான

மத் 26:71 அவன வாசல மணடபத்திறகுப போனபொழுது வேறொருத்தி அவனைக் கணடு. இவனும் நசரேயனாகிய இயேசுவோ டேகூட இருநதான எனறு அஙகே இருநதவாகளுக்குச சொனனாள

மத் 26:72 அவனோ அந்த மனுஷனை நான அறியேன எனறு ஆணையிட்டு. மறுபடியும் மறுதலி த்தான

மத் 26:73 சற்றுநேரத்துக்குப்பினபு அங்கே நின்றவாகள் பேதுருவி னிடத்தில் வந்து, மெய்யாகவே நீயும் அவர்களில ஒருவன உன பேச்சு உன்னை வெளிப்படுத்துகிறது என்றாகள்

மத் 26:74 அப்பொழுது அவன் அந்த மனுஷனை அறியேன் என்று சொல்லி, சபிக்கவும் சத்தியம் பண்ணவும் தொடங்கினான் உடனே சேவல் கூவிற்று.

மத் 26:75 அப்பொழுது பேதுரு சேவல கூவுகிறதறகுமுன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய என்று இயேசு தன்னிடத்தில் சொன்ன வசனத்தை நினைத்துக் கொண்டு, வெளியே போய், மனங்கசந்து அழுதான்

"பேதுரு வெளியே வந்து அரமனை முறறத்தில உட்கார்ந்திருந்தான்" - இரண்டு காரணங்களினால முறறத்தில உட்கார்ந்தான் ஒன்று அவனுடைய குறறமனச்சாட்சி, மற்றொன்று தன்னிடம் மேலும் யாரும் கேளவி கேட்பதைத் தவிர்க்க விரும்பினான்

"முறறம்" - வீதியிலிருந்து நீதிமனறததிறகுச் செலலும் நடைபாதை. (மாறகு 14:68)

"வேறொருத்தி (வேலைக்காரி-maid) அவனைக் கண்டாள்"

வேதாகமத்தில் முக்கியமான பணிப்பெண்கள்

1 ஆகார் (ஆதி 16:1-8)

2 சில்பாள (ஆதி 29:24, ஆதி 30:9-12

3 பில்காள் (ஆதி 29:29, ஆதி 30:3-7

4 எஸ்தர் (எஸ் 2:4-9)

5 மோசேக்கு உதவி புரிந்தவள் (யாத் 2:5-8)

6 நாகமானின் பணிப்பெண் (2 இராஜா 5:2-4)

7 யவீருவின் மகள (மத் 9:24-25)

8 பேதுருவினமீது குற்றம் சுமத்திய சிறு பெண (மத் 26:69)

9 பேதுருவினமீது குற்றம் சுமத்திய பணிப்பெண (மத் 26:71)

26 அதிகாரம்

சபி (curse) - καταθεματίζω - katathematizoo - 2653

வினைச்சொல் - சபி - பேதுரு தன்னைத்தானே சபிக்கிறான்

“சத்தியம் பண்ணினான்” - இயேசு கிறிஸ்துவைத் தனக்குத் தெரியாது என்று தேவனுடைய பேரில் சத்தியம் பண்ணினான். அந்த அளவிற்கு பேதுரு மனுஷருக்குப் பயந்து, தேவனை விட்டு பின்வாங்கிப்போனான் (மத் 26:58)

“சேவல் கூவிற்று” - இரண்டு சேவல்கள் கூவியதாக ஒரு சிலர் கூறுகிறார்கள். ஆக இவர்களுடைய வியாக்கியானத்தின் பிரகாரம் பேதுரு ஆறு முறை மறுதலிக்கிறான். முதலாவது சேவல் கூவுவதற்கு முன்பாக மூன்று முறை (யோவான் 18:17; மத் 26:70-71) வேறொரு சேவல் கூவுவதற்கு முன்பாக மூன்று முறை (மத் 26:73; மாற்கு 14:69; லூக்கா 22:59-60) எத்தனை சேவல் கூவினாலும் பேதுரு உடனே தன்னுடைய பாவத்திற்காக மனம் வருந்தி, மனங்கசந்து அழுகிறான் (மத் 26:75)

27 அதிகாரம்

5. இயேசுவைப் பிலாத்துவிடம் அனுப்புகிறார்கள் - (வசனம் 1) மாற்கு 15:1; லூக் 23:1; யோவான் 18:28; 19:8

மத் 27:1 விடியற்காலமானபோது, சகல பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும், இயேசுவைக் கொலை செய்யும்படி, அவருக்கு விரோதமாக ஆலோசனை பண்ணி,

மத் 27:2 அவரைக் கட்டி கொண்டு போய், தேசாதிபதியாகிய பொந்தியு பிலாத்துவினிடத்தில் ஒப்புக் கொடுத்தார்கள்.

"அவரைக் கட்டினார்கள்" - ஒரு பயங்கரமான குற்றவாளியைக் கட்டுவது போல இயேசுவைக் கட்டினார்கள். தப்பித்து ஓட முயற்சி பண்ணும் குற்றவாளிகளைத்தான் கட்டுவார்கள். ஆனால் இயேசுவோ தாமாகவே மனம் உவந்து தம்மைக் கைது பண்ணுவதற்கு ஒப்புக் கொடுத்திருந்தார். இயேசு கிறிஸ்துவின் அனுமதியில்லாமல் அவரை அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. (யோவான் 18:6)

6. யூதாஸ் நான்றுகொண்டு செத்துப் போகிறான் - (மத் 26:24; அப் 1:16-25)

மத் 27:3 அப்பொழுது, அவரைக் காட்டிக் கொடுத்த யூதாஸ், அவர் மரணாக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதைக் கண்டு, மனஸ்தாபப்பட்டு, அந்த முப்பது வெள்ளிக்காசைப் பிரதான ஆசாரியரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் திரும்பக் கொண்டுவந்து,

மத் 27:4 குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக் கொடுத்ததினால் பாவஞ் செய்தேன் என்றான். அதற்கு அவர்கள்: எங்களுக்கென்ன, அது உன்பாடு என்றார்கள்.

மத் 27:5 அப்பொழுது, அவன் அந்த வெள்ளிக்காசை தேவாலயத்திலே எறிந்துவிட்டு, புறப்பட்டுப்போய், நான்றுகொண்டு செத்தான்.

மத் 27:6 பிரதான ஆசாரியர் அந்த வெள்ளிக்காசை எடுத்து, இது இரத்தக்கிரயமானதால் காணிக்கைப் பெட்டியிலே இதைப் போடலாகாதென்று சொல்லி,

மத் 27:7 ஆலோசனை பண்ணின பின்பு, அந்நியரை அடக்கம் பண்ணுவதற்குக் குயவனுடைய நிலத்தை அதினாலே கொண்டார்கள்.

மத் 27:8 இதினிமித்தம் அந்த நிலம் இந்நாள்வரைக்கும் இரத்தநிலம் எனப்படுகிறது.

மத் 27:9 இஸ்ரவேல் புத்திரரால் மதிக்கப்பட்டவருக்குக் கிரயமாகிய முப்பது வெள்ளிக்காசை அவர்கள் எடுத்து,

மத் 27:10 கர்த்தர் எனக்குக் கற்பித்தபடி குயவனுடைய நிலத்திற்காக அதைக் கொடுத்தார்கள் என்று எரேமியா தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது அப்பொழுது நிறைவேறிற்று.

"அவரைக் காட்டிக் கொடுத்த யூதாஸ், அவர் மரணாக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதைக் கண்டான்" யூதாஸ்காரியோத்திற்கு இப்போது தான் அவன் செய்த தவறு புரிகிறது. ஆயினும் யூதாஸ் பேதுருவைப் போல மனந்திரும்பவில்லை. இயேசு கிறிஸ்துவிடம் தன்னுடைய பாவங்களுக்காக மன்னிப்புக் கோரவில்லை. சாத்தானுக்குத் தன்னை ஒப்புக்கொடுத்தான். இயேசுவை விட்டுப்பிரிந்து தனியாக இருந்தான். தன்னுடைய கோழைத்தனமான செயலுக்காக வெட்கப்பட்டு நான்று கொண்டு செத்தான்.

27 அதிகாரம்

"மனஸ்தாபப்பட்டான்" - இயேசு கிறிஸ்து மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதற்காக யூதாஸ் மனஸ்தாபப்பட்டான். தான் செய்த தவறுகளுக்காக யூதாஸ் மனஸ்தாபப்படவில்லை. யூதாஸ் இயேசுவோடுகூடவே இருந்தவன். இயேசு கிறிஸ்துவின் ஜீவியத்திற்கு பலமுறை ஆபத்து வந்த வேளைகளில் அவர் அந்த பிரச்சனைகளிலிருந்து தப்பித்து அப்புறம் போனார் என்பது யூதாசிற்குத் தெரியும். அதுபோலவே இயேசு தமது வல்லமையினால் இப்போதும் தப்பித்துக் கொள்வார் என்று யூதாஸ் நினைத்திருக்கலாம். ஆனால் யூதாஸ் நினைத்ததுபோல அங்கு ஒன்றும் நடைபெறவில்லை. தமது ஜீவனைக் காப்பதற்காக அங்கிருந்து அவர் மறைந்து செல்லவில்லை. தன்னால் இயேசுவிற்கு மரண ஆக்கினை வந்துவிட்டதே என்று மனஸ்தாபப்பட்டான்.

மனஸ்தாபப்படு (repented) - μεταμέλομαι - metamelomai - 3338

வினைச்சொல் - மனஸ்தாபப்படு, மனம் மாறாமலிரு

"முப்பது வெள்ளிக்காசு" - அந்நாட்களில் ஒரு வேலையாளுக்கு 115 நாட்களுக்கு கொடுக்கப்படும் சம்பளத்திற்கு சமமான தொகை.

"குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக் கொடுத்ததினால் பாவஞ்செய்தேன்" இன்றும் பலர் இப்படித்தான் புலம்புகிறார்கள். யூதாஸ் இயேசுவிடம் பாவ அறிக்கை பண்ணுவதற்குப் பதிலாக ஆசாரியரிடத்திலும், மூப்பரிடத்திலும் வந்து புலம்புகிறான். தம்மிடத்தில் வருகிற யாரையும் இயேசு கிறிஸ்து புறம்பே தள்ளமாட்டார். ஆனால் ஆசாரியரும், மூப்பரும் பாவியை இரட்சிப்பதற்குத் திராணியற்றவர்கள். ஆகையினால் யூதாசைப் பார்த்து "எங்களுக்கென்ன அது உன்பாடு" என்றார்கள்.

இயேசு கிறிஸ்துவின் இரத்தம் குற்றமில்லாதது. அவர் ஒரு பாவமும் செய்யவில்லை. அவருடைய குற்றமில்லாத இரத்தத்தைக் குறித்து பலர் சாட்சி கூறியிருக்கிறார்கள்.

1. யூதாஸ் (மத் 27:4)
2. பிலாத்துவின் மனைவி (மத் 27:19)
3. பிலாத்து (மத் 27:24)
4. ஏரோது (லூக்கா 23:15)
5. கள்ளன் (லூக்கா 23:41)
6. நூற்றுக்கதிபதி (லூக்கா 23:47)

"அவன் அந்த வெள்ளிக்காசை தேவாலயத்திலே எறிந்துவிட்டு, புறப்பட்டுப் போய், நான்றுகொண்டு செத்தான்" - இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களில் ஒருவன் இப்போது தன்னுடைய ஜீவனையே முடித்துக் கொண்டான். இயேசு கிறிஸ்துவிற்காகத் தனது ஜீவிய நாளெல்லாம் ஊழியம் செய்வதற்காக அழைக்கப்பட்டவன், இயேசுவிற்காக ஆத்துமாக்களை ஆதாயம் பண்ண வேண்டியவன், வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்க வேண்டியவன் இப்போது நான்றுகொண்டு செத்துப் போனான்.

"இது இரத்தக்கிரயமானதால் காணிக்கைப் பெட்டியிலே இதைப் போடலாகாது" - யூதருடைய பிரமாணத்தின்படி இரத்தக் கிரயத்தைக் காணிக்கைப் பெட்டிகளில் போடக்கூடாது. ஆனால் ஆசாரியரும் மூப்பரும் மாயக்காரர்கள். இரத்தக்கிரயத்தைக் குறித்துச் சிந்திக்கிறார்கள். ஆனால் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தைச் சிந்துவதற்கு சம்மதிக்கிறார்கள். ஒரு பாவமும் செய்யாத இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்து கொல்வது அவர்களுக்கு நியாயமாகத் தெரிகிறது.

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 21

"இஸ்ரவேல் புத்திரரால் மதிக்கப்பட்டவருக்குக் கிரயமாகிய முப்பது வெள்ளிக்காசை அவர்கள் எடுத்து, கர்த்தர் எனக்குக் கற்பித்தபடி குயவனுடைய நிலத்திற்காக அதைக் கொடுத்தார்கள்" (மத் 27:9-10; சக 11:12-13)

27 அதிகாரம்

7. பிலாத்துவிற்கு முன்பாக இயேசு - (மாற்கு 15:1; லூக் 23:1; யோவான் 18:28; 19:8)

மத் 27:11 இயேசு தேசாதிபதிக்கு முன்பாக நின்றார்; தேசாதிபதி அவரை நோக்கி: நீ யூதருடைய ராஜாவா என்று கேட்டான். அதற்கு இயேசு: நீ சொல்லுகிறபடிதான் என்றார்.

மத் 27:12 பிரதான ஆசாரியரும் மூப்பரும் அவர்மேல் குற்றஞ்சாட்டுகையில், அவர் மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை.

மத் 27:13 அப்பொழுது, பிலாத்து அவரை நோக்கி: இவர்கள் உன்மேல் எத்தனையோ குற்றங்களைச் சாட்டுகிறார்களே, நீ அவைகளைக் கேட்கவில்லையா என்றான்.

மத் 27:14 அவரோ ஒரு வார்த்தையும் மாறுத்தரமாகச் சொல்லவில்லை; அதனால் தேசாதிபதி மிகவும் ஆச்சரியப்பட்டான்.

"இயேசு தேசாதிபதிக்கு முன்பாக நின்றார்" - நீதிபதி அமர்ந்திருப்பார். குற்றம் சுமத்தப்பட்டவர் அவர் முன்பாக நிற்க வேண்டும். இது அக்காலத்து வழக்கம். (அப் 26:6)

"அவர் மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை" - தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்பது இயேசு கிறிஸ்துவிற்கு நன்றாகத் தெரியும். ஆகையினால் அவர் அவர்களுடைய கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல் அமைதியாக இருந்தார் (மத் 26:62; மத் 27:12-14)

8. இயேசுவிற்குத் தண்டனையும் பரபாசிற்கு விடுதலையும் - (மாற்கு 15:7; லூக் 23:13; யோவான் 18:39)

மத் 27:15 காவல்பண்ணப்பட்டவர்களில் எவனை விடுதலையாக்கவேண்டுமென்று ஜனங்கள் கேட்டுக்கொள்வார்களோ, அவனை அவர்களுக்காக விடுதலையாக்குவது பண்டிகைதோறும் தேசாதிபதிக்கு வழக்கமாயிருந்தது.

மத் 27:16 அப்பொழுது காவல்பண்ணப்பட்டவர்களில் பரபாஸ் என்னப்பட்ட பேர்போன ஒருவன் இருந்தான்.

மத் 27:17 பொறாமையினாலே அவரை ஒப்புக்கொடுத்தார்கள் என்று பிலாத்து அறிந்து,

மத் 27:18 அவர்கள் கூடியிருக்கையில், அவர்களை நோக்கி: எவனை நான் உங்களுக்கு விடுதலையாக்க வேண்டுமென்றிருக்கிறீர்கள்? பரபாசையோ? கிறிஸ்து என்னப்படுகிற இயேசுவையோ? என்று கேட்டான்.

மத் 27:19 அவன் நியாயாசனத்தில் உட்கார்ந்திருக்கையில், அவனுடைய மனைவி அவனிடத்தில் ஆளனுப்பி: நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்யவேண்டாம்; அவர் நிமித்தம் இன்றைக்குச் சொப்பனத்தில் வெகு பாடுபட்டேன் என்று சொல்லச் சொன்னாள்.

மத் 27:20 பரபாசை விட்டுவிடக் கேட்டுக்கொள்ளவும், இயேசுவைக் கொலைசெய்விக்கவும், பிரதான ஆசாரியரும் மூப்பரும் ஜனங்களை ஏவிவிட்டார்கள்.

மத் 27:21 தேசாதிபதி ஜனங்களை நோக்கி: இவ்விருவரில் எவனை நான் உங்களுக்கு விடுதலையாக்கவேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர்கள்: பரபாசை என்றார்கள்.

மத் 27:22 பிலாத்து அவர்களை நோக்கி: அப்படியானால், கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டான். அவனைச் சிலுவையில் அறையவேண்டும் என்று எல்லாரும் சொன்னார்கள்.

மத்தேயு - தொகுப்புரை

27 அதிகாரம்

மத் 27:23 தேசாதிபதியோ ஏன் என்ன பொல்லாப்புச் செய்தான் என்றான் அதற்கு அவர்கள் அவனைச் சிலுவையில் அறைய வேண்டும் என்று அதிகமதிகமாய்க் கூக்குரலிட்டுச் சொன்னார்கள்

மத் 27:24 கலகம் அதிகமாகிறதே யல்லாமல் தன் பிரயத்தனத்தினாலே பிரயோஜனமில்லையென்று பிலாத்து கண்டு, தண்ணீரை அள்ளி ஜனங்களுக்கு முன்பாகக் கைகளைக் கழுவி, இந்த நீதிமானுடைய இரத்தப் பழிக்கு நான் குற்றமற்றவன் நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்றான்

மத் 27:25 அதற்கு ஜனங்க ளெல்லாரும், இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக என்று சொன்னார்கள்

மத் 27:26 அப்பொழுது அவன் பரபாசை அவர்களுக்கு விடுதலை யாக்கி, இயேசுவையோ வாரினால் அடிப்பித்து, சிலுவையில் அறையும் படிக்கு ஒப்புக்கொடுத்தான்

"காவல்பண்ணப்பட்டவர்களில் எவனை விடுதலையாக்கவேண்டுமென்று ஜனங்கள் கேட்டுக்கொள்வார்களோ, அவனை அவர்க ளுக்காக விடுதலையாக்குவது பண்டிகை தோறும் தேசாதிபதிக்கு வழக்க மாயிருந்தது" இந்த வழக்கம் எப்பொழுது ஆரம்பமாயிற்று, இதை யார் ஆரம்பித்தார் என்பது தெரியவில்லை. இதற்கு ஆதாரம் என்ன என்றும் தெளிவாகத் தெரியவில்லை

"காவல்பண்ணப்பட்டவர்களில் எவனை விடுதலையாக்கவேண்டுமென்று ஜனங்கள் கேட்டுக்கொள்வார்களோ" தம்மை விடுதலை பண்ணுமாறு ஜனங்கள் கேட்க மாட்டார்கள் என்று இயேசுவிற்கு நன்றாக தெரியும். தேசாதிபதி ஜனங்களுடைய மார்க்க வைராக்கியத்தைப் பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டான்

"பொறாமையினாலே அவரை ஒப்புக் கொடுத்தார்கள்" - யூதமார்க்கத்தின் உபதேசத்திற்குச் சம்பந்தமில்லாதவாறு யூத மார்க்கத்தலைவர்கள் நடந்து கொண்டார்கள் பொறாமைப்படக்கூடாது என்பது அவர்கள் வேதத்தில் கற்றுக்கொள்ளும் உபதேசம். ஆனால்நடைமுறையில் அவர்கள் பொறாமைப் படுகிறார்கள்

"கிறிஸ்துஎன்னப்படுகிற இயேசுவையோ?" - இயேசுவே கிறிஸ்து மேசியா என்பது எல்லோருக்கும் தெரிந்திருந்த சத்தியம்.

"அவனுடைய மனைவி" - தேசாதிபதியின் மனைவி. கிலவுதியாள் புரோக்குல்லா (Claudia Procula) என்பது அவளுடைய பெயர் திபேரியாவின் இந்தப் பிரதேசத்தில் மட்டுமே தேசாதிபதியின் மனைவிமார்கள் தங்கள் கணவன்மார்களோடு நியாயா சனத்தில் அமர்ந்திருப்பார்கள்

"நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்யவேண்டாம்" - நல்ல ஆலோசனை ஆனால் இந்த ஆலோசனை ஏற்றுக் கொள்ளப்படவில்லை

"அவர் நிமித்தம் இன்றைக்குச் சொப்பனத்தில் வெகுபாடுபட்டேன்" - வேதாகமத்தில் பல வசனங்கள் சொப்பனங் களைப் பற்றிக் கூறுகிறது

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிற சொப்பனங்கள்

1 அபிமெலேக்கு - ஆபிரகாமைக் குறித்து (ஆதி 20:3)

2 யாக்கோபு - ஏணியைக் குறித்து (ஆதி 28:12)

3 யாக்கோபு - வரியும், புள்ளியும் உள்ள ஆடுகளைக் குறித்து (ஆதி 31:10-13)

4 யாக்கோபு - எகிப்தைக் குறித்து (ஆதி 46:2)

5 லாபான் - யாக்கோபைக் குறித்து (ஆதி 31:24)

6 யோசேப்பு - சகோதரரைக் குறித்து (ஆதி 37:5)

7 யோசேப்பு - சகோதரரைக் குறித்து (ஆதி 37:9)

27 அதிகாரம்

8 பானபாத்திரக்காரரின் தலைவன் - தன்னைக் குறித்து (ஆதி 40:9)

9 சுயம்பாகிகளின் தலைவன் - தன்னைக் குறித்து (ஆதி 40:16)

10 பார்வோன் - பஞ்சத்தைக் குறித்து (ஆதி 41:1-4)

11 பார்வோன் - பஞ்சத்தைக் குறித்து (ஆதி 41:5-8)

12 மீதியானியர் - கிதியோனைக் குறித்து (நீதி 7:13)

13 சாலொமோன் - ஞானத்தைக் குறித்து (1 இராஜா 3:5-15)

14 எலிப்பாஸ் - ஆவியைக் குறித்து (யோபு 4:12-21)

15. யோபு - பயங்கரத்தைக் குறித்து யோபு 7:14

16 நேபுகாத்நேச்சார் - ராஜ்யங்களைக் குறித்து (தானி 2)

17 நேபுகாத்நேச்சார் - தன்னைக் குறித்து (தானி 4)

18 தானியேல் - ராஜ்யங்களைக் குறித்து (தானி 7)

19 தானியேல் - ராஜ்யங்களைக் குறித்து (தானி 8)

20 தானியேல் - தேவனைக் குறித்து (தானி 10:5-9)

21 கள்ளத்தீர்க்கதரிசிகள் - பொய்யைக் குறித்து (எரே 23:27-32; எரே 29:8)

22 குறிசொல்லுகிறவர்கள் - தவறான காரியங்களைக் குறித்து (சக 10:2)

23 யோசேப்பு - மரியாளைக் குறித்து (மத் 1:20)

24 யோசேப்பு - எகிப்திற்கு ஓடிப் போவதைக் குறித்து (மத் 2:13)

25 யோசேப்பு - வீட்டிற்குத் திரும்பி வருவதைக் குறித்து (மத் 2:19)

26 யோசேப்பு - ஏரோதுவைக் குறித்து (மத் 2:22)

27 சாஸ்திரிகள் - எச்சரிப்பைக் குறித்து (மத் 2:12)

28. பிலாத்துவின் மனைவி - இயேசுவைக் குறித்து (மத் 27:19)

29 கொர்நேலியு - தூதனைக் குறித்து (அப 10:3-6)

30 பேதுரு - மிருகங்களைக் குறித்து (அப 10:10-16)

31 பவுல் - ஒரு மனுஷனைக் குறித்து (அப 16:9)

32 பவுல் - ரோமாபுரிக்குப் போவதைக் குறித்து (அப 23:11)

33. பவுல் - பாதுகாப்பைக் குறித்து (அப 28:23-24)

34. யோவான் - இயேசுவைக் குறித்து (வெளி 1:12-18)

"பரபாசை விட்டுவிடக் கேட்டுக் கொள்ளவும் இயேசுவைக் கொலை செய்விக்கவும் பிரதான ஆசாரியரும் மூப்பரும் ஜனங்களை ஏவி விட்டார்கள்" - யூதமார்க்கத் தலைவர்கள் செய்த வெட்கக் கேடான காரியம். ஜனங்களிடத்தில் பாவம் செய்யக்கூடாது என்று உபதேசம் பண்ண வேண்டியவர்கள் இப்போது அவர்களைப் பாவம் செய்யுமாறு ஏவிவிடுகிறார்கள்

"அதற்கு அவர்கள் பரபாசை என்றார்கள்" - சில நாட்களுக்கு முன்பாக இயேசு கிறிஸ்து எருசலேமிற்குள் பவனி வந்தார் அவருக்கு "ஓசன்னா" என்று சொல்லி வரவேற்ற அதே ஜனங்கள் இப்போது பரபாசை விடுதலை பண்ண வேண்டும் இயேசுவைச் சிலுவையில் அறைய வேண்டும் என்று கூறுகிறார்கள்

"கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்யவேண்டும்" - மானிட ஜீவியத்தில் இது முக்கியமான கேள்வி இதற்கு நாம் என்ன பதில் கூறுகிறோம் என்பதைப் பொறுத்தே நமது நித்திய ஜீவன் அமையும்.

27 அதிகாரம்

"ஏன், என்ன பொல்லாப்புச் செய்தான்" - இந்த கேள்விக்கு இன்னும் யாரும் பதில் கூறமுடியவில்லை. யாராலும் பதில் கூறமுடியாது. ஏனெனில் இயேசு கிறிஸ்து ஒரு பாவமும் அறியாதவர் (1பேதுரு 2:22)

"கலகம் அதிகமாகிறதேயல்லாமல் தன் பிரயத்தனத்தினாலே பிரயோஜனமில்லையென்று பிலாத்து கண்டு, தண்ணீரை அள்ளி, ஜனங்களுக்கு முன்பாகக் கைகளைக் கழுவி, இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன் நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்றான்" - பிலாத்து இயேசுவை விடுதலை பண்ண மனதாக இருந்தான். ஆனால் ஜனங்களோ இயேசுவைக் கொலைசெய்ய வேண்டுமென்று வைராக்கியமாக இருந்தார்கள். தேசாதிபதியால் நீதியான காரியத்தைச் செய்ய முடியவில்லை. ஜனங்களுடைய முடிவுக்குத் தனது தீர்ப்பை ஒப்புக்கொடுக்கிறான்.

"தண்ணீரை அள்ளி, ஜனங்களுக்கு முன்பாகக் கைகளைக் கழுவினான்" - ஏதாவது ஒரு காரியத்தில் தனக்கு எந்தவித பங்கும் இல்லை, தான் ஒரு நிரபராதி என்பதை அறிவிப்பதற்கு தன்னுடைய கைகளைக் கழுவுவது அக்காலத்து வழக்கம். (உபா 21:1-9; சங் 26:6) பிலாத்துவிற்குப் போர்சேவகர்கள் இருந்தார்கள். பிலாத்து விரும்பியிருந்தால் அவனால் கலகத்தை அடக்கி இயேசுவை விடுதலை பண்ணியிருக்க முடியும். ஆனால் அவனோ தனது கடமையின் பிரகாரம் செய்ய வேண்டியதைச் செய்யாமல் தன்னுடைய கைகளைக் கழுவிவிட்டான்.

"இவனுடைய இரத்தப்பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக" இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்கு யூதர்கள் உடன்டியாக பொறுப்பு ஏற்றுக் கொள்கிறார்கள். இயேசுவின் இரத்தப்பழி தங்கள்மீதும் தங்கள் பிள்ளைகளின்மீதும் இருப்பதாக என்று அவசரப்பட்டுக் கூறுகிறார்கள். அவர்கள்மீது இரத்தப்பழி வந்தது. உக்கிரமாக வந்தது. ரோமர்கள் ஏராளமான யூதர்களை இயேசுவைச் சிலுவையில் அறைந்தது போலவே அறைந்து கொன்றுபோட்டார்கள் (லூக்கா 21:20-24) இதைக் குறித்து வரலாற்று ஆசிரியர்கள் எழுதும்போது அனுதினமும் 500 யூதர்களை ரோமர்கள் சிலுவையில் அறைந்தார்கள் என்று எழுதியிருக்கிறார்கள். அவர்களுடைய பிள்ளைகள் எல்லா தேசங்களுக்கும் சிதறி ஓடினார்கள். தாங்கமுடியாத துயரத்தை அனுபவித்தார்கள். அவர்களுக்கு இன்னும் அனுபவிக்க வேண்டிய துன்பம் காத்துக்கொண்டிருக்கிறது. (மத் 24:15-22; எரே 30:3-9; எசே 20:33-38; தானி 11:40-45; தானி 12:1; சக 13:9; சக 14:1-5; வெளி 6:1-19:21)

"இயேசுவையோ வாரினால் அடிப்பித்தான்" - வாரினால் அடிப்பது குற்றவாளிகளுக்குக் கொடுக்கப்படும் கடுமையான தண்டனை. வார் என்பது சவுக்கைக் குறிக்கும். வாரின் கைப்பிடிகளில் பன்னிரண்டிருக்கும். மெல்லிய தோல்வார்கள் இருக்கும். அதன் முனைகளில் எலும்புத் துண்டுகளோ உலோகத் துண்டுகளோ இணைக்கப்பட்டிருக்கும். இதனால் வாரினால் அடிக்கும்போது வேதனை அதிகரிக்கும். குற்றவாளியை ஒரு மரத்தில் கட்டி வைத்து வாரினால் அடிப்பார்கள். அவனுடைய முதுகிலும் இடுப்பிலும் சில வேளைகளில் அவனுடைய முகத்திலும் அடிப்பார்கள். ஒவ்வொரு முறை வாரினால் அடிக்கும்போதும் குற்றவாளியின் சதை பிய்ந்து போகும். தண்டனை மிகவும் கடுமையாக இருப்பதினால் சவுக்கடி தாங்கமுடியாமல் பல குற்றவாளிகள் மயக்கமடைவார்கள். பலர் அப்படியே மடிந்தும் விடுவார்கள்.

குற்றவாளிகளிடமிருந்து இரகசியங்களைத் தெரிந்து கொள்வதற்காகவும் அவர்களை வாரினால் அடிப்பார்கள். குற்றங்களை ஒப்புக்கொள்ள வைப்பதற்காகவும் வாரினால் அடிக்கும் வழக்கம் இருந்தது. ஒரு பாவமும் அறியாத இயேசு கிறிஸ்துவிடம் எதை எதிர்பார்த்து வாரினால் அடித்தார்களோ தெரியவில்லை. (அப் 22:24,25) பிரமாணத்தின் பிரகாரமாக ஒருவரை 40 முறை வாரினால் அடிக்கலாம். (உபா 25:3) யூதர்கள் 39 முறை வாரினால் அடிக்கலாம் என்று அனுமதித்தார்கள். (2கொரி 11:24,25)

இயேசுவை அடித்த சவுக்கில் பன்னிரண்டு வார்கள் இருக்குமென்றால் அவரை 39 தடவைகள் அடித்தபோது அவருடைய சரீரத்தில் 468 தழும்புகள் உண்டாயிருக்கும். பட்ட இடத்திலேயே அடி திரும்பப்பட்டால் சதைக்குள் இருக்கும் எலும்பெல்லாம் வெளியே தெரியும். (ஏசா 52:14)

27 அதிகாரம்

9. இயேசுவின் சிரசின்மீது முள்முடி - (மாற்கு 15:16; யோவான் 19:1)

மத் 27:27 அப்பொழுது, தேசாதிபதியின் போர்ச்சேவகர் இயேசுவைத் தேசாதிபதியின் அரமனையிலே கொண்டுபோய், போர்ச்சேவகரின் கூட்டம் முழுவதையும் அவரிடத்தில் கூடிவரச் செய்து,

மத் 27:28 அவர் வஸ்திரங்களைக் கழற்றி, சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி,

மத் 27:29 முள்ளுகளால் ஒரு முடியைப் பின்னி, அவர் சிரசின்மேல் வைத்து, அவர் வலதுகையில் ஒரு கோலைக் கொடுத்து, அவர் முன்பாக முழங்காற்படியிட்டு: யூதருடைய ராஜாவே, வாழ்க என்று அவரைப் பரியாசம்பண்ணி,

மத் 27:30 அவர்மேல் துப்பி, அந்தக் கோலை எடுத்து, அவரைச் சிரசில் அடித்தார்கள்.

மத் 27:31 அவரைப் பரியாசம் பண்ணினபின்பு, அவருக்கு உடுத்தின மேலங்கியைக் கழற்றி, அவருடைய வஸ்திரங்களை அவருக்கு உடுத்தி, அவரைச் சிலுவையில் அறையும்படி கொண்டுபோனார்கள்.

மத் 27:32 போகையில், சிரேனே ஊரானாகிய சீமோன் என்னப்பட்ட ஒரு மனுஷனை அவர்கள் கண்டு, அவருடைய சிலுவையைச் சுமக்கும்படி அவனைப் பலவந்தம் பண்ணினார்கள்.

"அரமனை" - விசாரணை நடைபெறும் இடம். (மாற்கு 15:16; யோவான் 18:28,33; யோவான் 19:9) திறந்தவெளி. போர்ச்சேவகர்கள் தங்கியிருக்கும் இடம். பிலாத்துவின் அரண்மனை சீயோன் மலையில் உயர்ந்த இடத்தில் கட்டப்பட்டிருந்தது. இந்த இடத்தில் பிலாத்துவின் வீடும், அவனுடைய போர்ச்சேவகரும் இருந்தார்கள். (மாற்கு 15:16)

"சிவப்பான மேலங்கி" - இது ரோமருடைய இராணுவ உடையாக இருக்கலாம். யூதருக்கு ராஜாவாக இருப்பவரைப் பரியாசம் பண்ணுவதற்காக போர்ச்சேவகர்கள் இயேசுவிற்குச் சிவப்பான அங்கியை உடுத்தியிருக்கலாம்.

"முள்ளுகளால் ஒரு முடியைப் பின்னி, அவர் சிரசின்மேல் வைத்து, அவர் வலது கையில் ஒரு கோலைக் கொடுத்தார்கள்" - கொடூரமான முறையில் இயேசுவைப் பரியாசம் பண்ணுகிறார்கள். தம்மைப் பற்றி இயேசு கிறிஸ்து கூறிய தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறது. (மத் 20:17-19)

முட்கள் (thorns) - ἄκανθα - akantha - 173

பெண்பால் பெயர்ச்சொல் - முட்செடி, முள், முள்செடி (மத் 7:16; மத் 13:22; மத் 27:29; மாற்கு 4:7; மாற்கு 4:18; லூக்கா 6:44; லூக்கா 8:14; யோவான் 19:2; எபி 6:8) இயேசு கிறிஸ்துவின் சிரசில் வைக்கப்பட்ட முள்முடி எந்த முள்ளால் ஆனது என்று தெளிவாகத் தெரியவில்லை. ஆனாலும் குத்தினால் இரத்தம் வரக்கூடிய கடினமான முள்ளாக இருக்க வேண்டும். (நியா 8:7,16; சங் 58:9; நீதி 15:19; பிர 7:6; ஏசா 7:23-25; ஓசி 2:6; ஓசி 9:6; ஓசி 10:8; மீகா 7:4)

"அவரைச் சிலுவையில் அறையும்படி கொண்டு போனார்கள்" - சிலுவை மரணம் மிகவும் கொடூரமானது. அவமானத்திற்குரியது. மிகப்பெரிய குற்றவாளிகளுக்கு மட்டுமே இந்தத் தண்டனை கொடுக்கப்பட்டது. சிலுவை மரத்தில் குற்றவாளியின் இரண்டு கைகளையும் விரித்து ஆணிகளால் அறைவார்கள். அதன்பின்பு இரண்டு கால்களையும் சேர்த்து ஆணிகளால் அறைவார்கள். ஒரு பள்ளம் தோண்டி, சிலுவை மரத்தை குற்றவாளியோடு தூக்கி, அந்தப் பள்ளத்தில் நிறுத்துவார்கள். இவ்வாறு செய்யும்போது சிலுவையில் தொங்கும் நபருடைய எலும்பு மூட்டுகளெல்லாம் கழன்று போகும். சிலுவையில் தொங்கும் நபருடைய முழு சரீர பாரத்தையும் கைகளிலும், கால்களிலும் அறையப்பட்டிருக்கிற ஆணிகளே தாங்குகிறது. சிலுவையில் அந்த நபரை உயிரோடு விட்டு விடுவார்கள். அவர் வேதனை தாங்க முடியாமல் சிலுவையிலேயே மரித்து விடுவார்.

27 அதிகாரம்

"சிரேனே" - வடக்கு ஆப்பிரிக்காவில உள்ள லிபியா தேசத்தின் தலைநகரம் மத்திய தரைக்கடலுக்கு 11 மைல் தெற்கு முகமாக உள்ளது.

10. இயேசுவைச் சிலுவையில் அறைகிறார்கள் - (மாற்கு 15:22 லூக் 23:32 யோவான் 19:16)

மத் 27:33 கபாலஸ்தலம் என்று அர்த்தங்கொள்ளும் கொல்கொதா என்னும் இடத்துக்கு அவர்கள் வந்தபோது,

மத் 27:34 கசப்புக்கலந்த காடியை அவருக்குக் குடிக்கக்கொடுத்தார்கள் அவர் அதை ருசிபார்த்து, குடிக்க மனதில்லாதிருந்தார்

மத் 27:35 அவரைச் சிலுவையில அறைந்தபின்பு அவர்கள் சீட்டுப்போட்டு அவருடைய வஸ்திரங் களைப் பங்கிட்டுக் கொண்டார்கள் என் வஸ்திரங்களைத் தங்களுக் குள்ளே பங்கிட்டு, என் உடையின் பேரில சீட்டுப்போட்டார்கள் என்று தீர்க்கதரிசியால உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.

மத் 27:36 அவர்கள் அங்கே உட்கார்ந்து, அவரைக் காவல காத்துக் கொண்டிருந்தார்கள்

மத் 27:37 அன்றியும் அவர் அடைந்த ஆக்கினையின முகாந்தரத்தைக் காண்பிக்கும் பொருட்டு, இவன் யூதருடைய ராஜாவாகிய இயேசு என்று எழுதி, அவர் சிரசுக்கு மேலாக வைத்தார்கள்

மத் 27:38 அப்பொழுது, அவருடைய வலது பக்கத்தில ஒருவனும் அவருடைய இடது பக்கத்தில் ஒருவனுமாக இரண்டு கள்ளர் அவரோடேகூடச் சிலுவைகளில் அறையப்பட்டார்கள்

மத் 27:39 அந்த வழியாய நடந்து போகிறவர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி:

மத் 27:40 தேவாலயத்தை இடித்து மூன்று நாளைக்குள்ளே கட்டு கிறவனே உன்னை நீயே ரட்சித்துக் கொள் நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கிவா என்று அவரைத் தூஷித் தார்கள்

மத் 27:41 அப்படியே பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் பரியாசம் பண்ணி,

மத் 27:42 மற்றவர்களை ரட்சித்தான் தன்னைத்தான் ரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை இவன் இஸ்ரவேலின் ராஜாவானால இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கிவரட்டும் அப்பொழுது இவனை விசுவாசிப்போம்

மத் 27:43 தன்னை தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன்மேல நம்பிக்கையாயிருந்தானே அவர் இவன்மேல பிரியமாயிருந்தால இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்றார்கள்

மத் 27:44 அவரோடேகூடச் சிலுவை களில அறையப்பட்ட கள்ளரும் அந்தப் படியே அவரை நிந்தித்தார்கள்

"கபாலஸ்தலம் என்று அர்த்தங்கொள்ளும் கொல்கொதா" **(Golgotha, skull, calvaria)** லூக்கா 23:33 எருசலேமிற்கு வெளியேயுள்ள இடம். எபி 13:12 ஓரிகன் **(Origen)** (கிபி. 185-253) என்னும் வரலாற்று ஆசிரியர் கொல்கொதாவைப் பற்றிக் கூறும்போது இயேசு கிறிஸ்து சிலுவையில அறையப்பட்ட இடத்தில தான், ஆதாம் அடக்கம் பண்ணப்பட்டார் எனவும், அவருடைய கபாலம் அங்கு கண்டுபிடிக்கப் பட்டதாகவும் எழுதியிருக்கிறார்

27 அதிகாரம்

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 22

"கசப்புக்கலந்த காடியை அவருக்குக் குடிக்கக்கொடுத்தார்கள்; அவர் அதை ருசிபார்த்து, குடிக்க மனதில்லாதிருந்தார்" (சங் 69:21; மத் 27:34) சிலுவையில் தொங்கும் நபருக்கு தாங்க முடியாத வேதனை உண்டாகும் அந்த வேதனையைக் குறைப்பதற்காக சிலுவையில் தொங்கும் நபருக்கு போதையைக் கொடுக்கக்கூடிய காடியைக் கொடுப்பார்கள் (நீதி 31:6) ஆனால் இயேசு கிறிஸ்து அதைக் குடிக்க மனதில்லாதிருந்தார் முழுபாடும் அனுபவிக்க விரும்பினார் தான் அனுபவிக்க வேண்டிய பாடுகளில் எதுவும் குறையக் கூடாது என்பதில் அதிக கவனமாக இருந்தார்

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 23

"என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின்பேரில் சீட்டுப் போட்டார்கள்" (சங் 22:18, மத் 27:35)

"அவர்கள் அங்கே உட்கார்ந்து, அவரைக் காவல் காத்துக்கொண்டிருந்தார்கள்" - போர்ச்சேவகர்கள் இயேசுவைச் சிலுவையில் அறைந்து அங்கு காவல் காத்துக் கொண்டிருந்தார்கள் ஏனெனில் சில சமயங்களில் சிலுவையில் தொங்குபவருடைய குடும்பத்தாரோ அல்லது நண்பர்களோ வந்து அந்த நபரை விடுவித்துக் கொண்டு போய் விடுவார்கள் இதற்காகவே சேவகர்கள் சிலுவையில் தொங்கும் இயேசுவைக் காவல்காத்துக் கொண்டிருந்தார்கள்

"இவன் யூதருடைய ராஜாவாகிய இயேசு" இயேசுவைச் சிலுவையில் அறைந்தார்கள் அந்தச் சிலுவையின்மீது என்ன எழுதப் பட்டிருந்தது என்பதில் வேதபண்டிதர்களுக்குள்ளே கருத்து வேறுபாடு உள்ளது. நான்கு சுவிசேஷங்களிலும் வெவ்வேறு விதமான வார்த்தைகளை நாம் வாசிக்கிறோம்

1 மத் 27:37 இவன் யூதருடைய ராஜாவாகிய இயேசு

2 மாற்கு 15:26 - யூதருடைய ராஜா

3 லூக்கா 23:38 - இவன் யூதருடைய ராஜா

4 யோவான் 19:19 - நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா

இந்த எழுத்துக்கள் கிரேக்கு, லத்தீன், எபிரெயு ஆகிய பாஷைகளின் எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தது.

"அப்பொழுது, அவருடைய வலது பக்கத்தில் ஒருவனும் அவருடைய இடது பக்கத்தில் ஒருவனுமாக இரண்டு கள்ளர் அவரோடேகூடச் சிலுவைகளில் அறையப் பட்டார்கள்" - இரண்டு கள்ளர்களில் ஒருவன் இயேசுவைத் தூஷித்தான் மற்றவனோ தனக்கு இரக்கம் காண்பிக்கு மாறு கெஞ்சுகிறான் (மத் 27:38, மத் 27:44, மாற்கு 15:32, லூக்கா 23:32, லூக்கா 23:39-40)

"தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே உன்னை நீயே இரட்சித்துக்கொள்" - இயேசு கிறிஸ்து கூறிய வார்த்தையை அவரிடமே திரும்பக் கூறி அவரைப் பரியாசம்பண்ணுகிறார்கள் (யோவான் 2:19-21)

"அப்படியே பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் பரியாசம் பண்ணினார்கள்" இயேசுவைப் பரியாசம் பண்ணுவதற்காக மார்க்கத்தலைவர்கள் அவர் சிலுவையில் தொங்கும் இடத்திற்கே வந்து விட்டார்கள் சிலுவையில் மரிக்கும் இயேசுவின் வேதனையைக் கூட்டுவதற்காக இவர்கள் இங்கு வந்து அவரைப் பரியாசம் பண்ணினார்கள்

"மற்றவர்களை ரட்சித்தான், தன்னைத் தான் ரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை" இயேசு கிறிஸ்து சிலுவையில் மரிக்காமல் தன்னை இரட்சித்துக் கொண்டால், மனுக்குலம் இரட்சிக்கப்படுவதற்கு வாய்ப் பேயில்லை (மத் 16:25) இயேசு சிலுவையில் மரிக்காமல் தம் ஜீவனைக் காத்துக் கொண்டால், இந்த உலகத்திற்கு அவர் வந்ததன் நோக்கமே தோல்வியடைந் திருக்கும். (யோவான் 3:14-16, கலா 3:13 கொலோ 1:20; கொலோ 2:14-17; 1பேதுரு 2:24) மனுக்குலத்தை இரட்சிக்க வேண்டும் என்பது தேவனுடைய திட்டம் இதற்கு எதிராக அவர் ஒருபோதும் கிரியை செய்த தில்லை

27 அதிகாரம்

"சிலுவையிலிருந்து இறங்கிவரட்டும் அப்பொழுது இவனை விசுவாசிப்போம்" - கல்வாரி சிலுவையில் மரித்துக் கொண்டிருக்கும் இயேசுவைத் தடைபண்ணுவதற்கு சாத்தான் எடுக்கும் கடைசி முயற்சி. அவர் சிலுவையில் மரித்தால் மனுக்குலத்திற்கு இரட்சிப்பு உண்டு. தனக்கு அழிவு உண்டு என்பது சாத்தானுக்கு நன்றாகத் தெரியும். ஆகையினால் அவரை எப்படியாவது சிலுவையில் மரிக்கவிடாமல் தடுத்துவிட வேண்டுமென்று சாத்தான் எல்லா விதமான தந்திரங்களையும் செய்கிறான். சாத்தானின் வஞ்சக வார்த்தைகளுக்கு இயேசு கிறிஸ்து கீழ்ப்படிந்திருந்தால் மனுக்குலத்திற்கு இரட்சிப்பும் இல்லை. இயேசுவின் திட்டத்தில் ஜெயமும் இல்லை. கொலோ 2:14-17 கலா 3:13

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன வசன - 24

"தன்னை தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன்மேல் நம்பிக்கையாயிருந்தானே. அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும்" சங் 22:8 மத் 27:43

இயேசுவின் சத்துருக்கள் இயேசுவைப் பற்றிக் கூறிய இரண்டு சாட்சிகள்

1. இயேசு மற்றவர்களை இரட்சித்தார் (மத் 27:42; அப் 10:38)
2. இயேசு தேவன்மேல் நம்பிக்கையாய் இருந்தார் (மத் 27:43; சங் 22:8)

இக்காலத்தில் உலகத்தார் விசுவாசிகளைக் குறித்து இப்படிச் சாட்சி கூறினால் அது அவர்களுக்கும் ஆசீர்வாதம் சபைக்கும் ஆசீர்வாதம்

11. இயேசுவின் மரணம் - (மாற்கு 15:33; லூக் 23:44; யோவான் 19:28)

மத் 27:45 ஆறாம்மணி நேரமுதல் ஒன்பதாம் மணி நேரம் வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று.

மத் 27:46 ஒன்பதாம்மணி நேரத்தில் இயேசு: ஏலீ! ஏலீ! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்.

மத் 27:47 அங்கே நின்றவர்களில் சிலர் அதைக் கேட்டபொழுது, இவன் எலியாவைக் கூப்பிடுகிறான் என்றார்கள்.

மத் 27:48 உடனே அவர்களில் ஒருவன் ஓடி, கடற்காளானை எடுத்து, காடியில் தோய்த்து, அதை ஒரு கோலில் மாட்டி, அவருக்குக் குடிக்கக் கொடுத்தான்.

மத் 27:49 மற்றவர்களோ, பொறு, எலியா இவனை இரட்சிக்க வருவானோ பார்ப்போம் என்றார்கள்.

மத் 27:50 இயேசு, மறுபடியும் மகா சத்தமாய்க் கூப்பிட்டு, ஆவியை விட்டார்.

மத் 27:51 அப்பொழுது, தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது; பூமியும் அதிர்ந்தது; கன்மலைகளும் பிளந்தது.

மத் 27:52 கல்லறைகளும் திறந்தது; நித்திரையடைந்திருந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரங்களும் எழுந்திருந்தது.

மத் 27:53 அவர் உயிர்த்தெழுந்த பின்பு, இவர்கள் கல்லறைகளைவிட்டுப் புறப்பட்டு, பரிசுத்த நகரத்தில் பிரவேசித்து, அநேகருக்குக் காணப்பட்டார்கள்.

மத் 27:54 நூற்றுக்கு அதிபதியும், அவனோடேகூட இயேசுவைக் காவல் காத்திருந்தவர்களும் பூமியதிர்ச்சியையும் சம்பவித்த காரியங்களையும் கண்டு, மிகவும் பயந்து: மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன் என்றார்கள்.

மத் 27:55 மேலும், இயேசுவுக்கு ஊழியஞ்செய்யும்படி கலிலேயாவிலிருந்து அவரோடே வந்திருந்த அநேக ஸ்திரீகள் அங்கே தூரத்திலே நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

27 அதிகாரம்

மத் 27:56 அவர்களுக்குள்ளே மகதலேனா மரியாளும், யாக்கோபுக்கும், யோசேக்கும் தாயாகிய மரியாளும், செபெதேயுவின் குமாரருடைய தாயும் இருந்தார்கள்

மத்தேயு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 25

"என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்" (சங் 22:1; மத் 27:46) இயேசு மரித்துக் கொண்டிருக்கும் வேளையிலகூட தீர்க்கதரிசன வார்த்தையை மேற்கோளாகக் கூறுகிறார்

இயேசு கிறிஸ்து சிலுவையில் கூறிய வார்த்தைகள்

1 என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்? (சங் 22:1; மத் 27:46, மாற்கு 15:34)

2 பிதாவே. இவர்களுககு மன்னியும். தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறாகளே (லூக்கா 23:34)

3 இன்றைக்கு நீ என்னுடனேகூட பரதீசிலிருப்பாய என்று மெய்யாகவே உனக்குச சொல்லுகிறேன (லூக்கா 23:43)

4 பிதாவே, உம்முடைய கைகளில் என ஆவியை ஒப்புவிக்கிறேன (லூக்கா 23:46)

5 ஸ்திரீயே, அதோ உன் மகன அதோ உன் தாய் (யோவான 19:26 27)

6 தாகமாயிருக்கிறேன (யோவான் 19:28)

7 முடிந்தது (யோவான் 19:30)

"மகா சத்தமாயக் கூப்பிட்டார்" - இயேசு கிறிஸ்து மரிக்கும் தருவாயிலகூட அவருக்கு முடிவு வரையிலும் பலன இருந்தது. அவா தாமாகவே தமது ஜீவனை ஒப்புக்கொடுத்தார் (யோவான் 10:18)

"ஆவியை விட்டார்" - இயேசு தமது ஆவியையும், ஆத்துமாவையும் விட்டார் (லூக்கா 23:46; யோவான் 10:18 யோவான் 19:30; யாக் 2:26

"தேவாலயத்தின் திரைச்சீலை மேல் தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது" - தேவாலயத்தில் இரண்டு திரைச் சீலைகள் இருக்கும். ஒன்று பரிசுத்த ஸ்தலத்தின் வாசலில இருக்கும் மற்றொன்று பரிசுத்த ஸ்தலத்திற்கும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும நடுவில் இருக்கும் மகா பரிசுத்த ஸ்தலத்தில பிரதான ஆசாரியர் மட்டும வருஷத்திறகு ஒருமுறை ஜனங்களுடைய பாவங்களுக்காகப பாவநிவாரண பலி செலுத்துவதறகாக உள்ளே போவார் (எபி 9:2-9) தேவாலயத்தின் திரைச்சீலை 60 அடி உயரமுள்ளது. இந்தத் திரைச்சீலை மேலதொடங்கி கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது. யூதருக்கும புறஜாதியாருக்கும் இடையிலுள்ள பிரிவினை அகன்றது (எபே 2:14-18) ஒவவொரு விசுவாசியும் தேவனிடத்தில பிரதான ஆசாரியரின் துணையிலலாமல் நேரடியாகவே சென்று தங்களுடைய விண்ணப்பங்களை ஏறெடுக்க முடியும். (எபே 2:14-18 எபி 9:8 எபி 10:19-23)

"கல்லறைகளும திறநதது நித்திரையடைந்திருநத அநேக பரிசுததவானகளுடைய சரீரங்களும் எழுநதிருநதது" - இயேசு கிறிஸது உன்னததத்திறகு ஏறி சிறைபபட்டவாகளைச் சிறையாக்கினார் அதற்கு முன்னே பூமியின தாழ்விடங்களில இறங்கினார் (எபே 4:8-10, எபி 2:14-15) இப்போது விசுவாசிகள மரிக்கும்போது தாழ்விடங்களுக்குப போக வேண்டியதில்லை பரதேசிறகு சென்று அங்கு தங்களுடைய உயிரதெழுந்த சரீரம் வருவதற்காக காத்திருப்பாரகள் (2கொரி 5:8, பிலி 1:21 24; எபி 12:22; வெளி 6:9-11 துன்மாரககர் மரித்த பினபு நரகத்திற்குச் சென்று தஙகளுடைய சரீர உயிரத் தெழுதலுககாக காத்துக் கொண்டிருப பார்கள (லூக்கா 16:19-31; வெளி 20:11-15

"அவர் உயிர்த்தெழுந்தபினபு இவர்கள் கல்லறைகளைவிட்டுப புறபபட்டு, பரிசுத்த நகரத்தில பிரவேசித்து அநேகருக்குக் காணபபட்டாரகள்" இயேசு கிறிஸது உயிர்த்தெழுவதறகு முன்பாக இவாகள உயிர்த்தெழுவதிலலை. (லூக்கா 24:39 1கொரி 15:20-23; வெளி 1:5

27 அதிகாரம்

"மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன் என்றார்கள்" - தேவனுடைய ஒரேபேறான குமாரன் (யோவான் 1:14,18; யோவான் 3:16,18; கொலோ 1:15-18) இயேசு கிறிஸ்து தேவனுடைய ஒரேபேறானவர் நாம் அவருடைய சுவிகார புத்திரர் (ரோமர் 8:14-16; கலா 4:5; எபே 1:5)

"இயேசுவுக்கு ஊழியஞ்செய்யும்படி கலிலேயாவிலிருந்து அவரோடே வந்திருந்த அநேக ஸ்திரீகள் அங்கே தூரத்திலே நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள்" - இயேசு கிறிஸ்துவோடு கூட இருந்த சீஷர்கள் அவரோடு மரிப்பதாக வாக்குபண்ணினார்கள் ஆனால் துன்பம் வந்தபோதோ அவர்கள் எல்லோரும் இயேசுவை விட்டே ஓடிப்போய்விட்டார்கள் ஆனால் ஸ்திரீகளோ புருஷர்களைவிட தைரியமுடையவர்களாக இருக்கிறார்கள் அவர்கள் இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட இடத்திற்கே வந்துவிட்டார்கள் (லூக்கா 8:3)

"மகதலேனா மரியாள்" - (மத் 13:55)

"செபெதேயுவின் குமாரருடைய தாய்" (மத் 4:21; மத் 20:20-22)

12. இயேசுவின் சரீரத்தை அடக்கம் பண்ணுகிறார்கள் - (மாற்கு 15:24; லூக் 23:50; யோவான் 19:38)

மத் 27:57 சாயங்காலமானபோது இயேசுவுக்குச் சீஷனும் ஐசுவரியவானுமாயிருந்த யோசேப்பு என்னும் பேர்கொண்ட அரிமத்தியா ஊரானாகிய ஒரு மனுஷன் வந்து

மத் 27:58 பிலாத்துவினிடத்தில் போய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டான் அப்பொழுது, சரீரத்தைக் கொடுக்கும்படி பிலாத்து கட்டளையிட்டான்

மத் 27:59 யோசேப்பு அந்தச் சரீரத்தை எடுத்து, துய்யதான மெல்லிய துப்பட்டியிலே சுற்றி,

மத் 27:60 தான் கன்மலையில் வெட்டியிருந்த தன்னுடைய புதிய கல்லறையிலே அதை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டிவைத்துப் போனான்

மத் 27:61 அங்கே மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறைக்கு எதிராக உட்கார்ந்திருந்தார்கள்

"ஐசுவரியவான்" - ஏசா 53:9 ஆவது வசனத்தின் நிறைவேற்றம்.

"அரிமத்தியா" - (மத் 27:57; 1 சாமு 1:19; மாற்கு 15:43; லூக்கா 23:51; யோவான் 19:38)

"யோசேப்பு" - யோசேப்பும் நிக்கொதேமுவும் இயேசுவின் இரகசிய சீஷர்கள் அவர்கள் இயேசுவை அடக்கம் பண்ணினார்கள் (மாற்கு 15:43; லூக்கா 23:50-53; யோவான் 19:38-39)

பஸ்கா இராப்போஜனத்திலிருந்து கல்வாரி சிலுவையில் இயேசுவின் மரணம் வரையிலும் நடைபெற்ற நிகழ்ச்சிகள்

1. போஜனம்பண்ணுவதற்கு அமர்ந்தார் (மத் 26:20; மாற்கு 14:17; லூக்கா 22:14; யோவான் 13:1)

2. கால்களைக் கழுவினார் (யோவான் 13:2-20)

3. பஸ்கா போஜனம் புசித்தார் கர்த்தருடைய இராப்போஜனம் ஆரம்பமாகிறது. தாம் காட்டிக்கொடுக்கப்படப்போவதை அறிவித்தார் புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தினார் (மத் 26:21-29; மாற்கு 14:18-25; லூக்கா 22:15-23; யோவான் 13:21-30)

4. பேதுரு தம்மை மறுதலிக்கப்போவதைப் பற்றிய முதலாவது தீர்க்கதரிசனம் (யோவான் 13:36-38)

5. சீஷர்கள் மத்தியில் பிளவு (லூக்கா 22:24-30)

6. பேதுரு தம்மை மறுதலிக்கப்போவதைப் பற்றிய இரண்டாவது தீர்க்கதரிசனம் (லூக்கா 22:31-34)

27 அதிகாரம்

7 சீஷர்களின் ஊழியத்தைப் பற்றிய இறுதி அறிவிப்புக்கள் (லூக்கா 22:35-38; யோவான் 14:1-31)

8 மேலறையிலிருந்து புறப்பட்டுப் போனார்கள் (மத் 26:30; மாற்கு 14:26; லூக்கா 22:39 யோவான் 14:31)

9 கெத்செமனே தோட்டத்திற்குப் போகும் வழியில் கடைசி பிரசங்கமும் ஜெபமும் (யோவான் 15:1-17:26)

10 பேதுரு தம்மை மறுதலிக்கப்போவதைப் பற்றிய மூன்றாவது தீர்க்கதரிசனம் (மத் 26:31-35; மாற்கு 14:27-31)

11 இயேசு கிறிஸ்து கெத்செமனே தோட்டத்திற்கு வந்து வியாகுலப்படுகிறார் (மத் 26:36-46; மாற்கு 14:32-42; லூக்கா 22:40-46, யோவான் 18:1)

12 இயேசு கிறிஸ்து காட்டிக் கொடுக்கப்படுவதும், கைதுபண்ணப்படுவதும் (மத் 26:47-56; மாற்கு 14:43-52 லூக்கா 22:47-53, யோவான் 18:2-11)

13 பிலாத்துவின் முன்பாக விசாரணை (மத் 26:57-27:26; மாற்கு 14:53-15:15, லூக்கா 22:54-23:25 யோவான் 18:12-19:15

14 இயேசுவைச் சிலுவையில் அறைகிறார்கள் (மத் 27:27-56, மாற்கு 15:16-41 லூக்கா 23:32-49 யோவான் 19:16-36

15 இயேசுவை அடக்கம்பண்ணுகிறார்கள் (மத் 27:57-66, மாற்கு 15:42-47 லூக்கா 23:50-56, யோவான் 19:38-42

13. கல்லுக்கு முத்திரைபோட்டு இயேசுவின் கல்லறையைப் பத்திரப்படுத்துகிறார்கள் -

மத் 27:62 ஆயத்தநாளுக்குப் பின்னான மறுநாளிலே பிரதான ஆசாரியரும் பரிசேயரும் பிலாத்துவினிடத்தில் கூடிவந்து,

மத் 27:63 ஆண்டவனே, அந்த எத்தன் உயிரோடிருக்கும்போது, மூன்று நாளைக்குப்பின் எழுந்திருப்பேன் என்று சொன்னது எங்களுக்கு ஞாபகமிருக்கிறது.

மத் 27:64 ஆகையால், அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டுபோய், மரித்தோரிலிருந்து எழுந்தானென்று ஜனங்களுக்குச் சொல்லாதபடிக்கும், முந்தின எத்தைப் பார்க்கிலும் பிந்தின எத்து கொடியதாகாதபடிக்கும், நீர் மூன்று நாள்வரைக்கும் கல்லறையைப் பத்திரப்படுத்தும்படி கட்டளையிட வேண்டும் என்றார்கள்

மத் 27:65 அதற்குப் பிலாத்து: உங்களுக்குக் காவல்சேவகர் உண்டே; போய், உங்களால் கூடியமட்டும் பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள் என்றான்

மத் 27:66 அவர்கள் போய்க் கல்லுக்கு முத்திரைபோட்டு, காவல் வைத்து கல்லறையைப் பத்திரப்படுத்தினார்கள்

தீர்க்கதரிசன எண் - 47

"மூன்று நாளைக்குப்பின் எழுந்திருப்பேன்" (மத் 27:63) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"உங்களுக்குக் காவல்சேவகர் உண்டே; போய், உங்களால் கூடியமட்டும் பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள்" - ஒருவேளையில் நான்கு சேவகர்கள் காவல்காப்பார்கள் மூன்றுமணி நேரத்திற்கு ஒருமுறை காவற்சேவகர் மாற்றப்படுவார்கள் அப் 2:4

"கல்லறையைப் பத்திரப்படுத்தினார்கள்" - தேவன் அசையும்போது அவரை யாராலும் கட்டுப்படுத்த முடியாது.

"அவர்கள் போய்க் கல்லுக்கு முத்திரை போட்டார்கள்" - கல்லறையை மூடியிருக்கும் கல்லில் ஒரு கயிற்றைக் கட்டி அதில் ரோம அரசாங்கத்தின் முத்திரையைப் பதித்தார்கள் கல்லறை திறக்கப்பட்டால் முத்திரை உடைக்கப்பட்டிருக்கும். ரோமப் பேரரசின் முத்திரையை உடைப்பது மகாப் பெரிய குற்றம்.

28 அதிகாரம்

VI. உயிர்த்தெழுந்த பின்பு இயேசுவின் ஊழியம்

1. உயிர்த்தெழுதலுக்குக் கர்த்தருடைய தூதனின் சாட்சி – (மாற்கு 16:1 லூக் 24:1; அப் 1:1)

மத் 28:1 ஓய்வுநாள் முடிந்து வாரத்தின் முதலாம் நாள் விடிந்து வருகையில் மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்கவந்தார்கள்

மத் 28:2 அப்பொழுது, பூமி மிகவும் அதிர்ந்தது; கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்திறங்கிவந்து, வாசலிலிருந்த கல்லைப் புரட்டித் தள்ளி அதின்மேல் உட்கார்ந்தான்

மத் 28:3 அவனுடைய ரூபம் மின்னல் போலவும், அவனுடைய வஸ்திரம் உறைந்த மழையைப்போல வெண்மையாகவும் இருந்தது.

மத் 28:4 காவலாளர் அவனுக்குப் பயந்ததினால் திடுக்கிட்டுச் செத்தவர்கள் போலானார்கள்

மத் 28:5 தூதன் அந்த ஸ்திரீகளை நோக்கி: நீங்கள் பயப்படாதிருங்கள்; சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன்

மத் 28:6 அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்

மத் 28:7 சீக்கிரமாய்ப் போய், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள்; அவர் உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார்; அங்கே அவரைக் காண்பீர்கள்; இதோ, உங்களுக்குச் சொன்னேன் என்றான்

"ஓய்வுநாள்" – இது வாரத்தின் ஓய்வுநாள் ஆகும். பண்டிகையின் விசேஷித்த ஓய்வுநாள் அல்ல. (லேவி 23:7)

"விடிந்துவருகையில்" - அதிகாலைப் பொழுதில் (மாற்கு 16:2 லூக்கா 24:1) இன்னும் இருட்டு இருக்கும்போது (யோவான் 20:1)

"பூமி மிகவும் அதிர்ந்தது" – ஸ்திரீகள் கல்லறைக்கு வருவதற்கு முன்பாகவே, இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்து விட்டார் (மாற்கு 16:4; லூக்கா 24:2; யோவான் 20:1). இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு, மூன்றாம நாளில் உயிர்த்தெழுந்தார் (மத் 12:40, மத் 28:1; மாற்கு 16:2,9; லூக்கா 24:1; யோவான் 20:1,19)

"பூமி அதிர்ச்சி" – மூன்று நாளில் இது இரண்டாம் முறையாக ஏற்பட்ட பூமி அதிர்ச்சி (மத் 27:51)

"கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்திறங்கி வந்து வாசலிலிருந்த கல்லைப் புரட்டித் தள்ளி அதின்மேல் உட்கார்ந்தான்" - ஸ்திரீகள் கல்லறைக்கு வரும்போது கர்த்தருடைய தூதன் கல்லின்மேல் உட்கார்ந்திருந்தான் (மத் 28:5 மாற்கு 16:5)

"அவனுடைய ரூபம் மின்னலைப்போலவும் அவனுடைய வஸ்திரம் உறைந்த மழையைப்போல வெண்மையாகவும் இருந்தது" - சாதாரணமாக தேவதூதர்கள் வரும்போது மனுஷரைப்போலவே இருப்பார்கள். அவர்களிடம் விசேஷித்த தன்மை எதுவும் காணப்படாது. ஆனால் இங்கோ கர்த்தருடைய தூதன் விசேஷித்த வல்லமையோடு வருகிறான் (எபி 13:2)

"காவலாளர் அவனுக்குப் பயந்ததினால் திடுக்கிட்டுச் செத்தவர்கள் போலானார்கள்" – திடுக்கிட்டு செத்துப்போனவர்கள்போல மயங்கி விழுந்தார்கள். ஸ்திரீகளுடன் நடைபெற்ற செய்தியைச் சொல்வதற்காக ஓடிப்போனார்கள் (மத் 28:11)

தேவனுக்கு முன்பாகத் திடுக்கிட்டவர்கள்

1. எலிப்பாஸ் (யோபு 4:14)
2. மோசே (எபி 12:21)
3. எசேக்கியேல் (எசே 12:18)
4. பல புருஷர்கள் (தானி 10:5-7)
5. காவலாளர் (மத் 28:4)
6. பவுல் (அப் 9:6)
7. சிறைச்சாலைக்காரன் (அப் 16:29

28 அதிகாரம்

செத்தவர்கள்போல் இருந்தவர்களுக்கு எடுத்துக்காட்டுக்கள்

1 ஆபிரகாம் (ஆதி 15:12-17)

2 மோசே (உபா 9:18,25)

3 எசேக்கியேல் (எசே 1:28; எசே 3:23; எசே 4:4-17; எசே 43:3)

4 தானியேல் (தானி 8:17; தானி 10:5-19)

5 சீஷர்கள் (மத் 17:6)

6 காவலாளர் (மத் 28:4)

7 பவுல் (அப் 9:4)

8 பேதுரு (அப் 10:10-16)

9 யோவான் (வெளி 1:17; வெளி 19:10; வெளி 22:8)

"அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார். கர்த்தர் வைத்த இடத்தை வந்து பாருங்கள்" - இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குத் தேவதூதர்கள் சாட்சி பகர்ந்தார்கள் (மாற்கு 16:6; லூக்கா 24:5-6,23; யோவான் 21:14)

"சீக்கிரமாய்ப் போய், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள்" - இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு ஸ்திரீகள் இரண்டாவது சாட்சிகள். (மத் 28:7-8,10)

2. உயிர்த்தெழுதலுக்கு ஸ்திரீகளின் சாட்சி - (மாற்கு 16:8; லூக் 24:8; யோவான் 20:11)

மத் 28:8 அவர்கள் பயத்தோடும் மகா சந்தோஷத்தோடும் கல்லறையை விட்டுச் சீக்கிரமாய்ப் புறப்பட்டு, அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்க ஓடினார்கள்.

மத் 28:9 அவர்கள் அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்கப்போகிறபோது, இயேசு தாமே அவர்களுக்கு எதிர்ப்பட்டு: வாழ்க என்றார். அவர்கள் கிட்டவந்து, அவர் பாதங்களைத் தழுவி, அவரைப் பணிந்துகொண்டார்கள்.

மத் 28:10 அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நீங்கள் போய், என் சகோதரர் கலிலேயாவுக்குப் போகும்படி அவர்களுக்குச் சொல்லுங்கள்; அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள் என்றார்.

"அவர்கள் கிட்டவந்து, அவர் பாதங்களைத் தழுவி, அவரைப் பணிந்துகொண்டார்கள்" - இயேசு கிறிஸ்து மரியாளிடம் "என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை" என்று சொன்னார் (யோவான் 20:17)

"சகோதரர்" - இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள் கெத்செமனே தோட்டத்தில் அவரை விட்டு ஓடிப்போனார்கள். தங்களுடைய அவிசுவாசத்தின் நிமித்தம் இயேசுவை விட்டு விலகியே இருந்தார்கள். அவர்களுடைய பாவங்களை இயேசு கிறிஸ்து மன்னித்து விட்டதற்கு அடையாளமாக அவர்களைச் "சகோதரர்" என்று அழைக்கிறார்.

3. உயிர்த்தெழுதலுக்குக் காவல் சேவகரின் சாட்சி

மத் 28:11 அவர்கள் போகையில், காவல்சேவகரில் சிலர் நகரத்துக்குள்ளே வந்து, நடந்த யாவற்றையும் பிரதான ஆசாரியருக்கு அறிவித்தார்கள்.

4. இயேசுவின் உயிர்த்தெழுதல் மீதுள்ள விசுவாசத்தை அழிப்பதற்கு சதியாலோசனை -

மத் 28:12 இவர்கள் மூப்பரோடே கூடிவந்து, ஆலோசனைபண்ணி, சேவகருக்கு வேண்டிய பணத்தைக் கொடுத்து:

மத் 28:13 நாங்கள் நித்திரைபண்ணுகையில், அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டுபோய்விட்டார்கள் என்று சொல்லுங்கள்.

28 அதிகாரம்

மத் 28:14 இது தேசாதிபதிக்குக் கேள்வியானால், நாங்கள் அவரைச் சம்மதப்படுத்தி, உங்களைத் தப்புவிப்போம் என்றார்கள்.

மத் 28:15 அவர்கள் பணத்தை வாங்கிக்கொண்டு, தங்களுக்குப் போதிக்கப்பட்டபடியே செய்தார்கள். இந்தப் பேச்சு யூதருக்குள்ளே இந்நாள் வரைக்கும் பிரசித்தமாயிருக்கிறது.

"சேவகருக்கு வேண்டிய பணத்தைக் கொடுத்தார்கள்" - எவ்வளவு கொடுத்தார்கள் என்று தெரியவில்லை. இயேசுவின் கல்லறையை சுமார் 12 சேவகர்கள் முதல் 72 சேவகர்கள் வரை காவல் புரிந்திருக்க வேண்டும். 3 மணிக்கு ஒரு தடவை சேவகர்கள் மாற்றப்படுவார்கள். ஒவ்வொரு பிரிவிலும் நான்கு சேவகர்கள் இருப்பார்கள். மூன்று நாட்களாக காவல் புரிந்தார்கள். சேவகர்கள் பணத்தை வாங்கிக்கொண்டு அவர்கள் சொன்ன பிரகாரமாகவே பொய் கூறினார்கள். இது பாவமான செயல். இவர்கள் இயேசு கிறிஸ்துவிடம் மனந்திரும்பி வந்தால், அவர் அவர்களை நிச்சயமாகவே மன்னிப்பார் (வெளி 1:5; 1யோவான் 1:7-9; எபே 1:7).

"நாங்கள் நித்திரை பண்ணுகையில் அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து அவனைக் களவாய்க் கொண்டு போய்விட்டார்கள்" - இது ஒரு பொய்ச் சாட்சி. இதற்கான காரணங்கள்:

1. நான்கு சேவகர்களும் ஒரே வேளையில் தூங்கியிருப்பார்களா?

2. கல் புரட்டப்படும் சத்தத்தில் எழுந்திருக்க மாட்டார்களா?

3. கல்லைப் புரட்டித் தள்ளுவது மிகவும் கடினமானது. அந்த சத்தத்தில் ஒரு சேவகர்கூட எழுந்திருக்க மாட்டானா?

4. சேவகர்கள் கல்லறையின் வாசலிலே இருக்கிறார்கள். அவர்களைத் தாண்டி சீஷர்களால் எப்படி இயேசுவைக் களவாய்க் கொண்டுபோக முடியும்.

5. தூங்கும் சேவகர்களுக்குச் சீஷர்கள் தான் இயேசுவைக் களவாய்க் கொண்டுபோய் விட்டார்கள் என்று எப்படித் தெரியும்.

5. இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குச் சீஷர்களின் சாட்சி - (மாற்கு 16:12; லூக் 24:13; யோவான் 20:21)

மத் 28:16 பதினொரு சீஷர்களும், கலிலேயாவிலே இயேசு தங்களுக்குக் குறித்திருந்த மலைக்குப் போனார்கள்.

மத் 28:17 அங்கே அவர்கள் அவரைக் கண்டு, பணிந்துகொண்டார்கள்; சிலரோ சந்தேகப்பட்டார்கள்.

"அவர்கள் அவரைக் கண்டு, பணிந்துகொண்டார்கள்" - (யோவான் 20:14)

சந்தேகப்படு (doubted) - διστάζω - distazoo - 1365

வினைச்சொல் - சந்தேகப்படு - இந்தக் கிரேக்கச்சொல் மத் 14:31; 28:17 ஆகிய இரண்டு வசனங்களில் மட்டுமே வருகிறது.

6. பிரதான கட்டளை

மத் 28:18 அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மத் 28:19 ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,

மத் 28:20 நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.

மத்தேயு - தொகுப்புரை

28 அதிகாரம்

அதிகாரம் (power) - ἐξουσία - exousia - 1849

பெண்பால் பெயர்ச்சொல் - அதிகாரம் வல்லமை, ஆதீனம் (மத் 9:8)

"வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" - பிதா குமாரனுக்கு சகல அதிகாரத்தையும் கொடுத்திருக்கிறார். குமாரன் மனுக்குலத்து மீட்பின் திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார். இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் மனுஷனாக வருவதற்கு முன்பாக அவர் பரலோகத்தில் பிதாவோடும் பரிசுத்த ஆவியானவரோடும் சம அந்தஸ்தில் இருந்தார். அவர் பூமியில் மனுஷனாக இருந்தபோதோ மனுஷனுக்குரிய வரையறைகள் அவருக்கும் இருந்தது. (லூக்கா 2:40,52; யோவான் 8:28; பிலி 2:7) இப்பொழுது குமாரனுடைய மகிமை மறுபடியும் விளங்குகிறது. (யோவான் 17:5; எபே 1:20-23; கொலோ 1:15-18)

"ஆகையால்" எனக்கு சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டிருப்பதினால் நான் ஆரம்பித்து வைத்த ஊழியத்தை நீங்கள் தொடர்ந்து செய்யுமாறு நான் உங்களுக்கு சகல அதிகாரமும் கொடுக்கிறேன். (யோவான் 16:23)

பிரதான கட்டளை

"நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்"

1 புறப்பட்டுப்போங்கள் - எல்லா விசுவாசிகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டளை. பிரசங்கிமார்களுக்கு மட்டும் என்று இதை வரையறுக்கக்கூடாது. இரட்சிப்பின் அழைப்பு எல்லோருக்கும் பொதுவானது. அதுபோலவே கர்த்தருக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்னும் அழைப்பும் எல்லா விசுவாசிகளுக்கும் பொதுவானது. தேவன் நமக்கு சகல அதிகாரத்தையும் கொடுக்கிறார். அவர் நம்மோடு கூடவே இருப்பார்.

2 சீஷராக்குங்கள் - இந்த வாக்கியம் மத் 13:52; மத் 27:57; மத் 28:19; அப் 14:21 ஆகிய வசனங்களில் மட்டுமே வருகிறது.

சீஷராக்கு (Teach) - μαθητεύω - matheeteuoo - 3100

வினைச்சொல் - உபதேசி, சீஷராக்கு (to make disciples, enroll as a learner or pupil)

3 எல்லா சீஷர்களுக்கும் ஞானஸ்நானம் கொடுங்கள் (மத் 3:6; அப் 8:38)

4 உபதேசம் பண்ணுங்கள் - விசுவாசிகளைச் சீஷர்களாக்கிய பின்பு அவர்களுக்கு உபதேசம் பண்ண வேண்டும். இயேசு கிறிஸ்துவின் கற்பனைகள் எல்லாவற்றையும் விசுவாசிகள் கைக்கொள்ளுமாறு அவர்களுக்கு உபதேசம் பண்ண வேண்டும்.

உபதேசி (Teaching) - διδάσκω - didaskoo - 1321

வினைச்சொல் - உபதேசி, போதி, பிரசங்கி, போதகம் பண்ணு, உபதேசம் பண்ணு, கற்றுக்கொடு

"நாமத்திலே" - இதற்கு பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் அதிகாரத்தினால் என்று பொருள். இயேசுவின் அதிகாரத்தினால் மட்டுமல்ல, திரித்துவத்தில் இடம் பெற்றிருக்கிற பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவரின் அதிகாரத்தினால் நாம் ஞானஸ்நானங் கொடுக்க வேண்டும். இயேசு கிறிஸ்து தம்மையும் பிதாவையும் பரிசுத்த ஆவியானவரையும் அங்கீகரிக்குமாறு நமக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார். அப் 2:38; அப் 8:16; அப் 10:48; அப் 19:5 ஆகிய வசனங்களைப் புரிந்து கொள்வதற்கு இது உதவி புரியும். ஞானஸ்நானம் கொடுப்பதற்கு இயேசு கிறிஸ்து நமக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார். என்றாலும் பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவரின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்குமாறு நமக்கு கட்டளையிட்டிருக்கிறார்.

மத்தேயு – தொகுப்புரை

28 அதிகாரம்

"பிதா குமாரன் பரிசுத்த ஆவி" - இந்த வாக்கியம் ஏதோ ஒரு பிதாவையோ ஏதோ ஒரு குமாரனையோ ஏதோ ஒரு பரிசுத்த ஆவியானவரையோ குறிக்காது. இது தெளிவாக இயேசு கிறிஸ்துவின் பிதாவானவரையும், அந்த பிதாவானவரின் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையும் திரித்துவத்தில் மூன்றாம் நபராக இடம் பெற்றிருக்கும் பரிசுத்த ஆவியானவரையுமே குறிக்கும்.

"நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும்" நாம் ஜனங்களுக்கு உபதேசம் பண்ண வேண்டிய சத்தியம் மிகவும் தெளிவாக இருக்கிறது. இயேசு கிறிஸ்து நமக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களுக்கு உபதேசம் பண்ண வேண்டும். அவற்றை அவர்கள் கைக்கொள்ளுமாறு உபதேசம் பண்ண வேண்டும். இயேசு கிறிஸ்துவின் கட்டளையைக் கூட்டவோ அல்லது குறைக்கவோ நமக்கு அதிகாரம் இல்லை.

"உலகம்" - இது காலத்தைக் குறிக்கும். மனுஷனுடைய முடிவையோ வேறு எதனுடைய முடிவையோ குறிக்காது. இயேசு கிறிஸ்து மறுபடியும் வருமவரையிலும் நாம் அவருடைய கட்டளைகளை ஜனங்கள் கைக்கொள்ளும்படி உபதேசம் பண்ணிக்கொண்டே இருக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவும் நம்மோடே கூட உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் இருப்பார்.

உலகம் (world) - αἰών - aioon - 165

ஆண்பால் பெயர்ச்சொல் - காலம், உலகம், பிரபஞ்சம், அநாதி, சதாகாலங்கள்

(அ) என்றென்றைக்கும் அதாவது கடந்த காலத்தில் - யோவான் 6.5, 80.32

(ஆ) ஒரு குறிப்பிட்ட காலம் அதாவது இம்மை அல்லது மறுமை - மத். 12.32, மாற். 10.30

மாற்கு – முன்னுரை

காலம்

கி.பி. 57-63 எழுதப்பட்ட இடம் சரியாகத் தெரியவில்லை

ஆசிரியர்

யோவான் மாற்கு

மையக்கருத்து

இயேசு கிறிஸ்து கர்த்தருடைய ஊழியக்காரர் (ஏசா 42:1-21; ஏசா 50:4-11, ஏசா 52:13-53:12; சக 3:8; மாற்கு 10:45 பிலி 2:5-8) மாற்கு எழுதின சுவிசேஷம் முழுவதிலுமே கர்த்தருடைய ஊழியக்காரரின் சுபாவம் இயேசு கிறிஸ்துவிடம் வெளிப்படுகிறது. இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாறு இந்த சுவிசேஷத்தில் கூறப்படவில்லை ஊழியக்காரருக்கு வம்ச வரலாறு தேவையில்லை என்று நினைத்திருக்கலாம் இந்த சுவிசேஷம் வார்த்தைகளின் சுவிசேஷம் அல்ல கிரியைகளின் சுவிசேஷம். தெய்வீக ஏவுதலினால் மாற்கு இந்த சுவிசேஷ நூலை எழுதியிருக்கிறார் லூக்கா 1:3 கலா 1:12,16 கலா 2:2

இயேசு கிறிஸ்து கர்த்தருடைய ஊழியக்காரர்

இந்த சுவிசேஷத்தில் ஒரு ஊழியக்காரருடைய சுபாவங்கள் அதிகமாக வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அவையாவன

1. கிறிஸ்துவின் களைப்பு (மாற்கு 4:38, மாற்கு 11:12, மாற்கு 14:36)
2. இரக்கங்கள் (மாற்கு 6:34; மாற்கு 8:2)
3. அன்பு (மாற்கு 10:21)
4. தன்னிறைவு (மாற்கு 4:38-40 மாற்கு 15:5)
5. தனிமை (மாற்கு 1:35; மாற்கு 6:3-32)
6. ஆச்சரியம் (மாற்கு 6:6)
7. துக்கம் (மாற்கு 3:5)
8. பெருமூச்சு (மாற்கு 7:34; மாற்கு 8:12)
9. கோபம் (மாற்கு 3:5; மாற்கு 10:14)
10. ஊழியக்காரரின் இதர சுபாவங்கள் (மாற்கு 1:35; மாற்கு 3:7 மாற்கு 4:1,38; மாற்கு 6:7, 40 மாற்கு 12:41; மாற்கு 13:3 மாற்கு 15:39)

புள்ளி விவரங்கள்

அதிகாரங்கள் - 16

வசனங்கள் - 678

கேள்விகள் - 121

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் - 11

புதிய தீர்க்கதரிசனங்கள் - 30

வரலாற்றைக் குறிக்கும் வசனங்கள் - 582

பொருளடக்கம்

I. யோவான் ஸ்நானனின் ஊழியம் - (1:1-8)

II. தமது ஊழியத்திற்காக இயேசுவின் இறுதி ஆயத்தம் - (1:9-13)

III. இயேசுவின் ஊழியமும் உபதேசமும்

1. இயேசு தமது ஊழியத்தை கலிலேயாவில் ஆரம்பிக்கிறார் - (1:14-15)
2. பேதுரு, அந்திரேயா ஆகியோரின் அழைப்பு - (1:16-18)
3. யாக்கோபு, யோவான் ஆகியோரின் அழைப்பு - (1:19-20)
4. இயேசு கப்பர்நகூமை தமது ஊழிய ஸ்தலமாக ஆக்குகிறார் - (1:21-22)
5. இயேசு அசுத்த ஆவியை துரத்துகிறார் - (1:23-28)

மாற்கு - முன்னுரை

6. பேதுருவின் மாமியை சொஸ்தமாக்குகிறார் - (1:29-31)

7. பிசாசுகளைத் துரத்துகிறார் - அநேகரை சொஸ்தமாக்குகிறார் - (1:32-34)

8. இயேசு கிறிஸ்துவின் அதிகாலை ஜெபம் - (1:35-37)

9. கலிலேயாவிற்கு இயேசுவின் முதலாவது பிரயாணம் - (1:38-39)

10. இயேசு குஷ்டரோகியைச் சுத்தமாக்குகிறார் - (1:40-45)

11. கப்பர்நகூமிற்குத் திரும்பி வருகிறார் - திமிர்வாதக்காரனை குணமாக்குகிறார் - (2:1-12)

12. லேவி என்னும் மத்தேயுவை அழைக்கிறார் - (2:13-14)

13. பரிசேயருக்கு பதிலுரை - (2:15-17)

14. யோவான் ஸ்நானனின் சீஷர்களுக்கு பதிலுரை - (2:18-20)

15. வஸ்திரம், துருத்திகள் ஆகியவற்றின் உவமை - (2:21-22)

16. இயேசு ஓய்வுநாளுக்கும் ஆண்டவராக இருக்கிறார் - (2:23-28)

17. ஓய்வுநாளில் சூம்பின கையையுடைய ஒரு மனுஷனைச் சொஸ்தமாக்குகிறார் - (3:1-5)

18. இயேசுவை கொலைசெய்வதற்கு சதியாலோசனை - (3:6)

19. திரளான ஜனங்களை சொஸ்தமாக்குகிறார் - (3:7-12)

20. பன்னிரெண்டு பேரை பிரதிஷ்டை பண்ணுகிறார் - (3:13-15)

21. அப்போஸ்தலர்களின் பெயர்கள் - (3:16-19)

22. இயேசு மதிமயங்கியிருக்கிறார் என்று அவர்மீது குற்றச்சாட்டு - (3:20-21)

23. பரிசேயர்கள் பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாக தேவதூஷணம் கூறுகிறார்கள் - பிரிந்திருக்கும் இராஜ்ஜியம் - (3:22-27)

24. மன்னிக்கப்படாத பாவம் - (3:28-30)

25. இயேசுவின் புதிய உறவினர்கள் - (3:31-35)

26. விதைக்கிறவனைப் பற்றிய உவமை - (4:1-9)

27. உவமைகளாக பேசுவதற்கு காரணம் - (4:10-13)

28. விதைக்கிறவனைப் பற்றிய உவமையின் விளக்கம் - (4:14-20)

29. விளக்கைப் பற்றிய உவமை - (4:21-25)

30. விதையைப் பற்றிய உவமை - (4:26-29)

31. கடுகு விதையைப் பற்றிய உவமை - (4:30-34)

32. இயேசு புயல்காற்றை அமைதிப்படுத்துகிறார் - (4:35-41)

33. கதரேனருடைய நாட்டில் இருந்த அசுத்த ஆவியுள்ள மனுஷன் - (5:1-20)

34. பன்னிரெண்டு வருஷமாக பெரும்பாடுள்ள ஸ்திரீ குணமடைகிறாள் - யவீருவின் மகளை இயேசு உயிருடன் எழுப்புகிறார் - (5:21-43)

35. நாசரேத்தில் இயேசு - ஜனங்கள் இயேசுவை மறுபடியும் ஏற்றுக் கொள்ளவில்லை - (6:1-5)

36. இயேசு மறுபடியும் கலிலேயாவிற்கு பிரயாணம் பண்ணுகிறார் - (6:6)

37. இயேசு பன்னிரெண்டு சீஷர்களை ஊழியம் செய்வதற்கு வெளியே அனுப்புகிறார் - (6:7-13)

மாற்கு - முன்னுரை

38 ஏரோதுவின் கலங்கிய மனச்சாட்சி - யோவான் ஸ்நானனை சிரச்சேதம் பண்ணுகிறான் - (6:14-29)

39 பன்னிரெண்டு சீஷர்களும் திரும்பி வருகிறார்கள் - (6:30-31)

40 இயேசு ஐயாயிரம் பேருக்கு அற்புதமாக போஜனம் கொடுக்கிறார் - (6:32-44)

41 இயேசு தண்ணீரின்மீது நடக்கிறார் - (6:45-52)

42 கெனேசரேத்து நாட்டில் வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்குகிறார் - (6:53-56)

43 வேதபாரகரையும் பரிசேயரையும் இயேசு கடிந்து கொள்கிறார் - (7:1-13)

44 மனுஷனை தீட்டுப்படுத்தும் காரியம் - பாவங்கள் ஆத்துமாவை அழிக்கும் - (7:14-23)

45 சீரோபேனிக்கேய ஸ்திரீயின் மகளை இயேசு குணப்படுத்துகிறார் (7:24-30)

46 கொன்னை வாயுடைய செவிடனை சொஸ்தமாக்குகிறார் - (7:31-37)

47 நாலாயிரம் பேருக்கு இயேசு அற்புதமாக போஜனம் கொடுக்கிறார் (8:1-9)

48 பரிசேயரை இயேசு மறுபடியும் கடிந்து கொள்கிறார் - (8:10-13)

49 பரிசேயர், சதுசேயர் ஆகியோரின் புளித்தமாவைப் பற்றிய விளக்கம் (8:14-21)

50 இயேசு குருடனை சொஸ்தப்படுத்துகிறார் - (8:22-26)

51 பேதுருவின் அறிக்கை - (8:27-30)

52 தமது மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் இயேசு முன்குறித்துக் கூறுகிறார் (8:31)

53 இயேசுவும் பேதுருவும் ஒருவரையொருவர் கடிந்து கொள்கிறார்கள் - (8:32-33)

54 சீஷத்துவத்திற்குச் சோதனை - ஆத்துமாவின் மதிப்பு - (8:34-38)

55 மறுரூபமாதல் - வரப்போகும் இராஜ்யத்திற்கு ஒரு முன்னோட்டம் - (9:1-10)

56 யோவான் ஸ்நானனும், எலியாவும் - (9:11-13)

57 வல்லமையில்லாத சீஷர்களும் சர்வ வல்ல கிறிஸ்துவும் - (9:14-27)

58 ஜெபமும் உபவாசமும் - (9:28-29)

59 தமது மரணத்தையும் உயிர்த்தெழுதலைக் குறித்து இயேசு மறுபடியும் முன்குறித்துக் கூறுகிறார் - (9:30-32)

60 தாழ்மையைப் பற்றிய உபதேசம் - (9:32-37)

61 இயேசு பிரிவினையைக் கடிந்து கொள்கிறார் - (9:38-41)

62 விசுவாசிகளுக்கு இடறல் உண்டாக்குகிறவன் - (9:42)

63 இடறல் உண்டாக்கும் சரீரத்தின் அவயவங்கள் - (9:43-50)

64 மனைவியைத் தள்ளிவிடுதல் சம்பந்தமான பிரமாணம் - (10:1-9)

65 மனைவியைத் தள்ளிவிடுவதினால் ஏற்படும் விளைவுகள் - (10:10-12)

66 இயேசு சிறுபிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார் - (10:13-16)

67 மிகுந்த ஆஸ்தியுள்ள வாலிபன் - (10:17-22)

68 ஐசுவரியவான்களுக்கு எச்சரிப்பு - (10:23-27)

69 முழுமையான அர்ப்பணிப்பிற்கு வெகுமதிகள் - (10:28-31)

மாற்கு - முன்னுரை

70 இயேசு தமது மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் மறுபடியும் முன்குறித்துக் கூறுகிறார் - (10:32-34)

71 யாக்கோபு, யோவான் ஆகியோரின் மாம்ச சுபாவம் - (10:35-40)

72 மற்ற பத்து பேரின் மாம்ச சுபாவம் - (10:41-45)

73 இயேசு குருடனைக் குணப்படுத்துகிறார் - (10:46-52)

74. வெற்றிபவனி - (11:1-11)

75 கனிதராத அத்தி மரத்தை சபிக்கிறார் - (11:12-14)

76. தேவாலயத்தின் இரண்டாம் சுத்திகரிப்பு - (11:15-19)

77 ஜெபிக்கும்போது விசுவாசம் தேவை - (11:20-24)

78 ஜெபத்திற்கு பதில் கிடைப்பதற்கு நிபந்தனை - (11:25-26)

79 இயேசுவின் அதிகாரத்தை கேள்வி கேட்கிறார்கள் - (11:27-33)

80 திராட்சைத் தோட்டத்திற்கு எஜமானைப் பற்றிய உவமை - (12:1-12)

81 வரிப்பணத்தைப் பற்றிய உவமை (12:13-17)

82 உயிர்த்தெழுதலைப் பற்றிய கேள்வி - (12:18-27)

83 பிரதான கற்பனை - (12:28-34)

84 இயேசு பரிசேயரிடம் கேட்ட கேள்விகள் - (12:35-37)

85 வேதபாரகரின் ஆறு பாவங்கள (12:38-40)

86 விதவை காணிக்கையாக போட்ட ஒரு துட்டு - (12:41-44)

87 ஒலிவமலையின்மேல் இயேசு கூறிய தீர்க்கதரிசனம் - (மத் 24-25; மாற்கு 13, லூக் 21)

(1) எருசலேமின் அழிவை இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (13:1-2)

(2) இரண்டு பெரிய கேள்விகள் - (13:3-4)

(3) அடையாளங்கள் - இயேசுவின் இரண்டாம் வருகை -

(அ) யூதர்களுடைய வருத்தங்களின் ஆரம்பத்தில் எட்டு அடையாளங்கள் - (13:5-8)

(ஆ) இஸ்ரவேலின் வருத்தங்களின் போது எட்டு அடையாளங்கள் - (13:9-13)

(இ) பாழாக்குகிற அருவருப்பு - (13:14)

(ஈ) இஸ்ரவேல் அந்திக் கிறிஸ்துவிடம் தோற்று போகிறார்கள் - (13:15-18)

(உ) மகா உபத்திரவம் - (13:19-20)

(ஊ) மகா உபத்திரவத்தின் ஆறு அடையாளங்கள் - (13:21-23)

(4) இரண்டாம் வருகையின் விதமும் காலமும் - (13:24-27)

(5) அத்தி மரத்தைப் பற்றிய உவமை - (13:28-29)

(6) இந்த தீர்க்கதரிசனத்தின் எல்லா அடையாளங்களும் ஒரே சந்ததியில் நடைபெறும் (13:30-31)

(7) இயேசு கிறிஸ்து மறுபடியும் வரும் நேரம் யாருக்கும் அறிவிக்கப்படவில்லை (13:32-36)

88. இயேசுவை கொலைசெய்ய முயற்சி - (14:1-2)

89 இயேசுவின் அபிஷேகம் - (14:3-9)

90 இயேசுவைக் காட்டிக்கொடுக்க யூதாஸ் ஒப்புக்கொள்கிறான் - (14:10-11)

மாற்கு - முன்னுரை

91 பஸ்காவின் ஆயத்தம் - (14:12-16)

92 கடைசி பஸ்கா

1 தாம் காட்டிக் கொடுக்கப்படப் போவதை இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (14:17-21)

2 கர்த்தருடைய பந்தி - (14:22-26)

3 பேதுரு தம்மை மறுதலிக்கப்போவதை இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (14:27-31)

IV. கிறிஸ்துவின் பாடுகள்

கெத்செமனே தோட்டத்தில் இயேசுவின் துக்கமும் வியாகுலமும் - (14:32-42)

2 இயேசுவை கொலைசெய்வதற்கு முயற்சி - காட்டிக் கொடுக்கப்படுவதும் கைதுபண்ணப்படுவதும் (14:43-52)

3 இயேசுவின் வழக்கு விசாரணையும் பரியாசமும் - (14:53-65)

4 பேதுரு மறுதலிக்கிறான் - (14:66-72)

5 பிலாத்துவிற்கு முன்பாக இயேசு - (15:1-6)

6 இயேசுவிற்கு தண்டனையும் பரபாசிற்கு விடுதலையும் - (15:7-15)

7 இயேசுவின் சிரசின்மீது முள்முடி - (15:16-21)

8 இயேசுவை சிலுவையில் அறைகிறார்கள் - (15:22-32)

9 இயேசுவின் மரணம் - (15:33-41)

10 இயேசுவின் சரீரத்தை அடக்கம் பண்ணுகிறார்கள் - (15:42-47)

V. உயிர்த்தெழுந்த பின்பு இயேசுவின் ஊழியம்

1 உயிர்த்தெழுதலுக்கு கர்த்தருடைய தூதனின் சாட்சி - (16:1-7)

2 உயிர்த்தெழுதலுக்கு ஸ்திரீகளின் சாட்சி - (16:8-11)

3 இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு சீஷர்களின் சாட்சி - (16:12-14)

4 பிரதான கட்டளை - (16:15-18)

5 இயேசு பரமேறுகிறார் - (16:19)

6 அப்போஸ்தலருடைய நடபடிகளும் ஆதிகால விசுவாசிகளும் - (16:20)

1 அதிகாரம்

I. யோவான் ஸ்நானனின் ஊழியம் - (ஏசா 40:3; மல் 3:1; மத் 3; லூக் 3; யோவான் 1:6-34; 3:23)

மாற்கு 1:1 தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் ஆரம்பம்.

மாற்கு 1:2 இதோ, நான் என் தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன்; அவன் உமக்கு முன்னே போய், உமக்கு வழியை ஆயத்தம்பண்ணுவான் என்றும்,

மாற்கு 1:3 கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவருக்குப் பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டாகும் என்றும், தீர்க்கதரிசன ஆகமங்களில் எழுதியிருக்கிறபிரகாரமாய்,

மாற்கு 1:4 யோவான் வனாந்தரத்தில் ஞானஸ்நானங் கொடுத்து, பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக்குறித்துப் பிரசங்கம்பண்ணிக்கொண்டிருந்தான்.

மாற்கு 1:5 அப்பொழுது யூதேயா தேசத்தார் அனைவரும் எருசலேம் நகரத்தார் யாவரும் அவனிடத்திற்குப் போய், தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

மாற்கு 1:6 யோவான் ஒட்டகமயிர் உடையைத் தரித்து, தன் அரையில் வார்க்கச்சையைக் கட்டிக்கொண்டவனாயும், வெட்டுக்கிளியையும் காட்டுத்தேனையும் புசிக்கிறவனாயும் இருந்தான்.

மாற்கு 1:7 அவன்: என்னிலும் வல்லவர் ஒருவர் எனக்குப்பின் வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரைக் குனிந்து அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல.

மாற்கு 1:8 நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தேன்; அவரோ பரிசுத்த ஆவியினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார் என்று பிரசங்கித்தான்.

"சுவிசேஷத்தின் ஆரம்பம்" - யோவானுடைய பிரசங்கம் சுவிசேஷத்தின் ஆரம்பம். " " 1:12-13 (மத் 3:12-13 லூக்கா 16:16) யோவான் பிரசங்கித்த சுவிசேஷச் செய்தியை நாமும் பிரசங்கிக்க வேண்டும். (மத் 3:1)

"சுவிசேஷம்" - நற்செய்தி. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்போது அது கூறும் நற்செய்திக்கு மட்டுமே நாம் முக்கியத்துவம் தரவேண்டும். மாற்கு சுவிசேஷத்தில் இயேசு கிறிஸ்துவின் வம்சவரலாறு எழுதப்படவில்லை. யோவானைப் பற்றியும் இயேசுவைப் பற்றியும் பல காரியங்களை மாற்கு எழுதவில்லை. மத்தேயு, லூக்கா ஆகிய சுவிசேஷங்களில் நாம் வாசிக்கும் பல விஷயங்கள் மாற்கு எழுதின சுவிசேஷத்தில் இல்லை. (மத் 1-3; லூக்கா 1-3) இயேசு கிறிஸ்து கர்த்தருடைய ஊழியக்காரராக இந்த சுவிசேஷத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறார். ஊழியக்காரரின் வம்சவரலாற்றை யாருமே கூறுவதில்லை.

"தேவனுடைய குமாரன்" - (மத் 16:16 யோவான் 1:14)

மாற்கு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 1

"இதோ, நான் என் தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன்; அவன் உமக்கு முன்னே போய், உமக்கு வழியை ஆயத்தம்பண்ணுவான்" மாற்கு 1:2; மல் [illegible]

தூதன் (messenger) - ἄγγελος - angelos - 32

ஆண்பால் பெயர்ச்சொல் தூதன். தூதன் - தேவதூதனையும், மனுஷனையும் குறிக்கும்.

மாற்கு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 2

"கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவருக்குப் பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டாகும்" (ஏசா 40:3; மாற்கு 1:3

1 அதிகாரம்

"யோவான் வனாந்தரத்தில ஞானஸ்நானங் கொடுத்தான்" - (மத் 3:6)

"மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ் நானத்தைக் குறித்துப் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருந்தான்" - (மத் 3:1)

"பாவமன்னிப்புக்கென்று" - (மத் 3:11)

"தேசத்தார் அனைவரும்" - எபிரெய வழக்குச்சொல் யூதேயா தேசத்தார் என்பது யூதேயா தேசத்திலுள்ள பெரும்பான்மையான ஜனங்கள் என்று பொருள்படும். (ஆதி 41:56)

"தங்கள் பாவங்களை அறிக்கையிட்டார்கள்" - பாவமன்னிப்பு பெறவேண்டுமென்றால தேவனுக்கு முன்பாக நமது பாவங்களை அறிக்கையிட வேண்டும். (லூக்கா 11:4-5 ரோமர் 10:9-10; 1யோவான் 1:9) இயேசு கிறிஸ்துவின திருஇரத்தத்தில விசுவாசம் வைத்து நமது பாவங்களை இயேசு கிறிஸதுவிடம அறிக்கையிடும்போது அவா நமது பாவங்களை மன்னிக்கிறார் (ரோமர் 4:24-25 எபே 1:7) மனுஷா மனந்திரும்ப வேண்டும். பின்பு ஞானஸ்நானம் பெறவேண்டும் மனந்திரும்புதல பாவமன்னிப்பை பெற்றுக் கொள்வதற்கு ஆத்துமாவை ஆயத்தப்படுத்துகிறது. தண்ணீர ஞானஸ்நானம் காத்தரிடத்தில பொருததனை பண்ணுவதும். இரட்சிப்பின அடையாளமும் ஆகும் (1பேதுரு 3:21)

"யோவான" எபிரெய மொழியில யோவான் என்னும் பெயருககு "கர்த்தருடைய கிருபை அல்லது கர்த்தருடைய இரக்கம்" என்று பொருள இயேசு கிறிஸ்து கிருபையின பரிபூரணத்தைத் தம்மோடு சுமந்து வந்தார அவருடைய வழியை ஆயத்தம்பண்ணும் யோவானுடைய பெயரின பொருளும் கர்த்தருடைய கிருபை என்பதே. (யோவான் 1:16-17)

"வெட்டுக்கிளியையும் காட்டுத்தேனையும் புசிக்கிறவனாயும் இருந்தான்" - (மத் 3:4)

தீர்க்கதரிசன எண் - 1

"என்னிலும் வல்லவர் ஒருவர் எனக்குப்பின் வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரைக் குனிந்து அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தேன் அவரோ பரிசுத்தஆவியினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்" (மாற்கு 1:7-8) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேற்று நிறைவேறிக்கொண்டிருக்கிறது.

"அவருடைய பாதரட்சைகளின் வாரைக் குனிந்து அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல" - பழங்காலத்தில பாதரட்சை என்பது பாதத்தின்கீழ் இருக்கும் தோலும் அதைப பாதத்தோடு கட்டியிருக்கும் வாருமேயாகும் பாதரட்சைகளின் வாரைக் குனிந்து அவிழ்ப்பது என்பது ஒரு மாணவன் தன் ஆசிரியருக்குக் காண்பிக்கும் மரியாதை.

ஆல் (with) - ἐν - en - 1722

முன் இடைச்சொல - ஆல, இல. உடன் - யோவான் தண்ணீரில ஞானஸ்நானம் கொடுத்தான இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியில தமது சீஷர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறார்

II. தமது ஊழியத்திற்காக இயேசுவின் இறுதி ஆயத்தம் - (மத் 3:13; லூக் 3:21; 2:38)

மாற்கு 1:9 அந்த நாட்களில், இயேசு கலிலேயாவிலுள்ள நாசரேத்தூரிலிருந்து வந்து யோர்தான நதியில் யோவானால ஞானஸ்நானம் பெற்றார

மாற்கு 1:10 அவர் ஜலத்திலிருந்து கரையேறினவுடனே வானம் திறக்கப பட்டதையும் ஆவியானவர் புறாவைப்போல் தம்மேல் இறங்குகிறதையும் கண்டார்

மாற்கு 1:11 அன்றியும், நீர் என்னுடைய நேசகுமாரன உம்மில் பிரியமாயிருக்கிறேன என்று வானத்திலிருந்து ஒரு சத்தம உண்டாயிற்று.

மாற்கு 1:12 உடனே ஆவியானவர் அவரை வனாந்தரத்திற்குப போகும்படி ஏவினார

1 அதிகாரம்

மாற்கு 1:13 அவர் வனாந்தரத்திலே நாற்பதுநாள் இருந்து, சாத்தானால சோதிக்கப்பட்டு, அங்கே காட்டு மிருகங்களின் நடுவிலே சஞ்சரித்துக் கொண்டிருந்தார் தேவதூதர்கள அவருக்கு ஊழியஞ்செய்தார்கள்

"அவர் ஜலத்திலிருந்து கரையேறினவுடனே" - மாற்கு 1:10 - ஒருவர் ஜலத்திற்குள் இறங்காமல அதிலிருந்து கரையேற முடியாது. ஆகையினால இயேசு கிறிஸ்து தெளிப்பு ஞானஸ்நானம் எடுத்தார் என்று கூறுவதற்கு வாய்ப்பில்லை

வானம் திறக்கப்பட்டதைக் கண்டவர்கள்

1 எசேக்கியேல (எசே 1:1

2 இயேசு (மாற்கு 1:10

3. நாத்தான்வேல (யோவான் 1:51)

4. ஸ்தேவான (அப 7:56

5. பேதுரு (அப 10:11

6 யோவான (வெளி 4:1 வெளி 11:19 வெளி 19:11

"ஆவியானவர் புறாவைப்போல அவர்மேல இறங்கினார்" - (மத் 3:16; லூக்கா 3:21)

"நீர் என்னுடைய நேசகுமாரன், உம்மில பிரியமாயிருக்கிறேன்" - (மத் 3:17; மத் 17:5; யோவான் 12:28 எபி 1:)

"உடனே ஆவியானவர் அவரை வனாந்தரத்திற்குப் போகும்படி ஏவினார்" - இயேசு கிறிஸ்துவை ஆவியானவர் வழிநடத்தினார் மத் 4:1 லூக்கா 4:1 ஆகிய வசனங்களில வழிநடத்துதலைக் குறித்து நாம் வாசிக்கிறோம்

"காட்டுமிருகங்கள்" - மற்ற சுவிசேஷங்களில் காட்டுமிருகங்களைப் பற்றிக் கூறப்படவில்லை. இயேசு கிறிஸ்து சாத்தான்மீதும் பிசாசுகள்மீதும் அவனுடைய அந்தகார சக்திகளின்மீதும் அதிகாரம் உள்ளவர் அதேசமயத்தில் காட்டுமிருகங்கள்மீதும் அவற்றின் விஷங்கள் மீதும அவருக்கு அதிகாரமுள்ளது. விசுவாசிகளுக்கும இவை வாக்குத்தத்தமாகக் கூறப்பட்டிருக்கிறது. (சங் 91; மாற்கு 16:17-18; லூக்கா 10:19)

"தேவதூதர்கள் அவருக்கு ஊழியஞ் செய்தார்கள்" - (மத் 4:11; லூக்கா 22:43)

III. இயேசுவின் ஊழியமும் உபதேசமும் - (மத் 4:12; லூக் 4:14; யோவான் 1:35)

1. இயேசு தமது ஊழியத்தை கலிலேயாவில் ஆரம்பிக்கிறார் - (மத் 4:12; லூக் 4:14)

மாற்கு 1:14 யோவான் காவலில வைக்கப்பட்ட பின்பு, இயேசு கலிலேயாவிலே வந்து தேவனுடைய ராஜ்யத்தின சுவிசேஷத்தைப பிரசங்கித்து.

மாற்கு 1:15 காலம் நிறைவேறிற்று தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று. மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசியுங்கள என்றார

"யோவான காவலில வைக்கப்பட்டான" (மத் 11:2; மத் 14:1-12, யோவான 3:24

"இயேசு தேவனுடைய ராஜ்யத்தின சுவிசேஷத்தைப பிரசங்கித்தார்" மத்தேயு பிரசங்கித்தார உபதேசம்பண்ணினார வியாதிகளைத் சொஸ்தமாக்கினார் என்று எழுதுகிறார் (மத் 4:23, மத் 9:35)

"தேவனுடைய ராஜ்யம்" - இந்த உலகத்தில் தேவனுடைய ராஜ்யம். மத் 4:17, மத் 19:24)

காலம் நிறைவேறிற்று

1. மேசியாவின வருகை (ஆதி 3:15 தானி 9:24-26; ஏசா 9:6-7

மாற்கு – தொகுப்புரை

1 அதிகாரம்

2 காலத்தின் பரிபூரணம் (கலா 4:4-6)

3 கடைசிகாலம் - இந்த உலகத்தின் ராஜ்யங்களைத் தேவன் எடுத்துக் கொள்வதற்கு முன்பாக. (மத் 13 மத் 24-25; வெளி 11:15 வெளி 19:11-21; வெளி 20:1-10)

4 தேவனுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் என்பதை நிரூபிப்பதற்கு இஸ்ரவேலருக்கு கடைசி வாய்ப்பு (மத் 21:43 ரோமர் 9-11)

5 கிருபை, சத்தியம், ஆகியவற்றின் முழுமை (யோவான் 1:16-17 1பேதுரு 1:10-12)

6 தேவனைப் பற்றிய அறியாமை அகன்றுபோகும் காலம். (அப 17:30)

7 பரலோக ராஜ்யம் அறிவிக்கப்படும் காலம் (மத் 3:2; மத் 4:17)

8 மனுஷர் மத்தியிலே தேவனுடைய ராஜ்யம் முழுமையாக நிரூபிக்கப்படும் காலம் (மத் 12:28; அப 10:38; யோவான் 10:10; 2கொரி 4:20)

9 கர்த்தருடைய அனுக்கிரக வருஷம் ஏசா 61:1-2, லூக்கா 4:16-21 யோவான் 10:10

10 யூதரும் புறஜாதியாரும் சேர்ந்து ஆலயத்தைக் கட்டுவது (1கொரி 12:13, எபே 2:14-15, எபே 3:1-6)

11 உலகத்தின் சுவிசேஷ ஊழியம் (மத் 28:19-20, மாற்கு 16:15-20 லூக்கா 24:47, அப 1:4-8 அப 10:43)

12 பழைய உடன்படிக்கை அகற்றிப்போடப் படும் காலம். (யோவான் 19:30 கொலோ 2:14-17)

"மனந்திரும்புங்கள்" - இந்த செய்தியை பிரசங்கம் பண்ணினவர்கள் யோவான், (மத் 3:2), இயேசு (மத் 4:17), அப்போஸ்தலர் (மத் 10:7-10; மாற்கு 6:7-13) இவர்களைத் தொடர்ந்து இன்று வரையிலும் சுவிசேஷ செய்தியைப் பிரசங்கம் பண்ணுகிறவர்கள் மனந்திரும்புங்கள் என்னும் செய்தி யூதருக்கு மட்டும் என்றோ ஆதித்திருச்சபையாருக்கு மட்டும் என்றோ பொருள்கூறக்கூடாது. இந்தச் செய்தி எல்லாருக்கும் எக்காலத்திற்கும் உரியது. (லூக்கா 13:1-5, அப 2:38-39 அப 3:19; அப் 17:20 அப 19:8 அப 20:25 அப 28:23,31; 1கொரி 4:20

"சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்" - இரட்சிக்கப்படுவதற்கு இரண்டு காரியங்களைச் செய்ய வேண்டும் அவையாவன

1 மனந்திரும்பவேண்டும் (மத் 4:17 லூக்கா 13:1-5; ரோமர் 10:9-10 1யோவான் 1:9)

2 சுவிசேஷத்தை விசுவாசிக்க வேண்டும் (கீழ்படியவேண்டும்) (மாற்கு 16:15-16 ரோமர் 1:16; ரோமர் 8:12-13 கொலோ 3:6

2. பேதுரு, அந்திரேயா ஆகியோரின் அழைப்பு - (மத் 4:18; லூக் 5:8

மாற்கு 1:16 அவர் கலிலேயாக் கடலோரமாய் நடந்துபோகையில், மீன் பிடிக்கிறவர்களாயிருந்த சீமோனும் அவன் சகோதரன் அந்திரேயாவும் கடலில் வலைபோட்டுக் கொண்டிருக்கிற போது அவர்களைக் கண்டார்

மாற்கு 1:17 இயேசு அவர்களை நோக்கி: என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார்

மாற்கு 1:18 உடனே அவர்கள் தங்கள் வலைகளைவிட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்

"அவர் கலிலேயாக் கடலோரமாய் நடந்து போகையில் மீன்பிடிக்கிறவர்களாயிருந்த சீமோனும் அவன் சகோதரன் அந்திரேயாவும் கடலில் வலைபோட்டுக் கொண்டிருக்கிறபோது அவர்களைக் கண்டார்" - (மத் 4:18-22)

1 அதிகாரம்

"உடனே அவர்கள் தங்கள் வலைகளை விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்" - (மாற்கு 3:6)

3. யாக்கோபு, யோவான் ஆகியோரின் அழைப்பு - (மத் 4:21; லூக் 5:10)

மாற்கு 1:19 அவர் அவ்விடம் விட்டுச் சற்று அப்புறம் போனபோது செபெதேயுவின் குமாரன் யாக்கோபும் அவன் சகோதரன் யோவானும் படவிலே வலைகளைப் பழுது பார்த்துக் கொண்டிருக்கிறதைக் கண்டு,

மாற்கு 1:20 உடனே அவர்களையும் அழைத்தார்; அப்பொழுது அவர்கள் தங்கள் தகப்பனாகிய செபெதேயுவைக் கூலியாட்களோடு படவிலே விட்டு அவருக்குப் பின்சென்றார்கள்.

"கூலியாட்கள்" - அவர்களுடைய மீன்பிடிக்கும் தொழில் எவ்வளவு பெரியது என்று இங்கு கூறப்படவில்லை. எத்தனை கூலியாட்கள் அவர்களுக்கு வேலை செய்தார்கள் என்பதும் தெரியவில்லை. இயேசு கிறிஸ்து அவர்களை அழைத்தவுடன் அவருடைய அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து அவரைப் பின்பற்றிச்சென்றார்கள். அவர்களுடைய கீழ்ப்படிதல் மூலமாக சுவிசேஷ ஊழியம் வளர்ந்து பெருகிறது. (எபே 2:20-23)

4. இயேசு கப்பர்நகூமை தமது ஊழிய ஸ்தலமாக ஆக்குகிறார் - (மத் 4:13; லூக் 4:31)

மாற்கு 1:21 பின்பு கப்பர்நகூமுக்குப் போனார்கள். உடனே அவர் ஓய்வுநாளில் ஜெப ஆலயத்திலே பிரவேசித்து, போதகம் பண்ணினார்.

மாற்கு 1:22 அவர் வேதபாரகரைப்போலப் போதியாமல் அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியினால், அவருடைய போதகத்தைக்குறித்து ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

"கப்பர்நகூம்" - (மத் 11:23)

"ஜெப ஆலயம்" (synagogue) - இந்தச் சொல்லுக்கு பல்வேறு பொருள் உண்டு. ஒன்றுசேருதல், கூட்டிச்சேர்த்தல், ஜனங்களுடைய கூடுகை, ஜனங்கள் கூடும் இடம் என்று இதற்குப் பொருள் கூறலாம். (யாக் 2:2) பாபிலோனியச் சிறையிருப்பிற்குப் பின்பு ஜெப ஆலயங்களின் எண்ணிக்கை பெருகிற்று. பட்டணங்களிலும், நகரங்களிலும், கிராமங்களிலும், எல்லாச் சிற்றூர்களிலும் ஜெப ஆலயங்களை உண்டாக்கினார்கள். இவை பொதுவாக ஆறுகளின் அருகிலேயே இருக்கும். யூதர்கள் பல்வேறு விதமான சுத்திகரிப்புக்களைக் கைக்கொள்வார்கள். ஏராளமான தண்ணீர் இவர்களுக்குத் தேவைப்படும். ஆகையினால் ஆறுகளின் அருகில் ஜெப ஆலயங்களைக் கட்டுவது இவர்களுடைய வழக்கம்.

ஒரு ஜெப ஆலயத்தில் குறைந்தது 10 யூதர்கள் இருக்க வேண்டும். அதாவது 10 யூதர்கள் சேர்ந்து ஒரு ஜெப ஆலயத்தை ஆரம்பிக்கலாம். அவர்கள் ஜெப ஆலயத்தைப் பராமரித்து ஆராதனை ஒழுங்குகளைக் கையாளவேண்டும். ஒவ்வொரு யூதரும் ஓய்வுநாளின்போது ஜெப ஆலயத்திற்குக் கட்டாயம் செல்ல வேண்டும்.

எருசலேம் நகரத்தில் மட்டும் 480 ஜெப ஆலயங்கள் இருந்தன. ஜெப ஆலயங்களில் யூதர்கள் கர்த்தரை ஆராதித்தார்கள். அவர்களுக்கும் பழைய ஏற்பாட்டுப் பிரமாணங்களை உபதேசம் பண்ணினார்கள். மார்க்கக் கட்டளைகளோடு யூதருடைய வழக்குகளையும் ஜெப ஆலயங்களிலேயே விசாரித்தார்கள். (லூக்கா 12:11; அப் 9:2)

ஜெப ஆலயத்திற்கு மூப்பர்களையும் தலைவர்களையும் ஜனங்கள் தேர்ந்தெடுத்தார்கள். வேதவாக்கியங்களை உபதேசம் பண்ணுவதும், ஜனங்களுடைய வழக்குகளை விசாரிப்பதும் இவர்களுடைய பொறுப்பு. (மத் 10:17; மத் 23:34; யோவான் 9:22,34; யோவான் 12:42; யோவான் 16:2; அப் 22:19; அப் 26:11)

ஜெப ஆலயங்களில் ஆசாரியருக்கு அதிகமரியாதை கொடுக்கப்பட்டது. ஆனால் அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. ஆலோசனைச் சங்கத்தில் அங்கத்தினர்களாக இருப்பவர்களுக்கு மட்டுமே ஜெப ஆலயத்தில் அதிகாரம் உண்டு. ஜெப ஆலயத்தின் தலைவர் யாரை வேண்டுமானாலும் அழைத்து, வேதவசனங்களை வாசிக்குமாறோ,

மாற்கு – தொகுப்புரை

1 அதிகாரம்

உபதேசம்பண்ணுமாறோ கூறலாம் இயேசு பலமுறை ஜெபாலயங்களில் உபதேசம் பண்ணியிருக்கிறார் (மத் 4:23; மத் 13:54 மாற்கு 6:2; லூக்கா 4:15-22 யோவான் 18:20) அப்போஸ்தலர்களும் ஜெபாலயங்களில் பிரசங்கம் பண்ணியிருக்கிறார்கள். (அப் 13:5,15 அப் 14:1; அப் 17:10-17; அப் 18:19)

ஓய்வுநாளில் ஜெபாலயங்களில் மூன்று முறை ஆராதனை நடைபெறும். வேதபாரகரும், நியாயசாஸ்திரிகளும் ஜெபாலயங்களில் மிகவும் முக்கியமானவர்கள் இவர்கள் பள்ளி ஆசிரியர்கள் நியாயப்பிரமாணத்தை வியாக்கியானம் செய்து உபதேசம் பண்ணுகிறவர்கள் இவர்கள் ஜெபாலயங்களை அனுதினமும் பயன்படுத்தி ஜனங்களுக்கு அவ்விடங்களில் உபதேசம் பண்ணி வந்தார்கள் ஜெபாலயங்கள் பொதுவாக உயரமான இடங்களில் கட்டப்பட்டிருக்கும் ஜெபாலயங்களுக்கு பொதுவாக மேற் கூரையிராது. இதனால் ஜெபாலயத்திற்குள் வரும் ஜனங்கள் எருசலேமை நோக்கி அண்ணாந்துபார்த்து ஜெபம் பண்ண முடியும். (தானி 6:10)

ஜெபஆலயம் (synagogue) - συναγωγή - synagoogee - 4864

பெண்பால் பெயர்சொல் ஜெபஆலயம், ஆலயம், கூட்டம்

ஒவ்வொரு ஜெபாலயத்திலும் காணப்படும் காரியங்கள்

1 பெட்டி நியாயப்பிரமாணம் வைக்கப் பட்டிருக்கும்

2 உயர்ந்த பிரசங்க மேடை நியாயப் பிரமாணத்தை இந்த இடத்திலிருந்து வாசித்து, அதற்கு அர்த்தம் சொல்வார்கள்

3 ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியாக இருக்கைகள் இருக்கும் பொதுவாக ஸ்திரீகள் மாடங்களிலும், புருஷர்கள் மண்டபங்களிலும் அமர்ந்திருப்பார்கள்

4 ஜெபாலயத்து மூப்பர்களுக்கும், அதிகாரிகளுக்கும் ஜனங்களைப் பார்க்கும் பிரகாரம் முன்புறத்தில் ஆசனங்கள் இருக்கும்.

5 மாலை ஆராதனைகளிலும், பண்டிகைகளிலும் வெளிச்சம் தருவதற்காக விளக்குகள் ஏற்றப் பட்டிருக்கும்.

6 ஜெபாலயத்தின் பணிமுட்டுப் பொருட்களையும் இதர முக்கியமான பொருட்களையும் பாதுகாப்பாக வைப்பதற்காகத் தனி அறைகள் இருக்கும்.

அதிகாரம் (authority) - ἐξουσία - exousia - 1849

பெண்பால் பெயர்சொல் - அதிகாரம் வல்லமை, ஆதீனம் (மத் 9:8)

"வேதபாரகர்" - (மத் 2:4)

- **இயேசு அசுத்த ஆவியை துரத்துகிறார்** - (லூக் 4:33)

மாற்கு 1:23 அவர்களுடைய ஜெப ஆலயத்திலே அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷன் இருந்தான்

மாற்கு 1:24 அவன் ஐயோ நசரேயனாகிய இயேசுவே, எங்களுக்கும் உமக்கும் என்ன? எங்களைக் கெடுக்கவா வந்தீர்? உம்மை இன்னார் என்று அறிவேன் நீர் தேவனுடைய பரிசுத்தர் என்று சத்தமிட்டான்

மாற்கு 1:25 அதற்கு இயேசு: நீ பேசாமல் இவனை விட்டுப் புறப்பட்டுப்போ என்று அதை அதட்டினார்

மாற்கு 1:26 உடனே அந்த அசுத்த ஆவி அவனை அலைக்கழித்து, மிகுந்த சத்தமிட்டு, அவனைவிட்டுப் போய்விட்டது.

மாற்கு 1:27 எல்லாரும் ஆச்சரியப்பட்டு: இது என்ன இந்தப் புதிய உபதேசம் எப்படிப்பட்டது. இவர் அதிகாரத்தோடே அசுத்த ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார், அவைகள் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்று தங்களுக்குள்ளே ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள்

1 அதிகாரம்

மாற்கு 1:28 அதுமுதல் அவருடைய கீர்த்தி கலிலேயா நாடெங்கும் பிரசித்தமாயிற்று.

"அசுத்த ஆவி" - பிசாசுகளைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் பொதுவான சொல். மாற்கு 10 தடவைகள் இந்த வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார் (மாற்கு 1:23-27; மாற்கு 3:11,30; மாற்கு 5:2-13; மாற்கு 6:7; மாற்கு 7:25).

"உம்மை இன்னார் என்று அறிவேன், நீர் தேவனுடைய பரிசுத்தர்" - பிசாசுகளுக்கு இயேசு கிறிஸ்துவையும், அவருடைய அதிகாரத்தையும் நன்றாகத் தெரியும். (அப் 4:15) பிசாசுகள் தாங்கள் இயேசுவோடு நெருங்கி இருப்பதாகவும், இயேசுவோடு இணைந்து ஊழியம் செய்வதாகவும் ஒரு மாயமான தோற்றத்தை கொடுக்கும். ஆகையினால்தான் இயேசு கிறிஸ்து பிசாசுகளைத் தம்மிடத்தில் வரவிடாமல் விரட்டுகிறார். பிசாசுகள் தமக்குச் சத்துரு என்றும், அவைகள்மீது தமக்கு அதிகாரம் உள்ளது என்பதையும் வெளிப்படுத்துகிறார்.

"உடனே அந்த அசுத்த ஆவி அவனை அலைக்கழித்து, மிகுந்த சத்தமிட்டு, அவனைவிட்டுப் போய்விட்டது" - பிசாசு அவனைப் பாடாய்ப்படுத்துகிறது. மிகுந்த சத்தமிடுகிறது. அவனுக்கு அதிகமான வேதனையைக் கொடுக்கிறது.

"அவைகள் இவருக்குக் கீழ்ப்படிகிறதே" தங்கள்மீது அதிகாரம் உள்ளவர்களுக்கு ஊழியர்கள் கீழ்ப்படிவது வழக்கம். இயேசுவிற்கு பிசாசுகளின்மீது அதிகாரம் இருக்கிறது. ஆகையினால் பிசாசுகள் இயேசுவிற்குக் கீழ்ப்படிகிறது. ஆண்டவர் இதே அதிகாரத்தை [illegible] கொடுத்திருக்கிறார். தங்களிடத்தில் தெய்வீக வல்லமை இருப்பதாக கூறிக் கொள்கிறவர்கள் பிசாசுகளைத் துரத்த வேண்டும். இவர்களுக்குப் பிசாசுகள் கீழ்ப்படியவில்லையென்றால் இவர்களுக்குத் தேவனுடைய அதிகாரம் கொடுக்கப்படவில்லை என்றுதான் பொருள். (அப் 19:13-18) தேவனுடைய வல்லமை வெளிப்பட வேண்டுமென்றால் அங்கு அவிசுவாசிகளோ இருக்கக்கூடாது என்று நாம் வாதாடக்கூடாது. நம்முடைய பலவீனத்தை மறைப்பதற்காக நாம் கூறும் சாக்குப்போக்குகள்தான் இவை.

6. பேதுருவின் மாமியை சொஸ்தமாக்குகிறார் - (மத் 8:14; லூக் 4:38)

மாற்கு 1:29 உடனே அவர்கள் ஜெபஆலயத்தை விட்டுப் புறப்பட்டு, யாக்கோபோடும் யோவானோடுங்கூட, சீமோன் அந்திரேயா என்பவர்களுடைய வீட்டில் பிரவேசித்தார்கள்.

மாற்கு 1:30 அங்கே சீமோனுடைய மாமி ஜுரமாய்க் கிடந்தாள்; உடனே அவர்கள் அவளைக்குறித்து அவருக்குச் சொன்னார்கள்.

மாற்கு 1:31 அவர் கிட்டப்போய், அவள் கையைப் பிடித்து அவளைத் தூக்கிவிட்டார்; உடனே ஜுரம் அவளை விட்டு நீங்கிற்று. அப்பொழுது அவள் அவர்களுக்குப் பணிவிடை செய்தாள்.

"சீமோன் அந்திரேயா என்பவர்களுடைய வீடு" - அவர்கள் ஒரே வீட்டிலேயே குடியிருந்தார்கள்.

"உடனே" - (மாற்கு 3:6, மத் 8:14-15)

7. பிசாசுகளைத் துரத்துகிறார் - வியாதியஸ்தரை சொஸ்தமாக்குகிறார் - (மத் 8:16; லூக் 4:40)

மாற்கு 1:32 சாயங்காலமாகிச் சூரியன் அஸ்தமித்தபோது, சகல பிணியாளிகளையும், பிசாசு பிடித்தவர்களையும், அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்.

மாற்கு 1:33 பட்டணத்தார் எல்லாரும் வீட்டுவாசலுக்கு முன்பாகக் கூடிவந்தார்கள்.

மாற்கு 1:34 பலவிதமான வியாதிகளினால் உபத்திரவப்பட்டிருந்த அநேகரை அவர் சொஸ்தமாக்கி, அநேகம் பிசாசுகளையும் துரத்திவிட்டார்; அந்தப் பிசாசுகள் தம்மை அறிந்திருந்தபடியால், அவைகள் பேசுகிறதற்கு அவர் இடங்கொடுக்கவில்லை.

மாற்கு – தொகுப்புரை

1 அதிகாரம்

"சாயங்காலமாகிச் சூரியன் அஸ்தமித்தபோது, சகல பிணியாளிகளையும், பிசாசு பிடித்தவர்களையும், அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்" - மத் 8:16 ஆகிய வசனத்தோடு கூடுதலாகக் கூறப்பட்டிருக்கும் செய்தி ஓய்வுநாள் முடிந்துவிட்டது. ஓய்வுநாளில் சொஸ்தமாக்குவது பாவம் என்று ஜனங்கள் நினைத்தார்கள் (மாற்கு 3:2; லூக்கா 6:7; லூக்கா 13:10-16; யோவான் 5:9-18; யோவான் 9:14,16) ஆகையினால் சாயங்காலமானபோது இயேசுவிடம் வியாதியஸ்தர்களைக் கூட்டிக் கொண்டு வருகிறார்கள்.

"பலவிதமான வியாதிகளினால் உபத்திரவப்பட்டிருந்த அநேகரை அவர் சொஸ்தமாக்கி, அநேகம் பிசாசுகளையும் துரத்திவிட்டார்" - இயேசு கிறிஸ்துவிடம் வந்தவர்கள் யாரும் வெறுமையாகத் திரும்பி போவதில்லை. இயேசுவால் குணப்படுத்த முடியாத வியாதியும் ஒன்றுமில்லை. (மத் 8:16, மத் 13:58) இந்த வசனத்தில் நாம் வாசிக்கிற பிரகாரம் சிலருக்கு எந்த வியாதியும் இல்லாமல் இருக்கலாம். ஆயினும் அவர்களைப் பிசாசுகள் பிடித்திருப்பதற்கு வாய்ப்பிருக்கிறது.

"அந்தப் பிசாசுகள் தம்மை அறிந்திருந்தபடியால், அவைகள் பேசுகிறதற்கு அவர் இடங்கொடுக்கவில்லை" - (மாற்கு 1:24)

8. இயேசு கிறிஸ்துவின் அதிகாலை ஜெபம்

மாற்கு 1:35 அவர் அதிகாலையில் இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப்போய், அங்கே ஜெபம்பண்ணினார்.

மாற்கு 1:36 சீமோனும் அவனோடே இருந்தவர்களும் அவரைப் பின்தொடர்ந்து போய்,

மாற்கு 1:37 அவரைக் கண்டபோது: உம்மை எல்லாரும் தேடுகிறார்கள் என்று சொன்னார்கள்.

"அவர் அதிகாலையில், இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப்போய், அங்கே ஜெபம்பண்ணினார்" - மத் 6:17-இல் கூறப்பட்டிருக்கிற அவருடைய தெய்வத்துவத்தை விளக்கும் கூடுதல் அம்சம். ஜெபம் பண்ணுவது இயேசு கிறிஸ்துவின் வழக்கம். (மத் 14:23; மாற்கு 1:35; மாற்கு 6:46; லூக்கா 6:12; லூக்கா 9:28; லூக்கா 11:1)

"உம்மை எல்லாரும் தேடுகிறார்கள்" - இயேசு கிறிஸ்துவின் ஊழியத்திற்கும் தற்காலத்து மிஷினெரிகளுடைய ஊழியத்திற்கும் வித்தியாசம் தெரிகிறது. இயேசு கிறிஸ்துவை எல்லோரும் தேடிச்சென்றார்கள். நாம் தேவனுக்கு உண்மையாக ஊழியம்செய்யும்போது ஜனங்கள் நம்மையும் தேடிவருவார்கள்.

9. கலிலேயாவிற்கு இயேசுவின் முதல்வது பிரயாணம் - (மத் 4:23; மத் 9:35; லூக் 4:42)

மாற்கு 1:38 அவர்களை அவர் நோக்கி: அடுத்த ஊர்களிலும் நான் பிரசங்கம் பண்ண வேண்டுமாதலால் அவ்விடங்களுக்குப் போவோம் வாருங்கள்; இதற்காகவே புறப்பட்டு வந்தேன் என்று சொல்லி,

மாற்கு 1:39 கலிலேயா நாடெங்கும் அவர்களுடைய ஜெபஆலயங்களில் அவர் பிரசங்கம் பண்ணிக்கொண்டும், பிசாசுகளைத் துரத்திக்கொண்டும் இருந்தார்.

"இதற்காகவே புறப்பட்டுவந்தேன்" (லூக்கா 5:32)

10. இயேசு குஷ்டரோகியைச் சுத்தமாக்குகிறார் - (மத் 8:1; லூக் 5:12)

மாற்கு 1:40 அப்பொழுது குஷ்டரோகி ஒருவன் அவரிடத்தில் வந்து, அவர் முன்பாக முழங்கால்படியிட்டு: உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் என்று வேண்டிக் கொண்டான்.

1 அதிகாரம்

மாற்கு 1:41 இயேசு மனதுருகி, கையை நீட்டி, அவனைத் தொட்டு: எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார்.

மாற்கு 1:42 இப்படி அவர் சொன்னவுடனே குஷ்டரோகம் அவனை விட்டு நீங்கிற்று, அவன் சுத்தமானான்.

மாற்கு 1:43 அப்பொழுது அவர் அவனை நோக்கி: நீ இதை ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு எச்சரிக்கையாயிரு.

மாற்கு 1:44 ஆயினும் நீ போய் ஆசாரியனுக்கு உன்னைக் காண்பித்து, நீ சுத்தமானதினிமித்தம் மோசே கட்டளையிட்டிருக்கிறவைகளை அவர்களுக்குச் சாட்சியாகச் செலுத்து என்று கண்டிப்பாய்ச் சொல்லி, உடனே அவனை அனுப்பிவிட்டார்.

மாற்கு 1:45 அவனோ புறப்பட்டுப்போய், இந்தச் சங்கதி எங்கும் விளங்கும்படி பிரசித்தம்பண்ணத்தொடங்கினான்; அதினால் அவர் வெளியரங்கமாய்ப் பட்டணத்தில் பிரவேசிக்கக் கூடாமல், வெளியே வனாந்தரமான இடங்களில் தங்கியிருந்தார்; எத்திசையிலுமிருந்து ஜனங்கள் அவரிடத்திற்கு வந்தார்கள்.

"உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும்" - வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்குவது தேவனுடைய சித்தம். இதில் நமக்கு சந்தேகம் இருக்கக்கூடாது. தேவசித்தத்திற்கு எதிராக இயேசு எதையும் செய்யமாட்டார். அதே வேளையில் தேவசித்தத்தை இயேசு செய்யாமல் இருக்கவும் மாட்டார் (யோவான் 8:28).

"இயேசு மனதுருகி, கையை நீட்டி அவனைத் தொட்டார்" - (மத் 8:3; மத் 9:36).

"எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு" - தம்மிடத்தில் வருகிறவர்கள் எவரையும் இயேசு கிறிஸ்து புறம்பே தள்ளுவதில்லை. இயேசு கிறிஸ்துவிடம் ஜெபம்பண்ணி, அதற்குப் பதில் கிடைக்கவில்லையென்றால் அதற்கு ஏதாவது விசேஷமான காரணம் இருக்கும். தேவன் நீதிபரர், கிருபையுள்ளவர். வியாதி குணமாக வேண்டுமென்றும் சித்தம் உள்ளவர். ஆகையினால் குஷ்டரோகியைப் பார்த்து, எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்று கூறுகிறார்.

"இப்படி அவர் சொன்னவுடனே குஷ்டரோகம் அவனை விட்டு நீங்கிற்று, அவன் சுத்தமானான்" - தெய்வீக வல்லமை வெளிப்படாமல் குஷ்டரோகி உடனடியாகச் சொஸ்தமாக முடியாது. யாரோ ஒருவனுக்கு இயேசு தமது வல்லமையை இப்படி வெளிப்படுத்தியிருக்கும்போது நம்மீது அன்பாய் இருக்கும் நமது ஆண்டவர் நமக்காகத் தமது வல்லமையை நிச்சயம் வெளிப்படுத்தி அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்வார்.

"நீ இதை ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு எச்சரிக்கையாயிரு" - (மத் 8:4). அசுத்தமானவரைத் தொடக்கூடாது. தொடுவது நியாயப்பிரமாணத்தை மீறும் செயல். அசுத்தமான ஒருவரைத் தொடுகிற நபரும் அசுத்தமானவராகக் கருதப்படுவார் (லேவி 5:1-14; லேவி 15:5-27). இயேசு கிறிஸ்து ஒவ்வொரு முறையும் குஷ்டரோகியைத் தொட்டபோது அவர் பாரம்பரிய முறைமையின்படி தம்மைச் சுத்திகரித்துக் கொண்டதற்கு வேத ஆதாரம் எதுவுமில்லை. நியாயப்பிரமாணத்தின் பிரகாரம் சுத்திகரிக்கும் சடங்கு ஒருநாள் முழுவதும் நடைபெறும் (லேவி 15:5-27). இயேசு கிறிஸ்து திரளான ஜனங்களைச் சொஸ்தமாக்கினார். ஆயினும் நியாயப்பிரமாணத்தின்படி அவர் தம்மைச் சுத்திகரித்துக் கொள்ளவில்லை. நியாயப்பிரமாணத்தை அகற்றிவிட்டு, தமது புதிய பிரமாணத்தை மனுக்குலத்திற்குக் கொடுப்பதற்காகவே இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார் (2கொரி 3:6-5; ரோமர் 10:4; கலா 3:19-25; கலா 4:21-31).

"நீ போய், ஆசாரியனுக்கு உன்னைக் காண்பி" - (லேவி 14:1-32).

"மோசே" - மாற்கு எட்டு தடவை மோசேயின் பெயரைக் குறிப்பிட்டிருக்கிறார் (மாற்கு 1:44; மாற்கு 7:10; மாற்கு 9:3-4; மாற்கு 10:3-4; மாற்கு 12:19,26).

மாற்கு - தொகுப்புரை

1 அதிகாரம்

"இந்தச் சங்கதி எங்கும் விளங்கும்படியாகப் பிரசித்தம் பண்ணத்தொடங்கினான்" - இயேசு கிறிஸ்து சுத்தமான குஷ்டரோகியைப் பார்த்து "நீ இதை ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு எச்சரிக்கையாயிரு" என்று கூறியிருந்தார். ஆனால் இவனோ எல்லாருக்கும் கூறுகிறான். இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிப்பதும், அவர் நமக்குச் செய்த புண்ணியங்களை விவரிப்பதும் நல்ல காரியம் தான் (மாற்கு 1:4,7,14,38,39). ஆயினும் இதை ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு எச்சரிக்கையாயிரு என்று சொன்ன பின்பும் அதற்குக் கீழ்ப்படியாமல் இயேசு செய்த நற்காரியத்தைப் பிரசித்தம்பண்ணுவது கீழ்ப்படியாத செயலே (1சாமு 15:22-23).

"அதினால் அவர் வெளியரங்கமாகப் பட்டணத்தில் பிரவேசிக்கக் கூடாமல் வெளியே வனாந்தரமான இடங்களில் தங்கியிருந்தார்" - இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்கிறவர்களுக்குச் சாதாரணமாக வரக்கூடிய காரியம்தான். பலவேளைகளில் தேவனுடைய பிள்ளைகளுக்கு பட்டண அனுபவம் போகும். வனாந்தர அனுபவம் வரும். எல்லாச் சூழ்நிலையிலும் நாம் இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்ய வேண்டும் (யோவான் 14:12).

"எத்திசையிலுமிருந்து ஜனங்கள் அவரிடத்திற்கு வந்தார்கள்" ஜனங்கள் சில நாட்களாகத் தொடர்ந்து இயேசு கிறிஸ்துவிடம் வந்துகொண்டு இருக்கிறார்கள் (மாற்கு 2:1).

2 அதிகாரம்

11. கப்பர்நகூமிற்குத் திரும்பி வருகிறார் - திமிர்வாதக்காரனை குணமாக்குகிறார் - (மத் 9:1; லூக் 5:17; யோவான் 2:12)

மாற்கு 2:1 சிலநாட்களுக்குப்பின்பு அவர் மறுபடியும் கப்பர்நகூமுக்குப் போனார்; அவர் வீட்டிலிருக்கிறாரென்று ஜனங்கள் கேள்விப்பட்டு,

மாற்கு 2:2 உடனே வாசலுக்கு முன்னும் நிற்க இடம்போதாதபடிக்கு அநேகர் கூடிவந்தார்கள்; அவர்களுக்கு வசனத்தைப் போதித்தார்.

மாற்கு 2:3 அப்பொழுது நாலுபேர் ஒரு திமிர்வாதக்காரனைச் சுமந்துகொண்டு அவரிடத்தில் வந்தார்கள்.

மாற்கு 2:4 ஜனக்கூட்டத்தினிமித்தம் அவருக்குச் சமீபமாய்ச் சேரக்கூடாமல், அவர் இருந்த வீட்டின் மேற்கூரையைப் பிரித்துத் திறப்பாக்கி, திமிர்வாதக்காரன் கிடக்கிற படுக்கையை இறக்கினார்கள்.

மாற்கு 2:5 இயேசு அவர்கள் விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி: மகனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார்.

மாற்கு 2:6 அங்கே உட்கார்ந்திருந்த வேதபாரகரில் சிலர்:

மாற்கு 2:7 இவன் இப்படி தேவதூஷணம் சொல்லுகிறதென்ன? தேவன் ஒருவரேயன்றி பாவங்களை மன்னிக்கத் தக்கவர் யார் என்று தங்கள் இருதயங்களில் சிந்தித்துக் கொண்டிருந்தார்கள்.

மாற்கு 2:8 அவர்கள் தங்களுக்குள்ளே இப்படிச் சிந்திக்கிறார்களென்று இயேசு உடனே தம்முடைய ஆவியில் அறிந்து, அவர்களை நோக்கி: நீங்கள் உங்கள் இருதயங்களில் இப்படிச் சிந்திக்கிறதென்ன?

மாற்கு 2:9 உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டதென்று சொல்வதோ, எழுந்து உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நடவென்று சொல்வதோ, எது எளிது?

மாற்கு 2:10 பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும் என்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி:

மாற்கு 2:11 நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

மாற்கு 2:12 உடனே, அவன் எழுந்து, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு எல்லாருக்கும் முன்பாகப் போனான்; அப்பொழுது எல்லாரும் ஆச்சரியப்பட்டு: நாம் ஒருக்காலும் இப்படிக் கண்டதில்லையென்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

"சிலநாட்களுக்குப்பின்பு அவர் மறுபடியும் கப்பர்நகூமுக்குப் போனார்" - சில நாட்கள் இயேசுகிறிஸ்து வெளியரங்கமாய் பட்டணத்தில் பிரவேசிக்கவில்லை. திரளான ஜனங்கள் எத்திசையிலும் இருந்தும் அவரிடத்திற்கு வந்தார்கள் (மாற்கு 1:45). வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்குமாறு அவரிடத்தில் கூட்டிக் கொண்டு வந்தார்கள். சில நாட்களுக்குப் பின்பு அவர் ஓய்வு எடுப்பதற்காக ஒரு வீட்டிற்குப் போனார். ஆனால் அங்கும் அவரால் ஓய்வு எடுக்கமுடியவில்லை. அவர் வீட்டிலிருக்கிறார் என்று ஜனங்கள் கேள்விப்பட்டு, அந்த வீட்டிற்கும் கூட்டமாக வந்துவிட்டார்கள் (மாற்கு 2:1,2).

"வீடு" பேதுருவின் வீடாக இருக்கலாம். இயேசு கிறிஸ்து கப்பர்நகூமில் இருந்தபோது பேதுருவின் வீட்டிலிருந்து ஊழியம் செய்வது வழக்கம். (மத் 4:13; மத் 8:13; மாற்கு 1:29)

கிறிஸ்துவின் ஊழியத்தில் ஏராளமான ஆசீர்வாதங்கள்

1. பல பிசாசுகளைத் துரத்தினார் (மத் 8:16; மாற்கு 1:34)

2. பல அற்புதக்கிரியைகளை நடப்பித்தார் (மத் 13:58)

மாற்கு – தொகுப்புரை

2 அதிகாரம்

3 இயேசு கிறிஸ்துவைத் தொட்டவர்கள் அனைவரும் சொஸ்தமானார்கள் (மத் 14:36; மாற்கு 3:10 மாற்கு 6:56)

4 பலரைச் சொஸ்தமாக்கினார் (மாற்கு 1:34; மாற்கு 3:10)

5 பலவீனங்களைக் குணமாக்கினார் (லூக்கா 7:21)

6 பலருக்குப் பார்வையைக் கொடுத்தார் (லூக்கா 7:21)

7 அவருடைய நாமத்தில் பலர் விசுவாசம் வைத்தார்கள் (யோவான் 2:23; யோவான் 4:39-41; யோவான் 7:31 யோவான் 8:30; யோவான் 10:42)

8 பல அற்புதங்களைச் செய்தார் (யோவான் 11:47; யோவான் 12:37)

9 அதிகாரிகள் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தார்கள் (யோவான் 12:42)

10 பல அடையாளங்களைக் காண்பித்தார் (யோவான் 20:30 யோவான் 21:25)

11 பல காரியங்களை உபதேசம் பண்ணினார் (மத் 13:3; மாற்கு 6:34)

12 தம்முடைய ஜீவனை ஏராளமான ஜனங்களுக்குப் பாவநிவாரண கிரயமாகக் கொடுத்தார் (மத் 20:28 மாற்கு 10:45)

13 பலருடைய பாவங்களை மன்னிப்பதற்காகத் தமது இரத்தத்தைச் சிந்தினார் (மத் 26:28)

14 பலருடைய சரீரங்களை உயிர்த்தெழச் செய்தார் (மத் 27:52)

15 நமக்கு முன்மாதிரியாகப் பல பாடுகளை அனுபவித்தார் (மாற்கு 8:31; 1பேதுரு 4:1)

16. திரளான பாவங்களை மன்னித்தார் (லூக்கா 7:47)

17 தேவனுடைய பிள்ளைகளாகும்படி பலருக்கு அதிகாரம் கொடுத்தார் (யோவான் 1:12)

18 ஏராளமான நற்கிரியைகளைச் செய்தார் (யோவான் 10:32)

"அவர்களுக்கு வசனத்தைப் போதித்தார்" - கலிசேஷ ஊழியர்கள் செய்ய வேண்டிய காரியம் இதுதான். வசனத்தில் கலப்படமும் இருக்கக் கூடாது. வசனத்திற்குப் பதிலாக வேறு எதையும் பிரசிங்கிக்கவும் கூடாது. அவ்வாறு மாற்று உபதேசத்தைப் போதிக்கிறவன் கர்த்தர் கொடுத்திருக்கும் ஊழியத்தைத் தவறவிட்டு விடுகிறான்.

"அவர் இருந்த வீட்டின் மேற்கூரையைப் பிரித்துத் திறப்பாக்கினார்கள்" - கிழக்கு தேசங்களில் வீட்டின் மேல்மச்சு தட்டையாக இருக்கும். ஜனங்களுடைய பாதுகாப்பிற்காக அதன்மீது கைப்பிடிச்சுவர் கட்டப்பட்டிருக்கும் (உபா 22:8; நியா 16:27; 2சாமு 11:2). மொட்டை மாடியிலிருந்து வீட்டிற்குள் இறங்குவதற்குச் சிறிய கதவு இணைக்கப்பட்டிருக்கும். இந்தக் கதவை இடித்து அதனுடன் மச்சின் ஒரு பகுதியையும் இடித்து திமிர்வாதக்காரனை கீழே இறக்கினார்கள். மாடிக்குச் செல்வதற்கு வீட்டின் வெளியிலும் படியிருக்கும். அந்தப்படியின் வழியாக திமிர்வாதக்காரனை எளிதாக மாடிக்கு தூக்கிச்சென்றுவிட்டார்கள். இயேசு கிறிஸ்து வீட்டிற்குள் இருந்தார். அவருக்கு அருகாமையில் திமிர்வாதக்காரனைப் படுக்கையோடு இறக்குவதற்காக வீட்டின் மேற்கூரையைப் பிரித்துத் திறப்பாக்கினார்கள்.

"படுக்கை" மாற்கு 4:21 இல் கூறப்பட்டிருக்கிற படுக்கை வேறு. இந்தப் படுக்கை வேறு.

"இயேசு அவர்கள் விசுவாசத்தைக் கண்டார்" - தேவன் நமது விசுவாசத்தைக் காண விரும்புகிறார். நம்மிடம் விசுவாசம் காணப்படும்போது நமது ஜெபத்திற்குப் பதில் கிடைக்கும் (மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; எபி 11:6; யாக் 1:5-8)

"உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது" - (மத் 9:2

மாற்கு – தொகுப்புரை

2 அதிகாரம்

"தேவன் ஒருவரேயன்றிப் பாவங்களை மன்னிக்கத்தக்கவர் யார்" - இது சத்தியமான வார்த்தை. இயேசு கிறிஸ்துவைப் பொருத்த வரையில் "உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப் பட்டது" என்று அவர் கூறியது தேவ தூஷணமாகாது. பாவங்களை மன்னிப்பதற்கு அவர் அதிகாரமுடையவர். அவர் இன்னும் நமது பாவங்களை மன்னித்துக் கொண்டிருக்கிறார் (மாற்கு 2:10)

"அவர்கள் தங்களுக்குள்ளே இப்படிச் சிந்திக்கிறார்களென்று இயேசு உடனே தம்முடைய ஆவியில் அறிந்தார்" - மனுஷன் முகத்தைப் பார்க்கிறான் ஆனால் கிறிஸ்துவோ மனுஷருடைய இருதயங்களைப் பார்க்கிறார். ஆவிகளைப் பகுத்தறியும் வரம் அவரிடம் இருந்தது. அந்த ஆவியின் மூலமாக மனுஷர் தங்களுக்குள் சிந்திக்கும் காரியங்களை அறிந்து கொண்டார் (ஏசா 11:2; ஏசா 61:1; யோவான் 3:34)

"பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டு" - இயேசு கிறிஸ்து சகல அதிகாரம் உடையவர். பாவங்களை மன்னிப்பதற்கு எந்தச் சடங்குகளும் தேவையில்லை. சான்றாக

1. திமிர்வாதக்காரன் (மத் 9:2; மாற்கு 2:10)

2. பாவியான ஸ்திரீ (லூக்கா 7:48)

3. சகேயு (லூக்கா 19:1-9)

4. சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன் (லூக்கா 23:43)

5. பல ஆயிரக்கணக்கான புருஷர்களையும், ஸ்திரீகளையும் இயேசு கிறிஸ்து மன்னித்து அவர்களைச் சொஸ்தமாக்கினார் (மத் 9:22; மாற்கு 10:52; லூக்கா 17:19; லூக்கா 18:42; யோவான் 4:53; யோவான் 8:30-31; யோவான் 11:45) இயேசுவின் ஊழியத்தில் பாவமன்னிப்பும் சரீரசுகமாகுதலும் சேர்ந்தே நடைபெற்றது (மத் 13:15; மாற்கு 2:5-12) வேத உபதேசமும் இதை வலியுறுத்துகிறது. (யாக் 5:14-16)

"உடனே, அவன் எழுந்து, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு எல்லாருக்கு முன்பாகப் போனான்" - உண்மையான சுகமாகுதல் எல்லாருக்கும் முன்பாக நடைபெறுவதில் தவறொன்றும் இல்லை. சுகமான நபரை மனுஷர்கள் சோதித்துப் பார்க்கலாம்.

"அப்பொழுது எல்லாரும் ஆச்சரியப்பட்டு, நாம் ஒருக்காலும் இப்படிக் கண்டதில்லையென்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்" - தேவன் வியாதியில் மகிமைப்படுவதில்லை. வியாதி சொஸ்தமாகும்போது தேவன் மகிமைப்படுகிறார்.

கர்த்தரை எல்லோரும் துதிக்க வேண்டும். வியாதிப்பட்டவரும் துதிக்க வேண்டும். நல்ல ஆரோக்கியத்தோடு இருப்பவர்களும் துதிக்க வேண்டும். வியாதியோடு இருப்பதினால் தேவனைத் துதிக்கமாட்டேன் என்று சாக்குப்போக்கு சொல்லக்கூடாது. வியாதியிலிருப்பவர்கள்தான் தேவனைப் பற்றி அதிகமாகச் சிந்திப்பார்கள்.

வியாதியைச் சாத்தான் கொண்டு வருகிறான் (மத் 8:17; லூக்கா 13:16; யோவான் 10:10; அப் 10:38) சாத்தானுடைய கிரியைகளை அழிப்பதற்காக தேவன் இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பினார் (மத் 28:2; மாற்கு 16:17-18; யோவான் 14:12)

வியாதி சாத்தானுடைய கிரியை. வியாதியைச் சொஸ்தமாக்குவது இயேசு கிறிஸ்துவின் கிரியை. வியாதி குணமாகும்போது தேவன் மகிமை அடைகிறார். வியாதியினால் தேவன் மகிமை அடைவதில்லை. ஒருவன் தொடர்ந்து வியாதியில் இருக்கும்பொழுது அவனுக்குள் சாத்தானுடைய கிரியை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. வியாதியாக இருக்கிற நாம் கர்த்தரிடத்தில் விசுவாசத்தோடு ஜெபிக்க வேண்டும். தன் நோயிலிருந்து இயேசு கிறிஸ்து பூரண சுகம்தருவார் என்று முழுமனதோடு நம்பவேண்டும்.

12. லேவி என்னும் மத்தேயுவை அழைக்கிறார் (மத் 9:9; லூக் 5:27)

மாற்கு 2:13 அவர் மறுபடியும் புறப்பட்டுக் கடலருகே போனார், அப்பொழுது ஜனங்களெல்லாரும் அவரிடத்தில் வந்தார்கள், அவர்களுக்குப் போதகம் பண்ணினார்

2 அதிகாரம்

மாற்கு 2:14 அவர் நடந்துபோகையில் அல்பேயுவின் குமாரனாகிய லேவி ஆயத்துறையில் உட்கார்ந்திருக்கிறதைக் கண்டு: எனக்குப் பின்சென்றுவா என்றார்; அவன் எழுந்து அவருக்குப் பின்சென்றான்.

13. பரிசேயருக்கு பதிலுரை - (மத் 9:10; லூக் 5:30)

மாற்கு 2:15 அப்பொழுது அவனுடைய வீட்டிலே அவர் போஜனபந்தியிருக்கையில், அநேக ஆயக்காரரும் பாவிகளும் அவரோடுகூட வந்திருந்தபடியால், அவர்களும் இயேசுவோடும் அவர் சீஷரோடுங்கூடப் பந்தியிருந்தார்கள்.

மாற்கு 2:16 அவர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனம் பண்ணுகிறதை வேதபாரகரும் பரிசேயரும் கண்டு, அவருடைய சீஷரை நோக்கி: அவர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனபானம் பண்ணுகிறதென்னவென்று கேட்டார்கள்.

மாற்கு 2:17 இயேசு அதைக் கேட்டு: பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை. நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார்.

"ஆயக்காரர்" - (மத் 5:46)

"பாவிகள்" - (மத் 9:11)

"நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்கவந்தேன்" (லூக்கா 5:32)

14. யோவான் ஸ்நானனின் சீஷர்களுக்கு பதிலுரை - (மத் 9:14; லூக் 5:33)

மாற்கு 2:18 யோவானுடைய சீஷரும் பரிசேயருடைய சீஷரும் உபவாசம் பண்ணிவந்தார்கள். அவர்கள் அவரிடத்தில் வந்து: யோவானுடைய சீஷரும் பரிசேயருடைய சீஷரும் உபவாசிக்கிறார்களே, உம்முடைய சீஷர் உபவாசியாமலிருக்கிறதென்னவென்று கேட்டார்கள்.

மாற்கு 2:19 அதற்கு இயேசு: மணவாளன் தங்களோடிருக்கையில் மணவாளனுடைய தோழர் உபவாசிப்பார்களா? மணவாளன் தங்களுடனே இருக்கும்வரைக்கும் உபவாசிக்க மாட்டார்களே.

மாற்கு 2:20 மணவாளன் அவர்களை விட்டு எடுபடும் நாட்கள் வரும், அந்த நாட்களிலே உபவாசிப்பார்கள்.

உவமை எண் - 1

"மணவாளன் தங்களோடிருக்கையில் மணவாளனுடைய தோழர் உபவாசிப்பார்களா?" (மாற்கு 2:19-20)

"மணவாளனுடைய தோழர்" - திருமணச் சடங்குகளில் மணவாளனுடைய உறவினர்களும் நண்பர்களும் தோழர் என்று அழைக்கப்படுகிறார்கள். திருமண விருந்துகளைச் சந்தோஷமாக நடத்துவதற்காக மணவாளனுடைய தோழர்கள் திருமணத்திற்கு வருவார்கள்.

தீர்க்கதரிசனம் எண் - 2

"மணவாளன் அவர்களை விட்டு எடுபடும் நாட்கள் வரும், அந்த நாட்களிலே உபவாசிப்பார்கள்" - (மாற்கு 2:20) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேற்று நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

"அந்த நாட்களிலே உபவாசிப்பார்கள்" - விசுவாசிகள் இந்தக் காலத்தில் உபவாசித்து ஜெபிக்க வேண்டும்.

2 அதிகாரம்

15. வஸ்திரம், துருத்திகள் ஆகியவற்றின் உவமை - (மத் 9:16; லூக் 5:36)

மாற்கு 2:21 ஒருவனும் கோடித்துண்டைப் பழைய வஸ்திரத்தோடு இணைக்கமாட்டான் இணைத்தால், அதினோடே இணைத்த புதியதுண்டு பழையதை அதிகமாய்க் கிழிக்கும். பீறலும் அதிகமாகும்

மாற்கு 2:22 ஒருவனும் புது திராட்சரசத்தைப் பழந்துருத்திகளில் வார்த்துவைக்கமாட்டான் வார்த்து வைத்தால் புதுரசம் துருத்திகளைக் கிழித்துப்போடும். இரசமும் சிந்திப்போம். துருத்திகளும் கெட்டுப்போம். புதுரசத்தைப் புது துருத்திகளில் வார்த்துவைக்கவேண்டும் என்றார்

உவமை எண் - 2

"ஒருவனும் கோடித்துண்டைப் பழைய வஸ்திரத்தோடு இணைக்கமாட்டான்" (மாற்கு 2:21-22) ஒருவர் கர்த்தருக்குள் வரும்போது புதிய ஜீவனையும் புதிய அனுபவங்களையும் பெற்றுக் கொள்வதை இந்த உவமை விளக்குகிறது. அத்துடன் அவருடைய பழைய சுபாவங்களையும் அனுபவங்களையும் இந்தப் புதிய ஜீவனின் அனுபவத்தோடு கலக்கக்கூடாது. (மத் 9:16-17) இயேசு கிறிஸ்து தமது சீஷர்களை விட்டு எடுத்துக்கொள்ளப்படும் வேளைவந்த போது, அவர் அவர்களை எவ்வாறு பழக்குவித்தார் என்பதையும் இந்த உவமை விளக்குகிறது. (யோவான் 16:22; அப் 1:2)

புதுரசம் (new wine) - ναός - naos 3485

ஆண்பால் பெயர்ச்சொல் - புதியது

புதிதான (renewed) - καινός - kainos 2537

பொருள் - புது, புதிய, நவமான புதிதான

16. இயேசு ஓய்வுநாளுக்கும் ஆண்டவராக இருக்கிறார் - (மத் 12:1; லூக் 6:1-5)

மாற்கு 2:23 பின்பு, அவர் ஓய்வுநாளில் பயிர்வழியே போனார் அவருடைய சீஷர்கள் கூட நடந்துபோகையில், கதிர்களைக் கொய்யத் தொடங்கினார்கள்

மாற்கு 2:24 பரிசேயர் அவரை நோக்கி: இதோ ஓய்வுநாளில் செய்யத்தகாததை இவர்கள் ஏன் செய்கிறார்கள் என்றார்கள்

மாற்கு 2:25 அதற்கு அவர் தாவீதுக்கு உண்டான ஆபத்தில் தானும் தன்னோடிருந்தவர்களும் பசியாயிருந்த போது

மாற்கு 2:26 அவன் அபியத்தார் என்னும் பிரதான ஆசாரியன் காலத்தில் செய்ததை நீங்கள் ஒருக்காலும் வாசிக்கவில்லையா? அவன் தேவனுடைய வீட்டில் பிரவேசித்து ஆசாரியர் தவிர வேறொருவரும் புசிக்கத்தகாத தேவசமுகத்து அப்பங்களைத் தானும் புசித்துத் தன்னோடிருந்தவர்களுக்கும் கொடுத்தானே என்றார்

மாற்கு 2:27 பின்பு அவர்களை நோக்கி: மனுஷன் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை, ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது

மாற்கு 2:28 ஆகையால் மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார் என்றார்

"அவருடைய சீஷர்கள் கூட நடந்து போகையில் கதிர்களைக் கொய்யத் தொடங்கினார்கள்" - பயிர் வழியாக நடந்து போகும்போதும், திராட்சைத் தோட்டத்தின் வழியாக நடந்துசெல்லும்போதும் பயிர்களையோ, திராட்சைப்பழங்களையோ பறித்துப் புசிக்கலாம். இது அக்காலத்து வழக்கத்தின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளக்கூடியதே. (உபா 23:24-25) சீஷர்கள் ஓய்வுநாளில் கதிர்களைக் கொய்து புசித்தது பரிசேயருக்குக் கேள்விக்குறியாயிற்று. (மாற்கு 2:24

மாற்கு - தொகுப்புரை

2 அதிகாரம்

"இதோ ஓய்வுநாளில் செய்யத்தகாததை இவர்கள் ஏன் செய்கிறார்கள்" - பரிசேயர்கள் புறம்பான காரியங்களுக்கே அதிக முக்கியத்துவம் தருகிறார்கள் பாவிகள் மட்டுமல்லாது நீதிமான்கள்கூட இந்தச் சிறிய காரியங்களில் தவறு செய்து விடுவார்கள்

புறம்பான காரியங்களைக் குறித்து கேட்கப்பட்ட சில கேள்விகள்

1 ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனம் பண்ணுகிறதென்ன? (மத் 9:11; மாற்கு 2:16)

2 உம்முடைய சீஷர் உபவாசியாமலிருக்கிறதென்ன? (மத் 9:14; மாற்கு 2:18)

3 ஓய்வுநாளில் செய்யத்தகாததை உம்முடைய சீஷர்கள் செய்கிறார்களே? (மத் 12:2; மாற்கு 2:24)

4 உம்முடைய சீஷர்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தை ஏன் மீறி நடக்கிறார்கள்? (மத் 15:2)

5 கைகழுவாமல் போஜனம் பண்ணுகிறார்களே? (மத் 15:2,20)

6 வானத்திலிருந்து எங்களுக்கு அற்புத அடையாளங்களை ஏன் காண்பிக்கவில்லை? (மத் 16:1-4)

7 உங்கள் போதகர் வரிப்பணம் செலுத்துகிறதில்லையா? (மத் 17:24)

8 புருஷனானவன் தன் மனைவியை எந்த முகாந்தரத்தினாலாகிலும் தள்ளிவிடுவது நியாயமா? (மத் 19:3,7)

9 நீர் எந்த அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறீர்? (மத் 21:23-27)

10. பெரிய பாவம் எது? (மத் 22:35-40)

"தாவீதுக்கு உண்டான ஆபத்தில் தானும் தன்னோடிருந்தவர்களும் பசியாயிருந்தபோது" - (மத் 12:3; லூக்கா 6:3)

"அபியத்தார்" - அகிமெலேக்கின் மற்றொரு பெயர் (1சாமு 21:1; 1சாமு 22:9,11,20) இவனுக்கு அகியா என்று மற்றொரு பெயரும் உண்டு (1சாமு 14:3) இவனுடைய குமாரனின் பெயரும் இதுவே (1சாமு 22:20; 1நாளா 18:16)

அப்பம் (shewbread) - ἄρτος - artos - 740

ஆண்பால் பெயர்ச்சொல் - அப்பம், ஆகாரம், போஜனம், சாப்பாடு

சமுகம் (presence) - πρόθεσις - prothesis - 4286

பெண்பால் பெயர்ச்சொல் - சமுகம், மனநிர்ணயம், கோருதல், தீர்மானம், தெரிந்து கொள்ளுதல், நோக்கம்

சமுகத்தப்பம் ஆசரிப்புக்கூடார மேஜையின்மீது எப்போதும் வைக்கப்பட்டிருக்கும். கர்த்தரே எல்லாக் காரியங்களையும் நமக்குப் பராமரிப்பாகத் தருகிறவர் என்பதை விளக்கும் விதமாக தேவனுடைய தெய்வீக பிரசன்னத்தை இது குறிப்பிடுகிறது. (bread of face, bread of My presence) (யாத் 25:30; லேவி 24:5-9)

"ஓய்வுநாள்" - இந்த வசனத்தில் இந்த வார்த்தை ஓய்வைக்குறிக்கும். ஓய்வு எடுப்பதற்காக மனுஷன் உண்டாக்கப்படவில்லை மனுஷனுக்காக ஓய்வு உண்டாக்கப்பட்டது. ஓய்வு எடுத்து மனுஷன் நன்றாக வேலை செய்ய வேண்டுமென்பதுதான் ஓய்வு எடுப்பதன் நோக்கம். (மாற்கு 3:1-4; லூக்கா 6:9; லூக்கா 13:10-16; யோவான் 7:22-23)

மாற்கு – தொகுப்புரை

3 அதிகாரம்

17. ஓய்வுநாளில் சூம்பின கையையுடைய ஒரு மனுஷனைச் சொஸ்தமாக்குகிறார் – (மத் 12:9, லூக் 6:6)

மாற்கு 3:1 மறுபடியும் அவர் ஜெப ஆலயத்தில் பிரவேசித்தார். அங்கே சூம்பின கையையுடைய ஒரு மனுஷன் இருந்தான்.

மாற்கு 3:2 அவர் ஓய்வுநாளில் அவனைச் சொஸ்தமாக்கினால் அவர்பேரில் குற்றஞ்சாட்டலாமென்று அவர்மேல் நோக்கமாயிருந்தார்கள்.

மாற்கு 3:3 அப்பொழுது அவர் சூம்பின கையையுடைய மனுஷனை நோக்கி: எழுந்து நடுவே நில் என்று சொல்லி,

மாற்கு 3:4 அவர்களைப் பார்த்து: ஓய்வுநாட்களில் நன்மைசெய்வதோ, தீமைசெய்வதோ, ஜீவனைக் காப்பதோ, அழிப்பதோ, எது நியாயம் என்றார். அதற்கு அவர்கள் பேசாமலிருந்தார்கள்.

மாற்கு 3:5 அவர்களுடைய இருதயகடினத்தினிமித்தம் அவர் விசனப்பட்டு, கோபத்துடனே சுற்றிலும் இருந்தவர்களைப் பார்த்து, அந்த மனுஷனை நோக்கி: உன் கையை நீட்டு என்றார். அவன் நீட்டினான்; அவன் கை மறுகையைப்போலச் சொஸ்தமாயிற்று.

"மறுபடியும் அவர் ஜெப ஆலயத்தில் பிரவேசித்தார்" மற்றொரு ஓய்வுநாளில் ஜெப ஆலயத்தில் பிரவேசித்தார்.

"அவர் ஓய்வுநாளில் அவனைச் சொஸ்தமாக்கினால் அவர்பேரில் குற்றஞ்சாட்டலாமென்று அவர்மேல் நோக்கமாயிருந்தார்கள்" - இயேசு கிறிஸ்துவிற்கு வியாதியைக் குணமாக்கும் அதிகாரம் உள்ளது என்பதில் பரிசேயருக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஓய்வுநாளில் இயேசு குணமாக்கினால் அவர் நியாயப் பிரமாணத்தை மீறுகிறார் என்று அவர்மீது குற்றமசுமத்தலாம் என்று நினைத்தார்கள்.

"அவர்களுடைய இருதய கடினத்தினிமித்தம் அவர் விசனப்பட்டு, கோபத்துடனே சுற்றிலும் இருந்தவர்களைப் பார்த்தார்" - இயேசு கிறிஸ்து கோபப்பட்டார் என்னும் வாக்கியத்தை வாசித்து விட்டு ஒருசிலர் அவர் இன்னும் பரிபூரணப்படவில்லை, அவருக்குள் பழைய மனுஷன் இன்னும் இருக்கிறான் என்று கூறுகிறார்கள். கோபப்படுவதினால் அவர் தேவத்துவத்தை இழந்துவிட்டார் என்று கூறமுடியாது. பாவத்தை மன்னிப்பதற்கும் சாத்தானுடைய அந்தகார சக்திகளை அழிப்பதற்கும் கோபம் தடையாக இராது. மனுஷனுக்குப் பாவத்திற்கு எதிரான கோபத்துடன்கூடிய வைராக்கியம் இல்லையென்றால் அவனால் பாவத்தை எதிர்த்து நிற்கமுடியாது. சாத்தானையும் எதிர்த்து நிற்கமுடியாது. மனுஷனால் கோபப்படாமல் இருக்க முடியாது என்றாலும் தன்னுடைய புலன்களைக் கட்டுப்படுத்த கர்த்தர் உதவிபுரிய வேண்டுமென்று ஜெபம் பண்ண வேண்டும். தேவனுடைய பிரமாணத்திற்கு உட்பட்டு, நம்முடைய இச்சைகளும் செயல்பட வேண்டும் (கலா 5:22-23)

கடினம் (hardness) - πώρωσις - peeroosis - 4457

பெண்பால் பெயர்ச்சொல் - கடினம் (ரோமர் 11:25; எபே 4:18)

"அவன் கை மறுகையைப்போலச் சொஸ்தமாயிற்று" தேவனுடைய சிருஷ்டிக்கும் வல்லமையை இந்த அற்புதம் வெளிப்படுத்துகிறது. சூம்பின கையை மறுகையைப் போலச் சொஸ்தமாக்க வேண்டுமானால் அங்கு சிருஷ்டிக்கும் கிரியை நடைபெற வேண்டும்.

3 அதிகாரம்

இந்த அற்புதத்தை விட ஒரு நொடிப்பொழுதில் மரித்த எல்லோருடைய சரீரங்களையும் கர்த்தர் மறுரூபப்படுத்துவார் (1கொரி 15:51-58) இது மகாப்பெரிய அற்புதமாக இருக்கும். இப்பேர்ப்பட்ட அற்புதங்களைச் செய்யக்கூடியவர் சர்வ வல்லவர் என்றும், நமது ஜெபங்களுக்கு பதில் கொடுக்கிறவர் என்றும் நாம் விசுவாசிக்க வேண்டும். (2கொரி 1:20 2பேதுரு 1:4)

18. இயேசுவை கொலைசெய்வதற்கு சதியாலோசனை - (மத் 26:3)

மாற்கு 3:6 உடனே பரிசேயர் புறப்பட்டுப் போய், அவரைக் கொலைசெய்யும்படி அவருக்கு விரோதமாய் ஏரோதியரோடே கூட ஆலோசனை பண்ணினார்கள்.

உடனே (straightway) - εὐθέως - eutheos - 2112

வினையடை - உடனே, சீக்கிரமாய், முன்னே

புதிய ஏற்பாட்டில் "உடனே" என்னும் வார்த்தை 80 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மாற்கு மட்டும் இந்த வார்த்தையை 40 தடவைகள் பயன்படுத்தியிருக்கிறார். உடனே (straightway, immediately, forthwith, as soon as, anon, by and by, and shortly)

"ஏரோதியர்" - (மத் 22:16)

19. திரளான ஜனங்களை சொஸ்தமாக்குகிறார் - (மத் 12:15, லூக் 6:17)

மாற்கு 3:7 இயேசு தம்முடைய சீஷர்களோடே அவ்விடம்விட்டு கடலோரத்துக்குப் போனார்.

மாற்கு 3:8 கலிலேயாவிலும், யூதேயாவிலும், எருசலேமிலும், இதுமேயாவிலும், யோர்தானுக்கு அக்கரையிலுமிருந்து திரளான ஜனங்கள் வந்து அவருக்குப் பின்சென்றார்கள். அல்லாமலும் தீரு சீதோன் பட்டணங்களின் திசைகளிலுமிருந்து திரளான ஜனங்கள் அவர் செய்த அற்புதங்களைக் குறித்துக் கேள்விப்பட்டு, அவரிடத்தில் வந்தார்கள்.

மாற்கு 3:9 அவர் அநேகரைச் சொஸ்தமாக்கினார்; நோயாளிகளெல்லாரும் அதை அறிந்து அவரைத் தொடவேண்டுமென்று அவரிடத்தில் நெருங்கிவந்தார்கள்.

மாற்கு 3:10 ஜனங்கள் திரளாயிருந்தபடியால் அவர்கள் தம்மை நெருக்காதபடிக்கு, தமக்காக ஒரு படவை ஆயத்தம் பண்ண வேண்டுமென்று தம்முடைய சீஷர்களுக்குச் சொன்னார்.

மாற்கு 3:11 அசுத்த ஆவிகளும் அவரைக் கண்டபோது அவர் முன்பாக விழுந்து: நீர் தேவனுடைய குமாரன் என்று சத்தமிட்டன.

மாற்கு 3:12 தம்மைப் பிரசித்தம் பண்ணாதபடி அவைகளுக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார்.

"இயேசு தம்முடைய சீஷர்களோடே அவ்விடம்விட்டு கடலோரத்துக்குப் போனார்" இயேசு கிறிஸ்து அவர்களுக்குப் பயந்து அவ்விடத்தைவிட்டு புறப்பட்டுச் செல்லவில்லை. இயேசுவிற்குப் பயமில்லை. ஆயினும் பிதா தமக்கு நியமித்த ஊழியத்தைத் தடையில்லாமல் பரிபூரணமாகச் செய்ய வேண்டுமென்று இயேசு கிறிஸ்து சித்தம்கொண்டிருந்தார். இயேசு இவ்வாறு தமது ஊழிய இடத்தை விட்டு, புறப்பட்டுச் சென்றதைக் குறிக்கும் வசனங்கள் (மாற்கு 6:31,46; மாற்கு 7:24,31; மாற்கு 9:2; மாற்கு 10:1; மாற்கு 14:32)

"இதுமேயா" சவக்கடலுக்கும், யூதேயாவிற்கும் தெற்குப்பகுதியிலுள்ள பிரதேசம்.

3 அதிகாரம்

"அநேகர்" - இயேசு கிறிஸ்து அநேகரைச் சொஸ்தமாக்கினார் நோயாளிகள் எல்லோரும் அவரைத் தொட்டால் குணமாகலாம் என்று விசுவாசித்து அவரிடத்தில் நெருங்கி வந்தார்கள் இயேசுவைத் தொட்ட யாவரும் குணமானார்கள் (மத் 8:3, மத் 14:36)

நோய்கள் (plagues) - μάστιξ - mastix - 3148

பெண்பால் பெயர்ச்சொல் - நோய், வேதனை, அடித்தல் - இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் கிரேக்கச் சொல்லுக்கு கொடிய வியாதி, அல்லது ஜனங்களை அழிக்கும் சாத்தானுடைய அடிகள் என்று பொருள்படும். (மாற்கு 5:29,34 லூக்கா 7:21) சில வசனங்களில் இந்தச் சொல் "அடிகள்" என்று மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது. (அப் 22:24 எபி 11:36)

"அசுத்த ஆவிகளும் அவரைக் கண்டபோது, அவர் முன்பாக விழுந்து, நீர் தேவனுடைய குமாரன் என்று சத்தமிட்டன" - மாற்கு 1:23 அசுத்த ஆவிகள் இயேசுவைக் கண்டபோது அவர் முன்பாக விழுந்து இயேசுவைத் தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டன பிசாசுகள் யாரைப் பிடித்திருக்கிறதோ அவர்களைக் கீழே தள்ளும் இயேசு கிறிஸ்து இதை அனுமதிக்கவில்லை தம்மைப் பிரசித்தம் பண்ணக்கூடாது என்று பிசாசுகளுக்குக் கட்டளையிட்டார் (மாற்கு 1:23-25 மாற்கு 3:12, லூக்கா 4:35)

20. பன்னிரண்டு பேரை பிரதிஷ்டை பண்ணுகிறார் - (மத் 10; லூக் 6:12, 9:1, மாற்கு 6:7)

மாற்கு 3:13 பின்பு, அவர் ஒரு மலையின்மேல் ஏறி, தமக்குச் சித்தமானவர்களைத் தம்மிடத்தில் வரவழைத்தார், அவர்கள் அவரிடத்திற்கு வந்தார்கள்

மாற்கு 3:14 அப்பொழுது அவர் பன்னிரண்டு பேரைத் தெரிந்துகொண்டு, அவர்கள் தம்மோடுகூட இருக்கவும், பிரசங்கம்பண்ணும்படியாகத் தாம் அவர்களை அனுப்பவும்,

மாற்கு 3:15 வியாதிகளைக் குணமாக்கிப் பிசாசுகளைத் துரத்தும்படி அவர்கள் அதிகாரமுடையவர்களாயிருக்கவும், அவர்களை ஏற்படுத்தினார்

ஏற்படுத்தினார் (ordained) - ποιέω - poieoo - 4160

வினைச்சொல் - கட்டளையிடு, செலவைப்பண்ணு, கொடு, கைக்கொள், செய்யப்பண்ணு, உண்டாக்கு

பன்னிரெண்டு சீஷர்களுக்கும் இயேசு கிறிஸ்து கொடுத்த கட்டளைகள்

1 தம்மோடிருக்க வேண்டும் (மாற்கு 3:14

2 பிரசங்கம் பண்ண வேண்டும் (மாற்கு 3:14; மாற்கு 6:12; மாற்கு 16:15-20; மத் 10:7,20; லூக்கா 9:2,6 அப் 1:8)

3 வியாதிகளைக் குணமாக்க வேண்டும். (மாற்கு 3:15 மாற்கு 6:13 மாற்கு 16:15-20 மத் 10:1-8 லூக்கா 9:1,6; அப் 1:8)

4 பிசாசுகளைத் துரத்த வேண்டும் (மாற்கு 3:15; மாற்கு 6:13, மாற்கு 16:15-20; மத் 10:1-8, லூக்கா 9:1-6)

21. அப்போஸ்தலர்களின் பெயர்கள் - (மத் 10:2; லூக் 6:14; அப் 1:26

மாற்கு 3:16 அவர்கள் யாரெனில், சீமோன், இவனுக்குப் பேதுரு என்கிற பெயரிட்டார்

மாற்கு 3:17 செபெதேயுவின் குமாரனாகிய யாக்கோபு, யாக்கோபின் சகோதரனாகிய யோவான், இவர்களிருவருக்கும் இடிமுழக்க மக்களென்று அர்த்தங்கொள்ளும் பொவனெர்கேஸ் என்கிற பெயரிட்டார்

3 அதிகாரம்

மாற்கு 3:18 அந்திரேயா, பிலிப்பு, பர்த்தொலொமேயு, மத்தேயு, தோமா அல்பேயுவின் குமாரன் யாக்கோபு, ததேயு, கானானியனாகிய சீமோன்

மாற்கு 3:19 அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ்காரியோத்து என்பவர்களே

"செபெதேயுவின் குமாரனாகிய யாக்கோபு" - (மத் 4:21)

"யாக்கோபும், யாக்கோபின் சகோதரனாகிய யோவானும்" - இவர்கள் இருவருக்கும் இடிமுழக்க மக்களென்று அர்த்தங்கொள்ளும் பொவனெர்கேஸ் என்று பெயரிட்டார். இவர்கள் வல்லமையாகப் பிரசங்கம் பண்ணியதினாலோ அல்லது ஒரு பட்டணத்தைப் பரலோகத்திலிருந்து மின்னலும், இடியும் வந்து அழிக்க வேண்டும் என்று வைராக்கியமாக இருந்ததினாலோ இவர்களுக்கு இந்தப் பெயர் கொடுக்கப் பட்டிருக்கலாம். (லூக்கா 9:53-54)

"அந்திரேயா" - (மத் 4:18)

"பிலிப்பு" - (லூக்கா 6:14)

"பர்த்தொலொமேயு" - (மத் 10:3)

"அல்பேயுவின் குமாரன் யாக்கோபு" லூக்கா 24:10

"ததேயு" யாக்கோபின் சகோதரனாகிய யூதா என்றும் இவன் அழைக்கப்பட்டான் (லூக்கா 6:16; யோவான் 14:22; அப 1:13) இவனுக்கு ததேயு (Thaddaeus), லெபேயு (Lebbaeus) என்னும் மறுபெயரும் உண்டு (மத் 10:3

"கானானியனாகிய சீமோன்" (லூக்கா 6:15

"அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ்காரியோத்து" - (யோவான் 6:71)

22. இயேசு மதிமயங்கியிருக்கிறார் என்று அவர்மீது குற்றச்சாட்டு - (மத் 12:46; யோவான் 10:20; அப 12:15; 26:24-25

மாற்கு 3:20 பின்பு வீட்டுக்குப் போனார்கள்; அங்கே அவர்கள் சாப்பிடுவதற்கும் சமயமில்லாதபடிக்கு அநேக ஜனங்கள் மறுபடியும் கூடி வந்தார்கள்

மாற்கு 3:21 அவருடைய இனத்தார் இதைக் கேட்டபோது, அவர் மதி மயங்கியிருக்கிறார் என்று சொல்லி, அவரைப் பிடித்துக் கொள்ளும்படி வந்தார்கள்

"பின்பு வீட்டுக்குப் போனார்கள்; அங்கே அவர்கள் சாப்பிடுவதற்கும் சமயமில்லாதபடிக்கு அநேக ஜனங்கள் மறுபடியும் கூடிவந்தார்கள்" - மாற்கு 3:7-8 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற திரளான ஜனங்களே இவர்கள். இயேசு கிறிஸ்துவிடம் திரளான ஜனங்கள் கூடி வந்தார்கள். அவருடைய சத்துருக்களும் நண்பர்களும் அவரிடத்தில் வந்தார்கள். சில சமயங்களில் இயேசு கிறிஸ்துவிற்குச் சாப்பிடுவதற்குக்கூடச் சமயமவராது (மாற்கு 3:20) சில சமயங்களில் ஜனங்களின் எண்ணிக்கை அநேக ஆயிரங்களாக இருந்தது. அவர்கள் ஒருவரையொருவர் மிதிக்கத்தக்கதாகக் கூடிவந்தார்கள் (லூக்கா 12:1)

இயேசு கிறிஸ்து பல அற்புதங்களைச் செய்தார். பல வியாதிகளைச் சொஸ்தமாக்கினார். இதனால் அவருடைய கீர்த்தி எல்லா இடங்களுக்கும் வேகமாகப் பரவிற்று. இயேசு கிறிஸ்துவிடம் வந்தவர்கள் சிலர் எப்படியாவது அவரைத் தொட வேண்டும் என்று ஜனக்கூட்டத்தின் நடுவே நுழைந்து கொண்டு வந்தார்கள் (மாற்கு 5:24-34) ஒருசிலர் மேற்கூரையைப் பிரித்து திறப்பாக்கி, வியாதியஸ்தரை இயேசு கிறிஸ்துவிடம் கொண்டு வந்தார்கள் (மாற்கு 2:4)

இயேசு கிறிஸ்துவிடம் வந்த எல்லா வியாதியஸ்தருமே சொஸ்தமானார்கள். தம்மிடத்தில் வருகிற யாரையும் அவர் புறம்பே தள்ளுவதில்லை. அவர் எல்லோரையுமே சொஸ்தமாக்கினார் என்று வேதத்தில் 23 இடங்களில் நாம் வாசிக்கிறோம். (மத் 4:23

3 அதிகாரம்

இயேசுவின் கீர்த்தி அந்த அளவிற்குப் பிரபல்யமாய் இருந்தது. திரளான ஜனங்கள் அவரிடம் கூடி வந்தார்கள். ஜனங்கள் பொதுவாக வனாந்தரத்திற்குச் செல்ல மாட்டார்கள். இயேசு வனாந்தரத்தில் இருந்தபோதோ ஜனங்கள் அங்கு கூடிவந்து அவருடைய உபதேசத்தைக் கேட்டார்கள். வியாதியஸ்தரை அங்கு கொண்டுவந்தார்கள் (மத் 14:13-21, மத் 15:29-39). புசிப்பதற்கு ஆகாரம் இல்லாமல் இருந்தார்கள். இரண்டு வேளைகளில் ஜனங்களுடைய சரீரப் பசியைப் பார்த்து, இயேசு அவர்களுக்கு அற்புதமாகப் போஜனம் கொடுத்தார். இயேசு தம்மிடம் கொடுக்கப்பட்ட உணவை அவர் ஆசீர்வதித்து, ஸ்தோத்திரம் பண்ணி பிட்டு, ஜனங்களுக்கு கொடுக்கும்படி சீஷரிடம் கொடுத்தார். ஆயிரக்கணக்கான ஜனங்கள் திருப்தியாகப் போஜனம் பண்ணினார்கள் (மத் 14:15-21; 15:32-38).

"அவருடைய இனத்தார் இதைக் கேட்டார்கள்" - (மாற்கு 3:31; மத் 12:46-50, யோவான் 7:5)

"அவர் மதிமயங்கியிருக்கிறார் என்று சொல்லி, அவரைப் பிடித்துக் கொள்ளும்படி வந்தார்கள்" இயேசு கிறிஸ்துவின் சத்துருக்கள் அவர் மதிமயங்கியிருக்கிறார் என்றும், மாயக்காரியங்களுக்கு விரோதமாக உபதேசிக்கிறார் என்றும் இயேசுவின் இனத்தாரிடம் கூறுகிறார்கள். ஆகையினால், அவர்கள் இயேசுவைப் பிடித்துக் கொண்டு போவதற்காக வந்தார்கள்.

மதிமயங்கு (insane) - ἐξιστάνω - existanoo - 1839

வினைச்சொல் - மதிமயங்கு, ஆச்சரியப்படு, பிரமி (to be out of one's senses; insane) (மாற்கு 3:21, 2கொரி 5:13); பிசாசின் பிடியில் அகப்பட்டிருத்தல் (bewitched) (அப் 8:9-11); பிரமிப்புள்ளவராக இருத்தல் (amazed and astonished) (மாற்கு 2:12; மாற்கு 5:42; மாற்கு 6:51; லூக்கா 2:47; லூக்கா 8:56; லூக்கா 24:22; அப் 2:7,12, அப் 9:21; அப் 10:45; அப் 12:16)

23. பரிசேயர்கள் பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாக தேவதூஷணம் கூறுகிறார்கள் - பிரிந்திருக்கும் இராஜ்யம் - (மத் 9:34; 12:24; லூக் 11:15)

மாற்கு 3:22 எருசலேமிலிருந்து வந்த வேதபாரகர், இவன் பெயெல்செபூலைக் கொண்டிருக்கிறான், பிசாசுகளின் தலைவனாலே பிசாசுகளைத் துரத்துகிறான் என்றார்கள்.

மாற்கு 3:23 அவர்களை அவர் அழைத்து, உவமைகளாய் அவர்களுக்குச் சொன்னதாவது: சாத்தானைச் சாத்தான் துரத்துவது எப்படி?

மாற்கு 3:24 ஒரு ராஜ்யம் தனக்குத் தானே விரோதமாகப் பிரிந்திருந்தால் அந்த ராஜ்யம் நிலைநிற்கமாட்டாதே.

மாற்கு 3:25 ஒரு வீடு தனக்குத்தானே விரோதமாகப் பிரிந்திருந்தால், அந்த வீடு நிலைநிற்கமாட்டாதே.

மாற்கு 3:26 சாத்தான் தனக்குத்தானே விரோதமாக எழும்பிப் பிரிந்திருந்தால் அவன் நிலைநிற்கமாட்டாமல் அழிந்து போவானே.

மாற்கு 3:27 பலவானை முந்திக் கட்டினாலொழிய, ஒருவனும் பலவானுடைய வீட்டுக்குள் புகுந்து அவன் உடைமைகளைக் கொள்ளையிடக் கூடாது; கட்டினானேயாகில், அவன் வீட்டைக் கொள்ளையிடுவான்.

"வேதபாரகர்" - (மத் 2:4)

"பெயெல்செபூல்" - (மத் 10:25)

"ஒரு ராஜ்யம் தனக்குத்தானே விரோதமாகப் பிரிந்திருந்தால் அந்த ராஜ்யம் நிலைநிற்கமாட்டாதே" "இருந்தால்" என்னும் வாக்கியம் ஒரு காரியம் இவ்வாறு நடைபெற்றால் எப்படியிருக்கும் என்பதைக் கற்பனை பண்ணுவதாகும். மாற்கு 3 இடங்களில் "இருந்தால்" என்னும் வாக்கியத்தைப் பயன்படுத்தியிருக்கிறார் (மாற்கு 3:25-27)

3 அதிகாரம்

உவமை எண் - 3

"பலவானை முந்திக் கட்டினாலொழிய, ஒருவனும் பலவானுடைய வீட்டுக்குள் புகுந்து, அவன் உடைமைகளைக் கொள்ளையிடக் கூடாது. கட்டினானேயாகில், அவன் வீட்டைக் கொள்ளையிடுவான்" (மாற்கு 3:27) சாத்தானுடைய அந்தகார சக்திகளை இயேசு கிறிஸ்து கட்டுகிறார் அவனுடைய கிரியைகளை இயேசு அழிக்கிறார் (1யோவான் 3:8; கொலோ 2:14-17 எபி 2:14-15

24. மன்னிக்கப்படாத பாவம் - (மத் 12:31)

மாற்கு 3:28 மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் மனுஷர்கள் செய்யும் எல்லாப் பாவங்களும், அவர்கள் தூஷிக்கும் எந்தத் தூஷணங்களும் அவர்களுக்கு மன்னிக்கப்படும்.

மாற்கு 3:29 ஒருவன் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகத் தூஷணஞ் சொல்வானாகில், அவன் என்றென்றைக்கும் மன்னிப்படையாமல் நித்திய ஆக்கினைக்குள்ளாயிருப்பான் என்றார்.

மாற்கு 3:30 அசுத்த ஆவியைக் கொண்டிருக்கிறானென்று அவர்கள் சொன்னபடியினாலே அவர் இப்படிச் சொன்னார்.

"மனுஷர்கள் செய்யும் எல்லாப் பாவங்களும், அவர்கள் தூஷிக்கும் எந்தத் தூஷணங்களும், அவர்களுக்கு மன்னிக்கப்படும்" மனுஷருடைய எல்லாப் பாவங்களையும் இயேசு கிறிஸ்து மன்னிப்பார் ஒருவன் தான் செய்த பாவங்களுக்காக மனம்வருந்தி, மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவிடம் மன்னிப்புக்கோரி வரும்போது அவர் அவனை மன்னிக்கிறார் எப்பேர்ப்பட்ட பாவமாக இருந்தாலும், பாவங்களை மன்னிப்பதற்கு இயேசு கிறிஸ்து இரக்கமும் கிருபையும் உடையவர் ஆயினும் "ஒருவன் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகத் தூஷணஞ் சொல்வானாகில் அவன் என்றென்றைக்கும் மன்னிப்படையாமல் நித்திய ஆக்கினைக்குள்ளாயிருப்பான்" (மாற்கு 3:29; மத் 12:31-32)

"ஒருவன் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகத் தூஷணஞ்சொல்வானாகில், அவன் என்றென்றைக்கும் மன்னிப்படையாமல் நித்திய ஆக்கினைக்குள்ளாயிருப்பான்" - ஒருவன் வேண்டுமென்றே பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாகத் தூஷண வார்த்தை சொல்வான் என்றால், அது அவனுக்கு மன்னிக்கப்படாது. பரிசுத்த ஆவியானவரின் ஆள்தத்துவத்திற்கு எதிராகவும் அவருடைய கிரியைகளுக்கு எதிராகவும் யாரும் தூஷண வார்த்தைகளைக் கூறக்கூடாது. பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளைச் சாத்தானுடைய கிரியைகள் என்று சொல்லக்கூடாது. (மத் 12:31-32; எபி 10:26-29) இது மன்னிக்கக்கூடாத பாவம். வேண்டுமென்றே இயேசு கிறிஸ்துவின் ஒளியைப் புறக்கணிப்பதாகும்.

மனுஷருக்கு இரட்சிப்பு இயேசு கிறிஸ்துவின் மூலமாக மட்டுமே வருகிறது பரிசுத்த ஆவியானவர் மட்டுமே மனுஷனுக்காகப் பரிந்து பேசுகிறவர் அந்தப் பரிசுத்த ஆவியானவருக்கு எதிராக யாராவது ஒருவன் தூஷண வார்த்தை சொல்வான் என்றால் அவன் என்றென்றைக்கும் மன்னிப்பைப் பெறாமல் கொள்ளமாட்டான் நித்திய ஆக்கினைக்கு உள்ளாக இருப்பான் (1தீமோ 1:13)

"நித்திய ஆக்கினை" - நித்திய நரகம் நித்திய தண்டனை (மத் 25:46

25. இயேசுவின் புதிய உறவினர்கள் - (மத் 12:46; லூக் 8:19)

மாற்கு 3:31 அப்பொழுது அவருடைய சகோதரரும் தாயாரும் வந்து வெளியே நின்று அவரை அழைக்கும்படி அவரிடத்தில் ஆள் அனுப்பினார்கள்

மாற்கு 3:32 அவரைச் சுற்றிலும் உட்கார்ந்திருந்த ஜனங்கள் அவரை நோக்கி: இதோ, உம்முடைய தாயாரும் உம்முடைய சகோதரரும் வெளியே நின்று உம்மைத் தேடுகிறார்கள் என்றார்கள்

மாற்கு 3:33 அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: என் தாயார் யார்? என் சகோதரர் யார்? என்று சொல்லி,

மாற்கு 3:34 தம்மைச் சூழ உட்கார்ந்திருந்தவர்களைச் சுற்றிப் பார்த்து: இதோ என் தாயும், என் சகோதரரும் இவர்களே!

BELLWETHER PUBLISHERS

GOOD NEWS PUBLISHERS

மாற்கு - தொகுப்புரை

3 அதிகாரம்

மாற்கு 3:35 தேவனுடைய சித்தத்தின்படியே செய்கிறவன் எவனோ அவனே எனக்குச் சகோதரனும், எனக்குச் சகோதரியும், எனக்குத் தாயுமாய் இருக்கிறான் என்றான்

"அவருடைய சகோதரர்" - மாற்கு 3:21 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிற இயேசு கிறிஸ்துவின் நண்பர்களாக இருக்கலாம். (லூக்கா 8:19)

"அவர்கள் வெளியே நின்று அவனை அழைக்கும்படி அவரிடத்தில் ஆள் அனுப்பினார்கள்" இயேசு கிறிஸ்து வீட்டிற்கு உள்ளே இருந்தார் (மாற்கு 3:19) அவர் வெளியே வரவேண்டுமென்று அவரிடத்தில் ஆள் அனுப்பினார்கள் அவர் வந்தால் அவரைப் பிடித்துக் கொள்ளலாம் என்று நினைத்தார்கள். (மாற்கு 3:21)

"இயேசு தம்மைச் சூழ உட்கார்ந்திருந்தவர்களைச் சுற்றிப்பார்த்தார்" - மாற்கு 3:5-இல் பார்த்த பார்வைக்கும் இந்தப் பார்வைக்கும் வித்தியாசம் உண்டு. மாற்கு 3:5-இல் ஜனங்களுடைய இருதயக் கடினத்தைக் கண்டு கோபத்துடனே சுற்றிலுமிருந்தவர்களைப் பார்த்தார் ஆனால் இங்கே தங்களுக்குரிய எல்லாவற்றையும் விட்டுவிட்டுத் தம்மையே பின்பற்றி வந்திருக்கும் தமது சீஷர்களை அன்போடு பார்க்கிறார்

"தேவனுடைய சித்தத்தின்படியே செய்கிறவன்" தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறேன் என்று சொல்லுகிறவன் அல்ல; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனே இயேசு கிறிஸ்துவிற்குச் சகோதரனும் சகோதரியும், தாயுமாய் இருக்கிறார்கள் (மத் 7:21-27; மத் 23:3; யாக் 1:22-27)

4 அதிகாரம்

26. விதைக்கிறவனைப் பற்றிய உவமை - (மத் 13:3, 18; லூக் 8:4))

மாற்கு 4:1 அவர் மறுபடியும் கடலோரத்திலே போதகம்பண்ணத் தொடங்கினார்; திரளான ஜனங்கள் அவரிடத்தில் கூடிவந்தபடியால், அவர் கடலிலே நின்ற ஒரு படவில் ஏறி உட்கார்ந்தார்; ஜனங்களெல்லாரும் கடற்கரையில் நின்றார்கள்.

மாற்கு 4:2 அவர் அநேக விசேஷங்களை உவமைகளாக அவர்களுக்குப் போதித்தார்; போதிக்கிறபொழுது அவர்களுக்குச் சொன்னது:

மாற்கு 4:3 கேளுங்கள்: விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான்.

மாற்கு 4:4 அவன் விதைக்கையில், சிலவிதை வழியருகே விழுந்தது; ஆகாயத்துப் பறவைகள் வந்து அதைப் பட்சித்துப்போட்டது.

மாற்கு 4:5 சிலவிதை அதிக மண்ணில்லாத கற்பாறை நிலத்தில் விழுந்தது; அதற்கு ஆழமான மண்ணில்லாததினாலே சீக்கிரத்தில் முளைத்தது;

மாற்கு 4:6 வெயில் ஏறினபோதோ தீய்ந்து போய், வேரில்லாமையால் உலர்ந்துபோயிற்று.

மாற்கு 4:7 சிலவிதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தது; முள் வளர்ந்து, அது பலன் கொடாதபடி அதை நெருக்கிப்போட்டது.

மாற்கு 4:8 சிலவிதை நல்ல நிலத்தில் விழுந்து, ஓங்கிவளருகிற பயிராகி, ஒன்று முப்பதும், ஒன்று அறுபதும், ஒன்று நூறுமாகப் பலன் தந்தது.

மாற்கு 4:9 கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று அவர்களுக்குச் சொன்னார்.

"அவர் மறுபடியும் கடலோரத்திலே போதகம்பண்ணத் தொடங்கினார்" - இயேசு கிறிஸ்து வீட்டை விட்டுப் புறப்பட்டு, இந்த இடத்தில் ஏற்கெனவே பிரசங்கம் பண்ணியிருக்கிறார் (மாற்கு 4:1; 3:7-12). இயேசு வீட்டில் இருந்தபோது, அவரைப் பிடித்துக் கொண்டு போக அவருடைய தாயாரும், சகோதரரும் வந்திருந்தார்கள். அவரை அவர்கள் பிடித்துக்கொண்டு போனார்களா என்று வேதத்தில் எழுதப்படவில்லை. (மாற்கு 4:2)

"உவமைகள்" - (மத் 13:3,10-17)

உவமை எண் - 4

"விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான்" - மாற்கு கூறியிருக்கிற நான்காவது உவமை. (மாற்கு 4:3-9,14-20) இதுடன் மத் 13:3-9,18-23 ஆகிய வசனங்களுக்குக் கூறப்பட்டிருக்கும் குறிப்புரையையும் வாசிக்கவும். லூக்கா 8:4-8, 11-15 ஆகிய வசனங்களில் இந்த உவமை வேறு சூழ்நிலைகளில் மறுபடியும் கூறப்பட்டிருக்கிறது. மத் 13:3-9,18-23 ஆகிய வசனங்களில் உள்ள வார்த்தைகளிலிருந்து சற்று வித்தியாசமான வார்த்தைகளால் கூறப்பட்டிருக்கிறது.

பாலஸ்தீன தேசத்தில் கோதுமை விதைகளை அதிகமாக விதைத்துப் பயிரிடுவார்கள். வயல் நிலங்களுக்கு வேலியடைத்து நிலங்களை உழுவார்கள். நன்றாக உழுத நிலத்தில்தான் விதை நன்றாக வளரும். நிலத்தில் கற்கள் இருக்குமானால் அவற்றை அப்புறப்படுத்துவார்கள். இயேசு கிறிஸ்துவும் தமது சத்தியத்தை ஏற்றுக் கொள்வதற்குத் தமது சீஷர்களைப் பக்குவப்படுத்தினார். அவருடைய உள்ளத்திலிருந்த கற்களைப் போன்ற கடினமான பகுதிகளையும் களைகளைப் போன்ற தேவையில்லாத பகுதிகளையும், அப்புறப்படுத்தினார். விதையை ஏற்றுக்கொள்ளும் பக்குவமான நிலமாக மாற்றினார். (மாற்கு 4:4-8)

முன்மாரிக்காலத்தில் நிலத்தை உழுது, பக்குவப்படுத்துவார்கள். பக்குவப்பட்ட நிலத்தில் விதையை விதைப்பார்கள்.

4 அதிகாரம்

"விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான்" - மத் 13:18-23 ஆகிய வசனங்களில் விதைக்கிறவனைப் பற்றிய உவமை விளக்கப்பட்டிருக்கிறது. இது கிருபையின் காலத்தை வர்ணிக்கிறது. தேவனுடைய வார்த்தையை ஏற்றுக் கொள்கிற ஜனங்களுடைய இருதயங்கள் பல்வேறு விதமானவை. இருதயங்களில் வித்தியாசம் இருப்பதுபோலவே, அவர்கள் மூலமாக வெளிவரும் ஆவியின் கனியிலும் வித்தியாசம் இருக்கும் (மத் 13:24-30, 36-43)

"வழியருகே" - வேலியில்லாத தோட்டத்திற்கு அருகேயுள்ள நடைபாதை. எல்லோரும் அதில் நடந்து செல்வதினால் அந்த நிலமே இறுகிப்போய்க் கடினமாக இருக்கும்.

"நல்ல நிலம்" - கற்களும், முட்களும் அகற்றப்பட்ட விளைநிலம். நன்றாக உழுது ஆயத்தம் பண்ணப்பட்ட நிலம். விதை விதைத்தவுடன் அது வளர்வதற்கு அந்த நிலம் பக்குவமாக இருக்கிறது.

"மண்ணில்லாத கற்பாறை நிலம்" நன்றாகப் பக்குவப்படாத நிலம். இந்த நிலத்திலுள்ள கற்கள் அகற்றப்படவில்லை. இதில் மண் ஆழமாக இல்லை. ஆகையினால் விதை சீக்கிரத்தில் முளைத்தாலும், வேர் சரியாக விடாது. வெயில் ஏறும்போது, தீய்ந்துபோய் உலர்ந்துபோகும்.

"சிலவிதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தது; முள் வளர்ந்து, அது பலனை கொடாதபடி அதை நெருக்கிப்போட்டது" நன்றாகப் பக்குவப்படாத நிலம். முள் விதைகள் அகற்றப்படவில்லை. ஆகையினால் கோதுமையும் முள்ளும் சேர்ந்து வளர்கிறது. முட்செடி கோதுமைச் செடியை நெருக்கிப் போடுகிறது. கோதுமையால் நன்றாக வளர முடியவில்லை.

"சிலவிதை நல்ல நிலத்தில் விழுந்து ஓங்கிவளருகிற பயிராகி, ஒன்று முப்பதும் ஒன்று அறுபதும், ஒன்று நூறுமாகப் பலனைத் தந்தது" நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட விதை பலன் தருகிறது. ஆனால் ஒன்றுபோல் தருவதில்லை. ஒன்று முப்பதும் ஒன்று அறுபதும், ஒன்று நூறுமாகப் பலன் தந்தது. பலன் தருவதிலும் வித்தியாசம் உள்ளது.

"கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்" - (மத் 11:15)

27. உவமைகளாகப் பேசுவதற்கு காரணம் - (மத் 13:10-34; லூக் 8:9)

மாற்கு 4:10 அவர் தனித்திருக்கிறபோது பன்னிருவரோடுங்கூட அவரைச் சூழ்ந்திருந்தவர்கள் இந்த உவமையைக் குறித்து அவரிடத்தில் கேட்டார்கள்.

மாற்கு 4:11 அதற்கு அவர்: தேவனுடைய ராஜ்யத்தின் இரகசியத்தை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது; புறம்பே இருக்கிறவர்களுக்கோ இவைகளெல்லாம் உவமைகளாகச் சொல்லப்படுகிறது.

மாற்கு 4:12 அவர்கள் குணப்படாதபடிக்கும், பாவங்கள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதபடிக்கும், அவர்கள் கண்டும் காணாதவர்களாகவும், கேட்டும் உணராதவர்களாகவும் இருக்கும்படி இப்படிச் சொல்லப்படுகிறது என்றார்.

மாற்கு 4:13 பின்பு அவர் அவர்களை நோக்கி: இந்த உவமையை நீங்கள் அறியவில்லையா? அறியாவிட்டால் மற்ற உவமைகளையெல்லாம் எப்படி அறிவீர்கள்?

"அவர் தனித்திருக்கிறபோது" - இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப் பெற்றிருந்தார். ஆயினும் அவர் தனித்திருந்தார் (யோவான் 3:34). நாமும் தேவனோடு தனித்திருக்க வேண்டும். இதற்காக நமது நேரத்தை ஒதுக்கிக்கொள்ள வேண்டும்.

"தேவனுடைய ராஜ்யத்தின் இரகசியம்" - (மத் 13:11)

"தேவனுடைய ராஜ்யம்" - மத் 13:11 இல் பரலோகராஜ்யம் என்றிருக்கிறது. இது தேவனுடைய ராஜ்யத்தின் ஒரு பகுதி. தேவனுடைய ராஜ்யத்திற்கும் பரலோக ராஜ்யத்திற்கும் இடையிலுள்ள வேறுபாடுகளை மத் 4:17, மத் 19:24 ஆகிய வசனங்களுக்குக் கூறப்பட்டிருக்கிற குறிப்புகளில் காணலாம்.

4 அதிகாரம்

மாற்கு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 3

"அவர்கள் குணப்படாதபடிக்கும் பாவங்கள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதபடிக்கும், அவர்கள் கண்டும் காணாதவர்களாகவும், கேட்டும் உணராதவர்களாகவும் இருக்கும்படி இப்படிச் சொல்லப்படுகிறது" - (மாற்கு 4:12 ஏசா 6:9-10; மத் 13:14-15

"குணப்படுதல்" - தேவனோடு புதிய பாதையில் நடத்தல், தான் செல்லும் பாதையை மாற்றுதல் முகத்தைத் திருப்புதல் (சங் 79:7, சங் 51:13; லூக்கா 22:32, அப் 3:19; யாக் 5:19-20)

"பாவங்கள் அவர்களுக்கு மன்னிக்கப்படும்" - மனந்திரும்பும்போது பாவங்கள் மன்னிக்கப்படும். சீஷர்களுக்கும் இது பொருந்தும். (மாற்கு 4:11) பேதுருவினுடைய மனமாற்றத்தை லூக்கா 22:32 இல் வாசிக்கிறோம். இது மறுபடியும் மனம்மாறுவது ஆகும்.

"இந்த உவமையை நீங்கள் அறியவில்லையா? அறியாவிட்டால் மற்ற உவமைகளையெல்லாம் எப்படி அறிவீர்கள்?" - இந்த உவமையை அறிகிறவர்கள் மற்ற உவமைகளையும் அறிவார்கள் ஏனெனில் எல்லா உவமைகளும் ஒன்றுபோலவே வியாக்கியானம் பண்ணப்படுகிறது.

28. விதைக்கிறவனைப் பற்றிய உவமையின் விளக்கம் - மத் 13:18, லூக் 8:11)

மாற்கு 4:14 விதைக்கிறவன் வசனத்தை விதைக்கிறான்

மாற்கு 4:15 வசனத்தைக் கேட்டவுடனே சாத்தான் வந்து அவர்கள் இருதயங்களில் விதைக்கப்பட்ட வசனத்தை எடுத்துப் போடுகிறான்; இவர்களே வசனம் விதைக்கப்படுகிற வழியருகானவர்கள்

மாற்கு 4:16 அப்படியே, வசனத்தைக் கேட்டவுடனே அதைச் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொண்டும்,

மாற்கு 4:17 தங்களுக்குள்ளே வேர்கொள்ளாதபடியால், கொஞ்சக் கால மாத்திரம் நிலைத்திருக்கிறார்கள், வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைகிறார்கள்; இவர்களே கற்பாறை நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள்

மாற்கு 4:18 வசனத்தைக் கேட்டும் உலகக்கவலைகளும், ஐசுவரியத்தின் மயக்கமும் மற்றவைகளைப்பற்றி உண்டாகிற இச்சைகளும் உட்பிரவேசித்து வசனத்தை நெருக்கிப் போட அதினால் பலனற்றுப்போகிறார்கள்

மாற்கு 4:19 இவர்களே முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவர்கள்

மாற்கு 4:20 வசனத்தைக் கேட்டு, ஏற்றுக்கொண்டு, ஒன்று முப்பதும் ஒன்று அறுபதும் ஒன்று நூறுமாகப் பலன்கொடுக்கிறார்கள்; இவர்களே நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் என்றார்

மாற்கு 4:21 பின்னும் அவர் அவர்களை நோக்கி: விளக்கைத் தண்டினமேல் வைக்கிறதற்கேயன்றி மரக்காலின் கீழாகிலும், கட்டிலின் கீழாகிலும் வைக்கிறதற்குக் கொண்டுவருவார்களா?

"விதைக்கிறவன்" - மனுஷகுமாரனும், (மத் 13:37) அவருடைய ஊழியக்காரர்களும் (மாற்கு 16:15-20; 1கொரி 3:8-21) வசனத்தை விதைக்கிறார்கள்

"வசனம்" - தேவனுடைய வார்த்தையே விதை. (மத் 13:19; லூக்கா 8:11, ரோமர் 1:16

"இவர்களே வசனம் விதைக்கப்படுகிற வழியருகானவர்கள்" - தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, அதற்குக் கீழ்ப்படிய மறுக்கிறவர்கள் அல்லது தேவனுடைய வார்த்தையின் மூலமாக வரும் ஆசீர்வாதங்களை வேண்டாமென்று ஒதுக்கித் தள்ளுகிறவர்கள் (மத் 13:19, லூக்கா 8:12)

மாற்கு – தொகுப்புரை

4 அதிகாரம்

"வசனத்தைக் கேட்டவுடனே சாத்தான் வந்து அவர்கள் இருதயங்களில் விதைக்கப்பட்ட வசனத்தை எடுத்துப்போடுகிறான்" - சாத்தானுடைய முதல் வேலையே தேவனுடைய ஊழியத்திற்குத் தடையாக இருப்பதுதான். தேவனுடைய வசனம் வல்லமையுள்ளது. ஆகையினால் அதை எடுத்துப்போட வேண்டுமென்று சாத்தான் பிரயாசப்படுகிறான் (2கொரி 4:4; மத் 13:19; லூக்கா 8:12).

"அப்படியே, வசனத்தைக் கேட்டவுடனே அதைச் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொண்டும் தங்களுக்குள்ளே வேர்கொள்ளாதபடியால் கொஞ்சக்காலமாத்திரம் நிலைத்திருக்கிறார்கள்; வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைகிறார்கள்" - ஒருசிலர் வசனத்தைக் கேட்கிறார்கள். சந்தோஷமாக ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால் அவர்களுடைய உள்ளத்தில் வசனம் ஆழமாக வேர்கொள்ளவில்லை. உபத்திரவங்களும், துன்பங்களும் வந்தவுடன் நிலையில்லாமல் இருக்கிறார்கள். வசனத்தினிமித்தம் உபத்திரவமும், துன்பமும் நிச்சயம் வரும். வசனத்தில் வேர்கொள்ளாதவர்களால் இவற்றிற்கு எதிர்த்து நிற்கமுடியாது (மாற்கு 4:16-17; மத் 13:20-21; லூக்கா 8:13).

"வசனத்தைக் கேட்டும், உலகக்கவலைகளும், ஐசுவரியத்தின் மயக்கமும், மற்றவைகளைப்பற்றி உண்டாகிற இச்சைகளும் உட்பிரவேசித்து, வசனத்தை நெருக்கிப்போட அதனால் பலனற்றுப்போகிறார்கள்" - இவர்களே முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவர்கள். இவர்கள் வசனத்தைக் கேட்கிறார்கள். ஆனால் தங்களுடைய ஜீவியத்தில் ஆவிக்குரிய கனி எதையும் தருவதில்லை. சில காரணங்களினால் அவர்களுக்குள் இருக்கும் வசனம் நெருக்கிப் போடப்படுகிறது. அதனால் பலனற்றுப் போகிறார்கள். பொதுவாக மூன்று காரியங்கள் வசனத்தை நெருக்கிப்போடும். அவையாவன

1. உலகக்கவலைகள் அல்லது மாம்சத்தின் இச்சைகள் (மாற்கு 4:19; மத் 13:22; லூக்கா 8:14; லூக்கா 21:34; கலா 5:19-21; 1யோவான் 2:15-17).

2. ஐசுவரியத்தின் மயக்கம் அல்லது ஜீவனத்தின் பெருமை (மாற்கு 4:19; மத் 13:22; லூக்கா 8:14; 1தீமோ 6:8-10,17; 1யோவான் 2:15-17).

3. மற்றவைகளைப் பற்றி உண்டாகிற இச்சைகள் அல்லது காரியங்களின் ஆசை (மாற்கு 4:19; லூக்கா 8:14; லூக்கா 21:34; 1யோவான் 2:15-17).

"நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள்" - இவர்கள் வசனத்தைக் கேட்கிறார்கள். முழு இருதயத்தோடு வசனத்தை ஏற்றுக் கொள்கிறார்கள். வசனத்திற்குக் கீழ்ப்படிகிறார்கள். எல்லா காரியங்களிலும் தேவனை மகிமைப்படுத்துகிறார்கள். இவர்கள் உலகக் கவலைகளுக்கும், ஐசுவரியத்தின் மயக்கங்களுக்கும் விலகி ஜீவிக்கிறார்கள். தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் கனியுள்ளவர்களாகவும், உண்மையாகவும், உத்தமமாகவும் நடந்து கொள்கிறார்கள் (மத் 13:23; லூக்கா 8:15; 1யோவான் 1:7).

"வசனத்தைக் கேட்டு, ஏற்றுக்கொண்டு, ஒன்று முப்பதும், ஒன்று அறுபதும், ஒன்று நூறுமாகப் பலன்கொடுக்கிறார்கள்" - இந்த வசனத்தில் மூன்று காரியங்கள் வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கிறது. அவையாவன

1. வசனத்தைக் கேட்க வேண்டும்.

2. வசனத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

3. பலன் கொடுக்க வேண்டும்.

பரிசுத்த வேதாகமத்தில் தேவன் தமக்கும், தமது வார்த்தைக்கும் செவி கொடுக்குமாறு 155 தடவைகளுக்கும் மேலாகக் கூறியிருக்கிறார். கர்த்தர் கூறும் வார்த்தைகள் தெளிவானவை, முழுமையானவை. கர்த்தருடைய வார்த்தையைப் புரிந்து கொள்வதற்கு எளிமையாக இருக்கும். அதில் கடினம் எதுவும் இருக்காது. கர்த்தருடைய வார்த்தைக்கு விசேஷித்த வியாக்கியானம் எதுவும் தேவைப்படாது. கர்த்தர் ஒரு காரியத்தைக் கூறும்போது அதை மனுஷர் புரிந்து கொள்ளும் விதத்திலேயே கூறுகிறார். நாம் கர்த்தருடைய வசனத்தைக் கேட்டு, அதற்குக் கீழ்ப்படிய வேண்டும்.

4 அதிகாரம்

கர்த்தருடைய வசனத்தைக் கேட்கும் பலர் அதைத் தங்களுடைய உள்ளத்தில் ஏற்றுக்கொள்வதில்லை. இதற்குச் சில காரணங்கள் உள்ளன. அவையாவன

1. வசனத்தின் கருத்தைப் புரிந்துகொள்ளும் பொதுவான ஞானம் இல்லை.

2. வேதத்தை வாசிக்காமல் சோம்பேறியாக இருக்கிறார்கள்.

3. வேதவசனத்தின் சத்தியங்களை ஏற்றுக் கொள்ள முடியாதவாறு அவர்களுக்குள் மாற்று உபதேசங்கள் வேர் கொண்டிருக்கும். (மத் 15:7-14, யோவான் 8:43)

4. ஏற்கெனவே துர்உபதேசங்களைக் கேட்டு, அவற்றிற்குக் கீழ்ப்படிந்து விட்டவர்கள்.

5. சாத்தானின் கொள்கைகளை ஏற்கெனவே பின்பற்றி வருபவர்களுக்குத் தேவனுடைய உபதேசம் புரிந்து கொள்வதற்குக் கடினமாக இருக்கும்.

6. உலக ஐசுவரியத்திலும் பாவ ஜீவியத்திலும் மூழ்கியிருக்கிறவர்கள் சத்திய வசனத்தை புரிந்து கொள்ள விரும்பமாட்டார்கள். ஏனெனில் சத்திய வசனம் இவர்களுடைய பாவங்களைக் கடிந்து கூறுகிறது.

7. நிலையில்லாத ஆத்துமாக்களை உடையவர்கள் தங்களுக்கு அழிவு வரும் என்று தெரிந்தும் சத்தியத்தோடு போராடுகிறவர்கள் (2பேதுரு 3:16)

8. ஏமாற்றுக்காரர்கள் தங்களுடைய சொந்த லாபத்திற்காக வேதவசனத்தைப் பயன்படுத்துகிறவர்கள் (2கொரி 4:1-4)

9. தங்களுடைய ஆவிக்குரிய கண்களைக் குருடாக்குவதற்குச் சாத்தானை அனுமதித்தவர்கள். சாத்தான் இவர்களிடமிருந்து சத்தியத்தைத் திருடிச்சென்று விடுகிறான் (மத் 13:19-23, 2கொரி 4:1-4)

10. தங்களைத் தாழ்த்தி மனந்திரும்புவதற்கு மனமில்லாதவர்கள் (மத் 18:3, ஏசா 6:9-10)

ஒருவர் தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, தங்களுடைய உள்ளத்தில் அதை ஏற்றுக் கொண்டு, அதற்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கும்போது அவர் ஆவிக்குரிய கனியைக் கொடுப்பார் (ஏசா 55:11)

"ஒன்று முப்பதும் ஒன்று அறுபதும் ஒன்று நூறுமாகப் பலன்கொடுக்கிறார்கள்" - இந்த வாக்கியம் விசுவாசிகளுக்குள் வித்தியாசம் உண்டு என்று கூறவில்லை. விசுவாசிகள் கனி தரும் அளவில் வித்தியாசம் உண்டு என்றே கூறுகிறது.

29. விளக்கைப் பற்றிய உவமை - (மத் 5:15, லூக் 8:16, 11:33)

மாற்கு 4:22 வெளியரங்கமாகாத அந்தரங்கமுமில்லை, வெளிக்கு வராத மறைபொருளுமில்லை.

மாற்கு 4:23 கேட்கிறதற்கு ஒருவன் காதுள்ளவனாயிருந்தால் கேட்கக்கடவன் என்றார்.

மாற்கு 4:24 பின்னும் அவர் அவர்களை நோக்கி: நீங்கள் கேட்கிறதைக் கவனியுங்கள். எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்; கேட்கிற உங்களுக்கு அதிகம் கொடுக்கப்படும்.

மாற்கு 4:25 உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும்; இல்லாதவனெவனோ அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக் கொள்ளப்படும் என்றார்.

4 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 3

"வெளியரங்கமாகாத அந்தரங்கமுமில்லை வெளிக்கு வராத மறைபொருளுமில்லை." மாற்கு 4:22-25 இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை

"வெளியரங்கமாகாத அந்தரங்கமுமில்லை வெளிக்கு வராத மறைபொருளுமில்லை" - இதற்கு முன்பு வெளிப்படுத்தப்படாத சத்தியங்கள் இனிமேல பூரணமாக வெளிப்படுத்தப்படும் என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார் பழைய ஏற்பாட்டில மறைந்திருக்கும் சத்தியங்களைப் புதிய ஏற்பாடு வெளிப்படுத்துகிறது.

"பின்னும் அவர் அவர்களை நோக்கி: நீங்கள் கேட்கிறதைக் கவனியுங்கள் எந்த அளவினால அளக்கிறீர்களோ அந்த அளவினால உங்களுக்கும் அளக்கப்படும். கேட்கிற உங்களுக்கு அதிகம் கொடுக்கப்படும்" - இந்த வசனத்தில நமக்கு ஒரு எச்சரிப்பு கூறப்பட்டிருக்கிறது. நாம எதைக் கேட்கிறோம் என்பதில எச்சரிப்புடன் இருக்க வேண்டும். நாம சரியானதை சரியானபடி கேட்டால நமக்கு அதிக ஆசீர்வாதம் உண்டு. நாம் சத்தியத்தை ஏற்றுக் கொள்ளவில்லையென்றால நம்மிடம உள்ள ஆசீர்வாதங்கள எடுத்துக்கொள்ளப்படும் லூக்கா 8:16-18 இதைக்குறித்து இயேசு கிறிஸ்து கூறும்போது "உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும். இல்லாதவனெவனோ அவனிடத்தில உள்ளதும் எடுத்துக் கொள்ளப்படும்" என்றார்

30. விதையைப பற்றிய உவமை - (4:26-29)

மாற்கு 4:26 பின்னும் அவர் அவர்களை நோக்கி: தேவனுடைய ராஜ்யமானது, ஒரு மனுஷன் நிலத்தில விதையை விதைத்து,

மாற்கு 4:27 இரவில் தூங்கி, பகலில விழித்திருக்க, அவனுக்குத் தெரியாத விதமாய், விதை முளைத்துப் பயிராகிறதற்கு ஒப்பாயிருக்கிறது.

மாற்கு 4:28 எப்படியென்றால், நிலமானது முன்பு முளையையும், பின்பு கதிரையும் கதிரிலே நிறைந்த தானியத்தையும் பலனாகத் தானாய்க் கொடுக்கும்.

மாற்கு 4:29 பயிர் விளைந்து அறுப்புக்காலம் வந்தவுடனே, அறுக்கிறதற்கு ஆட்களை அனுப்புகிறான் என்றார்

உவமை எண் - 5

"பின்னும் அவர் அவர்களை நோக்கி: தேவனுடைய ராஜ்யமானது ஒரு மனுஷன் நிலத்தில விதையை விதைத்து '.........' (மாற்கு 4:26-29) தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிய வசனம மனுஷருடைய இருதயங்களில் விதைக்கப்படும்போது அது இயற்கையாகவே வளரக்கூடிய ஆற்றல உடையது (மாற்கு 4:33 ஏசா 55:10-11)

தானாய் (herself) - αὐτόματος - automatos - 844

பொருள் - தானாய் (automatically) இந்தக் கிரேக்கச்சொல் இந்த வசனத்திலும் அப (2:10) ஆகிய வசனத்தில மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

"அறுப்புக்காலம் வந்தவுடனே" - மத் 13:36-43, 49-50 ஆகிய வசனங்களில அறுப்புக்காலம் விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது.

31. கடுகு விதையைப் பற்றிய உவமை - (மத் 13:31; லூக் 13:18

மாற்கு 4:30 பின்னும் அவர் அவர்களை நோக்கி: தேவனுடைய ராஜ்யத்தை எதற்கு ஒப்பிடுவோம்? அல்லது எந்த உவமையினாலே அதைத் திருஷ்டாந்தப் படுத்துவோம்?

மாற்கு 4:31 அது ஒரு கடுகுவிதைக்கு ஒப்பாயிருக்கிறது. அது பூமியில் விதைக்கப்படும்போது பூமியிலுள்ள சகல விதைகளிலும் சிறிதாயிருக்கிறது

4 அதிகாரம்

மாற்கு 4:32 விதைக்கப்பட்டபின்போ அது வளர்ந்து, சகல பூண்டுகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதினுடைய நிழலின்கீழ் வந்தடையத்தக்க பெரிய கிளைகளை விடும் என்றார்.

மாற்கு 4:33 அவர்கள் கேட்டறியும் திராணிக்குத் தக்கதாக அவர் இப்படிப்பட்ட அநேக உவமைகளினாலே அவர்களுக்கு வசனத்தைச் சொன்னார்.

மாற்கு 4:34 உவமைகளினாலேயன்றி அவர்களுக்கு ஒன்றும் சொல்லவில்லை; அவர் தம்முடைய சீஷரோடே தனித்திருக்கும் போது அவர்களுக்கு எல்லாவற்றையும் விவரித்துச் சொன்னார்.

உவமை எண் - 6

"அது ஒரு கடுகுவிதைக்கு ஒப்பாயிருக்கிறது........" (மாற்கு 4:31-32) மனுஷர் மத்தியிலே தேவனுடைய ராஜ்யம் அதிக வளர்ச்சி பெறும் என்பதை விளக்கும் உவமை. தேவனுடைய ராஜ்யம் எல்லோரையும் ஏற்றுக் கொள்ளும் அடைக்கல ஸ்தலமாக இருக்கும்.

"ஆகாயத்துப் பறவைகள் அதினுடைய நிழலின்கீழ் வந்தடையத்தக்க பெரிய கிளைகளை விடும்" - ஆகாயத்துப் பறவைகள் என்பது மத் 13:19 லூக்கா 8:12 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற பிரகாரம் சாத்தானுடைய வல்லமைகளைக் குறிக்கும். தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும், சாத்தான் வஞ்சிப்பான். தன்னுடைய உபதேசமே உண்மையான உபதேசம் என்று கூறி துர்உபதேசத்தை ஜனங்கள் மத்தியிலே தூவுவான் (2கொரி 4:4; 2கொரி 11:14-15; 1தீமோ 4:1-6; 2தீமோ 3:5; 2தீமோ 4:1-4; மத் 24:24; வெளி 12:9) சத்தியத்திற்குப் புறம்பாக உபதேசிக்கிறவர்கள்கூட தாங்களே உண்மையான விசுவாசிகள் எனவும் தங்களுடைய சபைகளே உண்மையான சபைகள் எனவும் சாதிக்கிறார்கள். அவர்களுடைய கனியினால் நாம் அவர்களை அறிய வேண்டும். (மத் 7:15)

விவரித்து (expounded) - ἐπιλύω - epilyoo 1956

வினைச்சொல் - விவரி, தீர்க்கப்படு **(to solve further; explain more fully)** இந்தக் கிரேக்கச்சொல் இந்த வசனத்திலும், அப் 19:39 ஆவது வசனத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கர்த்தரைப் பின்பற்றுகிறவர்கள் அவருடைய சித்தத்தையும் வார்த்தையையும் புரிந்து கொள்வதற்காக அவரைப் பின்பற்ற வேண்டும். (1யோவான் 1:7)

32. இயேசு புயல்காற்றை அமைதிப்படுத்துகிறார் - (மத் 8:23; லூக் 8:22)

மாற்கு 4:35 அன்று சாயங்காலத்தில், அவர் அவர்களை நோக்கி: அக்கரைக்குப் போவோம் வாருங்கள் என்றார்.

மாற்கு 4:36 அவர்கள் ஜனங்களை அனுப்பிவிட்டு, அவர் படவிலிருந்தபடியே அவரைக் கொண்டுபோனார்கள்; வேறே படவுகளும் அவரோடேகூட இருந்தது.

மாற்கு 4:37 அப்பொழுது பலத்த சுழல்காற்று உண்டாகி, படவு நிரம்பத்தக்கதாக அலைகள் அதின்மேல் மோதிற்று.

மாற்கு 4:38 கப்பலின் பின்னணியத்தில் அவர் தலையணையை வைத்து நித்திரையாயிருந்தார். அவர்கள் அவரை எழுப்பி: போதகரே, நாங்கள் மடிந்து போகிறது உமக்குக் கவலையில்லையா என்றார்கள்.

மாற்கு 4:39 அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப் பார்த்து: இரையாதே, அமைதலாயிரு என்றார்; அப்பொழுது காற்று நின்றுபோய், மிகுந்த அமைதல் உண்டாயிற்று.

மாற்கு 4:40 அவர் அவர்களை நோக்கி: ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள், ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற் போயிற்று என்றார்.

4 அதிகாரம்

மாற்கு 4:41 அவர்கள் மிகவும் பயந்து: இவர் யாரோ? காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள்.

"அன்று சாயங்காலத்தில்" - இயேசு கிறிஸ்து கடலோரத்தில் உபதேசம் பண்ணிய அந்த நாளின் சாயங்காலத்திலே (மாற்கு 4:1)

"அவர்கள் ஜனங்களை அனுப்பிவிட்டு, அவர் படவிலிருந்தபடியே அவரைக் கொண்டு போனார்கள்" - இயேசு கிறிஸ்து மாற்கு 4:1 ஆவது வசனத்தில் உபதேசம் பண்ணிய அதே படவில் அக்கரைக்குப் போனார்கள். வேறே படவுகளும் அவரோடேகூட இருந்தது. (மாற்கு 4:36)

"அப்பொழுது பலத்த சுழல்காற்று உண்டாகி, படவு நிரம்பத்தக்கதாக அலைகள் அதின்மேல் மோதிற்று" - மத் 8:24-இல் பூமி அதிர்ச்சியைக் குறித்து வாசிக்கிறோம். பன்னிரெண்டு சீஷர்களைத் தெரிந்தெடுப்பதற்கு முன்பாக இந்தக் காரியம் நடைபெற்றது. (மத் 10:1) இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கிற பலத்தசுழல்காற்று என்பது புயல்காற்றைக் குறிக்கும்.

"அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப்பார்த்து: இரையாதே, அமைதலாயிரு என்றார்" - காற்றை உண்டாக்கியவர் தேவன் ஆகையினால் இயேசு தேவனை அதட்டினார் என்று இந்த வசனத்திற்குப் பொருள்கூறக் கூடாது. இந்தச் சுழல்காற்றை உண்டாக்கியவன் சாத்தான். தேவனுடைய அனுமதியின்பேரில் சாத்தானுக்குப் புயல்காற்றின்மீது அதிகாரம் கிடைத்திருக்கிறது. ஜனங்களை அழிப்பதற்காக சாத்தான் இந்த சுழல்காற்றைப் பயன் படுத்துகிறான் ஆகையினால் இயேசு கிறிஸ்து சாத்தானை அதட்டும் வண்ணமாக காற்றை அதட்டுகிறார் (யோபு 1:12 19 எபே 2:1 3)

"அவர் அவர்களை நோக்கி: ஏன் இப்படிப் பயப்படுகிறீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று" - நம்மிடத்தில் பயம் இருக்கிறது என்றால் நம்மிடத்தில் விசுவாசம் இல்லை என்றுதான் பொருள். இயேசு கிறிஸ்து தமது சீஷர்களைப் பார்த்து, "ஏன் இப்படி பயப்படுகிறீர்கள்" என்பதற்கு "ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று" என்பதே பொருள். ஆகையினால் நாம் எல்லா சூழ்நிலையிலும் தேவனையே விசுவாசத்தோடு சார்ந்து ஜீவிக்க பழகிக்கொள்ளவேண்டும். அவருடைய பராமரிப்பை நம்பி வாழவேண்டும் (மத் 6:25-34; மத் 8:26)

"அவர்கள் மிகவும் பயந்தார்கள்" - சீஷர்கள் சுழல்காற்றிற்குப் பயப்பட்டதைவிட காற்றை அதட்டிய இயேசு கிறிஸ்துவிற்கு மிகவும் பயந்தார்கள்

"இவர் யாரோ?" - இயேசு கிறிஸ்து தேவகுமாரன் மனுஷகுமாரனாக உலகத்திற்கு வந்தார். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பரிபூரணமாக பெற்றவர் (யோவான் 3:34) ஆவியானவரின் வரங்களைப் பெற்றிருக்கிறவர். தேவனைப் பரிபூரணமாக விசுவாசிக்கிறவர் (1கொரி 12:4-11) (மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24)

இயற்கையான சக்திகளின்மீது அதிகாரம் செலுத்தியதற்கு எடுத்துக்காட்டுகள்

1 மோசே (யாத் 7:14-25; யாத் 9:33-35; யாத் 10:21-27; யாத் 14:16)

2 யோசுவா (யோசு 10:12)

3 சாமுவேல் (1சாமு 7:9-12)

4 எலியா (1இராஜா 18:42-46; 2இராஜா 1:10-15; 2இராஜா 2:8; யாக் 5:17)

5 எலிசா (2இராஜா 2:14; 2இராஜா 3:16-20; 2இராஜா 4:1-7, 42-44; 2இராஜா 6:1-7; 2இராஜா 8:1-2)

6 வருங்கால உபத்திரவத்தின் இரண்டு சாட்சிகள் (வெளி 11:3-6)

7 வருங்கால அந்திக்கிறிஸ்து (வெளி 13:2,13; 2தெச 2:8-12)

5 அதிகாரம்

33. கதரேனருடைய நாட்டில் இருந்த அசுத்த ஆவியுள்ள மனுஷன் - (மத் 8:28; லூக் 8:26)

மாற்கு 5:1 பின்பு அவர்கள் கடலுக்கு அக்கரையிலுள்ள கதரேனருடைய நாட்டில் வந்தார்கள்

மாற்கு 5:2 அவர் படவிலிருந்து இறங்கினவுடனே அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷன் பிரேதக்கல்லறைகளிலிருந்து அவருக்கு எதிராக வந்தான்

மாற்கு 5:3 அவனுடைய குடியிருப்பு கல்லறைகளிலே இருந்தது. அவனைச் சங்கிலிகளினாலும் கட்ட ஒருவனாலும் கூடாதிருந்தது.

மாற்கு 5:4 அவன் அநேகந்தரம் விலங்குகளினாலும் சங்கிலிகளினாலும் கட்டப்பட்டிருந்தும் சங்கிலிகளை முறித்து விலங்குகளைத் தகர்த்துப்போடுவான் அவனையடக்க ஒருவனாலும் கூடாதிருந்தது.

மாற்கு 5:5 அவன் எப்பொழுதும் இரவும் பகலும், மலைகளிலும் கல்லறைகளிலும் இருந்து, கூக்குரலிட்டு, கல்லுகளினாலே தன்னைக் காயப்படுத்திக் கொண்டிருந்தான்

மாற்கு 5:6 அவன் இயேசுவைத் தூரத்திலே கண்டபோது, ஓடிவந்து அவரைப் பணிந்துகொண்டு

மாற்கு 5:7 இயேசுவே, உன்னதமான தேவனுடைய குமாரனே, எனக்கும் உமக்கும் என்ன? என்னை வேதனைப்படுத்தாதபடிக்கு தேவன்பேரில் உமக்கு ஆணையென்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான்

மாற்கு 5:8 ஏனெனில் அவர் அவனை நோக்கி: அசுத்த ஆவியே, இந்த மனுஷனை விட்டுப் புறப்பட்டுப்போ என்று சொல்லியிருந்தார்

மாற்கு 5:9 அப்பொழுது அவர் அவனை நோக்கி: உன் பேர் என்னவென்று கேட்டார் அதற்கு அவன் நாங்கள் அநேகராயிருக்கிறபடியால் என் பேர் லேகியோன் என்று சொல்லி,

மாற்கு 5:10 தங்களை அந்தத் திசையிலிருந்து துரத்திவிடாதபடிக்கு அவரை மிகவும் வேண்டிக்கொண்டான்

மாற்கு 5:11 அப்பொழுது அவ்விடத்தில் மலையருகே அநேகம் பன்றிகள் கூட்டமாக மேய்ந்துகொண்டிருந்தது.

மாற்கு 5:12 அந்தப் பிசாசுகளெல்லாம் அவரை நோக்கி: பன்றிகளுக்குள்ளே போகும்படி அவைகளுக்குள்ளே எங்களை அனுப்பும் என்று அவரை வேண்டிக் கொண்டன

மாற்கு 5:13 இயேசு அவைகளுக்கு உத்தரவு கொடுத்தவுடனே, அசுத்த ஆவிகள் புறப்பட்டுப் பன்றிகளுக்குள் போயின; உடனே ஏறக்குறைய இரண்டாயிரம் பன்றிகளுள்ள அந்தக் கூட்டம் உயர்ந்த மேட்டிலிருந்து ஓடி கடலிலே பாய்ந்து, கடலில் அமிழ்ந்து மாண்டது.

மாற்கு 5:14 பன்றிகளை மேய்த்தவர்கள் ஓடி இதைப் பட்டணத்திலும் சுற்றுப்புறங்களிலும் அறிவித்தார்கள் அப்பொழுது சம்பவித்ததைப் பார்க்கும்படி ஜனங்கள் புறப்பட்டு,

மாற்கு 5:15 இயேசுவினிடத்தில் வந்து லேகியோனாகிய பிசாசுகள் பிடித்திருந்தவன் வஸ்திரந்தரித்து உட்கார்ந்து புத்தி தெளிந்திருக்கிறதைக் கண்டு, பயந்தார்கள்

மாற்கு 5:16 பிசாசுகள் பிடித்திருந்தவனுக்கும் பன்றிகளுக்கும் சம்பவித்ததைக் கண்டவர்களும் அவர்களுக்கு விவரமாய்ச் சொன்னார்கள்

மாற்கு 5:17 அப்பொழுது தங்கள் எல்லைகளை விட்டுப்போகும்படி அவரை வேண்டிக்கொள்ளத் தொடங்கினார்கள்

மாற்கு – தொகுப்புரை

5 அதிகாரம்

மாற்கு 5:18 அப்படியே அவர் படவில் ஏறுகிற பொழுது, பிசாசு பிடித்திருந்தவன் அவரோடேகூட இருக்கும்படி தனக்கு உத்தரவுகொடுக்க அவரை வேண்டிக் கொண்டான்

மாற்கு 5:19 இயேசு அவனுக்கு உத்தரவு கொடாமல், நீ உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டிற்குப்போய், கர்த்தர் உனக்கு இரங்கி, உனக்குச் செய்தவைகளை யெல்லாம் அவர்களுக்கு அறிவியென்று சொன்னார்

மாற்கு 5:20 அந்தப்படி அவன் போய், இயேசு தனக்குச் செய்தவைகளை யெல்லாம் தெக்கப்போலி என்னும் நாட்டில் பிரசித்தம் பண்ணத்தொடங்கினான்; எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள்

"கதரேனர்" - கலிலேயாக் கடலுக்கு தென்கிழக்கிலும், யோர்தான் நதிக்குக் கிழக்கிலும் அமைந்துள்ள பட்டணம் கலிலேயாவிற்கும் சமாரியாவிற்கும், கிழக்குப் பிரதேசமான தெக்கபோலியில் அமைந்திருக்கிறது. கதரேனருடைய நாடு என்பது பட்டணத்திலிருந்து கடற்கரை வரையிலுமுள்ள பகுதியைக் குறிப்பிடும்

"அவனைச் சங்கிலிகளினாலும் கட்ட ஒருவனாலும் கூடாதிருந்தது" - அந்த மனுஷனுக்கு அதிக வல்லமையிருந்தது. அது பிசாசினால் உண்டான வல்லமை. சிம்சோனுக்கும், சங்கிலியினால் கட்ட முடியாதபடிக்கு அதிக வல்லமையிருந்தது. ஆனால் அந்த வல்லமையோ தேவனால உண்டாயிற்று (நியா 13-16)

"கல்லறைகள்" - கதரேனருடைய நாட்டைச் சுற்றிலும் ஏராளமான பாறைகளும் பாறை வெடிப்புகளும் இருந்தன அவற்றில ஏராளமான கல்லறைகளை அமைத்திருந்தார்கள். சில கல்லறைகள் 20 சதுர அடி பரப்புள்ளவை இந்த இடங்களில குற்றவாளிகளும், ஒழிந்து கொள்வார்கள் வைத்தியக்காரர்களும், பரமஏழைகளும் இப்படிப்பட்ட இடங்களில வசிப்பது வழக்கம். (ஏசா 65.4

"இயேசுவே, உன்னதமான தேவனுடைய குமாரனே, எனக்கும் உமக்கும் என்ன?" - பிசாசுகளுக்கு இயேசுவை நன்றாகத் தெரியும். அவர் தேவனுடைய குமாரன் என்று நன்றாக அறிந்து வைத்திருக்கும். ஒருவேளை இந்தச் சத்தியம் மனுஷருக்கு தெரியாமற் போகலாம். தங்களுடைய முடிவும் எப்படியிருக்கும் என்பது பிசாசுகளுக்கு நன்றாகவே தெரியும்.

"அப்பொழுது அவர் அவனை நோக்கி, உன் பேர் என்னவென்று கேட்டார்" - பிசாசுகளுக்கும் பெயர்கள் உண்டு. ஒரு மனுஷனுக்குள் 6,000 பிசாசுகள் புகுந்திருக்கும்போது அவை ஒவ்வொன்றின் பெயரையும் எழுதினால எழுத இடம் போதாது. இந்த பிசாசுகளுக்குத் தலைவன் ஒருவன் இருப்பான் அவனுக்குக் கீழ ஏராளமான குட்டிபிசாசுகள் இருக்கும் மத் 12:43-45 ஆகிய வசனங்களில் நாம் வாசிக்கும் பிசாசோடுகூட ஏழு பிசாசுகள் இருந்தன

"தங்களை அந்தத் திசையிலிருந்து துரத்திவிடாதபடிக்கு அவரை மிகவும் வேண்டிக்கொண்டான்" - பிசாசு இயேசுவிடம் ஜெபம் பண்ணிற்று இந்த இடத்தில நாம நான்கு பேரின ஜெபங்களை வாசிக்கிறோம. அவையாவன.

1 தலைமைப் பிசாசு (மாற்கு 5:7,10)

2 எல்லா பிசாசுகளும் (மாற்கு 5:12

3. கதரேனர் (மாற்கு 5:17)

4. சொஸ்தமானமனுஷன (மாற்கு 5:18-19

"அந்தத் திசை" - அந்தத் தேசத்தை விட்டு வெளியே என்று பொருள்படும் பிசாசுகளுக்கு இந்த இடத்தை விட்டு வெளியேற மனதில்லை அவற்றிற்குக் கூட மற்ற இடங்களை விட ஒரு சில இடங்களை விசேஷமாக பிடித்து விடும். (மத் 12:43-45 பிசாசுகளுக்கும், ஆசைகள் உண்டு

"பிசாசு பிடித்திருந்தவன வஸ்திரந்தரித்து உட்கார்ந்து, புத்தி தெளிந்திருக்கிறான்" இயேசு கிறிஸ்து இப்பேர்ப்பட்ட ஊழியத்தைச் செய்வதற்காகவே இந்த உலகத்திற்கு வந்தார் (யோவான் 10:10) சாத்தானுடைய அந்தகார சக்திகளை அழிப்பதற்காகவும், மனுஷரைச் சாத்தானுடைய கட்டுகளிலிருந்து விடுவிப்பதற்காகவும் இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார் (மாற்கு 16:17-18; யோவான் 14:12 லூக்கா 24:49; அப 1:8)

மாற்கு – தொகுப்புரை

5 அதிகாரம்

"இயேசு அவனுக்கு உத்தரவுகொடாமல், நீ உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டிற்குப்போய், கர்த்தர் உனக்கு இரங்கி, உனக்குச் செய்தவைகளையெல்லாம் அவர்களுக்கு அறிவியென்று சொன்னார்" - இந்த ஊர் ஜனங்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளவில்லை தங்களுடைய எல்லைகளை விட்டுப் போகும்படி இயேசுவை வேண்டிக் கொண்டார்கள் இந்த ஊரில தமது ஊழியத்தைச் செய்ய இயேசு கிறிஸ்துவிற்கு ஒரு நபர் தேவைப்பட்டான் ஆகையினால ஆண்டவர் அந்த மனுஷனை தமக்குச் சாட்சியாகவும், தேவனுடைய நாம மகிமைக்காகவும் அவனுடைய இனத்தாரோடே இருக்குமாறு கூறுகிறார் (மாற்கு 5:19-20

"கர்த்தர் உனக்கு இரங்கினார்" - (மத் 9:36

"தெக்கபோலி" - பத்து பட்டணங்களை அடங்கிய ஒரு மாகாணம். யோர்தானுக்கு கிழக்கிலும், கலிலேயா கடலுக்கு தெற்கிலும் அமைந்துள்ள பட்டணங்கள் (மத் 4:25 மாற்கு 5:20, மாற்கு 7:31)

34. பன்னிரெண்டு வருஷமாக பெரும்பாடுள்ள ஸ்திரீ குணமடைகிறாள் - யவீருவின் மகளை இயேசு உயிருடன் எழுப்புகிறார் - (மத் 9:18 லூக் 8:40

மாற்கு 5:21 இயேசு படவில ஏறி மறுபடியும் இக்கரைக்கு வந்து கடலோரத்திலிருந்த போது, திரளான ஜனங்கள் அவரிடத்தில கூடிவந்தார்கள்

மாற்கு 5:22 அப்பொழுது, ஜெப ஆலயத்தலைவரில ஒருவனாகிய யவீரு என்பவன் வந்து, அவரைக் கண்டவுடனே, அவர் பாதத்திலே விழுந்து,

மாற்கு 5:23 என் குமாரத்தி மரண அவஸ்தைப்படுகிறாள், அவள் ஆரோக்கியம் அடையும்படிக்கு நீர் வந்து அவள்மேல் உமது கைகளை வையும் அப்பொழுது பிழைப்பாள் என்று அவரை மிகவும் வேண்டிக்கொண்டாள்

மாற்கு 5:24 அவர் அவனோடேகூடப் போனார் திரளான ஜனங்கள் அவருக்குப் பின்சென்று, அவரை நெருக்கினார்கள்

மாற்கு 5:25 அப்பொழுது பன்னிரண்டு வருஷமாய் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ

மாற்கு 5:26 அநேக வைத்தியர்களால் மிகவும் வருத்தப்பட்டு, தனக்கு உண்டானவைகளையெல்லாம் செலவழித்தும், சற்றாகிலும் குணமடையாமல் அதிக வருத்தப்படுகிற பொழுது

மாற்கு 5:27 இயேசுவைக்குறித்துக் கேள்விப்பட்டு நான் அவருடைய வஸ்திரங்களையாகிலும் தொட்டால சொஸ்தமாவேன என்று சொல்லி,

மாற்கு 5:28 ஜனக்கூட்டத்துக்குள்ளே அவருக்குப் பின்னாக வந்து அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள

மாற்கு 5:29 உடனே அவளுடைய உதிரத்தின ஊறல நின்றுபோயிற்று அந்த வேதனை நீங்கி ஆரோக்கியமடைந்ததை அவள் தன் சரீரத்தில உணர்ந்தாள்

மாற்கு 5:30 உடனே இயேசு தம்மிலிருந்து வல்லமை புறப்பட்டதைத் தமக்குள அறிந்து ஜனக்கூட்டத்துக்குள்ளே திரும்பி: என் வஸ்திரங்களைத் தொட்டது யார் என்று கேட்டார

மாற்கு 5:31 அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: திரளான ஜனங்கள் உம்மை நெருக்கிக்கொண்டிருக்கிறதை நீர் கண்டும், என்னைத் தொட்டது யார் என்று கேட்கிறீரே என்றார்கள்

5 அதிகாரம்

மாற்கு 5:32 இதைச் செய்தவளைக் காணும்படிக்கு அவர் சுற்றிலும் பார்த்தார்

மாற்கு 5:33 தன்னிடத்திலே சம்பவித்ததை அறிந்த அந்த ஸ்திரீயானவள் பயந்து நடுங்கி அவர் முன்பாக வந்து விழுந்து உண்மையையெல்லாம் அவருக்குச் சொன்னாள்

மாற்கு 5:34 அவர் அவளைப் பார்த்து, மகளே, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, நீ சமாதானத்தோடேபோய் உன் வேதனை நீங்கி, சுகமாயிரு என்றார்

மாற்கு 5:35 அவர் இப்படிப் பேசிக் கொண்டிருக்கையில், ஜெபஆலயத் தலைவனுடைய வீட்டிலிருந்து சிலர் வந்து, உம்முடைய குமாரத்தி மரித்துப்போனாள், இனி ஏன் போதகரை வருத்தப்படுத்துகிறீர் என்றார்கள்

மாற்கு 5:36 அவர்கள் சொன்ன வார்த்தையை இயேசு கேட்டவுடனே ஜெபஆலயத்தலைவனை நோக்கி, பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு என்று சொல்லி,

மாற்கு 5:37 பேதுருவையும் யாக்கோபையும் யாக்கோபின் சகோதரன் யோவானையும் தவிர வேறொருவரும் தம்மோடே வருகிறதற்கு இடங் கொடாமல்,

மாற்கு 5:38 ஜெபஆலயத் தலைவனுடைய வீட்டிலே வந்து, சந்தடியையும் மிகவும் அழுது புலம்புகிறவர்களையும் கண்டு,

மாற்கு 5:39 உள்ளே பிரவேசித்து, நீங்கள் சந்தடிபண்ணி அழுகிறதென்ன? பிள்ளை மரிக்கவில்லை, நித்திரையாயிருக்கிறாள் என்றார்

மாற்கு 5:40 அதற்காக அவரைப் பார்த்து நகைத்தார்கள் எல்லாரையும் அவர் வெளியேபோகப்பண்ணி, பிள்ளையின் தகப்பனையும் தாயையும் தம்மோடே வந்தவர்களையும் அழைத்துக்கொண்டு, பிள்ளையிருந்த இடத்தில் பிரவேசித்து

மாற்கு 5:41 பிள்ளையின் கையைப் பிடித்து: தலீத்தா கூமி என்றார்; அதற்கு, சிறுபெண்ணே எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்று அர்த்தமாம்.

மாற்கு 5:42 உடனே சிறுபெண் எழுந்து நடந்தாள்; அவள் பன்னிரண்டு வயதுள்ளவளாயிருந்தாள் அவர்கள் மிகுந்த ஆச்சரியப்பட்டுப் பிரமித்தார்கள்

மாற்கு 5:43 அதை ஒருவருக்கும் அறிவியாதபடி அவர்களுக்கு உறுதியாகக் கட்டளையிட்டு, அவளுக்கு ஆகாரம் கொடுக்கும்படி சொன்னார்

"இக்கரை" - கலிலேயா கடலின் மேற்கு பகுதியிலுள்ள கப்பர்நகூம் பட்டணம்

"என் குமாரத்தி மரண அவஸ்தைப் படுகிறாள் அவள் ஆரோக்கியம் அடையும்படிக்கு நீர் வந்து அவள்மேல் உமது கைகளை வையும் அப்பொழுது பிழைப்பாள் என்று அவரை மிகவும் வேண்டிக்கொண்டான்" - தம்மிடத்தில் ஜெபம் பண்ண வருகிறவர்கள்மீது இயேசு கிறிஸ்து தமது கைகளை வைத்து ஜெபிக்க வேண்டும் என்ற வழக்கம் அக்காலத்தில் இருந்தது. (மத் 8:3, மாற்கு 6:5, மாற்கு 7:32; மாற்கு 8:23-26, மாற்கு 16:18, அப் 9:17; அப் 28:8; எபி 6:2)

"பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ" இவளுக்கு பன்னிரெண்டு வருஷ காலமாக உதிரப்போக்கு தொடர்ச்சியாக இருந்தது. (லேவி 15:25-30)

மாற்கு – தொகுப்புரை

5 அதிகாரம்

"அநேக வைத்தியர்களால் மிகவும் வருத்தப்பட்டாள்" - குணப்படுத்த முடியாத வைத்தியர்கள் கையில் நோயாளிகள் சிக்கினால் அவர்கள் பாடு மிகவும் திண்டாட்டமாக இருக்கும். நோயாளிகளைப் பாடாய்ப்பாடு படுத்திவிடுவார்கள். மனுஷனால நோயைக் குணப்படுத்த முடியாது. யூதருடைய வைத்தியர்கள் இந்த ஸ்திரீக்கு பலவிதமான வைத்தியங்களைச் செய்து பார்த்தார்கள். ஆனால் எந்த வைத்தியமும் இவளுடைய உதிரப்போக்கை நிறுத்தவில்லை. கசாயம் கொடுத்தார்கள். உணவில் பத்தியம் இருக்கச் சொன்னார்கள். வைத்தியர்கள் சொன்னபடியெல்லாம் இவள் கேட்டாள். ஆனால் இவளுடைய உதிரப்போக்கு நின்றபாடில்லை.

"நான் அவருடைய வஸ்திரங்களையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் என்று சொல்லி; ஜனக்கூட்டத்துக்குள்ளே அவருக்குப் பின்னாக வந்து, அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள்" - மத் 5:3. இது அவளுடைய உண்மையான விசுவாசத்தையும் எப்படியாயினும் குணமாகிவிட வேண்டுமென்னும் தீர்மானத்தையும் காண்பிக்கிறது.

அவளுடைய வியாதி குணமானதற்குச் சான்றுகள்

1. உடனே அவளுடைய உதிரத்தின் ஊறல் நின்றுபோயிற்று.
2. அந்த வேதனை நீங்கி ஆரோக்கியமடைந்ததை அவள் தன் சரீரத்தில் உணர்ந்தாள்.

"உடனே இயேசு தம்மிலிருந்து வல்லமை புறப்பட்டதைத் தமக்குள் அறிந்தார்" தம்மிடமிருந்து குணமாக்கும் வல்லமை புறப்பட்டுச் சென்றதை அவர் அறிந்தார். தம்மை ஒருவர் விசுவாசத்தோடு தொட்டதை உணர்ந்தார்.

"தன்னிடத்திலே சம்பவித்ததை அறிந்த அந்த ஸ்திரீயானவள் பயந்து, நடுங்கி, அவர் முன்பாக வந்து விழுந்து, உண்மையையெல்லாம் அவருக்குச் சொன்னாள்" - பன்னிரெண்டு வருஷமாகப் பெரும்பாடுள்ள ஸ்திரீ சொஸ்தமானதில் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் காரியங்களை நாம் வரிசையாகக் காணலாம்.

1. அவளுடைய பரிதாபமான சூழ்நிலை (மாற்கு 5:25)
2. எல்லா மருத்துவ சிகிச்சைகளையும் மேற்கொண்டாள் (மாற்கு 5:26)
3. தனக்கு உண்டானவைகளை எல்லாம் செலவழித்தாள் (மாற்கு 5:26)
4. இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் கேள்விப்பட்டாள் (மாற்கு 5:27)
5. இயேசுவின் வஸ்திரங்களைத் தொட வேண்டுமென்று தீர்மானம் பண்ணினாள் (மாற்கு 5:27)
6. தனது தீர்மானத்தின் பிரகாரமாக இயேசுவின் பின்னாக வந்தாள் (மாற்கு 5:27-28)
7. விசுவாசத்தோடு இயேசுவின் வஸ்திரத்தைத் தொட்டாள் (மாற்கு 5:28,34)
8. உடனே அவள் ஆரோக்கியமானாள் (மாற்கு 5:29)
9. அவள் ஆரோக்கியமடைந்ததைத் தன் சரீரத்தில் உணர்ந்தாள் (மாற்கு 5:33)

"மகளே, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, நீ சமாதானத்தோடே போய், உன் வேதனை நீங்கி, சுகமாயிரு" - இயேசு கிறிஸ்துவிடம் விசுவாசத்தோடு வரும்போது, அவர் தமது பிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார். இது இயேசுவின் சுபாவம். அவருடைய பிரமாணம். (மத் 8:10; மத் 9:29, மத் 21:22, மாற்கு 9:23; மாற்கு 11:22-24)

5 அதிகாரம்

"அவர்கள் சொன்ன வார்த்தையை இயேசு கேட்டவுடனே ஜெப ஆலயத்தலைவனை நோக்கி: பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு என்று சொன்னார்" - ஜெபாலயத்தலைவன் இயேசு கிறிஸ்துவிடம் வந்து தன்னுடைய குமாரத்தியைச் சொஸ்தமாக்க வேண்டுமென்று கேட்டான். அப்பொழுது ஜெப ஆலயத்தலைவனுடைய வீட்டிலிருந்து சிலர் வந்து, உம்முடைய குமாரத்தி மரித்துப்போனாள், இனி ஏன் போதகரை வருத்தப்படுத்துகிறீர் என்றார்கள். அவர்கள் இவ்வாறு கூறிய இந்த வார்த்தையைக் கேட்டவுடனே இயேசுகிறிஸ்து ஜெபாலயத் தலைவனிடம் இவ்வாறு கூறுகிறார். விசுவாசமுள்ளவனாயிரு என்று கூறுகிறார். நாம் இயேசு கிறிஸ்துவிடம் விசுவாசத்தோடு வரவேண்டும். தொடர்ந்து விசுவாசமுள்ளவர்களாக இருக்க வேண்டும். நமது அவிசுவாசத்தின் நிமித்தமாக ஜெபத்தில் நாம் கேட்கும் பல காரியங்களுக்கு நமக்கு பதில் கிடைப்பதில்லை.

"பேதுருவையும், யாக்கோபையும் யாக்கோபின் சகோதரன் யோவானையும் தவிர, வேறொருவரும் தம்மோடே வருகிறதற்கு இடங்கொடாமல்" இந்த மூவரும் இயேசு கிறிஸ்துவை பல சமயங்களில் பின்பற்றிச் சென்றவர்கள் (மத் 17:1-8, மத் 26:37)

"இயேசு ஜெபஆலயத்தலைவனுடைய வீட்டிலே வந்தார்" - மத் 8:13; மத் 15:28; யோவான் 4:50-54 ஆகிய வசனங்களில் நாம் வாசிக்கிற பிரகாரமாக இயேசு கிறிஸ்து தூரத்தில் இருந்தபடியே இந்த ஸ்திரீயைக் குணப்படுத்தியிருக்க முடியும். ஆயினும் இந்த வீட்டிற்கு வந்து, அந்த ஸ்திரீயைச் சொஸ்தமாக்க வேண்டுமென்று சித்தம் கொண்டார் (மத் 9:19)

"சந்தடி" - மிகுந்த சத்தம் (மத் 9:23)

"நீங்கள் சந்தடிபண்ணி அழுகிறதென்ன?" - கிழக்குதேசங்களில் ஒருவர் மரித்துப்போகும் போது அவருடைய உற்றார் உறவினர்கள் எல்லாம் துக்கம் விசாரிக்க வந்துவிடுவார்கள். ஒப்பாரிப்பாடல்களைப் பாடுவார்கள். கூலிக்கு அமர்த்தப்பட்ட ஒப்பாரி பாடகர்களும் இருப்பார்கள் (எரே 9:17-21; எரே 48:36; ஆமோ 5:16). இயேசு கிறிஸ்து இவர்களைப் பார்த்துத்தான் "நீங்கள் சந்தடிபண்ணி அழுகிறதென்ன?" என்று கேட்கிறார்.

"பிள்ளை மரிக்கவில்லை, நித்திரையாயிருக்கிறாள்" - அவள் நிரந்தரமாக மரித்துப்போகவில்லை. இயேசு கிறிஸ்து அவளை உயிர்த்தெழ வைக்கப்போகிறார்.

"அதற்காக அவரைப் பார்த்து நகைத்தார்கள்" - ஒப்பாரி பாடுகிறவர்கள் துக்கத்தினால் பாடவில்லை. அது அவர்களுடைய வழக்கம். ஆகையினால் ஒப்பாரி பாடுகிறவர்கள் திடீரென்று நகைக்கிறார்கள். இந்தப் பிள்ளை மரித்துவிட்டாள் என்பது அவர்களுக்குத் தெரியும். அவர்களுடைய நகைப்பு தங்களுடைய அவிசுவாசத்தையே காண்பிக்கிறது.

"எல்லாரையும் அவர் வெளியேபோகப் பண்ணினார்" - நகைத்தவர்களையும் சந்தடிபண்ணியவர்களையும் இயேசு வெளியே அனுப்பிவிட்டார். அவர்கள் இருந்தால் இயேசு கிறிஸ்துவால் அற்புதம் செய்ய முடியாது என்பது இதன் பொருளல்ல. தேவனுடைய கிரியை நடைபெறும் இடத்தில் அமைதியும் பயபக்தியும் காணப்படவேண்டும். இதை வலியுறுத்துவதற்காகவே இயேசு கிறிஸ்து அவர்களை வெளியே போகப்பண்ணினார்.

"பிள்ளையின் தகப்பனையும் தாயையும் தம்மோடே வந்தவர்களையும் அழைத்துக்கொண்டு, பிள்ளையிருந்த இடத்தில் பிரவேசித்தார்" மொத்தம் ஆறுபேர் அந்த பிள்ளையின் உயிர்த்தெழுதலைத் தங்கள் கண்களால் கண்டார்கள். இயேசு, பிள்ளையின் தாயும், தகப்பனும், மூன்று சீஷர்கள் (மாற்கு 5:37,40)

"பிள்ளையின் கையைப் பிடித்து: தலீத்தாகூமி என்றார்" தலீத்தாகூமி என்பது அராமிய்க் பாஷையின் வார்த்தை. இதற்கு சிறுபெண்ணே எழுந்திரு என்று பொருள்.

5 அதிகாரம்

சிறுபெண் (Damsel) - κοράσιον - korasion - 2877

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - சிறுபெண் (little girl) (மாற்கு 5:42; மாற்கு 6:22,28; மத் 9:24-25; மத் 14:11) இந்த வார்த்தையும் மாற்கு 5:39-41 ஆகிய வசனங்களில் காணப்படும் வார்த்தையும் வெவ்வேறானவை. இந்த வசனங்களில் "பைதியோன்" என்னும் கிரேக்கச்சொல் பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

பிள்ளை (child) - παιδίον - paidion - 3813

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பிள்ளை, பாலகன், சிறுபிள்ளை குழந்தை

"உடனே சிறுபெண் எழுந்து நடந்தாள்" - வீட்டிற்கு வெளியே சந்தடி பண்ணுகிறவர்களும், ஒப்பாரி பாடுகிறவர்களும், நகைத்துப் பரியாசம் பண்ணுகிறவர்களும் கூடியிருக்கிறார்கள். அவர்கள் நடுவிலே மரித்துப்போன இந்தச் சிறுபெண் இப்போது மறுபடியும் உயிர்பெற்று நடந்து செல்லுகிறாள். அதைக் கண்ட அனைவருக்கும் பிரமிப்பு உண்டாயிற்று.

ஆச்சரியப்படுதல், பிரமிப்பு அடைதல் (astonishment) - ἔκστασις - ekstasis - 1611

பெண்பால் பெயர்ச்சொல் - ஆச்சரியப்படுதல், பிரமிப்பு அடைதல், ஞானதிருஷ்டி, திகில் (entrancement, bewilderment, trance) (அப் 10:10; அப் 11:5; அப் 22:17; மாற்கு 16:8; லூக்கா 5:26; அப் 3:10)

"அதை ஒருவருக்கும் அறிவியாதபடி அவர்களுக்கு உறுதியாகக் கட்டளையிட்டார்" - மாற்கு 1:45; மாற்கு 3:12; மாற்கு 5:10,23,43; 1கொரி 16:12. தாம் செய்த அற்புதங்களை ஜனங்கள் பிறருக்கு அறிவிக்கக் கூடாது என்று இயேசு கிறிஸ்து கண்டிப்புடன் உத்தரவிடுகிறார். காலம் வருமளவுமிலும் இயேசு தாம் செய்த அற்புதங்களையும் அடையாளங்களையும் விளம்பரப்படுத்த வேண்டியதில்லை என்று சித்தம் கொண்டிருந்தார். திரளான ஜனங்கள் இயேசுவோடுகூட இருக்கிறார்கள். அவர்கள் மத்தியில் பிதாவின் சித்தத்தைச் செய்வது இயேசு கிறிஸ்துவின் பிரதான நோக்கம்.

"அவளுக்கு ஆகாரம் கொடுக்கும்படி சொன்னார்" - வியாதியிலிருப்பவர்களால் சரியாகச் சாப்பிடமுடியாது. இந்த சிறுமி மரித்துப்போனவள். இப்போது இயேசு கிறிஸ்து இவளுக்கு ஆகாரம் கொடுக்குமாறு கூறுகிறார். சரீரப்பிரகாரமாக அவள் ஆகாரத்தைப் புசித்து பெலன்கொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்து ஆச்சரிய அற்புதத்தைச் செய்யும் அதேவேளையில் இயற்கையின் பிரமாணத்திற்கும் முக்கியத்துவம் தருகிறார்.

6 அதிகாரம்

35. நாசரேத்தில் இயேசு - ஜனங்கள் இயேசுவை மறுபடியும் ஏற்றுக் கொள்ளவில்லை - (மத் 13:53 லூக் 4:16)

மாற்கு 6:1 அவர் அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, தாம் வளர்ந்த ஊருக்கு வந்தார்; அவருடைய சீஷரும் அவரோடேகூட வந்தார்கள்.

மாற்கு 6:2 ஓய்வுநாளானபோது, ஜெபஆலயத்தில் உபதேசம்பண்ணத் தொடங்கினார். அநேகர் கேட்டு ஆச்சரியப்பட்டு, இவைகள் இவனுக்கு எங்கேயிருந்து வந்தது? இவன் கைகளினால் இப்படிப்பட்ட பலத்த செய்கைகள் நடக்கும்படி இவனுக்குக் கொடுக்கப்பட்ட ஞானம் எப்படிப்பட்டது?

மாற்கு 6:3 இவன் தச்சன் அல்லவா? மரியாளுடைய குமாரன் அல்லவா? யாக்கோபு யோசே யூதா சீமோன் என்பவர்களுக்குச் சகோதரன் அல்லவா? இவன் சகோதரிகளும் இங்கே நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா? என்று சொல்லி, அவரைக் குறித்து இடறலடைந்தார்கள்.

மாற்கு 6:4 இயேசு அவர்களை நோக்கி: தீர்க்கதரிசி ஒருவன் தன் ஊரிலும் தன் இனத்திலும் தன் வீட்டிலுமேயன்றி வேறெங்கும் கனவீனமடையான் என்றார்.

மாற்கு 6:5 அங்கே அவர் சில நோயாளிகள்மேல் கைகளை வைத்து அவர்களைக் குணமாக்கினதேயன்றி, வேறொரு அற்புதமும் செய்யக்கூடாமல்,

"அவர் அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, தாம் வளர்ந்த ஊருக்கு வந்தார்" - இயேசுவின் வளர்ந்த ஊர் நாசரேத். அவர் யவீருவின் வீட்டை விட்டு, நாசரேத்திற்கு வருகிறார். இரண்டாம் முறையாக இந்த ஊருக்கு அவர் வருகிறார். இந்த ஊரிலுள்ள ஜெபாலயத்தில் இரண்டாம் முறையாக ஊழியம் செய்ய வருகிறார் (லூக்கா 4:16 - மத் 13:54-58 மாற்கு 6:1-6)

"தச்சன்" - இயேசு கிறிஸ்துவிற்குத் தச்சுத்தொழில் நன்றாக தெரியும். தமது முப்பதாவது வயதில் ஊழியத்தை ஆரம்பிக்கும் வரையிலும் இயேசு கிறிஸ்து தமது உலகத் தந்தையான யோசேப்போடு சேர்ந்து, தச்சுத்தொழில் செய்து வந்தார். யூதருடைய மார்க்க வழக்கத்தின் பிரகாரம் ஒவ்வொரு தந்தையும் தன்னுடைய முதல் ஆண் மகனுக்கு நான்கு காரியங்களைச் செய்ய வேண்டும். அவையாவன

1. அவனுக்கு விருத்தசேதனம் செய்ய வேண்டும். (ஆதி 17:10-14)

2. அவனை மீட்க வேண்டும் (யாத் 13:2,12; எண் 3:42-51)

3. நியாயப்பிரமாணத்தை அவனுக்குப் போதிக்க வேண்டும். (உபா 6:6-9 உபா 11:19-20)

4. ஒரு தொழிலைக் கற்றுத் தரவேண்டும்

யூதர் மதத்தில் ஒரு பொதுவான பழமொழி உண்டு "தன் மகனுக்கு எந்தத் தொழிலையும் கற்றுத்தராதவன் அவனுக்கு திருடக் கற்றுக்கொடுக்கிறான்" என்பது எபிரெயரின் பழமொழி. ஆகையினால் யூதமார்க்கத்துப் பெற்றோர் அனைவரும் தங்கள் ஆண் பிள்ளைகளுக்கு ஏதாவது ஒரு தொழிலைக் கற்றுத்தருவார்கள். யோசேப்பு இயேசு கிறிஸ்துவிற்கு தச்சுத்தொழிலைக் கற்றுக் கொடுத்தார்.

"மரியாளுடைய குமாரன்" - வேதவாக்கியத்தின் பிரகாரம் இயேசு கிறிஸ்து மரியாளின் குமாரன். அதேசமயத்தில் அவர் யோசேப்பின் குமாரன் அல்ல. (மத் 1:18-25; லூக்கா 1:30-35, யோவான் 1:14,18; யோவான் 3:14-20 எபி 1:1,2)

"சகோதரர்" - வேதாகமத்தில் சகோதரர் என்னும் வார்த்தைக்கு நான்கு விதமான பொருள் உண்டு. அவையாவன

1. ஒரே பெற்றோரின் பிள்ளைகள் (மாற்கு 6:3; ஆதி 42:1-9, மத் 4:18-21; கலா 1:19) இந்த பொருளில் சகோதரர் என்னும் வார்த்தை 260 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

மாற்கு – தொகுப்புரை

6 அதிகாரம்

2 இஸ்ரவேலர்கள் (எண் 20:14 உபா 15:12; உபா 23:7; நெபா 13:17) இந்த பொருளில சகோதரர் என்னும் வார்த்தை 57 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

3 மனுஷர்கள் (1இராஜா 9:13 1இராஜா 20:33) இந்த பொருளில சகோதரர் என்னும வார்த்தை 4 தடவைகள் பயன்படுத்தபபட்டிருக்கிறது.

4. விசுவாசிகள் (மத் 5:22-24; மத் 7:4, மத் 12:50; மத் 18:15-17) இந்த பொருளில சகோதரர் என்னும வார்த்தை 79 தடவைகள பயன்படுததப பட்டிருக்கிறது.

"அவருடைய சகோதரர்" என்னும வாக்கியம் பொதுவாக இயேசுவோடு கூடபிறநத சகோதரனையே குறிக்கும இவாகள இயேசு கிறிஸது பிறநத பினபு யோசேப்பிற்கும் மரியாளுக்கும பிறநதவாகள மத் 12:46-47 மத் 13:55; மாற்கு 3:31; லூககா 8:19 யோவான 2:12; யோவான 7:3-10; அப 1:14, 2கொரி 9:5; கலா 1:19) சகோதரர் என்னும சொலலுக்கு உறவினா என்னும பொருளும் உணடு (மாற்கு 6:4, லூக்கா 1:36,58 லூக்கா 2:44, லூக்கா 14:12, லூக்கா 21:16, லூக்கா 18:26, அப 10:24; ரோமர் 9:3 ரோமர் 16:7,11,21)

இயேசுகிறிஸ்து கிறிஸதுவ சகோதரத்துவத்தை உபதேசம் பணணினார (மத் 12:48-50,மத் 23:8; மாற்கு 3:34; லூக்கா 8:21, லூக்கா 22:32) பேதுரு மற்ற அபபோஸ்தலாகளைச் சகோதரரே என்று முதல முறையாகக் குறிப்பிட்டிருக்கிறார (அப் 6:3, 1பேதுரு 2:17) பவுல் 108 இடங்களில் இந்த வார்த்தையை பயன்படுத்துகிறார்

சகோதரரின் கடமைகள்

1 உங்கள் விரோதிகளை நேசிக்க வேண்டும். (மத் 5: 43-48

2 தேவனுடைய சித்தத்தைச் செயய வேண்டும். (மத் 12:50

3 சகோதரராக நேசிக்க வேண்டும் (மத் 23:8; அப 11:29; 1பேதுரு 1:22 1பேதுரு 3:8)

4 ஒருவரையொருவர் பெலப்படுத்த வேண்டும. (லூக்கா 22:32)

5. நியாயப்பிரமாணத்திற்கு மரிக்க வேண்டும. (ரோமர் 7:4

6 சரீரத்தின் கிரியைகளுக்கு மரிக்க வேண்டும. (ரோமர் 8:12-13 கொலோ 3:5)

7 அறியாதவர்களாக இருக்கக்கூடாது (ரோமர் 11:25; 1கொரி 10:1 1கொரி 12:1; 1தெச 4:13; 1தெச 5:1,4

8 தேவனிடம் சரீரத்தை ஒப்புக்கொடுக்க வேண்டும. (ரோமர் 12:1)

9 கலகத்தீர்க்கதரிசிகளை அடையாளம் காணவேண்டும். (ரோமர் 16:17)

10 ஒற்றுமையில இருக்க வேண்டும் (1கொரி 1:10)

11 சமாதானத்தைக் காத்துக்கொள்ள வேண்டும். (1கொரி 6)

12 பலவீனன விழுந்துபோவதற்குக் காரணமாக இருக்கக்கூடாது. (1கொரி 8:12; ரோமர் 14:1-15:3

13 துர்க்குணத்திலே குழந்தைகளாயும், புத்தியிலோ தேறினவர்களாயும இருக்க வேண்டும். (1கொரி 14:20

14 பரிபூரணமாக இருக்க வேண்டும் (1கொரி 13:11)

15 பாவம் செய்வதற்குச் சாக்குப்போக்கு சொல்லக்கூடாது. (கலா 5:13

16 பாவம் செய்யும் சகோதரரை மீட்டுக் கொள்ள வேண்டும். (கலா 6:1

6 அதிகாரம்

17 கர்த்தருக்குள் தைரியமாக இருக்க வேண்டும். (எபே 6:10)

18 கர்த்தருக்குள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். (பிலி 3:1)

19 நல்ல காரியங்களைச் சிந்திக்க வேண்டும். (பிலி 4:8)

20 உங்கள் அழைப்பைத் தெரிந்து கொள்ள வேண்டும். (1கொரி 1:26-31)

21 ஊழியக்காரர்களை மதிக்க வேண்டும். (1தெச 5:12)

22 அன்பில் பெருகவேண்டும். (1தெச 4:9-12)

23 அமைதியாக இருந்து, உங்கள் சொந்தக் கரங்களினால் வேலை செய்ய வேண்டும். (1தெச 4:10-12)

24 அவிசுவாசிகள் முன்பாக பக்தியாகவும், கண்ணியமாகவும் நடந்து கொள்ள வேண்டும் (1தெச 4:10-12)

25 துன்மார்க்கரை எச்சரிக்க வேண்டும் (1தெச 5:14)

26 ஆரோக்கியமான உபதேசத்தில் நிலைத்திருக்க வேண்டும். (2தெச 2:15; 2தீமோ 2:15 2தீமோ 3:16-17)

27 நன்மை செய்வதில் சோர்ந்துபோகக் கூடாது. (2தெச 3:13)

28 தேவனுடைய கிருபையை விட்டுவிலகி பின்வாங்கிப்போய்விடக் கூடாது. (எபி 3:12-14, எபி 12:15)

29 சோதனைகள் வரும்போது அதைச் சந்தோஷமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். (யாக் 1:2)

30 பாவத்தில் மூழ்கியுள்ள சகோதரரை மீட்பதற்கு உதவி புரிய வேண்டும். (யாக் 1:16, யாக் 5:19-20; யாக் 4:19)

31 கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும் கோபிப்பதற்குத் தாமதமாயும் இருக்க வேண்டும். (யாக் 1:1)

32 பட்சபாதம் இருக்கக்கூடாது. (யாக் 2)

33 விசுவாசத்தோடு கிரியை செய்ய வேண்டும். (யாக் 2:14)

34 அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து நம்மில் அநேகர் போதகராக ஆகக்கூடாது. (யாக் 3:1; 1கொரி 12:29; 2தீமோ 4:1-4)

35 மற்றவர்களைப் பற்றி விரோதமாய் பேசக்கூடாது. (யாக் 4:11)

36 பொறுமையாய் இருக்க வேண்டும் (யாக் 5:7)

37 ஒருவரையும் நியாயந்தீர்க்கக்கூடாது (யாக் 5:9)

38 சத்தியம் பண்ணக்கூடாது. (மத் 5:33-37; யாக் 5:12)

39 இரட்சிப்பை உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருக்க வேண்டும் (2பேதுரு 1:4-10)

40 உலகம் உங்களைப் பகைப்பதற்காக ஆச்சரியப்படக் கூடாது (1யோவான் 3:12, யாக் 4:4, யோவான் 15:18)

"யாக்கோபு" - (மத் 13:55)

"யோசே" - (மத் 13:55)

"யூதா" - (மத் 13:55)

"சீமோன்" - (மத் 13:55)

"சகோதரிகள்" - (மத் 13:56)

இடறலடைந்தார்கள் **(offended)**

σκανδαλίζω - skandalizoo - 4624

வினைச்சொல் இடறலடை, இடறலுண்டாக்கு **(scandalized, stumbled)**

6 அதிகாரம்

"தீர்க்கதரிசி ஒருவன் தன் ஊரிலும் தன் இனத்திலும் தன் வீட்டிலுமேயன்றி வேறெங்கும் கனவீனமடையான்" - (மத் 13:57; லூக்கா 4:24; யோவான் 4:44)

"அங்கே அவர் சில நோயாளிகள்மேல் கைகளை வைத்து, அவர்களைக் குணமாக்கினதேயன்றி, வேறொரு அற்புதமும் செய்யக்கூடாமல் போனார்" - (மத் 13:58) கர்த்தருடைய அநேக அற்புதங்களை நாசரேத் ஊரார் தங்கள் கண்களால் கண்டார்கள். ஆயினும் மற்ற ஊர் ஜனங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களைவிட இவர்கள் மிகவும் குறைவாகவே பெற்றுக்கொண்டார்கள்

36. இயேசு மறுபடியும் கலிலேயாவிற்கு பிரயாணம் பண்ணுகிறார் - (மத் 4:23; 9:35; 11:1, மாற்கு 1:38)

மாற்கு 6:6 அவர்களுடைய அவிசுவாசத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டு, கிராமங்களிலே சுற்றித்திரிந்து உபதேசம் பண்ணினார்

"அவர்களுடைய அவிசுவாசத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்" - (மத் 8:10)

"உபதேசம் பண்ணினார்" - (மத் 9:35)

37. இயேசு பன்னிரெண்டு சீஷர்களை ஊழியம் செய்வதற்கு வெளியே அனுப்புகிறார் - (மத் 10:1; மாற்கு 3:13; லூக் 6:12; 9:1)

மாற்கு 6:7 அவர் பன்னிருவரையும் அழைத்து, அசுத்த ஆவிகளைத் துரத்த அவர்களுக்கு அதிகாரங்கொடுத்து,

மாற்கு 6:8 வழிக்குப் பையையாகிலும் அப்பத்தையாகிலும், கச்சையில் காசையாகிலும், எடுத்துக் கொண்டு போகாமல், ஒரு தடியை மாத்திரம் எடுத்துக்கொண்டு போகவும்,

மாற்கு 6:9 பாதரட்சைகளைப் போட்டுக் கொண்டு போகவும், இரண்டு அங்கிகளைத் தரியாதிருக்கவும் கட்டளையிட்டார்

மாற்கு 6:10 பின்பு அவர்களை நோக்கி: நீங்கள் எங்கேயாகிலும் ஒரு வீட்டில் பிரவேசித்தால் அவ்விடத்தை விட்டுப் புறப்படும்வரைக்கும் அங்கேதானே தங்கியிருங்கள்

மாற்கு 6:11 எவர்களாகிலும் உங்களை ஏற்றுக் கொள்ளாமலும், உங்கள் வசனங்களைக் கேளாமலும் இருந்தால் நீங்கள் அவ்விடம் விட்டுப் புறப்படும் போது, அவர்களுக்குச் சாட்சியாக உங்கள் கால்களின் கீழே படிந்த தூசியை உதறிப்போடுங்கள். நியாயத்தீர்ப்புநாளிலே அந்தப் பட்டணத்திற்கு நேரிடுவதைப் பார்க்கிலும் சோதோம் கொமோரா பட்டணத்திற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, அவர்களை இரண்டு இரண்டுபேராக அனுப்பினார்

மாற்கு 6:12 அவர்கள் புறப்பட்டுப்போய்: மனந்திரும்புங்கள் என்று பிரசங்கித்து

மாற்கு 6:13 அநேகம் பிசாசுகளைத் துரத்தி, அநேகம் நோயாளிகளை எண்ணெய் பூசிச் சொஸ்தமாக்கினார்கள்

"அவர் பன்னிருவரையும் அழைத்தார்" (மத் 10:1)

"அசுத்த ஆவிகளைத் துரத்த அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்" (மத் 10:1)

"வழிக்குப் பையையாகிலும், அப்பத்தையாகிலும் கச்சையில் காசையாகிலும் எடுத்துக்கொண்டு போகவேண்டாம்" (மத் 10:9, 10) அரபு நாடுகளில் ஒருவர் நம்மோடு சேர்ந்து அப்பம் புசித்தால், அவர் நமது சிநேகிதர் என்று பொருள். சில நாடுகளில் நமக்கு ஒருவர் புசிப்பதற்கு அப்பம் தரும்போது நாம் ஏற்றுக்கொள்ள மறுப்பது அவரை அவமதிக்கும் செயலாகும். நாம் அவருடைய விரோதி என்று அவர்கள் முடிவு செய்து விடுவார்கள். ஒரு தடியை மாத்திரம் சீஷர்கள் எடுத்துச்சென்றால் போதுமானது. நீண்ட தூரம் நடக்கும்போது தடியை ஊன்றி நடந்தால் கால் வலி குறையும்.

6 அதிகாரம்

பாதரட்சைகள் (sandals)
σανδάλιον - sandalion
4547

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பாதரட்சைகள்

"இரண்டு அங்கிகள் - (மத் 10:10, லூக்கா 9.3, லூக்கா 22.35-3)

"நீங்கள் எங்கேயாகிலும் ஒரு வீட்டில் பிரவேசித்தால் அவ்விடத்தை விட்டுப் புறப்படுகிறவரைக்கும் அங்கேதானே தங்கியிருங்கள்" - (மத் 10:11)

"எவர்களாகிலும் உங்களை ஏற்றுக் கொள்ளாமலும், உங்கள் வசனங்களைக் கேளாமலும் இருந்தால் நீங்கள் அவ்விடம் விட்டுப் புறப்படும்போது, அவர்களுக்குச் சாட்சியாக உங்கள் கால்களின் கீழே படிந்த தூசியை உதறிப்போடுங்கள்" - (மத் 10:14)

தீர்க்கதரிசன எண் - 4

"நியாயத்தீர்ப்புநாளிலே அந்தப் பட்டணத்திற்கு நேரிடுவதைப்பார்க்கிலும் சோதோம் கொமோரா பட்டணத்திற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் (மாற்கு 6:11) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை

"மனந்திரும்புங்கள் என்று பிரசங்கித்தார்கள்" சுவிசேஷ ஊழியத்தின் ஒரு பகுதி ஜனங்களை மனந்திரும்பும்படியாறு அழைப்பது.

"அநேகம் நோயாளிகளை எண்ணெய் பூசிச் சொஸ்தமாக்கினார்கள்" - ஆதித்திருச்சபையில் வியாதியஸ்தருக்காக எண்ணெய் பூசி ஜெபம் பண்ணுவது வழக்கமாயிருந்தது. (யாக் 5:14-16)

38.ஏரோதுவின் கலங்கிய மனச்சாட்சி - யோவான் ஸ்நானனை சிரச்சேதம் பண்ணுகிறான் - (மத் 14:1; லூக் 9:7)

மாற்கு 6:14 அவருடைய பேர் பிரசித்தமானபடியினால் ஏரோதுராஜா அவரைக்குறித்துக் கேள்விப்பட்டு: யோவான்ஸ்நானன் மரித்தோரிலிருந்து எழுந்தான், ஆகையால் அவனிடத்தில் இந்தப் பலத்த செய்கைகள் விளங்குகிறது என்றான்.

மாற்கு 6:15 சிலர், அவர் எலியா என்றார்கள்; வேறு சிலர்: அவர், ஒரு தீர்க்கதரிசி, அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவனைப்போலிருக்கிறாரென்று சொன்னார்கள்.

மாற்கு 6:16 ஏரோது அதைக் கேட்டபொழுது: அவன் நான் சிரச்சேதம் பண்ணின யோவான்தான்; அவன் மரித்தோரிலிருந்து எழுந்தான் என்றான்.

மாற்கு 6:17 ஏரோது தன் சகோதரனாகிய பிலிப்புவின் மனைவி ஏரோதியாளைத் தனக்கு மனைவியாக்கிக் கொண்டபோது,

மாற்கு 6:18 யோவான் ஏரோதை நோக்கி: நீர் உம்முடைய சகோதரன் மனைவியை வைத்துக் கொள்வது நியாயமல்லவென்று சொன்னதினிமித்தம், ஏரோது சேவகரை அனுப்பி, யோவானைப் பிடித்துக் கட்டிக் காவலில் வைத்திருந்தான்.

மாற்கு 6:19 ஏரோதியாளும் அவனுக்குச் சதி நினைத்து, அவனைக் கொன்றுபோட மனதாயிருந்தாள்; ஆகிலும் அவளால் கூடாமற்போயிற்று.

மாற்கு 6:20 அதேனென்றால்: யோவான் நீதியும் பரிசுத்தமுமுள்ளவனென்று ஏரோது அறிந்து, அவனுக்குப் பயந்து, அவனைப் பாதுகாத்து, அவன் யோசனையின்படி அநேக காரியங்களைச் செய்து, விருப்பத்தோடே அவன் சொல்லைக் கேட்டு வந்தான்.

6 அதிகாரம்

மாற்கு 6:21 பின்பு சமயம் வாய்த்தது. எப்படியென்றால் ஏரோது தன் ஜென்மநாளிலே தன்னுடைய பிரபுக்களுக்கும் சேனாதிபதிகளுக்கும், கலிலேயா நாட்டின் பிரதான மனுஷருக்கும் ஒரு விருந்து பண்ணினபோது.

மாற்கு 6:22 ஏரோதியாளின் குமாரத்தி சபை நடுவே வந்து நடனம்பண்ணி ஏரோதுவையும் அவனோடேகூடப் பந்தியிருந்தவர்களையும் சந்தோஷப்படுத்தினாள் அப்பொழுது ராஜா சிறுபெண்ணை நோக்கி உனக்கு வேண்டியதை என்னிடத்தில் கேள், அதை உனக்குத் தருவேன் என்று சொன்னதுமல்லாமல்.

மாற்கு 6:23 நீ என்னிடத்தில் எதைக் கேட்டாலும், அது என் ராஜ்யத்தில் பாதியானாலும், அதை உனக்குத் தருவேன் என்று அவளுக்கு ஆணையும் இட்டான்

மாற்கு 6:24 அப்பொழுது, அவள் வெளியே போய், நான் என்ன கேட்கவேண்டும் என்று தன் தாயினிடத்தில் கேட்டாள் அதற்கு அவள், யோவான்ஸ்நானனுடைய தலையைக் கேள் என்றாள்

மாற்கு 6:25 உடனே அவள் ராஜாவினிடத்தில் சீக்கிரமாய் வந்து, நீர் இப்பொழுதே ஒரு தாலத்தில் யோவான்ஸ்நானனுடைய தலையை எனக்குத் தரவேண்டும் என்று கேட்டாள்

மாற்கு 6:26 அப்பொழுது ராஜா மிகுந்த துக்கமடைந்தான் ஆகிலும் ஆணையினிமித்தமும் கூடப் பந்தியிருந்தவர்களினிமித்தமும் அவளுக்கு அதை மறுக்க மனதில்லாமல்.

மாற்கு 6:27 உடனே அவனுடைய தலையைக் கொண்டுவரும்படி சேவகனுக்குக் கட்டளையிட்டு அனுப்பினான்

மாற்கு 6:28 அந்தப்படி அவன் போய், காவற்கூடத்திலே அவனைச் சிரச்சேதம் பண்ணி, அவன் தலையை ஒரு தாலத்திலே கொண்டு வந்து, அதை அந்தச் சிறு பெண்ணுக்குக் கொடுத்தான்; அந்தச் சிறுபெண் அதைத் தன் தாயினிடத்தில் கொடுத்தாள்

மாற்கு 6:29 அவனுடைய சீஷர்கள் அதைக் கேள்விப்பட்டு வந்து, அவன் உடலை எடுத்து, ஒரு கல்லறையில் வைத்தார்கள்

"அவருடைய பேர் பிரசித்தமானபடியினால் ஏரோதுராஜா அவரைக்குறித்துக் கேள்விப்பட்டான்" - (மத் 2.3)

"யோவான்ஸ்நானன் மரித்தோரிலிருந்து எழுந்தான்" - (மத் 3, லூக்கா 3)

"எலியா" - (மத் 17.3)

"ஏரோது சேவகரை அனுப்பி, யோவானைப் பிடித்துக் கட்டிக் காவலில் வைத்திருந்தான்" - (மத் 14:1-12, மாற்கு 6:17-29)

"ஏரோதியாளும் அவனுக்குச் சதி நினைத்தாள்" யோவான் ஸ்நானனுடைய பிரசங்கம் ஏரோதியாளுக்குப் பிடிக்கவில்லை ஆகையினால் அவனுக்கு எதிராக சதி பண்ண நினைத்தாள் ஆகிலும் அவளால் கூடாமற் போயிற்று. மாற்கு 6:18

"பிரபுக்கள்" - (lords, Great men) (வெளி 6:15; வெளி 18:23)

சேனாபதிகள் (captains) - χιλίαρχος - chiliarchos - 5506

ஆங்கில மொழிச்சொல் - பிரதான மனுஷர், தலைவன், சேனாபதி, சேனைத்தலைவர் ஆயிரம் போர்வீரர்களுக்குத் தலைவன்

"கலிலேயா நாட்டின் பிரதான மனுஷர்" - கலிலேயாவிலுள்ள முக்கியமான மனுஷர்கள்

சேவகன் (executioner) - σπεκουλάτωρ spekoulatoor 4688

6 அதிகாரம்

ஆண்பால் பெயர்ச்சொல் - சிரச்சேதம் பண்ணுகிற. சேவகன் - ராஜாவினுடைய மெய்க்காப்பாளன் வேவுகாரன ஆயுததாரி

39. பன்னிரெண்டு சீஷர்களும் திரும்பி வருகிறார்கள் - லூக் 9:10

மாற்கு 6.30 அப்பொழுது அப்போஸ்தலர் இயேசுவினிடத்தில கூடிவந்து, தாங்கள் செய்தவைகள் உபதேசித்தவைகள் யாவையும் அவருக்கு அறிவித்தார்கள

மாற்கு 6.31 அவர் அவர்களை நோக்கி, வனாந்தரமான ஓரிடத்தில தனித்து சற்றே இளைப்பாறும்படி போவோம் வாருங்கள என்றார ஏனென்னில வருகிறவாகளும் போகிறவாகளும் அநேகராயிருந்தபடியினால போஜனம பண்ணுகிறதற்கும் அவாகளுக்குச சமயமிலலாதிருந்தது.

"அப்போஸ்தலர் இயேசுவினிடத்தில கூடிவந்து, தாங்கள செய்தவைகள உபதேசித்தவைகள யாவையும் அவருக்கு அறிவித்தாாகள்" - மாறகு எழுதின சுவிசேஷத்தில மட்டுமே இந்தக் குறிப்பு காணபபடுகிறது. சுவிசேஷ ஊழியத்தில சுவிசேஷத்தைப பிரசங்கம் பண்ணுவதும் சுவிசேஷ செய்தியை உறுதிபண்ணுவதும் அடங்கியுள்ளது.

"அவா அவாகளை நோககி: வனாநதரமான ஓரிடத்தில தனித்து சற்றே இளைப்பாறும்படி போவோம் வாருஙகள என்றார், ஏனெனில, வருகிறவாகளும் போகிறவாகளும் அநேகராயிருநதபடியினால போஜனம் பணணுகிறதற்கும் அவாகளுக்குச் சமயமில்லாதிருந்தது" - சுவிசேஷ ஊழியாகள் தேவனுடைய ஊழியத்தை எப்போதும் செய்து கொணடிருககிற படியினால தஙகளுடைய சொந்த வேலைகளைக்கவனிப்பதற்கு அவாகளுககுப போதுமான அளவு சமயம் இருக்காது.

(அப 6:4; 2கொரி 4:9-14; 2கொரி 4:8-18 2கொரி 6:1-10; 2கொரி 10:4-7 2கொரி 11:26-28, எபே 6:10-18 யாக் 5:14-16) ஒரு சில ஊழியக்காரர்கள் தங்களைச் சரியாகக் கவனித்துக் கொள்ளாததினால் சரீரப பிரகாரமாக அவதிப்பட்டிருக்கிறார்கள் (பிலி 2:25-30 2தீமோ 4:20)

40. இயேசு ஐயாயிரம் பேருக்கு அற்புதமாக போஜனம் கொடுக்கிறார் - (மத் 14:15 லூக் 9:11; யோவான் 6:1)

மாறகு 6.32 அப்படியே அவர்கள் தனிமையாய ஒரு படவில் ஏறி வனாந்தரமான ஓர் இடத்துக்குப போனார்கள்

மாறகு 6.33 அவர்கள் புறப்படுப போகிறதை ஜனங்கள் கணடார்கள் அவரை அறிந்த அநேகர் சகல பட்டணங்களிலுமிருந்து காலநடையாய அவவிடத்திறகு ஓடி அவர்களுக்கு முனனே அஙகே சேர்ந்து அவரிடததில கூடிவநதார்களா

மாறகு 6.34 இயேசு கரையில வந்து அநேக ஜனஙகளைக் கணடு, அவாகள மேய்ப்பனிலலாத ஆடுகளைப போலிருநதபடியால அவாகளமேல மனதுருகி, அநேக காரியஙகளை அவாகளுக்கு உபதேசிககத தொடஙகினாா

மாறகு 6.35 வெகுநேரம் சென்றபினபு, அவருடைய சீஷாகள அவரிடத்தில வநது இது வனாந்தரமான இடம், வெகுநேரமுமாயிறறு.

மாறகு 6.36 புசிக்கிறதற்கும் இவாகளிடத்தில ஒனறுமிலலை ஆகையால இவாகள சுற்றியிருக்கிற கிராமஙகளுக்கும் ஊாகளுக்கும் போய், தஙகளுக்காக அப்பஙகளை வாங்கிக் கொள்ளும்படி இவாகளை அனுப்பிவிட வேணடும் என்றார்கள்

மாற்கு 6.37 அவர் அவர்களை நோககி: நீஙகளே அவாகளுக்குப போஜனங் கொடுஙகள் எனறாா அதறகு அவாகள் நாங்கள் போய், இருநூறு பணத்துக்கு அப்பங்களை வாஙகி இவாகளுக்குப் புசிக்கும்படி கொடுக்கக்கூடுமோ எனறாாகள்

மாற்கு - தொகுப்புரை

6 அதிகாரம்

மாற்கு 6:38 அதற்கு அவர்: உங்களிடத்தில் எத்தனை அப்பங்களுண்டு, போய்ப்பாருங்கள் என்றார். அவர்கள் பார்த்துவந்து: ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு என்றார்கள்.

மாற்கு 6:39 அப்பொழுது எல்லாரையும் பசும்புல்லின்மேல் பந்திபந்தியாக உட்காரவைக்கும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

மாற்கு 6:40 அப்படியே வரிசை வரிசையாய் நூறுநூறுபேராகவும் ஐம்பதைம்பது பேராகவும் உட்கார்ந்தார்கள்.

மாற்கு 6:4? அவர்கள் அந்த ஐந்து அப்பங்களையும், அந்த இரண்டு மீன்களையும் எடுத்து, வானத்தை அண்ணாந்துபார்த்து, ஆசீர்வதித்து, அப்பங்களைப்பிட்டு, அவர்களுக்குப் பரிமாறும்படி தமது சீஷர்களிடத்தில் கொடுத்தார்; அப்படியே இரண்டு மீன்களையும் எல்லாருக்கும் பங்கிட்டார்.

மாற்கு 6:42 எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள்.

மாற்கு 6:43 மேலும் அப்பங்களிலும் மீன்களிலும் மீதியான துணிக்கைகளைப் பன்னிரண்டு கூடை நிறைய எடுத்தார்கள்.

மாற்கு 6:44 அப்பம் சாப்பிட்ட புருஷர் ஏறக்குறைய ஐயாயிரம் பேராயிருந்தார்கள்.

"வனாந்தரமான ஓர் இடம்" - இயேசு கிறிஸ்து இந்த இடத்திற்கு ஏற்கெனவே போயிருக்கலாம். அல்லது அந்த ஊர் ஜனங்களுக்கு இந்த இடம் பழக்கமில்லாத இடமாக இருக்கலாம் (மாற்கு 6:32-33). ஆனால் அந்த ஊர் ஜனங்களோ அதை எப்படியோ அறிந்து, இயேசு அங்கே சேருவதற்கு முன்பாக அவர்கள் அங்கே போய்விட்டார்கள். அவர்களைப் பார்த்து இயேசு கிறிஸ்து மனதுருகினார் (மத் 9:36).

"புசிக்கிறதற்கும் இவர்களிடத்தில் ஒன்றுமில்லை. ஆகையால் இவர்கள் சுற்றியிருக்கிற கிராமங்களுக்கும் ஊர்களுக்கும் போய், தங்களுக்காக அப்பங்களை வாங்கிக்கொள்ளும்படி இவர்களை அனுப்பிவிட வேண்டும் என்றார்கள்" - சீஷர்கள் சாதாரண மனுஷரைப்போலப் பேசுகிறார்கள். இப்படிப்பட்ட வனாந்தரமான இடத்தில் ஏராளமான ஜனங்களுக்குப் போஜனம் கொடுக்க வாய்ப்பில்லை. ஆகையினால் அவர்களைச் சுற்றியிருக்கிற கிராமங்களுக்கும் ஊர்களுக்கும் அனுப்பிவிடுவது நியாயமாய்த் தோன்றுகிறது. ஆயினும் அவர்கள் மத்தியிலே இயேசு கிறிஸ்து இருக்கிறார். எல்லாருடைய தேவையையும் சந்திப்பதற்கு வல்லமையுள்ளவர். எல்லாப் பிரச்சனைகளையும் தீர்க்கக்கூடியவர்.

பணம் (pennyworth) - δηνάριον - deenarion - 1220

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பணம் காசு (மாற்கு 6:38)

"அப்பங்கள்" - கிழக்குத் தேசங்களில் பெரிய அப்பம் 5 அல்லது 6 அங்குல விட்டமும் ஒரு அங்குல கனமும் உடையதாக இருக்கும். ஒருவர் சாதாரணமாக ஒரு அப்பத்தைப் புசிக்கலாம். இயேசு கிறிஸ்து சுமார் 5000 முதல் 20,000 அப்பங்கள் வரையிலும் அற்புதமாக அதிகரிக்கச் செய்தார். 5000 புருஷர்கள் புசிக்கும் விதமாக, மீன்களையும் அதிகரிக்கச் செய்தார். திருப்தியாக எல்லோரும் சாப்பிட்டபின்பு, மீதியான துணிக்கைகளைப் பன்னிரெண்டு கூடைகள் நிறைய எடுத்தார்கள் (மாற்கு 6:43).

இந்தக் காரியம் இயேசு கிறிஸ்துவின் இரட்சிக்கும் கிரியையை வெளிப்படுத்துகிறது. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தினால் ஏற்படக்கூடிய இரட்சிப்பின் கிரியையை வெளிப்படுத்துகிறது. அற்புதங்களைச் செய்யும் வரத்தினால் எலிசா 20 அப்பங்களை 100 பேருக்குப் புசிக்கும் அளவிற்கு அதிகரிக்கச் செய்தான் (2 இராஜா 4:42-44). ஒரு சாதாரண மனுஷன் இந்த வல்லமையை வெளிப்படுத்தினான்.

6 அதிகாரம்

இயேசு கிறிஸ்து தேவனாக இருப்பதினாலும், அவருடைய தெய்வீக வல்லமையினாலும், இந்த அற்புதம் நடைபெற்றது என்று ஒரு சிலர் கூறுகிறார்கள். வேறு சிலரோ இயேசு இந்த அற்புதத்தை அவருடைய தெய்வீக சுபாவத்தினால் செய்யாமல், பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தினால் செய்ததாக கூறுகிறார்கள் (ஏசா 11:2; ஏசா 42:1-7; ஏசா 61:1-2; மத் 3:16-17; யோவான் 3:34; அப 10:38)

ஒவ்வொருவரும் மறுபடியும் பிறக்கும்போது தேவனுடைய தெய்வீக சுபாவத்தை அனுபவிக்கிறார்கள் (2பேதுரு 1:4). இதனால் யாருக்கும் எந்த வல்லமையும் கிடைப்பதில்லை. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை ஒருவர் பெற்றுக் கொள்ளும்போது மட்டுமே அவர் ஆவியானவரின் வரங்களைப் பெற்றுக் கொள்கிறார். பரிசுத்த ஆவியானவரின் வல்லமை அந்த நபர் மூலமாக கிரியை நடப்பிக்கிறது. (1கொரி 12:4-11; லூக்கா 24:49; அப 1:4-8)

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் அனைவருக்கும் உரியது என்பதற்குக் காரணங்கள்

1. இயேசுகிறிஸ்து எல்லா ஜனங்களையும் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணுவார் என்று யோவான் முன்னுரைத்திருக்கிறார் (மத் 3:11; யோவான் 1:33)
2. தம்மிடத்தில் விசுவாசமாயிருக்கிற அனைவருக்கும், பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை இயேசு கிறிஸ்து வாக்குப் பண்ணியிருக்கிறார் (யோவான் 7:37-39)
3. தம்மிடத்தில் கேட்கும் தேவனுடைய பிள்ளைகள் அனைவருக்கும் ஆவியானவரின் அபிஷேகத்தை இயேசு கிறிஸ்து வாக்குப் பண்ணியிருக்கிறார் (லூக்கா 11:9-13)
4. உன்னதத்திலிருந்து வரும் பலனால் தரிப்பிக்கப்படும் வரையிலும் எல்லா மனுஷரும் காத்திருக்க வேண்டுமென்று இயேசு கிறிஸ்து கட்டளையிட்டிருக்கிறார் (லூக்கா 24:49; அப 1:4-8)
5. ஒவ்வொரு விசுவாசிக்கும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையையும், அபிஷேகத்தையும் இயேசு கிறிஸ்து வாக்குப் பண்ணியிருக்கிறார் (அப 1:4-8; யோவான் 14:12; யோவான் 16:17-18)
6. ஆவியானவரின் அபிஷேகம் எல்லாருக்கும் உரியது என்று பேதுரு வாக்குப் பண்ணியிருக்கிறார் (அப 2:38-39; அப 5:32)
7. கடைசி நாட்களில் எல்லோருக்கும் ஆவியானவரின் அபிஷேகம் வழங்கப்படும் என்று பேதுரு முன்னறிவித்திருக்கிறார் (அப 2:16-21)
8. எல்லோரும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை பெற்றுக் கொள்வதற்காக இயேசு கிறிஸ்து மரித்தார் (கலா 3:13-14). பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் வேதாகமத்தில் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது (யோவான் 7:37-39; யோவான் 14:16-17,26; யோவான் 15:26; யோவான் 16:13-15; அப 1:4-8; அப் 2:38-39)
9. எல்லா விசுவாசிகளும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று ஆதித் திருச்சபையார் எதிர்பார்த்தார்கள் (அப 8:14-18; அப 9:17; அப் 19:1-6)
10. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் யூதருக்கும் புறஜாதியாருக்கும் உரியது. (மத் 3:11; யோவான் 7:37-39; அப 2:16-21, 38-39; அப் 5:32; அப் 10:44-48; அப் 11:14-18; அப் 15:7-11; கலா 3:13-14; ரோமர் 10:12)

"வானத்தை அண்ணாந்துபார்த்து, ஆசீர்வதித்து அப்பங்களைப்பிட்டு, அவர்களுக்குப் பரிமாறும்படி தம்முடைய சீஷர்களிடத்தில் கொடுத்தார்" - (மத் 14:19)

6 அதிகாரம்

கூடைகள் (baskets) - κόφινος - kophinos - 2894

ஆண்பால் பெயர்ச்சொல் - கூடை - யூதர்கள் பிரயாணம் பண்ணும்போது தங்களோடு சிறிய கூடைகளை எடுத்துச் செல்வார்கள் அவற்றில் தங்களுக்குத் தேவையான போஜன பதார்த்தங்களை வைத்திருப்பார்கள் புறஜாதியாருடைய போஜனங்களைப் புசிக்காமல் இருப்பதற்காக இவ்வாறு முன்னேற்பாடாகச் செல்வது யூதரின் வழக்கம். (மத் 14:20; மாற்கு 6:43 லூக்கா 9:17; யோவான் 6:13)

41. இயேசு தண்ணீரின்மீது நடக்கிறார் - (மத் 14:22 யோவான் 6:16

மாற்கு 6:45 அவர் ஜனங்களை அனுப்பிவிடுகையில், தம்முடைய சீஷர்கள் படவில் ஏறி அக்கரையில் பெத்சாயிதாவுக்கு எதிராக, தமக்கு முன்னே போகும்படி, அவர்களைத் துரிதப்படுத்தினார்

மாற்கு 6:46 அவர் ஜனங்களை அனுப்பிவிட்ட பின்பு, ஜெபம் பண்ணும்படி ஒரு மலையின் மேல் ஏறினார்

மாற்கு 6:47 சாயங்காலமானபோது படவு நடுக்கடலிலிருந்தது; அவரோ கரையிலே தனிமையாயிருந்தார்

மாற்கு 6:48 அப்பொழுது காற்று அவர்களுக்கு எதிராயிருந்தபடியினால் அவர்கள் தண்டுவலிக்கிறதில் வருத்தப் படுகிறதை அவர் கண்டு, இராத்திரியில் நாலாம் ஜாமத்தில் கடலின்மேல் நடந்து அவர்களிடத்தில் வந்து, அவர்களைக் கடந்து போகிறவர்போல் காணப்பட்டார்

மாற்கு 6:49 அவர் கடலின்மேல் நடக்கிறதை அவர்கள் கண்டு, ஆவேசம் என்று எண்ணி, சத்தமிட்டு அலறினார்கள்

மாற்கு 6:50 அவர்களெல்லாரும் அவரைக் கண்டு கலக்கமடைந்தார்கள் உடனே அவர் அவர்களோடே பேசி: திடன் கொள்ளுங்கள் நான்தான், பயப்படாதிருங்கள் என்று சொல்லி,

மாற்கு 6:51 அவர்கள் இருந்த படவில் ஏறினார் அப்பொழுது காற்று அமர்ந்தது; அதினால் அவர்கள் தங்களுக்குள்ளே மிகவும் பிரமித்து ஆச்சரியப்பட்டார்கள்

மாற்கு 6:52 அவர்களுடைய இருதயம் கடினமுள்ளதாயிருந்தபடியினால் அப்பங்களைக் குறித்து அவர்கள் உணராமற்போனார்கள்

"பெத்சாயிதா" - (லூக்கா 9:10)

"ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறினார்" - திரளான ஜனங்களை விட்டு, தனிமையாக இருக்கும்போது இயேசு கிறிஸ்து தனித்து ஜெபம் பண்ணுவது வழக்கம். (மத் 14:23; மாற்கு 1:35, மாற்கு 6:46; லூக்கா 6:12; லூக்கா 9:28 லூக்கா 11:1)

காண (saw) - εἴδω - eidoo - 1492

வினைச்சொல் - காண, அறி, பார், தெரிந்திரு, நோக்கு உணர அறிந்திரு, விளக்கு - ஒரு பொருளை சாதாரணமாக பார்ப்பதுபோன்று அல்லாமல் தனிப்பட்ட முறையில் கூர்ந்து கவனிப்பதை இந்தச் சொல் குறிக்கும். சீஷர்கள் தண்டு வலிக்கிறதில் வருத்தப்படுகிறதை இயேசு உணர்ந்தார்

வருத்தப்பட (toiling) βασανίζω basanizoo 928

வினைச்சொல் - வேதனைப்படு, அலைவுபடு, வருத்தப்படு, வாதிக்கப்படு, வேதனையடை (torment) (மத் 8:6,28 மாற்கு 5:7; லூக்கா 8:28; வெளி 9:5, வெளி 11:10; வெளி 14:10, வெளி 20:10

6 அதிகாரம்

"நாலாம் ஜாமம்" - அதிகாலை 3.00 மணியிலிருந்து 6.00 மணிவரையிலும் - மத் 14:25.

"கடலின்மேல் நடந்தார்" - பரிசுத்த ஆவியானவரின் பூரண அபிஷேகத்தினால இயேசு கிறிஸ்து இயற்கையின்மீதுள்ள தமது வல்லமையை மறுபடியுமாக நிரூபிக்கிறார் யோவான் 3.34; ஏசா 11.2; ஏசா 61.1 அப 10.38 தமமிடத்தில எந்த வல்லமையும் இல்லையென்றும். தமமிடத்திலுள்ள பரிசுத்த ஆவியானவரே அறபுதங்களைச் செயவதாகவும் இயேசு கிறிஸது வலியுறுததுகிறார் (யோவான் 8.28) இதே வலலமையினால பேதுருவும தணணீரின்மீது நடந்தான் (மத் 14.29) பேதுரு தணணீர்மீது நடந்ததினால அவன தேவனாகி விடவிலலை. பரிசுதத ஆவியானவரின அபிஷேக வலலமையினாலேயே பேதுருவால தணணீர்மீது நடககமுடிநதது. பரிசுதத ஆவியானவரின அபிஷேகததையும அவருடைய வலலமையையும், இயேசு கிறிஸது எலலா விசுவாசிகளுககும் வாககுப பணணியிருக்கிறார இதே வலலமை நமக்கும் கொடுக்கபபடும். (யோவான் 14.12, மத் 17.20; மத் 21.22; மாறகு 9.23, மாற்கு 11.22-24

"அவாகளைக் கடநது போகிறவரபோல காணபபடடார" படகு செலலும் வேகத்தைவிட இயேசு கிறிஸது தணணீர்ீனமீது வேகமாக நடநதுசென்றார

"அவாகளெலலாரும் அவரைக் கணடு கலக்கமடைந்தாாகள" - பனனிரெணடு சீஷாகளும் ஒருவேளை அதறகு மேறபட்டவாகளும் இநத அற்புதத்தைக் கணடு பயநதாாகள முதனமுறையாக தணணீரீனமீது ஒருவா நடபபதை அபபோதுதான தங்கள கணகளால காணகிறாாகள்

கடினமாயிரு (hardened) πωρόω poorooo 4456

வினைச்சொல் - கடினமாயிரு, கடினமாக்கு (petrify, to grow hard, callous, blind, become dull or lose the power of understanding) (மாற்கு 6.52 மாற்கு 8.17; யோவான் 12.40 ரோமர் 11.7; 2கொரி 3.14) இயேசு கிறிஸ்து தணணீரின்மீது நடந்த காட்சியைக் கண்டதினால் அவர்கள் பிரமித்து இருந்தார்கள் அவர்களால் எதையும் உணரமுடியவில்லை.

42. கெனேசரேத்து நாட்டில் வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்குகிறார் - (மத் 14.34)

மாறகு 6.53 அவர்கள் கடலைக் கடந்து கெனேசரேத்தென்னும் நாட்டிறகு வந்து கரை பிடித்தார்கள

மாறகு 6.54 அவர்கள படவிலிருந்து இறங்கினவுடனே, ஜனங்கள் அவரை அறிநது

மாறகு 6.55 அநதச் சுறறுபபுறமெங்கும் ஓடித்திரிநது பிணியாளிகளைப படுககைகளில கிடத்தி, அவர் வநதிருககிறாரெனறு கேளவிபபட்ட இடஙகளிலெலலாம சுமநது கொணடு வநதாாகள

மாறகு 6.56 அவாாமலும் அவா பிரவேசிதத கிராமஙகள் பட்டணஙகள் நாடுகள் எவைகளோ, அவைகளின சநதைவெளிகளிலே வியாதிக்காரரை வைதது அவருடைய வஸ்திரத்தின ஓரத்தையாகிலும் அவாகள் தொடும்படி உத்தரவாகவேணடும் எனறு அவரை வேணடிக்கொணடாாகள், அவரைத் தொட்ட யாவரும் சொஸ்தமானாாகள்

"கெனேசரேத்" - (மத் 14.34

"அவருடைய வஸ்திரத்தின ஓரத்தையாகிலும் அவர்கள் தொடும்படி உத்தரவாகவேணடும் என்று அவரை வேணடிக்கொணடாாகள் அவரைத் தொடட யாவரும் சொஸ்தமானார்கள்" - (மத் 8.3, மத் 9.20, மத் 13.58)

7 அதிகாரம்

43. வேதபாரகரையும் பரிசேயரையும் இயேசு கடிந்துகொள்கிறார் - மத் 15:1.

மாற்கு 7:1 எருசலேமிலிருந்து வந்த பரிசேயரும், வேதபாரகரில் சிலரும் அவரிடத்தில் கூடிவந்தார்கள்

மாற்கு 7:2 அப்பொழுது அவருடைய சீஷரில் சிலர் கழுவாத அசுத்த கைகளாலே போஜனம் பண்ணுகிறதை அவர்கள் கண்டு குற்றம்பிடித்தார்கள்

மாற்கு 7:3 ஏனெனில் பரிசேயர் முதலிய யூதர் அனைவரும் முன்னோர்களின் பாரம்பரியத்தைக் கைக்கொண்டு, அடிக்கடி கைகழுவினாலொழியச் சாப்பிட மாட்டார்கள்

மாற்கு 7:4 கடையிலிருந்து வரும்போதும் ஸ்நானம்பண்ணாமல் சாப்பிடமாட்டார்கள் அப்படியே செம்புகளையும் கிண்ணங்களையும் செப்புக்குடங்களையும் மணைகளையும் கழுவுகிறதுமல்லாமல், வேறு அநேக ஆசாரங்களையும் கைக்கொண்டு வருவார்கள்

மாற்கு 7:5 அப்பொழுது அந்தப் பரிசேயரும் வேதபாரகரும் அவரை நோக்கி: உம்முடைய சீஷர்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தை மீறி ஏன் கை கழுவாமல் சாப்பிடுகிறார்கள் என்று கேட்டார்கள்

மாற்கு 7:6 அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: இந்த ஜனங்கள் தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள் அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது என்றும்

மாற்கு 7:7 மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்றும் எழுதியிருக்கிற பிரகாரம் மாயக்காரராகிய உங்களைக்குறித்து ஏசாயா நன்றாய்த் தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறான்

மாற்கு 7:8 நீங்கள் தேவனுடைய கட்டளையைத் தள்ளிவிட்டு, மனுஷருடைய பாரம்பரியத்தைக் கைக்கொண்டு வருகிறவர்களாய், கிண்ணங்களையும் செம்புகளையும் கழுவுகிறீர்கள்; மற்றும் இப்படிப்பட்ட அநேக சடங்குகளையும் அநுசரித்து வருகிறீர்கள் என்றார்

மாற்கு 7:9 பின்னும் அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உங்கள் பாரம்பரியத்தைக் கைக்கொள்ளும்படிக்கு தேவனுடைய கட்டளைகளை வியர்த்தமாக்கினது நன்றாயிருக்கிறது

மாற்கு 7:10 எப்படியெனில், உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்றும் தகப்பனையாவது தாயையாவது நிந்திக்கிறவன் கொல்லப்படவேண்டும் என்றும் மோசே சொல்லியிருக்கிறாரே

மாற்கு 7:11 நீங்களோ, ஒருவன் தன் தகப்பனையாவது தாயையாவது நோக்கி: உனக்கு நான் செய்யத்தக்க உதவி எது உண்டோ, அதைக் கொர்பான் என்னும் காணிக்கையாகக் கொடுக்கிறேன் என்று சொல்லிவிட்டால் அவனுடைய கடமை தீர்ந்தது என்று சொல்லி.

மாற்கு 7:12 அவனை இனி தன் தகப்பனுக்காவது தன் தாய்க்காவது யாதொரு உதவியும் செய்ய ஒட்டாமல்

மாற்கு 7:13 நீங்கள் போதித்த உங்கள் பாரம்பரியத்தினாலே வேத வசனத்தை அவமாக்குகிறீர்கள் இதுபோலவே நீங்கள் மற்றும் அநேக காரியங்களையும் செய்கிறீர்கள் என்று சொன்னார்

"சீஷரில் சிலர் கழுவாத அசுத்த கைகளாலே போஜனம் பண்ணுகிறார்கள்" இது மனுஷனைத் தீட்டுப்படுத்தும் பாவமல்ல. ஆனால் இவர்களைக் குற்றப்படுத்தும் மாயக்காரரின் பாவங்கள் மனுஷனைத் தீட்டுப்படுத்தும். (மாற்கு 7:15-23, ரோமர் 1:29-32; கலா 5:19-21)

7 அதிகாரம்

"அவர்கள் கண்டு குற்றம்பிடித்தார்கள்" - மாயமாலக்காரர்கள் எதையாவது குற்றம் சொல்ல வேண்டுமென்பதற்காக வெளிப்புறமான காரியங்களை ஆராய்ந்து பார்ப்பார்கள் உள்ளான பரிசுத்தத்தை அவர்களால் காணமுடியாது. (2கொரி 5:17-18; எபி 12:14)

கழுவு (wash) - νίπτω - niptoo - 3538

வினைச்சொல் - கழுவு

தண்ணீரினால் யூதர்கள் அடிக்கடி தங்கள் கைகளைக் கழுவுவார்கள் இது அவர்களுடைய பாரம்பரியம். தேவனுடைய கட்டளை அல்ல. கைகளைக் கழுவுவதற்குப் போதுமான அளவு தண்ணீர் வேண்டும் தண்ணீருக்குள் கைகளை முக்கிக் கழுவுவார்கள் சிப்தா (Shibta) என்னும் மாயப்பிசாசு தங்களுடைய கரங்களில் இரவு வேளையில் தங்கும் என்பது யூதருடைய நம்பிக்கை. அதற்காகத் தங்கள் கைகளை அடிக்கடி கழுவி, பிசாசின் கிரியைகளிலிருந்து தங்களைச் சுத்தப்படுத்திக் கொள்வார்கள் அடிக்கடி கை கழுவாத யூதனை அவர்கள் இரட்சிக்கப்பட்டவராகவோ நீதிமானாகவோ மதிப்பதில்லை

ஸ்நானம்பண்ணுதல் (wash) βαπτίζω - baptizoo - 907

வினைச்சொல் - முழுகு, கழுவு ஞானஸ்நானம் பெறு, ஞானஸ்நானம் கொடு, ஸ்நானம் பண்ணு கைகழுவு தண்ணீரில் மாக்கச்சடங்குகளின் பிரகாரமாகச் சுத்தம்பண்ணுதல் எபி 9:10.

"வேறு அநேக ஆசாரங்களையும் கைக்கொண்டுவருவார்கள்" நாம் எந்த ஆசாரத்தையும் கடைப்பிடிக்க வேண்டுமென்று இயேசு கிறிஸ்து உபதேசம் பண்ணவில்லை காத்திரத்தில் நொறுங்கிய இருதயத்தோடு வருகிறவர்களை அவர் அன்போடு ஏற்றுக் கொள்கிறார் பரிசேயர்கள் பலவிதமான பாரம்பரியங்களையும், ஆசாரங்களையும் கைக்கொண்டு வந்தார்கள். (மாற்கு 7:2-9 மத் 15:1-3, மத் 16:12; மத் 23:1-33)

வேதாகமத்தில் சில காரியங்கள் பாவம் என்று தெளிவாக அறிவுறுத்தப்பட்டிருக்கும் வேறு சில காரியங்களைக் குறித்து, வேதவசனம் அதைப் பாவம் என்று வலியுறுத்தாது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நாம் தேவனுக்கு நமது மனச்சாட்சியின் பிரகாரம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் (ரோமர் 14:1-23; ரோமர் 15:1-3 1கொரி 8) நமது ஆத்துமாவை அழிக்கும் பாவங்கள் வேத வசனங்களில் அட்டவணையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது (மாற்கு 7:19-21; ரோமர் 1. 29-32 1கொரி 6:9-11; கலா 5:19-21 கொலோ 3:5-10)

நமது சரீரம் தேவனுடைய ஆலயம் இதை அசுத்தப்படுத்தக்கூடாது இயேசுகிறிஸ்துவின் மூலமாக நமது ஆத்துமாவை அழிக்கும் பாவங்களிலிருந்து விலகி, ஜெயஜீவியம் ஜீவிக்க வேண்டும். (2கொரி 3:16-17)

மணை (tables) - κλινάριον - klinarion - 2825

பால வேறுபாடற்ற பெயர்ச்சொல் - படுக்கை, கட்டில், மணை - யூதர்கள் சாய்ந்து அமரும் இருக்கைகள் அல்லது படுக்கைகள் (மத் 9:2,6 மாற்கு 4:21; மாற்கு 7:4,30 லூக்கா 5:18; லூக்கா 8:16, லூக்கா 17:34, அப் 5:15, வெளி 2:22) யூத மார்க்கத்தின் பழக்கவழக்கங்களை மாற்கு புற ஜாதியாருக்குத் தெளிவாகக் கூறுகிறார் (மாற்கு 7:2-9) ஆனால் மத்தேயுவோ யூதருக்கு சுவிசேஷம் எழுதியதினால் யூதருடைய பழக்கங்கள் அவர்களுக்கு ஏற்கெனவே தெரியும் என்பதினால் அவற்றைத் தெளிவாக விவரிக்கவில்லை (மத் 15:10 20)

மாற்கு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 4

"இந்த ஜனங்கள் தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள் அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது" (மாற்கு 7:6, ஏசா 29:13)

7 அதிகாரம்

"கொர்பான்" (Corban) - வாயினால் அறிக்கையிடும் காணிக்கை. என்னிடத்திலுள்ள பொருட்களை எல்லாம் தேவனுக்கு அர்ப்பணித்து விட்டேன் ஆகையினால் என்னுடைய பெற்றோரைப் பராமரிப்பதற்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை அவர்களுக்கு என்னால் ஒரு உதவியும் செய்ய முடியாது என்று கூறுதல் மத் 15:5

"மோசே சொல்லியிருக்கிறாரே" இயேசு கிறிஸ்து மோசேயின் வார்த்தைகளைத் தேவனுடைய வார்த்தை என்று அங்கீகரித்திருக்கிறார் (மாற்கு 7:10-13)

பரிசேயர் செய்யும் அநேக காரியங்கள் (மத் 23)

1 பலமுறை கைகளைக் கழுவுதல் (மாற்கு 7:2-5)

2 குற்றம் கண்டுபிடித்தல் (மாற்கு 7:2)

3 தேவனுடைய வார்த்தைக்குப் பதிலாக மனுஷருடைய பழக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தல் (மாற்கு 7:3)

4 மாரக்கச்சடங்குகளின் பிரகாரம் சரீரத்தைக் கழுவுதல் (மாற்கு 7:4)

5 கிண்ணங்களையும், செம்புகளையும் செப்புக் குடங்களையும் மணைகளையும் கழுவுதல் (மாற்கு 7:4,8)

6 தங்களுடைய மார்க்கச்சடங்குகளை மற்றவர்களும் கடைபிடிக்க வேண்டுமென்று வலியுறுத்துதல் (மாற்கு 7:5)

7 வெளிப்புறமான சுத்தத்தை வலியுறுத்தி, உள்ளான சுத்தத்தைக் கவனிக்காமல் இருத்தல் (மாற்கு 7:5,14-20)

8 தேவனை உதடுகளால் கனப்படுத்தி, இருதயத்தால் கனப்படுத்தாமல் இருத்தல். (மாற்கு 7:6)

9 வீணான ஆராதனையைச் செய்தல் (மாற்கு 7:7)

10 தேவனுடைய பிரமாணங்களை அங்கீகரிக்காமல் தள்ளிவைத்தல் (மாற்கு 7:8-9)

11 தேவனுடைய உபதேசங்களுக்குப் பதிலாக மனுஷருடைய மார்க்கத்தைக் கடைபிடித்தல். (மாற்கு 7:9)

12 மோசேயைப் பின்பற்றுவதாகக் கூறிவிட்டு, அவருடைய உபதேசங்களுக்குக் கீழ்ப்படியாமல் இருத்தல். (மாற்கு 7:10-13)

13 பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமையை ஒருவன் செய்ய வேண்டியதில்லையென்று தங்களுடைய மார்க்கத்தின் பிரகாரமாக அவனை விடுவித்தல். (மாற்கு 7:11-12)

14 சொந்த ஆதாயத்திற்காக மார்க்கத்தைப் பயன்படுத்துதல் (மாற்கு 7:11-12)

44. மனுஷனைத் தீட்டுப்படுத்தும் காரியம் - பாவங்கள் ஆத்துமாவை அழிக்கும் - (மத் 15:10; கலா 5:19)

மாற்கு 7:14 பின்பு அவர் ஜனங்களெல்லாரையும் வரவழைத்து அவர்களை நோக்கி: நீங்கள் எல்லாரும் எனக்குச் செவிகொடுத்து உணருங்கள்

மாற்கு 7:15 மனுஷனுக்குப் புறம்பே இருந்து அவனுக்குள்ளே போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்தமாட்டாது; அவன் உள்ளத்திலிருந்து புறப்படுகிறவைகளே அவனைத் தீட்டுப்படுத்தும்.

மாற்கு 7:16 கேட்கிறதற்கு ஒருவன் காதுள்ளவனாயிருந்தால் கேட்கக்கடவன் என்றார்

மாற்கு - தொகுப்புரை

7 அதிகாரம்

மாற்கு 7:17 அவர் ஜனங்களைவிட்டு வீட்டுக்குள் பிரவேசித்தபோது அவருடைய சீஷர்கள் அவர் சொன்ன உவமையைக்குறித்து அவரிடத்தில் விசாரித்தார்கள்

மாற்கு 7:18 அதற்கு அவர்: நீங்களும் இவ்வளவு உணர்வில்லாதவர்களா? புறம்பேயிருந்து மனுஷனுக்குள்ளே போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்தமாட்டாதென்று நீங்கள் அறிந்துகொள்ளவில்லையா?

மாற்கு 7:19 அது அவன் இருதயத்தில் போகாமல் வயிற்றிலே போகிறது; அதிலிருந்து எல்லாப் போஜனங்களின் அசுத்தங்களையும் கழிக்கிற ஆசனவழியாய் நீங்கிப்போகும்.

மாற்கு 7:20 மனுஷனுக்குள்ளே இருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்.

மாற்கு 7:21 எப்படியெனில், மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலை பாதகங்களும்,

மாற்கு 7:22 களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டுவரும்.

மாற்கு 7:23 பொல்லாங்கானவைகளாகிய இவைகளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்றார்.

உவமை எண் - 7

"மனுஷனுக்குப் புறம்பே இருந்து அவனுக்குள்ளே போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்தமாட்டாது; அவன் உள்ளத்திலிருந்து புறப்படுகிறவைகளே அவனைத் தீட்டுப்படுத்தும்" - மாற்கு கூறியிருக்கிற ஏழாவது உவமை (மாற்கு 7:15) போஜனபதார்த்தம் மனுஷனைத் தீட்டுப்படுத்தாது. இயேசு கிறிஸ்து மனுஷனுடைய சரீரத்தை அழிக்கும் போதைப் பொருட்களையோ, மதுபானங்களையோ, விஷப்பொருட்களையோ இங்கு குறிப்பிடவில்லை. சாதாரணமாக சரீரத்திற்கு போஜனமாக புசிக்கப்படும் போஜன பதார்த்தங்களைப் பற்றி இயேசு கிறிஸ்து இங்கு குறிப்பிடுகிறார் (மாற்கு 7:19; 2கொரி 7:1)

"கேட்கிறதற்கு ஒருவன் காதுள்ளவனாயிருந்தால் கேட்கக்கடவன்" - (மத் 11:15)

"புறம்பேயிருந்து மனுஷனுக்குள்ளே போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்த மாட்டாது" - மனுஷனுடைய வயிறுக்குள் போகும் போஜனபதார்த்தம் அவனைத் தீட்டுப்படுத்தாது. (மாற்கு 7:1) இங்கு போஜனமும் இருதயத்தின் பாவங்களும் ஒப்பிடப்பட்டிருக்கிறது. (மாற்கு 7:14-21)

ஆசனவழி (draught) - ἀφεδρών - aphedroon - 856

ஆண்பால் பெயர்ச்சொல் - ஆசனவழி (place for bodily waste, sewer) (மத் 15:17)

"மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும் விபசாரங்களும் வேசித்தனங்களும் கொலை பாதகங்களும்" - இருதயமே பாவத்திற்கும் நீதிக்கும் ஆதாரம். இருதயம் பொல்லாததாய் இருந்தால் அவனுடைய சிந்தனையும் பொல்லாததாய் இருக்கும். இருதயம் சுத்தமானதாக இருந்தால் அவனுடைய ஜீவியமும் சுத்தமானதாக இருக்கும். அவன் நல்ல கனிகளைக் கொடுப்பான் (மத் 7:15-20)

7 அதிகாரம்

ஆத்துமாவை அழிக்கும் பாவங்கள்

1 பொல்லாத சிந்தனைகள் 2கொரி 10:4, மத் 15:18)

2 விபசாரங்கள் (மத் 5:32)

3 வேசித்தனங்கள் (மத் 5:32)

4 கொலைபாதகங்கள்

5 களவுகள் (யாத் 20:15)

6 பொருளாசைகள் (லூக்கா 12:15)

7 துஷ்டத்தனங்கள் (சங் 1:4; சங் 35:26, சங் 36:4; சங் 50:16

8 கபடு (சங் 119:118

9 காமவிகாரம் (கலா 5:19)

10 வன்கண் (நீதி 23:6-7; நீதி 27:20 பிர 1:8; மத் 6:22-23 1யோவான் 2:16

11 தூஷணம் (யாத் 20:7)

12 பெருமை (சங் 101:5)

13 மதிகேடு (சங் 14:1, மாற்கு 7:21 2கொரி 11:1, 2கொரி 11:17,21)

மதிகேடு (Foolishness)

ἀφροσύνη - aphrosynee 877

பெண்பால் பெயர்ச்சொல் - மதிகேடு, புத்தியீனம் (folly, senselessness, foolishly, foolishness, recklessness [illegible] thoughtlessness)

பொல்லாத சிந்தனைகளுக்கு எடுத்துக்காட்டுகள்

1 பொதுவான துன்மார்க்கம் (ஆதி 6:5 சங் 64:5-6; ஏசா 59:7; ஏசா 65:2

2 பொறாமை (ஆதி 50:20

3 பொறுப்பைத் தட்டிக்கழித்தல் (உபா 15:9

4 பொய்ச்சாட்சி (உபா 19:15-21)

5 உண்மையில்லாத தீர்மானம் (நியா 18:2

6 கொலை (நியா 20:5)

7 நியாயந்தீர்த்தல (1சாமு 1:13)

8 கொலைபண்ண சதியாலோசனை (1சாமு 18:25; நெகே 6:2; எஸ் 3:6

9 பேராசை (2நாளா 32:1; எசே 38:10-12; லூக்கா 12:15-21

10 பெருமை (எஸ் 6:6; சங் 10:4

11 பொல்லாத சிந்தனை (யோபு 21:27, 2கொரி 10:4-7)

12 தவறான பாதுகாப்பு (சங் 49:11

13 மாயை (சங் 94:11; சங் 119:113 எரே 4:14)

14 மதிகேடு (நீதி 24:9

15. ஆட்சியாளர்களைச் சபித்தல (பிர 10:20)

16 கவலைப்படுதல (மத் 6:25-34 லூக்கா 12:11-26)

17 தவறாகக் குற்றம் சுமத்துதல் (மத் 9:3-4; மத் 12:24-25, லூக்கா 5:21-23; லூக்கா 7:37

18 வெளிப்படையான மார்க்கச் சடங்குகளில் பெருமை (மத் 15:1-20, மாற்கு 7:1-22; லூக்கா 6:7-8

19 தன்னைத்தானே உயர்த்துதல் (லூக்கா 9:46-48)

7 அதிகாரம்

20 சொந்த ஆதாயத்திற்காக தேவனுடைய பெறவிரும்புதல் (அப 8:18-24)

21 ஞானமில்லாத மார்க்க வைராக்கியம் அப 26:9-18

22 மனுஷ ஞானத்திறகாக பெருமைபடுதல் (1கொரி 3:18-21)

23 பட்சபாதம் (யாக் 2:1-4)

24 அவிசுவாசம் (லூக்கா 24:38)

வன்கண்ணுக்குக் காரணங்கள்

1 இருதயத்தின் கடினம் (உபா 15:9)

2 விரக்தி (உபா 28:54-57)

3 துன்மார்க்கம் (யோபு 24:15, 2பேதுரு 2:14, ஏசா 3:16; எசே 6:9)

4 பேராசை (நீதி 28:22)

5 இருள் (மத் 6:22-23; லூக்கா 11:34 யோவான் 12:40, அப 26:18)

6 திருப்தியின்மையும், முறுமுறுப்பும் (மத் 20:15

7 இச்சைகள் (1யோவான் 2:16)

8 கலக குணம் (மத் 13:15)

45. சீரோபெனிக்கேயா ஸ்திரீயின் மகளை இயேசு குணப்படுத்துகிறார் – (மத் 8:17; 15:21, மாற்கு 16:17-18; 1பேதுரு 2:24, யாக் 5:14

மாற்கு 7:24 பின்பு, அவர் எழுந்து அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, தீரு சீதோன் பட்டணங்களின் எல்லைகளில் போய், ஒரு வீட்டுக்குள் பிரவேசித்து, ஒருவரும் அதை அறியாதிருக்க விரும்பியும், அவர் மறைவாயிருக்கக் கூடாமற்போயிற்று.

மாற்கு 7:25 அசுத்த ஆவி பிடித்திருந்த ஒரு சிறு பெண்ணின் தாயாகிய ஒரு ஸ்திரீ அவரைக்குறித்துக் கேள்விப்பட்டு, வந்து அவர் பாதத்தில் விழுந்தாள்

மாற்கு 7:26 அந்த ஸ்திரீ சீரோபேனிக்கியா தேசத்தாளாகிய கிரேக்க ஸ்திரீயாயிருந்தாள்; அவள் தன் மகளைப் பிடித்திருந்த பிசாசைத் துரத்திவிடவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டாள்

மாற்கு 7:27 இயேசு அவளை நோக்கி, முந்திப் பிள்ளைகள் திருப்தியடையட்டும் பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நலலதலல என்றார்

மாற்கு 7:28 அதற்கு அவள் மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் மேஜையின் கீழிருக்கும் நாய்க்குட்டிகள் பிள்ளைகள் சிந்துகிற துணிக்கைகளைத் தின்னுமே என்றாள்

மாற்கு 7:29 அப்பொழுது, அவர், நீ சொன்ன அந்த வார்த்தையினிமித்தம் போகலாம், பிசாசு உன் மகளை விட்டு நீங்கிப்போயிற்று என்றார்

மாற்கு 7:30 அவள் தன் வீட்டுக்கு வந்த பொழுது பிசாசு போய்விட்டதையும், தன் மகள் கட்டில்லே படுத்திருக்கிறதையும் கண்டாள்

"ஒரு வீட்டுக்குள் பிரவேசித்து, ஒருவரும் அதை அறியாதிருக்க விரும்பியும் அவர் மறைவாயிருக்கக் கூடாமற்போயிற்று" இயேசு கிறிஸ்து விளம்பரப்பிரியா அல்ல. தம்மை விளம்பரப்படுத்த அவர் ஒருபோதும் முயற்சி செய்யவில்லை. தேவனுடைய ஊழியக் காரராகளாகிய நமக்கு அவருடைய சுபாவம் ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

"சிறுபெண்" – (மாற்கு 5:23

கிரேக்கம் (Greek) - Ἑλληνίς Helleenis 1674

7 அதிகாரம்

பெண்பால் பெயர்ச்சொல் - கிரேக்க ஸ்திரீ - யூதமார்க்கத்தார் அல்லாதவர்கள் அனைவரையுமே இந்தப் பெயரைச் சொல்லி அழைத்தார்கள் ரோமர் 1:16 ரோமர் 10:12 [redacted] 3:28 கொலோ 3:11

"சீரோபேனிக்கியா" - சீரியாவிலுள்ள பேனிக்கியா தேசம் ஆப்பிரிக்காவில் ஒரு பேனிக்கியா தேசம் உள்ளது. இதை வித்தியாசப்படுத்திக் காண்பிப்பதற்காக மாற்கு சீரோபேனிக்கியா தேசத்தாள் என்று எழுதுகிறார்

"முந்திப் பிள்ளைகள் திருப்தியடையட்டும். பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நலமல்ல" - மத் 15:23-24 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற கருத்து. புறஜாதியாரை இரட்சிப்பது தேவனுடைய திட்டம். என்றாலும் தமது இரட்சிப்பை முதன்முதலாக யூதருக்கே அறிமுகப்படுத்தினார். புறஜாதியாருக்கு ஊழியக்காரராக ஆகுமாறு யூதருக்கே முதலாவது வாய்ப்பைக் கொடுத்தார் (மத் 21:32; யோவான் 1:11, யோவான் 10:16, ரோமர் 1:16; ரோமர் 9, 2:9-11 எபே 3) இயேசு கிறிஸ்து அந்த ஸ்திரீயின் விசுவாசத்தையும் தீர்மானத்தையும் சோதிக்கிறார் அந்த ஸ்திரீ இந்தப் பரீட்சையில் வெற்றி பெறுகிறாள் (மத் 15:25-27)

"மேஜையின் கீழிருக்கும் நாய்க்குட்டிகள் பிள்ளைகள் சிந்துகிற துணிக்கைகளைத் தின்னுமே" மத் 15:27

"நீ சொன்ன அந்த வார்த்தையினிமித்தம் போகலாம். பிசாசு உன் மகளை விட்டு நீங்கிப்போயிற்று" - (மத் 15:28)

48. கொன்னை வாயுடைய செவிடனை சொஸ்தமாக்குகிறார் - (மத் 15:29)

மாற்கு 7:31 மறுபடியும், அவர் தீரு சீதோன் பட்டணங்களின் எல்லைகளை விட்டுப் புறப்பட்டு, தெக்கப்போலியின் எல்லைகளின் வழியாய்க் கலிலேயாக் கடலருகே வந்தார்

மாற்கு 7:32 அங்கே கொன்னை வாயுடைய ஒரு செவிடனை அவரிடத்தில் கொண்டுவந்து, அவர் தமது கையை அவன்மேல் வைக்கும்படி வேண்டிக் கொண்டார்கள்

மாற்கு 7:33 அப்பொழுது அவர் அவனை ஜனக்கூட்டத்தை விட்டுத்தனியே அழைத்துக் கொண்டுபோய், தம்முடைய விரல்களை அவன் காதுகளில் வைத்து, உமிழ்ந்து, அவனுடைய நாவைத் தொட்டு,

மாற்கு 7:34 வானத்தை அண்ணாந்து பார்த்து, பெருமூச்சுவிட்டு: எப்பத்தா என்றார்; அதற்குத் திறக்கப்படுவாயாக என்று அர்த்தமாம்

மாற்கு 7:35 உடனே அவனுடைய செவிகள் திறக்கப்பட்டு, அவனுடைய நாவின் கட்டும் அவிழ்ந்து, அவன் செவ்வையாய்ப் பேசினான்

மாற்கு 7:36 அதை ஒருவருக்கும் சொல்ல வேண்டாமென்று அவர்களுக்குக் கட்டளையிட்டார்; ஆகிலும் எவ்வளவு அதிகமாய் அவர்களுக்குக் கட்டளையிட்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர்கள் அதைப் பிரசித்தம் பண்ணி;

மாற்கு 7:37 எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தார்; செவிடர் கேட்கவும், ஊமையர் பேசவும் பண்ணுகிறார் என்று சொல்லி, மேன்மேலும் ஆச்சரியப்பட்டார்கள்

"தீரு சீதோன் பட்டணங்களின் எல்லைகள்" மத்தியதரைக்கடலின் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் தீரு, சீதோன் பட்டணங்கள் அமைந்துள்ளன தெக்கப்போலியின் எல்லைகள் (மாற்கு 5:20

"கொன்னைவாயுடைய ஒரு செவிடன்" - பிசாசின் கிரியையினால் இவன் செவிடனாக இருக்கிறான் (மாற்கு 9:25) தெளிவாகப் பேசமுடியவில்லை கொன்னிப்பேசுகிறான் (மாற்கு 7:35)

"அவர் தமது கையை அவன்மேல் வைக்கும்படி வேண்டிக்கொண்டார்கள்" - (மத் 8:3)

7 அதிகாரம்

கொன்னைவாயுடைய செவிடனுக்கு இயேசு கிறிஸ்து செய்த காரியங்கள்

1 அவர் அவனை ஜனக்கூட்டத்தை விட்டுத் தனியே அழைத்துக்கொண்டுபோனார்

2 தம்முடைய விரல்களை அவன் காதுகளில் வைத்தார்

3 துரையில் உமிழ்ந்தார்

4 அவனுடைய நாவைத் தொட்டார்

5 வானத்தை அண்ணாந்துபார்த்தார்

6 பெருமூச்சுவிட்டார் (ரோமர் 8:23; 2கொரி 5:2,4)

7 காதுகள் திறக்கப்படுவாயாக என்றார்

"எப்பத்தா" - அராமாயிக் மொழிச்சொல் திறக்கப்படுவாயாக என்பது இதன் பொருள்

கட்டு (string) - δεσμός - **desmos** - 1199

ஆங்கில வேர்ச்சொல் - கட்டு, விலங்கு (a band or chain) (லூக்கா 8:29; அப் 16:26; அப் 22:30) சாத்தானுடைய வல்லமையினால் கட்டப்படுதல் (லூக்கா 13:16)

"அதை ஒருவருக்கும் சொல்லவேண்டாமென்று அவர்களுக்குக் கட்டளையிட்டார்; அவர்கள் அதைப் பிரசித்தம் பண்ணினார்கள்" (மத் 8:4)

"எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தார்; செவிடர் கேட்கவும், ஊமையர் பேசவும் பண்ணுகிறார் என்று சொன்னார்கள்" - இயேசு கிறிஸ்துவைக் குறித்து ஜனங்கள் கூறிய உண்மையான சாட்சி. அவர் செய்யும் எல்லாக் காரியங்களையும் நன்றாக செய்தார். பூரணமாகச் செய்தார். வியாதியஸ்தரை அவர் அரைகுறையாகக் குணப்படுத்துவதில்லை. இயேசு கிறிஸ்து பரிபூரண சுகம் கொடுக்கிறவர் (மத் 15:58)

8 அதிகாரம்

47. நாலாயிரம் பேருக்கு இயேசு அற்புதமாக போஜனம் கொடுக்கிறார் - (மத் 15:32; 14:15)

மாற்கு 8:1 அந்த நாட்களிலே திரளான ஜனங்கள் கூடி வந்திருக்கையில், அவர்கள் சாப்பிடுகிறதற்கு ஒன்றுமில்லாதபோது, இயேசு தம்முடைய சீஷரை அழைத்து:

மாற்கு 8:2 ஜனங்களுக்காகப் பரிதபிக்கிறேன், இவர்கள் இப்பொழுது என்னிடத்தில் தங்கியிருந்த மூன்றுநாளாய்ச் சாப்பிட ஒன்றுமில்லாதிருக்கிறார்கள்.

மாற்கு 8:3 இவர்களில் சிலர் தூரத்திலிருந்து வந்தவர்களானபடியால், நான் இவர்களைப் பட்டினியாய் வீட்டிற்கு அனுப்பிவிட்டால் வழியில் சோர்ந்து போவார்களே என்றார்.

மாற்கு 8:4 அதற்கு அவருடைய சீஷர்கள்: இந்த வனாந்தரத்திலே ஒருவன் எங்கேயிருந்து அப்பங்களைக் கொண்டுவந்து இத்தனை பேர்களைத் திருப்தியாக்கக்கூடும் என்றார்கள்.

மாற்கு 8:5 அதற்கு அவர்: உங்களிடத்தில் எத்தனை அப்பங்கள் உண்டு என்று கேட்டார். அவர்கள்: ஏழு அப்பங்கள் உண்டு என்றார்கள்.

மாற்கு 8:6 அப்பொழுது அவர் ஜனங்களைத் தரையிலே பந்தியிருக்கக் கட்டளையிட்டு, அந்த ஏழு அப்பங்களையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, பிட்டு, அவர்களுக்குப் பரிமாறும்படி சீஷர்களிடத்தில் கொடுத்தார்; அவர்கள் ஜனங்களுக்குப் பரிமாறினார்கள்.

மாற்கு 8:7 சில சிறுமீன்களும் அவர்களிடத்தில் இருந்தது; அவர் அவைகளையும் ஆசீர்வதித்து, அவர்களுக்குப் பரிமாறும்படி சொன்னார்.

மாற்கு 8:8 அவர்கள் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள்; மீதியான துணிக்கைகளை ஏழுகூடை நிறைய எடுத்தார்கள்.

மாற்கு 8:9 சாப்பிட்டவர்கள் ஏறக்குறைய நாலாயிரம் பேராயிருந்தார்கள். பின்பு அவர் அவர்களை அனுப்பிவிட்டார்.

"ஜனங்களுக்காகப் பரிதபிக்கிறேன்" - (மத் 9:36) திரளான ஜனங்கள் புசிப்பதற்கு போஜனம் இல்லாமல் அங்கு கூடியிருக்கிறார்கள். அவ்வளவு பேருக்கும் போஜனம் கொடுக்க அங்கு அப்பங்களில்லை. ஒருசில அப்பங்கள் மட்டுமே இருந்தது. ஒருசில அப்பங்களை மட்டும் வைத்துக் கொண்டு எல்லோருக்கும் திருப்தியாகப் பரிமாறுவது இயலாத காரியம். மனுஷரால் இது கூடாதது. ஆனால் தேவனால் கூடாத காரியம் ஒன்றுமேயில்லை. இயேசு கிறிஸ்து எல்லோருக்கும் திருப்தியாக போஜனம் கொடுத்தார் (மத் 17:20; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 14:12)

"அந்த ஏழு அப்பங்களையும் எடுத்து ஸ்தோத்திரம்பண்ணினார்" ஒவ்வொரு முறை போஜனம் பண்ணும்போதும் தேவனுக்கு ஸ்தோத்திரம் பண்ணுவது யூதருடைய வழக்கம். (மத் 15:36; மாற்கு 6:41; யோவான் 6:11; 1கொரி 10:16)

"அப்பங்களைப் பிட்டார்" அப்பங்கள் ஒரு அங்குல கனமுள்ளதாக இருக்கும். இதைப் பங்குவைப்பதற்காக பிட்டுக் கொடுக்க வேண்டும். யூதருடைய அப்பங்கள் கடினமாக இருக்கும். யூதருடைய வழக்கத்தில் "அப்பம் பிட்குதல்" என்னும் வார்த்தைக்கு "போஜனம் பண்ணுதல்" என்று பொருள் (லூக்கா 24:35; அப் 2:42,46; அப் 26:26; அப் 27:35; 1கொரி 10:16)

கூடைகள் (baskets) - σπυρίς - spyris - 4711

மென்பால் மொழிச்சொல் - கூடை

8 அதிகாரம்

இந்தக் கூடைகள் அளவில் பெரியவை. ஒரு மனுஷனைக் கூட ஒரு கூடையில அடக்கி விடலாம். (அப் 9:25) இந்தக் கூடைகளைப் பற்றிய குறிப்பு இந்த வசனத்திலும், அத்துடன் மாற்கு 8:20 மத் 15:37 மத் 16:10 அப் 9:25 ஆகிய வசனங்களிலும் கூறப்பட்டிருக்கிறது. 4000 புருஷர்களும், ஏராளமான ஸ்திரீகளும குழந்தைகளும் திருப்தியாகப் புசித்தார்கள் (மாற்கு 8:9, 20, மத் 15:38) மீதியான அப்பங்களை ஏழு கூடை நிறைய எடுத்தார்கள் என்று வாசிக்கிறோம். கூடையின் அளவும் பெரியது. ஆகையினால ஒவ்வொரு கூடையிலும் ஏராளமான துணிக்கைகளைச் சேகரித்திருப்பார்கள். மாற்கு 8:19 ஆவது வசனத்தில கூறப்பட்டிருக்கிற கூடையும் இந்தக் கூடையும் வெவ்வேறானவை. அந்தக் கூடை அளவில சிறியது. இது அளவில பெரியது.

48. பரிசேயரை இயேசு மறுபடியும் கடிந்து கொள்கிறார் – (மத் 16:1, லூக் 12:54)

மாற்கு 8:10 உடனே அவர் தம்முடைய சீஷரோடே கூடப் படவில ஏறி தல்மனூத்தாவின எல்லைகளில வந்தார்

மாற்கு 8:11 அப்பொழுது பரிசேயர வந்து அவரோடே தர்க்கிக்கத் தொடங்கி, அவரைச சோதிக்கும்படி வானத்திலிருந்து ஒரு அடையாளத்தைக் காண்பிக்க வேண்டும் என்று கேட்டார்கள்

மாற்கு 8:12 அவர் தம்முடைய ஆவியில் பெருமூச்சுவிட்டு: இந்தச் சந்ததியார் அடையாளம் தேடுகிறதென்ன? இந்தச் சந்ததியாருக்கு ஒரு அடையாளமும் கொடுக்கப்படுவதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி,

மாற்கு 8:13 அவர்களை விட்டு மறுபடியும் படவில ஏறி, அக்கரைக்குப் போனார்

"தல்மனூத்தா" (Dalmanutha) - கலிலேயாக் கடலின் மேற்குக் கரையிலுள்ள பட்டணம். மத்தேயு இதை மகதலா Magdala, என்று குறிப்பிடுகிறார். ஆகையினால் இவ்விரண்டு பெயர்களும் ஒரே இடத்தைக் குறிக்கலாம். அல்லது இவ்விரண்டு இடங்களும் மிகவும் அருகாமையிலுள்ள இடங்களாக இருக்கலாம்.

"பரிசேயர் வந்து அவரோடே தர்க்கிக்கத் தொடங்கினார்கள்" - மாற்கு ஒரு நிகழ்ச்சியை எழுதும்போது அதற்கு அழகாக ஒரு முன்னுரையைக் கொடுப்பது வழக்கம். அதுபோன்ற முன்னுரையே இங்கு கூறப்பட்டிருக்கிறது. மாற்கு சுவிசேஷத்தில் காணப்படும் மற்ற நிகழ்ச்சிகளும், முன்னுரைகளும் (மாற்கு 1:45 மாற்கு 4:1 மாற்கு 5:17,20; மாற்கு 6:2,7,34,55 மாற்கு 8:11,31,32; மாற்கு 10:41,47 மாற்கு 11:15; மாற்கு 12:1; மாற்கு 13:5 மாற்கு 14:19,33, 65,69,71; மாற்கு 15:8,18

"வானத்திலிருந்து ஒரு அடையாளம்" - (மத் 12: 38-39; மத் 16:1-4; லூக்கா 11:16, 29-30; யோவான் 2:18, யோவான் 6:30

சோதனை மூன்று இடங்களிலிருந்து வரும். அவையாவன

1 சாத்தான் (மத் 4:3)

2 மனுஷர் (மாற்கு 8:11)

3. ஒருவனுடைய சொந்த ஆசைகள் (யாக் 1:13-15)

"இயேசு தம்முடைய ஆவியில பெருமூச்சு விட்டார்" மாற்கு 7:34 ரோமர் 8:23 2கொரி 5:2,4 ஆகிய வசனங்களில கூறப்பட்டிருக்கிற பிரகாரமாக ஆவியானவருக்குள "தவிப்பது" "பெருமூச்சுவிடுவது" என்று பொருள்படும். இயேசு கிறிஸ்து பல அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்தார் ஆனாலும், ஏராளமான ஜனங்கள் அவரை நம்பி, அவரை ஏற்றுக்கொண்டு அவரிடத்தில வரவில்லை. ஆகையினால், அவர்கள்மீது ஏற்பட்ட துக்கத்தினாலும் பரிதாபத்தினாலும் இயேசு கிறிஸ்து தமது ஆவியில தவித்து, பெருமூச்சு விடுகிறார்

8 அதிகாரம்

"இந்தச் சந்ததியார் அடையாளம் தேடுகிறதென்ன?" - மனுஷரோடு தொடர்புடைய தெய்வீக பிரச்சனையை இந்தக் கேள்வி எழுப்புகிறது. மனுஷர் தேவனிடத்தில் விசுவாசத்தோடு வரவேண்டும். தெய்வீகச் சித்தத்திற்கும் திட்டத்திற்கும் ஒப்புக்கொடுக்க வேண்டும். நமது திட்டத்தை ஏற்றுக் கொள்ளுமாறு ஆண்டவரிடம் வலியுறுத்தக்கூடாது.

"இந்தச் சந்ததியாருக்கு ஒரு அடையாளமும் கொடுக்கப்படுவதில்லை" - அவிசுவாசிகளுடைய ஆசைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்னும் அவசியம் இயேசு கிறிஸ்துவிற்கு இல்லை. ஏற்கெனவே அநேக அற்புதங்களை இயேசு கிறிஸ்து அவர்களுக்காகச் செய்திருக்கிறார். அப்போதெல்லாம் அவர்கள் இயேசுவை நம்பவில்லை. இனிமேல் அவர் அற்புதங்களைச் செய்தாலும், அவர்கள் நம்பப்போவதுமில்லை. தங்களுடைய சொந்த அறிவை அவர்களே தேடிக்கொண்டார்கள்.

49. பரிசேயர், சதுசேயர் ஆகியோரின் புளித்தமாவைப் பற்றிய விளக்கம் - (மத் 16:6)

மாற்கு 8:14 சீஷர்கள் அப்பங்களைக் கொண்டுவர மறந்துபோனார்கள். படவிலே அவர்களிடத்தில் ஒரு அப்பமாத்திரம் இருந்தது.

மாற்கு 8:15 அவர் அவர்களை நோக்கி: நீங்கள் பரிசேயருடைய புளித்தமாவைக் குறித்தும் ஏரோதின் புளித்தமாவைக் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் என்று கற்பித்தார்.

மாற்கு 8:16 அதற்கு அவர்கள்: நம்மிடத்தில் அப்பங்கள் இல்லாதபடியால் இப்படிச் சொல்லுகிறார் என்று தங்களுக்குள்ளே யோசனை பண்ணிக் கொண்டார்கள்.

மாற்கு 8:17 இயேசு அதை அறிந்து, அவர்களை நோக்கி: உங்களிடத்தில் அப்பங்கள் இல்லாதபடியினால் நீங்கள் யோசனை பண்ணுகிறதென்ன? இன்னும் சிந்தியாமலும் உணராமலும் இருக்கிறீர்களா? இன்னும் உங்கள் இருதயம் கடினமாயிருக்கிறதா?

மாற்கு 8:18 உங்களுக்குக் கண்களிருந்தும் காணாதிருக்கிறீர்களா? காதுகளிருந்தும் கேளாதிருக்கிறீர்களா? நினைவுகூராமலுமிருக்கிறீர்களா?

மாற்கு 8:19 நான் ஐந்து அப்பங்களை ஐயாயிரம் பேருக்குப் பங்கிட்டபோது, மீதியான துணிக்கைகளை எத்தனை கூடை நிறைய எடுத்தீர்கள் என்று கேட்டார். பன்னிரண்டு என்றார்கள்.

மாற்கு 8:20 நான் ஏழு அப்பங்களை நாலாயிரம் பேருக்குப் பங்கிட்டபோது, மீதியான துணிக்கைகளை எத்தனை கூடை நிறைய எடுத்தீர்கள் என்று கேட்டார். ஏழு என்றார்கள்.

மாற்கு 8:21 அப்படியானால், நீங்கள் உணராதிருக்கிறது எப்படி என்றார்.

எச்சரிக்கையாயிரு (beware) - βλέπω - **blepoo** - 991

விளைச்சொல் பார், பார்வையளி காண தரிசி, அறிந்திரு, எச்சரிக்கையாயிரு, நோக்கு, தரிசனங்காண (hold the mind towards, pay attention to; be cautious about) (மத் 11:29)

நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டிய காரியங்கள்

1. தேவனை மறப்பது (உபா 6:12, உபா 8:11)
2. தேவனுக்கு கோபம் மூட்டுவது (யாத் 23:21)
3. ஏழைகளை மறப்பது (உபா 15:9)
4. கள்ள உபதேசங்கள் (மத் 16:6-12; மாற்கு 8:15; லூக்கா 12:1)
5. கள்ளத்தீர்க்கதரிசிகள் (மத் 7:15; பிலி 3:2; 2கொரி 11:14-15)

8 அதிகாரம்

6. பேராசை (லூக்கா 12:15)

7. துன்மார்க்கர் (மத் 10:17)

8. வேதபாரகர் (மாற்கு 12:38 லூக்கா 20:46)

9. அடையாளங்கள் (அப் 13:40-41)

10. பின்மாற்றம் (2பேதுரு 3:17 கொலோ 2:8)

"பரிசேயருடைய புளித்தமாவைக்குறித்தும் ஏரோதின் புளித்தமாவைக்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்" - பரிசேயருடைய கள்ள உபதேசங்களைக் குறித்தும் ஏரோதின் கள்ள உபதேசங்களைக் குறித்தும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். (மத் 16:12)

"உங்களிடத்தில் அப்பங்கள் இல்லாதபடியினால் நீங்கள் யோசனை பண்ணுகிறதென்ன?" - இயேசு கிறிஸ்து ஒரு காரியத்தைப் பற்றிக்கூறும்போது சீஷர்கள் வேறொரு காரியத்தைப் பற்றி யோசனை பண்ணுகிறார்கள். இயேசு கிறிஸ்து கூறுவதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. இன்றைக்கும் அநேகர் சத்திய வசனங்களைப் புரிந்து கொள்வதில்லை.

சத்திய வசனங்களைப் புரிந்து கொள்ளாமல் இருப்பதற்குக் காரணங்கள்

1. சந்தேகம், அவிசுவாசம், அஞ்ஞானம் (மாற்கு 8:17)

2. சோம்பேறித்தனம், ஆர்வமின்மை (மாற்கு 8:17)

3. அறியாமை, வேதவாக்கியத்தை வாசிக்க வேண்டும் என்னும் அக்கறையின்மை (மாற்கு 8:17)

4. இருதயக்கடினம், (மாற்கு 8:17)

5. சத்தியத்தைக் காணக்கூடாதவாறு தங்கள் கண்களை வேண்டுமென்றே ஆவிக்குரிய காரியங்களுக்குக் குருடாக்குதல் (மாற்கு 8:18 மத் 13:14-15)

6. சத்தியத்தைக் கேட்கக்கூடாதவாறு தங்கள் காதுகளை வேண்டுமென்றே ஆவிக்குரிய காரியங்களுக்குச் செவிடாக்குதல் (மாற்கு 8:18)

7. சத்தியத்தை நினைவில் வைத்திருக்காதபடி வேண்டுமென்றே மறத்தல். (மாற்கு 8:18; மாற்கு 4:12)

இவையனைத்தும் மனுஷன் வேண்டுமென்றே தெரிந்து கொள்ளும் காரியங்கள். சீஷர்கள் இவர்களைப் போன்றவர்கள் அல்ல. சற்று நேரத்திற்கு முன்புதான் இயேசுவின் அற்புதத்தைக் கண்டார்கள். திரளான ஜனங்களுக்குப் போஜனம் கொடுக்கும்போது இவர்கள்தான் அதைப் பரிமாறினார்கள். இயேசு கிறிஸ்து பிசாசுகளைத் துரத்தும்போதும் வியாதிகளைச் சொஸ்தமாக்கும்போதும் சீஷர்கள் அவரோடுகூடவே இருந்தார்கள். ஆகையினால் இவர்களுக்கு மற்றவர்களைவிட விசேஷித்த விசுவாசமும் தெய்வீக ஞானமும் இருக்க வேண்டும். ஆனால் இவர்கள் சாதாரண மனுஷரைப்போன்றே இருக்கிறார்கள். ஆகையினால் இயேசு கிறிஸ்து இவர்களைப் பார்த்து "உங்களுக்குக் கண்களிருந்தும் காணாதிருக்கிறீர்களா? காதுகளிருந்தும் கேளாதிருக்கிறீர்களா? நினைவுகூராமலுமிருக்கிறீர்களா?" என்று கூறுகிறார்.

50. இயேசு குருடனை சொஸ்தப்படுத்துகிறார்

மாற்கு 8:22 பின்பு அவர் பெத்சாயிதா ஊருக்கு வந்தார். அப்பொழுது ஒரு குருடனை அவரிடத்தில் கொண்டுவந்து, அவனைத் தொடும்படி அவரை வேண்டிக்கொண்டார்கள்.

மாற்கு 8:23 அவர் குருடனுடைய கையைப் பிடித்து, அவனைக் கிராமத்துக்கு வெளியே அழைத்துக் கொண்டுபோய், அவன் கண்களில் உமிழ்ந்து, அவன்மேல் கைகளை வைத்து, எதையாகிலும் காண்கிறாயா என்று கேட்டார்.

மாற்கு 8:24 அவன் ஏறிட்டுப் பார்த்து, நடக்கிற மனுஷரை மரங்களைப்போலக் காண்கிறேன் என்றான்.

8 அதிகாரம்

மாற்கு 8:25 பின்பு அவர் மறுபடியும் அவன் கண்களின்மேல் கைகளை வைத்து, அவனை ஏறிட்டுப் பார்க்கும்படி செய்தார்; அப்பொழுது அவன் சொஸ்தமடைந்து, யாவரையும் தெளிவாய்க் கண்டான்.

மாற்கு 8:26 பின்பு அவர் அவனை நோக்கி: நீ கிராமத்தில் பிரவேசியாமலும், கிராமத்தில் இதை ஒருவருக்கும் சொல்லாமலும் இரு என்று சொல்லி, அவனை வீட்டிற்கு அனுப்பிவிட்டார்.

"பெத்சாயிதா" (Bethsaida) - இயேசு கிறிஸ்து ஏற்கெனவே இந்தப் பட்டணத்தைச் சபித்திருந்தார் ஆகையினால் இங்கு இன்னொரு அற்புதத்தைச் செய்ய அவருக்கு விருப்பம் இல்லை ஆகையினால் அவர் குருடனுடைய கையைப் பிடித்து அவனைக் கிராமத்துக்கு வெளியே அழைத்துக் கொண்டுபோனார் ஊருக்கு வெளியே அவனைச் சொஸ்தமாக்கினார் (மாற்கு 8:23; மத் 11:21)

"அவர் மறுபடியும் அவன் கண்களின்மேல் கைகளை வைத்தார்" இந்த வாக்கியத்தைப் பலவிதமாக வியாக்கியானம் பண்ணுகிறார்கள் இயேசு கிறிஸ்துவிற்கு வல்லமையில்லை ஆகையினால் முதல் தடவை அவன்மீது கைகளை வைத்தபோது அந்தக் குருடன் பார்வை அடையவில்லை என்று கூறுகிறார்கள் இப்படிப்பட்ட வியாக்கியானங்கள் தவறானவை இயேசு கிறிஸ்து யாரையும் தவணைமுறையில் குணப்படுத்துவதில்லை அவர் ஒரு வார்த்தை சொன்னாலே போதுமானது. வியாதி சொஸ்தமாகும் பிசாசுகள் ஓடிப்போகும்

"நீ கிராமத்தில் பிரவேசியாமலும் கிராமத்தில் இதை ஒருவருக்கும் சொல்லாமலும் இரு என்று சொல்லி, அவனை வீட்டிற்கு அனுப்பிவிட்டார்" தேவனுடைய அற்புதம் பெத்சாயிதா கிராமத்திற்கு மறுபடியும் அறிவிக்கப்பட வேண்டியதில்லை என்பதில் இயேசு உறுதியாக இருந்தார் ஆகையினால் அந்தக் கிராமத்தில் இந்த அற்புதத்தைக் குறித்து ஒருவருக்கும் சொல்லவேண்டாமென்று இயேசு கட்டளையிட்டார் (மத் 11:21)

51. பேதுருவின் அறிக்கை - (மத் 16:13, லூக் 9:18; யோவான் 6:67)

மாற்கு 8:27 பின்பு, இயேசுவும் அவருடைய சீஷர்களும் புறப்பட்டு, பிலிப்புச் செசரியா பட்டணத்தைச் சேர்ந்த கிராமங்களுக்குப் போனார்கள் வழியிலே அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: ஜனங்கள் என்னை யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார்

மாற்கு 8:28 அதற்கு அவர்கள்: சிலர் உம்மை யோவான்ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும், வேறு சிலர் தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள்

மாற்கு 8:29 அப்பொழுது அவர்: நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார் பேதுரு பிரதியுத்தரமாக: நீர் கிறிஸ்து என்றான்

மாற்கு 8:30 அப்பொழுது தம்மைக் குறித்து ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு அவர்களுக்கு உறுதியாய்க் கட்டளையிட்டார்

"பிலிப்புச் செசரியா" (Caesarea Philippi) (மத் 16:13)

"ஜனங்கள் என்னை யார் என்று சொல்லுகிறார்கள்" இந்தக் கேள்வியோடு இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் பகுதி ஊழியம் நிறைவேறு பெறுகிறது இதுவரையிலும் இயேசுகிறிஸ்து தமது தெய்வத்துவத்தை ஜனங்களுக்கு வெளிப்படுத்தி, அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் உறுதிப்படுத்தி வந்தார் இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தில் இதற்கு அடுத்து வரும் பகுதி அவருடைய பாடுகளின் பகுதியாகும். (மாற்கு 8:31)

"நீர் கிறிஸ்து" (Thou art the Christ) - (மத் 16:16) நாமும் இயேசு கிறிஸ்துவைப் பற்றிக்கூறும்போது இயேசுவைக் கிறிஸ்து என்று அறிக்கையிட வேண்டும்.

"தம்மைக் குறித்து ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு அவர்களுக்கு உறுதியாய்க் கட்டளையிட்டார்" - (மத் 8:4

8 அதிகாரம்

52. தமது மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (மத் 16.21; லூக் 9.22)

மாற்கு 8:31 அல்லாமலும் மனுஷகுமாரன் பல பாடுகள் பட்டு மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் ஆகாதவனென்று தள்ளப்பட்டு, கொலையுண்டு, மூன்று நாளைக்குப் பின்பு உயிர்த்தெழுந்திருக்க வேண்டியதென்று அவர்களுக்குப் போதிக்கத் தொடங்கினார்.

"அவர்களுக்குப் போதிக்கத் தொடங்கினார்" - இயேசு கிறிஸ்துவின் மூன்றாம் பகுதி ஊழியம் ஆரம்பமாகிறது. இந்த ஊழியப்பகுதியில் அவரை ஜனங்கள் ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணிக்கிறார்கள். இயேசு கிறிஸ்து பல பாடுகளை அனுபவிக்கிறார்.

தீர்க்கதரிசன எண் - 6

"மனுஷகுமாரன் பல பாடுகள் பட்டு, மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் ஆகாதவனென்று தள்ளப்பட்டு, கொலையுண்டு, மூன்று நாளைக்குப்பின்பு உயிர்த்தெழுந்திருக்க வேண்டியது" மாற்கு 8:31 இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (மத் 12:40)

53. இயேசுவும் பேதுருவும் ஒருவரையொருவர் கடிந்து கொள்கிறார்கள் (மத் 16.22)

மாற்கு 8:32 இந்த வார்த்தையை அவர் தாராளமாகச் சொன்னார். அப்பொழுது, பேதுரு அவரைத் தனியே அழைத்துக் கொண்டுபோய், அவரைக் கடிந்துகொள்ளத் தொடங்கினான்.

மாற்கு 8:33 அவர் திரும்பித் தம்முடைய சீஷரைப் பார்த்து, பேதுருவை நோக்கி: எனக்குப் பின்னாகப்போ சாத்தானே, நீ தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய் என்று சொல்லி, அவனைக் கடிந்துகொண்டார்.

"எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே" - (மத் 16.23)

54. சீஷத்துவத்திற்குச் சோதனை - ஆத்துமாவின் மதிப்பு - (மத் 8:18; 10:37; 16:24; லூக் 9:23)

மாற்கு 8:34 பின்பு அவர் ஜனங்களையும் தம்முடைய சீஷர்களையும் தம்மிடத்தில் அழைத்து: ஒருவன் என் பின்னே வரவிரும்பினால் அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்.

மாற்கு 8:35 தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான்; என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதை இரட்சித்துக் கொள்ளுவான்.

மாற்கு 8:36 மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?

மாற்கு 8:37 மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?

மாற்கு 8:38 ஆதலால் விபசாரமும் பாவமுமுள்ள இந்தச் சந்ததியில் என்னைக் குறித்தும் என் வார்த்தைகளைக் குறித்தும் எவன் வெட்கப்படுவானோ, அவனைக் குறித்து மனுஷகுமாரனும் தமது பிதாவின் மகிமைபொருந்தினவராய்ப் பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது வெட்கப்படுவார் என்றார்.

8 அதிகாரம்

"ஒருவன் என் பின்னே வரவிரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" - நாம் இயேசு கிறிஸ்துவை உண்மையாகவும் உத்தமமாகவும், மனத்தாழ்மையோடும் பின்பற்ற வேண்டும். நம்மை நாமே வெறுத்து நமது சிலுவையை எடுத்துக்கொண்டு இயேசு கிறிஸ்துவை பின்பற்ற வேண்டும். இதைத் தீர்மானம் பண்ண வேண்டியது நாம்தான். இயேசு கிறிஸ்துவின் உபதேசங்களுக்கு நாம் கீழ்படிந்து அவருக்குப் பின்செல்ல வேண்டும். (யோவான் 3:16; 1தீமோ 2:4; 2பேதுரு 3:9; வெளி 22:17)

"பின்பற்றக்கடவன்" - இந்த வாக்கியம் எத்தனை துன்பங்கள் வந்தாலும் இயேசுவைப் பின்பற்ற வேண்டும் என்னும் கட்டளையைக் குறிக்கிறது. மரணமே வந்தாலும் இயேசுவைப் பின்பற்ற வேண்டும். (மாற்கு 8:35) வசதிப்பட்டால் வசதியான நேரத்தில் இயேசுவைப் பின்பற்றிக்கொள்ளலாம் என்னும் பொருளை இந்த வாக்கியம் வெளிப்படுத்தவில்லை. (லூக்கா 9:62; எபி 10:38-39)

ஒருவர் மறுபடியும் பிறந்த பின்பு செய்ய வேண்டிய காரியங்கள்

1. இயேசு கிறிஸ்துவைத் தொடர்ந்து பின்பற்றுவதற்கு மனம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். (மாற்கு 8:34; யோவான் 7:17; யோவான் 12:26)

2. அனுதினமும் தன்னைத்தானே வெறுக்க வேண்டும். தன் சுயத்தைச் சார்ந்திருக்கக் கூடாது. தேவனுக்கு விரோதமான ஆசைகளைப் பற்றிக் கொண்டிருக்கக் கூடாது. (மாற்கு 8:34; ரோமர் 6:16-23; ரோமர் 8:1-13; கலா 5:19-24; கொலோ 3:1-10)

3. அனுதினமும் தன் சிலுவையை எடுத்துக் கொள்ள வேண்டும். (மாற்கு 8:34; லூக்கா 9:23; ரோமர் 6:1-13; ரோமர் 8:12-13; கொலோ 1:23; கொலோ 2:6-7; கொலோ 3:5-10)

4. எப்போதாவது இயேசுவைப் பின்பற்றலாம் என்றிருக்காமல் அனுதினமும் எப்போதும் இயேசுவைப் பின்பற்ற வேண்டும். (யோவான் 10:26-28)

"தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்" - தன்னுடைய ஜீவனை இரட்சிப்பதற்குத் தனது சொந்த முயற்சியையோ அல்லது சொந்த பலத்தையோ, சொந்த ஞானத்தையோ சார்ந்திருக்கக்கூடாது. மேலே கூறப்பட்டிருக்கிற நான்கு காரியங்களையும் கடைப்பிடிக்க வேண்டும். இல்லையென்றால் அவன் தன் ஆத்துமாவை இழந்துவிடுவான்.

"என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தின் நிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதை இரட்சித்துக் கொள்ளுவான்" - இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதற்காக ஒரு மனுஷன் எதையும் இழந்துபோகலாம். அவன் எதை இழந்தாலும் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதினால் அவன் தன் ஆத்துமாவை இரட்சித்துக் கொள்கிறான். ஒருவன் இந்த உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் அவன் தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு ஒரு இலாபமும் இல்லை. அனுதினமும் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக்கொண்டு இயேசு கிறிஸ்துவைப் பின்செல்லுகிறவர்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் ஏராளமான ஆசீர்வாதங்கள் வரும். அவன் நித்தியத்தைச் சுதந்தரித்துக் கொள்வான். (மத் 19:29; ரோமர் 8:16-18; 1பேதுரு 1:4-5)

"என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தின் நிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்துபோகிறவன்" விசுவாசிகள் இரண்டு காரியங்களுக்காகப் பாடுகளை அனுபவிப்பதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும். இதற்காக மரணமே வந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளத் தயங்கக்கூடாது. அவையாவன

1. கிறிஸ்துவின் நிமித்தம்

2. கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் நிமித்தம்

ஜீவன் (soul) - ψυχή - psychee 5590

8 அதிகாரம்

பெண்பால் பெயர்ச்சொல் - ஆத்துமா பிராணன், ஜீவன், ஆத்துமா, மனம் உயிர் the (life, emotions, passions, feelings, desires, and appetites)

இந்தச் சொல் 105 இடங்களில் மனுஷருடைய ஜீவனையும், மிருகங்களுடைய ஜீவனையும் குறிப்பதாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மிருகங்களின் ஆத்துமாவையும், ஜீவனையும் வெளி 8:9 வெளி 16:3 ஆகிய வசனங்களில் இந்தச் சொல் குறிக்கிறது.

தனி மனுஷனுடைய ஜீவனை இந்தச் சொல் குறிக்கும் வசனங்கள் அப் 2:41,43, அப் 3:23; அப் 7:14 அப் 27:37 ரோமர் 2:9 ரோமர் 13:1; 1கொரி 15:45; யாக் 5:20, 1பேதுரு 3:20, 2பேதுரு 2:14; வெளி 6:9 வெளி 18:13, வெளி 20:4

மனுஷனுடைய ஜீவன் அழிந்துபோகும் அல்லது இரட்சிக்கப்படும் என்று கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வசனங்களில் இந்தச் சொல் விளக்குகிறது. மத் 2:20, மத் 6:25 மத் 10:39, மத் 16:25; மத் 20:28 மாற்கு 3:4 மாற்கு 8:35 மாற்கு 10:45 லூக்கா 6:9 லூக்கா 9:24,56 லூக்கா 12:22,23 லூக்கா 14:26; லூக்கா 17:33 யோவான் 10:11,15,17 யோவான் 12:25, யோவான் 13:37,38 யோவான் 15:13 அப் 15:26; அப் 20:10,24 அப் 27:10,22; ரோமர் 11:3; ரோமர் 16:4, பிலி 2:30 1யோவான் 3:16; வெளி 12:11

மனுஷனுடைய ஆத்துமா அழிந்துபோகும் அல்லது இரட்சிக்கப்படும் என்று கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வசனங்களில் இந்தச் சொல் விளக்குகிறது. மத் 10:28 மத் 16:26, மாற்கு 8:36,37; லூக்கா 12:20 லூக்கா 21:19, 1தெச 2:8; 1தெச 5:23; எபி 4:12, எபி 6:19 எபி 10:39; எபி 13:17 யாக் 1:21, 1பேதுரு 1:9, 1பேதுரு 2:11,25; 1பேதுரு 4:19

இந்தச் சொல் ஆத்துமா எனவும், சுயம் எனவும் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வசனங்களில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது (மத் 11:29; மத் 12:18; மத் 26:38 மாற்கு 14:34; லூக்கா 1:46; லூக்கா 12:19, யோவான் 12:27; அப் 2:27,31; அப் 14:22 அப் 15:24; 2கொரி 1:23; எபி 10:38 1பேதுரு 1:22; 2பேதுரு 2:8, வெளி 18:14.

இந்தச் சொல் "மனது" என்று அப் 14:2 எபி 13:3 ஆகிய வசனங்களில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது.

இந்தச்சொல் ஒருவனுடைய முழு வல்லமையைக் குறிக்கும் ஆத்துமா எனவும் (மத் 22:37; மாற்கு 12:30,33; லூக்கா 2:35 லூக்கா 10:27; அப் 4:32; 3யோவான் 1:2, இருதயம் எனவும் (எபே 6:6) மனது எனவும் (பிலி 1:27) சுதந்தரமாகிய பலன் (கொலோ 3:23) எனவும் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது.

இந்தக் கிரேக்கச்சொல்லிற்கு இணையான எபிரெயச் சொல் "நெ-பெஷ் neh'-fesh

ஜீவன் (soul) - נפש - neh'-fesh - 5315

பெண்பால் பெயர்ச்சொல் - ஜந்து ஜீவன் ஆத்துமா, உயிர், ஜனம், பிராணன் சம்மதி, மனது மனம், பேர், பிறப்பு, ஆசை, இருதயம், பிராணி, செத்தவன் இறந்து போன பிணம், மனிதன் மிருகத்துக்கு மிருகம், சவம், பிரேதம், யாதொருவர், உள்ளம், இஷ்டம், ஆவல் பசி, உட்கருத்து, ஜீவனுக்கு ஜீவன், சுவாசம், சித்தம், இச்சை, போஜனம், நெருக்க மனுஷர்

நாம் வெட்கப்படக்கூடாத இரண்டு காரியங்கள்

1 இயேசு கிறிஸ்து (மாற்கு 8:38, லூக்கா 9:26; யோவான் 11-2

2 கிறிஸ்துவின் வார்த்தைகள்

காரணங்கள்

1 அவை தேவனுடைய வார்த்தைகள் (யோவான் 3:34

2 அவை ஆவியானது (யோவான் 6:63

மாற்கு - தொகுப்புரை

8 அதிகாரம்

3 அவை ஜீவனானது யோவான் 6:63,69

4 அவை நம்மை நியாயந்தீர்க்கும் யோவான் 12:48

5 அவை அற்புதமானது (யோவான் 14:10)

6 அவை தேவனோடு நம்மை ஒப்புரவாக்கும் (யோவான் 14:23)

7 நமது ஜெபத்திற்கு அவை பதில் கொடுக்கும் யோவான் 15:7 2கொரி 1:20

"விபசாரமும் பாவமுமுள்ள இந்தச் சந்ததி" - இயேசு கிறிஸ்துவின் காலத்தில் இஸ்ரவேல் ஜனத்தாருடைய சுபாவம் இவ்வாறுதான் இருந்தது. (மத் 11:16)

"மனுஷகுமாரன் தமது பிதாவின் மகிமை பொருந்தினவராய்ப் பரிசுத்த தூதர்களோடுங்கூட வருவார்" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை இந்த வசனம் குறிப்பிடுகிறது (மத் 13:39-43,49,50) மத் 24:29-31 2தெச 1:7-10) வரப்போகிற மகிமையைப் பற்றி ஓரளவு புரிந்து கொள்ள இந்த வசனம் உதவி புரிகிறது. (மத் 16:27 17:1-9, மாற்கு 9:1-7 2பேதுரு 1:16 இந்த வேளையில் பிதாவும் இயேசு கிறிஸ்துவோடு கூடவே வருவார் (தானி 7:7-14,22 சக 14:5 தீத்து 2:13

9 அதிகாரம்

55. மறுரூபமாதல் – வரப்போகும் இராஜ்ஜியத்திற்கு ஒரு முன்னோட்டம் – (மத் 16:28 - 17:9; லூக் 9:27; 2பேதுரு 1:16)

மாற்கு 9:1 அன்றியும், அவர் அவர்களை நோக்கி: இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன், மரணத்தை ருசி பார்ப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

மாற்கு 9:2 ஆறுநாளைக்குப்பின்பு, இயேசு பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் அழைத்து, உயர்ந்த மலையின்மேல் அவர்களைத் தனியே கூட்டிக்கொண்டுபோய், அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார்.

மாற்கு 9:3 அவருடைய வஸ்திரம் உறைந்த மழையைப்போல் பூமியிலே எந்த வண்ணானும் வெளுக்கக்கூடாத வெண்மையாய்ப் பிரகாசித்தது.

மாற்கு 9:4 அப்பொழுது மோசேயும் எலியாவும் இயேசுவுடனே பேசுகிறவர்களாக அவர்களுக்குக் காணப்பட்டார்கள்.

மாற்கு 9:5 அப்பொழுது பேதுரு இயேசுவை நோக்கி: ரபீ, நாம் இங்கே இருக்கிறது நல்லது; உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக, மூன்று கூடாரங்களைப் போடுவோம் என்றான்.

மாற்கு 9:6 அவர்கள் மிகவும் பயந்திருந்தபடியால், தான் பேசுகிறது இன்னதென்று அறியாமல் இப்படிச் சொன்னான்.

மாற்கு 9:7 அப்பொழுது, ஒரு மேகம் அவர்கள் மேல் நிழலிட்டது. இவர் என்னுடைய நேசகுமாரன், இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று.

மாற்கு 9:8 உடனே அவர்கள் சுற்றிலும் பார்த்தபோது, இயேசு ஒருவரைத்தவிர வேறொருவரையும் காணவில்லை.

மாற்கு 9:9 அவர்கள் மலையிலிருந்து இறங்குகிறபோது, அவர் அவர்களை நோக்கி: மனுஷகுமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும் வரைக்கும், நீங்கள் கண்டவைகளை ஒருவருக்கும் சொல்லவேண்டாம் என்று கட்டளையிட்டார்.

மாற்கு 9:10 மரித்தோரிலிருந்து எழுந்திருப்பது என்னவென்று அவர்கள் ஒருவரிடத்தில் ஒருவர் விசாரித்து, அந்த வார்த்தையைத் தங்களுக்குள்ளே அடக்கிக்கொண்டு.

மாற்கு 8:34-38 ஆகிய வசனங்களில் இயேசு கிறிஸ்து பேசிய ஜனங்களிடம் இப்போதும் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்.

தீர்க்கதரிசன எண் - 6

"இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன் மரணத்தை ருசிபார்ப்பதில்லை" (மாற்கு 9:1) இந்தத் தீர்க்கதரிசனம் இயேசு கிறிஸ்து மறுரூபமானபோது நிறைவேறிற்று. (மத் 16:28; மத் 17:1)

"தேவனுடைய ராஜ்யம்" - மாற்குவும் லூக்காவும் தேவனுடைய ராஜ்யம் என்று கூறுகிறார்கள். மத்தேயு பரலோக ராஜ்யம் என்று கூறுகிறார். ஒவ்வொரு சுவிசேஷமும் ஒரு குறிப்பிட்ட ஜனங்களுக்காக விசேஷமாக எழுதப்பட்டது. ஆகையினால் வார்த்தையில் இப்படிப்பட்ட வேறுபாடு காணப்படுகிறது. (மத் 4:17; மத் 19:24)

"ஆறுநாளைக்குப்பின்பு" - (லூக்கா 9:28

9 அதிகாரம்

"இயேசு பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் அழைத்தார்" - யவீருவின் மகளை இயேசு உயிரோடு எழுப்பியபோதும் (மாற்கு 5:37) கெத்செமனே தோட்டத்திலும் இந்த மூவருமே இயேசுவோடு கூட இருந்தார்கள் (மத் 26:37)

"உயர்ந்த மலை" - இந்த மலையின் பெயர் தெரியவில்லை

மறுரூபமானார் (transfigured) - μεταμορφόω - metamorphooo - 3339

வினைச்சொல் - மறுரூபமாகு மறுரூபப்படு (மத் 17:2)

"உறைந்த மழையைப்போல...... வெண்மையாய்ப் பிரகாசித்தது" - இயற்கையின் வெண்மை நிறம் பரிசுத்தத்திற்கு அடையாளம். (சங் 51:7; ஏசா 1:18; புல 4:7; தானி 7:9; மத் 28:3; வெளி 1:14)

"பூமியிலே எந்த வண்ணானும் வெளுக்கக் கூடாத வெண்மையாய்ப் பிரகாசித்தது" புதிய ஏற்பாட்டில் இந்த வசனத்தில் மட்டுமே இந்த உவமானம் கூறப்பட்டிருக்கிறது. எகிப்திலும் பாலஸ்தீனத்திலும் வஸ்திரங்களை வெண்மையாக்கும் கலை சிறப்பாக விளங்கிற்று. அதற்குரிய ரசாயன கலவைகளைச் சேர்த்து, வஸ்திரங்களை கசக்கி, கல்லில் அடித்து, சூரிய ஒளியில் உலர வைப்பார்கள். வஸ்திரங்களை உலர வைப்பதற்காகவே அதற்குரிய நிலம் இருந்தது. (ஏசா 7:3)

"மோசேயும் எலியாவும்" - (மத் 17:3)

ரபீ - ῥαββί - rhabbi - 4461

ஆண்பால் பெயர்ச்சொல் - ரபீ (teacher) (லூக்கா 9:38)

"உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக மூன்று கூடாரங்களைப் போடுவோம்" - (மத் 17:4)

"எலியா" - எலியா (Elijah) என்பதன் கிரேக்க பெயர் எலியாஸ் (Elias) என்பதாகும். (1இராஜா 17:1; 2இராஜா 2:11; மல் 4:5-6)

"ஒரு மேகம் அவர்கள் மேல் நிழலிட்டது" - (மத் 17:5)

"இவர் என்னுடைய நேசகுமாரன் இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று" - பலவேளைகளில் தேவனுடைய சத்தம் ஜனங்கள் கேட்கக்கூடிய விதமாக உண்டாயிற்று. (ஆதி 3:8; உபா 5:22-26; மத் 3:17; யோவான் 12:28; வெளி 10:4) தேவன் மனுஷரோடு பேசியதாக வேதாகமத்தில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட குறிப்புகள் உள்ளன (எபி 1:1-2)

"இவர் என்னுடைய நேசகுமாரன், இவருக்குச் செவிகொடுங்கள்" - நாசரேத் ஊராராகிய இயேசு கிறிஸ்து தமது நேசகுமாரன் என்று தேவன் இரண்டு முறை அறிவித்திருக்கிறார் (மத் 3:17). தமது ஒரேபேறான குமாரன் (யோவான் 1:14,18; யோவான் 3:16-18; 1யோவான் 4:9). இயேசு கிறிஸ்துவானவர் மட்டுமே பரிசுத்த ஆவியானவரால் உற்பத்தியாக்கப்பட்டு, ஸ்திரீயின் வயிற்றிலிருந்து பிறந்தவர் (ஏசா 7:14; ஏசா 9:6-7; மத் 1:18-25; லூக்கா 1:34-35; கலா 4:4) மனுஷர்கள் மறுபடியும் பிறந்த தேவனுடைய பிள்ளைகள் புத்திரசுவிகார பிள்ளைகள் (ரோமர் 8:14-16,23; ரோமர் 9:4; கலா 4:5; எபே 1:5)

தீர்க்கதரிசன எண் - 7

"மனுஷகுமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும் வரைக்கும்" (மாற்கு 9:9) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"மரித்தோரிலிருந்து எழுந்திருப்பது என்னவென்று அவர்கள் ஒருவரிடத்தில் ஒருவர் விசாரித்தார்கள்" இயேசு கிறிஸ்து கூறிய வார்த்தைகளைச் சீஷர்கள் புரிந்து கொள்ளவில்லை. வேதவாக்கியங்களைப் புரிந்து கொள்வதற்கு தெய்வீக ஞானம் தேவை. நாமும் வேதத்தை வாசிக்கும்போது தேவன் தமது சத்தியத்தை நமக்கு வெளிப்படுத்த வேண்டுமென்று ஜெபிக்க வேண்டும். இயேசு கிறிஸ்து தாம் பாடுபட்டு மரிக்கப்போவதைப் பற்றியும் மூன்றாவது நாளில் உயிர்த்தெழப் போவதைப் பற்றியும் ஏற்கெனவே தமது சீஷர்களிடம் மிகவும் தெளிவாகக் கூறியிருக்கிறார் (மாற்கு 2:20; மாற்கு 8:31)

மாற்கு - தொகுப்புரை

9 அதிகாரம்

56. யோவான் ஸ்நானனும், எலியாவும் - (மத் 17:10)

மாற்கு 9:11 எலியா முந்தி வரவேண்டுமென்று வேதபாரகர் சொல்லுகிறார்களே, அதெப்படியென்று அவரிடத்தில் கேட்டார்கள்

மாற்கு 9:12 அவர் பிரதியுத்தரமாக: எலியா முந்திவந்து எல்லாவற்றையும் சீர்படுத்துவது மெய்தான்; அல்லாமலும், மனுஷகுமாரன் பல பாடுகள் பட்டு அவமதிக்கப்படுவாரென்று அவரைக் குறித்து எழுதியிருக்கிறதே, அது எப்படி என்றார்

மாற்கு 9:13 ஆனாலும் எலியா வந்தாயிற்று; அவனைக்குறித்து எழுதியிருக்கிறபிரகாரம் தங்களுக்கு இஷ்டமானபடி அவனுக்குச் செய்தார்களென்று, உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்

தீர்க்கதரிசன எண் - 8

"எலியா முந்திவந்து எல்லாவற்றையும் சீர்படுத்துவது மெய்தான் அல்லாமலும் மனுஷகுமாரன் பல பாடுகள் பட்டு அவமதிக்கப்படுவார்" (மாற்கு 9:12) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

இந்தத் தீர்க்கதரிசனத்தில் இரண்டு காரியங்கள் அடங்கியிருக்கிறது. அவையாவன

1. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பு எல்லாவற்றையும் சீர் படுத்துவதற்காக வருவார் (மல் 4:5-6) இரண்டு சாட்சிகள் பூமியில் தோன்றும்போது இந்தக் காரியம் நிறைவேறும் (வெளி 11:3-12)

2. மனுஷகுமாரன் பலபாடுகள்படுவார் இந்தக் காரியமும் நிறைவேறிற்று. (மத் 27; மாற்கு 15)

"ஆனாலும் எலியா வந்தாயிற்று" - இது யோவான் ஸ்நானனைக் குறிக்கிறது. அவன் எலியாவின் வல்லமையோடும், ஆவியோடும் வந்தான் (லூக்கா 1:17) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக எலியா செய்யப்போவதை அவருடைய முதலாம் வருகைக்கு முன்பாக யோவான் ஸ்நானன் செய்தான் (மல் 3:1 ஏசா 40:3; மத் 17:12-13)

"தங்களுக்கு இஷ்டமானபடி அவனுக்குச் செய்தார்கள்" - (மத் 14:1-12)

57. வல்லமையில்லாத சீஷர்களும் சர்வ வல்ல கிறிஸ்துவும் - (மத் 17:14; லூக் 9:37)

மாற்கு 9:14 பின்பு அவர் சீஷரிடத்தில் வந்தபோது, அவர்களைச் சுற்றித் திரளான ஜனங்கள் நிற்கிறதையும், அவர்களோடே வேதபாரகர் தர்க்கிக்கிறதையும் கண்டார்

மாற்கு 9:15 ஜனங்களெல்லாரும் அவரைக் கண்டவுடனே மிகவும் ஆச்சரியப்பட்டு, ஓடிவந்து, அவருக்கு வந்தனஞ்செய்தார்கள்

மாற்கு 9:16 அவர் வேதபாரகரை நோக்கி: நீங்கள் இவர்களோடே என்னத்தைக் குறித்துத் தர்க்கம் பண்ணுகிறீர்கள் என்று கேட்டார்

மாற்கு 9:17 அப்பொழுது ஜனக் கூட்டத்தில் ஒருவன் அவரை நோக்கி: போதகரே, ஊமையான ஒரு ஆவி பிடித்த என் மகனை உம்மிடத்தில் கொண்டு வந்தேன்

மாற்கு 9:18 அது அவனை எங்கே பிடித்தாலும் அங்கே அவனை அலைக் கழிக்கிறது; அப்பொழுது அவன் நுரைதள்ளி, பல்லைக்கடித்து, சோர்ந்து போகிறான்; அதைத் துரத்திவிடும்படி உம்முடைய சீஷரிடத்தில் கேட்டேன், அவர்களால் கூடாமற் போயிற்று என்றான்

மாற்கு 9:19 அவர் பிரதியுத்தரமாக: விசுவாசமில்லாத சந்ததியே, எதுவரைக்கும் நான் உங்களோடு இருப்பேன்? எதுவரைக்கும் உங்களிடத்தில் பொறுமையாய் இருப்பேன்? அவனை என்னிடத்தில் கொண்டு வாருங்கள் என்றார்

9 அதிகாரம்

மாற்கு 9:20 அவனை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். அவரைக் கண்டவுடனே, அந்த ஆவி அவனை அலைக்கழித்தது; அவன் தரையிலே விழுந்து, நுரைதள்ளிப் புரண்டான்.

மாற்கு 9:21 அவர் அவனுடைய தகப்பனை நோக்கி: இது இவனுக்கு உண்டாகி எவ்வளவு காலமாயிற்று என்று கேட்டார். அதற்கு அவன்: சிறுவயதுமுதற்கொண்டே உண்டாயிருக்கிறது;

மாற்கு 9:22 இவனைக் கொல்லும்படிக்கு அது அநேகந்தரம் தீயிலும் தண்ணீரிலும் தள்ளிற்று. நீர் ஏதாகிலும் செய்யக்கூடுமானால் எங்கள்மேல் மனதிரங்கி எங்களுக்கு உதவிசெய்ய வேண்டும் என்றான்.

மாற்கு 9:23 இயேசு அவனை நோக்கி: நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார்.

மாற்கு 9:24 உடனே பிள்ளையின் தகப்பன்: விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும் என்று கண்ணீரோடே சத்தமிட்டுச் சொன்னான்.

மாற்கு 9:25 அப்பொழுது ஜனங்கள் கூட்டமாய் ஓடிவருகிறதை இயேசு கண்டு, அந்த அசுத்த ஆவியை நோக்கி: ஊமையும் செவிடுமான ஆவியே, இவனை விட்டுப் புறப்பட்டுப்போ, இனி இவனுக்குள் போகாதே என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அதை அதட்டினார்.

மாற்கு 9:26 அப்பொழுது அது சத்தமிட்டு, அவனை மிகவும் அலைக்கழித்துப் புறப்பட்டுப்போயிற்று. அவன் செத்துப்போனான் என்று அநேகர் சொல்லத்தக்கதாகச் செத்தவன்போல் கிடந்தான்.

மாற்கு 9:27 இயேசு அவன் கையைப் பிடித்து அவனைத் தூக்கினார்; உடனே அவன் எழுந்திருந்தான்.

போதகர் (Master) - διδάσκαλος **didaskalos** 1320

ஆண்பால் பெயர்ச்சொல் - வேதபாரகன், வேதகர், போதகர், குரு **(teacher)** (லூக்கா 9:38)

"ஊமையான ஒரு ஆவி" - அவனை ஊமையான ஆவி மட்டும் பிடிக்கவில்லை அலைக்கழிக்கும் ஆவியும் அவனைப் பிடித்திருந்தது. மத் 17:15

பிசாசின் கிரியைகளினால் ஏற்படும் விளைவுகள்

1 ஊமை (மாற்கு 9:17,25)

2 செவிடு (மாற்கு 9:25)

3 வாயில் நுரை தள்ளுதல் (மாற்கு 9:25

4 இழுப்பு (மாற்கு 9:18,20,26

5. பற்களைக் கடித்தல் (மாற்கு 9:18)

6 செத்தவன்போல மயங்கி விழுதல் (மாற்கு 9:18,26)

7 தரையில் விழுதல் (மாற்கு 9:20

8 தற்கொலை முயற்சிகள் (மாற்கு 9:22

9 கதறி ஓலமிடுதல் (மாற்கு 9:26

10 சந்திரரோகி (மத் 17:15)

விசுவாசமில்லாத மனுஷரை இயேசு கடிந்து கூறியிருக்கும் சந்தர்ப்பங்கள்

1. தெய்வீக பராமரிப்பில் (மத் 6:30

2 தெய்வீக பாதுகாப்பில் (மத் 14:31

3 தெய்வீக வல்லமையில் (மத் 16:6-12

4 கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்வதற்கு அபிஷேகம் பண்ணுகையில் (மத் 17:17-21 மாற்கு 9:19-23; மாற்கு 16:17,18 யோவான் 14:12)

மாற்கு - தொகுப்புரை

9 அதிகாரம்

5. அற்புதங்களை நடப்பிக்கும் வல்லமையில் (மாற்கு 11.21-24)

6. உயிர்த்தெழுதலில் (மாற்கு 16.14)

"அவனைக் கண்டவுடனே, அந்த ஆவி அவனை அலைக்கழித்தது. அவன் தரையிலே விழுந்து, நுரைதள்ளி புரண்டான்" - வாயில் நுரைத்தள்ளி, கீழே விழுந்து, உருண்டு, புரண்டான் செத்தவன் போல விழுந்தான் மாற்கு 9.25-27

"இவனைக் கொல்லும்படிக்கு அது அநேகந்தரம் தீயிலும் தண்ணீரிலும் தள்ளிற்று" - சாத்தானின் நோக்கம் இதுதான் அவன் கொல்லவும், அழிக்கவுமே வருகிறான் (யோவான் 10:10)

"நீர் ஏதாகிலும் செய்யக்கூடுமானால்" - சிறுவனின் தகப்பன் "கூடுமானால்" என்று கூறுகிறான் இயேசு கிறிஸ்துவும் "கூடுமானால்" என்று பதில் கூறுகிறார் மனுஷன் தன்னுடைய அவிசுவாசத்தை அகற்றிவிட்டு இயேசுவிடம் வரவேண்டும் தேவனுடைய சித்தத்தையும் அவருடைய வல்லமையையும் விசுவாசிக்க வேண்டும் அப்போது விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் மாற்கு 9.23 மாற்கு 11.22-24, மத் 17:20; மத் 21:22, யோவான் 14:12-15 யோவான் 15:7-16; யோவான் 16:23-26) தேவனால் கூடுமானால் என்னும் கேள்விக்கே இடமில்லை ஏனெனில் தேவனால் எல்லாம் கூடும் மனுஷன்தான் அதை விசுவாசிக்க வேண்டும் மனுஷனால் விசுவாசிக்கக்கூடுமானால் அது அவனுக்கு ஆகும். தேவன் நமக்கு ஏற்கெனவே பல காரியங்களை வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார் அவற்றை நாம் விசுவாசத்தோடு பெற்றுக்கொள்ள வேண்டும். நமது அவிசுவாசத்தினால் ஒன்றையும் பெற்றுக் கொள்ளாமல் அதற்குத் தேவனைக் குறைக்கூறக்கூடாது. (மாற்கு 9:24, எபி 11:6; யாக் 1:5-8)

"எங்கள்மேல் மனதிரங்கி, எங்களுக்கு உதவி செய்யவேண்டும்" - தேவன் வல்லமையுள்ளவர் அதேசமயத்தில் அவர் இரக்கம் உள்ளவர் அவர் மனதிரங்கி, நம்மீது தமது வல்லமையை வெளிப்படுத்துவார் என்று விசுவாசிக்க வேண்டும். அவர் தமது கிருபையினாலும், மனதுருக்கத்தினாலும் மனுஷருடைய தேவைகளையெல்லாம் சந்திப்பார் இங்கே இந்த மனுஷன் தனக்காகவும், தன் மகனுக்காகவும் மனதிரங்க வேண்டுமாறு இயேசு கிறிஸ்துவிடம் விண்ணப்பம் பண்ணுகிறான் (மத் 9.36)

"நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்" - இயேசு கிறிஸ்து தெளிவாகக் கூறுகிறார் (மாற்கு 11:22-24; மத் 17:20; மத் 21:21-22; எபி 11:6; யாக் 1:5-8). எல்லாம் கூடும் என்று அவர் கூறும்போது அதில் எல்லாமே அடங்கியிருக்கிறது எல்லாம் என்பது ஜீவனுக்குரியவைகளையும் நன்மையானவைகளையும் குறிக்கும் (2பேதுரு 1:3-4; சங் 84:11; 2கொரி 1:20)

"இயேசு அந்த அசுத்த ஆவியை நோக்கி, ஊமையும் செவிடுமான ஆவியே, இவனை விட்டுப் புறப்பட்டுப்போ இனி இவனுக்குள் போகாதே என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அதை அதட்டினார்" - இயேசுவின் சீஷர்களும் இப்படித்தான் சொன்னார்கள் ஆனால் அசுத்த ஆவி அவனை விட்டுப்போகவில்லை இயேசு கிறிஸ்துவின் வார்த்தைக்கு வல்லமையுண்டு அவர் விசுவாசத்தோடும் அதிகாரத்தோடும் பிசாசையும் அவனுடைய கிரியைகளையும் கடிந்து கொள்கிறார் வனாந்தரத்திலே இயேசு சாத்தானை ஜெயித்தார் சீஷர்கள் தங்களுடைய விசுவாச ஜீவியத்திலே அந்த அளவிற்கு வளர்ந்து வரவில்லை (மாற்கு 9:29, மத் 17:17-21; அப் 19:13-16)

38. ஜெபமும் உபவாசமும் - (மத் 17:19

மாற்கு 9:28 வீட்டில் அவர் பிரவேசித்தபொழுது அவருடைய சீஷர்கள் அதைத் துரத்திவிட எங்களால் ஏன் கூடாமற்போயிற்று என்று அவரிடத்தில் தனித்துக் கேட்டார்கள்

9 அதிகாரம்

மாற்கு 9:29 அதற்கு அவர்: இவ்வகைப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப் போகாது என்றார்.

"அதைத் துரத்திவிட எங்களால் ஏன் கூடாமற்போயிற்று" - என்று சீஷர்கள் இயேசுவிடம் கேட்டார்கள். "உங்கள் அவிசுவாசத்தினாலேதான்" என்பதே இயேசுவின் பதில் (மத் 17:20-21). பிசாசைத் துரத்திவிடுவது தேவனுடைய சித்தமே. ஆகையினால் நாமும் பிசாசுகளைத் துரத்த வேண்டும். உபவாசம்பண்ணி ஜெபித்து பிசாசுகளைத் துரத்த வேண்டும்.

"இவ்வகைப் பிசாசு" - பிசாசுகளில் பலவகை உண்டு என்பதை இயேசு கிறிஸ்து வெளிப்படுத்தியிருக்கிறார்.

59. தமது மரணத்தையும் உயிர்த்தெழுதலைக் குறித்து இயேசு மறுபடியும் முன்குறித்துக் கூறுகிறார் - (மத் 16:21)

மாற்கு 9:30 பின்பு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, கலிலேயாவைக் கடந்துபோனார்கள்; அதை ஒருவரும் அறியாதிருக்க வேண்டுமென்று விரும்பினார்.

மாற்கு 9:31 ஏனெனில் மனுஷகுமாரன் மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவார் என்றும், அவர்கள் அவரைக் கொன்றுபோடுவார்கள் என்றும், கொல்லப்பட்டு மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்திருப்பார் என்றும் அவர் தம்முடைய சீஷர்களுக்குப் போதகம்பண்ணிச் சொல்லியிருந்தார்.

"பின்பு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, கலிலேயாவைக் கடந்துபோனார்கள்; அதை ஒருவரும் அறியாதிருக்க வேண்டுமென்று விரும்பினார்" - இயேசு கிறிஸ்து பட்டணங்கள் வழியாகப் போகாமல் சுற்றிக்கொண்டு கலிலேயா வழியாகப் போனார். மறுரூபமலையில் இயேசுவின் பிரயாணம் ஆரம்பமாகிறது. இயேசு தமது பிரயாணத்தை ஒருவரும் அறியாதிருக்க வேண்டுமென்று விரும்பி இரகசியமாகச் செல்கிறார்.

தீர்க்கதரிசன எண் - 9

"மனுஷகுமாரன் மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவார்; அவர்கள் அவரைக் கொன்றுபோடுவார்கள்; கொல்லப்பட்டு மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்திருப்பார்" (மாற்கு 9:31) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இயேசு கிறிஸ்து தமது பாடுகளைப் பற்றி கூறிய மூன்றாவது அறிவிப்பு (மாற்கு 8:31; மாற்கு 9:12).

60. தாழ்மையைப் பற்றிய உபதேசம் - (மத் 18:1; 20:24; லூக் 9:46)

மாற்கு 9:32 அவர்களோ அந்த வார்த்தையை அறிந்துகொள்ளவில்லை; அதைக்குறித்து அவரிடத்தில் கேட்கவும் பயந்தார்கள்.

மாற்கு 9:33 அவர் கப்பர்நகூமுக்கு வந்து, வீட்டிலே இருக்கும்போது, அவர்களை நோக்கி: நீங்கள் வழியிலே எதைக்குறித்து உங்களுக்குள்ளே தர்க்கம்பண்ணினீர்கள் என்று கேட்டார்.

மாற்கு 9:34 அதற்கு அவர்கள் பேசாமல் இருந்தார்கள்; ஏனெனில் அவர்கள் தங்களுக்குள்ளே எவன் பெரியவன் என்று வழியில் தர்க்கம்பண்ணினார்கள்.

மாற்கு 9:35 அப்பொழுது அவர் உட்கார்ந்து, பன்னிருவரையும் அழைத்து: எவனாகிலும் முதல்வனாயிருக்க விரும்பினால் அவன் எல்லாருக்கும் கடையானவனும், எல்லாருக்கும் ஊழியக்காரனுமாயிருக்கக்கடவன் என்று சொல்லி,

9 அதிகாரம்

மாற்கு 9:36 ஒரு சிறுபிள்ளையை எடுத்து, அதை அவர்கள் நடுவிலே நிறுத்தி, அதை அணைத்துக் கொண்டு:

மாற்கு 9:37 இப்படிப்பட்ட சிறு பிள்ளைகளில் ஒன்றை என் நாமத்தினாலே ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்; என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அல்ல, என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான் என்றார்.

ஊழியக்காரன் (servant) - διάκονος - diakonos - 1249

ஆண்பால் அல்லது பெண்பால் பெயர்ச்சொல் - பணிவிடைக்காரன், ஊழியக்காரன், வேலைக்காரன், ஊழியஞ்செய்கிறவர், உதவிக்காரர் மத் 20:26

"ஒரு சிறுபிள்ளையை எடுத்து, அதை அவர்கள் நடுவிலே நிறுத்தினார்" - தாழ்மைக்கு எடுத்துக்காட்டு சிறுபிள்ளை. பலவேளைகளில் இயேசு கிறிஸ்து தம்மையே முன்மாதிரியாகக் காண்பித்திருக்கிறார் (மாற்கு 10:35-45; லூக்கா 22:24-27; யோவான் 13:2-20)

"இப்படிப்பட்ட சிறு பிள்ளைகளில் ஒன்றை என் நாமத்தினாலே ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்" - (மத் 18:1-10; லூக்கா 18:15-17)

61. இயேசு பிரிவினையைக் கடிந்து கொள்கிறார் - (லூக் 9:49; அப் 10:15,35; 20:30)

மாற்கு 9:38 அப்பொழுது யோவான் அவரை நோக்கி: போதகரே, நம்மைப் பின்பற்றாதவன் ஒருவன் உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துகிறதைக் கண்டோம்; அவன் நம்மைப் பின்பற்றாதவனானதால் அவனைத் தடுத்தோம் என்றான்.

மாற்கு 9:39 அதற்கு இயேசு: அவனைத் தடுக்க வேண்டாம்; என் நாமத்தினாலே அற்புதஞ்செய்கிறவன் எளிதாய் என்னைக்குறித்துத் தீங்குசொல்ல மாட்டான்.

மாற்கு 9:40 நமக்கு விரோதமாயிராதவன் நமது பட்சத்திலிருக்கிறான்.

மாற்கு 9:41 நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களாயிருக்கிறபடியினாலே, என் நாமத்தினிமித்தம் உங்களுக்கு ஒரு கலசம் தண்ணீர் குடிக்கக் கொடுக்கிறவன் தன் பலனை அடையாமற்போவதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

"அப்பொழுது யோவான் அவரை நோக்கி: போதகரே, நம்மைப் பின்பற்றாதவன் ஒருவன் உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துகிறதைக் கண்டோம்; அவன் நம்மைப் பின்பற்றாதவனானதால் அவனைத் தடுத்தோம் என்றான்" - இயேசு கிறிஸ்து மாற்கு 9:37 இல் கூறிய காரியம் யோவானின் மனதைத் தொட்டது. இயேசுவைப் பின்பற்றாத ஒருவன் அவருடைய நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினான். அதை யோவான் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகையினால் அவனைத் தடுத்தான். ஆனால் இயேசு கிறிஸ்துவோ "இப்படிப்பட்ட சிறு பிள்ளைகளில் ஒன்றை என் நாமத்தினாலே ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்; என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அல்ல, என்னை அனுப்பினவரை ஏற்றுக் கொள்ளுகிறான்" என்றார் (மத் 10:40)

"அவனைத் தடுக்க வேண்டாம்; என் நாமத்தினாலே அற்புதஞ்செய்கிறவன் எளிதாய் என்னைக் குறித்துத் தீங்குசொல்லமாட்டான்" - மோசே இந்தப் பாடத்தைத் தனது அனுபவத்தில் ஏற்கெனவே கற்றிருக்கிறார் (எண் 11:26-29). இயேசு கிறிஸ்துவின் விசுவாசிகள் சக விசுவாசிகளை நேசிப்பார்கள். தங்களைப் போலவே அவர்களையும் இயேசுவின் விசுவாசிகள் என்று அங்கீகரிப்பார்கள். தாங்கள் செய்யும் ஊழியங்களைப் போலவே அவர்களுடைய ஊழியங்களும் முக்கியமானவை என்று நினைப்பார்கள்.

9 அதிகாரம்

(பிலி 2:1-3, ரோமர் 12:10)
இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அற்புதங்களைச் செய்கிறவன் அவருடைய நாமத்திற்கு அவகீர்த்தி உண்டு பண்ணமாட்டான். ஒருவன் இயேசு கிறிஸ்துவை உண்மையாக பின்பற்றுகிறானா என்பதை அவனுடைய ஆவிக்குரிய ஜீவியத்திலிருந்து வெளிப்படும் கனிகளினாலே அறியலாம். வேதாகமத்தின் அடிப்படை உபதேசங்களுக்கு முரணாக உபதேசிப்பவர்களோடு நாம் பங்காளிகளாக இருக்கவேண்டாம். மறுபடி இயேசுவின் பிள்ளைகள் எல்லோருமே நமக்கு கிறிஸ்துவிற்குள் சகோதரர்களாகவும் சகோதரிகளாகவும் இருக்க வேண்டும். (மத் 7:15-20, மத் 23:1-33; அப் 8:9, அப் 13:8; ரோமர் 1:18-32; ரோமர் 16:17 2கொரி 11:8-31 2கொரி 6:9-11 2கொரி 11:13-15; கலா 5:19-21 கொலோ 2:8,18; பிலி 3:17-19 1தீமோ 4:1-8; 1தீமோ 3:1-13; 1தீமோ 4:3-4 2பேதுரு 2; 1யோவான் 1:9-10; யூதா 1:4-19 வெளி 2:14,20).

62. விசுவாசிகளுக்கு இடறல் உண்டாக்குகிறவன் - (மத் 18:5)

மாற்கு 9:42 என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல்லைக்கட்டி சமுத்திரத்தில் அவனைத் தள்ளிப்போடுகிறது அவனுக்கு நலமாயிருக்கும்.

"அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல்லைக்கட்டி சமுத்திரத்தில் அவனைத் தள்ளிப்போடுகிறது அவனுக்கு நலமாயிருக்கும்" இது யூதருடைய தண்டனை அல்ல. கிரேக்கரும் ரோமரும் குற்றவாளிகளுக்கு இப்படிப்பட்ட தண்டனைகளைக் கொடுத்தார்கள் (மத் 18:6, லூக்கா 17:2).

63. இடறல் உண்டாக்கும் சரீரத்தின் அவயவங்கள் - (மத் 5:22)

மாற்கு 9:43 உன் கை உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைத் தறித்துப்போடு; நீ இரண்டு கையுடையவனாய் அவியாத அக்கினியுள்ள நரகத்திலே போவதைப் பார்க்கிலும், ஊனனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்.

மாற்கு 9:44 அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்.

மாற்கு 9:45 உன் கால் உனக்கு இடறல் உண்டாக்கினால் அதைத் தறித்துப் போடு; நீ இரண்டு காலுடையவனாய் அவியாத அக்கினியுள்ள நரகத்திலே தள்ளப்படுவதைப் பார்க்கிலும், சப்பாணியாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்.

மாற்கு 9:46 அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்.

மாற்கு 9:47 உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினால் அதைப் பிடுங்கிப்போடு; நீ இரண்டு கண்ணுடையவனாய் நரக அக்கினியிலே தள்ளப்படுவதைப் பார்க்கிலும், ஒற்றைக் கண்ணனாய், தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்.

மாற்கு 9:48 அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்.

மாற்கு 9:49 எந்தப் பலியும் உப்பினால் உப்பிடப்படுவதுபோல, எந்த மனுஷனும் அக்கினியினால் உப்பிடப்படுவான்.

மாற்கு 9:50 உப்பு நல்லதுதான், உப்பு சாரமற்றுப்போனால், அதற்கு எதினாலே சாரம் உண்டாக்குவீர்கள்? உங்களுக்குள்ளே உப்புடையவர்களாயிருங்கள், ஒருவரோடொருவர் சமாதானமுள்ளவர்களாயும் இருங்கள் என்றார்.

9 அதிகாரம்

(பிலி 2:1-3 ரோமர் 12:10)

இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அற்புதங்களைச் செய்கிறவன் அவருடைய நாமத்திற்கு அவகீர்த்தி உண்டு பண்ணமாட்டான். ஒருவன் இயேசு கிறிஸ்துவை உண்மையாக பின்பற்றுகிறானா என்பதை அவனுடைய ஆவிக்குரிய ஜீவியத்திலிருந்து வெளிப்படும் கனிகளினாலே அறியலாம். வேதாகமத்தின் அடிப்படை உபதேசங்களுக்கு முரணாக உபதேசிப்பவர்களோடு நாம் பங்காளிகளாக இருக்கவேண்டாம். மறுபடி இயேசுவின் பிள்ளைகள் எல்லோருமே நமக்கு கிறிஸ்துவிற்குள் சகோதரர்களாகவும் சகோதரிகளாகவும் இருக்க வேண்டும். (மத் 7:15-20, மத் 23:1-33; அப் 8:9; அப் 13:8; ரோமர் 1:18-32; ரோமர் 16:17 2கொரி 11:6-11 2கொரி 6:9-11 2கொரி 11:13-15; கலா 5:19-21 கொலோ 2:8,18; பிலி 3:17-19 1தீமோ 4:1-6; 1தீமோ 3:1-13; 1தீமோ 4:3-4 2பேதுரு 2, 1யோவான் 1:9-10, யூதா 1:4-19 வெளி 2:14,20)

62. விசுவாசிகளுக்கு இடறல் உண்டாக்குகிறவன் – (மத் 18:5)

மாற்கு 9:42 என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல்லைக்கட்டி சமுத்திரத்தில் அவனைத் தள்ளிப்போடுகிறது அவனுக்கு நலமாயிருக்கும்.

"அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல்லைக்கட்டி சமுத்திரத்தில் அவனைத் தள்ளிப்போடுகிறது அவனுக்கு நலமாயிருக்கும்" இது யூதருடைய தண்டனை அல்ல. கிரேக்கரும் ரோமரும் குற்றவாளிகளுக்கு இப்படிப்பட்ட தண்டனைகளைக் கொடுத்தார்கள். (மத் 18:6, லூக்கா 17:2)

63. இடறல் உண்டாக்கும் சரீரத்தின் அவயவங்கள் – (மத் 5:22)

மாற்கு 9:43 உன் கை உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைத் தறித்துப்போடு; நீ இரண்டு கையுடையவனாய் அவியாத அக்கினியுள்ள நரகத்திலே போவதைப் பார்க்கிலும் ஊனனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்.

மாற்கு 9:44 அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்.

மாற்கு 9:45 உன் கால் உனக்கு இடறல் உண்டாக்கினால் அதைத்தறித்துப் போடு; நீ இரண்டு காலுடையவனாய் அவியாத அக்கினியுள்ள நரகத்திலே தள்ளப்படுவதைப் பார்க்கிலும் சப்பாணியாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்.

மாற்கு 9:46 அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்.

மாற்கு 9:47 உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினால் அதைப் பிடுங்கிப்போடு; நீ இரண்டு கண்ணுடையவனாய் நரக அக்கினியிலே தள்ளப்படுவதைப் பார்க்கிலும் ஒற்றைக் கண்ணனாய், தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்.

மாற்கு 9:48 அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்.

மாற்கு 9:49 எந்தப் பலியும் உப்பினால் உப்பிடப்படுவதுபோல, எந்த மனுஷனும் அக்கினியினால் உப்பிடப்படுவான்.

மாற்கு 9:50 உப்பு நல்லதுதான், உப்பு சாரமற்றுப்போனால், அதற்கு எதினாலே சாரம் உண்டாக்குவீர்கள்? உங்களுக்குள்ளே உப்பு உடையவர்களாயிருங்கள்; ஒருவரோடொருவர் சமாதானம் உள்ளவர்களாயும் இருங்கள் என்றார்.

மாற்கு - தொகுப்புரை

9 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 10

"உன் கை உனக்கு இடறல் உண்டாக்கினால் அதைத் தறித்துப்போடு. நீ இரண்டு கையுடையவனாய் அவியாத அக்கினியுள்ள நரகத்திலே போவதைப் பார்க்கிலும், ஊனனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்." மாற்கு 9:43-49 இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

"உனக்கு இடறல் உண்டாக்கினால்" - உன்னுடைய ஆத்துமா அழிந்து போகும் பிரகாரம் உனக்கு இடறல் உண்டாக்கினால் (மாற்கு 9:42,43,45,47)

"அதைத் தறித்துப்போடு" - நரகத்தில் நித்திய அக்கினை அடைவதைப் பார்க்கிலும் நமக்கு இடறல் உண்டாக்கும் உறுப்புகள் இல்லாமல் தேவனோடு இருப்பது நலம்.

"ஜீவன்" - நித்திய ஜீவன்

நரகம் (hell) - γέεννα - geenna - 1067

பெண்பால் பெயர்சொல் நரகம் (மத் 5:22; லூக்கா 12:5) நரகத்திலுள்ள அக்கினி ஒருபோதும் அவியாது. (ஏசா 66:22-24)

"நரகத்திலே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்" நரகத்திற்குப் போகிறவர்கள் அனுபவிக்கும் வேதனையை இந்த வசனம் விளக்குகிறது. புழு என்னும் சொல் மனுஷனைக் குறிக்கும். (யோபு 25:6, சங் 22:6; ஏசா 41:14; ஏசா 66:24) நரகத்தில் அதிக அக்கினை இருக்கும் ஆகையினால் மனுஷர் ஒவ்வொருவரும் அங்கு போகாமல் தப்பித்துக் கொள்வது நல்லது. அங்கு போகும் ஜீவன்கள் அக்கினியால் சாகாமலும், அவியாமலும் தொடர்ந்து வேதனைகளை அனுபவித்துக் கொண்டேயிருப்பார்கள்

அந்த வேதனைக்கு ஒரு முடிவேயிராது. (மத் 8:12; மத் 13:42,50; மத் 22:13 மத் 24:51 மத் 25:30,46; வெளி 14:9-11 வெளி 20:10-15; வெளி 21:8, ஏசா 66:24) நியாயத்தீர்ப்பின்போது துன்மார்க்கனுடைய சரீரமும் ஆத்துமாவும் நரகத்திற்குத் தள்ளப்படும். (வெளி 20:11-15 மத் 10:28)

"எந்த மனுஷனும் அக்கினியினால் உப்பிடப்படுவான்" - மாற்கு 9:43-48 ஆகிய வசனங்களில் மனுஷருடைய பாவங்கள் விளக்கப்பட்டிருக்கிறது. இந்த ஜீவனில் நமக்குத் தடையாக இருக்கும் காரியங்களிலிருந்து விடுதலை பெற்று நித்திய அக்கினையிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும்.

"எந்தப் பலியும் உப்பினால் உப்பிடப்படும்" - ஒவ்வொரு பலியும் பலியிடப்படும்போது பாதுகாப்பின் அடையாளமாக அது உப்பிடப்படும் (லேவி 2:13) இந்த வசனத்தில் நித்திய அக்கினி என்பது ஓயாது எரிந்து கொண்டிருக்கும் அக்கினியைக் குறிக்கிறது. ஒவ்வொரு பாவியும் நரகத்தின் அக்கினியினால் உப்பிடப்படுவான் (ஏசா 66:24) சோதோமின்மீது உப்பு மழைபோல பொழியப்பட்டது. (உபா 29:23) இந்த வசனத்தில் உப்பைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் காரியம் நரகத்தின் பயங்கரத்தையே குறிக்கிறது.

"ஒருவரோடொருவர் சமாதானம் உள்ளவர்களாயும் இருங்கள்" மாற்கு 9:34-50 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பாவங்கள் சகோதரரிடையே ஒற்றுமையையும் சமாதானத்தையும் அகற்றிப்போடும் ஆகையினால் அந்தப் பாவங்களை விட்டு விலகி, சகோதரருக்குள்ளே சமாதானமாக ஜீவிக்க வேண்டும். இங்கு கூறப்பட்டிருக்கும் [redacted]

1 பெருமை (மாற்கு 9:34)

2 இருமனம் (மாற்கு 9:38-39)

3 இடறல்கள் (மாற்கு 9:42)

4 சரீரத்தின் இச்சைகள் (மாற்கு 9:43-48; ரோமர் 1:29-32; கலா 5:19-21; மாற்கு 7:19-23; கொலோ 3:5-10)

10 அதிகாரம்

64. மனைவியைத் தள்ளிவிடுதல் சம்பந்தமான பிரமாணம் - மத் 5:31-32 19:1-8 லூக் 16:18 1கொரி 7:10-15

மாற்கு 10:1 அவர் அவ்விடம் விட்டெழுந்து, யோர்தானுக்கு அக்கரையிலுள்ள தேசத்தின் வழியாய் யூதேயாவின் எல்லைகளில் வந்தார்; ஜனங்கள் மறுபடியும் அவரிடத்தில் கூடிவந்தார்கள். அவர் தம்முடைய வழக்கத்தின்படியே மறுபடியும் அவர்களுக்குப் போதகம்பண்ணினார்.

மாற்கு 10:2 அப்பொழுது பரிசேயர் அவரைச் சோதிக்கவேண்டுமென்று அவரிடத்தில் வந்து, புருஷனானவன் தன் மனைவியைத் தள்ளிவிடுவது நியாயமா என்று கேட்டார்கள்.

மாற்கு 10:3 அவர் பிரதியுத்தரமாக: மோசே உங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறது என்ன என்று கேட்டார்.

மாற்கு 10:4 அதற்கு அவர்கள்: தள்ளுதற்சீட்டை எழுதிக்கொடுத்து, அவளைத் தள்ளிவிடலாமென்று மோசே உத்தரவுகொடுத்திருக்கிறார் என்றார்கள்.

மாற்கு 10:5 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: உங்கள் இருதயக் கடினத்தினிமித்தம் இந்தக் கட்டளையை உங்களுக்கு எழுதிக்கொடுத்தான்.

மாற்கு 10:6 ஆகிலும், ஆதியிலே மனுஷரைச் சிருஷ்டித்த தேவன் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார்.

மாற்கு 10:7 இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்;

மாற்கு 10:8 அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்; இவ்விதமாய் அவர்கள் இருவராயிராமல் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்.

மாற்கு 10:9 ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார்.

"பரிசேயர் அவரைச் சோதிக்க வேண்டுமென்று அவரிடத்தில் வந்தார்கள்" - (மத் 3:7)

"புருஷனானவன் தன் மனைவியைத் தள்ளிவிடுவது நியாயமா" - (மத் 5:31)

"தள்ளிவிடுவது" - விடுதலை பண்ணுவது, ஒப்பந்தத்திலிருந்து விடுவிப்பது (மத் 5:31)

"அவரைச் சோதித்தார்கள்" - கிறிஸ்துவின் காலத்தில் தள்ளிவிடுவதையும் மறுபடியும் திருமணம் செய்வதையும் குறித்துப் பலவிதமான கருத்து வேறுபாடுகள் இருந்தது. ஒருசிலர் புருஷன் தன் மனைவியை எந்தக் காரணத்தைக் காண்பித்து வேண்டுமானாலும் தள்ளிவிடலாம் என்று கூறினார்கள். ஆனால் வேறுசிலரோ எந்தக் காரணமானாலும் காரணம் காண்பித்துத் தள்ளிவிடுவது தவறு. வேசித்தனத்தின் நிமித்தமாக மட்டுமே தள்ளிவிடலாம் என்று கூறினார்கள். யூதரைப் பொறுத்த வரையிலும் தன் மனைவியைத் தள்ளிவிடுவதும் வேறொருத்தியை மறுபடியும் திருமணம் செய்து கொள்வதும் தங்களுடைய உரிமை என்று நினைத்தார்கள். இஸ்ரவேல் முழுவதிலும் இந்தப் பழக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

இந்த இடத்தில் மறுபடியும் திருமணம் பண்ணும் உரிமையைப் பற்றி கேள்வி எழவில்லை. தள்ளிவிடும் உரிமையைப் பற்றியே பரிசேயர் கேள்வி கேட்கிறார்கள். இயேசு கிறிஸ்து எந்தப் பிரிவிற்குச் சாதகமாகப் பேசுகிறார் என்பதை அவர்கள் அறிந்து கொள்ள விரும்பினார்கள். அக்காலத்து வழக்கத்தின் பிரகாரம் ஒரு புருஷன் தன் மனைவியைத் தள்ளிவிடலாம், எத்தனை மனைவிகளை வேண்டுமானாலும் தள்ளிவிடலாம். எத்தனை முறை வேண்டுமானாலும் திருமணம் செய்து கொள்ளலாம். பரிசேயர் இப்படிப்பட்ட கேள்வியைக் கேட்டு இயேசு கிறிஸ்துவை அவமதிக்க விரும்பினார்கள்.

10 அதிகாரம்

அதுமட்டுமல்லாமல், கிறிஸ்துவிற்கும் ஏரோதுவிற்கும் கருத்து வேறுபாட்டை உண்டுபண்ணி, யோவான் ஸ்நானனைச் சிரச்சேதம் பண்ணியதுபோன்று இயேசுவையும் கொன்று போடலாம் என்று சதியாலோசனை செய்தார்கள்.

இயேசு கிறிஸ்துவோ வேசித்தன முகாந்தரத்தினால் மட்டுமே தள்ளுதற்சீட்டை கொடுக்க வேண்டும் என்றும் பிரிவினருக்கு ஆதாரவாகப் பேசினார் (மத் 5:32, மத் 19:3-12). யூதருடைய பழக்க வழக்கத்தையும், அவர் மாற்று முயற்சி பண்ணவில்லை. தள்ளுதற்சீட்டு கொடுக்கும் உரிமை மறுபடியும் திருமணம் புரிவதற்கு அனுமதி அளிக்கிறது.

உபா 24:1-4 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் காரியங்களை இயேசு கிறிஸ்து அப்படியே ஏற்றுக் கொள்கிறார். மோசே கட்டளையிட்ட பிரகாரம் நடந்து கொள்ளுமாறு கூறுகிறார் (மாற்கு 10:3).

இந்தக் கட்டளையை எழுதிக் கொடுத்ததினால் மோசே தேவஆவியினால் ஏவப்படவில்லை என்று கூறாமல் அவர்களுடைய இருதயகடினத்தினிமித்தம் இந்தக் கட்டளையை எழுதிக்கொடுத்ததாக கூறுகிறார். ஆதியிலே மனுஷரைச் சிருஷ்டித்த தேவன் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்று கூறி தேவனுடைய சித்தத்தையும் தெளிவுபடுத்துகிறார் (மாற்கு 10:6-9).

65. மனைவியைத் தள்ளிவிடுவதினால் ஏற்படும் விளைவுகள் (மத் 5:31, 19:10; லூக் 16:18)

மாற்கு 10:10 பின்பு வீட்டிலே அவருடைய சீஷர்கள் அந்தக் காரியத்தைக்குறித்து மறுபடியும் அவரிடத்தில் விசாரித்தார்கள்.

மாற்கு 10:11 அப்பொழுது அவர்: எவனாகிலும் தன் மனைவியைத் தள்ளிவிட்டு, வேறொருத்தியை விவாகம் பண்ணினால், அவன் அவளுக்கு விரோதமாய் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான்.

மாற்கு 10:12 மனைவியும் தன் புருஷனைத் தள்ளிவிட்டு, வேறொருவனை விவாகம் பண்ணினால் விபசாரஞ் செய்கிறவளாயிருப்பாள் என்றார்.

"எவனாகிலும் தன் மனைவியைத் தள்ளிவிட்டு, வேறொருத்தியை விவாகம் பண்ணினால் அவன் அவளுக்கு விரோதமாய் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான்" - இயேசு கிறிஸ்து இந்தக் காரியத்தைத் சீஷர்களிடம் கூறுகிறார் (மாற்கு 10:10-12; லூக்கா 16:18). பரிசேயருக்குத் தள்ளுதற்சீட்டைப் பற்றி இயேசு கிறிஸ்து கூறிய காரியங்களை மத் 5:31-32, மத் 19:3-8 ஆகிய வசனங்களில் நாம் வாசித்தறியலாம்.

விசுவாசிகளுக்குத் தள்ளுதற்சீட்டைக் கொடுக்க வேண்டிய தேவை ஏற்படாது ஏனெனில் அவர்கள் வேசித்தனம் பண்ணுவதில்லை. (மத் 5:31-32; மத் 19:3-8; 1கொரி 7:10-17)

இரட்சிப்பு விசுவாசி என்று அழைக்கப்படுகிறவர்கள் கிறிஸ்துவில் புதுசிருஷ்டி அடைந்தவர்கள். தங்கள் ஜீவியத்தில் ஆவியின் கனியை வெளிப்படுத்துகிறவர்கள் (2கொரி 5:17-18; கலா 5:24; 1பேதுரு 1:21-22; 1பேதுரு 3:18; 1பேதுரு 4:1)

"வேறொருத்தியை விவாகம்பண்ணுதல்" ஒரு புருஷனோ அல்லது மனைவியோ தள்ளுதற்சீட்டைக் கொடாமல் விவாகம் பண்ணுதல் தவறு. இது வேதத்திற்குப் புறம்பான காரியம். மத் 5:31-32, மத் 19:1-8, 1கொரி 7:10-17.

66. இயேசு சிறுபிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார் – (மத் 19:13; லூக் 18:15)

மாற்கு 10:13 அப்பொழுது சிறு பிள்ளைகளை அவர் தொடும்படிக்கு அவர்களை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்; கொண்டுவந்தவர்களைச் சீஷர்கள் அதட்டினார்கள்.

10 அதிகாரம்

மாற்கு 10:14 இயேசு அதைக் கண்டு விசனமடைந்து: சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங் கொடுங்கள்; அவர்களைத் தடை பண்ணாதிருங்கள்; தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது.

மாற்கு 10:15 எவனாகிலும் சிறு பிள்ளையைப்போல் தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவன் அதில் பிரவேசிப்பதில்லை என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி;

மாற்கு 10:16 அவர்களை அணைத்துக் கொண்டு, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை ஆசீர்வதித்தார்.

"இயேசு அதைக் கண்டு, விசனமடைந்தார்" தமது சீஷர்கள் மத்தியிலே அன்பு குறைந்து காணப்படுவதைக் கண்ட இயேசு விசனமடைகிறார்.

67. மிகுந்த ஆஸ்தியுள்ள வாலிபன் - (மத் 19:16, லூக் 18:18)

மாற்கு 10:17 பின்பு அவர் புறப்பட்டு வழியிலே போகையில், ஒருவன் ஓடிவந்து, அவருக்கு முன்பாக முழங்கால்படியிட்டு: நல்ல போதகரே, நித்தியஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி நான் என்னசெய்ய வேண்டும் என்று கேட்டான்.

மாற்கு 10:18 அதற்கு இயேசு: நீ என்னை நல்லவன் என்று சொல்லுவானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லையே.

மாற்கு 10:19 விபசாரஞ் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, வஞ்சனை செய்யாதிருப்பாயாக, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்கிற கற்பனைகளை அறிந்திருக்கிறாயே என்றார்.

மாற்கு 10:20 அதற்கு அவன்: போதகரே, இவைகளையெல்லாம் என் சிறுவயது முதல் கைக்கொண்டிருக்கிறேன் என்றான்.

மாற்கு 10:21 இயேசு அவனைப் பார்த்து, அவனிடத்தில் அன்புகூர்ந்து: உன்னிடத்தில் ஒருகுறைவு உண்டு; நீ போய், உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று, தரித்திரருக்குக் கொடு; அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றிவா என்றார்.

மாற்கு 10:22 அவன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால் இந்த வார்த்தையைக் கேட்டு, மனமடிந்து துக்கத்தோடே போய்விட்டான்.

"நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி நான் என்னசெய்ய வேண்டும்" ஒவ்வொருவருடைய ஜீவியத்திலும் கேட்கப்பட வேண்டிய பிரதான கேள்வி இதுதான். இந்தக்கேள்விக்கு இந்த வசனத்திலும் யோவான் 3:16 ரோமர் 10:9-10; 1யோவான் 1:9, எபே 2:8-9 ஆகிய வசனங்களிலும் நாம் முழுமையான பதிலை வாசிக்கலாம்.

"நீ என்னை நல்லவன் என்று சொல்லுவானேன்?" - (மத் 19:16)

"உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக" - இயேசு கிறிஸ்து அந்த மனுஷனிடம் ஆறு காரியங்களைக் கைக்கொள்ளுமாறு கூறுகிறார். இவை வரிசைப்பிரகாரமாகக் கூறப்படவில்லை. அவனை விரைவில் உணர்த்துவதற்காக இயேசு இவ்வாறு கூறியிருக்கலாம். (ரோமர் 13:7-10)

மாற்கு - தொகுப்புரை

10 அதிகாரம்

"போதகரே" - இப்போது "நல்ல போதகரே" என்று அழைப்பதற்குப் பதிலாக "போதகரே" என்று அழைக்கிறான். தமது சிறு வயது முதல் கற்பனைகளைக் கைக்கொள்வதாகக் கூறுகிறான். இயேசு கிறிஸ்து அவன்மீது அன்புகூர்ந்து இன்னும் ஒரு கற்பனையையும் அவனுக்குக் கூறுகிறார். அவன் பத்தாவது கற்பனையைக் கைக்கொள்ளவில்லை. அவன் தன்னைப்போல பிறரை நேசிக்கவில்லை. (உபா 5:21; மத் 19:9)

"நீ போய், உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று____" இயேசு கிறிஸ்து கூறிய கட்டளையில் ஆறு காரியங்கள் அடங்கியிருக்கிறது. அவையாவன:

1. நீ போ
2. உனக்கு உண்டானவைகளையெல்லாம் வில்
3. தரித்திரருக்குக் கொடு
4. என்னிடத்தில் வா
5. சிலுவையை எடுத்துக்கொள்
6. என்னைப் பின்பற்றிவா

68. ஐசுவரியவான்களுக்கு எச்சரிப்பு
(மத் 6:19; 19:23; லூக் 18:24)

மாற்கு 10:23 அப்பொழுது இயேசு சுற்றிப்பார்த்து, தம்முடைய சீஷரை நோக்கி: ஐசுவரியமுள்ளவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது என்றார்.

மாற்கு 10:24 சீஷர்கள் அவருடைய வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள். இயேசு பின்னும் அவர்களை நோக்கி: பிள்ளைகளே, ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கையாயிருக்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறது எவ்வளவு அரிதாயிருக்கிறது.

மாற்கு 10:25 ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்றார்.

மாற்கு 10:26 அவர்கள் பின்னும் அதிகமாய் ஆச்சரியப்பட்டு, அப்படியானால் யார் இரட்சிக்கப்படக்கூடும் என்று தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள்.

மாற்கு 10:27 இயேசு அவர்களைப் பார்த்து: மனுஷரால் இது கூடாததுதான், தேவனால் இது கூடாததல்ல; தேவனாலே எல்லாம் கூடும் என்றார்.

"ஐசுவரியமுள்ளவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது" - தேவன் ஐசுவரியவான். மிகவும் கிருபையாகவே இருக்கிறார். அவருடைய இரக்கத்திற்குக் குறைவில்லை. ஆனால் ஐசுவரியவான்கள் தங்களுடைய ஐசுவரியத்தைத் தேவநாம மகிமைக்காகவும் பிறருடைய நன்மைக்காகவும் பயன்படுத்துவதில்லை. அவர்கள் தங்கள் ஐசுவரியத்தில் நம்பிக்கை வைக்கிறார்கள். அவ்வாறு நம்பிக்கை வைப்பதற்குப் பதிலாக அவர்கள் கர்த்தரிடத்திலே நம்பிக்கை வைக்க வேண்டும். (மாற்கு 10:24; 1தீமோ 6:9-12,17-19)

"ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கையாயிருக்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறது எவ்வளவு அரிதாயிருக்கிறது" - ஐசுவரியவான்களில் ஒரு சிலர் மட்டுமே இரட்சிக்கப்படுகிறார்கள். இதற்கான காரணத்தை இயேசு கிறிஸ்து இங்கு தெளிவுபடுத்துகிறார். மாற்கு 10:23

மாற்கு - தொகுப்புரை

10 அதிகாரம்

"ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில பிரவேசிப்பதைப்பார்க்கிலும் ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும்" - மத் 19:24)

"அவர்கள் பின்னும் அதிகமாய ஆச்சரியப் பட்டார்கள்" - மாற்கு 10:24-இல "சீஷர்கள் அவருடைய வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்" என்று வாசிக்கிறோம் இங்கு அவர்கள் இன்னும அதிகமாய ஆச்சரியப்படுகிறார்கள இதற்கான காரணம் என்ன? செல்வந்தர்கள் தாங்கள் விரும்பும் எதையும் பணத்தால வாங்கிவிடலாம் என்று நினைக்கிறார்கள் ஆனால அவர்களால தங்களுடைய இரட்சிப்பை பணத்தால வாங்கமுடியாது. இயேசுகிறிஸது கூறுவதை அவருடைய சீஷர்களால எளிதாகப் புரிந்து கொள்ள முடியவில்லை அவர்களும் மற்றவர்களைப போலவே "ஐசுவரியவான்களால் எல்லாம முடியும்" என்று நம்பினார்கள்

"அப்படியானால யார் இரட்சிக்கப்படக்கூடும்" செல்வந்தனோ ஏழையோ இயேசு கிறிஸதுவின கிருபையினால விசுவாசத்தால யாரும் இரட்சிக்கப்பட முடியும் நமது கிரியையினால அல்ல. தேவனுடைய கிருபையினாலேயே நாம் இரட்சிக்கப்படுகிறோம இரட்சிப்பு இலவசமானது ஐசுவரியவானகள தங்களைத் தாழ்த்த வேண்டும் ஏழைகளைப போலவே ஐசுவரியவானகளும் தஙகளைத் தாழ்த்தி, கிறிஸ்துவண்டை வரவேண்டும். இயேசு கிறிஸ்துவைப் பொருத்தவரையிலும் ஐசுவரியவான், ஏழை என்று பட்சபாதம் இல்லை. (யோவான் 3:16-18; 1தீமோ 2:4; 2பேதுரு 3:9, வெளி 22:17)

செல்வந்தனாக இருப்பதினால் அவன இரட்சிக்கப்படுவதற்குத் தடை ஏதும் இல்லை தன்னுடைய பாவங்களை அறிக்கையிட்டு. மனந்திருந்தி வருகிற யாவரையும் இயேசு கிறிஸது புறம்பே தள்ளாமல. அவர்களை இரட்சித்து, தம்மிடத்தில ஏற்றுக கொள்கிறார ரோமர் 3:24 31 ரோமர் 5:1-11, ரோமர் 10:9-10, எபே 2:8 9 1யோவான் 1:9

ஐசுவரியவான்களுக்குப் பல பிரச்சனைகளும், போராட்டங்களும் உண்டு இரட்சிப்பை விட பல காரியங்களுக்கு அவர்கள் முக்கியத்துவம் கொடுப்பார்கள் இரட்சிக்கப்படுவதற்கு தன்னுடைய ஐசுவரியத்தையெல்லாம் ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டுத்தான் வரவேண்டும் என்னும கட்டாயமில்லை. விசுவாசத்தோடு வந்தாலே போதுமானது. ஆனாலும் கர்த்தர் ஐசுவரியவானிடம அந்தக் காரியத்தைச் செய்யுமாறு எதிர்பார்த்தால அவன் நிச்சயமாகவே தன் ஐசுவரியத்தை விட்டுவிட்டுத் தான் வரவேண்டும் இங்கு வலியுறுத்தப்படுவது என்னவென்றால் ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தின்மீது நம்பிக்கை வையாமல இயேசுகிறிஸதுவிடத்தில நம்பிக்கை வைக்க வேண்டும் என்பதுதான்

69. முழுமையான அர்ப்பணிப்பிற்கு வெகுமதிகள் - (மத் 19:27; லூக் 18:28)

மாற்கு 10:28 அப்பொழுது பேதுரு அவரை நோக்கி: இதோ நாஙகள எல்லாவற்றையுமவிட்டு. உமமைப பின்பற்றினோமே என்று சொல்லத் தொடங்கினான

மாற்கு 10:29 அதற்கு இயேசு பிரதியுத்தரமாக: என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும் வீட்டையாவது சகோதரரையாவது சகோதரிகளையாவது தகப்பனையாவது தாயையாவது மனைவியையாவது பிள்ளைகளையாவது நிலஙகளையாவது விட்டவன எவனும்

மாற்கு 10:30 இப்பொழுது இம்மையிலே துன்பஙகளோடே கூட நூறத்தனையாக வீடுகளையும், சகோதரரையும் சகோதரிகளையும், தாயகளையும் பிள்ளைகளையும், நிலஙகளையும் மறுமையிலே நித்தியஜீவனையும் அடைவான என்று மெய்யாகவே உஙகளுக்குச் சொல்லுகிறேன்

மாற்கு 10:31 ஆகிலும் முந்தினோர் அநேகர பிந்தினோராயும் பிந்தினோர் அநேகர முந்தினோராயும் இருப்பார்கள் என்றார்

10 அதிகாரம்

"இதோ நாங்கள் எல்லாவற்றையும்விட்டு, உம்மைப் பின்பற்றினோமே" - (மத் 19:27-30)

தீர்க்கதரிசனம் எண் - 11

"என்னிமித்தமாகவும், சுவிசேஷத்தின் நிமித்தமாகவும், வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனும் இப்பொழுது இம்மையிலே, துன்பங்களோடே கூட நூறத்தனையாக, வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமையிலே நித்தியஜீவனையும் அடைவான்" (மாற்கு 10:29-31) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக்கொண்டிருக்கிறது. வரப்போகிற நாட்களில் இன்னும் நிறைவேறும்.

"நித்திய ஜீவன்" - (யோவான் 6:27)

70. இயேசு தமது மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் மறுபடியும் முன்குறித்துக் கூறுகிறார் - (மத் 16:21)

மாற்கு 10:32 பின்பு அவர்கள் எருசலேமுக்குப் பிரயாணமாய்ப் போகையில், இயேசு அவர்களுக்கு முன்னே நடந்துபோனார், அவர்கள் திகைத்து, அவருக்குப் பின்னே பயத்தோடே போனார்கள். அப்பொழுது அவர் பன்னிருவரையும் அழைத்து, தமக்குச் சம்பவிக்கப்போகிறவைகளை அவர்களுக்கு மறுபடியும் சொல்லத் தொடங்கினார்:

மாற்கு 10:33 இதோ, எருசலேமுக்குப் போகிறோம்; அங்கே மனுஷகுமாரன் பிரதான ஆசாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும் ஒப்புக்கொடுக்கப்படுவார்; அவர்கள் அவரை மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, புறத்தேசத்தாரிடத்தில் ஒப்புக்கொடுப்பார்கள்.

மாற்கு 10:34 அவர்கள் அவரைப் பரியாசம்பண்ணி, அவரை வாரினால் அடித்து, அவர்மேல் துப்பி, அவரைக் கொலைசெய்வார்கள்; ஆகிலும் மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார் என்றார்.

"அவர்கள் எருசலேமுக்குப் பிரயாணமாய்ப் போகையில் இயேசு அவர்களுக்கு முன்னே நடந்துபோனார். அவர்கள் திகைத்து அவருக்குப் பின்னே பயத்தோடே போனார்கள்" - இயேசு கிறிஸ்து எருசலேமிலே மரிப்பதற்காகப் போகிறார். ஆகையினால் சீஷர்கள் திகைத்து அவருக்குப் பின்னே பயத்தோடே போகிறார்கள் (மாற்கு 10:32-33)

தீர்க்கதரிசனம் எண் - 12

"இதோ, எருசலேமுக்குப் போகிறோம், அங்கே மனுஷகுமாரன் பிரதான ஆசாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும் ஒப்புக்கொடுக்கப்படுவார்; அவர்கள் அவரை மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து புறத்தேசத்தாரிடத்தில் ஒப்புக்கொடுப்பார்கள். அவர்கள் அவரைப் பரியாசம் பண்ணி, அவரை வாரினால் அடித்து, அவர்மேல் துப்பி, அவரைக் கொலைசெய்வார்கள். ஆகிலும் மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார்" (மாற்கு 10:33-34) - இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இயேசு கிறிஸ்து தமது பாடுகளைப் பற்றி அறிவித்த நான்காவது அறிவிப்பு (மாற்கு 8:31; மாற்கு 9:12,31). இந்தத் தீர்க்கதரிசனத்தில் பத்து காரியங்கள் அடங்கியிருக்கிறது. அவையாவன:

1. இடம் - எருசலேம்
2. பிரதான ஆசாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும் ஒப்புக் கொடுக்கப்படுவார்
3. அவர்கள் அவரை மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பார்கள்

மாற்கு - தொகுப்புரை

10 அதிகாரம்

4 புறத்தேசத்தாரிடத்தில் ஒப்புக் கொடுப்பார்கள்

5 புறத்தேசத்தார் அவரைப் பரியாசம் பண்ணுவார்கள்

6 புறதேசத்தார் அவரை வாரினால் அடிப்பார்கள்

7 புறதேசத்தார் அவர்மேல் துப்புவார்கள்

8 புறதேசத்தார் அவரைக் கொலை செய்வார்கள்

9 மூன்றுநாட்கள் அடக்கம் பண்ணப் பட்டிருப்பார்

10. மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார்

71. யாக்கோபு, யோவான் ஆகியோரின் மாம்ச ஆவல் - (மத் 20:20, 28)

மாற்கு 10:35 அப்பொழுது செபெதேயுவின் குமாரராகிய யாக்கோபும் யோவானும் அவரிடத்தில் வந்து: போதகரே, நாங்கள் கேட்டுக்கொள்ளப் போகிறதை நீர் எங்களுக்குச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறோம் என்றார்கள்

மாற்கு 10:36 அவர் அவர்களை நோக்கி: நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்கள் என்று கேட்டார்

மாற்கு 10:37 அதற்கு அவர்கள்: உமது மகிமையிலே, எங்களில் ஒருவன் உமது வலதுபாரிசத்திலும் ஒருவன் உமது இடதுபாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி எங்களுக்கு அருள்செய்யவேண்டும் என்றார்கள்

மாற்கு 10:38 இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் கேட்டுக் கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்கே தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும், உங்களால் கூடுமா என்றார்

மாற்கு 10:39 அதற்கு அவர்கள் கூடும் என்றார்கள் இயேசு அவர்களை நோக்கி: நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்

மாற்கு 10:40 ஆனாலும் என் வலது பாரிசத்திலும் என் இடது பாரிசத்திலும் உட்காரும்படி எவர்களுக்கு ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கே அல்லாமல் மற்றொருவருக்கும் அதை அருளுவது என் காரியமல்ல என்றார்

"செபெதேயுவின் குமாரராகிய யாக்கோபும் யோவானும் அவரிடத்தில் வந்தார்கள்" - மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் இவருடைய தாயார் இயேசுவிடத்தில் வந்து இந்தக் காரியங்களைக் கூறியதாக எழுதப்பட்டிருக்கிறது. (மத் 20:21)

"உமது மகிமையிலே" - அவர்கள் வரப்போகிற மகிமையையும் மேசியாவின் ராஜ்யத்தையும் புரிந்து கொண்டார்கள் என்பதை இது விளக்குகிறது (மத் 16:27-28)

"நான் குடிக்கும் பாத்திரம்" - (மத் 20:22

"நான் பெறும் ஸ்நானம்" பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம். இந்த வேளையில் இயேசு கிறிஸ்து மட்டுமே பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றிருந்தார் (மத் 3:16)

தீர்க்கதரிசன எண் - 13

"நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள் நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்" (மாற்கு 10:39) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. யாக்கோபும் யோவானும் இயேசு கிறிஸ்துவின் பாடுகளின் பாத்திரத்தில் பங்குபெறுவார்கள் (மத் 20:22) பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெறுவார்கள் (மத் 3:16, அப் 1:4-8, அப் 2:1-11)

10 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 14

"எவர்களுக்கு ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கு அருளப்படும்" (மாற்கு 10:4) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை ஏனெனில் தேவனுடைய ராஜ்யம் இன்னும் வரவில்லை (மத் 4:17

"ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிறது" - இது பிதாவின் கரத்தில் இருக்கிறது. (மத் 20:23)

72. மற்ற பத்து பேரின் மாம்ச கோபம் - (மத் 20:24; 18:1)

மாற்கு 10:41 மற்ற பத்துபேரும் அதைக் கேட்டு, யாக்கோபின்மேலும் யோவானின் மேலும் எரிச்சலானார்கள்

மாற்கு 10:42 அப்பொழுது, இயேசு அவர்களைக் கிட்டவரச்செய்து, புறஜாதியாருக்கு அதிகாரிகளாக எண்ணப்பட்டவர்கள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், அவர்களில் பெரியவர்கள் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரம் செலுத்துகிறார்கள் என்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்

மாற்கு 10:43 உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது, உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக் காரனாயிருக்கக்கடவன்

மாற்கு 10:44 உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக்கடவன்

மாற்கு 10:45 அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்

"மற்ற பத்துபேரும் அதைக் கேட்டு, யாக்கோபின்மேலும் யோவானின் மேலும் எரிச்சலானார்கள்" - (மத் 20:24-28

பணிவிடைக்காரன் (minister) - διάκονος - diakonos - 1249

ஆண்பால் அல்லது பெண்பால் பெயர்சொல் - பணிவிடைக்காரன் ஊழியக்காரன், வேலைக்காரன் ஊழியஞ்செய்கிறவர் உதவிக்காரர் (மத் 20:26)

தீர்க்கதரிசன எண் - 15

"மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல் ஊழியஞ் செய்யவும் அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" (மாற்கு 10:45) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று

"அநேகரை மீட்கும்பொருள்" - (மத் 20:28)

73. இயேசு குருடனைக் குணப் படுத்துகிறார் - (மத் 9:27, 20:29; லூக் 18:35)

மாற்கு 10:46 பின்பு அவர்கள் எரிகோவுக்கு வந்தார்கள். அவரும் அவருடைய சீஷர்களும் திரளான ஜனங்களும் எரிகோவை விட்டுப் புறப்படுகிறபோது, திமேயுவின் மகனாகிய பர்திமேயு என்கிற ஒரு குருடன் வழியருகே உட்கார்ந்து பிச்சை கேட்டுக்கொண்டிருந்தான்

மாற்கு 10:47 அவன் நசரேயனாகிய இயேசு வருகிறாரென்று கேள்விப்பட்டு: இயேசுவே, தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும் என்று கூப்பிடத் தொடங்கினான்

மாற்கு 10:48 அவன் பேசாதிருக்கும்படி அநேகர் அவனை அதட்டினார்கள். அவனோ: தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும் என்று முன்னிலும் அதிகமாகக் கூப்பிட்டான்

மாற்கு 10:49 இயேசு நின்று, அவனை அழைத்து வரச்சொன்னார். அவர்கள் அந்தக் குருடனை அழைத்து: திடன்கொள், எழுந்திரு, உன்னை அழைக்கிறார் என்றார்கள்

10 அதிகாரம்

மாற்கு 10:50 உடனே அவன் தன் மேல்வஸ்திரத்தை எறிந்துவிட்டு எழுந்து, இயேசுவினிடத்தில் வந்தான்

மாற்கு 10:51 இயேசு அவனை நோக்கி: நான் உனக்கு என்ன செய்யவேண்டும் என்றிருக்கிறாய் என்றார். அதற்கு அந்தக் குருடன்: ஆண்டவரே, நான் பார்வையடைய வேண்டும் என்றான்

மாற்கு 10:52 இயேசு அவனை நோக்கி: நீ போகலாம், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். உடனே அவன் பார்வையடைந்து, வழியிலே இயேசுவுக்குப் பின்சென்றான்

"எரிகோ" - (யோசு 2:1)

"அவன் பேசாதிருக்கும்படி அநேகர் அவனை அதட்டினார்கள். அவனோ: தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று முன்னிலும் அதிகமாய்க் கூப்பிட்டான்" எல்லோரும் குருடனை அமைதியாக இருக்குமாறு அதட்டினார்கள். ஆனால் அவன் தன் ஜெபத்தை நிறுத்தவில்லை. தன்னுடைய தேவை சந்திக்கப்பட வேண்டும், தான் பார்வையடைய வேண்டும் என்று இயேசுவிடம் தொடர்ந்து விண்ணப்பம் பண்ணுகிறான். முன்னிலும் அதிகமாய்க் கூப்பிட்டான். நாமும் நாம் ஏறெடுக்கும் ஜெபத்தில் இடைவிடாமல் ஜெபம் பண்ண வேண்டும் என்பதற்கு இவன் ஒரு முன்மாதிரியாக இருக்கிறான்

"இயேசு நின்று, அவனை அழைத்து வரச்சொன்னார்" இயேசுகிறிஸ்து எரிகோவிற்கு வரும்போது அவர் நான்கு குருடர்களைப் பார்வையடையச்செய்கிறார். மூன்று இடங்களில் சொஸ்தமாக்குகிறார்

1 அவர் எரிகோவுக்குச் சமீபமாய் வரும்போது (லூக்கா 18:35-43)

2 அவர் எரிகோவை விட்டுப் புறப்படுகிற போது (மாற்கு 10:46-52)

3 அவர் எரிகோவிலிருந்து புறப்பட்டுப் போகையில் (மத் 20:29-34) இந்த இடத்தில் இரண்டு குருடர்கள் வருகிறார்கள். மற்ற இடத்தில் ஒரு குருடன் மட்டுமே வருகிறான்

"உடனே அவன் தன் மேல்வஸ்திரத்தை எறிந்துவிட்டு, எழுந்து, இயேசுவினிடத்தில் வந்தான்" - தன்னால் முடிந்தவரையிலும் இயேசுவிடம் விரைவாக வந்து சேர வேண்டுமென்று விரும்பினான். இயேசுவை ஆர்வத்தோடு தேடினால் நிச்சயமாக அவரைக் கண்டடைவோம். தனக்குத் தடையாக இருக்கும் மேல்வஸ்திரத்தை எறிந்துவிட்டு, இயேசுவிடம் விரைவாக வந்தான். நாமும்கூட ஜெபம் பண்ணுவதற்குத் தடையாக இருக்கும் காரியங்களை உதறி எறிந்துவிட்டு, இயேசுவிடம் ஆர்வத்தோடு ஜெபிக்க வேண்டும். இவன் அதிக சத்தமாகக் கூப்பிட்டபோது இவனுடைய விசுவாசம் வளர்ந்தது. மற்றவர்கள் இவனைப் பேசாதிருக்குமாறு அதட்டியபோதும் இவனுடைய விசுவாசம் வளர்ந்தது. தனது விண்ணப்பத்தை இயேசு கிறிஸ்து அங்கீகரித்து தனக்குப் பார்வை கொடுப்பார் என்று நம்பினான். நம்பியதைப் பெற்றுக்கொண்டான்

"நான் உனக்கு என்ன செய்யவேண்டும் என்றிருக்கிறாய்" - அவனுடைய தேவை என்ன என்பது இயேசுவிற்குத் தெரியும். ஆயினும் அவனுடைய உண்மையான விசுவாசத்தை வெளிப்படுத்துவதற்காக அவனுடைய தேவை என்ன என்று கேட்கிறார். கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள். இவையெல்லாம் நாம் ஜெபத்தில் செய்ய வேண்டியவை. கர்த்தர் நமது ஜெபத்திற்குப் பதில்கொடுப்பார் (மத் 7:7-11; மத் 21:21-22)

"நீ போகலாம், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" நமது விசுவாசித்திற்குக் கர்த்தர் எப்போதுமே பலன் அளிக்க விரும்புகிறார். பலவேளைகளில் சில காரியம் மனுஷனால் கூடாதகாரியம் போன்று தெரியலாம். ஆனாலும் கர்த்தரால் எல்லாம்கூடும். (மத் 17:20; மத் 21:21-22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24) மனுஷர் தங்களுடைய விசுவாசத்தின் பிரகாரமாகவே பெற்றுக் கொள்வார்கள் (மத் 9:29). தம்மிடத்தில் விசுவாசத்தோடு வருகிற யாரையும் கர்த்தர் புறம்பே தள்ளுவதில்லை.

மாற்கு - தொகுப்புரை

11 அதிகாரம்

74. வெற்றிப்பவனி - (சக 9:9; மத் 21:1; லூக் 19:28; யோவான் 12:12)

மாற்கு 11:1 அவர்கள் எருசலேமுக்குச் சமீபமாய்ச் சேர்ந்து, ஒலிவமலைக்கு அருகான பெத்பகே பெத்தானியா என்னும் ஊர்களுக்கு வந்தபோது, அவர் தம்முடைய சீஷரில் இரண்டுபேரை நோக்கி:

மாற்கு 11:2 உங்களுக்கு எதிரேயிருக்கிற கிராமத்துக்குப் போங்கள்; அதில் பிரவேசித்தவுடனே, மனுஷர் ஒருவரும் ஒருக்காலும் ஏறியிராத ஒரு கழுதைக்குட்டி கட்டியிருக்கக் காண்பீர்கள்; அதை அவிழ்த்துக் கொண்டு வாருங்கள்.

மாற்கு 11:3 ஏன் இப்படிச் செய்கிறீர்கள் என்று ஒருவன் உங்களிடத்தில் கேட்டால்: இது ஆண்டவருக்கு வேண்டுமென்று சொல்லுங்கள்; உடனே அதை இவ்விடத்திற்கு அனுப்பிவிடுவான் என்று சொல்லி, அவர்களை அனுப்பினார்.

மாற்கு 11:4 அவர்கள் போய், வெளியே இருவழிச் சந்தியில் ஒரு வாசலருகே கட்டியிருந்த அந்தக் குட்டியைக் கண்டு, அதை அவிழ்த்தார்கள்.

மாற்கு 11:5 அப்பொழுது அங்கே நின்றவர்களில் சிலர்: நீங்கள் குட்டியை அவிழ்க்கிறது என்னவென்றார்கள்.

மாற்கு 11:6 இயேசு கற்பித்தபடியே அவர்களுக்கு உத்தரவு சொன்னார்கள். அப்பொழுது அவர்களைப் போகவிட்டார்கள்.

மாற்கு 11:7 அவர்கள் அந்தக் குட்டியை இயேசுவினிடத்தில் கொண்டுவந்து, அதின்மேல் தங்கள் வஸ்திரங்களைப் போட்டார்கள்; அவர் அதின்மேல் ஏறிப்போனார்.

மாற்கு 11:8 அநேகர் தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள்; வேறு சிலர் மரக்கிளைகளைத் தறித்து வழியிலே பரப்பினார்கள்.

மாற்கு 11:9 முன்நடப்பாரும் பின்நடப்பாரும்: ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்.

மாற்கு 11:10 கர்த்தரின் நாமத்தினாலே வருகிற நம்முடைய பிதாவாகிய தாவீதின் ராஜ்யம் ஆசீர்வதிக்கப்படுவதாக; உன்னதத்திலே ஓசன்னா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள்.

மாற்கு 11:11 அப்பொழுது, இயேசு எருசலேமுக்கு வந்து, தேவாலயத்தில் பிரவேசித்து, எல்லாவற்றையும் சுற்றிப்பார்த்து, சாயங்காலமானபோது பன்னிருவரோடுங்கூடப் பெத்தானியாவுக்குப் போனார்.

"பெத்பகே பெத்தானியா" - பெத்பகே என்பதற்கு அத்திப்பழங்களின் வீடு என்பது பொருள். பெத்தானியா என்பதற்கு பேரீச்சம்பழங்களின் வீடு என்று பொருள். இவ்விரண்டு ஊர்களுக்கும் இடையே ஒருமைல் தூரம் இடைவெளி இருந்தது. (மத் 21:1)

தீர்க்கதரிசன எண் - 10

"உங்களுக்கு எதிரேயிருக்கிற கிராமத்துக்குப் போங்கள்......" (மாற்கு 11:2-3) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"மனுஷர் ஒருவரும் ஒருக்காலும் ஏறியிராத ஒரு கழுதைக்குட்டி கட்டியிருக்கக் காண்பீர்கள்" - தேவனுக்குச் சொந்தமான அவருடைய பிள்ளைகள் அவருக்குக் கீழ்ப்படிவதை விட இந்தக் கழுதைக்குட்டியானது அவருக்குக் கீழ்ப்படிகிறது. (யோவான் 1:11)

"அவர்கள் போய், வெளியே இருவழிச் சந்தியில் ஒரு வாசலருகே கட்டியிருந்த அந்தக் குட்டியைக் கண்டு, அதை அவிழ்த்தார்கள்" - மாற்கு 11:2-3 ஆகிய வசனங்களின் நிறைவேற்றம்.

11 அதிகாரம்

"அதின்மேல் தங்கள் வஸ்திரங்களைப் போட்டார்கள்; அவர் அதின்மேல் ஏறிப்போனார்" - (மத் 21:8)

"ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்" - சங் 118:25-26 ஆகிய வசனங்களிலிருந்து மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்த வாக்கியத்திற்கு "இப்போது எங்களை இரட்சியும் அல்லது எங்களுக்கு உதவி புரியும் என்று பொருள் இயேசு கிறிஸ்துவின் இரண்டாவது வெற்றி பவனி (மத் 21:9)

தேவாலயம் (temple) - ἱερόν - hieron - 2411

பால வேறுபாடற்ற பெயர்ச்சொல்- தேவாலயம். ஆலயம். கோவில் (temple courts, sanctuary itself)

"எல்லாவற்றையும் சுற்றிப்பார்த்தார்" - தேவாலயத்துப் பிரகாரங்களில் என்ன காரியங்கள் நடைபெறுகிறது என்பதை இயேசு கிறிஸ்து சுற்றிப்பார்க்கிறார் இரண்டு நாட்களுக்கு முன்பு தேவாலயத்தில் காசுக்காரர்களையும், விற்கிறவர்களையும் துரத்தினார் (மத் 21:12-16) அதுபோன்ற காரியத்தை இப்போது அவர் செய்யவில்லை அவருடைய ஊழியத்தின் ஆரம்பத்தில் இதுபோன்ற காரியம் நடைபெற்றது. (யோவான் 2:13) இப்போது இயேசு தேவாலயத்திற்கு வரும்போது. எல்லாம் சரியாக இருக்கிறது. அடுத்த நாளில் இயேசு கிறிஸ்து தேவாலயத்திற்கு வந்து. இரண்டாம் முறையாக அதைச் சுத்திகரிக்கிறார் (மாற்கு 11:15-17)

75. கனிதராத அத்தி மரத்தை சபிக்கிறார் - (மத் 21:17; லூக் 13:6)

மாற்கு 11:12 மறுநாளிலே அவர்கள் பெத்தானியாவிலிருந்து புறப்பட்டு வருகையில், அவருக்குப் பசியுண்டாயிற்று.

மாற்கு 11:13 அப்பொழுது இலைகளுள்ள ஒரு அத்திமரத்தைத் தூரத்திலே கண்டு, அதில் ஏதாகிலும் அகப்படுமோ என்று பார்க்க வந்தார். அத்திப்பழக் காலமாயிராதபடியால், அவர் அதினிடத்தில் வந்தபோது அதில் இலைகளையல்லாமல் வேறொன்றையும் காணவில்லை.

மாற்கு 11:14 அப்பொழுது இயேசு அதைப் பார்த்து. இதுமுதல் ஒருக்காலும் ஒருவனும் உன்னிடத்தில் கனியைப் புசியாதிருக்கக் கடவன் என்றார் அதை அவருடைய சீஷர்கள் கேட்டார்கள்

"மறுநாளிலே" - (மத் 12:40)

"இலைகளுள்ள ஒரு அத்திமரத்தைத் தூரத்திலே கண்டார்" - இரண்டு வகையான அத்திமரங்கள் உண்டு. முதலாவது வகை சீக்கிரமாகவே பழுக்கக்கூடியவை (ஏசா 28:4 எரே 24:2) இரண்டாம் வகை காலந்தாழ்த்திப் பழுக்கக்கூடியவை (எரே 8:13 எரே 29:17) அத்திமரத்தில் இலைகள் இருந்தால் அதில் கனிகள் இருக்கும். பழக்காலம் வராவிட்டாலும். மரத்தில் இலை காணப்படுமானால் அதில் பழங்கள் இருக்கும் என்பதற்கு அடையாளம்

தீர்க்கதரிசன எண் - 17

"இதுமுதல் ஒருக்காலும் ஒருவனும் உன்னிடத்தில் கனியைப் புசியாதிருக்கக் கடவன்" - (மாற்கு 11:14) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேற்றுற்று. (மாற்கு 11:20)

இந்த வசனத்திற்கு பலவிதமான விளக்கவுரைகளைக் கூறுகிறார்கள் இந்த அத்திமரம் யாருக்குச் சொந்தமானது என்பதைப் பற்றியும் இயேசு கிறிஸ்து அந்த மரத்தைச் சபித்ததைப் பற்றியும் ஆராய்ச்சி செய்கிறார்கள் இந்த ஆராய்ச்சிகளை விட இயேசு கிறிஸ்துவே சிருஷ்டிகர் என்பதையும், அவருக்குச் சகல சிருஷ்டியின்மீதும் அதிகாரம் உள்ளது என்பதையும் நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது (யோவான் 1:3 எபே 3:9 கொலோ 1:16) பிதாவாகிய தேவன் தமது குமாரன் மூலமாகக் கிரியை செய்கிறார் (யோவான் 5:30,36 யோவான் 7:16 யோவான் 8:28 யோவான் 14:10) தேவனுடைய கிரியையைத் தாக்கம் பண்ணுவதற்கு நமக்கு உரிமையில்லை. (ரோமர் 9:14-24)

11 அதிகாரம்

70. தேவாலயத்தின் இரண்டாம் சுத்திகரிப்பு - (மத் 21:12 லூக் 19:45)

மாற்கு 11:15 அவர்கள் எருசலேமுக்கு வந்தார்கள் இயேசு தேவாலயத்தில் பிரவேசித்து, ஆலயத்தில் விற்கிறவர்களையும் கொள்ளுகிறவர்களையும் துரத்திவிட்டு காசுக்காரருடைய பலகைகளையும் புறா விற்கிறவர்களுடைய ஆசனங்களையும் கவிழ்த்து,

மாற்கு 11:16 ஒருவனும் தேவாலயத்தின் வழியாக யாதொரு பண்டத்தையும் கொண்டு போகவிடாமல்,

மாற்கு 11:17 என்னுடைய வீடு எல்லா ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும் என்று எழுதியிருக்கவில்லையா? நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்று அவர்களுக்குச் சொல்லி உபதேசித்தார்.

மாற்கு 11:18 அதை வேதபாரகரும் பிரதான ஆசாரியரும் கேட்டு, அவரைக் கொலை செய்ய வகைதேடினார்கள்; ஆகிலும் ஜனங்களெல்லாரும் அவருடைய உபதேசத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டபடியினாலே அவருக்குப் பயந்திருந்தார்கள்.

மாற்கு 11:19 சாயங்காலமானபோது அவர் நகரத்திலிருந்து புறப்பட்டுப்போனார்.

"தேவாலயம்" - தேவாலயத்தின் பிரகாரங்கள், தேவாலயத்திற்கு உள்ளே இருக்கும் மகாபரிசுத்த ஸ்தலம் அல்ல.

"இயேசு தேவாலயத்தில் பிரவேசித்து ஆலயத்தில் விற்கிறவர்களையும் கொள்ளுகிறவர்களையும் துரத்திவிட்டு, காசுக்காரருடைய பலகைகளையும், புறா விற்கிறவர்களுடைய ஆசனங்களையும் கவிழ்த்தார்" - இயேசு கிறிஸ்துவின் இறுதி வார ஊழியத்தில் இரண்டாம் முறையாக அவர் தேவாலயத்தைச் சுத்திகரித்தார். மொத்தம் மூன்று முறை அவர் தேவாலயத்தைச் சுத்திகரிப்பதாக வாசிக்கிறோம். (யோவான் 2:13; மத் 21:12-16) தேவாலயத்தை அவர் எவ்வாறு தனிநபராக இருந்து, சுத்திகரித்தார் அவருக்குப் பலத்த எதிர்ப்பு இருந்தபோதிலும் அதற்கு நடுவில் எவ்வாறு இந்தக் காரியத்தைச் செய்தார் இதற்கெல்லாம் தேவனுடைய வல்லமை அவர்மூலமாக வெளிப்பட்டதே காரணம். இயேசு கிறிஸ்து தேவாலயத்தில் இப்படிப்பட்ட கிரியையைச் செய்ததினால் தேவாலயத்துத் தலைவர்கள் அவரைக் கொலைசெய்வதற்காகச் சதியாலோசனை பண்ணினார்கள் (மாற்கு 11:18)

"என்னுடைய வீடு எல்லா ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும்" - எழுதப்பட்ட வார்த்தைக்கு இயேசு கிறிஸ்து விளக்கம் எதுவும் தரவில்லை. அவர் கூறுவதற்கு வியாக்கியானம்கூட தேவைப்படாது. புரிந்து கொள்வதற்கு மிகவும் எளிமையானதாக இருக்கும் வேதாகமமும் புரிந்து கொள்வதற்கு எளிமையானது. அதற்கான காரணங்கள்

1. பரிசுத்த வேதாகமம் தேவனுடைய வெளிப்பாடு (2தீமோ 3:16-17, 2பேதுரு 1:21; எபி 1:1)

2. ஏற்கெனவே கூறியுள்ள சத்தியத்தைப் பரிசுத்த வேதாகமம் மறுபடியும் வலியுறுத்துகிறது. (2கொரி 13:1) தேவன் என்ன சொல்கிறார் அதை எங்கே சொல்கிறார் என்பதை வாசித்து விட்டு, அதற்கு நாம் அப்படியே கீழ்ப்படிய வேண்டும்.

3. வேதாகமத்தின் மொழிநடை மிகவும் எளிமையானது. (லூக்கா 24:25,45)

4. பரிசுத்த வேதாகமத்திற்குக் கர்த்தரே ஆசிரியர் (2தீமோ 3:16-17, 2பேதுரு 1:21)

5. தேவனை நம்பும் ஜனங்கள் எளிதாகப் புரிந்து கொள்ளும் விதத்தில் வேதாகமம் எழுதப்பட்டிருக்கிறது (உபா 29:29 மத் 11:25 மத் 13:19-23; 2கொரி 4:3-6, 2தீமோ 3:16-17)

11 அதிகாரம்

6. வேதவசனங்களைப் புரிந்து கொள்வதற்கு அதை வாசித்து அதற்குக் கீழ்ப்படிந்தாலே போதுமானது. (சங் 1:2-3; 2தீமோ 2:15; மத் 11:15; மாற்கு 4:22-23)

7. பரிசுத்த வேதாகமத்தில் 80 சதவீதம் வரலாற்றையும், மனுஷர் எவ்வாறு வாழவேண்டும் என்னும் அறிவுரைகளையும் வாசிக்கிறோம். மீதமுள்ள 20 சதவீதம் தீர்க்கதரிசன காரியங்களைக் கூறுகிறது. (மாற்கு 8:17)

மாற்கு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 5

"என்னுடைய வீடு எல்லா ஜனங்களுக்கும் ஜெபவீடு எனப்படும் என்று எழுதியிருக்கவில்லையா? நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள்" (மாற்கு 11:17; ஏசா 56:7; எரே 7:11)

77. ஜெபிக்கும்போது விசுவாசம் தேவை - (மத் 21:21)

மாற்கு 11:20 மறுநாள் காலையிலே அவர்கள் அவ்வழியாய்ப் போகும்போது, அந்த அத்திமரம் வேரோடே பட்டுப்போயிருக்கிறதைக் [illegible]

மாற்கு 11:21 பேதுரு நினைவுகூர்ந்து அவரை நோக்கி: ரபீ, இதோ, நீர் சபித்த அத்திமரம் பட்டுப்போயிற்று என்றான்.

மாற்கு 11:22 இயேசு அவர்களை நோக்கி: தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்.

மாற்கு 11:23 எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மாற்கு 11:24 ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்.

"நீர் சபித்த அத்திமரம் பட்டுப்போயிற்று" - மாற்கு 11:14-இன் நிறைவேற்றம்

"தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்" - தேவனிடத்தில் மனுஷரால் விசுவாசமாய் இருக்க முடியும். மனுஷரால் முடியாத காரியத்தைத் தேவன் கட்டளையிடமாட்டார். தேவனை விசுவாசிக்கும் விசுவாசத்தோடு அவர் மனுஷனைச் சிருஷ்டித்தார். மனுஷன் பாவம் செய்து விழுந்தபோது அவிசுவாசம் அவனுக்குள் வந்தது (ஆதி 3:1-7). மனுஷன் புதுசிருஷ்டியாகும்போது அவனுக்குள் விசுவாசம் புதுப்பிக்கப்படுகிறது. அந்த விசுவாசத்தை அவன் காத்துக்கொள்ளும்போது அது பூரண நிலைக்கு வளர்கிறது. (ரோமர் 1:5,17; ரோமர் 10:17; கலா 2:20; கொலோ 1:23; கொலோ 2:6-7; 2தெச 1:3; 2பேதுரு 1:1-5)

தீர்க்கதரிசன எண் - 18

"எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால் அவன் சொன்னபடியே ஆகும்" (மாற்கு 11:23-24) நிபந்தனைக்கு உட்பட்டது.

ஜெபத்திற்குப் பதில் கிடைப்பதற்கு நிபந்தனைகள்

1. தேவனிடத்தில் விசுவாசம் வைத்திருக்கவேண்டும். (ரோமர் 4:17; எபி 11:3; கலா 5:22-23)

2. நமது விருப்பங்களைத் தேவனிடம் தாராளமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும். (மாற்கு 11:23-24; மத் 17:20; மத் 21:21-22; யோவான் 15:7)

11 அதிகாரம்

3 தேவன் நமது ஜெபத்திற்குப் பதில் கொடுப்பார் என்று இருதயத்தில் விசுவாசிக்க வேண்டும். (மாற்கு 11:23-24; மத் 17:20; மத் 21:21-22; மாற்கு 9:23; யோவான் 15:7,16)

4 இருதயத்தில் சந்தேகப்படக்கூடாது. (மாற்கு 11:23; மத் 17:20; யாக் 1:5-8)

5 நாம் கேட்பதைக் கர்த்தர் கொடுப்பார் என்பதை விசுவாசிக்க வேண்டும். (மாற்கு 11:23-24; மத் 7:7-11; மத் 17:20; மத் 21:21-22; எபி 11:6)

6 நாம் கேட்பதை ஆண்டவர் ஏற்கெனவே கொடுத்து விட்டார் என்று விசுவாசிக்க வேண்டும். (மாற்கு 11:24; மத் 17:20; 1யோவான் 5:14-15)

7 நாம் தேவனிடத்தில் கேட்கும்பொழுது புத்திரசுவிகாரத்தின் உரிமையோடு கேட்க வேண்டும். (மாற்கு 11:23-24; மத் 17:20; மாற்கு 9:23)

8 நாம் கேட்பதும் தேவனுடைய சித்தமும் ஒன்றுதான் என்று விசுவாசிக்கவேண்டும். (மாற்கு 11:24; யோவான் 15:7; மத் 17:20; மத் 21:21-22; எபி 11:6; யாக் 1:5-8)

9 ஒரு காரியம் தேவனுடைய சித்தம் என்று தெரிந்தும், அதற்காக ஜெபிக்கும்போது, "உமக்கு சித்தமானால்" என்று கூறி ஜெபிக்கக்கூடாது. (மாற்கு 11:23; சங் 84:11; 2கொரி 1:20; 2பேதுரு 1:3-4)

10 தேவனுக்கு முன்பாகவும், மனுஷருக்கு முன்பாகவும் சுத்த இருதயத்தோடும் சுத்த ஜீவியத்தோடும் இருக்க வேண்டும். (மாற்கு 11:25; யோவான் 15:7; 1 யோவான் 3:22-23)

78. ஜெபத்திற்கு பதில் கிடைப்பதற்கு நிபந்தனை - (மத் 6:14)

மாற்கு 11:25 நீங்கள் நின்று ஜெபம் பண்ணும்போது, ஒருவன்பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள்.

மாற்கு 11:26 நீங்கள் மன்னியாதிருப்பீர்களானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவும் உங்கள் தப்பிதங்களை மன்னியாதிருப்பார் என்றார்.

"நீங்கள் நின்று ஜெபம்பண்ணும்போது" - நின்று ஜெபம்பண்ணுவது முழங்கால்படியிட்டு ஜெபம்பண்ணுவதைப் போன்று நமது சரீரத்தின் நிலைமை. (1இராஜா 8:22; 2நாளா 6:13; சங் 3:1; லூக்கா 18:11-13)

"நீங்கள் மன்னியாதிருப்பீர்களானால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவும் உங்கள் தப்பிதங்களை மன்னியாதிருப்பார்" தேவன் நமது பாவங்களை மன்னிக்க வேண்டுமென்றால் அதற்காக நாம் செய்ய வேண்டிய நிபந்தனை ஒன்று உள்ளது. நமக்கு எதிராக மற்றவர்கள் பாவம் செய்திருக்கலாம். நாம் அவர்களை மன்னிக்க வேண்டும். (மாற்கு 11:25-26; மத் 18:21-35; ரோமர் 12:14)

79. இயேசுவின் அதிகாரத்தைக் கேள்வி கேட்கிறார்கள் (மத் 21:23; லூக் 20:1)

மாற்கு 11:27 அவர்கள் மறுபடியும் எருசலேமுக்கு வந்தார்கள். அவர் தேவாலயத்திலே உலாவிக்கொண்டிருக்கையில், பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் அவரிடத்தில் வந்து,

11 அதிகாரம்

மாற்கு 11:28 நீர் எந்த அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறீர்? இவைகளைச் செய்கிறதற்கு அதிகாரத்தை உமக்கு கொடுத்தவர் யார் என்று கேட்டார்கள்

மாற்கு 11:29 இயேசு பிரதியுத்தரமாக: நானும் உங்களிடத்தில் ஒரு காரியத்தைக் கேட்கிறேன், நீங்கள் எனக்கு உத்தரவு சொல்லுங்கள் அப்பொழுது நானும் இன்ன அதிகாரத்தினாலே இவைகளைச் செய்கிறேனென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்

மாற்கு 11:30 யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ மனுஷரால் உண்டாயிற்றோ, எனக்கு உத்தரவு சொல்லுங்கள் என்றார்

மாற்கு 11:31 அதற்கு அவர்கள் தேவனால் உண்டாயிற்றென்று சொல்வோமானால், பின்னை ஏன் அவனை விசுவாசிக்கவில்லையென்று கேட்பார்

மாற்கு 11:32 மனுஷரால் உண்டாயிற்றென்றுசொல்வோமானால் ஜனங்களுக்குப் பயப்பட வேண்டியதாயிருக்கும்; எல்லாரும் யோவானை மெய்யாகத் தீர்க்கதரிசியென்று எண்ணுகிறார்களே என்று தங்களுக்குள்ளே ஆலோசனை பண்ணி,

மாற்கு 11:33 இயேசுவுக்குப் பிரதியுத்தரமாக: எங்களுக்குத் தெரியாது என்றார்கள் அப்பொழுது இயேசு: நானும் இன்ன அதிகாரத்தினாலே இவைகளைச் செய்கிறேன் என்று உங்களுக்குச் சொல்லேன் என்றார்

"அவர்கள் மறுபடியும் எருசலேமுக்கு வந்தார்கள்" - இயேசு கிறிஸ்துவின் கடைசி வாரத்தில் மொத்தம் ஐந்து முறை எருசலேமிற்கு வந்தார் அதில் இது நான்காவது முறையாகும்.

1 வெள்ளிக்கிழமை (மத் 21:1-16

2 ஞாயிற்றுக்கிழமை (மாற்கு 11:1-11 லூக்கா19:29-44; யோவான் 12:12-19

3 திங்கள்கிழமை (மாற்கு 11:12-19 லூக்கா 19:45-48 யோவான் 12:20-50)

4 செவ்வாய்கிழமை (மத் 21:23-26:13 மாற்கு11:20-14:9; லூக்கா 20:1-21:38)

5. புதன்கிழமை (மத் 26:14-27:66 மாற்கு14:10-15:47 லூக்கா 22:1-23:56 யோவான் 13:1-19:42)

"அவர் தேவாலயத்திலே உலாவிக் கொண்டிருக்கையில் பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் அவரிடத்தில் வந்தார்கள்" - மத் 16:21-இல் இயேசு கிறிஸ்து முன்னறிவித்த காரியங்கள் இப்போது நிறைவேறத் துவங்குகிறது அவர்கள் கிறிஸ்துவைக் கொலை செய்வதற்காகப் பலவித தந்திரமான காரியங்களைச் செய்கிறார்கள் (மத் 21:15,23,45,46 மத் 26:3 5,4-56 47 27:66 மாற்கு14:1 15:31 லூக்கா 19:47 48 லூக்கா 20:19-47; லூக்கா 22:1 23:23 யோவான் 7:32 45 யோவான் 11:47 57 யோவான் 18:2 19:16)

அதிகாரம் (authority) - ἐξουσία - **exousia** 1849

பெண்பால் பெயர்ச்சொல் - அதிகாரம், வல்லமை, ஆதீனம் **(delegated power, the liberty and right to act)** யோவான் ஸ்நானன் எந்த அதிகாரத்தினால் கிரியை செய்தானோ அதே அதிகாரத்தினாலே தாமும் கிரியை செய்வதாக இயேசு கிறிஸ்து கூறுகிறார் லூக்கா 1:17 யோவான் 1:33-34

மாற்கு - தொகுப்புரை

11 அதிகாரம்

"தங்களுக்குள்ளே ஆலோசனை பண்ணினார்கள்" - ஒரு காரியம் செய்வது சரியா தவறா என்று ஆலோசனை பண்ணுவது ஆபத்தில் போய் முடியும். பொதுவாக இவ்வாறு ஆலோசனை பண்ணிய பின்பு அவர்கள் செய்யும் காரியங்கள் பாவமாகவே இருக்கும். வேதத்தில் எது சரி என்பது சந்தேகத்திற்கு இடமில்லாமல் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆகையினால் ஆலோசனை பண்ணுவதற்கே அவசியமில்லை.

வேதபாரகருக்கும், மூப்பருக்கும், பிரதான ஆசாரியருக்கும் தாங்கள்கேட்கும் கேள்விகளுக்கு ஏற்கெனவே பதில் தெரியும். இருந்தாலும் ஆலோசனை பண்ணுகிறார்கள். தாங்கள் வைத்த கண்ணியில் தாங்களே சிக்கிக்கொள்கிறார்கள்.

"எங்களுக்குத் தெரியாது என்றார்கள்" - வேதாகமத்தில் இவர்களைப் போன்று பொய் கூறியவர்கள் அநேகம்பேர் இருக்கிறார்கள் (ஆதி 4:9; ஆதி 12:19; ஆதி 18:15; ஆதி 20:2; ஆதி 26:7-10; ஆதி 27:6-24,46; யாத் 32; 1சாமு 15:13; 1சாமு 21:2; 1சாமு 27:10; 2சாமு 15:34-37; 2சாமு 16:16-19; 2சாமு 17:7-14; 1இராஜா 13:11-22; 2இராஜா 5:20-24; மத் 26:69-75; மத் 28:13-15; அப் 5:1-10; அப் 6:11-14; அப் 16:20-21; அப் 17:5-7; அப் 24:5; அப் 25:7-8)

12 அதிகாரம்

80. திராட்சைத் தோட்டத்திற்கு எஜமானைப் பற்றிய உவமை - (மத் 21:33; லூக் 20:9)

மாற்கு 12:1 பின்பு அவர் உவமைகளாய் அவர்களுக்குச் சொல்லத் தொடங்ினதாவது: ஒரு மனுஷன் ஒரு திராட்சத்தோட்டத்தை உண்டாக்கி, அதைச் சுற்றிலும் வேலியடைத்து, இரசத்தொட்டியை உண்டுபண்ணி, கோபுரத்தையும் கட்டி, தோட்டக்காரருக்கு அதைக் குத்தகையாக விட்டு, புறத்தேசத்துக்குப் போயிருந்தான்.

மாற்கு 12:2 தோட்டக்காரரிடத்தில் திராட்சத் தோட்டத்துக் கனிகளில் தன் பாகத்தை வாங்கிக்கொண்டு வரும்படி பருவகாலத்திலே அவர்களிடத்தில் ஒரு ஊழியக்காரனை அனுப்பினான்.

மாற்கு 12:3 அவர்கள் அவனைப் பிடித்து, அடித்து, வெறுமையாய் அனுப்பி விட்டார்கள்.

மாற்கு 12:4 பின்பு வேறொரு ஊழியக்காரனை அவர்களிடத்தில் அனுப்பினான்; அவர்கள் அவன்மேல் கல்லெறிந்து, தலையிலே காயப்படுத்தி, அவமானப்படுத்தி, அனுப்பிவிட்டார்கள்.

மாற்கு 12:5 மறுபடியும் வேறொருவனை அனுப்பினான்; அவனை அவர்கள் கொலைசெய்தார்கள். வேறு அநேகரையும் அனுப்பினான்; அவர்களில் சிலரை அடித்து, சிலரைக் கொன்றுபோட்டார்கள்.

மாற்கு 12:6 அவனுக்குப் பிரியமான ஒரே குமாரன் இருந்தான்; என் குமாரனுக்கு அஞ்சுவார்களென்று சொல்லி, அவனையும் கடைசியிலே அவர்களிடத்தில் அனுப்பினான்.

மாற்கு 12:7 தோட்டக்காரரோ: இவன் சுதந்தரவாளி, இவனைக் கொலை செய்வோம் வாருங்கள்; அப்பொழுது சுதந்தரம் நம்முடையதாகும் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டு,

மாற்கு 12:8 அவனைப் பிடித்துக் கொலை செய்து, திராட்சத் தோட்டத்துக்குப் புறம்பே போட்டுவிட்டார்கள்.

மாற்கு 12:9 அப்படியிருக்க, திராட்சத்தோட்டத்துக்கு எஜமான் என்ன செய்வான்? அவன் வந்து அந்தத் தோட்டக்காரரைச் சங்கரித்து, திராட்சத்தோட்டத்தை மற்றவர்களுக்கு ஒப்புக்கொடுப்பான் அல்லவா?

மாற்கு 12:10 வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று;

மாற்கு 12:11 அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது என்று எழுதியிருக்கிற வாக்கியத்தை நீங்கள் வாசிக்கவில்லையா என்றார்.

மாற்கு 12:12 இந்த உவமையைத் தங்களைக்குறித்துச் சொன்னாரென்று அவர்கள் அறிந்து, அவரைப் பிடிக்க வகைதேடினார்கள்; ஆனாலும் ஜனத்துக்குப் பயந்து அவரை விட்டுப் போய்விட்டார்கள்.

உவமை எண் - 8

"ஒரு மனுஷன் ஒரு திராட்சத்தோட்டத்தை உண்டாக்கி....." - மாற்கு கூறியிருக்கிற எட்டாவது உவமை (மாற்கு 12:1-11). யூதர்கள் இயேசு கிறிஸ்துவை மறுதலிப்பார்கள், ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதை இந்த உவமை விளக்குகிறது (மாற்கு 12:10). இந்த உவமையில் மனுஷன், தோட்டக்காரர், ஊழியக்காரன், பிரியமான ஒரே குமாரன் ஆகியோர் யார் என்று தெளிவாக கூறப்படவில்லை. இந்த உவமையின் பிரகாரம் பிரியமான ஒரேகுமாரன் என்பது இயேசு கிறிஸ்துவையே குறிக்கிறது.

12 அதிகாரம்

"திராட்சத்தோட்டத்தை உண்டாக்கினான்" - மாற்கு 12:1-9-இல் இந்த மனுஷனுடைய பன்னிரெண்டு கிரியைகளும் மாற்கு 12:1-இல் இந்த மனுஷனுடைய ஆறு கிரியைகளும் கூறப்பட்டிருக்கிறது.

"கோபுரம்" - காவல்காரர் காவல் காப்பதற்காக உயரமாகக் கட்டப்பட்டிருக்கும் காவல் கோபுரம் (ஏசா 1:8)

"பருவகாலம்" - திராட்சத்தோட்டத்தை உண்டாக்கின பின்பு, கனி தருவதற்காக நான்கு வருஷங்கள் காத்திருக்க வேண்டும். அதுவே திராட்சத்தோட்டத்தின் பருவகாலம்.

தோட்டக்காரரிடம் அனுப்பப்பட்டவர்கள்

1 ஒரு ஊழியக்காரன் - அவர்கள் அவனைப் பிடித்து, அடித்து, வெறுமையாய் அனுப்பிவிட்டார்கள் (மாற்கு 12:2-3)

2 வேறொரு ஊழியக்காரன் - அவர்கள் அவன்மேல் கல்லெறிந்து, தலையிலே காயப்படுத்தி, அவமானப்படுத்தி அனுப்பிவிட்டார்கள் (மாற்கு 12:4)

3 மறுபடியும் வேறொருவன் - அவனை அவர்கள் கொலைசெய்தார்கள் (மாற்கு 12:5)

4 வேறு அநேகர் - அவர்களில் சிலரை அடித்து, சிலரைக் கொன்று போட்டார்கள் (மாற்கு 12:5)

5 அவனுக்குப் பிரியமான ஒரே குமாரன் (மாற்கு 12:6-7) - அவனைப் பிடித்துக் கொலைசெய்து திராட்சத்தோட்டத்துக்குப் புறம்பே போட்டுவிட்டார்கள். இயேசுகிறிஸ்துவின் மரணத்தைப் பற்றிய முன்னறிவிப்பு (மாற்கு 12:10)

ஊழியக்காரன் (servant) - δοῦλος - doulos 1401

பெயர்ச்சொல் - வேலைக்காரனாகிய, ஊழியக்காரனாகிய, அடிமையாயிருக்கிற (a bondservant)

பிரியமான (wellbeloved) ἀγαπητός - agapeetos - 27

பெயர்ச்சொல் - நேச, பிரியமான

(அ) கிறிஸ்துவிற்கு பயன்படுத்தப்பட்ட பெயர்ச்சொல் - மத். 3:17

(ஆ) சக கிறிஸ்தவர்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ள பெயர்கள் - 1கொரி 4:14

(இ) 1யோவா 4:7ல் பிரியமானவர்களே என்னும் உரிச்சொல்

தேவன் இயேசுவை பிரியமானவர் என்று அழைக்கிறார் (மத் 3:17; மத் 12:18 மத் 17:5; மாற்கு 1:11; மாற்கு 9:7 லூக்கா 3:22; லூக்கா 9:35)

"அப்படியிருக்க, திராட்சத்தோட்டத்துக்கு எஜமான் என்ன செய்வான்? ...... அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது" இந்த வசனங்களில் இயேசுகிறிஸ்து கேட்கும் கேள்விகள் "பரிசுத்த வேதாகமம் தேவ ஆவியானவரால் அருளப்பட்டதை" அவர் அங்கீகரிப்பதைக் குறிக்கிறது.

1 மத் 19:4 = ஆதி 1:27

2 மத் 22:31-32 = யாத் 3:6

3 மத் 12:3 = லேவி 24:6-9

4 மத் 12:5 = எண் 28:9-10

5 மத் 12:3 = 1சாமு 21:6

6 மத் 21:16 = சங் 8:2

7 மத் 21:42 = சங் 118:22

8 மாற்கு 10:3-5 = உபா 24:1-6

12 அதிகாரம்

மாற்கு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 6

"வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக் கல்லாயிற்று" (மாற்கு 12:10; சங் 118:22; அப 4:10-12) இங்கு கல் (stone) என்று கூறப்பட்டிருப்பது இயேசு கிறிஸ்துவைக் குறிக்கும். (ஆதி 49:24; ஏசா 8:14, ஏசா 28:16; அப 4:11; எபே 2:20, 1பேதுரு 2:4-8) சில வசனங்களில் இயேசு கிறிஸ்து பாறை (Rock) என்னும் வார்த்தையாலும் கூறப்பட்டிருக்கிறார் (மத் 16:18; ரோமர் 9:33; 1கொரி 10:4, 1பேதுரு 2:8)

"இந்த உவமையைத் தங்களைக்குறித்துச் சொன்னாரென்று அவர்கள் அறிந்தார்கள்" - இயேசுகிறிஸ்து கூறிய உவமையின் பொருளை யூதர்கள் அறிந்து கொண்டார்கள். அவர்களே அதை அறிந்து கொள்ளும் போது தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் அவருடைய உபதேசங்களை அறிந்து கொள்ளுவது அதிக நிச்சயமாம். இயேசுகிறிஸ்து தாமே நமக்கு ஒளியாகவும் வெளிச்சமாகவும் இருக்கிறார்

81. வரிப்பணத்தைப் பற்றிய உவமை - (மத் 17:24, 22:15, லூக் 20:19)

மாற்கு 12:13 அவர்கள், பேச்சிலே அவரை அகப்படுத்தும்படிக்கு பரிசேயரிலும் ஏரோதியரிலும் சிலரை அவரிடத்தில் அனுப்பினார்கள்

மாற்கு 12:14 அவர்கள் வந்து, போதகரே, நீர் சத்தியமுள்ளவரென்றும் எவனைக் குறித்தும் உமக்குக் கவலையில்லையென்றும் அறிந்திருக்கிறோம், நீர் முகதாட்சிணியம் இல்லாதவராய் தேவனுடைய மார்க்கத்தைச் சத்தியமாய்ப் போதிக்கிறீர். இராயனுக்கு வரி கொடுக்கிறது நியாயமோ அல்லவோ? நாம் கொடுக்கலாமோ கொடுக்கக் கூடாதோ? என்று கேட்டார்கள்

மாற்கு 12:15 அவர்களுடைய மாயத்தை அவர் அறிந்து, நீங்கள் என்னை ஏன் சோதிக்கிறீர்கள்? நான் பார்க்கும்படிக்கு ஒரு பணத்தை என்னிடத்தில் கொண்டு வாருங்கள் என்றார்

மாற்கு 12:16 அவர்கள் அதைக் கொண்டுவந்தார்கள். அப்பொழுது அவர் இந்தச் சுரூபமும் மேலெழுத்தும் யாருடையது என்று கேட்டார். இராயனுடையது என்றார்கள்

மாற்கு 12:17 அதற்கு இயேசு, இராயனுடையதை இராயனுக்கும் தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார். அவர்கள் அவரைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள்

"ஏரோதியர்" - இவர்களும் யூதர்களே. ஏரோதின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டவர்கள். ஏரோதின் குடும்பத்தாருடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தவர்கள். தங்களுடைய யூதேயா தேசத்திற்குச் சுய ஆட்சி நிலைத்திருப்பதற்காக இவர்கள் ஏரோதோடும் அவனுடைய குடும்பத்தாரோடும் நட்புறவுடன் இருந்தார்கள். இயேசு கிறிஸ்து ஏற்கெனவே பரிசேயரின் வாயை அடைத்துவிட்டார். ஆகையினால் இப்போது அவரை அரசியலில் சிக்க வைக்கும் சூழ்ச்சியை மேற்கொள்கிறார்கள் (மத் 22:16)

போதகர் (Master) - διδάσκαλος - didaskalos - 1320

ஆண்பால் பெயர்ச்சொல் - வேதபாரகன், வேதகர், போதகர், குரு (teacher) (லூக்கா 9:38)

இயேசு கிறிஸ்துவைப் பற்றி அவர்கள் கூறிய சாட்சி

1. நீர் சத்தியமுள்ளவர்
2. எவனைக்குறித்தும் உமக்குக் கவலையில்லை
3. நீர் முகதாட்சிணியம் இல்லாதவர்
4. தேவனுடைய மார்க்கத்தைச் சத்தியமாய் போதிக்கிறவர்

12 அதிகாரம்

"இராயனுக்கு வரிகொடுக்கிறது நியாயமோ அல்லவோ? நாம் கொடுக்கலாமோ, கொடுக்கக் கூடாதோ?" - இந்தக்கேள்விகள் அரசியல சமமந்தப்பட்டவை யூதர்களை அந்நியராகிய ரோமர்கள் ஆட்சி புரிகிறார்கள நாம் அந்நியருக்கு வரிகொடுக்க வேண்டுமா அல்லது அவர்களுக்கு எதிராக கலகம பண்ண வேணடுமா இப்படிபபட்ட அர்த்தத்திலதான் அவர்கள் இயேசுவிடம கேளவிகேடகிறார்கள்

"அவர்களுடைய மாயத்தை அவர் அறிந்தார்" - இயேசு கிறிஸது சர்வஞானி அவருக்கு மறைவானது ஒன்றுமிலலை யூதர்கள் அந்நியருக்கு வரி கொடுக்க விரும்பவிலலை இயேசு கிறிஸது ராயனுக்கு வரி கொடுகக வேணடும் எனறு கூறினால யூதர்கள் இயேசுவை வெறுப்பார்கள் ராயனுககு வரிகொடுகக வேணடாம எனறு கூறினால ராயன் இயேசுவைக் கைது செயவான் ஆகையினால் இயேசு என்ன பதிலைக் கூறினாலும், அவரை ஒரு பிரசசனையில சிககு வைககலாம எனறு அவர்கள் எதிர்பாாத்தார்கள ஆனால அவரோ தமது தெயவீக ஞானத்தினால அவாகளுடைய வாயை அடைத்தாா

பணம் (penny) - δηνάριον - deenarion - 12:20

பால் வேறுபாடற்ற பெயசசொல் - பணம். காசு

82. உயிர்த்தெழுதலைப் பற்றிய கேள்வி - *(மத் 22:23; லூக் 20:27)*

மாற்கு 12:18 உயிர்த்தெழுதல் இலலையெனறு சாதிக்கிற சதுசேயா அவரிடத்தில வந்து.

மாற்கு 12:19 போதகரே, ஒருவனுடைய சகோதரன் சந்தானமிலலாமல் தன மனைவியை விட்டு இறந்துபோனால அவனுடைய சகோதரன அவன மனைவியை விவாகம் பணணி. தன சகோதரனுக்குச் சந்தானம் உணடாக்க வேணடுமென்று மோசே எஙகளுக்கு எழுதி வைத்திருக்கிறாரே

மாற்கு 12:20 இப்படியிருக்க, எழுபேர் சகோதரர் இருந்தார்கள்; மூத்தவன் ஒரு பெண்ணை விவாகம்பண்ணி, சந்தானமிலலாமல் இறந்துபோனான்

மாற்கு 12:21 இரண்டாம் சகோதரன் அவளை விவாகமபண்ணி, அவனும் சந்தானமிலலாமல் இறந்துபோனான் மூன்றாம சகோதரனும் அப்படியேயானான்

மாறகு 12:22 எழுபேரும் அவளை விவாகமபண்ணி சந்தானமில்லாமல் இறந்துபோனார்கள் எல்லாருக்கும் பினபு அந்த ஸ்திரீயும் இறந்துபோனாள்

மாறகு 12:23 ஆகையால் உயிர்த்தெழுதலில அவர்கள் எழுந்திருக்குமபோது அவர்களில் எவனுக்கு அவள் மனைவியாயிருப்பாள? எழுபேரும் அவளை மனைவியாகக் கொண்டிருந்தார்களே என்று கேடடார்கள

மாறகு 12:24 இயேசு அவர்களுக்குப பிரதியுத்தரமாக. நீஙகள வேத வாககியஙகளையும் தேவனுடைய வலலமையையும் அறியாத தினாலலவா தபபான எணணங கொளளுகிறீர்கள?

மாறகு 12:25 மரித்தோா உயிரோடெழுநதிருககும் போது கொளவனையும் கொடுபபனையும் இலலை அவாகள பரலோகத்தில இருககிற தேவதூதரைப போலிருபபாாகள

மாறகு 12:26 மரித்தோர் எழுநதிருபபதைப பற்றி: நான ஆபிரகாமின தேவனும் ஈசாக்கின தேவனும், யாக்கோபின தேவனுமாய இருககிறேன எனறு, தேவன முட்செடியைக் குறித்துச் சொலலிய இடத்தில், மோசேயின ஆகமத்தில் அவனுக்குச் சொன்னதை, நீங்கள் வாசிககவிலலையா?

மாற்கு 12:27 அவர் மரித்தோருக்கு தேவனாயிராமல், ஜீவனுள்ளோருக்கு தேவனாயிருக்கிறார்; ஆகையால நீஙகள் மிகவும் தபபான எண்ணங் கொளளுகிறீர்கள் எனறார்

12 அதிகாரம்

"உயிர்த்தெழுதல் இல்லையென்று சாதிக்கிற சதுசேயர்" - சதுசேயர் யூத மார்க்கத்தின் ஒரு பிரிவினர். இவர்கள் மரித்தோரின் உயிர்த்தெழுதலையும் தூதர்களையும் ஆவிகளையும் நம்புவதில்லை (அப் 23:8). வரலாற்றில் மோசே என்று ஒருவர் இருந்தார் என்பதை நம்பும் இவர்கள் மோசேயின் உபதேசங்களை நம்புவதில்லை (மாற்கு 12:19)

"ஒருவனுடைய சகோதரன் சந்தானமில்லாமல் தன் மனைவியை விட்டு இறந்துபோனால், அவனுடைய சகோதரன் அவன் மனைவியை விவாகம் பண்ணி, தன் சகோதரனுக்குச் சந்தானம் உண்டாக்க வேண்டும்" - உபா 25:5-6 ஆகிய வசனங்களிலிருந்து மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"ஆகையால், உயிர்த்தெழுதலில் அவர்கள் எழுந்திருக்கும்போது அவர்களில் எவனுக்கு அவள் மனைவியாயிருப்பாள்?" - இந்தக் கேள்விக்கு இயேசுவால் பதில் கூறமுடியாது என்று நினைத்தார்கள். ஆனால் அவரோ மறுபடியுமாகத் தமது தெய்வீக ஞானத்தைப் பயன்படுத்தி, அவர்களுக்குப் பதில் கூறுகிறார் (மாற்கு 12:25-27). அத்துடன் தம்மிடம் கேள்வி கேட்ட அவர்களிடமே "நீங்கள் வேத வாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாததினாலல்லவா தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள்?" என்று எதிர்க்கேள்வியும் கேட்கிறார்.

தீர்க்கதரிசன எண் - 19

"மரித்தோர் உயிரோடெழுந்திருக்கும்போது கொள்வனையும் கொடுப்பனையும் இல்லை; அவர்கள் பரலோகத்திலிருக்கிற தேவதூதரைப் போலிருப்பார்கள்" (மாற்கு 12:25). இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

"தேவதூதரைப் போலிருப்பார்கள்" - உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள் உயிர்த்தெழுந்த பின்பு திருமணம் செய்து கொள்வதில்லை. தங்களுடைய வம்ச விருத்திக்காக அவர்கள் திருமணம் செய்து கொள்ளவேண்டிய அவசியமில்லை. தேவன் தேவதூதர்களைச் சிருஷ்டிக்கும்போது எண்ணிலடங்காத திரளான தேவதூதர்களைச் சிருஷ்டித்தார். அவை மரிப்பதுமில்லை, இனவிருத்தி செய்வதுமில்லை. ஆகையினால் திருமணம் செய்து தங்களுடைய வம்சத்தை விருத்தி பண்ண வேண்டிய அவசியம் அவற்றிற்கு இல்லை. அதுபோலவே உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களும் இருப்பார்கள்.

"மரித்தோர்" - மரித்த சரீரங்கள். சரீர மரணம் என்பது சரீரத்தின் மரணத்தை மட்டுமே குறிக்கும். ஆத்துமாவும் ஆவியும் சரீர மரணத்தில் மரிப்பதில்லை. இரட்சிக்கப்படாத மனுஷர்களுடைய ஆத்துமாக்கள் அவர்கள் உயிரோடு இருக்கும்போதே மரித்தநிலைமையில் இருக்கின்றன. ஆவிக்குரிய மரணம் என்பது பாவத்தினால் தேவனிடமிருந்து பிரிந்திருப்பது ஆகும் (ஏசா 59:2; எபே 2:1-9; 1தீமோ 5:6). சரீரத்திலிருந்து உள்ளான மனுஷன் பிரிக்கப்படுவது சரீர மரணம் (யாக் 2:26). சரீர மரணத்தில் சரீரம் மரிக்கிறது. அதைக் கல்லறையில் அடக்கம் பண்ணுகிறார்கள். அதேசமயத்தில் அவர்களுடைய சரீரங்கள் மறுரூபமாகும்வரையிலும் அவர்களுடைய ஆத்துமாக்கள் வேறு இடங்களுக்குச் செல்லும். நீதிமான் பரலோகத்திற்குச் செல்லுவான் (பிலி 1:21-24; 2கொரி 5:8; எபி 12:22-23; வெளி 6:9-11). துன்மார்க்கன் நரகத்திற்குச் செல்வான் (லூக்கா 16:19-31; ஏசா 14:9; வெளி 20:11-15). உயிர்த்தெழுதலின்போது சரீரங்கள் மட்டுமே உயிர்த்தெழும். அவர்களுடைய ஆத்துமாவும், ஆவியும் ஏற்கெனவே மரிக்காமலேயே இருக்கின்றன. உயிர்த்தெழுந்த சரீரமும் அதற்குரிய ஆவியும் ஆத்துமாவும் ஒன்றுசேரும். இவ்வாறு ஒன்று சேர்ந்த பின்பு ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகிய மூன்றும் தேவனுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நின்று அவருடைய நியாயத்தீர்ப்பைப் பெறும். அப்போது வெகுமதியோ அல்லது தண்டனையோ கொடுக்கப்படும் (மத் 10:28; மத் 25:41-46; மாற்கு 9:43-49; வெளி 20:11-15; ஏசா 66:22-24).

மாற்கு - தொகுப்புரை

12 அதிகாரம்

"நான் ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாய் இருக்கிறேன்" - யாத் 3:2-6 ஆகிய வசனங்களிலிருந்து மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு ஆகியோர் இன்னும் ஜீவிக்கிறார்கள் (மாற்கு 12:27) ஆனால் அவர்களுடைய சரீரங்களோ மரித்துவிட்டது. அவர்களுடைய ஆவிகளும் ஆத்துமாக்களும் ஜீவிக்கின்றன.

"அவர் மரித்தோருக்கு தேவனாயிராமல் ஜீவனுள்ளோருக்குத் தேவனாயிருக்கிறார். ஆகையால் நீங்கள் மிகவும் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள்" - நமது சரீரம் மரித்த பின்பு, நமது ஆவியும் ஆத்துமாவும் மரிக்காமல் ஜீவிக்கும் என்பதை விளக்கும் வேதவசனம். "எல்லாரும் அவருக்குப் பிழைத்திருக்கிறார்களே" என்று லூக்கா 20:38-இல் வாசிக்கிறோம். மரித்தவர்களாகிய நாம் இயேசு கிறிஸ்துவினூடாக நமது ஆவியிலும் ஆத்துமாவிலும் பிழைத்திருக்கிறவர்களாக இருப்போம். பேதுருவும் மற்றவர்களும் உள்ளான மனுஷன் மரிப்பதில்லை என்று கூறியிருக்கிறார்கள் (1பேதுரு 3:4; 1பேதுரு 4:6; சங் 22:26; 1தெச 5:10; 2கொரி 4:16-18; யோவான் 3:16-36; யோவான் 5:24; யோவான் 11:25-26; யோவான் 2:17; எபி 12:23) சரீரங்கள் மரித்தபின்பு கர்த்தருக்காக நாம் பிழைத்திருப்போம். அதுபோலவே தேவனிடமிருந்து நமது கிரியைகளுக்குத் தக்கதாக வெகுமதியையோ அல்லது தண்டனையையோ பெற்றுக் கொள்வதற்காக நமது மரித்த சரீரங்கள் உயிர்த்தெழும் (மத் 10:40-42; மத் 16:27; அப் 17:31; ரோமர் 2:12-16; ரோமர் 14:10; 2கொரி 5:10; வெளி 20:11-15)

83. பிரதான கற்பனை - (மத் 22:34; லூக் 10:27)

மாற்கு 12:28 வேதபாரகரில் ஒருவன் அவர்கள் தர்க்கம்பண்ணுகிறதைக் கேட்டு, அவர்களுக்கு நன்றாய் உத்தரவு சொன்னாரென்று அறிந்து, அவரிடத்தில் வந்து, கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எதுவென்று கேட்டான்.

மாற்கு 12:29 இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எதுவென்றால், இஸ்ரவேலே கேள், நமதுடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்.

மாற்கு 12:30 உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிரதான கற்பனை.

மாற்கு 12:31 இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே. இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்றுமில்லை என்றார்.

மாற்கு 12:32 அதற்கு வேதபாரகன்: சரிதான், போதகரே, நீர் சொன்னது சத்தியம்; ஒரே தேவன் உண்டு, அவரைத்தவிர வேறொரு தேவன் இல்லை.

மாற்கு 12:33 முழு இருதயத்தோடும் முழு மனதோடும் முழு ஆத்துமாவோடும் முழுப்பலத்தோடும் அவரிடத்தில் அன்புகூருகிறதும், தன்னிடத்தில் அன்புகூருகிறதுபோல பிறனிடத்தில் அன்புகூருகிறதுமே சர்வாங்க தகனம் முதலிய பலிகளைப்பார்க்கிலும் முக்கியமாயிருக்கிறது என்றான்.

மாற்கு 12:34 அவன் விவேகமாய் உத்தரவுசொன்னதை இயேசு கண்டு: நீ தேவனுடைய ராஜ்யத்துக்குத் தூரமானவனல்ல என்றார். அதன்பின்பு ஒருவரும் அவரிடத்தில் யாதொரு கேள்வியும் கேட்கத் துணியவில்லை.

"கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எது" - (மத் 22:36)

12 அதிகாரம்

"இஸ்ரவேலே கேள், நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்" - உபா 6:2-4 ஆகிய வசனங்களிலிருந்து மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. ஒரே என்பதன் எபிரெய சொல் "ஏகாத் (echad) மற்றொரு சொல் "ஆகாத்" (achad) இதன் கிரேக்கச்சொல் "ஹெஸ்" (heis) எண்ணிக்கையில் ஒன்று. அல்லது ஒற்றுமை என்னும் பொருளை இந்தச் சொற்கள் தருகின்றன. வேதவசனத்தில் இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிற இடம் பயன்படுத்தப்பட்டிருக்கிற வேளை ஆகியவற்றைப் பொருத்து இதன் பொருள் மாறுபடலாம். பொதுவாக இதற்கு ஒருமை அல்லது ஒரே என்னும் பொருளே சிறப்பாக அமைகிறது. ஆதி 2:24, ஆதி 11:6 யோவான் 10:30 யோவான் 11:52 யோவான் 17:11,21-23 பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் மூன்று நபராக இருக்கின்ற போதிலும் அவர்கள் மூவருமே ஒருவராகவும் இருக்கிறார்கள் திரித்துவத்தின் தலைமைத்துவமாக இருக்கும் பிதாவையும் இந்தச் சொல் குறிக்கிறது. பிதா கிறிஸ்துவின் தலையாகவும் பரிசுத்த ஆவியானவரின் தலையாகவும் இருக்கிறார் 1கொரி 8:4-6 1கொரி 11:3 யோவான் 14:16 17,26,28; யோவான் 15:26, யோவான் 16:7,15 எபே 4:4-6 1யோவான் 5:7

ஒரே (one) - אֶחָד - ekh-awd' - 259

பெ.அ. முதலாம், ஒரே, ஒன்றாகிய

אָחַד - aw-khad' - 258

வி.சொ - முகம் திரும்புகிற திக்கெல்லாம், கூர்மையான **(to unite, be united as one, one in number)**

ஒன்று (one) εἷς heis 1520

எண்குறி - ஒரு, ஒன்று, ஒருமைப்பாடு

"இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பதே" - வேதபாரகன் இயேசுகிறிஸ்துவிடம் ஒரு கற்பனையைத்தான் கேட்டான் ஆனால் அவன் இரண்டு கற்பனைகளைப் பெற்றுக் கொண்டான் இவ்விரண்டுமே முக்கியமானது. இந்தக் கற்பனை லேவி 19:18 ஆவது வசனத்திலிருந்து மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"சரிதான்"(Well)-நலலது மாற்கு 12:32-34 ஆகியவை மத் 22:40; லூக்கா 20:39 ஆகிய வசனங்களுக்கு ஒத்துள்ளது

புத்தி (understanding) - σύνεσις - synesis - 4907

பெண்பால் பெயர்ச்சொல் - புத்தி, அறிவு, விவேகம், மனது, உணர்வு இந்தச் சொல்லுக்கு முழுமை, ஒரே, அறைகுறையாக இல்லாமல் முழுமையாக என்னும் பொருளும் உண்டு.
(a putting together, meaning the whole of the intelligence, not only one part of it)

இந்த வசனத்தில "சுனேசிஸ்" (sunesis) என்னும் கிரேக்கச் சொல்லே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. "டையோனாய" (dianoia) என்னும் கிரேக்கச் சொல் பயன்படுத்தப்படவில்லை மாற்கு 12:30 ஆவது வசனத்தில் மனது சிந்தனை ஆகிய பொருளில் இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

மனம் (mind) - διάνοια - dianoia 1271

பெண்பால் பெயர்ச்சொல் - மனம் சிந்தை, புத்தி

முதலாவது கற்பனையில நமது சரீரம் ஆத்துமா ஆவி ஆகிய மூன்றுமே தேவனிடத்தில கீழ்ப்படிந்து பயபக்தியோடு அன்புகூரவேண்டும். ஒருசிலர் இதைத் தவறாக விளக்கியானம் பண்ணுகிறார்கள் கர்த்தரிடத்தில் சிந்தனையில ஊழியம் செய்தால மட்டும் போதுமானது. ஒருவரும் சரீரத்திலோ அல்லது ஆத்துமாவிலோ பரிசுத்தமாய் இருக்க முடியாது. ஆவியில் மட்டுமே பரிசுத்தமாய் இருக்க முடியும் என்பது இவர்களுடைய விவாதம்.

12 அதிகாரம்

"சர்வாங்க தகனம் முதலிய பலிகளைப் பார்க்கிலும் முக்கியமாயிருக்கிறது" - இயேசு கிறிஸ்துவின் இந்தப் பிரதான கற்பனையை ஒருவர் சரியாகப் புரிந்து கொள்ளும்போது அவர் மற்ற சடங்காச்சாரங்களுக்கு அதிக முக்கியத்துவம் தரமாட்டார்

84. இயேசு பரிசேயரிடம் கேட்ட கேள்விகள் - (மத் 22:41 லூக் 20:39

மாற்கு 12:35 இயேசு தேவாலயத்திலே உபதேசம் பண்ணுகையில், அவர் கிறிஸ்து தாவீதின் குமாரனென்று வேதபாரகர் எப்படிச் சொல்லுகிறார்கள்?

மாற்கு 12:36 நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்று கர்த்தர் என் ஆண்டவரோடே சொன்னார் என்று தாவீது பரிசுத்த ஆவியினாலே சொல்லியிருக்கிறானே

மாற்கு 12:37 தாவீதுதானே அவரை ஆண்டவரென்று சொல்லியிருக்க அவனுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி என்றார் அநேக ஜனங்கள் அவருடைய உபதேசத்தை விருப்பத்தோடே கேட்டார்கள்

மாற்கு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன வசன் - 7

"நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்று கர்த்தர் என் ஆண்டவரோடே சொன்னார்" (மாற்கு 12:36; சங் 110:1)

சங்கீதம் 110 ஐ இயற்றியவர் பரிசுத்த ஆவியானவரே. கர்த்தத்துவத்தில் இரண்டு நபர்களைப் பற்றி இந்த வசனம் கூறுகிறது. திரித்துவத்தில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவருமே இடம் பெற்றிருக்கிறார்கள் மூவரும் சமநிலையில் இருப்பவர்கள் (யோவான் 5:7 2கொரி 13:14; மத் 3:16-17; மத் 28:19, யோவான் 14:16,26 யோவான் 15:26 யோவான் 16:7-15 அப் 2:33; அப் 7:55 எபே 4:4-6 வெளி 1:4; வெளி 4:2-5 வெளி 5:7)

"குமாரன்" - (மத் 22:45)

85. வேதபாரகரின் ஆறு பாவங்கள் - (மத் 23; லூக் 18:9; 20:45)

மாற்கு 12:38 பின்னும் அவர் உபதேசம் பண்ணுகையில் அவர்களை நோக்கி: நீண்ட அங்கிகளைத் தரித்துக் கொண்டு திரியவும் சந்தை வெளிகளில் வந்தனங்களை அடையவும்

மாற்கு 12:39 ஜெபஆலயங்களில் முதன்மையான ஆசனங்களில் உட்காரவும் விருந்துகளில் முதன்மையான இடங்களில் இருக்கவும் விரும்பி

மாற்கு 12:40 விதவைகளின் வீடுகளைப் பட்சித்து பார்வைக்கு நீண்ட ஜெபம்பண்ணுகிற வேதபாரகரைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் அதிக ஆக்கினையை அடைவார்கள் என்றார்

"வேதபாரகரைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" பரிசேயர் வேதபாரகர் ஆகியோரைப் பற்றிய குறிப்புகளை நாம் இந்த வசனங்களில் வாசித்தறியலாம் (மத் 23:1-33 மாற்கு 7:1-20, மாற்கு 8:15, மாற்கு 12:38-40, லூக்கா 11:39-52)

வேதபாரகரின் நடைமுறைகள் (மாற்கு 12:38-40)

1. நீண்ட அங்கிகளைத் தரித்துக் கொள்வார்கள் (மாற்கு 12:38, மத் 23:5)
2. சந்தைவெளிகளில் வந்தனங்களை அடைய விரும்புவார்கள் (மாற்கு 12:38

12 அதிகாரம்

3 ஜெபஆலயங்களில் முதன்மையான ஆசனங்களில் இருக்க விரும்புவார்கள் (மாற்கு 12:39, மத் 23:2,6)

4 விருந்துகளில் முதன்மையான இடங்களில் இருக்கவிரும்புவார்கள் (மாற்கு 12:39, மத் 23:6, லூக்கா 14:7-11, லூக்கா 20:46)

5 விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப் போடுவார்கள் (மாற்கு 12:40, மத் 23:14)

6 பார்வைக்கு நீண்ட ஜெபம் பண்ணுவார்கள் (மாற்கு 12:40, மத் 23:14)

தீர்க்கதரிசன எண் - 20

"அவர்கள் அதிக ஆக்கினையை அடைவார்கள்" (மாற்கு 12:40) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை (மத் 0:15)

88. விதவை காணிக்கையாக போட்ட ஒரு துட்டு - (லூக் 21:1)

மாற்கு 12:41 இயேசு காணிக்கைப் பெட்டிக்கு எதிராக உட்கார்ந்து, ஜனங்கள் காணிக்கைப் பெட்டியிலே பணம் போடுகிறதைப் பார்த்துக் கொண்டிருந்தார்; ஐசுவரியவான்கள் அநேகர் அதிகமாய்ப் போட்டார்கள்.

மாற்கு 12:42 ஏழையான ஒரு விதவையும் வந்து, ஒரு துட்டுக்குச் சரியான இரண்டு காசைப் போட்டாள்.

மாற்கு 12:43 அப்பொழுது, அவர் தம்முடைய சீஷரை அழைத்து: காணிக்கைப் பெட்டியில் பணம் போட்ட மற்றெல்லாரைப் பார்க்கிலும் இந்த ஏழை விதவை அதிகமாய்ப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மாற்கு 12:44 அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்தெடுத்துப் போட்டார்கள்; இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள் என்றார்.

காசு (mite) - λεπτός - leptos - 3016

பொருள் - காசு - கிரேக்கருடைய மிகக்குறைந்த மதிப்புடைய தாமிரக்காசு.

துட்டு (coin) - κοδράντης - kodrantees - 2835

ஆண்பால் பெயர்ச்சொல் - காசு, துட்டு - ரோமருடைய மிகக்குறைந்த மதிப்புடைய வெண்கலக்காசு

13 அதிகாரம்

87. ஒலிவமலையின்மேல் இயேசு கூறிய தீர்க்கதரிசனம் - (மத் 24-25; மாற்கு 13; லூக் 21)

(1) எருசலேமின் அழிவை இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (மத் 24:1; 23:37)

மாற்கு 13:1 அவர் தேவாலயத்தை விட்டுப் புறப்படும்போது, அவருடைய சீஷர்களில் ஒருவன் அவரை நோக்கி: போதகரே, இதோ, இந்தக் கல்லுகள் எப்படிப்பட்டது, இந்தக் கட்டடங்கள் எப்படிப்பட்டது! பாரும் என்றான்.

மாற்கு 13:2 இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: இந்தப் பெரிய கட்டடங்களைக் காண்கிறாயே, ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப் போகும் என்றான்.

"அவர் தேவாலயத்தை விட்டுப் புறப்படும்போது" - மத் 24-25; மாற்கு 13 ஆகியவை லூக்கா 21க்கு பின்பு நடைபெற்றவையாகும். லூக்கா 21:1-5 = லூக்கா 21:37-38 ஆகிய வசனங்களை இயேசு தேவாலயத்தில் பேசினார். ஒலிவமலையில் இயேசு மற்றொரு சம்பாஷணையைக் கூறினார் (மத் 24:3; மாற்கு 13:3) இவ்விரண்டு தீர்க்கதரிசனங்களுமே லூக்கா 21:12 ஆவது வசனத்தோடு ஒத்திருக்கிறது. ஆகையினால் இவ்விரண்டையும் சேர்த்துத் தியானிப்பது சிறப்பாக இருக்கும்.

போதகர் (Master) - διδάσκαλος - didaskalos 1320

ஆண்பால் பெயர்ச்சொல் - வேதபாரகன், வேதகர், போதகர், குரு (doctor) (லூக்கா 9:38)

"இந்தக் கல்லுகள் எப்படிப்பட்டது! இந்தக் கட்டடங்கள் எப்படிப்பட்டது" - (மத் 24:2)

தீர்க்கதரிசன எண் - 21

"ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப் போகும்" (மாற்கு 13:2) இந்தத் தீர்க்கதரிசனம் கி.பி. 70 இல் எருசலேம் அழிக்கப்பட்டபோது நிறைவேறிற்று. (லூக்கா 21:13-24; தானி 9:24)

(2) இரண்டு பெரிய கேள்விகள் - (மத் 24:3; லூக் 21:7)

மாற்கு 13:3 பின்பு, அவர் தேவாலயத்துக்கு எதிராக ஒலிவ மலையின்மேல் உட்கார்ந்திருக்கையில், பேதுருவும் யாக்கோபும் யோவானும் அந்திரேயாவும் அவரிடத்தில் தனித்து வந்து:

மாற்கு 13:4 இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? இவைகளெல்லாம் நிறைவேறுங்காலத்துக்கு அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்லவேண்டும் என்றார்கள்.

"பேதுருவும் யாக்கோபும் யோவானும் அந்திரேயாவும் அவரிடத்தில் தனித்து வந்தார்கள்" மத் 24:3ஆவது வசனத்திற்கு கூடுதலான விளக்கம்.

இயேசுவிடம் சீஷர்கள் கேட்ட கேள்விகள்

1. இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்?, எருசலேம் எப்பொழுது அழிக்கப்படும். இதற்குரிய பதில் மத் 24-25 மாற்கு 13 ஆகிய அதிகாரங்களில் கூறப்படவில்லை. லூக்கா 21:12-24 ஆகிய வசனங்களில் மட்டுமே இதற்கான பதிலை வாசிக்கிறோம்.

2. இவைகளெல்லாம் நிறைவேறுங் காலத்துக்கு அடையாளம் என்ன? - இந்தக் கேள்விக்கு மத் 24:4-27, மாற்கு 13:5-23; லூக்கா 21:8-11, 25-26 ஆகிய வசனங்களில் பதில் உள்ளது.

3. உலகத்தின் முடிவுக்கு அடையாளம் என்ன? (மத் 24:27-25:46, மத் 13:24-37; லூக்கா 21:27-38

13 அதிகாரம்

(3) அடையாளங்கள் - இயேசுவின் இரண்டாம் வருகை

(அ) யூதர்களுடைய வருத்தங்களின் ஆரம்பத்தில் எட்டு அடையாளங்கள் – (மத் 24:4, லூக் 21:8; வெளி 8-9)

மாற்கு 13:5 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக, ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்

மாற்கு 13:6 ஏனெனில் அநேகர் வந்து, என் நாமத்தைக்கொண்டு, நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள்

மாற்கு 13:7 யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப் படும்போது கலங்காதேயுங்கள் இவைகள் சம்பவிக்க வேண்டியதே. ஆனாலும் முடிவு உடனே வராது.

மாற்கு 13:8 ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும், எழும்பும் பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். பஞ்சங்களும் கலகங்களும் உண்டாகும்; இவைகள் வேதனைகளுக்கு ஆரம்பம்

தீர்க்கதரிசன எண் - 22

"ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" (மாற்கு 13:5-37) - இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது பூரணமாக நிறைவேறும். (மத் 6:1; மத் 11:29 மத் 24:4-24

"உங்களை வஞ்சியாதபடிக்கு" - வஞ்சிப்பதற்கு எதிரான எச்சரிப்புக்கள் (மத் 24:4-5,11,24; லூக்கா 21:8 1கொரி 6:9, 1கொரி 15:33; கலா 6:7; எபே 5:6; 2தெச 2:3-12; 2தீமோ 3:13; 1யோவான் 3:7

முடிவு (end) τέλος telos - 5056

பாலவேறுபாடற்ற பெயர்ச்சொல் - முடிவு, அழிவு, அந்தம், தொந்தரவு, விலகிப்போதல் (final end or limit at which a thing ceases to be, the end of some act, state, or life) இந்த வசனத்தில் இது ஜீவியத்தின் முடிவையோ, அல்லது உபத்திரவக் காலத்தின் முடிவையோ குறிக்கும். இவ்விரண்டில் ஒருவருடைய ஜீவியத்தில் எது முந்தி வருகிறதோ அதுவே அவருடைய முடிவாகும் (மத் 10:22)

வேதனை (sorrows) - ὠδίν - oodin - 5604

பெண்பால் பெயர்ச்சொல் - வேதனை உபாதி (pang, throe) - மகா உபத்திரவக்காலத்தில் இஸ்ரவேலருக்கு வரும் வேதனை (மத் 24:15-21 ஏசா 66:7-8; எரே 30:4-7 தானி 7:21; தானி 8:9-14, 24; தானி 9:27; தானி 11:40-45; தானி 12:1,7; வெளி 12)

(ஆ) இஸ்ரவேலின் வருத்தங்களின் போது எட்டு அடையாளங்கள் - (மத் 24:9)

மாற்கு 13:9 நீங்களோ எச்சரிக்கையாயிருங்கள், ஏனெனில் உங்களை ஆலோசனைச் சங்கங்களுக்கு ஒப்புக்கொடுப்பார்கள் நீங்கள் ஜெப ஆலயங்களில் அடிக்கப்படுவீர்கள் என்னிமித்தம் தேசாதிபதிகளுக்கும் ராஜாக்களுக்கும் சாட்சியாக அவர்களுக்கு முன்பாக நிறுத்தப்படுவீர்கள்

மாற்கு 13:10 சகல ஜாதிகளுக்கும் சுவிசேஷம் முந்திப் பிரசங்கிக்கப்பட வேண்டும்.

மாற்கு 13:11 அவர்கள் உங்களைக் கொண்டுபோய் ஒப்புக்கொடுக்கும் போது நீங்கள் என்ன பேசுவோமென்று முன்னதாகக் கவலைப்படாமலும் சிந்தியாமலு மிருங்கள் அந்நாழிகையிலே உங்களுக்கு எது அருளப் செய்யப்படுமோ அதையே பேசுங்கள் ஏனெனில் பேசுகிறவர்கள் நீங்களல்ல, பரிசுத்த ஆவியே பேசுகிறவர்

13 அதிகாரம்

மாற்கு 13:12 அன்றியும் சகோதரன் சகோதரனையும், தகப்பன் பிள்ளையையும் மரணத்துக்கு ஒப்புக்கொடுப்பார்கள்; பெற்றாருக்கு விரோதமாகப் பிள்ளைகள் எழும்பி அவர்களைக் கொலைசெய்வார்கள்.

மாற்கு 13:13 என் நாமத்தினிமித்தம் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள். முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்.

ஆலோசனைச்சங்கங்கள் (councils) - συνέδριον - synedrion - 4892

பல வேறுபாடற்ற பெயர்ச்சொல் - ஆலோசனைச்சங்கம், சங்கம் (sanhedrin) - இஸ்ரவேலின் மூப்பர்களுடைய சங்கம். (மத் 5:22; மத் 10:17; மத் 26:59; மாற்கு 13:9; மாற்கு 14:55; மாற்கு 15:1; லூக்கா 22:66; யோவான் 11:47; அப் 4:15; அப் 5:21,27,34,41; அப் 6:12,15; அப் 22:30; அப் 23:1,6,15,20,28; அப் 24:20)

"ஜெப ஆலயங்களில் அடிக்கப்படுவீர்கள்" - மத் 4:23 எல்லா ஜெபாலயங்களும் நியாயத்தீர்ப்பு வழங்கும் நீதிமன்றங்களாகச் செயல்படும். குற்றவாளிகளை அங்கு வாரினால் அடிப்பார்கள்.

"என்னிமித்தம் தேசாதிபதிகளுக்கும் ராஜாக்களுக்கும் சாட்சியாக அவர்களுக்கு முன்பாக நிறுத்தப்படுவீர்கள்" - சபை எடுத்துக் கொள்ளப்பட்டபின்பு யூதர்களில் அநேகர் இரத்தசாட்சிகளாக மரிப்பார்கள். (வெளி 6:9-11; வெளி 7:9-17; வெளி 12:17; வெளி 13:16-18; வெளி 14:9-11; வெளி 15:2-4; வெளி 17:6; வெளி 20:4-6)

"அவர்கள் உங்களைக் கொண்டுபோய் ஒப்புக்கொடுக்கும்போது, நீங்கள் என்ன பேசுவோமென்று முன்னதாகக் கவலைப்படாமலும் சிந்தியாமலுமிருங்கள்" - நீங்கள் விசாரிக்கப்படும்போது ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். எதைப் பேசுவோம் என்று சிந்திக்க வேண்டாம். அந்நாழிகையிலே உங்களுக்கு எது அருளப் செய்யப்படுமோ அதையே பேசுங்கள். உங்கள் மூலமாகப் பரிசுத்த ஆவியானவரே பேசுவார். (மத் 10:17-20; மத் 6:25)

"அன்றியும் சகோதரன் சகோதரனையும், தகப்பன் பிள்ளையையும் மரணத்துக்கு ஒப்புக்கொடுப்பார்கள்; பெற்றாருக்கு விரோதமாகப் பிள்ளைகள் எழும்பி, அவர்களைக் கொலைசெய்வார்கள்" - கிறிஸ்துவின் நிமித்தமாகக் குடும்பங்கள் பிரிக்கப்படும். (மத் 10:35-36; மீகா 7:6) குடும்பத்தில் உள்ளவர்களே ஒருவருக்கு விரோதமாக ஒருவர் எழும்புவார்கள். மனுஷர் வருசிக்கிறவர்களாக இருப்பார்கள்.

"என் நாமத்தினிமித்தம் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்" - உபத்திரவக்காலத்தில் தேவனைப் பின்பற்றுவோருக்குப் பலவிதமான இன்னல்கள் உண்டாகும். இயேசு கிறிஸ்துவின் நிமித்தமாக அவரைப் பின்பற்றுபவர்களை ஜனங்கள் பகைப்பார்கள். தானியேலின் எழுபதாவது வாரத்தில் இந்தக் காரியம் நடைபெறும். (தானி 9:27; வெளி 6:1-19:21)

(இ) பாழாக்குகிற அருவருப்பு - (மத் 24:15; தானி 9:27)

மாற்கு 13:14 மேலும் பாழாக்குகிற அருவருப்பைக்குறித்து தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே, வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன், அது நிற்கத்தகாத இடத்திலே நீங்கள் அதை நிற்கக் காணும்போது யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப் போகக்கடவர்கள்.

"அது நிற்கத்தகாத இடத்திலே நீங்கள் அதை நிற்கக் காணும்போது" - இந்த வாக்கியத்தில் "அப்போது" என்னும் சொல் மாற்கு 13:14-37 ஆகிய வசனங்கள் நிறைவேறும் காலத்தைக் குறிக்கிறது. தானியேலின் எழுபதாவது வாரத்தின் நடுவில் இக்காரியம் நடைபெறும். (மாற்கு 13:14,17,19, 20,21,24,26,27

மாற்கு - தொகுப்புரை

13 அதிகாரம்

"பாழாக்குகிற அருவருப்பு" - அந்திக்கிறிஸ்து இஸ்ரவேலோடு ஓர் உடன்படிக்கை பண்ணுவான் ஏழு வருஷத்திற்கு உடன்படிக்கை செய்வான் ஆனால் இந்த உடன்படிக்கையை நடுவில் முறித்துப் போடுவான் இதுவே மகா உபத்திரவக்காலத்தின் ஆரம்பம் அவன் இஸ்ரவேலை வெற்றி பெறுவான். தேவாலயத்தில் ஆராதனையை அகற்றிப்போடுவான் பரிசுத்த ஸ்தலத்தில் தன்னுடைய சொரூபத்தை நிறுத்தி. தன்னை ஆராதிக்குமாறு வற்புறுத்துவான் இதுவே பாழாக்குகிற அருவருப்பு ஆகும். (தானி 9:27; 2தெச 2:4 வெளி 13; வெளி 14:9-11; வெளி 15:2-4 வெளி 16:10, வெளி 20:4-6; மத் 24:15)

"அது நிற்கத்தகாத இடத்திலே நீங்கள் அதை நிற்கக் காணும்போது" - யூதருடைய தேவாலயத்தில் அந்திக் கிறிஸ்து மகா பரிசுத்த ஸ்தலத்தில் நிற்பான் இது அவனுக்குரிய ஸ்தலம் அல்ல அவன் அங்கே நிற்கக்கூடாது. மகா பரிசுத்த ஸ்தலத்தில் தேவனுடைய பிரசன்னம் மட்டுமே இருக்க வேண்டும். (2தெச 2:3-4 தானி 9:27 மத் 24:15)

"அப்போது யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள்" - அந்திக்கிறிஸ்து இஸ்ரவேலோடு தான் செய்து கொண்ட ஏழு வருஷ உடன்படிக்கையை முறிக்கும் காலத்தை இது குறிப்பிடும் இதன் பின்பு, மூன்றரை வருஷங்களுக்கு மகா உபத்திரவக்காலம் உண்டாகும் இக்காலத்தில் அந்திக்கிறிஸ்து பாலஸ்தீன தேசத்திற்குள் நுழைந்து இஸ்ரவேலை ஜெயிப்பான் எருசலேமைக் கைப்பற்றுவான் தேவாலயத்தில் யூதருடைய ஆராதனை முறைமையை அகற்றுவான் தன்னுடைய சொரூபத்தைத் தேவாலயத்தில் எல்லோரும் ஆராதனை செய்வதற்காக நிறுவுவான் இவனுடைய உபத்திரவம் மூன்றரை வருஷங்களுக்கு நீடிக்கும். இயேசு கிறிஸ்து அவனை அழித்துத் தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கும்போது மகா உபத்திரவக்காலம் முடிவுபெறும்.

(தானி 8:9-25; தானி 9:27; தானி 11:40-45 தானி 12:7 மத் 24:15-31; மாற்கு 13:14-27, 2தெச 2:1-12, வெளி 13:1-18, வெளி 14:9-11 வெளி 19:11-21) இந்த உபத்திரவக்காலத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் யூதேயாவிலிருந்து ஏதோமிற்கும், மோவாபிற்கும் மூன்றரை வருஷ காலங்களுக்கு ஓடிப்போய் தப்பித்துக் கொள்வார்கள் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது அவர்கள் இரட்சிக்கப்பட்டு. மறுபடியும் கூட்டிச்சேர்க்கப்படுவார்கள் (மத் 24:15-31 மத் 25:31-46 ரோமர் 11:25-29 சக 12:10-13:1 சக 14:1-2, வெளி 12:6,13-17)

(ஈ) இஸ்ரவேல் அந்திக்கிறிஸ்துவிடம் தோற்றுபோகிறார்கள் - மத் 24:16

மாற்கு 13:15 வீட்டின்மேல் இருக்கிறவன் தன் வீட்டிற்குள் இறங்காமலும் தன் வீட்டில் எதையாகிலும் எடுத்துக்கொள்ள உள்ளே போகாமலும் இருக்கக்கடவன்

மாற்கு 13:16 வயலில் இருக்கிறவன் தன் வஸ்திரத்தை எடுப்பதற்குப் பின்னிட்டுத் திரும்பாதிருக்கக் கடவன்

மாற்கு 13:17 அந்நாட்களிலே கர்ப்பவதிகளுக்கும் பால் கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ

மாற்கு 13:18 நீங்கள் ஓடிப்போவது மாரிகாலத்திலே சம்பவியாதபடிக்கு வேண்டிக்கொள்ளுங்கள்

"அந்நாட்களிலே கர்ப்பவதிகளுக்கும் பால்கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ" உபத்திரவக்காலத்தில் ஏற்படும் பயங்கரங்களை இது விளக்குகிறது (மத் 24:15-22)

(உ.) மகா உபத்திரவம் - (மத் 24:15, தானி 12:1; வெளி 12:19

மாற்கு 13:19 ஏனெனில் தேவன் உலகத்தைச் சிருஷ்டித்தது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான உபத்திரவம் அந்நாட்களில் உண்டாயிருக்கும்.

13 அதிகாரம்

மாற்கு 13:20 கர்த்தர் அந்நாட்களைக் குறைத்திராவிட்டால், ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை; தாம் தெரிந்து கொண்டவர்களினிமித்தமோ, அவர் அந்த நாட்களைக் குறைத்திருக்கிறார்

"தேவன் உலகத்தைச் சிருஷ்டித்தது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும் இனிமேலும் சம்பவியாததுமான உபத்திரவம் அந்நாட்களில உண்டாயிருக்கும்" - இது மகா உபத்திரவக் காலத்தின் விளக்கமாகும். (மத் 24:15-22

"கர்த்தர் அந்நாட்களைக் குறைத்திரா விட்டால்" - (மத் 24:22

"தாம் தெரிந்து கொண்டவர்களினிமித்தமோ" - யூதர்களில தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் (மத் 24:22, 31

(ஊ) மகா உபத்திரவத்தின் ஆறு அடையாளங்கள் - (மத் 24:23)

மாற்கு 13:21 அப்பொழுது, இதோ கிறிஸது இஙகே இருககிறா அதோ அஙகேயிருக்கிறா என்று எவனாகிலும் சொன்னால நம்பாதேயுஙகள

மாற்கு 13:22 ஏனெனில கள்ளக கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கத் தரிசிகளும் எழும்பி, கூடுமானால தெரிந்துகொள்ளப்பட்டவர் களையும் வஞ்சிக்கத் தக்கதாக அடையாளங களையும் அற்புதங்களையும் செய்வார்கள்

மாற்கு 13:23 நீங்களோ எச்சரிக்கையாயிருங்கள் இதோ எல்லாவற்றையும் முன்னதாக உங்களுக்கு அறிவித்திருக்கிறேன்

"அப்பொழுது, இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ, அங்கேயிருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால், நம்பாதேயுங்கள்" - மாற்கு 13:14-20 ஆகிய வசனங்கள் மகா உபத்திரவக்காலத்தைக் குறிக்கும். அப்போது மாற்கு 13:21-23 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற காரியங்கள் நடைபெறும்.

"கூடுமானால தெரிந்துகொள்ளப் பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்" - (மத் 24:24; 2தெச 2:8-12 வெளி 13; வெளி 16:13-16; வெளி 19:20 மாற்கு 13:22)

"நீங்களோ எச்சரிக்கையாயிருங்கள்" - இந்த அதிகாரத்தில நான்கு முறை இயேசு கிறிஸ்து இவ்வாறு எச்சரிக்கிறார் (மாற்கு 13:5,9,23,33) - (மத் 11:29

(4) இரண்டாம் வருகையின் விதமும் காலமும் - (மத் 24:27)

மாற்கு 13:24 அந்நாட்களிலே, அந்த உபத்திரவத்திற்குப் பின்பு, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும்

மாற்கு 13:25 வானத்தின் நட்சத்திரங்கள் விழும், வானங்களிலுள்ள சத்துவங்களும் அசைக்கப்படும்.

மாற்கு 13:26 அப்பொழுது மனுஷகுமாரன மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகங்களின்மேல வருகிறதைக் காண்பார்கள

மாற்கு 13:27 அப்பொழுது அவர் தம்முடைய தூதரை அனுப்பி, தாம் தெரிந்துகொண்டவர்களை பூமியின் கடைமுனை முதற்கொண்டு, வானத்தின கடைமுனைமட்டுமுள்ள நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச்சேர்ப்பார்

மாற்கு - தொகுப்புரை

13 அதிகாரம்

"அந்நாட்களிலே" - இயேசு கிறிஸ்து மறுபடியும் வந்தவுடன் உபத்திரவக்காலம் முடிவடைகிறது. இந்த வசனத்தில் "அந்நாட்களிலே" என்பது உபத்திரவக்காலம் முடிவடைந்தவுடன் துவங்கும் காலத்தைக் குறிக்கும். (மாற்கு 13:24-27; மத் 24:29-31 வெளி 19:17-21; சக 1

"உபத்திரவம்" - மாற்கு 13:14-20 மத் 24:15-22; வெளி 6:1-19:21; எரே 30 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் உபத்திரவம்

"சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும்" - தானியேலின் எழுபதாவது வார காலத்தில் ஐந்தாம் முறையாகக் கிரகங்களில் மாற்றம் ஏற்படுகிறது. (மத் 24:29)

"வானத்தின் நட்சத்திரங்கள் விழும்" - நட்சத்திரங்கள் விழுவதாக இரண்டு முறை மட்டுமே நாம் வேதத்தில் வாசிக்கிறோம்

1. ஆறாம் முத்திரையில் (வெளி 6:12-17)
2. கிறிஸ்துவின் வருகையின்போது (மாற்கு 13:25, மத் 24:29)

"வானங்களிலுள்ள சத்துவங்களும் அசைக்கப்படும்" வானத்தை ஆளுகை செய்யும் சாத்தானுடைய சேனைகளை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. (எபே 2:1-3 எபே 6:12) இவை இப்போது வானத்தின் அந்தகார சக்திகளாகக் கிரியை செய்கின்றன. இயேசு கிறிஸ்துவின் வருகையின்போது இவைகளுக்குப் பெலன் இராது. மூன்றரை வருஷங்களுக்கு இவை பூமியின் பாதாளத்திலே தள்ளப்படும். (வெளி 12:7-12) இந்தக் காலத்தின் முடிவில் வானத்தின் அந்தகார சக்திகள் தோற்கடிக்கப் படும் என்று ஏசாயா கூறுகிறார் (ஏசா 24:21-22; ஏசா 34:4) வானங்களில் சாத்தானுடைய சேனைகள் அந்தகார சக்திகளாக இருக்கும் போதே ஏசாயாவும் இயேசு கிறிஸ்துவும் அந்த அந்தகாரச் சக்திகளைப் பற்றி முன்னறிவிக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் வருகையின்போது அவை அசைக்கப்பட்டு, தோல்வி அடைவது மட்டுமல்ல ஆயிரம் வருஷங்களுக்கு சாத்தானின் சேனைகள் சிறையிலடைக்கப்படும். (ஏசா 24:21-22 வெளி 20:1-10) வானத்தின் நட்சத்திரங்களும் வானத்தின் சேனைகளும் 2இராஜா 23:4-5 ஆகிய வசனங்களில் வேறு பிரித்துக் கூறப்பட்டிருக்கின்றன. வானத்தின் சேனைகள் தந்திரமானவை. கடந்த காலங்களில் மனுஷர்கள் அவற்றை ஆராதித்து சேவித்து வந்தார்கள் (2இராஜா 17:16 2இராஜா 21:3,5 2நாளா 33:3-5; எரே 8:2; எரே 19:13 செப் 1:5; அப் 7:42)

"அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகங்களின் மேல் வருகிறதைக் காண்பார்கள்" - "அப்பொழுது" என்பது மகா உபத்திரவக் காலத்தின் முடிவு ஆகும். அப்பொழுது இயேசு கிறிஸ்து தமது மகிமையோடும் வல்லமையோடும் மேகங்களின்மேல் வருவார் (தானி 7:13-14 சக 14:5; மத் 16:27; மத் 24:29-31 மத் 25:31-46; யூதா 1:14, 2தெச 1:7-10 வெளி 1:7; வெளி 19:11-21)

"அப்பொழுது அவர் தம்முடைய தூதரை அனுப்பி தாம் தெரிந்துகொண்டவர்களை பூமியின் கடைமுனை முதற்கொண்டு, வானத்தின் கடைமுனைமட்டுமுள்ள நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச்சேர்ப்பார்" இயேசு கிறிஸ்துவினுடைய தூதர்கள் இஸ்ரவேல் ஜனத்தாரை நித்திய தேசமாக இருக்குமாறு கூட்டிச்சேர்ப்பார்கள் (மத் 24:31 ஏசா 11:11-12; ஏசா 60:8-9, ஏசா 65:9,22, ஏசா 66:19-21; எரே 31:36-40 எரே 33:17-26; எசே 36:8-24, எசே 37:21-28 எசே 39:25-29 ஆமோ 9:11-15 அப் 15:13-18 லூக்கா 1:31-32)

(5) அத்தி மரத்தைப் பற்றிய உவமை - (மத் 24:32; லூக் 21:29)

மாற்கு 13:28 அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள் அதிலே இளங்கிளைதோன்றி, துளிர் விடும்போது வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள்

13 அதிகாரம்

மாற்கு 13:29 அப்படியே இவைகள் சம்பவிக்கிறதைநீங்கள் காணும்போது அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்

உவமை எண் - 9

"அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள் ....." மாற்கு கூறியுள்ள ஒன்பதாவது உவமை (மத் 24:32-33 மாற்கு 13:28-29)

(6) **இந்த தீர்க்கதரிசனத்தின் எல்லா அடையாளங்களும் ஒரே சந்ததியில் நடைபெறும்** - (மத் 24:34, லூக் 17:26; 21:32)

மாற்கு 13:30 இவைகளெல்லாம் சம்பவிக்குமுன்னே இந்தச் சந்ததி ஒழிந்துபோகாதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்

மாற்கு 13:31 வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை

"இவைகளெல்லாம் சம்பவிக்குமுன்னே இந்தச் சந்ததி ஒழிந்துபோகாது" (மத் 24:34, மத் 11:16

"வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை" (மத் 24:35

(7) **இயேசு கிறிஸ்து மறுபடியும் வரும் நேரம் யாருக்கும் அறிவிக்கப்படவில்லை** (மத் 24:36, அப 1:7)

மாற்கு 13:32 அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர்தவிர மற்றொருவனும் அறியான் பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார்

மாற்கு 13:33 அக்காலத்தை நீங்கள் அறியாதபடியால் எச்சரிக்கையாயிருங்கள், விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்

மாற்கு 13:34 ஒரு மனுஷன் தன் வீட்டைவிட்டு, புறத்தேசத்துக்குப் பிரயாணமய்போக எத்தனிக்கும் போது, தன் ஊழியக்காரருக்கு அதிகாரங் கொடுத்து, அவனவனுக்குத் தன் தன் வேலையையும் நியமித்து, விழித்திருக்கும்படிக்குக் காவல் காக்கிறவனுக்குக் கற்பிப்பான்

மாற்கு 13:35 அப்படியே நீங்களும் விழித்திருங்கள் ஏனெனில், வீட்டெஜமான் சாயங்காலத்திலோ, நடுராத்திரியிலோ, சேவல்கூவும் நேரத்திலோ காலையிலோ எப்பொழுது வருவான் என்று நீங்கள் அறியீர்கள்

மாற்கு 13:36 நீங்கள் நினையாத வேளையில் அவன் வந்து உங்களைத் தூங்குகிறவர்களாகக் கண்டு பிடியாதபடிக்கு விழித்திருங்கள்

மாற்கு 13:37 நான் உங்களுக்குச் சொல்லுகிறதை எல்லாருக்கும் சொல்லுகிறேன் விழித்திருங்கள் என்றார்

"அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர்தவிர மற்றொருவனும் அறியான் பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள் குமாரனும் அறியார்" - இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் மனுஷகுமாரனாக அவதரித்தபோது அவரிடம் சர்வஞானம் இல்லை அவருடைய ஞானமும் அந்த நாட்களில் ஒரு வரையறைக்கு உட்பட்டிருந்தது என்பதை இந்த வசனம் விளக்குகிறது (மத் 24:36 லூக்கா 2:40,52 பிலி 2:7)

"எச்சரிக்கையாயிருங்கள்"- (மாற்கு 13:23

விழித்திரு (watch) - ἀγρυπνέω - agrypneo 69

வினைச்சொல் - விழித்திரு (be sleepless) இந்த வார்த்தை மாற்கு 13:33; லூக்கா 21:36, எபே 6:18; எபி 13:17 ஆகிய நான்கு வசனங்களில் மட்டுமே வருகிறது இந்த வார்த்தையும் மாற்கு 13:34-37 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் வார்த்தையும் ஒன்றல்ல.

13 அதிகாரம்

உவமை எண் - 10

"ஒரு மனுஷன் தன் வீட்டைவிட்டு, புறத்தேசத்துக்குப் பிரயாணமாய்ப்போக எத்தனிக்கும்போது." மாற்கு கூறியுள்ள பத்தாவது உவமை இந்த சுவிசேஷத்தில் இதுவே கடைசி உவமை. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து நாம் விழித்திருக்க வேண்டும் என்பதை இந்த உவமை வலியுறுத்துகிறது. (மாற்கு 13:34-37)

விழித்திரு (Watch) - γρηγορέω - **greegoreoo** - 1127

வினைச்சொல் - விழித்திரு **(be vigilent, alert)** (பேதுரு 5:8) இந்த வார்த்தையும் மாற்கு 13:34-இல் கூறப்பட்டிருக்கும் வார்த்தையும் வெவ்வேறானவை. இரவு வேளையில் நான்கு சாமங்கள் உள்ளன மாலைவேளை, நடுஇரவு, சேவல்கூவும் வேளை, காலைவேளை (மத் 14:25 மத் 24:43; மாற்கு 6:48, லூக்கா 12:38

14 அதிகாரம்

88. இயேசுவை கொலைசெய்ய முயற்சி - (மத் 26:3; லூக் 22:1)

மாற்கு 14.1 இரண்டு நாளைக்குப்பின்பு புளிப்பில்லாத அப்பஞ்சாப்பிடுகிற பஸ்காபண்டிகை வந்தது. அப்பொழுது பிரதான ஆசாரியரும் வேதபாரகரும், அவரைத் தந்திரமாய்ப் பிடித்துக் கொலை செய்யும்படி வகைதேடினார்கள்

மாற்கு 14.2 ஆகிலும் ஜனங்களுக்குள்ளே கலகம் உண்டாகாதபடிக்கு, பண்டிகையிலே அப்படிச் செய்யலாகாது என்றார்கள்

"இரண்டு நாளைக்குப்பின்பு" - (மாற்கு 11:27; மத் 26:2

"புளிப்பில்லாத அப்பஞ்சாப்பிடுகிற பஸ்காபண்டிகை" - பஸ்கா பண்டிகையும் புளிப்பில்லா அப்பப்பண்டிகையும் இரண்டு வெவ்வேறான பண்டிகைகள் இவ்விரண்டையும் ஒன்றாகவே ஆசரித்தார்கள் பஸ்காவை புசிக்கும் காலம் அந்தப் பண்டிகையின் ஏழு நாட்களின் துவக்கத்தில் வருகிறது. அப்போது புளிப்பில்லா அப்பம் மட்டுமே புசிப்பார்கள் (யாத் 12:1-28, லேவி 23:4-8)

89. இயேசுவின் அபிஷேகம் - மத் 26:6, லூக் 7:36, யோவான் 12:1

மாற்கு 14.3 அவர் பெத்தானியாவில் குஷ்டரோகியாயிருந்த சீமோன் வீட்டிலே போஜனபந்தியிருக்கையில் ஒரு ஸ்திரீ விலையேறப்பெற்ற நளதம் என்னும் உத்தம தைலமுள்ள வெள்ளைக்கல் பரணியைக் கொண்டு வந்து, அதை உடைத்து, அந்தத் தைலத்தை அவர் சிரசின்மேல் ஊற்றினாள்

மாற்கு 14.4 அப்பொழுது சிலர் தங்களுக்குள்ளே விசனமடைந்து, இந்தத் தைலத்தை இப்படி வீணாய்ச் செலவழிப்பானேன்?

மாற்கு 14.5 இதை முந்நூறு பணத்துக்கு அதிகமான கிரயத்துக்கு விற்று தரித்திரருக்குக் கொடுக்கலாமே என்று சொல்லி, அவளைக்குறித்து முறுமுறுத்தார்கள்

மாற்கு 14.6 இயேசு அவர்களை நோக்கி: அவளை விட்டுவிடுங்கள் ஏன் அவளைத் தொந்தரவு படுத்துகிறீர்கள்? என்னிடத்தில் நற்கிரியையைச் செய்திருக்கிறாள்

மாற்கு 14.7 தரித்திரர் எப்போதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள், உங்களுக்கு மனதுண்டாகும் போதெல்லாம் நீங்கள் அவர்களுக்கு நன்மை செய்யலாம், நானோ எப்போதும் உங்களிடத்தில் இரேன்

மாற்கு 14.8 இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்; நான் அடக்கம் பண்ணப்படுவதற்கு எத்தனமாக என் சரீரத்தில் தைலம்பூச முந்திக்கொண்டாள்

மாற்கு 14.9 இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப் படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேன் என்றார்

"இயேசு பெத்தானியாவில் குஷ்டரோகியாயிருந்த சீமோன் வீட்டிலே போஜனபந்தியிருந்தார்" (மத் 26:6)

கடைசி வாரத்தில் மூன்றுபோஜனங்கள்

1. லாசருவின் வீட்டில் - பஸ்காவிற்கு ஆறு நாட்களுக்கு முன்பு (யோவான் 12:1-9) இவ்வேளையில் மரியாள் இயேசுவைத் தைலத்தினால் அபிஷேகம் பண்ணினாள்

2. குஷ்டரோகியாயிருந்த சீமோன் வீட்டிலே - பஸ்காவிற்கு இரண்டு நாளைக்கு முன்பு - பெத்தானியாவில் (மாற்கு 14:1-9) இந்த நிகழ்ச்சியில் இயேசுவினுடைய சிரசின்மேல் தைலத்தை ஊற்றிய ஸ்திரீ யாரென்று தெரியவில்லை (மத் 26:6-13

3. கடைசி இராப்போஜனம் (யோவான் 13:1-20; மத் 26:20, மாற்கு 14:17; லூக்கா 22:14

14 அதிகாரம்

"குஷ்டரோகி" - சீமோன் ஒருகாலத்தில் குஷ்டரோகியாக இருந்தான். இயேசு கிறிஸ்து அவனைச் சுத்தமாக்கினார் என்று இந்த வசனத்தின் மூலமாகத் தெரிந்து கொள்கிறோம்.

"வெள்ளைக்கல் பரணி" - தைலங்களைச் சேர்த்து வைப்பதற்குப் பயன்படுத்தப்படும் குடுவை.

"உத்தமதைலம்" (spikenard) - இதில் இரண்டு கிரேக்கச் சொற்கள் உள்ளன. கிழக்கு தேசத்தில் இரண்டு விதமான தைலங்கள் இருந்தன. ஒன்று மிகவும் பரிசுத்தமானது. மற்றொன்று கலப்படம் செய்யப்பட்ட தைலம். (உன் 1:12; மாற்கு 14:3; யோவான் 12:2)

இந்த வசனத்தில் இயேசுவின் சிரசின்மீது ஸ்திரீ ஊற்றிய தைலம் சுத்தமானது, கலப்படமற்றது.

தைலம் (spikenard) - νάρδος - nardos - 3487

பெண்பால் பெயர்ச்சொல் - தைலம்

உத்தம (faith) πιστικός - pistikos - 4101

பெயரடை - உத்தம, களங்கமில்லாத

நிச்சயம் (faithful) - πίστις - pistis 4102

பெண்பால் பெயர்ச்சொல் - விசுவாசம், நிச்சயம், உண்மை

"அதை உடைத்தாள்" - பரணியை உடைப்பது என்பது சுத்த தைலத்தைப் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும் முத்திரையிடப்பட்ட குடுவையை உடைப்பது என்பது பொருள். இதனால் இந்தப் பரணியை உடைப்பதற்கு முன்பாகத் தைலத்தின் நறுமணம் வெளியேறாது.

"அந்தத் தைலத்தை அவர் சிரசின்மேல் ஊற்றினாள்" - கடைசி வாரத்தில் இரண்டு அபிஷேகங்கள் (மத் 26:7)

"முந்நூறு பணம்" - முந்நூறு நாள் வேலை செய்தால் கிடைக்கக்கூடிய சம்பளம் முந்நூறு பணமாகும்.

"அவளைக்குறித்து முறுமுறுத்தார்கள்" - முறுமுறுப்பதை இயேசுகிறிஸ்து எப்போதுமே அனுமதிப்பதில்லை. வேதவாக்கியத்தின் பிரகாரம் முறுமுறுப்பது சாதாரண கிரியை. (யாத் 15:24; யாத் 16:2-12; யாத் 17:3-5; எண் 14:2-36; எண் 17:5-10; உபா 1:27; யோசு 9:18; சங் 106:25; மத் 20:11; மாற்கு 14:5; லூக்கா 5:30; லூக்கா 15:2; லூக்கா 19:7; யோவான் 6:41,61; யோவான் 7:12,32; அப் 6:1; 1கொரி 10:10; பிலி 2:14; யூதா 1:16)

"தரித்திரர் எப்போதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள்" - மாற்கு 14:6; யோவான் 12:7 ஆகிய வசனங்களில் தமக்காகச் செய்யும் நற்கிரியைகளைப் பற்றிய விளக்கம்.

"நானோ எப்போதும் உங்களிடத்தில் இரேன்" - சபையில் திருவிருந்து நடைபெறும்பொழுது இயேசு கிறிஸ்துவின் சரீரத்திற்கு அடையாளமாக இருக்கும் அப்பமும் அவருடைய இரத்தத்திற்கு அடையாளமாக இருக்கும் இரசமும் பரிமாறப்படுகிறது. இதன் மூலமாக அவர் எப்போதும் நம்மிடத்தில் இருக்கிறார். ஆனாலும் இயேசு கிறிஸ்து தமது சரீரப்பிரகாரமாக நம்மிடத்தில் இல்லை.

தீர்க்கதரிசன எண் - 23

"இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்" (மாற்கு 14:8,9) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேற்று இயேசு கிறிஸ்துவின் சீஷர்களைவிட அறிமுகமில்லாத இந்த ஸ்திரீ மறுநாளில் அவர் அனுபவிக்கப் போகும் பாடுகளை நன்றாகப் புரிந்து வைத்திருந்தாள். (லூக்கா 22:24-27; லூக்கா 24:1,12,25,26,45; யோவான் 13:36; யோவான் 20:9)

90. இயேசுவைக் காட்டிக்கொடுக்க யூதாஸ் ஒப்புக்கொள்கிறான் - (மத் 26:14; லூக் 22:3)

மாற்கு 14:10 அப்பொழுது, பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் காரியோத்து என்பவன் அவரைப் பிரதான ஆசாரியருக்குக் காட்டிக் கொடுக்கும்படி அவர்களிடத்திற்குப் போனான்.

14 அதிகாரம்

மாற்கு 14:11 அவர்கள் அதைக் கேட்டு, சந்தோஷப்பட்டு, அவனுக்குப் பணங்கொடுப்போம் என்று வாக்குத்தத்தம் பண்ணினார்கள். அவன் அவரைக் காட்டிக் கொடுப்பதற்குத் தகுந்த சமயம் பார்த்துக்கொண்டிருந்தான்.

"பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ்காரியோத்து என்பவன் அவரைப் பிரதான ஆசாரியருக்குக் காட்டிக் கொடுக்கும்படி அவர்களிடத்திற்குப் போனான்"-மாற்கு 14:6-9; யோவான் 12:4-8 ஆகிய வசனங்களின் நிமித்தமாக யூதாஸ் காரியோத்து அவமடத்தை விட்டு போயிருக்கலாம். இயேசு கிறிஸ்து கைது பண்ணப்படுவதற்கு முந்திய நாளில் யூதாஸ் இயேசு கிறிஸ்துவை முப்பது வெள்ளிக் காசிற்கு காட்டிக்கொடுப்பதாக பிரதான ஆசாரியரோடு ஒப்பந்தம் செய்து கொண்டான். மாற்கு 14:12

91. பஸ்காவின் ஆயத்தம் - (மத் 26:17, லூக் 22:7)

மாற்கு 14:12 பஸ்காவைப் பலியிடும் நாளாகிய புளிப்பில்லாத அப்பம் சாப்பிடுகிற முதலாம் நாளிலே அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து: நீர் பஸ்காவைப் புசிப்பதற்கு நாங்கள் எங்கே போய் ஆயத்தம் பண்ணச் சித்தமாயிருக்கிறீர் என்று கேட்டார்கள்.

மாற்கு 14:13 அவர் தம்முடைய சீஷரில் இரண்டுபேரை நோக்கி: நீங்கள் நகரத்திற்குள்ளே போங்கள், அங்கே தண்ணீர்க்குடம் சுமந்து வருகிற ஒரு மனுஷன் உங்களுக்கு எதிர்ப்படுவான், அவன் பின்னே போங்கள்,

மாற்கு 14:14 அவன் எந்த வீட்டிற்குள் பிரவேசிக்கிறானோ அந்த வீட்டு எஜமானை நீங்கள் நோக்கி: நான் என் சீஷரோடுங்கூடப் பஸ்காவைப் புசிக்கிறதற்குத் தகுதியான இடம் எங்கேயென்று போதகர் கேட்கிறார் என்று சொல்லுங்கள்.

மாற்கு 14:15 அவன் கம்பளம் முதலானவைகள் விரித்து ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற விஸ்தாரமான மேல்வீட்டறையை உங்களுக்குக் காண்பிப்பான்; அங்கே நமக்காக ஆயத்தம்பண்ணுங்கள் என்று சொல்லி அனுப்பினார்.

மாற்கு 14:16 அப்படியே, அவருடைய சீஷர் புறப்பட்டு நகரத்தில் போய், தங்களுக்கு அவர் சொன்னபடியே கண்டு, பஸ்காவை ஆயத்தம் பண்ணினார்கள்.

"பஸ்காவைப் பலியிடும் நாளாகிய புளிப்பில்லாத அப்பஞ்சாப்பிடுகிற முதலாம் நாளிலே" - நிசான் மாதம் 14-ஆம் நாள் பஸ்கா ஆட்டுக்குட்டி ஆயத்த நாளிலே கொல்லப்படவேண்டும். மறுநாள் பிரதான நாளாகும். அது விசேஷித்த ஓய்வுநாளாக ஆசரிக்கப்படும். வாரத்தின் ஓய்வுநாளுக்கும் இதற்கும் வித்தியாசம் உண்டு. (யோவான் 19:30-31, லேவி 23:6-7)

தீர்க்கதரிசன எண் - 24

"நீங்கள் நகரத்திற்குள்ளே போங்கள், அங்கே தண்ணீர்க்குடம் சுமந்துவருகிற ஒரு மனுஷன் உங்களுக்கு எதிர்ப்படுவான்" (மாற்கு 14:13-15) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேற்றது.

"அங்கே தண்ணீர்க்குடம் சுமந்துவருகிற ஒரு மனுஷன் உங்களுக்கு எதிர்ப்படுவான்" இது ஒரு அரிதான காரியம். பாலஸ்தீன தேசத்தில் ஸ்திரீகளே தண்ணீர்க் குடங்களைச் சுமந்து வருவார்கள் (ஆதி 24:14-46; யோவான் 4:7). மனுஷர் பெரிய துருத்திகளில் தண்ணீரை நிரப்பி, அவற்றைக் கழுதைகளின்மீது ஏற்றி வருவார்கள்.

"மேல்வீட்டறை" - கிழக்கு தேசங்களில் பல வீடுகளில் மாடி அறை இருக்கும். அதற்குப் போகும் படிக்கட்டு வீட்டிற்கு வெளியே இருக்கும். (2இராஜா 1:2, 2இராஜா 23:12; 2நாளா 3:9, எசே 42:5, மாற்கு 14:15; லூக்கா 22:12, அப் 1:13, அப் 9:37-39; அப் 20:8)

14 அதிகாரம்

இயேசு கிறிஸ்து இங்கு கூறியிருக்கும் மேலறை ஒரு ஐசுவரியவானுக்கு உரியதாக இருக்க வேண்டும் ஏனென்றால் அது விஸ்தாரமானது. கம்பளம் முதலானவைகள் விரித்து வைக்கப்பட்டிருந்தது. ஒரு சிலர் இந்த மேலறையை மாற்கு என்னும் யோவானின் வீடு என்று கூறுகிறார்கள் ஆதிக் கிறிஸ்தவர்கள் அந்த மேலறையில கூடி ஜெபிப்பது வழக்கம். பரிசுத்த ஆவியானவர் அங்கு இறங்கினார் (லூக்கா 24:8-12 அப் 1:13 அப் 12:12)

பஸ்கா பண்டிகையின்போது எருசலேமிலுள்ள யூதர்கள் தங்களுடைய வீட்டின் அறைகளை வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு பஸ்காவை ஆசரிப்பதற்கு ஆயத்தப்படுத்திக் கொடுப்பது வழக்கம். இது யூதமார்க்கத்தில கடைப்பிடிக்கப்பட்டு வரும் பழக்கம்

மேல் வீடு (upper) - ἀνάγαιον - anagaion - 508

பால வேறுபாடற்ற பெயர்சொல் தனக்கு மேலே உள்ள இடம். மேல வீடு. மேல வீட்டு அறை

மேலவீடு (upper room) - עֲלִיָּה - al-ee-yaw' - 5944

பெபெசொ - அறைவீடு மேலவீடு. நடை, மண்டபம்

"அப்படியே, அவருடைய சீஷர் புறப்பட்டு நகரத்தில் போய, தங்களுக்கு அவர் சொன்னபடியே கண்டார்கள்" மாற்கு 14:13-15 ஆகிய வசனங்களில இயேசு கிறிஸ்து கூறிய தீர்க்கதரிசனம் உண்மையாயிற்று இயேசு கிறிஸ்துவின் வார்த்தை எப்போதுமே சத்தியமானவைதான முன்னறிவித்த காரியம் எதுவும் நடைபெறாமல போவதில்லை ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்பாகக் கூறப்பட்ட தீர்க்கதரிசனங்களும் அதற்குரிய காலம் வரும்பொழுது நிறைவேறி உள்ளன, நிறைவேறிக்கொண்டிருக்கின்றன நிச்சயமாகவே நிறைவேறும்

"பஸ்காவை ஆயத்தம் பண்ணினார்கள்" - சூரியன் அஸ்தமனமாகும் வேளையிலே பஸ்கா ஆயத்தமாக இருந்தது. குறித்த காலத்திற்கு முன்பாகவே சீஷர்கள் பஸ்காவை ஆயத்தம் பண்ணினார்கள் மறுநாள் மாலையிலதான் பொதுவாக பஸ்காவைப் புசிப்பது வழக்கம். ஆனால் இயேசு கிறிஸ்துவோ ஒரு நாளுக்கு முன்பாகவே பஸ்காவைப் புசிக்கிறார் ஏனென்றால அன்று இரவு முழுவதும் அவர் விசாரிக்கப்பட வேண்டியிருந்தது மறுநாள் எல்லோரும் பஸ்காவை ஆசரிக்கும்போது இயேசு கிறிஸ்து நமது பஸ்காவாக பலியிடப்பட்டார் (1கொரி 5:7) இந்த வசனத்தின் பிரகாரம் குறித்த வேளைக்கு முன்பாகவே அவர் பஸ்காவைப் புசித்து மறுநாளிலே பஸ்காவிற்காக நியமிக்கப்பட்ட குறித்த காலத்தில அவர் நமக்காகப் பஸ்கா ஆட்டுக்குட்டியாகப் பலியிடப்பட்டார் "பஸ்கா பண்டிகைக்கு முன்னே" என்று யோவான் 13 ஆவது வசனத்தில வாசிக்கிறோம் அதாவது கிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும்பஸ்கா பண்டிகைக்கு முன்பாகவே பஸ்கா போஜனம் பண்ணுகிறார்கள்

92. கடைசி பஸ்கா - (மத் 26:20, லூக் 22:14; யோவான் 13

(1) தாம் காட்டிக்கொடுக்கப்படப் போவதை இயேசு முன்குறித்துக் கூறுகிறார்

மாற்கு 14:17 சாயங்காலமான போது அவர் பன்னிருவரோடுங்கூட அவ்விடத்திற்கு வந்தார்

மாற்கு 14:18 அவர்கள் பந்தியமர்ந்து போஜனம் பண்ணுகையில இயேசு அவர்களை நோக்கி: என்னுடனே புசிக்கிற உங்களில ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்

மாற்கு 14:19 அப்பொழுது அவர்கள் துக்கமடைந்து, நானோ? நானோ? என்று ஒவ்வொருவரும் அவரிடத்தில் கேட்கத்தொடங்கினார்கள்

மாற்கு 14:20 அவர் பிரதியுத்தரமாக: என்னுடனே கூடத் தாலத்தில கையிடுகிறவனாகிய பன்னிருவரிலொருவனே அவன் என்று சொல்லி;

மாற்கு - தொகுப்புரை

14 அதிகாரம்

மாற்கு 14:21 மனுஷகுமாரன் தம்மைக் குறித்து எழுதியிருக்கிறபடியே போகிறார் ஆகிலும், எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக் கொடுக்கப் படுகிறாரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ! அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும் என்றார்

"சாயங்காலமான போது, அவர் பன்னிருவரோடுங்கூட அவ்விடத்திற்கு வந்தார்" - சாயங்காலத்திற்கு முன்பாகவே பஸ்கா ஆயத்தமாக இருக்கிறது. பஸ்காவின் ஆயத்தநாள் ஆரம்பமாகும்போது பஸ்கா ஆயத்தமாக இருக்கிறது. யூதர்கள் பொதுவாக மறுநாள் சாயங்காலத்தில் பஸ்காவை புசிப்பது வழக்கம்.

தீர்க்கதரிசன எண் - 25

"என்னுடனே புசிக்கிற உங்களில் ஒருவன் என்னைக்காட்டிக்கொடுப்பான் (மாற்கு 14:18) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

தீர்க்கதரிசன எண் - 26

"என்னுடனேகூடத் தாலத்தில் கையிடுகிறவனாகிய பன்னிருவரிலொருவனே அவன்" மாற்கு 14:20-21) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"என்னுடனேகூடத் தாலத்தில் கையிடுகிறவன்" விருந்து கொடுக்கிறவர் தன்னுடைய விருந்தினர்களைக் கனப் படுத்துவதற்காகத் தன்னுடைய போஜனத்தில் அவர்களுக்கு ஒரு பகுதியைக் கொடுப்பார் அதன் பிரகாரமாக இயேசு கிறிஸ்து யூதாசைக் கனப்படுத்துகிறார் (யோவான் 13:23-33)

"எழுதியிருக்கிறபடியே" வேதத்தில் எழுதியிருக்கிறபடியே நாம் ஜீவிப்போமானால் நமக்கு பிரச்சனை ஒன்றுமில்லை எழுதியிருக்கிறபடியே நாம் பிரசங்கிக்கும் போது சத்தியத்தையே பிரசங்கிப்போம். கள்ள உபதேசத்திற்கு வழியில்லை

"எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக் கொடுக்கப்படுகிறாரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ" வேதத்திலே நாம் வாசிக்கும் பயங்கரமான காரியம். இயேசு கிறிஸ்துவின் வாயில் பொதுவாக ஆசீர்வாதமான வார்த்தைகளே வரும் ஆனால் இப்போதோ தம்மைக் காட்டிக்கொடுக்கிற மனுஷனுக்கு ஐயோ என்று கூறுகிறார் யூதாஸ் இயேசுவின் பன்னிரு சீஷர்களில் ஒருவன்

யூதாஸைப் பற்றிய காரியங்கள்

1 அப்போஸ்தலன் (மத் 10 மாற்கு 3:13-19)

2 பரிசுத்த ஆவியினால் நிறைக்கப்பட்டவன் (மத் 10:20)

3 கண்டுபிடிக்கப்பட்ட ஆடு (மத் 10:16

4 பிரசங்கம் பண்ணுவதற்கு அபிஷேகிக்கப் பட்டவன் (மாற்கு 3:13

5 சுகமாக்குவதற்கு அபிஷேகிக்கப் பட்டவன் (மாற்கு 3:13-14

6 வல்லமையால் நிரப்பப்பட்டவன் (மத் 10:1-8)

7 நன்றாகப் பிரசங்கிக்கக்கூடியவன், குணமாக்கும் வரம் உடையவன் (மாற்கு 6:7-13, லூக்கா 9:6,10)

8 தண்ணீரில் ஞானஸ்நானம் கொடுத்தவன் (யோவான் 4:1-2

9 நித்திய ஜீவனைப் பெற்றுக் கொண்டவன் (யோவான் 17:2 = யோவான் 17:12)

10 இரட்சிக்கப்பட்டவன், ஜீவபுஸ்தகத்திலே பெயர் எழுதப்பட்டவன் (அப 1:20 = சங் 69:25-28; லூக்கா 10:20 = மாற்கு 6:13)

11 நித்திய காலமாக இயேசுவோடு ஆளுகை செய்வதற்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவன் (மத் 19:28

12 சபையின் முதலாவது பொக்கிஷத்தாரன் (யோவான் 12:4-6, யோவான் 13:29)

14 அதிகாரம்

13. கிறிஸ்துவின் சிநேகிதன். (சங் 41:9)

14. கிறிஸ்துவின் நம்பிக்கைக்குரியவன் (சங் 41:9; யோவான் 2:25)

15. கிறிஸ்துவின் விரோதியல்ல கிறிஸ்துவின் கிருபையையும் ஆலோசனையையும் பெற்றவன் கிறிஸ்துவோடுஐக்கியமாகஇருந்தவன் (சங் 55:12-14; யோவான் 13:18-19; அப் 1:16-17; சங் 41:9)

16. சுவிசேஷத்திருகுத் தெய்வீக ஊழியக்காரன் (சங் 109:8; அப் 1:20; மத் 10:1-8)

17. அப்போஸ்தல ஊழியத்தில் பங்கு பெற்றவன் (அப் 1:16-17,25; மத் 10:1-20)

18. திருடன் - அதாவது திருடனானான் பின்மாறிப்போனவன் (யோவான் 12:4-6; யோவான் 6:70; யோவான் 13:10-11; அப் 1:25; மாற்கு 14:21)

சுகமாயிருத்தல் (familiar) - שָׁלוֹם - shaw-lome', shaw-lome' - 7965

ஆபெசோ சமாதானம் சுகமாயிருத்தல். க்ஷேமம் [redacted] சுகசெய்தி, சுகம், ஷாலோம் சரி வினவுதல், பத்திரப்பட்டிருத்தல் சவுக்கியம், செல்வம் வாழ்வு கூடாரம், ஒப்புரவு, அனைத்தும் சுகித்திருத்தல் இஷ்டம் (சங் 41:9; சங் 69:25,28; சங் 109:3-20; யோவான் 7:70; யோவான் 17:12)

(2) கர்த்தருடைய பந்தி - (மத் 26:26; லூக் 22:19; 1கொரி 11)

மாற்கு 14:22 அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார்.

மாற்கு 14:23 பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதை அவர்களுக்குக் கொடுத்தார்; அவர்களெல்லாரும் அதிலே பானம் பண்ணினார்கள்.

மாற்கு 14:24 அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: இது அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது.

மாற்கு 14:25 நான் தேவனுடைய ராஜ்யத்தில் நவமான ரசத்தைப் பானம்பண்ணும் நாள் வரைக்கும் திராட்சப்பழரசத்தை இனி நான் பானம்பண்ணுவதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

மாற்கு 14:26 அவர்கள் ஸ்தோத்திரப் பாட்டைப் பாடினபின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்.

"அவர்கள் போஜனம் பண்ணுகையில் இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து அதைப் பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார்" - (மத் 26:20-29; லூக்கா 22:14-38; யோவான் 13:1-14:31)

தீர்க்கதரிசன எண் - 27

"இது என்னுடைய சரீரமாயிருக்கிறது ..." (மாற்கு 14:22-25) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. மாற்கு 14:25 ஆயிரம் வருஷ அரசாட்சியில் நிறைவேறும் (மத் 26:26; லூக்கா 22:15-18,30)

"அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" - (மத் 26:28

"நான் தேவனுடைய ராஜ்யத்தில் நவமான ரசத்தைப் பானம்பண்ணும் நாள் வரைக்கும் திராட்சப்பழரசத்தை இனி நான் பானம்பண்ணுவதில்லை" நித்திய ஜீவனில் மனுஷர் புசிப்பதற்கு வாய்ப்பு இருப்பதை இந்த [redacted] கூறுகிறது. (லூக்கா 22:15-18,30; வெளி 2:7,17; வெளி 19:9-10; வெளி 22:2

14 அதிகாரம்

"அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்" - மத் 26:30 லூக்கா 22:39 யோவான் 14:31

(3) பேதுரு தம்மை மறுதலிக்கப் போவதை இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (மத் 26:31 லூக் 22:31; யோவான் 13:36)

மாற்கு 14:27 அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: மேய்ப்பனை வெட்டுவேன், ஆடுகள் சிதறடிக்கப்படும் என்று எழுதியிருக்கிறபடி, இந்த இராத்திரியிலே நீங்களெல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள்.

மாற்கு 14:28 ஆகிலும் நான் உயிர்த்தெழுந்த பின்பு, உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போவேன் என்றார்.

மாற்கு 14:29 அதற்குப் பேதுரு: உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் இடறலடையேன் என்றான்.

மாற்கு 14:30 இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு இந்த இராத்திரியிலே, சேவல் இரண்டு தரம் கூவுகிறதற்கு முன்னே, நீ மூன்றுதரம் என்னை மறுதலிப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

மாற்கு 14:31 அதற்கு அவன்: நான் உம்மோடே மரிக்க வேண்டியதாயிருந்தாலும், உம்மை மறுதலிக்க மாட்டேன் என்று உறுதியாய்ச் சொன்னான்; எல்லாரும் அப்படியே சொன்னார்கள்.

தீர்க்கதரிசன எண் - 28

"இந்த இராத்திரியிலே நீங்களெல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள்" மாற்கு 14:27 இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

மாற்கு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 8

"மேய்ப்பனை வெட்டுவேன், ஆடுகள் சிதறடிக்கப்படும்" (மாற்கு 14:27; சக 13:7

தீர்க்கதரிசன எண் - 29

"நான் உயிர்த்தெழுந்த பின்பு, உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போவேன்" (மாற்கு 14:28-31, இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று

"உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும் நான் இடறலடையேன்" - (மத் 26:58)

"உறுதியாய்ச் சொன்னான்" - திரும்பத்திரும்பக்கூறுதல்

IV. கிறிஸ்துவின் பாடுகள்

1. கெத்செமனே தோட்டத்தில் இயேசுவின் துக்கமும் வியாகுலமும் - (மத் 26:36 லூக் 22:39; யோவான் 18:1)

மாற்கு 14:32 பின்பு கெத்செமனே என்னப்பட்ட இடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: நான் ஜெபம்பண்ணுமளவும் நீங்கள் இங்கே உட்கார்ந்திருங்கள் என்று சொல்லி,

மாற்கு 14:33 பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் தம்மோடே கூட்டிக்கொண்டுபோய், திகிலடையவும் மிகவும் வியாகுலப்படவும் தொடங்கினார்.

மாற்கு 14:34 அப்பொழுது அவர்: என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது; நீங்கள் இங்கே தங்கி, விழித்திருங்கள் என்று சொல்லி,

மாற்கு 14:35 சற்று அப்புறம்போய், தரையிலே விழுந்து, அந்த வேளை தம்மைவிட்டு நீங்கிப்போகக் கூடுமானால் அது நீங்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டு:

14 அதிகாரம்

மாற்கு 14:36 அப்பா பிதாவே, எல்லாம் உம்மாலே கூடும். இந்தப் பாத்திரத்தை என்னிடத்திலிருந்து எடுத்துப்போடும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்றார்.

மாற்கு 14:37 பின்பு அவர் வந்து, அவர்கள் நித்திரை பண்ணுகிறதைக் கண்டு, பேதுருவை நோக்கி: சீமோனே, நித்திரைபண்ணுகிறாயா? ஒரு மணிநேரம் நீ விழித்திருக்கக்கூடாதா?

மாற்கு 14:38 நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்.

மாற்கு 14:39 அவர் மறுபடியும் போய், அந்த வார்த்தைகளையே சொல்லி ஜெபம்பண்ணினார்.

மாற்கு 14:40 அவர் திரும்பி வந்தபோது, அவர்கள் மறுபடியும் நித்திரை பண்ணுகிறதைக் கண்டார்; அவர்களுடைய கண்கள் மிகுந்த நித்திரை மயக்கம் அடைந்திருந்தபடியால், தாங்கள் மறுமொழியாக அவருக்குச் சொல்வது இன்னதென்று அறியாதிருந்தார்கள்.

மாற்கு 14:41 அவர் மூன்றாந்தரம் வந்து: இனி நித்திரைபண்ணி இளைப்பாறுங்கள்; போதும், வேளை வந்தது, இதோ, மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிறார்.

மாற்கு 14:42 என்னைக் காட்டிக்கொடுக்கிறவன், இதோ, வந்துவிட்டான், எழுந்திருங்கள், போவோம் என்றார்.

"கெத்செமனே" - (மத் 26:36)

"பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் தம்மோடே கூட்டிக்கொண்டு போனார்" - மூன்று விசேஷித்த நிகழ்ச்சிகளில் இம்மூவரும் இயேசுவோடு கூட இருந்தார்கள் (மாற்கு 14:33; மாற்கு 5:37; மத் 17:1; லூக்கா 9:28)

திகிலடை (soreamazed) - εκθαμβέω - ekthambeoo - 1568

வினைச்சொல் - பயப்படு, ஆச்சரியப்படு, திகிலடை (to throw into terror, alarm, distress) இந்த வார்த்தை இந்த வசனத்திலும் மாற்கு 9:15; மாற்கு 16:5-6 ஆகிய வசனங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இயேசுவைத் திகிலடையச் செய்த காரியம் எது? இயேசு கிறிஸ்து கல்வாரிச் சிலுவையில் மரிக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தம். சாத்தானின் அந்தகாரச் சக்திகள் கல்வாரியில் அவர் மரிப்பதற்கு முன்பாகவே அவரைக் கொன்றுபோட முயற்சி பண்ணின்று. கல்வாரி சிலுவையில் இயேசு கிறிஸ்து சாத்தானை ஜெயிக்க வேண்டும். அது நடைபெறாமல் தடுப்பதற்காக சாத்தானுடைய சக்திகள் அனைத்தும் இயேசுவிற்கு எதிராகக் கிரியை செய்தன (மத் 20:22-23; கொலோ 2:14-17; எபி 5:7; 1பேதுரு 2:24)

"தரையிலே விழுந்தார்" சாத்தானின் அந்தகாரச் சக்திகள் இயேசுவை மிகுந்த பாரமாக அழுத்தியதினால் அவர் சரீரத்தில் களைப்படைந்தவராக தரையிலே விழுந்திருக்கலாம். (லூக்கா 22:43-44)

"அந்த வேளை தம்மைவிட்டு நீங்கிப்போகக் கூடுமானால் அது நீங்க வேண்டும்" "அந்த வேளை" என்பது "இந்தப்பாத்திரம்" என்னும் வாக்கியத்தைக் குறிக்கும். (மாற்கு 14:35 = மத் 26:39)

14 அதிகாரம்

"அப்பா பிதாவே" - அப்பா என்பது அராமாயிக் சொல் தந்தை என்பது இதன் பொருள் யூதர்கள் தங்களுடைய சரீரபிரகாரமான பெற்றோரையும் உடன்படிக்கையின் பிரகாரமாக மார்க்கம் மாறிய பெற்றோரையும் குறிப்பதற்கு "அப்பா" (Abba) என்னும் சொல்லைப் பயன்படுத்தினார்கள் அவர்களுடைய தாயார் அடிமையாக இருக்கும்போது இந்தச் சொல்லைப் பயன்படுத்துவதில்லை (கலா 4:24) குமாரனாகிய இயேசு கிறிஸ்து பிதாவாகிய தேவனை "அப்பா" என்றழைக்கிறார் இது அவர்களுக்கு இடையே இருக்கக்கூடிய உறவை வலியுறுத்துகிறது. அப்பா என்னும் இந்த வார்த்தை இந்த வசனத்திலும் ரோமர் 8:15 கலா 4:6 ஆகிய வசனங்களிலும் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆவி (spirit) - πνεῦμα - pneuma - 4151

பால வேறுபாடற்ற பெயர் - ஆவி (the mind, will) (1கொரி 2:11) புதிய ஏற்பாட்டில் "நியூமா" pneuma என்னும் கிரேக்கச் சொல் 385 தடவை பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

"நியூமா" (pneuma) என்னும் கிரேக்கச் சொல்லின் மொழிபெயர்ப்பு விவரம்

1. ஆவி (Spirit) - 133 தடவைகள்
2. ஆவி (spirit) - 153 தடவைகள்
3. பரிசுத்த ஆவி (Holy Ghost) - 83 தடவைகள்
4. பரிசுத்த ஆவி (Holy Spirit) - 4 தடவைகள்
5. ஆவி (ghost) - 2 தடவைகள்
6. ஜீவன் (life) - 1 தடவை
7. காற்று (wind) - 1 தடவை
8. ஆவிக்குரிய (spiritual) - 1 தடவை
9. ஆவிக்குரிய (spiritually) - 1 தடவை

"நியூமா" pneuma என்னும் கிரேக்கச் சொல் யாரைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

1. தேவன் (God) (யோவான் 4:24)
2. கிறிஸ்து (Christ) (1கொரி 6:17; 1கொரி 15:45)
3. பரிசுத்த ஆவியானவர் (Holy Spirit) (மத் 1:20)
4. தூதர்கள் (angels) (அப் 8:29; எபி 1:14)
5. பிசாசுகள் (demons) (மாற்கு 7:25-26; லூக்கா 10:17,20)
6. உயிர்த்தெழுந்த சரீரம் (resurrection body) (1கொரி 15:44-45)

தீர்க்கதரிசன எண் - 30

"இனி நித்திரைபண்ணி இளைப்பாறுங்கள் போதும் வேளை வந்தது இதோ மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிறார் (மாற்கு 14:41-42) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. சாதாரண விசுவாசிக்கு ஆவிக்குரிய போராட்டம் வரும்போது, விழித்திருந்து ஜெபிக்காமல் தூங்கி விடுகிறான் ஆனால் அவனுக்கு சரீரபிரகாரமான ஆபத்து வரும்போது தூங்காமல் விழித்திருப்பான் ஆவிக்குரிய ஆபத்துக்களையும் ஆவிக்குரிய போராட்டங்களையும் நாம் சரியாகப் புரிந்து கொள்ளாமல் இருப்பதினாலேயே ஜெபம் பண்ண வேண்டிய பல சமயங்களில் ஜெபம் பண்ணாமல் தூங்கிக் கொண்டிருக்கிறோம்.

மாற்கு - தொகுப்புரை

14 அதிகாரம்

போதும் (enough) - ἀπέχω - apechoo
568

வினைச்சொல் - போதும் - யூதாஸ் இயேசுவைக் காட்டிக் கொடுப்பதற்காக பிரதான ஆசாரியரிடம் ஏற்கெனவே பணம் பெற்று விட்டான் இது இயேசுவிற்குத் தெரியும். அவன் வாங்கியதற்கு ரசீது கொடுப்பதுபோன்று, இயேசு கிறிஸ்து "போதும்" என்று கூறுகிறார் (மாற்கு 14:41) இப்போது யூதாஸ் இயேசுவை நெருங்கிவிட்டான் (மாற்கு 14:42-45)

2. இயேசுவை கொல்வதற்கு முயற்சி - காட்டிக் கொடுக்கப்படுவதும் கைது பண்ணப்படுவதும் - (மத் 26:47 லூக் 22:47 யோவான் 18:3)

மாற்கு 14:43 உடனே அவர் இப்படிப் பேசுகையில், பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் வந்தான்; அவனோடேகூடப் பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் அனுப்பின திரளான ஜனங்கள் பட்டயங்களையும் தடிகளையும் பிடித்துக்கொண்டு வந்தார்கள்.

மாற்கு 14:44 அவரைக் காட்டிக் கொடுக்கிறவன்: நான் எவனை முத்தஞ்செய்வேனோ அவன்தான், அவனைப் பிடித்துப் பத்திரமாய்க் கொண்டுபோங்கள் என்று அவர்களுக்குக் குறிப்புச் சொல்லியிருந்தான்.

மாற்கு 14:45 அவன் வந்தவுடனே அவரண்டையில் சேர்ந்து: ரபீ, ரபீ, என்று சொல்லி, அவரை முத்தஞ்செய்தான்.

மாற்கு 14:46 அப்பொழுது அவர்கள் அவர்மேல் கைபோட்டு, அவரைப் பிடித்தார்கள்.

மாற்கு 14:47 அப்பொழுது கூடநின்றவர்களில் ஒருவன் கத்தியை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனைக் காதற வெட்டினான்.

மாற்கு 14:48 இயேசு அவர்களை நோக்கி: கள்ளனைப் பிடிக்கப் புறப்படுகிறதுபோல நீங்கள் பட்டயங்களையும் தடிகளையும் எடுத்துக்கொண்டு என்னைப் பிடிக்கவந்தீர்கள்.

மாற்கு 14:49 நான் தினந்தோறும் உங்கள் நடுவிலே தேவாலயத்தில் உபதேசம் பண்ணிக்கொண்டிருந்தேன், அப்பொழுது நீங்கள் என்னைப் பிடிக்கவில்லையே; ஆனாலும் வேதவாக்கியங்கள் நிறைவேற வேண்டியதாயிருக்கிறது என்றார்.

மாற்கு 14:50 அப்பொழுது எல்லாரும் அவரை விட்டு ஓடிப்போனார்கள்.

மாற்கு 14:51 ஒரு வாலிபன் ஒரு துப்பட்டியை மாத்திரம் தன்மேல் போர்த்துக்கொண்டு அவர் பின்னே போனான்; அவனைப் பிடித்தார்கள்.

மாற்கு 14:52 அவன் தன் துப்பட்டியைப் போட்டுவிட்டு, நிர்வாணமாய் அவர்களை விட்டு ஓடிப்போனான்.

"அப்பொழுது கூடநின்றவர்களில் ஒருவன் கத்தியை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனைக் காதற வெட்டினான்" பேதுரு காதை வெட்டினான் (யோவான் 18:10) பட்டயங்கள் வைத்திருந்த இரண்டு சீஷர்களில் பேதுரு ஒருவன் (லூக்கா 22:38)

"அப்பொழுது எல்லாரும் அவரை விட்டு ஓடிப்போனார்கள்" மாற்கு 14:27 ஆவது வசனத்தின் நிறைவேற்றம்.

"ஒரு வாலிபன்" இந்த வாலிபன் யாரென்று தெளிவாகத் தெரியவில்லை. ஒரு சிலர் இவனை லாசரு என்கிறார்கள் வேறு சிலர் இவனை மாற்கு என்னும் யோவான் என்கிறார்கள்

14 அதிகாரம்

துப்பட்டி (linen cloth) - σινδών - sindoon - 4616

பெண்பால் பெயர்ச்சொல் - துப்பட்டி இந்தத் துணியினால் இறந்தவர்களை அடக்கம் பண்ணுவார்கள் இதே துணியை துறவிகள் இரவு வேளையில் தரித்திருப்பார்கள்

"அவனைப் பிடித்தார்கள்" - 2சாமு 2:14 ஆவது வசனத்தில் போர்ச்சேவகர்கள் செய்ததுபோன்று இருக்கிறது.

8. இயேசுவின் வழக்கு விசாரணையும் பரியாசமும் - மத் 26:57 யோவான் 18:12,19; 22:63

மாற்கு 14:53 இயேசுவை அவர்கள் பிரதான ஆசாரியனிடத்தில் கொண்டு போனார்கள்; அங்கே ஆசாரியர் மூப்பர் வேதபாரகர் எல்லாரும் கூடி வந்திருந்தார்கள்

மாற்கு 14:54 பேதுரு தூரத்திலே அவருக்குப் பின்சென்று, பிரதான ஆசாரியனுடைய அரமனைக்குள் வந்து, சேவகரோடேகூட உட்கார்ந்து நெருப்பண்டையிலே குளிர்காய்ந்து கொண்டிருந்தான்

மாற்கு 14:55 அப்பொழுது பிரதான ஆசாரியரும் ஆலோசனைச் சங்கத்தாரனைவரும் இயேசுவைக் கொலைசெய்யும்படி அவருக்கு விரோதமாகச் சாட்சி தேடினார்கள்; அகப்படவில்லை

மாற்கு 14:56 அநேகர் அவருக்கு விரோதமாகப்பொய்ச்சாட்சிசொல்லியும் அந்தச் சாட்சிகள் ஒவ்வவில்லை

மாற்கு 14:57 அப்பொழுது சிலர் எழுந்து, கைவேலையாகிய இந்த தேவாலயத்தை நான் இடித்துப் போட்டு, கைவேலையல்லாத வேறொன்றை மூன்று நாளைக்குள்ளே கட்டுவேனென்று இவன் சொன்னதை நாங்கள் கேட்டோம் என்று

மாற்கு 14:58 அவருக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி சொன்னார்கள்

மாற்கு 14:59 அப்படிச் சொல்லியும் அவர்கள் சாட்சி ஒவ்வாமற்போயிற்று.

மாற்கு 14:60 அப்பொழுது பிரதான ஆசாரியன் எழுந்து நடுவே நின்று இயேசுவை நோக்கி: இவர்கள் உனக்கு விரோதமாய்ச் சொல்லுகிறதைக் குறித்து நீ ஒன்றும் சொல்லுகிறதில்லையா என்று கேட்டான்

மாற்கு 14:61 அவரோ ஒரு உத்தரவும் சொல்லாமல் பேசாதிருந்தார் மறுபடியும் பிரதான ஆசாரியன் அவரை நோக்கி, நீ ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? என்று கேட்டான்

மாற்கு 14:62 அதற்கு இயேசு: நான் அவர் தான் மனுஷகுமாரன் சர்வவல்லவரின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்களின்மேல் வருவதையும் நீங்கள் காண்பீர்கள் என்றார்

மாற்கு 14:63 பிரதான ஆசாரியன் இதைக் கேட்டவுடனே தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு இனிச் சாட்சிகள் நமக்கு வேண்டியதென்ன?

மாற்கு 14:64 தேவதூஷணத்தைக் கேட்டீர்களே உங்களுக்கு என்னமாய்த் தோன்றுகிறது என்றான் அதற்கு அவர்களெல்லாரும், இவன் மரணத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்று தீர்மானம் பண்ணினார்கள்

மாற்கு 14:65 அப்பொழுது சிலர் அவர்மேல் துப்பவும் அவருடைய முகத்தை மூடவும் அவரைக் குட்டவும் ஞானதிருஷ்டியினாலே பார்த்துச் சொல் என்று சொல்லவும் தொடங்கினார்கள் வேலைக்காரரும் அவரைக் கன்னத்தில் அறைந்தார்கள்

14 அதிகாரம்

"அங்கே ஆசாரியர் மூப்பர் வேதபாரகர் எல்லாரும் கூடிவந்திருந்தார்கள்" - அவர்கள் இரவு வேளையில் கூடிவந்திருக்கிறார்கள் மிகக்கொடிய குற்றவாளியை விசாரிப்பதுபோல இங்கு எல்லோருமே வந்திருக்கிறார்கள் இயேசுவைச் சீக்கிரமாகக் கொல்ல வேண்டுமென்பது ஆசாரியர் மூப்பர் வேதபாரகர் ஆகியோரின் எண்ணமாக இருக்கலாம் ஆனால் இயேசு கிறிஸ்து வேதவாக்கியத்தின் பிரகாரம் தமது ஜீவனை ஒப்புக்கொடுக்கச் சித்தம் கொண்டிருக்கிறார் இரவு வேளையில் அவர் விசாரிக்கப்படுகிறார் மறுநாள் பஸ்கா ஆட்டுக்குட்டி பலியிடப்படும் நாள் அந்த வேளையில் இயேசு கிறிஸ்து உலகத்தின் பாவத்திற்காகப் பஸ்கா ஆட்டுக்குட்டியாக அடிக்கப்படப்போகிறார்

"இயேசுவைக் கொலைசெய்யும்படி அவருக்கு விரோதமாகச் சாட்சி தேடினார்கள் அகப்படவில்லை" - யூதருடைய நியாயப் பிரமாணத்திற்கு விரோதமாக இங்கு விசாரணை நடைபெறுகிறது. விசாரிக்கும் முன்பாகவே சாட்சிகள் இருக்கும். ஆனால் இங்கோ இயேசுவைத் தங்கள் இஷ்டப்படி குற்றப்படுத்துவதற்காக சாட்சிகளைத் தேடுகிறார்கள் இயேசுவைக் கொலைசெய்ய வேண்டுமென்று தீர்மானம் பண்ணிவிட்டார்கள் ஆகையினால் ஏதாவது ஒரு வழியில் அவருக்கு விரோதமாகச் சாட்சிக் கூறுகிறவர்களைத் தேடினார்கள் ஆனாலும், ஒருவரும் அகப்படவில்லை ஒரு பாவமும் அறியாதவர் மனுக்குலத்தில் இயேசு கிறிஸ்து மட்டுமே அவரை ஆலோசனைச் சங்கத்தார் பாவியாகத் தீர்மானம் பண்ணுகிறார்கள்

"அநேகர் அவருக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொன்னார்கள்" பத்துக் கட்டளைகளில் ஒன்பதாவது கட்டளையை மீறும் செயல்

"கைவேலையாகிய இந்தத் தேவாலயத்தை நான் இடித்துப்போட்டு, கைவேலையல்லாத வேறொன்றை மூன்று நாளைக்குள்ளே கட்டுவேன்" - யோவான் 2:19-21 ஆகிய வசனங்களைப் பற்றிய குறிப்பு

"பிரதான ஆசாரியன் எழுந்து நடுவே நின்றான்" - பொதுவான விசாரணையில் பிரதான ஆசாரியன் எழுந்து நடுவே நிற்கமாட்டான் இயேசுவைப் பிலாத்துவிடம் அனுப்புவதற்குப் போதுமான சாட்சிகளைத் தேடி அவன் எழுந்து நடுவே நிற்கிறான் (மாற்கு 15:1)

"அவரோ ஒரு உத்தரவும் சொல்லாமல் பேசாதிருந்தார்" - ஏசா 53:7 ஆவது வசனத்தின் நிறைவேறுதல்.

"நீ ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா?" - இயேசு கிறிஸ்துவைப் பற்றிச் சரியாகப் புரிந்து கொள்ளாதவர்கள் குழம்பிப் போயிருக்கிறார்கள் அவர் இயேசு மட்டுமா? அல்லது அவர் இயேசு கிறிஸ்துவா? அவர் தேவகுமாரனா? அல்லது மனுஷகுமாரனா? இவ்வாறு தங்களுக்குள் பலவிதமான கேள்விகளைக் கேட்டுக் கொள்கிறார்கள்

இயேசு கிறிஸ்து தம்மைக் கிறிஸ்து என்றும் தேவனுடைய குமாரன் என்றும் வெளிப்படுத்தி இருக்கிறார் ஆனால் சாத்தானும் யூதரும் இயேசு கிறிஸ்துவின் இந்தச் சாட்சியைப் பொய்யாக்க முயற்சி பண்ணுகிறார்கள் (மத் 4:3,6 மத் 27:40, யோவான் 5:18 யோவான் 10:36 யோவான் 19:7)

இயேசு கிறிஸ்து தம்மைத் தேவகுமாரன் என்று கூறியதை பிதா அங்கீகரிக்கிறார் (மத் 3:17 மத் 17:5) பிசாசுகளும் இந்தச் சத்தியத்தை அங்கீகரிக்குமாறு பலவந்தம் பண்ணப்படுகிறார்கள் (மத் 8:29 மாற்கு 3:11; மாற்கு 5:7) இயேசுவின் சீஷர்கள் அவரைத் தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டார்கள் (மத் 14:33, மத் 16:16)

இயேசுவின் சத்துருக்களோ இந்தச் சத்தியத்திற்கு எதிர்த்து நிற்கிறார்கள் அவர் உயிர்த்தெழுந்த பின்பு கூட அவரைத் தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்க மறுக்கிறார்கள் (மத் 27:40; மத் 28:11-15, அப் 4:16-22; அப் 5:17-28,40-42 யூதர்களில் சிலர் மனந்திரும்பி, இயேசுவைக் கிறிஸ்து என்று அறிக்கையிட்டார்கள் (யோவான் 3:2; அப் 6:7)

மாற்கு - தொகுப்புரை

14 அதிகாரம்

"ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவன்" - யூதருக்கு யெகோவா என்னும் நாமம் மிகவும் பரிசுத்தமானது. அந்த நாமத்தை உச்சரிப்பதைத் தவிர்ப்பார்கள். ஆகையினால் அவர்கள் யெகோவா என்று கூறுவதற்குப் பதிலாக "ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவன்" என்று கூறுகிறார்கள்.

தீர்க்கதரிசன எண் - 81

"மனுஷகுமாரன் சர்வவல்லவரின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் நீங்கள் காண்பீர்கள்" (மாற்கு 14:62) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. (மத் 16:27; மத் 19:28; மத் 24:29-31; மத் 25:31-46; 2தெச 1:7-10; வெளி 19:11-21; சக 14:4-5; தானி 7:13)

"மனுஷகுமாரன்" - மாற்கு 14 இடங்களில் "மனுஷகுமாரன்" என்று எழுதியிருக்கிறார். அவற்றில் இது கடைசித் தடவையாகும் (மாற்கு 2:10,28; மாற்கு 8:31,38; மாற்கு 9:9,12,31; மாற்கு 10:33,45; மாற்கு 13:26; மாற்கு 14:21,41,62) (யோவான் 1:51)

"சர்வவல்லவரின் வலது பாரிசம்" இயேசு கிறிஸ்து மறுபடியும் பூமிக்கு வரும்போது பிதா அவரோடுகூட வருவார் என்பதை இந்த வசனம் தெளிவுபடுத்துகிறது. (சக 14:5; தீத்து 2:13; தானி 7:9-14,22)

"இவன் மரணத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்று தீர்மானம் பண்ணினார்கள்" - சரியாக விசாரணை செய்யாமலேயே ஒரு நிரபராதியைக் குற்றவாளி என்று தீர்மானம் பண்ணினார்கள். மாற்கு 14:64-65 ஆகிய வசனங்களில் அவர்கள் இயேசுவிற்குச் செய்த ஆறு காரியங்களைக் குறித்து நாம் வாசிக்கலாம்.

"சிலர் அவர்மேல் துப்பவும், அவருடைய முகத்தை மூடவும், அவரைக் குட்டவும், ஞானதிருஷ்டியினாலே பார்த்துச் சொல் என்று சொல்லவும் தொடங்கினார்கள்" - இவ்வாறு செய்தவர்கள் மார்க்கத்தலைவர்கள். தங்களைப் பக்திமான்கள் என்று கூறிக்கொள்பவர்கள்.

4. பேதுரு மறுதலிக்கிறான் - (மத் 26:69; லூக் 22:54; யோவான் 18:15,25)

மாற்கு 14:66 அத்தருணத்திலே பேதுரு கீழே அரமனை முற்றத்திலிருக்கையில் பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரிகளில் ஒருத்தி வந்து,

மாற்கு 14:67 குளிர்காய்ந்து கொண்டிருக்கிற பேதுருவைக் கண்டு, அவனை உற்றுப் பார்த்து: நீயும் நசரேயனாகிய இயேசுவோடே இருந்தாய் என்றாள்.

மாற்கு 14:68 அதற்கு அவன்: நான் அறியேன், நீ சொல்லுகிறது எனக்குத் தெரியாது என்று மறுதலித்து, [illegible] வாசல்மண்டபத்துக்குப் போனான்; அப்பொழுது சேவல் கூவிற்று.

மாற்கு 14:69 வேலைக்காரி அவனை மறுபடியும் கண்டு: இவன் அவர்களில் ஒருவன் என்று அருகே நின்றவர்களுக்குச் சொன்னாள்.

மாற்கு 14:70 அவன் மறுபடியும் மறுதலித்தான். சற்று நேரத்துக்குப் பின்பு மறுபடியும் அருகே நிற்கிறவர்கள் பேதுருவைப் பார்த்து: மெய்யாகவே நீ அவர்களில் ஒருவன்; நீ கலிலேயன், உன் பேச்சு அதற்கு ஒத்திருக்கிறது என்றார்கள்.

மாற்கு 14:71 அதற்கு அவன்: நீங்கள் சொல்லுகிற மனுஷனை அறியேன் என்று சொல்லி, சபிக்கவும் சத்தியம் பண்ணவும் தொடங்கினான்.

மாற்கு 14:72 உடனே சேவல் இரண்டாந்தரம் கூவிற்று. சேவல் இரண்டுதரம் கூவுகிறதற்குமுன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று இயேசு தனக்குச் சொன்ன வார்த்தையைப் பேதுரு நினைவுகூர்ந்து, மிகவும் அழுதான்.

14 அதிகாரம்

"நான் அறியேன் நீ சொல்லுகிறது எனக்குத் தெரியாது" - இயேசு கிறிஸ்து மாற்கு 14:30 ஆவது வசனத்தில் முன்னறிவித்த காரியம் நிறைவேறுகிறது. மூன்று வெவ்வேறு வேளைகளில் பலர் பேதுருவிடம் விசாரணை செய்கிறார்கள் (மாற்கு 14:67-72; மத் 26:69-75; லூக்கா 22:54-62; யோவான் 18:15-18,25-27) இரண்டு ஸ்திரீகள் ஒரு மனுஷன் அருகில் இருந்தவர்கள் ஆகியோர் பேதுருவிடம் கேள்வி கேட்கிறார்கள் மேலே கூறப்பட்டிருக்கிற வசனங்களில் அவன் நான்கு பொய்கள் கூறியதாக வாசிக்கிறோம்.

சபி (curse) - ἀναθεματίζω - anathematizoo - 332

வினைச்சொல் - சபதம் பண்ணு. சபி (cursing and swearing) இது புதிய ஏற்பாட்டில் புதுமையானதல்ல பேதுரு சில மணிநேரத்திற்கு முன்பாக இயேசுவைத் துதித்தான்

ஆனால் இப்போதோ அவரைச் சபிக்கிறான் இவனுடைய வாழ்விலும் பரிசுத்த ஆவியானவர் ஒரு பெரிய மாற்றத்தைக் கட்டளையிட்டார் பெந்தெகொஸ்தே நாளில் அவனுடைய ஜீவியத்தில் ஏற்பட்ட மாற்றத்தை அப 2 ஆவது அதிகாரத்தில் நாம் வாசித்தறியலாம்

"சேவல் இரண்டுதரம் கூவுகிறதற்குமுன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய்"

1. முதலாவது மறுதலிப்பு - மாற்கு 14:66 - ஒரு ஸ்திரீ பிரகாரத்தில் அவனிடம் கேள்வி கேட்டபோது பேதுரு மறுதலிக்கிறான்

2. இரண்டாவது மறுதலிப்பு மாற்கு 14:68 - அவன் குளிர்காய்ந்து கொண்டிருந்த போது

3. மூன்றாவது மறுதலிப்பு லூக்கா 22:59-62 இயேசு பேதுருவைப் பார்த்துக் கொண்டிருந்தபோது.

"மிகவும் அழுதான்" தான் செய்த தவறுக்கு மனங்கசந்து அழுகிறான் (மத் 26:75; லூக்கா 22:62)

15 அதிகாரம்

5. பிலாத்துவிற்கு முன்பாக இயேசு – (மத் 27:11; லூக் 23:1; யோவான் 18:28)

மாற்கு 15:1 பொழுது விடிந்தவுடனே பிரதான ஆசாரியரும் மூப்பரும் வேதபாரகரும் ஆலோசனைச் சங்கத்தாரனைவருங்கூடி ஆலோசனை பண்ணி, இயேசுவைக் கட்டிக் கொண்டு போய், பிலாத்துவினிடத்தில் ஒப்புக் கொடுத்தார்கள்.

மாற்கு 15:2 பிலாத்து அவரை நோக்கி: நீ யூதருடைய ராஜாவா என்று கேட்டான். அதற்கு அவர்: நீர் சொல்லுகிறபடிதான் என்றார்.

மாற்கு 15:3 பிரதான ஆசாரியர்கள் அவர்மேல் அநேகங் குற்றங்களைச் சாட்டினார்கள். அவரோ மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை.

மாற்கு 15:4 அப்பொழுது பிலாத்து மறுபடியும் அவரை நோக்கி: இதோ, இவர்கள் உன்மேல் எத்தனையோ குற்றங்களைச் சாட்டுகிறார்களே, அதற்கு நீ உத்தரவு ஒன்றும் சொல்லுகிறதில்லையா என்று கேட்டான்.

மாற்கு 15:5 இயேசுவோ அப்பொழுதும் உத்தரவு ஒன்றும் சொல்லவில்லை. அதினால் பிலாத்து ஆச்சரியப்பட்டான்.

மாற்கு 15:6 காவல்பண்ணப்பட்டவர்களில் எவனை விடுதலையாக்க வேண்டுமென்று ஜனங்கள் கேட்டுக்கொள்வார்களோ அவனை அவர்களுக்காக விடுதலையாக்குவது பண்டிகைதோறும் பிலாத்துவுக்கு வழக்கமாயிருந்தது.

"பொழுது விடிந்தவுடனே" – சூரிய உதயத்திற்கு முன்பு, மாற்கு 1:35, மாற்கு 16:2,9, யோவான் 20:1. நடு இரவிற்கு முன்பாக இயேசு கிறிஸ்துவை பிலாத்துவிடம் ஒப்புக்கொடுக்க வேண்டும். பிலாத்து "இதோ உங்கள் ராஜா" (யோவான் 19:14) என்று கூறும்போது ஏறக்குறைய ஆறு மணிநேரமாக இருந்தது.

"ஆலோசனைச் சங்கத்தாரனைவரும்" – பிரதான ஆலோசனைச் சங்கத்தில் எழுபத்திரண்டு மூப்பர்கள் அங்கத்தினராக இருப்பார்கள். ஒவ்வொரு கோத்திரத்திற்கும் ஆறு பேர் நியமிக்கப்படுவார்கள். சிறிய ஆலோசனைச் சங்கங்களில் மூன்று முதல் இருபத்தி மூன்று அங்கத்தினர்கள் வரையிலும் இருப்பார்கள். இவர்கள் எல்லோரும் கூடி ஆலோசனை பண்ணியது தேவன்மீதும் அவர் அபிஷேகம் பண்ணினவர்மீதும் அவர்களுக்கு இருந்த வெறுப்பைக் காண்பிக்கிறது. (சங் 2; லூக்கா 23:1; அப் 4:27; அப் 5:21)

கொண்டுபோ (carried ... away) – ἀποφέρω – apopheroo – 667

வினைச்சொல் – கொண்டுபோ
பலவந்தமாக இழுத்துச் செல்லுதல்

"நீ யூதருடைய ராஜாவா" – பிலாத்து இயேசு கிறிஸ்துவிடம் இவ்வாறு கேட்டதற்கு அவர் அவனுக்கு "நீர் சொல்லுகிறபடிதான்" என்று பதில் கூறுகிறார். இயேசு கிறிஸ்துவின் மீது தவறாகக் குற்றம் சாட்டப்பட்டபோது அவர் பதில் எதும் கூறாமல் ஏசா 53:7 ஆவது வசனத்தின் நிறைவேற்றமாக அமைதியாக இருந்தார்.

"நீ உத்தரவு ஒன்றும் சொல்லுகிறதில்லையா" – பிரதான ஆசாரியர்கள் இயேசுவின்மீது அநேகம் குற்றங்களைச் சாட்டினார்கள். ஆனால் இயேசுவோ மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை. பிலாத்துவிற்கு இது மிகவும் ஆச்சரியமாக இருந்தது. நீதிமன்றத்தில் இப்படிப்பட்ட வழக்குகளை அவன் விசாரித்ததும் இல்லை, கேள்விப்பட்டதும் இல்லை. சாதாரண குற்றவாளிகூட தன்மீது குற்றங்கள் சுமத்தப்படும்போது தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக எல்லா குற்றங்களையும் மறுப்பான். ஆனால் இயேசு கிறிஸ்துவோ மாறுத்தரம் ஒன்றும் சொல்லாமல் அமைதியாக இருக்கிறார். தம்மீது வழங்கவேண்டிய நியாயத்தீர்ப்பிற்கு வேளை வந்தாயிற்று என்பது அவருக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. ஆகையினால் கால தாமதத்தைத் தவிர்க்க விரும்பினார். ஏற்றவேளையில் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாக அவர் தேவனுடைய ஆட்டுக்குட்டியாக மரிக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவின் சிந்தனையில் பிரதான ஆசாரியர்களின் கேள்விகளை விட பிதாவின் சித்தத்தை நிறைவேற்றவேண்டும் என்னும் எண்ணமே நிறைந்திருந்தது.

15 அதிகாரம்

பிலாத்துவும், மதியீனன் அல்ல. பிரதான ஆசாரியர்கள் தவறான குற்றச்சாட்டுக்களை இயேசு கிறிஸ்துவின்மீது கூறுகிறார்கள் என்று அவனுக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. அவர்களுடைய பொறாமைக் குணமும் பிலாத்துவிற்கு மறைவாக இல்லை மாற்கு 15:10.

"காவல் பண்ணப்பட்டவர்களில் எவனை விடுதலையாக்க வேண்டுமென்று ஜனங்கள் கேட்டுக்கொள்வார்களோ, அவனை அவர்களுக்காக விடுதலையாக்குவது பண்டிகை தோறும் பிலாத்துவுக்கு வழக்கமாயிருந்தது - எருசலேமில் இந்தப் பண்டிகைக் காலத்தில் எல்லா புருஷர்களும் கூடியிருப்பார்கள் அவர்களை மகிழ்விப்பதற்காக ஜனங்கள் கேட்டுக் கொள்ளும் சிறைக்கைதிகள் சிலரை விடுதலை பண்ணுவது அக்காலத்து வழக்கம் யாத் 23:14-19

6. இயேசுவிற்கு தண்டனையும் பரபாசிற்கு விடுதலையும் - மத் 27:15; லூக் 23:13; யோவான் 18:39

மாற்கு 15:7 கலகம்பண்ணி அந்தக் கலகத்தில் கொலைசெய்து அதற்காகக் காவல் பண்ணப்பட்டவர்களில் பரபாஸ் என்னப்பட்ட ஒருவன் இருந்தான்

மாற்கு 15:8 ஜனங்கள் வழக்கத்தின்படியே தங்களுக்கு ஒருவனை விடுதலையாக்க வேண்டுமென்று சத்தமிட்டுக் கேட்டுக் கொள்ளத் தொடங்கினார்கள்

மாற்கு 15:9 பொறாமையினாலே பிரதான ஆசாரியர்கள் அவரை ஒப்புக் கொடுத்தார்களென்று பிலாத்து அறிந்து,

மாற்கு 15:10 அவர்களை நோக்கி: நான் யூதருடைய ராஜாவை உங்களுக்கு விடுதலையாக்க வேண்டுமென்றிருக்கிறீர்களா என்று கேட்டான்

மாற்கு 15:11 பரபாசைத் தங்களுக்கு விடுதலையாக்க வேண்டுமென்று ஜனங்கள் கேட்டுக்கொள்ளும்படி, பிரதான ஆசாரியர்கள் அவர்களை ஏவிவிட்டார்கள்

மாற்கு 15:12 பிலாத்து மறுபடியும் அவர்களை நோக்கி: அப்படியானால், யூதருடைய ராஜாவென்று நீங்கள் சொல்லுகிறவனை நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டான்

மாற்கு 15:13 அவனைச் சிலுவையில் அறையும் என்று மறுபடியும் சத்தமிட்டுச் சொன்னார்கள்

மாற்கு 15:14 அதற்குப் பிலாத்து: ஏன் என்ன பொல்லாப்புச் செய்தான் என்றான் அவர்களோ அவனைச் சிலுவையில் அறையும் என்று பின்னும் அதிகமாய்க் கூக்குரலிட்டுச் சொன்னார்கள்

மாற்கு 15:15 அப்பொழுது பிலாத்து ஜனங்களைப் பிரியப்படுத்த மனதுள்ளவனாய், பரபாசை அவர்களுக்கு விடுதலையாக்கி, இயேசுவையோ வாரினால் அடிப்பித்து சிலுவையில் அறையும்படிக்கு ஒப்புக்கொடுத்தான்

"பரபாஸ்" (**Barabbas**) - இவனைப் பற்றி வேதாகமம் அதிகமாக எதுவும் கூறவில்லை. மத் 27:20-21; மாற்கு 15:7,15; லூக்கா 23:18-19; யோவான் 18:40 அப் 3:14 ஆகிய வசனங்களில் மட்டுமே இவனைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. அவன் ஒரு கலகக்காரன் அவன் ஒரு கொலைகாரன் ஆனாலும் கூடியிருந்த ஜனங்கள் பரபாசை விடுதலை பண்ண வேண்டுமென்று கேட்டார்கள் பரபாஸ் குற்றவாளி. ஆனால் இயேசு கிறிஸ்துவோ ஒரு பாவமும் செய்யவில்லை. அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை. (1பேதுரு 2:22)

15 அதிகாரம்

"நான் யூதருடைய ராஜாவை உங்களுக்கு விடுதலையாக்க வேண்டுமென்றிருக்கிறீர்களா" - யூதர்கள் இயேசுவைப் பற்றிக் கூறிய முதலாவது குற்றச்சாட்டு "அவர் தம்மை யூதருடைய ராஜா என்று கூறினார்" என்பதுதான். பிலாத்து இந்தக் குற்றச்சாட்டைக் கேள்விப்பட்ட உடன் கோபமடைந்து இயேசுவிற்கு உடனே மரண தண்டனை கொடுப்பான் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் பிலாத்துவோ அவர்களுடைய வஞ்சனையையும், சதியையும் பொறாமையையும் அறிந்தான். ஆகையினால் இப்போது "நான் யூதருடைய ராஜாவை உங்களுக்கு விடுதலையாக்க வேண்டுமென்றிருக்கிறீர்களா" என்று யூதமார்க்கத்தலைவர்களிடம் கேட்கிறான். பிரதான ஆசாரியர்கள் இயேசுவை எப்படியும் கொலைசெய்ய வேண்டும் என்று சதியாலோசனை பண்ணினார்கள். பிலாத்துவின் கேள்வியில் அவர்களுக்குத் திருப்தியில்லை.

ஆகையினால், பிரதான ஆசாரியர் பிலாத்துவிடம் "இவனை விடுதலை பண்ணினால் நீர் இராயனுக்குச் சிநேகிதனல்ல; தன்னை ராஜாவென்கிறவனெவனோ அவன் இராயனுக்கு விரோதி என்று சத்தமிட்டார்கள்". பிலாத்து அவர்களுக்கு இணங்கி, இயேசுவைச் சிலுவையில் அறையும்படிக்கு அவர்களிடத்தில் ஒப்புக் கொடுத்தான் (யோவான் 19:12-15)

எவி விடு (moved) - ἀνασείω anaseioo - 383

வினைச்சொல் எவி விடு, கலகப்படுத்து

(up) ἀνά ana 303

முன்னிடைச் சொல் மறுபடியும் வலியுறுத்தல், ஒவ்வொன்றாக போன்ற பொருளைத் தரும் முன்னொட்டாகவோ அல்லது பின்னொட்டாகவோ பயன்படுத்தப்படும் வழியாம். எல்லாரும், இல் உள்ள தனித்தனியே, ஒவ்வொன்று

அசைக்கப்படு (moved) - σείω - seioo 4579

வினைச்சொல் - அதிர், திடுக்கிடு, அசைப்பண்ணு, அசைக்கப்படு (to stir up vehemently, rock, quake)

"அவனைச் சிலுவையில் அறையும்" - தேவதூஷணம் சொன்னதற்காக யூதர்கள் பொதுவாகக் கொடுக்கும் தண்டனை கல்லெறிவதுதான். தேசத்துரோகம் பண்ணினதற்கு ரோமர்கள் கொடுக்கும் தண்டனை சிலுவையில் அறைவது.

"ஏன், என்ன பொல்லாப்புச் செய்தான்" - பிலாத்து இயேசுவிடம் ஒரு குற்றமும் காணவில்லை. ஆகையினால் இயேசுவை எப்படியும் விடுதலை செய்யவேண்டுமென்று விரும்பினான். ஆனால் யூதர்களோ "அவனைச் சிலுவையில் அறையும் என்று பின்னும் அதிகமாய்க் கூக்குரலிட்டுச் சொன்னார்கள்"

பிலாத்துவின் மூன்று கோரிக்கைகள்

1. ஆலோசனைச் சங்கத்தாரிடம் (மத் 27:17-24)

2. ஜனங்களிடம் (மாற்கு 15:8-14)

3. ஆசாரியர்களிடம் (லூக்கா 23:13-24)

"பிலாத்து ஜனங்களைப் பிரியப்படுத்த மனதுள்ளவனாயிருந்தான்" - பலவீனமான அரசாங்கம் நீதியின்படி தீர்ப்பு செய்வதற்குப் பதிலாக ஜனங்களைப் பிரியப்படுத்தும். ஜனங்களைப் பிரியப்படுத்தும்போது நீதி மரித்துப்போகும். (யாத் 32:1 = 26-27, அப் 12:3 = 23)

"இயேசுவையோ வாரினால் அடிப்பித்து, சிலுவையில் அறையும்படிக்கு ஒப்புக் கொடுத்தான்" (மத் 27:26)

7. இயேசுவின் சிரசின்மீது முள்முடி - (மத் 27:27, யோவான் 19:5)

மாற்கு 15:16 அப்பொழுது போர்ச்சேவகர் அவரைத் தேசாதிபதியின் அரமனையாகிய மாளிகையில் கொண்டுபோய், அவ்விடத்தில் போர்ச்சேவகருடைய கூட்டமுழுவதையும் கூடிவரச்செய்து,

மாற்கு – தொகுப்புரை

15 அதிகாரம்

மாற்கு 15:17 சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி, முள்முடியைப் பின்னி அவருக்குச் சூட்டி

மாற்கு 15:18 யூதருடைய ராஜாவே வாழ்க என்று அவரை வாழ்த்தி

மாற்கு 15:19 அவரைச் சிரசில் கோலால் அடித்து, அவர்மேல் துப்பி, முழங்கால் படியிட்டு அவரை வணங்கினார்கள்

மாற்கு 15.20 அவரைப் பரியாசம் பண்ணினபின்பு சிவப்பான அங்கியைக் கழற்றி, அவருடைய வஸ்திரங்களை அவருக்கு உடுத்தி, அவரைச் சிலுவையில் அறையும்படி வெளியே கொண்டுபோனார்கள்

மாற்கு 15.21 சிரேனே ஊராரும் அலெக்சந்தருக்கும் ரூபுக்கும் தகப்பனுமாகிய சீமோன் என்னப்பட்ட ஒருவன் நாட்டிலிருந்து அவ்வழியே வருகையில், அவருடைய சிலுவையைச் சுமக்கும்படி அவனைப் பலவந்தம் பண்ணினார்கள்

"தேசாதிபதியின் அரமனையாகிய மாளிகை"(Praetorium) ரோமப்பேரரசின் நீதிபதிகள் பிரேட்டர் praetor என்று அழைக்கப்பட்டார்கள் அவர்களுடைய நீதிவழங்கும் மாளிகை தேசாதிபதியின் மாளிகை என்று அழைக்கப்பட்டது.

கூட்டம் (band) - σπεῖρα - speira - 4686

பெண்பால் பெயர்சொல் - கூட்டம் பட்டாளம் - அறுநூறு பேர்கொண்ட ரோமப்பேரரசின் பட்டாளம்

போர்ச்சேவகர்கள் இயேசுவைப் பரியாசம் பண்ணிய விதம்

1 அவர் வஸ்திரங்களைக் கழற்றினார்கள். (மத் 27:28)

2 சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தினார்கள் யூதருடைய ராஜாவே வாழ்க என்று வாழ்த்தினார்கள் (மாற்கு 15:17)

3 முள்முடியைப் பின்னி, அவருக்குச் சூட்டினார்கள் (மாற்கு 15:17 ராஜாக்களுக்கும் ஜெயம் பெற்றவர்களுக்கும் முடிசூட்டுவது வழக்கம். இயேசு கிறிஸ்து ராஜாதிராஜா சாத்தானை ஜெயிப்பதற்காக இந்த உலகத்திற்கு இயேசு வந்தார் இயேசு கிறிஸ்து தாம் அனுபவிக்கும் பாடுகள் மூலமாக மிகப்பெரிய வெற்றியை அடையப்போகிறார் என்பது அந்தப் போர்ச் சேவகர்களுக்குத் தெரியவில்லை. (கொலோ 1:20-23 கொலோ 2:14-17; 1பேதுரு 2:24

4 யூதருடைய ராஜாவே வாழ்க என்று அவரை வாழ்த்தி, வணங்கினார்கள் எல்லா முழங்கால்களும் ஒரு நாளில் இயேசுவிற்கு முன்பாக முடங்கும் என்பது அவர்களுக்குத் தெரியாது (மாற்கு 15:18-19; பிலி 2:9-11)

5 அவருடைய சிரசில் கோலால் அடித்தார்கள் அந்தக்கோல் அவர் ஒரு ராஜா என்பதை வெளிப்படுத்தும் அடையாளம் (மாற்கு 15:19)

6 அவர்மேல் துப்பினார்கள் யூதருடைய ராஜாவை இதைவிட அவமானப்படுத்த முடியாது. (மாற்கு 15:19)

7 அவருக்கு முன்பாக முழங்காற்படியிட்டு வணங்கினார்கள் (மாற்கு 15:19

8 அவருக்கு அணிவித்த சிவப்பான அங்கியைக் கழற்றி அவருடைய வஸ்திரங்களை அவருக்கு உடுத்தினார்கள் (மாற்கு 15:20

9 அவரைச் சிலுவையில் அறையும்படி வெளியே கொண்டுபோனார்கள் (மாற்கு 15:20)

"அவர்மேல் துப்பினார்கள்" - இயேசுவைச் சுற்றிலும் போர்ச்சேவகருடைய கூட்டம் முழுவதுமாக நிற்கிறார்கள் அவர்களுடைய எண்ணிக்கை அறுநூறுபேர் அறுநூறு பேரும் இயேசுவின்மீது சிறிது நேரம் துப்பிக்கொண்டே இருந்தால் இயேசுவின் நிலைமை எப்படி இருக்கும் என்பதைக் கற்பனை பண்ணுவதற்கே கடினமாக இருக்கிறது.

15 அதிகாரம்

"அவரைச் சிலுவையில் அறைந்தபோது மூன்றாம்மணி வேளையாயிருந்தது" - மூன்றாம் மணி வேளை என்பது காலை ஒன்பது மணியைக் குறிக்கும். அந்த வேளையில் இயேசுவைச் சிலுவையில் அறைந்தார்கள். ஆறு மணிநேரம் அவர் சிலுவையில் தொங்கினார். மாலை மூன்று மணிக்கு பஸ்கா ஆட்டுக்குட்டிகளை அடிப்பார்கள். அந்த வேளையில் தானே இயேசு கிறிஸ்து தமது ஜீவனை ஒப்புக் கொடுக்கிறார் (மத் 27:45-50; லூக்கா 23:44-46).

"யூதருடைய ராஜா" - இயேசுவைச் சிலுவையில் அறைந்தார்கள். அந்தச் சிலுவையின்மீது என்ன எழுதப்பட்டிருந்தது என்பதில் வேதபண்டிதர்களுக்குள்ளே கருத்து வேறுபாடு உள்ளது. நான்கு சுவிசேஷங்களிலும் வெவ்வேறு விதமான வார்த்தைகளை நாம் வாசிக்கிறோம்.

1. மத் 27:37 - இவன் யூதருடைய ராஜாவாகிய இயேசு
2. மாற்கு 15:26 - யூதருடைய ராஜா
3. லூக்கா 23:38 - இவன் யூதருடைய ராஜா
4. யோவான் 19:19 - நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா

இந்த எழுத்துக்கள் கிரேக்கு, லத்தீன், எபிரெயு ஆகிய பாஷைகளின் எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தது.

மாற்கு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 9

"அக்கிரமக்காரரில் ஒருவனாக எண்ணப்பட்டார்" (மாற்கு 15:28; ஏசா 53:12). இந்த வாக்கியத்தைக் குறித்து வேதபண்டிதர்கள் பலவிதமாக கருத்து கூறுகிறார்கள். பழைய ஏற்பாட்டு மூலபாஷைச்சுவடிகள் சிலவற்றில் இந்த வாக்கியம் காணப்படவில்லை என்பது சிலருடைய கருத்து. ஆகையினால் வேதபாரகர் இந்த வாக்கியத்தைத் தவறுதலாகச் சேர்த்திருக்க வேண்டும் என்று இவர்கள் விவாதிக்கிறார்கள்.

"அந்த வழியாய் நடந்துபோகிறவர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி: ஆ! ஆ! தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே இரட்சித்துக் கொள், சிலுவையிலிருந்திறங்கிவா என்று அவரைத் தூஷித்தார்கள்" - இயேசுவின் சத்துருக்கள் அவரைச் சிலுவையில் அறைந்துவிட்டார்கள். ஆனாலும் இயேசுவின்மீது அவர்களுடைய கோபம் இன்னும் தணியவில்லை. சிலுவையில் மரித்துக் கொண்டிருக்கும் இயேசுவை பரியாசம் பண்ணுகிறார்கள் (யோவான் 2:19-21).

"மற்றவர்களை இரட்சித்தான், தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை" - பிரதான ஆசாரியரும், வேதபாரகரும் மிகவும் முக்கியமான சத்தியத்தைப் புரிந்து கொள்ளவில்லை. இயேசு கிறிஸ்து தம்மை இரட்சித்திருந்தால் அவரால் மற்றவர்களை இரட்சிக்க முடியாது. இயேசு கிறிஸ்து சிலுவையில் தமது இரத்தத்தைச் சிந்தி மரித்ததினாலே நமக்கு இரட்சிப்பு உண்டாயிற்று.

"நாம் கண்டு விசுவாசிக்கத்தக்கதாக இஸ்ரவேலுக்கு ராஜாவாகிய கிறிஸ்து இப்பொழுது சிலுவையிலிருந்திறங்கட்டும்" - பரியாசக்காரர்கள் வீண்வார்த்தைகளைப் பேசுகிறார்கள். இயேசு கிறிஸ்து கல்லறையிலிருந்து மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். ஆனால் இவர்கள் இயேசுவை விசுவாசிக்கவில்லை (அப் 1:3; அப் 4:1-22; அப் 5:17-39; அப் 7:51-60). மனுஷரை இரட்சிப்பதற்கு கல்வாரியும் இயேசுவின் உயிர்த்தெழுதலும் தேவை (ரோமர் 4:25).

"இஸ்ரவேலுக்கு ராஜா" - மாற்கு 15:2 ஆவது வசனத்தில் இயேசு கிறிஸ்து தம்மைப் பற்றிக் கூறிய வாக்கியத்தை இப்போது அவருடைய சத்துருக்கள் அவரைப் பரியாசம் பண்ணுவதற்காகப் பயன்படுத்துகிறார்கள்.

"அவரோடே கூடச் சிலுவைகளில் அறையப்பட்டவர்களும் அவரை நிந்தித்தார்கள்" - இயேசு கிறிஸ்துவோடு இரண்டு கள்ளர்கள் சிலுவையில் அறையப்பட்டார்கள். ஒருசிலர் இரண்டுக்கு மேற்பட்டவர்கள்கூட சிலுவையில் அறையப்பட்டிருக்கலாம் என்று கூறுகிறார்கள் (மத் 27:38; மாற்கு 15:27).

15 அதிகாரம்

9. **இயேசுவின் மரணம்** - (மத் 27:45 லூக் 23:44 யோவான் 19:28)

மாற்கு 15:33 ஆறாம்மணி நேரமுதல் ஒன்பதாம் மணிநேரம் வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று.

மாற்கு 15:34 ஒன்பதாம்மணி நேரத்திலே இயேசு: எலோயீ! எலோயீ! லாமா சபக்தானி என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு, என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்.

மாற்கு 15:35 அங்கே நின்றவர்களில் சிலர் அதைக் கேட்டபொழுது: இதோ, எலியாவைக் கூப்பிடுகிறான் என்றார்கள்.

மாற்கு 15:36 ஒருவன் ஓடி, கடற்காளானைக் காடியிலே தோய்த்து, அதை ஒரு கோலில் மாட்டி, அவருக்குக் குடிக்கக்கொடுத்து: பொறுங்கள், எலியா இவனை இறக்க வருவானோ பார்ப்போம் என்றான்.

மாற்கு 15:37 இயேசு மகா சத்தமாய்க் கூப்பிட்டு ஜீவனை விட்டார்.

மாற்கு 15:38 அப்பொழுது தேவாலயத்தின் திரைச்சீலை மேலே தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது.

மாற்கு 15:39 அவருக்கு எதிரே நின்ற நூற்றுக்கு அதிபதி அவர் இப்படிக் கூப்பிட்டு ஜீவனை விட்டதைக் கண்டபோது: மெய்யாகவே இந்த மனுஷன் தேவனுடைய குமாரன் என்றான்.

மாற்கு 15:40 சில ஸ்திரீகளும் தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள்; அவர் கலிலேயாவிலிருந்தபோது அவருக்குப் பின்சென்று ஊழியஞ்செய்துவந்த மகதலேனா மரியாளும், சின்ன யாக்கோபுக்கும் யோசேக்கும் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும்,

மாற்கு 15:41 அவருடனேகூட எருசலேமுக்கு வந்திருந்த வேறே அநேக ஸ்திரீகளும் அவர்களோடே இருந்தார்கள்.

"ஆறாம்மணி நேரமுதல் ஒன்பதாம் மணிநேரம் வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று" - ஆறாம்மணி என்பது மதியம் பன்னிரெண்டு மணியைக் குறிக்கும். ஒன்பதாம் மணி என்பது மாலை மூன்று மணியைக் குறிக்கும்.

"ஒன்பதாம்மணி நேரத்திலே" - இது மாலை மூன்று மணியாகும். இந்த வேளையில் தேவாலயத்தில் பஸ்கா ஆடுகளும் மற்ற பலிகளும் செலுத்தப்படும். கல்வாரி சிலுவையில் இயேசு கிறிஸ்து சுமார் ஆறுமணி நேரம் தொங்கிப் பாடுகளை அனுபவித்தபின்பு, மாலை மூன்றுமணி அளவில் அவர் தமது ஜீவனை ஒப்புக்கொடுக்கிறார்.

"இயேசு: எலோயீ! எலோயீ! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு, என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்" - இயேசு கிறிஸ்து பேசியது எந்த மொழி என்பதை விளக்குவதில் பல கருத்துக்கள் உள்ளன. அவர் எபிரெயம் பேசியதாகவும், சீரிய மொழி பேசியதாகவும், அரமாயிக் மொழி பேசியதாகவும் வெவ்வேறு விதமாகக் கூறுகிறார்கள். அவர் என்ன மொழியைப் பேசினாலும் சிலுவைக்கு அருகாமையில் இருந்த யாரும் அவர் பேசியதைப் புரிந்து கொள்ளவில்லை. இந்த மொழிகள் எல்லாவற்றையும் தெரிந்திருந்தவர்கள் அங்கு இருந்ததாகவும் கூறமுடியாது.

மாற்கு - தொகுப்புரை

15 அதிகாரம்

மாற்கு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 10

"என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்" (மாற்கு 15:34; சங் 22:1) இயேசு கிறிஸ்து அனுபவித்த பாடுகளில் இதுவே மிகவும் கடினமான பகுதி. இயேசு கிறிஸ்து பிதாவோடு நித்திய காலமாக இருக்கிறவர். ஒரு கணப்பொழுது கூட அவர் பிதாவை விட்டுப் பிரியவில்லை. அந்த வேளையில் பிதாவிடமிருந்து பிரிந்திருப்பது இயேசுவிற்கு மிகவும் கடினமாக இருந்தது. பிதா தம்மைக் கைவிட்டது அவருக்கு மிகுந்த பாரத்தைக் கொடுத்தது. இயேசு கிறிஸ்து பிதாவின் ஒரேபேறான குமாரன். இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை என்பது தேவனுடைய பிரமாணம். இதன் பிரகாரமாக இயேசு கிறிஸ்து சிலுவையில் மரிக்க வேண்டியது தேவனுடைய சித்தமாகவே இருந்தது. இயேசு இவ்வாறு சத்தமிட்டுக் கூறியது பாவத்தின் பயங்கரத்தை வலியுறுத்துகிறது. ஒருவன் தேவனோடு ஐக்கியமாக இருக்க வேண்டுமென்றால் அவன் தன்னுடைய பாவங்களை விட்டு விட்டு, இயேசுவிடம் வரவேண்டும் (1யோவான் 1:7; எபி 12:14, தீத்து 2:11-14)

"எலியா" (Elias, Elijah) (1இராஜா 17 மல 4:5-6)

மாற்கு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 11

"கடற்காளானைக் காடியிலே தோய்த்து அதை ஒரு கோலில் மாட்டி, அவருக்குக் குடிக்கக்கொடுத்தான்" (மாற்கு 15:36; சங் 69:21, மத் 27:34,48; லூக்கா 23:36; யோவான் 19:29-30)

"இயேசு மகா சத்தமாய்க் கூப்பிட்டார்" இயேசு என்ன சொன்னார் என்று இங்கு குறிப்பிடப்படவில்லை. "முடிந்தது" என்று அவர் கூறியிருக்கலாம் (யோவான் 19:30) இயேசு கிறிஸ்து கூறியதை நூற்றுக்கதிபதி கண்டபோது அவன் இயேசு கிறிஸ்துவின் தெய்வத்துவத்தை அங்கீகரிக்கிறான். (மாற்கு 15:39)

"ஜீவனை விட்டார்" - தமது சொந்த ஆவியை விட்டார். அவருடைய ஆத்துமாவும் ஆவியும் அவருடைய சரீரத்தை விட்டுப் பிரிகிறது (யாக் 2:26, மாற்கு 14:38)

"தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது" - பரலோகத்தில் மகாபரிசுத்த ஸ்தலத்திற்குச் செல்லும் பாதை இயேசு கிறிஸ்துவின் திருரத்தத்தின் மூலமாக எல்லா மனுஷருக்கும் திறக்கப்பட்டிருக்கிறது (எபி 9:8; எபி 10:19-20) ஆசாரியரின் துணையில்லாமல் எல்லா மனுஷரும் தேவனைக் கண்டடைந்து, அவரைக் கிட்டிச்சேர முடியும். (அப் 2:21; 1யோவான் 1:9; ரோமர் 10:9-10; எபே 2:17-18)

"நூற்றுக்கு அதிபதி" - நூறு போர்ச்சேவகர்களுக்குத் தலைவன். இவன் இயேசுவைத் தேவகுமாரன் என்று அங்கீகரித்தான்

"சில ஸ்திரீகளும் தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள்" - யோவான் 19:25இல் இந்த ஸ்திரீகள் சிலுவையின் அருகே நின்று கொண்டிருந்தார்கள் என்று வாசிக்கிறோம். ஆனால் இந்த வசனத்தில் இவர்கள் தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்விரண்டுமே சத்தியமான வசனங்கள். இயேசு கிறிஸ்து சிலுவையில் ஆறுமணி நேரமாகத் தொங்கிக் கொண்டிருந்தார். அந்த வேளையில் இவர்கள் சிலுவைக்கு அருகிலும் தூரத்திலும் இருந்திருக்கலாம். (மாற்கு 15:47)

"மகதலேனா மரியாள்" கப்பர்நகூம் பட்டணத்திற்கு அருகில் மகதலா ஊர் உள்ளது. இவள் அந்த ஊரைச்சேர்ந்தவள். இயேசு கிறிஸ்து இவளிடமிருந்து ஏழு பிசாசுகளை ஏற்கெனவே துரத்தியிருந்தார் (மாற்கு 16:9; லூக்கா 8:2)

"சின்ன யாக்கோபுக்கும் யோசேக்கும் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும்" இயேசுவின் தாயாகிய மரியாளின் சகோதரி, கிலேயோப்பாவின் (Cleopas) மனைவி (லூக்கா 24:10)

"சின்ன யாக்கோபு" - இந்தப்பெயரில் வரும் "சின்ன" என்னும் சொல் "மைக்ரோஸ்" (mikros) என்னும் கிரேக்கச்சொல்லின் தமிழாக்கமாகும்.

15 அதிகாரம்

சின்ன (less) - μικρός - mikros - 3398

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - சின்ன, கொஞ்சம்

சின்ன யாக்கோபு உருவத்தில் சிறியவன். இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபும் சின்ன யாக்கோபும் வெவ்வேறானவர்கள் (மத் 13:55). இந்த மரியாளுக்கு இரண்டு குமாரர்களும், ஒரு குமாரத்தியும் இருந்தார்கள். ஆனால் இயேசுவின் தாயாகிய மரியாளுக்கோ நான்கு குமாரர்களும், சில குமாரத்திகளும் இருந்தார்கள் (மத் 13:55-56; மாற்கு 6:3)

10. இயேசுவின் சரீரத்தை அடக்கம் பண்ணுகிறார்கள் - (மத் 27:57; லூக் 23:50; யோவான் 19:38)

மாற்கு 15:42 ஓய்வுநாளுக்கு முந்தினநாள் ஆயத்த நாளாயிருந்த படியால், சாயங்காலமானபோது,

மாற்கு 15:43 கனம்பொருந்திய ஆலோசனைக்காரனும் அரிமத்தியா ஊரானும் தேவனுடைய ராஜ்யம் வரக் காத்திருந்தவனுமாகிய யோசேப்பு என்பவன் வந்து, பிலாத்துவினிடத்தில் துணிந்துபோய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டான்.

மாற்கு 15:44 அவர் இத்தனை சீக்கிரத்தில் மரித்துப்போனாரா என்று பிலாத்து ஆச்சரியப்பட்டு, நூற்றுக்கு அதிபதியை அழைப்பித்து: அவர் இதற்குள்ளே மரித்தது நிச்சயமா என்று கேட்டான்.

மாற்கு 15:45 நூற்றுக்கு அதிபதியினாலே அதை அறிந்துகொண்டபின்பு, சரீரத்தை யோசேப்பினிடத்தில் கொடுத்தான்.

மாற்கு 15:46 அவன் போய், மெல்லிய துப்பட்டியை வாங்கிக்கொண்டுவந்து, அவரை இறக்கி, அந்தத் துப்பட்டியிலே சுற்றி, கன்மலையில் வெட்டியிருந்த கல்லறையிலே அவரை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு கல்லைப் புரட்டிவைத்தான்.

மாற்கு 15:47 அவரை வைத்த இடத்தை மகதலேனா மரியாளும் யோசேயின் தாயாகிய மரியாளும் பார்த்தார்கள்.

"ஓய்வுநாளுக்கு முந்தினநாள்" - பஸ்காவிற்காக ஆட்டுக்குட்டிகள் பலியிடப்படும் நாள் பிரதான ஓய்வுநாள் பண்டிகைக்கு முந்திய நாள். இந்த ஓய்வுநாளும், வாரத்தின் ஓய்வுநாளும் வெவ்வேறு நாட்களாகும். (லேவி 23:6-7)

"கனம்பொருந்திய ஆலோசனைக்காரனும் அரிமத்தியா ஊரானும் தேவனுடைய ராஜ்யம் [redacted] காத்திருந்தவனுமாகிய யோசேப்பு என்பவன்" - பிரதான ஆலோசனைச் சங்கத்தில் ஒரு அங்கத்தினர். இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறைவதற்கு இவன் சம்மதிக்கவில்லை (மாற்கு 15:43; லூக்கா 23:51)

"பிலாத்துவினிடத்தில் துணிந்துபோனான்" - இயேசுவின் சரீரத்தைக் கேட்பதினால் ஏற்படக்கூடிய எல்லா பின்விளைவுகளையும் சிந்திக்காமல் துணிச்சலோடு பிலாத்துவிடம் பேசுகிறான்.

"இயேசுவின் சரீரத்தைக் கேட்டான்" - இயேசுவின் சரீரத்தை இவன் கேட்காவிட்டால் அவரை மற்ற துன்மார்க்கரோடே அடக்கம் பண்ணி விடுவார்கள். அவ்வாறு அடக்கம் பண்ணினால் ஏசா 53:9 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிற காரியம் நிறைவேறாது. "துன்மார்க்கரோடே அவனுடைய பிரேதக் குழியை நியமித்தார்கள்; ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார்" இந்தத் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக இந்தக் காரியமெல்லாம் நடைபெற்றது.

15 அதிகாரம்

"சரீரத்தை யோசேப்பினிடத்தில கொடுத்தான்" இந்த வசனத்தில் "கொடு" என்னும் சொல்லின் கிரேக்கச்சொல "துரேமை" (doreomai) என்பதாகும் இதற்கு "வெகுமதியாக கொடுத்தல" என்பது பொருள இந்தக் கிரேக்கச்சொல இந்த வசனத்திலும் 2பேதுரு 1:3,4 ஆகிய வசனத்திலும் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

தம்முடைய தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றுவதற்கும் தம்முடைய சித்தத்தைச் செய்வதற்கும தேவன் அதற்குரிய நபர்களை ஏற்கெனவே தெரிந்து கொண்டு அவர்களைப் பயன்படுத்தி வருகிறார்

கொடு (gave) - δωρέομαι - dooreomai - (45)

வினைச்சொல கொடு, தந்தருள

மெல்லிய துப்பட்டி (fine linen) - σινδών - sindoon - 46(6

பெண்பால் பெயர்ச்சொல் - மெல்லிய துப்பட்டி (grave clothes) (மாற்கு 14:51

16 அதிகாரம்

V. உயிர்த்தெழுந்த பின்பு இயேசுவின் ஊழியம் - (யோவான் 19:38)

உயிர்த்தெழுதலுக்கு கர்த்தருடைய தூதனின் சாட்சி - (மத் 28:1, லூக் 24:4, அப் 1:1)

மாற்கு 16:1 ஓய்வுநாளானபின்பு மகதலேனா மரியாளும் யாக்கோபின் தாயாகிய மரியாளும் சலோமே என்பவளும், அவருக்குச் சுகந்த வர்க்கமிடும்படி அவைகளை வாங்கிக் கொண்டு,

மாற்கு 16:2 வாரத்தின் முதலாம்நாள் அதிகாலையிலே சூரியன் உதயமாகிற போது கல்லறையினிடத்தில் வந்து,

மாற்கு 16:3 கல்லறையின் வாசலிலிருக்கிற கல்லை நமக்காக எவன் புரட்டித்தள்ளுவான் என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள்.

மாற்கு 16:4 அந்தக் கல் மிகவும் பெரிதாயிருந்தது; அவர்கள் ஏறெடுத்துப்பார்க்கிறபோது, அது தள்ளப்பட்டிருக்கக் கண்டார்கள்.

மாற்கு 16:5 அவர்கள் கல்லறைக்குள் பிரவேசித்து, வெள்ளையங்கி தரித்தவனாய் வலதுபக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒரு வாலிபனைக் கண்டு பயந்தார்கள்.

மாற்கு 16:6 அவன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள், சிலுவையில் அறையப்பட்ட நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறீர்கள், அவர் உயிர்த்தெழுந்தார், அவர் இங்கேயில்லை; இதோ அவரை வைத்த இடம்.

மாற்கு 16:7 நீங்கள் அவருடைய சீஷரிடத்திற்கும் பேதுருவினிடத்திற்கும் போய்: உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார், அவர் உங்களுக்குச் சொன்னபடியே அங்கே அவரைக் காண்பீர்கள் என்று, அவர்களுக்குச் சொல்லுங்கள் என்றான்.

"ஓய்வுநாள்" - வாரத்தின் ஓய்வுநாள் இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட பின்பு, நான்காம் நாள் பிரதான ஓய்வுநாளுக்குப் பின்பு, மூன்றாம்நாள் புளிப்பில்லா அப்பப்பண்டிகையின் முதலாம் நாள் (லேவி 23:6-7) இயேசு கிறிஸ்துவை அடக்கம் பண்ணி மூன்று பகலும் மூன்று இரவும் ஆயிற்று (மத் 12:40) சூரிய அஸ்தமனத்திலிருந்து சூரிய அஸ்தமனம் வரையிலும் நாட்கள் கணக்கிடப்பட்டன (லேவி 23:32)

"மரியாள்" - யாக்கோபு, யோவான் ஆகியோரின் தாய் (மத் 27:56 ; மாற்கு 15:40) செபெதேயுவின் மனைவி (மத் 4:21 மத் 20:20 மத் 27:56 மாற்கு 1:20)

"வாரத்தின் முதலாம்நாள்" - ஞாயிற்றுக் கிழமை, சனிக்கிழமை அல்ல. ஏனென்றால் ஓய்வுநாள் ஏற்கெனவே ஆயிற்று (மத் 28:1) ஓய்வுநாள் முடிந்து பன்னிரெண்டு மணிநேரங்கள் அல்லது ஒரு இரவு ஆயிற்று. மூன்று நாட்களுக்குப் பின்பு இயேசு உயிர்த்தெழுந்தார் (மாற்கு 8:31 மத் 12:40)

"கல்லறையின் வாசலிலிருக்கிற கல்லை நமக்காக எவன் புரட்டித்தள்ளுவான்" அவர்களுக்குக் கல்லறையைக் காவல் வைத்ததும் முத்திரையிட்டதும் தெரியாதது போன்று இருக்கிறது. ஏனென்றால் முத்திரையிட்ட கல்லறையைப் புரட்டித்தள்ளுவது சட்டப்படி குற்றம்.

"வெள்ளையங்கி தரித்தவனாய் வலது பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒரு வாலிபன்" மூன்று தூதர்களில் ஒருவன் (யோவான் 20:12)

அங்கி (garment) στολή stolee 4749

பெண்பால் பெயர்ச்சொல் நீண்ட அங்கி, வஸ்திரம், அங்கி (வெளி 7:13

16 அதிகாரம்

"பயந்தார்கள்" - மாற்கு 14:33-இல "திகிலடைதல" என்னும் பொருளுடையது. அவர்கள் இதை எதிர்பார்க்கவில்லை இயேசுவின் மரித்துப் போன சரீரத்தையே தேடிவந்தார்கள்

"அவர் உயிர்த்தெழுந்தார்" - முக்கியமான சுவிசேஷ செய்தி. இயேசு உயிர்த்தெழவில்லை என்றால ஒருவருக்கும் இரட்சிப்பு இல்லை (1கொரி 15 ரோமர் 4 25)

"பேதுரு" - பேதுரு தன்னைச் சீஷன் என்று அழைக்கப்படுவதற்கே தயங்கியிருப்பான் தனக்குத் தகுதியில்லை என்று நினைத்திருப்பான மற்றவர்கள செய்யாத தவறைப் பேதுரு செய்து விட்டான இயேசுவைத் தீர்மானமாக மறுதலித்து அவரைச் சபித்தான (மத் 26 70-74) அவன தவறு செய்தபோதிலும், தன தவறிற்காக அவன மனமகசந்து அழுதான கர்த்தர் அவனை மன்னித்துவிட்டார இதை விசேஷமாக பேதுருவிற்கு அறிவிப்பதற்காகவே தூதன அவர்களை நோக்கி, "நீங்கள பேதுருவினிடத்திற்குப் போய்....... சொல்லுங்கள" என்று கூறுகிறான கர்த்தர் அவனுக்கு "சகோதரரைத் திடப்படுத்தும்" ஊழியத்தைக் கொடுத்திருக்கிறார (லூக்கா 22 31 32)

"அவர் உங்களுக்குச் சொன்னபடியே" மாற்கு 14:28 ஆவது வசனத்தின நிறைவேற்றம்

2. உயிர்த்தெழுதலுக்கு ஸ்திரீகளின் சாட்சி - (மத் 28:8; லூக் 24:9 யோவான 20:1)

மாற்கு 16:8 நடுக்கமும் திகிலும் அவர்களைப்பிடித்தபடியால அவர்கள சீக்கிரமாய் வெளியே வந்து கல்லறையை விட்டு ஓடினார்கள அவர்கள் பயந்திருந்தபடியினால் ஒருவருக்கும் ஒன்றும் சொல்லாமற் போனார்கள்

மாற்கு 16:9 வாரத்தின் முதலாம்நாள் அதிகாலையிலே இயேசு எழுந்திருந்த பின்பு, மகதலேனா மரியாளுக்கு முதல்முதல தரிசனமானார்

மாற்கு 16:10 அவளிடத்திலிருந்து அவர் ஏழு பிசாசுகளைத் துரத்தியிருந்தார் அவள் புறப்பட்டு, அவரோடேகூட இருந்தவர்கள் துக்கப்பட்டு அழுது கொண்டிருக்கையில, அவர்களிடத்தில் போய் அந்தச் செய்தியை அறிவித்தாள்

மாற்கு 16:11 அவர் உயிரோடிருக்கிறாரென்றும் அவளுக்குக் காணப்பட்டார் என்றும் அவர்கள கேட்டபொழுது நம்பவில்லை

கல்லறைக்குப் போன ஸ்திரீகளுடைய கிரியைகள்

1. அவர்கள சீக்கிரமாய் வெளியே வந்தார்கள
2. கல்லறையை விட்டு ஓடினார்கள
3. நடுக்கமும் திகிலும் அவர்களைப் பிடித்தது.
4. அவர்கள பயந்திருந்தார்கள
5. ஒருவருக்கும் ஒன்றும் சொல்லாமற் போனார்கள

"வாரத்தின முதலாம்நாள் அதிகாலையிலே" இயேசு கிறிஸ்து அடக்கம் பண்ணப்பட்டபோது அவர பாதாளத்தில தமது ஊழியத்தை நிறைவேற்றினார (சங் 16:10 எபே 4:8-10, 1பேதுரு 3:19) நியமிக்கப்பட்ட காலம் வரையில மட்டுமே பிதா இயேசு கிறிஸ்துவை மரித்தவராக இருக்க அனுமதித்தார தீர்க்கதரிசனத்தின பிரகாரம் மூன்று இரவுகள மூன்று பகல்களுக்குப் பின்பு இயேசு உயிர்த்தெழுந்தார (மத் 12 40)

"மகதலேனா மரியாளுக்கு முதல்முதல் தரிசனமானார்" - தேவதூதனுடைய செய்திக்குப் பின்பு மரியாள் திரும்பவும் கல்லறைக்குச் சென்றாள் (யோவான் 20:1-18)

16 அதிகாரம்

"சிரேனே ஊரானும் அலெக்சந்தருக்கும் ரூபுக்கும் தகப்பனுமாகிய சீமோன் என்னப்பட்ட ஒருவன் நாட்டிலிருந்து அவ்வழியே வந்தான்" – விசுவாசிகள் மத்தியில் இவர்கள் பிரபலியமானவர்களாக இருந்திருப்பார்கள். அப் 19.33; ரோமர் 16.13 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறவர்கள் அலெக்சந்தரும் ரூபுமாக இருக்கலாம். வடக்கு ஆப்பிரிக்காவில் உள்ள லிபியா மாகாணத்தின் தலைநகரம் சிரேனே பட்டணம். மத்தியதரைக் கடலின் தென்பகுதியில் 11 மைல் தொலைவில் இந்த ஊர் உள்ளது.

8. இயேசுவை சிலுவையில் அறைகிறார்கள் – (மத் 27.33; லூக் 23.32; யோவான் 19.16)

மாற்கு 15.22 கபாலஸ்தலம் என்று அர்த்தங்கொள்ளும் கொல்கொதா என்னும் இடத்துக்கு அவரைக் கொண்டுபோய்,

மாற்கு 15.23 வெள்ளைப்போளம் கலந்த திராட்சரசத்தை அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள்; அவர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

மாற்கு 15.24 அப்பொழுது அவரைச் சிலுவையில் அறைந்தார்கள். அதன்பின்பு அவருடைய வஸ்திரங்களைப் பங்கிட்டு, ஒவ்வொருவன் ஒவ்வொரு பங்கை எடுத்துக்கொள்ளும்படி அவைகளைக் குறித்துச் சீட்டுப்போட்டார்கள்.

மாற்கு 15.25 அவரைச் சிலுவையில் அறைந்தபோது மூன்றாம்மணி வேளையாயிருந்தது.

மாற்கு 15.26 அவர் அடைந்த ஆக்கினையின் முகாந்தரத்தைக் காண்பிக்கும்பொருட்டு, யூதருடைய ராஜா என்று எழுதி, சிலுவையின்மேல் கட்டினார்கள்.

மாற்கு 15.27 அல்லாமலும், அவருடைய வலது பக்கத்தில் ஒருவனும் அவருடைய இடது பக்கத்தில் ஒருவனுமாக, இரண்டு கள்ளரை அவரோடேகூடச் சிலுவைகளில் அறைந்தார்கள்.

மாற்கு 15.28 அக்கிரமக்காரரில் ஒருவனாக எண்ணப்பட்டார் என்கிற வேதவாக்கியம் அதனாலே நிறைவேறிற்று.

மாற்கு 15.29 அந்த வழியாய் நடந்துபோகிறவர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி: ஆ! ஆ! தேவாலயத்தை இடித்து மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே,

மாற்கு 15.30 உன்னை நீயே இரட்சித்துக்கொண்டு சிலுவையிலிருந்து இறங்கிவா என்று அவரைத் தூஷித்தார்கள்.

மாற்கு 15.31 அப்படியே பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் தங்களுக்குள்ளே பரியாசம்பண்ணி: மற்றவர்களை இரட்சித்தான், தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை.

மாற்கு 15.32 நாம் கண்டு விசுவாசிக்கத்தக்கதாக இஸ்ரவேலுக்கு ராஜாவாகிய கிறிஸ்து இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கட்டும் என்று சொல்லிக்கொண்டார்கள். அவரோடேகூடச் சிலுவைகளில் அறையப்பட்டவர்களும் அவரை நிந்தித்தார்கள்.

"கொல்கொதா" – (மத் 27.33)

"வெள்ளைப்போளம் கலந்த திராட்சரசத்தை அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள்" இயேசு கிறிஸ்துவிற்கு மூன்று முறை குடிக்கக் கொடுக்கிறார்கள்.

1. கொல்கொதாவிற்கு அவரைக் கொண்டுவந்த போது (மத் 27.33-34; மாற்கு 15.22-23)
2. இயேசு சிலுவையின்மீது தொங்கிய போது குற்றவாளி தன்மீது இரக்கமாகஇருக்குமாறு விண்ணப்பம் செய்ததற்கு முன்பு (லூக்கா 23.36)
3. தமது ஜீவியத்தின் இறுதியில் (மத் 27.48; யோவான் 19.29)

16 அதிகாரம்

"அவர்களிடத்தில் போய், அந்தச் செய்தியை அறிவித்தாள்" - கல்லறையிலிருந்து இரண்டாம் முறையாகப் புறப்பட்டுச் செல்கிறாள். தான் இயேசுவைக் கண்டதாகக் கூறுகிறாள். அவளுடைய பேச்சை அவர்கள் நம்பவில்லை. அவளுடைய வார்த்தை அவர்களுக்கு வீணாய்போகத் தோன்றியது. (லூக்கா 24:11) இயேசு கிறிஸ்து தமது சீஷர்களிடம் ஏற்கெனவே தமது மரணத்தைப் பற்றியும், தாம் மரித்தபின்பு மூன்றாம் நாளிலே உயிர்த்தெழப்போவது பற்றியும் கூறியிருக்கிறார் (மத் 16:21). ஆனால் இயேசுவின் வார்த்தையை அவர்கள் இன்னும் நம்பவில்லை.

"அழுதுகொண்டிருந்தார்கள்" - இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்காக அவர்கள் துக்கப்பட்டு அழுதார்கள். ஆனாலும் கிறிஸ்து உயிர்த்தெழுவார் என்று அவர்களால் நம்ப முடியவில்லை. (மாற்கு 16:11,13)

3. இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு சீஷர்களின் சாட்சி - (மத் 28:16, லூக் 24:13-45, யோவான் 20-21)

மாற்கு 16:12 அதன்பின்பு அவர்களில் இரண்டுபேர் ஒரு கிராமத்துக்கு நடந்துபோகிறபொழுது அவர்களுக்கு மறுரூபமாய்த் தரிசனமானார்.

மாற்கு 16:13 அவர்களும் போய், அதை மற்றவர்களுக்கு அறிவித்தார்கள்; அவர்களையும் அவர்கள் நம்பவில்லை.

மாற்கு 16:14 அதன்பின்பு பதினொருவரும் போஜனபந்தியிலிருக்கையில் அவர்களுக்கு அவர் தரிசனமாகி, உயிர்த்தெழுந்திருந்த தம்மைக் கண்டவர்களை அவர்கள் நம்பாமற்போனதினிமித்தம் அவர்களுடைய அவிசுவாசத்தைக் குறித்தும் இருதய கடினத்தைக்குறித்தும் அவர்களைக் கடிந்துகொண்டார்.

"அதன்பின்பு அவர்களில் இரண்டுபேர் ஒரு கிராமத்துக்கு நடந்துபோகிறபொழுது அவர்களுக்கு மறுரூபமாய்த் தரிசனமானார்" - இவைகளுக்குப் பின்பு, எம்மாவுக்குப் போகும் சாலையில் இயேசு தம்மை இரண்டு பேருக்கு வெளிப்படுத்தினார் (லூக்கா 24:13-35; யோவான் 21:14)

ரூபம் (form) - μορφή morphee - 3444

பெண்பால் பெயர்ச்சொல் - ரூபம், உருவாதல் - காணக்கூடிய உருவம். இந்த வசனத்தில் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த சரீரத்தை இந்த வார்த்தை குறிப்பிடுகிறது. இதே வார்த்தை பிலி 2:6-இல் தெய்வத்துவத்தைக் குறிப்பிடுகிறது. வெளி 1:12-18, மத் 17:2 ஆகிய வசனங்களில் நாம் இயேசுவின் ரூபத்தை வாசிக்கிறோம். சீஷர்கள் இது வரையிலும் இயேசுவைக் கண்ட ரூபத்திற்கும், இப்போது காணும் அவருடைய மறுரூபத்திற்கும் வித்தியாசம் இருந்தது.

"அதன்பின்பு பதினொருவரும் போஜன பந்தியிலிருக்கையில் அவர்களுக்கு அவர் தரிசனமானார்" - (யோவான் 21:14)

"உயிர்த்தெழுந்திருந்த தம்மைக் கண்டவர்களை அவர்கள் நம்பாமற்போனதினிமித்தம் அவர்களுடைய அவிசுவாசத்தைக் குறித்தும் இருதயக் கடினத்தைக்குறித்தும் அவர்களைக் கடிந்து கொண்டார்" சீஷர்களுக்கு விசுவாசம் இல்லை. அவர்களும் சாதாரண மனுஷர்களைப் போலவே இருந்தார்கள். எதையும் தங்கள் கண்களால் கண்டு, தெளிவாக உணர்ந்த பின்பு மட்டுமே விசுவாசிக்கிறார்கள்.

4. பிரதான கட்டளை - (மத் 28:18, லூக் 24:49; யோவான் 16:23, அப் 1:8)

மாற்கு 16:15 பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும்போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்.

16 அதிகாரம்

மாற்கு 16:16 விசுவாசமுள்ளவனாகி ஞானஸ் [illegible] பெற்றவன் இரட்சிக்கப்படுவான் விசுவாசியாதவனோ ஆக்கினைக்கு உள்ளாகத் தீர்க்கப்படுவான்

மாற்கு 16:17 விசுவாசிக்கிறவர்களால நடக்கும் அடையாளங்களாவன, என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்;

மாற்கு 16:18 சர்ப்பங்களை எடுப்பார்கள் சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது. வியாதியஸ்தர் மேல கைகளை வைப்பார்கள். அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார்

"நீங்கள் உலகமெங்கும்போய சர்வ சிருஷடிக்கும் சுவிசேஷத்தைப பிரசங்கியுங்கள - இயேசு கிறிஸது எலலா விசுவாசிகளுக்கும் கொடுததிருககும் பிரதான கட்டளை

உலகம் (world) - κόσμος kosmos - 2889

ஆணபால பெயர்சொல் - உலகம் அலங்கரிப்பு, லௌகிகம் (social system) (2பேதுரு 3:6)

புதிய ஏற்பாட்டின்பிரகாரம் சுவிசேஷ ஊழியம்

1 சுவிசேஷத்தைப பிரசங்கம் பண்ணுங்கள்

2 சுவிசேஷத்தை உறுதிபண்ணுங்கள

யாருக்கு பிரசங்கம் பண்ண வேண்டும்

1 தரித்திரருக்கு லூக்கா 4:18; லூக்கா 7:22)

2 சாத்தானிடம் சிறைப்பட்டவர்களுக்கு லூக்கா 4:18

3 யூதர்களுக்கு (அப் 11:19-20

4 புறஜாதியாருக்கு (Gentiles) (கலா 2:2, எபே 3:8

5. புறஜாதியாருக்கு (Heathen) (கலா 1:16

6 பூமியில் வாசம் பண்ணுவோருக்கு (வெளி 14:6)

7 சர்வ சிருஷடிக்கும் (மாற்கு 16:15)

பிரசங்கம் பண்ண வேண்டிய இடங்கள்

1 உலகம் முழுவதும் (மத் 24:14 மாறகு 16)

2 எலலா இடங்களிலும் (அப 8:4)

3 பட்டணங்களில (மத் 11:1; அப் 8:40

4 ஊர்களில (மாறகு 1:38)

5 ஜெபாலயங்களில (மாறகு 1:39 லூக்கா 4:44)

6 வீட்டின் மேலகூரைகளில (மத் 10:27

7 அறியாத இடங்கள (2கொரி 10:16

சுவிசேஷத்தை எப்படிப் பிரசங்கிக்க வேண்டும், எப்படிப் பிரசங்கிக்ககூடாது

1 பொறாமையினாலும் விரோதத்தினாலும் பிரசங்கிககக் கூடாது. அன்பினாலும் நலமனதினாலும் பிரசங்கிக்க வேணடும். பிலி 1:15-17

2 வஞ்சகத்தினால் பிரசங்கிக்ககூடாது உணமையினால பிரசங்கிக்க வேணடும். (பிலி 1:18)

3 சிறந்த வசனிப்பினாலோ, மனுஷ ஞானத்தினாலோ பிரசங்கிக்கக் கூடாது. தேவனுடைய வல்லமையினால் பிரசங்கிக்க வேணடும். (1கொரி 2:3-5

4 மனுஷரைப பிரியப்படுத்தும் விதமாக பிரசங்கிக்ககூடாது. தைரியமாகவும், சத்தியத்தின் மீதுள்ள வைராக்கியமாகவும் பிரசங்கம் பண்ண வேணடும். (பிலி 1:14; அப் 9:27

16 அதிகாரம்

5 சந்தேகத்தோடும், அவிசுவாசத்தோடும் பிரசங்கிக்கக்கூடாது. விசுவாசத்தோடு பிரசங்கிக்க வேண்டும் (1தீமோ 4:6-16; 1பேதுரு 5:1-10)

6 மனுஷருக்குப் பட்சபாதமாக பிரசங்கிக்கக் கூடாது. தேவனுடைய ஊழியக்காரராக பிரசங்கிக்க வேண்டும். (மத் 22:16; எபே 6:6, கலா 1:10)

7 சுவிசேஷத்தை அரைகுறையாக பிரசங்கிக்கக் கூடாது. பூரண சுவிசேஷத்தை பிரசங்கிக்க வேண்டும் (ரோமர் 15:19,29)

நாம் பிரசங்கிக்கக்கூடாத காரியங்கள்

1 விருத்தசேதனம் (கலா 5:11)

2 மோசேயின் பிரமாணம் (அப் 15:21)

3 சுயம் (2கொரி 4:5

4. வேறே சுவிசேஷம் (கலா 1:8-9)

5. வேறே இயேசு (2கொரி 11:4)

நாம் பிரசங்கிக்க வேண்டிய காரியங்கள்

1 நற்செய்தி (ஏசா 61:1; லூக்கா 4:18)

2 பரலோக ராஜ்யம் (மத் 4:17; மத் 9:35; மத் 10:7, மத் 24:14; மாற்கு 1:14)

3 தேவனுடைய ராஜ்யம் (லூக்கா 4:43; லூக்கா 9:2,60; லூக்கா 16:16; அப் 8:12, அப் 20:25; அப் 28:31)

4 மனந்திரும்புதல் (மத் 3:1-2; லூக்கா 24:47

5 தண்ணீர் ஞானஸ்நானம் (மாற்கு 1:4; லூக்கா 3:3

6 ஆவியானவரின் அபிஷேகம் (மாற்கு 1:7-8 லூக்கா 3:16 யோவான் 1:33 யோவான் 7:37-39, அப் 1:4-8 அப் 2:33,38-39, அப் 5:32 கலா 3:13-14

7 சுவிசேஷம் மத் 11:5 லூக்கா 4:18 லூக்கா 20:1; அப் 8:25; அப் 14:7,21 அப் 16:10; ரோமர் 1:15-16 ரோமர் 15:20; 1கொரி 1:17 1கொரி 15:1; 2கொரி 10:16 கலா 2:2; கலா 3:8; கலா 4:13 எபி 4:2; 1பேதுரு 1:12,25; 1பேதுரு 4:6)

8 சமாதானத்தின் சுவிசேஷம் (ரோமர் 10:15)

9 கிறிஸ்துவின் சுவிசேஷம் (ரோமர் 15:19)

10 தேவனுடைய சுவிசேஷம் (ரோமர் 1:1, 2கொரி 11:7; 1தெச 2:9)

11 நித்திய சுவிசேஷம் (வெளி 14:6

12 வார்த்தை (மாற்கு 2:2; அப் 8:4,25; அப் 14:25; அப் 15:36; அப் 16:6 2தீமோ 4:2; எபி 4:2)

13 விசுவாச வார்த்தை (ரோமர் 10:8-17)

14 தேவனுடைய வார்த்தை (அப் 13:5, அப் 17:13)

15. கர்த்தருடைய வார்த்தை (அப் 15:35

16 இயேசு கிறிஸ்து (அப் 3:20, அப் 5:42; அப் 8:5,35, அப் 9:20, அப் 10:42-43; அப் 17:3,18, 2கொரி 1:19; 2கொரி 4:5 கலா 1:16)

17 சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து (1கொரி 1:23; 1கொரி 2:2

18 சிலுவை (1கொரி 1:18,21)

19 கர்த்தருடைய அநுக்கிரக வருஷம் (லூக்கா 4:18; ஏசா 61:1-2)

20 கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியம் (எபே 3:8)

16 அதிகாரம்

21 மீட்பு (லூக்கா 4:18; ஏசா 61:1)

22 ஒப்புரவாதல் (அப 14:15 2கொரி 5:14-21)

23 கிறிஸ்து சரீரப்பிரகாரமாக உயிர்த்தெழுதல (1கொரி 15:12)

24. நீதி (சங் 40:9; 2பேதுரு 2:5)

25. பாவங்களின் மன்னிப்பு (அப 13:38)

26 மரித்தோரின் உயிர்த்தெழுதல் அப 4:2)

27 சமாதானம் (அப 10:36; எபே 2:17)

28 தேவனுக்குப் புறம்பே எல்லாம் மாயை பிர 12:8-14

29 தேவபக்திக்குரிய இரகசியம் 1தீமோ 3:16

30 விசுவாசத்தினால நீதிமானாதல (கலா 3:8

"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன இரட்சிக்கப்படுவான விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" - சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதினால் இரண்டு காரியங்கள நடைபெறும்

1 விசுவாசத்தின்மூலமாக ஆத்துமாக்கள இரட்சிக்கப்படும். (ரோமர் 10:9-10; எபே 2:8-9 1யோவான் 1:7-9 2கொரி 2:15-16; ரோமர் 1:16. 1கொரி 1:18-21; யோவான் 3:16-20)

2 அவிசுவாசத்தின்மூலமாக ஆத்துமா ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படும். (2கொரி 2:15-16; 2கொரி 4:4 யோவான் 3:18-20; யோவான் 8:24, யோவான் 16:9, வெளி 21:8)

"இரட்சிக்கப்படுவான்" - ஒருவன் தன்னுடைய மரணத்திற்கு முன்பாக இரட்சிக்கப்படவேண்டும். மரித்த பின்பு, இரட்சிக்கப்படுவதற்கு வாய்ப்பில்லை (மத் 7:13-14; கலா 6:7-8; ரோமர் 6:23 ரோமர் 8:12-13) மரணத்திற்கு முன்பு இரட்சிக்கப்படவில்லையென்றால் அவன் நித்திய ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் ஆகையினால் அதற்குள் அவன் தேவனோடு ஒப்புரவாக வேண்டும் (1யோவான் 1:7; யோவான் 3:16 ரோமர் 10:9-10) கிருபையின் காலத்தில் நாம் இரட்சிக்கப்படுவது நமது ஆத்துமாவிற்கு உகந்தது. இரட்சிக்கப்படாதோருக்கு நரகமே முடிவு (மத் 7:13-14, மத் 19:29 யோவான் 6:27, கலா 6:7-8

விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்கள்

1 பிசாசுகளைத் துரத்துவார்கள (மாற்கு 16:17 லூக்கா 10:19 மத் 10:7-8; மத் 17:20-21 யோவான 14:12)

2 நவமான பாஷைகளைப் பேசுவார்கள (மாற்கு 16:17; அப் 2:4; அப 10:44-48; அப 19:1-7; 1கொரி 12-14. ஏசா 28:11)

3 சர்ப்பங்களை எடுப்பார்கள் (மாற்கு 16:18, லூக்கா 10:19, சங் 91, அப 28:1-5)

4 சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது (மாற்கு 16:18, சங் 91, லூக்கா 10:18; 2இராஜா 4:41

5 வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள் அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் (மாற்கு 16:18, மத் 10:1-8; லூக்கா 24:49, யோவான் 14:12; அப் 1:8

வியாதிஸ்தர்கள் சொஸ்தமாதல்

1 கிறிஸ்து சொஸ்தமாக்கினார் (மத் 13:58)

16 அதிகாரம்

2 சீஷர்கள் சொஸ்தமாக்கினார்கள் மத் 10:1-8 மாற்கு 6:7-13 லூக்கா 10:1-20; அப் 3:6; அப் 5:16; அப் 19:11-12 எபி 2:3-4)

3 சொஸ்தமாக்க வேண்டுமென்று எல்லா சீஷர்களுக்கும் இயேசு கிறிஸ்து கட்டளை கொடுத்திருக்கிறார் (மத் 10:8 லூக்கா 10:9 மத் 28:20)

4 சொஸ்தமாக்கும் வல்லமையை எல்லா விசுவாசிகளுக்கும் கொடுப்பதாக இயேசு வாக்குபண்ணியிருக்கிறார் (மாற்கு 16:17-18 மத் 17:20-21 மத் 21:22 மாற்கு 9:23; மாற்கு 11:22-24 லூக்கா 11:9-13; லூக்கா 24:49; யோவான் 7:37-39 யோவான் 14:12-15 யோவான் 15:7 16; யோவான் 16:23-26 அப் 1:8 அப் 2:38-39 அப் 5:12)

5 ஆதித் திருச்சபையார் வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்கினார்கள் யாக் 5:14-16 அப் 5:12

இவையெல்லாம் விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாகும். அவ்விசுவாசிகளுக்கு ஒரு அடையாளமும் நடக்காது; அவ்விசுவாசிகள் ஏதாவது சாக்குப் போக்குகள் சொல்லி, வியாதியஸ்தர்களைக் ஜெபிக்கமாட்டார்கள்

"என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள், நவமான பாஷைகளைப் பேசுவார்கள்" விசுவாசிகளுடைய வல்லமையின் ஆதாரம் "இயேசுவின் நாமம்" ஆகும் ஒரு விசுவாசி இயேசுவின் நாமத்தினாலே தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைப் பயன்படுத்தும்போது அவர் கிறிஸ்துவின் கிரியைகளைச் செய்வார் (யோவான் 14:12-15 யோவான் 15:16; யோவான் 16:23-26, அப் 1:8)

எடுப்பார்கள் (take up) airoo - 142

வினைச்சொல் - எடு இந்த வினைச்சொல் பலவிதமான பொருளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

1 எடு, அகற்று (Take up, remove) (மத் 14:12 யோவான் (2) யோவான் 11:39,41,48

2 எடுத்துக்கொள்ளப்படுதல் (Take away) (மத் 13:12; மத் 22:13, வாரிக்கொண்டு போதல் (to destroy) (மத் 24:39 யோவான் 15:2 1யோவான் 3:5

3. நீங்குதல (Put away) (எபே 4:31)

4. அகற்றுதல், கொல்லுதல (Do away with or kill) லூக்கா 23:18 யோவான் 19:15; அப் 21:36; அப் 22:22)

5 பெயர்ந்துபோதல (Remove) (மத் 21:21 மாற்கு 11:23)

இயேசு கிறிஸ்து விசுவாசிகளால் நடக்கும் அடையாளங்களில் ஒன்றாக அவர்கள் சர்ப்பங்களை எடுப்பார்கள் என்று கூறியிருக்கிறார் பாம்புகளை வைத்து வித்தை காட்டுவதை இயேசுவின் வாக்கியம் குறிக்காது. பாம்பு நம்மைத் தீண்டினாலும், அதன் விஷம் விசுவாசியைத் தாக்காது (அப் 28:1-5) பிரசங்கனையின்போது விசுவாசிகளுக்கு அவற்றின்மீது அதிகாரம் இருக்கும். பொது ஜனங்கள் மத்தியில் ஒருவன் பாம்பைக் கையில் பிடித்துக் காண்பிப்பதினால் அவன் விசுவாசியாகி விடுவதில்லை ஏராளமான பாம்பாட்டிகள் மகுடி ஊதி, பாம்போடு விளையாடுகிறார்கள். அவர்கள் எல்லோரும் இயேசு கிறிஸ்துவின் விசுவாசிகள் என்று கூறமுடியாது. ஒருவனுக்கு தேவனுடைய வல்லமை இருக்குமென்றால் அந்த வல்லமையை இயேசு கிறிஸ்துவும் அப்போஸ்தலர்களும் பயன்படுத்திய பிரகாரம் பயன்படுத்த வேண்டும். (அப் 5:16 அப் 10:38 அப் 19:11-12 ஒருவன் ஏராளமான பாம்புகளைத் தன் கையினால பிடித்து ஒரு வியாதிபஸ்தருக்கும் ஜெபிக்க வில்லையென்றால் அதனால் என்ன பிரயோஜனம்.

மாற்கு - தொகுப்புரை

16 அதிகாரம்

"சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது" - இந்த வாக்கியத்தில் "குடித்தாலும்" என்று இருக்கிறதே தவிர "குடிக்கவேண்டும்" என்றில்லை. சர்ப்பங்களை எடுப்பதற்குக் கூறப்பட்டிருக்கிற விளக்கமே இதற்கும் பொருந்தும். (அப் 28:1-5) - இல் பவுலை ஒரு சர்ப்பம் தீண்டிற்று. ஆனால் பவுலுக்கு ஒரு சேதமும் ஏற்படவில்லை. விசுவாசிகளுக்கும் இப்படிப்பட்ட காரியம் நடக்கும் என்றால், சர்ப்பங்களின் விஷத்திலிருந்து கர்த்தர் அவர்களைப் பாதுகாப்பார். விரோதிகள் சதி பண்ணி விஷம் கொடுத்தாலும் அது விசுவாசிகளைத் தாக்காது. (2இராஜா 4:40) கொடிய விலங்குகளிலிருந்தும் விசுவாசிகளுக்குப் பாதுகாப்பு உண்டு.

"வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்" - பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் வியாதியஸ்தர்கள்மீது கைகளை வைத்து ஜெபிக்கும் பழக்கமும், ஒருவரை ஆசீர்வதிப்பதற்காக அவர்மீது கைகளை வைத்து ஆசீர்வதிக்கும் பழக்கமும் இருந்தது. (ஆதி 48:14; எண் 8:10; எண் 27:23; உபா 34:9; மத் 19:15; மாற்கு 5:23; மாற்கு 6:25; லூக்கா 4:40; லூக்கா 13:13; அப் 5:12; அப் 13:3; அப் 14:3; அப் 19:11; அப் 28:8; 1தீமோ 4:14; 2தீமோ 1:6; எபி 6:2)

5. இயேசு பரமேறுகிறார் - (லூக் 24:50; அப் 1:9-11; எபே 1:20-23; 4:7-11)

மாற்கு 16:19 இவ்விதமாய்க் கர்த்தர் அவர்களுடனே பேசினபின்பு, பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார்.

"இவ்விதமாய்க் கர்த்தர் அவர்களுடனே பேசினபின்பு" - இந்த வாக்கியம் மாற்கு எழுதின சுவிசேஷத்திற்கு உரியதல்ல என்று சிலர் கூறுகிறார்கள். மாற்கு 16:9-20 ஆகிய வசனங்கள், இந்த வாக்கியம் மாற்கு எழுதின சுவிசேஷத்திற்கே உரியது என்று உறுதிபண்ணுகிறது. ஒருசில புதிய ஏற்பாட்டுக் கிரேக்கச் சுவடுகளில் மாற்கு எழுதின சுவிசேஷத்தில் மாற்கு 16:9-20 ஆகிய வசனங்கள் இல்லை.

"பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்" - (லூக்கா 24:49-53; யோவான் 3:13; யோவான் 6:62; அப் 1:9-11; எபே 4:8-10)

"தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார்" - (அப் 2:33; அப் 7:56-57; ரோமர் 8:34; எபே 1:20; கொலோ 3:1; எபி 1:3; எபி 8:1; எபி 10:12; எபி 12:2; 1பேதுரு 3:22)

6. அப்போஸ்தலருடைய நடபடிகளும் ஆதிகால விசுவாசிகளும் - (அப் 1:12-28:31)

மாற்கு 16:20 அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனே கூடக் கிரியையை நடப்பித்து அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். ஆமென்.

"அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியை நடப்பித்து அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார்" புதிய ஏற்பாட்டுச் சபையின் ஊழியம் இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதற்கு இந்த வசனம் நல்லதொரு எடுத்துக்காட்டாகும். விசுவாசிகள் எல்லா இடங்களுக்கும் புறப்பட்டுச் சென்று கர்த்தருடைய வார்த்தையைப் பிரசங்கம் பண்ண வேண்டும். கர்த்தர் அவர்களுடனேகூட கிரியை நடப்பிப்பார். அவர்கள் மூலமாக அடையாளங்களும், அற்புதங்களும் நடைபெறும். இதன்மூலமாக வசனம் உறுதிப்படும்.

லூக்கா - முன்னுரை

காலம்

கி.பி 58-63 - இடம் சரியாகத் தெரியவில்லை

ஆசிரியர்

லூக்கா இவர் ஒரு மருத்துவர் (கொலோ 4:14; 2தீமோ 4:11; பிலே 1:24) லூக்கா சில வசனங்களில் தன்னைப் பன்மைச் சுட்டுப் பெயரால் "நாம்" என்று குறிப்பிட்டிருக்கிறார் (அப 16:10-17; அப 20:5-15; அப 21:1-18; அப 27:1-28:16) இவர் ஒரு யூதர் ஒருவேளை லூகியோக இருக்கலாம். (ரோமர் 16:21; அப 13:1) லூக்காவும், லூகியும் ஒரே நபரென்றால் லூக்கா பவுலின் உறவினர் ஆவார்

மையக்கருத்து

இயேசு கிறிஸ்து தேவன் எதிர்பார்க்கும் புருஷன் (God's ideal Man) (சக 6:12) இவர் பிதாவைச் சார்ந்திருந்தார் (லூக்கா 3:21) பாவிகளுக்குச் சிநேகிதர் (லூக்கா 5:29, லூக்கா 7:29-37); கிருபையுள்ளவர் (லூக்கா 7:13; லூக்கா 13:10; பிறன் (லூக்கா 10:30 ,

லூக்கா எழுதின சுவிசேஷத்தில் காணப்படும் விசேஷித்த காரியங்கள்

அற்புதங்கள்

1 திரளான மீன்களைப் பிடித்தல் லூக்கா 5:4-11

2 நாயீன் ஊரில் மரித்த வாலிபனை உயிரோடு எழுப்புதல் (லூக்கா 7:11-18)

3 நிமிரக்கூடாத கூனியைச் சொஸ்தமாக்குதல் (லூக்கா 13:11-17)

4 நீர்க்கோவை வியாதியுள்ள மனுஷனைச் சொஸ்தமாக்குதல் (லூக்கா 14:1-6)

5 பத்துக் குஷ்டரோகிகளைச் சுத்தமாக்குதல் (லூக்கா 17:11-19)

6 பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனின் வலதுகாதைச் சொஸ்தமாக்குதல் (லூக்கா 22:50 51)

உவமைகள்

1 கடன் கொடுக்கிறவன் (லூக்கா 7:41-43)

2 நல்ல சமாரியன் (லூக்கா 10:30-37)

3 உதவி புரியும் சிநேகிதன் (லூக்கா 11:5-8)

4 ஐசுவரியமுள்ள மதிகேடன் (லூக்கா 12:16-21)

5 கனிகொடாத அத்திமரம் (லூக்கா 13:6-9)

6 காணாமல்போன வெள்ளிக்காசு (லூக்கா 15:8-10)

7 இளைய குமாரன் (லூக்கா 15:11-32)

8 விடாமுயற்சியுள்ள விதவை (லூக்கா 18:1-8)

9 ஜெபம் பண்ணும் இரண்டு மனுஷர் (லூக்கா 18:9-14)

சம்பாஷணைகள்

1 லூக்கா 1:5-80

2 லூக்கா 2:1-52

3 லூக்கா 3:10-14

4 லூக்கா 10:1-20

5 லூக்கா 19:1-10,41-44

6 லூக்கா 22:44

7 லூக்கா 23:7-12

8 லூக்கா 23:27-31

9 லூக்கா 23:34

10 லூக்கா 23:40-43

11 லூக்கா 24:50-53)

லூக்கா - முன்னுரை

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 24

வசனங்கள் - 1151

கேள்விகள் - 165

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள் - 9

புதிய தீர்க்கதரிசனங்கள் - 54

வரலாற்றைக் குறிக்கும் வசனங்கள் - 930

பொருளடக்கம்

I. யோவான் ஸ்நானனின் பிறப்பு

1 லூக்கா எழுதின சுவிசேஷத்திற்கு முன்னுரை - (1:1-4)

2 யோவான் ஸ்நானனுடைய பெற்றோரின் வரலாறு - (1:5-7)

3 யோவான் ஸ்நானனின் பிறப்பை பற்றிய முன்னறிவிப்பு - (1:8-17)

4 சகரியாவிற்கு அடையாளம் - (1:18-20)

5 எலிசபெத்து கர்ப்பவதியாகிறாள் - (1:21-25)

6 இயேசுவின் பிறப்பை பற்றிய முன்னறிவிப்பு - (1:26-38)

7 மரியாள் எலிசபெத்தைச் சந்திக்க வருகிறாள் - (1:39-45)

8 கர்த்தரை மகிமைப்படுத்தி பாடிய பாடல் - (1:46-56)

9 யோவான் ஸ்நானனின் பிறப்பும் விருத்தசேதனமும் - (1:57-63)

10 சகரியாவின் வாய் திறக்கப்பட்டு நாவு கட்டவிழ்க்கப்படுகிறது - (1:64-66)

11 சகரியாவின் தீர்க்கதரிசனம் - (1:67-79)

12 யோவான் ஸ்நானனின் குழந்தை பருவம் - (1:80)

II. இயேசு கிறிஸ்துவின் ஊழியத்திற்கு முற்பட்ட காலம்

1 இயேசுவின் பிறப்பு - (2:1-7)

2 மேய்ப்பர்களுக்கு கர்த்தருடைய தூதனின் அறிவிப்பு - (2:8-12)

3 பரமசேனையின் திரள் தேவனைத் துதிக்கிறார்கள் - (2:13-14)

4 இயேசுவின் பிறப்பை மேய்ப்பர்கள் உறுதி பண்ணுகிறார்கள் - (2:15-20)

5 இயேசுவிற்கு விருத்தசேதனமும் பெயரிடப்படுவதும் - (2:21)

6 மரியாளின் சுத்திகரிப்பு - (2:22-24)

7 சிமியோனின் தீர்க்கதரிசனம் - (2:25-35)

8 அன்னாள் கர்த்தரைப் புகழ்ந்து பேசுகிறாள் - (2:36-37)

9 இயேசுவின் குழந்தைப்பருவம் - (2:38-50)

10 இயேசு தமது பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நமக்கு ஒரு முன்மாதிரியைக் காண்பிக்கிறார் - (2:51-52)

III. யோவான் ஸ்நானனின் ஊழியம் -

1 யோவான் ஸ்நானனின் காலமும் அழைப்பும் - (3:1-2)

2 யோவான் ஸ்நானனுடைய ஊழியத்தின் நோக்கம் - (3:3-6)

3 யோவான் ஸ்நானன் ஜனங்களுக்கு கூறிய ஏழு அம்ச செய்தி - (3:7-11)

4 ஆயக்காரருக்கும் போர்ச்சேவகருக்கும் யோவான் ஸ்நானன் கூறிய நான்கு அம்ச செய்தி - (3:12-14)

5 இயேசு கிறிஸ்து பற்றி யோவான் ஸ்நானன் முன்குறித்துக் கூறுகிறான் - (3:15-18)

6 ஏரோது யோவான் ஸ்நானனைக் கைது பண்ணுகிறான் - (3:19-20)

லூக்கா - முன்னுரை

IV. தமது ஊழியத்திற்காக இயேசு கிறிஸ்துவின் இறுதி ஆயத்தம் -

1 தண்ணீர் ஞானஸ்நானம் - (3:21)

2 பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் - (3:22)

3. மரியாள், யோசேப்பு ஆகியோரின் வம்சவரலாறு

(1) இயேசுவிலிருந்து தாவீது வரையிலும் - (3:23-31)

(2) தாவீதிலிருந்து ஆபிரகாம் வரையிலும் - (3:32-34)

(3) ஆபிரகாமிலிருந்து ஆதாம் வரையிலும் - (3:35-38)

4 இயேசுவை சாத்தான் சோதிக்கிறான் (4:1-13)

V. இயேசுவின் ஊழியமும் உபதேசமும் -

1 இயேசு கலிலேயாவில் தமது ஊழியத்தை ஆரம்பிக்கிறார் - (4:14)

2 தாம் வளர்ந்த ஊரில் இயேசுவின் முதலாவது பிரசங்கம் - (4:15-27)

3 இயேசுவின் பிரசங்கத்தினால் ஏற்பட்ட விளைவு - இயேசுவைக் கொல்வதற்கு முயற்சி - (4:28-30)

4 இயேசு கப்பர்நகூமை தமது ஊழிய ஸ்தலமாக ஆக்குகிறார் - (4:31-32)

5 இயேசு அசுத்த ஆவியை துரத்துகிறார் - (4:33-37)

6 பேதுருவின் மாமியை சொஸ்தமாக்குகிறார் - (4:38-39)

7 பிசாசுகளைத் துரத்துகிறார் - அநேகரை சொஸ்தமாக்குகிறார் - (4:40-41)

8 கலிலேயாவிற்கு இயேசுவின் இரண்டாவது பிரயாணம் - (4:42-44)

9 படவில் உட்கார்ந்து ஜனங்களுக்கு போதகம் பண்ணுகிறார் -

10 இயேசு அற்புதம் செய்து படவை பயன்படுத்தியதற்கு கிரயம் செலுத்துகிறார் - (5:4-7)

11 பேதுரு, அந்திரேயா, யாக்கோபு, யோவான் ஆகியோரின் அழைப்பு - (5:8-11)

12 இயேசு குஷ்டரோகியை சுத்தமாக்குகிறார் - (5:12-14)

13 இயேசு திரளான ஜனங்களை சொஸ்தமாக்குகிறார் இயேசுவின் கீர்த்தி அதிகமாகப் பரம்பிற்று (5:15-16)

லூக்கா - தொகுப்புரை

1 அதிகாரம்

I. யோவான் ஸ்நானனின் பிறப்பு - லூக் 1:1-80.

1. லூக்கா எழுதின சுவிசேஷத்திற்கு முன்னுரை -

லூக்கா 1:1 மகா கனம்பொருந்திய தேயோப்பிலுவே, நாங்கள் முழுநிச்சயமாய் நம்புகிற சங்கதிகளை

லூக்கா 1:2 ஆரம்பமுதல் கண்ணாரக் கண்டு வசனத்தைப் போதித்தவர்கள் எங்களுக்கு ஒப்புவித்தபடியே அவைகளைக் குறித்துச் சரித்திரம் எழுத அநேகம்பேர் ஏற்பட்டபடியினால்,

லூக்கா 1:3 ஆதிமுதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த நானும் உமக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின் நிச்சயத்தை நீர் அறியவேண்டுமென்று,

லூக்கா 1:4 அவைகளை ஒழுங்காய் உமக்கு எழுதுவது எனக்கு நலமாய்த் தோன்றிற்று.

இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றைப் பலர் எழுதினார்கள். பரிசுத்த வேதாகமத்தில் அந்தச் சரித்திரங்கள் எல்லாம் இடம்பெறவில்லை. நான்கு புஸ்தகங்கள் மட்டுமே சுவிசேஷ புஸ்தகங்களாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. மற்றவையெல்லாம் தள்ளுபடி செய்யப்பட்டன. வேதாகம வரலாற்றில் 46 புஸ்தகங்கள் தள்ளுபடி செய்யப்பட்டு, அவை தள்ளுபடி ஆகமங்கள் என்று அழைக்கப்படுகிறது. அவற்றில் 20 பழைய ஏற்பாட்டு தள்ளுபடி ஆகமங்கள் 26 புதிய ஏற்பாட்டு தள்ளுபடி ஆகமங்கள்.

தற்போது நமது பரிசுத்த வேதாகமத்தில் 66 புஸ்தகங்கள் அங்கீகரிக்கப்பட்டுக் கோர்க்கப்பட்டிருக்கிறது. லூக்காவின் காலத்தில் பல தள்ளுபடி ஆகமங்கள் வழக்கத்தில் இருந்தன. அதைப் பற்றி லூக்கா எழுதும்போது "அவைகளைக் குறித்துச் சரித்திரம் எழுத அநேகம்பேர் ஏற்பட்டபடியினால்" என்று எழுதியிருக்கிறார்.

"சங்கதி" - இதற்கான கிரேக்கச் சொல் "டையிஜீஸ்" (diegesis) இந்தச் சொல் புதிய ஏற்பாட்டில் இந்த வசனத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு வரலாறு என்று பொருள்.

சங்கதி (declaration) - διήγησις - dieegeesis 1335

பெண்பால் பெயர்ச்சொல் - சங்கதி

"நாங்கள் முழுநிச்சயமாய் நம்புகிற சங்கதிகள்" - சான்றுகளால் நிரூபிக்கப்பட்ட சத்தியங்கள். இயேசு கிறிஸ்து கூறிய சத்தியங்களுக்கும் செய்த அற்புதங்களுக்கும் ஆயிரக்கணக்கானோர் சாட்சிகளாக இருந்தார்கள். அவை இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையையும், அவருடைய தெய்வீக ஊழியத்தையும் நிரூபிக்கின்றன. ஆகையினால் இந்தச் சங்கதிகளை லூக்காவும் அவனோடு சேர்ந்திருந்தவர்களும் நம்புகிறார்கள்.

"ஆரம்பமுதல்" - கிறிஸ்துவின் ஜீவியத்தின் ஆரம்பமுதல் (அப் 1:21-22)

கண்ணாரக் காணுதல் (eyewitnesses) - αὐτόπτης - autoptees - 845

ஆண்பால் பெயர்ச்சொல் - கண்ணாரக் காணுதல் - ஒருவர் தன்னுடைய சொந்தக் கண்களால் காண்பது.

போதித்தவர்கள் (ministers) - ὑπηρέτης - hypeeretees - 5257

ஆண்பால் பெயர்ச்சொல் - போதித்தவர்கள், சேவகன், வேலைக்காரன், பணிவிடைக்காரன், ஊழியக்காரர், உதவிக்காரர்

இந்தக் கிரேக்கச்சொல் தமிழ் மொழியில் பலவேறு விதமாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. சேவகன் "office" (மத் 5:25; யோவான் 7:32,45-46; யோவான் 18:3, 12,18,22; யோவான் 19:6, அப் 5:22,26) பணிவிடைக்காரன் "minister" (லூக்கா 1:2; லூக்கா 4:20, அப் 13:5; அப் 26:16; 2கொரி 4:1) உதவிக்காரன் "servant" (மத் 26:58, மாற்கு 14:54,65; யோவான் 18:36

லூக்கா – தொகுப்புரை

1 அதிகாரம்

"ஆதிமுதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த நானும், அவைகளை ஒழுங்காய் உமக்கு எழுதுவது எனக்கு நலமாய்த் தோன்றிற்று" - இயேசு கிறிஸ்துவைப் பற்றிய பல சத்தியங்கள் லூக்காவிற்குத் தெரிந்திருந்தது. ஆகையினால் அவற்றை லூக்கா எழுத வேண்டுமென்று விரும்பினார்.

சத்தியங்களை லூக்கா தெரிந்து கொண்ட விதம்

1. கண்ணாரக்கண்ட சாட்சிகள் லூக்கா 1:2
2. வசனத்தைப் போதித்தவர்கள் லூக்கா 1:2
3. எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்து அறிதல் (லூக்கா 1:3)
4. ஆதிமுதல்

ஆதிமுதல் (from above) - ἄνωθεν - anoothen - 509

வினையடை. மேலிருந்து, ஆதிமுதல், மறுபடியும், பரத்திலிருந்து, உன்னதத்திலிருந்து (யோவான் 3:3,7,31; யோவான் 19:11,23) இந்த வாக்கியம் தெய்வீக ஏவுதலையும் குறிக்கும் (2 தீமோ 3:16)

"மகா கனம்பொருந்திய" சமுதாயத்தில் கொடுக்கப்படும் பட்டம். இந்தப் பட்டத்திற்கும் அவருடைய நீதிநெறி வாழ்விற்கும் சம்பந்தம் இருக்காது. (அப் 23:26; அப் 26:25)

"தேயோப்பிலு" - இந்தப் பெயர் இந்த வசனத்திலும் அப் 1ம் ஆவது வசனத்திலும் மட்டுமே வந்திருக்கிறது. யோசேபஸ் (Josephus) என்னும் திருச்சபை வரலாற்று ஆசிரியர் தேயோப்பிலு என்னும் பெயரை இரண்டு இடங்களில் இரண்டு நபர்களுக்குக் குறிப்பிடுகிறார். இவர்கள் பிரதான ஆசாரியர்கள். இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறு இவருக்கு உபதேசிக்கப்பட்டது. (லூக்கா 1:3)

2. யோவான் ஸ்நானனுடைய பெற்றோரின் வரலாறு -

லூக்கா 1:5 யூதேயாதேசத்தின் ராஜாவாகிய ஏரோதின் நாட்களில், அபியா என்னும் ஆசாரிய வகுப்பில் சகரியா என்னும் பேர் கொண்ட ஆசாரியன் ஒருவன் இருந்தான். அவன் மனைவி ஆரோனுடைய குமாரத்திகளில் ஒருத்தி, அவள் பேர் எலிசபெத்து.

லூக்கா 1:6 அவர்கள் இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள்.

லூக்கா 1:7 எலிசபெத்து மலடியாயிருந்தபடியினால், அவர்களுக்குப் பிள்ளையில்லாதிருந்தது; இருவரும் வயது சென்றவர்களாயும் இருந்தார்கள்.

"யூதேயா தேசத்தின் ராஜா" - ரோமப்பேரரசின் பாராளுமன்றத்தார் தாங்கள் விரும்பும் ஒருவருக்கு இப்படிப்பட்ட பட்டத்தைச் சூட்டுவார்கள் (மத் 2:1)

"சகரியா" - சாதாரண ஆசாரியன். தேவாலயத்துச் சேவைக்காக தாவீது நியமித்த ஆசாரிய வகுப்பில் இவனுடைய முன்னோர்கள் வருகிறார்கள். லூக்கா 1:8-10 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற சேவைகளை ஒருவாரக்காலத்திற்கு ஒவ்வொரு ஆசாரிய வகுப்பாரும் நிறைவேற்றுவார்கள் (1நாளா 24:1). மொத்தம் 24 ஆசாரிய வகுப்பினர் இருந்தார்கள்.

"அபியா என்னும் ஆசாரிய வகுப்பு" - (1நாளா 24:10; நெகே 12:17)

"ஆரோனுடைய குமாரத்திகள்" - ஒரு ஆசாரியன் லேவிய ஸ்திரீயை திருமணம் செய்து கொள்வது சட்டப்பிரகாரம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. ஆயினும் ஆசாரியன் தன் ஆசாரிய வகுப்பிற்குள்ளேயே திருமணம் செய்து கொள்வதை அக்காலத்து ஆசாரிய வகுப்பார் விரும்பினார்கள் (லேவி 21:14)

"எலிசபெத்" - ஆரோனுடைய மனைவியின் பெயரும் எலிசபெத் (யாத் 6:23)

1 அதிகாரம்

"குற்றமற்றவர்கள்" - பவுலைப் போல இவர்களும் மார்க்கச்சடங்குகளில் குற்றமற்றவர்களாக இருந்தார்கள் (பிலி 3:6) கர்த்தரிட்ட சகல கற்பனைகளையும் நியமங்களையும் தங்கள் ஜீவியங்களில் வழுவாமல் கடைபிடித்து வந்தார்கள்

"எலிசபெத்து மலடியாயிருந்தபடியினால் அவர்களுக்குப் பிள்ளையில்லாதிருந்தது" - இது சாபமும், நிந்தையுமான காரியம் (ஆதி 16:2; ஆதி 29:32; ஆதி 30:1-11; உபா 28:18; 1சாமு 1:6; ஏசா 4:1)

"இருவரும் வயது சென்றவர்களாயும் இருந்தார்கள்" - பழைய ஏற்பாட்டுக் காலத்தில் சாராளையும் ஆபிரகாமையும்போல வயது முதிர்ந்தவர்களாக இருந்தார்கள் (ஆதி 11:30; ஆதி 17:17) யோவானின் பிறப்பு ஈசாக்கின் பிறப்பைப்போன்று ஓர் அற்புதமான காரியம். ரோமர் 4:17-21 எபி 11:11

3. யோவான் ஸ்நானனின் பிறப்பைப் பற்றிய முன்னறிவிப்பு -

லூக்கா 1:8 அப்படியிருக்க, அவன் தன் ஆசாரிய வகுப்பின் முறைப்படி தேவசந்நிதியிலே ஆசாரிய ஊழியம் செய்துவருகிற காலத்தில்

லூக்கா 1:9 ஆசாரிய ஊழிய முறைமையின்படி அவன் தேவாலயத்துக்குள் பிரவேசித்து தூபங்காட்டுகிறதற்குச் சீட்டைப் பெற்றான்

லூக்கா 1:10 தூபங்காட்டுகிற வேளையிலே ஜனங்களெல்லாரும் கூட்டமாய் வெளியே ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார்கள்

லூக்கா 1:11 அப்பொழுது கர்த்தருடைய தூதன் ஒருவன் தூபபீடத்தின் வலது பக்கத்திலே நின்று அவனுக்குத் தரிசனமானான்

லூக்கா 1:12 சகரியா அவனைக்கண்டு கலங்கி பயமடைந்தான்

லூக்கா 1:13 தூதன் அவனை நோக்கி: சகரியாவே, பயப்படாதே, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது; உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு யோவான் என்று பேரிடுவாயாக.

லூக்கா 1:14 உனக்குச் சந்தோஷமும் மகிழ்ச்சியும் உண்டாகும், அவன் பிறப்பினிமித்தம் அநேகர் சந்தோஷப்படுவார்கள்

லூக்கா 1:15 அவன் கர்த்தருக்கு முன்பாகப் பெரியவனாயிருப்பான் திராட்சரசமும் மதுவும் குடியான், தன் தாயின் வயிற்றிலிருக்கும்போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான்

லூக்கா 1:16 அவன் இஸ்ரவேல் சந்ததியாரில் அநேகரை அவர்கள் தேவனாகிய கர்த்தரிடத்திற்குத் திருப்புவான்

லூக்கா 1:17 பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும் கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப் படுத்தும்படியாக அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான் என்றான்

தூபங்காட்டு (burn incense) - θυμιάω - thymiaoo - 2370

வினைச்சொல் - தூபங்காட்டு

தூபங்காட்டுவதைப் பற்றிய முதலாவது குறிப்பு எண்ணாகமத்தில் வருகிறது (எண் 16:6) அங்கு கீழ்ப்படியாமையைப் பற்றிக் கூறப்படுகிறது. தூபங்காட்டுவதைப் பற்றிய கடைசிக்குறிப்பில் அவிசுவாசத்தைப் பற்றிக் கூறப்படுகிறது. (லூக்கா 1:20)

மகாபரிசுத்த ஸ்தலமுள்ள ஆலயம். இதன் கிரேக்கச்சொல் "நவோஸ்" (naos) "ஹைரோன்" (hieron) தேவாலயத்தின் பிரகாரத்தைக் குறிக்கும்.

லூக்கா – தொகுப்புரை

1 அதிகாரம்

தேவாலயம் (temple) - ναός - naos - 3485

ஆண்பால் பெயர்ச்சொல் - தேவாலயம், ஆலயம்

தேவாலயப்பிரகாரம் (temple) - ἱερόν - hieron - 2411

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல்- தேவாலயப்பிரகாரம், தேவாலயம் ஆலயம், கோவில்

"கர்த்தருடைய தூதன்" - லூக்கா எழுதின சுவிசேஷத்தில் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வசனங்களில் தூதர்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. (லூக்கா 1:11,26; லூக்கா 2:9,15,21 லூக்கா 12:8; லூக்கா 15:10; லூக்கா 16:22 லூக்கா 22:43; லூக்கா 24:4,23)

"தூபபீடம்" - (யாத் 30:1 யாத் 37:25-28; 1இராஜா 7:48)

"சகரியா அவனைக்கண்டு கலங்கி, பயமடைந்தான்" - (தானி 10:7; மாற்கு 16:8; வெளி 1:17

தீர்க்கதரிசன எண் - 1

"தூதன் அவனை நோக்கி: சகரியாவே பயப்படாதே, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது; உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு யோவான் என்று பேரிடுவாயாக..............." (லூக்கா 1:13-17) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"உன் வேண்டுதல் கேட்கப்பட்டது" எபிரெய மொழியின் இலக்கணத்தின் பிரகாரம் நிறைவு பெற்ற காரியத்தைக் குறிக்கும் வினைச்சொல் ஆகும் (aorist) சகரியா இப்பொழுது இந்தக் காரியத்திற்காக ஜெபம் பண்ணவில்லை அவனுக்கு வயதாயிற்று. ஆயினும் அவனுடைய வாலிப நாட்களில் அவன் ஏறெடுத்த வேண்டுதல்களைக் கர்த்தர் கேட்டார்

"யோவான்" - இந்தப் பெயருக்கு "யெகோவா கிருபை அளித்திருக்கிறார்" என்று பொருள் வேதாகமத்தில் ஏழு நபர்களுக்கு அவர்கள் பிறப்பதற்கு முன்பாகவே பெயர் கொடுக்கப்பட்டது (மத் 1:21) அவர்களில் யோவானும் ஒருவன் யோவானைப் பற்றி முன்னறிவிக்கப்பட்ட காரியங்களை லூக்கா 1:13-17 ஆகிய வசனங்களில் நாம் வாசித்தறியலாம்

"கர்த்தருக்கு முன்பாகப் பெரியவனாயிருப்பான்" - தன்னைத்தான் தாழ்த்துகிறவன் பெரியவனாக இருப்பான் தன்னைத்தான் உயர்த்துகிறவன் தள்ளிவிடப்படுவான் யோவான் கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்துவதினால் அவன் கர்த்தருடைய சமுகத்தில் பெரியவனாக இருக்கிறான் கர்த்தரே யோவானைப் பெரியவனாக்கியிருக்கிறார்

"திராட்சரசமும் மதுவும் குடியான்" - திராட்சைப்பழங்களிலிருந்து தயாரிக்கப்பட்ட திராட்சரசத்தையும் போதையைத் தரும் வேறு எந்த மதுபானத்தையும் யோவான் குடிக்கமாட்டான்

"தன் தாயின் வயிற்றிலிருக்கும்போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான்" - யோவான் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டான் ஆனால் அவன் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளவில்லை (மத் 3:14)

லூக்கா எழுதின சுவிசேஷத்தில் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டவர்கள்

1. யோவான் ஸ்நானன் (லூக் 1:15-17,80
2. மரியாள் (லூக் 1:35-46 55
3. எலிசபெத்து (லூக் 1:41-45
4. சகரியா (லூக் 1:67-79)
5. சிமியோன் (லூக் 2:25-35)
6. அன்னாள் (லூக் 2:36-38
7. சீஷர்கள் (லூக் 9:1-6; லூக் 10:1-20 = மத் 10:1-8, 20)
8. இயேசு கிறிஸ்து (லூக் 2:40-52

1 அதிகாரம்

இயேசுவும் சீஷர்களும், மரியாளும் பின்பு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டார்கள்

"அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவன்" - எலிசாவிடம் எலியாவின் ஆவியையும், பலத்தையும்போல இரட்டிப்பான மடங்கு இருந்தது. (2இராஜா 2:9) எலியாவிடம் ஆவியும் பலமும் இருந்த அளவிற்கு யோவானிடம் இருந்தது. மோசேயின் அளவு (எண் 11:17) அல்லது இயேசுவிடம் இருந்ததுபோன்று ஆவியானவரின் அளவில்லாத முழுமை. (யோவான் 3:34)

"பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி, உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்துவான்" - யோவானுடைய ஊழியத்தின் மூன்று நோக்கங்கள்

1 இஸ்ரவேல் குடும்பத்தாரை ஒன்று சேர்ப்பான்

2 கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்குத் திருப்புவான்

3 உத்தமமான ஜனத்தை இயேசு கிறிஸ்துவிற்கு ஆயத்தப்படுத்துவான் (மத் 3:1-3:11, யோவான் 1:31)

4. சகரியாவிற்கு அடையாளம்

லூக்கா 1:18 அப்பொழுது சகரியா தேவதூதனை நோக்கி: இதை நான் எதினால் அறிவேன்; நான் கிழவனாயிருக்கிறேன் என் மனைவியும் வயது சென்றவளாயிருக்கிறாளே என்றான்

லூக்கா 1:19 தேவதூதன் அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் தேவசந்நிதானத்தில் நிற்கிற காபிரியேல் என்பவன்; உன்னுடனே பேசவும், உனக்கு இந்த நற்செய்தியை அறிவிக்கவும் அனுப்பப்பட்டு வந்தேன்

லூக்கா 1:20 இதோ, தகுந்தகாலத்திலே நிறைவேறப்போகிற என் வார்த்தைகளை நீ விசுவாசியாதபடியினால் இவைகள் சம்பவிக்கும் நாள்மட்டும் நீ பேசக்கூடாமல் ஊமையாயிருப்பாய் என்றான்

"இதை நான் எதினால் அறிவேன்" - தனக்கு வயதான காரணத்தினால் இனிமேல் பிள்ளை பெறும் சிலாக்கியம் தனக்கு இல்லை என்று சகரியா நினைத்தான் ஆகையினால் இந்தக் கேள்வியைக் கேட்கிறான். மரியாளுக்கோ திருமணம் ஆவதற்கு முன்பாகவே பிள்ளையைப்பெறவேண்டிய வாய்ப்பு வருகிறது. (லூக்கா 1:34)

"நான் காபிரியேல் என்பவன்" - தானியேலிடம் வந்த அதே தூதன் (தானி 8:16; தானி 9:21) மரியாளிடம் அனுப்பப்பட்டவன் (லூக்கா 1:26) வேதாகமத்தில் நான்கு தூதர்களின் பெயர்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கிறது அவர்களில் இரண்டு பேர் விழுந்துபோன தூதர்களான லூசிபரும் அபத்தோனும் மற்ற இருவரும் நல்ல தூதர்கள் அவர்களின் பெயர் மிகாவேல் காபிரியேல்

1 லூசிபர் (ஏசா 14:12; எசே 28:11-17)

2 மிகாவேல் (தானி 10:13,21; தானி 12:1, யூதா 1:9; வெளி 12:7)

3 காபிரியேல் (தானி 8:16, தானி 9:21, லூக் 1:19,26)

4 அபத்தோன் அல்லது அப்பொல்லியோன் (வெளி 9:11)

செப்துவஜிந்த் பழைய ஏற்பாட்டில் சுவிசேஷம் என்னும் வார்த்தையும் பயன்படுத்தப்பட்டிருக்கிற விதம்

1 எந்த நற்செய்தியும் (1சாமு 31:9, 2சாமு 1:20; 1நாளா 10:9)

2 தேவனுடைய கிருபை (சங் 36:10, சங் 96:2)

3 மேசியாவின் ஆசீர்வாதங்கள் (ஏசா 40:9; ஏசா 61:1)

1 அதிகாரம்

புதிய ஏற்பாட்டில் சுவிசேஷம் என்னும் வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிற விதம்

1 தேவனுடைய ராஜ்யமும், பரலோக ராஜ்யமும் (மத் 4:23; மத் 9:35 மத் 24:14; மாற்கு 1:14)

2 தேவன் (ரோமர் 1:1; ரோமர் 15:16)

3 இயேசு கிறிஸ்து (மாற்கு 1:1 ரோமர் 1:16 ரோமர் 15:29 1கொரி 9:12-18)

4 இரட்சிப்பு (மாற்கு 16:15; லூக்கா 4:18 எபே 1:13

5. தேவனுடைய கிருபை (அப் 20:24)

6 சமாதானம் (ரோமர் 10:15; எபே 6:15)

7 வாக்குத்தத்தங்கள் (எபே 3:6 எபி 8:6

8 சத்தியம் (எபே 1:13; கொலோ 1:5)

9 விசுவாசம் (பிலி 1:27)

10 நம்பிக்கை (கொலோ 1:23)

11 நித்தியம் (2தீமோ 1:10)

12 புதிய உடன்படிக்கையின் பொதுவான ஆசீர்வாதங்கள் (மாற்கு 16:15, கலா 1:11, கலா 3:8

சுவிசேஷம் ஒன்றே. மத்தேயுவிலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரையிலும் உள்ள செய்தியே சுவிசேஷம். இதற்கு யூதரும், புறஜாதியாரும் கீழ்ப்படிய வேண்டும். (மத் 28:20, அப் 1:1-2; ரோமர் 10:12; 1கொரி 12:13 கலா 3:28; எபே 2:11-22; எபே 3:5-11

ராஜ்யத்தின் சுவிசேஷம் என்பது வரப்போகிற ராஜ்யத்தையும் குறிக்கும். அந்தேசமயத்தில் இரட்சிப்பையும் கிறிஸ்துவின் நற்செய்தியினால் வரும் எல்லா ஆசீர்வாதங்களையும் குறிக்கும் (மத் 6:33 மத் 13:11-50; மத் 18:1-35; மாற்கு 1:14-15; யோவான் 3:3-5; அப் 8:12; அப் 20:25; அப் 28:23,31, ரோமர் 14:17; 2கொரி 4:20; 2கொரி 6:9, கொலோ 1:13)

தீர்க்கதரிசன எண் - 2

"தகுந்தகாலத்திலே நிறைவேறப்போகிற என் வார்த்தைகளை நீ விசுவாசியாதபடியினால் இவைகள் சம்பவிக்கும் நாள்மட்டும் நீ பேசக்கூடாமல் ஊமையாயிருப்பாய்" (லூக்கா 1:20) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"இதோ தகுந்தகாலத்திலே நிறைவேறப்போகிற என் வார்த்தைகளை நீ விசுவாசியாத படியினால்" - சகரியா தேவனைச் சந்தேகப்பட்டான் தேவன் தனக்குக் கூறிய காரியம் நிறைவேறுவதற்கு ஒரு அடையாளத்தைக் கேட்டான் அவனிடம் அவிசுவாசம் இருந்தது கர்த்தர் அவனுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுத்தார் ஆனால் அந்த அடையாளமே அவனுக்குத் தண்டனையாயிற்று அவன் பேசக்கூடாத ஊமையானான்

5. எலிசபெத்து கர்ப்பவதியாகிறாள்

லூக்கா 1:21 ஜனங்கள் சகரியாவுக்குக் காத்திருந்து அவன் தேவாலயத்தில் தாமதித்ததினால் ஆச்சரியப்பட்டார்கள்

லூக்கா 1:22 அவன் வெளியே வந்தபோது அவர்களிடத்தில் பேசக்கூடாமலிருந்தான், அதினாலே தேவாலயத்தில் ஒரு தரிசனத்தைக் கண்டானென்று அறிந்தார்கள் அவனும் அவர்களுக்குச் சைகை காட்டி ஊமையாயிருந்தான்

லூக்கா 1:23 அவனுடைய ஊழியத்தின் நாட்கள் நிறைவேறினவுடனே தன் வீட்டுக்குப் போனான்

லூக்கா 1:24 அந்நாட்களுக்குப்பின்பு, அவன் மனைவியாகிய எலிசபெத்து கர்ப்பவதியாகி: ஜனங்களுக்குள்ளே எனக்கு உண்டாயிருந்த நிந்தையை நீக்கும்படியாகக் கர்த்தர் இந்த நாட்களில் என்மேல் கடாட்சம் வைத்து

லூக்கா 1:25 எனக்கு இப்படிச் செய்தருளினார் என்று சொல்லி, ஐந்து மாதம் வெளிப்படாதிருந்தாள்

1 அதிகாரம்

"ஜனங்கள் சகரியாவுக்குக் காத்திருந்து அவன் தேவாலயத்தில் தாமதித்ததினால ஆச்சரியப்பட்டார்கள்" - ஆசாரியன் தூபம்காட்டும்போது ஜனங்கள் சிறிது நேரம் மட்டுமே காத்திருப்பார்கள் அதன்பின்பு ஆசாரியன் வெளியே வந்து. காத்திருக்கும ஜனங்களை ஆசீர்வதிப்பான் இந்த முறை ஜனங்களுக்கு விசேஷித்த ஆசீர்வாதம் கிடைக்கிறது. அவர்கள் அற்புதத்தைக் கண்டார்கள் தேவதூதன் வந்ததினால ஏற்பட்ட விளைவுகளைக் கண்டார்கள்

"அவனுடைய ஊழியத்தின் நாட்கள் நிறைவேறினவுடனே தன் வீட்டுக்குப போனான்" - சகரியா ஊமையானான் ஊமையாக இருந்தாலும் அவன் தனக்கு நியமிக்கப்பட்ட ஊழியத்தை விட்டு ஓடிவிடவில்லை தன்னுடைய வீட்டிற்குப்போய தன் மனைவியிடம் இந்த நற்செய்தியைச் சொல்வதற்காக அவசரப்பட்டு ஓடிப்போகவில்லை அவனுக்கு நியமிக்கப்பட்ட கடமையைப் பொறுமையோடு நிறைவேற்றிய பின்பு, சகரியா தன்வீட்டிற்குப்போனான

"அவன் மனைவியாகிய எலிசபெத்து கர்ப்பவதியாகி____ஐந்து மாதம் வெளிப்படாதிருந்தாள்" லூக்கா 1:1 ஆகிது வசனம் நிறைவேற ஆரம்பிக்கிறது. தேவனுடைய இரக்கம் பரிபூரணமாக நிரூபிக்கப்பட வேண்டுமென்று எலிசபெத்து விரும்பினாள் தன்னுடைய ஜீவியத்தில ஏற்பட்ட நற்செய்தியை ஜனங்கள் மத்தியில சென்று அறிவிப்பதற்கு முன்பாக ஐந்து மாதம் காத்திருந்து. கர்த்தருடைய கிருபையை உறுதிசெய்து கொண்டாள

6. இயேசுவின் பிறப்பைப் பற்றிய முன்னறிவிப்பு

லூக்கா 1:26 ஆறாம் மாதத்திலே காபிரியேல் என்னும் தூதன், கலிலேயாவிலுள்ள நாசரேத்தென்னும் ஊரில,

லூக்கா 1:27 தாவீதின் வம்சத்தானாகிய யோசேப்பு என்கிற நாமமுள்ள புருஷனுக்கு நியமிக்கப்பட்டிருந்த ஒரு கன்னிகையினிடத்திற்கு தேவனாலே அனுப்பப்பட்டான் அந்தக் கன்னிகையின பேர் மரியாள

லூக்கா 1:28 அவன் இருந்த வீட்டில் தேவதூதன் பிரவேசித்து, கிருபை பெற்றவளே வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான்

லூக்கா 1:29 அவளோ அவனைக் கண்டு, அவன் வார்த்தையினால் கலங்கி, இந்த வாழ்த்துதல் எப்படிப்பட்டதோ என்று சிந்தித்துக்கொண்டிருந்தாள்

லூக்கா 1:30 தேவதூதன் அவளை நோக்கி: மரியாளே, பயப்படாதே; நீ தேவனிடத்தில கிருபைபெற்றாய.

லூக்கா 1:31 இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய. அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக.

லூக்கா 1:32 அவர் பெரியவராயிருப்பார் உன்னத மானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார

லூக்கா 1:33 அவர் யாக்கோபின குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார் அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்றான

லூக்கா 1:34 அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி: இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள

லூக்கா 1:35 தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்தஆவி உன்மேல வரும் உன்னதமானவருடைய பலம் உன்மேல நிழலிடும் ஆதலால உன்னிடத்தில பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன என்னப்படும்.

லூக்கா 1:36 இதோ, உனக்கு இனத்தாளாயிருக்கிற எலிசபெத்தும் தன் முதிர்வயதிலே ஒரு புத்திரனைக் கர்ப்பந்தரித்திருக்கிறாள மலடியென்னப்பட்ட அவளுக்கு இது ஆறாம் மாதம்.

1 அதிகாரம்

லூக்கா 1:37 தேவனாலே கூடாதகாரியம் ஒன்றுமில்லை என்றான்

லூக்கா 1:38 அதற்கு மரியாள் இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள் அப்பொழுது தேவதூதன் அவளிடத்திலிருந்து போய்விட்டான்

"ஆறாம் மாதத்திலே காபிரியேல் என்னும் தூதன் ....அனுப்பப்பட்டான்" - எலிசபெத்து கர்ப்பவதியாகி ஆறு மாதத்திற்குப் பின்பு (லூக்கா 1:36) இதன் பிரகாரம் யோவான் ஸ்நானன் இயேசு கிறிஸ்துவைவிட ஆறு மாதங்கள் வயதில் மூத்தவர்

"நாசரேத்து" - இயேசு கிறிஸ்து வளர்ந்த ஊர் (லூக்கா 2:39, லூக்கா 4:23 மத் 13:54

"கன்னிகை - மரியாள் கன்னிகையாக இருந்தாள் ஏசா 7:14 இல் கூறப்பட்டிருக்கிற கிரேக்கச்சொல் "அல்மா" (almah). புதிய ஏற்பாட்டில் கன்னிகை என்று பொருள்படும் கிரேக்கச்சொல் "பார்த்தீனோஸ் (parthenos) ஆகும். புருஷனை அறியாதவள் இதுவரையிலும் சரீரப்பிரகாரமாக உடலுறவில் ஈடுபடாதவள் என்று பொருள். (மத் 1:23; மத் 25:1,7,11 லூக்கா 1:27, லூக்கா 2:36; அப 21:9 1கொரி 7:25,28,34,36,37, 2கொரி11:2 வெளி 14:4 மரியாள் புருஷனை அறியாதவள் (லூக்கா 1:34)

கன்னிகை (virgin) - עַלְמָה - al-maw' - 5959

பெ.பெ.சொ - பெண், கன்னிகை கன்னியா

கன்னிகை (virgin) - παρθένος - parthenos 3933

பெண்பால் பெயர்ச்சொல் கன்னிகை, கன்னியாஸ்திரீ

"புருஷனுக்கு நியமிக்கப்பட்டிருந்தவள்" - (மத் 1:18)

"தாவீதின் வம்சத்தானாகிய யோசேப்பு" - யோசேப்பும், மரியாளும் தாவீதின் வம்சத்தைச் சேர்ந்தவர்கள் (மத் 1:6 லூக்கா 3:19)

தீர்க்கதரிசன எண் - 3

"கிருபை பெற்றவளே, வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார் ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள்" (லூக்கா 1:28) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"கிருபை பெற்றவளே" - மத்தேயுவும், மாற்குவும் கிருபை என்னும் சொல்லைப் பயன்படுத்தவில்லை. இந்த வசனத்திலும் எபே 1:6-இல் மட்டுமே இந்த வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது

"கலங்கினாள்" - கலக்கத்தில் இரண்டு வகை உள்ளது. ஒன்று முழுவதுமாகக் கலங்குதல் மற்றொன்று ஓரளவு கலங்குதல் இந்த வாக்கியத்தில் முழுவதுமாகக் கலங்குதல் என்று பொருள்படும் "டையடராசோ" (diatarasso) என்னும்கிரேக்கச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஓரளவு கலங்குதல் என்னும் பொருளைத் தரும் கிரேக்கச்சொல் "தராசோ" (tarasso)

கலங்கு (troubled) - διαταράσσω - diatarassoo - 1298

வினைச்சொல் - கலங்கு - முழுவதுமாக கலங்குதல் (to disturb wholly)

கலங்கு (troubled) - ταράσσω - tarassoo - 5015

வினைச்சொல் - கலங்கு, கலக்கமடை, துயரமடை - ஓரளவு கலங்குதல் (partial or light agitation) (லூக்கா 1:12)

"மரியாளே, பயப்படாதே, நீ தேவனிடத்தில் கிருபைபெற்றாய்" - (ஆதி 26:24

1 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 4

"நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக." (லூக்கா 1:30-33) இந்தத் தீர்க்கதரிசனத்தில் லூக்கா 1:30 ஆவது வசனத்திலிருந்து 32 ஆவது வசனத்தின் முன்பகுதி வரையிலும் நிறைவேறிற்று. "கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது" (லூக்கா 1:32-33) மேசியா பூமியை ஆளுகை செய்யும்போது இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும். (ஏசா 9:6-7; தானி 2:44-45; தானி 7:13-14,27; சக 14; வெளி 11:15; வெளி 22:4-5)

"இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக" - இயேசு கிறிஸ்துவைப் பற்றி நான்கு சுவிசேஷங்களிலும் நான்கு முக்கியமான சத்தியங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அவற்றை இந்த வசனம் தெளிவாகக் கூறுகிறது.

1. நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய் - "இதோ அந்த மனுஷன்" லூக்காவின் விளக்கம்
2. அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக "இதோ என் தாசன்" மாற்குவின் விளக்கம்
3. அவர் பெரியவராயிருப்பார் உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார் "இதோ உன் தேவன்" யோவானின் விளக்கம்.
4. அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார் - "இதோ உன் ராஜா" மத்தேயுவின் விளக்கம்

"இயேசு" - (மத் 1:21)

"அவர் பெரியவராயிருப்பார்" - இயேசுவும், யோவானும் பெரியவர்களாக இருந்தார்கள் (லூக்கா 1:15,32) ஆனாலும் இயேசு எல்லோரையும் விட பெரியவர் (மத் 7:11; யோவான் 3:27-30)

உன்னதமானவர் (Highest)
ὕψιστος hypsistos - 5310

> வினைபடை - உன்னதமானவர் - லூக்கா ஏழு இடங்களில் இந்த வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார் (லூக்கா 1:32,35,76; லூக்கா 2:14; லூக்கா 6:35; லூக்கா 8:28; லூக்கா 19:38) இதுபோக, புதிய ஏற்பாட்டில் மேலும் ஆறு இடங்களில் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது (மத் 21:9; மாற்கு 5:7; மாற்கு 11:10; அப் 7:48; அப் 16:17; எபி 7:1)

"கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார்" (2சாமு 7:16; ஏசா 9:6-7; ஏசா 16:5; சங் 132:11; லூக்கா 22:29-30)

"யாக்கோபு" - இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரையும் குறிக்கிறார் (எசே 48; லூக்கா 22:29-30; அப் 26:7; வெளி 7:4-8; வெளி 21:12)

"அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது" இயேசு கிறிஸ்துவின் ராஜ்யம் ஆயிரம் வருஷ அரசாட்சியில் முடிந்து போவதில்லை. அவருடைய ராஜ்யம் நித்தியகாலமாக நீடித்திருக்கும். (ஆதி 8:22; ஆதி 9:12,16; ஆதி 17:7,19; 2சாமு 7; சங் 72:5; சங் 79:13; சங் 81:4; ஏசா 9:6-7; ஏசா 51:8; ஏசா 57:21; எசே 37:24-28; தானி 2:44-45; தானி 7:13-14,27; லூக்கா 1:33,55; வெளி 11:15; வெளி 22:4-5)

"இது எப்படியாகும், புருஷனை அறியேனே" - மரியாள் அவிசுவாசத்தினால் இவ்வாறு கூறவில்லை. விளக்கம் கேட்கிறாள். சகரியாவிடம் தேவதூதன் கூறியபோது அவன் அவிசுவாசத்தோடு கேள்வி கேட்டான். (லூக்கா 1:18-20)

1 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 5

"பரிசுத்தஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும். (லூக்கா 1:35-37) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"தேவனுடைய குமாரன்" - இயேசு கிறிஸ்துவின் குமாரத்துவம் என்பது அவருடைய மானிடத்தையே குறிக்கும் அவருடைய தெய்வத்துவத்தைக் குறிக்காது. தேவனாக இருக்கும் இயேசு கிறிஸ்துவிற்குத் துவக்கம் இல்லை (மீகா 5:2 யோவான் 1:1-2) அவரே ஆதியும் அந்தமுமாக இருக்கிறார். தேவனாக இருக்கும் இயேசு கிறிஸ்து பிதாவின் ஒரேபேறானவர் அல்ல. அவர் பிதாவின் ஒரேபேறானவராக இருப்பார் என்றால் அவருக்கு ஒரு துவக்கம் இருக்கும். ஆனால் தேவனுக்குத் துவக்கம் இல்லை. மனுஷனாக இருக்கும் இயேசு கிறிஸ்துவிற்கு துவக்கம் உண்டு. அவர் பிதாவின் ஒரேபேறான குமாரன் (சங் 2:7,12, மத் 1:18-25 லூக்கா 1:35, எபி 1:5-6)

இயேசு கிறிஸ்துவின் மனுஷத்துவத்தையும், தெய்வத்துவத்தையும் விளக்கும்போது இந்த சத்தியங்களையெல்லாம் நாம் மனதில் வைத்துக்கொண்டு வியாக்கியானம் பண்ண வேண்டும்.

"இனத்தாள்" - இனத்தாள் என்பது உறவின் முறையைக் குறிக்காது. ஒரே கிராமத்தைச் சேர்ந்தவர்கள் (countryman) என்னும் பொருளையே தரும். ஏனெனில் மரியாளும், யோசேப்பும் தாவீதின் மூலமாக யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். எலிசபெத்து லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவள் (லூக்கா 1:5)

இனத்தாள் (cousin) - συγγενής - syngenees 4773

பெயரடை இனத்தானாகிய, உறவின் முறையான, பந்துஜனங்களான - இந்தச் கிரேக்கச்சொல் பல்வேறு விதமான மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. உறவினள் "cousin" (லூக்கா 1:36,58) உறவினன் "kin" (மாற்கு 6:4) உறவினர் "kinsmen" (லூக்கா 14:12; யோவான் 18:26, அப் 10:24; ரோமர் 9:3; ரோமர் 16:7,11,21) உற்றார் "kinsfolk" (லூக்கா 2:44; லூக்கா 21:16)

7. மரியாள் எலிசபெத்தைச் சந்திக்க வருகிறாள்

லூக்கா 1:39 அந்நாட்களில் மரியாள் எழுந்து மலைநாட்டிலே யூதாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குத் தீவிரமாய் போய்,

லூக்கா 1:40 சகரியாவின் வீட்டுக்குள் பிரவேசித்து எலிசபெத்தை வாழ்த்தினாள்.

லூக்கா 1:41 எலிசபெத்து மரியாளுடைய வாழ்த்துதலைக் கேட்டபொழுது அவளுடைய வயிற்றிலிருந்த பிள்ளை துள்ளிற்று, எலிசபெத்து பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு,

லூக்கா 1:42 உரத்த சத்தமாய்: ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள், உன் கர்ப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது.

லூக்கா 1:43 என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் வந்தது எனக்கு எதினால் கிடைத்தது.

லூக்கா 1:44 இதோ, நீ வாழ்த்தின சத்தம் என் காதில் விழுந்தவுடனே என் வயிற்றிலுள்ள பிள்ளை களிப்பாய்த் துள்ளிற்று.

லூக்கா 1:45 விசுவாசித்தவளே பாக்கியவதி, கர்த்தராலே அவளுக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும் என்றாள்.

"யூதாவிலுள்ள ஒரு பட்டணம்" - இயேசு கிறிஸ்து இருந்த கிராமத்திலேயே யோவானும் இருந்தார்.

1 அதிகாரம்

"எலிசபெத்து பரிசுத்த ஆவியினால நிரப்பப்பட்டாள்" - (லூக்கா 1:15)

தீர்க்கதரிசன எண் - 6

"ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் உன் கர்ப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது." (லூக்கா 1:42-45) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் வந்தது எனக்கு எதினால் கிடைத்தது" - எலிசபெத்து பரிசுத்த ஆவியினால நிரப்பப்பட்டு இயேசுவை "ஆண்டவர்" என்று அழைக்கிறாள்

8. கர்த்தரை மகிமைப்படுத்தி பாடிய பாடல் - (சாமு 2:1)

லூக்கா 1:46 அப்பொழுது மரியாள் என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது.

லூக்கா 1:47 என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூருகிறது.

லூக்கா 1:48 அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப் பார்த்தார் இதோ இது முதல் எல்லாச சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள்

லூக்கா 1:49 வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார் அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது.

லூக்கா 1:50 அவருடைய இரக்கம் அவருக்குப் பயந்திருக்கிறவர்களுக்குத் தலைமுறை தலைமுறைக்குமுள்ளது.

லூக்கா 1:51 தம்முடைய புயத்தினாலே பராக்கிரமஞ் செய்தார் இருதயசிந்தையில் அகந்தையுள்ளவர்களைச் சிதறடித்தார்

லூக்கா 1:52 பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி, தாழ்மையானவர்களை உயர்த்தினார்

லூக்கா 1:53 பசியுள்ளவர்களை நன்மைகளினால் நிரப்பி, ஐசுவரியமுள்ளவர்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார்

லூக்கா 1:54 நம்முடைய பிதாக்களுக்கு அவர் சொன்னபடியே, ஆபிரகாமுக்கு அவன் சந்ததிக்கும் என்றென்றைக்கும் இரக்கஞ்செய்ய நினைத்து

லூக்கா 1:55 தம்முடைய தாசனாகிய இஸ்ரவேலை ஆதரித்தார் என்றாள்

லூக்கா 1:56 மரியாள் ஏறக்குறைய மூன்றுமாதம் அவளுடனே இருந்து தன் வீட்டுக்குத் திரும்பிப்போனாள்

தீர்க்கதரிசன எண் - 7

"என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது ...." (லூக்கா 1:46-55) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று நிறைவேறிக்கொண்டு வருகிறது.

"என் இரட்சகர்" - என்று மரியாள் கூறுகிறாள் மரியாளைப் பற்றி விளக்கம் தருகிறவர்களில் சிலர் அவளிடத்தில் பாவமேயில்லை என்று கூறுகிறார்கள் (immaculate conception) ஆனால் மரியாளோ இயேசுவை "என் இரட்சகர்" என்று அழைக்கிறாள் இயேசு கிறிஸ்து மரியாளின் இரட்சகராக இருப்பார் என்றால் மரியாள் இரட்சிக்கப்பட வேண்டியவளே மரியாள் ஒரு பாவமும் செய்யவில்லையென்று எந்த வேதவசனமும் கூறவில்லை.

"அவருடைய இரக்கம் அவருக்குப் பயந்திருக்கிறவர்களுக்குத் தலைமுறை தலைமுறைக்குமுள்ளது" பயந்திருக்கிறவர்கள் என்பது கர்த்தரிடத்தில் பயபக்தியாக இருப்பதைக் குறிப்பிடும்.

ஆசனங்களிலிருந்து தள்ளப்பட்ட பலவான்கள்

1. பார்வோன் (யாத் 15:3-4)

1 அதிகாரம்

2 கோராகும், அவனுடைய புத்திரரும் எண் 16

3 ஆமான் (எஸ் 6.6-14)

4 நேபுகாத்நேச்சார் (தானி 4.24-37)

5 பெல்ஷாத்சார் (தானி 5)

6 அமத்சியா (2இராஜா 14:10)

7 உசியா (2நாளா 26:16)

8 பெருமையுள்ளோர் அனைவரும் சங் 33:10; 1பேதுரு 5.5; யாக் 4:6)

உயர்த்தப்பட்ட தாழ்மையுடையவர்கள்

1 யோசேப்பு (ஆதி 41.38-45)

2 தாவீது (1சாமு 18, 2சாமு 7)

3 மொர்தெகாய் (எஸ் 6.6-14)

4 தானியேல் (தானி 1.8-21)

5 யோவான் (மத் 3:4; மத் 11:11)

6 மரியாள் (லூக்கா 1:48)

7 இயேசு (பிலி 2.5-11)

8 தாழ்மையுடையவர் அனைவரும் மத் 23:12, யாக் 4:6; 1பேதுரு 5:3-6)

"பசியுள்ளவர்களை நன்மைகளினால் நிரப்பினார்" - (மத் 5:6; யோவான் 7.37-39 சங் 34:10

"ஐசுவரியமுள்ளவர்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார்" (பிர 6.2 கொரி 1:26 29

"மரியாள் ஏறக்குறைய மூன்றுமாதம் அவளுடனே இருந்தாள்" - யோவான் பிறக்கும் வரையிலும் அவளுடனே கூட இருந்திருக்க வேண்டும் (லூக்கா 1.36 = லூக்கா 1.56

"தன் வீட்டுக்குத் திரும்பிப்போனாள்" - நாசரேத்திற்குத் திரும்பிப்போனாள் யோசேப்பும் மரியாளும் இன்னும் சேர்ந்து வாழவில்லை. மரியாள் வீட்டை விட்டுச் சென்றபோது அவள் கர்ப்பமாக இருக்கிற விஷயம் தெரியவந்தது. மத் 1:18-25 ஆகிய வசனங்களில் உள்ள நிகழ்ச்சிகள் யூதேயாவில் மரியாள் தங்கியிருந்த மூன்று மாதங்களுக்குப்பின்பு நடந்தவையாகும்.

9. யோவான் ஸ்நானனின் பிறப்பும் விருத்தசேதனமும் - (2:21)

லூக்கா 1:57 எலிசபெத்துக்குப் பிரசவ காலம் நிறைவேறினபோது அவள் ஒரு புத்திரனைப் பெற்றாள்

லூக்கா 1:58 கர்த்தர் அவளிடத்தில் தமது இரக்கத்தை விளங்கப் பண்ணினாரென்று அவளுடைய அயலகத்தாரும் பந்துஜனங்களும் கேள்விப்பட்டு, அவளுடனேகூடச் சந்தோஷப்பட்டார்கள்

லூக்கா 1:59 எட்டாம் நாளிலே பிள்ளைக்கு விருத்தசேதனம் பண்ணும்படிக்கு அவர்கள் வந்து, அதின் தகப்பனுடைய நாமத்தின்படி அதற்குச் சகரியா என்று பேரிடப்போனார்கள்

லூக்கா 1:60 அப்பொழுது அதின் தாய்: அப்படியல்ல, அதற்கு யோவான் என்று பேரிடவேண்டும் என்றாள்

லூக்கா 1:61 அதற்கு அவர்கள்: உன் உறவின் முறையாரில் இந்தப் பேருள்ளவன் ஒருவனும் இல்லையே என்று சொல்லி,

லூக்கா 1:62 அதின் தகப்பனை நோக்கி: இதற்கு என்ன பேரிட மனதாயிருக்கிறீர் என்று சைகையினால் கேட்டார்கள்

லூக்கா 1:63 அவன் எழுத்துப் பலகையைக் கேட்டு வாங்கி, இவன் பேர் யோவான் என்று எழுதினான், எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள்

பெற்றாள் (brought forth) - γεννάω gennaoo 1080

வினைச்சொல் - பெற்றாள், பெறு, பிறந்திரு, உண்டாயிரு, எழும்பு, ஜநித்திரு. (ஜென்ம, ஜெநிப்பி (மத் 1:3

1 அதிகாரம்

"கர்த்தர் அவளிடத்தில தம்முடைய இரக்கத்தை விளங்கப்பண்ணினாரென்று அவளுடைய அயலகத்தாரும் பந்துஜனங்களும் கேள்விப்பட்டு, அவளுடனேகூடச் சந்தோஷப்பட்டார்கள்" - (லூக்கா 1:36)

"எட்டாம் நாளிலே பிள்ளைக்கு விருத்தசேதனம் பண்ணும்படிக்கு அவர்கள வந்தார்கள்" - (ஆதி 17:12, லேவி 12:3)

"அதின் தகப்பனுடைய நாமத்தின்படி அதற்குச் சகரியா என்று பேரிடப்போனார்கள" - சகரியாவின அயலகத்தாரும், பந்து ஜனங்களும் தந்தையின் பெயரைப பிள்ளைபெற்ற குழந்தைக்குச் சகரியா என்று பெயரிடப போனார்கள ஆனால அந்தக் குழந்தைக்கு யோவான் என்று பேரிட வேண்டும் என்பதாக தேவதூதன் சகரியாவிற்கு ஏற்கெனவே அறிவித்திருந்தான (லூக்கா 1:13)

பிள்ளைக்கு விருத்தசேதனம் பண்ணும்போது பேரிடுவது வழக்கம். ஆபிராம், சாராய ஆகியோரின் பெயரைத் தேவன் விருத்தசேதனத்தை நியமனம் பண்ணியபோது ஆபிரகாம் சாராள என்று மாற்றினார (ஆதி 17) யூதமார்க்கத்துக் குருமார்கள இதை மனதில கொண்டு, குழந்தைக்கு விருத்தசேதனத்தின்போது பேரிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள

பொதுவாகத் தந்தையின பெயரை மகனுக்குச் சூட்டுவதில்லை ஆனால் இங்கு சகரியாவின் பெயரைக் குழந்தைக்குச் சூட்ட வேண்டுமென்று அயலகத்தாரும் பந்துஜனங்களும் தீர்மானம் பண்ணுகிறார்கள் இதற்கு ஏதாவது விசேஷித்த காரணம் இருக்கலாம்

ஒவ்வொரு தேசத்திலும் பிள்ளைகளுக்கு விசேஷித்த நாட்களில் பெயரிடுவார்கள ரோமர்கள் ஒன்பதாவது நாளிலும் கிரேக்கர்கள் பத்தாவது நாளிலும் மற்ற தேசங்களில் குழந்தை பிறந்து ஏழாவது நாளிலும் பெயர்சூட்டுவது வழக்கம்.

"இதற்கு என்ன பேரிட மனதாயிருக்கிறீர் என்று சைகையினால் கேட்டார்கள்" - ஒன்பது மாதங்களாக சகரியா பேசமுடியாத ஊமையாக இருக்கிறான் (லூக்கா 1:20)

"எழுத்துப் பலகை" - பல தேசங்களில் எழுத்துப்பலகை பயன்படுத்தப்பட்டு வந்தது (ஏசா 30:8; ஆப 2:2; நீதி 3:3; எரே 17:1; 2கொரி 3:3)

"யோவான்" - யெகோவாவின் கிருபை என்று பொருள் இயேசு கிறிஸ்துவின் மூலமாக வரப்போகிற சத்தியத்தையும் கிருபையையும் யோவான் அறிமுகப்படுத்தப்போகிறான் (யோவான் 1:17

10. சகரியாவின் வாய்திறக்கப்பட்டு நாவு கட்டவிழ்க்கப்படுகிறது - (1:20)

லூக்கா 1:64 உடனே அவனுடைய வாய திறக்கப்பட்டு, அவனுடைய நாவும் கட்டவிழ்க்கப்பட்டு, தேவனை ஸ்தோத்திரித்துப் பேசினான்

லூக்கா 1:65 அதினால் அவர்களைச்சுற்றி வாசமாயிருந்த யாவருக்கும் பயமுண்டாயிற்று. மேலும் யூதேயாவின மலைநாடெங்கும் இந்த வர்த்தமானங்களெல்லாம் சொல்லிக் கொள்ளப்பட்டது.

லூக்கா 1:66 அவைகளைக் கேள்விப்பட்டவர்களெல்லாரும் தங்கள மனதிலே அவைகளை வைத்துக்கொண்டு, இந்தப் பிள்ளை எப்படிப்பட்டதாயிருக்குமோ என்றார்கள கர்த்தருடைய கரம் அந்தப் பிள்ளையோடே இருந்தது.

"உடனே அவனுடைய வாய திறக்கப்பட்டு, அவனுடைய நாவும் கட்டவிழ்க்கப்பட்டு, தேவனை ஸ்தோத்திரித்துப் பேசினான்" யோவானுடைய பிறப்பு சம்பந்தமாக நடைபெற்ற இரண்டாவது அற்புதம். (லூக்கா 1:20,64)

"யூதேயாவின் மலைநாடெங்கும் இந்த வர்த்தமானங்களெல்லாம் சொல்லிக் கொள்ளப்பட்டது" - யோவானுடைய பிறப்பு, சகரியா ஊமையானது மறுபடியும் பேசியது ஆகிய எல்லா வர்த்தமானங்களையும் இந்தப் பகுதியிலுள்ள ஜனங்கள் ஆச்சரியத்தோடு பேசிக்கொண்டார்கள

1 அதிகாரம்

11. சகரியாவின் தீர்க்கதரிசனம்

லூக்கா 1:67 அவனுடைய தகப்பனாகிய சகரியா பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு தீர்க்கதரிசனமாக.

லூக்கா 1:68 இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக

லூக்கா 1:69 அவர் நம்முடைய பிதாக்களுக்கு [illegible] பண்ணின இரக்கத்தைச் செய்வதற்கும்.

லூக்கா 1:70 தம்முடைய பரிசுத்த உடன்படிக்கையை நினைத்தருளி.

லூக்கா 1:71 உங்கள் சத்துருக்களின் கைகளினின்று நீங்கள் விடுதலையாக்கப் பட்டு உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமில்லாமல் எனக்கு முன்பாகப் பரிசுத்தத்தோடும் நீதியோடும் எனக்கு ஊழியஞ்செய்யக் கட்டளையிடுவேன் என்று.

லூக்கா 1:72 அவர் நம்முடைய பிதாவாகிய ஆபிரகாமுக்கு இட்ட ஆணையை நிறைவேற்றுவதற்கும்,

லூக்கா 1:73 ஆதிமுதற்கொண்டிருந்த தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளின் வாக்கினால் தாம் சொன்னபடியே

லூக்கா 1:74 தமது ஜனத்தைச் சந்தித்து மீட்டுக்கொண்டு, நம்முடைய சத்துருக்களினின்றும், நம்மைப் பகைக்கிற யாவருடைய கைகளினின்றும், நம்மை இரட்சிக்கும் படிக்கு,

லூக்கா 1:75 தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு இரட்சணியக்கொம்பை ஏற்படுத்தினார்

லூக்கா 1:76 நீயோ பாலகனே உன்னதமானவருடைய தீர்க்கதரிசி என்னப்படுவாய்; நீ கர்த்தருக்கு வழிகளை ஆயத்தம்பண்ணவும்

லூக்கா 1:77 நமது தேவனுடைய உருக்கமான இரக்கத்தினாலே அவருடைய ஜனத்துக்குப் பாவ மன்னிப்பாகிய இரட்சிப்பைத் தெரியப் படுத்தவும் அவருக்கு முன்னாக நடந்துபோவாய்.

லூக்கா 1:78 அந்தகாரத்திலும் மரண இருளிலும் உட்கார்ந்திருக்கிறவர் களுக்கு வெளிச்சமதரவும்.

லூக்கா 1:79 நம்முடைய கால்களைச் சமாதானத்தின் வழியிலே நடத்தவும் அவ்விரக்கத்தினாலே உன்னதத்திலி ருந்து தோன்றிய அருணோதயம் நம்மைச் சந்தித்திருக்கிறது என்றான்

"சகரியா பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, தீர்க்கதரிசனம் கூறினான்" - (லூக்கா 1:15)

தீர்க்கதரிசன என் - 6

"இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக..........." (லூக்கா 1:67-79) இந்தத் தீர்க்கதரிசனத்தில் லூக்கா 1:67-70,76-79 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. லூக்கா 1:71-75 ஆகிய வசனங்கள் நிறைவேறி வருகின்றன

"இரட்சணியக்கொம்பு" - கொம்புகள் அதிகாரங்களுக்கு அடையாளம் (1இராஜா 22:11; தானி 8:3) சில இடங்களில் இது ராஜரீகத்திற்கு அடையாளம் (தானி 7:23-24; தானி 8:20-21; வெளி 17:12) கொம்பை உயர்த்துதல் என்னும் வாக்கியம் "அதிகாரம் செலுத்துதல்" என்று பொருள்படும். (1சாமு 2:10, சங் 75:4, சங் 89:24) இரட்சணியக்கொம்பு என்பது வல்லமையுள்ள இரட்சிப்பு அல்லது வல்லமையுள்ள இரட்சகர் என்று பொருள்படும் (2சாமு 22:3; சங் 18:2) இஸ்ரவேலின் கொம்பு அல்லது தாவீதின் கொம்பு என்பது இஸ்ரவேல் தாவீது ஆகியோரின் வல்லமையைக் குறிப்பிடும். (சங் 132:17

"தாவீதின் வம்சம்" - தாவீதின் சந்ததியார் (லூக்கா 1:27,33,69 லூக்கா 2:4)

லூக்கா – தொகுப்புரை

1 அதிகாரம்

இரட்சிக்கப்படுவதினால் உண்டாகும் ஆசீர்வாதங்கள்

1 சத்துருக்களிடமிருந்து விடுதலை லூக்கா 1:71,74; 1யோவான் 5:18)

2 தேவனுடைய கிருபை (லூக்கா 1:72 எபே 2:4-9; தீத்து 3:4-5)

3 விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் (லூக்கா 1:72-73; கலா 3:6-15

4 தேவனோடு சமாதானம் லூக்கா 1:74 ரோமர் 5:1-11 எபே 2:14-18

5 பரிசுத்தமும், நீதியும் (லூக்கா 1:75 எபே 4:24, தீதது 2:11-12)

6 தேவனோடு ஒப்புரவாகுதல் லூக்கா 1:77; 2கொரி 5:14-21 கொலோ 1:20

7 வெளிச்சமும் வழிநடத்துதலும் (லூக்கா 1:79, 1யோவான 1:7 யோவான் 16:7-14

"ஆபிரகாமுக்கு இட்ட ஆணை" - கர்த்தர் ஆபிரகாமோடு செய்து கொண்ட உடன்படிக்கை. (ஆதி 12:1-4, ஆதி 17:4, ஆதி 22:16-17

"பயமில்லாமல்" - இரட்சிக்கப்படுவதினால் கிடைக்கும் சிலாக்கியம். (ரோமர் 8:14-16; 2தீமோ 1:7

"கர்த்தருக்கு முன்பாக பரிசுத்தத்தோடும் நீதியோடும்" - ஒருவிசுவாசியினுடைய ஜீவியத்தில் சாதாரணமாக நடைபெறும் காரியம். (கலா 5:19-24; எபே 4:24, 1தெச 4:7, எபி 12:14

"உயிரோடிருக்கும் நாளெல்லாம்" - நாம் உயிரோடிருக்கும் இந்த ஜீவியத்தில் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து பரிசுத்தமாக ஜீவிக்க வேண்டும். இந்த ஜீவியத்தில் இரட்சிக்கப்படவில்லையென்றால் இனிமேல இரட்சிக்கப்படுவதற்கு வாய்ப்பில்லை லூக்கா 1:75 தீத்து 2:11-12, எபி 12:14; வெளி 22:11)

"நீ கர்த்தருக்கு வழிகளை ஆயத்தம்பண்ண அவருக்கு முன்னாக நடந்துபோவாய்" - ஏசா 40:1-3; மல் 3:1 ஆகிய வசனங்கள் உறுதிப்பண்ணப்படுகிறது.

"பாவமன்னிப்பாகிய இரட்சிப்பு" - நமது பாவங்களைக் கர்த்தர் மன்னிக்கும் பொழுது நமக்கு இரட்சிப்பு கிடைக்கிறது (ரோமர் 8:14-16)

அருணோதயம் (dayspring)
ἀνατολή - anatolee - 395

பெண்பால பெயர்ச்சொல் - அருணோதயம், கிழக்கு, சூரியன் உதிக்கும் திசை, நட்சத்திரம் அல்லது சூரியன் ஆகியவற்றின் உதயம் - சில இடங்களில் இந்தக் கிரேக்கச்சொல் கிழக்கு என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. (மத் 2:1,2,9; மத் 8:11; மத் 24:27; லூக்கா 13:29; வெளி 7:2; வெளி 16:12; வெளி 21:13 யோவானுடைய வருகையினால உதிக்கப்போகும் வெளிச்சம் (யோவான 5:35) உலகத்தின் வெளிச்சமாகிய இயேசு கிறிஸ்து (மத் 4:16; லூக்கா 2:32 யோவான 1:5-9; யோவான 3:19-21 யோவான 8:12; யோவான் 9:5 யோவான 12:35-36 46

12. யோவான் ஸ்நானனின் குழந்தைப் பருவம்

லூக்கா 1:80 அந்தப் பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பலங்கொண்டு, இஸ்ரவேலுக்குத் தன்னைக் காண்பிக்கும் நாள்வரைக்கும் வனாந்தரங்களிலே இருந்தான

"அந்தப் பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பலங்கொண்டு, இஸ்ரவேலுக்குத் தன்னைக் காண்பிக்கும் நாள்வரைக்கும் வனாந்தரங்களிலே இருந்தான்" யோவான சரீரத்திலும் ஆவிக்குரிய வல்லமையிலும் வளர்ந்து வந்தார் (லூக்கா 1:17) ஊழியம் செய்வதற்கு நியமிக்கப்பட்ட வயது வரையிலும் வனாந்தரத்தில் இருந்தார் (எண் 4:3) யோவானின் வளர்ச்சியையும், இயேசுவின் வளர்ச்சியையும் லூக்கா 2:40,52 ஆகிய வசனங்களில் நாம் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

2 அதிகாரம்

II. இயேசு கிறிஸ்துவின் ஊழியத்திற்கு முற்பட்ட காலம் – மத் 1:9

1. இயேசுவின் பிறப்பு – (மத் 1:18)

லூக்கா 2:1 அந்நாட்களில் உலகமெங்கும் குடிமதிப்பு எழுதப்படவேண்டுமென்று அகஸ்துராயனால் கட்டளை பிறந்தது.

லூக்கா 2:2 சீரியாநாட்டிலே சிரேனியு என்பவன் தேசாதிபதியாயிருந்தபோது இந்த முதலாம் குடிமதிப்பு உண்டாயிற்று.

லூக்கா 2:3 அந்தப்படி குடிமதிப்பெழுதப்படும்படிக்கு எல்லாரும் தங்கள் தங்கள் ஊர்களுக்குப் போனார்கள்.

லூக்கா 2:4 அப்பொழுது யோசேப்பும் தான் தாவீதின் வம்சத்தானும் குடும்பத்தானுமாயிருந்தபடியினாலே தனக்கு மனைவியாக நியமிக்கப்பட்டுக் கர்ப்பவதியான மரியாளுடனே குடிமதிப்பெழுதப்படும்படி,

லூக்கா 2:5 கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத்தூரிலிருந்து யூதேயா நாட்டிலுள்ள பெத்லகேம் என்னும் தாவீதின் ஊருக்குப் போனான்.

லூக்கா 2:6 அவ்விடத்திலே அவர்கள் இருக்கையில் அவளுக்குப் பிரசவகாலம் நேரிட்டது.

லூக்கா 2:7 அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெற்று சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாதிருந்தபடியினால் பிள்ளையைத் துணிகளில் சுற்றி முன்னணையிலே கிடத்தினாள்.

"அந்நாட்களில்" **(And it came to pass)** – இந்த வாக்கியத்தை லூக்கா தான் எழுதின சுவிசேஷத்திலும் அப்போஸ்தலருடைய நடபடிகளிலும் 54 இடங்களில் பயன் படுத்தியிருக்கிறார். புதிய ஏற்பாட்டின் மற்ற இடங்களில் இந்த வாக்கியம் 11 இடங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

"அகஸ்துராயன்" (Caesar Augustus) – ஜூலியஸ் சீசருக்குப் பின்பு ஆட்சிப் பொறுப்பை ஏற்றவன். இவனுடைய சுவீகாரப் புத்திரன். கி.மு. 29 முதல் கி.பி. 4 வரையிலும் இவன் ஆட்சிபுரிந்தான். இவனுடைய மறுபெயர் காயூஸ் ஆக்டோவியஸ் (Caius Octavius)

"உலகமெங்கும்" – இது ஒரு உருவகச்சொல். அந்தப் பிரதேசம் முழுவதிலும் என்று பொருள்படும் (ஆதி 6:17; 2சாமு 6:5,15; 1இராஜா 11:16-17; தானி 2:37-38; தானி 7:23; மத் 3:5-6; லூக்கா 2:1-3; ரோமர் 1:8; கொலோ 1:23; வெளி 13:8,16)

"சிரேனியு" (Cyrenius) – இவனுக்கு கிரேனியு (Quirinus) என்று மறுபெயரும் உண்டு. இந்த வசனத்தைக் குறித்து பலவிதமான கருத்துக் கூறுகிறார்கள். இயேசு கிறிஸ்து பிறந்து பத்து அல்லது பன்னிரெண்டு ஆண்டுகளுக்குப் பின்பே இவன் சீரிய நாட்டிலே தேசாதிபதியாக இருந்தான். கி.மு. 12-இல் சிரேனியு ரோமப்பேரரசின் ஆலோசனைச் சங்கத்து உறுப்பினராக இருந்தான். இதன் மூலமாக தேசாதிபதியாக ஆவதற்குத் தகுதியைப் பெற்றான். கி.மு. 12-முதல் கி.மு. 4 வரையிலும் ஆட்சி புரிந்த தேசாதிபதிகளின் பெயர்கள் தெரியவருகிறது. கி.மு. 4 முதல் கி.பி. 4 வரையிலும் ஆட்சி புரிந்த தேசாதிபதிகளின் பெயர்கள் தெரியவில்லை.

இந்தக் காலக்கட்டத்தில்தான் குடிமதிப்பு உண்டாயிற்று. சீரிய நாட்டிலே இக்காலத்தில் சிரேனியு என்பவன் தேசாதிபதியாக இருந்தான் என்று லூக்கா எழுதுகிறார். இந்த வாக்கியத்தில் "முதலாம்" குடிமதிப்பு உண்டாயிற்று என்பதை "சிரேனியு என்பவன் தேசாதிபதியாய் இருந்ததற்கு முன்பு குடிமதிப்பு உண்டாயிற்று" என்று மொழிபெயர்க்க வேண்டும். **(This census was before Cyrenius was governor of Syria)**

முன்பு **(before) - πρῶτος - prootos**
4413

பொருள் : முன்பு, முந்தின, முதலாவதான, மூத்தவனான, மூப்பரான, ஆதியான

2 அதிகாரம்

"கலிலேயா நாடு" - எருசலேம் கடல மட்டத்திலிருந்து 1,500 அடி உயரத்தில உள்ளது; நாசரேத்தைவிட உயரமான பகுதி.

"தாவீதின் ஊர்" - தாவீது இந்த ஊரில வளர்ந்தான் (1சாமு 20:6) சீயோன் என்று இதற்கு மறுபெயரும் உண்டு. (2சாமு 5:9 2சாமு 6:10-16

"பெத்லகேம்" (Bethlehem) - இந்த பெயருக்கு "அப்பத்தின்வீடு" என்று பொருள் எருசலேமிலிருந்து தெற்கே 5 மைல தூரத்தில் உள்ளது.

"தாவீதின் வம்சத்தாரும் குடும்பத்தாருமாயிருந்த படியினாலே" - (மத் 1:1-7

"தனக்கு மனைவியாக நியமிக்கப்பட்டுக் கர்ப்பவதியான மரியாளுடனே" - யோசேப்பு தேவதூதனுடைய வார்த்தைக்குக் கட்டுப்பட்டு, மரியாளைத் திருமணம் செய்து கொள்கிறான

"அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெற்றாள்" - (மத் 1:3

"பிள்ளையைத் துணிகளில சுற்றினாள்" - (லூக்கா 2:12

முன்னணை (manger) - φάτνη phatnee - 5336

பெண்பால் பெயர்சொல் - முன்னணை, தொழுவம் (feeding place) (லூக்கா 2:7-16; லூக்கா 13:15) முன்னணை (crib) (யோபு 39:9; நீதி 14:4 ஏசா 1:3)

"சத்திரம்" ஒரு சில சத்திரங்களில விலங்குகளைத் தொழுவத்தில கட்டி வைத்திருப்பார்கள் அந்தத் தொழுவத்தைச் சுற்றிலும் அவற்றை மேய்ப்பவர்கள் சிறிய குடிசைகளில தங்கியிருப்பார்கள

2. மேய்ப்பர்களுக்கு கர்த்தருடைய தூதனின் அறிவிப்பு - (மத் 2:1-12

லூக்கா 2:8 அப்பொழுது அந்த நாட்டிலே மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கி, இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக்கொண்டிருந்தார்கள்

லூக்கா 2:9 அவ்வேளையில் கர்த்தருடைய தூதன் அவர்களிடத்தில் வந்து நின்றான்; கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது; அவர்கள் மிகவும் பயந்தார்கள்

லூக்கா 2:10 தேவதூதன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்

லூக்கா 2:11 இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்

லூக்கா 2:12 பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள்; இதுவே உங்களுக்கு அடையாளம் என்றான்

"கர்த்தருடைய மகிமை" தேவனுடைய பிரசன்னம். (The Shekinah, or glory) (யாத் 24:16; 1இராஜா 8:10; ஏசா 6:1-3)

"அவர்கள் மிகவும் பயந்தார்கள்" - (தானி 10; மாற்கு 16:8, வெளி 1:17)

தீர்க்கதரிசன எண் - 8

"பயப்படாதிருங்கள், இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்" லூக்கா 2:10-12 இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

புதிய ஏற்பாட்டில் சந்தோஷம் அடைந்தவர்களுக்கு எடுத்துக்காட்டுக்கள்

1. சாஸ்திரி (மத் 2:10)
2. எலிசபெத்து (லூக்கா 1:41-45

2 அதிகாரம்

3 மரியாள் (லூக்கா 1:46-56)

4 சகரியா (லூக்கா 1:64-79)

5 மேய்ப்பர்கள் (லூக்கா 2:20)

6 எல்லா ஜனங்களும் (லூக்கா 2:10)

7 எழுபதுபேர் (லூக்கா 10:17)

8 தந்தையும் வேலையாட்களும் லூக்கா 15:24

9 மனந்திரும்பும்போது தேவதூதர்கள் (லூக்கா 15:10

10 சகேயு (லூக்கா 19:6

11 இயேசு வெற்றிபவனி வந்தபோது மத் 21:9

12 உயிர்த்தெழுதலின்போது (மத் 28:8)

13 அவர் தரிசனம் தந்தபோது லூக்கா 24:41

14 அவர் பரமேறியபோது (லூக்கா 24:52

15 முழுசபை (அப 2:46; அப 15:3)

16 சப்பாணி குணமாக்கப்பட்டபோது (அப 3:8

17 புதிதாக மனந்திருந்தியவர்கள் (அப 8:8, அப 13:52)

18 பவுல் (2கொரி 2:3; 2கொரி 7:4,13)

19 எல்லா விசுவாசிகளும் (1பேதுரு 1:8)

20 கிறிஸ்து (யோவான் 15:11; எபி 12:2)

"இன்று" - இந்தக் குறிப்பிட்ட நாளில் தேவனுடைய ஒரேபேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்து பிறக்கிறார் (சங் 2:7; லூக்கா 1:35, எபி 1:5-7) வேறு எந்தக் காலத்திலும் தேவனுக்குக் குமாரன் பிறந்ததாக வேதத்தில் சான்றுகள் எதுவும் இல்லை. ஒரேபேறான குமாரன் என்பது இயேசு கிறிஸ்துவின் மனுஷத்துவத்தைக் குறிக்கும். அவருடைய தெய்வீகத்துவத்தைக் குறிக்காது. (அப 13:33

"தாவீதின் ஊர்" - பெத்லகேம். தாவீதினுடைய பிறந்த ஊர் மீகா 5:1-2, 1சாமு 16:1)

இரட்சகர் (Saviour) - σωτήρ - sooteer - 4990

ஆங்கில பெயர்ச்சொல் - இரட்சகர் (savior, deliverer, preserver) (லூக்கா 1:47 லூக்கா 2:11 யோவான் 4:42 அப 5:31 அப 13:23 எபே 5:23 பிலி 3:20 1தீமோ 1:1 1தீமோ 2:3 1தீமோ 4:10 2தீமோ 1:10 தீத்து 1:3,4 தீத்து 2:10,13 தீத்து 3:4,6 2பேதுரு 1:1 2பேதுரு 2:20; 2பேதுரு 3:2,18 1யோவான் 4:14; யூதா 1:25)

"கிறிஸ்து" - மத் 1:1)

"கர்த்தர்" - எல்லா வல்லமைகளுக்கும் ஆண்டவர் அவரால் இரட்சிக்க முடியும் (ரோமர் 14:9; 1கொரி 8:6) இயேசு இரட்சகராகவும் கிறிஸ்துவாகவும் ஆண்டவராகவும் இருக்கிறார் லூக்கா 2:10-இல் கூறப்பட்டிருக்கிற நற்செய்தி ஒரு மார்க்கத்தைப் பற்றியது அல்ல தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றியது.

"இதுவே உங்களுக்கு அடையாளம்" (யோவான் 2:11)

"பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள்" இயேசு கிறிஸ்து உன்னதமானவர் உயர்ந்தவர் ஆனால் அவருடைய ஆரம்பம் மிகவும் தாழ்மையாக இருக்கிறது. (எபே 1:21, 23 பிலி 2:9, கொலோ 1:16-18; 1பேதுரு 3:22

"துணிகளில் சுற்றி" குழந்தை பிறந்தவுடன் அதைத் துணிகளில் சுற்றுவார்கள் மெல்லிய துணிகளில் குழந்தையைச் சுற்றுவார்கள் கை, கால் எதுவும் வெளியே தெரியாதபடி குழந்தையை மொத்தமாகச் சுற்றிவிடுவார்கள் தலையும் சுற்றப்பட்டிருக்கும். கண்கள் மட்டுமே வெளியே தெரியும். கிழக்கு நாடுகளில் இப்படி ஒரு பழக்கம் இருந்தது. (யோபு 38:9 புல 2:22 எசே 16:4)

2 அதிகாரம்

3. பரமசேனையின் திரள் தேவனைத் துதிக்கிறார்கள் – (எபி 1:6, வெளி 5:13)

லூக்கா 2:13 அந்தஷணமே பரமசேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி,

லூக்கா 2:14 உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள்.

"பரமசேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி .....தேவனைத் துதித்தார்கள்" - இயேசு கிறிஸ்து பிறந்த வேளையில தெய்வீக வல்லமையும், அற்புத அடையாளங்களும் வெளிப்படுவதை நாம் காண்கிறோம்.

"சமாதானம்" - இயேசு கிறிஸ்து சமாதான பிரபு. ஏசா 9:6. சமாதானப்பிரபுவைக் கொலைசெய்துவிட்டு அவர்கள் சமாதானத்தைப் பற்றி வீணாகப் பேசுகிறார்கள். கிறிஸ்து வருமவரையிலும் இந்தப் பூமியில மெய்யான சமாதானம் இராது. (வெளி 19:20)

"மனுஷர்மேல பிரியம்" இது தேவனுடைய சித்தம். மனுஷருடைய நன்மையையே தேவன் நாடுகிறார். மனுஷருக்கு இதைப் புரிய வைக்க விரும்புகிறார். சங் 84:11, 1தீமோ 2:4, 2பேதுரு 3:9

4. இயேசுவின் பிறப்பை மேய்ப்பர்கள் உறுதி பண்ணுகிறார்கள்

லூக்கா 2:15 தேவதூதர்கள் அவர்களை விட்டுப் பரலோகத்துக்குப் போனபின்பு, மேய்ப்பர்கள் ஒருவரையொருவர் நோக்கி: நாம் பெத்லகேம் ஊருக்குப் போய், நடந்ததாகக் கர்த்தரால் நமக்கு அறிவிக்கப்பட்ட இந்தக் காரியத்தைப் பார்ப்போம் வாருங்கள் என்று சொல்லி,

லூக்கா 2:16 தீவிரமாய் வந்து, மரியாளையும், யோசேப்பையும், முன்னணையிலே கிடத்தியிருக்கிற பிள்ளையையும் கண்டார்கள்.

லூக்கா 2:17 கண்டு, அந்தப் பிள்ளையைக் குறித்துத் தங்களுக்குச் சொல்லப்பட்ட சங்கதியைப் பிரசித்தம் பண்ணினார்கள்.

லூக்கா 2:18 மேய்ப்பராலே தங்களுக்குச் சொல்லப்பட்டதைக் கேட்ட யாவரும் அவைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்.

லூக்கா 2:19 மரியாளோ அந்தச் சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்திலே வைத்து, சிந்தனை பண்ணினாள்.

லூக்கா 2:20 மேய்ப்பர்களும் தங்களுக்குச் சொல்லப்பட்டபடியே கேட்டு கண்ட எல்லாவற்றிற்காகவும் தேவனை மகிமைப்படுத்தி, துதித்துக்கொண்டு திரும்பிப் போனார்கள்.

"மேய்ப்பர்கள் தீவிரமாய் வந்து மரியாளையும் யோசேப்பையும் முன்னணையிலே கிடத்தியிருக்கிற பிள்ளையையும் கண்டார்கள்" தேவன் சொன்னது உண்மை என்பதை மனுஷர் எப்போதுமே காண்பார்கள் (2தீமோ 3:16-17)

5. இயேசுவிற்கு விருத்தசேதனமும் பெயரிடப்படுவதும்

லூக்கா 2:21 பிள்ளைக்கு விருத்தசேதனம் பண்ணவேண்டிய எட்டாம் நாளிலே, அது கர்ப்பத்திலே உற்பவிக்கிறதற்கு முன்னே தேவதூதனால் சொல்லப்பட்டபடியே, அதற்கு இயேசு என்று பேரிட்டார்கள்.

"பிள்ளைக்கு விருத்தசேதனம் பண்ண வேண்டிய எட்டாம் நாளிலே" - இது பழைய ஏற்பாட்டுப் பிரமாணத்தின் நிறைவேற்றம். (லேவி 12:3) ஆபிரகாமின் உடன்படிக்கையின் அடையாளம். (ஆதி 17:10-14)

"இயேசு" - இயேசு என்னும் பெயருக்கு "இரட்சகர்" அல்லது "இரட்சிப்பாக இருக்கிற தேவன்" என்று பொருள் (மத் 1:21)

2 அதிகாரம்

"அது கர்ப்பத்திலே உற்பவிக்கிறதற்கு முன்னே தேவதூதனால் சொல்லப்பட்டபடியே, அதற்கு இயேசு என்று பேரிட்டார்கள்" - பிறப்பதற்கு முன்பாகவே பேரிடப்பட்டவர்களில் இயேசு கிறிஸ்துவும் ஒருவர் மத் 1:21

6. மரியாளின் சுத்திகரிப்பு

லூக்கா 2:22 மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படியே அவர்களுடைய சுத்திகரிப்பின் நாட்கள் நிறைவேறினபோது,

லூக்கா 2:23 முதற்பேறான எந்த ஆண்பிள்ளையும் கர்த்தருக்குப் பரிசுத்தமானதென்னப்படும் என்று கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி அவரைக் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுக்கவும்,

லூக்கா 2:24 கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் சொல்லியிருக்கிறபடி ஒரு ஜோடு காட்டுப்புறாவையாவது இரண்டு புறாக்குஞ்சுகளையாவது பலியாகச் செலுத்தவும், அவரை எருசலேமுக்குக் கொண்டுபோனார்கள்.

"சுத்திகரிப்பின் நாட்கள்" ஆண்குழந்தை பிறந்ததிலிருந்து நாற்பது நாட்கள், பெண்குழந்தை பிறந்ததிலிருந்து எண்பது நாட்கள் லேவி 12:1-6)

"மோசேயின் நியாயப்பிரமாணம்" - இந்த அதிகாரத்தில் மட்டும் மோசேயின் நியாயப்பிரமாணத்தைப் பற்றி லூக்கா ஐந்து தடவை குறிப்பிட்டிருக்கிறார் (லூக்கா 4:4) இல் கூறப்பட்டிருக்கிற சத்தியத்தை வலியுறுத்துவதற்காக இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது.

"அவரைக் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுக்கவும்" - யாத் 13:12; யாத் 22:29, யாத் 34:19 எண் 3:12,13 எண் 18:15 ஆகிய வசனங்களின் நிறைவேற்றம்.

"முதற்பேறான எந்த ஆண்பிள்ளையும் கர்த்தருக்குப் பரிசுத்தமானதென்னப்படும்" - யாத் 13:2; எண் 18:15 ஆகிய வசனங்களின் மேற்கோள்

"ஒரு ஜோடு காட்டுப்புறாவையாவது இரண்டு புறாக்குஞ்சுகளையாவது பலியாகச் செலுத்தவும்" - மரியாளும், யோசேப்பும் எளியவர்கள் ஆகையினால் காட்டுப்புறாவையோ அல்லது புறாக்குஞ்சுகளையோ பலியாகச் செலுத்துகிறார்கள். அவர்கள் ஐசுவரியவான்களாக இருந்திருந்தால் ஆட்டுக்குட்டியைப் பலியாகச் செலுத்துவார்கள் (லேவி 12:8) அக்காலத்தில் பாலஸ்தீன தேசத்தில் காட்டுப்புறாக்களும் புறாக் குஞ்சுகளும் ஏராளமாக இருந்தன. அவற்றின் விலையும் அதிகமில்லை.

7. சிமியோனின் தீர்க்கதரிசனம்

லூக்கா 2:25 அப்பொழுது சிமியோன் என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் எருசலேமில் இருந்தான்; அவன் நீதியும் தேவபக்தியும் உள்ளவனாயும், இஸ்ரவேலின் ஆறுதல் வரக்காத்திருக்கிறவனாயும் இருந்தான்; அவன்மேல் பரிசுத்த ஆவி இருந்தார்.

லூக்கா 2:26 கர்த்தருடைய கிறிஸ்துவை நீ காணுமுன்னே மரணமடையமாட்டாய் என்று பரிசுத்த ஆவியினாலே அவனுக்கு அறிவிக்கப்பட்டுமிருந்தது.

லூக்கா 2:27 அவன் ஆவியின் ஏவுதலினால் தேவாலயத்திலே வந்திருந்தான். இயேசு என்னும் பிள்ளைக்காக நியாயப்பிரமாண முறைமையின்படி செய்வதற்குத் தாய் தகப்பனமார் அவரை உள்ளே கொண்டு வருகையில்,

லூக்கா 2:28 அவன் அவரைத் தன் கைகளில் ஏந்திக்கொண்டு, தேவனை ஸ்தோத்திரித்து:

லூக்கா 2:29 ஆண்டவரே, உமது வார்த்தையின்படி உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போகவிடுகிறீர்;

லூக்கா – தொகுப்புரை

2 அதிகாரம்

லூக்கா 2:30 புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும்.

லூக்கா 2:31 தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம் பண்ணின

லூக்கா 2:32 உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது என்றான்

லூக்கா 2:33 அவரைக் குறித்துச் சொல்லப்பட்டவைகளுக்காக யோசேப்பும் அவருடைய தாயாரும் ஆச்சரியப்பட்டார்கள்

லூக்கா 2:34 பின்னும் சிமியோன் அவர்களை ஆசீர்வதித்து, அவருடைய தாயாகிய மரியாளை நோக்கி: இதோ அநேகருடைய இருதய சிந்தனைகள் வெளிப்படத்தக்கதாக இஸ்ரவேலில் அநேகர் விழுகிறதற்கும் எழுந்திருக்கிறதற்கும், விரோதமாய்ப் பேசப்படும் அடையாளமாவதற்கும் இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்

லூக்கா 2:35 உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும் என்றான்

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிற ஐந்து சிமியோன்கள்

1. யாக்கோபின் குமாரன் (ஆதி 29:33)
2. இயேசுவின் முன்னோர்களில் ஒருவர் (லூக்கா 3:30)
3. சீஷன் (அப் 13:1)
4. பேதுரு (அப் 15:14)
5. எருசலேமில் இருந்த ஒரு யூதன்

எருசலேமிலிருந்த சிமியோனின் குணாதிசயங்கள்

1. அவன் நீதியும் தேவபக்தியும் உள்ளவன் (லூக்கா 2:25)
2. இஸ்ரவேலின் ஆறுதல் வரக் காத்திருக்கிறவனாய் இருந்தான் (லூக்கா 2:25)
3. அவன்மேல் பரிசுத்தஆவி இருந்தார் (லூக்கா 2:25)
4. தெய்வீக வெளிப்பாட்டைப் பெற்றிருந்தான் (லூக்கா 2:26)
5. பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்டான் (லூக்கா 2:27)
6. இயேசுவைத் தன் கைகளில் ஏந்திக் கொண்டான் லூக்கா 2:28 (யோவான் 1)
7. தீர்க்கதரிசனம் கூறினான் (லூக்கா 2:28-35)
8. யோசேப்பையும் மரியாளையும் ஆசீர்வதித்தான் (லூக்கா 2:34)

"இஸ்ரவேலின் ஆறுதல்" - மேசியாவின் வருகையையும் அவருடைய ஊழியத்தையும் குறிக்கும் வழக்குச்சொல்

லூக்கா எழுதின சுவிசேஷத்தில் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவர்களாகக் கூறப்பட்டிருக்கிறவர்கள்

1. யோவான் ஸ்நானன் (லூக்கா 1:15-17,80)
2. மரியாள் (லூக்கா 1:35,46-55)
3. எலிசபெத்து (லூக்கா 1:41-45)
4. சகரியா (லூக்கா 1:67-79)
5. சிமியோன் (லூக்கா 2:25-35)
6. அன்னாள் (லூக்கா 2:36-38)
7. சீஷர்கள் (லூக்கா 9:1-6, லூக்கா 10:1-20 = மத் 10:1-8,20)
8. இயேசு கிறிஸ்து லூக்கா 2:40-52

இயேசுவும் சீஷர்களும் மரியாளும் பின்பு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டார்கள் லூக்கா 3:22 அப் 1:4-14 அப் 2:1-4

2 அதிகாரம்

அறிவிக்கப்பட்டிருந்தது (revealed) - χρηματίζω - chreematizoo - 5537

வினைச்சொல் - எச்சரி, அறிவி, கட்டளையிடு, அழைக்கப்பட்டு - எச்சரி (to be warned) மத் 2:12,22; அப் 10:22; எபி 11:7) கட்டளையிடு (to be admonished) (எபி 8:5); அழைக்கப்படு to be called (அப் 11:26; ரோமர் 7:3), வெளிப்படுத்து (to reveal) லூக்கா 2:26); அறிவி (to speak) எபி 12:25) இந்தக் கிரேக்கச்சொல் ஏழு இடங்களில் தெய்வீக சம்பாஷணையையும் இரண்டு இடங்களில் மனுஷ சம்பாஷணையையும் குறிக்கிறது.

தீர்க்கதரிசன எண் - 10

"கர்த்தருடைய கிறிஸ்துவை நீ காணுமுன்னே மரணமடையமாட்டாய்" (லூக்கா 2:26) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"ஆவியின் ஏவுதலினால் தேவாலயத்திலே வந்திருந்தான்" - லூக்கா 2:26 ஐ நிறைவேற்றுவதற்காக அவன் தேவாலயத்திற்குட பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்டு வந்திருந்தான்

ஆல் (by) - ἐν - en - 1722

முன் இடைச்சொல் - ஆல், இல் உடன்

"தேவாலயம்" தேவாலயத்துப் பிரகாரங்களுக்கு வந்தான் பரிசுத்த ஸ்தலத்திற்கோ, மகாபரிசுத்த ஸ்தலத்திற்கோ அவனால் வரமுடியாது. ஆசாரியர்கள் மட்டுமே அங்குச் செல்லமுடியும்

"நியாயப்பிரமாண முறைமை" இங்கு நியாயப்பிரமாணத்தின் ஐந்து முறைமைகள் நிறைவேற்றப்படுகிறது. அவையாவன

1 விருத்தசேதனம் (ஆதி 17; லேவி 12:3)

2 பிள்ளைக்குப் பேரிடுதல்

3 ஸ்திரீயின் சுத்திகரிப்பு

4 இயேசுவைத் தேவனிடத்தில் பிரதிஷ்டை பண்ணுதல்

5 பலிகளைச் செலுத்துதல் (லேவி 12

"அவன் அவரைத் தன் கைகளில் ஏந்திக்கொண்டு, தேவனை ஸ்தோத்திரித்தான்" - இவ்வாறு செய்வது அக்காலத்து வழக்கம். (மத் 19:13-15)

தீர்க்கதரிசன எண் - 11

"ஆண்டவரே உமது வார்த்தையின்படி அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போகவிடுகிறீர் ...." (லூக்கா 2:28-32 இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று

"உம்முடைய இரட்சணியத்தை என்கண்கள் கண்டது" - சிமியோனே முதன்முதலாக ஜீவவார்த்தையைக் கண்டவன் (1யோவான் 1:1) தேவனுடைய இரட்சிப்பு என்பது சாதாரண மீட்பு மட்டும் அல்ல அது மீட்பராகிய தெய்வீக நபரையும் குறிக்கும். (ஏசா 62:11; லூக்கா 3:6; யோவான் 3:16)

"சகல ஜனங்களுக்கும் முன்பாக" - இது இரகசியமாக நடைபெறும் காரியமல்ல எல்லோருக்கும் வெளியரங்கமாகத் தெரியும் காரியம்.

"புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும் உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும்" யூதனாகிய தீர்க்கதரிசி இயேசு கிறிஸ்துவைப் புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளி என்று முதன்முறையாக அறிவிக்கிறான் (ஏசா 42:6) இரட்சிப்பு யூதருக்கு மட்டுமே உரியது என்று அப்போஸ்தலர்கள் முதலாவதாக நினைத்தார்கள் தெய்வீகக் கடிந்து கொள்ளுதலின் பின்பே அவர்கள் இரட்சிப்பு புறஜாதியாருக்கும்உரியது என்று அங்கீகரித்தார்கள் (அப் 10:18, அப் 11:18 ஆதித்திருச்சபையில் இந்தப் பிரச்சனை வலுவாக இருந்தது. (அப் 15 கலா 2

"அவரைக்குறித்துச் சொல்லப்பட்டவைகளுக்காக யோசேப்பும் அவருடைய தாயாரும் ஆச்சரியப்பட்டார்கள்" அவர்கள் ஆச்சரியப்பட்டு இந்தக் காரியங்களைத் தங்கள் இருதயத்திலே வைத்துக் கொண்டார்கள் லூக்கா 2:19

2 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 12

"இதோ அநேகருடைய இருதய சிந்தனைகள் வெளிப்படத்தக்கதாக இஸ்ரவேலில் அநேகர் விழுகிறதற்கும் எழுந்திருக்கிறதற்கும், விரோதமாகப் பேசப்படும் அடையாளமாவதற்கும், இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்" (லூக்கா 2:34-35) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"இஸ்ரவேலில் அநேகர் விழுகிறதற்கும் எழுந்திருக்கிறதற்கும்" - இயேசு கிறிஸ்துவை இஸ்ரவேலர்கள் மறுதலிக்கும்போது அவர்களுக்கு அவர் தடைக்கல்லாக இருந்து அவர்கள் விழுவதற்கு காரணமாக இருப்பார் (ஏசா 8:14; மத் 21:42-44; அப் 4:11; ரோமர் 9:33; 1கொரி 1:23) அவர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்போது இஸ்ரவேலுக்கு இரட்சிப்பாக இருந்து அவர்கள் எழுந்திருப்பதற்கு உதவி புரிவார் (சக 12:10-13:1; ரோமர் 11:25-29; அப் 15:13-15)

"விரோதமாகப் பேசப்படும் அடையாளம்" - (யோவான் 2:1)

பட்டயம் (sword) - 'ρομφαία - rhomphaia - 4501

பெண்பால் பெயர்ச்சொல் - பட்டயம் - இந்த வார்த்தை இந்த வசனத்திலும் வெளி 1:16, வெளி 2:12,16, வெளி 6:8, வெளி 19:15,21 ஆகிய வசனங்களில் மட்டுமே பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்து பாடுகளை அனுபவிக்கும் போது மரியாளுடைய ஆத்துமா வியாகுலமடைந்தது.

8. அன்னாள் கர்த்தரைப் புகழ்ந்து பேசுகிறாள்

லூக்கா 2:36 ஆசேருடைய கோத்திரத்தாளும், பானுவேலின் குமாரத்தியுமாகிய அன்னாள் என்னும் ஒரு தீர்க்கதரிசி இருந்தாள்; அவள் கன்னிப்பிராயத்தில் விவாகமானது முதல் ஏழுவருஷம் புருஷனுடனே வாழ்ந்தவளும், அதிக வயது சென்றவளுமாயிருந்தாள்.

லூக்கா 2:37 ஏறக்குறைய எண்பத்துநாலு வயதுள்ள அந்த விதவை தேவாலயத்தை விட்டு நீங்காமல் இரவும் பகலும் உபவாசித்து ஜெபம்பண்ணி, ஆராதனை செய்து கொண்டிருந்தாள்.

"அன்னாள்" அன்னாள் என்னும் ஒரு தீர்க்கதரிசி - (யாத் 15:20)

9. இயேசுவின் குழந்தைப்பருவம் - (மத் 2)

லூக்கா 2:38 அவளும் அந்நேரத்திலே வந்து நின்று, கர்த்தரைப் புகழ்ந்து, எருசலேமிலே மீட்புண்டாகக் காத்திருந்த யாவருக்கும் அவரைக்குறித்துப் பேசினாள்.

லூக்கா 2:39 கர்த்தருடைய நியாயப் பிரமாணத்தின்படி சகலத்தையும் அவர்கள் செய்து முடித்தபின்பு, கலிலேயா நாட்டிலுள்ள தங்கள் ஊராகிய நாசரேத்துக்குத் திரும்பிப்போனார்கள்.

லூக்கா 2:40 பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பெலன்கொண்டு, ஞானத்தினால் நிறைந்தது; தேவனுடைய கிருபையும் அவர்மேல் இருந்தது.

லூக்கா 2:41 அவருடைய தாய் தகப்பன்மார் வருஷந்தோறும் பஸ்கா பண்டிகையிலே எருசலேமுக்குப் போவார்கள்.

லூக்கா 2:42 அவருக்குப் பன்னிரண்டு வயதானபோது அவர்கள் அந்தப் பண்டிகை முறைமையின்படி எருசலேமுக்குப்போய்,

லூக்கா 2:43 பண்டிகை நாட்கள் முடிந்து திரும்பி வருகிறபோது, பிள்ளையாகிய இயேசு எருசலேமிலே இருந்துவிட்டார்; இது அவருடைய தாயாருக்கும் யோசேப்புக்கும் தெரியாதிருந்தது.

லூக்கா 2:44 அவர் பிரயாணக்காரரின் கூட்டத்திலே இருப்பாரென்று அவர்கள் நினைத்து, ஒரு நாள் பிரயாணம் வந்து, உறவின் முறையாரிடத்திலும் அறிமுகமானவர்களிடத்திலும் அவரைத் தேடினார்கள்.

2 அதிகாரம்

லூக்கா 2:45 காணாததினாலே அவரைத் தேடிக்கொண்டே எருசலேமுக்குத் திரும்பிப் போனார்கள்

லூக்கா 2:46 மூன்றுநாளைக்குப் பின்பு, அவர் தேவாலயத்தில் போதகர் நடுவில் உட்கார்ந்திருக்கவும் அவர்கள் பேசுகிறதைக் கேட்கவும் அவர்களை வினாவவும் கண்டார்கள்

லூக்கா 2:47 அவர் பேசக்கேட்ட யாவரும் அவருடைய புத்தியையும் அவர் சொன்ன மாறுத்தரங்களையுங் குறித்துப் பிரமித்தார்கள்

லூக்கா 2:48 தாய் தகப்பன்மாரும் அவரைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள் அப்பொழுது அவருடைய தாயார் அவரை நோக்கி: மகனே! ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்? இதோ, உன் தகப்பனும் நானும் விசாரத்தோடே உன்னைத் தேடினோமே என்றாள்

லூக்கா 2:49 அதற்கு அவர்: நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா என்றார்

லூக்கா 2:50 தங்களுக்கு அவர் சொன்ன வார்த்தையை அவர்கள் உணர்ந்துகொள்ளவில்லை

தீர்க்கதரிசன எண் - 13

"காத்தரைப் புகழ்ந்து, எருசலேமிலே மீட்புண்டாகக் காத்திருந்த யாவருக்கும் அவரைக்குறித்துப் பேசினாள்" (லூக்கா 2:38) இருந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"கர்த்தருடைய நியாயப்பிரமாணம்" - மோசேயின் நியாயப்பிரமாணமும் கர்த்தருடைய நியாயப்பிரமாணமும் ஒன்றுதான்

"கலிலேயாநாட்டிலுள்ள தங்கள் ஊராகிய நாசரேத்துக்குத் திரும்பிப்போனார்கள்" - (மத் 2:13,14,16)

"பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பெலன்கொண்டு, ஞானத்தினால் நிறைந்தது: தேவனுடைய கிருபையும் அவர்மேல் இருந்தது" - இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சத்தியங்கள் இங்கே கூறப்பட்டிருக்கிறது அவையாவன

1 சரீரத்தில் வளர்ந்தார் (லூக்கா 2:40)

2 ஆவியிலே பெலன்கொண்டார் (லூக்கா 2:40)

3 ஞானத்தினால் நிறைந்திருந்தார் (லூக்கா 2:40)

4 தேவனுடைய கிருபையில் ஜீவித்தார் (லூக்கா 2:40)

5 உபதேசம் பண்ணும் வரம் அவரிடம் இருந்தது. (லூக்கா 2:47)

6 தமது ஊழியத்தைத் தெரிந்து வைத்திருந்தார் (லூக்கா 2:49)

7 எல்லோருக்கும் முன்மாதிரியாக இருந்தார் (லூக்கா 2:51)

8 ஞானத்தில் விருத்தியடைந்தார் (லூக்கா 2:52)

9 சரீரத்தில் வளர்ச்சி பெற்றார் (லூக்கா 2:52)

10 மனுஷரிடத்திலும், தேவனிடத்திலும் கிருபையில் வளர்ந்தார் (லூக்கா 2:52; சங் 119:97-104; ஏசா 50:4)

"பஸ்கா" - (யாத் 12; லேவி 23)

"அவருக்குப் பன்னிரண்டு வயதானபோது" - இந்த வயதில் யூதமார்க்கத்து ஆண்பிள்ளைகள் அனைவரும் நியாயப் பிரமாணத்தின் குமாரராக ஆவார்கள் யோசேப்பு மீட்பின் கிரயம் செலுத்தி, இந்தப் பிரமாணத்தை நிறைவேற்றுகிறார் (எண் 3:47; எண் 18:16) இதன்மூலமாக அவர் சட்டப்படி தந்தையாகிறார். அவருடைய குமாரன் தனக்குக் கீழ்ப்படியவேண்டும் என்று கோரும் உரிமை அவருக்கு வருகிறது (லூக்கா 2:48-51)

பிள்ளை (child) παις pais 3816

2 அதிகாரம்

ஆண்பால் பெயர்ச்சொல் - வேலைக்காரர் வேலைக்காரன் தாசன் ஊழியக்காரர் - நியாயப்பிரமாணத்தின் குமாரன் - தேவனுடைய ஊழியக்காரராகத் தமது ஜீவியத்தைத் துவக்குவதற்கு அவருக்குப் பக்குவம் வருகிறது.

"இது அவருடைய தாயாருக்கும் யோசேப்புக்கும் தெரியாதிருந்தது" - இயேசு கிறிஸ்துவின் பாலகப்பருவம் வேதாகமத்தில் அதிகமாக விளக்கப்படவில்லை. அவர் நியாயப்பிரமாணத்தின் குமாரனானார். இதைத் தெய்வீகச் சித்தமாக நாம் பார்க்க வேண்டும்.

"பிரயாணக்காரரின் கூட்டம்" - பிரயாணம் பண்ணும் நண்பர்களும் உறவினர்களும்.

"ஒரு நாள் பிரயாணம்" - ஒருநாளில் சுமாராக 18 முதல் 30 மைல்கள் வரையிலும் பிரயாணம் பண்ணுவார்கள். ஆனாலும் முதலாவது நாளில் 3 முதல் 8 மைல்கள் வரையிலும் மாத்திரமே பிரயாணம் பண்ணுவார்கள். தவறுதலாக எதையாவது மறந்து அந்த ஊரில் வைத்துவிட்டு வந்துவிட்டால் மறுநாளில் அதை ஒருவர் விரைவாகப்போய் எடுத்துக்கொண்டு வருவதற்கு ஏதுவாக, முதல்நாளில் சிறிது தூரம் மட்டுமே பிரயாணம் செய்வது வழக்கம். எருசலேமிலிருந்து பிரயாணம் பண்ணும்போது, முதலாவது தங்கும் இடம் பீரோத் (Beeroth, Bireh) என்னும் பட்டணமாகும். எருசலேமிற்கு வடக்கே 6 மைல் தூரத்தில் அமைந்துள்ளது.

"மூன்றுநாளைக்குப் பின்பு அவரைத் தேவாலயத்தில் கண்டார்கள்" - இதனபின்பு பிரயாணக்கூட்டத்தாரோடு சேர்ந்து பயணம் செய்வது கடினம். என்றாலும் அவர்கள் இயேசுவைக் கண்டார்கள். தேவாலயத்தில் பல இடங்களில் போதகர்கள் தங்கள் சீஷர்களுக்கு நியாயப்பிரமாணத்தை விளக்கிக் கூறுவார்கள். தேவாலய ஆராதனை முடிந்த பின்பு யாராவது போதகரிடம் நியாயப்பிரமாணத்திலிருந்து ஏதாவது சந்தேகம் கேட்டால் அந்தச் சந்தேகத்தை அவர்கள் நிவர்த்தி செய்வார்கள்.

"அவர் போதகர் நடுவில் உட்கார்ந்திருக்கவும் கண்டார்கள்" - போதகர் உபதேசம் பண்ணும்போது சீஷர்கள் அவரைச் சுற்றிலும் உட்கார்ந்திருப்பது வழக்கம். (மத் 5:1; மத் 13:1-2; மத் 15:29; மத் 24:3; லூக்கா 4:20; லூக்கா 5:3)

"அவர் பேசக்கேட்ட யாவரும் அவருடைய புத்தியையும் அவர் சொன்ன மாறுத்தரங்களையுங் குறித்துப் பிரமித்தார்கள்" - இயேசுவிற்குப் பன்னிரெண்டு வயதாகிறது. இந்த வயதிலேயே அவருக்குத் தெய்வீக வெளிப்பாடு அதிகமாக இருந்தது. இதுவரையிலும் இந்த வயதிலுள்ள யாரிடமிருந்தும் இப்படிப்பட்ட தெய்வீக ஞானத்தை யாரும் கேள்விப்பட்டதில்லை. (ஏசா 50:4) இயேசு சரீரப் பிரகாரமாக வளர்ச்சியடைந்தபோது பரிசுத்த ஆவியானவர் அவருடைய சிந்தையில் உபதேசம்பண்ணிக்கொண்டு வந்தார். இயேசு கிறிஸ்துவிற்கு மார்க்கப்போதகர்கள் உபதேசம் பண்ணிக்கொண்டு வந்தபோதிலும் ஞானத்திலும் அறிவிலும் அவர் தமது போதகர்களைவிடச் சிறந்தவராக விளங்கினார். (சங் 119:97-104)

"தாய் தகப்பனமாரும் அவரைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள்" - இயேசு கிறிஸ்து ஒருவேளை தமது வீட்டில் தெய்வீக ஞானத்தை வெளிப்படுத்தாமல் அமைதியாக இருந்திருக்கலாம். தேவாலயத்தில் அவருடைய புத்தியையும் அவர் சொன்ன மாறுத்தரங்களையும் இயேசுவின் பெற்றோர் பார்த்தபோது மிகவும் பிரமித்தார்கள்.

"உன் தகப்பன் சட்டப்பிரகாரம் யோசேப்பு இயேசுவின் தகப்பன். ஆனால் ஆவிக்குரிய பிரகாரம் பிதாவாகிய தேவனே இயேசுவின் தந்தை. மரியாளின் பேச்சைக் கேட்டவுடன் இயேசு கிறிஸ்து அதைத் திருத்தும் விதமாகவும் தமது தெய்வீக ஊழியத்தை மரியாளுக்கு ஞாபகப்படுத்தும் விதமாகவும் "என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியது என்று அறியீர்களா" என்று பதில் கூறுகிறார். (லூக்கா 2:49)

"நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா" சங் 40:5-11 ஆவது வசனங்களிலிருந்து இயேசு கிறிஸ்து முதன் முறையாக பேசுகிறார். இந்த வசனங்களிலிருந்து இயேசு பேசிய கடைசி வார்த்தை "முடிந்தது" என்பதாகும். அதாவது பிதாவின் ஊழியத்தைச் செய்வதற்காக இயேசு பூமிக்கு வந்தார். அந்த ஊழியத்தைச் செய்து முடித்துவிட்டார்.

2 அதிகாரம்

"தங்களுக்கு அவர் சொன்ன வார்த்தையை அவர்கள் உணர்ந்துகொள்ளவில்லை" - இயேசு கிறிஸ்து கன்னி மரியாளின் வயிற்றில் உற்பத்தியாகி இருக்கும்போதே தேவதூதன் மூலமாக யோசேப்பிற்கும், மரியாளுக்கும் அவரைப் பற்றிய சத்தியங்கள் கூறப்பட்டிருந்தது. ஆனாலும் அவர்கள் மற்றவர்களைப் போலவே தேவதூதருடைய பேச்சைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தையும் உணர்ந்து கொள்ளாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தை அவர்கள் விசுவாசிக்க வில்லை (மத் 1:18-25; லூக்கா 1:27-56)

10. இயேசு தமது பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நமக்கு ஒரு முன்மாதிரியைக் காண்பிக்கிறார்

லூக்கா 2:51 பின்பு அவர் அவர்களுடனே கூடப்போய், நாசரேத்தூரில் சேர்ந்து அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார். அவருடைய தாயார் இந்தச் சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்திலே வைத்துக்கொண்டாள்.

லூக்கா 2:52 இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும் மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்.

"அவர் அவர்களுடனே கூடப்போய், நாசரேத்தூரில் சேர்ந்தார்" நாசரேத்திலிருந்து எருசலேம் 1,500 அடி உயரத்தில் இருக்கிறது. (லூக்கா 2:42)

"அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார்" மேலும் பதினெட்டு வருஷங்கள் இயேசு கிறிஸ்து தமது பெற்றோருக்குக் கீழ்ப்படிந்திருந்தார் (லூக்கா 3:23)

"அவருடைய தாயார் இந்தச் சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்திலே வைத்துக்கொண்டாள்" - (லூக்கா 2:33,48)

"இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும் மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்" - இயேசு கிறிஸ்துவிடம் தெய்வீகத் தன்மை இருந்தது. அந்தத் தன்மையை இயேசு தமது மானிடத் தன்மைக்குள் கட்டுப்படுத்தி வைத்திருந்தார். அவர் பூமியிலே தமது மாம்சத்தில் இருந்த நாட்களில் அவர் தேவனாக இருந்தாலும் முழுவதுமாக மனுஷனாகவும் இருந்தார். இயேசு தமது சரீரத்தில் ஒரு பாவமும் செய்யவில்லை. மனுக்குலத்தார் அனைவருக்கும் ஒரு முன்மாதிரியாக இருக்கும் ஜீவியத்தை வாழ்ந்து காட்டினார். சாத்தானைத் தோற்கடிப்பதற்காக அவர் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டார் (லூக்கா 2:40,52; பிலி 2:5-11; எபி 2:10-18; எபி 4:14-16; 1பேதுரு 2:21; 1பேதுரு 4:1) இந்த வல்லமை அவருக்கு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தின் மூலமாகவே வந்தது. வேறு எந்த விதத்திலும் வரவில்லை (மத் 3:16-17; மத் 12:28; அப் 10:38; ஏசா 11:1-2; ஏசா 42:1-5; ஏசா 61:1-2; லூக்கா 4:16-21) எந்த மனுஷனும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளும் போது அவரும் தெய்வீக வல்லமையைப் பெற்றுக் கொள்வார். இயேசு கிறிஸ்து வாக்குத்தத்தம் பண்ணிய பிரகாரம் அவருடைய ஊழியத்தை வல்லமையோடு செய்வார் (மத் 18:18; மாற்கு 16:15-20; யோவான் 14:12) இயேசு தாமாக ஒரு கிரியையும் செய்யவில்லை என்று பல இடங்களில் வலியுறுத்திக் கூறியிருக்கிறார் (யோவான் 8:28) பரிசுத்த ஆவியானவரின் வரங்கள் இயேசு கிறிஸ்துவின் மூலமாக கிரியை நடப்பிக்கின்றன. விசுவாசிகளும், பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளும்போது வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற தெய்வீக வல்லமையைப் பெற்றுக் கொள்ளலாம். கர்த்தருக்காக வல்லமையோடு ஊழியம் செய்யலாம். (மத் 17:20-21; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; மாற்கு 16:17-20; லூக்கா 24:49; யோவான் 7:37-39; யோவான் 14:12; யோவான் 17:18; அப் 1:8)

3 அதிகாரம்

III. யோவான் ஸ்நானனின் ஊழியம் - மத் 3:1.

1. யோவான் ஸ்நானனின் காலமும் அழைப்பும்

லூக்கா 3:1 திபேரியுராயன் ராஜ்யபாரம் பண்ணின பதினைந்தாம் வருஷத்திலே பொந்தியுபிலாத்து யூதேயாவுக்குத் தேசாதிபதியாயும் ஏரோது காற்பங்கு தேசமாகிய கலிலேயாவுக்கு அதிபதியாயும், அவன் சகோதரனாகிய பிலிப்பு காற்பங்கு தேசமாகிய இத்துரேயாவுக்கும் திராகொனித்தி நாட்டிற்கும் அதிபதியாயும், லிசானியா காற்பங்கு தேசமாகிய அபிலேனேக்கு அதிபதியாயும்.

லூக்கா 3:2 அன்னாவும் காய்பாவும் பிரதான ஆசாரியராயும் இருந்த காலத்தில் வனாந்தரத்திலே சகரியாவின் குமாரனாகிய யோவானுக்கு தேவனுடைய வார்த்தை உண்டாயிற்று.

"திபேரியுராயன்" - கி.பி. 14 முதல் 37 வரையிலும் ராஜ்யபாரம் பண்ணினான்

"பிலாத்து" - யூதேயாவின் தேசாதிபதி. ரோமப்பேரரசினால் நியமிக்கப்பட்டவன் (மத் 27:2) கலிலேயரைக் கொலைசெய்தவன் (லூக்கா 13:1) இயேசுவை விசாரணை செய்து அவரைச் சிலுவையில் அறைவதற்கு ஒப்புக் கொடுத்தவன் (மத் 27; மாற்கு 15; லூக்கா 23; யோவான் 18-19; அப் 3:13; அப் 4:27; அப் 13:28; 1தீமோ 6:13); இயேசுவின் சரீரத்தை யோசேப்பிடம் கொடுத்தவன் (மத் 27:57-58; மாற்கு 15:43-45; லூக்கா 23:52; யோவான் 19:38)

"ஏரோது" - (மத் 2:3)

"காற்பங்கு தேசமாகிய கலிலேயா" (மத் 14:1)

"அன்னாவும் காய்பாவும் பிரதான ஆசாரியராயும் இருந்தகாலத்தில்" - சுழற்சி முறையில பிரதான ஆசாரியரின் பட்டம் ஆசாரியருக்குக் கிடைக்கும். காய்பா, அன்னாவின் மருமகன் அன்னாவின்கீழ் தேவாலயத்தைக் காய்பா ஆட்சி புரிந்தான்

"வனாந்தரத்திலே சகரியாவின் குமாரனாகிய யோவானுக்கு தேவனுடைய வார்த்தை உண்டாயிற்று" - தெய்வீக அழைப்பு வரும் விதம். (ஆதி 15:1; 1சாமு 15:10; 2சாமு 7:4; 2சாமு 24:11; 1இராஜா 6:11; 1இராஜா 13:20; 1இராஜா 16:1; 1இராஜா 17:2; 1இராஜா 18:1,31; 1இராஜா 19:9). யோவான் தீர்க்கதரிசிகளில் கடைசியும் பெரியவனுமாக இருந்தவன் (மத் 11:11)

2. யோவான் ஸ்நானனுடைய ஊழியத்தின் நோக்கம்

லூக்கா 3:3 அப்பொழுது, கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள் அவருக்குப் பாதைகளைச் செவ்வை பண்ணுங்கள் என்றும்

லூக்கா 3:4 பள்ளங்களெல்லாம் நிரப்பப்படும் சகல மலைகளும் குன்றுகளும் தாழ்த்தப்படும் கோணலானவைகள் செவ்வையாகும் கரடானவைகள் சமமாகும் என்றும்

லூக்கா 3:5 மாம்சமான யாவரும் தேவனுடைய இரட்சிப்பைக் காண்பார்கள் என்றும் வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டாகும் என்று ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தில் எழுதியிருக்கிறபிரகாரம்

லூக்கா 3:6 அவன் யோர்தான் நதிக்கு அருகான தேசமெங்கும் போய், பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக் கேற்ற ஞானஸ்நானத்தைக்குறித்துப் பிரசங்கித்தான்

"பிரசங்கித்தான்" - (மத் 3:1)

"பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக் கேற்ற ஞானஸ்நானம்" - (மத் 3:6)

3 அதிகாரம்

லூக்கா சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 1

"வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டாகும்" லூக்கா 3:4-6, ஏசா 40:3-5

3. யோவான் ஸ்நானன் ஜனங்களுக்கு கூறிய ஏழு அம்ச செய்தி

லூக்கா 3:7 அவன் தன்னிடத்தில் ஞானஸ்நானம் பெறும்படிக்குப் புறப்பட்டுவந்த திரளான ஜனங்களை நோக்கி: விரியன்பாம்புக் குட்டிகளே! வருங்கோபத்துக்குத் தப்பித்துக் கொள்ள உங்களுக்கு வகைகாட்டினவன் யார்?

லூக்கா 3:8 மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்; ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லத் தொடங்காதிருங்கள்; தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

லூக்கா 3:9 இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது; ஆகையால் நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் என்றான்.

லூக்கா 3:10 அப்பொழுது ஜனங்கள் அவனை நோக்கி: அப்படியானால் நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று கேட்டார்கள்.

லூக்கா 3:11 அவர்களுக்கு அவன் பிரதியுத்தரமாக: இரண்டு அங்கிகளை உடையவன் இல்லாதவனுக்குக் கொடுக்கக்கடவன்; ஆகாரத்தை உடையவனும் அப்படியே செய்யக்கடவன் என்றான்.

"விரியன்பாம்புக் குட்டிகளே" - விரியன்பாம்புகளைப் போலவே அவற்றின் குட்டிகளும் விஷம் மிகுந்தவை (மத் 3:7-9)

"மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்" - மனந்திரும்புங்கள் அதேசமயத்தில் உங்கள் மனந்திரும்புதலை நிரூபிக்கும் விதமாக உங்கள் ஜீவியத்தின் மூலமாக நல்ல சுபாவங்களை வெளிப்படுத்திக் காண்பியுங்கள்.

தீர்க்கதரிசன எண் - 14

"இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது ஆகையால் நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்" (லூக்கா 3:9) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. தேசம் உடனடியாக அழிக்கப்படும். கனிகொடாத அத்திமரம் சபிக்கப்பட்டவுடன் பட்டுப்போயிற்று. அதுபோலவே இதுவரையிலும் கனிகொடாத இஸ்ரவேல் தேசம் இப்போது கனிதரவேண்டும். இல்லையேல் அது அழிக்கப்படும். கி.பி 70 ஆம் ஆண்டில் இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. நீரோ மன்னன் காலத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் சிதறி ஓடிப்போனார்கள் (மத் 3:10).

"இரண்டு அங்கிகளையுடையவன் இல்லாதவனுக்குக் கொடுக்கக்கடவன். ஆகாரத்தை உடையவனும் அப்படியே செய்யக்கடவன்" - மனந்திரும்புவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று ஜனங்கள் யோவானிடம் கேட்கிறார்கள். அதற்கு யோவான் இவ்வாறு பதில் கூறுகிறான். ஜனங்கள் மத்தியில் விசுவாசிகள் நீதியையும் இரக்கத்தையும் காண்பிக்கவேண்டும். தன்னுடைய தேவைக்கு மேல் அதிகமாக வைத்திருக்கிறவன் தேவையுள்ளவர்களுக்கு மனப்பூர்வமாகக் கொடுத்து உதவி புரியவேண்டும். சோம்பேறிக்கு உதவி செய்து, அவனை மேலும் சோம்பேறி ஆக்க வேண்டாம். என்றாலும் தேவைப்படுவோருக்கு முகம் கோணாமல் உதவி புரிவது விசுவாசிகளின் கடமை. அதே சமயத்தில் விசுவாசி தன்னையும், தன்னுடைய குடும்பத்தையும் பராமரிக்க வேண்டும். குடும்பத்தைப் பராமரிக்காமல் இருப்பது தவறு. (1தீமோ 5:8)

3 அதிகாரம்

4. ஆயக்காரருக்கும் போர்ச்சேவகருக்கும் யோவான் ஸ்நானன் கூறிய நான்கு அம்ச செய்தி

லூக்கா 3:12 ஆயக்காரரும் ஞானஸ்நானம் பெறவந்து, அவனை நோக்கி, போதகரே, நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று கேட்டார்கள்

லூக்கா 3:13 அதற்கு அவன்: உங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறதற்கு அதிகமாய் ஒன்றும் வாங்காதிருங்கள் என்றான்

லூக்கா 3:14 போர்ச்சேவகரும் அவனை நோக்கி, நாங்கள் என்னசெய்யவேண்டும் என்று கேட்டார்கள் அதற்கு அவன் நீங்கள் ஒருவருக்கும் இடுக்கண் செய்யாமலும் பொய்யாய்க் குற்றஞ்சாட்டாமலும் உங்கள் சம்பளமே போதுமென்றும் இருங்கள் என்றான்

"போதகரே, நாங்கள் என்னசெய்யவேண்டும்" என்று ஆயக்காரர் யோவானிடம் கேட்கிறார்கள் அவர்கள் யோவானைப் போதகரே என்று அழைக்கிறார்கள் அவர்களிடம் யோவான் "உங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறதற்கு அதிகமாய் ஒன்றும் வாங்காதிருங்கள்" என்றான்

போதகர் (Master) - διδάσκαλος - didaskalos - 1320

ஆண்பால் பெயர்ச்சொல் - வேதபாரகன், வேதகர், போதகர், குரு (teacher, doctor) (லூக்கா 9:38)

"போர்ச்சேவகரும் அவனை நோக்கி: நாங்கள் என்னசெய்யவேண்டும் என்று கேட்டார்கள்" - யோவான் அவர்களுக்குக் கூறிய மூன்று காரியங்கள். அவையாவன

1 நீங்கள் ஒருவருக்கும் இடுக்கண்செய்யாமல் இருங்கள்

2 பொய்யாய்க் குற்றஞ்சாட்டாமல் இருங்கள்

3 உங்கள் சம்பளமே போதுமென்று இருங்கள்

5. இயேசு கிறிஸ்து பற்றி யோவான் ஸ்நானன் முன்குறித்துக் கூறுகிறான்

லூக்கா 3:15 யோவானைக்குறித்து, இவன்தான் கிறிஸ்துவோ என்று ஜனங்களெல்லாரும் எண்ணங்கொண்டு, தங்கள் இருதயங்களில் யோசனையாயிருக்கையில்,

லூக்கா 3:16 யோவான் எல்லாருக்கும் பிரதியுத்தரமாக: நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன், என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்

லூக்கா 3:17 தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, கோதுமையைத் தமது களஞ்சியத்தில் சேர்த்து, பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றான்

லூக்கா 3:18 வேறு அநேக புத்திமதிகளையும் அவன் ஜனங்களுக்குச் சொல்லிப் பிரசங்கித்தான்

"யோவானைக்குறித்து, இவன்தான் கிறிஸ்துவோ என்று ஜனங்களெல்லாரும் எண்ணங்கொண்டு, தங்கள் இருதயங்களில் யோசனையாயிருக்கையில்" - ஜனங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. அதிகந்த குழப்பத்தில் இருக்கிறார்கள் யோவான் கிறிஸ்துவாக இருப்பாரோ என்று தங்களுக்குள் யோசனை பண்ணுகிறார்கள் யூதர்கள் தங்களை விடுதலை பண்ணுவதற்காக யெகோவா தேவன் ஒரு மேசியாவை அனுப்புவார் என்று அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் யோவான்தான் அந்த மேசியாவோ என்று அவர்களுக்குள் சந்தேகம் வந்து விட்டது.

லூக்கா – தொகுப்புரை

3 அதிகாரம்

"எல்லாருக்கும்" - (லூக்கா 2:1; மத் 3:6)

தீர்க்கதரிசன எண் - 15

"நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்" - (லூக்கா 3:16-17) லூக்கா 3:16 நிறைவேறிற்று. நிறைவேறிக் கொண்டிருக்கிறது. லூக்கா 3:17 இந்தக் காலத்தின் முடிவிலும், வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பின்போதும் நிறைவேறும். (மத் 13:40-50, மத் 25:41,46 வெளி 20:11-15)

"நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்" - மத் 3:6,11

"அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல" - மாற்கு 1:7

பரிசுத்த ஆவியானவருக்குக் கூறப்பட்டிருக்கும் அடையாளங்கள்

1 அக்கினி (Fire) - வைராக்கியமாய் பட்சிக்கும் வல்லமை **(zeal and refining power)** (சங் 104:4; ஏசா 4:3,4; மல 3:1-4; மத் 3:11 லூக்கா 3:16 யோவான் 2:17 அப் 2:3)

2 புறா (Dove) - சாந்தம், தீங்குசெய்யாமை, ஆறுதலளிக்கும் வல்லமை **(gentleness, harmlessness, and comforting power)** (லூக்கா 3:22; யோவான் 1:32,33)

3 தண்ணீர் (Water) - ஜீவனைக் கொடுக்கும் அளவில்லாத வல்லமை **(life giving and infinite power)** (யோவான் 7:37-39)

4 காற்று (Wind) - உயிர்த்தெழும் வல்லமை **(resurrection power)** (எசே 37:9, யோவான் 3:8; அப் 2:2)

5 எண்ணெய் (Oil) - பிரதிஷ்டை பண்ணி அபிஷேகிக்கும் வல்லமை **(consecration and anointing power)** (சங் 45:7; ஏசா 61:1-3, லூக்கா 4:16-21; எபி 1:9 யாக் 5:14-16)

6 முத்திரை (Seal) - மீட்டுக் காத்துக் கொள்ளும் வல்லமை **(redemptive and keeping power)** (எபே 1:13 எபே 4:30; 1பேதுரு 1:5)

7 அச்சாரம் (Earnest) - சொந்தமாக்கிக் கொள்ள உறுதி கொடுக்கும் வல்லமை **(ownership and guarantee power)** (2கொரி 1:22; எபே 1:13-14)

8 மழை, மாரி (Rain) - ஜீவனைக் கொடுத்து உயிர்ப்பிக்கும் வல்லமை **(life-giving and quickening power)** (சங் 1:3; ஓசி 6:3 ஓசி 10:12; யோவே 2:23-32; சக 10:1 யாக் 5:7)

9 பனி (Dew) - புதுப்பிக்கும் வல்லமை **(refreshing and invigorating power)** (சங் 72:6; ஓசி 14:5)

10 வரம் (Gift) - சந்தோஷம், கிருபை, விடுதலையளிக்கும் வல்லமை **(joyful, gracious, and liberating power)** (அப் 2:38-39, அப் 4:31-33, 2கொரி 3:17,18, எபி 1:9)

"தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, கோதுமையைத் தமது களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார்" - தானியத்தைத் திறந்த வெளியில் காற்றில் தூவுவார்கள். அறுத்த கதிர்களை விலங்குகளை விட்டு மிதிக்க விடுவார்கள். சில சமயங்களில் இதற்கு எந்திரங்களையும் பயன்படுத்துவார்கள் (உபா 25:4 ஏசா 28:27)

3 அதிகாரம்

தானியத்தில் சேர்ந்திருக்கும் உமியைச் சுளகினால் புடைப்பார்கள் உமி காற்றில பறக்கும் தானியம் தரையில கீழே விழும். அந்தத் தானியத்தைக் கூட்டிச்சேர்ப்பார்கள் உமியைத் தீயிட்டு எரிப்பார்கள் மனுஷருக்கு வரும் நியாயத்தீர்ப்பை விளக்குவதற்கு இந்த உவமை பல இடங்களில பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (யோபு 21:17-20; சங் 1:4, ஏசா 29:5; ஏசா 41:16; தானி 2:35)

"அவன் ஜனங்களுக்குச் சொல்லிப் பிரசங்கித்தான் - யோவான் பிரசங்கித்த உபதேசங்களை மத் 3:1 ஆவது வசனத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கத்தில் காணலாம்.

6. **ஏரோது யோவான் ஸ்நானனைக் கைது பண்ணுகிறான்** - (மத் 11:2, மாற்கு 6:14; லூக் 9:7)

லூக்கா 3:19 காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோது தன சகோதரனான பிலிப்புவின மனைவி ஏரோதியாளினிமித்தமாகவும் தான செய்த மற்றப பொல்லாங்குகளினிமித்த மாகவும் யோவானாலே கடிந்து கொள்ளப்பட்ட போது.

லூக்கா 3:20 தான செய்த மற்றெல்லாப பொல்லாங்குகளும் தவிர, யோவானையும் காவலில அடைத்துவைத்தான

"ஏரோது" - (மத் 2:3)

"காற்பங்கு" - (மத் 14:1)

"ஏரோதியாள்" - (மத் 14:3)

தான் செய்த மற்றெல்லாப பொல்லாங்குகளும் தவிர, யோவானையும் காவலில் அடைத்துவைத்து தனனுடைய பொல்லாங்குகளைக் கூட்டினான். கிரேக்க பாஷை புதிய ஏற்பாட்டில் ஏரோது தன் பொல்லாங்குகளைக் கூட்டினான என்பதற்கு "புரோஸ்டிதேமி" (prostithemi) என்னும் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது மருத்துவர்கள் பயன்படுத்தும் சொல் மருந்து போடுதல அல்லது வைத்தியம் பார்த்தல் என்பது இதற்குப் பொருள் லூக்காவிலும் அப்போஸ்தலரிலும் இந்தச் சொல 13 இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டின் மற்ற புஸ்தகங்களில 5 இடங்களில் மட்டுமே இந்த வார்த்தையைக் காணகிறோம்.

கூட்டு (Added) - προστίθημι - **prostitheemi** - 4369

விளைச்சொல் - கூட்டு, கூடக்கொடு. அதிகம் கொடு, வர்த்திக்கப் பண்ணு

"யோவானைக் காவலில் அடைத்து வைத்தான்" - திருச்சபை வரலாற்று ஆசிரியர் யோசபஸ் (Josephus) இதைப பற்றி எழுதும்போது ஏரோது யோவானை மக்கெரஸ் (Macherus) கோட்டையில் அடைத்து வைத்ததாக எழுதுகிறார் சவக்கடலுக்கு வடக்கில் அரபியாவின் எல்லையில இந்தக் கோட்டை அமைந்திருக்கிறது

IV. **நமது ஊழியத்திற்காக இயேசு கிறிஸ்துவின் இறுதி ஆயத்தம்** - (மத் 3:13; மாற்கு 1:9; யோவான் 1:31)

1. **தண்ணீர் ஞானஸ்நானம்** - (மத் 3:13 மாற்கு 1:9)

லூக்கா 3:21 ஜனங்களெல்லாரும் ஞானஸ்நானம் பெற்றபோது இயேசுவும் ஞானஸ்நானம் பெற்று. ஜெபம் பண்ணுகையில, வானம் திறக்கப்பட்டது.

"ஜனங்களெல்லாரும் ஞானஸ்நானம் பெற்றார்கள்" - (லூக்கா 2:1)

"இயேசுவும் ஞானஸ்நானம் பெற்றார்" - பாவங்களைக் கழுவுவதற்காகவோ அல்லது பாவங்களை மன்னிப்பதற்காகவோ யாரும் ஞானஸ்நானம் பெறுவதில்லை ஏனென்றால் ஒருபாவமும் செய்யாத இயேசு கிறிஸ்துவும் ஞானஸ்நானம் பெற்றார் (1பேதுரு 2:21-23 கிறிஸ்துவின மரணம் அடக்கம்பண்ணுதல், உயிர்த்தெழுதல ஆகியவற்றிற்கு அடையாளமாகவே விசுவாசிகள் ஞானஸ்நானம் பெறுகிறார்கள் (1பேதுரு 3:21) இயேசு கிறிஸ்து தமது மரணம் தாம் அடக்கம்பண்ணப்படுதல தமது உயிர்த்தெழுதல ஆகியவற்றிற்கு அடையாளமாகவே ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார் (யோவான் 1:31

3 அதிகாரம்

"இயேசு ஜெபம்பண்ணுகையில" - லூக்கா தான் எழுதிய சுவிசேஷத்தில இயேசு கிறிஸ்து ஏழு இடங்களில ஜெபம் பண்ணியதாக குறிப்பிட்டிருக்கிறார் அவற்றுள் இதுவும் ஒன்று. (லூக்கா 3:21 லூக்கா 5:16; லூக்கா 6:12; லூக்கா 9:18,28; லூக்கா 11:1 லூக்கா 22:41-44)

2. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் – (மத் 3:16; மாற்கு 1:10 யோவான் 3:34

லூக்கா 3:22 பரிசுத்த ஆவியானவர் ரூபங்கொண்டு புறாவைப்போல அவர்மேல் இறங்கினார் வானத்திலிருந்து ஒரு சத்தமும் உண்டாகி: நீர் என்னுடைய நேச குமாரன், உம்மில பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது.

"பரிசுத்த ஆவியானவர் ரூபங்கொண்டு புறாவைப்போல அவர்மேல இறங்கினார வானத்திலிருந்து ஒரு சத்தமும் உண்டாகி: நீர் என்னுடைய நேச குமாரன், உம்மில பிரியமாயிருக்கிறேன" என்று உரைத்தது திரித்துவத்தைத் தெளிவாக விளக்கும் வாக்கியம். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவா ஆகிய மூவருமே வெவ்வேறு ஆளத்துவப் பணபுடையவாகள இந்த வசனத்திலிருந்து நாம் விளங்கிக் கொள்ள வேண்டிய சத்தியங்கள

1 பிதா வானத்திலிருந்து பேசுகிறார

2 குமாரன பூமியிலிருந்து வானத்திலிருக்கும் பிதாவிடம் ஜெபிக்கிறார

3 பரிசுத்த ஆவியானவர் பரலோகத்திலுள்ள பிதாவிடமிருந்து இறங்கி வந்து, பூமியிலுள்ள குமாரனை அபிஷேகம் பண்ணுவதற்காகவும். வல்லமையினால நிரப்புவதற்காகவும் வருகிறார (ஏசா 11:1 ஏசா 42:1-5, ஏசா 48:16 ஏசா 61:1 லூக்கா 4:16-18 அப 10:38, 1யோவான் 5:7)

"நீர் என்னுடைய நேச குமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன்" - இந்த வசனம் மத் 3:17-இல வேறு விதமாகக் கூறப்பட்டிருக்கிறது. பிதா இவ்விரண்டு வாக்கியங்களையும் கூறியிருக்கலாம். அல்லது பிதா கூறியதன் கருத்தை இவ்விரண்டு சுவிசேஷ ஆசிரியர்களும் தங்களுடைய இலக்கிய நடையில் எழுதியிருக்கலாம் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்படும்போது என்பது சில சமயங்களில் கருத்துக்கள் மட்டும் ஏவப்பட்டிருக்கும். வார்த்தைகள் ஏவப்பட்டிருக்காது. ஆனாலும் பயன்படுத்திய வார்த்தைகளில முரண்பாடு எதுவும் இருக்காது. பரிசுத்த ஆவியானவர் தங்களுக்கு எவ்விருக்கிற கருத்துக்களை வேதாகம ஆசிரியர்கள் தங்களுடைய இலக்கிய நடையிலேயே எழுதியிருக்கிறார்கள்

3. மரியாள், யோசேப்பு ஆகியோரின் வம்சவரலாறு – (மத் 1:1)

(1) இயேசுவிலிருந்து தாவீது வரையிலும்

லூக்கா 3:23 அப்பொழுது இயேசு ஏறக்குறைய முப்பது வயதுள்ளவரானார் அவர யோசேப்பின குமாரனென்று எண்ணப்பட்டார் அந்த யோசேப்பு ஏலியின் குமாரன்

லூக்கா 3:24 ஏலி மாத்தாத்தின குமாரன; மாத்தாத் லேவியின குமாரன; லேவி மெல்கியின குமாரன் மெல்கி யன்னாவின குமாரன யன்னா யோசேப்பின குமாரன்

லூக்கா 3:25 யோசேப்பு மத்தத்தியாவின குமாரன, மத்தத்தியா ஆமோசின குமாரன; ஆமோஸ் நாகூமின குமாரன்; நாகூம் எஸ்லியின குமாரன்; எஸ்லி நங்காயின் குமாரன்

லூக்கா 3:26 நங்காய் மாகாத்தின் குமாரன மாகாத் மத்தத்தியாவின் குமாரன மத்தத்தியா சேமேயின் குமாரன சேமேய யோசேப்பின் குமாரன யோசேப்பு யூதாவின் குமாரன் யூதா யோவன்னாவின குமாரன்

3 அதிகாரம்

லூக்கா 3:27 யோவன்னா ரேசாவின் குமாரன்; ரேசா சொரொபாபேலின் குமாரன்; சொரொபாபேல் சலாத்தியேலின் குமாரன்; சலாத்தியேல் நேரியின் குமாரன்.

லூக்கா 3:28 நேரி மெல்கியின் குமாரன்; மெல்கி அத்தியின் குமாரன்; அத்தி கோசாமின் குமாரன்; கோசாம் எலமோதாமின் குமாரன்; எலமோதாம் ஏரின் குமாரன்; ஏர் யோசேயின் குமாரன்.

லூக்கா 3:29 யோசே எலியேசரின் குமாரன்; எலியேசர் [illegible] குமாரன்; யோரீம் மாத்தாத்தின் குமாரன்; மாத்தாத் லேவியின் குமாரன்.

லூக்கா 3:30 லேவி சிமியோனின் குமாரன்; சிமியோன் யூதாவின் குமாரன்; யூதா யோசேப்பின் குமாரன்; யோசேப்பு யோனானின் குமாரன்; யோனான் எலியாக்கீமின் குமாரன்.

லூக்கா 3:31 எலியாக்கீம் மெலெயாவின் குமாரன்; மெலெயா மயினானின் குமாரன்; மயினான் மாத்தாத்தாவின் குமாரன்; மாத்தாத்தா நாத்தானின் குமாரன்; நாத்தான் தாவீதின் குமாரன்.

"அப்பொழுது இயேசு ஏறக்குறைய முப்பது வயதுள்ளவரானார்" இயேசுவுக்கு முப்பது வயது ஆயிற்று. நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்உள்ள ஆசாரியர்கள் இந்த வயதில்தான் ஆசாரிய ஊழியத்தைச் செய்ய ஆரம்பிப்பார்கள். ஆசாரியர்கள் கிறிஸ்துவின் அடையாளமாக இருக்கிறார்கள். (எண் 4:23; 1நாளா 23:3)

"யோசேப்பின் குமாரனென்று எண்ணப்பட்டார்" - இயேசு சட்டப்படியாக யோசேப்பின் குமாரன். ஆனால் உண்மையில் அவர் தேவனுடைய ஒரேபேறான குமாரன். மரியாளின் வயிற்றில் உற்பத்தியானவர் (மத் 1:18-25; லூக்கா 1:35) யோசேப்பு யாக்கோபின் குமாரன். இந்த உறவு அவர்களுடைய சரீரப்பிரகாரமான உறவுகளினால் வருகிறது. (மத் 1:16)

"யோசேப்பின் குமாரன்" வம்சவரலாற்றை எழுதும்போது பெண்களின் பெயரைக் குறிப்பிடுவதில்லை. இந்த வம்சவரலாற்றில் ஏலி மரியாளின் இடத்திற்கு வருகிறார். வம்சவரலாறு எழுதப்படுகின்ற நியமனத்தின்படி ஆண்களுடைய வம்சவரலாறுகளே எழுதப்படும். இந்த அதிகாரத்தில் யோசேப்பின் வம்சவரலாறு சொரொபாபேல் வரையிலும் எழுதப்படுகிறது. (லூக்கா 3:23-27) இவனுடைய பெயர் பழைய ஏற்பாட்டில் காணப்படவில்லை. இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு ஒருசில தலைமுறைகளுக்கு முந்தினவனாக இவன் இருக்கக்கூடும்.

"சொரொபாபேல் சலாத்தியேலின் குமாரன்" - சலாத்தியேலின் இயற்கையான குமாரன் (எஸ்றா 3:8; எஸ்றா 5:2; நெகே 12:1; ஆகாய் 1:12-14; ஆகாய் 2:2,23; 1நாளா 3:17) -இல் சொரொபாபேலின் தகப்பனாக பெதாயா குறிப்பிடப்பட்டிருக்கிறான். இந்த வம்ச வரலாற்றில் இருக்கும் குழப்பத்தை ஒருசில வியாக்கியானங்கள் மூலமாக தெளிவுபடுத்தலாம். அவையாவன:

1. சலாத்தியேலும் பெதாயாவும் ஒரே நபராக இருக்கலாம்.

2. அவர்கள் இருவரும் சகோதரராக இருக்கலாம். மத் 1:12-இல் கூறப்பட்டிருக்கிற பிரகாரம் சொரொபாபேல் சலாத்தியேலின் உண்மையான குமாரனாக இருக்கலாம். அவனுடைய தகப்பன் மரித்தபோது இவன் பெதாயாவின் சட்டப்படியான குமாரனாக வந்திருக்கலாம். (உபா 25:5-6)

3. சொரொபாபேல் பெதாயாவின் மருமகனாக இருக்கலாம். யோசேப்பு ஏலியின் மருமகனாக இருப்பதுபோல. (லூக்கா 3:23) சலாத்தியேல் நேரியின் மருமகனாக இருக்கலாம். (லூக்கா 3:27) அவன் எகொனியாவின் குமாரன் (மத் 1:12; 1நாளா 3:17)

4. பழைய ஏற்பாட்டு பெயர்கள் புதிய ஏற்பாட்டில் சில இடங்களில் வித்தியாசமாக எழுதப்பட்டிருக்கின்றன. ரூத் 4:18-22; ஆதி 5; ஆதி 11; ஆதி 38 ஆகிய வசனங்களிலுள்ள பெயர்களை லூக் 3:32-38 ஆகிய வசனங்களிலுள்ள பெயர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கவும்.

3 அதிகாரம்

5. பெண்கள் சில சமயங்களில் திருமணமான பின்பு தங்களுடைய கணவன்மார்களின் பெயர்களைச் சேர்த்துக் கொள்வதற்குப் பதிலாக தங்கள் பெற்றோரின் குடும்ப பெயரையே சேர்த்துக் கொள்வார்கள் (எஸ்றா 2:61)

இயேசுவின் வம்சவரலாற்றில் ஏதாவது குழப்பம் இருக்குமென்றால் அது வேதபாரகருக்கும், பரிசேயருக்கும் நிச்சயமாகத் தெரிந்திருக்கும். அதை வைத்துக் கொண்டு அவர்கள் ஒரு பெரிய பிரச்சனையையே எழுப்பியிருப்பார்கள்

"சலாத்தியேல்" - இவன் தாவீதின் வம்சத்திலும், நாத்தானின் வம்சத்திலும் வருகிறான். நேரியின் குமாரத்தியை சலாத்தியேல் திருமணம் செய்து நாத்தானின் வம்சத்தில் வருகிறான். சாலொமோனின் குமாரனாக தாவீதின் வம்சத்தில் வருகிறான். நேரிக்கு ஆண் குழந்தை ஏதுவும் பிறக்கவில்லை. இவ்வாறாக தாவீதின் இரண்டு கிளைகள் சொரொபாபேலோடு இணைகின்றன. இயேசு கிறிஸ்து தாவீதின் குடும்பத்தில் வாரிசாக வருகிறார்

"நாத்தான்" - சாலொமோனின் மூத்த சகோதரன் (1நாளா 3:5) சாலொமோனைப் போல பழைய ஏற்பாடு வசனங்களில் இவனுடைய பெயர் அதிகமாகக் குறிப்பிடப்படவில்லை

(2) தாவீதிலிருந்து ஆபிரகாம் வரையிலும்

லூக்கா 3:32 தாவீது ஈசாயின் குமாரன், ஈசாய் ஓபேதின் குமாரன் ஓபேத் போவாசின் குமாரன் போவாஸ் சல்மோனின் குமாரன் சல்மோன் நகசோனின் குமாரன்

லூக்கா 3.33 நகசோன் அம்மினதாபின் குமாரன்; அம்மினதாப் ஆராமின் குமாரன் ஆராம் எஸ்ரோமின் குமாரன் எஸ்ரோம் பாரேசின் குமாரன்; பாரேஸ் யூதாவின் குமாரன், யூதா யாக்கோபின் குமாரன்

லூக்கா 3.34 யாக்கோபு ஈசாக்கின் குமாரன், ஈசாக்கு ஆபிரகாமின் குமாரன்; ஆபிரகாம் தேராவின் குமாரன்; தேரா நாகோரின் குமாரன்

"தாவீது ஈசாயின் குமாரன்; ஈசாய் ஓபேதின் குமாரன்; ஓபேத் போவாசின் குமாரன்" - (லூக்கா 3.32-38, ரூத் 4:18-22, ஆதி 5; ஆதி 11; ஆதி 25; ஆதி 29 ஆதி 30; ஆதி 38)

(3) ஆபிரகாமிலிருந்து ஆதாம் வரையிலும்

லூக்கா 3.35 நாகோர் சேரூக்கின் குமாரன்; சேரூக் ரெகூவின் குமாரன் ரெகூ பேலேக்கின் குமாரன்; பேலேக் ஏபேரின் குமாரன்; ஏபேர் சாலாவின் குமாரன்

லூக்கா 3.36 சாலா காயினானின் குமாரன் காயினான் அர்பகசாத்தின் குமாரன்; அர்பகசாத் சேமின் குமாரன் சேம் நோவாவின் குமாரன் நோவா லாமேக்கின் குமாரன்

லூக்கா 3.37 லாமேக்கு மெத்தூசலாவின் குமாரன் மெத்தூசலா ஏனோக்கின் குமாரன் ஏனோக்கு யாரேதின் குமாரன் யாரேத் மகலாலெயேலின் குமாரன் மகலாலெயேல் கேனானின் குமாரன் கேனான் ஏனோசின் குமாரன்

லூக்கா 3.38 ஏனோஸ் சேத்தின் குமாரன்; சேத் ஆதாமின் குமாரன் ஆதாம் தேவனால் உண்டானவன்

"சாலா காயினானின் குமாரன்" - இங்கு மறுபடியும் வம்சவரலாறு மருமகன் பெயர் மூலமாக வருகிறது. ஆதி 11:12 16 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற சாலா என்பவனே காயினானாக இருக்கலாம்.

"ஆதாம் தேவனால் உண்டானவன்" தேவன் ஆதாமைச் சிருஷ்டித்தார் மற்றவர்கள் எல்லோருமே மனுஷருக்குப் பிறந்தவர்கள் மனுஷருக்கும், விலங்குகளுக்கும் தங்கள் தங்கள் ஜாதிகளை விருத்தி பண்ணும் அதிகாரத்தைத் தேவன் கொடுத்தார் (ஆதி 1:20-28) எரேமியா, இஸ்ரேல் ஆகியோர் கர்ப்பத்தில் உற்பத்தியாவதைக் குறித்து தேவன் குறிப்பிட்டிருக்கிறார் (எரே 1:5, ஏசா 43:1; ஏசா 44:2

லூக்கா – தொகுப்புரை

3 அதிகாரம்

தேவனுடைய பிரமாணத்தின் பிரகாரமாக ஜீவராசிகள் தங்களுடைய இனத்தை உற்பத்தி பண்ணுகின்றன ஆதியிலே தேவன் ஆதாமைச் சிருஷ்டித்தார் நாம் நம்முடைய பெற்றோருக்குப் பிறந்திருக்கிறோம். நம்முடைய மூதாதையர் யாரென்று ஆராய்ந்து பார்ப்போம் என்றால் அது ஆதாமில் போய் முடியும் இதுவே கர்த்தருடைய உற்பத்திப் பிரமாணம்.

4 அதிகாரம்

4. இயேசுவை சாத்தான் சோதிக்கிறான் – (மத் 4:1)

லூக்கா 4:1 இயேசு பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவராய் யோர்தானை விட்டுத் திரும்பி ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டு,

லூக்கா 4:2 நாற்பதுநாள் பிசாசினாலே சோதிக்கப்பட்டார். அந்த நாட்களில் அவர் ஒன்றும் புசியாதிருந்தார்; அந்த நாட்கள் முடிந்தபின்பு அவருக்குப் பசியுண்டாயிற்று.

லூக்கா 4:3 அப்பொழுது பிசாசு அவரை நோக்கி: நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல் அப்பமாகும்படி சொல்லும் என்றான்.

லூக்கா 4:4 அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்.

லூக்கா 4:5 பின்பு பிசாசு அவரை உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் ஒரு நிமிஷத்திலே அவருக்குக் காண்பித்து:

லூக்கா 4:6 இவைகள் எல்லாவற்றின்மேலுமுள்ள அதிகாரத்தையும் இவைகளின் மகிமையையும் உமக்குத் தருவேன், இவைகள் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது, எனக்கு இஷ்டமானவனுக்கு இவைகளைக் கொடுக்கிறேன்.

லூக்கா 4:7 நீர் என்னைப் பணிந்துகொண்டால் எல்லாம் உம்முடையதாகும் என்று சொன்னான்.

லூக்கா 4:8 இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: எனக்குப் பின்னாகப்போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்.

லூக்கா 4:9 அப்பொழுது அவன் அவரை எருசலேமுக்குக் கொண்டுபோய், தேவாலயத்து உப்பரிகையின்மேல் அவரை நிறுத்தி: நீர் தேவனுடைய குமாரனேயானால், இங்கேயிருந்து தாழக்குதியும்.

லூக்கா 4:10 ஏனெனில், உம்மைக் காக்கும்படிக்குத் தம்முடைய தூதர்களுக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவார் என்றும்,

லூக்கா 4:11 உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டுபோவார்கள் என்றும், எழுதியிருக்கிறது என்று சொன்னான்.

லூக்கா 4:12 அதற்கு இயேசு: உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்று சொல்லியிருக்கிறதே என்றார்.

லூக்கா 4:13 பிசாசானவன் சோதனையெல்லாம் முடித்தபின்பு, சிலகாலம் அவரை விட்டு விலகிப்போனான்.

"இயேசு பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவராய்" ஆவியினால் நிறைந்தவர் என்னும் வாக்கியம் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைக் குறிக்கும். பரிசுத்த ஆவியானவர் மனுஷரைப் பலவேறு அளவுகளில் அபிஷேகம் பண்ணுகிறார். இயேசு கிறிஸ்துவைப் பொருத்தவரையில் ஆவியானவர் அவரை அளவிடமுடியாத அளவிற்கு அல்லது பூரண நிறைவாக அபிஷேகம் பண்ணினார் (யோவான் 3:34; அப் 10:38) பழைய ஏற்பாட்டுக் காலங்களில் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தின் அளவு ஒரு வரையறைக்குட்பட்டிருந்தது. ஒருகுறிப்பிட்ட வரத்தினால், குறிப்பிட்ட அளவில் குறிப்பிட்ட ஆற்றலில் பரிசுத்த ஆவியானவர் தனி நபர்களைத் தெரிந்தெடுத்து, அவர்களை நிரப்பினார் (யாத் 28:3; யாத் 31:3, யாத் 35:31, உபா 34:9; மீகா 3:8; லூக்கா 1:15-17,41,67

4 அதிகாரம்

பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின்பு பரிசுத்த ஆவியானவர் மனுஷரை நிறைத்தார் (அப் 2:4, அப் 4:8,31, அப் 6:3-8, அப் 7:55, அப் 9:17, அப் 11:24, அப் 13:9,52). "தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் பரிசுத்த ஆவியானவர் மனுஷரை நிறைத்தார்" (எபே 3:19, ரோமர் 15:29). பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகத்தின் பலவேறு அளவுகள் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. (எண் 11:16-25, 2இராஜா 2:9, லூக்கா 1:17, யோவான் 3:34)

"நாற்பதுநாள் பிசாசினாலே சோதிக்கப்பட்டார்" - இயேசு கிறிஸ்துவைப் பிசாசு நாற்பதுநாள் சோதித்தான். இந்த நாற்பது நாள் காலத்தில் அவருக்குப் பல சோதனைகளைக் கொடுத்திருப்பான். (மத் 4:1-11)

"இந்தக் கல் அப்பமாகும்படி சொல்லும்" - யூதேயா தேசத்திலுள்ள மலைகளில் சிதறிக்கிடக்கும் கற்கள் பார்ப்பதற்கு அப்பங்களைப் போலவே இருக்கும். (மத் 7:9)

"மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" - உபா 8:3 ஆவது வசனம் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"எனக்கு இஷ்டமானவனுக்கு இவைகளைக் கொடுக்கிறேன்" சாத்தான் இந்த உலகத்தின் அதிபதி என்றாலும் இந்த உலகத்தை ஆளும் அதிகாரம் அவனுக்கு இல்லை. தனக்கு அதிகாரம் இருப்பதுபோன்று ஏமாற்றுகிறான். (யோவான் 12:31; 2கொரி 4:4, வெளி 13:2,7, எபே 2:1-3) தேவனே சர்வ வல்லமையுள்ளவர். தேவனுடைய வல்லமையைச் சாத்தானால் தனக்கு இஷ்டமானவனுக்குக் கொடுக்க முடியாது. (தானி 2:20-22; தானி 4:17,25, 32-36; தானி 5:23-31)

"எனக்குப் பின்னாகப்போ சாத்தானே" - தேவவசனத்தில் இந்த வாக்கியம் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (மத் 6:24, யாக் 4:7, 1பேதுரு 5:8,9, எபே 6:10-18)

"உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக" - உபா 6:13; உபா 10:20 ஆகிய வசனங்கள் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"தேவாலயத்து உப்பரிகை" - கெதரோன் பள்ளத்தாக்கிலிருந்து 700 அடி உயரத்தில் அமைந்திருக்கிறது.

"உம்மைக் காக்கும்படிக்குத் தம்முடைய தூதர்களுக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவார்" - சங் 91:11-12 வசனங்களைச் சாத்தான் தவறுதலாக மேற்கோளிட்டுக் கூறுகிறான்.

காத்துக்கொள் (keep) - διαφυλάσσω - diaphylassoo - 1314

வினைச்சொல் - காத்துக்கொள் (thoroughly protect) - இந்தக் கிரேக்கச் சொல் இந்த வசனத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் வாக்குத்தத்தத்தினால் நாம் கர்த்தரைச் சோதிக்கக் கூடாது. பிசாசானவன் இயேசு கிறிஸ்துவைத் தற்கொலை செய்து கொள்வதற்குத் தூண்டினான். தேவனுடைய வாக்குத்தத்தத்தைச் சோதிப்பதற்காக யாரும் தற்கொலை பண்ண முயற்சி பண்ணக்கூடாது.

"உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக" - உபா 6:16 ஆவது வசனம் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"பிசாசானவன் சோதனையெல்லாம் முடித்தான்" - எல்லா சோதனைகளும் முடிந்தது. அதன் பின்பு சில காலம் மட்டும் அவரை விட்டு விலகிப்போனான். இதன் பொருள் என்னவெனில் சில காலம் கழித்து அவன் இயேசுவை மறுபடியும் சோதிக்க வந்தான். வித்தியாசமான சூழ்நிலைகளில், வித்தியாசமான சோதனைகளினால் சாத்தான் இயேசுவைச் சோதித்திருக்கலாம். (மத் 4:11)

4 அதிகாரம்

V. இயேசுவின் ஊழியமும் உபதேசமும் - (மத் 4:12, மாற்கு 1:14; யோவான் 1:35)

1. இயேசு கலிலேயாவில் தமது ஊழியத்தை ஆரம்பிக்கிறார் - (மத் 4:12; மாற்கு 1:14)

லூக்கா 4:14 பின்பு இயேசு ஆவியானவருடைய பலத்தினாலே கலிலேயாவுக்குத் திரும்பிப்போனார்; அவருடைய கீர்த்தி சுற்றிலுமிருக்கிற தேசமெங்கும் பரம்பிற்று.

"பின்பு இயேசு ஆவியானவருடைய பலத்தினாலே கலிலேயாவுக்குத் திரும்பிப் போனார்" - இயேசு கிறிஸ்து நாற்பது நாட்களாக பரிசுத்த ஆவியினாலே தீவிரமாய் வழிநடத்தப் பட்டார். அதே பரிசுத்த ஆவியானவருடைய பலத்தினாலே அவர் கலிலேயாவுக்குத் திரும்பிப் போனார் (லூக்கா 4:1)

"கலிலேயா" - கலிலேயாவின் இருளில் இயேசு கிறிஸ்து வெளிச்சம் தரும் தமது ஊழியத்தைச் செய்யப்போகிறார். இது அவருடைய ஊழியத்தைக் குறித்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதல் (ஏசா 9:1-2; மத் 4:12-25)

கீர்த்தி (fame) - φήμη - pheemee - 5345

பெண்பால் பெயர்சொல் - சங்கதி, கீர்த்தி (report, spread of news) (மத் 9:26; லூக்கா 4:14) - இந்த வார்த்தையும், லூக்கா 4:37-இல் பயன்படுத்தப்பட்டிருக்கிற கிரேக்கச் சொல்லும் ஒன்றல்ல. இது ஆரவாரம் அல்லது கடலின் கொந்தளிப்பின் சத்தம் என்று பொருள் தரும்.

2. தாம் வளர்ந்த ஊரில் இயேசுவின் முதலாவது பிரசங்கம் - (மாற்கு 6:1-6)

லூக்கா 4:15 அவர்களுடைய ஜெப ஆலயங்களில் அவர் உபதேசித்து எல்லாராலும் புகழப்பட்டார்.

லூக்கா 4:16 தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு அவர் வந்து, தம்முடைய வழக்கத்தின்படியே ஓய்வுநாளில் ஜெப ஆலயத்திலே பிரவேசித்து, வாசிக்க எழுந்து நின்றார்.

லூக்கா 4:17 அப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகம் அவரிடத்தில் கொடுக்கப்பட்டது. அவர் புஸ்தகத்தை விரித்தபோது:

லூக்கா 4:18 கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப் பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும்,

லூக்கா 4:19 கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார் என்று எழுதியிருக்கிற இடத்தை அவர் கண்டு,

லூக்கா 4:20 வாசித்து, புஸ்தகத்தைச் சுருட்டி, பணிவிடைக்காரனிடத்தில் கொடுத்து, உட்கார்ந்தார். ஜெபஆலயத்திலுள்ள எல்லாருடைய கண்களும் அவர்மேல் நோக்கமாயிருந்தது.

லூக்கா 4:21 அப்பொழுது அவர் அவர்களோடே பேசத்தொடங்கி: உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றையத்தினம் நிறைவேறிற்று என்றார்.

லூக்கா 4:22 எல்லாரும் அவருக்கு நற்சாட்சி கொடுத்து, அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டு: இவன் யோசேப்பின் குமாரன் அல்லவா என்றார்கள்.

லூக்கா 4:23 அவர் அவர்களை நோக்கி: வைத்தியனே, உன்னைத்தானே குணமாக்கிக்கொள் என்கிற பழமொழியைச் சொல்லி, நாங்கள் கேள்விப்பட்டபடி கப்பர்நகூமில் உன்னால் செய்யப்பட்ட கிரியைகள் எவைகளோ அவைகளை உன் ஊராகிய இவ்விடத்திலும் செய் என்று நீங்கள் என்னுடன் சொல்லுவீர்கள் என்பது நிச்சயம்.

லூக்கா – தொகுப்புரை

4 அதிகாரம்

லூக்கா 4:24 ஆனாலும் தீர்க்கதரிசி ஒருவனும் தன் ஊரிலே அங்கீகரிக்கப்படமாட்டான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்

லூக்கா 4:25 அன்றியும் எலியாவின் நாட்களிலே மூன்று வருஷமும் ஆறுமாதமும் வானம் அடைபட்டு தேசமெங்கும் மிகுந்த பஞ்சம் உண்டாயிருந்தபோது இஸ்ரவேலருக்குள் அநேகம் விதவைகள் இருந்தார்கள்

லூக்கா 4:26 ஆயினும் எலியா சீதோன் நாட்டிலுள்ள சரெப்தா ஊரிலிருந்த ஒரு விதவையினிடத்திற்கு அனுப்பப்பட்டானேயல்லாமல் மற்றொருத்தியினிடத்திற்கும் அனுப்பப்படவில்லை.

லூக்கா 4:27 அல்லாமலும் எலிசா தீர்க்கதரிசியின் காலத்திலே இஸ்ரவேலருக்குள்ளே அநேகம் குஷ்டரோகிகள் இருந்தார்கள் ஆயினும் சீரியா தேசத்தானாகிய நாகமானேயல்லாமல் அவர்களில் வேறொருவனும் சுத்தமாக்கப்படவில்லை என்று சத்தியத்தின்படியே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்

"ஜெபாலயங்கள்" - (மாற்கு 1:21)

"தம்முடைய வழக்கத்தின்படியே ஓய்வுநாளில் ஜெப ஆலயத்திலே பிரவேசித்தார்" தமது ஊரில் உள்ள ஜெபாலயத்தில் இயேசு கிறிஸ்துவின் அந்தஸ்தையும், ஸ்தானத்தையும் இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. ஒவ்வொரு ஓய்வுநாளின்போதும் வேதவாக்கியத்தை ஏழு பேர் வாசிக்க வேண்டும் ஒரு ஆசாரியன் ஒரு லேவியன், ஐந்து இஸ்ரவேல ஜனங்கள் ஆகியோர் வேதவாக்கியங்களை வாசிப்பார்கள்

"வாசிக்க எழுந்து நின்றார்" - வேதவாக்கியங்களை வாசிக்கிறவர்கள் வாசிக்கும்போதும் ஜெபிக்கும்போதும் எழுந்து நிற்க வேண்டும். இது ஜெபாலயத்து வழக்கம் தேவனுக்கும் அவருடைய வார்த்தைக்கும் கொடுக்கப்படும் பயபக்தியையும், மரியாதையையும் எழுந்துநிற்பதன் மூலமாக வெளிப்படுத்துகிறார்கள் (இராஜா 8:14,22,55; நெகே 8:4-7; நெகே 9:2-4, மாற்கு 11:25; லூக்கா 4:16; லூக்கா 18:11)

"ஏசாயா தீர்க்கதரிசி" - ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தைப் பற்றி தாராளவாத வேதவல்லுநர்களில் சிலர் வித்தியாசமாக வியாக்கியானம் பண்ணுகிறார்கள் ஏசா 1-39 ஆகிய அதிகாரங்களை மட்டும் ஏசாயா எழுதினார் என்றும் ஏசா 40-66 ஆகிய அதிகாரங்களைச் சிறையிருப்பிற்குப் பின்பு வேறொருவர் எழுதினார் என்றும் இவர்கள் வியாக்கியானம் கூறுகிறார்கள் புதிய ஏற்பாட்டில் ஏசாயாவின் பெயர் 21 இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது 12 இடங்களில் ஏசாயா தீர்க்கதரிசன புஸ்தகத்தில் உள்ள வசனங்கள் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது

"புஸ்தகம் - பெரிய தீர்க்கதரிசிகளின் புஸ்தகங்களெல்லாம் ஒரே புஸ்தகமாக கோர்க்கப்பட்டிருக்கும். 12 சிறிய தீர்க்கதரிசிகளின் புஸ்தகங்கள் தனியாக வேறொரு புஸ்தகமாகக் கோர்க்கப்பட்டிருக்கும்.

லூக்கா சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 2

"கர்த்தருடைய ஆவியானவர் என் மேலிருக்கிறார்" (ஏசா 61:1-2; லூக்கா 4:18-19)

"என்மேலிருக்கிறார்" பரிசுத்த ஆவியானவர் ஒருவர்மேல் இருக்கிறார் என்றால் அவரை ஒரு விசேஷித்த கிரியை நடப்பிப்பதற்கு வழிநடத்துகிறார் என்று பொருள் (எண் 11:17,29; எண் 24:2; நியா 3:10; நியா 6:34, நியா 11:29, நியா 14:6,19; நியா 15:14; 1சாமு 10:6,10, 1சாமு 11:6; 1சாமு 16:13; 1சாமு 19:20,23; 2நாளா 15:1; 2நாளா 24:20) பரிசுத்த ஆவியானவர் எல்லாமேசியாக்களையும் ... அவர்கள் எல்லோரையுமே பரிசுத்த ஆவியானவர் பயன்படுத்தியிருக்கிறார்

லூக்கா - தொகுப்புரை

4 அதிகாரம்

"தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார் இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்க என்னை அனுப்பினார்" - மேசியாவின் இரண்டு அம்ச ஊழியம்

1 சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறார்

2 குணமாக்குவதற்கு அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறார்

பிரசங்கிக்க வேண்டிய காரியங்கள்

1 தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும்.

2 பாவத்திலும், வியாதியிலும், மரணத்திலும் அடிமைகளாக இருப்பவர்களை விடுதலை பண்ண வேண்டும். (அப் 10:38; எபே 4:8-10; எபி 2:14-15)

3 கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்த வேண்டும். யூபிலி வருஷத்தில் எல்லோருக்கும் விடுதலை பிரசித்தப்படுத்தப்படும் (லேவி 25:8-13). ஒருவன் இயேசு கிறிஸ்துவின் பாவநிவாரண பலியை ஏற்றுக் கொள்ளும்போது அவனுடைய பாவம், சாபம், வியாதி ஆகியவற்றிலிருந்து விடுதலை பெறுகிறான்.

குணமாக்க வேண்டியவர்கள்

1 இருதயம், ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகியவற்றில் நருங்குண்டவர்கள் (அப் 10:38)

2 சரீரம், ஆவி, ஆத்துமா ஆகியவற்றில் குருடராக இருக்கிறவர்கள் (மத் 4:16; லூக்கா 1:79; லூக்கா 2:32; யோவான் 1:4-9; யோவான் 3:16-21; யோவான் 8:32; அப் 26:18; கொலோ 1:13)

3 நொறுங்குண்டவர்களை விடுதலையாக்க வேண்டும் (ஏசா 58:6-14; மாற்கு 5:1-20; லூக்கா 13:16)

"வாசித்து, புஸ்தகத்தைச் சுருட்டினார்" - இயேசு கிறிஸ்துவின் காலத்தில் வேதாகம புஸ்தகம் சுருளாகச் சுருட்டப்பட்டிருக்கும். அதை வாசிக்கும்போது சுருளை அவிழ்த்து திறந்து வாசிக்க வேண்டும். வாசித்த பின்பு, சுருளை மறுபடியும் சுருட்ட வேண்டும்.

"பணிவிடைக்காரன்" - ஜெபாலயங்களில் பணிவிடைக்காரன் என்பவன் மிகவும் தாழ்மையான உத்தியோகம் பார்க்கிறவன். எல்லோருக்கும் கடைசி அந்தஸ்தில் இருக்கிறவன்.

"உட்கார்ந்தார்" - (லூக்கா 2:46)

"உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றையதினம் நிறைவேறிற்று" - இயேசு கிறிஸ்துவின் வார்த்தை எல்லோரையும் ஆச்சரியப்படுத்திற்று. இயேசு கிறிஸ்து இந்த ஜனங்களோடு கூடத் முப்பது வருஷங்களாக ஜீவித்து வந்திருக்கிறார். அந்த நாட்களில் அவர் இப்படிப்பட்ட வார்த்தை எதுவும் கூறியதில்லை. முதன் முறையாக இயேசு கிறிஸ்து தமது தெய்வீக அதிகாரத்தை வெளிப்படுத்துகிறார்.

"வைத்தியனே உன்னைத்தானே குணமாக்கிக்கொள்" (ஆதி 50:2)

"தீர்க்கதரிசி ஒருவனும் தன் ஊரிலே அங்கீகரிக்கப்படமாட்டான்" - தீர்க்கதரிசிகளுடைய வரலாற்றில் இந்த வாக்கியம் சத்தியமானது என்று பல சமயங்களில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. (லூக்கா 6:50; எபி 11:4-40)

"எலியா" - (1 இராஜா 17:1-18:46; யாக் 5:17)

"எலிசா" - (2 இராஜா 5:1-27)

3. இயேசுவின் பிரசங்கத்தினால் ஏற்பட்ட விளைவு - இயேசுவைக் கொல்வதற்கு முயற்சி - (மத் 2:16; 26:3)

லூக்கா 4:28 ஜெப ஆலயத்திலிருந்த எல்லாரும் இவைகளைக் கேட்டபொழுது, கோபமூண்டு,

4 அதிகாரம்

லூக்கா 4.29 எழுந்திருந்து, அவரை ஊருக்குப் புறம்பே தள்ளி, தங்கள் ஊர் கட்டப்பட்டிருந்த செங்குத்தான மலையின் சிகரத்திலிருந்து அவரைத் தலைகீழாய்த் தள்ளிவிடும்படிக்கு அவ்விடத்திற்குக் கொண்டு போனார்கள்

லூக்கா 4.30 அவரோ அவர்கள் நடுவினின்று கடந்துபோய்விட்டார்

மனுஷரை நிரப்பிய காரியங்கள்

1 கொடுமை (Violence) (ஆதி 6:11 மீகா 6:12

2 ஆகாரம் (Food) (யாத் 16:12 மத் 14:20

3 ஆவி (Spirit) (யாத் 28.3 லூக்கா 1:15-67)

4. ஞானம் (Wisdom) (யாத் 35.35, லூக்கா 2:40, லூக்கா 4:1)

5 நன்மை (Good things) (சங் 104:28)

6 நிந்தனை, இகழ்ச்சி (Contempt and scorn) (சங் 123.3-4)

7 துன்மார்க்க யோசனைகள் (Wicked devices) நீதி 1:31

8 தீமை (Mischief) நீதி 12:21)

9 தன் வழிகள் (Own ways) (நீதி 14:14

10 அவனவன் உதடுகளின் விளைவு (Own words) (நீதி 18:20)

11 சலிப்பு (Indignation) (எரே 15:17; அப 5:17)

12 கசப்பு (Bitterness) (புல 3:15)

13 நிந்தை (Reproach) (புல 3.30

14 குடி(வெறி) (Drink) (எசே 23.33, ஆகாய் 1:6)

15 இலச்சை (Shame) (ஆப 2:16

16 கோபம் (Wrath) (லூக்கா 4:28 எஸ் 3.5)

17 பயம் (Fear) (லூக்கா 5:26

18 மூர்க்கவெறி (Madness) (லூக்கா 6:11)

19 துக்கம் (Sorrow) (யோவான் 16:6

20 ஆச்சரியம் (Wonder) (அப் 3:10

21 பொறாமை (Envy) (அப் 13:45

22. சந்தோஷம் (Joy) (அப் 13:52 2தீமோ 1:4)

23. கலகம் / அவமானம் (Confusion) (அப 19:29; யோபு 10:15)

24. அநியாயம் (Unrighteousness) (ரோமர் 1:29)

25. அறிவு (Knowledge) (ரோமர் 15:14

26. ஆறுதல் (Comfort) (2கொரி 7.4

27 நீதி (Righteousness) (பிலி 1:11

28 சகாயம் (Company) (ரோமர் 15.24

29 வாய்ச்சாலகம் (Talk) (யோபு 11:2

30 சஞ்சலம் (Trouble) (யோபு 14:1, சங் 88.3)

31 பாவங்கள் (Sins) (யோபு 20:11, ரோமர் 1:29-32)

32 சபிப்பு - கசப்பு (Cursing bitterness) (ரோமர் 3:14

33. பரிதானம் (Bribes) (சங் 26:10

லூக்கா – தொகுப்புரை

4 அதிகாரம்

34. வேதனை (Heaviness) (சங் 69:20)

35. உக்கிரம் (Divine fury) (எரே 6:11)

36. பலம் (Power) (மீகா 3:8; அப் 6:8)

37. வஞ்சகம், கொடுமை (Lies and robbery) (நாகூம் 3:1)

38. கொள்ளை - அநீதம் (Extortion-excess) (மத் 23:25)

39. மரித்தவர்களின் எலும்புகள் (Dead men's bones) (மத் 23:27)

40. மாயம், அக்கிரமம் (Hypocrisy-iniquity) (மத் 23:28)

41. குஷ்டரோகம் (Leprosy) (லூக்கா 5:12)

42. கொள்ளை, பொல்லாப்பு (Ravening-wickedness) (லூக்கா 11:39)

43. கிருபை, சத்தியம் (Grace and truth) (யோவான் 1:14)

44. விசுவாசம் (Faith) (அப் 6:3-8)

45. நற்கிரியைகள் (Good works) (அப் 9:36)

46. கபடம், பொல்லாப்பு (Subtlety-mischief) (அப் 13:10)

47. நற்குணம் (Goodness) (ரோமர் 15:14)

48. வியாகுலம் (Heaviness) (பிலி 2:26)

49. வெளிச்சம் (Light) (லூக்கா 11:34-36)

50. இருள் (Darkness) (லூக்கா 11:34-36)

கோபத்திற்குக் காரணங்கள்

1. இயேசு கிறிஸ்து அதே ஊரைச் சேர்ந்தவர் சிறு வயது முதல் இயேசுவை அவர்களுக்கு நன்றாக தெரியும். யூதர்கள் எலியாவையும், எலிசாவையும் மிகப்பெரிய தீர்க்கதரிசிகளாக அங்கீகரித்து அவர்கள்மீது மரியாதை வைத்திருந்தனர். இயேசு கிறிஸ்துவோ அந்தத் தீர்க்கதரிசிகளோடு தம்மை ஒப்பிட்டுக் கூறுகிறார்.

2. தேவனுடைய ஆசீர்வாதம் புறஜாதியாருக்கும் உரியது என்று இயேசு கூறுகிறார். இதை யூதர்கள் அங்கீகரிப்பதில்லை. தேவனுடைய ஆசீர்வாதங்களை யூதர்கள் புறஜாதியாரோடு பகிர்ந்து கொள்வதில்லை. தேவ ஆசீர்வாதம் பெறுவதற்கு புறஜாதியார் தகுதியற்றவர்கள் என்று நினைத்தார்கள்.

"செங்குத்தான மலையின் சிகரம்" - நாசரேத்து, மலையின்மீது கட்டப்பட்ட பட்டணம். அந்த மலையின் சிகரத்திலிருந்து அவனைத் தலைகீழாய்த் தள்ளிவிடும்படிக்கு அவ்விடத்திற்குக் கொண்டுபோனார்கள்.

"அவரோ அவர்கள் நடுவினின்று கடந்துபோய்விட்டார்" - லூக்கா 24:16-இல் நாம் வாசிக்கிற பிரகாரம் அவர்களுடைய கண்களிலிருந்து அவர் மறைந்திருக்க வேண்டும். அல்லது யோவான் 8:59-இல் நாம் வாசிக்கிற பிரகாரமாக இயேசுவைக் காணாதபடிக்கு அவர்களுடைய கண்கள் மூடப்பட்டிருக்க வேண்டும்.

4. இயேசு கப்பர்நகூமை தமது வாழிய ஸ்தலமாக ஆக்குகிறார் - (மத் 4:13; மாற்கு 1:21)

லூக்கா 4:31 பின்பு அவர் கலிலேயாவிலுள்ள கப்பர்நகூம் பட்டணத்துக்கு வந்து, ஓய்வுநாட்களில் ஜனங்களுக்குப் போதகம் பண்ணினார்.

லூக்கா 4:32 அவருடைய வசனம் அதிகாரமுள்ளதாயிருந்தபடியால் அவருடைய போதகத்தைக் குறித்து அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

"கப்பர்நகூம்" - (மத் 11:23)

4 அதிகாரம்

"அவருடைய வசனம் அதிகாரமுள்ளதாயிருந்தது" - இயேசு கிறிஸ்துவின் உபதேசம் தெய்வீக அதிகாரமும் அங்கீகாரமும் உள்ளது. (மத் 7:28-29)

5. இயேசு அசுத்த ஆவியை துரத்துகிறார் - (மாற்கு 1:23)

லூக்கா 4:33 ஜெபஆலயத்திலே அசுத்த ஆவிபிடித்திருந்த ஒரு மனுஷன் இருந்தான்

லூக்கா 4:34 அவன்: ஐயோ! நசரேயனாகிய இயேசுவே, எங்களுக்கும் உமக்கும் என்ன? எங்களைக் கெடுக்கவா வந்தீர்? உம்மை இன்னார் என்று அறிவேன்; நீர் தேவனுடைய பரிசுத்தர் என்று உரத்த சத்தமிட்டான்.

லூக்கா 4:35 அதற்கு இயேசு: நீ பேசாமல் இவனை விட்டுப் புறப்பட்டுப்போ என்று அதை அதட்டினார்; அப்பொழுது பிசாசு அவனை ஜனங்களின் நடுவே விழத்தள்ளி, அவனுக்கு ஒரு சேதமும் செய்யாமல், அவனை விட்டுப் போய்விட்டது.

லூக்கா 4:36 எல்லாரும் ஆச்சரியப்பட்டு: இது என்ன வார்த்தையோ! அதிகாரத்தோடும் வல்லமையோடும் அசுத்த ஆவிகளுக்குக் கட்டளையிடுகிறார், அவைகள் புறப்பட்டுப் போகிறதே என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள்.

லூக்கா 4:37 அவருடைய கீர்த்தி சுற்றிலுமிருந்த நாடுகளிலுள்ள இடங்களிலெல்லாம் பிரசித்தமாயிற்று.

"ஜெபஆலயத்திலே அசுத்த ஆவிபிடித்திருந்த ஒரு மனுஷன் இருந்தான்" - அசுத்த என்னும் தமிழ்ச்சொல் "அகதர்டோஸ்" (akathartos) என்னும் கிரேக்கச் சொல்லின் மொழிபெயர்ப்பு. 23 இடங்களில் இந்தச் சொல் பிசாசுகளைக் குறிக்கிறது. (மத் 10:1; மத் 12:43; மாற்கு 1:23-27; மாற்கு 3:11,30; மாற்கு 5:2-13; மாற்கு 6:7; மாற்கு 7:25; மாற்கு 9:25; லூக்கா 4:33-36; லூக்கா 6:18; லூக்கா 8:29; லூக்கா 9:42; லூக்கா 11:24; அப் 5:16; அப் 8:7; வெளி 16:13; வெளி 18:2) இரண்டு இடங்களில் மனுஷரைக் குறிக்கிறது (1கொரி 7:14; எபே 5:5)

அசுத்த (unclean) - ἀκάθαρτος - akathartos - 169

பொருள் - அசுத்த (impure, lewd, or foul)

(அ) சடங்காச்சாரத்தின் படி தீட்டும் அசுத்தமாகவும் இருப்பது

(ஆ) ஆவிக்குரிய அசுத்தம் எபே. 5:5

"ஐயோ! நசரேயனாகிய இயேசுவே, எங்களுக்கும் உமக்கும் என்ன? எங்களைக் கெடுக்கவா வந்தீர்? உம்மை இன்னார் என்று அறிவேன்; நீர் தேவனுடைய பரிசுத்தர் என்று உரத்த சத்தமிட்டான்" இயேசு கிறிஸ்து தேவனுடைய பரிசுத்தமானவர் என்பது பிசாசுகளுக்கு நன்றாகத் தெரியும். பிசாசுகளின் முடிவும் அவைகளுக்கு நன்றாகத் தெரியும். தேவனுடைய நித்திய திட்டம் தங்களுடைய பாடுகள் ஆகியவையும் பிசாசுகளுக்கு மறைவாக இருக்கவில்லை (மத் 8:29; மத் 25:41; லூக்கா 4:34; லூக்கா 8:28)

"நீ பேசாமல் இவனை விட்டுப் புறப்பட்டுப்போ" பிசாசுகள் பேசக்கூடியவைகள். தாங்கள் விரும்பும் சரீரத்திற்குள் விரும்பிய நேரத்திற்கு வரும். தாங்கள் விரும்பிய நேரத்தில் அவற்றிலிருந்து புறப்பட்டுச் செல்லும். பிசாசுகள் மனுஷரைப் பாடாய்ப்பாடு படுத்தும். ஆகையினால்தான், இயேசு கிறிஸ்து இந்தப் பிசாசைப் பேசாமல் இருக்குமாறு அதட்டி அவனை விட்டுப் போகுமாறு கட்டளையிடுகிறார்.

4 அதிகாரம்

விழத்தள்ளு (thrown) - ῥίπτω - rhiptoo - 4496

வினைச்சொல் - சிதறு, எறி, விழத்தள்ளு, வை, தள்ளு (a medical word for convulsions) (மத் 9:36; மத் 15:30; மத் 27:5; லூக்கா 4:35; லூக்கா 17:2; அப 22:23; அப 27:19,29)

சேதஞ்செய் (hurt) - βλάπτω - blaptoo - 984

வினைச்சொல் - சேதப்படுத்து, சேதஞ்செய் (a medical word meaning opposed to benefit) மாற்கு 16:18

"அவருடைய கீர்த்தி சுற்றிலுமிருந்த நாடுகளிலுள்ள இடங்களிலெல்லாம் பிரசித்தமாயிற்று" - இயேசு கிறிஸ்துவினுடைய கீர்த்தி கடல் முழக்கம்போல சுற்றிலுமிருந்த இடங்களுக்குப் பரவிற்று. இதன் கிரேக்கச் சொல் "எக்கோஸ்" (echos). இந்த வசனத்திலும் அப 2:2 ஆகிய வசனத்திலும் எபிரெயரிலும் மட்டுமே இச்சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு எதிரொலி, முழக்கம், பேரோசை என்றும் பொருள் கூறலாம்.

கீர்த்தி (fame) - ἦχος - eechos - 2279

ஆண்பால் பெயர்ச்சொல் - கீர்த்தி, முழக்கம்

6. பேதுருவின் மாமியை சொஸ்தமாக்குகிறார் - (மத் 8:14; மாற்கு 1:29; 1கொரி 9:5)

லூக்கா 4:38 பின்பு அவர் ஜெப ஆலயத்தை விட்டுப் புறப்பட்டு, சீமோன் வீட்டில் பிரவேசித்தார். சீமோனுடைய மாமி கடும் ஜுரமாய்க் கிடந்தாள்; அவளுக்காக அவரை வேண்டிக் கொண்டார்கள்.

லூக்கா 4:39 அவர் அவளிடத்தில் குனிந்து நின்று, ஜுரம் நீங்கும்படி கட்டளையிட்டார், அது அவளை விட்டு நீங்கிற்று; உடனே அவள் எழுந்திருந்து, அவர்களுக்குப் பணிவிடை செய்தாள்.

"சீமோனுடைய மாமி கடும் ஜுரமாய்க் கிடந்தாள்" - ஜுரத்தினால் மிகுந்த பாடுகளை அனுபவித்துக் கொண்டிருந்தாள் (அப 28:8)

"அவர் அவளிடத்தில் குனிந்து நின்று, ஜுரம் நீங்கும்படி கட்டளையிட்டார்" - ஜுரம் வந்தவர்களுக்கு அருகில் சென்றாலே நமக்கும் ஜுரம் வந்துவிடும் என்று ஜனங்கள் பயப்படுவார்கள். வியாதிகள் தொற்றிப்பரவக் கூடியது என்பதால் முன்னெச்சரிக்கையாக சற்று விலகியே இருப்பார்கள். ஆனால் இயேசு கிறிஸ்துவோ அவளிடத்தில் குனிந்து நின்றார் என்று வாசிக்கிறோம். தமக்கும் ஜுரம் வந்துவிடும் என்னும் பயம் இயேசுவிற்கு இல்லை. எல்லா வியாதிகளின் மீதும் இயேசு சர்வ அதிகாரம் உடையவர். சாத்தானை ஜெயித்தவர்.

7. பிசாசுகளைத் துரத்துகிறார் - அநேகரை சொஸ்தமாக்குகிறார் - (மத் 8:16; மாற்கு 1:32)

லூக்கா 4:40 சூரியன் அஸ்தமித்தபோது, ஜனங்களெல்லாரும் தங்களுக்குள்ளே பலபல வியாதிகளால் வருத்தப்பட்டவர்களை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்; அவர்கள் ஒவ்வொருவர்மேலும் அவர் தமது கைகளை வைத்து, அவர்களைச் சொஸ்தமாக்கினார்.

லூக்கா 4:41 பிசாசுகளும்: நீர் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று சத்தமிட்டு, அநேகரைவிட்டுப் புறப்பட்டது. அவரைக் கிறிஸ்து என்று பிசாசுகள் அறிந்திருந்தபடியால் அவர் அவைகளைப் பேசவொட்டாமல் அதட்டினார்.

"சூரியன் அஸ்தமித்தபோது, ஜனங்களெல்லாரும் தங்களுக்குள்ளே பலபல வியாதிகளால் வருத்தப்பட்டவர்களை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்" - சூரியன் அஸ்தமிக்கும்போது, ஓய்வுநாள் முடிவு பெறுகிறது. ஓய்வுநாளில் யூதர்கள் ஒரு வேலையும் செய்யமாட்டார்கள்.

4 அதிகாரம்

வியாதியஸ்தரைச் சொஸ்தமாக்குவதையும் ஒருவேலையாக அவர்கள் கருதினார்கள் ஆகையினால் ஓய்வுநாளின் பகல் பொழுதில் தங்களிடமுள்ள வியாதியஸ்தரை இயேசு கிறிஸ்துவிடம் கொண்டு வராமல் சூரியன் அஸ்தமித்த பின்பு கொண்டு வருகிறார்கள் (லூக்கா 13:14)

"அவர்கள் ஒவ்வொருவர்மேலும் அவர் தம்முடைய கைகளை வைத்து அவர்களைச் சொஸ்தமாக்கினார்" - (மத் 8.3 மாற்கு 16:18

"அவர்கள் ஒவ்வொருவர்மேலும்" - (மத் 13:58

"அவரைக் கிறிஸ்து என்று பிசாசுகள் அறிந்திருந்தபடியால் அவர் அவைகளைப் பேசவொட்டாமல் அதட்டினார்" - பிசாசுகளுக்கு இயேசுவே மேசியா அல்லது கிறிஸ்து என்பது தெரியும். ஆனால் இயேசு அவைகளைப் பேச அனுமதிக்கவில்லை அவைகளின் சாட்சியை இயேசு ஏற்றுக் கொள்ளவில்லை பிசாசுகளைச் சாட்சி சொல்ல அனுமதித்தால் தாம் பிசாசோடு சேர்ந்துகொண்டு, கூட்டாகக் கிரியை செய்வதாக பரிசேயர்கள் தம்மீது குற்றம் சுமத்துவார்கள் என்பது இயேசுவிற்கு நன்றாகத் தெரியும். ஆகையினால் தமது ஊழியத்தையும், உபதேசத்தையும் சாத்தான் அவமதித்து, அழித்துவிடாதவாறு மிகவும் எச்சரிக்கையாக இருந்து, அவைகளைப் பேசவிடாமல் அதட்டினார்

8. கலிலேயாவிற்கு இயேசுவின் இரண்டாவது பிரயாணம் - (மத் 4:23, மத் 9.35, மாற்கு 1:38)

லூக்கா 4:42 உதயமானபோது, அவர் புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப் போனார் திரளான ஜனங்கள் அவரைத் தேடி அவரிடத்தில் வந்து, தங்களை விட்டுப்போகாதபடிக்கு அவரை நிறுத்திக்கொண்டார்கள்

லூக்கா 4.43 அவரோ அவர்களை நோக்கி: நான் மற்ற ஊர்களிலும் தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கிக்கவேண்டும் இதற்காகவே அனுப்பப்பட்டேன் என்றார்

லூக்கா 4.44 அந்தப்படியே கலிலேயா நாட்டிலுள்ள ஜெபஆலயங்களில் பிரசங்கம் பண்ணிக்கொண்டுவந்தார்

"உதயமானபோது அவர் புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப் போனார்" - சூரியன் அஸ்தமனமான சாயங்கால வேளையிலிருந்து, இயேசு கிறிஸ்து வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்கிக் கொண்டிருக்கிறார் ஒருவேளை அவர் இரவு முழுவதும் வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்கிக்கொண்டு இருந்திருக்கலாம் பொழுது விடிந்து விடுகிறது. இயேசு கிறிஸ்து கடைசியாக இருக்கும் வியாதியஸ்தரையும் சுகமாக்குகிறார் (லூக்கா 4.40-42) ஒரு வனாந்தரமான இடத்திற்குச் சென்று அங்கு ஓய்வெடுக்கலாம் என்று விரும்பினார் தேவனுடைய அற்புதத்தைச் செய்யும் ஊழியக்காரருக்கு ஓய்வு ஏது? இயேசுவின் கீர்த்தி வேகமாகப் பரவுகிறது ஏராளமான வியாதியஸ்தர்களை இயேசு கிறிஸ்து இருக்கும் இடத்தைத் தேடி அங்கு கொண்டு வருகிறார்கள் தேவனுடைய வல்லமை நம் மூலமாகக் கிரியை செய்யுமென்றால் நாம் வனாந்தரம்போன்ற இடத்தில் இருந்தாலும் ஜனங்கள் நம்மைத் தேடி வருவார்கள்

"திரளான ஜனங்கள் அவரைத் தேடி அவரிடத்தில் வந்து தங்களை விட்டுப்போகாதபடிக்கு அவரை நிறுத்திக் கொண்டார்கள்" - இயேசு கிறிஸ்து தங்களுக்கு வேண்டும் என்று அவரிடம் விண்ணப்பம் பண்ணுகிறார்கள் அதில் தவறொன்றும் இல்லை ஆனால் அவர் தங்களுக்கு மட்டும்தான் வேண்டும் என்று நினைப்பது தவறு. இயேசுவின் நேரம், அவருடைய ஊழியம் எல்லாமே தங்களுடைய ஊரார் மத்தியில் மட்டுமே செய்ய வேண்டும் என்று விரும்பி தங்களை விட்டுப்போகாதபடிக்கு அவரை நிறுத்திக் கொண்டார்கள் இந்த வாக்கியத்தில் "நிறுத்திக்கொள்ளுதல்" என்னும் தமிழ்ச் சொல்லின் கிரேக்கச்சொல் "கடேகோ" **(katecho).** இதற்குப் பிடித்தல், தடைபண்ணுதல் கட்டிப்பிடித்தல் நிறுத்துதல் என்று பொருள் ஆனால் இயேசு கிறிஸ்துவோ தமது பிதாவின் சித்தத்தைச் செய்வதற்காக வந்திருக்கிறார் தம்முடைய ஊழியகாலத்தில் எங்கெல்லாம் போகவேண்டுமோ அங்கெல்லாம் சென்று பிதாவின் ஊழியத்தைச் செய்வது அவருக்குச் சித்தமாக இருந்தது. (லூக்கா 2:49 அப 10:38

4 அதிகாரம்

நிறுத்திக்கொள் (stayed) - κατέχω - katechoo - 2722

வினைச்சொல் - கட்டிக்கொள் நிறுத்திக்கொள் **(to hold fast, restrain, hinder)** (லூக்கா 4:42; லூக்கா 8:15, லூக்கா 14:9 மத் 21:38; யோவான் 5:4, அப் 27:40, ரோமர் 1:18; ரோமர் 7:6, 1கொரி 7:30; 1கொரி 11:2 1கொரி 15:2, 2கொரி 6:10 1தெச 5:21, 2தெச 2:6; பிலே 1:13, எபி 3:6,14, எபி 10:23)

"அவரோ அவர்களை நோக்கி: நான் மற்ற ஊர்களிலும் தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கிக்கவேண்டும்; இதற்காகவே அனுப்பப்பட்டேன் என்றார்" - தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கிப்பது தெய்வீக ஊழியம் தெய்வீக அதிகாரத்தோடும் வல்லமையோடும் தேவனுடைய ஊழியத்தைச் செய்ய வேண்டும் அற்புதங்களும் அடையாளங்களும் வசனங்களை உறுதி பண்ண வேண்டும் (யோவான் 5:36 யோவான் 9:4 யோவான் 10:38 யோவான் 14:11) பவுல் தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிக் கூறும்போது "தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல, பெலத்திலே உண்டாயிருக்கிறது" என்றார் (1கொரி 4:20 ரோமர் 15:18-19,29, எபி 2:3-4)

"கலிலேயா நாட்டிலுள்ள ஜெபஆலயங்கள்" (மாற்கு 1:21)

5 அதிகாரம்

9. படவில் உட்கார்ந்து ஜனங்களுக்கு போதகம் பண்ணுகிறார்

லூக்கா 5:1 பின்பு அவர் கெனேசரேத்துக் கடலருகே நின்றபோது, திரளான ஜனங்கள் தேவவசனத்தைக் கேட்கும்படி அவரிடத்தில் நெருங்கினார்கள்

லூக்கா 5:2 அப்பொழுது கடற்கரையிலே நின்ற இரண்டு படவுகளைக் கண்டார். மீன்பிடிக்கிறவர்கள் அவைகளை விட்டிறங்கி, வலைகளை அலசிக்கொண்டிருந்தார்கள்

லூக்கா 5:3 அப்பொழுது அந்தப் படவுகளில் ஒன்றில் ஏறினார். அது சீமோனுடையதாயிருந்தது. அதைக் கரையிலிருந்து சற்றே தள்ளும்படி அவனைக் கேட்டுக்கொண்டு, அந்தப் படவில் உட்கார்ந்து, ஜனங்களுக்குப் போதகம்பண்ணினார்

"திரளான ஜனங்கள் தேவவசனத்தைக் கேட்கும்படி அவரிடத்தில் நெருங்கினார்கள்" - ஆவிக்குரிய எழுப்புதல் ஏற்படும்பொழுது ஜனங்கள் திருவசனத்தைக் கேட்பதற்காகக் கூடி வருவார்கள். எழுப்புதலுக்கு இதுதான் அடையாளம். ஆகையினால் சபையில் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணும் காரியம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே இருக்க வேண்டும்

"கெனேசரேத்துக் கடல்" - மறுபெயர்கள் - திபேரியாக்கடல் (Sea of Tiberias) (யோவான் 21:1), கின்னரேத்துக் கடல் (Sea of Chinnereth) (எண் 34:11; உபா 3:17; யோசு 12:3; யோசு 13:27) கலிலேயாக்கடல் (Sea of Galilee) (மத் 4:18; மத் 15:29; மாற்கு 1:16; மாற்கு 7:31)

"கடற்கரையிலே நின்ற இரண்டு படவுகள்" கலிலேயாக்கடலில் எப்போதுமே நாலாயிரம் படவுகளுக்கு மேல் இருக்குமென்று கூறுகிறார்கள். அந்தப் படவுகளில் இரண்டு படவுகள் விசேஷித்தவை. ஒன்று பேதுருவிற்குரியது. மற்றொன்று அவருடைய நண்பர் ஒருவருக்குரியது.

"கரையிலிருந்து சற்றே தள்ளும்படி அவனைக் கேட்டுக்கொண்டார்" - லூக்கா 5:16-இல் கேட்பது என்பது தேவனிடம் விண்ணப்பம் பண்ணுவதைக் குறிக்கும். இங்கு இயேசு கிறிஸ்து சீமோனிடம் கேட்டது விண்ணப்பம் அல்ல. ஜெபமும் அல்ல. சாதாரண வேண்டுகோள் மட்டுமேயாகும்.

"அந்தப் படவில் உட்கார்ந்து ஜனங்களுக்குப் போதகம் பண்ணினார்" - (லூக்கா 2:46)

10. இயேசு அற்புதம் செய்து படவை பயன்படுத்தியதற்கு கிரயம் செலுத்துகிறார்

லூக்கா 5:4 அவர் போதகம்பண்ணி முடித்த பின்பு சீமோனை நோக்கி: ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய், மீன்பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள் என்றார்

லூக்கா 5:5 அதற்குச் சீமோன்: ஐயரே, இராமுழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை; ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன் என்றான்

லூக்கா 5:6 அந்தப்படியே அவர்கள் செய்து, தங்கள் வலை கிழிந்துபோகத்தக்கதாக மிகுதியான மீன்களைப் பிடித்தார்கள்

லூக்கா 5:7 அப்பொழுது மற்றப் படவிலிருந்த கூட்டாளிகள் வந்து தங்களுக்கு உதவி செய்யும்படிக்குச் சைகைகாட்டினார்கள். அவர்கள் வந்து இரண்டு படவுகளும் அமிழத்தக்கதாக நிரப்பினார்கள்

"ஐயரே" பேதுரு இயேசு கிறிஸ்துவைக் கடலுக்கும் மீனுக்கும் ஆண்டவராக அங்கீகரிக்கிறார் (சங் 8). இரவு முழுவதும் மீன்பிடித்தும் ஒன்றும் அகப்படவில்லை என்று இயேசுவிடம் முறையிடுகிறார். என்றாலும் ஆண்டவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிகிறார். தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியும்போது வலை கிழிந்துபோகத்தக்கதாக, படவு தண்ணீரில் முழுகத்தக்கதாக திரளான மீன்களைப் பிடிக்கிறார்கள்

5 அதிகாரம்

ஐயர் (Master) - ἐπιστάτης epistatees - 1988

ஆண்பால் பெயர்ச்சொல் - ஐயர் (a superintendent, commander) - அதிகாரமுடையவர் (லூக்கா 9:38)

"கூட்டாளிகள்" - யாக்கோபும் யோவானும் பேதுரு, அந்திரேயா ஆகியோரின் கூட்டாளிகள் (லூக்கா 5:10)

11. பேதுரு, அந்திரேயா, யாக்கோபு, யோவான் ஆகியோரின் அழைப்பு - (மத் 4:18; மாற்கு 1:16)

லூக்கா 5:8 சீமோன் பேதுரு அதைக் கண்டு இயேசுவின் பாதத்தில் விழுந்து, ஆண்டவரே நான் பாவியான மனுஷன் நீர் என்னைவிட்டு போகவேண்டும் என்றான்

லூக்கா 5:9 அவர்கள் திரளான மீன்களைப் பிடித்ததினிமித்தம் அவனுக்கும் அவனோடுகூட இருந்த யாவருக்கும் பிரமிப்புண்டானபடியினால் அப்படிச் சொன்னான்

லூக்கா 5:10 சீமோனுக்குக் கூட்டாளிகளான செபெதேயுவின் குமாரராகிய யாக்கோபும் யோவானும் அந்தப்படியே பிரமித்தார்கள் அப்பொழுது இயேசு சீமோனை நோக்கி: பயப்படாதே, இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார்

லூக்கா 5:11 அவர்கள் படவுகளைக் கரையிலே கொண்டுபோய் நிறுத்தி எல்லாவற்றையும் விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்

"நீர் என்னைவிட்டுப் போகவேண்டும்" - திரளான மீன்கள் கிடைத்தது இது ஒரு பெரிய அற்புதம். தன்னுடைய உணர்ச்சியை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை. இருந்தாலும் இந்த ஆச்சரியத்திற்கு மத்தியிலும் பேதுரு தன்னுடைய உண்மை நிலையை உணருகிறான் தான் ஒரு பாவியான மனுஷன் என்று அறிக்கையிடுகிறான் ஆகையினால் பாவியாகிய தன்னோடு சேரவேண்டாம். தன்னைவிட்டுப் போகவேண்டும் என்று இயேசுவிடம் அறிவிக்கிறான்

"நான் பாவியான மனுஷன்" - பேதுரு தன்னைப் பற்றிக் கூறிய உண்மையான அறிக்கை. அவனுடைய சுபாவம் நடத்தை எல்லாமே பாவமானது என்பதைக் கர்த்தரிடம் அறிக்கையிடுகிறான் (நியா 13:22 1சாமு 6:20; 2சாமு 12:13; யோபு 40:4)

"ஆண்டவரே" - இயேசு கிறிஸ்துவின் தெய்வத்துவத்தைப் பேதுரு அங்கீகரிக்கிறான் (1கொரி 12:3)

"அவனுக்கும் அவனோடுகூட இருந்த யாவருக்கும் பிரமிப்புண்டானது" - இயேசு கிறிஸ்து எங்கே சென்றாலும் ஆச்சரியமும் பிரமிப்பும் அவரைத் தொடர்ந்து வருகிறது ஏனெனில் அவர் அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் தமது வசனத்தை உறுதிப்படுத்தினார் ஜனங்கள் இதுவரையிலும் இப்படிப்பட்ட காரியங்களைத் தங்கள் கண்களால் கண்டதுமில்லை தங்கள் காதுகளால் கேட்டதுமில்லை

"யாக்கோபு" - (லூக்கா 24:10)

தீர்க்கதரிசன எண் - 16

"பயப்படாதே, இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய்" (லூக்கா 5:10) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேற்று.

"பிடிக்கிறவன்" - உயிரோடு பிடிக்கிறவன், சிறைபிடிக்கிறவன் (to take alive, or capture) சாத்தான் பாவத்தில் ஜீவிப்பவர்களைச் சிறைபிடிப்பது போன்றது (2தீமோ 2:26) சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கிறவர்களுடைய ஆத்துமாக்களைத் தேவனுடைய ஊழியக்காரர்கள் தேவனுக்காகச் சிறைபிடிக்க வேண்டும் இந்த வசனத்தில் ஆத்தும ஆதாயம் என்பது மீன்களை உயிரோடு பிடிப்பதற்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டிருக்கிறது.

5 அதிகாரம்

பிடி (catch) - ζωγρέω - zoogreoo - 2221

விணைச்சொல் - பிடி பிடிக்கிறவனாயிரு

"அவர்கள் படவுகளைக் கரையிலே கொண்டுபோய நிறுத்தி, எல்லாவற்றையும் விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்" - சுவிசேஷம் நம்மிடம் எதிர்பார்க்கும் காரியம் இதுதான் (மத் 19:27-30) நாம் செலுத்த வேண்டிய கிரயம் எதுவாக இருந்தாலும் அதைச் செலுத்தி கர்த்தரை மனப்பூர்வமாக பின்பற்றிச் செல்வதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும் நமக்கு இருக்கும் பொறுப்புக்களை உதறித்தள்ளிவிடவேண்டும் என்பது இதன் பொருளல்ல எல்லாவற்றையும் விட்டு அவரைப் பின்பற்றிச் சென்ற இவர்களுக்குக் குடும்ப பொறுப்புக்களும் இதர பொறுப்புக்களுக்கும் இருந்தன 1 தீமோ 5:8 இந்த வசனத்தை மையக்கருத்து என்னவென்றால் நமது ஜீவியத்தில் கர்த்தருக்கு முதலிடம் தரவேண்டும் என்பதுதான் (மத் 22:37 லூக்கா 14:26-27

12. இயேசு குஷ்டரோகியை சுத்தமாக்குகிறார் - (மத் 8:1, மாற்கு 1:40)

லூக்கா 5:12 பின்பு, அவர் ஒரு பட்டணத்தில் இருக்கையில் குஷ்டரோகம் நிறைந்த ஒரு மனுஷன் இயேசுவைக் கண்டு, முகங்குப்புற விழுந்து: ஆண்டவரே, உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மாலே ஆகும் என்று அவரை வேண்டிக்கொண்டான்

லூக்கா 5:13 அவர் தமது கையை நீட்டி, அவனைத் தொட்டு: எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார்; உடனே குஷ்டரோகம் அவனைவிட்டு நீங்கிற்று.

லூக்கா 5:14 அவர் அவனை நோக்கி: நீ இதை ஒருவருக்கும் சொல்லாமல், போய், உன்னை ஆசாரியனுக்குக் காண்பித்து, நீ சுத்தமான தினிமித்தம், மோசே கட்டளையிட்டபடியே, அவர்களுக்குச் சாட்சியாக பலி செலுத்து என்று கட்டளையிட்டார்

"குஷ்டரோகம் நிறைந்த ஒரு மனுஷன்" - அவனுடைய சரீரம் முழுவதிலும் குஷ்டரோகம் இருந்தது.

வேண்டிக்கொள் (besought) - δέομαι - deomai - 1189

விணைச்சொல் - வேண்டிக்கொள் உத்தரவுகேள் ஜெபம் பண்ணு, கேட்டுக்கொள் (to supplicate, plead)

"ஆண்டவரே, உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மாலே ஆகும்" - இயேசு கிறிஸ்துவால் தன்னைச் சுத்தமாக்க முடியும் என்று இந்த மனுஷன் நம்பினான் ஆனால் அவர் தன்னைச் சுத்தப்படுத்துவாரா என்று சந்தேகப்பட்டான் இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்ததின் நோக்கமே நம்முடைய பாவங்களை மன்னிப்பதற்காகவும் நம்முடைய வியாதிகளைச் சுகமாக்குவதற்காகவும் தான் வந்திருக்கிறார் ஆகையினால் நம்மைச் சுத்தப்படுத்துவது தேவனுடைய சித்தமா இல்லையா என்று நாம் சந்தேகப்படத் தேவையில்லை (யோவான் 10:10 அப் 10:38 மத் 8:17 1பேதுரு 2:24)

"எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு" தம்முடைய வாக்குத்தத்தங்கள் நிறைவேற வேண்டுமென்று தம்முடைய பிள்ளைகள் தம்மிடத்தில் வரும்போது தேவன் எப்போதும் கூறும் காரியம் இதுதான் "எனக்குச் சித்தமுண்டு" (மத் 7:7-11, மத் 17:20, மத் 21:22 மாற்கு 9:23; மாற்கு 11:22-24, யோவான் 15:7,16 எபி 11:6 யாக் 1:5-8 தேவனுடைய சித்தம் நமக்கு ஏற்கெனவே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தேவனுடைய சித்தத்தின் பிரகாரம் சிந்தித்துச் செயல்பட வேண்டியது மனுஷனுடைய பொறுப்பு

"நீ இதை ஒருவருக்கும் சொல்லாதே" - (மத் 8:4)

5 அதிகாரம்

"நீ சுத்தமானதினிமித்தம், மோசே கட்டளையிட்டபடியே, அவர்களுக்குச் சாட்சியாக பலிசெலுத்து" - இந்த மனுஷன் முழுவதுமாக சுத்தமாக்கப்பட்டான் என்று ஆசாரியர் சாட்சி கூறவேண்டுமென்று இயேசு கிறிஸ்து விரும்பினார். தேவனுடைய வல்லமைக்கு ஆசாரியர் சாட்சி பகரவேண்டும். ஆகையினால் சுத்தமாக்கப்பட்ட அந்த மனுஷனை ஆசாரியரிடத்திற்கு இயேசு கிறிஸ்து அனுப்புகிறார் (லேவி 13; லேவி 14; மத் 8:4)

"மோசே" - பத்து இடங்களில் லூக்கா மோசேயைப் பற்றிக் குறிப்பிடுகிறார் (லூக்கா 2:22; லூக்கா 5:14; லூக்கா 9:30,33; லூக்கா 16:29,31; லூக்கா 20:28,37; லூக்கா 24:27,44)

13. இயேசு திரளான ஜனங்களை சொஸ்தமாக்குகிறார் - இயேசுவின் கீர்த்தி அதிகமாகப் பரம்பிற்று - (மாற்கு 1:45)

லூக்கா 5:15 அப்படியிருந்தும் அவருடைய கீர்த்தி அதிகமாகப் பரம்பிற்று. திரளான ஜனங்கள் அவருடைய உபதேசத்தைக் கேட்பதற்கும், அவராலே தங்கள் பிணிகள் நீங்கிச் சவுக்கியமடைவதற்கும் கூடிவந்தார்கள்.

லூக்கா 5:16 அவரோ வனாந்தரத்தில் தனித்துப்போய், ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தார்.

"கீர்த்தி" - (லூக்கா 4:37)

"திரளான ஜனங்கள் அவருடைய உபதேசத்தைக் கேட்பதற்கும், அவராலே தங்கள் பிணிகள் நீங்கிச் சவுக்கியமடைவதற்கும் கூடிவந்தார்கள்" - இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்பதற்காகவும், தங்களுடைய பிணிகள் நீங்கி சௌக்கியமடைவதற்காகவும் ஜனங்கள் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கிறார்கள்.

"பிணிகள்" (infirmities) - சரீரம், சிந்தை, நீதிநெறி ஆகியவற்றில் பலவீனங்கள், குறைபாடுகள் (மத் 8:17)

"அவரோ வனாந்தரத்தில் தனித்துப்போய், ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார்" - இயேசு கிறிஸ்து பலதடவை திரளான ஜனங்களை விட்டு வனாந்தரத்திற்குப் போய் தனியாக ஜெபம் பண்ண விரும்பினார். ஆனால் ஜனங்களோ அவர் எங்கு சென்றாலும் அவரைக் கூட்டமாகத் தேடிச் சென்று கொண்டிருக்கிறார்கள் (மத் 12:15; மத் 14:13-35; மத் 15:29-39; மாற்கு 3:7-12; லூக்கா 12:1; யோவான் 8:59; யோவான் 12:36)

"அவர் ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார்" - (லூக்கா 3:21)

14. கப்பர்நகூமிற்குத் திரும்பி வருகிறார் - திமிர்வாதக்காரனைக் குணப்படுத்துகிறார் - (மத் 9:1; மாற்கு 2:1; யோவான் 2:12)

லூக்கா 5:17 பின்பு ஒருநாள் அவர் உபதேசித்துக் கொண்டிருக்கிறபோது, கலிலேயா யூதேயா நாடுகளிலுள்ள சகல கிராமங்களிலும், எருசலேம் நகரத்திலுமிருந்து வந்த பரிசேயரும் நியாயசாஸ்திரிகளும் உட்கார்ந்திருந்தார்கள். அப்பொழுது பிணியாளிகளைக் குணமாக்கத் தக்கதாகக் கர்த்தருடைய வல்லமை விளங்கிற்று.

லூக்கா 5:18 அப்பொழுது சில மனுஷர் திமிர்வாதக்காரன் ஒருவனைப் படுக்கையோடே எடுத்துக் கொண்டு வந்து, அவனை உள்ளே கொண்டுபோகவும் அவர் முன்பாக வைக்கவும் வகைதேடினார்கள்.

லூக்கா 5:19 ஜனக்கூட்டம் மிகுதியாயிருந்தபடியால் அவனை உள்ளே கொண்டு போகிறதற்கு வகைகாணாமல், வீட்டின்மேல் ஏறி, தட்டோடுகள் வழியாய் ஜனங்களின் மத்தியில் இயேசுவுக்கு முன்பாக அவனைப் படுக்கையோடே இறக்கினார்கள்.

5 அதிகாரம்

லூக்கா 5:20 அவர்களுடைய விசுவாசத்தை அவர் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி: மனுஷனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார்.

லூக்கா 5:21 அப்பொழுது வேதபாரகரும் பரிசேயரும் யோசனைபண்ணி, தேவதூஷணம் சொல்லுகிற இவன் யார்? தேவன் ஒருவரேயன்றி பாவங்களை மன்னிக்கத்தக்கவர் யார் என்றார்கள்.

லூக்கா 5:22 இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து, அவர்களை நோக்கி: உங்கள் இருதயங்களில் நீங்கள் சிந்திக்கிறதென்ன?

லூக்கா 5:23 உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்று சொல்வதோ, எழுந்து நடவென்று சொல்வதோ, எது எளிது?

லூக்கா 5:24 பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறிய வேண்டுமென்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

லூக்கா 5:25 உடனே அவன் அவர்களுக்கு முன்பாக எழுந்து, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு, தேவனை மகிமைப்படுத்தி, தன்வீட்டுக்குப் போனான்.

லூக்கா 5:26 அதினாலே எல்லாரும் ஆச்சரியப்பட்டு, தேவனை மகிமைப்படுத்தினார்கள் அல்லாமலும், அவர்கள் பயம் நிறைந்தவர்களாகி: அதிசயமான காரியங்களை இன்று கண்டோம் என்றார்கள்.

நியாயசாஸ்திரி (doctors of the law) - **νομοδιδάσκαλος** - **nomodidaskalos** - 3547

ஆண்பால் பெயர்ச்சொல் - நியாயசாஸ்திரி, நியாயப்பிரமாண போதகர் - லூக்கா 5:17, அப் 5:34, 1தீமோ 1:7 ஆகிய வசனங்களில் மட்டுமே இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. **(teachers of the law)**

திமிர்வாதம் (palsy) - **παραλύω** - **paralyoo** - 3886

வினைச்சொல் - திமிர்வாதக்காரனாயிரு **(paralyzed)**

பொருள் - தளர்ந்த (மத் 9:2; மாற்கு 2:4)

"அவர்களுடைய விசுவாசத்தை அவர் கண்டார்" - திமிர்வாதக்காரனுடைய விசுவாசத்தையும், அவனைக் கொண்டு வந்தவர்களுடைய விசுவாசத்தையும் இயேசு கிறிஸ்து கண்டார்.

"வேதபாரகரும் பரிசேயரும் யோசனை பண்ணினார்கள்" யோசனை பண்ணுவதே அவிசுவாசத்திற்கு ஆரம்பம். யோசனை விவாதத்திலும் தர்க்கத்திலும்தான் முடிவு பெறும்.

"தேவதூஷணம் சொல்லுகிற இவன் யார்? தேவன் ஒருவரேயன்றி பாவங்களை மன்னிக்கத் தக்கவர் யார்" திரித்துவத்தில் இயேசு கிறிஸ்துவும் ஒருவர் என்னும் சத்தியத்தை அவர்கள் அறியவில்லை. (மத் 28:19; யோவான் 14:23; யோவான் 20:23; 1யோவான் 5:7)

"இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்தார்" இயேசு கிறிஸ்து தம்மிடம் இருந்த ஆவிகளைப் பகுத்தறியும் வரத்தின் மூலமாக அவர்களுடைய சிந்தனைகளை அறிந்தார். இந்த வரம் இயேசுவிடம் தாராளமான அளவில் இருந்தது. (யோவான் 3:34; ஏசா 11:1-2; 1கொரி 12:8-11)

5 அதிகாரம்

"உங்கள் இருதயங்களில் நீங்கள் சிந்திக்கிறதென்ன? உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்று சொல்வதோ எழுந்து நடவென்று சொல்வதோ, எது எளிது?" - குணமாக்குவது எளிது என்று ஆதித்திருச்சபையார் நம்பினார்கள் ஆனால் இக்காலத்து மனுஷரோ பாவங்கள் மன்னிக்கப்படுவதுதான் எளிது என்று நம்புகிறார்கள் தேவனால் கூடாதகாரியம் ஒன்றுமில்லை தேவனால் வியாதிகளையும் குணப்படுத்த முடியும் மனுஷருடைய பாவங்களையும் மன்னிக்க முடியும்

"உடனே" - இயேசு கிறிஸ்து செய்த அற்புதங்களெல்லாம் உடனே நடைபெற்றது. தவணை முறையில் நடைபெறவில்லை (லூக்கா 1:64 லூக்கா 4:39 லூக்கா 5:13,25; லூக்கா 8:44,47; லூக்கா 13:13 லூக்கா 18:43; லூக்கா 22:60)

"அவன் அவர்களுக்கு முன்பாக எழுந்து தன் படுக்கையை எடுத்துக்கொண்டு தேவனை மகிமைப்படுத்தி, தன்வீட்டுக்குப் போனான்" - திமிர்வாதக்காரன் பரிபூரணமாகச் சொஸ்தமாக்கப் பட்டிருக்கிறான் என்பதற்கு இது ஓர் அடையாளம்

"அதினாலே எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள்" - ஆச்சரியம் அவர்களை ஆளுகை செய்தது.

"அவர்கள் பயம் நிறைந்தவர்களானார்கள்" - (லூக்கா 4:28)

அதிசயமான காரியங்கள் (strange things) - παράδοξος - paradoxos 3861

பெரடை - அதிசயமான காரியங்கள் எதிர்பாராத காரியங்கள் (anything unexpected). பொதுவாக மனுஷர் காணும் காரியங்களுக்கு முரண்பட்ட காரியங்கள் (contrary to what is usually seen)

15. லேவி என்னும் மத்தேயுவின் அழைப்பு - (மத் 9:9, மத் 2:13-14

லூக்கா 5:27 இவைகளுக்குப் பின்பு, அவர் புறப்பட்டு, ஆயத்துறையில் உட்கார்ந்திருந்த லேவி என்னும் பேருடைய ஒரு ஆயக்காரனைக் கண்டு: எனக்குப் பின்சென்று வா என்றார்

லூக்கா 5:28 அவன் எல்லாவற்றையும் விட்டு, எழுந்து, அவருக்குப் பின் சென்றான்

லூக்கா 5:29 அந்த லேவி என்பவன் தன் வீட்டிலே அவருக்குப் பெரிய விருந்து பண்ணினான் அநேக ஆயக்காரரும் மற்றவர்களும் அவர்களோடேகூடப் பந்தியிருந்தார்கள்

"ஆயக்காரன்" - ரோமப்பேரரசிற்கு வரிவசூல் பண்ணுகிறவன் (மத் 5:46 மத் 9:10-11; மத் 11:19; மத் 21:31 மாற்கு 2:15-16) அவர்கள் சுவிசேஷத்தைக் கேட்டபோது மனந் திரும்பினார்கள் (மத் 21:32; லூக்கா 3:12; லூக்கா 7:29 மத்தேயு, சகேயு ஆகியோர் இரட்சிக்கப்பட்ட ஆயக்காரர்கள் (மத் 9:9, மத் 10:3 மாற்கு 2:14; லூக்கா 5:27; லூக்கா 19:1-10

"லேவி" மத்தேயுவின் மறுபெயர் (மத் 10:3 மாற்கு 2:14, மாற்கு 3:18, லூக்கா 6:15 அப் 1:13

"ஆயத்துறை" சுங்கவரி வசூல் பண்ணுகிற இடம். மத்தேயு சுங்கவரி வசூலிக்கும் அதிகாரி

"அந்த லேவி என்பவன் தன் வீட்டிலே அவருக்குப் பெரிய விருந்துபண்ணினான்" மத்தேயுவும் சகேயுவும் இயேசு கிறிஸ்துவிற்குத் தங்கள் வீட்டிலே அவரை வரவேற்கும் விதமாக விருந்து பண்ணினார்கள் லூக்கா 19:5 7

16. பரிசேயருக்கு இயேசு கூறிய பதிலுரை - (மத் 9:10; மாற்கு 2:15

லூக்கா 5:30 வேதபாரகரும் பரிசேயரும் அவருடைய சீஷருக்கு விரோதமாக முறுமுறுத்து: நீங்கள் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனபானம் பண்ணுகிறதென்னவென்று கேட்டார்கள்

5 அதிகாரம்

லூக்கா 5:31 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை.

லூக்கா 5:32 நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்கவந்தேன் என்றார்.

"வேதபாரகரும் பரிசேயரும் அவருடைய சீஷருக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள்" - கலிலேயாவிலுள்ள பரிசேயரும் வேதபாரகரும் யூதேயா எருசலேமிலுள்ள வேதபாரகர் பரிசேயர் ஆகியோரும் வித்தியாசமானவர்கள் (மத் 15:1)

"அவருடைய சீஷருக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள்" - முறுமுறுப்பது வேதவாக்கியத்தில் கண்டனம்பண்ணப்பட்டிருக்கிறது. (சங் 37:1; 1கொரி 10:10; பிலி 2:14; யாக் 5:9)

முறுமுறுத்தவர்களுக்கு எடுத்துக் காட்டானவர்கள்

1 காயீன் (ஆதி 4:13-14)

2 ராகேல் (ஆதி 30:1)

3 மோசே (யாத் 5:22)

4. இஸ்ரவேலர் (யாத் 5:19)

5 கோராகு (எண் 16:8-11)

6 மிரியாமும், ஆரோனும் (எண் 12)

7 யோபு (யோபு 3; யோபு 6; யோபு 9; யோபு 10)

8 தாவீது (2சாமு 6:8; சங் 116:10)

9 ஆசாப் (சங் 73)

10 எலியா (1இராஜா 19:4-10)

11 சாலொமோன் (பிர 2:17-18)

12 எசேக்கியா (ஏசா 38:10-18)

13 எரேமியா (எரே 20:14-18; புல 3)

14 யோனா (யோனா 4)

15 யூதர்கள் (லூக்கா 5:30; யோவான் 6:41-52)

16 கலகக்காரர்கள் / அசுசரிப்புக்காரர்கள் (யூதா 1:16)

சுகமுள்ளவர் (healthy) ὑγιαίνω hygiainoo - 5198

வினைச்சொல் - சுகமடைந்திரு, சுகமாயிரு - மருத்துவ வார்த்தை (லூக்கா 7:10; லூக்கா 15:27; 3யோவான் 1:2) பவுல் இந்த வார்த்தையை நீதிநெறிக்குப் பயன்படுத்துகிறார் (1தீமோ 1:10; 1தீமோ 6:3; 2தீமோ 1:13; 2தீமோ 4:3; தீத்து 1:9,13; தீத்து 2:1-2)

பிணியாளி (sick) - κακός - kakos - 2556

பொல்லாத - கொடிய, பொல்லாத, பொல்லாப்புசெய்த, தீமைகளை அநுபவித்த, தகாத, கெடுதியான, தீங்கு அடைந்த, தீமைசெய்கிற, துர்க்கிரியையான, ஆகாத, துர்இச்சையான, துஷ்ட (**sickly, depraved in nature, an evil condition)**

"நீதிமான்களையல்ல பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்கவந்தேன்"

இயேசு கிறிஸ்து வந்ததற்கான நோக்கங்கள்

1 பாவங்களிலிருந்து இரட்சிக்க (மத் 1:21)

2 யூதர்களுக்கு இராஜாவாக இருக்க (யோவான் 18:37)

3 நியாயப்பிரமாணத்தை நிறைவேற்ற (மத் 5:17)

4 மனந்திரும்புவதற்குப் பாவிகளை அழைக்க (மத் 9:13; லூக்கா 5:32; லூக்கா 13:1-5)

5 பிரிவினை உண்டுபண்ண (மத் 10:34-36)

5 அதிகாரம்

6 இளைப்பாறுதல் தர (மத் 11:28-30)

7 அழிவிலிருந்து இரட்சிக்க லூக்கா 9:56

8 சபைக்கு ஜீவனைக் கொடுக்க (எபே 5:26

9 பலவீனத்திலிருந்து இரட்சிக்க தீத்து 2:14)

10 காணாமல்போனவர்களைத் தேடிக் கண்டுபிடித்து இரட்சிக்க (லூக்கா 9:10

11 புதிய உடன்படிக்கையை உண்டாக்க மத் 26:28; எபி 8:6; எபி 9:15)

12 பாவத்தை அகற்ற (எபி 9:26)

13 ஜனங்களுக்காக பாடு அனுபவிக்க (யோவான் 12:27; 1பேதுரு 3:18 பேதுரு 4:1-2

14 ஜனங்களைக் கிரயம் செலுத்தி மீட்க (மத் 20:28, 1தீமோ 2:6)

15 உபதேசம் பண்ணி சுகமாக்க (மத் 4:23-24 மாற்கு 1:38-39 லூக்கா 4:18 அப் 10:38)

16 உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்காமல் இரட்சிக்க (யோவான் 3:16-18 யோவான் 12:27)

17 பூமியின்மீது அக்கினியை அனுப்ப (லூக்கா 12:49

18 இரட்சிப்பாக இருக்க (1தீமோ 1:15)

19 பரிசுத்த ஆவியானவரில் அபிஷேகம் பண்ண (மத் 3:11, யோவான் 1:31-33 யோவான் 7:37-39)

20 தீமையிலிருந்து இரட்சிக்க (கலா 1:4

21 நியாயத்தீர்ப்பைக் கொண்டு வர (யோவான் 9:39

22 பரிபூரண ஜீவனைக் கொடுக்க (யோவான் 10:10)

23 வியாதிகளைச் சுமக்க (மத் 8:17, 1பேதுரு 2:24; ஏசா 53

24 உலகத்திற்கு வெளிச்சமாக இருக்க (யோவான் 12:46

25 நித்திய ஜீவனைக் கொடுக்க (யோவான் 17:3)

26 ஜனங்களுக்கு ஊழியம் செய்ய (மத் 20:28)

27 கிருபையையும், சத்தியத்தையும் கொண்டுவர (யோவான் 1:17)

28 தேவனுடைய சித்தத்தைச் செய்ய (யோவான் 6:38

29 சாத்தானுடைய கிரியையை அழிக்க (1யோவான் 3:8

30 முன்மாதிரியாக இருக்க (பேதுரு ..2

31 பாவங்களுக்கு மரிக்க (1கொரி 15:3 கலா 1:4)

32 நம்மைச் சுதந்திரிக்க (தீத்து 2:14)

17. யோவான் ஸ்நானனின் சீஷர்களுக்கு இயேசு கூறிய பதிலுரை – (மத் 9:14 மாற்கு 2:18

லூக்கா 5:33 பின்பு அவர்கள் அவரை நோக்கி: யோவானுடைய சீஷர் அநேகந்தரம் உபவாசித்து ஜெபம்பண்ணிக் கொண்டு வருகிறார்கள், பரிசேயருடைய சீஷரும் அப்படியே செய்கிறார்கள், உம்முடைய சீஷர் போஜனபானம் பண்ணுகிறார்களே அதெப்படியென்று கேட்டார்கள்

லூக்கா 5:34 அதற்கு அவர் மணவாளன் தங்களோடிருக்கையில் மணவாளனுடைய தோழர்களை நீங்கள் உபவாசிக்கச் செய்யக்கூடுமா?

லூக்கா 5:35 மணவாளன் அவர்களை விட்டு எடுபடும் நாட்கள் வரும், அந்த நாட்களிலே உபவாசிப்பார்கள் என்றார்

5 அதிகாரம்

"அநேகந்தரம் உபவாசித்து ஜெபம்பண்ணிக் கொண்டு வருகிறார்கள்" - பலர் இதைச் சடங்காச்சாரமாகச் செய்து வருகிறார்கள் ஆனால் இவர்கள் ஒருபோதும் தேவனிடத்தில் ஜெபம்பண்ணுவதில்லை (மத் 6:5 லூக்கா 18:9-14)

உவமை எண் - 1

"மணவாளன் தங்களோடிருக்கையில் மணவாளனுடைய தோழர்களை நீங்கள் உபவாசிக்கச் செய்யக்கூடுமா?" (லூக்கா 5:34-35) இயேசு கிறிஸ்து தமது சீஷர்களோடு இருப்பதையும் அவர்களைவிட்டுப் பிரிந்து போவதையும் இந்த உவமை விளக்குகிறது. (யோவான் 3:29)

"உபவாசம்" - (சங் 69:10)

தீர்க்கதரிசன எண் - 17

"மணவாளன் அவர்களை விட்டு எடுபடும் நாட்கள் வரும், அந்த நாட்களிலே உபவாசிப்பார்கள்" (லூக்கா 5:35) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

18. வஸ்திரம், துருத்திகள் பற்றி உவமை - (மத் 9:16, மாற்கு 2:21)

லூக்கா 5:36 அவர்களுக்கு ஒரு உவமையையும் சொன்னார். ஒருவனும் புதிய வஸ்திரத்துண்டைப் பழைய வஸ்திரத்தின்மேல் போட்டு இணைக்கமாட்டான், இணைத்தால் புதியது பழையதைக் கிழிக்கும் புதிய வஸ்திரத்துண்டு பழைய வஸ்திரத்துக்கு ஒவ்வாது.

லூக்கா 5:37 ஒருவனும் புது திராட்சரசத்தைப் பழந்துருத்திகளில் வார்த்துவைக்கமாட்டான் வார்த்துவைத்தால் புதுரசம் துருத்திகளைக் கிழித்துப்போடும் இரசமும் சிந்திப்போம் துருத்திகளும் கெட்டுப்போம்.

லூக்கா 5:38 புது ரசத்தைப் புது துருத்திகளில் வார்த்துவைக்கவேண்டும் அப்பொழுது இரண்டும் பத்திரப்பட்டிருக்கும்

லூக்கா 5:39 அன்றியும் ஒருவனும் பழைய ரசத்தைக் குடித்தவுடனே புது ரசத்தை விரும்பமாட்டான், பழைய ரசமே நல்லதென்று சொல்லுவான் என்றார்

உவமை எண்கள் - 2, 3

"ஒருவனும் புதிய வஸ்திரத்துண்டைப் பழைய வஸ்திரத்தின்மேல் போட்டு இணைக்கமாட்டான் ...." (லூக்கா 5:36-39) நியாயப்பிரமாணத்தையும் கிருபையையும் ஒன்றாகக் கலக்க முடியாது. கிருபையில் பங்குபெற வேண்டுமானால் நாம் மறுபடியும் பிறக்க வேண்டும். பழைய மார்க்கத்தில் மூழ்கியிருக்கிறவர்கள் முதலாவதாக மனம்மாறி, புதுசிருஷ்டியாக வேண்டும்.

லூக்கா - தொகுப்புரை

6 அதிகாரம்

19. இயேசு ஓய்வுநாளுக்கும் ஆண்டவராக இருக்கிறார் - (மத் 12:8; மாற்கு 2:28)

லூக்கா 6:1 பஸ்காபண்டிகையின் இரண்டாம் நாளைக்குப் பின்வந்த முதலாம் ஓய்வுநாளிலே, அவர் பயிர்வழியே நடந்து போகையில் அவருடைய சீஷர்கள் கதிர்களைக் கொய்து, கைகளினால் நிமிட்டித் தின்றார்கள்.

லூக்கா 6:2 பரிசேயரில் சிலர் அவர்களை நோக்கி: ஓய்வுநாளில் செய்யத்தகாததை நீங்கள் ஏன் செய்கிறீர்கள் என்று கேட்டார்கள்.

லூக்கா 6:3 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: தாவீதும் அவனோடிருந்தவர்களும் பசியாயிருந்த போது செய்ததை நீங்கள் வாசிக்கவில்லையா? அவன் தேவனுடைய வீட்டில் பிரவேசித்து, ஆசாரியர் மாத்திரமே தவிர வேறொருவரும் புசிக்கத்தகாத தேவசமுகத்து அப்பங்களைக் கேட்டு வாங்கி,

லூக்கா 6:4 தான் புசித்ததுமன்றி, தன்னுடனே கூட இருந்தவர்களுக்கும் கொடுத்தானே என்று சொன்னார்.

லூக்கா 6:5 மேலும், மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராயிருக்கிறார் என்றார்.

"பஸ்காபண்டிகையின் இரண்டாம் நாளைக்குப் பின்வந்த முதலாம் ஓய்வுநாளிலே" - புளிப்பில்லா அப்பப் பண்டிகை ஏழு நாட்களுக்கு ஆசரிக்கப்படும். நிசான் மாதம் 15ஆம் நாளில் இப்பண்டிகை துவங்கும் (லேவி 23:6-8). ஏழு நாள் பண்டிகை விசேஷித்த ஓய்வுநாளாக ஆசரிக்கப்படும். இது தவிர ஒவ்வொரு வாரத்திற்கும் ஓய்வுநாளும் உண்டு. இந்த வசனத்தில் கூறப்படுவது வாரத்தின் ஓய்வுநாளாகும் (மத் 12:1-8).

இரண்டாம் நாளைக்குப் பின்வந்த முதலாம் ஓய்வுநாள் (the second sabbath) - **δευτερόπρωτος** **deuteroprootos** (1207)

பொருள் - இரண்டாம் நாளைக்குப் பின்வந்த முதலாம்

"பரிசேயரில் சிலர் அவர்களை நோக்கி: ஓய்வுநாளில் செய்யத்தகாததை நீங்கள் ஏன் செய்கிறீர்கள் என்று கேட்டார்கள்" - ஓய்வுநாளில் பரிசேயர்களும் சில காரியங்களைச் செய்வார்கள். சிறுபிள்ளைகளுக்கு விருத்தசேதனம் செய்வார்கள். பள்ளத்தில் விழுந்துவிட்ட மிருகங்களை வெளியே தூக்கிவிடுவார்கள் (மத் 12:5,11). ஆனால் மனுஷரைப் பராமரிக்கும் காரியங்களைப் பொறுத்த அளவில் ஒன்றும் செய்யக்கூடாது. ஓய்வுநாளில் அவை தடைபண்ணப்பட்டிருக்கிறது என்பார்கள் (லூக்கா 6:6-11; லூக்கா 13:10-17).

"தாவீதும் அவனோடிருந்தவர்களும் பசியாயிருந்தபோது செய்ததை நீங்கள் வாசிக்கவில்லையா?" - இயேசு கிறிஸ்து ஓய்வுநாளைக் குறித்த பரிசேயரின் மாய்மாலத்தை இந்தக் கேள்வியினால் கடிந்து கொள்கிறார். தாவீதும் அவனோடிருந்தவர்களும் பசியாக இருந்தபோது அவன் தேவனுடைய வீட்டில் பிரவேசித்து ஆசாரியர் மாத்திரமே தவிர வேறொருவரும் புசிக்கத்தகாத தேவசமுகத்து அப்பங்களைக் கேட்டு வாங்கி, தான் புசித்ததுமன்றி தன்னுடனே கூட இருந்தவர்களுக்கும் கொடுத்தான் (யாத் 25:30; யாத் 29:23-33; லேவி 8:12; லேவி 24:5-9; 1சாமு 21:3-6).

ஆண்டவர் (Lord) - κύριος - kyrios - 2962

ஆண்டவர் மொழிச்சொல் - கர்த்தர், எஜமான், ஆண்டவர், ஐயா, உடையவன், தேவரீர் (owner, Lord, and Master of the sabbath) - இயேசு கிறிஸ்து ஓய்வுநாளுக்கும் ஆண்டவர். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப் பட்டதை இஸ்ரவேலர் நினைவுகூர வேண்டுமென்று கர்த்தர் தாமே அவர்களுக்குக் கூறியிருக்கிறார் (உபா 5:15).

6 அதிகாரம்

20. ஓய்வுநாளில் சூம்பின கையையுடைய மனுஷனை சொஸ்தமாக்குகிறார் - (மத் 12:9 மாற்கு 3:1)

லூக்கா 6:6 வேறொரு ஓய்வுநாளிலே அவர் ஜெப ஆலயத்தில் பிரவேசித்து உபதேசித்தார். அங்கே சூம்பின வலதுகையையுடைய ஒரு மனுஷன் இருந்தான்.

லூக்கா 6:7 அப்பொழுது வேதபாரகரும் பரிசேயரும் அவரிடத்தில் குற்றம் பிடிக்கும்படி, ஓய்வுநாளில் சொஸ்தமாக்குவாரோ என்று அவர்மேல் நோக்கமாயிருந்தார்கள்.

லூக்கா 6:8 அவர்களுடைய சிந்தனைகளை அவர் அறிந்து, சூம்பின கையையுடைய மனுஷனை நோக்கி: நீ எழுந்து, நடுவே நில் என்றார். அவன் எழுந்து நின்றான்.

லூக்கா 6:9 அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: நான் உங்களிடத்தில் ஒன்று கேட்கிறேன், ஓய்வுநாட்களில் நன்மை செய்வதோ, தீமை செய்வதோ, ஜீவனைக் காப்பதோ, அழிப்பதோ, எது நியாயம் என்று கேட்டு,

லூக்கா 6:10 அவர்களெல்லாரையும் சுற்றிப்பார்த்து, அந்த மனுஷனை நோக்கி: உன் கையை நீட்டு என்றார். அப்படியே அவன் தன் கையை நீட்டினான்; உடனே அவன் கை மறுகையைப்போல சொஸ்தமாயிற்று.

லூக்கா 6:11 அவர்களோ மூர்க்க வெறிகொண்டு, இயேசுவை என்ன செய்யலாமென்று ஒருவரோடொருவர் ஆலோசித்தார்கள்.

"வேறொரு ஓய்வுநாளிலே" ஓய்வுநாளைக் குறித்து இயேசு கிறிஸ்துவிற்கும் பரிசேயருக்கும் எப்போதும் பிரச்சனை ஏற்படுகிறது. (மாற்கு 3:1-7)

"ஓய்வுநாளில் சொஸ்தமாக்குவாரோ என்று அவர்மேல் நோக்கமாயிருந்தார்கள்" வேதபாரகரும், பரிசேயரும் இயேசுகிறிஸ்துவை அழிப்பதற்கு சமயம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆகையினால் இயேசுவின் மீது ஏதாவது குற்றம் கண்டுபிடிக்க முடியுமா என்று அவரைக் கவனித்துக் கொண்டேயிருக்கிறார்கள்.

"அவர்களுடைய சிந்தனைகளை அவர் அறிந்தார்" - இயேசு கிறிஸ்துவிடம் அறிவை உணர்த்தும் வசனமும், ஆவிகளைப் பகுத்தறியும் வரமும் இருந்தது. (லூக்கா 5:22 ; 1கொரி 12:4-11)

"ஓய்வுநாட்களில் நன்மை செய்வதோ, தீமை செய்வதோ, ஜீவனைக் காப்பதோ, அழிப்பதோ, எது நியாயம்" - தேவனுடைய சித்தத்தை இயேசு வெளிப்படுத்துகிறார். ஓய்வுநாளாக இருந்தாலும் வேறு எந்த விசேஷித்த நாளாக இருந்தாலும் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற வேண்டும். பிரமாணம் மனுஷருக்காக உண்டாக்கப்பட்டிருக்கிறது. மனுஷர் பிரமாணத்திற்காக உண்டாக்கப்படவில்லை. ஆண்டவர் மனுஷனைப் பிரமாணத்திற்கு அடிமையாக்கவில்லை. மனுஷன் ஓய்வு நாளுக்கும் எஜமானனாகஇருக்கிறான். ஓய்வு நாளில் நற்கிரியைகளைச் செய்வதற்கு மனுஷனுக்கு உரிமையுண்டு.

"அவர்களெல்லாரையும் சுற்றிப்பார்த்து அந்த மனுஷனை நோக்கி, உன் கையை நீட்டு என்றார்" - இந்த வாக்கியத்தை மாற்கு எழுதும்போது இயேசு கிறிஸ்து அங்கு கூடியிருந்தவர்களுடைய இருதயக் கடினத்தினிமித்தம் அவர்களைக் கோபத்தோடு பார்த்ததாகக் கூறுகிறார். பரிசேயரும் வேதபாரகரும் இயேசுவின் கேள்விகளுக்குப் பதில் கூறவில்லை. ஆகையினால் தமக்குப் பிரச்சனை வருமென்று தெரிந்தபோதிலும் பரிதாபமாக இருக்கும் சூம்பின கையையுடைய மனுஷனுக்கு உதவி புரிகிறார். ஓய்வுநாளில் இயேசு கிறிஸ்து கிரியை செய்கிறார். பாவம் செய்யவில்லை. பரிதாபமான அந்த மனுஷனுக்கு உதவிபுரிகிறார். இது தேவனுடைய சித்தத்திற்கு விரோதமான செயல் ஆகாது. (எபே 4:26)

"அவர்களோ மூர்க்கவெறிகொண்டார்கள்" - இயேசு நன்மை செய்தார். சூம்பின கையையுடையவன் குணமடைந்தான். ஆனால் வேதபாரகரும் பரிசேயரும் கோபமடைகிறார்கள். தங்களுடைய பாரம்பரிய பழக்கவழக்கங்களுக்கு அவர்கள் முக்கியத்துவம் தருகிறார்கள். ஆனால் தேவையுள்ள ஒரு மனுஷனுக்கு உதவிபுரிய அவர்கள் முன்வரவில்லை. மற்றவர் உதவி புரிவதையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

6 அதிகாரம்

21. பன்னிரெண்டு பேரை அபிஷேகம் பண்ணுகிறார் - (மத் 10:1; மாற்கு 3:13; 6:7; லூக் 9:1)

லூக்கா 6:12 அந்நாட்களிலே, அவர் ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறி, இராமுழுவதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார்.

லூக்கா 6:13 பொழுது விடிந்தபோது அவர் தம்முடைய சீஷர்களை வரவழைத்து, அவர்களில் பன்னிரண்டு பேரைத் தெரிந்து கொண்டு, அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார்.

லூக்கா 6:14 அவர்கள் யாரெனில்: பேதுரு என்று தாம் பேரிட்ட சீமோன், அவன் சகோதரனாகிய அந்திரேயா, யாக்கோபு, யோவான், பிலிப்பு, பர்தொலொமேயு,

லூக்கா 6:15 மத்தேயு, தோமா, அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு, செலோத்தே என்னப்பட்ட சீமோன்,

லூக்கா 6:16 யாக்கோபின் சகோதரனாகிய யூதா, துரோகியான யூதாஸ்காரியோத்து என்பவர்களே.

"அந்நாட்களிலே, அவர் ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறி இராமுழுவதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார்" - நமது ஊழியத்தில் ஆண்டவர் நமக்கு ஒரு வெற்றியைத் தரும்பொழுது நாமும் தேவனிடம் அதிக நேரம் ஜெபம்பண்ண வேண்டும். இப்படி ஜெபம் பண்ணினால் நமக்குள் பெருமை வராது. ஆண்டவர் நம்மைத் தொடர்ந்து ஆசீர்வதிப்பார். தேவனுடைய சமூகத்தில் நம்மை எப்போதும் தாழ்த்தவேண்டும். இதற்கும் தேவனுடைய உதவி தேவை. ஆகையினால் நம்முடைய ஊழிய அனுபவங்களில் தோல்விகள் ஏற்பட்டாலும், வெற்றிகள் ஏற்பட்டாலும் தேவனிடத்தில் அதிகநேரம் நம்மைத் தாழ்த்தி, ஜெபிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

"பன்னிரண்டுபேரைத் தெரிந்து கொண்டு, அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார்" - தம்முடைய சீஷர்களை ஊழியத்திற்கு அனுப்புவதற்கு முன்பாக இயேசு கிறிஸ்து அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார் என்பது தெரிகிறது. லூக்கா 9 மாற்கு 3:13-19=மாற்கு 6:7-13 அப்போஸ்தலர்களின் எண்ணிக்கை பன்னிரண்டு பேர் (மத் 10:2-4, மாற்கு 3:16-19; லூக்கா 6:14-16; அப் 1:13).

"அந்திரேயா" - (மத் 4:18).

"யாக்கோபு" - (மத் 4:21).

"பிலிப்பு" - பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் ஒருவர் (மத் 10:3; மாற்கு 3:18; அப் 1:13). இவருடைய ஊழிய அழைப்பு (யோவான் 1:43). நாத்தான்வேலை இயேசுவிடம் அழைத்து வருகிறவர் (யோவான் 1:45-50). நாத்தான்வேலின் சகோதரர் (லூக்கா 6:16). திரளான ஜனங்களுக்கு போஜனம் கொடுத்தபோது பந்திவிசாரிப்பில் உதவி புரிந்தவர் (யோவான் 6:4-7). கிரேக்கரை இயேசுவிடம் அழைத்து வந்தவர் (யோவான் 12:20-22). இயேசுவிடம் பிதாவைக் காண்பிக்கும்படி கேட்டவர் (யோவான் 14:8-13).

"பர்தொலொமேயு" - (மத் 10:3).

"அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு" - (லூக்கா 24:10).

"செலோத்தே என்னப்பட்ட சீமோன்" - பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் ஒருவர். கானானியன் என்று அழைக்கப்பட்டவர் (மத் 10:4; மாற்கு 3:18). செலோத்தே என்பவர்கள் யூதமார்க்கத்தில் வைராக்கியமான பிரிவினர். ரோமருக்கு எதிராகக் கலகம் பண்ணினவர்கள். லூக்கா 6:15; அப் 1:13). திருச்சபை வரலாற்றின் பிரகாரமாக சீமோனைச் சிரிய தேசத்திலே சிலுவையில் அறைந்து கொன்றார்கள். இவன் யாக்கோபு, மத்தேயு, யூதாஸ் ஆகியோரின் சகோதரர் எனவும் சீமோனைப் பற்றி ஒரு கருத்து இருக்கிறது.

"யூதா" ததேயு, லெபேயு மத் 10:3

"யாக்கோபின் சகோதரன்" இயேசுவின் சீஷர்களில் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகளான சகோதரர்கள் சிலர் இருக்கிறார்கள். அவர்களுடைய விவரம் வருமாறு.

6 அதிகாரம்

1 பேதுருவும், அந்திரேயாவும் (மத் 4:18)

2 யாக்கோபும், யோவானும் (மத் 4:21)

3 பிலிப்புவும், நாத்தான்வேல் என்னும் பர்த்தொலொமேயுவும் (யோவான் 1:43-51)

4 யாக்கோபும், யூதாவும் யூதாஸ்காரியோத்து அல்ல) லேவி மத்தேயுவும் (மாற்கு 2:14 லூக்கா 6:16 அப் 1:13) இந்த யூதா ததேயு, லெபேயு எனவும் அழைக்கப்பட்டான் (மத் 10:3 மாற்கு 3:18) செலோத்தே என்னப்பட்ட சீமோனும் யாக்கோபு யூதா ஆகியோரின் சகோதரராக இருக்கலாம் என்று ஒரு வரலாறு கூறுகிறது "யூதாஸ்காரியோத்து" - இயேசு கிறிஸ்துவின் சீஷர்களுடைய பெயர் பட்டியல் மூன்று இடங்களில் கூறப்பட்டிருக்கிறது. இம்மூன்று இடங்களிலும் இவனுடைய பெயரே கடைசியாக வருகிறது. (மத் 10:4 மாற்கு 3:19, லூக்கா 6:16)

"துரோகி" - யூதாஸ்காரியோத்தைப் பற்றிக் கூறும்போதெல்லாம் அவன் துரோகி என்று அழைக்கப்படுகிறான் மனுஷ வரலாற்றில் துரோகி என்னும் பட்டம் அவனைவிட்டு அகலாது.

22. இயேசு திரளான ஜனங்களை சொஸ்தமாக்குகிறார் - (மத் 12:15 மாற்கு 3:7

லூக்கா 6:17 பின்பு அவர் அவர்களுடனே கூட இறங்கி, சமனான ஒரு இடத்திலே நின்றார் அங்கே அவருடைய சீஷரில் அநேகம் பேரும், அவருடைய உபதேசத்தைக் கேட்கும்படிக்கும், தங்கள் வியாதிகளினின்று குணமாக்கப்படும் படிக்கும், யூதேயா தேசத்துத் திசைகள் யாவற்றிலிருந்தும் எருசலேம் நகரத்திலிருந்தும், தீரு சீதோன் பட்டணங்கள் இருக்கிற கடலோரத்திலிருந்தும் வந்தவர்களாகிய திரளான ஜனங்களும் இருந்தார்கள்

லூக்கா 6:18 அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களும் வந்து, ஆரோக்கியமடைந்தார்கள்

லூக்கா 6:19 அவரிடத்திலிருந்து வல்லமை புறப்பட்டு எல்லாரையும் குணமாக்கின படியினாலே, ஜனங்கள் யாவரும் அவரைத் தொடும்படிக்கு வகைதேடினார்கள்

"பின்பு அவர் அவர்களுடனேகூட இறங்கி, சமனான ஒரு இடத்திலே நின்றார்" - இயேசு கிறிஸ்து மலையிலே இரவு முழுவதும் ஜெபம் பண்ணிவிட்டு, இப்பொழுது சமமான இடத்திற்கு இறங்கி வருகிறார் வியாதியஸ்தர்களை அடுத்த நாளில் குணமாக்குவதற்கு ஆவிக்குரிய ரீதியாக இயேசு கிறிஸ்து தம்மை ஆயத்தப்படுத்தி இருக்கிறார்

வாதிக்கப்பட்டவர் (vexed) - ὀχλέω - ochleoo - 3791

வினைச்சொல் - வாதி (to mob, beset, harass) (அப் 5:16)

"அசுத்த ஆவிகள்" - (லூக்கா 4:33

வல்லமை (virtue) - δύναμις - dynamis - 1411

பெண்பால் பெயர்ச்சொல் - வல்லமை, பலத்த செய்கைகள் அற்புதங்கள் திறமை, பலம், சத்துவம், சக்தி, கருத்து உக்கிரம் பிரகுதி 2பேதுரு 1:3

"எல்லாரையும் குணமாக்கினார்" தம்மிடத்தில் வந்த வியாதியஸ்தர் அனைவரையும் இயேசு குணமாக்கினார் அவரால் குணமாக்க முடியாத வியாதி என்று எதுவுமில்லை வந்தவர்கள் அனைவருமே சுகமானார்கள் (மத் 13:58)

23. மலைப்பிரசங்கத்தின் ஒரு பகுதி

(1) நான்கு பாக்கியவான்கள் (மத் 5:3

லூக்கா 6:20 அப்பொழுது அவர் தம்முடைய சீஷர்களை நோக்கிப்பார்த்து, தரித்திரராகிய நீங்கள் பாக்கியவான்கள் தேவனுடைய ராஜ்யம் உங்களுடையது.

லூக்கா - தொகுப்புரை

6 அதிகாரம்

லூக்கா 6:21 இப்பொழுது பசியாயிருக்கிற நீங்கள் பாக்கியவான்கள் திருப்தியடைவீர்கள் இப்பொழுது அழுகிற நீங்கள் பாக்கியவான்கள் இனி நகைப்பீர்கள்

லூக்கா 6:22 மனுஷகுமாரன் நிமித்தமாக ஜனங்கள் உங்களைப் பகைத்து, உங்களைப் புறம்பாக்கி, உங்களை நிந்தித்து, உங்கள் நாமத்தைப் பொல்லாததென்று தள்ளிவிடும்போது நீங்கள் பாக்கியவான்களாயிருப்பீர்கள்

லூக்கா 6:23 அந்நாளிலே நீங்கள் சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள் பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும். அவர்களுடைய பிதாக்கள் தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்

தீர்க்கதரிசன எண் - 18

"தரித்திரராகிய நீங்கள் பாக்கியவான்கள் தேவனுடைய ராஜ்யம் உங்களுடையது____ லூக்கா 6:20-26 இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறவில்லை. மத் 5-7 ஆகிய அதிகாரங்களில் இயேசு கிறிஸ்துவின் மலைப்பிரசங்கத்தை வாசிக்கிறோம் லூக்கா இங்கு எழுதியிருப்பது மலைப்பிரசங்கம் அல்ல. வேறொரு வேளையில் வேறொரு இடத்தில் இயேசு கிறிஸ்து கூறிய உபதேசங்களை லூக்கா இங்கே எழுதியிருக்கிறார் மத் 5-7 ஆகிய அதிகாரங்கள் இயேசு கிறிஸ்து மலையில் அமர்ந்து பேசியவையாகும் ஆனால் லூக்கா எழுதியிருக்கும் இந்தப் பிரசங்கமும். இயேசு கிறிஸ்து சமமான ஒருஇடத்திலே நின்று பேசியவையாகும் லூக்கா 6:17) இயேசு கிறிஸ்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாக ஊழியம் செய்து வந்தார் அக்காலத்தில் தாம் ஏற்கெனவே கூறியிருந்த சத்தியங்களை மறுபடியுமாகக் கூறியிருப்பதற்கு வாய்ப்புள்ளது.

"இப்பொழுது பசியாயிருக்கிற நீங்கள் பாக்கியவான்கள்; திருப்தியடைவீர்கள்" - வருங்காலத்தில் யாரெல்லாம் பாக்கியவான்களாக இருப்பார்கள் என்று இயேசு கிறிஸ்து நான்கு பிரிவினரைப் பற்றி இங்கு குறிப்பிடுகிறார் (லூக்கா 6:20-23

1. தரித்திரர் (லூக்கா 6:20; மத் 5:3
2. பசியாயிருக்கிறவர்கள் (லூக்கா 6:21, மத் 5:6)
3. அழுகிறவர்கள் லூக்கா 6:2; மத் 5:4
4. பகைக்கப்படுகிறவர்கள் (லூக்கா 6:22, மத் 5:10-12)

"அந்நாளிலே நீங்கள் சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள்" - நீங்கள் குதித்துக் களிகூருங்கள் (leap for joy) உங்களைப் புறம்பாக்கி உங்களைப் பகைத்து உங்களை நிந்திக்கும்போது இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நீங்கள் சந்தோஷத்தோடு குதித்துப் பாடுங்கள் அப்போது தேவனுடைய ஆசீர்வாதம் உங்கள்மீது இறங்குவதை உணருவீர்கள்

"பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்" - புதிய ஏற்பாட்டிலும் பழைய ஏற்பாட்டிலும் தேவனுடைய பிள்ளைகளுக்குப் பல வெகுமதிகள் வாக்குத் தத்தம் பண்ணப்பட்டிருக்கிறது (சங் 19:1 சங் 58:11 சங் 91:8 நீதி 11:18 ஏசா 40:10 ஏசா 62:11; மத் 5:12, மத் 6:1-18 மத் 10:41-42; மத் 16:27; மாற்கு 9:41 லூக்கா 6:23,35 1கொரி 3:8,15 1கொரி 9:17-18; கொலோ 2:18 கொலோ 3:24; 2தீமோ 4:14, எபி 10:35, வெளி 11:18; வெளி 22:12)

"அவர்களுடைய பிதாக்கள் தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்" பிதாக்களுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் அவர்கள் நான்கு விதமான நிந்தையைக் கொடுத்தார்கள் அவையாவன

1. பகைத்தார்கள் 1இராஜா 18:4 1இராஜா 22:8)
2. புறம்பாக்கினார்கள் (எரே 12:9-11
3. நிந்தித்தார்கள் (1இராஜா 22:24-28 2நாளா 36:16; நெகே 9:26

லூக்கா - தொகுப்புரை

6 அதிகாரம்

4 பாடுகளை அனுபவிக்க வைத்தார்கள் (2நாளா 24:20-22; மத் 23:34-36)

(2) நான்கு ஐயோக்கள் - (மத் 23:23)

லூக்கா 6:24 ஐசுவரியவான்களாகிய உங்களுக்கு ஐயோ, உங்கள் ஆறுதலை நீங்கள் அடைந்து தீர்ந்தது.

லூக்கா 6:25 திருப்தியுள்ளவர்களாயிருக்கிற உங்களுக்கு ஐயோ, பசியாயிருப்பீர்கள். இப்பொழுது நகைக்கிற உங்களுக்கு ஐயோ, இனி துக்கப்பட்டு அழுவீர்கள்.

லூக்கா 6:26 எல்லா மனுஷரும் உங்களைக்குறித்துப் புகழ்ச்சியாய்ப் பேசும்போது உங்களுக்கு ஐயோ, அவர்கள் பிதாக்கள் கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்.

"ஐசுவரியவான்களாகிய உங்களுக்கு ஐயோ" தண்டனை பெறும் நான்கு பிரிவினர்கள்

1 அநீதியான ஐசுவரியவான்கள் (லூக்கா 6:24; யாக் 5)

2 பேராசையுள்ளவர்கள் (லூக்கா 6:25; லூக்கா 12:15-21; 1தீமோ 6:9)

3 புகழ்ச்சியை விரும்புகிறவர்கள் (லூக்கா 6:25; 2தீமோ 3; யோவான் 2:15-17)

4 மனுஷரைப் பிரியப்படுத்துகிறவர்கள் (லூக்கா 6:26; கலா 1:10; யோவான் 12:43)

(3) அன்பின் நான்கு பிரமாணங்கள் - (மத் 5:38)

லூக்கா 6:27 எனக்குச் செவிகொடுக்கிற உங்களுக்கு நான் சொல்லுகிறேன், உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள்.

லூக்கா 6:28 உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள், உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம்பண்ணுங்கள்.

"நான் சொல்லுகிறேன் உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள் உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள்" - (மத் 5:39-48)

(4) பழிவாங்குதலின் நான்கு பிரமாணங்கள் - (மத் 5:38)

லூக்கா 6:29 உன்னை ஒரு கன்னத்தில் அறைகிறவனுக்கு மறு கன்னத்தையும் கொடு. உன் அங்கியை எடுத்துக் கொள்ளுகிறவனுக்கு உன் வஸ்திரத்தையும் எடுத்துக்கொள்ளத் தடைபண்ணாதே.

லூக்கா 6:30 உன்னிடத்தில் கேட்கிற எவனுக்கும் கொடு; உன்னுடையதை எடுத்துக் கொள்ளுகிறவனிடத்தில் அதைத் திரும்பக் கேளாதே.

"அங்கி" (cloke) - பிரயாணம் செய்யும் போது அல்லது வேலையில்லாமல் ஓய்வாக இருக்கும் போது சரீரத்திற்கு வெளியே அணியும் வஸ்திரம்.

"வஸ்திரம்" - அங்கிக்கு உள்ளே அணியும் வஸ்திரம்.

"உன்னிடத்தில் கேட்கிற எவனுக்கும் கொடு. உன்னுடையதை எடுத்துக் கொள்ளுகிறவனிடத்தில் அதைத் திரும்பக் கேளாதே" இந்த வாக்கியம் போர்ச் சேவகர்களையும் வரிவசூலிக்கும் ஆயக்காரர்களையும் குறிக்கிறது. அவர்கள் ஜனங்களிடத்திலே எந்தவித இரக்கமும் காண்பிக்காமல் பலாத்காரத்தோடு அபகரித்துக் கொள்வார்கள். வரிக்கட்டுவதற்காக ஏழை ஜனங்கள் தங்களிடமுள்ள உடைமைகளை எல்லாம் சில வேளைகளில் விற்றுவிடுவதுமுண்டு (மத் 18:25,28; 30,34). இராஜாவின் சேவகர்கள் தங்களுக்குத் தேவையானதைப் போது ஜனங்களிடம் பலாத்காரமாக அபகரித்துக் கொள்வார்கள். ஜனங்களுடைய பொருட்களை மட்டுமல்ல தங்களுக்குத் தேவையானால், ஜனங்கள் தங்களுக்குச் சேவை புரிய வேண்டுமென்றும் வற்புறுத்துவார்கள் (மத் 5:41). ராஜாவின் சேவகருக்குப் பணிபுரிய மறுப்பது ராஜாவை அவமதிக்கும் செயலாகக் கருதப்பட்டது.

6 அதிகாரம்

(5) தங்கச்சட்டம் – (மத் 7:12)

லூக்கா 6:31 மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்

லூக்கா 6:32 உங்களைச் சிநேகிக்கிறவர் களையே நீங்கள் சிநேகித்தால் உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் தங்களைச் சிநேகிக் கிறவர்களைச் சிநேகிக்கிறார்களே

லூக்கா 6:33 உங்களுக்கு நன்மைசெய்கிறவர் களுக்கே நீங்கள் நன்மைசெய்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் அப்படிச் செய்கிறார்களே

லூக்கா 6:34 திரும்பக் கொடுப்பார்களென்று நம்பி நீங்கள் கடன்கொடுத்தால் உங்களுக்குப் பலன் என்ன? திரும்பத் தங்களுக்குக் கொடுக்கப்படும்படியாகப் பாவிகளும் பாவிகளுக்குக் கடன் கொடுக்கிறார்களே

"மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" - இந்த வாக்கியம் தங்கச்சட்டம் (The golden rule) என்று அழைக்கப்படுகிறது. லேவி 19:18 ஆவது வசனம் கூறும் உபதேசமும் தங்கச்சட்டம் என்று அழைக்கப்படுகிறது. "பழிக்குப்பழி வாங்காமலும், உன் ஜனப்புத்திரர்மேல் பொறாமை கொள்ளாமலும், உன்னில் நீ அன்புகூருவது போல பிறனிலும் அன்புகூருவாயாக" நம்மிடம் உள்ள எல்லாவற்றையும் மற்றவர்களுக்குக் கொடுத்துவிட வேண்டும் என்பது இதன் பொருளல்ல. ஏனெனில் மற்றவர்கள் தங்களிடம் உள்ள எல்லாப் பொருள்களையும் நமக்குக் கொடுத்துவிட வேண்டுமென்று நாமும் எதிர்பார்ப்பதில்லை. அப்படி எதிர்பார்ப்பது பேராசையாகும். நாம் பிறருடைய பொருளை இச்சிக்கக்கூடாது. (யாத் 20:17; உபா 5:21; ரோமர் 13:9; 1கொரி 5:11; 1கொரி 6:9-11; எபே 5:5)

இந்த வசனத்தின் மையக்கருத்து, நாம் இரக்கமுள்ளவர் களாகவும், அன்புள்ளவர் களாகவும், நீதியுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

"உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகித்தால், உங்களுக்குப் பலன் என்ன?____" - இயேசு கிறிஸ்து இந்த வசனத்தில் தங்கச்சட்டத்தை மூன்று விதமாக விளக்கியுரைக்கிறார்

1. பாவிகள் சிநேகிப்பதுபோல சிநேகிக்காமல் தேவனுடைய பிள்ளைகளாகச் சிநேகியுங்கள்
2. பாவிகள் நன்மை செய்கிறதுபோல நன்மை செய்யாமல், தேவனுடைய பிள்ளைகளாக நன்மை செய்யுங்கள்
3. பாவிகள் கடன்கொடுப்பதுபோல கடன் கொடுக்காமல் தேவனுடைய பிள்ளைகளாகக் கடன்கொடுங்கள்

தங்கச்சட்டத்தில் நான்கு விதமான காரியங்கள் அடங்கியுள்ளன. அவையாவன

1. அன்பின் நான்கு பிரமாணங்கள் (லூக்கா 6:27-28)
2. எதிர்த்து நிற்கும் நான்கு பிரமாணங்கள் (லூக்கா 6:29-30)
3. இரக்கத்தின் நான்கு பிரமாணங்கள் (லூக்கா 6:35-36)
4. நீதியின் நான்கு பிரமாணங்கள் (லூக்கா 6:37-38)

(6) இரக்கத்தின் ஐந்து பிரமாணங்கள்

லூக்கா 6:35 உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மைசெய்யுங்கள், கைமாறு கருதாமல் கடன்கொடுங்கள்; அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள்; அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே

லூக்கா 6:36 ஆகையால் உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறது போல நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள்

லூக்கா – தொகுப்புரை

6 அதிகாரம்

"உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள் நன்மைசெய்யுங்கள் கைம்மாறு கருதாமல் கடன்கொடுங்கள்" - லூக்கா 6.32-34 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற அன்பு, நன்மைசெய்தல் கடன்கொடுத்தல் ஆகிய பிரமாணங்கள் மறுபடியுமாகக் கூறப்பட்டிருக்கிறது இவற்றோடு இரக்கத்தின் பிரமாணம் சேர்க்கப்பட்டிருக்கிறது. (லூக்கா 6.35-36)

கடன்கொடுப்பது

"திரும்பக் கொடுப்பார்களென்று நம்பி நீங்கள் கடன்கொடுத்தால் உங்களுக்குப் பலன் என்ன? திரும்பத் தங்களுக்குக் கொடுக்கப் படும்படியாகப் பாவிகளும் பாவிகளுக்குக் கடன் கொடுக்கிறார்களே இவர்களுக்கு தேவனிடத்தில் ஒரு பலனும் இல்லை கைம்மாறு கருதாமல் கடன்கொடுங்கள்" (லூக்கா 6.34-35)

நியாயப்பிரமாணத்தின் பிரகாரம் சகோதரரிடம் வட்டி வாங்கக்கூடாது. (யாத் 22.25-27 லேவி 25.35-37 உபா 23.19-20, நெகே 5.1-13; சங் 15.5 நீதி 28.8; எசே 18.8-17; எசே 22.12) பலாத்காரமாக கடன் கொடுத்ததற்கு அடமானமாக எதையும் அபகரிக்கக்கூடாது. (உபா 24.6-17) மனுஷருக்கு உதவி புரியும் நோக்கத்தோடு கடன் கொடுக்க வேண்டும். (சங் 37.25-26, சங் 112.5). ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான் (நீதி 19.17) கடன் வாங்குகிறவன் கடன் கொடுக்கிறவனுக்கு அடிமையாகிறான் (நீதி 22.7)

விசுவாசிகள் தேவையுள்ளவர்களுக்கு உதவி புரிய வேண்டும். கைம்மாறு கருதாமல், பிரதிபலன் எதிர்பாராமல், உதவி புரிய வேண்டும் (மத் 5.42 லூக்கா 6.34-35) கடன் வாங்கியவர்கள் கடனைத் திருப்பிச் செலுத்தவில்லையென்றால் அவர்களுடைய பொருட்கள் எதையும் அபகரிக்கக்கூடாது. அவ்வாறு அபகரித்தால் தேவனிடத்தில் அவர்களுக்குப் பலன் இல்லை. கடன் வாங்கியவன் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய பொறுப்புள்ளவன் (யாத் 22.14-15; சங் 37.21 வாங்கிய எல்லாக் கடன்களையும் உரிய நேரத்தில் செலுத்தி விட வேண்டும். (யாத் 22.10-15; லேவி 25.14-25; மத் 5.25-26.40; 2இராஜா 4.1-7 லூக்கா 6.37

"உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள்" - லூக்கா 6.27-38 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பிரமாணங்களுக்குக் கீழ்ப்படியும்போது இரண்டு ஆசீர்வாதங்கள் கிடைக்கும் அவையாவன

1 பலன் மிகுதியாயிருக்கும். (லூக்கா 6.35; லூக்கா 6.23)

2 உன்னதமான தேவனுக்கு பிள்ளைகளாக இருப்பார்கள் (லூக்கா 6.35)

நன்றி (kind) - χρηστότης - chreestotees - 5543

பொருள் - மெதுவான, நல்ல, நன்மையான, தயவான, தயையுள்ள (morally good, kind, generous) - ஆவியின் கனி (கலா 5.22-23 நல்லவராக இருக்க வேண்டுமென்றும் கட்டளை (லேவி 19.34 லூக்கா 6.35-36, ரோமர் 5.1-5 கலா 6.10 எபே 4.32 கொலோ 3.12-14 1பேதுரு 3.8 (பேதுரு 4.8 2பேதுரு 1.7 (யோவான் 3.17 8

நற்குணத்திற்கு எடுத்துக்காட்டுக்கள்

1 தேவன் (சங் 25.8, சங் 107.1, லூக்கா 6.35)

2 இயேசு (அப் 10.38)

3 யாக்கோபிடம் பார்வோன் (ஆதி 47.5-6)

4 வேவுகாரரிடம் ராகாப் (யோசு 2.6-16)

5 சவுலிடம் தாவீது (1சாமு 24

6 பெனாதாத்திடம் ஆகாப் (1இராஜா 20.31)

7 மரியாளிடம் யோசேப்பு (மத் 1.19

6 அதிகாரம்

இரக்கமுள்ள (merciful) - οἰκτίρμων - oiktirmoon - 3629

பொருள் - இரக்கமுள்ள (merciful, compassionate) லூக்கா 6.36; யாக் 5.11) இரக்கமுள்ளவர்கள் மற்றவர்களைக் கேட்காமலேயே மன்னித்து விடுவார்கள் தங்களுக்குத் தீங்கு நேர்ந்தாலும் தொடர்ந்து பிறருக்கு நன்மையையே செய்வார்கள் தங்களுக்கு ஏற்பட்ட மனக்காயங்களை விரைவில் மறந்து விடுவார்கள் இரக்கமுள்ளவர்களுக்கு வேத வாக்கியத்தில் பல ஆசீர்வாதங்கள் கூறப்பட்டிருக்கிறது. மத் 5.7 கொலோ 3.12-13 யாக் 2.13; சங் 18.25; நீதி 3.3-4, நீதி 11.17 நீதி 14.21-22 நீதி 21.21 ஓசி 12.6 மீகா 6.8

இரக்கமுள்ளவர்களுக்கு எடுத்துக்காட்டு

1 தேவன் லூக்கா 6.36 லூக்கா 18.13-14 சங் 103.13

2 இயேசு (மத் 9.36 மத் 14.14)

3 யோசேப்பிடம் சிறைச்சாலைக் காவல்காரன் ஆதி 39.21-23)

4 ராகாபிடம் யோசுவா (யோசு 6.25)

5 சவுலிடம் தாவீது (சாமு 24.10-17)

6 ஆண்டவன் ஊழியக்காரனிடம் மத் 18.27

7 இஸ்ரவேலின் இராஜாக்கள் இராஜா 20.31

(7) நீதியின் நான்கு பிரமாணங்கள் (மத் 7.1)

லூக்கா 6.37 மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள் அப்பொழுது நீங்களும் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதிருப்பீர்கள்; மற்றவர்களை ஆக்கினைக் குள்ளாக்கும்படி தீர்க்காதிருங்கள், அப்பொழுது நீங்களும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதிருப்பீர்கள், விடுதலை பண்ணுங்கள் அப்பொழுது நீங்களும் விடுதலை பண்ணப்படுவீர்கள்

லூக்கா 6.38 கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும் அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள் நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்

"மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள் அப்பொழுது நீங்களும் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதிருப்பீர்கள்" - (மத் 7.1-5 ரோமர் 2.1-3 ரோமர் 14.4

"விடுதலைபண்ணுங்கள்" (forgiven) - (மத் 6.14-15 மாற்கு 11.25-26

"மடி" (bosom) - வஸ்திரத்தின் மடிப்புகளுக்கு மடி என்று பெயர் இதன் பயன்பாடுகள் சிறுபிள்ளைகளை மடியில் தூக்கிச் செல்வார்கள் (ஏசா 40.12 ஆடுகளையும் (2சாமு 12.3 மேலும் பல பொருட்களையும் (சங் 17.23 சங் 2.14 2இராஜா 4.39) மடியில் தூக்கிச் செல்வது வழக்கம். உள்ளான ஜீவியத்தையும் உணர்வுகளையும் உருவகமாகக் குறிப்பதற்கு மடி என்னும் சொல் பயன்படுத்தப்படுகிறது (யோபு 31.33 சங் 79.12 சங் 89.50) நன்மை செய்வதற்காக இரட்டிப்பான நன்மைகள் என்னும் பொருளில் லூக்கா6.38 இல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது

(8) குருடரான தலைவர்களைப் பின்பற்றுவதற்கு எதிரான எச்சரிப்பு - மத் 15.14

லூக்கா 6.39 பின்னும் அவர் ஒரு உவமையை அவர்களுக்குச் சொன்னார் குருடனுக்குக் குருடன் வழிகாட்டக் கூடுமோ? இருவரும் பள்ளத்தில் விழுவார்கள் அல்லவா

உவமை எண் - 4

"குருடனுக்குக் குருடன் வழிகாட்டக் கூடுமோ? இருவரும் பள்ளத்தில் விழுவார்கள் அல்லவா?" (லூக்கா 6.39 ஆவிக்குரிய குருட்டுத் தன்மையையும், அறிவையும் விளக்குகிறது. ஏசா 56.10 மத் 15.14)

6 அதிகாரம்

(9)ஒவ்வொரு விசுவாசியின் இலக்கு - (மத் 5:48;10:24; 1யோவான் 3:2; 4:17)

லூக்கா 6:40 சீஷன் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல, தேறினவன் எவனும் தன் குருவைப்போலிருப்பான்.

"சீஷன் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல, தேறினவன் எவனும் தன் குருவைப் போலிருப்பான்" - இயேசு கிறிஸ்து நம்மிடம் எதிர்பார்க்கிற பிரகாரம் நாம் அவரைப்போல இருக்க வேண்டும். (மத் 10:25) இயேசு கிறிஸ்துவிற்கு மேலாக இருக்கலாம் என்று நாம் சிந்திக்கக் கூடாது. அதே சமயத்தில் அவர் நம்மிடம் எதிர்பார்க்கும் அளவைவிட குறைவாகவும் இருக்கக்கூடாது. (யோவான் 14:12; யோவான் 17:18; யோவான் 20:21; எபே 4:13; 1யோவான் 2:6; 1யோவான் 4:17)

(10) துரும்பும், உத்திரமும் - (மத் 7:1; ரோமர் 2:1; யாக் 5:16)

லூக்கா 6:41 நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?

லூக்கா 6:42 அல்லது நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல் உன் சகோதரனை நோக்கி: சகோதரனே, நான் உன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப் போடட்டும் என்று நீ சொல்லுவதெப்படி? மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு, பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட ...

உள்ளமை எண் - 5

"நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?" (லூக்கா 6:41-42). நம்முடைய குற்றங்களையும், நம்மிடத்தில் காணப்படும் தவறுகளையும் கவனித்துப் பாராமல் எப்போதும் மற்றவர்களுடைய குற்றங்களையும் மற்றவர்களுடைய தவறுகளையும் கவனித்துக் கொண்டு இருக்கக்கூடாது.

(11) வாயின் பேச்சும் கிரியைகளும் - (மத் 7:15)

லூக்கா 6:43 நல்ல மரமானது கெட்ட கனிகொடாது, கெட்ட மரமானது நல்ல கனிகொடாது.

லூக்கா 6:44 அந்தந்தமரம் அதனதன் கனியினால் அறியப்படும்; முட்செடிகளில் அத்திப் பழங்களைப் பறிக்கிறதுமில்லை, நெருஞ்சிச்செடியில் திராட்சைப் பழங்களைப் பறிக்கிறதுமில்லை.

லூக்கா 6:45 நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான்; பொல்லாத மனுஷன் தன் இருதயமாகிய பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக்காட்டுகிறான்; இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய் பேசும்.

லூக்கா 6:46 என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற்போகிறதென்ன?

உள்ளமை எண் - 6

"நல்ல மரமானது கெட்ட கனிகொடாது, கெட்ட மரமானது நல்ல கனிகொடாது" (லூக்கா 6:43-45) மனுஷருடைய இருதயத்திலிருந்து வெளிவரும் நன்மையையும் தீமையையும் விளக்குகிறது (மத் 7:15-23; மத் 12:33-35; ரோமர் 2:1-3)

முட்செடி (bramble) - βάτος - batos 942

ஆண்பால் அல்லது பெண்பால் பெயர்ச்சொல் - முட்செடி (bush) (லூக்கா 6:44; லூக்கா 20:37; மாற்கு 12:26; அப் 7:30-35) செப்துவஜிந்த் கிரேக்க மொழி பழைய ஏற்பாட்டிலும் இதே சொல்லே பயன்படுத்தப்பட்டிருக்கிறது (யாத் 3:2-4)

6 அதிகாரம்

"நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான்" - 1கொரி 13:4-8 கலா 5:22-23 கொலோ 3:12-15 2பேதுரு 1:3-8

"பொல்லாத மனுஷன் தன் இருதயமாகிய பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக்காட்டுகிறான் இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய் பேசும்" - (மத் 15:19; மாற்கு 7:21 ரோமர் 1:21-32, 1கொரி 6:9-11 கலா 5:19-21)

"என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற்போகிறதென்ன?" - நாம் நம்மை இயேசுவின் விசுவாசிகள் என்று கூறிக்கொண்டாலும், இயேசு கிறிஸ்துவை ஆண்டவர் என்று கூறிக்கொண்டாலும் அவருடைய உபதேசங்களுக்குக் கீழ்ப்படிந்து ஜீவிப்பது மிகவும் முக்கியம் (மத் 7:21-23 1கொரி 6:9-11 கலா 5:19-21 ரோமர் 6:16-23, ரோமர் 8:12-13)

(12) இரண்டு அஸ்திபாரங்களைப் பற்றிய உவமை - (6:47-49) (மத் 7:24

லூக்கா 6:47 என்னிடத்தில் வந்து, என் வார்த்தைகளைக் கேட்டு, அவைகளின்படி செய்கிறவன் யாருக்கு ஒப்பாயிருக்கிறானென்று உங்களுக்குக் காண்பிப்பேன்

லூக்கா 6:48 ஆழமாய்த் தோண்டி, கற்பாறையின் மேல் அஸ்திபாரமபோட்டு, வீடுகட்டுகிற மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்; பெருவெள்ளம் வந்து நீரோட்டம் அந்த வீட்டின்மேல் மோதியும் அதை அசைக்கக் கூடாமற்போயிற்று ஏனென்றால் அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது

லூக்கா 6:49 என் வார்த்தைகளைக் கேட்டும் அவைகளின்படி செய்யாதவனோ அஸ்திபாரமில்லாமல் மண்ணின்மேல் வீடுகட்டினவனுக்கு ஒப்பாயிருக்கிறான்; நீரோட்டம் அதின்மேல் மோதினவுடனே அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்

உவமை எண் - 7

"ஆழமாய்த் தோண்டி கற்பாறையின் மேல் அஸ்திபாரமபோட்டு, வீடுகட்டுகிற மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான் ...." (லூக்கா 6:48-49) தேவனுடைய வார்த்தையைக் கேட்பதினால் ஏற்படும் இரண்டு வெவ்வேறு விளைவுகளை இந்த உவமை விளக்குகிறது.

"என் வார்த்தைகளைக் கேட்டும் அவைகளின்படி செய்யாதவனோ" "என் வார்த்தைகளைக் கேட்டு, அவைகளின்படி செய்கிறவன்" என்று லூக்கா 6:37 ஆவது வசனத்தில் வாசிக்கிறோம். இயேசு கிறிஸ்துவினுடைய உபதேசங்களைக் கேட்டும் அதற்குக் கீழ்ப்படியவில்லையென்றால் மனுஷனுக்கு ஆசீர்வாதமில்லை

லூக்கா - தொகுப்புரை

7 அதிகாரம்

24. இயேசு நூற்றுக்கதிபதியின் வேலைக்காரனை சொஸ்தமாக்குகிறார் - (மத் 8:5)

லூக்கா 7:1 அவர் தம்முடைய வார்த்தைகளையெல்லாம் ஜனங்களுடைய காதுகள் கேட்கும்படி சொல்லி முடித்தபின்பு, கப்பர்நகூமுக்குப் போனார்.

லூக்கா 7:2 அங்கே நூற்றுக்கு அதிபதியாகிய ஒருவனுக்குப் பிரியமான வேலைக்காரன் வியாதிப்பட்டு மரண அவஸ்தையாயிருந்தான்.

லூக்கா 7:3 அவன் இயேசுவைக்குறித்துக் கேள்விப்பட்டபோது, அவர் வந்து தன் வேலைக்காரனைக் குணமாக்க வேண்டுமென்று அவரை வேண்டிக்கொள்ளும்படி யூதருடைய மூப்பரை அவரிடத்தில் அனுப்பினான்.

லூக்கா 7:4 அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து, அவரைக் கருத்தாய் வேண்டிக்கொண்டு: நீர் இந்தத் தயவுசெய்கிறதற்கு அவன் பாத்திரனாயிருக்கிறான்.

லூக்கா 7:5 அவன் நம்முடைய ஜனத்தை நேசிக்கிறான், நமக்கு ஒரு ஜெபஆலயத்தையும் கட்டினான் என்றார்கள்.

லூக்கா 7:6 அப்பொழுது இயேசு அவர்களுடனே கூடப்போனார். வீட்டுக்குச் சமீபமானபோது, நூற்றுக்கு அதிபதி தன் சிநேகிதரை நோக்கி: நீங்கள் அவரிடத்தில் போய், ஆண்டவரே, நீர் வருத்தப்பட வேண்டாம்; நீர் என் வீட்டு வாசலுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல.

லூக்கா 7:7 நான் உம்மிடத்தில் வரவும் என்னைப் பாத்திரனாக எண்ணவில்லை, ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்.

லூக்கா 7:8 நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும், எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற சேவகருமுண்டு, நான் ஒருவனைப் போவென்றால் போகிறான், மற்றொருவனை வாவென்றால் வருகிறான், என் வேலைக்காரனை இதைச் செய்யென்றால் செய்கிறான் என்று நான் சொன்னதாகச் சொல்லுங்கள் என்று அவர்களை அனுப்பினான்.

லூக்கா 7:9 இயேசு இவைகளைக் கேட்டு, அவனைக் குறித்து ஆச்சரியப்பட்டு, திரும்பி, தம்மைப் பின்செல்லுகிற திரளான ஜனங்களை நோக்கி: இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

லூக்கா 7:10 அனுப்பப்பட்டவர்கள் வீட்டுக்குத் திரும்பிவந்தபோது, வியாதியாய்க் கிடந்த வேலைக்காரன் சுகமடைந்திருக்கிறதைக் கண்டார்கள்.

"அவர் தம்முடைய வார்த்தைகளையெல்லாம் ஜனங்களுடைய காதுகள் கேட்கும்படி சொல்லி முடித்தபின்பு"- சமனான பிரதேசத்தில் இயேசு கிறிஸ்து தமது பிரசங்கத்தைக் கூறி முடித்த பின்பு என்று பொருள்படும். (லூக்கா 6:17) இந்தப் பூமியில் இயேசு கொடுக்க வேண்டிய எல்லா உபதேசங்களும் என்று பொருள்படாது. ஏனென்றால் அவர் இன்னும் அநேகக் காரியங்களைப் பிரசங்கம் பண்ண வேண்டியிருக்கிறது. இயேசு ஜனங்களோடே உவமைகளாகப் பேசினார், உவமைகளினாலேயன்றி, அவர்களோடே பேசவில்லை. (மத் 13:34) இந்த வாக்கியத்தை ஒருசிலர் தவறுதலாகப் புரிந்து கொண்டு இயேசு கிறிஸ்து கூறியிருக்கும் எல்லா உபதேசங்களுமே உவமைகள் தான் என்று வியாக்கியானம் பண்ணுகிறார்கள். மத் 13 ஆவது அதிகாரத்திலுள்ள செய்திக்கு மட்டுமே இந்த வசனம் பொருந்தும். இதுபோலவே "அவர் சொல்லி முடித்தபின்பு" (லூக்கா 7:1) என்னும் வாக்கியம் இந்தக் குறிப்பிட்ட பிரசங்கத்தைச் செய்து முடித்தபின்பு என்று பொருள்படும்.

"கப்பர்நகூம்" - இயேசு கிறிஸ்துவைத் தமது சொந்த ஊராகிய நாசரேத்தில் ஜனங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. (மத் 4:13) அதன்பின்பு அவர் தமது ஊழிய ஸ்தலத்தைக் கப்பர்நகூமிற்கு மாற்றினார். நாசரேத்திலுள்ள ஜனங்கள் தங்களுடைய அவிசுவாசத்தினாலும் இருதயக் கடினத்தினாலும் தேவனுடைய மகிமையைக் காணமுடியாதவர்களாக இருந்தார்கள்.

7 அதிகாரம்

"நூற்றுக்கு அதிபதியாகிய ஒருவனுக்குப் பிரியமான வேலைக்காரன்" - மத் 8:5-13 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற காரியமும், இதுவும் ஒன்றுதானா என்பது தெரியவில்லை. ஒருசிலர் இரண்டு வசனப் பகுதிகளிலும் கூறப்பட்டிருக்கும் நூற்றுக்கதிபதி ஒரே நபர்தான் என்று கூறுகிறார்கள். ஆனால் வெவ்வேறு நிகழ்ச்சிகள் என்கிறார்கள்.

"வியாதிப்பட்டு அவஸ்தையாயிருந்தான்" - மத்தேயு 8 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கிற வியாதி திமிர்வாதமாகும்.

"நீர் இந்தத் தயவுசெய்கிறதற்கு அவன் பாத்திரனாயிருக்கிறான்" - நூற்றுக்கதிபதி மிகவும் நல்ல மனுஷன். அவன் யூதரை நேசிக்கிறான். யூதருக்கு ஒரு ஜெபாலயமும் கட்டிக் கொடுத்திருக்கிறான். ஆனால் நூற்றுக்கதிபதியோ தனக்கு எந்த புகழ்ச்சியையும் நாடவில்லை. இயேசு கிறிஸ்து தனது வீட்டிற்கு வருவதற்குக்கூட தான் பாத்திரவான் அல்ல என்று தன்னைத் தாழ்த்துகிறான் (லூக்கா 7:6-8). இயேசு கிறிஸ்து அவ்விரண்டு பிரிவினருடைய பேச்சுக்குச் செவிகொடுக்காமல் நூற்றுக் கதிபதியிடம் காணப்படும் விசுவாசத்தைக் கண்டார். இயேசு கிறிஸ்து ஒரு வார்த்தை மாத்திரம் சொன்னால் போதும், அப்போது தன் வேலைக்காரன் சொஸ்தமாவான் என்று நூற்றுக்கதிபதி நம்பினான் (லூக்கா 7:7-9). நம்முடைய ஜெபங்களுக்கு நமது விசுவாசத்திற்கு ஏற்ற பிரகாரம் கர்த்தர் பதில் தருவார் (மத் 17:20, மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24, எபி 11:6, யாக் 1:5-8).

"நூற்றுக்கு அதிபதி தன் சிநேகிதரை நோக்கி: நீங்கள் அவரிடத்தில் போய், ஆண்டவரே, நீர் வருத்தப்பட வேண்டாம். நீர் என் வீட்டு வாசலுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல" - மத் 8:5-13 இல் நாம் வாசிக்கும் நூற்றுக்கதிபதி இயேசு கிறிஸ்துவிடம் நேரடியாக வருகிறான். ஆனால் இந்த நூற்றுக்கதிபதி இயேசு கிறிஸ்துவிடம் தனது சிநேகிதரை அனுப்புகிறான்.

"இயேசு இவைகளைக் கேட்டு, அவனைக் குறித்து ஆச்சரியப்பட்டார்" - இயேசு இரண்டு இடங்களில் ஆச்சரியப்பட்டதாக வாசிக்கிறோம். ஒன்று இந்த வசனத்தில், நூற்றுக்கதிபதியின் விசுவாசத்தைக் குறித்து. மற்றொரு இடத்தில் நாசரேத்து ஊர் ஜனங்களுடைய அவிசுவாசத்தைக் குறித்து ஆச்சரியப்படுகிறார் (மாற்கு 6:6).

"அனுப்பப்பட்டவர்கள்" - நூற்றுக்கதிபதியின் சிநேகிதராக இருக்கலாம். (லூக்கா 7:6)

25. விதவையின் மகனை இயேசு உயிருடன் எழுப்புகிறார் (மத் 9:18)

லூக்கா 7:11 மறுநாளிலே அவர் நாயீன் என்னும் ஊருக்குப் போனார்; அவருடைய சீஷர் அநேகரும் திரளான ஜனங்களும் அவருடனேகூடப் போனார்கள்.

லூக்கா 7:12 அவர் ஊரின் வாசலுக்குச் சமீபித்தபோது, மரித்துப்போன ஒருவனை அடக்கம்பண்ணும்படி கொண்டு வந்தார்கள்; அவன் தன் தாய்க்கு ஒரே மகனாயிருந்தான், அவளோ கைம்பெண்ணாயிருந்தாள்; ஊரிலே வெகுஜனங்கள் அவளுடனேகூட வந்தார்கள்.

லூக்கா 7:13 கர்த்தர் அவளைப் பார்த்து, அவள்மேல் மனதுருகி: அழாதே என்று சொல்லி,

லூக்கா 7:14 கிட்டவந்து, பாடையைத் தொட்டார்; அதைச் சுமந்தவர்கள் நின்றார்கள்; அப்பொழுது அவர்: வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

லூக்கா 7:15 மரித்தவன் எழுந்து உட்கார்ந்து பேசத்தொடங்கினான். அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்தார்.

லூக்கா 7:16 எல்லாரும் பயமடைந்து: மகா தீர்க்கதரிசியானவர் நமக்குள்ளே தோன்றியிருக்கிறார் என்றும், தேவன் தமது ஜனங்களைச் சந்தித்தார் என்றும் சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

லூக்கா 7:17 இந்தச் செய்தி யூதேயா தேசமுழுவதிலும் சுற்றியிருக்கிற திசைகள் யாவற்றிலும் பிரசித்தமாயிற்று.

7 அதிகாரம்

லூக்கா 7:18 இவைகளையெல்லாம் யோவானுடைய சீஷர்கள் அவனுக்கு அறிவித்தார்கள். அப்பொழுது யோவான் தன் சீஷரில் இரண்டுபேரை அழைத்து,

"மறுநாளிலே அவர் நாயீன் என்னும் ஊருக்குப் போனார்" - லூக்கா 7:1-10 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற நிகழ்ச்சிகள் முடிந்த பிறகு.

"நாயீன்" (Nain) - கப்பர்நகூமிலிருந்து 21 மைல் தூரத்தில் உள்ள ஊர்.

"அவருடைய சீஷர் அநேகரும் திரளான ஜனங்களும் அவருடனேகூடப் போனார்கள்" - இயேசு கிறிஸ்துவிற்குப் பன்னிரெண்டு சீஷர்கள் இருந்ததாக நாம் பொதுவாக நினைக்கிறோம். ஆனால் உண்மையில் அவருடைய சீஷர் எத்தனைபேர் என்பது தெளிவாகத் தெரியவில்லை. இயேசு தேசம் முழுவதும் சென்று, ஆயிரக்கணக்கான வியாதியஸ்தரைச் சொஸ்தமாக்குகிறார். அவருக்கு அநேகர் சீஷராக இருந்திருக்கலாம். ஒரு இடத்தில் 500 பேருக்கு அதிகமான சகோதரர் (1 கொரி 15:6) என்று அதிக எண்ணிக்கையில் இயேசுவின் சீஷர்களைப் பற்றி ஒரு குறிப்பு காணப்படுகிறது.

"ஊரின் வாசல்" - தற்போதுள்ள நாயீன் ஊரில் வாசல் எதுவும் இல்லை. இயேசுவின் காலத்தில் இருந்த நாயீன் ஊரில் வாசல் இருந்திருக்கலாம்.

"மரித்துப்போன ஒருவனை அடக்கம் பண்ணும்படி கொண்டுவந்தார்கள்" மரித்துப் போனவர்களை ஊருக்கு வெளியில் அடக்கம் பண்ணுவது வழக்கம். பட்டணத்திற்கு உள்ளும் ஆலயங்களுக்கு அருகிலும் இறந்தவர்களை அடக்கம் பண்ணமாட்டார்கள். ராஜ வம்சத்தினருக்கு மட்டும் பட்டணத்திற்குள் அடக்கம் பண்ணும் சிலாக்கியம் கிடைக்கும் (1 இராஜா 2:10) இயேசுவைப் பின்பற்றி வரும் திரளான ஜனங்களும், மரித்துப் போனவனை அடக்கம்பண்ண வரும் ஜனங்களும் ஊரின் வாசலில் சந்திக்கிறார்கள் (லூக்கா 7:11-12)

"அவள் மேல் மனதுருகினார்" - இயேசு மனதுருக்கம் நிறைந்தவர் (மத் 9:36)

"பாடை" (bier) - மரித்தவனைத் தூக்கிச் செல்வதற்குப் பயன்படுத்தப்படும் கம்புகள். சடலத்தைத் துணிகளால் சுற்றி, கம்புகளின் மீது வைப்பார்கள். நான்குபேர் தங்கள் தோள்களமீது பாடையைச் சுமந்து செல்வார்கள்.

"வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன்" - பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தினால் இயேசு கிறிஸ்துவிற்கு மரணத்தின்மீது அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. யோவான் 5:24 அப்பொழுது தான் மரித்துப்போன ஒரு சிறுமியை இயேசு உயிரோடெழுப்பினார் (லூக்கா 8:42-56) அடக்கம் பண்ணப்படுவதற்குக் கொண்டு போகப்பட்ட மரித்தவனை இயேசு உயிரோடு எழுப்பினார் (லூக்கா 7:12) மரித்துப்போய் நான்கு நாட்கள் ஆனபின்பு இயேசு ஒருவனைஉயிரோடெழுப்பினார் யோவான்

உட்கார்ந்தான் (sat up) - ἀνακαθίζω -anakathizoo- 339

செயப்படுபொருள் - உட்கார் - இது மருத்துவ உலகில் பயன்படுத்தும் வாக்கியம். இந்த வசனத்திலும் அப் 9:40-இலும் மட்டுமே இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

"மகா தீர்க்கதரிசியானவர் நமக்குள்ளே தோன்றியிருக்கிறார் என்றும், தேவன் தமது ஜனங்களைச் சந்தித்தார் என்றும் சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்" - அவர்கள் கூறியது மெய்தான். இவை பல தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றமாகும் (உபா 18:15-19; ஏசா 9:6-7 லூக்கா 1:67-79

"யோவான்" - யோவான்ஸ்நானன் இந்த வேளையில் சிறைச்சாலையில் அடைக்கப் பட்டிருக்கிறான் (மத் 4:12; மத் 9:14) இயேசு கிறிஸ்து மரித்தோரை எழுப்புகிறார். அப்படிப்பட்ட வல்லமையுள்ளவர் இருக்கும்போது தான் ஏன் சிறைச்சாலையில் அடைப்பட்டிருக்க வேண்டும் என்று ஆச்சரியப்பட்டிருப்பான்.

26.யோவான் ஸ்நானன் இயேசுவைப் பற்றி கேட்ட கேள்விகள் (மத் 11:2

லூக்கா 7:19 நீங்கள் இயேசுவினிடத்திற்குப் போய்: வருகிறவர் நீர்தானா? அல்லது வேறொருவர் வரக் காத்திருக்க வேண்டுமா? என்று கேளுங்கள் என்று சொல்லி அனுப்பினான்.

7 அதிகாரம்

லூக்கா 7:20 அந்தப்படி அவர்கள் அவரிடத்தில் வந்து, வருகிறவர் நீர்தானா? அல்லது வேறொருவர் வரக் காத்திருக்கவேண்டுமா? என்று கேட்கும்படி யோவான்ஸ்நானன் எங்களை உம்மிடத்திற்கு அனுப்பினார் என்றார்கள்.

"அப்பொழுது யோவான் தன் சீஷரில் இரண்டுபேரை அழைத்து, அவர்களை இயேசுவினிடத்திற்கு அனுப்பினான்"-மத் 11 ஆவது அதிகாரத்தில் காணப்படும் அதே நிகழ்ச்சி.

"வருகிறவர் நீர்தானா? அல்லது வேறொருவர் வரக் காத்திருக்கவேண்டுமா?" - இயேசுவிற்கு யோவான்ஸ்நானன் ஞானஸ்நானம் கொடுத்தான். அவனுக்கு இயேசுவைப் பற்றி நன்றாகத் தெரியும். இருந்தாலும் இப்படி ஒரு கேள்வியைக் கேட்கிறான். அவன் இயேசுவைப் பற்றிச் சாட்சி கூறியிருக்கிறான் (மத் 3:11; யோவான் 1:29-34). யோவானுடைய கேள்விக்கு இயேசு கிறிஸ்து நேரடியாகப் பதில் கூறாமல், அவனுடைய சீஷர்களிடம் "நீங்கள் போய், கண்டவைகளையும் கேட்டவைகளையும் யோவானுக்கு அறிவியுங்கள்" என்று பதில் கூறுகிறார். தாமே மேசியா என்பதுதான் இதன் பொருள். தம்மைப் பற்றி தீர்க்கதரிசிகள் முன்னறிவித்த காரியங்களை இயேசு கிறிஸ்து யோவானின் சீஷர்களுக்கு முன்பாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். வேதவாக்கியம் இயேசு கிறிஸ்து மூலமாக நிறைவேறுகிறது. (லூக்கா 7:21-23)

27. இயேசு கிறிஸ்துவைக்கண்டு யோவான் ஸ்நானனுக்கு பதில் கூறுகிறார் - (மத் 11:4)

லூக்கா 7:21 அந்தச் சமயத்திலே நோய்களையும் கொடிய வியாதிகளையும் பொல்லாத ஆவிகளையும் கொண்டிருந்த அநேகரை அவர் குணமாக்கி, அநேகங் குருடருக்குப் பார்வையளித்தார்.

லூக்கா 7:22 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் போய், கண்டவைகளையும் கேட்டவைகளையும் யோவானுக்கு அறிவியுங்கள்; குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது.

லூக்கா 7:23 என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான் என்றார்.

"நோய்களையும் கொடிய வியாதிகளையும் பொல்லாத ஆவிகளையும் கொண்டிருந்த அநேகர்" - லூக்கா ஒரு மருத்துவர். இவர் வியாதிகளை வகைப்படுத்துகிறார். இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் வியாதிகள்

1. நோய்கள் (infirmities)
2. கொடிய வியாதிகள் (plagues)
3. பொல்லாத ஆவிகள் (evil spirits)

சாதாரண வியாதிகளுக்கும், பிசாசின் கிரியைகளின் மூலமாக வரும் வியாதிகளுக்கும் வித்தியாசம் உண்டு.

இயேசு கிறிஸ்து மேசியா என்பதை நிரூபிக்கும் அடையாளங்கள்

1. குருடர் பார்வையடைகிறார்கள் (ஏசா 29:18; ஏசா 35:5)
2. சப்பாணிகள் நடக்கிறார்கள் (ஏசா 35:6; ஏசா61:1)
3. குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள் (ஏசா 61:1)
4. செவிடர் கேட்கிறார்கள் (ஏசா 29:18; ஏசா 35:5)
5. மரித்தோர் எழுந்திருக்கிறார்கள் (ஏசா 11:2)
6. தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப் படுகிறது (ஏசா 11:2; ஏசா 42:1-5; ஏசா 60:1-3; ஏசா 61:1-2

7 அதிகாரம்

28. யோவான் ஸ்நானனைப் பற்றி இயேசு கூறிய சாட்சி - (மத் 11:7)

லூக்கா 7:24 யோவானுடைய தூதர்கள் போன பின்பு அவர் யோவானைக்குறித்து ஜனங்களுக்குச் சொன்னது என்னவென்றால், எதைப்பார்க்க வனாந்தரத்திற்குப் போனீர்கள்? காற்றினால் அசையும் நாணலையோ?

லூக்கா 7:25 அல்லவென்றால் எதைப்பார்க்கப் போனீர்கள்? மெல்லிய வஸ்திரந்தரித்த மனுஷனையோ? அலங்கார வஸ்திரந்தரித்துச் செல்வமாய் வாழ்கிறவர்கள் அரசர் மாளிகைகளிலே இருக்கிறார்கள்.

லூக்கா 7:26 அல்லவென்றால் எதைப்பார்க்கப் போனீர்கள்? தீர்க்கதரிசியையோ? ஆம், தீர்க்கதரிசியைப் பார்க்கிலும் மேன்மையுள்ளவனையே என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

லூக்கா 7:27 இதோ, நான் என் தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன், அவன் உமக்கு முன்னே போய் உமது வழியை ஆயத்தம் பண்ணுவான் என்று எழுதிய வாசகியத்தால் குறிக்கப்பட்டவன் இவன்தான்.

லூக்கா 7:28 ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரிய தீர்க்கதரிசி ஒருவனுமில்லை. ஆகிலும், தேவனுடைய ராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

லூக்கா 7:29 யோவானுடைய உபதேசத்தைக் கேட்ட ஆயக்காரர் முதலான சகல ஜனங்களும் அவனாலே ஞானஸ்நானம் பெற்று, தேவன் நீதிபரர் என்று அறிக்கையிட்டார்கள்.

"எதைப்பார்க்க வனாந்தரத்திற்குப் போனீர்கள்?" - "பார்க்க" (for to see, to look at) என்னும் வாக்கியம் ஐந்து இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (லூக்கா 7:24-26; மத் 11:8-9). இயேசு கிறிஸ்து கீழே கொடுக்கப்பட்டிருக்கும் காரியங்களைப் பார்க்கப்போனீர்களா என்று கேட்கிறார்.

1. காற்றினால் அசையும் நாணலையோ?

2. மெல்லிய வஸ்திரந்தரித்த மனுஷனையோ?

3. தீர்க்கதரிசியையோ?

இவ்வாறு கேள்விகளைக் கேட்டுவிட்டு, இதற்கு இயேசு கிறிஸ்துவே பதில் கூறுகிறார். "ஆம், தீர்க்கதரிசியைப் பார்க்கிலும் மேன்மையுள்ளவனையே என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் (லூக்கா 7:26)

லூக்கா சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 8

"இதோ, நான் என் தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன் அவன் உமக்கு முன்னே போய், உமது வழியை ஆயத்தம்பண்ணுவான்" (லூக்கா 7:27; மல 3:1; ஏசா 40:3)

பிறந்த (born) - γεννητός - genneetos - 1084

பெயரடை - பிறந்த (brought into the world) (மத் 11:3)

"யோவான்ஸ்நானனைப்பார்க்கிலும் பெரிய தீர்க்கதரிசி" பெரிய தீர்க்கதரிசி என்னும் வாக்கியம் ஒரு ஒப்புமை மட்டுமே ஆகும். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் யோவானை விட பெரிய தீர்க்கதரிசிகளெல்லாம் இருந்தார்கள். அவர்கள் நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்டவர்கள். ஆனால் யோவானோ புதிய ஏற்பாட்டின் பிரமாணத்திற்கு உட்பட்டவன். ஆகையினால் யோவான் மற்ற தீர்க்கதரிசிகளைவிட பெரியவனாக இருக்கிறான் (2கொரி 3:6-15; எபி 8:6)

7 அதிகாரம்

"தேவனுடைய ராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறான்" - இயேசு கிறிஸ்து மனுக்குலத்திற்குத் தமது கிருபையையும் முழுமையான ஆசீர்வாதத்தையும் கொடுக்க வந்திருக்கிறார் (யோவான் 1:16-17) ஆவியானவரின் ஒரு அளவை மட்டுமே யோவான் பெற்றிருந்தான் (யோவான் 1:15-17, மத் 3:14) ஆனால் விசுவாசிகளாகிய நமக்கோ பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகம் பூரணமாகக் கிடைத்திருக்கிறது. (லூக்கா 24:49; யோவான் 7:37-39 யோவான் 14:12-15 அப 1:4-8; அப 2:38-39, அப 5:32; எபே 3:19) பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பரிசுத்தவான்களுக்குப் பரிசுத்த ஆவியானவரின் ஒரு சில வரங்கள் மட்டுமே கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்காலத்து விசுவாசிகளுக்கு ஆவியானவரின் அனைத்து வரங்களும் அனுக்கிரகம் பண்ணப்பட்டிருக்கிறது. (மாற்கு 16:15-20 யோவான் 14:12-15; 1கொரி 12) சுவிசேஷ புஸ்தகங்களில் கூறப்பட்டிருக்கும் வாக்குத் தத்த ஆசீர்வாதங்கள் இயேசு கிறிஸ்துவின் காலத்திற்கு முந்தி ஜீவித்தவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்படவில்லை (2கொரி 3:6-15; எபி 8:6;1பேதுரு 1:10-12) ஆகையினால் "தேவனுடைய ராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறான்" என்று இயேசு கூறுகிறார்

"யோவானுடைய உபதேசத்தைக் கேட்ட ஆயக்காரர் முதலான சகல ஜனங்களும் அவனாலே ஞானஸ்நானம் பெற்று தேவனை நீதிபரர் என்று அறிக்கையிட்டார்கள்" - யோவானுடைய உபதேசத்தைக் கேட்டவர்கள் தேவனை நீதிபரர் என்று அறிக்கையிட்டார்கள் மனந்திருந்தி பாவமன்னிப்பு கேட்கும் எவர் பாவியையும் இயேசு கிருபையுடன் மன்னிக்கிறார் யோவான் ஊழியத்தின் மூலமாக இயேசு மகிமை பெறுகிறார்

29. இயேசு அவிசுவாசத்தைக் கடிந்து கொள்கிறார் - (மத் 11:16)

லூக்கா 7:30 பரிசேயரும் நியாயசாஸ்திரிகளுமோ அவனாலே ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்குக் கேடுண்டாக தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள்

லூக்கா 7:31 பின்னும் கர்த்தர் சொன்னது: இந்தச் சந்ததியை யாருக்கு ஒப்பிடுவேன்? இவர்கள் யாருக்கு ஒப்பாயிருக்கிறார்கள்?

லூக்கா 7:32 சந்தை வெளியில் உட்கார்ந்து ஒருவரையொருவர் பார்த்து: உங்களுக்காகக் குழல் ஊதினோம், நீங்கள் கூத்தாடவில்லை உங்களுக்காகப் புலம்பினோம், நீங்கள் அழவில்லை என்று குறை சொல்லுகிற பிள்ளைகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்

லூக்கா 7:33 எப்படியெனில், யோவான் ஸ்நானன் அப்பம் புசியாதவனும் திராட்சரசம் குடியாதவனுமாய் வந்தான்; அதற்கு நீங்கள்: அவன் பிசாசு பிடித்திருக்கிறவன் என்கிறீர்கள்

லூக்கா 7:34 மனுஷகுமாரன் போஜனபானம் பண்ணுகிறவராய் வந்தார் அதற்கு நீங்கள்: இதோ போஜனப் பிரியனும் மதுபானப் பிரியனுமான மனுஷன் ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன் என்கிறீர்கள்

லூக்கா 7:35 ஆனாலும் ஞானமானது அதன் பிள்ளைகளெல்லாராலும் நீதியுள்ளதென்று ஒப்புக்கொள்ளப்படும் என்றார்

"தங்களுக்குக் கேடுண்டாக தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள்" - தேவனுடைய உபதேசங்களைத் தங்களுடைய உள்ளங்களில் ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணித்தார்கள் (மத் 11:16-26

"இந்தச் சந்ததியை யாருக்கு ஒப்பிடுவேன்? இவர்கள் யாருக்கு ஒப்பாயிருக்கிறார்கள்?" (மத் 11:16 19

உவமை எண் - 8

"சந்தை வெளியில் உட்கார்ந்து, ஒருவரையொருவர் பார்த்து: உங்களுக்காகக் குழல் ஊதினோம், நீங்கள் கூத்தாடவில்லை. " (லூக்கா 7:32-35) யூதருக்கு சுவிசேஷத்தில் ஆர்வமில்லை என்பதை இந்த உவமை விளக்குகிறது. மத் 11:16

"அவன் பிசாசுபிடித்திருக்கிறவன்" (மத் 11:18 19)

7 அதிகாரம்

"ஞானமானது அதன் பிள்ளைகளெல்லாராலும் நீதியுள்ளதென்று ஒப்புக்கொள்ளப்படும்" - (மத் 11:19)

30. இயேசுவின் முதலாவது அபிஷேகம் - பரிசேயனாகிய சீமோன் - (மத் 26:6; யோவான் 12:1)

லூக்கா 7:36 பரிசேயரில் ஒருவன் தன்னுடனே போஜனம்பண்ண வேண்டுமென்று அவரை வேண்டிக் கொண்டான் அவர் அந்தப் பரிசேயனுடைய வீட்டில் பிரவேசித்துப் பந்தியிருந்தார்

லூக்கா 7:37 அப்பொழுது அந்த ஊரிலிருந்த பாவியாகிய ஒரு ஸ்திரீ அவர் பரிசேயன் வீட்டிலே பந்தியிருக்கிறதை அறிந்து, ஒரு பரணியில் பரிமளதைலம் கொண்டு வந்து

லூக்கா 7:38 அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுதுகொண்டு, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து, தன் தலைமயிரினால் துடைத்து, அவருடைய பாதங்களை முத்தஞ்செய்து, பரிமள தைலத்தைப் பூசினாள்

லூக்கா 7:39 அவரை அழைத்த பரிசேயன் அதைக் கண்டபோது, இவர் தீர்க்கதரிசியாயிருந்தால் தம்மைத் தொடுகிற ஸ்திரீ இன்னாளென்றும் இப்படிப்பட்டவளென்றும் அறிந்திருப்பார், இவள் பாவியாயிருக்கிறாளே என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்

லூக்கா 7:40 இயேசு அவனை நோக்கி: சீமோனே, உனக்கு நான் ஒரு காரியம் சொல்ல வேண்டும் என்றார் அதற்கு அவன்: போதகரே, சொல்லும் என்றான்

"பரிசேயரில் ஒருவன் தன்னுடனே போஜனம்பண்ணவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டான் அவர் அந்தப் பரிசேயனுடைய வீட்டில் பிரவேசித்துப் பந்தியிருந்தார்" - இந்த நிகழ்ச்சி லூக்காவில் மட்டுமே காணப்படுகிறது. மாற்கு 14:3-9 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சி வேறு.

"அந்த ஊரிலிருந்த பாவியாகிய ஒரு ஸ்திரீ" - இவள் மகதலேனா மரியாள் அல்ல. நாயீன் ஊரில் இருந்தவள் (லூக்கா 7:11-15). மகதலா கலிலேயா கடற்கரையில் உள்ளது. நாயீன் ஊரார் இந்த ஸ்திரீயைப் பாவியாய் இருக்கிறவள் என்று அறிந்திருந்தார்கள் (லூக்கா 7:39). மரியாள் லூக்கா 8:2-இல் குறிப்பிடப்பட்டிருக்கிறாள். ஆகையினால் இவளும் நாயீன் ஊர் ஸ்திரீயும் வெவ்வேறானவர்கள். இந்த ஸ்திரீ பாவியானவள் என்பதினால் இவள் வேசியானவள் என்பதற்கு ஆதாரமில்லை.

"பரணி" (alabaster box) - தைலம் வைப்பதற்குச் சலவைக்கல்லினால் செய்யப்பட்ட குடுவை. எகிப்து தேசத்தில் இது பிரபல்யமானது. இவற்றின் அளவும் வடிவமும் வெவ்வேறாக இருக்கும் (மத் 26:7; மாற்கு 14:3)

"தைலம்" (ointment) - (யாத் 30:25)

"அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுதுகொண்டு, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து தன் தலைமயிரினால் துடைத்தாள்" இந்த ஸ்திரீ இயேசுவிற்குப் பின்னாக வந்து, அவருடைய பாதங்களைக் கண்ணீரினால் நனைக்கிறாள்

"அவருடைய பாதங்களை முத்தஞ்செய்தாள்" யூதர், கிரேக்கர், ரோமர் ஆகியோர் மத்தியில் அன்பையும் பக்தியையும் வெளிப்படுத்தும் வழக்கம். வெற்றி பெற்ற அரசர்கள் முன்பாகத் தோல்வி பெற்றவர்கள் தங்களுடைய கீழ்ப்படிதலை வெளிப்படுத்துவதற்கு இப்படித்தான் நடந்து கொள்வார்கள்

"பரிமளதைலத்தைப் பூசினாள்" இயேசு மூன்று முறை பரிமளதைலத்தினால் அபிஷேகிக்கப்படுகிறார். அதில் இது முதலாவது தடவை. மற்ற இரண்டு முறைகளும் அவர் மரிக்கும் வாரத்தில் நடைபெறுகிறது (மத் 26:7-13, மாற்கு 14:3-9, யோவான் 12:3-8)

லூக்கா - தொகுப்புரை

7 அதிகாரம்

"அவரை அழைத்த பரிசேயன் அதைக் கண்டபோது, இவர் தீர்க்கதரிசியாயிருந்தால் தம்மைத் தொடுகிற ஸ்திரீ இன்னாளென்றும் இப்படிப்பட்டவளென்றும் அறிந்திருப்பார்; இவள் பாவியாயிருக்கிறாளே என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்" - இயேசு கிறிஸ்துவிற்குத் தம்மைத் தொடுகிற ஸ்திரீயைப் பற்றியும் தெரியும். தன்மனத்திற்குள்ளே இவ்வாறு சொல்லிக் கொண்ட பரிசேயனைப் பற்றியும் தெரியும். அவர் பரிசுத்த ஆவியானவரின் வரத்தினால் சகலத்தையும் அறிந்திருக்கிறார். பரிசேயனுக்கு விளக்கம் கூறும் விதமாக சீமோன் பேதுருவிடம் ஒரு காரியத்தைக் கூறுகிறார் (லூக்கா 7:49-50)

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிற சீமோன்கள்

1. சீமோன் பேதுரு (மத் 10:2)
2. கானானியனாகிய சீமோன் (மத் 10:4; மாற்கு 3:18; லூக்கா 6:15; அப் 1:13)
3. இயேசுவின் சகோதரன் (மத் 13:55; மாற்கு 6:3)
4. நாயீன் ஊரானாகிய சீமோன் (லூக்கா 7:36-50)
5. பெத்தானியாவிலுள்ள குஷ்டரோகி (மத் 26:6)
6. யூதாஸ்காரியோத்தின் தகப்பன் (யோவான் 6:71; யோவான் 12:4; யோவான் 13:2,26)
7. சிரேனே ஊரானாகிய சீமோன் (மத் 27:32; மாற்கு 15:21; லூக்கா 23:26)
8. மாயவித்தைக்காரனாகிய சீமோன் (அப் 8:9-24)
9. தோல்பதனிடுகிறவனாகிய சீமோன் (அப் 9:43; அப் 10:6-32)

31. கடன்பட்ட இரண்டு பேரைப் பற்றிய உவமை

லூக்கா 7:41 அப்பொழுது அவர்: ஒருவனிடத்தில் இரண்டுபேர் கடன்பட்டிருந்தார்கள்; ஒருவன் ஐந்நூறு வெள்ளிக்காசும், மற்றவன் ஐம்பது வெள்ளிக்காசும் கொடுக்க வேண்டியதாயிருந்தது.

லூக்கா 7:42 கொடுக்க அவர்களுக்கு நிர்வாகமில்லாதபோது, இருவருக்கும் கடனை மன்னித்துவிட்டான். இப்படியிருக்க, அவர்களில் எவன் அவனிடத்தில் அதிக அன்பாயிருப்பான்? அதைச் சொல் என்றார்.

லூக்கா 7:43 சீமோன் பிரதியுத்தரமாக: எவனுக்கு அதிகமாய் மன்னித்து விட்டானோ அவனே அதிக அன்பாயிருப்பான் என்று நினைக்கிறேன் என்றான். அதற்கு அவர்: சரியாய் நிதானித்தாய் என்று சொல்லி,

லூக்கா 7:44 ஸ்திரீயினிடமாய்த் திரும்பி, சீமோனை நோக்கி: இந்த ஸ்திரீயைப் பார்க்கிறாயே, நான் உன் வீட்டில் பிரவேசித்தேன், நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை; இவளோ, கண்ணீரினால் என் கால்களை நனைத்து, தன் தலைமயிரினால் அவைகளைத் துடைத்தாள்.

லூக்கா 7:45 நீ என்னை முத்தஞ்செய்யவில்லை, இவளோ நான் உட்பிரவேசித்தது முதல், என் பாதங்களை ஓயாமல் முத்தஞ்செய்தாள்.

லூக்கா 7:46 நீ என் தலையில் எண்ணெய் பூசவில்லை, இவளோ என் பாதங்களில் பரிமளதைலம் பூசினாள்.

லூக்கா 7:47 ஆதலால் நான் உனக்குச் சொல்லுகிறேன், இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது; இவள் மிகவும் அன்பு கூர்ந்தாளே. எவனுக்குக் கொஞ்சம் மன்னிக்கப்படுகிறதோ, அவன் கொஞ்சமாய் அன்புகூருவான் என்று சொல்லி,

லூக்கா – தொகுப்புரை

7 அதிகாரம்

உவமை எண் – 8

"ஒருவனிடத்தில் இரண்டுபேர் கடன்பட்டிருந்தார்கள்" (லூக்கா 7:41-47) தேவனிடத்தில் அன்பு செலுத்தும் அளவை இந்த உவமை விளக்குகிறது.

"கடன்கொடுக்கிறவன்" (creditor, a moneylender) - நியாயப்பிரமாணத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட வியாபாரம். ஆனால் இது நீதியாக நடைபெற வேண்டும் (யாத் 22:25-27; லேவி 25:14-17,35-37; உபா 23:19-20; உபா 24:6-17) ஏழு வருஷத்திற்கு ஒருமுறை சகோதரருடைய கடன்களையெல்லாம் தள்ளுபடி பண்ண வேண்டும். அந்நியருடைய கடனைத் தள்ளுபடி பண்ண வேண்டியதில்லை (யாத் 21:2-6; உபா 15:2-3) விசுவாசிகள் கடன் கொடுப்பதற்கு புதிய ஏற்பாட்டில் வேறுவிதமாக ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது. (மத் 5:42; லூக்கா 6:34)

"அவர்களில் எவன் அவனிடத்தில் அதிக அன்பாயிருப்பான்?" - இந்த உவமையின் மூலமாக கூறப்படும் உட்கருத்து இதுதான் (லூக்கா 7:43-47)

"இந்த ஸ்திரீயைப் பார்க்கிறாயே" இந்த உவமையை இயேசு ஸ்திரீக்கும் சீமோனுக்கும் பயன்படுத்துகிறார். ஸ்திரீயின் கிரியைகளை விளக்குகிறார் (லூக்கா 7:47-50)

"நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை" இயேசு கிறிஸ்து சீமோனிடம் அவனைப் பற்றிக் கூறும் காரியங்கள்

1. நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை
2. நீ என்னை முத்தஞ்செய்யவில்லை
3. நீ என் தலையில் எண்ணெய் பூசவில்லை

இயேசு கிறிஸ்து சீமோனிடம் அந்த ஸ்திரீயைப் பற்றிக் கூறும் காரியங்கள்

1. இவளோ, கண்ணீரினால் என் கால்களை நனைத்தாள்
2. தன் தலைமயிரினால் அவைகளைத் துடைத்தாள்
3. என் பாதங்களை ஓயாமல் முத்தஞ்செய்தாள்
4. இவளோ என் பாதங்களில் பரிமளதைலம் பூசினாள்

வீட்டிற்கு விருந்தினர் வரும்போது அவர்களுடைய பாதங்களைச் சுத்தம் பண்ணுவதற்காக தண்ணீர் தரும் பழக்கம் பாலஸ்தீன தேசத்தில் இருந்தது. கால்களைக் கழுவிய பின்பு, விருந்தினர்களுக்குப் புசிப்பதற்கு ஆகாரமும் தங்குவதற்கு இடமும் தருவார்கள் (ஆதி 18:4; ஆதி 24:32; ஆதி 43:24) கால்களைக் கழுவுவதற்காக அதற்குரிய பாத்திரங்களில் தண்ணீர் எப்போதும் நிரப்பப்பட்டிருக்கும். இதற்காக வேலைக்காரர்கள் நியமிக்கப்பட்டிருப்பார்கள் (1சாமு 25:41; 1தீமோ 5:10)

"முத்தஞ்செய்தல்" - பாலஸ்தீன தேசத்தில் மனுஷர் தங்கள் உற்றார் உறவினரையும் நண்பர்களையும் முத்தஞ்செய்து வாழ்த்துவது வழக்கம் (ஆதி 27:27; ஆதி 29:13; ஆதி 33:4; ஆதி 45:15; ஆதி 48:10; யாத் 4:27; யாத் 18:7; 1சாமு 20:41; லூக்கா 15:20; அப் 20:37) முத்தம் செய்வது மரியாதைக்குரிய செயல். (சங் 2:12; 1சாமு 10:1; 1இராஜா 19:18; யோபு 31:27; ஓசி 13:2) விசுவாசிகள் மத்தியிலும் இந்தப் பழக்கம் இருந்தது. (ரோமர் 16:16; 1கொரி 16:20; 2கொரி 13:12)

"தலையில் எண்ணெய் பூசுதல்" - இராஜாக்கள் முடிசூடும்போது அவர்களுடைய தலைகளில் விலையுயர்ந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணுவது வழக்கம். (2இராஜா 11:12) அதுபோலவே, பிரதான ஆசாரியரைப் பிரதிஷ்டை பண்ணும்போதும் செய்தார்கள் (சங் 133:2) விருந்தினர்களைக் கௌரவிக்கும் வகையில் அவர்களுடைய தலைகளில் எண்ணெய் பூசினார்கள் (லூக்கா 7:46; சங் 23:5; சங் 92:10; சங் 105:15; உபா 28:40; ரூத் 3:3; பிர 9:8; மீகா 6:15; மத் 6:17) தலையில் எண்ணெய் பூசாமல் இருப்பது துக்கமாக இருப்பதற்கு அடையாளம். (2சாமு 14:2; தானி 10:3; மத் 6:17-18) முகத்தில் எண்ணெய் பூசுவது சந்தோஷத்தின் அடையாளம். (சங் 45:7; எபி 1:9)

7 அதிகாரம்

32. பாவியான ஸ்திரீயை இயேசு மன்னிக்கிறார்

லூக்கா 7:48 அவளை நோக்கி: உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்றார்.

லூக்கா 7:49 அப்பொழுது கூடப் பந்தியிருந்தவர்கள்: பாவங்களை மன்னிக்கிற இவன் யார் என்று தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள்.

லூக்கா 7:50 அவர் ஸ்திரீயை நோக்கி: உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ என்றார்.

"உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது" - தண்ணீர் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பாகவே இயேசு கிறிஸ்து பலருடைய பாவங்களை மன்னித்திருக்கிறார் (மத் 9:1-7,22; மாற்கு 5:34; மாற்கு 10:52; லூக்கா 7:48; லூக்கா 17:19; லூக்கா 18:9-14,42; லூக்கா 19:1-9; லூக்கா 23:43; யோவான் 4:49-53; யோவான் 7:31; யோவான் 8:30-31)

"பாவங்களை மன்னிக்கிற இவன் யார்" - (மத் 9:3)

"உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ" - இயேசு கிறிஸ்துவின் இரத்தத்திலும் அவருடைய நாமத்திலும் விசுவாசம் வைக்கும்போது மனுஷருக்கு இரட்சிப்பு உண்டாகிறது (மத் 1:21; லூக்கா 13:1-5; ரோமர் 3:24; ரோமர் 10:9-10; எபே 1:7; எபே 2:8-9; எபி 9:22; 1யோவான் 1:9)

8 அதிகாரம்

33. கலிலேயாவிலிருந்து இயேசுவின் நான்காவது பிரயாணம் - (மத் 11:1; 4:23)

லூக்கா 8:1 பின்பு அவர் பட்டணங்கள் தோறும் கிராமங்கள் தோறும் பிரயாணம் பண்ணி தேவனுடைய ராஜ்யத்திற்குரிய நற்செய்தியைக் கூறிப் பிரசங்கித்து வந்தார் பன்னிருவரும் அவருடனேகூட இருந்தார்கள்

லூக்கா 8:2 அவர் பொல்லாத ஆவிகளையும் வியாதிகளையும் நீக்கிக் குணமாக்கின சில ஸ்திரீகளும், ஏழு பிசாசுகள் நீங்கின மகதலேனாள் என்னப்பட்ட மரியாளும்

லூக்கா 8:3 ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவியாகிய யோவன்னாளும் சூசன்னாளும், தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்துகொண்டு வந்த மற்ற அநேகம் ஸ்திரீகளும் அவருடனே இருந்தார்கள்

"அவர் பொல்லாத ஆவிகளையும் வியாதிகளையும் நீக்கிக் குணமாக்கின சில ஸ்திரீகளும்" - (மத் 15:22

"மகதலேனாள் என்னப்பட்ட மரியாள்" (லூக்கா 24:10

"ஏழு பிசாசுகள் நீங்கினவள்" - இந்த ஸ்திரீயைக் குறித்து விளக்கம் கூறும்போது இவளை ஒரு வேசி என்று கூறுகிறார்கள் ஆனால் வேதத்தில் இதற்கு ஆதாரம் எதுவும் இல்லை. பிசாசு பிடித்திருக்கும் நபரை நாம் எளிதாக அடையாளம் கண்டுபிடித்து விடலாம் ஆனால் அந்த நபருக்குள் எத்தனை பிசாசுகள் இருக்கின்றன என்பதை எண்ணுவது கடினம்

"ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவியாகிய யோவன்னாள்" - இந்த ஸ்திரீயின் கணவன் மூலமாக ஏரோது இயேசு கிறிஸ்துவைப் பற்றி பல காரியங்களைக் கேள்விப்பட்டிருக்கிறான் (மாற்கு 6:14-16, லூக்கா 23:8)

"சூசன்னாள்" - இந்த வசனத்தில் மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கிறாள்

"தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ் செய்துகொண்டு வந்தார்கள்" - இயேசு கிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் எவ்வாறு ஊழியக்காரர்களாக ஆதரிக்கப்பட்டார்கள் என்பதற்கு முதலாவது குறிப்பு இந்த வசனத்தில் காணப்படுகிறது. இயேசு கிறிஸ்து பட்டணம் தோறும் போனபோது அவரையும், அவருடைய சீஷர்களையும் அந்தந்த ஊரார் அன்போடு ஏற்றுக் கொண்டு அவர்களுக்குத் தங்குவதற்கு இடம் கொடுத்து புசிப்பதற்கு போஜனம் கொடுத்து வந்திருக்கிறார்கள் சில வேளைகளில் ஒருசில அப்பங்களை இயேசு கிறிஸ்து ஆசீர்வதித்து திரளான ஜனங்களுக்குப் போஜனமாகக் கொடுத்திருக்கிறார் தேவாலயத்து வரியை அற்புதமாக மீனின் வாயிலிருந்து வெளிப்பணமாகப் பெற்றுச் செலுத்தியிருக்கிறார்

மத் 21:19 லூக்கா 5:5-10; லூக்கா 7:36; லூக்கா 19:5) இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் பெற்றிருக்கிறவர் அவருக்குத் தமது சொந்த தேவைகளைச் சந்திப்பது ஒரு பெரிய பிரச்சனையே அல்ல (யோவான் 3:34)

34. விதைப்பவனைப் பற்றிய உவமை - (மத் 13:3-18; மாற்கு 4:1)

லூக்கா 8:4 சகல பட்டணங்களிலுமிருந்து திரளான ஜனங்கள் அவரிடத்தில் வந்து கூடினபோது அவர் உவமையாகச் சொன்னது.

லூக்கா 8:5 விதைக்கிறவன் ஒருவன் விதையை விதைக்கப் புறப்பட்டான் அவன் விதைக்கையில் சில விதை வழியருகே விழுந்து மிதியுண்டது ஆகாயத்துப் பறவைகள் வந்து அதைப் பட்சித்துப் போட்டது.

லூக்கா 8:6 சில விதை கற்பாறையின் மேல் விழுந்தது; அது முளைத்தபின் அதற்கு ஈரமில்லாததினால் உலர்ந்து போயிற்று.

லூக்கா 8:7 சில விதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தது, முள் கூட வளர்ந்து, அதை நெருக்கிப்போட்டது.

8 அதிகாரம்

லூக்கா 8:8 சில விதை நல்ல நிலத்தில் விழுந்தது அது முளைத்து ஒன்று நூறாகப் பலன் கொடுத்தது என்றார் இவைகளைச் சொல்லி. கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக் கடவன் என்று சத்தமிட்டுக் கூறினார்

உவமை எண் - 10

"விதைக்கிறவன் ஒருவன் விதையை விதைக்கப் புறப்பட்டான் " (லூக்கா 8:5-8,11-15) சுவிசேஷச் செய்தி பிரசங்கிக்கப்படுவதையும். அதனால் ஏற்படும் விளைவுகளையும் இந்த உவமை விளக்குகிறது. (மத் 13:1-9,18-23 மாற்கு 4:3-20)

"காதுள்ளவன்கேட்கக்கடவன்"-(மத் 11:15)

35. உவமைகளால் பேசுவதற்கு காரணம்-(மத் 13:10,34; மாற்கு 4:10)

லூக்கா 8:9 அப்பொழுது அவருடைய சீஷர்கள் இந்த உவமையின் கருத்து என்னவென்று அவரிடத்தில் கேட்டார்கள்

லூக்கா 8:10 அதற்கு அவர் தேவனுடைய ராஜ்யத்தின் இரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது. மற்றவர்களுக்கோ, அவர்கள் கண்டும் காணாதவர்களாகவும் கேட்டும் உணராதவர்களாகவும் இருக்கத் தக்கதாக, அவைகள் உவமைகளாகச் சொல்லப்படுகிறது.

"உவமை - (மத் 13:3)

"இரகசியங்கள்" - (மத் 13:11)

"தேவனுடைய ராஜ்யம்" - (மத் 4:17 மத் 19:24

"மற்றவர்களுக்கோ அவைகள் உவமைகளாகச்சொல்லப்படுகிறது" (மத் 13:11)

லூக்கா சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 4

"அவர்கள் கண்டும் காணாதவர்களாகவும், கேட்டும் உணராதவர்களாகவும் இருக்கத் தக்கதாக" - (லூக்கா 8:10; ஏசா 6:9-10)

36. விதைப்பவனைப் பற்றிய உவமையின் விளக்கம் - (மத் 13:18; மாற்கு 4:13)

லூக்கா 8:11 அந்த உவமையின் கருத்தாவது, விதை தேவனுடைய வசனம்.

லூக்கா 8:12 வழியருகே விதைக்கப் பட்டவர்கள் வசனத்தைக் கேட்கிறவர்களாயிருக் கிறார்கள்; அவர்கள் விசுவாசித்து இரட்சிக்கப் படாதபடிக்குப் பிசாசானவன் வந்து அவ்வசனத்தை அவர்கள் இருதயத்திலிருந்து எடுத்துப் போடுகிறான்

லூக்கா 8:13 கற்பாறையின் மேல் விதைக்கப்பட்டவர்கள் கேட்கும் போது சந்தோஷத்துடனே வசனத்தை ஏற்றுக் கொள்ளுகிறார்கள் ஆயினும் தங்களுக்குள்ளே வேர் கொள்ளாத படியினாலே, கொஞ்சக் காலமாத்திரம் விசுவாசித்து சோதனை காலத்தில் பின்வாங்கிப்போகிறார்கள்

லூக்கா 8:14 முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்கிறவர்களாயிருக் கிறார்கள் கேட்டவுடனே போய், பிரபஞ்சத்திற்குரிய கவலைகளினாலும் ஐசுவரியத்தினாலும் சிற்றின்பங்களினாலும் நெருக்கப்பட்டு, பலன் கொடாதிருக்கிறார்கள்

லூக்கா 8:15 நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள்

"விதை தேவனுடைய வசனம்" விதைக்கப்பட்ட விதையே தேவனுடைய வசனமாகும்.

8 அதிகாரம்

"வழியருகே" - (மாற்கு 4:15)

"கற்பாறையின் மேல் விதைக்கப்பட்டவர்கள் கேட்கும் போது சந்தோஷத்துடனே வசனத்தை ஏற்றுக் கொள்ளுகிறார்கள்" - (மாற்கு 4:16)

"முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவர்கள்" - (மாற்கு 4:18)

"பிரபஞ்சத்திற்குரிய கவலைகளினாலும் ஐசுவரியத்தினாலும் சிற்றின்பங்களினாலும்" - இந்தக் காரியங்களின் சுபாவங்கள்

1 பாவமானவை (எபி 11:25) மாம்சத்திற்குரியவை (கலா 5:19-21), தற்காலிகமானவை (யோபு 21:12-13, எபி 11:25); மாயையானவை (பிர 2:1-11); மதியீனமானவை (பிர 7:4); துன்மார்க்கரின் சுபாவம் (ஏசா 47:8; எபே 4:17-19; 2தீமோ 3:4; தீத்து 3:3; 1பேதுரு 4:3); ஆவிக்குரிய மரணத்திற்கு அடையாளம் (1தீமோ 5:6); ஐசுவரியங்களைத் தவறுதலாகப் பயன்படுத்துதலாகும் (யாக் 5:1-5); தேவனால் நியாயந்தீர்க்கப்படும் (1கொரி 6:9-11; கலா 5:19-21)

2 தேவனுடைய வார்த்தையை இவை இருதயத்தில் நெருக்கிப்போடுகிறது (லூக்கா 8:14); தேவனை மறுதலிக்கக் காரணமாக இருக்கிறது (லூக்கா 21:34); தரித்திரத்தைத் தருகிறது (நீதி 21:17); தேவனுடைய ராஜ்யத்திலிருந்து வெளியேறுகிறது (கலா 5:19-21; 2தெச 2:12); வருத்தத்திலும் நித்திய தண்டனையிலும் முடிவு பெறுகிறது (மாற்கு 4:20; யோபு 20:12-16; நீதி 21:17; 1கொரி 6:9-11; ரோமர் 1:29-32; ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13; கலா 5:19-21)

"பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள்" - இரட்சிக்கப்பட்டதற்கு இது ஒரு அடையாளமாகும்.

இரட்சிக்கப்படுவதற்கு நிபந்தனைகள்

1 தேவனுடைய வார்த்தையைக் கேட்க வேண்டும். (லூக்கா 8:12)

2 விசுவாசித்து, இரட்சிக்கப்பட வேண்டும். (லூக்கா 8:12; மாற்கு 16:16)

3 களங்கமற்ற நல்ல இருதயத்தைக் காத்துக் கொள்ள வேண்டும் (லூக்கா 8:12; ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13)

4 இருதயத்தில் தேவனுடைய வார்த்தையைக் காத்துக் கொள்ள வேண்டும். (லூக்கா 8:12; யோவான் 15:7)

5 சத்தியத்தில் வேரூன்றி நிலைத்து நிற்க வேண்டும். கீழே விழுந்துவிடக்கூடாது (லூக்கா 8:13; கொலோ 1:23; கொலோ 2:6-7; எபி 3:6,12-14; எபி 12:14-15)

6. தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய வேண்டும். (லூக்கா 8:15,21; யாக் 2:14-23; ரோமர் 1:16)

7 பொறுமையுடனே பலன் கொடுக்க வேண்டும் (லூக்கா 8:15; யோவான் 6:27; யோவான் 15:1-8)

37. கொளுத்தப்பட்ட விளக்கைப் பற்றிய உவமை - (மத் 5:15; மாற்கு 4:21; லூக் 11:33)

லூக்கா 8:16 ஒருவனும் விளக்கைக் கொளுத்தி அதை ஒரு பாத்திரத்தினாலே மூடமாட்டான், கட்டிலின் கீழே வைக்கவுமாட்டான்; உள்ளே பிரவேசிக்கிறவர்கள் அதின் வெளிச்சத்தைக் காணும்படிக்கு அதை விளக்குத்தண்டின் மேல் வைப்பான்.

லூக்கா 8:17 வெளியரங்கமாகாத இரகசியமுமில்லை; அறியப்பட்டு வெளிக்குவராத மறைபொருளுமில்லை.

லூக்கா 8:18 ஆதலால் நீங்கள் கேட்கிற விதத்தைக் குறித்துக் கவனியுங்கள்; உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும்; இல்லாதவனெவனோ அவன் தனக்குண்டென்று நினைக்கிறதும் அவனிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்படும் என்றார்.

8 அதிகாரம்

உவமை எண் - 11

"ஒருவனும் விளக்கைக் கொளுத்தி அதை ஒரு பாத்திரத்தினாலே மூடவு மாட்டான் கட்டிலின் கீழே வைக்கவு மாட்டான் உள்ளே பிரவேசிக்கிறவர்கள் அதின் வெளிச்சத்தைக் காணும்படிக்கு அதை விளக்குத்தண்டின் மேல் வைப்பான்" (லூக்கா 8:16) சத்தியத்தையும் வெளிச் சத்தையும் மூடக்கூடாது. மூடவும் முடியாது.

தீர்க்கதரிசன எண் - 18

"ஒருவனும் விளக்கைக் கொளுத்தி அதை ஒரு பாத்திரத்தினாலே மூடவுமாட்டான் ...." (லூக்கா 8:16-18) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. நியாயத் தீர்ப்பின்போது முழுவதுமாக நிறைவேறும்.

"விளக்கு" - மத் 5:15; மத் 10:26, மாற்கு 4:21-22

வெளியரங்கமாதல் (manifest) - φανερός - phaneros - 5318

பெயரடை - வெளியரங்கமான பிரசித்த, புறம்பான (made visible or known) இப்போது இரகசியமாக இருக்கும் வார்த்தைகளும், கிரியைகளும் ஒருகாலத்தில் வெளிப்படுத்தப்படும். மனுஷருடைய இரகசிய பாவங் களெல்லாம் ஒருநாளில் எல்லாருக்கும் தெரியவரும் (ரோமர் 2:16)

"நீங்கள் கேட்கிற விதத்தைக் குறித்துக் கவனியுங்கள்" தேவனுடைய வார்த்தையை மிகுந்த கவனத்தோடும், பக்தியோடும் கவனித்துக் கேட்க வேண்டும். தேவனுடைய வார்த்தையைக் கேட்பதினால் நமக்கு ஆசீர்வாதம் உண்டாக வேண்டும். வசனத்தைக் கேட்டால் மட்டும் போதாது. அதை நமது இருதயத்தில் ஏற்றுக்கொண்டு அதற்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்க வேண்டும். வசனத்தைக் கேட்டு அதன்படி செய்கிறவர்கள் தம்முடைய உறவினர்கள் என்று இயேசு கிறிஸ்து அறிவித்திருக்கிறார் (லூக்கா 8:19-21) வசனத்தைக் கேட்டுக் கீழ்ப்படிந்தால் நமது ஜீவியத்தில் ஆவிக்குரிய வெளிச்சத்தை மேன்மேலும் பெறுவோம். தவறினால் ஆவிக்குரிய இருளில் இருப்போம். (மத் 11:29)

"உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும்" - இது ஒரு ஆவிக்குரிய பிரமாணம். சத்தியம் யாரிடத்தில் இருக்கிறதோ அவனுக்கு மேலும் அதிகமாகச் சத்தியம் கொடுக்கப்படும். அவன் சத்தியத்தையே நாடுகிறான் ஆகையினால் வேறு எதையும் பெற்றுக் கொள்ளாமல் அவன் சத்தியத்தையே பெற்றுக் கொள்வான்.

"இல்லாதவனெவனோ அவன் தனக்கு உண்டென்று நினைக்கிறதும் அவனிடத்திலி ருந்து எடுத்துக்கொள்ளப்படும்" - இதுவும் ஒரு தெய்வீக பிரமாணம். சத்தியத்தை முழு இருதயத்தோடு தேடாமல் ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லிக் கீழ்ப்படியாமல் போகிறவர்களுக்கும் சத்தியத்தைக் கேட் பதற்கு மனதில்லாதவர்களுக்கும் சத்தியம் கொடுக்கப்படமாட்டாது. அவர்களிடத்தில் உள்ள சத்தியமும் அகன்றுபோய், அவர்கள் ஆவிக்குரிய இருளில் ஜீவிப்பார்கள்.

நினை (seemeth) - δοκέω - dokeoo - 1380

வினைச்சொல் - நினை, தோன்று, எண்ணு, உண்டாக்கு நலமாகக் காண், விளக்கு, யோசித்துப்பார் (to suppose, be of the opinion, reputed) - சந்தேகமான காரியங்களை இருத லாத்தை குறிக்கிறது. அதேசமயத்தில் நிச்சயமான காரியங்களையும் இருத லாத்தை குறிக்கும். (எபி 4:1; மத் 3:9, லூக்கா 22:24; யோவான் 5:39, 1கொரி 7:40; 1கொரி 10:12; 1கொரி 11:16; கலா 2:9; பிலி 3:4) இந்த மனுஷனிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்படும் காரியம் ஆவியின் கனியை வெளிப்படுத்தும் தேவனுடைய வார்த்தையாகும். (லூக்கா 8:11; 5:18) தேவனுடைய வசனமாகிய விதை யானது இருதயத்திலே லூக்கா 8:14-இல் கூறப்பட்டிருக்கிற பிரகாரம் நெருக்கப் பட்டால் அந்த வசனம் அவனுடைய இருதயத்திலிருந்து எடுத்துப் போடப்படும். ஆகையினால் தன்னிடத்தில் விதைக்கப் பட்டிருக்கிற சத்திய வசனம் எடுத்துப் போடப்படுவதற்கு முன்பாகவே ஆவியின் கனியைத் தரவேண்டும்.

8 அதிகாரம்

38. இயேசுவின் புதிய உறவினர்கள் - (மத் 12:46; மாற்கு 3:31)

லூக்கா 8:19 அப்பொழுது அவருடைய தாயாரும் சகோதரரும் அவரிடத்தில் வந்தார்கள்; ஜனக்கூட்டத்தினாலே அவரண்டையில் அவர்கள் சேரக்கூடாதிருந்தது.

லூக்கா 8:20 அப்பொழுது, உம்முடைய தாயாரும் உம்முடைய சகோதரரும் உம்மைப் பார்க்க வேண்டுமென்று வெளியே நிற்கிறார்கள் என்று அவருக்கு அறிவித்தார்கள்.

லூக்கா 8:21 அதற்கு அவர்: தேவனுடைய வசனத்தைக் கேட்டு அதின்படியே செய்கிறவர்களே எனக்குத் தாயும் எனக்குச் சகோதரருமாயிருக்கிறார்கள் என்றார்.

"அவருடைய சகோதரர்" - மரியாளுக்கு இயேசுவைத் தவிர மற்ற பிள்ளைகளும் உண்டு. இயேசுவுக்கு நான்கு சகோதரர்கள் இருந்தார்கள். யாக்கோபு, யோசே, சீமோன், யூதா என்பது அவர்களுடைய பெயர்களாகும். இயேசுவிற்கு மூன்று சகோதரிகள் இருந்திருக்கலாம். இயேசு கிறிஸ்துவிற்கு உலகப்பிரகாரமாக இப்படிப்பட்ட உறவுகள் இருந்தாலும் அவர் தேவனுடைய ஒரேபேறான குமாரரானவர். இயேசு மரியாளின் வயிற்றில் பரிசுத்த ஆவியானவரால் உற்பத்தியானவர். இவர் யோசேப்பின் குமாரன் அல்ல (மத் 13:55-56, மாற்கு 6:3).

கர்த்தர் மரியாளின் முதற்பேறான குமாரன் என்று அழைக்கப்படுகிறார் (மத் 1:25 லூக்கா 2:7). இதனால் மரியாளுக்கு மேலும் சில பிள்ளைகள் பிறந்திருக்கலாம்.

முதற்பேறு (firstborn)

πρωτότοκος - prootototokos - 4416

பொருள் - முதற்பேறான, முதற்பிறந்த

இந்த வார்த்தை ரோமர் 8:29, கொலோ 1:15-18; எபி 1:6; எபி 11:28, எபி 12:23; வெளி 1:5 ஆகிய வசனங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மற்றவர்களில் முதன்மையானவர் என்பது இதன் பொருள். இயேசு கிறிஸ்து மரியாளுடைய ஒரேபேறான குமாரனாக இருப்பார் என்றால் அதற்காகப் பயன்படுத்த வேண்டிய கிரேக்கச்சொல் "மோனோஜீனஸ்" (monogenees) ஆகும்.

ஒரே (only son) - μονογενής - monogenees - 3439

பொருள் - ஒரே, ஒரே பேறான

இந்த வார்த்தை லூக்கா 7:12, லூக்கா 8:42, லூக்கா 9:38 ஆகிய வசனங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு பெற்றோருக்கு ஒரே ஒரு குமாரனோ அல்லது ஒரே ஒரு குமாரத்தியோ இருக்கும்போது இந்த வார்த்தை பயன்படுத்தப்படும்.

இயேசு கிறிஸ்து பிதாவாகிய தேவனுடைய ஒரேபேறான குமாரன் (யோவான் 1:14,18; யோவான் 3:16,18; 1யோவான் 4:9).

மரியாளுக்கு மேலும் சில குழந்தைகள் பிறக்கும் என்பது ஏற்கெனவே முன்னறிவிக்கப்பட்டுள்ள தீர்க்கதரிசனமாகும். "என் சகோதரருக்கு வேறுமனுஷனும் என் தாயின் பிள்ளைகளுக்கு அந்நியனுமானேன். உம்முடைய வீட்டைக் குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது; உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தனைகள் என்மேல் விழுந்தது" (சங் 69:8-9)

அவருடைய தாயாரும், அவருடைய சகோதரரும் கப்பர்நகூமிற்கு அவரைத் தேடி வருகிறார்கள். இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தைத் தடைபண்ணுகிறார்கள் (மத் 12:46-50, மாற்கு 3:31-35; லூக்கா 8:19-21; யோவான் 2:12).

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுகின்ற வரையிலும் அவருடைய சகோதரர் அவரை விசுவாசிக்கவில்லை (யோவான் 7:3-10; அப் 1:14).

யாக்கோபு இயேசு கிறிஸ்துவின் சகோதரர் என்று அழைக்கப்பட்டிருக்கிறார் (மாற்கு 6:3, கலா 1:19).

8 அதிகாரம்

"தேவனுடைய வசனத்தைக் கேட்டு, அதின்படியே செய்கிறவர்கள்" - லூக்கா 8:15)

39. இயேசு புயல்காற்றை அமைதிப்படுத்துகிறார் - (மத் 8:23; மாற்கு 4:35)

லூக்கா 8:22 பின்பு ஒரு நாள் அவர் தமது சீஷரோடுங்கூடப் படவில் ஏறி, கடலின் அக்கரைக்குப் போவோம் வாருங்கள் என்றார்; அப்படியே புறப்பட்டுப் போனார்கள்.

லூக்கா 8:23 படவு ஓடுகையில் அவர் நித்திரையாயிருந்தார். அப்பொழுது கடலிலே சுழல் காற்றுண்டானதால் அவர்கள் மோசமடையத்தக்கதாய்ப் படவு ஜலத்தினால் நிறைந்தது.

லூக்கா 8:24 அவர்கள் அவரிடத்தில் வந்து, ஐயரே, ஐயரே, மடிந்துபோகிறோம் என்று அவரை எழுப்பினார்கள். அவர் எழுந்து, காற்றையும் ஜலத்தின் கொந்தளிப்பையும் அதட்டினார்; உடனே அவைகள் நின்றுபோய் அமைதலுண்டாயிற்று.

லூக்கா 8:25 அவர் அவர்களை நோக்கி, உங்கள் விசுவாசம் எங்கே என்றார். அவர்கள் பயந்து ஆச்சரியப்பட்டு, இவர் யாரோ, காற்றுக்கும் ஜலத்துக்கும் கட்டளையிடுகிறார், அவைகளும் இவருக்குக் கீழ்படிகிறதே என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள்.

"கடலிலே சுழல் காற்றுண்டானது" (மத் 8:24-27)

"படவு ஜலத்தினால் நிறைந்தது" படவிற்குள் தண்ணீர் புகுந்து படகு தண்ணீரினால் நிறைந்து விடுகிறது.

"உங்கள் விசுவாசம் எங்கே" நம் ஒவ்வொருவருடைய ஜீவியத்திலும் நாம் கேட்க வேண்டிய முக்கியமான கேள்வி இதுதான். ஒருவருக்கு விசுவாசம் இருக்குமென்றால் அவர் தேவனிடமிருந்து தன்னுடைய விண்ணப்பத்திற்குப் பதிலைப் பெற்றுக் கொள்வார் (மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; எபி 11:6; யாக் 1:5-8)

40. கதரேனருடைய நாட்டிலிருந்த பிசாசுகள் பிடித்தவன் - (மத் 8:28; மாற்கு 5:1)

லூக்கா 8:26 பின்பு கலிலேயாவுக்கு எதிரான கதரேனருடைய நாட்டில் சேர்ந்தார்கள்.

லூக்கா 8:27 அவர் கரையிலிறங்கின போது, நெடுநாளாய்ப் பிசாசுகள் பிடித்தவனும் வஸ்திரந்தரியாதவனும் வீட்டில் தங்காமல் பிரேதக் கல்லறைகளிலே தங்கினவனுமாயிருந்த அந்தப் பட்டணத்து மனுஷன் ஒருவன் அவருக்கு எதிராக வந்தான்.

லூக்கா 8:28 அவன் இயேசுவைக் கண்டபோது, கூக்குரலிட்டு, அவருக்கு முன்பாக விழுந்து, இயேசுவே, உன்னதமான தேவனுடைய குமாரனே, எனக்கும் உமக்கும் என்ன? என்னை வேதனைப்படுத்தாதபடிக்கு உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் என்று மகா சத்தத்தோடே சொன்னான்.

லூக்கா 8:29 அந்த அசுத்த ஆவி அவனை விட்டுப் போகும்படி இயேசு கட்டளையிட்டபடியினாலே அப்படிச் சொன்னான். அந்த அசுத்த ஆவி வெகுகாலமாய் அவனைப் பிடித்திருந்தது; அவன் சங்கிலிகளினாலும் விலங்குகளினாலும் கட்டுண்டு காவல்பண்ணப்பட்டிருந்தும், கட்டுகளை முறித்துப் போட்டுப் பிசாசினால் வனாந்தரங்களுக்குத் துரத்தப்பட்டிருந்தான்.

லூக்கா 8:30 இயேசு அவனை நோக்கி: உன் பேர் என்னவென்று கேட்டார்; அதற்கு அவன் லேகியோன் என்றான்; அநேகம் பிசாசுகள் அவனுக்குள் புகுந்திருந்தபடியால் அந்தப் பேரைச் சொன்னான்.

லூக்கா 8:31 தங்களைப் பாதாளத்திலே போகக் கட்டளையிடாதபடிக்கு அவைகள் அவரை வேண்டிக்கொண்டன.

லூக்கா - தொகுப்புரை

8 அதிகாரம்

லூக்கா 8:32 அவ்விடத்தில் அநேகம் பன்றிகள் கூட்டமாய் மலையிலே மேய்ந்துகொண்டிருந்தது. அந்தப் பன்றிகளுக்குள் போகும்படி தங்களுக்கு உத்தரவு கொடுக்கவேண்டும் என்று அவரை வேண்டிக்கொண்டன. அவைகளுக்கு உத்தரவு கொடுத்தார்.

லூக்கா 8:33 அப்படியே பிசாசுகள் அந்த மனுஷனைவிட்டு நீங்கி, பன்றிகளுக்குள் புகுந்தன. அப்பொழுது அந்தப் பன்றிக்கூட்டம் உயர்ந்த மேட்டிலிருந்து கடலிலே பாய்ந்து, அமிழ்ந்து, மாண்டது.

லூக்கா 8:34 அவைகளை மேய்த்தவர்கள் சம்பவித்ததைக் கண்டு, ஓடிப்போய், பட்டணத்திலும் சுற்றுப்புறங்களிலும் அறிவித்தார்கள்.

லூக்கா 8:35 அப்பொழுது, சம்பவித்ததைப் பார்க்கும்படி ஜனங்கள் புறப்பட்டு, இயேசுவினிடத்தில் வந்து, பிசாசுகள் விட்டுப்போன மனுஷனை வஸ்திரந்தரித்து இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து புத்திதெளிந்திருக்கிறதைக் கண்டு பயந்தார்கள்.

லூக்கா 8:36 பிசாசுகள் பிடித்திருந்தவன் சொஸ்தமாக்கப்பட்டதைக் கண்டவர்களும் அதை அவர்களுக்கு அறிவித்தார்கள்.

லூக்கா 8:37 அப்பொழுது கதரேனருடைய சுற்றுப்புறத்திலுள்ள திரளான ஜனங்கள் எல்லாரும் மிகவும் பயமடைந்தபடியினாலே தங்களை விட்டுப்போகும்படி அவரை வேண்டிக் கொண்டார்கள். அந்தப்படி அவர் படவில் ஏறி, திரும்பிப் போனார்.

லூக்கா 8:38 பிசாசுகள் நீங்கின மனுஷன் அவரோடே கூட இருக்கும்படி உத்தரவு கேட்டான்.

லூக்கா 8:39 இயேசு அவனை நோக்கி: நீ உன் வீட்டுக்குத் திரும்பிப்போய், தேவன் உனக்குச் செய்தவைகளையெல்லாம்அறிவி என்று சொல்லி, அவனை அனுப்பிவிட்டார். அந்தப்படி அவன் போய், இயேசு தனக்குச் செய்தவைகளையெல்லாம் பட்டணத்தில் எங்கும் பிரசித்தப்படுத்தினான்.

"கதரேனர்" - (மத். 8:28-34)

"லேகியோன்" - அநேகம் பிசாசுகள் அவனுக்குள் புகுந்திருந்தபடியால் அந்தப் பேரைச் சொன்னான். லேகியோன் என்றால் 6,000 என்று பொருள். பிசாசுகள் ஒரு மனுஷனுக்குள் புகுந்து கொள்ளும் போது அவற்றிற்கு அதிகமான இடவசதி தேவைப்படாது.

பாதாளம் (deep) - ἄβυσσος - **Abussos** - 12

பெண்பால் பெயர்ச்சொல் - ஆழம் காண முடியாத பாதாளம் என்று ஏழு இடங்களிலும், ஆழம் என்று இரண்டு இடங்களிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது **(bottomless, unbounded)** (வெளி. 20:3).

(அ) மரித்தவர்களின் இருப்பிடம் ரோம. 10:7

(ஆ) பிசாசுகளின் சிறைச்சாலை லூக். 8:31; வெளி. 20:3

"அவ்விடத்தில் அநேகம் பன்றிகள் கூட்டமாய் மலையிலே மேய்ந்துகொண்டிருந்தது" - பன்றியின் மாம்சம் புசிப்பதற்குத் தடைபண்ணப்பட்டிருந்தது. (லேவி. 11:7; உபா. 14:8). ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ இந்தப் பிரமாணத்தை மீறி விட்டார்கள் (ஏசா. 65:4, ஏசா. 66:17). பலிகளிலும் பன்றிகளைப் பயன்படுத்தினார்கள் (ஏசா. 66:3). பன்றிகள் அசுத்த மிருகங்களாகக் கூறப்பட்டிருக்கிறது. (நீதி. 11:22; மத். 7:6, லூக்கா 15:15-16, 2பேதுரு 2:22)

"பன்றிகளுக்குள் புகுந்தன" - பிசாசுகள் ஒரு சரீரத்திலிருந்து இன்னொரு சரீரத்திற்குத் தங்களுடைய சொந்த விருப்பத்தின்படி போகக்கூடியவை. அவற்றை நாம் அதட்டி அடக்கித் துரத்த வேண்டும். (மத். 12:43; மாற்கு 16:17)

"அவைகளை மேய்த்தவர்கள்" பன்றிகளை மேய்ப்பது மிகவும் தாழ்மையான வேலை (லூக்கா 15:15-16)

லூக்கா – தொகுப்புரை

8 அதிகாரம்

"புத்திதெளிந்திருக்கிறான்" - பிசாசுகள் விட்டுப்போன மனுஷன் இப்போது வஸ்திரம் தரித்திருக்கிறான் புத்திதெளிந்திருக்கிறான் இயேசுவின் பாதத்தருகே அமர்ந்திருக்கிறான் மனுஷர் தங்களுடைய முயற்சியினால் இதையெல்லாம் செய்ய முடியாது ஆனால் இயேசு கிறிஸ்து ஒரு நிமிஷ நேரத்திற்குள் இந்த மனுஷனுக்கு மறுவாழ்வு கொடுத்திருக்கிறார்

இந்த மனுஷன் இதுவரையிலும் புத்திதெளிவில்லாதவனாக இருந்தான் சரீரப்பிரகாரமான பலவீனங்களினாலோ பிசாசின் கிரியைகளினாலோ அல்லது மருத்துவ ரீதியான வேறு ஏதாவது காரணத்தினாலோ ஒருவனுக்கு புத்தி சுயாதீனமில்லாமல் போவதற்கு வாய்ப்புண்டு பொதுவாக பிசாசுகளே இப்படிப்பட்ட பிரச்சனைகளுக்குக் காரணமாக இருக்கும்.

தெளிவாக இருக்கும் மனுஷருக்குள் பிசாசு புகுந்துவிட்டால். அவர்கள் தங்கள் புத்தியில் குழப்பம் அடைந்து விடுவார்கள் கர்த்தருடைய விசுவாசமாக இருந்து இயேசு கிறிஸ்துவின் வல்லமையினால் மனுஷனை வருத்தும் பிசாசுகளைத் துரத்த வேண்டும். விசுவாசிகளுக்குத் தேவன் பிசாசுகளின்மீது அதிகாரம் கொடுத்திருக்கிறார்

"பிசாசுகள் பிடித்திருந்தவன் சொஸ்தமாக்கப் பட்டதைக் கண்டவர்களும் அதை அவர்களுக்கு அறிவித்தார்கள்" அங்கு கூடியிருந்த ஜனங்களுக்கு சொஸ்தமாக்கப்பட்ட மனுஷனுடைய முன்நிலைமையும் தெரியும் பின் நிலைமையும் தெரியும்

"தங்களை விட்டுப்போகும்படி அவரை வேண்டிக் கொண்டார்கள்" இயேசு கிறிஸ்துவிடம் அந்த ஊர் ஜனங்கள் தங்கள் ஊரைவிட்டுப் போகுமாறு கேட்டுக் கொள்கிறார்கள் இயேசு கிறிஸ்துவும் அந்த ஊரை விட்டுப் போய்விட்டார் அதன்பின்பு. அவர் அந்த ஊருக்குத் திரும்பி வரவில்லை இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள விரும்பாத ஜனங்களை அவர் ஒருபோதும் கட்டாயப் படுத்துவதில்லை யாரையும் அவர் பலவந்தம் பண்ணுவதுமில்லை மனுஷர் தாங்களாகவே தீர்மானம் பண்ணி. இயேசு கிறிஸ்துவிடம் வரவேண்டும். தம்மிடம் வருகிற யாரையும் அவர் புறம்பே தள்ளமாட்டார் இயேசு கிறிஸ்துவிடம் வந்து தங்களுடைய ஜீவனை ஒப்புக் கொடுக்காதவர்கள் நித்திய ஆக்கினையை அடைவார்கள் யாரை இரட்சிப்பதற்காக இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தாரோ அந்த ஜனங்களே அவரை ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணிக்கிறார்கள்

"பிசாசுகள் நீங்கின மனுஷன் அவரோடே கூட இருக்கும்படி உத்தரவு கேட்டான்" - பிசாசுகள் நீங்கிய மனுஷன் இயேசு கிறிஸ்துவைத் தம்மோடு இருக்குமாறு கேட்டுக் கொள்கிறான் ஆனால் புத்தி தெளிவாக இருக்கும் மனுஷரோ இயேசு கிறிஸ்துவைத் தங்களைவிட்டு போகும்படி வேண்டிக் கொள்கிறார்கள் (லூக்கா 8.37

"இயேசு அவனை அனுப்பிவிட்டார்" - இந்த நிகழ்ச்சியில் இயேசு கிறிஸ்து மூன்று ஜெபங்களுக்குப் பதில் கொடுக்கிறார் அவையாவன

1 பிசாசுகளின் விண்ணப்பம் (லூக்கா 8.32-33)

2 இரட்சிக்கப்படாத மனுஷரின் விண்ணப்பம் (லூக்கா 8.37)

3 புத்திதெளிந்தவனுடைய விண்ணப்பம் (லூக்கா 8.38-39)

புத்திதெளிந்தவன் இயேசுவோடு தான் இருக்க வேண்டுமென்று விண்ணப்பம் பண்ணினான் ஆனால் இயேசு கிறிஸ்து அவனுடைய வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளவில்லை அவன் தன் வீட்டிற்குப்போய் தாம் அவனுக்குச் செய்தவைகளை அறிவிக்க வேண்டுமென்று இயேசு அவனை அனுப்பி விடுகிறார்

இயேசுகிறிஸ்து செய்கிற நற்காரியங்களை இரட்சிக்கப்பட்டவர்கள் மற்ற ஜனங்களுக்கு அறிவிக்க வேண்டும்.எல்லோருக்கும் சுவிசேஷம் அறிவிப்பது தேவனுடைய சித்தம். அந்தச் சித்தத்திற்கு விசுவாசிகள் கீழ்ப்படிய வேண்டும். நம்முடைய சுய சித்தத்தைத் தேவன் அங்கீகரிக்க வில்லையென்று வருத்தப்படக் கூடாது. கர்த்தருடைய சித்தம் நிறைவேற நாம் ஒப்புக்கொடுக்க வேண்டும். இந்த வசனப்பகுதியில் பிசாசு பிடித்திருந்த மனுஷன் புத்திதெளிந்தவனாக இருக்கிறான் கிறிஸ்துவிடம் அவன் தன் விருப்பத்தைக் கூறுகிறான் ஆனால் கிறிஸ்து அவனுடைய விருப்பத்தை ஏற்றுக் கொள்ளாமல் தம்முடைய சித்தத்தைச் செய்யுமாறு கூறுகிறார் அந்த மனுஷன் இயேசுவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து புறப்பட்டுப் போனான்

8 அதிகாரம்

நாம் ஜெயம்பண்ணும்போது தேவனுடைய சித்தம் என்னவென்று தெரிந்து ஜெபிக்க வேண்டும் எபி 11:6

"பட்டணம்" - லூக்கா 8:34-இல் கூறப் பட்டிருக்கிற பட்டணம் இவர்கள் இயேசுவை அங்கீகரிக்கவில்லை லூக்கா 8:37) இப்படிப்பட்ட காரியம் இக்காலத்திலும் நடைபெறுகிறது. ஒருசில ஜனங்கள் ஒரு ஊழியக்காரரை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் வேறு ஊழியக்காரரை ஏற்றுக் கொள் வார்கள் இதனால ஊழியக்காரர்கள் தங்களுக்குள் பொறாமைபட வேண்டியதில்லை மனம் வருத்தபட வேண்டியதுமில்லை ஊழியக்காரரை அவர்கள் ஏற்றுக்கொள்ளா விட்டாலும், தேவனுடைய சத்தியத்தை ஜனங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் வேதவசனத்தை ஜனங்கள் ஏற்றுக்கொள்ள வில்லையென்றால அவர்களுடைய வருங்காலத்திற்கு நம்பிக்கை இல்லை

41. பெரும்பாடுள்ள ஸ்திரீ குணமடைகிறாள் - யவீருவின் மகளை இயேசு உயிருடன் எழுப்புகிறார் (மத் 9:18,மாற்கு 5:21)

லூக்கா 8:40 இயேசு திரும்பி வந்தபோது ஜனங்களெல்லாரும் அவருக்காகக் காத்திருந்தபடியால அவரைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டார்கள்

லூக்கா 8:41 அப்பொழுது ஜெப ஆலயத்தலைவனாகிய யவீரு என்னும் பேருள்ள ஒருவன் வந்து, இயேசுவின் பாதத்தில விழுந்து. பன்னிரண்டு வயதுள்ள தன்னுடைய ஒரே குமாரத்தி மரண அவஸ்தையாயிருந்த படியால,

லூக்கா 8:42 தன் வீட்டிற்கு வரும்படி அவரை வேண்டிக்கொண்டான் அவர் போகையில திரளான ஜனங்கள அவரை நெருக்கினார்கள்

லூக்கா 8:43 அப்பொழுது பன்னிரண்டு வருஷமாய் பெரும்பாடுள்ளவளாயிருந்து, தன் ஆஸ்திகளையெல்லாம் வைத்தியர்களுக்குச் செலவழித்தும் ஒருவனாலும் சொஸ்தமாக்கப் படாதிருந்த ஒரு ஸ்திரீ,

லூக்கா 8:44 அவருக்குப் பின்னாக வந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள் உடனே அவளுடைய பெரும்பாடுநின்று போயிற்று.

லூக்கா 8:45 அப்பொழுது இயேசு. என்னைத் தொட்டது யார் என்று கேட்டார் எங்களுக்குத் தெரியாதென்று எல்லாரும் சொன்ன போது பேதுருவும் அவனுடனே கூட இருந்தவர்களும். ஐயரே திரளான ஜனங்கள் உம்மைச் சூழ்ந்து நெருக்கிக் கொண்டிருக்கிறார்களே என்னைத் தொட்டது யார் என்று எப்படி கேட்கிறீர் என்றார்கள்

லூக்கா 8:46 அதற்கு இயேசு. என்னிலிருந்து வல்லமை புறப்பட்டதை அறிந்திருக்கிறேன் ஆதலால ஒருவர் என்னைத் தொட்டதுண்டு என்றார்

லூக்கா 8:47 அப்பொழுது அந்த ஸ்திரீ தான் மறைந்திருக்கவில்லை யென்று கண்டு நடுங்கி வந்து அவர் முன்பாக விழுந்து, தான் அவரைத் தொட்ட காரணத்தையும் உடனே தான சொஸ்தமானதையும் எல்லா ஜனங்களுக்கும் முன்பாக அவருக்கு அறிவித்தாள்

லூக்கா 8:48 அவர் அவளைப் பார்த்து. மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது சமாதானத்தோடே போ என்றார்

லூக்கா 8:49 அவர் இப்படிப் பேசிக் கொண்டிருக்கையில ஜெப ஆலயத் தலைவனுடைய வீட்டிலிருந்து ஒருவன் வந்து அவனை நோக்கி: உம்முடைய குமாரத்தி மரித்துப்போனாள், போதகரை வருத்தப்படுத்த வேண்டாம் என்றான்

லூக்கா 8:50 இயேசு அதைக் கேட்டு: பயப்படாதே; விசுவாசமுள்ளவனாயிரு, அப்பொழுது அவள் இரட்சிக்கப்படுவாள் என்றார்

8 அதிகாரம்

லூக்கா 8:51 அவர் வீட்டில் வந்த போது, பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் பெண்ணின் தகப்பனையும் தாயையும் தவிர வேறொருவரையும் உள்ளே வரவொட்டாமல்

லூக்கா 8:52 எல்லாரும் அழுது அவளைக் குறித்துத் துக்கங் கொண்டாடுகிறதைக் கண்டு: அழாதேயுங்கள், அவள் மரித்துப் போகவில்லை, நித்திரையாயிருக்கிறாள் என்றார்.

லூக்கா 8:53 அவள் மரித்துப் போனாளென்று அவர்கள் அறிந்ததினால், அவரைப் பார்த்து நகைத்தார்கள்.

லூக்கா 8:54 எல்லாரையும் அவர் வெளியே போகப்பண்ணி, அவளுடைய கையைப் பிடித்து: பிள்ளையே எழுந்திரு என்றார்.

லூக்கா 8:55 அப்பொழுது அவளுடைய உயிர் திரும்ப வந்தது, உடனே அவள் எழுந்திருந்தாள்; அவளுக்கு ஆகாரங் கொடுக்கக் கட்டளையிட்டார்.

லூக்கா 8:56 அவளுடைய தாய் தகப்பன்மார் ஆச்சரியப்பட்டார்கள். அப்பொழுது நடந்ததை ஒருவருக்கும் சொல்லாமலிருக்கும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

"இயேசு திரும்பி வந்தார்" - இயேசு கடலின் மறுகரைக்குத் திரும்பி வருகிறார். அவர் அங்கிருந்துதான் புறப்பட்டார் (லூக்கா 8:22,26). "ஜனங்களெல்லாரும் அவரைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டார்கள்" - ஒரு கூட்டம் ஜனத்தார் சத்தியத்தை ஏற்றுக் கொள்ள வில்லையென்றால் மற்றொரு கூட்டம் ஜனத்தார் சத்தியத்தைச் சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறார்கள். தேவனுடைய பிள்ளைகள் விசுவாசத்தோடு வேதவசனத்தைத் தொடர்ந்து பிரசங்கம் பண்ணிக்கொண்டே இருக்க வேண்டும். (மத் 28:19-20; மாற்கு 16:15-20; அப் 1:8) இயேசு கிறிஸ்துவை ஒரு ஊரார் ஏற்றுக் கொள்ளவில்லை. மற்றொரு ஊராரோ அவர் எப்போது வருவார் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

"ஜனங்களெல்லாரும் அவருக்காகக் காத்திருந்தார்கள்" - இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்பதற்காகவும், தங்கள் சரீரத்திலும், ஆவியிலும், ஆத்துமாவிலும் கிறிஸ்துவின் மூலமாக ஆசீர்வாதம் பெறுவதற்காகவும் ஜனங்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். நமக்குச் சத்திய வசனம் போதிக்கப்படும்போது அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். இது புறஜாதியார் இரட்சிக்கப்படும் காலம். ஆகையினால் விசுவாசப்பிள்ளைகள் பின்வாங்கிப்போய் விடாதவாறு எச்சரிப்போடு இருக்க வேண்டும். (ரோமர் 2:12-16)

"யவீரு" (Jairus) - இஸ்ரவேலருடைய பெயர் யாவீர் (Jair) (எண் 32:41; யோசு 13:30; நியா 10:3)

"ஜெப ஆலயத்தலைவன்" - ஜெபாலயத்திலுள்ள மூப்பர்களுக்குத் தலைவன் (மத் 9:18-33; மாற்கு 5:21-43)

"பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ளவளாயிருந்த ஸ்திரீ" - (மத் 9:20-22; மாற்கு 5:25-34)

"பெரும்பாடு" (issue of blood) (லேவி 15:19; மத் 9:20; மாற்கு 5:25)

நின்று போயிற்று (stanched) - ἵστημι - histeemi - 2476

வினைச்சொல் - நில், நிறுத்து, நிலைப்படுத்து, உடன்படு, சுமத்து (to stop, stand still)

"என்னிலிருந்து வல்லமை புறப்பட்டதை அறிந்திருக்கிறேன்" - (லூக்கா 6:19)

"அந்த ஸ்திரீ தான் மறைந்திருக்க வில்லையென்று கண்டு, நடுங்கி வந்து அவர் முன்பாக விழுந்தாள்" - பன்னிரண்டு வருஷமாக இந்த ஸ்திரீக்கு உதிரப்போக்கு இருந்தது. அநேக வைத்தியர்களால் மிகவும் வருத்தப்பட்டு, தனக்கு உண்டானவை களையெல்லாம் செலவழித்தும், சற்றாகிலும் குணமடையாமல் அதிக வருத்தப்பட்டுக் கொண்டிருந்தாள். பன்னிரண்டு வருஷமாக மருத்துவசிகிச்சை பெற்றாள். அது அவளுக்கு எந்த பலனும் தரவில்லை. இப்பொழுது அவள் இயேசுவைத் தொட்டவுடன் அவளுடைய பெரும்பாடு நின்றுபோயிற்று. அதனால் அவள் ஆச்சரியமடைந்தாள். அதே வேளையில், பயத்தினால் நடுங்கினாள்.

8 அதிகாரம்

"மகளே, திடன்கொள்" - அந்த ஸ்திரீ தவறான காரியம் ஒன்றும் செய்யவில்லை ஆகையினால் பயப்படவேண்டாம் என்று அவளுக்கு ஆறுதலாகக் கூறுகிறார்.

"உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" - இந்த ஸ்திரீயிடம் விசுவாசம் இருந்தது. இயேசுவின் வஸ்திரத்தைத் தொட்டால் நான் குணமடையலாம் என்னும் விசுவாசம் இருந்தது. அந்த விசுவாசத்தின் மூலமாக குணமடைகிறாள். இயேசுகிறிஸ்துவிடமிருந்து வல்லமை புறப்பட்டது என்றுதான் வாசிக்கிறோம். இயேசுவிடமிருந்து விசுவாசம் வெளிப்பட்டது என்று வாசிக்கவில்லை. ஸ்திரீயிடமிருந்துதான் விசுவாசம் வெளிப்பட்டது. இக்காலத்தில் வியாதியஸ்தருக்காக ஜெபிக்கும்போது ஜெபிக்கும் ஊழியக்காரர் வரம் பெற்றவரா விசுவாசமுள்ளவரா என்று அவருடைய விசுவாசத்தை நாம் பார்க்கிறோம். நம்முடைய விசுவாசத்தை வெளிப்படுத்தத் தவறி விடுகிறோம். ஆகையினால்தான் பலருடைய வியாதி குணமாவதில்லை. நம்முடைய வியாதி குணமடைய வேண்டுமென்று நாம் விசுவாசிக்க வேண்டும்.

நாம் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும்போது, தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெறுவோம். (மத் 7:7-11; மத் 17:20, மத் 21:22; மாற்கு 11:22-25, யோவான் 15:4, எபி 11:6, யாக் 1:5-8) விசுவாசம் தேவனுடைய வார்த்தையைக் கேட்பதினாலும், (ரோமர் 10:17) பரிசுத்த ஆவியினாலும் வரும். (1கொரி 12:4-11) விசுவாசிக்கிறவனுக்கு அக்காலத்தில் எல்லாம் கூடியது. அதுபோலவே இக்காலத்திலும் கூடும். (மத் 17:20, மாற்கு 9:23)

"உம்முடைய குமாரத்தி மரித்துப்போனாள், போதகரை வருத்தப்படுத்த வேண்டாம்" - அந்தக் குழந்தையின் தந்தைக்குப் பெரிய அதிர்ச்சி தரக்கூடிய வாக்கியம். யவீருவின் நிலைமை தடுமாறிற்று. அவனுடைய விசுவாசம் தளர்ந்து போனது. மகள் மரித்துப்போனாள், இனிமேல் விசுவாசித்து என்ன பிரயோஜனம் என்று நினைத்திருப்பான். ஆனால் இயேசுவின் விசுவாசம் பெரியது. எந்தக் சூழ்நிலையிலும் இயேசுவால் கூடாதகாரியம் ஒன்றுமில்லை.

"பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு, அப்பொழுது அவள் இரட்சிக்கப்படுவாள்" - தன் மகள் மரித்துப் போன செய்தியைக் கேட்டு யவீரு கலங்கிக் கொண்டிருக்கிறான். அவனிடம் இயேசு விசுவாசமுள்ளவனாக இரு என்று கூறுகிறார். இயேசு நம்மிடம் எதிர்பார்க்கும் காரியம் இதுதான். நாம் இயேசுவை விசுவாசிக்க வேண்டும். (மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; லூக்கா 15:7, (மாற்கு 11:22-25; எபி 11:6; யாக் 1:5-8))

"பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும்" - இம்மூவரும் இயேசு கிறிஸ்துவோடு பல சூழ்நிலைகளில் கூடவே இருந்தார்கள். (மாற்கு 9:2; மாற்கு 14:33; லூக்கா 8:51)

"எல்லாரும் அழுது அவளைக் குறித்துத் துக்கங்கொண்டாடுகிறதைக் கண்டார்" - இவர்கள் துக்க வீட்டில் ஒப்பாரி பாடுவதற்காக கூலிக்கு அமர்த்தப்பட்டவர்கள். (மத் 9:23; எரே 9:17-18)

"அவள் மரித்துப்போனாளென்று அவர்கள் அறிந்திருந்தார்கள்" - அவள் மரித்துப் போனாள் என்று அவர்களுக்குத் தெரிந்ததுபோலவே இயேசு கிறிஸ்துவிற்கும் தெரியும். ஆனால் அவள் மரித்தவளாகவே இருக்கப்போவதில்லை. உயிரோடு எழும்பப் போகிறாள் என்பது இயேசுவிற்கு மட்டுமே தெரியும்.

"எல்லாரையும் அவர் வெளியே போகப்பண்ணி, அவளுடைய கையைப் பிடித்து, பிள்ளையே எழுந்திரு என்றார்" (மாற்கு 5:40)

"அவள் உயிர் திரும்ப வந்தது" - அவள் மரித்துப் போனாள். அவளுடைய ஆவி அவளை விட்டுப் பிரிந்து போய்விட்டது. இப்பொழுது அவளுடைய உயிர் அதாவது அவளுடைய ஆவி திரும்பவும் அவளுடைய சரீரத்திற்குள் வருகிறது. (யாக் 2:26)

"அவளுக்கு ஆகாரங்கொடுக்கக் கட்டளையிட்டார்" - அந்தச் சிறுமி பசியாக இருப்பதை இயேசு உணர்ந்தார். ஆகையினால் அவளுக்கு ஆகாரம் கொடுக்குமாறு இயேசு கட்டளையிடுகிறார். பொதுவாக வியாதியாக இருக்கிறவர்களுக்குச் சரியாக ஆகாரம் கொடுக்கமாட்டார்கள். அவர்களாலும், சரியாகச் சாப்பிடமுடியாது. ஆனால் இந்தச் சிறுமிக்கு இப்பொழுது ஒரு பிரச்சனையும் இல்லை. ஆகையினால் அவளுக்கு ஆகாரம் கொடுக்குமாறு இயேசு கூறுகிறார்.

8 அதிகாரம்

42. இயேசு பன்னிரெண்டு பேரை ஊழியம் செய்வதற்கு அபிஷேகம் பண்ணுகிறார் - (6:12 மத் 10:1; மாற்கு 3:13; 6:7-13)

லூக்கா 9:1 அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷரையும் வரவழைத்து சகல பிசாசுகளையும் துரத்தவும் வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும அதிகாரமும கொடுத்து

லூக்கா 9:2 தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கிக்கவும், பிணியாளிகளைச் சொஸ்தமாக்கவும் அவர்களை அனுப்பினார்

லூக்கா 9:3 அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: வழிக்குத் தடியையாவது பையையாவது அப்பத்தையாவது காசையாவது எடுத்துக்கொண்டு போகவேண்டாம். இரண்டு அங்கிகளைக் கொண்டு போகவும் வேண்டாம்.

லூக்கா 9:4 எந்த வீட்டிலே பிரவேசிக்கிறீர்களோ, அங்கே தங்கி, அங்கிருந்து புறப்படுங்கள்

லூக்கா 9:5 உங்களை ஏற்றுக்கொள்ளாதவர்கள் எவர்களோ அவர்களுடைய ஊரைவிட்டு நீங்கள் புறப்படும்போது, அவர்களுக்குச் சாட்சியாக உங்கள் கால்களில் படிந்த தூசியை உதறிப் போடுங்கள் என்றார்

லூக்கா 9:6 அவர்கள் புறப்பட்டுப்போய், கிராமங்கள்தோறும் திரிந்து, எங்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து பிணியாளிகளைக் குணமாக்கினார்கள்

"அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷரையும் வரவழைத்தார்" - லூக்கா 6:12-16 ஆகிய வசனங்களில் இயேசு கிறிஸ்து தமது சீஷர்களை அப்போஸ்தலர்களாக பிரதிஷ்டை பண்ணுவதற்கு அழைத்தார் இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் காரியம் தம்முடைய சீஷர்கள் தமது ஊழியத்தைச் செய்வதற்கு வல்லமையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக அழைக்கப்படும் அழைப்பாகும். (மத் 10:1-8

"சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்தார்" - இயேசு அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார் என்று வாசிக்கிறோம். அதாவது இயேசு கிறிஸ்து அவர்களுக்குக் கொடுக்கும் வரையிலும் அவர்களுக்கு வல்லமையுமில்லை, அதிகாரமுமில்லை. வியாதிகளை அவர்களால் குணப்படுத்தவும் முடியாது. ஆனால் இப்போதோ இயேசு கிறிஸ்துவிடமிருந்து வல்லமையையும் அதிகாரத்தையும் பெற்றிருக்கிறார்கள் இப்போது இவர்களால் வியாதிப்பட்டவர்களைக் குணமாக்க முடியும் (மாற்கு 6:7-13; லூக்கா 9:6)

"சகல பிசாசுகளையும் துரத்தும் வல்லமையும் அதிகாரமும்" - (மத் 10:1-8 லூக்கா 10:1-20)

"வழிக்குத் தடியையாவது பையையாவது அப்பத்தையாவது காசையாவது எடுத்துக் கொண்டு போகவேண்டாம்; இரண்டு அங்கிகளைக் கொண்டு போகவும் வேண்டாம்" - (மத் 10:9-15 லூக்கா 10:3-12

"அவர்கள் புறப்பட்டுப்போய், கிராமங்கள் தோறும் திரிந்து எங்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து பிணியாளிகளைக் குணமாக்கினார்கள்" - இதுதான் புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டிருக்கிற ஊழியம்

1. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும். (மாற்கு 16:15)

2. சுவிசேஷ வசனத்தை உறுதிபண்ண வேண்டும். (மாற்கு 6:30, மத் 28:20 அப 11:8)

43. ஏரோதுவின் கலங்கிய மனச்சாட்சி - யோவான் ஸ்நானனை சிரச்சேதம் பண்ணுகிறான் - (மத் 14:1; மாற்கு 6:14)

லூக்கா 9:7 அப்பொழுது காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோது அவரால் செய்யப்பட்ட யாவையும் கேள்விப் பட்டதுமன்றி சிலர் யோவான் மரித்தோரிலிருந்து எழுந்தான் என்றும்,

9 அதிகாரம்

42. இயேசு பன்னிரெண்டு பேரை ஊழியம் செய்வதற்கு அபிஷேகம் பண்ணுகிறார் - (6:12 மத் 10:1; மாற்கு 3:14; 6:7-14)

லூக்கா 9:1 அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷரையும் வரவழைத்து சகல பிசாசுகளையும் துரத்தவும் வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்து

லூக்கா 9:2 தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கிக்கவும், பிணியாளிகளைச் சொஸ்தமாக்கவும் அவர்களை அனுப்பினார்

லூக்கா 9:3 அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: வழிக்குத் தடியையாவது பையையாவது அப்பத்தையாவது காசையாவது எடுத்துக்கொண்டு போகவேண்டாம். இரண்டு அங்கிகளைக் கொண்டு போகவும் வேண்டாம்.

லூக்கா 9:4 எந்த வீட்டிலே பிரவேசிக்கிறீர்களோ, அங்கே தங்கி, அங்கிருந்து புறப்படுங்கள்

லூக்கா 9:5 உங்களை ஏற்றுக்கொள்ளாதவர்கள் எவர்களோ அவர்களுடைய ஊரைவிட்டு நீங்கள் புறப்படும்போது, அவர்களுக்குச் சாட்சியாக உங்கள் கால்களில் படிந்த தூசியை உதறிப் போடுங்கள் என்றார்

லூக்கா 9:6 அவர்கள் புறப்பட்டுப்போய், கிராமங்கள்தோறும் திரிந்து, எங்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து பிணியாளிகளைக் குணமாக்கினார்கள்

"அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷரையும் வரவழைத்தார்" - லூக்கா 6:12-16 ஆகிய வசனங்களில் இயேசு கிறிஸ்து தமது சீஷர்களை அப்போஸ்தலர்களாகப் பிரதிஷ்டை பண்ணுவதற்கு அழைத்தார் இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் காரியம் தம்முடைய சீஷர்கள் தமது ஊழியத்தைச் செய்வதற்கு வல்லமையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக அழைக்கப்படும் அழைப்பாகும். (மத் 10:1-8

"சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்தார்" - இயேசு அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார் என்று வாசிக்கிறோம். அதாவது இயேசு கிறிஸ்து அவர்களுக்குக் கொடுக்கும் வரையிலும் அவர்களுக்கு வல்லமையுமில்லை. அதிகாரமுமில்லை. வியாதிகளை அவர்களால் குணப்படுத்தவும் முடியாது. ஆனால் இப்போதோ இயேசு கிறிஸ்துவிடமிருந்து வல்லமையையும் அதிகாரத்தையும் பெற்றிருக்கிறார்கள் இப்போது இவர்களால் வியாதியஸ்தர்களைக் குணமாக்க முடியும் (மாற்கு 6:7-13; லூக்கா 9:6)

"சகல பிசாசுகளையும் துரத்தும் வல்லமையும் அதிகாரமும்" - (மத் 10:1-8 லூக்கா 10:1-20)

"வழிக்குத் தடியையாவது பையையாவது அப்பத்தையாவது காசையாவது எடுத்துக் கொண்டு போகவேண்டாம்; இரண்டு அங்கிகளைக் கொண்டு போகவும் வேண்டாம்" - (மத் 10:9-15 லூக்கா 10:3-12

"அவர்கள் புறப்பட்டுப்போய், கிராமங்கள் தோறும் திரிந்து எங்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து பிணியாளிகளைக் குணமாக்கினார்கள்" - இதுதான் புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டிருக்கிற ஊழியம்

1 சுவிசேஷத்தைப் பிரசங்ிக்க வேண்டும் (மாற்கு 16:15)

2 சுவிசேஷ வசனத்தை உறுதிபண்ண வேண்டும் (மாற்கு 6:30, மத் 28:20 அப் 1:1-8)

43. ஏரோதுவின் கலங்கிய மனச்சாட்சி - யோவான் ஸ்நானனை சிரச்சேதம் பண்ணுகிறான் - (மத் 14:1; மாற்கு 6:14)

லூக்கா 9:7 அப்பொழுது காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோது அவரால் செய்யப்பட்ட யாவையும் கேள்விப் பட்டதுமன்றி சிலர் யோவான் மரித்தோரிலிருந்து எழுந்தான் என்றும்,

9 அதிகாரம்

லூக்கா 9:8 சிலர் எலியா தோன்றினான் என்றும், வேறு சிலர் பூர்வகாலத்துத் தீர்க்கதரிசிகளில் ஒருவன் உயிர்த்தெழுந்தான் என்றும் சொல்லிக் கொண்டபடியால கலக்கமடைந்து,

லூக்கா 9:9 யோவானை நான் சிரச்சேதம்பண்ணினேன்; இவன் இப்படிப்பட்டவைகளைச் செய்கிறான் என்று கேள்விப்படுகிறேனே; இவன் யார்? என்று ஏரோது சொல்லி, அவரைப் பார்க்க விரும்பினான்.

"ஏரோது" (Herod) - (மத் 2:1)

"காற்பங்கு" (tetrarch) - (மத் 14:1)

கலக்கமடைந்தான் (perplexed) - διαπορέω - diaporeoo - 1280

வினைச்சொல்-கலக்கமடை, சந்தேகப்படு (entirely at a loss with one's self). லூக்கா 9:7; லூக்கா 24:4; அப் 5:24

"எலியா (Elias, Elijah) (1இராஜா 17; 2இராஜா 2) ஒருசிலர் இயேசு கிறிஸ்துவை எலியா என்று நினைத்தார்கள். இதற்கான காரணங்கள்:

1. மேசியா வருவதற்கு முன்பாக எலியா வருவார் என்று மல்கியா தீர்க்கதரிசி முன்னறிவித்திருக்கிறார் (லூக்கா 4:5-6)

2. எலியாவும் பல அற்புதங்களைச் செய்திருக்கிறார்.

"பூர்வகாலத்துத் தீர்க்கதரிசிகளில் ஒருவன் உயிர்த்தெழுந்தான்" தீர்க்கதரிசிகளுடைய காலங்களுக்குப் பின்பு அவர்களைப் பற்றியும், அவர்களுடைய கிரியைகளைப் பற்றியும் பல விதமான கதைகளைக் கூறினார்கள். அவற்றில் ஒன்றுதான் இது. அந்தத் தீர்க்கதரிசிகளில் ஒருவன் உயிரோடு எழும்பியிருக்கலாம் என்று நினைத்தார்கள்.

"இவன் இப்படிப்பட்டவைகளைச் செய்கிறான் என்று கேள்விப்படுகிறேனே; இவன் யார்?" ஏரோது யோவானைச் சிரச்சேதம் பண்ணிவிட்டான். அவன் செய்த பாவம் அவனுடைய மனச்சாட்சியைக் குற்றப்படுத்தியது. இப்போது இயேசு கிறிஸ்துவைப் பற்றி ஏரோது கேள்விப்படுகிறான் (லூக்கா 8:2-3). இயேசுவின் கீர்த்தி அந்தத் தேசமெங்கும் பரவியிருந்தது. (லூக்கா 4:14,37)

44. பன்னிரெண்டு சீஷர்களும் திரும்பி வருகிறார்கள் - (மாற்கு 6:30)

லூக்கா 9:10 அப்போஸ்தலர் திரும்பிவந்து, தாங்கள் செய்த யாவையும் அவருக்கு விவரித்துச் சொன்னார்கள். அப்பொழுது அவர் அவர்களைக் கூட்டிக்கொண்டு, தனித்திருக்கும்படி பெத்சாயிதா என்னும் பட்டணத்தைச் சேர்ந்த வனாந்தரமான ஒரு இடத்துக்குப் போனார்.

"தாங்கள் செய்த யாவையும்" - (மத் 10:1-8; மாற்கு 6:7-13; லூக்கா 9:6)

"தனித்திருக்கும்படி வனாந்தரமான ஒரு இடத்துக்குப் போனார்" - இவ்வாறு வனாந்தரமான இடத்தில் இயேசு கிறிஸ்து ஓய்வு எடுப்பதற்காகவும், தம்முடைய சீஷர்களுக்கு உபதேசம் பண்ணுவதற்காகவும் போவது வழக்கம்.

"பெத்சாயிதா" (Bethsaida) - கலிலேயா கடலுக்கு அருகில் உள்ள பட்டணமும், அதைச் சார்ந்த வனாந்தரமான பகுதியும். இங்கு பல அப்போஸ்தலர்கள் வசித்து வந்தார்கள் (மாற்கு 6:32,45; மாற்கு 8:22; யோவான் 1:44; யோவான் 12:21). இந்தப் பட்டணத்திற்கு எதிராக சாபம் கூறப்பட்டது. (மத் 11:21; மத் 14:13; லூக்கா 9:10; லூக்கா 10:13) பெத்சாயிதா என்னும் பெயரில் இரண்டு பட்டணங்கள் இருந்தன. ஒரு பட்டணம் கலிலேயாவின் மேற்குக்கரையில் இருந்தது. மற்றொரு பட்டணம் யோர்தானுக்குக் கிழக்கிலும், கலிலேயாவிற்கு வடகிழக்கிலும் இருந்தது.

45. திரளான ஜனங்களை இயேசு சொஸ்தப்படுத்துகிறார் - (மாற்கு 14:13)

லூக்கா 9:11 ஜனங்கள் அதை அறிந்து, அவர் பின்னே போனார்கள். அவர்களை அவர் ஏற்றுக்கொண்டு, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து அவர்களுடனே பேசி, சொஸ்தமடைய வேண்டும் என்றிருந்தவர்களைச் சொஸ்தப்படுத்தினார்.

9 அதிகாரம்

"சொஸ்தமடையவேண்டுமென்றிருந்தவர்களைச் சொஸ்தப்படுத்தினார்" - (மத் 13:58)

46. ஐயாயிரம் பேரை இயேசு அற்புதமாக போஷிக்கிறார் - மத் 14:15,மாற்கு 6:32 யோவான் 6:1)

லூக்கா 9:12 சாயங்காலமாகிறபோது பன்னிருவரும் சேர்ந்துவந்து, அவரை நோக்கி: நாம் இருக்கிற இடம் வனாந்தரமாயிருக்கிறது; சுற்றியிருக்கிற ஊர்களிலும் கிராமங்களிலும் ஜனங்கள் போய்த் தங்கி, போஜனபதார்த்தங்களைச் சம்பாதித்துக் கொள்ளும்படி அவர்களை அனுப்பிவிட வேண்டும் என்றார்கள்.

லூக்கா 9:13 அவர் அவர்களை நோக்கி: நீங்களே அவர்களுக்குப் போஜனங் கொடுங்கள் என்றார். அதற்கு அவர்கள்: எங்களிடத்தில் ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களுமாத்திரமுண்டு; இந்த ஜனங்களெல்லாருக்கும் போஜனங் கொடுக்கவேண்டியதானால், நாங்கள் போய் வாங்கிக்கொண்டுவர வேண்டுமே என்றார்கள்.

லூக்கா 9:14 ஏறக்குறைய ஐயாயிரம் புருஷர் இருந்தார்கள். அவர்களைப் பந்திக்கு ஐம்பது ஐம்பதுபேராக உட்காரும்படி சொல்லுங்கள் என்று தம்முடைய சீஷர்களுக்குச் சொன்னார்.

லூக்கா 9:15 அவர்கள் அந்தப்படியே எல்லாரையும் உட்காரும்படி செய்தார்கள்.

லூக்கா 9:16 அப்பொழுது அவர் அந்த ஐந்து அப்பங்களையும் அந்த இரண்டு மீன்களையும் எடுத்து, வானத்தை அண்ணாந்து பார்த்து, அவைகளை ஆசீர்வதித்து, பிட்டு, ஜனங்கள்முன் வைக்கும்படி சீஷர்களிடத்தில் கொடுத்தார்.

லூக்கா 9:17 எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள்; மீதியான துணிக்கைகள் பன்னிரண்டு கூடை நிறைய எடுக்கப்பட்டது.

"போஜனபதார்த்தங்களைச் சம்பாதித்துக் கொள்ளும்படி அவர்களை அனுப்பிவிட வேண்டும்"-(லூக்கா 9:12-17, மத் 14:16-20

47. பேதுருவின் அறிக்கை - (மத் 16:13 மாற்கு 8:27; யோவான் 6:67

லூக்கா 9:18 பின்பு அவர் தமது சீஷரோடேகூடத் தனித்து ஜெபம்பண்ணிக்கொண்டிருக்கையில் அவர்களை நோக்கி: ஜனங்கள் என்னை யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார்.

லூக்கா 9:19 அதற்கு அவர்கள்: சிலர் உம்மை யோவான்ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும், வேறு சிலர் பூர்வகாலத்துத் தீர்க்கதரிசிகளில் ஒருவர் உயிர்த்தெழுந்தார் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள்.

லூக்கா 9:20 அப்பொழுது அவர்: நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். பேதுரு பிரதியுத்தரமாக: நீர் தேவனுடைய கிறிஸ்து என்றான்.

"ஜனங்கள் என்னை யார் என்று சொல்லுகிறார்கள்" - லூக்கா 9:7-9 மத் 16:13 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் விடைகளை ஒப்பிட்டுப் பார்க்கவும். ஜனங்கள் தம்மைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று இயேசு கிறிஸ்து பொது ஜனங்களின் கருத்தை அறிய விரும்புகிறார். ஒருசிலர் பொது ஜனங்களின் கருத்துக்களுக்குப் பயப்படுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு எடுத்துக்காட்டுக்கள்

1. குருடனுடைய பெற்றோர் (யோவான் 9:22
2. யூதமார்க்கத்துத் தலைவர்கள் (யோவான் 12:42 43)
3. பிரதான ஆசாரியர் (மத் 21:26)
4. யூதமார்க்கத்து மூப்பர் (அப் 4:21 அப் 5:26)
5. பவுல் (அப் 16:3
6. சபைத்தலைவர்கள் (அப் 21:18-26
7. யூதமார்க்கத்தமைந்த கிறிஸ்தவர்கள் (கலா 6:12)

9 அதிகாரம்

8 பேதுருவும், பர்னபாவும் (கலா 2:12)

9 சவுல் ராஜா (சாமு 15:24)

10 சிதேக்கியா (எரே 38:19-27)

11 ஆபிரகாம் (ஆதி 12, ஆதி 20)

12 ஈசாக்கு (ஆதி 26:7-11)

பொதுஜனங்களைப் பிரியப் படுத்தியவர்களுக்கு எடுத்துக்காட்டுக்கள்

1 ஏரோது (அப 12:1-3; மாற்கு 6:26)

2 பிலாத்து (மாற்கு 15:15)

3 பேலிக்ஸ் (அப 24:27)

4 பெஸ்து (அப 25:9)

5 தாவீது (2நாளா 20:21)

"தேவனுடைய கிறிஸ்து" - தேவனிடம் நமது ஜீவனை முழு இருதயதோடு அர்ப்பணித்து "நீர் தேவனுடைய கிறிஸ்து" என்று நமது முழு மனதோடு அறிக்கையிடும்போது நாம் புதிய ஜீவனைப் பெற்றுக் கொள்வோம் (1யோவான் 5:1 ரோமர் 10:9-10)

48. இயேசு தமது மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் முன் குறித்துக் கூறுகிறார் - (மத் 16:21)

லூக்கா 9:21 அப்பொழுது அவர்கள் அதை ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு உறுதியாய்க் கட்டளையிட்டார்

லூக்கா 9:22 மேலும் மனுஷகுமாரன் பல பாடுகள் பட்டவும், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் ஆகாதவனென்று தள்ளப்படவும் கொலையுண்ணவும் மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்திருக்கவும் வேண்டும் என்று சொன்னார்

"அப்பொழுது அவர்கள் அதை ஒருவருக்கும்சொல்லாதபடிக்கு உறுதியாய்க் கட்டளையிட்டார்" - தாமே கிறிஸ்து என்பதை ஒருவருக்கும் சொல்லவேண்டாமென்று கட்டளையிடுகிறார் (மத் 16:20) முடிந்த வரையிலும் பிரச்சனை இல்லாமல் சமாதானமாகத் தமது ஊழியத்தைச் செய்ய வேண்டுமென்று இயேசு விரும்புகிறார் வேளை வரும்போது எதுவும் மறைவாக இருக்காது. எல்லாம் வெளியரங்கமாகும். யோவான் 8:40 மத் 8:4

"அதை" - தாம் மேசியா என்று தம்மைப் பற்றி வெளிப்படுத்திய சத்தியம் (லூக்கா 9:20; மத் 16:20)

தீர்க்கதரிசன எண் - 20

"மனுஷகுமாரன் பல பாடுகள் படவும், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் ஆகாதவனென்று தள்ளப்படவும் கொலையுண்ணவும் மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்திருக்கவும் வேண்டும்" - (லூக்கா 9:22) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று இந்தத் தீர்க்கதரிசனத்தில் நாம் அறிந்து கொள்ள வேண்டிய முக்கியமான சத்தியங்கள்

1 "பல பாடுகள் படவும்" - இயேசு தமது பாடுகளைக் குறித்து முதன்முறையாக வெளிப்படுத்துகிறார் எங்கெல்லாம் தமது பாடுகளைக் குறித்து வெளிப்படுத்துகிறாரோ அங்கெல்லாம் தமது மகிமையைக் குறித்தும் இயேசு கிறிஸ்து வெளிப்படுத்தியிருக்கிறார்

2 "மூன்றாம்நாள்" இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலோடு தொடர்புபடுத்தி, இந்த வாக்கியம் 11 இடங்களிலபயன்படுத்தப்பட்டிருக்கிறது (மத் 16:21 மத் 17:23 மத் 20:19, மாற்கு 9:31 மாற்கு 10:34 லூக்கா 9:22 லூக்கா 18:33 லூக்கா 24:7,46 அப 10:40 1கொரி 15:4) "மூன்று நாளைக்குப் பின்பு" என்று மத் 12:40, மாற்கு 8:31 ஆகிய வசனங்களில் வாசிக்கிறோம். மூன்றுநாள் என்பது மூன்று முழு இரவுகளையும், மூன்று முழுப் பகல்களையும் குறிக்கும்.

9 அதிகாரம்

49. சீஷத்துவத்திற்குப் பரீட்சை - ஆத்துமாவின் மதிப்பு - (மத் 8:18 10:37; 16:24; மாற்கு 8:35)

லூக்கா 9:23 பின்பு அவர் எல்லாரையும் நோக்கி: ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்.

லூக்கா 9:24 தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்து போகிறவனே அதை இரட்சித்துக் கொள்ளுவான்.

லூக்கா 9:25 மனுஷன் உலகமுழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன்னைத்தான் கெடுத்து நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?

லூக்கா 9:26 என்னைக்குறித்தும் என் வார்த்தைகளைக்குறித்தும் எவன் வெட்கப்படுகிறானோ, அவனைக் குறித்து மனுஷகுமாரனும் தம்முடைய மகிமையோடும் பிதாவின் மகிமையோடும் பரிசுத்த தூதர்களின் மகிமையோடும் வரும்போது வெட்கப்படுவார்.

"ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்" இயேசு கிறிஸ்துவை நாம் பின்பற்றும்போது ஏனோதானோ என்று பின்பற்ற முடியாது. அவர் கூறும் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு அவருக்குக் கீழ்ப்படிந்து அவரைப் பின்பற்ற வேண்டும்.

இரட்சிக்கப்படுவதற்கு நாம் செய்ய வேண்டிய காரியங்கள்

1 கிறிஸ்துவைப் பின்பற்ற மனதுடையவர்களாக இருக்க வேண்டும். (யோவான் 7:17 வெளி 22:17)

2 தன்னைத்தான் வெறுக்க வேண்டும். (மாற்கு 8:34)

3 அநுதினமும் தன் சிலுவையை எடுத்துக் கொள்ள வேண்டும். எப்போதாவது நமக்கு விருப்பமான நேரத்தில் நமக்குத் தோதான நேரத்தில், நமக்கு ஆதாயம் வரும் நேரத்தில் இயேசுவைப் பின்பற்றலாம் என்று நினைக்கக்கூடாது. (மாற்கு 8:34)

4 முடிவு வரையிலும் இயேசுவைப் பின்பற்ற வேண்டும். ஒரு சில காலம் மட்டும் இயேசுவைப் பின்பற்றி விட்டு, பின்பு பின்வாங்கிப்போய் விடலாம் என்று நினைக்கக்கூடாது. (லூக்கா 8:13; எபி 3:6-14)

5 தன் ஜீவனை இரட்சிக்கக்கூடாது இழந்துபோக அனுமதிக்க வேண்டும். (லூக்கா 9:24; மாற்கு 8:35)

6 உலக சிநேகித்திலிருந்து விடுபட்டு ஜீவிக்க வேண்டும். (லூக்கா 9:25; யோவான் 15:18-19; யோவான் 17:14-16; ரோமர் 12:1-2; யாக் 4:4; 1யோவான் 2:15-17)

7 கிறிஸ்துவைக் குறித்தும், அவருடைய வார்த்தையைக் குறித்தும் வெட்கப்படக் கூடாது. (லூக்கா 9:26 மாற்கு 8:38)

"தன்னைத்தான் வெறுக்க வேண்டும்" - புதிய ஏற்பாட்டில் பல வசனங்களில் நம்மை நாமே வெறுக்க வேண்டும் என்று நமக்குக் கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறது. (மத் 5:29-30; மத் 10:37-39; மத் 16:24-25; மத் 18:8-9; மாற்கு 8:34; லூக்கா 9:23; லூக்கா 14:26-33; ரோமர் 6; ரோமர் 8:1-4; ரோமர் 13:14; ரோமர் 14:19-22; ரோமர் 15:1-5; 1கொரி 9:27; 1கொரி 10:23-24; கலா 5:16-26; பிலி 2:1-11; தீத்து 2:12; எபி 13:13; 1பேதுரு 2:11-16; 1பேதுரு 4:1-2)

தன்னைத்தான் வெறுத்தவர்களுக்கு எடுத்துக்காட்டுகள்

1 ஆபிரகாம் (ஆதி 13:9; ஆதி 22:1-12)

2 மோசே (எண் 16:15; எபி 11:25)

3 சாமுவேல் (1சாமு 12:3-4)

4 சாறிபாத் ஊரிலுள்ள விதவை (1இராஜா 17:8-16)

9 அதிகாரம்

5. எஸ்தர் (எஸ் 4:16

6. ரெகாபியர் (எரே 35:6-7)

7. அப்போஸ்தலர்கள் (மத் 4:20,22, மத் 9:9; மத் 19:27; அப 20:24; பிலி 3:7-8

தீர்க்கதரிசன எண் - 21

"தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தமாகத் தன்ஜீவனை இழந்துபோகிறவன் அதை இரட்சித்துக் கொள்ளுவான் ___" லூக்கா 9:24-27 இந்தத் தீர்க்கதரிசனத்தில் லூக்கா 9:24-25 ஆகிய வசனங்கள் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன லூக்கா 9:26 ஆவது வசனம் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போதும் அவருடைய ஆளுகை யின்போதும் நிறைவேறும். லூக்கா 9:27 ஆவது வசனம் இயேசு கிறிஸது மறுரூபமானபோது நிறைவேறிற்று லூக்கா 9:27-36). (மாற்கு 8:35)

"என்னைக்குறித்தும் என் வார்த்தைகளைக் குறித்தும் எவன் வெட்கப படுகிறானோ அவனைக்குறித்து மனுஷ குமாரனும் வெட்கப்படுவார்" - (மாற்கு 8:38)

"மனுஷகுமாரனும் தம்முடைய மகிமையோடும் பிதாவின மகிமையோடும் பரிசுத்த தூதர்களின மகிமையோடும் வருவார்" இயேசு கிறிஸதுவின இரண்டாம் வருகையை இந்த வசனம் குறிக்கிறது (மத் 16:27 மத் 24:29-31, மத் 25:31-46; வெளி 19; சக 14; 2தெச 1:7-10; 2தெச 2:8-12; யூதா 1:14)

50. மறுரூபமாதல் - வரப்போகிற இராஜ்ஜியத்திற்கு ஒரு முன்னோட்டம் - (மத் 16:28-17:1; மாற்கு 9:1, 2பேதுரு 1:16)

லூக்கா 9:27 இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யத்தைக் காணும்முன் மரணத்தை ருசிபார்ப்பதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்

லூக்கா 9:28 இந்த வார்த்தைகளை அவர் சொல்லி ஏறக்குறைய எட்டு நாளானபின்பு, அவர் பேதுருவையும் யோவானையும் யாக்கோபையும் கூட்டிக் கொண்டு, ஜெபம்பண்ணுகிறதற்கு ஒரு மலையின்மேல் ஏறினார்

லூக்கா 9:29 அவர் ஜெபம் பணணுகையில், அவருடைய முகரூபம் மாறிற்று அவருடைய வஸ்திரம் வெண்மையாகிப் பிரகாசித்தது.

லூக்கா 9:30 அன்றியும் மோசே எலியா என்னும் இரண்டுபேரும் மகிமையோடே காணப்பட்டு. அவருடனே சம்பாஷணை பண்ணி.

லூக்கா 9:31 அவர் எருசலேமிலே நிறைவேற்றப்போகிற அவருடைய மரணத்தைக்குறித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்

லூக்கா 9:32 பேதுருவும் அவனோடிருந் தவர்களும் நித்திரை மயக்கமாயிருந்தார்கள் ஆகிலும் அவர்கள் விழித்து அவருடைய மகிமையையும் அவரோடே நின்ற அவ்விரண்டுபேரையும் கண்டார்கள்

லூக்கா 9:33 அவ்விருவரும் அவரை விட்டுப் பிரிந்துபோகையில், பேதுரு இயேசுவை நோக்கி: ஐயரே நாம் இங்கே இருக்கிறது நல்லது உமக்கு ஒருகூடாரமும் மோசேக்கு ஒரு கூடாரமும் எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக மூன்று கூடாரங்களைப் போடுவோம் என்று தான சொல்லுகிறது இன்னதென்று அறியாமல் சொன்னான்

லூக்கா 9:34 இப்படி அவன் பேசுகையில், ஒரு மேகம் வந்து அவர்கள்மேல நிழலிட்டது அவர்கள் அந்த மேகத்துக்குள் பிரவேசிக்கையில் சீஷர்கள் பயந்தார்கள்

லூக்கா 9:35 அப்பொழுது இவர் என்னுடைய நேசகுமாரன், இவருக்குச் செவிகொடுங்கள் என்று மேகத்திலி ருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று.

9 அதிகாரம்

லூக்கா 9:36 அந்தச் சத்தம் உண்டாகையில் இயேசு ஒருவரே காணப்பட்டார். தாங்கள் கண்டவைகளில் ஒன்றையும் அவர்கள் அந்நாட்களில் ஒருவருக்கும் சொல்லாமல் அடக்கி வைத்திருந்தார்கள்.

"தேவனுடைய ராஜ்யத்தைக் காணுமுன் மரணத்தை ருசிபார்ப்பதில்லை" - இந்த வாக்கியம் நிறைவேறிற்று. எட்டு நாட்களுக்குப் பின்பு, இயேசு கிறிஸ்து அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார். தேவனுடைய ராஜ்யத்தில் அவர் எப்படி இருப்பாரோ அப்படி அவர்களுக்கு தரிசனம் ஆனார். (லூக்கா 9:28-35; மத் 16:28-17:8; மாற்கு 9:1-8; 2பேதுரு 1:16-18)

"தேவனுடைய ராஜ்யம்" - (மத் 4:17; மத் 19:24)

"ஜெபம்பண்ணுகிறதற்கு ஒரு மலையின்மேல் ஏறினார்" - இயேசு கிறிஸ்து ஜெபம் பண்ணுவதற்காகவும் ஏறினார். அதே சமயத்தில் லூக்கா 9:27 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிற தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றுவதற்காகவும் அங்கு போனார் (லூக்கா 3:21)

மற்ற சுவிசேஷங்களில் எழுதப்பட்டிராத சில விசேஷித்த காரியங்களை லூக்கா தான் எழுதிய சுவிசேஷத்தில் குறிப்பிடுகிறார்.

1. ஜெபம்பண்ணுகிறதற்கு ஒரு மலையின்மேல் ஏறினார்.
2. ஜெபம்பண்ணுகிறபோது இயேசு மறுரூபமானார்.
3. இயேசு கிறிஸ்து எருசலேமிலே நிறைவேற்றப்போகிற அவருடைய மரணத்தைக் குறித்து மோசேயும் எலியாவும் இயேசுவோடு பேசிக் கொண்டிருந்தார்கள் (மத் 17:1-9)

"எருசலேமிலே நிறைவேற்றப்போகிற அவருடைய மரணம்" - இயேசு கிறிஸ்துவின் மரணம் எதிர்பாராத காரியம் அல்ல. இயேசுவிற்குத் தெரியாத காரியம் ஒன்றுமில்லை. தமது மரணத்தைத் தாமே நிறைவேற்றப் போகிறார் (யோவான் 10:18). சாத்தானை ஜெயிக்கிறதற்காகவும் மனுஷரை மீட்பதற்காகவும் இயேசு கிறிஸ்து தமது ஜீவனையே பலியாக ஒப்புக்கொடுக்கப் போகிறார் (கொலோ 2:14-17; 1பேதுரு 2:24; எபி 2:14-15)

"இவர் என்னுடைய நேசகுமாரன், இவருக்குச் செவிகொடுங்கள்" - (மத் 3:17; மத் 17:5; மாற்கு 9:7; யோவான் 12:28)

"அந்தச் சத்தம் உண்டாகையில் இயேசு ஒருவரே காணப்பட்டார்" - இயேசு கிறிஸ்து இந்தப் பூமியில் மனுஷராக இருந்த காலத்தில் பிதாவும் பரிசுத்த ஆவியானவரும் எத்தனை முறை வானத்திலிருந்து இறங்கி வந்து குமாரனோடு ஐக்கியமாக இருந்தார்கள் என்று தெரியவில்லை (உபா 29:29)

51. வல்லமையில்லாத சீஷர்களும் சர்வவல்லமையுள்ள கிறிஸ்துவும் - (மத் 17:14; மாற்கு 9:14)

லூக்கா 9:37 மறுநாளில் அவர்கள் மலையிலிருந்திறங்கினபோது, திரளான ஜனங்கள் அவருக்கு எதிர்கொண்டு வந்தார்கள்.

லூக்கா 9:38 அவர்களில் ஒருவன் சத்தமிட்டு: போதகரே, என் மகனைக் கடாட்சித்தருள வேண்டுமென்று உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்; அவன் எனக்கு ஒரே பிள்ளையாயிருக்கிறான்.

லூக்கா 9:39 ஒரு ஆவி அவனைப் பிடிக்கிறது; அப்பொழுது அலறுகிறான்; அது அவனை நுரைதள்ள அலைக்கழித்து, அவனைக் கசக்கின பின்பும் அவனை விட்டு நீங்குவது அரிதாயிருக்கிறது.

லூக்கா 9:40 அதைத் துரத்திவிடும்படி உம்முடைய சீஷரை வேண்டிக் கொண்டேன், அவர்களால் கூடாமற்போயிற்று என்றான். லூக்கா 9:41 இயேசு பிரதியுத்தரமாக: விசுவாசமில்லாத மாறுபாடான சந்ததியே, எதுவரைக்கும் நான் உங்களோடிருந்து உங்களிடத்தில் பொறுமையாயிருப்பேன்? உன் மகனை இங்கே கொண்டுவா என்றார்.

9 அதிகாரம்

லூக்கா 9:42 அவன் சமீபத்துவருகையில் பிசாசு அவனைக் கீழே தள்ளி, அலைக்கழித்தது. இயேசு அந்த அசுத்தஆவியை அதட்டி, இளைஞனைக் குணமாக்கி அவன் தகப்பனிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தார்.

லூக்கா 9:43 அப்பொழுது எல்லாரும் தேவனுடைய மகத்துவத்தைக் குறித்துப் பிரமித்தார்கள். இயேசு செய்த யாவையுங் குறித்து அனைவரும் ஆச்சரியப் படுகையில் அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி:

"போதகரே" - கிரேக்கமொழியில் எட்டு வார்த்தைகள் போதகர் என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன அவையாவன

1 ஆண்டவர் (Lord) - κύριος - kyrios - 2962

ஆண்பால் பெயர்ச்சொல் - கர்த்தர், எஜமான், ஆண்டவர், ஐயா, உடையவர், தேவரீர் - கர்த்தர் "Lord" 721 தடவைகள், ஆண்டவர் "master" 11 தடவைகள், ஐயா "sir" 12 தடவைகள், உடையவர் "owner" லூக்கா 19:33, இந்தச் சொல் தேவனையும், கிறிஸ்துவையும் மனுஷனையும் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

2 ஆண்டவர் (Lord) - δεσπότης - despotees - 1203

ஆண்பால் பெயர்ச்சொல் ஆண்டவர், கர்த்தா, எஜமான் - ஆண்டவர் "Lord" 5 தடவைகள் எஜமான் "master" 5 தடவைகள் - நான்கு இடங்களில் மனுஷ எஜமானையும், ஒரு இடத்தில் தேவனையும் குறிக்கும்

3 வீட்டெஜமான் (master of the house) οἰκοδεσπότης oikodespotees 3617

ஆண்பால் பெயர்ச்சொல் - வீட்டெஜமான் (master of the house) -12 இடங்களில் கிறிஸ்துவையும், மனுஷனையும் குறிப்பதற்கு இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

4 ஐயர் (master) - ἐπιστάτης - epistatees 1988

ஆண்பால் பெயர்ச்சொல் - ஐயர் (commander, overseer) - 7 இடங்களில் இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இவை அனைத்துமே கிறிஸ்துவைக் குறிக்கும் லூக்கா 5:5; லூக்கா 8:24,45 லூக்கா 9:33,49; லூக்கா 17:13.

5 போதகர் (teacher) - διδάσκαλος-didaskalos - 1320

ஆண்பால் பெயர்ச்சொல் - வேதபாரகன், வேதகர், போதகர், குரு (teacher, doctor) - 58 இடங்களில் இந்தச் சொல் பயன் படுத்தப்பட்டிருக்கிறது. 10 இடங்களில் போதகர் எனவும், ஒரு இடத்தில் வேதபாரகர் எனவும், மற்ற இடங்களில் ஆண்டவர் எனவும் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது

6 போதகர் (master) - καθηγητής - katheegeetees - 2519

ஆண்பால் பெயர்ச்சொல் - போதகர் குரு (guide, leader) மத் 23:8,10

7 ரபீ (Rabbi)-ῥαββί- rhabbi - 4461

ஆண்பால் பெயர்ச்சொல் - ரபீ (my teacher, Rabbi,Master) மத் 23:7

8 ரபூனி (Lord) - ῥαββονί - rhabboni - 4462

ஆண்பால் பெயர் - ஆண்டவர், ரபூனி - ரபீ என்பதன் அராமயிக் மொழி வடிவம் (யோவான் 20:16 இந்தச் சொல் மாற்கு 10:51 இல் ஆண்டவர் எனவும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

9 அதிகாரம்

"அதைத் துரத்திவிடும்படி உம்முடைய சீஷரை வேண்டிக்கொண்டேன் அவர்களால் கூடாமற்போயிற்று" - இன்றைக்கு அநேகர் இந்த மனுஷனைப் போலத்தான் இருக்கிறார்கள் தங்களுக்குப் பிரச்சனை வரும்பொழுது உதவி தேடி இயேசுவிடம் வருகிறார்கள். இயேசு கிறிஸ்துவையும் அவருடைய வல்லமையையும் இவர்கள் பூரணமாக விசுவாசிப்பதில்லை மாற்கு 16:15-20 லூக்கா 10:19; யோவான் 14:12 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் சத்தியங்களை இவர்கள் வாசித்துப் புரிந்து கொள்வதில்லை. சீஷர்கள் இயேசு கிறிஸ்துவிடம் பிசாசுகளைத் துரத்தும் வல்லமையையும், அதிகாரத்தையும் பெற்றிருந்தார்கள் பிசாசுகளைத் துரத்துவதற்காகத் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த வல்லமையையும், அதிகாரத்தையும் பயன்படுத்தினார்கள் (மத் 10:1-8; மாற்கு 6:7-13 லூக்கா 9:1-5 லூக்கா 10:1-20)

"விசுவாசமில்லாத மாறுபாடான சந்ததியே, எதுவரைக்கும் நான் உங்களோடிருந்து, உங்களிடத்தில் பொறுமையாயிருப்பேன்?" சீஷர்கள் பிசாசைத் துரத்துவதற்கு முயற்சி பண்ணியதற்காகவோ அல்லது பிள்ளையின் தந்தை தன்னிடத்தில் முறையிட்டதற்காகவோ இயேசு யாரையும் கடிந்து கொள்ளவில்லை தம்முடைய சீஷர்களிடம் காணப்பட்ட அவிசுவாசத்திற்காகவே இயேசு கிறிஸ்து அவர்களைக் கடிந்து கொள்கிறார் "விசுவாசமில்லாத மாறுபாடான சந்ததியே" என்று கூறுகிறார்

"உன் மகனை இங்கே கொண்டுவா" - இயேசு கிறிஸ்து அதிகாரத்தோடு கூறுகிறார் உன்னதத்திலிருந்து வரும் பலனைப் பெற்றிருக்கும் யாவரும் விசுவாசத்தோடு இவ்வாறு கூறலாம். (லூக்கா 24:49, அப் 1:4-8, அப் 3:6; அப் 5:15-16; அப் 6:8, அப் 8:7,13, அப் 14:10; அப் 16:18)

"அசுத்த ஆவி" லூக்கா 4:33)

"இளைஞனைக் குணமாக்கினார்" பிசாசு பிடித்திருந்த இளைஞனைக் குணமாக்குவது இயேசுவிற்கு எளிதான காரியம். பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகம் அவர் மீது தங்கியிருந்தது. மாற்கு 9:14-29 ஆகிய வசனங்களில் இந்த நிகழ்ச்சி இன்னும் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. இது தொடர்பான கூடுதல் விவரத்தை மத் 17:16-20 ஆகிய வசனங்களில் நாம் வாசித்தறியலாம்

52. இயேசு தமது மரணத்தை மறுபடியும் முற்குறித்துக் கூறுகிறார் - (மத் 16:21)

லூக்கா 9:44 நீங்கள் இந்த வார்த்தைகளைக் கவனமாய்க் கேளுங்கள்; மனுஷகுமாரன் மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படப் போகிறார் என்றார்

லூக்கா 9:45 அவர்கள் அந்த வார்த்தையின் கருத்தை அறிந்து கொள்ளவில்லை அது அவர்களுக்குத் தோன்றாமல் மறைபொருளாயிருந்தது அந்த வார்த்தையைக் குறித்து அவரிடத்தில் விசாரிக்கவும் பயந்தார்கள்

தீர்க்கதரிசன எண் - 22

"மனுஷகுமாரன் மனுஷர் கைகளில் ஒப்புக் கொடுக்கப்படப்போகிறார்" - (லூக்கா 9:44) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேற்றும் இந்த உலகத்திற்கு இயேசு கிறிஸ்து வந்ததன் நோக்கம் அவருடைய சிந்தையில் எப்போதும் இருக்கிறது. தாம் அனுபவிக்கப் போகும் பாடுகளைக் குறித்து லூக்கா எழுதின சுவிசேஷத்தில் இயேசு இரண்டாம் முறையாக அறிவிக்கிறார் ஆனால் கிறிஸ்துவின் ஊழியத்தைக் குறித்தும் அவருடைய வார்த்தையின் கருத்தைக் குறித்தும் அவருடைய சீஷர்கள் அறிந்து கொள்ளவில்லை அது அவர்களுக்குத் தோன்றாமல் மறைபொருளாயிருந்தது. அந்த வார்த்தையைக் குறித்து அவரிடத்தில் விசாரிக்கவும் பயந்தார்கள் (மாற்கு 16:14, லூக்கா 24:45)

53. தாழ்மையைப் பற்றிய உபதேசம் (மத் 18:1; மாற்கு 9:33)

லூக்கா 9:46 பின்பு தங்களில் எவன் பெரியவனாயிருப்பானென்கிற வாக்குவாதம் அவர்களுக்குள் உண்டாயிற்று.

9 அதிகாரம்

லூக்கா 9:47 இயேசு அவர்கள் இருதயத்தின் யோசனையை அறிந்து, ஒரு சிறுபிள்ளையை எடுத்து, அதைத் தமதருகே நிறுத்தி,

லூக்கா 9:48 அவர்களை நோக்கி: இந்தச் சிறுபிள்ளையை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்; என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான்; உங்களெல்லாருக்குள்ளும் எவன் சிறியவனாயிருக்கிறானோ அவனே பெரியவனாயிருப்பான் என்றார்.

"தங்களில் எவன் பெரியவனாயிருப்பானென்கிற வாக்குவாதம் அவர்களுக்குள் உண்டாயிற்று" - இயேசு கிறிஸ்துவின் பாடுகளைக் குறித்து சீஷர்களால் அறிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் தங்களுக்குள் எவன் பெரியவனாக இருப்பான் என்று விவாதம் பண்ணத் தெரிந்திருந்தது. எல்லோருமே தலைவராக வேண்டுமென்று விரும்புகிறார்கள் (மத் 18:1)

"ஒரு சிறுபிள்ளையை எடுத்து, அதைத் தமதருகே நிறுத்தினார்" - மேட்டிமையான ஆவியை இயேசு கிறிஸ்து கடைசி இராப்போஜன வேளையிலும், கடிந்து கொள்கிறார் (லூக்கா 22:24-27, யோவான் 13:2-17)

54. இயேசு பிரிவினையைக் கடிந்து கொள்கிறார் - (மாற்கு 9:38 அப 10:45,35 20:30)

லூக்கா 9:49 அப்பொழுது யோவான் அவரை நோக்கி: ஐயரே, ஒருவன் உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துகிறதை நாங்கள் கண்டு, அவன் எங்களுடனேகூட உம்மைப் பின்பற்றாதவனானபடியால் அவனைத் தடுத்தோம் என்றான்.

லூக்கா 9:50 அதற்கு இயேசு: தடுக்கவேண்டாம்; நமக்கு விரோதியாயிராதவன் நமது பட்சத்திலிருக்கிறான் என்றார்.

ஐயர் (Master) - ἐπιστάτης epistatees 1988

ஆண்பால் பெயர்ச்சொல் - ஐயர் (லூக்கா 9:38)

"தடுக்கவேண்டாம்; நமக்கு விரோதியாயிராதவன் நமது பட்சத்திலிருக்கிறான்" - நற்கிரியைகளைச் செய்கிறவர்கள் எந்த சபையின் பிரிவினராக இருந்தாலும் அவர்களைக் குறைகூற வேண்டாம்.

55. சமாரியர்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ளவில்லை - (யோவான் 4:4-45; அப 8:5-25)

லூக்கா 9:51 பின்பு, அவர் எடுத்துக்கொள்ளப்படும் நாட்கள் சமீபித்தபோது, அவர் எருசலேமுக்குப் போகத் தமது முகத்தைத் திருப்பி,

லூக்கா 9:52 தமக்கு முன்னாகத் தூதர்களை அனுப்பினார். அவர்கள் போய், அவருக்கு இடத்தை ஆயத்தம் பண்ணும்படி சமாரியருடைய ஒரு கிராமத்திலே பிரவேசித்தார்கள்.

லூக்கா 9:53 அவர் எருசலேமுக்குப் போக நோக்கமாயிருந்தபடியினால் அவ்வூரார் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை.

"அவர் எடுத்துக்கொள்ளப்படும் நாட்கள் சமீபித்தபோது" கர்த்தருடைய ஊழியத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதி நிறைவு பெறுகிறது. சுவிசேஷ செய்தியை பிரசங்கம் பண்ணுவது, வியாதியஸ்தரைக் குணமாக்குவது, பிசாசின் பிடியில் அகப்பட்டிருப்போரை விடுவிப்பது ஆகிய ஊழியங்களை இயேசு கிறிஸ்து நிறைவேற்றி வந்திருக்கிறார் (அப 1:8) இந்த ஊழிய பகுதி நிறைவேறப்போகிறது. இதன் பின்பு, எருசலேமில் இயேசு கிறிஸ்து ஊழியத்தை ஆரம்பிக்கப் போகிறார். நம் ஒவ்வொருவருடைய பாவத்திற்காகவும், அவர் பாவநிவாரண பலியாக எருசலேமிலே மரிக்கப்போகிறார். இது இயேசு கிறிஸ்துவின் மற்றொரு ஊழியப்பகுதியாகும் (எபி 2:14-15, மத் 20:28; மாற்கு 10:45, 1தீமோ 2:4-6, கலா 1:4; தீத்து 2:14; 1பேதுரு 2:24, 1பேதுரு 3:18; வெளி 1:5)

9 அதிகாரம்

எடுத்துக்கொள்ளப்படுதல் (received up) -ἀνάλημψις-analeempsis- 354

பெண்பால் - பெயர்ச்சொல் எடுத்துக் கொள்ளப்படுதல் - இந்த வசனத்தில் மட்டுமே இந்தச் சொல் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. பெதுவஜ்ஜந்தில் எலியா எடுத்துக் கொள்ளப்பட்டதையும், புதிய ஏற்பாட்டில் கர்த்தர் எடுத்துக் கொள்ளப்பட்டதையும் குறிப்பதற்கு "அனலாம்பானோ" (analambano) என்னும் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (2இராஜா 2:11 மாற்கு 16:19 அப் 1:2,11,22; 1தீமோ 3:16)

ஏற்று (received) - ἀναλαμβάνω - analambanoo - 354

வினைச்சொல் - எடு, ஏற்று, கூட்டு, பிடி, ஏறெடு

"அவர் எருசலேமுக்குப் போகத் தமது முகத்தைத் திருப்பினார்" - அவர் தமது முகத்தைக் கற்பாறையைப்போலாக்கினார் (ஏசா 50:7, லூக்கா 9:51)

தூதர்கள் (angels) - ἄγγελος - angelos - 32

ஆண்பால் பெயர்ச்சொல் - தூதன் தூதர் (angels or messengers) - இவர்கள் மனுஷ தூதர்களாகிய அவருடைய சீஷர்கள். (லூக்கா 7:24)

"சமாரியர்" - இஸ்ரவேல் ஜனங்கள் சிறையிருப்பில் இருந்தபோது சமாரியாவில் புறஜாதியார் குடியிருந்தார்கள். இவர்கள் மத்தியில் சில யூதர்களும் குடியிருந்தார்கள் (2இராஜா 17:24-34) இவர்களுடைய புறஜாதி மார்க்கமும், யூதமார்க்கமும் இணைந்து, சமாரிய மார்க்கம் என்னும் கலப்பு மார்க்கத்தை உண்டாக்கினார்கள். இவர்கள் பஞ்சாகமத்தை மட்டுமே பரிசுத்த வேதாகமமாக அங்கீகரிக்கிறார்கள். சீகேமிற்கு அருகில் கிமு 332 இல் கெரிசீம் மலையில் ஒரு தேவாலயத்தைக் கட்டினார்கள்

சிறையிருப்பிலிருந்து திரும்பிப்போன சமாரியர்கள் எருசலேமையும், தேவாலயத்தையும் கட்டுவதற்கு உதவி புரிய மறுத்து விட்டார்கள் (எஸ்றா 4 நெகே 4, நெகே 6)

காலப்போக்கில் யூதருக்கும் சமாரியருக்கும் இடையிலுள்ள பிரிவினை அதிகமாயிற்று. யூதர் சமாரியாவின் தேசத்தின் வழியாகப் பிரயாணம் பண்ணுவதைத் தவிர்த்தார்கள் கலிலேயாவிற்குப் போவதற்கு சமாரியாவே சுருக்கு வழி. ஆனால் யூதர்கள் இவர்களுடைய தேசத்தின் வழியாகப் போகாமல் யோர்தானின் கிழக்குப் பகுதியைச் சுற்றி, கலிலேயாவிற்குப் பிரயாணம் மேற்கொண்டார்கள் (யோவான் 4:9; யோவான் 8:48)

சமாரியருடைய உபதேசத்தின் பிரகாரம் மோசேயே பெரியவர் மேசியாவைவிட மோசேயை இவர்கள் பெரியவராக கருதினார்கள் மோசே வழிநடத்துவார் என்பது இவர்களுடைய நம்பிக்கை

"அவர் எருசலேமுக்குப் போக நோக்கமாயிருந்தபடியினால் அவ்வூரார் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை" - (என் 20:14-21)

56. பழிவாங்குவதைப் பற்றிய உபதேசங்கள் - (2இராஜா 1:9, மத் 5:43)

லூக்கா 9:54 அவருடைய சீஷராகிய யாக்கோபும் யோவானும் அதைக் கண்டபோது: ஆண்டவரே எலியா செய்ததுபோல வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா என்று கேட்டார்கள்

லூக்கா 9:55 அவர் திரும்பிப்பார்த்து, நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்கள் என்பதை அறியீர்கள் என்று அதட்டி

லூக்கா 9:56 மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல இரட்சிக்கிறதற்கே வந்தார் என்றார். அதன்பின்பு அவர்கள் வேறொரு கிராமத்துக்குப் போனார்கள்

9 அதிகாரம்

ஆண்டவர்(Lord) κύριος-kyrios- 2962

ஆண்பால் பெயர்ச்சொல் - கர்த்தர் எஜமான் ஆண்டவர் ஐயா உடையவர் தேவரீர் (லூக்கா 9:38)

"எலியா (Elias, Elijah) - (2 இராஜா 1:8-15)

"அறியீர்கள்" - தாங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதைச் சீஷர்கள் அறிந்து கொள்ளவில்லை. வேதத்தைத் தியானித்து, சுயத்தைச் சிலுவையில் அறையும்போது நாம் என்ன ஆவி உள்ளவர்கள் என்பதை அறிந்து கொள்வோம். (கலா 2:20; 2தீமோ 2:15; 2தீமோ 3:17) வைராக்கியத்தையும் கோபத்தையும் நாம் கட்டுப்படுத்த வேண்டும். தெளிந்த சிந்தையோடு செயல்பட வேண்டும். (ரோமர் 10:1-4; யோவான் 16:2) இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தைச் சீஷர்கள் புரிந்து கொள்ளவில்லை (லூக்கா 9:44-45)

"இன்ன ஆவி" - பழிவாங்குதல் பரிசுத்த ஆவியானவரின் சுபாவமல்ல. மோசேயின் பிரமாணம் கூட பழிவாங்குவதை ஏற்றுக் கொள்ளவில்லை (லேவி 19:18; நீதி 24:29) எல்லோரிடத்திலும் அன்பாக இருக்க வேண்டும் என்பதே சுவிசேஷச் செய்தி (மத் 5:38-44, மத் 7:1-2, லூக்கா 9:52-55, ரோமர் 12:17; 1கொரி 6:7-8; 1தெச 5:15; 1பேதுரு 3:9) மனுஷன் பாவம் செய்யும்போது அவனுடைய இருதயம் கடினப்படுகிறது. சுவிசேஷத்திற்கும் நியாயப்பிரமாணத்திற்கும் செவிகொடுக்காமல் தனக்கு இஷ்டமானபடி செயல்படுகிறான் (யாத் 21:23-25; லேவி 24:17-22 உபா 19:19-21 ரோமர் 13:1-8)

"மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார்" - (லூக்கா 5:32)

57. சீஷத்துவத்திற்கு பரீட்சை - (மத் 8:18)

லூக்கா 9:57 அவர்கள் வழியிலே போகையில் ஒருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் எங்கே போனாலும் உம்மைப் பின்பற்றி வருவேன் என்றான்

லூக்கா 9:58 அதற்கு இயேசு: நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை என்றார்

லூக்கா 9:59 வேறொருவனை அவர் நோக்கி: என்னைப் பின்பற்றிவா என்றார். அதற்கு அவன்: ஆண்டவரே, முன்பு நான் போய் என் தகப்பனை அடக்கம்பண்ண எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும் என்றான்

லூக்கா 9:60 அதற்கு இயேசு: மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும்; நீ போய், தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கி என்றார்

லூக்கா 9:61 பின்பு வேறொருவன்: ஆண்டவரே, உம்மைப் பின்பற்றுவேன், ஆனாலும் முன்பு நான் போய் வீட்டிலிருக்கிறவர்களிடத்தில் அனுப்புவித்துக் கொண்டுவரும்படி எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும் என்றான்

லூக்கா 9:62 அதற்கு இயேசு: கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல என்றார்

"ஒருவன்" - வேதபாரகன் (மத் 8:19) இயேசு கிறிஸ்துவின் காலத்தில் இவர்களுக்குச் சுவிசேஷச் செய்தியை அறிவிப்பதும் கடினம். அவர்களும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். இஸ்ரவேல் தேசத்து ஆட்சியாளர்களுடன் இவர்கள் நெருங்கிய உறவில் இருந்தார்கள். சமுதாயத்திலும் இவர்களுக்கு உயர்ந்த அந்தஸ்து இருந்ததினால் சாதாரண ஜனங்களால் இவர்களைச் சந்திக்க முடியாது.

"மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை" தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவர். அவர் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் என்று திரித்துவத்தில் இருக்கிறார். மனுஷருடைய பாவங்களைப் போக்குவதற்காக இயேசு கிறிஸ்து மனுஷ ரூபம் எடுத்தார். உலகத்தைச் சிருஷ்டித்த இயேசு கிறிஸ்து தம்மை அதிகமாகத் தாழ்த்தியிருக்கிறார். நமக்காகத் தாழ்த்துகிறார். ஓய்வெடுக்க வேண்டிய சூழ்நிலையோ, களைப்போ தேவனுக்கு வராது. ஆனாலும், அவர் மனுஷ சாயலாக ஆனதினால் ஓய்வு எடுக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார். இருந்தாலும் மனுஷகுமாரனுக்குத் தலைசாய்க்க இடமில்லை

லூக்கா – தொகுப்புரை

9 அதிகாரம்

"நான் போய் என் தகப்பனை அடக்கம்பண்ண எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும்" - (மத் 8:21)

"மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணட்டும், நீ போய் தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கி" - (மத் 8:22)

"கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல" - லூக்கா 9:61 ஆவது வசனத்திற்கு இயேசு இந்த வசனத்தில் விடை கூறுகிறார். இது சற்றுக் கடினமாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் இது முடியாத காரியமல்ல. இந்த மனுஷன் வீட்டிற்குப் போனால் அங்கு அவிசுவாசிகள்தான் நிறைந்திருப்பார்கள். அவர்கள் இவனுடைய தீர்மானத்தைக் கலைத்துவிடுவார்கள். இயேசுவைப் பின்பற்றுவதிலிருந்து வழிவிலக்கிச் சென்றுவிடுவான்.

"கலப்பை இந்தக் கலப்பைக்கு ஒரு கை மட்டுமே இருக்கும். ஒருவர் மட்டுமே தன்னுடைய கையை வைக்க முடியும் (1 இராஜா 19:19)

10 அதிகாரம்

58. இயேசு எழுபது பேரை அபிஷேகிக்கிறார் -

(1) ஊழியத்தைக் கொடுத்து அவர்களை அனுப்புகிறார்

லூக்கா 10:1 இவைகளுக்குப் பின்பு கர்த்தர் வேறே எழுபதுபேரை நியமித்து, தாம் போகும் சகல பட்டணங்களுக்கும் இடங்களுக்கும் அவர்களைத் தமக்கு முன்னே இரண்டிரண்டு பேராக அனுப்பினார்

லூக்கா 10:2 அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம். ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்

லூக்கா 10:3 புறப்பட்டுப்போங்கள்; ஆட்டுக்குட்டிகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ நான் உங்களை அனுப்புகிறேன்

லூக்கா 10:4 பணப்பையையும் சாமான் பையையும் பாதரட்சைகளையும் கொண்டு போக வேண்டாம்; வழியிலே ஒருவனையும் வினவவும் வேண்டாம்

"கர்த்தர் வேறே எழுபதுபேரை நியமித்தார்" - இந்த வசனத்திலும் அப 1:23 ஆவது வசனத்திலும்

"எழுபதுபேர்" ஏற்கெனவே பன்னிரெண்டு சீஷர்கள் இருக்கிறார்கள் இவர்களோடு எழுபதுபேர் சேர்ந்து இப்போது மொத்தம் 82 பேர் பிரசங்கித்து நோயாளிகளைக் குணமாக்குகிறார்கள்

"இரண்டிரண்டு பேர்" - ஒருவரைத் தனியாக அனுப்புவதற்குப் பதிலாக இரண்டு பேராக அனுப்புவதினால் சில அனுகூலங்கள் உள்ளன அவையானவை:

1 சோதனைகளிலும், தனிமையிலும் சோர்வுகளிலும் ஒருவருக்கொருவர் உதவி புரிவார்கள் (பிர 4:9-12; ரோமர் 15:4)

2 ஒருவர் விழுந்தாலும் மற்றவர் அவரைத் தூக்கி விடுவார் (பிர 4:9,10 பிர 12:9-10 கலா 6:1)

3 சோதனைகள் வரும்போது பலவீனத்தில் பலப்படுத்துவதற்கு (ரோமர் 15:1-5; கலா 6:2)

4 ஜெபத்தில் ஒற்றுமை உண்டாக்குவதற்கு (மத் 18:19)

5 சாத்தான் தாக்கும்பொழுது பாதுகாப்பதற்கு பிர 4:12; உபா 32:30)

6 பிரசங்கத்தை உறுதிபண்ணுவதற்கு (உபா 17:6; உபா 19:15; மத் 18:16

"அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்" - அறுப்பும் வேலையாட்களும் சுவிசேஷ ஊழியர்களையும் ஆதாயம் பண்ண வேண்டிய ஆத்துமாக்களையும் குறிக்கும்.

வேண்டிக்கொள் (pray) - δέομαι - **deomai** - 1189

வினைச்சொல் - வேண்டிக்கொள் உத்தரவுகேள் ஜெபம் பண்ணு. கேட்டுக்கொள் நமது தேவை சந்திக்கப்படும் வரையிலும் தொடர்ந்து விண்ணப்பம் பண்ணுவது என்பது இந்த வார்த்தையின் பொருள்

அனுப்பும்படி (send forth) - ἐκβάλλω - **ekballoo** - 1544

வினைச்சொல் - எடுத்துப்போடு, துரத்து வெளியே அனுப்பிவிடு, எறி (to eject, cast out, expel, or send away) இதற்கு இணையான மற்றொரு வார்த்தை "அப்போஸ்டெல்லோ" **apostelloo** இதற்கு லூக்கா 10:3 இல் உள்ளபடி சாதாரணமாக அனுப்புதல் என்று பொருள் "எக்பாலலோ" (**ekballoo**) என்பது வல்லமையோடு வெளியே அனுப்புதல் என்று பொருள்படும்.

அனுப்பு (send) - ἀποστέλλω **apostelloo** 649

வினைச்சொல் - அனுப்பு, அனுப்பிவிடு, துரத்திவிடு

10 அதிகாரம்

"ஆட்டுக்குட்டிகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல இதோ நான் உங்களை அனுப்புகிறேன்" - மத் 10:16

பணப்பை (purse) - βαλλάντιον - ballantion - 905

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பணப்பை (money bag) - லூக்கா மட்டுமே இந்த வார்த்தையை பயன்படுத்துகிறார் (லூக்கா 10:4 லூக்கா 12:33; லூக்கா 22:35,36)

"பாதரட்சைகள் -இரண்டாவது பாதரட்சை - மாற்றி அணிவதற்குப் பயன்படும்.

"வழியிலே ஒருவரையும் வினவ வேண்டாம்" - வழியில் காணும் யாரையும் அன்பாக விசாரிக்கக்கூடாது என்பது இதன் பொருளல்ல விசுவாசிகள் ஒருவரையொருவர் அன்புடன் விசாரித்துக் கொள்ள வேண்டும். (பேதுரு 1:8 கனம்பண்ணுவதில் ஒருவரையொருவர் முந்திக் கொள்ள வேண்டும் ஆ[illegible] கிழக்குத் தேசங்களில் வழியில் போவோர் வருவோர் எல்லோரிடமும் மணிக்கணக்காகப் பேசி தங்களுடைய பொன்னான நேரத்தை வீணாகச் செலவிடுவார்கள் நேரத்தை வீணடிக்கும் இப்படிப்பட்ட பழக்கம் தேவையில்லை என்பது இந்த வாக்கியத்தின் பொருளாகும் எலிசா தன்னுடைய ஊழியக்காரனை அனுப்பும்போது வழியில் வீணாக நேரத்தைச் செலவு பண்ண வேண்டாம் என்று எச்சரித்து அனுப்பினான் (2 இராஜா 4:29)

(2) போகும் இடங்களில் அவர்கள் நடந்து கொள்ள வேண்டிய விதம் - (மத் 10:10-15)

லூக்கா 10:5 ஒரு வீட்டில் பிரவேசிக்கிற போது, இந்த வீட்டுக்குச் சமாதானம் உண்டாவதாகவென்று முதலாவது சொல்லுங்கள்

லூக்கா 10:6 சமாதான பாத்திரன் அங்கே இருந்தால் நீங்கள் கூறின சமாதானம் அவனிடத்தில் தங்கும் இல்லாதிருந்தால் அது உங்களிடத்திற்குத் திரும்பிவரும்

லூக்கா 10:7 அந்த வீட்டிலேதானே நீங்கள் தங்கியிருந்து, அவர்கள் கொடுக்கிறவைகளைப் புசித்துக் குடியுங்கள் வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான் வீட்டுக்கு வீடு போகாதிருங்கள்

லூக்கா 10:8 ஒரு பட்டணத்தில் நீங்கள் பிரவேசிக்கிறபொழுது, ஜனங்கள் உங்களை ஏற்றுக் கொண்டால் அவர்கள் உங்கள்முன் வைக்கிறவைகளை நீங்கள் புசித்து

"சமாதான பாத்திரன் அங்கே இருந்தால் நீங்கள் கூறின சமாதானம் அவனிடத்தில் தங்கும் இல்லாதிருந்தால் அது உங்களிடத்திற்குத் திரும்பிவரும்" - ஒரு வீட்டில் பிரவேசிக்கிறபோது, இந்த வீட்டுக்குச் சமாதானம் உண்டாவதாகவென்று முதலாவது சொல்லுங்கள் இவ்வாறு சொல்வது அக்காலத்து வழக்கம். அந்த வீட்டின் உரிமையாளர் சமாதானமுள்ள மனுஷனாக இருந்தால் உங்கள் ஆசீர்வாதம் அந்த வீட்டில் தங்கும். அவன் சமாதானத்தை விரும்பவில்லை என்றால் நீங்கள் கூறிய ஆசீர்வாதம் உங்களிடத்திற்கே திரும்பி வரும். உங்களை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லையென்றால் உங்கள் கால்களில் படிந்துள்ள தூசியை உதறித்தள்ளிவிட்டு, [illegible] இடத்தை விட்டுப் புறப்பட்டுப் போங்கள் (மத் 10:14) ஒரு மனுஷனிடம் எந்தப் பழக்கம் காணப்படுகிறதோ அந்தப் பழக்கத்தின் குமாரன் என்று யூதர்கள் அவனை அழைப்பார்கள் எடுத்துக்காட்டாக "சமாதானபாத்திரன்" யோவான் 17:12

"அந்த வீட்டிலேதானே நீங்கள் தங்கியிருந்து, அவர்கள் கொடுக்கிறவைகளைப் புசித்துக் குடியுங்கள் வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான் வீட்டுக்கு வீடு போகாதிருங்கள்" கிழக்குத் தேசத்தில் தேவையில்லாமல் வீட்டுக்கு வீடு சென்று வீண் வம்பு பேசுவார்கள் ஊழியக்காரர்கள் இதைத் தவிர்க்க வேண்டும். அவர்களுடைய நேரம் முக்கியமானது. ஊர்க்கதை பேசுவதற்கு அவர்கள் அனுப்பப்படவில்லை. இயேசுவின் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கே அவர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள் (லூக்கா 9:4)

10 அதிகாரம்

(3) செய்தியும் வல்லமையும் - (மத் 10; மாற்கு 3:13; 6:7; லூக் 6:12)

லூக்கா 10:9 அவ்விடத்திலுள்ள பிணியாளிகளைச் சொஸ்தமாக்கி: தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குச் சமீபமாய் வந்திருக்கிறது என்று அவர்களுக்குச் சொல்லுங்கள்.

"பிணியாளிகளைச் சொஸ்தமாக்கி: தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குச் சமீபமாய் வந்திருக்கிறது என்று அவர்களுக்குச் சொல்லுங்கள்" - தேவனுடைய ஊழியக்காரர்கள் எந்த ஊருக்குச் செல்லாலும் போகிறார்களோ அந்த ஊரிலுள்ள பிணியாளிகள் எல்லோரையும் சொஸ்தமாக்க வேண்டும். தேவனுடைய ராஜ்யம் அவர்களுக்குச் சமீபமாக வந்திருக்கிறது என்பதற்கு இது அடையாளம். தேவனுடைய ஊழியக்காரர்கள் அவர்கள் நடுவில் இருக்கிறார்கள் என்பதை எல்லோரும் அறிந்து கொள்வார்கள். தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல, பலத்திலே இருக்கிறது. (1கொரி 4:20; 2தீமோ 1:7)

(4) அவர்களை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்று இயேசு முன் குறித்துக் கூறுகிறார் - (மத் 10:14)

லூக்கா 10:10 யாதொரு பட்டணத்தில் நீங்கள் பிரவேசிக்கிறபொழுது ஜனங்கள் உங்களை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அதின் வீதிகளிலே நீங்கள் போய்:

லூக்கா 10:11 எங்களில் ஒட்டின உங்கள் பட்டணத்தின் தூசியையும் உங்களுக்கு விரோதமாய்த் துடைத்துப்போடுகிறோம்; ஆயினும் தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குச் சமீபமாய் வந்திருக்கிறதென்பதை அறிந்து கொள்வீர்களாக என்று சொல்லுங்கள்.

"எங்களில் ஒட்டின உங்கள் பட்டணத்தின் தூசி" - (மத் 10:14)

"ஒட்டினது" - இது ஒரு மருத்துவச் சொல். காயங்களைக் கட்டுதல் என்பது இதன் பொருள்.

"தூசியையும் உங்களுக்கு விரோதமாய்த் துடைத்துப்போடுகிறோம்" - ஊழியக்காரர்கள் ஜனங்களுடைய பொருளுக்காகவோ அவர்கள் தரும் வந்தனங்களுக்காகவோ ஊழியம் செய்யவரவில்லை. அவர்களுடைய ஆத்துமாக்களைத் தேவனிடம் ஆதாயப்படுத்த வேண்டும் என்னும் ஒரே நோக்கத்திற்காகவே வருகிறார்கள். தேவனுடைய கிருபையை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். அவர்களுடைய சரீர வியாதி குணமாக வேண்டும். அவர்களுடைய ஆத்துமா இரட்சிக்கப்பட வேண்டும். இதுவே ஊழியக்காரர்களுடைய நோக்கம். இதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லையென்றால் அவர்களிடத்தில் வேறொன்றையும் நீங்கள் எதிர்பார்த்து வரவில்லை என்பதை அவர்கள் புரிந்து கொள்ளும் விதமாக உங்கள் கால்களில் ஒட்டின அவர்களுடைய பட்டணத்தின் தூசியை துடைத்துப் போட வேண்டும். இந்தப் பழக்கம் தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்களுக்கு எதிராக வெளிப்படுவதையும் குறிக்கும் (லூக்கா 10:12; மத் 10:14-15). தங்களுக்குக் கேடுண்டாகவே அவர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளாமல் போகிறார்கள்.

(5) விசுவாசியாத பட்டணங்கள்மீது இயேசு நியாயத்தீர்ப்பை முன்குறித்துக் கூறுகிறார் - (மத் 11:20)

லூக்கா 10:12 அந்தப் பட்டணத்திற்கு நேரிடுவதைப்பார்க்கிலும் அந்த நாளிலே சோதோம் நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

லூக்கா 10:13 கோராசின் பட்டணமே, உனக்கு ஐயோ, பெத்சாயிதா பட்டணமே, உனக்கு ஐயோ, உங்களில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் தீருவிலும் சீதோனிலும் செய்யப்பட்டிருந்ததானால், அப்பொழுதே இரட்டுடுத்திச் சாம்பலில் உட்கார்ந்து மனந்திரும்பியிருப்பார்கள்.

லூக்கா 10:14 நியாயத்தீர்ப்புநாளில் உங்களுக்கு நேரிடுவதைப்பார்க்கிலும், தீருவுக்கும் சீதோனுக்கும் நேரிடுவது இலகுவாயிருக்கும்.

லூக்கா 10:15 வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே, நீ பாதாளபரியந்தம் தாழ்த்தப்படுவாய் என்று சொல்லி,

10 அதிகாரம்

லூக்கா 10:16 சீஷரை நோக்கி: உங்களுக்குச் செவிகொடுக்கிறவன் எனக்குச் செவிகொடுக்கிறான்; உங்களை அசட்டை பண்ணுகிறவன் என்னை அசட்டை பண்ணுகிறான்; என்னை அசட்டை பண்ணுகிறவன் என்னை அனுப்பினவரை அசட்டைபண்ணுகிறான் என்றார்.

தீர்க்கதரிசன எண் - 23

"அந்தப் பட்டணத்திற்கு நேரிடுவதைப் பார்க்கிலும் அந்த நாளிலே சோதோம் நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும்......." (லூக்கா 10:12-16) இந்தத் தீர்க்கதரிசனத்தில் லூக்கா 10:12-15 ஆவது வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை. இது நியாயத்தீர்ப்பின் நாளைக் குறிக்கும் (வெளி 20:11-15) இந்தத் தீர்க்கதரிசனத்தில் லூக்கா 10:16 ஆவது வசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

"இலகுவாயிருக்கும்" - சோதோமிற்குத் தேவனுடைய தண்டனை கிடைத்தது. அது மிகவும் கடுமையாக இருந்தது. இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாத ஜனங்கள் வசிக்கும்ஊரின்மீதும் தேவனுடையதண்டனை வரும். சோதோமின்மீது வந்த தண்டனையை விட இது அதிகமாக இருக்கும்.

"கோராசீனே பட்டணமே, உனக்கு ஐயோ பெத்சாயிதா பட்டணமே, உனக்கு ஐயோ" (மத் 11:21-24)

"அப்பொழுதே இரட்டுடுத்தி, சாம்பலில் உட்கார்ந்து, மனந்திரும்பியிருப்பார்கள்" - புறஜாதியாரைவிட யூதர்கள் கடின இருதயம் உடையவர்களாக இருக்கிறார்கள் (அப் 7:51 ரோமர் 2:5, 1இராஜா 20:31)

பாதாளம் (hell) - ᾅδης - hadees - 86

ஆங்கிலச் சொல் - பாதாளம் இறந்தவர்கள் பாதாளத்தில் தற்காலிகமாகத் தங்கும் இடம் (லூக்கா 16:23)

(6) **எழுபது பேரும் திரும்பி வருகிறார்கள் சாத்தான்மீது அதிகாரம் -** (மத் 18:18)

லூக்கா 10:17 பின்பு அந்த எழுபதுபேரும் சந்தோஷத்தோடே திரும்பிவந்து: ஆண்டவரே, உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகிறது என்றார்கள்.

லூக்கா 10:18 அவர்களை அவர் நோக்கி: சாத்தான் மின்னலைப்போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன்.

லூக்கா 10:19 இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகலவல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது.

லூக்கா 10:20 ஆகிலும், ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்றார்.

"சந்தோஷம்" - கிறிஸ்துவின் சந்தோஷத்தையும் எழுபதுபேரின் சந்தோஷத்தையும் நாம் ஒப்பிட்டுப் பார்க்கலாம். சந்தோஷத்திற்கான காரணத்தையும் ஆதாரத்தையும் நாம் வாசித்தறியலாம் (லூக்கா 10:17-22)

"சாத்தான் மின்னலைப்போல வானத்திலிருந்து விழுகிறான்" ஆதாமின் காலத்திற்கு முன்பாக சாத்தான் வானத்திலிருந்து கீழே தள்ளப்பட்டான் (ஏசா 14:12-14 எசே 4:23-26, எசே 28:11-17, ஆதி 1:1 2 2பேதுரு 3:5 8) ஆதாமின் வீழ்ச்சிக்குப் பிறகு சாத்தான் மறுபடியும் தன் கிரியைகளை மனுஷர் மத்தியில் நடப்பித்து வருகிறான். இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக அவன் மறுபடியும் பாதாளத்தில் தள்ளப்படுவான் (வெளி 12:7 2)

"இதோ சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும் சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன் ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது" இயேசு கிறிஸ்து இந்த வாக்குத்தத்தத்தை அவரோடு ஊழியம் செய்த 82 பேருக்கும் கொடுத்தார். ஆதேசமயத்தில் இந்த வாக்குத்தத்தம் இக்காலத்தில் விசுவாசிகளாக இருக்கும் நமக்கும் உரியது (மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23, மாற்கு 11:22-24; மாற்கு 16:15-20, யோவான் 14:12)

10 அதிகாரம்

அதிகாரம் (power) - ἐξουσία - exousia - 1849

பெண்பால் பெயர்ச்சொல் – அதிகாரம் வல்லமை, ஆதீனம் (delegated authority) – சாத்தானுடைய கிரியைகளை அழிப்பதற்கு தேவன் கொடுத்திருக்கும் அதிகாரத்தைத் தேவைப்படும்போது பயன்படுத்துவது.

"மேற்கொள்ள" - சாத்தானுடைய அந்தகார சக்திகளை மேற்கொள்வதற்கு இயேசு கிறிஸ்து தமது பிள்ளைகளுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார் (சங் 91:13; சங் 108:13;ஏசா 10:6;ஏசா 63:6;தானி 7:23; மீகா 5:5; வெளி 11:2) சர்ப்பங்கள், தேள்கள் என்பவை சாத்தானுடைய அந்தகார வல்லமையைக் குறிக்கும். இவற்றை விசுவாசிகள் மேற்கொள்ளலாம். (சங் 91; மாற்கு 16:17-18; அப் 28:5)

"ஆகிலும், ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள்" ஆவிகள் நமக்குக் கீழ்ப்படிகிறது. இது சந்தோஷமான காரியமே என்றாலும் நமது சந்தோஷத்திற்கான ஆதாரம் இதுவாக இருக்கக்கூடாது. நமது பெயர்கள் பரலோகத்தில் கர்த்தருடைய ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. நாம் அதற்காகச் சந்தோஷப்பட வேண்டும். (யாத் 32:32;சங் 69:28;தானி 12:1; பிலி 4:3; எபி 12:23;வெளி 3:5;வெளி 13:8;வெளி 17:8; வெளி 20:12;வெளி 21:27; வெளி 22:19) நம் மூலமாக கர்த்தர் அற்புதம் செய்யும்போது கர்த்தருடைய சமூகத்தில் நம்மை நாமே தாழ்த்த வேண்டும் நமக்குள் பெருமை வந்துவிடக்கூடாது. விசுவாசிகள் மிகுந்த எச்சரிப்போடு இருக்க வேண்டும்.

59. விசுவாசத்தின் எளிமைக்காக இயேசு ஆவியிலே களிகூருகிறார் - (மத் 11:25)

லூக்கா 10:21 அந்த வேளையில் இயேசு ஆவியிலே களிகூர்ந்து: பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை நீர் ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். ஆம், பிதாவே! இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது.

லூக்கா 10:22 சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. பிதா தவிர வேறொருவனும் குமாரன் இன்னாரென்று அறியான், குமாரனும் குமாரன் அவரை எவனுக்கு வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனுந் தவிர வேறொருவனும் பிதா இன்னாரென்று அறியான் என்றார்.

"ஆவியிலே" - இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியிலே களிகூர்ந்தார். இதுவே சந்தோஷத்தின் உண்மையான ஆதாரம். ஆவியில் களிகூரும்போது நமக்கு ஆவிக்குரிய பெருமை வராது. (கலா 5:22)

"பிதாவே" - இயேசு கிறிஸ்து "பிதாவே" என்னும் வார்த்தையை 180 இடங்களில் பயன்படுத்தியிருக்கிறார். ஜெபத்தில் தேவனைக் குறிப்பிடும்போது "பிதா" என்னும் வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார். யோவான் சுவிசேஷத்தில் மட்டும் "பிதா" என்னும் வார்த்தையை 112 தடவை பயன்படுத்தியிருக்கிறார். யோவான் சுவிசேஷம் பிதாவாகிய தேவனையும், குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையும் விரிவாக விளக்குகிறது. மேலும் "பிதா" என்னும் சொல் மத்தேயு சுவிசேஷத்தில் 44 தடவைகளும் மாற்கு சுவிசேஷத்தில் 5 தடவைகளும் லூக்கா சுவிசேஷத்தில் 17 தடவைகளும், அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் இரண்டு தடவைகளும் புதிய ஏற்பாட்டின் மற்ற புஸ்தகங்களில் 88 தடவைகளும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

பிதாவிற்கு வழங்கப்பட்டிருக்கிற பெயர்கள்

1. என் பிதா (யோவான் 5:17-18; யோவான் 8:16-18,54; யோவான் 14:28)
2. பரமபிதா (மத் 6:14-32)
3. வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவர் (மத் 11:25; லூக்கா 10:21)
4. பரிசுத்த பிதா (யோவான் 17:11)
5. நீதியுள்ள பிதா (யோவான் 17:25)

10 அதிகாரம்

6 நம்முடைய பிதாவாகிய தேவன் (ரோமர் 1:7; 1கொரி 1:3)

7 பிதாவாகிய ஒரே தேவன் (1கொரி 8:6; கலா 1:1; 1தெச 1:1)

8 நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதா (2கொரி 1:3; 2கொரி 11:31; எபே 1:3; எபே 3:14; எபே 6:23; கொலோ 1:3)

9 இரக்கங்களின் பிதா (2கொரி 1:3)

10 மகிமையின் பிதா (எபே 1:17)

11 ஆவிகளின் பிதா (எபி 12:9)

12 சோதிகளின் பிதா (யாக் 1:17)

60. சுவிசேஷத்தை விசுவாசிப்போருக்கு வெகுமதிகள் - (மத் 21:21; யோவான் 14:12)

லூக்கா 10:23 பின்பு தமது சீஷரிடத்தில் திரும்பி, தனித்து அவர்களை நோக்கி: நீங்கள் காண்கிறவைகளைக் காணுங் கண்கள் பாக்கியமுள்ளவைகள்.

லூக்கா 10:24 அநேக தீர்க்கதரிசிகளும் ராஜாக்களும் நீங்கள் காண்கிறவைகளைக் காணவும், நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் விரும்பியும், காணாமலும் கேளாமலும் போனார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

61. நியாய சாஸ்திரி இயேசுவிடம் கேள்வி கேட்கிறான் - (மத் 22:34; மாற்கு 12:28)

லூக்கா 10:25 அப்பொழுது நியாயசாஸ்திரி ஒருவன் எழுந்திருந்து அவரைச் சோதிக்கும்படி: போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கு நான் என்னசெய்ய வேண்டும் என்று கேட்டான்.

லூக்கா 10:26 அதற்கு அவர்: நியாயப்பிரமாணத்தில் என்ன எழுதியிருக்கிறது? நீ வாசித்திருக்கிறது என்ன என்றார்.

லூக்கா 10:27 அவன் பிரதியுத்தரமாக: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுப் பலத்தோடும் உன் முழுச்சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று எழுதியிருக்கிறது என்றான்.

லூக்கா 10:28 அவர் அவனை நோக்கி: நிதானமாய் உத்தரவு சொன்னாய்; அப்படியே செய், அப்பொழுது பிழைப்பாய் என்றார்.

லூக்கா 10:29 அவன் தன்னை நீதிமான் என்று காண்பிக்க மனதாய் இயேசுவை நோக்கி: எனக்குப் பிறன் யார் என்று கேட்டான்.

"நியாயசாஸ்திரி" - நியாயப்பிரமாணத்தை உபதேசிக்கிறவர்

போதகர் (Master) - διδάσκαλος - didaskalos - 1320

ஆண்பால் பெயர்ச்சொல் வேதபாரகன், வேதகர், போதகர், குரு (லூக்கா 9:38)

"உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுப் பலத்தோடும் உன் முழுச் சிந்தையோடும் அன்புகூர்ந்து உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" (மத் 19:16-22; மத் 22:35-40)

"அப்படியே செய், அப்பொழுது பிழைப்பாய்" இயேசு கிறிஸ்து இவ்வாறு கூறி பிரச்சனையைத் தீர்த்து வைக்கிறார். ஒருவன் மறுபடியும் பிறவாமல் இந்தக் காரியங்களைச் செய்ய முடியாது (யோவான் 3:3-5; 2கொரி 5:17)

"அவன் தன்னை நீதிமான் என்று காண்பிக்க மனதாய் இருந்தான்" சாதாரண மனுஷர்கள் இவனைப்போலத் தான் நடந்து கொள்கிறார்கள். அவர்களிடத்தில் உண்மையும் இராது, கனிவும் இராது.

10 அதிகாரம்

62. நல்ல சமாரியனின் உவமை

லூக்கா 10:30 இயேசு பிரதியுத்தரமாக: ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகையில் கள்ளர் கையில் அகப்பட்டான்; அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்துகொண்டு, அவனைக் காயப்படுத்தி, குற்றுயிராக விட்டுப்போனார்கள்.

லூக்கா 10:31 அப்பொழுது தற்செயலாய் ஒரு ஆசாரியன் அந்த வழியே வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான்.

லூக்கா 10:32 அந்தப்படியே ஒரு லேவியனும் அந்த இடத்துக்கு வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப் போனான்.

லூக்கா 10:33 பின்பு, சமாரியன் ஒருவன் பிரயாணமாய் வருகையில், அவனைக் கண்டு, மனதுருகி,

லூக்கா 10:34 கிட்ட வந்து, அவனுடைய காயங்களில் எண்ணெயும் திராட்சரசமும் வார்த்து, காயங்களைக் கட்டி, அவனைத் தன் சுயவாகனத்தின்மேல் ஏற்றி, சத்திரத்துக்குக் கொண்டுபோய், அவனைப் பராமரித்தான்.

லூக்கா 10:35 மறுநாளிலே தான் புறப்படும்போது இரண்டு பணத்தை எடுத்து, சத்திரத்தான் கையில் கொடுத்து: நீ இவனை விசாரித்துக்கொள், அதிகமாய் ஏதாகிலும் இவனுக்காகச் செலவழித்தால், நான் திரும்பிவரும்போது அதை உனக்குத் தருவேன் என்றான்.

லூக்கா 10:36 இப்படியிருக்க, கள்ளர்கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்றுபேரில் எவன் பிறனாயிருந்தான்? உனக்கு எப்படித்தோன்றுகிறது என்றார்.

லூக்கா 10:37 அதற்கு அவன்: அவனுக்கு இரக்கஞ்செய்தவனே என்றான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி: நீயும் போய் அந்தப்படியே செய் என்றார்.

பிரதியுத்தரமாக ὑπολαμβάνω - **hypolambanoo** - 5274

வினைச்சொல்-நினை, பதில் சொல் **(to take the ground from under him)**-(லூக்கா7:43 அப் 1:9 அப் 2:15)

உவமை எண் - 12

"ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகையில் கள்ளர் கையில் அகப்பட்டான்____" (லூக்கா 10:30-37) இந்த உவமை பிறர்மீது அன்புகூரவேண்டு மென்பதை விளக்குகிறது.

"எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகையில்" - இந்தப் பாதை மலையில் இருந்து தாழ்வாக இறங்கும் சாலையாகும். 18 மைல்கள் கிழக்கு முகமாக இந்தச் சாலையில் பிரயாணம் பண்ண வேண்டும். பாலஸ்தீன தேசத்தில் இந்தப் பாதை மிகவும் ஆபத்தானது. ஏனென்றால் கள்ளருடைய தொந்தரவு இந்தப் பாதையில் அடிக்கடி வரும்.

கள்ளர் அந்த மனுஷனுக்குச் செய்த காரியங்கள்

1. அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்துகொண்டார்கள்
2. அவனைக் காயப்படுத்தினார்கள்
3. குற்றுயிராக விட்டுவிட்டு விட்டார்கள்
4. அவனை விட்டுப் போனார்கள்

"ஒரு ஆசாரியன் அந்த வழியே வந்தான்" - எரிகோ ஆசாரியரின் பட்டணம். அங்கு 12,000 ஆசாரியர்கள் இருந்தார்கள். தேவாலயத்தில் ஊழியம் செய்வதற்காக அவர்கள் அந்தச் சாலை வழியாகச் செல்வது வழக்கம். இது பேரீச்சை மரங்களின் பட்டணமாகும். (உபா 34:3; நியா 1:16) எருசலேமிலிருந்து 18 மைல்கள் தூரத்திலும், யோர்தானிலிருந்து 6 மைல்கள் தூரத்திலும் அமைந்துள்ளது. யோசு 6:26=இராஜா 16:34

10 அதிகாரம்

"ஒரு லேவியனும் அந்த இடத்துக்கு வந்து, அவனைக் கண்டு பக்கமாய் விலகிப்போனான்" - லேவியர்கள் மார்க்கக் காரியங்களில் சிறந்து விளங்கியவர்கள். பிரமாணங்களையும், பாரம்பரியங்களையும் நன்றாக கடைப் பிடிப்பார்கள். ஆனால் ஒரு மனுஷனுக்கு ஆபத்து வரும்போது உதவி புரிய மாட்டார்கள். இங்கு நாம் வாசிக்கும் லேவியன் இரண்டு காரியங்களைச் செய்கிறான். அவையாவன: 1. அவனைக் கண்டான் 2. பக்கமாய் விலகிப் போனான். தனக்கு அந்த மனுஷன் மூலமாக எந்தத் தீட்டும் வந்துவிடக்கூடாது என்பதில் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்கிறான். இரக்கக்குணமுள்ள எந்த மனுஷனும் குற்றுயிராக இருக்கும் மனுஷனுக்கு உதவி புரிவான். அதனால் தனக்கு வரப்போகும் தீட்டைக் குறித்து, கவலைப்படமாட்டான். தன்னை மறுபடியும் சுத்திகரித்துக் கொள்வான். பிரமாணங்களைவிட சுவிசேஷமே சிறந்தது என்பதை இயேசுகிறிஸ்து பல இடங்களில் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

"சமாரியன்" - யூதர்கள் சமாரியரை வெறுத்தார்கள் (லூக்கா 9:52). ஆனால் இந்தச் சமாரியன்தான் இரக்கக்குணமுள்ளவனாக இருக்கிறான். குற்றுயிராக இருப்பவனுக்கு உதவி புரிய முன்வருகிறான். ஆசாரியரும் லேவியரும் அந்த மனுஷனைக் கைவிட்டுவிட்டார்கள். சமாரியனும் அவர்களால் கைவிடப்பட்டவனே. என்றாலும் சமாரியன் அவனுக்கு அன்போடு உதவி புரிகிறான்.

"சமாரியன் அவனைக் கண்டு, மனதுருகினான்" சமாரியனிடம் மனதுருக்கம் இருந்தது. அவனுக்கு பூதமார்க்கத்தைப் பற்றி சரியாக தெரிந்திருக்காது. ஆனால் மனுஷனுக்கு உதவி புரியத் தெரிந்திருந்தது. (லூக்கா 10:33-35)

சமாரியன் செய்த காரியங்கள்

1 அவனைக் கண்டான்

2 மனதுருகினான்

3 கிட்டவந்தான்

4 அவனுடைய காயங்களில் எண்ணெயும் திராட்சரசமும் வார்த்தான்

5 காயங்களைக் கட்டினான்

6 அவனைத் தன் சுயவாகனத்தின்மேல் ஏற்றினான்

7 அவனைச் சத்திரத்துக்குக் கொண்டு போனான்

8 அவனைப் பராமரித்தான்

9 இரண்டு பணத்தை எடுத்து சத்திரத்தான் கையில் கொடுத்தான்

10 நீ இவனை விசாரித்துக்கொள். அதிகமாய் ஏதாகிலும் இவனுக்காகச் செலவழித்தால் நான் திரும்பிவரும்போது அதை உனக்குத் தருவேன் என்றான்

"இரண்டு பணம்" - ஒருவனுடைய ஜீவனை மீட்கும் கிரயப்பணம் (யாத் 30:12-13). சாதாரண வேலையாளுக்கு இது இரண்டுநாள் சம்பளம். (மத் 20:1-16) சத்திரத்தானுக்கு சமாரியன் போதுமான அளவு பணம் கொடுத்திருக்கிறான்.

"இப்படியிருக்க, கள்ளர்கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்றுபேரில் எவன் பிறனாயிருந்தான்? உனக்கு எப்படித் தோன்றுகிறது" இந்த உவமையின் மூலமாக இயேசு கிறிஸ்து கூற விரும்பும் விளக்கம் இதுதான். இயேசு கிறிஸ்துவின் உபதேசம் எப்போதும் தெளிவாக இருக்கும். நாமதான சத்தியத்தை ஏற்றுக் கொண்டு அதற்குக் கீழ்ப்படிய வேண்டும். பலசமயங்களில் ஜனங்கள் இயேசு கிறிஸ்துவின் உபதேசங்களைக் கேட்பார்கள். ஆனால் தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தி உபதேசத்திற்குச் செவிகொடுக்க மாட்டார்கள். சத்தியத்தைஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இதனால் அவர்களுக்குக் கேடு வரும். (மத் 13:11-15)

"நீயும் போய் அந்தப்படியே செய்" நியாயசாஸ்திரிக்கு இயேசு கிறிஸ்து கூறிய காரியம் இதுதான். நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்வதற்கு அவன் இதைத் தான் செய்ய வேண்டும். நித்திய ஜீவனைப் பெற்றிருக்கிற மனுஷன் இந்தக் காரியங்களைத் தானாகவே செய்வான். (1யோவான் 3:16-18 1கொரி 13) யாருக்கு உதவி தேவைப்படுகிறதோ அவன்தான் பிறன்

10 அதிகாரம்

63. மார்த்தாளும் மரியாளும் - யோவான் 11:39-46

லூக்கா 10:38 பின்பு அவர்கள் பிரயாணமாய்ப் போகையில், அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்தார். அங்கே மார்த்தாள் என்னும் பேர்கொண்ட ஒரு ஸ்திரீ அவரைத் தன்வீட்டிலே ஏற்றுக்கொண்டாள்.

லூக்கா 10:39 அவளுக்கு மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தாள். அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

லூக்கா 10:40 மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்து, அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, நான் தனியே வேலைசெய்யும்படி என் சகோதரி என்னை விட்டுவந்திருக்கிறதைக் குறித்து உமக்குக் கவலையில்லையா? எனக்கு உதவிசெய்யும் படி அவளுக்குச் சொல்லும் என்றாள்.

லூக்கா 10:41 இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய்.

லூக்கா 10:42 தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார்.

"ஒரு கிராமம்" பெத்தானியா (Bethany) (யோவான் 11:1; யோவான் 12:1-3). பெயர் குறிப்பிடப்படாமல் "ஒரு" என்று குறிப்பிடப்பட்டிருக்கும் நபர்களும் இடங்களுக்கும் இந்த அதிகாரத்தில் சில இடங்களில் வருகிறது (லூக்கா 10:25,31,33,38). லூக்காசுவிசேஷத்திலும், அப்போஸ்தலருடைய நடபடிகளிலும் இந்த வாக்கியம் 101 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. வேதாகமத்தின் மற்ற புஸ்தகங்களின் "ஒரு" (certain) என்னும்வாக்கியம் 95 இடங்களில் வருகிறது: மற்ற சுவிசேஷங்களில் 26 இடங்களிலும், எல்லா நிருபங்களிலும் 9 இடங்களிலும் இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

"மார்த்தாள் அவரைத் தன்வீட்டிலே ஏற்றுக்கொண்டாள்" - மார்த்தாள் எப்போதும் பற்பல வேலைகளைச் செய்து கொண்டிருப்பாள். அவளுடைய சகோதரியின் பெயர் மரியாள். இயேசுவிடம் மரியாளைப் பற்றி மார்த்தாள் குறைகூறுவதாக வாசிக்கிறோம். ஆயினும் மார்த்தாளிடம் சில நல்ல சுபாவங்கள் காணப்படுகின்றன.

1. அவள் இயேசுவை ஏற்றுக் கொண்டாள் (லூக்கா 10:38).

2. அவள் இயேசுவைச் சேவித்தாள் (லூக்கா 10:40; யோவான் 12:2).

3. தேவை ஏற்படும்போது அவரிடத்தில் இவளே முதலாவது சென்றாள் (யோவான் 11:20,30).

4. இயேசுவிடத்தில் விசுவாசம் வைத்திருந்தாள் (யோவான் 11:21-22).

5. சரீர உயிர்த்தெழுதலையும் நித்திய ஜீவனையும் விசுவாசித்தாள் (யோவான் 11:23-27).

6. இயேசுவை கிறிஸ்து என்றும் தேவனுடைய குமாரன் என்றும் அறிக்கை செய்தாள் (யோவான் 11:27).

7. கிறிஸ்துவின் செய்தியை மரியாளுக்கு எடுத்துச் சென்றாள் (யோவான் 11:28).

"மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்தாள்" அளவிற்கு அதிகமாக வேலை செய்து கொண்டிருந்தாள் (லூக்கா 10:42; லூக்கா 21:34).

"மார்த்தாளே நீ அநேக காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய்" மார்த்தாள் அநேகக் காரியங்களில் ஆவலோடும் கலக்கத்தோடும், குழப்பத்தோடும் இருக்கிறாள் (மத் 6:25).

"தேவையானது ஒன்றே" மனுஷனுக்கு போஜனம் மட்டும் இருந்தால் போதாது. அதைவிட முக்கியமாகத் தேவனுடைய வார்த்தை வேண்டும். இதுவே ஆவிக்குரிய போஜனம். மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் (லூக்கா 10:42).

10 அதிகாரம்

மரியாளிடம் காணப்படும் நல்ல குணங்கள்

1. இயேசுவின் பாதத்தருகே அமர்ந்திருந்தாள் (லூக்கா 10:39)
2. இயேசுவின் வார்த்தையைக் கேட்டாள் (லூக்கா 10:39)
3. முக்கியமான காரியங்களுக்கு முன்னுரிமை கொடுத்தாள் (லூக்கா 10:42)
4. இயேசுவை எண்ணெயால் அபிஷேகம் பண்ணினாள் (யோவான் 11:2 யோவான் 12:3)
5. இயேசுவில் விசுவாசம் வைத்திருந்தாள் (யோவான் 11:32)
6. இயேசுவிற்கு முன்பாக தாழவிழுந்த ஒன்பது பேரில் இவளும் ஒருத்தி (யோவான் 11:32)

11 அதிகாரம்

64. ஜெபம் - ஜெபம் பண்ண போதிக்குமாறு இயேசுவிடம் விண்ணப்பம் - (மத் 6:5-15)

லூக்கா 11:1 அவர் ஒரு இடத்தில் ஜெபம்பண்ணி முடித்தபின்பு, அவருடைய சீஷரில் ஒருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்கு ஜெபம்பண்ணப் போதித்ததுபோல, நீரும் எங்களுக்குப் போதிக்கவேண்டும் என்றான்.

"அவர் ஒரு இடத்தில் ஜெபம்பண்ணி முடித்தார்" - (லூக்கா 3:21)

"ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்கு ஜெபம்பண்ணப்போதித்ததுபோல, நீரும் எங்களுக்குப் போதிக்கவேண்டும்" - இயேசுவின் சீஷர்கள் அவர் செய்யும் காரியங்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். இயேசு ஜெபம் பண்ணுவதையும், அவருடைய ஜெபங்கள் கேட்கப்பட்டு, பதில் கொடுக்கப்படுவதையும் பார்க்கிறார்கள். ஜெபத்தின் மூலமாக அவருக்கு வல்லமை வருவதையும் காண்கிறார்கள். ஆகையினால் தாங்களும் அவரைப் போல ஜெபிக்க வேண்டும் என்னும் ஆர்வம் அவர்களுக்குள் உண்டாயிற்று. ஆனால் அவர்களுக்கு ஜெபிக்கத் தெரியாது. தங்களுக்கு ஜெபம் பண்ணப் போதிக்குமாறு இயேசுவிடம் கேட்கிறார்கள்.

65. மாதிரி ஜெபம் - (மத் 6:9)

லூக்கா 11:2 அதற்கு அவர்: நீங்கள் ஜெபம் பண்ணும்போது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக, உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக,

லூக்கா 11:3 எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை அன்றன்றும் எங்களுக்குத் தாரும்;

லூக்கா 11:4 எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்; நாங்களும் எங்களிடத்தில் கடன்பட்ட எவனுக்கும் மன்னிக்கிறோமே; எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும் என்று சொல்லுங்கள் என்றார்.

"நீங்கள் ஜெபம் பண்ணும்போது, பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக, உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக" - இயேசு கிறிஸ்து இந்த உபதேசத்தைப் பல இடங்களில் பல வேளைகளில் கூறுகிறார். லூக்கா 11:1-இல் சீஷர்கள் கேட்கும் விண்ணப்பத்திற்கு இயேசு கூறும் பதில் இதுதான். நாம் ஜெபிக்கும்போது தேவனுடைய நாமம் பரிசுத்தப்படுவதாக என்று அறிவிக்க வேண்டும்.

ஜெபிக்கும்போது நாம் கவனிக்க வேண்டிய காரியங்கள்

1. ஜெபத்தின் விதிமுறைகளைப் புரிந்து கொண்டு அதன்படி ஜெபிக்க வேண்டும்.

2. தேவனிடத்தில் ஒரு நண்பரிடம் பேசுவது போலத் தைரியமாகப் பேசவேண்டும். (லூக்கா 11:5-8; லூக்கா 18:1-8; எபி 4:14-16, எபி 10:19-23,36)

3. நமது ஜெபத்திற்குத் தேவன் பதில் கொடுப்பார் என்னும் விசுவாசமும், நிச்சயமும் நமக்குள் காணப்படவேண்டும். (லூக்கா 11:9-10, மத் 7:7-11; மத் 17:20, மத் 21:21, மாற்கு 9:23; மாற்கு 11:22-24, யோவான் 14:12-15; யோவான் 15:7,16, யோவான் 16:23-26; எபி 11:6; யாக் 1:5-8; 1யோவான் 3:19-22, 1யோவான் 5:14-15)

லூக்கா - தொகுப்புரை

11 அதிகாரம்

4 ஜெபிக்கும்போது தேவனுடைய கர்த்தத்துவத்தையும், அவருடைய சர்வவல்லமையையும் விசுவாசிக்க வேண்டும். அவருடைய சித்தப்படி ஜெபிக்கும்போது நமது ஜெபத்திற்குப் பதில் கிடைக்கும் என்று விசுவாசிக்க வேண்டும். (லூக்கா 11:11-13; மத் 7:7-11; 1யோவான் 3:19-22 யோவான் 5:14-15; சங் 84:11)

5 நமது தேவையைச் சந்திப்பது தேவனுடைய சித்தம் என்று விசுவாசிக்க வேண்டும் (லூக்கா 11:9-13; சங் 23:1; சங் 34:9-10; சங் 84:11; மத் 17:20; மத் 21:21; மாற்கு 11:22-24; யோவான் 15:7)

6 பரிசுத்த ஆவியானவரையும் பரிசுத்த ஆவியானவரின் வரங்களையும் நாம் தேவனிடம் கேட்க வேண்டும் (லூக்கா 11:13; ரோமர் 8:26-27; எபே 2:18; எபே 6:18; யூதா 1:20; யோவான் 7:37-39)

7 தேவனிடம் யார் ஜெபித்தாலும் பதில் தருவார் என்னும் எண்ணம் நமக்குள் வரவேண்டும். பெரிய ஊழியக்காரர்கள் ஜெபித்தால்தான் தேவன் பதில் கொடுப்பார் நாம் ஜெபித்தால் தேவன் செவிகொடுக்க மாட்டார் என்று சோர்ந்து போகக்கூடாது. (லூக்கா 11:9-13; மத் 7:7-11; மாற்கு 9:23; மாற்கு 11:24; யோவான் 14:12-15; ரோமர் 2:11)

ஜெபத்தின் விதிமுறைகள்

1 ஜெபத்தை எப்படி ஆரம்பிப்பது (லூக்கா 11:2; மத் 11:25)

2 யாரிடம் ஜெபிப்பது (லூக்கா 11:2; யோவான் 14:13-15; யோவான் 15:16; யோவான் 16:23-26; மத் 6:9)

3 யாருடைய பெயரைப் பரிசுத்தப்படுத்துவது (லூக்கா 11:2)

4 யாருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிவது (லூக்கா 11:2)

5 யாருடைய விருப்பத்திற்குச் சேவைசெய்வது (லூக்கா 11:2; மத் 22:37)

6 எதைக் கேட்பது (லூக்கா 11:2-4)

7 தேவனிடம் எவ்வாறு ஐக்கியமாக இருப்பது (லூக்கா 11:4; 1யோவான் 3:21-22)

8 மற்றவர்களிடம் எவ்வாறு ஐக்கியமாக இருப்பது (லூக்கா 11:4; மாற்கு 11:25-26; எபே 4)

9 தேவனோடு எவ்வாறு ஜீவிப்பது (லூக்கா 11:4; 1யோவான் 1:5-9; யோவான் 17:2-3)

10 பாவத்திலிருந்து விலகி எவ்வாறு ஜீவிப்பது (லூக்கா 11:4; ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13)

66. வருந்தி கேட்கும் மனுஷனைப் பற்றிய உவமை - தேவனுடைய நண்பர்களின் தைரியம்

லூக்கா 11:5 பின்னும் அவர் அவர்களை நோக்கி: உங்களில் ஒருவன் தனக்குச் சிநேகிதனாயிருக்கிற அவனிடத்தில் பாதிராத்திரியிலே போய்: சிநேகிதனே

லூக்கா 11:6 என் சிநேகிதன் ஒருவன் வழிப்பிரயாணமாய் என்னிடத்தில் வந்திருக்கிறான், அவன் முன் வைக்கிறதற்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை; நீ மூன்று அப்பங்களை எனக்குக் கடனாகத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டான்.

லூக்கா 11:7 வீட்டுக்குள் இருக்கிறவன் பிரதியுத்தரமாக: என்னைத் தொந்தரவு செய்யாதே, கதவு பூட்டியாயிற்று, என் பிள்ளைகள் என்னோடேகூடப் படுத்திருக்கிறார்கள்; நான் எழுந்திருந்து உனக்குத் தரக்கூடாது என்று சொன்னான்

11 அதிகாரம்

உவமை எண் - 13

"உங்களில் ஒருவன் தனக்குச் சிநேகிதனாயிருக்கிறவனிடத்தில் பாதி ராத்திரியிலே போய், சிநேகிதனே" (லூக்கா 11:5-8). ஜெபத்தில் நாம் தைரியத்தோடு கேட்க வேண்டும் என்பதை இந்த உவமை விளக்குகிறது.

"பாதிராத்திரி" - பாலஸ்தீனதேசம் பாலைவனமாக இருப்பதினால் பகலில் வெயிலும் உஷ்ணமும் அதிகமாக இருக்கும். ஆகையினால் பகலில் ஜனங்கள் பிரயாணம் பண்ணாமல் இரவின் குளிர்ச்சிவேளையில் பிரயாணம் பண்ணுவார்கள். ஆகையினால் இந்த வசனத்தில் பாதிராத்திரியிலே ஒருவன் வீட்டிற்குள் வருவது அவர்களுக்குப் புதுமையான காரியமல்ல.

"அப்பங்கள் (loaves) - யூதர்களுடைய அப்பம் மெல்லியதாகவும், தட்டையாகவும் இருக்கும். இதுவே அவர்களுடைய பிரதான உணவு.

"என் பிள்ளைகள் என்னோடேகூடப் படுத்திருக்கிறார்கள். நான் எழுந்திருந்து, உனக்குத் தரக்கூடாது" - கிழக்கு தேசங்களில் பெற்றோரும், பிள்ளைகளும் ஒரே அறையில் படுத்துத் தூங்கும் வழக்கம் இருக்கிறது.

வருத்திக் கேட்பது (importunity) - ἀναίδεια - anaidera - 335

வெட்கம்விட்டுக் கேட்பது, வெட்கப்படாமல் திரும்பத் திரும்பக் கேட்பது (shamelessness, impudence) ஒருவன் சிநேகிதனிடத்தில் வருந்திக் கேட்கும்போது அவன் கேட்டதைத் தந்து விடுகிறான். நமது பரமபிதாவிடம் நாம் எதையாவது வருந்திக் கேட்கும்போது அவரும் நிச்சயமாக நமக்குத் தருவார்.

வருந்திக் கேட்டு ஜெபித்தவர்களுக்கு எடுத்துக்காட்டுகள்

1 ஆபிரகாம் (ஆதி 18:23-32)

2 யாக்கோபு (ஆதி 32:24-29)

3 மோசே (யாத் 32:32; உபா 9:25)

4 கிதியோன் (நியா 6:36-40)

5 அன்னாள் (1சாமு 1:10-18)

6 சாலொமோன் (1இராஜா 8:22-30)

7 எஸ்றா (எஸ்றா 9:5-6)

8 நெகேமியா (நெகே 1:4-6)

9 தாவீது (சங் 55:16-17; சங் 141:1-2)

10 தானியேல் (தானி 9:3-19; தானி 10:1-3)

11 புறஜாதி ஸ்திரீ (மத் 15:22-28)

12 விதவை (லூக்கா 18:1-8)

67. ஜெபத்திற்கு பதில் கொடுக்கப்படும் என்னும் நிச்சயம் - (மத் 7:7; 21:21; மாற்கு 9:23; 11:22; யோவான் 14:12; 15:7,16)

லூக்கா 11:9 மேலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.

லூக்கா 11:10 ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான், தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்.

"கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்" - (மத் 7:7-11)

11 அதிகாரம்

68. தேவன் நமது பரமபிதாவானவர் - (மத் 7:7; அப் 2:39; 5:32)

லூக்கா 11:11 உங்களில் தகப்பனாயிருக்கிற ஒருவனிடத்தில் மகன் அப்பங்கேட்டால், அவனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக்கேட்டால் மீனுக்குப் பதிலாய்ப் பாம்பைக் கொடுப்பானா?

லூக்கா 11:12 அல்லது முட்டையைக் கேட்டால் அவனுக்குத் தேளைக் கொடுப்பானா?

லூக்கா 11:13 பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்.

உவமை எண் - 14

"உங்களில் தகப்பனாயிருக்கிற ஒருவனிடத்தில் மகன் அப்பங்கேட்டால் அவனுக்குக் கல்லைக் கொடுப்பானா?" (லூக்கா 11:11). தேவனுடைய நித்திய பிதாத்துவத்தை இந்த உவமை விளக்குகிறது.

லூக்கா 11:11-13 ஆகிய வசனங்களில் கூறப்படும் மாறுபாட்டு அம்சங்கள்

1. அப்பம் - கல்
2. மீன் - பாம்பு
3. முட்டை - தேள்
4. நல்ல ஈவுகள் - பரிசுத்த ஆவி

பாலஸ்தீன தேசத்தில் ஏராளமான தேள்கள் இருந்தன. கருந்தேள்கள் கொடுக்கு கொடிய விஷம் உடையது. சீனாய் வனாந்தரத்தில் நான்கு விதமான தேள்கள் காணப்படுகின்றன. இவை பூச்சிகளைத் தின்று வாழும். கற்களுக்கு இடையிலும், குழிகளிலும் மறைந்திருக்கும்.

"பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா" - தேவன் தம்முடைய பிள்ளைகளை அதிகமாக நேசிக்கிறார். உலகப்பிரகாரமான பெற்றோர் தங்கள் பிள்ளைகளை நேசிப்பதைவிட தேவனுடைய அன்பு மிகப்பெரியது. தேவன் தமது சித்தத்தைப் பரிசுத்த வேதாகமத்தில் தெளிவுபடுத்தியிருக்கிறார். அவருடைய சித்தத்தின் பிரகாரம் நாம் எதைக் கேட்டாலும் அதை நமக்கு அன்போடு தருவார். மகன் செய்த பாவத்தைத் தந்தையால் மன்னிக்க முடியாது. மகனுக்கு மெய்யான சந்தோஷத்தையும் சமாதானத்தையும் அவனுடைய தந்தையால் தர இயலாது. நமது பரலோகப் பிதாவிடம் சென்று நம்மை மன்னிக்குமாறு விண்ணப்பம் பண்ணுவோமானால் அவர் நமது பாவங்களை மன்னிப்பார். நமக்கு மெய்யான சந்தோஷத்தையும் சமாதானத்தையும் கொடுப்பார். நமது வியாதிகளைச் சொஸ்தமாக்குவார். பிசாசின் கிரியைகளிலிருந்து நம்மை விடுவிப்பார் (மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 14:12-15; யோவான் 15:7,16; யோவான் 16:23-26; எபி 11:6; யாக் 1:5-8; 1யோவான் 3:21-22; 1யோவான் 5:14-15; சங் 91; 1பேதுரு 2:24).

"பரிசுத்த ஆவி" - பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பார். இந்த வாக்கியம் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தையும், கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வதற்கு வல்லமையையும் குறிக்கும். லூக்கா 24:49; யோவான் 7:37-39; அப் 2:33,38-39; அப் 5:32; மத் 3:11; கலா 3:13-14. ஒருவர் மறுபடியும் பிறக்கும்போது அவருக்குப் பரிசுத்த ஆவியானவர் ஓரளவு கொடுக்கப்படுகிறார் (யோவான் 3:3,5; ரோமர் 8:9,14-16; கலா 4:6). பெந்தெகொஸ்தே நாளில் சீஷர்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டார்கள் (அப் 1:4-8; அப் 2:1-16). நாம் தேவனிடத்தில் நம்மைப் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணுமாறு கேட்கும்போது அவர் நம்மை அபிஷேகிக்கிறார் (அப் 9:17; அப் 8:14-22; அப் 10:44-48; அப் 11:14-18; அப் 15:7-11; அப் 19:1-7).

11 அதிகாரம்

69. இயேசு பிசாசைத் துரத்துகிறார் – பரிசேயர்கள் பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாக தேவதூஷணம் கூறுகிறார்கள் – (மத் 12:24)

லூக்கா 11:14 பின்பு அவர் ஊமையாயிருந்த ஒரு பிசாசைத் துரத்தினார் பிசாசு புறப்பட்டுபோன பின்பு ஊமையன் பேசினான் ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள்

லூக்கா 11:15 அவர்களில் சிலர் இவன் பிசாசுகளின் தலைவனாகிய பெயெல்செபூலைக் கொண்டு பிசாசுகளைத் துரத்துகிறான் என்றார்கள்

"பெயெல்செபூல்" (Beelzebub) - (மத் 10:25)

70. பிரிந்திருக்கிற இராஜ்ஜியம் – (மத் 12:25, மாற்கு 3:23)

லூக்கா 11:16 வேறு சிலர் அவரைச் சோதிக்கும் படி வானத்திலிருந்து ஒரு அடையாளத்தைக் காட்ட வேண்டுமென்று அவரிடத்தில் கேட்டார்கள்

லூக்கா 11:17 அவர்களுடைய சிந்தனைகளை அவர் அறிந்து அவர்களை நோக்கி; தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப்போம் தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த வீடும் விழுந்துபோம்

லூக்கா 11:18 சாத்தானும் தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருந்தால் அவன் ராஜ்யம் எப்படி நிலைநிற்கும்? இப்படியிருக்க, பெயெல்செபூலைக் கொண்டு நான் பிசாசுகளைத் துரத்துகிறேன் என்கிறீர்களே

லூக்கா 11:19 நான் பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்தினால் உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்? ஆகையால், அவர்களே உங்களை நியாயந் தீர்க்கிறவர்களாயிருப்பார்கள்

லூக்கா 11:20 நான் தேவனுடைய விரலினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே.

லூக்கா 11:21 ஆயுதந்தரித்த பலவான் தன் அரமனையைக் காக்கிறபோது அவனுடைய பொருள் பத்திரப்பட்டிருக்கும்

லூக்கா 11:22 அவனிலும் அதிக பலவான் வந்து அவனை மேற்கொள்வானேயாகில் அவன் நம்பியிருந்த சகல ஆயுத வர்க்கத்தையும் பறித்துக் கொண்டு, அவனுடைய கொள்ளைப்பொருளைப் பங்கிடுவான்

லூக்கா 11:23 என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான் என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்

சோதி (tempting) - πειράζω - peirazoo - 3985

வினைச்சொல் - சோதி, சோதனைக்காரனாயிரு, பிரயத்தனம் பண்ணு, சோதனைக்குட்படுத்து பரீட்சை பார், முயற்சி செய், தூண்டிவிடு

"சிந்தனைகள்" (thoughts, Intents, motives) - (மத் 9:4, மத் 12:25, லூக்கா 5:22 லூக்கா 6:8 லூக்கா 11:17 யோவான் 2:25)

"தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப்போம் தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த வீடும் விழுந்துபோம்" – (மத் 12:25, மாற்கு 3:24)

லூக்கா - தொகுப்புரை

11 அதிகாரம்

"பெயெல்செபூலைக் கொண்டு நான் பிசாசுகளைத் துரத்துகிறேன் என்கிறீர்களே" - பரிசுத்த ஆவிக்கு விரோதமாகத் தேவதூஷணம் கூறும் காரியம். இது மன்னிக்கக்கூடாத பாவம். (மத் 12:24-32 மாற்கு 3:28-30; 1யோவான் 5:16)

"உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்?" - இயேசு பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்தவில்லை. அவர்களுடைய பிள்ளைகள் பிசாசின் பிள்ளைகள். ஆகையினால் அவர்கள் பிசாசுகளைத் துரத்தவில்லை. இயேசு கிறிஸ்து பிசாசுகளைத் துரத்துகிறார். இதனால் அவர் பரிசுத்த ஆவியானவரால் கிரியை செய்கிறார் என்பது உறுதியாகிறது. (யோவான் 3:1-2) யூதர்களுக்கு எதிராக அவர்களுடைய பிள்ளைகளே நியாயத்தீர்ப்பு நாளில் அவர்களுக்கு எதிராகச் சாட்சி கூறுவார்கள்.

"நான் தேவனுடைய விரலினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால் தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே" - பரிசுத்த ஆவியானவருக்கு அடையாளம் (மத் 12:28) தேவனுடைய ராஜ்யம் இனிமேல் வரப்போகிறது. எகிப்தின் மந்திரவாதிகள் மோசே செய்த அற்புதங்களைக் கண்டபோது "இது தேவனுடைய விரல்" என்று கூறினார்கள் (யாத் 8:19). கர்த்தருக்கு உருவம் உண்டா இல்லையா என்று வேதபண்டிதர்கள் பலவிதமாகக் கருத்துக் கூறுகிறார்கள் (நீதி 7:3; உன 5:5)

உவமை எண் - 15

"ஆயுதந்தரித்த பலவான் தன் அரமனையைக் காக்கிறபோது அவனுடைய பொருள் பத்திரப்பட்டிருக்கும்." (லூக்கா 11:21-22). சாத்தானின் தோல்வியை இந்த உவமை விளக்குகிறது. (மத் 12:29; மாற்கு 3:27

"என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான், என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்" - (மத் 12:30; லூக்கா 9:50)

71. பின்மாறிப் போனவர்களின் நிலைமை - (மத் 12:43 2பேதுரு 2:20-22)

லூக்கா 11:24 அசுத்தஆவி ஒரு மனுஷனை விட்டுப் புறப்படும்போது வறண்ட இடங்களில் அலைந்து இளைப்பாறுதல தேடியும் கண்டடையாமல்; நான் விட்டுவந்த என் வீட்டுக்குத் திரும்பிப்போவேன் என்று சொல்லி,

லூக்கா 11:25 அதில் வரும்போது அது பெருக்கி ஜோடிக்கப்பட்டிருக்கக் கண்டு,

லூக்கா 11:26 திரும்பிப்போய், தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைக் கூட்டிக்கொண்டுவந்து, உட்புகுந்து அங்கே குடியிருக்கும்; அப்பொழுது அந்த மனுஷனுடைய முன்னிலைமையிலும் அவன் பின்னிலைமை அதிக கேடுள்ளதாயிருக்கும் என்றார்.

உவமை எண் - 16

"அசுத்தஆவி ஒரு மனுஷனை விட்டுப் புறப்படும்போது வறண்ட இடங்களில் அலைந்து இளைப்பாறுதல் தேடியும் கண்டடையாமல்; நான் விட்டுவந்த என் வீட்டுக்குத் திரும்பிப் போவேன்." (லூக்கா 11:24-26). இரட்சிக்கப்பட்டவர்கள் பின்வாங்கிப் போய்விடக் கூடாது. பின்வாங்கிப் போனவர்களுடைய பின்நிலைமை முன்நிலைமையைவிட மிகவும் மோசமாக இருக்கும்.

பிசாசுகளைப் பற்றிய சில செய்திகள் (லூக்கா 11:24-26)

1. அவை அசுத்தமானவை. (லூக்கா 11:24)
2. மனுஷருடைய சரீரத்திற்கு உள்ளே போகும் வெளியே வரும். (லூக்கா 11:24-26)

11 அதிகாரம்

3. அவை நடக்கும் (லூக்கா 11:24)

4. அவை இளைப்பாறுதலைத் தேடும் (லூக்கா 11:24)

5. அவை பேசும் (லூக்கா 11:24)

6. அவை தீர்மானம் பண்ணும் (லூக்கா 11:24)

7. இடங்களை வேறுபடுத்திப் பார்க்கும் (லூக்கா 11:24-26)

8. பிசாசுகள் ஒன்றுக்கொன்று ஐக்கியமாகச் சேர்ந்திருக்கும் (லூக்கா 11:26)

9. அவை பொல்லாதவை (லூக்கா 11:26)

10. அவை மனுஷனை ஆளுகை செய்ய விரும்பும் (லூக்கா 11:24-26)

"அந்த மனுஷனுடைய முன்னிலைமையிலும் அவன் பின்னிலைமை அதிக கேடுள்ளதாயிருக்கும்." இஸ்ரவேலின் மோசமான நிலைமையை விளக்குவதற்கு இயேசு இந்த உவமையைப் பயன்படுத்துகிறார் (மத் 12:45) இரட்சிக்கப்பட்டு, பின்வாங்கிப் போனவர்களுடைய நிலைமையும் அதிக கேடுள்ளதாயிருக்கும் (2பேதுரு 2:20-22, எபி 6:4-9, எபி 10:26-29)

72. பாக்கியவானைக் குறித்து இரண்டு வெவ்வேறு கருத்துக்கள் - (மத் 5:3, லூக் 6:20)

லூக்கா 11:27 அவர் இவைகளைச் சொல்லுகையில், ஜனக்கூட்டத்திலிருந்த ஒரு ஸ்திரீ அவரை நோக்கி, உம்மைச் சுமந்த கர்ப்பமும் நீர் பாலுண்ட முலைகளும் பாக்கியமுள்ளவைகள் என்று சத்தமிட்டுச் சொன்னாள்.

லூக்கா 11:28 அதற்கு அவர்: அப்படியானாலும், தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, அதைக் காத்துக்கொள்ளுகிறவர்களே அதிக பாக்கியவான்கள் என்றார்.

"ஜனக்கூட்டத்திலிருந்த ஒரு ஸ்திரீ" - (லூக்கா 10:38)

"உம்மைச் சுமந்த கர்ப்பமும் நீர் பாலுண்ட முலைகளும் பாக்கியமுள்ளவைகள்" - இது இயேசுவின் தாயாகிய மரியாளின்மீது கூறப்பட்ட ஆசீர்வாதம். மனுஷர் மரியாளை உயர்த்துகிறார்கள். ஆனால் தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்து மரியாளை உயர்த்தவில்லை. தேவன் தம்மிடத்தில் எதைக் கூறுமாறு சொல்லியிருக்கிறாரோ அதையே இயேசு கிறிஸ்து கூறுகிறார். "தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, அதைக் காத்துக் கொள்ளுகிறவர்களே அதிக பாக்கியவான்கள்" என்று இயேசு கிறிஸ்து அறிவிக்கிறார்.

73. யோனாவின் அடையாளம் - (மத் 12:38)

லூக்கா 11:29 ஜனங்கள் திரளாய்க் கூடிவந்திருக்கிறபொழுது அவர் சொல்லத்தொடங்கினார்: இந்தச் சந்ததியார் பொல்லாதவர்களாயிருக்கிறார்கள்; அடையாளத்தைத் தேடுகிறார்கள்; ஆனாலும் யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை.

லூக்கா 11:30 யோனா நினிவே பட்டணத்தாருக்கு அடையாளமாயிருந்ததுபோல, மனுஷகுமாரனும் இந்தச் சந்ததிக்கு அடையாளமாயிருப்பார்.

தீர்க்கதரிசன எண் - 24

"இந்தச் சந்ததியார் பொல்லாதவர்களாயிருக்கிறார்கள்; அடையாளத்தைத் தேடுகிறார்கள்." (லூக்கா 11:29-42) இந்தத் தீர்க்கதரிசனத்தில் லூக்கா 11:29-30 ஆவது வசனங்கள் நிறைவேறியுள்ளன. லூக்கா 11:31-32 ஆகிய வசனங்கள் வெளி 20:11-15 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற நியாயத்தீர்ப்பின்போது நிறைவேறும்.

11 அதிகாரம்

"பொல்லாத சந்ததியார்" - தேவனுடைய வார்த்தையைக் கேட்பதற்குப் பதிலாக அவர்கள் அடையாளத்தைத் தேடுகிறார்கள். அவர்களுக்கு அற்புதங்களும் அடையாளங்களும் நடந்தாலும் அவர்கள் தேவனுடைய வார்த்தையை விசுவாசிப்பதில்லை. பாவத்தை நேசித்து சத்தியத்தை வெறுக்கிறார்கள். பரிசுத்த வேதாகமத்தைத் தேவனுடைய வார்த்தை என்று விசுவாசிக்க வேண்டும். இதை விசுவாசிக்காதவர்கள் அற்புதங்கள் நடந்தாலும், அது தேவனுடைய கிரியை என்று விசுவாசிக்க மாட்டார்கள். தேவனுடைய கிரியைகளைச் சாத்தானுடைய கிரியைகள் என்று கூறிவிடுவார்கள்.

"யோனா" (Jonas, Jonah) - (மத் 12:40-42; லூக்கா 2:34)

"இந்தச் சந்ததி" - (மத் 11:16)

74. இயேசு யூதர்களைக் கடிந்து கொள்கிறார் - (மத் 12:41; 11:20)

லூக்கா 11:31 தென்தேசத்து ராஜஸ்திரீ சாலொமோனுடைய ஞானத்தைக் கேட்க பூமியின் எல்லைகளிலிருந்து வந்தாள்; இதோ, சாலொமோனிலும் பெரியவர் இங்கே இருக்கிறார். ஆதலால் நியாயத்தீர்ப்பு நாளிலே அந்த ராஜஸ்திரீ இந்தச் சந்ததியாரோடெழுந்து நின்று இவர்கள்மேல் குற்றஞ்சுமத்துவாள்.

லூக்கா 11:32 யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு நினிவே பட்டணத்தார் மனந்திரும்பினார்கள்; இதோ, யோனாவிலும் பெரியவர் இங்கே இருக்கிறார். ஆதலால் நியாயத்தீர்ப்பு நாளிலே நினிவே பட்டணத்தார் இந்தச் சந்ததியாரோடெழுந்து நின்று, இவர்கள்மேல் குற்றஞ்சுமத்துவார்கள்.

"தென்தேசத்து ராஜஸ்திரீ" (queen of the south) - (1இராஜா 10:1; 2நாளா 9:1; மத் 12:42)

"நினிவே" (Nineve, Nineveh) - (யோனா 3:5-10; மத் 12:41)

75. கொளுத்தப்பட்ட விளக்கு - (மத் 5:13; மாற்கு 4:21; லூக் 8:16)

லூக்கா 11:33 ஒருவனும் விளக்கைக் கொளுத்தி, மறைவிடத்திலாவது மரக்காலின் கீழேயாவது வைக்காமல், உள்ளே வருகிறவர்கள் வெளிச்சம் காணும்படி அதை விளக்குத்தண்டின்மேல் வைப்பான்.

லூக்கா 11:34 கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது; உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரமுழுவதும் வெளிச்சமாயிருக்கும்; உன் கண் கெட்டதாயிருந்தால் உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்.

லூக்கா 11:35 ஆகையால் உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு.

உவமை எண் - 17

"ஒருவனும் விளக்கைக் கொளுத்தி, மறைவிடத்திலாவது மரக்காலின் கீழேயாவது வைக்காமல் உள்ளே வருகிறவர்கள் வெளிச்சம் காணும்படி அதை விளக்குத்தண்டின்மேல் வைப்பான் ...." (லூக்கா 11:33-36). நம்முடைய வெளிச்சம் பிரகாசமாக எரிய வேண்டும். (மத் 5:15-16) தீமையிலிருந்தும் இருட்டிலிருந்தும் நாம் விலகியிருக்க வேண்டும்.

"விளக்கு" (candle) - கையில் எடுத்துச் செல்லும் எண்ணெய் விளக்கு. ஆசரிப்புக் கூடாரத்தில் விளக்கு எப்போதும் எரிந்து கொண்டிருக்கும். (யாத் 25:31-40; யாத் 27:20-21)

விளக்குகளின் உருவகப்பயன்பாடுகள்

1. தேவன் (2சாமு 22:29)
2. பரிசுத்த ஆவியானவர் (வெளி 4:5)
3. தேவனுடைய வார்த்தை (சங் 119:105; நீதி 6:23)

லூக்கா - தொகுப்புரை

11 அதிகாரம்

4 இரட்சிப்பு (ஏசா 62:1)

5 மனுஷனுடைய ஜீவன் (யோபு 18:6, யோபு 21:17; சங் 18:28; நீதி 20:20)

6 மனுஷனுடைய ஆவி (நீதி 20:27)

7 ராஜா (1இராஜா 15:4; சங் 132:17)

8 மனுஷனுடைய கண் (மத் 6:22)

ஆபிரகாமின் பலியைக் கடந்து சென்றது அக்கினி ஜுவாலையாகும். அது சாதாரண விளக்கு அல்ல ஆதி 15:17) வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் எல்லா விளக்குகளுக்கும் ஒரே மாதிரியாக பொருள்கூறக்கூடாது. மத் 25:1-13 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருப்பவை உருவகமல்ல உண்மையிலே விளக்குகள்

"கண்ணானது சரீரத்தின் விளக்காய் இருக்கிறது" - கண் விளக்கைப் போன்றது. சரீரத்திற்கு வெளிச்சம் தருகிறது மத் 6.22

தெளிவு (single) - ἁπλόος - haploos - 573

பொருள் - தெளிவு (simple, single, whole, good, and sound) இந்த வார்த்தை இந்த வசனத்திலும் மத் 6:22 இல் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கண் தெளிவாக இருக்குமென்றால் அதன் பார்வையும் தெளிவாக இருக்கும். பார்க்க வேண்டிய பிரகாரமாகப் பார்க்கும். ஒளியும், இருளும் ஆவிக்குரிய காரியத்தை விளக்குகிறது. ஒளி ஆவிக்குரிய ஞானத்தையும், இருள் ஆவிக்குரிய குருட்டுத்தன்மையையும் குறிக்கும். மத் 4:16 லூக்கா 1:79 யோவான் 1:5 யோவான் 3:19 யோவான் 8:12 யோவான் 12:35,46. 1யோவான் 1:5-7; 1யோவான் 2:8-11) கண்கள் இச்சைகளினாலும் விபச்சாரத்தினாலும் நிறைந்திருந்தால் அதன் சரீரமும் இருளில் இருக்கும். சரீரத்தின் ஜீவன் குருடாய் இருக்கும். (2பேதுரு 1:9; 2பேதுரு 2:14, 1யோவான்2:15-17, வெளி 3:17-18)

"ஆகையால் உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு" - இது மனுஷனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற பொறுப்பு. கலிசேஷத்தில் கூறப்பட்டிருக்கிற நிபந்தனைகளைக் கைக்கொண்டு, நம்மிடத்திலுள்ள வெளிச்சம் இருள் ஆகாதபடிக்கு நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். (2பேதுரு 1:4-10 1யோவான் 2:15-17; கலா 5:16-26

76. பரிசேயரின் சுயநீதிக்காக இயேசு அவர்களைக் கடிந்து கொள்கிறார் - (மத் 23)

லூக்கா 11:36 உன் சரீரம் ஒருபுறத்திலும் இருளடைந்திராமல் முழுவதும் வெளிச்சமாயிருந்தால் ஒரு விளக்கு தன் பிரகாசத்தினாலே உனக்கு வெளிச்சம் கொடுக்கிறது போலே, உன் சரீரமுழுவதும் வெளிச்சமாயிருக்கும் என்றார்.

லூக்கா 11:37 அவர் இப்படிப் பேசிக் கொண்டிருக்கையில் பரிசேயன் ஒருவன் தன்னுடனே கூட அவர் பகற்போஜனம் பண்ணவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டான்; அவர் போய்ப் பந்தியிருந்தார்

லூக்கா 11:38 அவர் போஜனம் பண்ணுகிறதற்கு முன் கை கழுவாமலிருந்ததைப் பரிசேயன் கண்டு, ஆச்சரியப்பட்டான்

லூக்கா 11:39 கர்த்தர் அவனை நோக்கி: பரிசேயராகிய நீங்கள் போஜனபான பாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள், உங்கள் உள்ளமோ கொள்ளையினாலும் பொல்லாப்பினாலும் நிறைந்திருக்கிறது.

லூக்கா 11:40 மதிகேடரே, வெளிப்புறத்தை உண்டாக்கினவர் உட்புறத்தையும் உண்டாக்கவில்லையோ?

லூக்கா 11:41 உங்களுக்கு உண்டானவைகளில் பிச்சை கொடுங்கள், அப்பொழுது சகலமும் உங்களுக்குச் சுத்தமாயிருக்கும்.

11 அதிகாரம்

"உன் சரீரம் ஒருபுறத்திலும் இருளடைந்திராமல் முழுவதும் வெளிச்சமாயிருந்தால் ஒரு விளக்கு தன் பிரகாசத்தினாலே உனக்கு வெளிச்சம் கொடுக்கிறது போலே உன் சரீர முழுவதும் வெளிச்சமாயிருக்கும்" - நம்முடைய கண்களைப் பரிசுத்தமாக வைத்திருந்தால் நம்முடைய சரீரமும் பரிசுத்தமாக இருக்கும். நம்முடைய சரீரம் பரிசுத்தமாக இருக்கும்போது நமது ஆவியும் ஆத்துமாவும் பரிசுத்தமாக இருக்கும். (ரோமர் 6:1-23; ரோமர் 8:1-13; ரோமர் 12:1-2; 1கொரி 3:13-17; 1கொரி 6:19-20; 1கொரி 9:27; 2கொரி 4:10; 2கொரி 7:1; கொலோ 2:11-13; எபே 1:4; எபே 5:25-27; 1தெச 4:3-7; தீத்து 2:11-14)

போஜனம் பண்ணு (dine) - **ἀριστάω** - aristaoo – 709

வினைச்சொல் - போஜனம் பண்ணு - காலை போஜனம் சாப்பிடுதல் (breakfast) (லூக்கா 14:12; யோவான் 21:12,15)

போஜனம் பண்ணு (sup) - **δειπνέω** - deipneoo - 1172

வினைச்சொல் - சாப்பாடு பண்ணு, போஜனம் பண்ணு - இரவுபோஜனம் சாப்பிடுதல் (sup, supper) (லூக்கா 17:8; லூக்கா 22:20; 1கொரி 11:25; வெளி 3:20)

"அவர் போஜனம் பண்ணுகிறதற்கு முன் கைகழுவாமலிருந்ததைப் பரிசேயன் கண்டு ஆச்சரியப்பட்டான்" - மார்க்கத்தலைவர்கள் சிறிய காரியங்களைக்கூடப் பெரிது படுத்துகிறார்கள். ஆனால் முக்கியமான காரியங்களைக் கவனிக்காமல் மறந்து விடுகிறார்கள்.

கழுவு (washed) - **βαπτίζω** bapti

வினைச்சொல் - முழுக்கு, கழுவு, ஞானஸ்நானம் பெறு, ஞானஸ்நானம் கொடு, ஸ்நானம் பண்ணு, கைகழுவு (to dip) - இந்த வார்த்தை இரண்டு இடங்களில் "கழுவு" (wash) என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. (மாற்கு 7:4; லூக்கா 11:38) "பேப்டிஸோ" (baptizoo) என்னும் சொல் "பேப்டோ" (baptoo) என்னும் சொல்லிலிருந்து வந்திருக்கிறது.

கழுவு (wash) - **βάπτω** - baptoo - 911

வினைச்சொல் - கழுவு

"போஜனபான பாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள்" - மார்க்கச் சடங்குகளின் பிரகாரமாக கைகளையும், பாத்திரங்களையும் கழுவுகிறார்கள் (மாற்கு 7:4). பரிசேயர்கள் மாயமாலக்காரர்கள். தங்களுடைய மார்க்கத்தின் சடங்குகளை எல்லோருக்கும் தெரியும் விதமாக விளம்பரப்படுத்தி கடைப்பிடிக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய உள்ளமோ கொள்ளையினாலும் பொல்லாப்பினாலும் நிறைந்திருக்கிறது. (லூக்கா 11:40; மத் 23:1-33)

பொல்லாப்பு (wickedness) - **πονηρία** - poneeria - 4189

பெண்பால் பெயர்ச்சொல் - துர்குணம், துரோகம், பொல்லாப்பு, துஷ்டத்தனம் (மத் 12:39; லூக்கா 11:29)

மதிகேடர் (fools) - **ἄφρων** - aphroon - 878

பொருள் - மதிகேடான, பேதை, புத்தியீன, புத்தியில்லாத, மதியற்ற (senseless ones; without reason, foolish, stupid, acting without intelligence) (லூக்கா 11:40; லூக்கா 12:20; ரோமர் 2:20; 1கொரி 15:36; 2கொரி 11:16,19; எபே 5:17; 1பேதுரு 2:15)

11 அதிகாரம்

"வெளிப்புறத்தை உண்டாக்கினவர் உட்புறத்தையும் உண்டாக்கவில்லையோ?" - தேவன் மார்க்கத்தின் வெளிப்புறத்தையும் உட்புறத்தையும் விரும்புகிறார் மனுஷனுடைய ஆத்துமாவும், சரீரமும் சுத்தமாக இருக்க வேண்டுமென்பதே கர்த்தருடைய விருப்பம்

"உங்களுக்கு உண்டானவைகளில் பிச்சை கொடுங்கள் - உங்களுடைய பாத்திரங்களில் உள்ள உணவைத் தேவைப்படுகிறவர்களுக்கு பிச்சையாகக் கொடுங்கள் வெளிப்புறமான சுத்தத்தைப் பற்றி அதிகமாகக் கவலைப்படாதிருங்கள்

"சகலமும் உங்களுக்குச் சுத்தமாயிருக்கும்" - பிச்சைக் கொடுப்பது மிகவும் புண்ணியமானது என்று பரிசேயர்கள் நினைத்தார்கள் பிச்சை கொடுத்தால் தாங்கள் செய்த பாவங்களெல்லாம் சரியாகிவிடும் என்பது அவர்களுடைய நம்பிக்கை. அவர்கள் பாவமான காரியங்களைச் செய்தாலும் பிச்சைக் கொடுப்பதின் மூலமாகத் தங்களுடைய பாவங்கள் நீங்கும் என்று நினைக்கிறார்கள்

77. பரிசேயர், நியாய சாஸ்திரிகள் மீது ஆறு ஐயோக்கள் - மத் 6:23

(1) சுயநீதி - (ஏசா 64:6; மத் 23)

லூக்கா 11:42 பரிசேயரே, உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாம் மருக்கொழுந்து முதலிய சகலவித பூண்டுகளிலும் தசமபாகம் கொடுத்து நியாயத்தையும் தேவ அன்பையும் விட்டுவிடுகிறீர்கள் இவைகளையும் செய்யவேண்டும், அவைகளையும் விடாதிருக்கவேண்டுமே

"பரிசேயரே உங்களுக்கு ஐயோ" (மத் 23:29

(2) தன்னை உயர்த்துவது

லூக்கா 11:43 பரிசேயரே, உங்களுக்கு ஐயோ ஜெப ஆலயங்களில் முதன்மையான ஆசனங்களையும் சந்தைகளில் வந்தனங்களையும் விரும்புகிறீர்கள்

"ஜெப ஆலயங்களில் முதன்மையான ஆசனங் களையும் சந்தைகளில் வந்தனங்களையும் விரும்புகிறீர்கள் - (மத் 23:6 மாற்கு 12:38-39 லூக்கா 20:46

(3) மாய்மாலம்

லூக்கா 11:44 மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ மறைந்திருக்கிற பிரேதக் குழிகளைப் போலிருக்கிறீர்கள் அவைகள்மேல் நடக்கிற மனுஷருக்கு அவைகள் தெரியாதிருக்கிறது என்றார்

"மறைந்திருக்கிற பிரேதக்குழிகளைப் போலிருக்கிறீர்கள் அவைகள்மேல் நடக்கிற மனுஷருக்கு அவைகள் தெரியாதிருக்கிறது" - இந்த வாக்கியம் மத் 23:27-28 ஆகிய வசனங்களுக்கு நேர்மாறாக உள்ளது யூதர்கள் தங்களுடைய பழக்கங்களை மறந்து விடுகிறார்கள் பிரேதக்குழிகளை வெள்ளையடிப்பது அவர்களுடைய வழக்கம் ஆனால் இங்கு அவ
வெள்ளையடிக்காமல் விட்டுவிடுகிறார்கள் அந்த வழியாகப் போகும் மனுஷருக்கு அது பிரேதக்குழி என்று தெரியாமல் அதன்மீதே நடந்துபோகிறார்கள்

(4) சுமக்கக்கூடாத பாரம்

லூக்கா 11:45 அப்பொழுது நியாய சாஸ்திரிகளில் ஒருவன் அவரை நோக்கி: போதகரே நீர் இப்படிச் சொல்லுகிறதினால் எங்களையும் நிந்திக்கிறீரே என்றான்

லூக்கா 11:46 அதற்கு அவர் நியாயசாஸ்திரிகளே உங்களுக்கு ஐயோ சுமக்க அரிதான சுமைகளை மனுஷர் மேல் சுமத்துகிறீர்கள் நீங்களோ உங்கள் விரல்களில் ஒன்றினாலும் அந்தச் சுமைகளைத் தொடவும்மாட்டீர்கள்

லூக்கா – தொகுப்புரை

11 அதிகாரம்

"நியாயசாஸ்திரிகள்" (lawyers, teacher of the law) - கல்வியறிவு மிக்கவர்கள் நியாயப்பிரமாணத்தை ஜனங்களுக்கு உபதேசிக்கிறவர்கள் நியாயாதிபதிகள் இவர் வேதபாரகராகவும் இருந்தார்கள் எல்லா வேதபாரகரையும் நியாயசாஸ்திரிகள் என்று கூறமுடியாது. (மத் 22:35 ; மாற்கு 12:28) நியாயசாஸ்திரிகளை இயேசு கிறிஸ்து பரிசேயரோடும். வேதபாரகரோடும் சேர்க்காமல் தனியாகக் குறிப்பிடுகிறார் லூக்கா 11:44-52 லூக்கா 7:30 லூக்கா 10:25 லூக்கா 14:3) நியாயசாஸ்திரிகளில் ஒருவன் இயேசுவை பின்பற்றினான் தீத்து 3:13.

நியாயசாஸ்திரிகள் (lawyers) - νομικός - nomikos - 3544

பெயரடை - நியாயசாஸ்திரியான

"சுமக்க அரிதான சுமைகளைமனுஷர்மேலே சுமத்துகிறீர்கள்" - நியாயப்பிரமாணத்தில் கூறப்பட்டவை போக இன்னும் அநேக பிரமாணங்களை இவர்கள் ஜனங்களமீது சுமத்துகிறார்கள் இவை நியாயப்பிரமாணத்தில் எழுதப்பட்டவை அல்ல வாய்வழியாகக் கூறப்பட்டு வரும் பிரமாணங்கள் இவற்றைக் கடைப்பிடிப்பதும் கடினம். (அப் 15:10, கலா 2:14)

தொடு (touch) - προσψαύω - prospsauoo - 4379

வினைச்சொல் - தொடு, மெதுவாக தொடுதல், உடம்பில் புண் இருக்கும் இடத்தை மெதுவாகத் தடவுவதுபோன்று தொடுதல் (touch gently, feeling the pulse or some sore place on the body

(5) இரத்தச்சாட்சிகளின் இரத்தம்

லூக்கா 11:47 உங்களுக்கு ஐயோ உங்கள் பிதாக்கள் கொலைசெய்த தீர்க்கதரிசிகளுக்குக் கல்லறைகளைக் கட்டுகிறீர்கள்

லூக்கா 11:48 ஆகையால் உங்கள் பிதாக்களுடைய கிரியைகளுக்கு நீங்களும் உடன்பட்டவர்களென்று சாட்சியிடுகிறீர்கள் எப்படியென்றால், உங்கள் பிதாக்கள் அவர்களைக் கொலைசெய்தார்கள், நீங்களோ அவர்களுக்குக் கல்லறைகளைக் கட்டுகிறீர்கள்

லூக்கா 11:49 ஆதலால் தேவஞானமானது: நான் தீர்க்கதரிசிகளையும் அப்போஸ்தலர்களையும் அவர்களிடத்தில் அனுப்புவேன் அவர்களில் சிலரைக் கொலைசெய்து சிலரைத் துன்பப்படுத்துவார்கள்

லூக்கா 11:50 ஆபேலின் இரத்தமுதல் பலிபீடத்துக்கும் தேவாலயத்துக்கும் நடுவே கொலையுண்ட சகரியாவின் இரத்தம் வரைக்கும், உலகத்தோற்ற முதற்கொண்டு சிந்தப்பட்ட சகல தீர்க்கதரிசிகளுடைய இரத்தப்பழியும் இந்தச் சந்ததியினிடத்தில் கேட்கப்படத்தக்கதாக அப்படிச் செய்வார்கள் என்று சொல்லுகிறது

லூக்கா 11:51 நிச்சயமாகவே இந்தச் சந்ததியினிடத்தில் அது கேட்கப்படும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்

"உங்கள் பிதாக்களுடைய கிரியைகளுக்கு நீங்களும் உடன்பட்டவர்களென்று சாட்சியிடுகிறீர்கள் எப்படியென்றால் உங்கள் பிதாக்கள் அவர்களைக் கொலை செய்தார்கள் நீங்களோ அவர்களுக்குக் கல்லறைகளைக் கட்டுகிறீர்கள்" மத் 23:29-32 ஆகிய வசனங்களில் பரிசேயர்கள் தங்கள் பிதாக்களுடைய செய்கைகளைக் கடைப்பிடிக்கவில்லை இந்த வசனத்திலும் தங்களுடைய பிதாக்களுடைய கிரியைகளுக்கு உடன்படுகிறார்கள் அவர்களுடைய துன்மார்க்கமான உபதேசங்களை இவர்களும் உபதேசித்து, அவற்றைக் கடைப்பிடித்து வருகிறார்கள்

"தேவஞானம்" - இந்த வார்த்தை இயேசு கிறிஸ்துவைக் குறிப்பிடும். (மத் 23:34, 1கொரி 1:24,30)

தீர்க்கதரிசன எண் - 25

"நான் தீர்க்கதரிசிகளையும் அப்போஸ்தலர்களையும் அவர்களிடத்தில் அனுப்புவேன்" (லூக்கா 11:49-51 இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

11 அதிகாரம்

"தீர்க்கதரிசிகளையும் அப்போஸ்தலர்களையும்" - (அப் 11:27 அப் 15:33)

"அவர்களில் சிலரைக் கொலைசெய்து சிலரைத் துன்பப்படுத்துவார்கள்" - கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வசனங்களில் இந்த வேதவாக்கியம் நிறைவேறிற்று. அப் 4:1-21 அப் 5:17-42 அப் 6:9-15 அப் 7:54-60 அப் 8:1-4 அப் 9:1-4 அப் 12:1-18 அப் 13:45 அப் 14:1-5; அப் 16:19-40, அப் 17:5 அப் 19:24-41 அப் 21:33-28:31)

"உலகத் தோற்றம்" - (மத் 13:35)

"இந்தச் சந்ததியினிடத்தில் கேட்கப்பட்டது" - (மத் 23:35)

"சகரியா" (Zacharias) - (மத் 23:35)

(6) ஆத்துமாக்களின் அறிவு

லூக்கா 11:52 நியாயசாஸ்திரிகளே உங்களுக்கு ஐயோ அறிவாகிய திறவுகோலை எடுத்துக் கொண்டீர்கள், நீங்களும் உட்பிரவேசிக்கிறதில்லை உட்பிரவேசிக்கிறவர்களையும் தடைபண்ணுகிறீர்கள்

"அறிவாகிய திறவுகோலை எடுத்துக் கொண்டீர்கள்" ஜனங்களிடமிருந்து தேவனைப் பற்றிய அறிவை எடுத்துப்போட்டார்கள் மனுஷருடைய பாரம்பரியங்களைக் கடைப்பிடிக்குமாறு அவர்களை வலியுறுத்தி, தேவனுடைய கற்பனைகளை அவர்களிடத்திலிருந்து எடுத்துப் போடுகிறார்கள் மத் 15:1-9 மத் 16:6-12)

"நீங்களும் உட்பிரவேசிக்கிறதில்லை, உட்பிரவேசிக்கிறவர்களையும் தடைபண்ணுகிறீர்கள்" - அவர்களும் சத்தியத்தை ஏற்றுக் கொண்டு தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கமாட்டார்கள் மற்றவர்களையும் தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க விடாமல் தூரத்திவிடுகிறார்கள் (மத் 23:13)

78. இயேசுவிற்கு எதிரான சதியாலோசனை - (மத் 12:14 26:3)

லூக்கா 11:53 இவைகளை அவர்களுக்கு அவர் சொல்லுகையில் வேதபாரகரும் பரிசேயரும் அவர்மேல் குற்றஞ்சுமத்தும் பொருட்டு, அவர் வாய்மொழியில் ஏதாகிலும் பிழை கண்டுபிடிக்கவேண்டும் என்று உபாயம்பண்ணி அவரை மிகவும் நெருக்கவும்

லூக்கா 11:54 அநேக காரியங்களைக் குறித்துப் பேசும்படி அவரை ஏவவும் தொடங்கினார்கள்

"அவர் வாய்மொழியில் ஏதாகிலும் பிழை கண்டுபிடிக்கவேண்டும் என்று உபாயம்பண்ணி அவரை மிகவும் நெருக்கவும், அநேக காரியங்களைக்குறித்துப் பேசும்படி அவரை ஏவவும் தொடங்கினார்கள்" பரிசேயர்கள் இயேசுவைப் பல காரியங்களைப் பேசுமாறு வலியுறுத்துகிறார்கள் சத்தியத்தைக் கேட்க வேண்டுமென்பது அவர்களுடைய நோக்கமல்ல. அவரிடத்தில் ஏதாவது குற்றம் கண்டுபிடிக்க வேண்டும். இதற்காகவே அவரை அதிகமாகப் பேசும்படி கூறுகிறார்கள்

12 அதிகாரம்

79. மாயமாலத்திற்கு எதிரான எச்சரிப்பு - (மத் 10:26-27)

லூக்கா 12:1 அத்தருணத்திலே அநேகமாயிரம் ஜனங்கள் ஒருவரையொருவர் மிதிக்கத்தக்கதாகக் கூடி வந்திருக்கையில், அவர் முதலாவது தம்முடைய சீஷரை நோக்கி: நீங்கள் மாயமாகிய பரிசேயருடைய புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.

லூக்கா 12:2 வெளியாக்கப்படாத மறைபொருளுமில்லை, அறியப்படாத இரகசியமுமில்லை.

லூக்கா 12:3 ஆதலால் நீங்கள் இருளிலே பேசினது எதுவோ அது வெளிச்சத்திலே கேட்கப்படும்; நீங்கள் அறைகளில் காதிலே சொன்னது எதுவோ அது வீடுகளின்மேல் கூறப்படும்.

அநேகமாயிரம் (innumerable multitude) - μυριάς - myrias - 3461

பெண்பால் பெயர்சொல். அநேகமாயிரம், பதினாயிரம், ஆயிரமாயிரம் (myriads, or tens of thousands of people). ஒருவரையொருவர் மிதிக்கத்தக்க அளவிற்கு கூடியிருக்கும் ஜனங்கள்.

"நீங்கள் மாயமாகிய பரிசேயருடைய புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" - இயேசுகிறிஸ்து வேறொரு வேளையில் இக்காரியத்தைக் கூறியிருக்கிறார் (மத் 16:6).

"பரிசேயருடைய புளித்தமாவு" - இது பரிசேயருடைய கள்ளஉபதேசங்களைக் குறிக்கும். தேவனுடைய வார்த்தையை ஆவிக்குரிய ரீதியாக வியாக்கியானம் பண்ணுவதற்குப் பதிலாக மனுஷருடைய பாரம்பரியத்தின் பிரகாரம் வியாக்கியானம் பண்ணுதல். மத் 15:1-9; மத் 16:6-12; மத் 23:1-33; லூக்கா 11:37-52. பரிசேயரின் கள்ளஉபதேசங்கள் "மாயம்" (hypocrisy) என்று கூறப்பட்டிருக்கிறது. பரிசேயருக்கு வேதத்தின் உபதேசம் தெரியும். அவர்கள் தேவன்மீது விசுவாசமாக இராமலேயே அவரிடத்தில் விசுவாசமாக இருப்பதாக நடிக்கிறார்கள்.

தீர்க்கதரிசன எண் - 26

"வெளியாக்கப்படாத மறைபொருளுமில்லை, அறியப்படாத இரகசியமுமில்லை............" லூக்கா 12:2-5. இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. வெளி 20:11-15 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் நியாயத்தீர்ப்பின்போது இது முழுமையாக நிறைவேறும்.

"நீங்கள் இருளிலே பேசினது எதுவோ அது வெளிச்சத்திலே கேட்கப்படும்; நீங்கள் அறைகளில் காதிலே சொன்னது எதுவோ அது வீடுகளின்மேல் கூறப்படும்." மத் 10:26-27; லூக்கா 12:2.

80. மனுஷ பயத்திற்கு எதிரான எச்சரிப்பு - (மத் 10:28-33)

லூக்கா 12:4 என் சிநேகிதராகிய உங்களுக்கு நான் சொல்லுகிறேன், சரீரத்தைக் கொலை செய்து, அதன்பின்பு அதிகமாக ஒன்றும் செய்யத் திராணியில்லாதவர்களுக்குப் பயப்படாதிருங்கள்.

லூக்கா 12:5 நீங்கள் இன்னாருக்குப் பயப்பட வேண்டுமென்று உங்களுக்குக் காண்பிக்கிறேன்; கொலைசெய்த பின்பு நரகத்திலே தள்ள வல்லமையுள்ளவருக்குப் பயப்படுங்கள்; ஆம், அவருக்கே பயப்படுங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

12 அதிகாரம்

லூக்கா 12:6 இரண்டு காசுக்கு ஐந்து அடைக்கலான் குருவிகளை விற்கிறார்களல்லவா? அவைகளில் ஒன்றாகிலும் தேவனால் மறக்கப்படுகிறதில்லை.

லூக்கா 12:7 உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. ஆகையால் பயப்படாதிருங்கள். அநேகம் அடைக்கலான் குருவிகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்.

லூக்கா 12:8 அன்றியும் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ அவனை மனுஷகுமாரனும் தேவதூதர் முன்பாக அறிக்கைபண்ணுவார்.

லூக்கா 12:9 மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் தேவதூதர் முன்பாக மறுதலிக்கப்படுவான்.

சிநேகிதன (friend) - φίλος - philos - 5384

பொருள் - சிநேகிதனாயிருக்கிற தோழனாகிய (friend, associate) (மத் 11:19, மத் 26:50; லூக்கா 7:34, லூக்கா 12:4, யோவான் 11:11 யோவான் 15:13-15)

"சரீரத்தைக் கொலை செய்து அதன்பின்பு அதிகமாக ஒன்றும் செய்யத் திராணியில்லாதவர்களுக்குப் பயப்படாதிருங்கள்" மனுஷனால் சரீரத்தைத்தான் கொல்ல முடியும். அவனால் ஆத்துமாவையோ ஆவியையோ கொல்லமுடியாது அவை நித்தியமானவை. (1பேதுரு 3:4)

"நரகத்திலே தள்ள வல்லமையுள்ளவர்" - மரித்த சரீரத்தை மனுஷனால் சவக்குழியிலதான் தள்ளமுடியும். ஆனால் தேவனோ நரகத்தில் தள்ளிவிடுவார் (வெளி 20:11-15; சங் 9:17)

நரகம் (hell) γέεννα geenna 1067

பெண்பால் பெயர்சொல் - நரகம், எரிகிற அக்கினிக்கடல் (வெளி 19:20 வெளி 20:10-15; வெளி 21:8)

நரகத்தைப் பற்றி ஒருசில காரியங்கள்

1 ஒருசிலருக்கு மட்டுமே நரகம் நியமிக்கப்பட்டிருக்கிறது. (மத் 5:22 மத் 23:15,33)

2 பாவத்திலிருந்து மன்னிக்கப்பட்டு, மறுபடியும் பிறக்கிறவர்கள் நரகத்திலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். (மத் 5:29-30; மத் 18:9 வெளி 21:8)

3 சரீரமும் ஆத்துமாவும் நரகத்திற்குப் போகும். (மத் 10:28; லூக்கா 12:5)

4 நரகம் அழிவின் இடம். (மத் 23:33; மத் 25:41,46; வெளி 14:9-11 வெளி 19:20; வெளி 20:11-15 வெளி 21:8; ஏசா 66:22-24)

5 நியாயத்தீர்ப்பு வரும் வரையிலும் சரீரங்கள் நரகத்தில் தள்ளப்படும் (வெளி 20:11-15)

6 ஒருவனை நரகத்திற்குள் தள்ளுவதற்குத் தேவனுக்கு மட்டுமே அதிகாரம் உண்டு. (லூக்கா 12:5, மத் 10:28)

7 நரகம் எரிகிற அக்கினி. (யாக் 3:6)

8 துன்மார்க்கர் மட்டுமே நரகத்திற்குப் போவார்கள் (வெளி 20:11-15 வெளி 21:8; சங் 9:17)

9 நரகத்தின் தண்டனை வெவ்வேறு அளவில் இருக்கும். (வெளி 20:13, மத் 23:14-15)

10 மனுஷர் மனந்திரும்பி, நரக ஆக்கினையிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். (மத் 3:2-8, மத் 23:33)

11 நரகத்தின் அக்கினி அவியாது. அங்கு புழு சாகாது. (மாற்கு 9:43-49, மத் 25:41,46; வெளி 14:9-11, வெளி 20:10-15)

12 அதிகாரம்

12 நரகத்தின் அக்கினி, தண்டனை நியாயத்தீர்ப்பு, அழிவு ஆகியவை நித்தியமானவை (மத் 25:41,46; மாற்கு 3:29; மாற்கு 9:43-49; எபி 6:2; யூதா 1:7; வெளி 14:9-11; தானி 12:2)

13 நரகத்தில அழுகையும், வேதனையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும். (மத் 8:12; மத் 13:42,50; மத் 24:51)

14 ஜனங்கள் நரகத்திற்குள் உயிரோடு தள்ளப்படுவார்கள் (வெளி 19:20; வெளி 20:10-15)

15 பாதாளத்தில (tartarus) - (2பேதுரு 2:4; யூதா 1:6-7) (the abyss) (லூக்கா 8:31; வெளி 9; வெளி 20:3) இருக்கும் ஜனமாக்கள் நரகத்திலே தள்ளப்படுவார்கள் (வெளி 20:10-15)

16 நரகத்தில அக்கினியும், கந்தகமும் எரிந்து கொண்டிருக்கும் (வெளி 14:9-11; வெளி 20:10-15)

"இரண்டுகாசு" - (மத் 10:29)

"உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது" - தேவனுடைய பராமரிப்பையும், அவர் நம்மீது காண்பிக்கும் கவனிப்பையும் இந்த வாக்கியம் குறிக்கிறது.

தீர்க்கதரிசன எண் - 27

"மனுஷர் முன்பாக என்னை அறிக்கைபண்ணுகிறவன் எவனோ அவனை மனுஷகுமாரனும் தேவதூதர் முன்பாக அறிக்கை பண்ணுவார்" (லூக்கா 12:8-10) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. (வெளி20:11-15) ஆகிய வசனங்களில கூறப்பட்டிருக்கும் நியாயத் தீர்ப்பினபோது இது முழுமையாக நிறைவேறும்.

81. மன்னிக்கப்படாத பாவம் - (மத் 12:31)

லூக்கா 12:10 எவனாகிலும் மனுஷ குமாரனுக்கு விரோதமான விசேஷத்தைச் சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப் படும்; பரிசுத்த ஆவிக்கு விரோதமாய்த் தூஷணஞ் சொல்லுகிறவனுக்கோ மன்னிக்கப்படுவதில்லை.

"பரிசுத்த ஆவிக்கு விரோதமாய்த் தூஷணஞ் சொல்லுகிறவனுக்கோ மன்னிக்கப்படுவதில்லை" - (மத் 12:31-32; மாற்கு 3:28-29)

82. சுவிசேஷத்திற்கு வரும் எதிர்ப்பைப் பற்றிய முன்னறிவிப்பு - (மத் 10:16)

லூக்கா 12:11 அன்றியும், ஜெப ஆலயத் தலைவர்களுக்கும் துரைத்தனத் தார்களுக்கும் அதிகாரமுள்ளவர்களுக்கும் முன்பாக உங்களைக் கொண்டுபோய் விடும்போது, எப்படி என்னத்தை மாறுத்தரமாகச் சொல்லுவோம் என்றும், எதைப் பேசுவோம் என்றும் கவலைப் படாதிருங்கள்.

லூக்கா 12:12 நீங்கள் பேச வேண்டியவைகளைப் பரிசுத்த ஆவியானவர் அந்நேரத்திலே உங்களுக்குப் போதிப்பார் என்றார்.

"துரைத்தனத்தார்கள்" (magistrates) தேசத்தின் சட்டதிட்டங்களுக்கு அதிகாரி (நியா 18:7; எஸ்றா 7:25; லூக்கா 12:11,58; அப 16:20-22,35-38; தீத்து 3:1)

"எப்படி, என்னத்தை மாறுத்தரமாகச் சொல்லுவோம் என்றும், எதைப் பேசுவோம் என்றும் கவலைப்படாதிருங்கள்" - (மத் 6:25)

83. பேராசைக்கு எதிரான எச்சரிப்பு

லூக்கா 12:13 அப்பொழுது ஜனக் கூட்டத்தில் ஒருவன் அவரை நோக்கி: போதகரே, ஆஸ்தியைப் பாகம்பிரித்து என் வீதத்தை எனக்குத் தரும்படி என் சகோதரனுக்குக் கட்டளையிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டான்.

12 அதிகாரம்

லூக்கா 12:14 அதற்கு அவர் மனுஷனே என்னை உங்களுக்கு நியாயாதிபதியாகவும் பங்கிடுகிறவனாகவும் வைத்தவன் யார் என்றார்

லூக்கா 12:15 பின்பு அவர் அவர்களை நோக்கி: பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல என்றார்

"ஆஸ்தியைப் பாகம்பிரித்து என் வீதத்தை எனக்குத் தரும்படி" - உபா 21:15-17

"பொருளாசை" - "ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல" பொருளாசை தடைபண்ணப்பட்டிருக்கிறது. (யாத் 20:17 மத் 6:19-21; ரோமர் 13:9; எபே 5:3 எபி 13:5; 1யோவான் 2:15-17) தலைவர்களும் அதிகாரிகளும் மாாக்கவாதிகளும் பொருளாசையை வெறுக்க வேண்டும். (யாத் 18:21 1தீமோ 3:3; தீத்து 1:7; 1பேதுரு 5:2) பொருளாசை ஆத்துமாவை அழிக்கும் (1கொரி 5:11; எபே 5:3-5; 1தீமோ 6:9-11 2பேதுரு 2:3,14) பொருளாசையை நாம் முழுவதுமாக அகற்ற வேண்டும். (கொலோ 3:2-6)

பொருளாசையினால் ஏற்படும் விளைவுகள்

1 பேராசையும், கொலைபாதகமும் (நீதி 1:19; ஏசா 56:11; எரே 22:17)

2 ஏழ்மையும், கலகமும் (நீதி 11:24)

3 ஒடுக்குதலும் முரட்டாட்டமும் (நீதி 22:16; எரே 22:17; மீகா 2:2)

4 தேவனை மறுதலிப்பது (நீதி 30:8-9)

5 அநீதி (ஏசா 1:23; மீகா 7:3)

6 பின்வாங்கிப்போதல் (மீகா 3:11)

7 ஏமாற்றுதல் (மத் 13:22)

8 திருட்டு (மாற்கு 7:21-23)

9 சோதனைகளும் ஆசைகளும் (1தீமோ 6:9-11; 1யோவான் 2:15-17)

10 குறுகிய ஜீவனும், அதன் முடிவும் (எரே 17:11; லூக்கா 12:16-21)

பேராசைக்கு எடுத்துக்காட்டானவர்கள்

1 ஏவாள் - தடைபண்ணப்பட்டிருந்த கனி (ஆதி 3:6)

2 லோத்து - நிலங்கள் (ஆதி 13:10-13)

3 யாக்கோபு - சேஷ்டபுத்திரபாகமும் தகப்பனுடைய ஆசீர்வாதமும் (ஆதி 25:31 ஆதி 27:6-29)

4 பிலேயாம் - வெகுமதிகள் (2பேதுரு 2:15)

5 ஆகான் - பணம் (யோசு 7:21)

6 தாவீது - ஸ்திரீ (2சாமு 11:2-5)

7 ஆகாப் - திராட்சைத்தோட்டம் (1இராஜா 21:2-16)

8 கேயாசி - வெகுமதிகள் (2இராஜா 5:20-27)

9 மதிகேடான ஐசுவரியவான் பாதுகாப்பு (லூக்கா 12:17)

10 யூதாஸ்காரியோத்து - வெள்ளிக்காசு (மத் 26:15-16)

11 பரிசேயர் - ஐசுவரியங்கள் (லூக்கா 16:14)

12 சீமோன் (Simon Magus) - பரிசுத்த ஆவியானவரின் வல்லமை (அப் 8:18-23)

13 பேலிக்ஸ் (Festus) பணம் (அப் 24:26)

14 தேமா (Demas) - இப்பிரபஞ்சத்தின் மீது ஆசை (2தீமோ 4:10)

12 அதிகாரம்

84. ஐசுவரியமுள்ளவனைப் பற்றிய உவமை

லூக்கா 12:16 அல்லாமலும் ஒரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: ஐசுவரியமுள்ள ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது.

லூக்கா 12:17 அப்பொழுது அவன்: நான் என்ன செய்வேன்? என் தானியங்களைச் சேர்த்து வைக்கிறதற்கு இடமில்லையே.

லூக்கா 12:18 நான் ஒன்று செய்வேன், என் களஞ்சியங்களை இடித்து, பெரிதாகக் கட்டி, எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருள்களையும் அங்கே சேர்த்துவைத்து,

லூக்கா 12:19 பின்பு: ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேக பொருள்கள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக்கொண்டான்.

லூக்கா 12:20 தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும்; அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார்.

லூக்கா 12:21 தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல் தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கிறவன் இப்படியே இருக்கிறான் என்றார்.

உவமை எண் - 18

"ஐசுவரியமுள்ள ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது" - (லூக்கா 12:16-21) நம்முடைய ஆஸ்தி நமக்கு ஜீவனல்ல என்பதை இந்த உவமை விளக்குகிறது.

"ஐசுவரியமுள்ள ஒருவன்" - (லூக்கா 10:38)

தானியங்கள் (fruits) καρπός - **karpos** - 2590

ஆண்பால் பெயர்ச்சொல் - கனி, பலன், கதிர், விளைச்சல் (crops of the trees, vines, and fields)

"மதிகேடனே" - (லூக்கா 11:40)

"உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும்" - தேவனுக்கு நம்முடைய ஆத்துமாவைத் தாம் விரும்பும் எந்த வேளையிலும் எடுத்துக் கொள்ளும் அதிகாரம் உள்ளது. அதை எதிர்த்துக் கேள்வி கேட்கும் உரிமை யாருக்கும் இல்லை.

"அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும்" - இந்தக் கேள்வியை நாம் எப்போதும் நம்மனதிற்குள் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும்.

"தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல் தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கிறவன் இப்படியே இருக்கிறான்" - லூக்கா 12:15 இல் "ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல" என்னும் சத்தியம் கூறப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்து இங்கு கூறியிருக்கும் உவமை இந்தச் சத்தியத்தை விளக்குகிறது.

85. கவலைப்படுவதற்கு எதிரான பிரமாணம் - (மத் 6:25; லூக் 21:34

லூக்கா 12:22 பின்னும் அவர் தம்முடைய சீஷரை நோக்கி: இப்படியிருக்கிறபடியினால், என்னத்தை உண்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும், என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

லூக்கா – தொகுப்புரை

12 அதிகாரம்

லூக்கா 12:23 ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகளாயிருக்கிறது.

லூக்கா 12:24 காகங்களைக் கவனித்துப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை; அவைகளுக்குப் பண்டசாலையுமில்லை, களஞ்சியமுமில்லை; இல்லாவிட்டாலும் அவைகளையும் தேவன் பிழைப்பூட்டுகிறார்; பறவைகளைப் பார்க்கிலும் நீங்கள் எவ்வளவோ விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்.

லூக்கா 12:25 கவலைப்படுகிறதினால் உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்.

லூக்கா 12:26 மிகவும் அற்பமான காரியமுதலாய் உங்களால் செய்யக்கூடாதிருக்க, மற்றவைகளுக்காக நீங்கள் கவலைப்படுகிறதென்ன?

லூக்கா 12:27 காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை; என்றாலும், சாலொமோன் முதலாய் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

லூக்கா 12:28 இப்படியிருக்க, அற்பவிசுவாசிகளே! இன்றைக்குக் காட்டிலிருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படுகிற புல்லுக்கு தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா?

லூக்கா 12:29 ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று, நீங்கள் கேளாமலும் சந்தேகப்படாமலும் இருங்கள்.

லூக்கா 12:30 இவைகளையெல்லாம் உலகத்தார் நாடித் தேடுகிறார்கள்; இவைகள் உங்களுக்கு வேண்டியவைகளென்று உங்கள் பிதாவானவர் அறிந்திருக்கிறார்.

லூக்கா 12:31 தேவனுடைய ராஜ்யத்தையே தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.

லூக்கா 12:32 பயப்படாதே, சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்.

"அவர் தம்முடைய சீஷரை நோக்கி..........என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்"

இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்குக் கூறிய இந்த உபதேசத்தில் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் சத்தியங்களைக் .

1. மாயமாலத்தைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். (லூக்கா 12:1)
2. எல்லா இரகசியங்களும் வெளிப்படுத்தப்படும். (லூக்கா 12:2-3)
3. மனுஷனுக்குப் பயப்பட வேண்டாம். தேவனுக்கு மட்டுமே பயப்பட வேண்டும். (லூக்கா 12:4-5)
4. தேவனுடைய பராமரிப்பு எல்லோருக்கும் கிடைக்கும். (லூக்கா 12:7)
5. கிறிஸ்துவை அறிக்கையிட வேண்டும். (லூக்கா 12:8-9)
6. பரிசுத்த ஆவியானவரைக் கனம்பண்ண வேண்டும். (லூக்கா 12:10)
7. பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்திருக்க வேண்டும். (லூக்கா 12:12)

12 அதிகாரம்

8 மற்றவர்களுடைய வழக்குகளைத் தீர்த்து வைப்பதற்கு முன்நிற்கக்கூடாது. (லூக்கா 12:13-14)

9 பேராசையைக் குறித்து எச்சரிக்கையாக இருக்கவேண்டும். (லூக்கா 12:15)

10 ஆஸ்தியைவிட ஜீவன் உயர்ந்தது. (லூக்கா 12:15)

11 ஆஸ்தியில் பாதுகாப்பு இல்லை. (லூக்கா 12:20)

12 ஐசுவரியத்தை நாடக்கூடாது. (லூக்கா 12:15-21)

13 ஐசுவரியத்தில் நம்பிக்கை வைக்கக்கூடாது. (லூக்கா 12:15-21)

14 நமது ஜீவன் நிலையற்றது. (லூக்கா 12:18-20)

15. மரணம் உறுதி. (லூக்கா 12:20)

16 நீண்டகாலம் ஜீவிக்கலாம் என்னும் மனுஷனுடைய திட்டம் வீணானது. (லூக்கா 12:18-21; சங் 91)

17 தேவனுக்குக் கணக்கொப்புவிக்க வேண்டும். (லூக்கா 12:20-21)

18 நமது ஐசுவரியங்களை ஞானமாக பயன்படுத்த வேண்டும். (லூக்கா 12:20)

19 சரீரத்தைவிட ஆத்துமாவை நன்றாகப் பராமரிக்க வேண்டும். (லூக்கா 12:18-21)

20 ஆவியை அழித்துப்போட்டு ஐசுவரியத்தைத் தேடக்கூடாது. (லூக்கா 12:18-20)

21 ஐசுவரியத்தைத் தேடுவதற்காக ஜீவனை வீணாக்கக்கூடாது. முக்கியமான காரியங்களுக்கு நம் வாழ்வில் முன்னுரிமை தரவேண்டும். (லூக்கா 12:16-21)

22. இந்தப் பூமியில் ஐசுவரியங்களைச் சேர்த்து வைப்பது நமது ஆத்துமாவை அழித்துப் போடும். (லூக்கா 12:21,33-34)

23 நமது ஜீவியத்தின் தேவைகளுக்காகக் கவலைப்படக் கூடாது. (லூக்கா 12:22-30; மத் 6:25-34)

24 ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவன் விசேஷித்தது. (லூக்கா 12:23)

25 உடையைப் பார்க்கிலும் சரீரம் விசேஷித்தது. (லூக்கா 12:23)

26. பறவைகளைப் பார்க்கிலும் மனுஷர் விசேஷித்தவர். (லூக்கா 12:24)

27 கவலைப்படுவது பாவம். (லூக்கா 12:22,25-26)

28. காட்டுப்புஷ்பங்களை விட தேவன் மனுஷர்மீது அதிக அக்கறையுள்ளவராக இருக்கிறார். (லூக்கா 12:27-28)

29 சந்தேகப்படாமல் ஜீவிக்க வேண்டும். (லூக்கா 12:28-29)

30 முதலாவது தேவனுடைய ராஜ்யத்தைத் தேடவேண்டும். அப்போது உலக ஆசீர்வாதங்கள் நமக்குக் கூட்டிக் கொடுக்கப்படும். (லூக்கா 12:29-31)

31 நமமுடைய எல்லாத் தேவைகளையும் தேவன அறிந்திருக்கிறார். (லூக்கா 12:29-31)

32 வருங்காலத்திற்காகப் பயப்படக்கூடாது. (லூக்கா 12:32)

33 நம்முடைய பிள்ளைகளைத் தமது ராஜ்யத்தில் சேர்ப்பது தேவனுக்குப் பிரியமான காரியம். (லூக்கா 12:32)

34 பரலோகத்தில் சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் பொக்கிஷங்கள் நிலைத்திருக்கும். (லூக்கா 12:33-34)

35 கிறிஸ்துவின் வருகைக்காக நாம் காத்திருக்கிற மனுஷரைப் போல இருக்க வேண்டும். (லூக்கா12:35-38)

12 அதிகாரம்

36. கிறிஸ்துவின் வருகைக்காக நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும். லூக்கா 12:39-40

37. கிறிஸ்துவின் வருகைக்காக உண்மையும், விவேகமும் உள்ள விசாரணைக்காரராக இருக்க வேண்டும். (லூக்கா 12:41-48)

38. நமக்கு விரோதமாக இருக்கிறவர்களோடு ஒப்புரவாக வேண்டும். (லூக்கா 12:49-53)

39. காலத்தை அறிந்து கொள்ளுங்கள் லூக்கா 12:54-57

40. எல்லா ஜனங்களோடும் சமாதானமாக ஜீவனம் பண்ணுங்கள் லூக்கா 12:58-59

உவமை எண் - 19

"காகங்களைக் கவனித்துப்பாருங்கள் அவைகள் விதைக்கிறதுமில்லை அறுக்கிறதுமில்லை. அவைகளுக்குப் பண்டசாலையுமில்லை, களஞ்சியமுமில்லை இல்லாவிட்டாலும் அவைகளையும் தேவன் பிழைப்பூட்டுகிறார் பறவைகளைப்பார்க்கிலும் நீங்கள் எவ்வளவோ விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்" (லூக்கா 12:24). கவலைப்படக்கூடாது என்பதை இந்த உவமை விளக்குகிறது.

உவமை எண் - 20

"காட்டுபுஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள் அவைகள் உழைக்கிறதுமில்லை நூற்கிறதுமில்லை. என்றாலும் சாலொமோன் முதலாய் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை" லூக்கா 12:27) கவலைப்படக்கூடாது என்பதை இந்த உவமை விளக்குகிறது.

மனுஷர் கவனித்துப் பார்க்க வேண்டிய காரியங்கள்

1. தேவன் (உபா 4:39; உபா 8:5
2. தேவனுடைய நன்மை (சாமு 12:24)
3. தேவனுடைய கிரியைகள் (யோபு 37:14 சங் 8:3)
4. இயேசு கிறிஸ்து (எபி 3:1; எபி 12:3)
5. ஒருவரையொருவர் (எபி 10:24
6. கடந்த காலத்தையும், வருங்காலத்தையும் (உபா 32:7,29
7. தங்களுடைய வழிகள் (ஆகாய 1:5-7)
8. எறும்பையும் அதன் வழிகளையும் (நீதி 6:6)
9. காட்டுபுஷ்பங்கள் (மத் 6:28
10. காகங்கள் (லூக்கா 12:24

"என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று, நீங்கள் கேளாமலும் சந்தேகப்படாமலும் இருங்கள்" - தேவனையும் அவருடைய நீதியையும் நாம் ஆர்வத்தோடு தேட வேண்டும் இதுவே முக்கியத்துவம் தர வேண்டும் இதைத் தேடும்போது மற்றவைகளெல்லாம் நமக்குக் கூடக் கொடுக்கப்படும். (லூக்கா 12:31, மத் 6:33)

சந்தேகப்படு (doubtful) - μετεωρίζομαι meteoorizomai - 3349

வினைச்சொல் - சந்தேகப்படு (to raise in mid-air, suspend, fluctuate, be anxious, or be carried about as meteors moved about with the currents, tossed up and down between hope and fear) - சந்தேகப்படுவது புறஜாதியாருடைய பழக்கம். அவர்கள் மாயவித்தைகளையும், அருசனம் பார்க்குதலையும், குறி சொல்லுவதையும் சந்தேகத்தோடே செய்வார்கள் தாங்கள் கூறுவது நிறைவேறுமா நிறைவேறாதா என்னும் நிச்சயம் அவர்களிடத்தில் இராது. இவை பிசாசின் கிரியைகள் பிசாசு பொய் கூறும்.

12 அதிகாரம்

தடைபண்ணப்பட்டிருக்கிற பழக்க வழக்கங்கள்

1 மந்திரவித்தை **(Enchantments)** யாத் 7:11,22; யாத் 8:7,18 லேவி 19:26 உபா 18:10 2நாளா 33:6; 2இராஜா 17:17, 2இராஜா 21:6; ஏசா 47:9,12 எரே 27:9; தானி 1:20)

2 சூனியம் **(Witchcraft)** யாத் 22:18; உபா 18:10; 1சாமு 15:23; 2நாளா 33:6, 2இராஜா 9:22; மீகா 5:12 நாகூம் 3:4; கலா 5:19-21)

3 சூனியம் **(Sorcery)** (யாத் 7:11 ஏசா 47:9,12; ஏசா 57:3; எரே 27:9 தானி 2:2; மல 3:5; அப 8:9-11 அப 13:6-8; வெளி 9:21 வெளி 18:23; வெளி 21:8 வெளி 22:15

4 நாள்பார்த்தல் **(Soothsaying)** ஏசா 2:6; தானி 2:27; தானி 4:7 தானி 5:7,11; மீகா 5:12)

5 குறிசொல்லுதல் **(Divination)** (எசே 22:7 எசே 23:23 உபா 18:10-14; 2இராஜா 17:17, 1சாமு 6:2; எரே 14:14; எரே 27:9 எரே 29:8; எசே 12:24, எசே 13:6,7,23 எசே 21:22,29 எசே 22:28; மீகா 3:7; சக 10:2 அப் 16:16

6 சூனியம் **(Wizardry)** (யாத் 22:18; லேவி 19:31; லேவி 20:6,27; உபா 18:11, 1சாமு 28:3,9; 2இராஜா 21:6; 2இராஜா 23:24; 2நாளா 33:6, ஏசா 19:3)

7 செத்தவர்களிடத்தில் குறிகேட்டல் **(Necromancy)** (உபா 18:11, ஏசா 8:19, 1சாமு 28,1நாளா 10:13)

8 மந்திரவாதம் **(Magic)** (ஆதி 41:8,24, யாத் 7:11,22; யாத் 8:7, 18-19 யாத் 9:11; தானி 1:20; தானி 2:2,10,27; தானி 4:7,9; தானி 5:11 அப 19:19)

9 சன்னதம் கூறுதல் (ஏவல் செய்தல் **(Charm)** (உபா 18:11; ஏசா 19:3,

10 ஜோசியம் **(Prognostication)** (ஏசா 47:13)

11 ஜோசியம் **(Observing times)** (லேவி 19:26; லேவி 18:10 2இராஜா 21:6; 2நாளா 33:6

12 ஜாதகம் **(Astrology and star gazing)** (ஏசா 47:13; எரே 10:2 தானி 1:20; தானி 2:2,10; தானி 4:7 தானி 5:7-15)

கர்த்தரை நாம விசுவாசிக்க வேண்டும் பரிசுத்த ஆவியானவருடைய ஆலோசனையைக் கேட்க வேண்டும் இப்படிச் செய்வதற்குப் பதிலாகப் புறஜாதியார்கள் பிசாசுகளையும் அசுத்த ஆவிகளையும் நம்பி அவற்றின் ஆலோசனையைக் கேட்கிறார்கள் அவற்றின் முடிவு அழிவு (லேவி 19:31; லேவி 20:6, உபா 18:11; 1சாமு 28; 2இராஜா 21:6, 2இராஜா 23:24; 1நாளா 10:13, 2நாளா 33:6; ஏசா 8:19, ஏசா 19:3, ஏசா 29:4 1தீமோ 4:1-8, 2தெச 2:8-12, மத் 24:24; வெளி 13; வெளி 16:13-16 வெளி 19:20)

"சிறுமந்தை" - இரட்சிக்கப்பட்டிருக்கிற விசுவாசிகளின் கூட்டம். (மத் 7:14,21, 1பேதுரு 4:18)

88. ஐசுவரியவான்கள் மீது நம்பிக்கை வைப்பதற்கு எதிரான பிரமாணம் - (மத் 6:19)

லூக்கா 12:33 உங்களுக்கு உள்ளவைகளை விற்றுப் பிச்சை கொடுங்கள், பழமையாய்ப் போகாத பணப்பைகளையும் குறையாத பொக்கிஷத்தையும் பரலோகத்திலே உங்களுக்குச் சம்பாதித்துவையுங்கள், அங்கே திருடன் அணுகுகிறதுமில்லை, பூச்சி கெடுக்கிறதுமில்லை.

12 அதிகாரம்

லூக்கா 12:34 உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்

"உங்களுக்கு உள்ளவைகளை விற்றுப் பிச்சைகொடுங்கள்" - கர்த்தர் தடை பண்ணியிருக்கும் ஐசுவரியம் நம்மிடத்தில் இருக்குமென்றால் அதை விற்று பிச்சை கொடுத்து விடவேண்டும். (மத் 6:19 மத் 19:21; லூக்கா 12:21,33-34) நமக்குத் தேவைப்படும் வீடு, வாசலை விற்று பிச்சை கொடுக்க வேண்டுமென்று இந்த வசனம் கூறவில்லை (லூக்கா 12:34) தன்னுடைய குடும்பத்தைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பு மனுஷனுக்கு உண்டு (1தீமோ 5:8) நம்மிடத்தில் பேராசை இருக்கக்கூடாது என்பதே இங்கு வலியுறுத்திக் கூறப்படும் சத்தியமாகும் லூக்கா 12:13-21)

"பழமையாய்ப் போகாத பணப்பைகளையும் குறையாத பொக்கிஷத்தையும் பரலோகத்திலே உங்களுக்குச் சம்பாதித்துவையுங்கள் அங்கே திருடன் அணுகுகிறதுமில்லை. பூச்சி கெடுக்கிறதுமில்லை" ஆசாரியர்கள் கருவூலங்களில் பொக்கிஷங்களைப் பணப்பைகளில் சேர்த்து, மூட்டையாகக் கட்டியிருப்பார்கள் பணப்பைகளைப் பற்றிய குறிப்பு சில வேதவசனங்களில் காணப்படுகிறது 2இராஜா 5:23 2இராஜா 12:10 யோபு 14:17 யோவான் 12:6 யோவான் 13:29) நாம் இந்த உலகத்தில் ஐசுவரியங்களைச் சேர்ப்பதற்கு முக்கியத்துவம் தராமல் பரலோகத்தில் ஐசுவரியங்களைச் சேர்ப்பதற்கே முக்கியத்துவம் தரவேண்டும். ஏனெனில் நம்முடைய பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே நம்முடைய இருதயமும் இருக்கும்

87. விழித்திருக்கும் ஊழியக்காரரைப் பற்றிய உவமை - (மத் 25:14; மாற்கு 13:34

லூக்கா 12:35 உங்கள் அரைகள் கட்டப்பட்டதாகவும், உங்கள் விளக்குகள் எரிகிறதாகவும்.

லூக்கா 12:36 தங்கள் எஜமான் கலியாணத்திலிருந்து வந்து தட்டும்போது, உடனே அவருக்குத் திறக்கும்படி எப்பொழுது வருவார் என்று காத்திருக்கிற மனுஷருக்கு ஒப்பாகவும் இருங்கள்

லூக்கா 12:37 எஜமான் வரும் போது விழித்திருக்கிறவர்களாகக் காணப்படுகிற ஊழியக்காரரே பாக்கியவான்கள் அவர் அரை கட்டிக்கொண்டு, அவர்களைப் பந்தியிருக்கச்செய்து, சமீபமாய் வந்து அவர்களுக்கு ஊழியஞ்செய்வார் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்

லூக்கா 12:38 அவர் இரண்டாம் ஜாமத்திலாவது மூன்றாம் ஜாமத்திலாவது வந்து அவர்கள் அப்படியே இருக்கக் கண்டால் அவ்வூழியக்காரர் பாக்கியவான்கள்

தீர்க்கதரிசன எண் - 28

"உங்கள் அரைகள் கட்டப்பட்டதாகவும் உங்கள் விளக்குகள் எரிகிறதாகவும் ...." (லூக்கா 12:35-40) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை

"அரைகள் கட்டப்பட்டதாகவும்" - பிரயாணத்திற்கு எப்போதும் ஆயத்தமாக இருக்க வேண்டும். (யாத் 12:11)

"உங்கள் விளக்குகள் எரிகிறதாகவும்" - எப்போதும் விழித்திருக்க வேண்டும் எஜமானுடைய வரவை எதிர்பார்த்து அவரை வரவேற்பதற்காக ஆயத்தமாக இருக்க வேண்டும். (லூக்கா 12:37; மத் 25:1-13

உவமை எண் - 21

"தங்கள் எஜமான் கலியாணத்திலிருந்து வந்து தட்டும்போது, உடனே அவருக்குத் திறக்கும்படி எப்பொழுது வருவார் என்று காத்திருக்கிற மனுஷருக்கு ஒப்பாகவும் இருங்கள்" (லூக்கா 12:36-48 இயேசு கிறிஸ்து வரும்போது நாம் விழித்திருக்கிறவர்களாகவும், ஆயத்த முள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதை இந்த உவமை விளக்குகிறது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை இந்த வசனம் குறிக்கும் என்றும், சபை எடுத்துக் கொள்ளப்படுவதை இந்த வசனம் குறிக்காது என்றும் சிலர் இந்த வசனத்திற்கு வியாக்கியானம் கூறுகிறார்கள்

12 அதிகாரம்

"எஜமான் கலியாணத்திலிருந்து வந்து தட்டும்போது" - வெளி 19:1-10 ஆவது வசனங்களில் மணவாட்டியின் கலியாண விருந்து கூறப்பட்டிருக்கிறது. இந்தத் திருமண விருந்திற்குப் பின்பு இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை இருக்கும். (வெளி 19:11-21)

"அவர் அரை கட்டிக்கொண்டு, அவர்களைப் பந்தியிருக்கச்செய்து, சமீபமாய் வந்து, அவர்களுக்கு ஊழியஞ்செய்வார்" - இயேசு கிறிஸ்து தாமே தமது அரையைக் கட்டிக்கொண்டு, தமது ஊழியக்காரருக்கு வெகுமதி அளிப்பார்.

"இரண்டாம் ஜாமம்" - இரவு 9 மணி முதல் நடுஇரவு 12 மணி வரையிலும்.

"மூன்றாம் ஜாமம்" - நடுஇரவு 12 மணி முதல் அதிகாலை 3 மணி வரையிலும்.

88. வீட்டெஜமானைப் பற்றிய உவமை - (மத் 24:43)

லூக்கா 12:39 திருடன் இன்னநேரத்தில் வருவான் என்று வீட்டெஜமானுக்குத் தெரிந்திருந்தால், அவன் விழித்திருந்து, தன் வீட்டைக் கன்னமிடவொட்டான் என்று அறிந்திருக்கிறீர்கள்.

லூக்கா 12:40 அதுபோலவே நீங்கள் நினையாத நேரத்தில் மனுஷகுமாரன் வருவார், ஆகையால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள் என்றார்.

உவமை எண் - 22

"திருடன் இன்னநேரத்தில் வருவான் என்று வீட்டெஜமானுக்குத் தெரிந்திருந்தால், அவன் விழித்திருந்து, தன் வீட்டைக் கன்னமிடவொட்டான்." (லூக்கா 12:39-40). இயேசு கிறிஸ்துவின் வருகையின்போது தேவனுடைய பிள்ளைகள் ஆயத்தமாக இருக்க வேண்டும். (மத் 24:43)

வீட்டெஜமான் (goodman)
οἰκοδεσπότης
oikodespotees - 3617

ஆண்பால் பெயர்ச்சொல் - வீட்டெஜமான் (லூக்கா 9:38)

89. உண்மையில்லாத வேலைக்காரனைப் பற்றிய உவமை - (மத் 24:45)

லூக்கா 12:41 அப்பொழுது பேதுரு அவரை நோக்கி: ஆண்டவரே, இந்த உவமையை எங்களுக்குமாத்திரம் சொல்லுகிறீரோ எல்லாருக்கும் சொல்லுகிறீரோ என்று கேட்டான்.

லூக்கா 12:42 அதற்குக் கர்த்தர்: பணிவிடைக்காரருக்குத் தகுதியான காலத்திலே படிகொடுக்கும்படி எஜமான் அவர்கள்மேல் அதிகாரியாக வைக்கத்தக்க உண்மையும் விவேகமுமுள்ள விசாரணைக்காரன் யாவன்?

லூக்கா 12:43 எஜமான் வரும்போது அப்படியே செய்கிறவனாய்க் காணப்படுகிற ஊழியக்காரன் பாக்கியவான்.

லூக்கா 12:44 தனக்குள்ளதெல்லாவற்றின் மேலும் அவனை விசாரணைக்காரனாக வைப்பான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

லூக்கா 12:45 அந்த ஊழியக்காரனோ, என் எஜமான் வர நாள் செல்லும் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு, வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் அடிக்கவும், புசித்துக் குடித்து வெறிக்கவும் தலைப்பட்டால்,

லூக்கா 12:46 அவன் நினையாத நாளிலும், அறியாத நேரத்திலும், அந்த ஊழியக்காரனுடைய எஜமான் வந்து, அவனைக் கடினமாய்த் தண்டித்து, உண்மையில்லாதவர்களோடே அவனுக்குப் பங்கை நியமிப்பான்.

12 அதிகாரம்

லூக்கா 12:47 தன் எஜமானுடைய சித்தத்தை அறிந்தும் ஆயத்தமாயிராமலும் அவனுடைய சித்தத்தின்படி செய்யாமலும் இருந்த ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான்

லூக்கா 12:48 அறியாதவனாயிருந்து அடிகளுக்கு ஏதுவானவைகளைச் செய்தவனோ சில அடிகள் அடிக்கப்படுவான் எவனிடத்தில அதிகம் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில அதிகங்கேட்கப்படும். மனுஷர் எவனிடத்தில அதிகமாய ஒப்புவிக்கிறார்களோ அவனிடத்தில அதிகமாயக் கேட்பார்கள

தீர்க்கதரிசன எண் - 29

"பணிவிடைக்காரருக்குத் தகுதியான காலத்திலே படிகொடுக்கும்படி எஜமான அவர்களமேல அதிகாரியாக வைக்கத்தக்க உண்மையும் விவேகமுமுள்ள விசாரணைக காரன யாவன '........." (லூக்கா 12:42 53) இந்தத் தீர்க்கதரிசனத்தில லூக்கா 12:42 46 ஆகிய வசனங்கள இன்னும் நிறைவேறவில்லை லூக்கா 12:49-53 ஆகிய வசனங்கள நிறைவேறியுள்ளன

உவமை எண் - 23

"பணிவிடைக்காரருக்குத் தகுதியான காலத்திலே படிகொடுக்கும்படி எஜமான் அவர்களமேல் அதிகாரியாக வைக்கத்தக்க உண்மையும் விவேகமுமுள்ள விசாரணைக காரன யாவன ' " லூக்கா 12:42 48) இயேசு கிறிஸ்து வரும்போது உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதை இந்த உவமை விளக்குகிறது. (மத் 24:45-51)

"பாக்கியவான்" - இவன் தன்னுடைய சொந்த நன்மையைக் கவனிப்பதற்குப் பதிலாக எஜமானுடைய நன்மையையே அதிகமாக கவனித்தான் உண்மையுள்ளவனாக இருந்தான் ஆகையினால எஜமான் இவனைக் களிப்படுத்துவான் (லூக்கா 12:45-46)

"தனக்குள்ளே சொல்லிக் கொண்டு" - இயேசு கிறிஸ்துவின் வருகையைப் பற்றிய சத்தியம நமது இருதயத்திற்குள் எப்போதும் ஒலித்துக் கொண்டே இருக்க வேண்டும் சபை எடுத்துக் கொள்ளப்படுவதாக இருந்தாலும இயேசு கிறிஸ்துவின் இரண்டாம வருகையாக இருந்தாலும் இந்தச் செய்தி நமது இருதயத்திற்குள் எப்போதும் தொனித்துக் கொண்டே இருக்க வேண்டும் (தீத்து 2:13; 1யோவான் 3:1-3)

வேலைக்காரன் (menservants) - παῖς - pais - 3816

ஆண்பால பெயர்ச்சொல - வேலைக்காரர் வேலைக்காரன் தாசன ஊழியக்காரர் - உண்மையிலலாதவேலைக்காரர்களைக் குறிக்கும் சொல்

உண்மையில்லாத ஊழியக்காரன் செய்யும் [illegible]

1 அவனுடைய இருதயத்தில அவனுடைய எஜமானனைப் பற்றிய எண்ணம் இல்லை

2 தன் வேலைக்காரனை அடிக்கிறான்

3. பெருந்தீனி தினகிறான

4 புசித்துக் குடிக்கிறான (கலா 5:19-20 1கொரி 6:9-11)

"அவன நினையாத நாளிலும், அறியாத நேரத்திலும் அந்த ஊழியக்காரனுடைய எஜமான வந்து அவனைக் கடினமாயத் தண்டித்து உண்மையிலலாதவர்களோடே அவனுக்குப பங்கை நியமிப்பான" இந்த எஜமான யாரென்று நமக்கு அறிவிக்கப்படவில்லை நமக்கு எஜமான் இயேசு கிறிஸ்து. அவர் வரும்போது அவர் நம்மை விசாரிப்பார் அவருடைய நனமைக்குப பாத்திரவான்களாக நாம் நடந்து கொள்ள வேண்டும். (மத் 24:45-51)

12 அதிகாரம்

"அவனைக் கடினமாய்த் தண்டிப்பார்" - அழுகையும் பற்கடிப்பும் உள்ள நரகத்திற்குத் தள்ளிவிடுவார் (மத் 24:51; மத் 25: 30, 41 46)

"உண்மையில்லாதவர்களோடே அவனுக்குப் பங்கை நியமிப்பார்" - அவிசுவாசிகளுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற இடம் நரகம் (வெளி 21:8)

"தன் எஜமானுடைய சித்தத்தை அறிந்தும் ஆயத்தமாயிராமலும், அவனுடைய சித்தத்தின்படி செய்யாமலும் இருந்த ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான்" - நாம் ஏற்றுக் கொண்ட சத்தியத்தின் பிரகாரம் நமக்கு நியாயத்தீர்ப்பு உண்டு. (லூக்கா 12:47-48, ரோமர் 2:12-16) இந்த ஊழியக்காரனுக்கு எஜமானுடைய சித்தம் தெரியும். இருந்தாலும் அவன் ஆயத்தமாக இல்லை. ஆகையினால் அவனுக்கு அநேக அடிகள் கிடைக்கிறது. யூதருடைய பிரமாணத்தின் பிரகாரமாக அவர்கள் 40 அடிகளை அடித்தார்கள் (உபா 25:3) இதன்படி, ஒவ்வொரு குற்றத்திற்கும் இதைப் போன்று யூதர்கள் அடிக்க ஆரம்பித்து விட்டார்கள்

"அறியாதவனாயிருந்து, அடிகளுக்கு ஏதுவானவைகளைச் செய்தவனோ, சில அடிகள் அடிக்கப்படுவான்" யூதமார்க்கத்து பிரமாணத்தின் பிரகாரம் சிறிய தவறு செய்தவனுக்கு ஒருசில அடிகள் மட்டுமே கிடைக்கும். அதுபோலவே இந்த வசனத்தில் அறியாமல் தவறு செய்கிறவனுக்குச் சில அடிகள் மட்டுமே கிடைக்கிறது. எஜமானுடைய சித்தத்தைத் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பு வரும்போது அதைத் தெரிந்து கொள்ளாமல் இருப்பது தவறு. ஆவிக்குரிய ஜீவியத்தில் நமக்கு சத்தியம் அறிவிக்கப்படுகிறது. சத்தியத்தை ஏற்றுக் கொள்ளாமல் போவது நியாயத்தீர்ப்பு ஏதுவான குற்றமாகக் கருதப்படும். (யோவான் 3:19; 1கொரி 14:38)

"எவனிடத்தில் அதிகங் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங் கேட்கப்படும்; மனுஷர் எவனிடத்தில் அதிகமாய் ஒப்புவிக்கிறார்களோ அவனிடத்தில் அதிகமாய்க் கேட்பார்கள்" - லூக்கா 12:47-48 ஆகிய வசனங்களில் விளக்கப்பட்டிருக்கும் மையக்கருத்து இதுதான்

90. சுவிசேஷத்திற்கு வரும் எதிர்ப்பை இயேசு மறுபடியும் முன்குறித்துக் கூறுகிறார் - (வசனம் 1)

லூக்கா 12:49 பூமியின்மேல் அக்கினியைப் போடவந்தேன், அது இப்பொழுதே பற்றி எரிய வேண்டுமென்று விரும்புகிறேன்

லூக்கா 12:50 ஆகிலும் நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்

லூக்கா 12:51 நான் பூமியிலே சமாதானத்தை உண்டாக்கவந்தேன் என்று நினைக்கிறீர்களோ? சமாதானத்தையல்ல, பிரிவினையையே உண்டாக்கவந்தேன் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்

லூக்கா 12:52 எப்படியெனில் இதுமுதல் ஒரே வீட்டிலே ஐந்துபேர் பிரிந்திருப்பார்கள், இரண்டுபேருக்கு விரோதமாய் மூன்றுபேரும் மூன்றுபேருக்கு விரோதமாய் இரண்டுபேரும் பிரிந்திருப்பார்கள்

லூக்கா 12:53 தகப்பன் மகனுக்கும் மகன் தகப்பனுக்கும், தாய் மகளுக்கும் மகள் தாய்க்கும், மாமி மருமகளுக்கும் மருமகள் மாமிக்கும் விரோதமாய்ப் பிரிந்திருந்திருப்பார்கள் என்றார்

"பூமியின்மேல் அக்கினியைப் போடவந்தேன்" - (லூக்கா 5:32

12 அதிகாரம்

அக்கினி உருவகமாகப் பயன்படுத்தப் பட்டிருக்கும் விதம்

1 எரிச்சல் (உபா 4:24; எசே 36:5)

2 மனுஷனுடைய கோபம் (நீதி 16:27 சங் 39:3

3 தேவனுடைய வார்த்தை (எரே 5:14 எரே 23:29

4 பாவம் (நீதி 6:27; ஏசா 9:18)

5 நாவு (யாக் 3:5-6

6 ஊழியக்காரர்கள் (சங் 104:4; எபி 1:7)

7 கிறிஸ்து (மல 3:2)

8 பரிசுத்த ஆவியானவர் (மத் 3:11 வெளி 4:5

9 உபத்திரவம் (சங் 66:12, 1பேதுரு 1:7)

10 தேவனுடைய கோபம் (ஏசா 31:9 எரே 4:4, எரே 21:12; எசே 36:5)

11 நியாயத்தீர்ப்பு (சக 13:9 ஏசா 10:16 17;எரே 17:27, எரே 50:32

12 சுவிசேஷத்தின் நிமித்தமாக உபத்திரவமும் பிரிவினையும் லூக்கா 12:49)

"அது இப்பொழுதே பற்றி எரியவேண்டு மென்றுவிரும்புகிறேன்" சுவிசேஷத்தின் நிமித்தமாகப் பிரிவினைகளும் உபத்திரவங்களும், கலகங்களும் ஏற்கெனவே துவங்கி விட்டன

"நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு" - பாடுகளின் ஞானஸ்நானம் (லூக்கா 24:26. அப் 3:18, 1பேதுரு 3:18, மத் 3:6)

நெருக்கப்படு συνέχω synechoo - 4912

வினைச்சொல் - கூட்டக்கிடு, அடைத்துக்கொள், வருத்தப்பட்டுக்கிடு (pressed) (அப் 18:5; பிலி 1:23, லூக்கா 22:41-42)

"பிரிவினை" - பிரிவினைக்கு இயேசு கிறிஸ்து காரணமல்ல. சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளாமல் ஜனங்கள் கலகம் பண்ணுவதே பிரிவினைக்குக் காரணம். (2கொரி 2:14-17

"தகப்பன் மகனுக்கும் மகன் தகப்பனுக்கும் தாய் மகளுக்கும் மகள் தாய்க்கும் மாமி மருமகளுக்கும் மருமகள் மாமிக்கும் விரோத மாய்ப் பிரிந்திருந்திருப்பார்கள்" - சாத்தான் மூலமாக சுவிசேஷத்திற்கு வரும் எதிர்ப்பை இந்த வாக்கியம் கூறுகிறது

91. இயேசு பரிசேயரை மறுபடியும் கடிந்து கொள்கிறார் - (மத் 16:1 மாற்கு 8:10)

லூக்கா 12:54 பின்பு அவர் ஜனங்களை நோக்கி: மேற்கே மேகம் எழும்புகிறதை நீங்கள் காணும்போது மழை வருமென்று சொல்லுகிறீர்கள் அந்தப்படியுமாகும்.

லூக்கா 12:55 தென்றல் அடிக்கிறதை நீங்கள் காணும்போது உஷ்ணம் உண்டாகுமென்று சொல்லுகிறீர்கள், அந்தப்படியுமாகும்.

லூக்கா 12:56 மாயக்காரரே, பூமியின் தோற்றத்தையும் வானத்தின் தோற்றத்தையும் நிதானிக்க உங்களுக்குத் தெரியுமே, இந்தக் காலத்தையோ நிதானியாமற் போகிறதென்ன?

லூக்கா 12:57 நியாயம் இன்னதென்று நீங்களே தீர்மானியாமலிருக்கிறதென்ன?

"பின்பு அவர் ஜனங்களை நோக்கி" - லூக்கா 12:22 53 ஆகிய வசனங்களை இயேசு கிறிஸ்து சீஷர்களுக்கு உபதேசம் பண்ணினார் இப்போது லூக்கா 12:54-59 ஆகிய வசனங்களை ஜனங்களுக்கு உபதேசம் பண்ணுகிறார்

13 அதிகாரம்

"மேற்கே" - மத்தியதரைக்கடலுக்கு மேற்குப் பகுதி. அந்தப் பகுதியில் மேகம் எழுந்தால் மழை நிச்சயமாக வரும் என்பதற்கு அடையாளம் (1இராஜா 18:43-45)

"தென்றல் அடிக்கிறதை நீங்கள் காணும்போது உஷ்ணம் உண்டாகுமென்று சொல்லுகிறீர்கள்" - தென்றல் என்பது தென்பகுதிக் காற்றைக் குறிக்கும். பாலஸ்தீன தேசத்தின் தென்பகுதியில் பாலைவனம் இருக்கிறது. பாலைவனத்திலிருந்து வரும் காற்று உஷ்ணமாக இருக்கும்.

"மாயக்காரரே, பூமியின் தோற்றத்தையும் வானத்தின் தோற்றத்தையும் நிதானிக்க உங்களுக்குத் தெரியுமே. இந்தக் காலத்தையோ நிதானியாமற்போகிறதென்ன?" ஜனங்களால் நிதானிக்க முடிந்த இரண்டு பொதுவான காரியங்களை இயேசு கிறிஸ்து கூறுகிறார் (லூக்கா 12:54-55). அதன்பின்பு, இயேசு கிறிஸ்துவைப் பற்றிய காலத்தை அவர்கள் நிதானிக்க மனதில்லாமல் இருக்கிறதைக் கண்டு, அவர் அவர்களைக் கடிந்து கொள்கிறார் (லூக்கா 12:56-57; மத் 16:1-4)

92. ஒப்புரவாகுதலைக் குறித்து உபதேசம் - (மத் 5:23-26

லூக்கா 12:58 உனக்கு எதிராளியானவன் உன்னை அதிகாரியினிடத்திற்குக் கொண்டு போகிறபோது, வழியிலேதானே அவனிடத்திலிருந்து விடுதலையாகும்படி பிரயாசப்படு, இல்லாவிட்டால் அவன் உன்னை நியாயாதிபதிக்கு முன்பாகக் கொண்டுபோவான்; நியாயாதிபதி உன்னைச் சேவகனிடத்தில் ஒப்புக் கொடுப்பான்; சேவகன் உன்னைச் சிறைச்சாலையில் போடுவான்.

லூக்கா 12:59 நீ கடைசிக்காசைக் கொடுத்துத் தீர்க்குமட்டும் அவ்விடத்திலிருந்து புறப்படமாட்டாய் என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

"அதிகாரி" (magistrate, a civil officer) (லூக்கா 12:11)

"உனக்கு எதிராளியானவன் உன்னை அதிகாரியினிடத்திற்குக் கொண்டு போகிறபோது வழியிலேதானே அவனிடத்திலிருந்து விடுதலையாகும்படி பிரயாசப்படு" லூக்கா 12 ஆவது அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து 20 கட்டளைகளைக் கொடுத்திருக்கிறார். அவையாவன லூக்கா (2,3,4,5,7, 15,22,24,27,29,31, 32,33,35,36,40,58)

காசு (mite) - λεπτός leptos - 3016

பொருள் - காசு - குறைந்த மதிப்புள்ள தாமிரக்காசு (the smallest copper coin)

13 அதிகாரம்

93. நியாயம் தீர்க்காமல் மனந்திரும்ப வேண்டும் -

லூக்கா 13:1 பிலாத்து சில கலிலேயருடைய இரத்தத்தை அவர்களுடைய பலிகளோடே கலந்திருந்தான். அந்த வேளையிலே அங்கே இருந்தவர்களில் சிலர் அந்தச் செய்தியை அவருக்கு அறிவித்தார்கள்.

லூக்கா 13:2 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: அந்தக் கலிலேயருக்கு அப்படிப்பட்டவைகள் சம்பவித்ததினாலே, மற்ற எல்லாக் கலிலேயரைப் பார்க்கிலும் அவர்கள் பாவிகளாயிருந்தார்கள் என்று நினைக்கிறீர்களோ?

லூக்கா 13:3 அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்.

லூக்கா 13:4 சீலோவாமிலே கோபுரம் விழுந்து பதினெட்டுப்பேரைக் கொன்றதே; எருசலேமில் குடியிருக்கிற மனுஷரெல்லாரிலும் அவர்கள் குற்றவாளிகளாயிருந்தார்கள் என்று நினைக்கிறீர்களோ?

லூக்கா 13:5 அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள் என்றார்.

"பிலாத்து சில கலிலேயருடைய இரத்தத்தை அவர்களுடைய பலிகளோடே கலந்திருந்தான்" யோசபஸ் (ஓள்ஸ்வட்டனர்) என்னும் திருச்சபை வரலாற்று ஆசிரியர் இதைப் பற்றி எழுதும்போது பிலாத்து கலிலேயரைக் கொலைசெய்ததாக எழுதுகிறார்.

"அந்தக் கலிலேயருக்கு அப்படிப்பட்டவைகள் சம்பவித்ததினாலே, மற்ற எல்லாக் கலிலேயரைப் பார்க்கிலும் அவர்கள் பாவிகளாயிருந்தார்களென்று நினைக்கிறீர்களோ?" - கலிலேயர் அதிக உபத்திரவங்களை அனுபவித்தார்கள். இதனால் அவர்கள் மிகப்பெரிய பாவிகளென்று ஜனங்கள் நினைத்தார்கள். இதற்கு இயேசு இவ்வாறு பதில் கூறுகிறார். ஒருவருடைய வாழ்வில் அதிக உபத்திரவங்கள் வருவதினால் அவர்கள் பெரிய பாவிகள் ஆவதில்லை. எல்லோருமே பாவிகள் தான். தேவனுக்கு முன்பாக எல்லோருமே ஆக்கினைத்தீர்ப்பு அடையவேண்டியவர்களே. (லூக்கா 13:3,5; ரோமர் 3:23)

மனந்திரும்பு (Repent) - μετανοέω - metanoeoo - 3340

வினைச்சொல் - மனந்திரும்பு. மனஸ்தாபப்படு - தேவனுடைய கிருபையையும் மன்னிப்பையும் பெற்றுக் கொள்வதற்கு மனந்திரும்புதல் அவசியமாயிருக்கிறது. (லூக்கா 13:3,5; லூக்கா 15:7; லூக்கா 24:47; அப் 2:38; அப் 3:19; அப் 17:30; மத் 4:17)

மனந்திரும்பியவர்களுக்கு எடுத்துக்காட்டுக்கள்

1. யோசேப்பின் சகோதரர் (ஆதி 50:17)
2. இஸ்ரவேல் (எண் 21:7-9; நியா 2:4; எஸ்றா 9:4-14; நெகே 1:6-7)
3. தாவீது (2சாமு 24:10-17; சங் 51)
4. ஆகாப் (1இராஜா 21:25-29)
5. யோசியா (2இராஜா 22:11-20)
6. மனாசே (2நாளா 33:1-13)
7. நினிவே ஊரார் (யோனா 3; லூக்கா 11:32)
8. யூதர் (மத் 3:6; லூக்கா 3:7-15)
9. கெட்ட குமாரன் (லூக்கா 15:17-21)
10. ஆயக்காரர் (லூக்கா 18:9-14)

லூக்கா – தொகுப்புரை

13 அதிகாரம்

11 பேதுரு (மத் 26:75; லூக்கா 22:62)

12 கொரிந்தியர் (2கொரி 7:9-11)

தீர்க்கதரிசன எண் - 30

"எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்" - லூக்கா 13:3) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இயேசு கிறிஸ்து இவ்வாறு கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்த ஜனங்களில் சிலர் பிலாத்துவின் கரங்களினால் கலிலேயர் எவ்வாறு மடிந்து போனார்களோ அதுபோலவே மடிந்து போனார்கள் கிபி 70 ஆம் ஆண்டில் இந்தத் தீர்க்கதரிசனம் ரோமர்கள் மூலமாக யூதருக்கு நிறைவேறிற்று. யூதர்கள் பலிகளைச் செலுத்தியபோது அவர்களில் ஏராளமான பேரை ரோமர்கள் கொலைசெய்தார்கள்

"சீலோவாமிலே கோபுரம் விழுந்து பதினெட்டுபேரைக் கொன்றதே" - இந்த நிகழ்ச்சியைப் பற்றி எதுவும் தெளிவாகத் தெரியவில்லை அக்காலத்தில் நடைபெற்ற ஒரு முக்கியமான நிகழ்ச்சியான இருக்கலாம்

தீர்க்கதரிசன எண் - 31

"எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்" - (லூக்கா 13:5) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. சீலோவாம் கோபுரம் விழுந்து, ஜனங்கள் எப்படி செத்துப்போனார்களோ அதுபோலவே இயேசு கிறிஸ்துவின் வார்த்தையைக் கேட்டுக் கொண்டிருந்த ஜனங்களில் சிலரும் செத்துப் போனார்கள் கிபி 70 ஆம் ஆண்டில் எருசலேமின் கட்டடங்களும் அலங்கங்களும் இடிக்கப்பட்டு விழுந்தபோது ஏராளமான யூதர்கள் செத்துப் போனார்கள்

94. கனிகொடாத அத்திமரத்தைப் பற்றிய உவமை

லூக்கா 13:6 அப்பொழுது அவர் ஒரு உவமையையும் சொன்னார்; ஒருவன் தன் திராட்சத்தோட்டத்தில் ஒரு அத்திமரத்தை நட்டிருந்தான்; அவன் வந்து அதிலே கனியைத் தேடினபோது ஒன்றுங் காணவில்லை.

லூக்கா 13:7 அப்பொழுது அவன் தோட்டக்காரனை நோக்கி: இதோ, மூன்று வருஷமாய் இந்த அத்திமரத்திலே கனியைத் தேடி வருகிறேன் ஒன்றையுங் காணவில்லை, இதை வெட்டிப்போடு. இது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது என்றான்

லூக்கா 13:8 அதற்கு அவன்: ஐயா இது இந்த வருஷமும் இருக்கட்டும் நான் இதைச் சுற்றிலுங் கொத்தி, எருப்போடுவேன்

லூக்கா 13:9 கனிகொடுத்தால் சரி, கொடாவிட்டால், இனிமேல் இதை வெட்டிப்போடலாம் என்று சொன்னான் என்றார்

உவமை எண் - 24

"ஒருவன் தன் திராட்சத் தோட்டத்தில் ஒரு அத்திமரத்தை நட்டிருந்தான் அவன் வந்து அதிலே கனியைத் தேடினபோது ஒன்றுங் காணவில்லை ...." (லூக்கா 13:6-9) இஸ்ரவேலரின் கனிகொடாத தன்மையையும் அவர்கள் கனிகொடாவிட்டால் அழிந்து போவார்கள் என்னும் உண்மையையும் இந்த உவமை விளக்குகிறது (லூக்கா 13:8-10,25-35, மத் 21:33-46; ஏசா 5:1-7)

"திராட்சத்தோட்டம்" - பாலஸ்தீன தேசத்திலும் எகிப்து தேசத்திலும் திராட்சத் தோட்டங்கள் ஏராளமாக இருந்தன

"இதோ மூன்று வருஷமாய் இந்த அத்திமரத்திலே கனியைத் தேடி வருகிறேன், ஒன்றையுங் காணவில்லை, இதை வெட்டிப்போடு" இயேசு கிறிஸ்து மூன்று வருஷங்கள் ஜனங்கள் மத்தியிலே ஊழியம் செய்தார் "இந்த வருஷம்" என்பது நான்காம் வருஷத்தைக் குறிக்கும்.

13 அதிகாரம்

"இது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது" - 2,000 வருஷங்களாக இஸ்ரவேல ஜனங்கள் தேவனுக்குச் செவிகொடுக்கவில்லை அவர்களோடு ஏன் போராடவேண்டும். இதுவரையிலும் இல்லாத அளவிற்கு இப்போது அதிகமாகக் கலகம் பண்ணுகிறார்கள் லூக்கா 11:47-50 அப 7:51

"இனிமேல் இதை வெட்டிப்போடலாம்" - இஸ்ரவேல் ஜனங்களுடைய நியாயத்தீர்ப்பிற்கு முன்பாக அவர்களுக்கு 40 வருஷங்கள் கூட்டிக் கொடுக்கப்பட்டிருந்தது. லூக்கா 21:12-24

95. இயேசு நிமிரக்கூடாத கூனியை சொஸ்தமாக்குகிறார்

லூக்கா 13:10 ஒரு ஓய்வுநாளில் அவர் ஜெபஆலயத்திலே போதகம்பண்ணிக் கொண்டிருந்தார்

லூக்கா 13:11 அப்பொழுது பதினெட்டு வருஷமாய்ப் பலவீனப்படுத்தும் ஆவியைக் கொண்ட ஒரு ஸ்திரீ அங்கேயிருந்தாள் அவள் எவ்வளவும் நிமிரக்கூடாத கூனியாயிருந்தாள்

லூக்கா 13:12 இயேசு அவளைக் கண்டு, தம்மிடத்தில் அழைத்து, ஸ்திரீயே, உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய் என்று சொல்லி,

லூக்கா 13:13 அவள்மேல் தமது கைகளை வைத்தார் உடனே அவள் நிமிர்ந்து, தேவனை மகிமைப்படுத்தினாள்

லூக்கா 13:14 இயேசு ஓய்வுநாளிலே சொஸ்தமாக்கினபடியால் ஜெப ஆலயத்தலைவன் கோபமடைந்து ஜனங்களை நோக்கி வேலை செய்கிறதற்கு ஆறுநாள் உண்டே அந்த நாட்களிலே நீங்கள் வந்து சொஸ்தமாக்கிக் கொள்ளுங்கள் ஓய்வுநாளிலே அப்படிச் செய்யலாகாது என்றான்

லூக்கா 13:15 கர்த்தர் அவனுக்குப் பிரதியுத்தரமாக: மாயக்காரனே, உங்களில் எவனும் ஓய்வுநாளில் தன் எருதையாவது தன் கழுதையையாவது தொழுவத்திலிருந்து அவிழ்த்துக் கொண்டுபோய், அதற்குத் தண்ணீர் காட்டுகிறதில்லையா?

லூக்கா 13:16 இதோ, சாத்தான் பதினெட்டு வருஷமாய்க் கட்டியிருந்த ஆபிரகாமின் குமாரத்தியாகிய இவளை ஓய்வுநாளில் இந்தக் கட்டிலிருந்து அவிழ்த்து விடவேண்டியதில்லையா என்றார்

லூக்கா 13:17 அவர் அப்படிச் சொன்னபோது அவரை விரோதித்திருந்த அனைவரும் வெட்கப்பட்டார்கள் ஜனங்களெல்லாரும் அவரால் செய்யப்பட்ட சகல மகிமையான செயல்களைக் குறித்தும் சந்தோஷப்பட்டார்கள்

"பலவீனப்படுத்தும் ஆவி" - ஒரு அசுத்த ஆவி அந்த ஸ்திரீயைப் பதினெட்டு வருஷமாகப் பிடித்திருந்தது. சாத்தான் பதினெட்டு வருஷமாக அவளைக் கட்டியிருந்தான் (லூக்கா 13:16) பிசாசே மனுஷருடைய நோய்களுக்கும் பலவீனங்களுக்கும் காரணமானவன் நோய்கள் தேவனிடமிருந்து வரவில்லை பிசாசுகளிடமிருந்தே வருகின்றன (மத் 4:23-24 யோவான் 10:10 அப 10:38) எல்லா வியாதிகளையும் பலவீனங்களையும் ஏற்றுக் கொண்டு எல்லா மனுஷரையும் குணமாக்குவதற்காகவே இயேசு கிறிஸ்து வந்திருக்கிறார் (மத் 8:16-17 யோவான் 10:10 1பேதுரு 2:24 ஏசா 53) மனுஷரை வியாதியிலிருந்து விடுவிப்பது தேவனுடைய கிரியை

"பலவீனம்" (மத் 8:17

"ஜெப ஆலயத் தலைவன் கோபமடைந்தான்" மார்க்கத்தலைவர்கள் கோபப்படக்கூடாது. நீடிய பொறுமையுடன் இருக்க வேண்டும். தேவனுடைய அன்பை வெளிப்படுத்த வேண்டும். ஜெபஆலயத் தலைவனுக்கு மனுஷருடைய தேவையை விட சட்டதிட்டங்களே முக்கியமானவையாகத் தோன்றிற்று.

லூக்கா – தொகுப்புரை

13 அதிகாரம்

"இயேசு ஓய்வு நாளிலே சொஸ்தமாக்கினார்" – யூதமார்க்கத் தலைவர்களுக்கு இயேசு கிறிஸ்து செய்த காரியம் மிகப்பெரிய குற்றமாகத் தெரிகிறது. (மத் 12:1-12; மாற்கு 1:21-27; மாற்கு 2:23-28; மாற்கு 3:1-7; லூக்கா 6:1-9; லூக்கா 13:10-16; லூக்கா 14:1-6; யோவான் 5:1-18; யோவான் 7:22-23; யோவான் 9:1-16)

"வெட்கப்பட்டார்கள்" - மாயமாலமும் [redacted]மும் மனுஷருக்கு வெட்கத்தைக் கொடுக்கும். (எஸ்றா 9:6)

மனுஷரை வெட்கப்படுத்தும் காரியங்கள்

1. பின்மாற்றம் (எரே 17:13)
2. மனுஷ பயம் (நீதி 29:25; மாற்கு 8:38)
3. சுயம் (லூக்கா 14:9)
4. தவறான செய்கை (ரோமர் 6:21)

மனுஷரை வெட்கப்படுத்தாத காரியங்கள்

1. பாவமறியாத சுபாவம் (சங் 2:25)
2. தேவனைச் சார்ந்திருப்பது (சங் 25:2)
3. நம்பிக்கை (ரோமர் 5:5)
4. சுவிசேஷம் (ரோமர் 1:16)
5. விசுவாசம் (ரோமர் 9:33; ரோமர் 10:11)
6. வளர்ச்சி (2தீமோ 2:15)
7. நீதி (சங் 119:6)

இயேசு கிறிஸ்துவிடத்தில் விசுவாசமாக இருக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை (ரோமர் 9:33). வெட்கத்திலிருந்தும் மாயமாலத்திலிருந்தும் விடுதலை பெறவேண்டுமென்றால் நாம் சத்தியத்தை அறிய வேண்டும். சத்தியம் நம்மை விடுதலையாக்கும். (யோவான் 8:32-36; ரோமர் 1:16)

96. கடுகு விதையின் ஒப்புமை - (மத் 13:31; மாற்கு 4:30)

லூக்கா 13:18 அவர் அவர்களை நோக்கி: தேவனுடைய ராஜ்யம் எதற்கொப்பாயிருக்கிறது, அதை எதற்கு ஒப்பிடுவேன்?

லூக்கா 13:19 அது ஒரு கடுகுவிதைக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் தோட்டத்திலே போட்டான்; அது வளர்ந்து, பெரிய மரமாயிற்று; ஆகாயத்துப் பறவைகள் வந்து, அதின் கிளைகளில் அடைந்தது என்றார்.

"தேவனுடைய ராஜ்யம் எதற்கொப்பாயிருக்கிறது; அதை எதற்கு ஒப்பிடுவேன்?" - (மத் 4:17; மத் 19:24)

உவமை எண் - 25

"அது ஒரு கடுகுவிதைக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் தோட்டத்திலே போட்டான்; அது வளர்ந்து, பெரிய மரமாயிற்று; ஆகாயத்துப் பறவைகள் வந்து, அதின் கிளைகளில் அடைந்தது" (லூக்கா 13:19) பரலோக ராஜ்யத்தின் அளவிட முடியாத வளர்ச்சியை இந்த உவமை விளக்குகிறது (மத் 13:31)

97. புளித்தமாவைப் பற்றிய ஒப்புமை – (மத் 13:33; 16:6; மாற்கு 8:15; லூக் 12:1)

லூக்கா 13:20 மேலும் அவர்: தேவனுடைய ராஜ்யத்தை நான் எதற்கு ஒப்பிடுவேன்?

லூக்கா 13:21 அது புளித்தமாவுக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு ஸ்திரீ எடுத்து முழுவதும் புளிக்கும்வரைக்கும் மூன்றுபடிமாவிலே அடக்கிவைத்தாள் என்றார்.

உவமை எண் - 26

"அது புளித்தமாவுக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு ஸ்திரீ எடுத்து முழுவதும் புளிக்கும்வரைக்கும் மூன்றுபடிமாவிலே அடக்கிவைத்தாள்" (லூக்கா 13:21) தேவனுடைய ராஜ்யத்தில் காணப்படும் கலப்படத்தை இந்த உவமை விளக்குகிறது (மத் 13:33)

லூக்கா - தொகுப்புரை

13 அதிகாரம்

98 கிரியை செய்யாமல் பேச மட்டும் செய்வதற்கு எதிரான எச்சரிப்பு - (மத் 7:13-23)

லூக்கா 13:22 அவர் எருசலேமுக்குப் பிரயாணமாய்ப் போகும்போது பட்டணங்கள் தோறும் கிராமங்கள்தோறும் உபதேசம் பண்ணிக்கொண்டு போனார்

லூக்கா 13:23 அப்பொழுது ஒருவன் அவரை நோக்கி: ஆண்டவரே இரட்சிக்கப் படுகிறவர்கள் சிலபேர்தானோ என்று கேட்டான் அதற்கு அவர்

லூக்கா 13:24 இடுக்கமான வாசலவழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள், அநேகர் உட்பிரவேசிக்க வகை தேடினாலும் அவர்களாலே கூடாமற்போகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்

லூக்கா 13:25 வீட்டெஜமான் எழுந்து கதவைப் பூட்டின பின்பு, நீங்கள் வெளியே நின்று: ஆண்டவரே, ஆண்டவரே எங்களுக்குத் திறக்கவேண்டுமென்று சொல்லிக் கதவைத் தட்டும் போது அவர் பிரதியுத்தரமாக: நீங்கள் எவ்விடத்தாரோ, உங்களை அறியேன் என்று உங்களுக்குச் சொல்லுவார்

லூக்கா 13:26 அப்பொழுது நீங்கள் உம்முடைய சமுகத்தில் போஜனபானம் பண்ணினோமே, நீர் எங்கள் வீதிகளில் போதகம் பண்ணினீரே என்று சொல்லுவீர்கள்

லூக்கா 13:27 ஆனாலும் அவர்: நீங்கள் எவ்விடத்தாரோ உங்களை அறியேன், அக்கிரமக்காரராகிய நீங்களெல்லாரும் என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று சொல்லுவார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்

"அவர் எருசலேமுக்குப் பிரயாணமாய்ப் போகும்போது" - எருசலேமிற்கு இயேசு கிறிஸ்து மேற்கொண்ட கடைசிப் பிரயாணம். தமது கலிலேய ஊழியத்தை இதுவரையிலும் நிறைவேற்றி விட்டு, தமது பாடுகளை அனுபவிக்கும் இறுதி ஊழியத்திற்கு இயேசு கிறிஸ்து முன்னேறிச் செல்கிறார் (கொலோ 2:14-17, 1பேதுரு 2:24)

"இரட்சிக்கப்படுகிறவர்கள் சில பேர்தானோ" - (மத் 7:14)

"இடுக்கமான வாசலவழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள்" - பிரயாசப்படுதல் என்பதைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்கச்சொல் "அக்கோனிசோமாய்" (agoonizomai) ஆகும் இதற்கு நான்கு விதமான பொருள் உண்டு. அவையாவன

1. போட்டியில் கலந்து கொள்ளுதல்
2. எதிராளியோடு சண்டையிடுதல்
3. துன்பங்களுக்கும் பாடுகளுக்கும், ஆபத்துக்களுக்கும் நடுவில் போராடுதல்
4. வெற்றி பெற்று பரிசைப் பெறுவோம் என்னும் வைராக்கியத்தோடு தொடர்ந்து போராடுதல்

பிரயாசப்படு (Strive) - ἀγωνίζομαι - agoonizomai - 75

வினைச்சொல் - போராடு

(அ) சண்டையிடு (யோவா 18:36)

(ஆ) பிரயாசப்படு (கொலோ 1:29)

தீர்க்கதரிசன எண் - 32

"அநேகர் உட்பிரவேசிக்க வகைதேடினாலும் அவர்களாலே கூடாமற்போகும். . . " (லூக்கா 13:24-30) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறவில்லை.

13 அதிகாரம்

ஜனங்கள் இரட்சிக்கப்படாமல் இருப்பதற்குக் காரணங்கள்

1. தவறான வழியைத் தேடுகிறார்கள் (லூக்கா 13:24; ரோமர் 10:9-10)
2. தவறான காலத்தைத் தேடுகிறார்கள் (லூக்கா 13:25; மத் 7:21)
3. தவறான இடத்தில் தேடுகிறார்கள் (லூக்கா 13:25; வெளி 3:20)
4. தவறாக விண்ணப்பம் பண்ணுகிறார்கள் (லூக்கா 13:26; மத் 7:21)
5. வாயினால் விண்ணப்பம் பண்ணுகிறார்கள் அவர்களுடைய இருதயம் தேவனுக்குத் தூரமாக இருக்கிறது. (லூக்கா 13:26; ஏசா 29:13; மத் 15:8)

உவமை எண் - 27

"வீட்டெஜமான் எழுந்து, கதவைப் பூட்டினபின்பு........" (லூக்கா 13:25-27) காலம் கடந்த பின்பு இரட்சிக்கப்பட முடியாது என்பதை இந்த உவமை விளக்குகிறது. (எபி 9:27)

வீட்டெஜமான் (master)
οἰκοδεσπότης
oikodespotees - 3617

ஆண்பால் பெயர்சொல்
வீட்டெஜமான் (லூக்கா 9:38)

"ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்குத் திறக்கவேண்டுமென்று சொல்லிக் கதவைத் தட்டும்போது, அவர் பிரதியுத்தரமாக: நீங்கள் எவ்விடத்தாரோ உங்களை அறியேன் என்று உங்களுக்குச் சொல்லுவார்" (மத் 7:21; மத் 25:11-13)

89. வெறும் வாய்ப்பேச்சின் விளைவுகள்
- (மத் 7:21; 8:11; 13:26

லூக்கா 13:28 நீங்கள் ஆபிரகாமையும் ஈசாக்கையும் யாக்கோபையும் சகல தீர்க்கதரிசிகளையும் தேவனுடைய ராஜ்யத்தில் இருக்கிறவர்களாகவும் உங்களையோ புறம்பே தள்ளப்பட்டவர்களாகவும் காணும்போது உங்களுக்கு அழுகையும் பற்கடிப்பும் அங்கே உண்டாயிருக்கும்.

லூக்கா 13:29 கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலும் இருந்து ஜனங்கள் வந்து தேவனுடைய ராஜ்யத்தில் பந்தியிருப்பார்கள்

லூக்கா 13:30 அப்பொழுது முந்தினோர் பிந்தினோராவார்கள் பிந்தினோர் முந்தினோராவார்கள் என்றார்

"நீங்கள் ஆபிரகாமையும் ஈசாக்கையும் யாக்கோபையும் சகல தீர்க்கதரிசிகளையும் தேவனுடைய ராஜ்யத்திலிருக்கிறவர்களாகவும் உங்களையோ புறம்பே தள்ளப்பட்டவர்களாகவும் காணும்போது உங்களுக்கு அழுகையும் பற்கடிப்பும் அங்கே உண்டாயிருக்கும்" நியாயத்தீர்ப்பின்போது இந்தக் காரியங்கள் நிறைவேறும் (லூக்கா 13:24-27, வெளி 20:11-15, வெளி 21:8; மத் 7:21-23). நரகத்தில் ஏற்படப்பட்ட வேதனை இருக்குமென்று 7 இடங்களில் குறிப்பிடப் பட்டிருக்கிறது (மத் 8:12; மத் 13:42,50, மத் 22:13, மத் 24:51; மத் 25:30; லூக்கா 13:28 நரகத்தில் பற்கடிப்பு, அழுகை, ஆகியவை உண்டாயிருக்கும் என்று 8 இடங்களில் நாம் வாசித்தறிகிறோம். (யோபு 16:9, சங் 35:16; சங் 37:12; சங் 112:10, புல 2:16, மாற்கு 9:18 முதலிய வசனங்கள்) இவை உருவகமல்ல; உண்மையிலேயே நடைபெறப் போகும் காரியம்.

"அப்பொழுது முந்தினோர் பிந்தினோராவார்கள் பிந்தினோர் முந்தினோராவார்கள்" தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான் தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் (மத் 19:27-30; மத் 20:1-16.)

13 அதிகாரம்

100. ஏரோதுவை இயேசு கடிந்து கொள்கிறார்

லூக்கா 13:31 அந்த நாளிலே சில பரிசேயர் அவரிடத்தில் வந்து: நீர் இவ்விடத்தை விட்டுப்போய்விடும். ஏரோது உம்மைக் கொலைசெய்ய மனதாயிருக்கிறான் என்றார்கள்.

லூக்கா 13:32 அதற்கு அவர்: நான் இன்றைக்கும் [illegible] பிசாசுகளைத் துரத்தி வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்கி, மூன்றாம் நாளில் நிறைவடைவேன்.

லூக்கா 13:33 இன்றைக்கும் நாளைக்கும் மறுநாளைக்கும் நான் நடமாடவேண்டும்; எருசலேமுக்குப் புறம்பே ஒரு தீர்க்கதரிசியும் மடிந்துபோகிறதில்லை என்று நான் சொன்னதாக நீங்கள் போய் அந்த நரிக்குச் சொல்லுங்கள்.

மனதாயிரு (will) - θέλω - theloo - 2309

வினைச்சொல் - மனதாயிரு, விரும்பு, கோரு, வேண்டுமென்றிரு, சம்மதி, சித்தமாயிரு, இஷ்டமாயிரு (wish, desire) - மனதில் தோன்றும் எண்ணம் பின்பு செயல்வடிவம் பெறும்.

தீர்க்கதரிசன எண் - 33

"நான் இன்றைக்கும் நாளைக்கும் பிசாசுகளைத் துரத்தி, வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்கி, மூன்றாம் நாளில் நிறைவடைவேன்" (லூக்கா 13:32-35) இந்தத் தீர்க்கதரிசனத்தில் லூக்கா 13:32-33 ஆகிய வசனங்கள் நிறைவேறியுள்ளன. லூக்கா 13:34-35 ஆகிய வசனங்கள் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இஸ்ரவேல் ஜனங்கள் மேசியாவை ஏற்றுக் கொள்ளும்போது இந்தத் தீர்க்கதரிசனம் முழுமையாக நிறைவேறும். (ரோமா 11:25-27; சக 12:10-13:3; ஏசா 66:7-8; அப் 15:14-18)

"நான் சொன்னதாக நீங்கள் போய் அந்த நரிக்குச் சொல்லுங்கள்" - இந்த வசனத்தில் நரி ஏரோதைக் குறிக்கும்.

"நரி" - குகையில் வாழும் (மத் 8:20; லூக்கா 9:58). அழிக்கும் தன்மையுடையவை. (சங் 63:10; உன் 2:15; நெகே 4:3). சிம்சோன் நரிகளைப் பயன்படுத்தி தன் விரோதிகளை அழித்தான் (நியா 15:4). கள்ளத் தீர்க்கதரிசிகளைக் குறிப்பதற்கு நரி என்னும் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (எசே 13:4)

நிறைவேற்று (perfected) - τελειόω - teleiooo - 5048

வினைச்சொல் - முடி, தேறு, நிறைவேற்று, பூரணப்படுத்து (to complete, finish, bring to an end) - இயேசு கிறிஸ்து இரண்டு நாட்களுக்குக் கிரியை செய்யப் போகிறார். மூன்றாம் நாளில் தமது ஜீவனை ஒப்புக் கொடுப்பார். யோவான் 11:41-44 ஆகிய வசனங்களில் அற்புதங்கள் நிறைவடைகின்றன. இயேசு கிறிஸ்து செய்த பல அற்புதங்கள் அவருடைய ஊழியத்தை உறுதி பண்ணுகின்றது (லூக்கா 13:33). இயேசு கிறிஸ்துவின் கிரியைகள் மூன்று நாளில் நிறைவு பெறும். அதனுடன் ஏரோதுவின் தேசத்திலும் பிலாத்துவின் ஆளுகையிலும் இயேசு கிறிஸ்துவிற்கு நியமிக்கப்பட்டிருந்த காலமும் நிறைவு பெறும். (லூக்கா 23:5-12)

"இன்றைக்கும் நாளைக்கும் மறுநாளைக்கும் நான் நடமாடவேண்டும்" - எருசலேமிலிருந்து மூன்று நாட்கள் பிரயாணம்.

101. இயேசு எருசலேமிற்காக அழுகிறார் - (மத் 23:37; லூக் 19:41; 21:12)

லூக்கா 13:34 எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும் வண்ணமாக, நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று.

13 அதிகாரம்

லூக்கா 13:35 இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும். கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப் பட்டவர் என்று நீங்கள் சொல்லுங்காலம் வருமளவும் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

"எருசலேமே, எருசலேமே தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே . . ." - (மத் 23:37-39)

"இதோ உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்" - தானி 9:24-27 "இல் கூறப்பட்டிருக்கிற 69 ஆவது வாரத்தின் கடைசியில் இஸ்ரவேல் தேசமாக இராதவாறு அழிக்கப்படும். தேவன் தானியேல் கூறியிருக்கும் 70 ஆவது வாரத்தின் காரியங்களை நிறைவேற்றுவார். கடைசி ஏழு வருஷங்களில் வெளி 6:1 19:21; தானி 9:27; மத் 24:15-31 ஆகிய வசனங்களும் மற்ற தீர்க்கதரிசனங்களும் நிறைவேறும்.

"கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப் பட்டவர் என்று நீங்கள் சொல்லுங்காலம் வருமளவும் என்னைக் காணாதிருப்பீர்கள்" - (வெளி) 1:7 வெளி 19:11-21; சக 14:1-5

"கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப் பட்டவர்" - சங் 118:26 ஆவது வசனம் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்பதைக் குறிக்கும் கிரேக்கச் சொல் "ஈலோஜியோ" eulogeoo

ஸ்தோத்திரிக்கப்பட்டவர் (Blessed) - εὐλογέω - eulogeoo - 2127

வினைச்சொல் - ஆசீர்வதி, ஸ்தோத்திரி, துதி (praise, bless, blessing, blessed, praised) (லூக்கா 1:64) இந்தச் சொல் 44 தடவைகள் பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

பாக்கியவான் என்னும் சொல்லும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்னும் சொல்லும் ஒன்றல்ல. பாக்கியவானுடைய கிரேக்கச் சொல் "மக்காரியோஸ்" (makarios)

பாக்கியம் (blessed) - μακάριος - makarios 3107

ஆண்பால் பெயர்ச்சொல் - பாக்கியம் (blessed, happy, happier) இந்தச் சொல் 49 இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

14 அதிகாரம்

102. இயேசு ஓய்வுநாளில் சொஸ்தமாக்குகிறார்

லூக்கா 14:1 ஒரு ஓய்வுநாளிலே பரிசேயரில் தலைவனாகிய ஒருவனுடைய வீட்டிலே அவர் போஜனம் பண்ணும்படிக்குப் போயிருந்தார்.

லூக்கா 14:2 அப்பொழுது நீர்க்கோவை வியாதியுள்ள ஒரு மனுஷன் அவருக்கு முன்பாக இருந்தான். என்ன செய்வாரோவென்று ஜனங்கள் அவர்மேல் நோக்கமாயிருந்தார்கள்.

லூக்கா 14:3 இயேசு நியாயசாஸ்திரிகளையும் பரிசேயரையும் பார்த்து: ஓய்வுநாளிலே சொஸ்தமாக்குகிறது நியாயமா என்று கேட்டார்.

லூக்கா 14:4 அதற்கு அவர்கள் பேசாமலிருந்தார்கள். அப்பொழுது அவர் அவனை அழைத்து, சொஸ்தமாக்கி, அனுப்பிவிட்டு,

லூக்கா 14:5 அவர்களை நோக்கி: உங்களில் ஒருவனுடைய கழுதையாவது எருதாவது ஓய்வுநாளில் துரவிலே விழுந்தால், அவன் அதை உடனே தூக்கிவிடானோ என்றார்.

லூக்கா 14:6 அதற்கு உத்தரவு சொல்ல அவர்களால் கூடாமற்போயிற்று.

"பரிசேயரில் தலைவனாகிய ஒருவன்" இவன் யூதருடைய அதிகாரியாக இருக்கலாம் அல்லது ஆலோசனைச் சங்கத்தில் ஒரு மூப்பனாக இருக்கலாம். (யோவான் 3:1; யோவான் 19:38)

"ஜனங்கள் அவர்மேல் நோக்கமாய் இருந்தார்கள்" - இயேசு கிறிஸ்து செய்யப்போகிற காரியங்களைப் பார்ப்பதற்கு ஆவலாக இருந்தார்கள்.

நீர்க்கோவை வியாதி (dropsy) - ὑδρωπικός hydroopikos 5203

பெரடை - நீர்க்கோவை வியாதி (dropsical) - சரீரத்தில் தண்ணீர் சத்து அதிகமாக இருப்பதினால் உடம்பு உப்பிக்காணப்படுதல்.

"ஓய்வுநாள்" - (லூக்கா 13:14)

"அவர் அவனை அழைத்து, சொஸ்தமாக்கி, அனுப்பிவிட்டார்" - வியாதியாக இருந்த மனுஷனுடைய சரீரம் உப்பியிருந்தது. இயேசு அவனைச் சொஸ்தமாக்கியவுடன் அவனுடைய உப்பிய சரீரம் வற்றிவிட்டது. இயேசு கிறிஸ்து சொஸ்தமாக்கும்போது வியாதியஸ்தர்கள் உடனடியாக சுகமடைகிறார்கள். கொஞ்சம் கொஞ்சமாகவோ, தவணை முறையிலோ இயேசு சுகமாக்குவதில்லை. ஒருசமயம் இயேசு கிறிஸ்து குருடன்மீது இரண்டு முறை தமது கரங்களை வைத்து ஜெபித்ததாக வாசிக்கிறோம். (மாற்கு 8:23-25) இயேசு கிறிஸ்து ஒரு சிறுபிள்ளையைச் சாகிறதற்கு முன்பாக குணமாக்கினார். (யோவான் 4:51-52) இவ்விரண்டு இடங்களிலுமே சுகமாதல் உடனடியாக நடைபெற்றது.

"உங்களில் ஒருவனுடைய கழுதையாவது எருதாவது ஓய்வுநாளில் துரவிலே விழுந்தால் அவன் அதை உடனே தூக்கிவிடானோ" - இயேசு கிறிஸ்து எல்லாக் கேள்விகளுக்கும் பதில் கூறுவார் என்று பரிசேயருக்கு நன்றாகத் தெரியும். ஓய்வுநாளில் சொஸ்தமாக்குகிறது நியாயமா என்னும் கேள்வியைக் கேட்டவரே இயேசு கிறிஸ்துதான். பரிசேயரும், நியாயசாஸ்திரிகளும் இயேசுவின் கேள்விக்குப் பதில் கூறாமல் பேசாமல் இருந்தார்கள். அவர்களால் பதில் கூறமுடியாது. இயேசு கிறிஸ்து ஓய்வுநாளில் ஒரு வியாதியஸ்தனைக் குணமாக்கினார். ஆனால் அவர்களோ ஓய்வுநாளில் பலவேறு வேலைகளைச் செய்கிறார்கள். அவர்களுடைய கண்களில் உத்திரம் இருக்கிறது. யூதர்கள் ஓய்வுநாளில் விசேஷித்த போஜனங்களைப் புசித்து, ஓய்வுநாள் ஆசரிப்பார்கள். அவர்கள் ஓய்வுநாளைக் கொண்டாடுகிறார்களா அல்லது தங்களுடைய வயிறுகளைக் கொண்டாடுகிறார்களா.

14 அதிகாரம்

103. தாழ்மையைப் பற்றிய உபதேசம் – (லூக் 9:46

லூக்கா 14:7 விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பந்தியில் முதன்மையான இடங்களைத் தெரிந்துகொண்டதை அவர் பார்த்து, அவர்களுக்கு ஒரு உவமையைச் சொன்னார்

லூக்கா 14:8 ஒருவனால் கலியாணத்துக்கு நீ அழைக்கப்பட்டிருக்கும் போது பந்தியில் முதன்மையான இடத்தில் உட்காராதே. உன்னிலும் கனமுள்ளவன் ஒருவேளை அவனால் அழைக்கப்பட்டிருப்பான்

லூக்கா 14:9 அப்பொழுது உன்னையும் அவனையும் அழைத்தவன் உன்னிடத்தில் வந்து, இவருக்கு இடங்கொடு என்பான். அப்பொழுது நீ வெட்கத்தோடே தாழ்ந்த இடத்திற்குப் போகவேண்டியதாயிருக்கும்

லூக்கா 14:10 நீ அழைக்கப்பட்டிருக்கும் போது போய், தாழ்ந்த இடத்தில் உட்காரு. அப்பொழுது உன்னை அழைத்தவன் வந்து: சிநேகிதனே உயர்ந்த இடத்தில் வாரும் என்று சொல்லும்போது, உன்னுடனே கூடப் பந்தியிருக்கிறவர்களுக்கு முன்பாக உனக்குக் கனமுண்டாகும்

லூக்கா 14:11 தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான்; தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்

உவமை எண் – 28

"ஒருவனால் கலியாணத்துக்கு நீ அழைக்கப்பட்டிருக்கும்போது, பந்தியில் முதன்மையான இடத்தில் உட்காராதே" (லூக்கா 14:8) இந்த உவமை தாழ்மையை விளக்குகிறது

"பந்தியில் முதன்மையான இடம்" - விசேஷித்த அறைகள் (லூக்கா 14:7-8 லூக்கா 20:46; மத் 23:6) "இடங்கொடு" (லூக்கா 14:9-10 என்னும் வாக்கியத்திலும் இதே வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது விருந்தில் எல்லோருக்கும் இடமிருக்கும் விசேஷித்த விருந்தினர்களுக்கு முதன்மையான இடங்களைக் கொடுத்து அவர்களைக் கௌரவிப்பார்கள்

சிநேகிதன் (Friend) - φίλος - philos - 5384

பெயர்ச்சொல் - சிநேகிதனாயிருக்கிற, தோழனாகிய

கனம் (worship) - δόξα - doxa - 1391

பெண்பால் பெயர்ச்சொல் - மகிமை, மகத்துவம், துதி, கனம் **(glory, honor, respect)**

"தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான்; தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" - லூக்கா 14:7-10 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற உவமையின் விளக்கம். (லூக்கா 14:11) தன்னைத்தான் உயர்த்துவது தண்டனைக்குட்பட்டிருக்கிறது அது சாபமான பழக்கம். (எசே 31:10-14, ஒப 1:3-4 2கொரி 10:5,17-18, கலா 6:3 2தெச 2:4, 8-12; மத் 1:23)

தன்னைத்தான் உயர்த்துகிறவர்களுக்கு எடுத்துக்காட்டுக்கள்

1 லூசிபர் (ஏசா 14:12-14, எசே 28:11-17, 1தீமோ 3:6)

2 ஆதாமும், ஏவாளும் (ஆதி 3:8, யோபு 31:33)

3 பார்வோன் (யாத் 9:17)

4 கோராகும் அவன் புத்திரரும் (எண் 16

5 எசேக்கியா (2நாளா 32:9-19

6 நேபுகாத்நேச்சார் (தானி 4:30, தானி 5:20)

லூக்கா - தொகுப்புரை

14 அதிகாரம்

7 பெல்ஷாத்சார் (தானி 5)

8. ஆமான் (எஸ் 3:1-15; எஸ் 5:8-10)

9 மாயவித்தைக்காரனாகிய சீமோன் (அப 8:9)

10 ஏரோது (அப 12:20-23)

"தன்னைத்தான் உயர்த்துகிறவன்" - (மத் 23:12; லூக்கா 18:14; யாக் 4:10)

104. உண்மையான கிறிஸ்தவ விருந்து - (ஏசா 58:3-14)

லூக்கா 14:12 அன்றியும் அவர் தம்மை விருந்துக்கு அழைத்தவனை நோக்கி: நீ பகல் விருந்தாவது இராவிருந்தாவது பண்ணும்போது உன் சிநேகிதரையாகிலும் உன் சகோதரரையாகிலும் உன் பந்து ஜனங்களையாகிலும் ஐசுவரியமுள்ள அயலகத்தாரையாகிலும் அழைக்க வேண்டாம். அழைத்தால் அவர்களும் உன்னை அழைப்பார்கள் அப்பொழுது உனக்குப் பதிலுக்குப் பதில் செய்ததாகும்

லூக்கா 14:13 நீ விருந்துபண்ணும்போது ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் அழைப்பாயாக

லூக்கா 14:14 அப்பொழுது நீ பாக்கியவானாயிருப்பாய். அவர்கள் உனக்குப் பதில் செய்யமாட்டார்கள் நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும் என்றார்

லூக்கா 14:15 அவரோடேகூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவன் இவைகளைக் கேட்டபொழுது அவரை நோக்கி: தேவனுடைய ராஜ்யத்தில் போஜனம்பண்ணுகிறவன் பாக்கியவான் என்றான்

"அவர் தம்மை விருந்துக்கு அழைத்தவனை நோக்கி____" தம்மை விருந்துக்கு அழைத்த பரிசேயனிடம் இயேசு கிறிஸ்து பேசுகிறார்

லூக்கா 14:7-11 ஆகிய வசனங்கள் விருந்தினர்களிடம் கூறப்பட்டவை. பரிசேயனிடம் கூறப்பட்டவை அல்ல. இந்த வசனம் விருந்து கொடுக்கும் பரிசேயனிடம் கூறப்பட்டது.

உவமை எண் - 29

"நீ பகல் விருந்தாவது இராவிருந்தாவது பண்ணும்போது___" (லூக்கா 14:12-14) இந்த உவமை சுயநலமின்மையை விளக்குகிறது. ஐசுவரியவான்களை உபசரிப்பது தவறல்ல. என்றாலும் ஏழைகளையும் தேவையுள்ளோரையும் சந்தித்து அவர்களுக்கு உதவி புரிவது மிகவும் முக்கியமான காரியம்.

"அவர்களும் உன்னை அழைப்பார்கள் அப்பொழுது உனக்குப் பதிலுக்குப் பதில் செய்ததாகும்" - மனுஷர் பதிலுக்குப் பதில் செய்துவிட்டால் தேவனிடத்திலிருந்து ஆசீர்வாதம் வராது. ஏழைகளுக்கு உதவும்போது அவர்களால் பதிலுக்கு உதவ முடியாது. அப்பேர்ப்பட்ட உதவிகளுக்குத் தேவன் [redacted] அளிப்பார் (லூக்கா 14:14 மத் 10:40-42)

தீர்க்கதரிசன எண் - 84

"அப்பொழுது நீ பாக்கியவானாயிருப்பாய், அவர்கள் உனக்குப் பதில் செய்யமாட்டார்கள் நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும் (லூக்கா 14:14) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறவில்லை. இயேசு கிறிஸ்துவின் நியாயாசனத்தை இந்தத் தீர்க்கதரிசனம் விளக்குகிறது நீதிமான்களின் உயிர்த்தெழுதல் அல்லது சபை எடுத்துக் கொள்ளப்படுவதின்போது பரிசுத்தவான்களுக்கு வெகுமதிகள் அளிக்கப்படும். (மத் 16:27, ரோமர் 14:10, 1கொரி 3:11-15; 2கொரி 5:10 வெளி 22:12)

"தேவனுடைய ராஜ்யத்தில் போஜனம் பண்ணுகிறவன் பாக்கியவான்" உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள் நித்திய காலமாகத் தேவனுடைய ராஜ்யத்தில் போஜனம் பண்ணுவார்கள் (லூக்கா 22:16,18,30, வெளி 2:7,17 வெளி 19:7-10; வெளி 22:2,14 தேவனும், தேவதூதர்களும் போஜனம் பண்ணுவார்கள் (ஆதி 18:8; ஆதி 19:3; யாத் 24:11, சங் 78:25)

லூக்கா - தொகுப்புரை

14 அதிகாரம்

105. பெரிய விருந்தைப் பற்றிய உவமை - மத் 22:1-14)

லூக்கா 14:16 அதற்கு அவர்: ஒரு மனுஷன் பெரிய விருந்தை ஆயத்தம் பண்ணி, அநேகரை அழைப்பித்தான்.

லூக்கா 14:17 விருந்து வேளையில் தன் ஊழியக்காரனை நோக்கி: நீ அழைக்கப்பட்டவர்களிடத்தில் போய்: எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது, வாருங்கள் என்று சொல்லென்று அவனை அனுப்பினான்.

லூக்கா 14:18 அவர்களெல்லாரும் போக்குச்சொல்லத் தொடங்கினார்கள். ஒருவன்: ஒரு வயலைக்கொண்டேன், நான் அவசியமாய்ப் போய் அதைப் பார்க்க வேண்டும், என்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.

லூக்கா 14:19 வேறொருவன்: ஐந்தேர் மாடு கொண்டேன், அதைச் சோதித்துப் பார்க்கப்போகிறேன், என்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.

லூக்கா 14:20 வேறொருவன்: பெண்ணை விவாகம் பண்ணினேன், அதினால் நான் வரக்கூடாது என்றான்.

லூக்கா 14:21 அந்த ஊழியக்காரன் வந்து, இவைகளைத் தன் எஜமானுக்கு அறிவித்தான். அப்பொழுது வீட்டெஜமான் கோபமடைந்து, தன் ஊழியக்காரனை நோக்கி: நீ பட்டணத்தின் தெருக்களிலும் வீதிகளிலும் சீக்கிரமாய்ப் போய், ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் இங்கே கூட்டிக்கொண்டுவா என்றான்.

லூக்கா 14:22 ஊழியக்காரன் அப்படியே செய்து, ஆண்டவரே, நீர் கட்டளையிட்டபடி செய்தாயிற்று, இன்னும் இடம் இருக்கிறது என்றான்.

லூக்கா 14:23 அப்பொழுது எஜமான் ஊழியக்காரனை நோக்கி: நீ பெருவழிகளிலும் வேலிகளருகிலும் போய், என் வீடு நிறையும்படியாக ஜனங்களை உள்ளே வரும்படி வருந்திக் கூட்டிக்கொண்டுவா.

லூக்கா 14:24 அழைக்கப்பட்டிருந்த அந்த மனுஷரில் ஒருவனாகிலும் என் விருந்தை ருசிபார்ப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றான் என்று சொன்னார்.

உவமை எண் - 80

"ஒரு மனுஷன் பெரிய விருந்தை ஆயத்தம் பண்ணி, அநேகரை அழைப்பித்தான்.........." (லூக்கா 14:16-24) தேவன் செய்த நன்மைகளை நினைத்து அவரை ஸ்தோத்திரிக்காமல் வெறுப்பதை இந்த உவமை விளக்குகிறது.

"அவர்களெல்லாரும் போக்குச்சொல்லத் தொடங்கினார்கள்" - பாவிகள் எல்லோரும் இந்தக் காரியத்தில் ஒன்று சேருகிறார்கள். தேவனைச் சேவிக்காமல் இருப்பதற்கும் பாவம் செய்யாமல் பாவத்தை வெறுத்து ஒதுங்கி வராமல் இருப்பதற்கும் ஏதாவது காரணம் கண்டுபிடித்துக் கூறுகிறார்கள்.

போக்குச்சொன்னவர்களுக்கு எடுத்துக்காட்டுகள்

1. ஆதாமும் ஏவாளும் (ஆதி 3:12,13)
2. மோசே (யாத் 4:1-12)
3. ஆரோன் (யாத் 32:22-24)
4. கிதியோன் (நியா 6:12-17)
5. எலிசா (1இராஜா 19:19-21)
6. நாகமான் (2இராஜா 5:10-14)
7. எரேமியா (எரே 1:1-10)
8. பேலிக்ஸ் (அப் 24:25)
9. மற்றவர்கள் மத் 8:21, லூக்கா 9:59-62

சாக்குப் போக்குச் சொல்லுகிறவர்களுக்கு மன்னிப்பு இல்லை. (உபா 30:11-14; ரோமர் 1:20; ரோமர் 2:1

14 அதிகாரம்

"ஒரு வயலைக்கொண்டேன் நான் அகத்தியமாய்ப் போய் அதைப் பார்க்கவேண்டும்" - கண்ணால் பார்க்காத ஒரு நிலத்தை யாரும் விலைக்கு வாங்கமாட்டார்கள் அப்படி ஒருவன் வாங்குவது நல்ல வியாபாரம் ஆகாது.

"ஐந்தேர் மாடு கொண்டேன், அதைச் சோதித்துப் பார்க்கப்போகிறேன்" - பார்க்காமல் நிலத்தை வாங்குவதைவிட இது மோசமான காரியம் ஏர்மாடு வாங்குவதற்கு முன்பாக அது நல்ல மாடா, கிழடு மாடா, செக்குமாடா, உழவுமாடா என்பதைச் சோதித்துப் பார்த்துதான் வாங்குவார்கள் இவன் வாங்கிய பின்பு சோதித்துப் பார்க்கிறான்.

"பெண்ணை விவாகம் பண்ணினேன் அதினால் நான் வரக்கூடாது" - மற்றவர்களை விட இவன் மிகவும் மோசமாக சாக்குப்போக்குக் கூறுகிறான் இவன் தன் மனைவியோடு 24 மணிநேரமும் இருக்கப்போவதில்லை ஒருமணி நேரம் வந்து விருந்தில் கலந்து கொள்ளலாம் விருந்து ஆயத்தம் பண்ணினவன் இவனை விவாகரத்து பண்ணிவிட்டு வரச்சொல்லவில்லை விருந்தில் கலந்து கொள்ளுமாறு அழைக்கிறான் மனமிருந்தால் மார்க்கமுண்டு.

எஜமான் (master)
οἰκοδεσπότης
oikodespotees - 3617

ஆண்பால் பெயர்ச்சொல் - வீட்டெஜமான், எஜமான் (லூக்கா 9:38)

"கோபமடைந்தான்" எஜமான் கோபப்படுவதற்குக் காரணம் இருக்கிறது. அவன் யாரையெல்லாம் விருந்திற்கு அழைத்தானோ அவர்கள் எல்லோருமே அவனை அவமானப் படுத்தி விட்டார்கள்.

"நீ பட்டணத்தின் தெருக்களிலும் வீதிகளிலும் சீக்கிரமாய்ப் போய், ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் இங்கே கூட்டிக்கொண்டுவா" - விருந்து ஏற்கெனவே ஆயத்தமாகிவிட்டது அதை விருந்தினர்கள் அவசியம் புசிக்க வேண்டும். இல்லையேல் உணவு பாழாய்ப்போய்விடும். இஸ்ரவேல் ஜனங்களுக்குச் சுவிசேஷம் முதலாவது அறிவிக்கப்பட்டது. ஆனால் அவர்கள் எல்லோருமே சுவிசேஷத்தைப் புறக்கணித்து விட்டார்கள் (மத் 10:6 மத் 15:24 மத் 21:33-46 யோவான் 4:22 ரோமர் 1:16; அப் 13:46). யூதர்கள் புறக்கணித்த சுவிசேஷத்தைப் புறஜாதியார் ஏற்றுக் கொண்டார்கள் (அப் 15:13-18 ரோமர் 11:1-32)

கட்டாயப்படுத்து (compel) - **ἀναγκάζω - anankazoo** - 315

வினைச்சொல் - வருந்திக் கூட்டிக்கொண்டுவா கட்டாயப்படுத்து அவசியப்படு, பலவந்தப்படுத்து, கட்டாயம் பண்ணு (to necessitate, drive to, constrain by all means such as force, threats, persuasion, and entreaties) - இந்த வாக்கியம் "கட்டாயப்படுத்து" (compel) என்று 5 இடங்களில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. (லூக்கா 14:23 அப் 26:11; 2கொரி 12:11, கலா 2:3,14) "வருந்திச்செய்" (constrain) என்று 4 இடங்களில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது (மத் 14:22 மாற்கு 6:45; அப் 28:19, கலா 6:12)

"வருந்திக் கூட்டிக்கொண்டுவா" - ஜனங்களை வருந்திக் கூட்டிக்கொண்டு வந்தால்தான் வீடு விருந்தினர்களினால் நிறையும். இந்த மனுஷன் என்ன செய்து வருந்திக் கூட்டிக்கொண்டு வந்தான் என்று தெரியவில்லை. கர்த்தர் தமது சுவிசேஷச் செய்தியை அறிவிக்கும்போது சத்தியம், புத்திமதி, கடிந்துகொள்ளுதல், உபதேசம், நீடியபொறுமை, தாழ்மை, அன்பு போன்ற காரியங்களைப் பயன்படுத்தி வருந்திக் கூப்பிடுகிறார் வரப்போகிற நியாயத்தீர்ப்பைக் குறித்து, எச்சரிக்கிறார் நரகத்தின் பாடுகளைக் கூறி துன்மார்க்கரை எச்சரிக்கிறார் நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளலாம் என்று வாக்குத்தத்தம் பண்ணுகிறார்

14 அதிகாரம்

இயேசு கிறிஸ்து எப்படித்தான் வருந்திக் கூப்பிட்டாலும், ஒருவருடைய சொந்த சித்தத்திற்கு எதிராக அவர் யாரையும் கட்டாயப்படுத்துவதில்லை. வருந்திக் கூப்பிடுதல் அவசியம்தான். ஏனென்றால் ஜனங்கள் கீழே விழுந்தால் அவர்களால் எழுந்திருக்க முடியாது. ஆதாமும் ஏவாளும் பாவம்செய்து மொத்த மனுக்குலத்திற்கே சாபத்தைக் கொண்டு வந்துவிட்டார்கள். வருந்திக் கூப்பிட்டாலும், அழைப்பை ஏற்றுக் கொள்ளவதா வேண்டாமா என்று முடிவு பண்ணுவது மனுஷனே (யோவான் 3:16; 1 தீமோ 2:4; 2பேதுரு 3:9; வெளி 22:17)

106. சீஷத்துவத்தைப் பற்றி மறுபடியும் பரீட்சை - (மத் 16:24)

லூக்கா 14:25 பின்பு அநேக ஜனங்கள் அவரோடேகூடப் பிரயாணமாய்ப் போகையில், அவர்களிடமாய் அவர் திரும்பிப் பார்த்து;

லூக்கா 14:26 யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்.

லூக்கா 14:27 தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்.

"அநேக ஜனங்கள் அவரோடேகூடப் பிரயாணமாய்ப் போனார்கள்" லூக்கா 13:32-33 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் மூன்று நாட்களுக்குப் பின்பு இயேசு கிறிஸ்து தமது கடைசிக்கால ஊழியத்தைச் செய்வதற்காக எருசலேமிற்குப் பிரயாணமாக போகிறார். யூதேயா தேசத்திற்குக் கலிலேயா வழியாகவும், சமாரியா வழியாகவும் போகிறார் (லூக்கா 17:11; லூக்கா 18:31) எரிகோ வழியாகவும் செல்கிறார் (லூக்கா 18:35; லூக்கா 19:1) எருசலேமிற்கு செல்லும் பாதை என்று சில வசனங்களில் வாசிக்கிறோம். (லூக்கா 19:11,28-48) லூக்கா 13:31-19:27 ஆகிய வசனங்கள் எருசலேமிற்குச் செல்லும் பாதையில் நடைபெற்றவையாகும்.

"தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" - இதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதை விளக்கும் யூதருடைய வழக்குச்சொல். (மத் 6:24; மத் 10:37; ரோமர் 9:13; மல் 1:2-3; ஆதி 29:30-31; உபா 21:15-17) நாம் எல்லாவற்றையும்விட தேவனையும் அவருடைய சத்தியத்தையும் அதிகமாக நேசிக்க வேண்டும் (மத் 22:37). தேவனுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்பதே வேதாகமத்தின் மைய உபதேசம்.

"தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" - இந்த வசனத்தின் மூலமாக இயேசு கிறிஸ்து ஜனங்களிடம் நான்கு காரியங்களை எதிர்பார்க்கிறார். அவையாவன:

1. எல்லாவற்றையும்விட தேவனை நேசிக்க வேண்டும். (லூக்கா 14:26; மத் 22:37)
2. தன் சிலுவையைச் சுமந்து கொள்ள வேண்டும். (லூக்கா 14:27; மத் 10:38; மத் 16:24; மாற்கு 8:34)
3. கிறிஸ்துவை எப்போதும் பின்பற்ற வேண்டும். (லூக்கா 14:27; யோவான் 10:26-30)
4. இவையெல்லாவற்றையும் எப்போதாவது செய்யலாம் என்றில்லாமல் அனுதினமும் செய்ய வேண்டும். (லூக்கா 9:23)

107. கோபுரத்தைப் பற்றிய உவமை

லூக்கா 14:28 உங்களில் ஒருவன் ஒரு கோபுரத்தைக் கட்ட மனதாயிருந்து,

லூக்கா – தொகுப்புரை

14 அதிகாரம்

லூக்கா 14:29 அஸ்திபாரம் போட்டபின்பு முடிக்கத் திராணியில்லாமற் போனால் பார்க்கிறவர் களெல்லாரும்

லூக்கா 14:30 இந்த மனுஷன் கட்டத் தொடங்கி, முடிக்கத் திராணியில்லாமற் போனான் என்று சொல்லித் தன்னைப் பரியாசம் பண்ணாதபடிக்கு, அதைக் கட்டித் தீர்க்கிறதற்குத் தனக்கு நிர்வாகமுண்டோ இல்லையோ என்று முன்பு அவன் உட்கார்ந்து செலவுஞ் செலவைக் கணக்குப் பாராமலிருப்பானோ?

உவமை எண் - 31

"உங்களில் ஒருவன் ஒரு கோபுரத்தைக் கட்ட மனதாயிருந்து ...." (லூக்கா 14:28-30,33) இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள் செலவும் செலவைக் கணக்குப் பார்க்க வேண்டும் என்பதை விளக்கும் உவமை. இயேசுவைப் பின்பற்றும்போது உலகம், மாம்சம், சாத்தானின் அந்தகாரச் சக்திகள் ஆகியவை நமக்கு எதிராக வரும் இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் நாம் இயேசுவையே சார்ந்திருக்க வேண்டும் இவை எல்லாவற்றையும் எதிர்பார்த்துதான் இயேசுவைப் பின்பற்ற வேண்டும். (யோவான் 10:27-29, ரோமர் 8:33-39 2கொரி 10:4-7, எபே 6:10-18, 1பேதுரு1:5-13 யோவான் 4:4, யூதா 1:20-24)

108. யுத்தம் செய்யும் இராஜாவைப் பற்றிய உவமை

லூக்கா 14:31 அன்றியும் ஒரு ராஜா மற்றொரு ராஜாவோடே யுத்தஞ்செய்யப் போகிறபோது, தன்மேல் இருபதினாயிரம் சேவகரோடே வருகிற அவனைத் தான் பதினாயிரம் சேவகரைக்கொண்டு எதிர்க்கக் கூடுமோ கூடாதோ என்று முன்பு உட்கார்ந்து ஆலோசனை பண்ணாமலிருப்பானோ?

லூக்கா 14:32 கூடாதென்று கண்டால், மற்றவன் இன்னும் தூரத்திலிருக்கும் போதே, ஸ்தானாபதிகளை அனுப்பி, சமாதானத்துக்கு ஏற்பவைகளைக் கேட்டுக்கொள்வானே.

லூக்கா 14:33 அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளை எல்லாம் வெறுத்து விடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்.

உவமை எண் - 32

"அன்றியும் ஒரு ராஜா மற்றொரு ராஜாவோடே யுத்தஞ்செய்யப் போகிறபோது தன்மேல் இருபதினாயிரம் சேவகரோடே வருகிற அவனைத் தான் பதினாயிரம் சேவகரைக் கொண்டு எதிர்க்கக் கூடுமோ கூடாதோ என்று முன்பு உட்கார்ந்து ஆலோசனை பண்ணாமலிருப்பானோ?" (லூக்கா 14:31-33) ஒருவன் எல்லாவற்றையும் வெறுக்காவிட்டால் அவன் இரட்சிக்கப்படமாட்டான் என்பதை இந்த உவமை விளக்குகிறது. (மத் 19:29)

109. சாரமற்றுப்போன உப்பைப் பற்றிய உவமை - (மத் 5:13; மாற்கு 9:49)

லூக்கா 14:34 உப்பு நல்லதுதான்; உப்பு சாரமற்றுப்போனால் எதினால் சாரமாக்கப்படும்?

லூக்கா 14:35 அது நிலத்துக்காகிலும் எருவுக்காகிலும் உதவாது, அதை வெளியே கொட்டிப்போடுவார்கள். கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றார்.

உவமை எண் - 33

"உப்பு நல்லதுதான், உப்பு சாரமற்றுப் போனால் எதினால் சாரமாக்கப்படும்? ... " (லூக்கா 14:34-35), இரட்சிக்கப்பட்டிருக்கிற விசுவாசிகள் பின்வாங்கிப் போய்விட்டால் அவர்கள் தேவனுக்கும், மற்றவர்களுக்கும் பிரயோஜனமற்றவர்களாக இருக்கமாட்டார்கள் (மத்24:51; மத் 25:30, லூக்கா 9:62, ரோமர் 6:16-23, ரோமர் 8:12-13 1கொரி 9:27; கலா 5:19-21; கலா 6:7-8 எபி 6:4-9; எபி 10:26-29;2பேதுரு 2:20-22

லூக்கா – தொகுப்புரை

14 அதிகாரம்

"உப்பு சாரமற்றுப் போனால் எதினால் சாரமாக்கப்படும்?" - மழை வெயில் காற்று ஆகியவற்றில் உப்பைப் போட்டுவிட்டால் அது தன் சாரத்தை இழந்துவிடும் விசுவாசிகள் உலகத்திற்கு உப்பாக இருக்கிறார்கள் அவர்கள் தங்கள் சாரத்தை இழந்துவிட்டால், அவர்களால் மறுபடியும் உலகத்திற்கு உப்பாக இருக்கமுடியாது. (மத் 5:13, மார்க் 9:49-50)

"கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக் கடவன்" - (மத் 11:15)

லூக்கா - தொகுப்புரை

15 அதிகாரம்

110. முறுமுறுக்கும் பரிசேயர்

லூக்கா 15:1 சகல ஆயக்காரரும் பாவிகளும் அவருடைய வசனங்களைக் கேட்கும்படி அவரிடத்தில் வந்து சேர்ந்தார்கள்.

லூக்கா 15:2 அப்பொழுது பரிசேயரும் வேதபாரகரும் முறுமுறுத்து: இவர் பாவிகளை ஏற்றுக்கொண்டு அவர்களோடே சாப்பிடுகிறார் என்றார்கள்.

"சகல ஆயக்காரரும் பாவிகளும்" - அந்த இடத்தில் இருந்த ஆயக்காரரும் பாவிகளும். உலகத்திலுள்ள எல்லா ஆயக்காரர்களும், பாவிகளும் என்று பொருள்படாது. (வெளி 13:8-18)

"இவர் பாவிகளை ஏற்றுக் கொண்டு அவர்களோடே சாப்பிடுகிறார்" - தம்முடைய சீஷர்களிடம் லூக்கா 16:1 ஆகிய வசனத்திலிருந்து மறுபடியும் பேச ஆரம்பிப்பதற்கு முன்பாக ஒருசில உவமைகளைக் கூறுகிறார். அவர் உவமைகளைக் கூறியதின் காரணம் பரிசேயரும், வேதபாரகரும் முறுமுறுத்து இவ்வாறு கூறியதுதான். கிறிஸ்துவின் ஊழியத்தையும் அவர் கூறும் சத்தியத்தையும் இவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. (லூக்கா 5:32)

111. காணாமல் போன ஆட்டைப் பற்றிய உவமை - (மத் 9:10, மாற்கு 2:15; லூக் 5:30)

லூக்கா 15:3 அவர்களுக்கு அவர் சொன்ன உவமையாவது:

லூக்கா 15:4 உங்களில் ஒரு மனுஷன் நூறு ஆடுகளை உடையவனாயிருந்து, அவைகளில் ஒன்று காணாமற்போனால், தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் வனாந்தரத்திலே விட்டு, காணாமற்போன ஆட்டைக் கண்டுபிடிக்கும் அளவும் தேடித்திரியானோ?

லூக்கா 15:5 கண்டுபிடித்தபின்பு, அவன் சந்தோஷத்தோடே அதைத் தன் தோள்களின்மேல் போட்டுக்கொண்டு,

லூக்கா 15:6 வீட்டுக்கு வந்து, சிநேகிதரையும் அயலகத்தாரையும் கூடவரவழைத்து: காணாமற்போன என் ஆட்டைக் கண்டுபிடித்தேன், என்னோடுகூட சந்தோஷப்படுங்கள் என்பான் அல்லவா?

லூக்கா 15:7 அதுபோல, மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக்குறித்துச் சந்தோஷம் உண்டாகிறதைப் பார்க்கிலும், மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

"அவர்களுக்கு" - முறுமுறுக்கும் பரிசேயருக்கு லூக்கா 15:2

உவமை எண் - 84

"உங்களில் ஒரு மனுஷன் நூறு ஆடுகளை உடையவனாயிருந்து, அவைகளில் ஒன்று காணாமற்போனால், தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் வனாந்தரத்திலே விட்டு, காணாமற்போன ஆட்டைக் கண்டுபிடிக்குமளவும் தேடித்திரியானோ?______" (லூக்கா 15:4-7) காணாமல் போனவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டுமென்பதை இந்த உவமை விளக்குகிறது.

காணாமல் போன ஆடு என்பது ஒரு நம்பிக்கையும் இல்லாமல் பாவத்தில் சிக்கியிருக்கும் பாவிகளைக் குறிப்பிடும். இவர்கள் பாவத்திற்கு தங்களை ஒப்புக் கொடுக்கிறார்கள். பாவத்தின் சம்பளம் மரணம் என்பதை அறியாமல் இருக்கிறார்கள். எல்லோருக்குமே தங்கள் வீட்டிற்குப் போவதற்குப் பாதை தெரியும். மிருகங்கள் தங்கள் வசிப்பிடங்களுக்குத் திரும்பிச் செல்லும். பறவைகளும், தங்கள் கூடுகளுக்குத் திரும்பும். பாதைமாறி காணாமல்போய்விட்டால் யாருக்கும் பாதுகாப்பு இல்லை. இயேசு கிறிஸ்து கூறியிருக்கும் உவமைக்கு யாரும் எளிதாகப் பதில் கூறிவிடுவார்கள். காணாமல்போன ஆட்டைக் கண்டுபிடிக்கும் அளவும் மேய்ப்பன் நிச்சயமாகவே அதைத் தேடித்திரிவான் (லூக்கா 15:7) இந்த உவமை மத் 18:12 ஆவது வசனத்திலும் கூறப்பட்டிருக்கிறது.

15 அதிகாரம்

"பரலோகத்தில்" - இங்கு சந்தோஷப்படுகிறவர்கள் யார்? தேவனும் தேவதூதர்களும், சந்தோஷமடைவார்கள் (லூக்கா 15:10; லூக்கா 12:8; மத் 18:10)

"மனந்திரும்புகிற பாவி" - (லூக்கா 13:3)

"மனந்திரும்ப அவசியமில்லாத நீதிமான்கள்" - நீதிமான்கள் நீதியுடையவர்கள். அவர்கள் மனந்திரும்ப வேண்டிய அவசியமில்லை (லூக்கா 5:32) அவர்கள் ஏற்கெனவே மனந்திரும்பி விட்டார்கள். தங்கள் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறார்கள் (ரோமர் 1:16-17; ரோமர் 5:1; 2கொரி 7:9-10) தொண்ணூற்றொன்பது நீதிமான்களும் மனந்திரும்பியபோது நிச்சயமாகவே பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருந்திருக்கும். அதுபோலவே ஒருபாவி மனந்திரும்பும்போதும் பரலோகத்தில் சந்தோஷம் உண்டாயிருக்கும். பாவிகளை இரட்சிப்பதற்காகவே இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார். பரிசேயர் இயேசுவின் ஊழியத்தைக் குறித்து முறுமுறுப்பதில் அர்த்தமேயில்லை. இயேசு கிறிஸ்து தமக்கு நியமிக்கப்பட்ட ஊழியத்தையே செய்கிறார்.

112. காணாமல் போன வெள்ளிக்காசைப் பற்றிய உவமை – (மத் 18:11; லூக் 19:10)

> லூக்கா 15:8 அன்றியும், ஒரு ஸ்திரீ பத்து வெள்ளிக்காசை உடையவளாயிருந்து, அதில் ஒரு வெள்ளிக்காசு காணாமற் போனால், விளக்கைக் கொளுத்தி, வீட்டைப் பெருக்கி, அதைக் கண்டு பிடிக்கிற வரைக்கும் ஜாக்கிரதையாய்த் தேடாமலிருப்பாளோ?
>
> லூக்கா 15:9 கண்டுபிடித்தபின்பு, தன் சிநேகிதிகளையும் அயல்வீட்டுக் காரிகளையும் கூட வரவழைத்து, காணாமற்போன வெள்ளிக்காசைக் கண்டுபிடித்தேன், என்னோடுகூட சந்தோஷப்படுங்கள் என்பாள் அல்லவா?
>
> லூக்கா 15:10 அதுபோல மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாகச் சந்தோஷமுண்டாயிருக்கிறது என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

உவமை எண் - 35

"ஒரு ஸ்திரீ பத்து வெள்ளிக்காசை உடையவளாயிருந்து அதில் ஒரு வெள்ளிக்காசு காணாமற்போனால் விளக்கைக் கொளுத்தி, வீட்டைப் பெருக்கி, அதைக் கண்டுபிடிக்கிற வரைக்கும் ஜாக்கிரதையாய்த் தேடாமலிருப்பாளோ? ...." (லூக்கா 15:8-10) காணாமல் போனதைத் தேடுவதைக் குறித்து இந்த உவமை விளக்குகிறது.

காணாமல்போன காசு இரட்சிக்கப்படாத பாவிக்கு ஒப்பாயிருக்கிறது. ஒருபொருள் காணாமல்போய் அதிக காலம் ஆகிவிட்டால் அதைத் தேடுவது கடினம். அதுபோலவே ஒரு பாவி பாவத்தில் ஆழமாக மூழ்கிவிட்டால் அவனை மீட்பதும் கடினம். அவனுடைய இருதயம் கடினமாகி விடும். தன் இருதயக் கடினத்தினிமித்தம் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளாமல் நித்திய அழிவில் போய்ச் சேர்ந்துவிடுவான்.

காணாமல்போன ஆடும், காணாமல்போன வெள்ளிக்காசும்

1. காணாமல்போனது - ஒரு ஆடு, ஒரு வெள்ளிக்காசு (லூக்கா 15:4,8)
2. தேடுகிறவன் செய்தது - கருத்தாய் தேடுகிறான் (லூக்கா 15:4,8)
3. தேடுகிறவனின் உறுதி - கண்டுபிடிக்கும் வரையிலும் தேடுகிறான்
4. தேடுகிறவன் அன்பு - திரும்பக் கொண்டு வருகிறான்
5. தேடுகிறவனின் சந்தோஷம் - சந்தோஷமடைகிறான் (லூக்கா 15:6,9
6. தேடுகிறவனின் ஐக்கியம் - தன்னுடைய நண்பர்களோடும், உறவினர்களோடும் சந்தோஷப்படுகிறான்

15 அதிகாரம்

வெள்ளிக்காசு (pieces of silver) - δραχμή - drachmee - 1406

பெண்பால் பெயர்ச்சொல் - வெள்ளிக்காசு - இந்தக் காசு ரோமப்பேரரசின் "தினோரியோன்" (deenarion) என்னும் காசுக்கு இணையானது. இது ஒரு வேலையாளுடைய ஒருநாள் சம்பளம் (மத் 20:1-16)

காசு (cent) - δηνάριον - deenarion - 1220

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பணம், காசு

"அதுபோல மனந்திரும்புகிற ஒரே பாவியின்நிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாகச் சந்தோஷமுண்டாயிருக்கிறது" - (லூக்கா 15:4-7)

"மனந்திரும்புகிற பாவி" - (லூக்கா 13:3)

113. கெட்ட குமாரனைப் பற்றிய உவமை

(1) கெட்ட குமாரன் பிரிந்து போவதும் அவனுடைய பாவங்களும்

லூக்கா 15:11 பின்னும் அவர் சொன்னது: ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள்.

லூக்கா 15:12 அவர்களில் இளையவன் தகப்பனை நோக்கி: தகப்பனே, ஆஸ்தியில் எனக்கு வரும் பங்கை எனக்குத் தரவேண்டும் என்றான். அந்தப்படி அவன் அவர்களுக்குத் தன் ஆஸ்தியைப் பங்கிட்டுக்கொடுத்தான்.

லூக்கா 15:13 சில நாளைக்குப்பின்பு, இளையமகன் எல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டு, தூரதேசத்துக்குப் புறப்பட்டுப் போய், அங்கே துன்மார்க்கமாய் ஜீவனம்பண்ணி, தன் ஆஸ்தியை அழித்துப்போட்டான்.

உவமை எண் - 30

"ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள் ...." (லூக்கா 15:11-32) காணாமல்போன ஆத்துமாவை இரட்சிப்பது தேவனுடைய பிரியம். பரிசேயரின் முறுமுறுப்பையும் தேவனுடைய பிரியத்தையும் இந்த உவமை விளக்குகிறது.

"இரண்டு குமாரர்" - இயேசு கிறிஸ்து கூறிய உவமைகளில் நூறு ஆடுகள் (லூக்கா 15:4) பத்து வெள்ளிக்காசுகள் (லூக்கா 15:8) என்று பார்த்தோம். இப்பொழுது இரண்டு குமாரர்களைப் பற்றி இயேசு கிறிஸ்து கூறுகிறார். காணாமல்போன ஆட்டையும் காணாமல்போன வெள்ளிக்காசையும் அவைக் கிடைக்கும் வரையிலும் தேடினார்கள். வெள்ளிக்காசுக்கும் ஆட்டிற்கும் சுயாதீனமாகத் தீர்மானம் பண்ணும் ஆற்றலும் அறிவும் இல்லை. இந்த உவமையில் கூறப்பட்டிருக்கும் குமாரன் பகுத்தறிவு உள்ளவன். தன்னுடைய முடிவிற்கு இவனே காரணம். தன்னுடைய சுயத் தீர்மானத்தினாலேயே இவன் காணாமல் போனான். இப்பொழுது அதே தீர்மானத்தினாலேயே திரும்பி வந்திருக்கிறான். இவன் கண்டுபிடிக்கப்பட்ட போதும் வீட்டில் சந்தோஷம் உண்டாயிற்று (லூக்கா 15:7,9, 22-24)

"அவர்களில் இளையவன் தகப்பனை நோக்கி: தகப்பனே ஆஸ்தியில் எனக்கு வரும் பங்கை எனக்குத் தரவேண்டும் என்றான். அந்தப்படி அவன் அவர்களுக்குத் தன் ஆஸ்தியைப் பங்கிட்டுக்கொடுத்தான்." ரோமருடைய பிரமாணத்தின்படியும், யூதருடைய பிரமாணத்தின்படியும் ஒரு தந்தை தன்னுடைய எல்லா சொத்துக்களையும் தன் இஷ்டம்போல் செலவு செய்துவிட முடியாது. குமாரர்களுக்குச் சுதந்தரவீதம் கொடுக்க வேண்டும். அந்த தகப்பனுக்குக் குமாரர்கள் இல்லையென்றால் குமாரத்திகள் அவர்களுடைய பங்கைப் பெற்றுக் கொள்வார்கள் (ஆதி 31:14; எண் 27:8) யோபுவின் காரியம் சற்று வித்தியாசமாக இருக்கிறது. (யோபு 42:15) மூத்தகுமாரன் இரட்டிப்பான பங்கைப் பெற்றுக் கொள்வான் (உபா 21:17)

லூக்கா - தொகுப்புரை

15 அதிகாரம்

துன்மார்க்கமாய் ஜீவனம் பண்ணுதல (ruinously) ἀσώτως asootoos - 811

வினையடை - துன்மார்க்கமாய துன்மார்க்கமாய ஜீவனம் பண்ணுதல riotous living, living ruinously) - இந்தக் கிரேக்கச்சொல மற்ற இடஙகளில் துன்மார்க்கமான ஜீவியம், அடங்காத ஜீவியம வெறிகொண்ட ஜீவியம என்று அதன் பெயர்ச்சொல் மூலமாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

துன்மார்க்கம் (ruinously) - ἀσωτία - asootia - 810

பெணபால பெயர்ச்சொல் - வெறிகொணடது அடங்காதது துனமாரக்கம்

(2) கெட்ட குமாரன் அனுபவித்த துயரங்கள்

லூக்கா 15:14 எலலாவற்றையும் அவன செலவழித்த பினபு அநத தேசத்திலே கொடிய பஞசமுணடாயிற்று. அபபொழுது அவன குறைவுபடத்தொடஙகி.

லூக்கா 15:15 அநத தேசத்துக குடிகளில ஒருவனிடத்தில போய் ஒட்டிக்கொணடான அநதக் குடியானவன அவனைத் தன வயலகளில் பனறிகளை மேய்க்கும்படி அனுபபினான

லூக்கா 15:16 அபபொழுது பன்றிகள தினகிற தவிட்டினால தன வயிற்றை நிரபப ஆசையாயிருந்தான ஒருவனும் அதை அவனுக்குக் கொடுக்கவில்லை

செலவழி (spent) δαπανάω dapanaoo 1159

வினைச்சொல் - செலவழி, செலவுசெய், செலவுபண்ணு (to spend, waste, squander) - இதன் மற்ற பொருள்கள் செலவு செய்தல் (spend) (மாற்கு 5:26 2கொரி 12:15), செலவழி (consume) (யாக் 4:3), செலவு செய்தல் (be at charges) (அப் 21:24)

"அவன் குறைவுபடத்தொடங்கினான்" - பாவ சந்தோஷத்தில் மூழ்கியிருப்போர் எல்லோருமே குறைவுபடத்தொடங்குவார்கள் (கலா 6:7-8). இந்த வசனத்தை லூக்கா 15:24 வசனத்தோடு ஒப்பிடவும்.

"அந்த தேசத்துக் குடிகளில் ஒருவனிடத்தில போய ஒட்டிக் கொண்டான்" - அறிமுகமில்லாத அந்நியரிடத்தில் போய்ச்சேர்வதினால இவனுடைய பாதுகாப்பிற்கு உறுதியில்லை

"தேசத்துக் குடிகளில ஒருவன்" - எந்தத் தேசம் என்று குறிப்பிடப்படவில்லை இவனுடைய வீட்டிலிருநது தூரதேசமாக இருக்க வேணடும். (லூக்கா 15:13, அப் 2:39; எபே 2:17)

"பனறிகளை மேய்த்தான" - பனறிகளை மேய்ப்பது யூதமார்க்கத்திலும் வேறுபல மார்க்கங்களிலும் இழிவான வேலையாக கருதப்பட்டது. எகிப்து தேசத்தில பனறிகளை மேய்க்கிறவர்கள சமுதாயத்திலிருநது தள்ளிவைக்கப்பட்டிருநதார்கள் அவர்களால எகிப்தியின தெய்வஙகளை ஆராதிப்பதற்கு அவற்றின கோவில்களுக்கு வரமுடியாது கெட்ட குமாரனுடைய பரிதாபமான நிலைமைய விளக்கிக கூறுவதற்காகவே இயேசு கிறிஸ்து அவனைப பனறிகளை மேய்க்கிறவனாகக் குறிப்பிடுகிறார பாவிகளுடைய நிலைமையும் இதைப்போல பரிதாபமாகவே இருக்கிறது

"பனறிகள் தினகிற தவிட்டினால் தன் வயிற்றை நிரபப ஆசையாயிருந்தான" - அவன தன விருப்பத்திற்கு மாறாக அடிமையாக இருக்கிறான கடினமாக வேலைசெய்கிறான ஆனால் அவனுக்கு உணவு கொடுக்கப படவில்லை. பன்றிகள் தினகிற தவிட்டைத் தின்பதற்குக்கூட விரும்புகிறான் ஆனால் அதுகூட அவனுக்குக் கிடைக்கவில்லை. பன்றியின் தவிட்டை அவன் தின்றுவிட்டால் அவனைக் களவு செய்தவனாகக் கருதி, பிடித்துத் தணடிபபார்கள

15 அதிகாரம்

(3) கெட்ட குமாரன் தன் பாவத்தை உணருகிறான்

லூக்கா 15:17 அவனுக்குப் புத்தி தெளிந்த போது, அவன்: என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்குப் பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது, நானோ பசியினால் சாகிறேன்.

லூக்கா 15:18 நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போய்: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன்.

லூக்கா 15:19 இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்ல, உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன் என்று சொல்லி,

"அவனுக்குப் புத்தி தெளிந்தபோது அவன்: என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்குப் பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது, நானோ பசியினால் சாகிறேன்" - அவனுடைய பரிதாபமான சூழ்நிலை அவனுடைய புத்தியைத் தெளிய வைக்கிறது. இந்த வேலையை அவன் தொடர்ந்து செய்து வந்தால் பட்டினியாகக் கிடந்து மரித்தே போவான். அதையும் சிந்தித்துப் பார்க்கிறான். தன்னுடைய தகப்பனுடைய கூலிக்காரரைப் பற்றியும் சிந்தித்துப் பார்க்கிறான் (லூக்கா 15:17-19).

"தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன்" இதுவே உண்மையான மனந்திரும்புதல். பாவத்தை அறிக்கை செய்தல். உண்மையாகவே பாவத்திற்காக வருந்துதல். பாவத்தின் நிமித்தமாகத் தன்னைத் தாழ்த்துதல் (லூக்கா 13:3).

(4) கெட்ட குமாரன் தன் தகப்பனிடம் திரும்பி வருகிறான் - ஏற்றுக் கொள்ளப்படுகிறான்

லூக்கா 15:20 எழுந்து புறப்பட்டு, தன் தகப்பனிடத்தில் வந்தான். அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி, ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு, அவனை முத்தஞ்செய்தான்.

"கெட்ட குமாரன் எழுந்து புறப்பட்டான்" - மனந்திரும்ப வேண்டுமென்று தீர்மானம் பண்ணினால் மட்டும் போதாது. அதைச் செயலிலும் காண்பிக்க வேண்டும். உண்மையான மனந்திரும்புதல் நமது வார்த்தைகளிலும் கிரியைகளிலும் வெளிப்படும்.

"தன் தகப்பனிடத்தில் வந்தான்" - இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் தன்னை ஆதரிக்கும் தகப்பனிடம்தான் வரவேண்டும். இது நல்ல தீர்மானம்.

"அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டான்" லூக்கா 15:20-24 ஆகிய வசனங்களில் தகப்பன் செய்த காரியங்களை நாம் வாசிக்கிறோம்.

1. அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டான்.
2. மனதுருகினான்.
3. அவனைச் சந்தித்து தன்னுடைய வீட்டிற்கு அழைப்பதற்காக ஓடினான்.
4. அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு, அவனை முத்தஞ்செய்தான்.
5. தன் குமாரனின் பாவ அறிக்கையைக் கேட்டு அவனை மன்னித்தான்.
6. உயர்ந்த வஸ்திரத்தைக் கொண்டு வந்து, அவனுக்கு உடுத்தினான்.
7. அவன் கைக்கு மோதிரத்தைப் போட்டான்.
8. அவன் கால்களுக்குப் பாதரட்சைகளைப் போட்டான்.

15 அதிகாரம்

9 பெரிய விருந்தை ஆயத்தம் பண்ணினான்

10 சந்தோஷப்படத் தொடங்கினான்

(5) பாவ அறிக்கையும் மனந்திரும்புவதும்

லூக்கா 15:21 குமாரன் தகப்பனை நோக்கி, தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன்; இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல என்று சொன்னான்.

(6) வீட்டில் சந்தோஷம்

லூக்கா 15:22 அப்பொழுது தகப்பன் தன் ஊழியக்காரரை நோக்கி: நீங்கள் உயர்ந்த வஸ்திரத்தைக் கொண்டுவந்து, இவனுக்கு உடுத்தி, இவன் கைக்கு மோதிரத்தையும் கால்களுக்குப் பாதரட்சைகளையும் போடுங்கள்;

லூக்கா 15:23 கொழுத்த கன்றைக் கொண்டுவந்து அடியுங்கள், நாம் புசித்து, சந்தோஷமாயிருப்போம்.

லூக்கா 15:24 என் குமாரனாகிய இவன் மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்; காணாமற்போனான், திரும்பவும் காணப்பட்டான் என்றான். அப்படியே அவர்கள் சந்தோஷப்படத் தொடங்கினார்கள்.

"இவன் கைக்கு மோதிரத்தையும் கால்களுக்குப் பாதரட்சைகளையும் போடுங்கள்" அடிமையானவனுக்கு மோதிரம் பாதரட்சையும் கிடையாது. விடுதலையோடு வேலை செய்கிறவனுக்கே இவை கொடுக்கப்படும் (ஆதி 41:42 இராஜா 21:8 எஸ் 8:2 தானி 6:17 யாக 2:2) பழங்காலத்தில் அடிமைகளின் பாதரட்சைகளை அகற்றி விடுவார்கள் (ஏசா 20:2) அவர்கள் விடுதலை பெறும்போது மறுபடியும் அவர்களுக்கு பாதரட்சைகளைக் கொடுப்பார்கள்.

(7) மூத்த குமாரனின் பொறாமையும் கோபமும்

லூக்கா 15:25 அவனுடைய மூத்தகுமாரன் வயலிலிருந்தான். அவன் திரும்பி வீட்டுக்குச் சமீபமாய் வருகிறபோது, கீத வாத்தியத்தையும் நடனக்களிப்பையும் கேட்டு,

லூக்கா 15:26 ஊழியக்காரரில் ஒருவனை அழைத்து: இதென்ன என்று விசாரித்தான்.

லூக்கா 15:27 அதற்கு அவன்: உம்முடைய சகோதரன் வந்தார், அவர் மறுபடியும் சுகத்துடனே உம்முடைய தகப்பனிடத்தில் வந்து சேர்ந்தபடியினாலே அவருக்காகக் கொழுத்த கன்றை அடிப்பித்தார் என்றான்.

லூக்கா 15:28 அப்பொழுது அவன் கோபமடைந்து, உள்ளே போக மனதில்லாதிருந்தான். தகப்பனோ வெளியே வந்து, அவனை வருந்தியழைத்தான்.

லூக்கா 15:29 அவன் தகப்பனுக்குப் பிரதியுத்தரமாக: இதோ, இத்தனை வருஷகாலமாய் நான் உமக்கு ஊழியஞ்செய்து, ஒருக்காலும் உம்முடைய கற்பனையை மீறாதிருந்தும், என் சிநேகிதரோடே நான் சந்தோஷமாயிருக்கும்படி நீர் ஒருக்காலும் எனக்கு ஒரு ஆட்டுக்குட்டியையாவது கொடுக்கவில்லை.

லூக்கா 15:30 வேசிகளிடத்தில் உம்முடைய ஆஸ்தியை அழித்துப்போட்ட உம்முடைய குமாரனாகிய இவன் வந்தவுடனே கொழுத்த கன்றை இவனுக்காக அடிப்பித்தீரே என்றான்.

லூக்கா 15:31 அதற்குத் தகப்பன்: மகனே, நீ எப்போதும் என்னோடிருக்கிறாய், எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதாயிருக்கிறது.

15 அதிகாரம்

லூக்கா 15:32 உன் சகோதரனாகிய இவனோ மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்; காணாமற் போனான் திரும்பவும் [illegible]. ஆனபடியினாலே, நாம் சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியாயிருக்க வேண்டுமே என்று சொன்னான் என்றார்

இளைய குமாரனின் சுபாவங்கள் (லூக்கா 15:12-24)

1 புத்தி குறைந்திருந்தது - விளைவுகள் லூக்கா 15:12-16

2 மனந்திரும்புவதும் தாழ்மையும் லூக்கா 15:17-19

3 வீட்டிற்குத் திரும்பி வருவதும் ஏற்றுக் கொள்ளப்படுவதும் (லூக்கா 15:20)

4 தந்தையின் மனதுருக்கம் (லூக்கா 15:20

5 தந்தையிடம் பாவஅறிக்கை செய்வதும் அவனுடைய தாழ்மைக்கு எடுத்துக்காட்டும். (லூக்கா 15:21)

6 தந்தையின் வெகுமதிகள் லூக்கா 15:22-23)

7 காரணம் (லூக்கா 15:24)

மூத்த குமாரனின் சுபாவங்கள் (லூக்கா 15:25-32)

1 புத்தி குறைந்திருந்தது - விளைவுகள் லூக்கா 15:25-28)

2 கோபம் (லூக்கா 15:28)

3 தந்தையின் சமாதான வார்த்தை லூக்கா 15:28)

4 தன்னைப் பற்றி உயர்த்திக் கூறுதல் (லூக்கா 15:29)

5 தன் தந்தையையும், சகோதரனையும் குறைகூறுதல் (லூக்கா 15:29-30

6 தந்தையின் வெகுமதிகள் (லூக்கா 15:31-32)

7 காரணங்கள் (லூக்கா 15:32)

"அவன் கோபமடைந்து, உள்ளே போக மனதில்லாதிருந்தான்" - மூத்த குமாரனும் பரிசேயரும் பல விஷயங்களில் ஒன்றுபோலவே இருக்கிறார்கள்

மூத்த குமாரனுக்கும், பரிசேயருக்கும் இடையே காணப்படும் ஒப்புமைகள்

1 இருவரும் முறுமுறுத்தார்கள் (லூக்கா 15:2,29-30)

2 பாவிகள் மீது இருவரும் பொறாமையோடு இருந்தார்கள் (லூக்கா 15:2,30)

3 பாவிகள் மீது இருவருக்கும் அன்பில்லை (லூக்கா 15:2,27-32

4 இருவரும் பாவிகள் மன்னிப்பு பெறுவதில் மனதில்லாமல் இருந்தார்கள் (லூக்கா 15:2,28

5 பாவிகள் ஆசீர்வதிக்கப்படுவதை இருவரும் கண்டார்கள் (லூக்கா 15:1-2,25-27)

6 நடைபெற்றுக் கொண்டிருக்கும் காரியங்களை இருவரும்புரிந்து கொள்ளவில்லை (லூக்கா 15:1-2,26

7 இருவரும் கோபமடைந்தார்கள் (லூக்கா 15:2,28)

8 இருவருக்கும் விளக்கம் கூறப்பட்டது (லூக்கா 15:3-7,28)

9 இருவரும் தங்கள் செயல்களை நியாயமானதாக விவாதம் பண்ணினார்கள் (லூக்கா 15:7,29-30)

10 பாவிகளை ஆசீர்வதிக்கக்கூடாது என்று இருவரும் எதிர்பார்த்தார்கள் (லூக்கா 15:2,28-32)

15 அதிகாரம்

11 பாவிகள் மீது இருவருக்கும் அன்பில்லை (லூக்கா 15:2,28-32)

12 இருவரும் தங்களை ஆசீர்வதிக்க வேண்டுமென்று விரும்பினார்கள் (லூக்கா 15:29; லூக்கா 18:9-14)

13 இருவரும் சுயநீதியுடையவர்கள் (லூக்கா 15:29; மத் 23:28)

14 இருவரும் பிரமாணங்களைக் கடைப்பிடிப்பதாகக் கூறினார்கள் (லூக்கா 15:29; லூக்கா 18:9-14; மத் 23:3)

15 இருவரும் குற்றம் கண்டுபிடித்தார்கள் (லூக்கா 15:2,29)

"அவன் தகப்பனுக்குப் பிரதியுத்தரமாக: இதோ இத்தனை வருஷகாலமாய் நான் உமக்கு ஊழியஞ்செய்து ஒருக்காலும் உம்முடைய கற்பனையை மீறாதிருந்தும், என் சிநேகிதரோடே நான் சந்தோஷமாயிருக்கும்படி நீர் ஒருக்காலும் எனக்கு ஒரு ஆட்டுக் குட்டியையாகிலும் கொடுக்கவில்லை" தந்தையின் பதிலும் மூத்த குமாரனின் பதிலும் லூக்கா 15:27-32 ஆகிய வசனங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது. லூக்கா 15:2 ஆவது வசனத்தில் இயேசு கிறிஸ்து முறுமுறுத்த பரிசேயருக்கு பதில் கூறியதுபோன்று இருக்கிறது.

16 அதிகாரம்

114. உண்மையில்லாத உக்கிராணக் காரனைப் பற்றிய உவமை - லூக் 12:4.

லூக்கா 16:1 பின்னும் அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: ஐசுவரியவானாகிய ஒரு மனுஷனுக்கு ஒரு உக்கிராணக் காரன் இருந்தான் அவன் தன் எஜமானுடைய ஆஸ்திகளை அழித்துப் போடுகிறதாக எஜமானுக்கு அறிவிக்கப் பட்டது.

லூக்கா 16:2 அப்பொழுது எஜமான் அவனை வரவழைத்து: உன்னைக் குறித்து நான் இப்படிக் கேள்விப்படுகிற தென்ன? உன் உக்கிராணக்கணக்கை யொப்புவி இனி நீ உக்கிராணக் காரனாயிருக்கக்கூடாது என்றான்

லூக்கா 16:3 அப்பொழுது உக்கிராணக் காரன்: நான் என்ன செய்வேன், என் எஜமான் உக்கிராண விசாரிப்பிலிருந்து என்னைத் தள்ளிப் போடுகிறானே கொத்துகிறதற்கு எனக்குப் பெலனில்லை. இரக்கவும் வெட்கப்படுகிறேன்

லூக்கா 16:4 உக்கிராண விசாரிப்பை விட்டு நான் தள்ளப்படும்போது என்னைத் தங்கள் வீடுகளில் ஏற்றுக்கொள்வார் உண்டாகும்படி செய்யவேண்டியது இன்னதென்று எனக்குத் தெரியவந்தது என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு.

லூக்கா 16:5 தன் எஜமானிடத்தில கடன்பட்டவர்களை ஒவ்வொருவனாக வரவழைத்து: முதலாவது வந்தவனை நோக்கி: நீ என் எஜமானிடத்தில் பட்ட கடன் எவ்வளவு என்றான்

லூக்கா 16:6 அவன்: நூறுகுடம் எண்ணெய் என்றான். அப்பொழுது உக்கிராணக்காரன் அவனை நோக்கி: நீ உன் சீட்டை வாங்கி, உட்கார்ந்து ஐம்பது என்று சீக்கிரமாய் எழுது என்றான்

லூக்கா 16:7 பின்பு அவன் வேறொருவனை நோக்கி: நீ பட்ட கடன் எவ்வளவு என்றான் நூறு கலம் கோதுமை என்றான் அப்பொழுது அவன் நீ உன் சீட்டை வாங்கி, எண்பது என்று எழுது என்றான்

லூக்கா 16:8 அநீதியுள்ள உக்கிராணக் காரன் புத்தியாய்ச் செய்தான் என்று எஜமான் கண்டு, அவனை மெச்சிக்கொண்டான் இவ்விதமாய ஒளியின் பிள்ளைகளைப்பார்க்கிலும் இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததியில அதிக புத்திமான்களாயிருக்கிறார்கள்

உவமை எண் - 87

"ஐசுவரியவானாகிய ஒரு மனுஷனுக்கு ஒரு உக்கிராணக்காரன் இருந்தான் ...." (லூக்கா 16:1-13) நாம் கர்த்தரிடத்தில விசுவாசமுள்ளவர்களாகவும் உண்மையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் இரண்டு எஜமானருக்கு யாராலும் ஊழியம் செய்ய முடியாது

"உக்கிராணக்காரன்" - ஒரு எஜமானுடைய வீட்டையும், வீட்டிலுள்ள பொருட்களையும் வீட்டில வேலை பார்க்கும் வேலையாட்களையும் பராமரிக்கிறவன் தன்னுடைய எஜமானுக்கு நன்மை செய்து அவனுடைய பிள்ளைகளுக்கும் இவன பயிற்சி கொடுக்க வேண்டும் (ஆதி 15:2 ஆதி 24:2; ஆதி 43:19, லூக்கா 12:35-42 லூக்கா 19:12

" அவன தன எஜமானுடைய ஆஸ்திகளை அழித்துப போடுகிறதாக எஜமானுக்கு அறிவிக்கப்பட்டது உக்கிராணக்காரன்மீது குற்றம் சுமத்தப்படுகிறது. தன்னுடைய உக்கிராண ஊழியத்தில அவன பொறுப்புடன நடந்து கொள்ளவில்லை அவன மூலமாக எஜமானுக்கு இலாபம் வருவதற்குப் பதிலாக ஒருவேளை நஷ்டம் வந்திருக்கலாம்.

"இனி நீ உக்கிராணக்காரனாயிருக்கக் கூடாது" - அவனுடைய கணக்கு வழக்குகள் சரியாக இருந்து அவனிடத்தில ஒரு தவறும் இல்லையென்று நிரூபிக்கப்படும் வரையிலும் அவனால உக்கிராணக்காரனாக தொடர்ந்து வேலை செய்ய முடியாது.

16 அதிகாரம்

"கொத்துகிறதற்குஎனக்குப் பெலனில்லை இரக்கவும் வெட்கப்படுகிறேன்" - உக்கிராணக்காரனுடைய சரீரத்தில் வேலை செய்வதற்குப் பெலனில்லை பிச்சை எடுத்து பிழைப்பதற்கும் வெட்கப்படுகிறான் ஆனால் தன் எஜமானை ஏமாற்ற அவன் வெட்கப்படவில்லை

"என்னைத் தங்கள் வீடுகளில் ஏற்றுக்கொள்வார் உண்டாகும்படி செய்ய வேண்டியது" - தன்னுடைய எஜமானிடம் கடன் பட்டவர்கள் தன்னை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று ஒருசில காரியங்களைச் செய்கிறான்

"நூறுகுடம் எண்ணெய்" - அக்காலத்தில் எண்ணெயை அளப்பதற்குக் குடத்தைப் பயன்படுத்தினார்கள் ஒரு குடம் என்பது சுமாராக 40 லிட்டர் அளவாகும்.

நூறுகுடம் எண்ணெய் (hundred measures of oil) - βάτος - batos - 943

ஆண்பால் பெயர்சொல் - குடம்

"நூறு கலம் கோதுமை" - தானியத்தை அளப்பதற்குப் பழைய ஏற்பாட்டுக் காலத்திலும். புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் பயன்படுத்தப்பட்ட அளவு. ஒரு கலம் என்பது சுமார் 70 மரக்கால் அல்லது 80 லிட்டர் அளவாகும்

நூறு கலம் கோதுமை (hundred measures of wheat) - κόρος - koros - 2884

ஆண்பால் பெயர்ச்சொல் - கலம்

கலம் (bushels) - כּר - kore - 3734

ஆண்பால் பெயர்ச்சொல் - மரக்கால கலம்

"நீ உன் சீட்டை வாங்கி, எண்பது என்று எழுது" - உக்கிராணக்காரனுக்கு எஜமான் சில பொறுப்புக்களைக் கொடுத்திருந்தான் கடன் கொடுப்பது ஒப்பந்தங்கள் செய்வது, குத்தகைக்கு விடுவது, அதற்குரிய ஒப்பந்தங்களை எழுதுவது ஆகியவை எல்லாமே உக்கிராணக்காரனுடைய வேலை

"நீ உன் சீட்டை வாங்கி, எண்பது என்று எழுது" - உக்கிராணக்காரனுக்கு எஜமான் சில பொறுப்புக்களைக் கொடுத்திருந்தான் கடன் கொடுப்பது ஒப்பந்தங்கள் செய்வது, குத்தகைக்கு விடுவது, அதற்குரிய ஒப்பந்தங்களை எழுதுவது ஆகியவை எல்லாமே உக்கிராணக்காரனுடைய வேலை. எஜமானிடம் கடன்பட்டவர்களிடத்தில் இந்த உக்கிராணக்காரன் சென்று, கடன் ஒப்பந்தப் பத்திரங்களை எல்லாம் மாற்றி எழுதுமாறு கூறுகிறான் இதன் மூலமாக கடன் பட்டவர்களுக்கு ஆதாயம் உண்டாகும். உக்கிராணக்காரன் வேலையிலிருந்து நின்றபிறகு கடனாளிகள் இவனுக்கு நண்பர்களாக இருப்பார்கள்

"அநீதியுள்ள உக்கிராணக்காரன் புத்தியாய்ச் செய்தான் என்று எஜமான் கண்டு, அவனை மெச்சிக்கொண்டான்" - அந்த உக்கிராணக் காரனுடைய எஜமான் அவனை மெச்சிக் கொண்டான் ஆனால் இயேசு கிறிஸ்து அவனைப் பாராட்டவில்லை

"ஒளியின் பிள்ளைகளைப்பார்க்கிலும் இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததியில் அதிக புத்திமான்களாயிருக்கிறார்கள்" - ஒளியின் பிள்ளைகள் என்பது விசுவாசிகளைக் குறிக்கும் இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் என்பது அவிசுவாசிகளைக் குறிக்கும்

115. இருமனமாக இருப்பதை இயேசு கடிந்து கொள்கிறார் - மத் 6:22

லூக்கா 16:9 நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் நீங்கள் மாளும்போது உங்களை நித்தியமான வீடுகளிலே ஏற்றுக்கொள்வார்கள் உண்டாகும்படி, அநீதியான உலகப்பொருளால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள்

லூக்கா 16:10 கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான், கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான்

லூக்கா 16:11 அநீதியான உலகப் பொருளைப்பற்றி நீங்கள் உண்மையாயிராவிட்டால் யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்?

16 அதிகாரம்

லூக்கா 16:12 வேறொருவனுடைய காரியத்தில் நீங்கள் உண்மையுள்ளவர்களாயிராவிட்டால், உங்களுக்கு யாதொன்றைச் சொந்தமாகக் கொடுப்பவர் யார்?

லூக்கா 16:13 எந்த ஊழியக்காரனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்யக்கூடாது; ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான், அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை அசட்டைபண்ணுவான். தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களாலே கூடாது என்றான்.

"கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான்" - லூக்கா 16:9 ஆவது வசனத்தின் உண்மையான பொருளை லூக்கா 16:10-13 ஆவது வசனங்களில் விளக்குகிறார். நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்கிறவன் உண்மையுள்ளவனாகவும், நீதியுள்ளவனாகவும் இருக்க வேண்டும் (லூக்கா 16:10). ஒருவன் உலக ஐசுவரியத்தில் உண்மையுள்ளவனாக இருந்தால்தான் அவனுக்கு பரலோகத்தின் ஐசுவரியம் கிடைக்கும் (லூக்கா 16:11). நம்மிடத்தில் மற்றவர்கள் பொறுப்பாக ஒப்படைத்துள்ள காரியங்களுக்கு நாம் உத்திரவாதம் உள்ளவர்களாக இருக்க வேண்டும் (லூக்கா 16:12). ஏனெனில் இரண்டு எஜமான்களுக்கு ஒரே வேளையில் யாராலும் ஊழியஞ்செய்ய முடியாது (லூக்கா 16:13).

"எந்த ஊழியக்காரனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்யக்கூடாது. ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான், அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை அசட்டைபண்ணுவான். தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களாலே கூடாது" - இயேசு கிறிஸ்து இதை வலியுறுத்திக் கூறியிருக்கிறார் (மத் 6:24; மத் 7:21,24-29; மத் 12:50; மத் 13:20-22; மத் 18:15-17; யோவான் 6:27; யோவான் 8:34-36; யோவான் 15:1-8). தேவனுடைய ஊழியக்காரர்களும் இந்தச் சத்தியத்தை வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள் (ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13; 1கொரி 6:9-11; 1கொரி 9:27; கலா 1:6-7; கலா 5:4,19-21; கலா 6:7-8; 1தெச 3:8; 1தீமோ 5:11-15; 1தீமோ 6:19-21; 2தெச 2:12-16; எபி 3:6,12-14; எபி 6:4-9; எபி 10:26-29; யாக் 5:19-20; 1பேதுரு 3:8,15; 2பேதுரு 1:3-10; 2பேதுரு 2:20-22; 2யோவான் 1:9-10; யூதா 1:20-24).

"தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ் செய்ய உங்களாலே கூடாது" - தேவனுக்கும் சாத்தானுக்கும் ஒரே வேளையில் யாராலும் ஊழியஞ்செய்ய முடியாது. சாத்தானுக்கு ஊழியஞ்செய்கிறவர்கள் அவனோடு தங்களுடைய முடிவை அனுபவிப்பார்கள் (மத் 25:41,46). தேவனுக்கு ஊழியஞ் செய்பவர்கள் தேவனோடு நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வார்கள் (1தெச 4:16; யோவான் 14:1-3).

116. ஜீவியத்தின் இரண்டு வெவ்வேறு நிலைகள் - (சாமு 16:7; 1கொரி 1:27)

லூக்கா 16:14 இவைகளையெல்லாம் பொருளாசைக்காரராகிய பரிசேயரும் கேட்டு, அவரைப் பரியாசம் பண்ணினார்கள்.

லூக்கா 16:15 அவர் அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷர் முன்பாக உங்களை நீதிமான்களாகக் காட்டுகிறீர்கள், தேவனோ உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார்; மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது.

பொருளாசைக்காரன் (covetous)

φιλάργυρος philagyros 5366

பொருளாசைக்காரரான, பணப்பிரியரான (money lovers) - இந்த வார்த்தை இந்த வசனத்திலும் 2தீமோ 3:2 ஆவது வசனத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

16 அதிகாரம்

பரியாசம் பண்ணு (derided) ἐκμυκτηρίζω ekmukteerizoo - 1592

வினைச்சொல் - இகழ், பரியாசம் பண்ணு (to sneer at, turn up the nose at, deride) இந்த வார்த்தை இந்த வசனத்திலும் லூக்கா 23:35 ஆவது வசனத்திலும் மட்டுமே பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இந்தக் கிரேக்கச் சொல்லிற்கு இணையான எபிரெய வார்த்தை "லா-அக்" law-ag ஆகும்

பரிகாசம் (deride) - לָעַג - law-ag' - 3932

வினைச்சொல் - பரிகாசம் நகை சந்தோஷப்படு சங் 2:4 சங் 22:7 சங் 59:8 எசே 23:32 எசே 36:4 ஓசி 7:16

"நீங்கள் மனுஷர்முன்பாக உங்களை நீதிமான்களாகக் காட்டுகிறீர்கள் தேவனோ உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார் (மத் 23, மாற்கு 7:1-12

117. இரண்டு வெவ்வேறு திருவசனங்கள் - (யோவான் 1:17 2கொரி 3:6-15; கலா 3:17-25, 4:21-31 கொலோ 2:14 17; எபி 7:10)

லூக்கா 16:16 நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசன வாக்கியங்களும் யோவான் வரைக்கும் வழங்கிவந்தது. அதுமுதல் தேவனுடைய ராஜ்யம் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிறது யாவரும் பலவந்தமாய் அதில் பிரவேசிக்கிறார்கள்

லூக்கா 16:17 வேதத்தில் ஒரு எழுத்தின் உறுப்பு அவமாய்ப் போவதைப்பார்க்கிலும். வானமும் பூமியும்ஒழிந்துபோவதுஎளிதாயிருக்கும்.

"நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசன வாக்கியங்களும் யோவான்வரைக்கும் வழங்கி வந்தது அதுமுதல் தேவனுடைய ராஜ்யம் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிறது யாவரும் பலவந்தமாய் அதில் பிரவேசிக்கிறார்கள்" - (மத் 11:12-13)

"வேதத்தில் ஒரு எழுத்தின் உறுப்பு அவமாய்ப் போவதைப்பார்க்கிலும், வானமும் பூமியும் ஒழிந்துபோவது எளிதாயிருக்கும் - (மத் 24:35)

118. மனைவியைத் தள்ளிவிடுவது சம்பந்தமான பிரமாணம் - (மத் 19:3)

லூக்கா 16:18 தன் மனைவியைத் தள்ளிவிட்டு, வேறொருத்தியை விவாகம் பண்ணுகிறவன் விபசாரஞ் செய்கிறான், புருஷனாலே தள்ளப் பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ்செய்கிறான்

"தன் மனைவியைத் தள்ளிவிட்டு, வேறொருத்தியை விவாகம்பண்ணுகிறவன் விபசாரஞ்செய்கிறான் புருஷனாலே தள்ளப் பட்டவளை விவாகம்பண்ணுகிறவனும் விபசாரஞ் செய்கிறான்" - மத் 5:31-32 மத் 19:1-9)

119. ஐசுவரியமுள்ளவன், தரித்திரன் ஆகிய இருவரின் அனுபவங்கள்

(1) பூமியில் அவர்களுடைய வாழ்க்கை

லூக்கா 16:19 ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான் அவன் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து அநுதினமும் சம்பிரமமாய்வாழ்ந்துகொண்டிருந்தான்

லூக்கா 16:20 லாசரு என்னும் பேர்கொண்ட ஒரு தரித்திரனும் இருந்தான் அவன் பருக்கள் நிறைந்தவனாய், அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து

லூக்கா 16:21 அவனுடைய மேஜையிலிருந்து விழுந் துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்; நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கிற்று.

லூக்கா - தொகுப்புரை

16 அதிகாரம்

"ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான்" - இதை ஒரு உவமை போல இயேசு கிறிஸ்து கூறியிருந்தாலும், இது உண்மைச் சம்பவம் போலவே தெரிகிறது. இந்தச் சம்பவத்தில் இரண்டு பிச்சைக்காரர்கள் வருகிறார்கள். ஒருவன் இம்மையில் பிச்சையெடுக்கிறான். மற்றொருவன் மறுமையில் பிச்சை யெடுக்கிறான். மரித்த ஆத்துமாக்களின் உண்மை நிலைமையை இந்த நிகழ்ச்சி விளக்குகிறது.

லாசருவையும், ஐசுவரியவானையும் பற்றிய காரியங்கள்

1 இம்மையில் நாம் வாழும் வாழ்வும் மறுமையில் நாம் வாழும் வாழ்வும் வித்தியாசமாக இருப்பதற்கு வாய்ப்புள்ளது. (லூக்கா 16:22-32)

2 ஏழைகள் இம்மையில் இரட்சிக்கப் பட்டிருந்தால் மறுமையில் ஐசுவரியவான்களைப் போல இருப்பார்கள். இரட்சிக்கப்படாவிட்டால் நரகத்தில் பாடுகளை அனுபவிப்பார்கள்.

3 ஐசுவரியவான்கள் இம்மையில் இரட்சிக்கப் பட்டால் மறுமையில் ஐசுவரியவான்களாகவும் இருப்பார்கள். இரட்சிக்கப்படாவிட்டால் நரகத்தில் பாடுகளை அனுபவிப்பார்கள்.

4 இம்மையில் ஏழையாக இருந்தாலும் ஐசுவரியவானாக இருந்தாலும் மறுமைக்குரிய காரியங்களைச் சிந்தித்துச் செயல்பட வேண்டும்.

5 ஏழைக்கும், ஐசுவரியவானுக்கும் மரணம் நிச்சயம் வரும். அவர்களுடைய சரீரங்கள் அடக்கம் பண்ணப்படும்.

6 இரட்சிக்கப்பட்டவர்களைத் தேவ தூதர்கள் பரதீசுக்கு எடுத்துச் செல்வார்கள். (லூக்கா 16:22; லூக்கா 23:43. பரதீசு அப்போது பூமியின் ஆழத்தில் இருந்தது. (மத் 12:40; சங் 16:10; எபே 4:8-10; எபி 2:14-15 ஆகிய வசனங்களுக்கு பின்பு நீதிமான்கள் பரலோகத்திற்குச் செல்கிறார்கள் (2கொரி 5:8; பிலி 1:21-24; எபி 12:22-23 வெளி 6:9-11)

7 மரித்தவர்களின் ஆத்துமாக்களை வைப்பதற்கு ஒரு இடம் உண்டு (லூக்கா 16:22)

8 இரட்சிக்கப்படாதவர்கள் மரித்தபின்பு நரகத்திற்குப் போவார்கள் (லூக்கா 16:23; யாக் 2:26; ஏசா 14:9; வெளி 20:7-15; சங் 9:17; சங் 55:15

9 இரட்சிக்கப்படாதவர்கள் நரகத்தில் வேதனைகளை அனுபவிப்பார்கள் (லூக்கா 16:23-28; உபா 32:22 2சாமு 22:6; சங் 18:5; சங் 16:3 சங் 139:8; ஏசா 14:9-11; எசே 32:21; உன் 8:6; ஆப 2:5)

10 பௌதிக சரீரத்தைப் போலவே ஆவியும், ஆத்துமாவும் பேசும், வஸ்திரம் அணிந்து கொள்ளும், உணர்வுடன் இருக்கும் (லூக்கா 16:22-24; ஏசா 14:9-11; மத் 17:3; சங் 16:10; எபி 12:22-23 வெளி 6:9-11)

11 ஒருவனை நரகத்திற்குள் தள்ளுவதற்கு தேவனுக்கு மட்டுமே அதிகாரம் உண்டு. (லூக்கா 16:22-32, எசே 31:16; சங் 9:17, மத் 10:28, லூக்கா 12:4-5 வெளி 20:10 5 மத் 25:41,46 2பேதுரு 2:4 யூதா 1:6-7)

12 நரகத்திலும், பரலோகத்திலும் உள்ள ஆத்துமாக்கள் நித்திய காலமாக இருக்கும். (லூக்கா 16:22 32 1பேதுரு 3:4 1பேதுரு 4:6, லூக்கா 20:38 2கொரி 5:8, பிலி 1:21 24 எபி 12:22 23 வெளி 6:9-11

13 நரகத்திலும், பரலோகத்திலும் ஜெபமும், சம்பாஷணையும் தொடர்ந்து நடைபெறும். (லூக்கா 16:22-32, ஏசா 14:9-11; யோவான் 2:2, எசே 32:21; வெளி 6:9-11

16 அதிகாரம்

4 அக்கினியும், வேதனையும் நரகத்தில எப்போதும் இருக்கும். (லூக்கா 16:22-32; வெளி 14:9-11 வெளி 19:20; வெளி 20:10-15; வெளி 21:8; ஏசா 66:22-24 மத்8:12,மத்13:42,49-50,மத் 24:51 மத் 25:41,46; மாற்கு 9:43-49)

5. இரட்சிக்கப்படாதவர்கள் தாங்கள் மரித்த பின்பு நியாயத்தீர்ப்பு நாள் வரையிலும்நரகத்திலேயே இருப்பார்கள் (லூக்கா 16:26; வெளி 20:11-15)

6 இம்மையில நாம் இரட்சிக்கப் பட்டிருந்தால, நரகத்தின் ஆக்கினை யிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம (நீதி 23:14 23:14; யோவான் 3:16. யூதா 2:17-14; லூக்கா 13:3-5; 2கொரி 5:17-21)

7 தற்கால நரகமும், நித்திய நரகமும பூமியின தாழ்வான பகுதிகளில உள்ளன (lower parts of the earth) (சங் 63:9; எபே 4:8-10 மத் 12:40) பூமியின ஆழத்தில உள்ளன (nether parts of the earth) (எசே 31:14-18; எசே 32:18-27) பூமிக்கு அடியில உள்ளன (beneath the earth) (நீதி 15:24 ஏசா 14:9-15, எசே 31:14-18 எசே 32:18 27, வெளி 21:8)

18 சாத்தான அவனுடைய தூதகள பிசாசுகள, இரட்சிக்கப்படாத மனுஷாகள எலலோருமே நித்திய நரகத்தில தள்ளப்படுவாாகள (மத்8:29, மத் 25:41, வெளி 20:10-15; 2பேதுரு 2:4 யூதா 1:6-7)

நரகமும், கல்லறையும் ஒன்றல்ல. கல்லறை சரீரம் அடக்கம் பண்ணப்படும் இடம். நரகம் இரட்சிக்கப்படாதோரின் ஆத்துமா போய் சேரவேண்டிய இடம் (சங் 9:17, லூக்கா12:5 லூக்கா 16:26; வெளி 20:3; ஏசா 30:33)

(2) மரித்த பின்பு அவர்களுடைய அனுபவம்

லூக்கா 16:22 பின்பு அந்தத் தரித்திரன் மரித்து தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான் ஐசுவரியவானும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டான்

லாசருவைப் பற்றிய காரியங்கள்

1 அவன் ஒரு தரித்திரன் சரீரத்தில் பருக்கள் நிறைந்தவன் (லூக்கா 16:20-22)

2 ஐசுவரியவானுடைய வாசலருகே அவனுடைய மேஜையிலிருந்து விழுந் துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான் (லூக்கா 16:21)

3 அவன் மரித்தான் அவனுடைய சரீரம் அடக்கம் பண்ணப்பட்டது (லூக்கா 16:22)

4 தேவதூதர் அவனை ஆபிரகாமுடைய மடியிலே (பரதீசிலே) கொண்டுபோய் விட்டாாகள (லூக்கா 16:22

5 அவன் ஆபிரகாமோடும் இரட்சிக்கப்பட்ட எல்லோரோடும் இருந்தான் (லூக்கா 16:23)

6 அவன ஆறுதலாக இருந்தான் அவனுக்குபாடுகளும், வேதனைகளும் இல்லை இரட்சிக்கப் பட்டவாகளிடமிருந்து அவன தள்ளி வைககபபடவிலலை அவன இரக்கத்திற்காகக் கெஞ்சவில்லை. தன் கடந்த காலத்திற்காக வருந்தவிலலை அவனுக்குத் தாகம் எடுக்கவிலலை (லூக்கா 16:23 25

16 அதிகாரம்

லாசருவைப் பற்றிய காரியங்கள்

1 அவன் ஒரு தரித்திரன் சரீரத்தில் பருக்கள் நிறைந்தவன் (லூக்கா 16:20-22)

2 ஐசுவரியவானுடைய வாசலருகே அவனுடைய மேஜையிலிருந்து விழுந் துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான் (லூக்கா 16:21)

3 அவன் மரித்தான் அவனுடைய சரீரம் அடக்கம் பண்ணப்பட்டது. (லூக்கா 16:22)

4 தேவதூதர் அவனை ஆபிரகாமுடைய மடியிலே பரதீசிலே கொண்டுபோய் விட்டார்கள் (லூக்கா 16:22)

5 அவன் ஆபிரகாமோடும் இரட்சிக்கப்பட்ட எல்லோரோடும் இருந்தான் (லூக்கா 16:23)

6 அவன் ஆறுதலாக இருந்தான் அவனுக்குப் பாடுகளும் வேதனைகளும் இல்லை இரட்சிக்கப்பட்டவர்களிடமிருந்து அவன் தள்ளி வைக்கப்படவில்லை அவன் இரக்கத்திற்காகக் கெஞ்சவில்லை தன் கடந்த காலத்திற்காக வருந்தவில்லை. அவனுக்குத் தாகம் எடுக்கவில்லை (லூக்கா 16:23-25)

7 அவனுடைய ஆத்துமாவும், ஆவியும் தேவனோடு நித்திய காலமாக சந்தோஷமாக இருந்தது. (லூக்கா 16:24-26)

"தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான்" - தேவதூதர்கள் மரித்த சரீரத்தைக் கல்லறைக்குக் கொண்டுபோய் விடமாட்டார்கள் பரதீசிற்குக் கொண்டுபோய் விடுவார்கள் (லூக்கா 16:22, எபி 12:23; வெளி 6:9-11; 2கொரி 5:8, பிலி 1:21-24)

"ஆபிரகாமின் மடி" - இது யூதருடைய வழக்குச்சொல். பரதீசு என்பது இதன் பொருள் லூக்கா 23:43 ஆவது வசனத்தில் இது பரதீசு என்று அழைக்கப்படுகிறது பரதீசு பூமியின் தாழ்விடங்களில் உள்ளது (எபே 4:8-10 மத் 12:40) மூன்றாம் வானத்தில் வேறொரு பரதீசும் உள்ளது. (2கொரி 12:1-4 வெளி 2:7)

பரதீசு (paradise) - παράδεισος - paradeisos - 3857

ஆண்பால் பெயர்ச்சொல் - பரதீசு (park, forest, orchard) - ஏதேன் தோட்டத்தைக் குறிப்பதற்கு செப்துவஜிந்தில் இச்சொல்லே பயன்படுத்தப்பட்டிருக்கிறது

வனம் (garden) - פַּרְדֵּס - par-dace' - 6508

ஆண்பால் பெயர்ச்சொல் - வனம், சிங்காரவனம் - பழத்தோட்டம் (orchard) (உன் 4:13; பிர 2:5) வனம் (forest) (நெகே 2:8)

"மடியில் இருப்பது" என்னும் வாக்கியம் அந்த வேளையில் அந்த நபரோடு நெருங்கி இருப்பது என்னும் பொருளைத் தரும் (யோவான் 13:23) நெருங்கிய உறவு என்னும் இந்த வாக்கியத்திற்கு ஒரு பொருள் உள்ளது. (2சாமு 12:3 ஏசா 40:11 யோவான் 1:18)

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுவதற்கு முன்பாக நீதிமான்களில் அநேகர் மரித்திருக்கிறார்கள் அவர்கள் மரித்த பின்பு, அவர்களுடைய ஆத்துமாக்களைப் பிசாசு அவர்களுடைய விருப்பத்திற்கு மாறாக பாதாளத்தில் சிறைபிடித்து வைத்திருந்தான் (எபி 2:14-15)

இயேசு கிறிஸ்து மரித்தபோது அவருடைய சரீரத்தைக் கல்லறையில் அடக்கம் பண்ணினார்கள் அவர் பாதாளத்திற்குச் சென்று அங்கு சிறைப்பட்டவர்களை விடுதலையாக்கி. தம்மோடு கூட அழைத்து வந்தார் அவர் பரலோகத்திற்குப் பரமேறினபோது பிசாசின் சிறையிருப்பிலிருந்து தம்மால் விடுவிக்கப்பட்டவர்களையும், தம்மோடு அழைத்துச் சென்றார் (மத் 12:40 எபே 4:8-10)

16 அதிகாரம்

இயேசு கிறிஸ்து பாதாளத்தில் மரித்துப் போன நீதிமான்களைச் சாத்தானின் சிறையிருப்பிலிருந்து விடுவித்த பின்பு, அந்த இடம் வெறுமையாக இருக்கிறது. ஏனென்றால் இயேசு உயிர்த்தெழுந்த பின்பு, மரித்துப்போன பரிசுத்தவான்களின் ஆத்துமாக்களைப் பிசாசு பாதாளத்தில் சிறைபிடித்து வைப்பதில்லை. பரிசுத்தவான்கள் மரித்தவுடன் அவர்களுடைய ஆத்துமாக்கள் உடனடியாகப் பரலோகத்திற்குச் சென்று தங்களுடைய சரீர உயிர்த்தெழுதலுக்காகக் காத்துக் கொண்டிருக்கும் (2 கொரி 5:8; பிலி 1:21-24; எபி 12:22-24; வெளி 6:9-11)

இயேசு கிறிஸ்துவிடம் இப்போது பாதாளத்தின் திறவுகோல்களும் மரணத்தின் திறவுகோல்களும் உள்ளன (வெளி 1:18) பூமிக்குக் கீழேயுள்ள பாதாளத்தில் இரண்டு பிரிவு உண்டு. ஒன்று நீதிமான்களின் ஆத்துமாக்கள் தங்குமிடம். மற்றொன்று பாவிகளின் ஆத்துமாக்கள் தங்குமிடம். இயேசு கிறிஸ்து பாதாளத்திலுள்ள நீதிமான்களை விடுதலை பண்ணிய பின்பு, அந்த இடம், இன்று வரையிலும் காலியாகவே இருக்கிறது. ஆனால் பாதாளத்தில் பாவிகளின் ஆத்துமாக்கள் தங்குமிடத்தில் கூட்டம் அதிகமாக இருக்கிறது. அனுதினம் மரித்துப் போகும் பாவிகளுடைய ஆத்துமாக்கள் இங்குதான் வரும்.

ஆயிரம் வருஷ அரசாட்சியின் முடிவில் பாதாளம் தன்னிடத்திலுள்ள ஆத்துமாக்களைக் கணக்கொப்புவிக்கும். அந்த நாள் வரையிலும் மரித்துப் போன பாவிகளின் ஆத்துமாக்கள் அங்கேதான் தங்கியிருக்கும். பாதாளம் தன்னிடத்தில் சிறைபிடிக்கப் பட்டிருந்த ஆத்துமாக்களைக் கணக்கொப்புவிக்கும்போது கல்லறைகளும் தங்களிடத்திலுள்ள சரீரங்களையும் கணக்கொப்புவிக்கும்.

அதன்பின்பு, துன்மார்க்கருடைய சரீரம் ஆத்துமா, ஆவி எல்லாமே நித்திய நரகத்தில் நித்திய காலத்திற்கும் தள்ளப்படும் (வெளி 20:11-15)

1. அவன் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து, அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்து கொண்டிருந்தான் (லூக்கா 16:19)

2. அவன் மரித்தான் அவனுடைய சரீரத்தை அடக்கம் பண்ணினார்கள் (லூக்கா 16:22)

3. அவனுடைய ஆத்துமா பாதாளத்திற்குச் சென்றது (லூக்கா 16:23)

4. அவன் பாதாளத்தில் வேதனைப் பட்டான் (லூக்கா 16:23-25,28)

5. அவனுக்குக் கண்கள் இருந்தன. அவனால் பார்க்க முடிந்தது. ஆட்களை அவனால் அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது (லூக்கா 16:23)

6. அவன் நரகத்திலிருந்து "தகப்பனாகிய ஆபிரகாமே நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும் படி அவனை அனுப்பவேண்டும் இந்த அக்கினிஜுவாலையில் வேதனைப் படுகிறேனே" என்று கூப்பிட்டான் (லூக்கா 16:24)

7. அவனுக்கு நாவு, கண்கள், நினைவு, உணர்வு சித்தம், சத்தம், தன்னுடைய சகோதரர்களைக் குறித்த உணர்வு ஆகிய எல்லாமே இருந்தது. (லூக்கா 16:23-31)

(3) மரித்த பின்பு அவர்களுடைய ஜீவியங்கள்

லூக்கா 16:23 பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது தன் கண்களை ஏறெடுத்து தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான்

லூக்கா 16:24 அப்பொழுது அவன் தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்ப வேண்டும்; இந்த அக்கினி ஜுவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான்

லூக்கா - தொகுப்புரை

16 அதிகாரம்

லூக்கா 16:25 அதற்கு ஆபிரகாம், மகனே, நீ பூமியிலே உயிரோடிருக்குங் காலத்தில் உன் நன்மைகளை அநுபவித்தாய், லாசருவும் அப்படியே தீமைகளை அநுபவித்தான், அதை நினைத்துக்கொள்; இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான், நீயோ வேதனைப்படுகிறாய்.

பாதாளம் (hell) - ᾅδης - hadees - 86

ஆண்பால் பெயர்ச்சொல் - பாதாளம் இறந்தவர்கள் பாதாளத்தில் தற்காலிகமாகத் தங்கும் இடம் (the unseen world of departed spirits) - 10 இடங்களில் நரகம் பாதாளம் (hell) என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. (மத் 11:23; மத் 16:18; லூக்கா 10:15 லூக்கா 16:23; அப் 2:27,31; வெளி 1:18; வெளி 6:8; வெளி 20:13-14) ஒரே வசனத்தில் மட்டும் "கல்லறை" (grave) என்று மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. (1கொரி 15:55). நரகம் என்பதே இதன் சரியான மொழிபெயர்ப்பாகும். இந்தக் கிரேக்கச் சொல்லிற்கு இணையான எபிரெய வார்த்தை "சீயோல்" (sheh-ole', sheh-ole)

பாதாளம் (hell) - שְׁאוֹל - sheh-ole', sheh-ole' - 7585

பொதுப்பெயர்ச்சொல் - பாதாளம் நரகம் (சங் 9:17)

வேதனை (torments) - βάσανος - basanos - 931

ஆண்பால் பெயர்ச்சொல் - வேதனை (going to the bottom, the lowest torture or torment) (லூக்கா 16:23,28)

வேதனை (torments) - βασανίζω - basanizoo - 928

வினைச்சொல் - வேதனைப்படு, அலைவுபடு, வருத்தப்படு, வாதிக்கப்படு, வேதனைப்படு (to torture, be in pain) (மத் 8:6,29 மாற்கு 5:7; லூக்கா 8:28, வெளி 9:5; வெளி 11:10; வெளி 14:10 வெளி 20:10)

வேதனை (torture) - βασανισμός - basanismos - 929

ஆண்பால் பெயர்ச்சொல் - வேதனை வாதை torture (வெளி14:11)

வேதனைப்படு (sorrow) - ὀδυνάω - odynaoo - 3600

வினைச்சொல் - வேதனைப்படு, துக்கப்படு (the state of grief, sorrow, and torment) (லூக்கா 16:24-25)

இரட்சிக்கப்படாதவர்கள் நரகத்தில் வேதனை அநுபவிப்பதற்கான காரணங்கள்

1. பரலோகத்தில் நீதிமான்கள் மகிமையின் வஸ்திரம் தரித்து, நித்திய ஜீவனை அநுபவிப்பதை நரகத்திலிருந்து காணும்போது வேதனை உண்டாகும் (லூக்கா 16:23)

2. தங்களுடைய பாவத்தினாலேயே தங்களுடைய ஆத்துமா கெட்டுப்போய், இப்போது நரகத்தில் தள்ளப்பட்டிருக்கிறதென்னும் உணர்வு (லூக்கா 16:25)

3. இந்த வேதனையிலிருந்து விடுபட்டு, நன்மையைப் பெற வேண்டும் என்னும் நித்திய ஆவல் (லூக்கா 16:25)

4. இம்மையில் இரட்சிக்கப்படுவதற்கு இருந்த வாய்ப்புக்களையும், அதைத் தவற விட்டதையும் எண்ணி ஏங்குவது (லூக்கா 16:25

5. இம்மையில் தாங்கள் செய்த துர்க்கிரியைகளுக்காக மனம் வருந்துவது. இனிமேல் அதற்காக மனம்வருந்திப் பயனில்லை. இனிமேல் இரட்சிக்கப் படுவதற்கு வாய்ப்பில்லை. (லூக்கா 16:25)

லூக்கா – தொகுப்புரை

16 அதிகாரம்

6 நரகத்தின் பாடுகளிலிருந்து தப்பிப்பதற்கு வழியும் இல்லை நம்பிக்கையும் இல்லை. (லூக்கா 16:26)

7 தங்களுக்குப்பிரியமானவர்களிடமிருந்து பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். இரட்சிக்கப்பட்டவர்கள் இருக்கும் இடத்திற்கு இவர்களால் கடந்து போக முடியாதபடி இவர்களுக்கு நடுவில் ஒரு பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது. லூக்கா 16:23-26

8 தங்களுடைய மோசமான ஜீவியத்தினால் தங்களுடைய நண்பர்களும், தங்களுக்குப் பிரியமானவர்களும் தங்களுடைய ஆத்துமாக்களை அழித்துப் போட்டார்கள் என்னும் குற்ற உணர்வு. லூக்கா 16:27-31

9 தங்களுக்குப் பிரியமானவர்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்று விரும்பியும் தங்களால் எதுவும் செய்ய முடியாத பரிதாபமான நிலைமை. லூக்கா 16:29-31

10 அக்கினியும், கந்தகமும் அவர்களை வாட்டுகிறது. (லூக்கா 16:23-31, யோவான் 25:41,46, வெளி 14:9-11, வெளி 20:11-15, வெளி 21:8, வெளி 66:22-24)

(4) நடுவேயுள்ள பெரும் பிளப்பு

லூக்கா 16:26 அதுவுமல்லாமல் இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்துபோகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்துவரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்றான்.

பிளப்பு (gulf) - χάσμα - chasma - 5490

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பிளப்பு (a gaping opening, a chasm, an impassible gulf)

(5) பூமியில் உள்ளவர்களுக்கு சுவிசேஷம்

லூக்கா 16:27 அப்பொழுது அவன்: அப்படியானால் தகப்பனே எனக்கு ஐந்துபேர் சகோதரருண்டு. அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்துக்கு வராதபடி அவன் போய் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும்பொருட்டு,

லூக்கா 16:28 நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.

"நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்" மரித்துப்போன ஐசுவரியவானிடம் ஏறெடுக்கப்படும் விண்ணப்பம் வேதாகமத்தில் இந்த வசனத்தில் மட்டுமே வருகிறது. இந்த ஜெபத்தினால் எந்தப் பிரயோஜனமுமில்லை.

"வேதனையுள்ள இந்த இடம்" - நரகமே வேதனையுள்ள இடம்.

(6) தேவனுடைய வார்த்தை இறுதியான அதிகாரம்

[redacted]

லூக்கா 16:29 ஆபிரகாம் அவனை நோக்கி: அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு. அவர்களுக்கு அவர்கள் செவிகொடுக்கட்டும் என்றான்.

லூக்கா 16:30 அதற்கு அவன்: அப்படியல்ல தகப்பனாகிய ஆபிரகாமே, மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களிடத்தில் போனால் மனந்திரும்புவார்கள் என்றான்.

லூக்கா - தொகுப்புரை

16 அதிகாரம்

(5) பூமியில் உள்ளவர்களுக்கு சுவிசேஷம்

லூக்கா 16:27 அப்பொழுது அவன்: அப்படியானால், தகப்பனே, எனக்கு ஐந்துபேர் சகோதரருண்டு, அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்துக்கு வராதபடி, அவன் போய் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும்பொருட்டு,

லூக்கா 16:28 நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.

"நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்" மரித்துப்போன பரிசுத்தவான்கிடம் ஏறெடுக்கப்படும் விண்ணப்பம் வேதாகமத்தில் இந்த வசனத்தில் மட்டுமே வருகிறது. இந்த ஜெபத்தினால் எந்தப் பிரயோஜனமுமில்லை.

"வேதனையுள்ள இந்த இடம்" - நரகமே வேதனையுள்ள இடம்.

(6) தேவனுடைய வார்த்தை இறுதியான அதிகாரம்

லூக்கா 16:29 ஆபிரகாம் அவனை நோக்கி: அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு, அவர்களுக்கு அவர்கள் செவிகொடுக்கட்டும் என்றான்.

லூக்கா 16:30 அதற்கு அவன்: அப்படியல்ல, தகப்பனாகிய ஆபிரகாமே, மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களிடத்திற்குப் போனால் மனந்திரும்புவார்கள் என்றான்.

லூக்கா 16:31 அதற்கு அவன்: அவர்கள் மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்து போனாலும் நம்பமாட்டார்கள், என்று சொன்னான் என்றார்.

"அவர்களுக்கு அவர்கள் செவிகொடுக்கட்டும்" - மனுஷருக்குத் தேவன் கூறும் ஒரே காரியம் இதுதான். இம்மையில் நாம் தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, அதை விசுவாசித்து, அதற்குக் கீழ்ப்படிய வேண்டும். இல்லையேல் அழிவு நிச்சயம் (மாற்கு 16:16; ரோமர் 1:16; ரோமர் 2:12-16).

"அவர்கள் மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாவிட்டால் மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்து போனாலும் நம்பமாட்டார்கள்" - வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினாலே அருளப்பட்டிருக்கிறது என்பதற்கு இதுவும் ஒரு எடுத்துக்காட்டு.

"மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்து போனாலும் நம்பமாட்டார்கள்" இயேசு கிறிஸ்து ஏற்கெனவே மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து விட்டார். இருந்தாலும் இன்னும் ஏராளமான ஜனங்கள் நரகத்தைப் பற்றியும் அதன் வேதனைகளைப் பற்றியும் கவலைப்படாதவர்களாக இருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினால் அவர் கூறிய வேத வாக்கியங்களெல்லாம் நிறைவேறிற்று. (வெளி 1:18; வெளி 2:11; வெளி 6:8-11; வெளி 14:9-11; வெளி 20:4-15; வெளி 21:8) லூக்கா 16:19-32 ஆகிய வசனங்களில் நாம் வாசிக்கிற பிரகாரம் சத்திய வசனங்கள் மிகவும் தெளிவாக உள்ளன. இதற்குச் செவிகொடுத்துக் கீழ்ப்படிய வேண்டியது மனுஷனே. தங்களுடைய முடிவிற்கு தாங்களே பொறுப்பு ஏற்க வேண்டும்.

17 அதிகாரம்

120. விசுவாசிகளுக்கு இடறல்கள் - (மத் 18:5)

லூக்கா 17:1 பின்பு அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: இடறல்கள் வராமல்போவது கூடாதகாரியம் ஆகிலும் அவைகள் [illegible] வருகிறதோ அவனுக்கு ஐயோ!

லூக்கா 17:2 அவன் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறலுண்டாக்குகிறதைப் பார்க்கிலும் அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல் கட்டப்பட்டு, அவன் சமுத்திரத்தில் தள்ளுண்டுபோவது அவனுக்கு நலமாயிருக்கும்.

"அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி" - இயேசு கிறிஸ்து மறுபடியுமாகத் தம்முடைய சீஷர்களிடம் பேசுகிறார். (லூக்கா 16:14-15)

"இடறல்கள் வரும்" - (மத் 18:6-7 மாற்கு 9:42)

"அவைகள் எவனால் வருகிறதோ அவனுக்கு ஐயோ!" புதிய ஏற்பாட்டில் "ஐயோ" என்னும் சொல் 40 தடவை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்து 51 இடங்களில் ஐயோ என்னும் வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார் பட்டணங்கள் வேதபாரகர் பரிசேயர் விசுவாசமில்லாத ஜனங்கள் ஆகியோர்மீது நியாயத்தீர்ப்பை அறிவிப்பதற்காக ஐயோ என்னும் சொல்லை இயேசு பயன்படுத்துகிறார்

121. மன்னிப்பது பற்றிய பிரமாணம் (மத் 6:14, 18:21; மாற்கு 11:25-26; எபே 4:32)

லூக்கா 17:3 உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள் உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தால், அவனைக் கடிந்துகொள்; அவன் மனஸ்தாபப்பட்டால், அவனுக்கு மன்னிப்பாயாக.

லூக்கா 17:4 அவன் ஒருநாளில் ஏழுதரம் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து ஏழுதரமும் உன்னிடத்தில் வந்து: நான் மனஸ்தாபப்படுகிறேன் என்று சொன்னால், அவனுக்கு மன்னிப்பாயாக என்றார்.

"உங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தால் அவனைக் கடிந்துகொள்" - (மத் [illegible] 29

"அவன் மனஸ்தாபப்பட்டால், அவனுக்கு மன்னிப்பாயாக." - (மத் 18:21-35)

122. அளவில்லாத விசுவாசம் - (மத் 17:20; 21:21; மாற்கு 9:23)

லூக்கா 17:5 அப்பொழுது அப்போஸ்தலர் கர்த்தரை நோக்கி: எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணவேண்டும் என்றார்கள்.

லூக்கா 17:6 அதற்குக் கர்த்தர்: கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு உண்டாயிருந்தால், நீங்கள் இந்தக் காட்டத்திமரத்தை நோக்கி: நீ வேரோடே பிடுங்குண்டு கடலிலே நடப்படுவாயாக என்று சொல்ல, அது உங்களுக்குக் கீழ்ப்படியும்.

"எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணவேண்டும்" பெந்தெகொஸ்தே நாளில் சீஷர்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்ட போது, இயேசு கிறிஸ்து இந்த விண்ணப்பத்திற்குப் பதில் கொடுத்தார். நாம் எல்லோருமே விசுவாசம் என்னும் வரத்திற்காக ஜெபிக்க வேண்டும். அதை நாடவேண்டும். (1 கொரி 12:8-11,30) விசுவாசம் வேதவசனத்தைக் கேட்பதினாலேயே வரும். (ரோமர் 10:17)

"கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு உண்டாயிருந்தால்" - விசுவாசத்தின் அளவைக் குறித்து இயேசு கிறிஸ்து மறுபடியுமாகக் கூறுகிறார். விசுவாசத்தினால் மலைகளும் மரங்களும் அகன்று போகும். (மத் 17:20; லூக்கா 17:6) விசுவாசத்தினால் எல்லாவற்றையும் செய்ய முடியும். (மத் 21:22) விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் ஆகும். (மத் 17:20; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 14:12-15; யோவான் 15:7,16)

17 அதிகாரம்

123. உண்மையுள்ள ஊழியத்தைப் பத்திய உவமை - (மாற்கு 24:45, லூக் 12:42)

லூக்கா 17:7 உங்களில் ஒருவனுடைய ஊழியக்காரன் உழுது அல்லது மந்தைமேய்த்து வயலிலிருந்து வரும்போது, எஜமான் அவனை நோக்கி: நீ முன்பு போய்ச் சாப்பிடு என்று அவனுக்குச் சொல்வானோ?

லூக்கா 17:8 நீ எனக்குச் சாப்பாடு ஆயத்தம்பண்ணி, அரைகட்டிக்கொண்டு நான் போஜனபானம்பண்ணுமளவும் எனக்கு ஊழியஞ்செய், அதற்குப்பின் நீ புசித்துக் குடிக்கலாம் என்று அவனுக்குச் சொல்லுவானல்லவா?

லூக்கா 17:9 தான் கட்டளையிட்டவைகளை அந்த வேலைக்காரன் செய்ததற்காக அவனுக்கு உபசாரஞ்செய்வானோ? அப்படிச் செய்யமாட்டானே.

லூக்கா 17:10 அப்படியே நீங்களும் உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவற்றையும் செய்தபின்பு: நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்யவேண்டிய கடமையைமாத்திரம் செய்தோம் என்று சொல்லுங்கள் என்றார்.

உவமை எண் - 39

"உங்களில் ஒருவனுடைய ஊழியக்காரன் உழுது அல்லது மந்தைமேய்த்து வயலிலிருந்து வரும்போது, எஜமான் அவனை நோக்கி: நீ முன்பு போய்ச் சாப்பிடு என்று அவனுக்குச் சொல்வானோ? ...." (லூக்கா 17:7-10) தேவனுடைய ஊழியக்காரர்கள் தாங்கள் செய்யும் காரியங்களுக்குப் பெருமைபட்டக் கூடாது. நம்மிடம் எப்போதும் தாழ்மை இருக்க வேண்டும். நாம் செய்ய வேண்டியதை மாத்திரமே செய்திருக்கிறோம் என்று எண்ண வேண்டும் (லூக்கா 18:1)

"அப்படியே நீங்களும் உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவற்றையும் செய்தபின்பு: நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்யவேண்டிய கடமையைமாத்திரம் செய்தோம் என்று சொல்லுங்கள்" - லூக்கா 17:7-9 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் உவமையின் மையக்கருத்து இதுதான். பிரதிபலன் எதிர்பாராமல் நாம் கர்த்தருக்கு ஊழியம் செய்ய வேண்டும். உண்மையோடும் உத்தமமாகவும் மனத்தாழ்மையோடும் கர்த்தருக்கு ஊழியம் செய்ய வேண்டும். நமது ஊழியத்தில் பெருமைபாராட்டக்கூடாது. (மத் 6:1-6, யோவான் 12:43)

124. இயேசு பத்து குஷ்டரோகிகளைச் சுத்தமாக்குகிறார்

லூக்கா 17:11 பின்பு அவர் எருசலேமுக்குப் பிரயாணம்பண்ணுகையில், அவர் சமாரியா கலிலேயா என்னும் நாடுகளின் வழியாக நடந்துபோனார்.

லூக்கா 17:12 அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்தபோது, குஷ்டரோகமுள்ள மனுஷர் பத்துப்பேர் அவருக்கு எதிராக வந்து தூரத்திலே நின்று:

லூக்கா 17:13 இயேசு ஐயரே, எங்களுக்கு இரங்கும் என்று சத்தமிட்டார்கள்.

லூக்கா 17:14 அவர்களை அவர் பார்த்து, நீங்கள் போய், ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள் என்றார். அந்தப்படி அவர்கள் போகையில் சுத்தமானார்கள்.

லூக்கா 17:15 அவர்களில் ஒருவன் தான் ஆரோக்கியமானதைக் கண்டு, திரும்பிவந்து, உரத்த சத்தத்தோடே தேவனை மகிமைப்படுத்தி,

லூக்கா 17:16 அவருடைய பாதத்தருகே முகங்குப்புற விழுந்து, அவருக்கு ஸ்தோத்திரஞ்செலுத்தினான்; அவன் சமாரியனாயிருந்தான்.

லூக்கா 17:17 அப்பொழுது இயேசு: சுத்தமானவர்கள் பத்துப்பேர் அல்லவா, மற்ற ஒன்பதுபேர் எங்கே?

17 அதிகாரம்

லூக்கா 17:18 தேவனை மகிமைப்படுத்து கிறதற்கு இந்த அந்நியனே ஒழிய மற்றொருவனும் திரும்பிவரக்காணோமே என்று சொல்லி,

லூக்கா 17:19 அவனை நோக்கி: நீ எழுந்துபோ, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார்.

"எருசலேம்" - இயேசு கிறிஸ்து எருசலேமிற்கு வருகிறார். லூக்கா 11:32-33 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகளுக்கு மூன்று நாட்களுக்குப் பின்பு, இயேசு கிறிஸ்துவின் ஒரு ஊழியப்பகுதி நிறைவு பெறுகிறது. இதுவரையிலும் இயேசு கிறிஸ்து கூறியதும் செய்ததும் இந்த மூன்று நாட்களில் நடைபெற்ற காரியங்களாகும்.

"குஷ்டரோகமுள்ள மனுஷர் பத்துப்பேர் அவருக்கு எதிராக வந்து தூரத்திலே நின்றார்கள்" - குஷ்டரோக்கள் சமுதாயத்திலிருந்து தள்ளிவைக்கப் பட்டிருந்தார்கள். அவர்கள் தூரத்தில்தான் நிற்க வேண்டும். (லேவி 13:21,45-46; லேவி 14:2) ஜனங்களைவிட்டு 100 அடி தூரத்தில் தான் குஷ்டரோகிகள் இருக்க வேண்டுமென்று யூதருடைய பாரம்பரியம் கூறுகிறது. (யாத் 4:6)

ஐயா (Master) - ἐπιστάτης epistatees - 1988

ஆண்பால் பெயர்ச்சொல் - ஐயா (லூக்கா 9:38)

"நீங்கள் போய், ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள்" - (மத் 8:4; லூக்கா 5:14, லேவி 13, லேவி 14)

"அவர்கள் போகையில் சுத்தமானார்கள்" - குஷ்டரோகிகள் கொஞ்சம் கொஞ்சமாக குணமாகவில்லை. அவர்கள் உடனடியாக சுத்தமானார்கள். நாம் வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்கும்போது உடனடியாக அவர்கள் குணமடைய வேண்டுமென்று எதிர்பார்க்க வேண்டும்.

"அவர்களில் ஒருவன் தான் ஆரோக்கியமானதைக் கண்டு, திரும்பிவந்து, உரத்த சத்தத்தோடே தேவனை மகிமைப் படுத்தினான்" - பத்துபேர் குணமடைந்தாலும், ஒருவன் மட்டுமே இயேசு கிறிஸ்துவிடம் திரும்பி வந்து, அவரை மகிமைப் படுத்துகிறான்.

"சமாரியன்" - சமாரியருக்கு தெய்வீக அற்புதம் நடைபெறாது என்று யூதர்கள் நினைத்தார்கள். இப்போது சமாரியனும் குணமடைந்திருக்கிறான். ஆகையினால் தனது நன்றியைத் தெரிவிப்பதற்காக இயேசு கிறிஸ்துவிடம் உடனடியாகத் திரும்பி வருகிறான். (லூக்கா 10:33)

"சுத்தமானவர்கள் பத்துப்பேர் அல்லவா, மற்ற ஒன்பதுபேர் எங்கே?" - இன்றைய தினம் இயேசு கிறிஸ்து ஆயிரக்கணக்கான ஜனங்களைச் சொஸ்தமாக்கிக் கொண்டிருக்கிறார். அவர்களில் எத்தனைபேர் தேவனை மகிமைப் படுத்துகிறார்கள் என்று தெரியவில்லை. (யாத் 16:2)

"அந்நியன்" - புறதேசத்தான். இஸ்ரவேல் ஜனத்தைச் சேர்ந்தவன் அல்ல. ஒருவேளை குணமடைந்த மற்ற ஒன்பதுபேரும் யூதர்களாக இருக்கலாம். நகரத்திற்கு வெளியே இருக்கும் குஷ்டரோகிகள் யூதன் என்றும் சமாரியன் என்றும் வேறுபாடு இல்லாமல் இருந்திருக்கிறார்கள்.

125. தேவனுடைய இராஜ்ஜியம்

லூக்கா 17:20 தேவனுடைய ராஜ்யம் எப்பொழுது வருமென்று பரிசேயர் அவரிடத்தில் கேட்டபொழுது, அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: தேவனுடைய ராஜ்யம் பிரத்தியட்சமாய் வராது.

லூக்கா 17:21 இதோ, இங்கே என்றும், அதோ, அங்கே என்றும் சொல்லப் படுகிறதற்கும் ஏதுவிராது; இதோ, தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே என்றார்.

"தேவனுடைய ராஜ்யம்" (மத் 4:17; மத் 19:24)

பிரத்தியட்சம் (observation) παρατήρησις parateereesis 3907

17 அதிகாரம்

பெண்பால் பெயர்சொல் - பிரத்தியட்சம், காணக்கூடிய விதமாக கோபத்தோடு பார்ப்பது (hostile watching)

நோக்கமாயிரு (watching) παρατηρέω - parateereoo - 3906

வினைச்சொல் - நோக்கமாயிரு பார் காத்துக்கொண்டிரு, கோபத்தோடு பார்ப்பதைப் போன்றது (மாற்கு 3:2 லூக்கா 6:7 லூக்கா 14:1 லூக்கா 20:20 அப் 9:24)

"உங்களுக்குள்" - தேவனுடைய ராஜ்யம் நமக்குள் இருக்கிறது. ஆனாலும் நாம் அவ்வளவாய் புரிந்துகொள்ளவதில்லை

உட்புறம் (within) - ἐντός - entos - 787

இடைச்சொல் - உள் உட்புறம்

126. இயேசு தமது இரண்டாம் வருகையை முற்குறித்துக் கூறுகிறார் - மத் 24-25 மாற்கு 13 லூக் 21

(1) அவர் வரும் விதம் - (மத் 24:27)

லூக்கா 17:22 பின்பு அவர் சீஷர்களை நோக்கி: மனுஷகுமாரனுடைய நாட்களில் ஒன்றைக் காண வேண்டுமென்று நீங்கள் ஆசைப்படுங் காலம் வரும், ஆனாலும் அதைக் காணமாட்டீர்கள்.

லூக்கா 17:23 இதோ இங்கே என்றும், அதோ அங்கே என்றும் சிலர் உங்களிடத்தில் சொல்லுவார்கள்; நீங்கள் போகாமலும் பின்தொடராமலும் இருங்கள்.

லூக்கா 17:24 மின்னல் வானத்தின் ஒரு திசையிலே தோன்றி மறுதிசைவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல மனுஷகுமாரனும் தம்முடைய நாளிலே தோன்றுவார்.

லூக்கா 17:25 அதற்கு முன்பு அவர் அநேகம் பாடுபட்டு, இந்தச் சந்ததியினால் ஆகாதவனென்று தள்ளப்படவேண்டியதாயிருக்கிறது.

தீர்க்கதரிசன எண் - 85

"மனுஷகுமாரனுடைய நாட்களில் ஒன்றைக் காண வேண்டுமென்று நீங்கள் ஆசைப்படுங் காலம் வரும் ஆனாலும் அதைக் காண மாட்டீர்கள்" லூக்கா 17:22-37 இந்தத் தீர்க்கதரிசனத்தில் லூக்கா 17:22,25 ஆகிய வசனங்கள் நிறைவேறியுள்ளன. லூக்கா 17:23-24, 26-37 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

"இதோ இங்கே என்றும் அதோ அங்கே என்றும் சிலர் உங்களிடத்தில் சொல்லுவார்கள் நீங்களோ போகாமலும் பின்தொடராமலும் இருங்கள்" - தாங்களே மேசியா என்று பலர் தங்களைப் பற்றிக் கூறுவார்கள். தேவனுடைய ராஜ்யம் இதுதான் என்று பலர் கூறுவார்கள் (மத் 24:5,23-26) நீங்கள் வஞ்சிக்கப்படாத படிக்கு எச்சரிக்கையாக இருங்கள். இயேசு கிறிஸ்து வரும்போது மேகங்களமீது வருவதை எல்லோரும் காண்பார்கள் (லூக்கா 17:24 லூக்கா 21:27 மத் 24:27,30 மத் 25:31-46 2தெச 1:7-10 யூதா 1:14 வெளி 19:11-21 சக 14 ஏசா 63)

"அதற்கு முன்பு அவர் அநேகம் பாடுபட்டு, இந்தச் சந்ததியினால் ஆகாதவனென்று தள்ளப்பட வேண்டியதாயிருக்கிறது" இந்த வசனம் அப்படியே நிறைவேறியிருக்கிறது. அதுபோலவே லூக்கா 17:22-24, 26-37 ஆகிய வசனங்களும் நிறைவேறும்.

(2) அவர் வரும்போது அழிவு உண்டாகும் (மத் 24:37-40)

லூக்கா 17:26 நோவாவின் நாட்களில் நடந்ததுபோல மனுஷகுமாரனுடைய நாட்களிலும் நடக்கும்.

லூக்கா 17:27 நோவா பேழைக்குள் பிரவேசித்த நாள்வரைக்கும் ஜனங்கள் புசித்துக் குடித்தார்கள், பெண்கொண்டு கொடுத்தார்கள்; ஜலப்பிரளயம் வந்து எல்லாரையும் அழித்துப்போட்டது.

17 அதிகாரம்

லூக்கா 17:28 லோத்தினுடைய நாட்களில் நடந்ததுபோலவும் நடக்கும். ஜனங்கள் புசித்தார்கள், குடித்தார்கள் கொண்டார்கள் விற்றார்கள் நட்டார்கள், கட்டினார்கள்

லூக்கா 17:29 லோத்து சோதோமை விட்டுப் புறப்பட்ட நாளிலே வானத்திலிருந்து அக்கினியும் கந்தகமும் வருஷித்து, எல்லாரையும் அழித்துப் போட்டது.

லூக்கா 17:30 மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும்

நோவா, லோத்து ஆகியோரின் நாட்களில் நடந்த காரியங்கள்

1 தேவனைப் புறக்கணித்து விட்டார்கள் (ஆதி 4:1-7; ரோமர் 1:17-32)

2 பிரமாணத்திற்குப் புறம்பாக தேவ தூதரோடும் உறவு வைத்திருந்தார்கள் ஆதி 6:1-4; 2பேதுரு 2:4; யூதா 1:6-7

3 ஆண் புணர்ச்சிக்காரர்களாக இருந்தார்கள் (ஆதி 19 லூக்கா 17:28; லூக்கா 1:17-32)

4 பெண்கொண்டார்கள், தள்ளினார்கள் ஆதி 6:1-4; மத் 24:38; லூக்கா 17:27

5 புதிய காரியங்களைக் கண்டுபிடித்தார்கள் (ஆதி 4:17-24 ரோமர் 1:30, தானி 12:4; லூக்கா 17:28

6 தேவதூஷணம் சொன்னார்கள் (2பேதுரு 2:4-8; மத் 24:38; லூக்கா 17:27-28; 2தெச 2:3)

7 பிரசங்கத்தை ஏற்றுக் கொள்ளவில்லை (2பேதுரு 2:5; 2தீமோ 4:1-4; மத் 24:38

8 முரட்டாட்டமாக இருந்தார்கள் (ஆதி 6:1-13, ரோமர் 1:17-32; 2தீமோ 3)

9 ஒழுக்கமில்லாமல் இருந்தார்கள் (ஆதி 4:17-24 ஆதி 6:1-13 மத் 24:38; லூக்கா 17:26-28 ரோமர் 1:17-32; 2தீமோ 3)

10 குடித்து வெறித்திருந்தார்கள் (மத் 24:38; லூக்கா 17:26-30, லூக்கா 21:34-36; ரோமர் 1:17-32 2தீமோ 3)

11 கொண்டார்கள் விற்றார்கள் (லூக்கா 17:28 ரோமர் 1:17-32 2தீமோ 3)

12 நட்டார்கள் கட்டினார்கள் (லூக்கா 17:28; ரோமர் 1:17-32 தானி 12:4)

"நோவாவின் நாட்கள்" - (ஆதி 6:8-9:29; மத் 24:38)

"எல்லாரையும் அழித்துப் போட்டது" - (மத் 24:37-39)

"லோத்தினுடைய நாட்களில் நடந்தது போலவும் நடக்கும்" - (ஆதி 12:1-19:38 2பேதுரு 2:6-8)

"வானத்திலிருந்து அக்கினியும் கந்தகமும் வருஷித்து எல்லாரையும் அழித்துப்போட்டது" - (ஆதி 19:24; மத் 11:24, லூக்கா 10:12

"மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும்" - நோவாவின் நாட்களில் ஜலப்பிரளயம் எல்லோரையும் அழித்துப் போட்டது. லோத்தின் நாட்களில் அக்கினியும், கந்தகமும் சோதோமை அழித்துப் போட்டது. இந்த அழிவிலிருந்து ஒருசிலர் மட்டுமே தப்பினார்கள் ஆதி 6:9 இயேசு கிறிஸ்து தம்முடைய இரண்டாம் வருகையில் திரளான ஜனங்களை அழித்துப் போடுவார் ஒருசிலர் மட்டுமே ஆயிரம் வருஷ அரசாட்சிக்குக் கடந்து போவார்கள் (யோவே 3; சக 14; வெளி 19:11-21; வெளி 20:1-10 மத் 25:31-46)

"வெளிப்படும்நாள்" - சபை ஏற்கெனவே எடுத்துக் கொள்ளப்பட்டது (1தெச 4:16) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் அவர் பூமிக்கு வரும்பொழுது அவரோடே எடுத்துக்கொள்ளப் பட்ட பரிசுத்தவான்களும் வருவார்கள் இந்தக் காட்சியை எல்லாக் கண்களும் காணும். (சக 14:1-5; யூதா 1:14, வெளி 19:11-12; மத் 24:29-31, 2தெச 1:7-10)

17 அதிகாரம்

(3) இயேசுவின் இரண்டாம் வருகை குறித்த எச்சரிப்பு

லூக்கா 17:31 அந்த நாளிலே வீட்டின் மேலிருப்பவன் வீட்டிலுள்ள தன் பண்டங்களை எடுத்துக்கொண்டுபோக இறங்காமல் இருக்கக்கடவன்; அப்படியே வயலிலிருக்கிறவன் பின்னிட்டுத் திரும்பாமலும் இருக்கக்கடவன்.

லூக்கா 17:32 லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள்.

லூக்கா 17:33 தன் ஜீவனை இரட்சிக்க வகைதேடுகிறவன் அதை இழந்து போவான்; இழந்துபோகிறவன் அதை உயிர்ப்பித்துக்கொள்ளுவான்.

"அந்த நாளில்" - சபை எடுத்துக் கொள்ளப்படும் நாளைக் குறிக்காது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் நாளைக் குறிக்கும். (லூக்கா 17:34-37; மத் 24:27-31; மத் 25:31-46; வெளி 19:11-21)

"வீட்டின்மேலிருப்பவன் வீட்டிலுள்ள தன் பண்டங்களை எடுத்துக் கொண்டுபோக இறங்காமல் இருக்கக்கடவன்; அப்படியே வயலிலிருக்கிறவன் பின்னிட்டுத் திரும்பாமலும் இருக்கக்கடவன்" சபை எடுத்துக் கொள்ளப் படும்போது பரிசுத்தவான்கள் ஒரு நிமிஷத்திலே ஒரு கணப்பொழுதிலே எடுத்துக் கொள்ளப் படுவார்கள். (1கொரி 15:51-58) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது ஜனங்களுக்கு தங்கள் பண்டங்களை எடுத்துக் கொள்ளவும், வயலிலிருந்து வீட்டிற்குத் திரும்பிவரவும் நேரம் இருக்கும்.

"லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள்" லோத்தின் மனைவி திரும்பிப் பார்த்து, உப்புத்தூணானாள். இயேசு கிறிஸ்து இந்த வரலாற்று நிகழ்ச்சியை அங்கீகரிக்கிறார். பழைய ஏற்பாட்டுப் புஸ்தகங்களும், சுவிசேஷ புஸ்தகங்களும் பரிசுத்த வேதாகமத்தில் உள்ள மற்ற புஸ்தகங்களும் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டவையே.

இவை எல்லாமே ஒரே தேவனைப் பற்றியும் அவருடைய கிரியைகளைப் பற்றியும் கூறுகிறது. (ஆதி 19:26)

"தன் ஜீவனை இரட்சிக்க வகைதேடுகிறவன் அதை இழந்துபோவான்; இழந்துபோகிறவன் அதை உயிர்ப்பித்துக் கொள்ளுவான்" - (லூக்கா 9:24; மத் 10:39; மாற்கு 8:35)

(4) அர்மகெதோன் யுத்தம் - (எசே 38:17-39:17; யோவேல் 3; சக 14; மத் 24:27; வெளி 19:11)

லூக்கா 17:34 அந்த இராத்திரியில் ஒரே படுக்கையிலே படுத்திருக்கிற இரண்டுபேரில் ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான், மற்றவன் கைவிடப்படுவான்.

லூக்கா 17:35 திரிகை திரிக்கிற இரண்டு ஸ்திரீகளில் ஒருத்தி ஏற்றுக்கொள்ளப் படுவாள், மற்றவள் கைவிடப்படுவாள்.

லூக்கா 17:36 வயலிலிருக்கிற இரண்டு பேரில் ஒருவன் ஏற்றுக்கொள்ளப் படுவான், மற்றவன் கைவிடப்படுவான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

லூக்கா 17:37 அவர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: எங்கே, ஆண்டவரே என்றார்கள். அதற்கு அவர்: பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும் என்றார்.

"அந்த இராத்திரியில்" - இதுவும் சபை எடுத்துக் கொள்ளப்படுவதைக் குறிக்காது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையையே குறிக்கும். (மத் 24:27; 31:37-42) இயேசு கிறிஸ்து வரும்போது அர்மகெதோனில் யுத்தம் நடைபெறும். இதில் பலர் அழிந்து போவார்கள். வானத்தின் பறவைகளுக்கு அவர்கள் இரையாகிவிடுவார்கள். மத் 24:27-28; வெளி 19:17-21; எசே 39:4,17-21

லூக்கா - தொகுப்புரை

17 அதிகாரம்

"ஒருவன் ஏற்றுக் கொள்ளப்படுவான் மற்றவன் கைவிடப்படுவான்" - இந்த வசனம் சபை எடுத்துக் கொள்ளப்படுவதைக் குறிப்பதாகச் சிலரும், இரண்டாம் வருகையைக் குறிப்பதாகச் சிலரும் வியாக்கியானம் பண்ணுகிறார்கள் (மத் 24:27-42; லூக்கா 17:23-37). சபை எடுத்துக் கொள்ளப்படும்போது பரிசுத்தவான்கள் மத்திய ஆகாயத்தில் கர்த்தரைச் சந்திப்பதற்காக எடுத்துக் கொள்ளப்படுவார்கள். இந்த வசனங்களில் கூறப்பட்டிருப்பதுபோல யாரும் அழிக்கப்பட மாட்டார்கள் (மத் 24:38; லூக்கா 17:27-29). இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது அழிக்கப்பட்டவர்களை ஆகாயத்துப் பறவைகள் புசிக்கும். இது மத் 24:27-28; லூக்கா 17:34-37; வெளி 19:17-21; எசே 39:17-21 ஆகிய வசனங்களின் நிறைவேற்றமாகும். அர்மெகதோனில் நடைபெறும் யுத்தத்திற்குத் தேசத்தார் அனைவரும் கூடிவருவார்கள். அங்கு அவர்களை இயேசு கிறிஸ்துவும் அவருடைய பரமசேனைகளும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது அழிப்பார்கள் (சக 14:1-5; வெளி 19:11-21).

"மற்றவன் கைவிடப்படுவான்" - அர்மெகதோன் யுத்தத்தில் கொல்லப்படாதவர்களே கைவிடப்பட்டவர்கள். நோவாவும் லோத்தும் அவனுடைய குடும்பத்தாரும் ஜலப்பிரளயத்திலிருந்தும் அக்கினி, கந்தகத்திலிருந்தும் தப்பித்தார்கள் (லூக்கா 17:27-29). இயேசு கிறிஸ்து தமது பரிசுத்தவான்களோடு பூமிக்கு வரும்பொழுது நடைபெறும் அர்மெகதோன் யுத்தத்தில் ஒருசிலர் தப்பியவர்கள். இவர்கள் ஆயிரம் வருஷ ஆட்சியில் பூமியை நிரப்புவதற்காக அனுமதிக்கப்படுவார்கள் (சக 14:16-21; மத் 25:31-46; வெளி 19:11-20:10; எசே 39:2).

"எங்கே, ஆண்டவரே" - பிணங்கள் எங்கே கிடக்கும், கழுகுகள் எங்கே வந்து அவைகளைப் புசிக்கும் என்று சீஷர்கள் கேட்கிறார்கள். அர்மெகதோன் என்னும் இடமே இதற்குரிய சரியான விடையாகும் (மத் 24:27-28; வெளி 16:13-16; வெளி 19:17-21; எசே 39:17-21).

18 அதிகாரம்

127. அநீதியான நியாயாதிபதியைப் பற்றிய உவமை - சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ணுவதன் வல்லமை

லூக்கா 18:1 சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ணவேண்டும் என்பதைக் குறித்து அவர்களுக்கு அவர் ஒரு உவமையைச் சொன்னார்

லூக்கா 18:2 ஒரு பட்டணத்திலே ஒரு நியாயாதிபதி இருந்தான் அவன் தேவனுக்குப் பயப்படாதவனும் மனுஷரை மதியாதவனுமாயிருந்தான்

லூக்கா 18:3 அந்தப் பட்டணத்திலே ஒரு விதவையும் இருந்தாள்; அவள் அவனிடத்தில் போய், எனக்கும் என் எதிராளிக்கும் இருக்கிற காரியத்தில் எனக்கு நியாயஞ்செய்யவேண்டும் என்று விண்ணப்பம் பண்ணினாள்

லூக்கா 18:4 வெகுநாள் வரைக்கும் அவனுக்கு மனதில்லாதிருந்தது. பின்பு அவன் நான் தேவனுக்குப் பயப்படாமலும் மனுஷரைமதியாமலும் இருந்தும்.

லூக்கா 18:5 இந்த விதவை என்னை எப்பொழுதும் தொந்தரவு செய்கிறபடியினால், இவள் அடிக்கடி வந்து என்னை அலட்டாதபடி இவளுக்கு நியாயஞ்செய்யவேண்டும் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான் என்றான்

லூக்கா 18:6 பின்னும் கர்த்தர் அவர்களை நோக்கி: அநியாயமுள்ள அந்த நியாயாதிபதி சொன்னதைச் சிந்தித்துப் பாருங்கள்

லூக்கா 18:7 அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ் செய்யாமலிருப்பாரோ?

லூக்கா 18:8 சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ்செய்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் ஆகிலும் மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ என்றார்

"சோர்ந்துபோகாமல்" - இருதயம் தளர்ந்து விடக்கூடாது. சந்தேகம், பயம், அவிசுவாசம், மனத்தளர்ச்சி ஆகியவற்றிற்கு இடம் கொடுத்து, நாம் மனம் தளர்ந்துவிடக் கூடாது. நமது ஜெபத்திற்கு உடனடியாகப் பதில் கிடைக்கவில்லையென்றால் சோர்ந்துபோய்விடக் கூடாது. ஜெபத்திற்குப் பதில் நிச்சயமாகக் கிடைக்கும் இது தெய்வீக சித்தம். இயேசு கிறிஸ்து தமது திருஇரத்தத்தின் மூலமாக நம்மோடு ஏற்படுத்தியிருக்கும் இரத்த உடன்படிக்கை ஆகையினால் நமது ஆவிக்குரிய ஜீவியத்தில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக

உவமை எண் - 39

"ஒரு பட்டணத்திலே ஒரு நியாயாதிபதி இருந்தான் ...." லூக்கா 18:1-8 ஜெபத்திற்கு உடனே பதில் கிடைக்கவில்லை யென்றாலும் தொடர்ந்து ஜெபிக்க வேண்டும் என்பதை இந்த உவமை வலியுறுத்துகிறது

"விதவைகள்" பரிசுத்த வேதாகமத்தில் 84 இடங்களில் விதவைகளைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. 15 இடங்களில் பெற்றோர் இல்லாதவர் விதவை என்று அழைக்கப்பட்டிருக்கிறார்கள் இவர்கள் நியாய பிரமாணத்தின் பிரகாரம் பராமரிக்கப்பட்டு வந்தார்கள் (யாத் 22:22-24 உபா 10:18 உபா 14:28-29 உபா 16:11-14 உபா 24:17-21 உபா 27:19) தேவனுடைய விசேஷித்த பராமரிப்பும் விதவைகளுக்கு எப்போதும் உள்ளது. (சங் 68:5 சங் 94:6 சங் 146:9 நீதி 15:25) விதவைகளை ஒடுக்கியதற்காக தீர்க்கதரிசிகள் இஸ்ரவேல் புத்திரரைக் கடிந்து கொண்டார்கள் (ஏசா 1:17,23 ஏசா 10:1-2 எரே 7:6-7 எரே 22:3 சக 7:10 மல 3:5) பரிசேயர் விதவைகளை ஒடுக்கினார்கள் இதற்காக இயேசு அவர்களைக் கடிந்து கொண்டார் (மத் 23:14 மாற்கு 12:40 லூக்கா 20:47) விதவைகளைக் குறித்த காரியத்தில் சபைகளுக்கு அறிவுரைகள் கொடுக்கப் பட்டுள்ளன (1கொரி 7:8-9 1தீமோ 5:16 யாக் 1:27) விதவைகளைக் குறித்த பொருத்தனைகள் (எண் 30:9)

லூக்கா - தொகுப்புரை

18 அதிகாரம்

ஆசாரியரின் குமாரத்திகளை அவர்களுடைய பெற்றோர் பராமரிக்க வேண்டும். (லேவி 22:13) ஆசாரியர் விதவைகளைத் திருமணம் செய்யக்கூடாது. (லேவி 21:14) ஒரு சகோதரன் விதவையாக இருக்கும் தன்னுடைய சகோதரனின் மனைவியைத் திருமணம் செய்து தங்களுடைய குடும்பத்தின் சுதந்தரத்தைக் காத்துக் கொள்ள வேண்டும் (உபா 25:5-10 மத்22:23-33) ஆதித்திருச்சபையில முதலாவது பிரச்சனை விதவைகள் விசாரிப்பது தொடர்பாகவே எழுந்தது. (அப 6:1-7)

வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் விதவைகள்

1 தாமார் (ஆதி 38:1-39)

2 நகோமி, ஓர்பாள், ரூத் (ரூத் 1)

3. தெக்கோவா (2சாமு 14:5)

4. ஈராமின் தாயார் (1இராஜா 7:14)

5 செரூபாள் (1இராஜா 11:26)

6 சாரிபாத் ஊரிலுள்ள விதவை 1இராஜா 17

7 தீர்க்கதரிசியின் மனைவி (2இராஜா 4)

8 அன்னாள் (லூக்கா 2:36-37)

9 ஏழை விதவை (மாற்கு 12:41 லூக்கா 21:2)

10 நாயீன் ஊர் விதவை (லூக்கா 7:11-15)

11 விடாமுயற்சியோடு தொடர்ந்து விண்ணப்பம் பண்ணிய விதவை (லூக்கா 18:1-8)

12 தபித்தாள் அல்லது தொற்காள் (அப 9:36-42)

"அவள் அவனிடத்தில் போய்" - அந்த விதவை நியாயாதிபதி இடத்தில் நீடிய பொறுமையோடு தொடர்ந்து போய், தன்னுடைய வழக்கைக் குறித்துப் பேசி, தனக்கு நியாயம் பண்ண வேண்டுமென்று விண்ணப்பம் பண்ணுகிறாள் அவளுடைய நீடிய பொறுமையும் விடாமுயற்சியும் அவளுக்கு வெற்றியைத் தேடித் தந்தது

நியாயஞ்செய (Avenge) - ἐκδικέω - **ekdikeoo** - 1556

விளைச்சொல - தண்டனை செலுத்து பழிவாங்கு, நியாயஞ்செய் (**do me justice**) (லூக்கா 18:3,5; ரோமர் 12:19; 2கொரி 10:6, வெளி 6:10 வெளி 19:2)

"வெகுநாள் வரைக்கும்" அந்த விதவைக்கு நியாயம் செய்ய, நியாயாதிபதிக்கு வெகுநாள் வரைக்கும் மனதில்லை எத்தனை நாள் என்று தெரியவில்லை ஆனால எல்லா நாட்களிலும் இந்த விதவை தனக்கு நியாயம் செய்ய வேண்டுமென்று விண்ணப்பம் பண்ணிக் கொண்டே இருந்தாள்

"நான் தேவனுக்குப் பயப்படாமலும் மனுஷரை மதியாமலும் இருந்தும் தனக்குள்ளே சொல்லிக் கொண்டான்" விதவை நியாயாதிபதியை எப்பொழுதும் தொந்தரவு செய்கிறாள் அவளுடைய தொந்தரவை அவனால் தாங்கமுடியவில்லை அவள் தன்னை இனிமேல் அலட்டக்கூடாது என்று விரும்புகிறான் இதற்காகவாவது அவளுக்கு நியாயம் செய்ய வேண்டுமென்று தன் மனதிலே சொல்லிக் கொண்டான்

18 அதிகாரம்

தொந்தரவுபடுத்துதல் (troubleth) - κόπος - kopos - 2873

ஆண்பால் பெயர்ச்சொல் - தொந்தரவு படுத்துதல், தொந்தரவு செய்தல் வேலைக்குட்படுதல். வருத்தம் உண்டாக்குதல் (a beating, toil, trouble, suffering, pain, weariness) - இந்த வசனத்தில் இவள் அவனுக்கு அதிக மனஉளைச்சலைக் கொடுக்கிறாள் (2கொரி 6:5; 2கொரி 11:23,27)

"இவள் அடிக்கடி வந்து" - இவள் தொடர்ந்து வருவது நியாயாதிபதிக்குத் தொந்தரவாக இருக்கிறது. அவளைச் சமாளிக்கக்கூடிய பொறுமை அவனுக்கு இல்லை

அலட்டு (weary) - ὑπωπιάζω - hypopiazoo - 5299

வினைச்சொல் - அலட்டு, கீழ்ப்படுத்து (to tease, annoy into compliance, subdue by repeated attacks, to bring or keep under, to wear one out, or wear down to helplessness) (1கொரி 9:27)

"அநீதியுள்ள அந்த நியாயாதிபதி சொன்னதைச் சிந்தித்துப்பாருங்கள் அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ் செய்யாமலிருப்பாரோ?"

இந்த உவமையின் முக்கியக் கருத்து இதுதான் அநீதியுள்ள நியாயாதிபதியிடம் விதவை விடாமுயற்சியோடு தொடர்ந்து சென்று தனக்கு நியாயம் கேட்டுக் கொண்டாள் இதுபோலவே தேவனுடைய பிள்ளைகளும் தொடர்ந்து ஜெபிக்க வேண்டும். தேவன் நீதியுள்ளவர் கிருபையுள்ளவர் அநீதியுள்ள நியாயாதிபதியே அந்த விதவையின் விண்ணப்பத்திற்குப் பதில் கொடுத்தான் என்றால் நம்முடைய பரமபிதா தமது பிள்ளைகளின் ஜெபத்திற்குப் பதில் கொடுப்பது அதிக நிச்சயம்.

அநீதி (unjust) - ἀδικία - adikia - 93

பெண்பால் பெயர்ச்சொல் - அநீதி, அக்கிரமம் அநீதம் (unrighteousness, wrongdoing, injustice) - அநீதியுள்ள நியாயாதிபதி நீதியுள்ள நியாயாதிபதியாக இந்த வசனத்தில் மாறுகிறான்

தெரிந்துகொள்ளப்பட்ட (elect) - ἐκλεκτός - eklektos - 1588

பெயரடை - தெரிந்துகொள்ளப்பட்ட (picked out, chosen)

தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்

1 கிறிஸ்து (ஏசா 42:1; 1பேதுரு 2:6)

2 எல்லா விசுவாசிகளும் (ரோமர் 8:33; கொலோ 3:12; தீத்து 1:1; யோவான் 15:16 எபே 1:4. எபே 2:10; 2தெச 2:13; 2யோவான் 1:13)

3 இஸ்ரவேல் (ஏசா 45:4 ஏசா 65:9,22; மத் 24:21-31; மாற்கு 13:22,27; 1பேதுரு 1:2)

4 தேவதூதர்கள் (1தீமோ 5:21)

லூக்கா - தொகுப்புரை

18 அதிகாரம்

தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் யாராக இருந்தாலும். அவர்கள் யூதராக இருந்தாலும். புறஜாதியாராக இருந்தாலும் அவர்களும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களே (ரோமர் 9:11; ரோமர் 11:5,7,28; 1தெச 1:4 1பேதுரு 5:13; 2பேதுரு 1:10). தேவனை யார் தங்களுடைய கர்த்தராக தெரிந்து கொள்கிறார்களோ அவர்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் (மத் 11:28-30; மத் 20:16; யோவான் 1:12 யோவான் 3:16-20; யோவான் 6:37; எபே 1:4; 2தெச 2:13; யாக் 2:5; 1தீமோ 2:4, 2பேதுரு 3:9; வெளி 17:14; வெளி 22:17)

"நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ்செய்யாமலிருப்பாரோ?" - அநீதியுள்ள நியாயாதிபதி தனது சொந்த விருப்பத்தின் பிரகாரமாக விதவைக்கு நியாயம் செய்யாமல் தாமதம் பண்ணினான். ஆனால் தேவன் தம்மிடம் ஜெபிக்கும் பிள்ளைகளுக்குப் பதில் தராமல் தாமதம் செய்கிறார் என்றால் அதற்கு ஒரு தெய்வீக நோக்கம் இருக்கும். (எபி 11:6; யாக் 1:5-8) இம்மைக்குரிய வாக்குத்தத்தங்கள் நமக்கு இம்மையிலேயே கிடைக்கும்.

மறுமைக்குரிய வாக்குத்தத்தங்கள் நமக்கு மறுமையிலேயே தான் கிடைக்கும். இம்மைக்குரிய வாக்குத்தத்தங்களை நாம் தொடர்ந்து ஜெபித்து, பெற்றுக் கொள்ள பழகிக் கொள்ள வேண்டும். (மத் 17:20, மத் 21:22, மாற்கு 9:23; மாற்கு 11:22-24, எபி 11:6, யாக் 1:5-8)

"சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ் செய்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" - நமது ஜெபங்களுக்குப் பதில் கொடுக்கப்படும் என்று கிறிஸ்து நமக்குக் கூறும் வாக்குறுதி. ரோமர் 4:17-25

"மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ" - இது கடைசிக்கால விசுவாசத்தைக் குறிக்கும். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாகவே அவர் சபையை எடுத்துக் கொள்கிறார் (1தெச 4:16; 2தெச 2:7-8 உபத்திரவக்காலத்தில் பலவிதமான தேவ தூஷணங்கள் இருந்திருக்கும். மத் 24:24 1தீமோ 4; 2தீமோ 3:5; 2தீமோ 4:1-4 2தெச 2; வெளி 9:20-21; வெளி 13:1-18). உபத்திரவக்காலத்தில் இரட்சிக்கப்படுகிறவர்களை திரளான ஜனங்கள் கொன்று போடுவார்கள் (வெளி 6:9-11 வெளி 7:9-17; வெளி 13:16-18 வெளி 15:2-4; வெளி 20:4-6

128. பரிசேயனையும் ஆயக்காரனையும் பற்றிய உவமை - (மத் 23)

லூக்கா 18:9 அன்றியும், தங்களை நீதிமான்களென்று நம்பி, மற்றவர்களை அற்பமாய் எண்ணின சிலரைக்குறித்து அவர் ஒரு உவமையைச் சொன்னார்.

லூக்கா 18:10 இரண்டு மனுஷர் ஜெபம் பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள்; ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன்.

லூக்கா 18:11 பரிசேயன் நின்று: தேவனே! நான் பறிகாரர் அநியாயக்காரர், விபச்சாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப் போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததனால் உமமை ஸ்தோத்திரிக்கிறேன்.

லூக்கா 18:12 வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன் என்று, தனக்குள்ளே ஜெபம்பண்ணினான்.

லூக்கா - தொகுப்புரை

18 அதிகாரம்

லூக்கா 18:12 வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன் என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன் என்று தனக்குள்ளே ஜெபம்பண்ணினான்.

லூக்கா 18:13 ஆயக்காரன் தூரத்திலே நின்று தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: தேவனே பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான்.

லூக்கா 18:14 அவனல்ல இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஏனென்னில் தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்.

"தங்களை நீதிமான்களென்று நம்பி மற்றவர்களை அற்பமாயெண்ணின சிலர்" நம்மை நாமே நீதிமான்களாக எண்ணக்கூடாது. இது நமது பலவீனம் (மாற்கு 10:24, பிலி 3:4, 1தீமோ 6:17) நாம் நம்மைச் சார்ந்திருப்பதற்குப் பதிலாகக் கர்த்தரையே சார்ந்திருக்க வேண்டும்.

உவமை எண் - 40

"இரண்டு மனுஷர் ஜெபம்பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள்; ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன்" - (லூக்கா 18:9-14) சுயநீதி, சுயபெருமை ஆகியவற்றை இந்த உவமை விளக்குகிறது.

பரிசேயனும், ஆயக்காரனும்

1. சமுதாயத்தில் அந்தஸ்து உள்ளவர்கள் (லூக்கா 18:10)
2. நம்பிக்கையின் ஆதாரங்கள் (லூக்கா 18:9,13)
3. தேவனிடத்தில் விண்ணப்பங்கள் (லூக்கா 18:11-13)
4. தேவனுக்கு நேராக அவர்களுடைய மனப்பான்மைகள் (லூக்கா 18:11-13)
5. மற்றவருக்கு நேராக அவர்களுடைய மனப்பான்மைகள் (லூக்கா 18:11-13)
6. மார்க்கப் பின்னணிகள் (லூக்கா 18:9-13)
7. ஜெபத்தின் முடிவுகள் (லூக்கா 18:14)

பரிசேயன் தன் ஜெபத்தில் கூறும் [redacted]

1. நான் பாவிகளோடு ஜெபிக்கவில்லை
2. நான் மற்றவர்களைப்போல இல்லை
3. நான் அநியாயக்காரன் இல்லை
4. நான் பறிகாரன் இல்லை
5. நான் விபச்சாரக்காரன் இல்லை
6. நான் ஆயக்காரனைப் போல இல்லை (லூக்கா 18:11)
7. வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன்
8. என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன் (லூக்கா 18:12)

பரிசேயன் தன் பாவங்களைப் பற்றி தேவனிடம் ஒரு வார்த்தை கூட கூறவில்லை. அவன் சுயநீதியுடையவனாக இருந்தான் (லூக்கா 18:14)

"வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன்" யூதர்கள் வாரத்தில் திங்கள்கிழமையும் வியாழக்கிழமையும் உபவாசம் பண்ணுவார்கள். வருஷத்தில் ஒருமுறை அவர்கள் உபவாசம் பண்ண வேண்டுமென்று பிரமாணம் கட்டளையிடுகிறது. (லேவி 23:27-32) 1,200 வருஷங்களுக்குப் பின்பு சகரியாவின் காலத்தில் யூதர்கள் 4 முறை உபவாசம் பண்ணினார்கள் (சக 8:19) 500 வருஷங்களுக்குப் பின்பு கிறிஸ்துவின் காலத்தில் யூதர்கள் வருஷத்திற்கு 104 தடவைகள் உபவாசம் பண்ணினார்கள் (லூக்கா 18:12) அவர்கள் பிரமாணத்தில் வளர்ந்தார்கள். ஆனால் கிருபையில் வளரவில்லை.

லூக்கா - தொகுப்புரை

18 அதிகாரம்

"தன் மார்பிலே அடித்துக்கொண்டான்" - தன் மனதிலுள்ள துக்கத்தை வெளிப்படுத்துகிறான் (லூக்கா 23:48; எரே 31:19, நாகூம் 2:7)

"பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" - பரிசேயன் தன் ஜெபத்தில் 34 வார்த்தைகளைப் பேசினான் ஆயக்காரனோ மொத்தம் 7 வார்த்தைகளை மட்டுமே தன் ஜெபத்தில் பயன்படுத்துகிறான் ஆனால் ஆயக்காரனுடைய ஜெபமே கேட்கப்படுகிறது. அவன் உண்மையோடும் மனத்தாழ்மையோடும் குற்ற உணர்வோடும் எதிர்பார்ப்போடும் தேவனுடைய சமூகத்தில் விண்ணப்பம் பண்ணுகிறான்

கிருபையாயிரு (be merciful) - ἱλάσκομαι - hilaskomai - 2433

வினைச்சொல் - கிருபையாயிரு நிவாரணஞ்செய் - கிருபாசனத்தின்மீது பாவநிவாரண இரத்தம் தெளிக்கப்படுவதன் மூலமாக வரும் தேவனுடைய கிருபை (எபி 9:5 ரோமர் 3:25 யாத் 25:17-21)

"பாவி" ஆயக்காரன் தன்னைப் பொதுவான பாவியாகக் கூறாமல் "தான் ஒரு பாவி" என்று பொருள்படும் விதத்தில் தன்னுடைய நிலைமையைக் கூறுகிறான் (1 தீமோ 1:15) ஆயக்காரனுடைய ஜெபத்தில் தான் ஒரு பாவி என்பதும், தேவன் கிருபையுள்ளவர் என்பதும் வெளிப்படுத்தப்படுகிறது பாவநிவாரண இரத்தத்தின் மூலமாக தேவனுடைய கிருபை தனக்குக் கிடைக்கும் என்று ஆயக்காரன் நம்புகிறான் (லூக்கா 18:14) நாமும் ஜெபத்தில் ஆயக்காரனைப் போலவே ஜெபிக்க வேண்டும் (1யோவான் 1:9; ரோமர் 10:9-10)

"அவனல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவன்" ஒரு மனுஷனை நீதிமானாக்க இயேசு கிறிஸ்துவினால் முடிகிறது. ஒருவனுடைய பாவத்தை அவரால் மன்னிக்க முடிகிறது. இதற்குரிய அதிகாரம் இயேசுகிறிஸ்துவிற்கு உள்ளது.

"தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான் தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" - (மத் 20:16)

129. இயேசு சிறுபிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார் - (மத் 19:13, மாற்கு 10:13)

லூக்கா 18:15 பின்பு குழந்தைகளையும் அவர் தொடும்படிக்கு அவர்களை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள் சீஷர்கள் அதைக்கண்டு, கொண்டு வந்தவர்களை அதட்டினார்கள்

லூக்கா 18:16 இயேசுவோ அவைகளைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டு: சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள் அவைகளைத் தடைபண்ணாதிருங்கள் தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது

லூக்கா 18:17 எவனாகிலும் சிறுபிள்ளையைப் போல தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டால் அதில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்

"குழந்தைகளையும் அவர் தொடும்படிக்கு அவர்களை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள் சீஷர்கள் அதைக்கண்டு, கொண்டுவந்தவர்களை அதட்டினார்கள்" (மத் 19:13-15; மாற்கு 10:13-16

130. ஐசுவரியமுள்ள வாலிபன் (மத் 19:16; மாற்கு 10:17)

லூக்கா 18:18 அப்பொழுது தலைவன் ஒருவன் அவரை நோக்கி: நல்ல போதகரே நித்தியஜீவனைச் சுதந்தரித்துக் கொள்வதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான்

லூக்கா 18:19 அதற்கு இயேசு: நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே.

18 அதிகாரம்

லூக்கா 18:20 விபசாரஞ் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்கிற கற்பனைகளை நீ அறிந்திருக்கிறாயே என்றார்.

லூக்கா 18:21 அதற்கு அவன்: இவைகளையெல்லாம் என் சிறு வயதுமுதல் கைக்கொண்டிருக்கிறேன் என்றான்.

லூக்கா 18:22 இயேசு [redacted] கேட்டு: இன்னும் உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு; உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்றுத் தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றிவா என்றார்.

லூக்கா 18:23 அவன் அதிக ஐசுவரியமுள்ளவனானபடியினால் இதைக் கேட்டபொழுது, மிகுந்த துக்கமடைந்தான்.

"நல்ல போதகரே, நித்தியஜீவனைச் சுதந்தரித்துக்கொள்வதற்கு நான் என்ன செய்யவேண்டும்" - (மத் 19:16-30, மாற்கு 10:17-31)

"கற்பனைகளை நீ அறிந்திருக்கிறாயே" - மனுஷனுக்கு மனச்சாட்சி இருக்கிறது. நன்மை எது, தீமை எது என்பதை [redacted] அறிந்திருக்கிறான் (ரோமர் 2:12-16). வேதாகமம் தேவனுடைய வார்த்தை. தேவனுடைய சித்தம் இதில் எழுதப்பட்டிருக்கிறது. நாம் இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்கிற தெளிவான உபதேசம் வேதாகமத்தில் உள்ளது. தேவனுடைய வார்த்தையை அறிந்து கொண்டால் மட்டும் போதாது. அதற்குக் கீழ்ப்படியவும் வேண்டும்.

"இவைகளையெல்லாம் என் சிறு வயதுமுதல் கைக்கொண்டிருக்கிறேன்" - இவன் கற்பனைகளைக் கைக்கொண்டிருக்கிறான் என்பதில் இயேசு கிறிஸ்துவிற்குச் சந்தேகம் எதுவுமில்லை. அவன் உண்மையாகவே இந்த ஐந்து கற்பனைகளையும் கைக் கொண்டிருக்கிறான். "இயேசு அவனிடத்தில் அன்புகூர்ந்தார்" (மாற்கு 10:21) என்று வாசிக்கிறோம். இதன்பின்பு, இயேசு அவனிடம் இன்னும் ஒரு கற்பனையையும் கூறுகிறார். "உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்றுத் தரித்திரருக்குக் கொடு" அவன் இதுவரையிலும் இந்தக் கற்பனையைக் கைக்கொள்ளவில்லை. உன்னைப்போல பிறனையும் நேசிப்பாயாக என்னும் கற்பனைக்கு (மத் 22:37-39) ஒப்பாக இந்தக் கற்பனை இருக்கிறது. பிறர் ஏழையாக இருக்கலாம். நம்மிடம் உதவி எதிர்பார்க்கலாம். நம்மால் அவருக்கு உதவி செய்ய முடியலாம். தேவனுக்கு நாம் முழுமையாகக் கீழ்ப்படிய வேண்டும் (லூக்கா 10:27-37).

தரித்திரன் (poor) - πτωχός - ptoochos - 4434

பெரிதும் எளிமையுள்ள தரித்திரரான ஏழைகளான (destitute, in want) - பிச்சைக்காரன் (beggar) (லூக்கா 16:20,22), பிச்சை எடுத்தல் (beggarly) (கலா 4:9), தரித்திரன் (poor man) (யாக் 2:2)

"என்னைப் பின்பற்றிவா" - இதுவே கிறிஸ்தவ ஜீவியத்தின் இரகசியம். மத்தேயு சுவிசேஷத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரையிலும் உள்ள புதிய ஏற்பாட்டுப் புஸ்தகங்களின் மையக்கருத்து இதுதான். "இயேசுவை நாம் பின்பற்றி வரவேண்டும்". இதைச் செய்யாதவருக்கு நித்திய ஜீவன் இல்லை (யோவான் 10:27-29). விசுவாசிகள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் எல்லா உபதேசங்களுக்கும் கட்டளைகளுக்கும் கீழ்ப்படிய வேண்டும். (யாக் 1:18-27; யாக் 2:8-26; 1யோவான் 1:7; 1யோவான் 2:3-6,15-17; 1யோவான் 3:5-10; 1யோவான் 5:1-5,18)

18 அதிகாரம்

131. ஐசுவரியவான்களுக்கு எச்சரிப்பு - மத் 6:19; 19:23; மாற்கு 10:23)

லூக்கா 18:24 அவன் மிகுந்த துக்கமடைந்ததை இயேசுகண்டு: ஐசுவரியமுள்ளவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது.

லூக்கா 18:25 ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்றார்.

லூக்கா 18:26 அதைக் கேட்டவர்கள்: அப்படியானால் யார் இரட்சிக்கப்படக் கூடும் என்றார்கள்.

லூக்கா 18:27 அதற்கு அவர்: மனுஷரால் கூடாதவைகள் தேவனால் கூடும் என்றார்.

"ஐசுவரியமுள்ளவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது" ஐசுவரியவான்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கலாம். ஆனாலும் அது அவர்களுக்குக் கடினமான செயல்.

ஐசுவரியமுள்ளவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதற்குக் கடினமாக இருப்பதற்குக் காரணங்கள்

1. தங்களைச் செல்வந்தர்களாக்குவதற்கு ஏழைகளை ஒடுக்குகிறார்கள் (நெகே 5:1-13; யாக் 2:6-7; யாக் 5:1-7; நீதி 18:23; எரே 22:13-19)
2. தேவனிடத்தில் விசுவாசம் வைப்பதில்லை (யோபு 21:7-15; சங் 52:1-6)
3. தங்கள் ஐசுவரியத்தை நம்புகிறார்கள் (யோபு 31:24-28; சங் 52:1-6; நீதி 18:11; 1தீமோ 6:17)
4. தங்கள் வெற்றியில் பெருமைப் படுகிறார்கள் (சங் 52:1-6; சங் 73:3-9; நீதி 28:11; எசே 28:5; 1தீமோ 6:4-19)
5. தங்கள் பாவத்தில் சந்தோஷப் படுகிறார்கள் (எரே 7-9,27-1; ஆமோ 6:1-6)
6. தங்களைக் குறித்துப் பெருமை அடைகிறார்கள் (எரே 9:23; உபா 8:17-18; 1தீமோ 6:4-19)
7. தங்களுடைய செல்வங்களை ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுப்பதில்லை (மாற்கு 10:17-27; லூக்கா 18:22-26; 1தீமோ 6:17-19; 1யோவான் 3:17)
8. இன்னும் அதிக செல்வம் சேர்க்க வேண்டுமென்று பேராசை படுகிறார்கள் (லூக்கா 12:15-2; லூக்கா 16:13-31)
9. கடின இருதயமுடையவர்களாக இருக்கிறார்கள் (1தீமோ 6:17-18; யாக் 1:10; உபா 8:17)
10. தேவனுக்குக் கீழ்ப்படிய மறுக்கிறார்கள் (மாற்கு 10:21; லூக்கா 12:15; 1தீமோ 6:17-18; மத் 6:19-2; நீதி 23:4)

மனுஷருக்கு ஐசுவரியத்தைத் தருகிறவர் தேவனே. ஆகையினால் ஐசுவரியவான்கள் தேவனை அங்கீகரிக்க வேண்டும். ஒருவனிடத்திலுள்ள ஐசுவரியத்தைக் கர்த்தரால் எடுத்துப் போடவும் முடியும் (சாமு 2:7; உபா 8:17-18; 1தீமோ 6:17-18; ஆதி 24:1; 1இராஜா 3:12-14; யோபு 42:10). ஐசுவரியவான்களுக்குக் கர்த்தர் பல எச்சரிப்புக்களைக் கூறியிருக்கிறார் (உபா 6:10-12; உபா 8:10-18; உபா 31:20; நீதி 23:4; நீதி 27:23-24; நீதி 28:8,20-22; நீதி 30:8-9; பிர 5:9-19; பிர 6:1-2; ஏசா 5:8; மத் 6:19-21; மத் 13:22; மாற்கு 4:19; லூக்கா 12:15; 1தீமோ 6:4-19)

"ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும்" (மத் 19:24)

18 அதிகாரம்

"அப்படியானால் யார் இரட்சிக்கப்படக்கூடும்" - தேவனிடத்தில் பட்சபாதமில்லை. அவர் ஐசுவரியவானையும் ஏழையையும் ஒன்று போலவே பார்க்கிறார். இரட்சிப்பிற்கும், ஐசுவரியத்திற்கும் சம்பந்தமில்லை. இரட்சிக்கப் படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பது வேதாகமத்தில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. அதற்கு யாரெல்லாம் கீழ்ப்படிந்து நடக்கிறார்களோ அவர்கள் ஐசுவரியவான்களாக இருந்தாலும் ஏழைகளாக இருந்தாலும் அவர்கள் இரட்சிக்கப்படுவார்கள்.

132. முழுமையாக ஒப்புக் கொடுத்தவர்களுக்கு வெகுமதிகள் - (மத் 19:29; மாற்கு 10:28)

லூக்கா 18:28 அப்பொழுது பேதுரு அவரை நோக்கி: இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே என்றான்.

லூக்கா 18:29 அதற்கு அவர்: தேவனுடைய ராஜ்யத்தினிமித்தம் வீட்டையாவது பெற்றாரையாவது சகோதரரையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது விட்டுவிட்ட எவனும்,

லூக்கா 18:30 இம்மையிலே அதிகமானவைகளையும், மறுமையிலே நித்திய ஜீவனையும் அடையாமற் போவதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

"நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே" (மத் 19:27-30)

தீர்க்கதரிசன எண் - 36

"தேவனுடைய ராஜ்யத்தினிமித்தம் வீட்டையாவது, பெற்றாரையாவது சகோதரரையாவது, மனைவியையாவது பிள்ளைகளையாவது விட்டுவிட்ட எவனும், இம்மையிலே அதிகமானவைகளையும், மறுமையிலே நித்திய ஜீவனையும் அடையாமற் போவதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (லூக்கா 18:29-33) இந்தத் தீர்க்கதரிசனத்தில் லூக்கா 18:29-30 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை. லூக்கா 18:31-33 ஆகிய வசனங்கள் நிறைவேறியுள்ளன.

133. தமது மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் இயேசு மறுபடியும் முன்குறித்துக் கூறுகிறார் - (மத் 16:21)

லூக்கா 18:31 பின்பு அவர் பன்னிருவரையும் தம்மிடத்தில் அழைத்து: இதோ, எருசலேமுக்குப் போகிறோம், மனுஷகுமாரனைக் குறித்துத் தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டவைகளெல்லாம் நிறைவேறும்.

லூக்கா 18:32 எப்படியெனில், அவர் புறஜாதியாரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, பரியாசமும் நிந்தையும் அடைந்து, துப்பப்படுவார்.

லூக்கா 18:33 அவரை வாரினால் அடித்து, கொலைசெய்வார்கள்; மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார் என்றார்.

லூக்கா 18:34 இவைகளில் ஒன்றையும் அவர்கள் உணரவில்லை; அவைகளின் பொருள் அவர்களுக்கு மறைவாயிருந்தது, அவர் சொன்னவைகளை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை.

"எருசலேமுக்குப் போகிறோம்" லூக்கா 18:32-33 ஆகிய வசனங்களில் காணப்படும் மூன்று நாள் ஊழியத்தின் முடிவுப் பகுதிக்கு இயேசு கிறிஸ்து வருகிறார்.

"மனுஷகுமாரனைக் குறித்துத் தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டவைகளெல்லாம் நிறைவேறும்" இயேசு கிறிஸ்துவைக் குறித்து தீர்க்கதரிசிகள் பல காரியங்களை எழுதியிருக்கிறார்கள் அவைகளெல்லாம் நிறைவேறும்.

18 அதிகாரம்

மனுஷகுமாரனைக் குறித்துத் தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டு நிறைவேறியவை

1 புறஜாதியாரிடத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டார் (லூக்கா 18:32; மத் 27:2 அப் 4:27; சங் 2:1-3)

2 பரியாசம் பண்ணப்பட்டார் (லூக்கா 18:32; மத் 27:27-32, 41 சங் 22:13,16,18; சங் 69:21-26; சங் 109:25

3 நிந்தை அடைந்தார் (லூக்கா 18:32; மத் 27:27-32; சங் 22:13,16,18 ஏசா 52-53

4 துப்பப்பட்டார் (லூக்கா 18:32; மத் 26:67; மத் 27:30; மாற்கு 14:65 மாற்கு 15:19; ஏசா 50:6)

5 வாரினால் அடித்தார்கள் (லூக்கா 18:33; மத் 27:26; மாற்கு 15:15; யோவான் 19:1; ஏசா 52:14, ஏசா 53:3-12

6 சிலுவையில் அறைந்து கொலை செய்தார்கள் (லூக்கா 18:33; மத் 26:2, மத் 27:22-24, அப் 2:23; அப் 3:15 சங் 22:16; சக 13:6)

7 மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருந்தார் (லூக்கா 18:33; மத் 12:40, மத் 28; லூக்கா 24, யோவான் 20-21 சங் 16:10)

"அவர் சொன்னவைகள்" - மேசியா வருவார் அவர் தங்களை விடுதலை செய்வார் தங்களுக்கொரு ராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்று யூதர்கள் நம்பினார்கள் இயேசு கிறிஸ்துவே அந்த மேசியா என்பதை பலர் அறிந்து கொள்ளவில்லை. இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்புகூட ஏராளமான யூதர்கள் இயேசு கிறிஸ்துவே மேசியா என்பதை அறிந்து கொள்ளாமல் இருந்தார்கள் (அப் 1:6-7)

134. இயேசு குருடனைக் குணப்படுத்துகிறார் - (மத் 9:27; 20:29, மாற்கு 10:46)

லூக்கா 18:35 பின்பு அவர் எரிகோவுக்குச் சமீபமாய் வரும்போது, ஒரு குருடன் வழியருகே உட்கார்ந்து பிச்சைகேட்டுக் கொண்டிருந்தான்

லூக்கா 18:36 ஜனங்கள் நடக்கிற சத்தத்தை அவன் கேட்டு, இதென்ன என்று விசாரித்தான்

லூக்கா 18:37 நசரேயனாகிய இயேசு போகிறார் என்று அவனுக்கு அறிவித்தார்கள் அப்பொழுது அவன் இயேசுவே, தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும் என்று கூப்பிட்டான்

லூக்கா 18:38 முன் நடப்பவர்கள் அவன் பேசாமலிருக்கும்படி அவனை அதட்டினார்கள் அவனோ, தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும் என்று மிகவும் அதிகமாய்க் கூப்பிட்டான்

லூக்கா 18:39 இயேசு நின்று அவனைத் தம்மிடத்தில் கொண்டுவரும்படி சொன்னார்

லூக்கா 18:40 அவன் கிட்ட வந்தபொழுது அவர் அவனை நோக்கி:

லூக்கா 18:41 நான் உனக்கு என்னசெய்ய வேண்டும் என்றிருக்கிறாய் என்று கேட்டார் அதற்கு அவன், ஆண்டவரே, நான் பார்வையடைய வேண்டும் என்றான்

லூக்கா 18:42 இயேசு அவனை நோக்கி: நீ பார்வையடைவாயாக, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார்

லூக்கா 18:43 உடனே அவன் பார்வையடைந்து தேவனை மகிமைப்படுத்திக்கொண்டே அவருக்குப் பின்சென்றான் ஜனங்களெல்லாரும் அதைக் கண்டு, தேவனைப் புகழ்ந்தார்கள்

"ஒரு குருடன் வழியருகே உட்கார்ந்து பிச்சைகேட்டுக் கொண்டிருந்தான்" (மாற்கு 10:49)

லூக்கா - தொகுப்புரை

18 அதிகாரம்

"தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும்" - இயேசு கிறிஸ்து தாவீதின் குமாரன் என்பதும், அவரே மேசியா என்பதும் ஜனங்களுக்கு மிகவும் பிரபலமாக இருந்திருக்க வேண்டும். இல்லையென்றால் இந்தக் குருடனுக்கு இயேசு கிறிஸ்து தாவீதின் குமாரன் என்று தெரிந்திருப்பதற்கு வாய்ப்பில்லை (மத் 1:1).

"முன் நடப்பவர்கள் அவன் பேசாமலிருக்கும்படி அவனை அதட்டினார்கள்" - ஜனங்கள் இயேசுவோடு கூட இருந்தாலும் அவர்களுடைய இருதயத்தில் இயேசுவின் சிந்தையில்லை. இயேசுகிறிஸ்து மனதுருக்கம் உடையவர். ஆனால் இவர்களோ மனுஷப்பிரகாரமாகச் சிந்தித்து அந்தக் குருடனை அதட்டுகிறார்கள். இயேசுவின் சித்தத்தை அவரோடு இருக்கும் ஜனங்கள் புரிந்து கொள்ளவில்லை.

"நீ பார்வையடைவாயாக" - குணமடைவதற்கு இது மிகவும் எளிதான வைத்தியம். இயேசு கிறிஸ்து பரமவைத்தியர். அவருடைய வாயின் வார்த்தையிலிருந்து சுகமாகுதல் வருகிறது. அவர் ஒரு வார்த்தை சொன்னால் போதும். குருடன் பார்வையடைகிறான். தேவனுடைய வல்லமையினால் மட்டுமே இப்படிப்பட்ட அற்புதங்கள் நடைபெறும்.

"உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" - நோய்கள் குணமடைவதற்கு நோயாளியின் விசுவாசமும் தேவைப்படுகிறது. இயேசு கிறிஸ்து நம்மைக் குணப்படுத்துவார் என்னும் விசுவாசம் நமக்குள் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட விசுவாசம் காணப்படவில்லையென்றால் தேவனுடைய ஊழியக்காரர்கள் பரிசுத்த ஆவியானவரின் வார்த்தை வெளிப்படுத்த வேண்டும். தேவன் தமது வசனங்களை அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதிப்பண்ணுவார் (யோவான் 14:12).

"உடனே அவன் பார்வையடைந்தான்" - தெய்வீக சுகமாகுதல் நடைபெறுகிறது. அவன் உடனே தேவனை மகிமைப்படுத்துகிறான்.

"தேவனைப் புகழ்ந்தார்கள்" - அற்புதங்கள் நடைபெறும்போது தேவநாமம் மகிமைப்படும். தோல்வி, வியாதி ஆகியவை வரும்போது யாரும் தேவனை மகிமைப்படுத்தமாட்டார்கள். வியாதியின் மூலமாகத் தேவன் ஒரு ஆத்துமாவைச் சந்திப்பார் என்று சிலர் கூறுகிறார்கள். அதே சமயத்தில் வியாதியிலிருக்கும் ஒரு நபரைக் குணப்படுத்தியும் தேவனால் அந்த ஆத்துமாவைச் சந்திக்க முடியும். வியாதி குணமாகும்போது நாம் தேவனையே புகழவேண்டும். மனுஷரையும், ஊழியக்காரரையும் புகழ்ந்துவிடாதவாறு மிகுந்த எச்சரிப்போடு இருக்க வேண்டும்.

19 அதிகாரம்

135. சகேயுவின் மனமாற்றம்

(1) இயேசு எப்படிப்பட்டவரோ என்று பார்க்க விரும்பினான்

லூக்கா 19:1 அவர் எரிகோவில் பிரவேசித்து, அதின் வழியாக நடந்துபோகையில்

லூக்கா 19:2 ஆயக்காரருக்குத் தலைவனும் ஐசுவரியவானுமாயிருந்த சகேயு என்னப்பட்ட ஒரு மனுஷன்

லூக்கா 19:3 இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகைதேடினான்; அவன் குள்ளனானபடியால் ஜனக்கூட்டத்தில் அவரைக் காணக்கூடாமல்

லூக்கா 19:4 அவர் போகும் வழியில் முன்னாக ஓடி, அவரைப் பார்க்கும்படி ஒரு காட்டத்திமரத்தில் ஏறினான்

"எரிகோ" - (லூக்கா 10:30)

"சகேயு" - இந்த வசனத்தில் மட்டுமே இவனைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

"ஆயக்காரருக்குத் தலைவன்" எரிகோ பட்டணத்தில் வரிவசூல் பண்ணுகிறவர்கள் அநேகர் இருந்தார்கள். அவர்கள் எல்லோருக்குமே சகேயு தலைவன். உயர்ந்த உத்தியோகம் பார்த்து வருகிறான்.

"இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகைதேடினான். அவன் குள்ளனானபடியால், ஜனக்கூட்டத்தில் அவரைக் காணமுடியவில்லை" இவனைப் பற்றி வேதாகமத்தில் அதிகமாக எதுவும் கூறப்படவில்லை. அவன் ஒரு குள்ளன். இயேசு கிறிஸ்து எப்படிப்பட்டவரோ என்று இவன் பார்க்க விரும்பினான். வேதாகமத்தில் இயேசு கிறிஸ்துவின் சுபாவம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் அவர் கருப்பா, சிவப்பா, நெட்டையா, குட்டையா என்பதுபோன்ற விவரம் வேதவசனங்களில் இல்லை. ஓவியர்கள் இயேசு கிறிஸ்து இப்படித்தான் இருப்பார் என்று கற்பனை செய்து அவருடைய உருவத்தை ஓவியமாக வரைகிறார்கள். அது உண்மையா பொய்யா என்று யாருக்கும் தெரியாது. ஒரு நாளில் நாம் அவரை முகமுகமாகத் தரிசிப்போம் என்று வேதவாக்கியம் கூறுகிறது. இயேசு எப்படிப்பட்டவரோ என்னும் கேள்விக்கு அன்றுதான் விடை தெரியும்.

"காட்டத்திமரம்" - (1இராஜா 10:27)

(2) தயக்கமில்லாத கீழ்ப்படிதல்

லூக்கா 19:5 இயேசு அந்த இடத்தில் வந்தபோது, அண்ணாந்துபார்த்து அவனைக் கண்டு: சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கிவா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும் என்றார்

லூக்கா 19:6 அவன் சீக்கிரமாய் இறங்கி, சந்தோஷத்தோடே அவரை அழைத்துக்கொண்டுபோனான்

"இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்க வேண்டும்" - ஒரு ஊரின் வழியாக ராஜ வம்சத்தைச் சேர்ந்தவர் பிரயாணம் பண்ணும்போது, அவர் இப்படிப்பட்ட கட்டளையைக் கொடுப்பார். இயேசு கிறிஸ்து ராஜாதிராஜா ஆகையினால் தமக்குரிய உரிமையோடு சகேயுவிடம் அவனுடைய வீட்டில் தாம் தங்க வேண்டும் என்று கூறுகிறார்.

"சந்தோஷத்தோடே அவரை அழைத்துக் கொண்டு போனான்" விருந்தினர்களை நாம் நம்முடைய முகத்திலும் இருதயத்திலும் சந்தோஷமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்துவை எப்போதுமே நாம் சந்தோஷமாகவே நமது இருதயங்களில் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

(3) மனக்க உபத்திரவங்கள்

லூக்கா 19:7 அதைக் கண்ட யாவரும்: இவர் பாவியான மனுஷனிடத்தில் தங்கும்படி போனார் என்று முறுமுறுத்தார்கள்

(4) பாவம் உணர்த்தப்பட்டு தன்னை அர்ப்பணிக்கிறான்

லூக்கா 19:8 சகேயு நின்று, கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால் நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான்

19 அதிகாரம்

"என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன் நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால் நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன்" - இயேசு கிறிஸ்து சகேயுவினுடைய வீட்டிற்கு வந்தவுடன் அவன் பாவஅறிக்கை செய்ய ஆரம்பித்து விடுகிறான் தன்னுடைய ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுப்பதாக வாக்குப் பண்ணுகிறான் பழைய ஏற்பாட்டுப் பிரமாணத்தின் பிரகாரம் ஒருவன் ஒரு ஆட்டைத் திருடினால் அவன் நான்கு ஆடுகளைத் திருப்பிச் செலுத்த வேண்டும் (யாத் 22:1) சகேயு அதுபோலவே நாலத்தனையாய்த் திரும்பச் செலுத்துகிறேன் என்று அறிவிக்கிறான் அவனுடைய இருதயத்தில் ஒரு உண்மையான மாற்றம் ஏற்பட்டுவிட்டது.

(5) சகேயுவின் மனமாற்றமும் புதிய பிறப்பும்

லூக்கா 19:9 இயேசு அவனை நோக்கி, இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது. இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே

லூக்கா 19:10 இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார்

"இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது" லூக்கா 2:30 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருப்பதுபோல இதுவும் ஒரு சத்திய அறிக்கையாகும்

"இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே" இயேசு கிறிஸ்து காணாமல்போனவர்களைத் தேடிக் கண்டுபிடித்து இரட்சிப்பதற்காகவே இந்த உலகத்திற்கு வந்தார் யூதர்கள் தங்களை ஆபிரகாமின் குமாரர் என்று கூறிக்கொள்வதில் பெருமைப்பட்டார்கள் மார்க்கத்தலைவர்களும் தங்களை ஆபிரகாமின் குமாரர் என்றே கூறிக்கொண்டார்கள் ஆனால் அவர்களில் யாரும் சகேயு இரட்சிக்கப்படுவதற்கு உதவி புரியவில்லை

இயேசு கிறிஸ்து சகேயுவின் உள்ளத்தில் ஏற்பட்ட மாற்றத்தைக் கண்டவுடன் அவனும் ஆபிரகாமின் குமாரன் என்று அறிவிக்கிறார் இயேசு கிறிஸ்து பாவிகள் இருக்கும் இடத்திற்குச் சென்று அவர்களை இரட்சிக்கிறார் (லூக்கா 19:10)

"இழந்துபோனதைத்தேடவும்இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்" - (லூக்கா 5:32)

136. பத்து ராத்தல் திரவியம் பற்றிய உவமை – பரலோக இராஜ்ஜியம் தாமதமாகிறது – (மத் 25:14 அப் 1:7)

லூக்கா 19:11 அவர்கள் இவைகளைக் கேட்டுக்கொண்டிருக்கையில் அவர் எருசலேமுக்குச் சமீபித்திருந்த படியினாலும் தேவனுடைய ராஜ்யம் சீக்கிரமாய் வெளிப்படுமென்று அவர்கள் நினைத்த படியினாலும் அவர் ஒரு உவமையைச் சொன்னார்

லூக்கா 19:12 பிரபுவாகிய ஒருவன் ஒரு ராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பி வரும்படி தூரதேசத்துக்குப் போகப் புறப்பட்டான்

லூக்கா 19:13 புறப்படும்போது, அவன் தன் ஊழியக்காரரில் பத்துப்பேரை அழைத்து அவர்களிடத்தில் பத்து ராத்தல் திரவியம் கொடுத்து நான் திரும்பிவருமளவும் இதைக்கொண்டு வியாபாரம் பண்ணுங்கள் என்று சொன்னான்

லூக்கா 19:14 அவனுடைய ஊரார் அவனைப் பகைத்து இவன் எங்கள்மேல் ராஜாவாயிருக்கிறது எங்களுக்கு மனதில்லையென்று சொல்லும்படி அவன் பின்னே ஸ்தானாபதிகளை அனுப்பினார்கள்

லூக்கா 19:15 அவன் ராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பிவந்தபோது தன்னிடத்தில் திரவியம் வாங்கியிருந்த அந்த ஊழியக்காரரில் அவனவன் வியாபாரம்பண்ணிச் சம்பாதித்தது இவ்வளவென்று அறியும்படி, அவர்களைத் தன்னிடத்தில் அழைத்துவரச் சொன்னான்

19 அதிகாரம்

லூக்கா 19:16 அப்பொழுது முந்தினவன் வந்து: ஆண்டவனே, உம்முடைய ராத்தலினால் பத்துராத்தல் ஆதாயம் கிடைத்தது என்றான்.

லூக்கா 19:17 எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தம ஊழியக்காரனே, நீ கொஞ்சத்தில் உண்மையுள்ளவனாயிருந்தபடியால் பத்துப் பட்டணங்களுக்கு அதிகாரியாயிரு என்றான்.

லூக்கா 19:18 அப்படியே இரண்டாம் ஊழியக்காரன் வந்து: ஆண்டவனே, உம்முடைய ராத்தலினால் ஐந்துராத்தல் ஆதாயம் கிடைத்தது என்றான்.

லூக்கா 19:19 அவனையும் அவன் நோக்கி: நீயும் ஐந்து பட்டணங்களுக்கு அதிகாரியாயிரு என்றான்.

லூக்கா 19:20 பின்பு வேறொருவன் வந்து: ஆண்டவனே, இதோ, உம்முடைய ராத்தல், இதை ஒரு சீலையிலே வைத்திருந்தேன்.

லூக்கா 19:21 நீர் வைக்காததை எடுக்கிறவரும், விதைக்காததை அறுக்கிறவருமான கடினமுள்ள மனுஷனென்று அறிந்து, உமக்குப் பயந்திருந்தேன் என்றான்.

லூக்கா 19:22 அதற்கு அவன்: பொல்லாத ஊழியக்காரனே, உன் வாய்ச்சொல்லைக்கொண்டே உன்னை நியாயந்தீர்க்கிறேன். நான் வைக்காததை எடுக்கிறவனும், விதைக்காததை அறுக்கிறவனுமான கடினமுள்ள மனுஷனென்று அறிந்தாயே.

லூக்கா 19:23 பின்னை ஏன் நீ என் திரவியத்தைக் காசுக்கடையிலே வைக்கவில்லை, வைத்திருந்தால் நான் வரும்போது, அதை வட்டியோடே வரப்பற்றிக்கொள்வேனே என்று சொல்லி,

லூக்கா 19:24 சமீபமாய் நிற்கிறவர்களை நோக்கி: அந்த ராத்தலை அவன் கையிலிருந்தெடுத்து, பத்துராத்தல் உள்ளவனுக்குக் கொடுங்கள் என்றான்.

லூக்கா 19:25 அதற்கு அவர்கள்: ஆண்டவனே, அவனுக்குப் பத்துராத்தல் இருக்கிறதே என்றார்கள்.

லூக்கா 19:26 அதற்கு அவன்: உள்ளவன் எவனுக்குங் கொடுக்கப்படும், இல்லாதவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

லூக்கா 19:27 அன்றியும் தங்கள்மேல் நான் ராஜாவாகிறதற்கு மனதில்லாதிருந்தவர்களாகிய என்னுடைய சத்துருக்களை இங்கே கொண்டுவந்து, எனக்கு முன்பாக வெட்டிப்போடுங்கள் என்று சொன்னான் என்றார்.

உவமை எண் - 41

"பிரபுவாகிய ஒருவன் ஒரு ராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பிவரும்படி தூரதேசத்துக்குப் போகப் புறப்பட்டான் ____" 'லூக்கா 19:12-27 இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரும்வரையிலும், தேவனுடைய ராஜ்யம் தாமதமாகிறது என்பதை இந்த உவமை விளக்குகிறது. இந்த உவமையும் மத் 25:14-30 ஆகிய வசனங்களில் காணப்படும் உவமையும் ஒருசில வித்தியாசங்களைத் தவிர மற்றவை ஒன்றுபோல உள்ளது.

இந்த உவமை ஏரோதுவைக் குறிப்பதாகத் திருச்சபை வரலாற்று ஆசிரியர்கள் சிலர் கூறுகிறார்கள். ஏரோது யூதேயா ராஜ்யத்தைப் பெற்றுக் கொள்வதற்காக எரிகோவிலிருந்து ரோமாபுரிக்கு பிரயாணம் செய்தான். இயேசு கிறிஸ்து இந்தச் சம்பவத்தை உவமையாக கூறுகிறாரா அல்லது வேறுஏதாவது சம்பவத்தைக் கூறுகிறாரா என்று தெரியவில்லை.

தீர்க்கதரிசன எண் - 37

"பிரபுவாகிய ஒருவன் ஒரு ராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பிவரும்படி தூரதேசத்துக்குப் போகப் புறப்பட்டான்" 'லூக்கா 19:12 27 இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இது முழுமையாக நிறைவேறும்.

19 அதிகாரம்

ராத்தல் (pounds) - μνᾶ - mna - 3414

பெண்பால் பெயர்ச்சொல் - ராத்தல

"அவனுடைய ஊரார் அவனைப பகைத்து இவன் எங்கள்மேல ராஜாவாயிருக்கிறது எங்களுக்கு மனதில்லையென்று சொல்லும்படி அவன் பின்னே ஸ்தானாபதிகளை அனுப்பினார்கள்" - தேவனுடைய ராஜ்யம காலதாமதமாக வருவதற்கு மற்றொரு காரணம் ஜனங்களுடைய கிரியைகளும் ஊழியக் காரருடைய செயலகளும் ஆகும். இந்த உவமையில ஊழியக்காரர் என்பது ராஜாவினுடைய விசேஷித்த வேலையாட்களைக் குறிக்கும். ஊரார் என்பது ராஜாவின் ஆளுகைககு உடபட்ட ஜனங்களைக் குறிககும.

இந்த உவமையைத் தேவனுடைய ராஜ்யத்திற்கும் ஒப்பிடடுக் கூறலாம். ஊழியககாரர்கள் என்பது தேவனுடைய ஊழியககாரர்களையும் விசுவாசிகளையும குறிக்கும் இவர்கள் தேவனுடைய ராஜ்யத்தின சுவிசேஷததைப பிரசங்கிக்கிறார்கள ஊரார் என்பது கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாத யூதரையும் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளாத அவிசுவாசிகளையும் குறிககும (யோவான் 1:11 யோவான 15:18 25. மத் 27:21-25

"ஸ்தானாபதிகள்" - செய்தி (message) அகஸ்து ராயன் ஆட்சிபுரிந்தபோது யூதர்கள ஏரோதுவிற்கு எதிராக ராயனுககுச செய்தி அனுப்பினார்கள் இந்த உவமையில கூறப்பட்டிருக்கும் செய்தி அதுபோன்ற ஒரு காரியமாக இருக்கலாம்

"உம்முடைய ராத்தலினால் பத்துராத்தல் ஆதாயம் கிடைத்தது" இந்த ஊழியக்காரனுக்கு அதிக திறமை இருந்ததினால இவனைப பத்துப பட்டணஙகளுக்கு அதிகாரியாக ராஜா நியமித்தான்

"உம்முடைய ராத்தலினால் ஐந்துராத்தல் ஆதாயம் கிடைத்தது" - இந்த ஊழியக்காரனுக்கு அதிக திறமை இருந்ததினால இவனைப ஐந்து பட்டணங்களுக்கு அதிகாரியாக ராஜா நியமித்தான்

"சீலை" - கைக்குட்டை அல்லது வியர்வையைத் துடைக்கும் துணி. இந்த வசனத்திலும் யோவான் 11:44; யோவான் 20:7; அப் 19:12 ஆகிய வசனங்களிலும் இந்த வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இவன் பின்விளைவுகளை நினைத்துப பயந்தான் லாபம் கிடைக்கும் என்றும் நம்பிக்கை இல்லை. நஷ்டமாகிவிடுமோ என்று பயந்தான் இப்படிப்பட்டவனிடத்தில் எந்தப பொறுப்பையும் நம்பி ஒப்படைக்க முடியாது.

கடினமுள்ள (austere) - αὐστηρός - austeeros - 840

வறட்சி - கடினமுள்ள (dry, hard, harsh) - இந்த வார்த்தை இந்த வசனத்திலும் லூக்கா 19.22 ஆகிய வசனததில மட்டுமே பயன்படுத்தப பட்டிருககிறது.

"நீர் வைககாததை எடுக்கிறவரும். விதைககாததை அறுககிறவருமான கடினமுள்ள மனுஷன்" - அககாலத்தில காணபபட்ட அநீதியை இந்த உவமை விளககுகிறது. ராஜாக்கள கடினமானவர்களாக இருந்தார்கள தஙகள் விருப்பததை நிறைவேற்றினார்கள் ஜனஙகளை ஒடுக்கிக் கொள்ளையடித்தார்கள

"பின்னை ஏன் நீ என திரவியத்தைக் காசுககடையிலே வைக்கவில்லை வைத்திருந்தால நான வரும்போது அதை வட்டியோடே வரப்பற்றிக்கொள்வேனே" - ஊழியககாரனுக்கு ராஜாவைப பற்றி நன்றாகத் தெரிந்திருந்தது. அவனிடத்தில ஒப்படைககப்பட்டிருந்த திரவியத்தை வட்டிக்குக் கடன கொடுத்திருக்கலாம். இவனால வட்டி வாஙகமுடியவில்லை யென்றாலும் ராஜா வந்து வாங்கிக் கொள்வான

"நான வரும்போது" இயேசு கிறிஸ்துவின் வருகையைக் குறிக்கிறது. அவர் வரும்போது தமது ஊழியக்காரர்களை நியாயந்தீர்ப்பார மத் 16.27

19 அதிகாரம்

"பத்துராத்தல்" - (லூக்கா 19:13)

"உள்ளவன் எவனுக்குங் கொடுக்கப்படும் இல்லாதவனிடத்தில உள்ளதும் எடுத்துக் கொள்ளப்படும் - கிழக்கு தேசங்களில ஐசுவரியவான்களுக்கு மட்டுமே வெகுமதி கொடுப்பார்கள் ஏழைக்கு ஒன்றும் கிடைக்காது. அவனிடத்திலுள்ள கொஞ்சத்தையும் எடுத்துக் கொள்வார்கள லூக்கா 19:12-இல கூறப்பட்டிருக்கும் பிரபு இந்த வசனத்தைக் கூறுகிறான் இயேசு கிறிஸ்துவின் உபதேசமும் இதுதான் (மத் 13:12; மாற்கு 4:25; லூக்கா 8:18) பாத்திரவான்களுக்கு மட்டுமே வெகுமதி கொடுக்கப்படும். (மத் 16:27; மத் 25:29 2கொரி 5:9-10)

"தங்கள்மேல நான் ராஜாவாகிறதற்கு மனதில்லாதிருந்தவர்களாகிய என்னுடைய சத்துருக்களை இங்கே கொண்டு வந்து எனக்கு முன்பாக வெட்டிப்போடுங்கள என்று சொன்னான்" - இந்த வசனத்தையும் பிரபுவே கூறுகிறான லூக்கா 19:12) இயேசு கிறிஸ்துவும் மறுபடியும் வரும்போது தமது ராஜ்யத்தை ஸ்தாபித்து, தமது விரோதிகளைத் தண்டிப்பார் (மத் 25:31-46, 2தெச 1:7-10, யூதா 1:14; வெளி 19:11-21 சக 14

137. வெற்றிபவனி - (சக 9:9; மத் 21:1, மாற்கு 11:1; யோவான 12:12)

லூக்கா 19:28 இவைகளை அவர் சொன்ன பின்பு எருசலேமுக்குப் புறப்பட்டு, முந்தி நடந்துபோனார்

லூக்கா 19:29 அவர் ஒலிவ மலையெனனப்பட்ட மலையின் அருகான பெத்பகே பெத்தானியா என்னும் ஊர்களுக்குச் சமீபித்தபோது தம்முடைய சீஷரில் இரண்டுபேரை நோக்கி:

லூக்கா 19:30 உங்களுக்கு எதிரே இருக்கிற கிராமத்துக்குப் போங்கள அதிலே பிரவேசிக்கும்போது மனுஷரிலொருவனும் ஒருக்காலும் ஏறியிராத கழுதைக்குட்டியைக் கட்டியிருக்கக் காண்பீர்கள அதை அவிழ்த்துக்கொண்டு வாருங்கள

லூக்கா 19:31 அதை ஏன் அவிழ்க்கிறீர்க ளென்று யாராவது உங்களிடத்தில கேட்டால், அது ஆண்டவருக்கு வேண்டுமென்று சொல்லுங்கள் என்றார்

லூக்கா 19:32 அனுப்பப்பட்டவர்கள் போய், தங்களுக்கு அவர் சொன்னபடியே கண்டார்கள்

லூக்கா 19:33 கழுதைக்குட்டியை அவர்கள் அவிழ்க்கும்போது அதற்கு உடையவர்கள் குட்டியை ஏன் அவிழ்க்கிறீர்கள் என்றுகேட்டார்கள்

லூக்கா 19:34 அதற்கு அவர்கள் அது ஆண்டவருக்கு வேண்டுமென்று சொல்லி.

லூக்கா 19:35 அதை இயேசுவினிடத்தில கொண்டு வந்து தங்கள வஸ்திரங்களை அதின்மேலபோட்டு. இயேசுவை அதின்மேல ஏற்றினார்கள்

லூக்கா 19:36 அவர் போகையில அவர்கள தங்கள வஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள

லூக்கா 19:37 அவர் ஒலிவமலையின அடிவாரத்துக்குச் சமீபமாய் வருகையில் திரளான கூட்டமாகிய சீஷரெல்லாரும் தாங்கள் கண்ட சகல அற்புதங்களையுங் குறித்துச் சந்தோஷப்பட்டு,

லூக்கா 19:38 கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர் பரலோகத்திலே சமாதானமும் உன்னதத்திலே மகிமையும் உண்டாவதாக என்று மிகுந்த சத்தத்தோடே தேவனைப் புகழ்ந்தார்கள்

லூக்கா 19:39 அப்பொழுது கூட்டத்திலிருந்த பரிசேயரில் சிலர் அவரை நோக்கி: போதகரே உம்முடைய சீஷரை அதட்டும் என்றார்கள

லூக்கா 19:40 அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: இவர்கள் பேசாமலி ருந்தால் கல்லுகளே கூப்பிடும் என்று உங்களுக்குச்சொல்லுகிறேன் என்றார்

19 அதிகாரம்

"எருசலேமுக்குப் புறப்பட்டு, முந்தி நடந்துபோனார்" - எரிகோவிலிருந்து எருசலேம் 3,500 அடி உயரத்தில் உள்ளது. பாதை கடினமாகவும் செங்குத்தான உயரமாகவும் இருக்கும்

"அவர் ஒலிவமலையென்னப்பட்ட மலையின் அருகான பெத்பகே பெத்தானியா என்னும் ஊர்களுக்குச் சமீபித்தார்" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வெற்றி பவனி. இந்தப் பவனியை ஜனங்கள் எதிர்பார்த்தார்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ள ஆயத்தமாக இருந்தார்கள் (யோவான் 12:12-13) இயேசு கிறிஸ்துவின் முதலாவது பவனியின்போது ஜனங்கள் அவரை எதிர்பார்க்கவில்லை (மத் 21:1-17)

தீர்க்கதரிசன எண் - 88

"உங்களுக்கு எதிரே இருக்கிற கிராமத்துக்குப் போங்கள்" (லூக்கா 19:30-31) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"கழுதைக்குட்டி" - முதலாவது பவனியின்போது அங்கு இரண்டு மிருகங்கள் இருந்தன (மத் 21:1-6)

ஏற்றினார்கள் (set ... thereon)

ἐπιβιβάζω - epibibazoo - 1913

வினைச்சொல் - ஏற்று (to cause to mount, to place upon) (லூக்கா 19:35, லூக்கா 10:34; அப் 23:24)

"தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள்" - ரோமாபுரியாரின் ஆட்சிப் பிடியிலிருந்து தங்களை விடுவிக்கிறவர் வந்துவிட்டார் என்று ஜனங்கள் நினைத்தார்கள் தேவனுடைய ராஜ்யம் உடனே தோன்றும் என்று எதிர்பார்த்தார்கள் (லூக்கா 19:11)

ஜனங்களுக்குத் தெரியாத காரியங்கள்

1 தேவனுடைய ராஜ்யம் வருவதற்கு இது ஏற்ற காலமல்ல. (லூக்கா 19:11-27)

2 மேசியா முதலாவது பாடுகள்பட்டு, பின்பு ஜனங்களை மீட்பதற்காக மரிக்க வேண்டும். (லூக்கா 17:20-25)

3 இயேசு கிறிஸ்துவின் யுத்தம் ஆவிக்குரிய யுத்தம் (எபி 2:14-15 கொலோ 2:14-17)

4 அவர்கள் மத்தியில் இயேசு கிறிஸ்து யுத்தத்தைச் சந்திக்கப் போகிறார் (யோவான் 12:31; கொலோ 2:14-17; எபி 2:14-15)

5 சிலுவையில் தாம் மரிக்கப்போகும் தமது மரணத்தின் மூலமாக சாத்தானுடைய அந்தகாரச் சக்திகள் எல்லாம் தோற்று அழிந்து போகும் (கொலோ 2:14-17; 1பேதுரு 2:24)

6. மனுஷருடைய மீட்பின் அச்சாரம் அந்த வேளையில் நிறைவேற்றப்படும் (எபி 2:9-15; எபி 10:10-13; கலா 4:4; 1கொரி 15:24-28; யோவான் 19:30)

7 தேவனுடைய ராஜ்யம் வருவதற்கு முன்பாக சபை கட்டப்பட வேண்டும் சபையின் ஊழியம் நடைபெற வேண்டும். (அப் 15:13-18; எபே 3:1-6; எபே 5:25-31; 2தெச 2:7)

8 யூதர்கள் சிதறிப்போதல், மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படுதல், அந்திக் கிறிஸ்துவின் ஆட்சி, மகா உபத்திரவக் காலம் ஆகிய தீர்க்கதரிசனங்கள் எல்லாம் நிறைவேறும். (எசே 37; சக 14; வெளி 19-20)

"அவர் ஒலிவமலையின் அடிவாரத்துக்குச் சமீபமாய் வருகையில் திரளான கூட்டமாகிய சீஷரெல்லாரும் தாங்கள் கண்ட சகல அற்புதங்களையுங்குறித்துச் சந்தோஷப்பட்டார்கள்" - இயேசு கிறிஸ்துவிற்கு ஆயிரக்கணக்கான சீஷர்கள் இருந்திருக்க வேண்டும். இயேசுவைப் போற்றிப் புகழுகிறார்கள் ஆனால் இதே ஜனங்களே சில மணி நேரங்களுக்குப் பின்பு "இயேசுவைச் சிலுவையில் அறையும்" என்று கோபத்தோடு கத்தினார்கள்

19 அதிகாரம்

லூக்கா சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 5

"கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர் பரலோகத்திலே சமாதானமும் உன்னதத்திலே மகிமையும் உண்டாவதாக" (லூக்கா 19:38 சங் 118:26; சக 9:9)

கர்த்தர் (Lord) - κύριος - kyrios - 2962

ஆண்பால் பெயர்ச்சொல் - கர்த்தர் எஜமான் ஆண்டவர், ஐயா உடையவர் தேவரீர் - இந்த வசனத்தில் கர்த்தர் என்னும் வாக்கியம் பிதாவாகிய தேவனைக் குறிக்கும். (லூக்கா 9:38)

"பரலோகத்திலே சமாதானமும் உன்னதத்திலே மகிமையும் உண்டாவதாக" - பரலோகத்திலும் பூமியிலும் சமாதானத்தைக் கொண்டு வருவதற்காக இன்னும் ஒருசில மணிநேரங்களுக்குள் இயேசு கிறிஸ்து பாடுகளை அனுபவித்து, சிலுவையில் மரிக்கப் போகிறார் (கொலோ 2:14-17; எபி 2:14-15) தேவனுக்கும், மனுஷருக்கும் இயேசு கிறிஸ்து மத்தியஸ்தராக இருக்கிறார் தமது ஒப்புரவாகுதலின் ஊழியத்தை நிறைவேற்றுகிறார் (எபே 1:10; 1கொரி 15:24-28)

"இவர்கள் பேசாமலிருந்தால் கல்லுகளே கூப்பிடும்" - இந்தச் சூழ்நிலையில் சீஷர்களுடைய உணர்வுகளை அடக்குவது கடினம் அவர்களால் அமைதியாக இருக்க முடியாது அவர்கள் அமைதியாக இருந்தால் அங்கிருக்கும் கல்லுகளே கூப்பிடும்

138. இயேசு எருசலேமிற்காக அழுகிறார்

லூக்கா 19:41 அவர் சமீபமாய் வந்தபோது நகரத்தைப்பார்த்து, அதற்காகக் கண்ணீர்விட்டழுது,

லூக்கா 19:42 உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும், இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது.

லூக்கா 19:43 உன்னைச் சந்திக்குங் காலத்தை நீ அறியாமற்போனபடியால், உன் சத்துருக்கள் உன்னைச் சூழ மதில் போட்டு, உன்னை வளைந்துகொண்டு, எப்பக்கத்திலும் உன்னை நெருக்கி,

லூக்கா 19:44 உன்னையும் உன்னிலுள்ள உன் பிள்ளைகளையும் தரையாக்கிப் போட்டு, உன்னிடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல் இராதபடிக்குச் செய்யும் நாட்கள் உனக்கு வரும் என்றார்.

அழு (wept) - κλαίω - klaioo - 2799

வினைச்சொல் - அழு (to wail) - யோவான் 11:35-இல் பயன்படுத்தப் பட்டிருக்கும் கிரேக்கச் சொல் "டக்ருவோ" (dakruo) லூக்கா 19:41 இல் பயன்படுத்தப் பட்டிருக்கும் "க்லையோ" (klaioo). இது வெளிப்படையாக எல்லோருக்கும் தெரியும் விதமாக அழுது புலம்புதல் என்று பொருள்படும். (to hard crying, lamentation, bewailing) (மத் 2:18, மத் 26:75, மாற்கு 5:38-39, மாற்கு 14:72, மாற்கு 16:10 லூக்கா 6:21,25, லூக்கா 7:13,32,38; லூக்கா 8:52, லூக்கா 19:41 லூக்கா 22:62, லூக்கா 23:28 யோவான் 11:31,33 யோவான் 16:20 யோவான் 20:11-15 அப் 9:39; அப் 21:13, ரோமர் 12:15, 1கொரி 7:30; பிலி 3:18; யாக் 4:9, யாக் 5:1; வெளி 5:4,5, வெளி 18:9-19 திரளான ஜனங்களுக்கு முன்பாக இயேசு கிறிஸ்து அழுது புலம்புகிறார்

கண்ணீர்விடு (wept) - δακρύω dakryoo 1145

வினைச்சொல் கண்ணீர்விடு (யோவான் 11:35)

19 அதிகாரம்

இயேசு கிறிஸ்து அழுத இடம் பெத்தானியாவிலிருந்து எருசலேமிருக்குச் செல்லும் பாதையாகும். ஒலிவ மலைக்கு வந்தபோது, எருசலேமின் காட்சி நன்றாகத் தெரியும் கீதரோன் பள்ளத்தாக்கிலிருந்து பார்க்கும்போது மோரியா மலையும், அதன் தேவாலயமும் நன்றாகத் தெரியும் சீயோன் மலை மோரியா மலையைவிட உயர்ந்தது. அங்கு ஏரோதின் அரண்மனை இருந்தது. இந்த இடத்திலிருந்து தான் இயேசு கிறிஸ்து எருசலேம் நகரத்தைப் பார்த்து, அதற்காகக் கண்ணீர்விட்டு அழுகிறார்

தீர்க்கதரிசன எண் - 39

"உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும் இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது............." லூக்கா 19 42-44) இந்தத் தீர்க்கதரிசனம் கி.பி. 70இல் நிறைவேறிற்று.

"அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது" வெளிச்சத்தைவிட அவர்கள் இருளை விரும்புகிறார்கள் ஆகையினால் சத்தியமும் தீர்க்க தரிசனங்களும் அவர்களுக்கு மறைவா யிருக்கிறது. (யோவான் 3:19, 20)

"உன் சத்துருக்கள் உன்னைச் சூழ மதில்போட்டு உன்னை வளைந்துகொண்டு எப்பக்கத்திலும் உன்னை நெருக்குவார்கள் கி.பி. 70ஆம் ஆண்டில் ரோமர்கள் எருசலேம் நகரத்தாருக்கு இந்தக் காரியங்களைச் செய்தார்கள் லூக்கா 21:20-24

"மதில்" (trench, a rampart) - தீத்து என்பவன் ரோமப்பேரரசின் படைத்தளபதி. இவன் எருசலேமைத் தாக்குவது மிகவும் கடினம் என்று நினைத்தான் ஏனெனில் அது இயற்கையான மலையின் உயரத்தில் அமைந்திருந்தது. தீத்து எருசலேமைச் சுற்றிலும் மதில்போட்டான் அந்தப் பட்டணத்திற்குள் எந்தப் பொருட்களும் செல்லாதவாறு தடை பண்ணினான். இதனால் செழிப்போடு இருந்த எருசலேம் பட்டணம், பஞ்சத்திற்குத் தள்ளப்பட்டது.

"உன்னையும் உன்னிலுள்ள உன் பிள்ளைகளையும் தரையாக்கிப்போட்டு, உன்னிடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராது" - எருசலேம் பட்டணம் தரைமட்டமாக ஆக்கப்பட்டது. (மத் 24:2, மாற்கு 13:2; லூக்கா 21:6; சங் 137:9 ஓசி 10:14)

"உன்னைச் சந்திக்குங்காலம்" - தானி 9:24-27 ஆகிய வசனங்களில் 69 ஆவது வாரத்தின் முடிவு என்பது எருசலேமையும் தேவாலயத்தையும் திரும்பக் கட்டுவதற்குப் பாபிலோனியச் சிறையிருப்பு முடிந்து 483 வருஷங்களைக் குறிக்கும். இந்தக் காலத்தில் இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்படுகிறார் (தானி 9:25

139. தேவாலயத்தின் இரண்டாவது சுத்திகரிப்பு - (மத் 21:12; மாற்கு 11:15. முதலாவது சுத்திகரிப்பு (யோவான் 2:13))

லூக்கா 19:45 பின்பு அவர் தேவாலயத்தில் பிரவேசித்து, அதிலே விற்கிறவர்களையும் கொள்ளுகிறவர்களையும் புறம்பே துரத்தத்தொடங்கி,

லூக்கா 19:46 என்னுடைய வீடு ஜெப வீடாயிருக்கிறதென்றெழுதியிருக்கிறது நீங்களோ அதைக் கள்ளர்குகை யாக்கினீர்கள் என்றார்

லூக்கா 19:47 அவர் நாடோறும் தேவாலயத்தில் உபதேசம் பண்ணிக் கொண்டிருந்தார் பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் ஜனத்தின் மூப்பரும் அவரைக் கொலைசெய்ய [illegible].

லூக்கா 19:48 ஜனங்களெல்லாரும் அவருக்குச் செவிகொடுத்து அவரை அண்டிக்கொண்டிருந்தபடியால், அதை இன்னபடி செய்யலாமென்று வகை காணாதிருந்தார்கள்

"அதிலே விற்கிறவர்களையும் கொள்ளுகிறவர்களையும் புறம்பே துரத்தத்தொடங்கினார்" இயேசு கிறிஸ்து மூன்றாம் முறையாக தேவாலயத்தைச் சுத்தப்படுத்துகிறார் தமது ஊழியத்தின் ஆரம்ப காலத்தில் இயேசு தேவாலயத்தை முதல்முறையாக சுத்திகரித்தார் (யோவான் 2:15) இயேசு கிறிஸ்துவின் வெற்றிப் பவனியின்போது இந்தச் சுத்திகரிப்பிற்கு ஒருசில நாட்களுக்கு முன்பாக இரண்டாம் சுத்திகரிப்பு நடைபெற்றது. (மத் 21:12; மாற்கு 11:15

19 அதிகாரம்

எரிகோவிலுள்ள சகேயுவின் வீட்டில் இரவு தங்கிவிட்டு, பின்பு எருசலேமிற்குப் போகிறார் (லூக்கா 19:1-21). இது இயேசு கிறிஸ்து எருசலேமிற்குச் சென்ற முதலாவது பயணி. (மத் 21:1-16)

இதன்பின்பு, அவர் பெத்தானியாவிற்குச் சென்று, ஓய்வுநாளை ஆசரிக்கிறார். அங்கு மூன்று இராபபோஜனங்களில் முதலாவது இராபபோஜனம் பண்ணுகிறார். இங்கு இரண்டு அபிஷேகங்களில் முதலாவது அபிஷேகம் நடைபெறுகிறது. (மத் 21:17; யோவான் 12:1-11)

பின்பு இயேசு கிறிஸ்து எருசலேமிற்கு இரண்டாம் முறையாகப் பயணி செல்கிறார். அதன்பின்பு, பெத்தானியாவிற்குத் திரும்பி வருகிறார் (மாற்கு 11:1-11; லூக்கா 19:29-44; யோவான் 12:12-19)

இயேசு கிறிஸ்து மறுபடியும் எருசலேமிற்குத் திரும்பி வருகிறார். தேவாலயத்தைச் சுத்திகரிக்கிறார். உபதேசம் பண்ணுகிறார். அத்திமரத்தைச் சபிக்கிறார். பட்டணத்திற்கு வெளியே செல்கிறார். (மத் 21:18-22; மாற்கு 11:12-19; லூக்கா 19:45-48; யோவான் 12:20-50)

மறுபடியும் இயேசு கிறிஸ்து எருசலேமிற்குத் திரும்பி வந்து உபதேசம் பண்ணுகிறார். (மத் 24; 25; மாற்கு 13; லூக்கா 21) ஆகிய வசனங்களைத் தீர்க்கதரிசனமாகக் கூறுகிறார். அதன் பின்பு, பெத்தானியாவிற்குத் திரும்பி வந்து இரண்டாவது இராபபோஜனம் பண்ணுகிறார். இரண்டாவது அபிஷேகம் இங்கு நடைபெறுகிறது. (மத் 21:23- 26:13; மாற்கு 11:20-14:9; லூக்கா 20:1-21:38)

இயேசு கிறிஸ்து மூன்றாம் இராபபோஜனம் பண்ணுகிறார். ஜிதாஸ் காரியோத்து இயேசுவைக் காட்டிக் கொடுக்கிறான். கெத்செமனே தோட்டத்தில் இயேசு கிறிஸ்து ஜெபம் பண்ணும்போது அவரைக் கைது பண்ணுகிறார்கள். இரவு முழுவதும் இயேசுவை விசாரிக்கிறார்கள்.

மறுநாள் காலையில், இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறைகிறார்கள். அன்றுமாலை அவர் அடக்கம் பண்ணப்படுகிறார். (மத் 26:14-27:66; மாற்கு 14:10-15:47; லூக்கா 22:1-23:56; யோவான் 12:1-19:42)

இது யூதரின் விசேஷித்த ஓய்வுநாளில் நடைபெறுகிறது. (லேவி 23:7,24,35; யோவான் 19:31)

இயேசு கிறிஸ்துவின் சரீரம் கல்லறையில் மூன்றுநாள் இருக்கிறது. அவருடைய ஆவியும் ஆத்துமாவும் பாதாளத்திற்குச் சென்று, அங்கு சிறைப்பட்டவர்களை விடுவித்துக் கூட்டிக் கொண்டு வருகிறார். (மத் 12:40)

லூக்கா சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 6

"என்னுடைய வீடு ஜெப வீடாயிருக்கிறதென்று எழுதியிருக்கிறது; நீங்களோ அதைக் கள்ளர்குகையாக்கினீர்கள்" (லூக்கா 19:46; ஏசா 56:7; எரே 7:11)

குகை (den) - σπήλαιον - speelaion - 4693

பல வேறுபாடற்ற பெயர்ச்சொல் - குகை (மத் 21:13; மாற்கு 11:17; லூக்கா 19:46; யோவான் 11:38; எபி 11:38; வெளி 6:15)

கள்ளர் (thieves) - λῃστής - leestees - 3027

ஆண்பால் பெயர்ச்சொல் - கள்ளர் (robber) யோவான் 10:1,8; யோவான் 18:40; 2கொரி 11:26; திருடன் (thief) (மத் 21:13; மத் 26:55; மத் 27:38,44; மாற்கு 11:17; மாற்கு 14:48; மாற்கு 15:27; லூக்கா 10:30,36; லூக்கா 19:46; லூக்கா 22:52)

"அவர் நாடோறும் தேவாலயத்தில் உபதேசம் பண்ணிக்கொண்டிருந்தார்" - இயேசு கிறிஸ்து தாம் கைதுபண்ணப்பட்டு, விசாரிக்கப்படுவதற்கு முன்பு ஐந்து நாட்களாக தேவாலயத்தில் உபதேசம் பண்ணிக்கொண்டிருந்தார். (யோவான் 12:1; மத் 21:17)

செவிகொடு (attentive) - ἐκκρεμάννυμι - ekkremannymi - 1582

வினைச்சொல் - செவிகொடு, பேசுபவரின் வாயையே பார்த்துக் கொண்டிருத்தல். அவருடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையையும் கவனித்தல்.

20 அதிகாரம்

140. இயேசுவின் அதிகாரத்தை கேள்வி கேட்கிறார்கள் – (மத் 21:23; மாற்கு 11:27)

லூக்கா 20:1 அந்நாட்களில் ஒன்றில் அவர் தேவாலயத்திலே ஜனங்களுக்கு உபதேசித்து, சுவிசேஷத்தைப் பிரசங்கித்தபோது, பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் அவரிடத்தில் கூடிவந்து,

லூக்கா 20:2 நீர் எந்த அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறீர்? இந்த அதிகாரத்தை உமக்குக் கொடுத்தவர் யார்? அதை எங்களுக்குச் சொல்லும் என்றார்கள்.

லூக்கா 20:3 அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: நானும் உங்களிடத்தில் ஒரு காரியத்தைக் கேட்கிறேன், அதை எனக்குச் சொல்லுங்கள்.

லூக்கா 20:4 யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ? மனுஷரால் உண்டாயிற்றோ? என்று கேட்டார்.

லூக்கா 20:5 அவர்கள் தங்களுக்குள்ளே யோசனைபண்ணி: தேவனால் உண்டாயிற்று என்று சொல்வோமானால், பின்னை ஏன் அவனை விசுவாசிக்கவில்லை என்று கேட்பார்.

லூக்கா 20:6 மனுஷரால் உண்டாயிற்று என்று சொல்வோமானால், ஜனங்களெல்லாரும் யோவானைத் தீர்க்கதரிசியென்றெண்ணுகிறபடியினால் நம்மேல் கல்லெறிவார்கள் என்று சொல்லி,

லூக்கா 20:7 அது யாரால் உண்டாயிற்றோ, எங்களுக்குத் தெரியாது என்று பிரதியுத்தரம் சொன்னார்கள்.

"தேவாலயத்திலே ஜனங்களுக்கு உபதேசித்து, சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்" சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு நாம் முக்கியத்துவம் தரவேண்டும். சுவிசேஷச் செய்தியில் தெய்வீக வல்லமை வெளிப்படும். விசுவாசம் கேள்வியினாலே வரும். ஆதித்திருச்சபையார் சுவிசேஷத்தை எல்லா இடங்களிலும் பிரசங்கித்தார்கள். நாமும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதை நிறுத்திவிடக் கூடாது. (ரோமர் 1:18; 1கொரி 1:18-24)

"நீர் எந்த அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறீர்? இந்த அதிகாரத்தை உமக்குக் கொடுத்தவர் யார்?" - (லூக்கா 20:2-7 மத் 21:23-27)

இயேசு கிறிஸ்துவிடம் கேட்கப்பட்ட கேள்விகள்

1. மார்க்கக் காரியங்கள் (லூக்கா 20:1-8)
2. அரசியல் காரியங்கள் (லூக்கா 20:19-26)
3. தெய்வீகக் காரியங்கள் (லூக்கா 20:27-38)
4. வீட்டுக் காரியங்கள் (லூக்கா 20:28-33)

141. திராட்சைத் தோட்டத்தின் எஜமானைப் பற்றிய உவமை – (மத் 21:33; மாற்கு 12:1)

லூக்கா 20:8 அப்பொழுது இயேசு: நானும் இன்ன அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறேனென்று உங்களுக்குச் சொல்லேன் என்றார்.

லூக்கா 20:9 பின்பு அவர் ஜனங்களுக்குச் சொல்லத்தொடங்கின உவமையாவது: ஒரு மனுஷன் ஒரு திராட்சத்தோட்டத்தை உண்டாக்கி, அதைத் தோட்டக்காரருக்குக் குத்தகையாக விட்டு, நெடுநாளாகப் புறத்தேசத்துக்குப் போயிருந்தான்.

லூக்கா 20:10 அந்தத் தோட்டக்காரர் திராட்சத்தோட்டத்தின் கனிகளில் தன் பாகத்தைக் கொடுத்தனுப்பும்படி பருவகாலத்திலே அவர்களிடத்தில் ஒரு ஊழியக்காரனை அனுப்பினான். அந்தத் தோட்டக்காரர் அவனை அடித்து, வெறுமையாக அனுப்பிவிட்டார்கள்.

20 அதிகாரம்

லூக்கா 20:11 பின்பு அவன் வேறொரு ஊழியக்காரனை அனுப்பினான்; அவனையும் அவர்கள் அடித்து, அவமானப்படுத்தி, வெறுமையாக அனுப்பிவிட்டார்கள்.

லூக்கா 20:12 அவன் மூன்றாந்தரமும் ஒரு ஊழியக்காரனை அனுப்பினான்; அவனையும் அவர்கள் காயப்படுத்தி, துரத்திவிட்டார்கள்.

லூக்கா 20:13 அப்பொழுது திராட்சத் தோட்டத்தின் எஜமான்: நான் என்ன செய்யலாம், எனக்குப் பிரியமான குமாரனை அனுப்பினால், அவனையாகிலும் கண்டு அஞ்சுவார்கள் என்று எண்ணி, அவனை அனுப்பினான்.

லூக்கா 20:14 தோட்டக்காரர் அவனைக் கண்டபோது: இவன் சுதந்தரவாளி, சுதந்தரம் நம்முடையதாகும்படிக்கு இவனைக் கொல்லுவோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டு,

லூக்கா 20:15 அவனைத் திராட்சத் தோட்டத்திற்குப் புறம்பே தள்ளி, கொன்றுபோட்டார்கள். இப்படியிருக்கத் திராட்சத்தோட்டத்தின் எஜமான் அவர்களை என்னசெய்வான்?

லூக்கா 20:16 அவன் வந்து அந்தத் தோட்டக்காரரைச் சங்கரித்து, திராட்சத் தோட்டத்தை வேறு தோட்டக்காரரிடத்தில் கொடுப்பான் அல்லவா என்றார். அவர்கள் அதைக்கேட்டு, அப்படியாகாதிருப்பதாக என்றார்கள்.

லூக்கா 20:17 அப்பொழுது அவர் அவர்களைப் பார்த்து: வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று என்று எழுதியிருக்கிற வேதவாக்கியத்தின் கருத்தென்ன?

லூக்கா 20:18 அந்தக் கல்லின்மேல் விழுகிறவன் எவனோ அவன் நொறுங்கிப் போவான்; அது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப்போடும் என்றார்.

உவமை எண் - 42

"ஒரு மனுஷன் ஒரு திராட்சத்தோட்டத்தை உண்டாக்கி, அதைத் தோட்டக்காரருக்குக் குத்தகையாக விட்டு, நெடுநாளாகப் புறத்தேசத்துக்குப் போயிருந்தான் ...... (லூக்கா 20:9-18) யூதர்கள் இயேசு கிறிஸ்துவை மறுதலிப்பதை இந்த உவமை விளக்குகிறது. (மத் 21:33-46, மாற்கு 12:1-11)

"அவனைத் துரத்திவிட்டார்கள்" - லூக்கா 20:10-11 ஆகிய வசனங்கள் மத் 23:37, லூக்கா 13:33, எபி 11:36-37 ஆகிய வசனங்களை விளக்குகிறது.

"பிரியமானவர்" (beloved, dear, favorite, or one highly esteemed) - பிதா குமாரனைப் பிரியமானவர் என்று அழைக்கிறார் (மத் 3:17, மத் 12:18, மத் 17:5, மாற்கு 1:11, மாற்கு 9:7, லூக்கா 3:22, லூக்கா 9:35). ஒருவனுடைய குமாரனை இயேசு பிரியமானவர் என்று அழைக்கிறார். அது தமயையே விளக்குகிறது. (மாற்கு 12:6) லூக்கா 20:13) விசுவாசிகளை அழைப்பதற்கு இவ்வார்த்தை நிருபங்களில் 52 இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (ரோமா 1:7, ரோமா 11:28, ரோமா 16:8, 12, பிலி 2:12, 1யோவான் 3:2, 1யோவான் 4:1,7,11)

பிரியமான (beloved) - ἀγαπητός - agapeetos 27

பெயரடை: நேச, பிரியமான

(அ) கிறிஸ்துவிற்கு பயன்படுத்தப்பட்ட பெயரடை - மத். 3:17

(ஆ) சக கிறிஸ்தவர்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ள பெயர்கள் - 1கொரி 4:14

(இ) 1யோவா 4:7ல் பிரியமானவர்களே என்னும் உரிச்சொல்

20 அதிகாரம்

"திராட்சத்தோட்டத்தின் எஜமான் அவர்களை என்னசெய்வான்?" - இந்தக் கேள்விக்குரிய பதில் யூதருக்கு நன்றாக தெரியும் ஆகையினால் அவர்கள் "அப்படியாகாதிருப்பதாக" என்றார்கள் (லூக்கா 20:16) இந்தக் கேள்விக்கு யூதர்கள் தங்களுக்குள் பதில் கூறிக்கொண்டார்கள் (மத் 21:41) இந்த உவமையின் கருத்து மத் 21:42-45 ஆகிய வசனங்களில் தெளிவாக கூறப்பட்டிருக்கிறது.

இந்த உவமையின் மூலமாக யூதர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாமல் தள்ளி விடுவதையும் தேவன் யூதர்களைத் தள்ளிவிடுவதையும் விளக்குகிறது. தேவனுடைய ராஜ்யத்தை யூதர்களிடமிருந்து எடுத்து அதைப் புறஜாதியார் கையில் கொடுக்கிறார் ஆகையினால்தான் அவர்கள் "அப்படியாகாதிருப்பதாக" என்று அலறுகிறார்கள் இப்படி நடைபெறுவது யூதருக்குப் பிடிக்கவில்லை

லூக்கா சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 7

"வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக் கல்லாயிற்று" (லூக்கா 20:17, சங் 118:22)

தீர்க்கதரிசன எண் - 40

"அந்தக் கல்லின்மேல் விழுகிறவன் எவனோ அவன் நொறுங்கிப்போவான் அது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப்போடும்" (லூக்கா 20:18) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (மத் 21:44)

142. வரிப்பணத்தைப் பற்றிய கேள்வி - (மத் 17:24, 22:15, மாற்கு 12:13)

லூக்கா 20:19 பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் தங்களைக்குறித்து இந்த உவமையைச் சொன்னாரென்று அறிந்து, அந்நேரத்திலே அவரைப் பிடிக்க வகைதேடியும் ஜனங்களுக்குப் பயந்திருந்தார்கள்

லூக்கா 20:20 அவர்கள் சமயம்பார்த்து தேசாதிபதியின் ஆளுகைக்கும் அதிகாரத்துக்கும் அவரை ஒப்புக் கொடுக்கும்படி அவருடைய பேச்சிலே குற்றங்கண்டு பிடிக்கலாமென்று தங்களை உண்மையுள்ளவர்களாய்க் காண்பிக்கிற வேவுகாரரை அவரிடத்தில் அனுப்பினார்கள்

லூக்கா 20:21 அவர்கள் வந்து: போதகரே, நீர் நிதானமாய்ப் பேசி உபதேசிக்கிறீரென்றும் முகதாட்சணியமில்லாமல் தேவனுடைய மார்க்கத்தைச் சத்தியமாய்ப் போதிக்கிறீரென்றும் அறிந்திருக்கிறோம்

லூக்கா 20:22 இராயனுக்கு வரி கொடுக்கிறது நியாயமோ அல்லவோ, எங்களுக்குச் சொல்லும் என்று கேட்டார்கள்

லூக்கா 20:23 அவர்களுடைய தந்திரத்தை அவர் அறிந்து: நீங்கள் என்னை ஏன் சோதிக்கிறீர்கள்?

லூக்கா 20:24 ஒரு பணத்தை எனக்குக் காண்பியுங்கள் இதிலிருக்கிற சொரூபமும் மேலெழுத்தும் யாருடையது என்று கேட்டார் அதற்கு அவர்கள்: இராயனுடையது என்றார்கள்

லூக்கா 20:25 அதற்கு அவர்: அப்படியானால் இராயனுடையதை இராயனுக்கும் தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார்

லூக்கா 20:26 அவர்கள் அவரை ஜனங்களுக்கு முன்பாகப் பேச்சிலே குற்றம்பிடிக்கக்கூடாமல் அவர் சொன்ன உத்தரவைக் குறித்து ஆச்சரியப்பட்டு, மவுனமாயிருந்தார்கள்

"அவரைப் பிடிக்க வகைதேடினார்கள்" - இயேசு கிறிஸ்துவின் வேளை வருமவரையிலும் அவரை யாராலும் ஒன்றும் செய்ய முடியாது. தமது வேளை வந்தபோது இயேசு கிறிஸ்து தம்மையே ஒப்புக்கொடுக்கிறார் அதுவரையிலும் அந்த ஜனங்களுக்கு எந்த அதிகாரமும் கிடைக்கவில்லை (மத் 26:3)

20 அதிகாரம்

"சமயம்பார்த்தார்கள்" - (லூக்கா 17.20)

வேவுகாரன்(spies) - **ἐγκάθετος** - **egkathetos** 1455

பொருள் - வேவுகாரரான (liers in wait, secret agents). இந்த வார்த்தை இந்த வசனத்தில் மட்டுமே பயன்படுத்தப் பட்டிருக்கிறது. வேவுகாரரைப் பற்றிய குறிப்புகளை எண் 13; யோசு 8:13; யோபு 31:9 ஆகிய வசனங்களில் காணலாம்.

யூதர்கள் எதிர்பார்த்த காரியங்கள்

1 இயேசு கிறிஸ்துவின் பேச்சிலே குற்றம் கண்டுபிடிக்கலாம். அவர்களால் ஒரு குற்றமும் காணமுடியாது. ஏனெனில் இயேசு கிறிஸ்து சுயமாய்ப் பேசாமல் பரிசுத்த ஆவியானவர் எவற்றை மட்டுமே பேசினார். எந்த இடத்தில் எதைப் பேசவேண்டுமென்பது பரிசுத்த ஆவியானவருக்கு நன்றாகத் தெரியும் (யோவான் 8:28,38; யோவான் 12:49)

2 தேசாதிபதியின் ஆளுகைக்கும் அதிகாரத்துக்கும் அவரை ஒப்புக் கொடுக்கலாம். இயேசு கிறிஸ்துவின் ஜீவனையே அவர்கள் தங்கள் மனதில் நினைத்திருந்தார்கள். தேவனுடைய வேளை வரும்போதுதான் இதை அவர்களால் செய்ய முடியும். தமது ஜீவனைக் கொடுப்பதற்காகவே இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார் (லூக்கா 22:53; யோவான் 10:18; யோவான் 18:37)

நாயகமல்க்காரர்கள் அறிந்திருக்கும் காரியங்கள்

1 இயேசு கிறிஸ்து நிதானமாய்ப் பேசி உபதேசிக்கிறார்

2 முகதாட்சணியமில்லாமல் பேசுகிறார்

3 தேவனுடைய மார்க்கத்தைச் சத்தியமாய்ப் போதிக்கிறார்

வரி (tribute) - **φόρος** - **phoros** - 5411

ஆங்கில பெயர்ச்சொல் - வரி - யூதேயா தேசத்திற்குள் கொண்டுவரப்படும் எந்தப் பொருளுக்கும் வரி செலுத்த வேண்டும். யூதர்கள் மத்தியில் இந்த வரியைக் குறித்து கருத்து வேறுபாடு இருந்தது. (லூக்கா 2:2; ரோமர் 13:6-7)

தந்திரம் (craftiness) - **πανουργία** - **panourgia** - 3834

பெண்பால் பெயர்ச்சொல் - தந்திரம் (cunning) 1கொரி 3:19; 2கொரி 4:2; 2கொரி 11:3; எபே 4:14

தந்திரமானவர்களுக்குரிய எடுத்துக்காட்டுக்கள்

1 சாத்தான் - மனுஷர்களை வீழ்த்துவதில் சாத்தானுடைய தந்திரம் (ஆதி 3:1-8)

2 யாக்கோபு - சேஷ்டபுத்திர பாகத்தை வாங்குவதிலும் ஆசீர்வாதத்தைத் திருடுவதிலும் (ஆதி 25:31-33; ஆதி 27:6-29)

3 யாக்கோபு - லாபானுடைய மந்தையை மேய்ப்பதில் (ஆதி 30:31-43)

4 கிபியோனியர் - யோசுவாவை ஏமாற்றியதில் (யோசு 9:3-15)

5 சன்பல்லாத் - நெகேமியாவை வருசித்தது (நெகே 6)

6 யூதர்கள் - இயேசுவைக் கண்ணியில் சிக்க வைக்க முயற்சி பண்ணியது (மத் 22:15-28; லூக்கா 20:19-26)

7 யூதர்கள் - இயேசுவைக் கொலைசெய்ய வகைதேடியது (மத் 26:3)

பணம் (penny) - **δηνάριον** - **deenarion** 1220

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பணம், காசு

20 அதிகாரம்

"அவர்கள் அவரை ஜனங்களுக்கு முன்பாக பேச்சிலே குற்றம்பிடிக்கக்கூடாமல் அவர் சொன்ன உத்தரவைக் குறித்து ஆச்சரியப்பட்டு, மவுனமாயிருந்தார்கள்" - இயேசு கிறிஸ்துவிடம் அவர்களால் எந்தக் குற்றமும் கண்டுபிடிக்க முடியவில்லை. இயேசு கிறிஸ்துவை மரணத்திற்கு ஒப்புக் கொடுப்பதற்கான காரணத்தையும் அவர்களால் கண்டுபிடிக்க இயலவில்லை. ஏதாவது ஒரு காரணம் அவர்கள் கண்டுபிடித்தே ஆக வேண்டும். யூதாஸ்காரியோத்து அவர்களுக்கு உதவி புரிய முன்வந்தான். யூதாஸ் பணத்திற்கு ஆசைப்பட்டான். யூதருக்கு எப்படியாவது இயேசுவைக் கொல்ல வேண்டுமென்னும் ஆசை இருந்தது. இரண்டு ஆசைக்காரர்களும் ஒன்றுசேர்ந்து சதித்திட்டம் தீட்டினார்கள் (மத் 26:14-16; மாற்கு 14:10-11)

143. உயிர்த்தெழுதலைப் பற்றிய கேள்வி - (மத் 22:23; மாற்கு 12:18)

லூக்கா 20:27 உயிர்த்தெழுதல் இல்லையென்று சாதிக்கிற சதுசேயரில் சிலர் அவரிடத்தில் வந்து,

லூக்கா 20:28 போதகரே, ஒருவன் மனைவியையுடையவனாயிருந்து பிள்ளையில்லாமல் இறந்துபோனால், அவனுடைய சகோதரன் அவன் மனைவியை விவாகம்பண்ணி, தன் சகோதரனுக்குச் சந்தானமுண்டாக்க வேண்டும் என்று மோசே எங்களுக்கு எழுதிவைத்திருக்கிறாரே.

லூக்கா 20:29 சகோதரர் ஏழுபேரிருந்தார்கள், அவர்களில் மூத்தவன் ஒரு பெண்ணை விவாகம்பண்ணி, பிள்ளையில்லாமல் இறந்துபோனான்.

லூக்கா 20:30 பின்பு இரண்டாஞ்சகோதரன் அவளை விவாகம் பண்ணி, அவனும் பிள்ளையில்லாமல் இறந்துபோனான்.

லூக்கா 20:31 மூன்றாஞ்சகோதரனும் அவளை விவாகம்பண்ணினான்; அப்படியே ஏழுபேரும் அவளை விவாகம் பண்ணி, பிள்ளையில்லாமல் இறந்துபோனார்கள்.

லூக்கா 20:32 எல்லாருக்கும் பின்பு அந்த ஸ்திரீயும் இறந்துபோனாள்.

லூக்கா 20:33 இவ்விதமாய் ஏழுபேரும் அவளை விவாகம்பண்ணியிருக்க, உயிர்த்தெழுதலில் அவர்களில் எவனுக்கு அவள் மனைவியாயிருப்பாள் என்று கேட்டார்கள்.

லூக்கா 20:34 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் பெண்கொண்டும் பெண் கொடுத்தும் வருகிறார்கள்.

லூக்கா 20:35 மறுமையையும் மரித்தோரிலிருந்தெழுந்திருக்குதலையும் அடையப் பாத்திரராக எண்ணப்படுகிறவர்களோ பெண்கொள்வதுமில்லை பெண் கொடுப்பதுமில்லை.

லூக்கா 20:36 அவர்கள் இனி மரிக்கவுமாட்டார்கள்; அவர்கள் உயிர்த்தெழுதலின் பிள்ளைகளானபடியால் தேவதூதருக்கு ஒப்பானவர்களுமாய், தேவனுக்குப் பிள்ளைகளுமாயிருப்பார்கள்.

லூக்கா 20:37 அன்றியும் மரித்தோர் எழுந்திருப்பார்களென்பதை மோசேயும் முட்செடியைப்பற்றிய வாசகத்தில் காண்பித்திருக்கிறார்; எப்படியெனில், கர்த்தரை ஆபிரகாமின் தேவனென்றும் ஈசாக்கின் தேவனென்றும் யாக்கோபின் தேவனென்றும் சொல்லியிருக்கிறார்.

லூக்கா 20:38 அவர் மரித்தோரின் தேவனாயிராமல், ஜீவனுள்ளோரின் தேவனாயிருக்கிறார்; எல்லாரும் அவருக்குப் பிழைத்திருக்கிறார்களே என்றார்.

"உயிர்த்தெழுதல் இல்லையென்று சாதிக்கிற சதுசேயரில் சிலர் அவரிடத்தில் வந்தார்கள்" - (லூக்கா 20:27-38; மத் 22:23-33; மாற்கு 12:18-27)

20 அதிகாரம்

"போதகரே, ஒருவன் மனைவியையுடைய வனாயிருந்து பிள்ளையில்லாமல் இறந்துபோனால் அவனுடைய சகோதரன் அவன் மனைவியை விவாகம் பண்ணி தன் சகோதரனுக்குச் சந்தானமுண்டாக்கவேண்டும் என்று மோசே எங்களுக்கு எழுதிவைத்திருக்கிறாரே" - உபா 25:5 தேவனுடைய சத்துருக்களுக்கும் வேதவாக்கியம் நன்றாகத் தெரியும் தாங்கள் ஏற்றுக் கொள்ள விரும்பாத சத்தியத்தை எப்படி ஒதுக்கி வைப்பது என்று நன்றாகத் தெரிந்து வைத்திருந்தார்கள் தங்களுக்குத் தேவையான வசனங்களை மனப்பாடம் செய்து வைத்திருப்பார்கள் தங்களுடைய விருப்பத்தின் பிரகாரம் வேதவசனங்களைத் தங்களுக்கேற்ற படி வியாக்கியானம் பண்ணுவார்கள் தங்களுடைய அழிவுக்கு ஏதுவாக அவர்கள் அப்படி நடந்து கொள்கிறார்கள் (2பேதுரு 3:16)

"உயிர்த்தெழுதலில் அவர்களில் எவனுக்கு அவள் மனைவியாயிருப்பாள்" - இம்மையில் இருப்பதுபோலவே மறுமையிலும் மனுஷர் மனைவிகளோடும் பிள்ளைகளோடும் உற்றார் உறவினரோடும் இருப்பார்கள் என்று யூதரில் சிலர் நினைத்தார்கள் சதுசேயர்கள் இதை ஏற்றுக் கொள்வதில்லை அவர்கள் உயிர்த்தெழுதலே இல்லை என்று கூறுகிறவர்கள் (லூக்கா 20:27)

"இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் பெண்கொண்டும் பெண்கொடுத்தும் வருகிறார்கள்" - (யோவான் 17:12)

"பிரபஞ்சம்" - காலம், நீண்டகாலம் அல்லது குறுகிய காலம் அல்லது ஒரு குறிப்பிட்ட காலம் இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகள் என்பது இந்தக் காலத்தின் பிள்ளைகள் என்று பொருள்படும் இவர்கள் திருமணம் செய்து கொள்கிறார்கள் உயிர்த்தெழுதலின் காலத்திலுள்ள பிள்ளைகள் திருமணம் செய்து கொள்ள மாட்டார்கள் ஆயிரம் வருஷ அரசாட்சியில் மனுஷர் திருமணம் செய்து கொள்வார்கள் (வெளி 20; ஏசா 65:20 25) உயிர்த்தெழுந்த பின்பு, திருமணம் இல்லை யென்றாலும், அவர்கள் ஆண்களாகவோ அல்லது பெண்களாகவோ தான் இருப்பார்கள் (1கொரி 15:35-58)

தங்களுடைய இனவிருத்திக்காக உயிர்த்தெழுந்தவர்கள் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்னும் அவசியம் இல்லை. அவர்கள் தேவதூதரைப் போல இருப்பார்கள் அவை இனவிருத்தி செய்வதில்லை. வேதாகமத்தில் மனுஷருடைய திருமணத்தைப் பற்றி மிகவும் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. (ஆதி 8:22 ஆதி 9:12,16; ஆதி 17:19; 2சாமு 7; ஏசா 9:6-7; ஏசா 59:20-21; தானி 2:44-45, தானி 7:13-14,27; சக 14, 16-21; எசே 43:7 லூக்கா 1:31-33; மத் 25:31-46; வெளி 11:15 வெளி 20:1-15; வெளி 22:4-5

பிரபஞ்சம் (world) - αἰών - aioon - 165

ஆண்பால் பெயர்ச்சொல் - காலம் உலகம், பிரபஞ்சம், அநாதி, சதாகாலங்கள்

'அ' என்றென்றைக்கும் அதாவது கடந்த காலத்தில் - யோவான் 6:5; 80:32

(ஆ) ஒரு குறிப்பிட்ட காலம் அதாவது இம்மை அல்லது மறுமை - மத். 12:32, மாற். 10:30

தீர்க்கதரிசன எண் - 45

"மறுமையையும் மரித்தோரிலிருந் தெழுந்திருக்குதலையும் அடையப் பாத்திரராக எண்ணப்படுகிறவர்களோ பெண்கொள்வது மில்லை பெண்கொடுப்பதுமில்லை............" (லூக்கா 20:35 38) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறவில்லை

மறுமையையும் மரித்தோரிலிருந்தெழுந் திருக்குதலையும் அடையப் பாத்திரராக எண்ணப்படுகிறவர்கள் முதலாவது உயிர்த்தெழுதலில் பாக்கியவான்களாகவும், பரிசுத்தவான்களாகவும் இருப்பார்கள் (லூக்கா 21:34 யோவான் 5:28 29 யோவான் 14:1 3 1கொரி 15:2 4,5 58, எபே 5:26 28 பிலி 3:20 21 1தெச 4:13 17 2தெச 2 7 வெளி 20:4 6

"மறுமை" (world, The eternal age, the age of the ages) - பூமியை மேசியா நித்திய காலமாக ஆளுகை செய்யும் காலம். (ஏசா 9:6 7; தானி 2 44-45, தானி 7:13 14 27 சக 14, மத் 13:43, மத் 25:31 46 லூக்கா 1:31-33, வெளி 11:15; வெளி 20:1-15; வெளி 22:4-5

20 அதிகாரம்

"மரித்தோரிலிருந்தெழுந்திருக்குதல்" - முதலாவது உயிர்த்தெழுதல் மரித்த பரிசுத்தவான்கள் முதலாவது உயிர்த்தெழுவார்கள் அதன்பின்பு ஆயிரம் வருஷம் கழித்து, மரித்த துன்மார்க்கர் உயிர்த்தெழுவார்கள் (வெளி 20:4-6) சபை எடுத்துக் கொள்ளப்படும்போது கிறிஸ்துவில் மரித்தோர் மட்டுமே உயிர்த்தெழுவார்கள் (யோவான் 14:1-3; 1தெச 4:13-18; 1கொரி 15:23, 51-58)

இதிலிருந்து (from) - ἐκ - **ek** - 1537

முன்னிடைச்சொல் - இல் ஆல் இதிலிருந்து, விட்டு இடத்தில் முதல் தரம் இல்லாமல், ஆறாம் வேற்றுமையுடன் உடைய இன் கொண்டு, புறம்பே முதற்கொண்டு ஒரு, வழியாய், தொடங்கி

மரித்தோர் (dead) - νεκρός - **nekros** - 3498

பெயரடை - மரித்தோரான செத்துப்போன

"அவர்கள் இனி மரிக்கவு மாட்டார்கள் தேவதூதருக்கு ஒப்பானவர்களுமாய் இருப்பார்கள்" உயிர்த்தெழுதலின்போது கிறிஸ்துவிற்குள் மரித்தவர்கள் மறுரூபமடைவார்கள் லாசரு மரித்து நான்கு நாட்கள் சென்ற பிறகு மறுபடியும் உயிர் பெற்றான் ஆனால் அது உயிர்த்தெழுதல் ஆகாது. அவன் மறுபடியும் மரித்துப் போய் விட்டான் இந்த வசனத்தில் நாம் உயிர்த்தெழுந்தவர்களாக காண்கிறவர்கள் எவருமே இனிமேல் மரிக்கப்போவதில்லை அவர்கள் நித்திய காலமாக ஜீவிப்பார்கள் (1கொரி 15:51-58; பிலி 3:20-21) தேவதூதர்களைப் போல உயிர்த்தெழுந்தோரின் சரீரங்கள் சாகாமல் இருக்கும் (லூக்கா 20:36)

"தேவனுக்குப் பிள்ளைகள்" - முதலாவது உயிர்த்தெழுதலில் பங்கு பெறும் பரிசுத்தவான்கள் தேவனுக்குப் பிள்ளைகளாக இருப்பார்கள் முதலாவது உயிர்த்தெழுதலின் போது மரித்தவர்களாக இருக்கிறவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கமாட்டார்கள் ஆயிரம் வருஷ அரசாட்சிக்குப் பின்பே இவர்கள் உயிர்த்தெழுவார்கள் இவர்கள் பாக்கியவான்களோ பரிசுத்தவான்களோ அல்ல. தங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற நித்திய ஆக்கினையை அடைவதற்காக இவர்கள் உயிர்த்தெழுகிறார்கள் (வெளி 20:4-6,11-15; யோவான் 5:28-29; தானி 12:2)

"உயிர்த்தெழுதலின் பிள்ளைகள்" - இவர்கள் எல்லோருமே தேவனுக்குப் பிள்ளைகளாக இருக்கமாட்டார்கள் ஏனெனில் பரிசுத்தவான்களும் உயிர்த்தெழுவார்கள் துன்மார்க்கரும் உயிர்த்தெழுவார்கள் உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள் மட்டுமே தேவனுக்குப் பிள்ளைகளாக இருப்பார்கள் (1கொரி 15:21-23; யோவான் 5:28-29; தானி 12:2; வெளி 20:4-6,11-15) உயிர்த்தெழுவதினால் ஒருவர் தேவனுடைய பிள்ளையாக ஆகமுடியுமென்றால் கிறிஸ்து சிலுவையில் மரித்தது வீணாய் இருக்குமே

"கர்த்தரை ஆபிரகாமின் தேவனென்றும் ஈசாக்கின் தேவனென்றும் யாக்கோபின் தேவனென்றும் சொல்லியிருக்கிறார்" - (யாத் 3:3-6)

"மரித்தோர்" மரித்த சரீரங்கள் (யாக் 2:26) கர்த்தர் ஜீவனுள்ளோரின் தேவனாயிருக்கிறார் மரிக்காத ஆத்துமாக்களின் தேவன் மனுஷருடைய ஆவியும் ஆத்துமாவும் மரிக்காது அவை நித்திய காலமாக ஜீவிக்கும் (1பேதுரு 3:4)

144. இயேசு பரிசேயரிடம் கேட்ட கேள்விகள் - (மத் 22:41; மாற்கு 12:35)

லூக்கா 20:39 அப்பொழுது வேதபாரகரில் சிலர் அதைக்கேட்டு, போதகரே, நன்றாய்ச் சொன்னீர் என்றார்கள்

லூக்கா 20:40 அதன்பின்பு அவர்கள் அவரிடத்தில் வேறொன்றுங்கேட்கத் துணியவில்லை

லூக்கா 20:41 அவர் அவர்களை நோக்கி: கிறிஸ்து தாவீதின் குமாரனென்று எப்படிச் சொல்லுகிறார்கள்?

லூக்கா – தொகுப்புரை

20 அதிகாரம்

லூக்கா 20:42 நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்று,

லூக்கா 20:43 கர்த்தர் என் ஆண்டவருடனே சொன்னார் என்று தாவீது தானே சங்கீத புஸ்தகத்தில் சொல்லுகிறானே.

லூக்கா 20:44 தாவீது அவரை ஆண்டவரென்று சொல்லியிருக்க, அவனுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி என்றார்.

லூக்கா சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 8

"நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப்போடும்வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்று, கர்த்தர் என் ஆண்டவருடனே சொன்னார்" (லூக்கா 20:42-43; சங் 110:1,5, மத் 22:44-46, மாற்கு 12:35-37)

145. பரிசேயரின் அடையாளங்கள் - (மத் 23:3, மாற்கு 12:38; லூக் 18:9)

லூக்கா 20:45 பின்பு ஜனங்களெல்லாரும் கேட்கையில் அவர் தம்முடைய சீஷரை நோக்கி:

லூக்கா 20:46 நீண்ட அங்கிகளைத் தரித்துக்கொண்டு திரியவும், சந்தை வெளிகளில் வந்தனங்களை அடையவும், ஜெப ஆலயங்களில் முதன்மையான ஆசனங்களில் உட்காரவும் விருந்துகளில் முதன்மையான இடங்களில் இருக்கவும் விரும்பி,

லூக்கா 20:47 விதவைகளின் வீடுகளைப் பட்சித்து, பார்வைக்கு நீண்ட ஜெபம்பண்ணுகிற வேதபாரகரைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் அதிக ஆக்கினையை அடைவார்கள் என்றார்.

"பின்பு ஜனங்களெல்லாரும் கேட்கையில் அவர் தம்முடைய சீஷரை நோக்கி.....என்றார்" - எல்லா மனுஷரும் கேட்குமாறு பேசுவது ஒரு தலைவரின் தகுதி. ஆனால் மாய்மாலக்காரர்கள் இரகசியமாக சதியாலோசனை பண்ணுவார்கள் (மத் 23:2)

"நீண்ட அங்கிகளைத் தரித்துக்கொண்டு திரியவும் சந்தை வெளிகளில் வந்தனங்களை அடையவும் ஜெப ஆலயங்களில் முதன்மையான ஆசனங்களில் உட்காரவும் விருந்துகளில் முதன்மையான இடங்களில் இருக்கவும் விரும்பி, விதவைகளின் வீடுகளைப் பட்சித்து, பார்வைக்கு நீண்ட ஜெபம்பண்ணுகிற வேதபாரகரைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" மத் 23:2

தீர்க்கதரிசன எண் - 42

"அவர்கள் அதிக ஆக்கினையை அடைவார்கள்" லூக்கா 20:47 இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. (லூக்கா 18:24)

21 அதிகாரம்

146. விதவை காணிக்கையாக போட்ட இரண்டு காசுகள் – (மாற்கு 12:41)

லூக்கா 21:1 அவர் கண்ணோக்கிப் பார்த்தபோது, ஐசுவரியவான்கள் காணிக்கைப்பெட்டியிலே தங்கள் காணிக்கைகளைப் போடுகிறதைக் கண்டார்

லூக்கா 21:2 ஒரு ஏழை விதவை அதிலே இரண்டு காசைப் போடுகிறதையும் கண்டு,

லூக்கா 21:3 இந்த ஏழை விதவை மற்றெல்லாரைப் பார்க்கிலும் அதிகமாகப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்

லூக்கா 21:4 அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்தெடுத்து தேவனுக்கென்று கா போட்டார்கள்; இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்த தெல்லாம் போட்டுவிட்டாள் என்றார்

"ஐசுவரியவான்கள் காணிக்கைப் பெட்டியிலே தங்கள் காணிக்கைகளைப் போடுகிறார்கள்" - (லூக்கா 18:24)

ஏழை (poor) - πενιχρός - penichros - 3998

பொருள் - ஏழை - தன்னுடைய ஜீவனத்திற்காக மிகவும் கடினமாக உழைக்கிறவர் இந்த வாக்கியம் இந்த வசனத்தில் மட்டுமே பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

"இந்த ஏழை விதவை மற்றெல்லாரைப் பார்க்கிலும் அதிகமாகப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" - கொடுப்பதில் இது ஒரு புதிய பிரமாணம். ஒருவர் குறைவாக கொடுத்தாலும், தனக்கு உரிமையானது அனைத்தையும் கொடுத்து விட்டால் அதிகமாகக் கொடுத்துவிட்டதாக பொருள் ஐசுவரியவான்கள் அதிகமாகக் கொடுப்பதைவிட ஏழை விதவை கொடுத்தது இரண்டு காசாக இருந்தாலும், அதுவே அதிகம். (லூக்கா 21:3-4) எல்லாவற்றையும் வேண்டாம் என்று வெறுத்து கர்த்தரிடம் காணிக்கையாக அர்ப்பணிக்க வேண்டும். நமது ஜீவனைக்கூட வெறுத்து கர்த்தரிடம் அர்ப்பணித்துவிட வேண்டும். லூக்கா (4:33 மத் 19:27-29)

147. தேவாலயத்தைப் பற்றிய தீர்க்கதரிசனம் - (மத் 24-25; மாற்கு 13)

(1) எருசலேமின் அழிவை இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (மத் 23:39; 24:1)

லூக்கா 21:5 பின்பு, சிறந்த கற்களினாலும் காணிக்கைகளினாலும் தேவாலயம் அலங்கரிக்கப் பட்டிருக்கிறதைக் குறித்து சிலர் சொன்னபோது

லூக்கா 21:6 அவர்: நீங்கள் பார்க்கிற இவைகளில் ஒரு கல் மற்றொரு கல்லின் மேலிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்படும் நாட்கள் வரும் என்றார்

"தேவாலயம்" - இயேசு கிறிஸ்து லூக்கா 21ஆவது அதிகாரத்தில் உள்ள வசனங்களைப் பேசுகிறபோது அவர் இன்னும் தேவாலயத்திலேயே இருக்கிறார் காணிக்கைப் பெட்டியிலே ஜனங்கள் காணிக்கை போடுவதைக் கவனித்துக் கொண்டிருக்கிறார் லூக்கா 21:1-4

"சிறந்த கற்களினாலும் காணிக்கைகளினாலும் தேவாலயம் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது" ஆராதனைக்குப் பயன்பட்ட வெகுமதிகளினால் தேவாலயம் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது.

21 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 43

"நீங்கள் பார்க்கிற இவைகளில் ஒரு கல் மற்றொரு கல்லின்மேலிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்படும் நாட்கள் வரும்" லூக்கா 21:6) இந்தத் தீர்க்கதரிசனம் கி.பி. 70இல் எருசலேம் அழிக்கப்பட்டபோது நிறைவேறிற்று.

(2) இரண்டு கேள்விகள் - (மத் 24:3 மாற்கு 13:3

லூக்கா 21:7 அவர்கள் அவரை நோக்கி, போதகரே, இவைகள் எப்பொழுது சம்பவிக்கும், இவைகள் சம்பவிக்கும் காலத்துக்கு அடையாளம் என்ன என்று கேட்டார்கள்

(3) இயேசுவின் இரண்டாம் வருகைக்கு பத்து அடையாளங்கள் - (மத் 24:5, மாற்கு 13:5

லூக்கா 21:8 அதற்கு அவர், நீங்கள் வஞ்சிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் அநேகர் வந்து என் நாமத்தைத் தரித்துக் கொண்டு நான்தான் கிறிஸ்து என்றும், காலம் சமீபித்தது என்றும் சொல்லுவார்கள் அவர்களைப் பின்பற்றாதிருங்கள்

லூக்கா 21:9 யுத்தங்களையும் கலகங்களையும் குறித்து நீங்கள் கேள்விப்படும்போது பயப்படாதிருங்கள் இவைகள் முன்னதாகச் சம்பவிக்க வேண்டியதே, ஆனாலும் முடிவு உடனே வராது என்றார்

லூக்கா 21:10 அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்.

லூக்கா 21:11 பல இடங்களில் மகா பூமியதிர்ச்சிகளும், பஞ்சங்களும், கொள்ளைநோய்களும் உண்டாகும் வானத்திலிருந்து பயங்கரமான தோற்றங்களும் பெரிய அடையாளங்களும் உண்டாகும்

தீர்க்கதரிசன எண் - 44

"நீங்கள் வஞ்சிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் ஏனெனில் அநேகர் வந்து என் நாமத்தைத் தரித்துக் கொண்டு, நான்தான் கிறிஸ்து என்றும் காலம் சமீபித்தது என்றும் சொல்லுவார்கள்" அவர்களைப் பின்பற்றாதிருங்கள்..........
(லூக்கா 21:8-36) இந்தத் தீர்க்கதரிசனத்தில் லூக்கா 21:12-24 ஆகிய வசனங்கள் கி.பி. 70-இல் எருசலேம் அழிக்கப்பட்டபோது நிறைவேறிற்று லூக்கா 21:8-11,25-36 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை

இந்தக் காலத்தின் முடிவில் கிறிஸ்துவின் வருகையின்போது காணப்படும் அடையாளங்கள் (லூக்கா 21:8-11

1. வஞ்சனைகள் (Deceptions) (லூக்கா 21:8; மத் 24:4-5,11,24. 2தெச 2:8-12; 2தீமோ 3:13
2. அநேக கள்ளக்கிறிஸ்துக்கள் (Many false Christs) (லூக்கா 21:8 மத் 24:5,23-26; 2தெச 2:1-12, வெளி 13)
3. யுத்தங்கள் (Wars) (லூக்கா 21:9, மத் 24:6-7)
4. கலகங்கள் (Commotions) (லூக்கா 21:9, 1கொரி 14:33, 2கொரி 6:5 2கொரி 12:20 யாக் 3:16)
5. உலக யுத்தங்கள் (World wars) (லூக்கா 21:10; மத் 24:4-7, தானி 7:23-24; தானி 11:40-45

21 அதிகாரம்

6 பூமியதிர்ச்சிகள் (Great earthquakes) (லூக்கா 21:11 மத் 24:7; மாற்கு 13:8 வெளி 6:12-17; வெளி 11:13 வெளி 12:16; வெளி 16:17-21)

7 பஞ்சங்கள் (Famines) (லூக்கா 21:11 மத் 24:7; மாற்கு 13:8; வெளி 6:5-6 வெளி 7:16

8 கொள்ளைநோய்கள் (Pestilences) லூக்கா 21:11; மத் 24:7; வெளி 6:8 வெளி 9:5,18; வெளி 16:2)

9 பயங்கரமான தோற்றங்கள் (Fearful sights) (லூக்கா 21:11; மத் 24:21-22 மாற்கு 13:19-20; வெளி 6:8-17 வெளி 8:7-9:21; வெளி 11:5-6 வெளி 16:1-17

10 வானத்திலிருந்து அடையாளங்கள் (Great signs from heaven) லூக்கா 21:11 வெளி 6:12-17 வெளி 8:7-9:21 வெளி 16:1-21; யோவே 2:30-32 மத் 24:9; அப 2:19-21)

கலகம் (Commotions) - ἀκαταστασία - akatastasia - 181

பெண்பால் பெயர்ச்சொல் - கலகம் (instability, a state of disorder, disturbance, confusion)

பயப்படு (terrified) - πτοέω - ptoeoo 4422

வினைச்சொல் - பயப்படு (scared) - இந்த வார்த்தை இந்த வசனத்திலும் லூக்கா 24:37 ஆவது வசனத்திலும் மட்டுமே வந்திருக்கிறது.

"முடிவு" end இதற்கான கிரேக்கச்சொல் "டெலோஸ்" (telos) (to-telos) மத்தேயு 13:39 ஆவது வசனத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்கச்சொல் "சன்டெலெயா" (sunteleia) இதற்குக் காலத்தின் முடிவு என்று பொருள்

முடிவு (end) - τέλος - telos - 5056

பாலவேறுபாடற்ற பெயர்ச்சொல் - முடிவு, அழிவு, அந்தம், தொந்தரவு, விலகிப்போதல்

கடைசிக்காலம் (end) - συντέλεια - synteleia - 4930

பெண்பால் பெயர்ச்சொல் - முடிவு கடைசிக்காலம்

"உடனே" (by and by, immediately) - (மத் 24:6; மாற்கு 13:7; லூக்கா 17:7 மாற்கு 6:25)

"ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும் ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்" - ஏற்கெனவே நடைபெற்ற இரண்டு உலக யுத்தங்களை இந்த வசனம் குறிப்பதாகப் பலர் கூறுகிறார்கள் ஆனால் அதைத் தொடர்ந்து நடைபெறும் என்று கூறப்பட்ட காரியங்கள் எதுவும் நடைபெறவில்லை இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கிற யுத்தங்கள் பத்து ராஜ்யங்களின் யுத்தமாகும். (தானி 7:23-24 வெளி 17:12) அந்திக்கிறிஸ்துவின்கீழ் பத்து ராஜ்யங்கள் ஒன்றுசேர்ந்து யுத்தம் பண்ணும் (தானி 11:40-45)

(4) இந்த அடையாளங்களெல்லாம் நடப்பதற்கு முன்பாக எருசலேம் அழியும், இஸ்ரவேலர்கள் புறஜாதிகளுக்குள்ளே சிறைப்பட்டுப் போவார்கள்

லூக்கா 21:12 இவைகளெல்லாம் நடப்பதற்கு முன்னே என் நாமத்தினிமித்தம் அவர்கள் உங்களைப் பிடித்து, ஜெபஆலயங்களுக்கும் சிறைச்சாலைகளுக்கும் ஒப்புக்கொடுத்து, ராஜாக்கள் முன்பாகவும் அதிபதிகள் முன்பாகவும் உங்களை இழுத்துத் துன்பப்படுத்துவார்கள்

21 அதிகாரம்

லூக்கா 21:13 ஆனாலும் அது உங்களுக்குச் சாட்சியாவதற்கு ஏதுவாயிருக்கும்

லூக்கா 21:14 ஆகையால் என்ன உத்தரவு சொல்லுவோமென்று கவலைப்படாதிருக்கும்படி உங்கள் மனதிலே நிர்ணயம்பண்ணிக் கொள்ளுங்கள்

லூக்கா 21:15 உங்களை விரோதிக்கிறவர்கள் ஒருவரும் எதிர்பேசவும் எதிர்நிற்கவும் கூடாத வாக்கையும் ஞானத்தையும் நான் உங்களுக்குக் கொடுப்பேன்

லூக்கா 21:16 பெற்றாராலும் சகோதரராலும், பந்துஜனங்களாலும் சிநேகிதராலும் காட்டிக் கொடுக்கப் படுவீர்கள் உங்களில் சிலரைக் கொலைசெய்வார்கள்

லூக்கா 21:17 என் நாமத்தினிமித்தம் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்

லூக்கா 21:18 ஆனாலும் உங்கள் தலைமயிரில் ஒன்றாகிலும் அழியாது.

லூக்கா 21:19 உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக் கொள்ளுங்கள்

லூக்கா 21:20 எருசலேம் சேனைகளால் சூழப்பட்டிருப்பதை நீங்கள் காணும்போது, அதின் அழிவு சமீபமாயிற்றென்று அறியுங்கள்

லூக்கா 21:21 அப்பொழுது யூதேயாவிலிருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகவும், எருசலேமிலிருக்கிறவர்கள் வெளியே புறப்படவும், நாட்டுப்புறங்களிலிருக்கிறவர்கள் நகரத்தில் பிரவேசியாமலிருக்கவும் கடவர்கள்

லூக்கா 21:22 எழுதியிருக்கிற யாவும் நிறைவேறும்படி நீதியைச் சரிக்கட்டும் நாட்கள் அவைகளே

லூக்கா 21:23 அந்நாட்களில் கர்ப்பவதிகளுக்கும் பால்கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ, பூமியின்மேல் மிகுந்த இடுக்கணும் இந்த ஜனத்தின்மேல் கோபாக்கினையும் உண்டாகும்.

லூக்கா 21:24 பட்டயக்கருக்கினாலே விழுவார்கள் சகல புறஜாதிகளுக்குள்ளும் சிறைப்பட்டுப் போவார்கள் புறஜாதியாரின் காலம் நிறைவேறும்வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும்

"இவைகளெல்லாம் நடப்பதற்கு முன்னே" - கி.பி. 70-இல் எருசலேம் அழிந்ததை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. லூக்கா 21:5-11 ஆகிய வசனங்கள் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு அடையாளமாக நிறைவேறும். இயேசு கிறிஸ்து எருசலேம் தேவாலயம் ஆகியவற்றின் அழிவை முன்னறிவிக்கிறார் லூக்கா 21:6 எருசலேம் எப்பொழுது அழிக்கப்படும் என்று சீஷர்கள் கேட்கிறார்கள் (லூக்கா 21:7) இயேசு கிறிஸ்து லூக்கா 21:12-24 ஆகிய வசனங்களில் சீஷர்களின் கேள்விகளுக்குப் பதில் கூறுகிறார் அதைத் தொடர்ந்து தமது இரண்டாம் வருகைக்கு அடையாளங்களைக் கூறுகிறார் (லூக்கா 21:25-36)

"அவர்கள் உங்களைப் பிடித்து ஜெபஆலயங்களுக்கும் சிறைச்சாலைகளுக்கும் ஒப்புக்கொடுத்து ராஜாக்கள் முன்பாகவும் அதிபதிகள் முன்பாகவும் உங்களை இழுத்துத் துன்பப்படுத்துவார்கள்" - லூக்கா 21:12-19 ஆகிய வசனங்கள் விசுவாசிகள் எப்படித் துன்புறுத்தப்படுவார்கள் என்று விளக்குகிறது. லூக்கா 21:20-24 ஆகிய வசனங்கள் எருசலேமின் அழிவையும், உலகத்தின் எல்லாப் பாகங்களுக்கும் யூதர்கள் சிதறி ஓடப் போவதையும் கூறுகிறது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது புறஜாதியாரின் கடைசிக்காலம் வரையிலும் இந்த வசனங்கள் கூறுகின்றன (ரோமர் 11:25-29, சக 14, வெளி 19:11-21)

"என்ன உத்தரவு சொல்லுவோமென்று கவலைப்படாதிருக்கும்படி உங்கள் மனதிலே நிர்ணயம்பண்ணிக் கொள்ளுங்கள்" - (மத் 10:19-20; லூக்கா 12:11)

21 அதிகாரம்

"உங்களை விரோதிக்கிறவர்கள் ஒருவரும் எதிர்பேசவும் எதிர்நிற்கவும் கூடாத வாக்கையும் ஞானத்தையும் நான் உங்களுக்குக் கொடுப்பேன்" - இயேசு கிறிஸ்து தமது பிள்ளைகளுக்குக் கொடுக்கும் வாக்குத்தத்தம் நமக்கு எதிர்ப்புக்கள் வரும் ஆனாலும் கலங்கவேண்டாம் எதைப் பேசவேண்டும் எப்படி பேசவேண்டும் என்றும் கவலைப்படவேண்டாம். கர்த்தர் சகலத்தையும் பார்த்துக் கொள்வார் (அப் 2:11-40, அப 3:11-26; அப 4:1-22; அப 5:17-42, அப 6:9-7:60)

"பெற்றாராலும் சகோதரராலும் பந்துஜனங்களாலும். சிநேகிதராலும் காட்டிக் கொடுக்கப்படுவீர்கள் உங்களில் சிலரைக் கொலைசெய்வார்கள்" - இது மிகவும் கொடுமையான காரியம். ஆனாலும் பிசாசின் வல்லமையினால் இப்படிப்பட்ட துன்மார்க்கமான காரியங்கள் நடைபெறும் மார்க்கப் பிரிவினைகளினால் ஜனங்கள் ஒருவரையொருவர் கொலைசெய்வார்கள் வேதாகமத்தில் நாம் வாசிக்கும் முதலாவது துரோகமும், முதலாவது கொலையும் மார்க்கம் சம்பந்தமாகவே நடைபெற்றது. (ஆதி 4) கடைசிக் காலத்திலும் இதுபோலவே நடைபெறும் (வெளி 6:9-11 வெளி 7:9-17, வெளி 14:13 வெளி 15:2-4, வெளி 20:4-6, மத் 24:4-24)

கள்ளமார்க்கங்கள் மனுஷரைத் துன்மார்க்கமாக ஜீவிக்குமாறு வழிநடத்தும். துன்மார்க்கமான காரியங்களைப் பேசி. அவர்கள் துன்மார்க்கமான கிரியைகளைச் செய்வார்கள் அவைகளைச் செய்யும்போது தாங்கள் தெய்வீக காரியத்தைச் செய்வதாகவும், தங்கள் தேவனுக்கே இவற்றைச் செய்வதாகவும் கூறுவார்கள் இதையே அவர்கள் தங்களுடைய மார்க்கம் என்று உபதேசம் பண்ணுகிறார்கள் (யோவான் 16:2)

"என் நாமத்தினிமித்தம் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்" - இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே அவருடைய விசுவாசிகள் பகைக்கப்படுகிறார்கள் அந்தப் பகை வளர்ந்து, இப்போது உச்ச நிலையை எட்டியிருக்கிறது. (மத் 24:9-22 எரே 30:6-7) புறஜாதியார் எழும்பி. தங்களை உயர்த்தி, தேவனுக்கு எதிராகவும். தேவனுடைய பிள்ளைகளுக்கு எதிராகவும் கலகம் பண்ணுவார்கள் தங்களுடைய தேவனே உயர்ந்தவர் தங்களுடைய மார்க்கமே உயர்ந்தது என்று வைராக்கியம் பேசுவார்கள்

"உங்கள் தலைமயிரில் ஒன்றாகிலும் அழியாது" - எருசலேம் அழியும்போது இயேசு கிறிஸ்துவை உண்மையாகப் பின்பற்றுவோர் எவரும் அழிவதில்லை. (மத் 10:30)

"உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள்" - விசுவாசிகளுக்கு ஆவியின் கனியாகிய நீடிய பொறுமை இருக்க வேண்டும் தேவனோடு நம்முடைய ஆத்துமா சமாதானமாக ஜீவிக்க வேண்டும். (மத் 10:39; மத் 16:25, மாற்கு 8:35; லூக்கா 17:33)

"எருசலேம் சேனைகளால் சூழப்பட்டிருப்பதை நீங்கள் காணும்போது அதின் அழிவு சமீபமாயிற்றென்று அறியுங்கள்" - ரோமபுரியின் சேனைகள் எருசலேம் பட்டணத்தைச் சுற்றி, பதிவிருந்தார்கள் அவர்களுக்குத் தேவையான உணவு, தண்ணீர் மற்ற ஜீவாதார பொருட்கள் எதுவும் எருசலேமிற்குள் செல்லாதவாறு தடைபண்ணினார்கள் இது லூக்கா 19:43 ஆவது வசனத்தின் நிறைவேற்றம் எருசலேமின் அழிவு சமீபமாக இருந்தது (லூக்கா 21:20-24 லூக்கா 21) ஆவது அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து வலியுறுத்திக் கூறும் காரியம் இதுதான் லூக்கா 21:7 ஆவது வசனத்தில் கேட்கப்பட்டிருக்கும் கேள்விக்கு இயேசு கூறிய பதிலை இந்த அதிகாரத்தில் நாம் வாசிக்கிறோம். மத் 24, மாற்கு 13 ஆகிய அதிகாரங்களில் இந்தக் கேள்விக்குப் பதில் கூறப்படவில்லை.

21 அதிகாரம்

"நீதியைச் சரிக்கட்டும் நாட்கள்" - "விசாரிப்பின் நாட்கள் வரும் நீதிச் சரிக்கட்டும் நாட்கள் வரும்" என்று ஓசி 9:7 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது. மேசியா சமாதானத்தையும் ஆசீர்வாதத்தையும் அருளுவதற்காக கிருபையில் வரும் நாட்களை இது குறிக்காது (லூக்கா 19:41-44) அவர்கள் சமாதானத்தோடு வரும் நாட்களை ஏற்றுக் கொண்டால் அவர்களுக்கு நீதியைச் சரிக்கட்டுவதற்காக வரும் நாட்கள் தேவைப்படாது. (மத் 23:37-39 லூக்கா 13:33-35)

"எழுதியிருக்கிற யாவும் நிறைவேறும்" - எருசலேமின் அழிவைக் குறித்து எழுதப்பட்டிருக்கிற எல்லாக் காரியங்களும் நிறைவேறும் மற்ற தீர்க்கதரிசனங்களின் பூரண நிறைவேறுதலைப் பற்றி இந்த வசனம் கூறவில்லை

"அந்நாட்களில் கர்ப்பவதிகளுக்கும் பால்கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ" - புறஜாதி ஜனங்கள் யுத்தம் பண்ணும்போது கர்ப்பவதிகளையும், அவர்களுடைய பிள்ளைகளையும், தாய்மார்களையும் அழித்துப் போடுவார்கள் இது மத் 24:15-22 ஆகிய வசனங்களைப் போல உள்ளது. ஆனால் இது தனிப்பட்ட நிகழ்ச்சி கி.பி 70 இல் இது நிறைவேறிற்று. மத்தேயு கூறியிருக்கிற காரியங்கள் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக உபத்திரவக்காலத்தில் நிறைவேறும். அப்போது எருசலேம் புறஜாதியாரிடமிருந்து விடுவிக்கப்படும் அந்தக் காலத்திலும் அந்திக் கிறிஸ்துவின் சேனைகள் எருசலேமைச் சுற்றி வளைப்பார்கள் எருசலேமின் பாதிப்பட்டணத்தைப் பிடித்துவிடுவார்கள் (சக 14:1-5) இந்தக் காலத்திலும், கர்ப்பவதிகளுக்கும் தாய்மார்களுக்கும், பிள்ளைகளுக்கும் மிகுந்த இடுக்கண் உண்டாகும் சக 14 ஆவது அதிகாரத்தில் ஸ்திரீகள் கற்பழிக்கப்படுவார்கள் என்று வாசிக்கிறோம்.

"மிகுந்த இடுக்கண்" - ரோமாபுரியார் யூதர்களைச் சுற்றி வளைத்துப் பிடித்தார்கள் அவர்களைச் சிலுவைகளில் அறைந்து கொலை வேண்டுமென்று விரும்பினார்கள் ஆனால் போதுமான அளவு சிலுவைகள் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. கிடைத்த சிலுவைகளை வைத்து, எருசலேமின் அலங்கங்களில் ரோமாபுரியார் யூதர்களைச் சிலுவைகளில் அறைந்தார்கள் திரளான ஜனங்கள் பஞ்சத்தினால் எருசலேம் பட்டணத்திற்குள்ளேயே மாண்டுபோனார்கள் எருசலேம் பட்டணத்திற்கு அருகாமையிலுள்ள பள்ளத்தாக்குகளில் யூதர்களுடைய பிணங்கள் குவியலாக நிறைந்தது ரோமாபுரியாரின் படைத்தளபதி தீத்து இந்தப் படுகொலைக்குத் தான் காரணமல்ல என்று தன் கரங்களைத் தன்னுடைய தெய்வத்திற்கு முன்பாகக் கழுவியதாக வரலாறு கூறுகிறது மாண்டுபோன ஆறு இலட்சம் யூதர்களுடைய உடலங்களை ரோமர்கள் எருசலேம் பட்டணத்திற்கு வெளியே எண்ணி எறிந்தார்கள் எருசலேமில் பதினொரு இலட்சம் யூதர்கள் மடிந்தார்கள் 97 ஆயிரம் யூதர்களைக் குறைந்தவிலைக்கு அடிமைகளாக விற்றார்கள் 40 ஆயிரம் யூதர்களை விலைக்கு வாங்குவதற்கு ஆளில்லாமல் போனதினால் அவர்களை விடுதலை பண்ணிவிட்டார்கள் இதுதவிர 347,490 யூதர்கள் மற்ற வழிகளில் அழிந்தார்கள் இதுவே மிகுந்த இடுக்கண் என்று வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிறது

"புறஜாதியாரின் காலம் நிறைவேறும் வரைக்கும்" - எருசலேமின் ஒரு பகுதி இன்னும் புறஜாதியாரின் கைகளிலேயே இருக்கும். ஒரு குறுகிய காலத்திற்கு மட்டும் அது விடுவிக்கப்பட்டு, யூதருடைய தலைநகரமாக இருக்கும். தானியேலின் 70 ஆவது வாரத்தின் மையப்பகுதி வரைக்கும் அவ்வாறு இருக்கும். அதன்பின்பு, அந்திக் கிறிஸ்து வருகிறான் அவன் இஸ்ரவேலோடு செய்து கொண்ட ஏழு வருஷ உடன்படிக்கையை முறித்து பாலஸ்தீன தேசத்திற்குள் வருகிறான்

அந்திக் கிறிஸ்து எருசலேமைக் கைப்பற்றுவான் யூதருடைய வருங்கால தேவாலயத்தையும் கைப்பற்றுவான் அதைத் தனக்கு தலைநகரமாக்கி, அதில் மிருகங்களை ஆராதனை செய்யும் பழக்கத்தை ஏற்படுத்துவான் (தானி 9:27 தானி 11:4-45; தானி 12:7, மத் 24:15-21 2தெச 2:1-12; வெளி 13; வெளி 14:9-11, வெளி 15:2-4; வெளி 20:4-6

21 அதிகாரம்

எருசலேம் புறஜாதியாரின் கைகளில் 42 மாதங்களுக்கு இருக்கும். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது எருசலேம் விடுவிக்கப்படும். (வெளி 11:1-3; வெளி 12:6,14; வெளி 13:5; வெளி 19:11-21; செப் 14; 2தெச 2:8-12) இத்துடன் புறஜாதியாரின் காலம் முடிவடைகிறது.

புறஜாதியாரின் காலம் இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலே அடிமையாக இருந்த காலத்திலேயே ஆரம்பித்துவிட்டது. அதன்பின்பு, அசீரியர்கள் பாபிலோனியர்கள் ஆகியோரின் கரங்களில் யூதர்கள் துன்பங்களை அனுபவித்தார்கள். வெளி 17:8-17 ஆகிய வசனங்கள் எட்டு உலக ராஜ்யங்கள் புறஜாதியாரின் காலத்தில் இஸ்ரவேலை ஒடுக்கும் என்று கூறுகிறது.

(5) இக்காலத்தின் முடிவு - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை - புறஜாதியாருடைய காலங்களின் முடிவு - (யோவேல் 3; மத் 24:27, 25:31; மாற்கு 13:24; ரோமர் 11:25; 2தெச 1:7; 2:8; யூதா 14; வெளி 1:7; 19:11; சக 14)

லூக்கா 21:25 சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும்; பூமியின்மேலுள்ள ஜனங்களுக்குத் தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாகும்; சமுத்திரமும் அலைகளும் முழக்கமாயிருக்கும்.

லூக்கா 21:26 வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும். ஆதலால் பூமியின்மேல் வரும் ஆபத்துகளுக்குப் பயந்து, எதிர் பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோம்.

லூக்கா 21:27 அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகத்தின்மேல் வருகிறதைக் காண்பார்கள்.

லூக்கா 21:28 இவைகள் சம்பவிக்கத் தொடங்கும்போது, உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால், நீங்கள் நிமிர்ந்துபார்த்து உங்கள் தலைகளை உயர்த்துங்கள் என்றார்.

"சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும்; பூமியின்மேலுள்ள ஜனங்களுக்குத் தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாகும்; சமுத்திரமும் அலைகளும் முழக்கமாயிருக்கும்" - இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகைக்கு அடையாளமாக இருக்கும் காரியங்களுக்கு மறுபடியும் வருகிறார் (லூக்கா 21:8-11). இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது எட்டு அடையாளங்கள் உண்டாகும் என்று லூக்கா 21:25-28 ஆகிய வசனங்கள் கூறுகின்றன. கி.பி. 70-இல் எருசலேம் அழிக்கப்பட்டபோது இந்த வசனங்கள் நிறைவேறவில்லை. தேவாலயத்தைப் பற்றி இயேசு கிறிஸ்து தீர்க்கதரிசனம் கூறி முடித்தபின்பு, அவர் தேவாலயத்தை விட்டு ஒலிவமலைக்குப் போகும்போது இந்த வசனங்களை மேலும் விரிவாகக் கூறுகிறார் (மத் 24-25; மாற்கு 13).

"சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும்" (மத் 24:29-31; மாற்கு 13:24-26)

"அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகத்தின்மேல் வருகிறதைக் காண்பார்கள்" - லூக்கா 21:25-26 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற அடையாளங்கள் நடைபெறும்போதும் மத் 24:15-22 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் உபத்திரவகாலத்திற்குப் பின்பும் இயேசு கிறிஸ்து இந்தப் பூமிக்கு தமது ராஜ்யத்தை ஸ்தாபிப்பார் (மத் 24:29-31; மத் 25:31-46; சக 14; வெளி 19-20)

"இவைகள் சம்பவிக்கத் தொடங்கும்போது" - லூக்கா 21:8-11,25-26 ஆகிய வசனங்களிலுள்ள அடையாளங்கள் சம்பவிக்கத் துவங்கும்போது.

"நீங்கள் நிமிர்ந்துபார்த்து உங்கள் தலைகளை உயர்த்துங்கள்" அண்ணாந்து பார்த்து, கர்த்தரை எதிர்பாருங்கள் (லூக்கா 13:11; யோவான் 8:7,10)

21 அதிகாரம்

"உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால்" - சபை எடுத்துக் கொள்ளப்படுவதை இந்த வாக்கியம் குறிக்காது. இயேசு கிறிஸ்து தமது பரிசுத்தவான்களோடு இரண்டாம் முறையாக வரும்போது அவர் இஸ்ரவேலை மீட்பார் (மத் 24:29-31; ரோமர் 11:25-29 ஏசா 11:10-12; ஏசா 66:7-8; சக 14)

(6) அத்தி மரத்தைப் பற்றிய உவமை - மத் 24:32; மாற்கு 13:28)

லூக்கா 21:29 அன்றியும் அவர்களுக்கு ஒரு உவமையைச் சொன்னார்: அத்திமரத்தையும் மற்றெல்லா மரங்களையும் பாருங்கள்.

லூக்கா 21:30 அவைகள் துளிர்க்கிறதை நீங்கள் காணும்போது வசந்தகாலம் சமீபமாயிற்றென்று அறிகிறீர்கள்.

லூக்கா 21:31 அப்படியே இவைகள் சம்பவிக்கிறதை நீங்கள் காணும்போது, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்றென்று அறியுங்கள்.

உவமை எண் - 43

"அத்திமரத்தையும் மற்றெல்லா மரங்களையும் பாருங்கள். அவைகள் துளிர்க்கிறதை நீங்கள் காணும்போது வசந்தகாலம் சமீபமாயிற்றென்று அறிகிறீர்கள்" லூக்கா 21:29-31) தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று என்பதை இந்த உவமை விளக்குகிறது.

(7) அஷ்டயானங்களெல்லாம் ஒரே சந்ததியில் நிறைவேறும் - (மத் 24:34, மாற்கு 13:30)

லூக்கா 21:32 இவையெல்லாம் சம்பவிக்கும்முன் இந்தச் சந்ததி ஒழிந்துபோகாதென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

லூக்கா 21:33 வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை.

"இவையெல்லாம் சம்பவிக்கும்முன் இந்தச் சந்ததி ஒழிந்துபோகாது" - (மத் 24:34

"வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை" - (மத் 24:35)

(8) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்த எச்சரிப்புகள்

லூக்கா 21:34 உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறியினாலும் லவுகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள்மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்.

லூக்கா 21:35 பூமியிலெங்கும் குடியிருக்கிற அனைவர் மேலும் அது ஒரு கண்ணியைப்போல வரும்.

"எச்சரிக்கையாயிருங்கள்" (மத் 6:1; மத் 11:29)

"நீங்கள்" - சபை எடுத்துக் கொள்ளப்பட்டபிறகு உபத்திரவக்காலத்தில் ஜீவிக்கும் ஜனங்கள் (மத் 24:15-22, வெளி 6-19

பாரமடை (overcharged) - βαρύνω - barynoo - 925

வினைச்சொல் - பாரமடை (weighed down) - இந்த வசனத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. லூக்கா 9:32; 2கொரி 5:4 ஆகிய வசனங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கும் வார்த்தையோடு இதை ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

பெருந்திண்டி (surfeiting) - κραιπάλη kraipalee 2897

21 அதிகாரம்

பெண்பால் பெயர்ச்சொல் - பெருந்திண்டி, பாரமடைதல் - அதிகமாக சாப்பிட்ட பிறகு அல்லது குடித்து வெறித்த பிறகு வாந்தி பண்ணும் நிலைமை

வெறி (drunkenness) - μέθη - methee - 3178

பெண்பால் பெயர்ச்சொல் - வெறி (intoxication) - இந்த வசனத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ரோமர் 13:13; கலா 5:21; நீதி 20:1 ஏசா 28:7; எசே 23:32; எசே 39:19 ஆகிய வசனங்களில் பயன்படுத்தப் பட்டிருக்கும் வார்த்தையோடு இதை ஒப்பிட்டுப் பார்க்கலாம்

"லவுகீக கவலைகள் (cares of this life) - (மத் 6:25-33 பெருந்திண்டியும் வெறியும் வருங்காலத்தில் அந்த மனுஷனுக்கு நோய்களையும் சரீரத்தில் உபத்திரவங்களையும் உண்டாக்கும். அவன் ஜெபத்தோடும், சுயகட்டுப்பாட்டோடும் இருந்தால் கவலைப்படாமல் இருக்கலாம். தேவையில்லாத பிரச்சனைகளைத் தவிர்க்கலாம்.

"அந்த நாள் வரும்" இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் நாள் (மத் 24:43-51; மத் 25:1-13 லூக்கா 12:35-48, லூக்கா 13:24-30)

நினையாத (unawares) - αἰφνίδιος - aphnidios - 160

பெயரடை - நினையாத, சடிதியாய் (suddenly) - இந்த வசனத்திலும் 1தெச 5:3 ஆகிய வசனத்திலும் மட்டுமே இந்த வார்த்தை பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

(9) இரண்டாம் வருகைக்கு முன்பாக சபை எடுத்துக் கொள்ளப்படும் - (யோவான் 14:1; 1தெச 4:16

லூக்கா 21:36 ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப்பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் என்றார்

"ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு. எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்" - சபை எடுத்துக் கொள்ளப்படுவதை இந்த வாக்கியம் கூறுகிறது. லூக்கா 21:25-28 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பயங்கரமான நிகழ்ச்சிகளுக்குத் தப்பிக்கிறவர்கள் அவர்கள் மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்பட வேண்டும். எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருந்தால் மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவார்கள் (யோவான் 14:1-3; 1தெச 4:13-18

(10) இயேசு தேவாலயத்தில் உபதேசம் பண்ணுகிறார்

லூக்கா 21:37 அவர் பகற்காலங்களில் தேவாலயத்திலே உபதேசம்பண்ணிக் கொண்டிருந்து இராக்காலங்களில் வெளியிலே போய், ஒலிவமலை என்னப்பட்ட மலையிலே தங்கிவந்தார்

லூக்கா 21:38 ஜனங்களெல்லாரும் அவருடைய உபதேசத்தைக் கேட்கும்படி அதிகாலமே தேவாலயத்தில் அவரிடத்திற்கு வருவார்கள்

"அவர் பகற்காலங்களில் தேவாலயத்திலே உபதேசம்பண்ணிக்கொண்டிருந்து இராக் காலங்களில் வெளியிலே போய், ஒலிவமலை என்னப்பட்ட மலையிலே தங்கிவந்தார்" இயேசு கிறிஸ்து தமது உலக ஊழியத்தில் கடைசி ஆறு நாட்களில் செய்த காரியங்கள் இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது.

லூக்கா - தொகுப்புரை

21 அதிகாரம்

"மலையில் தங்கிவந்தார்" - இது வசந்த காலம். பனிகாலமல்ல. வசந்தகாலத்தில் ஜனங்கள் வீட்டிற்கு வெளியிலும் வீட்டின் கூரைமீதும், இரவில் படுத்துத் தூங்குவார்கள். இயேசு கிறிஸ்து இந்த வசனத்தில் செய்ததுபோலவே பல இரவு வேளைகளில் அவர் வெளியே தங்கியிருந்திருக்கிறார்.

22 அதிகாரம்

148. இயேசுவைக் கொல்வதற்கு சதியாலோசனை - (மத் 26:3; மாற்கு 14:1)

லூக்கா 22:1 பஸ்கா என்னப்பட்ட புளிப்பில்லாத அப்பப்பண்டிகை சமீபமாயிற்று.

லூக்கா 22:2 அப்பொழுது பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் அவரைக் கொலைசெய்யும்படி யோசித்து ஜனங்களுக்குப் பயப்பட்டபடியினால் எவ்விதமாய் அப்படிச்செய்யலாமென்று வகைதேடினார்கள்.

"பஸ்கா என்னப்பட்ட புளிப்பில்லாத அப்பப்பண்டிகை" - நிசான் மாதத்தில் இது ஏழு நாட்கள் நடைபெறும். (லேவி 23:5-8 மத் 26:17-19, மாற்கு 14:12-16)

"ஜனங்களுக்குப் பயப்பட்டபடியினால் எவ்விதமாய் அப்படிச்செய்யலாமென்று வகைதேடினார்கள்" - இயேசு கிறிஸ்துவிற்கு எதிராகத் திரளான ஜனங்களைத் தூண்டி விடுவதற்குப் பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் முயற்சி பண்ணினார்கள். அந்தத் திட்டம் தோல்வியடைந்தால் இயேசு கிறிஸ்துவை ஒரு இரகசியமான இடத்திற்குக் கடத்திச் சென்று, அங்கு அவரைக் கொல்ல வேண்டுமென்பது அவர்களுடைய திட்டம். இந்த வசனத்தில் "கொலைசெய்தல்" என்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிற கிரேக்கச் சொல் "அனைரியோ anaireo" என்பதாகும். இதற்கு ஒருவரைத் தூக்கிச்சென்று கொல்லுதல் அல்லது கடத்திச் சென்று கொல்லுதல் என்று பொருள்.

கொலைசெய் (kill) - ἀναιρέω - anaireo 337

வினைச்சொல் - கொலைசெய், மடிந்து போகவை, கொன்று போடு, நீக்கிப்போடு

இவர்களுக்கு உதவி புரிவதற்கு யூதாஸ்காரியோத்து இன்னும் இவர்களிடத்தில் வரவில்லை.

149. இயேசுவைக் காட்டிக் கொடுக்க யூதாஸ் ஒப்புக்கொள்கிறான் - (மத் 26:14; மாற்கு 14:10)

லூக்கா 22:3 அப்பொழுது பன்னிருவரில் ஒருவனாகிய ஸ்காரியோத்தென்னும் மறுபேர் கொண்ட யூதாசுக்குள் சாத்தான் புகுந்தான்.

லூக்கா 22:4 அவன் பிரதான ஆசாரியர்களிடத்திலும் சேனைத் தலைவர்களிடத்திலும்போய், அவரைக் காட்டிக்கொடுக்கும் வகையைக் குறித்து அவர்களோடே ஆலோசனை பண்ணினான்.

லூக்கா 22:5 அவர்கள் சந்தோஷப்பட்டு, அவனுக்குப் பணங்கொடுக்க உடன்பட்டார்கள்.

லூக்கா 22:6 அதற்கு அவன் சம்மதித்து, ஜனக்கூட்டமில்லாத வேளையில் அவரை அவர்களுக்குக் காட்டிக்கொடுக்கும்படி சமயந்தேடினான்.

"யூதாசுக்குள் சாத்தான் புகுந்தான்" - யூதாசிற்குள் சாத்தானுடைய சிந்தை வந்தது. சாத்தான் அவனை ஆளுகை செய்தான். சாத்தான் சரீரப் பிரகாரமாக யூதாசிற்குள் புகவில்லை. சாத்தானுடைய சிந்தை யூதாசிற்குள் புகுந்தது. சரீரப் பிரகாரமாக ஒரு நபர் இன்னொரு நபருக்குள் புகுவதை "கூடுவிட்டுக் கூடுபாய்தல்" என்கிறார்கள். இதற்கு வேதாகமத்தில் ஆதாரம் எதுவுமில்லை.

பவுலின் இருதயத்தில் கொரிந்தியரும் பிலிப்பியரும் இருந்ததாக வேதாகமம் கூறுகிறது. (2 கொரி 7:3 பிலி 1:7). இதுபோலவே தேவன் கிறிஸ்துவிடத்திலும் (2 கொரி 5:19) கிறிஸ்து தேவனிடத்திலும் (யோவான் 14:10-11) இருக்கிறார்கள். தேவனும் கிறிஸ்துவும் ஒருவருக்குள் ஒருவர் இருக்கிறார்கள் (யோவான் 14:10-11).

மனுஷர் பிதாவிடத்திலும், குமாரனிடத்திலும் இருக்கிறார்கள் (1 யோவான் 2:24) மனுஷர் கிறிஸ்துவில் இருக்கிறார்கள் (2 கொரி 5:17) மனுஷரும், ஆவியானவரும் ஒருவருக்குள் ஒருவர் இருக்கிறார்கள் (ரோமர் 8:9) கிறிஸ்து மனுஷருக்குள் இருக்கிறார்

22 அதிகாரம்

(கொலோ 1:27, ரோமர் 8:10) மனுஷரும் கிறிஸ்துவும் ஒருவருக்குள் ஒருவர் இருக்கிறார்கள் (யோவான் 14:20) எல்லா சிருஷ்டிகளும் தேவனுக்குள் இருக்கின்றன (அப 17:28) சாத்தான் மனுஷருக்குள் புகுகிறான் (லூக்கா 22:3, யோவான் 13:27).

மேலே கூறப்பட்டிருக்கும் வாக்கியங்கள் ஒருவருக்கொருவர் சிந்தையிலும் நோக்கத்திலும், செயலிலும் இணைந்திருப்பதைக் குறிக்கும். சரீரப் பிரகாரமாக ஒருவருக்குள் ஒருவர் புகுவதில்லை. கணவனும், மனைவியும் ஒரே சரீரமாக இருக்கிறார்கள் என்றால் அவர்கள் இருவரும் ஒரே மனதுடனும், ஒரே நோக்கத்துடனும், ஒரே சிந்தையுடனும் இருக்கிறார்கள் என்று பொருள்.

யூதாசிற்குள் சாத்தான் புகுந்தான் என்பது யூதாஸ் சாத்தானுடைய சோதனைக்குத் தன்னை ஒப்புக்கொடுத்து இயேசுவைக் காட்டிக் கொடுக்கத் தீர்மானம் பண்ணினான் என்று பொருள். யூதாசின் எண்ணமும், செயலும் சாத்தானுடையதுபோலவே ஆயிற்று.

நாம் தேவனுடைய சிந்தை உடையவர்களாக இருக்க வேண்டும். தேவன் நம்மை ஆளுகை செய்ய வேண்டும். சாத்தானுடைய சிந்தை நமக்குள் வருவதற்கும், சாத்தான் நம்மை ஆளுகை செய்வதற்கும் நாம் நம்மை ஒப்புக் கொடுக்கக்கூடாது. (1கொரி 6:17)

“சேனைத்தலைவர்கள்” (captains) - தேவாலயத்துச் சேவகர்களுக்கு அதிகாரிகள்.

“அவர்கள் சந்தோஷப்பட்டார்கள்” பிரதான ஆசாரியரும், பரிசேயரும் இயேசுவைக் கொலை செய்வதற்குச் சதித்திட்டம் தீட்டுகிறார்கள். யூதாஸ்காரியோத்து அவர்களிடத்தில் வந்து இயேசுவைக் காட்டிக் கொடுக்கும் விதத்தைப் பற்றி ஆலோசனை கூறியபோது அவர்கள் சந்தோஷம் அடைந்தார்கள். இயேசு கிறிஸ்துவோடு எப்போதும் திரளான ஜனங்கள் கூடியிருப்பார்கள். அவருடைய உபதேசத்தைக் கேட்பதற்கும், அவரால் சுகம்பெறுவதற்கும், ஏராளமான ஜனங்கள் கூடி வருவார்கள் (லூக்கா 22:6). ஜனக்கூட்டத்தார் இல்லாமல் இயேசு எப்பொழுது எங்கு தனிமையாக இருப்பார் என்பது அவருடைய சீஷர்களுக்கு மட்டுமே தெரியும். அது யூதாஸ்காரியோத்திற்கும் தெரிந்திருந்தது. ஜனக்கூட்டம் இல்லாத இடத்தில் இயேசுவைக் கைதுபண்ணினால் கலகம் வராது என்று நினைத்தார்கள்.

150. பஸ்காவின் ஆயத்தம் - (மத் 26:17; மாற்கு 14:12)

லூக்கா 22:7 பஸ்காவைப் பலியிட வேண்டிய புளிப்பில்லாத அப்பப்பண்டிகை நாள் வந்தது.

லூக்கா 22:8 அப்பொழுது அவர் பேதுருவையும் யோவானையும் அழைத்து: நாம் பஸ்காவைப் புசிக்கும்படிக்கு நீங்கள் போய், அதை நமக்கு ஆயத்தம் பண்ணுங்கள் என்றார்.

லூக்கா 22:9 அதற்கு அவர்கள்: நாங்கள் அதை எங்கே ஆயத்தம் பண்ணும்படி சித்தமாயிருக்கிறீர் என்று கேட்டார்கள்.

லூக்கா 22:10 அதற்கு அவர்: நீங்கள் நகரத்தில் பிரவேசிக்கும்போது தண்ணீர்க்குடம் சுமந்துவருகிற ஒரு மனுஷன் உங்களுக்கு எதிர்ப்படுவான்; நீங்கள் அவனுக்குப் பின்சென்று, அவன் போகும் வீட்டிற்குள் நீங்களும் போய்,

லூக்கா 22:11 அந்த வீட்டெஜமானை நோக்கி: நான் என் சீஷரோடுகூடப் [redacted] புசிக்கிறதற்குத் தகுதியான இடம் எங்கே என்று போதகர் உம்மிடத்தில் கேட்கச் சொன்னார் என்று சொல்லுங்கள்.

லூக்கா 22:12 அவன் கம்பளம் முதலானவைகள் விரித்திருக்கிற மேல்வீட்டிலுள்ள ஒரு பெரிய அறையை உங்களுக்குக் காண்பிப்பான், அங்கே ஆயத்தம்பண்ணுங்கள் என்று சொல்லி அனுப்பினார்.

22 அதிகாரம்

லூக்கா 22:13 அவர்கள் போய், தங்களிடத்தில் அவர் சொன்னபடியே கண்டு, பஸ்காவை ஆயத்தம் பண்ணினார்கள்.

"புளிப்பில்லாத அப்பப்பண்டிகை நாள்" - பஸ்கா பண்டிகைக்கு முந்திய நாள் அது. ஆயத்தநாள் என்று அழைக்கப்பட்டது. மாலையில் சூரியன் அஸ்தமனம் ஆவதிலிருந்து மறுநாள் மாலையில் சூரியன் அஸ்தமனமாவது வரையிலும் ஒரு நாள் என்று கணக்கிடப்படுகிறது. அந்த நாளில் இயேசு கிறிஸ்துவின் கடைசி இராபோஜனம், அவர் காட்டிக்கொடுக்கப்படுவது, கெத்செமனே தோட்டத்து அனுபவம், இயேசு கிறிஸ்து கைதுபண்ணப்படுதல், விசாரிக்கப்படுதல், சிலுவையில் அறையப்படுதல், அடக்கம் பண்ணப்படுதல் ஆகிய காரியங்கள் நடைபெற்றன (மத் 26:14-27:66; மாற்கு 14:10-15:47; லூக்கா 22:1-23:56; யோவான் 13:1-19:42).

தீர்க்கதரிசன எண் - 45

"நீங்கள் நகரத்தில் பிரவேசிக்கும்போது தண்ணீர்க்குடம் சுமந்துவருகிற ஒரு மனுஷன் உங்களுக்கு எதிர்ப்படுவான்____" (லூக்கா 22:10-12). இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"தண்ணீர்க்குடம் சுமந்துவருகிற ஒரு மனுஷன்" - ஆண்கள் பொதுவாகத் தண்ணீர்க் குடம் சுமப்பதில்லை. பெண்களே குடத்தில் தண்ணீர் சுமந்து வருவார்கள். ஆண்கள் துருத்திகளில் தண்ணீரை நிரப்பி அவற்றைக் கழுதைகளில் ஏற்றி வருவார்கள்.

வீட்டெஜமான் (goodman) - οἰκοδεσπότης - oikodespotees - 3617

ஆண்பால் பெயர்ச்சொல் வீட்டெஜமான் (லூக்கா 9:38)

"நான் என் சீஷரோடுகூடப் பஸ்காவைப் புசிக்கிறதற்குத் தகுதியான இடம் எங்கே" - பஸ்காவை எல்லோரும் புசிப்பதற்கு ஒரு நாளுக்கு முன்பாகவே இயேசு கிறிஸ்து பஸ்காவைப் புசிக்கிறார் (லூக்கா 22:13-16).

"மேல்வீட்டிலுள்ள ஒரு பெரிய அறை" - (மாற்கு 14:15; அப் 1:13; அப் 2:1)

151. கடைசி பஸ்கா

(1) கர்த்தருடைய பந்தி - (மத் 26:26; மாற்கு 14:22; யோவான் 13)

லூக்கா 22:14 வேளைவந்தபோது அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள்.

லூக்கா 22:15 அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன்.

லூக்கா 22:16 தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி,

லூக்கா 22:17 அவர் பாத்திரத்தை எடுத்து ஸ்தோத்திரம்பண்ணி: நீங்கள் இதை வாங்கி, உங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொள்ளுங்கள்.

லூக்கா 22:18 தேவனுடைய ராஜ்யம் வருமளவும் நான் திராட்சப்பழரசத்தைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

லூக்கா 22:19 பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து: இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.

22 அதிகாரம்

லூக்கா 22:20 போஜனம்பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து: இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்

"வேளைவந்தபோது" - பஸ்கா ஆயத்தமாக இருந்தபோது. லேவி 23:12)

பந்தியிரு (sat down) - ἀναπίπτω - anapiptoo - 377

விணைச்சொல் - சாய்ந்து அமரு, பந்தியிரு, உட்காரு (recline) யோவான் 13:25

"அவருடனேகூட பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள்" - யூதாஸ்காரியோத்து இன்னும் இயேசு கிறிஸ்துவோடுகூட இருக்கிறான்

தீர்க்கதரிசன எண் - 46

"நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன்___" (லூக்கா 22:15-22 இந்தத் தீர்க்கதரிசனத்தில் லூக்கா 22:16,18 ஆகிய வசனங்கள் நிறைவேறவில்லை. லூக்கா 22:15,17,19-22 ஆகிய வசனங்கள் நிறைவேறியுள்ளன

"தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லை" - நித்திய ராஜ்யத்தில் பஸ்கா ஆசரிக்கப்படும். (லூக்கா 22:16,18)

"தேவனுடைய ராஜ்யம்" - (மத் 4:17; மத் 19:24

கர்த்தருடைய பந்தி

1 பஸ்காபோஜனத்தின்போது இது ஆரம்பிக்கப்பட்டது (லூக்கா 22:14-20

2 இது கர்த்தருடைய பந்தி (the Lord's Supper) (1கொரி 11:20), இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தோடும், (the communion of the blood of Christ) கிறிஸ்துவின் சரீரத்தோடும் உடன்படிக்கை. (the communion of the body of Christ) (1கொரி 10:16

3 கர்த்தருடைய பந்தியில் பயன்படுத்தப்படும் பொருட்கள் திராட்சைரசம், (the fruit of the vine, grape juice) (மாற்கு 14:25; லூக்கா 22:18 புளிப்பில்லா அப்பம் "unleavened bread" (மத் 26:17,26; மாற்கு 14:12,22; லூக்கா 22:7,19

4 அப்பம் பிட்கப்பட்டது. இயேசு கிறிஸ்துவின் பிட்கப்பட்ட சரீரத்திற்கு அடையாளம் நமது சரீர சுகமாதலுக்காக அவர் அடிக்கப்பட்டார் (மத் 26:26 லூக்கா 22:19, 1கொரி 10:16 1கொரி 11:24-29; ஏசா 52:14 ஏசா 53:4-5; 1பேதுரு 2:24

5 திராட்சைரசம் இயேசுகிறிஸ்துவின இரத்தத்திற்கு அடையாளம். நம்முடைய பாவங்களை மன்னிப்பதற்காக அவர் இரத்தம் சிந்தினார் (மத் 26:28 மாற்கு 14:24; லூக்கா 22:20, 1கொரி 10:16; 1கொரி 11:25-29, எபே 1:7; கொலோ 1:14,20

6 ஒவ்வொரு விசுவாசியும் கர்த்தருடைய பந்தியில் பங்குபெற வேண்டும். (மத் 26:26-27; மாற்கு 14:22, லூக்கா 22:17; 1கொரி 10:16-17, 1கொரி 11:28)

7 கர்த்தருடைய பந்திக்காக ஸ்தோத்திரம் பண்ணி அதை ஆசீர்வதிக்க வேண்டும். (மத் 26:26-27, மாற்கு 14:22-23; லூக்கா 22:17,19, 1கொரி 10:16; 1கொரி 11:24

8 இயேசு கிறிஸ்து மறுபடியும் வரும் வரையிலும் அவருடைய மரணத்தை நினைவுகூரும் விதமாக நாம் இதில் பங்குபெற வேண்டும். (லூக்கா 22:19, 1கொரி 11:24-26

22 அதிகாரம்

9 கர்த்தருடைய பந்தியில அனுதினமும் பங்குபெறலாம் (அப 2:42-46) வாரம் ஒருமுறையோ (அப 20:7 1கொரி 10:17) அல்லது அடிக்கடியோ (1கொரி 11:26) நாம் பங்குபெறலாம். ஆதித்திருச்சபையார் கர்த்தருடைய பந்தியில அனுதினமும் பங்கு பெற்றார்கள். அதன்பின்பு அவர்கள் வாரம் ஒருமுறை கூடும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். அப்போது ஒவ்வொரு வாரமும் கர்த்தருடைய பந்தியில பங்கு பெற்றார்கள் (அப 20:7 1கொரி 16:2)

10 தேவனுடைய ராஜ்ஜியத்தில் கிறிஸ்துவும், எல்லா விசுவாசிகளும் கர்த்தருடைய பந்தியில நித்திய காலமாக பங்கு பெறுவார்கள் (மத் 26:29 மாற்கு 14:25 லூக்கா 22:18,30)

11 இது ஒரு சபை ஒழுங்கு. இதனால் விசுவாசிகள் ஒன்றுசேர வேண்டும். விசுவாசிகளிடையே அன்பு பெருக வேண்டும். பிரிவினை வந்துவிடக்கூடாது. (1கொரி 10:16-17 1கொரி 11:16-30)

12 கர்த்தருடைய பந்தியில விசுவாசத்தோடு பங்குபெற வேண்டும். பங்கு பெறுகிறவன் தன்னைத்தானே சோதித்துப் பார்க்க வேண்டும். அபாத்திரவானாகப் பங்குபெறுகிறவன் ஆக்கினையையும் வியாதியையும் சிலர் மரணத்தையும் அடைவார்கள் (1கொரி 11:27-30)

திராட்சைப்பழம் (fruit of the vine)
γένημα geneema 1081

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல். திராட்சைப்பழம், விளைச்சல், திராட்சைப்பழரசம் ஊறவைக்கப்பட்ட மது. அல்ல பழங்கள் செடியில கொத்தாக இருக்கும்போது அதை ஆங்கிலத்தில wine என்று அழைக்கிறார்கள் (ஏசா 65:8)

குடிவெறி

பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் குடித்து வெறிப்பது கடிந்து கொள்ளப் பட்டிருக்கிறது (உபா 21:20-21 உபா 29:19-21 1சாமு 1:14 நீதி 23:20,29-35 நீதி 31:4-6 ஏசா 5:11,22 ஏசா 28:1-8 ஆமோ 6:1-6 ஆப 2:15-17 லூக்கா 21:34 ரோமர் 13:13 1கொரி 5:11 1கொரி 6:9-10 கலா 5:19-21 எபே 5:18 1தெச 5:7-8) குடித்து வெறிப்பதினால் ஏற்படும் விளைவுகள் (உபா 21:20-21 சங் 69:12 நீதி 20:1 நீதி 23:20-21,29-35 நீதி 31:4-7 ஏசா 19:14 எரே 25:27 ஓசி 4:11 யோவே 3:3 ஆமோ 2:6-12 மீகா 2:11 ஆப 2:15-17 மத் 24:49)

குடித்து வெறித்திருந்தவர்களுக்கு எடுத்துக்காட்டுக்கள்

1. நோவா (ஆதி 9:21-27)
2. லோத்து (ஆதி 19:33-38)
3. ஆசாரியர்கள் (லேவி 10:1-9)
4. நாபால் (1சாமு 25:36)
5. உரியா (2சாமு 11:13)
6. ஏலா (1இராஜா 16:9)
7. முப்பத்தி மூன்று இராஜாக்கள் (1இராஜா 20:16)
8. அகாஸ்வேரு (எஸ் 1:10-11)
9. பெல்ஷாத்சார் (தானி 5:1-6)
10. இஸ்ரவேலரும் சபையாரும் (ஏசா 5:11 ஏசா 28:1; 1கொரி 11:21)

(2) தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட போவதை இயேசு முன் குறித்துக் கூறுகிறார் (மத் 26:20 மாற்கு 14:17 யோவான் 13:18)

லூக்கா 22:21 பின்பு இதோ என்னைக் காட்டிக்கொடுக்கிறவனுடைய கை என்னுடனே கூடப் பந்தியிலிருக்கிறது.

22 அதிகாரம்

லூக்கா 22:22 தீர்மானிக்கப்பட்டபடியே மனுஷ குமாரன் போகிறார், ஆனாலும் அவரைக் காட்டிக்கொடுக்கிற மனுஷனுக்கு ஐயோ என்றார்

லூக்கா 22:23 அப்பொழுது அவர்கள் நம்மில் யார் அப்படிச் செய்வான் என்று தங்களுக்குள்ளே விசாரிக்கத் தொடங்கினார்கள்

"என்னைக் காட்டிக்கொடுக்கிறவனுடைய கை என்னுடனே கூடப் பந்தியிலிருக்கிறது" - யூதாஸ்காரியோத்தும் கர்த்தருடைய பந்தியில் போஜனம் பண்ணினான் அவனுடைய கால்களும் கழுவப்பட்டிருந்தது. (மத் 26.20-25; மாற்கு 14:17, லூக்கா 22.21-23, யோவான் 13:2-19)

(3) தங்களில் எவன் பெரியவனாய் இருப்பான் என்னும் வாக்குவாதம் - (மத் 20:24, மாற்கு 10:41)

லூக்கா 22:24 அன்றியும் தங்களில் எவன் பெரியவனாயிருப்பான் என்று அவர்களுக்குள்ளே வாக்குவாதம் உண்டாயிற்று

லூக்கா 22:25 அவர் அவர்களை நோக்கி, புறஜாதியாரின் ராஜாக்கள் அவர்களை ஆளுகிறார்கள் அவர்கள்மேல் அதிகாரம் செலுத்துகிறவர்களும் உபகாரிகள் என்னப்படுகிறார்கள்

லூக்கா 22:26 உங்களுக்குள்ளே அப்படியிருக்கக்கூடாது, உங்களில் பெரியவன் சிறியவனைப் போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப் போலவும் இருக்கக்கடவன்

லூக்கா 22:27 பந்தியிருக்கிறவனோ பணிவிடை செய்கிறவனோ எவன் பெரியவன்? பந்தியிருக்கிறவன் அல்லவா? அப்படியிருந்தும் நான் உங்கள் நடுவிலே பணிவிடைக் காரனைப்போல் இருக்கிறேன்

"தங்களில் எவன் பெரியவனாயிருப்பான் என்று அவர்களுக்குள்ளே வாக்குவாதம் உண்டாயிற்று" - வாக்குவாதம் பண்ணுவதற்கு இது நேரமல்ல. அவர்கள் இயேசு கிறிஸ்துவையும், அவர் அனுபவிக்கபோகும் பாடுகளையும் சிந்தித்துப் பார்க்க வேண்டிய நேரம். இயேசு கிறிஸ்து மரித்துவிட்டால் அவருடைய இடத்திற்குத் தங்களுக்குள் யார் வருவான் என்று ஒருவேளை அவர்கள் வாக்குவாதம் பண்ணியிருக்கலாம். இது சாத்தானுடைய தந்திரம். சாத்தான் அந்தக் காலத்தில் சீஷர்களைக் குழப்பியது போலவே, இன்றும் ஊழியக்காரர்களைக் குழப்புகிறான் அதிகாரத்திற்காகவும் பதவிக்காகவும் அந்தஸ்திற்காகவும் கர்த்தருடைய பிள்ளைகள் வாக்குவாதம் பண்ணுகிறார்கள்

"சிறியவன்" (younger) - கேட்கிறவன் கற்றுக் கொள்கிறவன் ஊழியக்காரன்

"நான் உங்கள் நடுவிலே பணிவிடைக் காரனைப்போல இருக்கிறேன்" - மனுஷருடைய கோட்பாட்டின் பிரகாரம் பணிவிடை செய்கிறவன் சிறியவன் பந்தி இருக்கிறவன் பெரியவன் ஆனால் இயேசு கிறிஸ்து பணிவிடைக்காரராக இருக்கிறார் அதுவே அவருக்கு மேன்மையாகத் தெரிகிறது தேவன் கொடுக்க விரும்புகிறார் மனுஷன் பெற்றுக் கொள்ள விரும்புகிறான் மனுஷன் மற்றவர்களைத் தாழ்த்த விரும்புகிறான் ஆனால் கிறிஸ்துவோ தம்மையே தாழ்த்துகிறார் தேவனுடைய எண்ணத்தைப் புரிந்து கொள்ளாததினாலேயே லூசிபர் என்னும் சாத்தான் விழுந்துபோனான் தன்னை உயர்த்தினான் கீழே விழுந்தான் (ஏசா14:12-14; எசே 28:11-17, 1தீமோ 3:6 ஆதாமும் தன்னை உயர்த்தினான் பாவத்தில் விழுந்தான் (ஆதி 3)

(4) இராஜ்ஜியத்தில் அப்போஸ்தலரின் வருங்கால ஸ்தலம் - (மத் 19:28

லூக்கா 22:28 மேலும் எனக்கு நேரிட்ட சோதனைகளில் என்னோடேகூட நிலைத்திருந்தவர்கள் நீங்களே

லூக்கா 22:29 ஆகையால், என் பிதா எனக்கு ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்தினது போல, நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன்

22 அதிகாரம்

லூக்கா 22:30 நீங்கள் என் ராஜ்யத்திலே என் பந்தியில போஜனபானம்பண்ணி, இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந் தீர்க்கிறவர்களாய்ச் சிங்காசனங்களின் மேல உட்காருவீர்கள் என்றார்

"எனக்கு நேரிட்ட சோதனைகள்" - இயேசு கிறிஸ்துவின் விசாரணைகள் அவமானங்கள உபத்திரவங்கள பாடுகள் அவருடைய ஜீவனுக்கு எதிரான சதியாலோசனைகள்

தீர்க்கதரிசன எண் - 47

"என் பிதா எனக்கு ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்தினதுபோல, நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன ...." லூக்கா 22:29-30 இந்த தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகையினபோது இந்த ராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பார் உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள் எல்லோருக்குமே இந்த ராஜ்ஜியத்தில ஒரு பங்கு இருக்கும். (தானி 7:18,27; 1கொரி 4:8; 1கொரி 6:2-3, ரோமர் 8:17, 2தீமோ 2:12; வெளி 5:10, வெளி 20:4-6

"என ராஜ்யத்திலே என பந்தியில போஜனபானம்பணணி" - (லூக்கா 14:15)

"இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந் தீர்க்கிறவர்களாய்ச சிங்காசனங்களினமேல உட்காருவீர்கள்" - ஆயிரம் வருஷ அரசாட்சியில இந்தப் பூமியில உண்மையிலேயே நடக்கப் போகும் காரியம். சபையின்மீது ஆவிக்குரிய ஆளுகையை இந்த வசனம் குறிப்பிடவில்லை உண்மையான இராஜ்ஜியத்தையே குறிப்பிடுகிறது. லூக்கா 22:29)

152. பேதுரு தம்மை மறுதலிக்கப் போவதை இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (மத் 26:31, மாற்கு 14:27, யோவான் 13:36

லூக்கா 22:31 பின்னும் கர்த்தர் சீமோனே சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறது போலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக் கொண்டான்

லூக்கா 22:32 நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்

லூக்கா 22:33 அதற்கு அவன் ஆண்டவரே, காவலிலும் சாவிலும் உம்மைப் பின்பற்றிவர ஆயத்தமாயிருக்கிறேன் என்றான்

லூக்கா 22:34 அவர் அவனை நோக்கி: பேதுருவே, இன்றைக்குச் சேவல கூவுகிறதற்கு முன்னே நீ என்னை அறிந்திருக்கிறதை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று உனக்குச் சொல்லுகிறேன என்றார்

உத்தரவுகேள (desired) - ἐξαιτέω - exaiteoo - (1809

வினைச்சொல உத்தரவுகேள

உத்தரவு, கேள (demand; to obtain by asking)

யோபுவைச் சோதிக்க சாத்தான தேவனிடம் அனுமதி கேட்டான் அவரும் அவனுக்கு அனுமதி கொடுத்தார் (யோபு 1:6 யோபு 2:1) இந்த இடத்தில இயேசு கிறிஸ்து சீமோனுக்காக வேண்டிக் கொண்டதாக கூறுகிறார் "நானோ உன விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக் கொண்டேன்" லூக்கா 22:32 கோதுமையை சுளகினால புடைப்பதற்கு முன்பாக கோதுமைக் கதிர்மீது மிருகங்களை நடக்க விடுவார்கள் பேதுருவிற்கு இது கடினமான அனுபவமாக இருக்கும். காற்றில புடைக்கும்போது பதரெல்லாம் பறந்துபோகும்.

22 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 48

"நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து" (லூக்கா 22:32) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. பேதுரு மனம் திரும்பி இரட்சிக்கப்பட்டவன். மூன்று வருஷங்களாக இயேசு கிறிஸ்துவோடு ஊழியம் செய்தவன். ஆனாலும் அவனுக்கும் சாத்தானுடைய சோதனை வருகிறது. சோதனையில் விழுந்தான். பலவீனனாக இருந்தான். பேதுரு கர்த்தருடைய கிருபையினால் மறுபடியும் எழுந்து நின்றான். அதிக பலமுள்ளவனானான். கர்த்தருக்காக வல்லமையாக ஊழியம் செய்தான்.

"ஆண்டவரே, காவலிலும் சாவிலும் உம்மைப் பின்பற்றிவர ஆயத்தமாயிருக்கிறேன்" - பேதுருவினுடைய உள்ளத்தில் பெருமை இருந்தது. அந்தப் பெருமையே அவன் விழுவதற்குக் காரணமாயிற்று. (நீதி 16:18) நிற்கிறேன் என்று நினைக்கிற யாரும் விழுந்து விடாதவாறு மிகுந்த எச்சரிப்போடு இருக்க வேண்டும். (1கொரி 10:12-13)

தீர்க்கதரிசன எண் - 49

"இன்றைக்குச் சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை அறிந்திருக்கிறதை மூன்றுதரம் மறுதலிப்பாய்" (லூக்கா 22:34) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

153. புதிய பொருட்களுக்கு அனுமதி - (மத் 10:9-10, லூக் 10:4)

லூக்கா 22:35 பின்னும் அவர் அவர்களை நோக்கி: நான் உங்களைப் பணப்பையும் சாமான்பையும் பாதரட்சைகளும் இல்லாமல் அனுப்பினபோது ஏதாகிலும் உங்களுக்குக் குறைவாயிருந்ததா என்றார். அவர்கள், ஒன்றும் குறைவாயிருந்ததில்லை என்றார்கள்.

லூக்கா 22:36 அதற்கு அவர்: இப்பொழுதோ பணப்பையும் சாமான்பையும் உடையவன் அவைகளை எடுத்துக்கொள்ளக்கடவன்; பட்டயம் இல்லாதவன் தன் வஸ்திரத்தை விற்று ஒன்றைக் கொள்ளக்கடவன்.

லூக்கா 22:37 அக்கிரமக்காரரில் ஒருவனாக எண்ணப்பட்டார் என்று எழுதியிருக்கிற வாக்கியம் என்னிடத்தில் நிறைவேற வேண்டியதென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; என்னைப்பற்றிய காரியங்கள் முடிவு பெறுங்காலம் வந்திருக்கிறது என்றார்.

லூக்கா 22:38 அதற்கு அவர்கள்: ஆண்டவரே, இதோ, இங்கே இரண்டு பட்டயம் இருக்கிறது என்றார்கள். அவர், போதும் என்றார்.

"இப்பொழுதோ பணப்பையும் சாமான்பையும் உடையவன் அவைகளை எடுத்துக் கொள்ளக்கடவன்" - இயேசு கிறிஸ்து இதற்கு முன்பாகப் பணப்பையைக் கொண்டுபோக வேண்டாம் என்று கூறினார் (மத் 10:9-10) ஆனால் அதை இப்பொழுது மாற்றிக் கூறுகிறார். இயேசு இனிமேல் அவர்களுடைய தேவைகளைச் சந்திப்பதற்கு அவர்களோடுகூட இருக்கமாட்டார். ஜனங்கள் சீஷர்களை ஏற்றுக் கொள்ளாமல் துன்புறுத்துவார்கள். ஆகையினால் அவர்கள் பிரசங்கம் பண்ணப்போகும்போது தகுந்த ஆயத்தத்தோடு போவது நல்லது என்று நினைத்து இயேசு இவ்வாறு கூறுகிறார்.

"பட்டயம் இல்லாதவன் தன் வஸ்திரத்தை விற்று ஒன்றைக் கொள்ளக்கடவன்" யூதேயாவைச் சுற்றிலும் கொடிய விலங்குகளும் திருடர்களும் இருந்தார்கள். அவற்றிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கே இயேசு கிறிஸ்து இவ்வாறு கூறினார். மிருகங்களிடமிருந்து தங்களைப் பாதுகாப்பதற்காகப் பட்டயத்தைப் பயன்படுத்தலாம். மற்றவர்களைத் தாக்குவதற்குப் பயன்படுத்தக்கூடாது. சுவிசேஷத்தைப் பட்டயத்தின் மூலமாக அறிவிக்க முடியாது.

22 அதிகாரம்

லூக்கா சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 9

"அக்கிரமக்காரரில் ஒருவனாக எண்ணப்பட்டார் என்னைப்பற்றிய காரியங்கள் முடிவு பெறுங்காலம் வந்திருக்கிறது" லூக்கா 22:37 ஏசா 53:12

"போதும்" (It is enough) - இதுபோதும் என்று ஒருமையில கூறினார் அவை போதும் (they are enough) என்று பன்மையில கூறவில்லை யூதாசோடோ அவனோடு வரும் கூட்டத்தாரோடோ அவர்கள் சண்டையிடப் போவதில்லை. இயேசு கிறிஸ்துவின் வேளை வந்துவிட்டது. அவர் தம்மை ஒப்புக்கொடுக்கப் போகிறார்

VI. கிறிஸ்துவின் பாடுகள்

1. **கெத்செமனே தோட்டத்தில் இயேசுவின் துக்கமும் வியாகுலமும்** - (மத் 26:36 மாற்கு 14:32; யோவான் 18:1)

லூக்கா 22:39 பின்பு அவர் புறப்பட்டு வழக்கத்தின்படியே ஒலிவமலைக்குப் போனார் அவருடைய சீஷரும் அவரோடே கூடப் போனார்கள்

லூக்கா 22:40 அவ்விடத்தில சேர்ந்தபொழுது அவர் அவர்களை நோக்கி: நீங்கள் சோதனைக்குட் படாதபடிக்கு ஜெபம்பண்ணுங்கள் என்று சொல்லி,

லூக்கா 22:41 அவர்களை விட்டுக் கல்லெறிதூரம் அப்புறம்போய், முழங்காற்படியிட்டு,

லூக்கா 22:42 பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும். ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார்

லூக்கா 22:43 அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி அவரைப் பலப்படுத்தினான்

லூக்கா 22:44 அவர் மிகவும் வியாகுலப்பட்டு அதிக ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார் அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது.

லூக்கா 22:45 அவர் ஜெபம்பண்ணி முடித்து, எழுந்திருந்து, தம்முடைய சீஷரிடத்தில வந்து அவர்கள் துக்கத்தினாலே நித்திரை பண்ணுகிறதைக் கண்டு:

லூக்கா 22:46 நீங்கள் நித்திரை பண்ணுகிறதென்ன? சோதனைக்குட் படாதபடிக்கு எழுந்திருந்து ஜெபம் பண்ணுங்கள் என்றார்

"ஒலிவமலைக்குப் போனார், அவருடைய சீஷரும் அவரோடேகூடப் போனார்கள்" - யூதாஸ் இயேசுவோடு போகவில்லை பதினொரு சீஷர்கள் மட்டுமே போனார்கள்

"பிதாவே உமக்குச் சித்தமானால இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும் ஆயினும் என்னுடைய சித்தத்தின் படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" - (மத் 20:22, மத் 26:39

"வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான்" - இயேசு கிறிஸ்து மிகுந்த வியாகுலம் அடைந்தார் தேவதூதன் ஒருவன் அவரைப் பலப்படுத்தினான (மத் 4:11) அவருடைய வியாகுலத்தையும் இரத்த வியர்வையையும் அவருடைய மானிட பலத்தினால தாங்கிக் கொள்ள முடியவில்லை சாத்தானும் அவனுடைய பிசாசுகளும் இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில மரிக்க விடாதவாறு வதைக்கிறார்கள் தோட்டத்திலேயே அவரைக் கொன்றுபோட வேண்டுமென்று பிரயாசப்படுகிறார்கள் (எபி 5:7)

இயேசு கிறிஸ்து சிலுவையில மரிக்க வேண்டும். இதற்காகவே அவர் இந்த உலகத்திற்கு வந்தார் மனுக்குலத்தின் இரட்சிப்பின திட்டத்தில இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம் முக்கிய பங்கு வகிக்கிறது. இயேசு கிறிஸ்து சிலுவையில மரிக்காமல வேறு ஏதாவது ஒரு வழியில மரித்துப் போனால அவருடைய சித்தம் நிறைவேறாது.

22 அதிகாரம்

ஆகையினால் சாத்தான் இயேசுவை வேறு ஏதாவது வழியில் கொலைசெய்வதற்கு முயற்சி பண்ணுகிறான். இயேசு கிறிஸ்து சாத்தானை ஜெயித்தார். மனுஷருடைய பாவங்களை மன்னிக்கும் கிரயமாக தமது திருஇரத்தத்தைக் கல்வாரி சிலுவையிலே சிந்துகிறார் (கொலோ 1:20; கொலோ 2:14-17; எபி 2:14-15)

"அவர் மிகவும் வியாகுலப்பட்டு அதிக ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார்" - வியாகுலப்படுதல் என்பதன் கிரேக்க வார்த்தை "அகோனியா" **(agonia)** என்பதாகும். இதற்கு போராடுதல், முரண்படுதல் **(struggle, conflict)** என்று பொருள். இந்த வார்த்தை "அகோன்" **(agon)** என்னும் கிரேக்கச் சொல்லிலிருந்து வந்திருக்கிறது. இதற்கு கூடும் இடம் **(a place of assembly)** என்று பொருள். விளையாட்டு மைதானம், போட்டிகள் நடைபெறும் இடம், வெற்றி பெறவேண்டிய இடம், எல்லாத் தடைகளையும் வென்று ஜெயம் பெறவேண்டிய இடம் என்று இதற்குப் பொருள் கூறலாம். விசுவாசிகள் சுவிசேஷ ஊழியம் செய்வது ஒரு போராட்டமான காரியம். பல பிரச்சனைகள் வரலாம். இருந்தாலும் முடிவில் கர்த்தர் நமக்கு ஜெயம் தருவார் (1தெச 2:2; பிலி 1:30; 1தீமோ 4:12; 2தீமோ 4:7) இயேசு கிறிஸ்து கெத்செமனே தோட்டத்தில் தமது ஜீவனுக்கும், மரணத்திற்கும் இடையே போராடிக் கொண்டிருக்கிறார். அது சாதாரண ஜெப அனுபவம் அல்ல. போராடும் அனுபவம். இதனால் அவருக்கு மிகுந்த வியாகுலம் உண்டாயிற்று.

வியாகுலம் (agony) - **ἀγωνία**
agoonia - 74

பெண்பால் பெயர்ச்சொல்
வியாகுலம், ஆவல்

விளையாட்டு மைதானம் (assembly) - **ἀγών** agoon 73

ஆண்பால் பெயர்ச்சொல்

(அ) விளையாட்டுப்போட்டி, ஓட்டம்

(ஆ) கிறிஸ்தவ வாழ்க்கையின் போராட்டம் பிலி 1:30

(இ) ஆர்வத்தினால் ஏற்படும் மனப் போராட்டம் 2 கொலோ 2:1

"அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது" - இயேசு கிறிஸ்துவின் வியாகுலம் மிகவும் அதிகமாக இருந்தது. ஆகையினால் அவருடைய வியர்வைச் சுரப்பிகளில் இரத்தம் புகுந்து அவருடைய சரீரத்திலிருந்து சிவப்பு நிறத்தில் இரத்தம் கலந்த வியர்வை வடிந்தது. மருத்துவ ரீதியாக இவ்வாறு நடைபெறும் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

"நீங்கள் நித்திரைபண்ணுகிறதென்ன? சோதனைக்குட்படாதபடிக்கு எழுந்திருந்து ஜெபம்பண்ணுங்கள்" - இயேசு கிறிஸ்துவின் இந்த வார்த்தை மற்ற சுவிசேஷங்களில் வேறு விதமாக எழுதப்பட்டிருக்கிறது. நமக்குச் சோதனை வரலாம். நமது ஆவி பலமுள்ளதுதான். ஆனாலும் நமது சரீரமோ பலவீனமானது. ஆகையினால் நாம் விழித்திருந்து ஜெபம் பண்ண வேண்டும்.

2. இயேசுவை கொல்வதற்கு முயற்சி - யூதாஸ் காட்டிக்கொடுக்கிறான் - இயேசு காதை சொஸ்தப் படுத்துகிறார் - (மத் 26:47; மாற்கு 14:43; யோவான் 18:2)

லூக்கா 22:47 அவர் அப்படிப் பேசுகையில் ஜனங்கள் கூட்டமாய் வந்தார்கள்; அவர்களுக்கு முன்னே பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் என்பவனும் வந்து, இயேசுவை முத்தஞ்செய்யும்படி அவரிடத்தில் சேர்ந்தான்.

லூக்கா 22:48 இயேசு அவனை நோக்கி: யூதாசே, முத்தத்தினாலேயா மனுஷகுமாரனைக் காட்டிக்கொடுக்கிறாய் என்றார்.

லூக்கா 22:49 அவரைச் சூழநின்றவர்கள் நடக்கப்போகிறதைக் கண்டு: ஆண்டவரே, பட்டயத்தினாலே வெட்டுவோமா என்றார்கள்.

22 அதிகாரம்

லூக்கா 22:50 அந்தப்படியே அவர்களில் ஒருவன் பிரதான ஆசாரியனுடைய வேலைக் காரனை வலதுகாதற வெட்டினான்

லூக்கா 22:51 அப்பொழுது இயேசு: இம்மட்டில் நிறுத்துங்கள் என்று சொல்லி, அவனுடைய காதைத்தொட்டு, அவனைச் சொஸ்தப்படுத்தினார்

லூக்கா 22:52 பின்பு இயேசு தமக்கு விரோதமாய் வந்த பிரதான ஆசாரியர்களையும் தேவாலயத்துச் சேனைத் தலைவர்களையும் மூப்பர்களையும் நோக்கி: ஒரு கள்ளனைப் பிடிக்கப் புறப்பட்டு வருகிறதுபோல, நீங்கள் பட்டயங்களையும் தடிகளையும் எடுத்துப் புறப்பட்டுவந்தீர்களே

லூக்கா 22:53 நான் தினந்தோறும் தேவாலயத்தில் உங்களுடனேகூட இருக்கையில் நீங்கள் என்னைப் பிடிக்கக் கைநீட்டவில்லை; இதுவோ உங்களுடைய வேளையும் அந்தகாரத்தின் அதிகாரமுமாயிருக்கிறது என்றார்

"அவர்களில் ஒருவன் பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலதுகாதற வெட்டினான்" - இது பேதுரு செய்த காரியம். (யோவான் 18:10)

"இம்மட்டில் நிறுத்துங்கள்" இயேசு இவ்வாறு கூறி, அவனுடைய காதைத் தொட்டு, அவனைச் சொஸ்தப்படுத்தினார். லூக்கா சுவிசேஷத்தில் மட்டுமே இந்த சுகமாதலைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது

இயேசு கிறிஸ்துவைக் கைதுசெய்ய வந்தவர்கள்

1. பிரதான ஆசாரியர் - தேவாலயத்துச் சேவையில் 24 வகுப்புகளுக்குத் தலைவர்கள்
2. சேனைத்தலைவர்கள் - தேவாலயத்தின் சேனைக்குத் தலைவர்கள்
3. மூப்பர்கள் - ஆலோசனைச் சங்கத்தின் மூப்பர்கள்
4. ரோமாபுரியின் போர்வீரர்கள்
5. திரளான ஜனங்கள்

எல்லா யூதர்களும் இயேசுவின் விரோதிகள் என்று கூறமுடியாது. நிக்கோதேமுவும் அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பும் இயேசுவின் சிநேகிதர்கள் (யோவான் 19:38-39)

"இதுவோ உங்களுடைய வேளையும் அந்தகாரத்தின் அதிகாரமுமாயிருக்கிறது" - அந்தகாரத்தின் வல்லமை இப்போது கிரியை செய்கிறது. இயேசு கிறிஸ்துவை ஆளுகை செய்ய போகிறது. இந்த வேளைக்காகவே இயேசு கிறிஸ்து இதுவரையிலும் காத்திருக்கிறார்

3. பேதுரு மறுதலிக்கிறான் - (மத் 26:69; மாற்கு 14:66; யோவான் 18:15, 25)

லூக்கா 22:54 அவர்கள் அவரைப் பிடித்த பின்பு, பிரதான ஆசாரியனுடைய வீட்டில் கொண்டுபோய் விட்டார்கள். பேதுருவும் தூரத்திலே பின்சென்றான்

லூக்கா 22:55 அவர்கள் முற்றத்தின் நடுவிலே நெருப்பை மூட்டி, அதைச் சுற்றி உட்கார்ந்தபோது, பேதுருவும் அவர்கள் நடுவிலே உட்கார்ந்தான்

லூக்கா 22:56 அப்பொழுது ஒரு வேலைக்காரி அவனை நெருப்பண்டையிலே உட்கார்ந்திருக்கக் கண்டு, அவனை உற்றுப்பார்த்து: இவனும் அவனோடிருந்தான் என்றாள்

லூக்கா 22:57 அதற்கு அவன்: ஸ்திரீயே, அவனை அறியேன் என்று மறுதலித்தான்

லூக்கா 22:58 சற்றுநேரத்துக்குப்பின்பு வேறொருவன் அவனைக் கண்டு: நீயும் அவர்களில் ஒருவன் என்றான். அதற்குப் பேதுரு: மனுஷனே, நான் அல்ல என்றான்

22 அதிகாரம்

லூக்கா 22:59 ஏறக்குறைய ஒருமணி நேரத்துக்குப்பின்பு வேறொருவன் அவனைப் பார்த்து, மெய்யாகவே இவனும் அவனோடிருந்தான் இவன் கலிலேயன்தான் என்று சாதித்தான்

லூக்கா 22:60 அதற்குப் பேதுரு: மனுஷனே, நீ சொல்லுகிறதை அறியேன் என்றான் அவன் இப்படிச் சொன்னவுடனே சேவல் கூவிற்று.

லூக்கா 22:61 அப்பொழுது கர்த்தர் திரும்பி, பேதுருவை நோக்கிப்பார்த்தார் [illegible] கூவுகிறதற்கு முன்னே நீ மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று கர்த்தர் தன்னிடத்தில் சொன்ன வசனத்தை உடனே பேதுரு நினைவுகூர்ந்து,

லூக்கா 22:62 வெளியேபோய், மனங்கசந்து அழுதான்

"அவர்கள் அவரைப் பிடித்தபின்பு, பிரதான ஆசாரியனுடைய வீட்டில் கொண்டுபோய் விட்டார்கள் பேதுருவும் தூரத்திலே பின்சென்றான்" - (லூக்கா 22:54-62, மத் 26:57-75; மாற்கு 14:53-72)

"சேவல் கூவிற்று" - லூக்கா 22:34 ஆவது வசனம் நிறைவேறிற்று.

"கர்த்தர் திரும்பி, பேதுருவை நோக்கிப்பார்த்தார்" இயேசு கிறிஸ்துவின் இந்தப் பார்வையை பேதுருவால் மறக்கவே முடியாது. அந்தப் பார்வையில் பேதுரு தன்னுடைய உணர்வுகளுக்குத் திரும்பி வருகிறான் தான் செய்த பாவங்களுக்கு மனம் வருந்துகிறான்

"மனங்கசந்து அழுதான்" லூக்கா 19:41

4. **இயேசுவின் வழக்கு விசாரணையும் பரியாசமும்** - (மத் 26:57; மாற்கு 14:53, யோவான் 18:12,19)

லூக்கா 22:63 இயேசுவைப் பிடித்துக் கொண்ட மனுஷர் அவரைப் பரியாசம் பண்ணி, அடித்து:

லூக்கா 22:64 அவருடைய கண்களைக் கட்டி, அவருடைய முகத்தில் அறைந்து: உன்னை அடித்தவன் யார், அதை ஞானதிருஷ்டியினால் சொல் என்று அவரைக் கேட்டதுமன்றி,

லூக்கா 22:65 மற்றும் அநேக தூஷண வார்த்தைகளையும் அவருக்கு விரோதமாகச் சொன்னார்கள்

லூக்கா 22:66 விடியற்காலமானபோது ஜனத்தின் மூப்பரும் பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் கூடிவந்து தங்கள் ஆலோசனைச் சங்கத்தில் அவரைக் கொண்டுவந்து நிறுத்தி,

லூக்கா 22:67 நீ கிறிஸ்துவா? அதை எங்களுக்குச் சொல் என்றார்கள் அதற்கு அவர்: நான் உங்களுக்குச் சொன்னாலும் நம்பமாட்டீர்கள்

லூக்கா 22:68 நான் உங்களிடத்தில் வினாவினாலும் எனக்கு மாறுத்தரம் சொல்லமாட்டீர்கள் என்னை விடுதலை பண்ணவுமாட்டீர்கள்

லூக்கா 22:69 இதுமுதல் மனுஷகுமாரன் சர்வவல்லமையுள்ள தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பார் என்றார்

லூக்கா 22:70 அதற்கு அவர்களெல்லாரும்: அப்படியானால், நீ தேவனுடைய குமாரனா என்று கேட்டார்கள் அதற்கு அவர்: நீங்கள் சொல்லுகிறபடியே நான் அவர்தான் என்றார்

லூக்கா 22:71 அப்பொழுது அவர்கள் இனி வேறு சாட்சி நமக்கு வேண்டுவதென்ன? நாமே இவனுடைய வாயினாலே கேட்டோமே என்றார்கள்

"இயேசுவைப் பிடித்துக்கொண்ட மனுஷர் அவரைப் பரியாசம் பண்ணி, அடித்தார்கள்" - அவருடைய கண்களைக் கட்டி, அவருடைய முகத்தில் அறைந்து: உன்னை அடித்தவன் யார், அதை ஞானதிருஷ்டியினால் சொல் என்று அவரைக் கேட்டார்கள் மற்றும் அநேக தூஷணவார்த்தைகளையும் அவருக்கு விரோதமாகச் சொன்னார்கள் இயேசு கிறிஸ்துவிடம் ஆவியின் வரம் உள்ளது

22 அதிகாரம்

தம்மை அறைந்தது யாரென்று அவரால் நிச்சயமாகக் கூறமுடியும். இயேசு கிறிஸ்துவை அறைந்தவர்கள் சற்று நேரத்திற்கு முன்பாக அவர் ஒரு சேவகனின் காதைக் குணப்படுத்தினார். இதை அவர்கள் தங்கள் கண்களால் கண்டார்கள். இயேசு கிறிஸ்து தேவாலயத்திலும் மற்ற இடங்களிலும் வியாதியஸ்தரைச் சொஸ்தமாக்கியதைத் தங்கள் கண்களால் பார்த்தவர்கள். இப்படிப்பட்டவர்கள் தான் இயேசு கிறிஸ்துவே தேவகுமாரன் என்று தெரிந்தும், அவரை உபத்திரவப்படுத்துகிறார்கள்.

"விடியற்காலமானபோது ஜனத்தின் மூப்பரும் பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் கூடிவந்து, தங்கள் ஆலோசனைச் சங்கத்தில் அவரைக் கொண்டுவந்து நிறுத்தினார்கள்."

இரவு முழுவதும் இயேசு கிறிஸ்துவை விசாரித்தார்கள். நடுஇரவிற்கு முன்பாகவே யூதர்களும் பிலாத்துவும் இயேசுவை விசாரித்தார்கள் (யோவான் 19:14). இயேசு கிறிஸ்துவை ஏற்கெனவே வாரினால் அடித்துவிட்டார்கள் (யோவான் 19:1). நடுஇரவிலிருந்து காலை வரையிலும் அவரைக் கொல்ல வேண்டும் என்னும் முயற்சியைத் தொடர்ந்து செய்து வருகிறார்கள். விடியற்காலத்தில் இயேசு கிறிஸ்துவை யூதருடைய ஆலோசனைச் சங்கத்திற்கு அழைத்துக் கொண்டு வருகிறார்கள். தேவனுடைய குமாரனா கிறிஸ்துவா என்று இயேசு கிறிஸ்துவிடம் கேள்வி கேட்கிறார்கள். இயேசு கிறிஸ்து கூறும் பதில் அவர்களுக்குத் தேவதூஷணமாக ஆயிற்று. ஆகையினால் அவர்கள் இயேசுவை மறுபடியும் பிலாத்துவிடம் அழைத்துச் செல்கிறார்கள் (லூக்கா 22:66-23:5). பிலாத்து இயேசுவை ஏரோதிடம் அனுப்புகிறான். ஏரோது இயேசுகிறிஸ்துவைப் பரியாசம் பண்ணிவிட்டு, அவரை மறுபடியும் பிலாத்துவிடமே அனுப்பி விடுகிறான். பிலாத்து கடைசியில் இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறையப்படுவதற்கு ஒப்புக் கொடுக்கிறான் (லூக்கா 23:6-26).

தீர்க்கதரிசன எண் - 50

"நான் உங்களுக்குச் சொன்னாலும் நம்பமாட்டீர்கள்_____" (லூக்கா 22:67-69). இந்தத் தீர்க்கதரிசனத்தில் லூக்கா 22:67-68 ஆகிய வசனங்கள் நிறைவேறியுள்ளன. லூக்கா 22:69 ஆவது வசனம் இன்னும் நிறைவேறவில்லை.

இயேசு கிறிஸ்துவே மேசியா. இதை நிரூபிப்பதற்கு அவர் ஏற்கெனவே பல அற்புதங்களைச் செய்திருக்கிறார். ஆனால் அவர்கள் இயேசுவைக் கிறிஸ்து என்று விசுவாசிக்கவில்லை. ஆகையினால் இப்போது இயேசு அவர்களிடம் "நான் உங்களிடத்தில் வினாவினாலும் எனக்கு மாறுத்தரம் சொல்லமாட்டீர்கள். என்னை விடுதலை பண்ணவுமாட்டீர்கள். இதுமுதல் மனுஷகுமாரன் சர்வவல்லமையுள்ள தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பார்" என்று கூறுகிறார் (லூக்கா 22:67-69, மத் 26:63-65).

"நீங்கள் சொல்லுகிறபடியே நான் அவர்தான்" எபிரெய மொழியில் ஒரு காரியத்தை அழுத்தம் திருத்தமாகச் சொல்வதற்குப் பயன்படுத்தும் வார்த்தை. இயேசு கிறிஸ்து தம்மைத் தேவனுடைய குமாரன் என்று கூறினார். இது யூதருக்குத் தேவதூஷணமாகத் தெரிகிறது. இயேசுவைச் சிலுவையில் அறைவதற்கு அவர்கள் இதை ஒரு காரணமாகக் கூறினார்கள் (யோவான் 8:40).

லூக்கா – தொகுப்புரை

23 அதிகாரம்

5. பிலாத்துவிற்கு முன்பாக இயேசு - (மத் 27:11; மாற்கு 15:1, யோவான் 18:28; 19:8)

லூக்கா 23:1 அவர்களுடைய கூட்டத்தாரெல்லாரும் எழுந்திருந்து அவரைப் பிலாத்துவினிடத்திற்குக் கொண்டுபோய்,

லூக்கா 23:2 இவன் தன்னைக் கிறிஸ்து என்னப்பட்ட ராஜாவென்றும், ராயருக்கு வரிகொடுக்க வேண்டுவதில்லையென்றும் சொல்லி, ஜனங்களைக் கலகப்படுத்தக் கண்டோம் என்று அவர்மேல் குற்றஞ்சாட்டத் தொடங்கினார்கள்.

லூக்கா 23:3 பிலாத்து அவரை நோக்கி: நீ யூதருடைய ராஜாவா என்று கேட்டான். அவர் அவனுக்குப் பிரதியுத்தரமாக: நீர் சொல்லுகிறபடிதான் என்றார்.

லூக்கா 23:4 அப்பொழுது பிலாத்து பிரதான ஆசாரியர்களையும் ஜனங்களையும் நோக்கி: இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை என்றான்.

லூக்கா 23:5 அதற்கு அவர்கள்: இவன் கலிலேயா நாடுதொடங்கி இவ்விடம் வரைக்கும் யூதேயா தேசமெங்கும் உபதேசம்பண்ணி, ஜனங்களைக் கலகப்படுத்துகிறான் என்று வைராக்கியத்தோடே சொன்னார்கள்.

"அவர்களுடைய கூட்டத்தாரெல்லாரும் எழுந்திருந்து, அவரைப் பிலாத்துவினிடத்திற்குக் கொண்டு போனார்கள்" - பிரதான ஆசாரியர், மூப்பர் பிசாசின் வல்லமைகள் ஆகியவற்றிற்குத் திரளான கூட்டத்தார் செவிகொடுக்கிறார்கள். சில நாட்களுக்கு முன்பு இயேசு கிறிஸ்து எருசலேமிற்குள் பவனி வந்தபோது இவர்கள் இயேசுவை "ஓசன்னா" என்று கூறி, வரவேற்றார்கள். அதையெல்லாம் மறந்துவிட்டு, இப்போது ஜனங்கள் பிரதான ஆசாரியரின் பின்னால் போகிறார்கள்.

இயேசு கிறிஸ்துவின் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுக்கள்

1 தன்னைக் கிறிஸ்து என்னப்பட்ட ராஜாவென்று சொல்லி, ஜனங்களைக் கலகப்படுத்தக் கண்டோம். ஆனால் இயேசு கிறிஸ்துவோ இதற்கு நேர்எதிராகச் செயல்பட்டார் (ஏசா 41:8; ஏசா 42:1; மத் 12:19)

2 ராயருக்கு வரிகொடுக்க வேண்டுவதில்லை என்று இயேசு கூறியதாகக் குற்றம் சுமத்தினார்கள். ஆனால் இயேசுவோ ராயனுக்கு உரியதை ராயனுக்கும் தேவனுக்குரியதை தேவனுக்கும் கொடுங்கள் என்று கூறியிருக்கிறார் (லூக்கா 20:25)

3 இராயனுக்குப் பதிலாக தாமே ராஜா என்று இயேசு கிறிஸ்து கூறியதாக அவர்மீது குற்றம் சுமத்தினார்கள். ஆனால் இயேசு கிறிஸ்துவோ அப்படிச் சொல்லவில்லை. தமது ராஜ்ஜியம் இந்த உலகத்திற்குரியதல்ல என்று இயேசு ஏற்கனவே கூறியிருக்கிறார் (யோவான் 18:36). ஜனங்கள் இயேசுவை ராஜாவாக்க முயற்சி பண்ணியபோது அவர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. தமது ராஜ்ஜியத்திற்கு ஏற்றவேளை இன்னும் வரவில்லையென்று இயேசு அவர்களுக்கு உபதேசம் பண்ணினார் (யோவான் 6:15; லூக்கா 19:11-27, அப 1:6-7). யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் என்பதை இயேசு கிறிஸ்து அங்கீகரிக்கிறார். ஆனாலும் தமது ராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பதற்கு இது ஏற்ற வேளையல்ல என்பதையும் தெளிவுபடுத்துகிறார்.

"இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை" கண்ணியமான நபர் யாரும் இயேசு கிறிஸ்துவிடம் எந்தக் குற்றத்தையும் காணமுடியாது. அவருடைய உபதேசத்திலும் குறைகூறமுடியாது.

"கலகப்படுத்துகிறான்" லூக்கா 23:2 இல் கலகப்படுத்துதல் (pervert) என்னும் வார்த்தையைவிட இந்த வசனத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் (stirreth up) என்னும் வார்த்தை சற்றுக் கடினமான வார்த்தையாகும். பிலாத்துவிற்கு முன்பாக ஜனங்களால் எதிர்த்துப் பேசமுடியவில்லை.

23 அதிகாரம்

இயேசு கிறிஸ்து தம்மை யூதருடைய ராஜா என்று அங்கீகரித்ததினால பிலாத்து அவர்மீது பொறாமையாக இருந்தான் சீஷருக்கு எதிராகச் சொல்லப்பட்ட குற்றச்சாட்டைக் கூட மறந்துவிட்டான் இருந்தாலும். இயேசு கிறிஸ்துவிடத்தில ஒரு குற்றத்தையும் காணவில்லையென்று நியாயமாகக் கூறுகிறான்

கலகப்படுத்து (stirreth up) ἀνασείω - anaseioo - 383

வினைச்சொல் - ஏவி விடு கலகப்படுத்து

6. ஏரோது இயேசுவை பரியாசம் பண்ணுகிறான் - (23:6-12) 13:31

லூக்கா 23:6 கலிலேயா என்பதைப பிலாத்து கேட்டபொழுது, இந்த மனுஷன் கலிலேயனா என்று விசாரித்து.

லூக்கா 23:7 அவர் ஏரோதின அதிகாரத்துக் குள்ளானவர் என்றறிந்து. அந்நாட்களில எருசலேமிலே வந்திருந்த ஏரோதுவினிடத்திற்கு அவரை அனுப்பினான

லூக்கா 23:8 ஏரோது இயேசுவைக குறித்து அநேக காரியங்களைக் கேள்விப்பட்டிருந்ததினாலும் அவரால செய்யப்படும் அடையாளத்தைப பார்க்க வேண்டுமென்று விரும்பியிருந்ததினாலும் அவரைக காணும்படி வெகுநாளாய ஆசைகொண்டிருந்தான அந்தப்படி அவரைக் கண்டபோது மிகவும் சந்தோஷப்பட்டு.

லூக்கா 23:9 அநேக காரியங்களைக் குறித்து அவரிடத்தில் வினாவினான் அவர் மறுமொழியாக அவனுக்கு ஒன்றும் சொல்லவில்லை

லூக்கா 23:10 பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் அவர்மேலபிடிவாதமாய்க் குற்றஞ்சாட்டிக்கொண்டே நின்றார்கள

லூக்கா 23:11 அப்பொழுது ஏரோது தன் போர்ச்சேவகரோடுகூட அவரை நிந்தித்துப் பரியாசம்பண்ணி, மினுக்கான வஸ்திரத்தை அவருக்கு உடுத்தி. அவரைத் திரும்பப் பிலாத்துவினிடத்திற்கு அனுப்பினான்

லூக்கா 23:12 முன்னே ஒருவருக்கொருவர் பகைவராயிருந்த பிலாத்துவும் ஏரோதும் அன்றையத்தினம் சிநேகிதரானார்கள்

"ஏரோது" - கலிலேயாவின் ஆளுநரான ஏரோது அந்திபாஸ் (Herod Antipas) இவன் யோவான் ஸ்நானனைச் சிரச்சேதம் பண்ணினவன் பஸ்கா ஆசரிப்பதற்காக ஏரோது எருசலேமிற்கு வந்திருக்கிறான் குற்றமில்லாத ஒரு மனுஷனைக் கொல்லும் பொறுப்பிலிருந்து தப்பிப்பதற்கு பிலாத்து எடுத்துக் கொண்ட முதலாவது முயற்சி. ஏரோது ஒரு கலிலேயன் ஒருவேளை ஏரோது இயேசுவைத் தண்டித்தாலும் தண்டிப்பான விடுதலை பண்ணினாலும் விடுதலை செய்வான இயேசு கிறிஸ்துவை விடுதலை பண்ணுவதற்கு மேலும் மூன்று முறை முயற்சி பண்ணுகிறான் ஒவ்வொரு முறையும் இயேசுவிடத்தில குற்றமில்லை என்பதை அறிக்கை செய்கிறான லூக்கா 23:4-22

"ஏரோது அவரைக் கண்டபோது, மிகவும் சந்தோஷப்பட்டான்" - ஏரோது அடுத்த முறை இயேசுவைப பார்க்கும்போது மிகுந்த வருத்தமடைவான தன்னுடைய பாவங்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பைப பெற்றுக கொள்வான நித்திய ஆக்கினையிலிருந்து இயேசு கிறிஸ்துவால தன்னை விடுவிக்க முடியும் என்று அப்போது நினைப்பான ஏரோதுவினுடைய முழங்கால்களும் எல்லா முழங்கால்களும், கர்த்தருக்கு முன்பாக முடங்கும் (பிலி 2:9-11)

"வெகுநாள்" இயேசுவைக் காணும்படி வெகுநாளாய ஏரோது ஆசைப்பட்டுக் கொண்டிருந்தான இயேசுவைக்குறித்து அநேக காரியங்களைக் கேள்விப்பட்டிருந்தான அவரால செய்யப்படும் அடையாளத்தைப பார்க்க வேண்டுமென்று ஏரோது விரும்பினான் அதனால் அவரைக் காணும்படி வெகுநாளாய ஆசைகொண்டிருந்தான இயேசுவைப் பரியாசம் பண்ணுவதற்காக அவனுடைய நியாயத்தீர்ப்பு நாளில ஏரோது மிகுந்த வேதனைப்படுவான

23 அதிகாரம்

"அவரால் செய்யப்படும் அடையாளத்தைப் பார்க்கவேண்டுமென்று விரும்பினான்" - இயேசுகிறிஸ்து அற்புதங்களைச் செய்கிறவர் என்பது ஏரோதுவிற்கு நன்றாகத் தெரிந்திருந்தது. இருந்தாலும் பரிசேயரைப் போல அவன் இயேசுவைப் பரியாசம் பண்ணினான். இயேசு கிறிஸ்து பல அற்புதங்களைச் செய்தார். மனுஷருக்கு உதவி செய்ய வேண்டுமென்பதற்காகவே அவர் அற்புதங்களைச் செய்தார். மனுஷரைத் திருப்திப்படுத்துவதற்காக அவர் எந்த அற்புதத்தையும் செய்யவில்லை. இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நாம் விசுவாசத்தோடு ஜெபிக்கும்போது அவர் இன்றும் நம் மூலமாக அற்புதங்களைச் செய்கிறார் (மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 14:12)

"அடையாளம் (a sign) - இயேசுவே மேசியா என்பதை உறுதிபண்ணுவதற்கு ஏரோது ஒரு அடையாளத்தைக் காணவேண்டுமென்று விரும்பினான். இயேசு கிறிஸ்து ஏற்கெனவே பல அற்புதங்கள் மூலமாகவும், அடையாளங்கள் மூலமாகவும் தாமே மேசியா என்பதை நிரூபித்திருக்கிறார். மூன்று வருஷ காலமாக அவன் இயேசு கிறிஸ்து செய்த காரியங்களைக் கேட்டிருந்து, மனந்திரும்பியிருந்திருக்கலாம். தனக்குக் கிடைத்த எல்லா வாய்ப்புக்களையும் ஏரோது தவறவிட்டுவிட்டான். அவனொரு மாயமாலக்காரன். இயேசு கிறிஸ்துவிற்கு அவனுடைய மாயமாலம் நன்றாகத் தெரிந்திருந்தது. ஆகையினால் இயேசு கிறிஸ்து மறுமொழியாக அவனுக்கு ஒன்றும் சொல்லவில்லை (லூக்கா 23:9)

அடையாளம் (miracle) - σημεῖον - **seemeion** - 4592

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - அடையாளம், அற்புதம், அதிசயம்

"பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் அவர்மேல் பிடிவாதமாய்க் குற்றஞ்சாட்டிக் கொண்டே நின்றார்கள்" இயேசு கிறிஸ்து ஒரு பதிலும் சொல்லாமல் அமைதியாக இருக்கிறார். பிரதான ஆசாரியரும், வேதபாரகரும் தம்மீது குற்றம் சாட்டுவதற்கு அனுமதிக்கிறார்.

பிடிவாதமாய் (vehemently) - εὐτόνως **eutonoos** 2159

வினையடை - பிடிவாதமாய், பலமாய் (forcibly) - இந்த வார்த்தை இந்த வசனத்திலும், அப் 18:28 ஆகிய வசனத்திலும் மட்டுமே பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

"ஏரோது தன் போர்ச்சேவகரோடுகூட அவரை நிந்தித்துப் பரியாசம்பண்ணினான்" - இயேசு கிறிஸ்துவைப் பரியாசம்பண்ணி, அவரைப் பிலாத்துவிடம் திருப்பி அனுப்பி விட்டான். இயேசு கிறிஸ்து பரியாசம் பண்ணப்பட்டபோது யூதருக்கு மிகவும் சந்தோஷமாக இருந்திருக்கும்.

மினுக்கான வஸ்திரம் (shining, brilliant) - வெள்ளைநிற வஸ்திரம். ரோமாபுரியில் தலைவர்கள் அணியும் வெள்ளைநிற வஸ்திரம். ஏரோது இயேசுவைப் பரியாசம் பண்ணுகிறான். இயேசு கிறிஸ்து தேவனுடைய ராஜ்ஜியத்தைப் பற்றிக் கூறியதினால் அவரை ஒரு ராஜாவாகப் பரியாசம்பண்ணி மினுக்கான வெள்ளை வஸ்திரத்தை இயேசு கிறிஸ்துவிற்கு உடுத்துகிறான்.

இயேசு கிறிஸ்துவிற்கு மரண தண்டனை கொடுப்பதற்கு எந்த காரணத்தையும் ஏரோதுவினால் கண்டுபிடிக்க முடியவில்லை. இயேசு கிறிஸ்து ஒரு குற்றமும் செய்யவில்லை என்பது மறுபடியுமாக நிரூபணமாகிறது. யூதேயாவின் ஆட்சியாளரும், கலிலேயாவின் ஆட்சியாளரும் இயேசுகிறிஸ்துவிடம் எந்தக் குற்றத்தையும் காணவில்லை. ஆகையினால் இயேசு கிறிஸ்துவிற்கு மரணதண்டனை கொடுக்கக்கூடாது. இருந்தாலும் தேவனுடைய தெய்வீக சித்தம் ஏற்கெனவே வெளிப்படுத்தப் பட்டுவிட்டது. ஜனங்களின் பாவத்திற்காக இயேசு கிறிஸ்து சிலுவையில் மரிக்க வேண்டும். இது தேவனுடைய சித்தம்.

மினுக்கான (gorgeous) - λαμπρός - **lampros** - 2986

பெயரடை - மினுக்கான, பிரகாசமான, தெளிவான

"முன்னே ஒருவருக்கொருவர் பகைவராயிருந்த பிலாத்துவும் ஏரோதும் அன்றையத்தினம் சிநேகிதரானார்கள்" பிலாத்து கலிலேயருடைய இரத்தத்தை அவர்களுடைய பலிகளில் கலந்தான். இதனால் கலிலேயனாகிய ஏரோதுவும், பிலாத்துவும் பகைவரானார்கள் (லூக்கா 13:1-2)

லூக்கா – தொகுப்புரை

23 அதிகாரம்

7. இயேசுவிற்கு தண்டனையும் பரபாசிற்கு விடுதலையும் - (மத் 27:15; மாற்கு 15:7 யோவான் 18:38

லூக்கா 23:13 பிலாத்து பிரதான ஆசாரியர்களையும் அதிகாரிகளையும் ஜனங்களையும் கூடி வரச்செய்து,

லூக்கா 23:14 அவர்களை நோக்கி: ஜனங்களைக் கலகத்துக்குத் தூண்டிவிடுகிறவனாக இந்த மனுஷனை என்னிடத்தில் கொண்டுவந்தீர்கள்; நான் உங்களுக்கு முன்பாக விசாரித்தபோது, இவன்மேல் நீங்கள் சாட்டுகிற குற்றங்களில் ஒன்றையும் நான் இவனிடத்தில் காணவில்லை.

லூக்கா 23:15 உங்களை ஏரோதினிடத்திற்கும் அனுப்பினேன், அவரும் இவனிடத்தில் குற்றம் காணவில்லை. மரணத்துக்கேதுவாக இவன் ஒன்றும் செய்யவில்லையே.

லூக்கா 23:16 ஆனபடியால் இவனை தண்டித்து, விடுதலையாக்குவேன் என்றான்.

லூக்கா 23:17 பண்டிகைதோறும் அவர்களுக்கு ஒருவனை அவன் விடுதலையாக்குவது அவசியமாயிருந்தபடியால் அப்படிச் சொன்னான்.

லூக்கா 23:18 ஜனங்களெல்லாரும் அதைக் கேட்டு: இவனை அகற்றும், பரபாசை எங்களுக்கு விடுதலையாக்கும் என்று சத்தமிட்டுக் கேட்டார்கள்.

லூக்கா 23:19 அந்த பரபாசென்பவன் நகரத்தில் நடந்த ஒரு கலகத்தினிமித்தமும் கொலை பாதகத்தினிமித்தமும் காவலில் வைக்கப்பட்டிருந்தான்.

லூக்கா 23:20 பிலாத்து இயேசுவை விடுதலையாக்க மனதாய், மறுபடியும் அவர்களிடத்தில் பேசினான்.

லூக்கா 23:21 அவர்களோ: அவனைச் சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும் என்று கூக்குரலிட்டார்கள்.

லூக்கா 23:22 அவன் மூன்றாந்தரம் அவர்களை நோக்கி: ஏன், இவன் என்ன பொல்லாப்புச் செய்தான்? மரணத்துக்கு ஏதுவான குற்றம் ஒன்றும் இவனிடத்தில் நான் காணவில்லையே; ஆகையால் நான் இவனை தண்டித்து, விடுதலையாக்குவேன் என்றான்.

லூக்கா 23:23 அப்படியிருந்தும் அவனைச் சிலுவையில் அறையவேண்டுமென்று அவர்கள் உரத்த சத்தத்தோடு கேட்டுக்கொண்டேயிருந்தார்கள். அவர்களும் பிரதான ஆசாரியரும் இட்ட சத்தம் மேற்கொண்டது.

லூக்கா 23:24 அப்பொழுது அவர்கள் கேட்டுக்கொண்டபடியே ஆகட்டும் என்று பிலாத்து தீர்ப்புசெய்து,

லூக்கா 23:25 கலகத்தினிமித்தமும் கொலைபாதகத்தினிமித்தமும் காவலில் போடப்பட்டிருந்தவனை அவர்கள் கேட்டுக்கொண்டபடியே விடுதலையாக்கி, இயேசுவையோ அவர்கள் இஷ்டத்துக்கு ஒப்புக்கொடுத்தான்.

லூக்கா 23:26 அவர்கள் இயேசுவைக் கொண்டு போகிறபோது, நாட்டிலிருந்து வருகிற சிரேனே ஊரானாகிய சீமோன் என்கிற ஒருவனைப் பிடித்து, சிலுவையை அவர் பின்னே சுமந்துகொண்டுவரும்படி அதை அவன்மேல் வைத்தார்கள்.

"இவன்மேல் நீங்கள் சாட்டுகிற குற்றங்களில் ஒன்றையும் நான் இவனிடத்தில் காணவில்லை" இயேசுகிறிஸ்துவிடம் ஒரு குற்றமும் காணவில்லை என்று பிலாத்து இரண்டாம் முறையாக அறிக்கை செய்கிறான். கலிலேயாவின் தேசாதிபதியாகிய ஏரோதும் இயேசுவின்மீது ஒரு குற்றமும் சுமத்தவில்லை என்று பிலாத்து கூறுகிறான்.

(லூக்கா 23:13-15) பிலாத்து இப்போது இயேசுவை விடுவிக்கத் திட்டமிடுகிறான். இயேசுவை இன்னும் கொஞ்சம் தண்டித்தால் ஜனங்கள் திருப்தியடைந்து விடுவார்கள் என்று நினைத்தான். ஆனால் அவனுடைய எண்ணம் தவறு. இயேசுவை எப்படியும்

23 அதிகாரம்

கொல்ல வேண்டுமென்று ஜனங்கள் தீர்மானமாக இருந்தார்கள். அதன்பின்பு, இயேசுவை விடுதலை பண்ண வேண்டுமா அல்லது பரபாசை விடுதலைபண்ண வேண்டுமா என்று கேட்கிறான். ஒருவேளை இயேசுவை விடுதலை பண்ண வேண்டும். குற்றவாளியாகிய பரபாசை கொல்ல வேண்டும் என்று ஜனங்கள் கூறுவார்கள் என்று நினைத்தான். மறுபடியும் அவனுடைய எண்ணம் தவறாகிவிட்டது.

"எல்லாரும்" (all at once) - ஜனங்கள் எல்லாரும் மொத்தமாக சத்தமிட்டு கேட்கிறார்கள். பிலாத்து குழம்பி விடுகிறான். தனது தீர்மானத்தை மாற்றிக் கொள்கிறான். பிலாத்து இயேசுவை விடுதலையாக்க மனதாய், மறுபடியும் அவர்களிடத்தில் பேசினான். ஆனால் ஜனங்களோ பிலாத்துவிற்குச் செவிசாய்க்க வில்லை. (லூக்கா 23:20-22)

"ஏன் இவன் என்ன பொல்லாப்புச் செய்தான்?" - இந்தக் கேள்விக்கு அவர்களால் பதில் கூறமுடியவில்லை. பிலாத்து இந்தக் கேள்வி கேட்டதினால் ஜனங்களுடைய கோபமும், வேகமும் அதிகமாயிற்று.

கேட்டுக்கொண்டேயிரு (instant) - **ἐπίκειμαι** - **epikeimai** - 1945

வினைச்சொல் - நெருக்கு கேட்டுக்கொண்டேயிரு (to press upon, be urgent) (லூக்கா 7:4; அப் 26:7; ரோமர் 12:12; 2தீமோ 4:2) தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டே யிருக்கிறார்கள். அவசரமாகச் செய்து முடிக்க வேண்டுமென்று தொடர்ந்து கேட்டுக் கொண்டேயிருக்கிறார்கள்.

"மேற்கொண்டது" இயேசுகிறிஸ்துவை விடுதலை பண்ண வேண்டுமென்று பிலாத்து விரும்பினான். இயேசுவைச் சிலுவையில் அறைய வேண்டுமென்று ஜனங்கள் விரும்பினார்கள். ஜனங்களே ஜெயித்தார்கள். பிலாத்து ஜனங்களுடைய சித்தத்திற்குத் தன்னை ஒப்புக்கொடுத்தான். (லூக்கா 23:23-26)

"அவர்கள் இயேசுவைக் கொண்டு போகிறபோது, நாட்டிலிருந்து வருகிற சிரேனே ஊரானாகிய சீமோன் என்கிற ஒருவனைப் பிடித்து, சிலுவையை அவர் பின்னே சுமந்து கொண்டுவரும்படி அதை அவன்மேல் வைத்தார்கள்" - (மத் 27:31-34; மாற்கு 15:20-23)

8. அழும் ஸ்திரீகள்

லூக்கா 23:27 திரள்கூட்டமான ஜனங்களும், அவருக்காகப் புலம்பி அழுகிற ஸ்திரீகளும் அவருக்குப் பின்சென்றார்கள்.

லூக்கா 23:28 இயேசு அவர்கள் முகமாய்த் திரும்பி: எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்.

லூக்கா 23:29 இதோ, மலடிகள் பாக்கியவதிகளென்றும், பிள்ளைபெறாத கர்ப்பங்களும் பால்கொடாத முலைகளும் பாக்கியமுள்ளவைகளென்றும் சொல்லப்படும் நாட்கள் வரும்.

லூக்கா 23:30 அப்பொழுது மலைகளை நோக்கி: எங்கள்மேல் விழுங்களென்றும், குன்றுகளை நோக்கி: எங்களை மறைத்துக் கொள்ளுங்களென்றும் சொல்லத் தொடங்குவார்கள்.

லூக்கா 23:31 பச்சைமரத்துக்கு இவைகளைச் செய்தால், பட்டமரத்துக்கு என்ன செய்யமாட்டார்கள் என்றார்.

"ஸ்திரீகள்" - ஆதியிலே ஏவாள் பாவம் செய்தாள். சாத்தானால் வஞ்சிக்கப்பட்டாள். இந்த ஸ்திரீகளோ சாத்தானால் வஞ்சிக்கப் படாமல் இயேசுவிற்குப் பின்சென்றார்கள். (1தீமோ 2:14)

"அவருக்காகப் புலம்பி அழுதார்கள்" - தங்கள் மாரில் அடித்துக் கொண்டு புலம்பி அழுதார்கள்.

லூக்கா – தொகுப்புரை

23 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 51

"எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காகவும் உங்கள்பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்" (லூக்கா 23:28 31) இந்தத் தீர்க்கதரிசனம் கி.பி. 70-இல் எருசலேம் அழிக்கப்பட்ட போது நிறைவேறிற்று.

இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஸ்திரீகள் எருசலேமில் உள்ளவர்கள் கலிலேயாவிலிருந்து வந்தவர்கள் அல்ல. (லூக்கா 23:49,55) இந்த ஸ்திரீகள் தங்களுக்காகவும், தங்கள் பிள்ளைகளுக்காகவும் அழவேண்டும் 40 வருஷங்களுக்குப் பின்பு எருசலேம் பட்டணத்திற்கு வரப்போகும் அழிவை இயேசு கிறிஸ்து காண்கிறார் எருசலேம் பட்டணம் அழிக்கப்படும் எருசலேமில் உள்ளவர்கள் கொலைசெய்யப்படுவார்கள் (லூக்கா 21:20-24)

"இதோ மலடிகள் பாக்கியவதிகளென்றும் பிள்ளைபெறாத கர்ப்பங்களும் பால்கொடாத முலைகளும் பாக்கியமுள்ளவைகளென்றும் சொல்லப்படும் நாட்கள் வரும்" - எருசலேமை ரோமாபுரியார் முற்றுகையிட்டார்கள் பசியினாலும் பட்டினியினாலும் ஆயிரக்கணக்கான சிறுபிள்ளைகள் மடிந்துபோனார்கள் அப்போது ஏராளமான ஸ்திரீகள் இந்த வாக்கியங்களைக் கூறியிருப்பார்கள்

"அப்பொழுது மலைகளை நோக்கி: எங்கள்மேல் விழுங்களென்றும் குன்றுகளை நோக்கி: எங்களை மறைத்துக் கொள்ளுங்களென்றும் சொல்லத் தொடங்குவார்கள்" "அப்பொழுது" என்னும் வாக்கியம் எருசலேம் கி.பி. 70 இல் அழியப்போகும் தீர்க்கதரிசனத்தோடு தொடர்புடையது. வெளி 6:12-17 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் ஆறாவது முத்திரையை இந்த வசனம் குறிப்பிடாது. தானியேலின் 70 ஆவது வாரத்தின் முதல் பாதிப்பகுதியில் சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு, ஆறாவது முத்திரையைப் பற்றிய காரியம் நிறைவேறும். எருசலேம் ஜனங்கள் எப்படியும் சாகப்போகிறார்கள் ஆனாலும் தங்களுக்கு இப்படிப்பட்ட மரணம் வரக்கூடாது என்று நினைத்து இந்த கூறுவார்கள்

"பச்சைமரத்துக்கு இவைகளைச் செய்தால் பட்டமரத்துக்கு என்ன செய்யமாட்டார்கள்" - இது யூதருடைய வழக்குச்சொல் இயேசு கிறிஸ்துவின் பாடுகளையும் கி.பி. 70 ஆம் ஆண்டில் யூதருக்கு வரும் பாடுகளையும் இந்த வாக்கியம் ஒப்பிட்டுக் கூறுகிறது. இயேசு கிறிஸ்து பச்சை மரத்திற்கு ஒப்பானவர் அழகானவர் கனிகொடுக்கிறவர் யூதர்கள் பட்ட மரத்திற்கு ஒப்பானவர்கள் மரித்துப் போனவர்கள் கனியற்றவர்கள் ஒரு பாவமும் செய்யாத இயேசு கிறிஸ்துவையே ரோமாபுரியார் சிலுவையில் அறைவார்கள் என்றால் பாவத்தில் மூழ்கியிருக்கும் யூதருக்கு அவர்கள் அதிகமான தண்டனையைக் கொடுப்பார்கள் என்று இந்த வாக்கியம் விளக்குகிறது. பச்சைமரம் இயேசு கிறிஸ்துவின் மனுஷத்துவத்தைக் குறிக்கிறது

இயேசுகிறிஸ்துவின் மனுஷத்துவத்தைக் குறிக்கும் காரியங்கள்

1 மானிடப்பெயர்கள் (மத் 1:1,21; மத் 2:2; மத் 8:20; மத் 9:19 யோவான் 1:29 41 யோவான் 4:25 யோவான் 20:16, ரோமர் 1:3 1கொரி 15:45; வெளி 5:5 வெளி 22:16)

2 மானிடத் தாய் (ஆதி 3:15; ஏசா 7:14, ஏசா 9:6-7; ஏசா 11:1, மத் 1:18-23, கலா 4:4)

3 மானிடக் குழந்தைப்பருவம் (லூக்கா 2:16), பிள்ளைப்பருவம் (லூக்கா 2:40,52), வளர்ந்து பெரியவரான பருவம் (1தீமோ 2:5

4 மானிட சரீரமும், மாம்சமும் (யோவான் 1:14; எபி 2:14-18 1யோவான் 4:1-6

5 எல்லா மனுஷரையும் போலவே மனுஷனாக இருந்தார் (எபி 2:9-18, எபி 4:14-16)

6 பூமியில் மனுஷ ஜீவியம் (லூக்கா 2:40,52; யோவான் 5:30 46 யோவான் 6:57; யோவான் 7:16, யோவான் 8:27 29, பிலி 2:5-11, எபி 2:9-18; எபி 4:14-16; எபி 5:7 9

23 அதிகாரம்

7 மனுஷருக்குரிய வரையறைகள் இருந்தது. சரீரத்திலும் ஆவியிலும் வளர்ந்தார் (லூக்கா 2:40,52) அழுதார் (யோவான் 11:35) பசியுண்டாயிற்று (மத் 4:4-11 மாற்கு 11:12), தாகம் உண்டாயிற்று (யோவான் 4:7, யோவான் 19:28), உறங்கினார் (மத் 8:24) களைப்படைந்தார் (யோவான் 4:6) வருத்தப்பட்டார் (ஏசா 53:3-4), சரீர வேதனையை அனுபவித்தார் (லூக்கா 22:44; 1பேதுரு 1:18 பேதுரு 4:1), பிதாவிடம் இரக்கத்திற்காக ஜெபித்தார் (மத் 26:36-40; லூக்கா 22:15-27) சோதிக்கப்பட்டார் (மத் 4;எபி 4:14-16) சரீரத்தில் மரித்தார் (யோவான் 19:30, அப் 1:3; அப் 2:23; 1பேதுரு 2:24) மறுபடியும் உயிர்த்தெழுந்தார், நித்திய காலமாக ஜீவிக்கிறார் (லூக்கா 24:49; யோவான் 20:27; 1கொரி 5, சக 13:6

9. **இயேசுவை சிலுவையில் அறைகிறார்கள்** - (மத் 27:33, மாற்கு 15:22, யோவான் 19:16)

லூக்கா 23:32 குற்றவாளிகளாகிய வேறே இரண்டு பேரும் அவரோடேகூடக் கொலை செய்யப்படுவதற்குக் கொண்டு போகப்பட்டார்கள்

லூக்கா 23:33 கபாலஸ்தலம் என்று சொல்லப்பட்ட இடத்தில் அவர்கள் சேர்ந்த பொழுது, அங்கே அவரையும் அவருடைய வலதுபக்கத்தில் ஒரு குற்றவாளியையும் அவருடைய இடதுபக்கத்தில் ஒரு குற்றவாளியையும் சிலுவைகளில் அறைந்தார்கள்

லூக்கா 23:34 அப்பொழுது இயேசு, பிதாவே, இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார் அவருடைய வஸ்திரங்களை அவர்கள் பங்கிட்டுச் சீட்டுப்போட்டார்கள்

லூக்கா 23:35 ஜனங்கள் நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள் அவர்களுடனேகூட அதிகாரிகளும் அவரை இகழ்ந்து, இவன் மற்றவர்களை இரட்சித்தான், இவன் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட கிறிஸ்துவானால், தன்னைத்தானே இரட்சித்துக்கொள்ளட்டும் என்றார்கள்

லூக்கா 23:36 போர்ச்சேவகரும் அவரிடத்தில் சேர்ந்து, அவருக்குக் காடியைக் கொடுத்து,

லூக்கா 23:37 நீ யூதரின் ராஜாவானால் உன்னை இரட்சித்துக்கொள் என்று அவரைப் பரியாசம் பண்ணினார்கள்

லூக்கா 23:38 இவன் யூதருடைய ராஜா என்று, கிரேக்கு லத்தீன் எபிரெயு எழுத்துக்களில் எழுதி, அவருக்கு மேலாக வைக்கப்பட்டது

"குற்றவாளிகள்" (malefactors) - திருடர்கள், குற்றம் புரிந்தவர்கள் துன்மார்க்கர் இயேசு கிறிஸ்துவோடு இரண்டு பேரைச் சிலுவையில் அறைந்தார்கள் சிறிது வேளைக்குப் பின்பு மேலும் இரண்டுபேரைச் சிலுவையில் அறைந்தார்கள் என்று சிலர் கூறுகிறார்கள் இவர்களுடைய கருத்தின்படி ஐந்துபேர்கள் சிலுவையில் அறையப்பட்டிருக்க வேண்டும் (மத் 27:38)

"கபாலஸ்தலம்" (Calvary) - எபிரெய மொழியில் கொல்கொதா (Golgotha) என்று அழைக்கப்படுகிறது இந்த மலை பார்ப்பதற்குக் கபாலம் அதாவது மண்டையோடு போலவே இருக்கும். (மத் 27:33)

"பிதாவே இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" இயேசுகிறிஸ்துவின் கடைசி ஏழு ஜெபங்களை லூக்கா எழுதியிருக்கிறார் (லூக்கா 3:21, அப் 7:60)

"அவருடைய வஸ்திரங்களை அவர்கள் பங்கிட்டுச் சீட்டுப்போட்டார்கள்" (மத் 27:35; மாற்கு 15:24; யோவான் 19:23

"அவரை இகழ்ந்தார்கள்" இயேசு கிறிஸ்துவின் பக்கமாக திரும்பி, அவரைப் பரியாசம்பண்ணி இகழ்ந்தார்கள் (லூக்கா 16:14, சங் 2:4; சங் 22:7; சங் 35:16

23 அதிகாரம்

"இவன் மற்றவர்களை இரட்சித்தான் இவன் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட கிறிஸ்துவானால் தன்னைத்தானே இரட்சித்துக் கொள்ளட்டும்" - அவர்கள் இயேசு கிறிஸ்துவையும் அவருடைய ஊழியத்தையும் அறியாதிருக்கிறார்கள் இயேசு கிறிஸ்து தம்முடைய ஜீவனை இரட்சித்துக் கொண்டால் நமக்கு இரட்சிப்பு இல்லை. (மத் 16:25; மாற்கு 8:35 லூக்கா 9:24; லூக்கா 17:33

"போர்ச்சேவகரும்.....அவரைப் பரியாசம் பண்ணினார்கள்" - இவர்கள் ரோமாபுரியாரின் போர்ச்சேவகர்கள் யூதருடைய தேவாலயத்து சேவகர்கள் அல்ல இவர்கள் ராயனுக்கு விசுவாசமாக இருப்பார்கள் இயேசு கிறிஸ்து தம்மை யூதரின் ராஜா என்று கூறியது போர்ச்சேவகர்களுக்குப் பிடிக்கவில்லை. தங்கள் ராயனுக்கு விரோதமாகக் கூறப்பட்ட அவமானமாகக் கருதினார்கள் இதனால் அவர்களும் இயேசுவைப் பரியாசம் பண்ணினார்கள்

"நீ யூதரின் ராஜாவானால், உன்னை இரட்சித்துக்கொள்" - யூதமார்க்கத்துத் தலைவர்களும், ஜனங்களும் இயேசு கிறிஸ்துவைப் பரியாசம் பண்ணுகிறார்கள் இந்த வசனங்களில் நாம் மூன்று விதமான பரியாசங்களைப் பார்க்கிறோம் அவையாவன

1. யூதமார்க்கத்தாரின் பரியாசம் - "இவன் மற்றவர்களை இரட்சித்தான் இவன் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட கிறிஸ்துவானால் தன்னைத்தானே இரட்சித்துக்கொள்ளட்டும்" (லூக்கா 23:35
2. போர்ச்சேவகர் - "நீ யூதரின் ராஜாவானால், உன்னை இரட்சித்துக் கொள்" (லூக்கா 23:37)
3. சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன் "நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள்" (லூக்கா 23:39)

" இவன் யூதருடைய ராஜா என்று, கிரேக்கு லத்தீன் எபிரெயு எழுத்துக்களில் எழுதி, அவருக்கு மேலாக வைக்கப்பட்டது" - (மாற்கு 15:26)

10. சிலுவையில் அறையப்பட்ட குற்றவாளிகளில் ஒருவன் மனந்திரும்புகிறான்

லூக்கா 23:39 அன்றியும் சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன்: நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான்

லூக்கா 23:40 மற்றவன் அவனை நோக்கி: நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா?

லூக்கா 23:41 நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம் நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்க பலனை அடைகிறோம் இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனைக் கடிந்துகொண்டு,

லூக்கா 23:42 இயேசுவை நோக்கி: ஆண்டவரே நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான்

லூக்கா 23:43 இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்

"சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன்" இயேசு கிறிஸ்துவோடு மேலும் நான்குபேர் சிலுவையில் அறையப்பட்டிருக்கலாம் என்று கூறுகிறவர்கள் இந்த வசனத்தைப் பயன்படுத்துகிறார்கள் ஏற்கெனவே இரண்டு கள்ளர்கள் இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்டார்கள் இப்போது குற்றவாளிகளில் ஒருவன் என்று வாசிக்கிறோம். ஒருவேளை இரண்டு கள்ளர்களும் இரண்டு குற்றவாளிகளும் இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கலாம் என்பது இவர்களுடைய வியாக்கியானம். (மத் 27:44, மாற்கு 15:32)

23 அதிகாரம்

குற்றவாளிகளில் ஒருவன் இயேசுவை பரியாசம் பண்ணினான் மற்றவனோ தனது குற்றத்தை உணர்ந்து, இயேசு கிறிஸ்துவிடம் மன்னிப்புக் கோருகிறான்

மனந்திரும்பிய குற்றவாளியின் சுபாவங்கள்

1 தேவனுக்குப் பயந்தான் (லூக்கா 23:40

2 மற்றவன் தேவனுக்குப் பயப்படாமல் இருந்ததினால் அவனைக் கடிந்து கொண்டான் (லூக்கா 23:40)

3 தன்னுடைய ஆக்கினையையும் தன்னுடைய பரிதாபமான நிலையையும் அங்கீகரிக்கிறான் (லூக்கா 23:40)

4 தான் நியாயப்படி தண்டிக்கப்படுவதாக அறிவிக்கிறான் (லூக்கா 23:41)

5 இயேசு கிறிஸ்து ஒரு குற்றமும் செய்யவில்லையென்று அறிக்கையிடுகிறான் (லூக்கா 23:41)

6 இயேசுவை ஆண்டவர் என்று அறிக்கையிடுகிறான் (லூக்கா 23:42)

7 இயேசுகிறிஸ்து தம்முடைய ராஜ்ஜியத்தில் வெற்றியோடு வருவார் என்று தன்னுடைய விசுவாசத்தை அறிக்கை செய்கிறான் (லூக்கா 23:42

8 இயேசு கிறிஸ்துவின் இரக்கத்தையும் மன்னிப்பையும் கோருகிறான் லூக்கா 23:42)

தீர்க்கதரிசன எண் - 52

"இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய்" - (லூக்கா 23:43) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இயேசு கிறிஸ்து பூமியின் பாதாளத்திற்குச் சென்று சிறைப்பட்டவர்களை விடுவித்து வந்தபோது இவனுடைய ஆத்துமாவையும் விடுவித்து வந்தார் (எபே 4:8-10, சங் 16:10; மத் 12:40; எபி 2:14-15) சிலுவையில் தொங்கிய மற்றொரு குற்றவாளி நரகத்திற்குப் போனான் (லூக்கா 16:19-31; வெளி 20:11-15)

"பரதீசு" - இந்த வசனத்தில் குறிப்பிடப் பட்டிருக்கும் பரதீசு பூமியின் ஆழத்தில் இருக்கிறது. மூன்றாம் வானத்தில் இந்தப் பரதீசு இல்லை. (2கொரி 12:1-3) இயேசு கிறிஸ்து மரிப்பதற்கு முன்பாக மரித்துப்போன பரிசுத்தவான்களின் ஆத்துமாக்கள் பரதீசியில் இருந்தது. இயேசுகிறிஸ்து மரித்த பின்பு, பரதீசு என்னப்படும் பாதாளத்திற்குச் சென்று அங்கு சாத்தானால் சிறைபிடிக்கப்பட்டிருந்த பரிசுத்தவான்களை விடுவித்து மீட்டுக் கொண்டு வந்தார் அவர்களில் சிலுவையில் மரித்த மனந்திரும்பிய குற்றவாளிகளில் ஒருவனும் இருந்திருப்பான் அவன் இயேசுவோடு வானத்திலுள்ள பரதீசிற்கு மற்ற பரிசுத்தவான்களோடு போயிருப்பான் (2கொரி 12:1-4; வெளி 2:7, லூக்கா 16:23)

11. இயேசுவின் மரணம் - (மத் 27:45; மாற்கு 15:33; யோவான் 19:28

லூக்கா 23:44 அப்பொழுது ஏறக்குறைய ஆறாம் மணி நேரமாயிருந்தது ஒன்பதாம்மணி நேரமளவாக்கும் பூமியெங்கும் அந்தகாரமுண்டாயிற்று

லூக்கா 23:45 சூரியன் இருளடைந்தது தேவாலயத்தின் திரைச்சீலை நடுவில் இரண்டாகக் கிழிந்தது

லூக்கா 23:46 இயேசு, பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார், இப்படிச் சொல்லி, ஜீவனை விட்டார்

லூக்கா 23:47 நூற்றுக்கு அதிபதி சம்பவித்ததைக் கண்டு: மெய்யாகவே இந்த மனுஷன் நீதிபரனாயிருந்தான் என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தின[illegible].

லூக்கா 23:48 இந்தக் காட்சியைப் பார்க்கும்படி கூடிவந்திருந்த ஜனங்கள் எல்லாரும் சம்பவித்தவைகளைப் பார்த்தபொழுது தங்கள் மார்பில் அடித்துக்கொண்டு திரும்பிப் போனார்கள்

லூக்கா 23:49 அவருக்கு அறிமுகமானவர்களெல்லாரும் கலிலேயாவிலிருந்து அவருக்குப் பின்சென்று வந்த ஸ்திரீகளும் தூரத்திலே நின்று இவைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்

23 அதிகாரம்

"ஆறாம் மணி நேரம்" - மதியம் 12 மணி

"ஒன்பதாம் மணிநேரம்" - மாலை 3 மணி.

"தேவாலயத்தில் திரைச்சீலை நடுவில் இரண்டாகக் கிழிந்தது" - (மத் 4:6 மத் 27:51)

"ஜீவனை விட்டார்" (commend, Commit or entrust) - (சங் 31:5 அப் 7:59; 1பேதுரு 2:23). இயேசு கிறிஸ்து தமது ஜீவனை ஒப்புக்கொடுத்தார் தேவனை மனுஷனால் கொல்லமுடியாது. ஆகையினால் இயேசு கிறிஸ்து தமது ஜீவனை ஒப்புக் கொடுக்கிறார்

"ஜீவன்" (spirit) - சரீர மரணத்தின்போது, ஆவியும் ஆத்துமாவும் சரீரத்தை விட்டுப் பிரியும். (யாக 2:26) இயேசு கிறிஸ்து மரித்த போது, அவருடைய சரீரத்தை கல்லறையில் அடக்கம் பண்ணினார்கள் சாத்தானால் சிறைப்பிடிக்கப் பட்டவர்களை மீட்பதற்காக அவர் பாதாளத்திற்குச் சென்றார் (லூக்கா 23:43)

"மெய்யாகவே இந்த மனுஷன் நீதிபரனாயிருந்தான்" இது நூற்றுக்கதிபதி சம்பவித்ததைக் கண்டு, கூறிய வார்த்தை. இவன் ஏற்கெனவே இயேசு கிறிஸ்துவை "மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன்" என்று கூறியிருக்கிறான் (மத் 27:54)

"தங்கள் மார்பில் அடித்துக்கொண்டார்கள்" - பயங்கரமான காட்சிகளையும், அற்புதமான நிகழ்ச்சிகளையும் ஜனங்கள் கண்டார்கள் தாங்கள் மிகப்பெரிய பாவம் செய்திருப்பதை உணர்ந்தார்கள் ஆகையினால் தங்கள் மார்பில் அடித்துக் கொண்டு, தங்களுக்குக் கேடுண்டாக இப்படிப்பட்ட தவறுகளைச் செய்துவிட்டோமே என்று அழுது புலம்பினார்கள்

"அவருக்கு அறிமுகமானவர்களெல்லாரும், கலிலேயாவிலிருந்து அவருக்குப் பின்சென்று வந்த ஸ்திரீகளும் தூரத்திலே நின்று இவைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்" - இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள் தூரத்தில் நின்று இவைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள் ஒருசிலர் சிலுவைக்கருகில் சிறிது நேரம் இருந்தார்கள் (யோவான் 19:25-27) அதன்பின்பு, சிலுவையை விட்டு, சற்றுத் தூரத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் (லூக்கா 23:49; மத் 27:55-56)

12. இயேசுவின் சரீரத்தை அடக்கம் பண்ணுகிறார்கள் - (மத் 27:57; மாற்கு 15:42; யோவான் 19:38)

லூக்கா 23:50 யோசேப்பு என்னும் பேர்கொண்ட ஒரு ஆலோசனைக்காரன் இருந்தான் [redacted] உத்தமனும் நீதிமானுமாயிருந்தான்

லூக்கா 23:51 அவன் யூதருடைய பட்டணங்களி லொன்றாகிய அரிமத்தியாவிலிருந்து வந்தவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குக் காத்திருந்தவனும் யூதர்களுடைய ஆலோசனைக்கும் செய்கைக்கும் சம்மதியாதவனுமாயிருந்தான்

லூக்கா 23:52 அவன் பிலாத்துவினிடத்தில் போய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டு,

லூக்கா 23:53 அதை இறக்கி, மெல்லிய துப்பட்டியிலே சுற்றி, கன்மலையில் வெட்டப்பட்டதுமாய் ஒருக்காலும் ஒருவனும் வைக்கப்படாததுமாயிருந்த ஒரு கல்லறையிலே வைத்தான்

லூக்கா 23:54 அந்த நாள் ஆயத்த நாளாயிருந்தது; ஓய்வுநாளும் ஆரம்பமாயிற்று.

லூக்கா 23:55 கலிலேயாவிலிருந்து அவருடனேகூட வந்திருந்த ஸ்திரீகளும் பின்சென்று, கல்லறையையும் அவருடைய சரீரம் வைக்கப்பட்ட விதத்தையும் பார்த்து

லூக்கா – தொகுப்புரை

23 அதிகாரம்

லூக்கா 23:56 திரும்பிப்போய், கந்தவர்க்கங் களையும் பரிமள தைலங்களையும் ஆயத்தம் பண்ணி கற்பனையின்படியே ஓய்வுநாளில் ஓய்ந்திருந்தார்கள்

"யோசேப்பு" - இயேசு கிறிஸ்துவின் இரண்டு இரகசிய சீஷர்கள் அவரை அடக்கம் பண்ணினார்கள் நிக்கொதேமுவும் யோசேப்புமே அந்தச் சீஷர்கள் (யோவான் 3:1-9; யோவான் 7:50, யோவான் 19:38-39)

"யூதர்களுடைய ஆலோசனைக்கும் செய்கைக்கும் சம்மதியாதவனுமாயிருந்தான்" - யோசேப்பும், நிக்கொதேமுவும் இயேசுவிற்காகப் பேசினார்கள் (யோவான் 7:50) இருவரும் ஆலோசனைச் சங்கத்தின் அங்கத்தினர்கள் (லூக்கா 23:50, யோவான் 3:1,10) இயேசுவைக் கொலை செய்ய வேண்டுமென்று ஆலோசனைச் சங்கம் தீர்மானம் பண்ணியபோது இவர்கள் இருவரும் அந்தத் தீர்மானத்திற்குத் தங்களுடைய சம்மதத்தை வழங்கவில்லை

"தேவனுடைய ராஜ்யத்துக்குக் காத்திருந்தவன்" இஸ்ரவேல் தேசத்தில் இருந்த பக்திமான்கள் எல்லோருமே தேவனுடைய ராஜ்யத்திற்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள் (லூக்கா 2:25,38 லூக்கா 19:11, அப் 1:6-7)

கேள் (begged) - αἰτέω - aiteo - 154

வினைச்சொல் - கேள், வேண்டிக்கொள் விண்ணப்பம் பண்ணு (required) (லூக்கா 23:23) (desired) (லூக்கா 23:25)

"அதை இறக்கி, மெல்லிய துப்பட்டியிலே சுற்றி, கன்மலையில் வெட்டப்பட்டதுமாய் ஒருக்காலும் ஒருவனும் வைக்கப்படாததுமாயிருந்த ஒரு கல்லறையிலே வைத்தான்" - யோசேப்பு ஒரு ஐசுவரியவான் இவன் மூலமாக ஏசா 53:9 ஆவது வசனம் நிறைவேறுகிறது (மத் 27:57 மாற்கு 14:5 மாற்கு 15:46)

"அந்த நாள் ஆயத்தநாளாயிருந்தது" - பண்டிகையின் ஆயத்தநாள்

"ஓய்வுநாளும் ஆரம்பமாயிற்று" - இது வாரத்தின் ஓய்வுநாள் அல்ல பண்டிகையின் முதலாவது நாள் இது பிரதான ஓய்வுநாள் புளிப்பில்லா அப்பப்பண்டிகையின் முதலாவது ஓய்வுநாள் பிரதான ஓய்வுநாளாகும் நிசான் மாதம் 15 ஆம் தேதி இந்த ஓய்வுநாள் ஆசரிக்கப்படும். இந்த நாள் எந்தக் கிழமையில் வந்தாலும் அதை யூதர்கள் பிரதான ஓய்வுநாளாகவே ஆசரிப்பார்கள் இயேசு கிறிஸ்து கல்லறையில் மூன்று முழு இரவுகளும், மூன்று முழு பகல்களும் அடக்கம்பண்ணப்பட்டிருந்தார் (மத் 12:40

24 அதிகாரம்

VII. உயிர்த்தெழுந்த பின்பு இயேசுவின் ஊழியம்

1. உயிர்த்தெழுதலுக்கு கர்த்தருடைய தூதனின் சாட்சி - (மத் 28:1 மாற்கு 16:1; அப 1:1)

லூக்கா 24:1 வாரத்தின் முதலாம்நாள் அதிகாலையிலே தாங்கள் ஆயத்தம் பண்ணின சுகந்தவர்க்கங்களை அவர்கள் எடுத்துக்கொண்டு வேறு சில ஸ்திரீகளோடுங்கூடக் கல்லறையினிடத்தில் வந்தார்கள்.

லூக்கா 24:2 கல்லறையை அடைத்திருந்த கல் புரட்டித் தள்ளப்பட்டிருக்கிறதைக் கண்டு,

லூக்கா 24:3 உள்ளே பிரவேசித்து, கர்த்தராகிய இயேசுவின் சரீரத்தைக் காணாமல்,

லூக்கா 24:4 அதைக்குறித்து மிகுந்த கலக்கமடைந்திருக்கையில், பிரகாசமுள்ள வஸ்திரந்தரித்த இரண்டுபேர் அவர்கள் அருகே நின்றார்கள்.

லூக்கா 24:5 அந்த ஸ்திரீகள் பயப்பட்டு தலைகவிழ்ந்து தரையை நோக்கி நிற்கையில், அந்த இரண்டுபேரும் அவர்களை நோக்கி: உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன?

லூக்கா 24:6 அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார்.

லூக்கா 24:7 மனுஷகுமாரன் பாவிகளான மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படவும், சிலுவையில் அறையப்படவும், மூன்றாம்நாளில் எழுந்திருக்கவும் வேண்டுமென்பதாக அவர் கலிலேயாவிலிருந்த காலத்தில் உங்களுக்குச் சொன்னதை நினைவுகூருங்கள் என்றார்கள்.

லூக்கா 24:8 அப்பொழுது அவர்கள் அவருடைய வார்த்தைகளை நினைவுகூர்ந்து,

"வாரத்தின் முதலாம்நாள் அதிகாலையிலே" - வாரத்தின் முதலாம்நாள் என்பது சனிக்கிழமை மாலை சூரியன் அஸ்தமனமாகும் வேளையிலிருந்து ஞாயிற்றுக்கிழமை மாலை மறுபடியும் சூரியன் அஸ்தமனமாகும் வேளை வரையிலும் உள்ள 24 மணி நேரம் கொண்ட நாள். ஸ்திரீகள் ஞாயிற்றுக்கிழமை காலையில் கல்லறையினிடத்தில் வந்தார்கள். இயேசு கிறிஸ்து ஏற்கெனவே உயிர்த்தெழுந்து விட்டதைக் கண்டார்கள். இயேசு கிறிஸ்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்று நாட்களுக்குப் பிறகு உயிர்த்தெழுந்தார். அவருடைய சரீரம் கல்லறையில் இருந்தது. அவர் பாதாளத்திற்குச் சென்று சிறைப்பட்டிருந்த பரிசுத்தவான்களை விடுதலை பண்ணினார் (மத் 12:40; மத் 28:1; மாற்கு 16:1; யோவான் 20:1).

"கர்த்தராகிய இயேசு" - இந்த வாக்கியம் புதிய ஏற்பாட்டில் 33 தடவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதுவே அவற்றின் முதலாவது பயன்பாடாகும். இந்த வாக்கியம் வெளி 22:20 ஆவது வசனத்தில் கடைசித் தடவையாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. "கர்த்தராகிய இயேசுவே, வாரும்"

"பிரகாசமுள்ள வஸ்திரந்தரித்த இரண்டுபேர் அவர்கள் அருகே நின்றார்கள்" - மத்தேயுவும், மாற்குவும் ஒரே ஒரு தூதனைப் பற்றி மட்டுமே குறிப்பிடுகிறார்கள். ஒருவேளை ஒரு தூதன் கல்லறையிலும், மற்றொரு தூதன் கல்லறையை மூடியிருந்த கல்லின் அருகிலும் இருந்திருக்கலாம். லூக்கா கல்லறை நிகழ்ச்சியைத் தெளிவாக விளக்குகிறார்.

"உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன?" - இயேசு கிறிஸ்து சரீரப்பிரகாரமாக மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து விட்டார். அவர் நித்திய காலமாக ஜீவிக்கிறார் (லூக்கா 24:5-51; 1கொரி 15:1-23; ரோமர் 8:34; எபே 1:20-23; எபி 7:8,25; வெளி 1:18).

24 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 53

"மனுஷகுமாரன் பாவிகளான மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படவும் சிலுவையில் அறையப்படவும் மூன்றாம்நாளில் எழுந்திருக்கவும் வேண்டும்" (லூக்கா 24:7) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று

2. உயிர்த்தெழுதலுக்கு ஸ்திரீகளின் சாட்சி - (மத் 28:8; மாற்கு 16:8, யோவான் 20:1)

லூக்கா 24:9 கல்லறையை விட்டுத் திரும்பிப் போய் இந்தச் சங்கதிகளெல்லா வற்றையும் பதினொருவருக்கும் மற்றெல்லாருக்கும் அறிவித்தார்கள்

லூக்கா 24:10 இவைகளை அப்போஸ்தலருக்குச் சொன்னவர்கள் மகதலேனா மரியாளும் யோவன்னாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும் இவர்களுடனேகூட இருந்த மற்ற ஸ்திரீகளுமே.

லூக்கா 24:11 இவர்களுடைய வார்த்தைகள் அவர்களுக்கு வீண்பேச்சாகத் தோன்றினதினால் அவர்கள் இவர்களை நம்பவில்லை

"பதினொருவருக்கும் மற்றெல்லாருக்கும்" சீஷர்களுக்குப் பொதுவாகக் கூடும் இடம் ஒன்று இருந்திருக்க வேண்டும் ஒருவேளை அவர்கள் கடைசி இராப்போஜனப்பந்தியிருந்த இடமாக இருக்கலாம் இந்த மேலறையில் அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் அருளமாரிக்காகக் காத்திருந்தார்கள் (லூக்கா 22:12, அப் 1:13)

"மகதலேனா மரியாள்" - வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் ஆறு மரியாள்களில் ஒரு நபர் இயேசு கிறிஸ்து இவளைக் குணப்படுத்தினார் (மாற்கு 16:9, லூக்கா 8:2-3) இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்தபோது அவள் அங்கு இருந்தாள் (மத் 27:56; மாற்கு 15:40, யோவான் 19:25), கல்லறையிலும் அவள் இருந்ததாக வாசிக்கிறோம் (மத் 27:61, மத் 28:1-7; மாற்கு 15:47; மாற்கு 16:1-7 லூக்கா 23:49,55; லூக்கா 24:1-7 யோவான் 20:1,11-13) இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு அவரை முதலாவது பார்த்தவளும் இந்த மகதலேனா மரியாளே (மாற்கு 16:9; யோவான் 20:14-18

"யோவன்னாள்" - கூசாவின் மனைவி. இவன் ஏரோதின் காரியக்காரன் இயேசுவின் சீஷர்களில் ஒருவன் (லூக்கா 8:3 லூக்கா 24:10)

"யாக்கோபின் தாயாகிய மரியாள்" - வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் ஆறு மரியாள்களில் ஒரு நபர் இவள் கிலெயோப்பாவின் மனைவி. இயேசுவின் தாயாகிய மரியாளின் சகோதரி. (மத் 27:56 மாற்கு 15:40 யோவான் 19:25 இவள் மற்ற ஸ்திரீகளோடு கல்லறையில் இருந்தாள் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு இவளும் ஒரு சாட்சி (மத் 27:61 மத் 28:1 மாற்கு 15:47; மாற்கு 16:1, லூக்கா 24:10

"யாக்கோபு" - அல்பேயுவின் குமாரன் இயேசுவின் உறவினன் யூதாசின் (யூதாஸ்காரியோத்து அல்ல) சகோதரன் மத்தேயு. செலோத்தே என்னப்பட்ட சீமோன் ஆகியோரின் சகோதரன் லூக்கா 6:16 பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் ஒருவன் (மத் 10:3; மாற்கு 3:18; லூக்கா 6:15, அப் 1:13) இந்த யாக்கோபும், மத் 13:55 மாற்கு 6:3 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் யாக்கோபும் வெவ்வேறு நபர்கள் இந்த யாக்கோபு இயேசுவின் கூடப்பிறந்த சகோதரன் லூக்கா 8:19 இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபும், இந்த யாக்கோபும் அப் 1:13-14 ஆகிய வசனங்களில் வேறுபடுத்திக் காண்பிக்கப்பட்டிருக்கிறார்கள்

வீண்பேச்சு (idle tales) - λῆρος leeros 3026

24 அதிகாரம்

ஆண்பால் பெயர்ச்சொல் - வீண்பேச்சு (silly nonsense) - இது ஒரு மருத்துவச் சொல் ஆகும். குடிவெறியில் உளறுதல் காய்ச்சல் அதிகமாகும்போது அனத்துதல் என்று பொருள்படும். இந்த வசனத்தில் மட்டுமே இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

"அவர்கள் இவர்களை நம்பவில்லை" - இவர்கள் கூறியது வீண்பேச்சாகத் தோன்றியது. வீண்பேச்சை யாரும் நம்புவதில்லை.

3. வெறுமையான கல்லறை - லூக் 24:14

லூக்கா 24:12 பேதுருவோ எழுந்திருந்து, கல்லறையினிடத்திற்கு ஓடி, அதற்குள்ளே குனிந்துபார்க்கையில், சீலைகளைத் தனிப்பட வைத்திருக்கக்கண்டு, சம்பவித்ததைக் குறித்துத் தன்னில் ஆச்சரியப்பட்டுக்கொண்டுபோனான்.

"பேதுருவோ எழுந்திருந்து கல்லறையினிடத்திற்கு ஓடி, அதற்குள்ளே குனிந்துபார்க்கையில், சீலைகளைத் தனிப்பட வைத்திருக்கக்கண்டு, சம்பவித்ததைக் குறித்துத் தன்னில் ஆச்சரியப்பட்டுக்கொண்டுபோனான்" - பேதுரு ஆறு காரியங்கள் செய்ததாக நாம் இந்த வசனத்தில் வாசிக்கிறோம். அவையாவன

1 எழுந்திருந்தான்

2 ஓடினான்

3 குனிந்து பார்த்தான்

4. சீலைகளைத் தனிப்பட வைத்திருக்கக் கண்டான்

5 திரும்பிப் போனான்

6. ஆச்சரியப்பட்டான்

"சீலைகளைத் தனிப்பட வைத்திருக்கக் கண்டான்" - இயேசு கிறிஸ்துவின் சரீரத்தை சீஷர்கள் திருடி விட்டதாக யூதர்கள் பொய்குற்றம் சுமத்தினார்கள். சரீரத்தை யாரும் திருடவில்லை. அவர் உயிர்த்தெழுந்தார் என்பதற்கு இந்த வசனம் ஒரு முக்கியமான சாட்சியாகும் (மத் 28:12-15)

4. இயேசு இரண்டு சீஷர்களுக்கு தரிசனம் கொடுக்கிறார்

(1) எம்மாவு என்னும் கிராமத்திற்குப் பிரயாணம்

லூக்கா 24:13 அன்றையத்தினமே அவர்களில் இரண்டுபேர் எருசலேமுக்கு ஏழு அல்லது எட்டுமைல் தூரமான எம்மாவு என்னும் கிராமத்துக்குப் போனார்கள்.

லூக்கா 24:14 போகையில் இந்த வர்த்தமானங்கள் யாவையுங்குறித்து அவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள்.

"அன்றையத்தினமே அவர்களில் இரண்டுபேர் எருசலேமுக்கு ஏழு அல்லது எட்டுமைல் தூரமான எம்மாவு என்னும் கிராமத்துக்குப் போனார்கள்" - ஒருவன் கிலெயோப்பா. சின்ன யாக்கோபின் தந்தை. மரியாளின் சகோதரியாகிய மரியாளின் கணவன் (லூக்கா 24:10,18; யோவான் 19:25) இவன் கூடப்போனது யாரென்று தெரியவில்லை. திருச்சபை வரலாற்று ஆசிரியர்கள் லூக்கா அவன் கூடப் போனதாகக் கூறுகிறார்கள். லூக்கா எழுபதுபேரில் ஒருவர் (லூக்கா 10) இந்தச் சுவிசேஷத்தின் ஆசிரியர் லூக்கா ஆகையினால் லூக்கா தன் பெயரை இந்த வசனத்தில் குறிப்பிடவில்லை.

"எம்மாவு" (Emmaus) - யோசபஸ் என்னும் திருச்சபை வரலாற்று ஆசிரியர் எம்மாவுவைப் பற்றி எழுதும்போது அது எருசலேமிலிருந்து 7 அல்லது 8 மைல் தூரத்தில் உள்ளதாக உறுதிபண்ணுகிறார். எம்மாவு எந்த இடத்தில் உள்ளது என்று குறிப்பிடப்படவில்லை. எருசலேமிற்குத் தென்மேற்கில் இந்தக் கிராமம் இருக்கலாம் என்று சிலர் கருதுகிறார்கள்.

24 அதிகாரம்

(2) இயேசு தரிசனம் தந்து சீஷர்களிடம் கேள்வி கேட்கிறார்

லூக்கா 24:15 இப்படி அவர்கள் பேசி, சம்பாஷித்துக் கொண்டிருக்கையில் இயேசு தாமே சேர்ந்து அவர்களுடனேகூட நடந்து போனார்.

லூக்கா 24:16 ஆனாலும் அவரை அறியாதபடிக்கு அவர்களுடைய கண்கள் மறைக்கப்பட்டிருந்தது.

லூக்கா 24:17 அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நீங்கள் துக்கமுகமுள்ளவர்களாய் வழிநடந்து ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ளுகிற காரியங்கள் என்னவென்று கேட்டார்.

"மறைக்கப்பட்டிருந்தது" - இந்த வார்த்தைக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்கச் சொல் "க்ராதேயோ" (krateo) என்பதாகும் (to hold in check, restrain; to retain, keep, lay hold upon). இயேசு கிறிஸ்துவை அறியாதபடிக்கு அவர்களுடைய கண்கள் மறைக்கப்பட்டிருந்தது. தம்முடைய தோற்றத்தில் அவர் ஒருவேளை மாற்றம் அடைந்திருக்கலாம். அல்லது அவருக்கு வேறு ஏதாவது அற்புதம் நடைபெற்றிருக்கலாம். இந்த வசனத்திலிருந்து நாம் ஒரு காரியத்தைத் தெளிவாகக் காண்கிறோம். இயேசு கிறிஸ்துவால் தோன்றவும் முடியும், மறையவும் முடியும். தம்மை அறிவிக்கவும் முடியும், மறைக்கவும் முடியும். பலவேறு வழிகளில் தோன்றுமாறு தம்மை மாற்றவும் அவரால் முடியும். (மாற்கு 16:9,12; லூக்கா 24:16,31,36-43; யோவான் 20:14-16,19,26; யோவான் 21:4; வெளி 1:12-17; வெளி 10:1-3) அவர்களுடைய கண்கள் மறைக்கப்பட்டிருந்ததாக லூக்கா 24:16,31; யோவான் 20:14-15 ஆகிய வசனங்களில் வாசிக்கிறோம். மற்ற வசனங்களில் வாசிக்கும்போது அவர் தமது தோற்றத்தை மாற்றினார் எனவும், அவர் சாதாரணமாகத் தோன்றும் பிரகாரமாகத் தோன்றவில்லை என்றும் தெரியவருகிறது. ஆகையினால் அவர்கள் அவரை அறிய முடியவில்லை.

மறைக்கப்பட்டிருந்தது (holden)

κρατέω - krateoo - 2902

வினைச்சொல் - பிடி, தழுவு, கைக்கொள், மறைக்கப்பட்டிரு, முன்னிபாதிரு, பற்றிக்கொள், ஏந்திக்கொள்

"நீங்கள் துக்கமுகமுள்ளவர்களாய் வழிநடந்து ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ளுகிற காரியங்கள் என்ன" என்று இயேசு அவ்விருவரிடமும் கேட்கிறார். அதற்கு அவர்களில் ஒருவனாகிய கிலெயோப்பா என்பவன் பிரதியுத்தரமாக, இந்நாட்களில் எருசலேமிலே நடந்தவைகளை அறியாதபடிக்கு நீர் அந்நியராயிருக்கிறீரோ என்றான்.

சமீப நாட்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை அவர்கள் பேசிக்கொண்டு போனார்கள். இயேசு கிறிஸ்து அவர்கள் பேசுவதை அறிந்து கொள்ள விரும்பினார். தமக்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றி அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள விரும்பினார். அவர்கள் இயேசு கிறிஸ்துவிடம் அவரைப் பற்றி நடந்த காரியங்களை எல்லாம் கூறினார்கள். (லூக்கா 24:19-24) ஒருவர் உண்மையிலே அந்நியராக இருப்பார் என்றால் அவர்கள் கூறிய காரியம் அந்நியருக்குப் புரிந்திருப்பதற்கு வாய்ப்பில்லை.

(3) நிகழ்ச்சிகளின் வரலாறு

லூக்கா 24:18 அவர்களில் ஒருவனாகிய கிலெயோப்பா என்பவன் பிரதியுத்தரமாக: இந்நாட்களில் எருசலேமிலே நடந்தவைகளை அறியாதபடிக்கு நீர் அந்நியராயிருக்கிறீரோ என்றான்.

லூக்கா 24:19 அவர்: எவைகள் என்றார். அதற்கு அவர்கள்: நசரேயனாகிய இயேசுவைக் குறித்தவைகளே; அவர் தேவனுக்கு முன்பாகவும் ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செய்கையிலும் வாக்கிலும் வல்லமையுள்ள தீர்க்கதரிசியாயிருந்தார்.

லூக்கா 24:20 நம்முடைய பிரதான ஆசாரியரும் அதிகாரிகளும் அவரை மரண ஆக்கினைக்குட்படுத்தி, சிலுவையில் அறைந்தார்கள்.

24 அதிகாரம்

லூக்கா 24:21 அவரே இஸ்ரவேலை மீட்டி ரட்சிப்பவர் என்று நாங்கள் நம்பியிருந்தோம் இவைகள் சம்பவித்து இன்று மூன்று நாளாகிறது.

லூக்கா 24:22 ஆனாலும் எங்கள் கூட்டத்தைச் சேர்ந்த சில ஸ்திரீகள் அதிகாலமே கல்லறையினிடத்திற்குப் போய்,

லூக்கா 24:23 அவருடைய சரீரத்தைக் காணாமல், திரும்பிவந்து, அவர் உயிரோடிருக்கிறார் என்று சொன்ன தேவதூதரைத் தரிசித்தோம் என்று சொல்லி, எங்களைப் பிரமிக்கப் பண்ணினார்கள்.

லூக்கா 24:24 அப்பொழுது எங்களிலே சிலர் கல்லறையினிடத்திற்குப் போய் ஸ்திரீகள் சொன்னபடியே கண்டார்கள்; அவரையோ காணவில்லை என்றார்கள்.

"அவர் உயிரோடிருக்கிறார் என்று சொன்ன தேவதூதரைத் தரிசித்தோம்" இந்த நிகழ்ச்சிகள் அவர்களுக்குப் பிரமிப்பாக இருந்தது. நடைபெற்றவைகளை அவர்களால் நம்ப முடியவில்லை. வீண்பேச்சுகளைப்போல அவர்களுக்குத் தோன்றிற்று (லூக்கா 24:11). தேவதூதர்கள் உண்மையிலேயே தோன்றினார்கள். இயேசுவைத் தேடி கல்லறைக்குப் போனவர்கள் கல்லறை வெறுமையாய் இருந்ததைக் கண்டார்கள். இயேசுவை அவர்களால் காணமுடியவில்லை (லூக்கா 24:24).

(4) இயேசு அவர்களுடைய அவிசுவாசத்தைக் கடிந்து கொள்கிறார்

லூக்கா 24:25 அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே,

லூக்கா 24:26 கிறிஸ்து இவ்விதமாகப் பாடுபடவும், தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா என்று சொல்லி,

லூக்கா 24:27 மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக்குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்.

"விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே" - இதன் கிரேக்கச் சொல் "அநோதோஸ்" (anoeetos) (dull, foolish, slow of understanding, faith) ஞானமற்றவர்கள் (unwise) (ரோமர் 1:14); புத்தியில்லாதவர்கள் (fool) (லூக்கா 24:25) புத்தியில்லாத (foolish) (கலா 3:1,3; 1தீமோ 6:9; தீத்து 3:3)

புத்தியில்லாத (fool) - ἀνόητος - anoeetos - 453

பொருள் - புத்தியில்லாத, மூடமான, புத்தியீனமான, மதிகேடான

"தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும்" - எல்லா தீர்க்கதரிசனங்களையும் நாம் விசுவாசிக்க வேண்டும். தேவனுடைய மகிமையையும், தேவ ராஜ்யத்தின் மகத்துவத்தையும் யூதர்கள் விசுவாசித்தார்கள். புறஜாதியார் மத்தியில் இருக்கும் காரியங்கள் அவர்களை மேன்மைப்படுத்திற்று. ஆனால் யூதர்கள் மேசியாவின் தாழ்மையையும், பாடுகளையும் விசுவாசிக்கவில்லை. யூதர்களின் எதிர்பார்ப்புகளை இயேசு கிறிஸ்து நிறைவேற்றவில்லை. ஆகையினால் அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றார்கள்.

"கிறிஸ்து இவ்விதமாகப் பாடுபடவும் தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா" இயேசு கிறிஸ்து பாடுபடவும் வேண்டும். இயேசுகிறிஸ்துவைப் பற்றி பல தீர்க்கதரிசனங்கள் கூறப்பட்டுள்ளன. அவருடைய மகிமை, அவருடைய வல்லமை ஆகியவற்றைப் பற்றி பல தீர்க்கதரிசனங்கள் உள்ளன. அதேசமயத்தில் மேசியா பாடுபடவும் வேண்டும் என்றும் தீர்க்கதரிசனம் கூறுகிறது. வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் முதலாவது தீர்க்கதரிசனம் மேசியாவின் பாடுகளையும், சாத்தானோடு அவர் செய்ய

24 அதிகாரம்

வேண்டிய போராட்டங்களையும் பற்றிக் குறிப்பிடுகிறது. (ஆதி 3:15) இதுதவிர சங் 22; ஏசா 53; யாத் 12 ஆகிய அதிகாரங்கள் மேசியாவின் பாடுகளை விளக்குகின்றன. மேசியாவின் பாடுகளை விளக்கும் வசனபகுதிகளும் பல உள்ளன. ஏசா 50:4-7; ஏசா 52:14, தானி 9:26 சக 13:6-7) ஆபேலின் காலத்திலிருந்து பலிகளும் காணிக்கைகளும் பாடுகளுக்கு அடையாளமாகும். மோசே முதல் எல்லா தீர்க்கதரிசிகள் வரையிலும் மேசியாவின் பாடுகளைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து பாடுபட்ட பின்பு அவர் தமது மகிமையில் பிரவேசிப்பார். லூக்கா 24:25-27

(5) இயேசு அவர்களுக்கு தம்மை வெளிப்படுத்துகிறார்

லூக்கா 24:28 அத்தருணத்தில் தாங்கள் போகிற கிராமத்துக்குச் சமீபமானார்கள். அப்பொழுது அவர் அப்புறம் போகிறவர் போலக் காண்பித்தார்.

லூக்கா 24:29 அவர்கள் அவரை நோக்கி: நீர் எங்களுடனே தங்கியிரும், சாயங்காலமாயிற்று, பொழுதும் போயிற்று, என்று அவரை வருந்திக் கேட்டுக் கொண்டார்கள். அப்பொழுது அவர் அவர்களுடனே தங்கும்படி உள்ளே போனார்.

லூக்கா 24:30 அவர்களோடே அவர் பந்தியிருக்கையில், அவர் அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார்.

லூக்கா 24:31 அப்பொழுது அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு, அவரை அறிந்தார்கள். உடனே அவர் அவர்களுக்கு மறைந்துபோனார்.

லூக்கா 24:32 அப்பொழுது அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி: வழியிலே அவர் நம்முடனே பேசி, வேத வாக்கியங்களை நமக்கு விளங்கக் காட்டினபொழுது, நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்துவிட்டு எரியவில்லையா என்று சொல்லிக்கொண்டு.

"அவர் அப்புறம் போகிறவர் போலக் காண்பித்தார்" - இயேசுகிறிஸ்து அவர்களை ஏமாற்றவில்லை. இரண்டு சீஷர்களும் தாங்கள் போகவேண்டிய ஊருக்குச் சமீபமாய் போனார்கள். தம்மை அவர்கள் வீடுகளில் ஏற்றுக் கொள்ளுமாறு இயேசு கிறிஸ்து அவர்களைப் பலவந்தம் பண்ணவில்லை. ஆனால் அவர்கள் அவரை நோக்கி, நீர் எங்களுடனே தங்கியிரும், சாயங்காலமாயிற்று, பொழுதும் போயிற்று என்று அவரை வருந்திக் கேட்டுக்கொண்டார்கள். இயேசுகிறிஸ்து அவர்களுடைய வேண்டுதலை ஏற்றுக் கொண்டு, அவர்களோடு தங்குவதற்காக அந்த ஊருக்குள்ளே போனார்.

வருந்திக்கேட்டுக்கொள் (constrained) - παραβιάζομαι - parabiazomai - 3849

வினைச்சொல்

வருந்திக்கேட்டுக்கொள் (to constrain one by entreaties; to compel by force) இந்தக் கிரேக்கச் சொல் இந்த வசனத்திலும் அப் 16:15 ஆகிய வசனத்திலும் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

"அவர்களோடே அவர் பந்தியிருக்கையில் அவர் அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து அதைப்பிட்டு, அவர்களுக்குக் கொடுத்தார்" கர்த்தருடைய பந்தியில் இயேசு கிறிஸ்து செய்த காரியங்களைப் போல உள்ளது. (மத் 26:26) அவர்களுடைய கண்களைத் திறப்பதற்காகவும், தாம் அவர்களுக்கு அந்நியரல்ல என்பதை நிரூபிப்பதற்காகவும் இயேசு கிறிஸ்து இவ்வாறு செய்திருக்கலாம்.

24 அதிகாரம்

"உடனே அவர் அவர்களுக்கு மறைந்துபோனார்" - இயேசு கிறிஸ்துவை அவர்களால் காணமுடியவில்லை ஒரு தரிசனம் கண்டதாகத்தான் அவர்களால கூறமுடியும் தேவதூதனைக் கண்டதுபோலக் கண்டார்கள் (லூக்கா 24:23) ஆனால இயேசு கிறிஸ்து அவர்களோடு இருந்தது தரிசனமல்ல. உண்மை. இயேசு கிறிஸ்து அவர்களோடு பல மைல்கள் நடந்துபோனார் அவர்களிடம் கேள்விகளைக் கேட்டார் வேதவசனங்களை அவர்களுக்கு விளக்கிக் கூறினார் தங்களோடு தங்க வேண்டும் என்று கேட்டதறகு அவர்களுக்குச் சம்மதம் தெரிவித்தார் அத்துடன் அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து. பிட்டு. அவர்களுக்குக் கொடுத்தார் ஆகையினால இது தரிசனம அல்ல உண்மையிலேயே நடைபெற்ற காரியம்

(6) அப்போஸ்தலர்களிடம் அவர்களுடைய அறிவிப்பு

லூக்கா 24:33 அந்நேரமே எழுந்திருந்து எருசலேமுக்குத் திரும்பிப்போய பதினொருவரும் அவர்களோடிருந் தவர்களும் கூடியிருக்கக் கண்டு.

லூக்கா 24:34 கர்த்தர் மெய்யாகவே உயிர்த்தெழுந்து சீமோனுக்குத் தரிசனமானார் என்று அவர்கள சொல்லக் கேட்டு.

லூக்கா 24:35 வழியில நடந்தவைகளையும். அவர் அப்பத்தைப பிட்கையில தாங்கள அவரை அறிந்துகொண்டதையும் விவரித்துச சொன்னார்கள

"அந்நேரமே எழுந்திருந்து எருசலேமுக்குத் திரும்பிப்போனார்கள்" அவர்கள எம்மாவு ஊருக்கு என்ன காரியமாகப போனார்கள என்று தெரியவில்லை. அதையெல்லாம் தள்ளிவைத்து விட்டு. உடனே எருசலேமிற்குத் திரும்பிப் போகிறார்கள தாங்கள் இயேசு கிறிஸ்துவைக் கண்டதையும், அவர் தங்களுக்குக் கூறியதையும் மற்றவர்களுக்கு உடனே அறிவிப்பதற்காக எருசலேமிற்குத் திரும்பிப் போகிறார்கள்

"அவர்களோடிருந்தவர்களும்" - எல்லா விசுவாசிகளும். அவர்கள் எல்லோரும் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்ததைப் பற்றி கலந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள் ஒரு முழு நாளும ஆயிற்று. கிறிஸ்துவும். தேவதூதர்களும் மரியாளுக்கும் மற்ற ஸ்திரீகளுக்கும, பேதுருவிற்கும் தரிசனமானார்கள் (லூக்கா 24.34 கல்லறையைத் தேடிப்பார்த்தார்கள் இயேசுவை அங்கே காணவில்லை. இந்தச் செய்தி எருசலேம முழுவதும் வேகமாகப பரவிற்று. வாரத்தின் முதலாவது நாளில் விசுவாசிகளெல்லாம ஓரிடத்தில் கூடியிருக்கிறார்கள் அவர்கள் தொடர்ந்து பல காரியங்களைப பேசிக் கொண்டிருக்கிறார்கள் வாரத்தின் இரண்டாம நாளில இரவுப பொழுதுமாயிற்று அப்படிப்பட்ட சமயத்தில எம்மாவு ஊரிலிருந்து ஒரு ஆச்சரியமான செய்தியோடு இவ்விருவரும் அங்கு வருகிறார்கள அவர்கள கூறியதைக் கேட்ட பின்பு. அன்றிரவும அவர்களால தூங்கியிருக்க முடியாது

"கர்த்தர் மெய்யாகவே உயிர்த்தெழுந்து சீமோனுக்குத் தரிசனமானார் என்று அவர்கள சொல்லக் கேட்டார்கள" - சீஷர்களும விசுவாசிகளும கூடியிருந்து ஒவ்வொரு விஷயமாகப பேசிக்கொண்டிருக்கிறார்கள அவர்கள கடைசியாகப பேசின காரியம். கர்த்தர் மெய்யாகவே உயிர்த்தெழுந்து சீமோனுக்குத் தரிசனமான நிகழ்ச்சியாகும். கர்த்தர் இப்போது பேதுருவை மன்னித்து விட்டார் பேதுரு மனந்திரும்பி விட்டான சகோதரரைப பலப்படுத்துவதற்கு ஆயத்தமாக இருக்கிறான (லூக்கா 22.32)

"வழியில நடந்தவைகளையும், அவர் அப்பத்தைப பிட்கையில தாங்கள் அவரை அறிந்துகொண்டதையும் விவரித்துச் சொன்னார்கள" எம்மாவு ஊரிலிருந்து வந்த இருவரும் தங்கள அனுபவங்களைக் கூறினார்கள அவர்கள இவைகளைக் குறித்து பேசிக்கொண்டிருக்கையில இயேசு திடீரென்று அவர்கள நடுவிலே தோன்றுகிறார் (லூக்கா 24.36 இயேசு திடீரென்று வந்ததினால சீஷர்கள் பயந்துவிட்டார்கள அவரை ஏதோ ஒரு ஆவி என்று நினைத்தார்கள் (லூக்கா 24.37

24 அதிகாரம்

"உடனே அவர் அவர்களுக்கு மறைந்துபோனார்" - இயேசு கிறிஸ்துவை அவர்களால் காணமுடியவில்லை ஒரு தரிசனம் கண்டதாகத்தான் அவர்களால் கூறமுடியும் தேவதூதனைக் கண்டதுபோலக் கண்டார்கள் (லூக்கா 24:24) ஆனால் இயேசு கிறிஸ்து அவர்களோடு இருந்தது தரிசனமல்ல. உண்மை. இயேசு கிறிஸ்து அவர்களோடு பல மைல்கள் நடந்துபோனார் அவர்களிடம் கேள்விகளைக் கேட்டார் வேதவசனங்களை அவர்களுக்கு விளக்கிக் கூறினார் தங்களோடு தங்க வேண்டும் என்று கேட்டதற்கு அவர்களுக்குச் சம்மதம் தெரிவித்தார் அத்துடன் அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து. பிட்டு. அவர்களுக்குக் கொடுத்தார் ஆகையினால் இது தரிசனம் அல்ல உண்மையிலேயே நடைபெற்ற காரியம்

(6) அப்போஸ்தலர்களிடம் அவர்களுடைய அறிவிப்பு

லூக்கா 24:33 அந்நேரமே எழுந்திருந்து எருசலேமுக்குத் திரும்பிப்போய் பதினொருவரும் அவர்களோடிருந் தவர்களும் கூடியிருக்கக் கண்டு.

லூக்கா 24:34 கர்த்தர் மெய்யாகவே உயிர்த்தெழுந்து சீமோனுக்குத் தரிசனமானார் என்று அவர்கள் சொல்லக் கேட்டு.

லூக்கா 24:35 வழியில் நடந்தவைகளையும். அவர் அப்பத்தைப் பிட்கையில் தாங்கள் அவரை அறிந்துகொண்டதையும் விவரித்துச் சொன்னார்கள்

"அந்நேரமே எழுந்திருந்து எருசலேமுக்குத் திரும்பிப்போனார்கள்" அவர்கள் எம்மாவு ஊருக்கு என்ன காரியமாகப் போனார்கள் என்று தெரியவில்லை. அதையெல்லாம் தள்ளிவைத்து விட்டு. உடனே எருசலேமிற்குத் திரும்பிப் போகிறார்கள் தாங்கள் இயேசு கிறிஸ்துவைக் கண்டதையும், அவர் தங்களுக்குக் கூறியதையும் மற்றவர்களுக்கு உடனே அறிவிப்பதற்காக எருசலேமிற்குத் திரும்பிப் போகிறார்கள்

5. இயேசு பத்து பேருக்கு தரிசனம் தருகிறார் - தோமா அங்கில்லை - (யோவான் 20:19)

லூக்கா 24:36 இவைகளைக்குறித்து அவர்கள் பேசிக்கொண்டிருக்கையில், இயேசு தாமே அவர்கள் நடுவிலே நின்று. உங்களுக்குச் சமாதானம் என்றார்

லூக்கா 24:37 அவர்கள் கலங்கி. பயந்து ஒரு ஆவியைக் காண்கிறதாக நினைத்தார்கள்

(7) இயேசு கிறிஸ்துவின் சரீர உயிர்த்தெழுதலுக்கு சான்று - (யோவான் 21:14

லூக்கா 24:38 அவர் அவர்களை நோக்கி: நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள் உங்கள் இருதயங்களில் சந்தேகங்கள் எழும்புகிறதென்ன?

லூக்கா 24:39 நான்தான் என்று அறியும்படி, என் கைகளையும் என் கால்களையும் பாருங்கள், என்னைத் தொட்டுப்பாருங்கள் நீங்கள் காண்கிறபடி, எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறதுபோல ஒரு ஆவிக்கு இராதே என்று சொல்லி.

லூக்கா 24:40 தம்முடைய கைகளையும் கால்களையும் அவர்களுக்குக் காண்பித்தார்

லூக்கா 24:41 ஆனாலும் சந்தோஷத்தினால் அவர்கள் இன்னும் விசுவாசியாமல் ஆச்சரியப்படுகையில். புசிக்கிறதற்கு ஏதாகிலும் இங்கே உண்டா என்று அவர்களிடத்தில் கேட்டார்

லூக்கா 24:42 அப்பொழுது பொரித்த மீன்கண்டத்தையும் தேன்கூட்டுத் துணிக்கையையும் அவருக்குக் கொடுத்தார்கள்

லூக்கா 24:43 அவைகளை அவர் வாங்கி அவர்களுக்கு முன்பாகப் புசித்து

லூக்கா – தொகுப்புரை

24 அதிகாரம்

லூக்கா 24:44 அவர்களை நோக்கி: மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவை எல்லாம் நிறைவேறவேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக்கொண்டுவந்த விசேஷங்கள் இவைகளே என்றார்

லூக்கா 24:45 அப்பொழுது வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளும் படி அவர்களுடைய மனதை அவர் திறந்து அவர்களை நோக்கி,

"நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள்; உங்கள் இருதயங்களில் சந்தேகங்கள் எழும்புகிறதென்ன?" - இயேசு கிறிஸ்து அவர்களோடு பல வருஷங்களாக கூடவே இருந்திருக்கிறார் அவர் ஒரு ஆவியல்ல அவருக்கு மானிட சரீரம் உள்ளது. எலும்பும் சதையும் அவருடைய சரீரத்தில் இருக்கிறது. அவருடைய ஆவியும் ஆத்துமாவும் மரிக்கவில்லை சரீரம் மாத்திரமே மரித்திருக்கிறது. ஆகையினால் சரீரம் மாத்திரமே உயிர்த்தெழும். (யாக 2:26 சங் 16:10, 1கொரி 15) உள்ளான மனுஷன் நித்தியமானவன் (1பேதுரு 3:4) மனுஷன் பாவம் செய்யும்போது அவனுடைய ஆத்துமா தேவனிடத்திலிருந்து பிரிக்கப்படுகிறது. (ஏசா 59:2, எபே 2:1-9, 1தீமோ 5:6)

இயேசு கிறிஸ்துவின் சரீர உயிர்த்தெழுதலுக்குச் சான்றுகள்

1 என் கைகளையும் என் கால்களையும் பாருங்கள் (லூக்கா 24:39)

2 இது நான்தான். வேறு நபரல்ல (லூக்கா 24:39)

3 என்னைத் தொட்டுப்பாருங்கள் (லூக்கா 24:39)

4 நீங்கள் காண்கிறபடி, எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறது (லூக்கா 24:39)

5 தம்முடைய கைகளையும் கால்களையும் அவர்களுக்குக் காண்பித்தார் (லூக்கா 24:40; யோவான் 20:20

6 பொரித்த மீன்கண்டத்தையும் தேன்கூட்டுத் துணிக்கைகளையும் அவர் வாங்கி அவர்களுக்கு முன்பாகப் புசித்தார் (லூக்கா 24:41-43)

7 அவர் உயிர்த்தெழுந்தார் அவருடைய சரீரம் உயிர்த்தெழுந்தது. அவருடைய ஆத்துமாவும், ஆவியும் மரிக்கவில்லை ஆகையினால் அவை உயிர்த்தெழாது இயேசு கிறிஸ்துவின் ஆவியும் ஆத்துமாவும் பாதாளத்திற்குச் சென்று சாத்தானால் சிறைப் பிடிக்கப்பட்டவர்களை விடுதலையாக்கினார் (சங் 16:10 லூக்கா 23:43; எபே 4:8-10 1பேதுரு 3:9; எபி 2:14-15) அவருடைய சரீரம் மட்டுமே மரித்தது. (யாக் 2:26) ஆகையினால் அவருடைய சரீரம் மட்டுமே உயிர்த்தெழும் (லூக்கா 24:39; சக 13:6; அப 1:11

8 அவர்கள் அவர் பாதங்களைத் தழுவினார்கள் (மத் 28:9, லூக்கா 24:39-40)

9 அவர்கள் அவரைக் கண்டார்கள் (மத் 28:17; யோவான் 20:19-20)

10 இயேசு கிறிஸ்துவின் சரீரத்தை அவர்களால் காணமுடியவில்லை (லூக்கா 24:3,23) ஏனென்றால் அவருடைய சரீரம் உயிர்த்தெழுந்து விட்டது (லூக்கா 24:39-43)

11 உயிரோடு இருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? (லூக்கா 24:5-6; யாக் 2:26)

12 இயேசு கிறிஸ்து தாமே சேர்ந்து அவர்களுடனேகூட நடந்துபோனார் அவர்களுக்கு அப்பம் பிட்டுக் கொடுத்தார் அவர்கள் அவரை அறிந்தார்கள் (லூக்கா 24:15,30-31

13 அவர் உயிரோடிருக்கிறார் என்று தேவதூதர்கள் கூறினார்கள் (லூக்கா 24:23; மத் 28:6-7, மாற்கு 16:6)

24 அதிகாரம்

14 இயேசு கிறிஸ்து தாமே அவர்கள் நடுவிலே நின்றார் (லூக்கா 24:36 யோவான் 20:19) அவர்கள் இயேசுவை ஆவி என்று நினைத்தார்கள் (லூக்கா 24:37) தாம் ஒரு ஆவியல்ல என்று இயேசு சீஷர்களிடத்தில் கூறினார். அவர்களோடு பல வருஷங்களாக கூட இருந்த தமது சரீரமே அது என்பதை உறுதிபண்ணினார் (லூக்கா 24:39-43)

15 எழுதியிருக்கிறபடி கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம்நாளில் மரித்தோரிலிருந் தெழுந்திருக்கவும் வேண்டியதா யிருந்தது. (லூக்கா 24:46) சிலுவையில் எது அறையப்பட்டதோ அது உயிர்த்தெழுந்தது.

16 தம்முடைய கைகளை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்தார். அவர்களை ஆசீர்வதிக்கையில் அவர்களை விட்டுப் பிரிந்து பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார் (லூக்கா 24:50-51)

17 கர்த்தரை கல்லறையிலிருந்து எடுத்துக் கொண்டுபோய்விட்டார்கள் என்று மகதலேனா மரியாள் கூறினாள். அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழவேண்டும் என்னும் வேதவாக்கியத்தை அவர்கள் இன்னும் அறிந்து கொள்ளவில்லை (யோவான் 20:2,9) காணாமல்போனதாக கூறப்பட்ட இயேசு கிறிஸ்துவின் சரீரத்தை பன்னிரெண்டு தடவைகளுக்கு மேலாகக் கண்டார்கள் (யோவான் 21:14) இயேசுவின் சரீரத்தை யாரும் எடுத்துக் கொண்டுபோய்விடவில்லை. இயேசு கிறிஸ்துவின் சரீரம் உயிர்த்தெழுந்தது. அவர் இன்றும் பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார் (மாற்கு 16:19 அப் 2:33 ரோமர் 8:34, எபி 1:3, எபி 12:2)

18 அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே என் விரலையிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன் என்று தோமா கூறினான். எட்டு நாட்களுக்குப் பின்பு, இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்பதை தெரிந்து கொள்ளும் வாய்ப்பு தோமாவிற்குக் கிடைத்தது. (யோவான் 20:25-29 லூக்கா 24:37-43)

19 எல்லா உயிர்த்தெழுதல்களிலும் சரீரங்கள் மறுபடியும் ஜீவனைப் பெறும். உயிர்த்தெழுதலுக்கும் ஆத்துமாக்களுக்கும் சம்மந்தமில்லை (1இராஜா 17:17-24 2இராஜா 4:18-37 2இராஜா 13:21 யோவான் 11) கிறிஸ்துவின் சரீரம் உயிர்த்தெழ வேண்டியதில்லை என்று சிலர் கூறுகிறார்கள் ஆனால் அது துர்உபதேசம். இயேசுவின் சரீரம் உயிர்த்தெழுந்தது என்று வேதவசனங்கள் கூறுகின்றன (அப் 2:31; அப் 4:33; ரோமர் 1:4, 1பேதுரு 3:21)

20 நிதரிசனத்தில் நாம் இயேசு கிறிஸ்துவைக் காணும்போது, "உம் கைகளில் இருக்கிற இந்த வடுக்கள் என்னென்று கேட்டால், என் சிநேகிதரின் வீட்டிலே காயப்பட்டதினால் உண்டானவைகள்" என்பார் (சக 13:6)

21 அவர் மரித்து அடக்கம் பண்ணப்பட்டார் அவர் மறுபடியும் உயிரோடு எழும்பினார் (1கொரி 15:1-58) இயேசு கிறிஸ்துவின் சரீர உயிர்த்தெழுதலை விசுவாசிக்காதவர்கள் இரட்சிக்கப்படவே முடியாது.

"மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும்" - பஞ்சாகமம் மோசேயின் நியாயப்பிரமாணமாகும். தீர்க்கதரிசிகளின் ஆகமங்கள் என்பது யோசுவா, நியாயாதிபதிகள், சாமுவேல், ராஜாக்கள், தானியேலைத் தவிர மற்ற எல்லாத் தீர்க்கதரிசிகளும் ஆகும். சங்கீதங்கள் என்பது வேதாகமத்திலுள்ள மற்ற எல்லாப் புஸ்தகங்களையும் குறிக்கும்.

24 அதிகாரம்

"வேதவாக்கியங்களை அறிந்து கொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்தார்" – அவர்களுடைய உள்ளங்களில் காணப்பட்ட எல்லா சந்தேகங்களையும் கேள்விகளையும் நிவர்த்தி பண்ணினார் (அப 1:3) அவர்களுக்கு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை போதித்தார் (யோவான் 20:22)

6. பிரதான கட்டளை – (மத் 28:18 மாற்கு 16:15; அப 1:1-8)

லூக்கா 24:46 எழுதியிருக்கிறபடி கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம்நாளில் மரித்தோரிலிருந் தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது.

லூக்கா 24:47 அன்றியும் மனந் திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப் படவும் வேண்டியது.

லூக்கா 24:48 நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள்

"மூன்றாம்நாள்" – (லூக்கா 9:22)

மனந்திரும்புதலின் உபதேசம்

1 பாவஅறிக்கை, விசுவாசம் பாவநிவாரணம் (2கொரி 7:8-11)

2 தேவை (லூக்கா 13:1-5)

3 அதிகாரம் (ரோமர் 10:9-10; லூக்கா 18:14)

4 எப்படி மனந்திரும்ப வேண்டும். (யோவான் 16:8; எபி 4:12; ரோமர் 2:4, 2கொரி 10:8-11)

5 தாழ்மையோடு மன்னிப்பைப் பெறவேண்டும் (1யோவான் 1:9 அப் 2:38; அப 3:19; ரோமர் 10:9-10)

6 எல்லா ஜனங்களும் மனந்திரும்ப வேண்டும். (லூக்கா 13:1-5, லூக்கா 24:47; அப் 10:35, அப 17:30)

7 யார் பிரசங்கிக்க வேண்டும். (லூக்கா 24:48; அப் 1:8 மத் 28:19-20; மாற்கு 16:15-20)

8 எப்படிப் பிரசங்கிக்க வேண்டும். (லூக்கா 24:49; அப் 1:4-8 அப் 5:31-32; 2கொரி 2:1-5 2கொரி 4:20; ரோமர் 15:18-19,29 எபி 2:1)

9 தாமதம் பண்ணக்கூடாது (2கொரி 6:2; எபி 4:7; எபே 5:14)

10 எப்படி உறுதிபண்ணப்படவேண்டும் (லூக்கா 3:8; ரோமர் 1:5 ரோமர்10:16; அப் 5:32; 2கொரி 10:11)

7. உன்னதத்திலிருந்து வரும் பெலன் – (மத் 18:18)

லூக்கா 24:49 என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ நான் உங்களுக்கு அனுப்புகிறேன்; நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்

தீர்க்கதரிசன எண் - 54

"என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை, இதோ நான் உங்களுக்கு அனுப்புகிறேன் நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்" (லூக்கா 24:49) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (அப் 2)

"என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினது" – எல்லா விசுவாசிகளுக்கும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பிதா வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார் (மத் 3:11; யோவான் 1:31-33; யோவான் 7:37-39, யோவான் 14:12-17,26; யோவான் 15:26, யோவான் 16:13-15; அப் 1:4-8; அப் 2:1-21,33, 38-39; அப் 5:32, அப 10:44-48, அப் 11:14-18; அப 15:7-11; அப் 19:1-7)

24 அதிகாரம்

"எருசலேம் நகரத்தில் இருங்கள்" - ஆதித்திருச்சபை விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்வதற்கு எருசலேம் நகரத்திலே இருக்க வேண்டுமென்று அவர்களுக்கு இயேசு கிறிஸ்து கூறினார் (லூக்கா 24:49 அப 1:4-8; லூக்கா 11:13)

தரிப்பிக்கப்படு (clothed) - ἐνδύω - endyoo - 1746

விணைச்சொல் - தரிப்பிக்கப்படு. உடுத்து, வஸ்திரந்தரி - (put on) (மத் 27:31; மாற்கு 15:20, லூக்கா 15:22); (be clothed) (மாற்கு 15:17; வெளி 1:13); (be clothed in) (வெளி 15:6; வெளி 19:14). (arrayed in) (அப 12:21). பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெறுகிறவர் உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படுவார் தேவனுடைய வசனம் அடையாளத் தினாலும், அற்புதத் தினாலும் உறுதிபண்ணப்படும். (யோவான் 14:12, மாற்கு 16:16-20)

பெலன் (power) - δύναμις - dynamis - 1411

பெண்பால் பெயர்ச்சொல் - பெலன் வல்லமை, பலத்த செய்கைகள் அற்புதங்கள், திறமை, பலம், சத்துவம் சக்தி, கருத்து, உக்கிரம், மிகுதி (inherent power) இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்வதற்குப் பெலன் (யோவான் 14:12 மாற்கு 16:17 18, அப் 1:4-8)

8. இயேசு பரமேறுகிறார் - (மாற்கு 16:29-20; யோவான் 3:13; அப் 1:9-11)

லூக்கா 24:50 பின்பு அவர் பெத்தானியா வரைக்கும் அவர்களை அழைத்துக் கொண்டு போய் தம்முடைய கைகளை உயர்த்தி, அவர்களை ஆசீர்வதித்தார்

லூக்கா 24:51 அவர்களை ஆசீர்வதிக்கையில் அவர்களை விட்டுப் பிரிந்து, பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்

"தம்முடைய கைகளை உயர்த்தி, அவர்களை ஆசீர்வதித்தார்" - பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஆசாரியர் ஜனங்களை ஆசீர்வதிக்கும்போது தங்களுடைய கைகளை உயர்த்தி ஆசீர்வதித்தார்கள் அதுபோன்று இயேசு கிறிஸ்து அவர்களை ஆசீர்வதித்தார் (யாத் 17:12; 1இராஜா 8:22,38,54 எஸ்றா 9:5)

"பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்" - (அப 1:9-11 மாற்கு 16:19)

9. பரிசுத்த ஆவியானவருக்காக கீழ்ப்படிதலோடு காத்திருக்கிறார்கள் - (அப 1:12-2:13)

லூக்கா 24:52 அவர்கள் அவரைப் பணிந்து கொண்டு, மிகுந்த சந்தோஷத்தோடே எருசலேமுக்குத் திரும்பிவந்து,

லூக்கா 24:53 நாடோறும் தேவாலயத்திலே தேவனைப் புகழ்ந்து துதித்துக்கொண்டிருந்தார்கள். ஆமென்

"அவர்கள் அவரைப் பணிந்து கொண்டார்கள்" - இயேசு கிறிஸ்து இப்போது ஆராதிக்கப்படும் தேவத்துவநபராக இருக்கிறார் (வெளி 5:8-14, வெளி 7:10)

"மிகுந்த சந்தோஷம்" - பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தின் விளைவினால் மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று என்று சிலர் கூறுகிறார்கள் ஆனால் பெந்தெகொஸ்தே நாள் வரையிலும், பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் சீஷர்களுக்குக் கிடைக்கவில்லை (அப 1:4 8, அப் 2:1-21,33) பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெறாத தேவதூதரும் மனுஷரும் மிகுந்த சந்தோஷமாக இருக்கிறார்கள்

நாடோறும் (continually) διαπαντός diapantos 1275

லூக்கா – தொகுப்புரை

24 அதிகாரம்

"எருசலேம் நகரத்தில் இருங்கள்" - ஆதித்திருச்சபை விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்வதற்கு எருசலேம் நகரத்திலே இருக்க வேண்டுமென்று அவர்களுக்கு இயேசு கிறிஸ்து கூறினார் (லூக்கா 24:49 அப் 1:4-8; லூக்கா 11:13)

தரிப்பிக்கப்படு (clothed) - ἐνδύω endyoo - 1746

வினைச்சொல் - தரிப்பிக்கப்படு, உடுத்து, வஸ்திரந்தரி - (put on) மத் 27:31; மாற்கு 15:20; லூக்கா 15:22 ; (be clothed) (மாற்கு 15:17 வெளி 1:13); (be clothed in) (வெளி 15:6; வெளி 19:14); (arrayed in) (அப் 12:21). பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெறுகிறவர் உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படுவார். தேவனுடைய வசனம் அடையாளத்தினாலும் அற்புதத்தினாலும் உறுதிப்பண்ணப்படும். (யோவான் 14:12, மாற்கு 16:16-20)

பெலன் (power) - δύναμις - dynamis - 1411

பெண்பால் பெயர்ச்சொல் பெலன், வல்லமை, பலத்த செய்கைகள், அற்புதங்கள், திறமை, பலம், சதுவம், சக்தி, கருத்து, உக்கிரம், மிகுதி (inherent power) இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்வதற்குப் பெலன் (யோவான் 14:12, மாற்கு 16:17-18, அப் 1:4-8)

8. இயேசு பரமேறுகிறார் - (மாற்கு 16:19-20, யோவான் 3:13; அப் 1:9-11)

லூக்கா 24:50 பின்பு அவர் பெத்தானியா வரைக்கும் அவர்களை அழைத்துக் கொண்டுபோய், தம்முடைய கைகளை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்தார்.

லூக்கா 24:51 அவர்களை ஆசீர்வதிக்கையில், அவர்களை விட்டுப் பிரிந்து, பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்.

"தம்முடைய கைகளை உயர்த்தி, அவர்களை ஆசீர்வதித்தார்" பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஆசாரியர் ஜனங்களை ஆசீர்வதிக்கும்போது தங்களுடைய கைகளை உயர்த்தி ஆசீர்வதித்தார்கள். அதுபோன்று இயேசு கிறிஸ்து அவர்களை ஆசீர்வதித்தார் (யாத் 17:12; 1இராஜா 8:22,38,54, எஸ்றா 9:5)

"பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்" - (அப் 1:9-11 மாற்கு 16:19)

9. பரிசுத்த ஆவியானவருக்காக சீஷர் பயபக்தியோடு காத்திருக்கிறார்கள் - (அப் 1:12-2; 13)

லூக்கா 24:52 அவர்கள் அவரைப் பணிந்து கொண்டு, மிகுந்த சந்தோஷத்தோடே எருசலேமுக்குத் திரும்பிவந்து,

லூக்கா 24:53 நாடோறும் தேவாலயத்திலே தேவனைப் புகழ்ந்து துதித்துக்கொண்டிருந்தார்கள். ஆமென்.

"அவர்கள் அவரைப் பணிந்து கொண்டார்கள்" - இயேசு கிறிஸ்து இப்போது ஆராதிக்கப்படும் தேவத்துவமுடையவராக இருக்கிறார் (வெளி 5:8-14, வெளி 7:10)

"மிகுந்த சந்தோஷம்" - பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தினால் மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று என்று சிலர் கூறுகிறார்கள். ஆனால் பெந்தெகொஸ்தே நாள் வரையிலும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் சீஷர்களுக்குக் கிடைக்கவில்லை (அப் 1:4-8, அப் 2:1-21,33). பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெறாத தேவதூதரும், மனுஷரும் மிகுந்த சந்தோஷமாக இருக்கிறார்[redacted]

நாடோறும் (continually) - διαπαντός - diapantos - 1275

முன்னிடைச்சொல் - எப்பொழுதும், நாடோறும், நித்தமும் - சீஷர்கள் நாடோறும் தேவாலயத்தில் இருக்கிறார்கள் (எபி 13:15). பத்து நாட்களும் சீஷர்கள் தேவாலயத்திற்குச் சென்று தேவனைத் துதித்தார்கள் (மாற்கு 5:5; அப் 10:2; அப் 24:16, ரோமர் 11:10; எபி 9:6)

யோவான் - முன்னுரை

காலம்

கி.பி. 70-ஆம் ஆண்டில் இந்தச் சுவிசேஷம் எழுதப்பட்டது. எழுதப்பட்ட இடம் தெரியவில்லை.

ஆசிரியர்

யோவான் சீஷரில் இயேசுவுக்கு அன்பானவாயிருந்த ஒருவன் (யோவான் 13:23; யோவான் 19:26; யோவான் 20:2; யோவான் 21:7,20,24) அப்போஸ்தலன் யாக்கோபின் சகோதரன் (மத் 4:21). யாக்கோபு, பேதுரு ஆகியோரோடு பல வேளைகளில் கூட இருந்தவன் (மாற்கு 5:37; மாற்கு 9:2; மாற்கு 14:33) பொறுமையில்லாதவன் (மாற்கு 9:38; லூக்கா 9:49-56). பஸ்காவை ஆயத்தம் பண்ணுகிறான் (லூக்கா 22:8-13) இயேசு கிறிஸ்து விசாரிக்கப்படும்போது அங்கு இருக்கிறான் (யோவான் 18:15-16; யோவான் 19:26-27), இயேசுவின் கல்லறையில் இருக்கிறான் (யோவான் 20:2-8) மற்ற வேளைகளில் இயேசுவோடு கூட இருக்கிறான் (யோவான் 21) பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டான் (அப் 1:13-2:4) மரியாளைக் கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டான் (யோவான் 19:26) தேவாலயத்தில் பேதுருவோடு இருந்தான் (அப் 3) சிறைச்சாலையில் இருந்தான் (அப் 4-5) சமாரியாவிற்கு அனுப்பப்பட்டான் (அப் 8:14-17). சபையின் தூணாக இருந்தான் (கலா 2:9). யோவான் எழுதின சுவிசேஷம், 1யோவான், 2யோவான், 3யோவான், வெளிப்படுத்தின விசேஷம் ஆகிய நூல்களின் ஆசிரியர் (வெளி 1:9) யோவான் தன்னுடைய நூறாவது வயதில் இயற்கையாக மரணமடைந்தான் என்று பாரம்பரிய வரலாறு கூறுகிறது.

மையக்கருத்து

இயேசு கிறிஸ்து தேவன் யெகோவாவின் மேசியா, குமாரன். இயேசு கிறிஸ்துவின் தேவத்துவம் இந்த சுவிசேஷத்தில் உறுதி பண்ணப்படுகிறது (யோவான் 1:1-3,14,33,34,49; யோவான் 3:13-20; யோவான் 5:23,26; யோவான் 6:51,62; யோவான் 8:58; யோவான் 13:33; யோவான் 20:28,31)

இயேசு கிறிஸ்துவின் தேவத்துவத்திற்குச் சாட்சிகள்

1. பிதா (யோவான் 5:32-37; யோவான் 8:18)
2. குமாரன் (யோவான் 8:14; யோவான் 18:37)
3. பரிசுத்த ஆவியானவர் (யோவான் 15:26; யோவான் 16:13-15)
4. எழுதப்பட்ட வார்த்தை (யோவான் 1:45; யோவான் 5:39-46)
5. இயேசு கிறிஸ்துவின் கிரியைகள் (யோவான் 5:17, 36; யோவான் 10:25; யோவான் 14:11; யோவான் 15:24)
6. யோவான் ஸ்நானன் (யோவான் 1:7; யோவான் 5:32-35)
7. சீஷர்கள் (யோவான் 15:27; யோவான் 19:35; யோவான் 21:24)

யோவான் எழுதின சுவிசேஷத்திலும், மற்ற சுவிசேஷங்களிலும் காணப்படும் ஒற்றுமைகள்

1. யோவானுடைய ஊழியம்
2. கடைசி இராபோஜனம்
3. கெத்செமனே தோட்டத்தில் அபிஷேகம்
4. இயேசுகிறிஸ்துவின் பாடுகள்
5. உயிர்த்தெழுதல்
6. ஐயாயிரம் பேருக்கு போஜனம் கொடுத்தது
7. கடலின்மீது நடந்தது

இந்த ஏழு நிகழ்ச்சிகளைத் தவிர, யோவான் சுவிசேஷத்தில் காணப்படும் எல்லா நிகழ்ச்சிகளும் இந்த சுவிசேஷத்தின் விசேஷித்த காரியங்களாகும்.

யோவான் - முன்னுரை

சுவிசேஷங்களில் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வர்ணனை

1 மத்தேயு - இயேசு கிறிஸ்து ராஜா

2 மாற்கு - இயேசு கிறிஸ்து ஊழியக்காரர்

3 லூக்கா - இயேசு கிறிஸ்து மனுஷர்

4 யோவான் - இயேசு கிறிஸ்து தேவன்

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 21

வசனங்கள் - 879

கேள்விகள் - 167

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள் - 15

புதிய தீர்க்கதரிசனங்கள் - 44

பொருளடக்கம்

I. இயேசு கிறிஸ்து

1 இயேசு கிறிஸ்துவின் தெய்வத்துவமும் நித்தியமும் - (1:1-2)

2 இயேசு கிறிஸ்து மூலமாய் சகலமும் உண்டாயிற்று - (1:3-5)

II. யோவான் ஸ்நானன் - (1:6-8)

III. இயேசு கிறிஸ்து

1 தெய்வத்துவம், சிருஷ்டிப்பு கிரியை. இஸ்ரவேலர் இயேசுவை ஏற்றுக் கொள்ளவில்லை - (1:9-11)

2 மீட்பின் கிரியை - (1:12-13)

3 வார்த்தை மாம்சமாகிறார் - (1:14)

IV. யோவான் ஸ்நானன் - (1:15)

V. இயேசு கிறிஸ்து - கிருபை, சத்தியம் ஆகியவற்றின் ஆதாரம் - (1:16-18)

VI. யோவான் ஸ்நானன்

1 யோவான் ஸ்நானன் தன்னைப் பற்றி கூறிய சாட்சி - (1:19-24)

2 யோவான் ஸ்நானன் தன் ஞானஸ்நானத்தைப் பற்றி கூறிய சாட்சி - (1:25-28)

3 யோவான் ஸ்நானன் இயேசு கிறிஸ்துவைப் பற்றி கூறிய சாட்சி - (1:29-34)

VII. இயேசு கிறிஸ்துவின் ஊழியமும் உபதேசமும்

1 யோவான் ஸ்நானன் ஆதாயம் பண்ணிய இரண்டு சீஷர்கள் - (1:35-39)

2 அந்திரேயா ஆதாயம் பண்ணிய பேதுரு - (1:40-42)

3 இயேசுவானவர் தாமே ஆதாயம் பண்ணிய பிலிப்பு - (1:43-44)

4 பிலிப்பு ஆதாயம் பண்ணிய நாத்தான்வேல் - (1:45-46)

5 நாத்தான்வேலின் சந்தேகங்கள் நிவர்த்தியாகிறது - (1:47-49)

6 இயேசு கிறிஸ்துவின் முதலாவது தீர்க்கதரிசனம் - (1:50-51)

7 இயேசுவானவர் செய்த முதலாவது அற்புதம் - (2:1-11)

8 கப்பர்நகூமை இயேசு தமது ஊழிய ஸ்தலமாக ஆக்குகிறார் - (2:12)

9 தேவாலயத்தின் முதலாவது சுத்திகரிப்பு - (2:13-17)

10 யூதர்கள் அடையாளத்தை நாடுகிறார்கள் - இயேசுவின் மரணத்தைப் பற்றிய முதலாவது தீர்க்கதரிசனம் - (2:18-22)

யோவான் - முன்னுரை

11 எருசலேமில் பல அற்புதங்கள் (2:23-25)

12 இயேசுவும் நிக்கொதேமுவும்

(1) நிக்கொதேமு இயேசுவிடம் இராக்காலத்தில் வருகிறான் - (3:1-2)

(2) மறுபடியும் பிறக்க வேண்டியதின் அவசியத்தை இயேசு கூறுகிறார் - (3:3)

(3) மறுபடியும் பிறக்க வேண்டுமென்பதை நிக்கொதேமு தவறாக புரிந்து கொள்கிறான் - (3:4)

(4) மறுபடியும் பிறக்க வேண்டியதின் அவசியத்தை இயேசு விளக்கி கூறுகிறார் - (3:5-8)

(5) மறுபடியும் பிறக்க வேண்டும் என்பது நிக்கொதேமுவிற்கு புரியாத இரகசியமாகவே இருக்கிறது - (3:9)

(6) நிக்கொதேமுவை அவனுடைய அறியாமைக்காகவும் அவிசுவாசத்திற்காகவும் இயேசு கிறிஸ்து கடிந்து கூறுகிறார் (3:10-12)

13 இயேசுவைப் பற்றிய சாட்சி

(1) பரலோகத்தில் இருக்கிற கிறிஸ்து (3:13)

(2) கிறிஸ்துவின் சிலுவை மரணம் - (3:14-17)

(3) அவிசுவாசிகளுக்கு ஆக்கினைத்தீர்ப்பு - (3:18-21)

14 இயேசு கிறிஸ்து யூதேயாவில் ஊழியம் செய்கிறார் - (3:22)

15 யோவான் ஸ்நானன் அயினோன் என்னும் இடத்தில் ஊழியம் செய்கிறான் (3:23-24)

16 யோவான் ஸ்நானனின் கடைசி சாட்சி

(1) தன்னைப் பற்றி - (3:25-29)

(2) இயேசு கிறிஸ்துவைப் பற்றி - (3:30-36)

17 இயேசு கிறிஸ்து கலிலேயாவிற்கு பிரயாணம் பண்ணுகிறார் - (4:1-3)

18 இயேசு கிறிஸ்துவும் சமாரிய ஸ்திரீயும்

(1) சூழ்நிலைகள் - (4:4-6)

(2) இயேசு "தாகத்துக்குத் தா" என்கிறார் - (4:7-8)

(3) ஸ்திரீ "என்னிடத்தில் எப்படி கேட்கலாம்" என்கிறாள் - (4:9)

(4) இயேசு - அவர் உனக்கு ஜீவத் தண்ணீரைக் கொடுத்திருப்பார் - (4:10)

(5) ஸ்திரீ - எங்கேயிருந்து உமக்கு ஜீவத்தண்ணீர் உண்டாகும் - (4:11-12)

(6) இயேசு - நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்று - (4:13-14)

(7) ஸ்திரீ - அந்த தண்ணீரைத் தரவேண்டும் - (4:15)

(8) இயேசு - உன் புருஷனை இங்கே அழைத்துக் கொண்டுவா (4:16)

(9) ஸ்திரீ - எனக்கு புருஷன் இல்லை - (4:17)

(10) இயேசு - ஐந்து புருஷர் உனக்கு இருந்தார்கள், இப்பொழுது உனக்கு இருக்கிறவன் உனக்கு புருஷன் அல்ல (4:18)

(11) ஸ்திரீ - ஆண்டவரே நீர் தீர்க்கதரிசி நான் எங்கு தொழுது கொள்ள வேண்டும் (4:19-20)

யோவான் - முன்னுரை

(12) இயேசு - பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டும் - (4:21-24)

(13) ஸ்திரீ - கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார் - (4:25)

(14) இயேசு - நானே அவர் - (4:26)

19 சீஷர்கள் திரும்பி வருகிறார்கள் - ஸ்திரீ ஊரிலுள்ள ஜனங்களை கிறிஸ்துவிடம் அழைத்து வருகிறாள் - (4:27-30)

20 ஊழியக்காரரின் சந்தோஷமும் திருப்தியும் - (4:31-34)

21 கலிசேஷ ஊழியத்தைப் பற்றிய உபதேசம் - (4:35-38)

22 இரண்டு நாள் எழுப்புதல் கூட்டம் - (4:39-42)

23 கலிலேயாவில் இயேசுவை ஏற்றுக் கொள்கிறார்கள் - (4:43-45)

24 இராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய குமாரனை இயேசு குணமாக்குகிறார் (4:46-54)

25 பெதஸ்தா குளம் - இயேசு ஓய்வுநாளில் திமிர்வாதக்காரனை சொஸ்தமாக்குகிறார் (5:1-9)

26 ஓய்வுநாளில் படுக்கையை எடுத்துக் கொண்டு போவதற்காக யூதர்கள் அவனைக் கடிந்து கொள்கிறார்கள் - (5:10-13)

27 இயேசு தாம் சொஸ்தமாக்கிய திமிர்வாதக்காரனை மறுபடியும் காண்கிறார் - (5:14)

28 சொஸ்தமான மனுஷன் யூதரிடம் அறிவிக்கிறான் - (5:15)

29 இயேசுவை கொல்வதற்கு சதியாலோசனை - (5:16)

30 இயேசுவின் பதிலுரை

(1) இயற்கையில் பிதாவும் இயேசுவும் சமம் - (5:17-18)

(2) வல்லமையிலும் கிரியைகளிலும் பிதாவும் இயேசுவும் சமம் - (5:19-20)

(3) மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறதில் பிதாவும் இயேசுவும் சமம் - (5:21)

(4) நியாயத்தீர்ப்பு செய்வதில் பிதாவும் இயேசுவும் சமம் - (5:22)

(5) கனத்தில் பிதாவும் இயேசுவும் சமம் - (5:23)

(6) நித்திய ஜீவனைக் கொடுப்பதில் பிதாவும் இயேசுவும் சமம் - (5:24-25)

(7) தம்மில் தாமே ஜீவனுடையவராய் இருப்பதில் பிதாவும் இயேசுவும் சமம் - (5:26-27)

(8) மரணத்தின் மீதும் நித்தியத்தின்மீதும் உள்ள அதிகாரத்தில் பிதாவும் இயேசுவும் சமம் - (5:28-29)

(9) இயேசு பிதாவினிடத்தில் கேட்கிற படியே நியாயத்தீர்ப்பு செய்கிறார் - (5:30)

(10) இயேசுவைப் பற்றி கூறப்பட்டுள்ள சாட்சி

(அ) யோவான் ஸ்நானன் - (5:31-35)

(ஆ) இயேசுவின் கிரியைகள் (5:36)

(இ) பிதா (5:37-38)

(ஈ) வேதவாக்கியங்கள் - (5:39-42)

(11) இயேசு பிதாவின் நாமத்தினாலே வந்திருக்கிறார் - (5:43)

யோவான் - முன்னுரை

(12) இயேசு அவிசுவாசத்தைக் கடிந்து கொள்கிறார் - (5:44-47)

31 ஐயாயிரம் பேருக்கு அற்புதமாக போஜனம் கொடுக்கிறார் - (6:1-13)

32 இயேசுவை இராஜாவாக்கும்படி பிடித்துக் கொண்டு போக ஜனங்கள் மனதாயிருக்கிறார்கள் - (6:14-15)

33. இயேசு தண்ணீரின்மீது நடக்கிறார் - (6:16-21)

34. ஜீவ அப்பத்தைப் பற்றிய உபதேசம்

(1) திரளான ஜனங்கள் இயேசுவை தேடி வருகிறார்கள் - (6:22-25)

(2) இயேசு ஜனங்களுடைய தவறான நோக்கங்களைக் கடிந்து கொள்கிறார் - (6:26-27)

(3) தேவனுக்கு ஏற்ற கிரியைகளை எவ்வாறு செய்வது என்று ஜனங்கள் இயேசுவிடம் கேட்கிறார்கள் - (6:28)

(4) தேவனுக்கேற்ற கிரியை - (6:29)

(5) ஜனங்கள் அடையாளத்தை கேட்கிறார்கள் - (6:30-31)

(6) பிதா மெய்யான அப்பத்தை கொடுக்கிறார் - (6:32-33)

(7) ஜனங்கள் அந்த அப்பத்தை எப்பொழுதும் தங்களுக்கு தரவேண்டும் என்று கூறுகிறார்கள் - (6:34)

(8) இயேசு - ஜீவ அப்பம் நானே - (6:35-40)

(9) முறுமுறுக்கும் யூதர்கள் - (6:41-42)

(10) இயேசு ஜீவ அப்பத்தைப் பற்றி மேலும் விளக்குகிறார் - (6:43-51)

(11) யூதர்கள் தங்களுக்குள் வாக்குவாதம் பண்ணுகிறார்கள் - (6:52)

(12) இயேசு ஜீவ அப்பத்தைப் பற்றி இன்னும் அதிகமாக விளக்கி கூறுகிறார் - (6:53-58)

35 உபதேசத்தினால் சீஷத்துவத்திற்கு பரீட்சை - (6:59-66)

36 பேதுருவின் புதிய விசுவாச அறிக்கை - (6:67-69)

37 யூதாஸ் தம்மைக் காட்டிக் கொடுக்கப்போவதை இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (6:70-71)

38 இயேசுவின் சகோதரர்கள் அவரை விசுவாசிக்க வில்லை - (7:1-9)

39 எல்லா மனுஷருக்காகவும் மரிப்பதற்காக கலிலேயாவிலிருந்து இறுதி பிரயாணம் - (7:10-13)

40 தேவாலயத்தில் இயேசு உபதேசம் பண்ணுகிறார்

(1) யூதர்கள் ஆச்சரியப்படுகிறார்கள் - (7:14-15)

(2) இயேசுவின் உபதேசம் பிதாவின் உபதேசம் ஆகும் - (7:16-19)

(3) இயேசுவை பிசாசு பிடித்தவன் என்று குற்றம் சுமத்துகிறார்கள் - (7:20)

(4) இயேசு யூதர்களின் நிலையற்ற பழக்கங்களைக் கடிந்து கொள்கிறார் - (7:21-24)

(5) இயேசுவிடம் யூதர்கள் கூறிய மறுப்புரை - (7:25-27)

(6) இயேசு யூதர்களிடம் கூறிய பதிலுரை - (7:28-29)

(7) பிரிவினை - இயேசுவைக் கொலை சதியாலோசனை - (7:30-32)

யோவான் - முன்னுரை

(8) இயேசு பரிசேயருக்கு கூறிய பதிலுரை - (7:33-34)

(9) இயேசுவைப் பற்றியும் அவருடைய உபதேசங்களைப் பற்றியும் யூதர்களுக்குள் விவாதம் - (7:35-36)

(10) பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் - (7:37-39)

41 பிரிவினை - இயேசுவைக் கொலை சதியாலோசனை - (7:40-44)

42 சேவகரின் அறிக்கையும் நிக்கொதேமுவின் ஆலோசனையும் - (7:45-53)

43 இயேசு தேவாலயத்தில் உபதேசம் பண்ணுகிறார்

(1) விபசாரத்திலே கண்டுபிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீ - (8:1-11)

(2) இயேசு உலகத்திற்கு ஒளியாயிருக்கிறார் - (8:12)

(3) தம்மைப் பற்றி இயேசு கொடுத்த சாட்சியை பரிசேயர் குற்றப்படுத்துகிறார்கள் - (8:13)

(4) பிதா தம்மைக் குறித்து சாட்சி கொடுப்பதாக இயேசு கூறுகிறார் - (8:14-18)

(5) உம்முடைய பிதா எங்கே - (8:19-21)

(6) தன்னைத் தான் கொலைசெய்து கொள்வானோ - (8:22-24)

(7) நீர் யார் - (8:25-29)

(8) விசுவாசிகளுக்கு இயேசுவின் உபதேசம் - (8:30-32)

(9) யூதர்கள் விடுதலையின் சந்ததியாய் இருக்கிறோம் என்கிறார்கள் - இதற்கு இயேசுவின் மறுப்புரை - (8:33-38)

(10) யூதர்கள் ஆபிரகாமின் சந்ததியாயிருக்கிறோம் என்கிறார்கள் - இதற்கு இயேசுவின் மறுப்புரை - (8:39-40)

(11) யூதர்கள் பிதாவின் சந்ததியாய் இருக்கிறோம் என்கிறார்கள் - இதற்கு இயேசுவின் மறுப்புரை - (8:41-47)

(12) யூதர்கள் இயேசுவை சமாரியன் என்றும் பிசாசு பிடித்தவன் என்றும் கூறுகிறார்கள் - இதற்கு இயேசுவின் மறுப்புரை - (8:48-51)

(13) இயேசுவின் மகிமையைப் பற்றிய விளக்கம் - (8:52-56)

(14) ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே இயேசு இருக்கிறார் - (8:57-58)

44 இயேசுவை கொல்வதற்கு சதியாலோசனை - (8:59)

45. பிறவிக்குருடன்

(1) இவன் குருடனாய் பிறந்தது யார் செய்த பாவம் - (9:1-3)

(2) இயேசு பிறவிக்குருடனை சொஸ்தமாக்குகிறார் - (9:4-7)

(3) குருடனும் அயலகத்தாரும் - (9:8-12)

(4) குருடனும் பரிசேயரும் - (9:13-17)

(5) குருடனின் பெற்றோரும் யூதரும் - (9:18-23)

(6) குருடனும் பரிசேயரும் - (9:24-34)

(7) இயேசுவும் குணமாக்கப்பட்ட மனுஷனும் - (9:35-38)

46 தேவாலயத்தில் உபதேசம்

யோவான் - முன்னுரை

(1) இயேசுவின் ஊழியம் - (9:39)

(2) பரிசேயரின் கேள்வியும் இயேசுவின் பதிலும் - (9:40-41)

(3) நல்ல மேய்ப்பனைப் பற்றிய உவமை - (10:1-6)

(4) நல்ல மேய்ப்பனைப் பற்றிய உவமையின் விளக்கம் - (10:7-18)

(5) யூதர்களுக்குள் பிரிவினை - (10:19-21)

47 தேவாலயத்தில் இயேசுவின் உபதேசம்

(1) யூதர்கள் இயேசுவிடம் விசாரிக்கிறார்கள் - (10:22-24)

(2) இயேசு தமது தெய்வத்துவத்தை வலியுறுத்துகிறார் - (10:25-30)

(3) இயேசுவை கொல்வதற்கு முயற்சி - (10:31-33)

(4) இயேசு தமது தெய்வத்துவத்திற்கு சாட்சி கூறுகிறார் - (10:34-38)

48 இயேசுவைக் கொல்வதற்கு முயற்சி - (10:39-42)

49 மரித்த லாசரு உயிருடன் எழும்புகிறான்

(1) சூழ்நிலையும் நோக்கமும் - (11:1-6)

(2) யூதேயாவிற்கு மறுபடியும் பிரயாணம் - (11:7-16)

(3) இயேசும் மார்த்தாளும் - (11:17-27)

(4) இயேசுவும் மரியாளும் - (11:28-32)

(5) இயேசுவின் மனதுருக்கம் - (11:33-36)

(6) இயேசு லாசருவை அடக்கம் பண்ணிய கல்லறையினிடத்திற்கு வருகிறார் - (11:37-38)

(7) மார்த்தாளின் அவிசுவாசம் - (11:39)

(8) இயேசுவின் விசுவாசம் - (11:40)

(9) இயேசுவின் ஜெபம் - (11:41-42)

(10) இயேசுவின் வல்லமை - லாசருவை உயிருடன் எழுப்புகிறார் - (11:43-44)

50 அற்புதத்தின் விளைவு - (11:45-46)

51 இயேசுவைக் கொல்ல முயற்சி - (11:47-48)

52 இயேசுவின் மரணத்தைப் பற்றி காய்பாவின் தீர்க்கதரிசனம் - (11:49-52)

53. இயேசுவைக் கொல்ல முயற்சி - (11:53-54)

54. இயேசுவைப் பிடிப்பதற்குக் கட்டளை - (11:55-57)

55. இயேசுவின் அபிஷேகம் - (12:1-8)

56 லாசருவைக் கொல்ல சதியாலோசனை (12:9-11)

57 வெற்றிபவனி - (12:12-19)

58 தேவாலயத்தில் இயேசு கிறிஸ்துவின் உபதேசம்

(1) சூழ்நிலை - கிரேக்கர்கள் இயேசுவை தேடுகிறார்கள் - (12:20-22)

(2) இயேசு தமது மரணத்தை முன் குறித்துக் கூறுகிறார் - (12:23-24)

(3) சீஷத்துவத்திற்கு பரீட்சை - (12:25-26)

யோவான் - முன்னுரை

(4) ஜெபம் - வானத்திலிருந்து உண்டான சத்தம் - (12:27-29)

(5) கிறிஸ்துவின் சிலுவையில உலகத்திற்கு நியாயத்தீர்ப்பு - (12:30-33)

(6) இயேசுவிடம் கேட்கப்பட்ட கேள்வி - (12:34)

(7) இயேசு ஜனங்களுக்கு புத்திமதி கூறிவிட்டு அவர்களை விட்டு மறைகிறார் - (12:35-36)

59 தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாக ஜனங்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ளவில்லை - (12:37-41)

60 அதிகாரிகளின் சுபாவம் - (12:2-43)

61 இயேசு தம்மைப் பற்றி ஜனங்களிடம் கூறிய கடைசி சாட்சி - (12:44-50)

62 கடைசி பஸ்கா

(1) இயேசுவின வேளை - (13:1)

(2) போஜனம் பணணுகிறார்கள் - யூதாஸ் சோதிக்கப்படுகிறான் - (13:2)

(3) இயேசு தாழ்மைக்கு எடுத்துக் காட்டாக சீஷர்களுடைய கால்களைக் கழுவுகிறார் - (13:3-5)

(4) பேதுருவின கலக்கம் - (13:6)

(5) இயேசு செய்வதை பேதுரு அப்பொழுது அறியவில்லை - (13:7)

(6) தனது கால்களைக் கழுவக்கூடாது என்று பேதுரு கூறுகிறான் - (13:8)

(7) பின்பு பேதுரு தன் கைகளையும் தலையையும் கழுவவேண்டுமென்று கூறுகிறான் - (13:9)

(8) யூதாசைத் தவிர எல்லோரும் சுத்தமாயிருக்கிறார்கள் - (13:10-11)

(9) இயேசுவின் தாழ்மை நமக்கு ஓர் எடுத்துக்காட்டு - (13:12-17)

(10) யூதாஸ் தம்மை காட்டிக்கொடுக்கப் போவதை இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (13:18-26)

(11) யூதாஸ் தன்னை சாத்தானுக்கு ஒப்புக் கொடுக்கிறான் - (13:27-30)

(12) பஸ்காவில இயேசுவின் கடைசி உபதேசம் - (13:31-35)

63 ஒலிவமலையில இயேசுவின் பிரசங்கம்

(1) பேதுரு தம்மை மறுதலிக்கப் போவதை இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (13:36-38)

(2) சபை எடுத்துக் கொள்ளப்படப்போவதைப் பற்றிய முதலாவது அறிவிப்பு - (14:1-4)

(3) தீதியுவின பிரதான கேள்வி - (14:5)

(4) இயேசுவின பதிலுரை - (14:6-7)

(5) உண்மையான விசுவாசிகளின் ஆவல் - (14:8)

(6) தேவனுடைய உண்மையான வெளிப்பாடு - (14:9-11)

(7) இயேசுவை விசுவாசிக்கிறவர்களால செய்யக்கூடிய காரியங்கள் - (14:12)

(8) விசுவாசிகளுக்கு தேவன் செய்யும் காரியம் - (14:13-14)

(9) தேவனிடத்தில் அன்பாய் இருக்கிறவர்கள் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும் - (14:15-17)

யோவான் – முன்னுரை

(10) ஆவிக்குரிய ஐக்கியமும் வல்லமையும் – (14:18-21)

(11) விசுவாசிகளுக்கு தேவன் தம்மை வெளிப்படுத்துகிறார் – (14:22)

(12) விசுவாசிகளிடத்தில் தேவன் வாசம் பண்ணுகிறார் – (14:23-25)

(13) பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன் – (12:26)

(14) தேவனுடைய சமாதானம் – (14:27)

(15) இயேசு பிதாவினிடத்திற்கு போகிறார் – (14:28-31)

64 கெத்செமனே தோட்டத்திற்குப் போகும் வழியில் உபதேசம்

(1) மெய்யான திராட்சச்செடி – (15:1)

(2) இரண்டு விதமான கொடிகள் – (15:2)

(3) உண்மையான விசுவாசிகள் – (15:3)

(4) கனிகொடுப்பதற்கு நிபந்தனை – (15:4-5)

(5) கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டும் – (15:5-6)

(6) ஜெபத்திற்கு பதில் கிடைக்க நிபந்தனை – (15:7)

(7) கனிகளைக் கொடுப்பதன் நோக்கம் – (15:8)

(8) கிறிஸ்துவில் நிலைத்திருப்பதற்கு நிபந்தனைகளும் அதனால் ஆசீர்வாதங்களும் – (15:9-14)

(9) சிநேகிதத்திற்கு ஏழு அடையாளங்கள் – (15:15-17)

(10) உண்மையான விசுவாசிகளை உலகம் ஏன் பகைக்கிறது – (15:18-21)

(11) உலகம் ஏன் தேவனையும் கிறிஸ்துவையும் பகைக்கிறது – (15:22-25)

(12) சத்திய ஆவியான தேற்றரவாளன் – (15:26-27)

(13) இயேசு உபத்திரவத்தை முன் குறித்துக் கூறுகிறார் – (16:1-3)

(14) கிறிஸ்தவர்களின் உபத்திரவத்தைப் பற்றிய தீர்க்கதரிசனத்திற்குக் காரணம் – (16:4-6)

(15) இயேசு பிதாவினிடத்திற்கு போவதன் அவசியம் – (16:7)

(16) உலகத்தில் பரிசுத்த ஆவியானவரின் மூன்று அம்ச கிரியை – (16:8-11)

(17) வருங்கால வெளிப்பாடுகளின் தீர்க்கதரிசனங்கள் – (16:12-15)

(18) இயேசு பிதாவினிடத்திற்கு போவதன் உபதேசம் – (16:16)

(19) சீஷர்கள் இந்த உபதேசத்தைத் தவறாக புரிந்து கொள்கிறார்கள் – (16:17-18)

(20) இயேசு பிதாவினிடத்தில் போவதையும் திரும்பவும் வரப்போவதையும் குறித்து விளக்குகிறார் – (16:19-22)

(21) இயேசுவின் நாமத்தினால் ஜெபிக்க வேண்டும் – (16:23-26)

(22) சீஷர்கள் தவறாக புரிந்து கொண்டதற்கு தெளிவான விளக்கம் – (16:27-28)

(23) சீஷர்கள் தெளிவாக புரிந்து கொள்கிறார்கள் – (16:29-30)

(24) உபத்திரவங்களையும் கிறிஸ்தவர்களின் பாடுகளையும் குறித்த தீர்க்கதரிசனங்கள் – (16:31-33)

யோவான் - முன்னுரை

65. கர்த்தருடைய ஜெபம்

(1) பிதாவையும் குமாரனையும் மகிமைப்படுத்துதல் - (17:1)

2) நித்திய ஜீவன் - (17:2-3)

3) நியமித்த கிரியை செய்து முடிக்கப் பட்டிருக்கிறது - 17:4

(4) கிறிஸ்துவின் மகிமை - 17:5

5) கிறிஸ்து மனுஷருக்கு பிதாவின் நாமத்தை வெளிப்படுத்துகிறார் - (17:6-8)

(6) விசுவாசிகள் அனைவருடைய ஒற்றுமை - (17:9-11)

7) கேட்டின் மகன் கெட்டுபோகிறான் - (17:12)

8) விசுவாசிகளின் பரிசுத்தம் - (17:13-14)

9) விசுவாசிகளை தீமையிலிருந்து காக்கும்படி ஜெபம் - (17:15)

(10) விசுவாசிகளின் பரிசுத்தத்தை பற்றிய சாட்சி - (17:16)

(11) விசுவாசிகள் ஊழியத்திற்காக வேறு பிரிக்கப்படுகிறார்கள் (17:17-19)

(12) விசுவாசிகள் ஒன்றாயிருக்க வேண்டும் - (17:20-23)

(13) விசுவாசிகளின் மகிமை - (17:24)

(14) உலகம் பிதாவை அறியவில்லை - (17:25)

(15) ஊழியம் நிறைவேறிற்று - 17:26

VIII. இயேசுவின் பாடுகள்

1 கெத்செமனே தோட்டத்தில் இயேசு - (18:1)

2 இயேசுவைக் கொலை முயற்சி - இயேசு காட்டிக்கொடுக்கப்படுவதும் கைதுபண்ணப்படுவதும் - (18:2-11)

3 இயேசுவை அன்னா என்பவனிடத்திற்கு முதலாவதும், பின்பு காய்பா என்பவனிடத்திற்கும் கொண்டு போகிறார்கள் - (18:12-14)

4 பேதுருவின் முதலாவது மறுதலிப்பு - (18:15-18)

5. இயேசுவின் விசாரணை - (18:19-24)

6 பேதுருவின் இரண்டாம், மூன்றாம் மறுதலிப்புக்கள் - (18:25-27)

7 பிலாத்துவிற்கு முன்பாக இயேசு - (18:28-37)

8 இயேசுவிற்கு தண்டனையும் பரபாசிற்கு விடுதலையும் - (18:38-40)

9 இயேசுவின் சிரசின்மேல் முள்முடியை வைக்கிறார்கள் - (19:1-3)

10 பிலாத்து இயேசுவை ஜனங்களுக்கு முன்பாக கொண்டு வருகிறான் - (19:4-7)

11 இயேசுவை பிலாத்துவிடம் மறுபடியும் கொண்டு போகிறார்கள் (19:8-11)

12 பிலாத்து இயேசுவை விடுதலை பண்ண வழிபார்க்கிறான் - (19:12)

13 பிலாத்து இயேசுவை யூதருக்கு முன்பாக நிறுத்துகிறான் - (19:13-14)

14 யூதர்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ள மறுத்து விடுகிறார்கள் (19:15)

15 இயேசுவை சிலுவையில் அறைகிறார்கள் - (19:16-24)

16 இயேசுவின் சிலுவையின் அருகே நின்ற ஸ்திரீகள் - (19:25-27)

17 இயேசுவின் மரணம் - (19:28-37)

18 இயேசுவை அடக்கம் பண்ணுகிறார்கள் - (19:38-42)

யோவான் - முன்னுரை

IX. உயிர்த்தெழுந்த பின்பு இயேசுவின் ஊழியம்

ஸ்திரீகள் அப்போஸ்தலரிடம் கல்லறை காலியாக இருப்பதை அறிவிக்கிறார்கள் - (20:1-2)

2 பேதுருவும் யோவானும் இயேசுவை அடக்கம் பண்ணிய இடத்திற்கு ஓடுகிறார்கள் - (20:3-10)

3 மகதலேனா மரியாளுக்கு இயேசுவின் தரிசனம் - (20:11-17)

4 இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு மகதலேனா மரியாளின் சாட்சி (20:18)

5 இயேசு பத்து பேருக்கு தரிசனம் தருகிறார் தோமா அங்கில்லை (20:19-20)

6 இயேசு தமது சீஷர்களுக்கு ஊழிய பொறுப்புக்களைக் கொடுக்கிறார் (20:21-23)

7 கண்டு விசுவாசித்த தோமா (24-25)

8 இயேசு பதினொரு பேருக்கு தரிசனம் தருகிறார் - (20:26-28)

9 காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் - (20:29)

10 யோவான் எழுதின சுவிசேஷத்தின் நோக்கம் - (20:30-31)

11 இயேசு தமது சீஷர்களுக்கு மறுபடியும் தம்மை வெளிப்படுத்துகிறார் -

(1) ஒரு மீனும் அகப்படவில்லை - (21:1-3)

(2) திரளான மீன்கள் அகப்படுகிறது - (21:4-6)

(3) இயேசுவிற்கு அன்பாயிருந்த சீஷன் - (21:7)

(4) சீஷர்கள் மீன்களுள்ள கரைக்கு இழுத்து வருகிறார்கள் (21:8-14)

12 பேதுருவின் மூன்று அம்ச ஊழியம் (21:15-17)

13 பேதுருவின் மரணத்தைக் குறித்து தீர்க்கதரிசனம் (21:18-19)

14 பேதுரு யோவானைப் பற்றி கேட்கிறான் - (21:20-23)

15. யோவான் - இந்த சுவிசேஷத்தை எழுதியவர் - முடிவுரை - (21:24-25)

1 அதிகாரம்

I. இயேசு கிறிஸ்து

1. இயேசு கிறிஸ்துவின் தெய்வத்துவமும் நித்தியமும் - (மீகா 5:1; எபி 1:5-14; வெளி 1:8,17 22:13)

யோவான் 1:1 ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது.

யோவான் 1:2 அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்.

"ஆதி" - ஆரம்பம், முதலாவது காலத்தால் கணக்கிட முடியாத கடந்த காலம் (ஆதி 1:1; நீதி 8:23)

ஆதி (beginning) - ἀρχή - archee - 746

பெண்பால் பெயர்ச்சொல் - ஆதி, ஆதிமுதல், ஆரம்பம், முதல், அதிகாரமுள்ளவர்கள், அதிகாரம், துரைத்தனம், துவக்கம், மூலஉபதேசம், உலகமுண்டானது முதல், உலகத்தை சிருஷ்டித்தது முதல்

"வார்த்தை" - இதன் கிரேக்கச் சொல் "லோகோஸ்" (logos) என்பதாகும் (அப 1:1). வார்த்தை என்னும் சொல் கிறிஸ்துவைக் குறிக்கும் (யோவான் 1:14; வெளி 19:13). இயேசு கிறிஸ்து ஏற்கெனவே இருந்தார் என்பதை இந்த வாக்கியம் உறுதி பண்ணுகிறது (மீகா 5:1-2; வெளி 1:8,17; வெளி 2:8; வெளி 22:13,16). பிதாவைப் போலவும், பரிசுத்த ஆவியானவரைப் போலவும் இயேசு கிறிஸ்துவும் நித்தியமானவர் (சங் 90:1-2; எபி 9:14). பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் திரித்துவத்தில் அங்கம் வகிக்கிறார்கள் (1யோவான் 5:7).

வார்த்தை (Word) - λόγος - logos - 3056

ஆண்பால் பெயர்ச்சொல் - சொல், சொல்லுதல், வார்த்தை, கணக்கு, காரியம், புத்தி, ஞானம், வசனம், சங்கதி, பேச்சு, உபதேசம், கீர்த்தி, யோசனை, வாக்கியம்

"தேவனாயிருந்தது" - வார்த்தை தேவனிடத்தில் இருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது. திரித்துவத்தில் பிதாவும் பரிசுத்த ஆவியானவரும் தெய்வத்துவ பண்புடையவர்களாக இருப்பதுபோலவே வார்த்தையாகிய இயேசு கிறிஸ்துவும் தெய்வத்துவ பண்புடையவராக இருக்கிறார் (சங் 45:6-7; ஏசா 9:6-7; யோவான் 1:1; எபி 1:8-12; வெளி 1:8,11; வெளி 22:13-16)

2. இயேசு கிறிஸ்து மூலமாய் சகலமும் உண்டாயிற்று - (எபே 3:9; கொலோ 1:16; எபி 1:2; வெளி 3:14)

யோவான் 1:3 சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானது ஒன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை.

யோவான் 1:4 அவருக்குள் ஜீவன் இருந்தது; அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது.

யோவான் 1:5 அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை.

"அவர் மூலமாய்" - தேவன் எல்லாவற்றையும் இயேசு கிறிஸ்துவின் மூலமாகச் சிருஷ்டித்தார் (எபே 3:9; கொலோ 1:15-18; எபி 1:2)

"ஜீவன்" - இயேசு கிறிஸ்துவின் மூலமாக சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. அதே சமயத்தில் எல்லா சிருஷ்டிகளுக்கும் அவர் மூலமாகவே மீட்பு உண்டாயிற்று (யோவான் 17:2; கொலோ 1:20). எல்லா சிருஷ்டிகளும் பரிசுத்த ஆவியானவர் மூலமாக குமாரனால் வந்தது. அதுபோலவே எல்லா மீட்பும் வரும். இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்தார். அவருடைய மரணத்தினால் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின் மூலமாக சிருஷ்டியை இரட்சிப்பது தேவனுக்குச் சாத்தியமாயிற்று (யோவான் 3:3-5; தீத்து 3:5)

1 அதிகாரம்

பற்றிக்கொள்ளுதல் (comprehended) - καταλαμβάνω katalembanoo - 2638

வினைச்சொல் - பிடி, பற்றிக்கொள், அகப்படு, அடை, பெறு, அறி (to seize upon; to keep down or under; stop; to catch up with in the sense of to discover or detect) - வார்த்தையாகிய இயேசுகிறிஸ்துவை சாத்தானுடைய அந்தகாரச் சக்திகளினால் மேற்கொள்ள முடியாது. (எபே 6:12) வார்த்தையாகிய இயேசு கிறிஸ்து அவைகளைச் சிலுவையில் முறியடித்தார் (கொலோ 2:14-17)

II. யோவான் ஸ்நானன் - (மத் 3:1; மாற்கு 1:4; லூக் 3:1)

யோவான் 1:6 தேவனால் அனுப்பப்பட்ட ஒரு மனுஷன் இருந்தான்; அவன் பேர் யோவான்.

யோவான் 1:7 அவன் தன்னால் எல்லாரும் விசுவாசிக்கும்படி அந்த ஒளியைக் குறித்துச் சாட்சி கொடுக்கச் சாட்சியாக வந்தான்.

யோவான் 1:8 அவன் அந்த ஒளியல்ல, அந்த ஒளியைக் குறித்துச் சாட்சி கொடுக்க வந்தவனாயிருந்தான்.

"அவன் பேர் யோவான்" - யோவான்ஸ்நானன் இந்தச் சுவிசேஷத்தில் இவன் யோவான் என்றே அழைக்கப்படுகிறான். மற்ற சுவிசேஷங்களில் இவன் யோவான் ஸ்நானன் என்று அழைக்கப்படுகிறான்.

III. இயேசு கிறிஸ்து

1. தெய்வத்துவம், சிருஷ்டிப்பு கிரியை, இஸ்ரவேலர் இயேசுவை ஏற்றுக் கொள்ளவில்லை

யோவான் 1:9 உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி.

யோவான் 1:10 அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை.

யோவான் 1:11 அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார் அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை.

"உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி" - மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவே எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிறவர் அவரே அந்த மெய்யான ஒளி (யோவான் 8:12; யோவான் 9:5 யோவான் 12:35-46)

"பிரகாசிப்பித்தல்" (power) - சூரியன் எல்லாவற்றின்மீதும் பாய்ந்து சென்று பிரகாசிப்பிக்கிறதுபோல சூரியன் ஒளி கொடுக்காமல் யாரையும் தள்ளி விடுவதில்லை. அதுபோலவே மேசியா எல்லோரையும் ஆசீர்வதிக்கிறார் புறஜாதியாரையும் ஆசீர்வதிக்கிறார் (ஆதி 12:2; ரோமர் 10:11-13 ரோமர் 15:8-12

"தமக்குச் சொந்தமானவர்கள்" - யூதர்கள் (மத் 10:5-6, ரோமர் 9:5

2. மீட்பின் கிரியை - (யோவான் 17:2

யோவான் 1:12 அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்

யோவான் 1:13 அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்

1 அதிகாரம்

"அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ" - ஒவ்வொரு தனிநபரும் இயேசு கிறிஸ்துவையும் அவருடைய சுவிசேஷத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். (மாற்கு 16:16; யோவான் 3:16, யோவான் 6:37)

அதிகாரம் (power) - ἐξουσία
exousia - 1849

பெண்பால் பெயர்ச்சொல - அதிகாரம் வல்லமை. ஆதீனம் (delegated power; the liberty and right to use power) - அதிகாரம் செலுத்தும் உரிமை ஒவ்வொரு மனுஷனுக்கும் இரட்சிப்படைவதற்கு உரிமை இருக்கிறது. யோவான் 3:16 யோவான் 6:37 1தீமோ 2:4 2பேதுரு 3:9; வெளி 22:17)

"அவர்கள்" - இயேசு கிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்கள் (யோவான் 1:12; மத் 1:21; அப் 2:21, அப் 3:16; அப் 4:12

"பிறந்தவர்கள்" - இதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்கச் சொல் "ஜெனனாவோ" (gennaoo) சுவிசேஷத்தின் மூலமாக இயேசு கிறிஸ்துவிடம் ஒரு நபரை அழைத்து வருதல் என்று பொருள் (1கொரி 4:15, பிலே 1:10) தேவனுடைய குடும்பத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிற ஜனங்கள் என்றும் இதற்குப் பொருள் கூறலாம் (யோவான் 3:3 1யோவான் 2:29 யோவான் 3:9, 1யோவான் 5:1,18 ரோமர் 8:15) புதிய சரீரம், புதிய ஆத்துமா புதிய ஆவி ஆகியவற்றோடு பிறந்தவர்கள் என்று இந்த வார்த்தைக்குப் பொருள் கூறக்கூடாது ஏனென்றால் இயேசு கிறிஸ்து மட்டுமே தேவனுடைய ஒரேபேறான குமாரன் மரியாள் முதலாவது பெற்றெடுத்த பிள்ளை (யோவான் 1:14,18, யோவான் 3:16; மத் 1:1)

பிறந்திரு (born) - γεννάω
gennaoo 1080

வினைச்சொல் பெறு. பிறந்திரு. உண்டாயிரு, எழும்பு, ஜநித்திரு. (ஜென்ம ஜெநிப்பி (a bringing forth)

"இரத்தத்தினாலாவது" - மனுஷனுடைய இரத்தச் சம்பந்தமான பிறப்பினால் யாரும் தேவனுடைய பிள்ளைகளாக ஆவதில்லை.

"மாம்ச சித்தத்தினாலாவது" - தண்டனைக்குத் தப்பித்துக் கொள்ள வேண்டுமென்று தன்னுடைய மாம்சத்தின் பிரகாரமாகத் தீர்மானம் பண்ணுவதினாலும் ஒருவரும் தேவனுடைய பிள்ளைகளாக ஆவதில்லை.

"புருஷனுடைய சித்தத்தினாலாவது" - மனுஷருடைய கொள்கைகளினாலோ, கோட்பாடுகளினாலோ மார்க்க உபதேசங்களினாலோ யாருமே தேவனுடைய பிள்ளைகளாக ஆவதில்லை தேவனே மனுஷனை இரட்சிப்பதற்காக அவன் அனுபவிக்க வேண்டிய தண்டனையைக் கல்வாரி சிலுவையில் தாமே ஏற்றுக் கொண்டு, தமது திரு இரத்தத்தைச் சிந்தி, மனுஷனை இரட்சிக்கிறார் இதன் மூலமாகவே இரட்சிக்கப்பட்டவர்கள், தேவனுடைய பிள்ளைகளாக ஆகிறார்கள் (யோவான் 3:16; ரோமர் 3:20-30 2கொரி 5:14-21)

2. வார்த்தை மாம்சமாகிறார் - (ஏசா 7:14; 9:6, மத் 1:18, லூக் 1:35, ரோமர் 1:3 8:3 கலா 4:4 1தீமோ 3:16 எபி 1:5

யோவான் 1:14 அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார் அவருடைய மகிமையைக் கண்டோம் அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.

"அந்த வார்த்தை மாம்சமாயிற்று" - அந்த வார்த்தை ஆவியாகவில்லை, தேவனாகவில்லை பூமிக்குரிய காரியமாகவில்லை பரலோகத்திற்குரிய காரியமாகவில்லை அந்த வார்த்தை மாம்சமாயிற்று. இதனால் இயேசு கிறிஸ்து தேவனுடைய ஒரேபேறான குமாரனாக ஆகிறார் இயேசு கிறிஸ்துவின் குமாரத்துவம் எப்போதுமே அவருடைய மானிடத்தன்மையையே விளக்கும். இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையை விளக்காது. (லூக்கா 1:35 அப் 13:33

1 அதிகாரம்

"அவருடைய மகிமையைக் கண்டோம் அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" - மூலபாஷையில் எழுதப்பட்டிருக்கும் யோவான் சுவிசேஷத்தில் இந்த வசனம் அடைப்புக் குறிக்குள் (parentheses) கொடுக்கப் பட்டிருக்கிறது. யோவான் எழுதின சுவிசேஷத்தில் நாம் இதைப் போன்று பன்னிரெண்டு வாக்கியங்களை அடைப்புக் குறிக்குள் வாசிக்கிறோம் அவையாவன: (யோவான் 1:14,38 யோவான் 2:9; யோவான் 4:8 யோவான் 6:23; யோவான் 7:39,50 யோவான் 9:7; யோவான் 11:2 யோவான் 19:31; யோவான் 21:7,8)

"மகிமை" - (மத் 17:2; மாற்கு 9:3, லூக்கா 9:29; 2பேதுரு 1:16-17)

"பிதாவுக்கு ஒரேபேறானவர்" - இயேசு கிறிஸ்து மட்டுமே பிதாவின் ஒரேபேறான குமாரனாக இருந்தார், இருக்கிறார் எப்போதும் இருப்பார் (யோவான் 1:14,18, யோவான் 3:16,18; 1 யோவான் 4:9) இயேசு கிறிஸ்து ஒரேபேறானவர் என்று கூறுகிறோம். மனுஷர் யாரும் இயேசு கிறிஸ்துவைப்போல ஒரேபேறானவராக இருப்பதில்லை மனுஷருடைய பிறப்பு வேறு இயேசு கிறிஸ்துவின் பிறப்பு வேறு. (மத் 1:18 25 லூக்கா 1:34 35) விசுவாசிகள் தேவனுடைய பிள்ளைகளாகும்போது தேவன் நம்மைச் சுவீகார புத்திரராக அங்கீகரிக்கிறார் அவர் நம்மை இயேசுவைப் பெற்றெடுத்ததுபோல பெற்றெடுப்பதில்லை (ரோமர் 8:15 ரோமர் 9:4; கலா 4:5, எபே 1:5

IV. **யோவான் ஸ்நானன்** - (மத் 3:1, மாற்கு 1:4; லூக் 3:1; யோவான் 1:6

யோவான் 1:15 யோவான் அவரைக் குறித்துச் சாட்சி கொடுத்து: எனக்குப் பின்வருகிறவர் எனக்கு முன்னிருந்தவர் ஆகையால் அவர் என்னிலும் மேன்மையுள்ளவர் என்று நான் சொல்லியிருந்தேனே, அவர் இவர்தான் என்று சத்தமிட்டுக் கூறினான்

"எனக்கு முன்னிருந்தவர்" இயேசு கிறிஸ்து அநாதிக் காலமாக இருக்கிறார் ஆகையினால் அவர் யோவானுக்கு முன்னிருந்தவர் அதே வேளையில் இந்த உலக ஊழியத்தில் இயேசு கிறிஸ்து யோவானுக்குப் பின்பே வருகிறார் (மத் 3:11; லூக்கா 3:17; யோவான் 1:31-33

V. **இயேசு கிறிஸ்து - கிருபை, சத்தியம் ஆகியவற்றின் ஆதாரம்** - (யோவான் 14:6, 12-26, 17:2)

யோவான் 1:16 அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின்மேல் கிருபை பெற்றோம்

யோவான் 1:17 எப்படியெனில் நியாயப் பிரமாணம் மோசேயின் மூலமாயக் கொடுக்கப்பட்டது கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின

யோவான் 1:18 தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்

பரிபூரணம் (fulness) - πλήρωμα - **pleerooma** - 4138

பல் வேறுபாடற்ற மொழிச்சொல் - அதிகம், நிறைவு, பரிபூரணம், சம்பூரணம் (fullness, abundance, completeness) - மனுஷருடைய நியாயமான எல்லாத் தேவைகளும் சந்திக்கப்படும் என்று சுவிசேஷம் வாக்குப்பண்ணுகிறது. (2கொரி 1:20, மத் 7:7-11; மத் 17:20, மத் 21:22, மாற்கு 9:23; மாற்கு 11:22-24, யோவான் 14:12-17; யோவான் 15:7,16 யோவான் 16:23-26

"கிருபையின்மேல் கிருபை" - நமது தேவைகளுக்கு ஏற்ற பிரகாரம் தேவன் தமது கிருபையை நமக்கு அளவில்லாமல் கொடுத்துக் கொண்டே இருப்பார் (எபி 4:14-16 எபி 10:19-38 யாக் 1:5 8

"நியாயப்பிரமாணம்" இது எப்போதுமே மனுஷரைக் குற்றப்படுத்திக் கொண்டேயிருக்கும். மார்க்க ரீதியாக மனுஷர் செய்ய வேண்டிய காரியங்களை அறிவுறுத்தும்.

யோவான் - தொகுப்புரை

1 அதிகாரம்

"மோசே" - யோவான் சுவிசேஷத்தில் மோசே 13 இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறார் யோவான் 1:17,45 யோவான் 3:14 யோவான் 5:45-46; யோவான் 6:32 யோவான் 7:19-23; யோவான் 8:5 யோவான் 9:28-29

"கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின" - மோசேக்கு முன்பாக நியாயப்பிரமாணம் இல்லை என்று கூறமுடியாது. அதுபோலவே இயேசு கிறிஸ்துவிற்கு முன்பாக கிருபையும் சத்தியமும் இல்லை என்றும் கூறமுடியாது. நியாயப்பிரமாணமே சத்தியம். புதிய ஏற்பாடே நியாயப்பிரமாணம் புதிய ஏற்பாட்டில் 1050 கட்டளைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கிற கருத்து கிருபையின் நிறைவு. இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயிற்று என்பதாகும். பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் ஓரளவு மட்டுமே பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களைப் புதிய ஏற்பாட்டுக்கால விசுவாசிகள் பரிபூரணமாக பெற்றுக் கொள்ளலாம்

"கண்டது" - ஒருவருடைய சொந்த கண்களினாலும், சொந்த மனதினாலும் காண்பது. தேவனைப் பலர் தங்கள் கண்களால் கண்டிருக்கிறார்கள் ஆதி 18:2-33; ஆதி 32:24-30; யாத் 24:10; யாத் 33:11 யோசு 5:13 ஏசா 6 எசே 1:26-28 தானி 7:9-14; தானி 10:5-6 அப் 7:56-59 வெளி 4:2-5 வெளி 5:1-7) ஆனால் அவர்கள் தேவனை முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே தேவனை வெளிப்படுத்தினார் தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை என்பது தேவனை ஒருவனும் முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை என்று பொருள்படும் குமாரன் வெளிப்படுத்துவதை மட்டுமே விசுவாசிகள் காணமுடியும். இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியானவரின் நிறைவினால் தேவனை முழுமையாகப் புரிந்து கொண்டவர் (யோவான் 3:34; அப் 10:38; ஏசா 11:1-2; ஏசா 61:1-2; லூக்கா 4:16-18

கண்டார் (seen) ὁράω horaoo - 3708

வினைச்சொல் - கண்டார், எச்சரிக்கையாயிரு, பார், காண், தரிசி

"பிதாவின் மடி" - (லூக்கா 6:38

வெளிப்படுத்தினார் (declared) - ἐξηγέομαι - exeegeomai - 1834

வினைச்சொல் - விவரித்துச் சொல், வெளிப்படுத்து (revealed, expounded) - இந்த வார்த்தை இந்த வசனத்திலும் லூக்கா 24:35. அப் 10:8; அப் 15:12,14. அப் 21:19 ஆகிய வசனங்களிலும் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது

zVI. யோவான் ஸ்நானன்

1. **யோவான் ஸ்நானன் தன்னைப் பற்றி கூறிய சாட்சி** - (1:15; 3:25; மத் 3:3; மாற்கு 1:3; லூக் 3:4.

யோவான் 1:19 எருசலேமிலிருந்து யூதர்கள் ஆசாரியரையும் லேவியரையும் யோவானிடத்தில் அனுப்பி: நீர் யார் என்று கேட்டபொழுது

யோவான் 1:20 அவன் மறுதலியாமல் அறிக்கை யிட்டதுமன்றி: நான் கிறிஸ்து அல்ல என்றும் அறிக்கையிட்டான்

யோவான் 1:21 அப்பொழுது அவர்கள் பின்னை யார்? நீர் எலியாவா என்று கேட்டார்கள் அதற்கு: நான் அவன் அல்ல என்றான் நீர் தீர்க்கதரிசியானவரா என்று கேட்டார்கள் அதற்கும் அல்ல என்றான்

யோவான் 1:22 அவர்கள் பின்னும் அவனை நோக்கி: நீர் யார்? எங்களை அனுப்பினவர்களுக்கு நாங்கள் உத்தரவு சொல்லும்படிக்கு, உம்மைக்குறித்து என்ன சொல்லுகிறீர் என்று கேட்டார்கள்

யோவான் 1:23 அதற்கு அவன் கர்த்தருக்கு வழியைச் செவ்வை பண்ணுங்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்னபடியே, நான் வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தமாயிருக்கிறேன் என்றான்

1 அதிகாரம்

யோவான் 1:24 அனுப்பப்பட்டவர்கள் பரிசேயராயிருந்தார்கள்

"நான் கிறிஸ்து அல்ல" - யோவான் ஸ்நானன் கிறிஸ்துவோ எலியாவோ அல்லது கடந்த காலத்தில வாழ்ந்த தீர்க்கதரிசியோ அல்ல. அவன் ஒரு சாதாரண மனுஷன் சகரியாவிற்கும் எலிசபெத்திற்கும்பிறந்தவன் லூக்கா 1:24-57) அவன் எலியாவின் ஆவியோடும் வல்லமையோடும் வந்தான் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக எலியா என்ன செய்வாரோ அதை இயேசு கிறிஸ்துவின் முதலாம வருகைக்கு முன்பாக இஸ்ரவேல ஜனங்களுக்குச் செய்வதற்காக யோவான் ஸ்நானன் வந்தான் மல 4:5-6 லூக்கா 1:17) இந்தக் கருத்து மத் 11:14 மத் 17:10-13 ஆகிய வசனங்களை விளக்கும்.

"தீர்க்கதரிசியானவர்" - மோசே முன்னறிவித்த தீர்க்கதரிசியானவரா என்று கேட்கிறார்கள் உபா 18:15-18 அப 3:22-23; அப 7:37

யோவான் சுவிசேஷத்தில நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 1

"கர்த்தருக்கு வழியைச் செவ்வை பண்ணுங்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்னபடியே, நான் வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தமாயிருக்கிறேன்" (யோவான் 2:3 ஏசா 40:3

"ஏசாயா" - யோவான சுவிசேஷத்தில ஏசாயாவின பெயர் நானகு இடத்தில பயன்படுத்தப்பட்டிருக்கிறது. யோவான 1:23 யோவான் 12:38-41

2. யோவான் ஸ்நானன் தன் ஞானஸ்நானத்தைப் பற்றி கூறிய சாட்சி - (3:25; மத் 3:11; மார்கு 1:4; லூக் 3:3,16

யோவான் 1:25 அவர்கள் அவனை நோக்கி நீர் கிறிஸ்துவுமல்ல எலியாவுமல்ல தீர்க்கதரிசியானவருமல்ல வென்றால ஏன் ஞானஸ்நானங் கொடுக்கிறீர் என்று கேட்டார்கள்

யோவான் 1:26 யோவான் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக, நான் ஜலத்தினாலே ஞானஸ்நானங்கொடுக்கிறேன்; நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர் உங்கள் நடுவிலே நிற்கிறார்

யோவான் 1:27 அவர் எனக்குப் பின்வந்தும் என்னிலும் மேன்மையுள்ளவர் அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்கும் நான் பாத்திரனல்ல என்றான்

யோவான் 1:28 இவைகள் யோர்தானுக்கு அக்கரையில யோவான் ஞானஸ்நானங் கொடுத்த பெத்தாபராவிலே நடந்தன

"ஞானஸ்நானங் கொடுக்கிறீர்" - ஒருவர் யூதமார்க்கத்தில சேரும்போது அவருக்கு நியாயப்பிரமாண முறைமையின பிரகாரம் சுத்திகரிப்பு செய்வது வழக்கம் ஆலோசனைச் சங்கத்தின அனுமதியின் பேரிலேயே ஒருவரை யூதமார்க்கத்தில சேர்க்க முடியும் மூன்று நியாயசாஸ்திரிகள அல்லது வேதபாரகர்கள சுத்திகரிப்பு செய்யும்போது உடனிருப்பார்கள யோவான் ஸ்நானன யூதருடைய முறைமையைப பின்பற்றாமல ஞானஸ்நானம் கொடுத்து வந்தான யூதமார்க்கத்துத் தலைவர்களுக்கு அவனுடைய செயல் பிடிக்கவில்லை பரிசேயரின பழக்கவழக்கங்களுக்கு யோவான ஸ்நானன் முரணபாடாகச் செயகிறான

"நான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுக்கிறேன நீங்கள அறியாதிருக்கிற ஒருவர் உங்கள நடுவிலே நிற்கிறார்" - மேசியாவை இஸ்ரவேல ஜனங்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். யோவான ஸ்நானன ஞானஸ்நானம் கொடுப்பதற்கு இதுவே காரணம் (யோவான் 1:26-31

"பெத்தாபரா" (Bethabara) - பழைய ஏற்பாட்டு எபிரெய கையெழுத்துப் பிரதிகளில பலர் இந்தக் கிராமத்தைப பெத்தானியா (Bethania) என்றே கூறுகின்றனர் எரிகோவிற்கு எதிரே யோர்தான் நதிக்கரை ஓரமாக இந்தக் கிராமம் அமைந்திருந்தது (நியா 7:24, யோவான் 10:39-42)

1 அதிகாரம்

3. **யோவான் ஸ்நானன் இயேசு கிறிஸ்துவைப் பற்றி கூறிய சாட்சி** - (3:25; மத் 3:11, மாற்கு 1:7 லூக் 3:16

யோவான் 1:29 மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக் குட்டி.

யோவான் 1:30 எனக்குப்பின் ஒருவர் வருகிறார், அவர் எனக்கு முன்னிருந்த படியால் என்னிலும் மேன்மையுள்ளவரென்று நான் சொன்னேனே, அவர் இவர்தான்.

யோவான் 1:31 நானும் இவரை அறியாதிருந்தேன்; இவர் இஸ்ரவேலுக்கு வெளிப்படும் பொருட்டாக, நான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுக்க வந்தேன் என்றான்.

யோவான் 1:32 பின்னும் யோவான் சாட்சியாகச் சொன்னது: ஆவியானவர் புறாவைப் போல வானத்திலிருந்திறங்கி, இவர்மேல் தங்கினதைக் கண்டேன்.

யோவான் 1:33 நானும் இவரை அறியாதிருந்தேன்; ஆனால் ஜலத்தினால் ஞானஸ்நானங் கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்: ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங்கொடுக்கிறவர் என்று எனக்குச் சொல்லியிருந்தார்.

யோவான் 1:34 அந்தப்படியே நான் கண்டு, இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்துவருகிறேன் என்றான்.

தீர்க்கதரிசன எண் - 1

"இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக் குட்டி............" (யோவான் 1:29-33) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"தேவஆட்டுக்குட்டி" - வேதாகமத்தில் இயேசு கிறிஸ்துவிற்கு அடையாளப் பெயராக தேவஆட்டுக்குட்டி 32 இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (ஏசா 53:7 யோவான் 1:29,36; அப 8:32; 1பேதுரு 1:19 வெளி 5:6-13; வெளி 6:1,16; வெளி 7:9-17 வெளி 12:11; வெளி 13:8; வெளி 14:1-10 வெளி 15:3; வெளி 17:14; வெளி 19:7-9 வெளி 21:9-27; வெளி 22:1-3.

சுமந்து தீர்க்கிற (taketh away) - αἴρω - airoo - 142

வினைச்சொல் - சுமந்து தீர்க்கிற - பாவத்தை அகற்றுதல், குற்ற உணர்வையும் தண்டனையையும் அகற்றுதல் (1பேதுரு 2:24 சங் 103:12; 1யோவான் 3:5, மாற்கு 16:18

"பாவம்" - இலக்கைத் தவறவிடுதல் (missing the mark). செய்ய வேண்டியவற்றைச் செய்யாமல் இருப்பதும் செய்ய வேண்டாதவற்றைச் செய்வதும் பாவம் இது சிந்தையாகவோ, செயலாகவோ, வார்த்தையாகவோ இருக்கலாம். இலக்கை எவ்வாறு குறிபார்த்து எய்வது அதாவது இலக்கை எவ்வாறு தவறவிடாமல் இருப்பது என்பதை உபதேசம் பண்ணுவதற்காகவே இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார் (தீத்து 2:11-14; 1யோவான் 2:1-2,29, 1யோவான் 3:9- 1யோவான் 5:1 4,18

பாவம் (sin) - ἁμαρτία - hamartia - 266

பெண்பால் வினைப்பெயர் - பாவம், தோல்வி

(அ) பாவச் செயல் (1கொரி 15:17

(ஆ) பாவத்தில் மூழ்கியிருத்தல். எப்பொழுதும் பாவத்தில் இருத்தல் (யோவா 1:21), (ரோம 3:1

"அவர் எனக்கு முன்னிருந்தபடியால்" - (மீகா 5:2; ஏசா 9:6-7; எபி 1:8, வெளி 1:8

1 அதிகாரம்

"நானும் இவரை அறியாதிருந்தேன்" - யோவான் இயேசு கிறிஸ்துவை அறியவில்லை இயேசுவை அனுப்பிய பிதாவை யோவான் அறிந்திருந்தான் (யோவான் 1:33) யோவானும் இயேசுவும் உறவினர் என்பதை வேதவாக்கியம் தெளிவாக வெளிப்படுத்தவில்லை (லூக்கா 1:36).

வெளிப்படுத்து (manifest) - φανερόω - phaneroo - 5319

வினைச்சொல் - வெளியரங்கமாக்கு, வெளிப்படுத்து, தரிசனமாகு, விளங்கப்பண்ணு, தோன்று (to bring to light) - இஸ்ரவேல் ஜனங்களுக்கு மேசியாவை அறிமுகப்படுத்துதல் அல்லது வெளிப்படுத்துதல் என்று பொருள் (யோவான் 1:31, மத் 15:24)

சாட்சியாகச் சொல் (bare record) - μαρτυρέω - martyreoo - 3140

வினைச்சொல் - சாட்சியாயிரு, சாட்சிகொடு, சாட்சிசொல், சாட்சியாக அறிவி (bear witness)

மேசியாவிற்குச் சாட்சிகள்

1 பிதா (யோவான் 5:32-37; யோவான் 8:18)

2 குமாரன் (யோவான் 8:14; யோவான் 18:37)

3 பரிசுத்த ஆவியானவர் (யோவான் 15:26, யோவான் 16:13-15)

4 எழுதப்பட்ட வார்த்தை (யோவான் 1:45; யோவான் 5:39-46)

5 இயேசு கிறிஸ்துவின் கிரியைகள் (யோவான் 5:17, 36; யோவான் 10:25; யோவான் 14:11; யோவான் 15:24

6 யோவான் ஸ்நானன் (யோவான் 1:7; யோவான் 5:32-35

7 சீஷர்கள் (யோவான் 15:27; யோவான் 19:35; யோவான் 21:24

தங்கியிரு (abode) - μένω - menoo
3306

வினைச்சொல் - தங்கியிரு, நிலைத்திரு, தரித்திரு, இரு, வாசம்பண்ணு, நிலைக்கொண்டிரு, நிலைநில் (abide, dwell, remain) - யோவான் சுவிசேஷத்தில் இந்த வார்த்தை 41 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது மற்ற சுவிசேஷங்களில் 12 தடவைகளே பயன்படுத்தப்பட்டிருக்கிறது

"என்னை அனுப்பினவர்" - திரித்துவத்திற்கு இந்த வாக்கியம் ஒரு சான்றாகும் யோவான் ஸ்நானன் குமாரனை அறியவில்லை பிதாவை அறிந்திருந்தார் பரிசுத்த ஆவியானவர் பிதாவிடத்திலிருந்து இறங்கி குமாரன்மீது தங்குவதைக் கண்டார் (மத் 3:16-17; லூக்கா 3:22).

"கண்டபோது" - கண்களினால் பார்ப்பது மட்டுமல்ல காணும் பொருளை முழுமையாக உணருவது. ஒரே இடத்தில் ஒரே வேளையில் பிதாவையும் குமாரனையும் யோவான் தனது கண்களால் காண்கிறான் (தானி 7:9-14, அப் 7:55; வெளி 5:7; வெளி 7:10) பிதாவையும் குமாரனையும் தவிர பரிசுத்த ஆவியானவரைத் தனிநபராகக் காண்கிறான்

காண் (see) - εἴδω - eidoo - 1492

வினைச்சொல் - காண், அறி, பார், தெரிந்திரு, நோக்கு, உணர், அறிந்திரு, விளங்கு

"ஆவியானவர் இறங்கி இயேசு கிறிஸ்துவின்மேல் தங்கினார்" - ஏசா 11:2, ஏசா 42:1; ஏசா 61:1 ஆகிய வசனங்களின் நிறைவேற்றம். மத் 3:16-17, மாற்கு 1:10, லூக்கா 3:22 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

"பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுக்கிறவர்" - இயேசு கிறிஸ்துவே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் கொடுக்கிறவர் (மத் 3:11; லூக்கா 3:16, லூக்கா 24:49; யோவான் 1:33, யோவான் 7:37-39; யோவான் 14:16-17, 26, யோவான் 15:26; அப் 1:4-8, அப் 11:16

1 அதிகாரம்

VII. இயேசு கிறிஸ்துவின் ஊழியமும் உபதேசமும் - (மத் 4:14 மாற்கு 1:14; லூக் 4:14)

1. யோவான் ஸ்நானன் ஆதாயம் பண்ணிய இரண்டு சீஷர்கள்

யோவான் 1:35 மறுநாளிலே யோவானும் அவனுடையசீஷரில் இரண்டுபேரும் நிற்கும்போது,

யோவான் 1:36 இயேசு நடந்து போகிறதை அவன் கண்டு: இதோ தேவ ஆட்டுக்குட்டி என்றான்

யோவான் 1:37 அவன் அப்படிச் சொன்னதை அவ்விரண்டு சீஷரும் கேட்டு, இயேசுவுக்குப் பின்சென்றார்கள்

யோவான் 1:38 இயேசு திரும்பி அவர்கள் பின் செல்லுகிறதைக் கண்டு, என்ன தேடுகிறீர்கள் என்றார் அதற்கு அவர்கள்: ரபீ, நீர் எங்கே தங்கியிருக்கிறீர் என்று கேட்டார்கள், ரபீ என்பதற்குப் போதகரே என்று அர்த்தமாம்

யோவான் 1:39 அவர்: வந்து பாருங்கள் என்றார் அவர்கள் வந்து அவர் தங்கியிருந்த இடத்தைக் கண்டு, அன்றையத்தினம் அவரிடத்தில் தங்கினார்கள் அப்பொழுது ஏறக்குறையப் பத்துமணி வேளையாயிருந்தது.

"அவனுடையசீஷரில் இரண்டுபேர்" ஒருவன் அந்திரேயா (யோவான் 1:40) மற்றவன் அப்போஸ்தலனாகிய யோவானாக இருக்க வேண்டும் இந்தப் புஸ்தகத்தில் இவனுடைய பெயர் எங்கும் குறிப்பிடப்படவில்லை (யோவான் 19:35, யோவான் 20:2-4, யோவான் 21:2,7,20-25, லூக்கா 24:13).

காண் (looking upon) - ἐμβλέπω emblepoo 1689

விணைச்சொல் - கவனித்துப்பார், காண், பார், கூர்ந்து கவனி, கவனமாகப் பார் (to look with fixed eyes upon, look intently)

"தேவஆட்டுக்குட்டி" - (யோவான் 1:29)

"ரபீ" - (லூக்கா 9:38)

"ரபீ என்பதற்குப் போதகரே என்று அர்த்தமாம்" - அர்த்தம் என்றால் வியாக்கியானம் என்று பொருள் (மாற்கு 4:22, யோவான் 1:42; யோவான் 9:7; எபி 7:2)

அர்த்தம் (interpret) - ἑρμηνεύω - hermeeneuoo - 2059

விணைச்சொல் - அர்த்தம்

"பத்துமணிவேளை" - மாலை 4 மணி

2. அந்திரேயா ஆதாயம் பண்ணிய பேதுரு

யோவான் 1:40 யோவான் சொன்னதைக் கேட்டு, அவருக்குப் பின்சென்ற இரண்டுபேரில் ஒருவன் சீமோன் பேதுருவின் சகோதரனாகிய அந்திரேயா என்பவன்

யோவான் 1:41 அவன் முதலாவது தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு, மேசியாவைக் கண்டோம் என்று சொன்னான்; மேசியா என்பதற்குக் கிறிஸ்து என்று அர்த்தமாம்.

யோவான் 1:42 பின்பு, அவனை இயேசுவினிடத்தில் கூட்டிக் கொண்டுவந்தான் இயேசு அவனைப் பார்த்து நீ யோனாவின் மகனாகிய சீமோன், நீ கேபா என்னப்படுவாய் என்றார்; கேபா என்பதற்குப் பேதுரு என்று அர்த்தமாம்.

"மேசியாவைக் கண்டோம்" மேசியாவைக் கண்டவர்களுடைய ஜீவியம் மாற்றமடையும். (2 கொரி 5:17-18) மேசியாவைக் கண்டவர்கள் மற்றவர்களை மேசியாவிடம் அழைத்து வருவார்கள் சபையிலும், பழைய விசுவாசிகள் புதிய விசுவாசிகளை அழைத்துக் கொண்டு வரவேண்டும்.

1 அதிகாரம்

"மேசியா" - அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்பது இந்த வார்த்தையின் பொருள் இது ஒரு எபிரெய வார்த்தை. யோவான் 1:41; யோவான் 4:25 சாமு 2:10,35; சங் 2:2; தானி 9:25-26) ஆசாரியர்களைக் குறிப்பதற்கு இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (லேவி 4:3-5; லேவி 6:22), இராஜாக்கள் (சாமு 12:3-5; 1சாமு 16:6; 1சாமு 24:6-10 சாமு 26:9-23; 2சாமு 1:14-21, 2சாமு 19:21; 2சாமு 22:51; 2சாமு 23:1) தீர்க்கதரிசிகள் (1நாளா 16:22; சங் 105:15, சக 4:14) ஆகியோரையும் இந்தச் சொல குறிப்பிடுகிறது. பாபிலோனை அகற்றுவதற்குத் தேவன் தெரிந்தெடுத்த புறஜாதி ராஜாவிற்கும், இந்தப் பெயர் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (ஏசா 45:1) லூசிபரைக் குறிப்பதற்குக் கூட இதனுடன் தொடர்புடைய ஒரு வார்த்தை பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (எசே 28:14) மேசியா என்னும் எபிரெயச் சொல புதிய ஏற்பாட்டின் கிரேக்க மொழியிலும், மேசியா என்றே (mashiyach)எழுதப்பட்டிருக்கிறது. (மத் 1:1)

மேசியா (Messias) - מָשִׁיחַ - maw-shee'-akh - 4899

ஆண்பால் பெயர்ச்சொல - மேசியா அபிஷேகம் பெற்றவர், அபிஷேகம் பண்ணப்பட்டவர்

கிறிஸ்து - Χριστός - Christos - 5547

பெயர்ச்சொல் - கிறிஸ்து

"அபிஷேகிக்கப்பட்டவர்"

"யோனா" (Jona) - யோவான் என்னும் பெயரின் அராமாயிக் மொழிவடிவம்

"கேபா" (Cephas) கல் என்னும் பொருளைக் குறிக்கும் அராமாயிக் மொழிச்சொல். (1கொரி 1:12; 1கொரி 3:22; கொரி 9:5, 1கொரி 15:5; கலா 2:9)

பேதுரு (Peter) Πέτρος Petros 4074

ஓர் ஆணின் பெயர் பேதுரு, கேபா, கல (யோவான் 1:42 - புதிய ஏற்பாட்டில் 161 இடங்களில் "பேதுரு" என்றே இந்தச் சொல் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. (மத் 16:18) ஒரு மனுஷனை இயேசு கிறிஸ்து முதன் முறையாகப் பார்க்கும் போதே அவன் எப்பேர்ப்பட்டவன் என்பதைத் தீர்மானம் பண்ணி விடுகிறார் பேதுரு உறுதியானவன் ஆத்துமாவில் பெலமுள்ளவன்

3. இயேசுவானவர் நாமே ஆதாயம் பண்ணிய பிலிப்பு

யோவான் 1:43 மறுநாளிலே இயேசு கலிலேயாவுக்குப் போக மனதாயிருந்து, பிலிப்புவைக் கண்டு, நீ எனக்குப் பின்சென்று வா என்றார்

யோவான் 1:44 பிலிப்பென்பவன் அந்திரேயா பேதுரு என்பவர்களுடைய ஊராகிய பெத்சாயிதா பட்டணத்தான்

"கலிலேயா" - இயேசு கிறிஸ்து தமது ஊழியத்தை இங்கு ஆரம்பிக்கிறார் (மத் 4:12; மாற்கு 1:14 லூக்கா 4:14

"பெத்சாயிதா"(Bethsaida)- லூக்கா 9:10

4. பிலிப்பு ஆதாயம் பண்ணிய நாத்தான்வேல்

யோவான் 1:45 பிலிப்பு நாத்தான்வேலைக் கண்டு, நியாயப்பிரமாணத்திலே மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம், அவர் யோசேப்பின் குமாரனும் நாசரேத்தூரானுமாகிய இயேசுவே என்றான்

யோவான் 1:46 அதற்கு நாத்தான்வேல்: நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக் கூடுமோ என்றான். அதற்குப் பிலிப்பு: வந்து பார் என்றான்

"நாத்தான்வேல்" இந்தப் பெயரின் பொருள் தேவனுடைய வெகுமதி என்பதாகும். பர்த்தொலொமேயுவும் (Bartholomew) நாத்தான்வேலும் ஒரே நபராக இருக்கலாம். அப்போஸ்தலர்களின் பெயர் பட்டியலில் இவனுடைய பெயர் பிலிப்புடன் சேர்ந்து வருகிறது. (மத் 10:3, மாற்கு 3:18; லூக்கா 6:14, யோவான் 21:2, அப 1:13) நாத்தான்வேலின் சுபாவம், அவன் இயேசுவைச் சந்தேகப்பட்டது கேள்விக் கேட்டது விசுவாச அறிக்கை செய்தது ஆகியவற்றை யோவான் 1:45-51 ஆகிய வசனங்களில நாம் வாசித்தறியலாம்.

1 அதிகாரம்

"யோசேப்பின் குமாரன்" - இவை பிலிப்பு கூறிய வார்த்தையாகும். அக்காலத்து ஜனங்கள் இயேசுவை யோசேப்பின் குமாரன் என்றே கூறினார்கள் (மத் 13:55)

"நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக் கூடுமா" - இயேசு கிறிஸ்துவினால் மட்டுமே பூமியிலுள்ள மனுஷருக்கு நன்மை உண்டாகும்.

5. நாத்தான்வேலின் சந்தேகங்கள் நிவர்த்தியாகிறது

யோவான் 1:47 இயேசு நாத்தான்வேலைத் தம்மிடத்தில் வரக்கண்டு அவனைக் குறித்து: இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்றார்.

யோவான் 1:48 அதற்கு நாத்தான்வேல்: நீர் என்னை எப்படி அறிவீர் என்றான். இயேசு அவனை நோக்கி: பிலிப்பு உன்னை அழைக்கிறதற்கு முன்னே, நீ அத்திமரத்தின் கீழிருக்கும்போது உன்னைக் கண்டேன் என்றார்.

யோவான் 1:49 அதற்கு நாத்தான்வேல்: ரபீ, நீர் தேவனுடைய குமாரன், நீர் இஸ்ரவேலின் ராஜா என்றான்.

"இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன்" நாத்தான்வேலை இயேசு கிறிஸ்து பார்த்தவுடன் அவனுடைய சுபாவத்தை அப்படியே வெளிப்படுத்துகிறார் (யோவான் 1:42) யாக்கோபு ஜெபத்தில் ஜெயம் பெற்றதினால் கபடற்றவன் என்னும் பெயரைப் பெற்றான் (ஆதி 32:24-32) கபடற்றவன் என்பதற்கு ஏமாற்றாதவன் என்று பொருள்

"நீர் என்னை எப்படி அறிவீர்" - பரிசுத்த ஆவியானவரின் வரத்தினால் இயேசு கிறிஸ்து நாத்தான்வேலை அறிகிறார் (யோவான் 3:34; 1கொரி 12:4-11)

"ரபீ" - (லூக்கா 9:38)

"தேவனுடைய குமாரன்" - (மத் 16:16)

6. இயேசு கிறிஸ்துவின் முதலாவது தீர்க்கதரிசனம்

யோவான் 1:50 இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: அத்திமரத்தின் கீழே உன்னைக் கண்டேன் என்று நான் உனக்குச் சொன்னதினாலேயா விசுவாசிக்கிறாய், இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய் என்றார்.

யோவான் 1:51 பின்னும் அவர் அவனை நோக்கி: வானம் திறந்திருக்கிறதையும் தேவதூதர்கள் மனுஷ குமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இதுமுதல் காண்பீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

"அத்திமரத்தின் கீழே உன்னைக் கண்டேன் என்று நான் உனக்குச் சொன்னதினாலேயா விசுவாசிக்கிறாய்" - இயேசு கிறிஸ்து தமது கண்களால் நாத்தான்வேலைக் காண்பதற்கு முன்பாக அவனை ஆவியில் காண்கிறார். அதைத் தெரிந்தவுடன் நாத்தான்வேல் இயேசுவைத் தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிடுகிறான்.

தீர்க்கதரிசன எண் - 2

"இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய்____" (யோவான் 1:50-51) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேற்று நாத்தான்வேல் தேவனுடைய மகத்துவமான கிரியைகளைக் கண்டான். மூன்று வருஷங்களாக அவன் இயேசு கிறிஸ்துவோடு கூட இருந்து அவர் செய்த அற்புதங்களையெல்லாம் தன் கண்களால் பார்த்தான். யோவான் 1:51 எப்பொழுது நிறைவேறிற்று என்று கூறப்படவில்லை. இயேசு கிறிஸ்துவின் நித்திய ராஜ்யத்தில் இது நிறைவேறலாம். அப்போது வானம் திறந்திருக்கிறதையும் தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் தேவனுடைய நித்திய ராஜ்யத்தில் காணலாம். மத் 13:41-43 மத் 24:31; மத் 25:31; 2தெச 1:7

1 அதிகாரம்

"மெய்யாகவே மெய்யாகவே" - நிச்சயமாக என்றும் பொருள்படும். "ஆமென்" என்றும் இதற்குப் பொருள்கூறலாம். மெய்யாகவே மெய்யாகவே என்று யோவான் 25 இடங்களில் கூறியிருக்கிறார். யோவான் 1:51 யோவான் 3:3,5,11 யோவான் 5:19,24,25 யோவான் 6:26,32,47,53 யோவான் 8:34, 51, 58 யோவான் 10:1,7 யோவான் 12:24 யோவான் 13:16,20,21,38 யோவான் 14:12 யோவான் 16:20,23 யோவான் 21:18 இயேசு கிறிஸ்து சத்தியத்தைக் கூறுகிறார். அவரால் மட்டுமே ஒரு காரியத்தை இவ்வாறு வலியுறுத்திக் கூறமுடியும். யோவான் 14:6 மற்ற இடங்களிலெல்லாம் "மெய்யாகவே" என்று ஒரு தடவை மட்டுமே இந்த வார்த்தை பயன்படுத்தப் பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் 76 தடவைகளும் மத்தேயுவில் 30 தடவைகளும் மாற்குவில் 15 தடவைகளும், லூக்காவில் 8 தடவைகளும் இந்த வாக்கியம் வந்திருக்கிறது. சுவிசேஷ புஸ்தகங்களில் இயேசு கிறிஸ்து மட்டுமே "மெய்யாகவே" என்னும் வாக்கியத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்.

சுவிசேஷப் புஸ்தகங்கள் தவிர புதிய ஏற்பாட்டில் 21 தடவைகள் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. சுவிசேஷ புஸ்தகத்தில் இயேசு கிறிஸ்து "மெய்யாகவே" என்னும் வாக்கியத்தை 1?3 தடவைகள் பயன்படுத்தியிருக்கிறார் மற்ற 62 புஸ்தகங்களில் இதர ஆசிரியர்கள் இந்த வாக்கியத்தை 36 தடவைகள் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

"வானம் திறந்திருக்கிறதையும் தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இதுமுதல் காண்பீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்"

மனுஷகுமாரன் என்னும் வார்த்தை இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது. புதிய ஏற்பாட்டில் 88 தடவைகளும், தானி 7:13 -இல் ஒரு தடவையும் இந்த வார்த்தை இயேசு கிறிஸ்துவைக் குறிக்குமாறு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்து தேவனுடைய மனுஷன் மனுஷரை மீட்கிறவர் சாதாரண மனுஷருக்கும், இயேசுகிறிஸ்துவிற்கும் வித்தியாசம் ஏராளம் உள்ளன. இயேசு கிறிஸ்து மட்டுமே தேவனுடைய ஒரேபேறான குமாரன் மனுஷகுமாரன் (the Son of man

2 அதிகாரம்

7. இயேசுவானவர் செய்த முதலாவது அற்புதம்

யோவான் 2:1 மூன்றாம்நாளிலே கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே ஒரு கலியாணம் நடந்தது. இயேசுவின் தாயும் அங்கேயிருந்தாள்.

யோவான் 2:2 இயேசுவும் அவருடைய சீஷரும் அந்தக் கலியாணத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள்.

யோவான் 2:3 திராட்சரசங்குறைவுபட்டபோது இயேசுவின் தாய் அவரை நோக்கி: அவர்களுக்குத் திராட்சரசம் இல்லை என்றாள்.

யோவான் 2:4 அதற்கு இயேசு: ஸ்திரீயே, எனக்கும் உனக்கும் என்ன, என் வேளை இன்னும் வரவில்லை என்றார்.

யோவான் 2:5 அவருடைய தாய் வேலைக்காரரை நோக்கி: அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ அதின்படி செய்யுங்கள் என்றாள்.

யோவான் 2:6 யூதர்கள் தங்களைச் சுத்திகரிக்கும் முறைமையின்படியே, ஒவ்வொன்று இரண்டு மூன்று குடம் தண்ணீர் கொள்ளத்தக்க ஆறு கற்சாடிகள் அங்கே வைத்திருந்தது.

யோவான் 2:7 இயேசு வேலைக்காரரை நோக்கி: ஜாடிகளிலே தண்ணீர் நிரப்புங்கள் என்றார்; அவர்கள் அவைகளை நிறைய நிரப்பினார்கள்.

யோவான் 2:8 அவர் அவர்களை நோக்கி: நீங்கள் இப்பொழுது மொண்டு, பந்தி விசாரிப்புக் காரனிடத்தில் கொண்டுபோங்கள் என்றார், அவர்கள் கொண்டுபோனார்கள்.

யோவான் 2:9 அந்தத் திராட்சரசம் எங்கேயிருந்து வந்ததென்று தண்ணீரை மொண்ட வேலைக்காரருக்குத் தெரிந்ததேயன்றி பந்திவிசாரிப்புக் காரனுக்குத் தெரியாததினால், அவன் திராட்சரசமாய் மாறின தண்ணீரை ருசிபார்த்தபோது மணவாளனை அழைத்து;

யோவான் 2:10 எந்த மனுஷனும் முன்பு நல்ல திராட்சரசத்தைக் கொடுத்து, ஜனங்கள் திருப்தியடைந்த பின்பு, ருசிகுறைந்ததைக் கொடுப்பான், நீரோ நல்ல ரசத்தை இதுவரைக்கும் வைத்திருந்தீரே என்றான்.

யோவான் 2:11 இவ்விதமாக இயேசு இந்த முதலாம் அற்புதத்தைக் கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே செய்து, தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார்; அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்.

"மூன்றாம்நாள்" - இயேசு கிறிஸ்து தமது ஊழியத்தை ஆரம்பிப்பதற்காக யோர்தானிலிருந்து புறப்பட்டு மூன்று நாட்களுக்குப் பின்பு.

"கலியாணம்" - கலியாண விருந்து (மத் 22:1-4). கிழக்கு தேசங்களில் கலியாண விருந்து ஒருவாரகாலம் நடைபெறும்.

"கலிலேயாவிலுள்ள கானா" - நாசரேத்திலிருந்து 7 மைல் தொலைவிலுள்ள ஊர். ஆசேரில் ஒரு கானா ஊர் உள்ளது. இவ்விரண்டு ஊர்களுக்கும் வேறுபடுத்திக் காண்பிப்பதற்காக இந்த ஊர் கலிலேயாவிலுள்ள கானா ஊர் என்று அழைக்கப்பட்டது.

"சீஷர்" - இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தில் முதலாவது வாரத்தில் அவரோடு எத்தனை சீஷர்கள் இருந்தார்கள் என்று தெரியவில்லை.

"திராட்சரசங்குறைவுபட்டபோது" - திராட்சரசம் தீர்ந்துவிட்டது.

"திராட்சரசம்" - ஏசா 65:8

2 அதிகாரம்

"ஸ்திரீயே" - தமது தாயை ஸ்திரீயே என்று அழைப்பது அவமரியாதையான வார்த்தையல்ல கிழக்கு தேசத்தில இது மரியாதைக்குரிய வார்த்தையே (மத் 15:28 யோவான் 4:21 யோவான் 19:26; யோவான் 20:15)

"எனக்கும் உனக்கும் என்ன" - இந்த விஷயத்தில நான் உனக்கு என்ன செய்ய வேண்டும். இயேசு கிறிஸ்து அற்புதம் செய்யக் கூடிய வேளை இன்னும் பூரணமாக வரவில்லை. ஒருவேளை திராட்சரசம் முழுவதுமாகக் காலியாவது வரைக்கும் பொறுத்திருக்குமாறு கூறியிருக்கலாம். முழுவதும் காலியான பின்பு அற்புதம் செய்தால அது மிகவும் சிறப்பாக இருக்கும். தேவனுடைய மகிமை பூரணமாக வெளிப்படும்

"அவருடைய தாய்" - யோவான் சுவிசேஷத்தில மரியாளின் பெயர் குறிப்பிடப்படவில்லை (யோவான் 19:26-27)

"அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ அதின்படி செய்யுங்கள்" இந்தச சுவிசேஷத்தில மரியாள கூறியதாக எழுதப்பட்டிருக்கும் கடைசி வார்த்தைகள

"ஆறு கற்சாடிகள" - விருந்தினர்களின எண்ணிக்கைக்கேற்ப அங்கு ஆறு கற்சாடிகளைக் கொண்டு வருகிறார்கள

"பந்திவிசாரிப்புக்காரன" - மணவாளனின சிநேகிதனாக இருக்கலாம் அல்லது பந்தி பரிமாறுவதற்குப பொறுப்பான நபராக இருக்கலாம்

"எந்த மனுஷனும் முன்பு நலல திராட்சரசத்தைக் கொடுப்பான்" - இது மனுஷருடைய பழக்கம் ஆனால தேவனோ எப்போதும் நல்லதையே கொடுக்கிறா

"திருப்தியடைந்தபின்பு" - போதுமான அளவு திராட்சரசம் பருகிய பின்பு குடித்து வெறித்திருப்பது என்று பொருளபடாது

"முதலாம் அற்புதம்" - ஒரு சில தள்ளுபடி ஆகமங்களில் (apocryphal books) இயேசு கிறிஸ்து இன்னும் அநேக அற்புதங்களைச் செய்ததாக எழுதியிருக்கிறார்கள் அவற்றைப் பரிசுத்த ஆவியானவர் ஏவியதாக நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆகையினால் வேதவாக்கியத்தின் பிரகாரம் இதுவே முதலாம் அற்புதமாகும்.

"அற்புதம்" - இதன் கிரேக்க வார்த்தை "சேமேயோன்" (seemeion) தேவனுடைய கிரியையை உறுதிபணணும் நிகழச்சி. ஓர் அடையாளம். இந்த வார்த்தை பல்வேறு விதமாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது 50 இடஙகளில அடையாளம் (sign) எனவும், 23 இடஙகளில அறபுதம் (miracle) எனவும் 3 இடங்களில ஆச்சரியம் (wonder) எனவும் ஒரு இடத்தில் அடையாளம் (token) எனவும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது

தேவனுடைய அழைப்பை உறுதி பண்ணுவதற்காகவும் தேவனுடைய ஊழியத்தை உறுதிபண்ணுவதறகாகவும் தேவனுடைய பிளளைகள அடையாளங்களையும் அறபுதங்களையும் செய்தார்கள் (மத் 12:38; மத் 16:1-4; மாறகு 8:11 மாறகு 16:17-20; லூக்கா 11:16,29; லூக்கா 23:8; யோவான் 2:11,18,23; யோவான் 3:2; யோவான் 4:54 யோவான் 6:2,14,26,30; யோவான 7:31 யோவான 9:16 யோவான் 10:41 யோவான 11:47 யோவான 12:18,37 யோவான் 20:30; அப் 2:22,43; அப 8:6; 1கொரி 1:22; ரோமர் 15:19

தேவனுடைய வலலமை அற்புதஙகளாலும் அடையாளஙகளாலும் உறுதியாயிறறு களளபோதகாகளுககு எதிராகத் தேவனுடைய பிளளைகள சத்திய வசனஙகளை உபதேசம் பணணியபோது காததா தமது வசனஙகளை அடையாளங்களினாலும் அற்புதஙகளினாலும் உறுதிபணணினாா (மத் 24:24; மாற்கு 13:22, 2தெச 2:8-12; வெளி 13:13-18 வெளி 16:14 வெளி 19:20)

கடைசி நாட்களில் சாத்தான அறபுதங்களையும், அடையாளஙகளையும் செய்து ஜனஙகளை வஞ்சிப்பான் தமது களள உபதேசஙகளை ஜனங்களுடைய இருதயத்தில வஞ்சனையாக போதிப்பான் சாததானுடைய வலலமையைவிட தேவனுடைய வல்லமை பெரிது. கர்த்தர் தமது பிளளைகளுக்குத் தமது வலலமையை வாக்குபணணியிருக்கிறாா (மத் 17:20, மத் 18:18 மத் 21:22, மாற்கு 9:23, மாற்கு 11:22-24; மாற்கு 16:15-20, லூககா 10:19; யோவான் 14:12; அப் 1:8

2 அதிகாரம்

அற்புதம் (miracle) - σημεῖον - seemeion - 4592

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - அடையாளம், அற்புதம், அதிசயம்

"தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார்" - தேவன் தம்முடைய மகிமையை வெளிப்படுத்துவதற்காகவே அற்புதங்களைச் செய்கிறார். மனுஷருடைய பலவீனத்தினாலும், தோல்வியினாலும், பாவத்தினாலும், வியாதியினாலும் தேவன் மகிமையடைவதில்லை. தம்முடைய பிள்ளைகளின் பரிசுத்தத்தினாலும், பலத்தினாலும், வெற்றியினாலும், ஆரோக்கியத்தினாலுமே தேவன் மகிமையடைகிறார்.

8. கப்பர்நகூமை இயேசு தமது வழிய ஸ்தலமாக ஆக்குகிறார் - மத் 4:13; மாற்கு 1:21; லூக் 4:31)

யோவான் 2:12 அதன்பின்பு அவரும் அவருடைய தாயாரும் அவருடைய சகோதரரும் அவருடைய சீஷரும் கப்பர்நகூமுக்குப்போய், அங்கே சிலநாள் தங்கினார்கள்.

"கப்பர்நகூமுக்குப்போய், அங்கே சிலநாள் தங்கினார்கள்" - கப்பர்நகூம் கலிலேயா கடற்கரையிலுள்ள ஊர். இந்த ஊரிலிருந்து கானா ஊர் 700 அடி உயரத்தில் இருந்தது.

"இயேசுவின் சகோதரர்" - (லூக்கா 8:19)

9. தேவாலயத்தின் முதல்வது சுத்திகரிப்பு - (மத் 21:12)

யோவான் 2:13 பின்பு யூதருடைய பஸ்காபண்டிகை சமீபமாயிருந்தது. அப்பொழுது இயேசு எருசலேமுக்குப் போய்,

யோவான் 2:14 தேவாலயத்திலே ஆடுகள் மாடுகள் புறாக்களாகிய இவைகளை விற்கிறவர்களையும் காசுக்காரர் உட்கார்ந்திருக்கிறதையும் கண்டு,

யோவான் 2:15 கயிற்றினால் ஒரு சவுக்கையுண்டு பண்ணி, அவர்கள் யாவரையும் ஆடுமாடுகளையும் தேவாலயத்துக்குப் புறம்பே துரத்திவிட்டு, காசுக்காரருடைய காசுகளைக் கொட்டி, பலகைகளைக் கவிழ்த்துப் போட்டு,

யோவான் 2:16 புறாவிற்கிறவர்களை நோக்கி: இவைகளை இவ்விடத்திலிருந்து எடுத்துக் கொண்டு போங்கள்; என் பிதாவின் வீட்டை வியாபார வீடாக்காதிருங்கள் என்றார்.

யோவான் 2:17 அப்பொழுது, உம்முடைய வீட்டைக் குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது என்று எழுதியிருக்கிறதை அவருடைய சீஷர்கள் நினைவுகூர்ந்தார்கள்.

"யூதருடைய பஸ்காபண்டிகை" - ஆரம்பத்தில் இது "கர்த்தருடைய பஸ்காபண்டிகை" (Lord's Passover) என்று அழைக்கப்பட்டது (யாத் 12:11,27; லேவி 23:5; எண் 28:16). அதன் பின்பு இந்த பண்டிகையை யூதருடைய பஸ்காபண்டிகை (Jews' Passover) என்று அழைத்தார்கள் (யோவான் 2:13; யோவான் 6:4; யோவான் 11:55).

கர்த்தருடைய பண்டிகைகள் (லேவி 23:2) இப்போது யூதருடைய பண்டிகைகள் ஆயிற்று. (யோவான் 5:1; யோவான் 6:4; யோவான் 7:2; யோவான் 11:56; யோவான் 19:42) கர்த்தருடைய கற்பனைகளையும் யூதர்கள் மாற்றிவிட்டார்கள். மனுஷருடைய பாரம்பரியங்களைக் கைக்கொள்கிறார்கள் (மத் 15:1-9; மத் 16:6-12).

"தேவாலயத்திலே ஆடுகள் மாடுகள் புறாக்களாகிய இவைகளை விற்கிறவர்கள்" - யோசேபஸ் (Josephus) என்னும் திருச்சபை வரலாறு ஆசிரியர் பஸ்கா பண்டிகையைப் பற்றி எழுதியிருக்கிறார். தேவாலயத்தில் பஸ்கா பண்டிகையின்போது 256,500 விலங்குகளைப் பலியிடுவார்களாம். தேவாலயத்தில் மிகப்பெரிய வியாபாரம் நடந்திருக்கும். அனுமதி பெற்றவர்கள் மட்டுமே தேவாலயத்தில் ஆடுகளையும், மாடுகளையும், புறாக்களையும் விற்க முடியும். தேவாலயத்திற்கு மிகுந்த வருமானம் வந்திருக்கும்.

2 அதிகாரம்

"கயிற்றினால் ஒரு சவுக்கையுண்டு பண்ணி, அவர்கள் யாவரையும் ஆடுமாடுகளையும் தேவாலயத்துக்குப் புறம்பே துரத்திவிட்டார்" - ஆடுமாடுகளையும், அவற்றை விற்றவர்களையும் இயேசு கிறிஸ்து தேவாலயத்திலிருந்து வெளியே துரத்திவிடுகிறார். ஆடுகளை விற்றவர்களுக்கு தேவாலயத்தின் மகிமை தெரியாது. தேவாலயத்தைத் தாங்கள் அசுத்தப்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதும் அவர்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அவர்கள் பிரமாணத்தை மீறுகிறார்கள்.

"என் பிதாவின் வீடு" - இயேசு கிறிஸ்து 60 இடங்களில் தேவனை "என்பிதா" என்று அழைப்பதாக வாசிக்கிறோம். (யோவான் 2:16; யோவான் 5:17,43; லூக்கா 10:21)

யோவான்சுவிசேஷத்தில்நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 2

"உம்முடைய வீட்டைக் குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது" (யோவான் 2:17; சங் 69:9)

10. யூதர்கள் அடையாளத்தை நாடுகிறார்கள் - இயேசுவின் மரணத்தைப் பற்றிய முதலாவது தீர்க்கதரிசனம் - (மத் 12:38, லூக் 11:29)

யோவான் 2:18 அப்பொழுது யூதர்கள் அவரை நோக்கி: நீர் இவைகளைச் செய்கிறீரே, இதற்கு என்ன அடையாளத்தை எங்களுக்குக் காண்பிக்கிறீர் என்று கேட்டார்கள்.

யோவான் 2:19 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன் என்றார்.

யோவான் 2:20 அப்பொழுது யூதர்கள்: இந்த ஆலயத்தைக் கட்ட நாற்பத்தாறு வருஷம் சென்றதே, நீர் இதை மூன்று நாளைக்குள்ளே எழுப்புவீரோ என்றார்கள்.

யோவான் 2:21 அவரோ தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக் குறித்துப் பேசினார்.

யோவான் 2:22 அவர் இப்படிச் சொன்னதை அவர் மரித்தோரிலிருந்தெழுந்த பின்பு அவருடைய சீஷர்கள் நினைவுகூர்ந்து, வேதவாக்கியத்தையும் இயேசு வசனத்தையும் விசுவாசித்தார்கள்.

"நீர் இவைகளைச் செய்கிறீரே இதற்கு என்ன அடையாளத்தை எங்களுக்குக் காண்பிக்கிறீர்" - யோவான் 2:23 ஆகிய வசனத்தின் அடையாளங்கள்

தீர்க்கதரிசன எண் - 3

"இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள் மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்" (யோவான் 2:19) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (யோவான் 2:22; மத் 28:6-7,9; 1கொரி 15:3-4) இயேசு கிறிஸ்து தமது சரீரத்தைப் பற்றி இங்கு குறிப்பிடுகிறார்.

"இந்த ஆலயத்தைக் கட்ட நாற்பத்தாறு வருஷம் சென்றதே, நீர் இதை மூன்று நாளைக்குள்ளே எழுப்புவீரோ" - சொருபாபேல் கட்டிய தேவாலயத்தை ஏரோது இடித்து விட்டு, அதைப் பெரிதாகவும் அழகாகவும் கட்டினான். கி.மு. 20 ஆம் ஆண்டில் ஏரோது தேவாலயத்தைக் கட்டும் வேலையை ஆரம்பித்தான்.

"மரித்தோரிலிருந்து" இயேசு கிறிஸ்து மரித்து மூன்றாம் நாளில் உயிருடன் எழும்பினார். மரித்தோரில் இயேசு கிறிஸ்துவே முதலாவது உயிர்த்தெழுந்தவர். (மத் 27:51-53; மத் 28:6, 1கொரி 15:12-23; வெளி 20:4-6; பிலி 3:11)

"வேதவாக்கியம்" - இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளெல்லாமே வேதவாக்கியம்தான். இங்கு கூறப்பட்டிருப்பது சங் 16:10 ஆகிய வசனமாக இருக்கலாம்.

11. எருசலேமில் பல அற்புதங்கள்

யோவான் 2:23 பஸ்கா பண்டிகையிலே அவர் எருசலேமிலிருக்கையில் அவர் செய்த அற்புதங்களை அநேகர் கண்டு, அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்தார்கள்.

யோவான் - தொகுப்புரை

2 அதிகாரம்

யோவான் 2:24 அப்படியிருந்தும் இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால், அவர்களை நம்பி இணங்கவில்லை

யோவான் 2:25 மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால் மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்க வேண்டியதாயிருக்கவில்லை

"அவருடைய நாமத்தில் அநேகர் விசுவாசம் வைத்தார்கள்" - இயேசு கிறிஸ்து அற்புதங்களைச் செய்ததினால் அநேகர் விசுவாசம் வைத்தார்கள் தம்மிடத்தில் ஜனங்கள் விசுவாசம் வைக்க வேண்டும் என்பதற்காகவும் இயேசு கிறிஸ்து அற்புதங்களைச் செய்தார் (யோவான் 11:42

"இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால், அவர்களை நம்பி இணங்கவில்லை" அவர்களுடைய விசுவாசமும், அன்பும் உண்மையானவை அல்ல என்பது இயேசுவிற்குத் தெரிந்திருந்தது. பரிசுத்த ஆவியானவரின் வரத்தினால் இயேசு கிறிஸ்து இதைத் தெரிந்து கொண்டார் (1கொரி 12:4-7)

3 அதிகாரம்

12. இயேசுவும் நிக்கொதேமுவும்

(1) நிக்கொதேமு இயேசுவிடம் இராக்காலத்தில் வருகிறான்

யோவான் 3:1 யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயன் ஒருவன் இருந்தான்.

யோவான் 3:2 அவன் இராக்காலத்திலே இயேசுவினிடத்தில் வந்து: ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம்; ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றான்.

"யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயன் ஒருவன் இருந்தான்" நிக்கொதேமுவின் நிகழ்ச்சியை ஒரு சிலர் உவமை என்று கூறுகிறார்கள். "ஒருவன் இருந்தான்" என்னும் வாக்கியம் பொதுவாக உவமையிலேயே வரும் (மத் 12:10; மாற்கு 3:1; மாற்கு 6:20; லூக்கா 2:25; லூக்கா 4:33; லூக்கா 19:2; லூக்கா 23:50; யோவான் 1:6). ஆனால் இந்த வசனம் உவமையல்ல, உண்மை நிகழ்ச்சி.

"யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு" யூதமார்க்கத்தில் ரபீ என்று அழைக்கப்பட்டவன். ஆலோசனைச் சங்கத்தின் உறுப்பினன். எருசலேமில் இருந்த மூன்று ஐசுவரியவான்களில் ஒருவன்.

நிக்கொதேமு செய்த காரியங்கள்

1. இயேசுவினிடத்தில் வந்தான் (யோவான் 3:2)

2. அவரைப் பற்றி சாட்சி கூறினான் (யோவான் 7:50, 51)

3. அவருக்காக சேவை புரிந்தான் (யோவான் 19:39)

"இராக்காலம்" - நிக்கொதேமு இயேசு கிறிஸ்துவிடம் இராக்காலத்தில் வந்ததினால் வேதபண்டிதர்கள் இதைப் பலவிதமாக விமர்சிக்கிறார்கள். ஒருவேளை பயத்தினாலோ அல்லது அவமானத்தினாலோ நிக்கொதேமு பகல்வேளையில் வராமல் இயேசு கிறிஸ்துவிடம் இராக்காலத்திலே வந்திருக்கலாம் (யோவான் 7:50; யோவான் 19:38-39; யோவான் 20:19). கிறிஸ்துவிற்காக வெட்கப்படாத ஊழியர்கள் அநேகர் தங்களுக்குத் தேவன் கொடுத்திருக்கும் ஞானத்தைப் பயன்படுத்தி, சூழ்நிலை அறிந்து தேவனுக்காக ஊழியம் செய்கிறார்கள்.

"நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம்" - யூதமார்க்கத்தின் தலைவர்களில் சிலர் இயேசு கிறிஸ்துவைத் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறார்கள். ஆனால் யூதமார்க்கத்துத் தலைவர்களில் அநேகருக்கு இந்த உண்மை தெரிந்திருந்தாலும் அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளாமல் இயேசுவைப் புறக்கணிக்கிறார்கள்.

"ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால்" அற்புதங்களைச் செய்ய முடியாது. தேவன் நம்மோடு இருக்க வேண்டும். இதுவே வல்லமையின் இரகசியம் (அப் 10:38).

(2) மறுபடியும் பிறக்க வேண்டியதின் அவசியத்தை இயேசு கூறுகிறார் - (மத் 18:3)

யோவான் 3:3 இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

"ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான்" வேதாகமத்தில் "விட்டால்" Except என்பது மிகவும் முக்கியமான வார்த்தை. இது ஒரு நிபந்தனை. வேதாகமத்தில் இதுபோன்ற நிபந்தனைகள் பல காரியங்களுக்குக் கூறப்பட்டிருக்கிறது.

3 அதிகாரம்

1 நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள் (லூக்கா 13:1-5)

2 நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால் பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பதில்லை மாட்டீர்கள் (மத் 18:3)

3 ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் (யோவான் 1:13; 1யோவான் 2:29; 1யோவான் 3:9; 1யோவான் 5:1-4,18)

4 ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் (யோவான் 3:5)

5 நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை (யோவான் 6:53)

6 வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்களுடைய நீதி அதிகமாயிராவிட்டால் பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் (மத் 5:20)

7 கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாதது போல நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால் கனிகொடுக்கமாட்டீர்கள் (யோவான் 15:4-6)

"மறுபடியும் பிறப்பது" உன்னதத்திலிருந்து மறுபடியும் பிறப்பது. (லூக்கா 1:3) நம்முடைய சுபாவம் மறுபடியும் பிறக்க வேண்டும். நாம் நீதியில் புதுப்பிக்கப்பட வேண்டும். இரட்சிக்கப்படுவதற்கு நம்மிடம் உண்மையான பரிசுத்தம் காணப்பட வேண்டும் (2கொரி 5:17-21; எபே 4:22-24; கொலோ 1:13-14,20; கொலோ 2:12-17; கொலோ 3:1-16)

பிறந்திரு (born) - γεννάω - gennaoo - 1080

வினைச்சொல் - பெறு, பிறந்திரு, உண்டாயிரு, எழும்பு, ஜநித்திரு, (ஜென்மம்), ஜெநிப்பி

மறுபடியும் (again) ἄνωθεν anoothen - 509

வினையடை - மேலிருந்து, ஆதிமுதல், மறுபடியும், பரத்திலிருந்து, உன்னதத்திலிருந்து

காண் (see) - εἴδω - eidoo - 1492

வினைச்சொல் - காண், அறி, பார், தெரிந்திரு, நோக்கு, உணர், அறிந்திரு, விளங்கு

(8) மறுபடியும் பிறக்க வேண்டுமென்பதை நிக்கொதேமு தவறாகப் புரிந்து கொள்கிறான் - (ரோமர் 9:30-10:13; 1கொரி 1:18-31; 2கொரி 3:1-18; 4:3-4)

யோவான் 3:4 அதற்கு நிக்கொதேமு: ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ என்றான்.

"பிறக்கக் கூடுமோ" இயேசு கிறிஸ்து கூறியதை நிக்கொதேமு தவறாகப் புரிந்து கொண்டான். தன்னுடைய மனுஷ ஞானத்தினாலே இயேசுகிறிஸ்து கூறிய தெய்வீகக் காரியத்தை வியாக்கியானம் பண்ணுகிறான். இன்றைய தினமும் ஏராளமான ஜனங்கள் புதிய பிறப்பையும், பழைய பிறப்பையும் தங்களுக்குத் தெரிந்தபடியெல்லாம் வியாக்கியானம் பண்ணுகிறார்கள். நமக்கு இஷ்டமானபடி வியாக்கியானம் பண்ணக்கூடாது என்று இயேசு கிறிஸ்து எச்சரிக்கிறார் (யோவான் 3:12) முதலாவது பிறப்பு என்பது தாயின் கர்ப்பத்தில் பிறப்பது. மறுபடியும் பிறப்பது என்பது தேவன் நம்மைத் தமது பிள்ளையாக சுவீகாரம் எடுத்துக்கொள்வது. (ரோமர் 8:14-16; கலா 4:5; எபே 1:5)

3 அதிகாரம்

(4) மறுபடியும் பிறக்க வேண்டியதின் அவசியத்தை இயேசு விளக்கி கூறுகிறார் - ரோமர் 1:19-20

யோவான் 3:5 இயேசு பிரதியுத்தரமாக ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்

யோவான் 3:6 மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும் ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்.

யோவான் 3:7 நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்பட வேண்டாம்.

யோவான் 3:8 காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது அதின் சத்தத்தைக் கேட்கிறாய் ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது. ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார்

"ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்" இது இயற்கையான பிறப்பைக் குறிக்காது. நிக்கொதேமு ஏற்கெனவே பிறந்து விட்டான் அவன் மறுபடியும் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்க வேண்டும். ஜலத்தினால் என்பது தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறிக்காது. பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் தண்ணீர் ஞானஸ்நானம் இல்லாமலேயே இரட்சிக்கப்பட்டு, மறுபடியும் பிறந்திருக்கிறார்கள் (எபி 11; ரோமர் 3:23-25; எபி 9:15; ரோமர் 4; கலா 4:29; யாக் 2:23; சங் 32:5; சங் 103:3; லூக்கா 1:70; அப் 3:21; உபா 32:18; 2பேதுரு 1:21) அவர்கள் எல்லோருமே தண்ணீர் ஞானஸ்நானம் இல்லாமலேயே பரிசுத்த ஆவியானவரையும் அவருடைய வரங்களையும் அநேக ஆசீர்வாதங்களையும் பெற்றிருந்தார்கள் (சங் 51:12; 1இராஜா 3:12; 1இராஜா 4:29-34; எண் 11:17-29; அப் 3:21; லூக்கா 1:15-17, 41, 46,67; லூக்கா 2:25-38; எபி 11). இயேசு கிறிஸ்து தமது ஊழியக்காலத்தில் தண்ணீர் ஞானஸ்நானம் இல்லாமலேயே பலருடைய பாவங்களை மன்னித்தார் (மத் 9:1-7,22; மாற்கு 5:34; மாற்கு 10:52; லூக்கா 7:48; லூக்கா 17:19; லூக்கா 18:9-14; லூக்கா 19:1-9; லூக்கா 23:43; யோவான் 4:49-53; யோவான் 7:38; யோவான் 8:30-31; யோவான் 11:45; யோவான் 12:11,42)

தண்ணீர் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பாகவே தேவனுடைய பிள்ளைகள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றிருந்தார்கள் (அப் 9:17; அப் 10:44-48; அப் 11:14-18; அப் 15:7-11) தண்ணீர் ஞானஸ்நானம் ஓர் அடையாளம் மட்டுமே. (1பேதுரு 3:21) இது ஒரு சாட்சி (யோவான் 5:6-8) இரட்சிப்புக்கு தண்ணீர் ஞானஸ்நானம் அவசியம் என்று கூறமுடியாது. (1கொரி 1:14-24; 1கொரி 15:1-5; ரோமர் 1:16; ரோமர் 10:9,14; எபே 2:8,9; அப் 16:31; அப் 13:38,39; அப் 16:31; யோவான் 3:14-18,36; யோவான் 5:24; 1யோவான் 5:1) மனந்திரும்பியவர்கள் தங்களுடைய சாட்சியை ஜனங்களுக்கு அறிவிப்பதற்காக தண்ணீர் ஞானஸ்நானம் பெறுகிறார்கள் (மத் 3:2-6; மத் 28:19; அப் 2:38-41; அப் 8:12-37; அப் 10:43-48; அப் 18:8; அப் 19:4)

இந்த வசனத்தில் தண்ணீர் என்பது இரட்சிப்புக்கு உருவகமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (யோவான் 4:14; ஏசா 12:3), பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்திற்கும் தண்ணீர் உருவமாகும் (யோவான் 7:37-39), தேவனுடைய வார்த்தையினால் கழுவப்படுவதையும் தண்ணீர் குறிப்பிடுகிறது. (யோவான் 15:3; எபே 5:26) தேவனுடைய வார்த்தையினால் மனுஷர் கழுவப்பட்டு, மறுபடியும் பிறக்கிறார்கள் (யாக் 1:18; 1பேதுரு 1:23) ஜலத்தினால் பிறப்பது என்பது தேவனுடைய வார்த்தையினால் மறுபடியும் பிறப்பதைக் குறிக்கும்.

3 அதிகாரம்

"மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்" - இது ஒரு அடிப்படை பிரமாணம். நாம் மாம்சத்தின் பிரகாரமாக ஜீவிக்கிறோமா ஆவியின் பிரகாரமாக ஜீவிக்கிறோமா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும் (ரோமர் 8:1-13; கலா 5:16-26)

"ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான்" - மாம்சத்தினால் பிறந்திருக்கிறவன் காற்றின் சத்தத்தைக் கேட்கிறான். ஆவியினால் பிறந்திருக்கிறவன் பரிசுத்த ஆவியானவரின் சத்தத்தைக் கேட்கிறான்

(5) மறுபடியும் பிறக்க வேண்டும் என்பது நிக்கொதேமுவிற்கு புரியாத இரகசியமாகவே இருக்கிறது

யோவான் 3:9 அதற்கு நிக்கொதேமு: இவைகள் எப்படி ஆகும் என்றான்

"இவைகள் எப்படி ஆகும்" - எரே 31:33; எரே 32:39; எசே 11:19; எசே 18:31; எசே 36:25-27; சங் 51:10; ஏசா 1:18-20; ஏசா 55:6, 2 நாளா 7:14 ஆகிய வசனங்களை நாம் வாசிக்கும்போது இவைகள் எப்படி ஆகும் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்

(6) நிக்கொதேமுவை, அவனுடைய அறியாமைக்காகவும், அவிசுவாசத்திற்காகவும் இயேசு கிறிஸ்து கடிந்து கூறுகிறார்

யோவான் 3:10 இயேசு அவனை நோக்கி: நீ இஸ்ரவேலில் போதகனாயிருந்தும் இவைகளை அறியாமலிருக்கிறாயா?

யோவான் 3:11 மெய்யாகவே மெய்யாகவே நான் உனக்குச் சொல்லுகிறேன், நாங்கள் அறிந்திருக்கிறதைச் சொல்லி, நாங்கள் கண்டதைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறோம், நீங்களோ எங்கள் சாட்சியை ஏற்றுக் கொள்ளுகிறதில்லை

யோவான் 3:12 பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரமகாரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்?

"நீ இஸ்ரவேலில் போதகனாயிருந்தும் இவைகளை அறியாமலிருக்கிறாயா?" - இரட்சிக்கப்படுவதற்குத் தேவையான அளவு நிக்கொதேமுவிடம் வேதஅறிவு இருக்குமென்று இயேசு எதிர்பார்த்தார். ஆனால் அவன் போதகனாக இருந்தும் வேதவாக்கியத்தை அறியவில்லை.

"நீங்களோ எங்கள் சாட்சியை ஏற்றுக் கொள்ளுகிறதில்லை" - ஆவிக்குரிய காரியங்களை நிக்கொதேமு புரிந்து கொள்ளவில்லை. அதன்பின்பு அவன் இயேசுவை ஏற்றுக் கொள்கிறான் (யோவான் 19:39)

"பரமகாரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்?" - யோவான் 3:6,8 ஆகிய வசனங்கள் பூமிக்கடுத்தக் காரியங்கள். யோவான் 3:3,5,6,8 ஆகிய வசனங்கள் பரமகாரியங்கள்

13. இயேசுவைப் பற்றிய சாட்சி

(1) பரலோகத்தில் இருக்கிற கிறிஸ்து

யோவான் 3:13 பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷகுமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை

"பரலோகத்துக்கு ஏறினவன்" - எடுத்துக் கொள்ளப்பட்டவன் அல்ல. தன்னுடைய சொந்த வல்லமையினால் ஏறினவன். பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டவர்கள் ஏனோக்கு (ஆதி 5:24; எபி 11:5), எலியா (2இராஜா 2:11), பவுல் (2கொரி 12:1-3), யோவான் (வெளி 4:1). இந்த வாக்கியம் இயேசு கிறிஸ்து பரமேறுவதைக் குறிக்கிறது (யோவான் 3:13; யோவான் 6:62, அப் 1:11, லூக்கா 24:51; எபே 4:8-10). இயேசு கிறிஸ்து பரமேறினார். அவர் மறுபடியும் பூமிக்குத் திரும்பி வந்து, மறுபடியும் பரமேறுவார் (யோவான் 20:17)

3 அதிகாரம்

ஏறு (ascended up) - ἀναβαίνω - anabainoo - 305

விணைச்சொல் - ஏறு, முன்னேறு கரையேறு, வளர், அகப்படு, போ ஏற்றபோ, எழும்பு, வந்தெட்டியிரு பரம்பு

"பரலோகத்திலிருக்கிறவர்" - யோவான் இந்தச் சுவிசேஷத்தை எழுதிய போது இயேசு கிறிஸ்து ஏறகெனவே பரமேறிவிட்டார் நிக்கொதேமுவோடு இயேசுவின் சம்பாஷணை யோவான் 3:12 ஆவது வசனத்தோடு முடிவு பெறுகிறது. இப்பொழுது இயேசு பரலோகத்தில இருக்கிறார்

(2) கிறிஸ்துவின் சிலுவை மரணம் - யோவான 3:12 1யோவான் 1:9- 5:1)

யோவான 3:14 சர்ப்பமானது மோசேயினால வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டது போல மனுஷகுமாரனும்

யோவான 3:15 தன்னை விசுவாசிக்கிறவன எவனோ அவன கெட்டுப் போகாமல நித்திய ஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்பட வேணடும்

யோவான் 3:16 தேவன, தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவனைத் தந்தருளி இவ்வளவாய உலகத்தில அன்புகூர்ந்தார்

யோவான் 3:17 உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல். அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்

தீர்க்கதரிசன எண் -4

"சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டது போல மனுஷகுமாரனும் தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல நித்திய ஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்பட வேண்டும்." (யோவான் 3:14, 15) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (எண் 21:9; யோவான் 8:28 யோவான் 12:32-34; 1பேதுரு 2:24)

"மனுஷகுமாரனும் உயர்த்தப்படவேண்டும்" - மனுஷனை இரட்சிப்பதறகாகவும் இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறுவதறகாகவும் இயேசு கிறிஸது சிலுவையில அறையப்பட வேண்டும். (லூக்கா 24:26,46; அப 3:18 அப 17:3)

"தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல நித்திய ஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்படவேண்டும்" - தாம சிலுவையில அறையப்பட வேண்டியதறகான காரணத்தை இயேசு கிறிஸது கூறுகிறார் (யோவான 3:15-17 ; 1யோவான 5:24

"தன்னை விசுவாசிக்கிறவன எவனோ" - தேவனிடத்தில பட்சபாதம் இல்லை இயேசு கிறிஸதுவை யார் விசுவாசித்தாலும். அவர்கள இரட்சிக்கப்பட முடியும் (யோவான 3:15-17; 1தீமோ 2:4, 2பேதுரு 3:9- வெளி 22:17

விசுவாசம்

விசுவாசிப்பது என்பதன் கிரேக்கச்சொல "பிசிடியோஸ்" (Pisidios) புதிய ஏற்பாட்டில் 248 இடங்களில இந்தச் சொல பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இந்தச் சொல நிகழ்காலத்தில் "விசுவாசிக்கிறது" என்றே வரும். விசுவாசத்தின ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நாம் தொடர்ந்து விசுவாசித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று பொருள் (அப 14:22, எபே 6:16, கொலோ 1:23; கொலோ 2:5-7, 1தெச 5:8, 1தீமோ 2:15; 1தீமோ 3:9; 1தீமோ 6:12, 2தீமோ 3:8; 2தீமோ 4:7, தீத்து 1:13, எபி 10:23-38; 2பேதுரு 1:5-10) விசுவாசம் காணாமல் போகும். (லூக்கா 8:13, 1தீமோ 1:19; 1தீமோ 4:1; 1தீமோ 5:8,12, 1தீமோ 6:10,21; 2தீமோ 2:18; 2தீமோ 3:8, யூதா 1:3; வெளி 2:13)

யோவான் - தொகுப்புரை

3 அதிகாரம்

விசுவாசம் என்பதற்கு நாம் இவ்வாறு பொருள் கூறலாம்

1 தொடர்ந்து முயற்சி பண்ணுவது (ரோமர் 4:17-22; ரோமர் 8:38-39; 2தீமோ 1:12)

2 நம்பிக்கை வைப்பது (எபே 3:12; பிலி 1:6; எபி 3:6,12-14; எபி 10:35; 1யோவான் 3:21; 1யோவான் 5:14)

3 விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. (எபி 10:19-38; எபி 11:1, 6; ரோமர் 4:17; ரோமர் 8:24)

4 இயேசு கிறிஸ்துவையும், அவருடைய வார்த்தையையும் முழுவதுமாக சார்ந்திருக்க வேண்டும். (மத் 8:8-10; மத் 15:28; ரோமர் 10:17; எபி 11:1-12:3)

5 சத்தியத்திற்கு முழுவதுமாக கீழ்ப்படிய வேண்டும். (ரோமர் 1:5; ரோமர் 16:26; ரோமர் 6:16-23; யாக் 2:14-26; 2கொரி 10:4-7; எபி 11:6)

6 தேவனிடத்தில் எந்தவித தயக்கமும் இல்லாமல் முழுமையாக நம்பிக்கையாய் இருக்க வேண்டும் (மத் 6:25-34; மத் 12:21; லூக்கா 12:28-31; எபே 1:13; 1தீமோ 4:10; 1தீமோ 6:17; 1கொரி 10:13)

7 ஜீவியத்தின் புதிய வழிக்கு நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். (ரோமர் 1:17; ரோமர் 6:11-23; ரோமர் 8:1-16; 2கொரி 10:4-7; கலா 5:16-26; கலா 3:5-10; எபி 12:1-15; தீத்து 2:11-14; 1யோவான் 1:7; 1யோவான் 2:6; 1யோவான் 3:8-10; 1யோவான் 4:17; 1யோவான் 5:1-5, 18)

8 தேவனிடத்தில் விசுவாசம் இருந்தது. அவர் மனுஷனை மீட்டுக்கொண்டார் (ரோமர் 4:17; கலா 5:22; மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; லூக்கா 17:6; எபி 11)

9 வெளிப்படுத்தப்பட்டிருக்கிற சத்தியத்தை விசுவாசிக்க வேண்டும் (லூக்கா 18:8; யூதா 1:3; ரோமர் 10:17; 1தீமோ 4:1,6; 1தீமோ 6:10; 2தீமோ 3:16-17)

10 விசுவாசித்து சந்தோஷமாக இருக்க வேண்டும். இயேசு கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்தார் என்பதை விசுவாசித்து, நமது இரட்சிப்பை பெற்றுக் கொள்ள வேண்டும் (மாற்கு 16:16; அப 4:12; அப 10:43; ரோமர் 1:16; ரோமர் 3:24-3; எபே 2:8-9) விசுவாசத்தினால் தேவனுடைய கிருபையை பெற்றுக் கொள்ள வேண்டும். (ரோமர் 5:2) தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேறும் என்று விசுவாசிக்க வேண்டும். (எபி 6:12) விசுவாசத்தினால் நாம் பெற்றுக் கொள்ளும் காரியங்கள் - பரிசுத்த ஆவியானவர் (the Holy Spirit) (கலா 3:14); நீதி (righteousness) (ரோமர் 4; ரோமர் 9:30,32; ரோமர் 10:6; பிலி 3:9); தேவனுடைய பிள்ளை (sonship) (கலா 3:26); சுகமாதல் (healing) (யாக் 5:14-16; 1பேதுரு 2:24); நித்திய ஜீவன் (eternal life) (யோவான் 3:15-18,36; யோவான் 5:24; யோவான் 6:47) ஜெபத்திற்குப் பதில்கள் (answers to every prayer) (மத் 7:7-11; மத் 21:21; மாற்கு 11:22-24; லூக்கா 18:1-8; யோவான் 14:12-15; யோவான் 15:7,16)

விசுவாசிக்கிறவன் (believeth)
Πιστός Pistos 4100

வினைச்சொல் - விசுவாசிக்கிறது

யோவான் - தொகுப்புரை

3 அதிகாரம்

"கெட்டுப்போதல்" - அழிந்துபோதல் இதற்கான கிரேக்கவார்த்தை "அப்பலிமி" (apollymi) இந்த வார்த்தை வேதாகமத்தில் பலவிதமாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. **to destroy** (மத் 10:28); **lose** (மத் 10:39), **die** (யோவான் 18:14); **be lost** (2கொரி 4:3); **be marred** (மாற்கு 2:22), **perish** (மத் 8:25; மத் 18:14; எபி 1:11) நித்திய நரகத்திற்கு ஆத்துமாக்கள் போய், அங்கு பாடுகளை அனுபவிக்கும் என்பது இதன் பொருள் (லூக்கா 12:5 லூக்கா 16:23).

கெடு (perish) - ἀπόλλυμι - apollymi - 622

வினைச்சொல் - கொலை செய், அழி கெடு, கொல், சங்கரி

உலகம் (world) - κόσμος - kosmos - 2889

ஆண்பால் பெயர்ச்சொல் - உலகம் அலங்கரிப்பு, லௌகிகம்

"ஒரேபேறான குமாரன்" - (லூக்கா 1:34, யோவான் 3:13-14)

"நித்திய ஜீவன்" - இதற்கான கிரேக்க வார்த்தை "ஐயோநியோஸ்" (aioonios) நித்திய காலத்திற்கு வாழும் வாழ்வு (unknown time, time out of mind, eternity). யோவான் 3:15 இல் நித்தியம் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. ஜீவன் நித்தியமாக இருக்கும். மனுஷன் இரட்சிக்கப்பட்டாலும், இரட்சிக்கப்படாவிட்டாலும் அவனுடைய ஜீவன் நித்தியமானதே. அவன் இரட்சிக்கப்பட்டால் அவனுடைய ஜீவன் நித்தியகாலமாக பரலோகத்தில் தேவனோடு இருக்கும். அவன் இரட்சிக்கப்படாவிட்டால் அவனுடைய ஜீவன் நித்தியகாலமாக நரகத்தில் பாடுகளை அனுபவிக்கும். இந்த வசனத்தில் நித்திய ஜீவன் என்பது இயேசுகிறிஸ்துவோடு நித்திய காலமாக இருக்கப்போகும் ஜீவனைக் குறிக்கும். (யோவான் 6:27, 1யோவான் 5:11-12)

நித்திய (everlasting) - αἰώνιος - aioonios 166

பெயரடை - நித்திய

(அ) துவக்கமோ அல்லது முடிவோ அல்லாத, அநாதி ரோம 16:25

(ஆ) துவக்கம் இல்லாத ரோம 14:25

(இ) முடிவு இல்லாத

ஆக்கினைக்குள்ளாகத்தீர் (condemn) κρίνω - krinoo - 2919

வினைச்சொல் - வழக்காடு, நியாயந்தீர், தீர்மானி - இயேசுகிறிஸ்து மனுஷரை இரட்சிப்பதற்காக ஏற்கெனவே வந்துவிட்டார் இனிமேல் உலகத்தை நியாயந்தீர்ப்பதற்காக வருவார் (மத் 16:27; மத் 25:31-46)

(3) அவிசுவாசிகளுக்கு ஆக்கினைத் தீர்ப்பு - (மாற்கு 16:16; யோவான் 16:17)

யோவான் 3:18 அவனை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால் அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று.

யோவான் 3:19 ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத் தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது.

யோவான் 3:20 பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான்.

யோவான் 3:21 சத்தியத்தின்படி செய்கிறவனோ தன் கிரியைகள் தேவனுக்குள்ளாய்ச் செய்யப்படுகிறதென்று வெளியாகும்படிக்கு, ஒளியினிடத்தில் வருகிறான் என்றார்.

3 அதிகாரம்

"தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமம்" - இயேசு கிறிஸ்து என்பதே அவருடைய நாமம். அவருடைய நாமத்தின் பொருள் இரட்சகர் என்பது. அவருடைய நாமத்தில் விசுவாசம் வைக்கிறவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் மற்றவர்கள் இரட்சிக்கப்படமாட்டார்கள் (மத் 1:21)

ஆக்கினைத்தீர்ப்பு (condemnation) - κρίσις - krisis - 2920

பெண்பால் பெயர்ச்சொல் - நியாயத்தீர்ப்பு, நியாயம், ஆக்கினை தீர்ப்பு (judgment)

"அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகிறார்கள்" - (யோபு 15:16 யோபு 20:12; நீதி 2:14; யோவான் 3:19 யோவான் 12:43; 2பேதுரு 2:22)

பொல்லாங்கு (evil) - φαῦλος - phaulos - 5337

பெயரடை - தீமையான, பொல்லாங்கு செய்கிற, தூசசெயகை (worthless, base things). இந்த வார்த்தை இந்த வசனத்திலும் யோவான் 5:29; தீத்து 2:8, யாக் 3:16 ஆகிய வசனங்களிலும் பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

"சத்தியத்தின்படி செய்கிறவன்" தேவனுடைய வார்த்தையின் பிரகாரமாக ஜீவித்து, தன்னுடைய ஜீவியத்தில் ஆவியின் கனியைத் தொடர்ந்து தருகிறவன் (யாக் 1:22-27, யாக் 2:14-26; மத் 5:16; மத் 7:15-20

14. இயேசு கிறிஸ்து யூதேயாவில் ஊழியம் செய்கிறார்

யோவான் 3:22 இவைகளுக்குப் பின்பு, இயேசுவும் அவருடைய சீஷரும் யூதேயா தேசத்திற்கு வந்தார்கள்; அங்கே அவர் அவர்களோடே சஞ்சரித்து, ஞானஸ்நானங்கொடுத்து வந்தார்

"இவைகளுக்குப் பின்பு, இயேசுவும் அவருடைய சீஷரும் யூதேயா தேசத்திற்கு வந்தார்கள்" - பஸ்கா பண்டிகைக்குப் பின்பு, அவர்கள் எருசலேமை விட்டுப் புறப்பட்டு, சமாரியாவிற்கோ அல்லது கலிலேயாவிற்கோ வந்திருக்க வேண்டும். (யோவான் 2:13)

"ஞானஸ்நானங் கொடுத்து வந்தார்" - இயேசு கிறிஸ்து யாருக்கும் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை. அவருடைய சீஷர்களே ஞானஸ்நானம் கொடுத்தார்கள் (யோவான் 4:2)

15. யோவான் ஸ்நானன் அயினோன் என்னும் இடத்தில் ஊழியம் செய்கிறான்

யோவான் 3:23 சாலிம் ஊருக்குச் சமீபமான அயினோன் என்னும் இடத்திலே தண்ணீர் மிகுதியாயிருந்த படியினால், யோவானும் அங்கே ஞானஸ்நானங் கொடுத்துவந்தான்; ஜனங்கள் அவனிடத்தில் வந்து ஞானஸ்நானம் பெற்றார்கள்

யோவான் 3:24 அக்காலத்தில் யோவான் காவலில் வைக்கப்பட்டிருக்கவில்லை

அயினோன் (Aenon) - Αἰνών - Ainoon - 137

ஓர் இடத்தின் பெயர் - யோர்தான் பள்ளத்தாக்கு, யோவான் ஸ்நானன் ஞானஸ்நானம் கொடுத்து வந்த இடம் அயினோன் - இதன் பொருள் ஊற்று யோர்தானுக்கு மேற்குக்கரையிலுள்ள பட்டணம். சமாரியாவில் இருந்தது. எருசலேமிலிருந்து வடகிழக்கில் 54 மைல் தூரத்தில் இருந்தது.

"தண்ணீர் மிகுதியாயிருந்தது" அங்கு அநேக நீரூற்றுக்கள் இருந்தன ஞானஸ்நானம் கொடுப்பதற்கு ஏற்ற இடமாக இருந்தது.

3 அதிகாரம்

16. யோவான் ஸ்நானனின் கடைசி சாட்சி

(1) தன்னைப் பற்றி - (யோவான் 1:19)

யோவான் 3:25 அப்பொழுது யோவானுடைய சீஷரில் சிலருக்கும் யூதருக்கும் சுத்திகரிப்பைக் குறித்து வாக்குவாதமுண்டாயிற்று.

யோவான் 3:26 அவர்கள் யோவானிடத்தில் வந்து: ரபீ, உம்முடனே கூட யோர்தானுக்கு அக்கரையில் ஒருவர் இருந்தாரே, அவரைக் குறித்து நீரும் சாட்சிகொடுத்தீரே, இதோ, அவர் ஞானஸ்நானங் கொடுக்கிறார்; எல்லாரும் அவரிடத்தில் போகிறார்கள் என்றார்கள்.

யோவான் 3:27 யோவான் பிரதியுத்தரமாக: பரலோகத்திலிருந்து ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டாலொழிய, அவன் ஒன்றையும் பெற்றுக் கொள்ளமாட்டான்.

யோவான் 3:28 நான் கிறிஸ்துவல்ல, அவருக்கு முன்னாக அனுப்பப்பட்டவன் என்று நான் சொன்னதற்கு நீங்களே சாட்சிகள்.

யோவான் 3:29 மணவாட்டியை உடையவனே மணவாளன்; மணவாளனுடைய தோழனோ, அருகே நின்று, அவருடைய சொல்லைக் கேட்கிறவனாய், மணவாளனுடைய சத்தத்தைக்குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான்; இந்தச் சந்தோஷம் இப்பொழுது எனக்குச் சம்பூரணமாயிற்று.

"அப்பொழுது யோவானுடைய சீஷரில் சிலருக்கும் யூதருக்கும் சுத்திகரிப்பைக் குறித்து வாக்குவாதமுண்டாயிற்று" பாவத்தைச் சுத்திகரிப்பதற்கு யோவான் கொடுக்கும் ஞானஸ்நானம் சிறந்ததா அல்லது யூதருடைய சுத்திகரிப்பு முறைமை சிறந்ததா என்று அவர்களுக்குள் வாக்குவாதம் உண்டாயிற்று.

"பரலோகத்திலிருந்து ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டாலொழிய, அவன் ஒன்றையும் பெற்றுக் கொள்ளமாட்டான்" - இது சத்தியமான வாக்கியம். நாம் எவ்வளவுதான் சம்பாதித்தாலும், அது நிலைக்காது. தேவன் நமக்குத் தேவையானதைத் தரவேண்டும். அதுவே நிலைக்கும். (2பேதுரு 1:3-11; 2கொரி (20)

"மணவாளனுடைய தோழன்" - கலியாணத்தில் மணவாளனுடைய தோழனுக்கு முக்கியமான பங்கு இருக்கும். இவனும் ஒருசில சடங்குகளைச் செய்வான்.

"மணவாளனுடைய சத்தம்" - மணவாளனும் மணவாட்டியும் முதன் முறையாக பேசிக் கொள்வதைக் கேட்கும்போது மணவாளனுடைய தோழனுக்கு மிகுந்த சந்தோஷமாக இருக்கும்.

"இந்தச் சந்தோஷம் இப்பொழுது எனக்குச் சம்பூரணமாயிற்று" - யோவான் இவ்வாறு எழுதியிருப்பதினால் அவன் மணவாளனுடைய தோழன் மட்டுமே, இயேசு கிறிஸ்துவின் மணவாட்டியாக இருக்கமாட்டான் என்று பொருள் கூறக்கூடாது. யோவானும் கிறிஸ்துவின் மணவாட்டியாகவே இருப்பான். பரலோக நகரமாகிய புதிய எருசலேம் கிறிஸ்துவின் மணவாட்டியாக இருக்கிறது (வெளி 21:2,9-10). பழைய ஏற்பாட்டுக் கால பரிசுத்தவான்களும் (எபி 11:10-16), புதிய ஏற்பாட்டுக்கால பரிசுத்தவான்களும் (எபி 13:14; யோவான் 14:1-3) பரலோக நகரமாகிய புதிய எருசலேமிற்குப் போவார்கள். யோவான் ஸ்நானனும் அவர்களில் ஒருவனாக இருப்பான். ஆபேலிலிருந்து முதலாம் உயிர்த்தெழுதலில் உயிர்த்தெழுந்தோர் எல்லோருமே புதிய எருசலேமிற்குப் போவார்கள் (1கொரி 15:23, 51-58; 1தெச 4:16; வெளி 20:4-6). இந்த வசனத்தின் மூலமாக யோவான் ஸ்நானன் தான் மணவாளன் அல்ல, மணவாளனுடைய தோழனே என்பதை வலியுறுத்துகிறான். எல்லாப் பரிசுத்தவான்களும் மணவாளனுடைய தோழராக இருக்கிறார்கள் (யோவான் 15:13-15). யோவான் ஸ்நானன் ஜனங்களைக் கிறிஸ்துவிடம் அழைத்தான். அதுபோலவே மணவாட்டியின் அங்கத்தினர்கள் எல்லோரும் ஜனங்களைக் கிறிஸ்துவிடம் அழைத்துவரவேண்டும். (வெளி 22:17)

3 அதிகாரம்

(2) இயேசு கிறிஸ்துவைப் பற்றி - யோவான் 3:6,15,19,29)

யோவான் 3:30 அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்

யோவான் 3:31 உன்னதத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர், பூமியிலிருந்துண்டானவன் பூமியின் தன்மையுள்ளவனாயிருந்து பூமிக் காரியங்களைப் பேசுகிறான் பரலோகத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர்

யோவான் 3:32 தாம் கண்டதையும் கேட்டதையும் சாட்சியாகச் சொல்லுகிறார்; அவருடைய சாட்சியை ஒருவனும் ஏற்றுக் கொள்ளுகிறதில்லை

யோவான் 3:33 அவருடைய சாட்சியை ஏற்றுக் கொள்ளுகிறவன் தேவன் சத்தியமுள்ளவரென்று முத்திரைபோட்டு நிச்சயப்படுத்து கிறான்

யோவான் 3:34 தேவனால் அனுப்பப் பட்டவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார், தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார்

யோவான் 3:35 பிதாவானவர் குமாரனில் அன்பாயிருந்து எல்லாவற்றையும் அவர் கையில் ஒப்புக்கொடுத்திருக்கிறார்

யோவான் 3:36 குமாரனிடத்தில் விசுவாசமா யிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான், குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காணப்திில்லை தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும் என்றான்

தீர்க்கதரிசன எண் - 5

"அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்" யோவான் 3:30) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

உன்னதத்திலிருந்து **(from above)**

ἄνωθεν - **anoothen** 509

வினையடை - மேலிருந்து, ஆதிமுதல் மறுபடியும், பரத்திலிருந்து, உன்னதத்திலிருந்து

"தாம் கண்டதையும் கேட்டதையும் சாட்சியாகச் சொல்லுகிறார் அவருடைய சாட்சியை ஒருவனும் ஏற்றுக் கொள்ளுகிறதில்லை" - இந்த வாக்கியம் இன்றும் உண்மையாக இருக்கிறது.

முத்திரைபோடு (seal) - σφραγίζω - **sphragizoo** - 4972

வினைச்சொல் - முத்திரை போடு, ஒப்புவி, முத்தரித்திரு, முத்திரையாகப் பெறு **(to stamp, confirm, place beyond doubt)**

பரிசுத்த ஆவியானவரின் வெவ்வேறு அளவுகள்

1 மோசேயின் அளவு (எண் 11:17,25)

2 மோசேயின் அளவு 71 பங்குகளாகப் பிரிக்கப்பட்டது (எண் 11:16-17, 25-29

3 எலியாவின் அளவு (2இராஜா 2:9

4 இரட்டிப்பான பங்கு (2இராஜா 2:9-10

5 யோவான் ஸ்நானன்மீது எலியாவின் அளவு (லூக்கா 1:15-17)

6 ஆவியானவரின் அச்சாரம் (2கொரி 1:22; 2கொரி 5:5; 1யோவான் 4:13 பிலி 1:19)

7 அளவில்லாத பரிசுத்த ஆவியானவர் **(The Spirit without measure)** (யோவான் 3:34; ஏசா 11:2; ஏசா 42:1; ஏசா 61:1, லூக்கா 4:16-21; அப 10:38); பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் **(Spirit baptism or baptismal measure)** (மத் 3:11 மத் 20:22-23, லூக்கா 3:16 யோவான் 1:33 அப 1:4-8 அப 2:1-21 அப 8:15-24 அப 10:44-48 அப 11:14-18 அப 15:7-11 அப 19:1-7 கலா 3:14), தேவனுடைய நிறைவு **(the fulness of God)** (எபே 3:19, ரோமர் 15:29), ஜீவத்தண்ணீருள்ள நதிகள் **(the rivers of living water)** (யோவான் 7:37-39), உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படுதலும், பரிசுத்த ஆவியானவரின் முழுமையான அபிஷேகமும் **(the full anointing of the Spirit and enduement of power from on high)** (லூக்கா 24:49; யோவான் 14:12-15

3 அதிகாரம்

"விசுவாசியாதவன்" - இதன் கிரேக்கச் சொல் "அபெதியோ" (apeitheoo) இதன் மொழிபெயர்ப்புகள் (believe not) (யோவான் 3:36; அப் 17:5; அப் 19:9; ரோமர் 11:30,31; ரோமர் 15:31; எபி 3:18; எபி 11:31); (unbelieving) (அப் 14:2) (obey not) (ரோமர் 2:8; 1பேதுரு 3:1; 1பேதுரு 4:17); (disobedient) (ரோமர் 10:21; 1பேதுரு 2:7,8; 1பேதுரு 3:20) கீழ்ப்படியாதவன் விசுவாசியாதவன் என்பது இதன் பொருள்.

விசுவாசியாமலிரு (believeth not)
ἀπειθέω - apeitheoo - 544

வினைச்சொல் - விசுவாசியாமலிரு கீழ்ப்படியாமலிரு

கோபம் (wrath) - ὀργή - orgee - 3709

பெண்பால் பெயர்ச்சொல் - கோபம் கோபாக்கினை (temper, agitation of the soul, violent emotion, anger, wrath, indignation) - பாவம் செய்யும் மனுஷனையும், தேவனுக்குக் கலகம் செய்யும் மனுஷனையும் தண்டிக்கும் தேவனுடைய கோபம் "தேவனுடைய கோபம்" என்று அழைக்கப்படுகிறது. (மத் 3:7; லூக்கா 3:7; யோவான் 3:36; ரோமர் 1:18; ரோமர் 4:15; ரோமர் 9:22; 2தெச 1:16; எபி 3:11; எபி 4:3; வெளி 14:10)

4 அதிகாரம்

17. இயேசு கிறிஸ்து கலிலேயாவிற்கு பிரயாணம் பண்ணுகிறார்

யோவான் 4:1 யோவானைப்பார்க்கிலும் இயேசு அநேகம் பேரைச் சீஷராக்கி ஞானஸ்நானங் கொடுக்கிறாரென்று பரிசேயர் கேள்விப் பட்டதாகக் கர்த்தர் அறிந்தபோது.

யோவான் 4:2 யூதேயாவைவிட்டு மறுபடியுங் கலிலேயாவுக்குப் போனார்

யோவான் 4:3 இயேசு தாமே ஞானஸ்நானங் கொடுக்கவில்லை அவருடைய சீஷர்கள் கொடுத்தார்கள்

"கர்த்தர்" - இயேசு கிறிஸ்துவை யோவான் கர்த்தர் என்று அழைக்கிறார் (யோவான் 4:1, யோவான் 6:23 யோவான் 11:2 யோவான் 20:2,13,18,20,25 யோவான் 21:7, லூக்கா 9:38)

"பரிசேயர்" - யோவான் சதுசேயரைப் பற்றியோ ஏரோதியரைப் பற்றியோ மற்ற மார்க்கப் பிரிவினரைப் பற்றியோ இந்தச் சுவிசேஷத்தில் குறிப்பிடவில்லை

"மறுபடியுங் கலிலேயாவுக்குப் போனார்" (யோவான் 1:43, யோவான் 3:22)

18. இயேசு கிறிஸ்துவும் சமாரிய ஸ்திரீயும்

(1) சூழ்நிலைகள்

யோவான் 4:4 அவர் சமாரியா நாட்டின் வழியாய்ப் போக வேண்டியதாயிருந்தபடியால்

யோவான் 4:5 யாக்கோபு தன் குமாரனாகிய யோசேப்புக்குக் கொடுத்த நிலத்துக்கு அருகே இருந்த சமாரியாவிலுள்ள சீகார் என்னப்பட்ட ஊருக்கு வந்தார்

யோவான் 4:6 அங்கே யாக்கோபுடைய கிணறு இருந்தது இயேசு பிரயாணத்தினால் இளைப் படைந்தவராய் அந்தக் கிணற்றினருகே உட்கார்ந்தார் அப்பொழுது ஏறக்குறைய ஆறாம்மணி வேளையாயிருந்தது.

"அவர் சமாரியா நாட்டின் வழியாய்ப் போகவேண்டியதாயிருந்தது" - சமாரியா நாட்டின் வழியாகப் போவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவது காரணம் கலிலேயாவிற்குச் சமாரியா நாட்டின் வழியாகப் போனால் பிரயாண நேரம் மூன்று நாள் குறையும். இரண்டாவது காரணம், தேவனுடைய தெய்வீகச் சித்தம். சமாரியா நாட்டின் வழியாகப் போனதினால் சமாரியா நாட்டாளாகிய ஸ்திரீயும் மேலும் ஏராளமானஜனங்களுமஇரட்சிக்கப்பட்டார்கள்

சீகார் (Sychar) - Συχάρ - Sychar - 4965

ஓர் இடத்தின் பெயர் - *சீகார்* - குடிவெறியில உள்ள பட்டணம் தவறான பட்டணம் என்று இந்த ஊரைப் பற்றிக் கூறுவார்கள்

"யாக்கோபு தன் குமாரனாகிய யோசேப்புக்குக் கொடுத்த நிலம்" - (ஆதி 33:19; ஆதி 48:22, யோசு 24:32)

"ஆறாம்மணிவேளை" - மதியம் 12 மணி.

(2) இயேசு "தாகத்துக்குத் தா" என்கிறார்

யோவான் 4:7 அவருடைய சீஷர்கள் போஜன பதார்த்தங்களைக் கொள்ளும்படி ஊருக்குள்ளே போயிருந்தார்கள்

யோவான் 4:8 அப்பொழுது சமாரியா நாட்டாளாகிய ஒரு ஸ்திரீ தண்ணீர் மொள்ள வந்தாள் இயேசு அவளை நோக்கி: தாகத்துக்குத்தா என்றார்

"தாகத்துக்குத்தா" இயேசு கிறிஸ்து கிணற்றுக்குத் தண்ணீர் மொள்ள வந்த ஸ்திரீயிடம் ஏழு தடவை பேசுகிறார் முதலாவதாக, "தாகத்துக்குத்தா" என்று கூறி படிப்படியாகத் தம்மைப் பற்றி அவளுக்கு வெளிப்படுத்தி, இறுதியில் "உன்னுடனே பேசுகிற நானே அவர்" என்று தம்மைப் பற்றிக் கூறுகிறார் கிழக்குத் தேசங்களில் பெண்களே கிணற்றிற்குத் தண்ணீர் பிடிக்க வருவார்கள்

4 அதிகாரம்

(3) ஸ்திரீ "என்னிடத்தில் எப்படி கேட்கலாம்" என்கிறாள்

யோவான் 4:9 யூதர்கள் சமாரியருடனே சம்பந்தங்கலவாதவர்களான படியால் சமாரியா ஸ்திரீ அவரை நோக்கி: நீர் யூதனாயிருக்க, சமாரியா ஸ்திரீயாகிய என்னிடத்தில் தாகத்துக்குத்தா என்று எப்படிக் கேட்கலாம் என்றாள்

சம்பந்தம் கலத்தல் (dealings) - συγχράομαι - synchraomai - 4798

பெண்பால பெயர்ச்சொல - உடன்சம்பந்தங்கள், சம்பந்தம் கலத்தல (familiar intercourse or hospitality) - சமாரியரும், யூதரும் வாங்குவது, விருந்து போன்ற அன்றாட நடைமுறைக காரியங்களைச் செய்து வந்தாகள யோவான 4:8

(4) இயேசு - அவர் உனக்கு ஜீவத் தண்ணீரைக் கொடுத்திருப்பார்

யோவான் 4:10 இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: நீ தேவனுடைய ஈவையும் தாகத்துக்குத்தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால நீயே அவரிடத்தில கேட்டிருப்பாய். அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார் என்றார

தேவனுடைய ஈவுகள்

1 கிறிஸ்து (யோவான் 4:10; 2கொரி 9:15; எபி 6.4; ரோமர் 8.32)

2 பரிசுத்த ஆவியானவர் (அப 2.38-39; அப 8:20; அப் 10:45; அப 11:17; யோவான் 7 37-39)

3 ஆவிக்குரிய வரங்கள் (ரோமர் 1:11 ரோமர் 11:29; ரோமர் 12:6 1கொரி 1:7; 1கொரி 12:1-14:40 எபே 3.7; எபே 4.7; 1தீமோ 4:14 2தீமோ 1:6; எபி 2:4 1பேதுரு 4:10)

4 இரட்சிப்பு (ரோமர் 5:15-21 யோவான் 4:10-14 அப 4:12 எபே 2:8-9)

5. நித்திய ஜீவன் (ரோமர் 6:23 யோவான் 4:10-14 யோவான் 10:27-29

6 தெய்வீக அழைப்பு (1கொரி 7.7 ரோமர் 12.3-6 2கொரி 5:18 எபே 3.7; எபே 4:7)

7 நல்ல ஈவுகள் (யாக் 1:17; மத் 7:11)

8 ஊழியக்காரர்கள் (எபே 4:8-11

கனிகொடுத்தின் ஈவுகள்

1 கிருபையும், சத்தியமும் (யோவான் 1:17

2 ஜீவத்தண்ணீர் (யோவான் 4:10)

3. பரிசுத்த ஆவியானவர் (யோவான் 7.37-39 யோவான் 14:16

4. பரிபூரண முன்மாதிரி (யோவான 13:15

5. தேவனுடைய வார்த்தை (யோவான 17:8,14 யோவான 13:34

6 தேவனுடைய மகிமை (யோவான் 17:22

7 மெய்யான அப்பம் (யோவான் 6.32

8 நித்திய ஜீவன (யோவான் 6.33, யோவான் 10:27 29

9 சமாதானம் (யோவான் 14:27

10 ஜெபத்திற்குப் பதில்கள் (யோவான் 15:16 யோவான 16:23

"ஜீவத்தண்ணீர்" - நின்றுபோகாத நித்திய நீரூற்று (எரே 2:13, எரே 17:13, சக 14:8)

4 அதிகாரம்

(5) ஸ்திரீ - எங்கேயிருந்து உமக்கு ஜீவத்தண்ணீர் உண்டாகும்

யோவான் 4:11 அதற்கு அந்த ஸ்திரீ: ஆண்டவரே, மொண்டுகொள்ள உம்மிடத்தில் பாத்திரமில்லையே, கிணறும் ஆழமாயிருக்கிறதே, பின்னை எங்கேயிருந்து உமக்கு ஜீவத்தண்ணீர் உண்டாகும்.

யோவான் 4:12 இந்தக் கிணற்றை எங்களுக்குத் தந்த நம்முடைய பிதாவாகிய யாக்கோபைப்பார்க்கிலும் நீர் பெரியவரோ? அவரும் அவர் பிள்ளைகளும் அவர் மிருக ஜீவன்களும் இதிலே குடித்ததுண்டே என்றாள்.

ஆண்டவர் (Sir) - κύριος - kyrios - 2962

ஆண்பால் பெயர்ச்சொல் - கர்த்தர், எஜமான், ஆண்டவர், ஐயா, உடையவர், தேவரீர் (Sir) - (யோவான் 4:11,15,19,49; யோவான் 5:7; யோவான் 12:21; யோவான் 20:15; லூக்கா 9:18)

"மொண்டுகொள்ள உம்மிடத்தில் பாத்திரமில்லையே" கிழக்குத் தேசங்களில் பிரயாணம் பண்ணுகிறவர்கள் கிணறுகளில் தண்ணீர் பிடித்துக் கொள்வதற்காகத் தங்களோடு தோல்துருத்திகளைக் கொண்டு செல்வது வழக்கம்.

"கிணறும் ஆழமாயிருக்கிறதே" சாதாரணமாக ஒரு கிணறு 105 அடி ஆழமும், 9 அடி விட்டமும் இருக்கும். கிணற்றில் 15 அடி ஆழத்திற்குத் தண்ணீர் இருக்கும். கற்பாறைகளை வெட்டி கிணற்றை ஆழமாக்கியிருப்பார்கள்.

(6) இயேசு - நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்று

யோவான் 4:13 இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும்.

யோவான் 4:14 நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார்.

நீரூற்று (fountain) πηγή peegee 4077

பெண்பால் பெயர்ச்சொல் - ஊறல், கிணறு, ஊற்று, நீரூற்று (spring) (மாற்கு 5:29; யாக் 3:11-12; வெளி 7:17; வெளி 8:10; வெளி 14:7; வெளி 16:4; வெளி 21:6); கிணறு (well) (யோவான் 4:6,14; 2பேதுரு 2:17)

(7) ஸ்திரீ - அந்த தண்ணீரைத் தரவேண்டும்

யோவான் 4:15 அந்த ஸ்திரீ அவரை நோக்கி: ஆண்டவரே, எனக்குத் தாகமுண்டாகாமலும், நான் இங்கே மொண்டுகொள்ள வராமலுமிருக்கும்படி அந்தத் தண்ணீரை எனக்குத் தரவேண்டும் என்றாள்.

"எனக்குத் தாகமுண்டாகாமலும் நான் இங்கே மொண்டுகொள்ள வராமலுமிருக்கும்படி அந்தத் தண்ணீரை எனக்குத் தரவேண்டும்" - ஸ்திரீயின் விண்ணப்பத்தில் இரண்டு காரியம் உள்ளது. அவையாவன:

1. அவளுக்குத் தாகம் உண்டாகாமல் இருக்க வேண்டும்.
2. அவள் தண்ணீர் மொண்டுகொள்ள இங்கே வராமல் இருக்க வேண்டும்.

(8) இயேசு - உன் புருஷனை இங்கே அழைத்துக் கொண்டுவா

யோவான் 4:16 இயேசு அவளை நோக்கி: நீ போய், உன் புருஷனை இங்கே அழைத்துக் கொண்டுவா என்றார்.

"நீ போய், உன் புருஷனை இங்கே அழைத்துக் கொண்டுவா" அவளுடைய பிரச்சனையின் அஸ்திபாரத்திற்கே இயேசு கிறிஸ்து சென்று விட்டார். இதன் மூலமாக இயேசு கிறிஸ்து அவளுடைய பாவங்களை உணர்த்தி அவளை இரட்சிக்க முடியும்.

4 அதிகாரம்

(9) ஸ்திரீ - எனக்கு புருஷன் இல்லை

யோவான் 4:17 அதற்கு அந்த ஸ்திரீ எனக்குப் புருஷன் இல்லை என்றாள். இயேசு அவளை நோக்கி: எனக்குப் புருஷன் இல்லையென்று நீ சொன்னது சரிதான்.

(10) இயேசு - ஐந்து புருஷர் உனக்கு இருந்தார்கள், இப்பொழுது உனக்கு இருக்கிறவன் உனக்கு புருஷன் அல்ல

யோவான் 4:18 எப்படியெனில், ஐந்து புருஷர் உனக்கிருந்தார்கள், இப்பொழுது உனக்கிருக்கிறவன் உனக்குப் புருஷனல்ல, இதை உள்ளபடி சொன்னாய் என்றார்.

"ஐந்து புருஷர் உனக்கிருந்தார்கள் இப்பொழுது உனக்கிருக்கிறவன் உனக்குப் புருஷனல்ல" - பரிசுத்த ஆவியானவரின் வரத்தினால் இயேசு கிறிஸ்து அவளுடைய நிலைமையைத் தெரிந்து கொள்கிறார் (1கொரி 12:4-11). அவளுடைய கடந்த காலத்தைக் காண்கிறார். அவளுடைய சிந்தையில் ஓடிக் கொண்டிருக்கும் எண்ணங்களை அறிகிறார் (மத் 9:4; மத் 12:25; லூக்கா 5:22; லூக்கா 6:8; லூக்கா 11:17; யோவான் 2:24-25).

(11) ஸ்திரீ - ஆண்டவரே நீர் தீர்க்கதரிசி - நான் எங்கு தொழுது கொள்ள வேண்டும்

யோவான் 4:19 அப்பொழுது அந்த ஸ்திரீ அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன்.

யோவான் 4:20 எங்கள் பிதாக்கள் இந்த மலையிலே தொழுதுகொண்டுவந்தார்கள்; நீங்கள் எருசலேமிலிருக்கிற ஸ்தலத்திலே தொழுதுகொள்ள வேண்டும் என்கிறீர்களே என்றாள்.

"ஆண்டவரே, நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன்" - தன்னுடைய வாழ்வின் இரகசியத்தை இயேசு கிறிஸ்து வெளிப்படுத்தியவுடன் அவரை ஒரு வல்லமையுள்ள தீர்க்கதரிசி என்று அறிவிக்கிறாள். தம்மைப் பற்றி இயேசு கிறிஸ்து மேலும் அதிகமாகக் கூறிவிடாதவாறு தங்களுடைய சம்பாஷணையைத் திசை திருப்புகிறாள்.

"மலை" - கெரிசீம் மலை. ஆசீர்வாத மலை (the mount of blessing) அருகில் மற்றொரு மலை உள்ளது. அது ஏபால் மலை. சாபமலை (the mount of cursing) என்பது இதன் பொருள் (உபா 11:29; உபா 27:12-26; யோசு 8:33). யோதாம் இஸ்ரவேல் ஜனங்களிடம் இங்கிருந்து பேசினார் (நியா 9:7).

கிமு 332-இல் சமாரியாவின் தேசாதிபதியாக சன்பல்லாத் இருந்தான். சமாரியா பெர்சியருடைய ஆளுகையின்கீழ் இருந்தது. நெகேமியாவின்கீழ் இவன் இஸ்ரவேலரை எதிர்த்தான் (நெகே 4:7; 13:28). மகா அலெக்சாண்டரோடு சேர்ந்து கொண்டான். அலெக்சாண்டர் சன்பல்லாத்திற்கு எருசலேமிலுள்ள ஒரு தேவாலயத்தைப் போல கெரிசீம் மலையிலும் ஒரு தேவாலயம் கட்ட அனுமதி கொடுத்தான். தேவாலயத்தைக் கட்டி தன்னுடைய மருமகன் மனாசேயைத் தேவாலயத்தின் பிரதான ஆசாரியனாக்கினான். சமாரியா எருசலேமிலுள்ள தேவாலயத்திற்குப் போட்டியாக கெரிசீம் மலையிலுள்ள தேவாலயத்தில் ஆராதனை செய்தார்கள். பழைய ஏற்பாட்டிலுள்ள பஞ்சாகமத்தைத் தங்களுடைய வேதாகமமாகப் பயன்படுத்தி வந்தார்கள். யூதருக்கும் சமாரியருக்கும் உள்ள மிகப்பெரிய வேறுபாடு என்னவென்றால் கர்த்தரைக் கெரிசீம் மலையில் ஆராதிக்க வேண்டுமா அல்லது மோரியா மலையில் ஆராதிக்க வேண்டுமா என்பதுதான்.

4 அதிகாரம்

சமாரிய ஸ்திரீ இயேசு கிறிஸ்துவை ஒரு தீர்க்கதரிசி என்று கூறினாள். இந்த வாய்ப்பை பயன்படுத்தி, யூதருக்கும் சமாரியருக்கும் இடையிலுள்ள பிரச்சனையைப் பற்றிப் பேசுகிறாள்.

(12) இயேசு - பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும்

யோவான் 4:21 அதற்கு இயேசு: ஸ்திரீயே, நான் சொல்லுகிறதை நம்பு. நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளுங் காலம் வருகிறது.

யோவான் 4:22 நீங்கள் அறியாததைத் தொழுதுகொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்ளுகிறோம்; ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது.

யோவான் 4:23 உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்.

யோவான் 4:24 தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார்.

"ஸ்திரீயே" (யோவான் 2:4)

தீர்க்கதரிசன எண் - 0

"நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும் மாத்திரமல்ல எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளுங்காலம் வருகிறது" (யோவான் 4:21-24) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிறது. இயேசு கிறிஸ்து ஒரு சத்தியத்தை வெளிப்படுத்துகிறார். உண்மையான ஆராதனையை நாம் நமது இருதயத்திலிருந்து ஏறெடுக்க வேண்டும். எந்த மலையிலிருந்து ஆராதனை செய்தாலும் பிரச்சனையில்லை. நமது ஸ்தோத்திரமும் துதியும் இருதயத்தின் ஆழத்திலிருந்து வரவேண்டும்.

"பிதா" - இயேசு கிறிஸ்து தேவனுடைய ஒரேபேறான குமாரர் ஆகையினால் இயேசு ஆண்டவரை "பிதா" என்று அழைக்கிறார் (மத் 16:16) நாமெல்லாம் கர்த்தருடைய சுவிகாரப புத்திரர்கள் மத் 8:15 கலா 4:5 எபே 1:5 லூக்கா 1:21 2கொரி 6:18

பிதா (Father) - προπάτωρ - propatoor - 3962

ஆண்பால் பெயர்சொல் - தகப்பன், பிதா, முன்னோர்

"நீங்கள் அறியாததைத் தொழுது கொள்ளுகிறீர்கள்" - (2இராஜா 17:24-41, யோவான் 4:33)

"இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது" யூதருடைய மேசியா வழியாக இரட்சிப்பு வரும் என்று தீர்க்கதரிசிகள் முன்னறிவித்தார்கள் (லூக்கா 2:30 ரோமர் 3:1-2; ரோமர் 9:4-5 1பேதுரு 1:10-12)

"காலம் இப்பொழுதே வந்திருக்கிறது" - உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் இப்பொழுதே வந்திருக்கிறது.

தொழுதுகொள்ளுகிறவர்கள் (worshippers) προσκυνητής proskyneetees 4353

ஆண்பால் பெயர்சொல் - தொழுதுகொள்ளுகிறவர்கள்

யோவான் - தொகுப்புரை

4 அதிகாரம்

"ஆவியோடு" - சரீரபிரகாரமாக அல்ல நமது சிந்தையிலும், எண்ணங்களிலும் கர்த்தரைத் தொழுதுகொள்ளுதல்

"உண்மையோடு" - சத்தியத்தை ஏற்றுக் கொண்டு, கர்த்தரைத் தொழுது கொள்ளுதல். கள்ள உபதேசங்களைப் பின்பற்றக் கூடாது.

"தேவன் ஆவியாயிருக்கிறார்" - தேவன் சூரியனோ சந்திரனோ நட்சத்திரங்களோ அல்ல. அவர் கல்லோ, உலோகமோ, மரமோ மிருகமோ மனுஷனோ அல்ல. அவர் காற்றோ ஜலமோ அக்கினியோ அல்ல. அவர் ஆவியாயிருக்கிறார்

அவர் ஒரு நபர். அவருக்கு ஆவி, ஆத்துமா சரீரம் ஆகியவை உள்ளது. மனுஷருக்கு எலும்புகளும், சதைகளும் இருப்பது போன்று தேவனுக்கு இராது. மற்றபடி தேவன் மனுஷனைப் போல ஒரு நபராகவே இருக்கிறார் (யோபு 13:8 எபி 1:3) தேவனுக்கு ஆவிக்குரிய சரீரம் உள்ளது. (தானி 7:9-14; தானி 10:5-19) ரூபம் shape (யோவான் 5:37); சாயல் (form) (பிலி 2:5-7); மனுஷனுடைய ரூபமும், சாயலும் உள்ளது. (image and likeness of a man) (ஆதி 1:26, ஆதி 9:6, எசே 1:26-28, 1தீமோ 3:9)

வேதாகமத்தில் தேவனுடைய சரீர உறுப்புக்களாக நாம் வாசிக்கும் காரியங்கள்

1. பின்பகுதிகள் (back parts) (யாத் 33:23)
2. இருதயம் heart (ஆதி 6:6, ஆதி 8:21)
3. கைகளும், விரல்களும் (hands and fingers) (சங் 8:3-6; எபி 1:10 வெளி 5:1-7
4. வாய் (mouth) (எண் 12:8)
5. உதடுகளும், நாவும் (lips and tongue) (ஏசா 30:27)
6. பாதங்கள் (feet) (எசே 1:27, யாத் 24:10)
7. கண்கள் (eyes) (சங் 11:4; சங் 18:24 சங் 33:18)
8. காதுகள் (ears) (சங் 18:6
9. தலைமுடி, தலை, முகம், கைகள் (hair, head, face, arms) (தானி 7:9-14 தானி 10:5-19; வெளி 5:1-7 வெளி 22:4-6
10. இடுப்பு (loins) (எசே 1:26-28 எசே 8:1-4)

தேவனுக்குச் சரீர பிரசன்னம் உள்ளது (ஆதி 3:8; ஆதி 18:1-22) ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மற்ற நபர்கள் போவதுபோலவே போகிறார் (ஆதி 3:8 ஆதி 11:5; ஆதி 18:1-5,22,33; ஆதி 19:24 ஆதி 32:24-32; ஆதி 35:13; சக 14:5 தானி 7: 9-14; தீத்து 2:13)

தேவனிடம் உள்ள காரியங்கள்

1. சத்தம் (voice) (சங் 29, வெளி 10:3-4)
2. சுவாசம் (breath) (ஆதி 2:7)
3. முகரூபம் (countenance) (சங் 11:7

தேவன் செய்யும் காரியங்கள்

1. வஸ்திரம் தரிக்கிறார் (He wears clothes) (தானி 7:9-14 தானி 10:5-19 ,
2. போஜனம் பண்ணுகிறார் (eats) (ஆதி 18:1-8; யாத் 24:11
3. ஓய்வு எடுக்கிறார் (rests) (ஆதி 2:1-4, எபி 4:4)
4. பரலோகத்தில் வாசம்பண்ணுகிறார் (dwells in a mansion and in a city located on a material planet called Heaven) (யோவான் 14:1-3, எபி 11:10-16; எபி 13:14, வெளி 21

4 அதிகாரம்

5. சிங்காசனத்தில் அமர்ந்திருக்கிறார் (sits on a throne) (ஏசா 6; தானி 7:9-14; வெளி 4:1-5; வெளி 22:3-6)

6. நடக்கிறார் (walks) (ஆதி 3:8; ஆதி 18:1-8,22,33)

7. ஏறிப்போகிறார் (rides) (சங் 18:10; சங் 68:17; சங் 104:3; எசே 1)

தேவனுடைய உணர்வுகள்

1. துக்கம் (grief) (ஆதி 6:6)

2. கோபம் (anger) (1இராஜா 11:9)

3. மனம்வருந்துதல (repentance) ஆதி 6:6

4. வைராக்கியம் (jealousy) (யாத் 20:5)

5. வெறுப்பு (hate) (நீதி 6:16)

6. அன்பு (love) (யோவான் 3:16)

7. பரிதாபம் (pity) (சங் 103:13)

8. ஐக்கியம் (fellowship) (1யோவான் 1:3-7)

9. சந்தோஷம் (pleasure and delight) (சங் 147:10)

10. உணர்வுகள் (other soul passions like other beings) (கலா 5:22-23)

தேவனுடைய ஆன்மத்துவப் பண்புகள்

1. தனிப்பட்ட ஆவி (personal spirit) (சங் 143:10; ஏசா 30:1)

2. சிந்தை (mind) (ரோமர் 11:34)

3. ஞானம் (intelligence) (ஆதி 1:26; ரோமர் 11:33)

4. சித்தம் (will) ரோமர் 8:27; ரோமர் 9:19)

5. வல்லமை (power) (எபே 1:19; எபே 3:7,20; எபி 1:3)

6. சத்தியம் (truth) (சங் 91:4)

7. விசுவாசமும், நம்பிக்கையும் (faith and hope) (ரோமர் 12:3; 1கொரி 13:13)

8. நீதி (righteousness) (சங் 45:4)

9. உண்மை (faithfulness) (1கொரி 10:13)

10. அறிவும், ஞானமும் (knowledge and wisdom) (ஏசா 11:2; 1தீமோ 1:17)

11. சிந்தனை (reason) (ஏசா 1:18)

12. பகுத்தறிவு (discernment) (எபி 4:12)

13. மாறாத தன்மை (immutability) (எபி 6:17)

தேவன் தம்மைச் சரீரப்பிரகாரமாகப் பல இடங்களில் வெளிப்படுத்தியிருக்கிறார் (ஆதி 18; ஆதி 32:24-30; யாத் 24:9-11; யோசு 5:13-15; ஏசா 6; தானி 7:9-13; எசே 1; அப் 7:56-59; வெளி 4-5). மனுஷன் தேவனுடைய ரூபமாகவும், தேவனுடைய சாயலாகவும் இருக்கிறான். தேவனைக் காணமுடியாது. அவருடைய ரூபமாகவும், சாயலாகவும் இருக்கும் மனுஷன் மூலமாக தேவனை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். (ரோமர் 1:20)

(13) ஸ்திரீ கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார்

யோவான் 4:25 அந்த ஸ்திரீ அவரை நோக்கி: கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார் என்று அறிவேன், அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார் என்றாள்

4 அதிகாரம்

(14) இயேசு - நானே அவர்

யோவான் 4:26 அதற்கு இயேசு: உன்னுடனே பேசுகிற நானே அவர் என்றார்.

19. சீஷர்கள் திரும்பி வருகிறார்கள் - ஸ்திரீ ஊரிலுள்ள ஜனங்களை கிறிஸ்துவிடம் அழைத்து வருகிறாள்

யோவான் 4:27 அத்தருணத்தில் அவருடைய சீஷர்கள் வந்து, அவர் ஸ்திரீயுடனே பேசுகிறதைப் பற்றி ஆச்சரியப்பட்டார்கள். ஆகிலும் என்ன தேடுகிறீரென்றாவது, ஏன் அவளுடனே பேசுகிறீரென்றாவது ஒருவனும் கேட்கவில்லை.

யோவான் 4:28 அப்பொழுது அந்த ஸ்திரீ தன் குடத்தை வைத்துவிட்டு ஊருக்குள்ளே போய், ஜனங்களை நோக்கி:

யோவான் 4:29 நான் செய்த எல்லாவற்றையும் ஒரு மனுஷன் எனக்குச் சொன்னார்; அவரை வந்து பாருங்கள்; அவர் கிறிஸ்துதானோ என்றாள்.

யோவான் 4:30 அப்பொழுது அவர்கள் ஊரிலிருந்து புறப்பட்டு அவரிடத்தில் வந்தார்கள்.

"அவர் ஸ்திரீயுடனே பேசுகிறதைப் பற்றி ஆச்சரியப்பட்டார்கள்" - யூதருக்கும் சமாரியருக்கும் எந்தவிதச் சம்மந்தமுமில்லை. அப்படியிருக்கும் போது, யூதராகிய இயேசு கிறிஸ்து சமாரியா ஸ்திரீயிடம் பேசுவது சீஷருக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அதே சமயத்தில் யூதமார்க்கத்தில் ரபீ என்று அழைக்கப்படுகிறவர்கள் பொது இடங்களில் ஸ்திரீகளோடு பேசக்கூடாது. அது மட்டுமல்ல, தன் மனைவி, சகோதரி, மகள் ஆகிய யாருடனும் தெருவிலோ அல்லது வேறு பொது இடங்களிலோ யூதமார்க்கத்தின் ரபீமார்கள் பேசக்கூடாது.

ஆகையினால் இயேசு கிறிஸ்து கிணற்றண்டையில் ஸ்திரீயிடம் பேசியது சீஷருக்கு ஆச்சரியமாக இருந்தது.

20. ஊழியக்காரரின் சந்தோஷமும் திருப்தியும்

யோவான் 4:31 இப்படி நடக்கையில் சீஷர்கள் அவரை நோக்கி: ரபீ, போஜனம் பண்ணும் என்று வேண்டிக்கொண்டார்கள்.

யோவான் 4:32 அதற்கு அவர்: நான் புசிப்பதற்கு நீங்கள் அறியாத ஒரு போஜனம் எனக்கு உண்டு என்றார்.

யோவான் 4:33 அப்பொழுது சீஷர்கள் ஒருவரையொருவர் பார்த்து, யாராவது அவருக்குப் போஜனம் கொண்டு வந்திருப்பானோ என்றார்கள்.

யோவான் 4:34 இயேசு அவர்களை நோக்கி: நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது.

"நான் புசிப்பதற்கு நீங்கள் அறியாத ஒரு போஜனம் எனக்கு உண்டு" - ஆத்தும திருப்தி என்பதைச் சீஷர்கள் இன்னும் கற்றுக் கொள்ளவில்லை. ஒரு சமாரியா ஸ்திரீ மனந்திரும்பி இரட்சிக்கப்படும்போது இயேசு கிறிஸ்துவின் ஆத்துமாவில் சந்தோஷமும் சமாதானமும் திருப்தியும் உண்டாகும். (யோவான் 4:34)

"நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது" இயேசு கிறிஸ்து ஜீவியத்தின் இலக்கணத்தைத் தெளிவாகக் கூறுகிறார். தேவனுடைய சித்தத்தைச் செய்வது நமது வாழ்வின் இலக்காக இருக்க வேண்டும். அதற்காகவே நாம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கும்.

முடி (finish) τελειόω teleiooo 5048

வினைச்சொல் முடி, தேறு, நிறைவேற்று, பூரணப்படுத்து (to complete and bring to an end) (யோவான் 5:36, யோவான் 17:4,23, யோவான் 19:28,30)

4 அதிகாரம்

21. சுவிசேஷ ஊழியத்தைப் பற்றிய உபதேசம்

யோவான் 4:35 அறுப்புக்காலம் வருகிறதற்கு இன்னும் நாலுமாதம் செல்லும் என்று நீங்கள் சொல்லுகிறதில்லையா? இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

யோவான் 4:36 விதைக்கிறவனும் அறுக்கிறவனுமாகிய இருவரும் ஒருமித்துச் சந்தோஷப்படத்தக்கதாக அறுக்கிறவன் கூலியை வாங்கி, நித்திய ஜீவனுக்காகப் பலனைச் சேர்த்துக் கொள்ளுகிறான்.

யோவான் 4:37 விதைக்கிறவன் ஒருவன் அறுக்கிறவன் ஒருவன் என்கிற மெய்யான வழக்கச்சொல் இதினாலே விளங்குகிறது.

யோவான் 4:38 நீங்கள் பிரயாசப்பட்டுப் பயிரிடாததை அறுக்க நான் உங்களை அனுப்பினேன்; மற்றவர்கள் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய பிரயாசத்தின் பலனை நீங்கள் பெற்றீர்கள் என்றார்.

"அறுப்புக்காலம் வருகிறதற்கு இன்னும் நாலுமாதம் செல்லும் என்று நீங்கள் சொல்லுகிறதில்லையா?" பஸ்கா பண்டிகைக்குப் பின்பு அறுப்புக்காலம் வரும். பஸ்கா ஏப்ரல் மாதத்தில் நடைபெறும். இயேசு கிறிஸ்து இங்கு கூறியிருக்கும் மாதம் டிசம்பர் மாதத்துக் குளிர்காலமாகும்.

"இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்" - சமாரியர்கள் பட்டணத்திலிருந்து இயேசு கிறிஸ்து இருக்கும் கிணற்றண்டையில் வருகிறார்கள். அறுப்புக்கு விளைந்திருக்கிறது என்பது சமாரியருடைய ஆத்தும அறுவடையைக் குறிப்பிடும். அறுவடை சமீபமாக இருக்கிறது. அறுவடை பண்ண வேண்டிய காலம் ஒருநாள் வரும். ஆவிக்குரிய அறுவடைகளுக்கு நாம் நீண்ட காலம் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. சத்திய வசனங்களை நாம் ஏற்கனவே விதைத்திருக்கிறோம். விதைப்புக்கு ஏற்ற விளைச்சல் நிச்சயமாக இருக்கும்.

"அறுக்கிறவன் கூலியை வாங்கி, நித்திய ஜீவனுக்காகப் பலனைச் சேர்த்துக் கொள்ளுகிறான்" - இயேசு கிறிஸ்து சமாரிய ஸ்திரீயின் இருதயத்திலே சுவிசேஷ விதையை விதைத்திருக்கிறார். ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுவதற்கான கூலியை அவர் ஏற்கனவே வாங்கியிருக்கிறார். அவர் விதையை விதைத்து நித்திய ஜீவனுக்கான கனியை அன்றைய தினமே அறுவடை செய்கிறார். விதைக்கிறவரும் அறுக்கிறவரும் இந்த வசனத்தில் இயேசு கிறிஸ்துவே. இயேசு கிறிஸ்து அந்த நாளின் அறுவடைக்காக மிகுந்த சந்தோஷமடைகிறார் (கொரி 3:6-9)

"நீங்கள் பிரயாசப்பட்டுப் பயிரிடாததை அறுக்கிறீர்கள்" - இயேசு கிறிஸ்து தமது சீஷர்களை ஆத்தும அறுவடைக்காக அனுப்புகிறார். அவர்கள் அறுவடையின் பலனைப் பெற்றுக் கொள்வார்கள். ஆனால் சீஷர்கள் சத்திய வசனங்களை விதைக்கவில்லை. அவர்களுக்கு முன்பிருந்த பரிசுத்தவான்களும் தீர்க்கதரிசிகளும் வேத வசனத்தை ஜனங்களுடைய இருதயத்தில் விதைத்திருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவும், யோவான் ஸ்நானனும் ஏற்கனவே சத்திய வசனத்தை ஜனங்கள் மத்தியிலே விதைத்திருக்கிறார்கள். அவர்கள் ஏற்கனவே பலருக்கு சத்திய வசனங்களைப் பிரசங்கம் பண்ணி, ஞானஸ்நானம் கொடுத்திருக்கிறார்கள். ஏராளமான வியாதியஸ்தர்களைக் குணப்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் பிரயாசப்பட்டுப் பயிரிட்டார்கள். அவர்களுடைய பிரயாசத்தின் பலனைச் சீஷர்கள் பெற்றுக் கொள்கிறார்கள் (மத் 10; லூக்கா 9; லூக்கா 10; யோவான் 4:2)

22. இரண்டு நாள் எழுப்புதல் கூட்டம்

யோவான் 4:39 நான் செய்த எல்லாவற்றையும் எனக்குச் சொன்னார் என்று சாட்சி சொன்ன அந்த ஸ்திரீயினுடைய வார்த்தையினிமித்தம் அந்த ஊரிலுள்ள சமாரியரில் அநேகர் அவர்மேல் விசுவாசமுள்ளவர்கள் ஆனார்கள்.

4 அதிகாரம்

யோவான் 4:40 சமாரியர் அவரிடத்தில் வந்து, தங்களிடத்தில் தங்க வேண்டுமென்று அவரை வேண்டிக் கொண்டார்கள் அவர் இரண்டு நாள் அங்கே தங்கினார்

யோவான் 4:41 அப்பொழுது அவருடைய உபதேசத்தினிமித்தம் இன்னும் அநேகம்பேர் விசுவாசித்து

யோவான் 4:42 அந்த ஸ்திரீயை நோக்கி, உன் சொல்லினிமித்தம் அல்ல, அவருடைய உபதேசத்தை நாங்களே கேட்டு, அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலகரட்சகர் என்று அறிந்துவிசுவாசிக்கிறோமென்றார்கள்

"அநேகர் அவர்மேல் விசுவாசமுள்ளவர்கள் ஆனார்கள்" - அந்த ஸ்திரீயின் சாட்சியின் மூலமாக அந்த ஊர் ஜனங்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, மறுபடியும் பிறந்து, நித்திய ஜீவனைப் பெற்றுக் கொண்டார்கள் (யோவான் 4:42; யோவான் 3:15-18; யோவான் 5:24)

"ஸ்திரீ" - இவள் ஒரு வேசி என்பதற்கு ஆதாரம் எதுவுமில்லை. அவளுக்கு ஐந்து கணவர்கள் இருந்தார்கள். ஒருவேளை ஒவ்வொருவராக மரித்திருக்கலாம் (மத் 22:26 ஆவது வசனத்தில் ஒரு ஸ்திரீயின் ஏழு கணவர்களைப் பற்றி வாசிக்கிறோம்). அல்லது இந்த ஸ்திரீயின் புருஷர்கள் இவளைத் தள்ளுதற்சீட்டுக் கொடுத்து, தள்ளி வைத்திருக்கலாம். அக்காலத்தில் மனைவியைத் தள்ளிவிடுவது எளிது. எந்த முகாந்தரத்தினாலாகிலும் மனைவியைத் தள்ளிவிடலாம் என்று புருஷர்கள் நினைத்தார்கள் (மத் 19:1-12). தள்ளுதற்சீட்டைப் பற்றி உபா 24:1 ஆவது வசனத்தில் நாம் இவ்வாறு வாசிக்கிறோம். "ஒருவன் ஒரு ஸ்திரீயை விவாகம் பண்ணிக் கொண்ட பின்பு, அவளிடத்தில் இலச்சையான காரியத்தைக் கண்டு, அவள்மேல் பிரியமற்றவனானால், அவன் தள்ளுதலின் சீட்டை எழுதி, அவள் கையிலே கொடுத்து, அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பிவிடலாம்" யூதமார்க்கத்து ரபீமார்கள் இந்த நிபந்தனைகளையெல்லாம் புறக்கணித்து விட்டு, சிறிய காரணங்களுக்குக் கூட தள்ளுதற்சீட்டுக் கொடுத்து விடுகிறார்கள். சமாரியரும் யூதரைப் போல தள்ளுதற்சீட்டுக் கொடுத்திருக்கலாம். இயேசு கிறிஸ்து அவளிடம் "இப்பொழுது உனக்கிருக்கிறவன் உனக்குப் புருஷனல்ல" என்று கூறுகிறார். ஆகையினால் இந்த ஸ்திரீயும், அந்த மனுஷனும் கணவனும் மனைவியும் அல்ல (யோவான் 4:18)

"அவர் இரண்டு நாள் அங்கே தங்கினார்" - யூதர்கள் சமாரியருடைய ஊரில் தங்க மாட்டார்கள். இயேசு கிறிஸ்து அங்கு இரண்டு நாள் தங்கி, யூதருடைய பாரம்பரியத்தை மீறுகிறார். ஒரு ஸ்திரீயோடு பேசுவதே ரபீமாருக்கு உகந்ததல்ல. இப்போது சமாரியரோடு இரண்டு நாள் தங்குகிறார். இது பரிசேயருடைய பார்வையில் மிகப்பெரிய குற்றமாக இருக்கும் (யோவான் 4:9). நாம் பிறருக்கு உதவி செய்ய வேண்டுமென்று இயேசு கிறிஸ்து கூறியிருக்கிறார். தமது உபதேசத்தின் பிரகாரம் செயல்படுகிறார் (லூக்கா 10:29-37)

"அவருடைய உபதேசத்தினிமித்தம் இன்னும் அநேகம்பேர் விசுவாசித்தார்கள்" - யோவான் இரண்டு இடங்களில் "அநேகர்" இயேசுவை விசுவாசித்ததாகக் கூறுகிறார் (யோவான் 4:39,41). மிகப்பெரிய ஆத்தும அறுவடை அங்கு நடைபெறுகிறது

"உலகரட்சகர்" - இந்த வசனத்திலும் 1யோவான் 4:14 ஆவது வசனத்திலும் மட்டுமே இந்த வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது

"உலகம்" - இயேசு கிறிஸ்து யூதருக்கும், புறஜாதியாருக்கும் இரட்சகர் என்று இந்த சமாரியர்கள் விசுவாசித்தார்கள். இவர்கள் மற்ற சமாரியர்களைப் போல அல்ல. மற்ற சமாரியர்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ளவில்லை (லூக்கா 9:51-56). ஒருவர் இயேசுகிறிஸ்துவைத் தன்னுடைய உள்ளத்தில் ஏற்றுக்கொள்ளும்போது அவர்களுடைய ஜீவியத்தில் மாற்றம் ஏற்படும்

23. கலிலேயாவில் இயேசுவை ஏற்றுக் கொள்கிறார்கள்

யோவான் 4:43 இரண்டுநாளைக்குப் பின்பு அவர் அவ்விடம்விட்டுப் புறப்பட்டு, கலிலேயாவுக்குப் போனார்

யோவான் 4:44 ஒரு தீர்க்கதரிசிக்குத் தன் சொந்த ஊரிலே கனமில்லையென்று இயேசு தாமே சொல்லியிருந்தார்

4 அதிகாரம்

யோவான் 4:45 அவர் கலிலேயாவில் வந்தபோது, எருசலேமில் பண்டிகையிலே அவர் செய்த எல்லாவற்றையும் பார்த்திருந்த கலிலேயர் அவரை ஏற்றுக் கொண்டார்கள்; அவர்களும் பண்டிகைக்குப் போயிருந்தார்கள்.

"இரண்டுநாளைக்குப் பின்பு" - சமாரியாவில் இரண்டு நாட்கள் இருந்தபின்பு. பின்பு என்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்க வார்த்தை "மேடா" (meta) என்பதாகும். இதற்கு "ஒரு நிகழ்ச்சிக்குப் பின்பு" என்று பொருள். (யோவான் 5:1) இயேசுகிறிஸ்து மூன்று நாட்களுக்குப் பின்பு உயிர்த்தெழுந்தார் என்னும் வாக்கியத்திலும், இதே கிரேக்கச் சொல்லே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (மத் 27:63; மாற்கு 8:31). "பின்பு" என்னும் வார்த்தை பயன்படுத்தப்படும்போது அந்த நிகழ்ச்சி ஒரு காரியத்திற்கு நடுவில் நடைபெறவில்லை என்று பொருள். வேதவாக்கியத்தில் "ஒருசில நாட்களுக்குப் பின்பு" என்று நாம் சில வசனங்களில் வாசிக்கிறோம். எடுத்துக்காட்டாக "இரண்டு நாளைக்குப்பின்பு" (மத் 26:2; மாற்கு 4:1) "மூன்று நாளைக்குப்பின்பு" (அப் 25:1; அப் 28:17) "ஆறு நாளைக்குப் பின்பு" (மத் 17:1; மாற்கு 9:2) "எட்டு நாளைக்குப்பின்பு" (லூக்கா 9:28)

பின்பு (after) - μετά - meta - 3326

முன்னிடைச்சொல் - உடன், கூட, உம், உடைய

"ஒரு தீர்க்கதரிசிக்குத் தன் சொந்த ஊரிலே கனமில்லை" இயேசுகிறிஸ்துவின் சொந்த தேசம் யூதேயா. சொந்த ஊர் பெத்லகேம். (மீகா 5:1-2; மத் 2). அவர் ஊழியம் செய்த தேசம் கலிலேயா. யூதேயா அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. கலிலேயா அவரை ஏற்றுக்கொண்டது. (யோவான் 4:45) இயேசுகிறிஸ்து சொந்த ஊரான நாசரேத்தில் உள்ள ஜனங்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளவில்லை. கலிலேயாவிலுள்ள ஜனங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள். (லூக்கா 4:16-30)

24. இராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய குமாரனை இயேசு குணமாக்குகிறார்

யோவான் 4:46 பின்பு, இயேசு தாம் தண்ணீரைத் திராட்சரசமாக்கின கலிலேயாவிலுள்ள கானா ஊருக்கு மறுபடியும் வந்தார்; அப்பொழுது கப்பர்நகூமிலே ராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய குமாரன் வியாதியாயிருந்தான்.

யோவான் 4:47 இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு வந்தாரென்று அந்த மனுஷன் கேள்விப்பட்டபோது, அவரிடத்திற்குப் போய், தன் மகன் மரண அவஸ்தையாயிருந்தபடியினாலே, அவனைக் குணமாக்கும்படிக்கு வரவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டான்.

யோவான் 4:48 அப்பொழுது இயேசு அவனை நோக்கி: நீங்கள் அடையாளங்களையும் அற்புதங்களையும் காணாவிட்டால் விசுவாசிக்கமாட்டீர்கள் என்றார்.

யோவான் 4:49 அதற்கு ராஜாவின் மனுஷன்: ஆண்டவரே, என் பிள்ளை சாகிறதற்குமுன்னே வரவேண்டும் என்றான்.

யோவான் 4:50 இயேசு அவனை நோக்கி: நீ போகலாம், உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்றார். அந்த மனுஷன் இயேசு சொன்ன வார்த்தையை நம்பிப் போனான்.

யோவான் 4:51 அவன் போகையில், அவனுடைய ஊழியக்காரர் அவனுக்கு எதிர்கொண்டு வந்து: உம்முடைய குமாரன் பிழைத்திருக்கிறான் என்று அறிவித்தார்கள்.

யோவான் 4:52 அப்பொழுது: எந்த மணிநேரத்தில் அவனுக்குக் குணமுண்டாயிற்று என்று அவர்களிடத்தில் விசாரித்தான். அவர்கள்: நேற்று ஏழாமணிநேரத்தில் ஜுரம் அவனை விட்டது என்றார்கள்.

யோவான் 4:53 உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்று இயேசு தன்னுடனே சொன்ன மணிநேரம் அதுவே என்று தகப்பன் அறிந்து, அவனும் அவன் வீட்டாரனைவரும் விசுவாசித்தார்கள்.

4 அதிகாரம்

யோவான் 4:54 இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்குத் திரும்பிவந்த பின்பு இது அவர் செய்த இரண்டாம் அற்புதம்

"கலிலேயாவிலுள்ள கானா ஊர்" - (யோவான் 2:1)

"ராஜாவின் மனுஷர்" (nobleman) - கலிலேயாவின் காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதுவினுடைய அதிகாரியாகவோ அல்லது அவனுடைய குடும்பத்தாராகவோ இருக்கலாம் (யாக் 3:1 மத் 14:1)

ராஜாவின் மனுஷன் (nobleman) - βασιλίσκος - basiliskos - 937

பெரவட - ராஜா ராஜரீக ராஜாவின் மனுஷன் (an officer, prince) (யோவான் 4:46 49 அப 12:20-21, யாக் 2:8)

"கப்பர்நகூமிலே ராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய குமாரன் வியாதியாயிருந்தான்" நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன் வியாதியாக இருந்த சம்பவத்தை மத் 8:5-12, லூக்கா 7:1-10 ஆகிய வசனங்களில் நாம் வாசிக்கலாம். இவ்விரண்டும் வெவ்வேறு அற்புதங்கள் நடைபெற்ற இடம் விண்ணப்பம் கிறிஸ்துவின் பதில் மனுஷனுடைய விசுவாசம் எல்லாமே வெவ்வேறானவை.

"நீங்கள் அடையாளங்களையும் அற்புதங்களையும் காணாவிட்டால் விசுவாசிக்க மாட்டீர்கள்" இந்த மனுஷனிடம் விசுவாசம் இல்லை மத்தேயு 8 ஆவது அதிகாரத்தில் நாம் வாசிக்கும் நூற்றுக்கதிபதியினிடத்தில் மிகுந்த விசுவாசம் இருந்தது.

"அடையாளங்களையும் அற்புதங்களையும்" - (யோவான் 2:11) ஜனங்களை விசுவாசிகளாக ஆக்குவதற்கு அற்புதங்களும், அடையாளங்களும் நடைபெற்றன (மாற்கு 16:15-20 யோவான் 5:20-36 யோவான் 9:3-4 யோவான் 10:25-38 யோவான் 14:10-15)

தீர்க்கதரிசன எண் - 7

"நீ போகலாம், உன் குமாரன் பிழைத்திருக்கிறான்" (யோவான் 4:50) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"அந்த மனுஷன் இயேசு சொன்ன வார்த்தையை நம்பிப் போனான் - இதுவே விசுவாசம். (ரோமர் 4:17; ரோமர் 10:17 எபி 11:1) விசுவாசத்தை நாம் நடைமுறையில் செயல்படுத்த வேண்டும் கர்த்தர் வாக்கு மாறாதவர் அவர் வாக்குத்தத்தம் பண்ணியதை நிறைவேற்றுவார் வேதத்திலுள்ள தீர்க்கதரிசனங்களும் நிறைவேறும். கர்த்தருடைய வார்த்தையும் நிறைவேறும்

"எந்த மணிநேரத்தில அவனுக்குக் குணமுண்டாயிற்று என்று அவர்களிடத்தில் விசாரித்தான்" - இயேசு கிறிஸ்து சுகமாக்கும்போது தவணை முறையில் சுகமாக்காமல் உடனடியாகச் சுகமாக்குகிறார் ராஜாவின் மனுஷனிடம் நீ போகலாம் உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்று எந்த நேரத்தில் சொன்னாரோ அந்த நேரத்திலேயே அவனுடைய குமாரன் பிழைத்தான் (யோவான் 4:53)

"ஏழாமணிநேரம்" - மதியம் 1 மணி)

"அவன் விசுவாசித்தான்" - இயேசு சொன்ன வார்த்தையை அந்த மனுஷன் நம்பிப் போனான் (யோவான் 4:50) அவனுடைய விசுவாசம் இந்த வசனத்தில் உறுதிபண்ணப்படுகிறது.

"அவன் வீட்டாரனைவரும் விசுவாசித்தார்கள்" - அவன் வீட்டிலுள்ள எல்லோருமே இரட்சிக்கப்பட்டார்கள் எல்லோரும்விசுவாசித்தார்கள் ஒருவனுடைய விசுவாசத்தினால் மற்றவன் இரட்சிக்கப் படுவதில்லை ஒருவன் இரட்சிக்கப்படுவதற்கு அவனுக்குள் விசுவாசம் இருக்க வேண்டும்.

5 அதிகாரம்

25. பெதஸ்தா குளம் - இயேசு ஓய்வுநாளில் திமிர்வாதக்காரனை சொஸ்தமாக்குகிறார்

யோவான் 5:1 இவைகளுக்குப்பின்பு யூதருடைய பண்டிகை ஒன்று வந்தது. அப்பொழுது இயேசு எருசலேமுக்குப் போனார்

யோவான் 5:2 எபிரெய பாஷையிலே பெதஸ்தா என்னப்பட்ட ஒரு குளம் எருசலேமில் ஆட்டுவாசலினருகே இருக்கிறது. அதற்கு ஐந்து மண்டபங்களுண்டு.

யோவான் 5:3 அவைகளிலே குருடர் சப்பாணிகள் சூம்பின உறுப்புடையவர்கள் முதலான வியாதிக்காரர் அநேகர் படுத்திருந்து தண்ணீர் எப்பொழுது கலங்கும் என்று காத்துக் கொண்டிருப்பார்கள்

யோவான் 5:4 ஏனெனில் சில சமயங்களிலே தேவதூதன் ஒருவன் அந்தக் குளத்தில் இறங்கி தண்ணீரைக் கலக்குவான்; தண்ணீர் கலங்கினபின்பு யார் முந்தி அதில் இறங்குவானோ அவன் எப்பேர்ப்பட்ட வியாதியஸ்தனாயிருந்தாலும் சொஸ்தமாவான்

யோவான் 5:5 முப்பத்தெட்டு வருஷம் வியாதி கொண்டிருந்த ஒரு மனுஷன் அங்கே இருந்தான்

யோவான் 5:6 படுத்திருந்த அவனை இயேசு கண்டு, அவன் வெகுகாலமாய் வியாதியஸ்தனென்று அறிந்து, அவனை நோக்கி: சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா என்று கேட்டார்

யோவான் 5:7 அதற்கு வியாதியஸ்தன்: ஆண்டவரே, தண்ணீர் கலக்கப்படும் போது என்னைக் குளத்தில் கொண்டு போய் விடுகிறதற்கு ஒருவருமில்லை. நான் போகிறதற்குள்ளே வேறொருவன் எனக்கு முந்தி இறங்கிவிடுகிறான் என்றான்

யோவான் 5:8 இயேசு அவனை நோக்கி: எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட என்றார்

யோவான் 5:9 உடனே அந்த மனுஷன் சொஸ்தமாகி, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு, நடந்துபோனான் அந்த நாள் ஓய்வுநாளாயிருந்தது

"இவைகளுக்குப்பின்பு" - யோவான் இப்படிப்பட்ட வாக்கியத்தை 15 இடங்களில் பயன்படுத்தியிருக்கிறார் இதற்குரிய கிரேக்க வார்த்தை "மெடா" (meta) என்பதாகும். யோவான் சுவிசேஷத்திலும் வெளிப்படுத்தின விசேஷத்திலும் இந்த வாக்கியம் பலவிதமாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது இவைகளுக்குப் பின்பு "after these things" (யோவான் 3:22; யோவான் 6:1; யோவான் 7:1; யோவான் 21:1; வெளி 7:1; வெளி 18:1; வெளி 19:1) இவைகளுக்குப்பின்பு "after this" (யோவான் 5:1; யோவான் 19:38; வெளி 4:1; வெளி 7:9) இவைகளுக்குப் பின்பு "after that" (வெளி 15:5; வெளி 20:3) அதற்குப்பின்பு "afterward" (யோவான் 5:14) இவைகளுக்குப்பின்பு "hereafter" (யோவான் 13:7; வெளி 1:19; வெளி 4:1; வெளி 9:12). புதிய ஏற்பாட்டில் இந்த வாக்கியம் நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்திக் கூறுவதற்காக 12 இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (மாற்கு 16:12; லூக்கா 5:27; லூக்கா 10:1; லூக்கா 12:4; லூக்கா 17:8; லூக்கா 18:4; அப் 7:7; அப் 13:20; அப் 15:16; அப் 18:1; எபி 4:8; 1பேதுரு 1:11)

இவைகளுக்குப்பின்பு (After this) - μετά - meta – 3326

முன்னிடைச்சொல் - உடன், கூட, உம், உடைய

"யூதருடைய பண்டிகை" (யோவான் 2:13)

"இயேசு எருசலேமுக்குப் போனார்" - எருசலேமில் இயேசு கிறிஸ்து கலந்து கொண்ட இரண்டாவது பண்டிகை. (யோவான் 2:13-23; யோவான் 3:22)

"ஆட்டுவாசல்" - இது வாசலின் பெயராக இருக்கலாம். (நெகே 3:1,32; நெகே 12:39)

குளம் (pool) - κολυμβήθρα kolymbeethra 2861

5 அதிகாரம்

பெண்பால் பெயர்ச்சொல் - குளம் யோவான் 5:2,4; யோவான் 9:7 அப 27:43.

"பெதஸ்தா" - இரக்கத்தின்வீடு (house of mercy)

"ஐந்து மண்டபங்கள்" - வெயிலுக்கும் மழைக்கும் ஜனங்கள் ஒதுங்கித் தங்குவதற்காகக் கட்டப்பட்டிருந்தன

"வியாதிக்காரர்" (impotent) - வியாதி உடையவர்கள், நாதியற்றவர்கள்

"சப்பாணிகள்" (halt) - அப 3:2,11; அப 8:7; அப 14:8; மத் 11:5, மத் 18:8; மத் 21:14; மத் 7:22 மத் 14:13, 21; எபி 12:13; மாற்கு 9:45)

"சூம்பின உறுப்புடையவர்கள்" - திமிர்வாதக்காரர்கள் (மத் 12:10 மாற்கு 3:3 லூக்கா 6:6-8

"சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா" அந்த மனுஷனுக்கு இயேசுவைப் பற்றித் தெரியாது. ஆகையினால் இயேசு தாமே சம்பாஷணையை ஆரம்பித்து வைக்கிறார்

"ஆண்டவரே" - (யோவான் 4:11)

கலக்குதல் (troubled) - ταράσσω - tarassoo - 5015

வினைச்சொல் - கலங்கு கலக்கமடை, துயரமடை, கலக்குதல் (to agitate, cause commotion, disturb) (யோவான் 11:33, யோவான் 12:27; யோவான் 13:21; யோவான் 14:1,27

"எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட" - யோவான் கூறியிருக்கும் மூன்றாவது அற்புதம். (யோவான் 2:11, யோவான் 4:54). பெதஸ்தா குளத்தில் ஏராளமான வியாதியஸ்தர்கள் இருந்தார்கள் அவர்கள் எல்லோரையும் இயேசு குணமாக்காமல், இந்த மனுஷனை மட்டும் ஏன் குணமாக்கினார் என்று இந்த வசனத்தில் கூறப்படவில்லை.

இயேசு கிறிஸ்துவின் சத்துருக்கள் அவருக்கு எதிராக சதியாலோசனை பண்ணிக் கொண்டிருக்கிறார்கள் ஆகையினால் அவர் தமது கிரியைகளைப் பிரஸ்தாபப்படுத்த விரும்பவில்லை. அது ஓய்வுநாள் அந்த ஓய்வுநாளில் இயேசு கிறிஸ்து பெரிய குழப்பத்தை உண்டு பண்ண விரும்பவில்லை. (யோவான் 5:6) இயேசுவால் எல்லாரையும் குணப்படுத்த முடியாது. ஒருவேளையில் அவர் ஒருவரை மட்டுமே குணப்படுத்துவார் என்று இதற்கு வியாக்கியானம் கூறக்கூடாது. எல்லோரையும் குணப்படுத்துவதற்காகவே இயேசு கிறிஸ்து வந்திருக்கிறார் அவருடைய தழும்புகளால் நாம் எல்லோருமே குணமாகிறோம் (ஏசா 53:4-5; மத் 8:17; மத் 2:24)

26. ஓய்வுநாளில் படுக்கையை எடுத்துக் கொண்டு போவதற்காக யூதர்கள் அவனைக் கடிந்து கொள்கிறார்கள்

யோவான் 5:10 ஆதலால் யூதர்கள் குணமாக்கப்பட்டவனை நோக்கி: இது ஓய்வுநாளாயிருக்கிறதே, படுக்கையை எடுத்துக்கொண்டு போகிறது உனக்கு நியாயமல்ல என்றார்கள்

யோவான் 5:11 அவன் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: என்னைச் சொஸ்தமாக்கினவர் உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடவென்று எனக்குச் சொன்னார் என்றான்

யோவான் 5:12 அதற்கு அவர்கள் உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடவென்று உன்னுடனே சொன்ன மனுஷன் யார் என்று அவனிடத்தில் கேட்டார்கள்

யோவான் 5:13 சொஸ்தமாக்கப்பட்டவன் அவர் இன்னாரென்று அறியவில்லை; அவ்விடத்தில் ஜனங்கள் கூட்டமாயிருந்தபடியினால் இயேசு விலகியிருந்தார்

"இது ஓய்வுநாளாயிருக்கிறதே, படுக்கையை எடுத்துக்கொண்டு போகிறது உனக்கு நியாயமல்ல" - ஒரு பொது இடத்திலிருந்து தனி இடத்திற்கோ அல்லது தனி இடத்திலிருந்து ஒரு பொது இடத்திற்கோ ஓய்வுநாளில் ஒரு பொருளை எடுத்துச் செல்வது பிரமாணத்தை மீறும் செயல் என்று யூதமார்க்கத்து ரபீமார்கள் குற்றம் சுமத்தினார்கள் இதுபோன்று அவர்கள் பலவேறு பாரம்பரியங்களை ஜனங்கள் கடைபிடிக்க வேண்டுமென்று வலியுறுத்தி வந்தார்கள்

5 அதிகாரம்

"அவ்விடத்தில் ஜனங்கள் கூட்டமாயிருந்தபடியினால் இயேசு விலகியிருந்தார்" - அங்கு திரளான ஜனங்கள் கூட்டமாகக் கூடியிருந்தார்கள். தம்மீது யூதமார்க்கத் தலைவர்களுக்கு வெறுப்பு இருந்தது. அவர்கள் கடைபிடிக்க வேண்டுமென்று கூறிய பாரம்பரிய விதிகளை இயேசுகிறிஸ்து மீறினார். பிரச்சனை வரக்கூடாது என்று நினைத்து, இயேசு அந்த இடத்திலிருந்து விலகி இருந்தார். இதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்கச் சொல் "எக்னேயோ (ekneuoo) இதற்குக் கடந்துபோதல், அந்த இடத்திலிருந்து வேறு இடத்திற்குப் போதல், தப்பித்துப்போதல் (to escape, slip away) என்று பொருள். இந்த இடத்தில் இயேசு கிறிஸ்து தேவையில்லாமல் மரிக்க விரும்பவில்லை. கல்வாரி சிலுவையில் மரிக்க வேண்டுமென்பதே தேவனுடைய சித்தம். இயேசு கிறிஸ்து அதை நிறைவேற்றவே விரும்பினார்.

விலகு (conveyed ... away) - ἐκνεύω - ekneuoo - 1593

வினைச்சொல் - விலகு

27. இயேசு தாம் சொஸ்தமாக்கிய திமிர்வாதக்காரனை மறுபடியும் காண்கிறார்

யோவான் 5:14 அதற்குப்பின்பு இயேசு அவனை தேவாலயத்திலே கண்டு: இதோ, நீ சொஸ்தமானாய், அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ்செய்யாதே என்றார்.

பாவம் (sin) - ἁμαρτάνω hamartanoo - 264 - குறி தவறுதல் (யோவான் 1:29)

வினைச்சொல் குற்றம் செய், பாவஞ்செய், பெற்றுக்கொள்ளத் தவறு, நியதியின்படி நடக்கத்தவறு

அ) சட்டப்பிரகாரமாக தவறு செய்தல் (அப். 25:8) ஆவிக்குரியபிரகாரமாக தவறு செய்தல் (ரோம. 3:23, 5:12)

(ஆ) நீதி நெறிக்குப் புறம்பாகத் தவறு செய்தல்; ஒருவருக்கு விரோதமாகப் பாவஞ்செய்தல் (1கொரி. 6:18) மனிதர்கள் மத்தியில் தவறு செய்தல் (18:15)

(இ) தேவனுடைய சித்தத்தை மீறுதல், அதிலும் சிறப்பாக தேவன் வெளிப்படுத்தியுள்ள சித்தத்தை கூறி, அவருக்கு எதிராக பாவஞ்செய்தல் (மத். 27:2)

28. சொஸ்தமான மனுஷன் யூதரிடம் அறிவிக்கிறான்

யோவான் 5:15 அந்த மனுஷன் போய், தன்னைச் சொஸ்தமாக்கினவர் இயேசு என்று யூதர்களுக்கு அறிவித்தான்.

"அந்த மனுஷன் போய், தன்னைச் சொஸ்தமாக்கினவர் இயேசு என்று யூதர்களுக்கு அறிவித்தான்" - அந்த மனுஷனுக்கு யூதமார்க்கத் தலைவர்களால் இயேசு கிறிஸ்துவிற்கு நேரிட்டிருக்கிற பிரச்சனை தெரியவில்லை. ஆகையினால் இயேசுவின் அற்புதமான கிரியையை யூதருக்கு அறிவிக்கிறான்.

29. இயேசுவை கொல்வதற்கு சதியாலோசனை - (மத். 26:3)

யோவான் 5:16 இயேசு இவைகளை ஓய்வுநாளில் செய்தபடியால், யூதர்கள் அவரைத் துன்பப்படுத்தி, அவரைக் கொலைசெய்ய வகைதேடினார்கள்.

"இயேசு இவைகளை ஓய்வுநாளில் செய்தபடியால் யூதர்கள் அவரைத் துன்பப்படுத்தி, அவரைக் கொலைசெய்ய வகைதேடினார்கள்" இயேசு மேலும் பல சமயங்களில் ஓய்வு நாளில் சொஸ்தமாக்கியிருக்கிறார் (யோவான் 12:10-14; மாற்கு 2:27; மாற்கு 3:1-6; லூக்கா 6:6-11; லூக்கா 13:10-16; லூக்கா 14:1-5; யோவான் 5:16; யோவான் 9:14). இதனால் அவருக்கு உபத்திரவம் வரும். இதைத் தெரிந்திருந்தும் இயேசுகிறிஸ்து ஓய்வுநாளில் அற்புதம் செய்கிறார். ஓய்வுநாளுக்காக மனுஷன் சிருஷ்டிக்கப்படவில்லை. மனுஷனுக்காகவே ஓய்வுநாள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது என்பது இயேசு கிறிஸ்துவின் உபதேசம். (ஏசா. 1:13-15; ஓசி. 2:11)

5 அதிகாரம்

30. இயேசுவின் பதிலுரை

(1) இயற்கையில் பிதாவும் இயேசுவும் சமம் - (1:1)

யோவான் 5:17 இயேசு அவர்களை நோக்கி: என் பிதா இதுவரைக்கும் கிரியைசெய்துவருகிறார், நானும் கிரியைசெய்துவருகிறேன் என்றார்.

யோவான் 5:18 அவர் ஓய்வுநாள் கட்டளையை மீறினதுமல்லாமல் தேவனைத் தம்முடைய சொந்த பிதா என்றுஞ்சொல்லித் தம்மை தேவனுக்குச் சமமாக்கினபடியினாலே யூதர்கள் அவரைக் கொலைசெய்யும்படி அதிகமாய் வகைதேடினார்கள்.

"என் பிதா இதுவரைக்கும் கிரியைசெய்துவருகிறார் நானும் கிரியை செய்துவருகிறேன்" - தேவன் ஓய்வுநாளிலும் மற்ற நாட்களிலும் கிரியை செய்து வருகிறார். தம்முடைய சிருஷ்டிகளை எல்லா நாட்களிலும் பராமரிக்கிறார். கடினமாக உழைத்துவிட்டு ஓய்வு எடுப்பது தவறில்லை (ரோமர் 14:5-6). ஆனாலும் ஓய்வுநாளுக்கு முக்கியம் தவறாமல் தேவனுக்கே முக்கியம் தரவேண்டும். ஓய்வுநாளிலும் நன்மை செய்ய வேண்டும். (மத் 12:12; மாற்கு 2:27-28; மாற்கு 3:4; லூக்கா 6:9; லூக்கா 13:16; யோவான் 7:22-23; கலா 4:9-10; கொலோ 2:14-17)

"நானும் கிரியைசெய்துவருகிறேன்" பிதா குமாரனுக்குக் கொடுத்திருக்கும் அதிகாரத்தை இந்த வாக்கியம் வெளிப்படுத்துகிறது. (யோவான் 5:19-40; எபி 1:2) குமாரனுக்குப் பிதா கொடுத்திருக்கும் வேலையையே இயேசு கிறிஸ்து செய்து வருகிறார். பிதா ஓய்வுநாளிலும் கிரியை செய்வதினால் குமாரனும் ஓய்வுநாளில் கிரியை செய்கிறார்.

"அவர் ஓய்வுநாள் கட்டளையை மீறினதுமல்லாமல், தேவனைத் தம்முடைய சொந்த பிதா என்றுஞ்சொல்லித் தம்மை தேவனுக்குச் சமமாக்கினபடியினாலே யூதர்கள் அவரைக் கொலைசெய்யும்படி அதிகமாய் வகைதேடினார்கள்"

இயேசுகிறிஸ்துவைக் கொலைசெய்வதற்கு யூதமார்க்கத்து தலைவர்கள் பலமுறை முயற்சி பண்ணுகிறார்கள். அதற்குப் பலவிதமான காரணங்களையும் கண்டுபிடிக்கிறார்கள். இயேசு தம்மைத் தேவனுடைய குமாரன் என்று கூறியதும், தேவனைத் தம்முடைய பிதா என்று கூறியதும் யூதமார்க்கத்தலைவர்களுக்குத் தேவ தூஷணமாகத் தெரிகிறது. இயேசுகிறிஸ்து தம்மைத் தேவனுக்குச் சமமாக்கியதாக நினைத்தார்கள்.

"தேவனைத் தம்முடைய சொந்த பிதா என்றுஞ்சொல்லித் தம்மை தேவனுக்குச் சமமாக்கினார்" - இயேசு கிறிஸ்து மனுஷகுமாரனாக ஆவதற்கு முன்பாக அவர் பிதாவோடும் பரிசுத்த ஆவியானவரோடும் சம அந்தஸ்தில் இருந்தார். அவருக்கு ஆவிக்குரிய சரீரமும் தெய்வீக சுபாவங்களும் இருந்தது. இயேசு கிறிஸ்து மனுஷராக ஆனதினாலே தம்முடைய தெய்வத்துவத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, தம்மைத் தாமே வெறுமையாக்கி, ஒரு மனுஷனைப் போல ஆனார் (பிலி 2:5-11). இயேசு கிறிஸ்து எப்போதுமே பிதாவிற்கும் பரிசுத்த ஆவியானவருக்கும் சமமானவர். இதுவே திரித்துவத்தின் தத்துவம் (யோவான் 5:17-29)

(2) வல்லமையிலும் கிரியைகளிலும் பிதாவும் இயேசுவும் சமம் - (யோவான் 3:34)

யோவான் 5:19 அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்.

யோவான் 5:20 பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருந்து, தாம் செய்கிறவைகளையெல்லாம் அவருக்குக் காண்பிக்கிறார்; நீங்கள் ஆச்சரியப்படத்தக்கதாக இவைகளைப் பார்க்கிலும் பெரிதான கிரியைகளையும் அவருக்குக் காண்பிப்பார்.

5 அதிகாரம்

"பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ அதையேயன்றி வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்" - திரித்துவத்தில் இடம் பெற்றிருக்கும் பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் தனித்தனியாகக் கிரியை செய்வதில்லை. இயேசு கிறிஸ்து தம்மைத் தாமே வெறுமையாக்கி, மனுஷனானபோது, அவர் பூமியிலே பிதாவின் பிரதிநிதியாக இருந்தார். பிதா பரிசுத்த ஆவியினால் குமாரன் மூலமாகக் கிரியை செய்தார் (ஏசா 11:2; ஏசா 61:1; அப 10:38)

"அந்தப்படியே" (likewise) - பிதா செய்கிறதை அந்தப்படியே குமாரனும் செய்கிறார். பிதாவின் சித்தமும் குமாரனின் சித்தமும் ஒன்றாகவே இருக்கிறது.

"பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருந்து, தாம் செய்கிறவைகளையெல்லாம் அவருக்குக் காண்பிக்கிறார்" - இயேசு கிறிஸ்து இந்தப் பூமியில் மனுஷனாக இருந்த பொழுது, அவருடைய அறிவு, ஞானம், வல்லமை ஆகியவை அனைத்தும் மனுஷத்துவத்தின் வரையறைக்குட்பட்டிருந்தது. ஏசா 11:2, ஏசா 50:4; லூக்கா 2:40,52, மத் 11:25-27, மத் 24:36; அப 1:6-8, வெளி 1:1

தீர்க்கதரிசன எண் - 8

"நீங்கள் ஆச்சரியப்படத்தக்கதாக இவைகளைப் பார்க்கிலும் பெரிதான கிரியைகளையும் அவருக்குக் காண்பிப்பார்" யோவான் 5:20 இந்தத் தீர்க்கதரிசனம் கிறிஸ்துவின் கிரியைகளில் நிறைவேறிற்று.

(3) மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறதில் பிதாவும் இயேசுவும் சமம் (யோவான் 11:25)

யோவான் 5:21 பிதாவானவர் மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறதுபோல, குமாரனும் தமக்குச் சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிறார்

"பிதாவானவர் மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறதுபோல குமாரனும் தமக்குச் சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிறார்" - பரிசுத்த ஆவியானவரின் நிறைவினால் இயேசு கிறிஸ்துவிற்கு தேவனிடமிருந்து பரிபூரணமான அதிகாரமும், அளவில்லாத கிருபையும் கிடைத்திருக்கிறது (யோவான் 3:34) இயேசு கிறிஸ்து மனுஷரை உயிர்த்தெழச்செய்து தமது பரிபூரணமான அதிகாரத்தை வெளிப்படுத்துகிறார் (யோவான் 5:28-29; யோவான் 6:39 யோவான் 11:25)

(4) நியாயத்தீர்ப்பு செய்வதில் பிதாவும் இயேசுவும் சமம் - (அப 17:31)

யோவான் 5:22 அன்றியும் பிதாவைக் கனம்பண்ணுகிறதுபோல எல்லாரும் குமாரனையும் கனம்பண்ணும்படிக்கு பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல் நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்

"அன்றியும் பிதாவைக் கனம்பண்ணுகிறதுபோல எல்லாரும் குமாரனையும் கனம்பண்ணும்படிக்கு பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்" தேவன் இந்த உலகத்தை இயேசுகிறிஸ்து மூலமாக நியாயம் தீர்ப்பார் என்று இந்த வசனம் தெளிவாக விளக்குகிறது. அப 17:31 அப 2:46

(5) கனத்தில் பிதாவும் இயேசுவும் சமம் - (எபி 2:7-9)

யோவான் 5:23 குமாரனைக் கனம்பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம்பண்ணாதவனாயிருக்கிறான்

"குமாரனைக் கனம்பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம்பண்ணாதவனாயிருக்கிறான்" திரித்துவத்தில் பிதாவும் பரிசுத்த ஆவியானவரும் இருப்பதுபோல குமாரனும் இருக்கிறார். இயேசு அவர்களோடு சம அந்தஸ்தில் இருக்கிறார் என்பதை இந்த வசனம் விளக்குகிறது (1யோவான் 5:7

5 அதிகாரம்

(6) நித்திய ஜீவனைக் கொடுப்பதில் பிதாவும் இயேசுவும் சமம் – 17 2

யோவான் 5:24 என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட் படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்

யோவான் 5:25 மரித்தோர் தேவ குமாரனுடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது, அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்

"என் வசனத்தைக் கேட்டு என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு. அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல் மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்" யோவான் 5:22, 1யோவான் 3:14; 2கொரி 5:17; 2கொரி 5:24

தீர்க்கதரிசன எண் – 8

"மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள்" (யோவான் 5:25) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று, இன்னும் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

"மரித்தோர்" – ஆவிக்குரிய ரீதியாக மரித்தவர்கள் (மத் 8:22, எபே 2:1-9; 1தீமோ 5:6

"அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள்" – (மாற்கு 16:15-16; லூக்கா 24:47 அப் 2:38-39; அப 3:19; ரோமர் 10:9-17)

(7) தம்மில்தாமே ஜீவனுடையவராய் இருப்பதில் பிதாவும் இயேசுவும் சமம் – (1:4)

யோவான் 5:26 ஏனெனில், பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கிறது போல குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள் செய்திருக்கிறார்

யோவான் 5:27 அவர் மனுஷ குமாரனாயிருக்கிறபடியால் நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார்

"பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கிறதுபோல குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள்செய்திருக்கிறார்" குமாரன் தம்மில் தாமே ஜீவனுடையவராக இருக்கிறார் உலகத்தை இரட்சிக்கவும் நியாயந்தீர்க்கவும் சகல அதிகாரமும் பரிசுத்த ஆவியானவர் மூலமாகப் பிதாவினால் குமாரனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (ஏசா 11:2 ஏசா 42:1; ஏசா 61:1; அப 10:38, மத் 12:28

(8) மரணத்தின்மீதும் நித்தியத்தின் மீதும் உள்ள அதிகாரத்தில் பிதாவும் இயேசுவும் சமம்

யோவான் 5:28 இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்

யோவான் 5:29 அப்பொழுது, நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்

5 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 10

"இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம். ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" (யோவான் 5:28-29) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறவில்லை. பாவத்தில் மரித்துப்போன ஆத்துமாக்களை இயேசு கிறிஸ்து தமது வல்லமையினால் மறுபடியும் உயிர்த்தெழ வைக்கிறார் (யோவான் 5:25; எபே 2:1-9) பிரேதக்குழிகளில் உள்ள மரித்துப் போன சரீரங்களையும் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழச் செய்வார் (எபே 5:28-29; 1கொரி 15:20-23; வெளி 20:4-15)

"பிரேதக்குழிகளில்" - சரீர மரணம் அடைந்தவர்கள் மட்டுமே பிரேதக்குழிகளில் கிடப்பார்கள் (யாக் 2:26) சரீர உயிர்த்தெழுதலுக்காக பிரேதக்குழிகளில் சரீரங்கள் காத்துக் கொண்டிருக்கும் (யோவான் 5:28-29) ஆவியும் ஆத்துமாவும் மரிப்பதில்லை. சரீரம் மட்டுமே மரித்துப்போய் பிரேதக்குழிகளில் இருக்கும் (யோவான் 5:4) மரித்துப் போன பரிசுத்தவான்களின் ஆத்துமாக்கள் பரலோகத்தில் இருக்கும் (எபே 4:8-10; பிலி 1:21-24; 2கொரி 5:8; வெளி 6:9-11; எபி 12:22-23) மரித்துப்போன துன்மார்க்கரின் ஆத்துமாக்கள் நரகத்தில் இருக்கும். (லூக்கா 16:19-21; ஏசா 14:9; வெளி 20:11-15) மரித்துப் போனவர்களுடைய ஆத்துமாக்கள் பரலோகத்திலும் நரகத்திலும் உணர்வுடன் இருக்கும்.

"பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்" பிரேதக்குழிகளில் கிடக்கும் சரீரங்களும், பரலோகத்திலோ அல்லது நரகத்திலோ இருக்கும் அவர்களுடைய ஆத்துமாக்களும் மறுபடியும் உயிர்த்தெழும்போது ஒன்றுசேரும். அப்போது அவை தேவகுமாரனுடைய சப்தத்தைக் கேட்கும். அதன்பின்பு அவை பரலோகத்திற்கோ அல்லது நரகத்திற்கோ சென்று நித்திய காலமாகத் தங்கும். (யோவான் 5:28-29; தானி 12:2)

"அப்பொழுது நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" - பிரேதக்குழிகளிலிருந்து சரீரங்கள் ஜீவனற்றவையாகவும் மரித்தவையாகவும் புறப்பட்டு வரமுடியாது. ஆவியும், ஆத்துமாவும் உயிர்த்தெழுதலின்போது அதன் சரீரத்தோடு சேரும். அப்போது அந்த சரீரம் உயிர்த்தெழும். இயேசு கிறிஸ்துவும் இவ்வாறு உயிர்த்தெழுந்தார். அவருடைய சரீரம் கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டிருந்தது. அவருடைய ஆவியும் ஆத்துமாவும் பாதாளத்திற்குச் சென்று அங்கு சாத்தானால் சிறைபிடிக்கப் பட்டிருந்தவர்களை விடுதலைபண்ணி விட்டு, மறுபடியும் கல்லறைக்கு வந்து, அங்கு அடக்கம் பண்ணப்பட்டிருந்த சரீரத்தோடு சேர்ந்து கொண்டு இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் (சங் 16:10; மத் 12:40; மத் 28:1-6; எபே 4:8-10)

"நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாக...... புறப்படுவார்கள்" - நன்மை செய்தவர்கள் என்பது கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் எல்லா நபர்களையும் குறிக்கும்.

1. நன்மைசெய்தவர்கள் **(have done good)** (யோவான் 5:29)
2. பாக்கியவான்களும் பரிசுத்தவான்களும் **(blessed and holy)** (வெளி 20:4-6)
3. கிறிஸ்துவினுடையவர்கள் **(are Christ's)** (1கொரி 15:23,51-58; 1கொரி 5:24)
4. பாத்திரவான்கள் **(worthy)** (லூக்கா 21:36)
5. கிறிஸ்துவில் இருக்கிறவர்கள் **(in Christ)** (1தெச 4:16-17; 2கொரி 5:17)

5 அதிகாரம்

6 வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருப்பவரிடத்தில் இருக்கிறவர்கள் (that are in the way, the truth, and the life) (யோவான் 14:1-6)

7 அவர் பரிசுத்தமாக இருக்கிறதுபோல தங்களைப் பரிசுத்தப்படுத்திக் கொண்டிருக்கிறவர்கள் (that have purified themselves even as He is pure) (1யோவான் 3:2-3; 2கொரி 7:1; கலா 5:16-24; எபி 12:14)

8 கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில கறைதிரையில்லாமல இருக்கிறவர்கள (that are without spot or wrinkle and without blemish and are in the church, the body of Christ) (எபே 1:22-23; எபே 5:27; 1கொரி 12:13; கொலோ 1:18,24)

பரிசுத்தவானகள நித்திய ஜீவனைப பெறும்படிக்கு உயிரோடெழுந்து ஆயிரம வருஷங்களுக்குப பின்பு துன்மார்க்கர ஆக்கினையை அடையும்படிக்கு உயிர்த்தெழுவார்கள் (யோவான 5:29; தானி 12:2)

நன்மைசெய் (done good) - ποιέω - poieoo - 4160

வினைசொல கட்டளையிடு, செலவைப்பண்ணு, கொடு, கைக்கொள செய்யப்பண்ணு, உண்டாக்கு

"தீமைசெய்தவர்கள ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாக புறப்படுவார்கள்" பரிசுத்தவான்கள நித்திய ஜீவனைப பெறும்படிக்கு உயிர்த்தெழுந்து ஆயிரம் வருஷங்களுக்குப பின்பு துன்மார்க்கர் ஆக்கினையை அடையும்படிக்கு உயிர்த்தெழுவார்கள (யோவான 5:29; தானி 12:2; வெளி 14:9-11; வெளி 20:4-6, 11-15; வெளி 21:8; வெளி 22:15)

தீமைசெய் (done evil) - ἀναπράσσω - anaprassoo - 4238

வினைச்சொல் - எதிர்பார்

"ஆக்கினை" - யோவான் 5:22, 24, 27 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் ஆக்கினை என்பதன் கிரேக்கச் சொல் "கிரிசிஸ்" (krisis) நீதிமான்கள் நித்திய ஜீவனை அடைவதற்காக உயிர்த்தெழுவார்கள் துன்மார்க்கர் ஆக்கினையை அடைவதற்காக உயிர்த்தெழுவார்கள்

ஆக்கினை (damnation) - κρίσις - krisis - 2920

பெண்பால் பெயர்ச்சொல் - நியாயத்தீர்ப்பு, நியாயம், ஆக்கினை, தீர்ப்பு

(9) இயேசு பிதாவினிடத்தில் கேட்கிறபடியே நியாயத்தீர்ப்பு செய்கிறார் - (8:16; 9:39)

யோவான் 5:30 நான் என் சுயமாய் ஒன்றுஞ்செய்கிறதில்லை; நான் கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன் எனக்குச் சித்தமானதை நான் தேடாமல் என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது.

"நான் என் சுயமாய் ஒன்றுஞ்செய்கிறதில்லை நான் கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன் எனக்குச் சித்தமானதை நான் தேடாமல் என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது" குமாரனாகிய இயேசு கிறிஸ்து பிதாவாகிய தேவனோடு ஐக்கியமாக இருப்பதை இயேசு கிறிஸ்து சாட்சியாக அறிவிக்கிறார்

(10) இயேசுவைப் பற்றி கூறப்பட்டுள்ள சாட்சி

(அ) யோவான் ஸ்நானன் - (1:29)

யோவான் 5:31 என்னைக்குறித்து நானே சாட்சி கொடுத்தால் என் சாட்சி மெய்யாயிராது.

5 அதிகாரம்

யோவான் 5:32 என்னைக்குறித்து சாட்சி கொடுக்கிறவர் வேறொருவர் இருக்கிறார்,அவர் என்னைக்குறித்துக் கொடுக்கிற சாட்சி மெய்யான சாட்சியென்று அறிந்திருக்கிறேன்

யோவான் 5:33 நீங்கள் யோவானிடத்தில ஆளனுப்பி விசாரித்தீர்கள் அவன் சத்தியத்திறகு சாட்சிகொடுத்தான்

யோவான் 5:34 நான் ஏற்றுக் கொள்ளுகிற சாட்சி மனுஷருடைய சாட்சியலல நீங்கள் இரட்சிக்கப படுவதறகாகவே இவைகளைச் சொல்லுகிறேன்

யோவான் 5:35 அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருநதான், நீங்களும் சிலகாலம் அவன் வெளிச்சததிலே களிகூர மனதாயிருநதீர்கள

"என்னைக்குறித்து நானே சாட்சி கொடுத்தால என் சாட்சி மெய்யாயிராது" இயேசு கிறிஸ்து பொய் கூறாதவர் ஆகையினால அவரைக் குறித்து. அவர் கூறும் சாட்சி மெய்யாகவே இருக்கிறது. என்றாலும் நியாயப்பிரமாணததின் பிரகாரம ஒரு சாட்சி ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்றால். இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் அதை உறுதி பண்ண வேண்டும். (உபா 17:6)

"என்னைக்குறித்து சாட்சிகொடுக்கிறவர் வேறொருவர் இருக்கிறார்" பிதாவானவரே தமது குமாரனாகிய இயேசுகிறிஸதுவைக் குறித்து, சாட்சி கொடுக்கிறார் (யோவான 5:31, யோவான் 7:28; யோவான் 8:26; மத் 3:17 மத் 17:5) இந்த வசனத்தில் இயேசு கிறிஸ்து யோவான் ஸ்நானனைப் பற்றிக் கூறவில்லை அவர் ஏற்கெனவே இயேசுவைப் பற்றி சாட்சி கூறி வருகிறார் (யோவான் 5:33-35) இந்த வசனத்தில இயேசு பிதாவைக் குறிப்பிடுகிறார் (யோவான் 5:36-38) ஆகையினால பிதாவானவர் தம்மைக் குறித்து கொடுக்கிற சாட்சி மெய்யான சாட்சியென்று இயேசு கிறிஸது அறிந்திருக்கிறார்

"அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான் நீங்களும் சிலகாலம் அவன் வெளிச்சத்திலே களிகூர மனதாயிருந்தீர்கள்" - எரிந்து பிரகாசிக்கிற விளக்கு என்பது எபிரெயருடைய வழக்குச் சொல். இது பிரபல்யமான மனுஷரைக் குறிக்கும். (யோவான் 8:12) ஜனங்கள் யோவானைத் தீர்க்கதரிசியாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் தீர்க்கதரிசி போன்றவர் என்றும் விசுவாசிக்கிறார்கள் ஆகையினால் யோவான் ஸ்நானன் தம்மைப் பற்றிக் கூறியதை ஜனங்கள் விசுவாசிக்க வேண்டும் என்று இயேசுகிறிஸ்து இந்த வசனத்தில் வலியுறுத்திக் கூறுகிறார் (யோவான் 1:29)

(ஆ) இயேசுவின் கிரியைகள் - (10:31-38)

யோவான் 5:36 யோவானுடைய சாட்சியைப் பார்க்கிலும் மேன்மையான சாட்சி எனக்கு உண்டு, அதென்னவெனில நான் நிறைவேற்றும் படிக்குப் பிதாவானவர் எனக்குக் கற்பித்ததும் நான் செய்துவருகிறதுமான கிரியைகளே பிதா என்னை அனுப்பினார் என்று என்னைக்குறித்துச்சாட்சிகொடுக்கிறது

(இ) பிதா - (மத் 3:17, 17:5, யோவான 8:18; 10:25, 12:28 14:10

யோவான் 5:37 என்னை அனுப்பின பிதா தாமே என்னைக்குறித்துச் சாட்சி கொடுத்திருக்கிறார்; நீங்கள் ஒருககாலும் அவர் சத்தத்தைக் கேட்டதுமில்லை, அவர் ரூபத்தைக் கண்டதுமில்லை

யோவான் 5:38 அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசியாதபடியால அவருடைய வசனம் உங்களில் தரித்திருக்கிறதுமில்லை.

5 அதிகாரம்

"என்னை அனுப்பின பிதா தாமே என்னைக்குறித்துச்சாட்சிகொடுத்திருக்கிறார் நீங்கள் ஒருக்காலும் அவர் சத்தத்தைக் கேட்டதுமில்லை அவர் ரூபத்தைக் கண்டதுமில்லை" - சீனாய் மலையில இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய சத்தத்தைக் கேட்டதுபோன்று இவர்கள் கேட்கப்போவதில்லை (உபா 5:22-33) மற்றவர்கள் மத் 3:17; மத் 17:5 ஆகிய வசனங்களில் தேவனுடைய சத்தத்தைக் கேட்டதுபோன்றும், இவர்கள் கேட்கப் போவதில்லை.அவருடைய ரூபத்தையும் இவர்கள் காணப்போவதில்லை. (ஆதி 18:1-8 ஆதி 32:24-30 யாத் 24:9-11 யோசு 5:13-15; நியா 6:11-23; நியா 13:3-23; நாளா 21:16; யோபு 42:5; ஏசா 6; ஆமோ 9:1; எசே 1:26-28; தானி 7:9-14; தானி 10:5-6; அப் 7:56-59; வெளி 4-5) இந்த வசனங்கள் மூலமாக தேவனுக்கு ஒரு ரூபம் உண்டு என்பதும், அவர் தமது சப்தத்தை வெளிப்படுத்தக் கூடியவர் என்பதும் தெளிவாகிறது.

ரூபம் (figure) - εἶδος - eidos - 1491

பால் வேறுபாடற்ற பெயர்சொல் ரூபம், தரிசனம், தோற்றம் (external appearance,form,figure, shape)

(அ) வேதவாக்கியங்கள் - (லூக் 24:27,44

யோவான் 5:39 வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன உண்டென்று [redacted] ணுகிறீர்களே என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே

யோவான் 5:40 அப்படியிருந்தும் உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை

யோவான் 5:41 நான் மனுஷரால மகிமையை ஏற்றுக் கொள்ளுகிறதில்லை

யோவான் 5:42 உங்களில் தேவ அன்பு இல்லையென்று உங்களை அறிந்திருக்கிறேன்

ஆராய்ந்துபார் (Search) - ἐρευνάω - eraunaoo - 2045

வினைச்சொல் - ஆராய், ஆராய்ந்துபார் - வேட்டைக்குப் போகும்போது, வேட்டை நாய் மோப்பம் பிடித்து, வேட்டையாடுவது போல தேடிப்பார்த்தல் என்று பொருள்படும். வேதவாக்கியங்களில் நித்திய ஜீவன் உண்டு என்று யூதர்கள் எண்ணுகிறார்கள் அவர்கள் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் சத்தியத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே என்னைக் குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" - இயேசு கிறிஸ்துவின் கிரியைகளைக் குறித்து யோவான் ஸ்நானன் சாட்சி பகர்ந்தான் அது இயேசுவைப் பற்றிய மறைமுகமான சாட்சியாகும். (யோவான் 5:36) பிதாவானவர் தாமே தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்து நேரடியாகவே சாட்சி பகருகிறார் (வெளி 5:30-37; மத் 3:17 மத் 17:5) பிதாவானவர் கூறும் சாட்சியை யூதர்களால புரிந்து கொள்ள முடியாது ஏனெனில் அவர்கள் தேவனுடைய சத்தத்தைக் கேட்பதில்லை யோவான் 5:37 அதுமட்டுமல்ல, அவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் கூறும் சாட்சியும் கிடைப்பதில்லை. அவர்கள் வேதவாக்கியங்களையும் ஆராய்ந்து பார்ப்பதில்லை இயேசு கிறிஸ்துவைப் பற்றி வேதவாக்கியம் கூறும் சத்தியங்களையும் ஏற்றுக் கொள்வதில்லை பிதாவானவரே தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை அனுப்பினார் என்று வேதவாக்கியம் தெளிவாகக் கூறுகிறது. (யோவான் 5:38,40) ஆகையினால் இயேசு கிறிஸ்து யூதரிடம் "வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்" என்று கூறுகிறார்

மகிமை (honour) - δόξα doxa 1391

பெண்பால் பெயர்ச்சொல் - மகிமை மகத்துவம், துதி, கனம் - அங்கீகாரம் (approval) (யோவான் 5:44 துதி (praise) (யோவான் 9:24, யோவான் 12:43; 1பேதுரு 4:11

யோவான் - தொகுப்புரை

5 அதிகாரம்

(11) இயேசு பிதாவின் நாமத்தினாலே வந்திருக்கிறார் - (தானி 9:27)

யோவான் 5:43 நான் என் பிதாவின் நாமத்தினாலே வந்திருந்தும், நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை வேறொருவன் தன் சுய நாமத்தினாலே வந்தால் அவனை ஏற்றுக்கொள்வீர்கள்

தீர்க்கதரிசன எண் - 11

"நான் என் பிதாவின் நாமத்தினாலே வந்திருந்தும், நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ள வில்லை. வேறொருவன் தன் சுய நாமத்தினாலே வந்தால் அவனை ஏற்றுக்கொள்வீர்கள்" (யோவான் 5:43) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை தாம் செய்த எல்லாக் கிரியைகளையும் இயேசுகிறிஸ்து தமது பிதாவின் நாமத்தினாலேயே செய்தார் (யோவான் 5:43; யோவான் 10:25)

"வேறொருவன் தன் சுய நாமத்தினாலே வந்தால் அவனை ஏற்றுக்கொள்வீர்கள்" - வருங்காலத்தில் வரப்போகும் அந்திக்கிறிஸ்துவைக் குறிக்கும். (தானி 7:24; தானி 8:9, 23-24; தானி 9:27 தானி 11:35-45; மத் 24:15; 2தெச 2:1-12; 1யோவான் 2:18 வெளி 13) யூதர்கள் அந்திக்கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வார்கள் அவனோடு ஏழு வருஷங்களுக்கு உடன்படிக்கை செய்து கொள்வார்கள் (தானி 8:25, தானி 9:27)

(12) இயேசு அவிசுவாசத்தைக் கடிந்து கொள்கிறார்

யோவான் 5:44 தேவனாலேமாத்திரம் வருகிற மகிமையைத் தேடாமல் ஒருவராலொருவர் மகிமையை ஏற்றுக்கொள்ளுகிற நீங்கள் எப்படி விசுவாசிப்பீர்கள்?

யோவான் 5:45 பிதாவினிடத்தில் நான் உங்கள்மேல் குற்றஞ்சாட்டுவேன் என்று நினையாதிருங்கள்; நீங்கள் நம்புகிற மோசேயே உங்கள்மேல் குற்றஞ்சாட்டுவான்

யோவான் 5:46 நீங்கள் மோசேயை விசுவாசித்தீர்களானால், என்னையும் விசுவாசிப்பீர்கள்; அவன் என்னைக் குறித்து எழுதியிருக்கிறானே

யோவான் 5:47 அவன் எழுதின வாக்கியங்களை நீங்கள் விசுவாசியாமலிருந்தால் நான் சொல்லுகிற வசனங்களை எப்படி விசுவாசிப்பீர்கள் என்றார்

"மகிமை" - (யோவான் 5:41)

"பிதாவினிடத்தில் நான் உங்கள்மேல் குற்றஞ்சாட்டுவேன் என்று நினையாதிருங்கள்; நீங்கள் நம்புகிற மோசேயே உங்கள்மேல் குற்றஞ்சாட்டுவான்" - யூதமார்க்கத்தார் மோசேயைத் தங்கள் முற்பிதாவாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் அவர்கள் இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று ஏற்றுக் கொள்ளவில்லை இதற்காக இயேசு கிறிஸ்து அவர்கள்மீது குற்றம் சுமத்த வேண்டியதில்லை அவர்கள் நம்பும் மோசேயே இதற்காக அவர்கள்மீது குற்றம் சுமத்துவார் நியாயத்தீர்ப்பு நாளில் இந்தக் குற்றச்சாட்டு யூதர்கள்மீது சுமத்தப்படும்

"மோசே என்னைக்குறித்து எழுதியிருக்கிறானே" (ஆதி 3:15, ஆதி 12:3 ஆதி 17:18 ஆதி 49:10, உபா 18:15-18; லூக்கா 24:27, 44)

"அவன் எழுதின வாக்கியங்களை நீங்கள் விசுவாசியாமலிருந்தால் நான் சொல்லுகிற வசனங்களை எப்படி விசுவாசிப்பீர்கள்" - பஞ்சாகமத்தில் உள்ள ஐந்து புஸ்தகங்களும் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு, எழுதப்பட்டிருக்கிறது என்பதை இயேசுகிறிஸ்து இந்த வசனத்தின் மூலமாக அங்கீகாரம் பண்ணுகிறார் மோசேயின் வார்த்தைகளை நாம் விசுவாசிக்க வேண்டும். மோசேயின் வார்த்தைகளை விசுவாசியாதவர்கள் இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளையும் விசுவாசிக்க மாட்டார்கள் ஏனென்றால் மோசேயின் வார்த்தைகளும், கிறிஸ்துவின் வார்த்தைகளும் ஒத்திருக்கின்றன

6 அதிகாரம்

31. ஐயாயிரம் பேருக்கு அற்புதமாக போஜனம் கொடுக்கிறார் - (மத் 14:15; மாற்கு 6:32; லூக் 9:10)

யோவான் 6:1 இவைகளுக்குப்பின்பு இயேசு திபேரியாக்கடல் என்னப்பட்ட கலிலேயாக் கடலின் அக்கரைக்குப் போனார்.

யோவான் 6:2 அவர் வியாதிக்காரரிடத்தில் செய்த அற்புதங்களைத் திரளான ஜனங்கள் கண்டபடியால் அவருக்குப் பின்சென்றார்கள்.

யோவான் 6:3 இயேசு மலையின்மேல் ஏறி, அங்கே தம்முடைய சீஷருடனேகூட உட்கார்ந்தார்.

யோவான் 6:4 அப்பொழுது யூதருடைய பண்டிகையாகிய பஸ்கா சமீபமாயிருந்தது.

யோவான் 6:5 இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து, திரளான ஜனங்கள் தம்மிடத்தில் வருகிறதைக் கண்டு, பிலிப்புவை நோக்கி: இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை எங்கே கொள்ளலாம் என்று கேட்டார்.

யோவான் 6:6 தாம் செய்யப்போகிறதை அறிந்திருந்தும், அவனைச் சோதிக்கும்படி இப்படிக் கேட்டார்.

யோவான் 6:7 பிலிப்பு அவருக்குப் பிரதியுத்தரமாக: இவர்களில் ஒவ்வொருவன் கொஞ்சங்கொஞ்சம் எடுத்துக் கொண்டாலும், இருநூறு பணத்துக்கு அப்பங்களும் இவர்களுக்குப் போதாதே என்றான்.

யோவான் 6:8 அப்பொழுது அவருடைய சீஷரிலொருவனும் சீமோன் பேதுருவின் சகோதரனுமாகிய அந்திரேயா அவரை நோக்கி:

யோவான் 6:9 இங்கே ஒரு பையன் இருக்கிறான், அவன் கையில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு, ஆனாலும் அவைகள் இத்தனை ஜனங்களுக்கு எம்மாத்திரம் என்றான்.

யோவான் 6:10 இயேசு: ஜனங்களை உட்காரவையுங்கள் என்றார். அந்த இடம் மிகுந்த புல்லுள்ளதாயிருந்தது. பந்தியிருந்த புருஷர்கள் ஏறக்குறைய ஐயாயிரம்பேராயிருந்தார்கள்.

யோவான் 6:11 இயேசு அந்த அப்பங்களை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, சீஷர்களிடத்தில் கொடுத்தார், சீஷர்கள் பந்தியிருந்தவர்களுக்குக் கொடுத்தார்கள்; அப்படியே மீன்களையும் அவர் எடுத்து அவர்களுக்கு வேண்டியமட்டும் கொடுத்தார்.

யோவான் 6:12 அவர்கள் திருப்தியடைந்தபின்பு, அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒன்றும் சேதமாய்ப் போகாதபடிக்கு மீதியான துணிக்கைகளைச் சேர்த்துவையுங்கள் என்றார்.

யோவான் 6:13 அந்தப்படியே அவர்கள் சேர்த்து, வாற்கோதுமை அப்பங்கள் ஐந்தில் அவர்கள் சாப்பிட்டு மீதியான துணிக்கைகளினாலே பன்னிரண்டு கூடைகளை நிரப்பினார்கள்.

"இவைகளுக்குப் பின்பு இயேசு திபேரியாக் கடல் என்னப்பட்ட கலிலேயாக் கடலின் அக்கரைக்குப் போனார்" - யூதருடைய இரண்டாம் பண்டிகையில் கலந்து கொள்வதற்கு இயேசு கிறிஸ்து எருசலேமிற்கு இரண்டு முறை சென்றபின்பு கலிலேயாவிற்குத் திரும்பி வந்தார். கலிலேயாக்கடல் வழியாகப் பிரயாணம் பண்ணினார்.

"திபேரியாக்கடல்" - கலிலேயாக்கடலின் மேற்குக் கடல் ஓரத்தில் திபேரியாப் பட்டணம் உள்ளது. இதனால் கலிலேயாக்கடலுக்குத் திபேரியாக்கடல் என்னும் பெயர் வழங்கலாயிற்று. இந்த வசனத்திலும் யோவான் 6:23; யோவான் 21:1 ஆகிய வசனங்களிலும் நாம் இந்தப் பெயரை வாசிக்கிறோம்.

6 அதிகாரம்

"அற்புதங்கள்" – (யோவான் 2:11)

"யூதருடைய பண்டிகை" – யோவான் 2:13)

"இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை எங்கே கொள்ளலாம்" – இத்தனைபேரும் சாப்பிடுவதற்குப் பணத்திற்கு என்ன செய்வது என்னும் கேள்வி இங்கு எழவில்லை. சுவிசேஷ ஊழியத்தில் பணம் ஒரு பிரச்சனையாக இருக்கக் கூடாது. கர்த்தரைச் சார்ந்து ஜீவிக்க வேண்டும். விசுவாசத்தோடு ஊழியம் செய்ய வேண்டும். தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லையென்று பிரசங்கம் பண்ணுகிற நாம் அந்த வாக்கியத்தை நமது ஜீவியத்திலும் ஆழமாக விசுவாசிக்க வேண்டும். (மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 15:7,16)

பணம் (pennyworth) - δηνάριον - deenarion - 1220

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் பணம், காசு

"அந்திரேயா" – யோவான் 1:44; யோவான் 12:22 ஆகிய வசனங்களில் பிலிப்புடன் வருகிறான். ஒருசிலருடைய பிரச்சனையைத் தீர்த்து வைப்பதற்கு அந்திரேயா ஆலோசனை கூறுகிறான். ஆனால் இயேசு கிறிஸ்துவோ எல்லோருடைய பிரச்சனையையும் தீர்த்து வைக்கிறார் (யோவான் 6:9-13). இந்தச் சிறுபையன், அப்பம் விற்கும் பையனாக இருக்கலாம். கிழக்குத் தேசங்களில் திரளான ஜனங்கள் கூடியிருக்கும் இடங்களில் இவனைப் போன்ற சிறுவர்கள் உணவுப் பொருட்களை விற்பது வழக்கம்.

"இயேசு அந்த அப்பங்களை எடுத்து ஸ்தோத்திரம்பண்ணி, சீஷர்களிடத்தில் கொடுத்தார்" எல்லோருக்கும் உணவு கிடைப்பதற்கு முன்பாகவே இயேசு கிறிஸ்து விசுவாசத்தோடு பிதாவை ஸ்தோத்திரம் பண்ணுகிறார். எல்லோருக்கும் பிதாவானவர் உணவைக் கொடுத்துவிட்டதாக விசுவாசித்து ஸ்தோத்திரிக்கிறார். பிதாவிடம் உணவைக் கேட்பதற்குப் பதிலாக உணவைக் கொடுத்ததற்காகப் பிதாவை ஸ்தோத்திரிக்கிறார்.

"அவர் அப்பங்களையும், மீன்களையும் எடுத்து அவர்களுக்கு வேண்டியமட்டும் கொடுத்தார்" – இயேசு கிறிஸ்து எப்போதுமே நமது பிள்ளைகளுக்கு வேண்டியமட்டும் கொடுக்கிறவர். பிலிப்பு "கொஞ்சங்கொஞ்சம்" கொடுக்கலாம் என்று நினைத்தான் (யோவான் 6:7). ஆனால் கிறிஸ்துவோ தாராளமாக வேண்டியமட்டும் கொடுக்கிறார்.

"அவர்கள் திருப்தியடைந்தபின்பு, அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி, ஒன்றும் சேதமாய்ப் போகாதபடிக்கு மீதியான துணிக்கைகளைச் சேர்த்துவையுங்கள்" என்றார் – இது தெய்வீக நியமனம். தேவன் தாராளமாகக் கொடுக்கிறார். அவர் கொடுப்பதைச் சேதமாய்ப் போகாதபடிக்குப் பார்த்துக் கொள்ள வேண்டியது நமது கடமை. நாம் எதையும் வீணாக்கக் கூடாது. தேவன் வீணாக எதையும் செய்வதில்லை. தேவனுடைய எல்லாக் கிரியைகளுக்கும் ஒரு தெய்வீக நோக்கம் உண்டு. அந்த நோக்கத்தைப் புரிந்து கொண்டு, நாம் செயல்பட வேண்டும். எதையும் வீணாக்கி விடக்கூடாது. சேதமாய்ப் போவதற்கும் நாம் காரணமாக இருக்கக்கூடாது.

"அந்தப்படியே அவர்கள் சேர்த்து, வாற்கோதுமை அப்பங்கள் ஐந்தில் அவர்கள் சாப்பிட்டு மீதியான துணிக்கைகளினாலே பன்னிரண்டு கூடைகளை நிரப்பினார்கள்" ஆரம்பத்தில் அவர்களிடம் ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களுமே இருந்தன. ஆனால் இப்போது ஐயாயிரம் புருஷர்கள் திருப்தியாகச் சாப்பிட்டார்கள். இதுபோக ஏராளமான ஸ்திரீகளும் பிள்ளைகளும் சாப்பிட்டார்கள். எல்லோரும் திருப்தியடைந்த பின்பு, பன்னிரண்டு கூடைகளில் மீதியான துணிக்கைகளை நிரப்பினார்கள். ஒவ்வொரு அப்போஸ்தலருக்கும் ஒவ்வொரு கூடை.

கூடைகள் (baskets) - κόφινος kophinos - 2894

ஆண்பால் பெயர்ச்சொல் – கூடை – மத் 15:37; மாற்கு 8:8 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் கூடை வேறு. இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் கூடை வேறு.

6 அதிகாரம்

32. இயேசுவை இராஜாவாக்கும்படி பிடித்துக் கொண்டு போக ஜனங்கள் மனதாயிருக்கிறார்கள்

யோவான் 6:14 இயேசு செய்த அற்புதத்தை அந்த மனுஷர் கண்டு மெய்யாகவே இவர் உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசி என்றார்கள்

யோவான் 6:15 ஆதலால் அவர்கள் வந்து, தம்மை ராஜாவாக்கும்படி பிடித்துக் கொண்டுபோக மனதாயிருக்கிறார்களென்று இயேசு அறிந்து, மறுபடியும் விலகி, தனியே மலையின்மேல் ஏறினார்

"மெய்யாகவே இவர் உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசி" - நியாயப் பிரமாணங்களிலும், தீர்க்கதரிசிகளின் புஸ்தகங்களிலும், கூறப்பட்டிருக்கும் மேசியா (யோவான் 1:21,45)

"ஆதலால் அவர்கள் வந்து, தம்மை ராஜாவாக்கும்படி பிடித்துக்கொண்டுபோக மனதாயிருக்கிறார்களென்று இயேசு அறிந்து, மறுபடியும் விலகி, தனியே மலையின்மேல் ஏறினார்" திரளான ஜனங்களுக்கு இயேசு கிறிஸ்து போஜனம் கொடுத்தார். இது மிகப்பெரிய அற்புதம். இதனால் ஜனங்கள் ஆச்சரியமடைந்தார்கள். இயேசு கிறிஸ்துவை ராஜாவாக ஆக்கவேண்டுமென்று விரும்பினார்கள். இக்காலத்தில் யூதர்கள் ரோமருக்கு அடிமைகளாக இருந்தார்கள். இயேசு கிறிஸ்துவை ராஜாவாக்கினால் அவர் தங்களை ரோமப்பேரரசிடமிருந்து விடுவிப்பார் என்று நினைத்தார்கள். ஆசையினால் எப்படியாவது இயேசுவை ராஜாவாக ஆக்க வேண்டும் என்று நினைத்து, அவரைப் பிடித்துக் கொண்டுபோகத் திட்டம் பண்ணினார்கள். புகழும், சோதனையும் சேர்ந்தே வரும். இயேசு கிறிஸ்து அவர்களுடைய புகழ்ச்சியை அங்கீகரிக்கவில்லை. அவர்கள் தம்மை ராஜாவாக்க விரும்புவதை இயேசு கிறிஸ்து ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் அந்த இடத்திலிருந்து விலகி தனிமையான இடத்திற்கு ஜெபம்பண்ணப் போய்விட்டார். ஊழியத்தில் நம் எல்லோருக்கும் இயேசுகிறிஸ்து முன்மாதிரியாக இருக்கிறார். நமக்கு மனுஷர் மூலமாகப் புகழ்ச்சி வரும்போது, அதில் மயங்கிவிடாமல், தேவனுடைய சமூகத்தில் ஜெபம் பண்ணுவதையே நாடவேண்டும். புகழ்ச்சியை நாடக்கூடாது. தேவனுடைய சமூகத்தையே நாடவேண்டும். "அநியாயமாய் வந்த அதிக வருமானத்திலும் நியாயமாய் வந்த கொஞ்ச வருமானமே உத்தமம்" (நீதி 16:8)

33. இயேசு தண்ணீரின்மீது நடக்கிறார் – (மத் 14:22; மாற்கு 6:45)

யோவான் 6:16 சாயங்காலமானபோது அவருடைய சீஷர்கள் கடற்கரைக்குப் போய்,

யோவான் 6:17 படவில் ஏறி, கடலின் அக்கரையிலுள்ள கப்பர்நகூமுக்கு நேராய்ப்போனார்கள்; அப்பொழுது இருட்டாயிருந்தது, இயேசுவும் அவர்களிடத்தில் வராதிருந்தார்

யோவான் 6:18 பெருங்காற்று அடித்தபடியினாலே கடல் கொந்தளித்தது

யோவான் 6:19 அவர்கள் ஏறக்குறைய மூன்று நாலுமைல்தூரம் தண்டுவலித்துப்போனபொழுது, இயேசு கடலின்மேல் நடந்து, படவுக்குச் சமீபமாய் வருகிறதைக் கண்டு பயந்தார்கள்

யோவான் 6:20 அவர்களை அவர் நோக்கி: நான்தான், பயப்படாதிருங்கள் என்றார்

யோவான் 6:21 அப்பொழுது அவரைப் படவில் ஏற்றிக் கொள்ள மனதாயிருந்தார்கள்; உடனே படவு அவர்கள் போகிற கரையைப் பிடித்தது

மூன்று நாலுமைல்தூரம் - (five and twenty or thirty furlongs) σταδιον - stadion - 4712

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பந்தயச்சாலை, ஸ்தாதி தூரம், ஸ்தாதி அளவு

"இயேசு கடலின்மேல் நடந்து படவுக்குச் சமீபமாய் வருகிறதைக் கண்டு பயந்தார்கள்" இயேசுகிறிஸ்து படவில் வருவார் என்று சீஷர்கள் எதிர்பார்த்தார்கள்

6 அதிகாரம்

சீஷர்கள் இப்போது கொந்தளிக்கும் கடலில் இருக்கிறார்கள் அவர்களுக்குத் தெய்வீக உதவி தேவைப்படுகிறது. அவர்களுக்கு உதவி புரிவதற்காக இயேசுகிறிஸ்து கடலின்மீது நாலுமைல தூரம் நடந்தே வருகிறார்

"நான் தான், பயப்படாதிருங்கள்" - (யோவான் 4:26; யோவான் 8:24,28,58 யோவான் 13:19; யோவான் 18:5-8 மாற்கு 13:6; லூக்கா 21:8

"அப்பொழுது அவரைப் படவில ஏற்றிக்கொள்ள மனதாயிருந்தார்கள் உடனே படவு அவர்கள் போகிற கரையைப் பிடித்தது" - இது மிகப்பெரிய அற்புதம். படகு கொந்தளிக்கும் கடலில இருக்கிறது. அவர்கள நடுக்கடலில இருக்கிறார்கள திடீரென்று, நடுக்கடலில இருந்த படகு கரைக்கு வந்து சேர்ந்துவிட்டது. தேவனுடைய வல்லமை படகைக் கரைக்கு கொண்டு வந்துவிட்டது. பிலிப்பு தேவனுடைய வல்லமையினால வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதைப் போன்று இந்த நிகழ்ச்சி இருக்கிறது. (அப் 8:39-40)

34. ஜீவ அப்பத்தைப் பற்றிய உபதேசம்

(1) திரளான ஜனங்கள் இயேசுவை தேடி வருகிறார்கள்

யோவான் 6:22 மறுநாளில் கடலின் அக்கரையிலே நின்ற ஜனங்கள அவருடைய சீஷர் ஏறின அந்த ஒரே படவுதவிர அங்கே வேறொரு படவும் இருந்ததில்லையென்றும் இயேசு தம்முடைய சீஷருடனேகூடப் படவில ஏறாமல அவருடைய சீஷர்மாத்திரம் போனார்களென்றும் அறிந்தார்கள

யோவான் 6:23 கர்த்தர் ஸ்தோத்திரஞ் செய்தபின்பு அவர்கள அப்பம் சாப்பிட்ட இடத்துக்குச் சமீபமாய்த் திபேரியாவிலிருந்து வேறே படவுகள வந்தது.

யோவான் 6:24 அப்பொழுது இயேசுவும் அவருடைய சீஷரும் அங்கே இல்லாததை ஜனங்கள் கண்டு, உடனே அந்தப் படவுகளில் ஏறி, இயேசுவைத் தேடிக் கொண்டு, கப்பர்நகூமுக்கு வந்தார்கள்

யோவான் 6:25 கடலின் அக்கரையிலே அவர்கள் அவரைக் கண்டபோது, ரபீ, நீர் எப்பொழுது இவ்விடம் வந்தீர் என்று கேட்டார்கள

"இயேசுவும் அவருடைய சீஷரும் அங்கே இல்லாததை ஜனங்கள் கண்டார்கள்" - ஜனங்கள் இன்னும் இயேசுவைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள் அவரை எப்படியாவது ராஜாவாக ஆக்கிவிடவேண்டும் என்று தீர்மானமாக இருக்கிறார்கள் ஆனால இயேசுவை அங்கு காணவில்லை உடனே அந்தப் படவுகளில ஏறி, இயேசுவைத் தேடிக்கொண்டு, கப்பர்நகூமுக்கு வந்தார்கள் (யோவான் 6:15)

(2) இயேசு ஜனங்களுடைய தவறான நோக்கங்களைக் கடிந்து கொள்கிறார்

யோவான் 6:26 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் அற்புதங்களைக் கண்டதினால அல்ல நீங்கள் அப்பம் புசித்துத் திருப்தியானதினாலேயே என்னைத் தேடுகிறீர்கள் என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன

யோவான் 6:27 அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன் வரைக்கும் நிலை நிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள அதை மனுஷ குமாரன் உங்களுக்குக் கொடுப்பார் அவரைப் பிதாவாகிய தேவன் முத்திரித்திருக்கிறார் என்றார்

"நீங்கள அற்புதங்களைக் கண்டதினால் அல்ல நீங்கள அப்பம் புசித்துத் திருப்தியானதினாலேயே என்னைத் தேடுகிறீர்கள" இயேசு கிறிஸ்து அற்புதங்களைச் செய்யும்போது அவருடைய தெய்வீக சுபாவம் வெளிப்படுகிறது. திரளான ஜனங்களுக்கு இயேசு கிறிஸ்து போஜனம் கொடுத்து அற்புதம் செய்தார்

யோவான் – தொகுப்புரை

6 அதிகாரம்

இந்த ஜனங்கள் அப்பங்களை மாத்திரமே காண்கிறார்கள் அந்த அற்புதங்களைச் செய்த இயேசு கிறிஸ்து "தேவனுடைய குமாரன்" என்பதை அவர்கள் காணவில்லை அற்புதங்கள் நடைபெறும்போது இயேசுவை மேசியாவாக காணவேண்டும். அப்பம் சாப்பிட்டு, திருப்தியடைவது தவறல்ல அவர்களுடைய சரீரத்திற்கு போஜனம் தேவை அதேவேளையில் அவர்களுடைய ஆத்துமாவிற்கும் போஜனம் தேவைப்படுகிறது. இயேசு கிறிஸ்துவே ஜீவஅப்பம் அவர்கள் உலகப்பிரகாரமான அப்பத்தை புசித்தபோது, இயேசு கிறிஸ்துவை ஜீவ அப்பமாகக் காணவேண்டும்

நித்திய ஜீவன்

1 கிறிஸ்துவிடமிருந்து வருகிறது (யோவான் 6:37, 45,65)

2 அவருடைய சரீரத்தை புசிப்பது - அவருடைய இரத்தத்தை பானம் பண்ணுவது (யோவான் 6:50,51,54,58)

3 கிரியை நடப்பித்தல் (யோவான் 6:27)

4 அறுவடை - ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுதல் (யோவான் 4:35-38)

5 இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுத்தல் (யோவான் 12:25)

6 தேவனையும், கிறிஸ்துவையும் தெரிந்து கொள்ளுதல் (யோவான் 17:2-3)

7 சரியான வாசலில் உட்பிரவேசித்தல் (மத் 7:13-14

8 தீங்கு செய்யாதிருத்தல் (மத் 18:8-9)

9 கற்பனைகளைக் கைக்கொள்ளுதல் (மத் 19:17

10 எல்லாவற்றையும் வெறுத்தல (மத் 19:27-29; மாற்கு 10:28-30 லூக்கா 18:28-30)

11 பாவத்திலிருந்து விலகி ஜீவித்தல் (ரோமர் 5:21; ரோமர் 6:16-23 ரோமர் 8:1-13; தீத்து 2:11-14

12 நற்கிரியைகளைத் தொடர்ந்து செய்து நித்திய ஜீவனை நாடுதல் (ரோமர் 2:7)

13 ஆவிக்காக விதைத்தல் (கலா 6:7-8)

14 விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடுதல் (1தீமோ 6:12,19)

15. தெளிந்த புத்தியுள்ளவர்களாக இருத்தல் (தீத்து 1:2; தீத்து 3:7; 1பேதுரு 1:5,9,13; ரோமர் 8:24

16 சோதனைகளைத் தாங்கிக் கொள்ளுதல் யாக் 1:12

17 நித்திய ஜீவனின் வாக்குத்தத்தம் நமக்குள் இருக்க வேண்டும் - தேவனிடத்திலும் கிறிஸ்துவிடத்திலும் நாம் தொடர்ந்து இருக்க வேண்டும். (1யோவான் 2:24-25; 1யோவான் 5:11-20

18 எல்லோரையும் நேசித்தல (1யோவான் 3:14-15)

19 தேவனுடைய அன்பில் நம்மைக் காத்துக்கொண்டு, நித்திய ஜீவனை நோக்கிப் பார்த்தல் (யூதா 1:20-24

20 பாவத்தை மேற்கொள்ளுதல (வெளி 2:7,11,17,26, வெளி 3:5,12,21

21 மரணம் வரையிலும் உண்மையுள்ளவர்களாக இருத்தல் (வெளி 2:10; எபி 12:14-15

22 சுவிசேஷத்தை விசுவாசித்து அதற்குக் கீழ்ப்படிதல் (யோவான் 3:15-19,36, யோவான் 4:14 யோவான் 5:24, யோவான் 6:40,47,54; 2கொரி 5:17 ரோமர் 1:5)

23 மறுபடியும் பிறத்தல், கிறிஸ்துவின் சத்திய வசனத்தைக் கேட்டு, அதற்குக் கீழ்ப்படிதல் யோவான் 3 யோவான் 10:27-29

6 அதிகாரம்

நாம் இப்போது நித்திய ஜீவனைப் பெற்றுக் கொண்டு, அதைக் காத்துக்கொள்ள வேண்டும். மேலே கூறப்பட்டிருக்கும் நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். நாம் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்க வேண்டும் (மத் 7:13; மத் 18:8-9; மத் 19:17; ரோமர் 6:22). நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள வேண்டும். (ரோமர் 6:23; யாக் 1:12; 1பேதுரு 1:13; வெளி 2:10) ஆத்துமாக்களை அறுவடை செய்ய வேண்டும். (கலா 6:7-8); வரப்போகும் உலகத்தில் நாம் நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ள வேண்டும் (மத் 19:27-29; மாற்கு 10:28-30; லூக்கா 18:28-30) ஜீவியத்தின் முடிவில் நித்திய ஜீவன் பலனாகக் கிடைக்கும். (ரோமர் 6:22; யோவான் 3:16)

"நித்திய ஜீவனை மனுஷகுமாரன் உங்களுக்குக் கொடுப்பார். அவரைப் பிதாவாகிய தேவன் முத்திரித்திருக்கிறார்." பரிசுத்த ஆவியானவரை மனுஷகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவிற்கு அளவில்லாமல் கொடுத்திருப்பதினால் பிதாவானவர் குமாரனை முத்திரித்திருக்கிறார். அதாவது உறுதிபண்ணியிருக்கிறார். (யோவான் 3:33-34; யோவான் 3:34; இராஜா 21:8; யோபு 34:14; 2கொரி 1:22; எபே 1:13; எபே 4:30; வெளி 7:2)

(3) தேவனுக்கு ஏற்ற கிரியைகளை எவ்வாறு செய்வது என்று ஜனங்கள் இயேசுவிடம் கேட்கிறார்கள்

யோவான் 6:28 அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி: தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்னசெய்ய வேண்டும் என்றார்கள்.

"தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்னசெய்ய வேண்டும்" - விசுவாசிகளுடைய ஜீவியத்தில் இது மிகவும் முக்கியமான கேள்வி. நம்முடைய நற்கிரியைகள் மனுஷர் காணும்படியாக இருக்க வேண்டும். இதைக் கண்ட மனுஷர் தேவனை மகிமைப்படுத்த வேண்டும். (மத் 5:16) கிரியைகளின் மூலமாக நமது விசுவாசத்தைப் வெளிப்படுத்திக் காண்பிக்க வேண்டும் (யாக் 1:22-27; யாக் 2:14-26) நற்கிரியைகளைச் செய்வதற்கு இரட்சிக்கப் பட்டவர்களாகிய நாம் ஆர்வமுடையவர்களாக இருக்கவேண்டும். (தீத்து 2:11-14)

நம் மூலமாக அற்புதம் நடைபெறுவது தவறல்ல. ஆனால் நமது நோக்கம் தேவனை மகிமைப்படுத்துவதாகவே இருக்க வேண்டும். நம் மூலமாக தேவன் நடப்பிக்கும் அற்புதத்தில் நாம் பெருமைப்படக்கூடாது. நாம் நடப்பிக்கும் கிரியைகள் எப்போதும் தேவனை மகிமைப்படுத்தக்கூடியதாகவே இருக்க வேண்டும். லூசிபர் தேவனைப்போல ஆகவேண்டுமென்று நினைத்தான் (ஏசா 14:12-14) ஆதாமும் இதே தவறையே செய்தான் (ஆதி 3:1-14) அவர்களுடைய எண்ணமும் தவறு. இதற்காக அவர்கள் செய்த கிரியைகளும் தவறு.

இயேசுகிறிஸ்து தம்மைத் தாமே வெறுமையாக்கினார் (பிலி 2:5-11) அவரிடத்தில் சுயநலமில்லை. பிதாவை மகிமைப்படுத்த வேண்டும் என்பது மட்டுமே அவர் சித்தமாக இருந்தது. நாம் நமது ஜீவியத்தில் நமது சரீர பிரகாரமான தேவைகளுக்கு ஊழியம் செய்வதை நிறுத்திவிட்டு, தேவனுடைய நாம மகிமைக்காக ஊழியம் செய்ய வேண்டும். (யோவான் 6:29)

(4) தேவனுக்கேற்ற கிரியை

யோவான் 6:29 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது என்றார்.

6 அதிகாரம்

"அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது" - ஜனங்கள் இயேசுவிடம் தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றுகேள்வி கேட்டார்கள். அதற்கு இயேசு கிறிஸ்து இவ்வாறு பதில் கூறுகிறார். பிதாவாகிய தேவன் இயேசுகிறிஸ்துவை அனுப்பினார். அவரைத் தேவனுடைய ஒரேபேறான குமாரன் என்று எல்லோரும் விசுவாசிக்க வேண்டும். அப்போது தேவன் நம்மைத் தமது பிள்ளைகளாக ஏற்றுக்கொள்வார். தேவனுடைய கிரியைகளைச் செய்வதற்கு நம்மைப் பெலப்படுத்துவார் (மாற்கு 16:15-20; லூக்கா 24:49; யோவான் 14:12)

(5) ஜனங்கள் அடையாளத்தை கேட்கிறார்கள்

யோவான் 6:30 அதற்கு அவர்கள்: அப்படியானால் உம்மை விசுவாசிக்கும்படிக்கு நாங்கள் காணத்தக்கதாக நீர் என்ன அடையாளத்தைக் காண்பிக்கிறீர்? என்னத்தை நடப்பிக்கிறீர்?

யோவான் 6:31 வானத்திலிருந்து அவர்களுக்கு அப்பத்தைப் புசிக்கக் கொடுத்தார் என்று எழுதியிருக்கிறபடி நம்முடைய பிதாக்கள் வனாந்தரத்தில் மன்னாவைப் புசித்தார்களே என்றார்கள்.

"அப்படியானால் உம்மை விசுவாசிக்கும்படிக்கு நாங்கள் காணத்தக்கதாக நீர் என்ன அடையாளத்தைக் காண்பிக்கிறீர்? என்னத்தை நடப்பிக்கிறீர்?" - இயேசு கிறிஸ்து தேவகுமாரன் என்றும், மேசியா என்றும் விசுவாசிப்பதற்கு ஜனங்கள் அடையாளத்தைத் தேடுகிறார்கள். இயேசு கிறிஸ்து திரளான ஜனங்களுக்கு அற்புதமாகப் போஜனம் கொடுத்தார். இது அவர்களுக்குப் பெரிய அற்புதமாகத் தெரியவில்லை. ஏனெனில் இஸ்ரவேல் ஜனங்களுக்கு மோசே வனாந்தரத்தில் நாற்பது வருஷங்களாகப் போஜனம் கொடுத்தார். அப்படியிருந்தும் மோசே தன்னைத் தேவனுடைய குமாரன் என்றோ மேசியா என்றோ கூறிக் கொள்ளவில்லை. (யோவான் 2:11; யோவான் 6:42)

(6) பிதா மெய்யான அப்பத்தை கொடுக்கிறார்

யோவான் 6:32 இயேசு அவர்களை நோக்கி: வானத்திலிருந்து வந்த அப்பத்தை மோசே உங்களுக்குக் கொடுக்கவில்லை; என் பிதாவோ வானத்திலிருந்து வந்த மெய்யான அப்பத்தை உங்களுக்குக் கொடுக்கிறார் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

யோவான் 6:33 வானத்திலிருந்திறங்கி, உலகத்துக்கு ஜீவனைக் கொடுக்கிற அப்பமே தேவன் அருளிய அப்பம் என்றார்.

"வானத்திலிருந்து வந்த அப்பத்தை மோசே உங்களுக்குக் கொடுக்கவில்லை" மோசே மெய்யான அப்பத்தைக் கொடுப்பதில்லை. மெய்யான அப்பம் ஆத்துமாவிற்குப் போஜனம் கொடுத்து நித்திய ஜீவனைத் தரும். மோசே கொடுத்த அப்பமோ சரீரத்திற்குரியது. சரீரப் பசியை மட்டுமே போக்கும். (யாத் 16:15; சங் 78:24; யோவான் 6:47)

(7) ஜனங்கள் அந்த அப்பத்தை எப்பொழுதும் தங்களுக்கு தர வேண்டும் என்று கூறுகிறார்கள்

யோவான் 6:34 அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி: ஆண்டவரே, இந்த அப்பத்தை எப்பொழுதும் எங்களுக்குத் தரவேண்டும் என்றார்கள்.

"ஆண்டவரே இந்த அப்பத்தை எப்பொழுதும் எங்களுக்குத் தரவேண்டும்" ஜனங்கள் இவ்வாறு கேட்பதினால் அவர்கள் இன்னும் இயேசு கிறிஸ்து கூறிய சத்தியத்தைப் புரிந்து கொள்ளவில்லை என்று தெரிகிறது. தங்களுடைய சரீரத்தின் பசியைப் போக்கும் உலகப்பிரகாரமான அப்பத்தையே கேட்கிறார்கள்.

6 அதிகாரம்

(8) இயேசு - ஜீவ அப்பம் நானே

யோவான் 6:35 இயேசு அவர்களை நோக்கி: ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்.

யோவான் 6:36 நீங்கள் என்னைக் கண்டிருந்தும் விசுவாசியாமலிருக்கிறீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்.

யோவான் 6:37 பிதாவானவர் எனக்குக் கொடுக்கிறயாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை.

யோவான் 6:38 என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன்.

யோவான் 6:39 அவர் எனக்குத் தந்தவைகளில் ஒன்றையும் நான் இழந்துபோகாமல், கடைசி நாளில் அவைகளை எழுப்புவதே என்னை அனுப்பின பிதாவின் சித்தமாயிருக்கிறது.

யோவான் 6:40 குமாரனைக் கண்டு அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்தியஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும் என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது என்றார்.

தீர்க்கதரிசன எண் - 12

"ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்" (யோவான் 6:35) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

யோவான் சுவிசேஷத்தில் இயேசு கிறிஸ்து தம்மைப் பற்றிக் கூறியிருக்கும் [illegible]

1. ஜீவஅப்பம் நானே (யோவான் 6:35-51)
2. நான் உலகத்திற்கு ஒளியாய் இருக்கிறேன் (யோவான் 8:12, யோவான் 9:5)
3. நானே ஆடுகளுக்கு வாசல் (யோவான் 10:7-9)
4. நானே நல்ல மேய்ப்பன் (யோவான் 10:11-14)
5. நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் (யோவான் 11:25)
6. நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் (யோவான் 14:6)
7. நானே மெய்யான திராட்சச்செடி (யோவான் 15:1-6)

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்" - இயேசு கிறிஸ்து ஜீவதண்ணீரை நமக்குப் பருகக்கொடுப்பார் ஆகையினால் நமக்குத் தாகமடையாது. (யோவான் 7:37-39) பரிசுத்த ஆவியானவர் நம்மை அபிஷேகம் பண்ணுவார் நம்முடைய எல்லாத் தேவைகளும் சந்திக்கப்படும். எல்லாப் பிரச்சனைகளையும் பரிசுத்த ஆவியானவர் தீர்த்து வைப்பார் (மத் 17:20 மத் 21:22, மாற்கு 9:23; மாற்கு 11:22-24, லூக்கா 11:9-13; யோவான் 14:12-17,26, யோவான் 15:7,16,26; யோவான் 16:7-15 அப் 1:4-8; அப் 8:26; 1கொரி 12:1-13 கலா 3:14; கலா 5:16-26

"நீங்கள் என்னைக் கண்டிருந்தும் விசுவாசியாமலிருக்கிறீர்கள்" தேவனே அப்பத்தைக் கொடுத்தவர் மோசேயல்ல. இயேசு கிறிஸ்து ஐந்து அப்பங்களைக் கொண்டு, திரளான ஜனங்களுக்குப் போஜனம் கொடுத்ததை அந்த ஜனங்கள் தங்கள் கண்களால் கண்டிருக்கிறார்கள் இயேசு கிறிஸ்துவின் மூலமாக பல அடையாளங்களைக் கண்டும், அவரை விசுவாசியாமல் இருக்கிறார்கள் (யோவான் 6:26-27)

6 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 13

"பிதாவானவர் எனக்குக் கொடுக்கிறயாவும் என்னிடத்தில் வரும் என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" (யோவான் 6:37) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

"என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" - இயேசு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசத்தோடு மனந்திரும்பி, முழு இருதயத்தோடு வரவேண்டும். பாவத்தை விட்டு விலகி தேவனுக்குப் பரிசுத்தமாக வாழவேண்டுமென்று பிரதிஷ்டை பண்ணி இயேசுகிறிஸ்துவிடம் வரவேண்டும். இயேசு கிறிஸ்துவின் வார்த்தைக்கும், அவருடைய சித்தத்திற்கும் நம்மை ஒப்புக்கொடுத்து கீழ்ப்படிய வேண்டும். (ரோமர் 10:9-10; 2கொரி 7:10; 1யோவான் 1:9; அப் 2:38-39; அப் 3:19)

தீர்க்கதரிசன எண் - 14

"அவர் எனக்குத் தந்தவைகளில் ஒன்றையும் நான் இழந்துபோகாமல் கடைசி நாளில் அவைகளை எழுப்புவதே என்னை அனுப்பின பிதாவின் சித்தமாயிருக்கிறது. குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் நித்தியஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும் என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது" (யோவான் 6:39-40) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. உயிர்த்தெழுதலின் போது இந்தத் தீர்க்கதரிசனம் முழுமையாக நிறைவேறும் (1தெச 4:16-17; 1கொரி 15:23,51-58)

"அவர் எனக்குத் தந்தவைகளில் ஒன்றையும் நான் இழந்துபோகாமல்" (யோவான் 6:37,40, 47,51,53-58) ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற பிரகாரம் இயேசு கிறிஸ்து தம்மிடத்தில் வருகிற யாரையும் புறம்பே தள்ளவும் மாட்டார், இழந்து போகவும் மாட்டார் (யோவான் 3:15)

"கடைசி நாளில் அவைகளை எழுப்புவதே என்னை அனுப்பின பிதாவின் சித்தமாயிருக்கிறது" - கடைசி நாள் என்னும் வாக்கியத்தை யோவான் ஆறு இடங்களில் பயன்படுத்தியிருக்கிறார். நீதிமானின் கடைசி நாள் மீட்பை பற்றி யோவான் கூறுகிறார். அப்போது அவர்களுடைய சரீரங்கள் முழுவதுமாக மீட்கப்படும் (யோவான் 6:39-40, 44, 54; யோவான் 11:24) மேலும் ஒரு வசனத்தில் துன்மார்க்கர் கடைசி நாளில் உயிர்த்தெழுந்து நியாயத்தீர்ப்படைவார்கள் என்பதையும் யோவான் குறிப்பிட்டிருக்கிறார் (யோவான் 12:48; வெளி 20:11-15)

(9) முறுமுறுக்கும் யூதர்கள் - (மத் 26:3)

> யோவான் 6:41 நான் வானத்திலிருந்து வந்த அப்பம் என்று அவர் சொன்னதினிமித்தம் யூதர்கள் அவரைக்குறித்து முறுமுறுத்து:
>
> யோவான் 6:42 இவன் யோசேப்பின் குமாரனாகிய இயேசு அல்லவா? இவனுடைய தகப்பனையும் தாயையும் அறிந்திருக்கிறோமே; அப்படியிருக்க, நான் வானத்திலிருந்திறங்கிவந்தேன் என்று இவன் எப்படிச் சொல்லுகிறான் என்றார்கள்.

"நான் வானத்திலிருந்து வந்த அப்பம்" - (யோவான் 6:35)

"இவன் யோசேப்பின் குமாரனாகிய இயேசு அல்லவா? இவனுடைய தகப்பனையும் தாயையும் அறிந்திருக்கிறோமே; அப்படியிருக்க, நான் வானத்திலிருந்திறங்கிவந்தேன் என்று இவன் எப்படிச் சொல்லுகிறான்" ஜனங்கள் இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கவில்லை. தங்களுடைய அவிசுவாசத்திற்கு ஒருசில சாக்குப் போக்குகளைக் கூறுகிறார்கள் (மத் 13:55; மாற்கு 6:3; லூக்கா 4:22). ஜனங்கள் இந்த வசனங்களைக் கூறியபோது யோசேப்பு உயிரோடு இருந்தார்.

(10) இயேசு ஜீவ அப்பத்தைப் பற்றி மேலும் விளக்குகிறார்

> யோவான் 6:43 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: உங்களுக்குள்ளே முறுமுறுக்க வேண்டாம்.

6 அதிகாரம்

யோவான் 6:44 என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசி நாளில் நான் அவனை எழுப்புவேன்

யோவான் 6:45 எல்லாரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள் என்று தீர்க்கதரிசிகளின் ஆகமத்தில் எழுதியிருக்கிறதே; ஆகையால் பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக் கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான்

யோவான் 6:46 தேவனிடத்திலிருந்து வந்தவரே தவிர வேறொருவரும் பிதாவைக் கண்டதில்லை. இவரே பிதாவைக் கண்டவர்

யோவான் 6:47 என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்

யோவான் 6:48 ஜீவ அப்பம் நானே

யோவான் 6:49 உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்திருந்தும் மரித்தார்கள்

யோவான் 6:50 இதிலே புசிக்கிறவன் மரியாமலிருக்கும்படி வானத்திலிருந்து இறங்கின அப்பம் இதுவே

யோவான் 6:51 நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம். இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான் நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்

தீர்க்கதரிசன எண் - 15

"என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான் கடைசிநாளில் நான் அவனை எழுப்புவேன் எல்லாரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள் என்று தீர்க்கதரிசிகளின் ஆகமத்தில் எழுதியிருக்கிறதே, ஆகையால் பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக் கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான் (யோவான் 6:44-45) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. நீதிமான் உயிர்த்தெழுகையில் இது முழுவதுமாக நிறைவேறும். 1தெச 4:16 1கொரி 15:23,51-58)

"என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்" - தேவனுடைய வார்த்தையினாலும் பரிசுத்த ஆவியானவர் மூலமாகவும் மட்டுமே ஒருவன் இயேசு கிறிஸ்துவிடம் வரமுடியும். (யோவான் 6:45; யோவான் 16:7-11 ரோமர் 2:12-16

யோவான் சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 8

"எல்லாரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள்" (யோவான் 6:45 ஏசா 54:13; எரே 31:34)

"பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக் கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான்" பிதா மனுஷரை இவ்வாறுதான் இழுத்துக் கொள்கிறார் தம்முடைய வார்த்தையைப் பிரசங்கம் பண்ணுவதற்கு தமது பிரதிநிதிகளைப் பயன்படுத்துகிறார் (ரோமர் 10:14-17 2கொரி 1:17-24) பரிசுத்த ஆவியானவர் பாவத்தைக் குறித்து உணர்த்துகிறார் (யோவான் 16:7-11 பரிசுத்த ஆவியானவருடைய கிரியையின் மூலமாக மனுஷனுடைய மனச்சாட்சி குற்ற உணர்வு அடைகிறது. தன்னுடைய செயல் சரியானதா அல்லது தவறானதா என்பதை மனுஷன் வேதவாக்கியத்தின் பிரகாரமாக நிதானித்து அறிகிறான் ரோமர் 2:12-16, 2கொரி 2:15-17 1யோவான் 1:7) தேவன் மனுஷரைத் தம்மிடத்தில் இழுத்துக்கொள்ளும் போது அவர் பலவந்தத்தைப் பயன்படுத்துவதில்லை மனுஷருடைய சுயாதீன சித்தத்திற்குத் தேவன் அனுமதி அளிக்கிறார்

யோவான் - தொகுப்புரை

6 அதிகாரம்

"இவரே பிதாவைக் கண்டவர்" - இயேசு கிறிஸ்துவே பிதாவைக் கண்டவர் பிதாவை முழுவதுமாகப் புரிந்து கொண்டவர் தமது சிந்தையில் பிதாவை அறிந்து கொண்டவர் சத்தியத்தை முழுவதுமாகக் காண்கிறவர் இந்த வாக்கியத்தில் "கண்டவர்" என்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்கச் சொல் "ஹோராயோ (horaoo) என்பதாகும் இந்த வார்த்தை இந்தப் பொருளிலேயே பல வசனங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. யோவான் 3:18 யோவான் 8:18 யோவான் 3:45 யோவான் 15:24. யோவான் 3:6

காண் (seen) - ὁράω - horaoo - 3708

வினைச்சொல் - காண்பி எச்சரிக்கையாயிரு, பார், காண், தரிசி (to comprehend fully, understand with the mind; to see truth fully)

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு" இந்த வாக்கியம் மனுஷர் தொடர்ந்து செய்ய வேண்டிய கிரியையை வெளிப்படுத்துகிறது. நாம் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்துக் கொண்டிருக்க வேண்டும். எப்போதாவது ஒரு தடவை இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதினால் நமக்கு நித்திய ஜீவன் எப்போதும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கக் கூடாது. (லூக்கா 8:13; 1தீமோ 1:19; தீமோ 4:1, 1தீமோ 5:8,12; 1தீமோ 6:12,21 2 தீமோ 2:11-13, எபி 3:6, 12-14; எபி 4:11; எபி 10:23-38, யூதா 1:5, வெளி 2:10) இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் விசுவாசம் எப்போதும் நம்மிடத்தில் காணப்பட வேண்டும். நமது விசுவாசத்தை நிறுத்திவிடக் கூடாது. இயேசு கிறிஸ்து செய்யும் எல்லாக் காரியங்களிலும் தேவன் விசுவாசமாக இருக்கிறார் (ரோமர் 4:17; 1கொரி 13:13) விசுவாசிகள் தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக வரும் விசுவாசத்திலேயே ஜீவிக்கிறார்கள் (யோவான் 3:35, ரோமர் 1:17; கலா 2:20 எபி 10:23-38

"நித்திய ஜீவன்" - (யோவான் 6:27

"உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்திருந்தும் மரித்தார்கள்" - வனாந்தரத்திலேயே இஸ்ரவேல் ஜனங்கள் புசித்த அப்பம் அவர்கள் சரீரத்திற்குரியது. அவர்களுடைய ஆத்துமாவிற்குரியது அல்ல ஆகையினால் வனாந்தரத்தில் அவர்கள் புசித்த அப்பத்தினால் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளவில்லை. அதனால் அவர்கள் மன்னாவைப் புசித்திருந்தும் மரித்தார்கள் (யோவான் 6:27

தீர்க்கதரிசன எண் - 18

"இதிலே புசிக்கிறவன் மரியாமலிருக்கும்படி வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம் இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான் நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே" (யோவான் 6:50-51) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிமுறு நிறைவேறிக் கொண்டிருக்கிறது

"இதிலே புசிக்கிறவன் மரியாமலிருக்கும்படி" - இது சரீர மரணத்தைக் குறிக்காது ஆவிக்குரிய மரணத்தைக் குறிக்கும் ஜீவஅப்பத்தைப் புசிக்கிறவன் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வான் ஆகையினால் அவன் சரீரப் பிரகாரமாக மரித்தாலும் ஆவிக்குரிய பிரகாரமாக மரிப்பதில்லை (எபி 9:27; 1கொரி 15:51-58, 1தெச 4:16-17)

"நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்" இந்த அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து தம்மை ஜீவஅப்பமாக நான்கு இடங்களில் ஒப்பிட்டுக் கூறியிருக்கிறார் (யோவான் 6:35,41,48,51) ஜீவஅப்பம் என்பது இயேசு கிறிஸ்துவின் சரீரத்தைக் குறிக்கும். உலகத்தின் ஜீவனுக்காக இயேசு கிறிஸ்து தம்முடைய ஜீவனையே ஒப்புக் கொடுத்திருக்கிறார் (யோவான் 6:51) உலகத்திலுள்ள ஜனங்கள் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றால் இயேசு கிறிஸ்து கூறியிருக்கும் நிபந்தனைகளையும் கைக்கொள்ள வேண்டும். (யோவான் 6:27

பிழைத்திரு (living) - ζάω - zaoo 2198

6 அதிகாரம்

வினைச்சொல் - பிழைத்திரு, உயிரோடிரு, ஜீவித்திரு, வாழ்ந்திரு, சஞ்சரி, உண்டாயிரு, ஜீவனம் பண்ணு, ஜீவன் (live, be alive). இயேசு கிறிஸ்துவே மனுஷருக்கு ஜீவனைக் கொடுக்கிற அப்பம். (யோவான் 6:48,51)

"இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்" - நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வதற்கு இயேசு கிறிஸ்து கூறியிருக்கும் நிபந்தனைகளில் இதுவும் ஒரு நிபந்தனை. இந்த அப்பத்தைப் புசிக்க வேண்டும் (யோவான் 6:27). இயேசு கிறிஸ்துவைப் புசிப்பது என்பது விசுவாசத்தின் மூலமாக இயேசு கிறிஸ்துவை நம்முடைய உள்ளங்களில் ஏற்றுக் கொள்வது. நமக்காக இயேசு கிறிஸ்து செய்திருக்கிற காரியங்களை விசுவாசித்து ஏற்றுக் கொள்வது. பாவம் செய்யாமல் இயேசு கிறிஸ்துவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து ஜீவிப்பது. நமது பாவங்களை மன்னிப்பதற்காக இயேசு கிறிஸ்து ஏற்கெனவே அதற்குரிய கிரயத்தைச் செலுத்தியிருக்கிறார். நாம் இயேசு கிறிஸ்துவிற்குப் பயந்து கீழ்ப்படிதலோடு பாவமில்லாமல் ஜீவிக்கும்போது அவர் நம்மை மன்னிப்பதற்காக மறுபடியும் கிரயம் செலுத்த வேண்டியதில்லை (யோவான் 6:63).

(11) யூதர்கள் தங்களுக்குள் வாக்குவாதம் பண்ணுகிறார்கள்

யோவான் 6:52 அப்பொழுது யூதர்கள்: இவன் தன்னுடைய மாம்சத்தை எப்படி நமக்குப் புசிக்கக் கொடுப்பான் என்று தங்களுக்குள்ளே வாக்குவாதம் பண்ணினார்கள்.

"இவன் தன்னுடைய மாம்சத்தை எப்படி நமக்குப் புசிக்கக் கொடுப்பான்" - நம்முடைய பாவநிவாரண பலியாக இயேசு கிறிஸ்து மரித்தார் என்பதை நாம் ஏற்றுக் கொள்வதே அவருடைய மாம்சத்தைப் புசிப்பதாகும். அத்துடன் அவருடைய கற்பனைகளையும் நாம் கைக்கொள்ள வேண்டும். (யோவான் 6:27)

(12) இயேசு ஜீவ அப்பத்தைப் பற்றி இன்னும் அதிகமாக விளக்கி கூறுகிறார்

யோவான் 6:53 அதற்கு இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும் அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

யோவான் 6:54 என் மாம்சத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவேன்.

யோவான் 6:55 என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது.

யோவான் 6:56 என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன்.

யோவான் 6:57 ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினதுபோலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறதுபோலவும், என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான்.

யோவான் 6:58 வானத்திலிருந்து இறங்கின அப்பம் இதுவே; இது உங்கள் பிதாக்கள் புசித்த மன்னாவைப் போலல்ல; அவர்கள் மரித்தார்களே; இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான் என்றார்.

தீர்க்கதரிசனம் எண் - 17

"நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும் அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை. என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன்"

6 அதிகாரம்

யோவான் 6:53-54 இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. உயிர்த்தெழுதலின் போது இந்தத் தீர்க்கதரிசனம் முழுமையாக நிறைவேறும். (1கொரி 15:23,51-58; 1தெச 4:16-17) (யோவான் 3:3)

"என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு" - இயேசு கிறிஸ்துவின் மரணத்தினால் நமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஆசீர்வாதங்களில் பங்குபெறுவதைப் புசிப்பதும் பானம் பண்ணுவதும் என்பதை இது அடையாளமாக விளக்குகிறது. நாம் விசுவாசத்தினால் இதில் பங்கு பெறுகிறோம். இயேசு கிறிஸ்து நமக்காகச் செய்திருக்கும் கிரியைகளின் அடிப்படையிலேயே தேவன் நமக்கு ஆசீர்வாதங்களை அருளுகிறார். ஆகையினால் இயேசு கிறிஸ்துவின் மாம்சத்தைப் புசிக்கும்போதும் அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணும்போதும் நாம் பயபக்தியோடும், சந்தோஷத்தோடும் இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும். எபே 2:8-9; ரோமர் 3:24-25; ரோமர் 5:1-11; ரோமர் 10:9-10; அப் 3:16; அப் 4:12; அப் 15:9; அப் 26:18; கலா 2:16-20; கலா 3:1-26; 1பேதுரு 1:5-10. புசிப்பது என்பது ஆவிக்குரிய போஜனத்தைப் புசிப்பதைக் குறிக்கும் (1கொரி 10:3-4). ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் புசிப்பதினால் வரும் பலன்களாகும். (சங் 69:9; எபே 2:8; எபே 3:1-3; வெளி 10:9) பாவத்தினால் தீய விளைவுகள் உண்டாகும் (நீதி 9:17; ஓசி 10:13; யாக் 5:3). இயேசுகிறிஸ்து இங்கு உவமையாகக் கூறியிருக்கும் காரியங்கள் யூதருக்குப் புரிந்து கொள்வதற்குக் கடினமானவையல்ல. அவர்களுக்கு ஏற்கெனவே புரிந்திருக்கும் காரியங்கள் மூலமாகவே இயேசு கிறிஸ்து பேசுகிறார். ஆகையினால் இயேசுவின் வார்த்தை தங்களுக்குப் புரியவில்லையென்று சாக்குப் போக்குச் சொல்வதற்கு இடமேயில்லை. யோவான் 6:47-48 ஆகிய வசனங்களை யோவான் 6:53-54 ஆகிய வசனங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இயேசு கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைப்பது அவருடைய மாம்சத்தைப் புசிப்பதற்கும் அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணுவதற்கும் சமமான காரியம் என்பது விளங்கும்.

பிழைத்திரு (living) - ζάω - zaoo 2198

வினைச்சொல் - பிழைத்திரு, உயிரோடிரு, ஜீவித்திரு, வாழ்ந்திரு, சஞ்சரி, உண்டாயிரு, ஜீவனம் பண்ணு, ஜீவன்

"ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினார்" - இயேசு கிறிஸ்து பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்டதாக மூன்று இடங்களில் கூறுகிறார் (யோவான் 6:38,41,42). தம்மைப் பிதா அனுப்பினதாக ஐந்து இடங்களில் கூறுகிறார் (யோவான் 6:38-39, 40,44, 57).

"வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே" - ஏழு இடங்களில் மன்னா அல்லது மெய்யான அப்பம் வானத்திலிருந்து வந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது (யோவான் 6:31,32, 33,50,51,58).

"இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான்" - இயேசு கிறிஸ்து கூறியிருக்கும் நிபந்தனைகளைப் பின்பற்றினால் மனுஷருக்கு நித்திய ஜீவன் உண்டு என்று ஆறு இடங்களில் வாக்குப் பண்ணப்பட்டிருக்கிறது (யோவான் 6:40,47, 50,51,54,58) (யோவான் 6:27).

35. உபதேசத்தினால் சீஷத்துவத்திற்கு பரீட்சை - (மத் 8:22)

யோவான் 6:59 கப்பர்நகூமிலுள்ள ஜெப ஆலயத்திலே அவர் உபதேசிக்கையில் இவைகளைச் சொன்னார்.

யோவான் 6:60 அவருடைய சீஷரில் அநேகர் இவைகளைக் கேட்டபொழுது: இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள் என்றார்கள்.

யோவான் 6:61 சீஷர்கள் அதைக் குறித்து முறுமுறுக்கிறார்களென்று இயேசு தமக்குள்ளே அறிந்து, அவர்களை நோக்கி: இது உங்களுக்கு இடறலாயிருக்கிறதோ?

யோவான் 6:62 மனுஷகுமாரன் தாம் முன்னிருந்த இடத்திற்கு ஏறிப் போகிறதை நீங்கள் காண்பீர்களானால் எப்படியிருக்கும்.

6 அதிகாரம்

யோவான் 6:63 ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது. நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது.

யோவான் 6:64 ஆகிலும் உங்களில் விசுவாசியாதவர்கள் சிலர் உண்டு என்றார். விசுவாசியாதவர்கள் இன்னாரென்றும், தம்மைக் காட்டிக் கொடுப்பவன் இன்னானென்றும் ஆதிமுதலாக இயேசு அறிந்திருந்தபடியால், அவர் பின்னும்:

யோவான் 6:65 ஒருவன் என்பிதாவின் அருளைப் பெறாவிட்டால் என்னிடத்தில் வரமாட்டான் என்று இதினிமித்தமே உங்களுக்குச் சொன்னேன் என்றார்.

யோவான் 6:66 அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப்போனார்கள்.

"இது கடினமான உபதேசம் யார் இதைக் கேட்பார்கள்" - இயேசு கிறிஸ்து கூறிய உபதேசத்தை சீஷர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. நடைமுறைக்கு அவருடைய உபதேசம் ஒத்துவரவில்லை. அது ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவும் இல்லை.

"சீஷர்கள் அதைக்குறித்து முறுமுறுக்கிறார்களென்று இயேசு தமக்குள்ளே அறிந்தார்" சீஷர்கள் முறுமுறுப்பதை இயேசு கிறிஸ்து அறிவை உணர்த்தும் வசனம் என்னும் ஆவிக்குரிய வரத்தின் மூலமாகப் புரிந்து கொள்கிறார் (1கொரி 12:4-11, ஏசா 11:2, யோவான் 6:64)

"இது உங்களுக்கு இடறலாயிருக்கிறதோ? மனுஷகுமாரன் தாம் முன்னிருந்த இடத்திற்கு ஏறிப்போகிறதை நீங்கள் காண்பீர்களானால் எப்படியிருக்கும்?" இயேசு கிறிஸ்துவின் மாம்சத்தைப் புசிப்பதும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணுவதும் அவர்களுக்கு இடறலாயிருக்கிறது. இதைவிடக் கடினமான உபதேசங்களையெல்லாம் இயேசு கிறிஸ்து உபதேசம் பண்ண வேண்டும்.

அதை அவர்கள் எவ்வாறு புரிந்து கொள்வார்கள் என்று தெரியவில்லை. மனுஷகுமாரன் பரலோகத்திற்கு ஏறிப்போவதை அவர்கள் காணப்போகிறார்கள். அந்த நிகழ்ச்சியை அவர்கள் எவ்வாறு புரிந்து கொள்வார்களோ என்பது தெரியவில்லை.

தீர்க்கதரிசன எண் - 18

"மனுஷகுமாரன் தாம் முன்னிருந்த இடத்திற்கு ஏறிப்போகிறதை நீங்கள் காண்பீர்களானால் எப்படியிருக்கும்?" (யோவான் 6:62) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (லூக்கா 24:51, அப் 1:9, எபே 4:8-10)

"ஆவியே உயிர்ப்பிக்கிறது" - இயேசு கிறிஸ்து தம்மைப் பலியாக ஒப்புக் கொடுத்ததினால் நமக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் கிடைத்திருக்கிறது. அவர் தமது ஜீவனை நமக்கு ஜீவ அப்பமாகக் கொடுத்திருக்கிறார். இந்த உலகத்தை இரட்சிப்பதற்காக அவர் தமது சரீரத்தை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்திருக்கிறார். (1பேதுரு 2:24, கொலோ 1:20, கொலோ 2:14-17)

"மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது" - இயேசு கிறிஸ்துவின் லௌதீக சரீரத்தையும், இரத்தத்தையும் நாம் புசிக்கவோ, பானம் பண்ணவோ முடியாது. அவை நம்முடைய ஆத்துமாவை இரட்சிக்காது.

"நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது" இயேசு கிறிஸ்து பேசுகிற ஜீவன் ஆவிக்குரியது. மாம்சத்திற்குரியது அல்ல. நமக்கு நித்திய ஜீவனை அவர் வாக்குப்பண்ணுகிறார். (2கொரி 3:6, எபி 4:12)

இயேசு கிறிஸ்து ஆதிமுதலாக அறிந்திருந்த காரியங்கள்

1. சிலர் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க மாட்டார்கள்.
2. இயேசுகிறிஸ்துவை ஒருவன் காட்டிக் கொடுப்பான்.

6 அதிகாரம்

"அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப் போனார்கள்" - இயேசு கிறிஸ்துவின் பன்னிரெண்டு அப்போஸ்தலர்களை இந்த வசனம் குறிக்காது. அவரை ஏராளமான சீஷர்கள் பின்பற்றினார்கள். அவர்களில் அநேகர் இயேசுவோடு நடவாமல் பின்வாங்கிப் போனார்கள் (யோவான் 6:67)

36. பேதுருவின் புதிய விசுவாச அறிக்கை - (மத் 16:13; மாற்கு 8:27 லூக் 9:18

யோவான் 6:67 அப்பொழுது இயேசு பன்னிருவரையும் நோக்கி: நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ என்றார்.

யோவான் 6:68 சீமோன் பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே.

யோவான் 6:69 நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம் என்றான்.

"நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ" இந்த வாக்கியத்தை இயேசு கிறிஸ்து தமது பன்னிரெண்டு சீஷர்களிடம் கேட்கிறார். இந்தப் பன்னிரெண்டு சீஷர்களையும் இயேசு கிறிஸ்து இந்த உலகத்திலிருந்து தெரிந்தெடுத்தார். அவர்களை இரட்சித்தார். தமது ஊழியத்தைச் செய்வதற்கு அவர்களுக்குப் பெலன் கொடுத்தார். ஆவிக்குரிய இரகசியங்களை வெளிப்படுத்தினார். அவர்கள் மூலமாகப் பெரிய காரியங்களைச் செய்ய வேண்டுமென்று இயேசு கிறிஸ்து திட்டமிட்டிருக்கிறார்.

"நித்தியஜீவன்" - (யோவான் 6:27)

பேதுரு விசுவாசித்து அறிந்திருக்கிற [redacted]

1. யாரும் இயேசுவை விட்டு விலகிப்போக மாட்டார்கள்
2. இயேசு கிறிஸ்துவிடத்தில் மட்டுமே நித்திய ஜீவ வசனங்கள் உள்ளன
3. இயேசுவே கிறிஸ்து
4. இயேசு கிறிஸ்து ஜீவனுள்ள தேவனுடைய குமாரன்

இந்த நான்கு காரியங்களையும் நாம் அறிக்கையிடும்போது மறுபடியும் பிறக்கும் அனுபவம் நமக்குக் கிடைக்கிறது (1யோவான் 5:1)

37. யூதாஸ் தம்மைக் காட்டிக் கொடுக்கப்போவதை இயேசு முன்குறித்துக் கூறுகிறார்

யோவான் 6:70 இயேசு அவர்களை நோக்கி: பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்துகொள்ளவில்லையா? உங்களுக்குள்ளும் ஒருவன் பிசாசாயிருக்கிறான் என்றார்.

யோவான் 6:71 சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து பன்னிருவரிலொருவனாயிருந்தும் தம்மைக் காட்டிக்கொடுக்கப் போகிறவனாயிருந்தபடியினால் அவனைக் குறித்து இப்படிச் சொன்னார்.

பிசாசு (devil) - διάβολος **diabolos** 1228

பொருள் - பிசாசான, அவதூறு செய்கிறவன் **(adversary, false accuser, slanderer)** (1தீமோ 3:11, 2தீமோ 3:3; தீத்து 2:3) - இந்த வசனத்தில் யூதாஸ்காரியோத்து பிசாசாக இருக்கிறான். மற்ற இடங்களிலெல்லாம் இந்த வார்த்தை சாத்தானையே குறிக்கும். (யோவான் 8:44

யோவான் - தொகுப்புரை

6 அதிகாரம்

"யூதாஸ்காரியோத்து" - இவன் சீமோனின் குமாரன் (யோவான் 6:71, யோவான் 12:4 யோவான் 13:2 26) இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களில் ஒருவனாக இவனைத் தெரிந்தெடுத்தது. அப்போஸ்தல ஊழியத்திற்கு அபிஷேகம் பண்ணினார் (மத் 10:1-20; மாற்கு 3:14-19 லூக்கா 6:12-16, லூக்கா 9:1-10; அப 1:17), சீஷர்கள் மத்தியிலே பணப்பையை வைத்திருக்கிறவன் (யோவான் 12:4-6, யோவான் 13:29); நன்றாகப் பிரசங்கம் பண்ணக்கூடியவன் வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்கினான் (மாற்கு 6:7-13 லூக்கா 9:10). யூதாசின் மறுபெயர் ஸ்காரியோத்து யூதேயா தேசத்தில் காரியோத்து என்னும் ஊர் உள்ளது. இவன் அந்த ஊரைச் சேர்ந்தவன் (யோசு 15:25). இவனுடைய கடைசி நாட்களில் இவன் திருடனாகவும், பிசாசாகவும் மாறினான் (யோவான் 6:70; யோவான் 12:4-6) இயேசுவைக் காட்டிக்கொடுத்தான் (மத் 26:14-16 47-50; மாற்கு (4:10-11 43-45 லூக்கா 22:3-6 47-49 யோவான் 13:2 யோவான் 18:2-5 அப 1:16-25), பிரதான ஆசாரியரிடத்தில் பணத்தைத் திருப்பிக் கொடுத்தான் (மத் 27:3-10) நான்றுகொண்டு செத்தான் (மத் 26:24 மத் 27:5; மாற்கு 14:21 லூக்கா 22:22, யோவான் 17:12; அப 1:16-25) யூதாஸ் காரியோத்தைப் பற்றி கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனங்கள் (மத் 26:21-25, மாற்கு 14:18-21; லூக்கா 22:21-23, யோவான் 13:18-26; யோவான் 17:12 அப் 1:16,20= சங் 41:9, சங் 69:25, சங் 109:8; சக 11:12-13)

7 அதிகாரம்

38. இயேசுவின் சகோதரர்கள் அவரை விசுவாசிக்கவில்லை - சங் 69:8-9; மாற்கு 3:21; லூக் 9:51 யோவான் 7:3-10

யோவான் 7:1 இவைகளுக்குப் பின்பு, யூதர்கள் இயேசுவைக் கொலைசெய்ய வகைதேடின படியால், அவர் யூதேயாவிலே சஞ்சரிக்க மனதில்லாமல் கலிலேயாவிலே சஞ்சரித்து வந்தார்.

யோவான் 7:2 யூதருடைய கூடாரப் பண்டிகை சமீபமாயிருந்தது.

யோவான் 7:3 அப்பொழுது அவருடைய சகோதரர் அவரை நோக்கி: நீர் செய்கிற கிரியைகளை உம்முடைய சீஷர்களும் பார்க்கும்படி இவ்விடம்விட்டு யூதேயாவுக்குப் போம்.

யோவான் 7:4 பிரபலமாயிருக்க விரும்புகிற எவனும் அந்தரங்கத்திலே ஒன்றையும் செய்யமாட்டான்; நீர் இப்படிப்பட்டவைகளைச் செய்தால் உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தும் என்றார்கள்.

யோவான் 7:5 அவருடைய சகோதரரும் அவரை விசுவாசியாதபடியால் இப்படிச் சொன்னார்கள்.

யோவான் 7:6 இயேசு அவர்களை நோக்கி: என்வேளை இன்னும் வரவில்லை, உங்கள் வேளையோ எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறது.

யோவான் 7:7 உலகம் உங்களைப் பகைக்கமாட்டாது; அதின் கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறதென்று நான் சாட்சிகொடுக்கிறபடியினாலே அது என்னைப் பகைக்கிறது.

யோவான் 7:8 நீங்கள் இந்தப் பண்டிகைக்குப் போங்கள்; என் வேளை இன்னும் வராதபடியால் நான் இந்தப் பண்டிகைக்கு இப்பொழுது போகிறதில்லை என்றார்.

யோவான் 7:9 இவைகளை அவர்களுடனே சொல்லி, பின்னும் கலிலேயாவிலே தங்கினார்.

"இவைகளுக்குப் பின்பு இயேசு கலிலேயாவிலே சஞ்சரித்துவந்தார்" - (யோவான் 5:1)

"யூதேயா" (Jewry) - யூதருடைய தேசம். இந்த வசனத்திலும் தானி 5:13 ஆகிய வசனத்திலும் இந்த வார்த்தை பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

"யூதருடைய கூடாரப்பண்டிகை" (Jews' feast of tabernacles) - செப்டம்பர் மாதம் 15 ஆம் தேதியிலிருந்து 22 ஆம் தேதி வரையிலும் நடைபெறும். லேவி 23:34-44 உபா 16:13-16; 2நாளா 8:13; சக 14:16-21 இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப் படுவதற்கு ஏழு மாதங்களுக்கு முன்பு இந்தப் பண்டிகை நடைபெற்றது (யோவான் 2:13)

"இயேசு கிறிஸ்துவினுடைய சகோதரர்" - (லூக்கா 8:19)

"நீர் செய்கிற கிரியைகளை உம்முடைய சீஷர்களும் பார்க்கும்படி இவ்விடம்விட்டு யூதேயாவுக்குப்போம்" - யூதேயாவிலுள்ள உம்முடைய சீஷர்கள் நீர் செய்யும் கிரியைகளைக் காணட்டும்.

"பிரபலமாயிருக்க விரும்புகிற எவனும் அந்தரங்கத்திலே ஒன்றையும் செய்யமாட்டான்" இயேசு கிறிஸ்து சாதாரண மனுஷர் அல்ல. அவர் பிரபலமாயிருக்க விரும்பவில்லை. பல சமயங்களில் அவர் தம்மைக் குறித்தும் தமது அற்புதமான கிரியைகளைக் குறித்தும் வெளிப்படுத்த வேண்டாமென்று இயேசு கிறிஸ்து கட்டளையிட்டிருக்கிறார். சாதாரண மனுஷர் பிரபலமடைவதற்காக எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்துவார்கள். இயேசு கிறிஸ்துவை கலிலேயாவிலிருந்து வெளியேற்ற வேண்டுமென்பதே அவர்களுடைய நோக்கம். கலிலேயா சிறிய ஊர். அங்குள்ளவர்கள் பாமர ஜனங்கள். பட்டணத்திலோ நியாயசாஸ்திரிகளும், வேதபாரகர்களும் ஏராளமானபேர் இருப்பார்கள். அவர்கள் மத்தியிலே தமது ஊழியத்தைச் செய்யுமாறு இயேசு கிறிஸ்துவின் சகோதரர்கள் அவரைக் கலிலேயாவைவிட்டுப் போகுமாறு கூறுகிறார்கள்.

யோவான் - தொகுப்புரை

7 அதிகாரம்

"அவருடைய சகோதரரும் அவரை விசுவாசியாதபடியால் இப்படிச் சொன்னார்கள்" - இயேசு கிறிஸ்துவின் சகோதரர்களுக்கு அவர் செய்யும் அற்புதமான கிரியைகள் நன்றாகத் தெரியும். அவரை ஒரு தீர்க்கதரிசியாக ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருந்தார்கள். ஆனால் அவரை மேசியாவாக அவர்கள் ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. அவர் ராஜ்யத்தைக் குறித்துப் பேசினார் (யோவான் 6:15). மேசியா தமது ஜனங்களை ஆளுகை செய்ய வருவார் என்று யூதர்கள் நம்பினார்கள். இயேசு கிறிஸ்து உண்மையிலேயே மேசியாவாக இருப்பார் என்றால் அவரால் யூதரை ஆளுகை செய்ய முடியுமா என்றும் சந்தேகம் அவர்கள் மனதிற்குள் இருந்தது.

"என்வேளை இன்னும் வரவில்லை. உங்கள் வேளையோ எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறது" - இயேசு கிறிஸ்து தமது பாடுகளின் வேளையைக் குறிப்பிட்டாரா அல்லது பண்டிகைக்குப் போவதற்கு முன்பாக தமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஊழியத்தைக் குறிப்பிட்டாரா என்பது தெரியவில்லை. உலகம் யூதர்களைப் பகைக்காது. ஏனெனில் அவர்கள் உலகப்பிரகாரமான மேசியாவைத் தேடுகிறார்கள். இதே உலகம் இயேசு கிறிஸ்துவைப் பகைக்கிறது. ஏனெனில் அவர் அநியாயத்தையும், பெருமையையும், பேராசையையும் யூதருடைய பாரம்பரியங்களையும், கோட்பாடுகளையும் வெறுத்தார். இதைப் பற்றி இயேசு கிறிஸ்து கூறும்போது, "உலகம் உங்களைப் பகைக்கமாட்டாது; அதின் கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறதென்று நான் சாட்சிகொடுக்கிறபடியினாலே அது என்னைப் பகைக்கிறது" என்று கூறுகிறார்.

போ (Go) ἀναβαίνω anabainoo 305

வினைச்சொல் - ஏறு, முன்னேறு, கரையேறு, வளர், அகப்படு, போ, ஏறிப்போ, எழும்பு, வந்தெட்டியிரு, பரம்பு - மற்ற ஜனங்களோடு கூட்டமாகப் போவது என்று பொருள்படுகிறது. (யோவான் 11:55; மத் 20:17-18; மாற்கு 10:32-33; லூக்கா 2:42; லூக்கா 18:31; லூக்கா 19:28)

"நீங்கள் இந்தப் பண்டிகைக்குப் போங்கள்" - இயேசு கிறிஸ்துவிற்கு அந்தப் பண்டிகைக்குப் போவதற்கு இன்னும் வேளை வரவில்லை. ஆகையினால் அவர்களை இப்பொழுது போகுமாறு கூறுகிறார். இயேசு தமது சீஷர்களோடு அங்கு தனியாகப் போக விரும்பினார். திரளான கூட்டத்தைத் தம்மோடு சேர்த்துக் கொண்டுபோக இயேசு கிறிஸ்து விரும்பவில்லை. ஜனங்கள் இயேசு கிறிஸ்துவை ராஜாவாக ஆக்கவேண்டுமென்று ஏற்கனவே முயற்சி பண்ணுகிறார்கள். திரளான கூட்டத்தாரோடு சென்றால் ஜனங்கள் மத்தியில் மிகப்பெரிய பிரச்சனையாக இருக்கும். ஆகையினால் இயேசு தமது வேளையின் பிரகாரம் பண்டிகைக்குத் தனியாகப் போக விரும்புகிறார் (யோவான் 6:15).

"இவைகளை அவர்களுடனே சொல்லி, பின்னும் கலிலேயாவிலே தங்கினார்" - இயேசு கிறிஸ்து கலிலேயாவிலே மேலும் நான்கு நாட்களுக்குத் தங்கினார். பண்டிகையின் நடுவில் யூதேயாவிற்குப் போனார் (யோவான் 7:14).

39. எல்லா மனுஷருக்காகவும் மரிப்பதற்காக கலிலேயாவிலிருந்து இறுதி பிரயாணம்

யோவான் 7:10 அவருடைய சகோதரர் போனபின்பு, அவர் வெளியரங்கமாய்ப் போகாமல் அந்தரங்கமாய்ப் பண்டிகைக்குப் போனார்.

யோவான் 7:11 பண்டிகையிலே யூதர்கள் அவரைத் தேடி: அவர் எங்கேயிருக்கிறார் என்றார்கள்.

7 அதிகாரம்

யோவான் 7:12 ஜனங்களுக்குள்ளே அவரைக் குறித்து முறுமுறுப்புண்டாயிற்று. சிலர் அவர் நல்லவர் என்றார்கள் வேறுசிலர் அப்படியல்ல அவன் ஜனங்களை வஞ்சிக்கிறவன் என்று சொல்லிக் கொண்டார்கள்

யோவான் 7:13 ஆனாலும் யூதருக்குப் பயந்திருந்ததினாலே, ஒருவனும் அவரைக் குறித்துத் தாராளமாய்ப் பேசவில்லை

"அவருடைய சகோதரர் போனபின்பு, அவர் வெளியரங்கமாய்ப் போகாமல் அந்தரங்கமாய்ப் பண்டிகைக்குப் போனார்" - இயேசு கிறிஸ்து தமது சொந்த மகிமையைத் தேடவில்லை அழிந்து போகும் ஆத்துமாக்களை இரட்சிப்பதற்காகவே இயேசு கிறிஸ்து இந்தப் பூமிக்கு வந்தார் ஆகையினால் அவர் மனுஷருடைய புகழைத்தேடாமல், அந்தரங்கமாய் பண்டிகைக்குப் போனார்

"பண்டிகையிலே யூதர்கள் அவரைத் தேடினார்கள்" - யூதமார்க்கத் தலைவர்கள் இயேசுகிறிஸ்துவை அழிப்பதற்காகத் தேடுகிறார்கள் அடுத்து வரும் வசனங்களை வாசிக்கும்போது "ஜனங்களுக்குள்ளே அவரைக் குறித்து முறுமுறுப்புண்டாயிற்று. சிலர் அவர் நல்லவர் என்றார்கள் வேறுசிலர் அப்படியல்ல அவன் ஜனங்களை வஞ்சிக்கிறவன் என்று சொல்லிக்கொண்டார்கள்" என்று வாசிக்கிறோம். (யோவான் 7:12,13, 30-32,40-53)

"அவர் எங்கேயிருக்கிறார்" அழிந்துபோன ஆத்துமாக்கள் இன்றும் இயேசு கிறிஸ்துவைக் குறித்து, இந்தக் கேள்வியைத்தான் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்

"ஜனங்களுக்குள்ளே அவரைக் குறித்து முறுமுறுப்புண்டாயிற்று" - பண்டிகையிலே ஜனங்கள் தம்மைக் குறித்து முறுமுறுப்பார்கள் என்பது இயேசு கிறிஸ்துவிற்கு நன்றாகத் தெரியும் ஆகையினால் அவர் பண்டிகைக்கு உடனே செல்லவில்லை. ஜனங்களுடைய முறுமுறுப்பெல்லாம் அமர்ந்தபிறகு, நான்கு நாளைக்குப் பின்பு, இயேசு கிறிஸ்து பண்டிகைக்குச் சென்றார்

"அவன் ஜனங்களை வஞ்சிக்கிறவன்" - (மத் 24:4,24; 1தீமோ 4:1; யூதா 1:13)

40. தேவாலயத்தில் இயேசு உபதேசம் பண்ணுகிறார்

(1) யூதர்கள் ஆச்சரியப்படுகிறார்கள்

யோவான் 7:14 பாதிப்பண்டிகையான போது இயேசு தேவாலயத்துக்குப் போய், உபதேசம் பண்ணினார்

யோவான் 7:15 அப்பொழுது யூதர்கள் இவன் கல்லாதவராயிருந்தும் வேத எழுத்துக்களை எப்படி அறிந்திருக்கிறார் என்று ஆச்சரியப்பட்டார்கள்

"பாதிப்பண்டிகையான போது இயேசு தேவாலயத்துக்குப் போய், உபதேசம் பண்ணினார்" யூதமார்க்கத்தின் பாரம்பரியத்தின் பிரகாரம் பண்டிகையின் முதலாம் நாளிலேயே யூதர்கள் எல்லோரும் பண்டிகைக்கு வரவேண்டும். ஆனால் இயேசு கிறிஸ்துவோ பாதிப் பண்டிகையானபோது வருகிறார் பண்டிகையில் பலவிதமான சடங்குகளை நிறைவேற்றுவார்கள் இவையெல்லாம் யூதர்களுடைய பாரம்பரியம். அவைகள் முக்கியமானவையல்ல என்பதை வெளிப்படுத்துவதற்காகவே இயேசு கிறிஸ்து பாதிப்பண்டிகையானபோது அங்கு வந்திருக்கலாம்.

7 அதிகாரம்

"இவர் கல்லாதவராயிருந்தும் வேத எழுத்துக்களை எப்படி அறிந்திருக்கிறார்" - இயேசு கிறிஸ்து வேதசாஸ்திரிகளைப் போல கல்வி கற்கவில்லை ஆனால் வேதவாக்கியமும், அவர்களுடைய பாரம்பரியமும், வரலாறும் இயேசு கிறிஸ்துவிற்கு நன்றாகத் தெரிந்திருந்தது. (லூக்கா 2:42-47). இயேசு கிறிஸ்து தேவனிடமிருந்து ஞானத்தையும் அறிவையும் அளவில்லாமல் பெற்றிருந்தார் (ஏசா 11:2; ஏசா 42:1; ஏசா 50:6; ஏசா 61:1; லூக்கா 2:40,52; யோவான் 7:16; யோவான் 8:28,47; யோவான் 12:49; யோவான் 14:10,24; யோவான் 17:8)

(2) இயேசுவின் உபதேசம் பிதாவின் உபதேசம் ஆகும்

யோவான் 7:16 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: என் உபதேசம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பினவருடையதாய் இருக்கிறது.

யோவான் 7:17 அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ நான் சுயமாய் பேசுகிறேனோ என்று அறிந்து கொள்ளுவான்.

யோவான் 7:18 சுயமாய்ப் பேசுகிறவன் தன் சுயமகிமையைத் தேடுகிறான்; தன்னை அனுப்பினவரின் மகிமையைத் தேடுகிறவனோ உண்மையுள்ளவனாய் இருக்கிறான், அவனிடத்தில் அநீதியில்லை.

யோவான் 7:19 மோசே நியாயப் பிரமாணத்தை உங்களுக்குக் கொடுக்கவில்லையா? அப்படியிருந்தும் உங்களில் ஒருவனும் அந்த நியாயப்பிரமாணத்தின்படி நடக்கிறதில்லை. நீங்கள் ஏன் என்னைக் கொலைசெய்யத் தேடுகிறீர்கள் என்றார்.

"என் உபதேசம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது" - ஏழு இடங்களில் தாம் தேவனுடைய வார்த்தையையே பேசுவதாக இயேசு கிறிஸ்து கூறியிருக்கிறார் (யோவான் 7:16; யோவான் 8:28,47; யோவான் 12:49; யோவான் 14:10,24; யோவான் 17:8). அவர் ஒரு நல்ல ஸ்தானிகர் **(ambassador)**. எல்லா ஊழியக்காரர்களுக்கும் நல்ல முன் மாதிரியாக இருக்கிறவர் (2கொரி 5:20).

"அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்து கொள்ளுவான்" - ஒரு உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதா அல்லது வேறு எதனாலாவது உண்டாயிருக்கிறதா என்பதை அறிந்து கொள்வதற்கு ஒரு வழி இருக்கிறது. தேவனால் உண்டாயிருக்கிற உபதேசம் தேவனை மகிமைப்படுத்தும். ஜனங்கள் மத்தியிலே சமாதானத்தை உண்டுபண்ணும். தேவனை நேசிப்பதற்கு மனுஷனை வழிநடத்தும். இதனடிப்படையில் தமது உபதேசத்தைச் சோதித்துப் பார்க்குமாறு இயேசு கிறிஸ்து தமது சத்துருக்களிடம் கூறுகிறார்.

"சுயமாய்ப் பேசுகிறவன் தன் சுயமகிமையைத் தேடுகிறான்; தன்னை அனுப்பினவரின் மகிமையைத் தேடுகிறவனோ உண்மையுள்ளவனாய் இருக்கிறான், அவனிடத்தில் அநீதியில்லை" - இது சுயமான உபதேசத்திற்கு எடுத்துக்காட்டு. இவன் சுயமகிமையைத் தேடுகிறான். இவனிடத்தில் அநீதியிருக்கிறது. இவனை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இயேசு கிறிஸ்துவோ தேவனை மகிமைப்படுத்துகிறார். வேதவசனத்திற்கு முரண்பாடாக இயேசு கிறிஸ்து எதையும் உபதேசம் பண்ணவில்லை. அவர் ஒரு உண்மையான தீர்க்கதரிசி. இயேசு கிறிஸ்துவின் உபதேசங்களையும், அவருடைய அற்புதமான கிரியைகளையும் சோதித்துப் பார்க்கும்போது அவர் உண்மையிலேயே மேசியா என்பது தெளிவாகும்.

"உங்களில் ஒருவனும் அந்த நியாயப் பிரமாணத்தின்படி நடக்கிறதில்லை" (யோவான் 7:19-23)

7 அதிகாரம்

(3) இயேசுவை பிசாசு பிடித்தவன் என்று குற்றம் சுமத்துகிறார்கள்

யோவான் 7:20 ஜனங்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: நீ பிசாசுபிடித்தவன்; உன்னைக் கொலைசெய்யத் தேடுகிறவன் யார் என்றார்கள்.

"ஜனங்கள்" - பண்டிகையில் திரளான ஜனங்கள் கூடியிருக்கிறார்கள். பரிசேயரின் சதியாலோசனை அவர்களில் பலருக்குத் தெரியவில்லை. இயேசு கிறிஸ்து "நீங்கள் ஏன் என்னைக் கொலைசெய்யத் தேடுகிறீர்கள்" என்று கூறியது அவர்களுக்குப் புரியவில்லை. ஆகையினால் அவர்கள் இயேசுவிடம் நீ பிசாசுபிடித்தவன், உன்னைக் கொலைசெய்யத் தேடுகிறவன் யார் என்றார்கள்.

(4) இயேசு யூதர்களின் நிலையற்ற பழக்கங்களைக் கடிந்து கொள்கிறார் – (மத் 23:3,13)

யோவான் 7:21 இயேசு அவர்களை நோக்கி: ஒரே கிரியையைச் செய்தேன், அதைக்குறித்து எல்லாரும் ஆச்சரியப்படுகிறீர்கள்.

யோவான் 7:22 விருத்தசேதனம் மோசேயினால் உண்டாகாமல் பிதாக்களால் உண்டாயிற்று; பின்பு மோசே அதை உங்களுக்கு நியமித்தான்; நீங்கள் ஓய்வுநாளிலும் மனுஷனை விருத்தசேதனம் பண்ணுகிறீர்கள்.

யோவான் 7:23 மோசேயின் நியாயப்பிரமாணம் மீறப்படாதபடிக்கு ஓய்வுநாளில் மனுஷன் விருத்தசேதனம் பெறலாமென்றால், நான் ஓய்வுநாளில் ஒரு மனுஷனை முழுவதும் சுகமாக்கினதினாலே என்மேல் எரிச்சலாயிருக்கலாமா?

யோவான் 7:24 தோற்றத்தின்படி தீர்ப்பு செய்யாமல், நீதியின்படி தீர்ப்புசெய்யுங்கள் என்றார்.

"ஒரே கிரியையைச் செய்தேன், அதைக்குறித்து எல்லாரும் ஆச்சரியப் படுகிறீர்கள்" - ஒரே கிரியை என்பது இயேசு கிறிஸ்து ஓய்வுநாளில் வியாதியாக இருந்த மனுஷனைச் சொஸ்தமாக்கிய கிரியையாகும் (யோவான் 7:23; யோவான் 5:1-16). இயேசு கிறிஸ்து நியாயப்பிரமாணத்தை மீறியதாக பரிசேயர் அவர்மீது குற்றம் சுமத்துகிறார்கள். யூதமார்க்கத்தைப் பாதுகாப்பதற்காக இயேசு கிறிஸ்துவைக் கொலைசெய்ய வேண்டுமென்று சதியாலோசனை செய்கிறார்கள். இயேசு கிறிஸ்து ஓய்வுநாளில் ஒரே ஒரு கிரியை மட்டுமே செய்தார். ஆனால் பரிசேயர்களோ ஏராளமான கிரியைகளை ஓய்வுநாளில் செய்கிறார்கள். ஓய்வு நாளிலேதான் சிறுவர்களுக்கு விருத்தசேதனம் பண்ணுகிறார்கள். இதனால் பரிசேயர்களே அவர்களுடைய தீர்ப்பின் பிரகாரம் பெரிய பாவிகள் என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார் (யோவான் 7:21-23).

"மோசே" - மோசே விருத்தசேதனத்தைப் பற்றி யாத் 12:44,48; லேவி 12:3 ஆகிய வசனங்களில் மட்டுமே குறிப்பிட்டிருக்கிறார். விருத்தசேதனத்தைப் பற்றிய பிரமாணம் ஆபிரகாமிற்குக் கொடுக்கப்பட்டது (ஆதி 17:9-14).

"நான் ஓய்வுநாளில் ஒரு மனுஷனை முழுவதும் சுகமாக்கினதினாலே" முழுவதும் சுகமாகுவது என்பது ஆத்துமாவும் சரீரமும் சுகமாவதைக் குறிக்கும். (யோவான் 5:8,9)

"தோற்றத்தின்படி தீர்ப்பு செய்யாமல் நீதியின்படி தீர்ப்பு செய்யுங்கள்" விருத்தசேதனம் பண்ணுவதினால் பரிசேயர்கள் ஓய்வுநாள் பிரமாணத்தை மீறுகிறார்கள். ஆனால் தாங்கள் ஓய்வுநாள் பிரமாணத்தை மீறவில்லையென்று அவர்கள் கூறுகிறார்கள். இயேசு கிறிஸ்து 38 வருஷமாக வியாதியாக இருந்த மனுஷனை ஓய்வுநாளில் சொஸ்தமாக்கினார். இது அவர்களுக்கு பெரிய குற்றமாகத் தெரிந்தது. வியாதியஸ்தரைச் சொஸ்தமாக்கும் பிரமாணம், (யாத் 15:26) விருத்தசேதனப் பிரமாணம் (ஆதி 17:9-14) ஆகிய இரண்டுமே முக்கியமானது. யூதர்கள் இவ்விரண்டு பிரமாணங்களுக்கும் கீழ்ப்படிய வேண்டும். விருத்தசேதனப் பிரமாணத்தை ஏற்றுக் கொண்டு, சுகமாக்கும் பிரமாணத்தைத் தள்ளிவிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார்.

7 அதிகாரம்

விருத்தசேதனம் பிரமாணம் தேவையானது என்றால் சுகமாக்கும் பிரமாணமும் தேவையானதே. ஓய்வுநாளில் விருத்தசேதனம் பண்ணலாம் என்றால் ஓய்வுநாளில் சுகமாக்குவதும் தவறல்ல என்பது இயேசு கிறிஸ்துவின் உபதேசமாகும்.

(5) இயேசுவிடம் யூதர்கள் கூறிய மறுப்புரை

யோவான் 7:25 அப்பொழுது எருசலேம் நகரத்தாரில் சிலர்: இவனையல்லவா கொலைசெய்யத் தேடுகிறார்கள்?

யோவான் 7:26 இதோ, இவன் தாராளமாய்ப் பேசுகிறானே, ஒருவரும் இவனுக்கு ஒன்றும் சொல்லுகிறதில்லையே. மெய்யாய் இவன் கிறிஸ்துதான் என்று அதிகாரிகள் நிச்சயமாக அறிந்திருக்கிறார்களோ?

யோவான் 7:27 இவன் இன்ன இடத்திலிருந்து வந்தவனென்று நாம் அறிந்திருக்கிறோம்; கிறிஸ்து வரும்போதோ, அவர் இன்ன இடத்திலிருந்து வருகிறவரென்று ஒருவனும் அறியமாட்டானே என்றார்கள்.

"இவன் இன்ன இடத்திலிருந்து வந்தவனென்று நாம் அறிந்திருக்கிறோம்; கிறிஸ்து வரும்போதோ அவர் இன்ன இடத்திலிருந்து வருகிறவரென்று ஒருவனும் அறியமாட்டானே" யூதர்கள் ஏசா 53:8 ஆவது வசனத்திற்கு வியாக்கியானம் தருகிறார்கள். மேசியா இன்ன இடத்திலிருந்து வருவார் என்பது யாருக்கும் தெரியாது. ஆனால் இயேசு கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றி இவர்கள் எல்லோரும் நன்றாகத் தெரிந்து வைத்திருப்பதினால் இவரை மேசியா என்று பரிசேயர்கள் ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள்.

(6) இயேசு யூதர்களிடம் கூறிய பதிலுரை

யோவான் 7:28 அப்பொழுது இயேசு தேவாலயத்தில் உபதேசிக்கையில் சத்தமிட்டு: நீங்கள் என்னை அறிவீர்கள், நான் எங்கேயிருந்து வந்தேனென்றும் அறிவீர்கள்; நான் என் சுயமாய் வரவில்லை, என்னை அனுப்பினவர் சத்தியமுள்ளவர், அவரை நீங்கள் அறியாதிருக்கிறீர்கள்.

யோவான் 7:29 நான் அவரால் வந்திருக்கிறபடியினாலும், அவர் என்னை அனுப்பியிருக்கிறபடியினாலும், நானே அவரை அறிந்திருக்கிறேன் என்றார்.

"நீங்கள் என்னை அறிவீர்கள், நான் எங்கேயிருந்து வந்தேனென்றும் அறிவீர்கள்" - யோவான் 7:27 ஆவது வசனத்தில் யூதர்கள் கூறியதற்கு இயேசு கிறிஸ்து இந்த வசனத்தில் பதில் கூறுகிறார். அவர்கள் இயேசு கிறிஸ்துவையும் அறிந்திருக்கிறார்கள். அவர் எங்கேயிருந்து வந்திருக்கிறார் என்பதையும் அறிந்திருக்கிறார்கள். இந்த சத்தியங்களை அவர்கள் ஆராய்ந்து பார்ப்பார்கள் என்றால் இயேசு கிறிஸ்து சுயமாய் வரவில்லையென்பதையும், பிதாவானவரே அவரை அனுப்பினவர் என்பதையும், அவர் சத்தியமுள்ளவர் என்பதையும் பரிசேயர்கள் புரிந்து கொள்வார்கள். அந்தத் தேவனை அவர்கள் அறியாதிருக்கிறார்கள் (யோவான் 7:28; 2; யோவான் 8:19).

(7) பிரகாசினை - இயேசுவைக் கொல்ல சதியாலோசனை - (மத் 26:3)

யோவான் 7:30 அப்பொழுது அவரைப் பிடிக்க வகைதேடினார்கள். ஆனாலும் அவருடைய வேளை இன்னும் வராதபடியினால் ஒருவனும் அவர்மேல் கைபோடவில்லை.

யோவான் 7:31 ஜனங்களில் அநேகர் அவரை விசுவாசித்து: கிறிஸ்து வரும்போது இவர் செய்கிற அற்புதங்களைப் பார்க்கிலும் அதிகம் செய்வாரோ என்றார்கள்.

7 அதிகாரம்

யோவான் 7:32 ஜனங்கள் அவரைக் குறித்து இப்படி முறுமுறுக்கிறதைப் பரிசேயர் கேட்டபொழுது அவரைப் பிடித்துக்கொண்டு வரும்படிக்குப் பரிசேயரும் பிரதான ஆசாரியரும் சேவகரை அனுப்பினார்கள்.

"அப்பொழுது அவரைப் பிடிக்க வகைதேடினார்கள்" - இயேசு கிறிஸ்துவைக் கைதுபண்ண முயற்சி பண்ணுகிறார்கள். ஆனால் அவரைக் கைதுபண்ண முடியவில்லை. அவருடைய வேளை இன்னும் வரவில்லை. இந்த வேளையில் இயேசு கிறிஸ்து கைதாவது தெய்வீக சித்தமல்ல. தேவனுடைய சித்தத்திற்கு எதிராக அவர்களால் எந்தக் காரியமும் செய்ய முடியவில்லை (மத் 26:53; லூக்கா 22:53; யோவான் 18:6; எபி 12:22-23).

"அதிகமான அற்புதங்கள்" - (யோவான் 2:11)

"முறுமுறுத்தார்கள்" (யோவான் 6:41,43,61; யோவான் 7:12)

"சேவகர்" (officers) - (யோவான் 18:3,12,18; யோவான் 19:6; மத் 26:59)

(8) இயேசு பரிசேயருக்கு கூறிய பதிலுரை -

யோவான் 7:33 அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: இன்னுங் கொஞ்சக் காலம் நான் உங்களுடனேகூட இருந்து, பின்பு என்னை அனுப்பினவரிடத்திற்குப் போகிறேன்.

யோவான் 7:34 நீங்கள் என்னைத் தேடுவீர்கள், ஆனாலும் என்னைக் காணமாட்டீர்கள்; நான் இருக்கும் இடத்திற்கு நீங்கள் வரவுங் கூடாது என்றார்.

தீர்க்கதரிசன எண் - 19

"இன்னுங் கொஞ்சக்காலம் நான் உங்களுடனேகூட இருந்து, பின்பு என்னை அனுப்பினவரிடத்திற்குப் போகிறேன். நீங்கள் என்னைத் தேடுவீர்கள், ஆனாலும் என்னைக் காணமாட்டீர்கள்; நான் இருக்கும் இடத்திற்கு நீங்கள் வரவுங் கூடாது" (யோவான் 7:33-34) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"இன்னும் கொஞ்சக்காலம்" - இன்னும் ஏழு மாதங்கள் கழிந்த பின்பு, அப்போது பஸ்கா பண்டிகை வரும். எல்லா மனுஷருக்கும் இயேசு கிறிஸ்து பஸ்கா ஆட்டுக்குட்டியாக மரிப்பார். அப்போது அவர் தம்மை அனுப்பினவருடைய இடத்திற்குப் போவார்.

"நீங்கள் என்னைத் தேடுவீர்கள், ஆனாலும் என்னைக் காணமாட்டீர்கள்" - ரோமப்போர்சேர் எருசலேம் பட்டணத்தை அழிப்பதற்கு வருவார்கள். அப்பொழுது தங்களுக்கு ஒரு மீட்பர் வேண்டுமென்று யூதர்கள் மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவைத் தேடுவார்கள். ஆனால் அவரைக் காணமாட்டார்கள். இந்த வாக்கியம் ஒரு தீர்க்கதரிசன வசனமாக இருக்கலாம்.

"நான் இருக்கும் இடத்திற்கு நீங்கள் வரவுங் கூடாது" - இயேசு கிறிஸ்து இருக்கும் இடத்திற்கு இரட்சிக்கப்பட்டவர்கள் மட்டுமே போகமுடியும். பாவத்தில் சிக்கியிருக்கும் துன்மார்க்கர்களால் அங்கு போகமுடியாது. நீதிமான்கள் மட்டுமே உயிர்த்தெழுந்த பின்பு, தேவனிடம் செல்வார்கள் (2கொரி 5:8; பிலி 1:21-24; எபி 12:23; வெளி 6:9-11).

(9) இயேசுவைப் பற்றியும் அவருடைய உபதேசங்களைப் பற்றியும் யூதர்களுக்குள் விவாதம்

யோவான் 7:35 அப்பொழுது யூதர்கள்: இவரை நாம் காணாதபடிக்கு எங்கே போவார், கிரேக்கருக்குள்ளே சிதறியிருக்கிறவர்களிடத்திற்குப் போய், கிரேக்கருக்கு உபதேசம் பண்ணுவாரோ?

7 அதிகாரம்

யோவான் 7:36 நீங்கள் என்னைத் தேடுவீர்கள், ஆனாலும் என்னைக் காணமாட்டீர்கள் என்றும், நான் இருக்கும் இடத்துக்கு நீங்கள் வரக்கூடாதென்றும், இவர் சொன்ன வார்த்தையின் கருத்து என்னவென்று தங்களுக்குள்ளே சொல்லிக் கொண்டார்கள்

"இவரை நாம் காணாதபடிக்கு எங்கே போவார்" - யூதருக்கு நித்திய ஜீவனைப் பற்றித் தெரியவில்லை. கிரேக்கருக்குள்ளே சிதறியிருக்கிறவர்களிடத்திற்குப் போய் கிரேக்கருக்கு உபதேசம் பண்ணுவாரோ என்று உலகப்பிரகாரமான காரியங்களைச் சிந்தித்துப் பார்க்கிறார்கள்

"சிதறியிருக்கிறவர்கள்" - தேசங்களின் மத்தியிலே இஸ்ரவேல் ஜனத்தார் சிதறியிருக்கிறார்கள். சிதறியிருக்கும் யூதரைப் பற்றிய குறிப்பு மூன்று வசனங்களில் மட்டுமே வருகிறது. (யோவான் 7:35; யாக் 1:1; 1பேதுரு 1:1)

சிதறியிருத்தல் (dispersed) - διασπορά - diaspora - 1290

பெண்பால் பெயர்ச்சொல்

சிதறியிருத்தல்

"கிரேக்கர்" (Gentiles, Greek) கிரேக்கர்கள் புறஜாதியார் என்று அழைக்கப்பட்டார்கள். இதற்குரிய கிரேக்க வார்த்தை "ஹெலேன்" (Helleen). இதன் மொழிபெயர்ப்புகள் புறஜாதியார் (Gentile) - 7 தடவைகள் (யோவான் 7:35; ரோமர் 2:9, 10; ரோமர் 3:9; 1கொரி 10:32; 1கொரி 12:13) கிரேக்கர் (Greek) - 20 தடவைகள் (யோவான் 12:20; அப் 14:1; அப் 16:1,3; அப் 17:4; அப் 18:4,17; அப் 19:10,17; அப் 20:21; அப் 21:28; ரோமர் 1:14,16; ரோமர் 10:12; 1கொரி 1:22-24; கலா 2:3; கலா 3:28; கொலோ 3:11)

(10) **பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம்** - (மத் 3:11; 20:22-23; லூக் 24:49; யோவான் 14:12-17,26; 15:26; 16:13-15; அப் 1:4-8; 2:1-21,38-39; 5:32; 8:14-21; 9:17; 10:44-48; 11:14-18; 15:7-11; 19:1-6; கலா 3:14)

யோவான் 7:37 பண்டிகையின் கடைசி நாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து [redacted].

யோவான் 7:38 வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்.

யோவான் 7:39 தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை.

"பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாள்" - பண்டிகையின் எட்டாவது நாள். இந்த நாளில் இஸ்ரவேல் ஜனங்களுக்காகப் பலிகள் செலுத்தப்படும். முதல் ஏழு நாட்களுக்கு இஸ்ரவேல் ஜனங்கள் மற்ற தேசங்களுக்காகப் பலிக[redacted] செலுத்துவார்கள் (லேவி 23:34-36). எட்டாவது நாளில் இஸ்ரவேல் ஜனங்களுக்காகப் பலிகள் செலுத்தப்படுவதினால் தேவாலயத்தில் இஸ்ரவேல் புத்திரர் ஏராளமானோர் கூடி வந்திருப்பார்கள். இந்தப் பிரதான நாளில் ஆசாரியரில் ஒருவர் சீலோவாம் குளத்திலிருந்து பொற்குடத்தில் தண்ணீர் கொண்டு வருவார். காலை வேளையிலே, பலி செலுத்தப்படும் பொழுது, பலிபீடத்தின்மீது சீலோவாம் தண்ணீரைத் திராட்சரசத்தோடு கலந்து ஊற்றுவார். அப்போது இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் சந்தோஷமாகக் கர்த்தரைப் பாடித் துதிப்பார்கள். இப்போப்பட்ட சமயத்தில்தான் இயேசு கிறிஸ்து இந்த வாக்கியத்தைக் கூறுகிறார். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைக் குறிக்கும் தீர்க்கதரிசனம். ஒவ்வொரு விசுவாசிக்கும் இந்த ஆசீர்வாதம் தீர்க்கதரிசனமாகக் கூறப்பட்டிருக்கிறது (யோவான் 7:37-39)

யோவான் - தொகுப்புரை

7 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 20

"ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம்பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச் சொன்னார் இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை (யோவான் 7:37-39) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" - யோவான் 7:27 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் சத்தியத்தை இந்த வாக்கியம் உறுதிபண்ணுகிறது. "எவனோ" என்பது எந்தத் தேசத்தாரையும் எந்த ஜாதியாரையும் குறிக்கும் இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறத் துவங்கும் காலத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதியின் அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளலாம் (மத் 3:11; யோவான் 14:12; அப் 2:38, 39; அப் 5:32; கலா 3:14) "விசுவாசிக்கிறவன் எவனோ" என்னும் வாக்கியத்தின் மூலமாக விசுவாசிக்கிறவர்கள் எல்லோருக்குமே பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் வாக்குபண்ணப்பட்டிருக்கிறது என்பது தெளிவாகிறது (மாற்கு 16:16; யோவான் 3:18, 36; யோவான் 5:24; யோவான் 6:35, 40; யோவான் 11:25; யோவான் 12:44; யோவான் 14:12; 1பேதுரு 2:6; 1யோவான் 5:5, 10)

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நிபந்தனைகள்

1. தாகமாக இருக்க வேண்டும். (யோவான் 7:37) தேவனோடு ஐக்கியமாக இருக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்னும் ஆர்வம் விசுவாசிகளிடத்தில் காணப்பட வேண்டும். (சங் 42:2; சங் 63:1; சங் 143:6; ஏசா 41:17; ஏசா 44:3)

2. தேவனிடத்தில் வரவேண்டும் (யோவான் 7:37) தேவனுடைய சமூகத்தில் இருந்து தாழ்மையோடு வந்து அவரிடத்தில் நம்மை முழுவதுமாக அர்ப்பணிக்க வேண்டும் (ஏசா 55:1; மத் 11:28-30; 1யோவான் 1:7)

3. பானம் பண்ண வேண்டும் (யோவான் 7:37). பரிசுத்த ஆவியானவரின் வரங்கள், கனி, கிரியைகள் ஆகிய அனைத்தையும் நம்முடைய ஜீவியத்தில் முழு இருதயத்தோடு ஏற்றுக் கொள்ள வேண்டும். (1கொரி 12:4-13; கலா 5:22-23; வெளி 22:17)

4. வேதவாக்கியம் சொல்லுகிறபடி தேவனிடத்தில் விசுவாசமாயிருக்க வேண்டும். (யோவான் 7:38) வேதவாக்கியங்களை வாசித்து அவற்றை விசுவாசித்து அவற்றிற்குக் கீழ்ப்படிய வேண்டும் (யோவான் 14:12-15; மத் 28:20; மாற்கு 16:15-20; லூக்கா 24:49; அப் 1:4-8; அப் 5:32)

"அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" விசுவாசிகளின் ஜீவியத்திலிருந்து இயேசு கிறிஸ்துவின் ஊழியங்களைச் செய்வதற்கு அளவில்லாத வல்லமைகள் புறப்பட்டு வரும். (யோவான் 14:12)

உள்ளம் (belly) κοιλία **koilia** 2836

யோவான் – தொகுப்புரை

7 அதிகாரம்

"ஜீவத்தண்ணீருள்ள நதிகள்" - விசுவாசியின் உள்ளத்திலிருந்து பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தின் மூலமாக கிடைக்கப்பெறும் வல்லமை ஒரு நதியைப் போன்று தொடர்ந்து வந்துகொண்டேயிருக்கும் (யோவான் 3:34)

"தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப் போகிற ஆவியைக்குறித்து இப்படிச் சொன்னார்" - ஜீவத்தண்ணீருள்ள நதிகள் என்பது பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகத்தைக் குறிக்கும். இயேசு கிறிஸ்து மகிமையடைந்த பின்பு, எல்லா விசுவாசிகளும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளலாம். (யோவான் 3:34, அப 2:33,38-39) இந்தத் தீர்க்கதரிசனத்தை யோவேல் ஏற்கெனவே முன்னறிவித்திருக்கிறார் (யோவே 2:28= அப 2:1-2)

41. பிரிவினை - இயேசுவைக் கொல்ல சதியாலோசனை - (மத் 26:3)

யோவான் 7:40 ஜனங்களில் அநேகர் இந்த வசனத்தைக் கேட்டபொழுது, மெய்யாகவே, இவர் தீர்க்கதரிசியானவர் என்றார்கள்

யோவான் 7:41 வேறுசிலர், இவர் கிறிஸ்து என்றார்கள். வேறுசிலர், கிறிஸ்து கலிலேயாவிலிருந்தா வருவார்?

யோவான் 7:42 தாவீதின் சந்ததியிலும், தாவீது இருந்த பெத்லகேம் ஊரிலுமிருந்து கிறிஸ்து வருவார் என்று வேதவாக்கியம் சொல்லவில்லையா என்றார்கள்

யோவான் 7:43 இவ்விதமாக அவரைக் குறித்து ஜனங்களுக்குள்ளே பிரிவினையுண்டாயிற்று.

யோவான் 7:44 அவர்களில் சிலர் அவரைப் பிடிக்க மனதாயிருந்தார்கள் ஆகிலும் ஒருவனும் அவர்மேல் கைபோடவில்லை.

யோவான் சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 4

"தாவீதின் சந்ததியிலும், தாவீது இருந்த பெத்லகேம் ஊரிலுமிருந்து கிறிஸ்து வருவார்" (யோவான் 7:42; ஏசா 11:10; எரே 23:5 மீகா 5:1-2)

2. சேவகரின் அறிக்கையும் நிக்கொதேமுவின் ஆலோசனையும்

யோவான் 7:45 பின்பு அந்தச் சேவகர் பிரதான ஆசாரியரிடத்திற்கும் பரிசேயரிடத்திற்கும் திரும்பி வந்தார்கள்; இவர்கள் அவர்களை நோக்கி: நீங்கள் அவனை ஏன் கொண்டு வரவில்லை என்று கேட்டார்கள்

யோவான் 7:46 சேவகர் பிரதியுத்தரமாக: அந்த மனுஷன் பேசுகிறது போல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை என்றார்கள்

யோவான் 7:47 அப்பொழுது பரிசேயர்: நீங்களும் வஞ்சிக்கப்பட்டீர்களா?

யோவான் 7:48 அதிகாரிகளிலாவது பரிசேயரிலாவது யாதாமொருவர் அவனை விசுவாசித்ததுண்டா?

யோவான் 7:49 வேதத்தை அறியாதவர்களாகிய இந்த ஜனங்கள் சபிக்கப்பட்டவர்கள் என்றார்கள்

யோவான் 7:50 இராத்திரியிலே அவரிடத்திற்கு வந்தவனும் அவர்களிலொருவனுமாகிய நிக்கொதேமு என்பவன் அவர்களை நோக்கி:

யோவான் 7:51 ஒரு மனுஷன் சொல்வதைக் கேட்டு, அவன் செய்கைகளை அறிகிறதற்கு முன்னே அவனை ஆக்கினைக்குட்படுத்தலாமென்று நம்முடைய நியாயப் பிரமாணம் சொல்லுகிறதா என்றான்

யோவான் 7:52 அதற்கு அவர்கள்: நீரும் கலிலேயனோ? கலிலேயாவிலிருந்து ஒரு தீர்க்கதரிசியும் எழும்புகிறதில்லை என்பதை ஆராய்ந்து பாரும் என்றார்கள்

யோவான் – தொகுப்புரை

7 அதிகாரம்

யோவான் 7:53 பின்பு அவரவர் தங்கள் தங்கள் வீட்டுக்குப் போனார்கள்

"அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை" - இயேசு கிறிஸ்துவைச் சேவகர்களால் கைதுபண்ண முடியவில்லை. இயேசு கிறிஸ்து தம்மைக் கைது பண்ணுவதற்கு அனுமதி கொடுக்கவில்லை. தேவன் அனுமதி கொடுக்கும் காரியங்கள் மட்டுமே இந்த உலகத்தில் நடைபெறும்.

"நீங்களும் வஞ்சிக்கப்பட்டீர்களா? அதிகாரிகளிலாவது பரிசேயரிலாவது யாதாமொருவர் அவனை விசுவாசித்ததுண்டா?" - ஒரு காரியத்தை விசுவாசிக்க வேண்டுமென்றால் அதை அறிவியல் பூர்வமாக நிரூபிக்க வேண்டும் என்று ஜனங்கள் நினைக்கிறார்கள். நிரூபிக்கப்படாததை நம்புகிறவர்களை வஞ்சிக்கப்பட்டவர்களாகக் கருதுகிறார்கள். ஆனாலும் அதிகாரிகளிலும் பரிசேயரிலும் அநேகர் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தார்கள் (யோவான் 12:42; யோவான் 19:38, 39).

"வேதத்தை அறியாதவர்களாகிய இந்த ஜனங்கள் சபிக்கப்பட்டவர்கள்" - என்று பரிசேயர்கள் சேவகரிடம் கூறுகிறார்கள். நியாயப்பிரமாணத்தை அறியாமல் இருப்பதும் அதனால் அதைத் தங்களுடைய ஜீவியத்தில் கடைப்பிடிக்க முடியாமல் இருப்பதும் சாபமான காரியம் என்று பரிசேயர் கூறுகிறார்கள். நியாயப்பிரமாணம் யாரையும் விடுதலை பண்ணாது. அது எந்த மனுஷனையும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து அவனைக் குற்றமுள்ளவனாக்கும் (ரோமர் 3:9-23; ரோமர் 7:7-25; 1யோவான் 3:4).

"நீரும் கலிலேயனோ? கலிலேயாவிலிருந்து ஒரு தீர்க்கதரிசியும் எழும்புகிறதில்லை என்பதை ஆராய்ந்துபாரும்" - என்று பரிசேயர்கள் நிக்கொதேமுவிடம் கூறுகிறார்கள். அவன் அவர்களிடம் "ஒரு மனுஷன் சொல்வதைக் கேட்டு, அவன் செய்கைகளை அறிகிறதற்கு முன்னே அவனை ஆக்கினைக்குட்படுத்தலாமென்று நம்முடைய நியாயப்பிரமாணம் சொல்லுகிறதா" என்று கேட்ட கேள்விக்கு பரிசேயர் நிக்கொதேமுவிடம் இவ்வாறு மறுபடியும் கேள்வி கேட்கிறார்கள். பரிசேயர் கூறிய பதில் அவர்கள் வேதவாக்கியத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதையே காண்பிக்கிறது (யோவான் 7:27). கிறிஸ்து கலிலேயாவில் பிறக்கவில்லை. அவர் பெத்லகேமிலே பிறந்தார் (மீகா 5:1-2; மத் 2; லூக்கா 2). யோனா, ஓசியா, எலியா, எலிசா இன்னும் பல தீர்க்கதரிசிகள் வடக்கு ராஜ்யத்திலிருந்தே வந்தவர்கள். யூதேயாவிலிருந்து வந்தவர்கள் அல்ல. பரிசேயர் வேதவாக்கியங்களைச் சரியாகப் படித்திருந்தால் இந்தச் சத்தியம் அவர்களுக்குப் புரிந்திருக்கும்.

"பின்பு அவரவர் தங்கள் தங்கள் வீட்டுக்குப் போனார்கள்" - சீனாயிக் பதிப்புகளிலும் வத்திகன் பதிப்புகளிலும் (the Sinaitic and Vatican manuscripts) யோவான் 7:53-8:11 ஆகிய வசனங்கள் காணப்படவில்லை. அந்தப் பதிப்புகளில் இந்த வசனங்கள் சேர்த்துக் கொள்ளப்படாததினால் இவை வேதாகமத்திற்குரியவையல்ல என்று முடிவு பண்ணக்கூடாது. இவையும் வேதவாக்கியமே. பரிசுத்த ஆவியானவர் இந்த வசனங்களையும் எழுதுமாறு ஏவியிருக்கிறார். தேவனுடைய திருச்சித்தத்தின் பிரகாரமே இந்த [redacted] வேதாகமத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

8 அதிகாரம்

43. இயேசு தேவாலயத்தில் உபதேசம் பண்ணுகிறார்

(1) விபசாரத்திலே கண்டுபிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீ

யோவான் 8:1 இயேசு ஒலிவமலைக்குப் போனார்.

யோவான் 8:2 மறுநாள் காலையிலே அவர் திரும்பி தேவாலயத்திற்கு வந்தபோது, ஜனங்களெல்லாரும் அவரிடத்தில் வந்தார்கள்; அவர் உட்கார்ந்து அவர்களுக்கு உபதேசம் பண்ணினார்.

யோவான் 8:3 அப்பொழுது விபசாரத்திலே கண்டுபிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயை வேதபாரகரும் பரிசேயரும் அவரிடத்தில் கொண்டுவந்து, அவளை நடுவே நிறுத்தி:

யோவான் 8:4 போதகரே, இந்த ஸ்திரீ விபசாரத்தில் கையும் மெய்யுமாய்ப் பிடிக்கப்பட்டாள்.

யோவான் 8:5 இப்படிப்பட்டவர்களைக் கல்லெறிந்து கொல்லவேண்டுமென்று மோசே நியாயப்பிரமாணத்தில் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறாரே, நீர் என்ன சொல்லுகிறீர் என்றார்கள்.

யோவான் 8:6 அவர்மேல் குற்றஞ்சுமத்துவதற்கான காரணம் உண்டாகும்பொருட்டு அவரைச் சோதிக்கும்படி இப்படிச் சொன்னார்கள். இயேசுவோ குனிந்து, விரலினால் தரையிலே எழுதினார்.

யோவான் 8:7 அவர்கள் ஓயாமல் அவரைக் கேட்டுக்கொண்டிருக்கையில், அவர் நிமிர்ந்து பார்த்து: உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன் என்று சொல்லி,

யோவான் 8:8 அவர் மறுபடியும் குனிந்து, தரையிலே எழுதினார்.

யோவான் 8:9 அவர்கள் அதைக் கேட்டு, தங்கள் மனச்சாட்சியினால் கடிந்துகொள்ளப்பட்டு, பெரியோர்முதல் சிறியோர்வரைக்கும் ஒவ்வொருவராய்ப் போய்விட்டார்கள். இயேசு தனித்திருந்தார், அந்த ஸ்திரீ நடுவே நின்றாள்.

யோவான் 8:10 இயேசு நிமிர்ந்து அந்த ஸ்திரீயைத் தவிர வேறொருவரையுங் காணாமல்: ஸ்திரீயே, உன்மேல் குற்றஞ்சாட்டினவர்கள் எங்கே? ஒருவனாகிலும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லையா என்றார்.

யோவான் 8:11 அதற்கு அவள்: இல்லை, ஆண்டவரே என்றாள். இயேசு அவளை நோக்கி: நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை; நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே என்றார்.

"இப்படிப்பட்டவர்களைக் கல்லெறிந்து கொல்லவேண்டுமென்று" - (லேவி 20:10; உபா 22:22; எண் 5)

"அவர்மேல் குற்றஞ்சுமத்துவதற்கான காரணம் உண்டாகும்பொருட்டு அவரைச் சோதிக்கும்படி இப்படிச் சொன்னார்கள்" - மோசேயின் பிரமாணத்தை மீறிவிட்டாரா என்று சோதிக்க விரும்பினார்கள் (லேவி 20:10; உபா 22:22-24). மோசேயின் பிரமாணத்தை இயேசு கிறிஸ்து மீறினால் அவரைக் கள்ளத்தீர்க்கதரிசி என்று கூறிவிடலாம் என்பது அவர்களுடைய எண்ணம். அந்த ஸ்திரீயை மரணத்திற்கு ஏதுவாக இயேசு கிறிஸ்து தீர்ப்பளித்தால் அவர் ரோமருடைய அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துகிறார் என்று அவர்மீது குற்றம் சுமத்தலாம் என்பதும் அவர்களுடைய எண்ணம். எதாவது ஒரு வழியில் இயேசு கிறிஸ்துவைக் குற்றப்படுத்த வேண்டும். ஆனால் இயேசு கிறிஸ்துவோ அவர்களுக்குப் பதில் எதுவும் கூறாமல் தரையிலே எழுதினார் என்று வாசிக்கிறோம்.

"இயேசுவோ குனிந்து விரலினால் தரையிலே எழுதினார்" தரையில் என்ன எழுதினார் என்பது சுவிசேஷத்தில் கூறப்படவில்லை. பலரும் பலவிதமாக இதற்கு வியாக்கியானம் கூறுகிறார்கள்.

8 அதிகாரம்

நிமிர்ந்துபார் (lifted up) - ἀνακύπτω - anakyptoo - 352

வினைச்சொல் - நிமிர், நிமிர்ந்துபார் (stand upright) (யோவான் 8:7,10 லூக்கா 13:11) (to look up) லூக்கா 21:28

பாவமில்லாத (without sin) - ἀναμάρτητος - anamarteetos - 361

பெயரடை - பாவமில்லாத (sinless)

"உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன்" - கல்லெறிந்து கொல்வது யூதருடைய பிரமாணத்தின் பிரகாரம் ஏற்றுக் கொள்ளக்கூடிய தண்டனையே (யாத் 19:13; உபா 13:10; உபா 17:5 உபா 22:21) குற்றவாளிமீது குற்றம் சுமத்துபவர் முதலாவது கல்லை எறிவார் அதன்பின்பு மற்றவர்களும் குற்றவாளி மரிக்கும் வரையிலும் கல்லெறிவார்கள் (எண் 15:36; யோசு 7:25; 1இராஜா 21:13; அப் 7:58,59; அப் 14:19; 2கொரி 11:25) யூதருடைய முறைமையின் பிரகாரம் குற்றவாளியின் கைகளைப் பின்னால் கட்டி மேலங்கியை உரித்துவிட்டு, சந்தியின் நடுவில் நிறுத்துவார்கள். ஜனங்கள் 10 அல்லது 12 அடி தூரத்தில் நிற்பார்கள் குற்றம் புரிந்தவனுக்கு எதிராகச் சாட்சி கூறியவர்கள் குற்றவாளிமீது வேகமாகக் கல்லெறிவார்கள் அந்தக் கற்களினால் குற்றவாளி சாகவில்லையென்றால் ஒரு பெரிய கல்லினால் அவனுடைய மார்புப்பகுதியில் தாக்கி, அவனைக் கொல்வது வழக்கம்

"அவர்கள் அதைக் கேட்டு, தங்கள் மனச்சாட்சியினால் கடிந்துகொள்ளப்பட்டு பெரியோர்முதல் சிறியோர்வரைக்கும் ஒவ்வொருவராய்ப் போய்விட்டார்கள்" - தேவன் மனுஷருக்கு மனச்சாட்சியைக் கொடுத்திருக்கிறார் நாம் செய்யும் காரியம் சரியானதா அல்லது தவறானதா என்பதை நமது மனச்சாட்சியே முடிவு செய்யும். (ரோமர் 2:12-16

தங்கள் மனச்சாட்சியினால் கடிந்து கொள்ளப்பட்டதற்குக் காரணங்கள்

1. இயேசு கிறிஸ்துவிற்கு எதிராக அவர்கள் சதிபாலோசனை பண்ணினார்கள் அவர்களுக்கு அந்த ஸ்திரீயின்மீது இருந்த கோபத்தைவிட இயேசு கிறிஸ்துவின்மீது கோபம் அதிகமாக இருந்தது.
2. அந்த ஸ்திரீயோடு தவறு செய்த மனுஷனை அவர்களால் அங்கு கொண்டுவர முடியவில்லை.
3. இயேசு கிறிஸ்து குனிந்து தரையிலே எழுதினார்
4. உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன் என்று இயேசு கிறிஸ்து அவர்களுக்குக் கூறினார்
5. அவர்களுடைய மாயமாலம் இயேசு கிறிஸ்துவிற்கும், அங்கு கூடியிருந்தவர்களுக்கும் மறைவாயிருக்க வில்லை. எல்லாம் வெளியரங்கமாய் இருந்தது
6. இதே பாவத்தை அவர்களும் செய்திருந்த படியினால் அவர்களுக்குள் குற்ற உணர்வு இருந்தது. (ரோமர் 2:1)

"இயேசு தனித்திருந்தார் அந்த ஸ்திரீ நடுவே நின்றாள்" ஸ்திரீயின்மீது குற்றம் சுமத்தியவர்கள் எல்லோரும் போய்விட்டார்கள் இயேசு கிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் வேடிக்கை பார்ப்பதற்காக அங்கு கூடியிருந்தோர் மட்டுமே இப்போது இருக்கிறார்கள் அவர்கள் நடுவே அந்த ஸ்திரீ நிற்கிறாள் (யோவான் 8:10)

"நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை; நீ போ, இனிப் பாவஞ் செய்யாதே" - விபச்சாரத்தில் பிடிக்கப்பட்ட ஸ்திரீயை இயேசு கிறிஸ்து ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லை இந்த நிகழ்ச்சி ஆதிகால கிறிஸ்தவர்களிடையே ஒரு பிரச்சனையாக இருந்தது. விபச்சாரம் செய்யும் பாவத்தை தேவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவேண்டும் என்று எதிர்பார்த்தார்கள் இந்த வசனம் அவர்கள் எதிர்பார்த்தபடி இல்லை

8 அதிகாரம்

இந்த வசனங்களில் காணப்படும் மையக்கருத்தை ஆதிக்கிறிஸ்தவர்கள் தவறுதலாகப் புரிந்திருக்கலாம். இயேசு கிறிஸ்துவைக் குற்றப்படுத்துவதற்காக யூதமார்க்கத் தலைவர்கள் முயற்சி பண்ணுகிறார்கள். இயேசு கிறிஸ்து நியாயாதிபதி அல்ல. மோசேயின் பிரமாணத்தின் பிரகாரம் நியாயாதிபதிகள் மட்டுமே தண்டனை கொடுக்க முடியும். இயேசு கிறிஸ்து அந்த ஸ்திரீக்கு அந்தத் தண்டனையைக் கொடுத்திருந்தால் யூதமார்க்கத் தலைவர்கள் தங்களுடைய மார்க்க விதிகளை மீறியதாக இயேசுவின்மீது குற்றம் சுமத்துவார்கள்.

இயேசு கிறிஸ்து பாவிகளை இரட்சிப்பதற்காகவே இந்த உலகத்திற்கு வந்தார். யாரையும் அழிப்பதற்கு வரவில்லை. ஒருவர் தன் பாவத்திற்காக மனந்திருந்தி, தேவனிடத்தில் மன்னிப்பைக் கேட்கும்போது இயேசு கிறிஸ்து அந்த நபரை நிச்சயமாகவே மன்னிப்பார் (மத் 12:31-32; 1யோவான் 1:9).

இந்த வசனத்தில் இயேசு கிறிஸ்து "உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை" என்றுதான் கூறினாரே தவிர "விபசாரத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை" என்று கூறவில்லை. இயேசு கிறிஸ்துவைப் பொறுத்த வரையில் விபசாரம் பாவமே. இயேசு கிறிஸ்து பாவியான அந்த ஸ்திரீயை மன்னித்தார். மனந்திருந்தி தம்மிடத்தில் வரும் எந்தப் பாவியையும் இயேசு கிறிஸ்து மன்னிப்பார் (மத் 9:2-8; லூக்கா 7:47-50). இயேசு அந்த ஸ்திரீயிடம் "நீ போ, இனிப் பாவஞ் செய்யாதே" என்று கூறுகிறார். இதன் மூலமாக விபசாரத்தை அவர் ஒரு பாவமாக ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறார் என்பது தெளிவாகிறது. இயேசு கிறிஸ்து இதே போன்றுதான் பல இடங்களில் கிரியை செய்திருக்கிறார் (மத் 5:27-32; மத் 19:9,18-19).

(2) இயேசு உலகத்திற்கு ஒளியாயிருக்கிறார் - (யோவான் 1, 4- 9, 9:5, 12:35)

யோவான் 8:12 மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி: நான் உலகத்திற்கு ஒளியாயிருக் கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார்.

"மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி" - இயேசு கிறிஸ்து ஜனங்களிடம் ஒரு முக்கியமான சத்தியத்தை உபதேசம் பண்ணிக் கொண்டிருந்தார். ஆனால் யூதமார்க்கத் தலைவர்கள் அவருடைய உபதேசத்தை இடை மறித்து அங்கு விபச்சாரத்தில் பிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயை அவரிடத்தில் கொண்டு வருகிறார்கள் (யோவான் 8:1-2). சில பதிப்புகளில் இருப்பதுபோல யோவான் 7:53-8:11 ஆகிய வசனங்களை எடுத்துவிட்டால் "மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி" என்னும் வாக்கியத்திற்குப் பொருள்கூற முடியாது. யோவான் 7:52 ஆவது வசனம் தொடர்ச்சியாகவும் இராது.

"நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான்" (யோவான் 6:35). சாதாரணமாக பண்டிகை எட்டு நாட்கள் மட்டுமே நடைபெறும். யூதர்கள் இதை ஒன்பதாவது நாளிலும் கொண்டாடுவார்கள். அப்போது எல்லோரும் விளக்குகளை ஏற்றி வைத்துக் கொள்வார்கள் (நீதி 6:23; சங் 119:105). வேதவாக்கியம் மேசியாவை விளக்காகவும், வெளிச்சமாகவும் ஒளியாகவும் விளக்குகிறது. இயேசு கிறிஸ்து இந்த விசேஷித்த நாளில் தாம் உலகத்திற்கு ஒளியாக இருப்பதாகக் கூறுகிறார் (ஏசா 9:2; ஏசா 49:6; ஏசா 60:1).

(3) தம்மைப் பற்றி இயேசு கொடுத்த சாட்சியை பரிசேயர் குற்றப் படுத்துகிறார்கள்

யோவான் 8:13 அப்பொழுது பரிசேயர் அவரை நோக்கி: உன்னைக் குறித்து நீயே சாட்சி கொடுக்கிறாய், உன்னுடைய சாட்சி உண்மையானதல்ல என்றார்கள்.

8 அதிகாரம்

"உன்னைக்குறித்து நீயே சாட்சி கொடுக்கிறாய்" – (யோவான் 5:31-39)

(4) பிதா தம்மைக் குறித்து சாட்சி கொடுப்பதாக இயேசு கூறுகிறார் – (யோவான் 5:37-38)

யோவான் 8:14 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: என்னைக்குறித்து நானே சாட்சி கொடுத்தாலும், என் சாட்சி உண்மையாயிருக்கிறது, ஏனெனில் நான் எங்கேயிருந்து வந்தேனென்றும் எங்கே போகிறேனென்றும் அறிந்திருக்கிறேன்; நீங்களோ நான் எங்கேயிருந்து வருகிறேனென்றும் எங்கே போகிறேனென்றும் அறியீர்கள்.

யோவான் 8:15 நீங்கள் மாம்சத்துக்கேற்றபடி நியாயந்தீர்க்கிறீர்கள்; நான் ஒருவனையும் நியாயந்தீர்க்கிறதில்லை.

யோவான் 8:16 நான் நியாயந்தீர்த்தால் என் தீர்ப்பு சத்தியத்தின்படியிருக்கும், ஏனெனில் நான் தனித்திருக்கவில்லை, நானும் என்னை அனுப்பின பிதாவுமாக இருக்கிறோம்.

யோவான் 8:17 இரண்டுபேருடைய சாட்சி உண்மையென்று உங்கள் நியாயப்பிரமாணத்திலும் எழுதியிருக்கிறதே.

யோவான் 8:18 நான் என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவனாய் இருக்கிறேன், என்னை அனுப்பின பிதாவும் என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறார் என்றார்.

"நீங்கள் மாம்சத்துக்கேற்றபடி நியாயந்தீர்க்கிறீர்கள்" – (யோவான் 5:22; யோவான் 7:24)

"இரண்டு பேருடைய சாட்சி உண்மையென்று உங்கள் நியாயப்பிரமாணத்திலும் எழுதியிருக்கிறதே" – (உபா 17:6; உபா 19:15; 2கொரி 13:1)

"நான் என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறவனாயிருக்கிறேன் என்னை அனுப்பின பிதாவும் என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறார்" – திரித்துவத்தில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் ஆள்தத்துவமுடையவர்களாக இருப்பதை இந்த வசனம் விளக்குகிறது (யோவான் 5:17-40; 1யோவான் 5:7). பிதா குமாரனைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறார். அற்புதங்களைச் செய்வதற்காகப் பிதா குமாரனை அனுப்பினார். அந்த அற்புதங்கள் மூலமாகவே சாட்சி கொடுக்கிறார் (யோவான் 5:32,36; யோவான் 11:42; யோவான் 14:1; அப் 10:38)

(5) உம்முடைய பிதா எங்கே

யோவான் 8:19 அப்பொழுது அவர்கள்: உம்முடைய பிதா எங்கே என்றார்கள். இயேசு பிரதியுத்தரமாக: என்னையும் அறியீர்கள், என் பிதாவையும் அறியீர்கள்; நீங்கள் என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிவீர்கள் என்றார்.

யோவான் 8:20 தேவாலயத்திலே இயேசு உபதேசம் பண்ணுகிறபோது, காணிக்கைப் பெட்டியிருக்கும் இடத்தில் இந்த வசனங்களைச் சொன்னார். அவருடைய வேளை இன்னும் வராதபடியினால் ஒருவனும் அவரைப் பிடிக்கவில்லை.

யோவான் 8:21 இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: நான் போகிறேன், நீங்கள் என்னைத்தேடி உங்கள் பாவங்களிலே சாவீர்கள்; நான் போகிற இடத்துக்கு வர உங்களால் கூடாது என்றார்.

8 அதிகாரம்

"என்னையும் அறியீர்கள், என் பிதாவையும் அறியீர்கள் நீங்கள் என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிவீர்கள்" - யூதமார்க்கத் தலைவர்களுக்கு இயேசு கிறிஸ்துவைப் பற்றித் தெரியவில்லை. (யோவான் 7:28) பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவனால் குமாரனிடத்தில் வரமுடியாது. (யோவான் 6:37,39,44) நித்திய ஜீவன் என்பது குமாரனையும் அறிய வேண்டும் அவரை அனுப்பிய பிதாவையும் அறிய வேண்டும் யோவான் 17:2-11 யோவான் 5:20

"தருமப்பெட்டியிருக்கும் இடத்தில் இந்த வசனங்களைச் சொன்னார்" - பல சமயங்களில் இயேசு கிறிஸ்து இந்த இடத்திலிருந்து உபதேசம் பண்ணியிருக்கிறார் (மாற்கு 12:41; லூக்கா 21:1 யோவான் 8:20) இந்த இடம் தேவாலயத்தில் ஸ்திரீகளுடைய பிரகாரத்தில் உள்ளது.

"அவருடைய வேளை இன்னும் வராதபடியினால் ஒருவனும் அவரைப் பிடிக்கவில்லை யோவான் 7:6)

தீர்க்கதரிசன எண் - 21

"நான் போகிறேன் நீங்கள் என்னைத்தேடி உங்கள் பாவங்களிலே சாவீர்கள், நான் போகிற இடத்துக்கு வர உங்களால் கூடாது" (யோவான் 8:21) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"என்னைத் தேடுவீர்கள் (யோவான் 7:34

"உங்கள் பாவங்களிலே சாவீர்கள்" - இயேசு கிறிஸ்துவை அவர்கள் தேவனென்று விசுவாசிக்கவில்லை. அவிசுவாசம் என்னும் இந்தப் பாவத்திலே அவர்கள் சாவார்கள்

(6) தன்னைத்தான் கொலைசெய்து கொள்வானோ

யோவான் 8:22 அப்பொழுது யூதர்கள்: நான் போகிற இடத்துக்கு வர உங்களால் கூடாது என்கிறானே, தன்னைத்தான் கொலைசெய்து கொள்வானோ என்று பேசிக் கொண்டார்கள்.

யோவான் 8:23 அவர் அவர்களை நோக்கி: நீங்கள் தாழ்விலிருந் துண்டானவர்கள், நான் உயர்விலிருந் துண்டானவன்; நீங்கள் இந்த உலகத்திலிருந்துண்டானவர்கள், நான் இந்தஉலகத்திலிருந்துண்டானவனல்ல.

யோவான் 8:24 ஆகையால் நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன், நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார்.

"அப்பொழுது யூதர்கள்: நான் போகிற இடத்துக்கு வர உங்களால் கூடாது என்கிறானே தன்னைத்தான் கொலைசெய்து கொள்வானோ என்று பேசிக் கொண்டார்கள்" - இதே யூதர்கள் யோவான் 7:35 ஆவது வசனத்தில் "இவரை நாம் காணாதபடிக்கு எங்கே போவார் கிரேக்கருக்குள்ளே சிதறி இருக்கிறவர்களிடத்திற்குப் போய், கிரேக்கருக்கு உபதேசம் பண்ணுவாரோ" என்று கேட்டார்கள் இயேசு கிறிஸ்து தமது மரணத்தைப் பற்றிக் கூறுகிறார் என்பதை யூதர்கள் இறுதியாகப் புரிந்து கொள்கிறார்கள் இப்பொழுது அவர்களுக்குரிய பிரச்சனை "இயேசுவை யார் கொலைசெய்வார்கள்" என்பதுதான்.

"நீங்கள் தாழ்விலிருந்துண்டானவர்கள்" - பூமி (1கொரி 15:47)

"நான் உயர்விலிருந்துண்டானவன்" - பரலோகம். (யோவான் 3:13,31 யோவான் 6:33-42 கொலோ 3:1

யோவான் – தொகுப்புரை

8 அதிகாரம்

"நீங்கள் இந்த உலகத்திலிருந்து உண்டானவர்கள் நான் இந்த உலகத்திலிருந்துண்டானவனல்ல" - அவர்கள் இந்த உலகத்திற்குரியவர்கள் ஆகையினால் அவர்களால் கொலைசெய்யவும் முடியும். தங்களைத் தாங்களே கொல்லவும் முடியும். இவை இவ்வுலகத்திற்குரிய காரியங்கள் பிசாசின் கிரியைகள் ஆனால் இயேசு கிறிஸ்துவோ இந்த உலகத்திலிருந்து உண்டானவர் அல்ல அவர் பரலோகத்திலிருந்து உண்டானவர் இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்து கொன்றார்கள் கிபி. 70 ஆம் ஆண்டில் எருசலேமில் ஏற்பட்ட மிகப்பெரிய பஞ்சத்தினால் ஏராளமான யூதர்கள் தற்கொலை செய்து கொண்டார்கள் இவ்வாறாக இயேசு கிறிஸ்து கூறிய வார்த்தை அவர்களுடைய ஜீவியத்தில் உண்மையாயிற்று.

"நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள்" - கிரேக்க மொழியில் பாவங்கள் என்று பன்மையில் உள்ளது. யோவான் 8:21 ஆவது வசனத்தில் "உங்கள் பாவங்களில் சாவீர்கள்" என்று தமிழில் இருந்தாலும், அதன் மூலகிரேக்க பாஷையில் "உங்கள் பாவத்தில் சாவீர்கள்" என்று ஒருமையில் உள்ளது.

"நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்" - யோவான் 8:24,28 ஆகிய வசனங்களில் "நானே அவர்" (ஓ ஹோம் ட்ங்) என்றுள்ளது. கிரேக்க பாஷையில் "அவர் (he) என்னும் வார்த்தையில்லை யாத் 3:14-15 ஆகிய வசனங்களில் தேவனுடைய நாமத்தைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் காரியத்தை இது நமக்கு நினைவுபடுத்துகிறது. நித்தியமானவர் என்பது பொருள் தேவன் இருக்கிறவராக இருக்கிறேன் என்று மோசேயினிடம் சொல்லி, இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக என்றார்

மேலும் தேவன் மோசேயை நோக்கி, ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாயிருக்கிற உங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று நீ இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்வாயாக, என்றைக்கும் இதுவே என் நாமம் தலைமுறை தலைமுறைதோறும் இதுவே என் பேர்பிரஸ்தாபம்.

(7) நீர் யார்

யோவான் 8:25 அதற்கு அவர்கள்: நீர் யார் என்றார்கள் இயேசு அவர்களை நோக்கி: நான் ஆதிமுதலாய் உங்களுக்குச் சொல்லியிருக்கிறவர் தான்

யோவான் 8:26 உங்களைக்குறித்துப் பேசவும் நியாயந்தீர்க்கவும் எனக்கு அநேக காரியங்களுண்டு. என்னை அனுப்பினவர் சத்தியமுள்ளவர்; நான் அவரிடத்தில் கேட்டவைகளையே உலகத்துக்குச் சொல்லுகிறேன் என்றார்

யோவான் 8:27 பிதாவைக்குறித்துப் பேசினாரென்று அவர்கள் அறியாதிருந்தார்கள்

யோவான் 8:28 ஆதலால் இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனை உயர்த்தின பின்பு, நானே அவரென்றும், நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல், என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன் என்றும் அறிவீர்கள்

யோவான் 8:29 என்னை அனுப்பினவர் என்னுடனேகூட இருக்கிறார் பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியேயிருக்கவிடவில்லை என்றார்

"அதற்கு அவர்கள் நீர் யார் என்றார்கள்" - நாங்கள் சாவோம் என்று எப்படிக் கூறலாம். உமக்கு இவ்வாறு கூறுவதற்கு என்ன அதிகாரம் உள்ளது.

யோவான் – தொகுப்புரை

8 அதிகாரம்

"இயேசு அவர்களை நோக்கி: நான் ஆதிமுதலாய் உங்களுக்குச் சொல்லியிருக்கிறவர்தான்" - இயேசு கிறிஸ்து உலகத்தின் வெளிச்சமாக இருக்கிறார் (யோவான் 8:12) "ஆதிமுதலாய்" என்னும் வாக்கியத்தில் கிரேக்க மொழியில் "ஆதி" என்னும் சொல் மட்டுமே உள்ளது. "முதலாய்" (from) என்னும் வார்த்தை கிரேக்கமொழியில் இல்லை. ஆகையினால் இந்த வாக்கியத்திற்கு "நான் ஆதியாக இருக்கிறேன்" என்று பொருள் கூறலாம். எல்லாக் காரியங்களின் துவக்கமாகவும் எல்லா அதிகாரங்களுக்கும் வல்லமைகளுக்கும் இயேசு கிறிஸ்து ஆதாரமாக இருக்கிறார் (எபே 1:20-23; எபே 4:15; எபே 5:23; கொலோ 1:18; கொலோ 2:10,19; எபி 12:3)

"உங்களைக்குறித்துப் பேசவும் நியாயந்தீர்க்கவும் எனக்கு அநேக காரியங்களுண்டு" பிதாவானவர் தாமே தமது ஒரேபேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பினார். அவர் சத்தியமுள்ளவர். நான் செய்யும் காரியங்களைச் சொல்லுவதற்காகவே பிதா என்னை அனுப்பினார் என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார். இயேசு கிறிஸ்து பிதாவினிடத்தில் கேட்டவைகளையே உலகத்திற்குச் சொல்லுகிறார் (யோவான் 8:14,16,18,26)

"நீங்கள் மனுஷகுமாரனை உயர்த்தின பின்பு, நானே அவரென்றும், நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல், என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன் என்றும் அறிவீர்கள்" - இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்தபின்பு, யூதர்கள் அவரை மேசியா என்று புரிந்து கொள்வார்கள். இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மூலமாகவும், அவருடைய பரமேறுதல் மூலமாகவும் அவரே தேவனுடைய குமாரன் என்றும், அவரே உலகத்திற்கு வெளிச்சமானவர் என்பதையும் யூதர்கள் தெரிந்து கொள்வார்கள்

குமாரன் பிதாவோடு ஐக்கியமாக இருக்கும் [redacted]

1 குமாரன் தாமாக ஒன்றும் செய்வதில்லை. (யோவான் 5:17,19; யோவான் 8:18)

2 குமாரன் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை. (யோவான் 5:30)

3 தமக்குச் சித்தமானதைக் குமாரன் தேடாமல் பிதாவிற்குச் சித்தமானதைத் தேடுகிறார் (யோவான் 5:30; யோவான் 6:38)

4 குமாரனின் உபதேசம் அவருடையதாய் இராமல் அவரை அனுப்பின பிதாவுடையதாய் இருக்கிறது (யோவான் 7:16; யோவான் 8:26,38)

5 குமாரன் தன் சுயமாய் ஒன்றுஞ்செய்யாமல், பிதா அவருக்குப் போதித்தபடியே சொல்கிறார் (யோவான் 8:28)

6. பிதாவிற்கு பிரியமானவைகளையே குமாரன் எப்பொழுதும் செய்கிறார் (யோவான் 8:29)

7 குமாரன் சுயமாய் வரவில்லை. பிதாவினிடத்திலிருந்து வந்திருக்கிறார் (யோவான் 8:42; யோவான் 16:28)

8 குமாரன் தமக்கு மகிமையைத் தேடுகிறதில்லை (யோவான் 8:50,54)

9 குமாரன் சொல்லுகிற வசனங்களை அவர் சுயமாய்ச் சொல்லவில்லை. அவரிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்து வருகிறார் (யோவான் 10:25,37-38; யோவான் 14:10-11)

(8) விசுவாசிகளுக்கு இயேசுவின் உபதேசம்

யோவான் 8:30 இவைகளை அவர் சொல்லுகையில் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்

யோவான் 8:31 இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்

யோவான் – தொகுப்புரை

8 அதிகாரம்

யோவான் 8:32 சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்

"அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்" - இவர்கள் உண்மையிலேயே இயேசு கிறிஸ்துவின் விசுவாசிகள் அவ்வாறு இல்லையென்றால் பரிசுத்த ஆவியானவர் இந்த வசனத்தை வேதாகமத்தில் எழுதியிருக்க மாட்டார்

"நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்" - வேதாகமத்தில் ஏராளமான வாக்குத்தத்தங்கள் உள்ளன அதேவேளையில் ஏராளமான நிபந்தனைகளும் உள்ளன "ஆல்" "ல்" என்னும் வார்த்தை வேதாகமத்தில் 1,595 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தை நிபந்தனையைக் குறிக்கும். விசுவாசிகள் இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருந்தால் அவருடைய சீஷராக இருப்பார்கள் (யோவான் 8:31-32) இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராவிட்டால் அவருடைய சீஷராக இருக்கமாட்டார்கள்

"சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" சாபத்திலிருந்து மனுஷரை விடுவிப்பதற்காக இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையிலே மரித்தார் இதுவே வேதாகமத்தின் சத்தியம் பாவம், வியாதி, சாபம் ஆகியவற்றிலிருந்து நாம் விடுதலை பெறவேண்டுமென்றால் இந்தச் சத்தியத்தை நாம் அறிந்திருக்க வேண்டும் (ரோமர் 10:17; எபி 11:6; யாக் 1:5-8)

(9) யூதர்கள் விடுதலையின் சந்ததியாய் இருக்கிறோம் என்கிறார்கள் - இதற்கு இயேசுவின் மறுப்புரை
(ரோமர் 6:16-23; 1யோவான் 3:8)

யோவான் 8:33 அவர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: நாங்கள் ஆபிரகாமின் சந்ததியாயிருக்கிறோம் நாங்கள் ஒருக்காலும் ஒருவனுக்கும் அடிமைகளாய் இருக்கவில்லை விடுதலையாவீர்களென்று நீர் எப்படிச் சொல்லுகிறீர் என்றார்கள்

யோவான் 8:34 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: பாவஞ்செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்

யோவான் 8:35 அடிமையானவன் என்றைக்கும் வீட்டிலே நிலைத்திரான் குமாரன் என்றைக்கும் நிலைத்திருக்கிறார்

யோவான் 8:36 ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்

யோவான் 8:37 நீங்கள் ஆபிரகாமின் சந்ததியாரென்று அறிவேன் ஆனாலும் உங்களுக்குள்ளே என் உபதேசம் இடம் பெறாதபடியால் என்னைக் கொலைசெய்யத் தேடுகிறீர்கள்

யோவான் 8:38 நான் என் பிதாவினிடத்தில் கண்டதைச் சொல்லுகிறேன் நீங்களும் உங்கள் பிதாவினிடத்தில் கண்டதைச் செய்கிறீர்கள் என்றார்

"நாங்கள் ஆபிரகாமின் சந்ததியாயிருக்கிறோம் நாங்கள் ஒருக்காலும் ஒருவனுக்கும் அடிமைகளாயிருக்கவில்லை" யூதர்கள் மிகப்பெரிய பொய்யைக் கூறுகிறார்கள் அவர்களுடைய வரலாறே எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்துதான் ஆரம்பமாகிறது. 1800 வருஷங்களாக யூதர்கள் பல தேசங்களில் அடிமைகளாக இருந்திருக்கிறார்கள் எகிப்து, அசீரியா, பாபிலோன் மேதிய-பெர்சியா கிரேக்கம் ரோமாபுரி ஆகிய தேசங்களில் யூதர்கள் அடிமைகளாக இருந்தார்கள் கிபி 70 ஆவது ஆண்டில் கூட அவர்கள் ரோமருக்கு அடிமையாகவே இருந்தார்கள் இந்த வசனத்தை அவர்கள் கூறும்போது யூதேயா தேசம் ரோமாபுரிக்கு அடிமையாயிருந்தது

"பாவஞ்செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான்" - பாவத்தின் சம்பளம் மரணம். பாவம் செய்கிறவர்கள் எல்லோருமே அதற்குரிய கிரயத்தைச் செலுத்தியே ஆகவேண்டும். (ஆதி 2:17, எசே 18:4 ரோமர் 8:12,13 1கொரி 6:9, கலா 5:19-21 கலா 6:7,8

8 அதிகாரம்

"அடிமையானவன் என்றைக்கும் வீட்டிலே நிலைத்திரான் குமாரன் என்றைக்கும் நிலைத்திருக்கிறார்" - பாவத்திற்கு அடிமையாக இருக்கிறவன் தேவனுடைய வீட்டிலே என்றென்றைக்கும் நிலைத்திருப்பதில்லை நாம் பாவத்திலிருந்து விடுதலை பெற்றிருப்போமானால் தேவனுடைய வீட்டிலே தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடு நித்திய காலமாக இருப்போம். (ரோமர் 6:16-23; ரோமர் 14:1-4, ரோமர் 15:1-6; 1தெச 4:16

"குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள் - இயேசு கிறிஸ்து ஒருவனை பாவத்திலிருந்து மீட்டு இரட்சிக்கும்போது, அவன் இனிமேல் பாவத்திற்கு அடிமையாக இருப்பதில்லை (ரோமர் 6:16-23 ரோமர் 8:1-13 கலா 5:16-26; எபி 12:14; 1யோவான் 2:29 1யோவான் 3:6-10 1யோவான் 5:1-4,18)

(10) யூதர்கள் ஆபிரகாமின் சந்ததியாய் இருக்கிறோம் என்கிறார்கள் - இதற்கு இயேசுவின் மறுமொழி - (ரோமர் 2:28-29, 9:6

யோவான் 8:39 அதற்கு அவர்கள் ஆபிரகாமே எங்கள் பிதா என்றார்கள் இயேசு அவர்களை நோக்கி நீங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாயிருந்தால் ஆபிரகாமின் கிரியைகளைச் செய்வீர்களே

யோவான் 8:40 தேவனிடத்தில் கேட்டிருக்கிற சத்தியத்தை உங்களுக்குச் சொன்ன மனுஷனாகிய என்னைக் கொலைத் தேடுகிறீர்கள் ஆபிரகாம் இப்படிச் செய்யவில்லையே

"அதற்கு அவர்கள் ஆபிரகாமே எங்கள் பிதா என்றார்கள்" இது உண்மை தான். மாம்சத்தின் பிரகாரம் ஆபிரகாம் அவர்களுடைய பிதாவாக இருக்கிறார் ஆனாலும் அவர்கள் ஆபிரகாமின் உண்மையான பிள்ளைகளாக இல்லை ஒருவன் மாம்சத்தின் பிரகாரம் ஆபிரகாமின் சந்ததியாக இருந்தால் மட்டும் போதாது; அவன் ஆபிரகாமின் கிரியைகளைச் செய்ய வேண்டும். (ரோமர் 2:28-29; ரோமர் 9:4-13

"நீங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாயிருந்தால் ஆபிரகாமின் கிரியைகளைச் செய்வீர்களே" - யூதர்கள் ஆபிரகாமின் சரீரப் பிரகாரமான பிள்ளைகள் அவருடைய ஆவிக்குரிய பிள்ளைகள் அல்ல. இவர்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாக இருப்பார்களென்றால் ஆபிரகாமிடம் காணப்பட்ட விசுவாசம் கீழ்ப்படிதல், நீதி ஆகியவை இவர்களிடத்திலும் காணப்படும் ஆனால் இவர்களோ இயேசு கிறிஸ்துவைக் கொலைசெய்ய வகைதேடுகிறார்கள் இயேசு கிறிஸ்து சத்தியத்தை அவர்களுக்கு எடுத்துக் கூறுகிறார் ஆபிரகாம் இதுபோன்ற காரியத்தைத் தன்னுடைய ஜீவியத்தில் செய்யவே இல்லை.

"தேவனிடத்தில் கேட்டிருக்கிற சத்தியத்தை உங்களுக்குச் சொன்ன மனுஷனாகிய என்னைக் கொலைத் தேடுகிறீர்கள்" - இந்த ஒரு வசனத்தில் மட்டுமே இயேசு கிறிஸ்து தம்மை "மனுஷன்" **(man)** என்று குறிப்பிடுகிறார் பொதுவாக இயேசு கிறிஸ்து தம்மைப் பற்றிக் குறிப்பிடும்போது "தேவகுமாரன்" **(Son of God)** என்றும் "மனுஷகுமாரன்" **(Son of Man)** என்றுமே குறிப்பிடுகிறார் (யோவான் 1:49,51) அவர் உண்மையிலேயே மனுஷனாகவும் தேவனாகவும் இருந்தார் தேவனுடைய ஒரேபேறான குமாரன் கன்னிகையின் வயிற்றில் பிறந்தவர் (மத் 1:18)

இயேசு கிறிஸ்துவை யூதர்கள் கொலை செய்ய விரும்பியதற்குக் காரணங்கள்

1 இயேசு கிறிஸ்துவின் ராஜரீகம் (மத் 2:2 3:16 யோவான் 18:33 40 யோவான் 19:12 22

2 சத்தியத்தைக் கூறினார் (லூக்கா 4:21-29; யோவான் 8:40

3 ஓய்வுநாளில் குணப்படுத்தினார் (மத் 12:9-14; மாற்கு 3:1-6, யோவான் 5:16; யோவான் 9:16

8 அதிகாரம்

4 பொறாமை (மத் 26:3-4. மத் 27:18, மாற்கு 14:1; மாற்கு 15:10 லூக்கா 22:2; யோவான் 11:48)

5 அறியாமை (மத் 26:64-66 மாற்கு 14:62-64. யோவான் 12:40 அப் 3:17)

6 தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம். (லூக்கா 13:33-35 யோவான் 12:38-40 யோவான் 18:31-32; யோவான் 19:11 28:36-37; அப் 2:22-36; அப் 3:18)

7 தம்மைத் தேவனுடைய குமாரன் என்று கூறினார் (யோவான் 5:18 யோவான் 10:24-39 யோவான் 19:7)

8 அவிசுவாசம் (யோவான் 5:38-47 யோவான் 6:36, யோவான் 9:40-41 யோவான் 12:36-38

9 தம்மைத் தேவன் என்று கூறினார் (யோவான் 8:53-59 யோவான் 10:33 யோவான் 1:1-2 எபி 1:5-14)

10 தங்களுடைய அதிகாரம் போய் விடும் என்று பயந்தார்கள் (யோவான் 11:46-53 யோவான் 12:10 11:19)

(11) யூதர்கள் பிதாவின் சந்ததியாய் இருக்கிறோம் என்கிறார்கள் – இதற்கு இயேசுவின் மறுப்புரை – (யோவான் 3:5, 1யோவான் 3:8-10)

யோவான் 8:41 நீங்கள் உங்கள் பிதாவின் கிரியைகளைச் செய்கிறீர்கள் என்றார் அதற்கு அவர்கள் நாங்கள் வேசித்தனத்தினால் பிறந்தவர்களல்ல. ஒரே பிதா எங்களுக்குண்டு, அவர் தேவன் என்றார்கள்

யோவான் 8:42 இயேசு அவர்களை நோக்கி: தேவன் உங்கள் பிதாவாயிருந்தால் என்னிடத்தில் அன்பாயிருப்பீர்கள் ஏனெனில் நான் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறேன் நான் சுயமாய் வரவில்லை, அவரே என்னை அனுப்பினார்

யோவான் 8:43 என் வசனத்தை நீங்கள் ஏன் அறியாமலிருக்கிறீர்கள்? என் உபதேசத்தைக் கேட்க மனதில்லாதிருக்கிறதினால் அல்லவா?

யோவான் 8:44 நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள் உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள் அவன் ஆதிமுதற் கொண்டு மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான் சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்

யோவான் 8:45 நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொல்லுகிறபடியினாலே நீங்கள் என்னை விசுவாசிக்கிறதில்லை

யோவான் 8:46 என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக் கூடும்? நான் சத்தியத்தைச் சொல்லியிருக்க, நீங்கள் ஏன் என்னை விசுவாசிக்கிறதில்லை

யோவான் 8:47 தேவனால் உண்டானவன் தேவனுடைய வசனங்களுக்குச் செவி கொடுக்கிறான்; நீங்கள் தேவனால் உண்டாயிராதபடியினால் செவிகொடாமலிருக்கிறீர்கள் என்றார்

"நீங்கள் உங்கள் பிதாவின் கிரியைகளைச் செய்கிறீர்கள்" யூதர்கள் பிசாசின் கிரியைகளைச் செய்கிறார்கள் (1யோவான் 3:8) ஆதியிலிருந்தே அவர்களுடைய பிதாக்கள் கொலைகாரர்களாக இருந்தார்கள் இவர்கள் சாத்தானின் பிள்ளைகள் (யோவான் 8:41-44)

8 அதிகாரம்

"நாங்கள் வேசித்தனத்தினால் பிறந்தவர்களல்ல. ஒரே பிதா எங்களுக்குண்டு. அவர் தேவன் என்றார்கள்" - தாங்கள் விக்கிரகாராதனைக்காரர்கள் அல்ல என்று யூதர்கள் இயேசுவிடம் கூறுகிறார்கள். விக்கிரகாராதனை ஆவிக்குரிய வேசித்தனமாகக் கருதப்பட்டது. தேவனுக்கும் இஸ்ரவேலுக்கும் இடையேயுள்ள திருமண உடன்படிக்கையின் மீறுதலே விக்கிரகாராதனை ஆகும். (நீதி 2:17; ஏசா 1:21; ஓசி 1:2; ஓசி 4:12; 2 நாளா 21:11; எசே 16)

"தேவன் உங்கள் பிதாவாயிருந்தால் என்னிடத்தில் அன்பாயிருப்பீர்கள்" - இயேசுகிறிஸ்து தேவனைத் தமது பிதா என்று அழைக்கிறார். யூதர்களும் தேவனைத் தங்களுடைய பிதா என்று அழைக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவிற்கும், யூதருக்கும் பிதா ஒருவரே என்றால் அவர்கள் இயேசு கிறிஸ்துவைத் துன்பப்படுத்தமாட்டார்கள். அவரிடத்தில் அன்பாக இருப்பார்கள்.

"என் வசனத்தை நீங்கள் ஏன் அறியாமலிருக்கிறீர்கள்? என் உபதேசத்தைக் கேட்க மனதில்லாதிருக்கிறதினால் அல்லவா?" இயேசு கிறிஸ்துவின் உபதேசம் யூதருடைய மாயமாலத்தை வெளிப்படுத்துகிறது. அவர்களுடைய பாவங்களைக் கடிந்து கூறுகிறது. ஆகையினால் அவர்கள் இயேசுவின் உபதேசத்தைக் கேட்க மனதில்லாமல் இருக்கிறார்கள்.

பிசாசு (devil) - διάβολος - diabolos – 1228

பெயரடை - பிசாசான, அவதூறு செய்கிறவன் (adversary, slanderer, accuser) இந்த வசனத்திலும், மேலும் பல வசனங்களிலும் பிசாசு என்பது சாத்தானையே குறிக்கும். (யோவான் 13:2; மத் 4:1-11; மத் 13:39; மத் 25:41; லூக்கா 4:1-13; லூக்கா 8:12; அப் 10:38; அப் 13:10; எபே 4:27; எபே 6:11; 1தீமோ 3:6-7; 2தீமோ 2:26; எபி 2:14; யாக் 4:7; 1பேதுரு 5:8; 1யோவான் 3:8-10; யூதா 1:9; வெளி 2:10; வெளி 12:9,12; வெளி 20:2,10) புறங்கூறுகிறவர்களும், குற்றம் சுமத்துகிறவர்களும் பிசாசு என்னும் வார்த்தையினாலேயே அழைக்கப்படுகிறார்கள். (யோவான் 6:70; 1தீமோ 3:11; 2தீமோ 3:3; தீத்து 2:3)

இச்சை (lusts) - ἐπιθυμία - epithymia - 1939

பெண்பால் பெயர்ச்சொல் - இச்சை, ஆசை (desire, crave, long for, lust) - சாத்தான் கொடுக்கும் இச்சைகள் மாம்சத்திற்குரியவைகள். அவை எப்போதும் மனுஷருடைய ஆவிக்குரியக் காரியங்களோடு யுத்தம் பண்ணும். மனுஷரிடத்தில் ஆர்வம் இருப்பது தவறல்ல. ஆனால் அது பேராசையாக மாறி, தேவனுடைய பிரமாணத்தை மீறி, பாவமான காரியங்களை இச்சிக்கக் கூடாது.

"பிசாசானவன் ஆதிமுதற் கொண்டு மனுஷகொலை பாதகனாயிருக்கிறான்" - இது காயீனுடைய மரணத்தைக் குறிக்கவில்லை. பாவத்தினால் மனுக்குலம் முழுவதுமே மரித்துக் கொண்டிருப்பதைக் குறிப்பிடுகிறது. (ஆதி 2:17; ரோமர் 5:12; எபி 2:14)

துவக்கத்திலிருந்து (from the beginning) - ἀπό - apo - 575

முன்னிடைச் சொல் - ஓரிடத்தில் இருந்து, துவக்கத்திலிருந்து

ஆதிமுதல் (from the beginning) - ἀρχή - archee - 746

பெண்பால் பெயர்ச்சொல் - ஆதி, ஆதிமுதல், ஆரம்பம், முதல், அதிகாரமுள்ளவர்கள், அதிகாரம், துரைத்தனம், துவக்கம், மூலஉபதேசம், உலகமுண்டானது முதல், உலகத்தை சிருஷ்டித்தது முதல்

8 அதிகாரம்

ஆதிமுதல் இருந்த காரியங்கள்

1 சிருஷ்டிப்பு (மத் 19:4,8; மத் 24:21, மாற்கு 10:6; மாற்கு 13:19 2பேதுரு 3:4)

2 மானிட இனம் (யோவான் 8:44 யோவான் 3:8

3 கர்த்தருடைய ஊழியம் (லூக்கா 1:2; யோவான் 15:27; 1 யோவான் 1:1)

4 பவுலின் பொதுவாழ்வு (அப் 26:4)

5 நாம் கேட்கும் சத்தியம் (1யோவான் 2:7,13,14,24 1யோவான் 3:11; 2யோவான் 1:5-6)

6 தேவனுடைய சபதம் (2தெச 2:13)

"அவன் சத்தியத்திலே நிலை நிற்கவில்லை" - பிசாசானவன் சிறிதுகாலம் சத்தியத்திலே இருந்தான் பின்பு தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணினான் அவன் சத்தியத்திலே நிலைநிற்க வில்லை (எசே 28:11-17 ஏசா 14:12-14) லூசிபரின் கீழ்ப்படியாமையினால் பூமிக்கு ஜலப்பிரளயம் சாபமாக வந்தது என்று ஒருசிலர் வியாக்கியானம் பண்ணுகிறார்கள் (ஆதி 1:2, எரே 4:23-26; 2பேதுரு 3:5-8)

"சத்தியம் அவனிடத்தில் இல்லை" சாத்தான் பொய்யனாகவும் பொய்க்குத் தகப்பனாகவும் இருக்கிறான் அவன் சத்தியத்தைக் கேட்டாலும் அதற்குக் கீழ்ப்படியவில்லை பொய்யையே பேசுகிறான் இது அவனுடைய சுபாவம். (யோவான் 8:39-47 இந்த வாக்கியம் அந்திக்கிறிஸ்துவைக் குறிக்கும் என்று சிலர் வியாக்கியானம் பண்ணுகிறார்கள் அவன் இஸ்ரவேல் ஜனங்களோடு சமாதான உடன்படிக்கை செய்து, தனது உடன்படிக்கையைப் பாதியில் மீறிவிடுகிறான்

"என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக் கூடும்? நான் சத்தியத்தைச் சொல்லியிருக்க, நீங்கள் ஏன் என்னை விசுவாசிக்கிறதில்லை" - இயேசு கிறிஸ்துவினிடத்தில் பாவம் உண்டென்று அவர்களால் குற்றப்படுத்த முடியவில்லை. அவரிடத்தில் எந்தத் தவறையும் அவர்களால் காணமுடியவில்லை. ஆகையினால் அவர்கள் இயேசுவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்க வேண்டும். (யோவான் 8:9; யோவான் 3:20 யோவான் 16:8)

(12) யூதர்கள் இயேசுவை சமாரியன் என்றும் பிசாசு பிடித்தவன் என்றும் கூறுகிறார்கள் - இதற்கு இயேசுவின் மறுப்புரை - (மத் 1:18; 3:16-17; லூக் 1:35; அப் 10:38)

யோவான் 8:48 அப்பொழுது யூதர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: உன்னைச் சமாரியனென்றும் பிசாசு பிடித்தவனென்றும் நாங்கள் சொல்லுகிறது சரிதானே என்றார்கள்

யோவான் 8:49 அதற்கு இயேசு: நான் பிசாசுபிடித்தவனல்ல, நான் என் பிதாவைக் கனம் பண்ணுகிறேன் நீங்கள் என்னைக் கனவீனம் பண்ணுகிறீர்கள்

யோவான் 8:50 நான் எனக்கு மகிமையைத் தேடுகிறதில்லை அதைத் தேடி நியாயந்தீர்க்கிறவர் ஒருவர் இருக்கிறார்

யோவான் 8:51 ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால் அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காணபதில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்

"உன்னைச் சமாரியனென்றும், பிசாசு பிடித்தவனென்றும் நாங்கள் சொல்லுகிறது சரிதானே" - யூதருக்குச் சமாரியரைப் பிடிக்காது. யூதரைப் பொறுத்த அளவில், சமாரியர் என்பது ஒரு இழிவான வார்த்தை. அவர்கள் இயேசு கிறிஸ்துவை இழிவான வார்த்தையைக் கூறி அவமதிக்கிறார்கள்

பிசாசு (devil) δαιμόνιον daimonion 1140

8 அதிகாரம்

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல - பிசாசு, பேய், அசுத்த ஆவி, அந்நிய தேவதை (demon) (மத் 12.24)

"நான் என் பிதாவைக் கனம் பண்ணுகிறேன்" - யோவான் 8.28)

"ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால் அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை" - யோவான் 3:16

(13) இயேசுவின் மகிமையைப் பற்றிய விளக்கம் - (ஏசா 7:14; 9:6-7 யோவான் 13-2

யோவான் 8:52 அப்பொழுது யூதர்கள் அவரை நோக்கி: நீ பிசாசு பிடித்தவனென்று இப்பொழுது அறிந்திருக்கிறோம். ஆபிரகாமும் தீர்க்கதரிசிகளும் மரித்தார்கள்; நீயோ ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால் என்றென்றைக்கும் மரணத்தை ருசிபார்ப்பதில்லை என்கிறாய்.

யோவான் 8:53 எங்கள் பிதாவாகிய ஆபிரகாமிலும் நீ பெரியவனோ? அவர் மரித்தார்; தீர்க்கதரிசிகளும் மரித்தார்கள்; உன்னை நீ எப்படிப்பட்டவனாக்குகிறாய் என்றார்கள்.

யோவான் 8:54 இயேசு பிரதியுத்தரமாக: என்னை நானே மகிமைப்படுத்தினால் அந்த மகிமை வீணாயிருக்கும்; என் பிதா என்னை மகிமைப்படுத்துகிறவர், அவரை உங்கள் தேவனென்று நீங்கள் சொல்லுகிறீர்கள்.

யோவான் 8:55 ஆயினும் நீங்கள் அவரை அறியவில்லை, நான் அவரை அறிந்திருக்கிறேன்; அவரை அறியேன் என்று சொல்வேனாகில் உங்களைப்போல நானும் பொய்யனாயிருப்பேன்; அவரை நான் அறிந்து அவருடைய வார்த்தையைக் கைக்கொண்டிருக்கிறேன்.

யோவான் 8:56 உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக் காண ஆசையாயிருந்தான், கண்டு களிகூர்ந்தான் என்றார்.

"ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால் என்றென்றைக்கும் மரணத்தை ருசிபார்ப்பதில்லை" - என்று இயேசு கிறிஸ்து கூறியதாக யூதர்கள் கூறுகிறார்கள் அவர் இரண்டாம் மரணமாகிய நித்திய மரணத்தைக் கூறுகிறார் ஆனால் இவர்களோ இயேசு கிறிஸ்துவின் வார்த்தையைப் புரட்டுகிறார்கள் யூதர்கள் சரீர மரணத்தையே சிந்தித்துப் பார்க்கிறார்கள் ஆபிரகாமும் தீர்க்கதரிசிகளும் மரித்தார்கள் என்று வரலாறு பேசுகிறார்கள் நாம் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டால் நாம் மரித்தாலும் அவர் சபையை எடுத்துக் கொள்ள வரும்போது நாம் மறுபடியும் உயிரோடு எழுந்திருப்போம். (எபி 9.27 1கொரி 15:51-58)

"என்னை நானே மகிமைப்படுத்தினால அந்த மகிமை வீணாயிருக்கும்" - யூதர்கள் தங்களை மேன்மைப்படுத்த விரும்புகிறார்கள் ஆனால் இயேசு கிறிஸ்துவோ தம்மைத் தாழ்த்துகிறார் சிலுவையின் மரண பரியந்தம் தம்மைத் தாழ்த்துகிறார் (2 நாளா 25:19, சங் 49:6- சங் 94:4 சங் 97.7 ரோமர் 1.30)

"என் பிதா என்னை மகிமைப்படுத்துகிறவர்" இயேசு கிறிஸ்துவின் மூலமாகத் தேவன் அற்புதங்களைச் செய்கிறார் இயேசு கிறிஸ்துவின் வசனங்களை அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதிபண்ணுகிறார் இதன் மூலமாகப் பிதா குமாரனை மகிமைப்படுத்துகிறார்

"நீங்கள் அவரை அறியவில்லை நான் அவரை அறிந்திருக்கிறேன் அவரை அறியேன் என்று சொல்வேனாகில் உங்களைப் போல நானும் பொய்யனாயிருப்பேன்" யூதர்கள் பொய்யர்களாக இருக்கிறார்கள் அவர்கள் தேவனை அறியவில்லை. என்றாலும் தாங்கள் தேவனை அறிந்திருப்பதாகக் கூறுகிறார்கள் இயேசு கிறிஸ்து பிதாவை அறிந்திருக்கிறார் அவருக்குக் கீழ்ப்படிகிறார் (யோவான் 8:39-56)

8 அதிகாரம்

களிகூர்ந்தான் (rejoiced) ἀγαλλιάω - agalliaoo - 21

வினைச்சொல் - களிப்புடனிரு மிகுந்த சந்தோஷமாயிரு சந்தோஷத்தினால் குதி (rejoice exceedingly) (1பேதுரு 1:6,8; 1பேதுரு 4:13; லூக்கா 10:21)

காண் (see) - εἴδω - eidoo - 1492

வினைச்சொல் - காண், அறி, பார் தெரிந்திரு, நோக்கு, உணர் அறிந்திரு, விளங்கு

ஆபிரகாம் கண்ட காரியங்கள்

1 தேவனுடைய திட்டத்தைக் கண்டார் தமது ஜனங்களை மீட்பதற்காகத் தேவன் மேசியாவை அனுப்புவார் கானான் தேசத்தைத் தம்முடைய ஜனங்களுக்குத் தேவன் நித்திய சுதந்தரமாகக் கொடுப்பார் (ஆதி 12:1-3; ஆதி 17:1-22)

2 மேசியாவை இந்த உலகத்திற்கு மனுஷராக அனுப்புவது தேவனுடைய திட்டம் என்பதை ஆபிரகாம் கண்டார் (ரோமர் 4:13-22; ரோமர் 9:4-7; கலா 3:16)

3 திரித்துவத்தின் இரண்டாம் நபராகிய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை ஆபிரகாம் [redacted] (ஆதி 18:1-8,19-20; ஆதி 19:24)

(14) ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே இயேசு இருக்கிறார் - (மீகா 5:2; யோவான் 1:1-2)

யோவான் 8:57 அப்பொழுது யூதர்கள் அவரை நோக்கி உனக்கு இன்னும் ஐம்பது வயதாகவில்லையே, நீ ஆபிரகாமைக் கண்டாயோ என்றார்கள்

யோவான் 8:58 அதற்கு இயேசு, ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்

"ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன்" - இயேசு கிறிஸ்து நித்தியமானவர் ஆபிரகாமிற்கு முன்பே இருந்தவர் இப்போதும் இருக்கிறவர் இனிமேலும் இருக்கிறபோகிறவர் இந்த வசனத்தில் "நான் இருக்கிறேன் (I am) என்பது தேவனுடைய நித்திய நாமங்களில் ஒன்றாகும். (யாத் 3:14-15; மீகா 5:1-2; யோவான் 1:1-2; யோவான் 8:24) இயேசு கிறிஸ்து தம்மை "நான் இருக்கிறேன்" என்று கூறியபோது அவர் தமது தெய்வத்துவத்தைப் பற்றிக் கூறுகிறார் என்று யூதர்கள் புரிந்துகொண்டார்கள்

44. இயேசுவை கொல்வதற்கு சதியாலோசனை - (மத் 26:3)

யோவான் 8:59 அப்பொழுது அவர்மேல் எறியும்படி கல்லுகளை எடுத்துக்கொண்டார்கள் இயேசு மறைந்து அவர்கள் நடுவிலே கடந்து தேவாலயத்தை விட்டுப்போனார்

"அவர்மேல் எறியும்படி கல்லுகளை எடுத்துக்கொண்டார்கள் இயேசு மறைந்து அவர்கள் நடுவிலே கடந்து தேவாலயத்தை விட்டுப்போனார்" - (யோவான் 8:40) இயேசு கிறிஸ்து தம்மை "நான் இருக்கிறேன்" என்று கூறி தேவனாக வெளிப்படுத்துகிறார் இது யூதருக்கு தேவதூஷணமாகத் தெரிகிறது நியாயப்பிரமாணத்தின் பிரகாரம் தேவதூஷணம் சொல்லுகிறவனைக் கல்லெறிந்து கொல்ல வேண்டும். (லேவி 24:16) அவர்களுடைய கோபம் தணியட்டும் என்று இயேசு கிறிஸ்து சிறிது காலம் தேவாலயத்தை விட்டு அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் போனார்

9 அதிகாரம்

45. பிறவிக்குருடன்

(1) இவன் குருடனாய் பிறந்தது யார் செய்த பாவம்

யோவான் 9:1 அவர் அப்புறம் போகையில் பிறவிக்குருடனாகிய ஒரு மனுஷனைக் கண்டார்

யோவான் 9:2 அப்பொழுது அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: ரபீ, இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம், இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ என்று கேட்டார்கள்

யோவான் 9:3 இயேசு பிரதியுத்தரமாக: அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்

"ரபீ, இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம், இவன் செய்த பாவமோ இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ" - பக்தியுள்ள ஆத்துமாக்கள் நன்மையைப் பெறும்படியாக மறுபடியும் பிறப்பார்கள் என்று யூதர்கள் நம்பினார்கள். தண்டனை பெறுவதற்காக அல்ல, நன்மையைப் பெறுவதற்காகவே மறுபடியும் பிறப்பார்கள். துன்மார்க்கரோ நித்திய ஆக்கினையை அடையும்படியாக காவலில் அடைக்கப்படுவார்கள் என்பது யூதருடைய நம்பிக்கை. ஆசியாவிலே, சில தேசங்களிலும் யூதர்களில் சிலரும், துன்மார்க்கர் தண்டனையை அனுபவிப்பதற்காக மறுபடியும் பிறப்பதாக நம்புகிறார்கள். இந்தப் பிறவியில் யாருக்காவது உடல் ஊனம் இருக்குமானால் அந்த நபர் அவருடைய முந்திய பிறவியில் பாவம் செய்திருக்கிறார் என்பது இதன் பொருள்.

சரீரத்தில் காணப்படும் அங்கவீன அடையாளங்கள் ஆத்துமாவில் காணப்படும் பாவத்தின் வெளிப்பாடு என்பது இவர்களுடைய நம்பிக்கை. சான்றாக, முந்திய பிறவியில் பெற்றோரை அவமதித்தோருக்கு இந்தப் பிறவியில் தலைவலி வரும். யாரையாவது முந்திய பிறவியில் விஷம் கொடுத்து கொன்றிருந்தால் இந்தப் பிறவியில் அவருக்கு காக்காய் வலிப்பு நோய் வரும். பிறருடைய மனைவியை இச்சித்தவருக்கு கண்களில் வேதனைகள் உண்டாகும். தாயைக் கொலைசெய்தவர் குருடராகப் பிறப்பார்கள் என்பது சிலருடைய நம்பிக்கை.

"அது இவன் செய்த பாவமுமல்ல இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல" - முந்திய பிறவி, முந்திய பிறவியில் செய்த பாவங்கள், பாவங்களுக்கு அடையாளமே அங்கவீனங்கள் ஆகிய கோட்பாடுகளை இயேசு கிறிஸ்து ஏற்றுக் கொள்ளவில்லை. இவற்றிற்கு வேத வாக்கியத்தின் பிரகாரம் எந்த ஆதாரமும் இல்லை. ஒரு நபர் சரீரப்பிரகாரமாக மரித்த பின்பு மறுபடியுமாகப் பூமியில் வந்து குழந்தையாகப் பிறப்பதில்லை. மனுஷனுடைய பாவத்தினாலும் சாத்தானுடைய வல்லமையினாலும் வியாதியும் வேதனைகளும் வருவதற்கு வாய்ப்புகள் உள்ளன (எபே 2:1-3, லூக்கா 13:16; அப் 10:38). அதே வேளையில் சரீரத்தைப் பேணாமல், சரியான உணவு உட்கொள்ளாமல், போதுமான அளவு ஓய்வு எடுத்துக் கொள்ளாமல், தாறுமாறாக ஜீவிப்போருக்குச் சரீரத்தில் பலவீனங்களும் நோய்களும் வருவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன.

"தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்" இந்தப் பிறவிக் குருடனைக் குறித்து வாசிக்கிறோம். இவன் குருடனாகப் பிறந்தது இவன் செய்த பாவத்தினாலுமல்ல இவனைப் பெற்றவர்களுடைய பாவத்தினாலுமல்ல என்று இயேசு கிறிஸ்து தெளிவாகக் கூறுகிறார். இவன் பார்வையடைவதன் மூலமாக தேவனுடைய கிரியைகள் இவன் மூலமாக வெளிப்படப் போகிறது. அதுமட்டுமல்ல, இவன் குருடனாகப் பிறந்திருப்பதற்குத் தேவனும் காரணமல்ல. தேவன் நோய்களைக் குணப்படுத்துகிறவர். சாத்தான் நோய்களை உண்டுபண்ணுகிறவன் (மத் 12:22; அப் 10:38; யோவான் 10:10, 1யோவான் 3:8)

யோவான் - தொகுப்புரை

9 அதிகாரம்

(2) இயேசு பிறவிக்குருடனை சொஸ்தமாக்குகிறார்

யோவான் 9:4 பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும். ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது.

யோவான் 9:5 நான் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்றார்.

யோவான் 9:6 இவைகளைச் சொல்லி, அவர் தரையிலே துப்பி, உமிழ்நீரினால் சேறுண்டாக்கி, அந்தச் சேற்றைக் குருடனுடைய கண்களின்மேல் பூசி:

யோவான் 9:7 நீ போய், ஸிலோவாம் குளத்திலே கழுவு என்றார். ஸிலோவாம் என்பதற்கு அனுப்பப்பட்டவன் என்று அர்த்தமாம். அப்படியே அவன் போய்க் கழுவி, பார்வையடைந்தவனாய்த் திரும்பி வந்தான்.

"ஸிலோவாம் குளம்" - எசேக்கியா ராஜா இதைக் கட்டினான் (2 இராஜா 20:20)

குளம் (pool) - κολυμβήθρα - kolymbeethra - 2861

பெண்பால் பெயர்ச்சொல் - குளம் - குளிப்பதற்கு ஏற்ற குளம். (யோவான் 5:2,4,7 - யோவான் 9:7)

(3) குருடனும் அயலகத்தாரும் -

யோவான் 9:8 அப்பொழுது அயலகத்தாரும், அவன் குருடனாயிருக்கையில் அவனைக் கண்டிருந்தவர்களும்: இவன் உட்கார்ந்து பிச்சை கேட்டுக்கொண்டிருந்தவனல்லவா என்றார்கள்.

யோவான் 9:9 சிலர்: அவன்தான் என்றார்கள். வேறு சிலர்: அவனுடைய சாயலாயிருக்கிறான் என்றார்கள். அவனோ: நான்தான் அவன் என்றான்.

யோவான் 9:10 அப்பொழுது அவர்கள் அவனை நோக்கி: உன் கண்கள் எப்படித் திறக்கப்பட்டது என்றார்கள்.

யோவான் 9:11 அவன் பிரதியுத்தரமாக: இயேசு என்னப்பட்ட ஒருவர் சேறுண்டாக்கி, என் கண்களின்மேல் பூசி, நீ போய் ஸிலோவாம் குளத்திலே கழுவு என்றார்; அப்படியே நான் போய்க் கழுவி, பார்வையடைந்தேன் என்றான்.

யோவான் 9:12 அப்பொழுது அவர்கள்: அவர் எங்கே என்றார்கள். அவன்: எனக்குத் தெரியாது என்றான்.

"இயேசு என்னப்பட்ட ஒருவர் சேறுண்டாக்கி, என் கண்களின்மேல் பூசி, நீ போய் ஸிலோவாம் குளத்திலே கழுவு என்றார்; அப்படியே நான் போய்க் கழுவி, பார்வையடைந்தேன்" - இயேசு இவ்வளவு காரியங்களையும் ஏன் செய்தார் என்பது இங்கு விளக்கப்படவில்லை. இதோ ஒரு தெய்வீக காரணத்திற்காகவே இயேசு கிறிஸ்து இந்தக் காரியங்களையெல்லாம் செய்திருக்க வேண்டும்.

(4) குருடனும் பரிசேயரும்

யோவான் 9:13 குருடனாயிருந்த அவனைப் பரிசேயரிடத்திற்குக் கொண்டுபோனார்கள்.

யோவான் 9:14 இயேசு சேறுண்டாக்கி, அவன் கண்களைத் திறந்த நாள் ஓய்வுநாளாயிருந்தது.

யோவான் 9:15 ஆகையால் பரிசேயரும் அவனை நோக்கி: நீ எப்படிப் பார்வையடைந்தாய் என்று மறுபடியும் கேட்டார்கள். அதற்கு அவன்: அவர் என் கண்களின்மேல் சேற்றைப் பூசினார், நான் கழுவினேன், காண்கிறேன் என்றான்.

யோவான் - தொகுப்புரை

9 அதிகாரம்

யோவான் 9:16 அப்பொழுது பரிசேயரில் சிலர் அந்த மனுஷன் ஓய்வுநாளைக் கைக்கொள்ளாததினால் அவன் தேவனிடத்திலிருந்து வந்தவனல்ல என்றார்கள். வேறுசிலர் பாவியாயிருக்கிற மனுஷன் இப்படிப்பட்ட அற்புதங்களை எப்படிச் செய்வான் என்றார்கள். இவ்விதமாய் அவர்களுக்குள்ளே பிரிவினை உண்டாயிற்று.

யோவான் 9:17 மறுபடியும் அவர்கள் குருடனை நோக்கி: உன் கண்களைத் திறந்தானே, அவனைக்குறித்து நீ என்ன சொல்லுகிறாய் என்றார்கள். அதற்கு அவன்: அவர் தீர்க்கதரிசி என்றான்.

"இயேசு சேறுண்டாக்கி, அவன் கண்களைத் திறந்த நாள் ஓய்வுநாளாயிருந்தது" - யூதமார்க்கத்து பாரம்பரியத்தின் பிரகாரம், ஓய்வுநாளில் வேலை செய்வது குற்றம். இயேசு கிறிஸ்து ஓய்வுநாளில் குருடனுடைய கண்களைத் திறந்தது, பரிசேயருடைய பார்வைக்கு மிகப்பெரிய குற்றமாகத் தெரிந்தது. ஒரு பள்ளத்தில் விழுந்த மிருகத்தை ஓய்வுநாளில் தூக்கிவிடுவது தவறல்ல. ஆனால் நரகத்தில் விழுந்திருக்கும் மனுஷனைத் தூக்கிவிடுவது அவர்களுடைய பாரம்பரியத்தின்படி குற்றம்.

"அந்த மனுஷன் ஓய்வுநாளைக் கைக்கொள்ளாததினால் அவன் தேவனிடத்திலிருந்து வந்தவனல்ல" ஒரு மனுஷன் தேவனிடத்திலிருந்து வந்தவனா இல்லையா என்பதை அவன் ஓய்வுநாளைக் கைக்கொள்ளுகிறானா, இல்லையா என்பதை வைத்து பரிசேயர்கள் தீர்மானம் பண்ணுகிறார்கள். மற்றவர்கள் முன்பாகத் தான் ஒரு பக்திமான் என்று நடித்துக் காண்பிப்போரை தேவன் அங்கீகரிப்பதில்லை. இருதயத்தில் பயபக்தியும் தாழ்மையும் உள்ளவர்களையே தேவன் அங்கீகரிக்கிறார்.

"பாவியாயிருக்கிற மனுஷன் இப்படிப்பட்ட அற்புதங்களை எப்படிச் செய்வான்" - பிறவிக் குருடன் பரிசேயர்கள் மத்தியில் இருந்தான். பரிசேயர்களால் அவனைக் குணப்படுத்த முடியவில்லை. குருடனைக் குணப்படுத்துவது தேவனுடைய கிரியை. தேவனுடைய மனுஷரால் மட்டுமே இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்ய முடியும்.

"உன் கண்களைத் திறந்தானே அவனைக்குறித்து நீ என்ன சொல்லுகிறாய்" - என்று பரிசேயர்கள் குருடனிடம் கேட்டார்கள். மார்க்கத் தலைவர்களைவிட கண் திறக்கப்பட்ட குருடன் அதிக புத்திமானாயிருக்கிறான். இவனுக்கு இயேசு கிறிஸ்து ஒரே ஒரு அற்புதம்தான் செய்தார். சிறிது நேரம்தான் இவன் இயேசுவைக் கண்டான். ஆனாலும் இயேசுகிறிஸ்துவை ஒரு தீர்க்கதரிசி என்று கண்டு கொண்டான்.

(5) குருடனின் பெற்றோரும் யூதரும்

யோவான் 9:18 அவன் குருடனாயிருந்து பார்வையடைந்ததை யூதர்கள் நம்பாமல், பார்வையடைந்தவனுடைய தாய் தகப்பன்மாரை அழைப்பித்து,

யோவான் 9:19 அவர்களை நோக்கி: உங்கள் குமாரன் குருடனாய்ப் பிறந்தான் என்று சொல்லுகிறீர்களே, அவன் இவன்தானா? இவனானால், இப்பொழுது இவன் எப்படிப் பார்வையடைந்தான் என்று கேட்டார்கள்.

யோவான் 9:20 தாய்தகப்பன்மார் பிரதியுத்தரமாக: இவன் எங்கள் குமாரன்தான் என்றும், குருடனாய்ப் பிறந்தான் என்றும் எங்களுக்குத் தெரியும்.

யோவான் 9:21 இப்பொழுது இவன் பார்வையடைந்த வகை எங்களுக்குத் தெரியாது; இவன் கண்களைத் திறந்தவன் இன்னான் என்பதும் எங்களுக்குத் தெரியாது. இவன் வயதுள்ளவனாயிருக்கிறான், இவனைக் கேளுங்கள், இவனே சொல்லுவான் என்றார்கள்.

யோவான் - தொகுப்புரை

9 அதிகாரம்

யோவான் 9:22 அவனுடைய தாய்தகப்பன்மார் யூதர்களுக்குப் பயந்ததினால் இப்படிச் சொன்னார்கள்; ஏனெனில் இயேசுவைக் கிறிஸ்து என்று எவனாவது அறிக்கை பண்ணினால் அவனை ஜெபஆலயத்துக்குப் புறம்பாக்கவேண்டுமென்று யூதர்கள் அதற்கு முன்னமே கட்டுப்பாடு செய்திருந்தார்கள்.

யோவான் 9:23 அதினிமித்தம், இவன் வயதுள்ளவனாயிருக்கிறான், இவனையே கேளுங்கள் என்று அவன் தாய் தகப்பன்மார் சொன்னார்கள்.

"அவன் குருடனாயிருந்து பார்வையடைந்ததை யூதர்கள் நம்பவில்லை. " குருடன் பார்வையடைந்தான் ஆனால் பரிசேயர்களோ இன்னும் குருடராக இருக்கிறார்கள். பார்வையுள்ளவனைக் குருடனாகக் காண்கிறார்கள். தாங்கள் காணும் காரியங்களை அவர்களால் நம்பவே முடியவில்லை. இயேசு கிறிஸ்துவை ஒரு தீர்க்கதரிசி என்றுகூட அவர்களால் நம்ப முடியவில்லை. ஏனெனில் ஓய்வுநாளில் இயேசு கிறிஸ்து பிறவிக் குருடனுடைய கண்களைத் திறந்ததினால் அவர் தேவனுடைய பிரமாணத்திற்கு எதிராகக் கிரியைகளைச் செய்வதாக நினைத்தார்கள்.

"அவனுடைய தாய்தகப்பன்மார் யூதர்களுக்குப் பயந்ததினால் இப்படிச் சொன்னார்கள்; ஏனெனில் இயேசுவைக் கிறிஸ்து என்று எவனாவது அறிக்கை பண்ணினால் அவனை ஜெபஆலயத்துக்குப் புறம்பாக்கவேண்டுமென்று யூதர்கள் அதற்குமுன்னமே கட்டுப்பாடு செய்திருந்தார்கள். இயேசு கிறிஸ்துவை மேசியா என்று யாராவது அறிக்கையிட்டால் அவர்கள் ஜெபாலயத்திலிருந்து புறம்பே தள்ளப்படுவார்கள். ஜெபாலயத்தோடு அவர்கள் எந்தவிதத் தொடர்பும் வைத்துக் கொள்ள முடியாது. கிறிஸ்துவைப் பின்பற்றுவோருக்கு எதிராக இயற்றப்பட்ட புதிய பிரமாணம். ஆகையினால் கிறிஸ்தவ விசுவாசிகள் ஜெபாலயங்களில் அங்கத்தினர்களாக இருக்க முடியாமல் தங்களுக்கென்று சபை கூடுதலை நியமித்துக் கொண்டார்கள்.

(6) குருடனும் பரிசேயரும்

யோவான் 9:24 ஆதலால் அவர்கள் குருடனாயிருந்த மனுஷனை இரண்டாந்தரம் அழைத்து: நீ தேவனை மகிமைப்படுத்து; இந்த மனுஷன் பாவியென்று நாங்கள் அறிந்திருக்கிறோம் என்றார்கள்.

யோவான் 9:25 அவன் பிரதியுத்தரமாக: அவர் பாவியென்று எனக்குத் தெரியாது; நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன்; இது ஒன்றுதான் எனக்குத் தெரியும் என்றான்.

யோவான் 9:26 அவர்கள் மறுபடியும் அவனை நோக்கி: உனக்கு என்ன செய்தான், உன் கண்களை எப்படித் திறந்தான் என்றார்கள்.

யோவான் 9:27 அவன் பிரதியுத்தரமாக: முன்னமே உங்களுக்குச் சொன்னேன், நீங்கள் கேளாமற்போனீர்கள்; மறுபடியும் கேட்க வேண்டியதென்ன? அவருக்குச் சீஷராக உங்களுக்கும் மனதுண்டோ என்றான்.

யோவான் 9:28 அப்பொழுது அவர்கள் அவனைவைது: நீ அவனுடைய சீஷன்; நாங்கள் மோசேயினுடைய சீஷர்.

யோவான் 9:29 மோசேயுடனே தேவன் பேசினாரென்று அறிவோம், இவன் எங்கேயிருந்து வந்தவனென்று அறியோம் என்றார்கள்.

யோவான் 9:30 அதற்கு அந்த மனுஷன்: அவர் என் கண்களைத் திறந்திருந்தும், அவர் எங்கேயிருந்து வந்தவரென்று நீங்கள் அறியாதிருக்கிறது ஆச்சரியமான காரியம்.

யோவான் 9:31 பாவிகளுக்குத் தேவன் செவிகொடுக்கிறதில்லை என்று அறிந்திருக்கிறோம்; ஒருவன் தேவபக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவிகொடுப்பார்.

யோவான் 9:32 பிறவிக்குருடனுடைய கண்களை ஒருவன் திறந்தானென்று உலகமுண்டானது முதல் கேள்விப்பட்டதில்லையே.

9 அதிகாரம்

யோவான் 9:33 அவர் தேவனிடத்திலிருந்து வராதிருந்தால் ஒன்றும் செய்யமாட்டாரே என்றான்.

யோவான் 9:34 அவர்கள் அவனுக்குப் பிரதியுத்தரமாக: முழுவதும் பாவத்தில் பிறந்த நீ எங்களுக்குப் போதிக்கிறாயோ என்று சொல்லி, அவனைப் புறம்பே தள்ளிவிட்டார்கள்.

"நீ தேவனை மகிமைப்படுத்து" - என்று பரிசேயர்கள் குருடனாயிருந்த மனுஷனிடம் கூறுகிறார்கள். இந்த வாக்கியம் ஆணையிடும் போது கூறப்பட வேண்டியதாகும். தேவனை மகிமைப்படுத்து என்பது தேவன் பேரில் ஆணையிடு என்று கூறுவதற்குச் சமம் (யோசுவா 7:19). குருடனாய் இருந்த மனுஷனை தேவன் பேரில் ஆணையிட வைக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவை பாவியென்று பரிசேயர்கள் அறிவித்தார்கள். அதே வாக்கியத்தை இந்த மனுஷனும் தன்னுடைய வாயினால் கூற வேண்டுமென்று முயற்சி பண்ணினார்கள். ஆனால் குருடனாயிருந்த மனுஷனோ மிகவும் ஞானமாய் பதில் கூறுகிறான். "அவர் பாவியென்று எனக்குத் தெரியாது. நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன்; இது ஒன்றுதான் எனக்குத் தெரியும்" (யோவான் 9:25).

"அவர்கள் மறுபடியும் அவனை நோக்கி: உனக்கு என்னசெய்தான், உன் கண்களை எப்படித் திறந்தான் என்றார்கள்" - மூன்றாம் முறையாக பரிசேயர்கள் குருடனாயிருந்த மனுஷனைப் பார்த்து, அவன் எப்படிப் பார்வையடைந்தான் என்று கேட்கிறார்கள் (யோவான் 9:10,15,26). பரிசேயரிடம் இந்த மனுஷன் மட்டுமே பயமில்லாமல் தைரியமாய்ப் பேசுகிறான் (யோவான் 9:27). இதனால் மார்க்கத்தலைவர்கள் அவன்மீது கோபம் கொண்டு, அவனை ஜெபஆலயத்திலிருந்து புறம்பே தள்ளி விடுகிறார்கள் (யோவான் 9:28-34).

வைதல் (reviled) - λοιδορέω loidoreoo - 3058

வினைச்சொல் - வைதல், வைய்ப்படு (vilify, rail at; to rebuke, to abuse by words) (நீதி 12:18; அப் 23:4; 2கொரி 4:12; 1பேதுரு 2:23)

"மோசேயுடன் தேவன் பேசினாரென்று அறிவோம், இவன் எங்கேயிருந்து வந்தவனென்று அறியோம்" - முதல் முறையாக பரிசேயர்கள் சத்தியத்தைப் பேசுகிறார்கள். இயேசு கிறிஸ்து எங்கேயிருந்து வந்தார் என்பது தங்களுக்குத் தெரியாது என்று அறிவிக்கிறார்கள். அதுவரையிலும் அவர்கள் இயேசு கிறிஸ்துவைப் பற்றி எல்லாந் தெரிந்ததாகக் கூறி வந்தார்கள். யோசேப்பின் குமாரன் என்றும், தேவனுடைய குமாரன் அல்ல என்றும் இயேசு கிறிஸ்துவைப் பற்றி இதுவரையிலும் கூறி வந்தார்கள் (மத் 13:55; மாற்கு 6:3; யோவான் 6:42; யோவான் 7:27, 52).

"பாவிகளுக்கு தேவன் செவி கொடுக்கிறதில்லை என்று அறிந்திருக்கிறோம்; ஒருவன் தேவபக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவிகொடுப்பார்" - இந்த வாக்கியத்தை தேவன் கூறியதாக நாம் எடுத்துக் கொள்ளக்கூடாது. இது யூதருடைய பாரம்பரிய நம்பிக்கை. பாவிகளுக்குத் தேவன் செவிகொடுக்கிறதில்லையென்று யூதர்கள் நம்பினார்கள். ஆனால் இயேசு கிறிஸ்துவோ பாவிகளைத் தேடிவந்தவர். பாவிகளுக்கு அவர் செவிகொடுக்கிறார். இந்த இடத்தில் இவன் கூறியது இந்தச் சூழ்நிலைக்கு மட்டுமே பொருந்தும். குருடனுடைய கண்களைத் திறப்பதற்கு தேவன் பாவிகளைப் பயன்படுத்தமாட்டார். இயேசு கிறிஸ்து தேவனிடத்திலிருந்து வந்தவர் இல்லையென்றால் அவரால் தன்னைக் குணமாக்கியிருக்க முடியாது என்று குருடனாக இருந்தவன் சாட்சி கூறுகிறான் (யோவான் 9:31-34). இந்த வாக்கியத்திற்கு இப்படித்தான் வியாக்கியானம் பண்ண வேண்டுமே தவிர, பாவிகளுக்குத் தேவன் செவிகொடுக்கிறதில்லை என்று தீர்மானம் பண்ணிவிடக்கூடாது. தேவன் பாவிகளுடைய ஜெபத்தைக் கேட்பார், எப்போதும் கேட்பார். வேதாகமத்திலே பாவிகளுடைய ஜெபத்தைத் தேவன் கேட்டதற்கு பல எடுத்துக்காட்டுக்கள் உள்ளன.

9 அதிகாரம்

பாவிகளுடைய ஜெபங்களைத் தேவன் கேட்டதற்கு எடுத்துக்காட்டுக்கள்

1 ஆசீர்வாதத்திற்காக யாக்கோபின் ஜெபம் ஆதி 28

2 விடுதலைக்காக இஸ்ரவேல் ஜனங்களின் ஜெபம் (நியா 3:9,15 நியா 6:7-10; நியா 10:6-18 நியா 20:18-28

3 இரக்கத்திற்காக ஆகாபின் ஜெபம் (1இராஜா 21:25-29

4 இரக்கத்திற்காக மனாசேயின் ஜெபம் 2நாளா 33:9-13

5 பாவமன்னிப்பிற்காக பாவமான ஸ்திரீயின் ஜெபம் (லூக்கா 7:36-50)

6 பாவமன்னிப்பிற்காக ஆயக்காரனின் ஜெபம் (லூக்கா 18:9-14

7 குணமடைவதற்காக ராஜாவின் மனுஷனின் ஜெபம் (யோவான் 4:49-53)

8 இரட்சிப்பிற்காக கொர்நேலியு அவன் வீட்டார் ஆகியோரின் ஜெபம் அப 10:1-6; அப 11:14-18, அப 15:7-13

பாவிகள் ஜெபம் பண்ணும் பொழுது அவர்கள் மனந்திரும்பினால், தேவன் அவர்களுடைய பாவங்களை மன்னிப்பார் இந்த வாக்குத்தத்தத்தைத் தவிர வேறு எதையும் தேவன் அவர்களுக்கு வாக்குபண்ணவில்லை. (1யோவான் 1:9) இதுதவிர தேவன் பாவிகளின் ஜெபத்தைக் கேட்டு, அவர்களை ஆசீர்வதித்தால் அது தேவனுக்குப் பிரியமான, அவருக்குச் சித்தமான காரியம்

"முழுவதும் பாவத்தில் பிறந்த நீ எங்களுக்குப் போதிக்கிறாயோ என்று சொல்லி, அவனைப் புறம்பே தள்ளிவிட்டார்கள்" இயேசுவைக் கிறிஸ்து என்று எவனாவது அறிக்கை பண்ணினால் அவனை ஜெப ஆலயத்துக்குப் புறம்பாக்கவேண்டுமென்று யூதர்கள் அதற்கு முன்னமே கட்டுப்பாடு செய்திருந்தார்கள் (யோவான் 9:22) குருடனாயிருந்த மனுஷன் உண்மையைப் பேசினான் சத்தியத்திற்குச் சாட்சி கொடுத்தான் அங்கு உண்மை எடுபடவில்லை. அவனை ஜெபாலயத்திலிருந்து புறம்பே தள்ளி விட்டார்கள்

ஜெபாலயத்திலிருந்து ஒருவனைப் புறம்பே தள்ளுவது மூன்று விதமாக இருக்கும் அவையாவன

1 நித்தின் (niddin) - முப்பது நாட்களுக்கு ஜெபாலயத்திலிருந்து புறம்பே தள்ளுதல். ஜெபாலய ஆராதனைகளில் இந்த முப்பது நாட்களும் அவன் பங்குபெறக்கூடாது தன்னுடைய தலை முடியையோ தாடியையோ சவரம் பண்ணக்கூடாது துக்க வஸ்திரம் தரித்திருக்க வேண்டும்.

2 செரெம் (cherem) - தொடர்ந்து கலகம் பண்ணுவோரை இந்த அடிப்படையில் ஜெபாலயத்திலிருந்து புறம்பே தள்ளுவார்கள் அவனைச் சபித்து யூத ஜனங்களோடு எந்த சம்பந்தமும் கலக்கக்கூடாது தடை பண்ணி விடுவார்கள் தேவாலயத்திற்குள்ளோ ஜெபாலயத்திற்குள்ளோ வருவதற்கு அவனுக்குத் தடை பண்ணப்பட்டிருக்கும்.

3. ஷம்மதா (shammatha) - தொடர்ந்து கலகம் பண்ணுவோருக்கு இந்தத் தண்டனை வழங்கப்படும். யூதஜனங்களோடு எந்தவிதத் தொடர்பும் வைத்துக் கொள்ள முடியாதவாறு அவன் விலக்கி வைக்கப்பட்டிருப்பான் இது மிகவும் கடுமையான தண்டனையாகும்.

(7) இயேசுவும் குணமாக்கப்பட்ட மனுஷனும்

யோவான் 9:35 அவனை அவர்கள் புறம்பே தள்ளி விட்டதை இயேசு கேள்விப்பட்டு, அவனைக் கண்டபோது, நீ தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறாயா என்றார்

யோவான் – தொகுப்புரை

9 அதிகாரம்

யோவான் 9:36 அதற்கு அவன்: ஆண்டவரே, அவரிடத்தில் நான் விசுவாசமாயிருக்கும்படிக்கு அவர் யார் என்றான்.

யோவான் 9:37 இயேசு அவனை நோக்கி: நீ அவரைக் கண்டிருக்கிறாய், உன்னுடனே பேசுகிறவர் அவர்தான் என்றார்.

யோவான் 9:38 உடனே அவன்: ஆண்டவரே, விசுவாசிக்கிறேன் என்று சொல்லி, அவரைப் பணிந்துகொண்டான்.

48. தேவாலயத்தில் உபதேசம்

(1) இயேசுவின் ஊழியம் - (மத் 5:17; 10:34; 20:28; லூக் 4:18; 12:49; 19:10; யோவான் 10:10,16; 12:46; அப் 10:38; தீத்து 2:14; எபி 4:14; 1பேதுரு 3:18; 1யோவான் 3:5,8)

யோவான் 9:39 அப்பொழுது இயேசு: காணாதவர்கள் காணும்படியாகவும், காண்கிறவர்கள் குருடராகும்படியாகவும், நியாயத்தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன் என்றார்.

"காணாதவர்கள் காணும்படியாகவும், காண்கிறவர்கள் குருடராகும்படியாகவும் நியாயத்தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன்" - என்று இயேசு கிறிஸ்து கூறினார். அவருடைய வருகையின் விளைவை இது குறிப்பிடுகிறது. இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பு உண்டு. அவருடைய வருகையின் நோக்கத்தை யோவான் 12:47 கூறுகிறது. மனுஷரை இரட்சிப்பதற்கே அவர் வந்தார். ஒருவன் இயேசு கிறிஸ்து கொடுக்கும் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளவில்லையென்றால் இறுதியில் அவன் நியாயத்தீர்ப்பை பெறுவான் (மத் 13:14-16; யோவான் 3:16-21)

(2) பரிசேயரின் கேள்வியும் இயேசுவின் பதிலும்

யோவான் 9:40 அவருடனேகூட இருந்த பரிசேயரில் சிலர் இவைகளைக் கேட்டபொழுது: நாங்களும் குருடரோ என்றார்கள்.

யோவான் 9:41 இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் குருடராயிருந்தால் உங்களுக்குப் பாவமிராது; நீங்கள் காண்கிறோம் என்று சொல்லுகிறபடியினால் உங்கள் பாவம் நிலைநிற்கிறது என்றார்.

"நீங்கள் குருடராயிருந்தால் உங்களுக்குப் பாவமிராது; நீங்கள் காண்கிறோம் என்று சொல்லுகிறபடியினால் உங்கள் பாவம் நிலைநிற்கிறது" என்று இயேசு கிறிஸ்து பரிசேயரிடம் கூறுகிறார். அவர்கள் அறியாமல் தவறு செய்தால் ஒருவேளை மன்னிக்கப்படலாம். ஆனால் பரிசேயரோ அறிந்தும் தவறு செய்கிறார்கள். இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள விரோதத்தினாலே அவரை ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணிக்கிறார்கள். ஆகையினால் அவர்களுடைய பாவம் நிலைநிற்கிறது.

10 அதிகாரம்

(3) நல்ல மேய்ப்பனைப் பற்றிய உவமை – (சங் 23; எபி 13:20)

யோவான் 10:1 மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஆட்டுத்தொழுவத்துக்குள் வாசல்வழியாய்ப் பிரவேசியாமல் வேறுவழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான்.

யோவான் 10:2 வாசல்வழியாய்ப் பிரவேசிக்கிறவனோ ஆடுகளின் மேய்ப்பனாயிருக்கிறான்.

யோவான் 10:3 வாசல்காக்கிறவன் அவனுக்குத் திறக்கிறான்; ஆடுகளும் அவன் சத்தத்துக்குச் செவிகொடுக்கிறது. அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக்கொண்டு போகிறான்.

யோவான் 10:4 அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான்; ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது.

யோவான் 10:5 அந்நியனுடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அந்நியனுக்குப் பின்செல்லாமல், அவனை விட்டோடிப்போம் என்றார்.

யோவான் 10:6 இந்த உவமையை இயேசு அவர்களுடனே சொன்னார்; அவர்களோ அவர் சொன்னவைகளின் கருத்தை அறியவில்லை.

"மெய்யாகவே மெய்யாகவே" (யோவான் 1:51)

"நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" - இயேசு கிறிஸ்து 135 இடங்களில் இந்த வாக்கியத்தைப் பயன்படுத்தியிருக்கிறார். புதிய ஏற்பாட்டில் மற்றவர்கள் இரண்டு இடங்களில் இந்த வாக்கியத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் (லூக்கா 3:8; அப் 5:38) இயேசு கிறிஸ்து இந்த வாக்கியத்தைக் கூறும்போது அவர் தமது அதிகாரத்தை உறுதிபண்ணுகிறார். அப் 5:38 ஆவது வசனத்தில் உள்ளது ஒரு ஆலோசனையாகும்.

"ஆட்டுத்தொழுவம்" - ஆடுகளை இரவு வேளைகளில் தங்க வைக்கும் இடம். மிருகங்களிடமிருந்து பாதுகாப்பாகத் தங்க வைப்பதற்கு ஆடுகளைத் தொழுவங்களில் அடைத்து வைப்பார்கள். தொழுவத்திற்கு ஒரு பாதுகாப்பான வாசலும் இருக்கும் (எண் 32:16-36; 1சாமு 24:3; 2நாளா 32:28; சங் 78:70)

கள்ளன் (thief) - κλέπτης - **kleptees** - 2812

ஆண்பால் பெயர்ச்சொல் - திருடன், கள்ளன் - (மத் 6:19; மத் 24:43; லூக்கா 12:33,39; யோவான் 10:1, 10; 1கொரி 6:10; 1பேதுரு 4:15), திருடன் **(a pilferer)** (யோவான் 12:6) இந்த வசனத்தில் கள்ளன் என்பது கள்ளப் போதகர்களைக் குறிக்கும். இவர்கள் மனுஷருக்கு உபதேசம் பண்ணுவதில் கவனம் செலுத்தாமல் தங்களுடைய ஆதாயத்திற்காக மற்றவர்களைக் குறைகூறுவார்கள். தேவையில்லாமல் சபிப்பார்கள்.

கொள்ளைக்காரன் (robber) - λῃστής - **leestees** - 3027

ஆண்பால் பெயர்ச்சொல் - கள்ளர், கொள்ளைக்காரன் - பலாத்காரமாகத் திருடுகிறவன் (யோவான் 10:8; யோவான் 18:40; 2கொரி 11:26) திருடன் **(thief)** என்று சில வசனங்களில் தவறுதலாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. (மத் 21:13; மத் 26:55; மத் 27:38,44; மாற்கு 11:17; மாற்கு 14:48; மாற்கு 15:27; லூக்கா 10:30,36; லூக்கா 19:46; லூக்கா 22:52)

10 அதிகாரம்

நல்ல மேய்ப்பனின் குணநலன்கள்

1 தனிநபர் ஞானம் - தேவனையும் அவருடைய வார்த்தையையும் நன்றாக அறிந்திருப்பார் (யோவான் 10:5; 2கொரி 5:17; யோவான் 3:5; கலா 5:16-26; 1கொரி 12)

2 தெய்வீக அழைப்பு - சுய மகிமைக்காகவோ உலக லாபத்திற்காகவோ ஊழியம் செய்யாமல் தெய்வீக அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து, ஊழியம் செய்கிறார் (யோவான் 10:2; அப் 13:3; 1கொரி 12:28; எபே 4:11; ரோமர் 11:29)

3 பிரதிஷ்டை - தேவனுடைய சித்தம் தேவனுடைய மகிமை ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து ஊழியம் செய்வார். காணாமல்போன ஆத்துமாக்களிடத்தில் கரிசனையோடு இருந்து, சபையின் நன்மைக்காக ஊழியம் செய்வார் (யோவான் 10:9-13; லூக்கா 19:10; அப் 10:28; 2கொரி 5:14-21; எபே 4:12)

4 தெய்வீக அபிஷேகம் - தன்னுடைய கல்வி, ஞானம், முயற்சி, திறமை ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் தராமல் தெய்வீக வழிநடத்துதலையும் உதவியையும் எதிர்பார்த்து ஊழியம் செய்வார் (லூக்கா 11:13; லூக்கா 24:49; யோவான் 7:37-39; யோவான் 14:12; 17:26; யோவான் 15:26; அப் 1:4-8; அப் 5:32; 1கொரி 2:4-10; 1கொரி 12:1-11; 2கொரி 3)

5 அன்பு - தன்னிடத்தில் பொறுப்பாக ஒப்படைக்கப்பட்டிருக்கும் ஆத்துமாவிற்கு உத்திரவாதம் கொடுப்பார். அவர்களை அன்போடு நேசித்துப் பராமரிப்பார். அவர்களுடைய பிரச்சனைகளைக் கரிசனையோடு கவனித்துக் கேட்பார் (யோவான் 10:3,9; அப் 20:26-35; எபே 1:15-19; எபே 3:13-21; 1தெச 2:4-13; 2தீமோ 4:1-5; எபி 13:7,17)

6 நல்ல முன்மாதிரி - ஆத்துமாக்களை வழிநடத்துவார். துரத்திவிடமாட்டார். ஆத்துமாக்களுக்குப் போஜனம் கொடுப்பார். ஆத்துமாக்களை அழித்துவிடமாட்டார். தான் உபதேசித்த பிரகாரம் ஜீவிப்பார் (யோவான் 10:3-4; 1கொரி 4:9-13; 2கொரி 4:8-18; 2கொரி 6:3-10; 1தீமோ 3:1-13; 1தீமோ 4:11-16; 2தீமோ 2; தீத்து 1)

7 தெய்வீக வெற்றி - வைராக்கியத்தோடும் பயமில்லாமலும் ஊழியம் செய்வார். தன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் ஆத்துமாக்களைப் பாதுகாத்துப் பராமரிப்பார். அவர்களுக்காக தியாகம் பண்ணுவார். அவர்களைச் சந்தித்து அவர்களுடைய தேவைகளை அறிந்து அவர்களுக்கு உதவி புரிவார் (யோவான் 10:9-18; மாற்கு 16:17-18; யாக் 5:14-16; லூக்கா 19:10; எசே 2:1-8; எசே 13:1-9; எசே 34)

"வாசலைக் காக்கிறவன்" - ஆட்டுத் தொழுவத்தில் ஒரு வாசல் இருக்கும். அதைக் காக்கிறவன் ஒருவன் இருப்பான். காலைவேளையில் அவன் தொழுவத்தின் வாசலைத் திறந்துவிட்டு, ஆடுகளை மேய்ச்சலுக்கு அனுப்புவான். அதுபோலவே மாலை வேளையில் மேய்ந்துவிட்டுத் திரும்ப வரும் ஆடுகளைத் தொழுவத்திற்குள் அடைத்து ஆடுகளைப் பாதுகாத்துக் கொள்வான்.

"அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக் கொண்டுபோகிறான்" கிழக்குத் தேசங்களில் ஆடுகளை மேய்க்கிறவன் ஒவ்வொரு ஆட்டையும் பேர்சொல்லி அழைப்பான். ஆடுகளும் தங்களுடைய பெயரைத் தெரிந்திருக்கும். கூப்பிடுகிறவனுடைய சத்தத்தையும் அறிந்து கொள்ளும். தன் பெயரைச் சொல்லிக் கூப்பிடும்போது அந்த ஆடு மேய்ப்பனிடம் வரும். ஆடுகள் மொத்தமாக இருந்தாலும், மேய்ப்பன் தனித்தனியே ஆடுகளின் பெயரைச் சொல்லிக் கூப்பிடும்போது அது தனித்தனியாக வரும்.

10 அதிகாரம்

"அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான்" - கிழக்குத் தேசங்களில் ஆடுகளை மேய்க்கிறவன் ஆடுகளுக்கு முன்பாக நடந்துபோவான். புல்லுள்ள இடங்கள் தண்ணீர் தடாகம் ஆகியவற்றைக் கண்டுபிடித்து, அங்கு தன்னுடைய ஆடுகளை வழிநடத்திச் செல்லுவான்.

"ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்கிறது" - ஆடுகள் எப்போதும் தங்கள் மேய்ப்பனின் பின்னாலேயே செல்லும். அந்நியரின் சத்தத்திற்குச் செவிகொடுக்காது.

"உவமை (wayside saying; proverb; a saying deviating from the usual manner of speaking) - இதற்கான கிரேக்க வார்த்தை "பரோமியா" (paroimia) என்பதாகும். இதற்கு இணையான மற்றொரு வார்த்தை "பழமொழி" இதன் கிரேக்கச் சொல் "பாரபோலே" (parabolee) என்பதாகும். இந்தக் கிரேக்கச் சொல் யோவான் சுவிசேஷத்தில் பயன்படுத்தப்படவில்லை. இந்த வசனத்திலும் யோவான் 16:25,29, 2பேதுரு 2:22 ஆகிய வசனங்களிலும் "பரோமியா" (paroimia) என்னும் சொல்லே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. யோவான் 10:1-6 ஆகிய வசனங்கள் உவமையின் விரிவாகவும் யோவான் 10:7-30 ஆகிய வசனங்கள் உபதேசம் பண்ணப்பட்டிருக்கும் சத்தியமாகும்.

உவமை (parable) - παροιμία paroimia - 3942

பெண்பால் பெயர்ச்சொல் - உவமை பழமொழி

பழமொழி (proverb) - παραβολή parabolee 3850

பெண்பால் பெயர்ச்சொல் - உவமை, ஒப்பனை, பழமொழி, பாவனை

இயேசு கிறிஸ்து உவமையாகக் கூறிய காரியங்கள்

1 நானே ஆடுகளுக்கு வாசல் (யோவான் 10:7,9; யோவான் 6:35)

2 எனக்கு முன்னே வந்து தங்களை மேசியா என்று சொல்லிக் கொண்டவர்கள் எல்லோரும் கள்ளரும், கொள்ளைக்காரருமாயிருக்கிறார்கள் (யோவான் 10:8)

3 நானே இரட்சிப்பின் வாசல் (யோவான் 10:9; யோவான் 3:15-20,36; யோவான் 5:24; யோவான் 14:6)

4 என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால் அவன் இரட்சிக்கப்படுவான் (யோவான் 10:9; யோவான் 8:32)

5 பிசாசு திருடவும், (லூக்கா 8:12), கொல்லவும் (kill) (எபி 2:14), அழிக்கவும் (destroy) (யோவான் 10:10; மாற்கு 9:22; லூக்கா 13:16; அப் 10:38; யோபு 2:7) வருகிறான்

6 நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அது பரிபூரணப்படவும் வந்தேன் (யோவான் 10:10; மத் 4:23, மத் 8:17, லூக்கா 4:18; லூக்கா 10:38, 1பேதுரு 2:24; எபி 2:14, ஏசா 53)

7 நானே நல்ல மேய்ப்பன். பிரதான மேய்ப்பன். மேய்ப்பர்களுக்குத் தலைவன் (யோவான் 10:11,14, 1பேதுரு 5:4; எபி 13:20). கிறிஸ்து சபையின் தலையாக இருக்கிறார் (எபே 1:20-23; எபே 5:25-32; கொலோ 1:18,24). இயேசு கிறிஸ்து சகல அதிகாரத்திற்கும், வல்லமைக்கும் தலைவராக இருக்கிறார் (கொலோ 2:10; 1பேதுரு 3:22)

8 நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான். அவை மரிக்க வேண்டிய இடத்தில் தாம் மரித்து அவற்றை இரட்சிக்கிறார் (யோவான் 10:11,15,17-18; ஏசா 53; 1பேதுரு 2:24)

10 அதிகாரம்

9 கூலிக்கு அமர்த்தப்பட்ட மேய்ப்பர்கள் ஆபத்து வரும்போது, ஆடுகளைப் பாதுகாக்காமல், விட்டு, ஓடிப்போய் விடுவார்கள். ஆடுகள் மரணத்திற்கும், அழிவிற்கும் பிரிவிற்கும் நேராகக் கடந்து செல்லும் (யோவான் 10:12-13; அப் 20:28-31; ரோமர் 16:17; 2கொரி 11:14-15; 1தீமோ 4; 2தீமோ 4)

10 நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டும் இருக்கிறேன் (யோவான் 10:14,27 யோவான் 17:1-3)

11 நான் பிதாவை அறிந்திருக்கிறேன் பிதா என்னை அறிந்திருக்கிறார் (யோவான் 10:15; யோவான் 7:29 யோவான் 8:55)

12 இந்தத் தொழுவத்திலுள்ளவைகள் அல்லாமல் (யூதர்கள்) வேறே ஆடுகளும் (புறஜாதியார்) எனக்கு உண்டு. அவைகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கும். அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும். (யோவான் 10:16; ரோமர் 10:12 1கொரி 12:13; கலா 3:28 எபே 1:10; எபே 2:11-22; எபே 3:6-15)

13 நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்து கொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார் (யோவான் 10:17 1பேதுரு 2:24; கொலோ 2:20)

14 ஒருவனும் என் ஜீவனை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளமாட்டான். நானே அதைக் கொடுக்கிறேன் (யோவான் 10:18; யோவான் 19:11; ஏசா 53:7)

15 நான் உயிர்த்தெழுவேன் (யோவான் 10:17,18; 1கொரி 15; மத் 28)

16 என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது. நான் அவைகளை அறிந்திருக்கிறேன். அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது. நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன். அவைகள் ஒருக்காலும் கெட்டுப் போவதில்லை. ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை (யோவான் 10:25-29; மத் 19:27-30 மாற்கு 10:28-31; லூக்கா 9:23 லூக்கா 18:28-30; கலா 6:7-8; ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13)

(4) நல்ல மேய்ப்பனைப் பற்றிய உவமையின் விளக்கம் -

யோவான் 10:7 ஆதலால் இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: நானே ஆடுகளுக்கு வாசல் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

யோவான் 10:8 எனக்கு முன்னே வந்தவர்களெல்லாரும் கள்ளரும் கொள்ளைக்காரருமாயிருக்கிறார்கள்; ஆடுகள் அவர்களுக்குச் செவிகொடுக்கவில்லை.

யோவான் 10:9 நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால் அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவான்.

யோவான் 10:10 திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான்; நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அது பரிபூரணப்படவும் வந்தேன்.

யோவான் 10:11 நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்.

யோவான் 10:12 மேய்ப்பனாயிராதவனும், ஆடுகள் தனக்குச் சொந்தமல்லாதவனுமான கூலியாள் ஓநாய் வருகிறதைக் கண்டு ஆடுகளை விட்டு ஓடிப்போகிறான்; அப்பொழுது ஓநாய் ஆடுகளைப்பீறி, அவைகளைச் சிதறடிக்கும்.

10 அதிகாரம்

யோவான் 10:13 கூலிக்காரன் கூலிக்காக வேலை செய்கிறவனானபடியால் ஓடிப்போகிறான், ஆடுகளுக்காக அவன் கவலைப்படான்

யோவான் 10:14 நானே நல்ல மேய்ப்பன்; பிதா என்னை அறிந்திருக்கிறது போலவும் நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோலவும்

யோவான் 10:15 நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்

யோவான் 10:16 இந்தத் தொழுவத்திலுள்ளவைகள் அல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவர வேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும் அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்.

யோவான் 10:17 நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார்

யோவான் 10:18 ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ள மாட்டான் நானே அதைக் கொடுக்கிறேன் அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக் கொண்டேன் என்றார்

தீர்க்கதரிசன எண் - 22

"நானே நல்ல மேய்ப்பன்; பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும் நான் பிதாவை அறிந்திருக்கிறது போலவும் நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன், ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்" (யோவான் 10:14-18) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

(5) யூதர்களுக்குள் பிரிவினை - (யோவான் 7:12,30,40)

யோவான் 10:19 இந்த வசனங்களினிமித்தம் யூதருக்குள்ளே மறுபடியும் பிரிவினையுண்டாயிற்று.

யோவான் 10:20 அவர்களில் அநேகர் இவன் பிசாசு பிடித்தவன் பயித்தியக்காரன் ஏன் இவனுக்குச் செவிகொடுக்கிறீர்கள் என்றார்கள்

யோவான் 10:21 வேறே சிலர் இவைகள் பிசாசுபிடித்தவனுடைய வசனங்களல்லவே. குருடருடைய கண்களைப் பிசாசு திறக்கக்கூடுமோ என்றார்கள்

"பிரிவினை" - இயேசு கிறிஸ்துவைக் குறித்து யூதருக்குள்ளே உண்டான மூன்றாவது பிரிவினை (யோவான் 7:43, யோவான் 9:16 யோவான் 10:19)

"பிசாசுபிடித்தவன்" - (யோவான் 8:48 மத் 12:24)

"பயித்தியக்காரன்" - வேதாகமத்தில் ஒருசிலரைப் பயித்தியக்காரன் என்று கூறும் சமயத்திலிருக்கிறார்கள் தாவீது (1சாமு 21:13-15); இயேசு (மாற்கு 3:21, யோவான் 10:20) ரோதை (அப் 12:15), தீர்க்கதரிசி (2இராஜா 9:11), பவுல் (அப் 26:11,24-25)

பயித்தியமாவதற்குக் காரணங்கள்

1 எதிரிகளின் ஆக்கிரமிப்பு **(invasion)** (எரே 25:16);

2 தன்னை உயர்த்துதல் **(self exaltation)** (எரே 29:26),

3 பாடுகள் **(sufferings)** (உபா 28:34),

4 ஒடுக்கப்படுதல் **(oppression)** (பிர 7:7);

5 பாவம் **(sin)** (எரே 51:7; ஓசி 9:7

10 அதிகாரம்

"அவர்களில் அநேகர்: இவன் பிசாசு பிடித்தவன், பயித்தியக்காரன் ஏன் இவனுக்குச் செவிகொடுக்கிறீர்கள் என்றார்கள் வேறே சிலர் இவைகள் பிசாசுபிடித்தவனுடைய வசனங்களல்லவே. குருடருடைய கண்களைப் பிசாசு திறக்கக்கூடுமோ என்றார்கள்" - பிசாசுகளும் அற்புதங்களைச் செய்யும் (மத் 24:24 2தெச 2:8-12 வெளி 13 வெளி 19:20; யாத் 7:10-12; யாத் 8:7,18-19)

47. தேவாலயத்தில் இயேசுவின் உபதேசம்

(1) யூதர்கள் இயேசுவிடம் விசாரிக்கிறார்கள்

யோவான் 10:22 பின்பு எருசலேமிலே தேவாலயப்பிரதிஷ்டைபண்டிகை நடந்தது, மார்காலமுமாயிருந்தது.

யோவான் 10:23. இயேசு தேவாலயத்தில் சாலொமோனுடைய மண்டபத்திலே உலாவிக் கொண்டிருந்தார்

யோவான் 10:24 அப்பொழுது யூதர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு, எது வரைக்கும் [redacted] ஆத்துமாவுக்குச் சந்தேகம் உண்டாக்குகிறீர் நீர் கிறிஸ்துவானால் எங்களுக்குத் தெளிவாய்ச் சொல்லும் என்றார்கள்

"தேவாலயப் பிரதிஷ்டை பண்டிகை" அந்தியோகஸ் எபிபேனஸ் (Antiochus Epiphanes தேவாலயத்தை மாசுபடுத்தினான் இது கி.மு. 164 ஆம் ஆண்டு நடைபெற்றது. இவன் தேவாலயத்தின் பலிபீடத்திலே ஒரு பெண் பன்றியைப் பலியிட்டு. அதன் இரத்தத்தையும், கொழுப்பையும் தேவாலயம் முழுவதும் தெளித்தான் அவன் செய்த அருவருப்பான காரியம் இரண்டு நாட்களாகத் தொடர்ந்து நடைபெற்றது. யூதர்கள் தேவாலயத்தைச் சுத்திகரிக்க விரும்பினார்கள் யூதாஸ் மக்கபேயஸ் (Judas Maccabaeus) தேவாலயத்தைச் சுத்திகரிப்பதற்கு ஒரு குழு அமைத்து சுத்திகரித்தான் இந்தச் சுத்திகரிப்பு யூதருடைய கூடாரப்பண்டிகைக்கு (யோவான் 7:2) மூன்றரை மாதங்களுக்குப் பின்பும், பஸ்கா பண்டிகைக்கு நான்கு மாதங்களுக்கு முன்பும் நடைபெற்றது இதைத் தேவாலய பிரதிஷ்டை பண்டிகை என்று யூதர்கள் அழைத்தார்கள் இயேசுகிறிஸ்து ஐந்து பண்டிகைகளில் கலந்து கொண்டதாக யோவான் சுவிசேஷத்தில் எழுதியிருக்கிறார் (யோவான் 2:13 யோவான் 5:1 யோவான் 7:2,10; யோவான் 10:22 யோவான் 12:1; யோவான் 13:1

பிரதிஷ்டை பண்டிகை (dedication) - ἐγκαίνια - enkainia - 1456

பால் வேறுபாடற்ற பெயர்சொல் - பிரதிஷ்டை பண்டிகை

புதிய (new) - καινός - kainos - 2537

பெயரடை - புது புதிய, நவமான புதிதான

"சாலொமோனுடைய மண்டபம்" - தேவாலயத்தின் வெளிப்பிரகாரம் புறஜாதியாருடைய பிரகாரம் எனவும் இது அழைக்கப்படுகிறது. யூதரும் புறஜாதியாரும் இங்கு தங்கியிருப்பது வழக்கம். இதன் கிழக்குப் பகுதியில் உள்ளது சாலொமோனுடைய மண்டபம் என்று அழைக்கப்பட்டது சாலொமோன் இந்த மண்டபத்தைக் கட்டினான மிகவும் அழகான சலவைக்கற்களால் இதை நேர்த்தியாகக் கட்டினான் நேபுகாத்நேச்சார் எருசலேம் பட்டணத்தைப் பிடித்தபோது சாலொமோன மண்டபம் மிகவும் அழகாக இருந்ததினால, அதை அழிக்காமல விட்டுவிட்டான்

"எதுவரைக்கும் எங்கள் ஆத்துமாவுக்குச் சந்தேகம் உண்டாக்குகிறீர், நீர் கிறிஸ்துவானால் எங்களுக்குத் தெளிவாய்ச் சொல்லும்" யூதருடைய ஆவல் அதிகமாகிறது. இயேசு கிறிஸ்துவை எப்படியாவது பிடிக்க வேண்டும் என்று தீவிரமாக இருக்கிறார்கள் இயேசு கிறிஸ்து தம்மை யூதருடைய ராஜா என்று அவர் வாயினாலேயே அறிக்கையிட வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள்

10 அதிகாரம்

அப்பேர்ப்பட்ட காரியம் விரைவில நடந்தால் இயேசுவைப் பிலாத்துவிடம் அழைத்துச் சென்று, அவர்மீது குற்றம் சுமத்தலாம் என்று ஆவலாகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள் அவர்களால பொறுமையாக இருக்க முடியவில்லை

(2) இயேசு தமது தெய்வத்துவத்தை வலியுறுத்துகிறார் – (யோவான் 9; 5:17-47; 14:9; 17:2)

யோவான் 10:25 இயேசு அவர்களுக்குப பிரதியுத்தரமாக: அதை உங்களுக்குச் சொன்னேன் நீங்கள் விசுவாசிக்க விலலை; என் பிதாவின் நாமத்தினாலே நான் செயகிற கிரியைகளே என்னைக் குறிததுச் சாட்சிகொடுககிறது.

யோவான 10:26 ஆனாலும், நான் உஙகளுக்கு சொனனபடியே நீஙகள என மநதையின ஆடுகளாயிராத படியினாலவிசுவாசியாமலிருககிறீாகள

யோவான 10:27 என் ஆடுகள என சத்தத்திறகுச செவிகொடுககிறது. நான அவைகளை அறிநதிருககிறேன அவைகள எனக்குப்பினசெல்லுகிறது.

யோவான் 10:28 நான் அவைகளுககு நித்தியஜீவனைக் கொடுககிறேன அவைகள ஒருக்காலும் கெட்டுப போவதிலலை. ஒருவனும் அவைகளை என கையிலிருநது பறித்துக கொள்வதுமிலலை

யோவான் 10:29 அவைகளை எனக்குத் தநத என பிதா எலலாரிலும் பெரியவராயிருக்கிறாா அவைகளை என் பிதாவின கையிலிருநது பறித்துக் கொளள ஒருவனாலும் கூடாது.

யோவான் 10:30 நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்றார்

"அதை உங்களுக்குச் சொன்னேன், நீங்கள விசுவாசிக்கவிலலை" - இயேசு கிறிஸ்து அவர்களிடம் "என் பிதாவின் நாமத்தினாலே நான் செயகிற கிரியைகளே என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறது' என்று கூறினார் ஆனால் அவர்கள் அதை விசுவாசிக்கவிலலை. இதன் மூலமாக இவர்கள் இயேசு கிறிஸ்துவின் ஆடுகளாக இருக்க முடியாது. (யோவான் 10:25-26)

"என் பிதாவின் நாமத்தினாலே" - தாம் செயத எலலாக் கிரியைகளையும் இயேசு கிறிஸது தமது பிதாவின் நாமத்தினாலேயே செயதார் (யோவான் 5:43)

நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்வதற்கு மனுஷர் தொடர்ந்து செய்ய வேண்டிய மூன்று காரியங்கள்

1. விசுவாசிக்க வேண்டும் - இயேசு கிறிஸதுவை முழுமனதுமாகவும் தொடர்ச்சியாகவும் விசுவாசிகக வேணடும (யோவான் 10:26 யோவான 6:47
2. இயேசு கிறிஸதுவின் சபதத்தைக் கேடக வேணடும அவருடைய வாாததைகளைக் கேடபவாகளாக மடடுமலலாமல அதனபடி செயகிறவாகளாகவும் இருக்க வேணடும. (யோவான 10:27 யாக 1:22 27 யாக் 2:19 26 யோவான 10:3)
3. இயேசு கிறிஸ்துவைப பினபற்ற வேணடும. ஆரம்பத்தில ஒருசில நாடகள மட்டும் இயேசு கிறிஸ்துவைப பினபற்றிவிட்டு, நினறு விடக்கூடாது அநுதினமும் பினபற்ற வேணடும் (யோவான 10:6, யோவான் 10:27, லூக்கா 9:23) தஙகளுக்குத் தேவனைத் தெரியும். ஆகையினால தஙகளுக்கு நித்திய ஜீவன உணடு எனறு யூதாகள் கூறினாாகள் ஆனால யூதாகளுடைய எணணம் தவறு என்று இயேசு கிறிஸ்து அறிவிக்கிறார் (யோவான் 5:37-47, யோவான் 8:54-55

"நித்திய ஜீவன்" - (யோவான் 6:27

10 அதிகாரம்

"நான் அவைகளுக்கு நித்தியஜீவனைக் கொடுக்கிறேன், அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை" - நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்வதற்கு யோவான் 10:26 ஆவது வசனத்தில் இயேசு கிறிஸ்து கூறியிருக்கும் நிபந்தனைகளை இவர்கள் கைக்கொள்வதினால் அவர்கள் கெட்டுப் போவதில்லை

பறித்துக்கொள் (pluck) - ἁρπάζω - harpazoo - 726

வினைச்சொல் - இழு பறித்துக்கொள், பிடித்துக்கொள், மீறு எடுத்துக்கொள் (take by force) (மத் 11:12; யோவான் 6:15, அப 23:10); (catch) (யோவான் 10:12); (catch away or up) (மத் 13:19; அப 8:39 2கொரி 12:2-4; 1தெச 4:17 வெளி 12:5); (pull) (யூதா 1:23), (pluck) (யோவான் 10:28-29)

"அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார் பிதாவானவர் மனுஷரை விடவும் தூதர்களை விடவும், பிசாசுகளை விடவும் எல்லாரை விடவும் பெரியவராக இருக்கிறார் எல்லாச் சத்துருக்களைவிட பிதாவானவர் பெரியவர் ஆகையினால் "அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது" என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார் நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்வதற்கு நாம் செய்ய வேண்டிய காரியம் எளிமையானது. நாம் தேவனிடத்தில் வரவேண்டும். அவருடைய இரட்சிப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். நம்முடைய ஜீவியத்தில் அவருடைய வல்லமை வெளிப்படுவதற்கு நாம் தடைபண்ணாமல், அனுமதிக்க வேண்டும். நம்முடைய சுயாதீன சித்தத்திற்குத் தேவன் யாரையும் பலவந்தம் பண்ணமாட்டார் பாவம் செய்கிறவர்கள் தங்களுடைய சுய விருப்பத்தின் பிரகாரமாகவும். சுய தீர்மானத்தின் பிரகாரமாகவுமே பாவம் செய்கிறார்கள் எடுத்துக்காட்டாக லூசிபர் (ஏசா 14:12-14; 1தீமோ 3:6) தேவதூதர்கள் (2பேதுரு 2:4, யூதா 1:6-7, ஆதாமிற்கு முன்பாக இருந்தவர்கள் (எரே 4:23-26; 2பேதுரு 3:5-7), பிசாசுகள் (மத் 8:29), ஆதாமும், ஏவாளும் (ஆதி 3, ரோமர் 5. 12-21)

"நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" - திரித்துவத்தில் ஒன்றாய் இருக்கிறோம் (யோவான் 17:11, 21-23). திரித்துவத்தில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் மூன்று தெய்வங்களாகப் பிரிந்திருப்பதில்லை. தானி 7:9-14 1யோவான் 5:7; அப 7:55; ரோமர் 8:34 1கொரி 8:6; 1கொரி 11:3; எபே 1:20-23 எபே 4:1-6; 1தீமோ 2:5; எபி 1:3; எபி 8:1 எபி 12:2; 1பேதுரு 3:22; வெளி 5:1-7)

(3) இயேசுவை கொல்வதற்கு முயற்சி - (மத் 26:3)

யோவான் 10:31 அப்பொழுது யூதர்கள் மறுபடியும் அவர்மேல் கல்லெறியும்படி கல்லுகளை எடுத்துக்கொண்டார்கள்

யோவான் 10:32 இயேசு அவர்களை நோக்கி: நான் என் பிதாவினாலே அநேக நற்கிரியைகளை உங்களுக்குக் காண்பித்தேன், அவைகளில் எந்தக் கிரியையினிமித்தம் என்மேல் கல்லெறிகிறீர்கள் என்றார்

யோவான் 10:33 யூதர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: நற்கிரியையினிமித்தம் நாங்கள் உன்மேல் கல்லெறிகிறதில்லை நீ மனுஷனாயிருக்க உன்னை தேவன் என்று சொல்லி, இவ்விதமாகத் தேவதூஷணஞ்சொல்லுகிறபடியினால் உன்மேல் கல்லெறிகிறோம் என்றார்கள்

"யூதர்கள் மறுபடியும் அவர்மேல் கல்லெறியும்படி கல்லுகளை எடுத்துக் கொண்டார்கள்" இயேசு கிறிஸ்து தேவதூஷணம் கூறுகிறார் என்று யூதர்கள் நினைத்தார்கள் நானும் பிதாவும் ஒன்றாய் இருக்கிறோம் என்று இயேசு கூறியதை அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஆகையினால் பழைய ஏற்பாட்டு நியாயப் பிரமாண முறைமையின்படி தேவதூஷணம் சொல்பவரைக் கல்லெறிவதற்காக யூதர்கள் கல்லுகளை எடுத்துக் கொண்டார்கள்

10 அதிகாரம்

"நான் என் பிதாவினாலே அநேக நற்கிரியைகளை உங்களுக்குக் காண்பித்தேன் அவைகளில் எந்தக் கிரியையினிமித்தம் என்மேல் கல்லெறிகிறீர்கள்" - என்று இயேசு கிறிஸ்து யூதர்களிடம் கேட்கிறார் இயேசு கிறிஸ்து வியாதிப்பஸ்தரைச் சொஸ்தமாக்கினார் பிசாசுகளைத் துரத்தினார் குஷ்டரோகிகளைச் சுத்தமாக்கினார் மரித்தோரை உயிரோடு எழுப்பினார் ஏராளமான ஜனங்களுக்குப் போஜனம் கொடுத்தார் சத்தியத்தை உபதேசம் பண்ணினார் இப்படிப்பட்ட நன்மைகளைச் செய்த தமக்கு அவர்கள் தரும் வெகுமதி இதுதானா என்று இயேசு கிறிஸ்து அவர்களிடம் கேட்கிறார்

(4) இயேசு தமது தெய்வத்துவத்திற்கு சாட்சி கூறுகிறார் - (யோவான் 14:14 5:17 47)

யோவான் 10:34 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: தேவர்களாயிருக்கிறீர்கள் என்று நான் சொன்னேன் என்பதாய் உங்கள் வேதத்தில் எழுதியிருக்கவில்லையா?

யோவான் 10:35 தேவவசனத்தைப் பெற்றுக்கொண்டவர்களைத் தேவர்கள் என்று அவர் சொல்லியிருக்க வேதவாக்கியமும் தவறாததாயிருக்க

யோவான் 10:36 பிதாவினால் பரிசுத்தமாக்கப்பட்டும் உலகத்தில் அனுப்பப்பட்டும் இருக்கிற நான் என்னை தேவனுடைய குமாரன் என்று சொன்னதினாலே தேவதூஷணஞ் சொன்னாய் என்று நீங்கள் சொல்லலாமா?

யோவான் 10:37 என் பிதாவின் கிரியைகளை நான் செய்யாதிருந்தால் நீங்கள் என்னை விசுவாசிக்க வேண்டியதில்லை

யோவான் 10:38 செய்தேனேயானால், நீங்கள் என்னை விசுவாசியாதிருந்தாலும், பிதா என்னிலும் நான் அவரிலும் இருக்கிறதை நீங்கள் அறிந்து விசுவாசிக்கும்படி அந்தக் கிரியைகளை விசுவாசியுங்கள் என்றார்

"தேவர்களாயிருக்கிறீர்கள்" - சங் 82:6 ஆவது வசனத்திலிருந்து மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. "வேதம்" (law) என்பது பரிசுத்த வேதாகமம் முழுவதையும் குறிப்பிடலாம். (யோவான் 12:34 யோவான் 15:25) சாதாரண நியாயாதிபதிகளையே தேவர்கள் என்று அழைத்தார்கள் ஆனால் இயேசு கிறிஸ்துவோ தேவனுடைய குமாரனாக இருக்கிறார் தேவனோடு ஒன்றாய் இருக்கிறார் அப்பேர்ப்பட்டவரை "தேவனாயிருக்கிறார்" என்று கூறுவதில் தவறொன்றும் இல்லை

48. இயேசுவைக் கொல்வதற்கு முயற்சி - (மத் 26:3)

யோவான் 10:39 இதினிமித்தம் அவர்கள் மறுபடியும் அவரைப் பிடிக்கத் தேடினார்கள், அவரோ அவர்கள் கைக்குத் தப்பி

யோவான் 10:40 யோர்தானுக்கு அக்கரையிலே முன்னே யோவான் ஞானஸ்நானங் கொடுத்துக் கொண்டிருந்த இடத்துக்குத் திரும்பிப்போய், அங்கே தங்கினார்

யோவான் 10:41 அநேகர் அவரிடத்தில் வந்து: யோவான் ஒரு அற்புதத்தையும் செய்யவில்லை ஆகிலும் இவரைக் குறித்து யோவான் சொன்னதெல்லாம் மெய்யாயிருக்கிறது என்றார்கள்

யோவான் 10:42 அவ்விடத்திலே அநேகர் அவரிடத்தில் விசுவாசமுள்ள [illegible]

"இதினிமித்தம் அவர்கள் மறுபடியும் அவரைப் பிடிக்கத் தேடினார்கள், அவரோ அவர்கள் கைக்குத் தப்பினார்" இயேசு கிறிஸ்துவை மறுபடியும் கைது பண்ணுவதற்குத் தேடினார்கள் (யோவான் 7:30, 32, 44) ஆனால் அவர் எப்படித் தப்பினார் என்று இங்கு கூறப்படவில்லை

யோவான் – தொகுப்புரை

10 அதிகாரம்

"யோர்தானுக்கு அக்கரையிலே" (யோவான் 1:28) எரிகோவிற்கு எதிரே இருக்கும் இந்தப் பகுதியிலே இயேசு கிறிஸ்து தங்கினார். இதன் பின்பு லாசருவை உயிருடன் எழுப்புவதற்காகப் பெத்தானியாவிற்குச் சென்றார். அதன்பின்பு அவர் எப்பிராயீம் என்னப்பட்ட ஊருக்குப் போனார். இது வனாந்தரத்திற்குச் சமீபமாய் இருந்தது (யோவான் 11:54).

"யோவான் ஒரு அற்புதத்தையும் செய்யவில்லை" ஆனாலும் அற்புதம் செய்யக்கூடிய வல்லமை யோவானிடம் இருந்தது. அவன் எலியாவின் ஆவியையும் பலத்தையும் உடையவன். எலியா அற்புதங்களைச் செய்ததுபோன்று யோவான் ஸ்நானனாலும் அற்புதங்களைச் செய்திருக்க முடியும். ஆனாலும் யோவான் ஒரு அற்புதமும் செய்யவில்லை.

11 அதிகாரம்

49. மரித்த லாசரு உயிருடன் எழும்புகிறான்

(1) சூழ்நிலையும் நோக்கமும்

யோவான் 11:1 மரியாளும் அவள் சகோதரியாகிய மார்த்தாளும் இருந்த பெத்தானியா கிராமத்திலுள்ள வனாகிய லாசரு என்னும் ஒருவன் வியாதிப் பட்டிருந்தான்

யோவான் 11:2 கர்த்தருக்குப் பரிமளதைலம் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தவள் அந்த மரியாளே. அவளுடைய சகோதரனாகிய லாசரு வியாதியாயிருந்தான்

யோவான் 11:3 அப்பொழுது அவனுடையசகோதரிகள், ஆண்டவரே நீர் சிநேகிக்கிறவன் வியாதி யாயிருக்கிறான் என்று சொல்ல அவரிடத்திற்கு ஆள் அனுப்பினார்கள்

யோவான் 11:4 இயேசு அதைக் கேட்ட பொழுது, இந்த வியாதி மரணத்துக்கு ஏதுவாயிராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது. தேவனுடைய குமாரனும் அதினால் மகிமைப்படுவார் என்றார்கள்

யோவான் 11:5 இயேசு மார்த்தாளிடத்திலும் அவளுடைய சகோதரியினிடத்திலும் லாசருவினிடத்திலும் அன்பாயிருந்தார்

யோவான் 11:6 அவன் வியாதியாயிருக்கிறதாக அவர் கேள்விப்பட்டபொழுது, தாம் இருந்த இடத்திலே பின்னும் இரண்டுநாள் தங்கினார்

வியாதியாயிரு (sick) - ἀσθενέω - astheneoo 770

வினைச்சொல் - வியாதியாயிரு வியாதியாயகிட, வியாதிப்பட்டிரு பிணியாளியாயிரு, பலவீனமாயிரு (to be weak) (2கொரி 11:21,29; 2கொரி 12:10), (impotent) (யோவான் 5:3,7), (sick) (யோவான் 4:46; யோவான் 11:1-6 அப 19:12)

"லாசரு" - மறுபெயர் எலெயேசர் (Eleazar) தேவன் உதவி புரிகிறார் என்பது இந்தப் பெயரின் பொருள் இந்த லாசருவும் லூக்கா 16:19-31 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் மனுஷனும் ஒரே நபரல்ல அவன் இந்த லாசரு மரிப்பதற்கு முன்பாகவே மரித்துவிட்டான்

"பெத்தானியா" (Bethany) - ஒலிவ மலையின் கிழக்குப் பகுதியிலுள்ள சமவெளியில் அமைந்துள்ள கிராமம். எருசலேமிலிருந்து இரண்டு மைல் தூரத்தில் உள்ளது. (யோவான் 11:18; லூக்கா 10:38-41) இயேசு கிறிஸ்து இங்கு ஒரு பண்டிகையில் கலந்திருக்கிறார் (மத் 26:6-13 யோவான் 12:1-9) இயேசுகிறிஸ்து எருசலேமிற்குள் பவனி சென்றபோது ஒரு கழுதையின்மீது ஏறிச்சென்றார் அந்தக் கழுதை இந்த ஊரிலிருந்துதான் கொண்டுவரப்பட்டது (மாற்கு 11:1-11)

"மரியாளும் அவள் சகோதரியாகிய மார்த்தாளும்" - இயேசு கிறிஸ்துவிற்குச் சேவை செய்தவர்கள் (லூக்கா 10:38-42, லூக்கா 12:2) இயேசுவின் நண்பர்கள் (யோவான் 11:5)

"கர்த்தருக்குப் பரிமளதைலம் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தவள் அந்த மரியாளே அவளுடைய சகோதரனாகிய லாசரு வியாதியாயிருந்தான்" - மார்த்தாளும், மரியாளும் லாசருவின் சகோதரர்கள் யோவான் 12:3-8 ஆகிய வசனங்களில் இயேசு கிறிஸ்துவை அபிஷேகம் பண்ணியவள் இந்த மரியாளே (மத் 26:6) இந்த நிகழ்ச்சிக்கு முன்பாக மரியாள் இயேசுவை அபிஷேகம் பண்ணினாள் என்று தெரியவில்லை இந்தச் சுவிசேஷத்தை எழுதின யோவான் இந்த நிகழ்ச்சி நடைபெற்று பல வருஷங்களுக்குப் பின்பே, இந்த விசேஷங்களை எழுதினார்

அனுப்பு (sent) - ἀποστέλλω - apostelloo 649

வினைச்சொல் அனுப்பு, அனுப்பிவிடு, துரத்திவிடு, ஆள் அனுப்புதல் (send a messenger)

11 அதிகாரம்

"வியாதியாயிருக்கிறான்" - மரிக்கும் தருவாயில் இருக்கிறான் இயேசு கிறிஸ்து எப்படியும் வந்து, வியாதியாக இருக்கும் லாசருவைக் குணப்படுத்துவார் என்று நினைத்தார்கள். ஆனால் இயேசு கிறிஸ்துவோ தமது மனதில் வேறுசில திட்டங்கள் வைத்திருந்தார். "அவன் வியாதியாயிருக்கிறதாக அவர் கேள்விப்பட்ட பொழுது, தாம் இருந்த இடத்திலே பின்னும் இரண்டுநாள் தங்கினார்" (யோவான் 11:6) என்று வாசிக்கிறோம்.

"இந்த வியாதி மரணத்துக்கு ஏதுவாயிராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது" - இயேசு கிறிஸ்து இந்த ஊரிலிருந்து 18 மைல் தூரத்தில் இருக்கிறார். லாசரு வியாதியாக இருக்கிறான். அவன் மரித்துப் போவான் என்பது இயேசுவிற்குத் தெரியும். இது தற்காலிக மரணமே. இந்த வியாதியினால் அவன் மரித்தாலும் இயேசு கிறிஸ்து மறுபடியும் அவனை உயிரோடு எழுப்புவார். இதனால் ஜனங்கள் தேவனை மகிமைப்படுத்துவார்கள்.

"தேவனுடைய குமாரனும் அதினால் மகிமைப்படுவார்" - லாசரு மரித்துப் போனான். அவனுடைய மரணத்தினால் இயேசு கிறிஸ்து மகிமையடையவில்லை. மரித்த லாசருவை இயேசு உயிரோடு எழுப்பினார். இதனால் எல்லோரும் தேவனை மகிமைப்படுத்தினார்கள். இன்றைய தினத்திலும் கூட தேவன் வியாதியினாலும் மரணத்தினாலும் மகிமையடைவதில்லை. வியாதி குணமாவதினாலும் மரணத்திலிருந்து மனுஷர் உயிர்த்தெழுவதினாலுமே தேவன் மகிமையடைகிறார். ஒரு மனுஷன் வியாதியாக இருக்கும்போது, இயேசு கிறிஸ்து அவனுடைய வியாதியைக் குணப்படுத்தி, மகிமையடைவதற்கு வாய்ப்பு இருக்கிறது. பிணியாளிகளுக்கு மட்டுமே வைத்தியன் தேவை. ஒருவன் சுகமாக இருக்கும் பொழுது, அவனைக் குணப்படுத்த வேண்டிய அவசியமில்லை.

"அவன் வியாதியாயிருக்கிறதாக அவர் கேள்விப்பட்ட பொழுது, தாம் இருந்த இடத்திலே பின்னும் இரண்டுநாள் தங்கினார்" இயேசு கிறிஸ்து பின்னும் இரண்டு நாள் தங்கினதினால் அவருக்கு மார்த்தாள்மீதும் மரியாள்மீதும், லாசருமீதும் அன்பில்லை என்று கூற முடியாது. தெய்வீக வல்லமை லாசருவினிடத்தில் பரிபூரணமாகக் கிரியை நடப்பிக்க வேண்டும் என்பதற்காகவே இயேசு கிறிஸ்து பின்னும் இரண்டுநாள் தங்கினார்.

(2) யூதேயாவிற்கு மறுபடியும் பிரயாணம் - (யோவான் 10:40)

யோவான் 11:7 அதன்பின்பு அவர் தம்முடைய சீஷரை நோக்கி: நாம் மறுபடியும் யூதேயாவுக்குப் போவோம் வாருங்கள் என்றார்.

யோவான் 11:8 அதற்கு சீஷர்கள்: ரபீ இப்பொழுது தான் யூதர் உம்மைக் கல்லெறியத்தேடினார்களே, மறுபடியும் நீர் அவ்விடத்திற்குப் போகலாமா என்றார்கள்.

யோவான் 11:9 இயேசு பிரதியுத்தரமாக: பகலுக்குப் பன்னிரண்டு மணிநேரம் இல்லையா? ஒருவன் பகலிலே நடந்தால் அவன் இந்த உலகத்தின் வெளிச்சத்தைக் காண்கிறபடியினால் இடறமாட்டான்.

யோவான் 11:10 ஒருவன் இரவிலே நடந்தால் தன்னிடத்தில் வெளிச்சம் இல்லாதபடியினால் இடறுவான் என்றார்.

யோவான் 11:11 இவைகளை அவர் சொல்லியபின்பு அவர்களை நோக்கி: நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான், நான் அவனை எழுப்பப்போகிறேன் என்றார்.

யோவான் 11:12 அதற்கு அவருடைய சீஷர்கள்: ஆண்டவரே, நித்திரையடைந்திருந்தால் சுகமடைவான் என்றார்கள்.

யோவான் 11:13 இயேசுவானவர் அவனுடைய மரணத்தைக்குறித்து அப்படிச் சொன்னார்; அவர்களோ நித்திரைசெய்து இளைப்பாறுகிறதைக்குறித்துச் சொன்னாரென்று நினைத்தார்கள்.

யோவான் 11:14 அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: லாசரு மரித்துப் போனான் என்று வெளிப்படையாய்ச் சொல்லி;

யோவான் - தொகுப்புரை

11 அதிகாரம்

யோவான் 11:15 நான் அங்கே இராததினால் நீங்கள் விசுவாசமுள்ளவர்களாகிறதற்கு ஏதுவுண்டென்று உங்கள் நிமித்தம் சந்தோஷப்படுகிறேன்; இப்பொழுது அவனிடத்திற்குப் போவோம் வாருங்கள் என்றார்

யோவான் 11:16 அப்பொழுது திதிமு என்னப்பட்ட தோமா மற்றச் சீஷர்களை நோக்கி, அவரோடேகூட மரிக்கும்படி நாமும் போவோம் வாருங்கள் என்றான்

"இப்பொழுது தான் யூதர் உம்மைக் கல்லெறியத்தேடினார்களே" - ஒருசில வாரங்களுக்கு முன்பு தான் யூதர்கள் இயேசுவைக் கல்லெறியத் தேடினார்கள் (யோவான் 10:31-42)

"நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான்" - மரணமடைந்திருக்கிறான் என்று பொருள்படும். (யோவான் 11:13-14; 1தெச 4:13-17; 1தெச 5:6-10; அப் 7:60; 1கொரி 11:30; 1கொரி 15:18,20)

"லாசரு மரித்துப்போனான்" - லாசரு வியாதியாக இருக்கிறான் என்று தம்மிடத்தில் ஒருவன் வந்து சொன்னபோதே அவன் மரித்துவிட்டான் என்பது இயேசுவிற்குத் தெரியும். இயேசு கிறிஸ்து ஆவிக்குரிய வரத்தினால் எல்லாக் காரியங்களையும் தெரிந்து வைத்திருக்கிறார்

"நான் அங்கே இராததினால் நீங்கள் விசுவாசமுள்ளவர்களாகிறதற்கு ஏதுவுண்டென்று உங்கள் நிமித்தம் சந்தோஷப்படுகிறேன்" - இயேசு கிறிஸ்து வியாதியாக இருந்த லாசருவோடு இல்லை. அதனால் அவன் வியாதி குணமாகவில்லை. மரித்துவிட்டான். இப்பொழுது இயேசு கிறிஸ்து அங்கு போகிறார். மரித்த லாசருவை உயிரோடு எழுப்புவார். இதைப் பார்க்கும் இயேசு கிறிஸ்துவின் சீஷர்களுக்கு அவரே மேசியா என்பது நிரூபிக்கப்படும். இதற்காக இயேசு அங்கேயிராததினால் சந்தோஷப்படுகிறார்

"திதிமு என்னப்பட்ட தோமா" (Didymus) - பன்னிரெண்டு சீஷர்களில் ஒருவன் (மத் 10:3; மாற்கு 3:18; லூக்கா 6:15; அப் 1:13-14). இயேசு கிறிஸ்துவிடம் கேள்வி கேட்டவன் (யோவான் 14:5). இயேசு உயிர்த்தெழுந்த பின்பு அவரைக் கண்டவன் (யோவான் 20:24-29; யோவான் 21:1-2). யூதர்கள் புறஜாதியார் ஊருக்குப் போகும்போது தங்களுடைய பெயரைக் கிரேக்கம் அல்லது லத்தீன் மொழியில் மாற்றிக் கொள்வார்கள். இதன் மூலமாகக் கிரேக்கரோடும், ரோமரோடும் தாங்கள் எளிதாகப் பழகலாம் என்று நினைத்தார்கள். இந்தப் பிரகாரமாகவே தோமா தன் பெயரை திதிமு என்று அழைக்கிறான்

"அவரோடேகூட மரிக்கும்படி நாமும் [illegible] வாருங்கள்" - இயேசு லாசருவின்மீது அன்பாக இருந்தார். எருசலேமில் தமக்குச் சத்துருக்கள் இருக்கிறார்கள் என்பது அவருக்குத் தெரியும். அவர்கள் தம்மைக் கொலைசெய்ய வகைபார்ப்பார்கள் என்பதையும் இயேசு கிறிஸ்து அறிந்திருக்கிறார். என்றாலும் லாசருவின்மீதுள்ள அன்பினாலும் பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற வேண்டும் என்னும் காரணத்தினாலும் ஆபத்துகள் இருக்கின்றபோதிலும் இயேசு கிறிஸ்து பெத்தானியாவிற்குப் போகிறார். எருசலேமிற்குப் போனால் இயேசு கிறிஸ்துவை நிச்சயமாகக் கொன்றுவிடுவார்கள் என்று தோமா நினைத்தான். அவரைக் கொல்லும்போது அவருடைய சீஷர்களையும் கொல்வதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் அவரோடேகூட மரிக்கும்படி நாமும் போவோம் வாருங்கள் என்று தோமா மற்றச் சீஷர்களைக் கூப்பிடுகிறான்

(3) இயேசுவும் மார்த்தாளும்

யோவான் 11:17 இயேசு வந்தபோது அவன் கல்லறையில் வைக்கப்பட்டு நாலுநாளாயிற்றென்று கண்டார்

யோவான் 11:18 பெத்தானியா ஊர் எருசலேமுக்குச் சமீபமாய் ஏறக்குறைய இரண்டுமைல் தூரத்திலிருந்தது.

11 அதிகாரம்

யோவான் 11:19 யூதரில் அநேகர் மார்த்தாள் மரியாள் என்பவர்களுடைய சகோதரனைக் குறித்து அவர்களுக்கு ஆறுதல் சொல்லும்படி அவர்களிடத்தில் வந்திருந்தார்கள்

யோவான் 11:20 இயேசு வருகிறார் என்று மார்த்தாள் கேள்விப்பட்டபோது அவருக்கு எதிர்கொண்டுபோனாள். மரியாளோ வீட்டிலே உட்கார்ந்திருந்தாள்

யோவான் 11:21 மார்த்தாள் இயேசுவினிடத்தில்வந்து: ஆண்டவரே நீர் இங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான்

யோவான் 11:22 இப்பொழுதும் நீர் தேவனிடத்தில் கேட்டுக்கொள்ளுவதெதுவோ அதை தேவன் உமக்குத் தந்தருளுவாரென்று அறிந்திருக்கிறேன் என்றாள்

யோவான் 11:23 இயேசு அவளை நோக்கி: உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான் என்றார்

யோவான் 11:24 அதற்கு மார்த்தாள் உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசிநாளிலே அவனும் உயிர்த்தெழுந்திருப்பான் என்று அறிந்திருக்கிறேன் என்றாள்

யோவான் 11:25 இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்

யோவான் 11:26 உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான் இதை விசுவாசிக்கிறாயா என்றார்

யோவான் 11:27 அதற்கு அவள்: ஆம். ஆண்டவரே, நீர் உலகத்தில் வருகிறவரான தேவகுமாரனாகிய கிறிஸ்து என்று நான் விசுவாசிக்கிறேன் என்றாள்

"இயேசு வந்தபோது அவன் கல்லறையில் வைக்கப்பட்டு நாலுநாளாயிற்றென்று கண்டார்" - லாசரு மரித்து நாலுநாள் ஆயிற்று. இயேசு கிறிஸ்து தாம் இருந்த ஊரில் இரண்டு நாள் தங்கியிருந்தார் லாசருவின் வியாதியைப் பற்றி செய்தி சொல்ல வந்தவன் ஒரு நாள் பிரயாணம் பண்ணினான் இயேசு கிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் பெத்தானியாவிற்குப் பிரயாணம் பண்ணிவர ஒருநாளாயிற்று ஆகமொத்தம் லாசரு மரித்து நாலுநாளாயிற்று. யூதர்கள் தங்களுடைய பாரம்பரியத்தின் பிரகாரம் மரித்தவர்களுடைய ஆவி அவர்களுடைய சரீரத்தை மூன்றுநாள் சுற்றிவரும் என்று நம்புகிறார்கள் இந்த மூன்றுநாட்களும் துக்கம் அனுசரிப்பார்கள் அழுது புலம்புவார்கள் ஒருவேளை அந்த ஆவி இவர்களுடைய அழுகைக்கு இரக்கப்பட்டு பரிதாபப்பட்டு மறுபடியும் அந்த சரீரத்திற்குள் வந்துவிடும் இறந்தவர் உயிர்பிழைத்தார் என்பது யூதமார்க்கத்துத் தலைவர்களுடைய நம்பிக்கை நான்காவது நாளில் மரித்தோரின் உடல் நாற்றமெடுக்கும் அப்போது அந்த நபருடைய ஆவி அவருடைய கல்லறையை விட்டு புறப்பட்டுப் போய்விடும். இதனால் நான்காம் நாளில் மரித்தோரின் உற்றார் உறவினர் எல்லோரும் தங்கள் மார்புகளில் அடித்துக் கொண்டு மிகுந்த சத்தமிட்டு அழுவார்கள் சில இடங்களில் நான்கு நாட்களுக்கும் ஏழு நாட்களுக்கும் இவ்வாறு துக்கம் அனுசரிப்பார்கள் (ஆதி 27:41)

"யூதரில் அநேகர் மார்த்தாள் மரியாள் என்பவர்களுடைய சகோதரனைக் குறித்து அவர்களுக்கு ஆறுதல் சொல்லும்படி அவர்களிடத்தில் வந்திருந்தார்கள்" இறந்தவரின் உறவினருக்கு ஆறுதல் சொல்வதற்காக உற்றார் உறவினர், எல்லோரும் அவர்களுடைய வீட்டிற்கு வருவது வழக்கம். பலநாட்களுக்கு இவ்வாறு வந்துபோவார்கள் இறந்தவரின் உறவினர்கள் கல்லறையிலிருந்து திரும்பி வரும்போது ஆறுதல் சொல்லும்படி வந்திருக்கிறவர்கள் வரிசையாக நின்று அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளைக் கூறுவார்கள் இதன் பின்பும், பல நாட்களுக்கு அவர்களுடைய உற்றார் உறவினர்கள் அந்த வீட்டிற்கு வந்து ஆறுதல் கூறுவது வழக்கம். (யோவான் 11:31)

11 அதிகாரம்

ஆறுதல் சொல் (comfort)

παραμυθέομαι

paramutheomai - 3888

வினைச்சொல் - ஆறுதல் சொல தேற்று (to speak tenderly)

"மரியாளோ வீட்டிலே உட்கார்ந்திருந்தாள்" - துக்க வீட்டில் உள்ளவர்கள் தரையில் உட்கார்ந்திருப்பது அக்காலத்து வழக்கம் (எஸ்றா 9:3-4; நெகே 1:4; சங் 137:1; ஏசா 47:1; லூக்கா 1:79; மத் 27:61)

"ஆண்டவரே நீர் இங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான் இப்பொழுதும் நீர் தேவனிடத்தில கேட்டுக்கொள்ளுவதெதுவோ அதை தேவன உமக்குத் தந்தருளுவாரென்று அறிந்திருக்கிறேன்" - என்று மார்த்தாள இயேசுவினிடத்தில வந்து கேட்கிறாள இயேசு கிறிஸது ஏறகெனவே பல அறபுதஙகளைச செய்திருககிறார் மரித்தோரை உயிரோடே எழுபபியிருககிறார் வியாதியஸ்தரைச் சொஸதமாககியிருககிறார் இவையெல்லாவறறையும் மார்த்தாள ஏறகெனவே கேளவிபபட டிருககிறாள ஆகையினால இயேசு கிறிஸதுவிடம் விசுவாசத்தோடு தமது பிரசசனையைக கூறுகிறாள இயேசு கிறிஸதுவும் தமமுடைய பிளளைகளுக்கு இப்படிப்பட்ட வாககுத்தத்தத்தைக்கூறியிருக்கிறார் (மத் 7:7-11; மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24, லூககா 11:1-13, லூக்கா 18:1-14, யோவான 14:1-15, யோவான 15:7,16, யோவான 16:23-26) மார்த்தாளுக்கு இயேசு கிறிஸ்துவின வலலமையைப பற்றித் தெரியும் அவருடைய தெயவீக ஆற்றலில் மார்த்தாள் நம்பிக்கை வைக்கிறாள்

"உயிர்த்தெழுதல நடக்கும் கடைசி நாளிலே அவனும் உயிர்த்தெழுந்திருப்பான்" - (யோவான் 6:39,40,44,54; யோவான் 12:48; தானி 12:2,13)

"நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்" - (யோவான் 6:35)

"ஜீவன்" - இயேசு கிறிஸ்துவில் எல்லா ஜீவனும் இருக்கிறது (1யோவான் 5:11,12; யோவான் 1:4; யோவான் 3:15-20,36; யோவான் 5:24, யோவான் 14:6)

"என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" - இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களும் சரீரப்பிரகாரமாக மரித்துப போவார்கள் (எபி 9:27) ஆனாலும் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுதலின் நாளிலே தமமுடைய பிள்ளைகளை உயிரோடே எழுப்புவார் அவர்கள் நித்திய காலமாக ஜீவிப்பார்கள் (1கொரி 15:20-23,51-58; 1தெச 4:13-18)

"உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்" - இம்மையில் இயேசு கிறிஸதுவில விசுவாசம வைத்திருக்கிறவன் மறுமையில நித்திய ஜீவனைப பெற்றுக் கொள்வான் (யோவான் 6:27)

"இதை விசுவாசிக்கிறாயா" - இயேசு கிறிஸது மார்த்தாளிடம் உயிர்த்தெழுதலைப பற்றி தாம கூறுவதை விசுவாசிக்கிறாயா என்று கேட்கிறார் இதை விசுவாசிக்கிறவர்கள இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரன என்றும், மேசியா என்றும விசுவாசிப்பார்கள் ஆனால மார்த்தாளுடைய சிந்தையில அவளுடைய சகோதரனாகிய லாசருவின மரணமே நிறைந்திருக்கிறது. உலகப்பிரகாரமான காரியம அவளை ஆட்கொள்கிறது ஆவிக்குரிய காரியங்களை அவளால தரிசிக்க முடியவில்லை

(4) இயேசுவும் மரியாளும் - லூக் 10:38

யோவான் 11:28 இவைகளைச் சொன்ன பின்பு, அவள் போய், தன சகோதரியாகிய மரியாளை இரகசியமாய் அழைத்து, போதகர் வந்திருக்கிறார் உன்னை அழைக்கிறார் என்றாள்

யோவான் 11:29 அவள் அதைக் கேட்டவுடனே, சீக்கிரமாய் எழுந்து, அவரிடத்தில வந்தாள்

யோவான் 11:30 இயேசு இன்னும் கிராமத்துக்குள் வராமல, மார்த்தாள் தம்மைச் சந்தித்த இடத்திலே இருந்தார்

11 அதிகாரம்

யோவான் 11:31 அப்பொழுது, வீட்டிலே அவளுடனேகூட இருந்து அவளுக்கு ஆறுதல் சொல்லிக்கொண்டிருந்த யூதர்கள் மரியாள் சீக்கிரமாய் எழுந்துபோகிறதைக் கண்டு அவள் கல்லறையினிடத்தில் அழுகிறதற்குப் போகிறாள் என்று சொல்லி, அவளுக்குப் பின்னே போனார்கள்.

யோவான் 11:32 இயேசு இருந்த இடத்தில் மரியாள் வந்து, அவரைக் கண்டவுடனே அவர் பாதத்தில் விழுந்து, ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான் என்றாள்.

"இவைகளைச் சொன்னபின்பு, அவள் போய், தன் சகோதரியாகிய மரியாளை இரகசியமாய் அழைத்து, போதகர் வந்திருக்கிறார், உன்னை அழைக்கிறார் என்றாள்" - இயேசு கிறிஸ்து மரியாளையும் தம்மிடத்தில் வருமாறு அழைக்கிறார். அவளுடைய சகோதரனைத் தாம் உயிரோடு எழுப்பப்போவதை அவளும் காண வேண்டுமென்று இயேசு விரும்புகிறார். அவள் வருவது வரைக்கும், இயேசு கிறிஸ்து சிறிதுநேரம் காத்திருக்கிறார். (யோவான் 11:28-38)

"இயேசு இன்னும் கிராமத்துக்குள் வராமல், மார்த்ாள் தம்மைச் சந்தித்த இடத்திலே இருந்தார்" யூதருடைய கல்லறைத் தோட்டம் கிராமங்களுக்கு வெளியே இருக்கும்.

"அவள் கல்லறையினிடத்தில் அழுகிறதற்குப் போகிறாள் என்று சொல்லி, அவளுக்குப் பின்னே போனார்கள்" ஒருவர் மரித்துப்போனால் நான்கு நாட்களுக்குத் துக்கம் அனுசரிப்பார்கள். அடிக்கடி கல்லறைக்குப் போய் அழுவார்கள். உறவினர் கல்லறைக்குப் போகும்போது உற்றார் உறவினரும் அவர்களோடு கூடவே போவார்கள். அவர்களை தனியாக எங்கும் அனுப்ப மாட்டார்கள். (யோவான் 11:17)

இயேசுகிறிஸ்துவிற்கு முன்பாக அவருடைய பாதத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கியவர்கள்

1. சாஸ்திரிகள் (மத் 2:11)
2. யவீரு (மாற்கு 5:22)
3. சொஸ்தமான ஸ்திரீ (மாற்கு 5:33)
4. சீரோபேனிக்கேயா ஸ்திரீ (மாற்கு 7:25)
5. பேதுரு (லூக்கா 5:8)
6. குஷ்டரோகி (லூக்கா 5:12)
7. கதரேனர் (லூக்கா 8:28)
8. சமாரியர் (லூக்கா 17:16)
9. மரியாள் (யோவான் 11:32)

"நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான்" - தன் சகோதரன் மரிப்பதற்கு முன்பாக இயேசு கிறிஸ்து வந்திருந்தால் அவர் அவனுடைய வியாதியை சொஸ்தமாக்கியிருப்பார் என்று மரியாள் நினைக்கிறாள். லாசருவை உயிரோடு எழுப்ப வேண்டுமென்று அவள் விண்ணப்பம் பண்ணவில்லை.

(5) இயேசுவின் மனதுருக்கம்

யோவான் 11:33 அவள் அழுகிறதையும் அவளோடேகூட வந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்டபோது ஆவியிலே கலங்கித் துயரமடைந்து,

யோவான் 11:34 அவனை எங்கே வைத்தீர்கள் என்றார். ஆண்டவரே, வந்து பாரும் என்றார்கள்.

யோவான் 11:35 இயேசு கண்ணீர் விட்டார்.

யோவான் 11:36 அப்பொழுது யூதர்கள்: இதோ, இவர் அவனை எவ்வளவாய்ச் சிநேகித்தார் என்றார்கள்.

11 அதிகாரம்

"அவள் அழுகிறதையும் அவளோடே கூட வந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்டபோது ஆவியிலே கலங்கித் துயரமடைந்தார்" - இயேசு கிறிஸ்து ஆவியிலே கலங்கி (groaned) துயரமடைந்தார் (troubled) கலங்குதல் என்பதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்க வார்த்தை "எம்பிரிமயோமாய" (embrimaomai) என்பதாகும் இதற்கு கோபப்படுதல் என்று பொருள் (anger; be very angry, moved with indignation) (யோவான் 11.33,38 மத் 9.30; மாற்கு 1.43; மாற்கு 14.5) சாத்தான் லாசருவிற்கு வியாதியைக் கொண்டுவந்து அவனைக் கொன்றுபோட்டான் சாத்தானின் கிரியையினால் அங்கு ஏற்பட்ட துக்கத்திற்காக இயேசு கிறிஸ்து சாத்தானமீது கோபப்படுகிறார் இதன்பின்பு அவர் தமது ஆவியில துயரமடைகிறார் துயரமடைவதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்கச் சொல "தாராசோ" (tarassoo). (to stir, agitate in mind) சாத்தானுடைய மரணத்தின வல்லமையினால் இயேசு கிறிஸ்து சாத்தானின அநதகாரச சக்திகளோடுபோராடுகிறார் (எபி 2:14) இநத வாத்தை மத் 14:26; மாற்கு 6:50, லூக்கா 1:12; யோவான 5:4,7 யோவான 12:27; யோவான 14:1 ஆகிய வசனஙகளிலும் பயன்படுததப்பட்டிருக்கிறது.

கலங்கு (groaned)

ἐμβριμάομαι

embrimaomai - 1690

வினைச்சொல் - கண்டிப்பாய்க் கட்டளையிடு, கண்டிப்பாய் சொல்லு. கலங்கு

துயரமடை (troubled) - ταράσσω - tarassoo - 5015

வினைச்சொல் - கலக்கமடை, துயரமடை

"இயேசு கண்ணீா விட்டார்" (Jesus wept) - வேதாகமத்தில மிகச்சிறிய வசனம். ஆயினும் மிகுந்த வல்லமையுள்ள வசனம். இயேசு கிறிஸ்துவின் மானிடத் தன்மையில் காணப்படும் இரக்கத்தையும், மனதுருக்கத்தையும் இந்த வசனம அளவில்லாமல வெளிப்படுத்துகிறது. இயேசு கிறிஸ்து தமது பிள்ளைகள் எல்லோரையும் சிநேகிதராகப பாவிக்கிறார் ஒரு சிநேகிதர் மீது அவர் எவ்வளவு பாசமாக இருக்கிறார் என்பதை இந்த வசனம் விளக்குகிறது. லாசரு மரித்ததினால் அவருடைய உறறார் உறவினரும் அழுகிறார்கள் அவர்களோடு சேர்ந்து இயேசு கிறிஸ்துவும அழுதார் லாசருமீது இயேசுவிற்கு இருந்த அன்பையும் மனதுருக்கத்தையும் அவருடைய கிரியை வெளிபபடுத்திக் காண்பிக்கிறது (யோவான் 11 33-36 ஏசா 53.3; எபி 2:16-18 எபி 4:15 ரோமர் 12:15) இயேசு கிறிஸ்து அழுததற்கு வேறொரு காரணமும இருக்கலாம் பாவமும் மரணமும பயங்கரமானது அவர்கள் இயேசு கிறிஸ்துவைத் தங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளவில்லை யென்றால நித்தியகாலமாகப பாடுகளை அனுபவிப்பார்கள யூதமார்க்கத்தார் தம்மை மேசியாவாக ஏற்றுக கொள்ளமாட்டார்கள இதனால அந்த தேசமே அழிக்கப்படும என்பதை நினைத்து இயேசு அழுதிருக்கலாம. (யோவான் 11:46-54 லூக்கா13:34-35 லூக்கா19:41; மத் 23:37-39

(6) இயேசு லாசருவை அடக்கம் பண்ணிய கல்லறையினிடத்திற்கு வருகிறார்

யோவான 11:37 அவாகளில் சிலா குருடனுடைய கணகளைத் திறந்த இவர், இவனைச் சாகாமலிருக்கபபணணவும் கூடாதா எனறாாகள

யோவான் 11:38 அப்பொழுது இயேசு மறுபடியும் தமக்குளளே கலஙகிக் கல்லறையினிடத்திற்கு வந்தார் அது ஒரு குகையாயிருந்தது, அதினமேல் ஒரு கல் வைக்கப்பட்டிருந்தது.

"குருடனுடைய கணகளைத் திறந்த இவர், இவனைச் சாகாமலிருக்கபபணணவும கூடாதா" - எனறு அஙகிருந்தவாகளில் சிலர் கேட்டாாகள நிச்சயமாகவே இயேசு கிறிஸதுவால் அதைச் செயய முடியும. குருடனுடைய கண்களைத் திறந்ததைவிட மிகப்பெரிய அற்புதத்தை இயேசு கிறிஸது இன்னும் சிறிது நேரத்தில் செய்யப் போகிறாா அதை அவாகள் அறியாமல இவ்வாறு கூறுகிறார்கள்

11 அதிகாரம்

"அப்பொழுது இயேசு மறுபடியும் தமக்குள்ளே கலங்கி கல்லறையினிடத்திற்கு வந்தார்" - யோவான் 11:38

"அது ஒரு குகையாயிருந்தது. அதின்மேல் ஒரு கல் வைக்கப்பட்டிருந்தது" - கற்பாறைகளிலும் குகைகளிலும் யூதர்கள் கல்லறைகளைச் செதுக்கி வைப்பார்கள் பெரிய கல்லை எடுத்து குகையின் வாசலில் சாய்வாக வைத்து கல்லறையை மூடிவைப்பார்கள்

(7) மார்த்தாளின் அவிசுவாசம்

யோவான் 11:39 இயேசு: கல்லை எடுத்துப் போடுங்கள் என்றார். மரித்தவனுடைய சகோதரியாகிய மார்த்தாள் அவரை நோக்கி: ஆண்டவரே, இப்பொழுது நாறுமே, நாலுநாளாயிற்றே என்றாள்

"ஆண்டவரே, இப்பொழுது நாறுமே நாலுநாளாயிற்றே" - என்று லாசருவின் சகோதரியாகிய மார்த்தாள் கூறுகிறாள் லாசரு மரித்து நான்கு நாளாயிற்று. ஆகையினால் அவனுடைய சரீரம் நாற்றமெடுக்க ஆரம்பித்தது. யோவான் 11:17

(8) இயேசுவின் விசுவாசம்

யோவான் 11:40 இயேசு அவளை நோக்கி: நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா என்றார்

"நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா" - இந்த வாக்கியத்தை இயேசு கிறிஸ்து மார்த்தாளிடம் எப்போது சொன்னார் என்று வேதத்தில் எழுதப்படவில்லை இந்தச் சம்பவத்தில் நடைபெற்ற பல காரியங்கள் வேதாகமத்தில் எழுதப்படாமல் இருக்கலாம். யோவான் 21:25

(9) இயேசுவின் ஜெபம்

யோவான் 11:41 அப்பொழுது மரித்தவன் வைக்கப்பட்ட இடத்திலிருந்து கல்லை எடுத்துப்போட்டார்கள் இயேசு தமது கண்களை ஏறெடுத்து: பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்

யோவான் 11:42 நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்; ஆனாலும் நீர் என்னை அனுப்பினதைச் சூழ்ந்து நிற்கும் ஜனங்கள் விசுவாசிக்கும்படியாக அவர்கள் நிமித்தம் இதைச் சொன்னேன் என்றார்

"இயேசு தமது கண்களை ஏறெடுத்தார்" - இயேசு கிறிஸ்து தமது கண்களைத் திறந்து பரலோகத்தை நோக்கிப் பார்த்தார் மத் 17:8 லூக்கா 6:20 லூக்கா 16:23 யோவான் 4:35 யோவான் 6:5 யோவான் 17:1

"பிதாவே" இயேசு கிறிஸ்து ஜெபத்தில் பிதாவே என்னும் வாக்கியத்தை 15 இடங்களில் பயன்படுத்தியிருக்கிறார் (மத் 11:25-26; மத் 26:39,42; லூக்கா 23:34,46; யோவான் 11:41; யோவான் 12:27-28; யோவான் 17:1,5,11,21,24-25; லூக்கா 10:21; லூக்கா 22:42; மாற்கு 14:36 யோவான் 17 ஆவது அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து ஏறெடுத்த நீண்ட ஜெபத்தை நாம் வாசிக்கிறோம் அதற்கு அடுத்தபடியாக இந்த ஜெபமும் ஒரு நீண்ட ஜெபமாகும்

"நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்" - இயேசு கிறிஸ்து பெத்தானியாவிற்கு வருவதற்கு முன்பாகவே இந்தக் காரியத்தைக் குறித்து ஜெபித்து தேவனுடைய சித்தத்தை அறிந்திருக்கிறார் (யோவான் 11:3-6 தேவனுடைய சித்தத்தின் பிரகாரமாகவே லாசரு நோயாய்ப் பட்டிருக்கும்போது இயேசு கிறிஸ்து உடனடியாக வராமல் அவன் மரித்து நான்கு நாட்கள் ஆனபின்பு வருகிறார்

11 அதிகாரம்

கிறிஸ்து நடப்பித்த அற்புதங்களின் நோக்கங்கள்

1 ஜனங்கள் விசுவாசிக்கும்படியாக (யோவான் 2:23 யோவான் 4:48 யோவான் 11:42; யோவான் 12:37 யோவான் 14:11; அப 2:43; அப 4:30 அப 5:12; அப 8:13; அப 14:3; அப 15:12; அப 19:11 ரோமர் 15:18-29)

2 தீர்க்க தரிசனத்தை நிறைவேற்றும்படியாக (ஏசா 11:2 ஏசா 61:1-2; மத் 8:17; லூக்கா 4:18)

3 தேவனுடைய சித்தத்தைச் செயல் படுத்துவதற்காக (யோவான் 5:30 யோவான் 6:38 யோவான் 10:10 எபி 10:7)

4 சாத்தானுடைய கிரியைகளை அழிப்பதற்காக லூக்கா 13:16 அப் 10:38; 1யோவான் 3:8)

5 பரிபூரண ஜீவனைக் கொடுப்பதற்காக (யோவான் 10:10)

6 தாமே மேசியா என்பதையும் தேவனுடைய குமாரன் என்பதையும் நிரூபிப்பதற்காக (யோவான் 5:17-19,30-36 யோவான் 10:25,36-38 யோவான் 14:10-11 யோவான் 15:24 யோவான் 20:30-31; அப 2:32)

7 தேவனுடைய வார்த்தையையும் அனைவரும் உறுதிப்படுத்துவதற்காக (யோவான் 5:20 எபி 2:3-4 மாற்கு 16:15-20, 2கொரி 12:12 யோவான் 14:12

8 தேவன் இயேசு கிறிஸ்துவோடு கூட இருக்கிறார் என்பதை நிரூபிப்பதற்காக (யோவான் 3:2; அப 10:38)

9 சாத்தான்மீது தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்திக் காண்பிப்பதற்காக (லூக்கா 10:19, லூக்கா 13:16, மத் 12:28; அப் 10:38)

10 தேவனுடைய ராஜ்யத்தை நிரூபிப்பதற்காக (மத் 12:28 1கொரி 4:20)

11 தேவனை மகிமைப்படுத்துவதற்காக (யோவான் 2:11; யோவான் 11:4. மத் 9:8; மத் 15:31; மாற்கு 2:12 லூக்கா 4:15; லூக்கா 5:26 லூக்கா 7:16; லூக்கா 13:13,

12 ஊழியம் ஊழியர்களுக்கு ஒரு முன்மாதிரியை ஏற்படுத்துவதற்காக (மத் 10:1-8; மத் 28:20 மாற்கு 6:7-13 லூக்கா 9:6; லூக்கா 10:9 யோவான் 17:18; மாற்கு 16:15-20 யோவான் 14:12; அப 1:1-8 ரோமர் 15:18-29)

13 பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகத்தின் மூலமாகக் கிடைக்கும் வல்லமையை வெளிப்படுத்திக் காண்பிப்பதற்காக (மத் 20:22-23; லூக்கா 4:18; யோவான் 3:34 மத் 3:11 லூக்கா 24:49; அப 1:4-8; யோவான் 7:37-39

14 சரீரம், ஆவி, ஆத்துமா ஆகிய மூன்றுக்குமே பரிபூரண இரட்சிப்பு கிடைக்கும் என்பதை வெளிப்படுத்துவதற்காக (மத் 4:23-24, மத் 8:17; மத் 9:35; மத் 13:15 யோவான் 10:10; 1பேதுரு 2:24 ஏசா 53:4-5)

(10) இயேசுவின் வல்லமை - லாசருவை உயிருடன் எழுப்புகிறார்

யோவான் 11:43 இவைகளைச் சொன்ன பின்பு: லாசருவே, வெளியே வா என்று, உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார்

யோவான் 11:44 அப்பொழுது மரித்தவன் வெளியே வந்தான்; அவன் கால்களும் கைகளும் பிரேதச் சீலைகளினால் கட்டப்பட்டிருந்தது, அவன் முகமும் சீலையால் சுற்றப்பட்டிருந்தது. இயேசு அவர்களை நோக்கி: இவனைக் கட்டவிழ்த்துவிடுங்கள் என்றார்

11 அதிகாரம்

"லாசருவே, வெளியே வா என்று உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார்" - யோவான் 5.25 ஆவது வசனம் முதன் முறையாக நிறைவேறுகிறது. அங்கு கூடியிருந்த எல்லா ஜனங்களும் இயேசு கிறிஸ்து உரத்த சத்தமாகக் கூப்பிட்டதைக் கேட்டார்கள். மரித்தோர்கூட இயேசுவின் சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறார்கள்.

"அப்பொழுது, மரித்தவன் வெளியே வந்தான். அவன் கால்களும் கைகளும் பிரேதச் சீலைகளினால் கட்டப்பட்டிருந்தது. அவன் முகமும் சீலையால் சுற்றப்பட்டிருந்தது" - மரித்தோரை அடக்கம் பண்ணும்போது, கால்களையும் கைகளையும் சீலைகளினால் கட்டுவது வழக்கம் ஆகையினால் லாசரு வெளியே வந்தும் அவனால் நடக்க முடியவில்லை. அங்கே இருந்தவர்களை நோக்கி இயேசு கிறிஸ்து "இவனைக் கட்டவிழ்த்து விடுங்கள்" என்று கூறுகிறார்.

சீலை (napkin) - σουδάριον - soudarion - 4676

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - *சீலை*, *கச்சை* (sweat cloth) (யோவான் 20.7; லூக்கா 19:20; அப் 19:12)

30. அற்புதத்தின் விளைவு

யோவான் 11:45 அப்பொழுது மரியாளிடத்தில் வந்திருந்து, இயேசு செய்தவைகளைக் கண்டவர்களாகிய யூதர்களில் அநேகர் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்.

யோவான் 11:46 அவர்களில் சிலர் பரிசேயரிடத்தில் போய், இயேசு செய்தவைகளை அவர்களுக்கு அறிவித்தார்கள்.

"அவர்களில் சிலர் பரிசேயரிடத்தில் போய், இயேசு செய்தவைகளை அவர்களுக்கு அறிவித்தார்கள்" - இயேசு கிறிஸ்து மரித்த லாசருவை உயிரோடு எழுப்பியதை அங்கு கூடியிருந்த ஜனங்கள் கண்டார்கள். அவர்களில் அநேகர் இயேசு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள். அந்தக் கூட்டத்தில் பரிசேயர்களால் அனுப்பப்பட்ட வேவுகாரர்களும் இருந்தார்கள். அவர்கள் இந்தச் சங்கதியைப் பரிசேயரிடத்தில் அறிவித்தார்கள்.

51. இயேசுவைக் கொல்ல முயற்சி - (மத் 26.3)

யோவான் 11:47 அப்பொழுது பிரதான ஆசாரியரும் பரிசேயரும் ஆலோசனைச் சங்கத்தைக் கூடிவரச்செய்து: நாம் என்னசெய்கிறது? இந்த மனுஷன் அநேக அற்புதங்களைச் செய்கிறானே.

யோவான் 11:48 நாம் இவனை இப்படி விட்டுவிட்டால், எல்லாரும் இவனை விசுவாசிப்பார்கள்; அப்பொழுது ரோமர் வந்து நம்முடைய ஸ்தானத்தையும் ஜனத்தையும் அழித்துப்போடுவார்களே என்றார்கள்.

"நாம் என்னசெய்கிறது? இந்த மனுஷன் அநேக அற்புதங்களைச் செய்கிறானே" - இயேசு கிறிஸ்து அற்புதம் செய்கிறார் என்பதைப் பிரதான ஆசாரியரும் பரிசேயரும் ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனாலும் அவர்களுடைய இருதயம் மேலும் கடினமடைகிறது. இயேசு கிறிஸ்துவின் உபதேசத்திற்கு எதிர்த்து நிற்க வேண்டுமென்று தீர்மானமாக இருக்கிறார்கள்.

"நாம் இவனை இப்படி விட்டுவிட்டால் எல்லாரும் இவனை விசுவாசிப்பார்கள். அப்பொழுது ரோமர் வந்து நம்முடைய ஸ்தானத்தையும் ஜனத்தையும் அழித்துப் போடுவார்களே" - இயேசு கிறிஸ்துவை அழித்து விட வேண்டும். இல்லையெனில், ஜனங்கள் இயேசுவைப் பின்பற்றி, அவரை ராஜாவாக ஆக்கிவிடுவார்கள். அப்போது, ரோமர்கள் தங்களுக்கு எதிராக வந்து, தங்களுடைய ஸ்தானத்தையும், அந்தஸ்தையும் அகற்றிப்போடுவார்கள் என்று பரிசேயரும் பிரதான ஆசாரியரும் பயந்தார்கள். தேவாலயத்தை ஆளுகை செய்யும் பொறுப்பைத் தங்களிடமிருந்து ரோமர் எடுத்துப் போடுவார்கள் என்று கலங்கினார்கள்.

11 அதிகாரம்

52. இயேசுவின் மரணத்தைப் பற்றி காய்பாவின் தீர்க்கதரிசனம் - (யோவான் 18:14)

யோவான் 11:49 அப்பொழுது அவர்களில் ஒருவனும் அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனுமாகிய காய்பா என்பவன் அவர்களை நோக்கி: உங்களுக்கு ஒன்றுந்தெரியாது.

யோவான் 11:50 ஜனங்களெல்லாரும் கெட்டுப்போகாதபடிக்கு ஒரே மனுஷன் ஜனங்களுக்காக மரிப்பது நமக்கு நலமாயிருக்குமென்று நீங்கள் சிந்தியாமலிருக்கிறீர்கள் என்றான்.

யோவான் 11:51 இதை அவன் சுயமாய்ச் சொல்லாமல், அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனானபடியினாலே இயேசு யூதஜனங்களுக்காக மரிக்கப்போகிறாரென்றும்,

யோவான் 11:52 அந்த ஜனங்களுக்காக மாத்திரமல்ல, சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகளை ஒன்றாகச் சேர்க்கிறதற்காகவும் மரிக்கப்போகிறாரென்றும் தீர்க்கதரிசனமாய்ச் சொன்னான்.

"அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனுமாகிய காய்பா என்பவன்" - நியாயப்பிரமாணத்தின் பிரகாரம் ஆசாரியர்கள் தங்களுடைய ஜீவிய காலம் முழுவதும் பதவியிலிருப்பார்கள். ஆனால் இங்கு பிரதான ஆசாரியருடைய பதவி ஒவ்வொரு வருஷமாக மாறுவதாகக் காண்கிறோம். ரோமரும், ஏரோதுவும் தங்களுக்குப் பிடித்தவரை பிரதான ஆசாரியராக நியமித்து, பதவியில் அமர்த்துவார்கள். யோசீபஸ் **(Josephus)** என்னும் திருச்சபை வரலாற்று ஆசிரியர் காய்பாவைப் பற்றி எழுதும்போது, காய்பா என்பது அவனுடைய மறுபெயர் என்றும், அவனுடைய உண்மையான பெயர் யோசேப்பு என்றும் எழுதியிருக்கிறார்.

தீர்க்கதரிசன எண் - 23

"உங்களுக்கு ஒன்றுந்தெரியாது. ஜனங்களெல்லாரும் கெட்டுப்போகாதபடிக்கு ஒரே மனுஷன் ஜனங்களுக்காக மரிப்பது நமக்கு நலமாயிருக்குமென்று நீங்கள் சிந்தியாமலிருக்கிறீர்கள்" (யோவான் 11:49-52) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. யூதஜனங்களுக்காக இயேசு கிறிஸ்து மரிக்க வேண்டும் என்று காய்பா கூறினான்.

"அந்த ஜனங்களுக்காகமாத்திரமல்ல, சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகளை ஒன்றாகச் சேர்க்கிறதற்காகவும் மரிக்கப்போகிறார்" - சிதறியிருக்கும் யூதர்களை மாத்திரம் இந்தத் தீர்க்கதரிசனம் குறிக்குமென்றால் இது இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நிறைவேறும் (மத் 24:31; ஏசா 11:11-12; எசே 37) இந்தத் தீர்க்கதரிசனம் யூதரையும் புறஜாதியாரையும் குறிக்குமென்றால் இது ஆயிரம் வருஷ அரசாட்சியில் நிறைவேறும். (எபே 1:10; 1கொரி 15:24-28)

53. இயேசுவைக் கொல்ல முயற்சி - (மத் 26:3; மாற்கு 14:1; லூக் 22:1)

யோவான் 11:53 அந்நாள்முதல் அவரைக் கொலை செய்யும்படிக்கு ஆலோசனை பண்ணினார்கள்.

யோவான் 11:54 ஆகையால் இயேசு அதன்பின்பு வெளியரங்கமாய் யூதருக்குள்ளே சஞ்சரியாமல், அவ்விடம் விட்டு வனாந்தரத்துக்குச் சமீபமான இடமாகிய எப்பிராயீம் என்னப்பட்ட ஊருக்குப்போய், அங்கே தம்முடைய சீஷருடனேகூடத் தங்கியிருந்தார்.

"அந்நாள்முதல் அவரைக்கொலை செய்யும்படிக்கு ஆலோசனைபண்ணினார்கள்" - இயேசுகிறிஸ்துவைக் கொலைசெய்ய வேண்டுமென்று பிரதான ஆசாரியரும், பரிசேயரும் சதியாலோசனை பண்ணிய நாட்களில் ஆலோசனைச் சங்கத்தார் மத்தியிலே ஒத்த கருத்து ஏற்படவில்லை. அவர்களுக்குள் பிரிந்திருந்தார்கள். இயேசு கிறிஸ்து அவர்களுடைய பிரிவினையைப் பயன்படுத்தி, தமது ஊழியத்தைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார். உபதேசம் செய்து அற்புதங்களை நடத்தி வந்தார்.

11 அதிகாரம்

"இயேசு அதன்பின்பு வெளியரங்கமாய் யூதருக்குள்ளே சஞ்சரிக்கவில்லை" - யோவான் 11:53 ஆவது வசனத்தில் ஆலோசனைச் சங்கத்தார் இயேசு கிறிஸ்துவைக் கொலைசெய்ய வேண்டுமென்று ஒன்றுபடுகிறார்கள் அந்த நாளிலிருந்து இயேசு கிறிஸ்து யூதருக்குள்ளே வெளியரங்கமாய் சஞ்சரிக்கவில்லை யூதமார்க்கத் தலைவர்கள் இயேசுவைச் சீக்கிரமாய் கொலைசெய்ய வேண்டும் என்று தீர்மானம் பண்ணியதற்கு அவர் சமீபத்தில் நடப்பித்த மூன்று அற்புதங்களே காரணமாகும். அவையாவன

1 ஓய்வுநாளில் திமிர்வாதக்காரனை இயேசு குணமாக்கினார் (யோவான் 5:9-16

2 ஓய்வுநாளில் பிறவிக்குருடனைக் குணமாக்கினார் (யோவான் 9:16,22,34)

3. மரித்த லாசருவை உயிரோடு எழுப்பினார் (யோவான் 11:46-54)

இந்த மூன்று அற்புதங்களும், யூதர்கள் மத்தியிலே கலக்கத்தை உண்டுபண்ணிற்று. இயேசு கிறிஸ்து தாம் கூறிய பிரகாரம் தேவனுடைய குமாரனாக இருப்பாரோ மேசியாவாகவா இருப்பாரோ என்று ஜனங்கள் சிந்திக்க ஆரம்பித்தார்கள் இயேசு கிறிஸ்துவின் செல்வாக்கு ஜனங்கள் மத்தியிலே வேகமாக வளர்ந்தது. யூதமார்க்கத் தலைவர்களால் இயேசுவின் பிரபல்யத்தைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை ஆகையினால் அவரை எப்படியாவது கொலைபண்ண வேண்டுமென்று சதியாலோசனை பண்ணினார்கள்

"எப்பிராயீம்" (Ephraim) - எருசலேமிற்கு வடக்கே 20 மைல் தூரத்தில் உள்ள பட்டணம் பெத்தேலுக்கு அருகிலுள்ளது (2 நாளா 13:19; யோசு 15:9) பஸ்கா பண்டிகை வரும் வரையிலும் இயேசு கிறிஸ்து இந்தப் பட்டணத்தில் இரண்டு மாதங்கள் தங்கியிருந்தார்

54. இயேசுவைப் பிடிப்பதற்குக் கட்டளை - (மத் 26.3

யோவான் 11:55 யூதருடைய பஸ்கா பண்டிகை சமீபமாயிருந்தது அதற்கு முன்னே அநேகர் தங்களைச் சுத்திகரித்துக்கொள்ளும் பொருட்டு நாட்டிலிருந்து எருசலேமுக்குப் போனார்கள்

யோவான் 11:56 அங்கே அவர்கள் இயேசுவைத் தேடிக்கொண்டு தேவாலயத்தில் நிற்கையில், ஒருவரையொருவர் நோக்கி, உங்களுக்கெப்படித் தோன்றுகிறது அவர் பண்டிகைக்கு வரமாட்டாரோ என்று பேசிக்கொண்டார்கள்

யோவான் 11:57 பிரதான ஆசாரியரும் பரிசேயரும் அவரைப் பிடிக்கும்படி யோசித்து அவர் இருக்கிற இடத்தை எவனாவது அறிந்திருந்தால், அதை அறிவிக்க வேண்டுமென்று கட்டளையிட்டிருந்தார்கள்

"யூதருடைய பஸ்காபண்டிகை" (யோவான் 2:13)

"அநேகர் தங்களைச் சுத்திகரித்துக் கொள்ளும் பொருட்டு நாட்டிலிருந்து எருசலேமுக்குப் போனார்கள்" - யூதர்கள் இறந்த சரீரங்களையோ, அல்லது அசுத்தமான பொருட்களையோ தொடக்கூடாது. தொட்டால் அது அவர்களுக்குத் தீட்டாக இருக்கும். தீட்டுப்பட்டவர்கள் லேவியருடைய பிரமாணத்தின் பிரகாரம் தங்களைச் சுத்திகரித்துக் கொள்ள வேண்டும். (எண் 9:6-10)

"பிரதான ஆசாரியரும் பரிசேயரும் அவரைப் பிடிக்கும்படி யோசித்தார்கள்" - கைது பண்ணும்படி யோசித்தார்கள் யோவான் 7:30, 32:44; யோவான் 10:39

12 அதிகாரம்

55. இயேசுவின் அபிஷேகம் - (மத் 26:6; மாற்கு 14:3; லூக் 7:36)

யோவான் 12:1 பஸ்காபண்டிகை வர ஆறுநாளைக்கு முன்னே இயேசு தாம் மரணத்திலிருந்து எழுப்பின லாசரு இருந்த பெத்தானியாவுக்கு வந்தார்.

யோவான் 12:2 அங்கே அவருக்கு இராவிருந்து பண்ணினார்கள்; மார்த்தாள் பணிவிடை செய்தாள்; லாசருவும் அவருடனேகூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவனாயிருந்தான்.

யோவான் 12:3 அப்பொழுது மரியாள் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டுவந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள்; அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது.

யோவான் 12:4 அப்பொழுது அவருடைய சீஷரில் ஒருவனும் அவரைக் காட்டிக்கொடுக்கப்போகிறவனுமாகிய சீமோனுடைய குமாரனான யூதாஸ்காரியோத்து:

யோவான் 12:5 இந்தத் தைலத்தை முந்நூறு பணத்துக்கு விற்று, தரித்திரருக்குக் கொடாமல் போனதென்ன என்றான்.

யோவான் 12:6 அவன் தரித்திரரைக் குறித்துக் கவலைப்பட்டு இப்படிச் சொல்லாமல், அவன் திருடனானபடியினாலும், பணப்பையை வைத்துக்கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனானபடியினாலும் இப்படிச் சொன்னான்.

யோவான் 12:7 அப்பொழுது இயேசு: இவளை விட்டுவிடு, என்னை அடக்கம்பண்ணும் நாளுக்காக இதை வைத்திருந்தாள்.

யோவான் 12:8 தரித்திரர் எப்பொழுதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள், நான் எப்பொழுதும் உங்களிடத்தில் இரேன் என்றார்.

"பஸ்காபண்டிகை வர ஆறுநாளைக்கு முன்னே இயேசு தாம் மரணத்திலிருந்து எழுப்பின லாசரு இருந்த பெத்தானியாவுக்கு வந்தார்" - நிசான் மாதம் ஒன்பதாம் நாள் இயேசு கிறிஸ்து எரிகோவிற்கு வந்து, அங்கு சகேயுவின் வீட்டில் இரவு தங்கினார் (லூக்கா 19:1-10). ராத்தல் திரவியங்களைப் பற்றிய உவமையை இயேசுகிறிஸ்து அங்குக் கூறிவிட்டு, எருசலேமிற்குப் புறப்பட்டுச் சென்றார் (லூக்கா 19:11-28). இரண்டு சீஷர்களை அனுப்பி கழுதையையும் அதன் குட்டியையும் கொண்டு வருமாறு கூறினார். எருசலேமிற்குத் தமது முதலாவது பயணத்தைச் செய்து பெத்தானியாவிற்கு மாலைப்பொழுதில் திரும்பி வருகிறார் (மத் 21:1-17).

"இயேசு தாம் மரணத்திலிருந்து எழுப்பின லாசரு" - (யோவான் 11:1-44).

"அங்கே அவருக்கு இராவிருந்து பண்ணினார்கள்" - கடைசி வாரத்தில் இயேசு கிறிஸ்து பங்குபெற்ற மூன்று இராவிருந்துகளில் இது முதலாவதாகும் (மாற்கு 14:3).

இராத்தல் (pound) - λίτρα - litra - 3046

பெண்பால் பெயர்ச்சொல் - இராத்தல் (மாற்கு 14:3; யோவான் 19:39)

"மரியாள் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டுவந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசினாள்" - கடைசி வாரத்தில் இரண்டு அபிஷேகம் இதைப் போன்று நடைபெற்றது (மாற்கு 14:3-8). இயேசு கிறிஸ்துவின் ஆரம்ப ஊழியகாலத்தில் அவருக்கு மற்றுமொரு அபிஷேகமும் நடைபெற்றது. கப்பர்நகூமில் சீமோன் என்னும் பரிசேயனுடைய வீட்டில் இந்த அபிஷேகம் நடைபெற்றதாக லூக்கா 7:36-50 ஆகிய வசனங்களில் நாம் வாசிக்கிறோம்.

"யூதாஸ்காரியோத்து" - (யோவான் 6:71)

12 அதிகாரம்

பணம் (pence) - δηνάριον deenarion - 1220

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பணம், காசு

திருடன் (thief) - κλέπτης kleptees - 2812

ஆண்பால் பெயர்ச்சொல் - திருடன் (யோவான் 10:1)

பை (bag) - γλωσσόκομον - glossokomon - 1101

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பை - நாதசுரங்களில் பயன்படுத்தப்படும் ஊதுகுழல்களை இந்தப் பைகளில் எடுத்துச் செல்வார்கள் (யோவான் 12:6; யோவான் 13:29)

சுமத்தல் (bare) - βαστάζω - bastazoo - 941

வினைச்சொல் - சும, சகி, கொண்டு போ, சுமத்தல், சுமந்துகொள், சுமந்துவா, எடுத்துக்கொள், தாங்கு, தூக்கிக்கொள் (to lift up; bear, carry off) - இந்த வசனத்தில் இந்த வார்த்தை யோவான் 20:15 ஆவது வசனத்தில் கூறியிருக்கிற பிரகாரம் திருடுதல் என்னும் பொருளைக் கொடுக்கும். ஆகையினால் தான் யூதாஸ்காரியோத்து திருடன் என்று அழைக்கப்படுகிறான்.

"இவளை விட்டுவிடு, என்னை அடக்கம்பண்ணும் நாளுக்காக இதை வைத்திருந்தாள்" இயேசு கிறிஸ்து தமது மரணத்தைப் பற்றி இங்கு கூறுகிறார். சீஷர்களால் இந்த உபதேசத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

59. லாசருவைக் கொல்லச் சதியாலோசனை

யோவான் 12:9 அப்பொழுது யூதரில் திரளான ஜனங்கள் அவர் அங்கேயிருக்கிறதை அறிந்து இயேசுவினிமித்தமாகமாத்திரம் அல்ல, அவர் மரித்தோரிலிருந்தெழுப்பின லாசருவைக் காணும்படியாகவும் வந்தார்கள்.

யோவான் 12:10 லாசருவினிமித்தமாக யூதர்களில் அநேகர் போய், இயேசுவினிடத்தில் விசுவாசம் வைத்தபடியால்,

யோவான் 12:11 பிரதான ஆசாரியர்கள் லாசருவையும் கொலைசெய்ய ஆலோசனை பண்ணினார்கள்.

"அவர் மரித்தோரிலிருந்தெழுப்பின லாசருவைக் காணும்படியாகவும் வந்தார்கள்" - ஜனங்கள் இயேசு கிறிஸ்துவைக் காண்பதை விட அவர் செய்யும் அற்புதங்களைக் காண்பதற்கு விரும்புகிறார்கள். மனுஷர்களுடைய உள்ளத்திலே எதையாவது புதுமையாகக் காணவேண்டும் என்னும் ஆவல் உள்ளது. ஆகையினால் இங்கு மரித்து உயிரோடு எழுப்பப்பட்ட லாசருவைக் காண கூடி வருகிறார்கள்.

கொலைசெய் (to kill) - ἀποκτείνω - apokteinoo - 615

வினைச்சொல் - கொல், அழி, கொலைசெய். நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு மரண தண்டனை கொடுக்கப்படுதல் என்பது இதன் பொருளல்ல. ஒரு மனுஷனைப் பலவந்தமாகக் கொலைபண்ணுதல் என்னும் பொருளையே இந்த வாக்கியம் தரும். (மத் 14:5; லூக்கா 9:22; லூக்கா 20:14; அப் 3:15; அப் 7:52; அப் 23:12) மார்க்கத் தலைவர்கள் தங்களுடைய ஆசையை நிறைவேற்றுவதற்காக ஒரு குற்றமும் செய்யாத இயேசுகிறிஸ்துவைக் கொலை செய்யத் துணிந்து விடுகிறார்கள்.

"லாசருவினிமித்தமாக யூதர்களில் அநேகர் போய், இயேசுவினிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்" பிரதான ஆசாரியர்கள் லாசருவைக் கொலைசெய்ய வேண்டுமென்று ஆலோசனை பண்ணியது ஜனங்களில் சிலருக்குப் பிடிக்கவில்லை. இயேசுவைக் கொலைசெய்வதற்கும் அவர்கள் சம்மதம் தெரிவிக்கவில்லை. அப்போபட்ட ஜனங்கள் பிரதான ஆசாரியர்களிடத்திலிருந்து பிரிந்து இயேசு கிறிஸ்துவிடம் வருகிறார்கள்.

யோவான் – தொகுப்புரை

12 அதிகாரம்

57. வெற்றிப்பவனி – (சக 9:9;மத் 21:1; மாற்கு 11:1; லூக் 19:28)

யோவான் 12:12 மறுநாளிலே இயேசு எருசலேமுக்கு வருகிறாரென்று பண்டிகைக்கு வந்த திரளான ஜனங்கள் கேள்விப்பட்டு,

யோவான் 12:13 குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு, அவருக்கு எதிர்கொண்டு போகும்படி புறப்பட்டு: ஓசன்னா, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று ஆர்ப்பரித்தார்கள்.

யோவான் 12:14 அல்லாமலும், சீயோன் குமாரத்தியே, பயப்படாதே, உன் ராஜா கழுதைக் குட்டியின்மேல் ஏறிவருகிறார் என்று எழுதியிருக்கிறபிரகாரமாக,

யோவான் 12:15 இயேசு ஒரு கழுதைக் குட்டியைக் கண்டு அதின்மேல் ஏறிப்போனார்.

யோவான் 12:16 இவைகளை அவருடைய சீஷர்கள் துவக்கத்திலே அறியவில்லை. இயேசு மகிமையடைந்த பின்பு, இப்படி அவரைக் குறித்து எழுதியிருக்கிறதையும், தாங்கள் இப்படி அவருக்குச் செய்ததையும் நினைவுகூர்ந்தார்கள்.

யோவான் 12:17 அன்றியும், அவருடனே கூட இருந்த ஜனங்கள் அவர் லாசருவைக் கல்லறையிலிருந்து வெளியே வரவழைத்து, அவனை உயிரோடே எழுப்பினாரென்று சாட்சி கொடுத்தார்கள்.

யோவான் 12:18 அப்படிப்பட்ட அற்புதத்தை அவர் செய்தார் என்று ஜனங்கள் கேள்விப்பட்டதினால் அவர்கள் அவருக்கு எதிர்கொண்டு போனார்கள்.

யோவான் 12:19 அப்பொழுது பரிசேயர் ஒருவரையொருவர் நோக்கி: நீங்கள் செய்கிறதெல்லாம் வீணென்று அறிகிறதில்லையா? இதோ, உலகமே அவனுக்குப் பின்சென்று போயிற்றே என்றார்கள்.

"மறுநாளிலே இயேசு எருசலேமுக்கு வருகிறார்" – பஸ்கா பண்டிகைக்கு முந்திய நான்காவது நாள் நிசான் மாதம் 11 ஆம் நாள் இயேசு கிறிஸ்து எருசலேம் நகரத்திற்கு இரண்டாம் முறையாகப் பவனி வரும் நாள் (மாற்கு 11:1-7 லூக்கா 19:29-35, யோவான் 12:12) இயேசு கிறிஸ்து பெத்தானியாவை விட்டு வருகிறார் எருசலேமிலிருந்து திரளான ஜனங்கள் இயேசு கிறிஸ்துவை வரவேற்கிறார்கள் (மாற்கு 11:8-10; லூக்கா 19:36-40 யோவான் 12:12-19) இயேசு எருசலேம் பட்டணத்திற்காக அழுகிறார் லூக்கா 19:41-44 அவர் தேவாலயத்திற்குள் சென்று அங்கு சுற்றிப் பார்த்துவிட்டு, மறுபடியும் பெத்தானியாவிற்குத் திரும்பி வந்து இரவில் தங்குகிறார் லூக்கா 11:11

ஆர்ப்பரித்தார்கள் (cried) - κράζω - krazoo - 2896

வினைச்சொல் - கூப்பிடு, அலறு, ஆர்ப்பரி, கூக்குரலிடு, சொல், சத்தமிடு, அமளியுண்டாக்கு, ஓலமிடு (shouting out) யோவான் 12:44 யோவான் 7:37 யோவான் 11:43 யோவான் 18:40 ; யோவான் 19:6,15 மத் 12:19; மத் 15:22.

யோவான் சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 5

"ஓசன்னா, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்திரிக்கப் பட்டவர்" (யோவான் 12:13, சங் 118:25-26) "ஓசன்னா" என்பது அராமயிக மொழிச்சொல். ஆண்டவரே எங்களை இரட்சியும், ஆண்டவரே எங்களுக்கு உதவி புரியும் என்பது இந்த வார்த்தையின் பொருள்.

யோவான் சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 6

"சீயோன் குமாரத்தியே, பயப்படாதே, உன் ராஜா கழுதைக் குட்டியின்மேல் ஏறிவருகிறார்" (யோவான் 12:15, சக 9:9

12 அதிகாரம்

மகிமையடைந்தார் (glorified)
δοξάζω - doxazoo - 1392

வினைச்சொல் - மகிமைப்படுத்து புகழ் மேன்மைப்படுத்து, உயர்த்து - யோவான் சுவிசேஷத்தில் இந்த வார்த்தை 23 தடவை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மற்ற சுவிசேஷங்களில் மொத்தம் 14 தடவைகளே பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

"அவருடனேகூட இருந்த ஜனங்கள் அவர் லாசருவைக் கல்லறையிலிருந்து வெளியே வரவழைத்து அவனை உயிரோடே எழுப்பினாரென்று சாட்சி கொடுத்தார்கள்" - இயேசு கிறிஸ்து லாசருவை உயிரோடு எழுப்பிய போது, இவர்கள் அந்த அற்புதத்தைத் தங்கள் கண்களால் கண்டார்கள். தாங்கள் கண்ட சத்தியத்திற்கு இவர்கள் சாட்சி பகர்ந்தார்கள். இவர்களுடைய சாட்சியின்மூலமாக ஏராளமானோர் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தார்கள் (யோவான் 12:17-18)

"பரிசேயர் ஒருவரையொருவர் நோக்கி: நீங்கள் செய்கிறதெல்லாம் வீணென்று அறிகிறதில்லையா?" - இயேசு கிறிஸ்துவிடம் திரளான ஜனங்கள் போவதைப் பரிசேயர்கள் கண்டு, மிகுந்த வேதனையடைகிறார்கள். அதை எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டுமென்று ஆலோசனை பண்ணுகிறார்கள். ஆனாலும் பரிசேயர்கள் ஜனங்களுக்காக பயப்படுகிறார்கள். அவர்கள் எல்லோரும் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறபடியினால், தங்களுக்கு விரோதமாக எழும்பி, தங்களை அழித்து விடுவார்களோ என்று பரிசேயர்கள் பயப்படுகிறார்கள்.

பிரயோஜனப்படு (prevail) - ὠφελέω - oopheleoo - 5623

வினைச்சொல்- உதவிசெய், பிரயோஜனப்படு,குணமடை, ஆதாயப்படு, பலனடை லாபப்படு(profit). (profit) (மத் 15:5,மத் 16:26,மாற்கு 7:11, மாற்கு8 36 யோவான்6:63 ரோமர்2:25 1கொரி 13:3 1கொரி 14:6 கலா 5:2 எபி4 2 எபி13:9 (be advantaged) (லூக்கா 9:25); (be bettered) (மாற்கு 5:26),(prevail)(மத் 27:24,

யோவான் 12:19) தமிழ் வேதாகமத்தில் "வீண்" என்று வாசிக்கிறோம். கிரேக்க மொழியில் "பிரயோஜனமில்லை" என்றுள்ளது.

"இதோ உலகமே அவனுக்குப் பின்சென்று போகிறதே" - ஏராளமான ஜனங்கள் இயேசு கிறிஸ்துவை பின்பற்றிச் சென்றார்கள். முழு உலகமும் இயேசுவை பின்பற்றிச் சென்றால் நலமாக இருக்கும். புதிய பூமியில் இந்த வாக்கியம் அப்படியே நிறைவேறும். (வெளி 2; 2பேதுரு 3:13; ஏசா 65:17; ஏசா 66)

58. தேவாலயத்தில் இயேசு கிறிஸ்துவின் உபதேசம்

(1) சூழ்நிலை - கிரேக்கர்கள் இயேசுவை தேடுகிறார்கள்

யோவான் 12:20 பண்டிகையில் ஆராதனை செய்யவந்தவர்களில் சில கிரேக்கர் இருந்தார்கள்.

யோவான் 12:21 அவர்கள் கலிலேயாநாட்டுப் பெத்சாயிதா ஊரானாகிய பிலிப்புவினிடத்தில் வந்து: ஐயா, இயேசுவைக் காண விரும்புகிறோம் என்று அவனைக் கேட்டுக்கொண்டார்கள்.

யோவான் 12:22 பிலிப்பு வந்து, அதை அந்திரேயாவுக்கு அறிவித்தான்; பின்பு அந்திரேயாவும் பிலிப்புவும் அதை இயேசுவுக்கு அறிவித்தார்கள்.

"பண்டிகையில் ஆராதனை செய்ய வந்தவர்களில் சில கிரேக்கர் இருந்தார்கள்" - இவர்கள் புறஜாதி மார்க்கத்திலிருந்து யூதமார்க்கத்திற்கு மாறியவர்கள் (1இராஜா 8:41-42; மத் 23)

ஆராதனைசெய் (worship) - προσκυνέω - proskyneoo - 4352

வினைச்சொல் - பணிந்துகொள், தொழுதுகொள், வணங்கு, தாழவிழு, ஆராதனைசெய் (to prostrate one's self, do homage) - தாழ விழுந்து வணங்குதல். இவர்கள் தேவாலயத் திருக்குவரும்போது புறஜாதியாருக்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் வெளிப்பிரகாரத்தில் கூடிவந்து ஆராதனை செய்வார்கள் (வெளி 11:2) அவர்கள் யூதமார்க்கத்திற்கு மாறவில்லையென்றால் பண்டிகையின் போஜனத்தில் பங்குபெற அவர்களுக்கு அனுமதியில்லை. (யாத் 12:48)

12 அதிகாரம்

"பிலிப்பு" - பன்னிரெண்டு சீஷர்களில் ஒருவன் (மத் 10:3,மாற்கு 3:18 லூக்கா 6:14 அப் 1:13). இயேசு கிறிஸ்து பிலிப்புவை அழைக்கிறார் (யோவான் 1:43-50) நாத்தான்வேலின் சகோதரன் (யோவான் 1:45-50; யோவான் 1:41) பிலிப்புவின் பெயர் காணப்படும் வசனங்கள் (யோவான் 6:5-7; யோவான் 12:20-22 யோவான் 14:8-13

"அந்திரேயா" - பன்னிரெண்டு சீஷர்களில் ஒருவன் மத் 10:2 மாற்கு 3:18 லூக்கா 6:14; அப 1:13). மீன்பிடிக்கிறவன் பேதுருவின் சகோதரன் (மத் 4:18 யோவான் 1:41-44) யோவான் ஸ்நானனின் சீஷனாக இருந்தான் (யோவான் 1:40) அந்திரேயாவின் பெயர் காணபடும் வசனங்கள் (மாற்கு 13:3-4; யோவான் 6:8, யோவான் 12:20-22

(2) இயேசு தமது மரணத்தை முன் குறித்துக் கூறுகிறார் (மத் 27:45)

> யோவான் 12:23 அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: மனுஷகுமாரன் மகிமைப்படும்படியான வேளை வந்தது.
>
> யோவான் 12:24 மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும்; செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும்.

தீர்க்கதரிசன எண் - 24

"மனுஷகுமாரன் மகிமைப்படும்படியான வேளை வந்தது. மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும்; செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும்" (யோவான் 12:23-24) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இயேசு கிறிஸ்து பாடுகளை அனுபவிக்கும் வேளை வந்துவிட்டது. மகிமைப்படும் வேளை யூதருக்கும் புறஜாதியாருக்கும் நடுவில் இருக்கும் திரை அகற்றப்படும்போது வரும். அந்தத் திரை அகற்றப்படும்போது யூதரும், புறஜாதியாரும் ஒரே சரீரமாக இருப்பார்கள் (மத் 27:51; 1கொரி 12:13; ரோமர் 1:16, ரோமர் 10:9-14; எபே 2:12-18; எபே 3:6, கலா 3:28)

மணி (corn) - κόκκος kokkos- 2848

> ஆண்பால் பெயர்ச்சொல் - விதை, மணி (grain) (மத் 13:31; மத் 17:20 மாற்கு 4:31 லூக்கா 13:19 லூக்கா 17:6; யோவான் 12:24 1கொரி 15:37)

இயேசு கிறிஸ்து தம்மை ஒரு கோதுமை மணிக்கு ஒப்பிட்டுக் கூறுகிறார். அவருடைய மரணம் கோதுமை மணி விதைக்கப்படுவதற்கு ஒப்பாயிருக்கிறது. விதை நிலத்திற்குள் இருப்பதுபோன்று இயேசு கிறிஸ்துவையும் அடக்கம் பண்ணினார்கள். விதைக்கப்பட்ட விதை முளைத்து எழும்பும். அதுபோல இயேசு கிறிஸ்துவும் உயிர்த்தெழுந்தார். முளைக்கும் விதை பயிராகி பலன் தரும். அதுபோலவே உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து தம்முடைய பிள்ளைகளுக்கு நித்திய ஜீவனைத் தருகிறார். இயேசு கிறிஸ்து மகிமையடைந்திருக்கிறார். மிகுந்த பலனைத் தருகிறார். இயேசு கிறிஸ்துவை மகிமைப்படுத்தாத சபை மகிமையான சபையாக இருக்க முடியாது (யோவான் 7:37-39; அப் 2:33, எபே 1)

இயேசுகிறிஸ்துவின் மரணமும், உயிர்த்தெழுதலும் விளக்கப்பட்டுள்ள விதம்

1. தேவை - அவருடைய மரணம் அவசியமானது
2. காரணம் - நிலத்தில் விழுந்தது
3. இடம் - நிலத்திற்குள்
4. தற்போதுள்ள நிலைமை - செத்திருக்கிறது.
5. கூடுதலின்மை - தனித்திருக்கவில்லை.
6. உயிர்த்தெழுதல் - கொடுக்கிறது
7. நோக்கம் - மிகுந்த பலன், உலகத்தின் மீட்பு

12 அதிகாரம்

8 ஆச்சரியம் - மரணமும் உயிர்த்தெழுதலும் ஆச்சரியமான காரியம்.

நாம் விதையை நிலத்தில் விதைக்கிறோம். அந்த விதை முளைத்து அதிகமாக பலன் தரும் என்று நம்புகிறோம். அதுவும் பலன் தருகிறது. அதன் பலனை புசிக்கிறோம். ஆனாலும், இந்தக் காரியங்களெல்லாம் எப்படி நடைபெறுகிறது என்று நமக்குத் தெரியவில்லை. இது நமக்கு இரகசியமாகவே இருக்கிறது. பூமி, காற்று, தண்ணீர், சூரியஒளி ஆகியவையெல்லாம் சேர்ந்து ஒரு புதிய ஜீவனை எப்படி உண்டுபண்ணுகிறது என்று நமக்குப் புரியவில்லை. ஆனாலும் நமது கண்களுக்கு முன்பாகவே விதைக்கப்படும் விதை முளைக்கிறது. இந்தக் காரியம் நமக்குப் புரியவில்லையென்றாலும், நாம் இதை விசுவாசிக்கிறோம். அதுபோலவே தேவனுடைய கிரியைகளும் நமக்கு ஆச்சரியமாகவும், இரகசியமாகவும் உள்ளது. இயேசு கிறிஸ்து மரித்தார். அடக்கம்பண்ணப்பட்டார். மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். திரளான ஜனங்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். இந்தச் சத்தியம் நமக்கு ஆச்சரியமானதாகவும், புரியாத இரகசியமானதாகவும் இருக்கின்ற போதிலும் இதை நாம் விசுவாசிக்க வேண்டும்.

(3) சீஷத்துவத்திற்கு பரீட்சை - (12:25-26) (மத் 16:24)

யோவான் 12:25 தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழந்துபோவான்; இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக்கொள்ளுவான்.

யோவான் 12:26 ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்.

"தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழந்துபோவான்; இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக்கொள்ளுவான்" - வேதாகமத்தில் இதே போன்ற பொருளைக் கூறும் வசனங்கள் பல உள்ளன. (யோவான் 12:25; நீதி 13:7; மத் 10:39; 2கொரி 6:4-10; 2கொரி 12:1-11; எபே 3:17-19; பிலி 3:7)

"தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன்" - வேதாகமத்தில் இரண்டு விதமான சிநேகத்தைக் குறித்து நாம் வாசிக்கிறோம். ஒன்று நம்மை நாமே சிநேகிப்பது. அல்லது மற்ற மனுஷரையோ உலகப்பொருளையோ சிநேகிப்பது. இதற்கான கிரேக்க வார்த்தை "பிலேயோ" (phileo). மற்றொரு சிநேகம் தேவனிடத்தில் சிநேகமாக இருப்பது. இதற்கான கிரேக்க வார்த்தை "அகாபோ" (agapao). யோவான் 11:3,36 ஆகிய வசனங்களில் பிலேயோ சிநேகமே கூறப்பட்டிருக்கிறது. கிறிஸ்து லாசருவினிடத்தில் பிலேயோ சிநேகத்தைக் காண்பித்தார். யோவான் 11:5 ஆவது வசனத்தில் பிலேயோ சிநேகம் கூறப்படவில்லை. ஏனெனில் அங்கு லாசருவின் சகோதரிகளைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது.

சிநேகி (loveth) - φιλέω - phileoo - 5368

வினைச்சொல் - விரும்பு, நேசி, முத்தஞ்செய், அன்பாயிரு, சிநேகி, அன்புகூர்

சிநேகித்தல் (loveth) - ἀγαπάω - agapaoo - 25

வினைச்சொல் - அன்பு செலுத்துதல், சிநேகித்தல், அன்பு கூருதல்

(அ) தேவன் மனிதனிடம் காட்டும் அன்பு யோவா 3:16

(ஆ) கிறிஸ்து தனி மனிதனிடம் காட்டும் அன்பு மாற்கு 10:21

(இ) ஒரு மனிதன் மற்ற மனிதர்களிடம் காட்டும் அன்பு 2கொரி 12:15

12 அதிகாரம்

ஈ மனிதர் உலகப்பிரகாரமான பொருட்களிடம் காட்டும் அன்பு லூக் 11:43. இந்தச் சொல் பொதுவாக தன்னலம் கருதாத நீதியான கிறிஸ்தவ அன்பைக் குறிக்கும்.

ஜீவன் (life) - ψυχή - psychee - 5590

பெண்பால் பெயர்ச்சொல் - பிராணன் ஜீவன், ஆத்துமா மனம், உயிர் (மாற்கு 8:36)

இழந்துபோ (lose) - ἀπόλλυμι - apollymi - 622

வினைச்சொல் - இழந்துபோ, கொலை செய், அழி, கெடு, கொல், சங்கரி (யோவான் 3:15)

"தன் ஜீவனை வெறுக்கிறவன்" - (லூக்கா 14:26)

"ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன்" - (யோவான் 10:26)

(4) ஜெபம் - வானத்திலிருந்து உண்டான சத்தம் - (12:27-29) மத் 3:17, 17:5

யோவான் 12:27 இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது, நான் என்ன சொல்லுவேன். பிதாவே, இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ, ஆகிலும் இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன்.

யோவான் 12:28 பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும் என்றார். அப்பொழுது, மகிமைப்படுத்தினேன், இன்னமும் மகிமைப்படுத்துவேன் என்கிற சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று.

யோவான் 12:29 அங்கே நின்றுகொண்டிருந்து அதைக் கேட்ட ஜனங்கள் இடிமுழக்கமுண்டாயிற்று என்றார்கள். வேறு சிலர் தேவதூதன் அவருடனே பேசினான் என்றார்கள்.

"என் ஆத்துமா கலங்குகிறது" - (யோவான் 11:33; யோவான் 13:21; யோவான் 14:1,27)

"பிதாவே, இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ. ஆகிலும் இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன்" - இயேசு கிறிஸ்து இந்த வேளையினின்று இரட்சியும் என்று பிதாவிடம் ஜெபிக்க மாட்டார் ஏனெனில் அவர் இதற்காகவே இந்த வேளைக்குள் வந்திருக்கிறார்.

"சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று" - மத் 3:17; மத் 17:5; உபா 5:22-25 ஆகிய வசனங்களில் நாம் வாசிக்கிற பிரகாரமாக மனுஷர் கேட்கக்கூடிய விதத்தில் வானத்திலிருந்து சத்தம் உண்டாயிற்று.

"மகிமைப்படுத்தினேன்" - சாத்தானைத் தோற்கடித்ததன் மூலமாக கிறிஸ்து தேவனை மகிமைப்படுத்துவதைக் குறிக்கும் (மத் 4:1-11)

"இன்னமும் மகிமைப்படுத்துவேன்" - கல்வாரி சிலுவையிலே இயேசு கிறிஸ்து சாத்தானை முழுமையாகத் தோற்கடிப்பதைக் குறிக்கும். (கொலோ 2:14-17)

"அங்கே நின்றுகொண்டிருந்து அதைக் கேட்ட ஜனங்கள் இடிமுழக்கமுண்டாயிற்று என்றார்கள்" - ஜனங்கள் ஒரு சத்தத்தைக் கேட்டார்கள் அந்த சத்தத்திலுள்ள வார்த்தைகளை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை இடிமுழக்கம் போன்ற ஒரு தொனியைக் கேட்டார்கள் பவுலுக்கு உண்டான கிறிஸ்துவின் சத்தம்போன்றுள்ளது. (அப 9:7= அப 22:9)

(5) கிறிஸ்துவின் சிலுவையில் உலகத்திற்கு நியாயத்தீர்ப்பு - (கலா 3:13; கொலோ 2:14, எபி 2:14, 1பேதுரு 2:24)

யோவான் 12:30 இயேசு அவர்களை நோக்கி: இந்தச் சத்தம் என்னிமித்தம் உண்டாகாமல் உங்கள் நிமித்தமே உண்டாயிற்று.

யோவான் 12:31 இப்பொழுதே இந்த உலகத்துக்கு நியாயத்தீர்ப்பு உண்டாகிறது; இப்பொழுதே இந்த உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான்.

12 அதிகாரம்

யோவான் 12:32 நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்றார்

யோவான் 12:33 தாம் இன்னவிதமான மரணமாய் மரிக்கப்போகிறாரென்பதைக் குறிக்கும்படி இப்படிச் சொன்னார்

"இந்தச் சத்தம் என்னிமித்தம் உண்டாகாமல் உங்கள் நிமித்தமே உண்டாயிற்று" - என்று இயேசு கிறிஸ்து புறஜாதியாரிடம் கூறுகிறார். புறஜாதியார் இயேசு கிறிஸ்துவிடம் வந்திருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவில் அவர்கள் வைத்திருக்கும் விசுவாசத்தை உறுதிப்பண்ணுவதற்காகவே இந்த சத்தம் உண்டாயிற்று.

தீர்க்கதரிசன எண் - 25

"இப்பொழுதே இந்த உலகத்துக்கு நியாயத்தீர்ப்பு உண்டாகிறது. இப்பொழுதே இந்த உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான். நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும் போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்" (யோவான் 12:31-32) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நியாயத்தீர்ப்பு (judgment) - κρίσις - krisis - 2920

பெண்பால் பெயர்ச்சொல் - நியாயத்தீர்ப்பு, நியாயம், ஆக்கினை, தீர்ப்பு - இந்த வார்த்தை நியாயத்தீர்ப்பு (judgment) என்று 41 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதன் மற்ற மொழிபெயர்ப்புகள் (damnation) (மத் 23:33; மாற்கு 3:29; யோவான் 5:29); (condemnation) (யோவான் 3:19; யோவான் 5:24) (accusation) (2பேதுரு 2:11; யூதா 1:9) சிலுவையின்மீது இந்த உலகத்திற்கு உண்டாயிருக்கிற நியாயத்தீர்ப்பைக் குறித்து, இந்த வாக்கியம் விளக்குகிறது.

அதிபதி (prince) - ἄρχων - archoon - 758

ஆண்பால் பெயர்ச்சொல் - தலைவன், அதிகாரி, அதிபதி, பிரபு - சாத்தானே உலகத்தின் அதிபதி (ruler of the world system) (யோவான் 12:31; யோவான் 14:30; யோவான் 16:11), (ruler of demons) (மத் 12:24; மாற்கு 3:22); (ruler of the air) (எபே 2:2)

"இந்த உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான்" - தள்ளப்படுதல் என்பதற்கு யோவான் 9:34-35; மத் 21:39; மாற்கு 12:8; லூக்கா 20:15; அப் 7:58 ஆகிய வசனங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கும் சொல்லே இங்கும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

"நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும் போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்" - உயர்த்தப்படுதல் என்பதன் கிரேக்க [redacted] "ஹுப்சோ" (hupsoo) என்பதாகும். இதற்கு உயர்த்துதல், வானத்தில் உயர்த்துதல் என்று பொருள் (to lift up on high, exalt) (மத் 11:23; மத் 23:12; லூக்கா 1:52; லூக்கா 10:15; லூக்கா 14:11; லூக்கா 18:14; அப் 2:33; அப் 5:31; அப் 13:17; 2கொரி 11:7; 1பேதுரு 5:6) இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு, உயர்த்தப்படுகிறார். சிலுவையில் உயர்த்தப்படுவதை இந்த வாக்கியம் குறிப்பதோடு இயேசு கிறிஸ்து வானத்திற்கு [redacted]த்தப்படுவதையும் குறிப்பிடுகிறது. (யோவான் 3:14; யோவான் 8:28; யோவான் 12:32,34) (lift up) (யாக் 4:10)

உயர்த்தப்படு (lifted up) - ὑψόω - hypsooo - 5312

வினைச்சொல் - உயர்த்து, உயர்த்தப்படு

12 அதிகாரம்

"எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்ளுவேன்" - இயேசு கிறிஸ்து பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது அவர் எல்லோரையும் தம்மிடத்தில் இழுத்துக் கொள்ளுவார் பரிசுத்த ஆவியானவர் மூலமாகவும், இயேசு கிறிஸ்து செய்த அற்புதங்கள் மூலமாகவும் ஜனங்களைத் தம்மிடமாக இழுத்துக் கொள்வார் விசுவாசிகள் மூலமாக நடைபெறும் அற்புதங்கள் சுவிசேஷச் செய்தியை உறுதிப்படுத்துகிறது. (யோவான் 7:37-39, யோவான் 14:12; அப் 2:33;மாற்கு 16:17-20, லூக்கா 24:49; எபி 2:3-4) இயேசு கிறிஸ்துவின் மகிமையின் நாளிலும் அவருடைய ஆளுகையின்போதும் எல்லா மனுஷரும் அவரிடமாக இழுத்துக் கொள்ளப்படுவார்கள் (ஆதி 49:10, ஏசா 11:10; எபே 1:10)

(6) இயேசுவிடம் கேட்கப்பட்ட கேள்வி

யோவான் 12:34 ஜனங்கள் அவரை நோக்கி: கிறிஸ்து என்றென்றைக்கும் இருக்கிறார் என்று வேதத்தில் சொல்லியதை நாங்கள் கேட்டிருக்கிறோம்; அப்படியிருக்க மனுஷகுமாரன் உயர்த்தப்பட வேண்டியதென்று எப்படிச் சொல்லுகிறீர்; இந்த மனுஷகுமாரன் யார் என்றார்கள்.

"கிறிஸ்து என்றென்றைக்கும் இருக்கிறார்" - (சங் 89:29; சங் 110:4, ஏசா 9:6-7, தானி 7:14)

(7) இயேசு ஜனங்களுக்கு புத்திமதி கூறிவிட்டு அவர்களை விட்டு மறைகிறார்

யோவான் 12:35 அதற்கு இயேசு: இன்னும் கொஞ்சக்காலம் ஒளி உங்களிடத்தில் இருக்கும். இருளில் நீங்கள் அகப்படாதபடிக்கு ஒளி உங்களோடிருக்கையில் நடவுங்கள் இருளில் நடக்கிறவன் தான் போகிற இடம் இன்னதென்று அறியான்.

யோவான் 12:36 ஒளி உங்களோடிருக்கையில் நீங்கள் ஒளியின் பிள்ளைகளாகும்படிக்கு, ஒளியினிடத்தில் விசுவாசமாயிருங்கள் என்றார். இவைகளை இயேசு சொல்லி, அவர்களை விட்டு மறைந்தார்.

"இன்னும் கொஞ்சக்காலம் ஒளி உங்களிடத்தில் இருக்கும்" - மேசியா எப்போதும் இருப்பார் (யோவான் 12:34). சூரியனுடைய ஒளியை நாம் பகலில் மட்டுமே காணமுடியும். இரவில் காணமுடியாது. ஆனாலும் சூரியன் பகலிலும் இரவிலும் உள்ளது. அதுபோலவே மேசியா எப்போதும் இருந்தாலும் அவரைக் காண்பதற்கும் ஒரு காலம் உண்டு. ஆகையினால் இயேசு கிறிஸ்து ஜனங்களிடம் "இருளில் நீங்கள் அகப்படாதபடிக்கு ஒளி உங்களோடிருக்கையில் நடவுங்கள்" என்று கூறுகிறார். இருள் சீக்கிரமாக வந்து விடும் அப்போது ஜனங்கள் இயேசுகிறிஸ்துவைத் தேடுவார்கள் ஆனாலும் கண்டுகொள்ள மாட்டார்கள் (லூக்கா 17:22; யோவான் 7:34; மத் 21:43) இருளில் நடக்கிறவன் தான் போகிற இடம் இன்னதென்று அறியான்.

59. தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாக ஜனங்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளவில்லை - (மத் 13:10)

யோவான் 12:37 அவர் இத்தனை அற்புதங்களை அவர்களுக்கு முன்பாகச் செய்திருந்தும் அவர்கள் அவரை விசுவாசிக்கவில்லை.

யோவான் 12:38 கர்த்தாவே, எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்ன வசனம் நிறைவேறும்படி இப்படி நடந்தது.

யோவான் 12:39 ஆகையால் அவர்கள் விசுவாசிக்கமாட்டாமற்போனார்கள் ஏனென்றால் ஏசாயா பின்னும்:

யோவான் 12:40 அவர்கள் கண்களினால் காணாமலும், இருதயத்தினால் உணராமலும், குணப்படாமலும் இருக்கும் படிக்கும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலிருக்கும்படிக்கும், அவர்களுடைய கண்களை அவர் குருடாக்கி, அவர்கள் இருதயத்தைக் கடினமாக்கினார் என்றான்.

12 அதிகாரம்

யோவான் 12:41 ஏசாயா அவருடைய மகிமையைக் கண்டு அவரைக்குறித்துப் பேசுகிறபோது இவைகளைச் சொன்னான்

"அவர் இத்தனை அற்புதங்களை அவர்களுக்கு முன்பாகச் செய்திருந்தும் அவர்கள் அவரை விசுவாசிக்கவில்லை" - இயேசு கிறிஸ்து பல அற்புதங்களைச் செய்தார் அவர்களுக்கு முன்பாகவே அவைகளைச் செய்தார் தங்கள் கண்களால் அந்த அற்புதங்களையெல்லாம் கண்டார்கள் ஆனாலும் அவர்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கவில்லை. இன்றைய தினமும் ஏராளமான ஜனங்கள் அற்புதங்களைக் காணகிறார்கள் ஆனால் அவர்கள் இயேசு கிறிஸ்துவைக் காண்பதில்லை

யோவான் சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 7

"கர்த்தாவே, எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது" (யோவான் 12:38, ஏசா 53:1)

"கர்த்தருடைய புயம் கர்த்தருடைய அற்புதமான வல்லமையைக் குறிப்பதற்கு கர்த்தருடைய புயம் என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (சங் 98:1 ஏசா 52:10; ஏசா 53:1; ஏசா 59:16 ஏசா 63:5, அப 4:30; அப 11:21; அப 13:11)

யோவான் சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 8

"அவர்கள் கண்களினால் காணாமலும் இருதயத்தினால் உணராமலும் குணப்படாமலும் இருக்கும்படிக்கும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமல் இருக்கும்படிக்கும், அவர்களுடைய கண்களை அவர் குருடாக்கி, அவர்கள் இருதயத்தைக் கடினமாக்கினார்" (யோவான் 12:40, ஏசா 6:9-10)

ஜனங்களுக்கு கண்கள் இருந்தும் குருடராயிருக்கிறார்கள் இருதயம் இருந்தும் உணராமலிருக்கிறார்கள். (மத் 13:14-15; 2கொரி 2:15-16; யோவான் 9:39-41 யோவான் 15:22-25

விசுவாசிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வாக்குத்தத்தங்கள்

1 மனமாற்றம் - தேவனோடு நடப்பதற்கு ஏதுவாக நமது சரீரப் பிரகாரமான நடையில் மாற்றம் (சங் 19:7; சங் 51:13 ஏசா 6:10; ஏசா 60:5; மத் 13:15 மத் 18:3; மாற்கு 4:12 லூக்கா 22:32 யோவான் 12:40; அப 3:19; அப் 15:3. அப 28:27; யாக் 5:19-20

2 சரீர சுகமாதல் - தேவனிடத்தில் புதிய ஆரோக்கியத்தைப் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக சரீர ஆரோக்கியத்தில் மாற்றம் (யாத் 15:26 சங் 91; சங் 103:3 ஏசா 6:10; ஏசா 53 மத் 8:17 யோவான் 10:10; ரோமர் 8:11 1பேதுரு 2:24; 3யோவான் 1:2; யாக் 5:14-16)

மனுஷருடைய இரட்சிப்பு என்பது அவர்களுடைய ஆத்துமாவின் இரட்சிப்பையும் சரீரத்தின் குணமாதலையும் குறிக்கும் (மத் 8:17; மத் 9:5,35; மத் 10:1-8 மத் 12:28 மத் 13:15; யோவான் 10:10; அப 10:38 இயேசு கிறிஸ்துவால் நமது பாவங்களையும் மன்னிக்க முடியும் நமது சரீர வியாதிகளையும் குணமாக்க முடியும் இதுவே பூரண சுவிசேஷம் இதுவே இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் வல்லமை.

"ஏசாயா அவருடைய மகிமையைக் கண்டு, அவரைக்குறித்துப் பேசுகிறபோது இவைகளைச் சொன்னான்" - ஏசாயா இயேசு கிறிஸ்துவின் மகிமையைக் கண்டான ஆறு இடங்களில் இயேசு கிறிஸ்து தம்மையும் ஏசாயாவையும் இணைத்து கூறியிருக்கிறார் இதன் மூலமாக இயேசு கிறிஸ்துவின் தெய்வத்துவமும் அவர் எக்காலத்திலும் உரியவர் (pre-existence) என்பதும் தெளிவாகிறது.

60. அதிகாரிகளின் பயம் - (அப 6:7

யோவான் 12:42 ஆகிலும் அதிகாரிகளிலும் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள் அப்படியிருந்தும் ஜெபஆலயத்துக்குப் புறம்பாக்கப்படாதபடி, பரிசேயர்நிமித்தம் அதை அறிக்கை பண்ணாதிருந்தார்கள்

யோவான் 12:43 அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள்

12 அதிகாரம்

"அதிகாரிகளிலும் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்" - இரண்டு பேர்களுடைய பெயர்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கிறது (யோவான்19:38-39)

"அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள்" - இந்த வசனத்தில் விரும்புதல் என்பதற்குப் பயன்படுத்தப் பட்டிருக்கும் கிரேக்கச் சொல் "அகாபே"(agapao). (யோவான் 12:25) மனுஷர் தங்களைப் புகழ வேண்டும் தங்களுக்கு ஐசுவரியம் பெருக வேண்டும். ஆதாயம் வரவேண்டும் இயேசு கிறிஸ்துவின் மூலமாக நிந்தைகள் எதுவும் வரக்கூடாது என்று விரும்பினார்கள் (எபி 11:26; எபி 13:13; 1பேதுரு 4:14)

விரும்பினார்கள் (loved) - ἠγάπησαν - agavaoo - 25

வினைச்சொல் - அன்பு செலுத்துதல் சிநேகித்தல், அன்பு கூருதல்

அ) தேவன் மனிதனிடம் காட்டும் அன்பு யோவா 3:16

ஆ) கிறிஸ்து தனி மனிதனிடம் காட்டும் அன்பு மாற்கு 10:21

இ) ஒரு மனிதன் மற்ற மனிதர்களிடம் காட்டும் அன்பு 2கொரி. 12:15

(ஈ) மனிதர் உலகப்பிரகாரமான பொருட்களிடம் காட்டும் அன்பு லூக் 11:43 இந்தச் சொல் பொதுவாக தன்னலம் கருதாத நீதியான கிறிஸ்தவ அன்பைக் குறிக்கும்.

61. இயேசு தம்மைப் பற்றி ஜனங்களிடம் கூறிய கடைசி சாட்சி

யோவான் 12:44 அப்பொழுது இயேசு சத்தமிட்டு: என்னிடத்தில் விசுவாச மாயிருக்கிறவன் என்னிடத்தில் அல்ல என்னை அனுப்பினவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறான்

யோவான் 12:45 என்னைக் காண்கிறவன் என்னை அனுப்பினவரைக் காண்கிறான்

யோவான் 12:46 என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனும் இருளில் இராதபடிக்கு, நான் உலகத்தில் ஒளியாக வந்தேன்

யோவான் 12:47 ஒருவன் என் வார்த்தைகளைக் கேட்டும் விசுவாசியாமற் போனால், அவனை நான் நியாயந் தீர்ப்பதில்லை; நான் உலகத்தை நியாயந் தீர்க்கவராமல், உலகத்தை இரட்சிக்க வந்தேன்

யோவான் 12:48 என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிற தொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்

யோவான் 12:49 நான் சுயமாய்ப் பேசவில்லை, நான் பேசவேண்டியது இன்னதென்றும் உபதேசிக்க வேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார்

யோவான் 12:50 அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறதென்று அறிவேன்; ஆகையால் நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன் என்றார்

"அப்பொழுது இயேசு சத்தமிட்டு....... கூறினார்" - மிகுந்த சத்தமாகப் பேசினார் (யோவான் 7:27; யோவான் 11:43) இயேசு கிறிஸ்து ஜனங்களோடு பேசிய கடைசி சம்பாஷணை (யோவான் 12:44-50)

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் என்னிடத்தில் அல்ல, என்னை அனுப்பின வரிடத்தில் விசுவாசமாயிருக்கிறான்" - இயேசு கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசம் அவரோடு முடிந்துபோவதில்லை இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதினால் அவருடைய பிதாவாகிய தேவனையும் நாம் விசுவாசிக்கிறோம். இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய ஒரேபேறான குமாரன் என்று நாம் விசுவாசிக்கிறோம். (யோவான் 5:23 யோவான் 7:14-19; யோவான் 10:30, யோவான் 12:44-50; யோவான் 13:20

12 அதிகாரம்

"நான் உலகத்தில் ஒளியாக வந்தேன்" - (லூக்கா 5.32)

நாம் செய்ய வேண்டிய காரியங்கள்

1. கிறிஸ்துவின் வார்த்தைகளை விசுவாசிப்பதற்கு ஏதுவாக நாம் அவைகளைக் கேட்க வேண்டும். (யோவான் 12:47; ரோமர் 10:14)

2. கிறிஸ்துவின் வார்த்தைகளைக் கைக்கொள்வதற்கு ஏதுவாக நாம் அவைகளை விசுவாசிக்க வேண்டும். (யோவான் 12:47; ரோமர் 10:14)

3. நாம் இரட்சிக்கப்படுவதற்கு ஏதுவாகக் கிறிஸ்துவின் வார்த்தைகளைக் கைக்கொள்ள வேண்டும். (மத் 10:22; ரோமர் 6:22; எபி 3:6,12-14; எபி 6:11; 1பேதுரு 1:9,13; வெளி 2:26)

"ஒருவன் என் வார்த்தைகளைக் கேட்டும் விசுவாசியாமற்போனால், அவனை நான் நியாயந்தீர்ப்பதில்லை" - இயேசு கிறிஸ்து இப்போது ஜனங்களை நியாயந்தீர்க்கமாட்டார். அவர் உலகத்தை நியாயந்தீர்க்க வராமல், உலகத்தை இரட்சிக்கவந்தார். அவருடைய வார்த்தைகள் கடைசி நாட்களில் அவிசுவாசிகளை நியாயந்தீர்க்கும். (யோவான் 12:45-46)

தீர்க்கதரிசன எண் - 28

"என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது. நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்" (யோவான் 12:48) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை

தள்ளிவிடு (rejecteth) - ἀθετέω - atheteoo 114

வினைச்சொல் - மறு, வியர்த்தமாக்கு, தள்ளிவிடு, அசட்டைப் பண்ணு (to count as nothing, despise) (யோவான் 12:48; மாற்கு 6:26; மாற்கு 7:9; லூக்கா 7:30; லூக்கா 10:16; 1கொரி 1:19; கலா 2:21; கலா 3:15; 1தெச 4:8; 1தீமோ 5:12; எபி 10:28; யூதா 1:8)

"கடைசி நாள்"-யோவான் சுவிசேஷத்தில் 6 இடங்களில் கடைசி நாளைக் குறித்து வாசிக்கிறோம். (யோவான் 6:39,40,44,54; யோவான் 11:24; யோவான் 12:48)

"நான் சுயமாய்ப் பேசவில்லை" - இயேசு கிறிஸ்து தமது சுயமகிமைக்காக எதையும் செய்யவில்லை. அவர் பிதாவின் மகிமையையே தேடுகிறார். அவருடைய சித்தத்தையே செய்கிறார். இயேசு கிறிஸ்து உபதேசிக்க வேண்டிய சத்தியங்களை அவரை அனுப்பின பிதா அவருக்குக் கட்டளையிட்டுக் கூறியிருக்கிறார். அதை மட்டுமே இயேசு கிறிஸ்து உபதேசிக்கிறார்.

"அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறதென்று அறிவேன்; ஆகையால் நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன்" - இயேசுகிறிஸ்து பேசவேண்டியது இன்னதென்றும் உபதேசிக்க வேண்டியது இன்னதென்றும் அவரை அனுப்பின பிதாவே அவருக்குக் கட்டளையிட்டார்" (யோவான் 12:49) இதுவே நித்திய ஜீவனின் வல்லமை. (யோவான் 6:63; யோவான் 12:50; 1யோவான் 3:23; 1யோவான் 5:10-13)

இயேசு கிறிஸ்து ஜனங்கள் மத்தியில் செய்த கடைசி ஊழியமாக யோவான் இந்தச் சுவிசேஷத்தில் குறிப்பிடுகிறார். பஸ்காவிற்கு முந்திய இரண்டாம் நாளில் அதாவது நிசான் மாதம் 13 ஆம் தேதி நடைபெற்ற எந்தக் காரியத்தையும் யோவான் இந்த சுவிசேஷத்தில் எழுதவில்லை.

இயேசு கிறிஸ்து எருசலேமிற்கு அதிகாலமே புறப்பட்டுச் செல்கிறார். அவருடைய சீஷர்கள் இயேசு கிறிஸ்துவிடம் அத்திமரத்தைப்பற்றிக் கேள்வி கேட்கிறார்கள் (மாற்கு 11:20-26). இயேசு கிறிஸ்து தேவாலயத்தில் உபதேசம் செய்து, மிகவும் முக்கியமான முதலாவது தீர்க்கதரிசனத்தைக் கூறுகிறார் (மத்21:23-23:39; மாற்கு11:27-12:44; லூக்கா 20:1-21:38) இயேசு கிறிஸ்து தேவாலயத்தை விட்டு ஒலிவமலைக்குச் செல்கிறார். அங்கு முக்கியமான இரண்டாவதுதீர்க்கதரிசனத்தைக் கூறுகிறார் (மத்24:1-25:46; மாற்கு 13:1-37) அதன்பின்பு அவர் பெத்தானியாவிற்குத் திரும்பி வருகிறார். குஷ்டரோகியாக இருந்த சீமோனுடைய வீட்டிலே இரண்டாவது இராப்போஜனத்தில் பங்கு பெறுகிறார். அங்கு இயேசு கிறிஸ்துவிற்கு இரண்டாம் அபிஷேகம் நடைபெறுகிறது. (மத் 26:1-13; மாற்கு 14:1-9

13 அதிகாரம்

62. கடைசி பஸ்கா - (மத் 26:20 மாற்கு 14:17; லூக் 22:14)

(1) இயேசுவின் வேளை - (2:4, 7:30 8:20; 12:23,27; 17:1)

யோவான் 13:1 பஸ்கா பண்டிகைக்கு முன்னே, இயேசு இவ்வுலகத்தை விட்டு பிதாவினிடத்திற்குப் போகும்படியான தம்முடைய வேளை வந்ததென்று அறிந்து தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்புவைத்தபடியே முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்புவைத்தார்.

"பஸ்கா பண்டிகைக்கு முன்னே" - நிசான் மாதம் 14 ஆம் தேதி பஸ்கா பண்டிகைக்கு ஆயத்தநாள். இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட நாள். கடைசி இராபோஜனத்தின் போது, யூதாஸ் காரியோத்து இயேசு கிறிஸ்துவைக் காட்டிக் கொடுக்க சதிபண்ணுகிறான் (மத் 26:14-29 மாற்கு 14:10-25; லூக்கா 22:1-38, யோவான் 13:1-38) இந்த சம்பாஷணை இயேசு கிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் கெத்செமனே தோட்டத்திற்குப் போகும்போது நடைபெற்றது (மத் 26:30-35; மாற்கு 14:26-31 லூக்கா 22:39, யோவான் 14:1-18:1) கெத்செமனே தோட்டத்தில் இயேசுகிறிஸ்து கைது பண்ணப்படுவதும் பிலாத்து அவரை விசாரிப்பதும் (மத் 26:36-27:31, மாற்கு 14:32-15:19, லூக்கா 22:40-23:25; யோவான் 18:2-19:15) இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்படுவதும், அவருடைய சரீரத்தைக் கல்லறையில் அடக்கம் பண்ணுவதும் (மத் 27:31-66; மாற்கு 15:20-47; லூக்கா 23:26-56, யோவான் 19:16-42)

"தம்முடைய (இயேசு கிறிஸ்துவினுடைய) வேளை வந்தது" - (யோவான் 2:4, யோவான் 7:30; யோவான் 8:20; யோவான் 12:23,27; யோவான் 17:1; லூக்கா 22:53

"முடிவுபரியந்தம்" - இது ஒரு குறிப்பிட்ட காலத்தை வெளிப்படுத்தவில்லை. தம்முடைய சீஷர்களுக்காக இயேசு கிறிஸ்து மிகுந்த தாழ்மையோடு ஊழியம் செய்வதற்கு ஆயத்தமாக இருந்ததைக் குறிப்பிடுகிறது

(2) போஜனம் பண்ணுகிறார்கள் - யூதாஸ் சோதிக்கப்படுகிறான்

யோவான் 13:2 சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து அவரைக் காட்டிக் கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதயத்தைத் தூண்டினபின்பு, அவர்கள் போஜனம் பண்ணிக்கொண்டிருக்கையில்

"அவர்கள் போஜனம்பண்ணிக் கொண்டிருக்கையில்" - கிரேக்க மொழியில் "அவர்கள் போஜனம்பண்ணி முடித்தபின்பு" (ended) என்றிருக்கிறது. இராப்போஜனத்திற்கு அவர்கள் ஆயத்தமாகின பின்பு என்று பொருள் (மத் 26:14-19) முதலாவதாக இயேசு கிறிஸ்து சீஷர்களுடைய கால்களைக் கழுவ வேண்டும் (யோவான் 13:3-17 லூக்கா 7:44

"சீமோனின் குமாரனாகிய யூதாஸ் காரியோத்து அவரைக் காட்டிக்கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதயத்தைத் தூண்டினபின்பு" ஏற்கெனவே பிசாசானவன் யூதாஸ்காரியோத்தின் இருதயத்தைத் தூண்டிக் கொண்டிருக்கிறான் (மத் 26:14-19)

(3) இயேசு தாழ்மைக்கு எடுத்துக் காட்டாக சீஷர்களுடைய கால்களைக் கழுவுகிறார்

யோவான் 13:3 தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக் கொடுத்தாரென்பதையும் தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும், தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்து,

யோவான் 13:4 போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றிவைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு,

13 அதிகாரம்

யோவான் 13:5 பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக் கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார்

"தம்முடைய கையில் பிதா எல்லா வற்றையும் ஒப்புக்கொடுத்தாரென்பதையும் தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும் தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்தார்" - அடிமைகளே மற்றவர்களுடைய கால்களைக் கழுவுவார்கள் இயேசு கிறிஸ்து ஒரு அடிமையைப் போன்று தம்மைத் தாழ்த்துகிறார் தமது தெய்வத்துவம் அதிகாரம் வரப்போகிற மகிமை ஆகியவற்றைத் தம்மைத் தாழ்த்துவதற்கு முன்பாகச் சிந்தித்துப் பார்க்கிறார் தம்முடைய மேன்மை அதிகமாக இருந்தாலும். இயேசு கிறிஸ்து தம்மைத் தாழ்த்தி, சீஷர்களுடைய கால்களைக் கழுவுகிறார்

"இயேசு கிறிஸ்து போஜனத்தை விட்டெழுந்தார்" - போஜன ஆயத்தம் முடிவு பெற்ற பின்பு, இயேசு கிறிஸ்து போஜன மேஜையிலிருந்து எழுந்து, தமது சீஷர்களுடைய கால்களைக் கழுவத் துவங்குகிறார் சீஷர்கள் தங்களுக்குள் யார் பெரியவன் என்று விவாதம் பண்ணிக் கொண்டிருந்தார்கள் லூக்கா 22:24) இயேசு கிறிஸ்து அவர்களுடைய பெருமையின் ஆவியைக் கடிந்து கொண்டார் ஒரு சிறுபிள்ளையைத் தம்மிடத்தில் அழைத்து அவர்கள் சிறுபிள்ளையைப்போல இருக்க வேண்டும் என்று உபதேசம் பண்ணினார் ஒருவருக்கொருவர் அதிகாரம் செலுத்த முயற்சி பண்ணக்கூடாது. இயேசு கிறிஸ்து ஊழியம் கொள்ள வராமல், ஊழியம் செய்ய வந்தார் (மத் 18:3-10). பல சமயங்களில் இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களின் பெருமையான ஆவியைக் கடிந்து கூறியிருக் கிறார் (மத் 20:20-28, மாற்கு 10:35-45) வருஷங்கள் சென்று விட்டதால், சீஷர்கள் இந்த உபதேசத்தை மறந்திருக்கலாம். அவர்கள் உலகப் பெருமையையும் உலக மகிமையையும் நாடியிருக்கலாம். அவர்களுக்குத் தாழ்மையின் முக்கியத்துவத்தை வலியுறுத்திக் கூறுவதற்காக இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவுகிறார்

"வஸ்திரங்களைக் கழற்றிவைத்தார்" - தம்முடைய மேலங்கியைக் கழற்றி வைத்தார் (யோவான் 19:23) வேலை செய்யும்போதும், தூங்கும்போதும் யூதர்கள் தங்களுடைய மேலங்கியைக் கழற்றி வைப்பது வழக்கம்.

"ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டார்" - அடிமையானவன் வேலை செய்யும்போது, அரையிலே தன்னுடைய துணியைக் கட்டிக் கொள்ள வேண்டும். யூதாஸ்காரியோத்தின் கால்களை இயேசு கிறிஸ்து முதலாவதாகக் கழுவினதாகச் சிலர் கூறுகிறார்கள் தம்முடைய இரக்கத்தினாலே அவனைச் சூழ்ந்து கொண்டார் ஒரு விரோதியிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதைக் காண்பிப்பதற்காக இயேசு கிறிஸ்து யூதாசின் கால்களைக் கழுவியிருக்கலாம். (யோவான் 13:5,10-12

"சீஷருடைய கால்களைக் கழுவினார்" - கழுவுதல் என்பதற்கு இங்கு பயன்படுத்தப் பட்டிருக்கும் கிரேக்க வார்த்தை "நிப்டோ" (niptoo) சரீரத்தில் ஒரு பகுதியைக் கழுவுதல் என்பது இதன் பொருள் (மத் 6:17 மத் 15:2; மாற்கு 7:3; யோவான் 9:7-15 யோவான் 13:5-14; 1தீமோ 5:10) மற்றொரு வார்த்தை "பேப்டோ" (baptoo) சரீரத்தை முழுக்குதல் என்பது இதன் பொருள் (வெளி 19:13 யோவான் 13:26 லூக்கா 16:24) பேப்டோ என்னும் கிரேக்க வார்த்தையிலிருந்தே பேப்டைஸ் (baptize) "ஞானஸ்நானம் கொடுத்தல்" என்னும் சொல் வந்திருக்கிறது (மத் 3:6)

கழுவு (wash) - νίπτω - niptoo - 3538

விணைச்சொல் - கழுவு

முழுக்கு (immerse) - βάπτω baptoo - 911

விணைச்சொல் - முழுக்கு

துடை (wipe) - ἐκμάσσω ekmassoo 1591

விணைச்சொல்- துடை (யோவான் 11:2, யோவான் 12:3; லூக்கா 7:38,44

13 அதிகாரம்

(4) பேதுருவின் கலக்கம்

யோவான் 13:6 அவர் சீமோன் பேதுருவினிடத்தில் வந்தபோது அவன் அவரை நோக்கி: ஆண்டவரே நீர் என் கால்களைக் கழுவலாமா என்றான்

(5) இயேசு செய்வதை பேதுரு அப்பொழுது அறியவில்லை

யோவான் 13:7 இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய், இனிமேல் அறிவாய் என்றார்

"நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுதுநீ அறியாய். இனிமேல் அறிவாய்" - என்று இயேசு கிறிஸ்து சீமோன் பேதுருவிடம் கூறுகிறார் தாம் செய்து கொண்டிருக்கும் காரியத்தின் நோக்கத்தை இயேசுகிறிஸ்துவிரைவில் தமது சீஷர் களுக்கு அறிவிப்பார் யோவான் 13:12-17 ஆகிய வசனங்களில் தாம் சீஷர்களின் கால்களைக் கழுவியதற்கான காரணங்களை இயேசு கிறிஸ்து கூறுகிறார்

(6) தனது கால்களைக் கழுவக்கூடாது என்று பேதுரு கூறுகிறான்

யோவான் 13:8 பேதுரு அவரை நோக்கி: நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவப்படாது என்றான் இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை என்றார்

"நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவப்படாது" தமது சீஷர்களின் கால்களைக் கழுவுவது இயேசுகிறிஸ்துவிற்கு கண்ணியமான செயல் அல்ல அவருடைய வயதிற்கு உகந்த செயல் அல்ல என்னும் பொருள்பட பேதுரு இயேசுவிடம் கூறுகிறான் ஒரு சில கிரேக்க வார்த்தைகள் மொத்தமாகச் சேர்க்கப்பட்டு. இந்தப் பொருளைத் தருமாறு தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

ஒன்றுமில்லை (never) - οὐ - ou - 3364

எதிர்மறை எச்சம் - மாட்டாது வேண்டாம், ஒன்றுமில்லை

- μή mee மே

எதிர்மறை எச்சம் இல்லாம் - வேண்டாம்

நோக்கி (unto) - εἰς - eis - 1519

முன்னிடைச்சொல் - நோக்கி, மூலம்

ὁ - ho - 3588

கிரேக்க மொழியில் சிறப்புச்சுட்டு - குறிப்பிட்ட நபர்களையோ அல்லது பொருட்களையோ குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது வலியுறுத்தும் இலக்கணக்கூறாகவும் பயன் படுத்தப்படுகிறது

αἰών - aioon - 165

ஆண்பால பெயர்ச்சொல் - காலம், உலகம் பிரபஞ்சம் அநாதி, சதா காலங்கள்

(அ) என்றென்றைக்கும் அதாவது கடந்த காலத்தில - யோவான் 6:5, 80:32

(ஆ) ஒரு குறிப்பிட்ட காலம் அதாவது இம்மை அல்லது மறுமை - மத். 12:32, மாற். 10:30

"நான் உன்னைக் கழுவாவிட்டால என்னிடத்தில உனக்குப் பங்கில்லை" என்று இயேசு கிறிஸ்து பேதுருவிடம் கூறுகிறார் சீஷர்களுடைய கால்களைக் கழுவுவதைவிட ஒரு மேலான காரியம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது ஒவ்வொருவரும் தங்களைத் தாழ்த்த வேண்டும் என்னும் உபதேசத்தை இயேசு கிறிஸ்து நடைமுறையில் செயல்படுத்திக் காண்பித்துக் கொண்டிருக்கிறார் நமது ஆத்துமாவில் பெருமை வரக்கூடாது. பெருமை நமது ஆத்துமாவை அழித்துப்போடும். (மத் 18:1 8; மத் 23:8 12 லூக்கா 14:7 11; லூக்கா 18:14; 1பேதுரு 5:1 8

13 அதிகாரம்

(7) பின்பு பேதுரு தன் கைகளையும் தலையையும் கழுவ வேண்டுமென்று கூறுகிறான்

யோவான் 13:9 அதற்குச் சீமோன் பேதுரு: ஆண்டவரே, என் கால்களை மாத்திரமல்ல, என் கைகளையும், என் தலையையுங்கூட கழுவவேண்டும் என்றான்.

"ஆண்டவரே, என் கால்களைமாத்திரமல்ல, என் கைகளையும் என் தலையையுங்கூட கழுவவேண்டும்" - என்று பேதுரு இயேசுவிடம் கூறுகிறான். ஆவிக்குரிய சுத்திகரிப்பைக் குறித்து இயேசு கிறிஸ்து கூறுவதை பேதுரு கடைசியாக புரிந்து கொள்கிறான். ஆகையினால் தம்மை முழுவதுமாகக் கழுவ வேண்டுமென்று இயேசுவிடம் விண்ணப்பம் பண்ணுகிறான்.

(8) யூதாசைத் தவிர எல்லோரும் சுத்தமாயிருக்கிறார்கள்

யோவான் 13:10 இயேசு அவனை நோக்கி: முழுகினவன் தன் கால்களை மாத்திரம் கழுவவேண்டியதாயிருக்கும், மற்றபடி அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான்; நீங்களும் சுத்தமாயிருக்கிறீர்கள், ஆகிலும் எல்லாரும் அல்ல என்றார்.

யோவான் 13:11 தம்மைக் காட்டிக் கொடுக்கிறவனை அவர் அறிந்திருந்தபடியினால் நீங்களெல்லாரும் சுத்தமுள்ளவர்கள் அல்ல என்றார்.

"முழுகினவன் தன் கால்களைமாத்திரம் கழுவவேண்டியதாயிருக்கும், மற்றபடி அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான்" பஸ்காவிற்கு ஆயத்தம் பண்ணுவதற்காக இயேசு கிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் இரண்டு தடவை ஸ்நானம் பண்ணியிருந்திருப்பார்கள். ஆகையினால் அவர்களுடைய சரீரங்களில் அழுக்கு இருப்பதற்கு வாய்ப்பில்லை. ஸ்நானம் பண்ணிய இடத்திலிருந்து பஸ்காவைப் புசிக்கும் இடம் வரையிலும் அவர்கள் தங்கள் பாதங்களால் நடந்து வந்திருக்கிறார்கள். அவர்களுடைய பாதங்களில் தூசியிருப்பதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் இயேசு "முழுகினவன் தன் கால்களைமாத்திரம் கழுவவேண்டியதாயிருக்கும்" என்று கூறுகிறார் (லூக்கா 7:44).

"நீங்களும் சுத்தமாயிருக்கிறீர்கள் ஆகிலும் எல்லாரும் அல்ல" - என்று கூறி இயேசு கிறிஸ்து யூதாஸ்காரியோத்தின் பாவமான நிலைமையைக் குறிப்பிடுகிறார். சீஷர்கள் தங்கள் பாவங்களிலிருந்து கழுவப்பட்டார்கள். ஆனால் யூதாஸ்காரியோத்தோ தன்னுடைய உள்ளத்தில் சாத்தானுக்கு இடம் கொடுத்து பாவம் செய்யத் துணிகிறான் (யோவான் 13:11).

சுத்தம் (clean) - καθαρός - katharos - 2513

பொருள் - சுத்தமுள்ள, தூயதான, சுத்தமாயிருக்கிற, சுத்த (pure) (மத் 5:8; அப் 20:26; ரோமர் 14:20; 1தீமோ 1:5; 1தீமோ 3:9; 2தீமோ 1:3; 2தீமோ 2:22; தீத்து 1:15; எபி 10:22; யாக் 1:27; 1பேதுரு 1:22; வெளி 15:6; வெளி 21:18, 21; வெளி 22:1), (clean) (மத் 23:26; மத் 27:59; லூக்கா 11:41; யோவான் 13:10-11; யோவான் 15:3; அப் 18:6; வெளி 19:8, 14), (clear) (வெளி 21:18).

(9) இயேசுவின் தாழ்மை நமக்கு ஓர் எடுத்துக்காட்டு - (மத் 18:2)

யோவான் 13:12 அவர்களுடைய கால்களை அவர் கழுவினபின்பு, தம்முடைய வஸ்திரங்களைத் தரித்துக் கொண்டு, திரும்ப உட்கார்ந்து அவர்களை நோக்கி: நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா?

யோவான் 13:13 நீங்கள் என்னைப் போதகரென்றும் ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள், நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர்தான்.

யோவான் 13:14 ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்.

13 அதிகாரம்

யோவான் 13:15 நான் உங்களுக்குச் செய்தது போல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்

யோவான் 13:16 மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல, அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல

யோவான் 13:17 நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால் இவைகளைச் செய்வீர்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்

"நீங்கள் என்னைப் போதகரென்றும் ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள்" - இயேசு கிறிஸ்துவிற்குப் போதகர் ஆண்டவர் என்று இரண்டு பட்டங்களைக் கொடுக்கிறார்கள் மிகவும் விசேஷித்த ஞானமுள்ளோருக்கு மட்டுமே இவ்வாறு இரண்டு பட்டங்களைக் கொடுப்பது வழக்கம்.

"ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால் நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்" இயேசு கிறிஸ்து தம்மைத் தாழ்த்தி, தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவுகிறார் இயேசு கிறிஸ்துவே இந்தக் காரியத்தைச் செய்யும்போது, அவருடைய சீஷர்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் நிச்சயமாகவே கழுவ வேண்டும் ஒருவனும் தனது சுய மகிமையைத் தேடாமல் பிறருடைய நன்மையையும் தேட வேண்டும். (பிலி 2:4-7) மற்றவர்களுடைய கால்களைக் கழுவும் செயல் தன்னைத்தான் வெறுத்து பிறருக்கு அன்பை வெளிப்படுத்தும் செயலாகும். நான்காம் நூற்றாண்டு வரையிலும், திருச்சபையில் விசுவாசிகளுடைய கால்களைக் கழுவும் வழக்கம் இல்லை. புதிய ஏற்பாட்டின் மற்ற புத்தகங்களிலும் இந்தப் பழக்கம் இருந்ததாகக் குறிப்பு எதுவும் இல்லை ஆதரிக்கப்படும் விதவைகள் பரிசுத்தவான்களுடைய கால்களைக் கழுவ வேண்டும். (1 தீமோ 5:10) ஆனால் இந்தப் பழக்கம் சபை ஒழுங்காக நியமிக்கப்படவில்லை

"ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல" (மத் 10:24-25 லூக்கா 6:40; யோவான் 15:20

"நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால்" - இவைகள் என்பது கால்களைக் கழுவுவதைக் குறிக்காது. தேவையுள்ளவர்களுக்கு உதவி புரிவதைக் குறிக்கும். சிறுமையானவர்களை ஆதரிப்பதைக் குறிக்கும்.

(10) யூதாஸ் தம்மைக் காட்டிக் கொடுக்கப் போவதை இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (மத் 26:20 மாற்கு 14:17 லூக் 22:21)

யோவான் 13:18 உங்களெல்லாரையுங் குறித்து நான் பேசவில்லை நான் தெரிந்துகொண்டவர்களை அறிவேன் ஆகிலும் வேதவாக்கியம் நிறைவேறத் தக்கதாக, என்னுடனே அப்பம் புசிக்கிறவன் என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்

யோவான் 13:19 அது நடக்கும்போது நானே அவரென்று நீங்கள் விசுவாசிக்கும்பொருட்டு, இப்பொழுது அது நடப்பதற்கு முன்னமே அதை உங்களுக்குச் சொல்லுகிறேன்

யோவான் 13:20 நான் அனுப்புகிறவனை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான் என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக் கொள்ளுகிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்

யோவான் 13:21 இயேசு இவைகளைச் சொன்னபின்பு, ஆவியிலே கலங்கி: உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேனென்று சாட்சியாகச் சொன்னார்

யோவான் 13:22 அப்பொழுது யாரைக் குறித்துப் பேசுகிறாரோ என்று சீஷர்கள் ஐயப்பட்டு, ஒருவரையொருவர் நோக்கிப் பார்த்தார்கள்

யோவான் - தொகுப்புரை

13 அதிகாரம்

யோவான் 13:23 அந்தச் சமயத்தில் அவருடைய சீஷரில் இயேசுவுக்கு அன்பானவனாயிருந்த ஒருவன் இயேசுவின் மார்பிலே சாய்ந்து கொண்டிருந்தான்

யோவான் 13:24 யாரைக்குறித்துச் சொல்லுகிறாரென்று விசாரிக்கும்படி சீமோன் பேதுரு அவனுக்குச் சைகை காட்டினான்

யோவான் 13:25 அப்பொழுது அவன் இயேசுவின் மார்பிலே சாய்ந்துகொண்டு ஆண்டவரே அவன் யார் என்றான்

யோவான் 13:26 இயேசு பிரதியுத்தரமாக நான் இந்தத் துணிக்கையைத் தோய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ அவன்தான் என்று சொல்லி துணிக்கையைத் தோய்த்து சீமோன் குமாரனாகிய யூதாஸ் காரியோத்துக்குக் கொடுத்தார்

"உங்களெல்லாரையுங்குறித்து நான் பேசவில்லை" - யோவான் 13:10-11 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் யூதாஸ் காரியோத்தை இந்த வசனம் மறுபடியும் குறிப்பிடுகிறது.

"நான்தெரிந்துகொண்டவர்களை அறிவேன்" இயேசு கிறிஸ்து இரவு முழுவதும் ஜெபம் பண்ணி, தமது சீஷர்களைத் தெரிந்து கொண்டார் (லூக்கா 6:12-16) அவர் யூதாஸ்காரியோத்தையும் தம்முடைய சீஷரில் ஒருவராகத் தெரிந்து கொண்டார் அவன் துன்மார்க்கனாக இருக்க வேண்டுமென்பதோ, அல்லது அவன் துன்மார்க்கனாக ஆகவேண்டுமென்பதோ இயேசு கிறிஸ்துவின் விருப்பமல்ல ஆனாலும் யூதாஸ்காரியோத்து இயேசு கிறிஸ்துவிற்கு உண்மையுள்ளவனாக இருக்கமாட்டான் அவரைக் காட்டிக் கொடுப்பான் என்பதை கிறிஸ்து தாமே முன்னறிகிறார் அவன் இயேசு கிறிஸ்துவைக் காட்டிக் கொடுத்து, தனக்கு அழிவைத் தேடிக் கொள்வான் இயேசு கிறிஸ்து யூதாஸ்காரியோத்தைத் திருத்துவதற்கு முயற்சி பண்ணுகிறார்

ஆனால் அவனோ சாத்தானுக்குத் தன் உள்ளத்தில் இடம் கொடுத்து விடுகிறான் வேதவாக்கியம் நிறைவேறுகிறது.

யோவான் சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாடு தீர்க்கதரிசன எண் - 8

"என்னுடனே அப்பம் புசிக்கிறவன் என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்" (யோவான் 13:18; சங் 41:9

யூதாஸ்காரியோத்து இயேசு கிறிஸ்துவோடு அப்பம் புசித்தான் அது அவனுடைய பாவத்தை அதிகரித்தது கிழக்குத் தேசத்தில் ஒருவன் தன் விரோதியோடு அப்பம் புசிக்கும்போது அந்த விரோதியைத் தன்னுடைய நண்பனாக்கிக் கொள்வான் உப்பிட்டவனுக்குத் துரோகம் செய்யமாட்டான் ஆனால் இங்கு யூதாஸ்காரியோத்து இயேசு கிறிஸ்துவோடு போஜனம் பண்ணிவிட்டு அவரையே காட்டிக்கொடுக்கத் தீர்மானம் பண்ணுகிறான்

"என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்" - இந்த வாக்கியம் கிழக்குத் தேசத்தின் வழக்குச் சொல் வளர்த்த கடா மார்பில் பாய்கிறது என்னும் வழக்குச் சொல்லுக்குச் சமமானது. கிழக்குத் தேசத்தில் குதிரையை நன்றாகத் தீனி போட்டு பராமரித்து வளர்ப்பார்கள் அது தன் எஜமானையே குதிகாலைத் தூக்கி, எத்தி விடும். இது நம்பிக்கைத் துரோகத்தைக் குறிக்கும் வழக்குச் சொல்

"அது நடக்கும்போது நானே அவரென்று நீங்கள் விசுவாசிக்கும்பொருட்டு, இப்பொழுது அது நடப்பதற்கு முன்னமே அதை உங்களுக்குச் சொல்லுகிறேன்" சீஷர்கள் தங்கள் விசுவாசத்தில் வளரவேண்டும் நிலைத்திருக்க வேண்டும். இதற்காகவே இயேசு கிறிஸ்து பல அற்புதங்களைச் செய்திருக்கிறார் அவர்களுக்கும் அற்புதங்களைச் செய்யும் வல்லமையைக் கொடுத்திருக்கிறார்

"நானே அவர்" - (யோவான் 8:28,58, யோவான் 18:5-6)

"நான் அனுப்புகிறவனை ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக் கொள்ளுகிறான்" யோவான் 12:44

13 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 27

"உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோவான் 13:21) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

இயேசு கிறிஸ்து யூதாஸ்காரியோத்தின் கால்களையும் கழுவுகிறார் இதன்பின்பே இந்தத் தீர்க்கதரிசனத்தை இயேசு கிறிஸ்து கூறுகிறார்

"உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்" - (மத் 26:14-16,45-50, மாற்கு 14:10-11; லூக்கா 22:3-6,47-48)

"அப்பொழுது யாரைக்குறித்துப் பேசுகிறாரோ என்று சீஷர்கள் ஐயப்பட்டு, ஒருவரையொருவர் நோக்கிப்பார்த்தார்கள்" - யாருமே யூதாஸ்காரியோத்தைச் சந்தேகப் படவில்லை. (யோவான் 13:22-26) அவன் பணப்பையை வைத்திருக்கிறவன் ஆகையினால் அனைவருடைய நம்பிக்கைக்குப் பாத்திரவானாக இருந்தான் அவன் ஒரு நல்ல நடிகனாக இருந்திருக்க வேண்டும் பிசாசின் வல்லமையினால் அவன் தவறு ஒன்றும் செய்யாதவனைப்போல தன் முகத்தை வைத்திருந்திருக்கலாம்

"அந்தச் சமயத்தில் அவருடைய சீஷரில் இயேசுவுக்கு அன்பானவனாயிருந்த ஒருவன் இயேசுவின் மார்பிலே சாய்ந்து கொண்டிருந்தான்" இந்தச் சுவிசேஷத்தை எழுதிய யோவானை இந்த வாக்கியம் குறிக்கும்.(யோவான் 19:26, யோவான் 20:2 யோவான் 21:7,20-24)

தீர்க்கதரிசன எண் - 28

"நான் இந்தத் துணிக்கையைத் தோய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ அவன்தான்" யோவான் 13:26) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"துணிக்கை (a morsel) - இதன் கிரேக்கச் சொல் "ப்சோமியோன்" (psoomion) என்பதாகும். இந்தச் சொல் இந்த வசனத்திலும், யோவான் 13:27,30 ஆகிய வசனங்களிலும் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது அவர்களுடைய இராப்போஜனத்தின் ஒரு பகுதி. விருந்து கொடுக்கிறவர் அப்பத்தின் ஒரு பகுதியாகிய துணிக்கையை எடுத்து, ரசத்தில் தோய்த்து, விருந்தினருக்குக் கொடுப்பார் அதைப் பெற்றுக் கொள்ளும் விருந்தினர்கள் கௌரவிக்கப் படுகிறார்கள் இயேசு கிறிஸ்து யூதாஸ்காரியோத்தின் மனச்சாட்சியோடு யோவான் 13:27 ஆவது வசனத்தில் பேசிப்பார்த்தார் இப்பொழுது அவனுடைய இருதயத்தில் பேசிப் பார்க்கிறார் ஆனால் ஒரு பிரயோஜனமும் ஏற்படவில்லை யூதாஸ்காரியோத்தின் இருதயம் கடினமாயிற்று.

துணிக்கை (sop) - ψωμίον - **psoomion** - 5596

பல வேறுபாடுற்ற பெயர்ச்சொல் - துணிக்கை

(11) யூதாஸ் தன்னை சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கிறான்

யோவான் 13:27 அந்தத் துணிக்கையை அவன் வாங்கினபின்பு, சாத்தான் அவனுக்குள் புகுந்தான் அப்பொழுது இயேசு அவனை நோக்கி, நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய் என்றார்

யோவான் 13:28 அவர் இப்படி அவனுடனே சொன்னதின் கருத்தைப் பந்தியிருந்தவர்களில் ஒருவனும் அறியவில்லை.

யோவான் 13:29 யூதாஸ் பணப்பையை வைத்துக் கொண்டிருந்தபடியினால், அவனைப்போய், பண்டிகைக்குத் தேவையானவைகளைக் கொள்ளும் படிக்காவது தரித்திரருக்கு ஏதாகிலும் கொடுக்கும்படிக்காவது இயேசு அவனுடனே சொல்லியிருப்பார் என்று சிலர் நினைத்தார்கள்

யோவான் 13:30 அவன் அந்தத் துணிக்கையை வாங்கினவுடனே புறப்பட்டுப்போனான் அப்பொழுது இராக்காலமாயிருந்தது.

யோவான் - தொகுப்புரை

13 அதிகாரம்

"அந்தத் துணிக்கையை அவன் வாங்கினபின்பு, சாத்தான் அவனுக்குள் புகுந்தான்" - சாத்தான் என்னும் சொல் யோவான் சுவிசேஷத்தில் இந்த வசனத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பாகவே சாத்தான் தன்னுடைய வஞ்சனையை யூதாசின் இருதயத்தில் விதைத்துவிட்டான் (மத் 26:14-16) இயேசு கிறிஸ்து யூதாசிடம் பேசியபோது அவன் தன்னுடைய இருதயத்தைக் கடினப்படுத்தினான். இப்போதோ சாத்தான் தன்னை ஆளுகை செய்வதற்கு யூதாஸ் இடம் கொடுத்து விடுகிறான் (லூக்கா 22:3)

"இயேசு அவனை நோக்கி: நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய் என்றார்" - யூதாஸ் சாத்தானுக்கு இடம் கொடுத்திருப்பது இயேசுவிற்குத் தெரியும். இதற்கு மேல் யூதாசிடம் பேசி ஒரு பயனும் இல்லை என்பதை இயேசு நன்றாகத் தெரிந்து வைத்திருந்தார். ஆகையினால் அவன் செய்யப் போகிற வேலையைச் சீக்கிரமாகச் செய்யுமாறு இயேசு கிறிஸ்து யூதாசை அனுப்புகிறார் (சங் 41:6-சங் 41:9)

(12) பஸ்காவில் இயேசுவின் கடைசி உபதேசம் - (மத் 26:30)

யோவான் 13:31 அவன் புறப்பட்டுப் போனபின்பு, இயேசு: இப்பொழுது மனுஷகுமாரன் மகிமைப்படுகிறார், தேவனும் அவரில் மகிமைப்படுகிறார்.

யோவான் 13:32 தேவன் அவரில் மகிமைப்பட்டிருந்தால், தேவன் அவரைத் தம்மில் மகிமைப்படுத்துவார், சீக்கிரமாய் அவரை மகிமைப்படுத்துவார்.

யோவான் 13:33 பிள்ளைகளே, இன்னும் கொஞ்சக்காலம் நான் உங்களுடனேகூட இருப்பேன்; நீங்கள் என்னைத் தேடுவீர்கள், ஆனாலும் நான் போகிற இடத்துக்கு நீங்கள் வரக்கூடாதென்று நான் யூதரோடே சொன்னதுபோல இப்பொழுது உங்களோடும் சொல்லுகிறேன்.

யோவான் 13:34 நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்.

யோவான் 13:35 நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்.

தீர்க்கதரிசன எண் - 29

"இப்பொழுது மனுஷகுமாரன் மகிமைப்படுகிறார், தேவனும் அவரில் மகிமைப்படுகிறார். தேவன் அவரில் மகிமைப்பட்டிருந்தால், தேவன் அவரைத் தம்மில் மகிமைப்படுத்துவார், சீக்கிரமாய் அவரை மகிமைப்படுத்துவார் ...." (யோவான் 13:31-33) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

இயேசு கிறிஸ்து இந்த உலகத்தை இரட்சிப்பதற்காக வந்தவர். ஆகையினால் அவர் மகிமைப்படுகிறார். இயேசு கிறிஸ்து உலகத்தை இரட்சிப்பதினால் அவரை அனுப்பிய பிதாவும் அவரில் மகிமைப்படுகிறார்.

"இன்னும் கொஞ்சக்காலம் நான் உங்களுடனேகூட இருப்பேன், நீங்கள் என்னைத் தேடுவீர்கள், ஆனாலும் நான் போகிற இடத்துக்கு நீங்கள் வரக்கூடாது" இந்த நாளில் மட்டும் இயேசு கிறிஸ்து அவர்களோடு இருப்பார். அதன்பின்பு, இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்படுவார். மூன்று நாள் அடக்கம்பண்ணப்பட்டிருப்பார். மூன்றாம் நாளில் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுவார். அதன்பின்பு நாற்பது நாட்களுக்கு இயேசு கிறிஸ்து இந்தப் பூமியில் அவர்களுக்குத் தரிசனம் தருவார். பின்பு வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவார் (மத் 12:40, அப் 1:3,11) இந்தச் சத்தியத்தை இயேசு கிறிஸ்து யூதருக்குச் சொல்லியிருக்கிறார் (யோவான் 7:34; யோவான் 8:21) தம்முடைய பிள்ளைகளை எடுத்துக் கொள்வதற்காக இயேசு கிறிஸ்து மறுபடியும் வருவார் (யோவான் 13:36 யோவான் 14:3)

13 அதிகாரம்

"நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்" - லேவி 19:18 ஆவது வசனத்தில் நாம் வாசிக்கும் கற்பனையே இங்கும் கூறப்பட்டிருக்கிறது. "உன்னில் நீ அன்புகூருவது போல பிறரிலும் அன்புகூருவாயாக" இந்தக் கற்பனையில "நான் உங்களில் அன்பாயிருந்தது போல" என்னும் வாக்கியத்தை இயேசு கிறிஸ்து சேர்த்திருக்கிறார் இயேசுகிறிஸ்து தமமிடத்தில அன்புகூருவதை விட அதிகமாகவே பிறரிடத்தில அன்புகூர்ந்தார் ஆகையினாலதான் அவர் பாவிகளை இரட்சிப்பதற்காக தமது ஜீவனையே ஒப்புக் கொடுத்தார் சீஷர்கள் மற்றவர்களை நேசிக்க வேண்டும் மற்றவர்களுக்காக சீஷர்கள் தங்கள் ஜீவனையே தரவேண்டும். நரகத்திலிருந்து அவர்களை இரட்சிக்க வேண்டுமென்றால அதற்காக என்னென்ன தியாகங்களையெல்லாம் செய்ய வேண்டுமோ அவை எல்லாவற்றையும் செய்வதற்குச சீஷர்கள் ஆயத்தமாக இருக்க வேண்டும். (ரோமர் 5:8-11)

புதிய (new) - καινός - kainos - 2537

பெயரடை - புது, புதிய, நவமான புதிதான

"நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள்" - சீஷர்களிடத்தில பொறாமையும், பெருமையும் இருந்தது. இயேசு கிறிஸ்து தமது சீஷர்களிடத்தில அன்பாய் இருந்ததுபோல அவர்களும் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாய் இருக்க வேண்டும் பொதுவாக போதகரின் உபதேசம், அவருடைய சீஷரிடத்தில இருக்கும். இயேசு கிறிஸ்துவோ தமது சுபாவம் தம்முடைய சீஷரிடத்தில இருக்க வேண்டுமென்று விரும்புகிறார் இயேசு கிறிஸ்துவினிடத்தில் இருந்த அன்பு அவருடைய சீஷரிடத்திலும் இருக்க வேண்டும். (1யோவான் 3:11-18 1யோவான் 4:7-21)

"ஒருவரிலொருவர்" - இந்த வாக்கியம் இரண்டு கிரேக்க வார்த்தைகளின் தமிழாக்கமாகும். அவையாவன, "என்" (en), "அலீலோயோன்" (alleeloon) இந்த வாக்கியம் இந்த வசனத்திலும் மாற்கு 9:50 ரோமர் 15:5 ஆகிய வசனங்களிலும் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

இல் (among) - ἐν - en - 1722

முன் இடைச்சொல் - ஆல், இல்,

ஒருவரிலொருவர் (one to another) - ἀλλήλων - alleeloon - 240

மறுபெயர் பன்மை ஒருவரை யொருவர் ஒருவரோடொருவர் ஒருவருக்கொருவர் தங்களுக்குள்ளே உங்களுக்குள்ளே ஒருவரிலொருவர் ஒன்றையொன்று ஒருவர் பேரிலொருவர்

69. ஒலிவமலையில் இயேசுவின் பிரசங்கம் - (மத் 26:30)

(1) பேதுரு தம்மை மறுதலிக்கப் போவதை இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (மத் 26:31, மாற்கு 14:26; லூக் 22:31

யோவான் 13:36 சீமோன்பேதுரு அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் எங்கே போகிறீர் என்றான் இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் போகிற இடத்துக்கு இப்பொழுது நீ என் பின்னே வரக்கூடாது, பிற்பாடு என் பின்னே வருவாய் என்றார்

யோவான் 13:37 பேதுரு அவரை நோக்கி: ஆண்டவரே நான் இப்பொழுது உமக்குப் பின்னே ஏன் வரக்கூடாது? உமக்காக என் ஜீவனையும் கொடுப்பேன் என்றான்

யோவான் 13:38 இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: எனக்காக உன் ஜீவனைக் கொடுப்பாயோ? சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாயென்று மெய்யாகவே மெய்யாகவே, உனக்குச் சொல்லுகிறேன் என்றார்

யோவான் – தொகுப்புரை

13 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 30

"நான் போகிற இடத்துக்கு இப்பொழுது நீ என் பின்னே வரக்கூடாது பிற்பாடு என் பின்னே வருவாய்" யோவான் 13:36 இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"ஆண்டவரே நான் இப்பொழுது உமக்குப் பின்னே ஏன் வரக்கூடாது? உமக்காக என் ஜீவனையும் கொடுப்பேன்" என்று பேதுரு தன்னைப் பற்றிச் சரியாகத் தெரியாமலேயே இயேசுகிறிஸ்துவிடம் பேசுகிறான் ஏன் அவருக்குப் பின்னே போகமுடியாது என்பதைத் தெரிந்து கொள்வதில் ஆவலோடு இருக்கிறான் இயேசுகிறிஸ்துவிற்காகத் தன் ஜீவனைக் கொடுப்பதாக வாக்குக் கொடுக்கிறான் ஆனால் அவன் இயேசுகிறிஸ்துவை மறுதலித்து விடுவான் என்பது அவனுக்கே தெரியாது. நம்மைப் பற்றி நமக்குத் தெரியாத காரியங்களெல்லாம் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிற்கு நன்றாகத் தெரியும் (யோவான் 13:38)

தீர்க்கதரிசன எண் - 31

"சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய்" - (யோவான் 13:38) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

மறுதலி (denied) - ἀπαρνέομαι - aparneomai - 533

வினைச்சொல்-வெறுமறுதலி(utterly denied) பொதுவாக மனுஷரை மறுதலிப்பதையே இந்த வாக்கியம் குறிப்பிடும். (மத் 26:34-35,75, மாற்கு 14:30-31,72; லூக்கா 22:34,61

14 அதிகாரம்

(2) சபை எடுத்துக் கொள்ளப்படப் போவதைப் பற்றிய முதலாவது அறிவிப்பு - (1தெச 4:13)

யோவான் 14:1 உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள் என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்

யோவான் 14:2 என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு, அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன் ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன்

யோவான் 14:3 நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்

யோவான் 14:4 நான் போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள் வழியையும் அறிந்திருக்கிறீர்கள் என்றார்

தீர்க்கதரிசன எண் - 32

"உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள் என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள் என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு" (யோவான்14:1-3) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை சபை எடுத்துக் கொள்ளப்படும்போது நிறைவேறும். (1தெச 4:16 1கொரி 15:23, 51-58)

யோவான் சுவிசேஷத்தில் காணப்படும் கர்த்தரின் காரியங்கள்

1 கண்ணீர் (யோவான் 5:4-7)

2 ஆவி (யோவான் 11:33 யோவான் 13:21)

3 ஆத்துமா (யோவான் 12:27)

4 இருதயம் (யோவான் 14:1,27)

"என் பிதா" இயேசு கிறிஸ்து "என்பிதா" என்னும் வாக்கியத்தைப் பல இடங்களில் பயன்படுத்தியிருக்கிறார் யோவான் சுவிசேஷத்தில் 38 இடங்களிலும், மத்தேயு சுவிசேஷத்தில் 15 இடங்களிலும், லூக்கா சுவிசேஷத்தில் 4 இடங்களிலும், இந்த வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது மாற்கு சுவிசேஷத்தில் "என் பிதா" என்னும் வாக்கியம் பயன்படுத்தப்படவேயில்லை. (யோவான் 4:21)

வீடு (house) - οἰκία - oikia - 3614

மூலபாஷை பெயர்ச்சொல் - வீடு **(dwelling place)** - பிதாவின் வாசஸ்தலம் பரலோகமாகும் (2கொரி 12:1-4 வெளி 4-5 எபே 1:20 எபி 8:1 எபி 9:24 அப 1:11)

வாசஸ்தலங்கள் (mansions) - μονή - monee - 3438

மூலபாஷை பெயர்ச்சொல் - வாசஸ்தலம் வாசம் பண்ணுதல் **(abiding places, mansions)** - இந்த வாக்கியம் இந்த வசனத்திலும் யோவான் 14:23 ஆவது வசனத்திலும் மட்டுமே பயன்படுத்தப் பட்டிருக்கிறது

ஸ்தலம் (place)-τόπος - topos - 5117

மூலபாஷை பெயர்ச்சொல் - இடம், ஸ்தலம் ஸ்தானம், பட்டணம் போன்றது **(a place of habitation, as a city)** (லூக்கா 4:37 லூக்கா 10:1 யோவான் 4:20 1கொரி 1:2 1தெச 1:8, எபி 11:10-16 எபி 12:22-24 எபி 13:14 வெளி 21:2 9-27

"நான் மறுபடியும் வருவேன்" இந்த வாக்கியம் சபை எடுத்துக் கொள்ளப் படுவதைக் குறிக்கும். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம்வருகையைக்குறிக்காது (1தெச4:16 1கொரி 15:23,51-58 பிலி 3:21 கொலோ 3:4 எபே 5:27) சபை எடுத்துக் கொள்ளப்படும் போது இயேசு கிறிஸ்து தமக்காக மரித்த எல்லாப் பரிசுத்தவான்களையும் உயிரோடிருக்கும் பரிசுத்தவான்களையும் எடுத்துக் கொள்வார் அதன்பின்பு, இயேசு கிறிஸ்து அவர்களோடு தமது இரண்டாம் வருகையில் பூமிக்குத் திரும்பிவருவார் (சக 14:5 யூதா 1:14 வெளி 19:11-21)

14 அதிகாரம்

"நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்" - கிறிஸ்து பரலோகத்தில் இருக்கிறபடியினால் சபை எடுத்துக் கொள்ளப்படும்போது, நாமும் பரலோகத்திற்குப் போவோம் (அப 1:11 எபே 1:20; எபி 8:1; எபி 9:24

(3) சீஷியத்தின் பிரதான கேள்வி

யோவான் 14:5 தோமா அவரை நோக்கி, ஆண்டவரே, நீர் போகிற இடத்தை அறியோமே வழியை நாங்கள் எப்படி அறிவோம் என்றான்.

(4) இயேசுவின் பதிலுரை

யோவான் 14:6 அதற்கு இயேசு, நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.

யோவான் 14:7 என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள், இதுமுதல் நீங்கள் அவரை அறிந்தும் அவரைக் கண்டும் இருக்கிறீர்கள் என்றார்.

"நானே......இருக்கிறேன்" (I am) - இந்த வாக்கியம் இரண்டு கிரேக்க வார்த்தைகளினால் ஆனது. அவையாவன "ஈகோ" (egoo) "எமி" (eimi) யோவான் சுவிசேஷத்தில் இயேசுகிறிஸ்து 21 இடங்களில் தம்மைப் பற்றி இவ்வாறு கூறியிருக்கிறார் (யோவான் 4:26, யோவான் 6:35,48,51 யோவான் 8:12,1 8:24,28,58 யோவான் 10:7,9,11,14 யோவான் 11:25 யோவான் 13:19, யோவான் 14:6, யோவான் 15:1,5; யோவான் 18:5,8)

நான் (I) ἐγώ - egoo - 1473

பிரதி பெயர்ச்சொல் - நான், எனக்கு

இருக்கிறேன்(am) - εἰμί eimi 1510

வினைச்சொல் - இரு

"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்" - இயேசு கிறிஸ்துவே வழி, அவரே சத்தியம், அவரே ஜீவன்

இயேசு கிறிஸ்து எவ்வாறு வழியாக இருக்கிறார்

1. தேவனிடத்திற்குச் செல்லும் ஒரே வழி (The only way to God) (மத் 7:14 யோவான் 10:1,7,9; யோவான் 14:6
2. தப்பிச்செல்லும் வழி (The way of escape) (1கொரி 10:13)
3. பரிசுத்தத்திற்குச் செல்லும் வழி (The way into the holiest) (எபி 9:8-15 எபி 10:19-23)
4. புதிய ஜீவனுள்ள வழி (The new and living way) (எபி 10:20 எபி 5:9
5. சத்தியத்தின் வழி (The way of truth) (2பேதுரு 2:2)
6. சரியான வழி (The right way) (2பேதுரு 2:15)
7. நீதியின் வழி (The way of righteousness) (2பேதுரு 2:21 1கொரி 1:30)

"சத்தியம்" - யோவான் சுவிசேஷத்தில் இயேசு கிறிஸ்து சத்தியம் என்னும் வார்த்தையை 22 தடவைகள் பயன்படுத்தியிருக்கிறார் மற்ற சுவிசேஷங்களில் 4 தடவைகள் மட்டுமே பயன்படுத்தியிருக்கிறார் இயேசு கிறிஸ்துவே தேவனுடைய சத்தியம். அந்தச் சத்தியம் நம்மை விடுதலையாக்கும். (யோவான் 8:32-36, யோவான் 14:6) இயேசுகிறிஸ்து போதகர் சத்தியத்திற்கு ஆதாரமாக இருக்கிறார் (மத் 22:16; மாற்கு 12:14; யோவான் 1:14,17

"ஜீவன்" யோவான் சுவிசேஷத்தில் இயேசு கிறிஸ்து ஜீவன் என்னும் வார்த்தையை 44 தடவைகள் பயன்படுத்தியிருக்கிறார் மற்ற சுவிசேஷங்களில் 18 தடவைகள் மட்டுமே பயன்படுத்தியிருக்கிறார் (யோவான் 6:27)

14 அதிகாரம்

"என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" - (அப் 4:12 எபே 2:18

"என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்" - யோவான் 12:44

"இதுமுதல் நீங்கள் அவரை அறிந்தும் அவரைக் கண்டும் இருக்கிறீர்கள்" - யோவான் 1:18

(5) உண்மையான விசுவாசிகளின் ஆவல்

யோவான் 14:8 பிலிப்பு அவரை நோக்கி, ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது எங்களுக்குப் போதும் என்றான்

(6) தேவனுடைய உண்மையான வெளிப்பாடு

யோவான் 14:9 அதற்கு இயேசு: பிலிப்புவே, இவ்வளவுகாலம் நான் உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படி சொல்லுகிறாய்?

யோவான் 14:10 நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா? நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை, என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்துவருகிறார்

யோவான் 14:11 நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள்; அப்படியில்லாவிட்டாலும் என் கிரியைகளினிமித்தமாவது என்னை நம்புங்கள்

"நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறோம்" - (லூக்கா 22:3)

(7) இயேசுவை விசுவாசிக்கிறவர்களால் செய்யக்கூடிய காரியங்கள் - (மத் 18:18)

யோவான் 14:12 மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான்; இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்

"என்னை விசுவாசிக்கிறவன் - இந்த வாக்கியம் எல்லா விசுவாசிகளையும் குறிக்கும் (யோவான் 3:15-18,36 யோவான் 5:24 யோவான் 6:35,47; யோவான் 7:37-39 யோவான் 11:25; யோவான் 12:44-46 மாற்கு 9:23; மாற்கு 16:15-20; அப் 10:43 ரோமர் 1:16; ரோமர் 3:26; 1யோவான் 5:1-10

"கிரியைகள்" (works) - இதன் கிரேக்க வார்த்தை "எர்கோன்" (ergon). கிரியை, வேலை, ஊழியம், வேலைப்பாடு (works, deeds, acts) இயேசுகிறிஸ்து இந்த வாக்கியத்தில் கிரியைகள் என்று கூறியிருப்பது அற்புதங்கள் சுகமாதல்கள் அடையாளங்கள் தெய்வீக வல்லமையினால் நடைபெறும் வல்லமையான காரியங்கள் போன்றவற்றைக் குறிக்கும் (மத் 11:20-24 மத் 13:54-58; மத் 14:2; யோவான் 5:20,36 யோவான் 9:3; யோவான் 10:25,32; யோவான் 14:10-12) இயேசு கிறிஸ்து தமது கிரியைகளினால் சகல வியாதிகளையும் சொஸ்தமாக்கினார் பிசாசுகளைத் துரத்தினார் மரித்தோரை எழுப்பினார் குஷ்டரோகிகளைச் சுத்தமாக்கினார் சாத்தானின் அந்தகாரச் சக்தியினால் அடிமைகளாக இருந்தவர்களை விடுவித்தார் (மத் 4:23-24,மத் 9:35; அப் 10:38) திரளான ஜனங்களுக்குப் போஜனம் கொடுத்தார், தண்ணீரின்மீது நடந்தார் தண்ணீரைத் திராட்சரசமாக மாற்றினார்

கிரியைகள் (works) - ἔργον - ergon 2041

பலவேறுபாட்டுற்ற பெயர்ச்சொல் கிரியை, வேலை, ஊழியம், வேலைப்பாடு

யோவான் – தொகுப்புரை

14 அதிகாரம்

"என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான்" - இந்த வாக்குத்தத்தம் எல்லா விசுவாசிகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. (லூக்கா 10:19; லூக்கா 24:49; அப் 1:4-8) எல்லா விசுவாசிகளும் தேவனுடைய தெய்வீக வல்லமையைப் பெற்றுக் கொள்ள முடியும். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் (யோவான் 7:37-39) விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளும்போது, ஆவிக்குரிய கிரியைகளைச் செய்வதற்குப் பெலனடைவார்கள்

"இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்" - இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியானவரை அளவில்லாமல் பெற்றிருக்கிறார் எந்த மனுஷருக்கும் இயேசு கிறிஸ்துவைவிட அதிகமான வல்லமை கொடுக்கப்படவில்லை. (யோவான் 3:34; ஏசா 11:2; ஏசா 61:1-2) ஆகையினால், பெரிய காரியங்கள் என்பது இயேசு கிறிஸ்து செய்த காரியங்களைவிட பெரிய காரியங்கள் என்று பொருள்கொள்ளமுடியாது. மனுஷன் தனக்குரிய கிரியைகளைச் செய்வதற்குப் பதிலாக தன்னுடைய மனுஷ வல்லமைக்கு அப்பாற்பட்ட பெரிய கிரியைகளை பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் செய்வான்

பெரிய கிரியைகளுக்கான காரணங்கள்

1 உலகத்தின் அதிபதியாகிய சாத்தான புறம்பே தள்ளப்பட வேண்டும். (யோவான 12:31)

2 சிலுவையில சாத்தானின தோல்வி (கொலோ 2:14-17; 1பேதுரு 2:24)

3 முழுமையான இரட்சிப்பு (யோவான் 19:30; கொலோ 2:14-17; 1பேதுரு 1:10-12)

4 இயேசு கிறிஸ்து மகிமை அடையும் வரையிலும், பரிசுத்த ஆவியானவரின அபிஷேகம் கொடுக்கப்படாது (யோவான் 7:37-39 அப் 1:4-8 அப் 2:33)

5 விசுவாசிகளுக்காக கிறிஸ்துவின் பரிந்து பேசும் ஜெபம். (ரோமர் 8:34, எபி 7:25)

6 இயேசு கிறிஸ்துவின் மகிமை மறுபடியும் உண்டாகிறது (யோவான் 17:5)

7 கிறிஸ்துவின் பிரதான ஆசாரியத்துவம் (எபி 4:14-16 எபி 6:20; எபி 7:11-28; எபி 9:11-15

8 எல்லா வல்லமைகளுக்கும் தலைவர் (எபே 1:20-23; 1பேதுரு 3:22; கொலோ 2:10)

9 விசுவாசிகளுக்குக் கொடுப்பதற்காக சகல அதிகாரமும் இயேசு கிறிஸ்துவிற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது (மத் 28:18-20; யோவான் 14:12-15; அப் 1:8

10 மரணம், பாதாளம், கல்லறை ஆகியவற்றின்மீது முழுமையான வெற்றி (எபி 2:14-15; வெளி 1:18 கொலோ 2:14-15)

11 இயேசு கிறிஸ்துவே சபையின் தலைவர் (எபே 1:20-23, கொலோ 1:16-18,24

12 வாக்குத்தத்தங்களின பிரகாரம் புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களைத் தருகிறார் (மத் 26:28 2கொரி 3:6-15, எபி 8:6) பெரிய வல்லமையினால இதை உறுதிபண்ணுகிறார் (எபி 2:1-4, மாற்கு 16:15-20; லூக்கா 24:49, 2கொரி 3:6-15; 2பேதுரு 1:1-10

13 கிறிஸ்துவில பரிபூரணமான கிருபை சாத்தியமாய் இருக்கிறது (யோவான 1:17; கொலோ 2:10

14 பாடுகளைத் தொடர்ந்து இரட்சிப்பின் மகிமை வெளிப்படும். (1பேதுரு 1:10-12, எபி 2:1-4; 2கொரி 3)

15 எல்லா விசுவாசிகளும் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க முடியும். (எபி 10:19-38; எபே 2:14-18

14 அதிகாரம்

16 யூதரையும், புறஜாதியாரையும் தேவன் ஒன்றுபோல் ஆசீர்வதிக்கும் காலம். (எபே 2:14-18; எபே 3:1-11 ரோமர் 10:9-14)

17 தேவன் கிறிஸ்துவை அனுப்பியதுபோன்று, சகல அதிகாரத்தோடும், வல்லமையோடும் மனுஷனை அனுப்பும் காலம். (யோவான் 17:18 யோவான் 20:21)

18 எல்லா விசுவாசிகளும் பரிசுத்த ஆவியானவரின் வரங்களையும் கனியையும், அபிஷேகத்தையும் பெற்றுக் கொள்ளும் காலம். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பரிசுத்த ஆவியானவரின் ஒரு பகுதியை மட்டுமே பரிசுத்தவான்கள் பெற்றுக் கொண்டார்கள் (யோவான் 7:37-39 யோவான் 14:12-15; மத் 17:20 மத் 21:22; மாற்கு 9:23)

19 கிறிஸ்துவிலும், பரிசுத்த ஆவியானவரிலும் அளவில்லாத ஆசீர்வாதங்களைப் பெறும் காலம் சுவிசேஷத்தின் வாக்குத்தத்தங்கள் முழுமையான ஆசீர்வாதங்களைத் தரும் காலம். (யோவான் 17:20, யோவான் 21:22; மாற்கு 9:23 மாற்கு 11:22-24; யோவான் 15:7,16, 2கொரி 2:20; 2பேதுரு 1:3-12)

20 தேவன் எல்லாத் தேசங்களையும் ஆசீர்வதிக்கும் காலம் (மத் 28:18-20, மாற்கு 16:15-20; லூக்கா 24:47-49, அப் 1:4-8, ஆதி 12:1-3). விசுவாசிகள் உலகம் முழுவதும் சென்று இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும்

21 மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான் இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான் (யோவான் 14:12)

(8) விசுவாசிகளுக்கு தேவன் செய்யாயும் காரியம்

யோவான் 14:13 நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்

யோவான் 14:14 என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்

"நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ குமாரனில் பிதா மகிமைப்படும் படியாக, அதைச் செய்வேன் - விசுவாசிகள் இயேசுகிறிஸ்துவிடம் ஜெபிக்கும்போது அவர் [illegible] ஜெபங்களுக்குப் பதில் கொடுக்கிறார் நம்மை இரட்சிக்கிறார் நமது வியாதிகளைக் குணப்படுத்துகிறார் இதன் மூலமாகப் பிதா இயேசு கிறிஸ்துவில் மகிமைப்படுகிறார் நாம் விசுவாசிக்கும்போது கேட்பதைப் பெற்றுக் கொள்வோம் என்று சந்தேகப்படாமல் விசுவாசிக்க வேண்டும் (எபி 11:6 யாக் 1:5-8; மாற்கு 11:22-24)

(9) தேவனிடத்தில் அன்பாயிருக்கிறவர்கள் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும் – லூக் 11:13, அப் 2:38-39, 10:45- 11:17; 15:8, கலா 3:14

யோவான் 14:15 நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்

யோவான் 14:16 நான் பிதாவை வேண்டிக் கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்

யோவான் 14:17 உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ள மாட்டாது, அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்

14 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 33

"நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன் அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்" - யோவான் 14:16-21 இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

இயேசு கிறிஸ்து தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தராக இருப்பார் (1தீமோ 2:5) அவருடைய மத்தியஸ்தத்தின் மூலமாகவும், பரிந்து பேசும் ஜெபத்தின் மூலமாகவும் கிருபையின் எல்லா ஆசீர்வாதங்களும் நமக்கு வரும் (ரோமர் 8:34; எபி 7:25)

"வேறொரு" - இயேசு கிறிஸ்து வேறொரு தேற்றரவாளன் என்று குறிப்பிட்டிருப்பதினால் இந்த வாக்கியம் அவனைக் குறிக்காது. மற்றொரு தெய்வீக நபரைக் குறிக்கும்.

தேற்றரவாளன் (Comforter) - παράκλητος-parakleetos- 3875

ஆண்பால் பெயர்சொல் - தேற்றரவாளன், நீதிபரர் (யோவான் 14:26)

"என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்கு" - பரிசுத்த ஆவியானவர் நம்மோடு என்றென்றைக்கும் இருப்பார். நம்மை விட்டு எடுத்துக் கொள்ளப்படமாட்டார். சபை எடுத்துக் கொள்ளப்படும் வரையில் மட்டுமே பரிசுத்த ஆவியானவர் நம்மோடு இருப்பார் என்று நினைக்க வேண்டியதில்லை. அவர் இப்போது நம்மோடு இருப்பதுபோலவே, உபத்திரவக் காலத்திலும் ஆயிரம் வருஷ அரசாட்சியிலும் நித்திய காலமாகவும் இருப்பார் (அப் 2:16-21; வெளி 7:14; வெளி 12:17; வெளி 19:10; சக 12:10) பரிசுத்த ஆவியானவர் இந்த உலகத்தை விட்டு எடுத்துக் கொள்ளப்பட்டால், மனுஷருக்குப் புதிய ஏற்பாட்டின் ஆசீர்வாதங்கள் எதுவும் கிடைக்காது (2தெச 2:7)

உலகம்(world) κόσμος-kosmos 2889

ஆண்பால் பெயர்ச்சொல் - உலகம், அலங்காரம், லௌகிகம்- அவிசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்ளமாட்டார்கள் (ரோமர் 8:9,14-16; கலா 4:6; 1கொரி 3:16-17)

"உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது" - இந்த வாக்கியத்தில் உலகம் என்பது அவிசுவாசிகளைக் குறிக்கும். அவர்கள் பரிசுத்த ஆவியானவரைக் காணவும் புரிந்து கொள்ளவும் மறுக்கிறார்கள் (1கொரி 2:14) பரிசுத்த ஆவியானவரைத் தன்னுடைய ஜீவியத்தில் பெற்றுக் கொண்டு, அவரைக் கிரியை செய்வதற்கு இவர்கள் அனுமதிப்பதில்லை. (யோவான் 1:12; யோவான் 3:5,16-20,36; யோவான் 5:24; யோவான் 16:7-15)

"அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால் நீங்கள் அவரை அறிவீர்கள்" - பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுடைய உள்ளத்தில் வாசம் பண்ணுகிறார். அவர்களுக்குள் இருக்கிறார். ஆகையினால் விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரை அறிந்திருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து இந்த வசனத்தில் தமது சீஷர்களிடத்தில் பேசுகிறார். இயேசு கிறிஸ்துவின் சீஷர்களுக்கு பரிசுத்த ஆவியானவர் ஒரு குறிப்பிட்ட அளவு கொடுக்கப்பட்டிருக்கிறார். இயேசு கிறிஸ்து பரமேறிய பின்பு, இவர்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை நிறைவாகப் பெற்றுக் கொள்வார்கள் (யோவான் 7:37-39; லூக்கா 24:49; அப் 1:4-8)

"அவர் உங்களுடனே வாசம்பண்ணி" - இந்த வாக்கியத்தில் "உடனே" என்பதன் கிரேக்க வார்த்தை "பாரா" (para) என்பதாகும். பரிசுத்த ஆவியானவர் சீஷர்களோடு இருந்தார் (beside, alongside of) அதுமட்டுமல்லாமல் ஆவியானவர் அவர்களுக்குள்ளும் இருந்தார் (in them) (மத் 10:1-8,20; மாற்கு 6:7-13; லூக்கா 9:1-10; லூக்கா 10:1-20) பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குள் இருந்தாலும் அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பூரணமாகப் பெற்றுக் கொள்ளவில்லை. (யோவான் 3:34) இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு பரிசுத்த ஆவியானவரை அளவில்லாமல் கொடுப்பார் (மத் 3:11; யோவான் 1:31-33; யோவான் 7:37-39; லூக்கா 11:13; லூக்கா 24:49; அப் 1:4-8; அப் 2:16-21,33,38-39; அப் 5:32; கலா 3:14)

14 அதிகாரம்

உடன் (with) - παρά - para - 3844

முன்னிடைச்சொல் - உடைய, முதல் ஆறாம் வேற்றுமையுடன் இருந்து நான்காம் வேற்றுமையுடன் இல இரண்டாம் வேற்றுமை இன்

(10) ஆவிக்குரிய ஐக்கியமும் வல்லமையும்

யோவான் 14:18 நான் உங்களைத் திக்கற்றவர் களாகவிடேன் உங்களிடத்தில் வருவேன்

யோவான் 14:19 இன்னும் கொஞ்சக் காலத்திலே உலகம் என்னைக் காணாது; நீங்களோ என்னைக் காண்பீர்கள் நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள்

யோவான் 14:20 நான் என் பிதாவிலும் நீங்கள் என்னிலும் நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்

யோவான் 14:21 என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான் என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான் நானும் அவனில் அன்பாயிருந்து அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார்

"நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன்" திக்கற்றவர்கள் (orphans) என்பதன் கிரேக்க வார்த்தை "ஆர்பனோஸ்" (orphanos). இந்த வாக்கியம் இந்த வசனத்திலும், யாக் 1:27 ஆவது வசனத்திலும் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு போதகருக்கு அவருடைய சீஷர்கள் அவருக்குப் பிள்ளைகளாக இருப்பார்கள் போதகர் மரித்த பின்பு, சீஷர்கள் அனாதைகளைப் போன்று இருப்பார்கள் இயேசு தமது சீஷர்களைப் பிள்ளைகளே என்று அழைக்கிறார்

(யோவான் 13:33) ஆகையினால், இப்பொழுது தாம் போன பின்பு அவர்களை திக்கற்றவர்களாய் விடேன் என்று வாக்குப் பண்ணுகிறார்

திக்கற்றவர்கள் (comfortless) ὀρφανός - orphanos - 3737

பெயரடை - திக்கற்றவர்களான (orphans)

"உங்களிடத்தில் வருவேன்" - ஆம் இயேசு கிறிஸ்து அவர்களிடத்தில் வந்தார் (யோவான் 20; அப 1:3)

"இன்னும் கொஞ்சக்காலத்திலே உலகம் என்னைக் காணாது" - இன்னும் இருபது மணி நேரத்தில் இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் மரித்துப் போவார் அவரைச் சிலுவையிலிருந்து கீழே இறக்கி, கல்லறையில் அடக்கம்பண்ணுவார்கள் அதன் பின்பு, அவிசுவாசிகளான இந்த உலகம் இயேசு கிறிஸ்துவைக் காணாது

"நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள்" - இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுகிறபடியினால் அவருடைய சீஷர்களும் உயிர்த்தெழுவார்கள் அவருடைய உயிர்த்தெழுதல் சீஷர்கள் விசுவாசிக்கும் சத்தியங்களை நிரூபிப்பதாக உள்ளது (1கொரி 15) ஆகையினால் உலகம் இயேசு கிறிஸ்துவைக் காணாவிட்டாலும் சீஷர்கள் அவரைக் காண்பார்கள்

"நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும் நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்" - (லூக்கா 22:3)

"என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான்" - இயேசுகிறிஸ்துவின் கற்பனைகளைப் பெற்றுக் கொண்டால் மட்டும் போதாது அவைகளைக் கைக்கொள்ளவும் வேண்டும். (யோவான் 6:27, யோவான் 10:6,26)

"நானும் அவனில் அன்பாயிருந்து அவனுக்கு [redacted] வெளிப்படுத்துவேன்" இயேசு கிறிஸ்துவெவ்வொருவிசுவாசிக்கும் கொடுக்கும் வாக்குத்தத்தம். (யோவான் 7:37 39, யோவான் 14:12 15; யோவான் 15:16)

14 அதிகாரம்

(11) விசுவாசிகளுக்கு தேவன் தம்மை வெளிப்படுத்துகிறார்

யோவான் 14:22 ஸ்காரியோத்தல்லாத யூதா என்பவன் அவரை நோக்கி: ஆண்டவரே நீர் உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தாமல் எங்களுக்கு உம்மை வெளிப்படுத்தப்போகிற காரணமென்ன என்றான்.

"ஸ்காரியோத்தல்லாத யூதா" - யாக்கோபின் சகோதரன் ஒரு அப்போஸ்தலன் (லூக்கா 6:16; அப் 1:13) மறுபெயர் லெபேயு (Lebbaeus). ததேயு (Thaddaeus) (மத் 10:3; மாற்கு 3:18)

(12) விசுவாசிகளிடத்தில் தேவன் வாசம்பண்ணுகிறார் (1கொரி 6:17)

யோவான் 14:23 இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான்; அவனில் என் பிதா அன்பாயிருப்பார், நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்.

யோவான் 14:24 என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக்கொள்ளமாட்டான். நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது.

யோவான் 14:25 நான் உங்களுடனே தங்கியிருக்கையில் இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.

தீர்க்கதரிசன எண் - 34

"ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான்; அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்." (யோவான்14:23-26) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று இன்னும் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

"நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்" - இந்த வாக்கியத்தில் "நாங்கள்", "வாசம்பண்ணுவோம்" என்று பன்மையில் கூறப்பட்டிருக்கிறது. பிதாவும், குமாரனும் ஒற்றுமையாகக் கிரியை செய்கிறார்கள். இருவருமே சர்வ ஞானமுள்ளவர்கள். இயேசு கிறிஸ்து தமது சீஷர்களை விட்டுப் புறப்படும் காலத்தையும், இயேசு கிறிஸ்துவின் மகிமை அவரிடம் மறுபடியும் கொடுக்கப்படும் காலத்தையும் இது குறிக்கும். (யோவான் 17:5) இயேசு கிறிஸ்து இந்தப் பூமியில் 33 வருஷங்கள் மனுஷராக இருந்தபோது அவர் மனுஷத்துவத்தின்வரையறைக்குட்பட்டிருந்தார். அவரால் ஒரு வேளையில் ஓரிடத்தில் மட்டுமே இருக்க முடிந்தது. ஆனால் இப்போதோ இயேசுகிறிஸ்து சர்வ வியாபகராக இருக்கிறார் (He is omnipresent)

(13) பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன்

யோவான் 14:26 என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்.

"தேற்றரவாளன்" - பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கும் வார்த்தை. இதற்கான கிரேக்க வார்த்தை "பேரக்லேட்டோஸ்" (parakletos) என்பதாகும். யோவான் மட்டுமே புதிய ஏற்பாட்டில் இந்த வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார் (யோவான் 14:16,26; யோவான் 15:26; யோவான் 16:7) பரிந்துபேசுகிறவர் (Advocate). (1யோவான் 2:1) தேற்றரவாளன் என்பவருக்கு ஒருவருக்கு உதவி செய்யக்கூடியவர், ஆறுதல் கூறக்கூடியவர் என்று பொருள். இந்தப் பூமியில் பரிசுத்த ஆவியானவர் நமது தேற்றரவாளராக இருக்கிறார். பரலோகத்தில் இயேசு கிறிஸ்து நமது தேற்றரவாளராக இருப்பார்.

தேற்றரவாளன் (Comforter)

παράκλητος parakleetos
3875

ஆண்பால் பெயர்ச்சொல்
தேற்றரவாளன், நீதிபரர்

14 அதிகாரம்

"நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்" - யோவான் 16:8)

(14) தேவனுடைய சமாதானம்

யோவான் 14:27 சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன் என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன் உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக.

"சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன் என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்" - இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் மரிப்பதன் மூலமாக அவருடைய பிள்ளைகளுக்குக் கிடைக்கும் மிகப்பெரிய ஆசீர்வாதம் அவருடைய சமாதானமாகும். இயேசு கிறிஸ்துவின் சமாதானம் உலகம் கொடுக்கக்கூடிய சமாதானம் போன்று இராது. இது உலக சமாதானம் இயேசு கிறிஸ்து கொடுப்பது தெய்வீக சமாதானம் அவர்கள் சமாதானத்தின் பிரபுவைக் கொலை செய்துவிட்டார்கள் (அப் 4:27) இன்னும் அவர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளவில்லை ஆகையினால் அவர் அவர்களை ஆளுகை செய்ய வருமவரையிலும். அவர்களுக்குச் சமாதானம் இராது. (சங் 2; 1தெச 5:3; 1கொரி 15:24-28

"உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" (யோவான் 14:1 3

(15) இயேசு பிதாவினிடத்திற்கு போகிறார் - (யோவான் 14:6,12,16,26; 15:26; 16:7,23; அப் 1:4; 2:33; ரோமர் 8:34, எபி 1:3; 4:14; 7:25)

யோவான் 14:28 நான் போவேன் என்றும், திரும்பி உங்களிடத்தில் வருவேன் என்றும் நான் உங்களுடனே சொன்னதைக் கேட்டீர்களே நீங்கள் என்னில் அன்புள்ளவர்களாயிருந்தால் பிதாவினிடத்திற்குப் போகிறேனென்று நான் சொன்னதைக் குறித்துச் சந்தோஷப்படுவீர்கள், ஏனெனில் என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்

யோவான் 14:29 இது நடக்கும்போது நீங்கள் விசுவாசிக்கும்படியாக, நடப்பதற்கு முன்னமே இதை உங்களுக்குச் சொன்னேன்

யோவான் 14:30 இனி நான் உங்களுடனே அதிகமாய்ப் பேசுவதில்லை. இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை

யோவான் 14:31 நான் பிதாவில் அன்பாயிருக்கிறேன் என்றும், பிதா எனக்குக் கட்டளையிட்டபடியே செய்கிறேன் என்றும் உலகம் அறியும் படிக்கு இப்படி நடக்கும் எழுந்திருங்கள் இவ்விடம்விட்டுப் போவோம் வாருங்கள் என்றார்

தீர்க்கதரிசன எண் - 85

"நான் போவேன் என்றும், திரும்பி உங்களிடத்தில் வருவேன் என்றும் நான் உங்களுடனே சொன்னதைக் கேட்டீர்களே நீங்கள் என்னில் அன்புள்ளவர்களாயிருந்தால் பிதாவினிடத்திற்குப் போகிறேனென்று நான் சொன்னதைக் குறித்துச் சந்தோஷப்படுவீர்கள் ஏனெனில் என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்" (யோவான் 14:28 31) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று இன்னும் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

"என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்" திரித்துவத்தில் பிதாவே தலைவராக இருக்கிறார் (யோவான் 14:16; யோவான் 16:23-26 1கொரி 11:3) இயேசு கிறிஸ்து பிதாவானவரோ, பரிசுத்த ஆவியானவரோ அல்ல

"இந்த உலகத்தின் அதிபதி" - சாத்தான் (யோவான் 12:31; எபே 2:2 1கொரி 4:4

14 அதிகாரம்

"அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை" - இயேசு கிறிஸ்துவிடத்தில் சாத்தானுடைய பாவமோ அவனுடைய சுபாவமோ இல்லை. இயேசு கிறிஸ்து ஒரு பாவமும் செய்யவில்லை. ஆகையினால் பாவத்தின் சம்பளமாகிய மரணம் அவருக்குக் கிடையாது. சாத்தானுக்கு இயேசுவைக் கொல்ல உரிமையில்லை. ஆனபோதிலும் பிதாவாகிய தேவன் தமது ஒரேபேறான குமாரனைச் சிலுவையில் மரிப்பதற்கு ஒப்புக்கொடுத்தார். இயேசு கிறிஸ்து ஒரு பாவமும் அறியாதவர். உலகத்தின் பாவங்களுக்காக இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்தார். ஒரு பாவமும் அறியாத இயேசு கிறிஸ்துவைச் சாத்தான் சிலுவையில் அறைந்ததால் இயேசுகிறிஸ்துவினிடத்தில் சாத்தானுக்கு ஒன்றுமில்லை. அவன் ஒரு பொய்யன் என்பதும், மாய்மாலக்காரன் என்பதும் உறுதியாகிறது. இயேசு கிறிஸ்துவினால் இரட்சிக்கப்பட்டவர்களிடத்திலும் சாத்தானுக்கு ஒரு அதிகாரமும் இல்லை. கல்வாரி சிலுவையில் இயேசு கிறிஸ்து சாத்தானின் சகல அந்தகாரச் சக்திகளையும் முறியடித்தார்.

"நான் பிதாவில் அன்பாயிருக்கிறேன்" - இந்த ஒரு வசனத்தில் மட்டுமே இயேசு கிறிஸ்து தமது பிதாவிடத்தில் அன்பாக இருப்பதாகக் கூறுகிறார். ஆறு இடங்களில் தாம் குமாரன்மீது அன்பாக இருக்கிறார் என்று பிதா கூறுவதை வாசிக்கிறோம் (யோவான் 3:35; யோவான் 10:17; யோவான் 15:9; யோவான் 17:23-26).

"பிதா எனக்குக் கட்டளையிட்டபடியே செய்கிறேன்" - இயேசு கிறிஸ்து பிதாவில் அன்பாயிருக்கிறார். அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிகிறார். பிதா குமாரனுக்குக் கட்டளையிட்டபடியே செய்கிறார்.

"எழுந்திருங்கள் இவ்விடம்விட்டுப் போவோம் வாருங்கள்" இந்த வசனமும், மத் 26:30 ஆவது வசனமும் ஒன்றாக இருக்கலாம். அவ்வாறாயின், யோவான் 14 ஆவது அதிகாரம் இராப்போஜன அறையைவிட்டு புறப்படுவதற்கு முன்பாகப் பேசிய வசனங்களாகும். யோவான் 15-17 ஆகிய அதிகாரங்கள் கெத்செமனே தோட்டத்திற்குப் போகும் வழியில் பேசியவை.

யோவான் - தொகுப்புரை

14 அதிகாரம்

"அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை" - இயேசு கிறிஸ்துவிடத்தில் சாத்தானுடைய பாவமோ அவனுடைய சுபாவமோ இல்லை. இயேசு கிறிஸ்து ஒரு பாவமும் செய்யவில்லை. ஆகையினால் பாவத்தின் சம்பளமாகிய மரணம் அவருக்குக் கிடையாது. சாத்தானுக்கு இயேசுவைக் கொல்ல உரிமையில்லை. ஆனபோதிலும் பிதாவாகிய தேவன் தமது ஒரேபேறான குமாரனைச் சிலுவையில் மரிப்பதற்கு ஒப்புக்கொடுத்தார். இயேசு கிறிஸ்து ஒரு பாவமும் அறியாதவர். உலகத்தின் பாவங்களுக்காக இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்தார். ஒரு பாவமும் அறியாத இயேசு கிறிஸ்துவைச் சாத்தான் சிலுவையில் அறைந்ததால் இயேசுகிறிஸ்துவினிடத்தில் சாத்தானுக்கு ஒன்றுமில்லை. அவன் ஒரு பொய்யன் என்பதும், மாய்மாலக்காரன் என்பதும் உறுதியாகிறது. இயேசு கிறிஸ்துவினால் இரட்சிக்கப்பட்டவர்களிடத்திலும் சாத்தானுக்கு ஒரு அதிகாரமும் இல்லை. கல்வாரி சிலுவையில் இயேசு கிறிஸ்து சாத்தானின் சகல அந்தகாரச் சக்திகளையும் முறியடித்தார்.

"நான் பிதாவில் அன்பாயிருக்கிறேன்" - இந்த ஒரு வசனத்தில் மட்டுமே இயேசு கிறிஸ்து தமது பிதாவிடத்தில் அன்பாக இருப்பதாகக் கூறுகிறார். ஆறு இடங்களில் தாம் குமாரன்மீது அன்பாக இருக்கிறார் என்று பிதா கூறுவதை வாசிக்கிறோம். (யோவான் 3:35; யோவான் 10:17; யோவான் 15:9; யோவான் 17:23-26)

"பிதா எனக்குக் கட்டளையிட்டபடியே செய்கிறேன்" - இயேசு கிறிஸ்து பிதாவில் அன்பாயிருக்கிறார். அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிகிறார். பிதா குமாரனுக்குக் கட்டளையிட்டபடியே செய்கிறார்.

"எழுந்திருங்கள் இவ்விடம்விட்டுப் போவோம் வாருங்கள்" - இந்த வசனமும் மத் 26:30 ஆவது வசனமும் ஒன்றாக இருக்கலாம். அவ்வாறாயின், யோவான் 14 ஆவது அதிகாரம் இராப்போஜன அறையைவிட்டு புறப்படுவதற்கு முன்பாகப் பேசிய வசனங்களாகும். யோவான் 15-17 ஆகிய அதிகாரங்கள் கெத்செமனே தோட்டத்திற்குப் போகும் வழியில் பேசியவை.

15 அதிகாரம்

64. கெத்செமனே தோட்டத்திற்குப் போகும் வழியில் உபதேசம்

(1) மெய்யான திராட்சச்செடி

யோவான் 15:1 நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத் தோட்டக்காரர்

"மெய்யான திராட்சச்செடி" - இஸ்ரவேல் ஜனங்கள் பொய்யான திராட்சச் செடியாக மாறிவிட்டார்கள் கசப்பான பழங்களைத் தந்தார்கள் (ஏசா 5:1-7) இயேசு கிறிஸ்து மெய்யான திராட்சச் செடியாக இருக்கிறார் நல்ல பழங்களைத் தருகிறார்

(2) இரண்டு விதமான கொடிகள்

யோவான் 15:2 என்னில் கனி கொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார், கனி கொடுக்கிற கொடி எதுவோ அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார்

"என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார் கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி அதைச் சுத்தம்பண்ணுகிறார்" கொடி என்பது இயேசு கிறிஸ்துவின் எல்லா விசுவாசிகளையும் குறிக்கும் கொடியானது கனி தரவேண்டும். கனிதரும் அந்தக் கொடியை நன்றாகச் சுத்தம்பண்ணி அதிக கனி கொடுக்குமாறு பராமரிப்பார்கள்

அந்தக் கொடி கனி கொடுக்கவில்லையென்றால் அதைச் செடியில் இராதவாறு அறுத்துப்போடுவார்கள் அறுத்துப் போடுகிறவர் பிதாவானவர் மனுஷனல்ல தேவனுடைய கரத்திலிருந்து யாராலும் அவருடைய பிள்ளைகளைப் பறித்துக் கொள்ள முடியாது.

கனிதராத கொடிகளைத் தேவனே அறுத்துப் போடுவார் தேவன் இவ்வாறு அறுத்துப் போடமாட்டார் என்று சொல்வோமென்றால், அவருடைய கிரியைகளை நாம் மட்டுப்படுத்துகிறவர்களாக இருப்போம். கனிகொடாத செத்துப்போன கொடிகளைத் தேவனுடைய வல்லமையைவிட மகத்துவமானது என்று பெருமைப்பட்டுக் கொண்டிருப்போம்.

திராட்சத் தோட்டக்காரனிடம்போய், கனிகொடாத கொடிகளை அறுத்துப் போடக்கூடாது என்று யாராவது சொல்ல முடியுமா கனிகொடுக்கும் என்று நம்பிதான் தோட்டக்காரன் திராட்சச் செடியை வளர்க்கிறார் கனிகொடுக்கும் கொடியைப் பராமரிக்கிறான் கனிகொடாத கொடியை அறுத்துப் போடுகிறார்

(3) உண்மையான விசுவாசிகள்

யோவான் 15:3 நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்

"நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்" இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தினாலே அவருடைய சீஷர்கள் கிறிஸ்து சிலுவையில் மரிப்பதற்கு முன்பாகவும் பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பாகவும் சுத்தமாக இருக்கிறார்கள்

சுத்தம் (clean) - καθαρός - katharos - 2513

பொருள் - சுத்தமுள்ள, தூயதான, சுத்தமாயிருக்கிற சுத்த (யோவான் 13:11) இருதயச் சுத்தத்தை இந்த வாக்கியம் குறிப்பிடும். (மத் 5:8)

(4) கனிகொடுப்பதற்கு நிபந்தனை

யோவான் 15:4 என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன் கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்க மாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்க மாட்டீர்கள்

15 அதிகாரம்

யோவான் 15:5 நானே திராட்சச்செடி நீங்கள் கொடிகள் ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான் என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.

"என்னில் நிலைத்திருங்கள்" - நிலைத்திரு (remain, continue, dwell, and abide) என்பதன் கிரேக்க வார்த்தை "மேனோ (menoo) என்பதாகும் கிறிஸ்துவில் நாம் நிலைத்திருக்க வேண்டும். நாம கிறிஸ்துவில நிலைத்திருக்க விலலையென்றால் நம்மால ஆவிக்குரிய கனியைத் தரமுடியாது. ஆகையினால நாம் கிறிஸது வாக்கியசெடியில நிலைத்திருக்கும் கொடிகளாக இருக்க வேணடும். லூக்கா 22:31

நிலைத்திரு (Abide) - μένω - menoo - 3306

வினைசொல - தங்கியிரு, நிலைத்திரு, தரித்திரு, இரு, வாசமபணணு, நிலைகொணடிரு, நிலைநில

"நானே திராட்சசெடி நீங்கள கொடிகள்" இயேசு கிறிஸதுவே மெய்யான திராட்சசெடி விசுவாசிகள கொடிகள விசுவாசிகள் கிறிஸ்துவில நிலைத்திருப்பது மிகவும் அவசியம ஒருவன கிறிஸதுவில நிலைத்திருக்கவிலலை எனறால அவனால ஆவிக்குரிய கனியைக் கொடுக்க முடியாது. ஆகையினால தான இயேசு கிறிஸது "ஒருவன என்னிலும் நான அவனிலும் நிலைத்திருந்தால, அவன மிகுந்த கனிகளைக் கொடுப்பான என்னையல்லாமல உங்களால ஒன்றும் செய்யக்கூடாது" என்று கூறுகிறார்

(5) கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டும்

யோவான் 15:6 ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால. வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன எறியுண்டு உலர்ந்து போவான்; அப்படிப் பட்டவைகளைச் சேர்த்து அக்கினியிலே போடுகிறார்கள் அவைகள் எரிந்துபோம்

"ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்" - விசுவாசி கிறிஸ்துவில் நிலைத்திருக்கவில்லையென்றால அவனுடைய ஆவிக்குரிய ஜீவியம் உலர்ந்து போகும். உலர்ந்து போன ஜீவியத்தில் ஆவியின் கனியை எதிர்பார்க்க முடியாது. திராட்சைத் தோட்டத்தில்கூட உலர்ந்துபோன கொடி கனிதராது. அப்படிப்பட்ட கனிகொடாத உலர்ந்துபோன கொடிகளை எல்லாம் சேர்த்து, அக்கினியிலே போட்டு, எரிப்பார்கள்

(6) ஜெபத்திற்கு பதில் கிடைக்க நிபந்தனை

யோவான் 15:7 நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்

"நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" - நமது ஜெபங்களுக்கு இயேசு கிறிஸது பதில் தரவேணடுமென்றால நமக்கு நியமிக்கப் பட்டிருக்கும் நிபந்தனைகளை நிறைவேற்ற வேணடும் யோவான 15 ஆவது அதிகாரத்தில் நாம் பல நிபந்தனைகளை வாசிக்கிறோம் (யோவான 15:6,10,18,19,20 22,24

"நீங்கள கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" - தேவனுடைய பிள்ளைகள தங்களுடைய தேவைகளை ஜெபத்தில் ஏறெடுக்க வேணடும். நாம் கேட்டுக் கொள்வதெதுவோ அது நமக்குச் செய்யப்படும் என்பது தேவனுடைய வாக்குத்தத்தம். இரண்டு ஏற்பாடுகளிலுமே நாம இந்த வாக்குத்தத்தத்தை வாசிக்கிறோம். இயேசு கிறிஸ்து நமமுடைய தேவைகளைச் சந்திப்பார் நாம் ஜெபத்தில் கேட்டுக் கொள்வதை நமக்குச் செய்வார் (சங் 2:8 சங் 34:9-10 சங் 84:11 மத் 7:7-11; மத் 17:20 மத் 18:18 20 மத் 21:22, மாற்கு 9:23; மாற்கு 11:22 24, யோவான் 14:12-15; யோவான் 15:7,16, யோவான் 16:23-26; எபே 3:20, எபி 11:6, யாக் 1:5-8; 1யோவான் 3:21 22 1யோவான் 5:14-15)

15 அதிகாரம்

"கர்த்தாவே, உமக்குச் சித்தமானால் எனக்கு இந்தக் காரியத்தைச் செய்யும்" என்று நாம் ஜெபிக்கிறோம். இது தவறு ஒன்றுமில்லை. ஆனாலும், தேவனுடைய சித்தம் இதுதான் என்று தெளிவாகத் தெரிந்த பின்பும் அதை அவர் நமக்குச் செய்வாரா என்னும் சந்தேகம் நமக்கு வரக்கூடாது.

உலகப்பிரகாரமான பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்கவேண்டுமென்று அறிந்திருக்கிறார்கள். நம்முடைய பரலோக பிதா நமது தேவையை நன்றாக அறிந்திருக்கிறார். நாம் குறைவற்றவர்களாகவும், பரிபூரணமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதே தேவனுடைய சித்தம். (மத் 7:7-11; லூக்கா 11:9-13; ரோமர் 8:32; யாக் 1:5)

(7) கனிகளைக் கொடுப்பதன் நோக்கம்

யோவான் 15:8 நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், என்னுடைய சீஷராயிருப்பீர்கள்.

யோவான் 15:1-8 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற முக்கிய உபதேசங்கள்

1. தேவன் திராட்சைத் தோட்டத்துக்காரர் (யோவான் 15:1)
2. கிறிஸ்து திராட்சச்செடி (யோவான் 15:1,5)
3. விசுவாசிகள் கிறிஸ்துவிலுள்ள கொடிகள் (யோவான் 15:2,5)
4. இயேசு கிறிஸ்துவில் ஒருவன் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான். அப்படிப் பட்டவைகளைச் சேர்த்து அக்கினியிலே போடுகிறார்கள் (யோவான் 15:2,6)
5. இயேசு கிறிஸ்துவில் கனி கொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார் (யோவான் 15:2,5)
6. இயேசு கிறிஸ்துவிலுள்ள ஒவ்வொரு கொடியும் சுத்தமாக இருக்கிறது - தேவனுடைய வார்த்தையினால் இருதயம் சுத்தமாக இருக்கிறது. அவர்கள் ஒளியில் நடக்கிறார்கள் (யோவான் 15:3; மத் 5:8; எபே 5:26; யோவான் 3:5; யாக் 1:18; 1பேதுரு 1:23; 1யோவான் 1:7)
7. கொடிகள் (விசுவாசிகள்) கிறிஸ்துவிலும், கிறிஸ்து விசுவாசிகளிடத்திலும் நிலைத்திருக்க வேண்டும். (யோவான் 15:4-5)
8. கொடியானது தானாய் கனிகொடுக்க மாட்டாது. (யோவான் 15:4-5)
9. விசுவாசிகள் இயேசு கிறிஸ்துவில் நிலைத்திருக்காவிட்டால், அவர்கள் மூலமாக கனிகொடுப்பதற்கு இயேசு கிறிஸ்து உதவி புரிய மாட்டார் (யோவான் 15:4-6)
10. கிளைகள் கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால், அதை அறுத்து எரித்துப்போடுவார்கள் (யோவான் 15:6)
11. விசுவாசிகள் கிறிஸ்துவில் நிலைத்திருந்தால் மட்டும் போதாது. இயேசு கிறிஸ்துவினுடைய வார்த்தைகளும் விசுவாசிகளிடத்தில் நிலைத்திருக்க வேண்டும். அப்போது அவர்கள் கேட்டுக்கொள்ளும் விண்ணப்பங்கள் அவர்களுக்குக் கொடுக்கப்படும். (யோவான் 15:7)
12. விசுவாசிகள் இயேசு கிறிஸ்துவில் நிலைத்திருந்து அதிக கனிகொடுக்கும் போது பிதா மகிமைப்படுவார் (யோவான் 15:8)

(8) கிறிஸ்துவில் நிலைத்திருப்பதற்கு நிபந்தனைகளும் அதனால் ஆசீர்வாதங்களும்

யோவான் 15:9 பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள்.

15 அதிகாரம்

யோவான் 15:10 நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறது போல நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால் என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்

யோவான் 15:11 என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன்

யோவான் 15:12 நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது.

யோவான் 15:13 ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை

யோவான் 15:14 நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால் என் சிநேகிதராயிருப்பீர்கள்

"பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்" பிதாவானவர் குமாரனுடைய சத்தத்தை எப்போதும் கேட்டுக் கொண்டிருக்கிறார். தமது நாமத்தினாலே கேட்கப்படும் எல்லா விண்ணப்பங்களுக்கும் பதில் கொடுப்பதாக இயேசு கிறிஸ்து வாக்குபண்ணியிருக்கிறார் (யோவான் 14:12-15, யோவான் 15:16, யோவான் 16:23-26)

"என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" இந்த வாக்கியம் பரிசுத்த வேதாகமத்தில் 359 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இவற்றில் தேவனுடைய கற்பனைகளை மனுஷர் கைக்கொள்ள வேண்டும் என்பதே பிரதானமாயிருக்கிறது. பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் இந்தக் கற்பனை மிகவும் முக்கியமானது. விசுவாசிகள் தங்களுடைய ஜீவிய காலம் முழுவதற்கும் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்க வேண்டும்.

"நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல" - நாம் எந்த அளவிற்கு இயேசு கிறிஸ்துவின் கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும் என்பதை இயேசு கிறிஸ்து இந்த வசனத்தில் விளக்குகிறார். இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் நீதிபரராக இருந்ததுபோன்று நாமும் நீதிமான்களாக இருக்க வேண்டும். (யோவான் 17:14-16; 1யோவான் 2:29; 1யோவான் 3:7-10; 1யோவான் 4:17; 1யோவான் 5:1-5:18) இயேசு கிறிஸ்து தமது பிதாவிற்குக் கீழ்ப்படிந்தது போன்று நாமும் இயேசு கிறிஸ்துவிற்குக் கீழ்ப்படிய வேண்டும். தேவனுக்குக் கீழ்ப்படியாமல் அவருடைய கிருபையை யாரும் எதிர்பார்க்கக்கூடாது

"என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும் உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும் இவைகளை உங்களுக்குச் சொன்னேன்" - ஜெபத்திற்குப் பதில் கிடைப்பதில் யோவான் 16:24 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் கருத்தோடு தொடர்புடையது. நமது ஜெபங்களுக்குப் பதில் கிடைக்கும்போது நம்மிடத்தில் சந்தோஷம் நிலைத்திருக்கும். அது நிறைவாயிருக்கும். இந்த சந்தோஷம் வேண்டுமென்றால், நாம் இயேசு கிறிஸ்துவிற்குப் பரிபூரணமாகக் கீழ்ப்படிய வேண்டும். (யோவான் 15:10) பிதாவானவர் குமாரனுக்கு எப்போதும் செவிகொடுப்பது போன்று இயேசு கிறிஸ்து நமக்கு எப்போதும் செவிகொடுப்பார் (யோவான் 11:42) இயேசு கிறிஸ்துவின் சந்தோஷம் நம்மிடத்தில் நிலைத்திருக்கும்போது நமது சந்தோஷம் நிறைவாயிருக்கும். (யோவான் 15:11; யோவான் 16:22,24, யோவான் 17:13) நமக்கு சந்தோஷமும் சமாதானமும் வேண்டுமென்றால் நாம் இயேசு கிறிஸ்துவிற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்னும் நிபந்தனையும் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (யோவான் 14:27, யோவான் 15:9-14)

15 அதிகாரம்

"நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது" - பிதாவானவர் குமாரனுக்குக் கொடுத்திருக்கும் கற்பனையையே இயேசு கிறிஸ்துவானவர் நமக்கும் கொடுக்கிறார் (யோவான் 15:10) இயேசு கிறிஸ்து நம்மிடத்தில் அன்பாயிருக்கிறதுபோல, நாமும் பிறரிடத்தில் அன்பாயிருக்க வேண்டும். இயேசு கிறிஸ்து நமக்காகத் தமது ஜீவனையே கொடுத்தார். நாமும் பிறருக்காக நமது ஜீவனைக் கொடுக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். யோவான் 15:12-14 ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு வேறொன்றுமில்லை

"நான் உங்களுக்குக் கற்பிக்கிறயாவையும் நீங்கள் செய்வீர்களானால் என் சிநேகிதராயிருப்பீர்கள்" - நாம் இயேசு கிறிஸ்துவின் சிநேகிதராக இருக்க வேண்டுமென்றால், அவர் நமக்குக் கற்பிக்கிற யாவையும் செய்ய வேண்டும். செய்யாவிட்டால், இயேசு கிறிஸ்துவின் சிநேகிதராக இருக்க முடியாது.

(9) சிநேகிதத்திற்கு ஏழு அடையாளங்கள்

யோவான் 15:15 இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன் ஏனென்றால் [illegible] பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்

யோவான் 15:16 நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை நான் உங்களைத் தெரிந்துகொண்டேன். நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும் உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்

யோவான் 15:17 நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்றே இவைகளை உங்களுக்குக் கற்பிக்கிறேன்

"இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை" - இயேசு கிறிஸ்து நம்மை அடிமைகளாக நடத்துவதில்லை. நாம் பூமியில் அவருடைய பங்காளிகளாகவும் ஸ்தானிகர்களாகவும் இருக்கிறோம். இயேசு கிறிஸ்து இந்தப் பூமியில் பிதாவின் கிரியையைச் செய்து அவரை மகிமைப்படுத்தியதுபோன்று நாமும் கிறிஸ்துவின் கிரியைகளைச் செய்து கிறிஸ்துவை மகிமைப்படுத்த வேண்டும். (யோவான் 14:12 யோவான் 15:15 யோவான் 17:18 யோவான் 20:21-23) இயேசு கிறிஸ்துவின் சுதந்தரமான பிள்ளைகளாக நாம் இருக்க வேண்டுமென்றால், நாமும் அவருடனே கூடப் பாடுபட வேண்டும் (ரோமர் 8:17

இயேசு கிறிஸ்து நம்மைத் தெரிந்து கொண்டதற்கான காரணங்கள்

1. நாம் புறப்பட்டுப் போய் கனிதர வேண்டும்
2. நித்திய கிரியைகளைச் செய்ய வேண்டும்.
3. நம்முடைய ஜெபத்திற்குப் பதிலைத் தர வேண்டும்.

இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரரிடம் காணப்பட வேண்டிய சுபாவங்கள்

1. திராட்சைச்செடியில் நிலைத்திருக்க வேண்டும். (யோவான் 15:5
2. தேவனுடைய ஊழியத்தைச் செய்வதற்கு அவர் நம்மைத் தெரிந்தெடுக்க வேண்டும். யோவான் 15:15
3. தேவனுடைய ஊழியத்தைச் செய்வதற்கு அவர் நம்மை அபிஷேகிக்க வேண்டும். (யோவான் 15:15
4. ஊழியக்காரர்கள் கனிதர வேண்டும், சோம்பேறியாக இருக்கக்கூடாது. (யோவான் 6:27 - யோவான் 15:16

15 அதிகாரம்

5 ஊழியம் செய்யப் போகிறவர்களாக இருக்க வேண்டும். காத்துக் கொண்டிருக்கிறவர்களாக இருக்கக் கூடாது (மத் 28:19-20; மாற்கு 4:35-38 மாற்கு 16:15-20; அப் 1:4-8)

6 தங்களுடைய கனியைக் காத்துக் கொள்ள வேண்டும். அழித்துப் போடக்கூடாது. (யோவான் 15:16 யோவான் 6:27)

7 பதில் பெறுவதற்காகத் தேவனிடம் ஜெபிக்க வேண்டும். (யோவான் 15:16)

8 எல்லா மனுஷர்களையும் நேசிக்க வேண்டும். (யோவான் 15:12-17; 1யோவான் 3:4-18; 1கொரி 13)

"நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ" - "என் நாமத்தினாலே" என்பது இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தினாலே என்று பொருள்படும். (யோவான் 16:23)

(10) உண்மையான விசுவாசிகளை உலகம் ஏன் பகைக்கிறது - மத் 10:22; யோவான் 16:3; 17:14 யாக் 4:4 1யோவான் 2:15-17)

யோவான் 15:18 உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள்

யோவான் 15:19 நீங்கள் உலகத்தாராயிருந்தால் உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும். நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது.

யோவான் 15:20 ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக் கொள்ளுங்கள் அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள் அவர்கள் என் வசனத்தைக் கைக்கொண்டதுண்டானால், உங்கள் வசனத்தையும் கைக்கொள்ளுவார்கள்

யோவான் 15:21 அவர்கள் என்னை அனுப்பினவரை அறியாதபடியினால் என் நாமத்தினிமித்தமே இவைகளையெல்லாம் உங்களுக்குச் செய்வார்கள்

தீர்க்கதரிசன எண் - 30

"உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள் ...." யோவான் 15:18-21 இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிறது

"நீங்கள் உலகத்தாராயிருந்தால் உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும் நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும் நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும் உலகம் உங்களைப் பகைக்கிறது" - இயேசு கிறிஸ்து மூன்றிடங்களில் தம்முடைய சீஷருக்கு இந்தச் சத்தியத்தைச் சாட்சியாக அறிவித்திருக்கிறார் யோவான் 15:19 யோவான் 17:14-16)

தேவனுடைய பிள்ளைகளை உலகம் பகைப்பதற்குக் காரணங்கள்

1 இயேசு கிறிஸ்து இதை முன்னறிவித்தார் (யோவான் 15:18-21

2 கடிந்து கொள்ளப்படுவதை உலகம் வெறுக்கிறது. (யோவான் 3:19

3 இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தின் பிரகாரமாக நாம் ஜீவிக்கும்போது துன்மார்க்கருடைய பாவ சுபாவங்கள் வெளிப் படுத்தப்படுகிறது. (ரோமர் 12:2; தீத்து 2:11-12

4 இயேசு கிறிஸ்துவின் ஒளியினால் துன்மார்க்கத்தின் இருள் வெளிப்படுத்தப் படுகிறது. (யோவான் 3:18-20; பிலி 2:15

யோவான் – தொகுப்புரை

15 அதிகாரம்

5 உலகம் குருடாயிருக்கிறது (2கொரி 4:4)

6 கிறிஸ்துவின் பிள்ளைகள் உலகத்திற்குரியவர்கள் அல்ல. (யோவான் 15:19, யோவான் 17:14-16)

7 கிறிஸ்துவின் பிள்ளைகளோடு உலகம் யுத்தம் பண்ணுகிறது (யோவான் 16:33 எபே 6:12; 1யோவான் 5:4)

8 உலகம் தேவனுக்கு எதிராக இயல்பாகவே விரோதம் பாவிக்கிறது. (யாக் 4:4; மத் 18:7)

9 உலகத்தின் வழிகளைத் தேவனுடைய பிள்ளைகள் வெறுக்கிறார்கள் (1யோவான் 2:15-17)

10 தேவனுடைய பிள்ளைகள் உலகத்திலிருந்து வேறுபட்டு ஜீவிக்கிறார்கள் (யாக் 1:27 ரோமர் 12:2; 2பேதுரு 2:20)

11 ஆவிக்குரிய அனுபவங்களை உலகம் புரிந்து கொள்ளவில்லை. (கலா 2:20 2கொரி 5:17

12 உலகம் தேவனைப் புரிந்து கொள்ளவில்லை (யோவான் 15:21)

துன்பப்படுத்து (persecuted) - διώκω - diookoo - 1377

வினைச்சொல் - துன்பப்படுத்து கொடுமைப்படுத்த வேண்டுமென்னும் எண்ணத்தோடு துன்பப்படுத்துவது. **(to pursue with malignant intent)** - வேதாகமத்தில் "கொடுமைப்படுத்து" **(persecute)** என்றும், இந்த வார்த்தை மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. (மத் 5:10-12,44, மத் 10:23,மத் 23:34 லூக்கா 21:12, யோவான் 5:16; யோவான் 15:20, அப் 7:52; அப் 9:4-5 அப் 22:4-8, அப் 26:11-15; ரோமர் 12:14; 1கொரி 4:12; 1கொரி 15:9 2கொரி 4:9, கலா 1:13,23 கலா 4:29; பிலி 3:6; வெளி 12:13)

"என் நாமத்தினிமித்தமே" இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தின் நிமித்தம். (அப் 4:7,17-18; அப் 5:40-41 அப் 9:14-16,27)

[illegible] அனுப்பினவர்" - பிதாவானவரே தம்மை அனுப்பியதாக இயேசு கிறிஸ்து யோவான் சுவிசேஷத்தில் 43 தடவைகள் குறிப்பிட்டிருக்கிறார் மற்ற சுவிசேஷங்களில நான்கு தடவை மட்டுமே இந்த வாக்கியத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்

(11) உலகம் ஏன் தேவனையும் கிறிஸ்துவையும் பகைக்கிறது - (மத் 10:34 யோவான் 3:16-21; 7:7 ரோமர் 8:7; 2கொரி 4:3-4

யோவான் 15:22 நான் வந்து அவர்களிடத்தில் பேசாதிருந்தேனானால் அவர்களுக்குப் பாவமிராது இப்பொழுதோ தங்கள் பாவத்தைக்குறித்துப் போக்குச் சொல்ல அவர்களுக்கு இடமில்லை

யோவான் 15:23 என்னைப் பகைக்கிறவன் என் பிதாவையும் பகைக்கிறான்

யோவான் 15:24 வேறொருவரும் செய்யாத கிரியைகளை நான் அவர்களுக்குள்ளே செய்யாதிருந்தேனானால் அவர்களுக்குப் பாவமிராது இப்பொழுது அவர்கள் என்னையும் என் பிதாவையும் கண்டும் பகைத்திருக்கிறார்கள்

யோவான் 15:25 முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள் என்று அவர்களுடைய வேதத்தில் எழுதியிருக்கிற வாக்கியம் நிறைவேறும்படிக்கு இப்படியாயிற்று.

"நான் வந்து அவர்களிடத்தில் பேசாதிருந்தேனானால் அவர்களுக்குப் பாவமிராது; இப்பொழுதோ தங்கள் பாவத்தைக்குறித்துப் போக்குச்சொல்ல அவர்களுக்கு இடமில்லை" - இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்து தம்மைப் பற்றி வெளிப்படுத்தியிருக்கிறார் சத்தியத்தை உபதேசம் பண்ணியிருக்கிறார் ஜனங்கள் இயேசுவைக் கண்டிருக்கிறார்கள் அவருடைய உபதேசத்தைக் கேட்டிருக்கிறார்கள் உபதேசத்தைக் கேட்டும் அவருக்குக் கீழ்ப்படியவில்லையென்றால் அது மிகப்பெரிய பாவம். தங்கள் பாவத்தைக் குறித்து போக்குச்சொல்லுவதற்கு அவர்களுக்கு இடமில்லை

15 அதிகாரம்

போக்குச்சொல்லுதல் (cloke)

πρόφασις prophasis 4392

பெண்பால் பெயர்ச்சொல் - வஞ்சகம் பார்வை பாவனை இச்சகம் (excuse) போக்குச்சொல்லுதல் (pretence) (மத் 23:14, மாற்கு 12:40 பிலி 1:18) (shew) (லூக்கா 20:47); (colour) அப் 27:30); (cloke) யோவான் 15:22; 1தெச 2:5)

யோவான் சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 10

"முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள்" யோவான் 15:25 சங் 35:19 சங் 69:4 சங் 109:3 சங் 119:161)

முகாந்தரமில்லாமல் (without) - δωρεάν - dorean - 1432

வினையடை - முகாந்தரமில்லாமல், வீணாய் (freely) (மத் 10:8 ரோமர் 3:24, 2கொரி 11:7 வெளி 21:6, வெளி 22:17), (in vain) (கலா 2:21) (for naught) (2தெச 3:8) (without a cause) யோவான் 15:25)

(12) சத்திய ஆவியான தேற்றரவாளன் - கலா 4:6 வெளி 19:10)

யோவான் 15:26 பிதாவினிடத்தில் நான் உங்களுக்கு அனுப்பப் போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது அவர் என்னைக்குறித்துச் சாட்சி கொடுப்பார்

யோவான் 15:27 நீங்களும் ஆதிமுதல் என்னுடனேகூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்

தீர்க்கதரிசன எண் - 37

"பிதாவினிடத்தில் நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும் பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக்குறித்துச் சாட்சி கொடுப்பார்" (யோவான் 15:26-27 இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"தேற்றரவாளன்" - யோவான் 14:26

"பிதாவினிடத்தில் நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும் பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன்" - இயேசு கிறிஸ்துவே பரிசுத்த ஆவியானவரில் அபிஷேகம் பண்ணுகிறவர் (மத் 3:11 யோவான் 1:31-33)

"பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன்" - இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அல்லது இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தினாலே பிதாவானவர் பரிசுத்த ஆவியானவரை அனுப்புவார் (யோவான் 14:26)

"அவர் என்னைக்குறித்துச் சாட்சி கொடுப்பார்" மனுஷரைப் பரிசுத்த ஆவியினாலே அபிஷேகம் பண்ணும் பிதாவானவர் குமாரனைக் குறித்து பிரசங்கத்திலும் தீர்க்கதரிசனத்திலும் சாட்சி கொடுப்பார்

1 பிரசங்கத்தில் லூக்கா 4:18 அப 2:1-39 1கொரி 1:17-8:23, 1கொரி 2:1-16

2 தீர்க்கதரிசனத்தில் (அப 3:21, அப 11:27 அப 13:1,32 அப 21:10 1கொரி 12:10,28

"நீங்களும் ஆதிமுதல் என்னுடனேகூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" சீஷர்களும், இயேசு கிறிஸ்துவிற்காக சாட்சி பகருவார்கள் (அப 1:8,22

16 அதிகாரம்

(13) இயேசு உபத்திரவத்தை முன் குறித்துக் கூறுகிறார் - (மத் 5:10; யோவான் 15:18)

யோவான் 16:1 நீங்கள் இடறலடையாதபடிக்கு இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.

யோவான் 16:2 அவர்கள் உங்களை ஜெப ஆலயங்களுக்குப் புறம்பாக்குவார்கள்; மேலும் உங்களைக் கொலைசெய்கிறவன் தான் தேவனுக்குத் தொண்டு செய்கிறவனென்று நினைக்குங்காலம் வரும்.

யோவான் 16:3 அவர்கள் பிதாவையும் என்னையும் அறியாதபடியினால் இவைகளை உங்களுக்குச் செய்வார்கள்.

தீர்க்கதரிசன எண் - 88

"நீங்கள் இடறலடையாதபடிக்கு இவைகளை உங்களுக்குச் சொன்னேன்...." (யோவான் 16:1-16) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இன்னும் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

இடறலடை (offended) - σκανδαλίζω - skandalizoo - 4624

வினைச்சொல் - இடறலடை, இடறலுண்டாக்கு (to stumble) - ஒரு நபரை அவமதிக்க அடையச் செய்தல், நம்பிக் கீழ்ப்படிய வேண்டியவனை ஒதுக்கிவைத்துவிடுதல் (மத் 5:29-30; மத் 18:6-9; மத் 24:10; மத் 26:31,33; யோவான் 6:61; யோவான் 16:1)

"அவர்கள் உங்களை ஜெப ஆலயங்களுக்குப் புறம்பாக்குவார்கள்" ஜெபாலயத்திலிருந்து வெளியே தள்ளிவிடுவார்கள். தங்களோடு எந்த சமுதாய உறவும் வைத்துக் கொள்ளக்கூடாது என்று தடைபண்ணுவார்கள் (யோவான் 9:22; யோவான் 12:42)

தொண்டு (service) - λατρεία - latreia 2999

பெண்பால் பெயர்ச்சொல் - தொண்டு, ஆராதனை, தேவாராதனை, காணிக்கை (an offering) (ரோமர் 9:4; ரோமர் 12:1; எபி 9:1,6)

"அவர்கள் பிதாவையும் என்னையும் அறியாதபடியினால் இவைகளை உங்களுக்குச் செய்வார்கள்" - அவர்கள் பிதாவையும் அறியவில்லை, கிறிஸ்துவையும் அறியவில்லை. ஆகையினால் தேவனுடைய பிள்ளைகளை அவர்கள் சகித்துக் கொள்ளாமல் துன்புறுத்துகிறார்கள் (யோவான் 16:3; யோவான் 15:21)

(14) கிறிஸ்தவர்களின் உபத்திரவத்தைப் பற்றிய தீர்க்கதரிசனத்தின் காரணம்

யோவான் 16:4 அந்தக் காலம் வரும்போது நான் இவைகளை உங்களுக்குச் சொன்னேனென்று நீங்கள் நினைக்கும்படி இவைகளை உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்; நான் உங்களுடனேகூட இருந்தபடியினால் ஆரம்பத்திலே இவைகளை உங்களுக்குச் சொல்லவில்லை.

யோவான் 16:5 இப்பொழுது நான் என்னை அனுப்பினவரிடத்திற்குப் போகிறேன்; எங்கே போகிறீரென்று உங்களில் ஒருவனும் என்னைக் கேட்கவில்லை.

யோவான் 16:6 ஆனாலும் நான் இவைகளை உங்களுக்குச் சொன்னதினால் உங்கள் இருதயம் துக்கத்தால் நிறைந்திருக்கிறது.

"அந்தக் காலம் வரும்போது நான் இவைகளை உங்களுக்குச் சொன்னேனென்று நீங்கள் நினைக்கும்படி இவைகளை உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்" இந்தக் காரியங்களை இயேசு கிறிஸ்து தமது சீஷர்களிடம் ஆரம்பத்திலேயே சொல்லவில்லை. சொல்லியிருந்தால் அவர்கள் சோர்ந்து போயிருப்பார்கள். இப்பொழுது, இந்தச் சத்தியங்களையெல்லாம் இயேசு கிறிஸ்து தமது சீஷர்களிடம் சொல்ல வேண்டிய வேளை வந்துவிட்டது. ஆரம்பத்தில் இயேசு அவர்களோடு கூட இருந்தார். இப்போது அவர்களைவிட்டு, இயேசு கிறிஸ்து எடுத்துக் கொள்ளப்படப் போகிறார்.

16 அதிகாரம்

"எங்கே போகிறீர்" - இதற்கு முன்பு இரண்டு தடவை இந்தக் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. (யோவான் 13:36 யோவான் 14:5) இப்பொழுது சீஷர்களுடைய இருதயம் வருத்தத்தினால் நிறைந்திருக்கிறது. ஆகையினால் எங்கே போகிறீரென்று சீஷர்களில் ஒருவனும் இயேசுவைக் கேட்கவில்லை

(15) இயேசு பிதாவினிடத்திற்கு போவதன் அவசியம் - யோவான் 14:12

யோவான் 16:7 நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும். நான் போகாதிருந்தால் தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்

"நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்" பிரயோஜனமாய் இருக்கும் என்பதற்கான கிரேக்க வார்த்தை "சம்பெரோ" **(sympheroo)** என்பதாகும் இயேசு கிறிஸ்து போவதினால் அவர் பரிசுத்த ஆவியானவரைத் தம்முடைய பிள்ளைகளுக்கு அனுப்புவார் ஆகையினால் இயேசு கிறிஸ்து போவது பிரயோஜனமாயிருக்கும் இந்த வார்த்தை வேதாகமத்தில் பலவிதமாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. **(expedient)** (யோவான் 16:7; யோவான் 11:50 யோவான் 18:14; 1கொரி 6:12; 1கொரி 10:23; 2கொரி 8:10; 2கொரி 12:1); **(profit)** (1கொரி 7:35; 1கொரி 10:33; 1கொரி 12:7 எபி 12:10), **(profitable)** (மத் 5:29,30; அப் 20:20), **(better)** (மத் 18:6); **good** (மத் 19:10) இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் மரிக்க வேண்டியது மிகவும் அத்தியாவசியமான காரியம் அவர் மரித்து பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அவர் போகவில்லை என்றால் பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளிடத்தில் வரார்

பிரயோஜனமாயிரு (expedient)

συμφέρω - sympheroo - 4851

வினைச்சொல் - நலமாயிரு, பிரயோஜனமாயிரு, தகுதியாயிரு

"தேற்றரவாளன்" - (யோவான் 14:26

"அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்" - திரித்துவத்தில் பரிசுத்த ஆவியானவர் மூன்றாம் நபர் (1யோவான் 5:7; மத் 28:19 2கொரி 13:14) பிதாவும் குமாரனும் பரிசுத்த ஆவியானவரை அனுப்புகிறார்கள் (யோவான் 14:16,26; யோவான் 15:26 யோவான் 16:7; லூக்கா 24:49; அப 2:33)

(16) உலகத்தில் பரிசுத்த ஆவியானவரின் மூன்று அம்ச கிரியை - (14:26; 15:26; 16:13-15 ரோமர் 8:1-26)

யோவான் 16:8 அவர் வந்து பாவத்தைக் குறித்தும், நீதியைக்குறித்தும் நியாயத் தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்

யோவான் 16:9 அவர்கள் என்னை விசுவாசியாததினாலே பாவத்தைக் குறித்தும்

யோவான் 16:10 நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே நீதியைக்குறித்தும்

யோவான் 16:11 இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்பட்டதினாலே நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்துவார்

பரிசுத்த ஆவியானவர் செய்யும் ஊழியங்கள்

1. மறுபடியும் பிறக்க வைக்கிறார் (யோவான் 3:3,5
2. ஜீவனைக் கொடுக்கிறார் (யோவான் 6:63; ரோமர் 8:11
3. பெலனைக் கொடுக்கிறார் (யோவான் 7:37-39; யோவான் 14:12-17; லூக்கா 24:49; அப் 1:4-8

16 அதிகாரம்

4 நித்திய தேற்றரவாளர் யோவான் 14:16,26, யோவான் 15:26, யோவான் 16:7

5. சத்தியத்தை உபதேசம் பண்ணுகிறார் யோவான் 14:17,26, யோவான் 15:26, யோவான் 16:13; 1யோவான் 2:20-27)

6 எல்லா சத்தியத்தையும் ஞாபகப் படுத்துகிறார் (யோவான் 14:26)

7 எல்லா சத்தியத்திறகுள்ளும் வழிநடத்துகிறார் (யோவான் 16:13)

8 கிறிஸ்துவை வெளிப்படுத்துகிறார் (யோவான் 16:13-15

9 எல்லா நிகழ்ச்சிகளையும் வெளிப் படுத்துகிறார் (யோவான் 16:13)

10 கிறிஸ்துவை மகிமைப்படுத்துகிறார் (யோவான் 16:14

11 கிறிஸதுவிறகு பிரதான சாட்சியாக இருக்கிறார் (யோவான் 15:26 யோவான் 16:13-15, அப 1:8)

12 பாவத்தைக் குறித்தும் நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்துகிறார் யோவான் 16:8

கண்டித்து உணர்த்து (reprove) - ἐλέγχω - elenchoo - 1651

வினைச்சொல் - குற்றத்தையுணர்த்து கடிந்துகொள், கண்டி, கண்டனம் பண்ணு, கலக்கம் உண்டாக்கு, தீர்க்கப்படு (to convince, convict, refute, expose, to bring to shame the person reproved) - இந்த கிரேக்க வார்த்தை இவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

(convince) யோவான் 8:46 1கொரி 14:24; தீத்து 1:9; யாக் 2:9 (convict) (யோவான் 8:9 ; (tell one's fault) (மத் 18:15 ; (reprove) (லூக்கா 3:19 யோவான் 3:20; யோவான் 16:8 எபே 5:11,13; 2தீமோ 4:2); (rebuke) (1தீமோ 5:20 தீத்து 1:13 தீத்து 2:15 எபி 12:5 யூதா 1:15 வெளி 3:19

"உலகத்தைக் குறித்து கண்டித்து உணர்த்துவார்" - யூதர்களை மட்டுமல்லாமல் மனுக்குலத்தார் அனைவரையும் பரிசுத்த ஆவியானவர் கண்டித்து உணர்த்துவார் (யோவான் 3:16; 1யோவான் 2:2)

"அவர்கள் என்னை விசுவாசியாத படியினாலே பாவத்தைக்குறித்து கண்டித்து உணர்த்துவார்" - அவிசுவாசமே பாவத்தின் அஸ்திபாரம். பாவசுபாவத்திற்கு அவிசுவாசமே ஆதாரம். அவிசுவாசம் மனுஷரை அழித்துப் போடும். (மாற்கு 16:16; லூக்கா 8:13 யோவான் 3:16-20,36, யோவான் 5:24,38 யோவான் 8:24; யோவான் 10:26

"நீதியைக்குறித்து கண்டித்து உணர்த்துவார்" - மனுஷனுடைய நீதி பிரயோஜனமற்றது (ஏசா 64:6 ரோமர் 10:3) கிறிஸ்துவே நமது நீதியாக இருக்கிறார் (1கொரி 1:30) இயேசு கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தினாலே நாம் நீதிமான்களாக ஆக்கப்படுகிறோம் (ரோமர் 3:22-25, ரோமர் 4:1-22 2கொரி 5:14-21)

"நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறேன்" - இயேசு கிறிஸ்துவானவர் பிதாவிடம் திரும்பப் போகிறார் பரிசுத்த ஆவியானவர் இந்தப் பூமியில் இயேசு கிறிஸ்துவின் ஸ்தானத்தில் இருந்து அவருடைய ஊழியத்தைச் செய்வார் (யோவான் 14:12

"நியாயத்தீர்ப்பைக் குறித்து கண்டித்து உணர்த்துவார்" - இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கிறவர்கள் நியாயத்தீர்ப்பின் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்வார்கள் (யோவான் 3:15-20 யோவான் 5:24) இயேசு கிறிஸ்துவைத் தங்களுடைய சொந்த இரட்சகராக விசுவாசித்து ஏற்றுக் கொள்ளாதவர்கள் சாத்தானோடு அழிந்து போவார்கள் (மத் 25:41; யோவான் 3:36; வெளி 20:11-15; வெளி 21:8)

16 அதிகாரம்

"இந்த உலகத்தின் அதிபதி நியாயந் தீர்க்கப்பட்டதினாலே" - எல்லா விசுவாசிகளும் நியாயந்தீர்க்கப்படுவார்கள். அவர்களுடைய அதிபதியாகிய சாத்தான் கல்வாரி சிலுவையிலே இயேசு கிறிஸ்துவினால் தோற்கடிக்கப்பட்டான். தன்னுடைய அழிவையே சாத்தானால் தடுத்து நிறுத்த முடியாது. பெலனற்றவனாக இருக்கிறான். அப்படிப்பட்ட சாத்தானால் தன்னுடைய பிள்ளைகளை அவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற அழிவிலிருந்து காப்பாற்ற முடியாது. (யோவான் 16:11 யோவான் 12:31; கொலோ 2:14-17 ரோமர் 16:20; வெளி 20:10-15)

(17) வருங்கால வெளிப்பாடுகளின் தீர்க்கதரிசனங்கள் – (அப் 1:2)

யோவான் 16:12 இன்னும் அநேகங் காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்.

யோவான் 16:13 சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையும் சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.

யோவான் 16:14 அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்.

யோவான் 16:15 பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன்.

"இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்" - இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு உபதேசம் பண்ண வேண்டிய சத்தியங்கள் இன்னும் ஏராளமாய் உள்ளது. ஆனால் சீஷர்களோ அதிகமான உபதேசங்களை ஏற்றுக் கொள்ள ஆயத்தமாக இல்லை. தம்முடைய சீஷர்களின் நிலைமையை உணர்ந்து இயேசு கிறிஸ்து அவர்களால் எவ்வளவு தாங்கிக் கொள்ள முடியுமோ அந்த அளவிற்கு மட்டும் படிப்படியாக உபதேசம் பண்ணுகிறார். (யோவான் 2:24; யோவான் 19:17; அப் 15:1; கலா 6:2,5) ஓய்வுநாள் பிரமாணங்களும் யூதருடைய பண்டிகைகளும் ஒழிந்துபோகும். திருச்சபையிலே யூதர்களைப் போலவே புறஜாதியாரும் சம அந்தஸ்தில் இருப்பார்கள். இந்த உபதேசங்களை சீஷர்களால் இப்போது தாங்கிக்கொள்ள முடியாது. பரிசுத்த ஆவியானவர் அவர்களிடத்தில் வரும்போது அவர் மூலமாக இயேசு கிறிஸ்து சகல சத்தியங்களையும் உபதேசம் பண்ணுவார். (யோவான் 16:13-15)

தாங்கு (bear) - βαστάζω - bastazoo - 941

வினைச்சொல் - சுமசகி, கொண்டு போ, சுமந்துகொள், சுமந்துபோ, எடுத்துக்கொள், தாங்கு, தூக்கிக்கொள்

(18) இயேசு பிதாவினிடத்திற்கு போவதன் உபதேசம்

யோவான் 16:16 நான் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் கொஞ்சக்காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள், மறுபடியும் கொஞ்சக் காலத்திலே என்னைக் காண்பீர்கள் என்றார்.

"கொஞ்சக்காலம்" - (யோவான் 13:33)

"நான் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால்" இயேசு கிறிஸ்து மூன்று இடங்களில் தாம் பிதாவினிடத்திற்குப் போவதைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

16 அதிகாரம்

1 நான் என் பிதாவினிடத்திற்குப் போகிற படியினால் என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான் இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான் (யோவான் 14:12-17,26; யோவான் 15:7; மத் 3:11; மத் 17:20 லூக்கா 11:13; லூக்கா 24:49, அப் 1:4-8; அப் 38-39)

2 நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும். நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார் நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன் அவர் வந்து பாவத்தைக்குறித்தும் நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார் (யோவான் 16:8-11)

3 நான் பிதாவினிடத்திற்குப் போகிற படியினால் கொஞ்சக்காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள் மறுபடியும் கொஞ்சக் காலத்திலே என்னைக் காண்பீர்கள் யோவான் 16:16

(19) சீஷர்கள் இந்த உபதேசத்தைத் தவறாக புரிந்து கொள்கிறார்கள்

யோவான் 16:17 அப்பொழுது அவருடைய சீஷரில் சிலர் நான் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் கொஞ்சக் காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள் என்றும் மறுபடியும் கொஞ்சக்காலத்திலே என்னைக் காண்பீர்கள் என்றும் அவர் நம்முடனே சொல்லுகிறதின் கருத்தென்ன என்று தங்களுக்குள்ளே பேசிக் கொண்டதுமன்றி,

யோவான் 16:18 கொஞ்சக்காலம் என்கிறாரே, இதென்ன? அவர் சொல்லுகிறது இன்னதென்று நமக்கு விளங்கவில்லையே என்றார்கள்

(20) இயேசு பிதாவினிடத்தில் போவதையும் திரும்பவும் வரப் போவதையும் குறித்து விளக்குகிறார்

யோவான் 16:19 அதைக்குறித்துத் தம்மிடத்தில் கேட்கும்படி அவர்கள் விரும்புகிறதை இயேசு அறிந்து அவர்களை நோக்கி: கொஞ்சக் காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள் மறுபடியும் கொஞ்சக் காலத்திலே என்னைக் காண்பீர்கள் என்று நான் சொன்னதைக்குறித்து நீங்கள் உங்களுக்குள்ளே விசாரிக்கிறீர்களோ?

யோவான் 16:20 மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் நீங்கள் அழுது புலம்புவீர்கள் உலகமோ சந்தோஷப்படும் நீங்கள் துக்கப்படுவீர்கள், ஆனாலும் உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்

யோவான் 16:21 ஸ்திரீயானவளுக்குப் பிரசவகாலம் வந்திருக்கும்போது அவள் துக்கமடைகிறாள் பிள்ளைபெற்றவுடனே ஒரு மனுஷன் உலகத்தில் பிறந்தானென்கிற சந்தோஷத்தினால் அப்புறம் உபத்திரவத்தை நினையாள்

யோவான் 16:22 அதுபோல நீங்களும் இப்பொழுது துக்கமடைந்திருக்கிறீர்கள் நான் மறுபடியும் உங்களைக் காண்பேன் அப்பொழுது உங்கள் இருதயம் சந்தோஷப்படும் உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடத்திலிருந்து எடுத்துப் போடமாட்டான

தீர்க்கதரிசன எண் - 39

"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோவான் 16:19-28) இந்தத் தீர்க்கதரிசனத்தில் யோவான் 16:19-22,27-28 ஆகிய வசனங்கள் நிறைவேறியுள்ளன யோவான் 16:23-26 ஆகிய வசனங்கள் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன

யோவான் – தொகுப்புரை

16 அதிகாரம்

"நீங்கள் அழுது புலம்புவீர்கள், உலகமோ சந்தோஷப்படும். நீங்கள் துக்கப்படுவீர்கள் ஆனாலும் உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்" - இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறி விட்டது. (லூக்கா 23:27; லூக்கா 24:41)

"ஸ்திரீயானவளுக்குப் பிரசவகாலம் வந்திருக்கும்போது அவள் துக்கமடைகிறாள்; பிள்ளைபெற்றவுடனே ஒரு மனுஷன் உலகத்தில் பிறந்தானென்கிற சந்தோஷத்தினால் அப்புறம் உபத்திரவத்தை நினையாள்" - இயேசு கிறிஸ்துவின் மரணத்தினால் சீஷர்களுக்கு உண்டாகும் துக்கமும், அவருடைய உயிர்த்தெழுதலினால் உண்டாகும் சந்தோஷமும் இந்த வசனத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. (யோவான் 16:21)

(21) இயேசுவின் நாமத்தினால் ஜெபிக்க வேண்டும்

யோவான் 16:23 அந்த நாளிலே நீங்கள் என்னிடத்தில் ஒன்றுங் கேட்கமாட்டீர்கள். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார்.

யோவான் 16:24 இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை. கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்.

யோவான் 16:25 இவைகளை நான் உவமைகளாய் உங்களுடனே பேசுகிறேன், காலம் வரும். அப்பொழுது நான் உவமைகளாய் உங்களுடனே பேசாமல் பிதாவைக்குறித்து வெளிப்படையாக உங்களுக்கு அறிவிப்பேன்.

யோவான் 16:26 அந்த நாளில் நீங்கள் என் நாமத்தினாலே வேண்டிக் கொள்வீர்கள். உங்களுக்காகப் பிதாவை நான் கேட்டுக்கொள்வேனென்று உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை.

"அந்த நாளிலே" - இயேசு கிறிஸ்து பிதாவினிடத்திற்குத் திரும்பிப் போகும் நாளிலே சீஷர்கள் இயேசுவிடம் ஒன்றும் கேட்கமாட்டார்கள். ஆனால் அவர்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பிதாவிடத்தில் கேட்பார்கள். அதை அவர் அவர்களுக்குத் தருவார். (யோவான் 14:13-14; 12:19-20; யோவான் 16:5,10,16,23-27)

"கேட்டுக்கொள்வதெதுவோ" - வேதாகமத்தில் தேவன் தமது பிள்ளைகளுக்கு ஏராளமான காரியங்களை வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். விசுவாசிகள் அவற்றில் எதை வேண்டுமானாலும் தங்களுக்குக் கேட்கலாம். அது அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

"என் நாமத்தினாலே" - இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நாம் ஜெபிக்கும்போது "இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஜெபிக்கிறோம் பிதாவே" என்று கூறி நமது ஜெபத்தை முடிக்கிறோம். இயேசு கிறிஸ்து பிதாவிடம் நமக்காகப் பரிந்து பேசுகிறார். ஆகையினால் நமக்காகப் பரிந்துபேசும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நாம் ஜெபிக்கிறோம். நாம் ஜெபிக்கும் காரியங்களை இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவிடம் பரிந்து பேசுவார். நீதிமன்றத்தில் நமது வழக்குகளை வழக்கறிஞர் நீதிபதியிடம் எடுத்துரைப்பதுபோன்று இந்தச் சத்தியம் உள்ளது.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் நாம் பெற்றுக் கொள்ளும், செய்யும் காரியங்கள்

1. இரட்சிப்பு (மத் 1:21; அப் 4:12)
2. ஞானஸ்நானம் (மத் 28:19; அப் 8:16)
3. ஐக்கியம் (மத் 18:5; லூக்கா 9:48)
4. ஆராதனை (மத் 18:20; 2கொரி 1:10)
5. நற்கிரியைகள் (மாற்கு 9:41)

16 அதிகாரம்

6 பிசாசுகளைத் துரத்துவது (மாற்கு 16:17; லூக்கா 10:17)

7 பிரசங்கம் பண்ணுதல் (லூக்கா 24:47 அப 8:12)

8 வியாதிகளைச் சுகமாக்குதல (மாற்கு 16:18; அப 3:6,16; யாக் 5:14-16

9 நியாயந்தீர்த்தல் (1கொரி 5:1-5 அப 13:6-11; 2தெச 3:6)

10 ஜெபம் (யோவான் 14:13-15, யோவான் 15:16, யோவான் 16:23-26)

11 துதி (எபே 5:20; எபி 13:15)

12 எல்லாக் காரியங்களும் கொலோ 3:17

13 பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்ளுதல (லூக்கா 11:13 லூக்கா 24:49; யோவான் 7:37-39, யோவான் 14:26; அப 1:4-8)

14 கிறிஸ்துவின் கிரியைகளைச் செய்தல மாற்கு 16:17-20; யோவான் 14:12-15)

இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஜெபம் பண்ணுவது நமக்குக் கிடைத்திருக்கும் மிகப்பெரிய சிலாக்கியம் அவர் நாமம் வல்லமையுள்ளது. இயேசுவின் நாமத்தில் நாம் எதைக் கேட்டாலும் பிதாவானவர் அதை நமக்குத் தருவார (யாக் 1:5-8

"இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை" - இயேசு கிறிஸ்து இதுவரையிலும் தமமுடைய சீஷரோடுகூடவே இருந்தார் அவர்களுக்கு எது தேவைப்பட்டாலும், அவர்கள் இயேசு கிறிஸ்துவிடம் நேரடியாகக் கேட்பார்கள் ஆனால இப்பொழுதோ இயேசு கிறிஸ்து தமது சீஷர்களை விட்டு, கடந்து செல்ல வேண்டிய வேளை வந்துவிட்டது. இனிமேல் அவர்கள் இயேசு கிறிஸ்துவிடம் நேரடியாகக் கேட்பதற்குப் பதிலாக அவருடைய நாமத்தினாலே கேட்பார்கள்

"கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக் கொள்வீர்கள்" - இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே கேட்பதற்குச் சீஷர்கள் தயங்க வேண்டியதில்லை. விசுவாசத்தோடு கேட்கும் போது, அவர்கள் பெற்றுக் கொள்வார்கள் (மத் 17:20; மத் 21:22 மாற்கு 11:22-24; யோவான் 14:12-15 யோவான் 15:16; யோவான் 16:23-26

"உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்" - நமக்கு உதவி புரிவதற்காகவே இயேசு கிறிஸ்து நமது ஜெபத்திற்குப் பதில் கொடுக்கிறார் பிதாவிடத்தில் ஜெபிக்கும்போது தேவனுடைய பிதாத்துவத்தை நாம் அங்கீகரிக்கிறோம் (மத் 7:11; லூக்கா 11:9-13; யாக் 1:17), ஆகையினால ஜெபிக்கும்போது தயக்கம் தேவையில்லை. நாம விசுவாசத்தோடு ஜெபிக்கலாம். (சங் 23:1; சங் 34:9-10 சங் 84:11; சங் 91:1-12; மத் 21:22 மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 14:12-15)

"உங்களுக்காகப் பிதாவை நான் கேட்டுக்கொள்வேன்" - சீஷர்கள் இயேசுவின் நாமத்தில ஜெபிப்பார்கள் அவர்கள் ஜெபிப்பதை இயேசு கிறிஸ்து அவர்களுக்காக பிதாவிடம் கேட்டுக் கொள்வார் (ரோமர் 8:34; எபி 7:25; 1யோவான் 2:1-2 பிதாவானவர் எப்போதும் குமாரனுடைய சத்தத்திற்குச் செவி கொடுக்கிறார் நமக்கு இரட்சிப்பைக் கொடுப்பதற்காகவே இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் மரித்தார் பிதாவிடம் நாம் நமக்கு இரட்சிப்பைக் கேட்கும்போது அவர் அதை நமக்குத் தராமல் இருக்க மாட்டார் (ரோமர் 8:32 இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அதாவது இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தினாலே நாம் ஜெபிக்கும்போது, நமது ஜெபத்தைப் பிதா எப்போதும் கேட்கிறார் அந்த ஜெபத்திற்குப் பதில் கொடுக்கிறார் இந்த இரகசியத்தை நமக்குச் சொல்வதற்காகவே பிதாவானவர் இயேசு கிறிஸ்துவை நம்மிடத்தில் அனுப்பியிருக்கிறார் (யோவான் 16:27

(22) சீஷர்கள் தவறாக புரிந்து கொண்டதற்கு தெளிவான விளக்கம் - (வசனம் 16

யோவான் 16:27 நீங்கள் என்னைச் சிநேகித்து, நான் தேவனிடத்திலிருந்து புறப்பட்டு வந்தேனென்று விசுவாசிக்கிறபடியினால பிதாதாமே உங்களைச் சிநேகிக்கிறார்

16 அதிகாரம்

யோவான் 16:28 நான் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு உலகத்திலே வந்தேன் மறுபடியும் உலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகிறேன் என்றார்

(23) சீஷர்கள் தெளிவாக புரிந்து கொள்கிறார்கள்

யோவான் 16:29 அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: இதோ இப்பொழுது நீர் உவமையாய்ப் பேசாமல் வெளிப்படையாய்ப் பேசுகிறீர்

யோவான் 16:30 நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர் என்றும் ஒருவன் உம்மை வினாவவேண்டுவதில்லை யென்றும் இப்பொழுது அறிந்திருக்கிறோம், இதினாலே நீர் தேவனிடத்திலிருந்து வந்தீரென்று விசுவாசிக்கிறோம் என்றார்கள்

(24) உபத்திரவங்களையும் கிறிஸ்தவர்களின் பாடுகளையும் குறித்த தீர்க்கதரிசனங்கள்

யோவான் 16:31 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது நீங்கள் விசுவாசிக்கிறீர்கள்

யோவான் 16:32 இதோ, நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன்தன் இடத்துக்குப் போய், என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வரும், அது இப்பொழுது வந்திருக்கிறது, ஆனாலும் நான் தனித்திரேன், பிதா என்னுடனேகூட இருக்கிறார்

யோவான் 16:33 என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன் உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன்கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்

தீர்க்கதரிசன எண் - 40

"இதோ, நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன்தன் இடத்துக்குப் போய், என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வரும் அது இப்பொழுது வந்திருக்கிறது ஆனாலும் நான் தனித்திரேன் பிதா என்னுடனேகூட இருக்கிறார் ....." (யோவான் 16:32-33) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று

"உலகம்" - (யோவான் 15:19)

"நான் உலகத்தை ஜெயித்தேன்" - ஜெயித்தல் ஜெயம் கொள்ளுதல் **(overcome, conquered)** என்பதற்கான கிரேக்க வார்த்தை "நிகாயோ" **(nikaoo)** என்பதாகும். 28 இடங்களில் இந்த வார்த்தை பயன்படுத்தப் பட்டிருக்கிறது. யோவான் சுவிசேஷத்தில் இந்த வசனத்தில் மட்டுமே இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருந்தாலும் (யோவான் வெளிப்படுத்தின விசேஷம் ஆகிய புஸ்தகங்களில் 23 தடவைகள் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது இதன் மொழிபெயர்ப்பு வெவ்வேறாக உள்ளன **(overcome)** (1யோவான் 2:13-14 1யோவான் 4:4; 1யோவான் 5:4-5; வெளி 2:7,11,17,26; வெளி 3:5,12,21 வெளி 11:7,12:11; வெளி 13:7 வெளி 17:14. வெளி 21:7); **(conquer)** (வெளி 6:2), **(prevail)** (வெளி 5:5); **(got the victory)** (வெளி 15:2) இதுதவிர மேலும் மூன்று இடங்களில் இந்த வார்த்தை பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (லூக்கா 11:22 ரோமர் 3:4 ரோமர் 12:21)

ஜெயங்கொள் **(overcome)** - νικάω - **nikaoo** 3528

வினைச்சொல் - மேற்கோள், ஜெயி, வெற்றியடை, வெல், ஜெயங்கொள்

யோவான் – தொகுப்புரை

17 அதிகாரம்

65. கர்த்தருடைய ஜெபம்

(1) பிதாவையும் குமாரனையும் மகிமைப்படுத்துதல்

யோவான் 17:1 இயேசு இவைகளைச் சொன்னபின்பு தம்முடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்து,

"இயேசு இவைகளைச் சொன்னபின்பு" - இவைகள் என்பது யோவான் 13:32-16:33 ஆகிய வசனங்களைக் குறிக்கும். இதன் பின்பு இயேசு கிறிஸ்து நீண்ட ஜெபம் ஒன்றை ஏறெடுக்கிறார். இந்த ஜெபத்தை நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம். அவையாவன

1. தமக்காக (யோவான் 17:1-5)
2. தமது சீஷர்களுக்காக (யோவான் 17:9-19)
3. எல்லா சீஷர்களுக்காக (யோவான் 17:20-24)
4. தமது சீஷர்களுக்காக (யோவான் 17:25-26)

"தம்முடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்தார்" - (யோவான் 11:41)

"வேளை வந்தது" (the hour is come) - (யோவான் 7:30; யோவான் 8:20; யோவான் 12:23,27; யோவான் 13:1)

"நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்" - (யோவான் 12:16,28-30)

(2) நித்திய ஜீவன்

யோவான் 17:2 பிதாவே, வேளை வந்தது, நீர் உம்முடைய குமாரனுக்குத் தந்தருளின யாவருக்கும் அவர் நித்தியஜீவனைக் கொடுக்கும்பொருட்டு மாம்சமான யாவர்மேலும் நீர் அவருக்கு அதிகாரங் கொடுத்தபடியே, உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்.

யோவான் 17:3 ஒன்றான மெய்த் தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்.

அதிகாரம் (power) - ἐξουσία - exousia - 1849

பெண்பால் பெயர்சொல் - அதிகாரம், வல்லமை, ஆதீனம் (authority, delegated power) - நித்திய ஜீவனைக் கொடுக்கும் அதிகாரம் பிதாவானவர் தமக்குக் கொடுத்திருக்கும் அனைவருக்கும் நித்திய ஜீவனைக் கொடுக்கும் அதிகாரத்தை இயேசு கிறிஸ்து பெற்றிருக்கிறார்.

"நித்தியஜீவனைக் கொடுக்கும்பொருட்டு" - எல்லோருக்காகவும் மரித்தார் ஆகையினால் அவரால் எல்லோருக்கும் நித்திய ஜீவனைக் கொடுக்க முடியும் (யோவான் 3:16; 1தீமோ 2:4; 2பேதுரு 3:9; வெளி 22:17)

"அவருக்கு தந்தருளினார், கொடுத்தார்" (யோவான் 17:2,6,9,11,12,24)

"நித்திய ஜீவன்" - நாம் இயேசு கிறிஸ்துவோடு பரலோகத்தில் நித்திய காலமாக ஜீவிப்போம்.

17 அதிகாரம்

"உம்மை அறிவது" (know thee) - தேவனை அறிவதே நித்திய ஜீவன் இதற்காகத்தான் வேதாகமத்தில் ஞானமும் அறிவும் வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கிறது. அறிதல் அறிவு என்னும் பொருளைத் தரும் வாக்கியங்கள் வேதாகமத்தில் 1,401 இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. வேதவாக்கியங்கள் எல்லாமே தேவனை அறியும் சத்தியத்தோடு தொடர்புடையதாக இருக்கும் வேதவசனங்கள் தேவனுடைய நித்திய சித்தத்தை உறுதிபண்ணும். தேவனை அறியாமல் இருப்பதும், அவரை அறிந்து கொள்ள மறுப்பதும் அவரை விசுவாசியாமல் இருப்பதும் வேதவாக்கியங்களில் கடிந்து கூறப்பட்டிருக்கிறது. தேவனைப் பற்றிய அறிவு நமக்கு இல்லையென்றால் அந்த அறியாமை நமது ஆத்துமாவை அழித்துப்போடும் (1யோவான் 5:13, 2பேதுரு 1:1-8)

"மெய்த் தேவன்" - பழைய ஏற்பாட்டுக் காலங்களில் பொய்த் தெய்வங்கள் இருந்தன இவற்றிலிருந்து மெய்யான தேவனை வேறுபடுத்திக் காண்பிப்பதற்காக இந்த வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (2நாளா 15:3; எரே 10:10; யோவான் 3:33 யோவான் 8:26; 1தெச 1:9, 1யோவான் 5:20; வெளி 6:10)

வேதாகமத்தில் காணப்படும் மெய்யான காரியங்கள்

1 தேவன் (God) (யோவான் 17:3 1யோவான் 5:20)

2 பிரமாணங்கள் (Laws) (நெகே 9:13)

3 வழிகள் (Ways) (வெளி 15:3)

4 சாட்சி (Testimony) (யோவான் 21:24)

5 வார்த்தை (Saying) (1தீமோ 3:1; வெளி 19:9)

6 சாட்சி (Record) (யோவான் 8:14; யோவான் 19:35)

7 பழமொழி (Proverb) (2பேதுரு 2:22)

8 சாட்சி (Witness) (எரே 42:5, வெளி 3:14)

9 நியாயத்தீர்ப்பு (Judgment) (சக 7:9 வெளி 16:7)

10 ஐசுவரியங்கள் (Riches) (லூக்கா 16:11)

11 ஒளி (Light) (யோவான் 1:9 1யோவான் 2:8)

12 தொழுது கொள்ளுகிறவர்கள் (Worshipers) (யோவான் 4:23)

13 அப்பம் (Bread) (யோவான் 6:32)

14 திராட்சச்செடி (Vine) (யோவான் 15:1)

15 பரிசுத்தம் (Holiness) (எபே 4:24)

16 உத்தம கூட்டாளி (Yokefellow) (பிலி 4:3)

17 ஆசரிப்புக்கூடாரம் (Tabernacle) (எபி 8:2)

18 இருதயம் (Heart) (எபி 10:22)

19 கிருபை (Grace) (1பேதுரு 5:12)

20 மனுஷர் (Men) (ஆதி 42:11,19,31,34)

"அனுப்பினவர்" தாம் எழுதுக்கும் இந்த ஜெபத்தில் இயேசு கிறிஸ்து ஆறு இடங்களில் பிதா தம்மை அனுப்பியதாகக் குறிப்பிடுகிறார் (யோவான் 17:3,8,18,21,23,25) யோவான் சுவிசேஷத்தில் மட்டும் பிதா குமாரனை அனுப்பியதாக 46 இடங்களில் கூறப்பட்டிருக்கிறது மற்ற சுவிசேஷங்களில் மொத்தம் 4 இடங்களில் மட்டுமே இந்த வாக்கியத்தை நாம் வாசிக்கிறோம்.

(3) நியமித்த கிரியை செய்து முடிக்கப்பட்டிருக்கிறது

யோவான் 17:4 பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன் நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன்

17 அதிகாரம்

"பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்" - இயேசுகிறிஸ்து பூமியிலே தேவனுடைய சித்தத்தைச் செய்தார். பிரசங்கம், உபதேசம், சுகமாக்குதல், பரிசுத்த ஜீவியம் ஆகியவற்றின் மூலமாக இயேசுகிறிஸ்து தேவனுடைய சித்தத்தைச் செய்து, அவரை மகிமைப்படுத்தினார்.

"நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன்" - மத் 4:23; அப் 10:38 ஆகிய வசனங்களில் நாம் வாசிக்கும் கிரியைகளை இயேசு கிறிஸ்து செய்து முடித்தார். மீட்பின் கிரியையை இயேசு கிறிஸ்து இன்னும் சிறிது நேரத்தில் கல்வாரி சிலுவையில் மரித்து செய்து முடித்து விடுவார் (யோவான் 19:30). பரலோகத்தில் இயேசுகிறிஸ்து தமது கிரியைகளை இன்னும் செய்து கொண்டிருக்கிறார் (ரோமர் 8:34; எபி 4:14-16; எபி 7:25).

(4) கிறிஸ்துவின் மகிமை

> யோவான் 17:5 பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்.

"உலகம் உண்டாகிறதற்கு முன்னே" இயேசு கிறிஸ்து தம்மைத் தாமே வெறுமையாக்கினதை இந்த வசனம் விளக்குகிறது (பிலி 2:7). இந்த வசனத்தில் இயேசு கிறிஸ்து மூன்று காரியங்களைப் பற்றி கூறுகிறார். அவையாவன:

1. நித்தியமாக இருப்பது (Eternal pre-existence) (மீகா 5:1-2; யோவான் 1:1-2; வெளி 1:8,11; வெளி 2:8; வெளி 22:13; கொலோ 1:15-18).
2. தம்மைத் தாமே வெறுமையாக்குவது (Earthly self-emptying) (லூக்கா 2:40,52; யோவான் 1:14; பிலி 2:5-11; எபி 1:3-9; எபி 2:9-18; எபி 4:14-16; எபி 5:7).
3. மகிமையைத் திரும்பப் பெற்றுக் கொள்வது (Restored glory) (யோவான் 17:5; மத் 28:18; எபே 1:20-23; பிலி 2:9-11; 1பேதுரு 3:22; எபி 12:2; வெளி 3:21).

(5) கிறிஸ்து மனுஷருக்கு பிதாவின் நாமத்தை வெளிப்படுத்துகிறார்

> யோவான் 17:6 நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன். அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள்; அவர்களை எனக்குத் தந்தீர்; அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள்.

> யோவான் 17:7 நீர் எனக்குத் தந்தவைகளெல்லாம் உம்மாலே உண்டாயினவென்று இப்பொழுது அறிந்திருக்கிறார்கள்.

> யோவான் 17:8 நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்; அவர்கள் அவைகளை ஏற்றுக்கொண்டு, நான் உம்மிடத்திலிருந்து புறப்பட்டு வந்தேன் என்று நிச்சயமாய் அறிந்து, நீர் என்னை அனுப்பினீர் என்று விசுவாசித்திருக்கிறார்கள்.

"உம்முடைய நாமம்" - பிதாவின் அதிகாரம் (யோவான் 5:43; யோவான் 10:25).

"நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன்" - இயேசு கிறிஸ்து தமக்குத் தந்த மனுஷர் என்று இங்கு குறிப்பிடுவது பன்னிரண்டு சீஷர்களை மட்டும் என்றில்லாமல் இருபது சீஷர்களையும், அவர்களோடு சேர்ந்து இயேசு கிறிஸ்துவிடம் வந்து அவரை விசுவாசித்த அனைவரையும் குறிக்கும். இயேசு கிறிஸ்து இந்த மனுஷரைப் பற்றிக் குறிப்பிடும் காரியங்கள்:

17 அதிகாரம்

1 நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப் படுத்தினேன் (யோவான் 17:6, 22:24)

2 அவர்கள் உம்முடையவர் களாயிருந்தார்கள் (யோவான் 17:6,9)

3 அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள் யோவான் 17:6,8

4 நீர் எனக்குத் தந்தவைகளெல்லாம் உம்மாலே உண்டாயினவென்று இப்பொழுது அறிந்திருக்கிறார்கள் யோவான் 17:7,8,25

5 உலகம் அவர்களைப் பகைத்தது. யோவான் 17:14

6 நான் உலகத்தானல்லாததுபோல அவர்களும் உலகத்தாரல்ல (யோவான் 17:14-16

7 அவர்களில் நான் மகிமைப் பட்டிருக்கிறேன் (யோவான் 17:10)

8 நீர் அவர்களை எனக்குத் தந்தீர் (யோவான் 17:2,6,9,11,12,24)

9 நான் அவர்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுத்திருக்கிறேன் யோவான் 17:2-3

10 நீர் எனக்குத் தந்தவர்களைக் காத்துக் கொண்டுவந்தேன்; கேட்டின் மகன் கெட்டுப் போனானேயல்லாமல் அவர்களில் ஒருவனும் கெட்டுப் போகவில்லை யோவான் 17:12)

(6) விசுவாசிகள் அனைவருடைய ஒற்றுமை - (வசனம் 20)

யோவான் 17:9 நான் அவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறேன் உலகத்துக்காக வேண்டிக் கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறேன் அவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்களே

யோவான் 17:10 என்னுடையவைகள் யாவும் உம்முடையவைகள் உம்முடையவைகள் என்னுடையவைகள்; அவர்களில் நான் மகிமைப் பட்டிருக்கிறேன்

யோவான் 17:11 நான் இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்தி லிருக்கிறார்கள்; நான் உம்மிடத்திற்கு வருகிறேன் பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்.

"நான் அவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறேன்" - இயேசு கிறிஸ்து தம்மிடத்தில் விசுவாசம் வைத்திருப்பவர்களுக்காக வேண்டிக் கொள்ளும் காரியங்கள்

1 நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும் படி வேண்டிக்கொள்ளுகிறேன் (யோவான் 17:11,15

2 நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும் படிக்கு நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக் கொள்ளும் (யோவான் 17:11,21-23)

3 அவர்கள் என் சந்தோஷத்தை நிறைவாய் அடைய வேண்டும் (யோவான் 17:13)

4 உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும். அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப் பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன் (யோவான் 17:17-19 யோவான் 10:36

5 பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்ததை உலகம் ஏற்றுக் கொள்வதாக. (யோவான் 17:24

6 நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனே கூட இருக்க விரும்புகிறேன்

17 அதிகாரம்

7 நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக வேண்டிக் கொள்கிறேன் (யோவான் 17:24)

"என்னுடையவைகள் யாவும் உம்முடையவைகள் உம்முடையவைகள் என்னுடையவைகள்" - திரித்துவத்தில பிதாவும். குமாரனும் சம அந்தஸ்தில இருக்கிறார்கள் விசுவாசிகளாகிய நாம இயேசு கிறிஸ்துவிடம் "என்னுடையவைகள் யாவும் உம்முடையவைகள்" என்று ஜெபத்தில அறிக்கையிடலாம். ஆனால "உம்முடையவைகள் என்னுடையவைகள்" என்று நமமால இயேசு கிறிஸ்துவிடம் கூறமுடியாது.

(7) கேட்டின் மகன் கெட்டுப்போகிறான்

யோவான் 17:12 நான் அவர்களுடனேகூட உலகத்திலிருக்கையில அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக் கொண்டேன நீர் எனக்குத் தந்தவர்களைக் காத்துக் கொண்டு வந்தேன வேதவாக்கியம் நிறைவேறுத்தக்கதாக, கேட்டின மகன கெட்டுப போனானேயலலாமல. அவர்களில ஒருவனும் கெட்டுப்போகவிலலை

"கேட்டின மகன கெட்டுப போனானேயலலாமல அவர்களில் ஒருவனும் கெட்டுப்போகவில்லை" - கேட்டின மகனாகிய யூதாஸ்காரியோத்தைத் தவிர வேறு யாரும் கெட்டுப்போகவிலலை (அப் 1:20-25; சங் 41:9; சங் 69:25-29) பிதாவானவர இயேசு கிறிஸ்துவிற்குத் தந்தவர்களில் யூதாஸ் காரியோத்தும் ஒருவன ஆகையினாலதான் இயேசு கிறிஸ்து தமது ஜெபத்தில பிதாவிடம் யூதாஸ்காரியோத்தைப் பற்றி கணக்கு ஒப்புவிக்கிறார் (மத் 10:1-20; மாற்கு 3:13-19; மாற்கு 6:7-13, லூக்கா 6:12-16)

கெட்டுப்போ (lost) ἀπόλλυμι apollymi 622

வினைச்சொல் கொலை செய், அழி, கெடு, கொல், சங்கரி, கெட்டுப்போ - (to lose) (யோவான் 6:12,39 யோவான் 12:25; யோவான் 17:12 யோவான் 18:9); (perish) (யோவான் 3:15-16; யோவான் 6:27 யோவான் 10:28; யோவான் 11:50) (destroy) (யோவான் 10:10); (die) (யோவான் 18:14)

"கேட்டின் மகன்" (son of perdition) - அழிவின் மகன் (son of destruction) என்பது இந்த வாக்கியத்தின் பொருள் ஏனெனில இவன் தன் அழிவைத் தெரிந்து கொண்டு. அழிவை நோக்கிப் போகிறான் இந்த வாக்கியம அந்திக்கிறிஸ்துவையும் குறிக்கும். 2தெச 2:3 செப்துவஜிந்த் பதிப்பில இந்த வாக்கியம் துரோகம் பண்ணுகிற பிள்ளைகளைக் (children of transgression) குறிக்கிறது (ஏசா 57:4) ஒரு குறிப்பிட்ட இலக்கு. குறிப்பிட்ட சுபாவம், குறிப்பிட்ட கொள்கை உடையவர்களை எபிரெயரும் கிரேக்கரும் விசேஷித்த வாக்கியங்களினால அழைத்தார்கள அவையாவன

1. இராஜ்யத்தின புத்திரர் (children of the kingdom) (மத் 8:12 மத் 13:38)
2. மணவாளனுடைய தோழன (of the bridechamber) (மத் 9:15
3. நரகத்தின மகன (of hell) (மத் 23:15
4. கோபாக்கினையின பிள்ளைகள் (of wrath) (எபே 2:3)
5. ஞானத்தின் பிள்ளைகள (of wisdom) (மத் 11:19; லூக்கா 7:35)

யூதாஸ்காரியோத்திற்கும் அந்திக் கிறிஸ்துவிற்கும் பிறப்பு, வளர்ப்பு, மரணம ஆகிய எதிலும் உறவு ஒன்றும இலலை. அவர்கள ஒரே பெற்றோருக்குப் பிறக்கவில்லை அவர்கள் இருவரும் தங்கள் கிரியைகளினால தங்களுடைய அழிவைத் தேடிக் கொண்டார்கள கிறிஸ்துவின் கரங்களினால அந்திக் கிறிஸ்து மரிப்பான் யூதாஸ் நான்றுகொண்டு செத்தான் (தானி 7:11 ஏசா 11:4 2தெச 2:8 வெளி 19:20)

17 அதிகாரம்

யோவான் சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 11

"வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக கேட்டின் மகன் கெட்டுப்போனானேயல்லாமல், அவர்களில் ஒருவனும் கெட்டுப்போகவில்லை" (யோவான் 17:12; சங் 41:9; சங் 69:25-29; சங் 109:8 அப் 1:20-25) ஒருவன் தெரிந்தும் பாவம் செய்தால் அவன் அழிவைத் தெரிந்திருக்கிறான். இரட்சிக்கப்படுவதற்கு அவனுக்கு விருப்பம் இல்லை. ஆகையினால் அழிந்துபோகிறான். யூதாஸ்காரியோத்து பாவம் செய்த பின்பு, தன்னுடைய பாவத்திற்காக மனம் வருந்தி இயேசு கிறிஸ்துவிடம் வந்து மன்னிப்புக் கோரவில்லை. தம்மிடம் வந்த யாரையும் இயேசு கிறிஸ்து புறம்பே தள்ளமாட்டார். ஆனால், யூதாஸ்காரியோத்தோ இயேசு கிறிஸ்துவிடம் வருவதற்குப் பதிலாக தன்னுடைய அழிவைத் தானே தேடிக்கொள்கிறான்.

(8) விசுவாசிகளின் பரிசுத்தம் - (எபி 12:14; எபி 15:3)

யோவான் 17:13 இப்பொழுது நான் உம்மிடத்திற்கு வருகிறேன்; அவர்கள் என் சந்தோஷத்தை நிறைவாய் அடையும்படி உலகத்தில் இருக்கையில் இவைகளைச் சொல்லுகிறேன்.

யோவான் 17:14 நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன்; நான் உலகத்தானல்லாதது போல அவர்களும் உலகத்தாரல்ல; ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது.

(9) விசுவாசிகளை தீமையிலிருந்து காக்கும்படி ஜெபம்

யோவான் 17:15 நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

"நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்" - தம்முடைய சீஷர்கள் எல்லாரும் இந்த உலகப் பாடுகளிலிருந்து உடனடியாக விடுதலை பெறுவதற்காக மரித்துப் போகவேண்டுமென்றோ, அல்லது உலகத்திலுள்ள ஜனங்களிடமிருந்து தங்களைப் பிரித்து தனிமையான இடங்களில் வாழவேண்டும் என்றோ இயேசு கிறிஸ்து விண்ணப்பம் பண்ணவில்லை. சோதனைகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக சீஷர்கள் இப்படி ஓடிப்போவது இயேசு கிறிஸ்துவின் சித்தமல்ல. அவர்கள் இந்த உலகத்திற்கு இயேசு கிறிஸ்துவின் முன்மாதிரிகளாகவும் ஒளியாகவும் ஜீவிக்க வேண்டும் (மத் 5:16; பிலி 2:15; தீத்து 2:11-14; 1கொரி 5:10).

"நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்" (மத் 6:13; 1யோவான் 5:19)

(10) விசுவாசிகளின் பரிசுத்தத்தைப் பற்றிய சாட்சி - (யோவான் 15:3,19)

யோவான் 17:16 நான் உலகத்தானல்லாதது போல அவர்களும் உலகத்தாரல்ல.

(11) விசுவாசிகள் ஊழியத்திற்காக வேறுபிரிக்கப்படுகிறார்கள் - (யோவான் 10:36)

யோவான் 17:17 உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்.

17 அதிகாரம்

யோவான் 17:18 நீர் என்னை உலகத்தில் அனுப்பினது போல நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன்

யோவான் 17:19 அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப் பட்டவர்களாகும்படி அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்

"உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்" - பரிசுத்தமாக்குதல் என்பதற்கான கிரேக்க வார்த்தை "ஹாகியோஜோ" (hagiazo). தேவனுக்காகவும், தேவனுடைய ஊழியத்திற்காகவும் பரிசுத்தப்படுத்துவது ஒரு பரிசுத்தமான பயன்பாட்டிற்காக அசுத்தத்திலிருந்து விலகியிருப்பது என்பது இந்த வாக்கியத்தின் பொருள். இதன் அடிப்படை பொருள் விலகியிருப்பது என்பதாகும். பாவத்திலிருந்தும் அசுத்தத்திலிருந்தும் நாம் விலகியிருக்கும்போது, நாம் பரிசுத்தமடைகிறோம். தேவனுக்காகவும் தேவனுடைய ஊழியத்திற்காகவும் நாம் நம்மையும் நமது உடைமைகளையும் பரிசுத்தப்படுத்த வேண்டும்.

பரிசுத்தமாக்கப்பட்ட பொருட்கள்

1. விசேஷித்த நாள் (ஆதி 2:3),
2. ஆசரிப்புக்கூடாரம் (யாத் 29:43-44)
3. வஸ்திரங்கள் (லேவி 8:30)
4. வீடுகள் (லேவி 27:9-29)
5. தேவாலயங்கள் (2 நாளா 7:16-20)

இந்தப் பொருட்கள் எல்லாவற்றையுமே தேவனுடைய பரிசுத்த ஊழியத்திற்காக அவரிடம் அர்ப்பணிக்க வேண்டும்.

பரிசுத்தமாக்குவதற்கு தேவை இல்லாதவர்கள்

1. தேவனுடைய நாமம் (எசே 36:23)
2. தேவன் (1பேதுரு 3:15)
3. கிறிஸ்து (யோவான் 10:36 யோவான் 17:19)
4. ஏற்கெனவே பரிசுத்தமாக்கப்பட்ட சீஷர்கள் (யோவான் 13:10 யோவான் 15:3 யோவான் 17:2,6,14,16)

பரிசுத்தப்படுத்துதல் (Sanctify) - ἁγιάζω - hagiazoo - 37

வினைச்சொல் - பரிசுத்தப்படுத்துதல், பரிசுத்தப்படுதல், பரிசுத்தமாக்குதல், பரிசுத்தஞ்செய்தல், பரிசுத்தம் பண்ணுதல், பரிசுத்தமாக்கப்படுதல்

(அ) தேவனுக்காகப் பொருட்களையோ அல்லது நபர்களையோ வேறுபிரித்து அர்ப்பணித்தல். மத். 23:17; யோவா 10:36

(ஆ) சட்டப்பிரகாரமாக, நீதிநெறிப் பிரகாரமாக பரிசுத்தப்படுத்துதல் 1கொரி. 6:11; 7:14

(இ) சடங்குகளின் மூலமாக ஒரு பொருளையோ அல்லது நபரையோ பரிசுத்தப்படுத்துதல் எபி 9:13 2தீமோ 2:21

(ஈ) பரிசுத்தமுள்ளதை அங்கீகரித்தல் (மத். 6:9)

"நீர் என்னை உலகத்தில் அனுப்பினது போல நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன்" பிதா குமாரனை இந்த உலகத்திற்கு அனுப்பினார். அதுபோலவே, குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் தம்முடைய எல்லா சீஷர்களையும் இந்த உலகத்திற்கு அனுப்புகிறார். இந்த ஜெபத்தில் இயேசு கிறிஸ்து தமது பன்னிரெண்டு சீஷர்களுக்காக மட்டும் என்று ஜெபிக்காமல், தம்முடைய எல்லா சீஷர்களுக்காகவும் ஜெபிக்கிறார். "நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறது மல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன்" (யோவான் 17:20; மத் 28:20; மாற்கு 16:15-20; யோவான் 14:12; யோவான் 20:21; மத் 16:18)

17 அதிகாரம்

"அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்" - தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்காக இயேசு கிறிஸ்து மரணபரியந்தம் தம்மைத் தாமே வேறு பிரித்து, ஒப்புக்கொடுத்தார். இயேசு கிறிஸ்துவின் மரணத்தின் மூலமாக அவரை விசுவாசத்தினால் ஏற்றுக் கொள்கிற அனைவருக்கும் இரட்சிப்பு உண்டாகிறது. அவர்கள் தேவனுடைய வார்த்தையைத் தொடர்ந்து வாசித்து, தியானித்து அதற்குக் கீழ்ப்படிவதினாலே அவர்கள் தொடர்ந்து பரிசுத்தமாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் (யோவான் 17:17; எபே 5:26)

(12) விசுவாசிகள் ஒன்றாயிருக்க வேண்டும் - (வசனம் 9)

யோவான் 17:20 நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறது மல்லாமல் இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன்

யோவான் 17:21 அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்ளுகிறேன்

யோவான் 17:22 நாம் ஒன்றாயிருக்கிறது போல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்

யோவான் 17:23 ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும் படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்

"அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், ___ நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்" - பரிபூரணமான ஒற்றுமையை இயேசு கிறிஸ்து இந்த ஜெபத்தில் ஐந்து இடங்களில் கூறியிருக்கிறார் (யோவான் 17:11,21-23). குமாரனைப் பிதா அனுப்பினார் என்பதை இந்த உலகம் விசுவாசிக்க வேண்டும். தேவனுடைய பிள்ளைகள் தேவனிடத்தில் ஒன்றாயிருக்கும் போது பிதா குமாரனை அனுப்பினார் என்பதை இந்த உலகம் விசுவாசிக்கும் (ஏசா 2:2-4; ஏசா 11:9).

"நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல" - (லூக்கா 22:3)

"நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கு" - விசுவாசிகள் இந்த உலகத்திற்கு சுவிசேஷச் செய்தியை அறிவிக்க வேண்டும். தங்கள் வாயினால் அறிவித்தால் மட்டும் போதாது. தேவனுடைய சத்தியத்தை இந்த உலகம் அறிய வேண்டும். அதற்காக நாம் செய்ய வேண்டிய காரியம் என்னவென்றால் பிதாவும் குமாரனும் ஒன்றாயிருப்பது போல விசுவாசிகளும் ஒன்றாயிருக்க வேண்டும். ஆதித்திருச்சபையின் விசுவாசிகள் தங்களுக்குள் ஒருமனப்பட்டிருந்தார்கள் (அப் 1:14; அப் 2:1,46; அப் 4:24,32; அப் 5:12). "வைராக்கியமும் விரோதமும் எங்கே உண்டோ அங்கே கலகமும் சகல துர்ச் செய்கைகளுமுண்டு" (யாக் 3:16). தேவபிள்ளைகள் ஒற்றுமையாக இருக்கும் போது தேவநாமம் மகிமைப்படும்.

(13) விசுவாசிகளின் மகிமை

யோவான் 17:24 பிதாவே, உலகத் தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனே கூட இருக்க விரும்புகிறேன்

17 அதிகாரம்

"பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால்" - இயேசு கிறிஸ்து உலகத்தோற்றத்திற்கு முன்பாகவே இருந்தார் என்பதை இரண்டாம் முறையாகக் குறிப்பிடுகிறார் (யோவான் 17:5)

(14) உலகம் பிதாவை அறியவில்லை

யோவான் 17:25 நீதியுள்ள பிதாவே, உலகம் உம்மை அறியவில்லை, நான் உம்மை அறிந்திருக்கிறேன்; நீர் என்னை அனுப்பினதை இவர்களும் அறிந்திருக்கிறார்கள்

பிதாவைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் காரியங்கள்

1 நீதியுள்ள பிதா (Righteous) (யோவான் 17:25)

2 பரிசுத்த பிதா (Holy) (யோவான் 17:11)

3 பரலோகபிதா (Heavenly) (மத் 6:14,26,32)

4 இரக்கங்களின் பிதா (Father of Mercies) (2கொரி 1:3)

5 மகிமையின் பிதா (Father of Glory) (எபே 1:17)

6 ஆவிகளின் பிதா (Father of Spirits) (எபி 12:9)

7 சோதிகளின் பிதா (Father of Lights) (யாக் 1:17)

8 வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவர் (Lord of Heaven) (மத் 11:25)

(15) ஊழியம் நிறைவேறிற்று

யோவான் 17:26 நீர் என்னிடத்தில் வைத்த அன்பு அவர்களிடத்திலிருக்கும்படிக்கும், நானும் அவர்களிலிருக்கும்படிக்கும், உம்முடைய நாமத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன்; இன்னமும் தெரியப்படுத்துவேன் என்றார்

யோவான் 17 ஆவது அதிகாரத்தில் நாம் செய்திருப்பதாக இயேசு கிறிஸ்து கூறிய [redacted]

1 பூமியில் நான் உம்மை மகிமைப்படுத்தினேன் (யோவான் 17:4)

2 நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன் (யோவான் 17:4)

3 உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன் (யோவான் 17:6)

4 நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை நான் அவர்களுக்குக் கொடுத்தேன் (யோவான் 17:8)

5 நீர் எனக்குத் தந்தவர்களை நான் காத்துக் கொண்டு வந்தேன் (யோவான் 17:12)

6 நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன் (யோவான் 17:14)

7 நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன் (யோவான் 17:18)

8 நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன் (யோவான் 17:22)

9 நான் உம்மை அறிந்திருக்கிறேன் (யோவான் 17:25)

10 உம்முடைய நாமத்தைத் தெரியப்படுத்தினேன் (யோவான் 17:26)

17 அதிகாரம்

"அவர்கள் ......உம்முடைய - இந்த ஜெபத்தில் இந்த வார்த்தையைப் போன்று 69 சுட்டுப்பெயர்களை (pronouns) இயேசு கிறிஸ்து பயன்படுத்தியிருக்கிறார். சீஷர்களுக்கு பன்மைச்சுட்டுப்பெயர் பயன்படுத்தப்பட்டிருப்பது போன்று பிதாவுக்கும், கிறிஸ்துவிற்கும் சில வசனங்களைப் பன்மைச் சுட்டுப்பெயர் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. திரித்துவத்தில் பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் இருப்பதைப் பன்மைச் சுட்டுப் பெயர் விளக்குகிறது. (யோவான் 17:11, 21-23) இவை தவிர 65 இடங்களில் கிறிஸ்துவிற்குச் சுட்டுப் பெயர் ஒருமையிலும் 53 இடங்களில் பிதாவிற்குச் சுட்டுப் பெயர் ஒருமையிலும் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இத்துடன், தேவனையும், சீஷர்களையும் குறிப்பதற்குப் பன்மைச் சுட்டுப் பெயர் 43 இடங்களில் பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

18 அதிகாரம்

VIII. இயேசுவின் பாடுகள்

1. கெத்செமனே தோட்டத்தில் இயேசு - (மத் 26:36; மாற்கு 14:32; லூக் 22:39)

யோவான் 18:1 இயேசு இவைகளைச் சொன்னபின்பு, தம்முடைய சீஷருடனே கூட கெதரோன் என்னும் ஆற்றுக்கு அப்புறம் போனார்; அங்கே ஒரு தோட்டம் இருந்தது, அதிலே அவரும் அவருடைய சீஷரும் பிரவேசித்தார்கள்.

"தம்முடைய சீஷருடனேகூட கெதரோன் என்னும் ஆற்றுக்கு அப்புறம் போனார்" - இயேசுகிறிஸ்து தாம் இதுவரையிலும் பேசிய இடத்திலிருந்து புறப்பட்டு போகிறார் (யோவான் 14:31)

"கெதரோன்" (Cedron) - மறுபெயர் கீதரோன் (Kidron) (2சாமு 15:23; 1இராஜா 15:13; 2இராஜா 23:4) கெதரோன் 6 அல்லது 7 அடி அகலமுள்ள சிறிய ஆறு. எருசலேம் மதில் சுவற்றிலிருந்து 200 கெஜம் தூரத்தில் உள்ளது. இந்த ஆற்றைத் தாண்டினால், ஒலிவ மலையின் அடிவாரம் வரும். மழைக்காலத்தில் மட்டுமே இந்த ஆற்றில் தண்ணீர் வரும். தான் வஞ்சிக்கப்பட்ட போது தாவீது இந்த ஆற்றைக் கடந்து சென்றான் (2சாமு 15:23)

"அங்கே ஒரு தோட்டம் இருந்தது" - பழத்தோட்டம். இந்தத் தோட்டத்தின் பெயர் கெத்செமனே (Gethsemane) (மத் 26:36-47; மாற்கு 14:30-36; லூக்கா 22:40-44) பூதமாக்கத்தில் ஐசுவரியவான்களாக இருக்கிறவர்கள் பட்டணத்திற்கு வெளியே ஒரு தோட்டம் அமைத்து, அங்கு ஓய்வாகப் போய் வருவார்கள். கெத்செமனே தோட்டம் இயேசு கிறிஸ்துவின் நண்பருடைய தோட்டமாக இருக்கலாம். அவர் அடிக்கடி அங்கே சென்று தங்குவது வழக்கம். (யோவான் 18:2; லூக்கா 22:40)

2. இயேசுவைக் கொல்ல முயற்சி - இயேசு காட்டிக்கொடுக்கப் படுவதும் கைதுபண்ணப் படுவதும் - (மத் 26:3; 26:47 மாற்கு 14:43; லூக் 22:47)

யோவான் 18:2 இயேசு தம்முடைய சீஷருடனேகூட அடிக்கடி அங்கே போயிருந்தபடியினால் அவரைக் காட்டிக்கொடுக்கிற யூதாசும் அந்த இடத்தை அறிந்திருந்தான்.

யோவான் 18:3 யூதாஸ் போர்ச்சேவகரின் கூட்டத்தையும் பிரதான ஆசாரியர் பரிசேயர் என்பவர்களால் அனுப்பப்பட்ட ஊழியக்காரரையும் கூட்டிக்கொண்டு, பந்தங்களோடும் தீவட்டிகளோடும் ஆயுதங்களோடும் அவ்விடத்திற்கு [illegible]

யோவான் 18:4 இயேசு தமக்கு நேரிடப்போகிற எல்லாவற்றையும் அறிந்து, எதிர்கொண்டுபோய், அவர்களை நோக்கி: யாரைத் தேடுகிறீர்கள் என்றார்.

யோவான் 18:5 அவருக்கு அவர்கள் பிரதியுத்தரமாக: நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம் என்றார்கள். அதற்கு இயேசு: நான்தான் என்றார். அவரைக் காட்டிக்கொடுத்த யூதாசும் அவர்களுடனேகூட நின்றான்.

யோவான் 18:6 நான்தான் என்று அவர் அவர்களிடத்தில் சொன்னவுடனே அவர்கள் பின்னிட்டுத் தரையிலே விழுந்தார்கள்.

யோவான் 18:7 அவர் மறுபடியும் அவர்களை நோக்கி: யாரைத் தேடுகிறீர்கள் என்று கேட்டார். அவர்கள்: நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம் என்றார்கள்.

யோவான் 18:8 இயேசு பிரதியுத்தரமாக: நான்தான் என்று உங்களுக்குச் சொன்னேனே, [illegible] தேடுகிறதுண்டானால், இவர்களைப் போகவிடுங்கள் என்றார்.

18 அதிகாரம்

யோவான் 18:9 நீர் எனக்குத் தந்தவர்களில் ஒருவனையும் நான் இழந்துபோகவில்லையென்று அவர் சொல்லிய வசனம் நிறைவேறத்தக்கதாக இப்படி நடந்தது.

யோவான் 18:10 அப்பொழுது சீமோன் பேதுரு, தன்னிடத்திலிருந்த பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலதுகாதற வெட்டினான்; அந்த வேலைக்காரனுக்கு மல்குஸ் என்று பேர்.

யோவான் 18:11 அப்பொழுது இயேசு பேதுருவை நோக்கி: உன் பட்டயத்தை உறையிலே போடு; பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனோ என்றார்.

"இயேசு தம்முடைய சீஷருடனேகூட அடிக்கடி அங்கே போயிருந்தார்" - இயேசு கிறிஸ்துவின் ஊழியகாலத்தில் நாம் இரண்டு விதமான பகுதிகளைப் பார்க்கிறோம். தலைசாய்ப்பதற்குக் கூட இடமில்லாமல் ஓய்வில்லாமல் ஊழியம் செய்த நேரம், மற்றொன்று தனிமையில் ஓய்வு எடுத்த நேரம். இயேசு கிறிஸ்து சகல ஜனங்களுக்கும் நன்மை செய்வதற்காக ஓய்வில்லாமல் ஊழியம் செய்தார் (அப் 10:38) தமது தனிமையான நேரத்தை இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு உபதேசம் பண்ணவும், பிதாவினிடத்தில் ஜெபம் பண்ணவும் பயன்படுத்தினார்.

"போர்ச்சேவகரின் கூட்டம்" - 600 போர்வீரர்கள் கொண்ட போர்ச்சேவகர்களின் பட்டாளம் (யோவான் 18:3,12; அப் 10:1; அப் 21:31, அப் 27:1, மத் 27:27, மாற்கு 15:16) இந்தக் கூட்டத்தில் போர்ச்சேவகர்களின் அதிகாரிகளும், பிரதான ஆசாரியரும் இருப்பார்கள் (யோவான் 7:32,45-46)

கூட்டம் (band) - σπεῖρα - speira - 4686

பெண்பால் பெயர்ச்சொல் - கூட்டம், பட்டாளம்

பந்தங்கள் (lanterns) - φανός - phanos - 5322

ஆண்பால் பெயர்ச்சொல் - பந்தங்கள், தீவட்டி (torch) இந்த வசனத்தில் மட்டுமே பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

தீவட்டிகள் (torches) - λαμπάς - lampas - 2985

பெண்பால் பெயர்ச்சொல் - தீவட்டி, விளக்கு, தீபம் (lamps) (மத் 25:1-8 வெளி 4:5; வெளி 8:10; அப் 20:8)

"ஆயுதங்கள்" - பட்டயங்களும், தடிகளும் (லூக்கா 22:52)

"நான்தான்" - (யோவான் 14:6 யாத் 3:14)

"நான்தான் என்று அவர் அவர்களிடத்தில் சொன்னவுடனே அவர்கள் பின்னிட்டுத் தரையிலே விழுந்தார்கள்" - தாம் விரும்பியிருந்தால் இயேசு கிறிஸ்து அவர்களைக் கொன்றுபோட்டிருக்கலாம். இயேசு கிறிஸ்துவின் அனுமதியில்லாமல் அவரை யாராலும் ஒன்றும் செய்ய முடியாது. அவர் அங்கிருந்து தப்பிச் செல்ல வேண்டுமென்று விரும்பியிருந்தால் அவர்களை விட்டு இயேசு கிறிஸ்து கடந்து போயிருக்கலாம். என்றாலும் இயேசு கிறிஸ்து எப்போதுமே பிதாவின் சித்தத்தையே செய்கிறார். ஒவ்வொரு காரியத்திற்கும் உரிய ஏற்ற வேளை வரும்போது அந்தந்தக் காரியங்களைச் செய்கிறார். இந்த வசனத்தில் இயேசு கிறிஸ்து "நான்தான்" என்று கூறியவுடனே போர்ச்சேவகரின் கூட்டத்தாரும் ஊழியக்காரரும் தம்முடைய இருதயங்களிலேயே பயமடைந்தவர்களாக பின்னிட்டுத் தரையிலே விழுந்தார்கள்.

"என்னைத் தேடுகிறதுண்டானால், இவர்களைப் போகவிடுங்கள்" என்று இயேசு கிறிஸ்து போர்ச்சேவகரின் கூட்டத்திடம் சொல்லுகிறார். அவர்களிடம் இயேசு பணிவோடு விண்ணப்பம் பண்ணவில்லை. அதிகாரத்தோடு பேசுகிறார். இயேசு கிறிஸ்து தம்மைத் தாமே அவர்களிடத்தில் ஒப்புக்கொடுத்து விட்டார். அவர்கள் இயேசுவை மட்டுமே தேடிக்கொண்டு வந்தார்கள். தம்முடைய சீஷர்களை அவர்கள் ஒன்றும் செய்யாமல் அனுப்பிவிட வேண்டுமென்று இயேசு அவர்களிடத்தில் அதிகாரத்தோடு கூறுகிறார்.

18 அதிகாரம்

இயேசு கிறிஸ்து நல்ல மேய்ப்பன் தமது ஆடுகளுக்காகத் தமது ஜீவனையே கொடுக்கிறவர். இயேசு கிறிஸ்துவின் வல்லமை அவருடைய சீஷர்களை பாதுகாத்தது. பேதுரு, ஆசாரியனுடைய வேலைக்காரனை வலதுகாதற வெட்டினான். சேவகர்கள் இதினிமித்தம் இவர்கள்மீது கோபப்பட்டு, எல்லாச் சீஷர்களையும் கொன்றுபோட்டிருந்திருப்பார்கள். ஆனாலும் இயேசு கிறிஸ்து தமது சீஷர்களை பாதுகாக்கிறார் (யோவான் 18:10)

தீர்க்கதரிசன எண் - 41

"நீர் எனக்குத் தந்தவர்களில் ஒருவனையும் நான் இழந்துபோகவில்லை" (யோவான் 18:9; யோவான் 17:12) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"பட்டயம்" (sword) - (லூக்கா 22:36)

வெட்டு (smote) - παίω - paioo - (8:17

வினைச்சொல் - வெட்டு, அடி கொட்டு (மத் 26:68; மாற்கு 14:47 லூக்கா 22:64; வெளி 9:5)

"சீமோன்பேதுரு, தன்னிடத்திலிருந்த பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலதுகாதற வெட்டினான்" சீஷர்கள் ஏற்கெனவே பயமடைந்து, தரையில் விழுந்து கிடந்தார்கள். இப்போது பேதுரு, வேலைக்காரனுடைய வலதுகாதை வெட்டிவிட்டான். அங்கு இயேசு கிறிஸ்து மறுபடியும் ஒரு அற்புதம் செய்கிறார். அவனுடைய வலதுகாதை மறுபடியும் அதற்குரிய இடத்திலேயே வைத்து அவனைச் சொஸ்தமாக்குகிறார். இதைக் கண்ட போர்ச்சேவகர்களுக்குப் பயம் அதிகரித்திருக்கும். இயேசு கிறிஸ்துவின் அனுமதியில்லாமல் அவரை ஒன்றுமே செய்ய முடியாது என்பதைத் தெளிவாகப் புரிந்து வைத்திருப்பார்கள் (மத் 26:51-56)

"அந்த வேலைக்காரனுக்கு மல்குஸ் என்று பேர்" - யோவான் மட்டுமே அந்த வேலைக்காரனுடைய பெயரைக் குறிப்பிடுகிறார். ஆனால் இயேசு கிறிஸ்து அவனுடைய காதைக் குணப்படுத்தியதை யோவான் குறிப்பிடவில்லை. (லூக்கா 22:51)

"பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனோ" - என்று இயேசு கிறிஸ்து பேதுருவிடம் கேட்கிறார். தமது பாடுகளின் பாத்திரத்தைக் குறித்து (Cup of sufferings) இயேசு கிறிஸ்து இந்த வசனத்தில் குறிப்பிடுகிறார் (மத் 20:22-23)

3. **இயேசுவை அன்னா என்பவனிடத்திற்கு முதலாவதும், பின்பு காய்பா என்பவனிடத்திற்கும் கொண்டு போகிறார்கள்** - (மத் 26:57, மாற்கு 14:53; லூக் 22:63)

யோவான் 18:12 அப்பொழுது போர்ச் சேவகரும், ஆயிரம் போர்ச்சேவகருக்குத் தலைவனும் யூதருடைய ஊழியக்காரரும் இயேசுவைப்பிடித்து அவரைக் கட்டி

யோவான் 18:13 முதலாவது அவரை அன்னா என்பவனிடத்திற்குக் கொண்டு போனார்கள்; அவன் அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனாகிய காய்பாவுக்கு மாமனாயிருந்தான்

யோவான் 18:14 ஜனங்களுக்காக ஒரே மனுஷன் சாகிறது நலமாயிருக்குமென்று யூதருக்கு ஆலோசனை சொன்னவன் இந்தக் காய்பாவே.

"ஆயிரம் போர்ச்சேவகருக்குத் தலைவன்" இயேசு கிறிஸ்துவைக் கைதுபண்ணுவதற்கு ரோமர்கள் அதிகம் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இயேசு கிறிஸ்து மிகப்பெரிய தேசத்துரோகம் பண்ணிவிட்டதாக அவர்மீது யூதர்கள் குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள். அவர் பெரிய கலகக்காரர் என்று நினைத்து, அவரைக் கைதுபண்ணுவதற்காக ஆயிரம் போர்ச்சேவகருக்குத் தலைவனையே அனுப்பியிருக்கிறார்கள்

18 அதிகாரம்

தலைவன் (captain) - χιλίαρχος - chiliarchos - 5506

ஆண்பால் பெயர்ச்சொல் – பிரதான மனுஷர் தலைவன் சேனாபதி, சேனைத்தலைவர்

"முதலாவது அவனை அன்னா என்பவனிடத்திற்குக் கொண்டுபோனார்கள்" - அன்னா என்பவன் ஆலோசனைச் சங்கத்தின் தலைவனாக இருக்கலாம் பலதடவை இவன் பிரதான ஆசாரியனாக நியமிக்கப் பட்டிருக்கிறான் இவனுக்கு ஐந்து குமாரர்களும், ஒரு மருமகனும் இருந்தார்கள் இவனுடைய மருமகன் காய்பா பிரதான ஆசாரியனாக இருந்திருக்கிறான்

"அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியன்" - பிரதான ஆசாரியருடைய பதவி பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஒருவருடைய வாழ்நாள் முழுவதற்கும் கொடுக்கப்பட்டது. ஆனால் ரோமருடைய ஆட்சிகாலத்தில் ஒவ்வொரு வருஷமும் பிரதான ஆசாரியர் மாறிக்கொண்டே வந்தார்கள் ரோமப்பேரரசின் தேசாதிபதிகள் பிரதான ஆசாரியரை நியமனம் செய்தார்கள்

"ஜனங்களுக்காக ஒரே மனுஷன் சாகிறது நலமாயிருக்குமென்று யூதருக்கு ஆலோசனை சொன்னவன் இந்தக் காய்பாவே" - இயேசு கிறிஸ்துவைக் கொலை செய்ய வேண்டுமென்று காய்பா ஏற்கெனவே தீர்ப்பு வழங்கி விட்டான் (யோவான் 11:49-52) ஆகையினால் இவனுக்கு இயேசு கிறிஸ்துவினுடைய வழக்கில் தீர்ப்பு கூறுவதற்குத் தகுதியில்லை இயேசு கிறிஸ்துவோ நீதியாக விசாரிக்கப்படவில்லை சிலுவையில் மரிப்பதற்கு அவர் எந்தப் பாவமும் செய்யவில்லை உலகத்தின் பாவங்களை மன்னிப்பதற்கு அவர் தம்மைச் சிலுவையில் மரிப்பதற்கு ஒப்புக்கொடுத்தார்

4. பேதுருவின் முதலாவது மறுதலிப்பு - (மத் 26:69; மாற்கு 14:66 லூக் 22:54; யோவான் 18:25

யோவான் 18:15 சீமோன்பேதுருவும் வேறொரு சீஷனும் இயேசுவுக்குப் பின் சென்றார்கள் அந்தச் சீஷன் பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமானவனாயிருந்ததினால், இயேசுவுடனே கூடப் பிரதான ஆசாரியனுடைய அரமனைக்குள் பிரவேசித்தான்

யோவான் 18:16 பேதுரு வாசலருகே வெளியே நின்றான் அப்பொழுது பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமானவனாயிருந்த மற்றச் சீஷன் வெளியே வந்து வாசல் காக்கிறவர்களுடனே பேசி, பேதுருவை உள்ளே அழைத்துக்கொண்டு போனான்

யோவான் 18:17 அப்பொழுது வாசலைக் காக்கிற வேலைக்காரி பேதுருவை நோக்கி: நீயும் அந்த மனுஷனுடைய சீஷரில் ஒருவனல்லவா என்றாள் அவன், நான் அல்ல என்றான்

யோவான் 18:18 குளிர்காலமானபடியினாலே ஊழியக்காரரும் சேவகரும் கரிநெருப்புண்டாக்கி, நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்தார்கள் அவர்களுடனே கூடப் பேதுருவும் நின்று குளிர்காய்ந்துகொண்டிருந்தான்

"சீமோன்பேதுருவும் வேறொரு சீஷனும் இயேசுவுக்குப் பின்சென்றார்கள்" இந்த வாக்கியத்தில் வேறொரு சீஷன் என்பது யோவானைக் குறிக்கலாம். (யோவான் 13:23, யோவான் 19:26; யோவான் 21:7,20) அல்லது இந்த வார்த்தை நிக்கொதேமுவையோ அல்லது யோசேப்பையோ குறிக்கலாம். (யோவான் 19:38)

"வாசல்காக்கிற வேலைக்காரி பேதுருவை நோக்கி" யூதருடைய பாரம்பரியத்தின் பிரகாரம் இந்த வேலைக்காரியின் பெயர் பல்லிலா (Ballila) என்று தெரிய வருகிறது. அக்காலத்தில் ஸ்திரீகளே வாசலைக் காக்கிறவர்களாக இருந்தார்கள் (அப் 12:13

18 அதிகாரம்

"நான் அல்ல" - என்று பேதுரு அந்த ஸ்திரீயிடம் கூறுகிறான். பேதுரு கூறிய மூன்று பொய்களில் முதலாவது பொய். யோவான் 18:17,25-26

"அவர்களுடனேகூடப் பேதுருவும் நின்று குளிர்காய்ந்துகொண்டிருந்தான்" - குளிர் காலமானபடியினாலே ஊழியக்காரரும் சேவகரும் கரிநெருப்புண்டாக்கி, நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்தார்கள். இயேசு கிறிஸ்துவை யூதர்களிடம் ஒப்படைத்து விட்டு, இவர்களெல்லோரும் தங்களுடைய இடங்களில் குளிர்காய்ந்து கொண்டிருக்கிறார்கள். விரோதிகள் மத்தியில் குளிர்காய்வது தவறு என்பது பேதுருவிற்குத் தெரியவில்லை.

5. இயேசுவின் விசாரணை – (மத் 26:57; மாற்கு 14:53; லூக் 22:63)

யோவான் 18:19 பிரதான ஆசாரியன் இயேசுவினிடத்தில் அவருடைய சீஷரைக் குறித்தும் போதகத்தைக்குறித்தும் விசாரித்தான்.

யோவான் 18:20 இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் வெளியரங்கமாய் உலகத்துடனே பேசினேன்; ஜெப ஆலயங்களிலேயும் யூதர்களெல்லாரும் கூடிவருகிற தேவாலயத்திலேயும் எப்பொழுதும் உபதேசித்தேன்; அந்தரங்கத்திலே நான் ஒன்றும் பேசவில்லை.

யோவான் 18:21 நீ என்னிடத்தில் விசாரிக்க வேண்டியதென்ன? நான் சொன்னவைகளைக் கேட்டவர்களிடத்தில் விசாரியும்; நான் பேசினவைகளை அவர்கள் அறிந்திருக்கிறார்களே என்றார்.

யோவான் 18:22 இப்படி அவர் சொன்னபொழுது, சமீபத்தில் நின்ற சேவகரில் ஒருவன்: பிரதான ஆசாரியனுக்கு இப்படியா உத்தரவு சொல்லுகிறது என்று, இயேசுவை ஒரு அறை அறைந்தான்.

யோவான் 18:23 இயேசு அவனை நோக்கி: நான் தகாதவிதமாய்ப் பேசினதுண்டானால், தகாததை ஒப்புவி; நான் தகுதியாய்ப் பேசினேனேயாகில், என்னை ஏன் அடிக்கிறாய் என்றார்.

யோவான் 18:24 பின்பு அன்னா என்பவன் பிரதான ஆசாரியனாகிய காய்பாவினிடத்திற்கு அவரைக் கட்டுண்டவராக அனுப்பினான்.

"பிரதான ஆசாரியன் இயேசுவினிடத்தில் அவருடைய சீஷரைக்குறித்தும் போதகத்தைக் குறித்தும் விசாரித்தான்" - இயேசு கிறிஸ்துவினுடைய உபதேசம், தமக்காக அவர் சீஷர்களைச் சேர்த்துக் கொண்டது, புதிய உபதேசங்களைப் பேசி, ஒரு புதிய மார்க்கத்தை ஆரம்பித்தது ஆகிய காரியங்களைக் குறித்து பிரதான ஆசாரியன் இயேசுவிடம் கேள்வி கேட்கிறான். சட்டப்படி இயேசு கிறிஸ்துவின்மீது ஏதாவது குற்றம் சுமத்த முடியுமா என்று பார்க்கிறான். ஆனால் அவனுக்கு ஒரு காரணமும் அகப்படவில்லை. இந்த விசாரணை முழுவதும் இரவு வேளையில் நடைபெறுகிறது. இரவு வேளையில் யூதருடைய பிரமாணத்தின் பிரகாரம் யாரையும் விசாரிக்கக்கூடாது. ஓய்வுநாளுக்கு முந்திய நாளிலோ அல்லது பண்டிகையின் முந்திய நாளிலோ யாருக்கும் எந்தத் தண்டனையும் வழங்கக்கூடாது என்பது யூதருடைய பிரமாணம். இயேசு கிறிஸ்துவை விசாரித்த காலத்தில் யூதர்கள் இந்தப் பிரமாணங்கள் எல்லாவற்றையும் மீறிவிட்டார்கள். இயேசுவை இரவு வேளையில் விசாரித்தார்கள். பஸ்காவிற்கு முந்திய நாளில் விசாரித்தார்கள். பண்டிகையின் பிரதான ஓய்வுநாளுக்கு முந்திய நாளில் விசாரித்தார்கள். இயேசு கிறிஸ்து விசாரிக்கப்படும்போது அவருடைய நியாயம் எடுத்துப்போடப்பட்டது. (ஏசா 53:8; அப் 8:33)

"இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் வெளியரங்கமாய் உலகத்துடனே பேசினேன்; ஜெபஆலயங்களிலேயும் யூதர்களெல்லாரும் கூடிவருகிற தேவாலயத்திலேயும் எப்பொழுதும் உபதேசித்தேன்; அந்தரங்கத்திலே நான் ஒன்றும் பேசவில்லை. நீ என்னிடத்தில் விசாரிக்க வேண்டியதென்ன? நான் சொன்னவைகளைக் கேட்டவர்களிடத்தில் விசாரியும்; நான் பேசினவைகளை அவர்கள்

18 அதிகாரம்

அறிந்திருக்கிறார்களே என்றார்" - இயேசு கிறிஸ்து பிரதான ஆசாரியனுடைய கேள்விக்கு மிகவும் தெளிவாகப் பதில் கூறிவிடுகிறார் எல்லா ஜனங்களுக்கும் மத்தியில் வெளிப்படையாக இயேசு கிறிஸ்து பேசியிருக்கிறார் அவர் இரகசியமாக ஒரு காரியமும் செய்யவில்லை பிரதான ஆசாரியருக்கு வேவுகாரர்கள் இருந்தார்கள் இயேசு கிறிஸ்துவின் உபதேசம் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நியாயப்பிரமாணத்திற்கு எதிராகவும் தீர்க்கதரிசிகளுக்கு எதிராகவும் இயேசு கிறிஸ்து ஒன்றும் பேசவில்லை தேசத்தில் கலகம் பண்ணவில்லை இயேசு கிறிஸ்துவின்மீது அவர்கள் கூறிய குற்றச்சாட்டு எதுவும் உண்மையல்ல

"இப்படி அவர் சொன்னபொழுது சமீபத்தில் நின்ற சேவகரில் ஒருவன் பிரதான ஆசாரியனுக்கு இப்படியா உத்தரவு சொல்லுகிறது என்று இயேசுவை ஒரு அறை அறைந்தான்" - ஒரு வழக்கு விசாரணை நடந்து கொண்டிருக்கும்போதே சேவகரில் ஒருவன் இயேசு கிறிஸ்துவிற்குத் தண்டனை கொடுக்கிறான் இயேசு கிறிஸ்து அங்கு நியாயமாக விசாரிக்கப்படவில்லை இயேசு அங்கு வருவதற்கு முன்பாகவே அவரைக் கொன்றுபோட வேண்டுமென்று பிரதான ஆசாரியன் தீர்மானம் பண்ணிவிட்டான் (யோவான் 18:19 மாற்கு 14:55

"இயேசு அவனை நோக்கி நான் தகாதவிதமாய்ப் பேசினதுண்டானால் தகாததைக் ஒப்புவி, நான் தகுதியாய்ப் பேசினேனேயாகில் என்னை ஏன் அடிக்கிறாய் என்றார்" விசுவாசிகளுக்கு உபத்திரவங்கள் உண்டு அவர்கள் தங்களுக்கு வரும் பிரச்சனைகளையும் பாடுகளையும் சகித்துக் கொள்ள வேண்டும். அதே வேளையில் தங்கள்மீது யாராவது தவறாகக் குற்றம் சுமத்தும்போதோ அல்லது தங்களிடத்தில் தவறாக நடந்து கொள்ளும்போதோ அவர்களிடத்தில் நியாயம் கேட்பது தவறு இல்லை இவ்வாறு செய்வது மத் 5:39 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிற பிரமாணத்தை மீறும் செயல் ஆகாது.

"பின்பு அன்னா என்பவன் பிரதான ஆசாரியனாகிய காய்பாவினிடத்திற்கு அவரைக் கட்டுண்டவராக அனுப்பினான்" - இந்த வழக்கு விசாரணை முழுவதும் அன்னாவிற்கு முன்பாக நடைபெறுகிறது. காய்பாவிற்கு முன்பாக நடைபெற்ற வழக்கு விசாரணையை யோவான் எழுதவில்லை.

6. பேதுருவின் இரண்டாம், மூன்றாம் மறுதலிப்புக்கள் – (யோவான் 18:15)

யோவான் 18:25 சீமோன்பேதுரு நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்தான் அப்பொழுது சிலர் அவனை நோக்கி: நீயும் அவனுடைய சீஷரில் ஒருவனல்லவா என்றார்கள் அவன்: நான் அல்ல என்று மறுதலி[illegible]

யோவான் 18:26 பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரரில் பேதுரு காதறவெட்டினவனுக்கு இனத்தானாகிய ஒருவன் அவனை நோக்கி: நான் உன்னை அவனுடனேகூடத் தோட்டத்திலே காணவில்லையா என்றான்

யோவான் 18:27 அப்பொழுது பேதுரு மறுபடியும் மறுதலித்தான்; உடனே சேவல் கூவிற்று.

"நான் அல்ல" - பேதுரு கூறிய இரண்டாவது பொய் (யோவான் 18:17,26

"அப்பொழுது பேதுரு மறுபடியும் மறுதலித்தான் உடனே சேவல் கூவிற்று" பேதுரு கூறிய மூன்றாவது பொய் பேதுரு இயேசுவை அவர் கூறிய பிரகாரமாகவே மறுதலித்து விட்டான் (மத் 26:69-75 மாற்கு 14:66-75)

7. பிலாத்துவிற்கு முன்பாக இயேசு (மத் 27:1,11; மாற்கு 15:1, லூக் 23:1)

யோவான் 18:28 அவர்கள் காய்பாவினிடத்திலிருந்து இயேசுவைத் தேசாதிபதியின் அரமனைக்குக் கொண்டு போனார்கள்; அப்பொழுது விடியற் காலமாயிருந்தது. தீட்டுப்படாமல் பஸ்காவைப் புசிக்கத்தக்கதாக, அவர்கள் தேசாதிபதியின் அரமனைக்குள் பிரவேசியாதிருந்தார்கள்

யோவான் – தொகுப்புரை

18 அதிகாரம்

யோவான் 18:29 ஆதலால் பிலாத்து அவர்களிடத்தில் வெளியே வந்து, இந்த மனுஷன்மேல் என்ன குற்றஞ் சாட்டுகிறீர்கள் என்றான்

யோவான் 18:30 அவர்கள் அவனுக்குப் பிரதியுத்தரமாக, இவன் குற்றவாளியாயிராவிட்டால் இவனை உம்மிடத்தில் ஒப்புக் கொடுக்கமாட்டோம் என்றார்கள்

யோவான் 18:31 அப்பொழுது பிலாத்து அவர்களை நோக்கி, இவனை நீங்களே கொண்டுபோய் உங்கள் நியாயப் பிரமாணத்தின்படி நியாயந்தீருங்கள் என்றான். அதற்கு யூதர்கள்: ஒருவனையும் மரண ஆக்கினை செய்ய எங்களுக்கு அதிகாரமில்லை என்றார்கள்

யோவான் 18:32 தாம் இன்னவிதமான மரணமாய் மரிக்கப்போகிறாரென்பதைக் குறித்து இயேசு குறிப்பாய்ச் சொல்லியிருந்த வார்த்தை நிறைவேறத் தக்கதாக இப்படிச் சொன்னார்கள்

யோவான் 18:33 அப்பொழுது பிலாத்து மறுபடியும் அரமனைக்குள் பிரவேசித்து, இயேசுவை அழைத்து, நீ யூதருடைய ராஜாவா என்று கேட்டான்

யோவான் 18:34 இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நீராய் இப்படிச் சொல்லுகிறீரோ? அல்லது மற்றவர்கள் என்னைக்குறித்து இப்படி உமக்குச் சொன்னார்களோ என்றார்

யோவான் 18:35 பிலாத்து பிரதியுத்தரமாக: நான் யூதனா? உன் ஜனங்களும் பிரதான ஆசாரியரும் உன்னை என்னிடத்தில் ஒப்புக் கொடுத்தார்கள், நீ என்ன செய்தாய் என்றான்

யோவான் 18:36 இயேசு பிரதியுத்தரமாக: என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப் படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல என்றார்

யோவான் 18:37 அப்பொழுது பிலாத்து அவரை நோக்கி: அப்படியானால் நீ ராஜாவோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக: நீ சொல்லுகிறபடி நான் ராஜாதான்; சத்தியத்தைக் குறித்துச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார்

"அவர்கள் காய்பாவினிடத்திலிருந்து இயேசுவைத் தேசாதிபதியின் அரமனைக்குக் கொண்டுபோனார்கள்" - இயேசு கிறிஸ்துவின் ஊழியககாலத்தில் அவரைப் பலர் வழிநடத்தியிருக்கிறார் அதன் விவரம் வருமாறு.

1. பரிசுத்த ஆவியானவர் இயேசு கிறிஸ்துவைச் சாத்தானால் சோதிக்கப் படுவதற்காக வழிநடத்தினார் (மத் 4:1-11; லூக்கா 4:1-13)

2. சாத்தானைத் தோற்கடிப்பதற்காக பரிசுத்த ஆவியானவர் இயேசு கிறிஸ்துவை வழிநடத்தினார் (லூக்கா 4:14-22)

3. யூதர்கள் இயேசு கிறிஸ்துவைக் கொலைசெய்வதற்காக மலையின் உச்சிக்குக் கொண்டுபோனார்கள் (லூக்கா 4:29)

4. திரளான ஜனங்கள் இயேசுவை அன்னா என்பவனிடத்திற்குக் கொண்டு போனார்கள் (யோவான் 18:13)

5. திரளான ஜனங்கள் இயேசுவைக் காய்பா என்பவனிடத்திற்குக் கொண்டு போனார்கள் (மத் 26:57, மாற்கு 14:53; லூக்கா 22:54, யோவான் 18:24)

யோவான் - தொகுப்புரை

18 அதிகாரம்

6 யூதர்கள் இயேசுவை பிலாத்துவினிடத்திற்குக் கொண்டு போனார்கள் (மத் 27:2 லூக்கா 23:1; யோவான் 18:28)

7 போர்ச்சேவகர்கள் இயேசுவை ஏரோதுவினிடத்திற்குக் கொண்டு போனார்கள் (லூக்கா 23:7)

8 போர்ச்சேவகர்கள் இயேசுவை மறுபடியும் பிலாத்துவினிடத்திற்குக் கொண்டு போனார்கள் (லூக்கா 23:11-25)

9 இயேசுவை அடிப்பதற்காகவும் பரியாசம் பண்ணுவதற்காகவும் போர்ச்சேவகர்கள் கூட்டிக் கொண்டு போனார்கள் (மாற்கு 15:16-19)

10 சிலுவையில் அறைவதற்காக போர்ச்சேவகர்கள் இயேசு கிறிஸ்துவைக் கொண்டுபோனார்கள் (மத் 27:31; மாற்கு 15:20 லூக்கா 23:26,32; யோவான் 19:16)

இயேசு கிறிஸ்து தம்முடைய பிள்ளைகளை நித்திய ஜீவனுக்கு நேராகவே எப்போதும் வழிநடத்திச் செல்கிறார் (லூக்கா 24:50; எபே 4:8-10 சங் 23:1; சங் 77:20)

"தேசாதிபதியின் அரமனை" (the hall of judgment) பிலாத்துவின் வீடு. பிலாத்து தனது அரமனையிலேயே வழக்குகளை விசாரித்து வருகிறான் (மாற்கு 15:16)

"அப்பொழுது விடியற்காலமாயிருந்தது" பஸ்கா பண்டிகையின் ஆயத்தநாளின் விடியற்காலம். யூதருடைய நேரத்தின் பிரகாரம் இது இரவு 11 மணி முதல் நடுஇரவு 12 மணி வரையிலும் இருக்கலாம். இதற்கடுத்த காலம் ஆரம்மணி வேளை அல்லது நடுநிசி என்று அழைக்கப்படுகிறது. (யோவான் 19:14)

"தீட்டுப்படாமல் பஸ்காவைப் புசிக்கத்தக்கதாக, அவர்கள் தேசாதிபதியின் அரமனைக்குள் பிரவேசியாதிருந்தார்கள்" - இயேசுகிறிஸ்து இதற்கு முன்பாகவே பஸ்காவைப் புசித்துவிட்டார் (மத் 26:18-20 மாற்கு 14:12-16; லூக்கா 22:7-15) பஸ்கா ஆட்டுக்குட்டி பலியிடப்படும் வேளையில் இயேசுகிறிஸ்து தாமே பலியாகப் போகிறார் (1கொரி 5:7)

"பிலாத்து அவர்களிடத்தில் வெளியே வந்து, இந்த மனுஷன்மேல் என்ன குற்றஞ் சாட்டுகிறீர்கள்" - யூதர்கள் அரமனைக்குள் வரவில்லை. அரமனைக்குள் போவதை யூதர்கள் தீட்டாகக் கருதினார்கள் ரோமருடைய தேசாதிபதிகளும் யூதருடைய மார்க்கச் சடங்குகளை அங்கீகரித்தார்கள் ஆகையினால் பிலாத்து அரமனையிலிருந்து வெளியே வந்து யூதர்களிடத்தில் பேசுகிறான்

குற்றவாளி (malefactor) - κακοποιός - kakopoios - 2555

பொருள் - குற்றவாளியான அக்கிரமக்காரனான தீமைசெய்கிற பொல்லாங்குசெய்த (evildoer) - (1பேதுரு 2:12,14; 1பேதுரு 3:16; 1பேதுரு 4:15)

யூதர்கள் இயேசு கிறிஸ்துவை நியாயம் விசாரிக்க விரும்பவில்லை. தாங்கள் ஏற்கெனவே தீர்மானம் பண்ணியிருந்த மரண தண்டனையை அவருக்குக் கொடுக்க வேண்டுமென்று விரும்பினார்கள் ஒரு மனுஷனை நியாயம் விசாரிக்காமல், அவனைக் கொல்வதற்குப் பிலாத்துவிற்கு மனதில்லை ஆகையினால் பிலாத்து இயேசு கிறிஸ்துவை அவர்களிடமே ஒப்படைத்துவிடுகிறான் "இவனை நீங்களே கொண்டுபோய், உங்கள் நியாயப் பிரமாணத்தின்படி நியாயந்தீருங்கள்" என்று கூறுகிறான் (யோவான் 18:31)

"ஒருவனையும் மரண ஆக்கினை செய்ய எங்களுக்கு அதிகாரமில்லை" - என்று யூதர்கள் பிலாத்துவிடம் கூறுகிறார்கள் இது ஒரு பொய். ஏனெனில் தங்களுடைய பிரமாணத்தை மீறுபவரைக் கல்லெறிந்து கொல்லும் அதிகாரம் அவர்களுக்கு உள்ளது. (யோவான் 8:1-11,59; யோவான் 10:31 அப் 7:59) யூதர்கள் இயேசு கிறிஸ்துவிற்குப் பயந்ததினாலும் ஜனங்கள் தங்களுக்கு எதிராகக் கலகம்பண்ணுவார்கள் என்பதினாலும் இயேசு கிறிஸ்துவைக்

18 அதிகாரம்

கொல்லும் பொறுப்பை பிலாத்துவிடம் கொடுக்கப் பார்க்கிறார்கள் (யோவான் 19:7,12) தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றுவதற்கு இயேசு கிறிஸ்து சிலுவையில் மரிக்க வேண்டும் (மத் 20:19 மத் 26:2 யோவான் 3:14 யோவான் 12:32-33) ஒருவரைச் சிலுவையில் அறைந்து கொல்வதற்கு யூதருக்கு அதிகாரமில்லை ஆகையினால் இயேசு கிறிஸ்துவின்மீது தேசத்துரோகக் குற்றத்தைச் சுமத்துகிறார்கள் இராயனுக்கு எதிராக இயேசு கலகம் பண்ணியதாகப் பொய் கூறுகிறார்கள் பிலாத்து மட்டுமே இயேசுவைச் சிலுவையில் அறைவதற்கு அதிகாரம் பெற்றவன் (யோவான் 19:7,12)

"தாம் இன்னவிதமான மரணமாய் மரிக்கப்போகிறாரென்பதைக் குறித்து இயேசு குறிப்பாய்ச் சொல்லியிருந்த வார்த்தை நிறைவேறத்தக்கதாக இப்படிச் சொன்னார்கள்" - யோவான் 12:32-33 ஆகிய வசனங்களின் நிறைவேற்றம்.

"நீ யூதருடைய ராஜாவா" - என்று பிலாத்து இயேசுவிடம் கேட்டான் இயேசு கிறிஸ்து தேவதூஷணம் சொன்னார் என்பது தான் யூதருடைய குற்றச்சாட்டு ஆனால் அதை மறைத்துவிட்டு இயேசு இராயனுக்கு எதிராகக் கலகம் பண்ணினார் என்று குற்றம் சுமத்துகிறார்கள் இந்தக் குற்றத்திற்குத்தான் குற்றவாளியைச் சிலுவையில் அறைந்து கொல்ல முடியும்

"நீராய் இப்படிச் சொல்லுகிறீரோ? அல்லது மற்றவர்கள் என்னைக்குறித்து இப்படி உமக்குச் சொன்னார்களோ" - தம்மைப் பிலாத்துவிடம் கூட்டிக் கொண்டு வந்த யூதர்கள் இப்படி உமக்குச் சொன்னார்களா அல்லது தம்மீது பிலாத்துவிற்கு ஏதாவது சந்தேகம் உள்ளதா என்று பொருள்படும் விதத்தில் இயேசு இவ்வாறு கேட்கிறார்

"நான் யூதனா? உன் ஜனங்களும் பிரதான ஆசாரியரும் உன்னை என்னிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள் நீ என்ன செய்தாய்" - என்று பிலாத்து இயேசுவிடம் கேட்கிறான் இயேசுகிறிஸ்து யூதருடைய ராஜா அல்ல என்றால் யூதர்கள் ஏன் இயேசுவைக் கொலை பண்ண வகைதேடுகிறார்கள் என்று பிலாத்து இயேசுவிடம் கேட்கிறான்

"என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல" - உரியது என்பதன் கிரேக்க வார்த்தை "எக் (ek) (of, out from) இயேசுகிறிஸ்துவின் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல. பரலோகத்திற்குரியது. இனிமேல் அது உலகத்திற்குரியதாக இருக்கும். (தானி 2:44 தானி 7:13-27 சக 14 வெளி 5:10; வெளி 11:15)

உரியது (of) - ἐκ - ek - 1537

முன்னிடைச்சொல் - இல் ஆல் இலிருந்து விட்டு. இடத்தில் முதல் தரம் இல்லாமல் ஆறாம் வேற்றுமையுடன் உடைய. இன் கொண்டு. புறம்பே. முதற்கொண்டு. ஒடு. வழியாய். தொடங்கி

"நீ சொல்லுகிறபடி நான் ராஜாதான்" - இயேசு கிறிஸ்து ராஜாவாக இருக்குமாறு பிறந்தார் சத்தியத்தைக் குறித்து சாட்சிக் கொடுப்பதற்காக வந்தார் சத்தியவான் எவனும் இயேசு கிறிஸ்துவின் சத்தம் கேட்டு அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவான் (யோவான் 8:47; யோவான் 10:3-4,16,27

8. இயேசுவிற்கு தண்டனையும் பரபாசிற்கு விடுதலையும் - (மத் 27:15; மாற்கு 15:7; லூக் 23:18)

யோவான் 18:38 அதற்கு பிலாத்து சத்தியமாவது என்ன என்றான் மறுபடியும் அவன் யூதர்களிடத்தில் வெளியே வந்து நான் அவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்

யோவான் 18:39 பஸ்காபண்டிகையில் நான் உங்களுக்கு ஒருவனை விடுதலை பண்ணுகிற வழக்கமுண்டே ஆகையால் யூதருடைய ராஜாவை நான் உங்களுக்காக விடுதலைபண்ண உங்களுக்கு மனதுண்டா என்றான்

யோவான் 18:40 அப்பொழுது அவர்களெல்லாரும் இவனையல்ல பரபாசை விடுதலைபண்ணவேண்டும் என்று மறுபடியும் சத்தமிட்டார்கள், அந்தப் பரபாசென்பவன் கள்ளனாயிருந்தான்

18 அதிகாரம்

"சத்தியமாவது என்ன" - யூதருடைய மார்க்கக் காரியங்கள் பிலாத்துவிற்குச் சரியாகத் தெரியாது. ஆகையினால் குழம்பிப் போய் விடுகிறான். சத்தியம் என்றால் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறான். இயேசுகிறிஸ்துவே சத்தியமாக இருக்கிறார். இயேசு கிறிஸ்துவைக் கண்டுகொண்டு, அவருக்குக் கீழ்ப்படிகிறவன் சத்தியத்தை அறிந்து கொள்வான் (யோவான் 8:32-36, யோவான் 14:6)

"அவன் யூதர்களிடத்தில் வெளியே வந்தான்" - பிலாத்து இரண்டாம் முறையாக நியாயம் விசாரிக்கும் மண்டபத்திலிருந்து யூதரிடம் பேசுவதற்காக வருகிறான் (யோவான் 18:28-29). இந்த முறை வரும்போது, இயேசு கிறிஸ்துவினிடத்தில் தான் ஒரு குற்றமும் காணவில்லையென்று யூதரிடம் கூறுகிறான்.

வழக்கம் (custom) - συνήθεια - synetheia - 4914

பெண்பால் பெயர்ச்சொல் - வழக்கம் - இந்த வார்த்தை இந்த வசனத்திலும் 1கொரி 11:16 ஆவது வசனத்திலும் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

"யூதருடைய ராஜாவை நான் உங்களுக்காக விடுதலைபண்ண உங்களுக்கு மனதுண்டா" - என்று பிலாத்து யூதரிடம் கேட்கிறான். பஸ்காபண்டிகையில் பிலாத்து யூதருக்கு ஒருவனை விடுதலைபண்ணுகிற வழக்கமுண்டு. பரபாஸ் என்பவன் கொள்ளைக்காரன். ஜனங்கள் "பரபாசை விடுதலை பண்ண வேண்டாம். இயேசுவை விடுதலை பண்ண வேண்டும்" என்று யூதர்கள் தன்னிடம் கேட்பார்கள் என்று பிலாத்து நினைத்தான். ஆனால் இவன் இப்படிக் கேட்டதினால் இயேசுவைக் கொலைசெய்ய வேண்டுமென்று யூதர்கள் எல்லோரும் பிரசித்த சத்தமிட்டுக் கத்துகிறார்கள் (யோவான் 18:40)

"யூதருடைய ராஜா" - பிலாத்து இயேசுவை யூதருடைய ராஜா என்றே கூறுகிறான். அவன் கூறுவது யூதருக்குப் பிடிக்கவில்லை. இயேசுவை விடுதலைபண்ணினால் பிலாத்து இராயனுக்கு விரோதி என்று கூறி, பிலாத்துவின்மீதே குற்றம் சுமத்திவிடுகிறார்கள் (யோவான் 19:12)

கள்ளன் (robber) - λῃστής - leestees - 3027

ஆண்பால் பெயர்ச்சொல் - கள்ளன் (bandit) (மாற்கு 11:17; மாற்கு 14:48, மாற்கு 15:27) மேசியாவைத் தெரிந்தெடுப்பதற்குப் பதிலாக யூதர்கள் ஒரு கள்ளனைத் தெரிந்தெடுக்கிறார்கள். தங்களுக்கு அழிவைத் தேடிக் கொள்கிறார்கள்.

யோவான் - தொகுப்புரை

19 அதிகாரம்

9. இயேசுவின் சிரசின்மேல் முள்முடியை வைக்கிறார்கள் - (மத் 27:27; மாற்கு 15:16)

யோவான் 19:1 அப்பொழுது பிலாத்து இயேசுவைப் பிடித்து வாரினால் அடிப்பித்தான்

யோவான் 19:2 போர்ச்சேவகர் முள்ளுகளினால் ஒரு முடியைப் பின்னி அவர் சிரசின்மேல் வைத்து சிவப்பான ஒரு அங்கியை அவருக்கு உடுத்தி,

யோவான் 19:3 யூதருடைய ராஜாவே வாழ்க என்று சொல்லி, அவரைக் கையினால் அடித்தார்கள்

"பிலாத்து இயேசுவைப் பிடித்து வாரினால் அடிப்பித்தான்" - ரோமப்பேரரசின் முறைமையின்படி இயேசுவை வாரினால் அடித்தார்கள் யூதமார்க்கத்து முறைமையை விட ரோமமார்க்கத்து முறைமையின்படி வாரினால் அடிப்பது மிகவும் கடுமையாக இருக்கும். (மத் 27:26) சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பாக குற்றவாளியை வாரினால் அடிப்பது வழக்கம் ஆனால் இங்கோ பிலாத்து இயேசுவை வாரினால் அடித்தால் யூதர்கள் திருப்தியடைந்து விடுவார்கள் இயேசுவை விடுதலை பண்ணிவிடலாம் என்று நினைத்தான் (லூக்கா 23:16) ஆனால் யூதர்கள் இந்தத் தண்டனையில் திருப்தியடையவில்லை இயேசுவை எப்படியும் சிலுவையில் அறைந்துவிட வேண்டுமென்று வைராக்கியமாக இருந்தார்கள்

"முள்ளுகளினால் ஒரு முடி" (மத் 27:29)

"வாழ்க" (Hail) - வெற்றி பெறுவீராக, சுகமாயிருப்பீராக, ஆரோக்கியமாயிருப்பீராக என்று பொருள்படும்

10. பிலாத்து இயேசுவை ஜனங்களுக்கு முன்பாக கொண்டு வருகிறான்

யோவான் 19:4 பிலாத்து மறுபடியும் வெளியே வந்து: நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன் என்று நீங்கள் அறியும்படிக்கு, இதோ உங்களிடத்தில் இவனை வெளியே கொண்டுவருகிறேன் என்றான்

யோவான் 19:5 இயேசு, முள்முடியும் சிவப்பங்கியும் தரித்தவராய், வெளியே வந்தார் அப்பொழுது பிலாத்து அவர்களை நோக்கி: இதோ, இந்த மனுஷன் என்றான்

யோவான் 19:6 பிரதான ஆசாரியரும் சேவகரும் அவரைக் கண்டபோது சிலுவையில் அறையும் சிலுவையில் அறையும் என்று சத்தமிட்டார்கள் அதற்குப் பிலாத்து: நீங்களே இவனைக் கொண்டுபோய்ச் சிலுவையில் அறையுங்கள் நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன் என்றான்

யோவான் 19:7 யூதர்கள் அவனுக்குப் பிரதியுத்தரமாக: எங்களுக்கு ஒரு நியாயப்பிரமாணமுண்டு, இவன் தன்னை தேவனுடைய குமாரனென்று சொன்னபடியினால் அந்த நியாயப்பிரமாணத்தின்படியே, இவன் சாகவேண்டும் என்றார்கள்

"உங்களிடத்தில் இவனை வெளியே கொண்டுவருகிறேன்" யூதர்கள் பிலாத்துவின் அரணமனைக்கு வெளியே இருக்கிறார்கள் பிலாத்து இயேசு கிறிஸ்துவை வெளியே கொண்டுவருகிறேன் என்று கூறுகிறான் அரணமனைக்கு உள்ளே இயேசு கிறிஸ்துவை வாரினால் அடித்து, அவருடைய சிரசின்மீது முள்ளுகளினால் ஒரு முடியைப் பின்னி வைத்தான் இதனால் அவருடைய சரீரத்தின் தோலெல்லாம் பிய்ந்திருந்தது. தலையிலிருந்து இரத்தம் வடிந்தது. இயேசு கிறிஸ்துவை இந்த நிலைமையில் கொண்டு வந்து யூதர்படம் காண்பித்தால் அவர்களுடைய மனது மாறிவிடும். இயேசு கிறிஸ்துவை அவர்கள் விடுதலை பண்ணுவதற்கு சம்மதம் தெரிவிப்பார்கள் என்று நினைத்தான் ஆனால் யூதமார்க்கத்தாரின் இருதயத்திலோ சிறிதளவும் இரக்கம் இல்லை.

19 அதிகாரம்

இயேசு கிறிஸ்துவை விடுவிக்க அவர்களுக்கு மனதில்லை. இயேசுவைச் சிலுவையில் அறையும் என்று தொடர்ந்து யூதர்கள் பிலாத்துவிடம் சத்தமிட்டுக் கூறுகிறார்கள். இயேசு கிறிஸ்துவிடம் தாம் ஒரு குற்றமும் காணவில்லையென்று பிலாத்து மேலும் இரண்டு முறை அறிவிக்கிறான் (யோவான் 19:4,6)

"இதோ இந்த மனுஷன்" - யூதர்கள் இயேசு கிறிஸ்துவைத் தங்களுடைய மார்க்கத்தின் விரோதியாகக் கருதினார்கள். தங்களுடைய அதிகாரத்திற்கு இயேசு கிறிஸ்து இடையூறாக இருப்பதாக யூதமார்க்கத் தலைவர்கள் நினைத்தார்கள். எப்படியாவது இயேசு கிறிஸ்துவை விடுதலை செய்துவிட வேண்டுமென்று பிலாத்து விரும்புகிறான். ஆனால் யூதர்களோ இயேசுவைச் சிலுவையில் அறைந்துவிட வேண்டுமென்று தீர்மானமாக இருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து முள்முடியும், சிவப்பங்கியும் தரித்தவராய் வெளியே வந்தார். அவரை அந்த நிலைமையில் காணும்போது யாருடைய மனதும் இளகிவிடும். அவருடைய சரீரம் முழுவதும் வாரினால் அடிக்கப்பட்ட காயங்கள். தலையிலிருந்து இரத்தம் வழிகிறது. இதைப் பார்த்தாவது யூதர்கள் இயேசுவை விடுதலை பண்ண சம்மதிப்பார்கள் என்று நினைத்து, பிலாத்து யூதரிடம் "இதோ இந்த மனுஷன்" என்று கூறி இயேசுவைக் காண்பிக்கிறான்.

"எங்களுக்கு ஒரு நியாயப்பிரமாணமுண்டு. இவன் தன்னை தேவனுடைய குமாரனென்று சொன்னபடியினால், அந்த நியாயப்பிரமாணத்தின்படியே இவன் சாகவேண்டும்" என்று யூதர்கள் பிலாத்துவிடம் கூறுகிறார்கள். இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறைய வேண்டும் என்பதற்கு யூதர்கள் கூறும் மற்றொரு குற்றச்சாட்டு. இந்தக் குற்றச்சாட்டினால், பிலாத்து பயந்து விடுகிறான். ஆகையினால் இயேசு கிறிஸ்துவை மறுபடியும் விசாரிப்பதற்காக விசாரணை நடைபெறும் இடத்திற்கு அழைத்துச் செல்லுகிறான் (யோவான் 19:8,7)

11. இயேசுவை பிலாத்துவிடம் மறுபடியும் கொண்டு போகிறார்கள் - யோவான் 18:28

யோவான் 19:8 பிலாத்து இந்த வார்த்தையைக் கேட்டபொழுது அதிகமாய்ப் பயந்து,

யோவான் 19:9 மறுபடியும் அரமனைக்குள்ளே போய், இயேசுவை நோக்கி: நீ எங்கேயிருந்து வந்தவன் என்றான். அதற்கு இயேசு மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை.

யோவான் 19:10 அப்பொழுது பிலாத்து: நீ என்னோடே பேசுகிறதில்லையா? உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலைபண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத் தெரியாதா என்றான்.

யோவான் 19:11 இயேசு பிரதியுத்தரமாக: பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால் என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது; ஆனபடியினாலே என்னை உம்மிடத்தில் ஒப்புக்கொடுத்தவனுக்கு அதிக பாவமுண்டு என்றார்.

"பிலாத்து இந்த வார்த்தையைக் கேட்டபொழுது அதிகமாய்ப் பயந்தான்" பிலாத்துவிற்கு இரண்டு விதமான பயம் இருந்தது. ஒன்று ஆலோசனைச் சங்கத்தாரை எதிர்ப்பது. அவர்களுக்கு விரோதமாக நடந்து கொண்டால் ஆலோசனைச் சங்கத்தார் பிலாத்துவிற்கு எதிராக இராயனிடம் பிராது பண்ணுவார்கள். பிலாத்துவின் பதவிக்கு அது ஆபத்தாகிவிடும். மற்றொரு பயம் என்னவென்றால் குற்றமற்ற ஒருவரைத் தண்டிப்பதற்கு அவனுக்கு மனதில்லை. இயேசு கிறிஸ்து அற்புதங்களைச் செய்தவர். ஒரு பாவமும் அறியாதவர். இயேசு கிறிஸ்துவைப் பற்றி எச்சரிக்கையாக இருக்குமாறு பிலாத்துவின் மனைவி ஏற்கெனவே அவனுக்கு ஆலோசனை கூறியிருக்கிறாள். அதுமட்டுமல்லாமல், தன்னுடைய மனச்சாட்சியின் பிரகாரமாகவும் பிலாத்து இயேசுவைத் தண்டிக்க விரும்பவில்லை.

19 அதிகாரம்

"மறுபடியும் அரமனைக்குள்ளே போய், இயேசுவை நோக்கி: நீ எங்கேயிருந்து வந்தவன் என்றான். அதற்கு இயேசு மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை" - இயேசு கிறிஸ்து உண்மையிலேயே தேவனுடைய குமாரனா என்பதைப் பிலாத்து அறிந்து கொள்ள விரும்பினான். மற்ற ஜனங்களைவிட இயேசு கிறிஸ்து மிகவும் மாறுபட்டவராக இருந்தார். அவர் ஒரு தெய்வீக புருஷராக இருப்பதைப் பிலாத்து காணுகிறான். ஆகையினால் பிலாத்து இயேசுவிடம் "நீ எங்கேயிருந்து வந்தவன்" என்று கேள்வி கேட்கிறான். நீர் பரலோகத்திலிருந்து வந்தவரா, உமது பூர்வீகம் என்ன, உமது தெய்வீகக் கிரியைகளுக்கு ஆதாரம் என்ன என்று பல கேள்விகளுக்கு விடை தெரிந்து கொள்வதற்குப் பிலாத்து விரும்பினான். ஆனால் இயேசு கிறிஸ்துவோ மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை.

"பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது" - பிலாத்து இயேசுவிடம் "உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலை பண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத் தெரியாதா" என்று கூறுகிறான். ஆனால் இயேசு கிறிஸ்து அவனுக்குப் பிதாவின் சித்தத்தின்படிதான் எல்லாம் நடைபெறும் என்று மிகவும் எளிமையாகவும் உறுதியாகவும் பதில் கூறிவிடுகிறார். தேவனுடைய சித்தமில்லாமல் ஒருவனும் ஒருகாரியத்தையும் செய்ய முடியாது. தம்மைச் சிலுவையில் அறைந்தால் அது பிலாத்துவிற்கு பாவமாக கருதப்படும் என்பது இயேசுவிற்குத் தெரியும். ஏனெனில் பிலாத்து தன்னுடைய மனசாட்சிக்குச் செவி கொடுக்கவில்லை. பிலாத்துவின் பாவத்தைவிட யூதமார்க்கத்தாரின் பாவம் மிகவும் அதிகமாக இருக்கும். ஏனெனில் அவர்கள் தெரிந்தும் வேண்டுமென்றே பாவம் செய்கிறார்கள்.

12. பிலாத்து இயேசுவை விடுதலை பண்ண வழிபார்க்கிறான்

யோவான் 19:12 அதுமுதல் பிலாத்து அவரை விடுதலைபண்ண வகை தேடினான். யூதர்கள் அவனை நோக்கி: இவனை விடுதலை பண்ணினால் நீர் இராயனுக்குச் சிநேகிதனல்ல; தன்னை ராஜாவென்கிறவனெவனோ அவன் இராயனுக்கு விரோதி என்று சத்தமிட்டார்கள்.

"அதுமுதல் பிலாத்து அவரை விடுதலை பண்ண வகைதேடினான்" - இயேசு கிறிஸ்துவை எப்படியாவது விடுதலை பண்ணிவிட வேண்டும் என்று பிலாத்து முயற்சி பண்ணுகிறான். ஆனால் யூதரோ இயேசுவைச் சிலுவையில் அறைந்துவிட வேண்டுமென்று வைராக்கியமாக இருக்கிறார்கள். இயேசுவை விடுதலை பண்ணினால், அது இராயனுக்கு எதிராகச் செய்யப்படும் துரோகம் என்று யூதர்கள் பிலாத்துவின்மீது குற்றம் சுமத்துகிறார்கள்.

"இவனை விடுதலைபண்ணினால் நீர் இராயனுக்குச் சிநேகிதனல்ல; தன்னை ராஜாவென்கிறவனெவனோ அவன் இராயனுக்கு விரோதி" - யூதர்களுக்கு இராயனையும் பிடிக்காது. அவர்கள் எப்போதும் இராயனுக்கு எதிராக எதிர்த்து நிற்கிறவர்கள். ஆனால் இயேசுவின் மீதுள்ள அவர்களுடைய வெறுப்பு இராயன்மீதுள்ள வெறுப்பைவிட அதிகமாய் இருக்கிறது. யூதர்கள் இராயனுக்கும் சிநேகிதரல்ல, இயேசுவிற்கும் சிநேகிதரல்ல. எப்படியாவது பிலாத்து இயேசுவைச் சிலுவையில் அறைவதற்கு உத்தரவு கொடுக்க வேண்டுமென்று யூதர்கள் பலவிதமாக முயற்சி பண்ணுகிறார்கள்.

13. பிலாத்து இயேசுவை யூதருக்கு முன்பாக நிறுத்துகிறான்

யோவான் 19:13 பிலாத்து இந்த வார்த்தையைக் கேட்டபொழுது, இயேசுவை வெளியே அழைத்துவந்து, தளவரிசைப்படுத்தின மேடையென்றும், எபிரெயு பாஷையிலே கபத்தா என்றும் சொல்லப்பட்ட இடத்திலே, நியாயாசனத்தின்மேல் உட்கார்ந்தான்.

19 அதிகாரம்

யோவான் 19:14 அந்த நாள் பஸ்காவுக்கு ஆயத்த நாளும் ஏறக்குறைய ஆறுமணி நேரமுமாயிருந்தது. அப்பொழுது அவன் யூதர்களை நோக்கி: இதோ உங்கள் ராஜா என்றான்.

பிலாத்து இந்த வார்த்தையைக் கேட்டபொழுது, இயேசுவை வெளியே அழைத்துவந்தான் - தான் இராயனுக்கு எதிராகத் துரோகம் பண்ணுவதாக யூதர்கள் தன்மீது குற்றம் சுமத்தியவுடன் பிலாத்து பயந்து விடுகிறான். இக்காலத்தில் திபேரியு (Tiberius) இராயனாக ஆட்சிபுரிந்தான். இவன் ஒரு கொடுங்கோலன். தனக்கு எதிராக யாராவது கலகம் பண்ணியது தெரியவந்தால், உடனே திபேரியு அவனைப் பிடித்துக் கொன்று போடுவான். அதுமட்டுமல்லாமல் திபேரியுவின் ஆட்சிக்காலத்தில், அவனுடைய ஆட்சிக்கு எதிரான சதியாலோசனைகள் மிகவும் அதிகமாக இருந்தன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் யாராவது ஒருவன் திபேரியு இராயனுக்கு விரோதமாகத் துரோகம் பண்ணுகிறான் என்னும் செய்தி அவனுக்குக் கிடைத்தாலே போதும். உடனே திபேரியு இராயன் அவனைப் பிடித்துக் கொன்றுபோடுவான். ஆகையினால்தான் இராயனைப் பற்றி பேசியவுடன், பிலாத்து மிகவும் பயப்படுகிறான். யூதர்கள் மண்டபத்திற்கு வெளியே நிற்கிறார்கள். இயேசுவை அவர்களிடத்திற்கு அழைத்து வருகிறான். இயேசுவை விடுவிப்பதற்கு பிலாத்து மறுபடியும் முயற்சி பண்ணுகிறான். இந்த முயற்சி பிலாத்து எடுக்கும் ஐந்தாவது முயற்சியாகும். (லூக்கா 23:4,15,20,22; யோவான் 18:38; யோவான் 19:4,6,12,13-14).

"தளவரிசைப்படுத்தின மேடை என்றும் எபிரெயு பாஷையிலே கபத்தா என்றும் சொல்லப்பட்ட இடத்திலே நியாயாசனத்தின் மேல் உட்கார்ந்தான்" பிலாத்துவின் அரண்மனையின் முன்மண்டபத்தில் கற்களால் கட்டப்பட்டிருந்த மேடை. இந்த மேடைக்கு கிரேக்க மொழியில் "பீமா" (Beema) என்று பெயர். பிலாத்து இந்த இடத்தில் அமர்ந்துதான், இறுதித்தீர்ப்பு வழங்குவது வழக்கம். (மத் 27:19; யோவான் 19:13; அப் 12:21; அப் 18:12,17; அப் 25:6,10,17) இயேசு கிறிஸ்துவும் தமது நியாயத்தீர்ப்பின் நாளில் நியாயாசனத்தின்மீது அமர்ந்து நியாயத்தீர்ப்பு வழங்குவார் (ரோமர் 14:10; 2கொரி 5:10).

நியாயாசனம் (judgment) - Βημα - Beema - 968

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - நியாயாசனம், சிங்காசனம்

"கபத்தா" (Gabbatha) - எபிரெயு பாஷைச் சொல். மேடை என்பது இதன் பொருள்.

"ஆறுமணி நேரம்" - நடுஇரவு 12 மணி.

"இதோ உங்கள் ராஜா" - பிலாத்து சற்று முன்பு இயேசு கிறிஸ்துவை "இதோ இந்த மனுஷன்" (யோவான் 19:5) என்று கூறினான். இப்போது இயேசுவை இராஜா என்கிறான்.

14. யூதர்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ள மறுத்து விடுகிறார்கள் - (மத் 27:25)

யோவான் 19:15 அவர்கள்: இவனை அகற்றும் அகற்றும், சிலுவையில் அறையும் என்று சத்தமிட்டார்கள். அதற்குப் பிலாத்து: உங்கள் ராஜாவை நான் சிலுவையில் அறையலாமா என்றான். பிரதான ஆசாரியர் பிரதியுத்தரமாக: இராயனேயல்லாமல் எங்களுக்கு வேறே ராஜா இல்லை என்றார்கள்.

"அகற்றும் அகற்றும்" (Away) - இதற்கான கிரேக்க வார்த்தை "ஐரோ" (airoo). "சர்ப்பங்களை எடுப்பார்கள்" (மாற்கு 16:18) என்பதற்கும், இந்தக் கிரேக்க வார்த்தையே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தைக்கு தூக்குதல், அழித்தல், தூக்கி எறிதல், கொன்றுபோடுதல் என்று பலவிதமான பொருள் கூறலாம். (மத் 22:13; யோவான் 1:29; யோவான் 19:15; அப் 21:36; அப் 22:22; 1யோவான் 3:5)

அகற்று (Away) αἴρω - airoo - 142

யோவான் - தொகுப்புரை

19 அதிகாரம்

வினைச்சொல் - அகற்று

"இராயனேயல்லாமல் எங்களுக்கு வேறே ராஜா இல்லை" - யூதர்கள் இதுவரையிலும் இராயனைத் தங்களுடைய விரோதியாகப் பாவித்தார்கள் இப்போது அவர்கள் இராயனைத் தங்களுடைய இராஜாவாக ஏற்றுக் கொள்கிறார்கள் யூதமார்க்கத் தலைவர்கள் அதிகமாகப் பாவம் செய்கிறார்கள் தங்கள் விரோதியை நண்பர்களாக்குகிறார்கள் நண்பரை விரோதியாக்குகிறார்கள் தேவனைத் தெரிந்தெடுப்பதற்குப் பதிலாகச் சாத்தானைத் தெரிந்தெடுக்கிறார்கள் நித்திய ஜீவனைத் தெரிந்தெடுப்பதற்குப் பதிலாக நித்திய அழிவைத் தெரிந்தெடுக்கிறார்கள்

15. இயேசுவை சிலுவையில் அறைகிறார்கள் - (மத் 27:33; மாற்கு 15:22; லூக் 23:32)

யோவான் 19:16 அப்பொழுது அவரைச் சிலுவையில் அறையும்படிக்கு அவர்களிடத்தில் ஒப்புக்கொடுத்தான் அவர்கள் இயேசுவைப் பிடித்துக் கொண்டுபோனார்கள்

யோவான் 19:17 அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு எபிரெயு பாஷையிலே கொல்கொதா என்று சொல்லப்படும் கபாலஸ்தலம் என்கிற இடத்திற்குப் புறப்பட்டுப்போனார்

யோவான் 19:18 அங்கே அவரைச் சிலுவையில் அறைந்தார்கள் அவரோடேகூட வேறிரண்டுபேரை இரண்டு பக்கங்களிலும் இயேசுவை நடுவிலுமாகச் சிலுவைகளில் அறைந்தார்கள்

யோவான் 19:19 பிலாத்து ஒரு மேல்விலாசத்தை எழுதி சிலுவையின்மேல் போடுவித்தான் அதில் நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா என்று எழுதியிருந்தது.

யோவான் 19:20 இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடம் நகரத்திற்குச் சமீபமாயிருந்தபடியினால், யூதரில் அநேகர் அந்த மேல்விலாசத்தை வாசித்தார்கள்; அது எபிரெயு கிரேக்கு லத்தீன் பாஷைகளில் எழுதியிருந்தது.

யோவான் 19:21 அப்பொழுது யூதருடைய பிரதான ஆசாரியர் பிலாத்துவை நோக்கி: யூதருடைய ராஜா என்று நீர் எழுதாமல், தான் யூதருடைய ராஜா என்று அவன் சொன்னதாக எழுதும் என்றார்கள்

யோவான் 19:22 பிலாத்து பிரதியுத்தரமாக: நான் எழுதினது எழுதினதே என்றான்

யோவான் 19:23 போர்ச்சேவகர் இயேசுவைச் சிலுவையில் அறைந்தபின்பு, அவருடைய வஸ்திரங்களை எடுத்து ஒவ்வொரு சேவகனுக்கு ஒவ்வொரு பங்காக நாலு பங்காக்கினார்கள் அங்கியையும் எடுத்தார்கள் அந்த அங்கி தையலில்லாமல் மேலே தொடங்கி முழுவதும் நெய்யப்பட்டதாயிருந்தது

யோவான் 19:24 அவர்கள்: இதை நாம் கிழியாமல், யாருக்கு வருமோ என்று இதைக்குறித்துச் சீட்டுப்போடுவோம் என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள் என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின்மேல் சீட்டுப்போட்டார்கள் என்கிற வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாகப் போர்ச்சேவகர் இப்படிச் செய்தார்கள்

"அவரைச் சிலுவையில் அறையும்படிக்கு அவர்களிடத்தில் ஒப்புக்கொடுத்தான்" இறுதியாக பிலாத்து யூதருடைய சத்தத்திற்குச் செவிகொடுக்கிறான் திபேரியு இராயனிடம் அவர்கள் பிராது பண்ணிவிடுவார்கள் என்று பயந்து இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறையும்படிக்கு அவர்களிடத்தில் ஒப்புக் கொடுத்தான் அவர்களுடைய விருப்பத்திற்கு இயேசுவை அவர்களிடம் ஒப்புவிக்கிறான் (லூக்கா 23:25) ஆகையினால், மேசியாவைக் கொலைசெய்தார்கள் என்னும் குற்றச்சாட்டு யூதர்மீது விழுகிறது. (அப் 2:23) யூதருடைய விருப்பத்தையே ரோமர்கள் நிறைவேற்றினார்கள்

யோவான் - தொகுப்புரை

19 அதிகாரம்

இயேசுவைச் சிலுவையில் அறைவதற்கு ஒப்புக் கொடுத்துவிட்டு, பிலாத்து தன் கைகளைக் கழுவிவிடுகிறான் (மத் 27:24) போர்ச் சேவகர்கள் இயேசு கிறிஸ்துவை பரியாசம் பண்ணிய நிகழ்ச்சிகளை யோவான் இந்தச் சுவிசேஷத்தில் எழுதவில்லை (மத் 27:26; மாற்கு 15:16

"அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு புறப்பட்டுப்போனார்" - தமது சிலுவையை இயேசு கிறிஸ்து தாமே சுமந்து செல்கிறார் சுமந்து செல்லும்பொழுது வழியில் அதைச் சுமப்பதற்கு அவரிடத்தில் பலனில்லை ஏற்கெனவே வாரினால் அடிக்கப்பட்டதினாலும், முள்முடி சூட்டப்பட்டதினாலும், அவர் பலவீனமாக இருந்தார் சீமோன் என்பவனை அவர்கள் வழியில் பிடித்து, இயேசுவின் சிலுவையைச் சுமந்து வரும்படி அவனைப் பலவந்தம் பண்ணினார்கள் மத் 27 32

"எபிரெயு பாஷையிலே கொல்கொதா என்று சொல்லப்படும் கபாலஸ்தலம்" - (மத் 27.33

"பிலாத்து ஒரு மேல்விலாசத்தை எழுதி, சிலுவையின்மேல் போடுவித்தான்" - பிலாத்துவே இந்த மேல்விலாசத்தை எழுதியதை யோவான் சுவிசேஷத்தில் மட்டுமே வாசிக்கிறோம்

"இவன் யூதருடைய ராஜாவாகிய இயேசு" இயேசுவைச் சிலுவையில் அறைந்தார்கள் அந்தச் சிலுவையின்மீது என்ன எழுதப்பட்டிருந்தது என்பதில் வேத பண்டிதர்களுக்குள்ளே கருத்து வேறுபாடு உள்ளது. நான்கு சுவிசேஷங்களிலும் வெவ்வேறு விதமான வார்த்தைகளை நாம் வாசிக்கிறோம்

1 மத் 27.37 - இவன் யூதருடைய ராஜாவாகிய இயேசு

2 மாற்கு 15:26 - யூதருடைய ராஜா

3 லூக்கா 23.38 - இவன் யூதருடைய ராஜா

4 யோவான் 19:19 - நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா

இந்த எழுத்துக்கள் கிரேக்கு, லத்தீன், எபிரெயு ஆகிய பாஷைகளின் எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தது.

"இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடம் நகரத்திற்குச் சமீபமாயிருந்தது" - எருசலேமின் வடக்கு அலங்கத்திற்கு வெளியே இருந்தது. தமஸ்குவிற்கும் ஏரோதுவின் வாயிலுக்கும் நடுவில் இருந்தது இயேசுவை பிலாத்து விசாரித்த விசாரணை மண்டபத்திலிருந்து இந்த இடம் அரைமைல் தூரத்திலுள்ளது (மத் 27.33

"யூதருடைய பிரதான ஆசாரியர்" - இந்த வாக்கியம் இந்த வசனத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அவர்கள் இதுவரையிலும் தேவனுடைய பிரதான ஆசாரியர்களாக இருந்தார்கள் ஆனால் இப்போது யூதருடைய பிரதான ஆசாரியராக மாறிவிட்டார்கள் தேவனுக்குச் சேவை செய்வதற்குப் பதிலாக யூதருக்குச் சேவை செய்கிறார்கள் தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்குப் பதிலாக யூதருடைய சித்தத்தைச் செய்கிறார்கள்

"நான் எழுதினது எழுதினதே" - ரோமப் பேரரசின் சட்ட விதிகளின் பிரகாரம் ஒரு தீர்ப்பு கொடுத்துவிட்டால் அதை மாற்ற முடியாது. ஆகையினால்தான், பிலாத்து நான் எழுதினது எழுதினதே என்று கூறுகிறான் இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அவர்கள் அறைந்ததற்கான காரணத்தை ஒருமேல் விலாசமாக எழுதி சிலுவையில் போடுவித்தான் இயேசுகிறிஸ்து யூதருடைய ராஜா இது சத்தியமான வாக்கியம். அவர் எப்போதுமே ராஜாவாக இருந்தவர் இராஜாவாக இருக்கிறவர் ராஜாவாக இருக்கப்போகிறவர் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது எல்லோருமே இயேசு கிறிஸ்துவை இராஜாவாக அங்கீகாரம் பண்ணுவார்கள் (மத் 23.39 சக 12:10-13:3 வெளி 1:7; லூக்கா 1.32-33; ஏசா 9:6-7

"போர்ச்சேவகர் இயேசுவைச் சிலுவையில் அறைந்தபின்பு, அவருடைய வஸ்திரங்களை எடுத்து ஒவ்வொரு சேவகனுக்கு ஒவ்வொரு பங்காக நாலு பங்காக்கினார்கள்" - இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறைவதற்கு நான்கு சேவகர்கள் நியமிக்கப்பட்டார்கள் என்பது இந்த வசனத்தின் மூலமாகத் தெரிகிறது.

19 அதிகாரம்

"அங்கி" (coat) - இதற்கான கிரேக்க வார்த்தை "சிடோன்" (chitoon) என்பதாகும். இது உள் அங்கியைக் குறிப்பிடும். முழங்கால் வரையிலும் தொங்குதலாக இருக்கும். (மத் 5:40; லூக்கா 6:29; அப் 9:39) ஒருவர் இதைப் போன்று இரண்டு அங்கிகளை அணிவது ஆடம்பரமாகக் கருதப்பட்டது. ஆகையினால் சீஷர்கள் இரண்டு அங்கிகளை அணிவதற்குத் தடைபண்ணப் பட்டிருந்தார்கள். (மத் 10:10; மாற்கு 6:9; லூக்கா 3:11; லூக்கா 9:3). ஒரு நபர் அங்கியை மட்டும் அணிந்திருந்து, அதற்கு மேல் எந்த வஸ்திரமும் அணியவில்லை யென்றால், அவர் நிர்வாணமாக இருப்பதாகவே ஜனங்கள் கருதினார்கள். (யோ 19:24)

அங்கி (coat) - χιτών - chitoon - 5509

ஆண்பால் பெயர்ச்சொல் - வஸ்திரம், அங்கி

யோவான் சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 12

"என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின்மேல் சீட்டுப் போட்டார்கள்" (யோவான் 19:24; சங் 22:18)

16. இயேசுவின் சிலுவையின் அருகே நின்ற ஸ்திரீகள்

யோவான் 19:25 இயேசுவின் சிலுவையினருகே அவருடைய தாயும், அவருடைய தாயின் சகோதரி கிலெயோப்பா மரியாளும், மகதலேனா மரியாளும் நின்றுகொண்டிருந்தார்கள்.

யோவான் 19:26 அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு, தம்முடைய தாயை நோக்கி: ஸ்திரீயே, அதோ, உன் மகன் என்றார்.

யோவான் 19:27 பின்பு அந்த சீஷனை நோக்கி: அதோ, உன் தாய் என்றார். அந்நேரமுதல் அந்தச் சீஷன் அவளைத் தன்னிடமாய் ஏற்றுக்கொண்டான்.

"கிலெயோப்பா" (Cleophas) - மறுபெயர் அல்பேயு (Alpheus) (மத் 10:3; மாற்கு 3:18; லூக்கா 6:15; லூக்கா 10-13, 24:18)

"தமக்கு அன்பாயிருந்த சீஷன்" - இது யோவானைக் குறிக்கும். (யோவான் 13:23; யோவான் 21:7,20,24) இயேசு கிறிஸ்து கல்வாரிச் சிலுவையில் மரித்துக் கொண்டிருக்கிறார். அவருடைய உலகப் பிரகாரமான தந்தையாகிய யோசேப்பு மரித்துவிட்டார். மரியாளின் வயிற்றில் பிறந்த இயேசுவின் சகோதரர்கள் அவரை மேசியாவாக இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை. தாம் மரிக்கும் அந்த வேளையிலகூட தமது தாயாகிய மரியாளுக்கு ஒரு குறைவும் வரக்கூடாது என்று இயேசு கிறிஸ்து விரும்புகிறார். ஆகையினால் தமது தாயைப் பராமரிக்கும் பொறுப்பை தமக்கு அன்பான சீஷனாகிய யோவானிடம் ஒப்புக்கொடுக்கிறார். "தம்முடைய தாயை நோக்கி: ஸ்திரீயே, அதோ, உன் மகன் என்றார். பின்பு அந்த சீஷனை நோக்கி: அதோ, உன் தாய் என்றார்." இயேசு கிறிஸ்து யாரையும் கைவிடவே மாட்டார் (லூக்கா 8:19)

17. இயேசுவின் மரணம் - (மத் 27:45; மாற்கு 15:33; லூக் 23:44)

யோவான் 19:28 அதன்பின்பு, எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து, வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக: தாகமாயிருக்கிறேன் என்றார்.

யோவான் 19:29 காடி நிறைந்த பாத்திரம் அங்கே வைக்கப்பட்டிருந்தது; அவர்கள் கடற்காளானைக் காடியிலே தோய்த்து, ஈசோப்புத்தண்டில் மாட்டி, அவர் வாயினிடத்தில் நீட்டிக்கொடுத்தார்கள்.

யோவான் 19:30 இயேசு காடியை வாங்கினபின்பு, முடிந்தது என்று சொல்லி, தலையைச் சாய்த்து, ஆவியை ஒப்புக்கொடுத்தார்.

யோவான் - தொகுப்புரை

19 அதிகாரம்

யோவான் 19:31 அந்த நாள் பெரிய ஓய்வுநாளுக்கு ஆயத்தநாளாயிருந்தபடியினால் உடல்கள் அந்த ஓய்வுநாளிலே சிலுவைகளில் இராதபடிக்கு, யூதர்கள் பிலாத்துவினிடத்தில் போய், அவர்களுடைய காலெலும்புகளை முறிக்கும்படிக்கும் உடல்களை எடுத்துப் போடும்படிக்கும் உத்தரவு கேட்டுக் கொண்டார்கள்.

யோவான் 19:32 அந்தப்படி போர்ச்சேவகர் வந்து, அவருடனேகூடச் சிலுவையில் அறையப்பட்ட முந்தினவனுடைய காலெலும்புகளையும் மற்றவனுடைய காலெலும்புகளையும் முறித்தார்கள்.

யோவான் 19:33 அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து, அவர் மரித்திருக்கிறதைக் கண்டு, அவருடைய காலெலும்புகளை முறிக்கவில்லை.

யோவான் 19:34 ஆகிலும் போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவிலே குத்தினான்; உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது.

யோவான் 19:35 அதைக் கண்டவன் சாட்சிகொடுக்கிறான், அவனுடைய சாட்சி மெய்யாயிருக்கிறது; நீங்கள் விசுவாசிக்கும்படி தான் சொல்லுகிறது மெய்யென்று அவன் அறிந்திருக்கிறான்.

யோவான் 19:36 அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை என்கிற வேதவாக்கியம் நிறைவேறும்படி இவைகள் நடந்தது.

யோவான் 19:37 அல்லாமலும் தாங்கள் குத்தினவரை நோக்கிப்பார்ப்பார்கள் என்று வேறொரு வேதவாக்கியம் சொல்லுகிறது.

யோவான் சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாடு தீர்க்கதரிசனம் எண் - 18

"தாகமாயிருக்கிறேன்" - (யோவான் 19:28; சங் 69:21)

"காடி" (hyssop) - (மத் 27:34; மாற்கு 15:23)

"முடிந்தது" (It is finished) - இதற்கான கிரேக்க வார்த்தை "டெலேயோ" (teleoo) என்பதாகும். இதற்கு பலவிதமாக பொருள் கூறலாம். **"make an end"** (மத் 11:1; **"finish"** (மத் 13:53; மத் 19:1; மத் 26:1; யோவான் 19:30; 2தீமோ 4:7; வெளி 10:7; வெளி 11:7; வெளி 20:5); **"expire"** (வெளி 20:7); **"fulfil"** (அப் 13:29; ரோமர் 2:27; கலா 5:16; யாக் 2:8; வெளி 15:8; வெளி 17:17; வெளி 20:3); **"fill up"** (வெளி 15:1); **"accomplish"** (லூக்கா 12:50; லூக்கா 18:31; லூக்கா 22:37; யோவான் 19:28); **"perform"** (லூக்கா 2:39); **"pay"** (மத் 17:24; ரோமர் 13:6)

முடிந்தது (finished) - **τελέω** - **teleoo** - 5055

வினைச்சொல் - முடிப்போ நிறைவேற்று

இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்ததினால் முடிவுபெற்ற காரியங்கள்

1. கிறிஸ்துவின் பாடுகளைப் பற்றிக் கூறியிருக்கும் எல்லா வேதவாக்கியங்களும் நிறைவு பெறுகிறது. **(Fulfillment of all scriptures of the sufferings of Christ)** (சங் 22; ஏசா 53; லூக்கா 24:25-26,44; யோவான் 19:28; 1பேதுரு 1:11; 1பேதுரு 3:18)

2. சாத்தானின் தோல்வி **(Defeat of Satan)** (யோவான் 12:31-32; கொலோ 2:14-17; எபி 2:14-15

யோவான் – தொகுப்புரை

19 அதிகாரம்

3 யூதருக்கும் புறஜாதியாருக்கும் நடுவேயுள்ள திரை கிழிந்து போகிறது. (Breaking down of the middle wall of partition to make Jews and Gentiles one) (எபே 2:14-18; எபே 3:6; 1கொரி 12:13 கலா 3:28; ரோமர் 10)

4 தேவனிடம் யாருடைய துணையும் இல்லாமல் நாமே செலலும் சிலாக்கியம் கிடைக்கிறது. (Way for personal access to God) (எபே 2:18-19; எபி 10:19-38)

5 மரணத்தின் ஆட்சி அகற்றபபடுகிறது. (Cancellation of the reign of death) (ரோமர் 5:12-21; ரோமர் 6:9, ரோமர் 8:2; 1கொரி 15:1-58 2கொரி 3:6-15; எபி 2:14-15)

6 பாவத்தின வலலமை அகறறபபடுகிறது. (Cancellation of sin's power) (ரோமர் 6:1-23; ரோமர் 9:8:2, 1கொரி 15:54-58)

7 மரணபரியநதம், கீழபடிதல், நேசிததல் எனபது நடைமுறையில விளக்கபபடுகிறது. (Demonstration of obedience and love to death) (பிலி 2:8 எபி 5:8-10 1பேதுரு 2:21, 1பேதுரு 4:1)

8 கிறிஸ்துவின் பரிபூரணம் (Perfection of Christ) (எபி 2:10 எபி 5:8 11)

9 எலலாப் பாவங்களுக்கும் இரட்சிபபு (Salvation from all sin) (மத் 26:28, எபே 1:7; கொலோ 1:14; எபி 9:15; வெளி 1:5; வெளி 5:9 10)

10 தேவனுக்கும், மனுஷனுக்கும் இடையே சமாதானம் உணடாகிறது. (Making of peace between God and man) (கொலோ 1:20-22; 2கொரி 5:14-21; ரோமர் 5:1-11)

11 எலலோருக்கும் பாவத்தின் கிரயமாகிய மரணம் செலுத்தப்படுகிறது. (Death penalty paid for all) (2கொரி 5:14-21; 1கொரி 6:19-20 எபி 2:9-15; ரோமர் 5:6-8, 1பேதுரு 1:19)

12 மனுஷனைச் சாத்தான் கட்டியிருக்கும் கடடுக்கள் அவிழக்கபபடுகிறது. மனுஷர் பாவத்திலிருந்தும் சாத்தானிடமிருந்தும் விடுவிக்கப படுகிறார்கள் (Cancellation of the mortgage claim of Satan and freeing of man and his dominion from sin and Satan) (1கொரி 6:19-20; ரோமர் 8:18-24. ரோமர் 14:7-9; 2கொரி 5:14-15 1தெச 5:10; எபி 2:9-15 வெளி 5:9-10; வெளி 2:1-22:5 1பேதுரு 1:19)

13 தேவனுடைய பூரண நீதி திருபதியாக விளங்குகிறது. Satisfaction of the full justice of God (ஆதி 2:17 ரோமர் 3:21-26; ரோமர் 5:1-11 யோவான் 3:16)

14 எலலோருக்கும் சரீர சுகமாகுதல உணடாகிறது. (Physical healing for all) (மத் 8:17; மத் 13:15, ஏசா 53:4-5; 1பேதுரு 2:24, யோவான 10:10, யாக் 5:14-16

15. பரிசுதத ஆவியானவரின அபிஷேகமும், அவருடைய பூரண வலலமையும் விசுவாசிகளுக்குக் கொடுக்கபபடுகிறது. (A way for the full endowment of power and full anointing of the Holy Spirit) (கலா 3:13-14; யோவான 7:37-39, லூக்கா 24:49; அப 1:4-8 33

16 பழைய உடனபடிக்கை ஒழிந்துபோகிறது. புதிய உடன்படிக்கை முததிரைப போடபபடுகிறது. (Blotting out of the Old Covenant and making and sealing of the New Covenant) (கொலோ 2:14-17 எபே 2:14-18 மத் 26:28; 2கொரி 3:6-15, கலா 3:13 25 கலா 4:21 31 எபி 7:11 28 எபி 8:6-10:1 18

19 அதிகாரம்

"இயேசு கிறிஸ்து தலையைச் சாய்த்து, ஆவியை ஒப்புக்கொடுத்தார்" - இயேசு கிறிஸ்து இதுவரையிலும் தமது தலையை நேராக வைத்திருந்தார். தமது ஜீவனைத் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தார். இப்போது, தேவனுடைய சித்தத்தின் பிரகாரம் தமது ஆவியை ஒப்புக்கொடுக்கிறார் (யோவான் 10:18)

"இயேசு கிறிஸ்து தமது ஆவியை ஒப்புக்கொடுத்தார்" - சிலுவையில் இயேசு கிறிஸ்துவின் சரீரம் தொங்கிக் கொண்டிருக்கிறது. அவருடைய சரீரத்தை விட்டு, இயேசு கிறிஸ்துவின் ஆவியும் ஆத்துமாவும் பிரசங்கம் பண்ணுவதற்காக பாதாளத்திற்குச் சென்றது. (1பேதுரு 3:19) நீதிமான்களுடைய ஆவிகளை விடுதலைபண்ணுவதற்காக இயேசு கிறிஸ்து பாதாளத்திற்குச் சென்றார் (சங் 16:10; மத் 12:40; எபே 4:8-10; எபி 2:14-15) மரித்த சரீரத்தை அடக்கம்பண்ணும்போது அதன் ஆவியும் சேர்ந்தே அடக்கம் பண்ணப்படுவதில்லை (யாக் 2:26; பிலி 1:21-24; 2கொரி 5:8; எபி 12:22-23; ஏசா 14:9, சங் 16:10; வெளி 6:9-11; வெளி 20:11-15) ஆவியும், ஆத்துமாவும் மரிப்பதில்லை. (1பேதுரு 3:4; 1பேதுரு 4:6; லூக்கா 16:19-31; மத் 10:28) ஒரு நபர் மரிக்கும்போது அவருடைய சரீரத்தை விட்டு ஆவியும், ஆத்துமாவும் வெளியேறும். உயிர்த்தெழும்போது அந்த ஆவியும் ஆத்துமாவும் அவற்றின் சரீரத்தோடு மறுபடியும் ஒன்றுசேரும். (யாக் 2:26; 1ராஜா 17:20-22; யோபு 14:10; 2சாமு 12:19-23, லூக்கா 8:49-56; லூக்கா 16:22, லூக்கா 23:43-46; 2கொரி 5:8; பிலி 1:21-24, வெளி 6:9-11, 2பேதுரு 1:13-15)

"அந்த நாள் பெரிய ஓய்வுநாளுக்கு ஆயத்தநாளாயிருந்தது" மறுநாள் பெரிய ஓய்வுநாளாகும் "high day" (யோவான் 19:31) பண்டிகையின் பிரதான ஓய்வுநாள் இந்த ஓய்வுநாளும், வாரத்தின் ஓய்வுநாளும் வெவ்வேறானவை. வாரத்தின் ஓய்வுநாள் மேலும் இரண்டு நாள் கழித்து வருகிறது. (லேவி 23:6-11, மத் 12:40) "இரவிலே பிரேதம் மரத்திலே தொங்கலாகாது" என்று யூதருடைய பிரமாணம் கூறுகிறது. (உபா 21:22-23)

"அவர்களுடைய காலெலும்புகளை முறிக்கும்படிக்கும் உடல்களை எடுத்துப் போடும்படிக்கும் உத்தரவு கேட்டுக் கொண்டார்கள்" - ஒரு குற்றவாளியைச் சிலுவை மரத்தில் தொங்கவிடும்போது அந்த நபரை விரைவாகச் சாகவைப்பதற்காக அந்த நபருடைய காலெலும்புகளை முறிக்கும் பழக்கம் அக்காலத்தில் இருந்தது. ஆனால் இயேசு கிறிஸ்துவின் காலெலும்புகளை அவர்கள் முறிப்பதற்கு முன்பாகவே அவர் மரித்துவிட்டார். ஆகையினால் அவருடைய காலெலும்புகளைப் போர்ச்சேவகர் முறிக்கவில்லை. (யோவான் 19:36)

"போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான். உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது" - இயேசு கிறிஸ்து உலகத்தின் பாவங்களுக்காக மரித்தார். தமது திருஇரத்தத்தை நமக்காகச் சிந்தினார் (மத் 26:28; 1கொரி 15:3; ரோமர் 5:6-8; கலா 1:4; கொலோ 1:14,20-22

"அதைக் கண்டவன் சாட்சிகொடுக்கிறான். அவனுடைய சாட்சி மெய்யாயிருக்கிறது" - இந்த வசனத்தில் அதைக் கண்டவன் என்பது இந்தச் சுவிசேஷத்தை எழுதிய யோவானைக் குறிக்கும். (யோவான் 19:25-26; யோவான் 21:24-25)

யோவான் சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 14

"அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை" யோவான் 19:36; யாத் 12:46; எண் 9:12, சங் 34:20

யோவான் சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 15

"தாங்கள் குத்தினவரை நோக்கிப் பார்ப்பார்கள்" - (யோவான் 19:37, சங் 22:16; சக 12:10; வெளி 1:7

19 அதிகாரம்

18. இயேசுவை அடக்கம் பண்ணுகிறார்கள் - (மத் 27:57 மாற்கு 15:42; லூக் 23:50)

யோவான் 19:38 இவைகளுக்குப்பின்பு அரிமத்தியா ஊரானும் யூதருக்குப் பயந்ததினால் இயேசுவுக்கு அந்தரங்க சீஷனுமாகிய யோசேப்பு இயேசுவின் சரீரத்தை எடுத்துக்கொண்டு போகும்படி பிலாத்துவினிடத்தில் உத்தரவு கேட்டான். பிலாத்து உத்தரவு கொடுத்தான். ஆகையால் அவன் வந்து, இயேசுவின் சரீரத்தை எடுத்துக்கொண்டுபோனான்.

யோவான் 19:39 ஆரம்பத்திலே ஒரு இராத்திரியில் இயேசுவினிடத்தில் வந்திருந்த நிக்கொதேமு என்பவனும் வெள்ளைப்போளமும் கரியபோளமும் கலந்து ஏறக்குறைய நூறு இராத்தல் கொண்டுவந்தான்.

யோவான் 19:40 அவர்கள் இயேசுவின் சரீரத்தை எடுத்து, யூதர்கள் அடக்கம் பண்ணும் முறைமையின்படியே அதைச் சுகந்தவர்க்கங்களுடனே சீலைகளில் சுற்றிக் கட்டினார்கள்.

யோவான் 19:41 அவர் சிலுவையில் அறையப்பட்ட இடத்தில் ஒரு தோட்டமும், அந்தத் தோட்டத்தில் ஒருக்காலும் ஒருவனும் வைக்கப்பட்டிராத ஒரு புதிய கல்லறையும் இருந்தது.

யோவான் 19:42 யூதருடைய ஆயத்தநாளானபடியினாலும், அந்தக் கல்லறை சமீபமாயிருந்தபடியினாலும், அவ்விடத்திலே இயேசுவை வைத்தார்கள்.

"அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு" (**Joseph of Arimathaea**) - இயேசு கிறிஸ்துவின் இரகசிய சீஷர்களில் ஒருவன். ஆலோசனைச் சங்கத்தில் இவனும் ஒரு அங்கத்தினர் (யோவான் 19:38-42; மத் 27:57-60; மாற்கு 15:42-47; லூக்கா 23:50-56) இவனுடைய சொந்த ஊர் ராமா (**Ramah**) செதுவிநிதில இந்த ஊர் அராமதாயீம் (**Armathaim**) (2 சாமு 1:19) என்று அழைக்கப்படுகிறது.

"நிக்கொதேமு" - (யோவான் 3:1) இவன் இயேசு கிறிஸ்துவிடம் முதலாவது வரும்போது இராத்திரியிலே வந்தான் என்று வாசிக்கிறோம். இப்போது, அவனிடத்தில் பயமோ வெட்கமோ இல்லை. வெளிப்படையாக வருகிறான்.

"நிக்கொதேமு என்பவன் வெள்ளைப்போளமும் கரியபோளமும் கலந்து ஏறக்குறைய நூறு இராத்தல் கொண்டுவந்தான்" - மரித்தோரின் சடலங்களை அடக்கம் பண்ணும்போது சரீரத்தின் துர்நாற்றம் வெளியே வராமல் இருப்பதற்காக அந்தச் சரீரத்தில் வாசனைத் திரவியங்களைத் தடவுவது வழக்கம். இறந்தவர் மரியாதைக்குரியவராக இருந்தால் வாசனைத்திரவியங்களை அதிகமான அளவு கொண்டு வருவார்கள். இந்த வசனத்தில் நிக்கொதேமு நூறு இராத்தல் கொண்டு வந்தான் என்று வாசிக்கிறோம். சாதாரண சரீரத்தை அடக்கம் பண்ணுவதை விட, இயேசு கிறிஸ்துவின் சரீரத்தை அடக்கம் பண்ணுவதற்கு அதிக அளவில் வாசனைத் திரவியத்தைக் கொண்டு வருகிறார்கள். நிக்கொதேமுவைத் தவிர ஸ்திரீகளும் வாசனைத் திரவியங்களைக் கொண்டு வந்தார்கள் (மாற்கு 16:1 லூக்கா 23:56; லூக்கா 24:1).

வெள்ளைப்போளம் (**myrrh**) - **σμύρνα** - **smyrna** - 4666

பெண்பால் பெயர்ச்சொல் - வெள்ளைப்போளம் (**a fragrant gum used in anointing oil**) (யாத் 30:23), **perfume** (சங் 45:8), **(embalming)** (மாற்கு 15:23, யோவான் 19:39) இந்த வார்த்தை இந்த வசனத்திலும், மத் 2:11 ஆகிய வசனத்திலும் மட்டுமே புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் இந்த வார்த்தையை நாம் பல வசனங்களில் வாசிக்கலாம். (ஆதி 37:25; ஆதி 43:11; யாத் 30:23; சங் 45:8; நீதி 7:17; உன் 3:6; உன் 4:6,14; உன் 5:1,13; எஸ் 2:12)

"கரியபோளம்" (**aloes**) - நறுமணம் கமழும் ஒரு மரத்தின் பட்டை. புதிய ஏற்பாட்டில் இந்த வசனத்திலும், பழைய ஏற்பாட்டில் 4 வசனங்களிலும் நாம் கரியபோளத்தைக் குறித்து வாசிக்கிறோம். (எண் 24:6; நீதி 7:17; உன் 4:14; சங் 45:8) சரீரத்தை அடக்கம் பண்ணும்போது கரியபோளத்தைப் பயன்படுத்துவார்கள் (யோவான் 19:39).

19 அதிகாரம்

"அவர்கள் இயேசுவின் சரீரத்தை எடுத்து, யூதர்கள் அடக்கம்பண்ணும் முறைமையின்படியே அதைச் சுகந்தவர்க்கங்களுடனே சீலைகளில் சுற்றிக் கட்டினார்கள்" - எகிப்தியர்கள் இறந்தோருடைய சடலங்களைப் பாடம்பண்ணிப் பாதுகாப்பார்கள் (ஆதி 50:2-3). யூதர்கள் எகிப்தியரைப் போன்று சரீரங்களைப் பாடம்பண்ணுவதில்லை. மரித்தவரின் சடலத்தின்மீது வாசனைத் திரவியங்களை ஊற்றி, அதைச் சீலைகளினால் சுகந்தவர்க்கங்களுடனே சுற்றிக் கட்டிவிடுவார்கள். இயேசு கிறிஸ்துவின் சரீரத்தில் இந்தச் சடங்குகளை எல்லாம் செய்ய முடியவில்லை. ஏனெனில் ஓய்வுநாள் வந்துவிடுகிறது. ஆகையினால் அவருடைய சரீரத்தில் வாசனைத் திரவியங்களை வைத்து அபிஷேகம் பண்ண முடியவில்லை. ஓய்வுநாள் முடிந்த பிறகு, ஸ்திரீகள் வாசனைத் திரவியங்களோடு வருகிறார்கள் (மாற்கு 16:1). இரண்டு கால்களையும் கைகளையும் சீலைகளினால் சுற்றுவார்கள். முகத்தை ஒரு துணியால் மூடுவார்கள் (யோவான் 11:44; யோவான் 20:7; அப் 5:6).

"அவர் சிலுவையில் அறையப்பட்ட இடத்தில் ஒரு தோட்டம் இருந்தது" - வேதாகமத்தில் நாம் நான்கு விதமான தோட்டங்களைக் குறித்து வாசிக்கிறோம். இவை மனுஷருடைய பாவங்களோடும் இரட்சிப்போடும் தொடர்புடையவை. அவையாவன:

1. ஆதாமுக்கு முந்திய காலத்திலிருந்த ஏதேன் தோட்டம். இங்கு லூசிபர் ஆட்சி புரிந்து கலகம் பண்ணினான் (எசே 28:13).

2. ஆதாமின் காலத்திலிருந்த ஏதேன் தோட்டம். இங்கு ஆதாம் ஆட்சி புரிந்து கலகம் பண்ணினான் (ஆதி 2:8-3:24).

3. கெத்செமனே தோட்டம். இங்கு இயேசு கிறிஸ்து மனுஷருடைய பாவத்தினால் விசாரமடைந்தார் (மத் 26:36-56).

4. யோசேப்பின் தோட்டம். இயேசு கிறிஸ்து இந்தத் தோட்டத்தில் அடக்கம் பண்ணப்பட்டார் (யோவான் 19:41).

கல்லறை (sepulchre) - μνημεῖον - mneemeion - 3419

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - கல்லறை, பிரேதக்குழி (grave) (யோவான் 5:28; யோவான் 11:17,31,38; யோவான் 12:17). கல்லறையும் நரகமும் ஒன்றல்ல. கல்லறை மரித்த சரீரம் போகும் இடம். நரகம் துன்மார்க்கர் நித்திய காலமாக பாடுகளை அனுபவிக்கப் போகுமிடம்.

"யூதருடைய ஆயத்தநாளினிமித்தமும் அந்தக் கல்லறை சமீபமாயிருந்தபடியினாலும் அவ்விடத்திலே இயேசுவை வைத்தார்கள்" - யூதருடைய ஓய்வுநாள் நெருங்கிவிட்டது. யூதருக்கு ஓய்வுநாள் மாலை வேளையில் சூரியன் அஸ்தமனமாகும்போது ஆரம்பமாகும். இயேசு கிறிஸ்துவை அதற்குள் அடக்கம் பண்ண வேண்டுமென்று அவசரமாக அடக்கம் பண்ணுகிறார்கள். இயேசுவை நல்ல கல்லறையில் வைத்து அவரைப் பாதுகாக்க வேண்டுமென்பது அவருடைய சீஷர்களின் விருப்பம். அவர் உயிர்த்தெழுவார் என்று அவர்கள் நம்பவில்லை. ஆனால் ஓய்வுநாள் ஆரம்பமாகப் போகிறபடியினால், இயேசு கிறிஸ்துவைச் சீக்கிரம் அடக்கம் பண்ண வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்தார்கள். இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்த இடத்திற்கு அருகிலுள்ள கல்லறையில் அவரை அடக்கம் பண்ணுகிறார்கள்.

19 அதிகாரம்

இயேசு கிறிஸ்துவின் கல்லறையைக் குறித்து ஜனங்கள் வெவ்வேறு விதமான நம்பிக்கைகளைக் கொண்டிருந்தார்கள். இயேசு கிறிஸ்துவின் கல்லறை புனிதமானது. பலவிதமான அற்புதங்களை இயேசு கிறிஸ்து அந்தக் கல்லறையிலிருந்து செய்வதாக கிரேக்கரும் ஆர்மேனியரும் நம்பினார்கள். ஒவ்வொரு ஈஸ்டர் தினத்தின்போதும் பரலோகத்திலிருந்து ஒரு அக்கினி இந்தக் கல்லறைக்கு வரும் என்பது இவர்களுடைய நம்பிக்கை. இந்தக் கல்லறையிலிருந்து ஒரு விளக்கை ஏற்றி, மரித்துப்போன மற்றவர்களுடைய கல்லறையில் வைத்தால் அவர்கள் நரகத்தின் அக்கினியிலிருந்து பாதுகாக்கப்படுவார்கள் என்றும் பரலோகத்திற்குச் செல்வார்கள் என்றும் அவர்கள் நம்பினார்கள். ஓரளவு இயேசு கிறிஸ்துவின் கல்லறையை விக்கிரகாராதனை செய்யும் ஸ்தலம்போல மாற்றிவிட்டார்கள். அந்த இடத்தில் பரிசுத்த கல்லறையின் தேவாலயம் **(Church of the Holy Sepulchre)** என்று ஒரு ஆலயத்தையும் கட்டிவிட்டார்கள். சுமார் 400 வருஷங்களாக இந்த விக்கிரகாராதனை முறைமை நடைபெற்று வந்தது. இந்த ஆலயம் 1808 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 11 ஆம் நாள் எரிக்கப்பட்டு, அழிக்கப்பட்டதாக திருச்சபை வரலாறு கூறுகிறது.

20 அதிகாரம்

IX. உயிர்த்தெழுந்த பின்பு இயேசுவின் ஊழியம்

1. ஸ்திரீகள் அப்போஸ்தலரிடம் கல்லறை காலியாக இருப்பதை அறிவிக்கிறார்கள்

யோவான் 20:1 வாரத்தின் முதல்நாள் காலையில், அதிக இருட்டோடே மகதலேனா மரியாள் கல்லறையினிடத்திற்கு வந்து கல்லறையை அடைத்திருந்த கல் எடுத்துப் போட்டிருக்கக் கண்டாள்

யோவான் 20:2 உடனே அவள் ஓடி சீமோன் பேதுருவினிடத்திலும் இயேசுவுக்கு அன்பாயிருந்த மற்றச் சீஷனிடத்திலும் போய்: கர்த்தரைக் கல்லறையிலிருந்து எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள், அவரை வைத்த இடம் எங்களுக்குத் தெரியவில்லை என்றாள்

"வாரத்தின் முதல்நாள் காலை" (first day of the week) ஓய்வுநாட்களின் முதலாவது நாள் பெந்தெகொஸ்தே பண்டிகைக்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஏழு ஓய்வுநாட்களை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. (லேவி 23:15-17)

"அதிக இருட்டோடே, மகதலேனா மரியாள் கல்லறையினிடத்திற்கு வந்தாள்" - சூரியன் உதிப்பதற்கு முன்பாகவே மரியாள் வருகிறாள் மரியாளின் பெயர் இந்த வசனத்தில் விசேஷமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவளே பேதுருவையும் யோவானையும் கல்லறையினிடத்திற்கு அழைத்து வந்தவள் (யோவான் 20:2)

"இயேசுவுக்கு அன்பாயிருந்த மற்றச் சீஷன்" இது யோவானைக் குறிக்கும். (யோவான் 13:23; யோவான் 19:26; யோவான் 20:2; யோவான் 21:7,20-25)

"கர்த்தரைக் கல்லறையிலிருந்து எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள் அவரை வைத்த இடம் எங்களுக்குத் தெரியவில்லை" யோசேப்பும், நிக்கொதேமுவும் இயேசு கிறிஸ்துவின் சரீரத்தை எடுத்துக் கொண்டு போய்விட்டதாக மரியாள் நினைத்தாள்

2. பேதுருவும் யோவானும் இயேசுவை அடக்கம் பண்ணிய இடத்திற்கு ஓடுகிறார்கள் - (லூக் 24:12)

யோவான் 20:3 அப்பொழுது பேதுருவும் மற்றச் சீஷனும் கல்லறையினிடத்திற்குப் போகும்படி புறப்பட்டு, இருவரும் ஒருமித்து ஓடினார்கள்

யோவான் 20:4 பேதுருவைப் பார்க்கிலும் மற்றச் சீஷன் துரிதமாய் ஓடி, முந்திக் கல்லறையினிடத்தில்

யோவான் 20:5 அதற்குள்ளே குனிந்துபார்த்து சீலைகள் கிடக்கிறதைக் கண்டான்; ஆனாலும் அவன் உள்ளே போகவில்லை

யோவான் 20:6 சீமோன்பேதுரு அவனுக்குப் பின்னே வந்து கல்லறைக்குள்ளே பிரவேசித்து

யோவான் 20:7 சீலைகள் கிடக்கிறதையும் அவருடைய தலையில் சுற்றியிருந்த சீலை மற்றச் சீலைகளுடனே வைத்திராமல் தனியே ஒரு இடத்திலே சுருட்டி வைத்திருக்கிறதையும் கண்டான்

யோவான் 20:8 முந்திக் கல்லறையினிடத்திற்கு வந்த மற்றச் சீஷனும் அப்பொழுது உள்ளே பிரவேசித்து கண்டு விசுவாசித்தான்

யோவான் 20:9 அவர் மரித்தோரிலிருந்து எழுந்திருக்க வேண்டும் என்ற வேதவாக்கியத்தை அவர்கள் இன்னும் அறியாதிருந்தார்கள் யோவான்

20:10 பின்பு அந்தச் சீஷர்கள் தங்களுடைய இடத்திற்குத் திரும்பிப் போனார்கள்

"பேதுருவைப்பார்க்கிலும் மற்றச் சீஷன் துரிதமாய் ஓடி முந்திக் கல்லறையினிடத்தில் வந்தான்" - பேதுருவைவிட யோவான் இளையவன் என்பதற்கு வேதத்தில் ஆதாரமில்லை ஆனாலும் பேதுருவைவிட யோவான் வேகமாக ஓடினான்

20 அதிகாரம்

"சீலைகள் கிடக்கிறதையும், அவருடைய தலையில் சுற்றியிருந்த சீலை மற்றச் சீலைகளுடனே வைத்திராமல் தனியே ஒரு இடத்திலே சுருட்டி வைத்திருக்கிறதையும் கண்டான்" - இந்தச் சீலைகள் இயேசு கிறிஸ்துவின் சரீரத்தை அடக்கம் பண்ணிய போது, எப்படி இருந்ததோ அப்படியே அந்த இடத்திலேயே இருந்தது. யோவான் இந்தச் சீலைகளைத் தாண்டி கடந்து போனான். சுருட்டி வைத்திருந்த சீலையை உலைக்காமல், தாண்டிச் செல்கிறான். லாசருவைக் கட்டியிருந்த சீலையை அவிழ்த்ததுபோன்று இயேசுவிற்கு யாரும் செய்ய வேண்டியதில்லை (யோவான் 11:44) இயேசு கிறிஸ்துவின் சரீரம் உயிர்த்தெழுந்தது. அவரைச் சுற்றியிருந்த சீலைகளுக்கு ஒன்றும் ஆகவில்லை. அவைச் சுற்றப்பட்டபடியே அதே இடத்தில் இருந்தது. கல்லறையின் கதவு திறந்திருந்தது. இயேசு கிறிஸ்துவின் சரீரம் வெளியேறிச் செல்வதற்காக கல்லறை திறக்கப்படவில்லை. அவர் இப்பொழுது உயிர்த்தெழுந்த சரீரத்தில் இருக்கிறார். கல்லறை பூட்டப்பட்டிருந்தாலும், அவரால் வெளியே போகமுடியும். ஆனால் பூட்டப்பட்டிருக்கும் கல்லறைக்குள் சீஷர்களால் உள்ளே வரமுடியாது. சீஷர்கள் கல்லறைக்குள் வரவேண்டுமென்பதற்காகவும், தாம் உயிர்த்தெழுந்திருப்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகவும் கல்லறையை மூடப்பட்டிருந்த கல் திறந்திருந்தது. இயேசு கிறிஸ்து பூட்டப்பட்டிருந்த கதவுகள் வழியாகவும் போகக்கூடியவர் (யோவான் 20:19)

யோவான் சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் – 16

"அவர் மரித்தோரிலிருந்து எழுந்திருக்க வேண்டும்" (யோவான் 20:9; சங் 16:10-11)

"அந்தச் சீஷர்கள் தங்களுடைய இடத்திற்குத் திரும்பிப்போனார்கள்" அவர்களுடைய இடம் என்பது சீஷர்கள் தற்காலிகமாக தங்கிய இடத்தைக் குறிக்கும்.

3. மகதலேனா மரியாளுக்கு இயேசுவின் தரிசனம் – (மத் 28:8

யோவான் 20:11 மரியாள் கல்லறையினருகே வெளியே நின்று அழுது கொண்டிருந்தாள். அப்படி அழுது கொண்டிருக்கையில் அவள் குனிந்து கல்லறைக்குள்ளே பார்த்து,

யோவான் 20:12 இயேசுவின் சரீரம் வைக்கப்பட்டிருந்த இடத்திலே வெள்ளுடை தரித்தவர்களாய் இரண்டு தூதர்கள் தலைமாட்டில் ஒருவனும் கால்மாட்டில் ஒருவனுமாக, உட்கார்ந்திருக்கிறதைக் கண்டாள்.

யோவான் 20:13 அவர்கள் அவளை நோக்கி: ஸ்திரீயே, ஏன் அழுகிறாய் என்றார்கள். அதற்கு அவள்: என் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள், அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை என்றாள்.

யோவான் 20:14 இவைகளைச் சொல்லிப் பின்னாகத் திரும்பி, இயேசு நிற்கிறதைக் கண்டாள்; ஆனாலும் அவரை இயேசு என்று அறியாதிருந்தாள்.

யோவான் 20:15 இயேசு அவளைப் பார்த்து: ஸ்திரீயே, ஏன் அழுகிறாய், யாரைத் தேடுகிறாய் என்றார். அவள், அவரைத் தோட்டக்காரனென்று எண்ணி: ஐயா, நீர் அவரை எடுத்துக் கொண்டுபோனதுண்டானால், அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும், நான் போய் அவரை எடுத்துக் கொள்ளுவேன் என்றாள்.

யோவான் 20:16 இயேசு அவளை நோக்கி: மரியாளே என்றார். அவள் திரும்பிப் பார்த்து: ரபூனி என்றாள், அதற்குப் போதகரே என்று அர்த்தமாம்.

யோவான் 20:17 இயேசு அவளை நோக்கி: என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப் போகவில்லை; நீ என் சகோதரரிடத்திற்குப் போய், நான் என் பிதாவினிடத்திற்கும், உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச் சொல் என்றார்.

20 அதிகாரம்

"மரியாள் கல்லறையினருகே வெளியே நின்று அழுதுகொண்டிருந்தாள் அப்படி அழுது கொண்டிருக்கையில் அவள் குனிந்து கல்லறைக்குள்ளே பார்த்தாள்" - பேதுருவும் யோவானும் கல்லறையைவிட்டு தங்களுடைய இடத்திற்குத் திரும்பிப் போனபின்பு மரியாள் இன்னும் கல்லறையின் அருகே வெளியே நின்று அழுதுகொண்டிருந்தாள் கல்லறைக்குள்ளே குனிந்து பார்த்தாள் இயேசுவின் சரீரம் வைக்கப்பட்டிருந்த இடத்திலே வெள்ளுடை தரித்தவர்களாய் இரண்டு தூதர்கள் தலைமாட்டில் ஒருவனும் கால்மாட்டில் ஒருவனுமாக உட்கார்ந்திருக்கிறதைக் கண்டாள் (யோவான் 20:12) தேவதூதர்கள் இரண்டாம் முறையாகத் தோன்றிய நிகழ்ச்சியாக இருக்கலாம். மத் 28:1-6 மாற்கு 16:1-6 ஆகிய வசனங்களில் தேவதூதர்கள் முதலாவது தோன்றினார்கள் மரியாள் பேதுருவிடமும் யோவானிடமும் "கர்த்தரைக் கல்லறையிலிருந்து எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள் அவரை வைத்த இடம் எங்களுக்குத் தெரியவில்லை" (யோவான் 20:1-2) என்று கூறிய பின்பு இரண்டாம் முறையாகத் தேவதூதர்கள் தோன்றுகிறார்கள்

"என் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள் அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை" என்று மரியாள் கூறுகிறாள் யோவான் 20:2 ஆவது வசனத்தில் "அவரை வைத்த இடம் எங்களுக்குத் தெரியவில்லை" என்று வாசிக்கிறோம் "எங்கள்" என்பது பன்மைச் சொல் மரியாளோடு வேறு ஸ்திரீகளும் இருந்தார்கள் மாற்கு 16:1) இந்த வசனத்தில் "அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை" என்று மரியாள் தன்னைப் பற்றி ஒருமையில் "எனக்கு" என்று குறிப்பிடுவதினால் இங்கு மரியாள் மட்டும் தனியாக இருந்திருக்க வேண்டும்.

"இயேசு நிற்கிறதைக் கண்டாள் ஆனாலும் அவரை இயேசு என்று அறியாதிருந்தாள்" அவரை இயேசு என்று மரியாள் ஏன் அறிந்து கொள்ளவில்லை என்பதற்கு பலவிதமான வியாக்கியானங்களை வேதஅறிஞர்கள் கூறுகிறார்கள் எந்த வியாக்கியானமும் தெளிவாக இல்லை (லூக்கா 24:16)

"இயேசு அவளைப் பார்த்து: ஸ்திரீயே, ஏன் அழுகிறாய், யாரைத் தேடுகிறாய் என்றார்" - மரியாள் யாரைத் தேடுகிறாள் என்பது இயேசுவிற்கு நன்றாகத் தெரியும் அவளுக்கு இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப் பற்றி எந்த அளவிற்குத் தெரிந்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வதற்காக இயேசு இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கலாம். இயேசு இந்த உலகத்தில் ஊழியம் செய்துகொண்டிருந்த போது தாம் மரிக்கப்போவதையும் மூன்றாம் நாளில் உயிர்த்தெழப் போவதையும் பலமுறை அறிவித்திருக்கிறார் ஆனால் மரியாளோ அவருடைய சீஷர்களோ இந்தச் சத்தியத்தை நம்பியதாகவோ ஞாபகத்தில் வைத்திருப்பதாகவோ தெரியவில்லை. விசுவாசமில்லாத யூதர்கள் இயேசு கிறிஸ்து தமது உயிர்த்தெழுதலைப் பற்றிக் கூறியதை நினைவில் வைத்திருந்தார்கள் (மத் 27:63)

> தோட்டக்காரர் (gardener) - κηπουρός - keephouros - 2780
>
> ஆண்பால் பெயர்ச்சொல் - தோட்டக்காரர் - தோட்டத்தில் வேலை பார்க்கிறவன் தோட்டத்தில் பணிபுரிபவர்களுக்கு அதிகாரியாக இருப்பவன் எஜமானுக்குக் கணக்குக் கொடுக்கிறவன்

"நான் போய் அவரை எடுத்துக் கொள்ளுவேன்" - இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள பாசத்தினாலும், அன்பினாலும் மரியாள் இவ்வாறு கூறுகிறாள் இயேசு கிறிஸ்துவின் சரீரத்தை மரியாளால் எவ்வாறு தூக்கியெடுத்துக் கொள்ளமுடியும் இயேசு கிறிஸ்துவின் சரீர எடையோடு சேர்ந்து 100 இராத்தல் வெள்ளைப்போளமும், கரிய போளமும் அவருடைய சரீரத்தில் சுற்றிக் கட்டப்பட்டிருந்தது மரியாளால் இயேசுவின் சரீரத்தைத் தூக்கி எடுத்துக் கொள்வதற்கு வாய்ப்பில்லை

"இயேசு அவளை நோக்கி: மரியாளே என்றார்" இப்போது அங்கு இருப்பது இயேசு கிறிஸ்து என்று மரியாள் அறிந்து கொள்கிறாள் இயேசு கிறிஸ்து தம்மைத் தாமே முதலாவது மரியாளுக்கு வெளிப்படுத்திக் காண்பித்தார் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை மற்றவர்களுக்கு மரியாளே முதலாவது அறிவித்தவள்

20 அதிகாரம்

"ரபூனி" (Rabboni) - இது அரமாயிக் மொழிச்சொல். (லூக்கா 9:38)

தீர்க்கதரிசன எண் - 42

"என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை. நீ என் சகோதரரிடத்திற்குப் போய், நான் என் பிதாவினிடத்திற்கும், உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன்" (யோவான் 20:17) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"என்னைத் தொடாதே" - இந்த வசனத்தில் "தொடு" என்பதற்கான கிரேக்க வார்த்தை "ஹாப்தோமாய்" **(haptomai)** என்பதாகும். இதற்குக் கட்டித் தழுவுதல், கட்டிக் கொள்ளுதல் என்று பொருள். என்னைத் தொடாதே என்று இயேசு கிறிஸ்து கூறியது "என்னைக் கட்டித் தழுவவேண்டாம்" என்று பொருள்படும். இயேசு கிறிஸ்து உடனடியாக பரலோகத்திற்கு ஏறிச்செல்லப் போகிறார். அந்த நாளில் அவர் பரலோகத்திற்குச் சென்று, அதே நாளிலேயே இந்தப் பூமிக்குத் திரும்பவும் வந்து, தமது சீஷர்களுக்குக் காட்சி கொடுத்தார்.

தொடு (Touch) - ἅπτομαι
haptomai - 680

வினைச்சொல் - தொடு

"நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை" இயேசு கிறிஸ்து பரலோகத்திற்கு ஏறிப்போகவேண்டும். மரியாள் தம்மை அங்கு போகவிடாமல் இங்கு கட்டி வைத்திருப்பதை இயேசு கிறிஸ்து விரும்பவில்லை. தம்மைத் தொடுவதற்கு இயேசு கிறிஸ்து ஸ்திரீகளுக்கு அனுமதி கொடுத்திருந்தார் (மத் 28:9). ஆனால் அவரை யாரும் கட்டிப்போடக்கூடாது.

"நீ என் சகோதரரிடத்திற்குப் போ" - தம்முடைய சகோதரர் என்று இயேசு கிறிஸ்து இங்கு கூறியிருப்பது அவருடைய சீஷர்களையே குறிக்கும். மரியாளின் வயிற்றில் பிறந்த இயேசு கிறிஸ்துவின் சகோதரரைக் குறிக்காது (மத் 12:49; மத் 28:10; லூக்கா 8:19-21; எபி 2:11)

4. இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு மகதலேனா மரியாளின் சாட்சி - (மத் 28:8)

யோவான் 20:18 மகதலேனா மரியாள் போய், தான் கர்த்தரைக் கண்டதையும், அவர் தன்னுடனே சொன்னவைகளையும் சீஷருக்கு அறிவித்தாள்.

"மகதலேனா மரியாள் போய், தான் கர்த்தரைக் கண்டதையும் அவர் தன்னுடனே சொன்னவைகளையும் சீஷருக்கு அறிவித்தாள்" - ஆனால் சீஷர்களோ மரியாள் கூறியதை விசுவாசிக்கவில்லை (மாற்கு 16:11)

5. இயேசு பத்து பேருக்கு தரிசனம் தருகிறார் - தோமா அங்கில்லை - (வசனம் 24-25)

யோவான் 20:19 வாரத்தின் முதல் நாளாகிய அன்றையத்தினம் சாயங்கால வேளையிலே சீஷர்கள் கூடியிருந்த இடத்தில் யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில் இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார்.

யோவான் 20:20 அவர் இப்படிச் சொல்லித் தம்முடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். சீஷர்கள் கர்த்தரைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள்.

"வாரத்தின் முதல்நாளாகிய அன்றையத் தினம் சாயங்காலவேளையிலே" - இயேசு கிறிஸ்து ஒரே நாளிலேயே பரலோகத்திற்குச் சென்றுவிட்டு, மறுபடியும் பூமிக்குத் திரும்பி வருகிறார் (யோவான் 20:17)

20 அதிகாரம்

"வாரத்தின் முதல்நாள்" (first day of the week) - இது ஞாயிற்றுக்கிழமையைக் குறிக்கும் வாரத்தின் முதல நாளாகிய ஞாயிற்றுக்கிழமையிலே விசுவாசிகள் கூடி தேவனை ஆராதிக்கவில்லையென்று ஒரு சிலர் கூறுகிறார்கள் அது தவறான கருத்து. இந்த வசனமும், யோவான் 20:26; அப 20:7; 1கொரி 16:2 ஆகிய வசனங்களும் வாரத்தின் முதலநாளாகிய ஞாயிற்றுக் கிழமையிலே தேவனுடைய பிள்ளைகள் தேவனை ஆராதித்ததை உறுதிபண்ணுகிறது. யோவான் 20:19, 26 ஆகிய வசனங்கள் மூலமாக இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களைச் சந்திப்பதற்கு இரண்டு முறை வாரத்தின் முதலநாளாகிய ஞாயிற்றுக் கிழமையைத் தெரிந்தெடுத்தது. ஆசீர்வதித்திருக்கிறார் என்பதை உறுதி பண்ணுகிறது. அதுமட்டுமல்ல பெந்தெகொஸ்தே நாளும் வாரத்தின் முதலநாளாகிய ஞாயிற்றுக் கிழமையிலேயே வருகிறது. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்திற்காக சீஷர்கள் பத்து நாட்கள் காத்திருந்தார்கள் இந்தப் பத்து நாட்களில் இரண்டு ஞாயிற்றுக் கிழமை வருகிறது. (லூக்கா 24:49; அப 1:3-8; அப 2:1) பெந்தெகொஸ்தே நாளிலிருந்து விசுவாசிகள் வாரத்தின் முதல நாளாகிய ஞாயிற்றுக் கிழமையிலேயே கூடிவந்து தேவனை ஆராதித்தார்கள் என்பது வரலாற்றுப் பிரகாரம் தெரியவருகிறது. (அப 20:7; 1கொரி 16:1-2)

"சீஷர்கள் கூடியிருந்த இடத்தில் யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருந்தன" உயிர்த்தெழுந்த சரீரங்களுக்குக் கதவுகள் ஒரு தடையாக இராது. பூட்டப்பட்டிருக்கும் கதவுகளுக்குள்ளேயும், உயிர்த்தெழுந்த சரீரம் போகும். உயிர்த்தெழுந்த சரீரங்கள் ஆவிக்குரிய சரீரங்கள் என்று அழைக்கப்படுகிறது. (1கொரி 15:42-44) ஒருவேளை உயிர்த்தெழுந்த சரீரங்கள் ஆவிகளைப் போன்று இருக்கலாம் அவற்றால் தோன்றவும் முடியும், மறையவும் முடியும். அவற்றைக் காணவும் முடியும், காணாமுடியாமலும் இருக்கும்.

"சீஷர்கள் கூடியிருந்த இடம்" - நண்பருடைய வீட்டின் மேலறையாக இருக்கலாம். அவர்கள் அங்கு பஸ்காவைப் புசித்திருக்கலாம். (மாற்கு 14:15; லூக்கா 22:12; அப 1:13)

"இயேசு வந்து நடுவே நின்று உங்களுக்குச் சமாதானம் என்றார்" - எபிரெயர்கள் ஒருவரையொருவர் வாழ்த்தும் போது "உங்களுக்குச் சமாதானம்" (Peace be unto you) என்று கூறி வாழ்த்துவார்கள் யோசேப்பின் சகோதரர்கள் அவனிடம் இவ்வாறு கூற மறுத்துவிடுகிறார்கள் (ஆதி 37:4; நியா 19:20; 1சாமு 25:6; மத் 10:12-13) இயேசு கிறிஸ்து தமது சீஷர்களிடம் உங்களுக்குச் சமாதானம் என்று கூறும்போது அவர்களுக்கு நிச்சயமாகவே தெய்வீக சமாதானம் வரும். இயேசு கிறிஸ்து வாக்குமாறாதவர் அவர் சர்வ வல்லவர் (யோவான் 14:27; யோவான் 16:33)

"அவர் இப்படிச் சொல்லித் தம்முடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார்" - கைகளையும் கால்களையும் விலாவையும் காண்பித்தார் (லூக்கா 24:39)

6. இயேசு தமது சீஷர்களுக்கு ஊழியப் பொறுப்புக்களைக் கொடுக்கிறார் - (மத் 18:18; யோவான் 14:12)

யோவான் 20:21 இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: உங்களுக்குச் சமாதானமுண்டாவதாக; பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன் என்று சொல்லி,

யோவான் 20:22 அவர்கள்மேல் ஊதி: பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்;

யோவான் 20:23 எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும், எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும் என்றார்.

20 அதிகாரம்

"பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்" - பிதாவானவர் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவிற்கு பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை அளவில்லாமல் அருளியிருக்கிறார் அதுபோலவே குமாரனாகிய இயேசுகிறிஸ்து தமது சீஷர்களை பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தோடும் வல்லமையோடும் அனுப்புகிறார் (யோவான் 7:37-39; யோவான் 14:12; யோவான் 17:18 யோவான் 20:21; லூக்கா 24:49; அப 1:4-8 மத் 18:18

"இயேசு அவர்கள்மேல் ஊதினார்" - ஊது என்பதன் கிரேக்க வார்த்தை "எம்புசவோ" (emphysaoo) என்பதாகும். புதிய ஏற்பாட்டில் இந்த வசனத்தில் மட்டுமே நாம் இந்த வார்த்தையை வாசிக்கிறோம். பழைய ஏற்பாட்டில் ஆதி 2:7 ஆவது வசனத்தில் "தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார் மனுஷன் ஜீவாத்துமாவானான்" என்று வாசிக்கிறோம். இதில் பயன்படுத்தப் பட்டிருக்கும் எபிரெய வார்த்தை "நப்பக்" (naw-fakh') என்பதாகும். இதற்கு வேகமாக ஊதுதல் வல்லமையோடு ஊதுதல் என்று பொருள் செப்துவஜிந்த் பதிப்பில் இந்த வசனத்தில் "எம்புசவோ" (emphysaoo) என்னும் கிரேக்க வார்த்தையே பயன்படுத்தப் பட்டிருக்கிறது

ஊது (breathed) - ἐμφυσάω - emphysaoo - 1720

வினைச்சொல் - ஊது

ஊது (breathe) - נָפַח - naw-fakh' - 5301

வினைச்சொல் - விட்டுவிடு, ஊது ஊதிப்போடு, கொதி, பொங்கு, அவி, உபத்திரவப்படுத்து, திரணமாயெண்ணு

"எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும், எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும்" - இயேசு கிறிஸ்து தமது சீஷர்களுக்கு அதிகாரம் கொடுக்கிறார் இந்த அதிகாரம் மத்தேயு 18:18 ஆவது வசனத்தில் "பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்" என்று இயேசு கிறிஸ்து தமது சீஷர்களிடம் கூறியிருப்பது போன்று உள்ளது.

7. கண்டு விசுவாசித்த தோமா

யோவான் 20:24 இயேசு வந்திருந்த போது பன்னிருவரில் ஒருவனாகிய திதிமு என்னப்பட்ட தோமா என்பவன் அவர்களுடனேகூட இருக்கவில்லை

யோவான் 20:25 மற்றச் சீஷர்கள் கர்த்தரைக் கண்டோம் என்று அவனுடனே சொன்னார்கள் அதற்கு அவன், அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே என் விரலையிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன் என்றான்

"திதிமு என்னப்பட்ட தோமா" - யோவான் சுவிசேஷத்தில் மூன்றாம் முறையாக இவனுடைய பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறது (யோவான் 11:16; யோவான் 14:5 யோவான் 20:24) பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் ஒருவன் இவனுடைய மறுபெயர் திதிமு. (யோவான் 20:24; யோவான் 21:2, மத் 10:3 மாற்கு 3:18; லூக்கா 6:15, அப 1:13 இவனுக்குச் சந்தேகப்படும் தோமா "doubting Thomas" என்னும் மற்றொரு பெயர் உள்ளது. இவன் உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கவில்லை (யோவான் 20:25) இந்த அடிப்படையில் நாம் எல்லா அப்போஸ்தலர்களையும் சந்தேகப்படுகிறவர்கள் அவிசுவாசிகள் என்று அழைக்கலாம் (மத் 28:17; மாற்கு 16:11-14, லூக்கா 24:11,25,41; யோவான் 20:27 இயேசு கிறிஸ்து தமது சீஷர்களுக்குத் தரிசனம் கொடுத்தபோது, தோமா அங்கு இல்லை. மற்ற சகோதரர்கள் கூடி வந்திருக்கும் பொழுது தோமா அங்கில்லை. ஆகையினால் அவனால் இயேசு கிறிஸ்து வின் உயிர்த்தெழுந்த அற்புதத்தைக் காண முடியவில்லை இன்றைக்கும் அநேகர் சபை கூடுதலை விட்டுவிட்டு, சபைக்கு வராமல் இருப்பதினால் தேவனுடைய மகிமையைக் காணாதிருக்கிறார்கள் (எபி 10:25

20 அதிகாரம்

8. இயேசு பதினொரு பேருக்கு தரிசனம் தருகிறார்

யோவான் 20:26 மறுபடியும் எட்டுநாளைக்குப் பின்பு அவருடைய சீஷர்கள் வீட்டுக்குள்ளே இருந்தார்கள்; தோமாவும் அவர்களுடனேகூட இருந்தான்; கதவுகள் பூட்டப்பட்டிருந்தது. அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று, உங்களுக்குச் சமாதானம் என்றார்

யோவான் 20:27 பின்பு அவர் தோமாவை நோக்கி, நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப் பார், உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார்

யோவான் 20:28 தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக: என் ஆண்டவரே! என் தேவனே! என்றான்

"மறுபடியும் எட்டுநாளைக்குப்பின்பு அவருடைய சீஷர்கள் வீட்டுக்குள்ளே இருந்தார்கள்" வாரத்தின் முதலாம் நாளிலே சீஷர்கள் ஓரிடத்தில் கூடி இருந்தார்கள் (யோவான் 20:19) அந்த நாளுக்கு எட்டு நாளைக்குப் பின்பு இயேசு கிறிஸ்து ஞாயிற்றுக்கிழமை உயிர்த்தெழுந்தார். இது இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை. தோமா இந்த நாளில் சீஷர்கள் மத்தியிலே இருந்தான். அப்பொழுது, இயேசு கிறிஸ்து அவர்கள் நடுவிலே வந்து நின்றார். "உங்களுக்குச் சமாதானம்" (யோவான் 20:19,21,26) என்று கூறி இயேசுகிறிஸ்து மறுபடியும் தம்முடைய சீஷர்களை வாழ்த்தினார். இப்போதும் கதவுகள் பூட்டப்பட்டிருந்தது. இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த சரீரத்திற்கு பூட்டப்பட்டிருக்கும் கதவு ஒரு தடையல்ல (யோவான் 20:19) இயேசு கிறிஸ்து அவர்கள் நடுவிலே தோன்றி, அவர்களுக்கு உபதேசம் பண்ணிவிட்டு, அவர்கள் பார்வையிலிருந்து மறைந்துவிட்டார் (லூக்கா 24:31)

இதன் பின்பு, பெந்தெகொஸ்தே நாள் வருகிறது. இதுவரையிலும், இயேசு கிறிஸ்து இந்தப் பூமியிலே தமது சீஷர்களுக்கு உபதேசம் பண்ணிக் கொண்டு வந்தார் (அப் 1:3). 40 ஆம் நாளில் இயேசு கிறிஸ்து வானத்திற்கு உயர எடுத்துக் கொள்ளப் பட்டார் (அப் 1:11) இதன் பின்பு, 10 நாட்கள் கழித்து பெந்தெகொஸ்தே நாள் வருகிறது. இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த ஞாயிற்றுக் கிழமையிலிருந்து 50 நாட்கள் கழித்து, பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தது. (அப் 2:1; லேவி 23:15-16) முதலாவது உயிர்த்தெழுந்த ஞாயிற்றுக் கிழமை பற்றியும் எட்டு நாளைக்குப் பின்பு வந்த ஞாயிற்றுக்கிழமை பற்றியும் பரிசுத்த வேதாகமத்திலே குறிப்பு உள்ளது. இதற்கு இடையிலுள்ள ஞாயிற்றுக்கிழமைகளில் என்ன நடைபெற்றன என்று நமக்குத் தெரியவில்லை. இயேசு கிறிஸ்து இந்த நாட்களில் தமது சீஷர்களுக்கு உபதேசம் பண்ணியிருந்திருக்கலாம். (யோவான் 20:19,26)

"தோமாவும் அவர்களுடனேகூட இருந்தான்" - சீஷர்களுடைய முதலாவது கூடுகையில் தோமா அவர்களோடு இல்லை (யோவான் 20:24) உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து அவர்களுக்குத் தரிசனமானதை தோமா கேள்விப்பட்டான். அவரை எப்படியாவது பார்த்துவிட வேண்டுமென்று தீர்மானம்பண்ணி அடுத்த ஞாயிற்றுக் கிழமையில் சீஷர்கள் கூடியிருக்கும் இடத்தில் தோமாவும் அவர்களுடனேகூட இருந்தான். அவிசுவாசியாக இருந்த தோமாவின் அவிசுவாசத்தை இயேசுகிறிஸ்து அகற்றினார் (யோவான் 20:27-28)

"தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக: என் ஆண்டவரே! என் தேவனே! என்றான்" - இவை சாதாரண வார்த்தைகளல்ல. இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்திற்கு தோமாவின் வார்த்தைகள் மறுக்க முடியாத சாட்சியாகும். தோமா தன் கையை நீட்டி, இயேசு கிறிஸ்துவின் விலாவிலே போட்டானா என்று தெரியவில்லை. ஆனால் அவனுடைய ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டிருக்கிறது. அவன் இயேசு கிறிஸ்துவை தன் ஆண்டவராகவும், தன் தேவனாகவும் காண்கிறான். தோமாவே, இயேசு கிறிஸ்துவை முதன் முதலாகத் தேவன் என்று அழைத்தவன். பழைய ஏற்பாட்டுக்கால தீர்க்கதரிசிகள் இயேசுவைத் தேவன் என்று முன்னறிவித்திருக்கிறார்கள் (ஏசா 9:6,7; சங் 45:6,7; யோவான் 1:1,2; யோவான் 5:17,47; யோவான் 10:33-36; அப் 20:28; பிலி 2:5-11; கொலோ 1:15-18; எபி 1:8,9)

20 அதிகாரம்

9. காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்

யோவான் 20:29 அதற்கு இயேசு, தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்.

"அதற்கு இயேசு, தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்" - இயேசு கிறிஸ்துவைக் கண்டவர்களுக்கு விசேஷித்த ஆசீர்வாதம் உண்டு என்று வேதத்தில் எங்கும் கூறப்படவில்லை. இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்.

10. யோவான் எழுதின சுவிசேஷத்தின் நோக்கம்

யோவான் 20:30 இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார்.

யோவான் 20:31 இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது.

"இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார்" - இந்த வசனத்தில் வேறு அநேக அற்புதங்கள் என்பது யோவான் 20:30, 21:25 ஆகிய வசனங்களில் காணப்படும் அடையாளமாகவோ அல்லது சுவிசேஷப் புஸ்தகங்களை நாம் வாசிக்கும் அநேக அடையாளங்களாகவோ இருக்கலாம் (யோவான் 21:25; அப் 1:3; எபி 2:3-4; மாற்கு 16:15-20).

"இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்கள்" - இந்த வசனத்தைப் பலர் தவறுதலாக வியாக்கியானம் பண்ணுகிறார்கள். தள்ளுபடி ஆகமங்களையும் (apocryphal gospels) பரிசுத்த ஆவியானவர் ஏவியிருக்கிறார் என்று இதன் அடிப்படையில் கூறுகிறார்கள்.

"இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கிறது" இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன். அவரே வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்த மேசியா. விசுவாசத்தின் மூலமாக நமக்குப் பூரண இரட்சிப்பு உண்டாகும். சுவிசேஷத்தில் கூறப்பட்டிருக்கிற எல்லா ஆசீர்வாதங்களும் நமக்குக் கிடைக்கும். நாம் இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதற்காகவும், அவருடைய ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும் இந்தச் சுவிசேஷப் புஸ்தகம் எழுதப்பட்டிருக்கிறது.

21 அதிகாரம்

11. இயேசு தமது சீஷர்களுக்கு மறுபடியும் தம்மை வெளிப் படுத்துகிறார்

(1) ஒரு மீனும் அகப்படவில்லை

யோவான் 21:1 இவைகளுக்குப்பின்பு இயேசு திபேரியா கடற்கரையிலே மறுபடியும் சீஷருக்குத் தம்மை வெளிப்படுத்தினார்; வெளிப்படுத்தின விவரமாவது.

யோவான் 21:2 சீமோன்பேதுருவும் திதிமு என்னப்பட்ட தோமாவும், கலி லேயா நாட்டிலுள்ள கானா ஊரானாகிய நாத்தான்வேலும் செபெதேயுவின் குமாரரும் அவருடைய சீஷரில் வேறு இரண்டுபேரும் கூடியிருக்கும்போது.

யோவான் 21:3 சீமோன்பேதுரு மற்றவர்களை நோக்கி: மீன்பிடிக்கப் போகிறேன் என்றான். அதற்கு அவர்கள்: நாங்களும் உம்முடனேகூட வருகிறோம் என்றார்கள். அவர்கள் புறப்பட்டுப்போய், உடனே படவேறி னார்கள். அந்த இராத்திரியிலே அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை.

"இவைகளுக்குப்பின்பு" - யோவான் இந்த சுவிசேஷத்தில் "இவைகளுக்குப் பின்பு" என்னும் வாக்கியத்தைப் பல இடங்களில் பயன்படுத்தியிருக்கிறார். அவற்றில் இது கடைசித் தடவையாகும். (யோவான் 5:1)

"இயேசு திபேரியா கடற்கரையிலே மறுபடியும் சீஷருக்குத் தம்மை வெளிப்படுத்தினார்" - இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு, அவர் தமது மகிமையையும், வல்லமையையும் வெளிப்படுத்தினார். தாம் வாக்குத்தத்தம் பண்ணிய பிரகாரமாக இம்முறை கலிலேயாவிலே தம்மை வெளிப்படுத்துகிறார். (மத் 28:7)

வெளிப்படுத்து (shewed)

φανερόω - phaneroo - 5319

வினைச்சொல் - வெளியரங்கமாக்கு, வெளிப்படுத்து, தரிசனமாகு, விளங்கப்பண்ணு, தோன்று

"சீமோன்பேதுருவும், திதிமு என்னப்பட்ட தோமாவும், கலிலேயா நாட்டிலுள்ள கானா ஊரானாகிய நாத்தான்வேலும் செபெதேயுவின் குமாரரும் அவருடைய சீஷரில் வேறு இரண்டுபேரும் கூடியிருக்கும்போது சீமோன் பேதுரு மற்றவர்களை நோக்கி: மீன்பிடிக்கப் போகிறேன் என்றான். அதற்கு அவர்கள்: நாங்களும் உம்முடனேகூட வருகிறோம் என்றார்கள்" - இயேசு கிறிஸ்துவின் ஏழு சீஷர்கள் மீன்பிடிக்கப் போகிறார்கள். இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு, தங்களுடைய பிழைப்பிற்காக இவர்கள் மீன்பிடிக்கச் சென்றார்களா அல்லது பொழுதுபோக்கிற்காக மீன்பிடிக்கச் சென்றார்களா என்பது தெரியவில்லை. (லூக்கா 8:3)

"அந்த இராத்திரியிலே அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை" - இதற்கு முந்திய முறை இவர்கள் மீன்பிடிக்கச் சென்றபோதும், அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை. இப்போதும் அதேபோன்ற நிலைமையே சீஷர்களுக்கு வருகிறது. இரண்டு இயேசு கிறிஸ்து அவர்களுக்குத் திரளான மீன்கள் கிடைப்பதற்கு உதவி புரிகிறார். தம்மை மேசியாவாக வெளிப்படுத்துகிறார். இரண்டு இடங்களிலும் அவர்களைப் பிரசங்கம் பண்ணுமாறு அழைக்கிறார். (லூக்கா 5:1-11; யோவான் 21:1-20)

"ஒன்றும் பிடிக்கவில்லை" - இந்த வாக்கியத்தில் "பிடித்தல்" என்பதன் கிரேக்க வார்த்தை "பியாஸோ" (piazoo) என்பதாகும். யோவான் மட்டுமே இந்தச் சுவிசேஷத்தில் இந்த வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார். (யோவான் 7:30, 32, 44; யோவான் 8:20; யோவான் 10:39; யோவான் 11:57; யோவான் 21:10) மனுஷரைப் பிடிப்பதற்கு இந்த வார்த்தை மூன்று இடங்களில் பயன் படுத்தப்பட்டி ருக்கிறது. (அப் 12:4; 2கொரி 11:32; வெளி 21:19) மனுஷனைப் பிடித்து தூக்கிவிடு வதற்கு இந்த வார்த்தை ஒரு இடத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (அப் 3:7)

21 அதிகாரம்

பிடி (caught) πιάζω piazoo 4084

வினைச்சொல் – பிடி, பிடித்துக்கொள்

(2) திரளான மீன்கள் அகப்படுகிறது – (லூக் 5:1-11)

யோவான் 21:4 விடியற்காலமான போது, இயேசு கரையிலே நின்றார்; அவரை இயேசு என்று சீஷர்கள் அறியாதிருந்தார்கள்.

யோவான் 21:5 இயேசு அவர்களை நோக்கி: பிள்ளைகளே, புசிக்கிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா என்றார். அதற்கு அவர்கள்: ஒன்றுமில்லை என்றார்கள்.

யோவான் 21:6 அப்பொழுது அவர்: நீங்கள் படவுக்கு வலதுபுறமாக வலையைப் போடுங்கள், அப்பொழுது உங்களுக்கு அகப்படும் என்றார். அப்படியே அவர்கள் போட்டு, திரளான மீன்கள் அகப்பட்டதினால் அதை இழுக்க மாட்டாதிருந்தார்கள்.

"விடியற்காலமானபோது, இயேசு கரையிலே நின்றார்; அவரை இயேசு என்று சீஷர்கள் அறியாதிருந் தார்கள்" – இருட்டாக இருந்ததி னாலோ அல்லது அவர்களுக்கு இடையிலுள்ள தூரம் அதிகமாக இருந்ததினாலோ அல்லது இயேசு கிறிஸ்துவின் ரூபம் மாறியிருந்த தினாலோ அவரை இயேசு என்று சீஷர்கள் அறியாதிருந்தார்கள் (மாற்கு 16:12).

"பிள்ளைகளே, புசிக்கிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா" என்று இயேசு அவர்களிடம் கேட்டார். இந்த வசனத்தில் "பிள்ளைகளே" என்பதன் கிரேக்க வார்த்தை "பைதியோன் (paidion) என்பதாகும். இதற்கு சிறுகுழந்தை, விளையாட்டுப் பிள்ளை என்று பொருள். இயேசு கிறிஸ்து தமது சீஷர்களைச் சிறுபிள்ளைகளாகப் பாவிக்கிறார்.

"ஏதாகிலும் உண்டா" என்னும் வாக்கியம் மூலபாஷையில் "ஏதாகிலும் மீன் உண்டா" என்றுள்ளது. இதன் கிரேக்க வார்த்தை "பிரோஸ்பகியோன்" (prosphagion) இதற்கு மீன் என்றோ அல்லது அப்பத்தோடு தொட்டுச் சாப்பிடும் உணவு என்றோ பொருளாகும். ஒரு வேளை ஆண்டவர் கடற்கரையில் மீன்வாங்குகிறவர் போல நின்றிருக்கலாம்.

பிள்ளைகள் (Children) παιδίον - paidion - 3813

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் – பிள்ளை, பாலகன், சிறுபிள்ளை, குழந்தை

மீன் (fish) - προσφάγιον - prosphagion - 4371

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் – [illegible]

(3) இயேசுவிற்கு அன்பாயிருந்த சீஷன்

யோவான் 21:7 ஆதலால் இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன் பேதுருவைப் பார்த்து: அவர் கர்த்தர் என்றான். அவர் கர்த்தர் என்று சீமோன்பேதுரு கேட்டவுடனே, தான் வஸ்திரமில்லாத வனாயிருந்தபடியினால், தன் மேற் சட்டையைக் கட்டிக்கொண்டு கடலிலே குதித்தான்.

"இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன் பேதுருவைப் பார்த்து: அவர் கர்த்தர் என்றான்" – யோவான் பேதுருவிடம் கூறுகிறான் (யோவான் 20:4).

கட்டிக்கொள் (girt) - διαζώννυμι - diazoonnymi - 1241

வினைச்சொல் – கட்டிக்கொள் (to wrap around) யோவான் 13:4-5; யோவான் 21:7

"தான் வஸ்திரமில்லாதவனாயிருந்த படியினால்" அவன் சிறிய கால்சட்டை மட்டும் அணிந்திருக்கலாம். (யோவான் 19:23) அவன் கடலில் குதித்தான். ஒருவேளை படகைக் கரைக்கு இழுத்துச் செல்வதற்கு உதவியாக அவன் கடலில் குதித்திருக்கலாம்.

21 அதிகாரம்

(4) சீஷர்கள் மீன்களுள்ள வலையை கரைக்கு இழுத்து வருகிறார்கள்

யோவான் 21:8 மற்றச் சீஷர்கள் கரைக்கு ஏறக்குறைய இருநூறுமுழத் தூரத்தில் இருந்தபடியினால் படவிலிருந்துகொண்டே மீன்களுள்ள வலையை இழுத்துக் கொண்டு வந்தார்கள்

யோவான் 21:9 அவர்கள் கரையிலே வந்திறங்கினபோது, கரிநெருப்பு போட்டிருக்கிறதையும், அதின்மேல் மீன் வைத்திருக்கிறதையும், அப்பத்தையும் கண்டார்கள்

யோவான் 21:10 இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் இப்பொழுது பிடித்த மீன்களில் சிலவற்றைக் கொண்டு வாருங்கள் என்றார்

யோவான் 21:11 சீமோன்பேதுரு படவில் ஏறி, நூற்றைம்பத்துமூன்று பெரிய மீன்களால் நிறைந்த வலையைக் கரையில் இழுத்தான். இத்தனை மீன்கள் இருந்தும் வலை கிழியவில்லை

யோவான் 21:12 இயேசு அவர்களை நோக்கி: வாருங்கள், போஜனம் பண்ணுங்கள் என்றார். அவரைக் கர்த்தரென்று சீஷர்கள் அறிந்தபடியினால் அவர்களில் ஒருவனும்: நீர் யார் என்று கேட்கத் துணியவில்லை

யோவான் 21:13 அப்பொழுது இயேசு வந்து, அப்பத்தையும் மீனையும் எடுத்து, அவர்களுக்குக் கொடுத்தார்

யோவான் 21:14 இயேசு மரித்தோரிலிருந்தெழுந்த பின்பு தம்முடைய சீஷருக்கு அருளின தரிசனங்களில் இது மூன்றாவது தரிசனம்

"இருநூறுமுழத் தூரம்" - கடற்கரையிலிருந்து 134 மீட்டர் தூரம்.

"அவர்கள் கரையிலே வந்திறங்கின போது, கரிநெருப்புப் போட்டிருக்கிறதையும், அதின் மேல் மீன் வைத்திருக்கிறதையும், அப்பத்தையும் கண்டார்கள்" - தாங்கள் திரளான மீன்களைப் பிடித்ததுபோலவே இங்கு வேறொரு அற்புதம் நடைபெறுகிறது. கர்த்தர் தங்களுடைய தேவைகளையெல்லாம் சந்திக்கிறார். அவர்கள் மறுபடியும் கடலுக்குச் சென்று மீன்பிடித்துத் தங்களுடைய ஜீவனத்தை நடத்த வேண்டிய கட்டாயத்தில் இல்லை. கர்த்தருக்காக அவர்கள் ஊழியம் செய்யும்போது கர்த்தர் அவர்களைப் போஷிப்பார்

"இயேசு அவர்களை நோக்கி: வாருங்கள், போஜனம்பண்ணுங்கள்" - இந்த வசனத்தில் "போஜனம்பண்ணு" என்பதன் கிரேக்க வார்த்தை "அரிஸ்தாயோ" (aristaoo) என்பதாகும். இதற்கு காலைபோஜனம் சாப்பிடுதல் என்று பொருள் (லூக்கா 11:37). இரவுபோஜனம் சாப்பிடுவதற்கு கிரேக்க மொழியில் "தெய்பனோன்" (deipnon) என்னும் வார்த்தை பயன்படுத்தப்படும். (மாற்கு 6:21; லூக்கா 14:12-24; யோவான் 12:2; யோவான் 13:2,4; யோவான் 21:20; 1கொரி 11:20-21; வெளி 19:9,17). இயேசு கிறிஸ்து அவர்களோடு போஜனம் பண்ணினார். உயிர்த்தெழுந்தவர்கள் போஜனம் பண்ணுவார்கள் (லூக்கா 24:42-43). தேவனும், தேவதூதர்களும் போஜனம் பண்ணுவார்கள் (ஆதி 18; யாத் 24:9-11).

போஜனம் பண்ணு (dine) - ἀριστάω - aristaoo - 709

வினைச்சொல் - போஜனம் பண்ணு, காலைபோஜனம் பண்ணு (eat the morning meal)

போஜனம் (supper) - δεῖπνον - deipnon - 1173

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - விருந்து, பந்தி, போஜனம், இரவுபோஜனம்

"இயேசு மரித்தோரிலிருந்தெழுந்த பின்பு தம்முடைய சீஷருக்கு அருளின தரிசனங்களில் இது மூன்றாவது தரிசனம்" அப்போஸ்தலர்களில் அநேகருக்கு இயேசு கிறிஸ்து மூன்று முறை தரிசனம் கொடுத்ததாக இந்த வசனத்தில் நாம் வாசிக்கிறோம். (யோவான் 20:19,26; யோவான் 21:1-14) இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு பன்னிரெண்டு தடவைகள் தரிசனம் தந்திருக்கிறார்

21 அதிகாரம்

இயேசு கிறிஸ்துவின் தரிசனங்கள்

1 மகதலேனா மரியாளுக்கு (மாற்கு 16:9 யோவான் 20:15-16

2 கல்லறையிலிருந்த ஸ்திரீகளுக்கு மத் 28:9

3 எம்மாவுக்குச் செல்லும் சாலையில் இரண்டு சீஷர்களுக்கு லூக்கா 24:13-31

4 பேதுருவிற்கு (லூக்கா 24:34, கொரி 15:5

5 பத்து அப்போஸ்தலர்களுக்கு யோவான் 20:19

6 பதினொரு அப்போஸ்தலர்களுக்கு யோவான் 20:26

7 ஏழு அப்போஸ்தலர்களுக்கு (யோவான் 21:1-22) இரண்டாம் ஞாயிறுக் கிழமைக்குப் பின்பு இந்தத் தரிசனம் உண்டாயிற்று.

8 கலிலேயாவில் ஒரு மலையில் பதினொரு அப்போஸ்தலர்களுக்கு (மத் 28:16

9 மத்தியாவையும் சேர்த்து பன்னிரெண்டு அப்போஸ்தலர்களுக்கு (1கொரி 15:5, அப் 1:26)

10 ஐநூறு சகோதரர்களுக்கு (1கொரி 15:6

11 இயேசு கிறிஸ்துவின் சகோதரனாகிய யாக்கோபிற்கு (1கொரி 15:7; கலா 1:19

12 எல்லா அப்போஸ்தலர்களுக்கும் (1கொரி 15:7; மாற்கு 16:19-20; லூக்கா 24:50-53, அப் 1:3-12,26)

12. பேதுருவின் மூன்று அம்ச ஊழியம்

யோவான் 21:15 அவர்கள் போஜனம் பண்ணின பின்பு, இயேசு சீமோன் பேதுருவை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன், ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அவர்: என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக என்றார்.

யோவான் 21:16 இரண்டாந்தரம் அவர் அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன், ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அவர்: என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார்.

யோவான் 21:17 மூன்றாந்தரம் அவர் அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா என்றார். என்னை நேசிக்கிறாயா என்று அவர் மூன்றாந்தரம் தன்னைக் கேட்டபடியினாலே பேதுரு துக்கப்பட்டு: ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர் என்றான். இயேசு: என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார்.

21 அதிகாரம்

"அவர்கள் போஜனம்பண்ணினபின்பு, இயேசு சீமோன்பேதுருவை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார்" - பேதுருவை இயேசு எப்போதும் சீமோனே என்றே அழைப்பார் லூக்கா 22:34 ஆவது வசனத்தில் மட்டும் பேதுருவே என்று கூறுகிறார் மற்ற சீஷர்களைவிட பேதுரு இயேசு கிறிஸ்து விடத்தில் அதிக அன்பாக இருப்பதாக பெருமைபட்டுக் கொண்டான் ஆகையினால் இயேசு அவனிடம இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில அன்பாயிருக்கிறாயா என்றார் (மத் 26:33-35) இயேசுகிறிஸ்து மூன்று தடவை பேதுருவிடம் என்மீது அன்பாக இருக்கிறாயா என்று கேட்கிறார் முதல இரண்டு முறை கேட்கும்போது "நீ என்னிடத்தில அன்பாய இருக்கிறாயா" என்று கேட்கிறார் இதறகான கிரேகக வார்த்தை "அகாபே" (agapao) என்பதாகும். இதறகு பரிபூரணமான அன்பு என்று பொருள் பேதுரு இயேசு கிறிஸ்துவிறகுப பதில கூறும்போது "ஆம் ஆண்டவரே உமமை நேசக்கிறேன" என்று கூறுகிறான நேசக்கிறேன என்பதன கிரேகக வார்த்தை "பிலேயோ" (phileo) என்பதாகும் இதறகு சகோதர சிநேகம், நட்பு என்று பொருள மூன்றாம் முறையாக இயேசு கிறிஸ்து பேதுருவிடம் கேட்கும்போது என்னிடத்தில அன்பாயிருக்கிறாயா என்று கேட்பதற்குப பதிலாக "என்னை நேசக்கிறாயா" என்று கேட்கிறார அதாவது இயேசு கிறிஸது இரண்டுமுறை அகாபே (agapao) என்னும் சொல்லைப் பயனபடுத்தி விட்டு, மூன்றாம் முறையாக பிலேயோ (phileo) என்னும் சொலலைப பயனபடுத்துகிறார இதன பொருள் என்னவெனில பேதுரு, என்மீது நீ தெய்வீக அன்பு வைத்திருக்கிறாயா" என்று இரண்டு முறை கேட்டுவிட்டு, பின்பு மூன்றாம் முறையாக "நீ என்மீது சகோதர அன்பாவது வைத்திருக்கிறாயா" என்று கேட்கிறார் இயேசு கிறிஸ்து மூன்றாம் முறையாக இந்த வார்த்தையைப் பயன படுத்தியதினால பேதுரு மிகுந்த துக்கபபட்டு, "ஆண்டவரே நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர்" என்று தன்னைத் தாழ்த்துகிறான்

அன்பாயிரு (lovest) - ἀγαπάω - agavaoo - 25

வினைச்சொல் - அன்பு செலுத்துதல், சிநேகித்தல், அன்பு கூருதல், அன்பாயிரு

(அ) தேவன் மனிதனிடம் காட்டும் அன்பு யோவா 3:16

(ஆ) கிறிஸ்து தனி மனிதனிடம் காட்டும அன்பு மாறகு 10:21

(இ) ஒரு மனிதன் மற்ற மனிதர்களிடம் காட்டும அன்பு 2கொரி. 12:15

(ஈ) மனிதர் உலகப்பிரகாரமான பொருட்களிடம் காட்டும் அன்பு லூக் 11:43. இந்தச் சொல் பொதுவாக தன்னலம் கருதாத நீதியான கிறிஸதவ அன்பைக் குறிக்கும்

சிநேகி (to like) - φιλέω - phileoo - 5368

வினைசசொல - விரும்பு, நேசி, முத்தசெய், அன்பாயிரு, சிநேகி, அன்புகூர்

"என ஆட்டுககுட்டிகளை மேய்ப்பாயாக" மேயததல என்பதன கிரேக்க வார்த்தை "போஸ்கோ" (boskoo) என்பதாகும் இதறகு இயேசு கிறிஸதுவின பிள்ளைகளை வழிநடதத வேண்டும் பாதுகாக்க வேண்டும் பராமரிக்க வேண்டும் ஆளுகை செய்ய வேண்டும அவர்களுககு நலல மேய்ப்பனாக இருகக வேண்டும் என்பது பொருள்

ஆட்டுககுட்டிகள என்பதன கிரேக்க வார்த்தை "ஆர்னியோன" (arnion) என்பதாகும். இந்த வசனத்திலும், வெளிப்படுத்தின விசேஷத்தில் 27 இடங்களிலும இந்த வார்த்தை பயன் படுத்தப்பட்டிருக்கிறது. ஆட்டுக்குட்டி என்பது பொதுவாக இயேசு கிறிஸ்துவையே குறிக்கும். வெளி 13:11 ஆவது வசனம் மட்டும பூமியிலிருந்து எழும்பிய மிருகத்தைக் குறிக்கிறது. ஆட்டுக்குட்டிக்கு பயனபடுத்தப் பட்டிருக்கும் வேறொரு கிரேக்க வார்த்தை "அம்னோஸ்" (amnos) என்பதாகும். (யோவான் 1:29,36; அப் 8:32, 1பேதுரு 1:19

யோவான் – தொகுப்புரை

21 அதிகாரம்

மேய் (Feed) - **βόσκω** - **boskoo** - 1006

வினைச்சொல் - மேய்ந்து கொண்டிரு, மேய

ஆட்டுக்குட்டி (lambs) - **ἀρνίον** - **arnion** - 721

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - ஆட்டுக்குட்டி, ஆட்டுக்குட்டியானவர்

ஆட்டுக்குட்டி (lamb) - **ἀμνός** - **amnos** - 286

ஆண்பால்பெயர்ச்சொல் - ஆட்டுக்குட்டி

"என் ஆடுகளை மேய்ப்பாயாக" - இந்த வாக்கியத்தில் மேய்ப்பாயாக என்பதன் கிரேக்கச் சொல் "போய்மாய்னோ" **(poimainoo)** என்பதாகும். பதினொரு இடங்களில் இந்த வார்த்தை ஆளுகைசெய் என்றும், **(rule)** (மத் 2:6; வெளி 2:27 வெளி 12:5; வெளி 19:15) மற்ற இடங்களில் போஜனம் கொடு அல்லது மேய் **(feed)** (யோவான் 21:16, லூக்கா 17:7 அப் 20:28, 1கொரி 9:7 1பேதுரு 5:2, யூதா 1:12; வெளி 7:17) என்றும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

மேய் (Feed) - **ποιμαίνω** - **poimainoo** - 4165

வினைச்சொல் - மேய், அரசாளு, ஆளு

இந்த வசனத்தில் ஆடுகள் என்பதன் கிரேக்க வார்த்தை "ப்ரோபேஷன்" **(probation)** என்பதாகும். இதை பலவிதமாக மொழிபெயர்க்கலாம். ஆடுகள் **(sheep)** (மத் 12:11-12; மத் 18:12-13 லூக்கா 15:4-6, யோவான் 2:14-15) இயேசுகிறிஸ்து **(figuratively of Christ)** அப் 8:32), இரட்சிக்கப்படாத ஜனங்கள் **(lost people)** (மத் 9:36; மத் 10:6, மத் 15:24, 1பேதுரு 2:25); இரட்சிக்கப்பட்ட ஜனங்கள் **(saved people)** (மத் 10:16 மத் 26:31; யோவான் 10:1-27, யோவான் 21:16-17, ரோமர் 8:36 எபி 13:20), பொதுவான ஜனங்கள் **(people in general)** (மத் 25:31-46)

ஆடு (sheep) - **προβάτιον** - **probation** 4263

பால்வேறுபாடற்ற பெயர்ச்சொல் - ஆடு

"மூன்றாந்தரம்" - பேதுரு ஏற்கெனவே சேவல் கூவுகிறதற்கு முன்னே இயேசு கிறிஸ்துவை மூன்று முறை மறுதலித்தவன் ஆகையினால் இயேசு கிறிஸ்து இப்பொழுது அவனை மூன்று முறை விசுவாச அறிக்கை பண்ண வைக்கிறார்

அவர் மூன்றாந்தரம் தன்னைக் கேட்டபடியினாலே, பேதுரு துக்கப்பட்டான் - துக்கப்படுதல் என்பதன் கிரேக்க வார்த்தை லூபேயோ (lupeo) என்பதாகும் இது பலவேறு பொருட்களில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. **"grieve"** (மாற்கு 10:22; யோவான் 21:17, ரோமர் 14:15; 2கொரி 2:4-5; எபே 4:30 **"sorry" and "sorrowful"** (மத் 14:9 மத் 17:23; மத் 18:31, மத் 19:22, மத் 26:22,37; மாற்கு 14:19, யோவான் 16:20 2கொரி 2:2; 2கொரி 6:10 2கொரி 7:8-11 1தெச 4:13); **"be in heaviness"** (1பேதுரு 1:6)

துக்கப்படு (grieved) - **λυπέω** - **lypeoo** - 3076

வினைச்சொல் - துக்கமடை துக்கப்படு **(to make sorrowful, to affect with sadness, cause grief, make uneasy)**

"ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர் நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர்" - இயேசு கிறிஸ்துவிடம் பேதுரு மிகுந்த தாழ்மையோடு தன்னைப் பற்றி அறிக்கையிடுகிறான் அவனிடத்தில் காணப்பட்ட பெருமையெல்லாம் மறைந்துபோயிற்று. இயேசு கிறிஸ்து அவனிடம் இப்படிப்பட்ட தாழ்மையைத்தான் எதிர்பார்க்கிறார். அவனுக்குத் தன்னைப் பற்றித் தெரியவில்லை ஆனால் தான் இயேசு கிறிஸ்துவை நேசிப்பதை பேதுரு அறிந்திருக்கிறான் (யோவான் 21:17

மேய் (Feed) - **βόσκω** - **boskoo** 1006

வினைச்சொல் - மேய்ந்து கொண்டிரு, மேய் (யோவான் 21:15

21 அதிகாரம்

13. பேதுருவின் மரணத்தைக் குறித்து தீர்க்கதரிசனம் - (2பேதுரு 1:14)

யோவான் 21:18 நீ இளவயதுள்ளவனாயிருந்த போது உன்னை நீயே அரைகட்டிக்கொண்டு, உனக்கு இஷ்டமான இடங்களிலே நடந்து திரிந்தாய்; நீ முதிர் வயதுள்ளவனாகும்போது உன் கைகளை நீட்டுவாய்; வேறொருவன் உன் அரையைக் கட்டி, உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு உன்னைக் கொண்டு போவான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

யோவான் 21:19 இன்னவிதமான மரணத்தினாலே அவன் தேவனை மகிமைப்படுத்தப்போகிறானென்பதைக் குறிக்கும்படியாக இப்படிச் சொன்னார். அவர் இதைச் சொல்லியபின்பு, அவனை நோக்கி: என்னைப் பின்பற்றிவா என்றார்.

மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" யோவான் இந்தச் சுவிசேஷத்தில் இந்த வாக்கியத்தை 25 இடங்களில் பயன்படுத்தியிருக்கிறார். அவற்றில் இது கடைசித் தடவையாகும் (யோவான் 1:51)

தீர்க்கதரிசன எண் - 43

நீ இளவயதுள்ளவனாயிருந்தபோது உன்னை நீயே அரைகட்டிக்கொண்டு, உனக்கு இஷ்டமான இடங்களிலே நடந்து திரிந்தாய், நீ முதிர் வயதுள்ளவனாகும் போது உன் கைகளை நீட்டுவாய்; வேறொருவன் உன் அரையைக் கட்டி உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு உன்னைக் கொண்டுபோவான்" (யோவான் 21:18) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இன்னவிதமான மரணத்தினாலே அவன் தேவனை மகிமைப் படுத்தப்போகிறானென்பதைக் குறிக்கும் படியாக இப்படிச் சொன்னார் (யோவான் 21:19).

இந்த வாக்கியம் பேதுரு மரணமடைந்த பின்பு எழுதப்பட்டது. வரலாற்று ஆசிரியர்கள் பேதுருவைப் பற்றி எழுதும்போது, அவனுடைய விருப்பத்தின் பிரகாரம் அவனைத் தலைகீழாகத் தொங்கவிட்டு சிலுவையில் அறைந்தார்கள் என்று எழுதியிருக்கிறார்கள். தன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் போன்று சிலுவையில் நேராக அறைந்து தொங்கவிடுவதற்கு தான் பாக்கியவான் அல்ல என்று பேதுரு நினைத்தான். தன்னைச் சிலுவையில் தலைகீழாக அறையுமாறு அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டான். அவனுடைய வேண்டு கோளின் பிரகாரம் அவனைச் சிலுவையில் தலைகீழாக அறைந்து கொன்றார்கள்.

"இளவயதுள்ளவன்" - இதன் கிரேக்க வார்த்தை "நியோஸ்" (neos) என்பதாகும். இதற்கு முப்பது வயதிற்குட்பட்டவன் என்று பொருள். இந்த வார்த்தையினாலும், யோவான் கல்லறைக்குப் பேதுருவை முந்தி ஓடினான் (யோவான் 20:4) என்னும் வார்த்தையினாலும் சீமோன்பேதுரு நடுவயது மனுஷன் (middle) aged man (45 முதல் 50 வயது வரை) என்பது தெரியவருகிறது.

இளவயது (young) - νεος - neos - 3501

பெயரடை - புது, இளைய, வாலிபரான, புதிதான, புதிய, இளவயதுள்ள

"உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு உன்னைக் கொண்டுபோவான்" கொண்டுபோ என்பதன் கிரேக்க வார்த்தை "பெரோ" (pheroo) என்பதாகும். பேதுரு மரிக்கும் வேளையை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. அவன் விரும்பாத இடத்திற்கு அவனை அழைத்துச் செல்வார்கள். அதாவது அவனுடைய மரணத்திற்கும் கல்லறைக்கும் அவனைக் கொண்டுபோவார்கள்.

கொண்டுபோ (carry) - φέρω pheroo - 5342

வினைச்சொல் - கொண்டு வா, கொண்டுபோ, சுமந்து கொள், பலன் தா, கொடு, சாட்டு, நீட்டு, அடி, தாங்கு, பொறுமையாயிரு, உண்டாக்கு, அளி, ஏவு, சகி (lead, carry, bear, or bring forth) (யோவான் 2:8; யோவான் 12:24, யோவான் 15:2-8,16; யோவான் 21:18)

யோவான் – தொகுப்புரை

21 அதிகாரம்

"என்னைப் பின்பற்றிவா" – இயேசு கிறிஸ்து இந்த வார்த்தைகளையெல்லாம் சொல்லிய பின்பு, பேதுருவைப் பார்த்து 'என்னைப் பின்பற்றிவா' என்று கூறுகிறார். இதற்கான கிரேக்க வார்த்தை அகோலோதெயோ (akolouthuoo) என்பதாகும். மரணம் வந்தாலும் என்னைப் பின்பற்ற வேண்டும் என்று ஒரு தலைவன் கூறுவதைப் போன்றது. வேலைக்காரன் தன் எஜமானனையும், போர்வீரன் தன் படைத்தலைவனையும், மாணவன் தன் ஆசிரியரையும் மரணபரியந்தம் பின்பற்றுவார்கள். அதேபோன்று என்னைப் பின்பற்றிவா என்று இயேசு கிறிஸ்து பேதுருவை அழைக்கிறார் (மத் 8:19; மத் 9:9; மத் 19:27; யோவான் 12:26; யோவான் 21:22). இயேசு கிறிஸ்து தன்னிடம் இவ்வாறு கூறுவதினால் பேதுரு மகிழ்ச்சியடைந்திருப்பான். தான் இனிமேல் இயேசுவை மறுதலிக்கப் போவதில்லை என்று அவர் தன்னை நம்புவதாக உறுதிபண்ணிக் கொள்வான். இரண்டு இடங்களில் இயேசு கிறிஸ்து பேதுரு தம்மைப் பின்பற்றி வருமாறு கட்டளையிட்டிருக்கிறார் (யோவான் 21:19,22).

பின்பற்று (Follow) - ἀκολουθέω - akolouthuoo - 190

வினைச்சொல் – பின்செல், பின்பற்று, பின்னே செய், பின்னே போ

14. பேதுரு யோவானைப் பற்றி கேட்கிறான்

யோவான் 21:20 பேதுரு திரும்பிப்பார்த்து, இயேசுவுக்கு அன்பாயிருந்தவனும், இராபோஜனம் பண்ணுகையில் அவர் மார்பிலே சாய்ந்து: ஆண்டவரே, உம்மைக் காட்டிக்கொடுக்கிறவன் யார் என்று கேட்டவனுமாகிய சீஷன் பின்னே வருகிறதைக் கண்டான்.

யோவான் 21:21 அவனைக் கண்டு பேதுரு இயேசுவை நோக்கி: ஆண்டவரே, இவன் காரியம் என்ன என்றான்.

யோவான் 21:22 அதற்கு இயேசு: நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால், உனக்கென்ன, நீ என்னைப் பின்பற்றிவா என்றார்.

யோவான் 21:23 ஆகையால் அந்தச் சீஷன் மரிப்பதில்லையென்கிற பேச்சு சகோதரருக்குள்ளே பரம்பிற்று. ஆனாலும், அவன் மரிப்பதில்லையென்று இயேசு சொல்லாமல், நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால் உனக்கென்னவென்று சொன்னார்.

"இயேசுவுக்கு அன்பாயிருந்தவன்" – இந்த வாக்கியம் யோவானைக் குறிக்கிறது (யோவான் 13:23; யோவான் 19:26; யோவான் 20:2; யோவான் 21:7,20,24).

பேதுரு இயேசுவை நோக்கி, "ஆண்டவரே, இவன் காரியம் என்ன" – இயேசு கிறிஸ்து பேதுருவைத் தம்மைப் பின்பற்றி வருமாறு அழைக்கிறார். யோவானைக் குறித்து இயேசு கிறிஸ்து என்ன சொல்லப்போகிறார் என்பதை அறிந்து கொள்ள பேதுரு விரும்புகிறான். ஆனால் இயேசு கிறிஸ்துவோ "நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால் உனக்கென்ன நீ என்னைப் பின்பற்றிவா" என்று கூறிவிடுகிறார். யோவான் முதல் நூற்றாண்டின் இறுதியில் மரித்தான்.

15. யோவான் – இந்த சுவிசேஷத்தை எழுதியவர் – முடிவுரை

யோவான் 21:24 அந்தச் சீஷனே இவைகளைக்குறித்துச் சாட்சி கொடுத்து இவைகளை எழுதினவன், அவனுடைய சாட்சி மெய்யென்று அறிந்திருக்கிறோம்.

யோவான் 21:25 இயேசு செய்த வேறு அநேக காரியங்களுமுண்டு; அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன். ஆமென்.

"அந்தச் சீஷனே இவைகளைக்குறித்துச் சாட்சிகொடுத்து இவைகளை எழுதினவன்" – யோவான் சுவிசேஷத்தின் ஆசிரியர் யோவான் என்பது இந்த வசனத்தின் மூலமாகத் தெளிவாகிறது.

21 அதிகாரம்

இயேசு செய்த வேறு அநேக காரியங்களுமுண்டு. அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன். இயேசு கிறிஸ்து அநேக அற்புதங்களைச் செய்தார் அவை அனைத்தும் வேதப் புத்தகத்தில் எழுதப்படவில்லை அவைகளையெல்லாம் எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் மிகவும் அதிகமாக இருக்கும்.

ஆகையினால் பரிசுத்த ஆவியானவரின் அனுமதி பெற்று எழுதப்பட்டவை மட்டுமே வேதபுத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறது

உலகம் (world) κόσμος
kosmos 2889

ஆண்பால் பெயர்ச்சொல் உலகம், அலங்கரிப்பு, லௌகிகம்

அப்போஸ்தலர் – முன்னுரை

காலம்

கி.பி. 63 ஆம் வருஷம். இடம் சரியாகத் தெரியவில்லை.

ஆசிரியர்

லூக்கா (அப் 1:1; லூக்கா 1:1-3)

மையக்கருத்து

பரிசுத்த ஆவியானவரின் நடபடிகளும் அப்போஸ்தலருடைய நடபடிகளும் தேவனுடைய வார்த்தை உறுதிபண்ணப்படுகிறது. இயேசு கிறிஸ்துவின் மார்க்கம் பரவுகிறது. புறஜாதியாருக்குப் பவுலின் ஊழியம். அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகம் மாற்கு 16:20 ஆவது வசனத்தின் விரிவாக்கமாகும். பரிசுத்த ஆவியானவர் தமது விசுவாசிகளிடத்தில் வந்திறங்குகிறார். இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்வதற்குத் தேவனுடைய பிள்ளைகளைப் பெலப்படுத்துகிறார்.

கிறிஸ்துவின் சீஷர்கள் செய்யவும் பிரசங்கிக்கவும் செய்கிறார்கள் **"began both to do and teach"** (அப் 1:1-3) ஆயிரம் வருஷ அரசாட்சியைப் பற்றிய சத்தியம் இந்தப் புஸ்தகம் முழுவதிலும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. (அப் 1:6; அப் 2:17-20; அப் 3:19-21, அப் 8:12; அப் 14:22, அப் 20:25; அப் 28:23 31)

அப்போஸ்தலருடைய நடபடிகளின் பெரும்பகுதி எருசலேம் பட்டணமாகும். யூதர்கள் மோசேயின் பிரமாணத்தை இக்காலத்தில் அனுசரித்து வந்தார்கள்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகம் புறஜாதியாருடைய இரட்சிப்பைப் பற்றியும் விளக்குகிறது. தேவனுடைய சத்தியத்தை அறிவிப்பதற்கு இஸ்ரவேல் ஜனங்களுக்குப் பதிலாகப் புறஜாதியார் தெரிந்தெடுக்கப்படுவார்கள் என்று முன்னறிவிக்கப்பட்ட தீர்க்கதரிசனங்கள் இந்தப் புஸ்தகத்தில் நிறைவேறுவதைக் காண்கிறோம். (மத் 21:33-46; மத் 23:37-39; யோவான் 10:16; அப் 10:1-28-30)

யூதருக்கும் புறஜாதிக் கிறிஸ்தவருக்குமிடையே மிகப்பெரிய பிரச்சனை இருந்தது. மோசேயின் பிரமாணத்தைப் புறஜாதிக் கிறிஸ்தவர்களும் அவசியம் கடைபிடிக்க வேண்டுமா என்பதே அந்தப் பிரச்சனை. இறுதியாக கிறிஸ்தவர்கள் நியாயப் பிரமாணத்தின்கீழ் இல்லை என்றும், பழைய ஏற்பாட்டுப் பிரமாணங்கள் எல்லாம் ஒழிந்து போயின என்றும் மோசேயின் பிரமாணத்திற்குப் பதிலாக புதிய உடன்படிக்கை விசுவாசிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் தீர்மானிக்கப்படுகிறது. அப் 15:24

மற்ற புஸ்தகங்களில் காணப்படாத 400 விசேஷித்த வார்த்தைகளை லூக்கா பயன்படுத்துகிறார். அவை மருத்துவம் சம்பந்தமான சொற்களாகும்.

அப்போஸ்தலருடைய மையச்செய்தி இயேசு கிறிஸ்துவின் மரணம், அவர் அடக்கம் பண்ணப்படுவது, மூன்றாம் நாளில் அவர் உயிர்த்தெழுவது, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் தேவன் தமது வசனங்களை அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் உறுதிபண்ணுவது என்பவைகளாகும்.

பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினாலும் வரங்களினாலும் ஏராளமான ஜனங்கள் சபையில் சேர்க்கப்பட்டார்கள் (மாற்கு 16:15-20; எபி 2:3-4; 1கொரி 2:1-4) ஒரு கிறிஸ்தவ சபை எப்படி இருக்க வேண்டும், எப்படி இயங்க வேண்டும் என்பதற்கு அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் நாம் தெளிவான உபதேசத்தை வாசிக்கலாம்.

புள்ளி விவரங்கள்

அதிகாரங்கள் 28

வசனங்கள் 1007

கேள்விகள் 78

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் - 27

புதிய தீர்க்கதரிசனங்கள் - 20

வரலாற்றைக் குறிக்கும் வசனங்கள் - 949

அப்போஸ்தலர் – முன்னுரை

பொருளடக்கம்

I. உயிர்த்தெழுந்த பின்பு இயேசு கிறிஸ்துவின் ஊழியம்

1 லூக்கா சுவிசேஷத்தின் கருத்து (1:1)

2 அப்போஸ்தலருடைய நடபடிகளின் கருத்து (1:2)

3 உயிர்த்தெழுந்த பின்பு இயேசு கிறிஸ்து நாற்பது நாட்களுக்கு தரிசனம் கொடுத்தார் (1:3)

4 வாக்குத்தத்தம் நிறைவேற காத்திருக்குமாறு கட்டளை (1:4)

5. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைக் குறித்து தீர்க்கதரிசனம் (1:5)

6 இராஜ்யத்தைப் பற்றிய கேள்வி (1:6-7)

7 பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தோடு பெலனடைவோம் என்னும் வாக்குத்தத்தம் (1:8)

8 இயேசு கிறிஸ்து பரமேறுகிறார் (1:9)

9 இயேசுவின் இரண்டாம் வருகை முற்குறித்துக் கூறப்படுகிறது (1:10-11)

II. சபை பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகிக்கப்படுகிறது

1 பத்து நாட்கள் காத்திருப்பு (1:12-14)

2 சபையின் அலுவலக கூட்டம்

(1) இன்னும் ஒரு அப்போஸ்தலர்தேவை (1:15-20)

(2) அப்போஸ்தலருக்குத்தகுதிகள் (1:21-22)

(3) இரண்டு பேர்களை ஆலோசிக்கிறார்கள் (1:23)

(4) ஜெபம் பண்ணினார்கள் (1:24-25)

(5) மத்தியாவை அப்போஸ்தல பட்டத்திற்கு தேர்ந்தெடுக்கிறார்கள் (1:26)

3 பெந்தெகொஸ்தே நாள் – மனுஷர்மீது பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரி (2:1-4)

4 ஜனங்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றதினால் ஏற்பட்ட விளைவு (2:5-13)

III. எருசலேமின் எழுப்புதல்

1 முதலாவது அப்போஸ்தல பிரசங்கம்

(1) பிரசங்கியாரும் பிரசங்கத்தைக் கேட்டவர்களும் (2:14)

(2) யோவேலின் தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறது (2:15-16)

(3) கடைசி நாட்களில் யோவேலின் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது (2:17-18)

(4) உபத்திரவ காலத்திலும் மனுஷர்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெறுவார்கள் (2:19-21)

(5) இயேசு கிறிஸ்துவை தேவன் வெளிப்படுத்தினார் (2:22)

(6) இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார் (2:23)

(7) இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் (2:24-32)

(8) இயேசு கிறிஸ்து பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார் காண்கிறதும் கேட்கிறதுமாகிய பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் (2:33-35)

(9) தேவன் இயேசுவை ஆண்டவரும் கிறிஸ்துவும் ஆக்கினார் (2:36)

2 பேதுருவின் பிரசங்கத்தினால் ஏற்பட்ட விளைவு (2:37)

3. பாவிகள் செய்ய வேண்டியது (2:38

அப்போஸ்தலர் – முன்னுரை

4 பரிசுத்த ஆவியானவரின் வாக்குத்தத்தம் எல்லா விசுவாசிகளுக்கும் உரியது (2:39)

5 எழுதப்படாத அநேக புத்திமதிகள் (2:40)

6 மூவாயிரம் பேர் இரட்சிக்கப்பட்டார்கள் (2:41)

7 ஆதித்திருச்சபையின் மகிமையான நிலை (2:42-47)

8 அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை பெற்ற பிறகு அவர்கள் மூலமாக நடைபெற்ற முதலாவது அற்புதம் (3:1-8)

9 அற்புதத்தினால் ஜனங்கள்மீது ஏற்பட்ட விளைவு (3:9-11)

10. பேதுருவின் இரண்டாவது செய்தி

(1) இயேசு கிறிஸ்துவின் தெய்வத்துவத்தை அற்புதம் உறுதிபண்ணுகிறது (3:12-13)

(2) இஸ்ரவேலின் மூன்று பாவங்கள் (3:14-15)

(3) இயேசு என்னும் நாமத்தின் வல்லமை (3:16)

(4) இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டது தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம் (3:17-18)

(5) தேசம் மீட்கப்படுவதற்கு நிபந்தனைகள் (3:19)

(6) இயேசுவின் இரண்டாம் வருகை (3:20-21)

(7) இயேசுவின் முதலாம் வருகையை மோசே முன்குறித்துக் கூறினார் (3:22)

(8) ஜீவனை அல்லது மரணத்தை சுயாதீனமாக தெரிந்தெடுக்க வேண்டும் (3:23)

(9) இயேசுவின் பாடுகளை எல்லா தீர்க்கதரிசிகளும் முன்னறிவித்தார்கள் (3:24)

(10) கிறிஸ்துவின் ஊழியத்தை ஆபிரகாமும் முன்னறிவித்தான் (3:25)

(11) சுவிசேஷம் முதலாவது இஸ்ரவேலுக்கு அறிவிக்கப்படுகிறது (3:26)

11 முதலாவது உபத்திரவம்

(1) பேதுருவையும் யோவானையும் கைதுபண்ணுகிறார்கள் (4:1-3)

(2) பேதுருவின் இரண்டாம் பிரசங்கத்தினால் ஏற்பட்ட விளைவு - ஐயாயிரம் பேர் இரட்சிக்கப் பட்டார்கள் (4:4)

(3) பேதுருவையும் யோவானையும் விசாரிக்கிறார்கள் (4:5-7)

(4) பேதுருவின் விவாதம் - இயேசு என்னும் நாமத்தின் வல்லமை (4:8-12)

(5) ஆலோசனைச் சங்கத்தாரின் முடிவு (4:13-18)

(6) பேதுரு, யோவான் ஆகியோரின் பதிலுரை (4:19-20)

(7) யூதர்கள் அப்போஸ்தலர்களை பயமுறுத்தி விட்டுவிடுகிறார்கள் (4:21-22)

12 வல்லமைக்காக விசுவாசிகள் ஒருமனப்பட்டு ஜெபிக்கிறார்கள் (4:23-30)

13 ஜெபத்திற்கு தேவன் கொடுக்கும் பதில் (4:31)

14 சபையின் நிலைமை (4:32-37)

15. ஆதிசபையில் காணப்பட்ட முதலாவது பாவமும் அதன் விளைவுகளும் (5:1-11)

16 ஆதித்திருச்சபையின் வல்லமை (5:12-16)

17 இரண்டாவது உபத்திரவம்

(1) அப்போஸ்தலர்களைக் கைது பண்ணுகிறார்கள் (5:17-18)

அப்போஸ்தலர் – முன்னுரை

(2) அற்புதமாக விடுதலையாகிறார்கள் (5:19-20)

(3) ஆலோசனை சங்கத்தார் அப்போஸ்தலர்கள் தப்பித்ததைக் கண்டுபிடிக்கிறார்கள் (5:21-24)

(4) அப்போஸ்தலர்களை மூன்றாம் முறையாக கைதுபண்ணுகிறார்கள் (5:25-26)

(5) அப்போஸ்தலர்களிடத்தில இரண்டாம் முறையாக விசாரணை (5:27-28)

(6) அப்போஸ்தலரின் விவாதம (5:29-32)

(7) விவாதத்தினால் ஏற்பட்ட விளைவு (5:33)

(8) கமாலியேலின் எச்சரிப்பு (5:34-39)

(9) அப்போஸ்தலர்களை அடித்து இனிமேல இயேசுவின நாமத்தைக் குறித்து பேசக்கூடாது என்று கட்டளையிடுகிறார்கள் (5:40)

(10) அப்போஸ்தலரிடத்தில காணப்பட்ட விளைவு (5:41)

18 எதிர்ப்புகளின மத்தியிலும் அப்போஸ்தலர்கள தொடர்ந்து தேவனுடைய ஊழியத்தைச் செய்கிறார்கள் (5:42)

19 சபையில் முதலாவது பிரச்சனை (6:1)

20 பிரச்சனை தீர்த்து வைக்கப்படுகிறது (6:2-3)

21 போதிக்கிறவர்களின கடமைகள (6:4)

22 மூப்பர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை அபிஷேகித்தார்கள (6:5-6)

23 சபையின் வேகமான வளர்ச்சி (6:7)

24 மூப்பரின் வல்லமை (6:8)

25 மூன்றாவது உபத்திரவம்

(1) ஸ்தேவானின் வல்லமையும் ஞானமும் (6:9-11)

(2) ஸ்தேவான்மீது ஆலோசனை சங்கத்திற்கு முன்பாக விசாரணை (6:12-15)

(3) ஸ்தேவானின் பிரசங்கம்

(அ) ஆபிரகாமின் அழைப்பு (7:1-3)

(ஆ) வாக்குத்தத்தங்களும் உடன்படிக்கைகளும் (7:4-8)

(இ) எகிப்தில் யோசேப்பும் இஸ்ரவேலரும் (7:9-16)

(ஈ) எகிப்தியரிடத்தில அடிமைத்தனம் (7:17-19)

(உ) நாற்பது வருஷங்களாக மோசேக்கு பயிற்சி (7:20-22)

(ஊ) இஸ்ரவேலரை மீட்கும் மோசேயின முயற்சியை அவர்கள முதலாவது ஏற்றுக் கொள்ளவில்லை (7:23-28)

(எ) மோசேக்கு நாற்பது வருஷ தெய்வீக பயிற்சி (7:29-34)

(ஏ) மோசேக்கும் தேவனுக்கும் எதிராக இஸ்ரவேலரின நாற்பது வருஷ கலகம் (7:35-41)

(ஐ) இஸ்ரவேல் தொடர்ந்து கலகம் பண்ணியதால் தேவன இஸ்ரவேலை தள்ளிவிட்டார (7:42-50)

(ஒ) இஸ்ரவேல் இன்னும் கலகம் பண்ணுகிறார்கள் (7:51-53)

(4) ஸ்தேவானின் தரிசனம் - பரலோகம், தேவன், கிறிஸ்து (7:54-56)

(5) ஸ்தேவான் முதலாவது இரத்தச்சாட்சியாக மரிக்கிறான் — பவுலைப் பற்றிய முதலாவது குறிப்பு (7:57-60)

6 சபையார் எல்லாருக்கும் துன்பம் உண்டாயிற்று விசுவாசிகள் சிதறிப் போனார்கள் (8:1)

(7) ஸ்தேவானின் அடக்கம் - விசுவாசிகளை துன்புறுத்திய சவுல் (8:2-3)

IV. யூதேயாவிலும் சமாரியாவிலும் சுவிசேஷ ஊழியம்

1. சிதறிப்போனவர்கள் வசனத்தைப் பிரசங்கிக்கிறார்கள் (8:4)

2 சமாரியாவில எழுப்புதல

(1) பிலிப்புவின் பிரசங்கம் (8:5)

(2) பட்டணத்தில மறுபடியும் எழுப்புதல (8:6-8)

(3) சீமோன் என்னும் மாயவித்தைக் காரன இரட்சிக்கப்படுகிறான் (8:9-13)

(4) இரட்சிக்கப்பட்ட சமாரியர்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் பெறுகிறார்கள் (8:14-17)

(5) சீமோனின பாவமான விண்ணப்பம் (8:18-19)

(6) பேதுரு சீமோனைக் கடிந்து கொள்கிறான (8:20-23)

(7) நியாயத்தீர்ப்பைக் குறித்து சீமோனின பயம் (8:24)

3 மற்ற பட்டணங்களில எழுப்புதல (8:25)

4 பிலிப்புவும் எத்தியோப்பியனும்

(1) ஒரு ஆத்துமாவிற்கு சுவிசேஷம் சொல்ல பரிசுத்த ஆவியானவரின அழைப்பு (8:26-29)

(2) தனிநபர் சுவிசேஷத்திற்கு ஒரு முன்மாதிரி (8:30-35)

(3) ஞானஸ்நான ஆராதனை (8:36-38)

(4) கர்த்தருடைய ஆவியானவர பிலிப்பை கொண்டு போய்விட்டார் (8:39)

(5) சகல பட்டணங்களிலும் எழுப்புதல்கள் (8:40)

V. சவுலின் வரலாறு

1 கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துகிறவன் (9:1-2)

2 இயேசு சவுலைச் சந்திக்கிறார் (9:3-7)

3 சவுல் மூன்று நாள் பார்வையில்லாதவனாய் புசியாமலும் குடியாமலும் இருக்கிறான் (9:8-9)

4. அனனியாவின் ஊழியம் (9:10-16)

5 சவுலுக்கு கண்பார்வை திரும்பவும் வருகிறது - பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை பெற்றுக் கொள்கிறான் (9:17-19)

6. சவுல இயேசு கிறிஸ்துவைக் குறித்து பிரசங்கம் பண்ணி தமஸ்குவில குடியிருக்கிற யூதர்களைக் கலங்கப் பண்ணுகிறான (9:20-22)

7 சவுலைக் கொலைசெய்வதற்கு முயற்சி (9:23-25)

8 சவுல எருசலேமில பிரசங்கம் பண்ணுகிறான் (9:26-28)

9 சவுலைக் கொலைசெய்வதற்கு மறுபடியும் முயற்சி (9:29-30)

10 சபையின் மூன்றாவது உபத்திரவத்தின முடிவு (9:31)

VI. பேதுருவின வரலாறு

1 திமிர்வாதமுள்ளவனைக் குணப்படுத்துகிறான (9:32-35)

2 தபீத்தாளை உயிருடன எழுப்புகிறான் (9:36-43)

3 புறஜாதியார் மத்தியில் எழுப்புதல

(1) கொர்நேலியுவின் தரிசனம் (10:1-6)

(2) கொர்நேலியு பேதுருவினிடத்திற்கு ஆட்களை அனுப்புகிறான் (10:7-8)

அப்போஸ்தலர் – முன்னுரை

3 பேதுருவின் தரிசனம் - துப்பட்டியும் அசுத்தமான மிருகங்களும் (10:9-16)

4) பேதுருவும் கொர்நேலியு அனுப்பிய மனுஷரும் (10:17-22)

(5) பேதுருவும் கொர்நேலியுவும் (10:23-33)

6) பேதுருவின் பிரசங்கம் - விசுவாசத்தினால் இரட்சிப்பு

அ) தேவன் பட்சபாதமுள்ளவரல்ல (10:34-35)

(ஆ) தேவனுடைய வார்த்தை சமாதானத்தையும் சரீர சுகத்தையும் தருகிறது (10:36-38)

இ) சுவிசேஷத்தின் நான்கு முக்கிய கருத்துக்கள் - மரணம், அடக்கம்பண்ணப்படுதல், உயிர்த்தெழுதல், இயேசு கிறிஸ்துவின் பிரத்தியட்சம் (10:39-41)

ஈ) இயேசு கிறிஸ்து உயிரோடு இருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் நியாயாதிபதி (10:42)

(உ) விசுவாசிக்கிறவர்கள் அனைவரும் கிறிஸ்துவின் மூலமாக பாவ மன்னிப்பை பெறுவார்கள் (10:43)

7 புறஜாதியார் இரட்சிக்கப்பட்டு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெறுகிறார்கள் தண்ணீர் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பு (10:44-48)

(8) புறஜாதியாருக்கு பிரசங்கம் பண்ணினதற்காக பேதுருவின்பேரில் வாக்குவாதம் பண்ணுகிறார்கள் (11:1-3)

9 பேதுரு வரிசையாய் அவர்களுக்கு காரியத்தை விவரிக்கிறான்

(அ) தேவன் பட்சபாதமுடையவரல்ல (11:4-10)

(ஆ) புறஜாதியாருக்கு பிரசங்கம் பண்ணுமாறு தேவன் எனக்கு கட்டளை கொடுத்திருக்கிறார் (11:11-12)

(இ) கொர்நேலியு, தூதர்கள், பரிசுத்த ஆவியானவர் ஆகியோர் தேவன் எனக்கு கொடுத்த கட்டளையை உறுதிபண்ணினார்கள் (11:13-14)

(ஈ) பரிசுத்த ஆவியானவர் புறஜாதியார் மேலும் இறங்கினார் (11:15-16)

(உ) தேவன் புறஜாதியாருக்கு அநுக்கிரகம் பண்ணியிருக்கும்போது தேவனைத் தடுக்கிறதற்கு நான் எம்மாத்திரம் (11:17)

4. சபை திருப்தியடைகிறது - தேவனை மகிமைப்படுத்துகிறார்கள் (11:18)

VII. பெனிகேநாடு, சீப்புரு தீவு, சீரியா ஆகிய இடங்களில் சுவிசேஷ ஊழியம்

1 விசுவாசிகள் உபத்திரவத்தினால் சிதறிப்போனார்கள் (11:19)

2 சீரியாவிலுள்ள அந்தியோகியாவில் எழுப்புதல் (11:20-21)

3 சபை அனுப்பிய முதலாவது மிஷினெரி (11:22-24)

4 ஆதிதிருச்சபை அனுப்பிய முதலாவது மிஷினெரி குழு (11:25-26)

5 சபையின் முதலாவது தீர்க்கதரிசிகள் (11:27-28)

6 எருசலேமிலுள்ள ஏழை விசுவாசிகளுக்கு உதவி (11:29-30)

VIII. நான்காவது உபத்திரவம்

1. ஏரோது இராஜா யாக்கோபை கொலை செய்கிறான் (12:1-2)

2 பேதுருவை கைது பண்ணுகிறார்கள் (12:3-4)

அப்போஸ்தலர் - முன்னுரை

3 பேதுருவின் விடுதலைக்காக சபையார் தொடர்ந்து ஜெபிக்கிறார்கள் (12:5-6)

4 பேதுரு அற்புதமாக விடுதலை பெறுகிறான் (12:7-11)

5 ஜெபத்திற்கு பதில் கிடைத்தும் அவிசுவாசம் (12:12-17)

6 சேவகர்மீது ஏரோதுவின் கோபம் (12:18-19)

7 ஏரோதுவின் மரணம் (12:20-23)

8 பவுலும் பர்னபாவும் தர்ம ஊழியத்தை நிறைவேற்றி திரும்பி வருகிறார்கள் (12:24-25)

IX. பவுலின் முதலாவது மிஷினெரி பிரயாணம்

1 பரிசுத்த ஆவியானவரின் அழைப்பு (13:1-2)

2 பரிசுத்த ஆவியானவரும் சபையாரும் பவுலையும் பர்னபாவையும் யூதர்களுக்கு மிஷனெரிகளாக அனுப்புகிறார்கள் (13:3-5)

3 பாப்போ பட்டணத்தில் பர்யேசு என்னும் பெயர்கொண்ட மாயவித்தைக்காரன் குருடனாகிறான் (13:6-12)

4 பாப்போ பட்டணத்தை விட்டு பம்பிலியாவிலிருக்கும் பெர்கே பட்டணத்திற்கு வருகிறார்கள் - யோவான் அவர்களை விட்டு பிரிந்து எருசலேமிற்கு திரும்பி போகிறான் (13:13)

5 பெர்கே பட்டணத்தை விட்டு புறப்பட்டு பிசீதியா நாட்டிலுள்ள அந்தியோகியாவிற்கு வருகிறார்கள் (13:14-15)

6 அந்தியோகியாவில் பவுலின் பிரசங்கம் - பிரசங்க செய்தி விசுவாசத்தினால் இரட்சிப்பு

(1) எகிப்திலிருந்து புறப்பட்டு கானான் தேசத்தை சுதந்தரமாக பெறுகிறார்கள் (13:16-19)

(2) நியாயாதிபதிகளின்காலமும் சவுலின் ஆட்சியும் (13:20-21)

(3) தாவீதின் வித்தாகிய இயேசு (13:22-23)

(4) யோவான் ஸ்நானன் (13:24-25)

(5) இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைகிறார்கள் (13:26-29)

(6) இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுகிறார் (13:30-32)

(7) இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் - தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றம் (13:33-37)

(8) இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதால் மட்டுமே நீதிமானாக்கப்பட முடியும் (13:38-39)

(9) கிறிஸ்துவை அசட்டை பண்ணுவதற்கு எதிரான எச்சரிப்பு (13:40-41)

7 பவுலின் பிரசங்கத்தினால் அந்தியோகியாவில் ஏற்பட்ட விளைவு (13:42-43)

8 யூதர்களின் எதிர்ப்பு (13:44-45)

9 புறஜாதி மத்தியில் ஊழியம் (13:46-49)

10 பவுலையும் பர்னபாவையும் அந்தியோகியாவின் எல்லைகளுக்கு புறம்பாக துரத்தி விடுகிறார்கள் (13:50-52)

11 இகோனியா பட்டணத்தில் சபை ஸ்தாபிக்கப்படுகிறது (14:1-5)

12 இகோனியாவிலிருந்து லீஸ்திரா வரையிலும் - சப்பாணியைக் குணமாக்குகிறார்கள் - இங்கு ஒரு சபையை ஸ்தாபிக்கிறார்கள் (14:6-10)

13 ஜனங்கள் பவுலையும் பர்னபாவையும் தேவர்கள் என்று வழிபட வருகிறார்கள் (14:11-18)

14 பவுலை கல்லெறிந்து அவன் மரித்துப்போனான் என்று எண்ணி அவனை பட்டணத்திற்கு வெளியிலே இழுத்துக் கொண்டு போகிறார்கள் (14:19-20)

அப்போஸ்தலர் – முன்னுரை

15 லீஸ்திராவுக்கும் இக்கோனியாவுக்கும் அந்தியோகியாவுக்கும் திரும்பி வருகிறார்கள் - ஒவ்வொரு சபையிலும் மூப்பர்களை ஏற்படுத்துகிறார்கள் (14:21-23)

16 பெர்கே, அத்தலியா பட்டணத்திற்கு திரும்பி வந்து பின்பு சீரியாவிலுள்ள அந்தியோகியாவிற்கு வருகிறார்கள் - அப 13:3 -ல் குறிப்பிட்டுள்ள முதலாவது மிஷினெரி பிரயாணம் நிறைவு பெறுகிறது (14:24-26)

17 முதலாவது மிஷினெரி பிரயாணத்தைக் குறித்து சபையில் அறிவிக்கிறார்கள் (14:27-28)

X. கிறிஸ்தவர்களின் முதலாவது பொதுக்குழு கூட்டம்

1 விருத்தசேதனம் (15:1-2)

2 பவுலையும் பர்னபாவையும் அந்தியோகியாவிலிருந்து அனுப்புகிறார்கள் (15:3-4)

3. ஆலோசனைச் சங்கத்தின் நோக்கம் (15:5-6)

4 பேதுருவின் வாக்குவாதம் (15:7-11)

5 தேவன் புறஜாதியாருக்குள்ளே அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்கிறார் (15:12)

6 யாக்கோபுவின் விவாதம் (15:13-18)

7 புறஜாதிகளில் தேவனிடத்தில் திரும்புகிறவர்களை கலங்கப் பண்ணுதலாகாது (15:19-21)

8 பிரிவினையில்லாமல் கிறிஸ்தவர்களின் ஒற்றுமை காத்துக் கொள்ளப்படுகிறது (15:22)

9 புறஜாதி கிறிஸ்தவர்களுக்கு உபதேசம் (15:23-29)

10 நிருபத்திற்காகவும் அதனால் உண்டான ஆறுதலுக்காகவும் சந்தோஷப் படுகிறார்கள் (15:30-34)

XI. பவுலின் இரண்டாவது மிஷினெரி பிரயாணம்

1 மாற்கு என்னும் பேர்கொண்ட யோவான் நிமித்தமாக பவுலும் பர்னபாவும் பிரிந்து விடுகிறார்கள் (15:35-39)

2 பவுல் சீலாவை தெரிந்து கொண்டு சீரியாவிற்கும் சிலிசியாவிற்கும் பிரயாணம் செய்து சபைகளை திடப்படுத்துகிறான் (15:40-41)

3 தெர்பையிலும் லீஸ்திராவிலும் பவுல் - தீமோத்தேயு பவுலோடு சேர்ந்து கொள்கிறான் (16:1-3)

4 எல்லா சபைகளுக்கும் அப்போஸ்தல கட்டளைகளைகொடுக்கிறார்கள் (16:4-5)

5 பிரிகியா, கலாத்தியா, மீசியா ஆகிய தேசங்களுக்கு பிரயாணம் (16:6-8)

6 துரோவாவில மக்கெதோனியா தேசத்தானின் அழைப்பு (16:9-10)

7 துரோவாவிலிருந்து பிலிப்பி பட்டணத்திற்கு பிரயாணம் (16:11-12)

8 பிலிப்பி பட்டணத்தில் முதலாவது விசுவாசி - லீதியாள் (16:13-15)

9 குறிசொல்லுகிற ஏவுகிற ஆவியைத் துரத்துகிறார்கள் - பவுலும் சீலாவும் சிறைச்சாலையில் (16:16-24)

10 பூமி மிகவும் அதிர்ந்தது (16:25-26)

11 சிறைச்சாலைக்காரனும் அவனுடைய வீட்டாரும் இரட்சிக்கப்படுகிறார்கள் (16:27-34)

12 இரகசியமாய் விடுதலைப் பெற பவுல் விரும்பவில்லை (16:35-40)

13 பிலிப்பி பட்டணத்திலிருந்து தெசலோனிக்கே பட்டணத்திற்கு பிரயாணம் (17:1-4)

14 யூதர்களுடைய எதிர்ப்பு பட்டணத்தை விட்டு பவுலை வெளியேற்றுகிறார்கள் (17:5-9)

அப்போஸ்தலர் – முன்னுரை

15 தெசலோனிக்கே பட்டணத்திலிருந்து பெரோயா பட்டணத்திற்கு பிரயாணம் - யூதர்கள் பவுலை இங்கும் எதிர்த்து அவனை பட்டணத்தை விட்டு வெளியேற்றுகிறார்கள் (17:10-14)

16 அத்தேனே பட்டணத்தில பவுல் - சீலாவும், தீமோத்தேயுவும் தன்னிடத்திற்கு வருமாறு அழைப்பு (17:15)

17 அத்தேனே பட்டணத்தில் கிரேக்க ஞானிகளோடு பவுல் வாக்குவாதம் பண்ணுகிறான (17:16-21)

18 அத்தேனே பட்டணத்தில பவுலின் பிரசங்கம் - இயேசு உலகத்தை நியாயம் தீர்க்கிறார்

1) அறியப்படாத தேவன் (17:22-23)

2) கர்த்தரே சிருஷ்டிகர் - மனுஷனை தேவன் சிருஷ்டித்ததின நோக்கம் (17:24-27)

3) விக்கிரகாராதனையை பவுல் கடிந்து கொள்கிறான (17:28-29)

4) அறியாமையுள்ள காலங்கள (17:30)

5) தேவன இயேசு கிறிஸ்துவைக் கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயம் தீர்ப்பார் (17:31)

6) பவுலின பிரசங்கத்தினால ஏற்பட்ட விளைவு (17:32-34)

19. அத்தேனே பட்டணத்திலிருந்து கொரிந்து பட்டணத்திற்கு பிரயாணம் - ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் (18:1-3)

20 ஓய்வுநாளைக் குறித்து ஜெபாலயத்தில பவுலின சம்பாஷணை (18:4)

21 சீலாவும் தீமோத்தேயுவும் பவுலோடு சேர்ந்து கொள்கிறார்கள் (18:5-6)

22 பவுல யூதருடைய ஜெபாலயத்தை விட்டு ஒரு வீட்டில் பிரசங்கம் பண்ணி அங்கு ஒரு சபையை ஸ்தாபிக்கிறான (18:7-8)

23 பயப்படாமல் பேசுமாறு பவுலின் தரிசனம் (18:9-11)

24. பவுல் கைது பண்ணப்படுகிறான் - கல்லியோன் என்பவனுக்கு முன்பாக பவுலைக் கொண்டு போனார்கள் - கல்லியோன் அவர்களைத் துரத்தி விட்டான் (18:12-16)

25. சொஸ்தேனேயைப் பிடித்து அடிக்கிறார்கள் (18:17)

26. கொரிந்து பட்டணத்திலிருந்து கெங்கிரேயாவிற்கும் எபேசுவிற்கும் பிரயாணம - இங்கு பிரசங்கம் பண்ணி ஆக்கில்லாவையும் பிரிஸ்கில்லாளையும் வழியனுப்பி விடுகிறான் (18:18-20)

27 எபேசு பட்டணத்திலிருந்து செசரியா எருசலேம் பட்டணத்திற்கு பிரயாணம் பண்ணி அந்தியோகியாவிற்கு திரும்பி வருகிறார்கள் - அப 15:35-ல் ஆரம்பிக்கப்பட்ட இரண்டாவது மிஷினெரி பிரயாணம் நிறைவு பெறுகிறது (18:21-22)

XII. பவுலின் மூன்றாவது மிஷினெரி பிரயாணம

1 கலாத்தியா, பிரிகியா நாடுகளுக்கு பிரயாணம் (18:23)

2 அப்பொல்லோ என்பவன் எபேசுவில பிரசங்கம் பண்ணுகிறான - ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவனுக்கு தேவனுடைய மார்க்கத்தை திட்டமாய் விபரித்துக் காண்பிக்கிறார்கள் (18:24-28)

3 பவுல் எபேசுவில் யோவானின சீஷர்களைக் காண்கிறான் (19:1-7)

4 ஜெபாலயத்தில் பவுல மூன்று மாதங்கள் பிரசங்கம் பண்ணி அங்கு ஒரு சபையை ஸ்தாபிக்கிறான (19:8)

5 ஜெபாலயத்திலிருந்து விசுவாசிகளை தனியாக பிரிக்கிறான் - திரன்னு என்பவனுடைய வித்தியாசாலையிலே அநுதினமும் சம்பாஷித்து வருகிறான (19:9-10)

6 பவுல் மூலமாக நடைபெற்ற அற்புதங்கள் (19:11-12)

BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

அப்போஸ்தலர் – முன்னுரை

7 பவுலைப் போன்று நடப்பித்தவர்களை பொல்லாத ஆவி மேற்கொண்டது (19:13-17)

8 எபேசுவில் எழுப்புதல் பரவிற்று (19:18-20)

9 பிரசங்க பிரயாணம் – தீமோத்தேயுவும் எரஸ்துவும் முன்பாகவே அனுப்பப்படுகிறார்கள் (19:21-22)

10 பவுல் எபேசுவில் தங்குகிறான் – வெள்ளி தட்டான்களின் கலகம்

(1) கலகத்திற்கு காரணம் (19:23-27)

(2) வெள்ளி தட்டான்கள் பவுலின் உடன் ஊழியக்காரர்களை அரங்கசாலைக்குள் கொண்டு செல்கிறார்கள் (19:28-29)

(3) பவுல் கூட்டத்திற்குள் போக மனதாயிருந்தான் – ஆனால் அவனுடைய நண்பர்கள் அவனைப் போகவிடவில்லை (19:30-31)

(4) கூட்டத்தின் குழப்பம் (19:32-34)

(5) பட்டணத்து சம்பிரதியானவன் ஜனங்களை அமர்த்துகிறான் (19:35-41)

11 மக்கெதோனியாவிற்கும் கிரேக்கத்திற்கும் பிரயாணம் (20:1-5)

12 பிலிப்பி பட்டணத்திலிருந்து துரோவா பட்டணத்திற்கு பிரயாணம் (20:6)

13 வாரத்தின் முதல் நாளிலே அப்பம் பிட்கிறார்கள் (20:7-8)

14 ஐத்திகு உயிரோடு எழுப்பப்படுகிறான் (20:9-12)

15 துரோவா பட்டணத்திலிருந்து மிலேத்து பட்டணத்திற்கு (20:13-16)

16 மிலேத்துவிலிருந்து பவுல் எபேசுவுக்கு ஆள் அனுப்பி சபையின் மூப்பரை வரவழைக்கிறான்

(1) ஆசியாவில் பவுலின் உண்மையுள்ள ஊழியம் (20:17-19)

(2) கிறிஸ்துவிற்காக பவுலின் பக்தி வைராக்கியம் (20:20-21)

(3) பாடுபடுவதற்கு பவுலின் பிரதிஷ்டை (20:22-24)

(4) பவுல் உண்மையுள்ளவனாகவும் சுத்தமுள்ளவனாகவும் இருக்கிறான் (20:25-27)

(5) சபையில் பிளவுகளும் குழப்பங்களும் பற்றிய எச்சரிப்பு (20:28-31)

(6) தேவனிடத்தில் அவர்களை ஒப்புக் கொடுக்கிறான் (20:32)

(7) பவுலின் தன்னலமற்ற சேவை (20:33-35)

(8) கிறிஸ்தவரின் பிரியாவிடை (20:36-38)

17 மிலேத்துவிலிருந்து தீரு பட்டணத்திற்கு (21:1-3)

18 தீருவில் பரிசுத்த ஆவியானவர் பவுலை எருசலேமிற்கு போக வேண்டாமென்று தடைபண்ணுகிறார் (21:4)

19 தீருவிலிருந்து செசரியா பட்டணத்திற்கு பிரயாணம் பிலிப்பென்னும் சுவிசேஷகனுடைய வீட்டிலே பிரவேசிக்கிறான் (21:5-9)

20 பவுலின் பாடுகளைக் குறித்து பரிசுத்த ஆவியானவர் மறுபடியும் எச்சரிக்கிறார் (21:10-11)

21 எருசலேமிற்கு சென்று அங்கு பாடு அனுபவிப்பதில் பவுல் உறுதியாக இருக்கிறான் (21:12-14)

22 செசரியா பட்டணத்திலிருந்து எருசலேமிற்கு பிரயாணம் – அப 18:23-ல் துவங்கிய மூன்றாவது மிஷினெரி பிரயாணம் நிறைவு பெறுகிறது (21:15-17)

அப்போஸ்தலர் – முன்னுரை

XIII. பவுல் கைதுபண்ணப்படுவதும் வழக்கு விசாரணைகளும்

1 தேவன் புறஜாதியாரிடத்தில் செய்தவைகளை பவுல் விவரித்துக் கூறுகிறான் (21:18-19)

2 யூதமார்க்க கிறிஸ்தவர்களை திருப்தி செய்வதற்காக யூதமார்க்கத்து பொருத்தனைகளை செய்யுமாறு யாக்கோபும், மூப்பர்களும் பவுலுக்கு ஆலோசனை கூறுகிறார்கள் (21:20-24)

3 விசுவாசிகளான புறஜாதியார் பிரமாணங்களைக் கைக்கொள்வதில்லை (21:25)

4 மூப்பர்களின் ஆலோசனையை பவுல் பின்பற்றுகிறான் (21:26-27)

5 யூதர்கள் பவுலைச் சூழ்ந்து கொண்டு அடிக்கிறார்கள் - புறஜாதியார் பவுலை விடுவிக்கிறார்கள் (21:28-32)

6 பவுலை இரண்டு சங்கிலிகளினால் கட்டி கோட்டைக்குள்ளே கொண்டு வருகிறார்கள் (21:33-36)

7 ஜனங்களிடத்தில் பேசுவதற்கு தனக்கு உத்தரவாக வேண்டுமென்று பவுல் வேண்டிக்கொள்கிறான் (21:37-40)

8 ஜனக்கூட்டத்திற்கு முன்பாக பவுல் கூறிய விளக்கம்

(1) கிறிஸ்தவர்களை பவுல் துன்புறுத்தினான் (22:1-5)

(2) பவுலின் மனமாற்றம் (22:6-11)

(3) அனனியாவின் ஊழியம் (22:12-16)

(4) தேவாலயத்தில் பவுலின் தரிசனம் (22:17-21)

(5) ஜனக்கூட்டத்திலிருந்து பவுலைக் காப்பாற்றுகிறார்கள் (22:22-24)

(6) பவுல் ஒரு ரோம பிரஜை (22:25-30)

9 ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாக பவுலின் விவாதம்

(1) பவுலின் சாட்சி (23:1-2)

(2) பிரதான ஆசாரியனை பவுல் கடிந்து கொள்கிறான் (23:3-5)

(3) பவுலின் புதிய யுக்தி - பரிசேயருக்கு விண்ணப்பம் (23:6)

(4) பவுலின் யுக்தி வெற்றி பெறுகிறது - பரிசேயருக்கும் சதுசேயருக்கும் வாக்குவாதம் உண்டாகிறது (23:7-8)

10 பவுலை மறுபடியும் மீட்கிறார்கள் (23:9-10)

11 கர்த்தர் பவுலிடம் பேசுகிறார் (23:11)

12 பவுலைக் கொல்வதற்கு சதியாலோசனை (23:12-15)

13 சதியாலோசனை கண்டுபிடிக்கப்படுகிறது (23:16-22)

14 பவுலை செசரியா பட்டணத்திலுள்ள தேசாதிபதியாகிய பேலிக்ஸினிடத்திற்கு அனுப்புகிறார்கள் (23:23-24)

15. பேலிக்ஸிற்கு நிருபம் (23:25-30)

16 பவுலையும் நிருபத்தையும் பேலிக்ஸிடம் ஒப்புக்கொடுக்கிறார்கள் (23:31-33)

17 பவுலை ஏரோதின் அரண்மனையில் காவல் பண்ணும்படி பேலிக்ஸ் கட்டளையிடுகிறான் (23:34-35)

18 பேலிக்ஸிற்கு முன்பாக பவுல்

(1) பவுலுக்கு எதிரான குற்றச்சாட்டு (24:1-9)

(2) பேலிக்ஸ் முன்பாக பவுலின் விவாதம் (24:10-21)

(3) விசாரணை தள்ளிவைக்கப்படுகிறது பவுலைக் கண்டிப்பில்லாமல் நடத்த உத்தரவாகிறது (24:22-23)

அப்போஸ்தலர் – முன்னுரை

19 பவுல் பேலிக்ஸிற்கு பிரசங்கம் பண்ணுகிறான் (24.24-26)

20 செசரியா பட்டணத்தில் இரண்டு வருஷங்கள் அமைதி (24.27)

21 பவுலைக் கொல்வதற்கு புதிய ஆலோசனை (25.1-3)

22 பெஸ்து சதியை முறியடிக்கிறான் 25.4-5

23 பெஸ்துவிற்கு முன்பாக பவுல 25.6-9

24 பவுல இராயனுக்கு அபயமிடுகிறான் (25.10-12

25 பெஸ்து அகிரிப்பா இராஜாவிடம் பவுலைப் பற்றி கூறுகிறான் (25.13-22)

26 அகிரிப்பா இராஜாவிற்கு முன்பாக பவுல் (25.23-27

27 அகிரிப்பா இராஜாவிற்கு முன்பாக பவுல உத்தரவு சொலகிறான

(1) கிறிஸ்தவர்களின் உபத்திரவம் (26.1-12)

(2) பவுலின மனமாற்றம் 26.13-18

(3) பவுலின பிரசங்கம் 26.19-20

(4) தான் கைது பண்ணப்பட்டதற்கு காரணம் (26.21-23

(5) பவுல் பயித்தியக்காரன என்று அவனமீது குற்றசாட்டு 26.24

(6) தான் பயித்தியக்காரன் அல்ல என்று பவுல் கூறுகிறான் (26.25-26)

(7) அகிரிப்பா இராஜாவிடம் பவுலின்விண்ணப்பம் 26.27-29

(8) அகிரிப்பா இராஜாவின் தீர்மானம் (26.30-32

XIV பவுலைரோமாபுரிக்கு அனுப்புகிறார்கள்

1 செசரியா பட்டணத்திலிருந்து மீறாப பட்டணத்திறகு பிரயாணம் (27.1-5

2 இத்தாலியாவிற்கு கப்பல்களை மாறறுகிறார்கள் (27.6-9)

3 பவுலின் ஆலோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை (27.10-13)

4 புயலகாற்று வீசுகிறது (27.14-20

5 பவுலின் தரிசனமும் தீர்க்கதரிசனமும் (27.21-26)

6 தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறது (27.27-44

7 மெலித்தா தீவில கரைசேருகிறார்கள (28.1-2)

8 விரியனபாமபு பவுலின கையை கவ்விக்கொளகிறது (28.3-7)

9 மெலித்தா தீவில புபிலியுவினுடைய தகப்பன் குணமடைகிறான் (28.8-10

10 மெலித்தா தீவிலிருநது ரோமாபுரிக்குப பிரயாணம் (28.11-16

11 ரோமாபுரியில பவுல் – யூதாகளுக்கு முனபாக பவுல் கூறிய காரியஙகள் (28.17-20)

12 பவுல் யூதாகளுக்கு பிரசங்கம் பணணுகிறான (28.21-24

13 பவுல் யூதாகளுக்குக் கூறிய கடைசி செய்தி – இரட்சிபபு புறஜாதியாருக்கு அனுப்பபட்டிருக்கிறது (28.25-29

14 ரோமாபுரியில பவுலின் இரண்டு வருஷ ஊழியம் (28.30-31

1 அதிகாரம்

I. உயிர்த்தெழுந்த பின்பு இயேசு கிறிஸ்துவின் ஊழியம் - (மத் 28 மாற்கு 16; லூக் 24 யோவான் 20-21)

1. லூக்கா சுவிசேஷத்தின் கருத்து

அப் 1:1 தெயோப்பிலுவே இயேசுவானவர் தாம் தெரிந்து கொண்ட அப்போஸ்தலருக்குப் பரிசுத்த ஆவியினாலே கட்டளையிட்ட பின்பு,

"தெயோப்பிலு" (Theophilus) - லூக்கா 1

"இயேசுவானவர் தாம் தெரிந்துகொண்ட அப்போஸ்தலருக்குப் பரிசுத்த ஆவியினாலே கட்டளையிட்ட பின்பு" - பரிசுத்த ஆவியானவர் இப்போது இயேசு கிறிஸ்துவின் பிரதிநிதியாக ஊழியம் செய்கிறார். இயேசு கிறிஸ்து செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கின எல்லாவற்றையும் இப்போது பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய பிரதிநிதியாகச் செய்பட்டு இந்தப் பூமியிலே நிறைவேற்றி வருகிறார். (அப் 1:2-8; அப் 5:9 அப் 8:29,39; அப் 10:19; அப் 11:12 அப் 13:2-4; அப் 15:28; அப் 16:6; அப் 20:28; அப் 21:4-11; 1கொரி 2:1-14 1கொரி 12:4-30 2கொரி 3:8; எபே 2:22; எபே 3:5) பழைய ஏற்பாட்டில் பத்து கற்பனைகள் பிரதானமாக இருந்தது. புதிய உடன்படிக்கையில் இவை ஏராளமான இன்னும் அநேக கற்பனைகள் சேர்க்கப்பட்டிருக்கிறது. (அப் 15:1,24)

2. அப்போஸ்தலருடைய நடபடிகளின் கருத்து

அப் 1:2 அவர் எடுத்துக்கொள்ளப்பட்ட நாள் வரைக்கும் செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கின எல்லாவற்றையுங்குறித்து, முதலாம் பிரபந்தத்தை உண்டுபண்ணினேன்.

"முதலாம் பிரபந்தம்" (former treatise) - லூக்கா சுவிசேஷத்தைக் குறிக்கும். (லூக்கா 1:3)

"பிரபந்தம்" (treatise) - இதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்க வார்த்தை "லோகோஸ்" (logos) என்பதாகும். புதிய ஏற்பாட்டில் 330 தடவைகள் இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு மூன்று விதமாகப் பொருள் கூறலாம். அவையாவன

1 பேச்சுடன் (speech) தொடர்புடைய பயன்பாடு - சொல் (a word) (யாக் 3:2); வார்த்தை (saying) (மத் 19:22); நிரூபம் (discourse) (2கொரி 10:10); உபதேசம் (doctrine) (1தீமோ 6:3; 2தீமோ 1:13); பிரபந்தம் (narrative) (அப் 1:1); பேச்சு (report) (யோவான் 21:23) உள்ளான மனது வெளிப்படுவதையும் இந்த வார்த்தை குறிக்கும். (எபி 4:2)

2 சிந்தையுடன் (mind) தொடர்புடைய பயன்பாடு - புரிந்து கொள்ளும் சக்திகள் (எபி 4:12)

3 நபருடன் (person) தொடர்புடைய பயன்பாடு - தேவனுடைய ஜீவனுள்ள வார்த்தை (the essential living Word of God) (யோவான் 1:1,14; 1யோவான் 1:1; 1யோவான் 5:7; வெளி 19:13); எல்லா ஞானத்தின் வெளிப்பாடுகள் (the embodiment of and expression of all wisdom and prudence) (எபே 1:8; 1கொரி 1:30; கொலோ 2:3)

பிரபந்தம் (treatise) - λόγος - logos

3056

ஆண்பால் பெயர்ச்சொல் - சொல், சொல்லுதல், வார்த்தை, கணக்கு, காரியம், புத்தி, ஞானம், வசனம், சங்கதி, பேச்சு, உபதேசம், கீர்த்தி, யோசனை, வாக்கியம் (concept, an idea)

அப்போஸ்தலர் – தொகுப்புரை

1 அதிகாரம்

கிரேக்க மொழியில் சிந்தையை வெளிப்படுத்துவதற்கு "ரேமா" (rheema) என்னும் சொல் பயன்படுத்தப்படுகிறது. வார்த்தைகளை இலக்கண ரீதியாக முறையாக வெளிப்படுத்துதல் என்பது இதன் பொருள்.

வார்த்தை (word) - 'ρῆμα - rheema - 4487

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - வார்த்தை, மொழி, வாக்கு, வசனம் காரியம், சொல்லப்பட்டது, சொன்ன உத்தரவு, வாக்கியம், சங்கதி

"அவர் எடுத்துக்கொள்ளப்பட்ட நாள் வரைக்கும் செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கின எல்லாவற்றையும்" - சுவிசேஷ புஸ்தகங்களில் இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தை நாம் வாசிக்கிறோம். அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் இயேசு கிறிஸ்து தமது விசுவாசிகள் மூலமாகத் தமது ஊழியத்தைத் தொடர்ந்து நிறைவேற்றி வருவதை நாம் வாசிக்கிறோம். (யோவான் 14:12; மாற்கு 16:15-20)

"அவர் எடுத்துக்கொள்ளப்பட்ட நாள் வரைக்கும்" - இயேசு கிறிஸ்து பரமேறும் வரையிலும் தமது ஊழியத்தைத் தொடர்ந்து நிறைவேற்றி வந்தார். அதன் பின்பு, இயேசு கிறிஸ்து தமது விசுவாசிகளைப் பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகம் பண்ணினார். அவர்கள் மூலமாக இயேசு கிறிஸ்து தமது ஊழியத்தைத் தொடர்ந்து செய்து வருகிறார் (அப் 1:2,8; லூக்கா 24:49; மாற்கு 16:15-20)

"இயேசு கிறிஸ்து எடுத்துக்கொள்ளப்பட்ட நாள்" - (அப் 1:9-11; அப் 2:33; அப் 7:56; மாற்கு 16:19; லூக்கா 24:51; ரோமர் 8:34; எபே 1:20; கொலோ 3:1; எபி 1:3; எபி 4:14; எபி 8:1; எபி 12:2)

3\. உயிர்த்தெழுந்த பின்பு இயேசு கிறிஸ்து நாற்பது நாட்களுக்கு தரிசனம் கொடுத்தார் - (மத் 28; மாற்கு 16; லூக் 24; யோவான் 20-21; 1கொரி 15:6-20; 2பேதுரு 1:14)

அப் 1:3 அவர் பாடுபட்டபின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார்.

"அவர் பாடுபட்டபின்பு.......அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார்" - இயேசு கிறிஸ்துவின் பாடுகளையும் மரணத்தையும் குறிக்கும் வசனம் (1கொரி 15:3-8; 1பேதுரு 1:11)

"நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமானார்" - (யோவான் 21:14)

"தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசினார்" இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு, பரமேறுவதற்கு முன்பாக நாற்பது நாளளவும் தமது அப்போஸ்தலருக்குத் தரிசனமானார். இந்த நாட்களில் அவர் தேவனுடைய இராஜ்யத்திற்குரியவைகளை அவர்களுக்கு உபதேசம் பண்ணினார்.

இயேசு கிறிஸ்து உபதேசம் பண்ணிய சத்தியங்கள்

1\. கிறிஸ்துவின் சரீர உயிர்த்தெழுதல் (யோவான் 21:14)

2\. கிறிஸ்துவின் அதிகாரம் (மத் 28:18; அப் 1:4-8; லூக்கா 24:49)

3\. சுவிசேஷம் உலகம் முழுவதும் பிரசங்கிக்கப்படும். (மத் 28:19; மாற்கு 16:15; லூக்கா 24:47; அப் 1:8)

4\. தண்ணீர் ஞானஸ்நானம் (மத் 28:19; மாற்கு 16:16)

1 அதிகாரம்

5 கிறிஸ்துவின்எல்லாக் கட்டளையையும் கடைபிடிக்க வேண்டும். (மத் 28.20)

6 ஊழியத்தின் திட்டம் (மத் 28 20)

7 சுவிசேஷத்தின் அடையாளங்கள் (மாற்கு 16:17-20)

8 தீர்க்கதரிசிகள் மெய்யானவர்கள் (லூக்கா 24:25-27,44)

9 பாடுகள் அவசியமானவை (லூக்கா 24:46)

10 உயிர்த்தெழுதலும், பரமேறுதலும் அவசியமானவை. (லூக்கா 24:26,46 கொரி 15

11 கிறிஸ்துவே வேதவாக்கியங்களின் மையச் செய்தியாக இருக்கிறார் லூக்கா 24:27,44

12 உயிர்த்தெழுந்த சரீரங்களின் சுபாவம் போஜனம் பண்ணுதல (லூக்கா 24:39-43, யோவான் 21:14)

13 வேதவாக்கியம் அப்படியே நிறைவேறும். (லூக்கா 24:27,44-46)

14 சுவிசேஷச்செய்தியை அறிவிப்பதற்குத் தேவனுடைய வல்லமையைப் பெற்றுக் கொள்வதற்காகக் காத்திருக்க வேண்டும். (லூக்கா 24.49, அப 1 4-8)

15 புதிய ஏற்பாட்டு முறைமையைக் கையாளவேண்டும் அவையாவன

(1) சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுவது. (மத் 28:19; மாற்கு16:15-16; லூக்கா 24.47; அப் 1:8

(2 சுவிசேஷத்தை உறுதி பண்ணுவது (மத் 28:20; மாற்கு16:17 20; லூக்கா 24:49; யோவான் 20:21-23; அப் 13,4-8)

4. வாக்குத்தத்தம் நிறைவேற காத்திருக்குமாறு கட்டளை - (லூக் 24:49-53)

அப் 1:4 அன்றியும் அவர் அவர்களுடனே கூடி வந்திருக்கும் போது, அவர்களை நோக்கி: யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான் நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்

தீர்க்கதரிசன எண் - 1

"நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்" (அப 1:5) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (அப 2:1-39)

பரிசுத்த ஆவியானவரின் வரங்களும், கனியும் - முதல் எட்டு அதிகாரங்கள்

1 பாஷைகள் (அப 2.3-11

2 தீர்க்கதரிசனம் (அப 2:16-21 அப 3:19-21)

3 அறிவை உணர்த்தும் வசனம் (அப 2:23-36, அப 5.3-11; அப் 8:22

4 ஞானத்தை உணர்த்தும் வசனம் (அப் 2.37-40, அப 3:19, அப 4:8-12 அப் 5:29-33, அப 6.3-10

5 அற்புதங்கள் (அப 2:43, அப 3:6-16, அப் 4:22; அப 5:12-16, அப 6:8, அப் 8:6-17)

6 சுகமாக்குதல (அப3:6-8,16, அப 4:22, அப் 5:16; அப 6:8, அப் 8:6-13

7 பகுத்தறிதல் (அப 5.3-11; அப 8:22

8 விசுவாசம் (அப 3.3-16; அப் 5:12-16, அப் 6:8)

9 ஆவியின் கனி (அப் 2:1,42-47, அப 3.3-20; அப் 4:29-33, அப 5:12-16,26-42, அப் 7:54-60, அப 8:8)

1 அதிகாரம்

5. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைக் குறித்து தீர்க்கதரிசனம் - (மத் 3:6)

அப் 1:5 ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்

"பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள்" - எல்லா விசுவாசிகளும் பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்குக் காத்திருக்க வேண்டும். (மத் 28:20; மாற்கு 16:15-20; லூக்கா 24:49 யோவான் 7:37-39; யோவான் 14:12 யோவான் 15:4-16) பிதாவின் வாக்குத்தத்தம் என்பது பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைக் குறிக்கும்.

"நீங்கள் என்னிடத்தில் கேள்விப்பட்டது" இயேசு கிறிஸ்து பல சமயங்களில் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைக் குறித்து பல சமயங்களில் தம்முடைய சீஷர்களோடு பேசியிருக்கிறார் (யோவான் 7:37-39 யோவான் 14:12-17:26. யோவான் 15:26. யோவான் 16:7-15)

6. இராஜ்ஜியத்தைப் பற்றிய கேள்வி - (மத் 4:17)

அப் 1:6 அப்பொழுது கூடி வந்திருந்தவர்கள் அவரை நோக்கி: ஆண்டவரே இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர் என்று கேட்டார்கள்

அப் 1:7 அதற்கு அவர்: பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல

"அப்பொழுது கூடி வந்திருந்தவர்கள் அவரை நோக்கி: ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர் என்று கேட்டார்கள்" - இயேசு கிறிஸ்து இந்தக் கேள்விக்குப் பதில் கூறவில்லை. இந்தக் காரியத்தைப் பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிறார். பிதாவின் காலங்களையும், வேளைகளையும் அறிகிறது விசுவாசிகளுக்கு அடுத்ததல்ல. (மத் 24:32; மாற்கு 13:32)

7. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தோடு பெலனடைவோம் என்னும் வாக்குத்தத்தம் - (லூக் 24:49; மத் 18:18)

அப் 1:8 பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும் யூதேயா முழுவதிலும் சமாரியாவிலும் பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்

தீர்க்கதரிசன எண் - 2

"பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும் யூதேயா முழுவதிலும் சமாரியாவிலும் பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" (அப் 1:8) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (அப் 2:1-47) இது உபத்திரவக் காலத்திலும் ஆயிரம் வருஷ அரசாட்சியிலும் பூரணமாக நிறைவேறும்.

பெலன் (power) - δύναμις dynamis - (1411)

பெலன் எனப்பொருள் பெலன் வல்லமை பலத்த செய்கைகள், அற்புதங்கள் திறமை பலம் சத்துவம், சக்தி. கருத்து உக்கிரம் மிகுதி ஒரு "டைனமோ" (dynamo) தனக்குத்தானே மின்சாரத்தை உற்பத்தி செய்வது போன்று, ஆவிக்குரிய பெலனை உற்பத்தி செய்யும் வல்லமை.

1 அதிகாரம்

"பூமியின் கடைசிபரியந்தம்" – இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தினுடைய ஆசீர்வாதம் முழு உலகத்திற்குமுரியது. இது யூதருக்கு மட்டுமென்றோ அல்லது முதலாவது நூற்றாண்டில் வாழ்ந்த விசுவாசிகளுக்கு மட்டுமென்றோ வரையறுக்கப்படவில்லை. சுவிசேஷத்தின் ஆசீர்வாதம் எல்லோருக்கும் எக்காலத்திற்கும் உரியது.

8. இயேசு கிறிஸ்து பரமேறுகிறார் – 2:33; மாற்கு 16:19; லூக் 24:50; யோவான் 3:13; எபே 1:20; 4:8; பிலி 2:9-11; எபி 1:3; 1பேதுரு 3:22)

அப் 1:9 இவைகளை அவர் சொன்ன பின்பு, அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில், உயர எடுத்துக் கொள்ளப்பட்டார்; அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக் கொண்டது.

"அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில் உயர எடுத்துக்கொள்ளப்பட்டார்" – இயேசு கிறிஸ்து பரமேறினார் (மாற்கு 16:19; லூக்கா 24:51; யோவான் 3:13; எபே 1:20; எபி 1:3; 1பேதுரு 3:22)

"அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது" – தேவதூதர்கள் இயேசு கிறிஸ்துவை எடுத்துக் கொள்ளவில்லை. அவர் மேகங்கள் நடுவே பரமேறினார் (தானி 7:13-14; 1தெச 4:17; வெளி 1:7; வெளி 11:12; வெளி 14:14)

9. இயேசுவின் இரண்டாம் வருகை முன்குறித்துக் கூறப்படுகிறது – (மத் 24:27)

அப் 1:10 அவர் போகிறபோது அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ, வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டுபேர் அவர்களருகே நின்று;

அப் 1:11 கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்துபார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்.

"அவர்போகிறபோது அவர்கள் வானத்தை அண்ணாந்துபார்த்துக்கொண்டிருந்தார்கள்" – இயேசு கிறிஸ்துவை ஒரு மேகம் எடுத்துக் கொண்டது. சீஷர்கள் அந்த மேகத்தையே அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டுபேர் அவர்களருகே நின்றார்கள்" – இவ்விரண்டு தூதர்களும் வானத்திலிருந்து இறங்கி வந்ததாக எழுதப்படவில்லை. தூதர்களுக்குத் தோன்றவும் மறையவும் வல்லமையுண்டு. (எபி 13:2)

"வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள்" – தேவனும் தேவதூதர்களும் எப்போதும் வெண் வஸ்திரம் தரித்தவர்களாகவே வர்ணிக்கப்படுகிறார்கள் (தானி 7:9; மத் 17:2; மத் 28:3; யோவான் 20:12; வெளி 4:4) இரட்சிக்கப்பட்டோரும் வெண் வஸ்திரம் தரித்திருப்பார்கள் வெளி 3:4,5,18; வெளி 6:11; வெளி 7:9,13; வெளி 19:8,14

"கலிலேயராகிய மனுஷரே" – இந்த வாக்கியத்தில் மனுஷரே என்னும் வார்த்தை திரளான கூட்டத்தைக் குறிக்கும் சொல்லாகும் (அப் 1:16; அப் 2:14,22,29,37; அப் 3:12; அப் 5:35; அப் 7:2; அப் 13:15,16,26,38; அப் 15:7,13; அப் 17:22; அப் 19:35; அப் 21:28; அப் 22:1; அப் 23:1,6; அப் 28:17)

தீர்க்கதரிசன எண் – 3

"உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாகவானத்துக்குஎழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்" (அப் 1:11) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும். (மத் 24:29-31; மத் 25:31-46; வெளி 19:11-21) "இந்த இயேசுவானவர்" என்னும் வாக்கியம் இயேசு கிறிஸ்து மறுபடியும் தம்முடைய மாம்சத்திலும், எலும்பிலும் வருவார் என்பதைக் குறிக்கும். (லூக்கா 24:37-43)

1 அதிகாரம்

"இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்" - எப்படி பரமேறினாரோ அப்படியே பரத்திலிருந்து திரும்பி வருவார். இயேசு கிறிஸ்து தமது சரீரத்தில் மனுஷர் காணக்கூடிய விதமாக மேகங்கள் நடுவில் எந்த இடத்தில் பரமேறினாரோ அந்த இடத்திற்கு வருவார். அவர் மறுபடியும் வருவதை மனுஷர் தங்களுடைய கண்களால் காண்பார்கள் (அப 1:12; தானி 7:13-14; சக 14:1-5; மத் 24:29-31; மத் 25:31-46; 2தெச 1:7-10; வெளி 1:7; வெளி 19:11-21)

II. சபை பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகிக்கப்படுகிறது - (மத் 3:6)

1. பத்து நாட்கள் காத்திருப்பு - (அப 1:3-5; 2:1; லேவி 23:4-16)

அப 1:12 அப்பொழுது அவர்கள் எருசலேமுக்குச் சமீபமாய் ஒரு ஓய்வுநாள் பிரயாண தூரத்திலிருக்கிற ஒலிவமலை என்னப்பட்ட மலையிலிருந்து எருசலேமுக்குத் திரும்பிப்போனார்கள்.

அப 1:13 அவர்கள் அங்கே வந்தபோது மேல் வீட்டில் ஏறினார்கள். அதில் பேதுருவும், யாக்கோபும், யோவானும், அந்திரேயாவும், பிலிப்பும், தோமாவும், பற்தொலொமேயும், மத்தேயும், அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபும், செலோத்தே என்னப்பட்ட சீமோனும், யாக்கோபின் சகோதரனாகிய யூதாவும் தங்கியிருந்தார்கள்.

அப 1:14 அங்கே இவர்களெல்லாரும் ஸ்திரீகளோடும் இயேசுவின் தாயாகிய மரியாளோடும், அவருடைய சகோதரரோடுங்கூட ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்.

"ஒலிவமலை" (Olivet) - இயேசு கிறிஸ்து இரண்டாம் முறையாக வரும் ஸ்தலம். (சக 14:4)

"ஒரு ஓய்வுநாள் பிரயாண தூரம்" - சுமார் ஒரு மைல் தூரம்.

"மேல் வீடு" - (மாற்கு 14:15)

"அதில் பேதுருவும் யாக்கோபும் ... யாக்கோபின் சகோதரனாகிய யூதாவும் தங்கியிருந்தார்கள்" - மாற்கு 14:15; லூக்கா 22:12; அப 1:13 ஆகிய வசனங்களில் நாம் வாசிக்கும் மேல்வீடு ஜனங்கள் வசிக்கும் ஸ்தலமாகும். இங்கு இந்த நாட்களில் சீஷர்கள் தங்கியிருந்தார்கள் (மாற்கு 14:15). தேவாலயத்தின் பிரகாரங்களிலும் அவர்கள் ஜெபிப்பதற்காகச் சென்று, அங்கு தேவனைத் துதித்தார்கள் (லூக்கா 24:53)

"ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்" - மூலபாஷையில் "ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தொடர்ந்து தரித்திருந்தார்கள்" என்றிருக்கிறது. தொடர்ந்து என்பதற்கான கிரேக்க வார்த்தை "ப்ரோஸ்கார்தெரேயோ" (proskartereoo) என்பதாகும். ஒரு காரியத்தில் உறுதியாகத் தரித்திருத்தல் என்பது இதன் பொருள் (அப 2:42,46; அப் 6:4; அப 8:13; அப 10:7; ரோமர் 12:12; ரோமர் 13:6; கொலோ 4:2; மாற்கு 3:9)

தொடர்ந்து (continued) - προσκαρτερέω proskartereoo 4342

வினைச்சொல் - தொடர்ந்து நெருங்கிவா, உறுதியாய்த் தரி, ஒருமனப்பட்டு பற்றிக்கொள், இடைவிடாமல் பண்ணு (to preserve in a thing, to adhere firmly to)

"ஒருமனப்பட்டு தரித்திருந்தார்கள்" ஜெபத்தில் ஒரே சிந்தையுடையவர்களாக இருந்தார்கள் (அப 2:1,46; அப் 4:24; அப 5:12; அப 7:57; அப 8:6; அப 12:20; அப 15:25; அப 18:12; அப 19:29; ரோமர் 15:6)

1 அதிகாரம்

"ஸ்திரீகள்" - கலிலேயாவிலிருந்து இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றி வந்த ஸ்திரீகள் (மத் 27:55-56)

"இயேசுவின் தாயாகிய மரியாள்" - வேதாகமத்தில் மரியாளின் பெயர் இந்த வசனத்தில் கடைசியாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"இயேசுவின் சகோதரர்" - (லூக்கா 8:19)

2. சபையின் அதுவல்க கூட்டம்

(1) இன்னும் ஒரு அப்போஸ்தலர் தேவை

அப 1:15 அந்நாட்களிலே சீஷர்களில் ஏறக்குறைய நூற்றிருபதுபேர் கூடியிருந்த போது, அவர்கள் நடுவிலே பேதுரு எழுந்து நின்று,

அப 1:16 சகோதரரே, இயேசுவைப் பிடித்தவர்களுக்கு வழிகாட்டின யூதாசைக்குறித்துப் பரிசுத்தஆவி தாவீதின் வாக்கினால் முன் சொன்ன வேதவாக்கியம் நிறைவேற வேண்டியதாயிருந்தது.

அப 1:17 அவன் எங்களில் ஒருவனாக எண்ணப்பட்டு, இந்த ஊழியத்திலே பங்கு பெற்றவனாயிருந்தான்.

அப 1:18 அநீதத்தின் கூலியினால் அவன் ஒரு நிலத்தைச் சம்பாதித்து, தலைகீழாக விழுந்தான்; அவன் வயிறுவெடித்து, குடல்களெல்லாம் சரிந்துபோயிற்று.

அப 1:19 இது எருசலேமிலுள்ள குடிகள் யாவருக்கும் தெரிந்திருக்கிறது; அதினாலே அந்த நிலம் அவர்களுடைய பாஷையிலே இரத்தநிலம் என்று அர்த்தங்கொள்ளும் அக்கெல்தமா எனப்பட்டிருக்கிறது.

அப 1:20 சங்கீத புஸ்தகத்திலே: அவனுடைய வாசஸ்தலம் பாழாகக்கடவது, ஒருவனும் அதில் வாசம்பண்ணாதிருப்பானாக என்றும்; அவனுடைய கண்காணிப்பை வேறொருவன் பெறக்கடவன் என்றும் எழுதியிருக்கிறது.

"அந்நாட்களிலே" - பரிசுத்த ஆவியானவருக்காகக் காத்திருந்த பத்து நாட்களில். (அப 1:3; அப 2:1; லேவி 23:10-16)

"கூடியிருந்தபோது" - அதே இடத்தில் சீஷர்கள் கூடியிருந்தபோது (அப 1:15; அப 2:1,44; அப 4:26)

"நூற்றிருபதுபேர்" - ஒரு பட்டணத்தில் ஆலோசனைச் சங்கம் அமைப்பதற்கு யூதருடைய பாரம்பரியத்தின் பிரகாரம் குறைந்தது நூற்றிருபதுபேர் இருக்க வேண்டும். அந்த எண்ணிக்கையில் உள்ளவர்கள் இங்கு கூடியிருக்கிறார்கள்.

"பரிசுத்த ஆவி தாவீதின் வாக்கினால் முன் சொன்ன வேதவாக்கியம் நிறைவேற வேண்டியதாயிருந்தது" இந்த வசனம் அப 1:20 ஆகிய வசனத்தைக் குறிப்பிடுகிறது.

"அவன் எங்களில் ஒருவனாக எண்ணப்பட்டு, இந்த ஊழியத்திலே பங்கு பெற்றவனாயிருந்தான்" யூதாஸ் காரியோத்து இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தில் பங்கு பெற்றவன். இரட்சிக்கப்பட்டவன். ஆனாலும் தனது கலகக் குணத்தினாலும் மீறுதலினாலும் அவன் இயேசுவை விட்டு பின்வாங்கி விழுந்து போனான். (அப 1:17,20,25; யோவான் 6:70; யோவான் 17:12; சங் 41:9; சங் 69:22)

"அநீதத்தின் கூலியினால் அவன் ஒரு நிலத்தைச் சம்பாதித்தான்" யூதாஸ் மரித்த பின்பு அவனுடைய முப்பது வெள்ளிக்காசுகளைப் பரிசேயர் எடுத்துக் கொண்டு ஒரு குயவனுடைய தோட்டத்தை விலைக்கு வாங்கினார்கள் (மத் 27:6-8

1 அதிகாரம்

"தலைகீழாக விழுந்தான்; அவன் வயிறுவெடித்து, குடல்களெல்லாம் சரிந்து போயிற்று - யூதாஸ் தன்னுடைய உள்ளத்தில சாத்தானுக்கு இடம் கொடுத்தான் பிசாசானவன் அவனை உபத்திரவம் பண்ணிய பின்பு, அவனுடைய சரீரத்தை மேலே இருந்து கீழே தூக்கி எறிந்துவிட்டான் லூக்கா யூதாஸைப் பற்றி சில விசேஷித்த காரியங்களை எழுதியிருக்கிறார் (அப் 1:18-19; மத் 27:5)

அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 1

"சங்கீத புஸ்தகத்திலே, அவனுடைய வாசஸ்தலம் பாழாகக்கடவது ஒருவனும் அதில வாசம்பண்ணாதிருப்பானாக என்றும், அவனுடைய கண்காணிப்பை வேறொருவன் பெறக்கடவன் என்றும் எழுதியிருக்கிறது" (அப் 1:20; சங் 69:25-28; சங் 109:8-15) யூதாசின வாசஸ்தலம் பாழாகக்கடவது. ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய பெயர் கிறுக்கப்பட்டுப் போவதாக என்று சங் 69:25-28 ஆகிய வசனங்களில யூதாஸைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (யாத் 32:32-33; வெளி 3:5, வெளி 22:18-19)

கண்காணிப்பு (bishoprick)
ἐπισκοπή - episkopee - 1984

பெண்பால் பெயர்சொல
கண்காணிப்பு - கண்காணி
"overseer" (அப் 20:28)
உதவிக்காரர் "bishop" (பிலி 1:1, 1தீமோ 3:2, தீத்து 1:7; 1பேதுரு 2:25)

(2) அப்போஸ்தலருக்கு தகுதிகள்

அப் 1:21 ஆதலால், யோவான் ஞானஸ்நானங்கொடுத்த நாள்முதற் கொண்டு,கர்த்தராகிய இயேசுவானவர் நம்மிடத்திலிருந்து உயர எடுத்துக் கொள்ளப்பட்ட நாள் வரைக்கும்.

அப் 1:22 அவர் நம்மிடத்தில் சஞ்சரித்திருந்த காலங்களிலெல்லாம் எங்களுடனேகூட இருந்த மனுஷர்களில் ஒருவன் அவர் உயிரோடெழுந்ததைக் குறித்து, எங்களுடனேகூடச் சாட்சியாக ஏற்படுத்தப்படவேண்டும் என்றான்

"சாட்சியாக ஏற்படுத்தப்படவேண்டும்" (ordained to be a witness) - மூலபாஷையில "ஏற்படுத்தப்படவேண்டும் (ordained) என்னும் வார்த்தை இங்கே இதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்க வார்த்தை "கினோமாய (ginomai) என்பதாகும். இதற்குச் சாட்சி என்று பொருள்

சாட்சி (witness) - γίνομαι - ginomai - 1096

வினைச்சொல் - செய, உண்டாக்கு

"உயிரோடெழுந்தது" - இயேசு கிறிஸ்து உயிரோடெழுந்ததுதான அப்போஸ்தல ஊழியத்தின பிரதான சத்தியம் (அப் 2:24,31-32; அப் 4:2,10,33; அப் 10:40 அப் 13:30; அப் 17:3,18,32, அப் 23:6 அப் 24:15,21; 1கொரி 15, எபி 6:2)

(3) இரண்டு பேர்களை ஆலோசிக்கிறார்கள்

அப் 1:23 அப்பொழுது அவர்கள் யுஸ்து என்னும் மறுநாமமுள்ள பர்சபா எனனப்பட்ட யோசேப்பும் மத்தியாவும் ஆகிய இவ்விரண்டுபேரையும் நிறுத்தி.

"அவர்கள யுஸ்து என்னும் மறுநாமமுள்ள பர்சபா என்னப்பட்ட யோசேப்பும் மத்தியாவும் ஆகிய இவ்விரண்டு பேரையும் நிறுத்தினார்கள்" பன்னிரண்டு சீஷர்களில ஒருவனான யூதாஸ் காரியோத்து மரித்துப் போனான் அவனுடைய ஸ்தானத்தில் வேறொருவனைத் தெரிந்தெடுக்க வேண்டுமென்று சீஷர்கள் விரும்பினார்கள அதற்காக இவ்விருவரையும் நிறுத்தி, இவர்களில ஒருவனை சீஷர்கள் தெரிந்தெடுக்கிறார்கள் (அப் 4:36

1 அதிகாரம்

(4) ஜெபம் பண்ணினார்கள்

அப 1:24 எல்லாருடைய இருதயங்களையும் அறிந்திருக்கிற கர்த்தாவே, யூதாஸ் என்பவன் தனக்குரிய இடத்துக்குப் போகும்படி இழந்துபோன இந்த ஊழியத்திலும் இந்த அப்போஸ்தல பட்டத்திலும் பங்கு பெறுவதற்காக,

அப 1:25 இவ்விரண்டு பேரில் தேவரீர் தெரிந்துகொண்டவனை எங்களுக்குக் காண்பித்தருளும் என்று ஜெபம்பண்ணி,

"யூதாஸ் என்பவன் தனக்குரிய இடத்துக்குப் போகும்படி இழந்துபோன இந்த ஊழியத்திலும் இந்த அப்போஸ்தல பட்டத்திலும்" யூதாஸ் காரியோத்து இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தில் பங்கு பெற்றவன். அதன் பின்பு, தன் பாவத்தினால் தனக்குக் கொடுக்கப்பட்ட ஊழியத்தை இழந்து போனான் என்பது இந்த வசனத்தின் மூலமாகத் தெளிவாகிறது.

"யூதாஸ் என்பவன் தனக்குரிய இடத்துக்குப் போகும்படி" தனக்குரிய இடத்தைத் தன்னுடைய பாவத்தின் நிமித்தமாக யூதாஸ் தெரிந்து கொண்டான் (மத்25:41;மத் 26:24; வெளி 21:8; சங் 9:17)

(5) மத்தியாவை அப்போஸ்தலப் பட்டத்திற்கு தேர்ந்தெடுக்கிறார்கள்

அப 1:26 பின்பு, அவர்களைக்குறித்துச் சீட்டுப் போட்டார்கள்; சீட்டு மத்தியாவின் பேருக்கு விழுந்தது; அப்பொழுது அவன் பதினொரு அப்போஸ்தலருடனே சேர்த்துக் கொள்ளப்பட்டான்.

"அவர்களைக்குறித்துச் சீட்டுப் போட்டார்கள்; சீட்டு மத்தியாவின் பேருக்கு விழுந்தது" - அக்காலத்தில் ஒரு காரியத்தை முடிவு பண்ணுவதற்காக ஜெபித்துவிட்டு, சீட்டுப் போடுவது வழக்கம். சீட்டு யார் பேருக்கோ அல்லது எதன் பேருக்கோ விழுகிறதோ அதைத் தேவனுடைய சித்தமாக ஜனங்கள் ஏற்றுக் கொள்வார்கள் (லேவி 16:8-9; யோசு 14:2)

"மத்தியா பதினொரு அப்போஸ்தலருடனே சேர்த்துக்கொள்ளப்பட்டான்" - பரிசுத்த ஆவியானவர் சீட்டுப் போட்டு தெரிந்தெடுத்ததை அங்கீகரிக்கிறார். யூதாசின் அப்போஸ்தலபட்டத்தை மத்தியா பெற்றுக் கொள்கிறான். பவுல் பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் ஒருவனல்ல. யூதாசின் ஸ்தானத்தைப் பவுல் பெற்றுக் கொள்ளவில்லை. பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் ஒருவனாகப் பவுல் தன்னை எண்ணிக் கொள்ளவில்லை.

2 அதிகாரம்

3. பெந்தெகொஸ்தே நாள் - மனுஷர்மீது பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரி - (மத் 3:6; யோவான் 7:37)

அப் 2:1 பெந்தெகோஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள்

அப் 2:2 அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று.

அப் 2:3 அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது.

அப் 2:4 அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்

"பெந்தெகோஸ்தே" (Pentecost) - இது ஒரு கிரேக்க மொழிச்சொல் "ஐம்பது" என்பது இதன் பொருள். முதற்கனிகளின் கதிர்க்கட்டைத் தேவாலயத்தில் அசைவாட்டும் பலியாகச் செலுத்திய நாளிலிருந்து ஐம்பதாவது நாளில் பெந்தெகொஸ்தே நாள் வரும். (லேவி 23:15-16) இந்த வசனத்திலும் அப் 20:16; 1கொரி 16:8 ஆகிய வசனங்களிலும் மட்டுமே பெந்தெகொஸ்தே நாளைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

"அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள்" - அப் 1:15 ஆவது வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் 120 சீஷர்களும் ஒருமனப்பட்டிருந்தார்கள் எல்லோரும் ஒரே ஆர்வத்தோடும், பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்னும் வாஞ்சையோடும் ஜெபத்தில் விசுவாசத்தோடு தரித்திருந்தார்கள்

"ஓரிடத்திலே வந்திருந்தார்கள்" - இந்த வசனத்தில் நாம் வாசிக்கும் ஓரிடம் தேவாலயத்திலுள்ள ஒரு பிரகாரமாக இருக்கலாம். அங்கு சீஷர்கள் ஜெபம் பண்ணுவதற்காகக் கூடுவது வழக்கம். (லூக்கா 24:53; அப் 2:46) இந்த நாட்களில் சீஷர்கள் தங்குவதற்காகப் பயன்படுத்திய மேல்வீடாக இந்த இடம் இருக்காது என்று சில வியாக்கியானம் கூறுகிறார்கள் (மாற்கு 14:15, அப் 1:13)

சடுதியாய் (suddenly) - ἄφνω - **aphnoo** - 869

வினையடை - சடுதியாய் (அப் 16:26, அப் 28:6)

முழக்கம் (sound) - ἦχος - eechos - 2279

ஆண்பால் பெயர்ச்சொல் - கீர்த்தி, முழக்கம் (லூக்கா 4:37, எபி 12:19)

"பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல" காற்று அடித்தல் என்னும் வாக்கியத்திலுள்ள அடித்தல் (rushing) என்பதன் கிரேக்க வார்த்தை "பெரோ" (pheroo) என்பதாகும். இந்த வார்த்தைக்கு இவ்வாறும் பொருள் கூறலாம். (to move) (2பேதுரு 1:21), (carry) (யோவான் 21:18), (be driven) (அப் 27:17); (to rush) (அப் 2:2)

பரிசுத்த ஆவியானவர் அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அங்கு கூடியிருந்த 120 பேருடைய உள்ளான ஜீவியத்தில் ஜீவத்தண்ணீருள்ள நதிகளைப் போல பரிசுத்த ஆவியானவர் நிரம்பி வழிந்தார் (யோவான் 7:37-39)

2 அதிகாரம்

நிரம்பிற்று என்பதற்கான கிரேக்க வார்த்தை "எக்கேயோ" (ekcheoo) என்பதாகும். இந்த வார்த்தையை இவ்வாறும் மொழிபெயர்க்கலாம். "shed forth" (அப் 2:33); "shed" (தீத்து 3:6); "pour out" (அப் 2:17) பொழிதல் என்பது இதன் பொதுவான பொருளாகும். பரலோகத்திலிருந்து மழையைப் போலத் தாராளமாக பொழிதல் என்றும் இந்த வார்த்தைக்குப் பொருள் கூறலாம் (லூக்கா 24:49; அப் 1:8). பரிசுத்த ஆவியானவர் 120 சீஷர்கள் உட்கார்ந்திருந்த வீட்டில் பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல வந்து, அந்த வீடு முழுவதையும் நிரப்பினார். பலத்த காற்று என்பது மழை பொழிவதற்கு முன்பாக இடி இடிக்கும் பலத்த ஓசையைப் போன்றது. (1இராஜா 19:11-12)

அடித்தல (rushing) - φέρω - pheroo - 5342

வினைச்சொல் - கொண்டு வா, கொண்டுபோ, சுமந்து கொள், பலன் தா, கொடு, காட்டு, நீட்டு, அடி, தாங்கு, பொறுமையாயிரு, உண்டாக்கு, அனி), ஏவு, சகி

கொட்டு (gush) - ἐκχέω - ekcheoo - 1632

வினைச்சொல் - சிந்து, கொட்டு, ஊற்று, பொழி, சிந்துபோ

"அவர்கள் உட்கார்ந்திருந்தார்கள்" அவர்கள் பொறுமையோடு அமர்ந்திருந்தார்கள் (அப் 1:4). பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளும் வரையிலும் 120 பேரும் அங்கு அமர்ந்திருந்தார்கள் (லூக்கா 24:49)

"அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள்" பலத்த காற்று அடிக்கிற முழக்கத்தைத் தொடர்ந்து வீட்டில் அமர்ந்திருந்த 120 பேர் மீதும் அக்கினிமயமான நாவுகள்போல பிரிந்திருக்கும் நாவுகள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது.

"அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டார்கள்" - 120 பேரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டார்கள். பரிசுத்த ஆவியினாலே அபிஷேகம் பண்ணப்பட்டார்கள்.

பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களின் ஆவிக்குரிய அனுபவங்கள்

1. அவர்கள் நிரப்பப்பட்டார்கள் (They were filled) (யாத் 28:3; யாத் 31:3; யாத் 35:31; உபா 34:9; மீகா 3:8)
2. அவர்களில் பரிசுத்த ஆவியானவர் இருந்தார் (had the Spirit in them) (ஆதி 41:38; எண் 27:18; தானி 4:8-9,18; தானி 5:11-14; தானி 6:3)
3. பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குள் இருந்தார் (within them) (சங் 51:10-11; ஏசா 63:10-14; எசே 11:19)
4. பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மூலமாக இருந்தார் (into them) (எசே 2:2; எசே 3:24; அப் 3:21)
5. பரிசுத்த ஆவியானவர் அவர்கள்மீது இருந்தார் (upon them) (எண் 11:17-29; நியா 3:10; நியா 6:34; நியா 11:29; நியா 14:6,19; நியா 15:14)
6. பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மூலமாகக் கிரியை நடப்பித்தார் (He moved many) (நியா 13:25; அப் 3:21; 2பேதுரு 1:21)
7. பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் யாரையும் பரிசுத்த ஆவியானவர் அபிஷேகம் பண்ணவில்லை.

புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களின் ஆவிக்குரிய அனுபவங்கள்

1. யோவான் ஸ்நானனும், மற்றவர்களும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்படவில்லை. (லூக்கா 1:15-17,41-67; லூக்கா 2:25-38

அப்போஸ்தலர் - தொகுப்புரை

2 அதிகாரம்

2 பெந்தெகொஸ்தே நாளில் மரியாள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெறுவதற்கு 35 வருஷங்களுக்கு முன்பாக அவள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தாள் (லூக்கா 1:45-56; அப் 1:13-15; அப் 2:1-4)

3 இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகம் பண்ணப்படுவதற்கு 30 வருஷங்களுக்கு முன்பாக அவர் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தார் (ஏசா 50:4-5; லூக்கா 2:40-52; மத் 3:16-17)

4 சீஷர்கள் பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகம் பண்ணப்படுவதற்கு 3 வருஷங்களுக்கு முன்பாக அவர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தார்கள். அவர்களிடத்தில் பரிசுத்த ஆவியானவர் இருந்தார் (மத் 10:1-8,20; அப் 1:4-8; அப் 2:1-4,33)

பழைய ஏற்பாட்டுக்கால பரிசுத்தவான்களும், பரிசுத்த ஆவியானவரின் வரங்களும் கனியும்

1 பரிசுத்த ஆவியானவரின் வரங்களும் கனியும் பழைய ஏற்பாட்டுக் கால பரிசுத்தவான்களிடம் காணப்பட்டது. (1இராஜா 3:12; 1இராஜா 17:1-2; 1இராஜா 18:25; அப் 3:21; எபி 11)

2 பரிசுத்த ஆவியானவர் வெவ்வேறு அளவுகளில் அவர்களுக்கு அருளப்பட்டிருந்தார் (எண் 11:16-25; 2இராஜா 2:9; லூக்கா 1:17)

3 பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை அவர்கள் பெற்றுக் கொள்ளவில்லை. அதாவது பரிசுத்த ஆவியானவரை அவர்கள் அளவில்லாமல் பெற்றுக் கொள்ளவில்லை. (யோவான் 3:34; யோவான் 7:37-39)

புதிய ஏற்பாட்டுக்கால சீஷர்களும், பரிசுத்த ஆவியானவரின் வரங்களும் கனியும்

1 பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முன்பாக சீஷர்களிடம் பரிசுத்த ஆவியானவரின் வரங்களும், வல்லமையும் இருந்தது (மத் 10:1-8,16-20; மாற்கு 6:7-13; லூக்கா 10)

2 சீஷர்கள் இயேசு கிறிஸ்துவிற்காக ஊழியத்தை ஆரம்பிக்கும் முன்பாக பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்திற்காகக் காத்திருக்குமாறு இயேசு கிறிஸ்து அவர்களுக்குக் கட்டளை கொடுத்தார் (லூக்கா 24:49; யோவான் 7:37-39; யோவான் 14:12; அப் 1:4-8)

பழைய ஏற்பாட்டுக் கால பரிசுத்தவான்களுக்கும், இயேசு கிறிஸ்துவின் சீஷர்களுக்கும் கொடுக்கப்பட்டிருந்த ஆவிக்குரிய அனுபவங்கள்

1 இரட்சிப்பு (salvation) (சங் 51:12)

2 மீட்பு (redemption) (சங் 31:5)

3 கிருபை (grace) (சங் 84:11)

4 சரீர சுகமாதல் (physical healing) (யாத் 15:26)

5 பரலோகத்தில் அவர்களுடைய பெயர்கள் எழுதப்பட்டிருந்தது (names written in heaven) (யாத் 32:32-33; லூக்கா 10:20)

6 புதிய பிறப்பு (the new birth) (கலா 4:28-30)

7 மனமாற்றம் (conversion) (சங் 19:7)

8 நீதி (righteousness) (ரோமர் 4)

9 சுவிசேஷம் (the gospel) (கலா 3:6-14; எபி 4:2)

10 நீதிமானாக்கப்படுதல் (justification) (ரோமர் 4)

2 அதிகாரம்

11 பரிசுத்தம் (holiness) (அப 3:21, 2பேதுரு 1:21)

12 சுத்த இருதயங்கள் (pure hearts) சங் 24:4

13 பரிசுத்த மாக்கப்படுதல் (sanctification) (யாத் 29:42-44 யாத் 31:13, எசே 20:12, யோவான் 15:3

14 பெந்தெகொஸதே நாளுக்கு முன்பாக ஆவிக்குரிய ஆசீர்வாதங்களில் பல (many other spiritual blessings before Pentecost) யோவான் 7:37-39; அப 2:33)

பழைய ஏற்பாட்டுப பரிசுத்தவான்களும், பரிசுத்த ஆவியானவரின ஆசிர்வாதங்களைப பெற்றிருந்தார்கள பரிசுத்த ஆவியானவரின அபிஷேகத்திற்கு இவற்றை அடையாளமாக எடுத்துக் கொள்ள முடியாது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில பரிசுத்த ஆவியானவர் பரிசுத்தவான்களை ஓரளவு மட்டுமே நிரப்பினார் புதிய ஏற்பாட்டுக் காலத்தில அளவில்லாமல் நிறைவாக நிரப்புகிறார் இதுவே பரிசுத்த ஆவியானவரின அபிஷேகம் எனறழைக்கப்படுகிறது. (யோவான் 3:34; யோவான் 7:37-39; யோவான 24:49, அப 10:38; ஏசா 61:1 ரோமர் 15:29, எபே 3:19

பழைய ஏற்பாட்டுக்கால பரிசுத்தவான்கள் பரிசுத்த ஆவியானவரை ஓரளவு மட்டுமே பெற்றிருந்திருந்ததினால் அவர்களுடைய ஆவிக்குரிய வல்லமையும், ஓரளவிற்கு மட்டுமே என்று வரையறுக்கப்பட்டிருந்தது.

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றிருக்கும் புதிய ஏற்பாட்டுக்கால விசுவாசிகள் கிறிஸ்துவைப் போலவும், அப்போஸ்தலர்களைப் போலவும் கிரியை நடப்பிப்பார்கள் (மத் 17:20; மத் 21:22, மாற்கு 9:23; மாற்கு 11:22-24 மாற்கு 16:17-18; யோவான் 14:12; அப் 2:43 அப 3:6; அப 5:16; ரோமர் 15:18-19,29,

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை ஒருவர் பெற்றுக் கொள்ளும்போது அவர் ஆவியானவரால நிரப்பப்படுகிறார் அதே சமயத்தில ஒருவர் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படும்போது அவர் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப பெற்றுக் கொண்டார் என்று கூறமுடியாது பெந்தெகொஸதே நாளில 120 சீஷர்களும் பரிசுத்த ஆவியானவரால நிரப்பப்பட்டார்கள அதே சமயத்தில அவர்கள் பரிசுத்த ஆவியானவரால அபிஷேகிக்கப்பட்டார்கள் (அப 1:4-8; அப் 2:4) சீஷர்கள் பரிசுத்த ஆவியானவரின அபிஷேகத்தைப பெற்ற பின்பு பரிசுத்த ஆவியானவரால தொடர்ந்து நிரப்பப்பட்டுக் கொண்டேயிருக்க வேண்டும். (அப 4:8,31 அப 13:52)

பரிசுத்த ஆவியானவரின அபிஷேகத்தைப பெற்றிருக்கும விசுவாசி பரிசுத்த ஆவியில தொடர்ந்து நடக்க வேண்டும் தொடர்ந்து ஜீவிக்க வேண்டும் தேவனுடைய பரிபூரணமான எல்லா நிறைவுகளாலும் நிரப்பப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும் அப்போதுதான பரிசுத்த ஆவியானவரின அபிஷேகத்தைப பெற்றிருக்கும் விசுவாசி பரிசுத்த ஆவியானவரை எப்போதும் நிறைவாகப் பெற்றிருப்பார் (எபே 3:16-20, எபே 5:18; கலா 5:16-26

"வெவவேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள" – ஏசாயா இதை முன்னறிவித்திருக்கிறார் (ஏசா 28:9-12 இயேசு கிறிஸ்துவும் இதை முன்னறிவித்திருக்கிறார் (மாற்கு 16:17, யோவான்15:26; யோவான் 16:13) இந்தத் தீர்க்கதரிசனம் பல வசனங்களில் நிறைவேறியிருக்கிறது (அப் 2:4-13, அப் 10:44-48; அப 19:1-7; 1கொரி 12-14

2 அதிகாரம்

"ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே" - தீர்க்கதரிசிகள் மூலமாக அவர்களுடைய சொந்த பாஷைகளைப் பரிசுத்த ஆவியானவர் பேசியதைப் போன்று இருக்கிறது. (அப 3:21; எபி 1:1-2) இங்கு சீஷர்கள் வெவ்வேறு பாஷைகளில் பேசினார்கள் (அப 2:4,6,11) பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்ற விசுவாசிகள் ஆவியானவரின் ஏவுதலினால் அந்நிய பாஷைகளைப் பேசுகிறார்கள் இது ஒரு ஆவிக்குரிய வரம் இந்த வரத்தைப் பெற்றிருக்கும் விசுவாசிகள் அந்நிய பாஷையில் பேசுவதைத் தங்களுடைய மனதில் பதிய வைத்து விடுவார்கள் இதனால் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதல் இல்லாமலேயே விசுவாசி தனது சொந்த முயற்சியினால் அந்நிய பாஷையில் பேசமுடியும். பின்மாற்றிப்போன விசுவாசியாலகூட அந்நிய பாஷையில் பேசமுடியும். (1கொரி 13:1-3) ஆகையினாலதான தீர்க்கதரிசனம் உரைப்பது, அந்நிய பாஷைகளினால பேசுவது, பாஷைகளை வியாக்கியானம் பண்ணுவது ஆகிய வரங்களை நாம நிதானித்து அறிய வேண்டும் என்று வேதவாக்கியம் நம்மை எச்சரித்துக் கூறுகிறது. இந்தக் காரியங்களையெல்லாம விசுவாசி பரிசுத்த ஆவியானவரின ஏவுதலினால பேசுகிறாரா அல்லது தனது சுயமாகப் பேசுகிறாரா என்று நாம் நிதானித்து அறிய வேண்டும (1கொரி 14:29-33

4. ஜனங்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றதினால் ஏற்பட்ட விளைவு

அப 2:5 வானத்தின்கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்து வந்த தேவபக்தியுள்ள யூதர்கள் அப்பொழுது எருசலேமிலே வாசம்பண்ணினார்கள்

அப் 2:6 அந்தச் சத்தம் உண்டானபோது, திரளான ஜனங்கள் கூடிவந்து, தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் பேசுகிறதை அவரவர்கள் கேட்டபடியினாலே கலக்கமடைந்தார்கள்

அப 2:7 எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு, ஒருவரையொருவர் பார்த்து, இதோ, பேசுகிற இவர்களெல்லாரும் கலிலேயரல்லவா?

அப் 2:8 அப்படியிருக்க நம்மில் அவரவர்களுடைய ஜென்மபாஷைகளிலே இவர்கள் பேசக் கேட்கிறோமே, இதெப்படி?

அப் 2:9 பார்த்தரும், மேதரும், எலாமீத்தரும், மெசொப்பொத்தாமியா யூதேயா, கப்பத்தோக்கியா, பொந்து ஆசியா, பிரிகியா

அப 2:10 பம்பிலியா, எகிப்து என்னும் தேசத்தார்களும் சிரேனே பட்டணத்தைச் சுற்றியிருக்கிற லிபியாவின் திசைகளிலே குடியிருக்கிறவர்களும் இங்கே சஞ்சரிக்கிற ரோமாபுரியாரும் யூதரும் யூதமார்க்கத்தமைந்தவர்களும்

அப 2:11 கிரேத்தரும், அரபியருமாகிய நாம நம்முடைய பாஷைகளிலே இவர்கள் தேவனுடைய மகத்துவங்களைப் பேசக்கேட்கிறோமே என்றார்கள்

அப 2:12 எல்லாரும் பிரமித்துச் சந்தேகப்பட்டு, இதென்னமாய் முடியுமோ என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்

அப் 2:13 மற்றவர்களோ இவர்கள் மதுபானத்தினால் நிறைந்திருக்கிறார்களென்று பரியாசம் பண்ணினார்கள்

"வானத்தின்கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்துவந்த தேவபக்தியுள்ள யூதர்கள் அப்பொழுது எருசலேமிலே வாசம் பண்ணினார்கள்" - தேவபக்தியுள்ள யூதர்கள் எருசலேமிலே வாசம்பண்ணினார்கள் ஆகையினால் பண்டிகைக்கு வந்த ஜனங்கள் எல்லோருமே பிற தேசங்களிலிருந்து வந்தவர்கள் என்று கூறமுடியாது. சிதறிப்போன யூதர்கள் எருசலேமிலே நிரந்தரமாகத் தங்குவதற்கு வந்துவிட்டார்கள் ஒருவேளை இந்தக் காலத்தில் யூதர்கள் தங்களுடைய மேசியாவை அதிகமாக எதிர்பார்த்து, எருசலேமிற்கு வந்திருக்கலாம்.

அப்போஸ்தலர் – தொகுப்புரை

2 அதிகாரம்

வாசம் பண்ணு (dwelling) κατοικέω - katoikeoo - 2730

வினைச்சொல் - வாசம் பண்ணு, குடியிரு, வாசமாயிரு

பக்தி (devout) - εὐλαβής - eulabees - 2126

பெயரடை - பக்தியுள்ள (pious) அப 8:2; லூக்கா 2:25

"அந்தச் சத்தம் உண்டானபோது திரளான ஜனங்கள் கூடிவந்தார்கள்" - அப 2:2 ஆவது வசனத்தில வாசிக்கிற பிரகாரமாக பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல உண்டான முழக்கத்தை அந்தப் பட்டணத்திலிருந்த எல்லோரும் கேட்டார்கள். தேவாலயத்திலிருந்து இந்த முழக்கம் உண்டாயிற்று. ஜனங்கள் எல்லோரும் தேவாலயத்திற்குக் கூடிவந்து பார்த்த போது, அங்கு 120 சீஷர்களும் பரிசுத்த ஆவியானவரிலே நிறைந்தவர்களாக அந்நிய பாஷைகளிலே பேசியதைக் [illegible].

"யூதமார்க்கத் தமைந்தவர்கள்" (proselytes) - மத் 23:15

"இவர்கள் மதுபானத்தினால நிறைந்திருக்கிறார்கள்" இந்த வசனத்தில கூறப்பட்டிருக்கும் மதுபானம் என்பதன கிரேக்க வார்த்தை "குளுகோஸ்" (gleukos) என்பதாகும். இது மருத்துவ உலகில் பயன்படுத்தப்படும் சொல. புதிய திராட்சை பழத்தைப் பிழிந்து, அதை இனிப்பான இரசமாக மாற்றி, அருந்துவது வழக்கம். பழங்காலத்தில் திராட்சைரசத்தை ஒரு வருஷம் வரையிலும் கெட்டுப்போகாமல வைத்திருந்து, பருகினார்கள்

மதுபானம் (new wine) γλεῦκος gleukos 1098

பாலவேறுபாடற்ற பெயர்ச்சொல் மதுபானம்

III. எருசலேமின் எழுப்புதல் - (அப 2:14-8:3; 8:4; 11:19)

1. முதலாவது அப்போஸ்தல பிரசங்கம்

(1) பிரசங்கியாரும் பிரசங்கத்தைக் கேட்டவர்களும்

அப 2:14 அப்பொழுது பேதுரு பதினொருவரோடுங்கூட நின்று அவர்களை நோக்கி, உரத்த சத்தமாய்: யூதர்களே எருசலேமில் வாசம் பண்ணுகிற ஜனங்களே நீங்களெல்லாரும் அறிந்து கொள்வீர்களாக, என் வார்த்தைகளுக்குச் செவிகொடுங்கள்

"அப்பொழுது பேதுரு பதினொருவரோடுங்கூட நின்றான்" - இது வரையிலும் உட்கார்ந்திருந்தவர்கள் இப்போது நிற்கிறார்கள் (அப 2:2)

"பதினொருவரோடுங்கூட" - பேதுரு பன்னிரண்டாவது நபராக நிற்கிறார் (அப 1:26)

"உரத்த சத்தமாய்.......பேதுரு பேசுகிறான்" - அந்நிய பாஷையில பேசுவதை சீஷர்கள் நிறுத்தி விட்டார்கள் பரிசுத்த ஆவியானவரின அபிஷேகத்தினாலே பேதுரு பிரசங்கம பண்ணுகிறான அந்நிய பாஷையில பிரசங்கம பண்ணாமல, தன சொந்த பாஷையில பிரசங்கம் பண்ணுகிறான அப 2:9-11 ஆகிய வசனங்களில கூறப்பட்டிருக்கும 16 தேசங்களிலிருந்து [illegible] வந்திருக்கும யூதர்கள பேதுருவின பாஷையைப் புரிந்து கொண்டார்கள

வார்த்தைகள் (words) - ῥῆμα rheema - 4487

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - வார்த்தை, மொழி, வாக்கு, வசனம், காரியம், சொல்லப்பட்டது, சொன்ன உத்தரவு, வாக்கியம், சங்கதி

வார்த்தைகள் (words) - λόγος - logos 3056

ஆண்பால் பெயர்ச்சொல் - சொல், சொல்லுதல், வார்த்தை, கணக்கு, காரியம், புத்தி, ஞானம், வசனம், சங்கதி, பேச்சு, உபதேசம், கீர்த்தி, யோசனை, வாக்கியம்

அப்போஸ்தலர் – தொகுப்புரை

2 அதிகாரம்

(2) யோவேலின் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று - (யோவேல் 2:28)

அப் 2:15 நீங்கள் நினைக்கிறபடி இவர்கள் வெறிகொண்டவர்களல்ல, பொழுது விடிந்து மூன்றாம் மணி வேளையாயிருக்கிறதே.

அப் 2:16 தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது.

"நீங்கள் நினைக்கிறபடி" - 120 சீஷர்களும் சந்தோஷமாக அந்நியபாஷையில் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைச் சாதாரணமாகப் பார்க்கும்போது மதுபானத்தினால் வெறி கொண்டவர்களைப்போல இருக்கிறார்கள் (அப் 2:15). இவர்கள் வெறிகொண்டவர்களல்ல.

"பொழுது விடிந்து மூன்றாம் மணி வேளையாயிருக்கிறதே" - காலை 9 மணி. காலை வேளையில் யூதர்கள் யாரும் குடிப்பதில்லை. இந்த நேரத்தில் அவர்கள் தேவாலயத்தில் ஆராதனை செய்வது வழக்கம். பக்தியே இல்லாத யூதர்கூட காலை 9 மணிக்கு மதுபானம் அருந்தமாட்டார்கள்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 3

"தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது. கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள், உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்." (அப் 2:16-21, யோவே 2:28-29)

(3) கடைசி நாட்களில் யோவேலின் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது

அப் 2:17 கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்.

அப் 2:18 என்னுடைய ஊழியக்காரர் மேலும், என்னுடைய ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்.

தீர்க்கதரிசன எண் - 4

"கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்........" (அப் 2:17-21) இந்தத் தீர்க்கதரிசனம் ஓரளவு நிறைவேறிற்று. உபத்திரவகாலத்தில் தேவன் தம்முடைய வார்த்தையை நிறைவேற்றும்போது இந்தத் தீர்க்கதரிசனம் முழுமையாக நிறைவேறும் (அப் 2:19-21; வெளி 6:9-11, வெளி 7:1-17; வெளி 15:2-4)

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பற்றிய உபதேசங்கள்

1. உபத்திரவக்காலத்தில் பரிசுத்த ஆவியானவர் பூமியிலிருந்து எடுத்துக் கொள்ளப்படமாட்டார் (அப் 2:17-21, யோவான் 14:16; சக 12:10-13:1; வெளி 6:9-11; வெளி 7:14, வெளி 12:17; வெளி 19:10)
2. உபத்திரவக்காலத்திலும் தேவன் பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரியைப் பொழிந்தருளுவார்

2 அதிகாரம்

3 யோவேலின் தீர்க்கதரிசனம் புருஷர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் யூதருக்கும், புறஜாதியாருக்கும் உரியது.

4 யோவேலின் தீர்க்கதரிசனம் பெந்தெகொஸ்தே நாளில் முழுமையாக நிறைவேறவில்லை

5 யோவேலின் தீர்க்கதரிசனம் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைக் குறிக்கிறது.

6 புருஷர்களும், ஸ்திரீகளும் பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகிக்கப்பட்டு, பிரசங்கிப்பார்கள் (அப 2:17-18; 1கொரி 11:4-6; 1கொரி 14:3 31)

7 சபைகளில் உள்ள ஸ்திரீகள் பேசாமலிருக்கக் கடவர்கள் பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும் வேதமும் அப்படியே சொல்லுகிறது. (1கொரி 14:34 35) இந்த வசனம் இவ்வாறு கூறுவதினால் ஸ்திரீகள் பிரசங்கம் பண்ணக்கூடாது என்று பொருளல்ல. ஸ்திரீகளும் பிரசங்கம் பண்ணலாம். உபதேசம் பண்ணலாம் (அப 2:17-18)

8 பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தோடு தரிசனங்கள் சொப்பனங்கள், தீர்க்கதரிசனங்கள் மற்ற ஆவிக்குரிய அனுபவங்கள் சேர்ந்தே வரும் (அப 2:17 18)

9 இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரையிலும் மனுஷர் தொடர்ந்து இரட்சிக்கப்பட்டுக் கொண்டிருப்பார்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டிருப்பார்கள் (அப 2:17-21; வெளி 6:9-11 வெளி 7:14; வெளி 12:17; வெளி 15:2 4)

10 யூதருக்கானாலும், புறஜாதியாருக்கானாலும் தேவனுடைய கிருபையின் கதவு ஒருபோதும் அடைக்கப்படுவதில்லை. (அப 2:17-21 வெளி 7:1-7 வெளி 17:17 வெளி 15:2-4

"கடைசிநாட்களில்" - யூதர்கள் இந்த வாக்கியத்தை நன்றாகப் புரிந்து கொண்டார்கள் "மேசியாவின் நாட்கள்" என்பது கடைசி நாட்களைக் குறிக்கும் யூதர்கள் தங்களுடைய மேசியாவை சிலுவையில் அறைந்து கொன்றார்கள் என்பதற்கு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகமும் ஒரு சான்றாகும்.

"சொப்பனங்கள்" - (தானி 4:5

"என்னுடைய ஊழியக்காரர்மேலும் என்னுடைய ஊழியக்காரிகள்மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன்" - தேவனுடைய குமாரர்மீதும், குமாரத்திகள்மீதும் என்றுமட்டுமல்லாமல் அடிமைகள்மீதும் தேவன் தமது பரிசுத்த ஆவியானவரைக் கடைசி நாட்களிலே ஊற்றுவார்

(4) உபத்திரவ காலத்திலும் மனுஷர்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெறுவார்கள் யோவேல் 2:28 சக 12:10 13:7 வெளி 6:9 11 7:14

அப 2:19 அல்லாமலும் உயர வானத்திலே அற்புதங்களையும் தாழ பூமியிலே இரத்தம் அக்கினி, புகைக்காடாகிய அதிசயங்களையும் காட்டுவேன்

அப 2:20 கர்த்தருடைய பெரிதும் பிரகாசமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும் சந்திரன் இரத்தமாகவும் மாறும்.

அப 2:21 அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான் என்று தேவன் உரைத்திருக்கிறார்

"இரத்தம்" (blood) வெளி 8:7 8 வெளி 11:6 வெளி 16:3-6; எசே 38:22

2 அதிகாரம்

"அக்கினி" (fire) - வெளி 8:5-8 வெளி 9:17-18; வெளி 11:5; வெளி 16:8 வெளி 18:8

"புகைக்காடு" (vapour of smoke) - வெளி 9:2-3,17-18; வெளி 18:9,18 வெளி 19:3.

"சூரியன் இருளாக மாறும்" - வெளி 6:12; வெளி 8:12; வெளி 9:2 வெளி 16:10; மத் 24:29

"சந்திரன் இரத்தமாக மாறும்" - வெளி 6:12; வெளி 8:12; வெளி 16:10 மத் 24:29.

"கர்த்தருடைய பெரிதும் பிரகாசமுமான நாள் வரும்" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் நாள் அல்லது கர்த்தருடைய நாள் மத் 24:29-31 மத் 25:31-46 வெளி 19:11

"கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான்" - மனம் திரும்புவதற்கு பாவிகள் இருக்கும் வரையிலும் இந்த வாக்கியம் சத்தியமானதாக இருக்கும். யூதருக்கோ அல்லது புறஜாதியாருக்கோ தேவனுடைய கிருபையின் கதவு அடைக்கப்படும் என்பதற்கு வேதவாக்கியத்தில் ஆதாரம் எதுவுமில்லை (எபி 9:27

(5) இயேசு கிறிஸ்துவை தேவன் வெளிப்படுத்தினார்

அப் 2:22 இஸ்ரவேலரே, நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள் நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக்கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும் அடையாளங்களையும் நடப்பித்து அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார்

"நசரேயனாகிய இயேசு" (Jesus of Nazareth) - அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் இந்த வாக்கியம் 7 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட ஊரிலிருந்து வரும் ஒரு குறிப்பிட்ட நபர் மேசியாவாக இருப்பார் என்பதை வலியுறுத்துவதற்காக இந்த வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (அப் 2:22; அப் 3:6 அப் 4:10 அப் 6:14 அப் 10:38; அப் 22:8; அப் 26:9

"அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார்" - அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும், பலத்த செய்கை களினாலும் தேவன் இயேசு கிறிஸ்துவை ஜனங்களுக்கு வெளிப்படுத்தினார் (அப் 10:38; யோவான் 14:11 யோவான் 15:24; ஏசா 61:1-2; எபி 2:3-4.

வெளிப்படுத்து (approved) - ἀποδείκνυμι - apodeiknymi - 584

வினைச்சொல் - இரட்சிக்கப்படு, ரூபி காண்பி ஒப்புக்கொடு. வெளிப்படுத்து (set forth, commended) (அப் 25:7; 1கொரி 4:9, 2தெச 2:4

(6) இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார் - (ஆதி 3:15, ஏசா 53; சங் 22

அப் 2:23 அப்படியிருந்தும், தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின் படியேயும் அவருடைய முன்னறிவின் படியேயும் ஒப்புக் கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து அக்கிரமக் காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலை செய்தீர்கள்

"தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின் படியேயும் அவருடைய முன்னறிவின்படியேயும் ஒப்புக் கொடுக்கப்பட்ட அந்த இயேசு" - மனுஷருடைய பாவங்களை மன்னிப்பதற்கு தேவன் தமது குமாரனை இரட்சகராக இந்த உலகத்திற்கு அனுப்ப வேண்டுமென்று நிர்ணயித்திருந்தார் மனுஷரை இரட்சிப்பதற்காகத் தமது குமாரனையே பலியாகச் செலுத்த வேண்டுமென்று தேவன் திருவுளம் பற்றினார் ஆகையினால் இயேசு கிறிஸ்து துன்மார்க்கருடைய கைகளினால் சிலுவையில் அறையப்பட்டார் தேவனுடைய ஆலோசனையின் படியும் அவருடைய முன்னறிவின் படியும் இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் தமது ஜீவனை ஒப்புக் கொடுத்தார்

2 அதிகாரம்

(7) இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் - (சங் 16:9-10; 110:4,5)

அப 2:24 தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து அவரை எழுப்பினார்; அவர் மரணத்தினால கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது.

அப 2:25 அவரைக்குறித்துத் தாவீது: கர்த்தரை எப்பொழுதும் எனக்குமுன்பாக நிறுத்தி நோக்கிக்கொண்டிருக்கிறேன்; நான் அசைக்கப்படாதபடி அவர் என் வலதுபாரிசத்திலே இருக்கிறார்,

அப 2:26 அதினாலே என் இருதயம் மகிழ்ந்தது, என் நாவு களிகூர்ந்தது; என் மாம்சமும் நம்பிக்கையோடே தங்கியிருக்கும்.

அப 2:27 என் ஆத்துமாவை பாதாளத்தில் விடீர்; உம்முடைய பரிசுத்தர் அழிவைக் காணவொட்டீர்,

அப 2:28 ஜீவமார்க்கங்களை எனக்குத் தெரியப்படுத்தினீர்; உம்முடைய சந்நிதானத்திலே என்னைச் சந்தோஷத்தினால் நிரப்புவீர் என்று சொல்லுகிறான்.

அப 2:29 சகோதரரே, கோத்திரத் தலைவனாகிய தாவீதைக் குறித்து நான் உங்களுடனே தைரியமாய்ப் பேசுகிறதற்கு இடங்கொடுங்கள்; அவன் மரணமடைந்து அடக்கம் பண்ணப்பட்டான்; அவனுடைய கல்லறை இந்நாள்வரைக்கும் நம்மிடத்திலிருக்கிறது.

அப 2:30 அவன் தீர்க்கதரிசியாயிருந்து, உன் சிங்காசனத்தில் வீற்றிருக்க மாம்சத்தின்படி உன் சந்ததியிலே கிறிஸ்துவை எழும்பப்பண்ணுவேன் என்று தேவன் தனக்குச் சத்தியம்பண்ணினதை அறிந்தபடியால்,

அப 2:31 அவன் கிறிஸ்துவினுடைய ஆத்துமா பாதாளத்திலே விடப்படுவதில்லையென்றும், அவருடைய மாம்சம் அழிவைக் காணபதில்லையென்றும் முன்னறிந்து, அவர் உயிர்த்தெழுதலைக்குறித்து இப்படிச் சொன்னான்.

அப 2:32 இந்த இயேசுவை தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்.

உபாதிகள் (pains) - ὠδίν - oodin - 5604

பெண்பால் பெயர்ச்சொல் - வேதனை உபாதிகள் (birth pangs) (மத் 24:8; மாற்கு 13:8; 1தெச 5:3) - இயேசு கிறிஸ்துவின் மரண உபாதிகளின் கட்டை தேவன் அவிழ்த்துவிட்டார். இயேசு கிறிஸ்துவின்மீது மரணத்திற்கு இனிமேல் அதிகாரம் இல்லை. மனுஷனுடைய பாவங்களை மன்னிப்பதற்குச் செலுத்த வேண்டிய கிரயத்தை இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையிலே செலுத்தினார். இயேசு கிறிஸ்து மரணத்தை ஜெயித்தார்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 3

"கர்த்தரை எப்பொழுதும் எனக்குமுன்பாக நிறுத்தி நோக்கிக்கொண்டிருக்கிறேன், நான் அசைக்கப்படாதபடி அவர் என் வலதுபாரிசத்திலே இருக்கிறார்." (அப 2:25-27; சங் 16:8-11)

அப்போஸ்தலர் - தொகுப்புரை

2 அதிகாரம்

"என் ஆத்துமாவைப் பாதாளத்திலே விடீர்" - மனுஷருடைய ஆத்துமாக்கள் மரிப்பதில்லை. நித்திய காலமாக ஜீவிக்கக்கூடியவை. அவை புதைகுழிகளில் புதைக்கப்படுவதுமில்லை. மனுஷனுடைய மரித்த சரீரம் மட்டுமே மண்ணுக்குள் புதைக்கப்படும். அவன் மண்ணினால் ஆனவன். மண்ணுக்குள் திரும்புகிறான் (ஆதி 2:7; ஆதி 3:19; யாக் 2:26). மனுஷருடைய ஆத்துமாக்கள் பரதீசிற்கோ அல்லது பாதாளத்திற்கோ செல்லும். அங்கு அவை தனித்தனியாக வைக்கப்பட்டிருக்கும் (லூக்கா 16:19-31). இயேசு கிறிஸ்து பாதாளத்திற்குச் சென்று அங்கு சிறை வைக்கப்பட்டிருந்த பரிசுத்தவான்களின் ஆத்துமாக்களை விடுவித்து அவர் பரமேறியபோது, தம்மோடு பரலோகத்திற்கு அழைத்துச் சென்றார் (எபி 2:14-15; எபே 4:8-10). இப்போது இரட்சிக்கப்பட்டோர் மரிக்கும்போது அவர்களுடைய ஆத்துமாக்கள் பரலோகத்திற்குச் செல்லும் (2கொரி 5:8; பிலி 1:21-24; எபி 12:23; வெளி 6:9-11). துன்மார்க்கருடைய ஆத்துமாக்கள் நரகத்திற்குச் செல்லும். உயிர்த்தெழுதலின் நாள் வரையிலும் அவை அங்கே இருக்கும் (ஏசா 14:9; வெளி 20:11-15).

"உம்முடைய பரிசுத்தர் அழிவைக் காணவொட்டீர்" - கிறிஸ்துவின் சரீரம் அழியாது. மூன்றாம் நாளில் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார். அவர் ஆவியாக உயிர்த்தெழாமல் தமது சரீரத்தில் உயிர்த்தெழுந்தார். அழியாத மாம்சத்தையும் எலும்பையும் பெற்றுக் கொண்டு, நித்திய சரீரத்தோடு உயிர்த்தெழுந்தார் (லூக்கா 24:37-43; யோவான் 20:25-29; சக 13:6; அப் 1:3).

"கோத்திரத்தலைவனாகிய தாவீது" - இந்த வாக்கியம் இந்த வசனத்திலும் அப் 7:8-9, எபி 7:4 ஆகிய வசனங்களிலும் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆபிரகாமும், யாக்கோபின் புத்திரரும் தேசத்தின் முற்பிதாக்கள். தாவீது ராஜ்யத்தை ஸ்தாபித்தவர்.

"தாவீதினுடைய கல்லறை இந்நாள்வரைக்கும் நம்மிடத்திலிருக்கிறது" இந்த வசனத்தில் கல்லறை என்பதற்கான கிரேக்க வார்த்தை "ம்னேமேயினோன்" (mneemeion) என்பதாகும். இந்த வார்த்தையை இவ்வாறு மொழிபெயர்க்கலாம். "grave" (மத் 27:52-53; லூக்கா 11:44; யோவான் 5:28; யோவான் 11:17,31,38; யோவான் 12:17; வெளி 11:9); "tomb" (மத் 8:28; மத் 27:60; மாற்கு 5:2-5; மாற்கு 6:29; லூக்கா 8:27); "sepulchre" (மத் 23:29; மத் 27:60; மத் 28:8; மாற்கு 15:46; மாற்கு 16:2-8; லூக்கா 11:47-48; லூக்கா 23:53,55; லூக்கா 24:1,2,12,22,24; யோவான் 19:41-42; யோவான் 20:1-11; அப் 2:29; அப் 7:16; அப் 13:29).

கல்லறை என்பதன் எபிரெய வார்த்தை "கேபேர்" (keh'-ber) என்பதாகும். இந்த வார்த்தையை இவ்வாறு மொழிபெயர்க்கலாம்: "grave" (ஆதி 50:5; யாத் 14:11; எண் 19:16-18; 2சாமு 3:32; 2சாமு 19:37; 1இராஜா 13:30; 1இராஜா 14:13; 2இராஜா 22:20; 2இராஜா 23:6; 2நாளா 34:4,28; யோபு 3:22; யோபு 5:26; யோபு 10:19; யோபு 17:1; யோபு 21:32; சங் 88:5,11; ஏசா 14:19; ஏசா 53:9; ஏசா 65:4; எரே 8:1; எரே 20:17; எரே 26:23; எசே 32:22-26; எசே 37:12-13; எசே 39:11; நாகூம் 1:14); "burying place" (ஆதி 23:4,9,20; ஆதி 49:30; ஆதி 50:13; நியா 16:31); "sepulchre" (ஆதி 23:6; நியா 8:32; 2சாமு 2:32; 2சாமு 4:12; 2சாமு 17:23; 2சாமு 21:14; 1இராஜா 13:22,31; 2இராஜா 13:21; 2இராஜா 23:16,17; 2நாளா 16:14; 2நாளா 21:20; 2நாளா 24:25; 2நாளா 28:27; 2நாளா 32:33; 2நாளா 35:24; நெகே 2:3,5; நெகே 3:16; சங் 5:9; ஏசா 22:16; எரே 5:16).

இவ்விரண்டு வார்த்தைகள் மட்டுமே கல்லறையைக் குறிக்கும். சியோல், ஹேடேஸ் ஆகிய வார்த்தைகள் நரகத்தைக் குறிக்கும். இவ்வார்த்தைகளைக் கல்லறை என்று மொழிபெயர்க்கக்கூடாது (லூக்கா 12:5; லூக்கா 16:19-31; சங் 9:17).

2 அதிகாரம்

கல்லறை (sepulchre) - μνῆμα mneema - 3418

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - கல்லறை

கல்லறை (grave) - μνημεῖον mneemeion - 3419

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - கல்லறை, பிரேதக்குழி

கல்லறை (grave) - קֶבֶר - keh'-ber, kib-raw' - 6913

ஆண்பால் பெயர்ச்சொல் - கல்லறை குகை, பிரேதக்குழி, புதைக்கிற ஸ்தானம்

நரகம் (grave) - שְׁאוֹל - sheh-ole', sheh-ole' - 7585

பொதுப்பெயர்ச்சொல் - பாதாளம் நரகம்

பாதாளம் (grave) - ᾅδης - hadees - 86

ஆண்பால் பெயர்ச்சொல் - பாதாளம் இறந்தவர்கள் பாதாளத்தில் தற்காலிகமாகத் தங்கும் இடம்

அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 4

"அவன் தீர்க்கதரிசியாயிருந்து, உன் சிங்காசனத்தில் வீற்றிருக்க மாம்சத்தின்படி உன் சந்ததியிலே கிறிஸ்துவை எழும்பப்பண்ணுவேன் என்று தேவன் தனக்குச் சத்தியம்பண்ணினதை அறிந்தபடியால்" (அப 2:30; 2சாமு 7:12-16)

"மாம்சம்" - இயேசு கிறிஸ்து சரீரப் பிரகாரமாக உயிர்த்தெழுந்தார் என்பதை இந்தவாக்கியம்மறுபடியும்உறுதிபண்ணுகிறது. தாவீது ஒரு ஆவிக்குரிய ஜீவனைப் பெற்றெடுக்கவில்லை. அவர் ஒரு மாம்சத்திற்குரிய ஜீவனையே பெற்றெடுத்தார். அந்த மாம்சத்தில் ஆத்துமாவும், ஆவியும் இருந்தது. தாவீதின் வம்சத்தில் பிறந்த இயேசு கிறிஸ்துவானவரே சிலுவையில் அறையப்பட்டார். மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து எழும்பினார். தாவீதின் சிங்காசனத்தில் இயேசு கிறிஸ்து நித்திய காலமாக வீற்றிருப்பார் (ஏசா 9:6-7; லூக்கா 1:32-33; வெளி 11:15)

அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 5

"அவன் கிறிஸ்துவினுடைய ஆத்துமா பாதாளத்திலே விடப்படுவதில்லையென்றும் அவருடைய மாம்சம் அழிவைக் காணப்படுவதில்லையென்றும் முன்னறிந்து அவர் உயிர்த்தெழுதலைக்குறித்து இப்படிச் சொன்னான்" (அப 2:31; சங் 16:10)

"அவருடைய மாம்சம் அழிவைக் காணவில்லை" - இயேசு கிறிஸ்துவின் சரீரம் அழிவதில்லை. அவர் அடக்கம் பண்ணப்பட்ட போதிலும் அவருடைய சரீரம் அழியாமல் இருந்தது. தமது சரீரத்தில் அவர் மறுபடியும் உயிர்த்தெழுந்தார் (லூக்கா 24:39-43)

"இந்த இயேசுவை தேவன் எழுப்பினார்" - கல்லறையில் அடக்கம்பண்ணப்பட்டிருந்த இயேசு கிறிஸ்துவின் சரீரத்தைத் தேவன் எழுப்பினார். இயேசு கிறிஸ்துவின் ஆவியை எழுப்பவில்லை (லூக்கா 24:37-43)

(8) இயேசு கிறிஸ்து பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார் - காண்கிறதும் கேட்கிறதுமாகிய பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் - (யோவான் 7:39; 14:16, 26; 15:26; 16:7-15)

அப 2:33 அவர் தேவனுடைய வலதுகரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்.

2 அதிகாரம்

அப 2:34 தாவீது பரலோகத்திற்கு எழுந்து போகவில்லையே. நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும்

அப 2:35 நீர் என் வலதுபாரிசத்தில் உட்காருமென்று கர்த்தர் என் ஆண்டவருடனே சொன்னார் என்று அவனே சொல்லியிருக்கிறான்

"அவர் தேவனுடைய வலதுகரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்றார்" - இந்த வசனத்தில் இரண்டு முக்கியமான உபதேசங்கள் உள்ளன அவையாவன

1. பிதாவின் வலது கரத்தினாலே இயேசு கிறிஸ்து உயர்த்தப்பட்டார் (மத் 26:64; மாற்கு 16:19; அப 7:56; ரோமர் 8:34; எபே 1:20; கொலோ 3:1; எபி 1:3; எபி 8:1; எபி 12:2; 1பேதுரு 3:22)

2. தேவனுடைய வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றமும், மனுஷருக்கு இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை அருளுவதும். (லூக்கா 24:49; யோவான் 1:33; யோவான் 7:37-39; யோவான் 14:16, 17, 26; யோவான் 15:26; யோவான் 16:7-15; அப 1:4-8; அப 2:33; அப 5:32; அப 11:16; அப 15:7-11; கலா 3:14)

"தாவீது பரலோகத்திற்கு எழுந்து போகவில்லையே" - தாவீதின் ஆத்துமாவும் ஆவியும் பரலோகத்திலேதான் உள்ளன. அவனுடைய சரீரம் இன்னும் உயிர்த்தெழவில்லை. (எபி 12:23; எபே 4:8-10; 2கொரி 5:8; பிலி 1:21-24)

அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 6

"நீர் என் வலதுபாரிசத்தில் உட்காருமென்று கர்த்தர் என் ஆண்டவருடனே சொன்னார்" (அப 2:35; சங் 110:1)

(8) தேவன் இயேசுவை ஆண்டவரும் கிறிஸ்துவும் ஆக்கினார் - (அப 2:36)

அப 2:36 ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான்

"இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார்" - தேவன் இயேசுவைக் காணமுடியாத ஒரு ஆவியாக ஆக்காமல், அவரை ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார்

2. பேதுருவின் பிரசங்கத்தினால் ஏற்பட்ட விளைவு - (வசனம் 41; 4:4; 5:33)

அப 2:37 இதை அவர்கள் கேட்டபொழுது இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து, சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும் என்றார்கள்

"இதை அவர்கள் கேட்டபொழுது இருதயத்திலே குத்தப்பட்டவர்களானார்கள்" - அவர்களுடைய இருதயத்தில் உணர்த்தப்பட்டார்கள். தாங்கள் இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்துவிட்டதை நினைத்துப் பார்க்கிறார்கள். அவருடைய தயவும் கிருபையும் இரக்கமும் தங்களுக்குக் காண்பிக்கப்படவில்லையென்றால் தங்களுக்கு இரட்சிப்பே இல்லை என்று உணர்ந்து கொள்கிறார்கள்

3. பாவிகள் செய்ய வேண்டியது - (லூக் 13:1-5; 24:47; 1யோவான் 1:9)

அப் 2:38 பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்

2 அதிகாரம்

"நீங்கள் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்" - என்று பேதுரு அவர்களுக்குப் பதில் கூறுகிறான். அவர்கள் பேதுருவிடமும் மற்ற அப்போஸ்தலர்களிடமும் "சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும்" என்று கேட்டார்கள். இந்தக் கேள்விக்குத்தான் பேதுரு இவ்வாறு பதில் கூறுகிறான்.

"இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்" - யூதர்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அதாவது இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும்போது அவர்கள் தங்களுடைய யூதமார்க்கத்தை விட்டு விலகி வரவேண்டும். அதனுடன் யூதமார்க்கத்திற்குரிய அரசியல் உரிமைகளையும் சலுகைகளையும் ஒதுக்கிவிட்டு வரவேண்டும். (மத் 28:19)

"பாவமன்னிப்புக்கென்று" - இந்த வாக்கியத்தில் "என்று" என்பதன் கிரேக்க வார்த்தை "ஏயஸ்" (eis) என்பதாகும். பாவங்கள் மன்னிக்கப்பட்டதன் நிமித்தமாக என்பது இதன் பொருள். ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பாகவே அந்த நபர் மனந்திரும்பி இருக்க வேண்டும். ஒரு நபர் மனந்திரும்பும்போது அவருடைய பாவங்கள் மன்னிக்கப்படுகிறது. (யோவான் 1:9; ரோமர் 10:9-10). இதன் பின்பு தான், அந்த நபர் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும். ஞானஸ்நானமானது இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்கும், அடக்கம் பண்ணப்பட்டதற்கும், உயிர்த்தெழுதலுக்கும் அடையாளமாகும். (1பேதுரு 3:21) ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும் நபர் தான் மனமாறியுள்ளதையும் விசுவாசத்தினால் கிறிஸ்துவின் மன்னிப்பை பெற்றிருப்பதையும் தான் இரட்சிக்கப்பட்டிருப்பதையும் இந்த உலகத்திற்குச் சாட்சியாக அறிவிக்கிறார். (மத் 3:11, எபே 2:8-9, ரோமர் 1:16, ரோமர் 3:24-25, ரோமர் 5:1)

என்று (for) - εἰς - eis - 1519

(முன்னிடைச்சொல்) - என்று, நோக்கி, மூலம்

"பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" - ஒருவன் தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவிடம் வரும்போது அவர் அவனுடைய பாவங்களையெல்லாம் மன்னிக்கிறார். இயேசு கிறிஸ்துவின் வாக்குத்தத்தத்தின் பிரகாரமாக இரட்சிக்கப்பட்ட அந்த நபர் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளலாம். (அப் 2:39; அப் 5:32; மத் 3:11; யோவான் 1:33; யோவான் 7:37-39; யோவான் 14:12,16-17,26; யோவான் 15:26; யோவான் 16:7-15; கலா 3:13-14)

4. **பரிசுத்த ஆவியானவரின் வாக்குத்தத்தம் எல்லா விசுவாசிகளுக்கும் உரியது** - (மத் 3:11; லூக் 11:14, யோவான் 7:37-39, கலா 3:14)

அப் 2:39 வாக்குத்தத்தமானது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி,

5. **எழுதப்படாத அநேக புத்திமதிகள்** - (யோவான் 21:25)

அப் 2:40 இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சிகூறி, மாறுபாடுள்ள இந்தச் சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் என்றும் புத்தி சொன்னான்.

6. **மூவாயிரம் பேர் இரட்சிக்கப்பட்டார்கள்** - (4:4)

அப் 2:41 அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத் தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

2 அதிகாரம்

"வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள்" – ஏற்றுக் கொள்ளுதல் என்பதன் கிரேக்க வார்த்தை "அபோதேகோமாய்" (apodechomai) என்பதாகும். இதற்கு முழுவதுமாக ஏற்றுக் கொள்ளுதல் என்று பொருள். (அப் 15:4; அப் 18:27; அப் 24:3; அப் 28:30; லூக்கா 8:40)

ஏற்றுக்கொள் (received) - ἀποδέχομαι - apodechomai - 588

வினைச்சொல் - ஏற்றுக்கொள் (fully received)

நமக்குக் கூறப்பட்டிருக்கும் புத்திமதிகள்

1 சுவிசேஷத்தின் நிபந்தனைகளைக் கைக்கொண்டு நம்மை இரட்சித்துக் கொள்ள வேண்டும். (அப் 2:38-40)

2 நெருக்கங்களில் திடமனதாயிருக்க வேண்டும். (அப் 27:22)

3 நற்கிரியைகளைச் செய்ய வேண்டும். (2கொரி 9:5)

4 நம்முடைய நடத்தையில் தேவனைப் பிரியப்படுத்த வேண்டும். (1தெச 4:1)

5 ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்தி சொல்ல வேண்டும். (1தெச 5:14)

6 திடனற்றவர்களைத் தேற்ற வேண்டும். (1தெச 5:14)

7 பலவீனரைத் தாங்க வேண்டும். (1தெச 5:14)

8 எல்லோரிடமும் நீடிய சாந்தமாக இருக்க வேண்டும். (1தெச 5:14)

9 மற்றவர்கள் நமக்குச் செய்யும் தீமைக்கு நாம் தீமை செய்யக்கூடாது. (1தெச 5:15)

10 எப்பொழுதும் நன்மை செய்ய நாட வேண்டும். (1தெச 5:15)

11 எப்பொழுதும் சந்தோஷமாயிருக்க வேண்டும். (1தெச 5:16)

12 இடைவிடாமல் ஜெபம் பண்ண வேண்டும். (1தெச 5:17)

13 எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்ய வேண்டும். (1தெச 5:18)

14 ஆவியை அவித்துப் போடாமல் இருக்க வேண்டும். (1தெச 5:19)

15 தீர்க்கதரிசனங்களை அற்பமாய் எண்ணக்கூடாது. (1தெச 5:20)

16 எல்லாவற்றையும் சோதித்துப் பார்க்க வேண்டும். (1தெச 5:21)

17 நலமானதைப் பிடித்துக் கொள்ள வேண்டும். (1தெச 5:21)

18 பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டுவிலக வேண்டும். (1தெச 5:22)

19 அமைதலோடே வேலைசெய்து மற்றவர்களுடைய உழைப்பில் தின்னாமல், சொந்த உழைப்பில் தின்ன வேண்டும். (2தெச 3:12)

20 நன்மை செய்வதிலே சோர்ந்து போகாமல் இருக்க வேண்டும். (2தெச 3:13)

21 வசனங்களுக்குக் கீழ்ப்படியாமல் இருக்கிறவர்களோடு கலந்திருக்கக் கூடாது. (2தெச 3:14)

22 எல்லா மனுஷருக்காகவும் ஜெபம் பண்ண வேண்டும். (1தீமோ 2:1)

23 எஜமான்களிடமும், வேலையாட்களிடமும் பிரியமுடன் நடந்து கொள்ள வேண்டும். (1தீமோ 6:1-2; தீத்து 2:9-10)

24 நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, புத்தி சொல்ல வேண்டும். (2தீமோ 4:2)

2 அதிகாரம்

25. எதிர் பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ண வல்லவராய் இருக்க வேண்டும் (தீத்து 1:9

26. தெளிந்த புத்தியுள்ளவர்களாக இருக்க வேண்டும். (தீத்து 2:6)

27. நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்ல வேண்டும். (எபி 3:13 எபி 10:25

28. விசுவாசமுள்ள ஊழியக்காரராய் இருக்க வேண்டும். (1பேதுரு 5)

29. மூப்பருக்குக் கீழ்ப்படிய வேண்டும். (1பேதுரு 5:5

30. ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து மனத்தாழ்மையை அணிந்து கொள்ள வேண்டும் (1பேதுரு 5)

31. தேவனுடைய பலத்த கைக்குள் அடங்கி இருக்க வேண்டும். (1பேதுரு 5:5-6)

32. நமது கவலைகளையெல்லாம் கர்த்தர் மேல் வைத்துவிட வேண்டும் (1பேதுரு 5:7

33. தெளிந்த புத்தியுள்ளவர்களாக இருக்க வேண்டும். விழித்திருந்து விசுவாசத்தினாலே பிசாசானவனை எதிர்த்து நிற்க வேண்டும். (1பேதுரு 5:8 10)

34. விசுவாசத்தில் நிலைத்திருக்க வேண்டும். (அப் 11:23, அப் 14:22; அப் 15:32

35. விசுவாசத்திற்காகத் தைரியமாகப் போராட வேண்டும். (யூதா 1:3)

"பேதுருவினுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள் அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்" எவ்வளவு சீக்கிரமாக அவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள் யார் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்கள் மூவாயிரம் பேரும் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வதற்கு எவ்வளவு காலமாயிற்று என்னும் விவரம் எல்லாம் இந்த வசனத்தில் எழுதப்படவில்லை.

7. ஆதித் திருச்சபையின் மகிமையான நிலை -

(4:32 5:12 6:1

அப் 2:42 அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும் அப்பம் பிட்குதலிலும் ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்

அப் 2:43 எல்லாருக்கும் பயமுண்டாயிற்று அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப்பட்டது

அப் 2:44 விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள்

அப் 2:45 காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத் தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்துகொடுத்தார்கள்

அப் 2:46 அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து வீடுகள் தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி

அப் 2:47 தேவனைத் துதித்து ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள் இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்

"அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" சீஷர்கள் நான்கு காரியங்களில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் அவையாவன

அப்போஸ்தலர் – தொகுப்புரை

2 அதிகாரம்

1 அப்போஸ்தலருடைய உபதேசம் (Apostolic teaching) (மத் 28:20)

2 அந்நியோந்நியம் (Fellowship) 1யோவான் 1:3-7

3 அப்பம் பிட்குதல் (Communion) (அப 2:42,46; அப 20:7 1கொரி 10:16-17; 1கொரி 11:23-34 மத் 26:26-30

4 ஜெபம் பண்ணுதல் (Prayers) மத் 7:7-11 மத் 21:22 மாற்கு 11:22-24; யோவான் 15:7,16; எபே 6:18

"எல்லாருக்கும் பயமுண்டாயிற்று" - எருசலேம் முழுவதையும் மிகப்பெரிய பயம் சூழ்ந்து கொண்டது. பல வாரங்களுக்குப் பின்பு ஜனங்கள் மறுபடியுமாக அற்புதங்களைக் காண்கிறார்கள். அநுதினமும் அநேக அற்புதங்களும் அநேக அடையாளங்களும் செய்யப்பட்டன. இதைக [illegible] ஜனங்கள் மத்தியிலே குழப்பம் உண்டாயிற்று. குழப்பத்தின் நடுவிலே எல்லோருக்கும் பயமுமுண்டாயிற்று.

"விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள்" பண்டிகை நாட்களிலே எருசலேமிற்கு ஏராளமான யூதர்கள் பல ஊர்களிலிருந்து வருவார்கள். அவர்கள் எல்லோருக்கும் எருசலேம் பட்டணத்தார் தங்கும் இடம் கொடுத்து, போஜனம் கொடுத்துப் பராமரிப்பது வழக்கம். இப்படிப்பட்ட பண்டிகை நாட்களில் சமுதாயத்தில் நன்மை செய்வது யூதருக்குப் புதுமையல்ல. பண்டிகை முடிந்தவுடன், யாரும் யாரையும் கவனிக்க மாட்டார்கள். ஒருவரும் பிறருக்கு உதவி புரியமாட்டார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் சீஷர்கள் ஒரு புதிய வழக்கத்தைத் துவக்குகிறார்கள். விசுவாசிகளிடத்தில் உள்ள எல்லா ஆசீர்வாதங்களையும் அவர்கள் பொதுவாகக் கொண்டு வந்து, சகலத்தையும் பொதுவாக வைத்து அநுபவித்தார்கள்.

சீஷர்களுடைய பிரசங்கத்தின் மூலமாக எருசலேமிலே மிகப்பெரிய எழுப்புதல் உண்டாயிற்று. எழுப்புதல் கூட்டங்களும் நீண்ட நேரம் நடைபெற்றன. கூட்டத்திற்கு வரும் ஜனங்களுக்கு போஜனம் கொடுப்பதற்காக சீஷர்கள் பொதுவாக வைத்து அநுபவிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தினார்கள். அவர்கள் காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத் தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்துகொடுத்தார்கள். தங்களுடைய அத்தியாவசிய தேவைகள்போக மீதமுள்ளவைகளை விசுவாசிகள் விற்று மற்றவர்களுக்கு உதவி செய்திருக்கலாம்.

விற்று எல்லோருக்கும் பகிர்ந்து கொடுக்கும் பழக்கம் எழுப்புதல் நடைபெற்ற காலத்தில் எருசலேமிலே தற்காலிகமாக நடைபெற்று வந்தது. எருசலேமிலே உள்ள சபையிலோ அல்லது வேறு இடங்களிலோ இந்தப் பழக்கம் தொடர்ந்து நிரந்தரமாக இருந்ததற்கு ஆதாரம் எதுவும் இல்லை.

விசுவாசிகளில் சிலர் வசதி [illegible] வசதியுள்ளவர்களாகவும் இருக்கலாம். அதுபோலவே சபைகளிலும் சில சபை வசதி குறைந்தவையாகவும், வேறுசில சபைகள் வசதியுள்ளவையாகவும் இருக்கலாம். வசதியுள்ளவர்கள் வசதி குறைந்தவருக்கு உதவி புரிய வேண்டும். (1கொரி 16:1 2கொரி 8-9). உதவி புரியும் வழக்கம் நம்முடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து வர வேண்டும். ஆதித்திருச்சபையில் கூட பிறருக்கு உதவி புரிய வேண்டுமென்று யாரும் யாரையும் கட்டாயப்படுத்தவும் இல்லை. பலவந்தம் பண்ணவுமில்லை. (அப 5:4)

"அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்திருந்தார்கள்" பிரசங்கத்தைக் கேட்பதற்கு ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடிவருகிறார்கள். திரளான ஜனங்கள் இரட்சிக்கப்படுகிறார்கள். தேவாலயத்திலுள்ள பிரகாரங்களில் மட்டுமே ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடிவர முடியும்.

2 அதிகாரம்

"இரட்சிக்கப் படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்" தேவனுடைய வார்த்தையைக் கேட்டதினாலும் தங்களுடைய ஜீவியத்தில் அவற்றிற்குக் கீழ்ப்படிந்து நடப்பதினாலும் ஜனங்கள் இரட்சிக்கப்பட்டார்கள் அனுதினமும் தேவனுடைய வசனம் ஜனங்களுக்குப் பிரசங்கிக்கப்பட்டது. ஆகையினால் கர்த்தர் அநுதினமும் சபையிலே இரட்சிக்கப் படுகிறவர்களைச் சேர்த்துக்கொண்டு வந்தார்

3 அதிகாரம்

8. அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்ற பிறகு அவர்கள் மூலமாக நடைபெற்ற முதலாவது அற்புதம் - (மத் 10:1-8; மாற்கு 6:7-13)

அப் 3:1 ஜெபவேளையாகிய ஒன்பதாம் மணிநேரத்திலேபேதுருவும் யோவானும் தேவாலயத்துக்குப் போனார்கள்.

அப் 3:2 அப்பொழுது தன் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய்ப் பிறந்த ஒரு மனுஷனைச் சுமந்துகொண்டு வந்தார்கள்; தேவாலயத்திலே பிரவேசிக்கிறவர்களிடத்தில் பிச்சை கேட்கும்படி, நாடோறும் அவனை அலங்கார வாசல் என்னப்பட்ட தேவாலய வாசலண்டையிலே வைப்பார்கள்.

அப் 3:3 தேவாலயத்திலே பிரவேசிக்கப் போகிற பேதுருவையும் யோவானையும் அவன் கண்டு பிச்சைகேட்டான்.

அப் 3:4 பேதுருவும் யோவானும் அவனை உற்றுப்பார்த்து: எங்களை நோக்கிப்பார் என்றார்கள்.

அப் 3:5 அவன் அவர்களிடத்தில் ஏதாகிலும் கிடைக்குமென்று எண்ணி, அவர்களை நோக்கிப்பார்த்தான்.

அப் 3:6 அப்பொழுது பேதுரு: வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை; என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்: நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி;

அப் 3:7 வலதுகையினால் அவனைப் பிடித்துத் தூக்கிவிட்டான்; உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன்கொண்டது.

அப் 3:8 அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான்; நடந்து, குதித்து, தேவனைத் துதித்துக்கொண்டு, அவர்களுடனேகூடத் தேவாலயத்திற்குள் பிரவேசித்தான்.

"ஜெபவேளையாகிய ஒன்பதாம்மணி நேரத்திலே பேதுருவும் யோவானும் தேவாலயத்துக்குப் போனார்கள்" - அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் இவர்கள் இருவரும் ஏழு இடங்களில் சேர்ந்து கூறப்பட்டிருக்கிறார்கள் (அப் 3:1,3,4,11; அப் 4:13,19; அப் 8:14)

"ஒன்பதாம்மணி நேரம்" - இது மாலை 3 மணியாகும். யூதர்கள் ஒருநாளில் 3 மணி நேரம் ஜெபிப்பார்கள். ஆபிரகாம் முதலாவது ஜெபத்தையும், ஈசாக்கு இரண்டாவது ஜெபத்தையும், யாக்கோபு மூன்றாவது ஜெபத்தையும் ஆரம்பித்து வைத்தாக யூதர்கள் நம்பினார்கள்.

"அலங்கார வாசல்" - இந்த வாசல் வெண்கலத்தினால் செய்யப்பட்டது. மிகவும் அலங்காரமாக அழகு படுத்தப்பட்டிருக்கும்.

"வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை" - தேவாலயத்திற்குள் போகும்போது யூதர்கள் காணிக்கை செலுத்துவதற்காக வெள்ளியையோ பொன்னையோ தங்களோடு எடுத்துச் செல்வது வழக்கம். ஏழைகளுக்கு உதவி புரிவதற்காக தங்களோடு பணத்தை எடுத்துச் செல்வார்கள். ஆனால் அப்போஸ்தலர்களும் மிகவும் ஏழைகளாக இருக்கிறார்கள். அவர்களிடத்தில் ஒரு பொருளும் இல்லை.

"என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்" உலகத்திலுள்ள ஐசுவரியத்தைப் பார்க்கிலும் தேவனுடைய வல்லமை மேன்மையானது. தேவனுடைய பிள்ளைகள் உலக ஐசுவரியத்தைப் பார்க்கிலும் தேவனுடைய வல்லமையைப் பெற்றுக் கொள்வதையே நாடவேண்டும்.

"நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட" இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அதிகாரத்தோடும் விசுவாசத்தோடும் கூறப்பட்ட முதலாவது வார்த்தை. சீஷர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்துகிறார்கள் (யோவான் 16:23)

"உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன்கொண்டது" இயேசு கிறிஸ்து குணமாக்கும்போதும், அவர் உடனடியாகக் குணப்படுத்தினார். அதுபோலவே அவருடைய சீஷர்கள் மூலமாகவும் குணமாகுதல் உடனடியாக நடைபெறுகிறது (மத் 13:58)

3 அதிகாரம்

"அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான் நடந்து, குதித்து, தேவனைத் துதித்துக்கொண்டு, அவர்களுடனேகூட தேவாலயத்திற்குள் பிரவேசித்தான்" - சப்பாணியாய் இருந்தவனுடைய கால்களும் கரங்களும் பலன்கொண்டது. அவன் தன் சரீரத்தில் புதிய அனுபவங்களைப் பெற்றுக் கொள்கிறான். அவன் செய்த காரியங்கள்

1. தானாகவே எழுந்து நின்றான்
2. தானாகவே நடந்தான்
3. ஒரு குழந்தையைப்போலக் குதித்தான்
4. தேவாலயத்தில் தேவனைத் துதித்தான் (அப 3:8)
5. பேதுருவையும், யோவானையும் பற்றிக்கொண்டான் (அப 3:11)

குதித்தெழு (leaping) - ἐξάλλομαι - exallomai - 1814

வினைச்சொல் - குதித்தெழு (springing, jumping up)

குதி (leaping) - ἅλλομαι - hallomai - 242

வினைச்சொல் - ஊரு. குதி (jumping, leaping, springing up) (ஏசா 35:6, யோவான் 14:10, யோவான் 4:14)

9. அற்புதத்தினால் ஜனங்கள்மீது ஏற்பட்ட விளைவு (மத் 8:27, 15:31)

அப 3:9 அவன் நடக்கிறதையும் தேவனைத் துதிக்கிறதையும் ஜனங்களெல்லாரும் கண்டு,

அப் 3:10 தேவாலயத்தின் அலங்கார வாசலண்டையிலே பிச்சைகேட்க உட்கார்ந்திருந்தவன் இவன்தான் என்று அறிந்து, அவனுக்குச் சம்பவித்ததைக் குறித்து மிகவும் ஆச்சரியப்பட்டுப் பிரமித்தார்கள்.

அப 3:11 குணமாக்கப்பட்ட சப்பாணி பேதுருவையும் யோவானையும் பற்றிக் கொண்டிருக்கையில், ஜனங்களெல்லாரும் பிரமித்து, சாலொமோன் மண்டபம் என்னப்பட்ட மண்டபத்திலே அவர்களிடத்திற்கு ஓடிவந்தார்கள்

"அவன் நடக்கிறதையும் தேவனைத் துதிக்கிறதையும் ஜனங்களெல்லாரும் கண்டார்கள்" - உண்மையான தெய்வீக சுகமாதல் நடைபெறும்போது அது எல்லோரும் காணக்கூடிய விதமாக இருக்கிறது. குணம் பெற்றவர் தேவனைத் துதிப்பார். அந்த நிகழ்ச்சியைப் பார்க்கும் ஜனங்கள் ஆச்சரியப்பட்டுப் பிரமிப்பார்கள்

"ஜனங்கள் மிகவும் ஆச்சரியப்பட்டுப் பிரமித்தார்கள்" - ஜனங்களை ஆச்சரியமும் பிரமிப்பும் நிரப்பிற்று. மனுஷரைப் பலகாரியங்கள் நிரப்பும்.

மனுஷரை நிரப்பிய காரியங்கள்

1. கொடுமை (Violence) (ஆதி 6:11 மீகா 6:12)
2. அப்பம் (Food) (யாத் 16:12 மத் 14:20)
3. ஆவி (Spirit) (யாத் 28:3 லூக்கா 1:15-67)
4. ஞானம் (Wisdom) (யாத் 35:35 லூக்கா 2:40; லூக்கா 4:1)
5. நன்மை (Good things) (சங் 104:28
6. நிந்தனை, இகழ்ச்சி (Contempt and scorn) (சங் 123:3-4
7. துன்மார்க்க யோசனைகள் (Wicked devices) (நீதி 1:31)
8. தீமை (Mischief) (நீதி 12:21
9. தன் வழிகள் (Own ways) (நீதி 14:14)
10. அவனவன் உதடுகளின் விளைவு (Own words) (நீதி 18:20

அப்போஸ்தலர் - தொகுப்புரை

3 அதிகாரம்

11 சலிப்பு (Indignation) (எரே 15:17 அப 5:17)

12 கசப்பு (Bitterness) (புல 3:15)

13 நிந்தை (Reproach) (புல 3:30)

14 குடி வெறி (Drink) (எசே 23:33 ஆகாய 1:6)

15 இலச்சை (Shame) (ஆப 2:16)

16 கோபம் (Wrath) (லூக்கா 4:28 எஸ் 3:5)

17 பயம் (Fear) (லூக்கா 5:26)

18 மூர்க்கவெறி (Madness) (லூக்கா 6:11)

19 துக்கம் (Sorrow) (யோவான் 16:6)

20 ஆச்சரியம் (Wonder) (அப 3:10)

21 பொறாமை (Envy) (அப 13:45)

22 சந்தோஷம் (Joy) (அப 13:52 2தீமோ 1:4)

23 குழப்பம் (Confusion) (அப 19:29 யோபு 10:15

24 அநியாயம் (Unrighteousness) (ரோமர் 1:29

25 அறிவு (Knowledge) (ரோமர் 15:14)

26 ஆறுதல (Comfort) (2கொரி 7:4)

27 நீதி (Righteousness) (பிலி 1:11)

28 சகாயம் (Company) (ரோமர் 15:24)

29 வாயச்சாலகம் (Talk) (யோபு 11:2)

30 சஞ்சலம் (Trouble) (யோபு 14:1; சங் 88:3

31 பாவங்கள் (Sins) (யோபு 20:11 ரோமர் 1:29-32)

32 கபிப்பு - கசப்பு (Cursing bitterness) (ரோமர் 3:14

33 பரிதானம் (Bribes) (சங் 26:10

34 வேதனை (Heaviness) (சங் 69:20

35 உக்கிரம் (Divine fury) (எரே 6:11)

36 பலம் (Power) (மீகா 3:8; அப் 6:8

37 வஞ்சகம், கொடுமை (Lies and robbery) (நாகூம் 3:1)

38 கொள்ளை - அநீதம் (Extortion-excess) (மத் 23:25)

39 மரித்தவர்களின் எலும்புகள் (Dead men's bones) (மத் 23:27)

40 மாயம், அக்கிரமம் (Hypocrisy-iniquity) (மத் 23:28

41 குஷ்டரோகம் (Leprosy) (லூக்கா 5:12)

42 கொள்ளை, பொல்லாப்பு (Ravening-wickedness) (லூக்கா 11:39)

43 கிருபை, சத்தியம் (Grace and truth) (யோவான் 1:14)

44 விசுவாசம் (Faith) (அப 6:3-8

45 நற்கிரியைகள (Good works) (அப 9:36)

46 கபடம், பொல்லாப்பு (Subtlety mischief) (அப 13:10)

47 நற்குணம்(Goodness) (ரோமர் 15:14

48 விசாகுலம் (Heaviness) (பிலி 2:26

49 வெளிச்சம்(Light) (லூக்கா 11:34-36

50 இருள்(Darkness) (லூக்கா 11:34-36

3 அதிகாரம்

"சாலொமோன் மண்டபம் என்னப்பட்ட மண்டபம்" – இந்த மண்டபம் 800 அடி நீளமானது. வெளிப்பிரகாரத்தின் கிழக்குப் பகுதியில் இந்த மண்டபம் கட்டப்பட்டிருந்தது. "சாலொமோனுடைய மண்டபம்" - தேவாலயத்தின் வெளிப்பிரகாரம் புறஜாதியாருடைய பிரகாரம் எனவும் இது அழைக்கப்படுகிறது. யூதரும் புறஜாதியாரும் இங்கு தங்கியிருப்பது வழக்கம். இதன் கிழக்குப் பகுதியில் உள்ளது சாலொமோனுடைய மண்டபம் என்று அழைக்கப்பட்டது. சாலொமோன் இந்த மண்டபத்தைக் கட்டினான். மிகவும் அழகான சலவைக்கற்களால் இதை நேர்த்தியாகக் கட்டினான். நேபுகாத்நேச்சார் எருசலேம் பட்டணத்தைப் பிடித்தபோது, சாலொமோன் மண்டபம் மிகவும் அழகாக இருந்ததினால் அதை அழிக்காமல் விட்டுவிட்டான் (யோவான் 10:23)

10. பேதுருவின் இரண்டாவது செய்தி

(1) இயேசு கிறிஸ்துவின் தெய்வத்துவத்தை அற்புதம் உறுதி பண்ணுகிறது
- (யோவான் 5:36; 10:37-38; 14:11)

அப 3:12 பேதுரு அதைக் கண்டு, ஜனங்களை நோக்கி: இஸ்ரவேலரே, இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படுகிறதென்ன? நாங்கள் எங்கள் சுயசக்தியினாலாவது, எங்கள் சுயபக்தியினாலாவது, இவனை நடக்கப் பண்ணினோமென்று நீங்கள் எங்களை நோக்கிப் பார்க்கிறதென்ன?

அப 3:13 ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களுடைய தேவனாகிய நம்முடைய பிதாக்களின் தேவன் தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை மகிமைப்படுத்தினார்; அவரை நீங்கள் ஒப்புக்கொடுத்தீர்கள், பிலாத்து அவரை விடுதலையாக்கத் தீர்மானித்தபோது அவனுக்கு முன்பாக அவரை மறுதலித்தீர்கள்.

"நாங்கள் எங்கள் சுயசக்தியினாலாவது எங்கள் சுயபக்தியினாலாவது இவனை நடக்கப்பண்ணினோமென்று நீங்கள் எங்களை நோக்கிப்பார்க்கிறதென்ன?" - சப்பாணியாக இருந்தவன் இப்போது நடக்கிறான். பேதுருவும், யோவானும் அவனை நடக்கப் பண்ணினார்கள். ஜனங்கள் மிகுந்த ஆச்சரியப்பட்டு, யோவானையும் பேதுருவையும் நோக்கிப் பார்க்கிறார்கள். இந்த அற்புதம் தங்களுடைய சுயசக்தியினாலாவது, சுயபக்தியினாலாவது நடைபெறவில்லை என்று பேதுருவும் யோவானும் அறிக்கை பண்ணுகிறார்கள். தேவனுடைய வல்லமையினாலேயே சப்பாணி நடக்கிறான். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்ட பின்பு அவர்கள் தேவனுடைய ஊழியத்தைச் செய்வதற்குப் பெலனடைந்தார்கள். தேவவல்லமையால் நிரப்பப்பட்டார்கள் (லூக்கா 24:49; அப 1:4-8)

"ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களுடைய தேவனாகிய நம்முடைய பிதாக்களின் தேவன் தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை மகிமைப்படுத்தினார்" - சப்பாணி எழுந்து நடந்ததின் மூலமாக இயேசு கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படுகிறது. இயேசு கிறிஸ்துவை மகிமைப்படுத்தும்போது பரிசுத்த ஆவியானவரின் வல்லமை அளவில்லாமல் அருளப்படும். (யோவான் 7:37-39)

(2) இஸ்ரவேலின் மூன்று பாவங்கள்
(மத் 27:15-25; அப 2:23; 7:51)

அப 3:14 பரிசுத்தமும் நீதியுமுள்ளவரை நீங்கள் மறுதலித்து, கொலைபாதகனை உங்களுக்காக விடுதலை பண்ண வேண்டுமென்று கேட்டு,

அப 3:15 ஜீவாதிபதியைக் கொலை செய்தீர்கள்; அவரை தேவன் மரித்தோரிலிருந்தெழுப்பினார்; அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம்.

"பரிசுத்தமும் நீதியுமுள்ளவரை நீங்கள் மறுதலித்தீர்கள்" - பேதுரு ஏற்கெனவே இயேசு கிறிஸ்துவை மூன்று முறை மறுதலித்தவன். அப்போஸ்தலனாகிய இவன் இப்போது யூதரிடம் இயேசு கிறிஸ்துவை அவர்கள் மறுதலித்தது சம்பந்தமாகப் பேசுகிறான் (மத் 26:69-75)

3 அதிகாரம்

"பரிசுத்தமுள்ளவர்" (Holy One) - இயேசு கிறிஸ்துவை அப்போஸ்தலரும் பிசாசுகளும் பரிசுத்தமுள்ளவர் "the Holy One" என்று அழைத்தார்கள் (மாற்கு 1:24 லூக்கா 4:34; அப் 2:27; அப் 3:14 அப் 4:27,30; சங் 16:10; ஏசா 29:23 ஏசா 49:7)

"நீதியுள்ளவர்கள்" (Just) - இந்த வாக்கியம் இயேசு கிறிஸ்துவைக் குறிக்கும் (அப் 7:52; அப் 22:14)

"கொலைபாதகன்" (murderer) - [illegible] வாக்கியம் பரபாசைக் குறிக்கும் (மத் 27:15-26)

"ஜீவாதிபதியைக் கொலைசெய்தீர்கள்" - இந்த வாக்கியத்தில் அதிபதி என்பதன் கி[illegible] வார்த்தை "ஆர்கேகோஸ்" (archeegos) என்பதாகும். இதற்கு தலைவர் முதன்மையானவர் முக்கியமானவர் காரணகர்த்தா (author) என்று பலவிதமாகப் பொருள் கூறலாம். இயேசு கிறிஸ்து பலகாரியங்களுக்கு அதிபதியாக இருக்கிறார் அவையாவன

1 சமாதானப்பிரபு Prince (Author) of peace (ஏசா 9:6)

2 அதிபதிகளுக்கு அதிபதி Prince (Leader) of Princes (தானி 8:25)

3 பிரபுவாகிய மேசியா Messiah the (Anointed) Prince (தானி 9:25)

4 ஜீவாதிபதி Prince (Author) of Life (அப் 3:15)

5 அதிபதியும் இரட்சகரும் A Prince and a Savior (அப் 5:31)

6 பூமியின் இராஜாக்களுக்கு அதிபதி Prince (Leader or Ruler) of theKingsof the Earth (வெளி 1:5)

7 இரட்சிப்பின் அதிபதி Captain (Prince, Author)of Salvation (எபி 2:10)

8 விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிறவர் The Author (Prince) and Finisher of our Faith (எபி 12:2)

அதிபதி (Prince) - ἀρχηγός - archeegos - 747

பொருள் - அதிபதி, துவக்குகிறவர்

(3) இயேசு என்னும் நாமத்தின் வல்லமை - (மாற்கு 16:17-18 யோவான் 14:12-15; 15:16

அப் 3:16 அவருடைய நாமத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே அவருடைய நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைப் பெலப்படுத்தினது அவரால் உண்டாகிய விசுவாசமே உங்களெல்லாருக்கும் முன்பாக இந்தச் சர்வாங்க சுகத்தை இவனுக்குக் கொடுத்தது

"அவருடைய நாமத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே" - தேவனுடைய வல்லமையைப் பெற்றுக் கொள்வதற்கும் தெய்வீக அற்புதங்களைச் செய்வதற்கும் ஆதாரமாக இருப்பது இயேசு கிறிஸ்துவின் நாமமும் அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்து செய்யப்படும் கிரியைகளுமாகும் (மத் 1:21; மாற்கு 16:17-18, யோவான் 1:12, யோவான் 14:12-15, யோவான் 15:16 யோவான் 16:23-26, அப் 2:38, அப் 3:6 அப் 4:12; அப் 9:34; பிலி 2:9-11) இந்த ஜீவாதிபதியாகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைத்து பேதுரு சப்பாணியை நடக்கச் செய்கிறான் (யோவான் 10:10)

சர்வாங்க சுகம் (perfect) - ὁλοκληρία holokleeria 3647

பொருள் பொச்சொல் - சர்வாங்க சுகம் (wholeness) - இந்த வசனத்தில் மட்டுமே இந்த வாக்கியம் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. மேலும் இரண்டு வசனங்களில் முழுமையைக் குறிக்கும் பொருளாக (adjective) இந்த வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (1தெச 5:23, யாக் 1:4)

3 அதிகாரம்

(4) இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டது தீர்க்க தரிசனத்தின் நிறைவேற்றம் - (ஆதி 3:15; ஏசா 53; சங் 22)

அப் 3:17 சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச் செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன்

அப் 3:18 கிறிஸ்து பாடுபடவேண்டுமென்று தேவன் தம்முடைய தீர்க்க தரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் முன்னறிவித்தவைகளை இவ்விதமாய் நிறைவேற்றினார்

அறி (wot) - εἴδω - eidoo - 1492

வினைச்சொல் - காண், அறி, பார் தெரிந்திரு, நோக்கு, உணர் அறிந்திரு, விளங்கு (know) அப் 3:16

"நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச் செய்தீர்கள் யூதருடைய அறியாமை மிகப்பெரிய குற்றமாகும். அவர்கள் வேண்டுமென்றே அறியாமையைத் தெரிந்து கொண்டார்கள் இயேசு கிறிஸ்துவிடம் ஒரு பாவமும் இல்லாதிருந்தும், அவரைச் சிலுவையில் அறைவதற்கு ஒப்புக் கொடுத்தார்கள் அவர்கள் அறியாமல் இந்தத் தவறைச் செய்த போதிலும், அவர்கள் செய்தது குற்றமே அவர்கள் தங்களுடைய தவறுகளுக்காக மனந்திரும்ப வேண்டும். அவர்கள் தேவனிடம் தாங்கள் செய்த தவறை உணர்ந்து மனந்திரும்பி வரும்போது இயேசு கிறிஸ்து அவர்களை மன்னிப்பார்

"கிறிஸ்து பாடுபட வேண்டுமென்று தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் முன்னறிவித்தவைகளை இவ்விதமாய் நிறைவேற்றினார்" மேசியா அனுபவிக்க வேண்டிய பாடுகளைக் குறித்துப் பல தீர்க்க தரிசிகள் முன்னறிவித்து இருக்கிறார்கள்

அந்தத் தீர்க்கதரிசனங்கள் எல்லாமே இயேசு கிறிஸ்து பாடுகள் அனுபவித்ததில் நிறைவேறிற்று. ஸ்திரீயின் வித்து, சாத்தானின் குதிங்காலை நசுக்குவது முதல் (ஆதி 3:15) இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் எல்லாத் தீர்க்கதரிசனங்களும் நிறைவேறிற்று. இயேசு கிறிஸ்துவின் பாடுகளைத் தாவீது (சங் 22) ஏசாயா (ஏசா 52:14 ஏசா 53:1-12) தானியேல் (தானி 9:25-26) ஆகியோர் ஏற்கெனவே முன்னறிவித்திருக்கிறார்கள் தீர்க்கதரிசிகள் மூலமாக முன்னறிவிக்கப்பட்ட தீர்க்கதரிசனங்களை இயேசு கிறிஸ்து நிறைவேற்றினார்

(5) தேசம் மீட்கப்படுவதற்கு நிபந்தனைகள் - (ரோமர் 11:25-27 சக 12:10-13:1)

அப் 3:19 ஆனபடியினாலே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும் முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும்

(6) இயேசுவின் இரண்டாம் வருகை (மத் 24:27)

அப் 3:20 உங்கள் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படும்பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள்

அப் 3:21 உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்க தரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறுந் திருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

"உங்கள் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படும்பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள்" பாவமன்னிப்பு பெறுவதற்கு இரண்டு காரியங்கள் அவசியமானவை. அவையாவன

1. மனந்திரும்ப வேண்டும்.
2. குணப்பட வேண்டும்.

3 அதிகாரம்

மனந்திரும்புதல் என்பதற்கான கிரேக்க வார்த்தை "மெடானோயோ" (metanoeoo) என்பதாகும். மனதை நீதிநெறி வழிக்கு நேராக திசை திருப்புதல். ஒரு மனுஷனுடைய சுபாவத்தை பாவத்திற்கு விரோதமாகத் திருப்புதல் என்பது இந்த வார்த்தையின் பொருள் (மத் 3:2; மத் 4:17; அப் 2:38 அப் 3:19; லூக்கா 13:3-5) யூதர்கள் இப்போது இயேசுவை மேசியா என்று புரிந்து கொள்கிறார்கள். அவர்கள் தங்களுடைய மனதை இயேசு கிறிஸ்துவின் உபதேசங்களுக்கு நேராகத் திருப்ப வேண்டும் இயேசு கிறிஸ்துவிற்கு எதிராக அவர்கள் செய்த பாவங்களை உணர்ந்து அதற்காக மனந்திரும்ப வேண்டும்.

மனந்திரும்பு (Repent) - μετανοέω - metanoeoo - 3:40

விணைச்சொல் - மனந்திரும்பு, மனஸ்தாபப்படு

"குணப்படுதல்" (Be converted) என்பது ஒருவருடைய நடத்தையை மாற்றுவது. ஒரு வழியில் போகும்போது அந்த வழியில் தொடர்ந்து செல்லாமல் திரும்பி வருவது. தேவனுக்காகத் தேவனோடு நேரான பாதையில் நடப்பது என்று இந்த வார்த்தைக்குப் பலவிதமாகப் பொருள் கூறலாம். (சங் 19:7; சங் 51:13; மத் 18:3, யாக் 5:19)

மனந்திரும்புவதைப் பற்றி பழைய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டளைகள்

1 "தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் திரும்பு" (உபா 30:10)

2 "நீங்கள் உங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பி, என் கற்பனைகளையும், கட்டளைகளையும் கைக் கொள்ளுங்கள்" (2 இராஜா 17:13).

3. "உங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, உங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்புங்கள்" (2 நாளா 7:14, எரே 25:5; எரே 26:3; எசே 33:11 சக 1:4

4 "திரும்புங்கள், உங்கள் நரகலான விக்கிரகங்களை விட்டுத் திரும்புங்கள் உங்கள் சகல அருவருப்புகளையும் விட்டு [illegible] முகத்தைத் திருமபுங்கள்" (எசே 14:6 எசே 18:30)

5. "நீ உன் தேவனிடத்தில் திரும்பு, தயவையும் நியாயத்தையும் கைக் கொண்டு இடைவிடாமல் உன் தேவனை நம்பிக் கொண்டிரு" (ஓசி 12:6)

மனந்திரும்புவோருக்கு வாக்குத்தத்தமாகக் கூறப்பட்டிருக்கும் ஆசீர்வாதங்கள்

1 கர்த்தர் உன் கைகள் செய்யும் எல்லா வேலைகளிலும் உன் கர்ப்பத்தின் கனியிலும் உன் மிருகஜீவனின் பலனிலும், உன் நிலத்தின் கனியிலும் உனக்குப் பரிபூரணமுண்டாகச் செய்வார் உனக்கு நன்மை உண்டாகச் சந்தோஷமாயிருப்பார் (உபா 30:8-10)

2 பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு அவர்கள் பாவத்தை மன்னிப்பேன் (2 நாளா 7:14)

3 துன்மார்க்கன், தான் செய்த எல்லா மீறுதல்களையும் விட்டுத் திரும்புகிறபடியினால் அவன் பிழைக்கவே பிழைப்பான் அவன் சாவதில்லை. (எசே 18:28-32; எசே 33:11

4 அவர்களுடைய செய்கைகளுடைய பொல்லாப்பினிமித்தம் நான் அவர்களுக்குச் செய்ய நினைக்கிற தீங்குக்கு நான் மனஸ்தாபப்படுகிறேன் (எரே 26:3

5 உங்கள் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படும் (அப் 3:19 அப் 2:38, 1யோவான் 1:9)

அப்போஸ்தலர் – தொகுப்புரை

3 அதிகாரம்

"பாவம்" - இலக்கைத் தவறவிடுதல (missing the mark). செய்ய வேண்டியவற்றைச் செய்யாமல இருப்பதும் செய்ய வேண்டாதவற்றைச் செய்வதும் பாவம் இது சிந்தையாகவோ செயலாகவோ வார்த்தையாகவோ இருக்கலாம் இலக்கை எவ்வாறு குறிபார்த்து எய்வது. அதாவது இலக்கை எவ்வாறு தவறவிடாமல இருப்பது என்பதை உபதேசம் பண்ணுவதற்காகவே இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார் (தீத்து 2:11-14; 1யோவான் 2:1-2:29 யோவான் 3:9; 1யோவான் 5:1-4:18)

பாவம் (sin) - 'αμαρτία - hamartia - 266

பெண்பால வினைப்பெயர் - பாவம தோல்வி

(அ) பாவச் செயல (1கொரி. 15:17)

(ஆ) பாவத்தில முழ்கியிருத்தல் எப்பொழுதும் பாவத்தில இருத்தல் (யோவா 1:21), (ரோம. 3:9)

"உங்கள் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படும்பொருட்டு" - பாவங்கள கழுவப்படும் பொருட்டு பாவிகளுடைய ஜீவியத்தில காணப்படும் எல்லாப் பாவங்களும் அகற்றப்பட்டு அந்த நபர சுத்திகரிக்கப்பட வேண்டும் (கொலோ 2:14 வெளி 3:5 வெளி 7:17 வெளி 21:4, வெளி 1:5 1கொரி 6:11 ஏசா 1:18 இந்த வாக்கியத்தில "பொருட்டு" என்பதன கிரேக்க வார்த்தை "ஹோபோஸ" (hopoos) என்பதாகும். ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காக என்பது இந்த வார்த்தையின் பொருள். அப்போஸ்தலர நடபடிகள புஸ்தகத்தில இந்த வார்த்தை அதிகமாகப் பயனபடுத்தப்பட்டிருக்கிறது. (அப 3:19 அப 8:15.24 அப 9:2,12,17 அப 15:17 அப 23:15.20 அப் 24:26, அப 25:3,26; அப் 9:24; அப 23:23; அப 20:16). ஒருவருடைய பாவங்கள் நிவாரத்தி செய்யப்பட வேண்டுமானால் அவர மனந்திருந்தி குணப்பட வேண்டும். அப்போது அவருக்கு கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும். (1கொரி 5:17-18, எபே 1:3 கலா 5:22-23; ஏசா 28:11-12

பொருட்டு (when) - ὅπως - hopoos - 3704

எச்சம் - பொருட்டு

தீர்க்கதரிசன எண் - 5

"உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும்______" (அப 3:21-22) இந்தத் தீர்க்கதரிசனம நிறைவேறவில்லை இயேசு கிறிஸதுவின் இரண்டாம வருகையின் போதும ஆயிரம வருஷ அரசாட்சியிலும் புதிய பூமியிலும் இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும. (மத் 24:29-31; மத் 25:31-46, 2தெச 1:7-10; யூதா 1:14; வெளி 19:11-21 சக 14)

"உலகத்தோற்றமுதல தேவன தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள" - இந்தக் காலம் முழுமையான மீட்பின காலத்தைக் குறிக்கும். ஆயிரம் வருஷ அரசாட்சியில இயேசு கிறிஸது ஆயிரம் வருஷங்களுக்கு ஆட்சி புரிவார எல்லோரையும் ஒன்றாகக் கூட்டிச் சேர்ப்பார் (எபே 1:10, 1கொரி 15:24-28) எல்லாக் காரியங்களையும் பாவமற்றதாகவும், பரிபூரணமானதாகவும் ஆக்குவார் (ஏசா 65:17; ஏசா 66:22-24, 2பேதுரு 3:5-13; வெளி 21:22) இந்தக் காரியங்களெல்லாம் சீரபடுத்தப்பட்ட பினபு மீட்கப்பட்ட பரிபூரணமான இராஜ்யத்தைக் குமாரனாகிய இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனிடம் ஒப்படைப்பார

நிறைவேறித்தீருதல் (restitution) ἀποκατάστασις apokatastasis 605

பெண்பால் பெயர்ச்சொல நிறைவேறித்தீருதல

3 அதிகாரம்

தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் மனுஷனையும் சிருஷ்டித்தார் தேவனுடைய சித்தத்தின் பிரகாரம் அவன் பூமியில் பலுகிப்பெருக வேண்டும் ஆனால் மனுஷனோ சாத்தானுக்கு இடம் கொடுத்து தேவனுக்கு விரோதமாகக் கிரியை செய்து பாவத்தில் விழுந்து விடுகிறான் இதனால் தேவன் எதிர்பார்த்த பிரகாரம் மனுஷனால் பூமியில் பலுகிப் பெருக முடியவில்லை மனுஷனுடைய பாவத்தினால் தேவனுடைய திட்டம் நின்றுபோய்விடவில்லை அது நிறைவேறுவதில் காலம் தாமதமாகிறது. எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் (The Restitution of All Things) வரும் வரையிலும் தேவனுடைய சித்தம் நிறைவேறுவதுதாமதமாகிறது. (அப 3:21) எல்லாம் நிறைவேறிய பின்பு தேவனுடைய சித்தத்தின் பிரகாரமே உலகம் இருக்கும். மனுஷன் பாவம் செய்யாமல் இருந்தால் இந்தப் பூமி எப்படி இருந்திருக்குமோ அப்படி எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வந்தபின்பு இருக்கும்.

இந்த உலகத்தில் பாவம், வியாதி, மரணம், சாபம் ஆகியவை தாராளமாக உள்ளன இவையெல்லாம் உலகத்தில் இல்லையென்றால் இந்தப் பூமி எப்படியிருக்குமோ அப்படியே புதிய பூமியில் (New Earth) இருக்கும் தேவனுடைய ஆசீர்வாதங்கள் பூமியில் முழுமையாகத் தங்கியிருக்கும் தேவன் எந்த நோக்கத்தோடு இந்தப் பூமியையும் இந்தப் பூமியிலுள்ள சிருஷ்டிகளையும் சிருஷ்டித்தாரோ அந்த நோக்கம் புதிய பூமியில் பரிபூரணமாக நிறைவேறும். (ஆதி 8:22 ஆதி 9:12, ஏசா 66:22-24 2பேதுரு 3:13

இந்தப் பூமியிலே தாவீது ராஜாவாக இருந்த போது, அவன் யூதருக்கும் புறஜாதியாருக்கும் இராஜாவாக இருந்தான் தேவனுடைய ராஜ்ஜியத்திற்குத் தாவீதின் ராஜ்ஜியம் முன்மாதிரியாக இருக்கிறது. (அப 3:24-26, 2சாமு 7:11-17,24-29 சங் 89:3-4,35-37;ஏசா 9:6-7; எசே 43:7-9 தானி 2:44-45; தானி 7:13-14,18,27; லூக்கா1:32-33, வெளி 11:15; வெளி 22:4-5)

"உலகத்தோற்றமுதல்" - இந்த வாக்கியத்தில் "முதல்" என்பதன் கிரேக்க வார்த்தை "அயினோஸ்" (aioonios) என்பதாகும். ஆதியிலிருந்து அல்லது பழைய காலத்திலிருந்து என்பது இதன் பொருள் இந்த உலகத்தின் ஆரம்ப காலத்தை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. மனுஷன் தன் பாவத்தில் விழுந்த போது ஸ்திரீயின் வித்தினால் மனுக்குலத்திற்கு மீட்பு உண்டாகும் என்று தேவன் தீர்க்கதரிசனமாகக் கூறினார் (ஆதி 3:15) ஆதாமிலிருந்து ஏழாவதாக வந்த ஏனோக்கு இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை முன்னறிவித்தான் (யூதா 14) மனுஷனுடைய பாவத்தினால் பூமி இப்போது சாபத்தில் இருக்கிறது. ஒரு நாளில் இந்த சாபமெல்லாம் அகலும். பூமியில் ஒரு சாபமும் இராது. அந்த நாளே "தீர்க்கதரிசனங்களெல்லாம் நிறைவேறித் தீரும் காலமாகும்"

உலகத்தோற்றமுதல் (from of old) - ἀπό - apo - 575

முன்னிடச் சொல் - ஓரிடத்தில் இருந்து துவக்கத்திலிருந்து உலகத்தோற்றமுதல்

நித்திய (from of old) - αἰώνιος - aioonios - 166

பெயரடை - நித்திய

(அ) துவக்கமோ அல்லது முடிவோ இல்லாத, அநாதி ரோம. 16:25

(ஆ) துவக்கம் இல்லாத ரோம. 14:25

(இ) முடிவு இல்லாத

(7) இயேசுவின் முதலாம் வருகையை மோசே முன்குறித்துக் கூறினார் (உபா 18:15

அப 3:22 மோசே பிதாக்களை நோக்கி: உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார் அவர் உங்களுக்குச் சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்குச் செவிகொடுப்பீர்களாக.

3 அதிகாரம்

அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 7

"உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவார்; அவர் உங்களுக்குச் சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்குச் செவி கொடுப்பீர்களாக................" (அப் 3:22-23; உபா 18:15-19)

(8) ஜீவனை விட்டு மரணத்தை சுயாதீனமாக தெரிந்தெடுக்க வேண்டும் - (யோவான் 3:14-16)

அப் 3:23 அந்தத் தீர்க்கதரிசியின் சொற் கேளாதவனெவனோ அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப் படுவான் என்றான்

(9) இயேசுவின் பாடுகளை எல்லா தீர்க்கதரிசிகளும் முன்னறிவித்தார்கள் - (லூக் 24:25-27, 44)

அப் 3:24 சாமுவேல் முதற்கொண்டு எத்தனை பேர் தீர்க்கதரிசனம் உரைத்தார்களோ, அத்தனைபேரும் இந்த நாட்களை முன்னறிவித்தார்கள்

(10) கிறிஸ்துவின் ஊழியத்தை ஆபிரகாமும் முன்னறிவித்தான் - (ஆதி 12:1-3; யோவான் 8:52-58)

அப் 3:25 நீங்கள் அந்தத் தீர்க்கதரிசிகளுக்கும் புத்திரராயிருக்கிறீர்கள், உன் சந்ததியினாலே பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும் என்று தேவன் ஆபிரகாமுக்குச் சொல்லி, நம்முடைய முன்னோர்களோடே பண்ணின உடன்படிக்கைக்கும் புத்திரராயிருக்கிறீர்கள்

"தேவன் ஆபிரகாமுக்குச் சொல்லி, நம்முடைய முன்னோர்களோடே பண்ணின உடன்படிக்கைக்கும் புத்திரராயிருக்கிறீர்கள்" - இது ஆபிரகாமின் உடன்படிக்கையாகும்

அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 8

"உன் சந்ததியினாலே பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்" (அப் 3:25; ஆதி 12:1-3)

(11) சுவிசேஷம் முதலாவது இஸ்ரவேலுக்கு அறிவிக்கப் படுகிறது - (மத் 10:6, ரோமர் 1:16

அப் 3:26 அவர் உங்களெல்லாரையும் உங்கள் பொல்லாங்குகளிலிருந்து விலக்கி, உங்களை ஆசீர்வதிக்கும்படி தேவன் தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை எழுப்பி, முதலாவது உங்களிடத்திற்கே அவரை அனுப்பினார் என்றான்

"தேவன் தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை எழுப்பி, முதலாவது உங்களிடத்திற்கே அவரை அனுப்பினார்" சுவிசேஷம் முதலாவதாக யூதருக்கே அறிவிக்கப்பட்டது (யோவான் 1:11, மத் 10:6, மத் 15:24; ரோமர் 1:16)

"அவர் உங்களெல்லாரையும் உங்கள் பொல்லாங்குகளிலிருந்து விலக்கி, உங்களை ஆசீர்வதிக்கும்படி" இயேசு கிறிஸ்து வந்ததன் பிரதான நோக்கமும், சுவிசேஷச் செய்தி பிரசங்கிக்கப்படுவதன் நோக்கமும் இதுதான் (யோவான் 3:16; 1கொரி 1:21

4 அதிகாரம்

11. முதலாவது உபத்திரவம்

(1) பேதுருவையும் யோவானையும் கைது பண்ணுகிறார்கள் - (5:17, 25; 8:1; 9:1; 12:1)

அப 4:1 அவர்கள் ஜனங்களுடனே பேசிக் கொண்டிருக்கையில் ஆசாரியர்களும் தேவாலயத்துச் சேனைத்தலைவனும் சதுசேயரும் அவர்களிடத்தில் வந்து,

அப 4:2 அவர்கள் ஜனங்களுக்கு உபதேசிக்கிறதினாலும் இயேசுவை முன்னிட்டு, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலைப் பிரசங்கிக்கிறதினாலும், சினங்கொண்டு,

அப 4:3 அவர்களைப் பிடித்து, சாயங்காலமாயிருந்தபடியினால், மறுநாள்வரைக்கும் காவலில் வைத்தார்கள்.

"ஆசாரியர்கள்" - ஆரம்பத்திலிருந்தே இவர்கள் இயேசு கிறிஸ்துவின் விரோதிகளாக இருந்தவர்கள்.

"தேவாலயத்துச் சேனைத்தலைவன்" (captain of the temple) தேவாலயத்தில் அமைதியை நிலைநாட்டுபவராகவும் சட்ட ஒழுங்கைப் பராமரிப்பவராகவும் நியமிக்கப் பட்டிருக்கிறவன். இவனுக்குக் கீழ் பல போர்ச்சேவகர்கள் பணிபுரிவார்கள்.

"சதுசேயர்" (Sadducees) - இயேசு கிறிஸ்துவின் காலத்தில் பரிசேயர் அவருக்கு எதிராக எழும்பி நின்றார்கள். இப்போது சதுசேயர் இயேசு கிறிஸ்துவையும் அவருடைய சீஷர்களையும் சீஷர்களின் உபதேசங்களையும், எதிர்க்கிறார்கள். சதுசேயர் உயிர்த்தெழுதலை நம்புவதில்லை (அப 23:8). அப்போஸ்தலருடைய பிரசங்கத்தின் மையச் செய்தி இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்பதுதான். சதுசேயருக்கு ஏற்றுக் கொள்ளமுடியாத உபதேசமும் மரித்தோரின் உயிர்த்தெழுதல் தான். ஆகையினால் இவ்விருவருடைய மார்க்க உபதேசங்களும் ஒன்றுக்கொன்று முரண் பட்டிருந்தன. இதனால் சதுசேயர் அப்போஸ்தலர்களை வெறுத்தார்கள் (அப் 1:22).

"அவர்கள் ஜனங்களுக்கு உபதேசிக்கிறதினாலும் இயேசுவை முன்னிட்டு, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலைப் பிரசங்கிக்கிறதினாலும், சினங்கொண்டார்கள்" - அப்போஸ்தலருடைய உபதேசத்தை ஜனங்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்று திரளான ஜனங்கள் நம்புகிறார்கள். இதனால் சதுசேயருக்கு அவர்கள்மீது சினம் அதிகமாயிற்று.

"அவர்களைப் பிடித்து, சாயங்காலமாயிருந்தபடியினால் மறுநாள்வரைக்கும் காவலில் வைத்தார்கள்" - சதுசேயர்கள் தவறான காரியத்தைச் செய்து வருகிறார்கள். சீஷர்களைக் காவலில் வைத்ததினால் தெய்வீக எழுப்புதல் வேகமாகப் பரவிற்று. (அப் 4:4,33; அப் 5:1)

(2) பேதுருவின் இரண்டாம் பிரசங்கத்தினால் ஏற்பட்ட விளைவு - ஐயாயிரம் பேர் இரட்சிக்கப் பட்டார்கள் - (2:41-4)

அப 4:4 வசனத்தைக் கேட்டவர்களில் அநேகர் விசுவாசித்தார்கள்; அவர்கள் தொகை ஏறக்குறைய ஐயாயிரமாயிருந்தது.

"வசனத்தைக் கேட்டவர்களில் அநேகர் விசுவாசித்தார்கள்; அவர்கள் தொகை ஏறக்குறைய ஐயாயிரமாயிருந்தது" - ஏற்கெனவே 3,000 இரட்சிக்கப்பட்டிருந்தார்கள். இப்பொழுது மேலும் 5,000 பேர் இரட்சிக்கப் பட்டிருக்கிறார்கள். இக்காலத்தில் விசுவாசிகளின் எண்ணிக்கை சுமார் 8,000 பேராக இருக்கிறது. (அப 2:41)

(3) பேதுருவையும் யோவானையும் விசாரிக்கிறார்கள் - (அப் 5:27-33)

அப 4:5 மறுநாளிலே ஜனங்களுடைய அதிகாரிகளும் மூப்பரும் வேதபாரகரும்,

அப் 4:6 பிரதான ஆசாரியனாகிய அன்னாவும், காய்பாவும், யோவானும், அலெக்சந்தரும் பிரதான ஆசாரியருடைய குடும்பத்தார் யாவரும் எருசலேமிலே கூட்டங்கூடி,

4 அதிகாரம்

அப 4:7 அவர்களை நடுவே நிறுத்தி: நீங்கள் எந்த வல்லமையினாலே எந்த நாமத்தினாலே இதைச் செய்தீர்கள் என்று கேட்டார்கள்

"அதிகாரிகளும் மூப்பரும் வேதபாரகரும்" - இவர்கள் ஆலோசனைச் சங்கத்தின் கூட்டத்தார்கள் யூதருடைய ஆலோசனைச் சங்கத்தில் இவர்களே பிரதானமாக இருந்தவர்கள்

"பிரதான ஆசாரியனாகிய அன்னா" - காய்பாவோடு பிரதான ஆசாரியனாக இருந்தவன் லூக்கா 3:2 யோவான் 18:13,19,24 இவன் பதினொரு வருஷங்கள் பிரதான ஆசாரியனாக இருந்தான் இவனுடைய ஐந்து குமாரர்களும் இவனுக்குப் பின்பு பிரதான ஆசாரியர்களாக ஆனார்கள்

"காய்பா" - மத் 26:3

"யோவான்" (John) - இந்த யோவான் என்பவன் இக்காலத்திலிருந்த புகழ்பெற்ற ரபீயாக இருக்கலாம் என்றும் இவனுடைய முழுப்பெயர் "யோனான் பென் லாக்காய்" (Johanan Ben Laccai) என்றும் திருச்சபை வரலாற்று ஆசிரியர்கள் கருதுகிறார்கள்

"அலெக்சந்தர்" (Alexander) இவனுடைய முழுப்பெயர் "அலெக்சந்தர் லிசிமாக்கஸ்" (Alexander Lysimachus) என்றும் இக்காலத்தில் யூதருக்குள் மிகுந்த ஐசுவரியவானாக இருந்தவன் என்றும் இவனைப் பற்றி வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள் தேவாலயத்திற்கு இவன் மிகுந்த வெகுமதிகளைக் கொடுத்தான் என்றும் அக்கிரிப்பா ராஜா இவன்மீது மிகுந்த மரியாதை வைத்திருந்தான் என்றும் இவனைப் பற்றி ஒரு செய்தி உள்ளது

"பிரதான ஆசாரியருடைய குடும்பத்தார்" - பிரதான ஆசாரியர் எந்தக் குடும்பங்களிலிருந்து தெரிந்தெடுக்கப்படுவார்களோ அந்தக் குடும்பத்தார் அனைவரும்

"நீங்கள் எந்த வல்லமையினாலே, எந்த நாமத்தினாலே, இதைச் செய்தீர்கள்" - இந்த வாக்கியத்தில் "வல்லமை" என்பதற்கான கிரேக்க வார்த்தை "டுனாமிஸ்" dynamis என்பதாகும். (2 பேதுரு 1:3)

வல்லமை (Power) - δύναμις - dynamis - 1411

பெண்பால் பெயர்ச்சொல் - வல்லமை பலத்த செய்கைகள், அற்புதங்கள், திறமை, பலம், சத்துவம், சக்தி, கருத்து, உக்கிரம், மிகுதி

"எந்த நாமத்தினாலே" - எந்த நாமத்தினாலே என்பதற்கு எந்த அதிகாரத்தினாலே என்று பொருள் சீஷர்கள் அற்புதங்களைச் செய்கிறார்கள் என்பதை ஆலோசனைச் சங்கத்தார் ஏற்றுக் கொள்கிறார்கள் ஆனால் இந்த அற்புதங்களை அவர்கள் எந்த நாமத்தினாலே அல்லது எந்த அதிகாரத்தினாலே செய்கிறார்கள் என்று யூதர்களுக்குத் தெரியவில்லை. அதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார்கள் பிசாசுகளும் அசுத்த ஆவிகளும் இதுபோன்று அற்புதங்களைச் செய்யும் என்று யூதர்கள் நம்பினார்கள் பிசாசின் நாமத்தினாலே அல்லது பிசாசின் அதிகாரத்தினாலே அற்புதங்களைச் செய்வோருக்கு லேவி 20:27 ஆகிய வசனத்தின் பிரகாரம் அவர்களுக்கு மரணதண்டனை கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது.

(4) பேதுருவின் விவாதம் - இயேசு என்னும் நாமத்தின் வல்லமை - (மத் 10:19)

அப் 4:8 அப்பொழுது பேதுரு பரிசுத்த ஆவியினாலே நிறைந்து அவர்களை நோக்கி: ஜனத்தின் அதிகாரிகளே, இஸ்ரவேலின் மூப்பர்களே

அப் 4:9 பிணியாளியாயிருந்த இந்த மனுஷனுக்குச் செய்யப்பட்ட உபகாரத்தைக் குறித்து எதினாலே இவன் ஆரோக்கியமானானென்று நீங்கள் இன்று எங்களிடத்தில் விசாரித்துக் கேட்டால்,

அப்போஸ்தலர் – தொகுப்புரை

4 அதிகாரம்

அப 4:10 உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறானென்று உங்களெல்லாருக்கும், இஸ்ரவேல் ஜனங்களெல்லாருக்கும் தெரிந்திருக்கக்கடவது.

அப 4:11 வீடுகட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக்கல்லானவர்.

அப 4:12 அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்.

"பேதுரு பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவன்" இயேசுகிறிஸ்துவை விசாரித்த போது, பேதுரு பேசுவதற்கே பயந்தான். காய்பாவின் அரண்மனையில் சேவல் கூவுகிறதற்கு முன்னே இயேசு கிறிஸ்துவை மூன்று முறை பயத்தினால் மறுதலித்தான் (மத் 26:69-75). அதே பேதுரு இப்போது தைரியமாகப் பேசுகிறான். அவன் பரிசுத்த ஆவியினாலே நிறைந்திருந்ததுதான் அவனுடைய தைரியத்திற்குக் காரணம். மத் 10:18-20 ஆகிய வசனங்களில் இயேசு கிறிஸ்து கூறியிருக்கும் தீர்க்கதரிசன வார்த்தைகள் இப்போது நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

"உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறானென்று உங்களெல்லாருக்கும், இஸ்ரவேல் ஜனங்களெல்லாருக்கும் தெரிந்திருக்கக்கடவது" - பேதுரு இயேசு கிறிஸ்துவை ஜனங்கள் மத்தியிலே தைரியமாக அறிக்கையிடுகிறான். சப்பாணியாக இருந்த இந்த மனுஷன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேதான் சொஸ்தமானான் என்று எல்லோருக்கும் முன்பாக சிறிதளவும் பயமில்லாமல் மிகுந்த தைரியத்தோடு அறிக்கையிடுகிறான்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 8

"வீடுகட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக்கல்லானவர்" (அப் 4:11; சங் 118:22; மத் 21:42; ஏசா 28:16; ஏசா 49:7; ரோமர் 9:33; 1பேதுரு 2:7-8)

"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை" - இயேசு கிறிஸ்துவினால் மட்டுமே மனுஷருக்கு இரட்சிப்பு உண்டாயிருக்கிறது. மனுஷர் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை.

இந்த வாக்கியத்தில் இரட்சிப்பு என்பதற்கான கிரேக்க வார்த்தை "சொட்டேரியா" (sooteeria) என்பதாகும்.

இரட்சிப்பு (salvation) - σωτηρία - sooteeria - 4991

பெண்பால் பெயர்ச்சொல் - இரட்சிப்பு, விடுதலை, இரட்சணியம்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நமக்குப் பல காரியங்களிலிருந்து இரட்சிப்பு அதாவது விடுதலை கிடைக்கிறது. அவையாவன

1. நோவாவின் ஜலப்பிரளயத்தின் நியாயத்தீர்ப்பிலிருந்தும், அழிவிலிருந்தும் நாம் இரட்சிக்கப்பட்டு பாதுகாக்கப்படுகிறோம். (எபி 11:7)

4 அதிகாரம்

2 விரோதிகளிடமிருந்து இரட்சிப்பு (லூக்கா 1:71)

3 பாவங்களிலிருந்து இரட்சிப்பு ரோமர் 10:9,9-10

4 அடிமைத்தனத்திலிருந்து இரட்சிப்பு அப 7:25)

5 ஆரோக்கியம், நோயிலிருந்து இரட்சிப்பு (அப 27:34)

6 சரீரக் குறைபாடுகளிலிருந்து இரட்சிப்பு (அப 4:12=அப 4:10, அப 3:1-12,16

7 பொதுவான இரட்சிப்பு - பலவிதமான இரட்சிப்புகள் (லூக்கா 1:69, யோவான் 4:22; அப 13:26,47, ரோமர் 1:16; ரோமர் 11:11; 2கொரி 1:6, 2கொரி 6:2; 2கொரி 7:10; எபே 1:13 பிலி 2:12; 2தீமோ 3:15; எபி 6:9, யூதா 1:3

8 பாவங்களிலிருந்து இரட்சிப்பு (லூக்கா 1:77, லூக்கா 19:9, ரோமர் 10:10, 2தெச 2:13)

9 மரணம், அப்பங்கள ஆக்கியவற்றிலிருந்து இரட்சிப்பு (ரோமர் 13:11, பிலி 1:19,28 1தெச 5:8-9, 2தீமோ 2:10; எபி 1:14, எபி 2:3,10; எபி 5:9; எபி 9:28 1பேதுரு 1:5,9,10; 2பேதுரு 3:15 வெளி 7:10 வெளி 12:10; வெளி 19:1)

பாவங்கள் மன்னிக்கப்படுவதும் இரட்சிப்பு தான் ஆனால் இரட்சிப்பு என்றால் இதுமட்டுமே என்று நாம் வரையறுக்க முடியாது. மேலே கூறப்பட்டிருக்கும் எல்லாக் காரியங்களிலிருந்தும் இரட்சிக்கப்படுவதும் இரட்சிப்பு என்றே அழைக்கப்படுகிறது. (ரோமர் 1:16)

"நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (மத் 1:21; அப் 2:38, அப் 3:6,16 யோவான் 14:12-15; யோவான் 16:16, யோவான் 16:23-26; மாற்கு 16:17

(5) ஆலோசனைச் சங்கத்தாரின் முடிவு - (அப 5:34-39)

அப 4:13 பேதுருவும் யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு, அவர்கள் படிப்பறியாதவர்களென்றும் பேதைமையுள்ளவர்களென்றும் அறிந்தபடியினால் ஆச்சரியப்பட்டு, அவர்கள் இயேசுவுடனே கூட இருந்தவர்களென்றும் அறிந்துகொண்டார்கள்

அப 4:14 சொஸ்தமாக்கப்பட்ட மனுஷன் அவர்கள் அருகே நிற்கிறதைக் கண்டபடியால், எதிர்பேச அவர்களுக்கு இடமில்லாதிருந்தது

அப 4:15 அப்பொழுது அவர்களை ஆலோசனைச் சங்கத்தைவிட்டு வெளியே போகும்படி கட்டளையிட்டு, தங்களுக்குள்ளே யோசனைபண்ணிக்கொண்டு:

அப 4:16 இந்த மனுஷரை நாம் என்ன செய்யலாம்? எருசலேமில் வாசம்பண்ணுகிற எல்லாருக்கும் தெரிந்திருக்கிறபடி வெளியரங்கமான அற்புதம் இவர்களால் செய்யப்பட்டதே, அதை நாம் இல்லையென்று சொல்லக்கூடாது.

அப் 4:17 ஆகிலும் இது அதிகமாய் ஜனத்துக்குள்ளே பரம்பாதபடிக்கு, இதுமுதல் ஒருவரோடும் இந்த நாமத்தைக் குறித்துப் பேசக்கூடாதென்று அவர்களை உறுதியாய்ப் பயமுறுத்த வேண்டுமென்று சொல்லிக்கொண்டு,

அப 4:18 அவர்களை அழைத்து, இயேசுவின் நாமத்தைக்குறித்து எவ்வளவும் பேசவும் போதிக்கவும் கூடாதென்று அவர்களுக்குக் கட்டளையிட்டார்கள்

4 அதிகாரம்

"பேதுருவும் யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டார்கள்" - இந்த வாக்கியத்தில் "தைரியம்" என்பதற்கான கிரேக்க வார்த்தை "பரேசியா" (parreesia) என்பதாகும்.

தைரியம் (boldness) - παρρησία - parreesia - 3954

பெண்பால பெயர்ச்சொல் - வினையடையாகவும் பயன்படும். தாராளம், வெளிப்படுத்துதல், தெளிவு, வெளிப்படை, தைரியம் (outspokenness)

தைரியம் என்னும் இந்த வார்த்தை புதிய ஏற்பாட்டில் பலவிதமான அர்த்தங்களைத் தருமாறு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அவையாவன

1. தைரியமாகப் பேசுதல் (Boldness of speech) (2கொரி 7:4)
2. தெளிவாகப் பேசுதல் (Plainness of speech) (2கொரி 3:12)
3. தாராளமாகப் பேசுதல் (Freely) அப் 2:29
4. வெளிப்படையாகப் பேசுதல் (Openly) (மாற்கு 8:32; யோவான் 7:4,13; யோவான் 11:54; யோவான் 18:20; கொலோ 2:15)
5. தைரியமாக (Boldly) (யோவான் 7:26; எபே 6:19; எபி 4:16)
6. தைரியம்(Boldness) (அப் 4:13,29,31; எபே 3:12; பிலி 1:20; 1தீமோ 3:13; எபி 10:19; 1யோவான் 4:17)
7. நம்பிக்கை(Confidence)(அப் 28:31; எபி 3:6; எபி 10:35; 1யோவான் 2:28; 1யோவான் 3:21; 1யோவான் 5:14)

"அவர்கள் படிப்பறியாதவர்களென்றும் பேதைமையுள்ளவர்களென்றும் அறிந்த படியினால ஆச்சரியப்பட்டார்கள்" - இவர்களுக்கு யூதமார்க்கத்தில் கல்வியறிவு இல்லை. இவர்களை யாரும் ரபீ என்று அழைக்கமாட்டார்கள். ஆனால் இவர்களிடத்தில் தெய்வீக ஞானம் இருந்தது.

"அவர்கள் இயேசுவுடனேகூட இருந்தவர்களென்றும் அறிந்து கொண்டார்கள்" - இவர்கள் இயேசு கிறிஸ்துவோடு கூட இருந்தவர்கள் என்பதை அங்கு கூடியிருந்த ஜனங்கள் புரிந்து கொள்கிறார்கள்.

"சொஸ்தமாக்கப்பட்ட மனுஷன் அவர்கள் அருகே நிற்கிறதைக் கண்டபடியால் எதிர்பேச அவர்களுக்கு இடமில்லாதிருந்தது" - இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே சுபாணியாக இருந்த மனுஷன் அவர்கள் அருகே எழுந்து நிற்கிறான். இயேசு கிறிஸ்துவின் தெய்வீக வல்லமைக்கு அவன் சாட்சியாக நின்று கொண்டிருக்கிறான். ஆகையினால அங்குகூடியிருந்த ஜனங்களால் சீஷர்களை எதிர்த்துப் பேச முடியவில்லை. வாயடைத்துப்போய் நிற்கிறார்கள்.

"இது அதிகமாய் ஜனத்துக்குள்ளே பரம்பாதபடிக்கு இதுமுதல் ஒருவரோடும் இந்தநாமத்தைக்குறித்துப் பேசக்கூடாதென்று அவர்களை உறுதியாய்ப் பயமுறுத்த வேண்டுமென்று சொல்லிக் கொண்டார்கள்" - இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அற்புதங்களும் அடையாளங்களும் நடைபெறுகிறது. இதை யூதமார்க்கத்து ஜனங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் காரியம் தொடர்ந்து நடைபெற்றால் இவர்கள் யூதமார்க்கத்தை விட்டுவிட்டு இயேசு கிறிஸ்துவின் மார்க்கத்திற்குப் போய் விடுவார்கள். மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவிற்கு தாங்கள் மட்டுமே விரோதியாக இருக்க வேண்டும் என்று யூதமார்க்கத்துத் தலைவர்கள் தங்களுக்குள் தீர்மானம் பண்ணின படியினால், இவ்வாறு கூறுகிறார்கள்.

(6) பேதுரு, யோவான் ஆகியோரின் பதிலுரை - (அப் 5:25-32)

அப் 4:19 பேதுருவும் யோவானும் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: தேவனுக்குச் செவிகொடுக்கிறதைப் பார்க்கிலும் உங்களுக்குச் செவி கொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப்பாருங்கள்.

4 அதிகாரம்

அப் 4:20 நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக் கூடாதே என்றார்கள்

"தேவனுக்குச் செவிகொடுக்கிறதைப் பார்க்கிலும் உங்களுக்குச் செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப்பாருங்கள்" - என்று பேதுருவும் யோவானும் அவர்களுக்குப் பிரதியுத்தரமாகக் கூறுகிறார்கள். அப்போஸ்தலர்கள் பேசும்போது அவர்கள் மூலமாக தெய்வீக ஞானம் வெளிப்படுகிறது. அவர்களுடைய விரோதிகளினால் இவர்களுடைய பேச்சில் இவர்களைச் சிக்க வைக்க முடியவில்லை. (மாற்கு 13:11 லூக்கா 21:15, அப் 6:10)

"நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாதே"

இது எல்லா விசுவாசிகளுக்கும் கூறப்பட்டிருக்கும் அறிவுரை. நாமும் நாம் கண்டவைகளையும், கேட்டவைகளையும் பேசாமலிருக்கவும் முடியாது. பேசாமலிருக்கவும் கூடாது.

(7) யூதர்கள் அப்போஸ்தலர்களை பயமுறுத்தி விட்டுவிடுகிறார்கள் 5:40

அப் 4:21 நடந்த சங்கதிகளைக்குறித்து எல்லாரும் தேவனை மகிமைப்படுத்தின படியால் ஜனங்களுக்குப் பயந்து அவர்களை தண்டிக்க வகையொன்றுங் காணாமல், அவர்களைப் பயமுறுத்தி விட்டுவிட்டார்கள்

அப் 4:22 அற்புதமாய்ச் சொஸ்தமாக்கப்பட்ட மனுஷன் நாற்பது வயதுக்கு மேற்பட்டவனாயிருந்தான்

"நடந்த சங்கதிகளைக்குறித்து எல்லாரும் தேவனை மகிமைப்படுத்தினபடியால், ஜனங்களுக்குப் பயந்து அவர்களைத் தண்டிக்க வகையொன்றுங்காணாமல், அவர்களைப் பயமுறுத்தி விட்டுவிட்டார்கள்" - திரளான ஜனங்கள் தங்களுடைய யூதமார்க்கத்தை விட்டு இயேசுகிறிஸ்துவின் மார்க்கத்தைப் பின்பற்றுகிறார்கள். அவர்கள் எல்லோரும் தேவனை மகிமைப்படுத்துகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் சீஷர்களைத் தண்டித்தால் ஜனங்கள் தங்களுக்கு எதிராகத் திரும்பிவிடுவார்கள் என்று யூதமார்க்கத்துத் தலைவர்கள் பயப்படுகிறார்கள் (அப் 5:14

"அற்புதமாய்ச் சொஸ்தமாக்கப்பட்ட மனுஷன் நாற்பது வயதுக்கு மேற்பட்டவனாயிருந்தான்" - வேதாகமத்தில் நீண்ட நாளாக வியாதியாக இருந்த மனுஷன் இவன்தான். நாற்பது வருஷமாக சப்பாணியாக இருக்கிறான். இயேசு கிறிஸ்து 38 வருஷமாக நடக்க முடியாமல் இருந்த ஒரு திமிர்வாதக்காரனைப் பெதஸ்தா குளத்தண்டையில் சொஸ்தமாக்கினார் (யோவான் 5:5)

12. வல்லமைக்காக விசுவாசிகள் ஒருமனப்பட்டு ஜெபிக்கிறார்கள் - (மாற்கு 16:17-20, லூக் 24:49-52

அப் 4:23 அவர்கள் விடுதலையாக்கப்பட்ட பின்பு, தங்களைச் சேர்ந்தவர்களிடத்தில் வந்து பிரதான ஆசாரியர்களும் மூப்பர்களும் தங்களுக்குச் சொன்ன யாவையும் அறிவித்தார்கள்

அப் 4:24 அவர்கள் அதைக் கேட்டு, ஒருமனப்பட்டு தேவனை நோக்கிச் சத்தமிட்டு: கர்த்தாவே, நீர் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனாயிருக்கிறீர்

அப் 4:25 புறஜாதிகள் கொந்தளித்து ஜனங்கள் விருதா காரியங்களைச் சிந்திப்பானேன் என்றும்,

4 அதிகாரம்

அப் 4:26 கர்த்தருக்கு விரோதமாகவும் அவருடைய கிறிஸ்துவுக்கு விரோதமாகவும் பூமியின் ராஜாக்கள் எழும்பி நின்று அதிகாரிகள் ஏகமாய்க் கூட்டங்கூடினார்கள் என்றும் தேவரீர் உம்முடைய தாசனாகிய தாவீதின் வாக்கினால் உரைத்தீரே

அப் 4:27 அந்தப்படி உம்முடைய கரமும் உம்முடைய ஆலோசனையும் முன்குறித்தவைகள் யாவையும் செய்யும்படி

அப் 4:28 ஏரோதும் பொந்தியுபிலாத்தும், புறஜாதிகளோடும் இஸ்ரவேல ஜனங்களோடுங்கூட நீர் அபிஷேகம் பண்ணின உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவுக்கு விரோதமாய், மெய்யாகவே கூட்டங் கூடினார்கள்

அப் 4:29 இப்பொழுதும், கர்த்தாவே அவர்கள் பயமுறுத்தல்களை தேவரீர் கவனித்து,

அப் 4:30 உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவின் நாமத்தினாலே அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கும்படி செய்து பிணியாளிகளைக் குணமாக்கும்படி உம்முடைய கரத்தை நீட்டி உம்முடைய ஊழியக்காரர் உம்முடைய வசனத்தை முழு தைரியத்தோடும் சொல்லும்படி அவர்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருளும் என்றார்கள்

"அவர்கள் விடுதலையாக்கப்பட்ட பின்பு, தங்களைச் சேர்ந்தவர்களிடத்தில் வந்தார்கள்" பேதுருவையும் யோவானையும் ஆலோசனைச் சங்கத்தார் பிடித்துச் சென்று விசாரித்த போது சபை அவர்களுக்காக ஜெபித்துக் கொண்டிருந்தது. பரிசுத்த ஆவியானவர் அவர்களைப் பாதுகாக்க வேண்டுமென்றும் அவர்களை விடுவிக்க வேண்டுமென்றும் சபையார் ஜெபித்துக் கொண்டிருந்தார்கள்

"ஒருமனப்பட்டு" (one accord) (அப் 1:14)

அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 10

"புறஜாதிகள் கொந்தளித்து, ஜனங்கள் விருதா காரியங்களைச் சிந்திப்பானேன் என்றும்........" (அப் 4:25-28; சங் 2:1-2

இயேசு கிறிஸ்துவிற்கு விரோதமாய் கூட்டம் கூடினவர்கள்

1. புறஜாதி ஜனங்கள் அப் 4:25,27
2. இஸ்ரவேல ஜனங்கள் அப் 4:25,27
3. ராஜாக்கள் – ஏரோது, ராயன் பிலாத்து (அப் 4:27)
4. இஸ்ரவேலின் அதிகாரிகள் (அப் 4:26)

"கர்த்தருக்கு விரோதமாகவும் அவருடைய கிறிஸ்துவுக்கு விரோதமாகவும்" - இந்த வாக்கியத்தில் கர்த்தர் என்பது திரித்துவத்தில் உள்ள ஒரு நபரையும் அவருடைய கிறிஸ்து என்பது திரித்துவத்தில் உள்ள மற்றொரு நபரையும் குறிக்கும்

"அந்தப்படி உம்முடைய கரமும் உம்முடைய ஆலோசனையும் முன்குறித்தவைகள் யாவையும் செய்யும்படி" - இந்த வாக்கியத்தில் "முன்குறித்தவைகள்" என்பதன் கிரேக்க வார்த்தை "ப்ரோரீஜோ" (proorizoo) என்பதாகும். பாவிகளை மன்னிக்க வேண்டுமென்று தேவன் முன்குறித்திருக்கிறார் பாவிகளை இரட்சிப்பதற்காக இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார் (எபி 9:15 எபி 10:4-10; யோவான் 3:16

தேவன் முன்குறித்திருக்கும் காரியங்கள்

1. பாவிகள் இரட்சிக்கப்படுவதற்காக தமது ஒரேபேறான குமாரனைப் பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும் (ரோமர் 5:8)
2. பாவிகள் தங்களுடைய சுயாதீனச் சித்தத்தின் பிரகாரம் தீர்மானம் பண்ணுவதற்கு அனுமதி கொடுக்க வேண்டும். இதனால் தேவனுடைய சித்தத்திற்கு எதிர்த்து நின்றவர்கள் தங்களுடைய தீர்மானத்தின் பிரகாரம் இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்தார்கள் (அப் 2:22-24, அப் 3:13-26; அப் 4:10,26-30, யோவான் 3:16 வெளி 22:17

4 அதிகாரம்

முன்குறித்திரு (determined) - προορίζω - proorizoo - 4309

வினைச்சொல் – முன்குறித்திரு ஏற்படுத்து

"இப்பொழுதும், கர்த்தாவே, அவர்கள் பயமுறுத்தல்களை தேவரீர் கவனித்து ....உம்முடைய ஊழியக்காரர் உம்முடைய வசனத்தை முழு தைரியத்தோடும் சொல்லும்படி அவர்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருளும்" - என்று ஜெபிக்கிறார்கள் பயமுறுத்தல்கள் தங்களுக்கு எதிராக அல்ல தேவனுக்கு எதிராகவே உள்ளது என்று அறிவிக்கிறார்கள் தேவனுடைய வார்த்தையையும், அவருடைய ஆலோசனையையும் அவமாக்க வேண்டுமென்று யூதர்கள் தீர்மானம் பண்ணுகிறார்கள் சீஷர்கள் இயேசு கிறிஸ்துவின் வசனத்தை முழு தைரியத்தோடு சொல்வதற்கும் இயேசுவின் நாமத்தினாலே அற்புதங்களைச் செய்வதற்கும் அவர்களுக்கு அநுக்கிரகம் செய்ய வேண்டுமென்று ஜெபிக்கிறார்கள் (அப் 4:30)

"பிணியாளிகளைக் குணமாக்கும்படி உம்முடைய கரத்தை நீட்டி" அற்புதங்களைச் செய்யும் வல்லமையை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. அப் 4:30 அப் 11:21

13. ஜெபத்திற்கு தேவன் கொடுக்கும் பதில் - (அப் 5:12-16; 15:4,12 19:11 12

அப் 4:31 அவர்கள் ஜெபம்பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு தேவ வசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள்

"அவர்கள் ஜெபம்பண்ணினபோது அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது" - பூமியதிர்ச்சி தேவனுடைய பிரசன்னத்திற்கும் தேவன் ஜெபத்திற்குப் பதில் கொடுத்ததற்கும் அடையாளமாகும்.

தேவன் பூமியதிர்ச்சிகள் மூலமாகத் தம்மை வெளிப்படுத்தியிருந்த நிகழ்ச்சிகள்

1. எலியாவிற்கு (1இராஜா 19:11-12)
2. இஸ்ரவேலுக்கும் எருசலேமிற்கும் (ஏசா 29:6)
3. சிலுவையில் அறையப்பட்டபோது (மத் 27:54)
4. உயிர்த்தெழுந்தபோது (மத் 28:2
5. சீஷர்கள் ஜெபித்தபோது (அப 4:31
6. அப்போஸ்தலர்கள் ஜெபித்தபோது (அப 16:26)

பூமியதிர்ச்சியைக் குறித்த தீர்க்கதரிசனங்கள்

1. ஆறாவது முத்திரையில (வெளி 6:12-17
2. ஏழாவது முத்திரைக்கும் முதலாவது [redacted] தொனிக்கும் நடுவில (வெளி 8:5)
3. இரண்டு சாட்சிகள் உயிர்த்தெழுந்து பரலோகத்திற்கு ஏறிச்சென்ற போது (வெளி 11:13)
4. ஏழாவது எக்காளதொனியில (வெளி 11:19)
5. ஏழாவது கிரியில் (வெளி 16:17 21
6. பல பூமியதிர்ச்சிகள் (மத் 24:7, மாற்கு 13:8; லூக்கா 21:11

4 அதிகாரம்

"அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினால் நிரப்பப்பட்டு, தேவவசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள்" - பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கப்படும் விசுவாசிகள் தேவனுடைய நிறைவை எப்போதும் பெற்றிருப்பதற்காகப் பரிசுத்த ஆவியானவரின் புதிய அருள்மாரியை எப்போதும் பெற்றுக் கொண்டே இருக்க வேண்டும். (அப் 1:4-8; அப் 2:1-11,33,38-39 அப் 4:31; யோவான் 1:16; பிலி 1:19, 2கொரி 1:22; 2கொரி 5:5; எபே 3:19 ,யோவான் 4:13) இயேசு கிறிஸ்துவும் பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப் பல இடங்களில் பெற்றிருக்கிறார் பரிசுத்த ஆவியானவரின் புதிய வரவையும் பெற்றிருக்கிறார் தேவனுடைய நிறைவில வல்லமையில் இயேசு கிறிஸ்து தொடர்ந்து அற்புதங்களையும் அடையாளங்களையும் நடப்பித்தார் நம்முடைய ஜீவியத்திலும் பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரியை நாம் தொடர்ந்து பெற்றுக் கொண்டு இருக்க வேண்டும். அப்போதுதான் நம்முடைய ஜீவியத்தில் ஆவிக்குரிய வல்லமை தங்கியிருக்கும் (லூக்கா 3:21)

14. சபையின் நிலைமை

(அப் 2:42; 5:12-16, 6:1-7)

அப் 4:32 விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள் ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை. சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது.

அப் 4:33 கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சி கொடுத்தார்கள் அவர்களெல்லார் மேலும் பூரணகிருபை உண்டாயிருந்தது.

அப் 4:34 நிலங்களையும் வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டுவந்து,

அப் 4:35 அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தார்கள் அவனவனுக்குத் தேவையான தற்குத்தக்கதாய் பகிர்ந்து கொடுக்கப்பட்டது அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை.

அப் 4:36 சீப்புருதீவானும் லேவியனும் அப்போஸ்தலராலே ஆறுதலின் மகன் என்று அர்த்தங்கொள்ளும் பர்னபா என்னும் மறுபேர்பெற்றவனுமாகிய யோசே என்பவன்

அப் 4:37 தனக்கு உண்டாயிருந்த நிலத்தை விற்று, அதின் கிரயத்தைக் கொண்டு வந்து அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான்

"விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள்" - (அப் 1:14

"ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை" - விசுவாசிகளிடத்தில் சுயநலமில்லை. உண்மையான சகோதர சிநேகம் காணப்பட்டது ஒவ்வொருவரும் பிறனை நேசித்தார்கள் தங்களுடைய சுய விருப்பத்தைப் பூர்த்தி செய்வதற்குப் பதிலாகப் பிறருடைய தேவையைச் சிந்தித்துப் பார்த்தார்கள் (பிலி 2:1-3; மத் 22:39 யோவான் 13:34-35; யோவான் 15:9-13,17 யாக் 2:14-18; 1யோவான் 3:11-18 1யோவான் 4:7-21; 1கொரி 13) புதிய விசுவாசிகள் தங்களுடைய சிந்தையிலும், மனதிலும் அதிகமாக மாறிவிட்டார்கள் தங்களுடைய உடைமைகளைச் சுயநலம் பாராமல் பிறருக்குக் கொடுக்கிறார்கள் (அப் 2:44-45)

"சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது" இந்த வசனத்தையும் அப் 2:44-47 ஆகிய வசனங்களையும் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் தங்களுக்கு ஆதரவாகப் பயன்படுத்துகிறார்கள் இயேசு கிறிஸ்துவின் ராஜ்யம் கம்யூனிஸ்ட் ராஜ்யம் அல்ல. அவர் பரலோக ராஜ்யத்தைப் பற்றியே பேசினார் பரலோக ராஜ்யத்தில் தேவனுடைய பிள்ளைகள் சுயநலமில்லாமல் இருப்பார்கள் பிறருடைய தேவைகளையும் சந்தித்து உதவி புரிவார்கள் (ஏசா 11:1-10; 1கொரி 15:24-28; வெளி 2:27 வெளி 5:10; வெளி 12:5; வெளி 20:1-10, சக 14:1-21; யோவே 3)

அப்போஸ்தலர் - தொகுப்புரை

4 அதிகாரம்

"மிகுந்த பலம்" - ஆதித்திருச்சபையில மிகுந்த பலம் இருந்தது. விசுவாசிகள் இயேசு கிறிஸ்துவைக் குறித்து மிகுந்த பலமாகச் சாட்சி கொடுத்தார்கள். (அப் 1:8)

ஆதித்திருச்சபையில் இருந்த பலம்

1. மிகுந்த பலம் (Great power) அப் 4:33
2. மகா வல்லமை (Mighty power) எபே 1:19
3. பலத்த சத்துவத்தின் வல்லமை (Exceeding great power) (எபே 1:19
4. மகத்துவமுள்ள வல்லமை (Excellent power) (2கொரி 4:7)
5. நித்திய வல்லமை (Eternal power) (ரோமர் 1:20)
6. மகிமையான வல்லமை (Glorious power) (கொலோ 1:11)
7. திவ்விய வல்லமை (Divine power) (2பேதுரு 1:3)

"கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதல்" - ஆசாரியர்கள் தங்களுக்கு எதிராகப் பலவிதமான சட்டங்களை இயற்றினாலும் அப்போஸ்தலர்கள் தங்களுடைய செய்தியை மாற்றிக் கொள்ளவில்லை (அப் 4:17) இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலே அவர்களுடைய பிரசங்கத்தின் மையச் செய்தியாக இருந்தது. இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை நம்பாதவனால் இரட்சிக்கப்பட முடியாது.
(1கொரி 15:1-23)

"அவர்களெல்லார்மேலும் பூரணகிருபை உண்டாயிருந்தது" - அப்போஸ்தலர் நடபடிகளில் நாம் வாசிக்கும் போது ஆதித்திருச்சபையில் காணப்பட்ட தேவனுடைய வல்லமை மகத்துவம், அற்புதம், வெளிப்பாடு, வழிநடத்துதல் போன்ற எல்லாமே மிகுதியாகவும், பூரணமாகவும் இருந்தது. அவ்வாறு இருந்த காரியங்கள்

1. வல்லமை (Power) (அப் 4:33)
2. கிருபை (Grace) (அப் 4:33)
3. பயம் (Fear) (அப் 5:5,11
4. கூட்டம் (Company) (அப் 6:7
5. அற்புதங்கள் (Wonders) (அப் 6:8
6. அதிசயங்கள் (Miracles) (அப் 6:8
7. உபத்திரவம் (Persecution) (அப் 8:1
8. சந்தோஷம் (Joy) (அப் 8:8, அப் 15:3

"அவனவனுக்குத் தேவையானதற்குத் தக்கதாய்ப் பகிர்ந்துகொடுக்கப்பட்டது" - (அப் 2:44-45)

"ஆறுதலின் மகன் என்று அர்த்தங்கொள்ளும் பர்னபா என்னும் மறுபேர்பெற்றவனுமாகிய யோசே" (Joses surnamed Barnabas) சில பதிப்புகளில் இவனுடைய பெயர் யோசேப்பு பர்னபா (Joseph Barnabas) அப் 1:23 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருப்பவன் இவனே இவன் ஆறுதலின் மகன் "Son of Consolation" என்று அழைக்கப்பட்டான் (அப் 13:15) இவன் ஒரு தீர்க்கதரிசியாகவும் அப்போஸ்தலனாகவும் ஆனான் (அப் 13:1, அப் 14:14) பவுலை அப்போஸ்தலரிடம் அழைத்து வந்தவன் இவனே (அப் 9:25-27 பவுலின் உடன் ஊழியன் (அப் 11:30, அப் 12:25; அப் 13:1-15:35) பவுலிடமிருந்து பிரிந்தான் (அப் 15:36-41) சத்தியத்தை விட்டு விலகிப்போனான் (கலா 2 பவுலிடம் ஒப்புரவானான் (1கொரி 9:6)

5 அதிகாரம்

15. ஆதிசபையில் காணப்பட்ட முதலாவது பாவமும் அதன் விளைவுகளும் - (1கொரி 4:18-21; 5:5)

அப 5:1 அனனியா என்னும் பேருள்ள ஒருவனும், அவனுடைய மனைவியாகிய சப்பீராளும் தங்கள் காணியாட்சியை விற்றார்கள்.

அப 5:2 தன் மனைவி அறிய அவன் கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்து வைத்து, ஒருபங்கைக் கொண்டுவந்து அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான்.

அப 5:3 பேதுரு அவனை நோக்கி: அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?

அப 5:4 அதை விற்குமுன்னே அது உன்னுடையதாய் இருக்கவில்லையோ? அதை விற்றபின்பும் அதின் கிரயம் உன் வசத்திலிருக்கவில்லையோ? நீ உன் இருதயத்திலே இப்படிப்பட்ட எண்ணங்கொண்டதென்ன? நீ மனுஷரிடத்தில் அல்ல தேவனிடத்தில் பொய்சொன்னாய் என்றான்.

அப 5:5 அனனியா இந்த வார்த்தைகளைக் கேட்கவே விழுந்து ஜீவனை விட்டான். இவைகளைக் கேள்விப்பட்ட யாவருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று.

அப 5:6 வாலிபர் எழுந்து அவனைச் சேலையில் சுற்றி, வெளியே எடுத்துக்கொண்டுபோய், அடக்கம்பண்ணினார்கள்.

அப 5:7 ஏறக்குறைய மூன்று மணி நேரத்துக்குப் பின்பு, அவனுடைய மனைவி நடந்ததை அறியாமல், உள்ளே வந்தாள்.

அப 5:8 பேதுரு அவளை நோக்கி: நிலத்தை இவ்வளவுக்குத்தானா விற்றீர்கள், எனக்குச் சொல் என்றான். அவள்: ஆம், இவ்வளவுக்குத்தான் என்றாள்.

அப 5:9 பேதுரு அவளை நோக்கி: கர்த்தருடைய ஆவியைச் சோதிக்கிறதற்கு நீங்கள் ஒருமனப்பட்டதென்ன? இதோ, உன் புருஷனை அடக்கம்பண்ணினவர்களுடைய கால்கள் வாசற்படியிலே வந்திருக்கிறது, உன்னையும் வெளியே கொண்டுபோவார்கள் என்றான்.

அப 5:10 உடனே அவள் அவனுடைய பாதத்தில் விழுந்து ஜீவனை விட்டாள். வாலிபர் உள்ளே வந்து, அவள் மரித்துப்போனதைக் கண்டு, அவளை வெளியே எடுத்துக்கொண்டுபோய், அவளுடைய புருஷனண்டையிலே அடக்கம்பண்ணினார்கள்.

அப 5:11 சபையாரெல்லாருக்கும், இவைகளைக் கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும், மிகுந்த பயமுண்டாயிற்று.

"அனனியா என்னும் பேருள்ள ஒருவனும், அவனுடைய மனைவியாகிய சப்பீராளும்" அனனியா என்பதற்கு கிருபை என்றும், சப்பீராள் என்பதற்கு அழகு என்றும் பொருள். ஆனால் அவர்கள் தங்கள் பெயருக்கும் நடத்தைக்கும் சம்மந்தமில்லாமல் இருக்கிறார்கள். இவர்கள் இருவருமே இயேசுவின் சீஷர்கள். அப்போஸ்தல சபையின் அங்கத்தினர்கள். ஆதித்திருச்சபையில் விசுவாசிகளுக்கு உபத்திரவம் அதிகமாக இருந்தது. ஆகையினால் உண்மையான விசுவாசிகள் மட்டுமே திருச்சபையில் இடம் பெற்றிருப்பார்கள். அனனியாவும் சப்பீராளும் இரட்சிக்கப்பட்டவர்கள் (அப 4:31,4:7; அப 5:1,5,17,18,27,42; அப 8:1) மற்ற சீஷர்களோடு இவர்களும் ஒருமனப்பட்டிருந்தார்கள். சபையின் காரியங்களை மற்றவர்களோடு சேர்ந்தே செய்தார்கள் (அப 1:14; அப 2:1,46; அப 24.32,37)

5 அதிகாரம்

"சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?" – அனனியா தன் மனைவி அறிய அவன் கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்துவைத்து ஒருபங்கைக் கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான். இவன் பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லுகிறான். சாத்தான் இவனுடைய இருதயத்தை நிரப்புகிறான். பரிசுத்த ஆவியானவர் நிரம்பியிருந்த இடத்தில் இப்போது சாத்தான் நிரம்பியிருக்கிறான். "நீ மனுஷரிடத்தில் அல்ல தேவனிடத்தில் பொய்சொன்னாய்" அப் 5:4 என்று கூறப்பட்டிருப்பதின் மூலமாகப் பரிசுத்த ஆவியானவர் தேவன் என்று அழைக்கப் படுகிறார். திரித்துவத்தில் பிதாவையும் குமாரனையும் போல பரிசுத்த ஆவியானவர் அங்கம் வகிக்கிறார்.

"நீ உன் இருதயத்திலே இப்படிப்பட்ட எண்ணங் கொண்டதென்ன?" – அனனியாவின் உள்ளத்திலே எமாற்றும் எண்ணம் திடீரென்று வந்துவிடவில்லை. அவன் மிகுந்த கவனத்தோடு திட்டமிட்டுச் செயல்படுகிறான் (யாக் 1:13-15).

"உடனே அவன் அவனுடைய பாதத்தில் விழுந்து ஜீவனை விட்டான்" – பேதுருவிடத்தில் அறிவை உணர்த்தும் வசனமும், ஆவிகளைப் பகுத்தறியும் வரமும் 1கொரி 12:4-11 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் ஆவிக்குரிய இதர வரங்களும் இருந்தன.

16. ஆதித்திருச்சபையின் வல்லமை (மத் 28:18; மாற்கு 16:17-20; 1கொரி 12)

அப் 5:12 அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது. எல்லாரும் ஒருமனப்பட்டுச் சாலொமோனுடைய மண்டபத்தில் இருந்தார்கள்.

அப் 5:13 மற்றவர்களில் ஒருவரும் அவர்களுடனே சேரத் துணியவில்லை. ஆகிலும் ஜனங்கள் அவர்களை மேன்மைப்படுத்தினார்கள்.

அப் 5:14 திரளான புருஷர்களும் ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகிக் கர்த்தரிடமாக அதிகமதிகமாய்ச் சேர்க்கப்பட்டார்கள்.

அப் 5:15 பிணியாளிகளைப் படுக்கைகளின் மேலும் கட்டில்களின் மேலும் கிடத்தி, பேதுரு நடந்துபோகையில் அவனுடைய நிழலாகிலும் அவர்களில் சிலர்மேல் படும்படிக்கு அவர்களை வெளியே வீதிகளில் கொண்டு வந்து வைத்தார்கள்.

அப் 5:16 சுற்றுப் பட்டணங்களிலுமிருந்து திரளான ஜனங்கள் பிணியாளிகளையும் அசுத்த ஆவிகளால் வாதிக்கப் பட்டவர்களையும் எருசலேமுக்குக் கொண்டு வந்தார்கள்; அவர்களெல்லாரும் குணமாக்கப் பட்டார்கள்.

"அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது" – அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் பரிசுத்த ஆவியானவரின் வரங்கள் கிரியை செய்ததை நாம் வாசிக்கிறோம். அவையாவன:

1. பாஷைகள் (Tongues) (அப் 2:4, அப் 10:44-48; அப் 19:1-7)
2. சுகமாதல்கள் (Healings) (அப் 2:43, அப் 3:6; அப் 5:12-16)
3. அற்புதங்கள் (Miracles) (அப் 2:43, அப் 4:22; அப் 5:12-16; அப் 6:8)
4. தீர்க்கதரிசனம் (Prophecy) (அப் 2:17-21, அப் 3:19-1; அப் 13:1)
5. அறிவு (Knowledge) (அப் 2:35-40, அப் 5:3-11; அப் 8:19-25)

அப்போஸ்தலர் – தொகுப்புரை

5 அதிகாரம்

6. ஞானம் (Wisdom) (அப் 3:12-26; அப 4:5-22; அப 6:10)

7. விசுவாசம் (Faith) (அப 2:43; அப 3:6,16; அப 5:12-16)

8. பகுத்தறிதல் (Discernment) (அப 2:35; அப 3:4-6; அப 5:3-11)

புதிய ஏற்பாட்டில் அற்புதமான கிரியைகள்

1. தீர்ப்பு வழங்குதல (Executing judgment) (அப 5:1-12, அப 13:6-12; 1கொரி 4:18-21; 1கொரி 5:4-5)

2. அற்புதமான விடுதலைகள் (Miraculous deliverances) (அப 5:19-28; அப 9:3-9,31; அப 12:1-19)

3. கைகளை வைப்பதினால் பரிசுத்த ஆவியானவரின அபிஷேகம் (Holy Spirit imparted by laying on hands) (அப 8:14-25; அப 9:17-19; அப 19:1-7)

4. ஆவிக்குரிய வரங்களை மற்றவர்களுக்கு அருளப்படுதல (Imparting spiritual gifts to others) (ரோமர் 1:11; 1தீமோ 4:14; 2தீமோ 1:6)

5. விஷங்கள் சரீரத்திற்குத் தீங்கு செய்யாமல் இருப்பது (Immunity from poisons) (மாற்கு 16:17-18; லூக்கா 10:19; அப 28:3-6)

6. மரித்தோரை எழுப்புவது (Raising the dead) (அப 9:40; அப் 20:10)

7. பூமியதிர்ச்சிகள் (Earthquakes) (அப 4:31; அப 16:26)

8. விசேஷித்த அற்புதங்கள் (Special miracles) (அப் 19:11-12)

9. பரிசுத்த ஆவியானவரின் நிறைவு (Fullness of the Spirit manifest) (ரோமர் 15:18-19,29; எபி 2:3-4)

புதிய ஏற்பாட்டில் உள்ள எல்லாப புஸ்தகங்களிலுமே பரிசுத்த ஆவியானவரின் அற்புதமான வல்லமை கிரியை செய்தது குறிப்பிடப்பட்டிருக்கிறது. (மத் 10:1-8; மாற்கு 16:17-20; லூக்கா 10:19; லூக்கா 24:49; யோவான் 14:12; யோவான் 17:18; ரோமர் 1:4; ரோமர் 15:18-19,29; 1கொரி 1:4-7,18-24; 1கொரி 2:1-7,12-13; 1கொரி 4:18-20; 1கொரி 12:1-11,28-31; 1கொரி 13:1-3; 1கொரி 14:1-40; 1கொரி 16:10; 2கொரி 1:20-22; 2கொரி 2:14; 2கொரி 3:6-15; 2கொரி 4:7; 2கொரி 6:3-10; 2கொரி 8:7; 2கொரி 10:4-7; 2கொரி 12:12-18; 2கொரி 13:10; கலா 3; எபே 1:3-19; எபே 3:7-4:13; எபே 6:10-18; கொலோ 1:11; கொலோ 2:10; பிலி 1:7,27; 1தெச 1:3-8; 1தெச 2:13-14; 2தெச 1:3,11; 2தெச 2:17; 2தெச 3:1-9; 1தீமோ 1:16; 2தீமோ 1:7; 2தீமோ 2:4,19-21; 2தீமோ 3:1-5,16-17; தீத்து 2:11-14; தீத்து 3:4-6; எபி 2:1-4; எபி 3:6,12-14; எபி 4:11-16; எபி 6:11-12; எபி 10:19-39; 11:1-12:2; எபி 13:8,21; யாக் 1:5-8; யாக் 2:17-26; யாக் 4:6-10; யாக் 5:14-16; 1பேதுரு 2:12; 1பேதுரு 4:10-11; 1பேதுரு 5:5-10; 2பேதுரு 1:3-10; 1யோவான 2:6,13-27; 1யோவான 3:1-3,20-24; 1யோவான 5:13-14; 2யோவான் 1:2-4; 3யோவான 1:2-4; யூதா 1:3-25; வெளி 1:9; வெளி 19:10)

"சாலொமோனுடைய மண்டபம்" (யோவான் 10:23, அப 3:11)

"பிணியாளிகளைப் படுக்கைகளின் மேலும் கட்டில்களின்மேலும் கிடத்தி, பேதுரு நடந்துபோகையில் அவனுடைய நிழலாகிலும் அவர்களில் சிலர்மேல் படும்படிக்கு, அவர்களை வெளியே வீதிகளில் கொண்டுவந்து வைத்தார்கள்"

5 அதிகாரம்

இந்த அற்புதம் சபையிலுள்ள அங்கத்தினரின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதோடு தொடர்புடையது. தேவனுடைய சமூகத்தில் ஏராளமானோர் ஒருமனப்படும்போது தேவன் மிகப்பெரிய காரியங்களைச் செய்வார். இப்படிப்பட்ட விசுவாசம் ஆதித்திருச்சபையில் காணப்பட்டபடியினால், பேதுரு நடந்து போகையில் அவனுடைய நிழலுக்குக்கூட குணமாக்கும் வல்லமை உண்டு என்று விசுவாசித்தார்கள். அப்போஸ்தலர்கள் எல்லோரையும் குணப்படுத்தினார்கள் (அப் 5:16. மத் 13:58)

"பேதுருவின் நிழல்" - யோவான் 14:12 ஆவது வசனம் நிறைவேறுகிறது. இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள் அவரைப் போலவே கிரியை செய்கிறார்கள். பேதுருவின் நிழலுக்குக் குணப்படுத்தும் வல்லமையில்லை. ஜனங்கள் தேவனிடத்தில் வைக்கும் விசுவாசத்தினால் தேவனே அவர்களைக் குணப்படுத்தினார். ஜனங்களுடைய விசுவாசத்தை இயேசு கிறிஸ்து கனப்படுத்துகிறார். கர்த்தர் தமது வசனங்களை அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் உறுதிபண்ணுகிறார் (மாற்கு 16:17-20, எபி 2:4)

"சுற்றுப்பட்டணங்களிலுமிருந்து திரளான ஜனங்கள் பிணியாளிகளையும் அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையும் எருசலேமுக்குக் கொண்டுவந்தார்கள். அவர்களெல்லாரும் குணமாக்கப்பட்டார்கள்"

பிணியாளிகள் என்பவர்கள் வேறு, அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்கள் என்பவர்கள் வேறு. (மத் 4:24; மத் 10:1; மாற்கு 1:32-34; மாற்கு 16:17-18; லூக்கா 4:40-41; லூக்கா 7:21)

17. இரண்டாவது உபத்திரவம்

(1) **அப்போஸ்தலர்களைக் கைது பண்ணுகிறார்கள்** - (4:1; 5:25; 8:1; 9:1; 12:1)

அப் 5:17 அப்பொழுது பிரதான ஆசாரியனும் அவனுடனேகூட இருந்த சதுசேய சமயத்தாரனைவரும் எழும்பி, பொறாமையினால் நிறைந்து,

அப் 5:18 அப்போஸ்தலர்களைப் பிடித்து, பொதுவான சிறைச்சாலையிலே வைத்தார்கள்.

"சதுசேய சமயத்தாரனைவரும்" - இந்த வாக்கியத்தில் "சமயத்தார்" என்பதன் கிரேக்க வார்த்தை "ஹேரேசிஸ்" (hairesis) என்பதாகும். இந்த வார்த்தை மார்க்க பிரிவு (a sect) என்றும், (அப் 5:17; அப் 15:5; அப் 24:5; அப் 26:5; அப் 28:22) வேதப்புரட்டு, மார்க்கபேதம் (heresy) (அப் 24:14; 1கொரி 11:19; கலா 5:20; 2பேதுரு 2:1) என்றும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. சமயத்தார் என்னும் வார்த்தை துன்மார்க்கமான வார்த்தையல்ல. ஒரு மார்க்கப்பிரிவினரை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. ஆனாலும் இதே வார்த்தையே வேதப்புரட்டிற்கும் ஒரு இடத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (தீத்து 3:10)

சமயத்தார் (sect) - αἵρεσις - hairesis - 139

பெண்பால் பெயர்ச்சொல் - சமயத்தார், மதபேதம், சமயபேதம், மார்க்கபேதம், வேதப்புரட்டு

யூதர்கள் கிறிஸ்தவர்களை ஒரு சமயத்தாராகவே அழைத்தார்கள் (அப் 24:5,14; அப் 28:22). கிறிஸ்தவரும் பரிசேயரையும், சதுசேயரையும், மற்ற பிரிவினரையும் சமயத்தாராகவே அழைத்தார்கள் (அப் 5:17; அப் 15:5; அப் 26:5). சத்தியத்தை விட்டு விலகி இருப்பது எல்லாமே மார்க்கபேதமும், வேதப்புரட்டாகவும் இருக்கும். கலா 5:20; 1கொரி 11:19; 2பேதுரு 2:1)

5 அதிகாரம்

பொறாமை (indignation) - ζῆλος - zeelos - 2205

பால் வேறுபாடற்ற பெயர்சொல அல்லது ஆண்பால் பெயர்ச்சொல் - வைராக்கியம். பொறாமை ஜாக்கிரதை, கோபாக்கினை, வெறுப்பு இந்த கிரேக்க வார்த்தை பரிசுத்த வேதாகமத்தில் பலவிதமான பொருளைத் தருமாறு மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. "zeal" யோவான் 2:17; ரோமர் 10:2 2கொரி 7:11; 2கொரி 9:2; பிலி 3:6 கொலோ 4:13); (fervent mind) 2கொரி 7:7 (emulation) கலா 5:20 (envy) (அப 13:45) (envying) ரோமர் 13:13 1கொரி 3:3 2கொரி 12:20 யாக் 3:14-16 (jealousy) (2கொரி 11:2); (indignation) (அப 5:17 எபி 10:27

(2) அற்புதமாக விடுதலையாகிறார்கள்
(அப 12:3-10)

அப 5:19 கர்த்தருடைய தூதன் இராத்திரியிலே சிறைச்சாலையின் கதவுகளைத் திறந்து அவர்களை வெளியே கொண்டு வந்து.

அப 5:20 நீங்கள் போய் தேவாலயத்திலே நின்று, இந்த ஜீவவார்த்தைகள் எல்லாவற்றையும் ஜனங்களுக்குச் சொல்லுங்கள் என்றான்

"கர்த்தருடைய தூதன் இராத்திரியிலே சிறைச்சாலையின் கதவுகளைத் திறந்து அவர்களை வெளியே கொண்டு வந்தான்" அப்போஸ்தலர்களைப் பிடித்து, பொதுவான சிறைச்சாலையிலே வைத்தார்கள் கர்த்தருடைய தூதன் அவர்களுக்கு உதவி புரிகிறான் கர்த்தருடைய தூதன் இவ்வாறு உதவி புரிவதற்கான காரணங்கள்

1 அப்போஸ்தலர்களை உற்சாகப் படுத்துவதற்காக

2 அவர்கள் தேவனுடைய பராமரிப்பில் இருக்கிறார்கள் என்பதை உறுதி பண்ணுவதற்காக

3 யூதர்கள் தேவனுக்கு எதிராக யுத்தம் பண்ணுகிறார்கள் என்பதை யூதமார்க்கத் தலைவர்களுக்குக் காண்பிப்பதற்காக

4 தேவனை உண்மையாகவே பின்பற்றுகிறவர்களை அவர்கள் துன்புறுத்துகிறார்கள் என்பதை யூதமார்க்கத் தலைவர்களுக்குக் காண்பிப்பதற்காக

5 எல்லா ஜனங்களுக்கும் சுவிசேஷத்தின் இரட்சிப்பின் செய்தியை பரவவிடாமல் அவர்கள் தடுப்பதை யூதமார்க்கத் தலைவர்களுக்குக் காண்பிப்பதற்காக

6 யூதர்களை மறுபடியும் அன்போடு கடிந்து கொள்வதற்காக

7 மனந்திரும்புவதற்கு யூதருக்கு மறுபடியும் ஒரு வாய்ப்பு கொடுப்பதற்காக

"இந்த ஜீவவார்த்தைகள்" (the words of this life) - இயேசு கிறிஸ்துவின் மூலமாகவும் அவருடைய உயிர்த்தெழுதலின் மூலமாகவும் உண்டாயிருக்கும் ஆவிக்குரிய வார்த்தைகளையும் சரீரத்திற்குரிய வார்த்தைகளையும் நித்திய ஜீவனுக்குரிய வார்த்தைகளையும் இந்த வாக்கியம் குறிக்கும். சதுசேயர்கள் உயிர்த்தெழுதலை ஏற்றுக் கொள்ளாதவர்களாகையால் இந்த ஜீவவார்த்தைகளையும் ஏற்றுக் கொள்ளவில்லை

(3) ஆலோசனை சங்கத்தார் அப்போஸ்தலர்கள் தப்பித்ததைக் கண்டுபிடிக்கிறார்கள்

அப 5:21 அவர்கள் அதைக்கேட்டு, அதிகாலமே தேவாலயத்தில் பிரவேசித்துப் போதகம் பண்ணினார்கள். பிரதான ஆசாரியனும் அவனுடனேகூட இருந்தவர்களும் வந்து, ஆலோசனைச் சங்கத்தாரையும் இஸ்ரவேல் புத்திரரின் மூப்பரெல்லாரையும் வரவழைத்து, அப்போஸ்தலர்களைக் கொண்டு வரும்படி சிறைச்சாலைக்குச் சேவகரை அனுப்பினார்கள்

5 அதிகாரம்

அப் 5:22 சேவகர் போய், சிறைச்சாலையிலே அவர்களைக் காணாமல் திரும்பிவந்து:

அப் 5:23 சிறைச்சாலை மிகுந்த பத்திரமாய்ப் பூட்டப்பட்டிருக்கவும், காவற்காரர் வெளியே கதவுகளுக்கு முன் நிற்கவும் கண்டோம்; திறந்தபொழுதோ உள்ளே ஒருவரையும் காணோம் என்று அறிவித்தார்கள்.

அப் 5:24 இந்தச் செய்தியை ஆசாரியனும் தேவாலயத்தைக் காக்கிற சேனைத் தலைவனும் பிரதான ஆசாரியர்களும் கேட்டபொழுது, இதென்னமாய் முடியுமோ என்று, அவர்களைக்குறித்துக் கலக்கமடைந்தார்கள்.

“ஆலோசனைச்சங்கத்தார்” **(council, Sanhedrin)** ஆலோசனைச்சங்கத்தாரும் இஸ்ரவேல் புத்திரரின் மூப்பர் எல்லாரும்

“உள்ளே ஒருவரையும் காணோம்” சிறைச்சாலையிலே எல்லாப் பொருட்களும் வைத்த இடத்தில் அப்படியே இருந்தன ஆனால் சீஷர்களை மட்டும் காணோம்

“இதென்னமாய் முடியுமோ என்று அவர்களைக்குறித்துக் கலக்கமடைந்தார்கள்” இந்தச் செய்தியை ஆசாரியனும் தேவாலயத்தைக் காக்கிற சேனைத்தலைவனும் பிரதான ஆசாரியர்களும் கேட்டபொழுது அவர்களுக்குக் கலக்கம் உண்டாயிற்று. சிறைச்சாலையிலிருந்து கைதுபண்ணி வைக்கப்பட்டிருந்தவர்கள் தப்பிச் சென்றதினால், இனிமேல் வேறு என்னென்ன காரியங்களை அவர்கள் செய்வார்களோ என்று அவர்களைக் குறித்து கலக்கமடைந்தார்கள்

(4) அப்போஸ்தலர்களை மூன்றாம் முறையாக கைது பண்ணுகிறார்கள் - (அப் 4:1-3, 5:17, 8:1, 9:1; 12:1

அப் 5:25 அப்பொழுது ஒருவன் வந்து: இதோ, நீங்கள் காவலில் வைத்த மனுஷர் தேவாலயத்திலே நின்று ஜனங்களுக்குப் போதகம் பண்ணுகிறார்கள் என்று அவர்களுக்கு அறிவித்தான்.

அப் 5:26 உடனே சேனைத்தலைவன் சேவகரோடே கூடப் போய், ஜனங்கள் கல்லெறிவார்களென்று பயந்ததினால் பலவந்தம் பண்ணாமல் அவர்களை அழைத்துக் கொண்டுவந்தான்.

“பலவந்தம்பண்ணாமல் அவர்களை அழைத்துக் கொண்டு வந்தான்” - அவர்களுடைய கைகளுக்கு விலங்கிடாமல் அழைத்து வந்தான்

“ஜனங்கள் கல்லெறிவார்களென்று பயந்தான்” - இவர்கள் அப்போஸ்தலருக்கோ அவர்கள் மூலமாக இரட்சிக்கப்பட்டவர்களுக்கோ பயப்படவில்லை. இரட்சிக்கப்படாத யூதர்கள் நிமித்தமாகவே பயந்தான். இவர்கள் அப்போஸ்தலர்களைச் சுற்றி நின்று கொண்டு, அவர்களுடைய போதகத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பெரிய அற்புதங்களும் அடையாளங்களும் அப்போஸ்தலர் மூலமாக நடைபெறும் என்று எதிர்பார்த்தார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அப்போஸ்தலர்களைக் கைதுபண்ணினால் யூதர்கள் தங்களுக்கு விரோதமாகக் கலகம்பண்ணுவார்கள் என்று சேவகர்கள் பயந்தார்கள்

(5) அப்போஸ்தலர்களிடத்தில் இரண்டாம் முறையாக விசாரணை - (அப் 4:5-22

அப் 5:27 அப்படி அவர்களை அழைத்துக் கொண்டு வந்து, ஆலோசனைச் சங்கத்துக்கு முன்பாக நிறுத்தினார்கள். அப்பொழுது பிரதான ஆசாரியன் அவர்களை நோக்கி:

அப்போஸ்தலர் - தொகுப்புரை

5 அதிகாரம்

அப 5:28 நீங்கள் அந்த நாமத்தைக் குறித்துப் போதகம் பண்ணக் கூடாதென்று நாங்கள் உங்களுக்கு உறுதியாய்க் கட்டளையிடவில்லையா? அப்படியிருந்தும், இதோ, எருசலேமை உங்கள் போதகத்தினாலே நிரப்பி அந்த மனுஷனுடைய இரத்தப்பழியை எங்கள் மேல் சுமத்த வேண்டுமென்றிருக்கிறீர்கள் என்று சொன்னான்

"நீங்கள் அந்த நாமத்தைக்குறித்துப் போதகம்பண்ணக்கூடாது" - இயேசு கிறிஸ்துவின் நாமத்தைக் குறித்து அல்லது அவருடைய அதிகாரத்தினால் பேசக்கூடாது. (மத் 28:19; மாற்கு 16:17-20; அப 2:38; யோவான் 16:23-26)

"எருசலேமை உங்கள் போதகத்தினாலே நிரப்பினீர்கள்" - சீஷர்கள் எருசலேம் முழுவதும் சென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தைக் குறித்து போதகம் பண்ணினார்கள் இதனால் எருசலேம் நகரமே அப்போஸ்தலருடைய போதகத்தினாலே நிறைந்திருந்தது.

எருசலேமை நிரப்பிய போதகங்கள்

1. சிலுவையில் அறையப்படுதல் (Crucifixion) (அப 2:23,36; அப 3:13-15,20; அப 4:10; அப 5:30)
2. இயேசு கிறிஸ்துவின் சரீர உயிர்த்தெழுதல் (Physical resurrection of Jesus) (அப 2:24,27-32; அப 3:15,26; அப் 4:2,10,33; அப 5:30)
3. இயேசு கிறிஸ்து வானத்திற்கு உயரே எடுத்துக் கொள்ளப்படுதல் (Exaltation of Jesus) (அப 2:33-35; அப 3:13, 20-21; அப் 5:31)
4. மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும். (Repentance and remission of sins) (அப் 2:38; அப் 3:19,26; அப 4:12; அப 5:31)
5. இயேசு கிறிஸ்து ஒரே அதிபதியும், ஒரே இரட்சகரும் (Jesus the only Prince and Savior) (அப் 3:15; அப 3:16; அப் 4:10,12; அப 5:31)
6. எல்லோருக்கும் தண்ணீர் ஞானஸ்நானம் (Water baptism for all) (அப 2:38,41)
7. எல்லோருக்கும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் (Spirit baptism for all) (அப் 2:16-21,33,38-39; அப 5:32; யோவான் 1:33; யோவான் 7:37-39)
8. குமாரரும் குமாரத்திகளும் உரைக்கும் தீர்க்கதரிசனங்கள் (Prophetic utterances by sons and daughters) (அப் 2:16-21)
9. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கான அடையாளங்கள் (Signs of the second coming) (அப 2:16-21)
10. கர்த்தருடைய நாள் (Day of the Lord) (அப 2:20; 2தெச 2)
11. எல்லோருக்கும் இரட்சிப்பு (Salvation for all) (அப் 2:21,38; அப 3:19)
12. தேவனால் அங்கீகரிக்கப்பட்ட இயேசு கிறிஸ்து (Jesus approved by God) (அப் 2:22; அப் 10:38)
13. தேவனுடைய முன்னறிவு (Foreknowledge of God) (அப 2:23; அப் 4:28)
14. நரகத்திற்குச் செல்லும் ஆத்துமா (Soul goes to hell) (அப 2:27,31; ஏசா 14:9; லூக்கா 16:19-31; வெளி 20:11-15)

அப்போஸ்தலர் - தொகுப்புரை

5 அதிகாரம்

15. கல்லறைக்குச் செல்லும் சரீரம் **(Body goes to the grave)** (அப் 2:29)

16. இயேசு கிறிஸ்துவின் அழியாத சரீரம் **(Incorruption of Christ's body)** அப் 2:27,31; லூக்கா 24:37-43 யோவான் 21:14

17. இயேசு கிறிஸ்து மாம்சத்தில் தாவீதின் குமாரன் **(Christ David's Son in flesh)** (அப் 2:30)

18. இயேசு கிறிஸ்து தேவனுடைய ஒரேபேறான குமாரன் **(Christ God's only Son)** (அப் 3:13,26)

19. இயேசுகிறிஸ்து தேவனுடைய பரிசுத்தமானவர் **(Christ God's Holy One)** (அப் 3:14)

20. இயேசு கிறிஸ்து தேவனுடைய நீதிபரர் **(Christ God's Just One)** அப் 3:14

21. ஜீவாதிபதியாகிய இயேசு கிறிஸ்து **(Christ the Prince (author) of life)** (அப் 3:15, அப் 5:31)

22. இயேசு கிறிஸ்து தாவீதின் சிங்காசனத்தையும், ராஜ்யத்தையும் திரும்பவும் நிலைநிறுத்துவார் **(Christ to reestablish David's throne and kingdom)** (அப் 2:30; லூக்கா 1:32-33)

23. இயேசு கிறிஸ்து தேவனுடைய சத்துருக்களை விழத்துவார் **(Christ to put down God's enemies)** (அப் 2:35; 1கொரி 15:24-28; எபி 2:9)

24. தேவன் இயேசுவைக் கர்த்தரும், கிறிஸ்துவுமாக்கினார் **(Jesus made both Lord and Christ)** (அப் 2:36; பிலி 2:9-11; எபி 1:3)

25. கர்த்தருடைய பந்தி **(Lord's Supper)** (அப் 2:42, 1கொரி 10:16-17, 1கொரி 11:25-34; லூக்கா 22:15-30)

26. கிறிஸ்தவருடைய அதிகாரம் **(Christian's power of attorney)** (அப் 2:38-39; அப் 3:6,16; அப் 4:10 யோவான் 16:23-26)

27. தாழ்மையுள்ள ஊழியம் **(Humble ministry)**(அப் 3:12; அப் 4:10,29-32

28. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வைக்கும் விசுவாசத்தின் மூலமாக சரீர சுகமாதல் **(Physical healing through faith in Jesus' name)** (அப் 3:6,16; அப் 4:10-12)

29. இரட்சிப்பதற்கு கிறிஸ்துவின் பாடுகள் அவசியமாய் இருக்கிறது **(Sufferings of Christ necessary to redeem)** (அப் 3:18-25, அப் 4:28; அப் 5:30-32

30. இரட்சிக்கப்படுவதற்கு மனந்திரும்புதல் மூலமாக ஏற்படும் மனமாற்றம் அவசியமாய் இருக்கிறது **(Conversion through repentance necessary to be saved)** (அப் 3:19-21, அப் 4:12, அப் 5:31)

31. இளைப்பாறுதலின் காலங்கள் **(Times of refreshing)** (அப் 3:19)

32. இரண்டாம் வருகை **(Second coming)** (அப் 3:20-21; அப் 1:11

33. வீழ்ச்சிக்கு முன்பாக இருந்ததைப் போன்று எல்லாவற்றையும் மறுபடியுமாகப் புதுப்பிப்பது **(Complete restoration of all things as before the fall)** (அப் 3:21

அப்போஸ்தலர் – தொகுப்புரை

5 அதிகாரம்

34. இயேசு கிறிஸ்து ஒரு தீர்க்கதரிசி. எல்லோரும் அவருடைய சத்தத்தைக் கேட்கவேண்டும் இல்லையேல் அழிந்து போவார்கள் **(Jesus a prophet all men must hear or be lost)** (அப் 3:22-23; அப் 4:12)

35. தீர்க்கதரிசிகளுடைய முக்கியமான செய்தி இயேசுகிறிஸ்துவும் அவருடைய பாடுகளுமாகும். **(Jesus and His sufferings the main theme of the prophets)** (அப் 3:18-25

36. இஸ்ரவேலுக்கு முதலாவதாக இரட்சிப்பு கொடுக்கப்பட்டது. **(Israel offered salvation first)** அப் 3:26; யோவான் 1:11, ரோமர் 1:16

37. சாத்தான் உண்மையிலேயே ஒரு நபர் **(Satan a real person)** (அப் 5:3)

38. பரிசுத்த ஆவியானவர் தேவனாக இருக்கிறார் **(Holy Spirit is God)** (அப் 5:3-4

39. தேவதூதர்களின் ஊழியம் **(Ministry of angels)** (அப் 5:19, அப் 8:26

40. மனுஷர் மத்தியிலே தேவனுடைய ஊழியத்தைப் பரிசுத்த ஆவியானவர் நிறைவேற்றுகிறார் **(Holy Spirit the executive of God among men)** (அப் 1:8; அப் 2:33-39, அப் 5:3-4,32; அப் 13:1-4,9; அப் 15:28, அப் 16:6; அப் 20:28)

"அந்த மனுஷனுடைய இரத்தப்பழியை எங்கள் மேல் சுமத்த வேண்டும் என்றிருக்கிறீர்கள் அப்போஸ்தலருடைய பிரசங்கத்தின் மூலமாக இயேசுகிறிஸ்துவைக் கொலை செய்தது யூதமார்க்கத்து தலைவர்களே என்று ஜனங்கள் நினைக்கிறார்கள்

இதனால் தங்களை அவர்கள் கொலைசெய்ய முயற்சி பண்ணுவதாக யூதமார்க்கத்தலைவர்கள் அப்போஸ்தலர்மீது குற்றம் சுமத்துகிறார்கள்

(6) அப்போஸ்தலரின் விவாதம் - (அப் 4:8-12)

அப் 5:29 அதற்குப் பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும், மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது.

அப் 5:30 நீங்கள் மரத்திலே தூக்கிக் கொலை செய்த இயேசுவை நம்முடைய பிதாக்களின் தேவன் எழுப்பி

அப் 5:31 இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக, அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலதுகரத்தினாலே உயர்த்தினார்

அப் 5:32 இந்தச் சங்கதிகளைக் குறித்து நாங்கள் அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறோம் தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்தஆவியும் சாட்சி என்றார்கள்

"மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது" இதற்கு முன்பாக அப் 4:19 ஆவது வசனத்தில் இதே போன்று அப்போஸ்தலர்கள் பதில் கூறியிருக்கிறார்கள்

"நீங்கள் மரத்திலே தூக்கிக் கொலை செய்த இயேசுவை நம்முடைய பிதாக்களின் தேவன் எழுப்பினார்" இரட்சிப்பின் சுவிசேஷத்தை அப்போஸ்தலர்கள் ஜனங்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிறார்கள்

இரட்சிப்பின் சுவிசேஷத்தின் ஆதாரத்துங்கள்

1. கிறிஸ்துவின் மரணம் **(Death of Christ)** (அப் 5:30)

2. கிறிஸ்துவின் சரீர உயிர்த்தெழுதல் **(Physical resurrection of Jesus)** (அப் 5:30; லூக்கா 24:37-43, யோவான் 21:14,

5 அதிகாரம்

3. தமது பாவநிவாரண ஊழியத்தை நிறைவேற்றுவதற்காக கிறிஸ்து உயர்த்தப் படுதல் **(Exaltation of Jesus to make effective His atoning work)** (அப் 5:31 அப் 2:33-35; ரோமர் 4:24-25; ரோமர் 5:10-11; ரோமர் 6:1-14 ரோமர் 8:34; ரோமர் 10:9-10 1கொரி 15:1-23; எபி 1:3)

4. மனந்திரும்புவதும், பாவமன்னிப்பும். **(Repentance and forgiveness of sins)** (மத் 4:17; லூக்கா 13:1-5; லூக்கா 24:47; அப் 2:38; அப் 3:19 யோவான் 3:9; எபே 1:7)

விசுவாசத்தினால் நாம் நீதிமானாக்கப் படுகிறோம் மன்னிக்கப்படுவது இதோடே நின்றுவிடக்கூடாது. பாவத்தின் எல்லா பெலவீனங்களும் அழிக்கப்பட வேண்டும் பாவத்தின் அசுத்தங்கள் எல்லாம் கழுவப்பட வேண்டும். பாவம் செய்ததினால் நமது உள்ளத்தில் காணப்படும் குற்ற உணர்வு மன்னிக்கப்பட வேண்டும்

1கொரி 15:1-8 ஆகிய வசனங்களிலும் இரட்சிப்பின் சுவிசேஷம் விளக்கப்பட்டிருக்கிறது. இவ்விரண்டு வசனப்பகுதிகளும் ஒரே காரியத்தையே குறிப்பிடுகின்றன இவ்விரண்டிலும் நாம் காணும் பொதுவான கருத்து என்னவெனில் 1 மரணம் 2 அடக்கம் பண்ணப்படுதல் 3 சரீர உயிர்த்தெழுதல் 4 கிறிஸ்துவின் கிரியை வெளிப்படுதல் 5 மனந்திரும்புதல் 6 தேவனிடத்தில் விசுவாசம் என்பவையாகும்.

"இந்தச் சங்கதிகளைக்குறித்து" - இயேசு கிறிஸ்துவின் ஜீவியம், அற்புதங்கள் உபதேசங்கள், அவருடைய பாடுகள் (அப் 1:21-22

"நாங்கள் அவருக்குச் சாட்சிகளாய் இருக்கிறோம்" எல்லாப் பிரசங்கிமார்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் பொறுப்பு இதுதான் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்கள் அவருக்குச் சாட்சியாக இருக்க வேண்டும் (லூக்கா 24:48; அப் 1:8,22; அப் 2:32 அப் 3:15; அப் 4:2,19-20,33; அப் 5:20,29,32)

"பரிசுத்தஆவியும் சாட்சி" - தேவனுடைய சத்தியங்களுக்கு அவருடைய அப்போஸ்தலர்கள் சாட்சியாக இருப்பதுபோன்று பரிசுத்த ஆவியானவரும் சாட்சியாக இருக்கிறார் (யோவான் 15:26-27 சுவிசேஷகர்களால் பிரசங்கிக்கப்படும் தேவனுடைய வார்த்தையை அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் பரிசுத்த ஆவியானவர் உறுதிப்படுத்துகிறார் (அப் 2:1-11,33,38-39,43; அப் 3:6-11; அப் 4:29-31; அப் 5:12-20,32; எபி 2:1-4. 1கொரி 12)

"தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்த ஆவி" - தேவனுக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு மட்டுமே பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் கொடுக்கப் படுகிறது ஆதி அப்போஸ்தலரிடம் இருந்ததைப் போன்று பரிசுத்த ஆவியானவர் நம்மிடத்தில் இல்லையென்றால் நாம் தேவனுக்குக் கீழ்ப்படியவில்லை நம்மிடத்தில் அவிசுவாசம் உள்ளது என்றே பொருள் (லூக்கா 24:49, அப் 1:4-8)

(7) விரோதத்தினால் ஏற்பட்ட விளைவு - (அப் 4:13-18)

அப் 5:33 அதை அவர்கள் கேட்டபொழுது மூர்க்கமடைந்து அவர்களைக் கொலை செய்யும்படிக்கு யோசனை பண்ணினார்கள்

"அதை அவர்கள் கேட்டபொழுது மூர்க்கமடைந்தார்கள்" இந்த வாக்கியத்தில் "மூர்க்கமடைதல்" **(cut to the heart)** என்பதன் கிரேக்க வார்த்தை "டையாபிரியோ" **(diaprioo)** என்பதாகும். இந்த வார்த்தை இந்த வசனத்திலும் அப் 7:54 ஆவது வசனத்திலும் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அப் 2:37 ஆவது வசனத்தில் "குத்தப்படுதல்" **(pricked)** என்னும்வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

அப்போஸ்தலர் – தொகுப்புரை

5 அதிகாரம்

இதற்கான கிரேக்க வார்த்தை "கட்டாநிசோமாய" (katanyssomai) என்பதாகும் இருதயத்தில் குத்தப்படுதல் என்பது இதன் பொருள்

மூர்க்கமடை (cut to the heart) - διαπρίω - diaprioo - 1282

வினைச்சொல் - மூர்க்கமடை பழிக்குப்பழி வாங்க வேண்டும் என்று கோபப்படுதல்

குத்தப்படு (pricked) - κατανύσσομαι - katanyssomai - 2660

வினைச்சொல் - குத்தப்படு [illegible] செய்ததற்காக உணர்த்தப்படுதல்

(8) கமாலியேலின் எச்சரிப்பு

அப 5.34 அப்பொழுது சகல ஜனங்களாலும் கனம்பெற்ற நியாய சாஸ்திரியாகிய கமாலியேல் என்னும் பேர்கொண்ட ஒரு பரிசேயன் ஆலோசனைச் சங்கத்தில் எழுந்திருந்து, அப்போஸ்தலரைச் சற்றுநேரம் வெளியே கொண்டு போகச்சொல்லி,

அப 5.35 சங்கத்தாரை நோக்கி: இஸ்ரவேலரே, இந்த மனுஷருக்கு நீங்கள் செய்யப் போகிறதைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்

அப 5.36 ஏனென்றால் இந்நாட்களுக்கு முன்னே தெயுதாஸ் என்பவன் எழும்பி, தன்னை ஒரு பெரியவனாகப் பாராட்டினான் ஏறக்குறைய நானூறுபேர் அவனைச் சேர்ந்தார்கள், அவன் மடிந்துபோனான் அவனை நம்பின அனைவரும் சிதறி, அவமாய்ப் போனார்கள்

அப 5.37 அவனுக்குப்பின்பு, குடிமதிப்பின் நாட்களிலே, கலிலேயனாகிய யூதாஸ் என்பவன் எழும்பி தன்னைப் பின்பற்றும்படி அநேக ஜனங்களை இழுத்தான் அவனும் அழிந்துபோனான்; அவனை நம்பியிருந்த அனைவரும் சிதறடிக்கப் பட்டார்கள்

அப 5.38 இப்பொழுது நான் உங்களுக்குச் சொல்லுகிறதென்னவென்றால் இந்த மனுஷருக்கு ஒன்றுஞ்செய்யாமல் இவர்களை விட்டுவிடுங்கள் இந்த யோசனையும் இந்தக் கிரியையும் மனுஷரால் உண்டாயிருந்ததானால் ஒழிந்துபோம்

அப் 5.39 தேவனால் உண்டாயிருந்ததேயானால் அதை ஒழித்துவிட உங்களால் கூடாது தேவனோடே போர்செய்கிறவர்களாயக் காணப்படாதபடிக்குப் பாருங்கள் என்றான்

"கமாலியேல்" (Gamaliel) - யூதமார்க்கத்தில் மிகவும் முக்கியமான ரபீ ஹில்லேலின் (Hillel) பேரன் இவனுடைய தந்தையின் பெயர் சிமியோன் தன்னுடைய தந்தை மரணமடைந்த போது கமாலியேல் ஆலோசனைச் சங்கத்திற்குத் தலைவனானான் யூதருடைய மார்க்கப் பாரம்பரியத்தின் பிரகாரம் சீனாய் மலையில் தேவன் மோசேக்குக் கொடுத்த பிரமாணங்களைப் பெற்றுக் கொண்டவர்களில் இவன் முப்பத்தைந்தாவது தலைவனாகும். அப்போஸ்தலன் பவுல் கமாலியேலிடம் கல்வி பயின்றவன் (அப 22.3) எருசலேம் பட்டணம் அழிக்கப்படுவதற்கு 18 வருஷங்களுக்கு முன்பாக கமாலியேல் மரித்தான் கிபி 70-ஆம் ஆண்டில் எருசலேம் பட்டணம் அழிக்கப்பட்ட போது, கமாலியேலின் மகன் சிமியோன் எருசலேமின் இடிபாடுகளில் சிக்கி மரணமடைந்தான் யூதமார்க்கத்துப் பாரம்பரியங்களை மிகவும் கண்டிப்புடன் பின்பற்றுபவன் என்று கமாலியேல் பெயர்பெற்றிருந்தான் ஆயினும் அப 5.34-39 ஆகிய வசனங்களில் தன்னுடைய கருத்தை மிகவும் தெளிவாகவும், வெளிப்படையாகவும் கூறினான்

5 அதிகாரம்

"தெயுதாஸ்" (Theudas) - இவன் யார் என்பது சரியாகத் தெரியவில்லை. யோசபஸ் (Josephus) தன்னுடைய திருச்சபை வரலாற்று ஆசிரியர் தெயுதாசைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். அவன் அப்போஸ்தலர் நடபடிகள் புஸ்தகத்தில் இவனைப் பற்றி எழுதப்பட்டிருக்கும் இந்த வரலாற்றிற்கு பத்து வருஷங்கள் பின்பு வந்தவன்.

"கலிலேயனாகிய யூதாஸ்" (Judas of Galilee) - யோசபஸ் (Josephus) தன்னுடைய திருச்சபை வரலாற்று நூலில் யூதாசைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். வரிகொடுப்பது சம்மந்தமாக இவன் கலகம் பண்ணினான். இந்த வசனத்தில் குறிப்பிட்டிருக்கிற பிரகாரமாக யூதாஸ் அழிந்து போனான்.

"இந்த யோசனையும் இந்தக் கிரியையும் மனுஷரால் உண்டாயிருந்ததானால் ஒழிந்துபோம்" - கமாலியேலின் கருத்து சரியாக இல்லை. ஏனென்றால் இந்த உலகத்தில் ஏராளமான கள்ளமார்க்கங்களும் கள்ள உபதேசங்களும் தோன்றின. அவை அழிந்து போகாமல் இன்றும் வளர்ந்துகொண்டே வருகின்றன.

போர் செய்கிற (fight) - θεομάχος - theomachos - 2314

பொருட - போர் செய்கிற (to strive)

தேவன் (God) - θεός - theos - 2316

ஆண்பால் பெயர்சொல் அல்லது பெண்பால் பெயர்ச்சொல் - தேவன், தெய்வம், திவ்வியம்

சண்டைபண்ணு (strive) - μάχομαι - machomai - 3164

வினைச்சொல் - வாக்குவாதம் பண்ணு, சண்டைபண்ணு

தேவனோடு போர்செய்தவர்கள்

1. லூசிபர் (ஏசா 14:12-14; லூக்கா 10:18)
2. தூதர்கள் (2பேதுரு 2:4; யூதா 1:6-7)
3. நிம்ரோத்தும், அவனுடைய சந்ததியும் (ஆதி 11:1-9)
4. பார்வோன் (யாத் 5:1-14:31; ரோமர் 9:15-24)
5. ஆமான் (எஸ் 3:1-7:10)
6. இஸ்ரவேலின் அதிகாரிகள் (அப் 4:1-8:1)
7. அந்திக்கிறிஸ்து (வெளி 13:1-18; வெளி 19:19-21)

(9) அப்போஸ்தலர்களை அடித்து இனிமேல் இயேசுவின் நாமத்தைக் குறித்து பேசக் கூடாது என்று கட்டளையிடுகிறார்கள்

அப் 5:40 அப்பொழுது அவர்கள் அவனுடைய யோசனைக்கு உடன்பட்டு, அப்போஸ்தலரை வரவழைத்து அடித்து, இயேசுவின் நாமத்தைக் குறித்துப் பேசக்கூடாதென்று கட்டளையிட்டு, அவர்களை விடுதலையாக்கினார்கள்.

"அப்போஸ்தலரை வரவழைத்து அடித்தார்கள்" - வரலாற்றில் தேவனுடைய பிள்ளைகளுக்கு இதைப் போன்று பல இடங்களில் தண்டனை கொடுக்கப் பட்டிருக்கிறது.

தேவனுடைய ஜனங்கள் அடிக்கப் பட்டிருப்பதற்குச் சான்றுகள்

1. பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் (எபி 11:36)
2. இயேசுகிறிஸ்து (மத் 27:26; யோவான் 19:1)
3. பன்னிரெண்டு அப்போஸ்தலர்கள் (அப் 5:40)

5 அதிகாரம்

4. ஏராளமான கிறிஸ்தவர்கள் அப் 22:19.

5. பவுலும், சீலாவும் (அப் 16:22-24,37)

6. பவுல் (அப் 21:32; 2கொரி 11:25)

"இயேசுவின் நாமத்தைக்குறித்துப் பேசக்கூடாதென்று கட்டளையிட்டு, அவர்களை விடுதலையாக்கினார்கள்" - இயேசுகிறிஸ்துவின் நாமத்தைக் குறித்து அப்போஸ்தலர்கள் பிரசங்கம் பண்ணக்கூடாது என்று இரண்டாம் முறையாக கட்டளையிடப்படுகிறார்கள் (அப் 4:17-18, அப் 5:28

(10) அப்போஸ்தலரிடத்தில் காணப்பட்ட விசுவாசம்

அப் 5:41 அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால் சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய்

"அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப் பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போனார்கள்" - மத் 5:12; லூக்கா 6:23 ஆகிய வசனங்களின் நிறைவேற்றம். (1பேதுரு 4:13; பிலி 3:1; கொலோ 1:24

18. எதிர்ப்புகளின் மத்தியிலும் அப்போஸ்தலர்கள் தொடர்ந்து தேவனுடைய ஊழியத்தைச் செய்கிறார்கள்

அப் 5:42 தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவை கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்

"தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி இயேசுவை கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்" - ஒவ்வொரு விசுவாசியும் தினந்தோறும் செய்ய வேண்டிய கடமை

விசுவாசிகளின் அன்றாட கடமைகள்

1 ஜெபம் பண்ண வேண்டும். (மத் 6:11; லூக்கா 11:3

2 அனுதினமும் தங்களுடைய சிலுவையை எடுத்துக் கொள்ள வேண்டும் (லூக்கா 9:23

3 ஒருமனதுடன் இருக்க வேண்டும் (அப் 2:46)

4 உபதேசம் பண்ண வேண்டும் (மத் 26:55; லூக்கா 19:47

5 ஆத்துமாக்களை ஆதாயம் பண்ண வேண்டும். (அப் 2:47; அப் 16:5

6 இயேசு கிறிஸ்துவைக் குறித்து பிரசங்கம் பண்ண வேண்டும் (அப் 5:42)

7 வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும். (அப் 17:11

8 வேதவாக்கியங்களைச் சம்பாஷித்துக் கொண்டு வரவேண்டும். (அப் 19:9

9 பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். (2கொரி 11:28

10 ஒருவருக்கொருவர் புத்தி கூற வேண்டும். (எபி 3:13

6 அதிகாரம்

19. சபையில் முதலாவது பிரச்சனை

அப் 6:1 அந்நாட்களிலே, சீஷர்கள் பெருகின போது, கிரேக்கரானவர்கள் தங்கள் விதவைகள் அன்றாடக விசாரணையில் திட்டமாய் விசாரிக்கப் படவில்லையென்று, எபிரெயருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள்

"எபிரெயருக்கு விரோதமாய முறுமுறுத்தார்கள்" - அந்நாட்களிலே சீஷர்கள் பெருகினார்கள் கிரேக்கரானவர்கள் தங்கள் விதவைகள் அன்றாடக விசாரணையில் திட்டமாய் விசாரிக்கப்படவில்லை என்று நினைத்தார்கள் இதனால் அவர்கள் எபிரெயருக்குவிரோதமாய முறுமுறுத்தார்கள் "முறுமுறுத்தல" (murmuring) என்பதன் கிரேக்க வார்த்தை "கோங்குஸ்மோஸ்" (gongysmos) எனபதாகும். இது திருச்சபையில ஏற்பட்ட முதலாவது முறுமுறுப்பு இநத வாாத்தையை வேதாகமத்தில் ஒருசில வசனஙகளில மட்டுமே நாம் வாசிக்கிறோம. (யோவான் 7:12; அப 6:1 பிலி 2:14 பேதுரு 4:9) சீஷாகள் தஙகளுககுரியதைப பொதுவாக அனுபவிதது வநதாாகள ஆனால அநதப பழககததை சிறிது காலம சென்றபின்பு நிறுத்தி விட்டாாகள இதனால இநதப பிரசசனை திருசசபையில வநதது. திருசசபையால் எலலோரையும பராமரிப்பது என்பது சிரமமான காரியமாக இருககும் சுவிசேஷச் செயதியைப பிரசஙகம் பணணும் ஊழியக்காராகளால் இநத விஷயத்தில அதிகக் கவனம் செலுத்த முடியாது.

முறுமுறுப்பு (murmuring) - γογγυσμός - gongysmos - 1112

ஆணபால் பெயச்சொல முறுமுறுப்பு

"கிரேக்கரானவாகள்" (Grecians) - கிரேக்க மொழி பேசும் யூதாகள சிதறிப்போனவாகள் இப்போது எருசலேமில் தஙகியிருக்கிறாாகள் பலகாலமாக கிரேக்க மொழி பேசும் தேசத்தில இவாகள இருந்ததினால இவாகள கிரேக்க மொழியைப பேசுகிறாாகள்

"எபிரெயர்" (Hebrews) - எருசலேமில் வசிக்கும் எபிரெய மொழி பேசும் யூதர்கள் (அப 21:40; அப 22:2)

"அன்றாடக விசாரணை" (daily ministration) - அப் 2:44-45 ஆகிய வசனஙகளில கூறப்பட்டிருக்கும் விசாரிப்பின் ஊழியஙகள்

20. பிரச்சனை தீர்க்கப் படுகிறது - (1தீமோ 3:8)

அப் 6:2 அப்பொழுது பன்னிருவரும் சீஷர் கூட்டத்தை வரவழைத்து, நாஙகள் தேவவசனத்தைப போதியாமல பந்திவிசாரணைசெயவது தகுதியலல.

அப 6:3 ஆதலால் சகோதரரே பரிசுத்த ஆவியும ஞானமும நிறைந்து நறசாட்சி பெறறிருக்கிற எழுபேரை உங்களில தெரிந்து கொள்ளுஙகள் அவர்களை இநத வேலைக்காக ஏற்படுத்துவோம

"நாஙகள தேவவசனத்தைப போதியாமல பந்திவிசாரணைசெயவது தகுதியலல" - பநதி விசாரணை செயவதறகு (serve tables) விதவைகள காணிக்கைகளைக் கொடுககிறாாகள இநதக் காணிக்கைகளைக் கொணடு ஜனஙகளுககு அனறாடக விசாரணை செயய வேணடும். அபபோஸதலாகள சுவிசேஷச செயதியைப பிரசஙகம பணணுவதில அதிகக் கவனம் செலுதத வேணடியவாகள அநத ஊழியததை நிறுததிவிட்டு, தஙகளுடைய நேரததைப பந்தி விசாரணை செயவதறகுச் செலவு செயவது தஙகளுக்குத் தகுதியானதலல என்று கூறுகிறாாகள

"ஆதலால் சகோதரரே, பரிசுத்தஆவியும் ஞானமும் நிறைநது நறசாட்சி பெற்றிருக்கிற எழுபேரை உஙகளில தெரிந்து கொளளுஙகள அவாகளை இநத வேலைககாக ஏறபடுத்துவோம்" அபபோஸ்தலாகள ஜெபமபணணுவதிலும் தேவவசனததைப போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல தரித்திருக்க விருமபுகிறாாகள் ஆகையினால் பந்திவிசாரணை செயவதற்கு பரிசுத்தஆவியும் ஞானமும் நிறைந்து, நறசாட்சி பெற்றிருக்கிற எழுபேரை அவாகளில தெரிந்து கொளளுமாறு கூறுகிறார்கள் அவாகளைப பந்திவிசாரணை செயயும் வேலைக்காக நியமிக்கலாம என்பது அபபோஸ்தலரின் கருத்து (அப் 6:3-4

6 அதிகாரம்

பந்திவிசாரணை செய்பவர்களின் தகுதிகள்

1 நற்சாட்சி பெற்றிருக்க வேண்டும். அப 6:3

2 பரிசுத்த ஆவியினால் நிறைந்திருக்க வேண்டும். (அப 6:3,5)

3 ஞானத்தால் நிறைந்திருக்க வேண்டும் அப 6:3

4 விசுவாசத்தால் நிறைந்திருக்க வேண்டும். (அப 6:5,8)

5 வல்லமையினால் நிறைந்திருக்க வேண்டும். அப 6:8

இந்தத் தகுதிகளையும் 1தீமோ 3:8-13 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் தகுதிகளையும் நாம் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

21. போதிக்கிறவர்களின் கடமைகள் அப 20:28, 2கொரி 5:14-18; 6:1-10 எபே 4:11-13, 1தீமோ 3, தீத்து 1)

அப 6:4 நாங்களோ ஜெபம் பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம் என்றார்கள்

"தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியம்" மூன்று கிரேக்க வார்த்தைகளினால் இந்த வார்த்தை சொல்லப்பட்டு கூறப்படுகிறது. அவையாவன. "டையாகோனியா - ஹோ - லோகோஸ்" (diakonia - ho - logos). வார்த்தையின் ஊழியம் என்பது இதன் பொருள் சபையில் இரண்டு விதமான ஊழியங்களை ஏற்படுத்துகிறார்கள் ஒன்று பந்தி விசாரணை செய்யும் ஊழியம். மற்றொன்று தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியம் ஒவ்வொரு ஜெபாலயத்திலும் குறைந்த பட்சம் மூன்று மூப்பர்கள் இருப்பார்கள் இவர்கள் சபையின் ஆவிக்குரிய காரியங்களையும் சரீரப் பிரகாரமான காரியங்களையும் விசாரிப்பார்கள் (மத் 20:26)

ஊழியம் (ministry) - διακονία - diakonia - 1248

வேலைகளைச் செய்தல், ஊழியம் உதவி, விசாரணை, தர்மசகாயம் - பெண்பால் பெயர்ச்சொல்

'ο - ho - 3588

கிரேக்க மொழியில் சிறப்புச்சுட்டு - குறிப்பிட்ட நபர்களையோ அல்லது பொருட்களையோ குறிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படுகிறது வலியுறுத்தும் இலக்கணக்கூறாகவும் பயன்படுத்தப் படுகிறது

வார்த்தை (Word) - λόγος - logos - 3056

ஆண்பால் பெயர்சொல் - சொல் சொல்லுதல் வார்த்தை, கணக்கு காரியம் புத்தி. ஞானம். வசனம். சங்கதி. பேச்சு உபதேசம். கீர்த்தி. யோசனை வாக்கியம்

22. மூப்பர்களைத் தெரிந்தெடுத்து அவர்களை அபிஷேகித்தார்கள் - 13:1-5; 1தீமோ 4:14, 2தீமோ 1:6 எபி 6:2)

அப 6:5 இந்த யோசனை சபையாரெல்லாருக்கும் பிரியமாயிருந்தது. அப்பொழுது விசுவாசமும் பரிசுத்த ஆவியும் நிறைந்தவனாகிய ஸ்தேவானையும் பிலிப்பையும் பிரொகோரையும், நிகானோரையும். தீமோனையும் பர்மெனாவையும் யூதமார்க்கத் தமைந்தவனான அந்தியோகியா பட்டணத்தானாகிய நிகொலாவையும் தெரிந்துகொண்டு.

அப 6:6 அவர்களை அப்போஸ்தலருக்கு முன்பாக நிறுத்தினார்கள் இவர்கள் ஜெபம்பண்ணி அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள்

6 அதிகாரம்

"விசுவாசமும் பரிசுத்த ஆவியும் நிறைந்தவனாகிய ஸ்தேவானையும் பிலிப்பையும், பிரொகோரையும், நிக்கானோரையும், தீமோனையும், பர்மெனாவையும், யூதமார்க்கத் தமைந்தவனான அந்தியோகியா பட்டணத்தானாகிய நிக்கொலாவையும் தெரிந்து கொண்டார்கள்" - திருச்சபை ஏழு பேரைப் பந்தி விசாரிப்பு ஊழியத்திற்காகத் தெரிந்தெடுத்தார்கள். அவர்களை அப்போஸ்தலருக்கு முன்பாக நிறுத்தினார்கள். இவர்கள் ஜெபம்பண்ணி அவர்கள்மேல் கைகளை வைத்து பந்திவிசாரிப்பு ஊழியத்திற்காக வேறுபிரித்து அவர்களைப் பிரதிஷ்டை பண்ணினார்கள் (அப 6:3,5-6) ஸ்தேவான் (அப 6:5-8:2; அப 22:20) பிலிப்பு (அப 6:5; அப 8:1-40; அப 21:8)

"யூத மார்க்கத்தமைந்தவனான அந்தியோகியா" (proselyte of Antioch) - மத் 23:15

"அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள்" - பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்வதற்காக அப்போஸ்தலர்கள் இவர்கள்மீது கைகளை வைக்கவில்லை. அவர்கள் ஏற்கெனவே பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் பெற்றவர்கள். விசுவாசத்திலும், வல்லமையிலும் ஞானத்திலும் நிறைந்தவர்கள். மோசே யோசுவாவைப் பிரதிஷ்டை பண்ணியது போன்று, (எண் 27:18-23) அப்போஸ்தலர்கள் இந்த ஏழு பேரையும் பந்தி விசாரிப்பு ஊழியத்திற்காகப் பிரதிஷ்டை பண்ணுகிறார்கள்.

23. சபையின் வேகமான வளர்ச்சி
(அப 2:41; 4:4, 5:14)

> அப 6:7 தேவவசனம் விருத்தியடைந்தது; சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று; ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தார்கள்.

"ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தார்கள்" ஆதித்திருச்சபையில் நடைபெற்ற மிகப்பெரிய அற்புதம். இதுவரையிலும் ஆசாரியர்கள் இயேசுகிறிஸ்துவிற்கும், அவருடைய சுவிசேஷ ஊழியத்திற்கும் எதிர்த்து நின்றவர்கள். இப்போது இயேசு கிறிஸ்துவை ஆசாரியரும் விசுவாசிக்கிறார்கள். தேவவசனம் விருத்தியடைந்தது. சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று. மகாபெரிய எழுப்புதல் உண்டாயிற்று. இயேசுவிற்குச் சத்துருக்களாக இருந்தவர்கள் எல்லாம் இப்போது இயேசு கிறிஸ்துவைத் தங்களுடைய இரட்சகராக ஏற்றுக் கொண்டு, அவருக்குக் கீழ்படிகிறார்கள்.

24. ஆவியின் வல்லமை - (வசனம் 3-5; மாற்கு 16:17; 14:12-15)

> அப் 6:8 ஸ்தேவான் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான்.

"ஸ்தேவான் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான்" - வாக்குத்தத்தங்களும் அடையாளங்களும் எல்லா விசுவாசிகளுக்கும் உரியவை. அப்போஸ்தலர்கள் மூலமாக மட்டுமே அற்புதங்களும் அடையாளங்களும் நடைபெறும் என்று வரையறுக்கப்படவில்லை என்பதற்கு இந்த வசனம் சாட்சியாயிருக்கிறது. (மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; மாற்கு 16:15-20; லூக்கா 24:49; யோவான் 14:12-15; யோவான் 15:7,16; யோவான் 16:23-26; அப் 1:4-8; அப் 2:38-39; அப் 5:32; 1கொரி 12:4-11) பன்னிரெண்டு அப்போஸ்தலரோடு சேர்ந்து இந்த ஏழு பேரும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஊழியம் செய்கிறார்கள். பரிசுத்த ஆவியானவர் இவர்கள் மூலமாகவும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடைபெறச் செய்கிறார். அப் 2:38-39 ஆகிய வசனங்களில் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறார். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் பெற்ற யாரும் தேவனுடைய வல்லமையினால் அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பிக்க முடியும்.

6 அதிகாரம்

25. மூன்றாவது உபத்திரவம்

(1) ஸ்தேவானின் வல்லமையும் ஞானமும் - (4:31; 5:17,25; 8:1; 9:1; 12:1)

அப 6:9 அப்பொழுது லிபர்த்தினர் என்னப்பட்டவர்களின் ஆலயத்தைச் சேர்ந்தவர்களிலும், சிரேனே பட்டணத்தாரிலும், அலெக்சந்திரியா பட்டணத்தாரிலும், சிலிசியா நாட்டாரிலும், ஆசியா தேசத்தாரிலும் சிலர் எழும்பி, ஸ்தேவானுடனே தர்க்கம்பண்ணினார்கள்.

அப 6:10 அவன் பேசின ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்துநிற்க அவர்களால் கூடாமற்போயிற்று.

அப 6:11 அப்பொழுது அவர்கள்: மோசேக்கும் தேவனுக்கும் விரோதமாக இவன் தூஷண வார்த்தைகளைப் பேசக் கேட்டோம் என்று சொல்லும்படியாக மனுஷரை ஏற்படுத்தி,

"அப்பொழுது லிபர்த்தினர் என்னப்பட்டவர்களின் ஆலயத்தைச்சேர்ந்தவர்களிலும் சிரேனே பட்டணத்தாரிலும் அலெக்சந்திரியா பட்டணத்தாரிலும், சிலிசியா நாட்டாரிலும் ஆசியா தேசத்தாரிலும் சிலர் எழும்பி ஸ்தேவானுடனே தர்க்கம்பண்ணினார்கள்" கி.பி. 20-ஆம் ஆண்டில் திபேரியு ராயன் (Tiberius) ரோமாபுரியிலுள்ள எல்லா யூதர்களையும்வெளியேற்றினான் இவர்களில் அடிமைகள் ஏராளமானோர் இருந்தனர் லிபர்த்தினர் (Libertines) என்பவர்கள் இவ்வாறு விடுவிக்கப்பட்ட அடிமைகளாக இருக்கலாம் ஆப்பிரிக்காவில் உள்ள லிபர்த்தினா (Libertina) பகுதியில் வசித்த ஜனங்கள் எருசலேமில் வந்து குடியிருந்தார்கள் லிபர்த்தினர் என்பது இந்த ஜனங்களையும் குறிக்கலாம். வடக்கு ஆப்பிரிக்காவிலுள்ள சிரேனே பட்டணம் அலெக்சந்திரியா பட்டணம் ஆகியவற்றிலிருந்து எருசலேமிற்கு வந்த யூதர்களைப் பற்றியும் இந்த வசனம் குறிப்பிடுகிறது. ஆப்பிரிக்காவிலிருந்து வந்த இந்த யூதர்களுக்குத் தனியாக ஜெபாலயங்கள் இருந்தன. இந்த யூதர்களும், சிலுசியா நாட்டு யூதர்களும் சேர்ந்து, ஸ்தேவானோடு தர்க்கம் பண்ணுகிறார்கள். சிலுசியா என்பது ஆசியாவிலுள்ள பகுதியின் மாகாணமாகும். இவர்களால் ஸ்தேவானுக்கு எதிர்த்து நிற்க முடியவில்லை. அவன் பரிசுத்த ஆவியானவரின் ஞானத்தினால் நிறைந்திருந்தான்.

"அவன் பேசின ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்துநிற்க அவர்களால் கூடாமற்போயிற்று" - ஸ்தேவான் ஒரு அப்போஸ்தலனல்ல. பரிசுத்த ஆவியானவருடைய வல்லமை அப்போஸ்தலனுக்கு மட்டுமே கிடைக்கும் என்று வரையறுக்கப்படவில்லை என்பதற்கு ஸ்தேவானின் ஞானமும் ஒரு சாட்சியாகும் (லூக்கா 21:15). அப்போஸ்தலர்கள் பெற்றுக் கொண்ட அதே தெய்வீக வல்லமையை எல்லா விசுவாசிகளும் பெற்றுக் கொள்ள முடியும். (யோவான் 14:12; மாற்கு 9:23; மாற்கு 16:17-18; 1கொரி 12:4-11)

"மனுஷரை ஏற்படுத்தினார்கள்" - இந்த வாக்கியத்தில் ஏற்படுத்துதல் என்பது தவறான குற்றச்சாட்டுகளைக் கூறுவதற்கு மனுஷரை நியமித்தல், பணம்கொடுத்து பொய்சாட்சிகளை நியமித்தல் என்று பொருள்படும்.

ஏற்படுத்து (suborned) - ὑποβάλλω - hypoballoo - 5260

வினைச்சொல் - ஏற்படுத்து

தூஷணம் (blasphemous) - βλάσφημος - blaspheemos - 989

பெயரடை - தூஷணம், தூஷிக்கிற (அப் 6:11, 13; 1தீமோ 1:13; 2தீமோ 3:2; 2பேதுரு 2:11)

(2) ஸ்தேவான்மீது ஆலோசனை சங்கத்திற்கு முன்பாக விசாரணை

அப 6:12 ஜனங்களையும் மூப்பரையும் வேதபாரகரையும் எழுப்பிவிட்டு, அவன்மேல் பாய்ந்து, அவனைப்பிடித்து ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாக இழுத்துக் கொண்டுபோய்,

6 அதிகாரம்

அப் 6:13 பொய்ச்சாட்சிகளையும் நிறுத்தினார்கள் இவர்கள் இந்த மனுஷன் இந்தப் பரிசுத்த ஸ்தலத்துக்கும் வேதப் பிரமாணத்துக்கும் விரோதமாகத் தூஷண வார்த்தைகளை ஓயாமற் பேசுகிறான்

அப் 6:14 எப்படியென்றால் நசரேயனாகிய அந்த இயேசு இந்த ஸ்தலத்தை அழித்துப் போட்டு மோசே நமக்குக் கொடுத்த முறைமைகளை மாற்றுவானென்று இவன் சொல்லக் கேட்டோம் என்றார்கள்

அப் 6:15 ஆலோசனைச் சங்கத்தில் உட்கார்ந்திருந்த அனைவரும் அவன்மேல் கண்ணோக்கமாயிருந்து அவன் முகம் தேவதூதன் முகம்போலிருக்கக் கண்டார்கள்

"ஜனங்களையும் மூப்பரையும் வேதபாரகரையும் எழுப்பிவிட்டார்கள்" ஸ்தேவானுக்கு எதிராகப் பொய்சாட்சிகளை ஏற்படுத்தினார்கள் மூப்பருடைய அனுமதியைப் பெற்று ஸ்தேவானை ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாகப் பலவந்தமாகக் கொண்டு வந்து நிறுத்துகிறார்கள் தங்களுடைய எண்ணம் நிறைவேறுவதற்காக ஸ்தேவானுக்கு எதிராக ஜனங்களைத் தூண்டி விடுகிறார்கள்

"இந்த மனுஷன் இந்தப் பரிசுத்த ஸ்தலத்துக்கும் வேதப்பிரமாணத்துக்கும் விரோதமாகத் தூஷண வார்த்தைகளை ஓயாமற் பேசுகிறான்" ஸ்தேவானுக்கு எதிராக பொய்ச்சாட்சிகளை நிறுத்தி. அவர்கள் மூலமாக ஸ்தேவானைக் குற்றம் சுமத்துகிறார்கள் ஸ்தேவான் தேவதூஷணம் கூறினான் என்பது அவர்களுடைய குற்றச்சாட்டு

ஸ்தேவான்மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுக்கள்

1 கிறிஸ்துவை மோசேயைவிட பெரியவராக்கி, மோசேயைத் தூஷிக்கிறான் (அப் 6:11,14)

2 கிறிஸ்துவை தேவாலயத்தையும் நியாயப்பிரமாணத்தையும் விட உயர்த்தி, தேவனைத் தூஷிக்கிறான் (அப் 6:11,14)

3. கிறிஸ்து இந்தத் தேவாலயத்தை அழிப்பார் என்று கூறி. தேவாலயத்தைத் தூஷிக்கிறான் (அப் 6:14; மத் 24:1-3; லூக்கா 21:20-24 தானி 9:26)

4 கிறிஸ்து நியாயப்பிரமாணத்தை அழித்துவிட்டார் புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தியிருக்கிறார் என்று கூறி நியாயப்பிரமாணத்தைத் தூஷித்தான் (அப் 6:14; மத் 26:28 2கொரி 3:6-15 கொலோ 2:14-17)

"அவன் முகம் தேவதூதன் முகம்போலிருக்கக் கண்டார்கள்" - தம்முடைய மகிமையும் பிரகாசமும் ஸ்தேவான் முகத்தின் மூலமாகப் பிரகாசிப்பதற்குத் தேவன் அனுமதி கொடுத்தார் ஸ்தேவான் கூறியது சத்தியமான வார்த்தைகள் என்பதை நிரூபிக்கும் வண்ணமாக அவனுடைய முகம் தேவதூதனுடைய முகம்போல் இருந்தது ஸ்தேவான் தன்னுடைய சுயபக்தியினாலோ சுயபுத்தியினாலோ பேசவில்லை. தேவஞானத்தினால் நிறைந்து பேசினான் அவனுடைய முகம் தேவதூதனுடைய முகம்போல இருந்தது இது ஓர் அற்புதமான காரியம். சபையில் இப்போதுள்ள அற்புதங்களை நடப்பிப்பது தேவனுக்குப் பிரியமாய் இருக்கிறது. சபையானது தன்னுடைய பலத்தினாலோ, பராக்கிரமத்தினாலோ கிரியை செய்யாமல், தேவனுடைய ஆவியானவரைக் கிரியை செய்வதற்கு அனுமதிக்கும்போது சபையில் அற்புதங்களும் அடையாளங்களும் நடைபெறும்.

7 அதிகாரம்

(3) ஸ்தேவானின் பிரசங்கம்

(அ) ஆபிரகாமின் அழைப்பு - (ஆதி 12:1-9

அப் 7:1 பிரதான ஆசாரியன் அவனை நோக்கி, காரியம் இப்படியாயிருக்கிறதென்று கேட்டான்

அப் 7:2 அதற்கு அவன்: சகோதரரே பிதாக்களே, கேளுங்கள் நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் காரானூரிலே குடியிருக்கிறதற்கு முன்னமே மெசொபொத்தாமியா நாட்டிலே இருக்கும்போது மகிமையின் தேவன் அவனுக்குத் தரிசனமாகி,

அப் 7:3 உன் தேசத்தையும் உன் இனத்தையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்கு வா என்றார்

"காரியம் இப்படியாயிருக்கிறது" - என்று பிரதான ஆசாரியன் ஸ்தேவானிடம் கேட்கிறான் ஸ்தேவான்மீது யூதமார்க்கத்துத் தலைவர்கள் குற்றம் சுமத்துகிறார்கள் தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை ஸ்தேவான் மறுக்கவில்லை இருந்தாலும் அவர்களுக்குச் சத்தியத்தை விளக்கிக் கூற விரும்புகிறான் தன்மீது குற்றம் சுமத்துகிறவர்கள்தான் நியாயப்பிரமாணத்தை மீறுகிறவர்கள் என்றும் அவர்களே தேவனைத் தூஷிக்கிறவர்கள் என்றும் தேவாலய ஆராதனையை அசுத்தப் படுத்துகிறவர்கள் என்றும் ஸ்தேவான் விரிவாகக் கூறுகிறான்

"மகிமையின் தேவன்" The God of glory - மெய்யான தேவனுக்குப் பல நாமங்கள் உண்டு. அதில் இதுவும் ஒன்று.

தேவனுடைய நாமங்கள்

1 மகிமையின் தேவன் (The God of Glory) (அப் 7:2)

2 பொறுமையை அளிக்கும் தேவன் (The God of patience) ரோமர் 15:5)

3 நம்பிக்கையின் தேவன் (The God of hope) (ரோமர் 15:13

4 சமாதானத்தின் தேவன் (The God of peace) (ரோமர் 15:33

5 சகலவிதமான ஆறுதலின் தேவன் (The God of all comfort) (2கொரி 1:3)

6 இரக்கங்களின் பிதா (Father of mercies) (2கொரி 1:3)

7 அன்புக்கு காரணராகிய தேவன் (The God of love) (2கொரி 13:11)

8 சகல கிருபையும் பொருந்திய தேவன் (The God of all grace) (1பேதுரு 5:10)

9 சத்தியமுள்ள தேவன் (The God of truth) (உபா 32:4)

10 யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவன் (God the Judge of all) (எபி 12:23)

"மெசொபொத்தாமியா" (Mesopotamia) - ஐபிராத்து டைகிரிஸ் ஆகிய நதிகளுக்கு இடையில் உள்ள தேசம் (அப் 7:4)

"காரானூர்" (Charran, Haran) (ஆதி 11:31)

"உன் தேசத்தையும் உன் இனத்தையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்கு வா" ஆபிரகாமின் உடன்படிக்கை (The Abrahamic Covenant) (ஆதி 12:1

(ஆ) வாக்குத்தத்தங்களும் உடன்படிக்கைகளும் (ஆதி 12:1-9; 13:14-18; 15:1-21; 17:6-19; 22:15-18

அப் 7:4 அப்பொழுது அவன் கல்தேயர் தேசத்தைவிட்டுப் புறப்பட்டு, காரானூரிலே வாசம்பண்ணினான அவனுடைய தகப்பன் மரித்தபின்பு, அவனிடத்தை விட்டு நீங்கள் இப்பொழுது குடியிருக்கிற இத்தேசத்திற்கு அவனை அழைத்துக் கொண்டுவந்து குடியிருக்கும்படி செய்தார்

அப்போஸ்தலர் – தொகுப்புரை

7 அதிகாரம்

அப் 7:5 இதிலே ஒரு அடி நிலத்தையாகிலும் அவனுடைய கையாட்சிக்குக் கொடாமலிருக்கையில் அவனுக்குப் பிள்ளையில்லாதிருக்கும் போது உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் இதைச் சுதந்தரமாகத் தருவேன் என்று அவனுக்கு வாக்குத்தத்தம் பண்ணினார்

அப் 7:6 அந்தப்படி தேவன் அவனை நோக்கி, உன் சந்ததியார் அந்நிய தேசத்தில் சஞ்சரிப்பார்கள் அத்தேசத்தார் அவர்களை அடிமைகளாக்கி, நானூறு வருஷம் துன்பப்படுத்துவார்கள்

அப் 7:7 அவர்களை அடிமைப்படுத்தும் ஜனத்தையோ நான் ஆக்கினைக்குட்படுத்துவேன் அதற்குப்பின்பு அவர்கள் புறப்பட்டுவந்து இவ்விடத்திலே எனக்கு ஆராதனை செய்வார்கள் என்றார்

அப் 7:8 மேலும் விருத்தசேதன உடன்படிக்கையையும் அவனுக்கு ஏற்படுத்தினார் அந்தப்படியே அவன் ஈசாக்கைப் பெற்றபோது எட்டாம்நாளிலே அவனை விருத்தசேதனம் பண்ணினான் ஈசாக்கு யாக்கோபையும், யாக்கோபு பன்னிரண்டு கோத்திரபிதாக்களையும் பெற்றார்கள்

"அவனுடைய தகப்பன் மரித்தபின்பு, அவ்விடத்தை விட்டு நீங்கள் இப்பொழுது குடியிருக்கிற இத்தேசத்திற்கு அவனை அழைத்துக்கொண்டுவந்து குடியிருக்கும்படி செய்தார்" – (ஆதி 11:31-32; ஆதி 12:1,4-5)

அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் – 11

"உன் சந்ததியார் அந்நிய தேசத்தில் சஞ்சரிப்பார்கள் அத்தேசத்தார் அவர்களை அடிமைகளாக்கி, நானூறு வருஷம் துன்பப்படுத்துவார்கள்" (அப் 7:6-7; ஆதி 15:13-14

"உன் சந்ததியார் அந்நிய தேசத்தில் சஞ்சரிப்பார்கள்" - இந்த வாக்கியத்தில் அந்நிய தேசத்தில் சஞ்சரிப்பவர்களைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்க வார்த்தை "பரோய்கோஸ்" **(paroikos)** என்பதாகும். **(a stranger or sojourner)** (அப் 7:6,29; எபே 2:19, 1பேதுரு 2:11) இஸ்ரவேல் ஜனங்கள் பல தேசங்களிலே பரதேசிகளாகச் சஞ்சரித்தார்கள் கானான் பெலிஸ்திய தேசம் எகிப்து ஆகியவற்றுடன்மேலும் பல அந்நிய தேசங்களில் ஆபிரகாமின் சந்ததியார் சஞ்சரித்தார்கள் (ஆதி 15:13) ஆரானிலிருந்து புறப்பட்டதிலிருந்து 430 வருஷங்கள் அந்நிய தேசங்களில் சஞ்சரித்துக் கொண்டிருந்தார்கள் (ஆதி 12:1-4) எகிப்து தேசத்திலே இவர்கள் 215 வருஷங்கள் மட்டுமே இருந்தார்கள் மொத்தம் சஞ்சரித்த 430 வருஷங்களில் இது பாதிக்காலமே ஆகும்.

அந்நியதேசத்தில் சஞ்சரித்தல் **(sojourn)** - **πάροικος** - **paroikos** - 3941

மொழி - அந்நியர் அந்நியதேசத்தில் சஞ்சரித்தல்

அந்நிய தேசம் **(strange land)** - **ἀλλότριος** - **allotrios** - 245

பொருள் - அந்நியர் வேறொருவன் அந்நிய, மற்றொருவன், மற்றவர்கள் (மத் 12:40, அப் 7:6, (ஆதி 15:13-14))

அடிமைகளாக்கு **(bring)** - **δουλόω** - **doulooo** - 1402

ஆங்கில பெயர்ச்சொல் - அடிமைகளாக்கு அடிமைப்படுத்து **(enslave them)**

துன்பப்படுத்து **(entreat)** - **κακόω** - **kakooo** - 2559

வினைச்சொல் - அடிமையாக்கு, துன்பப்படுத்து, உபத்திரவப்படுத்து, தீங்குசெய், பகையுண்டாக்கு **(wrong them)** (அப் 7:6,19; அப் 12:1, அப் 14:2; அப் 18:10; 1பேதுரு 3:13

7 அதிகாரம்

"அத்தேசத்தார் அவர்களை அடிமைகளாக்கி, நானூறு வருஷம் துன்பப்படுத்துவார்கள்" - ஆபிரகாமின் காலத்திலிருந்து மோசேயின் காலம் வரைக்கும் உள்ள காலம் 430 வருஷங்களாகும். (யாத் 12:40; கலா 3:14-17) ஆதி 15:13; அப 7:6 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற 400 வருஷங்கள் என்பது இஸ்மவேல் துரத்தப்பட்ட பின்பு ஈசாக்கு ஆபிரகாமின் வித்தாக அங்கீகரிக்கப்பட்ட பின்பு கணக்கிடப்படும் காலமாகும் (ஆதி 21:12 கலா 4:30) ஈசாக்கு பிறந்து ஐந்து வருஷங்களுக்குப் பின்பு இந்தக் காரியம் நடைபெற்றது. ஆபிரகாம் ஆரானிலிருந்து தனக்கு 75 வயது ஆகும்போது புறப்பட்டுப் போனான். ஈசாக்கு பிறப்பதற்கு முன்பு இது 25 வருஷமாகும். அதாவது இஸ்மவேல் வெளியேற்றப்பட்டு ஈசாக்கு ஆபிரகாமின் வித்தாக அங்கீகரிக்கப்படுவதற்கு முன்பாக முப்பது வருஷங்களாகும் (அப 7:6)

"அவர்களை அடிமைப்படுத்தும் ஜனத்தையோ நான் ஆக்கினைக்குட்படுத்துவேன்" - எகிப்தியர்கள் இஸ்ரவேல் ஜனங்களை அடிமைப்படுத்தினார்கள் (யாத் 1:1-14, 31)

"அதற்குப்பின்பு அவர்கள் புறப்பட்டுவந்து இவ்விடத்திலே எனக்கு ஆராதனை செய்வார்கள்" எகிப்தியர்கள் ஆக்கினைக்கு உட்படுத்தப்பட்ட பின்பு இஸ்ரவேல் ஜனங்கள் கானானைச் சுதந்தரித்துக் கொள்வார்கள் (அப 7:6)

"விருத்தசேதன உடன்படிக்கையையும் அவனுக்கு ஏற்படுத்தினார்" ஆபிரகாமின் உடன்படிக்கையில் விருத்தசேதன உடன்படிக்கையும் வருகிறது (ஆதி 12:1-3 ஆதி 17:9-27) மோசேயின் உடன்படிக்கையிலும் விருத்தசேதனம் வந்தாலும் அது மோசேயின் காலத்தில் ஆரம்பிக்கப்படவில்லை

"அவன் ஈசாக்கைப் பெற்றபோது எட்டாம்நாளிலே அவனை விருத்தசேதனம் பண்ணினான்; ஈசாக்கு யாக்கோபைப் பெற்றான், யாக்கோபு பன்னிரண்டு கோத்திரப் பிதாக்களையும் பெற்றான்" ஆபிரகாம் ஈசாக்கை விருத்தசேதன உடன்படிக்கையின்கீழ் பெற்றெடுத்தான். ஈசாக்கு யாக்கோபையும், யாக்கோபு பன்னிரண்டு கோத்திரப் பிதாக்களையும் விருத்தசேதன உடன்படிக்கையின் கீழேயே பெற்றெடுத்தார்கள். ஆகையினால் இவர்கள் எல்லோருமே உடன்படிக்கையின் புத்திரரும், சுதந்தரவாளிகளுமாக இருக்கிறார்கள். வாக்குத்தத்த தேசம் இவர்களுடைய சுதந்தரவீதம். இந்த உடன்படிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கும் உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் இவர்களுக்குரியவை.

"கோத்திரபிதாக்கள்" (partriarchs) - (அப 2:29)

(இ) எகிப்தில் யோசேப்பும் இஸ்ரவேலரும் - (ஆதி 37:28-34; 41:1-50:26)

அப் 7:9 அந்தக் கோத்திரபிதாக்கள் பொறாமைகொண்டு யோசேப்பை எகிப்துக்குக் கொண்டுபோகும்படியாக விற்றுப்போட்டார்கள்

அப 7:10 தேவனோ அவனுடனேகூட இருந்து, எல்லா உபத்திரவங்களினின்றும் அவனை விடுவித்து, எகிப்தின் ராஜாவாகிய பார்வோனுக்கு முன்பாக அவனுக்குக் கிருபையையும் ஞானத்தையும் அருளினார்; அந்த ராஜா அவனை எகிப்துதேசத்திற்கும் தன் வீடனைத்திற்கும் அதிகாரியாக ஏற்படுத்தினான்

அப 7:11 பின்பு எகிப்து கானான் என்னும் தேசங்களிலெங்கும் பஞ்சமும் மிகுந்த வருத்தமும் உண்டாகி, நம்முடைய பிதாக்களுக்கு ஆகாரம் கிடையாமற் போயிற்று.

அப் 7:12 அப்பொழுது எகிப்திலே தானியம் உண்டென்று யாக்கோபு கேள்விப்பட்டு, நம்முடைய பிதாக்களை முதலாந்தரம் அனுப்பினான்

அப் 7:13 இரண்டாந்தரம் யோசேப்பு தன்னுடைய சகோதரருக்குத் தன்னைத் தெரியப்படுத்தினான்; யோசேப்புடைய வம்சமும் பார்வோனுக்குத் தெரியவந்தது.

அப 7:14 பின்பு யோசேப்பு, தன்னுடைய தகப்பன் யாக்கோபும் தன்னுடைய இனத்தார் யாவருமாகிய, எழுபத்தைந்து பேரை அழைக்க அனுப்பினான்

7 அதிகாரம்

அப 7:15 அந்தப்படி யாக்கோபு எகிப்துக்குப் போனான் அவனும் நம்முடைய பிதாக்களும் மரித்து.

அப 7:16 அங்கேயிருந்து சீகேமுக்குக் கொண்டுவரப்பட்டு, ஆபிரகாம் சீகேமின் தகப்பனாகிய எமோருடைய சந்ததியாரிடத்தில் ரொக்கக் கிரயத்துக்கு வாங்கியிருந்த கல்லறையில் வைக்கப்பட்டார்கள்

"அந்தக் கோத்திரபிதாக்கள் பொறாமை கொண்டு யோசேப்பை எகிப்துக்குக் கொண்டு போகும்படியாக விற்றுப்போட்டார்கள்" - இந்த வாக்கியத்தில் பொறாமைகொண்டார்கள (moved with envy) என்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்க வார்த்தை "ஜெலோ" (zeelooo) என்பதாகும் யோசேப்பின சொப்பனத்தைக் கேட்டபோது அவனுடைய சகோதரருக்கு அவனமீது மிகுந்த கோபம் உண்டாயிற்று. அவனுக்கு உண்டான தீர்க்கதரிசனம் நிறைவேறக்கூடாது என்று விரும்பினார்கள அதனை நிறைவேறாததைத் தடுப்பதற்காக யோசேப்பை பொறாமையினால விற்றுப் போட்டார்கள் ஆனால தேவனுடைய தீர்க்கதரிசனம் நிறைவேறுவதற்கு அவர்களுடைய பொறாமையே உதவி புரிந்தது

பொறாமை (envy) - ζηλόω - zeelooo - 2206

வினைச்சொல் - பொறாமைகொள வைராக்கியங் கொள, நாடு. வைராக்கியம் பாராட்டு. ஜாக்கிரதையாயிரு

பொறாமை (indignation) - ζῆλος - zeelos - 2205

பால் வேறுபாடற்ற பெயர்சொல அல்லது ஆண்பால் பெயர்ச்சொல் - வைராக்கியம், பொறாமை, ஜாக்கிரதை கோபாக்கினை, வெறுப்பு

"தேவனோ அவனுடனேகூட இருந்தார்" - தேவன் யோசேப்பின் மூலமாகத் தமது சித்தத்தை நிறைவேற்ற வேண்டுமென்று விரும்பினார் ஆகையினால தேவன் அவனை ஆசீர்வதித்து பாதுகாத்துப் பராமரித்தார

யோசேப்பின்மீது தேவனுடைய ஆசீர்வாதங்கள்

1 தேவன் அவனோடுகூட இருந்தார் (அப 7:9; ஆதி 39:2,21,23) எல்லா விசுவாசிகளுக்கும் இந்த ஆசீர்வாதம் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது.

2 எல்லா உபத்திரவங்களினின்றும் அவனை விடுவித்தார் (அப் 7:10 ஆதி 41:37-45)

3 எல்லா எகிப்தியரிடத்திலும் அவனுக்குக் கிருபையை அருளினார் (அப 7:10 ஆதி 41:37-45)

4 எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் சமுகத்திலே அவனுக்கு ஞானத்தை அருளினார் (அப 7:10; ஆதி 41:16-45)

5 எகிப்துதேசத்திற்கு அவனை அதிகாரியாக ஏற்படுத்தினார் (அப 7:10; ஆதி 41:37-45

6 எகிப்தின் ராஜாவின் வீட்டிற்கும் அவனை அதிகாரியாக ஏற்படுத்தினார் (அப 7:10; ஆதி 41:40-45)

"தேசங்களிலெங்கும் பஞ்சமும் மிகுந்த வருத்தமும் உண்டாயிற்று" (ஆதி 41:54-57

"நம்முடைய பிதாக்களுக்கு ஆகாரம் கிடையாமற்போயிற்று" - போஜனம் பண்ணுவதற்குக் கூட அவர்களுக்கு ஆகாரம் கிடைக்கவில்லை. பசியினாலும். பட்டினியாலும் மடிந்து போகக்கூடிய நிலைமைக்கு வந்துவிட்டார்கள

"யோசேப்பு தன்னுடைய சகோதரருக்குத் தன்னைத் தெரியப்படுத்தினான்" - (ஆதி 45:1-28)

"யோசேப்பு, தன்னுடைய தகப்பன் யாக்கோபும் தன்னுடைய இனத்தார் யாவருமாகிய, எழுபத்தைந்து பேரை அழைக்க அனுப்பினான" செப்துவஜிந்த் பதிப்பிலுள்ள ஆதி 46:20 ஆவது வசனத்தை ஸ்தேவன் இங்கு மேற்கோளாகக் கூறுகிறான் ஆதி 46:27 உபா 10:22 ஆகிய வசனங்களில் எகிப்திற்கு வந்தவர்கள் 70 பேர் என்றுள்ளது இவர்களில் மனாசே, எப்பிராயீம் ஆகியோரின் ஐந்து புத்திரர்கள் சேர்க்கப்படவில்லை.

7 அதிகாரம்

"சீகேம்" (Sychem, Shechem) - ஆதி 23:6-20 ஆதி 33:19; ஆதி 47:30, ஆதி 49:29 ஆதி 50:5; யாத் 13:19, யோசு 24:32

(ஈ) எகிப்தியரிடத்தில் அடிமைத்தனம் - (யாத் 1:7-22)

அப 7:17 ஆபிரகாமுக்கு தேவன் ஆணையிட்டு அருளின வாக்குத்தத்தம் நிறைவேறுங் காலம் சமீபித்தபோது,

அப 7:18 யோசேப்பை அறியாத வேறொரு ராஜா தோன்றின காலமளவும், ஜனங்கள் எகிப்திலே பலுகிப் பெருகினார்கள்

அப 7:19 அவன் நம்முடைய ஜனங்களை வஞ்சனையாய் நடப்பித்து, நம்முடைய பிதாக்களின் குழந்தைகள் உயிரோடிராதபடிக்கு அவர்கள் அவர்களை வெளியே போட்டுவிடும்படி செய்து அவர்களை உபத்திரவப்படுத்தினான்

"யோசேப்பை அறியாத வேறொரு ராஜா தோன்றினான்" - (யாத் 1:8-22; சங் 105:25) இவன் அசீரிய ராஜா பழைய எகிப்திய பேரரசை இவன் தோற்கடித்து எகிப்தின் ஆட்சியைக் கைப்பற்றினான் (ஏசா 52:4

(உ) நாற்பது வருஷங்களாக மோசேக்கு பயிற்சி - (யாத் 2:10)

அப 7:20 அக்காலத்திலே மோசே பிறந்து, திவ்விய சவுந்தரியமுள்ளவனாயிருந்து, மூன்று மாதமளவும் தன் தகப்பன் வீட்டிலே வளர்க்கப்பட்டான்

அப் 7:21 அவன் வெளியே போட்டுவிடப்பட்டபோது, பார்வோனுடைய குமாரத்தி அவனை எடுத்துத் தனக்குப் பிள்ளையாக வளர்த்தாள்

அப 7:22 மோசே எகிப்தியருடைய சகலசாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு, வாக்கிலும் செய்கையிலும் வல்லவனானான்

"மோசே பிறந்து திவ்விய சவுந்தரியமுள்ளவனாயிருந்தான்" தேவனுடைய பார்வையில் சவுந்தரியமுள்ளவனாக இருக்கிறான் (யாத் 2:2

"மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு, வாக்கிலும் செய்கையிலும் வல்லவனானான்" - அக்காலத்தில எகிப்தியர்கள் ஞானமுள்ளவர்களாகவும், பல கலைகளில் தேர்ச்சி பெற்றவர்களாகவும் இருந்தார்கள் எகிப்தியரின் கணித சாஸ்திரம் மருத்துவ சாஸ்திரம் கட்டிடக்கலை இசை மார்க்கம் ஆகியவற்றை இன்றும் உலகத்தார் வியந்து போற்றுகிறார்கள் யோசபஸ் என்னும் திருச்சபை வரலாற்று ஆசிரியர் மோசேயைப் பற்றி எழுதும்போது அவன் எகிப்திய சேனையின் தலைவனாக இருந்தான் என்றும் எகிப்தியர் மீதுபடையெடுத்து வந்த எத்தியோப்பியரை வெற்றி பெற்றான் என்றும் எழுதுகிறார் மோசே வாக்கிலும், செய்கையிலும் வல்லவனாக இருந்தான்

(ஊ) இஸ்ரவேலரை மீட்கும் மோசேயின் முயற்சியை அவர்கள் முதல்விசை ஏற்றுக் கொள்ளவில்லை - (யாத் 2:11-15

அப 7:23 அவனுக்கு நாற்பது வயதான போது இஸ்ரவேல் புத்திரராகிய தன்னுடைய சகோதரரைக் கண்டு சந்திக்கும்படி அவனுடைய இருதயத்தில் எண்ணமுண்டாயிற்று.

அப 7:24 அப்பொழுது அவர்களில் ஒருவன் அநியாயமாய் நடத்தப்படுகிறதை அவன் கண்டு, அவனுக்குத் துணை நின்று, எகிப்தியனை வெட்டி, துன்பப்பட்டவனுக்கு நியாயஞ்செய்தான்

அப் 7:25 தன்னுடைய கையினாலே தேவன் தங்களுக்கு இரட்சிப்பைத் தருவாரென்பதைத் தன்னுடைய சகோதரர் அறிந்து கொள்வார்களென்று அவன் நினைத்தான் அவர்களோ அதை அறியவில்லை.

7 அதிகாரம்

அப் 7:26 மறுநாளிலே சண்டைபண்ணிக் கொண்டிருக்கிற இரண்டுபேருக்கு அவன் எதிர்ப்பட்டு: மனுஷரே, நீங்கள் சகோதரராயிருக்கிறீர்கள்; ஒருவருக்கொருவர் அநியாயஞ் செய்கிறதென்ன என்று அவர்களைச் சமாதானப்படுத்தும்படி பேசினான்.

அப் 7:27 பிறனுக்கு அநியாயஞ்செய்தவன் அவனைப் பிடித்துத் தள்ளி: எங்களமேல் அதிகாரியாகவும் நியாயாதிபதியாகவும் உன்னை ஏற்படுத்தினவன் யார்?

அப் 7:28 நேற்று நீ அந்த எகிப்தியனைக் கொன்றதுபோல என்னையும் கொன்றுபோட மனதாயிருக்கிறாயோ என்றான்.

"மோசேக்கு நாற்பது வயதானது" - பார்வோனின் அரண்மனையில் மோசே 40 வருஷங்கள் இருந்தான் (அப் 7:23). மீதியான் தேசத்தில் மோசே 40 வருஷங்கள் இருந்தான் அப் 7:30. இஸ்ரவேல்தேசத்தில் மோசே 40 வருஷங்கள் இருந்தான் (அப் 7:36; யாத் 2:11; உபா 2:7; உபா 8:2; உபா 31:2)

"இஸ்ரவேல் புத்திரராகிய தன்னுடைய சகோதரரைக் கண்டு சந்திக்கும்படி அவனுடைய இருதயத்தில் எண்ணமுண்டாயிற்று" - பரிசுத்த ஆவியானவர் இப்படிப்பட்ட ஓர் எண்ணத்தை மோசேயின் உள்ளத்திலே உண்டாக்கினார். அவனுக்கு ஏற்கெனவே தேவனுடைய வார்த்தை உண்டாயிருந்தது. அதன் மூலமாக விசுவாசம் வந்தது. (எபி 11:24; ரோமர் 10:17)

"எகிப்தியனை வெட்டி, துன்பப்பட்டவனுக்கு நியாயஞ்செய்தான்" - இந்த வாக்கியத்தில் நியாயஞ்செய்தல் என்பதற்கான கிரேக்க வார்த்தை "எக்டிகேசிஸ்" (ekdikeesis) என்பதாகும். இதற்கு பழிவாங்குதல் (took vengeance) என்று பொருள் கூறலாம். அப் 7:24; லூக்கா 18:7, 8; லூக்கா 21:22; ரோமர் 12:19; 2கொரி 7:11; 2தெச 1:8; எபி 10:30; 1பேதுரு 2:14

நியாயஞ்செய்தான் (avenged) ἐκδίκησις - ekdikeesis 1557

பெண்பால் பெயர்ச்சொல் - பழிவாங்குதல், நீதியைச் சாக்கட்டுதல், நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்துதல்

"தன்னுடைய கையினாலே தேவன் தங்களுக்கு இரட்சிப்பைத் தருவாரென்பதைத் தன்னுடைய சகோதரர் அறிந்து கொள்வார்களென்று அவன் நினைத்தான்" - ஜனங்கள் தன்னைத் தலைவராக ஏற்றுக் கொள்வார்கள் என்று மோசே நினைத்தான். இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலே அடிமைகளாக இருக்கிறார்கள். தன்னுடைய ஜனங்கள் அநியாயமாய் நடத்தப்படுவதை மோசேயால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. துன்பப்பட்டவனுக்கு நீதியைச் சரிகட்டினான். பரிசுத்த ஆவியானவர் தன் மூலமாகக் கிரியைசெய்கிறார் என்று நினைத்தான். இஸ்ரவேல் ஜனங்களும், தங்களுக்கு ஒரு இரட்சகர் தேவை என்பதை உணர்ந்திருந்தார்கள். ஆனால் தேவனுடைய திட்டம் நிறைவேறுவதற்கு இது ஏற்ற காலமாக இல்லை. ஜனங்களை விடுவித்து வழிநடத்துவதற்கு முன்பாக மோசே தேவனிடம் கற்றுக் கொள்ள வேண்டும். இதை மோசே அறிந்து கொள்ளவில்லை. தன்னுடைய கையினாலே தேவன் தங்களுக்கு இரட்சிப்பைத் தருவாரென்பதைத் தன்னுடைய சகோதரர் அறிந்து கொள்வார்களென்று மோசே நினைத்தான். ஆனால் அவர்களோ அதை அறியவில்லை. பரிசுத்த ஆவியானவர் மோசேக்கு தொடர்ந்து பாடம் கற்றுக்கொடுக்க விரும்பினார். மறுநாளில் மோசேயின் ஜீவியத்தில் மிகவும் முக்கியமான காரியம் நடைபெறுகிறது. (அப் 7:26)

"மறுநாளிலே சண்டைபண்ணிக் கொண்டிருக்கிற இரண்டுபேருக்கு அவன் எதிர்ப்பட்டு: மனுஷரே, நீங்கள் சகோதரராயிருக்கிறீர்கள்; ஒருவருக்கொருவர் அநியாயஞ்செய்கிறதென்ன என்று, அவர்களைச் சமாதானப்படுத்தும்படி பேசினான்" - இரண்டு பேர் சண்டை போட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களைத் தன்னுடைய மனுஷ முயற்சியினாலோ அல்லது சுய வல்லமையினாலோ சுயபெலத்தினாலோ சமாதானப்படுத்தலாம், அவர்களை ஒன்று சேர்த்து விடலாம் என்று மோசே நினைத்தான். ஆனால் இது நடைமுறைக்கு ஒத்துவராது என்பதை மோசே கற்றுக் கொண்டான்.

7 அதிகாரம்

பரிசுத்த ஆவியானவர் மோசேக்குக் கற்றுக் கொடுத்த முதலாவது பாடம் இதுதான் (அப 7:26-28). சண்டை பண்ணிக்கொண்டிருக்கிறவர்களைப் பார்த்து மோசே "மனுஷரே" என்று அழைக்கிறான். இதற்கான கிரேக்க வார்த்தை "அநேர்" aneer என்பதாகும். இது மரியாதைக்குரிய சொல். பெரியோர்களை அழைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் பன்மைச்சொல். ஆனால் அவர்கள் மோசேயின் [illegible] இணங்கவில்லை.

மனுஷர் (Sir) - ἀνήρ - aneer - 435

ஆண்பால் பெயர்ச்சொல் - புருஷன், மனுஷன், போதிய வயது நிரம்பியவன் (அப 7:26; அப 14:15; அப 19:25; அப 27:10,21,25)

"பிறனுக்கு அநியாயஞ்செய்தவன் அவனைப் பிடித்துத் தள்ளினான்" - இந்த வாக்கியத்தில் "பிடித்துத் தள்ளு" என்பதற்கான கிரேக்க வார்த்தை "அப்போதேயோ" (apootheoo) என்பதாகும். இதற்கு புறக்கணித்தல், ஏற்றுக் கொள்ள மறுத்தல் என்று பொருள்.

தள்ளு (thrust) - ἀπωθέω - apootheoo - 683

வினைச்சொல் - தள்ளு, தீர்த்துக்கொள், தள்ளிவிடு (to reject). (அப 7:27,39; அப 13:46; ரோமர் 11:1-2; 1தீமோ 1:19)

"எங்கள்மேல் அதிகாரியாகவும் நியாயாதிபதியாகவும் உன்னை ஏற்படுத்தினவன் யார்?" - மோசே எகிப்தில் பார்வோனின் அரண்மனையில் வளர்ந்தவன். நம்மீது அவனுக்கு அக்கறையில்லை என்று யூதர்கள் நினைத்தார்கள். மோசே இப்பொழுது இவர்களைச் சமாதானப்படுத்தும்படி பேசியபோது அவர்களால் இவனைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகையினால் மோசேயிடம் அநியாயம் செய்தவன் இவ்வாறு கேள்வி கேட்கிறான்.

"நேற்று நீ அந்த எகிப்தியனைக் கொன்றது போல என்னையும் கொன்றுபோட மனதாயிருக்கிறாயோ" - பிறனுக்கு அநியாயம் செய்தவன் மோசேயிடம் மேலும் இவ்வாறு கூறுகிறான். மோசே செய்த குற்றத்தை வெளிப்படுத்துகிறான். தனக்கு மரண தண்டனை கிடைத்துவிடுமோ என்று பயந்து மோசே எகிப்து தேசத்தை விட்டே ஓடிப் போகிறான். மோசே இன்னும் பார்வோனுடைய அரண்மனையில் அதிகாரத்தோடு இருந்திருந்தால், அவன் இவ்வாறு ஓடிப்போகவேண்டிய அவசியமில்லை. விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டான் (எபி 11:24-26). ஆகையினால் இப்போது மோசே பார்வோனுடைய அரண்மனையிலும் இல்லை. தன்னுடைய சகோதரர் தன்னை ஏற்றுக் கொள்ளாமல் ஒதுக்கி விட்டபோதிலும் தேவனுடைய வார்த்தை அவனுடைய உள்ளத்தில் தோன்றியிருந்ததினால் அவன் சந்தேகப்படாமல் எகிப்தை விட்டு ஓடிப்போனான் (எபி 11:27).

(எ) மோசேக்கு நாற்பது வருஷ தெய்வீக பயிற்சி

(யாத் 2:15; 4:31)

அப 7:29 இந்த வார்த்தையினிமித்தம் மோசே ஓடிப்போய், மீதியான் தேசத்திலே சஞ்சரித்துக் கொண்டிருந்தான். அங்கே இருக்கும்போது அவனுக்கு இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள்.

அப 7:30 நாற்பது வருஷம் சென்றபின்பு, சீனாய்மலையின் வனாந்தரத்திலே கர்த்தருடைய தூதனானவர் முட்செடி எரிகிற அக்கினிஜுவாலையிலே அவனுக்குத் தரிசனமானார்.

அப 7:31 மோசே அந்தத் தரிசனத்தைக் கண்டு, அதிசயப்பட்டு, அதை உற்றுப் பார்க்கும்படி சமீபித்துவருகையில்,

7 அதிகாரம்

அப 7:32 நான் ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன் என்று கர்த்தர் திருவுளம் பற்றின சத்தம் அவனுக்கு உண்டாயிற்று. அப்பொழுது மோசே நடுக்கமடைந்து உற்றுப்பார்க்கத் துணியாமலிருந்தான்.

அப 7:33 பின்னும் கர்த்தர் அவனை நோக்கி: உன் பாதங்களிலிருக்கிற பாதரட்சைகளைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமியாயிருக்கிறது.

அப 7:34 எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, அவர்கள் பெருமூச்சைக் கேட்டு, அவர்களை விடுவிக்கும்படி இறங்கினேன்; ஆகையால், நீ வா, நான் உன்னை எகிப்திற்கு அனுப்புவேன் என்றார்.

"இந்த வார்த்தையினிமித்தம் மோசே ஓடிப்போய், மீதியான் தேசத்திலே சஞ்சரித்துக் கொண்டிருந்தான்" - அந்நியதேசத்திலே ஒரு பரதேசியைப்போல சஞ்சரித்துக் கொண்டிருக்கிறான் (அப் 7:29)

"மீதியான்" (Madian, Midian) (யாத் 2:15, யாத் 3:1)

"அங்கே இருக்கும்போது அவனுக்கு இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள்" - கெர்சோமும், எலியேசரும் பிறந்தார்கள் (யாத் 2:22, யாத் 18:2)

"சீனாய்மலையின் வனாந்தரத்திலே கர்த்தருடைய தூதனானவர் முட்செடி எரிகிற அக்கினிஜுவாலையிலே அவனுக்குத் தரிசனமானார்" மோசே இந்த மலையை ஓரேப் (Horeb) (யாத் 3:1) என்று அழைக்கிறார். இந்த மலைப்பிரதேசம் முழுவதிற்கும் ஓரேப் என்று பெயர். அதிலுள்ள ஒரு குறிப்பிட்ட மலை சீனாய் மலை என்று அழைக்கப்படுகிறது.

"கர்த்தருடைய தூதனானவர்" (angel of the Lord) - இந்த வாக்கியம் தேவனையே குறிக்கும். மனுஷர் மத்தியில் தேவன் கர்த்தருடைய தூதனானவராகத் தோன்றுகிறார் (அப் 7:32-34; யாத் 3:2-4:17)

யாத் 3-4 ஆகிய அதிகாரங்களில் கர்த்தருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பெயர்கள்

1 கர்த்தருடைய தூதனானவர் (The Angel of the Lord) (யாத் 3:2)

2 தேவனும், கர்த்தருமானவர் (The Lord and God) (யாத் 3:4-7; யாத் 4:1-27)

3 உன் பிதாக்களுடைய தேவன் (The God of thy Father) (அம்ராம் - Amram யாத் 6:18) ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனும் (the God of Abraham, the God of Isaac, and the God of Jacob) (யாத் 3:6,15-16; யாத் 4:5)

4 இருக்கிறவராக இருக்கிறேன் (I AM THAT I AM, I AM) (யாத் 3:14)

5 எபிரெயருடைய தேவன் (The Lord God of the Hebrews) (யாத் 3:18)

6 எங்கள் தேவனாகிய கர்த்தர் (The Lord our God) (யாத் 3:18)

"மோசே அந்தத் தரிசனத்தைக் கண்டான்" இந்த வாக்கியத்தில் "தரிசனம்" என்பதன் கிரேக்க வார்த்தை "ஹோராமா" (horama) என்பதாகும். அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் 11 இடங்களிலும் மத்தேயு சுவிசேஷத்தில் ஓரிடத்திலும் இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதன் பலவேறு மொழிபெயர்ப்புகள் "sight" (அப் 7:31) "vision" (மத் 17:9; அப் 9:10-12; அப் 10:3,17,19; அப் 11:5; அப் 12:9; அப் 16:9-10; அப் 18:9) இந்தக் கிரேக்க வார்த்தையும் "ஹோராசிஸ்" (horasis) என்னும் கிரேக்க வார்த்தையும் ஒரே வேர்ச்சொல்லிருந்து வந்திருக்க வேண்டுமென்று மொழியியல் அறிஞர்கள் கருதுகிறார்கள். இதன் மொழிபெயர்ப்புகள் இவ்வாறு உள்ளது. "sight" (வெளி 4:3), "to look upon" (வெளி 4:3); "visions" (அப் 2:17; வெளி 9:17)

7 அதிகாரம்

தரிசனம் (sight) - ὅραμα horama 3705

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - தரிசனம்

பார்வை (visions) - ὅρασις horasis - 3706

பெண்பால் பெயர்ச்சொல் - பார்வை

"மோசே நடுக்கமடைந்து, உற்றுப்பார்க்கத் துணியாமலிருந்தான்" - நான் ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன் என்று கர்த்தர் திருவுளம் பற்றின சத்தம் அவனுக்கு உண்டாயிற்று. தேவனுடைய சத்தத்தைக் கேட்டவுடன் அங்கு தெய்வீக பிரசன்னம் இருப்பதை மோசே அறிந்து கொள்கிறான். ஆனால் அவனுக்குள் பயம் வந்துவிடுகிறது. ஆகையினால் அவன் நடுக்கமடைந்து உற்றுப்பார்க்கத் துணியாமலிருந்தான்

தேவனுடைய பிரசன்னத்தின்போது ஏற்படும் விளைவுகள்

1 அயர்ந்த நித்திரை (ஆதி 2:21; ஆதி 15:12

2 ஐயோ! அதமானேன். நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன் என்னும் உணர்வு. (ஏசா 6

3 நான் முகங்குப்புற விழுந்தேன் எசே 1:28, எசே 3:23; எசே 43:4, எசே 44:4

4. நான் திடுக்கிட்டேன் (தானி 8:17)

5 அவர்கள் மிகவும் நடுநடுங்கி, ஓடி ஒளித்துக்கொண்டார்கள் (தானி 10:7)

6 என் பெலனெல்லாம் போயிற்று. என் உருவம் மாறி வாடிப்போயிற்று. திடனற்றுப்போனேன். நான் முகங் கவிழ்ந்து, நித்திரை போகிறவனாய்த் தரையிலே முகங்குப்புற விழுந்து கிடந்தேன் என் முழங்கால்களும் என் உள்ளங்கைகளும் தரையை ஊன்றியிருக்க என்னைத் தூக்கி வைத்தது. (தானி 10:8-10)

7 சீஷர்கள் முகங்குப்புற விழுந்து மிகவும் பயந்தார்கள் (மத் 17:6

8 காவலாளர் பயந்ததினால் திடுக்கிட்டுச் செத்தவர்கள்போலானார்கள் (மத் 28:4

9 மோசே நடுக்கமடைந்து, உற்றுப் பார்க்கத் துணியாமலிருந்தான் (அப 7:32)

10 அவன் (சவுல்) தரையிலே விழுந்தான் அவன் நடுங்கித் திகைத்தான் (அப 9:4-9)

11 அவன் ஞானதிருஷ்டியடைந்தான் (அப 10:10)

12 உள்ளே ஓடி, நடுநடுங்கி விழுந்தான் (அப 16:29)

13 நான் மிகவும் பயந்து நடுங்குகிறேன் (எபி 12:21)

14 நான் அவரைக் கண்டபோது செத்தவனைப்போல அவருடைய பாதத்தில் விழுந்தேன் (வெளி 1:17; வெளி 19:10, வெளி 22:8

15 திகிலும் நடுக்கமும் என்னைப் பிடித்தது. என் எலும்புகளெல்லாம் நடுங்கினது. (யோபு 4:14

"உன் பாதங்களிலிருக்கிற பாதரட்சைகளைக் கழற்றிப்போடு, நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமியாயிருக்கிறது" (யாத் 3:5 யோசு 5:15)

"எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்தேன்" இந்த வாக்கியத்தில் உபத்திரவம் என்பது வியாதியைக் குறிக்காது. அவர்களுடைய துன்பங்களைக் குறிக்கும்.

பெருமூச்சு (groaning) στεναγμός - stenagmos 4726

ஆண்பால் பெயர்ச்சொல் பெருமூச்சு (ரோமர் 8:26

7 அதிகாரம்

(ஏ) மோசேக்கும் தேவனுக்கும் எதிராக இஸ்ரவேலரின் நாற்பது வருஷ கலகம் - (யாத் 5:1-19:2; 32:1-6; எண் 12-14

அப் 7:35 உன்னை அதிகாரியாகவும் நியாயாதிபதியாகவும் ஏற்படுத்தினவன் யார் என்று சொல்லி அவர்கள் மறுதலித்திருந்த இந்த மோசேயைத்தானே தேவன் முட்செடியில் அவனுக்குத் தரிசனமான தூதனாலே தலைவனாகவும் மீட்பனாகவும் அனுப்பினார்.

அப் 7:36 இவனே அவர்களை அங்கேயிருந்து அழைத்துக் கொண்டு வந்து, எகிப்து தேசத்திலேயும் சிவந்த சமுத்திரத்திலேயும், நாற்பது வருஷ காலமாய் வனாந்தரத்திலேயும் அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான்.

அப் 7:37 இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்கள் சகோதரரிலிருந்து என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக எழும்பப் பண்ணுவார்; அவருக்குச் செவி கொடுப்பீர்களாக என்று சொன்னவன் இந்த மோசேயே.

அப் 7:38 சீனாய்மலையில் தனனுடனே பேசின தூதனோடும் நம்முடைய பிதாக்களோடுங்கூட வனாந்தரத்திலே சபைக்குள்ளிருந்தவனும் நமக்குக் கொடுக்கும்படி ஜீவவாக்கியங்களைப் பெற்றவனும் இவனே.

அப் 7:39 இவனுக்கு நம்முடைய பிதாக்கள் கீழ்ப்படிய மனதாயிராமல், இவனைத் தள்ளிவிட்டு, தங்கள் இருதயங்களில் எகிப்துக்குத் திரும்பி,

அப் 7:40 ஆரோனை நோக்கி: எகிப்து தேசத்திலிருந்து எங்களை அழைத்துக் கொண்டு வந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம், ஆதலால் எங்களுக்கு முன்செல்லும் தெய்வங்களை எங்களுக்கு உண்டுபண்ணும் என்று சொல்லி,

அப் 7:41 அந்நாட்களில் ஒரு கன்றுக்குட்டியை உண்டுபண்ணி, அந்த விக்கிரகத்திற்குப் பலியிட்டு, தங்கள் கையின் கிரியைகளில் களிகூர்ந்தார்கள்.

"உன்னை அதிகாரியாகவும் நியாயாதிபதியாகவும் ஏற்படுத்தினவன் யார் என்று சொல்லி அவர்கள் மறுதலித்திருந்த இந்த மோசே" - இஸ்ரவேல ஜனங்கள் மோசேயை மறுதலித்து விட்டார்கள். இயேசுகிறிஸ்துவையும் யூதஜனங்கள் மறுதலித்து விட்டார்கள். அவர்களுடைய ஒரே இரட்சகராக இருக்கிற இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறைந்து கொன்று விட்டார்கள்.

"தேவன், முட்செடியில் அவனுக்குத் தரிசனமான தூதனாலே, மோசேயைத் தலைவனாகவும் மீட்பனாகவும் அனுப்பினார்" - இந்த வாக்கியத்தில் தேவன் மோசேயை மீட்பனாக அனுப்பினார் என்று வாசிக்கிறோம். மீட்பன் என்பதன் கிரேக்க வார்த்தை "லுதரோடேஸ்" (lytrootees) என்பதாகும். வேதாகமத்தில் மீட்பு, மீட்பர், மீட்கும் கிரயம் ஆகியவற்றைக் குறிப்பதற்கு இது தொடர்பான பல வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அவையாவன:

மீட்பன் (deliverer) - λυτρωτής - lytrootees - 3086

ஆண்பால் பெயர்ச்சொல் - மீட்பன்

மீட்கும் பொருள் (ransom) - λύτρον - lytron - 3083

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - மீட்கும் பொருள் (மத் 20:28; மாற்கு 10:45)

மீட்டுக்கொள் (redeemed) - λυτρόω lytrooo 3084

வினைச்சொல் - மீட்டு இரட்சி, மீட்டுக்கொள் (லூக்கா 24:21; தீத்து 2:14; 1பேதுரு 1:18)

மீட்பு (redemption) - λύτρωσις - lytroosis 3085

பெண்பால் பெயர்ச்சொல் - மீட்பு (லூக்கா 1:68; லூக்கா 2:38; எபி 9:12)

அப்போஸ்தலர் – தொகுப்புரை

7 அதிகாரம்

"முட்செடியில் அவனுக்குத் தரிசனமான தூதனாலே" - தூதனாலே என்பது மூலபாஷையில் தூதனுடைய கரத்தினாலே (by the hand of the angel) என்றிருக்கிறது. இந்த வாக்கியத்திற்கு தேவனுடைய கரத்தினாலே என்று பொருள் (அப 7:30)

அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 12

"உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்கள் சகோதரரிலிருந்து என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக எழும்பப் பண்ணுவார்" (அப 7:37; உபா 18:15)

"வனாந்தரத்திலே சபைக்குள்ளிருந்தவன்" - இந்த வாக்கியத்தில் சபை என்பது கிரேக்க வார்த்தை "எக்லேஷியா" (ekkleesia) என்பதாகும். இதற்கு வெளியே அழைக்கப்பட்டவர்கள் என்று பொருள். புதிய ஏற்பாட்டில் 115 இடங்களில் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. சபை என்பதே இதன் பொதுவான பொருளாகும். அப 19:32-41 ஆகிய வசனங்களில் மட்டும் இந்த வார்த்தை "கூட்டம்" (assembly) என்று பொருள்படுமாறு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் இதற்கு இணையான எபிரெயச் சொல் "காஹால்" (Qahal) என்பதாகும். பழைய ஏற்பாட்டில் 123 இடங்களில் இந்த எபிரெயச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. தேசங்களிலிருந்து அழைக்கப்பட்ட இஸ்ரவேல் ஜனங்களையே இந்த வார்த்தை பொதுவாகக் குறிப்பிடும். (ஆதி 12:3) காஹால் என்னும் சொல்லுக்கு வேறுபல பொருட்களும் உள்ளன. அவையாவன

1. ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் அழைக்கப்பட்ட கூட்டத்தினர் (ஆதி 49:6)
2. ஆராதனை செய்வதற்காக அழைக்கப்பட்ட இஸ்ரவேல் ஜனங்கள் (உபா 18:16; உபா 31:30; யோசு 8:35; நியா 21:8)
3. ஆராதிப்பவர்களின் கூட்டம். (சங் 22:22-25)

செப்துவஜிந்த் பதிப்பில் காஹால் என்னும் எபிரெயச் சொல் எக்லேஷியா என்னும் கிரேக்கச் சொல்லால் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

சபை (church) - ἐκκλησία - ekkleesia 1577

பெண்பால் பெயர்ச்சொல் - சபை, கூட்டம், சங்கம்

கூடிக்கொள் (to call) - קָהַל - ko-haw-thee' - 6950

வினைச்சொல் - கூடு, சேர், கூடிக்கொள், கூட்டங்கூடு, கூடிவரச்செய், கூடிவரப் பண்ணு, கூட்டு, கூடி வரும்படி செய்

சபை என்னும் சொல்லுக்கு மேலே கூறப்பட்டிருக்கும் பொதுவான பொருளைத் தருவதோடு இந்தச் சொல் கிறிஸ்தவரின் ஒரு குறிப்பிட்ட பிரிவினரையும் தேவனை ஆராதிப்பதற்காக விசுவாசிகள் கூடிவரும் கூட்டத்தையும் கிறிஸ்துவின் முழு சரீரமாகிய சபையையும் குறிக்கும். (எபே 1:22; கொலோ 1:18,24)

புதிய ஏற்பாட்டுச் சபைகள்

1. தேவனுடைய [illegible] (அப 20:28; 1கொரி 1:2; 1கொரி 10:32; 1கொரி 15:9; 2கொரி 1:1; கலா 1:13)
2. தேவனுடைய சபைகள் (1கொரி 11:16; 1தெச 2:14; 2தெச 1:4; 1தீமோ 3:5)
3. ஜீவனுள்ள தேவனுடைய சபை (1தீமோ 3:15)
4. கிறிஸ்துவின் சபை (ரோமர் 16:16)
5. வீட்டிலே கூடிவருகிற சபை (ரோமர் 16:5; 1கொரி 16:19; கொலோ 4:15; பிலே 1:2)
6. புறஜாதியாருடைய சபை (ரோமர் 16:4)
7. கலாத்தியா நாட்டுச் சபைகள் (1கொரி 16:1; கலா 1:2)

7 அதிகாரம்

8 ஆசியா நாட்டிலுள்ள சபைகள் (1கொரி 16:19)

9 மக்கெதோனியா நாட்டுச் சபைகள் (2கொரி 8:1)

10 யூதேயா தேசத்திலே கிறிஸ்துவுக்குள்ளான சபைகள் (கலா 1:22)

11 லவோதிக்கேயா சபை (கொலோ 4:16)

12 தெசலோனிக்கேயர் சபை (1தெச 1:1 2தெச 1:1)

13 முதற் பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபை (எபி 12:23)

14 எபேசு சபை (வெளி 2-3)

15 சபைகள் (வெளி 22:16)

சபையின் பொதுவான விளக்கம்

1 ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு காரியத்தைப் பற்றி விவாதிப்பதற்காகக் கூடியிருக்கும் ஜனங்கள் (அப 19:32,39,41)

2 ஏதேசசையாகவோ அல்லது அமைப்பின் பேரிலோ கூடியிருக்கும் ஜனங்கள் (அப 19:32,41)

3 செப்துவஜிந்தில் இஸ்ரவேல் ஜனங்கள் கூடி வருவது சபை என்று அழைக்கப்பட்டிருக்கிறது. (உபா 31:30; யோசு 8:35, நியா 21:8, 1நாளா 29:1)

4 அழைக்கப்பட்ட ஜனங்கள் கூடுவது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட ஜனங்கள் (அப 7:38; எபி 2:12)

5 தேவனை ஆராதனை செய்வதற்காக கூடியிருக்கும் விசுவாசிகளின் கூட்டம் (1கொரி 11:18; 1கொரி 14:4-5, 12, 19, 23,28,35; எபி 2:12)

6 புதிய ஏற்பாட்டுக் காலத்தில் சபை என்பது யூதரிடத்திலிருந்தும் புறஜாதியாரிடத்திலிருந்தும் அழைக்கப்பட்டவர்களைக் குறிக்கும் (1கொரி 12:13; எபே 2:14-15) இவர்கள் கிறிஸ்துவின் சரீரம் என்றும் அழைக்கப்பட்டார்கள் (மத் 16:18 1கொரி 10:32; 2கொரி 12:28 2கொரி 15:9; கலா 1:13; எபே 1:22 எபே 3:10,21; எபே 5:23-32; பிலி 3:6 கொலோ 1:18,24; 1தீமோ 3:5,15)

7 ஒருகுறிப்பிட்ட காரியத்தை விவாதிப்பதற்காக பல சபைகளின் பிரதிநிதிகள் கூடியிருக்கும் கூட்டம் (அப 15:22)

8 ஒரிடத்திலுள்ள விசுவாசிகள் தேவனை ஆராதிப்பதற்காகவும், தேவனுடைய ஊழியத்தை விவாதிப்பதற்காகவும் வழக்கமாகவும் ஒழுங்காகவும் கூடுவது. (மத் 18:17; அப 2:47; அப 5:11 அப் 8:1,3; அப் 11:22,26, அப 12:1,5; அப் 13:1; அப 14:23,27, அப 15:3-4, அப 18:22 அப 20:17,28; ரோமர் 16:1,5,23 1கொரி 1:2; 1கொரி 4:17; 1கொரி 6:4 1கொரி 11:18,22, 1கொரி 14:4-5,12, 19,23,28,35; 1கொரி 16:19 2கொரி 1:1; பிலி 4:15, கொலோ 4:15-16 1தெச 1:1; 2தெச 1:1; 1தீமோ 3:5, 1தீமோ 5:16; பிலே 1:2, யாக் 5:14, 1பேதுரு 5:13, 3யோவான 1:6-10, வெளி 2:1,8,12,18 வெளி 3:1,14

9 பரலோகத்தில விசுவாசிகள் கூடுவது (எபி 12:23; எபி 2:12

10 விசுவாசிகளின ஸ்தலசபைகள் எல்லாம் சேர்ந்தது (அப 9:31, அப் 15:41; அப 16:5; அப 19:37, ரோமர் 16:4,16; 1கொரி 7:17, 1கொரி11:16; 1கொரி 14:33-34, 1கொரி 16:1,19; 2கொரி 8:1,18 24. 2கொரி 11:8,28; 2கொரி 12:13 கலா 1:2,22; 1தெச 2:14, 2தெச 1:4, வெளி 1:4,11,20; வெளி 2:7,11,17,23,29, வெளி 3:6,13,22; வெளி 22:16

7 அதிகாரம்

"வனாந்தரத்திலே சபைக்குள்ளிருந்தவன்" - வனாந்தரத்திலுள்ள சபை என்பது எகிப்திலிருந்து அழைத்து வரப்பட்ட இஸ்ரவேல் ஜனங்களைக் குறிக்கும். மோசேயின் உடன்படிக்கையின் பிரகாரம் இவர்கள் தேவனுடைய பிரதிநிதியாக இருக்க வேண்டும். மேசியா இந்த உலகத்திற்கு வரும்வரையிலும் யூதர்கள் தேவனுடைய சந்ததியாராகத் தங்களை வெளிப்படுத்திக் காண்பிக்க வேண்டும் (மத் 7:11, லூக்கா 16:16, கலா 3:19)

"சீனாய்மலையில் தன்னுடனே பேசின தூதன்" - (அப் 7:30)

"ஜீவவாக்கியங்கள்" (lively oracles) - இந்த வசனத்தில் ஜீவவாக்கியம் என்பது மோசேயின் பிரமாணத்தைக் குறிக்கும். இந்தப் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்தால் ஜீவன் உண்டு என்பது பழைய ஏற்பாட்டுப் பிரமாணம் (ரோமர் 3:2). ஆவது வசனத்தில் வாக்கியம் என்பது பழைய ஏற்பாட்டைப் பொதுவாகக் குறிக்கும் சொல்லாகும். எபி 5:12, 1பேதுரு 4:11 ஆகிய வசனங்களில் வாக்கியம் என்பது பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டு வெளிப்பாட்டையும் குறிக்கும் சொல்லாகும். ஜீவவாக்கியங்கள் என்பது இரண்டு கிரேக்க வார்த்தைகளின் மொழிபெயர்ப்பாகும். அவையாவன

வாக்கியம் (oracles) - λόγιον - logion - 3051

பெயர்ச்சொல் - வல்லவனுமான வாக்கியம்

ஜீவித்திரு (living) - ζάω - zaoo - 2198

வினைச்சொல் - பிழைத்திரு உயிரோடிரு, ஜீவித்திரு வாழ்ந்திரு சுகசரி உண்டாயிரு ஜீவனம் பண்ணு ஜீவன்

"எகிப்துதேசத்திலிருந்து எங்களை அழைத்துக்கொண்டு வந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம். ஆதலால் எங்களுக்கு முன்செல்லும் தெய்வங்களை எங்களுக்கு உண்டுபண்ணும் என்று சொன்னார்கள்" - இதன் வரலாற்றை யாத் 32 ஆவது அதிகாரத்தில் நாம் வாசித்தறியலாம்

(ஐ) இஸ்ரவேல் தொடர்ந்து கலகம் பண்ணியதால் தேவன் இஸ்ரவேலை தள்ளிவிட்டார் - (நியா 2:11-14; ஆமோ 5:25-27)

அப் 7:42 அப்பொழுது தேவன் அவர்களை விட்டு விலகி, வானசேனைக்கு ஆராதனை செய்ய அவர்களை ஒப்புக்கொடுத்தார். அதைக் குறித்து, இஸ்ரவேல் வம்சத்தாரே, நீங்கள் வனாந்தரத்திலிருந்த நாற்பது வருஷமளவும் பலிகளையும் காணிக்கைகளையும் எனக்குச் செலுத்தினீர்களோ என்றும்,

அப் 7:43 பணிந்துகொள்ளும்படி நீங்கள் உண்டாக்கின சொரூபங்களாகிய மோளோகின் கூடாரத்தையும், உங்கள் தேவனாகிய ரெம்பான் என்னும் நட்சத்திர சொரூபத்தையும் சுமந்தீர்களே ஆகையால் உங்களைப் பாபிலோனுக்கு அப்புறத்திலே குடிபோகப்பண்ணுவேன் என்றும் தீர்க்கதரிசிகளின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறதே.

அப் 7:44 மேலும் நீ பார்த்த மாதிரியின்படியே சாட்சியின் கூடாரத்தை உண்டுபண்ணுவாயாக என்று மோசேயுடனே பேசினவர் கட்டளையிட்ட பிரகாரமாக, அந்தக் கூடாரம் வனாந்தரத்திலே நம்முடைய பிதாக்களோடு இருந்தது.

அப் 7:45 மேலும் யோசுவாவுடனேகூட நம்முடைய பிதாக்கள் அதைப் பெற்றுக் கொண்டு, தேவன் அவர்களுக்கு முன்பாகத் துரத்திவிட்ட புறஜாதிகளுடைய தேசத்தை அவர்கள் கட்டிக் கொள்ளுகையில், அதை அந்த தேசத்தில் கொண்டு வந்து தாவீதின் நாள் வரைக்கும் வைத்திருந்தார்கள்.

அப் 7:46 இவன் தேவனிடத்தில் தயவு பெற்றபடியினால் யாக்கோபின் தேவனுக்கு ஒரு வாசஸ்தலத்தைத் தான் கட்ட வேண்டுமென்று விண்ணப்பம் பண்ணினான்.

அப் 7:47 சாலொமோனோ அவருக்கு ஆலயத்தைக் கட்டினான்.

அப் 7:48 ஆகிலும் உன்னதமானவர் கைகளினால் செய்யப்பட்ட ஆலயங்களில் வாசமாயிரார்.

7 அதிகாரம்

அப 7:49 வானம் எனக்குச் சிங்காசனமும் பூமி எனக்குப் பாதபடியுமாயிருக்கிறது. எனக்காக நீங்கள் எப்படிப்பட்ட வீட்டைக் கட்டுவீர்கள் நான் தங்கியிருக்கத் தக்க ஸ்தலம் எது.

அப 7:50 இவைகள் எல்லாவற்றையும் என்னுடைய கரம் உண்டாக்க வில்லையா என்று கர்த்தர் உரைக்கிறார் என்று தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே

"தேவன் அவர்களை விட்டு விலகி வானசேனைக்கு ஆராதனை செய்ய அவர்களை ஒப்புக்கொடுத்தார்" - (ரோமர் 1:24,28)

"இஸ்ரவேல் வம்சத்தாரே" - ஆமோ 5:25 ஆகிய வசனம் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. யூதருடைய வேதாகமத்தில் சிறிய தீர்க்கதரிசிகளின் புஸ்தகங்களெல்லாம் சேர்ந்து ஒரே புஸ்தகமாகக் கோர்க்கப் பட்டிருக்கிறது.

"நீங்கள் வனாந்தரத்திலிருந்த நாற்பது வருஷமளவாயில் காணிக்கைகளையும் [illegible]களையும் எனக்குச் செலுத்தினீர்களோ இதற்கு இல்லை என்றே பதில் கூறவேண்டும் அவர்களுடைய இருதயத்திலும் அவர்களுடைய கரங்களின் கிரியைகளிலும் அவர்கள் விக்கிரகாராதனையை விட்டு வெளியே வரவில்லை. (அப 7:43)

"மோளோகு" (Moloch) அம்மோனியரின் தெய்வம் இந்தத் தெய்வத்திற்கு ஜனங்கள் தங்களுடைய பிள்ளைகளைத் தீக்கடக்கப் பண்ணி பலியிடுவார்கள் உபா 18:10 லேவி 18:21, லேவி 20:2; 2இராஜா 16:3 2இராஜா 21:6 2இராஜா 23:10 எரே 19:5 எரே 32:35) மோளோகு சூரிய தேவன் என்றும் அழைக்கப்படுகிறது. மோளோகின் சிலையை வெண்கலத்தால் செய்தார்கள் இதற்கு எருதின் முகமும், மனுஷனுடைய கைகளும் இருந்தது. இந்தச் சிலைக்கு நடுவில் இதைச் சூடுபண்ணுவதற்கு ஒரு அடுப்பு இருக்கும்.

அதில் எப்போதும் அக்கினி எரிந்து கொண்டேயிருக்கும். மோளோகின் கரங்கள் எப்போதும் நீட்டப்பட்டதாகவும், அக்கினியினால் சூடு ஏறியதாகவும் இருக்கும். பெற்றோர் தங்கள் பிள்ளைகளை மோளோகின் சூடான கரங்களில் வைத்து, பலியிடுவார்கள் சூடு தாங்காமல் சிறு பிள்ளைகள் அழும்போது அதன் சத்தம் பெற்றோருக்கும் மற்றோருக்கும் கேட்காமல் இருப்பதற்காக வாத்தியக்கருவிகளை மோளோகின் ஆசாரியர்கள் அதிக தொனியோடு இசைப்பார்கள்

"ரெம்பான்" (Remphan) - சூரியன் என்பதைக் குறிக்கும் காப்டிக் (Coptic) மொழிபெயர் ஆமோ 5:26 ஆகிய வசனத்தில் நட்சத்திர ராசி (Chiun) என்று கூறப் பட்டிருக்கிறது புறஜாதி தேசத்தார் யுத்தம் பண்ணப்போகும்போது தங்களுடைய தெய்வங்களையும் யுத்தக் களத்திற்கு சப்பரங்களில் தூக்கிச் செல்வது வழக்கம் பிரயாணம் பண்ணும்போது இவ்வாறு தங்கள் தெய்வங்களைத் தூக்கிச் சுமப்பார்கள் இந்தத் தெய்வங்களுக்குச் சிறிய கோவில்களையும் கட்டுவார்கள் (அப 7:24 இஸ்ரவேல் ஜனங்களும் வனாந்தரத்திலே புறஜாதியாரைப் போன்று மோளோகு நட்சத்திர ராசிகள் ஆகியவற்றின் விக்கிரகங்களைச் சப்பரங்களிலே சுமந்து சென்றார்கள் இதற்காகத் தேவன் அவர்களைத் தமஸ்குவிற்கு அப்பாலே குடியோட்டுவேன் என்று ஆமோஸ் மூலமாக எச்சரித்தார் (ஆமோ 5:25-27, அப 7:43) இஸ்ரவேல் ஜனங்கள் அசீரிய தேசத்திற்கும், மேதிய தேசத்திற்கும் அடிமைகளாக இழுத்துச் செல்லப்பட்டார்கள் (2இராஜா 17:6) ஸ்தேவான் இவர்களுக்குப் பிரசங்கம் பண்ணி முடித்த பின்பு, யூதர்களை ரோமப்பேரரசர் துன்புறுத்தினார்கள் பழைய ஏற்பாட்டுக் கால இஸ்ரவேல் ஜனங்களைப் போல இவர்களும் தேசமெங்கும் சிதறிப்போனார்கள்

"யோசுவாவுடனேகூட நம்முடைய பிதாக்கள் அதைப் பெற்றுக்கொண்டார்கள்" ஒரு சில பதிப்புக்களில் இந்த வாக்கியம் "இயேசுவுடனே கூட" என்றிருக்கிறது இது "யோசுவாவுடனே கூட" என்றிருக்க வேண்டும். (எபி 4:8) இயேசு என்னும் பெயருக்கும் யோசுவா என்னும் பெயருக்கும் "இரட்சகர்" (Savior) என்றே பொருள்

7 அதிகாரம்

"அதை அந்த தேசத்தில கொண்டு வந்து தாவீதின் நாள்வரைக்கும் வைத்திருந்தார்கள்" - யோசுவாவின் காலத்திலிருந்து தாவீதின் காலம் வரையிலும் இஸ்ரவேல ஜனங்கள் கானான் தேசத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக தொடர்ந்து சுதந்தரித்துக் கொண்டு வந்தார்கள்

வாசஸ்தலம் (tabernacle) - σκήνωμα - skeenooma - 4638

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - வாசஸ்தலம (habitation) அப 7:46; 2பேதுரு 1:13-14) இந்த வார்த்தையும் அப 7:44 ஆவது வசனத்தில உள்ள வார்த்தையும ஒன்றலல

"உன்னதமானவர் கைகளினால் செய்யப்பட்ட ஆலயங்களில வாசமாயிரார்" - லூக்கா 1:32 அப 17:34; மாற்கு 14:58 எபே 2:11 எபி 9:11,24

"வானம் எனக்குச் சிங்காசனமும் பூமி எனக்குப் பாதபடியுமாயிருக்கிறது" - ஏசா 66:1-2, 1இராஜா 8:27.

"நான தங்கயிருக்கத்தக்க ஸ்தலம் எது" "தங்குதல" என்பதற்கான கிரேக்க வார்த்தை"கட்டாபாவோசிஸ" (katapausis) என்பதாகும். இதற்கு ஒருவனை அதிகாரத்திலிருந்து அகற்றுதல ஒடுக்குதல என்று பொருள (a putting down; to depose one from power) இந்த வார்த்தை இந்த வசனத்திலும், எபி 3:11,18 எபி 4:1,3,5,10,11 ஆகிய வசனங்களிலும் பயனபடுத்தப்பட்டிருக்கிறது.விரோதியானவன மறுபடியும் எழும்பி தொடர்ந்து தராதவாறு அவனை அழுத்திவிட்டு ஓயவாகத் தங்குதல என்பது இந்த வார்த்தையின பொதுவான பொருளாகும். (அப 2:35,மத் 22:44) மீட்பின கிரியையையும், சத்துருவின கலகத்தை அடக்குவதற்காக யுத்தம் பண்ணுவதையும் தேவன ஆயிரம் வருஷ அரசாட்சியின இறுதியில் முடித்துவிட்டு ஓய்ந்திருப்பார அப்போது தேவன் எல்லாவற்றிற்கும் எலலாமாக இருப்பார் (1கொரி 15:24-28 எபே 1:10 வெளி 21:3-7; வெளி 22:3)

தங்கியிருத்தல் (rest)
κατάπαυσις - katapausis - 2663

பெண்பால் பெயர்ச்சொல் - தங்கியிருத்தல், இளைப்பாறுதல்

(ஏ) இஸ்ரவேல் இன்னும் கலகம் பண்ணுகிறார்கள் - (மத் 21:42-46, 23:37-39 26:25

அப் 7:51 வணங்காக் கழுத்துள்ளவர்களே இருதயத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம் பெறாதவர்களே உங்கள் பிதாக்களைபபோல நீங்களும் பரிசுத்த ஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறீர்கள்

அப 7:52 தீர்க்கதரிசிகளில் யாரை உங்கள் பிதாக்கள் துன்பப்படுத்தாமலி ருந்தார்கள? நீதிபரருடைய வருகையை முன்னறிவித்தவர்களையும் அவர்கள் கொலை செய்தார்கள இப்பொழுது நீங்கள அவருக்குத் துரோகிகளும அவரைக் கொலை செய்த பாதகருமாயிருக்கிறீர்கள

அப 7:53 தேவதூதரைக்கொண்டு நீங்கள நியாயப்பிரமாணத்தைப பெற்றிருந்தும், அதைக் கைக் கொள்ளாமற் போனீர்கள என்றான

"வணங்காக் கழுத்துள்ளவர்களே" - இதற்கான கிரேக்க வார்த்தை "ஸ்கெலெரோட்ராக்கேலோஸ்"(skleerotrachee los) என்பதாகும். புதிய ஏற்பாட்டில் இந்த வார்த்தை இந்த வசனத்தில மட்டுமே பயன்படுத்தப் பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டின செப்துவஜிந்த் பதிப்பில் நாம் இந்த வார்த்தையைப் பல வசனங்களில காணலாம். (யாத் 33:3,5, யாத் 34:9, உபா 9:6,13, உபா 31:27; 2நாளா 30:8, நீதி 29:1 உழுவதற்குப் பயன்படாத கொழுத்த கழுத்துள்ள எருதை இந்த வார்த்தை குறிக்கிறது. எருதின கழுத்து கொழுத்திருப்பதினால அதன்மீது நுகத்தை வைக்கமுடியாது. இந்த எருதால் வலதுபுறமாகவோ, இடதுபுறமாகவோ திரும்ப முடியாது. இப்படிப்பட்ட கொழுத்த எருதுகளை உழுவதற்குப் பயன்படுத்தவும் முடியாது.

7 அதிகாரம்

வணங்காக்கழுத்துள்ள (stiffnecked) σκληροτράχηλος skleerotracheelos - 4644

பெயரடை - வணங்காக்கழுத்துள்ள

"இருதயத்திலும் செவிகளிலும் விருத்த சேதனம் பெறாதவர்களே" - வேதாகமத்தில் பலவிதமான விருத்தசேதனமின்மையைக் குறித்து நாம் வாசிக்கிறோம் அவையாவன

1 செவிகளின் விருத்தசேதனமின்மை (அப் 7:51; எரே 6:10)

2 உதடுகளின் விருத்தசேதனமின்மை (யாத் 6:12)

3 இருதயத்தின் விருத்தசேதனமின்மை (அப் 7:51; லேவி 26:41; உபா 10:16 எரே 4:4; எரே 9:26)

4 மாம்சத்தின் விருத்தசேதனமின்மை (ஆதி 17:11)

"பரிசுத்தஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறீர்கள்" - எதிர்த்து நில் என்பதன் கிரேக்க வார்த்தை "ஆண்டிபிப்டோ" (antipiptoo) என்பதாகும். முரண்டு பிடிக்கும் கன்றுக்குட்டியை இழுத்துச் செல்ல முடியாது அது தீர்மானமாக நகரவே நகராது இதைப் போன்ற பொருளை இந்த வார்த்தை குறிப்பிடுகிறது. (ஓசி 4:16; ஓசி 7

எதிர்த்து நில் (resist) - ἀντιπίπτω - antipiptoo - 496

வினைச்சொல் - எதிர்த்து நில்

பரிசுத்த ஆவிக்கு விரோதமாக இவர்கள் எப்பொழுதும் எதிர்த்து நின்றார்கள் பரிசுத்த ஆவிக்கு ஜனங்களால் எதிர்த்து நிற்க முடியும் பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்த முடியும் இதுபோன்று பரிசுத்த ஆவியோடு தொடர்பு படுத்தி பல காரியங்களைச் செய்ய முடியும் அவையாவன

1 எதிர்க்கலாம் (அப் 7:51)

2 சோதிக்கலாம் (அப் 5:9)

3 பொய் சொல்லலாம் (அப் 5:3-4)

4 துக்கப்படுத்தலாம் (எபே 4:30)

5 விரோதமாகத் தூஷணம் பேசலாம் (மத் 12:31-32)

6 நிந்திக்கலாம் (எபி 6:4-6 எபி 10:26-29)

7 அவித்துப் போடலாம் (1தெச 5:19)

8 விசனப்படுத்தலாம் (சங் 78:40 ஏசா 63:10)

9 சாந்திபண்ணலாம் (சக 6:8)

10 ஐக்கியமாய் இருக்கலாம் (பிலி 2:1)

"உங்கள் பிதாக்களைப்போல நீங்களும் பரிசுத்தஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறீர்கள்" - இவர்களுடைய பிதாக்களும் கலகக்காரர்கள் இவர்களும் கலகக்காரர்கள் பரிசுத்த ஆவியானவர் இவர்களிடத்தில் தொடர்ந்து கிரியை செய்து கொண்டு வந்தார் இவர்களைக் கண்டித்து உணர்த்தினார் ஆனால் இவர்களோ பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாக எதிர்த்து நிற்கிறார்கள் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்கும் எச்சரிப்புகளுக்கும் நாம் செவிகொடுக்க வில்லையென்றால் அழிவு நமக்கு நிச்சயம்.

"தீர்க்கதரிசிகளில் யாரை உங்கள் பிதாக்கள் துன்பப்படுத்தாமலிருந்தார்கள்?" அவர்கள் பரிசுத்த ஆவியானவருக்கு எதிர்த்து நின்றது மட்டுமல்ல பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்ட அனைவரையும் துன்பப்படுத்தினார்கள் நீதிபரருடைய வருகையை முன்னறிவித்தவர்களையும் அவர்கள் கொலை செய்தார்கள்

"நீதிபரர்" (Just One) - இந்த வார்த்தை இயேசு கிறிஸ்துவைக் குறிக்கும். (அப் 3:14, அப் 22:14)

"தேவதூதரைக்கொண்டு அவர்கள் நியாயப்பிரமாணத்தைப் பெற்றிருந்திருந்தார்கள்" - நியாயப்பிரமாணம் என்பது ஒரு நியமனத்தை அல்லது ஒரு ஏற்பாட்டைக் குறிக்கும் வார்த்தையாகும். (arrangement, ordinance) (ரோமர் 13:2) பிரமாணத்தைக் கொடுக்கும் போது தேவதூதரும் இருந்தார்கள் பிரமாணத்தைக் கொடுப்பதற்கு தேவதூதரும் பயன்படுத்தப் பட்டார்கள் (அப் 7:38,53 சங் 68:17, கலா 3:19 எபி 2:2)

அப்போஸ்தலர் – தொகுப்புரை

7 அதிகாரம்

நியாயப்பிரமாணம் (disposition) - διαταγή - diatagee - 1296

பெண்பால் பெயர்ச்சொல் - நியமம் நியாயப்பிரமாணம்

(4) ஸ்தேவானின் தரிசனம் - பரலோகம், தேவன், கிறிஸ்து

அப் 7:54 இவைகளை அவர்கள் கேட்டபொழுது, மூர்க்கமடைந்து அவனைப் பார்த்துப் பல்லைக் கடித்தார்கள்.

அப் 7:55 அவன் பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவனாய், வானத்தை அண்ணாந்து பார்த்து, தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டு:

அப் 7:56 அதோ, வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் என்றான்.

"இவைகளை அவர்கள் கேட்டபொழுது மூர்க்கமடைந்தார்கள்" (cut to the heart) (அப் 5:33)

யூதர்களை மூர்க்கமடையச் செய்த ஸ்தேவானின் குற்றச்சாட்டுக்கள்

1 வணங்காக் கழுத்துள்ளவர்கள் (அப் 7:51)

2 இருதயத்தில் விருத்தசேதனம் பெறாதவர்கள் (அப் 7:51)

3 செவிகளில் விருத்தசேதனம் பெறாதவர்கள் (அப் 7:51)

4 பரிசுத்த ஆவிக்கு எப்போதும் எதிர்த்து நிற்கிறவர்கள் (அப் 7:51)

5 மேசியாவை மறுதலித்தவர்கள் அப் 7:52

6 மேசியாவைக் கொலைசெய்த பாதகர்கள் (அப் 7:52)

7 நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளாதவர்கள் (அப் 7:53

யூதர்கள் மூர்க்கமடைந்ததினால் செய்த காரியங்கள்

1 தங்கள் பல்லைக் கடித்தார்கள் (அப் 7:54)

2 மனந்திரும்பாமல் தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தினார்கள் (அப் 7:54,57)

3 பழிவாங்க வேண்டுமென்று உரத்த சத்தமாய்க் கூக்குரலிட்டார்கள் (அப் 7:57)

4 சுவிசேஷத்தைக் கேட்காமல் தங்கள் காதுகளை அடைத்துக் கொண்டார்கள் (அப் 7:57)

5 கலகம் பண்ணுவதில் ஒன்றுகூடி இருந்தார்கள் (அப் 7:57

6 பிரசங்கியாரை நகரத்திற்குப் புறம்பே தள்ளினார்கள் (அப் 7:58

7 பிரசங்கியாரைக் கல்லெறிந்து கொன்றார்கள் (அப் 7:58

"அவன் பரிசுத்தஆவியினாலே நிறைந்தவனாய், வானத்தை அண்ணாந்து பார்த்தான்" - ஸ்தேவான் கண்ட காரியங்கள் (அப் 7:55-56)

1 வானங்கள் திறந்திருக்கிறது

2 தேவனுடைய மகிமை

3 பிதாவாகிய தேவன்

4 தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறார்

"தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதைக் கண்டான்" திரித்துவத்தில் உள்ள மூவரும் இங்கு வருகிறார்கள் இம்மூவரும் தனித்தனியாக ஆள்தத்துவம் உடையவர்கள் பிதாவாகிய தேவனும் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் இந்த வசனத்திலே தனித்தனியாக இருப்பதை வாசிக்கிறோம். திரித்துவத்தில் மூன்றாம் நபராகிய பரிசுத்த ஆவியானவர் ஸ்தேவானை நிரப்பிக் கொண்டிருந்தார் (அப் 7:55-56)

7 அதிகாரம்

"மனுஷகுமாரன்" (Son of man) - மனுஷகுமாரன் என்னும் வாக்கியம் புதிய ஏற்பாட்டில் 88 இடங்களில் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. நான்கு சுவிசேஷங்களிலும் இயேசு கிறிஸ்துவானவர் தம்மை மனுஷகுமாரன் என்று 85 இடங்களில் அழைத்திருக்கிறார் (யோவான் 1:51)

"தேவனுடைய வலதுபாரிசம்" - இயேசு கிறிஸ்துவிற்கு உரிய இடம் இதுதான். தமது மகிமையைத் திரும்பப் பெற்றுக் கொண்டதினாலும், தமது நீதியினாலும் இயேசு கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்திற்கு உரியவராக இருக்கிறார் (யோவான் 17:5; எபே 1:20-23; பிலி 2:9-11; எபி 1:3-4; அப 2:33)

(5) ஸ்தேவான் முதலாவது இரத்தச் சாட்சியாக மரிக்கிறான் - பவுலைப் பற்றிய முதலாவது குறிப்பு - (அப 22:20)

அப 7:57 அப்பொழுது அவர்கள் உரத்தசத்தமாய்க் கூக்குரலிட்டுத் தங்கள் காதுகளை அடைத்துக் கொண்டு, ஒருமனப்பட்டு அவன்மேல் பாய்ந்து,

அப 7:58 அவனை நகரத்துக்குப் புறம்பே தள்ளி, அவனைக் கல்லெறிந்தார்கள். சாட்சிக்காரர் தங்கள் வஸ்திரங்களைக் கழற்றி, சவுல் என்னப்பட்ட ஒரு வாலிபனுடைய பாதத்தினருகே வைத்தார்கள்.

அப 7:59 அப்பொழுது: கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக் கொள்ளும் என்று ஸ்தேவான் தொழுது கொள்கையில் அவனைக் கல்லெறிந்தார்கள்.

அப 7:60 அவனோ முழங்காற்படியிட்டு: ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி, நித்திரையடைந்தான்.

"சாட்சிக்காரர் தங்கள் வஸ்திரங்களைக் கழற்றி, சவுல் என்னப்பட்ட ஒரு வாலிபனுடைய பாதத்தினருகே வைத்தார்கள்" - சாட்சிக்காரர் என்பது முதலாவது கல்லெறிந்தவர்களைக் குறிக்கும் வாக்கியமாகும். (உபா 17:7) நகரத்திற்கு வெளியே கல்லெறிந்து கொல்ல வேண்டும் (லேவி 24:23)

"சவுல் என்னப்பட்ட ஒரு வாலிபன்" - வாலிபன் (young) என்னும் வாக்கியம் 20 முதல் 40 வயதிற்குட்பட்ட நபரைக் குறிக்கும் (அப 7:58; அப 20:9; அப 23:17,18,22)

வாலிபன் (young) - νεανίας - neanias - 3494

ஆண்பால் பெயர்ச்சொல் - வாலிபன்

"சவுல்" - இந்த வசனத்தில்தான் சவுலின் பெயர் முதன் முறையாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

"கர்த்தராகிய இயேசுவே" - என்றழைத்து ஸ்தேவான் தொழுதுகொண்டான். இயேசு கிறிஸ்துவிடம் ஜெபிக்கிறான். திரித்துவத்தில் இயேசு கிறிஸ்துவும் ஒருவர் என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும்.

"என் ஆவியை ஏற்றுக்கொள்ளும்" - ஒருவன் மரிக்கும்போது அவனுடைய ஆவி மரித்துப்போன சரீரத்தில் இருப்பதில்லை (யாக் 2:26; மத் 10:28; லூக்கா 12:5; 2கொரி 5:8; பிலி 1:21-24; 1பேதுரு 3:4; எபி 12:23; வெளி 6:9-11)

"அவனோ, முழங்காற்படியிட்டு" - ஸ்தேவான் மரித்துக் கொண்டிருக்கும் வேளையிலும் கர்த்தருக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபிக்கிறான். முழங்காலில் நின்றவாறே மரிக்கிறான். தன்னைக் கொலைசெய்தவர்கள் மீது ஸ்தேவானுக்கு எவ்வித வெறுப்போ, காழ்ப்புணர்ச்சியோ இல்லை.

"இப்படிச் சொல்லி, நித்திரையடைந்தான்" - இந்த ஜெபத்திலும் லூக்கா 23:34 ஆவது வசனத்திலுள்ள ஜெபத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம். மரிக்கும்போது சரீரம் நித்திரையடையும். புதைகுழியில் என்ன நடைபெறுகிறது என்பது மரித்துப்போன உடலுக்கு ஒன்றும் தெரியாது. சரீரம் மரித்த பின்பு ஆவி உயிருடனே இருக்கும். நரகத்திற்கோ, அல்லது பாதாளத்திற்கோ அது தேவனுடைய சித்தத்தின் பிரகாரம் செல்லும் (லூக்கா 16:19-31; அப் 7:59; ஏசா 14:9; வெளி 20:11-15)

8 அதிகாரம்

(6) சபையார் எல்லாருக்கும் துன்பம் உண்டாயிற்று - விசுவாசிகள் சிதறிப்போனார்கள் - (4:1 5:17,25; 8:1; 9:1; 12:1)

அப 8:1 அவனைக் கொலைசெய்கிறதுக் சவுலும் சம்மதித்திருந்தான். அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர்தவிர மற்ற யாவரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறுண்டு போனார்கள்

"அவனைக் கொலைசெய்கிறதுக் சவுலும் சம்மதித்திருந்தான்" - இந்த வாக்கியத்திற்குச் சந்தோஷமாக சம்மதம் தெரிவித்தான் என்று பொருள். ஸ்தேவானைக் கொலை பண்ணியதினால் சவுல் மிகுந்த சந்தோஷமாக இருந்தான்

சம்மதி (consenting) - συνευδοκέω - syneudokeoo - 4909

வினைச்சொல் - உடன்படு, சம்மதி, பிரியப்படு

கொலை (death) - ἀναίρεσις - anairesis - 336

பெண்பால் பெயர்ச்சொல் - கொலை (murder) (அப 8:1, அப 22:20)

"எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று" - இந்த சபையே முதலாவது கிறிஸ்தவ சபை. ஆகையினால் நம்முடைய ஸ்தலசபை நம்முடைய ஸ்தலத்தில் முதலாவது சபை என்று பெருமைப்பட்டுக் கொள்வதில் அர்த்தம் ஒன்றுமில்லை

"அப்போஸ்தலர்தவிர மற்ற யாவரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறுண்டு போனார்கள்" எல்லாத் தேசங்களுக்கும் தமது சுவிசேஷச் செய்தியை பரப்ப வேண்டுமென்று தேவன் சித்தம் கொண்டிருந்தார். இதற்காக அவர் சபைக்குத் துன்பம் வருவதை அனுமதித்தார். தம்முடைய பிள்ளைகள் சிதறுண்டு போவதையும் அனுமதித்தார்

சிதறுண்டுபோதல் என்பதற்கான கிரேக்க வார்த்தை "டையாஸ்போரா" (diaspora) என்பதாகும். அப் 2:5-11 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் தேசங்களிலிருந்து வந்த ஜனங்கள் எருசலேமில் தங்கி இருந்தார்கள். இந்த பட்டணத்தில் இரட்சிக்கப்பட்டவர்கள் எருசலேமிலுள்ள சபைக்குத் துன்பம் உண்டானபோது எருசலேமை விட்டு தங்கள் சொந்த தேசங்களுக்குத் திரும்பிப் போனார்கள். தங்களோடு தாங்கள் பெற்றுக் கொண்ட சுவிசேஷச் செய்தியையும் எடுத்துச் சென்றார்கள். தங்களுடைய தேசங்களில் சபைகளை ஸ்தாபித்தார்கள் (அப 8:4, அப 11:19-21)

சிதறு (scatter) - διασπείρω - diaspeiroo - 1289

வினைச்சொல் - சிதறு

சிதறியிருத்தல் (scattered) - διασπορά - diaspora - 1290

பெண்பால் பெயர்ச்சொல் - சிதறியிருத்தல்

"அப்போஸ்தலர்தவிர, மற்ற யாவரும்" - சிதறுண்டுபோனார்கள். அப்போஸ்தலர் சிதறிப்போகாமல் இருந்ததே தேவனுடைய [illegible]

(7) ஸ்தேவானின் அடக்கம் - விசுவாசிகளை துன்புறுத்திய சவுல் - (1தீமோ 1:13)

அப் 8:2 தேவபக்தியுள்ள மனுஷர் ஸ்தேவானை எடுத்து அடக்கம்பண்ணி, அவனுக்காக மிகவும் துக்கங் கொண்டாடினார்கள்

அப் 8:3 சவுல் வீடுகள்தோறும் நுழைந்து, புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக் கொண்டுபோய், காவலில் போடுவித்து, சபையைப் பாழாக்கிக் கொண்டிருந்தான்

"தேவபக்தியுள்ள மனுஷர் ஸ்தேவானை எடுத்து அடக்கம்பண்ணினார்கள்" - மரித்தோரை அப்படியே விட்டுவிட மாட்டார்கள். யார் மரித்தாலும் அவரை அடக்கம் பண்ணுவார்கள். தேவபக்தியுள்ள மனுஷர் தங்களுடைய நற்குணத்தினால் ஸ்தேவானுடைய மரித்த சடலத்தை எடுத்து அடக்கம் பண்ணினார்கள்

8 அதிகாரம்

"அவனுக்காக மிகவும் துக்கங்கொண்டாடினார்கள்" - பொதுவாக ஆலோசனைச் சங்கத்தார் ஒருவனைக் குற்றவாளியாகத் தீர்மானம் பண்ணி அவனைக் கல்லெறிந்து கொன்றுவிட்டால் அந்த மனுஷனுக்காக யாரும் துக்கங்கொண்டாட மாட்டார்கள். ஆனால் இங்கோ ஸ்தேவானுக்காக தேவபக்தியுள்ள மனுஷர் மிகவும் துக்கங்கொண்டாடினார்கள்.

"சவுல் சபையைப் பாழாக்கிக் கொண்டிருந்தான்" - பாழாக்குதல் என்பதற்கான கிரேக்க வார்த்தை "லிமாயனோ" (lymainoo) என்பதாகும். இதற்கு பழிவாங்குதல், அடித்துக் குதறுதல் என்று பொருள் கூறலாம்.

பாழாக்கு (havock) - λυμαίνω - lymainoo - 3075

வினைச்சொல் - பாழாக்கு

"சவுல் வீடுகள்தோறும் நுழைந்து புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக் கொண்டுபோனான்" விசுவாசிகள் ஆண்களாக இருந்தாலும் பெண்களாக இருந்தாலும் சிறியோராக இருந்தாலும் பெரியோராக இருந்தாலும் சவுல் எந்தவித பாகுபாடும் காட்டாமல் ஈவு இரக்கமில்லாமல் அவர்களைப் பிடித்து இழுத்துக் கொண்டுபோய், ஆலோசனைச் சங்கத்தின் நியாயாதிபதிகளிடத்தில் ஒப்புவித்தான்.

"அவர்களைக் காவலில் போடுவித்தான்" ஒருவனுக்கு மரண தண்டனை கொடுக்கும் அதிகாரம் ரோமருக்கு மட்டுமே இருந்தது. ஆலோசனைச் சங்கத்தார் ஒருவனைக் காவலில் போட்டு, சிறையில் அடைக்கலாம். தண்டிக்கலாம். ஆனால் அவர்களுக்கு மரணதண்டனை கொடுக்கும் அதிகாரம் இல்லை. ரோமப் பேரரசின் அனுமதி பெற்று, ஒருவனைக் கொலைசெய்யலாம் (அப் 26:10). அவ்வது ஸ்தேவானைக் கொன்றதுபோல ஜனங்களைத் தூண்டிவிட்டு கொலை பண்ணலாம். சவுல் ஆலோசனைச் சங்கத்தில் அதிகாரியாகப் பணிபுரிந்தான். அவர்களுடைய உத்தரவுகளை நிறைவேற்றுகிறான்.

IV. யூதேயாவிலும் சமாரியாவிலும் சுவிசேஷ ஊழியம் - (8:1-8:15)

1. சிதறிப்போனவர்கள் வசனத்தைப் பிரசங்கிக்கிறார்கள்

அப் 8:4 சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து சுவிசேஷவசனத்தைப் பிரசங்கித்தார்கள்.

"சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து சுவிசேஷவசனத்தைப் பிரசங்கித்தார்கள்" - சுவிசேஷத்தைச் சந்தோஷமாகப் பிரசங்கித்தார்கள். தாங்கள் அறிவிக்கும் சுவிசேஷச் செய்திக்குக் கனமும் முக்கியமும் தந்து பிரசங்கம் பண்ணினார்கள். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் பரவக்கூடாது என்பதற்காக யூதமார்க்கத்தார் சபையைத் துன்புறுத்தினார்கள். இவர்களுடைய துன்பம் தாங்கமுடியாமல் விசுவாசிகள் பல தேசங்களுக்கும் சிதறி ஓடினார்கள். இவர்கள் சிதறி ஓடியது சாத்தானுக்கு வெற்றிபோன்று தெரிந்தது. ஆனால் இயேசு கிறிஸ்து இவர்கள் சிதறி ஓடியதையே தமது சுவிசேஷப் பிரபல்யத்திற்குப் பயன்படுத்தினார்.

சுவிசேஷம் பிரசங்கி (preaching) - εὐαγγελίζω - euangelizoo - 2097

வினைச்சொல் - சுவிசேஷம் பிரசங்கி, நற்செய்தி அறிவி, பிரசங்கி, சுவிசேஷம் அறிவி

2. சமாரியாவில் எழுப்புதல்

(1) பிலிப்புவின் பிரசங்கம்

அப் 8:5 அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான்.

"பிலிப்பு" (Philip) - சுவிசேஷகனாகிய பிலிப்பு (அப் 6:5; அப் 8:5-40; அப் 21:8-9) அப்போஸ்தலன் பிலிப்பல்ல. (லூக்கா 6:14)

8 அதிகாரம்

"சமாரியாவிலுள்ள ஒரு பட்டணம்" - எந்தப் பட்டணம் என்று தெரியவில்லை. பழைய ஏற்பாட்டில் இருந்த பழங்காலத்துப் பட்டணம் சமாரியா என்று அழைக்கப்பட்டது. கி.மு. 128 ஆவது ஆண்டில் ஜான் ஹிர்கானஸ் (John Hyrcanus). சமாரியாப் பட்டணத்தை முழுவதுமாக அழித்துப் போட்டான். இதன்பின்பு, ஏரோது கி.மு. 27 ஆவது ஆண்டில் சமாரியாப் பட்டணத்தைத் திரும்பக் கட்டி, அதற்கு செபஸ்தே (Sebaste) என்று வேறு பெயரிட்டான். அதன் பின்பு யாரும் இந்தப் பட்டணத்தைச் சமாரியா பட்டணம் என்று அழைக்கவில்லை. சமாரிய தேசத்தில் சீகேம் (Sychem) மிகவும் முக்கியமான ஸ்மயப்பகுதியாக இருந்தது. கெரிசீம் மலை சமாரியருடைய தேவாலயம் இருந்த இடமாகும். இந்தப் பட்டணத்தில் இயேசு கிறிஸ்து ஏற்கனவே பலருக்கு ஊழியம் செய்திருக்கிறார். (யோவான் 4:1-42) இந்த வசனத்தில் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணம் என்பது சீகேமைக் குறிக்கலாம்.

"கிறிஸ்துவைக்குறித்துப் பிரசங்கித்தான்" - பிரசங்கித்தல் என்பதற்கான கிரேக்க வார்த்தை "கெருஸ்ஸோ" (keeryssoo) என்பதாகும். பிலிப்பு இயேசுகிறிஸ்துவைக் குறித்து பிரசங்கித்தான். ஒரு தூதன் அறிவிப்பது போல அறிவித்தான் (to proclaim as a herald). இயேசு கிறிஸ்துவைப் பற்றி பிரசங்கிப்பது ஒவ்வொரு விசுவாசிக்கும் நியமிக்கப்பட்டிருக்கிற கடமையாகும். (யோவான் 16:13-15)

பிரசங்கித்தான் (preached)

κηρύσσω - keeryssoo - 2784

வினைச்சொல் - பிரசங்கி, பிரசங்கம் பண்ணு, பிரசித்தம் பண்ணு, கூறு

(2) பட்டணத்தில் மகாபாடியம் எழும்புதல் – (அப் 5:12-38,42)

அப 8:6 பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டு கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப் பட்டுக் கவனித்தார்கள்.

அப 8:7 அநேகரிலிருந்து அசுத்தஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது. அநேகந் திமிர்வாதக்காரரும் சப்பாணிகளும் குணமாக்கப் பட்டார்கள்.

அப 8:8 அந்தப் பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று.

"அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள்" - (அப 1:14)

"பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டு கண்டார்கள்" - அதிசயங்களைக் கேள்விப்படவும் முடியும் காணவும் முடியும். (அப் 8:7; மத் 4:23-24; மத் 11:4-5)

"அசுத்தஆவிகள்" - அசுத்த என்னும் தமிழ்ச்சொல் "அகதர்டோஸ்" (akathartos) என்னும் கிரேக்கச் சொல்லின் மொழிபெயர்ப்பு. 23 இடங்களில் இந்தச் சொல் பிசாசுகளைக் குறிக்கிறது. (மத் 10:1; மத் 12:43; மாற்கு 1:23-27; மாற்கு 3:11,30; மாற்கு 5:2-13; மாற்கு 6:7; மாற்கு 7:25; மாற்கு 9:25; லூக்கா 4:33-36; லூக்கா 6:18; லூக்கா 8:29; லூக்கா 9:42; லூக்கா 11:24; அப 5:16; அப் 8:7; வெளி 16:13; வெளி 18:2) இரண்டு இடங்களில் மறுஜெனக் குறிக்கிறது. (1கொரி 7:14; எபே 5:5)

அசுத்த (unclean) - ἀκάθαρτος - akathartos - (6)

பொருள் - அசுத்த (impure, lewd, or foul)

(அ) சடங்காச்சாரத்தின் படி தீட்டும் அசுத்தமாகவும் இருப்பது

(ஆ) ஆவிக அசுத்தம் எபே 5:5

திமிர்வாதம் (palsies) - παραλύω - paralyoo - 3886

வினைச்சொல் - திமிர்வாதக் காரனாயிரு (paralysis), தளர்ந்த "palsy" (அப் 8:7; அப் 9:33; லூக்கா 5:18,24) "feeble" (எபி 12:12)

8 அதிகாரம்

(3) சீமோன் என்னும் மாய வித்தைக்காரன் இரட்சிக்கப் படுகிறான்- (அப் 13:6-12)

அப 8:9 சீமோன் என்று பேர்கொண்ட ஒரு மனுஷன் அந்தப பட்டணத்திலே மாயவித்தைக் காரனாயிருந்து, தன்னை ஒரு பெரியவனென்று சொல்லி, சமாரியா நாட்டு ஜனங்களைப் பிரமிக்கப் பண்ணிக்கொண்டிருந்தான்

அப 8:10 தேவனுடைய பெரிதான சக்தி இவன்தான் என்று எண்ணி சிறியோர் பெரியோர் யாவரும் அவனுக்குச் செவிகொடுத்துவந்தார்கள்

அப 8:11 அவன் அநேக காலமாய்த் தன்னுடைய மாயவித்தைகளினாலே அவர்களைப் பிரமிக்கப்பண்ணினதினால அவனை மதித்துவந்தார்கள்

அப 8:12 தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக்குறித்து பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்த போது, புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்

அப 8:13 அப்பொழுது சீமோனும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று பிலிப்பைப் பற்றிக்கொண்டு, அவனால் நடந்த அடையாளங்களையும் பெரிய அற்புதங்களையும் கண்டு பிரமித்தான்

"சீமோன் என்று பேர்கொண்ட ஒரு மனுஷன்" (Simon) - இந்த சீமோனைப் பற்றி வரலாற்று ஆசிரியர்கள் சில செய்திகளை எழுதியிருக்கிறார்கள் இவன் ஒரு சுயபெருமைக்காரன் மோசேக்கு நியாயப் பிரமாணத்தைக் கொடுத்ததே தான்தான் என்று இந்த சீமோன் ஜனங்களிடம் சொல்லி வந்தான் தன்னை மேசியாவாகவும், பரிசுத்த ஆவியாகவும் ஜூபித்தராகவும் (Jupiter) ஜனங்கள் மத்தியிலே சீமோன் காண்பித்துக் கொண்டிருந்தான்

மாயவித்தைக்காரன் (sorcery)

μαγεύω mageuoo - 3096

வினைச்சொல் - மாயவித்தைக் காரனாயிரு - சாஸ்திரிகளுடைய வேலையைச் செய்கிறவன் சடங்குகளைச் செய்கிறவன் பெர்சியர் நடுவிலே அக்கினியை வழிபட்டவன் (மத் 2:1)

பிரமிக்கப்பண்ணு (bewitched)

ἐξίστάνω - existanoo - 1839

வினைச்சொல் - மதிமயங்கு ஆச்சரியப்படு, பிரமி, பிரமிக்கப்பண்ணு (to drive out of one's senses; to be amazed beyond measure) (அப 2:7,12; மாற்கு 3:21; 2கொரி 5:13)

"தேவனுடைய பெரிதான சக்தி இவன்தான் என்று எண்ணி சிறியோர் பெரியோர் யாவரும் அவனுக்குச் செவிகொடுத்துவந்தார்கள்" - சீமோன் சில மாயவித்தைகளைச் செய்து வந்தான் ஆகையினால இவன் தேவனுடைய பெரிதான சக்தி என்று ஜனங்கள் சீமோனை நம்பினார்கள் அவன் சொன்னதற்கெல்லாம் செவிகொடுத்து வந்தார்கள்

"தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக்குறித்து பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்" - சீமோனின் வல்லமையைவிட பிலிப்புவின் வல்லமை மகா பெரியது சீமோனிடம் இருந்தது மனுஷ வல்லமை, பிலிப்பு வெளிப்படுத்தியது தெய்வீக வல்லமை. சீமோன் சில மாயவித்தைகளைச் செய்து ஜனங்கள் மத்தியில தன்னைப் பெரியவனாகக் காண்பித்தான் பிலிப்பு பரிசுத்த ஆவியானவரால கிரியை நடப்பித்து, தனக்குள் இருக்கும் பெரியவராகிய இயேசு கிறிஸ்துவை வெளிப்படுத்தினான

பிலிப்புவின் பிரசங்கச் செய்தி

1. தேவனுடைய வார்த்தை (The Word of God) (அப 8:4)
2. கிறிஸ்து (Christ) (அப் 8:5)

அப்போஸ்தலர் – தொகுப்புரை

8 அதிகாரம்

3. தேவனுடைய ராஜ்யம் (The things of the kingdom of God) (அப 8:12; 1கொரி 4:18-20)

4. இயேசு கிறிஸ்துவினுடைய நாமம் (The name of Jesus Christ) (அப 8:12; மாற்கு 16:17; யோவான் 14:12-15; யோவான் 15:16; யோவான் 16:23-26)

பிலிப்புவின் பிரசங்கத்தினால் ஏற்பட்ட விளைவுகள்

1. திரளான ஜனங்கள் மெய் தேவனை விசுவாசித்தார்கள் (அப 8:6,12)
2. அடையாளங்களும், அற்புதங்களும் நடைபெற்றன (அப 8:6-7,12-13)
3. பிசாசுகள் துரத்தப்பட்டன (அப 8:7)
4. பெரிய சந்தோஷம் உண்டாயிற்று (அப 8:8)
5. ஏராளமானோர் தண்ணீரில ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப 8:12-16)
6. பரிசுத்த ஆவியானவர் அருளப்பட்டார் (அப் 8:14-23)

"அவனால் நடந்த அடையாளங்களையும் பெரிய அற்புதங்களையும் கண்டு பிரமித்தார்கள்" பிலிப்புவின் மூலமாகத் தேவனுடைய தெய்வீக வல்லமை வெளிப்பட்டது. பரிசுத்த ஆவியானவர் அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து, தமது வசனத்தை உறுதி பண்ணினார் அப 8:9

(4) இரட்சிக்கப்பட்ட சமாரியர்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் பெறுகிறார்கள் - (மத் 3:6

அப 8:14 சமாரியர் தேவவசனத்தை ஏற்றுக்கொண்டதை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு, பேதுருவையும் யோவானையும் அவர்களிடத்திற்கு அனுப்பினார்கள்

அப 8:15 இவர்கள் வந்தபொழுது அவர்களில் ஒருவனும் பரிசுத்த ஆவியைப் பெறாமல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தை மாத்திரம் பெற்றிருந்தவர்களாகக் கண்டு,

அப 8:16 அவர்கள் பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபம்பண்ணி

அப 8:17 அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள் அப்பொழுது அவர்கள் பரிசுத்தஆவியைப் பெற்றார்கள்

"சமாரியர் தேவவசனத்தை ஏற்றுக் கொண்டதை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு, பேதுருவையும் யோவானையும் அவர்களிடத்திற்கு அனுப்பினார்கள்" - எருசலேமிலும் எழுப்புதல் நடைபெற்றது. முதல் முறையாக அப்போஸ்தலர்கள் எருசலேமைவிட்டு புறப்பட்ட செய்தியை இந்த வசனத்தில் வாசிக்கிறோம்.

"அவர்கள் பரிசுத்தஆவியைப் பெற்றுக் கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபம் பண்ணினார்கள்" இந்த வசனத்திலிருந்து நாம் ஆவிக்குரிய காரியங்கள் பலவற்றைக் கற்றுக் கொள்ளலாம். அவையாவன

1. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்திற்காக ஜெபிப்பது, கவிசேஷ ஊழியத்தின் ஒரு பகுதியாகும். (அப 8:15 அப 4:14 அப 9:17-18; அப 19:1-7 லூக்கா 11:13 1கொரி 12:30; 1கொரி 14:1
2. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் என்பது வேறு. இரட்சிக்கப்படும்போது நமது உள்ளத்தில் நடைபெறும் பரிசுத்த ஆவியானவரின் கிரியை என்பது வேறு. (ரோமர் 8:9,14-16

அப்போஸ்தலர் – தொகுப்புரை

8 அதிகாரம்

3 இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் விசுவாசிகள் ஏற்கெனவே இரட்சிக்கப்பட்டவர்கள். தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றவர்கள். கிறிஸ்துவில் மிகுந்த சந்தோஷமாக இருந்தவர்கள். ஆகையினால் இங்கு கூறப்பட்டிருப்பது பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகமும், தேவனுடைய ஊழியத்தைச் செய்வதற்குப் பரிசுத்த ஆவியானவரின் தெய்வீக வரங்களுமே ஆகும். இரட்சிக்கப்படுவதற்கு ஏதுவான பரிசுத்த ஆவியானவரின் கிரியையைப் பற்றி இங்கு கூறப்படவில்லை. (அப 8:6-13)

4 பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளும் அனுபவம் இரட்சிப்பின் அனுபவத்தைத் தொடர்ந்து வருகிறது. (அப 8:6-13)

5 பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் எல்லா விசுவாசிகளுக்கும் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. (அப 8:14-17)

6 எருசலேமில் இருந்தவர்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டார்கள். அதே போன்றதொரு அபிஷேகத்தை மற்ற இடங்களிலுள்ள திருச்சபையாரும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று அப்போஸ்தலர்கள் விரும்பினார்கள். (அப 2:33,38-39; மத் 3:11; யோவான் 7:37-39)

7 ஒருவன் இரட்சிக்கப்பட்டு குணமாக்கப்பட்டு, தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்று, இயேசு கிறிஸ்துவில் அதிக சந்தோஷமாக இருப்பதினால் அவனிடத்தில் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் உள்ளது என்று கூறமுடியாது. சமாரியர்கள் இந்த அனுபவங்கள் எல்லாவற்றையும் பெற்றிருந்தும் அவர்கள் இன்னும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளவில்லை. (அப 8:6-13)

8 பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் ஜெபத்தினாலும், கைகளை வைப்பதினாலும் அருளப்படுகிறது (அப 8:15-23)

9 பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெறுவதற்குக் கைகளை வைத்தால் ஜெபம்பண்ண ஆகவேண்டும் என்று எந்த நியதியும் இல்லை. ஏனெனில் பெந்தெகொஸ்தே நாளிலும் (அப் 2:1-2), கொர்நேலியுவின் வீட்டிலும் (அப் 10:44-48) யாரும் யார்மீதும் கைகளை வைக்காமலேயே பரிசுத்த ஆவியானவர் அருளப்பட்டார்.

10 பன்னிரெண்டு அப்போஸ்தலர்களைத் தவிர, தேவனால் அபிஷேகிக்கப்பட்டிருக்கிற மற்றவர்கள்கூட விசுவாசிகள் மீது தங்கள் கைகளை வைத்து அவர்களும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்வதற்காக ஜெபிக்கலாம் (அப 9:17-18; அப 19:1-7; 1தீமோ 4:14; 2தீமோ 1:6)

11 பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்வதற்காக விசேஷித்த ஆராதனை நடத்துவது வேத வாக்கியங்களின் பிரகாரம் ஏற்றுக் கொள்ளக்கூடியதே. (அப 8:15-17; அப 9:17-18; அப் 19:1-7, 1தீமோ 4:14, 2தீமோ 1:6; எபி 6:2)

12 பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை ஒரு நபர் பெற்றுக் கொள்ளும்போது மற்றவர்கள் காணக்கூடிய, கேட்கக்கூடிய அனுபவம் அவருக்கு உண்டாகும். (அப 8:18-23)

13 ஆவிக்குரிய காரியங்கள் வியாபாரப் பொருட்களல்ல. பணம் சம்பாதிப்பதற்காக ஆவிக்குரிய காரியங்களைப் பயன்படுத்தக் கூடாது. (அப் 8:18-23)

14 பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைப் பணத்தைக் கொடுத்து யாரும் விலைக்கு வாங்க முடியாது. (அப 8:18-23)

8 அதிகாரம்

15. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்கிற நம்முடைய இருதயம் குணப்பட்டதாகவும், தேவனிடத்தில் செம்மையாகி நற்சாட்சி பெற்றதாகவும் இருக்க வேண்டும். (அப் 8:21)

16. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் தேவனுடைய வரம் என்றும் (அப் 8:20), ஆவியானவரின் அபிஷேகம் (அப் 1:4-5; அப் 2:38-39; அப் 8:14-18; அப் 15:7-11; அப் 19:1-7) என்றும் அழைக்கப்படுகிறது.

(5) சீமோனின் பாவமான விண்ணப்பம்

அப் 8:18 அப்போஸ்தலர் தங்கள் கைகளை அவர்கள்மேல் வைத்ததினால் பரிசுத்தஆவி தந்தருளப்படுகிறதைச் சீமோன் கண்டபோது அவர்களிடத்தில் பணத்தைக் கொண்டுவந்து,

அப் 8:19 நான் எவன்மேல் என் கைகளை வைக்கிறேனோ, அவன் பரிசுத்தஆவியைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும் என்றான்.

(6) பேதுரு சீமோனைக் கடிந்து கொள்கிறான்

அப் 8:20 பேதுரு அவனை நோக்கி: தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக் கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோடேகூட நாசமாய்ப் போகக்கடவது.

அப் 8:21 உன் இருதயம் தேவனுக்கு முன்பாகச் செம்மையாயிராதபடியால் இந்த விஷயத்திலே உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை.

அப் 8:22 ஆகையால் நீ உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம்.

அப் 8:23 நீ கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருக்கிறதாகக் காண்கிறேன் என்றான்.

"ஆகையால் நீ உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம்" - மாயவித்தைக்காரனாகிய சீமோன் தன்னுடைய இருதயத்திலே பாவம் செய்கிறான். தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதிக்கலாம் என்று நினைத்தான். பேதுரு அவனுடைய ஆத்துமாவிற்கு நம்பிக்கையைக் கொடுக்க விரும்புகிறார். தன்னுடைய துர்க்குணத்தைவிட்டு சீமோன் மனந்திரும்பி, தேவனை நோக்கி விண்ணப்பம் பண்ண வேண்டும். தான் செய்த தவறுகளுக்கெல்லாம் அவன் மன்னிப்பு கோரவேண்டும். அப்போது ஒருவேளை சீமோனுடைய இருதயத்தில் காணப்பட்ட தீய எண்ணங்கள் அவனுக்கு மன்னிக்கப்படலாம் என்று பேதுரு மாயவித்தைக்காரனுக்கு ஆலோசனை கூறுகிறான்.

(7) நியாயத்தீர்ப்பைக் குறித்து சீமோனின் பயம்

அப் 8:24 அதற்குச் சீமோன்: நீங்கள் சொன்ன காரியங்களில் ஒன்றும் எனக்கு நேரிடாதபடிக்கு, எனக்காகக் கர்த்தரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றான்.

"நீங்கள் சொன்ன காரியங்களில் ஒன்றும் எனக்கு நேரிடாதபடிக்கு, எனக்காகக் கர்த்தரை வேண்டிக்கொள்ளுங்கள்" இந்த சீமோனைப் பற்றி அப் 8:13 ஆம் வசனத்தில் நாம் இவ்வாறு வாசிக்கிறோம். "சீமோனும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று பிலிப்புவைப் பற்றிக்கொண்டு, அவனால் நடந்த அடையாளங்களையும் பெரிய அற்புதங்களையும் கண்டு பிரமித்தான்" (அப் 8:13). அதன் பின்பு, அப்போஸ்தலர் தங்கள் கைகளை அவர்கள்மேல் வைத்ததினால் பரிசுத்தஆவி தந்தருளப்படுகிறதைச் சீமோன் கண்டான். தன்னுடைய சுயலாபத்திற்காக இந்த வரத்தைப் பணத்திற்குக் கொள்ளவேண்டும் என்று விரும்பினான் (அப் 8:18-23). இப்போது மறுபடியுமாகத் தன்னுடைய துன்மார்க்கமான எண்ணத்திலிருந்து மனந்திரும்பி, தனக்காக ஜெபித்துக் கொள்ளுமாறு கேட்கிறான் (அப் 8:24).

8 அதிகாரம்

3. மற்ற பட்டணங்களில் எழுப்புதல்

அப 8:25 இவ்விதமாய் அவர்கள் கர்த்தருடைய வசனத்தைச் சாட்சியாய் அறிவித்துச் சொன்னபின்பு, சமாரியருடைய அநேக கிராமங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து எருசலேமுக்குத் திரும்பி வந்தார்கள்

"இவ்விதமாய் அவர்கள் கர்த்தருடைய வசனத்தைச் சாட்சியாய் அறிவித்துச் சொன்னபின்பு, சமாரியருடைய அநேக கிராமங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து எருசலேமுக்குத் திரும்பி வந்தார்கள்" - பேதுரு, யோவான் ஆகியோருடைய முதலாவது மிஷினெரி பிரயாணம். கர்த்தருடைய வசனமும் சுவிசேஷமும் அவர்கள் பிரசங்கம் பண்ணிய செய்தியாகும். சுவிசேஷ ஊழியத்தின் மூன்றாவது நிலைக்கு இவர்கள் வந்திருக்கிறார்கள். எருசலேம், யூதேயா, சமாரியா ஆகிய பகுதிகளில் கர்த்தருடைய வார்த்தையைப் பிரசங்கித்தார்கள் (அப 1:8)

4. பிலிப்புவும் எத்தியோப்பியனும்

(1) ஒரு ஆத்துமாவிற்கு சுவிசேஷம் சொல்ல பரிசுத்த ஆவியானவரின் அழைப்பு

அப 8:26 பின்பு கர்த்தருடைய தூதன் பிலிப்பை நோக்கி: நீ எழுந்து, தெற்கு முகமாய் எருசலேமிலிருந்து காசா பட்டணத்துக்குப் போகிற வனாந்தர மார்க்கமாய்ப் போ என்றான்

அப 8:27 அந்தப்படி அவன் எழுந்து போனான். அப்பொழுது எத்தியோப்பியருடைய ராஜஸ்திரீயாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரியும் அவளுடைய பொக்கிஷ முழுவதற்கும் தலைவனுமாயிருந்த எத்தியோப்பியனாகிய ஒரு மனுஷன் பணிந்துகொள்ளும்படி எருசலேமுக்கு வந்திருந்து,

அப 8:28 ஊருக்குத் திரும்பிப்போகும்போது, தன் இரதத்திலே உட்கார்ந்து ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்துக் கொண்டிருந்தான்

அப 8:29 ஆவியானவர்: நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்துகொள் என்று பிலிப்புடனே சொன்னார்

"கர்த்தருடைய தூதன் பிலிப்பை நோக்கி: நீ எழுந்து தெற்குமுகமாய் எருசலேமிலிருந்து காசா பட்டணத்துக்குப் போகிற வனாந்தரமார்க்கமாய்ப் போ என்றான்" - அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் தேவதூதரின் ஊழியங்களைப் பற்றி நாம் வாசிக்கிறோம். அவையாவன

1 அப்போஸ்தலர்களைச் சிறைச்சாலையிலிருந்து விடுவித்தது. (அப 5:19)

2 எங்கே பிரசங்கம் பண்ண வேண்டுமென்று இயேசுவை வழிநடத்தியது. (அப 8:26)

3 பிரசங்கிக்கிறவரை எங்கே கண்டு பிடிக்கலாம் என்று கொர்நேலியுவை வழிநடத்தியது. (அப 10:3,7,22; அப 11:13-18; அப் 15:5-1)

4 பேதுருவை சிறைச்சாலையிலிருந்து விடுவித்தது. (அப் 12:7-11,15

5 பெருமைபட்டதற்காக ஏரோதுவைத் தண்டித்தது. (அப் 12:23

6 பவுலை வழிநடத்தி அவனுக்கு ஆறுதல் கூறியது. (அப 27:23)

"காசா பட்டணம்" (Gaza) - எகிப்திற்குப் போகும் சாலையில் காணவே கடைசி பட்டணமாகும். கடலிலிருந்து 3 மைல் தூரத்தில் இந்தப்பட்டணம் அமைந்திருக்கிறது. அதோடு வனாந்தரத்திற்குப் போகும் வாசலாக இந்தப் பட்டணம் உள்ளது.

"அந்தப்படி அவன் எழுந்துபோனான்" - பிலிப்பு தங்கியிருந்த பட்டணத்தில் தெய்வீக எழுப்புதல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அங்கு அவனுக்குப் பல வசதிகளும், வாய்ப்புக்களும் இருந்தன. இருந்தாலும் ஒரு ஆத்துமாவிற்குப் பிரசங்கம் பண்ணுவதற்காக பிலிப்பு வனாந்தரத்தை நோக்கிப் போகிறான். தேவனுடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறான். தெற்குமுகமாக ஏன் போகவேண்டும். எருசலேமிலிருந்து எவ்வளவு தூரம் போகவேண்டும் என்னும் கேள்வியெல்லாம் பிலிப்பு கேட்கவில்லை. காசா பட்டணம் எருசலேமிலிருந்து 100 மைல் தூரத்தில் இருந்தது.

8 அதிகாரம்

"எத்தியோப்பியருடைய ராஜஸ்திரீயாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரி" - இந்த வாக்கியத்தில் மந்திரி என்பதன் கிரேக்கச் சொல் "டைனாஸ்டேஸ்" (dynastees) என்பதாகும். இதற்கு மிகுந்த அதிகாரம் (great authority) என்று பொருள். இந்த வார்த்தையின் மற்ற மொழிபெயர்ப்புகள் "potentate" (1தீமோ 6:15) "mighty" (லூக்கா 1:52), "of great authority" (அப் 8:27, 2கொரி 9:8; 2கொரி 13:3; ரோமர் 14:4)

மந்திரி (potentate) - δυνάστης - dynastees - 1413

ஆண்பால் பெயர்ச்சொல் - பலவான், சக்கராதிபதி, மந்திரி (great authority)

"கந்தாகே" (Candace) - எத்தியோப்பிய ராணிகளுக்கு வழங்கப்படும் பட்டப்பெயர். எகிப்திய ராஜாக்கள் பார்வோன் என்று அழைக்கப்பட்டதுபோலவும் [illegible]த்திய ராஜாக்கள் அபிமெலேக்கு என்று அழைக்கப்பட்டது போலவும் இதுவும் ஒரு பட்டப்பெயராகும்.

ராஜஸ்திரீ (queen) - βασίλισσα - basilissa - 938

பெண்பால் பெயர்ச்சொல் - ராஜஸ்திரீ
அப் 8:27, மத் 12:42; லூக்கா 11:31 வெளி 18:7

"எத்தியோப்பியனாகிய ஒருவன் பணிந்துகொள்ளும்படி எருசலேமுக்கு வந்திருந்தான்" சேபாவின் ராஜஸ்திரீயின் (queen of Sheba) மூலமாக இஸ்ரவேலின் தேவனைப் பற்றி இவன் கேள்விப்பட்டிருக்கலாம் (1இராஜா 10). இஸ்ரவேல் தேசத்தைத் தவிர, அதைச் சுற்றிலுமிருந்த தேசங்களிலிருந்தும் இஸ்ரவேலின் தேவனைப் பணிந்து கொள்வதற்காகப் பக்திமான்கள் வருவது வழக்கம். எத்தியோப்பியன் அப்படிப்பட்டவர்களில் ஒருவன். சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனின் மார்க்கத்தைக் கற்றுக் கொண்டாள். அவள் தன்னுடைய தேசத்திற்குத் திரும்பி வந்த பின்பு, யூதமார்க்கத்தை அங்கு ஸ்தாபித்ததாக வரலாறு கூறுகிறது. சாலொமோனுக்கும் சேபாவின் ராஜஸ்திரீக்கும் ஒரு குமாரன் பிறந்தான். அவனுக்கு மெனிலேக்கு (Menilek) என்று பெயரிட்டார்கள். சேபாவின் ராஜஸ்திரீக்குப் பின்பு, மெனிலேக்கு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டான். தன்னுடைய தாயின் விருப்பத்தின் பிரகாரம் தன்னுடைய தேசத்தில் யூதமார்க்கத்தைப் பரப்பி அதன் பாரம்பரிய பிரமாணங்களின் பிரகாரம் அவனும் அவனுடைய தேசத்தாரும் ஜீவித்து வந்தார்கள்.

"ஆவியானவர் நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்துகொள் என்று பிலிப்புடனே சொன்னார்" - இரதத்தில் போய்க்கொண்டிருக்கிறவன் ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்துக் கொண்டிருந்தான். அவன் இரட்சிக்கப் படுவதற்குப் பக்குவமாக இருக்கிறான் என்பதைப் பரிசுத்த ஆவியானவர் அறிந்திருந்தார். ஆகையினால் ஆவியானவர் பிலிப்புவை அந்த இரதத்துடனே சேர்த்துக் கொள்ளுமாறு கூறுகிறார்.

(2) தனிநபர் சுவிசேஷத்திற்கு ஒரு முன்மாதிரி - (யோவான் 1:35-36, 4:6-30)

அப் 8:30 அப்பொழுது பிலிப்பு ஓடிப் போய்ச்சேர்ந்து, அவன் ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசிக்கிறதைக் கேட்டு: நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா என்றான்.

அப் 8:31 அதற்கு அவன்: ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும் என்று சொல்லி, பிலிப்பு ஏறி, தன்னோடே உட்காரும்படி அவனை வேண்டிக் கொண்டான்.

அப் 8:32 அவன் வாசித்த வேதவாக்கியம் என்னவென்றால்: அவர் ஒரு ஆட்டைப் போல அடிக்கப்படுவதற்குக் கொண்டு போகப்பட்டார்; மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப்போல அவர் தமது வாயைத் திறவாதிருந்தார்.

8 அதிகாரம்

அப 8.33 அவர் தம்மைத் தாழ்த்தினபோது அவருடைய நியாயம் எடுத்துப்போடப் பட்டது; அவருடைய ஜீவன் பூமியிலிருந்து எடுபட்டுப்போயிற்று; அவருடைய வம்சத்தை யாராலே சொல்லிமுடியும் என்பதே

அப 8.34 மந்திரி பிலிப்பை நோக்கி: தீர்க்கதரிசி யாரைக்குறித்து இதைச் சொல்லுகிறார்? தம்மைக்குறித்தோ வேறொருவரைக்குறித்தோ? எனக்குச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொண்டான்

அப 8.35 அப்பொழுது பிலிப்பு பேசத்தொடங்கி, இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக்குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான்

"பிலிப்பு ஓடிப்போய்ச்சேர்ந்தான்" - பரிசுத்த ஆவியானவருக்குக் கீழ்ப்படிந்து பிலிப்பு வேகமாக ஓடுகிறான் இரதத்தில் உட்கார்ந்திருக்கும் மனுஷனிடம் ஆத்தும ஆதாய ஊழியம் செய்கிறான்

"ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும்" வேதவாக்கியத்தைச் சாதாரணமாக வாசித்துப் புரிந்து கொள்வது கடினமதான பரிசுத்த ஆவியானவரின் கிருபையினால் வேதவாக்கியங்களை யாராவது ஒருவர் வியாக்கியானம் பண்ணினால் வசனங்களை வாசிப்போருக்கு அதைப் புரிந்து கொள்வது மிகவும் எளிதாக இருக்கும்

அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 13

"அவர் ஒரு ஆட்டைப் போல அடிக்கப் படுவதற்குக் கொண்டு போகப்பட்டார் மயிர்கத் தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப்போல அவர் தமது வாயைத் திறவாதிருந்தார்" (அப் 8.32, ஏசா 53.7-8) செப்துவஜிந்த் பதிப்பில் உள்ள வசனம் அப்படியே இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"அவர் தம்மைத் தாழ்த்தினபோது அவருடைய நியாயம் எடுத்துப்போடப்பட்டது" - யூதர்கள் மத்தியிலே ஒருவனுக்குத் தண்டனை கொடுப்பதற்கு முன்பாக அவனுடைய சார்பில் யாராவது வழக்காடுவதற்கு முன்வருகிறார்களா என்று கேட்பது வழக்கம். ஆனால் இயேசு கிறிஸ்துவைப் பொருத்தவரையில் அவரிடம் முறையான வழக்கு விசாரணை எதுவும் நடைபெறவில்லை. இதையே தீர்க்கதரிசி இவ்வாறு இங்கு கூறுகிறார் அவர் தம்மைத் தாழ்த்தினார் அப்போது அவருடைய நியாயம் எடுத்துப்போடப்பட்டது என்று கூறுகிறார் இயேசு கிறிஸ்து விசாரிக்கப்படுவதற்கு 750 வருஷங்களுக்கு முன்பாகவே அவர் எவ்வாறு விசாரிக்கப்படுவார் என்பது பற்றி பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசி தெளிவாக முன்னறிவித்திருக்கிறார்

"அவருடைய வம்சத்தை யாராலே சொல்லி முடியும்" - இயேசு கிறிஸ்துவின் ஜீவன் பூமியிலிருந்து எடுபட்டுப் போயிற்று அவருடைய ஜீவியத்தையும் கிரியைகளையும் இனிமேல் யார் அறிவிப்பார்கள் என்னும் பொருளில் இந்த வாக்கியம் கூறப்பட்டிருக்கிறது (அப 8.33)

வம்சம் (generation) - γενεά - genea - 1074

பெண்பால் பெயர்ச்சொல் - தலைமுறை, சந்ததி, வம்சம், காலம் பூர்வகாலம், முற்காலம் (a begetting, birth, nativity, descent, genealogy, age, span of life)

"அப்பொழுது பிலிப்பு பேசத்தொடங்கி, இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக் குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான்" பிலிப்பு இந்த வேதவசனத்தை ஆதாரமாக வைத்து பிரசங்கம் பண்ணுகிறான் பிலிப்பு தன் பிரசங்கத்தை ஒரு வசனத்தோடு முடித்துக் கொள்ளவில்லை வேதவாக்கியத்தின் மூலமாக இயேசு கிறிஸ்துவே மேசியா என்பதையும் அவருடைய பிறப்பு, மரணம், அடக்கம் பண்ணப்படுதல் உயிர்த்தெழுதல், பரமேறுதல் ஆகிய சத்தியங்களையும் பிலிப்பு எத்தியோப்பிய மந்திரிக்கு விவரித்துக் கூறினான்

8 அதிகாரம்

(3) ஞானஸ்நான ஆராதனை

அப 8:36 இவ்விதமாய் அவர்கள் வழிநடந்துபோகையில் தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள் அப்பொழுது மந்திரி: இதோ தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத்தடையென்னவென்றான்.

அப 8:37 அதற்குப் பிலிப்பு: நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன்: இயேசுகிறிஸ்துவைதேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி,

அப 8:38 இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள், பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தான்.

"அப்பொழுது மந்திரி: இதோ தண்ணீர் இருக்கிறதே. நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான்" - மந்திரி ஞானஸ்நானத்தைப் பற்றிப் பேசுகிறான். ஆகையினால் பிலிப்பு அவனிடம் முழுச் சுவிசேஷத்தையும் அறிவித்திருக்க வேண்டும்.

"நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லை" - இதுவே இரட்சிப்பின் இரகசியம். (ரோமர் 1:16; ரோமர் 10:9-10; எபே 2:8-9)

"இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன்" - முழு இருதயத்தோடு ஒரு மனுஷன் இவ்வாறு விசுவாசிக்கும்போது அவன் மறுபடியும் பிறக்கிறான் (1யோவான் 5:1)

"பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்" - இயேசு கிறிஸ்து அடக்கம் பண்ணப்பட்டதற்கு அடையாளமாக பிலிப்பு மந்திரியைத் தண்ணீரில் அடக்கம் பண்ணப்போகிறான் (ரோமர் 6:4, கொலோ 2:12). இயேசு உயிர்த்தெழுந்ததற்கு அடையாளமாக மந்திரி தண்ணீரிலிருந்து வெளியே வருவான் (மத் 3:6, மத் 3:16; மாற்கு 1:10)

"பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தான்" - தற்காலத்தில் ஞானஸ்நானத்தைப் பற்றி பலவிதமான உபதேசங்கள் உள்ளன. ஞானஸ்நானம் கொடு என்பதன் கிரேக்க வார்த்தை "பேப்டோ" baptoo என்பதாகும். இதற்கு முழுக்குதல், அமுக்குதல், ஒரு திரவப்பொருளில் முக்குதல் என்று பொருள். இது கிரேக்க மொழியில் ஒரு வேர்ச்சொல்.

ஞானஸ்நானங் கொடு (baptize) - **βάπτω** - **baptoo** - 911

ஆண்பால் பெயர்ச்சொல் - ஞானஸ்நானங் கொடு, கழுவு

1. ஒருவனுடைய விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்தல் (லூக்கா 16:24)

2. அப்பத்தை ரசத்தில் தோய்த்தல் (மத் 26:23; மாற்கு 14:20; யோவான் 13:26)

3. வஸ்திரத்தை இரத்தத்தில் தோய்த்தல் (வெளி 19:13)

இந்த வேர்ச்சொல்லிலிருந்து கிரேக்க மொழியில் மேலும் பல சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவையாவன:

1. ஞானஸ்நானம் கொடு (plunge) - **βαπτίζω** - **baptizoo** - 907

வினைச்சொல் - முழுக்கு, கழுவு, ஞானஸ்நானம் பெறு, ஞானஸ்நானம் கொடு, ஸ்நானம் பண்ணு, கைகழுவு **(to overwhelm; make wholly wet; immerse; submerge, sink; plunge; to dip under; and to baptize)** (மத் 3:6-16, மத் 20:22-23; மத் 28:19; மாற்கு 1:4-9, மாற்கு 10:38-39; மாற்கு 16:16, லூக்கா 3:7-21; லூக்கா 7:29-30, லூக்கா 12:50, யோவான் 1:25-33 யோவான் 3:22-26 யோவான் 4:1-2, அப 1:5; அப 2:38,41; அப் 8:12-16,36-38 அப் 9:18, அப் 10:47-48 அப 11:16; அப் 16:15,33; அப் 18:8, அப 19:3-5;22:16; ரோமர் 6:3, 1கொரி 1:13-17; 1கொரி 10:2; 1கொரி 12:13, 1கொரி 15:29; கலா 3:27)

8 அதிகாரம்

(1) யோர்தான் நதியில் ஞானஸ்நானங் கொடு (மத் 3:6; மாற்கு 1:5,9)

2) தண்ணீரில் ஞானஸ்நானங்கொடு மத் 3:11; மாற்கு 1:8 யோவான் 1:26,31,33

3) ஞானஸ்நானம் பெற்றபின்பு தண்ணீரிலிருந்து கரையேறினார்கள் (மத் 3:16; மாற்கு 1:10; அப 8:38-39)

4 மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள் 2கொரி 10:2

5) பரிசுத்த ஆவியினால உங்களை ஞானஸ்நானம் பண்ணுவார் மத் 3:11; மாற்கு 1:8; லூக்கா 3:16 யோவான் 1:33; அப 1:5 அப 11:16

6 கழுவுதல். முழுவதுமாகக் கழுவுதல மாற்கு 7:4; லூக்கா 11:38)

(7) ஸ்நானன் "Baptist" (மாற்கு 6:14 , ஸ்நானம்பண்ணு "baptized" (யோவான் 10:40

(8 ஞானஸ்நானங் கொடுத்தல் முழுவதுமாக முழுக்குதல் (மத் 3:6-16 மத் 20:22-23, மத் 28:19 மாற்கு 1:4-9 மாற்கு 10:38-39 மாற்கு 16:16 லூக்கா 3:7-21 லூக்கா 7:29-30; லூக்கா 12:50 யோவான 1:25-33; யோவான 3:22-26, யோவான் 4:1-2; அப 1:5; அப 2:38,41, அப 8:12-16,36-38; அப 9:18; அப 10:47-48; அப 11:16; அப 16:15,33, அப 18:8; அப 19:3-5,22:16; ரோமர் 6:3; 1கொரி 1:13-17, 1கொரி 10:2 1கொரி 12:13; 1கொரி 15:29, கலா 3:27)

2 ஞானஸ்நானம் (immersion) βάπτισμα baptisma 908

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல்- ஞானஸ்நானம், ஸ்நானம் (submersion, baptism) (மத் 3:7 மத் 20:22-23; மத் 21:25; மாற்கு 1:4; மாற்கு 10:38-39; மாற்கு 11:30 லூக்கா 3:3; லூக்கா 7:29; லூக்கா 12:50; லூக்கா 20:4. அப 1:22; அப 10:37; அப் 13:24. அப 18:25; அப 19:3-4; ரோமர் 6:4 எபே 4:5; கொலோ 2:12; 1பேதுரு 3:21)

(1) ஏழுவிதமான ஞானஸ்நானங்கள் உள்ளன (மத் 3:6)

(2) எல்லா ஞானஸ்நானங்களும். அடக்கம பண்ணப்படுவதற்கு அடையாளமாகும். (ரோமர் 6:4 கொலோ 2:12)

(3) ஞானஸ்நானம பாவங்களை இரட்சிக்காது. (மத் 3:11, 1பேதுரு 3:21)

3 ஸ்நானங்கள் (baptism) - βαπτισμός - baptismos - 909

ஆண்பால பெயர்ச்சொல் - கழுவுதல். ஸ்நானங்கள (baptism) (எபி 6:2 ; (washing) (மத் 7:4,8 ; எபி 9:10)

4 ஸ்நானன (baptizer) - βαπτιστής - baptistees - 910

ஆண்பால் பெயர்ச்சொல் - ஸ்நானன், (எப்பொழுதும் யோவான் ஸ்நானனையேகுறிக்கும் (a baptizer; one who dips) "Baptist" (மத் 3:1 மத் 11:11-12; மத் 14:2,8, மத் 16:14, மத் 17:13; மாற்கு 6:24-25 மாற்கு 8:28; லூக்கா 7:20,28,33 லூக்கா 9:19)

(4) கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக்கொண்டு போய்விட்டார் - (யோவான் 15:21; 2இராஜா 2:11 எபி 11:5)

அப் 8:39 அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய்விட்டார் மந்திரி அப்புறம் அவனைக்காணாமல சந்தோஷத்தோடே தன் வழியே போனான்

8 அதிகாரம்

"அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறின பொழுது - பிலிப்பு மந்திரிக்கு முழுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான் என்பதற்கு இந்த வசனம் ஒரு சான்றாகும். (மத் 3:16)

"கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டுபோய்விட்டார்" - அப் 8:29 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருப்பவர் பரிசுத்த ஆவியானவரே. ஆவியானவர் பிலிப்புவை 25 மைல் தூரத்திலுள்ள ஆசோத் **(Azotus)** என்னும் ஊருக்குக் கொண்டுபோய்விட்டார். இந்த வாக்கியத்தில் "கொண்டுபோய்விட்டு" என்பதன் கிரேக்க வார்த்தை "ஹார்பாஜோ" **(harpazoo)** என்பதாகும். இதற்கு எடுத்துக்கொள், கைப்பற்றிக்கொள் என்று பொருள். இதன் மற்ற மொழிபெயர்ப்புகள்: **"take by force"** (மத் 11:12; யோவான் 6:15; அப் 23:10), **"catch away"** (மத் 13:19; அப் 8:39), **"catch"** (யோவான் 10:12), **"catch up"** (2கொரி 12:2-4; 1தெச 4:17; வெளி 12:5), **"pluck"** (யோவான் 10:28-29), **"pull"** (யூதா 1:23).

கொண்டுபோய்விட்டு (caught away) - ἁρπάζω - **harpazoo** - 726

வினைச்சொல் - இழு, பறித்துக்கொள், பிடித்துக்கொள், பீறு, எடுத்துக்கொள் **(to seize; catch away; pluck; pull, take away by force)**

(5) சகல பட்டணங்களிலும் எழுப்புதல்கள்

அப் 8:40 பிலிப்பு ஆசோத்திலே காணப்பட்டு, அவ்விடத்திலிருந்து பிரயாணம் பண்ணி, செசரியாவுக்கு வருகிறவரையில் சகல பட்டணங்களிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக் கொண்டு வந்தான்.

"செசரியா" (Caesarea) - இது செசரியா பிலிப்பி அல்ல (மத் 16:13). யோப்பாவிற்கும், கர்மேல் மலைக்கும் இடையே ஏரோது கட்டிய பட்டணம். பிலிப்பு இந்த ஊரில் வாழ்ந்தான் (அப் 21:8). செசரியா பிலிப்பி என்று கூறாமல் செசரியா என்று மட்டும் கூறப்பட்டுள்ளதால் அது இந்தப் பட்டணத்தையே குறிக்கும்.

அப்போஸ்தலர் – தொகுப்புரை

9 அதிகாரம்

V. சவுலின் வரலாறு

1. கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துகிறவன்-(அப் 7:58; 8:1,3; 22:4; 26:9 கலா 1:13; 1தீமோ 1:13; பிலி 3:6)

அப் 9:1 சவுல் என்பவன் இன்னும் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலை செய்யும்படி சீறி, பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய்,

அப் 9:2 இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும் ஸ்திரீகளையாகிலும் தான் கண்டுபிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி, தமஸ்குவிலுள்ள ஜெபஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான்.

"இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும் ஸ்திரீகளையாகிலும்" - இந்த மார்க்கம் என்பது கிறிஸ்தவ மார்க்கத்தைக் குறிக்கும். (அப் 18:25-26 அப் 19:9,23 அப் 22:4 அப் 24:14,22 யோவான் 14:6

2. இயேசு சவுலைச் சந்திக்கிறார் (அப் 22:6, 26:13

அப் 9:3 அவன் பிரயாணமாய்ப் போய், தமஸ்குவுக்குச் சமீபித்தபோது சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது.

அப் 9:4 அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது: சவுலே, சவுலே, நீ [redacted] ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான்.

அப் 9:5 அதற்கு அவன்: ஆண்டவரே, நீர் யார் என்றான். அதற்குக் கர்த்தர்: நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார்.

அப் 9:6 அவன் நடுங்கித் திகைத்து: ஆண்டவரே, நான் என்னசெய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர்: நீ எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார்.

அப் 9:7 அவனுடனேகூடப் பிரயாணம்பண்ணின மனுஷர்கள் சத்தத்தைக் கேட்டும் ஒருவரையுங் காணாமல் பிரமித்து நின்றார்கள்.

"தமஸ்கு" - சீரிய தேசத்து தலைநகரம் (2சாமு8:5,1இராஜா11:24; 1இராஜா 15:18-20 1இராஜா 20:1; 2இராஜா 8:28 2இராஜா 10:33; 2இராஜா 12:17 2இராஜா 13:3,24; 2இராஜா 14:28 2இராஜா 16:5-9). உலகத்திலுள்ள பழமையான பட்டணங்களுள் ஒன்று. ஆபிரகாமோ அல்லது அவனுடைய சந்ததியாரோ இந்தப் பட்டணத்தைக் கட்டியிருக்க வேண்டுமென்று பாரம்பரிய வரலாறு கூறுகிறது. (ஆதி 14:15 15:2

"அவன் தரையிலே விழுந்தான்" - தேவனுடைய பிரசன்னம் காணப்படும் இடத்திலே மனுஷர் தரையிலே தாழவிழுவார்கள்

"அவனுடனேகூடப் பிரயாணம்பண்ணின மனுஷர்கள் சத்தத்தைக் கேட்டும் ஒருவரையுங் காணாமல் பிரமித்து நின்றார்கள்" சவுலோடு பிரயாணம் பண்ணின மனுஷர்கள் சத்தத்தைக் கேட்டார்கள். அந்த சத்தத்திலுள்ள வார்த்தைகளை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை (அப் 22:9

3. சவுல் மூன்று நாள் பார்வையில்லாதவனாய் புசியாமலும் குடியாமலும் இருக்கிறான் - (அப் 22:11

அப் 9:8 சவுல் தரையிலிருந்தெழுந்து, தன் கண்களைத் திறந்தபோது ஒருவரையுங் காணவில்லை. அப்பொழுது கைலாகு கொடுத்து, அவனைத் தமஸ்குவுக்குக் கூட்டிக்கொண்டுபோனார்கள்.

அப் 9:9 அவன் மூன்று நாள் பார்வையில்லாதவனாய்ப் புசியாமலும் குடியாமலும் இருந்தான்.

9 அதிகாரம்

"சவுல் தரையிலிருந்தெழுந்து, தன் கண்களைத் திறந்தபோது ஒருவரையுங் காணவில்லை" - அவன் தன் கண்களைத் திறந்தான் ஆனால் அவன் பார்வையில்லாதவனாகவே இருந்தான் (அப 9:9). அவனால் ஒரு மனுஷனையும் காணமுடியவில்லை அவனுக்குத் தரிசனமான இயேசு கிறிஸ்துவைத் தரிசித்தான் (அப 9:17,27; அப 22:14; 1கொரி 9:1; 1கொரி 15:8)

4. அனனியாவின் ஊழியம் - (22:12)

அப 9:10 தமஸ்குவிலே அனனியா என்னும் பேருள்ள ஒரு சீஷன் இருந்தான்; அவனுக்குக் கர்த்தர் தரிசனமாகி: அனனியாவே, என்றார்; அவன்: ஆண்டவரே, இதோ அடியேன் என்றான்.

அப 9:11 அப்பொழுது கர்த்தர்: நீ எழுந்து, நேர்த்தெருவு என்னப்பட்ட தெருவுக்குப் போய், யூதாவின் வீட்டிலே தர்சு பட்டணத்தானாகிய சவுல் என்னும் பேருள்ள ஒருவனைத் தேடு; அவன் இப்பொழுது ஜெபம்பண்ணுகிறான்;

அப 9:12 அனனியா என்னும் பேருள்ள ஒரு மனுஷன் தன்னிடத்தில் வரவும், தான் பார்வையடையும்படி தன்மேல் கைவைக்கவும் தரிசனங்கண்டான் என்றார்.

அப 9:13 அதற்கு அனனியா: ஆண்டவரே, இந்த மனுஷன் எருசலேமிலுள்ள உம்முடைய பரிசுத்தவான்களுக்கு எத்தனையோ பொல்லாங்குகளைச் செய்தானென்று அவனைக்குறித்து அநேகரால் கேள்விப்பட்டிருக்கிறேன்.

அப 9:14 இங்கேயும் உம்முடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற யாவரையுங் கட்டும்படி அவன் பிரதான ஆசாரியர்களால் அதிகாரம் பெற்றிருக்கிறானே என்றான்.

அப 9:15 அதற்குக் கர்த்தர்: நீ போ; அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான்.

அப 9:16 அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன் என்றார்.

"தரிசனம்" (vision) - அனனியா கர்த்தரைத் தரிசித்தான். அவன் தரிசனத்தில் கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டான். தரிசனம் என்பது நமது சிந்தனையில் வரும் கற்பனையல்ல. நமது சரீரத்தின் கண்களால் உண்மையாகவே பார்ப்பதுதான் தரிசனமாகும். (ஆதி 15:1; எண் 12:6; எண் 24:4,16; யோபு 33:15; எசே 8:4; எசே 43:3; தானி 2:19; தானி 7:2; தானி 8:1-2,27; தானி 9:21; தானி 10:5-8; மத் 17:1-9; லூக்கா 1:22; லூக்கா 24:23; அப 10:3,17-19; அப 11:5)

தேவனிடமிருந்து தரிசனம் பெற்றவர்கள்

1. ஆபிரகாம் (ஆதி 15:1)
2. யாக்கோபு (ஆதி 46:2)
3. பிலேயாம் (எண் 24:4,16)
4. சாமுவேல் (1சாமு 3:1-15)
5. நாத்தான் (2சா 7:17; 1நாளா 17:15)
6. ஏசாயா (ஏசா 1:1; 2நாளா 32:32)
7. மேசியா (சங் 89:19)
8. எசேக்கியேல் (எசே 7:13; எசே 8:3-4; எசே 11:24)
9. இத்தோ (2நாளா 9:29)
10. தானியேல் தானி2:19, 8:1-27; 9:21-24
11. நேபுகாத்நேச்சார் (தானி 2)
12. ஒபதியா (ஒப 1)
13. நாகூம் (நாகூம் 1:1)

9 அதிகாரம்

14 ஆபகூக் (ஆப 2:2-3)

15 பேதுரு (மத் 17:9; அப் 10:19; அப் 11:5)

16 யாக்கோபு (மத் 17:9)

17 யோவான் (மத் 17:9; வெளி 9:17)

18 சகரியா (லூக் 1:22)

19 அனனியா (அப் 9:10-12)

20 கொர்நேலியு (அப் 10:3,17)

21 பவுல் (அப் 16:9-10; அப் 18:9; 2கொரி 12)

"நேர்தெரு" (Straight street) - கிழக்கு வாசலிலிருந்து மேற்கு வாசலுக்குப் போகும் தெரு. இதில் பல சிறிய தெருக்கள் பிரிந்து போகும். கிழக்கு தேசத்து பட்டணங்களில் இப்படிப்பட்ட தெருக்களில் கடை வாசல்கள் இருக்கும்.

தெரு (street) - 'ρύμη - rhymee - 4505

பெண்பால் பெயர்சொல் - வீதி "lane" லூக்கா 14:21), தெரு "street"(அப் 9:11; அப் 12:10; மத் 6:2).

"யூதாவின் வீடு" (house of Judas) - இந்த யூதாவைப் பற்றி அதிகமாகத் தெரியவில்லை.

"தர்சு" (Tarsus) - சிலிசியாவின் (Cilicia) தலைநகரம். இதன் தற்போதைய பெயர் தராசோ (Tarasso). ஒரு காலத்தில் இந்தப் பட்டணத்தில் அலெக்சந்திரியாவின் நாகரிகமும், அத்தேனேயின் நாகரிகமும் சிறந்து விளங்கிற்று. ஜூலியஸ் சீசருடைய காலத்திலிருந்து பட்டணத்தில் உள்ளவர்கள் ரோமப்பேரரசின்மீது மிகுந்த மரியாதை வைத்திருந்தார்கள். ஆகையினால் இந்த ஊர் ஜனங்கள் ரோமப் பிரஜைகளாக அங்கீகரிக்கப்பட்டிருந்தார்கள் (அப் 22:29; அப் 23:27).

"அவன் இப்பொழுது ஜெபம்பண்ணுகிறான்" - சவுல் இப்போது ஜெபித்துக் கொண்டிருக்கிறான். இரட்சிப்பதற்கு உண்மையான வழி என்ன என்பதையும் தேவனுடைய சித்தம் என்ன என்பதையும் தெரிந்து கொள்வதற்காக ஜெபிக்கிறான். அவன் இன்னும் பாவம் மரணம் ஆகிய பிரமாணங்களிலிருந்து இரட்சிக்கப்படவில்லை. தன்னுடைய பாவத்தைக் குறித்து உணர்த்தப்பட்டிருக்கிறான். கர்த்தரிடத்தில் வைராக்கியமாக இருக்கிறான். இருந்தாலும் இவன் தன்னுடைய யூதமார்க்கத்துக் கொள்கையில் நிரம்பி இருந்தான். தேவனுக்கு எதிராகவும் கிறிஸ்துவிற்கு எதிராகவும் யுத்தம் பண்ணினான். தன்னுடைய ஜீவியத்தின் இந்தப் பரிதாபமான காலத்தையே ரோமர் 7:7-25 ஆகிய வசனங்களில் பவுல் விவரித்துக் கூறுகிறான். ரோமர் 8:1-4 ஆகிய வசனங்களில் தான் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்திலிருந்து விடுதலையானதாக எழுதுகிறான். அப் 9:17-18 ஆகிய வசனங்களில் பவுல் இரட்சிக்கப்பட்ட காரியத்தைக் குறித்து வாசிக்கிறோம். பழைய பிரமாணங்களிலிருந்து பவுல் விடுதலையாக்கப்பட்டு இயேசு கிறிஸ்துவைத் தன்னுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்கிறான். எல்லா விஷயங்களிலும் தேவனுக்கு முன்பாக நல்மனசாட்சியோடே நடந்து கொள்கிறான் (அப் 23:1).

"அனனியா என்னும் பேருள்ள ஒரு மனுஷன் தன்னிடத்தில் வரவும், தான் பார்வையடையும்படி தன்மேல் கைவைக்கவும் தரிசனங்கண்டான்" அனனியா (Ananias) என்பவன் தமஸ்குப் பட்டணத்தில் உள்ள ஒரு யூதன் (அப் 9:10; அப் 22:12). இவனும் அப் 5 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் அனனியாவும் வெவ்வேறு நபர்கள். பவுல் ஏற்கெனவே அனனியாவைத் தன் தரிசனத்தில் கண்டான். இப்போது அனனியா பவுலைப் பற்றி தரிசனம் காண்கிறான். இரண்டு தரிசனங்கள் மூலமாக தேவனுடைய காரியம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

அப்போஸ்தலர் – தொகுப்புரை

9 அதிகாரம்

"எருசலேமிலுள்ள உம்முடைய பரிசுத்தவான்கள்" - இரட்சிக்கப்பட்ட எல்லோருமே பரிசுத்தவான்கள்தான் ஆகையினால் ஒருவன் மரித்த பின்பு அவனைப் பரிசுத்தமாக்குவதற்கு எந்த முயற்சி எடுத்துக் கொள்ளத் தேவையில்லை அந்த முயற்சி நிறைவேறாது. அப 9:13,32,41; அப 26:10; ரோமர் 1:7 கொரி 1:2; 1கொரி 6:1-2; 2கொரி 1:1 எபே 1:1; பிலி 1:1; கொலோ 1:2; 2தெச 1:10 யூதா 1:3, வெளி 5:8; வெளி 13:7,10, வெளி 17:6

தீர்க்கதரிசன எண் - 6

"அதற்குக் கர்த்தர், நீ போ; அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான ...." (அப 9:15-16) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

தெரிந்துகொள்ளப்பட்டது (chosen) - ἐκλογή - eklogee - 1589

பெண்பால் பெயர்சொல் தெரிந்துகொள்ளப்பட்டது "election" (ரோமர் 9:11 ரோமர் 11:5,7,28; 1தெச 1:4, 2பேதுரு 1:10) "chosen" (அப 9:15)

தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்

1 கிறிஸ்து (ஏசா 42:1; 1பேதுரு 2:6)

2 எல்லா விசுவாசிகளும் (ரோமர் 8:33; கொலோ 3:12; தீத்து 1:1; யோவான் 15:16; எபே 1:4 எபே 2:10; 2தெச 2:13; 2யோவான் 1:13)

3 இஸ்ரவேல் (ஏசா 45:4 ஏசா 65:9,22; மத் 24:21-31; மாற்கு 13:22,27 1பேதுரு 1:2)

4 தேவதூதர்கள் (1தீமோ 5:21)

தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் யூதராக இருந்தாலும், புறஜாதியாராக இருந்தாலும் அவர்களும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களே (ரோமர் 9:11; ரோமர் 11:5,7,28; 1தெச 1:4 1பேதுரு 5:13; 2பேதுரு 1:10) தேவனை யார் தங்களுடைய கர்த்தராகத் தெரிந்து கொள்கிறார்களோ அவர்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் (மத் 11:28-30; மத் 20:16; யோவான் 1:12 யோவான் 3:16-20; யோவான் 6:37 எபே 1:4; 2தெச 2:13; யாக் 2:5 1தீமோ 2:4; 2பேதுரு 3:9; வெளி 17:14 வெளி 22:17)

பாத்திரம் (vessel) - σκεῦος - skeuos - 4632

பால் வேறுபாடற்ற பெயர்சொல் - உடைமை, பண்டம், பாத்திரம், கூடு, பாய், பாண்டம், மூடு, வஸ்து - பொருட்கள் (material vessels) (மாற்கு 11:16, லூக்கா 8:16 யோவான் 19:29, அப 10:11,16 அப 11:5; 2தீமோ 2:20, எபி 9:21 வெளி 2:27; 2தீமோ 18:12) ஜனங்கள் (people) (அப் 9:15, ரோமர் 9:21-23, 2கொரி 4:7; 1தெச 4:4, 2தீமோ 2:21, 1பேதுரு 3:7)

அறிவி (bear) - βαστάζω - bastazoo - 941

வினைச்சொல் - அறிவி, சும, சகி, கொண்டு போ, சுமந்துகொள், சுமந்துவா, எடுத்துக்கொள், தாங்கு, தூக்கிக்கொள் - கரங்களினால் எடுத்துக் கொள்வது (to take up with the hands) கொடியைப்போல் ஏற்றுவது, தாங்குவது, உயர்த்துவது (raise as a flag; carry as a banner; support, exalt, hold upright)

9 அதிகாரம்

காண்பி (shew) - ὑποδείκνυμι hypodeiknymi - 5263

வினைச்சொல் - வழிகாட்டு, காண்பி, முன்னெச்சரிப்பு (forewarn) (அப் 9:16, அப் 20:35; மத் 3:7; லூக்கா 3:7 லூக்கா 6:47; லூக்கா 12:5)

"அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபட வேண்டும்" - மற்றவர்களை இனிமேல் பவுல் துன்புறுத்த முடியாது. இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் நிமித்தம் பவுல் துன்பப்பட வேண்டும். இயேசு கிறிஸ்துவைப் பிரசங்கித்ததற்காக அவன் ஜனங்களைத் துன்பப்படுத்தினான். இனிமேல் இயேசு கிறிஸ்துவைப் பிரசங்கித்து துன்பம் அனுபவிக்கப் போகிறான்.

5. சவுலுக்கு கண்பார்வை திரும்பவும் வருகிறது - பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை பெற்றுக் கொள்கிறான் - (அப் 22:12, 16:26, 26:13-18)

அப் 9:17 அப்பொழுது அனனியா போய், வீட்டுக்குள் பிரவேசித்து அவன்மேல் கையை வைத்து, சகோதரனாகிய சவுலே, நீ வந்த வழியிலே உனக்குத் தரிசனமான இயேசுவாகிய கர்த்தர், நீ பார்வையடையும் படிக்கும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படும்படிக்கும் என்னை அனுப்பினார் என்றான்.

அப் 9:18 உடனே அவன் கண்களிலிருந்து மீன் செதிள்கள் போன்றவைகள் விழுந்தது; அவன் பார்வையடைந்து, எழுந்திருந்து ஞானஸ்நானம் பெற்றான்.

அப் 9:19 பின்பு அவன் போஜனம் பண்ணிப் பலப்பட்டான். சவுல் தமஸ்குவிலுள்ள சீஷருடனே சிலநாள் இருந்து,

"சகோதரனாகிய சவுலே" - உறவினர்கள் (relatives) (ஆதி 14:16 ஆதி 29:12); பிறர் (neighbors) (உபா 23:7); இஸ்ரவேலர் (any Israelite) (லேவி 19:17, உபா 22:1-4; எரே 34:9); எந்த மனுஷனும் (any man) (ஆதி 9:5 1யோவான் 3:15) உடன்பணி (a companion) (2சாமு 1:26). விசுவாசிகள் ஒருவரையொருவர் அழைத்துக் கொள்வதற்கு பயன்படுத்தும் வாக்கியம் (It is a fraternal epithet among Christians) (அப் 9:17 அப் 21:20; 1கொரி 7:12; 2கொரி 2:13 எபி 2:11-12; 1பேதுரு 1:22)

"நீ வந்த வழியிலே உனக்குத் தரிசனமான இயேசுவாகிய கர்த்தர்" - மூலபாஷை புதிய ஏற்பாட்டில் "இயேசுவாகிய" (even Jesus) என்னும் வார்த்தை இல்லை. இங்கு கர்த்தர் என்னும் வார்த்தை இயேசுவைக் குறிக்கும். தேவன் இயேசுவைக் கர்த்தரும் கிறிஸ்துவுமாக்கினார் (அப் 2:36). பேதுரு இயேசுவை "எல்லாருக்கும் கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து" என்று கூறுகிறார் (அப் 10:36). கிரேக்க மொழியில் "கர்த்தர் அல்லது ஆண்டவர்" என்னும் வார்த்தையைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கும் சொல் "கூரியோஸ்" (kyrios) என்பதாகும். இந்த வார்த்தை பழைய ஏற்பாட்டில் "யெகோவா" என்னும் எபிரெய வார்த்தைக்குச் சமமானது. (மத் 22:44, அப் 9:5; அப் 22:8; அப் 26:15, சங் 110:1)

கர்த்தர் (Jesus) - κύριος - kyrios - 2962

ஆண்பால் பெயர்ச்சொல் - கர்த்தா, எஜமான், ஆண்டவர், ஐயா, உடையவர், தேவரீர்

"பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படும்படிக்கும்" - சாதாரண விசுவாசியின் மூலமாகவும், பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் அருளப்படும் என்பதற்கு இந்த வாக்கியம் முதலாவது எடுத்துக்காட்டு ஆகும். (அப் 8:14-23; அப் 19:1-7, 1தீமோ 4:14; 2தீமோ 1:6)

செதிள்கள் (scales) - λεπίς - lepis - 3013

பெண்பால் பெயர்ச்சொல் - செதிள்கள் செதுவழிந்த பதிப்பில் லேவி 11:9-10

9 அதிகாரம்

"ஞானஸ்நானம் பெற்றான்" - பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்ற பின்பு, பவுல் தண்ணீர் ஞானஸ்நானம் பெறுகிறான் (அப 10:44-48) சில வசனங்களில் தண்ணீர் ஞானஸ்நானம் பெற்ற பின்பு பரிசுத்த அபிஷேகம் அருளப்படுகிறது. (அப் 2, அப 8, அப 19)

6. சவுல் இயேசு கிறிஸ்துவைக் குறித்து பிரசங்கம் பண்ணி தமஸ்குவில் குடியிருக்கிற யூதர்களைக் கலங்கப் பண்ணுகிறான் - (அப 26:19-20, கலா 1:15-24

அப் 9:20 தாமதமின்றி, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஆலயங்களிலே பிரசங்கித்தான்

அப 9:21 கேட்டவர்களெல்லாரும் ஆச்சரியப்பட்டு: எருசலேமில் இந்த நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவர்களை நாசமாக்கி, இங்கேயும் அப்படிப்பட்டவர்களைக் கட்டிப் பிரதான ஆசாரியர்களிடத்திற்குக் கொண்டுபோகும்படி வந்தவன் இவனல்லவா என்றான்

அப 9:22 சவுல் அதிகமாகத் திடன் கொண்டு, இவரே கிறிஸ்துவென்று திருஷ்டாந்தப்படுத்தி, தமஸ்குவில் குடியிருக்கிற யூதர்களைக் கலங்கப் பண்ணினான்

"தாமதமின்றி, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஆலயங்களிலே பிரசங்கித்தான்" - பரிசுத்த ஆவியானவர் பவுலை அபிஷேகம் பண்ணினவுடன் அவனைப் பிரசங்கம் பண்ணுவதற்கு ஆயத்தம் பண்ணினார் ஜெபத்தின் மூலமாகத் தேவனுடைய வெளிப்பாட்டைத் தாராளமாகப் பெற்றுக் கொண்டான் (1கொரி 2:1-16; 2கொரி 12:1,7; கலா 1:11-16; கலா 2:7) பவுல் ஏற்கெனவே வேதவாக்கியங்களைப் பல வருஷங்களாக நன்றாகக் கற்றிருந்தான் இப்போது பரிசுத்த ஆவியானவர் அவனை அபிஷேகம் பண்ணியதினால் இயேசுவே மேசியா என்பதைத் தன்னுடைய உள்ளத்தில் ஏற்றுக் கொண்டு, அந்தச் சத்தியத்தை மனுஷர் மத்தியிலே பிரசங்கம் பண்ணுகிறான் (அப் 9:20,22)

ஆச்சரியப்பட்டார்கள் (amazed) - ἐξιστάνω - existanoo - 1839

வினைச்சொல் - மதிமயங்கு, ஆச்சரியப்படு, பிரமி (அப 8:9)

நாசமாக்கினான் (destroyed) - πορθέω - portheoo - 4199

வினைச்சொல் - நாசமாக்கு, பாழாக்கு, அழி (to waste) (கலா 1:13) (destroy) (அப் 9:21; கலா 1:23) ஒருவனை விரோதியாகப் பாவித்தல், அவனுடைய உடைமைகளை அழித்தல், அவனைக் கைதுபண்ணி துன்புறுத்துதல் என்னும் பொருளையும் இந்த வார்த்தை தரும் பவுல் இவையெல்லாவற்றையும் செய்தவன் (அப 7:58; அப 8:1-3; அப 9:1-6,14; அப 26:10-11)

திடன்கொள் (strength) - ἐνδυναμόω - endynamooo - 1743

வினைச்சொல் - பலப்படு, திடன்கொள் (was strengthened) (ரோமர் 4:20 எபே 6:10; பிலி 4:13; 1தீமோ 1:12, 2தீமோ 2:1; 2தீமோ 4:17; எபி 11:34

"சவுல் அதிகமாகத் திடன்கொண்டு, இவரே கிறிஸ்துவென்று திருஷ்டாந்தப்படுத்தி, தமஸ்குவில் குடியிருக்கிற யூதர்களைக் கலங்கப்பண்ணினான்" - பவுல் யூதரோடு தர்க்கம் பண்ணினான் இயேசுவைக் கிறிஸ்து என்று திருஷ்டாந்தப்படுத்தினான் யூத ஜனங்களும் இயேசுவைக் கிறிஸ்து என்று ஏற்றுக் கொள்ளும் வரையிலும் அவர்களோடு விவாதம் பண்ணினான்

9 அதிகாரம்

திருஷ்டாந்தப்படுத்து (proving) - συμβιβάζω - symbibazoo - 4822

வினைச்சொல் - திருஷ்டாந்தப்படுத்து நிச்சயித்துக்கொள், இணைக்கப்படு (join together) (எபே 4:16, கொலோ 2:2,19) ஒப்பிடு, முடிவுபண்ணு (compare, conclude) (அப் 16:10) நிரூபிக்கப்பட்ட சத்தியங்கள் மூலமாகத் தான் கூறுவது உண்மை என்பதை ஏற்றுக் கொள்ள வைப்பது (to bring to the same opinion by proven facts) (அப் 9:22); உபதேசம் பண்ணு (to teach) (1கொரி 2:16)

இயேசு கிறிஸ்துவின் ஜீவியத்தையும் கிரியைகளையும் தீர்க்கதரிசிகளுடைய ஜீவியங்களோடும், கிரியைகளோடும் ஒப்பிட்டுக் கூறி, இயேசுவே மேசியா என்பதைப் பவுல் ஜனங்களுக்கு உபதேசம் பண்ணினான். பவுல் கூறிய காரியங்களைத் தமஸ்குவிலுள்ள யூதர்கள் வேதவாக்கியங்களில் ஆராய்ந்து பார்த்து தெளிவு பெறுவதற்குப் பதிலாக அவர்கள் பவுலையும், அவனுடைய மாற்றத்தையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆகையினால் தமஸ்குவில் பவுலின் ஊழியத்தின் மூலமாக யாராவது இரட்சிக்கப்பட்டார்களா என்று தெரியவில்லை. தமஸ்குவில் கிறிஸ்தவ சபை இருந்ததற்கு ஆதாரமும் இல்லை. (அப் 17:11-12)

7. சவுலைக் கொல்வதற்கு முயற்சி - (2கொரி 11:32)

அப் 9:23 அநேகநாள் சென்றபின்பு யூதர்கள் அவனைக் கொலைசெய்யும்படி ஆலோசனை பண்ணினார்கள்

அப் 9:24 அவர்களுடைய யோசனை சவுலுக்குத் தெரியவந்தது. அவனைக் கொலை செய்யும்படி அவர்கள் இரவும் பகலும் கோட்டை வாசல்களைக் காத்துக் கொண்டிருந்தார்கள்

அப் 9:25 சீஷர்கள் இராத்திரியிலே அவனைக் கூட்டிக்கொண்டுபோய், ஒரு கூடையிலே வைத்து, மதில் வழியாய் இறக்கிவிட்டார்கள்

"அநேகநாள் சென்றபின்பு, யூதர்கள் அவனைக் கொலைசெய்யும்படி ஆலோசனை பண்ணினார்கள்" - அநேகநாள் சென்றபின்பு என்பது மூன்று வருஷங்களைக் குறிக்கும். பவுல் தமஸ்குவிலிருந்து அரபியா தேசத்திற்கு ஊழியம் செய்யப் புறப்பட்டான் (கலா 1:18, 2கொரி 11:32). அதன்பின்பு இரண்டாம் முறையாக மூன்று வருஷங்களுக்குப் பின்பு தமஸ்குவிற்கு வருகிறான். 1இராஜா 2:38-39 ஆகிய வசனங்களில் அநேக நாட்கள் என்பது மூன்று வருஷங்களைக் குறிக்கிறது

ஆலோசனை பண்ணினார்கள் (took counsel) - συμβουλεύω - symbouleuoo - 4823

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - ஆலோசனைபண்ணு, சதிபண்ணு (plotted) (அப் 9:23, மத் 26:4, யோவான் 11:53; யோவான் 18:14, வெளி 3:18)

8. சவுல் எருசலேமில் பிரசங்கம் பண்ணுகிறான் - (அப் 22:17, கலா 1:17-22)

அப் 9:26 சவுல் எருசலேமுக்கு வந்து சீஷருடனே சேர்ந்துகொள்ளப் பார்த்தான்; அவர்கள் அவனைச் சீஷனென்று நம்பாமல் எல்லாரும் அவனுக்குப் பயந்திருந்தார்கள்

அப் 9:27 அப்பொழுது பர்னபா என்பவன் அவனைச் சேர்த்துக் கொண்டு, அப்போஸ்தலரிடத்தில் அழைத்துக் கொண்டுபோய், வழியிலே அவன் கர்த்தரைக் கண்டதையும், அவர் அவனுடனே பேசினதையும், தமஸ்குவில் அவன் இயேசுவின் நாமத்தினாலே தைரியமாய்ப் பிரசங்கித்ததையும் அவர்களுக்கு விவரித்துச் சொன்னான்

9 அதிகாரம்

அப 9:28 அதன்பின்பு அவன் எருசலேமிலே அவர்களிடத்தில போக்கும் வரத்துமாயிருந்து,

"சவுல் எருசலேமுக்கு வந்து சீஷருடனே சேர்ந்துகொள்ளப் பார்த்தான்" - இந்த வாக்கியத்தில "பார்த்தான்" என்பதன் கிரேக்கவார்த்தை "பேராயோ" (peirao) என்பதாகும். இந்த வார்த்தைக்கு முயற்சி பண்ணுதல் என்று பொருள் ஆனால அவர்கள் அவனைச் சீஷனென்று நம்பாமல எல்லாரும் அவனுக்குப பயந்திருந்தார்கள் தங்களை வேவுபார்பபதறகாக பவுல வந்திருபபதாக நினைத்தார்கள இயேசுவின் சீஷர்களைச் சவுல் துன்புறுத்திய நிகழ்ச்சிகளை எருசலேமிலுள்ளவர்கள யாரும் மறந்துவிடவில்லை

பார்த்தான் (assayed) - πειράζω - peirazoo - 3985

வினைச்சொல் - சோதி. சோதனைக்காரனாயிரு, பிரயத்தனம பண்ணு. சோதனைக்குட்படுத்து பரீட்சை முயற்சி செய். தூண்டிவிடு (tried)

"பர்னபா" (Barnabas) - (அப 4:36)

"அப்போஸ்தலர்" - பேதுருவும், யாக்கோபும் (கலா 1:19) பவுல் இரட்சிக்கபட்டு மூன்று வருஷங்களாயிற்று. அதன பின்பும் அவனுடைய இரட்சிப்பு எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்கு ஏன தெரியவில்லையென்று தெளிவாக விளக்கபபடவில்லை பவுல் அரபிய தேசத்திலிருந்த மூன்று வருஷ காலத்தில எருசலேமிலுள்ளவர்கள அவனைப் பற்றி அதிகமாகக கேள்விப்படாமல இருந்திருக்கலாம். ஒருவேளை அவர்கள பவுலைப் பற்றிக கேள்விப் பட்டிருந்தாலும் அவனுடைய ஜீவியம் அவர்களுக்குத் தெரியாது. பவுல அவர்களோடு எருசலேமில இல்லாமல அரபியாவிற்குப போய்விட்டான் ஆகையினால் எருசலேமிலுள்ள கிறிஸ்தவருக்கு பவுல ஓர் அந்நியனைப் போன்றே இருக்கிறான்

"அதன்பின்பு அவன் எருசலேமிலே அவர்களிடத்தில போக்கும் வரத்துமாயிருந்தான்" சுமார் 15 நாட்கள (கலா 1:18

9. சவுலைக் கொல்வதற்கு மறுபடியும் முயற்சி - (வசனம் 23-25

அப் 9:29 கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே தைரியமாய்ப் பிரசங்கித்து, கிரேக்கருடனே பேசித் தர்க்கித்தான்; அவர்களோ அவனைக் கொலை செய்ய எத்தனம் பண்ணினார்கள்

அப 9:30 சகோதரர் அதை அறிந்து அவனைச் செசரியாவுக்கு அழைத்து கொண்டு போய், தர்சுவுக்கு அனுப்பி விட்டார்கள்

தைரியமாய் (boldly) - παρρησιάζομαι - parreesiazomai - 3955

வினைச்சொல் - தைரியமாய்ப் பிரசங்கிதைரியங்கொள், தைரியமாய்ப பேசு (to have boldness, especially in speaking) (அப 9:27,29; அப 13:46; அப் 14:3; அப் 18:26; அப் 19:8; அப 26:26 எபே 6:20 1தெச 2:2

"கிரேக்கர்" (Grecians) - (அப 6:1)

"செசரியா" (Caesarea) - (அப் 8:40

"தர்சு" (Tarsus) - (அப் 9:11 இதனபின்பு அப் 11:25 ஆவது வசனம் வரையிலும் நமக்கு பவுலைப் பற்றி ஒரு செய்தியும் தெரியவில்லை. இந்த வசனம் பவுல இரட்சிக்கபபட்டு எட்டு வருஷங்களுக்குப பின்பு நடைபெற்ற காரியம் என்று வரலாறு ஆசிரியர்கள் கூறுகிறார்கள்

10. சபையின் மூன்றாவது உபத்திரவத்தின் முடிவு - (அப 6:9-8:4

அப 9:31 அப்பொழுது யூதேயா கலிலேயா சமாரியா நாடுகளிலெங்குமுள்ள சபைகள சமாதானம் பெற்று, பக்திவிருத்தியடைந்து கர்த்தருக்குப பயப்படுகிற பயத்தோடும் பரிசுத்த ஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின

9 அதிகாரம்

"அப்பொழுது யூதேயா கலிலேயா சமாரியா நாடுகளிலெங்கும் சபைகள் சமாதானம் பெற்று, பக்திவிருத்தியடைந்து, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடும் பரிசுத்த ஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின" - இக்காலத்தில சபையில ஐந்துவிதமான ஆசீர்வாதங்கள் பெருகியிருந்தன அவையாவன

1 சபைகள் சமாதானம் பெற்றிருந்தன

2 சபைகள் பக்திவிருத்தியடைந்தன

3 சபைகள் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடு நடந்தன

4 சபைகள் பரிசுத்த ஆவியின் ஆறுதலோடு நடந்தன

5 சபைகள் பெருகின

ஆதித்திருச்சபையின ஆசீர்வாதங்களையும் பரிசுத்தத்தையும் அவர்களுடைய நிலைமையையும். இந்த வசனம் விளக்குகிறது. இந்தக் காலத்தில சபைகள சமாதானமாக இருந்ததற்கு ரோமப்பேரரசு யூதர்களைத் துன்புறுத்தியதே காரணம். ரோமப்பேரரசர் தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி, எருசலேமிலே யூதருடைய தேவாலயத்தில இராயனுடைய சிலையை நிறுவினார் யூதர்கள ரோமருக்கு எதிராகக் கலகம் பண்ணினார்கள் கலகம் பண்ணியவர்களை அடக்குவதற்காகவும் அழிப்பதற்காகவும் இராயன ரோமருடைய போர்சேவகர்களை இங்கு அனுப்பினான யூதர்கள் மிகவும் துன்புறுத்தப்பட்டார்கள ரோமர்களை எதிர்ப்பதே யூதருடைய முக்கியமான வேலையாக இருந்தது. ஆகையினால இக்காலத்தில யூதர்களால கிறிஸ்தவர்களைத் துன்புறுத்த முடியவில்லை இதனால சபைகள சமாதானம் பெற்றிருந்தன பவுல மனந்திரும்பினான் ஆயினும் யூதேயாவிலோ சமாரியாவிலோ கலிலேயாவிலோ கிறிஸ்தவருக்கு எதிரான உபத்திரவம் நிறுத்தப்படவில்லை அது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான இருந்தது பல வருஷங்களுக்குப் பின்பு, இக்காலத்தில சபைகள் தேவகிருபையால சமாதானம் பெற்றிருந்தன

VI. பேதுருவின் வரலாறு

1. திமிர்வாதமுள்ளவனைக் குணப் படுத்துகிறான்

> அப 9:32 பேதுரு போய் எல்லாரையும் சந்தித்துவருகையில், அவன் லித்தா ஊரிலே குடியிருக்கிற பரிசுத்தவான்களிடத்திற்கும் போனான்
>
> அப் 9:33 அங்கே எட்டு வருஷமாய்க் கட்டிலின் மேல் திமிர்வாதமுள்ளவனாய்க் கிடந்த ஐனேயா என்னும் பேருள்ள ஒரு மனுஷனைக் கண்டான்
>
> அப 9:34 பேதுரு அவனைப் பார்த்து, ஐனேயாவே இயேசுகிறிஸ்து உன்னைக் குணமாக்குகிறார் நீ எழுந்து உன் படுக்கையை நீயே போட்டுக்கொள் என்றான் உடனே அவன் எழுந்திருந்தான்
>
> அப 9:35 லித்தாவிலும் சாரோனிலும் குடியிருந்தவர்களெல்லாரும் அவனைக் கண்டு கர்த்தரிடத்தில திரும்பினார்கள

"பேதுரு போய் எல்லாரையும் சந்தித்து வருகையில அவன் லித்தா ஊரிலே குடியிருக்கிற பரிசுத்தவான்களிடத்திற்கும் போனான" - மறுபடியுமாக நாம் இந்த வசனத்தில பேதுருவின ஊழிய வரலாற்றை வாசிக்கிறோம. அப்போஸ்தலருடைய நடபடிகள புஸ்தகத்தில பேதுரு இதுவரையிலும மிகவும் முக்கியமான அப்போஸ்தலனாக இருந்தான அப 1:15-5 அப 2:14 37 38 அப 3:1-12 அப 4:8-9 அப் 5:1-29; அப் 8:14-23, இவனுடைய வரலாறு அப் 12:19 வரையிலும் கூறப்பட்டிருக்கிறது.

"லித்தா (Lydda) எருசலேமிற்கு மேறகில 30 மைல் தூரத்திலுள்ள பட்டணம் யோப்பாவிற்கு (Joppa) கிழக்கில 10 மைல் தூரத்தில அமைந்திருந்தது.

திமிர்வாதம் (palsy) παραλύω paralyoo 3886

விளைச்சொல் - திமிர்வாதகாரனாயிரு

பெயரடை - தளர்ந்த

9 அதிகாரம்

"இயேசுகிறிஸ்து உன்னைக் குணமாக்குகிறார்" - இந்த வசனத்தோடு இயேசுகிறிஸ்து முதலாவது குணப்படுத்திய நிகழ்ச்சியை ஒப்பிட்டு வாசித்து பார்க்கலாம். (அப் 3:6)

"உடனே அவன் எழுந்திருந்தான்" - புதிய ஏற்பாட்டு சுகமாதல்கள் முழுமையாகவும், உடனடியாகவும் நடைபெற்றன.

"கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்" - லித்தாவிலும்சாரோனிலும் குடியிருந்தவர்கள் எல்லாரும் திமிர்வாதமுள்ளவனாய் கிடந்த ஐனேயா சுகமானதைக் கண்டு கர்த்தரிடத்தில் திரும்பினார்கள். தெய்வீக சுகமாதல்களும், அற்புதங்களும் நடைபெறும் போது ஜனங்கள் கர்த்தரிடத்தில் திரும்புவார்கள். விசுவாசிகளுடைய விசுவாசம் வர்த்திக்கும். (மத் 17:20; மாற்கு9:23;மாற்கு16:17-18; யோவான் 14:12-15)

2. தபீத்தாளை உயிருடன் எழுப்புகிறான்

அப் 9:36 யோப்பா பட்டணத்தில் கிரேக்குப் பாஷையிலே தொற்காள் என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி இருந்தாள்; அவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்து கொண்டுவந்தாள்.

அப் 9:37 அந்நாட்களில் அவள் வியாதிப்பட்டு மரணமடைந்தாள்; அவளைக் குளிப்பாட்டி மேல்வீட்டிலே கிடத்திவைத்தார்கள்.

அப் 9:38 யோப்பா பட்டணம் லித்தா ஊருக்குச் சமீபமானபடியினாலே பேதுரு அவ்விடத்திலே இருக்கிறானென்று சீஷர்கள் கேள்விப்பட்டு, தாமதமில்லாமல் தங்களிடத்தில் வரவேண்டுமென்று சொல்லும்படி இரண்டு மனுஷரை அவனிடத்திற்கு அனுப்பினார்கள்.

அப் 9:39 பேதுரு எழுந்து, அவர்களுடனே கூடப்போனான். அவன் போய்ச் சேர்ந்தபொழுது, அவர்கள் அவனை மேல்வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோனார்கள். அப்பொழுது விதவைகளெல்லாரும் அழுது, தொற்காள் தங்களுடனேகூட இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும் வஸ்திரங்களையும் காண்பித்து, அவனைச் சூழ்ந்து நின்றார்கள்.

அப் 9:40 பேதுரு எல்லாரையும் வெளியே போகச்செய்து, முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, பிரேதத்தின் புறமாய்த் திரும்பி: தபீத்தாளே, எழுந்திரு என்றான். அப்பொழுது அவள் தன் கண்களைத் திறந்து, பேதுருவைப் பார்த்து உட்கார்ந்தாள்.

அப் 9:41 அவன் அவளுக்குக் கைகொடுத்து, அவளை எழுந்திருக்கப்பண்ணி, பரிசுத்தவான்களையும் விதவைகளையும் அழைத்து, அவளை உயிருள்ளவளாக அவர்களுக்கு முன் நிறுத்தினான்.

அப் 9:42 இது யோப்பா பட்டணமெங்கும் தெரியவந்தது. அப்பொழுது அநேகர் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்.

அப் 9:43 பின்பு அவன் யோப்பா பட்டணத்திலே தோல் பதனிடுகிறவனாகிய சீமோன் என்னும் ஒருவனிடத்தில் அநேகநாள் தங்கியிருந்தான்.

"யோப்பா பட்டணம்" (Joppa) - எருசலேமிருந்து மேற்கே 40 மைல் தொலைவில் மத்தியதரைக் கடற்கரையில் அமைந்துள்ள துறைமுகப்பட்டினம் (அப் 9:36-43; அப் 10:5-6,32; யோசு 19:46; 2நாளா 2:16; எஸ்றா 3:7; யோனா 1:3)

"தொற்காள் என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள்" (Tabitha - Dorcas) - தபீத்தாள் அரமாயிக் வார்த்தை. தொற்காள் கிரேக்க வார்த்தை. இவ்விரண்டு வார்த்தைக்குமே வரையாடு 'மான்போன்று' இருக்கும் ஆடு (antelope, gazelle) என்று பொருள். கிழக்கு தேசங்களில் சிறுபெண்களுக்கு அழகிய மிருகங்களின் பெயர்களை வழங்குவது வழக்கம்.

9 அதிகாரம்

"அவள் (தொற்காள்) நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்துகொண்டு வந்தாள்" - தேவனுடைய தெய்வீக அன்பு அவளிடத்தில் நிரம்பியிருந்தது. மனுஷருக்கு உதவி செய்ய வேண்டும் என்றும் நல்ல எண்ணம் கொண்டிருந்தாள். நல்ல மனதோடு நற்கிரியைகளைச் செய்து வந்தாள்.

"அந்நாட்களில் அவள் வியாதிப்பட்டு மரணமடைந்தாள். அவளைக் குளிப்பாட்டி மேல்வீட்டிலே கிடத்திவைத்தார்கள்" - ஆதித்திருச்சபையில் விசுவாசிகள் மரிக்கும் போது, அவர்கள்மீதுள்ள அன்பினாலும் பாசத்தினாலும், மரியாதையினாலும் மரித்தோர் உயிர்த்தெழுவார் என்னும் ஆழமான நம்பிக்கையினாலும் மரித்தவர்களை சடலங்களைக் குளிப்பாட்டி நல்ல வஸ்திரம் உடுத்துவது வழக்கம்.

அங்கிகள் (coats) - χιτών - chitoon - 5509

ஆண்பால் பெயர்ச்சொல் - அங்கி. சரீரத்திற்கு மேல் அணியும் உள் வஸ்திரங்கள் (undergarment) மத் 10:10; மாற்கு 6:9; லூக்கா 3:11 லூக்கா 9:3; யூதா 1:23

வஸ்திரங்கள் (garments) - ἱμάτιον - himation - 2440

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல். வஸ்திரம் சரீரத்திற்கு மேல் அணியும் வெளி வஸ்திரங்கள் (outer garment, cloak, mantle) (மத் 9:20; யோவான் 19:2; அப் 9:39)

"பேதுரு எல்லாரையும் வெளியே போகச்செய்தான்" - மத் 9:23 ஆவது வசனத்தில் இயேசு கிறிஸ்து இதைப்போன்று செய்த ஒரு நிகழ்ச்சியை வாசிக்கிறோம். "இயேசுவானவர் தலைவனுடைய வீட்டிலே வந்து, தாரை ஊதுகிறவர்களையும் இரைகிற ஜனங்களையும் கண்டு ஜனங்கள் வெளியே துரத்தப்பட்ட பின்பு" (மத் 9:23-25) அங்கு ஏளனப்பேச்சுக்காரர்கள் இருந்தார்கள். ஒரே சந்தடியாக இருந்தது. அவர்கள் துரத்தப் பட்டால்தான் விசுவாசம் கிரியை நடப்பிக்கும் அற்புதம் நடைபெறும் என்பதற்காக அவர்கள் துரத்தப்படவில்லை. அவர்கள் சந்தடி பண்ணிக் கொண்டிருந்தார்கள். அந்த இடத்தில் ஒரு அமைதியையும் பக்தியான சூழ்நிலையையும் கொண்டு வரவேண்டுமென்பதற்காக அந்த ஜனங்கள் வெளியே துரத்தப்பட்டார்கள். இதே காரணத்திற்காகவே பேதுருவும் எல்லோரையும் வெளியே போகச்செய்தான்.

"முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணினான்" - அப் 7:60 ஆவது வசனத்தில் ஸ்தேவானும் இவ்வாறு முழங்காற்படியிட்டு ஜெபித்தான் என்று வாசிக்கிறோம்.

"தபீத்தாளே எழுந்திரு என்றான். அப்பொழுது அவள் தன் கண்களைத் திறந்து பேதுருவைப் பார்த்து உட்கார்ந்தாள்" - அப்போஸ்தலர்கள் மரித்தவர்களை உயிரோடு எழுப்பிய முதலாவது அற்புதம் (மத் 9:25; மத் 10:8)

"அநேகர் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்" - தபீத்தாள் உயிரோடு எழுந்தது யோப்பா பட்டணம் எங்கும் தெரியவந்தது. தேவனுடைய வல்லமையையும் அற்புதங்களையும் காண்கிற ஜனங்கள் கர்த்தரிடத்தில் விசுவாசம் வைப்பார்கள்.

"பின்பு அவன் யோப்பா பட்டணத்திலே தோல் பதனிடுகிறவனாகிய சீமோன் என்னும் ஒருவனிடத்தில் அநேகநாள் தங்கியிருந்தான்" - யோப்பா பட்டணத்தில் தேவனுடைய அற்புத வல்லமை வெளிப்பட்டது. தொற்காள் என்னப்பட்ட தபீத்தாள் தேவவல்லமையால் உயிரோடு எழும்பினாள். இதனால் அந்த ஊரில் மிகப்பெரிய எழுப்புதல் உண்டாயிற்று. பேதுரு இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அந்த ஊரிலேயே அநேக நாள் தங்கியிருந்து இயேசு கிறிஸ்துவைப் பற்றி ஜனங்களுக்குப் பிரசங்கித்து வந்தான். பேதுரு இந்த ஊரில் மூன்று வருஷமாகத் தங்கியிருந்து ஊழியம் செய்தான் என்று வரலாற்று ஆசிரியர்கள் கருதுகிறார்கள் (அப் 9:23)

"தோல் பதனிடுகிறவனாகிய சீமோன்" - அக்காலத்தில் தோல் பதனிடுகிறவர்கள் சுத்த மிருகம் அசுத்த மிருகம் என்று பாகுபாடு பாராமல் எல்லா மிருகங்களுடைய தோல்களையும் பதனிட்டார்கள். அசுத்த மிருகங்களைத் தொடுவது யூதருக்கு அருவருப்பான காரியம். பேதுரு மூலமாக மிகப்பெரிய அற்புதம் நடைபெற்றாலும் அவன் யோப்பா பட்டணத்திலுள்ள ஐசுவரியவான்களின் வீடுகளில் தங்குவதற்குப் பதிலாக அந்த பட்டணத்தில் மிகவும் தாழ்வானவனாகக் கருதப்பட்ட யோப்பா வீட்டில் மனத்தாழ்மையோடு தங்குகிறான்.

9 அதிகாரம்

கிறிஸ்தவ சபையின் முதலாவது காலம்

கிறிஸ்து உயிரோடு எழுப்பப்பட்ட நிகழ்ச்சியுடன் ஆதித்திருச்சபையின் முதலாவது காலம் நிறைவு பெறுகிறது. பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரி பொழியப்பட்டு, இப்போது எட்டு வருஷங்கள் கடந்து விட்டது. இந்த காலத்தில் யூதருக்கு மட்டுமே சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. (மத் 10:6; யோவான் 1:11; ரோமர் 1:16) யூதர்களே சபையை ஸ்தாபித்தார்கள் அதை யூதருக்காக ஸ்தாபித்தார்கள். இந்தக் காலத்தில் புறஜாதியாருக்கும் சுவிசேஷம் பரவ வேண்டுமென்று தேவன் திருவுளம் பற்றினார். யூதர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணித்து விடுவார்கள் என்பது இயேசுவிற்கு நன்றாகத் தெரியும். ஆகையினால் சபையின் நிர்வாகங்களில் சில மாற்றங்களைத் தேவன் திட்டமிட்டார் (மத் 21:33-46) தர்சீஸ் பட்டணத்தானாகிய சவுலின் மனமாற்றம் இயேசு கிறிஸ்துவின் திட்டம் நிறைவேறுவதற்கு ஒரு ஆயத்தமாகும்.

கிறிஸ்தவ சபையின் இரண்டாவது காலம்

இந்தக் காலத்தில் சுவிசேஷ ஊழியம் புறஜாதியார் மத்தியில் நடைபெறுகிறது. அதற்கு ஏற்ற பிரகாரமாக சுவிசேஷ ஊழியத்தில் மாற்றம் ஏற்படுகிறது. சுவிசேஷத்தில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. மோசேயின் பிரமாணங்களைக் குறித்து யூதருக்கும் புறஜாதியாருக்கும் இடையே கருத்து வேறுபாடு வந்தது. புறஜாதியார் மத்தியில் திருச்சபைகள் வளர்ந்து பெருகின. புறஜாதியார் மத்தியில் ஊழியம் செய்தவர்களும் யூதர்களுக்கு மத்தியில் ஊழியம் செய்தவர்களும் பொதுவாகக் கூட்டம் கூடி தங்களிடையே நிலவிய கருத்து வேறுபாடுகளைத் தவிர்த்துக் கொண்டார்கள் (அப் 15; கலா 2; கலா 3:19-25; கலா 4:2, 3; கொலோ 2:14-17; 2 கொரி 3:6-15; எபி 7,8,9,10)

10 அதிகாரம்

3. புறஜாதியார் மத்தியில் எழுப்புதல்

(1) கொர்நேலியுவின் தரிசனம்

அப் 10:1 இத்தாலியா பட்டாளம் என்னப்பட்ட பட்டாளத்திலே நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியு என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் செசரியா பட்டணத்திலே இருந்தான்.

அப் 10:2 அவன் தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தான்.

அப் 10:3 பகலில் ஏறக்குறைய ஒன்பதாம் மணி நேரத்திலே தேவனுடைய தூதன் தன்னிடத்தில் வரவும், கொர்நேலியுவே, என்று அழைக்கவும் பிரத்தியட்சமாய்த் தரிசனங்கண்டு,

அப் 10:4 அவனை உற்றுப்பார்த்து, பயந்து: ஆண்டவரே, என்ன என்றான். அப்பொழுது அவன்: உன் ஜெபங்களும் உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது.

அப் 10:5 இப்பொழுது நீ யோப்பா பட்டணத்துக்கு மனுஷரை அனுப்பி, பேதுரு என்று மறுபேர்கொண்ட சீமோனை அழைப்பி;

அப் 10:6 அவன் தோல் பதனிடுகிறவனாகிய சீமோன் என்னும் ஒருவனிடத்திலே தங்கியிருக்கிறான்; அவனுடைய வீடு கடலோரத்திலிருக்கிறது; நீ செய்யவேண்டியதை அவன் உனக்குச் சொல்லுவான் என்றான்.

"செசரியா" (Caesarea) - (அப் 8:40)

"கொர்நேலியு" (Cornelius) - பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின்பு, (அப் 15:7-13) சுவிசேஷச் செய்தியைக் கேட்ட முதலாவது புறஜாதியார் கொர்நேலியுவும், அவனுடைய வீட்டாரும் ஆவர். அதுவரையிலும் திருச்சபையில் விருத்தசேதனம் பெற்றவர்களும், மோசேயின் பிரமாணங்களைக் கைக்கொள்பவர்களும் மட்டுமே அங்கத்தினர்களாக இருந்தனர். தேவன் தமது சுவிசேஷத்தைப் புறஜாதியாருக்கும் அறிவிக்க விரும்பினார். பேதுருவின் ஜீவியத்தில் இதைக் குறித்து உணர்த்தினார். அவர் மூலமாக மற்ற அப்போஸ்தலர்களுக்கும் கிறிஸ்துவின் சுவிசேஷம் யூதருக்கு மட்டும் என்றல்லாமல் புறஜாதியாருக்கும் உரியது என்னும் சத்தியம் வெளிப்படுத்தப்பட்டது. (அப் 10:9-28,34-35; அப் 11:1-18; அப் 15:7-13)

"நூற்றுக்கு அதிபதி" (centurion) - ரோமப்படையில் 100 போர் வீரர்களுக்குத் தலைவன். புதிய ஏற்பாட்டில் பத்து நூற்றுக்கு அதிபதிகளைக் குறித்து நாம் வாசிக்கிறோம். (மத் 8:5; மத் 27:54; லூக்கா 7:6; அப் 10:1; அப் 21:32; அப் 22:25; அப் 23:17,23; அப் 27:1)

"இத்தாலியா பட்டாளம்" - ஒரு பட்டாளத்தில் 555 காலாட்படையினரும், 66 குதிரைப்படையினரும் இருப்பார்கள். இவர்கள் அனைவரும் ஒரே இனத்தவராகவும் இருப்பார்கள். இத்தாலியா பட்டணத்தில் உள்ளவர்கள் அனைவருமே இத்தாலியா தேசத்தார்.

பட்டாளம் (band) - σπεῖρα - speira - 4686

பொதுவான பொருள் - கூட்டம், பட்டாளம்

"அவன் தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தான்" கொர்நேலியு மிகவும் நல்லவன். தேவபக்தியுள்ளவன். தேவனுக்குப் பயந்தவன். ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்தவன். எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தவன். ஆனாலும், அவன் இன்னும் இரட்சிக்கப்படவில்லை. ஒரு பாவியை அவனுடைய கிரியைகள் ஒருபோதும் இரட்சிக்காது.

10 அதிகாரம்

மனுஷருடைய ஆத்துமாவை இரட்சிக்காத காரியங்கள்

1 தேவனிடத்தில் பக்தியாயிருப்பது. மார்க்கச்சடங்குகளைக்கடைப்பிடிப்பது. (அப 1:5, 10:7, 13:50; 17:17, 22:12)

2 தேவனுக்குப் பயப்படுவது (அப 10:2) பிசாசுகளும் தேவனுக்குப் பயப்படுகின்றன (யாக் 2:19) இரட்சிக்கப் படாதவர்களும் தேவனுக்குப் பயப்படுகிறார்கள் (சாமு 12:18, 2இராஜா 17:32-34,41 யோனா 1:16, வெளி 21:8)

3 ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்வது. (அப 10:2) பரிசேயர்களும் தாராளமாகத் தருமம் செய்தார்கள் ஆனால் அவர்கள் இரட்சிப்பை ஏற்றுக் கொள்ளவில்லை. (மத் 6:1-2) ஒருவன் தன்னிடத்திலுள்ள எல்லாவற்றையும் தருமம் பண்ணினாலும் அவன் இயேசு கிறிஸ்துவைத் தன் சொந்த இரட்சகராகஏற்றுக் கொள்ளாவிட்டால் அவனுக்கு இரட்சிப்பு இல்லை (1 கொரி 13:3)

4 எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக்கொண்டிருப்பது. (அப 10:2) பாவிகளும் மாயமாலக்காரர்களும் எப்போதும் ஜெபம் பண்ணுவார்கள் (மத் 6:5-7 லூக்கா 18:9-14) நரகத்திலும்கூட ஜனங்கள் ஜெபிப்பார்கள் ஆனால் அந்த ஜெபத்தால் பிரயோஜனம் இல்லை (லூக்கா 16:23-31)

5 தரிசனங்களைக் காண்பது. (அப 10:3-6) இரட்சிக்கப் படாதோர்கூட தரிசனங்களைக் கண்டிருக்கிறார்கள் ஆனால் அது அவர்களை இரட்சிக்கவில்லை (யோபு 33:14-30, ஏசா 29:7,12, தானி 2:1-9,28 தானி 4:5,27-37 தானி 5:1-31 சக 13:5)

6 மனுஷருடைய கண்களில் நீதிமானாக இருப்பது. (அப 10:22)

7 மனுஷர் மத்தியிலே நல்லவர் என்று சாட்சி பெறுவது. (அப் 10:22) தேவனுடைய பரிசுத்தவான்களைக் கொலை பண்ணியதற்காகப் பவுல்கூட யூத ஜனங்கள் மத்தியிலே நல்லவன் என்று பெயர் பெற்றிருந்தான் (அப 23:1 அப 26:5 பிலி 3:6)

8 உபவாசம் பண்ணுவது. (அப 10:30) மாயமாலக்காரரும் உபவாசம் பண்ணுகிறார்கள் (மத் 6:16-18 லூக்கா 18:9-14)

"ஒன்பதாம்மணி நேரம்" - மாலை 3 மணி.

"உன் ஜெபங்களும் உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது" - (யோவான் 9:31)

"அவன் தோல் பதனிடுகிறவனாகிய சீமோன் என்னும் ஒருவனிடத்திலே தங்கியிருக்கிறான் அவனுடைய வீடு கடலோரத்திலிருக்கிறது" தேவனுக்குத் தம்முடைய பிள்ளைகளைப் பற்றிய எல்லா விவரங்களும் தெரியும். அவர்களுடைய முகவரியும் தெரியும்.

"நீ செய்யவேண்டியதை அவன் உனக்குச் சொல்லுவான்" - கொர்நேலியு செய்ய வேண்டிய காரியம் ஒன்றுதான் அவன் சுவிசேஷத்தைக் கேட்டு, அதை விசுவாசிக்க வேண்டும். (அப 10:22-32)

(2) கொர்நேலியு பேதுருவினிடத்திற்கு ஆட்களை அனுப்புகிறான்

(அப 11:13 15:7-11)

அப 10:7 கொர்நேலியு தன்னுடனே பேசின தேவதூதன் போனபின்பு, தன் வீட்டு மனுஷரில் இரண்டுபேரையும் தன்னிடத்தில் சேவிக்கிற போர்ச்சேவகரில் தேவபக்தியுள்ள ஒருவனையும் அழைத்து

அப 10:8 எல்லாவற்றையும் அவர்களுக்கு விவரித்துச் சொல்லி, அவர்களை யோப்பா பட்டணத்துக்கு அனுப்பினான்

அப்போஸ்தலர் – தொகுப்புரை

10 அதிகாரம்

(3) பேதுருவின் தரிசனம் - தூப்பட்டியும் அசுத்தமான மிருகங்களும் - (அப் 11:4-10)

அப் 10:9 மறுநாளிலே அவர்கள் பிரயாணப்பட்டு அந்தப் பட்டணத்துக்குச் சமீபித்து வருகையில், பேதுரு ஆறாம்மணி நேரத்திலே ஜெபம்பண்ணும்படி மேல்வீட்டில் ஏறினான்.

அப் 10:10 அவன் மிகுந்த பசியடைந்து சாப்பிட மனதாயிருந்தான். அதற்கு அவர்கள் ஆயத்தம்பண்ணுகையில், அவன் ஞானதிருஷ்டியடைந்து

அப் 10:11 வானம் திறந்திருக்கிறதாகவும், நாலு முனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப்போல ஒருவிதமான கூடு தன்னிடத்தில் இறங்கி, தரையில் விடப்பட்டிருக்கிறதாகவும்,

அப் 10:12 அதிலே பூமியிலுள்ள சகலவிதமான நாலுகால் ஜீவன்களும், காட்டுமிருகங்களும், ஊரும் பிராணிகளும், ஆகாயத்துப் பறவைகளும் இருக்கிறதாகவும் கண்டான்.

அப் 10:13 அல்லாமலும்: பேதுருவே, எழுந்திரு, அடித்துப் புசி என்று அவனுக்குச் சொல்லும் ஒரு சத்தம் உண்டாயிற்று.

அப் 10:14 அதற்குப் பேதுரு: அப்படியல்ல, ஆண்டவரே, தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் புசித்ததில்லை என்றான்.

அப் 10:15 அப்பொழுது: தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே என்று இரண்டாந்தரமும் சத்தம் அவனுக்கு உண்டாயிற்று.

அப் 10:16 மூன்றாந்தரமும் அப்படியே உண்டாயிற்று. பின்பு அந்தக் கூடு திரும்ப வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

"மறுநாளிலே அவர்கள் பிரயாணப்பட்டார்கள்" - செசரியா யோப்பாவிற்கு வடக்கே 35 மைல் தூரத்தில் உள்ளது. ஒருநாள் பிரயாணத்தில் அந்த ஊருக்குப் போய் சேரமுடியாது. கொர்நேலியு மாலை 3 மணி அளவில் தரிசனம் கண்டான் (அப் 10:3). கொர்நேலியுவின் தரிசனத்திற்குப் பின்பு அவர்கள் தங்களுடைய பிரயாணத்தை ஆரம்பித்து இருந்தால் மதிய வேளையில் பேதுருவிடம் வந்து சேர்ந்திருப்பார்கள் (அப் 10:23-24). ஆறாம்மணி என்பது மதியம் 12 மணியைக் குறிக்கும்.

"பேதுரு ஆறாம்மணி நேரத்திலே ஜெபம்பண்ணும்படி மேல்வீட்டில் ஏறினான்" - மேல்வீட்டின் கூரை கிழக்குத் தேசங்களில் தட்டையாக இருக்கும். ஜனங்கள் ஜெபம் பண்ணுவதற்காகவும் ஓய்வெடுப்பதற்காகவும் மேல்வீட்டைப் பயன்படுத்துவார்கள்.

"அவன் ஞானதிருஷ்டியடைந்தான்" - தன்னைச் சுற்றிலும் என்ன நடைபெறுகிறது என்பதைப் பற்றி ஒன்றும் தெரியாமல் தரிசனத்தின் கருப்பொருளை மட்டுமே தன்னுடைய மனதில் கவனித்துப் பார்ப்பது (அப் 10:11-16).

"வானம் திறந்திருக்கிறதாகவும் நாலுமுனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப்போல ஒருவிதமான கூடு தன்னிடத்தில் இறங்கித் தரையில் விடப்பட்டிருக்கிறது" அந்தத் துப்பட்டியிலே பூமியிலுள்ள சகலவிதமான நாலுகால் ஜீவன்களும் காட்டுமிருகங்களும் ஊரும் பிராணிகளும் ஆகாயத்துப் பறவைகளும் இருக்கிறதாகவும் கண்டான். யூதர்களையும் புறஜாதியாரையும் இரட்சிப்பதற்கு தேவன் சித்தம் கொண்டிருக்கிறார் என்பதை இந்தத் தரிசனம் வெளிப்படுத்துகிறது (அப் 10:34-35; அப் 11:1-18; அப் 15:7-11).

"பேதுருவே, எழுந்திரு, அடித்துப் புசி என்று அவனுக்குச் சொல்லும் ஒரு சத்தம் உண்டாயிற்று" - அடித்துப் புசி என்பதற்கு பலியிட்டுப் புசித்தல் (sacrifice and eat) என்று பொருள். துப்பட்டியிலே சகலவிதமான மிருகங்கள் இருந்தன. அவை யூதரையும் புறஜாதியாரையும் குறிக்கும். தேவன் புறஜாதியாரையும் சந்திக்க வேண்டுமென்று விரும்புகிறார். பேதுரு யூதருக்கும் புறஜாதியாருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணவேண்டும்.

10 அதிகாரம்

யூதருக்கும், புறஜாதியாருக்கும் இடையிலுள்ள பிரிவினைச் சுவர் இயேசு கிறிஸ்துவின் மூலமாக அழிந்து போயிற்று. பெந்தெகொஸ்தே அனுபவம் நடைபெற்று எட்டு வருஷங்கள் ஆயிற்று. இன்னும் புறஜாதியாருக்குச் சுவிசேஷம் அறிவிக்கப்படவில்லை (எபே 2:14-16) இப்போது யூதரையும், புறஜாதியாரையும் ஒரே மேய்ப்பனின்கீழ் கொண்டுவரவேண்டிய காலம் வந்திருக்கிறது. (யோவான் 10:16 1கொரி 12:13)

"அப்படியல்ல, ஆண்டவரே தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் புசித்ததில்லை" - நியாயப்பிரமாணத்தினால் தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற போஜனம். (மாற்கு 7:2 லேவி 11 உபா 14)

"தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே" - தேவன் சுவிசேஷத்தினால் புறஜாதியாரை இன்னும் இரட்சிக்கவில்லை. இப்போது அவர்களையும் இரட்சிக்கும்படிக்குத் தேவன் திருவுளம் பற்றியிருக்கிறார். தமது விருப்பத்தை பேதுருவிற்கு முதலாவதாகக் கற்பித்தார். தம் விரும்பினார். தேவன் சர்வ ஆளுநராக இருக்கிறார். யூதருக்கும், புறஜாதியாருக்கும் இயேசு கிறிஸ்துவே இரட்சகர். ஜனங்களுடைய பாவத்திலிருந்து இயேசு கிறிஸ்துவின் திரு இரத்தத்தினால் கழுவப்படும்போது, புறஜாதியாரும் யூதரைப்போலவே நீதிமான்களாக்கப் படுகிறார்கள். இந்தச் சத்தியத்தை ஆதித்திருச்சபை புரிந்து கொள்ள வேண்டும். கிறிஸ்துவில் இனவேறுபாடு இல்லை (கலா 3:28, கொலோ 3:11) கிறிஸ்துவில் யூதரும், புறஜாதியாரும் ஒரே சரீரமாக இருக்கிறார்கள் (1கொரி 12:13; எபே 2:14-22)

"மூன்றாம்தரமும் அப்படியே உண்டாயிற்று" - இதை உறுதிப்பண்ணுவதற்கு இந்தக் காரியம் மூன்று முறை நடைபெற்றது. (2கொரி 13:1)

"பின்பு அந்தக் கூடு திரும்ப வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது" கூடு வானத்திலிருந்துதான் இறங்கி வந்தது. தேவனிடத்திலிருந்து வந்தது. யூதரையும் புறஜாதியாரையும் இரட்சிக்க வேண்டுமென்பது தேவனுடைய சித்தம் என்பதை வலியுறுத்துவதற்காக அந்தக்கூடு பரலோகத்திலிருந்து இறங்கி வந்தது. யூதரும் புறஜாதியாரும் தேவனிடத்திலிருந்தே வந்தவர்கள். இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் மூலமாக இவ்விரு திரத்தாரும் தேவனிடத்திற்கே திரும்பச் செல்வார்கள் (எபே 3:14-15)

(4) பேதுருவும் கொர்நேலியு அனுப்பிய மனுஷரும் - (அப 11:11)

அப 10:17 அப்பொழுது பேதுரு, தான் கண்ட தரிசனத்தைக்குறித்துத் தனக்குள்ளே சந்தேகப்படுகையில், இதோ, கொர்நேலியுவினால் அனுப்பப்பட்டமனுஷர்கள் சீமோனுடைய வீட்டை விசாரித்துக் கொண்டு, வாசற்படியிலே வந்து நின்று,

அப 10:18 பேதுரு என்று மறுபேர்கொண்ட சீமோன் இங்கே தங்கியிருக்கிறாராஎன்று கேட்டார்கள்.

அப 10:19 பேதுரு அந்தத் தரிசனத்தைக் குறித்துச் சிந்தனை பண்ணிக் கொண்டிருக்கையில், ஆவியானவர்: இதோ, மூன்று மனுஷர் உன்னைத் தேடுகிறார்கள்.

அப 10:20 நீ எழுந்து இறங்கி, ஒன்றுக்கும் சந்தேகப்படாமல், அவர்களுடனே கூடப்போ; நானே அவர்களை அனுப்பினேன் என்று அவனுக்குச் சொன்னார்.

அப 10:21 அப்பொழுது பேதுரு கொர்நேலியுவினால் தன்னிடத்தில் அனுப்பப்பட்ட மனுஷரிடத்திற்கு இறங்கிப்போய்: இதோ, நீங்கள் தேடுகிறவன் நான்தான்; நீங்கள் வந்திருக்கிற காரியம் என்ன என்றான்.

அப் 10:22 அதற்கு அவர்கள்: நீதிமானும், தேவனுக்குப் பயப்படுகிறவரும், யூதஜனங்களெல்லாராலும் நல்லவரென்று சாட்சி பெற்றவருமாகிய கொர்நேலியு என்னும் நூற்றுக்கு அதிபதி உம்மைத் தமமுடைய வீட்டுக்கு அழைப்பித்து, உம்மால் சொல்லப்படும் வார்த்தைகளைக் கேட்கும்படி பரிசுத்த தூதனாலே தேவயத்தனமாயக் கட்டளைபெற்றார் என்றார்கள்.

10 அதிகாரம்

சந்தேகப்படு (doubted) - διαπορέω - diaporeoo - 1280

வினைச்சொல் - கலக்கமடை, சந்தேகப்படு, தரிசனத்தின் பொருள் தெரியாமல் தவிப்பது. (perplexed as to meaning)

"ஆவியானவர் ____ அவனுக்குச் சொன்னார்" - பரிசுத்த ஆவியானவர் கொர்நேலியுவை ஆயத்தப்படுத்தினார். அதன் மூலமாக அவன் மூன்று மனுஷரைப் பேதுருவிடம் அனுப்பினான். இது நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது பரிசுத்த ஆவியானவர் பேதுருவின் உள்ளத்திலும் கிரியை நடப்பித்தார். புறஜாதியாருக்கும் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு பேதுருவின் மனதைப் பக்குவப்படுத்தினார். சவுலோடும் அனனியாவோடும் பரிசுத்த ஆவியானவர் ஒரே சமயத்தில் கிரியை செய்ததுபோலவே இங்கு கொர்நேலியுவோடும், பேதுருவோடும் கிரியை செய்கிறார் (அப் 9:10-20). பரிசுத்த ஆவியானவர் தாம் செய்யும் காரியத்தைப் பூரணமாகவும், நோக்கத்தியாகவும் செய்வார்.

"இதோ மூன்று மனுஷர் உன்னைத் தேடுகிறார்கள்" பரிசுத்த ஆவியானவர் மூன்று கிரியைகளைச் செய்கிறார். அவையாவன:

1. கொர்நேலியுவிடம் தேவதூதனை அனுப்பி, அவனுக்கு ஒரு தரிசனத்தைத் தந்தார் (அப் 10:3-7,22,30; அப் 11:13)

2. பேதுருவிற்கு ஒரு தரிசனத்தைத் தந்தார் (அப் 10:9-16; அப் 11:5)

3. பேதுருவிடம் பேசி, என்ன செய்ய வேண்டுமென்று தெளிவுபடுத்தினார் (அப் 10:19-20)

"உம்மால் சொல்லப்படும் வார்த்தைகளைக் கேட்கும்படி பரிசுத்த தூதனாலே கொர்நேலியு தேவபக்தனாய்க் கட்டளைபெற்றார்" பேதுரு கொர்நேலியுவிடம் சென்று இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷச் செய்தியை அறிவிக்க வேண்டும்.

இதற்காகவே பரிசுத்த ஆவியானவர் கொர்நேலியுவையும், பேதுருவையும் ஆயத்தப்படுத்தினார் (அப் 10:6,22,32-44; அப் 11:14; அப் 15:7). சுவிசேஷச் செய்தியைப் பிரசங்கம் பண்ணுவது ஜனங்களை இரட்சிப்பதற்குத் தேவனுடைய வழியாகும். (மாற்கு 16:15-16; லூக்கா 24:47; அப் 1:8; அப் 8:4; ரோமர் 1:16; ரோமர் 10:9-17; 1கொரி 1:17-24; 1கொரி 2:1-16; 1கொரி 15:1-8)

(5) பேதுருவும் கொர்நேலியுவும் - 10:23

அப் 10:23 அப்பொழுது பேதுரு அவர்களை உள்ளே அழைத்து அவர்களுக்கு உபசாரஞ்செய்து, மறுநாளிலே அவர்களுடனேகூடப் புறப்பட்டான்; யோப்பா பட்டணத்தாராகிய சகோதரரில் சிலரும் அவனுடனேகூடப் போனார்கள்.

அப் 10:24 மறுநாளிலே செசரியா பட்டணத்தில் பிரவேசித்தார்கள். கொர்நேலியு தன் உறவின் முறையாரையும் தன்னுடைய விசேஷித்த சிநேகிதரையும் கூடவரவழைத்து, அவர்களுக்காகக் காத்திருந்தான்.

அப் 10:25 பேதுரு உள்ளே பிரவேசிக்கிறபொழுது, கொர்நேலியு அவனுக்கு எதிர்கொண்டுபோய், அவன் பாதத்தில் விழுந்து பணிந்துகொண்டான்.

அப் 10:26 பேதுரு அவனைத் தூக்கியெடுத்து: எழுந்திரும், நானும் ஒரு மனுஷன்தான் என்றான்.

அப் 10:27 அவனுடனே பேசிக்கொண்டு, உள்ளேபோய், அநேகர் கூடி வந்திருக்கிறதைக் கண்டு,

அப் 10:28 அவர்களை நோக்கி: அந்நிய ஜாதியானோடே கலந்து அவனிடத்தில் போக்குவரவாயிருப்பது யூதனானவனுக்கு விலக்கப்பட்டிருக்கிறதென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்; அப்படியிருந்தும், எந்த மனுஷனையும் தீட்டுள்ளவனென்றும் அசுத்தனென்றும் நான் சொல்லாதபடிக்கு தேவன் எனக்குக் காண்பித்திருக்கிறார்.

அப்போஸ்தலர் – தொகுப்புரை

10 அதிகாரம்

அப 10:29 ஆகையால் நீங்கள் என்னை அழைப்பித்தபோது நான் எதிர்பேசாமல் வந்தேன் இப்போதும் என்ன காரியத்துக்காக என்னை அழைப்பித்தீர்கள் என்று கேட்கிறேன் என்றான்

அப 10:30 அதற்குக் கொர்நேலியு நாலு நாளைக்கு முன்னே இந்நேரத்திலே நான் உபவாசித்து ஒன்பதாம்மணி நேரத்தில என் வீட்டிலே ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தேன் அப்பொழுது பிரகாசமுள்ள வஸ்திரந்தரித்த மனுஷன் ஒருவன் எனக்கு முன்பாக நின்று,

அப 10:31 கொர்நேலியுவே, உன் ஜெபம் கேட்கப்பட்டது, உன் தானதருமங்கள் தேவசந்நிதியில நினைத்தருளப்பட்டது.

அப 10:32 யோப்பா பட்டணத்துக்கு ஆள் அனுப்பி, பேதுரு என்று மறுபேர் கொண்ட சீமோனை வரவழைப்பாயாக அவன் கடலோரத்திலே தோல் பதனிடுகிறவனாகிய சீமோனுடைய வீட்டிலே தங்கியிருக்கிறான அவன் வந்து உனனிடத்தில பேசுவான என்றார

அப 10:33 அந்தப்படியே நான உடனே உம்மிடத்திற்கு ஆள அனுப்பினேன நீர வந்தது நலல காரியம் தேவனாலே உமக்குக் கட்டளை யிடப்பட்ட யாவையும் கேட்கும்படிக்கு நாஙகள எலலாரும் இப்பொழுது இஙகே தேவ சமுகத்தில கூடியிருக்கிறோம் என்றான

"மறுநாளிலே அவர்களுடனேகூடப் புறப்பட்டான், யோப்பா பட்டணத்தாராகிய சகோதரரில் சிலரும் அவனுடனேகூடப் போனார்கள்" - (அப 10:9) பேதுரு தன்னோடு ஆறு சாட்சிகளை அழைத்துச் செல்கிறான தான் செய்யும் காரியங்களுக்கு ஆலோசனைச் சங்கத்தாரிடம் கணக் கொப்புவிக்க வேண்டும் என்பது பேதுருவிற்குத் தெரியும் (அப 10:45; அப 11:1-18; அப் 15:7)

"கொர்நேலியு தன் உறவின் முறையாரையும் தன்னுடைய விசேஷித்த சிநேகிதரையும் கூடவரவழைத்து, அவர்களுக்காகக் காத்திருந்தான்" - கொர்நேலியுவின் வீட்டில் அவனுடைய உறவின்முறையாரும் அவனுடைய சிநேகிதரும் கூடியிருக்கிறார்கள் பேதுருவின் வருகைக்காக காத்திருக்கிறார்கள் அவர்கள் இரட்சிக்கப்படுவதற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள் (அப 10:44

"கொர்நேலியு அவனுக்கு எதிர்கொண்டு போய், அவன் பாதத்தில விழுந்து பணிந்து கொண்டான் பேதுரு அவனைத் தூக்கியெடுத்து, எழுந்திரும் நானும் ஒரு மனுஷனதான என்றான் - கொர்நேலியு இதுவரையிலும் புறஜாதியாருடைய மார்க்கத்தின்பிரகாரமாகப் பழகியிருக்கிறான் பக்திமான்களுடைய கால்களில விழுந்து பணிந்து கொள்வது அவனுடைய புறஜாதி மார்க்கத்து வழக்கம் அவர்கள் பக்திமானையும் தேவனைப்போலவும் தேவதூதனைப போலவும் மதித்தார்கள இந்த பழக்கத்திலதான் பேதுரு கொர்நேலியுவை பார்த்தவுடன் அவன் ஒரு தேவதூதர் என்று நினைத்து அவனுடைய பாதத்தில விழுந்து பணிந்துகொண்டான பேதுரு அந்த மரியாதையை ஏற்றுக் கொள்ளவில்லை நாம் கர்த்தருடைய பாதத்தில மட்டுமே விழுந்து பணிந்து கொள்ள வேண்டும். மனுஷரை தெய்வமாக நினைத்து ஆராதிக்கக்கூடாது. இதைக் கொர்நேலியுவிற்கு விளக்குவதற்காக பேதுரு அவனைத் தூக்கியெடுத்து, எழுந்திரும் நானும் ஒரு மனுஷனதான என்றான (அப 10:25-26; அப் 14:11-18, வெளி 19:10, வெளி 22:8-9)

"எந்த மனுஷனையும் தீட்டுள்ளவனென்றும் அசுத்தனென்றும் நான சொல்லாதபடிக்கு தேவன எனக்குக் காண்பித்திருக்கிறார்" யோப்பாவிலே தன்னுடைய தரிசனத்திற்கான காரணத்தை பேதுரு இப்போது புரிந்து கொள்கிறான் எந்த மனுஷனையும் பேதுரு தீட்டுள்ளவனென்றோ அசுத்தனென்றோ அழைக்கக்கூடாது. தேவன தனக்குக் காண்பித்த தரிசனத்தின மூலமாக இதை விளக்கி இருக்கிறார என்பதைப பேதுரு புரிந்து கொள்கிறான் (அப 10:28,34-35, அப 11:17-18)

10 அதிகாரம்

"என்ன காரியத்துக்காக என்னை அழைப்பித்தீர்கள்" - கொர்நேலியுவினால் அனுப்பப்பட்ட மனுஷரிடத்தில் ஏற்கெனவே பேதுரு இவ்வாறு கேட்டான் (அப் 10.21) இப்போது மறுபடியுமாகக் கேட்டு பேதுரு தன்னைத் தெளிவுபடுத்திக் கொள்ள விரும்புகிறான்

"நான் உபவாசித்து, ஒன்பதாம்மணி நேரத்தில் என் வீட்டிலே ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தேன் அப்பொழுது பிரகாசமுள்ள வஸ்திரந்தரித்த மனுஷன் ஒருவன் எனக்கு முன்பாக நின்றார்" - ஒன்பதாம் மணி நேரம் என்பது மாலை 3 மணியாகும் தேவனும், தேவதூதர்களும் பிரகாசமுள்ள வஸ்திரம் தரித்திருப்பார்கள் கறுப்பு வஸ்திரங்களில் தேவதூதர்கள் தோன்றியதாக வேதவசனத்தில் ஆதாரம் எதுவும் இல்லை

"கொர்நேலியுவே, உன் ஜெபம் கேட்கப்பட்டது, உன் தானதருமங்கள் தேவசந்நிதியில் நினைத்தருளப்பட்டது" - இந்த வசனமும் அப் 10.4 ஆவது வசனம் ஒரே கருத்துடையது. தேவன் தமது சித்தத்தை வெளிப்படுத்தும்போது சில வேளைகளில் அதை இரண்டு அல்லது மூன்று முறை கூறி உறுதிப்பண்ணுகிறார் (அப் 10.16, 2கொரி 13.1)

"யோப்பா பட்டணத்துக்கு ஆள் அனுப்பி, அவன் வந்து உன்னிடத்தில் பேசுவான் என்றார்" தேவதூதன் இந்தக் காரியங்களையெல்லாம் கொர்நேலியுவிடம் அறிவிக்கிறார் இதுவரையிலும் கொர்நேலியுவைப் பற்றி வேதத்தில் எதுவும் கூறப்படவில்லை அவனிடத்தில் சீமோனைப் பற்றிய காரியங்களைத் தேவதூதன் தெளிவாக அறிவிக்கிறார் ஒரு காரியம் தேவனால் அறிவிக்கப்படுகிறதா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் அந்தக் காரியம் வேதாகமத்தோடு ஒத்திருக்கிறதா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். வேதவசனத்தோடு, ஒத்துப்போகாத வெளிப்பாடுகளை நாம் புறக்கணித்து விடலாம் அவை தேவனுடைய வெளிப்பாடும் அல்ல, அவை தேவனுடைய சித்தமும் அல்ல (1யோவான் 4.1-6; உபா 18.22)

"தேவனாலே உமக்குக் கட்டளையிடப்பட்ட யாவையும் கேட்கும்படிக்கு நாங்கள் எல்லாரும் இப்பொழுது இங்கே தேவசமுகத்தில் கூடியிருக்கிறோம்" - தேவனுடைய மனுஷனிடத்திலிருந்து தனிநபரும் சபையாரும் இதை எதிர்பார்க்க வேண்டும்.

(6) பேதுருவின் பிரசங்கம் - விசுவாசத்தினால் இரட்சிப்பு - (10.34-43)

(அ) தேவன் பட்சபாதமுள்ளவரல்ல - (உபா 10.17; 16.19; 2சாமு 14.14 2கொரி 19.7; ரோமர் 2.11; எபே 6.9 யாக் 2.9)

அப் 10.34 அப்பொழுது பேதுரு பேசத்தொடங்கி: தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும்

அப் 10.35 எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்

பேதுருவின் பிரசங்கச் செய்தி

1 தேவன் பட்சபாதமுள்ளவரல்ல (அப் 10.34; ரோமர் 2.11; எபே 6.9 1பேதுரு 1.17)

2 தேவன் நம்மை ஏற்றுக் கொள்வதற்கு இரண்டு நிபந்தனைகள்

(1) தேவனுக்குப் பயப்பட வேண்டும் (அப் 10.35; லூக்கா 12.5)

(2) கலிசேஷத் திட்டத்திற்குக் கீழ்ப்படிந்து, நீதியைச் செய்ய வேண்டும் (அப் 10.35, யாக் 1)

3 தேவன் கிறிஸ்துவை இஸ்ரவேலுக்கு அனுப்பினார் (அப் 10.36-37 யோவான் 1.11; யோவான் 3.16-20 மத் 10.6; மத் 15.24.

4 கிறிஸ்து எல்லோருக்கும் கர்த்தராய் இருக்கிறார் (அப் 10.36, அப் 2.36

10 அதிகாரம்

5 கிறிஸ்து சமாதானத்தைச் சுவிசேஷமாய்க் கூறுவதற்கு வந்தார் (அப் 10:36; அப் 3:15 லூக்கா 2:14, யோவான் 14:27)

6 சுவிசேஷ ஊழியத்தின் காலம் யோவான் ஸ்நானனுடைய பிரசங்கத்திலிருந்து ஆரம்பமாகிறது. அப் 10:37; மத் 3:11; லூக்கா 16:16 அப் 1:21-22, கலா 3:19-29)

7 தேவன் இயேசு கிறிஸ்துவை பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார் (அப் 10:38 யோவான் 3:34)

8 சுவிசேஷ ஊழியத்தின் இரண்டு முக்கியமான பகுதிகள் பிரசங்கம் பண்ணுவதும், அதை உறுதி பண்ணுவதுமாகும். (அப் 10:36 38 மத் 4:23-25; எபி 2:34; யோவான் 14:11)

9 பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகத்தோடு வல்லமையும் வரும் அப் 10:38, அப் 1:8; லூக்கா 10:19 லூக்கா 24:49, மாற்கு 16:15-20, யோவான் 14:12

10 வியாதிகளுக்குத் தேவன் காரணமல்ல சாத்தானே காரணம். (அப் 10:38 லூக்கா 10:19; லூக்கா 13:16, யோவான் 10:10, மத் 4:23-24 மத் 10:1-8

11 அற்புதங்களினாலும், அடையாளங்களினாலும் தேவன் கிறிஸ்துவை அங்கீகரித்திருக்கிறார் (அப் 10:38; அப் 2:22, யோவான் 3:2; மத் 4:23-24, மத் 8:17, யோவான் 14:11)

12 வியாதிகளைக் குணமாக்குவது தேவனுடைய சித்தம். (அப் 10:38 மத் 8:17, 1பேதுரு 2:24; யோவான் 10:10, யோவான் 14:12, மாற்கு 16:15-20, லூக்கா 10:19; 1கொரி 12:4-11 யாக் 5:14-16, 3யோவான் 1:2)

13 தேவன் வகுத்துள்ள நீதிகளுக்குக் கீழ்ப்படியும்போது யாவரையும் குணமாக்குவது தேவனுடைய சித்தம் (அப் 10:38; மத் 13:58, மத் 7:7-11 மத் 17:20; மத் 21:22, மாற்கு 9:23 மாற்கு 11:22-24; லூக்கா 10:19 யோவான் 10:10; யோவான் 14:12-15 யோவான் 15:7,16; யோவான் 16:23-26, யாக் 5:14

14 கிறிஸ்துவின் ஜீவியத்திற்கும் ஊழியத்திற்கும் சாட்சிகளாகத் தேவன் சிலரைத் தெரிந்தெடுத்திருக்கிறார் (அப் 10:39-41; அப் 1:22; அப் 3:15, அப் 5:32)

15 இயேசு கிறிஸ்துவை மரத்திலே தூக்கி, கொலை செய்தார்கள் (அப் 10:39; அப் 2:23; அப் 3:15 அப் 4:10; அப் 5:30, 1பேதுரு 2:24)

16 தேவன் இயேசு கிறிஸ்துவை மூன்றாம் நாளிலே எழுப்பி, பிரத்தியட்சமாய் காணும்படி செய்தார் (அப் 10:40 அப் 2:24-27; லூக்கா 24:39 1கொரி 15)

17 இயேசு கிறிஸ்துவின் சரீர உயிர்த்தெழுதலுக்குச் சாட்சிகள் இருக்கிறார்கள் (அப் 10:40-41, அப் 1:3; யோவான் 21:14

18 சுவிசேஷச் செய்தியைப் பிரசங்கிக்கவும், சாட்சியாக ஒப்புவிக்கவும் இயேசு கிறிஸ்து தமது விசுவாசிகளுக்குக் கட்டளையிட்டிருக்கிறார் (அப் 10:42, மத் 28:19-20; மாற்கு 16:15-20, லூக்கா 24:49-53; அப் 1:4-8

19 இயேசு கிறிஸ்துவே தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதி (அப் 10:42; அப் 17:31, யோவான் 5:22)

20 உயிரோடு இருக்கிறவர்களும் மரித்தவர்களும் நியாயம் தீர்க்கப்படுவார்கள் அப் 10:42, வெளி 20:11-14, மத் 25:31-46 ரோமர் 14:10; 2கொரி 5:10, 2கொரி 3:11-15)

10 அதிகாரம்

21 தீர்க்கதரிசிகள் எல்லாரும் இயேசு கிறிஸ்துவைக் குறித்தே சாட்சி கொடுத்திருக்கிறார்கள் (அப் 10:43 அப் 3:21 லூக்கா 24:44 யோவான் 5:39)

22 இரட்சிக்கப்படுவதற்கு இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பது மிகவும் அவசியம் (அப் 10:43 அப் 2:38 அப் 4:12 ரோமர் 10:9-10)

(ஆ) தேவனுடைய வார்த்தை சமாதானத்தையும் சௌ ககத்தையும் தருகிறது - (சங் 107:20; மத் 8:17; 13:15; மாற்கு 16:17 ரோமர் 4:16; 2கொரி 1:20; 1பேதுரு 2:24

அப் 10:36 எல்லாருக்கும் கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவைக் கொண்டு அவர் சமாதானத்தைச் சுவிசேஷமாய்க் கூறி இஸ்ரவேல் புத்திரருக்கு அனுப்பின வார்த்தையை அறிந்திருக்கிறீர்களே

அப் 10:37 யோவான் ஞானஸ்நானத்தைக் குறித்துப் பிரசங்கித்தபின்பு கலிலேயா நாடு முதற்கொண்டு யூதேயா தேசமெங்கும் நடந்த சங்கதி இதுவே.

அப் 10:38 நசரேயனாகிய இயேசுவை தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும்பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்கு கிறவராயும் சுற்றித்திரிந்தார்

"இயேசுகிறிஸ்துவைக் கொண்டு சமாதானம்" (peace by Jesus Christ) - யூதருக்கும்புறஜாதியாருக்கும் ஒப்புரவாகுதலும் தேவனுக்கும் மனுஷருக்கும் இடையில ஒப்புரவாகுதலும், இயேசு கிறிஸ்துவின சுவிசேஷத்தின மூலமாக வருகிறது. (எபே 2:14-16, 1கொரி 12:13; 2கொரி 5:14-21) எல்லோருக்கும் ஆண்டவராக இருக்கிற இயேசு கிறிஸ்துவிடம் பட்சபாதம் இல்லை அவர் யூதரையும், புறஜாதியாரையும் ஒன்றுபோலவே இரட்சிப்பார் (அப் 10:34-37,43

"நசரேயனாகிய இயேசுவை தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்" - (ஏசா 11:2 ஏசா 42:1-5 ஏசா 61:1 மத் 3:16

"பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும்" - இந்த வாக்கியத்தில் "அகப்படுதல்" என்பதற்கான கிரேக்க வார்த்தை "கட்டாடுநாஸ்டேவோ" (katadynasteuoo) என்பதாகும் இதற்கு அதிகாரம் செலுத்துதல் ஒருவருடைய விருப்பத்திற்கு எதிராக அவரை அடிமைப்படுத்துதல் என்று பொருள்

அகப்படு (oppressed) - καταδυναστεύω - katadynasteuoo - 2616

வினைச்சொல் - ஒடுக்கு, அகப்படு (அப் 10:38; யாக் 2:6; லூக்கா 13:16 யோவான் 10:10; 2கொரி 12:7 வெளி 2:10) (to overpower or exercise hard control over one; to use power against one)

(இ) சுவிசேஷத்தின் நான்கு முக்கிய கருத்துக்கள் - மரணம், அடக்கம்பண்ணப்படுதல், உயிர்த்தெழுதல், இயேசு கிறிஸ்துவின் பிரத்தியட்சம் - (1கொரி 15:1-23)

அப் 10:39 யூதருடைய தேசத்திலும் எருசலேமிலும் அவர் செய்தவைகளெல்லாவற்றிற்கும் நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம் அவரை மரத்திலே தூக்கிக் கொலைசெய்தார்கள்

அப் 10:40 மூன்றாம் நாளிலே தேவன் அவரை எழுப்பி பிரத்தியட்சமாயக் காணும்படி செய்தார்

அப் 10:41 ஆயினும் எல்லா ஜனங்களுக்கும் பிரத்தியட்சமாகும்படி செய்யாமல், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தபின்பு அவரோடே புசித்துக் குடித்தவர்களும் தேவனால் முன்பு நியமிக்கப்பட்ட சாட்சிகளுமாகிய எங்களுக்கே பிரத்தியட்சமாகும்படி செய்தார்

அப்போஸ்தலர் – தொகுப்புரை

10 அதிகாரம்

பிரத்தியட்சமாயக் காண் (openly) - ἐμφανής - enphanees - 1717

பொருள் - பிரத்தியட்சமாயக் காண் வெளியரங்கமாகு - எல்லோரும் காணும்

பிரகாரமாகத் தோன்றுவது. இந்த வார்த்தை இந்த வசனத்திலும் ரோமர் 10:20 ஆவது வசனத்திலும் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

"ஆயினும் எல்லா ஜனங்களுக்கும் பிரத்தியட்சமாகும்படி செய்யாமல், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தபின்பு அவரோடே புசித்துக் குடித்தவர்களும் தேவனால் முன்பு நியமிக்கப்பட்ட சாட்சிகளுமாகிய எங்களுக்கே பிரத்தியட்சமாகும்படி செய்தார்" - தேவபக்தியற்றவர்களுக்கும், தம்மைச் சிலுவையிலே கொலைசெய்தவர்களுக்கும் இயேசு கிறிஸ்து தம்மை வெளிப்படுத்தவில்லை. தம்மை பெருமைப்படுத்துவதற்காகவோ தம்முடைய உயிர்த்தெழுதலை விளம்பரப் படுத்துவதற்காகவோ இயேசு கிறிஸ்து யாரிடம் தம்மை வெளிப்படுத்திக் காண்பிக்கவில்லை. தம்மைப் பற்றி யார் உண்மையாகச் சாட்சி பகருவார்களோ அவர்களுக்கு மட்டுமே இயேசு கிறிஸ்து தம்மைப் பிரத்தியட்சமாய் வெளிப்படுத்தினார். இவர்கள் தங்களுடைய ஜீவனுக்கும் முக்கியத்துவம் தராமல் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷ ஊழியம் ஒன்றே தங்களுடைய ஜீவியத்தில் பிரதானம் என்று கருதியவர்கள். தேவன் தம்முடைய பிரமாணத்தை வெளிப்படுத்திய போது, தம்மைக் காண்பதற்கு 74 பேரை மட்டுமே தெரிந்தெடுத்தார் (யாத் 24:9-11). திரளான ஜனங்கள் தேவனுடைய சத்தத்தைக் கேட்டார்கள். ஆனால் அது பயங்கரமான சத்தம். அதை இனிமேல் தாங்கள் கேட்க விரும்பவில்லை என்று கூறிவிட்டார்கள் (உபா 5:22-33; எபி 12:18-21). ஒரே சமயத்தில் கிறிஸ்துவை 500 பேருக்கும் மேற்பட்டோர் தரிசித்தார்கள் (1கொரி 15:5-8). இயேசு கிறிஸ்து யாருக்கும் தம்மை மறைப்பதில்லை. தம்மைத் தேடி வருகிறவர் யாருக்கும் தம்மை வெளிப்படுத்தி அவர்களைப் புறம்பே தள்ளாமல் ஏற்றுக் கொள்கிறார்.

(ஈ) **இயேசு கிறிஸ்து உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் நியாயாதிபதி** - (அப் 17:31; யோவான் 5:22; ரோமர் 2:16, மத்தேயு 25:31)

அப் 10:42 அன்றியும் அவரே உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதியென்று ஜனங்களுக்குப் பிரசங்கிக்கவும் சாட்சியாக ஒப்புவிக்கவும் அவர் எங்களுக்குக் கட்டளையிட்டார்.

"ஜனங்களுக்குப் பிரசங்கிக்கவும் சாட்சியாக ஒப்புவிக்கவும் அவர் எங்களுக்குக் கட்டளையிட்டார்" - இயேசு கிறிஸ்துவை ஜனங்களுக்கு அறிவிக்க வேண்டும். இது எல்லா விசுவாசிகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிற கட்டளை. வேதத்தில் இந்தக் கட்டளை விசேஷமாகக் கொடுக்கப்பட்டிருக்கும் சில வசனங்களை நாம் காணலாம். அவையாவன

1. யோனா - நினிவே பட்டணத்தாருக்கு (யோனா 3:2)
2. அப்போஸ்தலர் - யூதருக்கு (மத் 10:7)
3. அப்போஸ்தலர் - எல்லா ஜனங்களுக்கும் (மத் 10:27)
4. அப்போஸ்தலர் - உலகத்திற்கு (மாற்கு 16:15)
5. சீஷனாக ஆகப்போகிறவன் (லூக்கா 9:60)
6. அப்போஸ்தர் - ஜனங்களுக்கு (அப் 10:42)
7. தீமோத்தேயு (2தீமோ 4:2)

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிற முக்கியமான பிரசங்கியார்கள்

1. தேவன் (கலா 3:8)
2. நோவா (2பேதுரு 2:5)
3. தாவீது (சங் 40:9)
4. சாலொமோன் (பிர 1:1-12, பிர 7:27, பிர 12:8-10)

10 அதிகாரம்

5 யோனா (யோனா 3:2; லூக்கா 11:32)

6 யோவான் ஸ்நானன் (மத் 3:1)

7 இயேசு கிறிஸ்து (மத் 4:23 லூக்கா 4:18-21)

8 பன்னிரெண்டு அப்போஸ்தலர்கள் மத் 10:7; மாற்கு 6:1; மாற்கு 16:20)

9 பவுலும், பர்னபாவும் (அப் 13:2,5)

10 பிலிப்பு (அப 8:5,12,25)

கட்டளையிடு (ordained) - ὁρίζω - horizoo - 3724

வினைச்சொல் - கட்டளையிடு தீர்மானி, நிர்ணயி, ஏற்படுத்து, நியமி குறி, வாக்குத்தத்தம் பண்ணு - எல்லையை நிர்ணயம் பண்ணு. ஒரு வேலையைச் செய்வதற்கு ஆட்களை ஏற்படுத்து என்று இந்த வார்த்தைக்குப் பொருள் கூறலாம். இதன் மொழிபெயர்ப்புகள் (limited) (எபி 4:7); (determine) அப 11:29, அப 17:26; லூக்கா 22:22); (determinate) (அப 2:23) (declare) (ரோமர் 1:4); (ordain) அப 10:42; அப 17:31).

நியாயாதிபதி (Judge) - κριτής - kritees - 2923

ஆண்பால் பெயர்ச்சொல் - நியாயாதிபதி. நியாயந்தீர்க்கிறவர் (judge) (மத் 5:25; மத் 12:27; லூக்கா 11:19, லூக்கா 12:58; லூக்கா 18:2,6, அப 13:20; அப 18:15, அப 24:10, யாக் 2:4; யாக 4:11) தேவனையும் கிறிஸ்துவையும் குறிப்பதற்கு இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கும் வசனங்கள் அப 10:42; 2தீமோ 4:8; எபி 12:23; யாக் 5:9

"இயேசு கிறிஸ்துவே உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதி" உயிரோடிருக்கிறவர்கள் என்பது இப்போது உயிரோடிருக்கிறவர்கள் இவர்கள் பின்பு மரித்து விடுவார்கள் மரித்தோரின் நியாயத்தீர்ப்பின் போது இவர்கள் மரித்தோர் மத்தியில் இருப்பார்கள் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது உயிரோடிருக்கிற தேசங்கள் நியாயந் தீர்க்கப்படும். (மத் 25:31-46) இயேசு கிறிஸ்து மறுபடியும் வரும்போது எருசலேமிற்கு எதிராக ஒன்றுகூடி வரும் ஜனங்கள் மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும். (சக 14:1-5). எல்லா தேசங்களிலுமிருந்து வரும் எல்லா ஜனங்களும் எருசலேமிற்கு எதிராக வரமாட்டார்கள் தேசங்களின் சேனைகள் மட்டுமே வருவார்கள் தேசங்களுக்கு உள்ளே ஜீவிக்கும் ஜனங்கள் அநேகருக்கு இந்த யுத்தத்தைப் பற்றிச் சரியாகத் தெரியாது இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போதுகூட ஜனங்கள் மத்தியிலே ஆச்சரியமும் குழப்பமும் இருக்கும் (ஏசா 66:19-21)

(உ) விசுவாசிக்கிறவர்கள் அனைவரும் கிறிஸ்துவின் மூலமாக பாவ மன்னிப்பைப் பெறுவார்கள் - (13:39; ரோமர் 3:21)

> அப 10:43 அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக் குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள் என்றான்

"இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவான்" - (மத் 26:28, லூக்கா 24:47 அப 2:38 அப 5:31 அப 10:43; அப 13:38-39, எபே 1:7, எபே 2:1-9; 1யோவான் 1:9

(7) புறஜாதியார் இரட்சிக்கப்பட்டு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெறுகிறார்கள் (தண்ணீர் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பு அப 11:14-18 15:7-11 மத் 3:6

> அப 10:44 இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்

10 அதிகாரம்

அப் 10:45 அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும் தேவனைப் புகழுகிறதையும்

அப் 10:46 பேதுருவோடேகூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும் போது பரிசுத்தஆவியின் வரம் புறஜாதிகள் மேலும் பொழிந்தருளப் பட்டதைக் குறித்துப் பிரமித்தார்கள்

அப் 10:47 அப்பொழுது பேதுரு: நம்மைப்போல பரிசுத்தஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி,

அப் 10:48 கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கும்படி கட்டளையிட்டான் அப்பொழுது சிலநாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டிக்கொண்டார்கள்

"வசனத்தைக் கேட்டவர்கள்" - அப் 10:34-43 ஆவது வசனங்களின் சுவிசேஷச் செய்தி.

"அவர்கள்" - பேதுருவும், அவனோடு வந்த ஆறு யூதர்களும் (அப் 10:23, அப் 11:12)

"விருத்தசேதனமுள்ள விசுவாசிகள்" - இந்த வாக்கியம் யூதர்களைக் குறிக்கும். (அப் 10:45, அப் 11:2, ரோமர் 3:30; ரோமர் 4:9-12, ரோமர் 15:8, கலா 2:7-12; பிலி 3:3, கொலோ 4:11, தீத்து 1:10)

"பரிசுத்தஆவியின வரம் புறஜாதிகள்மேலும் பொழிந்தருளப்பட்டது" இதைப் பார்த்தபோது யூதர்கள் பிரமித்தார்கள் பெந்தெகொஸ்தே நாளில இயேசு கிறிஸ்து யூதருக்கு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பொழிந்தருளினார் இந்த அபிஷேகம் புறஜாதியாருக்கும் கிடைக்குமென்று இவர்கள் நம்பவும் இல்லை எதிர்பார்க்கவும் இல்லை. (அப் 10:47; அப் 11:15-17, அப் 15:8-9)

"அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும் தேவனைப் புகழுகிறதையும் கேட்கும்போது அவர்கள் பிரமித்தார்கள்" - இங்கு பேதுருவோடு வந்திருந்த யூதர்கள் எட்டு வருஷத்திற்கு முன்பு பெந்தெகொஸ்தே நாளின் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றவர்கள் அதே அபிஷேகத்தை இப்போது புறஜாதியாரும் பெற்றிருக்கிறார்கள் (அப் 2:1-11; அப் 10:44-48; அப் 19:1-7) பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் ஒருவர் இரட்சிக்கப்பட்ட பின்பு, அவருக்குக் கொடுக்கப்படும். பவுலுக்கும் அப்படித்தான் கொடுக்கப்பட்டது. (அப் 9:17-18) சில சமயங்களில இரட்சிக்கப்பட்டு. சில காலம் சென்ற பிறகு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் கொடுக்கப்படலாம் பெந்தெகொஸ்தே நாளில சீஷர்களுக்கும் (அப் 2:1-11) சமாரியருக்கும் (அப் 8:12-23) எபேசியருக்கும (அப் 19:1-7 பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம அவர்கள இரட்சிக்கப்பட்டு. சிறிது காலம் சென்ற பின்பே கொடுக்கப்பட்டது. பரிசுத்த ஆவியானவரின அபிஷேகம ஞானஸ்நானம பெற்றுக் கொள்வதற்கு முன்பாகவும் கொடுக்கப்படலாம். இயேசு (மத் 3:16-17, பெந்தெகொஸ்தே நாளில சீஷர்கள் (அப் 2:1-11), சமாரியர் (அப் 8:4-23), எபேசியர் (அப் 19:1-7) ஆகியோரின அநுபவங்கள் இதை விளக்குகிறது.

"அப்பொழுது பேதுரு: நம்மைப்போல பரிசுத்தஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொன்னான்" இங்கு கூடியிருக்கிறவர்கள புறஜாதி மார்க்கத்திலிருந்து இரட்சிக்கப் பட்டிருக்கிறார்கள் இவர்கள் பரிசுத்த ஆவியானவரின அபிஷேகத்தைப் பெற்றிருக்கிறார்கள் தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வதற்கு முன்பாகவே இவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் அருளப் பட்டிருக்கிறது. (அப் 9:17-18) தண்ணீர் ஞானஸ்நானம் ஒருவருடைய பாவத்தை மன்னிக்காது. நமது பாவத்தை இயேசு கிறிஸ்து மன்னித்திருக்கிறார் என்பதற்கு அடையாளமாகவே நாம் எல்லோருக்கும சாட்சியாக ஞானஸ்நானம் பெற்றுக் கொள்கிறோம். (மத் 3:11)

அப்போஸ்தலர் – தொகுப்புரை

10 அதிகாரம்

"கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கும்படி கட்டளையிட்டான்" - ஞானஸ்நானம் பெறாதபடிக்கு யாரும் தண்ணீரை விலக்கக்கூடாது. இவர்கள் இரட்சிக்கப்பட்டவர்கள் புதிய விசுவாசிகள் அபிஷேகம் பெற்றவர்கள் இவர்களுடைய உள்ளத்தில் ஏற்பட்டிருக்கிற மாற்றத்தை மற்றவர்களுக்குச் சாட்சியாக அறிவிப்பதற்கு இவர்கள் தண்ணீரில் ஞானஸ்நானம் பெறவேண்டும். (1பேதுரு 3:21; 1யோவான் 5:6-8) கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கும்படி பேதுரு கட்டளையிட்டான் கர்த்தருடைய நாமத்தினாலே என்பதற்குக் கர்த்தருடைய அதிகாரத்தினாலே என்பதுபொருள் அதாவது ஞானஸ்நானம்கொடுப்பதற்குக் கர்த்தருடைய அதிகாரத்தைப் பெற்றிருக்கிறவர்கள் அவர்கள் பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவரின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுப்பார்கள் (மத் 28:19) திரித்துவத்தில் உள்ள பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவர் என்னும் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுப்பதற்கு இயேசு கிறிஸ்து அங்கீகாரம் பண்ணுகிறார் அதிகாரம் கொடுக்கிறார் (1யோவான் 5:7) பிதாவின் நாமத்தையும் பரிசுத்த ஆவியானவரின் நாமத்தையும் ஒதுக்கி வைத்து விட்டு, தமது நாமத்தினால் மட்டும் ஞானஸ்நானம் கொடுப்பதை இயேசு கிறிஸ்து அங்கீகரிப்பதுமில்லை அவ்வாறு ஞானஸ்நானம் கொடுப்பதற்கு யாருக்கும் அதிகாரம் கொடுப்பதுமில்லை

11 அதிகாரம்

(8) புறஜாதியாருக்கு பிரசங்கம் பண்ணியதற்காக பேதுரு வீனிடத்தில் வாக்குவாதம் பண்ணுகிறார்கள்

அப 11:1 புறஜாதியாரும் தேவவசனத்தை ஏற்றுக் கொண்டார்களென்று யூதேயாவிலிருக்கிற அப்போஸ்தலரும் சகோதரரும் கேள்விப்பட்டார்கள்.

அப 11:2 பேதுரு எருசலேமுக்குத் திரும்பி வந்தபோது விருத்தசேதனமுள்ளவர்கள் அவனை நோக்கி:

அப 11:3 விருத்தசேதனமில்லாத மனுஷரிடத்தில் நீர் போய், அவர்களோடே போஜனம்பண்ணினீர் என்று அவனோடே வாக்குவாதம்பண்ணினார்கள்.

"புறஜாதியாரும் தேவவசனத்தை ஏற்றுக் கொண்டார்களென்று யூதேயாவிலிருக்கிற அப்போஸ்தலரும் சகோதரரும் கேள்விப்பட்டார்கள்" - செசரியா, சமாரியா ஆகிய தேசங்களில் இருந்த புறஜாதியார் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டார்கள். யூதேயாவிலிருந்த யூதசமயத்தில் விசுவாசிகளானவர்கள் இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டார்கள். புறஜாதியார் மத்தியில் பேதுரு சுவிசேஷ ஊழியம் செய்தது யூதேயாவிலுள்ள கிறிஸ்தவருக்குப் பிடிக்கவில்லை. ஆகையினால் அதைக் குறித்து பேதுருவைக் கடிந்து கொண்டார்கள் (அப 11:3). ஆதித்திருச்சபையில் பேதுருவிற்கு மேன்மையான அந்தஸ்து இல்லை என்பதற்கு இது ஒரு சான்றாகும். மற்றவர்கள் தன்னோடு வாக்குவாதம் பண்ணக்கூடிய நிலைமையில்தான் பேதுரு இருந்தான் (பேதுரு 5:1).

"விருத்தசேதனமில்லாத மனுஷரிடத்தில் நீர் போய், அவர்களோடே போஜனம்பண்ணினீர்" - புறஜாதியாரோடு போஜனம்பண்ணுவது யூதசமயத்தில் விசுவாசிகளானவர்களுக்கு மிகப்பெரிய குற்றமாக இருக்கிறது. நியாயப் பிரமாணத்தை மீறுகிறது பாவம் என்று யூதருடைய பிரமாணம் கூறுகிறது. (கலாத்தியர் 2:12) யூதசமயத்தில் விசுவாசிகளானவர்களும் இதைப்பின்பற்றி புறஜாதியாரோடு போஜனம் பண்ணுவதைத் தவறு என்று கூறுகிறார்கள்.

(9) பேதுரு வரிசையாய் அவர்களுக்கு காரியத்தை விவரிக்கிறான்

(அ) தேவன் பட்சபாதமுடையவரல்ல

அப 11:4 அதற்குப் பேதுரு காரியத்தை முதலிலிருந்து வரிசையாய் அவர்களுக்கு விவரிக்கத் தொடங்கி:

அப 11:5 நான் யோப்பா பட்டணத்தில் ஜெபம்பண்ணிக்கொண்டிருந்த போது ஞானதிருஷ்டியடைந்து ஒரு தரிசனத்தைக் கண்டேன்; அதென்னவென்றால் நாலு முனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப்போல ஒரு கூடு வானத்திலிருந்து என்னிடத்தில் இறங்கிவந்தது.

அப 11:6 அதிலே நான் உற்றுப்பார்த்துக் கவனிக்கிறபோது, பூமியிலுள்ள நாலுகால் ஜீவன்களையும், காட்டு மிருகங்களையும், ஊரும் பிராணிகளையும், ஆகாயத்துப் பறவைகளையும் கண்டேன்.

அப 11:7 அல்லாமலும், பேதுருவே, எழுந்திரு, அடித்துப் புசி என்று என்னுடனே சொல்லுகிற சத்தத்தையும் கேட்டேன்.

அப 11:8 அதற்கு நான்: ஆண்டவரே, அப்படியல்ல; தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றும் ஒருக்காலும் என் வாய்க்குள்ளே போனதில்லை என்றேன்.

11 அதிகாரம்

அப் 11:9 இரண்டாந்தரமும் வானத்திலிருந்து சத்தம் உண்டாகி: தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதேயென்று மறுமொழி சொல்லிற்று.

அப் 11:10 இப்படி மூன்றுதரம் சம்பவித்தபின்பு, எல்லாம் வானத்திற்குத் திரும்ப எடுத்துக்கொள்ளப்பட்டது.

அப் 11:11 உடனே செசரியாவிலிருந்து என்னிடத்திற்கு அனுப்பப்பட்ட மூன்று மனுஷர் நான் இருந்த வீட்டுக்குமுன்னே வந்து நின்றார்கள்.

"பேதுரு காரியத்தை முதலிலிருந்து வரிசையாய் அவர்களுக்கு விவரிக்கத் தொடங்கினான்" - அப் 10 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கிற காரியங்களை [illegible] மற்றுஞ்சில எடுத்துக்காட்டுக்களோடு பேதுரு விவரித்துக் கூறுகிறான்.

"தீட்டு" (common) (அப் 10:13-14,28)

"மூன்று மனுஷர்" - கொர்நேலியுவின் இரண்டு வேலைக்காரரும் ஒரு சேவகனும் (அப் 10:7,19, அப் 11:11)

(ஆ) புறஜாதியாருக்கு பிரசங்கம் பண்ணுமாறு தேவன் எனக்கு கட்டளை கொடுத்திருக்கிறார் - (10:9-35)

அப் 11:12 நான் ஒன்றுக்குஞ் சந்தேகப்படாமல் அவர்களோடேகூடப் போகும்படி ஆவியானவர் எனக்குக் கட்டளையிட்டார்; சகோதரராகிய இந்த ஆறுபேரும் என்னோடேகூட வந்தார்கள், அந்த மனுஷனுடைய வீட்டுக்குள் பிரவேசித்தோம்.

"ஆவியானவர்" - பரிசுத்த ஆவியானவர் (அப் 10:19)

(இ) கொர்நேலியு, தூதர்கள், பரிசுத்த ஆவியானவர் ஆகியோர் தேவன் எனக்கு கொடுத்த கட்டளையை உறுதிபண்ணினார்கள் - (10:7-22)

அப் 11:13 அவனோ தன் வீட்டிலே ஒரு தேவதூதன் நிற்கிறதைக் கண்டதாகவும், யோப்பா பட்டணத்திலிருக்கிற பேதுரு என்று மறுபேர்கொண்ட சீமோனை அழைக்கும்படிக்கு மனுஷரை அவ்விடத்திற்கு அனுப்பு.

அப் 11:14 நீயும் உன் வீட்டாரனைவரும் இரட்சிக்கப்படுவதற்கேதுவான வார்த்தைகளை அவன் உனக்குச் சொல்லுவான் என்று அந்தத் தூதன் தனக்குச் சொன்னதாகவும் எங்களுக்கு அறிவித்தான்.

"நீயும் உன் வீட்டாரனைவரும் இரட்சிக்கப்படுவதற்கேதுவான வார்த்தைகளை அவன் உனக்குச் சொல்லுவான்" - கொர்நேலியு இன்னும் இரட்சிக்கப்படவில்லை. பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்பதற்கு முன்பாக அவனோ அவனுடைய வீட்டாரோ இரட்சிக்கப்படவில்லை (அப் 10:43-48; அப் 11:14-18; அப் 15:7-13)

(ஈ) பரிசுத்த ஆவியானவர் புறஜாதியார் மேலும் இறங்கினார் - (அப் 10:44-48)

அப் 11:15 நான் பேசத்தொடங்கினபோது பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினதுபோலவே, அவர்கள்மேலும் இறங்கினார்.

அப் 11:16 யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான், நீங்களோ பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள் என்று கர்த்தர் சொன்ன வார்த்தையை அப்பொழுது நினைவுகூர்ந்தேன்.

11 அதிகாரம்

"நான் பேசத்தொடங்கினபோது, பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினது போலவே, அவர்கள்மேலும் இறங்கினார்" - பேதுரு பிரசங்கம் பண்ணத் தொடங்கிய போதே பரிசுத்த ஆவியானவருடைய அருள்மாரி அவர்கள்மீது பொழிய ஆரம்பித்து விட்டது. பேதுரு மிகவும் கஷ்டப்பட்டுத்தான் பேசியிருக்க வேண்டும். (அப 2:1-11 அப 10:44-48)

"யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான், நீங்களோ பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள் என்று கர்த்தர் சொன்ன வார்த்தையை அப்பொழுது நினைவுகூர்ந்தேன்" - புறஜாதியார் அந்நிய பாஷையிலே பேசுகிறார்கள். பெந்தெகொஸ்தே நாளில் சீஷர்கள் எல்லோரும் அந்நிய பாஷையில் பேசியதைப் போன்று இந்தச் சம்பவம் இருந்தது. அப 11:16=அப 1:4-8 மத் 3:11) பெந்தெகொஸ்தே நாளில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்திருந்த சீஷர்களுக்கு தேவன் வரத்தை அநுக்கிரகம் பண்ணினதுபோல கொர்நேலியுவிற்கும் அவனுடைய வீட்டில் கூடியிருந்தவர்களுக்கும் அந்த வரத்தையே அநுக்கிரகம்பண்ணினார் (அப 11:17) தேவனை பேதுருவால் தடுக்க முடியாது.

(உ) தேவன் புறஜாதியாருக்கு அநுக்கிரகம் பண்ணியிருக்கும் போது தேவனைத் தடுக்கிறதற்கு நான் எம்மாத்திரம்

அப 11:17 ஆதலால் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்திருக்கிற நமக்கு தேவன் வரத்தை அநுக்கிரகம் பண்ணினதுபோல அவர்களுக்கும் அந்த வரத்தையே அநுக்கிரகம்பண்ணியிருக்கும் போது தேவனைத் தடுக்கிறதற்கு நான் எம்மாத்திரம் என்றான்

4. சபை திருப்தியடைகிறது - தேவனை மகிமைப் படுத்துகிறார்கள்

அப 11:18 இவைகளை அவர்கள் கேட்டபொழுது அமர்ந்திருந்து, அப்படியானால் ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலை தேவன் புறஜாதியாருக்கும் அருளிச் செய்தார் என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்

"இவைகளை அவர்கள் கேட்டபொழுது அமர்ந்திருந்து.....தேவனை மகிமைப் படுத்தினார்கள்" - புறஜாதியார் இரட்சிக்கப் படுகிறார்கள். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் அவர்களுக்கும் அருளப்படுகிறது. யூதசமயத்தில் விசுவாசிகளானவர்களுக்கு இந்தச் சம்பவம் முதலில் பிடிக்கவில்லை. பேதுரு நடந்த காரியங்களை விவரித்துக் கூறிய பின்பு, எருசலேமிலுள்ள அப்போஸ்தலரும் யூதசமயத்தில் விசுவாசிகளானவரும் அமைதல் அடைந்து தேவனை மகிமைப்படுத்தினார்கள். புறஜாதி கிறிஸ்தவர்கள்மீது அவர்களுக்கு இருந்த கோபம் தணிந்துபோயிற்று. யூதருக்கும் புறஜாதியாருக்கும் சுவிசேஷச் செய்தியைப் பிரசங்கம் பண்ண வேண்டும் என்று தீர்மானம் பண்ணுகிறார்கள். தேவனுடைய சித்தத்திற்குத் தங்களை ஒப்புக்கொடுக்கிறார்கள்

"ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலை தேவன் புறஜாதியாருக்கும் அருளிச்செய்தார்" கொர்நேலியு யூதமார்க்கத்தில் சேரவில்லை. அவன் இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து கிறிஸ்தவ மார்க்கத்தை ஏற்றுக் கொள்கிறான்

VII. பெனிக்கேநாடு, சீப்புரு தீவு, சீரியா ஆகிய இடங்களில் சுவிசேஷ ஊழியம் - (அப 8:4

1. விசுவாசிகள் உபத்திரவத்தினால் சிதறிப்போனார்கள்

அப் 11:19 ஸ்தேவான் நிமித்தமாய் எழும்பின உபத்திரவத்தினாலே சிதறப் பட்டவர்கள் சுவிசேஷ வசனத்தை யூதர்களுக்கேயன்றி மற்ற ஒருவருக்கும் அறிவியாமல், பெனிக்கேநாடு, சீப்புருதீவு, அந்தியோகியா பட்டணம்வரைக்கும் சுற்றித்திரிந்தார்கள்

11 அதிகாரம்

"ஸ்தேவான் நிமித்தமாய் எழும்பின உபத்திரவத்தினாலே சிதறப்பட்டவர்கள் சுவிசேஷ வசனத்தை யூதர்களுக்கேயன்றி மற்ற ஒருவருக்கும் அறிவியாமல் பெனிக்கேநாடு, சீப்புருதீவு, அந்தியோகியா பட்டணமவரைக்கும் சுற்றித்திரிந்தார்கள்" - அப் 8:1-2 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் உபத்திரவங்களுக்குப் பின்பு யூதசமயத்தில் விசுவாசிகளானவர்கள் பெனிக்கேநாடு, சீப்புருதீவு, அந்தியோகியா பட்டணமவரைக்கும் சுற்றித்திரிந்தார்கள்

"பெனிக்கேநாடு" (Phenice) - கலிலேயாவிற்கும், சீரியாவிற்கும் இடையிலுள்ள தேசம். மத்தியதரைக்கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ளது. தீரு, சீதோன் ஆகிய பட்டணங்கள் இந்தத் தேசத்தில் உள்ளன (அப் 15:3, அப் 21:2, அப் 27:12)

"சீப்புருதீவு (Cyprus) - மத்தியதரைக் கடலில் உள்ள தீவு. அப் 4:36, அப் 11:19-20; அப் 13:4, அப் 15:39, அப் 21:3,16, அப் 27:4

"அந்தியோகியா" (Antioch) சீரியாவில் உள்ள பட்டணம். அந்தியோகஸ் செலுகஸ் (Antiochus Seleucus) இந்தப் பட்டணத்தைக் கட்டினான். ஓரந்தஸ் Orontes நதியின் அருகில் இந்தப் பட்டணம் அமைந்துள்ளது. அக்காலத்தில் கிழக்குத் தேசங்களிலுள்ள பட்டணங்களில் இந்தப் பட்டணமே மிகவும் பிரசித்தி பெற்றதாகும். (அப் 6:5, அப் 11:19-27, அப் 13:1, அப் 14:26; அப் 15:22-35, கலா 2:11. பிசீதியாவிலுள்ள அந்தியோகியா இந்தப் பட்டணம் அல்ல (அப் 13:14-52, அப் 14:19-22; அப் 18:22; 2 தீமோ 3:11)

"சிதறப்பட்டவர்கள் சுவிசேஷ வசனத்தை யூதர்களுக்கேயன்றி மற்ற ஒருவருக்கும் அறிவிக்கவில்லை" - அவர்கள் பேதுருவின் தரிசனத்தையோ அல்லது யூதேயாவிலுள்ள யூதசமயத்தில் விசுவாசிகளின் தீர்மானத்தையோ இன்னும் கேள்விப்படவில்லை. ஆகையினால் யூதர்களுக்கு மட்டுமே அவர்கள் சுவிசேஷச் செய்தியை அறிவித்து வருகிறார்கள் (அப் 11:1-18)

2. சீரியாவிலுள்ள அந்தியோகியாவில் எழுப்புதல் (11:20-21)

அப் 11:20 அவர்களில் சீப்புருதீவாரும் சிரேனே பட்டணத்தாருமாகிய சிலர் அந்தியோகியா பட்டணத்துக்கு வந்து கிரேக்கருடனே பேசிக் கர்த்தராகிய இயேசுவைக்குறித்துப் பிரசங்கித்தார்கள்

அப் 11:21 கர்த்தருடைய கரம் அவர்களோடே இருந்தது; அநேக ஜனங்கள் விசுவாசிகளாகி, கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்

"சிரேனே பட்டணம்" (Cyrene) - வடக்கு ஆப்பிரிக்காவில் உள்ள பட்டணம் (மத் 27:32; அப் 2:10; அப் 6:9, அப் 11:20, அப் 13:1)

"கிரேக்கர்" (Grecians) கிரேக்கருடைய பட்டணங்களில் வசித்து வந்த கிரேக்க மொழி பேசிய யூதர்கள் (அப் 6:1, அப் 9:29, அப் 11:20)

"கர்த்தருடைய கரம் அவர்களோடே இருந்தது" அவர்கள் பிரசங்கித்து வந்த தமது வார்த்தையை தேவன் அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் உறுதிப்படுத்தினார் (அப் 4:30, அப் 13:11)

"அநேக ஜனங்கள் விசுவாசிகளாகி, கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்" - ஏராளமான ஜனங்கள் இரட்சிக்கப்பட்டார்கள். இரட்சிப்பு என்பது பழைய பாவ[redacted]வங்களிலிருந்து முற்றிலுமாக விடுவிக்கப்பட்டு, தேவனைப் பின்பற்றி நடப்பதாகும். (சங் 19:7; மத் 18:3; அப் 3:19, யாக் 5:19-20; சங் 51:13)

11 அதிகாரம்

3. சபை அனுப்பிய முதலாவது மிஷினெரி - (8:14; 11:19)

அப் 11:22 எருசலேமிலுள்ள சபையார் இந்தக் காரியங்களைக்குறித்துக் கேள்விப்பட்டபோது, அந்தியோகியா வரைக்கும் போகும்படிக்குப் பர்னபாவை அனுப்பினார்கள்.

அப் 11:23 அவன் போய்ச் சேர்ந்து தேவனுடைய கிருபையைக் கண்டபோது, சந்தோஷப்பட்டு, கர்த்தரிடத்தில் மனநிர்ணயமாய் நிலைத்திருக்கும்படி எல்லாருக்கும் புத்திசொன்னான்.

அப் 11:24 அவன் நல்லவனும் பரிசுத்த ஆவியினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்தவனுமாயிருந்தான்; அநேக ஜனங்கள் கர்த்தரிடமாய்ச் சேர்க்கப்பட்டார்கள்.

"எருசலேமிலுள்ள சபையார்" - இதுவே ஆதித்திருச்சபை. கிறிஸ்தவ மார்க்கத்துக்கு எருசலேமிலிருந்த சபையே தாய் சபையாகும்.

"அந்தியோகியாவரைக்கும் போகும்படிக்குப் பர்னபாவை அனுப்பினார்கள்" - ஆதித் திருச்சபையார் மிஷனெரிகளை பல தேசங்களுக்கும் அனுப்பினார்கள். பரிசுத்த ஆவியானவரே திருச்சபையின் காரியங்களைத் தீர்மானம் பண்ணினார். பரிசுத்த ஆவியானவரின் அங்கீகாரத்தோடு அவர்கள் பர்னபாவை அந்தியோகியா வரைக்கும் அனுப்பினார்கள் (அப் 11:22; அப் 8:29,39; அப் 10:19; அப் 11:12; அப் 13:2-4; அப் 15:28; அப் 16:7; அப் 20:28; அப் 21:11)

"அவன் போய்ச் சேர்ந்து, தேவனுடைய கிருபையைக் கண்டான்." திருச்சபை பர்னபாவை அனுப்பும்போது அவன் சந்தோஷத்தோடு தேவனுடைய ஊழியத்தைச் செய்வதற்குப் புறப்பட்டுப் போகிறான். பர்னபா நல்லவன். பரிசுத்த ஆவியினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்திருந்தவன்.

நல்ல ஊழியக்காரரின் சுபாவங்கள்

1 திருச்சபையின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிகிறார் (அப் 11:22-23)

2 தேவனுடைய ஊழியத்தை அங்கீகாரம் பண்ணுகிறார் (அப் 11:23)

3 தேவன் மற்ற ஊழியக்காரர்களை ஆசீர்வதிக்கும்போது, பொறாமைப்படாமல் சந்தோஷப்படுகிறார் (அப் 11:23)

4 தேவனைப் பற்றிக் கொள்ளுமாறும், தேவனை விட்டு பின்வாங்கிப் போய் விடாதவாறும் ஜனங்களுக்குப் புத்தி சொல்லுவார் (அப் 11:23)

5. நல்லவராக இருப்பார் (அப் 11:24)

6 பரிசுத்த ஆவியினால் நிறைந்தவராய் இருப்பார் (அப் 11:24)

7 விசுவாசத்தினால் நிறைந்தவராய் இருப்பார் (அப் 11:24)

8 அநேக ஜனங்களை ஆசீர்வதிப்பார் (அப் 11:24)

"கர்த்தரிடத்தில் மனநிர்ணயமாய் நிலைத்திருக்கும்படி எல்லாருக்கும் புத்தி சொன்னான்" விசுவாசிகள் கர்த்தரிடத்தில் நிலைத்திருக்க வேண்டும். விசுவாசிகளுக்கும் பிரச்சனை வரலாம். துன்பங்கள் வரலாம். எல்லாச் சூழ்நிலைகளிலும் கர்த்தரைப் பற்றிக் கொள்வதற்கு ஊழியக்காரர்கள் விசுவாசிகளுக்குப் புத்தி கூறவேண்டும். (வெளி 3:16)

நிலைத்திரு (cleave) - προσμένω - prosmenoo - 4357

வினைச்சொல் - தங்கியிரு, தரித்திரு, நிலைத்திரு (abide with) (அப் 18:18, மத் 15:32; மாற்கு 8:2; 1தீமோ 1:3, 1தீமோ 5:5)

4. ஆதித்திருச்சபை அனுப்பிய முதலாவது மிஷினெரி குழு - (அப் 13:1-3)

அப் 11:25 பின்பு பர்னபா சவுலைத் தேடும்படி தர்சுவுக்குப் புறப்பட்டுப்போய், அவனைக் கண்டு, அந்தியோகியாவுக்கு அழைத்துக் கொண்டுவந்தான்.

11 அதிகாரம்

அப் 11:26 அவர்கள் ஒரு வருஷகாலமாய்ச் சபையோடே கூடியிருந்து, அநேக ஜனங்களுக்கு உபதேசம்பண்ணினார்கள் முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று.

"பின்பு பர்னபா சவுலைத் தேடும்படி தர்சுவுக்குப் புறப்பட்டுப்போனான்" - உபத்திரவம் பவுலை விட்டிற்கு அனுப்பிவிட்டது. (அப் 9:29-30). பவுல ஏற்கெனவே கிரேக்க தத்துவத்திலும் கொள்கைகளிலும், கோட்பாடுகளிலும் தேர்ச்சி பெற்றவன். அந்தியோகியா சீரியாவின் தலைநகரம். ரோமபேரரசில அந்தியோகியா மூன்றாவது முக்கிய நகரமாகும் ரோமாபுரியும், அலெக்சந்திரியா பட்டணமும் முதல இரண்டு முக்கிய பட்டணங்கள அந்தியோகியாவில கலவிமான்கள பலர் வசித்து வந்தார்கள அவர்களுக்கு மதத்தில ஊழியம் செய்ய பானபாவிற்கு பவுலின உதவி தேவைப்படுகிறது. ஆகையினால பானபா பவுலை அந்தியோகியாவிற்கு அழைத்துக் கொண்டு வந்தான

"முதல முதல அந்தியோகியாவிலே சீஷாகளுக்குக் கிறிஸதவாகள எனகிற பேர வழங்கிற்று" கிறிஸதவாகள எனபதறகு கிறிஸதுவைப போனறவாகள எனறு பொருள கிறிஸ்தவாகள எனனும் பெயரை முதன முதலாக யாா வழங்கினாாகள எனறு தெரியவில்லை திருசசபை வரலாறறில இநதப பெயா இயேசு கிறிஸதுவின விசுவாசிகளுக்கு நிலைத்து விட்டது. இநதப பூமியிலே பலவிதமான பட்டஙகளை மனுஷாகள பெறறுக் கொளளலாம். அவையெலலாவற்றிலும் பிரதானமானது ஒருவா கிறிஸ்தவா எனறு அழைக்கபபடுவதாகும் அப 11:26, அப 26:28, 1பேதுரு 4:16.

5. சபையின் முதல்வது தீர்க்கதரிசிகள் (அப 13:1 21:10 11

அப 11:27 அந்நாட்களிலே எருசலேமிலிருந்து சில தீர்க்கதரிசிகள் அந்தியோகியாவுக்கு வந்தார்கள்

அப 11:28 அவர்களில் ஒருவனாகிய அகபு என்பவன் எழுந்து, உலகமெங்கும் கொடிய பஞ்சம் உண்டாகும் என்று ஆவியானவராலே அறிவித்தான்; அது அப்படியே கிலவுதியு ராயனுடைய நாட்களிலே உண்டாயிற்று.

"அந்நாட்களிலே எருசலேமிலிருந்து சில தீர்க்கதரிசிகள் அந்தியோகியாவுக்கு வந்தார்கள்" - தேவனுக்காக பேசுகிறவர்கள் தீர்க்கதரிசிகள் என்று அழைக்கப்பட்டார்கள் (எபி 1:1 அப 3:21) அவர்கள் பொதுவாக நீதியைப் பிரசங்கித்து வந்தார்கள் (அப 15:32; 1கொரி 14:3) சில சமயங்களில் நடைபெறப் போகிற காரியங்களை முன்னறிவித்தார்கள் (அப 11:28; அப 21:10 லூக்கா 24:44). தீர்க்கதரிசனம் பரிசுத்த ஆவியானவரின் வரங்களில் ஒன்று (1கொரி 12:4-11, 28) தீர்க்கதரிசன வரங்களை உடையவர்களும், இந்த வரத்தைப பயன்படுத்துகிறவர்களும் தீர்க்கதரிசிகள என்று அழைக்கப்பட்டார்கள் (எபே 4:11; அப 11:27; அப 13:1) எவ்வாறு தீர்க்கதரிசனம உரைக்க வேண்டும் எனபதறகான வழிமுறைகள் 1கொரி 14 ஆவது அதிகாரததில தெளிவாக விளக்கபபட்டிருக்கிறது அப்போஸதலருக்கு அடுதத படியாக தீர்க்கதரிசிகளுடைய ஊழியம் மிகவும் முக்கியமானதாகும் (எபே 4:11; 1கொரி 12:28, 1சாமு 19:20, 2நாளா 9:29)

"அகபு" (Agabus) - இரண்டு முறை இவனுடைய பெயரை வேதாகமத்தில வாசிக்கிறோம். (அப 11:28; அப் 21:10)

தீர்க்கதரிசன எண் - 7

"உலகமெங்கும் கொடிய பஞ்சம் உண்டாகும்" (அப 11:28 இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. அது அப்படியே கிலவுதியு ராயனுடைய நாட்களிலே உண்டாயிற்று. கொடிய பஞ்சம் யூதேயாவில ஏற்பட்டது. (அப 11:29-30) அந்தியோகியாவிலோ அல்லது உலகின் மற்ற பகுதிகளிலோ சீஷாகள் இந்தப பஞ்சத்திற்குத் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளவில்லை கிலவுதி இராயனுடைய (Claudius Caesar) நான்காம் வருஷ ஆட்சியில் இந்தப பஞ்சம் உண்டாயிற்று. யூதேயாவை இக்கொடிய பஞ்சம் மிகவும் பாதித்தது. இந்த வாக்கியத்தில் உலகமெங்கும் என்பது யூதேயா தேசத்தையே குறிக்கும். (ஆதி 41:56)

11 அதிகாரம்

6. எருசலேமிலுள்ள சக விசுவாசிகளுக்கு உதவி

(கலா 2:10; 2கொரி 8-9)

அப் 11:29 அப்பொழுது சீஷரில் அவரவர் தங்கள் தங்கள் திராணிக்குத்தக்கதாக யூதேயாவில் குடியிருக்கிற சகோதரருக்கு உதவியாகப் பணஞ் சேகரித்து அனுப்ப வேண்டுமென்று தீர்மானம் பண்ணினார்கள்

அப் 11:30 அப்படியே அவர்கள் சேகரித்து பர்னபா சவுல் என்பவர்களுடைய கையிலே கொடுத்து மூப்பரிடத்திற்கு அனுப்பினார்கள்

"அப்படியே அவர்கள் சேகரித்து, பர்னபா சவுல் என்பவர்களுடைய கையிலே கொடுத்து மூப்பரிடத்திற்கு அனுப்பினார்கள்"

இந்த வசனத்தில் மூப்பர்கள் என்பது எருசலேம் சபையின் மூப்பர்களைக் குறிக்கும் (அப் 11:1; அப் 12:1 2, கலா 3:9

12 அதிகாரம்

VIII. நான்காவது உபத்திரவம்

1. ஏரோது இராஜா யாக்கோபை கொலை செய்கிறான்

அப் 12:1 அக்காலத்திலே ஏரோதுராஜா சபையிலே சிலரைத் துன்பப்படுத்தத் தொடங்கி,

அப் 12:2 யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபைப் பட்டயத்தினாலே கொலைசெய்தான்.

"ஏரோதுராஜா" (Herod the king) - இவன் ஏரோது அகிரிப்பா (Herod Agrippa) இவன் அரிஸ்டோபுலசின் (Aristobulus) குமாரனும், பெரிய ஏரோதின் (Herod the Great) பேரனுமானவன். யோவான் ஸ்நானனைச் சிரச்சேதம் பண்ணிய ஏரோது அந்திப்பாவின் (Herod Antipas) உறவினன். ஏரோதியாள் (Herodias) இவனுடைய சகோதரி (மத் 2:1)

"யாக்கோபு" (James) - செபெதேயுவின் குமாரனாகிய யாக்கோபு (மத் 4:21) இங்கு மத் 20:23 ஆவது வசனம் நிறைவேறுகிறது. யாக்கோபு பாடுகளின் பாத்திரத்தையும் மரணத்தின் பாத்திரத்தையும் பருகுகிறான். யாக்கோபின் மரணத்தினால் அப்போஸ்தலர்களுடைய எண்ணிக்கை பதினொன்றாகக் குறைந்து விட்டது. யாக்கோபிற்குப் பதிலாக வேறுயாரும் அப்போஸ்தலராகத் தெரிந்தெடுக்கப்படவில்லை. இந்த பதினொரு அப்போஸ்தலர்களுக்குப் பதிலாக வேறு யாரும் அவர்களுடைய ஊழிய ஸ்தானத்திற்குத் தெரிந்தெடுக்கப்படவில்லை.

"யோவான்" (John) - யோவானைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் கடைசி குறிப்பு.

"பட்டயம்" - பட்டயத்தால் கொல்லப்படுவதை ரபீமார்கள் மிகப்பெரிய அவமானமாகக் கருதினார்கள். யாக்கோபு பட்டயத்தினாலே கொலைசெய்யப்பட்டது யூதருக்குப் பிரியமான காரியமாக இருந்தது. (அப் 12:3)

2. பேதுருவை கைது பண்ணுகிறார்கள் - (அப் 4:1; 5:17,25)

அப் 12:3 அது யூதருக்குப் பிரியமாயிருக்கிறதென்று அவன் கண்டு, பேதுருவையும் பிடிக்கத்தொடர்ந்தான். அப்பொழுது புளிப்பில்லாத அப்பப்பண்டிகை நாட்களாயிருந்தது.

அப் 12:4 அவனைப் பிடித்துச் சிறைச்சாலையிலே வைத்து, பஸ்கா பண்டிகைக்குப் பின்பு ஜனங்களுக்கு முன்பாக அவனை வெளியே கொண்டு வரலாமென்று எண்ணி, அவனைக் காக்கும்படி வகுப்புக்கு நாலு போர்ச்சேவகராக ஏற்படுத்திய நாலு வகுப்புகளின் வசமாக ஒப்புவித்தான்.

"பேதுருவையும் பிடிக்கத் தொடர்ந்தான்" - பேதுரு நான்காம் முறையாக கைதுபண்ணப்படுகிறான் (அப் 4:3; அப் 5:18-19,25)

"பேதுருவைக் காக்கும்படி வகுப்புக்கு நான்கு போர்ச்சேவகராக ஏற்படுத்திய நான்கு வகுப்புகளின் வசமாக ஒப்புவித்தான்" - வகுப்புக்கு நான்கு போர்ச்சேவகர் (quaternions) என்பதற்கான கிரேக்க வார்த்தை "டெட்ராடியோன்" (tetradion) என்பதாகும். ஒவ்வொரு சாமத்திலும் நான்கு போர்ச்சேவகர்கள் பேதுருவைக் காவல் காத்தார்கள். அவன் இரண்டு சேவகர் நடுவே சிறைச்சாலையில் நித்திரை பண்ண வேண்டும். மற்ற இரண்டு போர்ச்சேவகர்கள் அவனைச் சங்கிலிகளால் கட்டியிருப்பார்கள் (அப் 12:6)

நான்கு போர்ச்சேவகர் (quaternions) - τετράδιον - tetradion - 5069

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - நான்கு போர்ச்சேவகர்

"அப்பொழுது புளிப்பில்லாத அப்பப்பண்டிகை நாட்களாயிருந்தது" - கிரேக்க மொழியில் புளிப்பில்லா அப்பப்பண்டிகை பஸ்கா (Passover) என்று அழைக்கப்படுகிறது. (மத் 26:2,19; மாற்கு 14:1,16; லூக்கா 2:41; லூக்கா 22:1,15; யோவான் 2:13,23; யோவான் 6:4; யோவான் 11:55; யோவான் 12:1; யோவான் 13:1; யோவான் 18:28,39; யோவான் 19:14; 1கொரி 5:7; எபி 11:28) ஒரு சில ஆங்கில

12 அதிகாரம்

மொழிபெயர்ப்புகளில் இந்தப் பண்டிகை ஈஸ்டர் Easter என்றும் அழைக்கப்பட்டது. இது கிறிஸ்தவ பெயரல்ல. கிறிஸ்து பிறப்பதற்கு முன்பாகவே புறஜாதியார் ஈஸ்டர் என்னும் பண்டிகையைக் கொண்டாடி வந்தார்கள். ஈஸ்டர் என்பது இஸ்தார் (Ishtar) என்னும் பெயரிலிருந்து வந்தது. இஸ்தார் பாபிலோனிய பெண் தெய்வமாகும். பரலோகத்தின் ராணி (Queen of Heaven) என்பது இதன் பெயர். பழைய ஏற்பாட்டில் அஸ்தரோத்து (Ashtoreth) என்னும் தேவதைக்கும், அஸ்தரே (Eastre, Astarte) என்பதே பெயர். இஸ்ரவேல் ஜனங்கள் அஸ்தரோத்து என்னும் பெண் தெய்வத்தை ஆராதனை செய்தார்கள். தேவனுக்கு இது அருவருப்பான காரியமாக இருந்தது (1சாமு 7:3; 1இராஜா 11:5,33; 2இராஜா 23:13; எரே 7:18; எரே 44:18). பாபிலோனியர்கள் இஸ்தார் பண்டிகையைக் கொண்டாடும்போது சிலுவையைப் போன்ற ஒரு அடையாளத்தைச் செய்து வணங்குவார்கள். பாபிலோனிய இரகசியங்களின் பிரகாரம் இது ஜீவனைக் குறிக்கும் அடையாளமாகக் கருதப்பட்டது.

மேலநாடுகளில் ஈஸ்டர் பண்டிகையின்போது முட்டைகளை வைத்து பண்டிகை கொண்டாடுவது வழக்கம். இந்த முட்டைகளுக்கு ஈஸ்டர் முட்டைகள் என்று பெயர். இந்த முட்டையைப் பற்றி ஒரு கதை உள்ளது. வானத்திலிருந்து மிகப்பெரிய முட்டை ஒன்று ஐபிராத்து நதியில் விழுந்ததாம். நதியில் ஒரு மீன் இந்த முட்டையைக் கரையோரத்தில் போட்டுவிட்டதாம். அங்கு வந்த புறா ஒன்று அந்த முட்டையின்மீது அடைகாத்து குஞ்சு பொரித்ததாம். அந்த முட்டையிலிருந்து வந்ததே இஸ்தார் (Astarte, Ishtar, the goddess of Easter) என்னும் தெய்வம். இது பாபிலோனியருடைய கதை. இதுபோலவே லெந்துகாலம் (Lent) என்பதும் பாபிலோனியருடைய பண்டிகை. இவ்வாறு ஈஸ்டர், லெந்துகாலம் ஆகிய பெயர்களைப் பற்றி வேதபண்டிதர்களில் சிலர் வியாக்கியானம் பண்ணுகிறார்கள்.

பஸ்கா (Easter) - πάσχα - pascha - 3957

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பஸ்கா

3. பேதுருவின் விடுதலைக்காக சபையார் தொடர்ந்து ஜெபிக்கிறார்கள்

அப 12:5 அப்படியே பேதுரு சிறைச்சாலையிலே காக்கப்பட்டிருக்கையில் சபையார் அவனுக்காக தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார்கள்.

அப 12:6 ஏரோது அவனை வெளியே கொண்டு வரும்படி குறித்திருந்த நாளுக்கு முந்தின நாள் இராத்திரியிலே பேதுரு இரண்டு சங்கிலிகளினாலே கட்டப்பட்டு, இரண்டு சேவகர் நடுவே நித்திரை பண்ணிக்கொண்டிருந்தான்; காவற்காரரும் கதவுக்கு முன்னிருந்து சிறைச்சாலையைக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

4. பேதுரு அற்புதமாக விடுதலை பெறுகிறான்

அப 12:7 அப்பொழுது கர்த்தருடைய தூதன் அங்கே வந்து நின்றான்; அறையிலே வெளிச்சம் பிரகாசித்தது. அவன் பேதுருவை விலாவிலே தட்டி: சீக்கிரமாய் எழுந்திரு என்று அவனை எழுப்பினான். உடனே சங்கிலிகள் அவன் கைகளிலிருந்து விழுந்தது.

அப் 12:8 தூதன் அவனை நோக்கி: உன் அரையைக் கட்டி, உன் பாதரட்சைகளைத் தொடுத்துக்கொள் என்றான்; அவன் அந்தப்படியே செய்தான். தூதன் பின்னும் அவனை நோக்கி: உன் வஸ்திரத்தைப் போர்த்துக்கொண்டு என் பின்னே வா என்றான்.

அப் 12:9 அந்தப்படியே அவன் புறப்பட்டு அவனுக்குப் பின்சென்று, தூதனால் செய்யப்பட்டது மெய்யென்று அறியாமல் தான் ஒரு தரிசனங்காண்கிறதாக நினைத்தான்.

12 அதிகாரம்

அப 12:10 அவர்கள் முதலாங்காவலையும் இரண்டாங் காவலையும் கடந்து, நகரத்திற்குப் போகிற இருப்புக்கதவண்டையிலே வந்தபோது அது தானாய் அவர்களுக்குத் திறவுண்டது. அதின் வழியாய் அவர்கள் புறப்பட்டு ஒரு வீதி நெடுக நடந்துபோனார்கள். உடனே தூதன் அவனை விட்டுப் போய்விட்டான்.

அப 12:11 பேதுருவுக்குத் தெளிவு வந்த போது, ஏரோதின் கைக்கும் யூதஜனங்களின் எண்ணங்களுக்கும் என்னை விடுதலையாக்கும்படிக்குக் கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பினாரென்று நான் இப்பொழுது மெய்யாய் அறிந்திருக்கிறேன் என்றான்.

"கர்த்தருடைய தூதன்" - எபி 1:14 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் பணிவிடையின் ஆவிகளில் ஒன்று. இரண்டாம் முறையாக பேதுருவைத் தேவதூதன் விடுவிக்கிறான் (அப 5:19)

"சங்கிலிகள் அவன் கைகளிலிருந்து விழுந்தது" இந்த வசனத்தில் நாம் நான்கு அற்புதங்களைக் காண்கிறோம். அவையாவன:

1. போர்ச்சேவகர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

2. சங்கிலிகள் பேதுருவின் கைகளிலிருந்து விழுந்தது. (அப 12:7)

3. யாருக்கும் தெரியாமல் மூன்று கதவுகள் வழியாகப்போனார்கள்.

4. இருப்புக்கதவு அவர்களுக்குத் தானாய் திறவுண்டது. (அப 12:10)

தானாய் (own accord) - αὐτόματος - automatos 844

பொருள் - தானாய் automatically (மாற்கு 4:28)

"தூதன் அவனை விட்டுப் போய்விட்டான்" - தன்னுடைய உதவி இனிமேல் பேதுருவிற்குத் தேவையில்லை என்னும் நிலை வந்தவுடன் தூதன் அவனைவிட்டுப் போய்விட்டான். தேவதூதர்கள் தேவைப்படும்போது வருவார்கள். தங்கள் வேலை முடிந்தவுடன் புறப்பட்டுப் போய்விடுவார்கள். தேவையில்லாமல் எங்கும் தங்கியிருக்கமாட்டார்கள்.

"பேதுருவுக்குத் தெளிவு வந்த போது" - பேதுருவிற்கு இது வரையிலும் தெளிவு இல்லை. இதுவரையிலும் என்ன நடந்தது என்பது அவனுக்குத் தெளிவாகத் தெரியவில்லை. தேவதூதன் அவனைவிட்டுப் புறப்பட்டுப் போனபின்பு தான் தன்னை விடுதலையாக்கும்படிக்குக் கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பினார் என்று அறிந்து கொள்கிறான்.

"யூதஜனங்களின் எண்ணங்கள்" - யாக்கோபைப் போலவே பேதுருவையும் கொன்றுபோட வேண்டுமென்று யூதர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். (அப 12:2-3)

5. ஜெபத்திற்கு பதில் கிடைத்தும் அவிசுவாசம்

அப 12:12 அவன் இப்படி நிச்சயித்துக்கொண்டு, மாற்கு என்னும் பேர்கொண்ட யோவானுடைய தாயாகிய மரியாள் வீட்டுக்கு வந்தான்; அங்கே அநேகர் கூடி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார்கள்.

அப 12:13 பேதுரு வாசற்கதவைத் தட்டின போது ரோதை என்னும் பேர்கொண்ட ஒரு பெண் ஒற்றுக்கேட்க வந்தாள்.

அப் 12:14 அவள் பேதுருவின் சத்தத்தை அறிந்து சந்தோஷத்தினால் கதவைத் திறவாமல், உள்ளேயோடி, பேதுரு வாசலுக்குமுன்னே நிற்கிறார் என்று அறிவித்தாள்.

அப் 12:15 அவர்கள்: நீ பிதற்றுகிறாய் என்றார்கள். அவளோ அவர்தானென்று உறுதியாய்ச் சாதித்தாள். அப்பொழுது அவர்கள்: அவருடைய தூதனாயிருக்கலாம் என்றார்கள்.

12 அதிகாரம்

அப் 12:16 பேதுரு பின்னும் தட்டிக் கொண்டிருந்தான் அவர்கள் திறந்தபோது அவனைக் கண்டு பிரமித்தார்கள்

அப் 12:17 அவர்கள் பேசாமலிருக்கும்படி அவன் கையமர்த்தி, கர்த்தர் தன்னைக் காவலிலிருந்து விடுதலையாக்கின விதத்தை அவர்களுக்கு விவரித்து, இந்தச் செய்தியை யாக்கோபுக்கும் சகோதரருக்கும் அறிவியுங்கள் என்று சொல்லி; புறப்பட்டு, வேறொரு இடத்திற்குப் போனான்

"மாற்கு என்னும் பேர்கொண்ட யோவானுடைய தாயாகிய மரியாள்" - ஆறு மரியாள்களில் ஒருவர் (மத் 13:55)

"மரியாள்" - புதிய ஏற்பாட்டில் ஆறு மரியாள்களைப் பற்றி வாசிக்கிறோம்.

1 இயேசுவின் தாயார்

2 மகதலேனா மரியாள் (லூக்கா 8:2, லூக்கா 24:10

3. லாசருவின் சகோதரி (மத் 26:7, லூக்கா 10:39-42, யோவான் 11 யோவான் 12:3

4. யாக்கோபுவின் தாயார் (யோவான் 19:25, மத் 27:56, மாற்கு 15:40)

5 மாற்குவின் தாயார் (அப் 12:12),

6 பவுலின் உதவியாள (ரோமர் 16:6)

இவர்களைத்தவிர பழைய ஏற்பாட்டில் இரண்டு பேருக்கு மரியாள் (மிரியாம்) என்னும் பெயர் இருந்தது (யாத் 15:20; நாளா 4:17

"மாற்கு என்னும் பேர்கொண்ட யோவான்" - மாற்கு சுவிசேஷத்தை எழுதியவன் பர்னபாவின் உறவினன் (கொலோ 4:10) இயேசுவின் சீஷர்களில் ஒருவன் (அப் 12:12) பவுலும் பர்னபாவும் மாற்குவைத் தங்களுடைய மிஷனெரி பிரயாணத்தின்போது தங்களோடு கூட அழைத்துச் சென்றார்கள் ஆனால் அவன் இடையில நோயவாய்ப்பட்டதினால் அவர்களை விட்டுப் பிரிந்து வந்துவிட்டான் (அப் 12:25; அப் 13:5,13) பவுலின் இரண்டாவது மிஷனெரி பிரயாணத்தின்போது மாற்குவைக் குறித்துப் பவுலுக்கும் பர்னபாவிற்கும் இடையே கருத்து வேறுபாடு உண்டாயிற்று (அப் 15:33-39 பேதுருவின் ஊழியத்தின் மூலமாக மாற்கு இரட்சிக்கப்பட்டவன் (1பேதுரு 5:13) பின்பு மாற்கு பவுலோடு சேர்ந்து ஊழியம் செய்தான் (கொலோ 4:10-11; 2தீமோ 4:11 பிலே 1:24)

"ரோதை" (Rhoda) - இந்தப் பெயருக்கு ரோஜாப்பூ (Rose) என்று பொருள்

"அவள் பேதுருவின் சத்தத்தை அறிந்தாள்" - பேதுரு பிரசங்கம் பண்ணியதை ரோதை ஏற்கெனவே கேட்டிருக்கிறார்கள் அவளுடைய வீட்டிற்கு பேதுரு அடிக்கடி வரக்கூடியவர் அவர்களுடைய குடும்ப நண்பர்

"அவர்கள்: நீ பிதற்றுகிறாய் என்றார்கள்" பேதுரு விடுதலையாக வேண்டுமென்று சீஷர்கள் தொடர்ந்து ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தார்கள் அவர்களுடைய ஜெபத்திற்குத் தேவன் பதில் கொடுத்தார் பேதுருவைச் சிறைச்சாலையிலிருந்து விடுவித்தார் ஆனால் அதை அவர்களால் நம்ப முடியவில்லை. ரோதை புத்தி தடுமாற்றத்தினால் பிதற்றுகிறதாகக் கூறினார்கள்

பிதற்று (mad) - μαίνομαι - mainomai 3105

வினைச்சொல் - பயித்தியக் காரனாயிரு, பிதற்று அப் 12:15, 26:24-25; யோவான் 10:20, 1கொரி 14:23

12 அதிகாரம்

"அவருடைய தூதனாயிருக்கலாம்" - ஒவ்வொருவரையும் பாதுகாப்பதற்காகத் தேவன் ஒரு தூதனை நியமித்திருக்கிறார் என்று யூதர்கள் நம்பினார்கள். இங்கு வந்து கதவைத் தட்டுவது பேதுருவின் தூதன் என்று நினைத்தார்கள். ஆனாலும் யாரையும் உடனே உள்ளே விடுவதற்கு அவர்களுக்கு மனதில்லை.

"பேதுரு பின்னும் தட்டிக்கொண்டிருந்தான். அவர்கள் திறந்தபோது அவனைக் கண்டு பிரமித்தார்கள்" - ஒரு நபர் வீட்டின் கதவைத் தட்டும்போது கதவைத் தட்டுகிறவர் யார் என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்ட பின்பே வீட்டுக்காரர் கதவைத் திறப்பார். அவர் நண்பராக இருந்தால் வாசற்காவல்காரன் தன் எஜமானிடம் அறிவிப்பான். எஜமான் அனுமதி கொடுத்தால் அவனுக்குக் கதவைத் திறந்து விடுவான். யூதருக்குப் பயந்ததினால் இவர்கள் தங்களுடைய கதவுகளைப் பூட்டி உள்ளே பயத்தோடு இருந்தார்கள். வீட்டில் இருக்கும் எல்லாக் கதவுகளையும் பூட்டி விட்டார்கள் (யோவான் 20:19).

பிரமித்தார்கள் (astonished) - ἐξιστάνω - existanoo - 1839

வினைச்சொல் - மதிமயங்கு, ஆச்சரியப்படு, பிரமி (அப் 2:7; அப் 8:13; அப் 9:21; அப் 10:45)

"அவர்கள் பேசாமலிருக்கும்படி அவன் கையமர்த்தினான்" - பேதுரு மிகுந்த அவசரத்தில் இருக்கிறான். தான் வந்த காரியத்தை உடனே சொல்லிவிட்டு, அவன் தப்பிச் செல்ல வேண்டும். ஏரோதின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசத்திலிருந்து அவன் வெளியேற வேண்டும். அதற்கு முன்பாகத் தன்னுடைய விடுதலையைப் பற்றி சீஷர்களுக்கு அறிவிக்க விரும்புகிறான். தான் வந்த காரியத்தைச் சொல்லிவிட்டு, அவன் வேறொரு இடத்திற்குப் போனான். எங்கு போனான் என்று தெரியவில்லை.

"கர்த்தர் தன்னைக் காவலிலிருந்து விடுதலையாக்கினார்" - பேதுருவைக் கர்த்தரே விடுதலையாக்கினார். சிறைச்சாலைக் காவற்காரர்களில் பேதுருவிற்கு நண்பர்கள் இருந்திருக்கலாம். அவர்கள் உதவியினால் பேதுரு தப்பித்திருக்கலாம் என்று சிலர் கூறுகிறார்கள். ஆனால் அது தவறான கருத்து. பேதுருவைக் காவலிலிருந்து விடுதலையாக்கினவர் கர்த்தரே.

"யாக்கோபு" (James) - கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சகோதரன் (அப் 12:17; அப் 15:13-21; அப் 21:18; கலா 1:19; கலா 2:9,12; யாக் 1:1; 1கொரி 15:7; லூக்கா 8:19). ஆதித்திருச்சபையில் பேதுருவிற்குப் பிரதான ஸ்தானம் கொடுக்கப்படவில்லை. சபையின் மூன்று தூண்களில் பேதுருவும் ஒரு தூணாக இருந்தான் (கலா 2:9).

6. சேவகர்மீது ஏரோதுவின் கோபம்

அப் 12:18 பொழுது விடிந்தபின்பு பேதுருவைக் குறித்துச் சேவகருக்குள்ளே உண்டான கலக்கம் கொஞ்சமல்ல.

அப் 12:19 ஏரோது அவனைத் தேடிக் காணாமற்போனபோது, காவற்காரரை விசாரணை செய்து, அவர்களைக் கொலைசெய்யும்படி கட்டளையிட்டு, பின்பு யூதேயாதேசத்தை விட்டுச் செசரியா பட்டணத்துக்குப் போய், அங்கே வாசமாயிருந்தான்.

"பொழுது விடிந்தபின்பு பேதுருவைக்குறித்துச் சேவகருக்குள்ளே உண்டான கலக்கம் கொஞ்சமல்ல" - பேதுரு காவலிலிருந்து விடுவிக்கப்பட்டதினால் சேவகர்கள் கலங்கினார்கள். ஒரு கைதி தப்பியோடிவிட்டால் அக்காலத்து வழக்கத்தின் பிரகாரம் கைதியைக் காவல்காத்த சேவகர்களைக் கொன்றுபோடுவது வழக்கம். ஆகையினால் சேவகர் மிகுந்த கலக்கம் அடைகிறார்கள் (அப் 12:19).

கலக்கம் (stir) - τάραχος - tarachos - 5017

ஆண்பால் பெயர்ச்சொல் - கலக்கம் (அப் 12:18; அப் 19:23)

12 அதிகாரம்

"யூதேயா தேசத்தை விட்டுச் செசரியா பட்டணத்துக்குப் போய், அங்கே வாசம் பண்ணினான்" - ஏரோது செசரியாவிற்குப் போனான். பேதுரு அங்கு போகவில்லை.

7. ஏரோதுவின் மரணம்

அப் 12:20 அக்காலத்திலே ஏரோது தீரியர்பேரிலும் சீதோனியர்பேரிலும் மிகவும் கோபமாயிருந்தான்; தங்கள் தேசம் ராஜாவின் தேசத்தினால் போஷிக்கப்பட்டபடியினால், அவர்கள் ஒருமனப்பட்டு, அவனிடத்தில் வந்து ராஜாவின் வீட்டு விசாரணைக்காரனாகிய பிலாஸ்துவைத் தங்கள் வசமாக்கிச் சமாதானம் கேட்டுக்கொண்டார்கள்.

அப் 12:21 குறித்தநாளிலே, ஏரோது ராஜவஸ்திரம் தரித்துக்கொண்டு, சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்து, அவர்களுக்குப் பிரசங்கம்பண்ணினான்.

அப் 12:22 அப்பொழுது ஜனங்கள்: இது மனுஷசத்தமல்ல, இது தேவசத்தம் என்று ஆர்ப்பரித்தார்கள்.

அப் 12:23 அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தாதபடியினால் உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான்; அவன் புழுப்புழுத்து இறந்தான்.

"தங்கள் தேசம் ராஜாவின் தேசத்தினால் போஷிக்கப்பட்டது" - தீருவும், சீதோனும் ரோமருடைய ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசங்கள். கலிலேயாவிலிருந்து வந்த ஜனங்கள் அங்கே இருந்தார்கள். ஏரோது தீரியர்பேரிலும் சீதோனியர்பேரிலும் மிகவும் கோபமாயிருந்தான். அவர்கள் ரோமருடைய ஆட்சிக்கு உட்பட்டிருந்தபடியினால் ஏரோதுவினால் அவர்களோடு யுத்தம் செய்ய முடியாது. ஆனாலும் அவர்கள்மீது இருந்த கோபத்தினால் கலிலேயாவிலிருந்து எந்தப் பொருளும் தீருவிற்கும், சீதோனுக்கும் போகாதவாறு தடைபண்ணிவிட்டான். தனக்குக் கீழுள்ள மற்ற பிரதேசங்களிலிருந்தும் இந்தப் பகுதிக்கு எந்தப் பொருளும் போவதற்கு ஏரோது அனுமதிக்கவில்லை. தீருவும், சீதோனும் வணிக மையங்கள். மற்ற பிரதேசங்களிலிருந்து தங்களுடைய பகுதிக்குப் பொருட்கள் வந்து வியாபாரம் நடந்தால்தான் தீருக்கும், சீதோனுக்கும் செழிப்பு உண்டாகும். ஆகையினால் தங்கள்மீது ஏரோது கோபமாக இருப்பதைக் கண்டு, அவனுடைய கோபத்தை எப்படியாவது தணிக்க வேண்டுமென்று இவர்கள் விரும்பினார்கள்.

"ராஜாவின் வீட்டு விசாரணைக்காரனாகிய பிலாஸ்து" **(Blastus the king's chamberlain)** - ஏரோதுவின் வீட்டில் பிலாஸ்து என்பவன் வீட்டு விசாரணைக்காரனாக இருந்தான். ஏரோதுவினிடத்தில் இவனுக்கு அதிக செல்வாக்கு இருந்தது. தீருவும் சீதோனியரும் பிலாஸ்துவைத் தங்களுடைய நண்பனாக்கிக் கொண்டார்கள். அவன் மூலமாக ஏரோதுவிடம் சமாதானம் பேசினார்கள். ஏரோதும் பிலாஸ்துவின் மூலமாக தீரியர்பேரிலும், சீதோனியர் பேரிலும் சமாதானம் அடைந்தான்.

கோபமாயிரு **(highly displeased) - θυμομαχέω - thymomacheoo** - 2371

வினைச்சொல் கோபமாயிரு **(fighting mad)**

"ஏரோது ராஜவஸ்திரம் தரித்துக்கொண்டு, சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்து, அவர்களுக்குப் பிரசங்கம்பண்ணினான்" ஏரோது அரசியல் பிரசங்கம் பண்ணினான். ஜனங்கள் எல்லோரும் ஏரோதுவை வாழ்த்தினார்கள். தேவனுக்கே உரிய மகிமையை அவன் தனக்குரியதாக்கிக் கொண்டான். இதனால் தேவனுடைய கோபம் ஏரோதுவின்மீது வந்து இறங்கிற்று.

"இது மனுஷ சத்தமல்ல, இது தேவசத்தம்" ஏரோது சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்திருக்கிறான். ராஜவஸ்திரம் தரித்திருக்கிறான். ஜனங்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிறான். இதைக் கேட்ட ஜனங்கள் இது மனுஷ சத்தமல்ல, இது தேவசத்தம் என்று ஆர்ப்பரித்தார்கள். தன்னை இவ்வாறு உயர்த்தியதற்காக ஏரோது ஜனங்களைக் கடிந்து கொள்ளவில்லை. அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தவில்லை.

அப்போஸ்தலர் – தொகுப்புரை

12 அதிகாரம்

ஆனபடியினால் கர்த்தருடைய தூதன் அவனை உடனே அடித்தான் ஏரோது புழுப்புழுத்து இறந்தான் யோசபஸ (Josephus) என்னும் திருச்சபை ஆசிரியர் ஏரோதுவின் மரணத்தைப் பற்றி எழுதியிருக்கிறார் ஏரோதுவிற்கு மிகுந்த வயிற்று வலி உண்டாயிற்று என்றும் ஐந்து நாட்களாக வயிற்று வலியினால் துடிதுடித்து இறந்தான் என்றும் யோசபஸ ஏரோதுவின் மரணத்தைக் குறித்து எழுதியிருக்கிறார் பேதுருவின் சத்துருவைக் கர்த்தருடைய தூதன் கொன்று போட்டான ஆகையினால ஏரோதுவின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசத்திற்குள பேதுரு இனிப்பயமில்லாமல சென்று இயேசு கிறிஸதுவின சுவிசேஷச் செய்தியைப் பிரசங்கம் பண்ணலாம. (அப 12:1-17)

புழுப்புழுத்த (worms) - σκωληκόβρωτος - skoolekobrootos - 4662

பெயரடை - புழுப்புழுத்த - இந்த வசனத்தில மட்டுமே இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

புழு (worm) - σκώληξ - skooleex - 4663

ஆண்பால் பெயர்சொல் - புழு (மாற்கு 9 44-48)

இற (gave up the ghost) - ἐκψύχω - ekpsychoo 1634

வினைச்சொல் - இற ஜீவனை விடு - இந்த வார்த்தை இந்த வசனத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது (அப 5:5,10)

8. பவுலும் பர்னபாவும் தர்ம ஊழியத்தை நிறைவேற்றி திரும்பி வருகிறார்கள் - 12:24

அப 12:24 தேவவசனம் வளர்ந்து பெருகிற்று

அப 12:25 பர்னபாவும் சவுலும் தர்ம ஊழியத்தை நிறைவேற்றினபின்பு மாற்கு என்னும் மறுபேர்கொண்ட யோவானைக் கூட்டிக் கொண்டு எருசலேமைவிட்டுத் திரும்பி வந்தார்கள்

"பர்னபாவும் சவுலும் தர்ம ஊழியத்தை நிறைவேற்றினபின்பு மாற்கு என்னும் மறுபேர்கொண்ட யோவானைக் கூட்டிக் கொண்டு எருசலேமைவிட்டுத் திரும்பி வந்தார்கள்" யூதேயாவிலுள்ள பரிசுத்தவான்களுக்கு தர்ம ஊழியத்தை நிறைவேற்றினார்கள் (அப 11:27-30) அதன் பின்பு அவர்கள் மாற்கு என்னும் மறுபேர் கொண்ட யோவானோடு திரும்பி வந்தார்கள் (அப 12:12)

13 அதிகாரம்

IX. பவுலின் முதலாவது மிஷினெரி பிரயாணம் - அப் 13:1-14:28; 15:25-18:23

1. பரிசுத்த ஆவியானவரின் அழைப்பு

அப் 13:1 அந்தியோகியா பட்டணத்திலுள்ள சபையிலே பர்னபாவும், நீகர் என்னப்பட்ட சிமியோனும், சிரேனே ஊரானாகிய லூகியும், காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதுடனேகூட வளர்க்கப்பட்ட மனாயீனும், சவுலும் தீர்க்கதரிசிகளாயும் போதகர்களாயும் இருந்தார்கள்.

அப் 13:2 அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து, உபவாசித்துக் கொண்டிருக்கிறபோது, பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம்பற்றினார்.

போதகர்கள் (teachers) - διδάσκαλος - didaskalos - 1320

ஆண்பால் பெயர்சொல் - வேதபாரகன், வேதகர், போதகர், குரு. இந்த வார்த்தை சுவிசேஷங்களில் பொதுவாக இயேசு கிறிஸ்துவைக் குறிக்கும். "doctor" (லூக்கா 2:46) "teacher" (யோவான் 3:2) யாக் 3:1 ஆவது வசனத்தில் இந்த வார்த்தை போதகர் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

"நீகர் என்னப்பட்ட சிமியோன்" - நீகர் (Niger) என்பதற்கு கருப்பு என்று பொருள். அது அவனுடைய தலைமுடியின் நிறத்தையோ அல்லது அவனுடைய சரீரத்தின் கருப்பு நிறத்தையோ குறிக்கலாம்.

"சிரேனே ஊரானாகிய லூகி" (Lucius of Cyrene) - சிரேனே ஊர் வடக்கு ஆப்பிரிக்காவில் இருக்கிறது. லூகியைப் பற்றி அதிகமாக வேறொன்றும் தெரியவில்லை.

"மனாயீன்" (Manaen) - இவன் ஏரோது அந்திப்பாவுடனே கூட வளர்க்கப்பட்டவன். ஏரோது அந்திப்பா யோவான் ஸ்நானனைச் சிரச்சேதம் பண்ணினவன். கிரேக்க மொழியில் "கூட வளர்க்கப்பட்டவன்" என்பதற்கு "ஒரே ஸ்திரீயால் வளர்க்கப்பட்டவர்கள்" என்று பொருள். மனாயீனுடைய தாய் ஏரோது அந்திப்பாவையும் வளர்த்தாள். யூதர்கள் மனாயீனை ஒரு தீர்க்கதரிசியாகக் கருதினார்கள். அவன் சிறுவனாக இருந்தபோதே ஏரோதுவின் ராஜ்யபாரத்தைக் குறித்து தீர்க்கதரிசனமாக முன்னறிவித்தான். ஏரோது ராஜாவானபோது அவன் மனாயீனைத் தன்னுடைய அரண்மனைக்கு அழைத்து அவனுக்கு உயர்ந்த அந்தஸ்தைக் கொடுத்து கௌரவித்தான்.

"காற்பங்கு" (tetrarch) - (மத் 14:1)

"அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து உபவாசித்துக்கொண்டிருக்கிறார்கள்" - அவர்கள் என்பது அப் 13:1 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிற ஐந்து தீர்க்கதரிசிகளையும் போதகர்களையும் குறிக்கும்.

இந்த வாக்கியத்தில் ஆராதனை செய்தல் என்பதற்கான கிரேக்க வார்த்தை "லேட்டோர்ஜியோ" (leitourgeoo) என்பதாகும். இதற்கு தன்னுடைய சொந்த செலவில் சேவை புரிதல், பொதுஜனங்களுக்குச் சேவை செய்தல், ஒரு வேலையைச் செய்தல், ஊழியம் செய்தல் என்று பலவிதமாகப் பொருள் கூறலாம். (to serve at one's own expense; to render public service; to perform a work; to minister). மோசேயின் ஆராதனை முறைமையில் ஆசாரியர்கள் அனுதின ஊழியம் செய்வதற்கும் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (எபி 10:11) ஜெபத்திலும் பலியிடுவதிலும் ஆசாரியருடைய ஊழியம் (லூக்கா 1:23; எபி 8:6; எபி 9:21) ஏழைகளுக்கு உதவி புரிதல் (2கொரி 9:12; பிலி 2:30) ஆகியவற்றிற்கும் இதே சொல்லே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. தேவதூதர்கள் தேவனுடைய சித்தத்தைப் பரிசுத்தவான்கள் மத்தியிலே நிறைவேற்றுவதற்கும், இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (எபி 1:14)

13 அதிகாரம்

பரிசுத்தமான காரியங்களில் தன்னை முழுவதுமாக அர்ப்பணித்திருக்கிறவர் மார்க்கக் காரியங்களில் ஊழியம் செய்கிறவர் ஆகியோருக்கும் இந்தச் சொல் வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (எபி 8:2; ரோமர் 15:16; எபி 1:7; பிலி 2:25) கர்த்தருக்கு ஊழியம் செய்தல் என்பது தேவனுடைய சமூகத்தில் பிறருக்காக சேவை புரிதல் என்று பொருள் (2கொரி 5:20; பிலி 2:17). ஏழைக்கு உதவி புரிதல் கர்த்தருக்குக் கடன் கொடுப்பதற்குச் சமம் (நீதி 19:17). அப் 13:1, 2 ஆகிய வசனங்களில் தீர்க்கதரிசிகளும் போதகர்களும் கர்த்தருக்கு ஆராதனை செய்து, உபவாசித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏழைகளுக்காகவும் இரட்சிக்கப்படாத ஆத்துமாக்களுக்காகவும் வியாதியஸ்தர்களுக்காகவும் கர்த்தருடைய ஊழியக்காரர்கள் அவருடைய சமூகத்தில் உபவாசம் பண்ணி, ஆராதனை செய்கிறார்கள்.

ஆராதனைசெய் (ministered) - λειτουργέω - leitourgeoo - 3008

வினைச்சொல் - ஆராதனைசெய், உதவிசெய்

"உபவாசித்துக்கொண்டிருக்கிறார்கள்" - பக்தியுள்ள யூதர்கள் பொதுவாக திங்கள் கிழமையிலும் வியாழக்கிழமையிலும் உபவாசம் பண்ணி, ஜெபாலயத்தில் ஆராதனை செய்வார்கள். ஆதித்திருச்சபை கிறிஸ்தவர்கள் எப்படி, எத்தனை நாள் உபவாசம் பண்ணினார்கள் என்னும் விவரம் தெரியவில்லை. யூதர்கள் ஓய்வுநாளில் ஆராதனையில் பங்குபெறுவார்கள். ஆனால் அன்று உபவாசம் பண்ணமாட்டார்கள்.

"பரிசுத்தஆவியானவர் திருவுளம்பற்றினார்" - பரிசுத்த ஆவியானவர் இவர்களிடம் எவ்வாறு கூறினார் என்பது இந்த வசனத்தில் குறிப்பிடப்படவில்லை. பரிசுத்த ஆவியானவர் மனுஷரிடத்தில் பல வழிகளில் பேசுகிறார்.

தேவன் மனுஷரிடம் பேசும் வழிகள்

1. தீர்க்கதரிசனத்தின் மூலமாக (அப் 3:21; 2பேதுரு 1:21, அப் 11:27-28; அப் 21:10; எபி 1:1)
2. பாஷைகள், வியாக்கியானம் மூலமாக (1கொரி 12:4-11; 1கொரி 14:1-40)
3. அமர்ந்த மெல்லிய சத்தம் (1இராஜா 19:12)
4. கேட்கக்கூடிய தெளிவான சப்தம் (மத் 1:17; மத் 17:5; யோவான் 12:28; அப் 9:7; உபா 5)
5. தேவதூதர்கள் மூலமாக (அப் 8:26; அப் 12:8; அப் 27:23)
6. தரிசனங்கள் மூலமாக (சங் 89:19; அப் 9:10; அப் 10:3; அப் 11:5; அப் 16:9; அப் 18:9)
7. சொப்பனங்கள் (ஆதி 20:6; மத் 1:20; மத் 2:12-22; அப் 2:17; தானி 2:19,28,45)
8. மனுஷருடைய ஆவியை உணர்த்துவது மூலமாக (அப் 17:16; அப் 18:5; அப் 19:21; 2கொரி 2:13; எபே 4:30; 1தெச 5:19; ரோமர் 8:16)

பிரித்துவிடு (Separate) - ἀφορίζω - aphorizoo - 873

வினைச்சொல் - பிரி, தள்ளிவிடு, பிரித்துவிடு, பிரித்துக்கொள், பிரித்தெடு, பிரிந்துபோ (to mark off from others by boundaries) (மத் 13:49; மத் 25:32; லூக்கா 6:22, அப் 19:9; கலா 2:12), (to set apart for a specific purpose or work) (அப் 13:2; ரோமர் 1:1; கலா 1:15), (to live separated from sin) (2கொரி 6:17)

2. பரிசுத்த ஆவியானவரும் சபையாரும் பவுலையும் பர்னபாவையும் யூதர்களுக்கு மிஷனெரிகளாக அனுப்புகிறார்கள் - (மத் 4:17; 10:6, 15:24, ரோமர் 1:16)

அப் 13:3 அப்பொழுது உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை அனுப்பினார்கள்.

13 அதிகாரம்

அப் 13:4 அப்படியே அவர்கள் பரிசுத்தஆவியினால் அனுப்பப்பட்டுச் செலூக்கியாபட்டணத்துக்கு வந்து, கப்பல் ஏறி, அங்கிருந்து சீப்புருதீவுக்குப் போனார்கள்

அப் 13:5 சாலமி பட்டணத்தில் வந்தபோது அவர்கள் யூதருடைய ஜெபஆலயங்களில் தேவவசனத்தைப் பிரசங்கித்தார்கள் யோவானும் அவர்களுக்கு உதவிக் காரனாயிருந்தான்

"அவர்கள் உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்து அவர்களை அனுப்பினார்கள்" - ஆதித்திருச்சபையிலிருந்த சகோதரர்கள் நான்கு காரியங்களைச் செய்தார்கள் (அப் 13:3) அவையாவன

1 உபவாசம் பண்ணினார்கள்

2 ஜெபம் பண்ணினார்கள்

3 அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள்

4 அவர்களை அனுப்பினார்கள்

"அவர்கள் பரிசுத்தஆவியினால் அனுப்பப்பட்டார்கள்" பானபாவையும் சவுலையும் பரிசுத்த ஆவியானவர் அழைத்தார் இப்பொழுது அனுப்புகிறார்

"அவர்கள் செலூக்கியாபட்டணத்துக்கு வந்து, கப்பல் ஏறி அங்கிருந்து சீப்புருதீவுக்குப் போனார்கள்" பவுலின் முதலாவது மிஷினெரி பிரயாணம்

1 அந்தியோகியா (Antioch) - சீரியா (Syria) இங்கிருந்து புறப்படுகிறார்கள் அப் 13:1-3

2 செலூக்கியா (Seleucia) - சீரியாவின் (Syria) துறைமுகபட்டிணம். (அப் 13:4)

3 சாலமி (Salamis) - சீப்புருவில (Cyprus) உள்ள தீவு (அப் 13:5)

4 பாப்போ பட்டணம் (Paphos) - சீப்புருவில் (Cyprus) உள்ள தீவு (அப் 13:6-12)

5 பெர்கே (Perga), பம்பிலியா (Pamphylia), சின்ன ஆசியா (Asia Minor) (அப் 13:13)

6 அந்தியோகியா (Antioch) - பிசீதியா (Pisidia) (அப் 13:14-50)

7 இக்கோனியா பட்டணம் (Iconium) - லிக்கவோனியா (Lycaonia) நாட்டின் தலைநகரம் (அப 13:51-14:5)

8 லீஸ்திரா (Lystra) - லிக்கவோனியா (Lycaonia) (அப் 14:6-19)

9 தெர்பை (Derbe) - லிக்கவோனியா (Lycaonia) (அப் 14:20)

10 லீஸ்திராவிருக்குத் (Lystra) திரும்பி வருகிறார்கள் - லிக்கவோனியா (Lycaonia) (அப 14:21)

11 இக்கோனியாவிருக்குத் (Iconium) திரும்பி வருகிறார்கள் - பிசீதியா (Pisidia) (அப் 14:21)

12 அந்தியோகியாவிருக்குத் (Antioch) திரும்பி வருகிறார்கள் - பிசீதியா (Pisidia) (அப் 14:21-23)

13 பெர்கே (Perga) - பம்பிலியா (Pamphylia) (அப 14:24-25)

14 அத்தலியா (Attalia) - பம்பிலியா (Pamphylia) (அப் 14:25)

15 புறப்பட்ட இடத்திற்கே திரும்பி வருகிறார்கள் - அந்தியோகியா சீரியா (அப் 14:26-28)

"அவர்கள் யூதருடைய ஜெபஆலயங்களில் தேவவசனத்தைப் பிரசங்கித்தார்கள்" முதலாவது மிஷினெரி பிரயாணத்தின்போது பவுலும், பானபாவும் செய்த ஊழியங்கள்

1 தேவவசனத்தைப் பிரசங்கித்தார்கள் (அப 13:5,7,44)

13 அதிகாரம்

2 மாயவித்தைக்காரனுடைய கண் குருடாயிற்று (அப் 13:8-12)

3 சீப்புரு தீவின் அதிபதி இரட்சிக்கப்படுகிறான் (அப் 13:12)

4 புறஜாதியாரிடம் புறப்பட்டுப் போகிறார்கள் (அப் 13:46)

5 ஏராளமானோர் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள் (அப் 13:12-49, அப் 14:1)

6 சீஷர்கள் சந்தோஷத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் நிரப்பப்பட்டார்கள் (அப் 13:52)

7 பல அற்புதங்கள் (அப் 13:11, அப் 14:3-20

8 தங்களை ஆராதிப்பதை அப்போஸ்தலர்கள் அங்கீகரிக்கவில்லை (அப் 14:11-18)

9 மரித்துப்போன நிலைமையிலிருந்து பவுல் உயிரோடு வருகிறான் (அப் 14:19-20

10 சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணினார்கள் (அப் 14:7,21)

11 பலருக்கு உபதேசம் பண்ணினார்கள் (அப் 14:21-22)

12 கர்த்தருடைய வசனம் அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று (அப் 13:49

13 சபைகளை ஸ்தாபித்து, அதற்கு மூப்பர்களை நியமித்தார்கள் (அப் 14:23)

14 மிஷினெரி பிரயாணத்தின்போது நடைபெற்ற காரியங்களை சீஷரிடம் அறிக்கை சமர்ப்பித்தார்கள் (அப் 14:27

அப்போஸ்தலருடைய உபதேசங்கள்

1 தேவனுடைய வார்த்தையும், சுவிசேஷமும் ஒன்றே (அப் 13:5-8 அப் 14:7)

2 சாத்தானுடைய பிள்ளைகளும், தேவனுடைய சத்துருக்களும் இரட்சிக்கப் படாதவர்கள் (அப் 13:10 1யோவான் 3:10)

3 கிறிஸ்தவ மார்க்கம் அற்புதங்களை விசுவாசிக்கும் மார்க்கமாகும். (அப் 13:11; அப் 14:3-10; அப் 15:12 அப் 19:11; மாற்கு 16:15-20 யோவான் 14:12; எபி 2:3-4

4 கிறிஸ்தவ மார்க்கம் கலகக்காரர்களை நியாயந்தீர்க்கிறது (அப் 13:11; அப் 5:1-11; 1கொரி 4:19-20; 1கொரி 5:5

5 ஜனங்கள் தேவனிடம் பயபக்தியாயிருக்க வேண்டும் (அப் 13:16; லூக்கா 12:5

6 இஸ்ரவேல தேசம் தேவனால தெரிந்தெடுக்கப்பட்ட ஜனம் (அப் 13:17)

7 இஸ்ரவேலின வரலாறு மெய்யானது (அப் 13:17-22)

8 இயேசு கிறிஸ்து தாவீதின் வித்து (அப் 13:22-23)

9 இயேசு கிறிஸ்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா (அப் 13:23 4 மத் 1:18-25; மத் 8:17, லூக்கா 2

10 மேசியா அறிவிக்கப்பட்டார் (அப் 13:24-25)

11 விசுவாசிக்கிறவர்களுக்கு மட்டுமே இரட்சிப்பு உண்டு (அப் 13:26,38 39 யோவான் 3:15-20; ரோமர் 10:9-17

12 இரட்சிப்பின சுவிசேஷத்தின் நான்கு முக்கிய அம்சங்கள

(1) கிறிஸ்துவின மரணம் (அப் 13:28 29

(2) கிறிஸ்து அடக்கம் பண்ணப்பட்டார் (அப் 13:29

அப்போஸ்தலர் – தொகுப்புரை

13 அதிகாரம்

3 கிறிஸ்து தமது சரீரத்தில உயிர்த்தெழுந்தார் (அப் 13:30 லூக்கா 24:29 யோவான் 21:14)

(4 கிறிஸ்து தமது சரீரத்தில தம்மை வெளிப்படுத்தினார் அப் 13:31; யோவான் 21:14, 1கொரி 15:3-8)

13 இயேசு கிறிஸ்து தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றினார் அப் 13:32-41 லூக்கா 24:44 யோவான் 5:39 மத் 5:17)

14 இயேசு கிறிஸ்து தமது சரீரத்தில உயிர்த்தெழுந்தார் என்பதை நம்பும் விசுவாசம நமது ஆத்தும இரட்சிப்பிற்கு அவசியமானது. அப் 13:32-39 1கொரி 15:12-23)

15 இயேசு கிறிஸ்து தேவனுடைய ஒரேபேறான குமாரன (அப் 13:33-37 லூக்கா 1:35; எபி 1:5-7; மத் 1:18-25)

16 கிறிஸ்துவின சரீரம் அழிவைக் காணவில்லை அவருடைய சரீரம் அழியாமல உயிர்த்தெழுந்தது. அப் 13:34 37 லூக்கா 24:39)

17 கிறிஸ்துவில மட்டுமே மன்னிப்பு உண்டு அப் 13:38 மத் 26:28 எபே 1:7 கொலோ 1:20)

18 கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தினால் நாம் நீதிமானாக்கப் படுகிறோம் (அப் 13:39 ரோமர் 3:21 31 ரோமர் 5:1)

19 மோசேயின் பிரமாணம் யாரையும் நீதிமானாக்காது. (அப் 13:39 ரோமர் 3:21 31 கலா 3:19 29 கலா 4:21 31 கொலோ 2:14 17 எபி 7:10

20 இஸ்ரவேலின் கலகக்குணம் ஏற்கெனவே முன்னறிவிக்கப்பட்டது. (அப் 13:40-41; மத் 21:33-46; ரோமர் 9:33

21 இரட்சிக்கப்படுவதற்கு தேவனுடைய கிருபையையும், அவரிடத்தில் விசுவாசத்தையும் தொடர்ந்து பற்றிக் கொள்ள வேண்டும். அப் 13:43 அப 14:22 கலா 1:6 கலா 5:4 எபி 3:6,12-14 எபி 6:4-9 எபி 10:26-29)

22 நித்திய ஜீவன் நியந்தனைக்குட்பட்டது (அப 13:46-48 மாற்கு 10:23-30 யோவான் 6:27)

23 சுவிசேஷம் யூதருக்கும் புறஜாதியாருக்கும் பொதுவானது (அப 13:46-47 ரோமர் 1:16 1கொரி 12:13

24 கிறிஸ்தவர்கள் சந்தோஷத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் நிறைந்திருக்க வேண்டும் (அப 13:52 யோவான 7:39

25 விசுவாசத்தினால சரீர சுகமாதல உண்டாகும் (அப 14:3,8-10 1பேதுரு 2:24 யாக் 5:14-16 யோவான் 10:10

26 மனந்திரும்புதல அவசியமானது (அப 14:15 மத் 18:3 யோவான 3:3-8 அப 3:19

27 தேவனே சர்வத்தையும் சிருஷ்டித்தவர் (அப 14:15)

28 லௌதீக ஆசீர்வாதங்கள் தேவனுடைய அன்பை உறுதிபண்ணுகிறது. (அப 14:17 மத்7 7 11, 3யோவான 1:2

29 கிறிஸ்தவர்களுக்கு உபத்திரவம் உண்டு (அப 14:22 ரோமர் 5:3 5, 2தீமோ 3:12)

30 இரட்சிக்கப்படுவதற்கு தேவனுடைய இராஜ்யத்தில பிரவேசிக்க வேண்டும். (அப 14:22, யோவான 3:1 5

"யூதருடைய ஜெபாலயங்கள்" சமயம் கிடைக்கும்போதெல்லாம் அப்போஸ்தலர்கள் யூதருடைய ஜெபாலயங்களுக்குச் சென்று அங்கு இயேசு கிறிஸ்துவின சுவிசேஷச் செய்தியை பிரசங்கித்தார்கள் (அப 13:5,14,16,42; அப் 14:1, அப 17:1,10,17, அப் 18:4,19; அப் 19:8)

13 அதிகாரம்

"யோவான்" - மாற்கு என்னும் மறுபெயர் கொண்ட யோவான் (John Mark) (அப் 12:25)

3. பாப்போ பட்டணத்தில் பர்யேசு என்னும் பெயர்கொண்ட மாய வித்தைக்காரன் குருடனாகிறான்

அப் 13:6 அவர்கள் பாப்போ பட்டணம் வரைக்கும் தீவை கடந்து வந்தபோது பர்யேசு என்னும் பேர்கொண்ட மாயவித்தைக்காரனும் கள்ளத் தீர்க்கதரிசியுமான ஒரு யூதனை கண்டார்கள்

அப் 13:7 அவன் விவேகமுள்ள மனுஷனாகிய செர்கியுபவுல் என்னும் அதிபதியுடனே கூட இருந்தான் அந்த அதிபதி பர்னபாவையும் சவுலையும் அழைப்பித்து, அவர்களிடத்தில் தேவ வசனத்தைக் கேட்க ஆசையாயிருந்தான்

அப் 13:8 மாயவித்தைக்காரன் என்று அர்த்தங்கொள்ளும் பேரையுடைய அந்த எலிமா என்பவன் அதிபதியை விசுவாசத்தினின்று திருப்பும்படி வகைதேடி அவர்களோடு எதிர்த்துநின்றான்

அப் 13:9 அப்பொழுது பவுல் என்று சொல்லப்பட்ட சவுல் பரிசுத்தஆவியினால் நிறைந்தவனாய் அவனை உற்றுப்பார்த்து.

அப் 13:10 எல்லாக் கபடமும் எல்லாப் பொல்லாங்கும் நிறைந்தவனே பிசாசின் மகனே, நீதிக்கெல்லாம் பகைஞனே, கர்த்தருடைய செம்மையான வழிகளைப் புரட்டுவதில் ஓயமாட்டாயோ?

அப் 13:11 இதோ இப்பொழுதே. கர்த்தருடைய கை உன்மேல் வந்திருக்கிறது, சிலகாலம் சூரியனைக் காணாமல் நீ குருடனாயிருப்பாய் என்றான் உடனே மந்தாரமும் இருளும் அவன்மேல் விழுந்தது அவன் தடுமாறி கைலாகு கொடுக்கிறவர்களைத் தேடினான்

அப் 13:12 அப்பொழுது அதிபதி சம்பவித்ததைக் கண்டு, கர்த்தருடைய உபதேசத்தைக்குறித்து அதிசயப்பட்டு, விசுவாசித்தான்

"பாப்போ பட்டணம்" (Paphos) - சீப்புரு தீவின் தலைநகரம் இங்கு வீனஸ் தெய்வத்திற்கு ஒரு கோவில் உள்ளது இந்த தெய்வத்தை பாப்போ தீவின் இராணியாகக் கருதி இத்தீவார் வழிபட்டார்கள்

"மாயவித்தைக்காரன்" (sorcerer) - வித்தைகளையும் மாயமந்திரங்களையும் செய்கிறவன் (லூக்கா 12:24)

"கள்ளத்தீர்க்கதரிசி" - (மத் 7:15)

"பர்யேசு" (Barjesus) - இயேசு அல்லது யோசுவா என்னும் பெயருடையவரின் குமாரன் தனக்குத் தெய்வீக அழைப்பு இருப்பதாக இவன் கூறி வந்தான் ஜனங்களுக்கு ஜோசியம் பார்க்கிறவன்

அதிபதி (deputy) - ἀνθύπατος - anthypatos - 446

ஆங்கில பெயர்ச்சொல் - அதிபதி, தேசாதிபதி (proconsul) (அப் 13:7-12; அப் 19:38)

"எலிமா" (Elymas) - இந்தப் பெயருக்கு அறிந்தவன் அல்லது ஞானி என்று பொருள்

"பவுல்" - பவுல் என்னும் பெயருக்கு சிறியது அல்லது குட்டை குள்ளன் (little or dwarfish) என்று பொருள் இது ரோமாபுரியார் பயன்படுத்தும் பெயர் (2கொரி 10:10) சவுல் என்னும் பெயருக்குக் கேட்கப்பட்டது "asked for" என்று பொருள்

13 அதிகாரம்

"எல்லாக் கபடமும் எல்லாப் பொல்லாங்கும் நிறைந்தவனே" - மாயவித்தைக்காரனிடம் ஒரு வல்லமையும் இல்லை ஆனால் தன்னிடம் எல்லா வல்லமையும் இருப்பதாக ஜனங்களை ஏமாற்றுகிறான்

தீர்க்கதரிசன எண் - 8

"இதோ இப்பொழுதே, கர்த்தருடைய கை உன்மேல் வந்திருக்கிறது, சிலகாலம் சூரியனைக் காணாமல் நீ குருடனாயிருப்பாய்" (அப் 13:11) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"அதிபதி சம்பவித்ததைக் கண்டு, கர்த்தருடைய உபதேசத்தைக்குறித்து அதிசயப்பட்டு விசுவாசித்தான்" - கர்த்தருடைய உபதேசம் உண்மை என்பதற்கு இதுவும் ஒரு சான்று. தேவனுடைய வல்லமை அவருடைய ஊழியக்காரர்கள் மூலமாக அறிவிக்கப்படும் தேவவசனங்களை உறுதிப்பண்ணிற்று.

அதிசயப்படு (astonished) - ἐκπλήσσω - ekpleessoo - 1605

வினைச்சொல் - ஆச்சரியப்படு, அதிசயப்படு (struck with astonishment) (மத் 7:28; மத் 22:33, லூக்கா 4:32)

4. பாப்போ பட்டணத்தை விட்டு பம்பிலியாவிலிருக்கும் பெர்கே பட்டணத்திற்கு வருகிறார்கள் - யோவான் அவர்களை விட்டு பிரிந்து எருசலேமிற்கு திரும்பி போகிறான் - (12:12,25; 13:5; 15:37; 2தீமோ 4:11)

அப் 13:13 பின்பு பவுலும் அவனைச் சேர்ந்தவர்களும் பாப்போ பட்டணத்தை விட்டுக் கப்பல் ஏறிப் பம்பிலியாவிலிருக்கும் பெர்கே பட்டணத்துக்கு வந்தார்கள் யோவான் அவர்களை விட்டுப் பிரிந்து எருசலேமுக்குத் திரும்பிப்போனான்

"பின்பு பவுலும் அவனைச் சேர்ந்தவர்களும்" - இதற்கு முந்திய வசனத்தில் லூக்கா பர்னபாவின் பெயரை முதலாவதாகவும் பவுலின் பெயரை இரண்டாவதாகவும் கூறினார் (அப் 11:30 அப் 12:25) இந்த வசனத்திலிருந்து பவுலின் பெயரையே முதலாவதாகக் குறிப்பிடுகிறார்

"யோவான் அவர்களை விட்டுப் பிரிந்து எருசலேமுக்குத் திரும்பிப்போனான்" - ஏதோ ஒரு காரியத்திற்காக யோவான் தன் வீட்டிற்குத் திரும்பிப் போய்விட்டான் இதனால் தன்னுடைய இரண்டாவது மிஷனெரி பிரயாணத்தின்போது பவுல் யோவானைத் தன்னோடு அழைத்துச் செல்ல மறுத்து விடுகிறான் (அப் 15:36-41) ஆனாலும் பின்பு அவனைத் தன்னோடு வருமாறு அழைக்கிறான் (2தீமோ 4:11)

5. பெர்கே பட்டணத்தை விட்டு புறப்பட்டு பிசீதியா நாட்டிலுள்ள அந்தியோகியாவிற்கு வருகிறார்கள்

அப் 13:14 அவர்கள் பெர்கே பட்டணத்தை விட்டுப் புறப்பட்டு, பிசீதியா நாட்டிலுள்ள அந்தியோகியாவுக்கு வந்து, ஓய்வுநாளிலே ஜெபஆலயத்தில் பிரவேசித்து, உட்கார்ந்தார்கள்

13 அதிகாரம்

அப் 13:15 நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசன ஆகமமும் வாசித்துமுடிந்தபின்பு: சகோதரரே, நீங்கள் ஜனங்களுக்குப் புத்தி சொல்ல விரும்பினால் சொல்லுங்கள் என்று சொல்லும்படி ஜெபஆலயத்தலைவர்கள் அவர்களிடத்தில் ஆள் அனுப்பினார்கள்.

"பெர்கே" (Perga) - பம்பிலியாவின் (Pamphylia) தலைநகரம். அந்தியோகியா (Antioch) பிசீதியாவின் (Pisidia) தலைநகரம் இது ஒரு ரோமாபுரியாரின் குடியிருப்பு பகுதி.

"நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசன ஆகமமும் வாசித்துமுடிந்தபின்பு" ஒவ்வொரு ஓய்வுநாளிலும் நியாயப்பிரமாணத்தையும், தீர்க்கதரிசனத்தையும் ஜெபாலயங்களில் வாசிப்பது வழக்கம். நியாயப்பிரமாணத்தை ஒரு வருஷத்தில் வாசித்து முடிப்பதற்கு ஏதுவாக அதைப் பிரித்து வைத்திருந்திருந்தார்கள் (லூக்கா 4:16)

புத்திசொல்லுதல் (exhortation) - **παράκλησις** - **parakleesis** - 3874

பெண்பால் பெயர்ச்சொல் - ஆறுதல், புத்திசொல்லுதல் "intreaty" (2கொரி 8:4); "comfort" (அப் 9:31; ரோமர் 15:4; 2கொரி 1:3-4; 2கொரி 7:4,13) "exhortation" (அப் 13:15; ரோமர் 12:8; 1கொரி 14:3; 2கொரி 8:17; 1தெச 2:3; 1தீமோ 4:13; எபி 12:5; எபி 13:22) "consolation" (லூக்கா 2:25; லூக்கா 6:24; அப் 4:36; அப் 15:31; ரோமர் 15:5; 2கொரி 1:5-7; 2கொரி 7:7; பிலி 2:1; 2தெச 2:16; பிலே 1:7; எபி 6:18)

6. அந்தியோகியாவில் பவுலின் பிரசங்கம் - பிரசங்க செய்தி - விசுவாசத்தினால் இரட்சிப்பு - (அப் 10:34)

(1) எகிப்திலிருந்து புறப்பட்டு கானான் தேசத்தை சுதந்தரமாக பெறுகிறார்கள் - யாத் ([illegible] யோசு 6-22)

அப் 13:16 அப்பொழுது பவுல் எழுந்திருந்து கையமர்த்தி: இஸ்ரவேலரே, தேவனுக்குப் பயந்து நடக்கிற சகல ஜனங்களே, கேளுங்கள்.

அப் 13:17 இஸ்ரவேலராகிய இந்த ஜனத்தினுடைய தேவன் நம்முடைய பிதாக்களைத் தெரிந்துகொண்டு, எகிப்து தேசத்தில் அவர்கள் பரதேசிகளாய்ச் சஞ்சரித்தபோது ஜனங்களை உயர்த்தி, தமது புயபலத்தினாலே அதிலிருந்து அவர்களைப் புறப்படப்பண்ணி,

13 அதிகாரம்

அப் 13:18 நாற்பது வருஷகாலமாய் வனாந்தரத்தில் அவர்களை ஆதரித்து,

அப் 13:19 கானான் தேசத்தில் ஏழு ஜாதிகளை அழித்து அவர்களுடைய தேசத்தை இவர்களுக்குச் சுதந்தரமாகப் பங்கிட்டுக் கொடுத்து

"நாற்பது வருஷகாலமாய் வனாந்தரத்தில் அவர்களை ஆதரித்தார்" - (எண் 14:33-34; எண் 32:13; உபா 2:7; உபா 8:2-4)

"கானான் தேசத்தில் ஏழு ஜாதிகளை அழித்தார்" - கானானியர் (Canaanites) ஏத்தியர் (Hittites), கிர்காசியர் (Girgasites), எமோரியர் (Amorites) ஏவியர் அல்லது ஏபியர் (Hivites) பெரிசியர் (Perizzites), எபூசியர் (Jebusites)

"அவர்களுடைய தேசத்தை இவர்களுக்குச் சுதந்தரமாகப் பங்கிட்டுக் கொடுத்தார்" யோசுவா 13 ஆவது அதிகாரம் முதல் 22 ஆவது அதிகாரம் வரையிலும் இந்த நிகழ்ச்சி விளக்கப்பட்டிருக்கிறது.

(2) நியாயாதிபதிகளின் காலமும் சவுலின் ஆட்சியும்

(நியா 2:16-1சாமு 31:13)

அப் 13:20 பின்பு ஏறக்குறைய நானூற்றைம்பது வருஷகாலமாய் சாமுவேல் தீர்க்கதரிசிவரைக்கும் அவர்களுக்கு நியாயாதிபதிகளை ஏற்படுத்திவந்தார்.

அப் 13:21 அதுமுதல் தங்களுக்கு ஒரு ராஜா வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்; அப்படியே தேவன் பென்யமீன் கோத்திரத்தானாகிய கீசுடைய குமாரனான சவுலை நாற்பது வருஷகாலமாய் அவர்களுக்குக் கொடுத்தார்.

"அவர்களுக்கு நியாயாதிபதிகளை ஏற்படுத்தி வந்தார்" - நியா 3:7-16:31, 1சாமு 4:1-8:5

"பின்பு ஏறக்குறைய நானூற்றைம்பது வருஷகாலமாய் சாமுவேல் தீர்க்கதரிசி வரைக்கும்" - சாமுவேலின் ஊழியம் ஆரம்பித்ததிலிருந்து 450 வருஷங்கள் (நியா 3:7-1சாமு 8:5)

"ராஜா - தேவன் சவுலை அவர்களுக்கு ராஜாவாகக் கொடுத்தார்" - (1சாமு 8-2; 1நாளா 10; ஓசி 13:11)

(3) தாவீதின் வித்தாகிய இயேசு - (மத் 1:1-17; லூக் 3:23-38)

அப் 13:22 பின்பு அவர் அவனைத் தள்ளி, தாவீதை அவர்களுக்கு ராஜாவாக ஏற்படுத்தி, ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன்; எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் அவன் செய்வான் என்று அவனைக்குறித்துச் சாட்சியுங் கொடுத்தார்.

அப் 13:23 அவனுடைய சந்ததியிலே தேவன் தமது வாக்குத்தத்தத்தின்படியே இஸ்ரவேலுக்கு இரட்சகராக இயேசுவை எழும்பப்பண்ணினார்.

"ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன்" - சங் 89:20 ஆவது வசனம் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன்" தேவனுடைய சித்தத்தின் பிரகாரம் இஸ்ரவேல் ராஜ்யத்தை ஆளுகை செய்வதற்குத் தாவீது தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டார் (1சாமு 13:14) நியாயப் பிரமாணத்தின் பிரகாரம் தாவீது தேசத்தை ஆளுகை செய்து வழிநடத்தினார். இஸ்ரவேலில் தாவீது விக்கிரகாராதனையை அனுமதிக்கவில்லை. எல்லாக் காரியங்களிலும் தேவனுடைய வழிநடத்துதலை நாடினார். தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற பிரகாரமாக தாவீது தன்னுடைய பொதுவாழ்வில் நடந்து கொண்டார். தனது சொந்த தனிப்பட்ட வாழ்வில் தாவீது சில தவறுகள் செய்ததை வேதவாக்கியத்தின் வாயிலாக வாசிக்கிறோம். சவுல் தாவீதிற்கு நேர் எதிராக இருந்தவன் (1சாமு 15; 1சாமு 28; 1நாளா 10:13-14)

"அவனுடைய சந்ததி" - (மத் 1:1-17; லூக்கா 3:23-38; ஏசா 11:1)

13 அதிகாரம்

"வாக்குத்தத்தம்" - (2சாமு 7:12-16; சங் 132:11; ஏசா 9:6)

(4) யோவான் ஸ்நானன் - (மத் 3)

அப் 13:24 இவர் வெளிப்படுவதற்கு முன்னே மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக்குறித்து யோவான் இஸ்ரவேலர் யாவருக்கும் பிரசங்கித்தான்.

அப் 13:25 யோவான் தன் பணிவிடை ஓட்டத்தை நிறைவேற்றுகிறபோது: நீங்கள் என்னை யார் என்று நினைக்கிறீர்கள், நான் அவர் அல்ல; இதோ, எனக்குப்பின் ஒருவர் வருகிறார், அவருடைய பாதரட்சையை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல என்றான்.

"மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானம்" - (மத் 3:1-11; லூக்கா 3:1-21; யோவான் 1:31-34)

"இதோ எனக்குப்பின் ஒருவர் வருகிறார் அவருடைய பாதரட்சையை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல" புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனம் அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் நிறைவேற்றிற்று. (அப் 13:25; மத் 3:11; லூக்கா 3:16)

(5) இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைகிறார்கள் - (ஏசா 53; சங் 22)

அப் 13:26 சகோதரரே, ஆபிரகாமின் சந்ததியில் பிறந்தவர்களே, தேவனுக்குப் பயந்து நடக்கிறவர்களே, இந்த இரட்சிப்பின் வசனம் உங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

அப் 13:27 எருசலேமில் குடியிருக்கிறவர்களும் அவர்கள் அதிகாரிகளும் அவரை அறியாமலும், ஓய்வுநாள்தோறும் வாசிக்கப்படுகிற தீர்க்கதரிசிகளின் வாக்கியங்களை அறியாமலும் அவரை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்ததினால் அந்த வாக்கியங்களை நிறைவேற்றினார்கள்.

அப் 13:28 மரணத்திற்கு ஏதுவானதொன்றும் அவரிடத்தில் காணாதிருந்தும், அவரைக் கொலைசெய்யும்படிக்குப் பிலாத்துவை வேண்டிக்கொண்டார்கள்.

அப் 13:29 அவரைக்குறித்து எழுதியிருக்கிறவைகள் யாவையும் அவர்கள் நிறைவேற்றினபின்பு, அவரை மரத்திலிருந்து இறக்கி, கல்லறையிலே வைத்தார்கள்.

"அவரை அறியாமலும் ஓய்வுநாள்தோறும் வாசிக்கப்படுகிற தீர்க்கதரிசிகளின் வாக்கியங்களை அறியாமலும்" - ஆசாரியர்கள் அறியாமையில் இருக்கிறார்கள் அவர்களுக்கு தேவனைக் குறித்த அறிவும் இல்லை தேவனுடைய வார்த்தையைக் குறித்த ஞானமும் இல்லை அவர்கள் தீர்க்கதரிசிகளையும் அறியவில்லை மேசியாவையும் அறியவில்லை ஆனாலும் ஒவ்வொரு ஓய்வுநாளிலும் அவர்கள் தீர்க்கதரிசிகளின் வாக்கியங்களை ஆலயங்களில் வாசிக்கிறார்கள்

(6) இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுகிறார் (1 கொரி 15:1-23; மத் 28; மாற்கு 16; லூக் 24; யோவான் 20-21)

அப் 13:30 தேவனோ அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார்.

அப் 13:31 தம்முடனேகூடக் கலிலேயாவிலிருந்து எருசலேமுக்குப் போனவர்களுக்கு அவர் அநேகநாள் தரிசனமானார்; அவர்களே ஜனங்களுக்கு முன்பாக அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறார்கள்.

13 அதிகாரம்

அப 13.32 நீர் என்னுடைய குமாரன் இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்று இரண்டாம் சங்கீதத்தில் எழுதியிருக்கிறபடியே.

"தேவனோ அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார்" – (அப 13:16-41)

"அவர் அநேகநாள் தரிசனமானார்" - நாற்பது நாட்கள் (அப 1.3)

"அவர்களே ஜனங்களுக்கு முன்பாக அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறார்கள்" - (அப 1:8,22; அப 2.32; அப 3.15, அப 4.32; அப் 5.32)

அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 14

"நீர் என்னுடைய குமாரன் இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன்" (அப 13.33. சங் 2 7)

திரித்துவத்தின் இரண்டாம் நபராகிய இயேசு கிறிஸ்து மனுகுலத்தை மீட்பதற்காக மானிட சரீரம் எடுத்து அவதரித்ததை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது (பிலி 2:5 11 ஏசா 7:14 ஏசா 9:6) மரியாள் மூலமாக தேவனுடைய ஒரேபேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்து இந்தப் பூமியிலே அவதரித்தார் (மத் 1:18 25 லூக்கா 1 35 யோவான் 1:14) இந்த காரியம் ஒரு குறிப்பிட்ட நாளில் நடைபெற்றது. "இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன்" (எபி 1:5 7) ஆகையினால் இதற்கு முந்திய காலத்தில் தேவனுக்கு ஒரு குமாரன் இருந்ததாக நம்மால் கூறமுடியாது. இயேசு கிறிஸ்துவின் குமாரத்துவம் அவருடைய தெய்வீகத்தைக் குறிப்பிடாமல் அவருடைய மனுஷத்துவத்தையே குறிப்பிடுகிறது

தேவனுக்குத் துவக்கமும் இல்லை, முடிவும் இல்லை அவர் அநாதிக்காலமாக இருக்கிறவர் ஆகையினால் இயேசு கிறிஸ்துவிற்கும் ஆரம்பம் இருக்க முடியாது அவரைப் பெற்றெடுக்க முடியாது. அவர் குமாரனாகவும் இருக்க முடியாது அவர் எப்போதுமே தேவனாகவே இருக்கிறவர் (சங் 90 2 மீகா 5.2; யோவான் 1:1-2 எபி 1.8) ஆனாலும் இயேசு கிறிஸ்து மனுஷராகவும் தேவனுடைய குமாரனாகவும் இருப்பதினால் அவர் நித்தியமானவர் அல்ல மனுஷனாகிய இயேசு கிறிஸ்துவிற்கு ஒரு ஆரம்பம் உண்டு அவர் தேவனுடைய ஒரேபேறான குமாரன் மரியாள் இயேசு கிறிஸ்துவைப் பெற்றெடுத்தாள் ஆகையினால் இயேசு கிறிஸ்துவின் குமாரத்துவம் நித்தியமானது என்று கூறமுடியாது நித்தியம் என்பதற்கு ஆரம்பமோ அல்லது முடிவோ இருக்கக்கூடாது இயேசு கிறிஸ்து மனுஷனாக அவதரித்தபோது அவருக்கு ஒரு ஆரம்பமும் அவருக்கு ஒரு முடிவும் இருந்தது அதேவேளையில் இயேசு கிறிஸ்துவின் தெய்வத்துவமானது நித்தியமானது அவருக்கு ஒரு ஆரம்பமோ அல்லது ஒரு முடிவோ இல்லை அவர் நித்தியமானவர் இந்த வசனத்தில் "இன்று நான் உன்னை ஜெநிப்பித்தேன்" என்பது இயேசு கிறிஸ்துவின் மனுஷத்துவத்தின் ஆரம்பத்தைக் குறிக்கும்.

குமாரன் என்று கூறும்போதே அதற்குக் காலம் சந்ததிகள் பிதா தாயார் ஆரம்பம் எல்லாமே வந்துவிடுகிறது ஆதாமும் (லூக்கா 3.38) தூதர்களும் (யோபு 1:6 யோபு 2:1 யோபு 38:7 ஆதி 6:1 4) தேவனால் நேரடியாக சிருஷ்டிக்கப்பட்டவர்கள் ஆகையினால் இவர்களுக்கு பிறப்பு இல்லை காலம் சிருஷ்டிக்கப்படுதல் ஆரம்பம் ஆகியவை தேவத்துவத்திற்கும் நித்தியத்துவத்திற்கும் நேர் எதிரானவை. தேவனிடம் இந்தக் குணங்கள் எதுவும் இல்லை. இயேசு கிறிஸ்துவின் குமாரத்துவம் என்பது அவருடைய தெய்வத்துவத்தைக் குறிப்பிடாமல் மனுஷத்துவத்தையே குறிக்கிறது. ஆகையினால் அவருக்கு ஒரு ஆரம்பம் இருக்கிறது. (சங் 2 7 அப 13.33 எபி 1:5 எபி 5:5) "இன்று நான் உன்னை ஜெநிப்பித்தேன்" என்னும் வாக்கியத்தில் "இன்று" என்னும் வார்த்தை நித்தியத்தைக் குறிப்பிடாது

13 அதிகாரம்

எபி 1:5-7 லூக்கா 1:35 மத் 1:18-25) இன்று என்பது 2,000 வருஷங்களுக்கு முன்பாக ஒரு நாளில் நடைபெற்ற வரலாற்று நிகழ்ச்சியாகும் தேவனுக்கு ஒரு குமாரன் பிறப்பார் என்னும் சத்தியம் ஏற்கெனவே முன்னறிவிக்கப் பட்டிருந்தது. (ஏசா 7:14 ஏசா 9:6 எபி 1:5 மத் 1:18-25 லூக்கா 1:32-35) கன்னிமரியாள் பரிசுத்த ஆவியானவரால் கர்ப்பம் தரித்தபோது இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (மத் 20 இயேசு கிறிஸ்துவே தேவனுடைய ஒரேபேறான குமாரனாக இருக்கிறவர் யோவான் 1:14,18 யோவான் 3:16-18 யோவான் 4:9

(7) இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் - தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றம் - சங் 2:7 16:10

அப 13:33 இயேசுவை எழுப்பினதினாலே தேவன் நம்முடைய பிதாக்களுக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தத்தை அவர்களுடைய பிள்ளைகளாகிய நமக்கு நிறைவேற்றினார் என்று நாங்களும் உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கிறோம்.

அப 13:34 இனி அவர் அழிவுக்குட்படாதபடிக்கு அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்பதைக்குறித்து: தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்குக் கட்டளையிடுவேன் என்று திருவுளம் பற்றினார்.

அப 13:35 அன்றியும், உம்முடைய பரிசுத்தர் அழிவைக் காணவொட்டீர் என்று வேறொரு சங்கீதத்தில் சொல்லியிருக்கிறது.

அப 13:36 தாவீது தன் காலத்திலே தேவனுடைய சித்தத்தின்படி அவருக்கு ஊழியஞ்செய்தபின்பு நித்திரையடைந்து, தன் பிதாக்களிடத்திலே சேர்க்கப்பட்டு, அழிவைக் கண்டான்.

அப 13:37 தேவனால் எழுப்பப்பட்டவரோ அழிவைக் காணவில்லை.

சுவிசேஷம் (glad tidings) εὐαγγελίζω euangelizoo 2097

வினைச்சொல் - சுவிசேஷம் பிரசங்கி. நற்செய்தி அறிவி. பிரசங்கி. சுவிசேஷம்

"தேவன் நம்முடைய பிதாக்களுக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தம்" - (ஆதி 3:15 ஆதி 12:1-3 உபா 18:15 ஏசா 7:14 ஏசா 9:6 ஏசா 11:1 ஏசா 42:1-5 ஏசா 61:1 சங் 16:1

"அவர் அழிவுக்குட்படாதபடிக்கு அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார்" - மரியாளின் வயிற்றில் பிறந்த தேவனுடைய குமாரன் தம்முடைய சரீரத்தில் அழிவைக் காணவில்லை. அழிவைக் காண்பதற்கு முன்பாகவே அவர் தமது சரீரத்தில் உயிர்த்தெழுந்தார் (சங் 16:10 யோவான் 21:14; அப 2:24-27; அப 13:33 லூக்கா 24:39)

அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 15

"தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்குக் கட்டளையிடுவேன்" அப 13:34 ஏசா 55:3 சங் 18:50; சங் 89:3,4, 20-24, 35-37

தாவீதிற்கு அருளின நிச்சயமான கிருபைகள் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மூலமாக உறுதிபண்ணப்படுகிறது. தாவீதிற்கு ஒரு நித்திய ராஜ்யம் உண்டாயிருக்கும் என்று வாக்குப் பண்ணப்பட்டது. (2சாமு 7 சங் 89:3,4,28,36) இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை உறுதி பண்ணிற்று. வாக்குத்தத்தத்திற்குப் புதிய உடன்படிக்கையும் உண்டாயிற்று. (1கொரி 15:9-23)

13 அதிகாரம்

அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 10

"உம்முடைய பரிசுத்தர் அழிவைக் காணவொட்டீர்" (அப 13:35; சங் 16:10)

(8) இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதால் மட்டுமே நீதிமானாக்கப்பட முடியும் - ரோமர் 3:21

அப 13:38 ஆதலால் சகோதரரே இவர் மூலமாய் உங்களுக்குப் பாவமன்னிப்பு உண்டாகும் என்று அறிவிக்கப்படுகிறதென்றும்

அப 13:39 மோசேயின் நியாயப்பிரமாணத்தினாலே நீங்கள் எவைகளினின்று விடுதலையாகி நீதிமான்களாக்கப்படக்கூடாதிருந்ததோ விசுவாசிக்கிறவன் எவனும் அவைகளினின்று இவராலே விடுதலையாகி நீதிமானாக்கப்படுகிறான் என்றும் உங்களுக்குத் தெரிந்திருக்கக் கடவது.

"இவர் மூலமாய் உங்களுக்குப் பாவமன்னிப்பு உண்டாகும்" இயேசு கிறிஸ்து மூலமாக மனுக்குலத்திற்கு பாவமன்னிப்பு உண்டாகும் (மத் 1:21 மத் 26:28, அப 2:38, அப 4:12 அப் 13:38-39 எபே 1:7; கொலோ 1:20 பேதுரு 2:24

"விசுவாசிக்கிறவன் எவனும் அவைகளினின்று இவராலே விடுதலையாகி நீதிமானாக்கப்படுகிறான்" - கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசமும், இயேசு கிறிஸ்துவின் பாவநிவாரணமும் மனுஷனை நீதிமானாக்குகிறது. (யோவான் 3:15-20; ரோமர் 1:16; ரோமர் 3:24-31; ரோமர் 10:9-17, 1கொரி 15:1-8)

"மோசேயின் நியாயப்பிரமாணத்தினாலே நீங்கள் எவைகளினின்று விடுதலையாகி நீதிமான்களாக்கப்படக்கூடாதிருந்ததோ அவைகள்" - மோசேயின் நியாயப்பிரமாணத்தில் வைக்கும் விசுவாசமோ அல்லது அதன் மூலமாக நடத்தப்படும் கிரியைகளோ ஒருவருடைய ஆத்துமாவை இரட்சிக்காது.

(ரோமர் 3:27-31; ரோமர் 4:1-6,14-15 ரோமர் 9:31,30-33; ரோமர் 11:5-6; கலா 2:16 கலா 3:1-14,18-29; எபே 2:8-9; தீத்து 3:5 ஆகையினால் நியாயப்பிரமாணத்தில் மாற்றம் கொண்டுவரவேண்டும் அல்லது அது அகற்றப்படவேண்டும் (2கொரி 3:6-15 கலா 3:19-25; கலா 4:21-31; எபி 7:10-28 எபி 8:1-13)

(9) கிறிஸ்துவை அசட்டை பண்ணுவதற்கு எதிரான எச்சரிப்பு

அப 13:40 அன்றியும் தீர்க்கதரிசிகளின் புஸ்தகத்திலே,

அப 13:41 அசட்டைக்காரரே பாருங்கள், பிரமித்து அழிந்துபோங்கள் உங்கள் நாட்களில் ஒரு கிரியையை நான் நடப்பிப்பேன் ஒருவன் அதை உங்களுக்கு விவரித்துச் சொன்னாலும் நீங்கள் விசுவாசிக்கமாட்டீர்கள் என்று சொல்லியிருக்கிறபடி உங்களுக்கு நேரிடாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்றான்

"அன்றியும் தீர்க்கதரிசிகளின் புஸ்தகத்திலே, சொல்லியிருக்கிறபடி, உங்களுக்கு நேரிடாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" இயேசு கிறிஸ்துவின் மூலமாக நமக்கு இரட்சிப்பு இலவசமாகக் கிடைக்கிறது. அதை நாம் ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்து விட்டால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு நம்மீது நிச்சயம் வரும். நம்முடைய முற்பிதாக்கள்மீது தேவன் பாபிலோனியர் மூலமாக நியாயத்தீர்ப்பை அனுப்பினார் (ஆப 1:5-10) இனிமேல் ரோமாபுரியார் மூலமாக தேவன் நியாயத்தீர்ப்பை அனுப்புவார் என்று பவுல் அவர்களுக்கு எச்சரித்துக் கூறுகிறார் (லூக்கா 21:20-24)

13 அதிகாரம்

அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 17

"அசட்டைக்காரரே, பாருங்கள், பிரமித்து அழிந்துபோங்கள்; உங்கள் நாட்களில் ஒரு கிரியையை நான் நடப்பிப்பேன்; ஒருவன் அதை உங்களுக்கு விவரித்துச் சொன்னாலும் நீங்கள் விசுவாசிக்க மாட்டீர்கள்" அப் 13:41; ஆப 1:5

"பிரமித்து அழிந்துபோங்கள்" - பார்வையிலிருந்து ஒழிந்துபோங்கள்; உங்கள் விரோதிகளுடைய பயங்கரத்திலிருந்து மறைந்து கொள்ளுங்கள் என்பது இந்த வாக்கியத்தின் பொருளாகும். இதற்கான கிரேக்க வார்த்தை "அப்பானிஜோ" (aphanizoo) என்பதாகும். மத் 6:16,19-20; அப் 13:41; யாக் 4:14 ஆகிய வசனங்களில் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த வேதவாக்கியம் கிபி 70 ஆம் ஆண்டு நிறைவேறிற்று.

அழி (perish) - ἀφανίζω - aphanizoo - 853

வினைச்சொல் - மாட்டமனறு, கெடு, அழி, தோன்றாமற்போ (to snatch out of sight, hide yourselves through terror of your enemies)

"உங்கள் நாட்களில் ஒரு கிரியையை நான் நடப்பிப்பேன், ஒருவன் அதை உங்களுக்கு விவரித்துச் சொன்னாலும் நீங்கள் விசுவாசிக்கமாட்டீர்கள்" எருசலேம் அழிக்கப்படும் கிரியையை இந்த வாக்கியம் விளக்குகிறது. கிபி 70 ஆம் ஆண்டு இந்த வார்த்தை நிறைவேறிற்று. (மத் 24:2; லூக்கா 19:41-44; லூக்கா 21:20-24; தானி 9:26) ஒருசிலர் இந்த வாக்கியம் இஸ்ரவேலில் நடைபெறப்போகும் எழுப்புதலைக் குறிப்பதாக வியாக்கியானம் பண்ணுகிறார்கள். ஆப 1:5-10 ஆகிய வசனங்கள் இஸ்ரவேலின் அழிவையே குறிக்கிறது. அதன் எழுப்புதலைக் குறிக்கவில்லை.

7. பவுலின் பிரசங்கத்தினால் அந்தியோகியாவில் ஏற்பட்ட விளைவு - (13:14-21)

அப் 13:42 அவர்கள் யூதருடைய ஜெபஆலயத்திலிருந்து புறப்படுகையில் அடுத்த ஓய்வு நாளிலே இந்த வசனங்களைத் தங்களுக்குச் சொல்ல வேண்டும் என்று புறஜாதியார் வேண்டிக்கொண்டார்கள்.

அப் 13:43 ஜெபஆலயத்தில் கூடின சபை கலைந்துபோனபின்பு, யூதரிலும் யூதமார்க்கமைந்த பக்தியுள்ளவர்களிலும் அநேகர் பவுலையும் பர்னபாவையும் பின்பற்றினார்கள்; அவர்களுடனே இவர்கள் பேசி, தேவனுடைய கிருபையிலே நிலைகொண்டிருக்கும்படி அவர்களுக்குப் புத்திசொன்னார்கள்.

"அவர்கள் யூதருடைய ஜெபஆலயத்திலிருந்து புறப்படுகையில் அடுத்த ஓய்வு நாளிலே இந்த வசனங்களைத் தங்களுக்குச் சொல்லவேண்டும் என்று புறஜாதியார் வேண்டிக்கொண்டார்கள்" - சத்தியத்தை ஏற்றுக் கொள்ளாத யூதர்கள் ஜெபாலயத்தை விட்டு ஏற்கெனவே வெளியே போய்விட்டார்கள் (அப் 13:43). சத்தியத்தை விசுவாசிக்கும் யூதர்கள் பவுலை மறுபடியும் அடுத்த ஓய்வுநாளுக்கு வந்து தங்களுக்குச் சத்திய வசனங்களை விளக்கி கூறவேண்டுமாறு கேட்டுக் கொள்கிறார்கள். அதன்பின்பு, ஜெபாலயத்தில் கூடின சபை கலைந்தது. (அப் 13:42-43)

"அவர்களுடனே இவர்கள் பேசி, தேவனுடைய கிருபையிலே நிலை கொண்டிருக்கும்படி அவர்களுக்குப் புத்தி சொன்னார்கள்" தேவனுடைய கிருபை இல்லாமல் யாரும் இரட்சிக்கப்பட முடியாது. (கலா 1:6; கலா 5:4; எபி 12:15)

8. யூதர்களின் எதிர்ப்பு

அப் 13:44 அடுத்த ஓய்வுநாளிலே கொஞ்சங் குறையப் பட்டணத்தாரனைவரும் தேவ வசனத்தைக் கேட்கும்படி கூடிவந்தார்கள்.

13 அதிகாரம்

அப் 13:45 யூதர்கள் ஜனக்கூட்டங்களைக் கண்டபோது பொறாமையினால் நிறைந்து, பவுலினால் சொல்லப்பட்டவைகளுக்கு எதிரிடையாய்ப் பேசி, விரோதித்துத் தூஷித்தார்கள்.

"யூதர்கள் ஜனக்கூட்டங்களைக் கண்டபோது பொறாமையினால் நிறைந்தார்கள்" - புறஜாதியார்கள் தங்களோடு சமமாக இருப்பதை யூதர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. கிறிஸ்துவின் உபதேசத்தினால்தான் தங்களுக்கு இப்படிப்பட்ட அவமானம் வந்ததாக யூதர்கள் கருதுகிறார்கள் (லூக்கா 4:28; 1கொரி 12:13; கலா 3:28; கொலோ 3:11).

"பவுலினால் சொல்லப்பட்டவைகளுக்கு எதிரிடையாய்ப் பேசி, விரோதித்துத் தூஷித்தார்கள்" - இயேசு கிறிஸ்துவை யூதர்கள் தூஷிக்கிறார்கள். கிறிஸ்துவின் உபதேசத்திற்கு எதிராகப் பேசுகிறார்கள்.

9. புறஜாதி மத்தியில் ஊழியம்
(18:6 28:28 13:4

அப் 13:46 அப்பொழுது பவுலும் பர்னபாவும் தைரியங்கொண்டு அவர்களை நோக்கி: முதலாவது உங்களுக்கே தேவ வசனத்தைச் சொல்லவேண்டியதாயிருந்தது; நீங்களோ அதைத் தள்ளி, உங்களை நித்திய ஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக் கொள்ளுகிறபடியினால், இதோ, நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம்.

அப் 13:47 நீர் பூமியின் கடைசிபரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை ஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன் என்கிற வேதவாக்கியத்தின்படி கர்த்தர் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறபடியினால் இப்படிச் செய்கிறோம் என்றார்கள்.

அப் 13:48 புறஜாதியார் அதைக் கேட்டுச் சந்தோஷப்பட்டு, கர்த்தருடைய வசனத்தை மகிமைப்படுத்தினார்கள்; நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசித்தார்கள்.

அப் 13:49 கர்த்தருடைய வசனம் அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று.

"பவுலும் பர்னபாவும் தைரியங் கொண்டார்கள்" - பரிசுத்தஆவியானவர் பவுலையும், பர்னபாவையும் அபிஷேகம் பண்ணியிருக்கிறார். அவர்களுடைய வாயில் தமது வார்த்தையை அருளியிருக்கிறார். அவர்களை எதிர்த்து நிற்பவர்களுக்கு எப்படி மாறுத்தரம் தரவேண்டும் என்று பரிசுத்த ஆவியானவரே அவர்களை வழிநடத்துகிறார் (லூக்கா 21:15; அப் 6:10). பவுலும் பர்னபாவும் சத்தியத்தைப் பேசுகிறார்கள். அத்துடன் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகமும் அவருடைய பேச்சின் மூலமாக வெளிப்படுகிறது. ஆகையினால் அவர்கள் இருவரும் தைரியம் கொண்டு பேசுகிறார்கள்.

"முதலாவது உங்களுக்கே தேவவசனத்தைச் சொல்லவேண்டியதாயிருந்தது" - யூதருக்கு சுவிசேஷ செய்தி முதலாவது பிரசங்கிக்கப்பட வேண்டுமென்பது கர்த்தருடைய கட்டளை (அப் 3:26; ரோமர் 1:16; மத் 10:6; லூக்கா 24:47).

"நீங்களோ அதைத் தள்ளி, உங்களை நித்திய ஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக் கொள்ளுகிறீர்கள்" - யூதர்கள் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷச் செய்தியை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகையினால் அவர்களுக்கு நித்திய ஜீவன் கிடைக்காது. யூதர்கள் தங்களுடைய அழிவை யூதர்கள் தாங்களே தேடிக் கொள்கிறார்கள்.

"இதோ, நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம்" - யூதர்கள் நித்திய ஜீவனை ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணித்தபடியினால் பவுலும் பர்னபாவும் அதைப் புறஜாதியாருக்கு அறிவிப்பதற்காகப் போகிறார்கள்.

13 அதிகாரம்

அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 16

"நீர் பூமியின் கடைசிபரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை ஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன்" (அப் 13:47 ஏசா 49:6). மேசியா புறஜாதியாருக்கும் ஒளியாக இருப்பார் யூதர்களால தங்களுடைய சொந்தத் தீர்க்கதரிசியை மறுதலிக்க முடியாது. ஆகையினால அவர்கள் ஆக்கினைக்குட்பட்டவர்களாக இருப்பார்கள்

"நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசித்தார்கள்" - இந்த வாக்கியத்தில நியமிக்கப்படுதல் என்பதற்கான கிரேக்க வார்த்தை "டாஸ்ஸோ" (tassoo) என்பதாகும். இதற்கு இவ்வாறு பொருள் கூறலாம். (ordain) (அப 13:48; ரோமர் 13:1); (set) (லூக்கா 7:8), (appoint) (மத் 28:16; அப 22:10; அப 28:23); (determine) (அப 15:2); (addict) (1கொரி 16:15) தேவன் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிற எல்லோரையுமே நித்திய ஜீவனுக்கு நியமித்திருக்கிறார் (யோவான் 3:15-20 ரோமர் 1:16, ரோமர் 10:9-10; 1தீமோ 2:4 2பேதுரு 3:9; வெளி 22:17). எல்லோரும இரட்சிக்கப்பட வேண்டுமென்பதே தேவனுடைய சித்தம் மனுஷன சுயாதீனமாக தீர்மானம்பண்ணி, இயேசு கிறிஸ்துவைத் தனனுடைய ஆண்டவராகவும், சொந்த இரட்சகராகவும் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒரு குறிப்பிட்ட நபர் இரட்சிக்கப்படக்கூடாது என்பது தேவனுடைய சித்தமல்ல எல்லோரும் இரட்சிக்கப்பட வேண்டும். விசுவாசிக்கிறவர்கள் எல்லோருமே இரட்சிக்கப்படுவார்கள் அவர்களைத் தேவன தமது நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வதற்காக நியமித்திருக்கிறார்

நியமிக்கப்படு (ordained) - τάσσω - tassoo 5021

வினைச்சொல் குறித்திரு, நியமிக்கப்படு, ஒப்புவித்திரு

"கர்த்தருடைய வசனம் அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று" - இங்கு நடைபெற்ற எழுப்புதல் கூட்டத்தில் பல பிரதேசங்களிலிருந்தும் ஜனங்கள் வந்திருந்தார்கள் அவர்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிப்பை பெற்றுக் கொண்டார்கள் அந்த விசுவாசிகள் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷச் செய்தியை அந்தியோகியா பிசீதியா ஆகிய பிரதேசங்களுக்குச் சுற்றிலுமுள்ள பகுதிகளுக்கு எடுத்துச் சென்றார்கள்

10. பவுலையும் பர்னபாவையும் அந்தியோகியாவின் எல்லைகளுக்கு புறம்பாக துரத்தி விடுகிறார்கள் - (13:14)

அப 13:50 யூதர்கள் பக்தியும் கனமுமுள்ள ஸ்திரீகளையும் பட்டணத்து முதலாளிகளையும் எடுத்துவிட்டு, பவுலையும் பர்னபாவையும் துன்பப்படுத்தும்படி செய்து, தங்கள் எல்லைகளுக்குப் புறம்பாக அவர்களைத் துரத்திவிட்டார்கள்

அப 13:51 இவர்கள் தங்கள் கால்களில் படிந்த தூசியை அவர்களுக்கு எதிராக உதறிப்போட்டு, இக்கோனியா பட்டணத்துக்குப் போனார்கள்

அப் 13:52 சீஷர்கள் சந்தோஷத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் நிரப்பப்பட்டார்கள்

"பக்தியும் கனமுமுள்ள ஸ்திரீகள்" - ஜெபாலயத்தில யூதர்கள் மத்தியிலே சில ஸ்திரீகள் கனமுள்ளவர்களாக இருந்தார்கள் ஜெபாலயத்தில அவர்களுக்கு உயர்ந்த அந்தஸ்து வழங்கப்பட்டிருந்தது. அந்த ஸ்திரீகளையும் பட்டணத்திலுள்ள முதலாளிகளையும் யூதர்கள் எவ்விட்டார்கள் இவர்களுடைய உதவியினால யூதர்கள் பவுலையும், பர்னபாவையும் தங்களுடைய பட்டணத்து எல்லைகளுக்குப் புறம்பாகத் துரத்திவிட்டார்கள்

அப்போஸ்தலர் - தொகுப்புரை

13 அதிகாரம்

"தங்கள் கால்களில் படிந்த தூசியை அவர்களுக்கு எதிராக உதறிப் போட்டார்கள்" இந்த ஊர் ஜனங்கள் தேவனுக்கு எதிர்த்து நின்றதினால் அந்த ஊரிலுள்ள தூசியும் சாபமாக இருக்கிறது. ஆகையினால் தங்கள் கால்களில் படிந்த தூசியை அவர்களுக்கு எதிராக உதறிப் போட்டுவிடுகிறார்கள். தங்களுடைய கால்களில் சாபமான அந்தத் தூசியைக்கூட சுமந்துசெல்ல அப்போஸ்தலர்களுக்கு விருப்பம் இல்லை (மத் 10:14; அப் 18:6; மாற்கு 6:11)

"இக்கோனியா பட்டணம்" (Iconium) - லிக்கவோனியாவின் (Lycaonia) தலைநகரம். (அப் 13:51)

"சீஷர்கள் சந்தோஷத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் நிரப்பப்பட்டார்கள்" - உபத்திரவங்களுக்கு மத்தியிலும் சீஷர்கள் சந்தோஷத்தினால் நிரம்பியிருக்கிறார்கள். பரிசுத்த ஆவியானவர் அவர்களை நிரப்புகிறார் (அப் 5:41; எபி 10:34; யாக் 1:2)

14 அதிகாரம்

11. இக்கோனியா பட்டணத்தில் சபை ஸ்தாபிக்கப்படுகிறது

அப் 14:1 இக்கோனியா பட்டணத்திலே அவர்கள் இருவரும் யூதருடைய ஜெப ஆலயத்தில் பிரவேசித்து, யூதரிலும் கிரேக்கரிலும் திரளான ஜனங்கள் விசுவாசிக்கத்தக்கதாய்ப் பிரசங்கித்தார்கள்.

அப் 14:2 விசுவாசியாத யூதர்கள் சகோதரருக்கு விரோதமாகப் புறஜாதியாருடைய மனதை எழுப்பிவிட்டு, பகையுண்டாக்கினார்கள்.

அப் 14:3 அவர்கள் அங்கே அநேகநாள் சஞ்சரித்துக் கர்த்தரை முன்னிட்டுத் தைரியமுள்ளவர்களாய்ப் போதகம்பண்ணினார்கள்; அவர் தமது கிருபையுள்ள வசனத்திற்குச் சாட்சியாக அடையாளங்களும் அற்புதங்களும் அவர்கள் கைகளால் செய்யப்படும்படி அநுக்கிரகம்பண்ணினார்.

அப் 14:4 பட்டணத்து ஜனங்கள் பிரிந்து, சிலர் யூதரையும் சிலர் அப்போஸ்தலரையும் சேர்ந்துகொண்டார்கள்.

அப் 14:5 இவர்களை அவமானப்படுத்தவும் கல்லெறியவும் வேண்டுமென்று, புறஜாதியாரும் யூதரும் அவர்கள் அதிகாரிகளும் அமளிபண்ணுகையில்,

"யூதரிலும் கிரேக்கரிலும் திரளான ஜனங்கள் விசுவாசிக்கத்தக்கதாகப் பிரசங்கித்தார்கள்" - பவுலும், பர்னபாவும் பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையினாலும், பரிசுத்த ஆவியானவர் உறுதிப்படுத்தும் அடையாளங்களுடனும் அற்புதங்களுடனும் யூதர் மத்தியிலும் புறஜாதியார் மத்தியிலும் ஊழியம் செய்து வருகிறார்கள். அவர்களில் அநேகர் இயேசு கிறிஸ்துவைத் தங்களுடைய இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள். (1கொரி 2:1-4)

"புறஜாதியாருடைய மனதை எழுப்பிவிட்டு, பகையுண்டாக்கினார்கள்" - விசுவாசிகளுக்கு எதிராக அவிசுவாசிகளைத் தூண்டிவிடுகிறார்கள். அவர்களுடைய உள்ளத்தில் நஞ்சையும் பகைமையையும் கலக்குகிறார்கள்.

"கர்த்தரை முன்னிட்டுத் தைரியமுள்ளவர்களாய்ப் போதகம் பண்ணினார்கள்" - பிரசங்கம் பண்ணுவதற்கு எல்லா வாசல்களும் அவர்களுக்குத் திறந்திருந்தது. அவர்கள் போதகம் பண்ணியபோது இயேசு கிறிஸ்து தமது கிருபையுள்ள வசனத்திற்குச் சாட்சியாக அடையாளங்களும் அற்புதங்களும் அவர்கள் கைகளால் செய்யப்படும்படி அநுக்கிரகம் பண்ணினார். பவுலும் பர்னபாவும் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணினார்கள். புறஜாதியார்கள் இயேசு கிறிஸ்துவின்மீது விசுவாசம் வைப்பதற்கு உதவியாகவும் தேவனுடைய மகிமைக்காகவும் அற்புதங்களும் அடையாளங்களும் நடைபெற்றன. (மாற்கு 16:17-20; எபி 2:3-4; அப் 4:30; அப் 19:11; ரோமர் 15:18-29)

"இவர்களை அவமானப்படுத்தவும் கல்லெறியவும் வேண்டுமென்று புறஜாதியாரும் யூதரும் அவர்கள் அதிகாரிகளும் அமளி பண்ணினார்கள்" - சீஷர்களை அவமானப்படுத்த வேண்டும். அவர்களுடைய பிரசங்கம் தேவதூஷணமானது என்று புறஜாதியார் மத்தியிலும் யூதஜாதியார் மத்தியிலும் பிரச்சனையை உண்டு பண்ணுகிறார்கள். இதன் வாயிலாகப் பவுலையும் பர்னபாவையும் கல்லெறிந்து கொல்ல வேண்டுமென்பது அவர்களுடைய சதியாலோசனை.

12. இக்கோனியாவிலிருந்து லீஸ்திரா வரையிலும் - சப்பாணியைக் குணமாக்குகிறார்கள் - இங்கு ஒரு சபையை ஸ்தாபிக்கிறார்கள்

அப் 14:6 இவர்கள் அதை அறிந்து, லிக்கவோனியா நாட்டிலுள்ள பட்டணங்களாகிய லீஸ்திராவுக்கும் தெர்பைக்கும் அவைகளின் சுற்றுப்புறங்களுக்கும் ஓடிப்போய்,

அப் 14:7 அங்கே சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணினார்கள்.

14 அதிகாரம்

அப் 14:8 லீஸ்திராவிலே ஒருவன் தன் தாயின் வயிற்றிலிருந்து பிறந்ததுமுதல் சப்பாணியாயிருந்து, ஒருபோதும் நடவாமல், கால்கள் வழங்காதவனாய் உட்கார்ந்து,

அப் 14:9 பவுல் பேசுகிறதைக் கேட்டுக்கொண்டிருந்தான். அவனைப் பவுல் உற்றுப்பார்த்து, இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் அவனுக்கு உண்டென்று கண்டு,

அப் 14:10 நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்து நில் என்று உரத்த சத்தத்தோடே சொன்னான். உடனே அவன் குதித்தெழுந்து நடந்தான்.

"இவர்கள் அதை அறிந்தார்கள்" - பவுலும், பர்னபாவும் ஜனங்களுடைய சதியாலோசனையை அறிந்தார்கள். அவர்களுக்கு இந்தச் சதியாலோசனை அறிவிக்கப்பட்டபோது, சீஷர்கள் தப்பித்து ஓடிப்போய்விட்டார்கள். தங்களுடைய ஜீவனுக்குப் பயந்ததினால் இவர்கள் தப்பித்து ஓடவில்லை. ஜீவனோடு இருந்தால்தான் தேவனுக்காகத் தொடர்ந்து ஊழியம் செய்ய முடியும். பாடுகளை அனுபவிக்க முடியும் என்னும் வைராக்கியத்தோடு ஓடிப்போகிறார்கள் (மத் 10:23)

"லீஸ்திராவுக்கும் தெர்பைக்கும்" (Lystra and Derbe) - இக்கோனியாவில (Iconium) இருந்தவர்களில் பெரும்பாலானோர் கிரேக்கர், யூதர், ரோம அதிகாரிகள் மற்றும் சில புறஜாதி ஜனங்கள் ஆவார்கள். லீஸ்திராவிலும் தெர்பையிலும் இருந்த ஜனங்கள் விக்கிரகாராதனைக்காரர்கள். இதனால் இவ்விரண்டு வித்தியாசமான இடங்களிலும் அப்போஸ்தலர்களை அந்த ஜனங்கள் வித்தியாசமாக ஏற்றுக் கொள்கிறார்கள்

"அவனைப் பவுல் உற்றுப் பார்த்து இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் அவனுக்கு உண்டென்று கண்டான்" - சப்பாணியாக இருந்தவனிடம் இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் இருந்தது. இதைப் பவுல் தனது ஆவியில் அறிந்து கொள்கிறான். அப்போஸ்தலன் பவுலிடம் ஆவியின் வரங்கள் எல்லாமே இருந்தது.

பவுலிடம் இருந்த ஆவியின் வரங்கள்

1 ஞானத்தைப் போதிக்கும் வசனம் (Word of wisdom) (1கொரி 2:7, எபே 1:8; கொலோ 1:28 1கொரி 12:1,7)

2 அறிவை உணர்த்தும் வசனம் (Word of knowledge) (1கொரி 2:14, 1கொரி 11:6; 1கொரி 12:1,7; எபே 3:4 2பேதுரு 3:18)

3 விசுவாசம் (Faith) (1கொரி 13:2; 2கொரி 4:13; கலா 2:20; எபே 3:12; 2தீமோ 4:7)

4 குணமாக்கும் வரங்கள் (Gifts of healing) (அப் 14:3,10; அப் 15:12; அப் 19:11; ரோமர் 15:18-29)

5 அற்புதங்களைச் செய்யும் சக்தி (Working of miracles) (அப் 19:11)

6 தீர்க்கதரிசனம் (Prophecy) (1கொரி 13:2; 1கொரி 14:3 1தீமோ 1:18; 1தீமோ 4:14, 2தீமோ 6 2பேதுரு 3:18)

7 ஆவிகளைப் பகுத்தறிதல் (Discerning of spirits) (அப் 13:10 அப் 14:9; அப் 16:18, 1கொரி 13:2

8 பற்பல பாஷைகளைப் பேசுதல் (Tongues) (1கொரி 13:1 1கொரி 14:18)

9 பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல் (Interpretation of tongues) (1கொரி 14:13-16

பவுலிடம் இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் சம்பூரணமான ஆசீர்வாதம் இருந்தது. (ரோமர் 15:29)

"அவன் குதித்தெழுந்து நடந்தான்" புதிய ஏற்பாட்டுத் திருச்சபையின் ஊழியத்தில் அற்புத சுகமாதல் இவ்வாறுதான் நடைபெற வேண்டும். இயேசு கிறிஸ்துவும், ஆதித்திருச்சபையாரும், வியாதியஸ்தர்களை இதுபோன்று குணமாக்கி இருக்கிறார்கள் (மத் 13:58 அப் 3:6-9 அப் 5:16 அப் 6:8 அப் 8:7 அப் 9:18,34 அப் 19:3)

14 அதிகாரம்

13. ஜனங்கள் பவுலையும் பர்னபாவையும் தேவர்கள் என்று வழிபட வருகிறார்கள்

அப் 14:11 பவுல் செய்ததை ஜனங்கள் கண்டு, தேவர்கள் மனுஷரூபமெடுத்து நம்மிடத்தில் இறங்கி வந்திருக்கிறார்கள் என்று லிக்கவோனியா பாஷையிலே சத்தமிட்டுச் சொல்லி,

அப் 14:12 பர்னபாவை யூப்பித்தர் என்றும், பவுல் பிரசங்கத்தை நடத்தினவனானபடியினால் அவனை மெர்க்கூரி என்றும் சொன்னார்கள்.

அப் 14:13 அல்லாமலும் பட்டணத்துக்கு முன்னே இருந்த யூப்பித்தருடைய கோவில் பூஜாசாரி எருதுகளையும் பூமாலைகளையும் வாசலண்டையிலே கொண்டுவந்து ஜனங்களோடேகூட அவர்களுக்குப் பலியிட மனதாயிருந்தான்.

அப் 14:14 அப்போஸ்தலராகிய பர்னபாவும் பவுலும் அதைக் கேட்டபொழுது, தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, கூட்டத்துக்குள்ளே ஓடி, உரத்த சத்தமாய்:

அப் 14:15 மனுஷரே, ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப்போலப் பாடுள்ள மனுஷர்தானே; நீங்கள் இந்த வீணான தேவர்களைவிட்டு, வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்பவேண்டுமென்று உங்களுக்குப் பிரசங்கிக்கிறோம்.

அப் 14:16 சென்ற காலங்களில் அவர் சகல ஜனங்களையும் தங்கள் தங்கள் வழிகளிலே நடக்கவிட்டிருந்தும்,

அப் 14:17 அவர் நன்மை செய்துவந்து, வானத்திலிருந்து மழைகளையும் செழிப்புள்ள காலங்களையும் நமக்குத் தந்து, ஆகாரத்தினாலும் சந்தோஷத்தினாலும் நம்முடைய இருதயங்களை நிரப்பி, இவ்விதமாய் அவர் தம்மைக்குறித்துச் சாட்சி விளங்கப்பண்ணாதிருந்ததில்லை என்றார்கள்.

அப் 14:18 இப்படி அவர்கள் சொல்லியும் தங்களுக்கு ஜனங்கள் பலியிடாதபடிக்கு அவர்களை அமர்த்துகிறது அரிதாயிருந்தது.

"லிக்கவோனியா பாஷை" (the speech of Lycaonia) - இது கிரேக்க மொழி அல்ல. இது வேறு என்ன பாஷை என்று இதுவரையிலும் அறியப்படவில்லை.

"தேவர்கள் மனுஷரூபமெடுத்து நம்மிடத்தில் இறங்கி வந்திருக்கிறார்கள்" - புறஜாதியாருக்கு விநோதமான பழக்கவழக்கங்கள் இருக்கிறது. தங்களுடைய தெய்வங்கள் மனுஷ ரூபம் எடுத்து வரும் என்று அவர்கள் நம்பினார்கள். பவுல் அற்புதம் செய்தான் ஆகையினால் பவுலை மெர்க்குரி (Mercury) தெய்வம் என்று அழைத்தார்கள். பர்னபா அவனோடுகூட இருந்தவன். அவனை யூப்பித்தர் (Jupiter) என்று அழைத்தார்கள். இந்த ஊர் ஜனங்களுக்கு மெர்க்குரி தெய்வத்தைப் பற்றியும் யூப்பித்தர் தெய்வத்தைப் பற்றியும் நன்றாகத் தெரியும். அவை அடிக்கடி மனுஷரூபமெடுத்து ஜனங்கள் மத்தியில் ஏதாவது மாய மந்திரங்களைச் செய்யும். இந்த ஊரில் இப்போது ஒரு சப்பாணி குணமாக்கப்பட்டிருக்கிறான். இது தங்களுடைய தெய்வத்தின் வேலை என்றும், பவுல் பர்னபா ஆகியோரின்மீது தங்களுடைய தெய்வங்கள் இறங்கி வந்திருக்கின்றன என்றும் ஜனங்கள் நினைக்கிறார்கள்.

"பட்டணத்துக்கு முன்னே இருந்த யூப்பித்தருடைய கோவில்" இந்தப் பட்டணத்திற்கு முன்பாக யூப்பித்தருக்கு ஒரு கோவில் இருந்தது. அதற்கு ஒரு பூஜாசாரியும் இருந்தான். அப்போஸ்தலர்களுக்கு பூஜாசாரியும், ஜனங்களும் பலிகளைச் செலுத்த விரும்பினார்கள்.

14 அதிகாரம்

கோவில் பூஜாசாரி எருதுகளையும் பூமாலைகளையும் வாசலண்டையிலே கொண்டு வந்தான். பவுலும், பர்னபாவும் வாசலண்டையில் நிற்கிறார்கள். இந்த இடத்தில்தான் சப்பாணி ஜனங்களிடம் பிச்சை கேட்பது வழக்கம். அந்தச் சப்பாணி வாசலண்டையில் சொஸ்தமாக்கப் பட்டிருக்கலாம்.

"பூமாலைகள்" - புறஜாதி தெய்வங்களுக்குப் பலியிடும்போது பலியிடப்படும் மிருகங்களுடைய கொம்புகளில் பூமாலைகளைச் சுற்றிக் கட்டுவது வழக்கம். அவர்களுடைய தெய்வங்களுக்கும் பலிசெலுத்தப்படும் பலிபீடத்திலும் பூமாலைகளை அணிவிப்பார்கள்.

"மனுஷரே, ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப்போலப் பாடுள்ள மனுஷர்தானே" - என்று பவுலும், பர்னபாவும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, கூட்டத்துக்குள்ளே ஓடி, உரத்த சத்தமாய் கூறுகிறார்கள். மனுஷர்கள் தங்களைத் தெய்வமாக்குவதற்கு இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள் அனுமதிக்கவில்லை.

பவுலின் பிரசங்கச் செய்தி

1. நீங்கள் இந்த வீணான தேவர்களைவிட்டு விலகுங்கள் (அப் 14:15)
2. ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்புங்கள் (அப் 14:15)
3. தேவன் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கினார் (அப் 14:15)
4. தேவன் பாவிகள்மீது நீடிய பொறுமையுள்ளவராக இருக்கிறார் (அப் 14:16)
5. தேவனுடைய பராமரிப்பு (அப் 14:17)

இந்தப் பிரசங்கத்தை புறஜாதியார் மத்தியில் கூறுவதற்கு அதிக தைரியம் வேண்டும். பவுல் பரிசுத்த ஆவியினால் நிறைந்து தெய்வீக வல்லமையினால் தைரியத்தோடு பிரசங்கம் பண்ணுகிறான். இந்த புறஜாதியாருக்கு அவர்களுக்குரிய தெய்வங்களும், அவர்களுக்குரிய பூஜைமுறைகளும் பலி செலுத்தும் முறைகளும் உண்டு. தங்கள் தெய்வங்களிடம் இவர்கள் பக்தியாக இருந்தார்கள். யூதர்கள் இந்த ஊருக்கு அந்தியோகியாவிலிருந்தும், இக்கோனியாவிலிருந்தும் வந்து இந்த ஊர் ஜனங்களைத் திசைதிருப்புகிறார்கள். தங்களுடைய பிரசங்கங்களின் மூலமாக ஜனங்களை பவுலுக்கும் பர்னபாவிற்கும் விரோதமாகத் திருப்பிவிடுகிறார்கள். சற்று நேரத்திற்கு முன்பு பவுலையும் பர்னபாவையும் தங்களுடைய தெய்வமென்று கூறியவர்கள் இப்போது அவர்கள் இருவரையும் கல்லெறிந்து கொல்லுவதற்கு ஆயத்தமாகிவிட்டார்கள் (அப் 14:19-20).

வீணான (vanities) - ματαιος - mataios - 3152

பொருள் - வீணான (vain things) (அப் 14:15, 1கொரி 3:20; 1கொரி 15:17; தீத்து 3:9, யாக் 1:26, 1பேதுரு 1:18)

"ஜீவனுள்ள தேவன்" பழைய ஏற்பாட்டில் இந்த வாக்கியம் 15 இடங்களில் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (உபா 5:26; யோசு 3:10; 1சாமு 17:26,36; 2இராஜா 19:4,16; சங் 42:2; சங் 84:2; ஏசா 37:4,17; எரே 10:10; எரே 23:36; தானி 6:20,26; ஓசி 1:10) புதிய ஏற்பாட்டில் இந்த வாக்கியம் 16 இடங்களில் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (மத் 16:16; மத் 26:63; யோவான் 6:69; அப் 14:15; ரோமா 9:26; 2கொரி 3:3; 2கொரி 6:16; 1தெச 1:9; 1தீமோ 3:15; 1தீமோ 4:10; 1தீமோ 6:17; எபி 3:12; எபி 9:14; எபி 10:31; எபி 12:22; வெளி 7:2) ஜீவனுள்ள பிதா என்னும் வாக்கியத்தை யோவான் 6:57 ஆவது வசனத்தில் நாம் வாசிக்கிறோம். இந்த வசனப்பகுதிகள் அனைத்துமே வீணான தேவர்களுக்கு விரோதமான வாக்கியமாகும்.

14 அதிகாரம்

"சென்ற காலங்களில் அவர் சகல ஜனங்களையும் தங்கள் தங்கள் வழிகளிலே நடக்கவிட்டிருந்தார்" - ஜனங்களுடைய கடந்த கால அறியாமையைத் தேவன் பொறுத்துக் கொண்டார் ஆனால் இப்போது எல்லோரும் மனந்திரும்ப வேண்டுமென்று தேவன் எச்சரித்துக் கூறுகிறார் (அப் 17:30)

14. பவுலைக் கல்லெறிந்து அவன் மரித்துப் போனான் என்று எண்ணி அவனை பட்டணத்திற்கு வெளியிலே இழுத்துக் கொண்டு போகிறார்கள்

அப் 14:19 பின்பு அந்தியோகியாவிலும் இக்கோனியாவிலுமிருந்து சில யூதர்கள் வந்து, ஜனங்களுக்குப் போதனைசெய்து பவுலைக் கல்லெறிந்து அவன் மரித்துப் போனானென்று எண்ணி, அவனைப் பட்டணத்துக்கு வெளியிலே இழுத்துக் கொண்டு போனார்கள்

அப் 14:20 சீஷர்கள் அவனைச் சூழ்ந்து நிற்கையில், அவன் எழுந்து பட்டணத்திற்குள் பிரவேசித்தான் மறுநாளில் பர்னபாவுடனேகூடத் தெர்பைக்குப் புறப்பட்டுப் போனான்

"சில யூதர்கள் வந்து, ஜனங்களுக்குப் போதனைசெய்து, பவுலைக் கல்லெறிந்தார்கள்" - இந்த ஊர் ஜனங்கள் எல்லாப் பிரசங்கங்களையும் கேட்கிறார்கள் அவர்களுக்குள் சத்தியம் வேரூன்றவில்லை ஆகையினால்தான், சத்தியமார்க்கத்தைப் பிரசங்கம் பண்ணிய பவுலைக் கல்லெறிந்தார்கள் அவன் மரித்துப் போனானென்று எண்ணி, அவனைப் பட்டணத்துக்கு வெளியிலே இழுத்துக்கொண்டு போனார்கள்

"சீஷர்கள் அவனைச் சூழ்ந்துநிற்கையில், அவன் எழுந்தான்" - அங்குள்ள விசுவாசிகள் பவுலுக்காக ஜெபம் பண்ணுகிறார்கள் அவன் குணமடைய வேண்டுமென்று ஊக்கமாக ஜெபிக்கிறார்கள் பவுல் மரித்துப்போனவன்போல கல்லெறிபட்டுக் கிடக்கிறான் கர்த்தர் தமது பிள்ளைகளுடைய ஜெபத்தைக் கேட்கிறார் மரித்துப் போன நிலைமையிலிருந்த பவுலை எழுப்புகிறார் அவன் எழுந்து எப்போதும்போல பட்டணத்திற்குள் பிரவேசித்தான்

இந்த வாக்கியத்தில் "எழுந்தான்" என்பதற்கான கிரேக்க வார்த்தை "அனிஸ்தேமி" (anisteemi) என்பதாகும் இதற்கு எழும்பு, மறுபடியும் எழும்பு, உயிருடன் எழும்பு என்று பொருள் **(to stand up, rise again, resurrection)** (மத் 12:41; மத் 17:9 மத் 20:19; மாற்கு 8:31 மாற்கு 9:9,31 மாற்கு 10:34; மாற்கு 12:23-26 லூக்கா 9:8,19; லூக்கா 11:32 லூக்கா 16:31; லூக்கா 18:33 லூக்கா 24:7,46; யோவான் 6:39-40,44,54 யோவான் 11:23-24; யோவான் 20:9 அப் 2:24,30,32 அப் 3:26 அப் [illegible]:4 அப் 13:33,34 அப் 14:20 அப் 17:3,31 ரோமர் 14:9 ரோமர் 15:12 எபே 5:14 1தெச 4:14,16) இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்க வார்த்தை உயிர்த்தெழுதலைக் குறிப்பதற்கு 40 இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது ஆகையினால் பவுல் கல்லால் எறியப்பட்டு மரித்துப் போனான் என்றும், தேவன் அவனை மறுபடியும் உயிருடன் எழும்பினார் என்றும் சில வியாக்கியானம் கூறுகிறார்கள்

எழுந்து (rose up) - **ἀνίστημι** - **anisteemi** 450

விணைச்சொல் - எழு, எழும்பு, உண்டாக்கு, புறப்படு, எழுப்பு, எழும்பப்பண்ணு

14 அதிகாரம்

15. **லீஸ்திராவுக்கும் இக்கோனியாவுக்கும் அந்தியோகியாவுக்கும் திரும்பி வருகிறார்கள் - ஒவ்வொரு சபையிலும் மூப்பர்களை ஏற்படுத்துகிறார்கள்** - (1:22; தீத்து 1:5)

அப் 14:21 அந்தப் பட்டணத்தில் அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, அநேகரைச் சீஷராக்கினபின்பு, லீஸ்திராவுக்கும் இக்கோனியாவுக்கும் அந்தியோகியாவுக்கும் திரும்பி வந்து,

அப் 14:22 சீஷருடைய மனதைத் திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்திசொல்லி, நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

அப் 14:23 அல்லாமலும் அந்தந்தச் சபைகளில் அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்தி வைத்து, உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்கள் விசுவாசித்துப் பற்றிக்கொண்ட கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள்.

பிரசங்கி (taught) - μαζός - mazos - 3100

ஆண்பால் பெயர்சொல் - பிரசங்கி (make disciples) (அப் 14:21 மத் 13:52, மத் 27:57; மத் 28:19)

"லீஸ்திராவுக்கும் இக்கோனியாவுக்கும் அந்தியோகியாவுக்கும் திரும்பி வந்தார்கள்" இது சீரியாவிலுள்ள அந்தியோகியாவாகும் (அப் 13:4)

திடப்படுத்து (Confirming) - ἐπιστηρίζω episteerizoo - 1991

வினைச்சொல் - திடப்படுத்து, ஒருவருக்கு சாய்ந்துகொள்ள ஆதாரவாக ஒன்றைக் கொடுப்பது உறுதிபண்ணுவது (to give one something to lean on; confirm) (அப் 15:32,41; அப் 18:23)

நிலைத்திரு (continue) - ἐμμένω - emmenoo - 1696

வினைச்சொல் - நிலைத்திரு, நிலை, நில (abide in; stand by; continue in) (கலா 3:10; எபி 8:9)

நம்மிடத்தில் நிலைத்திருக்க வேண்டிய காரியங்கள்

1. நற்கிரியைகளைச் செய்வது (ரோமர் 2:7)
2. கர்த்தரைப் பின்பற்றுவது (சாமு 12:14)
3. தேவனுடைய வார்த்தை (யோவான் 8:31)
4. கிறிஸ்துவின் அன்பு (யோவான் 15:9, 1தீமோ 2:15)
5. தேவனுடைய கிருபை (அப் 13:43)
6. விசுவாசம் (அப் 14:22, கொலோ 1:23)
7. தேவனுடைய தயவை (ரோமர் 11:22)
8. ஜெபம் (கொலோ 4:2)
9. தெளிந்த உபதேசங்கள் (1தீமோ 4:16 2தீமோ 3:14)
10. குமாரனும், பிதாவும் (1யோவான் 2:24)

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் இவை நிலைத்திருக்க வேண்டும். அப்போதுதான் தேவன் நம்மை ஆசீர்வதிப்பார்.

"தேவனுடைய ராஜ்யம்" - (மத் 4:17, மத் 19:24)

14 அதிகாரம்

"அந்தந்தச் சபைகளில் அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்தி வைத்தார்கள்" - ஏற்படுத்தி வைத்தல் என்பதற்கு தெரிந்து கொள்ளுதல் என்று பொருள். அப் 13:48 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருப்பது போன்று. இங்கு மூப்பர்களை ஏற்படுத்தி வைக்கவில்லை. அங்கு ஸ்தலசபையார் மூப்பர்களை நியமித்தார்கள். ஆனால் இந்த வசனத்தில் அப்போஸ்தலர்களே மூப்பர்களைத் தெரிந்தெடுக்கிறார்கள்.

ஏற்படுத்து (ordained) - χειροτονέω - cheirotoneoo - 5500

வினைச்சொல் - ஏற்படுத்து (chosen) (2கொரி 8:19 2தீமோ 4:22; தீத்து 3:15)

"மூப்பர்கள்" (elders) - இதற்கான கிரேக்க வார்த்தை "பிரஸ்பட்டரோஸ்" (presbyteros) என்பதாகும். பழைய ஏற்பாட்டில் கோத்திரத் தலைவர்கள் பட்டணங்களின் தலைவர்கள் தேசங்களின் தலைவர்கள் ஆகியோர் மூப்பர் [illegible] அழைக்கப்பட்டார்கள் (உபா 1:13) சுவிசேஷ புஸ்தகங்களிலும் அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்திலும் மூப்பர் என்பது ஆலோசனைச் சங்கத்தாரையே பொதுவாக குறிக்கும். (மத் 15:2, மத் 16:21; மத் 21:23, மத் 26:3, அப் 4:5,8,23) ஆதித்திருச்சபையில் மூப்பர்கள் ஊழியக்காரர்களாகவும், உதவி செய்கிறவர்களாகவும் இருந்தார்கள். அதாவது பிரசங்கம் பண்ணும் மூப்பர்களும் ஸ்தலசபையில் பந்திவிசாரணை செய்யும் மூப்பர்களும் இருந்தார்கள். (அப் 11:30; அப் 14:23; அப் 16:4; அப் 20:17,28; அப் 21:18, 1தீமோ 5:17; தீத்து 1:5; யாக் 5:14 எல்லா அப்போஸ்தலர்களும் மூப்பர்களே (அப் 11:30; 1பேதுரு 5:1; 2யோவான் 1:1, 3யோவான் 1), ஆனால் எல்லா மூப்பர்களும் அப்போஸ்தலர்கள் அல்ல. (அப் 15:2,4,6,22,23; அப் 16:4) அப் 20:17 ஆவது வசனத்தில் மூப்பர்கள் எனப்படுகிறவர்கள், அப் 20:28 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் கண்காணிகளைக் குறிக்கும். 1தீமோ 5:17, தீத்து 1:5-10 1பேதுரு 5:1-2 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் மூப்பர்கள் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணும் மூப்பர்களாகும். அப் 6 ஆவது அதிகாரத்தில் உள்ளவர்கள் பந்திவிசாரணை செய்த மூப்பர்கள். மூப்பர்களும், உதவிக்காரர்களும் பிலி 1:1; 1தீமோ 3:1-13. மத் 20:26-27 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறார்கள் (அப் 20:28) பிரஸ்பட்டரோஸ் என்னும் வார்த்தை வயதான புருஷர்களையும், வயதான ஸ்திரீகளையும் குறிக்கும். (லூக்கா 15:25; யோவான் 8:9; அப் 1:7, அப் 4:22; 1தீமோ 5:2). பரலோகத்தில் உள்ளவர்களுக்கும் மூப்பர்கள் என்னும் பெயர் வழங்கப்பட்டிருக்கிறது. வெளி 4:4,10 வெளி 5:6,8,11,14; வெளி 7:11,13 வெளி 11:16; வெளி 14:3; வெளி 19:4). இந்த வார்த்தை 68 இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. யோவான் 8:9 அப் 2:17; அப் 4:22 ஆகிய வசனங்களைத் தவிர மற்ற வசனங்களில் "மூப்பர்" என்னும் வார்த்தையை நாம் காணகிறோம்.

மூப்பர்கள் (elders) - πρεσβύτερος - presbyteros - 4245

பெயர்ச்சொல் - முன்னோரான மூப்பரான முதிர் வயதுள்ள

"உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்களை விசுவாசித்துப் பற்றிக்கொண்ட கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள்" - மூப்பர்களை இவ்வாறுதான் பிரதிஷ்டை பண்ணுவார்கள் (லூக்கா 23:46)

10. பெர்கே, அத்தலியா பட்டணத்திற்கு திரும்பி வந்து பின்பு சீரியாவிலுள்ள அந்தியோகியாவிற்கு வருகிறார்கள் - அப் 13:1 -ல் குறிப்பிடுள்ள முதலாவது மிஷனரி பிரயாணம் நிறைவு பெறுகிறது

அப் 14:24 பின்பு பிசீதியா நாட்டைக் கடந்து, பம்பிலியா நாட்டிற்கு வந்து,

அப் 14:25 பெர்கே ஊரில் வசனத்தைப் பிரசங்கித்து, அத்தலியா பட்டணத்திற்குப் போனார்கள்

14 அதிகாரம்

அப் 14:26 அங்கே கப்பல் ஏறி தாங்கள் நிறைவேற்றின கிரியைக்காக தேவனுடைய கிருபைக்கு ஒப்புவிக்கப்பட்டுப் புறப்பட்டு அந்தியோகியாவுக்கு வந்தார்கள்

"அந்தியோகியாவுக்கு வந்தார்கள்" - பவுல், பர்னபா ஆகியோரின் முதலாவது மிஷினெரி பிரயாணம் முடிவு பெறுகிறது.

17. முதலாவது மிஷினெரி பிரயாணத்தைக் குறித்து சபையில் அறிவிக்கிறார்கள்

அப் 14:27 அவர்கள் அங்கே சேர்ந்தபொழுது சபையைக் கூடிவரச் செய்து, தேவன் தங்களைக்கொண்டு செய்தவைகளையும், அவர் புறஜாதிகளுக்கு விசுவாசத்தின கதவைத் திறந்ததையும் அறிவித்து

அப் 14:28 அங்கே சீஷருடனேகூட அநேகநாள் சஞ்சரித்திருந்தார்கள்

"பவுலும் பர்னபாவும் அந்தியோகியாவிற்கு வந்தசேர்ந்தபொழுது சபையைக் கூடிவரச்செய்து தேவன் தங்களைக்கொண்டு செய்தவைகளையும் அவர் புறஜாதிகளுக்கு விசுவாசத்தின் கதவைத் திறந்ததையும் அறிவித்தார்கள்" - தங்களுடைய மூன்று வருஷ மிஷினெரி ஊழியத்தில் நடைபெற்ற காரியங்களைச் சபையாருக்கு அறிவித்தார்கள் கர்த்தர் புறஜாதிகளுக்கு விசுவாசத்தின் கதவைத் திறந்தார் கர்த்தரே விசுவாசத்தின் கதவைத் திறக்கிறவர் மனுஷரால் இந்தக் கதவைத் திறக்க முடியாது (மத் 16:19 மத் 18:18

"அங்கே சீஷருடனேகூட அநேகநாள் சஞ்சரித்திருந்தார்கள்" சுமார் ஐந்து வருஷ காலங்களாக பவுலும் பர்னபாவும் அந்தியோகியாவிலே சீஷர்களோடு இருந்தார்கள் என்று சிலர் வியாக்கியானம் கூறுகிறார்கள்

15 அதிகாரம்

X. கிறிஸ்தவர்களின் முதலாவது பொதுக்குழு கூட்டம் - (வசனம் 5,10,19-21,24-28; கொலோ 2:14-17)

1. விருத்தசேதனம்

அப் 15:1 சிலர் யூதேயாவிலிருந்து வந்து: நீங்கள் மோசேயினுடைய முறைமையின்படியே விருத்தசேதனமடையாவிட்டால் இரட்சிக்கப்படமாட்டீர்கள் என்று சகோதரருக்குப் போதகம் பண்ணினார்கள்

அப் 15:2 அதினாலே அவர்களுக்கும் பவுல் பர்னபா என்பவர்களுக்கும் மிகுந்த வாக்குவாதமும் தர்க்கமும் உண்டானபோது, அந்த விஷயத்தினிமித்தம் பவுலும் பர்னபாவும் அவர்களைச் சேர்ந்த வேறு சிலரும் எருசலேமிலிருக்கிற அப்போஸ்தலரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் போக வேண்டுமென்று தீர்மானித்தார்கள்

"நீங்கள் மோசேயினுடைய முறைமையின்படியே விருத்தசேதனமடையாவிட்டால் இரட்சிக்கப்படமாட்டீர்கள்" கிறிஸ்தவர்கள் மத்தியிலே உபதேசத்தில் முதல் முறையாக கருத்து வேறுபாடு உண்டாகிறது. இந்தப் பிரச்சனை தீர்த்து வைக்கப்பட்டதாக நாம் இந்த அதிகாரத்தை வாசித்துத் தெரிந்து கொள்ளலாம். கிறிஸ்தவ விசுவாசம் மிகவும் எளிமையானது. ஒருசிலர் கிறிஸ்தவ உபதேசத்தில் தங்களுடைய சொந்தப் பிரமாணங்களையும் பாரம்பரியங்களையும் உள்ளே நுழைத்து, அதைக் கடினமாக்குகிறார்கள்

கலாத்தியாவிலிருந்த திருச்சபையார் நியாயப்பிரமாணத்திற்கு உடன்பட்டிருந்தார்கள் பவுல் இதற்காக அவர்களைக் கடிந்து கொண்டார் (கலா 1:6 கலா 3:1-5 கலா 5:4 பேதுரு, பர்னபா மற்றும் பலர் சிறிது காலம் இந்தத் தவறான உபதேசங்களினால் ஈர்க்கப்பட்டிருந்தார்கள் அதன் பின்பு, பரிசுத்த ஆவியானவரின் வெளிப்படுத்துதலினாலே அவர்கள் தங்களுடைய தவற்றைத் திருத்திக் கொண்டு, மெய்யான உபதேசத்திற்குத் திரும்பினார்கள் (கலா 2:11-21)

மோசேயின் பிரமாணம் ஒழிந்து போயிற்று புதிய ஏற்பாட்டுக் காலத்திற்கு மோசேயின் பிரமாணம் தேவையற்றது அது பயனற்றது இனிமேல் மோசேயின் பிரமாணம் தேவையில்லை நாம் புதிய ஏற்பாட்டில் மோசேயின் பிரமாணத்தைக் குறித்து இப்படிப்பட்ட கருத்துக்களில் பல வாக்கியங்களை வாசிக்கிறோம் அவையாவன

abolished and done away (2கொரி 3:6-15); **cast out** (கலா 4:21-31); **abolished** (எபே 2:15); **blotted out; taken out of the way** (கொலோ 2:14-17); **changed** (எபி 7:12); **disannulled** (எபி 7:18); **replaced; has vanished** (எபி 8:6-13; எபி 10:9)

"அதினாலே அவர்களுக்கும் பவுல் பர்னபா என்பவர்களுக்கும் மிகுந்த வாக்குவாதமும் தர்க்கமும் உண்டானது" - இந்த வாக்கியத்தில் அவர்கள் என்பது அந்தியோகியாவிலுள்ள சீஷர்களைக் குறிக்கும். (அப் 15:3)

தீர்மானித்தார்கள் (determined)

τάσσω - tassoo - 5021

வினைச்சொல் குறித்திரு, நியமிக்கப்படு, ஒப்புவித்திரு (appointed) அப் 13:48

15 அதிகாரம்

2. பவுலையும் பர்னபாவையும் அந்தியோகியா விலிருந்து அனுப்புகிறார்கள்

அப் 15:3 அந்தப்படி அவர்கள் சபையாரால் வழிவிட்டனுப்பப்பட்டு, பெனிக்கே சமாரியா நாடுகளின் வழியாய்ப் போய், புறஜாதியார் மனந்திரும்பின செய்தியை அறிவித்து, சகோதரர் எல்லாருக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கினார்கள்.

அப் 15:4 அவர்கள் எருசலேமுக்கு வந்து, சபையாராலும் அப்போஸ்தலராலும் மூப்பராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டபோது, தேவன் தங்களைக்கொண்டு செய்தவைகளையெல்லாம் அறிவித்தார்கள்.

"அவர்கள் சபையாரால் வழிவிட்டனுப்பப்பட்டார்கள்" - சபையின் மூலமாகப் பவுலும் பர்னபாவும் அனுப்பப்படுகிறார்கள். திருச்சபை அவர்களுடைய பிரயாணச் செலவுகளை ஏற்றுக் கொள்கிறது.

"புறஜாதியார் மனந்திரும்பின செய்தியை அறிவித்தார்கள்" - அவர்களுடைய முதலாவது மிஷனெரி பிரயாணத்தின்போது புறஜாதியார் ஏராளமானோர் மனந்திரும்பினார்கள். அவர்களைப் பற்றி பவுலும், பர்னபாவும் அறிவிக்கிறார்கள்.

மனந்திரும்புதல் (conversion)

ἐπιστροφή - epistrophee - 1995

பெண்பால் பெயர்ச்சொல் - திரும்புதல்

மனந்திரும்புதல்

தவறான வழியில் ஒருவன் இதுவரையிலும் சென்று கொண்டிருந்தால் அவன் தேவவசனத்தைக் கேட்டு அதற்கு முற்றிலுமாகக் கீழ்ப்படிந்து தேவனிடத்தில் திரும்பி வருவதே மனந்திரும்புதலாகும்.

மனுஷன் இயற்கையாகவே தன்னுடைய ஜென்ம சுபாவத்தின் பிரகாரம் பாவியாக இருக்கிறான். அவன் பாவத்தையும் உலகக் காரியங்களையும் நேசிக்கிறான். தேவனிடத்தில் மனுஷன் தன்னை ஒப்புக் கொடுக்கும்போது, அவனுக்குப் பாவத்தின்மீதும் உலகக் காரியங்களின்மீதும் வெறுப்பு உண்டாகிறது. அவன் மனம் மாறுகிறான். மனுஷனுக்கு பாவத்தின்மீது வெறுப்பு உண்டாவதும் அவன் தேவனிடத்தில் திரும்பி வருவதும் சாத்தியமானதே. 2கொரி 5:17-18

விசுவாசிகளாகிய நாம் இயேசு கிறிஸ்துவில் மனந்திரும்பி வந்திருக்கிறவர்கள். அவிசுவாசிகளுக்கு தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கூறி, அவர்களையும் மனந்திரும்புவதற்கு வழிநடத்த வேண்டும். அவிசுவாசிகளை மனந்திரும்புவதற்கு வழிநடத்தும் வழிமுறைகள்

1. நம்முடைய பேச்சாற்றலினாலோ விவாதத்தினாலோ விஞ்ஞான முறைமையினாலோ நாம் யாரையும் மனந்திருந்தச் செய்ய முடியாது. பரிசுத்த ஆவியானவரே ஒருவருடைய மனதைத் திருத்துகிறவர். யோவான் 16:7-11

2. தேவனுடைய வார்த்தையின் மூலமாக மனந்திரும்புதல் உண்டாகிறது. யோவான் 15:3; யாக் 1:18; 1பேதுரு 1:23; எபி 4:12

3. பாவி தன்னுடைய பாவங்களுக்காக மனம் வருந்தி, திருந்தும்போது மனந்திரும்புதல் உண்டாகிறது. லூக்கா 13:1-5; 2கொரி 7:10; 1யோவான் 1:9; லூக்கா 18:13; அப் 3:19

4. இயேசு கிறிஸ்துவின் நாமத்திலும் அவருடைய பாவநிவாரண பலியிலும் விசுவாசம் வைப்பதன் மூலமாக மனந்திரும்புதல் உண்டாகிறது. மத் 1:21; அப் 4:12

ஒருவன் மனந்திரும்புவதற்குப் பலவிதமான இடையூறுகள் இருக்கலாம். அவையாவன

1. சுயநேசம். தன்னைத்தானே அதிகமாக நேசிப்பது. தான் இரட்சிக்கப்படவில்லை, பாவத்தில் மூழ்கியிருக்கிறோம் என்பதை ஏற்றுக் கொள்ள மனதில்லாமல் இருப்பது.

15 அதிகாரம்

2 முழு மனதோடு இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளாமல அரைகுறை இருதயத்தோடு தேவனை ஏற்றுக் கொளவது. பாவத்திலிருந்து விடுதலை பெறறு. தேவனிடத்தில தன்னைப் பூரணமாக அர்ப்பணிக்க மனதில்லாமல் இருப்பது.

3 காலம்தாழத்துதல இப்போது மனந்திரும்ப வேண்டாம் பின்பு தேவைப்படும்போது வேறு எப்போதாவது மனந்திரும்பிக் கொளளலாம் என்று மனந்திரும்புவதைக் காலதாமதப் படுத்துவது.

4 இயேசு கிறிஸ்துவை விசுவாசியாமல இருப்பதறகு ஏதாவது சாக்குப் போக்குகளைக் கூறுவது. தேவனுசுகும். சத்தியத்திறகும் தன்னுடைய இருதயத்தில இடம் தராமல இருப்பது.

ஒருவர் உணமையிலேயே மனநதிருமபி இருக்கிறாரா இலலையா எனபதைக் கணடறிவதற்கு ஒருசில சான்றுகள உளளன அவையாவன

1 அவா புதிய சிருஷடியாக இருப்பார் அவருடைய வாழகையில பெரிய மாறறம ஏற்பட்டிருககும் (2 கொரி 5:17 18)

2 பரிசுத்த ஆவியானவர் அவருககுச சாட்சி பகருவார் (ரோமா 8:16)

3 ஆக்கினைக்குட்பட்டிருக்கமாட்டார (ரோமா 8:1 4)

4 பாவத்திலிருந்து கழுவப்பட்டிருப்பார் (1 யோவான் 1:7 9)

5 பாவத்திற்கு அடிமையாக இராமல் பாவத்தின்மீது ஜெயம் பெற்றிருப்பார் (யோவான்8 31-36; 1யோவான் 2:29, 1யோவான் 3:5 10 1யோவான் 5:1-4,18; ரோமா 6)

6 தேவனுடைய பிள்ளையாக இருப்பார் (யோவான் 1:12; 2தீமோ 1:7)

7 தன்னுடைய மாம்சத்தைச் சிலுவையில் அறைந்திருப்பார் (கலா 5:24)

8 இரட்சிப்பின் சந்தோஷம் அவரிடத்தில் காணப்படும். (1கொரி 6:11)

இன்றே இரட்சணிய நாள் ஆகையினால் தேவன் இலவசமாகத் தரும் இந்த இரட்சிப்பை யாரும் அசட்டை பண்ணாமல் காலதாமதம் பண்ணாமல் ஏறறுக் கொள்ள வேணடும் காலதாமதம் பணணுவதினால் பலவிதமான உபத்திரவஙகள் பெருகும். (2கொரி 6:2) மனந்திரும்புதல் அனுபவம் கிறிஸ்தவ வாழக்கையின் ஒரு ஆரம்பம் மட்டுமே (கொலோ 2:6-7 2பேதுரு 3:18) நமது ஆவிக்குரிய ஜீவியத்தில் பூரண புருஷராகும் வரையிலும் நாம் வளர்ந்து கொண்டே இருக்க வேணடும்

"தேவன் தங்களைக்கொண்டு செய்தவைகளையெல்லாம் அறிவித்தார்கள்" - தேவன பவுலோடும் பர்னபாவோடும் கூடவே இருந்தார் நம்மோடு தேவன் இருக்கும்போது நமக்கு ஆவிக்குரிய ஜீவியத்திலும் ஊழியத்திலும் வெறறி உறுதியாகிறது (அப் 7:9; அப 10:38; யோவான் 3:2)

3. ஆலோசனைச் சங்கத்தின் நோக்கம்

அப 15:5 அப்பொழுது பரிசேய சமயத்தாரில விசுவாசிகளான சிலா எழுந்து அவர்களை விருத்தசேதனம் பணணுகிறதும் மோசேயின நியாயப் பிரமாணத்தைக் கைக்கொளளும்படி அவாகளுக்குக கறபிக்கிறதும் அவசியம் என்றாாகள

அப 15:6 அப்போஸ்தலரும் மூப்பரும் இந்தக் காரியத்தைக் குறித்து ஆலோசனை பணணும்படி கூடினாாகள

"பரிசேய சமயத்தாா" (அப 15:7) இவாகளில விசுவாசிகளான சிலர் இருந்தாாகள இவாகள் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தாலும விருத்தசேதனம்பணணுகிறதும் மோசேயின நியாயப்பிரமாணத்தைக் கைக்கொளளும்படி அவாகளுக்குக் கற்பிக்கிறதும் அவசியம் என்றாாகள ஆனால இது அவசியமில்லை. இந்தப்பிரச்சனை இந்த அதிகாரத்தில் தீர்த்து வைக்கப்படுகிறது. (அப 15:19-28)

15 அதிகாரம்

"அப்போஸ்தலரும் மூப்பரும் இந்தக் காரியத்தைக் குறித்து ஆலோசனைபண்ணும்படி கூடினார்கள்" - (அப் 14:23) திருச்சபையின் மூப்பர்கள் எல்லோரும் கூடும் முதலாவது மாநாடு. பவுல் மூன்றாம் முறையாக எருசலேமிற்கு வருகிறார் (அப் 9:26; அப் 11:30)

4. பேதுருவின் வாக்குவாதம்

அப் 15:7 மிகுந்த தர்க்கம் உண்டான போது, பேதுரு எழுந்து, அவர்களை நோக்கி: சகோதரரே, நீங்கள் அறிந்திருக்கிறபடி புறஜாதியார் என்னுடைய வாயினாலே சுவிசேஷ வசனத்தைக் கேட்டு விசுவாசிக்கும்படி தேவன் அநேக நாட்களுக்கு முன்னே உங்களில் ஒருவனாகிய என்னைத் தெரிந்துகொண்டார்.

அப் 15:8 இருதயங்களை அறிந்திருக்கிற தேவன் நமக்குப் பரிசுத்த ஆவியைத் தந்தருளினதுபோல அவர்களுக்கும் தந்தருளி, அவர்களைக்குறித்துச் சாட்சி கொடுத்தார்.

அப் 15:9 விசுவாசத்தினாலே அவர்கள் இருதயங்களை அவர் சுத்தமாக்கி, நமக்கும் அவர்களுக்கும் யாதொரு வித்தியாசமுமிராதபடி செய்தார்.

அப் 15:10 இப்படியிருக்க, நம்முடைய பிதாக்களாலும் நம்மாலும் சுமக்கக் கூடாதிருந்த நுகத்தடியைச் சீஷர் கழுத்தின்மேல் சுமத்துவதினால் நீங்கள் தேவனைச் சோதிப்பானேன்?

அப் 15:11 கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையினாலே அவர்கள் இரட்சிக்கப்படுகிறது எப்படியோ, அப்படியே நாமும் இரட்சிக்கப்படுவோமென்று நம்பியிருக்கிறோமே என்றான்.

"மிகுந்த தர்க்கம் உண்டானது" - மோசேயின் பிரமாணத்தைக் கைக்கொண்டு விருத்தசேதனம் பெற்றால்தான் இரட்சிக்கப்பட முடியும் என்று ஒரு பிரிவினரும் இரட்சிக்கப் படுவதற்கு இவை தேவையில்லை என்று மற்றொரு பிரிவினரும் தர்க்கம் பண்ணுகிறார்கள். திருச்சபையின் கூட்டத்தில் இந்தத் தர்க்கம் இல்லாமலேயே அப்போஸ்தலர்கள் எழும்பி நின்று இதுதான் சத்தியம் என்று வாக்குவாதம் பண்ணாமல் அறிவித்திருக்கலாம். ஆனாலும் திருச்சபையாரின் சந்தேகத்தைத் தீர்த்து வைப்பதற்கும் அவர்களுக்குச் சத்தியத்தில் தெளிவை உண்டுபண்ணுவதற்கும் அப்போஸ்தலர்கள் விரும்புகிறார்கள். ஆகையினால் அவர்களுடைய கருத்துக்களைத் தாராளமாகக் கூறுவதற்கு அனுமதிக்கிறார்கள்.

பரிசேயர் சமயத்தாரில் விசுவாசிகளானவர்களுக்கு கெரிந்தஸ் (Cerinthus) என்பவன் தலைவனாக இருந்து விவாதம் பண்ணினான் என்று திருச்சபை வரலாறு கூறுகிறது. இவர்கள் தங்களுடைய கருத்துக்களைக் கூறி முடித்தபின்பு, அப்போஸ்தலர்கள் அவர்களுடைய தர்க்கங்களுக்கும் சந்தேகங்களுக்கும் விடை கூறுகிறார்கள். அவர்களுடைய எண்ணங்கள் தவறானவை என்பதையும் வேதவாக்கியங்களுக்கு முரணானவை என்பதையும் ஆவிக்குரிய ஜீவியத்திற்குப் பயனற்றவை என்பதையும் புறஜாதியாரிலிருந்து விசுவாசிகளானவர்களுக்கு இந்தப் பிரமாணங்களைக் கைக்கொள்வது கடினமானது என்பதையும் அப்போஸ்தலர்கள் திருச் சபையாருக்கு வேதவசனங்களின் ஆதாரத்தோடு தெளிவாக எடுத்துக் கூறுகிறார்கள்.

"பேதுரு எழுந்து, அவர்களை நோக்கி: தேவன் அநேக நாட்களுக்கு முன்னே உங்களில் ஒருவனாகிய என்னைத் தெரிந்துகொண்டார்" அநேக நாட்களுக்கு முன்பு என்பது 10 அல்லது 12 வருஷங்களுக்கு முன்பு என்று பொருள்படும். (அப் 10:20)

"புறஜாதியார் என்னுடைய வாயினாலே சுவிசேஷ வசனத்தைக் கேட்டு விசுவாசிக்கும்படி" அப்போஸ்தலர் 10 ஆம் அதிகாரத்திற்கு முன்பு புறஜாதியாருக்குச் சுவிசேஷம் அறிவிக்கப்படவில்லை என்பது இந்த வாக்கியத்தின் வாயிலாகத் தெரிய வருகிறது. (அப் 10:6,22,32 33; அப் 11:13-14

அப்போஸ்தலர் - தொகுப்புரை

15 அதிகாரம்

"இருதயங்களை அறிந்திருக்கிற தேவன்" - மனுஷன் முகத்தைப் பார்க்கிறவன் ஆனால் தேவனோ நமது இருதயங்களை அறிந்திருக்கிறவர் ஒவ்வொருவனுக்கும் அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும் படிக்கு. இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளந்திரியங்களைச் சோதித்தறிகிற வருமாய் இருக்கிறார்" (எரே 17:10)

"தேவன் நமக்குப் பரிசுத்த ஆவியைத் தந்தருளினதுபோல அவர்களுக்கும் தந்தருளி, அவர்களைக்குறித்துச் சாட்சி கொடுத்தார்" - (அப் 10:46) இரட்சிக்கப்படுவதற்குப் புறஜாதியாரும் தகுதியானவர்கள் என்பதைத் தேவன் தாமே சாட்சி பகருகிறார் தேவன் சாட்சி கொடுக்கிறார் என்பது அவர் அங்கீகரிக்கிறார் என்றும் தமது முத்திரையை அதன்மீது பதிக்கிறார் என்றும் பொருள் தேவன் புறஜாதியாருக்கு பரிசுத்த ஆவியைத் தந்தருளினார் பெந்தெகொஸ்தே நாளில் சீஷர்களுக்குப் பரிசுத்த ஆவியைத் தந்ததுபோலவே. இப்போது புறஜாதியாருக்கும் பரிசுத்த ஆவியைத் தந்தருளினார் கிறிஸ்துவில் யூதர் என்றும் புறஜாதியார் என்றும் வித்தியாசம் எதுவும் இல்லை (1கொரி 12:13; கலா 3:28 கொலோ 3:11) புறஜாதியார் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்ட போது அவர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளவும் இல்லை. விருத்தசேதனம் பண்ணிக் கொள்ளவும் இல்லை

"விசுவாசத்தினாலே அவர்கள் இருதயங்களை அவர் சுத்தமாக்கினார்" பரிசுத்த ஆவியானவரே அவர்களுடைய இருதயங்களைச் சுத்தமாக்கினார் பேதுரு வார்த்தைகளைப் பிரசங்கம் பண்ணிக் கொண்டிருந்தபோதே அவர்களுடைய இருதயச் சுத்திகரிப்பு நடைபெற்றது. (அப் 10:44-48) ஒருவர் புது சிருஷ்டியாகும்போது தேவன் அவருடைய இருதயத்தைச் சுத்திகரிக்கிறார் (2கொரி 5:17-18; 2தெச 2:13; 1யோவான் 1:9; 1யோவான் 2:29; 1யோவான் 3:5-10; 1யோவான் 5:1; 4:18) இருதயச் சுத்திகரிப்பு இல்லாமல் புது சிருஷ்டி இல்லை பெந்தெகொஸ்தே நாளில் சீஷர்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முன்பாகவே தேவன் அவர்களுடைய இருதயங்களைச் சுத்திகரித்து இருந்தார். (யோவான் 13:11; யோவான் 15:3; யோவான் 17:14-16) விசுவாசத்தினாலே தேவன் நமது இருதயங்களைச் சுத்திகரிப்பார் (ரோமர் 10:9-10; எபே 2:8-9)

"இப்படியிருக்க நம்முடைய பிதாக்களாலும் நம்மாலும் சுமக்கக்கூடாதிருந்த நுகத்தடியைச் சீஷர் கழுத்தின்மேல் சுமத்துவதினால் நீங்கள் தேவனைச் சோதிப்பானேன்?" - நுகத்தடி என்பது விருத்தசேதனத்தை மட்டும் குறிப்பிடவில்லை. புறஜாதியாருக்குத் தேவன் 1800 வருஷங்களாகக் கொடுத்திராத பிரமாணங்களைத் தேவன் அவர்களுக்குக் கொடுத்தார் என்று கூறி அவர்கள்மீது கட்டாயமாக அதைச் சுமத்துவதும் நுகத்தடியாகும். (ரோமர் 2:12-16) நியாயப்பிரமாணமும் விருத்தசேதனமும் அடிமைத்தனத்தின் நுகமாகும் யாராலும் அதைச் சுமக்க முடியாது (அப் 15:10; கலா 5:1) இயேசு கிறிஸ்துவில் நமக்கு விடுதலை உண்டு ஆனால் சிலர் இந்த விடுதலையைச் சந்தோஷமாக அனுபவிப்பதற்குப் பதிலாகத் தங்களுடைய கழுத்தின்மேல் ஒருசில நுகத்தடியைச் சுமத்திக் கொள்கிறார்கள் தங்களோடு போகாமல் தங்களைச் சேர்ந்த மற்றவர்களின் கழுத்தின் மேலும் பலவிதமான நுகத்தடியைச் சுமத்துகிறார்கள் (2கொரி 3:6-17; கலா 2:4; கலா 5:1-13)

"நீங்கள் தேவனைச் சோதிப்பானேன?" - தேவனே புறஜாதியாரை இரட்சித்து அவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரை அருளினார் அவர்கள் விருத்தசேதனம் பண்ண வேண்டுமென்றும் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்றும் தேவன் எந்தவித நிபந்தனையையும் அவர்கள்மீது சுமத்தவில்லை இவற்றைத் தேவன் அவர்களுக்காகத் திட்டமிடவும் இல்லை. ஆனால் யூதர்களோ இவர்களை நியாயப்பிரமாணத்திற்குக் கடனாளிகளாக்குகிறார்கள் (கலா 5:3) தேவன் எதிர்பாராக்காத காரியங்களை யூதர்கள் புறஜாதியாரிடமிருந்து எதிர்பார்த்து தேவனுக்குக் கோபம் உண்டாக்குகிறார்கள் தேவனுடைய சித்தத்திற்கு எதிர்த்து நின்று தேவனுடைய கிருபையை அவமதிக்கிறார்கள் புறஜாதியார் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளாமலேயே இயேசு கிறிஸ்துவின்மீது விசுவாசம் வைத்து இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள் தேவனே இவர்களைத் தமது கிருபையினாலும், தயவினாலும் இரட்சித்திருக்கிறார் ஆனால் யூதர்கள் இவர்களுடைய இரட்சிப்பை அங்கீகரிக்கவில்லை. இதன் மூலமாக இவர்கள் தேவனைச் சோதிக்கிறார்கள்

15 அதிகாரம்

இந்த வாக்கியத்தில் சோதித்தல என்பதற்கான கிரேக்க வார்த்தை "பேராஜோ" (peirazoo) என்பதாகும். வேதாகமத்தில இந்த வார்த்தை இவ்வாறு மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. "tempt" (மத் 4:1; மத் 16:1; மத் 19:3; மத் 22:18,35 மாற்கு 1:13; மாற்கு 8:11; மாற்கு 10:2; மாற்கு 12:15; லூக்கா 4:2; லூக்கா 11:16 லூக்கா 22:23; யோவான் 8:6; அப 5:9 அப 15:10; 1கொரி 7:5; 1கொரி 10:9,13, கலா 6:1; 1தெச 3:5; எபி 2:18; எபி 3:9 எபி 4:15; எபி 11:37; யாக் 1:13-14) "tempter" (மத் 4:3; 1தெச 3:5); try (எபி 11:17; வெளி 2:2,10; வெளி 3:10) "assay" (அப 16:7); "go about" (அப் 24:6); "examine" (2கொரி 13:5); "prove" (யோவான் 6:6)

சோதி (tempt) - πειράζω - peirazoo - 3985

வினைச்சொல் - சோதி சோதனைக்காரனாயிரு, பிரயத்தனம் பண்ணு, சோதனைக்குட்படுத்து பரிட்சை பார், முயற்சி செய், தூண்டிவிடு (try, put to the test)

"அவர்கள் இரட்சிக்கப்படுகிறது எப்படியோ" அவர்கள் என்பது புறஜாதியாரைக் குறிக்கும் அப 15:10 ஆம் வசனத்தில் கூறப்பட்டிருக்கும் யூதர்களுடைய பிதாக்களைக் குறிக்காது.

"கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையினாலே அவர்கள் இரட்சிக்கப்படுகிறது எப்படியோ, அப்படியே நாமும் இரட்சிக்கப் படுவோமென்று நம்பியிருக்கிறோமே" இயேசுகிறிஸ்துவின் கிருபையினாலேயே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் நம்முடைய கிரியையினால யாரும் இரட்சிக்கப்படுவதில்லை ரோமர் 3:23-31 ரோமர் 4:2,6, ரோமர் 9:11, ரோமர் 11:6, கலா 2:16, கலா 3:2,14, எபே 2:8,9 தீத்து 3:5) நாம் விசுவாசிக்க வேண்டும். நமது பாவங்களிலிருந்து மனந்திருந்தி, தேவனிடம் வரவேண்டும்.

தேவன் தமது கிருபையினால் நம்மை இரட்சிப்பார் (லூக்கா 13:1-5; எபே 2:8-9 நாம் ஆவியில நடந்து ஜீவிக்க வேண்டும் தேவனிடத்தில நாம் தொடர்ந்து விசுவாசம் வைத்திருக்க வேண்டும். தம்மை விசுவாசிக்கிறவர்களைத் தேவன் நீதிமான்களாக்குகிறார் ஆகையினால் விசுவாசமும் தேவை கிரியையும் தேவை (ரோமர் 6:14-23; ரோமர் 8:1-13 கலா 5:16-26; கொலோ 1:6-7 கொலோ 3:5-10; 1யோவான் 1:7) புறஜாதியார் கிருபையினாலே இரட்சிக்கப்படுவார்கள் யூதர்கள் நியாயப் பிரமாணத்தினாலே இரட்சிக்கப்படுவார்கள் என்று பிரித்துக் கூறவும் முடியாது (அப 15:11; ரோமர் 10:9-17; 1கொரி 12:13 கலா 3:28; கொலோ 3:11) தேவனிடத்தில் நாம் தொடர்ந்து விசுவாசம் வைத்திருக்க வேண்டும். தம்மை விசுவாசிக்கிறவர்களைத் தேவன் நீதிமான்களாக்குகிறார் ஆகையினால், விசுவாசமும் தேவை, கிரியையும் தேவை. (ரோமர் 6:14-23, ரோமர் 8:1-13; கலா 5:16-26 கொலோ 1:6-7; கொலோ 3:5-10 1யோவான் 1:7) புறஜாதியார் கிருபையினாலே இரட்சிக்கப்படுவார்கள் யூதர்கள் நியாயப் பிரமாணத்தினாலே இரட்சிக்கப்படுவார்கள் என்று பிரித்துக் கூறவும் முடியாது (அப 15:11; ரோமர் 10:9-17; 1கொரி 12:13 கலா 3:28; கொலோ 3:11

அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் பேதுரு கூறியிருப்பதாக எழுதப்பட்டிருக்கும் கடைசி வார்த்தைகள் இவைகளே கலா 2:14-21 ஆகிய வசனங்களில் பேதுருவிற்கு எதிராக இந்த வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருப்பதை நாம் வாசித்தறியலாம்.

5. தேவன் புறஜாதியாருக்குள்ளே அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்கிறார் (கலா 3:1-5)

அப 15:12 அப்பொழுது கூடிவந்திருந்த யாவரும் அமைந்திருந்து, பர்னபாவும் பவுலும் தங்களைக்கொண்டு தேவன் புறஜாதிகளுக்குள்ளே செய்த அடையாளங்கள் அற்புதங்கள் யாவையும் விவரித்துச் சொல்லக் கேட்டார்கள்

15 அதிகாரம்

"கூடிவந்திருந்த யாவரும் அமைந்திருந்தார்கள்" - எல்லோரும் அமைதியாக இருக்கிறார்கள். பேதுருவின் விவாதத்திற்கு யாரும் எதிர்பேசவில்லை. பேதுருவின் விவாதம் எளிமையாகவும் தெளிவாகவும் இருந்தது. தேவன் அவனுடைய வார்த்தைகளை உறுதிபண்ணினார்.

"பர்னபாவும் பவுலும் தங்களைக்கொண்டு தேவன் புறஜாதிகளுக்குள்ளே செய்த அடையாளங்கள் அற்புதங்கள் யாவையும் விவரித்துச் சொல்லக் கேட்டார்கள்" - பேதுருவிற்கு அடுத்த படியாக பவுலும் பர்னபாவும் பேசுகிறார்கள். நியாயப் பிரமாணத்தைக் கடைபிடிக்காமலேயே புறஜாதியார் மத்தியில் தேவன் செய்த அடையாளங்களையும், அற்புதங்களையும் பவுலும், பர்னபாவும் கூடி வந்திருந்த யாவருக்கும் விவரித்துச் சொல்லுகிறார்கள். அவர்கள் கூறுவதைத் திருச்சபையார் செவிகொடுத்துக் கேட்கிறார்கள்.

6. யாக்கோபுவின் விவாதம் - ரோமர் 3:21

அப் 15:13 அவர்கள் பேசி முடிந்தபின்பு, யாக்கோபு அவர்களை நோக்கி: சகோதரரே, எனக்குச் செவிகொடுங்கள்.

அப் 15:14 தேவன் புறஜாதிகளினின்று தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தைத் தெரிந்து கொள்ளும்படி முதல்முதல் அவர்களுக்குக் கடாட்சித்தருளின விதத்தைச் சீமோன் விவரித்துச் சொன்னாரே.

அப் 15:15 அதற்குத் தீர்க்கதரிசிகளுடைய வாக்கியங்களும் ஒத்திருக்கிறது.

அப் 15:16 எப்படியெனில் மற்ற மனுஷரும் என்னுடைய நாமந்தரிக்கப்படும் சகல ஜாதிகளும் கர்த்தரைத் தேடும்படிக்கு,

அப் 15:17 நான் இதற்குப்பின்பு திரும்பி வந்து, விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்து, அதில் பழுதாய்ப்போனவைகளை மறுபடியும் சீர்ப்படுத்தி, அதைச் செவ்வையாக நிறுத்துவேன் என்று இவைகளையெல்லாஞ்செய்கிற கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது.

அப் 15:18 உலகத்தோற்றமுதல் தேவனுக்கு தம்முடைய கிரியைகளெல்லாம் தெரிந்திருக்கிறது.

"யாக்கோபு" - பவுலுக்கும், பர்னபாவிற்கும் அடுத்தபடியாக யாக்கோபு பேசுகிறார். இவர் இயேசு கிறிஸ்துவின் சகோதரர். திருச்சபையின் பொதுக்குழுவிற்குத் தலைவர் (அப் 12:17 தாக்கா 8:1) தமது செய்தியின் மூலமாக இந்தப் பிரச்சனைக்கு இறுதித் தீர்ப்பு வழங்குகிறார். "ஆதலால் புறஜாதிகளில் தேவனிடத்தில் திரும்புகிறவர்களைக் கலங்கப் பண்ணலாகாதென்றும், விக்கிரகங்களுக்குப் படைத்த அசுசியானவைகளுக்கும், வேசித்தனத்திற்கும், நெருக்குண்டு செத்ததிற்கும், இரத்தத்திற்கும் விலகியிருக்கும்படி அவர்களுக்கு நாம் எழுதவேண்டுமென்றும் நான் தீர்மானிக்கிறேன்" (அப் 15:19,20) என்று கூறி இந்த விவாதத்திற்குத் தீர்ப்புக் கூறி முற்றுப்புள்ளி வைக்கிறார்.

"சிமியோன் விவரித்துச் சொன்னாரே" யாக்கோபு இங்கு சீமோன் பேதுருவைப் பேதுரு என்று அழைக்காமல் சிமியோன் என்று அழைக்கிறார். மத் 16:18 ஆவது வசனத்தில் இயேசு கிறிஸ்து சீமோன் பேதுருவிடம் "நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" என்று கூறினார். சீமோன் பேதுரு சபையின் அஸ்திபாரம் அல்ல. இயேசு கிறிஸ்துவின் மீதுதான் சபை கட்டப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் திருச்சபைக்குத் தேவன் அங்கீகரித்திருந்த தூண்களில் பேதுருவும் ஒருவர். யாக்கோபிற்கு இந்தச் சத்தியம் தெளிவாகத் தெரிந்திருந்தபடியினால் அவர் பேதுருவைப் பேதுரு என்று அழைக்காமல் சாதாரணமாகச் சிமியோன் என்று அழைக்கிறார்.

15 அதிகாரம்

"தேவன் புறஜாதிகளினின்று தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தைத் தெரிந்து கொள்ளும்படி முதல்முதல் அவர்களுக்குக் கடாட்சித்தருளின விதம்" – அப 10.34-48 அப 11:14 ஆகிய வசனங்களிலுள்ள நிகழ்ச்சிகளைக் குறிக்கும்

"அதற்குத் தீர்க்கதரிசிகளுடைய வாக்கியங்களும் ஒத்திருக்கிறது" - புறஜாதியாரின் இரட்சிப்பைக் குறித்து தீர்க்கதரிசிகளும் முன்னறிவித்திருக்கிறார்கள் (ஏசா 11:10; ஏசா 42:1.6 ஏசா 49:6.22; ஏசா 60:3; ஏசா 66:19, ரோமர் 9.25-33; மல 1:11; ஆமோ 9:10-11)

அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 19

"மற்ற மனுஷரும் என்னுடைய நாமந்தரிக்கப்படும் சகல ஜாதிகளும் கர்த்தரைத் தேடும்படிக்கு நான் இதற்குப்பின்பு திரும்பிவந்து, விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்து அதிலே பழுதாய்ப்போனவைகளை மறுபடியும் சீர்ப்படுத்தி, அதைச் செவ்வையாக நிறுத்துவேன் என்று இவைகளையெல்லாஞ் செய்கிற கா[illegible] சொல்லுகிறார் (அப் 15:16-17 ஆமோ 9:11-12)

இந்த வாக்கியத்தில் "இதற்குப் பின்பு" என்பது சபையின்காலம் முடிவு பெற்று சபை எடுத்துக் கொள்ளப்பட்டு தேவன் இஸ்ரவேல் தேசத்தை மறுபடியும் கட்ட ஆரம்பிக்கும் காலத்தைக் குறிக்கும் மேசியா தமது நித்திய ஆளுகைக்காக இஸ்ரவேல் தேசத்தைக் கட்டுவார் (ஓசி 3:4-5 ஏசா 9:6-7 தானி 7:13-14 லூக்கா 1:32-33 வெளி 11:15 வெளி 20:1-10, வெளி 22:4-5) இயேசு கிறிஸ்து திரும்பி வரும்போது தாவீதின் ராஜ்யம் மறுபடியும் எடுப்பித்து சீர்ப்படுத்தி செவ்வையாக நிறுத்தப்படும் மத் 24:29-31 மத் 25:31-46, 2தெச 1:7-10; வெளி 19:11-21 சக 14.)

கூடாரம் (tabernacle) - σκηνή - skeenee - 4633

பெண்பால் பெயர்ச்சொல் - கூடாரம், வீடு, வாசஸ்தலம் (tent) - இயேசு கிறிஸ்து மறுபடியும் வரும்போது தாவீதின் ராஜ்யம் ஒரு கூடாரம்போல மிகவும் தாழ்ந்த நிலைமையில் இருக்கும் (சக 14:1-5,14)

"மற்ற மனுஷர்" (residue of men) - இந்த வாக்கியம் இஸ்ரவேலில் மீந்திருப்பவர்களையும், (ஏசா 1:9) கர்த்தரைத் தேடி அவருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளும் புறஜாதியாரையும் குறிக்கும்.

"உலகத்தோற்றமுதல் தேவனுக்குத் தம்முடைய கிரியைகளெல்லாம் தெரிந்திருக்கிறது" - தேவனுக்கு ஒரு திட்டம் உண்டு. உலகத்தோற்ற முதல் அவருடைய திட்டம் அவருக்குத் தெரிந்திருக்கிறது. அவருடைய திட்டத்தை மனுக்குலத்திற்கு வெளிப்படுத்தி விளக்குவதே பரிசுத்த வேதாகமம் (எபே 1:9)

7. **புறஜாதிகளில் தேவனிடத்தில் திரும்புகிறவர்களை கலங்கப் பண்ணுதலாகாது** - (ரோமர் 3:21)

அப 15:19 ஆதலால் புறஜாதிகளில் தேவனிடத்தில் திரும்புகிறவர்களைக் கலங்கப்பண்ணலாகாதென்றும்

அப 15:20 விக்கிரகங்களுக்குப் படைத்த அசுசியானவைகளுக்கும், வேசித்தனத்திற்கும், நெருக்குண்டு செத்ததிற்கும் இரத்தத்திற்கும் விலகியிருக்கும்படி அவர்களுக்கு நாம் எழுதவேண்டுமென்றும் நான் தீர்மானிக்கிறேன்

அப 15:21 மோசேயின் ஆகமங்கள் ஓய்வுநாள்தோறும் ஜெப ஆலயங்களில் வாசிக்கப்பட்டு வருகிறபடியால், பூர்வகாலந்தொடங்கிச் சகல பட்டணங்களிலும் அந்த ஆகமங்களைப் பிரசங்கிக்கிறவர்களும் உண்டே என்றான்

15 அதிகாரம்

"புறஜாதிகளில் தேவனிடத்தில் திரும்புகிறவர்களைக் கலங்கப்பண்ணலாகாது" - மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும் புறஜாதியாரை கலங்கப் பண்ணக்கூடாது. அவர்கள் ஆறுதலாகவும், சமாதானமாகவும் சந்தோஷமாகவும் இயேசு கிறிஸ்துவை பின்பற்ற வேண்டும். தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாகக் கிரியை செய்து விடக்கூடாது. இந்த நோக்கத்தோடுதான் திருச்சபையின் பொதுக்குழு கூடியிருக்கிறது.

"நான் தீர்மானிக்கிறேன்" - என்று யாக்கோபு கூறுகிறார். இதை பேதுரு கூறவில்லை. யாக்கோபே திருச்சபையின் தலைவர். ஆகையினால் இறுதித்தீர்ப்பை யாக்கோபு தன் வாயினால் கூறுகிறார்.

புறஜாதியாரில் விசுவாசிகளானவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற பிரமாணங்கள்

1. விக்கிரகங்களுக்குப் படைத்த அசுசியானவைகளுக்கு விலகியிருக்க வேண்டும். விக்கிரகங்களிலிருந்து முழுவதுமாக விலகியிருக்க வேண்டும். விக்கிரகாராதனையில் காணப்படும் எந்த அசுத்தத்திலும் பங்குபெறாமல் விலகியிருக்க வேண்டும். (அப் 15:20,29; 1கொரி 8:7-13; 1கொரி 10:18-22)

2. வேசித்தனத்திற்கு விலகியிருக்க வேண்டும். வேசித்தனங்களும் விபசாரங்களும் பழைய ஏற்பாட்டு காலத்தில் விக்கிரகாராதனையின் ஓர் அம்சமாக இருந்தது. (அப் 15:20,29; எண் 25:1-15) இவற்றிலிருந்து புறஜாதியார் விலகியிருக்க வேண்டும்.

3. நெருக்குண்டு செத்ததிற்கு விலகியிருக்க வேண்டும். (அப் 15:20,29; அப் 21:25) நெருக்குண்டு செத்த மிருகங்களுடைய சரீரத்தில் இன்னும் இரத்தம் இருக்கும். லேவி 17:10-14 ஆகிய வசனத்தில் கூறப்பட்டிருக்கும் பிரமாணத்தின்படி இதில் பங்குபெறுவது தவறு.

4. இரத்தத்திற்கு விலகியிருக்க வேண்டும். (அப் 15:20,29; அப் 21:25; ஆதி 9:4) இரத்தத்தைப் புசிப்பது மட்டுமல்லாமல் கொலைபண்ணுதல், இரத்தம் சிந்தும் அளவிற்கு பிறருக்கு இடையூறு பண்ணுதல் ஆகிய காரியங்களிலிருந்தும் விலகியிருக்க வேண்டும்.

விலகியிரு (Abstain) - ἀπέχω - apechoo - 567

வினைச்சொல் - விலகியிரு (அப் 15:20,29; 1தெச 4:3 ; 1தெச 5:22 ; 1தீமோ 4:3 ; 1பேதுரு 2:11)

"மோசேயின் ஆகமங்கள் ஓய்வுநாள்தோறும் ஜெபஆலயங்களில் வாசிக்கப்பட்டது" - ஒவ்வொரு ஓய்வுநாளிலும் ஆகமங்கள் வாசிக்கப்படும்போது அந்த ஆகமங்களைப் பற்றி ஒருவர் பிரசங்கித்துக் கூறும் வழக்கமும் இருந்தது.

8. பிரிவினையில்லாமல் விசுவாசிகளின் ஒற்றுமை காத்துக் கொள்ளப் படுகிறது

அப் 15:22 அப்பொழுது தங்களில் சிலரைத் தெரிந்துகொண்டு பவுலோடும் பர்னபாவோடும் அந்தியோகியாவுக்கு அனுப்புகிறது அப்போஸ்தலருக்கும் மூப்பருக்கும் சபையாரெல்லாருக்கும் நலமாகக் கண்டது. அவர்கள் யாரென்றால், சகோதரரில் விசேஷித்தவர்களாகிய பர்சபா என்று மறுபேர்கொண்ட யூதாவும் சீலாவுமே.

"சபையாரெல்லாருக்கும் நலமாகக் கண்டது" - சபை ஒருமனப்படுகிறது. தங்களுடைய கருத்து வேறுபாடுகளிலிருந்து விடுதலை பெற்று ஒன்று படுகிறார்கள். (அப் 15:25)

"பர்சபா" (Barsabas) - பர்னபாவின் சகோதரனாக இருக்கலாம். (அப் 1:23)

15 அதிகாரம்

"சீலா" (Silas) - மறுபெயர் சில்வானு (Silvanus) (2கொரி 1:19; 1தெச 1:1 2தெச 1:1 1பேதுரு 5:12) எருசலேம் திருச்சபையில் முக்கியமான தலைவர் பவுலின் இரண்டாவது மிஷினெரி பிரயாணத்தின்போது அவரோடு உடன் சென்றவர் (அப 15:40-41 அப 16:19-29 அப 17:4-15 அப 18:5) தீர்க்கதரிசி (அப 15:27,32-34) சின்ன ஆசியாவிற்குப் பேதுருவின் நிருபத்தை எடுத்துச் சென்றவர் (1பேதுரு 5:12)

9. புறஜாதி கிறிஸ்தவர்களுக்கு உபதேசம் - (கொலோ 2:14)

அப் 15:23 இவர்கள் கையில் அவர்கள் எழுதிக் கொடுத்தனுப்பின நிருபமாவது: அப்போஸ்தலரும் மூப்பரும் சகோதரருமாகிய நாங்கள் அந்தியோகியாவிலும் சீரியாவிலும் சிலிசியாவிலும் இருக்கும் புறஜாதியாராகிய சகோதரருக்கு வாழ்த்துதல் சொல்லி எழுதிய நிருபம் என்னவென்றால்.

அப 15:24 எங்களால் கட்டளைபெறாத சிலர் எங்களிடத்திலிருந்து புறப்பட்டு நீங்கள் விருத்தசேதனமடைய வேண்டுமென்றும், நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்றும் சொல்லி, இப்படிப்பட்ட வார்த்தைகளால் உங்களைக் கலக்கி, உங்கள் ஆத்துமாக்களைப் புரட்டினார்கள் என்று நாங்கள் கேள்விப்பட்டபடியினாலே.

அப 15:25 நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்காகத் தங்கள் பிராணனையும் ஒப்புக்கொடுக்கத் துணிந்தவர்களும் எங்களுக்குப் பிரியமானவர்களுமாயிருக்கிற பர்னபா பவுல் என்பவர்களோடுங்கூட

அப 15:26 எங்களால் தெரிந்து கொள்ளப் பட்ட சில மனுஷரை உங்களிடத்திற்கு அனுப்புகிறது ஒருமனப்பட்டுக் கூடின எங்களுக்கு நலமாகக் கண்டது.

அப 15:27 அந்தப்படியே யூதாவையும் சீலாவையும் அனுப்பியிருக்கிறோம். அவர்களும் இவைகளை வாய்மொழியாக உங்களுக்கு அறிவிப்பார்கள்

அப 15:28 எவையெனில் விக்கிரகங்களுக்குப் படைத்தவை களுக்கும் இரத்தத்திற்கும் நெருக்குண்டு செத்ததிற்கும் வேசித்தனத்திற்கும், நீங்கள் விலகியிருக்க வேண்டுமென்பதே.

அப 15:29 அவசியமான இவைகளையல்லாமல் பாரமான வேறொன்றையும் உங்கள்மேல் சுமத்தாமலிருப்பது பரிசுத்தஆவிக்கும் எங்களுக்கும் நலமாகக் கண்டது. இவைகளுக்கு விலகி நீங்கள் உங்களைக் காத்துக்கொள்வது நலமாயிருக்கும் சுகமாயிருப்பீர்களாக என்று எழுதினார்கள்

"உங்கள் ஆத்துமாக்களைப் புரட்டினார்கள்" (subverting your souls) - உங்களுடைய விசுவாசத்தைக் குழப்புகிறார்கள் இதன் மூலமாக உங்களுடைய ஆத்துமாக்களை நிலையில்லாமல் தத்தளிக்கச் செய்கிறார்கள்

"நீங்கள் விருத்தசேதனமடைய வேண்டுமென்றும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்றும் சொன்னார்கள்" - நியாயப்பிரமாணம் புதிய ஏற்பாட்டுக் கால விசுவாசிகளுக்கு அகற்றப் பட்டிருக்கிறது. நாம் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இயேசு கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கையில் ஜீவிக்கிறோம் ஆகையினால் பழைய ஏற்பாட்டுப் பிரமாணத்திற்கு நம்மை ஆளுகை செய்யும் அதிகாரம் இல்லை பத்து கட்டளைகளில் நான்காம் கற்பனையாகிய ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக என்னும் கற்பனை புதிய ஏற்பாட்டு விசுவாசிகளுக்கு நியமிக்கப் படவில்லை. புதிய உடன்படிக்கையில் பழைய ஏற்பாட்டின் பத்து கட்டளைகளில் ஒன்பது கற்பனைகள் மட்டுமே சேர்க்கப்பட்டிருக்கிறது.

15 அதிகாரம்

நான்காம் கற்பனையாகிய ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக என்னும் கற்பனை நீக்கப்பட்டதற்கான காரணங்கள்

1 இயேசு கிறிஸ்து தமது புதிய உடன்படிக்கையில் இந்தக் கற்பனையைச் சேர்த்துக் கொள்ளவில்லை. பத்து கற்பனைகளில் ஒன்பது கற்பனைகள் புதிய உடன்படிக்கையில் இடம் பெற்றுள்ளன. ஆனால் இந்த நான்காம் கற்பனை இடம் பெறவில்லை.

2 இயேசு கிறிஸ்து இந்த பூமியில் தமது சத்தியத்தை உபதேசம் பண்ணுவதற்கு ஏராளமான வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக்கிறார். அவற்றில் நான்கு இடங்களில் மட்டுமே ஓய்வுநாள் என்னும் வார்த்தையை பயன்படுத்தியிருக்கிறார் (மத் 12:8; மத் 24:20; மாற்கு 2:27-28; லூக்கா 6:5). ஓய்வுநாளில் நன்மை செய்வது ஏற்றுக் கொள்ளக்கூடியது என்பது இயேசு கிறிஸ்துவின் உபதேசமாகும். மனுஷனுக்காக ஓய்வுநாள் உண்டாக்கப்பட்டிருக்கிறது. மனுஷன் ஓய்வுநாளுக்காகச் சிருஷ்டிக்கப்படவில்லை. எந்த இடத்திலும் இயேசு கிறிஸ்து ஒரு குறிப்பிட்ட நாளை ஓய்வுநாளாக அனுசரித்து ஓய்ந்திருக்க வேண்டும் என்று கூறவில்லை.

3 பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவன் இஸ்ரவேல் ஜனங்களோடு ஒரு உடன்படிக்கை பண்ணினார். அந்த உடன்படிக்கையின் ஓர் அம்சமே ஓய்வுநாள் பிரமாணமாகும் (யாத் 20:8-11; யாத் 31:13-18; எசே 20:12-20). மோசேக்கு முன்பாக மனுஷரோடு இந்த உடன்படிக்கை உண்டாக்கப்படவில்லை (உபா 5:2-3). புறஜாதியாரோடும் திருச்சபையாரோடும் ஓய்வுநாள் பிரமாணம் ஏற்படுத்தப்படவில்லை (ரோமர் 2:14; உபா 4:7-10). ஆகையினால் ஓய்வுநாள் பிரமாணம் புதிய ஏற்பாட்டுக்கால திருச்சபைக்கு நியமிக்கப்படவில்லை.

4 பத்து கற்பனைகளில் ஓய்வுநாளைப் பற்றிய நான்காவது கற்பனை சடங்காச்சாரமானது. மற்ற ஒன்பதும் நீதிநெறியுடன் தொடர்புடையது. இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்தில் ஓய்வு எடுக்கமுடியாமல் துன்பங்களை அனுபவித்து வந்தார்கள். தேவன் அவர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தார். இதை நினைவுகூரும் விதமாகவே பழைய ஏற்பாட்டுக்கால இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஓய்வுநாள் பிரமாணம் கொடுக்கப்பட்டது (உபா 5:15). வருங்காலத்தில் எல்லா விசுவாசிகளுக்கும் நியமிக்கப்பட்டிருக்கும் நித்திய ஓய்விற்கு ஓய்வுநாள் பிரமாணம் ஓர் அடையாளமாகும் (கொலோ 2:14-17; எபி 4:1-11; எபி 10:1). வரப்போகும் ஒரு சத்தியத்திற்கு ஓய்வுநாள் பிரமாணம் நிழலாக இருப்பதினால் இதை ஒதுக்கி வைப்பதில் தவறொன்றும் இல்லை (மத் 11:28-29; கொலோ 2:14-17). நமது சரீரத்திற்கு ஓய்வு தேவை. நாம் எந்த நாளில் வேண்டுமானாலும் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம்.

5 பத்து கற்பனைகளில் நான்காம் கற்பனையாகிய ஓய்வுநாள் பிரமாணம் மட்டுமே மனுஷருடைய நீதிநெறியை பாதிக்காத பிரமாணம். மற்ற ஒன்பது பிரமாணங்களும் மனுஷருடைய நீதிநெறியுடன் தொடர்புடையவை. அவற்றை ஏற்றுக் கொள்ளவில்லையென்றால் மனுஷருடைய ஆத்துமா அழிந்து போகும்.

6 இந்த நான்காம் கற்பனை மனுஷனுடைய ஆத்துமாவை அழிப்பதற்குப் பெலனற்றது. பழைய ஏற்பாட்டுக்கால தீர்க்கதரிசிகள் மூலமாக இந்த ஓய்வுநாள் பிரமாணம் அழிந்துபோகும் என்று தேவன் முன்னறிவித்திருக்கிறார் (ஓசி 2:11; ஏசா 1:10-15).

7 தேவன் பழையதை அழித்துவிட்டு, புதிய உடன்படிக்கையை ஏற்படுத்துவார் என்று தீர்க்கதரிசிகள் முன்னறிவித்திருக்கிறார்கள் (ஏசா 42:6; ஏசா 49:8; ஏசா 59:21; எரே 31:31-40; எரே 32:37-44; எசே 36:24-38). புதிய ஏற்பாட்டு வசனங்களிலும் இந்தச் சத்தியம் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது (ரோமர் 11:25-29; எபி 8:8-12; எபி 10:16-18; மத் 26:28).

15 அதிகாரம்

8 இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டதைக் கொண்டாடுவதற்காகவே ஓய்வுநாள் பிரமாணம் நியமிக்கப்பட்டது (உபா 5:15) நாங்கள் விடுவிக்கப்பட்டதைத்தான் இஸ்ரவேல ஜனத்தார் நினைவுகூர வேண்டும் (யாத் 20:8) தேவன் இந்த உலகத்தைச் சிருஷ்டிக்கும்போது அவர் ஓய்ந்திருந்ததை ஓய்வுநாள் பிரமாணத்தின் மூலமாக நாம் நினைவுகூரத் தேவையில்லை

9 பத்து கற்பனைகளில் நான்காம் கற்பனையாகிய ஓய்வுநாள் பிரமாணத்தை மட்டுமே நீதிநெறி பிரமாணத்தை அழிக்காமல் அகற்ற முடியும் இஸ்ரவேல ஜனங்கள் ஓய்வுநாளில் பிரயாணம் பண்ணினார்கள் (எண் 33:3 லேவி 23:5-11 யோசு 6:12-16) ஆசரிப்புக் கூடாரத்தை நிறுவினார்கள் (யாத் 40:2,17; லேவி 23:5-11) காணிக்கை வேலைபார்த்தார்கள் (எண் 13:25) யுத்தம் பண்ணினார்கள் (1இராஜா 20:29, 2இராஜா 3:9, யோசு 6:12-16) தாவீதும், மற்றவர்களும் ஓய்வுநாள் பிரமாணத்தை மீறியபோதிலும் அவர்கள் குற்றமற்றவர்களாக இருந்தார்கள் (மத் 12:2-5)

10 கர்த்தருடைய பிள்ளைகள் வாரத்தின் எந்த நாளையும் ஓய்வுநாளாக அனுசரிப்பதற்குப் புதிய ஏற்பாடு அனுமதி அளிக்கிறது. புதிய உடன்படிக்கையில் ஓய்வுநாள் பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டும் என்னும் நிபந்தனை எதுவும் கூறப்படவில்லை (ரோமர் 14:1-13; கலா 4:9-11; கொலோ 2:14-17) ஆதித்திருச்சபையார் பழைய ஏற்பாட்டுக் கால பிரமாணத்தின் பிரகாரம் சபை கூடும் நாளை நிர்ணயம் பண்ணவில்லை தங்களுடைய சொந்த விருப்பத்தின் பிரகாரமாகவும், வசதிக்கேற்ற பிரகாரமாகவும் வாரத்தின் முதலாம் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையை சபை கூடும் நாளாக அனுசரித்து வந்தார்கள் (யோவான் 20:19; யோவான் 20:7 அப் 20:7, 1கொரி 16:2)

"எங்களால் கட்டளைபெறாத சிலர் எங்களிடத்திலிருந்து புறப்பட்டார்கள்" - அந்தியோகியாவிலுள்ள திருச்சபைக்கு பிரச்சனையை உண்டுபண்ணியவர்களை எருசலேமிலுள்ள ஆதித்திருச்சபையார் அனுப்பவில்லை. (அப் 15:1)

"இவைகளை வாய்மொழியாக உங்களுக்கு அறிவிப்பார்கள்" - எருசலேம் திருச்சபையிலிருந்து நிருபங்கள் அனுப்பப்படிருக்கிறது. நிருபத்திலுள்ள சத்தியங்களை யூதாவும், சீலாவும் வாய்மொழியாக அறிவித்து அதை உறுதிபண்ணுவார்கள் எருசலேம் திருச்சபையின் முடிவை யாரும் மாற்றி திரித்துக்கூறக்கூடாது என்பதில் அவர்கள் அதிகக் கவனத்தோடு இருந்தார்கள்

"பரிசுத்தஆவிக்கும் எங்களுக்கும் நலமாகக் கண்டது" - மோசேயின் நியாயபிரமாணத்தைப் புறஜாதியார்மீது சுமத்தாமல் இருப்பது எல்லோருக்குமே நலமாகக் காணப்படுகிறது புறஜாதியார் பாரமான இந்த நுகத்திலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள் பரிசுத்த ஆவியானவருக்கும் சபையார் எல்லோருக்கும் இவ்வாறு தீர்மானம் எடுத்திருப்பது பிரியமாக இருக்கிறது

"அவசியமான இவைகள்" புறஜாதியார் கைக்கொள்ள வேண்டும் என்று திருச்சபையார் தீர்மானம் பண்ணின நான்கு காரியங்கள் (அப் 15:20) புறஜாதியார் மட்டுமல்லாமல் யூதமார்க்கத்திலிருந்து விசுவாசிகளானவர்களும் இந்த நியதிகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். (அப் 15:29)

10. நிருபத்திற்காகவும் அதனால் உண்டான ஆறுதலுக்காகவும் சந்தோஷப்படுகிறார்கள்

அப் 15:30 அவர்கள் அனுப்பிவிடப்பட்டு, அந்தியோகியாவுக்கு வந்து சபையைக் கூடிவரச்செய்து நிருபத்தை ஒப்புவித்தார்கள்

அப் 15:31 அதை அவர்கள் வாசித்து, அதனாலுண்டாகிய ஆறுதலுக்காகச் சந்தோஷப்பட்டார்கள்

அப்போஸ்தலர் – தொகுப்புரை

15 அதிகாரம்

அப் 15:32 யூதா சீலா என்பவர்களும் தீர்க்கதரிசிகளாயிருந்த படியினாலே அநேக வார்த்தைகளினாலே சகோதரருக்குப் புத்திசொல்லி, அவர்களைத் திடப்படுத்தி.

அப் 15:33 சிலகாலம் அங்கேயிருந்து பின்பு சகோதரரால் சமாதானத்தோடே அப்போஸ்தலரிடத்திற்கு அனுப்பிவிடப் பட்டார்கள்.

அப் 15:34 ஆகிலும் சீலாவுக்கு அங்கே தரித்திருக்கிறது நலமாய்க் கண்டது.

"யூதா சீலா என்பவர்களும் தீர்க்கதரிசிகள்" - (சாமு 19:20)

அப்போஸ்தலர் (apostles) - ἀπόστολος - apostolos - 652

1 ஆண்பால பெயர்ச்சொல் - அப்போஸ்தலர் அப்போஸ்தலன் அனுப்பப்பட்டவன் ஸ்தானாபதி பன்னிரண்டு சீஷர்களைக் குறிப்பதற்கும் (மத். 10:2)

2 முக்கியமான கிறிஸ்தவத் தலைவர்களைக் குறிப்பதற்கும் (அப் 14:14). புதிய ஏற்பாட்டில் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது

ஒருவர் தன்னுடைய சார்பாக ஒருவனை தன்னுடைய முழு அதிகாரத்தோடு அனுப்புகிறார் இவ்வாறு அனுப்பப்படுகிறவர் அப்போஸ்தலர் என்னப்படுவார் அனுப்புகிறவர் அனுப்பப் படுகிறவரை ஆதரிப்பார் அவர் செய்யும் காரியங்களுக்கு அங்கீகாரம் கொடுக்கிறார் தேவன் தமது பிள்ளைகளைத் தமது ஊழியத்தைச் செய்யும் காரியமாகத் தம்முடைய பெலத்தோடும் அதிகாரத்தோடும் அனுப்பியிருக்கிறார் புதிய ஏற்பாட்டில் 81 இடங்களில் இந்த வார்த்தை அப்போஸ்தலர் என்றே மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இரண்டு வசனங்களில் ஸ்தானாபதி (messenger) (2கொரி 8:23, பிலி 2:25) என்றும் ஒரு வசனத்தில் அனுப்பப்பட்டவர் (he that is sent) (யோவான் 13:16) என்றும் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது.

புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் அப்போஸ்தலர்கள்

1 சீமோன் பேதுருவும், அவன் சகோதரரும் (Simon Peter and his brother)

2 அந்திரேயா (Andrew) (மத் 10:2)

3 செபெதேயுவின் குமாரன் யாக்கோபு (James, son of Zebedee)

4 அவன் சகோதரன் யோவான் (John his brother) (மத் 10:2)

5. பிலிப்புவும் அவன் சகோதரரும் (Philip and his brother)

6 பர்த்தொலொமேயு (Bartholomew) (மத் 10:3)

7 அல்பேயுவின் குமாரன் யாக்கோபு (James, son of Alphaeus)

8 யாக்கோபின் சகோதரனாகிய யூதா (Judas his brother) (லூக்கா 6:16)

9 மத்தேயு, அல்பேயுவின் குமாரன் ஒருவேளை யாக்கோபு, யூதா ஆகியோரின் சகோதரனாக இருக்கலாம். (Matthew, son of Alphaeus, perhaps brother of James and Judas) (மாற்கு 2:14; லூக்கா 6:15)

10 தோமா (Thomas) (மத் 10:3)

11 செலோத்தே என்னப்பட்ட சீமோன் பாரம்பரிய வரலாற்றின் பிரகாரம் யாக்கோபு, யூதா ஆகியோரின் சகோதரன் (Simon Zelotes, brother of James and Judas, according to tradition) (லூக்கா 6:15)

12 யூதாஸ்காரியோத்து (Judas Iscariot) (மத் 10:4)

13 மத்தியா (Matthias) (அப் 1:26)

14 பர்னபா (Barnabas) (1கொரி 9:5-6 அப் 13:1-3; அப் 14:4,14; கலா 2:9)

15 அதிகாரம்

15 அன்றோனீக்கு **(Andronicus)** (ரோமர் 16:7)

16 யூனியா **(Junia)** (ரோமர் 16:7)

17 அப்பொல்லோ **(Apollos)** (1கொரி 4:6-9)

18 கர்த்தருடைய சகோதரனாகிய யாக்கோபு **(James, the Lord's brother)** (கலா 1:19; கலா 2:6; யாக் 1:1)

19 சீலா **(Silas)** (1தெச 1:1; 1தெச 2:6)

20 தீமோத்தேயு **(Timothy)** (1தெச 1:1; 1தெச 2:6)

21 தீத்து **(Titus)** (2கொரி 8:23)

22 எப்பாப்பிரோதீத்து **(Epaphroditus)** (பிலி 2:25)

23 பவுல் **(Paul)** (கலா 1:1; கலா 2:8)

24 இயேசு கிறிஸ்து **(Jesus Christ)** (எபி 3:1)

பன்னிரண்டு அப்போஸ்தலர்களுடைய பெயர்கள் மத் 10:2-4; மாற்கு 3:16-19; லூக்கா 6:14-16; அப் 1:13,26 ஆகிய வசனங்களில் அட்டவணைப்படுத்தப் பட்டிருக்கிறது.

அப்போஸ்தலருக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் கட்டளை அவர்களுடைய கடமைகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரம் ஆகியவற்றைக் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வசனங்களில் நாம் வாசித்தறியலாம். (மத் 10; மத் 28:19-20; மாற்கு 3:14-15; மாற்கு 6:7-13; மாற்கு 16:15-20; லூக்கா 9:1-5; லூக்கா 24:47-53; யோவான் 20:22-23; யோவான் 21:15-19; அப் 1:4-8)

XI. பவுலின் இரண்டாவது மிஷனெரி பிரயாணம் - (அப் 15:36-18:22; 13:1 - 18:23)

1. மாற்கு என்னும் பேர்கொண்ட யோவான் நிமித்தமாக பவுலும் பர்னபாவும் பிரிந்து விடுகிறார்கள் - (அப் 13:13)

அப் 15:35 பவுலும் பர்னபாவும் அந்தியோகியாவிலே சஞ்சரித்து, வேறே அநேகரோடுங்கூடக் கர்த்தருடைய வசனத்தை உபதேசித்துப் பிரசங்கித்துக் கொண்டிருந்தார்கள்.

அப் 15:36 சிலநாளைக்குப்பின்பு பவுல் பர்னபாவை நோக்கி: நாம் கர்த்தருடைய வசனத்தை அறிவித்திருக்கிற சகல பட்டணங்களிலுமுள்ள சகோதரர்கள் எப்படியிருக்கிறார்களென்று போய்ப் பார்ப்போம் வாரும் என்றான்.

அப் 15:37 அப்பொழுது பர்னபா என்பவன் மாற்கு என்னும் பேர்கொண்ட யோவானைக்கூட அழைத்துக்கொண்டு போகவேண்டும் என்றான்.

அப் 15:38 பவுலோ, அவன் பம்பிலியா நாட்டிலே நம்மை விட்டுப் பிரிந்து நம்மோடேகூட ஊழியத்துக்கு வராததினாலே அவனை அழைத்துக் கொண்டு போகக்கூடாது என்றான்.

அப் 15:39 இதைப்பற்றி அவர்களுக்குள்ளே கடுங்கோபம் மூண்டபடியினால் அவர்கள் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்தார்கள். பர்னபா மாற்குவைக் கூட்டிக்கொண்டு கப்பல் ஏறிச் சீப்புருதீவுக்குப் போனான்.

"கர்த்தருடைய வசனத்தை அறிவித்திருக்கிற சகல பட்டணங்கள்" பவுலும் பர்னபாவும் தங்களுடைய முதலாவது மிஷனெரி பிரயாணத்தின்போது ஸ்தாபித்திருந்த சபைகள் (அப் 13:4)

"யோவானைக்கூட அழைத்துக்கொண்டு போகவேண்டும் என்றான்" இந்த வாக்கியத்தில் என்றான் என்பது தீர்மானம் பண்ணினான் அல்லது ஆலோசனை பண்ணினான் என்று பொருள்படும். பர்னபா மாற்கு என்னும் பேர்கொண்ட யோவானைத் தங்களோடுகூட அழைத்துக்கொண்டு போகவேண்டும் என்று தீர்மானமாக இருக்கிறான்.

15 அதிகாரம்

ஆலோசனைபண்ணு (determined) - βουλεύω - bouleuoo - 1011

வினைச்சொல் - ஆலோசனைபண்ணு, யோசனை பண்ணு, யோசி, தீர்மானம் பண்ணி (deliberate determination) - ஏற்கெனவே விரும்பிய பிரகாரமோ அல்லது புதியதாகவோ ஒரு காரியத்தை யோசிப்பது. (மாற்கு 15:15; அப் 5:28,33; அப் 12:4; அப் 15:37; அப் 18:27; அப் 19:30; அப் 22:30; அப் 23:28; அப் 28:18)

"மாற்கு என்னும் பேர்கொண்ட யோவான்" - பவுலின் முதலாவது மிஷினெரி பிரயாணத்தின் போது மாற்கு அவர்களைவிட்டுப் பிரிந்து தன் வீட்டிற்குப் போய்விட்டான். ஆகையினால் தங்களுடைய இரண்டாவது மிஷினெரி பிரயாணத்தின்போது மாற்குவைத் தங்களோடுகூட அழைத்துச் செல்வது ஏற்றதல்ல என்று பவுல் நினைத்தான். (அப் 12:12)

"அவன் பம்பிலியா நாட்டிலே நம்மை விட்டுப் பிரிந்து நம்மோடேகூட ஊழியத்துக்கு வரவில்லை" - (அப் 13:13)

"இதைப்பற்றி அவர்களுக்குள்ளே கடுங் கோபமுண்டானபடியினால் அவர்கள் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்தார்கள்" பவுலுக்கும், பர்னபாவிற்கும் கருத்து வேறுபாடு வந்துவிட்டது. கடுங்கோபமுண்டது என்பதினால் இவர்கள் இருவரும் [redacted] போட்டுக் கொண்டிருந்தார்கள் என்று பொருளல்ல. இவ்விருவரும் ஒன்றுபோல சிந்தித்துத் தீர்மானம் பண்ணுவதற்குப் பதிலாக வித்தியாசமாகத் தீர்மானம் பண்ணுகிறார்கள். இதற்கான கிரேக்க வார்த்தை "பேரோக்சிஸ்மோஸ்" (paroxysmos) என்பதாகும். (an incitement; a stirring up) இந்த வார்த்தை இந்த வசனத்திலும், எபி 10:24 ஆகிய வசனத்தில் மட்டுமே பயன்படுத்தப் பட்டிருக்கிறது. பவுலும், பர்னபாவும் தனித்தனியே தீர்மானம் பண்ணி தங்களுடைய திட்டத்தின் பிரகாரம் செயல்படுகிறார்கள்.

பவுல் தேவனுடைய நீதியை நினைத்துப் பார்க்கிறார். தேவனுடைய ஊழியத்திற்கு எது நன்மை பயக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கிறார். யோவான் மாற்கு முதலாவது மிஷினெரி பிரயாணத்தின்போது ஏற்கெனவே பின்வாங்கிப் போனவன். (அப் 13:13) அவனை மறுபடியும் நம்ப முடியாது என்று பவுல் நினைக்கிறார்.

யோவான் மாற்கு பர்னபாவின் உறவினன். தன் உறவினன்மீது பர்னபா பாசத்தோடு இருக்கிறான். தன் உறவினனுக்கு எது நன்மையானது என்பதைச் சிந்தித்துப் பார்க்கிறான். ஆனால் பவுலும் பர்னபாவும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் பிடிவாதமாக இருக்கிறார்கள். தனித்தனியே பிரிந்துபோய், தேவனுடைய ஊழியத்தைச் செய்வது என்று தீர்மானம் பண்ணினார்கள். தான் உண்மையுள்ள ஊழியக்காரன் என்பதை மாற்கு பின்பு நிரூபிக்கிறான். ஆகையினால் பவுலே மறுபடியும் மாற்குவிற்கு நிருபம் எழுதினதை நாம் வாசிக்கிறோம். (2தீமோ 4:11)

கிறிஸ்துவிற்குள் இரண்டு சகோதரர்கள் கருத்து வேறுபடுவது தவறல்ல. ஆனால் சண்டைபோட்டுக் கொள்ளக்கூடாது. கிறிஸ்தவ அன்பை மறந்துவிட்டுக் கோபப்படக்கூடாது. இந்த வசனத்தில் பவுலுக்கும் பர்னபாவிற்கும் கருத்து வேறுபாடு உண்டாயிற்று. ஒன்றுசேர்ந்து செயல்பட முடியவில்லை. ஆகையினால் அவர்கள் தனித்தனியாகப் பிரிகிறார்கள். பிரிந்தாலும் அவர்கள் இருவருமே தேவனுடைய ஊழியத்தைப் பிரதானமாகச் செய்கிறார்கள்.

கடுங்கோபம் (contention) - παροξυσμός - paroxysmos - 3948

ஆண்பால் பெயர்ச்சொல் - கடுங்கோபம், எவப்படுதல்

"பர்னபா மாற்குவைக் கூட்டிக்கொண்டு கப்பல் ஏறிச் சீப்புருதீவுக்குப் போனான்" - திருச்சபை வரலாற்றில் பர்னபாவைப் பற்றி இதற்குப் பின்பு எந்தக்குறிப்பும் காணப்படவில்லை. (அப் 13:4) பவுல் தரைவழியாக சின்ன ஆசியாவிற்குப் பிரயாணம் பண்ணினார்.

15 அதிகாரம்

2. பவுல் சீலாவை தெரிந்து கொண்டு சீரியாவிற்கும் சிலிசியாவிற்கும் பிரயாணம் செய்து சபைகளை திடப்படுத்துகிறான்

அப 15:40 பவுலோ சீலாவைத் தெரிந்து கொண்டு, சகோதரராலே தேவனுடைய கிருபைக்கு ஒப்புவிக்கப்பட்டு புறப்பட்டு.

அப 15:41 சீரியாவிலும் சிலிசியாவிலும் திரிந்து, சபைகளைத் திடப்படுத்தினான்

பவுலின் இரண்டாவது மிஷனெரி பிரயாணம்

1 அந்தியோகியாவிலிருந்து சீரியா சிலிசியா ஆகியவற்றின் வழியாக தெர்பைக்கு லிக்கவோனியா (அப 15.41 16.1)

2 லீஸ்திரா, லிக்கவோனியா (அப 16.1)

3 இக்கோனியா - லிக்கவோனியா (அப் 16.2-4)

4 பிரிகியா, கலாத்தியா நாடு, மீசியா வழியாகத் துரோவாவுக்கு அப் 16.6-8

5. ஆசியான் கடல் வழியாக சாமோத்திராக்கேவிற்கும் நெயாப்போலிக்கும் (அப் 16.11

6 பிலிப்பி - மக்கெதோனியா (அப 16.12-40)

7 அம்பிபோலி பட்டணம், அப்பொலோனியா பட்டணத்தின் வழியாக தெசலோனிக்கே, மக்கெதோனியா (அப 17.1-9)

8 பெரோயா மக்கெதோனியா (அப 17.10-14)

9 அத்தேனே, கிரேக்கு (அப் 17.15-34)

10 கொரிந்து கிரேக்கு (அப 18.1-17)

11 கெங்கிரேயா, கிரேக்கு (அப 18.18

12 ஆசியான கடல் வழியாக திரும்பவும் எபேசு பட்டணம், சின்ன ஆசியா (அப் 18.19-21)

13 செசரியா, சமாரியா (அப 18.21-22

14 எருசலேம் (அப 18.22)

15 திரும்பவும் அந்தியோகியாவிற்கு, சீரியா (அப 18.22)

16 அதிகாரம்

3. தெர்பையிலும் லீஸ்திராவிலும் பவுல் - தீமோத்தேயு பவுலோடு சேர்ந்து கொள்கிறான் - (அப 14:20 1 தீமோ 1:2; 2 தீமோ 2:2)

அப 16:1 அதன்பின்பு அவன் தெர்பைக்கும் லீஸ்திராவுக்கும் போனான். அங்கே தீமோத்தேயு என்னப்பட்ட ஒரு சீஷன் இருந்தான்; அவன் தாய் விசுவாசமுள்ள யூதஸ்திரீ, அவன் தகப்பன் கிரேக்கன்.

அப 16:2 அவன் லீஸ்திராவிலும் இக்கோனியாவிலுமுள்ள சகோதரராலே நற்சாட்சி பெற்றவனாயிருந்தான்.

அப 16:3 அவனைப் பவுல் தன்னுடனே கூட்டிக் கொண்டு போகவேண்டுமென்று விரும்பி, அவனுடைய தகப்பன் கிரேக்கன் என்று அவ்விடங்களிலிருக்கும் யூதர்களெல்லாரும் அறிந்திருந்தபடியால், அவர்கள் நிமித்தம் அவனுக்கு விருத்தசேதனம்பண்ணினான்.

தீமோத்தேயு

தீமோத்தேயு என்பது இவன் பெயர் (2 கொரி 1:1, 1 தீமோ 1:2,18; 1 தீமோ 6:20 2 தீமோ 1:2, பிலே 1:1; எபி 13:23). பவுலின் முதலாவது மிஷனெரி பிரயாணத்தின்போது இரட்சிக்கப்பட்டவன் (அப 14:6-7=1 தீமோ 1:2) இவனுடைய பெற்றோர் யூதரும் கிரேக்கருமாக இருந்தார்கள். விருத்த சேதனம்பண்ணாமலேயே நல்லகிறிஸ்தவனாக இருந்தான் (அப 16:1-3). பவுலைப் போன்று இவன் மூலமாகவும் தேவன் அற்புதங்களைச் செய்தார் (1 கொரி 16:10). பவுலின் உடன் ஊழியக்காரனாக ஊழியம் செய்து வந்தான் (அப 16:1-3, அப 17:14-15; அப 18:5; அப 19:22, அப 20:4; ரோமர் 16:21; 1 கொரி 4:17, பிலி 2:19). தீமோத்தேயுவின் ஊழியம் (எபி 13:23). எபிரெயர் கலாத்தியர் ஆகிய நிருபங்களைப் பவுலுக்காகத் தீமோத்தேயு எழுதினதாகச் சிலர் கூறுகிறார்கள். தீமோத்தேயு பரிசுத்த ஆவியானவரின் வரத்தைப் பெற்றிருந்தான் (1 தீமோ 4:14, 2 தீமோ 1:6).

வேத வாக்கியத்தைக் கற்றுக் கொள்ளும் சிறந்த மாணாக்கன் (2 தீமோ 1:5 2 தீமோ 2:15 2 தீமோ 3:15)

"அவர்கள் நிமித்தம் அவனுக்கு விருத்தசேதனம்பண்ணினான்" - தீமோத்தேயுவிற்கு விருத்தசேதனம் பண்ணவில்லையென்றால் யூதர்கள் அவனுடைய பிரசங்கத்தைக் கேட்கமாட்டார்கள். விருத்தசேதனம் பண்ணுவது அவனை இரட்சிக்காது. அதேசமயத்தில் விருத்தசேதனம் பண்ணாமல் இருப்பது அவனைச் சபிக்காது. ஆனாலும் இங்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் சுவிசேஷப் பிரபலத்தின் வேகத்தை அதிகரிப்பதற்காகப் பவுல் ஞானத்தோடு தீமோத்தேயுவிற்கு விருத்தசேதனம் பண்ணினான். இதே பவுல் தீத்துவிற்கு விருத்தசேதனம் பண்ண மறுத்துவிட்டான். இப்படி மறுத்ததற்கும் அப்போது இருந்த சூழ்நிலையே காரணம் (கலா 2:3-5). யூதரை இரட்சிப்பதற்காகப் பவுல் எல்லாவிதமான உபாயங்களையும் கையாளுகிறான் (1 கொரி 9:20 ரோமர் 9:1-3). ஆனாலும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுவதா சுவிசேஷமா என்னும் பிரச்சனை வரும்போது சுவிசேஷமே பிரதானம் என்று தன்னுடைய நிலையைப் பவுல் தெளிவுபடுத்துகிறார் (கலா 2:1-21).

4. எல்லா சபைகளுக்கும் அப்போஸ்தலர் சட்டங்களைக் கொடுக்கிறார்கள் - (அப 15:23)

அப 16:4 அவர்கள் பட்டணங்கள்தோறும் போகையில், எருசலேமிலிருக்கும் அப்போஸ்தலராலும் மூப்பராலும் விதிக்கப்பட்ட சட்டங்களைக் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு ஒப்புவித்தார்கள்.

அப 16:5 அதினாலே சபைகள் விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு, நாளுக்குநாள் பெருகின.

சட்டங்கள் (decrees) - δόγμα dogma - 1378

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - கட்டளை, சட்டம், சட்டதிட்டம் (doctrine, ordinance, judgment) (அப 16:4; அப 17:7, லூக்கா 2:1, எபே 2:15 கொலோ 2:14. எபி 11:23)

16 அதிகாரம்

"அதினாலே சபைகள் விசுவாசத்தில ஸ்திரப்பட்டு, நாளுக்குநாள் பெருகின" - அப்போஸ்தலர் 15 ஆவது அதிகாரத்தில காணப்படும் கருத்து வேறுபாடுகள் சபையின் வளர்ச்சியை பாதித்தது. அந்த பிரச்சனை தீர்த்து வைக்கப்பட்ட பின்பு, சபைகள் விசுவாசத்தில ஸ்திரப்பட்டன அதன் விளைவாக சபைகள் பெருகின

5. பிரிகியா, கலாத்தியா, மீசியா ஆகிய தேசங்களுக்கு பிரயாணம்

அப 16:6 அவர்கள் பிரிகியா கலாத்தியா நாடுகளைக் கடந்துபோன போது, ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்கு பரிசுத்த ஆவியினாலே தடைபண்ணப்பட்டு

அப 16:7 மீசியா தேசமட்டும் வந்து பித்தினியா நாட்டுக்குப் போகப் பிரயத்தனம் பண்ணினார்கள் ஆவியானவரோ அவர்களைப் போகவொட்டாதிருந்தார்

அப 16:8 அப்பொழுது அவர்கள் மீசியா பக்கமாய்ப் போய் துரோவாவுக்கு வந்தார்கள்

"ஆசியா" (Asia) - இந்த வசனத்தில ஆசியா என்பது சின்ன ஆசியா முழுவதையும் குறிக்காது. ஏனெனில அவர்கள் ஏற்கெனவே கலாத்தியா, பொகியா, பிசீதியா, லிக்கவோனியா பம்பிலியா ஆகிய பிரதேசங்களில சபைகளை ஸ்தாபித்திருக்கிறார்கள் ஆசியாவின வடக்குப் பகுதியிலும், மேற்கு பகுதியிலும் பித்னியா, மீசியா ஆகிய தேசங்கள உள்ளன இந்தக் காலத்தில பவுல அங்கு சென்று வசனத்தைச் சொல்லாதபடிக்கு பரிசுத்த ஆவியானவர் அவர்களைத் தடைபண்ணினார் (அப 16:7) சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்வதற்கு ஆயத்தமாக இருந்த பிற பகுதிகளுக்கு பவுல புறப்பட்டுச் சென்று சுவிசேஷ வசனங்களைப் பிரசங்கம் பண்ணினார் ஆசியாவில தடைபண்ணப்பட்டிருந்த இந்தப் பகுதிகளுக்கு அவை சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ள ஆயத்தமாக இருந்த சமயத்தில் இங்கும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது. (1பேதுரு 1:1)

"துரோவா" (Troas) தார்தானெலஸிற்கு (Dardanelles) தெற்கே 30 மைல் தூரத்தில் உள்ளது.

6. துரோவாவில் மக்கெதோனியா தேசத்தானின் அழைப்பு

அப 16:9 அங்கே இராத்திரியிலே பவுலுக்கு ஒரு தரிசனம் உண்டாயிற்று அதென்னவெனில் மக்கெதோனியா தேசத்தான் ஒருவன் வந்துநின்று: நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று தன்னை வேண்டிக் கொண்டதாக இருந்தது

அப 16:10 அந்தத் தரிசனத்தை அவன் கண்டபோது அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி கர்த்தர் எங்களை அழைத்தாரென்று நாங்கள் நிச்சயித்துக் கொண்டு, உடனே மக்கெதோனியாவுக்குப் புறப்பட்டுப் போகப் பிரயத்தனம்பண்ணி.

"பவுலுக்கு ஒரு தரிசனம் உண்டாயிற்று" - (சாமு 3:1)

"மக்கெதோனியாவுக்குப் புறப்பட்டுப்போகப் பிரயத்தனம் பண்ணினோம்" - இந்த வசனத்தில முதன முறையாக அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தின ஆசிரியரான லூக்காவைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. பவுலின பிரயாணத்தில லூக்காவும் துரோவாவில சேர்ந்து கொண்டார் என்று ஒருசிலர் கருதுகிறார்கள்

"அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி கர்த்தர் [redacted] அழைத்தார் என்று நாங்கள் நிச்சயித்துக்கொண்டோம்" தரிசனத்தின் மூலமாக கர்த்தர் தங்களை மக்கெதோனியாவிற்கு சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு வழிநடத்துகிறார் என்பதைத் தெரிந்து கொள்கிறார்கள்

7. துரோவாவிலிருந்து பிலிப்பி பட்டணத்திற்கு பிரயாணம்

அப 16:11 துரோவாவில் கப்பல் ஏறி, சமோத்திராக்கே தீவுக்கும், மறுநாளிலே நெயாப்போலி பட்டணத்துக்கும் நேராய் ஓடி,

16 அதிகாரம்

அப் 16:12 அங்கேயிருந்து மக்கெதோனியா தேசத்து நாடுகளில் ஒன்றிற்குத் தலைமையானதும் ரோமர் குடியேறினதுமான பிலிப்பி பட்டணத்துக்கு வந்து அந்தப் பட்டணத்திலே சிலநாள் தங்கியிருந்தோம்

கப்பல் ஏறு (loosing) ἀνάγω - anagoo - 321

வினைச்சொல்- கொண்டுபோ புறப்படு. ஏறிவரப்பண்ணு. கப்பல் ஏறு (weighed anchor) லூக்கா 8:22 அப் 13:13 அப் 16:11 அப் 18:21 அப் 20:3,13 அப் 21:1-2 அப் 27:2,4,12,21 அப் 28:10-11,21)

"சாமோத்திராக்கே தீவு" (Samothracia) - ஏகியேன் கடலில் உள்ள தீவு. 20 மைல் சுற்றளவு கொண்டது.

'நெயாப்போலி' (Neapolis) - பிலிப்பியின் துறைமுகப்பட்டணம். பிலிப்பியிலிருந்து 10 மைல் தூரத்தில் உள்ளது. ஐரோப்பாவில் முதன் முறையாக நெயாப்போலிக்குத்தான் பவுலின் மூலமாகச் சுவிசேஷம் செய்தி வந்திருக்கிறது.

'பிலிப்பி' (Philippi) கிமு 42 ஆம் ஆண்டில் நடைபெற்ற முக்கியமான யுத்தத்தில் இந்த இடம் ரோமாபுரியாரின் கைவசமானது. பவுல் இங்கொரு சபையை ஸ்தாபித்தார். அப் 16:12-40 ஆகிய வசனங்களில் நாம் வாசிக்கும் நிகழ்ச்சிகள் இந்தப் பட்டணத்தில் நடைபெற்றவையாகும்.

"தலைமையான பட்டணம்" பவுலின் நாட்களில் பிலிப்பி பட்டணம் தலைமையானது. ரோமாபுரியார் முதன் முதலில் இந்தப் பிரதேசத்தைக் கைப்பற்றிய போது அம்பிபோலியே தலைமையான பட்டணமாக இருந்தது. ரோமர்கள் பிலிப்பியைக் கைப்பற்றிய பின்பு ரோமாபுரியாருக்கு பிலிப்பி பட்டணமே தலைமையான பட்டணமாயிற்று.

"ரோமர் குடியேறின பட்டணம்" - பிலிப்பி பட்டணத்தில் ரோமருடைய போர்ச்சேவகர்கள் குடியேறினார்கள். அகஸ்து ராயன் தான் போரிட்டு வென்ற இடங்களிலெல்லாம் தன்னுடைய பட்டாளத்தின் ஒரு பகுதியை அந்தந்த ஊர்களில் குடியமர்த்துவது வழக்கம். இதன் மூலமாக யாரும் ராயனுக்கு எதிராகக் கலகம் பண்ணமாட்டார்கள். கலகம் ஏற்பட்டாலும் அந்தப் பகுதியில் குடியமர்த்தப் பட்டிருக்கும் ரோமப்போர்ச்சேவகர்கள் கலகத்தை உடனடியாக அடக்கி விடுவார்கள் (அப் 16:37)

8. பிலிப்பி பட்டணத்தில் முதல்லாவது விசுவாசி - லீதியாள்

அப் 16:13 ஓய்வுநாளில் நாங்கள் பட்டணத்துக்கு வெளியே போய், ஆற்றினருகே வழக்கமாய் ஜெபம் பண்ணுகிற இடத்தில் உட்கார்ந்து, அங்கே கூடிவந்த ஸ்திரீகளுக்கு உபதேசித்தோம்

அப் 16:14 அப்பொழுது தியத்தீரா ஊராளும் இரத்தாம்பரம் விற்கிறவளும் தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ கேட்டுக்கொண்டிருந்தாள். பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார்

அப் 16:15 அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றபின்பு, அவள் எங்களை நோக்கி: நீங்கள் என்னைக் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவளென்று எண்ணினால், என் வீட்டிலே வந்து தங்கியிருங்கள் என்று எங்களை வருந்திக் கேட்டுக்கொண்டாள்

"ஆற்றினருகே வழக்கமாய் ஜெபம் பண்ணுகிற இடம்" இந்த ஊரில் ஜெபாலயம் இல்லை. ஆகையினால் விசுவாசிகள் ஆற்றினருகே உட்கார்ந்து ஜெபம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். யூதர்கள் இதுபோன்று ஆற்றினருகிலும் கடல் அருகிலும் ஜெபம் பண்ணுவது வழக்கம்.

"அங்கே கூடிவந்த ஸ்திரீகளுக்கு உபதேசித்தோம்" கர்த்தரை ஆராதிப்பதற்காக ஜனங்கள் வருவதற்கு முன்பாகவோ அல்லது அவர்கள் கூடிவந்து கொண்டிருக்கும்போதோ சீஷர்கள் ஸ்திரீகளுக்கு உபதேசித்திருக்கலாம்.

16 அதிகாரம்

"லீதியாள்" (Lydia) - சின்ன ஆசியாவில் லீதியா (Lydia) என்றொரு மாகாணம் உள்ளது. இவளுடைய பெயர் இந்த இடத்தின் பெயரிலிருந்து வந்திருக்கலாம். இவளுடைய சொந்த ஊர் தியத்திரா. இந்த ஊர் லீதியா பிரதேசத்தில் அமைந்திருக்கிறது. லீதியாவில் உள்ள ஸ்திரீகள் இரத்தாம்பரம் செய்வதில் தேர்ச்சி பெற்றவர்கள்.

திறந்தருளு (opened) - διανοίγω - dianoigoo - 1272

வினைச்சொல் - திற, உற்பவி, காண்பி, விளங்கக்காட்டு, திறந்தருளு (open effectually) - (அப 16:14 அப 17:3; மாற்கு 7:34-35 லூக்கா 2:23 லூக்கா 24:31-32,45) சுவிசேஷச் செய்தியைக் கேட்கும்போது ஒருசிலர் தங்களுடைய இருதயத்தைத் திறந்து கொடுத்து கர்த்தரை ஏற்றுக் கொள்கிறார்கள். ஒருசிலர் தங்களுடைய இருதயத்தைக் கடினப்படுத்தி சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளவில்லை.

வீட்டார் அனைவரும் இரட்சிக்கப் பட்டவர்கள்

1 ராஜாவின் மனுஷன் (Nobleman) யோவான் 4:53

2 கொர்நேலியு (Cornelius) (அப 10:24-48, அப 11:14)

3 லீதியாள் (Lydia) (அப 16:15)

4 பிலிப்பிய சிறைச்சாலைக் காவல்காரன் (Philippian jailer) (அப 16:31-34)

5 யுஸ்து (Justus) (அப 18:7)

6 கிறிஸ்பு (Crispus) (அப 18:8)

7 அரிஸ்தொபூலு (Aristobulus) (ரோமர் 16:10)

8 நர்கீசு (Narcissus) (ரோமர் 16:11)

9 ஸ்தேவான் (Stephanas) (1கொரி 1:16, 1கொரி 16:15)

10. ஒநேசிப்போரு (Onesiphorus) (2தீமோ 4:19)

வருந்திக்கேட்டுக்கொள் (constrained) - παραβιάζομαι parabiazomai - 3849

வினைச்சொல் - வருந்திக்கேட்டுக் கொள் (to constrain one by entreaties) (அப 16:15 லூக்கா 24:29 ஆதி 19:9; 1சாமு 28:23)

9. குறிசொல்லுகிற ஏவுகிற ஆவியைத் துரத்துகிறார்கள் - பவுலும் சீலாவும் சிறைச்சாலையில்

அப 16:16 நாங்கள் ஜெபம்பண்ணுகிற இடத்துக்குப் போகையில் குறிசொல்லுகிற ஆவியைக்கொண்டிருந்து குறிசொல்லுகிறதினால் தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயத்தை உண்டாக்கின ஒரு பெண் எங்களுக்கு எதிர்ப்பட்டாள்

அப 16:17 அவள் பவுலையும் எங்களையும் பின்தொடர்ந்து வந்து இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர் இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் என்று சத்தமிட்டாள்

அப 16:18 இப்படி அநேகநாள் செய்துகொண்டுவந்தாள் பவுல் சினங்கொண்டு, திரும்பிப்பார்த்து, நீ இவளை விட்டுப் புறப்படும்படி இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அந்த ஆவியுடனே சொன்னான், அந்நேரமே அது புறப்பட்டுப் போயிற்று

அப 16:19 அவளுடைய எஜமான்கள் தங்கள் ஆதாயத்து நம்பிக்கை அற்றுப் போயிற்றென்று கண்டு, பவுலையும் சீலாவையும் பிடித்து சந்தை வெளியிலுள்ள அதிகாரிகளிடத்தில் இழுத்துக்கொண்டு போனார்கள்

16 அதிகாரம்

அப 16:20 அவர்களை அதிகாரிகளிடத்தில் ஒப்புவித்து, யூதர்களாகிய இந்த மனுஷர் நம்முடைய பட்டணத்தில் கலகம்பண்ணி,

அப 16:21 ரோமராகிய நாம் ஏற்றுக் கொள்ளவும் அநுசரிக்கவும் தகாத முறைமைகளைப் போதிக்கிறார்கள் என்றார்கள்.

அப 16:22 அப்பொழுது ஜனங்கள் கூட்டங்கூடி அவர்களுக்கு விரோதமாய் எழும்பினார்கள். அதிகாரிகள் அவர்கள் வஸ்திரங்களைக் கிழித்துப்போடவும், அவர்களை அடிக்கவும் சொல்லி,

அப 16:23 அவர்களை அநேக அடி அடித்த பின்பு, சிறைச்சாலையிலே வைத்து, அவர்களைப் பத்திரமாய்க் காக்கும்படி சிறைச்சாலைக்காரனுக்குக் கட்டளையிட்டார்கள்.

அப 16:24 அவன் இப்படிப்பட்ட கட்டளையைப் பெற்று, அவர்களை உட்காவலறையிலே அடைத்து, அவர்கள் கால்களைத் தொழு மரத்தில் மாட்டிவைத்தான்.

"நாங்கள் ஜெபம்பண்ணுகிற இடத்துக்குப் போனோம்" ஜெபம்பண்ணுகிற இடம் என்பதற்கான கிரேக்க வார்த்தை "புரோசேகே" (proseuchee) என்பதாகும். இது ஜெபம்பண்ணுவதைக் குறிப்பிடாமல் ஜெபம் பண்ணுகிற இடத்தைக் குறிப்பிடுகிறது. அப்போஸ்தலர்கள் இந்த இடத்தில் பல நாட்கள் தங்கியிருந்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள் (அப 16:18)

ஜெபம்பண்ணுகிற இடம் (place of prayer) προσευχή proseuchee - 4335

பெண்பால் பெயர்ச்சொல் - ஜெபம் பண்ணுகிற இடம்

"குறிசொல்லு ஏவுகிற ஆவி" (a spirit of divination) - கிரேக்கருடைய பாரம்பரிய வழக்கத்தின் பிரகாரம் குறிசொல்லும் ஆவி என்பது பைத்தான் (python) அல்லது அப்பல்லோவின் (Apollo) ஆவியாகும். பைத்தான் என்பது பெரிய பாம்பு. இது பர்னாசஸ் (Parnassus) மலைப்பகுதியில் இருந்து கொண்டு வருங்காலத்து நிகழ்ச்சியை முன்குறித்துக் கூறுமாம். அப்பல்லோ இந்தப் பாம்பைக் கொன்று போட்டான். அதனால் இவனுக்கு பைத்தியஸ் (Pythius) என்று பெயர். பாம்பைக் கொன்ற பிறகு அப்பல்லோ வருங்கால நிகழ்ச்சியை முன்குறித்துக் கூறினான். குறிசொல்லுகிறவர்கள் அனைவருமே அப்பல்லோ பைத்தியசின் ஆவியை (the spirit of Apollo Pythius) உடையவர்கள் என்று கிரேக்கர்கள் நம்பினார்கள். இவனுடைய கோவிலில் பெண் பூஜாசாரிகள் இருப்பார்கள். இவர்களுக்கு பைத்தோனஸ் (Pythoness) என்று பெயர். இவர்கள் மூலமாகவே குறிகள் கூறப்படும்.

"இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள்" இவள் கூறிய வார்த்தை அனைத்துமே உண்மையானவை. ஆனாலும் சாத்தான் இதைத் தந்திரமாகக் கையாளுகிறான். குறிசொல்லுகிற பெண் இதைக் கூறுவதினால் அந்த ஊரிலுள்ள ஜனங்கள் சீஷர்களுக்கும் குறிசொல்லும் தேவர்களுக்கும் ஒரு சம்பந்தம் இருப்பதாக நினைப்பார்கள். சீஷர்களும் குறிசொல்லும் ஆவியினாலேயே சுவிசேஷ செய்தியைப் பிரசங்கிப்பதாக அந்த ஊர் ஜனங்கள் நினைப்பார்கள். சீஷர்கள் செய்யும் அற்புதங்களும், அடையாளங்களும் குறிசொல்லும் தேவர்களுடைய வல்லமையினால் நடைபெறுவதாக நினைத்து சுவிசேஷத்திற்கும் மெய் தேவனுக்கும் உண்மையான மரியாதையைத் தரமாட்டார்கள். அந்த அசுத்த ஆவியை பவுல் இயேசுவின் நாமத்தினாலேயே துரத்துகிறான். அந்நேரமே அது புறப்பட்டுப் போயிற்று. இதன் மூலமாக இயேசு கிறிஸ்துவிற்கும் குறிசொல்லும் அசுத்த ஆவிகளுக்கும் சம்பந்தம் எதுவுமில்லையென்பது ஜனங்களுக்குத் தெளிவாயிற்று. (அப 16:18)

16 அதிகாரம்

"பவுல் சினங்கொண்டு, திரும்பிப்பார்த்து, நீ இவளை விட்டுப் புறப்படும்படி இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அந்த ஆவியுடனே சொன்னான். அந்நேரமே அது புறப்பட்டுப் போயிற்று" - பவுல் சாத்தானின் நோக்கத்தைத் தெரிந்து கொள்கிறான். ஆகையினால் அந்தச் சிறுமியைத் துரத்தாமல், அவள் மூலமாகக் கிரியை செய்துகொண்டு வந்த அசுத்த ஆவியைத் துரத்துகிறான். அவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அசுத்த ஆவி அந்தப் பெண்ணைவிட்டு வெளியே புறப்பட்டுப் போயிற்று. சிறிதும் தாமதம் பண்ணாமல் அந்நேரமே போயிற்று. ஏனெனில் பவுல் தன்னுடைய நாமத்தினால் பிசாசைத் துரத்தாமல் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே பிசாசுக்குக் கட்டளை கொடுத்தான். இயேசு கிறிஸ்துவின் நாமம் வல்லமையுள்ள நாமம்.

"அவளுடைய எஜமான்கள் தங்கள் ஆதாயத்து நம்பிக்கை அற்றுப் போயிற்றென்று கண்டார்கள்" - அந்தப் பெண்ணைவிட்டு, பிசாசுகள் வெளியே வந்ததை அவளுடைய எஜமான்கள் தங்கள் கண்களால் கண்டார்கள் (மாற்கு 9:26; லூக்கா 9:42; அப் 8:7). அவர்களுடைய பிழைப்பு அந்தப் பெண் குறிசொல்லுவது மூலமாகவே நடைபெற்றது. அவர்களுக்கு மிகுந்த வருமானம் அவள் மூலமாக வந்தது. இப்போது எல்லாம் போயிற்று. இதனால் அவர்கள் பவுலையும் சீலாவையும் பிடித்து சந்தைவெளியிலுள்ள அதிகாரிகளிடத்தில் இழுத்துக்கொண்டு போனார்கள்.

அதிகாரி (magistrates) - στρατηγός- strateegos - 4755

ஆண்பால் பெயர்ச்சொல் - சேனைத் தலைவன், அதிகாரி - ரோம குடியிருப்பிற்குத் தலைவராக இருக்கும் சேனைத்தலைவன். பிரச்சனைகளை இவனிடம் வந்துதான் ஜனங்கள் தீர்த்துக் கொள்ள வேண்டும். (அப் 16:20-38; அப் 4:1; அப் 5:24-26; லூக்கா 22:4,52)

"யூதர்" - பவுல் பென்யமீன் கோத்திரத்தான் (பிலி 3:5). மற்றவர்கள் இதர கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். எல்லோருமே யூதர்கள். இஸ்ரவேல் கோத்திரத்தார் எல்லோருமே யூதர்கள் என்றே அழைக்கப்பட்டார்கள் (கலா 2:13-15).

"ரோமராகிய நாம் ஏற்றுக்கொள்ளவும் அநுசரிக்கவும் தகாத முறைமைகளைப் போதிக்கிறார்கள்" - ரோமர்கள் தங்களுடைய தெய்வங்களின்மீதும் தேசிய ஆராதனையின்மீதும் மிகவும் வைராக்கியமாக இருந்தார்கள். புதிய மார்க்கத்தைத் தங்களுக்குள் கலந்துவிடக்கூடாது என்பதில் மிகுந்த எச்சரிப்போடு இருந்தார்கள். இதன் காரணத்தினால்தான் ரோமாபுரியிலிருந்து யூதர்கள் எல்லோரும் துரத்தப்பட்டு விடப்பட்டார்கள். இதே குற்றத்தை இங்கு அப்போஸ்தலர்கள்மீது சுமத்துகிறார்கள்.

"அதிகாரிகள் அவர்கள் வஸ்திரங்களைக் கிழித்துப்போடவும் அவர்களை அடிக்கவும் சொன்னார்கள்" - ரோமப்பேரரசின் முறைமையின்படி அடித்தல் என்பது மிலாறுகளால் அடிப்பதைக் குறிப்பிடும். (2கொரி 11:25). யூதர்கள் 39 அடிகள் மட்டுமே அடிப்பார்கள். ரோமருக்கு அடிப்பட்ட பிரமாணம் எதுவும் இல்லை. தாங்கள் விரும்பிய படி ஆசைதீர அடிப்பார்கள். பவுல் இதைக் குறித்து எழுதும்போது "நான் அதிகமாய் அடிபட்டவன்" என்று எழுதுகிறான் (2கொரி 11:23). அதிகமாய் என்பதற்கு கணக்குவழக்கு இல்லாமல் என்று பொருள்.

அடி (beat) - ῥαβδίζω rhabdizoo - 4463

வினைச்சொல் - அடி, மிலாறுகளால் அடி

சிறைச்சாலைக்காரன் (jailor) - δεσμοφύλαξ desmophylax 1200

ஆண்பால் பெயர்ச்சொல் - சிறைச் சாலைக்காரன் (அப் 16:23,27,36)

16 அதிகாரம்

"அவர்களை உட்காவலறையிலே அடைத்து, அவர்கள் கால்களைத் தொழு மரத்தில் மாட்டிவைத்தான்" - உட்காவலறை என்பது காற்று வெளிச்சம் போகமுடியாத இருட்டறை ஆகும் கைதிகளுடைய கால்களைத் தொழுமரத்தில மாட்டி வைப்பார்கள் கைதிகள் துயித்துச் செலவக் கூடாது. அதுமட்டுமலல தொழுமரத்தில கால்களை நுழைப்பதறகு மட்டுமே இடம் இருக்கும் இதனால காலகளில மிகுந்த வேதனையும். காயமும் உண்டாகும் ஏறகெனவே அநேக அடிகள் அடிக்கப பட்டவர்கள இப்போது இவர்களுடைய காலகள் தொழுமரத்தில கட்டப்பட்டிருக்கிறது. மிகுந்த வேதனையைச் சீஷர்கள் அனுபவிக்கிறார்கள இவ்வளவு துன்பத்திறகு நடுவிலும நடுராத்திரியிலே பவுலும சீலாவும ஜெபம் பணணி. தேவனைத் துதித்துப பாடினார்கள (அப 16:25) காவலில வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக் கொணடிருநதார்கள

10. பூமி மிகவும் அதிர்ந்தது

அப 16:25 நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபமபணணி. தேவனைத துதித்துப பாடினாாகள காவலில வைக்கப்பட்டவாகள அதைக கேட்டுக்கொணடிருநதாாகள

அப 16:26 சடிதியிலே சிறைச்சாலையின அஸ்திபாரஙகள அசையும்படியாக பூமி மிகவும் அதிாந்தது, உடனே கதவுகளெல்லாம் திறவுணடது. எலலாருடைய கட்டுகளும் கழன்று போயிற்று.

"சடிதியிலே சிறைச்சாலையின் அஸ்தி பாரஙகள் அசையும்படியாக பூமி மிகவும் அதிாந்தது, உடனே கதவுகளெல்லாம் திறவுணடது, எலலாருடைய கட்டுகளும் கழனறுபோயிற்று" தேவன அவாகளுடைய ஜெபத்திறகுப பதில கொடுத்தாா பூமியதிாச்சியை உணடுபணணினாா

11. சிறைச் சாலைக்காரனும் அவனுடைய வீட்டாரும் இரட்சிக்கப் படுகிறார்கள்

அப் 16:27 சிறைச்சாலைக்காரன் நித்திரை தெளிந்து, சிறைச்சாலையின் கதவுகள் திறந்திருக்கிறதைக் கண்டு, கட்டுணடவர்கள் ஓடிபபோனாாகள என்று எணணி பட்டயத்தை உருவித் தன்னைக் கொலைசெயது கொள்ளபபோனான்

அப் 16:28 பவுல் மிகுந்த சத்தமிட்டு, நீ உனக்குக் கெடுதி ஒன்றுஞ் செயது கொள்ளாதே; நாங்கள் எல்லாரும் இங்கேதான் இருக்கிறோம் என்றான்

அப 16:29 அப்பொழுது அவன் தீபங்களைக் கொணடுவரச்சொலலி. உள்ளே ஓடி, நடுநடுங்கி, பவுலுக்கும் சீலாவுக்கும் முன்பாக விழுந்து

அப 16:30 அவர்களை வெளியே அழைத்து வந்து, ஆணடவமாரே, இரட்சிக்கப்படுவதறகு நான் என்ன செயயவேண்டும் என்றான்

அப் 16:31 அதறகு அவாகள் காததராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி. அப்பொழுது நீயும் உன வீட்டாரும் இரட்சிககப படுவீாகள என்று சொல்லி.

அப் 16:32 அவனுக்கும் அவன வீட்டிலிருநத யாவருக்கும் காததருடைய வசனத்தைப போதித்தாாகள

அப் 16:33 மேலும் இராத்திரியில அந்நேரத்திலேதானே அவன அவாகளை அழைத்துக்கொணடுபோய, அவாகளுடைய காயஙகளைக் கழுவினான அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றாாகள்

அப 16:34 பின்பு அவன அவர்களைத் தன் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டுபோய், அவர்களுக்கு போஜனஙகொடுத்து தன வீட்டாா அனைவரோடுங்கூட தேவனிடத்தில் விசுவாசமுளளவனாகி மனமகிழ்ச்சி யாயிருந்தான

16 அதிகாரம்

"சிறைச்சாலைக்காரன் நித்திரை தெளிந்து, சிறைச்சாலையின் கதவுகள் திறந்திருக்கிறதைக் கண்டு, கட்டுண்டவர்கள் ஓடிப்போனார்கள் என்றெண்ணி, பட்டயத்தை உருவித் தன்னைக் கொலைசெய்து கொள்ளப்போனான்" - கைதிகள் தப்பித்துப்போகக்கூடாது. அவர்கள் தப்பித்தால் அவர்களைக் காவல் காத்தவர்களுக்கு மரணதண்டனை கொடுக்கப்படும். ரோமருடைய காலங்களில் மரண தண்டனை அனுபவிப்பது மிகவும் கொடூரமாக இருக்கும். இதற்குப் பயந்து தற்கொலை பண்ணிக் கொள்வதே சிறந்தது என்று சிறைச்சாலைக்காரன் நினைக்கிறான்.

"நீ உனக்குக் கெடுதி ஒன்றுஞ் செய்துகொள்ளாதே" - பவுல் இருட்டறையில் இருக்கிறான். சிறைச்சாலைக்காரன் பட்டயத்தை உருவி, தன்னைக் கொலைசெய்து கொள்ளப் போகிறான். இருட்டில் பவுலுக்கு இது எப்படித் தெரிந்தது என்று தெரியவில்லை. ஒருவேளை சிறைச்சாலைக்காரனுடைய அறையில் ஏதாவது விளக்கு ஏற்றப்பட்டிருக்கலாம். அல்லது அவன் என்ன செய்யப் போகிறான் என்பதை ஆவியானவர் பவுலுக்கு உணர்த்தியிருக்கலாம். ஆகையினால் பவுல் மிகுந்த சத்தமிட்டு, நீ உனக்குக் கெடுதி ஒன்றுஞ் செய்துகொள்ளாதே என்று கூறுகிறான்.

"சிறைச்சாலைக்காரன் பவுலுக்கும் சீலாவுக்கும் முன்பாக விழுந்தான்" - தான் கேட்டது பவுலின் சத்தம்தானா என்பதை உறுதிபண்ண விரும்புகிறான். தீபங்களைக் கொண்டுவரச்சொல்கிறான். உள்ளே ஓடிப்போகிறான். அங்கே பவுலும் சீலாவும் கட்டுகள் கழற்றப்பட்டவர்களாக அங்கேயே இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்தபோது சிறைச்சாலைக்காரன் மிகுந்த பயமடைந்து நடுநடுங்கி, பவுலுக்கும் சீலாவுக்கும் முன்பாக விழுந்தான். இப்படிப்பட்ட அற்புதங்களுக்கு அப்போஸ்தலர்களே காரணம் என்பதைப் புரிந்து கொண்டதினால் அவர்களுக்கு முன்பாக சிறைச்சாலைக்காரன் விழுந்திருக்கலாம்.

"ஆண்டவன்மாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்" - ஆத்தும ஆதாய ஊழியத்தில் அப் 16:30,31 ஆகிய இரண்டு வசனங்களும் அதிகமாகப் பயன்படுத்தப் படுகிறது.

"கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" - ஒருவன் தன் பாவத்தைக் குறித்து, மனம்வருந்தி, இயேசுகிறிஸ்து தன்னை இரட்சிப்பார், அவருடைய திருஇரத்தத்தின் மூலமாகத் தனக்கு மீட்பு உண்டு என்று விசுவாசிக்கும்போது அவனுக்கும், அவனுடைய வீட்டாருக்கும் இரட்சிப்பு உண்டாகிறது. இந்த வாக்கியத்தை மனப்பாடம் பண்ணி, தேவனிடத்தில் அறிக்கை பண்ணுவதினால் யாரும் இரட்சிக்கப்பட மாட்டார்கள். தேவனிடத்தில் நம்மைப் பரிபூரணமாக ஒப்புக்கொடுத்து தேவனையும் அவருடைய சத்திய வார்த்தையையும் நமது முழு இருதயத்தோடு விசுவாசிக்கும்போது நாம் இரட்சிக்கப்படுகிறோம் (ரோமர் 10:9-10). இயேசு கிறிஸ்து ஒரு தெய்வம் என்று நினைப்பதினால் நாம் இரட்சிக்கப்படுவதில்லை. மனந்திரும்புதல் நமது இருதயத்தின் ஆழத்திலிருந்து உண்மையாகவே வரவேண்டும். இயேசு கிறிஸ்துவை நமது சொந்த இரட்சகராக நமது இருதயத்தில் ஏற்றுக் கொண்டு விசுவாசிக்க வேண்டும் (எபே 2:8-9; யோவான் 1:12). ஒருவரிடத்தில் மனந்திரும்புதல் எண்ணமே இல்லாதபோது அவனை இந்த வசனத்தை அறிக்கையிடுமாறு கூறுவதினால் அவனுடைய ஆத்துமாவிற்கு எவ்வித பிரயோஜனமும் கிடைப்பதில்லை.

"உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" - இரட்சிக்கப்பட்டவர்களுடைய வீட்டாரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால் வீட்டிலுள்ள ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவைத் தங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டும். தங்களுடைய பாவங்களை அறிக்கையிட்டு மனம்திரும்பி, இயேசு கிறிஸ்துவிடம் வரவேண்டும் (மத் 18:3; யோவான் 3:3,5).

"அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள்" - சிறைச்சாலைக்காரனுடைய வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வார்த்தை பிரசங்கிக்கப்பட்டது. இரட்சிப்பின் வழி அவர்கள் எல்லோருக்கும் தெளிவுபடுத்தப்பட்டது. அவனுடைய வீட்டார் யாவரும் சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டு, ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள் (அப் 16:32-33). வீட்டார் அனைவரும் என்று கூறும்போது இந்த வீட்டில் சிறு பிள்ளைகளும் இருந்திருக்கலாம்.

16 அதிகாரம்

வீட்டார் அனைவரும் ஞானஸ்நானம் பெற்றார்கள் ஆகையினால் சிறு பிள்ளைகளும் ஞானஸ்நானம் பெறுவதற்கு தடையொன்றும் இல்லையென்று ஒருசிலர் இந்த வசனத்தை வைத்து விவாதம் பண்ணுகிறார்கள். லீதியாளின் வீட்டிலும் இதேபோன்ற காரியமே நடைபெற்றது. (அப் 16:15) ஆனால் இங்கு சிறுபிள்ளைகள் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள் என்பதற்குத் தெளிவான ஆதாரம் ஒன்றும் இல்லை. வீட்டில் எல்லோருக்கும் முழுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதற்குத் தண்ணீர் இருந்திருக்காது. ஆகையினால் இவர்கள் தெளிப்பு ஞானஸ்நானம் பெற்றிருப்பார்கள் என்று ஒருசிலர் இந்த வசனத்திற்கு வியாக்கியானம் கூறுகிறார்கள். ஆனால் இந்த ஊருக்கு அருகில் ஆறு இருந்தது. (அப் 16:13-15)

12. இரகசியமாய் விடுதலைப் பெற பவுல் விரும்பவில்லை

அப் 16:35 பொழுது விடிந்தபின்பு அந்த மனுஷரை விட்டுவிடுங்கள் என்று சொல்ல அதிகாரிகள் சேவகர்களை அனுப்பினார்கள்.

அப் 16:36 சிறைச்சாலைக்காரன் பவுலுக்கு இந்த வார்த்தைகளை அறிவித்து: உங்களை விடுதலையாக்கும்படிக்கு அதிகாரிகள் கட்டளை அனுப்பினார்கள்; ஆகையால் நீங்கள் இப்பொழுது புறப்பட்டு, சமாதானத்தோடே போங்கள் என்றான்.

அப் 16:37 அதற்குப் பவுல்: ரோமராகிய எங்களை அவர்கள் நியாயம் விசாரியாமல், வெளியரங்கமாய் அடித்து, சிறைச்சாலையிலே போட்டார்கள், இப்பொழுது இரகசியமாய் எங்களை விடுதலையாக்குகிறார்களோ? அப்படியல்ல, அவர்களே வந்து எங்களை வெளியே அழைத்து அனுப்பிவிடட்டும் என்றான்.

அப் 16:38 சேவகர் இந்த வார்த்தைகளை அதிகாரிகளுக்கு அறிவித்தார்கள். ரோமராயிருக்கிறார்களென்று அவர்கள் கேட்டபொழுது பயந்துவந்து,

அப் 16:39 அவர்களுடனே தயவாய்ப் பேசி, அவர்களை வெளியே அழைத்துக் கொண்டு போய், பட்டணத்தை விட்டுப் புறப்பட்டுப் போகும்படி கேட்டுக் கொண்டார்கள்.

அப் 16:40 அந்தப்படி அவர்கள் சிறைச்சாலையிலிருந்து புறப்பட்டு லீதியாளிடத்திற்குப் போய், சகோதரரைக் கண்டு, அவர்களுக்கு ஆறுதல் சொல்லிப் போய்விட்டார்கள்.

அதிகாரிகள் (serjeants) - ῥαβδοῦχος - rhabdouchos - 4465

ஆண்பால் பெயர்ச்சொல் - அதிகாரி - இவர்கள் சிறைக்கைதிகளை பிரம்புகளினால் அடிக்கிறவர்கள் (அப் 16:22)

"அந்த மனுஷரை விட்டுவிடுங்கள்" - பழைய ஏற்பாட்டின் ஒரு மூலபாஷைச் சுவடி காலையில் அதிகாரிகளே சிறைச்சாலைக்கு வந்ததாகக் கூறுகிறது. பூமியதிர்ச்சி உண்டானதால் அவர்கள் மிகவும் பயந்து அப்போஸ்தலர்களை விடுதலை பண்ணுவதற்காக வந்தார்கள் என்று கோடக்ஸ் பேஜே (Codex Bezae) என்னும் புதிய ஏற்பாட்டு மூலபாஷை சுவடியில் நாம் வாசிக்கிறோம்.

"ரோமராகிய எங்களை அவர்கள் நியாயம் விசாரியாமல், வெளியரங்கமாய் அடித்து சிறைச்சாலையிலே போட்டார்கள்" - ரோமருடைய வழக்கத்தின் பிரகாரம் ஒரு ரோமப் பிரஜையை விசாரிக்காமல் சிறையில் அடைப்பது சட்டப்படி குற்றம். ராயனுடைய அனுமதி பெற்றே ரோமருக்குத் தண்டனை கொடுக்க முடியும். பவுல் அதிகாரிகளுக்கு ஒரு பாடம் கற்பிக்க விரும்பினார். அவர்கள் ரோமருடைய சட்ட திட்டங்களை மீறி பவுலை விசாரியாமல் தண்டித்ததினால் ராயனுக்கும் அவனுடைய ஆட்சிக்கும் அவமரியாதையை உண்டு பண்ணி விட்டார்கள்.

"ரோமராயிருக்கிறார்களென்று அவர்கள் கேட்டபொழுது பயந்துவந்தார்கள்" - அதிகாரிகளுக்குப் பயம் உண்டாயிற்று. ரோமாபுரிக்கு இந்தச் செய்தி சென்றால், அதிகாரிகளுக்கு நிச்சயம் தண்டனை கிடைக்கும். ரோமர்கள் தங்களுடைய பிரஜைகளைப் பாதுகாப்பதில் மிகவும் வைராக்கியமாக இருந்தார்கள்.

16 அதிகாரம்

"அவர்களுடனே தயவாய்ப் பேசி, அவர்களை வெளியே அழைத்துக்கொண்டு போய், பட்டணத்தை விட்டுப் புறப்பட்டுப்போகும்படி கேட்டுக் கொண்டார்கள்" - இந்த வசனம் கோடெக்ஸ் பேஜேயில் (Codex Bezae) இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது. அதிகாரிகள் சிறைச்சாலைக்குப் பவுலின் நண்பர்கள் பலரை அழைத்துக் கொண்டு வந்தார்கள். தங்களுக்கு எதிராக ஜனங்கள் கலகம் பண்ணுவதற்கு முன்பு பவுலையும் சீலாவையும் விடுவித்து விடவேண்டுமென்று விரும்புகிறார்கள். அங்கு நடைபெற்ற சூழ்நிலை அதிகாரிகளுக்குத் தெளிவாகத் தெரியாது. பவுலும் சீலாவும் நீதிமான்கள். அவர்கள் குற்றம் ஒன்றும் செய்யவில்லை. அதன்பின்பு பவுலும் சீலாவும் சிறைச்சாலையிலிருந்து வெளியேறி விசுவாசிகளுக்குக் கர்த்தருடைய வார்த்தையைப் பிரசங்கம் பண்ணிவிட்டு, அந்த ஊரை விட்டுப் புறப்பட்டுப்போனார்கள் (அப் 16.40)

17 அதிகாரம்

13. பிலிப்பி பட்டணத்திலிருந்து தெசலோனிக்கே பட்டணத்திற்கு பிரயாணம்

அப் 17:1 அவர்கள் அம்பிபோலி பட்டணத்தையும் அப்பொலோனியா பட்டணத்தையும் கடந்து தெசலோனிக்கே பட்டணத்துக்கு வந்தார்கள்; அங்கே யூதருக்கு ஒரு ஜெபஆலயம் இருந்தது.

அப் 17:2 பவுல் தன் வழக்கத்தின்படியே அவர்களிடத்தில் போய், மூன்று ஓய்வுநாட்களில் வேதவாக்கியங்களின் நியாயங்களை எடுத்து அவர்களுடனே சம்பாஷித்து

அப் 17:3 கிறிஸ்து பாடுபடவும் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதென்றும், நான் உங்களுக்கு அறிவிக்கிற இந்த இயேசுவே கிறிஸ்து என்றும் காண்பித்து, திருஷ்டாந்தப் படுத்தினான்.

அப் 17:4 அவர்களில் சிலரும், பக்தியுள்ள கிரேக்கரில் திரளான ஜனங்களும், கனம் பொருந்திய ஸ்திரீகளில் அநேகரும் விசுவாசித்து பவுலையும் சீலாவையும் சேர்ந்து கொண்டார்கள்.

"அம்பிபோலி" (Amphipolis) மக்கதோனியா பட்டணம். ஸ்ட்ரிமோன் (Strymon) ஆற்றிற்கு நடுவே உள்ள ஒரு தீவில் இந்த பட்டணம் கட்டப்பட்டிருக்கிறது. ஸ்ட்ரிமோன் ஆறு ஆஜேயன் கடலிலே போய் கலக்கும். அம்பிபோலி பட்டணம் பிலிப்பி பட்டணத்திலிருந்து 33 மைல் தென் மேற்காக அமைந்திருக்கிறது.

"அப்பொலோனியா" (Appolonia) அம்பிபோலியாவிலிருந்து தெற்கே 30 மைல் தூரத்திலும், தெசலோனிக்கேயாவிலிருந்து மேற்கே 30 மைல் தூரத்திலும் அமைந்துள்ள பட்டணம்.

"தெசலோனிக்கே" (Thessalonica) - இந்தப் பட்டணத்தை காசாண்டார் (Cassander) கட்டினான். தன்னுடைய மனைவியின் பெயரால் இந்தப் பட்டணத்தை தெசலோனிக்கே என்று அழைத்தான். இந்தப் பட்டணத்தின் தற்காலத்துப் பெயர் சாலோனிக்கி (Saloniki). கிரேக்க தேசத்தில் இது மிகவும் முக்கியமான பட்டணமாகும். இந்தப் பட்டணத்தில் யூதர்கள் ஏராளமானோர் இருந்தார்கள். இங்கு ஒரு ஜெபாலயமும் இருந்தது.

"யூதருக்கு ஒரு ஜெபஆலயம்" - யூதர் ஆராதனை நடத்தும் ஒரு இடம் (proseuche). (அப் 16:13,16)

சம்பாஷணைப் பண்ணு (reasoned) - διαλέγομαι - dialegomai - (2S6)

வினைச்சொல் - தர்க்கம் பண்ணு, சம்பாஷி, சம்பாஷணைப் பண்ணு, பிரசங்கம் பண்ணு, தர்க்கித்துப்பேசு, கடிந்துகொள் - இதன் மற்ற மொழிபெயர்ப்புக்கள் (reason with) (அப் 17:2; அப் 18:4,19; அப் 24:25); (dispute) (மாற்கு 9:34; அப் 17:17; அப் 19:8-9; அப் 24:12; யூதா 1:9); (speak) (எபி 12:5); (preach) (அப் 20:7, 9)

"காண்பித்து" (Opening) - (அப் 16:14)

திருஷ்டாந்தப்படுத்து (alleging) - παρατίθημι - paratitheemi - 3908

வினைச்சொல் - முன்வை, பரிமாறு, ஒப்புவி, திருஷ்டாந்தப்படுத்து (setting before them) (அப் 17:3; அப் 14:23; அப் 16:34; அப் 20:32; மத் 13:24; மாற்கு 8:6-7; 1கொரி 10:27)

"கிறிஸ்து பாடுபடவும் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதென்றும் நான் உங்களுக்கு அறிவிக்கிற இந்த இயேசுவே கிறிஸ்து" இரட்சிப்பின் சுவிசேஷத்தில் நான்கு அடிப்படை சத்தியங்கள் உள்ளன (1கொரி 15:1-8). அவற்றை நாம் இந்த வசனத்தில் வாசிக்கிறோம். மேசியாவின் ஊழியத்தைப் பற்றி பவுல் இங்கு தெளிவாகக் கூறிவிட்டு, அந்த மேசியா இயேசு கிறிஸ்துவே என்று வலியுறுத்திக் கூறுகிறார்.

17 அதிகாரம்

"விசுவாசித்தார்கள்" - பவுலின் பிரசங்கத்தில் காணப்பட்ட வேகத்தினாலோ விறுவிறுப்பினாலோ இவர்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கவில்லை தங்களுடைய உள்ளத்தில் உணர்த்தப்பட்டு விசுவாசித்தார்கள் (1கொரி 2:4) வேதவாக்கியம் உபதேசக்கிறதை விசுவாசித்தார்கள் (1தெச 1:7; 1தெச 2:13)

விசுவாசித்து (believed) - ἐπισείω - episeioo - 3982

வினைச்சொல் - ஏவிவிடு நம்பிக்கையாயிரு, சம்மதப்படுத்து நம்பியிரு, வசமாக்கு, புத்திசொல் உடன்படு, போதனை செய், கீழ்படி நிச்சயித்திரு, திடன்கொள்

"பக்தியுள்ள கிரேக்கர்" - (அப் 10:2)

"கனம் பொருந்திய ஸ்திரீகள்" - முக்கியமான குடும்பத்தைச் சேர்ந்த ஸ்திரீகள் (அப் 13:50)

14. யூதர்களுடைய எதிர்ப்பு - பட்டணத்தை விட்டு பவுலை வெளியேற்றுகிறார்கள்

அப் 17:5 விசுவாசியாத யூதர்கள் வைராக்கியங்கள் கொண்டு வீணராகிய சில பொல்லாதவர்களைச் சேர்த்துக் கொண்டு கூட்டங்கூடி பட்டணத்தில் அமளியுண்டாக்கி, யாசோனுடைய வீட்டை வளைந்துகொண்டு, அவர்களைப் பட்டணத்தாருக்கு முன்பாக இழுத்துக் கொண்டுவர வகைதேடினார்கள்

அப் 17:6 அவர்களைக் காணாமல் யாசோனையும் சில சகோதரரையும் பட்டணத்து அதிகாரிகளிடத்தில் இழுத்துக் கொண்டு வந்து, உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள்

அப் 17:7 இவர்களை யாசோன் ஏற்றுக் கொண்டான் இவர்களெல்லாரும் இயேசு என்னும் வேறொருவனை ராஜா என்று சொல்லி இராயனுடைய கட்டளைகளுக்கு விரோதமாகச் செய்கிறார்களென்று கூக்குரலிட்டு,

அப் 17:8 இவைகளைக் கேட்டுக் கொண்டிருந்த ஜனங்களையும் பட்டணத்து அதிகாரிகளையும் கலங்கப்பண்ணினார்கள்

அப் 17:9 பின்பு அவர்கள் யாசோனிடத்திலும் மற்றவர்களிடத்திலும் ஜாமீன் வாங்கிக் கொண்டு, அவர்களை விட்டுவிட்டார்கள்

"விசுவாசியாத யூதர்கள் வைராக்கியங்கள் கொண்டார்கள்" - பொறாமை கொண்டார்கள் (அப் 7:9)

"சில பொல்லாதவர்கள்" (baser sort) - ஒருவேலையும் செய்யாமல் சோம்பேறியாக (Idlers) இருக்கிறவர்கள் ரவுடிகள் (rowdies) (அப் 19:38)

"யாசோனுடைய வீடு" (Jason) - இவனுடைய வீட்டில் அப்போஸ்தலர்கள் தங்கியிருந்தார்கள்

"இராயனுடைய கட்டளைகளுக்கு விரோதமாகச் செய்கிறார்கள்" - மார்க்கக் காரியங்களில் கருத்து வேறுபாடு உண்டானால் உடனே அவர்களைத் தேசதுரோகிகளாகச் சித்தரித்து விடுகிறார்கள்

"இராயனுடைய கட்டளை" (decrees of Caesar) - (அப் 16:4)

"இயேசு என்னும் வேறொருவனை ராஜா என்று சொல்கிறார்கள்" இயேசுவின்மீதும் தேசதுரோகக் குற்றச்சாட்டு சுமத்தினார்கள் (யோவான் 18:36-37 யோவான் 19:12) அப்போஸ்தலர்கள் பரலோக ராஜ்ஜியத்தைப் பற்றிப் பேசுகிறார்கள் வரப்போகிற ராஜாவாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி ஜனங்களுக்கு அறிவிக்கிறார்கள் அவர்கள் எந்தச் சூழ்நிலையிலும் இயேசு கிறிஸ்து வானவர் இராயனுக்கு விரோதமாகப் போட்டி ராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்போகிறார் என்று பிரசங்கிக்கவே இல்லை இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகையில் ராஜாவாக இந்தப் பூமிக்கு வந்து, ஆளுகை செய்வார்

ஜாமீன் (security) - ἱκανός hikanos 2425

பெயரடை - பாத்திரனான, ஜாமீன் (substantial bail)

17 அதிகாரம்

15. தெசலோனிக்கே பட்டணத்திலிருந்து பெரோயா பட்டணத்திற்கு பிரயாணம் - யூதர்கள் பவுலை இங்கும் எதிர்த்து அவனை பட்டணத்தை விட்டு வெளியேற்றுகிறார்கள்

அப் 17:10 உடனே சகோதரர் இராத்திரிகாலத்திலே பவுலையும் சீலாவையும் பெரோயா பட்டணத்துக்கு அனுப்பிவிட்டார்கள்; அவர்கள் அங்கே சேர்ந்து, யூதருடைய ஜெப ஆலயத்திற்குப் போனார்கள்

அப் 17:11 அந்தப் பட்டணத்தார் மனோ வாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால் தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப்பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்

அப் 17:12 அதனால் அவர்களில் அநேகம் பேரும் கனம்பொருந்திய கிரேக்கரில் அநேக ஸ்திரீகளும் புருஷர்களும் விசுவாசித்தார்கள்

அப் 17:13 பெரோயாவிலும் தேவவசனம் பவுலினால் அறிவிக்கப்படுகிறதென்று தெசலோனிக்கேயரான யூதர்கள் அறிந்தபோது, அங்கேயும் வந்து ஜனங்களைக் கிளப்பிவிட்டார்கள்

அப் 17:14 உடனே சகோதரர் பவுலைச் சமுத்திரவழியாய்ப் போக அனுப்பிவிட்டார்கள் சீலாவும் தீமோத்தேயும் அங்கே தங்கியிருந்தார்கள்

"பெரோயா"(Berea) தெசலோனிக்கேயிலிருந்து 50 மைல் தூரத்தில் உள்ள பட்டணம்

"பெரோயா பட்டணத்தார் நற்குணசாலிகளாயிருந்தார்கள்" அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டார்கள் காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்தார்கள் நன்கு கல்வி கற்று, தேர்ச்சி பெற்றவர்கள் நல்ல குணமுடையவர்கள் நற்குணசாலிகளிடம் காணப்படும் நற்பண்புகளானவை

1 தேவனுடைய வார்த்தையை விவாதம் பண்ணாமல் திறந்த மனதோடு உடனே ஏற்றுக் கொள்வார்கள்

2 சத்தியங்களை அறிந்து கொள்வதற்காகத் தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்ப்பார்கள்

3 வேதவாக்கியங்களில் தெளிவாக எழுதப்பட்டிருக்கும் சத்தியங்களை விசுவாசிப்பார்கள் (அப் 17:12)

நற்குணசாலி (noble) - εὐγενής - eugenees - 2104

பொருள் - பிறப்பு. நற்குணசாலி (well born). (லூக்கா 19:12 1கொரி 1:26)

"உடனே சகோதரர் பவுலைச் சமுத்திர வழியாய்ப் போக அனுப்பிவிட்டார்கள்" - மத் 10:23 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் கட்டளைக்கு அவர்கள் கீழ்ப்படிந்தார்கள்

16. அத்தேனே பட்டணத்தில் பவுல் - சீலாவும், தீமோத்தேயுவும் தன்னிடத்திற்கு வருமாறு அழைப்பு

அப் 17:15 பவுலை வழிநடத்தினவர்கள் அவனை அத்தேனே பட்டணம்வரைக்கும் அழைத்துக்கொண்டுபோய், அங்கே சீலாவும் தீமோத்தேயும் அதிசீக்கிரமாகத் தன்னிடத்திற்கு வரும்படி அவர்களுக்குச் சொல்லக் கட்டளை பெற்றுக்கொண்டு புறப்பட்டுப்போனார்கள்

"அத்தேனே" (Athens) கிரேக்க தேசத்தில் மிகவும் முக்கியமான பட்டணம். அநேக கல்விமான்கள் இங்கிருந்தார்கள் (அப் 17:15-34) (1தெச 3:1)

17 அதிகாரம்

17. அத்தேனே பட்டணத்தில் கிரேக்க ஞானிகளோடு பவுல் வாக்குவாதம் பண்ணுகிறான்

அப் 17:16 அத்தேனே பட்டணத்தில பவுல் அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கையில, அந்தப் பட்டணம் விக்கிரகங்களால நிறைந்திருக்கிறதைக் கண்டு, தன் ஆவியில மிகுந்த வைராக்கியமடைந்து,

அப் 17:17 ஜெபஆலயத்தில் யூதரோடும், பக்தியுள்ளவர்களோடும், சந்தைவெளியில எதிர்ப்பட்டவர்களோடும் தினந்தோறும் சம்பாஷணைபண்ணினான்.

அப் 17:18 அப்பொழுது எபிக்கூரரும் ஸ்தோயிக்கருமான ஞானிகளில சிலர் அவனுடனே வாக்குவாதம் பண்ணினார்கள். சிலர்: இந்த வாயாடி என்ன பேசப்போகிறான் என்றார்கள். சிலர் இவன் அந்நிய தேவதைகளை அறிவிக்கிறவனாகக் காணகிறது என்றார்கள். அவன் இயேசுவையும் உயிர்த்தெழுதலையும் அவர்களுக்குப் பிரசங்கித்தபடியினாலே அப்படிச் சொன்னார்கள்.

அப் 17:19 அவர்கள் அவனை மார்ஸ் மேடைக்கு அழைத்துக்கொண்டுபோய்: நீ சொல்லுகிற புதிதான உபதேசம் இன்னதென்று நாங்கள் அறியலாமா?

அப் 17:20 நூதனமான காரியங்களை எங்கள் காதுகள் கேட்கப்பண்ணுகிறாய், அவைகளின் கருத்து இன்னதென்று அறிய மனதாயிருக்கிறோம் என்றார்கள்.

அப் 17:21 அந்த அத்தேனே பட்டணத்தாரெல்லாரும், அங்கே தங்குகிற அந்நியரும், நவமான காரியங்களைச் சொல்லுகிறதிலும் கேட்கிறதிலுமே யொழிய வேறொன்றிலும் பொழுது போக்குகிறதில்லை.

"அந்தப் பட்டணம் விக்கிரகங்களால் நிறைந்திருக்கிறது" உலகத்தில் இந்தப் பட்டணத்திலதான் விக்கிரகங்கள் மிகவும் அதிகம் என்று கூறுகிறார்கள்.

வைராக்கியமடை (stirred)

παροξύνω - paroxynoo - 3947

வினைச்சொல் - வைராக்கியமடை, சினமடை (1கொரி 13:5)

"ஜெபஆலயத்தில் யூதரோடும் பக்தியுள்ளவர்களோடும் சந்தைவெளியில் எதிர்ப்பட்டவர்களோடும் தினந்தோறும் சம்பாஷணை பண்ணினான்" - (அப் 17:2

"எபிக்கூரர்" (Epicureans) - எபிக்கூரசை (Epicurus) இவர்கள் பின்பற்றினார்கள். இவர்களுடைய காலம் கி.மு 342 - 274. இவர்கள் எந்தத் தெய்வத்தின்மீதும் நம்பிக்கை வைப்பதில்லை. கடவுளின் பெயரை மட்டுமே நம்பினார்கள். புசிப்பதும் குடிப்பதும்தான் ஜீவியம் என்று நினைத்தார்கள். உலகத்தில் யாரும் யாரையும் ஆளக்கூடாது என்று விரும்பினார்கள். தாங்கள் எந்தத் தேசத்தையும் சேர்ந்தவர்கள் அல்ல என்று கூறிவிடுவார்கள்.

"ஸ்தோயிக்கர்" (Stoicks) - இவர்கள் ஜீனோவை (Zeno) பின்பற்றினார்கள். இவர்களுடைய காலம் கி.மு 270. இவர்கள் பல தெய்வங்களை நம்பினார்கள். விதிப்பிரகாரமாகவே மனுஷனுடைய வாழ்வு அமையும் என்பது இவர்களுடைய தத்துவம். எந்தத் தெய்வமும் மனுஷனுக்கு நன்மை செய்யாது என்றார்கள். மனுஷனுக்குத் துக்கம் சந்தோஷம் ஆசை எதுவும் இருக்கக்கூடாது என்பது இவர்களுடைய கொள்கை. எபிக்கூரியரும் ஸ்தோயிக்கரும் மரித்தோர் உயிர்த்தெழுவதை நம்புவதில்லை. ஆத்துமா நித்திய காலமாக ஜீவிக்கும் என்பதைக்கூட எபிக்கூரியர் நம்பவில்லை. (அப் 17:18)

ஞானி (philosophers) -

φιλόσοφος - philosophos 5386

ஆண்பால் பெயர்ச்சொல் - ஞானி

17 அதிகாரம்

"இந்த வாயாடி என்ன பேசப்போகிறான் என்றார்கள்" - இந்த வாக்கியத்தில் "வாயாடி" என்பதற்கான கிரேக்க வார்த்தை "ஸ்பர்மோலகோஸ்" (spermologos) என்பதாகும். இதற்கு விதைகளைக் கொத்தித் தின்னும் பறவை என்று பொருள். சிறிய பறவை. பவுலை இந்தப் பெயரிட்டு அழைக்கிறார்கள். இந்தப் பறவை சாலையில் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கிடக்கும் உணவு தானியங்களைப் பொறுக்கித் தின்னும். அதுபோல பவுல் மற்றவர்களுடைய செய்திகளை அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சேகரித்துக் கூறுவதாக இந்த ஞானிகள் நினைத்தார்கள். ஆகையினால் பவுலை வாயாடி என்றார்கள்.

வாயாடி (babbler) - σπερμολόγος - spermologos - 4691

பொருள் - வாயாடி (seed-picker, chatterer)

"இவன் அந்நிய தேவதைகளை அறிவிக்கிறவனாகக் காணகிறது" - அப் 17 : 18 ஆகிய வசனங்களில் உள்ள பிரகாரம் பவுல் இயேசு கிறிஸ்துவை வெளிப்படுத்திக் காண்பித்தான்.

"அந்நிய தேவதைகள்" - இந்த வாக்கியத்தைக் குறிப்பிடுவதற்கு இரண்டு கிரேக்க வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அவையாவன: "செனோஸ்" (xenos) "டைமோனியோன்" (daimonion) என்பதாகும். டைமோனியோன் என்பது பிசாசுகளையும், தேவதைகளையும் குறிக்கும். அந்நிய தேவதைகளைப் பற்றிப் பிரசங்கம் பண்ணுவது ரோமாபுரியிலும் அத்தேனே பட்டணத்திலும் தடைபண்ணப்பட்டிருந்தது. சாக்ரடீஸ் விநோதமான தெய்வங்களையும் தெய்வீக சக்திகளையும் குறித்துப் பேசினதாக அவன்மீது குற்றம் சுமத்தினார்கள். புறஜாதியாருடைய தெய்வ நம்பிக்கையின் பிரகாரம் "தியோஸ்" (theos) என்பது இயற்கையின் தெய்வங்களைக் குறிக்கும். "டைமோன" (daimoon) என்பது தெய்வமான மனுஷனைக் குறிக்கும்.

பவுல் இயேசு கிறிஸ்துவைப் பற்றி அவர்களுக்குப் பிரசங்கம் பண்ணும்போது, இயேசு கிறிஸ்து மனுஷராக இருந்தார் என்றும் சிலுவையில் அறையப்பட்டார் என்றும் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார் என்றும் பிதாவின் வலதுபாரிசத்திற்கு உயர்த்தப்பட்டார் என்றும் தெளிவாக எடுத்துக் கூறினார். கிரேக்கருக்கு இந்த உபதேசம் புதிதல்ல. மனுஷருக்கு உதவி புரிந்த மாவீரர்களும் பெரிய காரியங்களை நிறைவேற்றிய புனிதர்களும் தங்களுடைய சரீரங்களில் மரித்த பின்பு உயர்த்தப்படுவார்கள் என்று நம்பினார்கள். ஆகையினால்தான் இயேசு கிறிஸ்துவை அந்நிய தேவதை என பொருள்படும் டைமோனியோன் என்று அழைக்கிறார்கள். கிரேக்கரைப் பொறுத்த வரையில் இயேசு கிறிஸ்து தியோஸ் என்று அழைக்கப்படும் இயற்கையின் தெய்வமல்ல. அவர் டைமோன் என்று அழைக்கப்படும் தெய்வமான மனுஷன்.

கிரேக்கர்கள் உயிர்த்தெழுவதை நம்பவில்லை. ஒவ்வொரு காரியத்திற்கும் கிரேக்கர்கள் ஒரு உருவத்தைக் கொடுத்து விடுவார்கள். ஆகையினால்தான் அத்தேனே பட்டணத்தில் எண்ணற்ற விக்கிரகங்கள் நிறைந்திருந்தன. பிறப்பிற்கு ஒரு விக்கிரகம், இறப்பிற்கு ஒரு விக்கிரகம், சந்தோஷத்திற்கு ஒரு விக்கிரகம், கவலைக்கு ஒரு விக்கிரகம் என்று எல்லா உணர்ச்சிகளுக்கும் எல்லாக் காரியங்களுக்கும் அங்கு விக்கிரகங்கள் இருக்கும்.

பவுல் கிரேக்கரிடம் இயேசு கிறிஸ்துவைப் பற்றியும் அவருடைய உயிர்த்தெழுதலைப் பற்றியும் பிரசங்கித்தான். ஆகையினால் பவுல் இரண்டு தெய்வங்களைப் பிரசங்கித்ததாகக் கூறுகிறார்கள். அவர்களைப் பொறுத்த அளவில் இயேசு கிறிஸ்து ஒரு தெய்வம். உயிர்த்தெழுதல் மற்றொரு தெய்வம். இவை இரண்டுமே அவர்களுக்கு அந்நிய தேவதைகள். கிரேக்கர்கள் அவனை அத்தேனே பட்டணத்தாரின் ஆலோசனைச் சங்கத்திற்கு முன்பாக அழைத்துச் செல்கிறார்கள்.

அந்நியமான (strange) - ξένος - xenos 3581

பொருள் அந்நியமான, புதுமையான, சடப்பான

17 அதிகாரம்

அந்நிய தேவதை (foreign demons) - δαιμόνιον - daimonion - 1140

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பிசாசு, பேய், அசுத்த ஆவி, அந்நிய தேவதை

தேவன் (god) - θεός - theos - 2316

ஆண்பால் பெயர்ச்சொல் அல்லது பெண்பால் பெயர்ச்சொல் - தேவன் தெய்வம், திவ்வியம்

பிசாசுகள் (devils) - δαίμων - daimoon - 1142

ஆண்பால் அல்லது பெண்பால் பெயர்ச்சொல் - பிசாசுகள், பேய்கள்

"அவன் இயேசுவையும் உயிர்த்தெழுதலையும் அவர்களுக்குப் பிரசங்கித்தான்" - பவுல் பிரசங்கித்த சுவிசேஷ செய்தியிலிருந்து கிரேக்கர்கள் நினைவில் வைத்திருந்தது இரண்டு காரியங்கள்தான். அவை 1. இயேசு கிறிஸ்து 2. அவருடைய உயிர்த்தெழுதல்

"மார்ஸ் மேடை" (Areopagus, The hill of Mars) - அத்தேனே பட்டணத்தாரின் ஆலோசனைச் சங்கம் மார்ஸ்மேடையில் கூடுவது வழக்கம். (அப் 17:22) புறஜாதியார் மத்தியில் இந்தச் சங்கம் மிகவும் புனிதமானதாகவும், மரியாதைக்குரியதாகவும் கருதப்பட்டது. அத்தேனே பட்டணத்தாரைப் பொறுத்த அளவில் இது ஒரு நீதிமன்றம். இங்கு ஒரு கதை நடந்ததாக இவர்கள் நம்புகிறார்கள். நெப்டியூனின் (Neptune) மகனான ஹலிரோதியஸை (Halirrhothius) மார்ஸ் கொலை செய்து விட்டதாக அவன்மீது பன்னிரண்டு தேவதைகள் குற்றம் சுமத்தினார்களாம். அந்த வழக்கு இந்த மேடையில் நடைபெற்றதாம். இறுதியில் மார்ஸ் தன்னுடைய விவாதத் திறமையினால் விடுவிக்கப்பட்டானாம். ஆகையினால் இந்த மார்ஸ் மேடையில் வழங்கப்படும் தீர்ப்பு நியாயமானதாகவும், பாரபட்சமற்றதாகவும் இருக்கும் என்பது கிரேக்கருடைய நம்பிக்கை. நியாயமானதாகவும் பாரபட்சமற்றதாகவும் இருக்கும் என்பது கிரேக்கருடைய நம்பிக்கை. மார்ஸ் மேடையில் நியாயம் விசாரிக்கப்பட்டால் எல்லோருக்கும் திருப்தியாக இருக்கும்.

மார்ஸ் மேடையில் நியாயமன்றம் இரவு வேளையில் கூட்டப்படும். குற்றம்சுமத்தப்பட்டவர்கள்மீது ஈவு இரக்கம் எதுவும் பார்க்கக்கூடாது. அவர்களுக்குப் பாரபட்சம் காண்பிக்கக் கூடாது. நீதி ஒன்றே பிரதானமாக இருக்க வேண்டும் என்னும் அடிப்படையில்தான் அவர்கள் இரவில் நீதிமன்றத்தைக் கூட்டினார்கள். வழக்கு விசாரணை நடைபெறும் பொழுது குற்றவாளிகள் அழுவதற்கோ தங்கள்மீது பரிதாபம் ஏற்படுத்துவதற்காக எந்தக் காரியத்தைச் செய்வதற்கோ அவர்களுக்கு அனுமதியில்லை. தங்கள் வழக்குகளை மட்டும் எடுத்துக் கூறலாம். இரவு வேளையாகையால் அந்த இடமும் இருட்டாக இருக்கும். நீதிபதிகள் குற்றவாளிகளின் முகத்தைப் பார்த்து அவர்கள்மீது பரிதாபப்படவோ இரக்கம் காண்பிக்கவோ முடியாது.

வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பு ஒரு மிருகத்தைப் பலியிடுவார்கள். தாங்கள் சொல்வதெல்லாம் உண்மை என்று அதன் இரத்தத்தின்மீது வழக்காடுகிறவர்கள் ஆணையிடுவார்கள். இதன் பொருள் என்னவெனில் பொய்கூறியவனும் அவனுடைய குடும்பத்தாரும் இந்த மிருகத்தைப்போன்றே கொல்லப்படுவார்கள் என்பதுதான்.

இப்போது நியாய மன்றத்திலே அவர்கள் பவுலை விசாரிப்பதற்காக அழைத்து வருகிறார்கள்.

"நவமான காரியங்கள்" (new thing) - புதிய காரியங்களும் புதிய கருத்துக்களும்

18. அத்தேனே பட்டணத்தில் பவுலின் பிரசங்கம் - இயேசு உலகத்தை நியாயம் தீர்க்கிறார்

(1) அறியப்படாத தேவன்

அப் 17:22 அப்பொழுது பவுல் மார்ஸ் மேடையின் நடுவிலே நின்று, அத்தேனரே, எந்த விஷயத்திலும் நீங்கள் மிகுந்த தேவதாபக்தியுள்ளவர்களென்று காண்கிறேன்.

17 அதிகாரம்

அப 17:23 எப்படியென்றால், நான் சுற்றித் திரிந்து, உங்கள் ஆராதனைக் குரியவைகளைக் கவனித்துப் பார்த்த பொழுது, அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலி பீடத்தைக் கண்டேன் நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்

"பவுல் மார்ஸ் மேடையின் நடுவிலே நின்றான் - நியாயாதிபதிகளுக்கு முன்பாக பவுல் நிற்கிறான்

ஆராதனைக்குரியவைகள் (devotions) - σέβασμα - sebasma - 4574

பால் வேறுபாடற்ற பெயர்சொல - ஆராதனைக் குரியவைகள ஆராதிக்கப்படுவது (objects of worship). அப 17:23; 2தெச 2:4)

"நீங்கள அறியாமல ஆராதிக்கிற அவரையே நான உங்களுக்கு அறிவிக்கிறேன" - அத்தேனே பட்டணத்தில புதிய தெய்வத்தைப பிரசங்கம் பணணுவது சட்டபபிரகாரம் மிகப்பெரிய குற்றம். ஆகையினால அவாகள ஏறகெனவே ஆராதித்து வந்த தெய்வத்தோடு தன்னுடைய பிரசங்கச செய்தியைப பவுல இணைத்துக் கூறுகிறான அவன அந்த ஊரில சுற்றித் திரிந்தபோது அங்கு பலவிதமான விக்கிரகங்களைக் கண்டான அதில ஒரு பலிபீடத்தில "அறியப்படாததேவன்" என்று எழுதப்பட்டிருந்தது. பவுல புதிய தேவனை இங்கு கூறுவதற்குப பதிலாக அந்த அறியப்படாத தேவனே இயேசு கிறிஸது என்று விவரித்துக் கூறுகிறான அந்த அறியப்படாத தேவனை அத்தேனே பட்டணத்தாா ஏற்கெனவே அங்கீகரித்து, ஏற்றுக் கொண்டிருக்கிறாாகள

தேவனைப் பற்றிய உபதேசங்கள்

1 உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கினவர் (அப 17:24)

2 வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவர் (அப் 17:24)

3 கைகளினால் கட்டப்பட்ட கோவில் களில் அவர் வாசம்பண்ணுகிறதில்லை.

4 மனுஷர் கைகளால் அவர் பணிவிடை கொள்ளுகிறதுமில்லை.

5. எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் அவர் கொடுக்கிறார் (அப 17:25)

6 மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப் பண்ணினார் (அப 17:26

7 பூமியின் மீதெங்கும் குடியிருக்கச்செய்தார் (அப் 17:26)

8 முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார் (அப 17:26; அப 15:18)

9 தேவன் மனுஷருக்கு இரட்சிப்பை உண்டுபண்ணியிருக்கிறார் (அப 17:27)

10 சர்வ வியாபகர் (அப் 17:27)

11 எல்லா ஜீவனுக்கும் அவர் ஆதாரமாய இருக்கிறார் (அப் 17:28)

12 அவர் ஜீவனுள்ளவர் (அப் 17:29

13. இயேசு கிறிஸ்து தேவனுடைய வெளிப்பாடாக இருக்கிறார் (அப 17:30

14 எல்லோரும் மனந்திரும்ப வேண்டும் (அப 17:30)

15. நியாயத்தீர்ப்பின் நாள் குறிக்கப் பட்டிருக்கிறது (அப 17:31, வெளி 20:11-15; மத் 12:36, ரோமர் 2:16

16 பூலோகத்தை நீதியாய நியாயந்தீர்ப்பார் (அப் 17:31 வெளி 20:11-15)

17 இயேசு கிறிஸ்து நியாயாதிபதியாக இருப்பார் (அப 17:31; யோவான் 5

18 இயேசு கிறிஸ்துவை மரித்தோரிலி ருந்து எழுப்பினதினாலே அதின நிச்சயத்தை எல்லாருக்கும் விளக்கப் பண்ணினார் (அப 17:31; 1கொரி 15

17 அதிகாரம்

(2) கர்த்தரே சிருஷ்டிகர் - மனுஷனை தேவன் சிருஷ்டித்ததின் நோக்கம் - (வெளி 4:11)

அப் 17:24 உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம்பண்ணுகிறதில்லை

அப் 17:25 எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் [illegible] கொடுக்கிற அவர் [illegible] யாதொன்று தேவையானது போல மனுஷர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறதுமில்லை

அப் 17:26 மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின்மீதெங்கும் குடியிருக்கச் செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்

அப் 17:27 கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார் அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே

"உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர்" கோவில்களில் பூட்டப்பட்டிருக்கும் தெய்வங்கள் அறியப்படாத தேவனாக இருக்க முடியாது என்று பவுல் கூறுகிறார் ஏதென்சில் அந்த தேவதைகள் கோவில்களைவிடச் சிறியவை. கோவில்கள் அவற்றை அடக்கி வைத்துவிட்டன கிரேக்கருடைய விக்கிரகாராதனை அனைத்தையும் பவுல் இந்த வசனத்தின் மூலமாகக் கடிந்து கூறுகிறார்

"வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம்பண்ணுகிறதில்லை" - பவுல் இந்த வசனத்தில் ஸ்தேவான் கூறிய வார்த்தையைமேற்கோளாகக் கூறுகிறார் ஸ்தேவானைக் கொல்வதற்குக் காரணமாக இருந்தவனே இந்த பவுல்தான் பவுல் கேட்ட முதலாவது பிரசங்கமும் ஸ்தேவானுடைய பிரசங்கமே. (அப் 7:48)

பணிவிடைகொள் (worshipped) - θεραπεύω - therapeuoo - 2323

வினைச்சொல் - சொஸ்தமாக்கு, குணமாக்கு சௌக்கியமாக்கு ஆரோக்கியமாக்கு, பணிவிடைகொள் (wait upon, minister, heal) - [illegible] ஆராதிக்கிறவர்கள் கர்த்தரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டும் (யோவான் 4:24; ஏசா 40:31; அப் 1:4)

"எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர்" - அத்தேனே பட்டணத்தில் உள்ளவர்கள் தங்களுடைய விக்கிரகங்களை ஆராதனை செய்யும்போது அவற்றிற்குத் தேவையானவற்றை பணிவிடையாகச் செய்வார்கள் அறியப்படாத தேவன் ஜனங்களைப் பராமரிக்கிறவர் தேவனால் பராமரிக்கப்படும் ஜனங்களால் தேவனைப் பராமரிக்க முடியாது. இந்த வசனத்தின் மூலமாக பவுல் அத்தேனே பட்டணத்தாரின் விக்கிரகாராதனை முறைமையைக் கடிந்து கூறுகிறார் அறியப்படாத தேவன் எப்போதும் ஜீவிக்கிறவர் அவர் எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிறவர் அவருக்கு ஒன்றும் தேவையில்லை ஆகையினால் அவர் மனுஷர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறதுமில்லை

"மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணினார்" தேவன் மனுஷஜாதியான சகல ஜனங்களையும் ஒரே இரத்தத்தில் தோன்றப் பண்ணினாலும் அவர்களைப் பூமியில் ஒரே இடத்தில் குடியிருக்கச் செய்யாமல் பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்தார் அவர்களுக்குக் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்

17 அதிகாரம்

ஆதாமின் மூலமாக மனுக்குலம் அனைத்தும் சிருஷ்டிக்கப்பட்ட போதிலும் மனுக்குலமானது பூமியெங்கும் பலுகிப்பெருக வேண்டுமென்பது தேவனுடைய சித்தம் (ஆதி 1:28 ஆதி 8:17 ஆதி 9:1) மனுஷனுடைய கீழ்படியாமையினாலேயே தேவன் ஜனங்களுடைய பாஷைகளைத் தாறுமாறாக்கினார் (ஆதி 11:1-9) பூமியைக் கண்டங்களாகப் பிரித்து பல தேசங்களாக உண்டாக்கினார் (ஆதி 10:25) சரீரப் பிரகாரமாகவும் ஆவிக்குரிய பிரகாரமாகவும் ஜனங்களை இவ்வாறு பிரித்து வைத்திருப்பது தேவனுடைய சித்தமாயிற்று.

மேசியாவின் சந்ததி

1 நோவாவின் ஜலப்பிரளயத்திற்கு முன்பாகவும், பின்பாகவும் விழுந்துபோன தேவதூதர்கள் பூலோகத்திலுள்ள ஸ்திரீகளை விவாகம் பண்ணினார்கள் (ஆதி 6:1-4) இவர்களுக்கு ராட்சதர்கள் பிறந்தார்கள் இது சாத்தானுடைய தந்திரம். மானிட இனத்தைப் பாழாக்குவதற்காக (ஆதி 3:15 ஆவது வசனத்தில வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஸ்திரீயின் வித்தாகிய மேசியாவின் பிறப்பைத் தடைபண்ணுவதற்காகவும் சாத்தான் இவ்வாறு சதியாலோசனை பண்ணினான்

2 நோவாவின் நாட்களில் ஜனங்கள் துன்மார்க்கராய் இருந்தார்கள் அவர்களை அழிப்பதற்காகவே தேவன் பூமியிலே ஜலப்பிரளயத்தை அனுப்பினார் (ஆதி 6)

3 நோவாவையும், அவனுடைய குடும்பத்தாரையும் தேவன் பாதுகாத்தார் இவர்கள் மட்டுமே ஆதாமின் சந்ததியில களங்கமில்லாமல் வந்தவர்கள் (ஆதி 6:9)

4 இஸ்ரவேல் ஜனங்கள் கானானியரோடு திருமணம் செய்து ஒரு கலப்பு இனத்தை உண்டுபண்ண வேண்டும் என்பது சாத்தானின் மற்றொரு சதியாலோசனை இதன் மூலமாக மேசியாவின் பிறப்பைத் தடைபண்ணலாம் என்று சாத்தான் நினைத்தான் ஆனால் தேவனோ இஸ்ரவேல தேசத்தை மற்ற தேசங்களோடு கலந்துவிடாதவாறு வேறு பிரித்து வைத்திருந்தார் மேசியாவின் பிறப்பிற்கு ஆயத்தமாக இஸ்ரவேல் தேசத்தார் தங்களுடைய பரிசுத்தத்தைக் காத்துக் கொள்வதற்காக தேவன் அவர்களை வேறு பிரித்து வைத்திருந்தார் (ஆதி 24:3)

வேறுபிரிக்கப்பட்ட இஸ்ரவேல் தேசம்

1 ஆபிரகாம் தன் மகன் ஈசாக்கிற்கு விவாகம் பண்ணுவதற்குப் பெண் பார்ப்பதற்காக எலியேசரை அனுப்பினான் கானானிய ஸ்திரீயைத் தன் மகனுக்கு மனைவியாகக் கொள்ளக்கூடாது என்று ஆபிரகாம் தடைபண்ணினான் (ஆதி 24:1-4 தேவன் இதில பிரியமாக இருந்தார் ஆகையினால ஈசாக்கிற்கு யாரை மனைவியாகக் கொள்ள வேண்டுமென்று தேவன் வழிநடத்தினார் (ஆதி 24:7-67

2 ஈசாக்கு தன மகன் யாக்கோபிற்குக் கானானியஸ்திரீயைப் பெண் கொள்ள தடைபண்ணினான் (ஆதி 27:46-28:7

3 ஆபிரகாம் தன் மறுமனையாட்டியின் பிள்ளைகளையும் இரண்டாம் மனைவியையும் ஈசாக்கிடமிருந்து தூர தேசத்திற்கு அனுப்பினான அவர்களுடைய சந்ததியும் ஈசாக்கின் சந்ததியும் கலந்துவிடாதவாறு இந்தக் காரியம் நடைபெற்றது (ஆதி 25:1-6

4 ஏசாவின கீழ்படியாமை அவனுடைய பெற்றோரை மிகவும் வருத்தமடையச் செய்தது (ஆதி 25:28 ஆதி 26:34-35, ஆதி 27:46 ஆதி 28:8-9

5 ஈசாக்கின் இரண்டு சந்ததியார் நித்திய காலமாகப் பிரிந்திருக் கிறார்கள் ஆதி 36 ஆதி 46:8-26

6 இஸ்மவேலின் சந்ததியாரும், ஈசாக்கின சந்ததியாரும் நித்திய காலமாகப் பிரிந்திருக்கிறார்கள் (ஆதி 25:12-23; கலா 4:29

17 அதிகாரம்

7 இஸ்ரவேல் ஜனங்கள் அந்நிய ஜாதியில் விவாகம் பண்ணுவதை தேவன் தடை பண்ணினார் (யாத் 34:12-16; உபா 7:3-6)

8 புறஜாதி திருமணம் தேவனுடைய ஜனங்கள் மத்தியிலே பிரிவினையை உண்டாக்குகிறது. (எண் 12)

9 இஸ்ரவேல் ஜனங்கள் அந்நிய ஜாதியாரைத் திருமணம் செய்ததற்குத் தண்டனையாக அவர்களுடைய தேசத்திலே விரோதிகள் இருந்தார்கள் (யோசு 23:12-13)

10 புறஜாதி திருமணம் இஸ்ரவேலின்மீது சாபத்தை வருவித்தது. (நியா 3:6-7 எண் 25:1-8)

11 சாலொமோன் அந்நிய ஸ்திரீயைத் திருமணம் செய்து பாவம் செய்தான் (1 இராஜா 11)

12 பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்கள் அந்நிய ஸ்திரீகளை விவாகம் செய்து பாவம் செய்தார்கள் (எஸ்றா 9; எஸ்றா 10; நெகே 13)

13 அவர்களைப் பிரித்து வைக்குமாறு தேவன் இஸ்ரவேல் ஜனத்தாரிடம் கூறினார்

14 யூதர்கள் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட ஜனம். ஆகையினால் எல்லாக் காலங்களிலும் அவர்கள் வேறுபிரிக்கப்பட்ட ஜனமாகவே கருதப்படுகிறார்கள் மத் 10:6 யோவான் 1:11

15 யூதருக்கும் மற்ற தேசங்களுக்கும் இடையிலுள்ள வேறுபாடு எப்போதும் இருக்கும். (ஏசா 2:2-4; எசே 47 எசே 47:13-48:35; சக 14:16-21 மத் 19:28; லூக்கா 1:32-33; வெளி 7:1-8; வெளி 14:1-5)

16 இஸ்ரவேலில் உள்ள சில ஜனங்கள் மற்றவர்களோடு சேர்ந்து ஆராதிக்கக் கூடாது. (உபா 23:1-3; எஸ்றா 10:8; நெகே 9:2; நெகே 10:28; நெகே 13:3)

பிரிக்கப்பட்டிருக்கும் காரியங்கள்

1 மாட்டையும் கழுதையையும் பிணைத்து உழாதிருப்பாயாக (உபா 22:10)

2 உன் மிருகஜீவன்களை வேறு ஜாதியோடே பொலியவிடாயாக (லேவி 19:19)

3 உன் வயலிலே வெவ்வேறு வகையான விதைகளைக் கலந்து விதையாயாக, (லேவி 19:19)

4 உன் திராட்சத் தோட்டத்திலே பலவிதமான விதையை விதைக்காயாக. (உபா 22:9)

5 சணல் நூலும் கம்பளிநூலும் கலந்த வஸ்திரத்தை உடுத்தாதிருப்பாயாக (உபா 22:11; லேவி 19:19)

விசுவாசிகளுடைய வேறுபிரிக்கப்பட்ட ஜீவியம்

விசுவாசிகளாகிய நாம் இந்த உலகத்தில் இருந்தாலும் நாம் இந்த உலகத்திற்குரியவர்கள் அல்ல. சிலவேளைகளில் நாம் ஒருசில ஜனங்களைவிட்டு வேறுபிரிந்து ஜீவிக்க வேண்டும். (மத் 18:15-17; 1கொரி 5:9-13; 1கொரி 6:15; 2கொரி 6:14-18; 2தெச 3:6,14; 1தீமோ 6:5; 2தீமோ 3:5)

"கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார்" ஜனங்கள் தேவனைத் தேடவேண்டும் அவரைக் கண்டுபிடிக்க வேண்டும் தேவனுடைய கிரியைகள் அனைத்துமே இந்தத் தெய்வீக நோக்கத்தை மையமாக வைத்தே செயல்படுகிறது. (1பேதுரு 2:24; 2பேதுரு 3:9; யோவான் 3:15-20; வெளி 22:17)

தடவு (feel) - ψηλαφάω
pseelaphaoo - 5584

வினைச்சொல் - தொடு, தடவு (grope for) (அப் 17:27; லூக்கா 24:39; எபி 12:18; 1யோவான் 1:1) - தேவன் எல்லோருக்கும் அருகிலேயேயிருக்கிறார் ஆகையினால் அவரைத்தேடுகிறவர்கள் அனைவரும் கண்டடைவார்கள் (ரோமர் 10:9-10; 1யோவான் 1:9)

17 அதிகாரம்

(3) விக்கிரகாராதனையை பவுல் கடிந்து கொள்கிறான்

அப் 17:28 ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம் இருக்கிறோம். அப்படியே உங்கள் புலவர்களிலும் சிலர் நாம் அவருடைய சந்ததியார் என்று சொல்லியிருக்கிறார்கள்

அப் 17:29 நாம் தேவனுடைய சந்ததியாராயிருக்க, மனுஷருடைய சித்திரவேலையினாலும் யுக்தியினாலும் உருவாக்கின பொன் வெள்ளி கல் இவைகளுக்கு தெய்வம் ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்கலாகாது.

"அவருக்குள் நாம் பிழைக்கிறோம் அசைகிறோம், இருக்கிறோம்" - தேவனே நமது ஜீவியத்தின் ஆதாரமாக இருக்கிறார் (எபி 1:3)

"அப்படியே உங்கள் புலவர்களிலும் சிலர் நாம் அவருடைய சந்ததியார் என்று சொல்லியிருக்கிறார்கள்" பவுல் இந்த வசனத்தில் "அவருக்குள் நாம் பிழைக்கிறோம் அசைகிறோம் இருக்கிறோம் என்று கூறியிருப்பது சிலிசியாவிலுள்ள (Cilicia) அரடஸ் (Aratus) என்னும் புலவர் கூறியிருப்பதை மேற்கோளாக கூறுகிறார் பவுல் சிலிசியா தேசத்தைச் சேர்ந்தவர்

சந்ததி (offspring) - **γένος** - genos - 1085

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - சகல விதம், ஜாதி, குழந்தைகள் சந்ததி, பலவித, பற்பல, சகலவிதம் இவ்வகை, குடும்பத்தார் ஜனங்கள் தேசம், வம்சம், பிறந்தவன் எத்தனையோவிதம் **offspring** (அப் 17:28-29; வெளி 22:16); **generation** (1பேதுரு 2:9); **stock** (அப் 13:26; பிலி 3:5); **kindred** (அப் 4:6, அப் 7:13,19); **countrymen** (2கொரி 11:26); **nation** (மாற்கு 7:26; கலா 1:14); **kind** (மத் 13:47; மத் 17:21; மாற்கு 9:29; 1கொரி 12:10; 1கொரி 14:10 **diversity** (1கொரி 12:28 **birth** (அப் 4:36; அப் 18:2,24 - ஆதாமினுடைய வம்சவழியில் வருகிறவர்கள் அனைவருமே தேவனுடைய சந்ததியாராய் இருக்கிறோம். ஆதி 1:26-28

தெய்வம் (Godhead) θεῖος theios - 2304

பெயரடை - தெய்வம் (Divine One) (2பேதுரு 1:3-4 - நாம் தேவனுடைய சந்ததியாராய் இருக்கும்போது தேவனைப் போலவே இருக்க வேண்டும் அத்தேனே பட்டணத்திலுள்ள விக்கிரகங்களைப் போல இருக்கக்கூடாது.

சித்திரவேலை (graven) - **χάραγμα** - charagma - 5480

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - சித்திரவேலை, முத்திரை - அப் 17:29 ஆவது வசனத்தில் சித்திரவேலை (graven) என்றிருக்கிறது மற்ற இடங்களில் மிருகத்தின் அடையாளமாகிய முத்திரையைக் (mark of the beast) குறிக்கிறது (வெளி 13:16-17 வெளி 14:9-11 வெளி 15:2 வெளி 16:2 வெளி 19:20 வெளி 20:4

(4) அறியாமையுள்ள காலங்கள்

அப் 17:30 அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர் போலிருந்தார் இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்

"அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர்போலிருந்தார் இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்" விக்கிரகாராதனை உலகத்தை அசுசிப்படுத்திற்று. தேவன் இதை அறியாமையுள்ள காலங்களாகக் கருதி, விக்கிரகாராதனையைப் பொறுத்துக் கொண்டார் அதைக் காணாதவர்போல இருந்தார் ஆனால் இப்போதோ தம்மை மனுக்குலத்திற்குப் பரிபூரணமாக வெளிப்படுத்தியிருக்கிறார் இனிமேல் மனுஷர் விக்கிரகாராதனையிலிருந்து மனந்திரும்பி, மெய்தேவனை மட்டுமே ஆராதிக்க வேண்டும். (லூக்கா 13:3

17 அதிகாரம்

(5) தேவன் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயம் தீர்ப்பார் - (மத் 25.31-46. யோவான் 5.22 ரோமர் 2.16)

அப் 17.31 மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார் அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார் அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளக்கப்பண்ணினார் என்றான்

தீர்க்கதரிசன எண் - 8

"மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார் அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந் தீர்ப்பார் அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளக்கப்பண்ணினார் (அப் 17.31) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை ஆயிரம் வருஷ அரசாட்சியின் முடிவில் நிறைவேறும். (வெளி 20.7-15; மத் 12.36 யோவான் 5.22, ரோமர் 2.16)

"அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளக்கப்பண்ணினார்" - இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினாலே எல்லா மனுஷருக்கும் உயிர்த்தெழுதலும் நியாயத்தீர்ப்பும் உறுதியாயிற்று. (1 கொரி 15.4, 23) இயேசு கிறிஸ்து நியாயாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார் (அப் 13.48) எப்பிக்கூரியரையும் ஸ்தோயிக்கரையும் பொறுத்த வரையில் உயிர்த்தெழுதல், நியாயத்தீர்ப்பு ஆகியவை புத்தியீனமான மனுஷனுடைய சொப்பனத்தைப் போன்றவை. அவர்கள் உயிர்த்தெழுதலை விசுவாசிக்கவில்லை

ஆகையினால் மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்து அவர்கள் கேட்டபொழுது சிலர் இகழ்ந்தார்கள் பவுல் இன்னும் பிரசங்கம் பண்ணி முடிக்கவில்லை. அதற்குள் சிலர் நீ சொல்லுகிறதை இன்னொருவேளை கேட்போம் என்று கூறிவிட்டு, பவுல் பிரசங்கம் பண்ணி முடியும்வரையில் காத்திராமல் அந்த இடத்தை விட்டு புறப்பட்டுப் போய்விட்டார்கள் அவர்கள் பவுலுக்கு எந்தத் தண்டனையும் கொடுக்கவில்லை. பவுல் கிரேக்கருடைய சட்ட திட்டங்கள் எதையும் மீறவில்லை ஆகையினால் இப்படியிருக்க, பவுல் அவர்களை விட்டுப் போய்விட்டான்

(6) பவுலின் பிரசங்கத்தினால் ஏற்பட்ட விளைவு

அப் 17.32 மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்து அவர்கள் கேட்டபொழுது சிலர் இகழ்ந்தார்கள் சிலர் நீ சொல்லுகிறதை இன்னொருவேளை கேட்போம் என்றார்கள்

அப் 17.33 இப்படியிருக்க, பவுல் அவர்களை விட்டுப் போய்விட்டான்

அப் 17.34 சிலர் அவனைப் பற்றிக் கொண்டு, விசுவாசிகளானார்கள் அவர்களில் மார்ஸ்மேடையின் நியாயாதிபதிகளில் ஒருவனாகிய தியொனீசியு என்பவனும், தாமரி என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீயும் இவர்களுடனே வேறு சிலரும் இருந்தார்கள்

"தியொனீசியு" (Dionysius the Areopagite) அத்தேனேயில் உள்ள மார்ஸ்மேடையில் இயங்கி வந்த நீதிமன்றத்து நியாயாதிபதிகளில் ஒருவன் இந்தப் பட்டணத்தின் தேசாதிபதிகள் மட்டுமே நியாயாதிபதியாக இருக்க முடியும். இவன் ஜனங்கள் மத்தியில் உயர்ந்த அந்தஸ்துடையவன்

18 அதிகாரம்

19. அத்தேனே பட்டணத்திலிருந்து கொரிந்து பட்டணத்திற்கு பிரயாணம் - ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும்

அப் 18:1 அதன்பின்பு பவுல் அத்தேனே பட்டணத்தை விட்டு கொரிந்து பட்டணத்துக்கு வந்து,

அப் 18:2 யூதரெல்லாரும் ரோமாபுரியை விட்டுப்போகும்படி கிலவுதியுராயன் கட்டளையிட்டபடியினாலே இத்தாலியாவிலிருந்து புதிதாய் வந்திருந்த பொந்துதேசத்தானாகிய ஆக்கில்லா என்னும் நாமமுள்ள ஒரு யூதனையும் அவன் மனைவியாகிய பிரிஸ்கில்லாளையும் அங்கே கண்டு, அவர்களிடத்திற்குப் போனான்.

அப் 18:3 அவர்கள் கூடாரம்பண்ணுகிற தொழிலாளிகளாயிருந்தார்கள். தானும் அந்தத்தொழில் செய்கிறவனானபடியினாலே அவர்களிடத்தில் தங்கி, வேலைசெய்துகொண்டு வந்தான்.

"கொரிந்து" (Corinth) - கிரேக்கு தேசத்தின் தலைநகரமாகவும், ரோமருடைய அதிபதியின் ஆளுகை ஸ்தலமாகவும் கொரிந்து பட்டணம் விளங்கிற்று. (அப் 18:12) அத்தேனே பட்டணம் கல்வி கற்கும் மையமாக இருந்தது. கொரிந்து அத்தேனே பட்டணத்திலிருந்து 40 மைல் மேற்கில் அமைந்திருந்தது. இந்தப் பிரதேசத்தில் அஸ்தரோத்து (Astoreth) அப்ரோத்தியா (Aphrodite) (நியா 2:13) ஆகியவற்றை ஆராதிக்கும் முறைமையைக் கிரேக்கர்கள் இங்கு பரப்பினார்கள். பொனிசியர்கள் (Phoenicians) இந்த ஆராதனை முறைமையை ஜனங்கள் மத்தியிலே அறிமுகப்படுத்தினார்கள். (1இராஜா 11:33)

"ஆக்கில்லா" (Aquila) - ஆக்கில்லாவின் பெயர் அவன் மனைவியாகிய பிரிஸ்கில்லாளோடு சேர்ந்தே கூறப்பட்டிருக்கிறது. (ரோமர் 16:3; 1கொரி 16:19; 2தீமோ 4:19)

"யூதரெல்லாரும் ரோமாபுரியை விட்டுப் போகும்படி கிலவுதிராயன் கட்டளையிட்டான்" - கிபி 52 ஆம் வருஷத்தில் இந்தக் கட்டளை பிரபலிக்கப்பட்டது.

தொழில் (craft) - ὁμότεχνος homotechnos - 3673

பெயரடை - தொழில் - மருத்துவர்கள் இந்த வார்த்தையை அதிகமாகப் பயன்படுத்துவார்கள்

"அவர்கள் கூடாரம்பண்ணுகிற தொழிலாளிகளாயிருந்தார்கள்" (tentmakers) - யூதர்கள் தங்களுடைய ஆண்பிள்ளைகளை ஏதாவது தொழில் கற்றுக் கொள்ள வேண்டுமென்று வலியுறுத்துவார்கள். ஒரு தொழிலும் தெரியாத யூதனுக்கு தங்கள் ஜனத்தின் மத்தியில் மதிப்பு இல்லை. ஒருவனுக்கு ஏதாவது ஒரு தொழில் தெரிந்திருந்தால்தான் அவனால் யாரையும் எதிர்பாராமல் சுயமாக ஜீவிக்க முடியும். தன் மகனுக்கு எந்தத் தொழிலையும் கற்றுத் தராத பெற்றோர் அவனைத் திருடனாக்குகிறார்கள் என்று யூதா மதத்திலே ஒரு பழமொழி உள்ளது. ஆட்டுரோமம் மற்றும் ஒட்டகத்தின் ரோமம் ஆகியவற்றினால் கூடாரம் பின்னுவது வழக்கம். சில இடங்களில் பவுல் கூடாரம் பின்னும் தொழில் செய்து தன்னுடைய தேவைகளைப் பராமரித்து வந்தான் (அப் 20:34; 1கொரி 4:12; 1தெச 2:9; 2தெச 3:8) இதற்கான காரணம் 2கொரி 11:9-12 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. எல்லா இடங்களிலும் கூடாரம் பின்னும் தொழில் செய்து சுவிசேஷ ஊழியத்தைப் பவுல் செய்தாரா என்று தெரியவில்லை. தன்னுடைய புதிய விசுவாசிகளுக்கு ஏதாவது தொழிலைப் பவுல் கற்றுக் கொடுத்த விவரமும் நமக்குக் கிடைக்கவில்லை. (2கொரி 12:13; கலா 6:6)

20. ஓய்வுநாளைக் குறித்து ஜெபாலயத்தில் பவுலின் சம்பாஷணை

அப் 18:4 ஓய்வுநாள்தோறும் அவன் ஜெபஆலயத்திலே சம்பாஷணைபண்ணி, யூதருக்கும் கிரேக்கருக்கும் புத்தி சொன்னான்.

"ஓய்வுநாள்தோறும் அவன் ஜெப ஆலயத்திலே சம்பாஷணைபண்ணி யூதருக்கும் கிரேக்கருக்கும் புத்திசொன்னான்" - (அப் 17:2

18 அதிகாரம்

21. சீலாவும் தீமோத்தேயுவும் பவுலோடு சேர்ந்து கொள்கிறார்கள்

அப 18:5 மக்கெதோனியாவிலிருந்து சீலாவும் தீமோத்தேயும் வந்தபோது, பவுல் ஆவியில வைராக்கியங் கொண்டு, இயேசுவே கிறிஸ்து என்று யூதருக்குத் திருஷ்டாந்தப்படுத்தினான்.

அப 18:6 அவர்கள் எதிர்த்துநின்று தூஷித்த போது, அவன் தன் வஸ்திரங்களை உதறி, உங்கள் இரத்தப்பழி உங்கள் தலையின் மேல இருக்கும், நான் சுத்தமாயிருக்கிறேன், இதுமுதல புறஜாதியாரிடத்திற்குப் போகிறேனென்று அவர்களுடனே சொல்லி.

"பவுல ஆவியில வைராக்கியங்கொண்டு, இயேசுவே கிறிஸது என்று யூதருக்குத் திருஷ்டாந்தப்படுத்தினான" - இயேசுவைக் கிறிஸது என்று கூறுவது யூதனைப பொருத்த வரையில மிகப்பெரிய தேவதூஷணம்.

எதிர்த்துநில (opposed) - ἀντιτάσσω - antitassoo - 498

வினைச்சொல - எதிர்த்துநில

யூதாகள் யுத்தம் செயவதற்கு வரிசையில நிற்பதுபோன்று பவுலோடு எதிர்த்து நின்றாகள். இவவாறுதான இந்த வாக்கியத்தில பொருளபடுகிறது (to set the battle in array). மற்ற இடங்களிலசாதாரணமாக எதிர்த்துநில (resist)என்றே மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. (ரோமர் 13:2; யாக் 4:6, யாக் 5:6, 1பேதுரு 5:5)

"தூஷித்தாாகள்" - இயேசு கிறிஸதுவே மேசியா இதில சந்தேகம் எதுவும் இல்லை. இந்தச் சத்தியத்திற்கு எதிராக மனுஷரால எந்த விவாதமும் பண்ண முடியாது. ஆகையினால் இந்தச் சத்தியத்தை ஏற்றுக கொள்ளாதவர்கள அப்போஸ்தலருக்கு எதிராகக் கலகம் பண்ணி, அவாகளைத் தூஷிக்கிறாாகள் இயேசுவைக் கிறிஸ்து என்று கூறுவது தேவதூஷணம் என்று அறிவிக்கிறாாகள்.

"பவுல் தன் வஸ்திரங்களை உதறினான்" - கால்களில் உள்ள தூசியை உதறிப் போடுவதற்குச் சமமானது. மத் 10:14, மாற்கு 6:11; லூக்கா 9:5; லூக்கா 10:11 அப 13:51)

"உங்கள் இரத்தப்பழி உங்கள் தலையின் மேல இருக்கும்" - இயேசு கிறிஸ்து யூதர்கள்மீது வரப்போகும் பழியையும், அழிவையும் குறித்துக் கூறினார் (மத் 23:37-39) பவுலும் இந்த வசனத்தில் யூதர்கள்மீது இரத்தப்பழி வரும் என்று அறிவிக்கிறார் ஆனாலும் யூதருடைய ஜெபாலயங்களுக்கு அவர் தொடர்ந்து சென்று இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப பிரசங்கித்தார் இஸ்ரவேல் ஜனங்களை எப்படியாவது இரட்சிப்பிற்குள் வழிநடத்தி வேண்டுமென்று பவுல தொடர்ந்து ஊழியம் செய்து கொண்டிருந்தார் (அப 19:8 ரோமர் 9-11)

"நான் சுத்தமாயிருக்கிறேன்" - என் கடமை முடிந்து விட்டது எனக்கு நியமிக்கப்பட்டிருக்கும் பொறுப்பிலிருந்து நான விடுதலை பெற்று விட்டேன் என்னும் பொருளில பவுல இவவாறு கூறுகிறார் (அப 20:26; எபே 3:17-21; எபே 3:1-6

22. பவுல் யூதருடைய ஜெபாலயத்தை விட்டு ஒரு வீட்டில் பிரசங்கம் பண்ணி அங்கு ஒரு சபையை ஸ்தாபிக்கிறான்

அப 18:7 அவவிடத்தைவிட்டு, தேவனை வணங்குகிறவனாகிய யுஸ்து என்னும் பேருள்ள ஒருவனுடைய வீட்டிற்கு வந்தான், அவன் வீடு ஜெபஆலயத்திற்கு அடுத்ததாயிருந்தது.

அப் 18:8 ஜெபஆலயத்தலைவனாகிய கிறிஸ்பு எனபவன தன வீட்டார் அனைவரோடும் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ள வனானான் கொரிந்தியரில அநேகரும் சுவிசேஷத்தைக் கேட்டு, விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றாாகள்

18 அதிகாரம்

"அவவிடத்தைவிட்டு, தேவனை வணங்குகிறவனாகிய யுஸ்து என்னும் பேருள்ள ஒருவனுடைய வீட்டிற்கு வந்தான்" - ஆக்கில்லாவோடும், பிரிஸ்கில்லாளோடும் தங்கியிருந்த இடத்திலிருந்து பவுல யுஸ்துவின் வீட்டிற்கு வருகிறான் (அப 18:7) ஒருசில புதிய ஏற்பாட்டு மூலபாஷை சுவடிகளில் யுஸ்துவிற்கு தீத்து யுஸ்து (Titus Justus) என்னும் பெயரும் வழங்கப்பட்டிருக்கிறது.

"ஜெப ஆலயத்தலைவனாகிய கிறிஸ்பு என்பவன் தன் வீட்டார் அனைவரோடும் கர்த்தரிடத்தில விசுவாசமுள்ளவனானான்" - ஜெபாலயத் தலைவனே ஜெபாலயங்களில நடைபெறும் எல்லா மார்க்கக் காரியங்களுக்கும் தலைமை தாங்குகிறவன இவனே ஜெபாலயத்திற்கு வருகிறவர்களுக்கு பிரமாணத்தை வியாக்கியானம் பண்ண வேண்டும். நியாயப்பிரமாணத்திற்கு எது ஏற்றது எது ஏற்றுக்கொள்ளப்படாதது என்பதை இவனே முடிவு பண்ண வேண்டும். திருமணங்களை நடத்தி வைக்க வேண்டும். விவாகரத்துக்களுக்கும் அனுமதியளிக்க வேண்டும கலகம் பண்ணுகிறவர்களை ஜெபாலயத்தை விட்டு விலக்கி வைக்க வேண்டும இப்போப்பட்ட பெரிய பொறுப்பில உள்ள ஜெபாலயத் தலைவன தன்னுடைய யூதமார்க்கத்தை விட்டுவிட்டு, இயேசு கிறிஸ்துவின மீதும், அவருடைய சுவிசேஷச் செய்தியின்மீதும் விசுவாசம் வைக்கிறான அவனோடு அவனுடைய வீட்டார் அனைவரும் கர்த்தரிடத்தில விசுவாசம் உள்ளவர்கள் ஆனார்கள இவன மனந்திரும்பிய பின்பு, சொஸ்தேனே (Sosthenes) இயேசு கிறிஸ்துவில விசுவாசமுள்ளவனாகியிருக்க வேண்டும். (அப 18:17, 1கொரி 1:1).

23. பயப்படாமல் பேசுமாறு பவுலின் தரிசனம்

அப 18:9 இராத்திரியிலே கர்த்தர் பவுலுக்குத் தரிசனமாகி: நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே,

அப 18:10 நான் உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்குசெய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை இந்தப் பட்டணத்தில எனக்கு அநேக ஜனங்கள் உண்டு என்றார்

அப 18:11 அவன் ஒரு வருஷமும் ஆறு மாதமும அங்கே தங்கி, தேவவசனத்தை அவர்களுக்குள்ளே உபதேசம்பண்ணிக் கொண்டுவந்தான்

"இராத்திரியிலே கர்த்தர் பவுலுக்குத் தரிசனமாகி: நீ பயப்படாமல் பேசு மவுன மாயிராதே" - பவுல் யூதரோடு தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறான் அவனுடைய உயிருக்குப பல சமயங்களில் ஆபத்துக்கள் வந்தன ஆகையினால அவன் தன்னுடைய சரீரத்திலும ஆவியிலும் சோர்ந்துபோய இருக்க வேண்டும் இப்படிப்பட்ட சூழ்நிலையில கர்த்தர் அவனைத் திடப்படுத்த விரும்பினார் அவனுக்கு ஆறுதல்கூறி அவனைப பயப்படாமல பேசுமாறு கூறினார் கொரிந்து பட்டணத்தைவிட்டு பவுல புறப்பட்டுப போவதைக் கர்த்தர் தடை பண்ணினார் பவுல் அந்தப் பட்டணத்தில இன்னும் கொஞ்சகாலம் தொடர்ந்து தங்கியிருந்து ஊழியம செய்வது கர்த்தருக்குச் சித்தமானது என்பதை வெளிப்படுத்துகிறார்

"அவன ஒரு வருஷமும் ஆறு மாதமும் அங்கே தங்கினான" கிபி 54-55 ஆகிய ஆண்டில் இந்தக் காரியம் நடைபெற்றது இக்காலத்தில் தான் பவுல 1தெசலோனிக்கேயர் (கிபி. 54), 2தெசலோனிக்கேயர் (கிபி. 55) ஆகிய நிருபங்களை எழுதினான

24. பவுல் கைது பண்ணப்படுகிறான் - கல்லியோன் என்பவனுக்கு முன்பாக பவுலைக் கொண்டு போனார்கள் - கல்லியோன் அவர்களைத் துரத்தி விட்டான்

அப் 18:12 கல்லியோன் என்பவன் அகாயா நாட்டிற்கு அதிபதியானபோது, யூதர்கள் ஒருமனப்பட்டு, பவுலுக்கு விரோதமாய எழும்பி, அவனை நியாயாசனத்துக்கு முன்பாகக் கொண்டுபோய்:

18 அதிகாரம்

அப் 18:13 இவன் வேதப்பிரமாணத்துக்கு விகற்பமாய்த் தேவனைச் சேவிக்கும்படி மனுஷருக்குப் போதிக்கிறான் என்றார்கள்.

அப் 18:14 பவுல் பேசுவதற்கு எத்தனப்படுகையில், கல்லியோன் யூதரை நோக்கி: யூதர்களே, இது ஒரு அநியாயமாய், அல்லது பொல்லாத நடக்கையாயிருக்குமேயானால் நான் உங்களுக்குப் பொறுமையாய்ச் செவிகொடுப்பது நியாயமாயிருக்கும்.

அப் 18:15 இது சொற்களுக்கும் நாமங்களுக்கும், உங்கள் வேதத்துக்கும் அடுத்த தர்க்கமான படியினாலே, இப்படிப்பட்டவைகளைக் குறித்து விசாரணைசெய்ய எனக்கு மனதில்லை, நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி,

அப் 18:16 அவர்களை நியாயாசனத்தினின்று துரத்திவிட்டான்.

"கல்லியோன்" (Gallio) - இவன் அகாயா நாட்டிற்கு அதிபதி. அகாயா நாடு மறுபடியுமாக கி.பி. 44 ஆம் ஆண்டு ரோமப்பேரரசால் ஆளுகை செய்யப்படுகிறது. திபேரியு இராயனுடைய நேரடி ஆட்சியின்கீழ் இருந்த நாடு வரவில்லை. கல்லியோன் செனக்காவினுடைய (Seneca) மூத்த சகோதரன். செனக்கா நீரோ (Nero's) மன்னனுடைய ஆசிரியர். கல்லியோன் இதமான சுபாவம் கொண்டவன். கிருபையுள்ளவன். அப் 18:14-16 ஆகிய வசனங்களில் கிறிஸ்தவருடைய வழக்குகளை இவன் விசாரித்த விதத்திலிருந்து இவனுடைய நற்பண்பு வெளிப்படுகிறது. கல்லியோனையும் அவனுடைய இரண்டு சகோதரரையும் நீரோ மன்னன் ஒருசில அரசியல் பிரச்சனைகள் காரணமாகக் கொன்றுபோட்டான்.

"அகாயா நாடு" (Achaia) - தெசலேயின் (Thessaly) தென்பகுதியிலுள்ள கிரேக்க நாடு முழுவதும் அகாயா நாடு என்று அழைக்கப்பட்டது.

"நியாயாசனம்" (judgment seat) - நியாயாதிபதி அமர்ந்து இருக்கும் ஆசனம். கிரேக்க மொழியில் இதற்கு "பீமா" (Beema) என்று பெயர். இந்த ஆசனம் உயர்ந்த மேடை போன்று இருக்கும். ரோமப் பேரரசில் யாரையும் தண்டிக்கும் உரிமை யூதருக்கு இல்லை. ஆகையினால் யூதர்கள் பவுலை ரோமருடைய தேசாதிபதியிடம் அழைத்து வருகிறார்கள். யூதருக்கு மரண தண்டனை கொடுக்கக்கூடிய அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தால், கல்லியோனுடைய நியாயாசனத்திற்குப் பவுலை அழைத்து வந்திருக்கமாட்டார்கள். அவனைப் பிடித்த இடத்திலேயே கொலைசெய்து இருப்பார்கள்.

நியாயாசனம் (judgment seat) - Bημα - Beema - 968

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - நியாயாசனம், சிங்காசனம்

"இது ஒரு அநியாயமாய், அல்லது பொல்லாத நடக்கையாய்" - பவுலைத் தன்னிடத்தில் யூதர்கள் பொறாமையினாலும் காழ்ப்புணர்ச்சியினாலும் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பது கல்லியோனுக்குத் தெரிய வருகிறது. பவுலிடத்தில் கல்லியோன் அநியாயமான காரியத்தையோ அல்லது பொல்லாத நடத்தையையோ காணவில்லை. இங்கு நடைபெறும் வழக்கு யூதமார்க்கத்துடன் சம்மந்தம் உடையது. ஆகையினால் இப்படிப்பட்டவைகளைக் குறித்து விசாரணைசெய்ய எனக்கு மனதில்லை. நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி, அவர்களை நியாயாசனத்தினின்று துரத்திவிட்டான். யூதர்கள் பவுலின் விசாரணையைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று கல்லியோனுக்கு முன்பாக வற்புறுத்தியிருந்திருப்பார்கள். ஆகையினால், தேசாதிபதியாகிய கல்லியோன் தன்னுடைய போர்ச்சேவகர்களைக் கொண்டு, யூதர்களை நியாயாசனத்திலிருந்து துரத்திவிட்டிருக்கலாம்.

23. சொஸ்தேனேயைப் பிடித்து அடிக்கிறார்கள்

அப் 18:17 அப்பொழுது கிரேக்கரெல்லாரும் ஜெபஆலயத் தலைவனாகிய சொஸ்தேனேயைப் பிடித்து நியாயாசனத்துக்கு முன்பாக அடித்தார்கள். இவைகளில் ஒன்றையுங் குறித்துக் கல்லியோன் கவலைப்படவில்லை.

18 அதிகாரம்

"அப்பொழுது கிரேக்கரெல்லாரும் ஜெப ஆலயத்தலைவனாகிய சொஸ்தேனேயைப் பிடித்து, நியாயாசனத்துக்கு முன்பாக அடித்தார்கள்" - (அப் 18:8) ஜெபாலயத் தலைவனாகிய சொஸ்தேனேயும் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தவன் (2கொரி 1:1) ஒருவேளை இந்தக் காரணத்திற்காக அவர்கள் சொஸ்தேனேயை அடித்திருக்கலாம்

26. கொரிந்து பட்டணத்திலிருந்து கெங்க்கிரேயாவிற்கும் எபேசுவிற்கும் பிரயாணம் - இங்கு பிரசங்கம் பண்ணி ஆக்கில்லாவையும் பிரிஸ்கில்லாளையும் வழியனுப்பி விடுகிறான்

அப் 18:18 பவுல் அநேகநாள் அங்கே தரித்திருந்தபின்பு, சகோதரரிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு தனக்கு ஒரு பிரார்த்தனை உண்டாயிருந்தபடியினால் கெங்க்கிரேயா பட்டணத்தில் தலைச்சவரம் பண்ணிக்கொண்டு, சீரியாதேசத்துக்குப் போகக் கப்பல் ஏறினான்; பிரிஸ்கில்லாளும் ஆக்கில்லாவும் அவனுடனே கூடப் போனார்கள்

அப் 18:19 அவன் எபேசுபட்டணத்துக்கு வந்தபோது அங்கே அவர்களை விட்டு நீங்கி, ஜெபஆலயத்தில் பிரவேசித்து, யூதருடனே சம்பாஷணை பண்ணினான்

அப் 18:20 அவன் இன்னுங் சிலகாலம் தங்களுடனே இருக்கவேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டபோது, அவன் சம்மதியாமல்,

"கெங்க்கிரேயா பட்டணத்தில் தலைச்சவரம் பண்ணிக்கொண்டான்" - பவுலுக்கு ஒரு பிரார்த்தனை உண்டாயிருந்தது. அதை எருசலேமில் நிறைவேற்றி இருக்க வேண்டும். (அப் 21:24-27) எபேசுவில் ஆக்கில்லா பவுலுக்கு இந்தப் பிரார்த்தனையை நினைவுபடுத்தியிருக்க வேண்டும். (அப் 18:26)

பிரார்த்தனை(vow) εὐχή euchee 2171

பெண்பால் பெயர்ச்சொல் - பிரார்த்தனை, ஜெபம் அப் 18:18, அப் 21:23 யாக் 5:15

"எபேசுபட்டணம்" (Ephesus) - கெங்க்கிரேயாவிற்கும் கொரிந்துவிற்கும் அருகில் ஆசியோன் கடற்கரையில் அமைந்துள்ள பட்டணம். சின்ன ஆசியாவில் எல்லா விதத்திலும் இந்தப் பட்டணம் சிறந்து விளங்கிற்று. எபேசு பட்டணத்தில் ஏராளமான தத்துவ ஞானிகளும் மேடைப் பேச்சாளர்களும் இருந்தார்கள் தியானாளுக்கு (Diana) எபேசுவில் பிரசித்தி பெற்ற கோவில் ஒன்று இருந்தது. பழங்காலத்தின் ஏழு அற்புதங்களில் இந்தக் கோவிலும் ஒன்று. காலப்போக்கில் இந்தக் கோவில் முழுவதுமாக அழிந்து போயிற்று இப்போது இல்லை.

27. எபேசு பட்டணத்திலிருந்து செசரியா, எருசலேம் பட்டணத்திற்கு பிரயாணம் பண்ணி, அந்தியோகியாவிற்கு திரும்பி வருகிறார்கள் - அப் 15:35-ல் ஆரம்பிக்கப்பட்ட இரண்டாவது மிஷினெரி பிரயாணம் நிறைவு பெறுகிறது

அப் 18:21 வருகிற பண்டிகையிலே எப்படியாகிலும் நான் எருசலேமில் இருக்கவேண்டும்; தேவனுக்குச் சித்தமானால் திரும்பி உங்களிடத்திற்கு வருவேனென்று சொல்லி, அவர்களிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு, கப்பல் ஏறி, எபேசுவை விட்டுப் புறப்பட்டு,

அப் 18:22 செசரியா பட்டணத்துக்கு வந்து எருசலேமுக்குப் போய், சபையைச் சந்தித்து அந்தியோகியாவுக்குப் போனான்

"வருகிற பண்டிகையிலே எப்படியாகிலும் நான் எருசலேமில் இருக்கவேண்டும்" பவுல் இங்கு குறிப்பிடுவது பஸ்கா பண்டிகையாக இருக்கலாம்.

"தேவனுக்குச் சித்தமானால் திரும்பி உங்களிடத்திற்கு வருவேன்" பவுல் மறுபடியாக எபேசுவிற்குத் திரும்பி வந்து, அங்கு மூன்று வருஷம் தங்கியிருந்து ஊழியம் செய்கிறார் (அப் 19, அப் 20:31)

18 அதிகாரம்

"பவுல் எருசலேமுக்குப் போனார்"- பஸ்கா பண்டிகையில் கலந்து கொள்வதற்காகப் பவுல் எருசலேமிற்குப் போனார். பண்டிகைக்குப் பின்பு, பவுல் மறுபடியும் அந்தியோகியாவிற்குப் போனார் என்று வாசிக்கிறோம். இவ்வாறாகப் பவுலின் இரண்டாம் மிஷினெரிப் பிரயாணம் முடிவு பெறுகிறது.

XII. பவுலின் மூன்றாவது மிஷினெரிப் பிரயாணம் – (அப் 18:23-21:17; 13:1 15:35

1. கலாத்தியா, பிரிகியா நாடுகளுக்கு பிரயாணம்

அப் 18:23 அங்கே சிலகாலம் சஞ்சரித்த பின்பு, புறப்பட்டு கிரமமாய்க் கலாத்தியா நாட்டிலேயும் பிரிகியா நாட்டிலேயும் சுற்றித்திரிந்து சீஷரெல்லாரையும் திடப்படுத்தினான்.

பவுலின் மூன்றாவது மிஷினெரிப் பிரயாணம்

1 சீரியா, சிலிசியா, கலாத்தியா மற்றும் பிரிகியா ஆகியவை வழியாகத் தரைமார்க்கமாக பிரயாணம் பண்ணினார் (Went by land again through Syria, Cilicia, Galatia, and Phyrgia) (அப் 15:41-16:6=அப் 18:23)

2 எபேசு, இயோனியா, சின்ன ஆசியா (Ephesus, Ionia, Asia Minor) அப் 19:1-41

3 மக்கதோனியா (Macedonia) (அப் 20:1)

4 கிரேக்கு (Greece) (அப் 20:2)

5 மக்கதோனியா (Macedonia) (அப் 20:3)

6 பிலிப்பிலிருந்து துரோவா, மிசியா ஆகியோன் கடல் வழியாக சின்ன ஆசியாவிற்கு (Philippi, to Troas, Mysia, across the Aegean to Asia Minor) (அப் 20:4-12)

7 ஆசோ மிசியா (Assos, Mysia) (அப் 20:13)

8 மித்திலேனே லெஸ்போசிலுள்ள தீவு (Mitylene, Isle of Lesbos) (அப் 20:14)

9 துரோகில்லியோன் (Trogyllium) (அப் 20:15)

10 மிலேத்து, காரியா, சின்ன ஆசியா (Miletus, Caria, Asia Minor) (அப் 20:15-38)

11 கோஸ்தீவு (Isle of Coos) (அப் 21:1)

12 ரோதுதீவு(Isle of Rhodes)(அப் 21:1)

13 பத்தாரா பட்டணம், சீரியா (Patara, Syria) (அப் 21:1)

14 தீரு, பெனிக்கே தேசம் (Tyre, Phoenicia) (அப் 21:2-6)

15 பித்தொலோமாய், கலிலேயா (Ptolemais, Galilee) (அப் 21:7)

16 செசரியா சமாரியா (Caesarea, Samaria) (அப் 21:8-14)

17 மிஷினெரிப் பிரயாணத்தை முடித்து விட்டு எருசலேமிற்கு திரும்ப வருகிறார் (Back to Jerusalem) (அப் 21:15-23:30)

2. அப்பொல்லோ என்பவன் எபேசுவில் பிரசங்கம் பண்ணுகிறான் - ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவனுக்கு தேவனுடைய மார்க்கத்தை திட்டமாய் விவரித்துக் காண்பிக்கிறார்கள்

அப் 18:24 அப்பொழுது அலெக்சந்திரியா பட்டணத்திலே பிறந்தவனும் சாதுரியவானும் வேதாகமங்களில் வல்லவனுமான அப்பொல்லோ என்னும் பேர்கொண்ட ஒரு யூதன் எபேசு பட்டணத்துக்கு வந்தான்

18 அதிகாரம்

அப 18:25 அவன் கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டு, யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருந்து, ஆவியில் அனலுள்ளவனாய்க் கர்த்தருக்கடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம் பண்ணிக்கொண்டுவந்தான்.

அப 18:26 அவன் ஜெப ஆலயத்தில் தைரியமாய்ப் பேசத்தொடங்கினபோது, ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவன் பேசுகிறதைக் கேட்டு, அவனைச் சேர்த்துக்கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள்.

அப 18:27 பின்பு அவன் அகாயா நாட்டிற்குப் போகவேண்டுமென்றிருக்கையில், சீஷர்கள் அவனை ஏற்றுக்கொள்ளும்படி சகோதரர் அவர்களுக்கு எழுதினார்கள்.

அப 18:28 அவன் அங்கே வந்தபின்பு, வெளியரங்கமாக யூதர்களுடனே பலமாய்த் தர்க்கம்பண்ணி, இயேசுவே கிறிஸ்து என்று வேதவாக்கியங்களைக்கொண்டு திருஷ்டாந்தப்படுத்தினபடியால், கிருபையினாலே விசுவாசிகளானவர்களுக்கு மிகவும் உதவியாயிருந்தான்.

"அப்பொல்லோ" (Apollos) அலெக்சந்திரியா பட்டணத்தில் பிறந்தவன். சாதுரியவான். வேதாகமங்களில் வல்லவன் (அப 18:24-28, அப 19:1, 1கொரி 1:12, 1கொரி 3:4-7, 1கொரி 16:12, தீத்து 3:13)

"அலெக்சந்திரியா பட்டணம்" (Alexandria) - இந்தப் பட்டணம் எகிப்தில் உள்ளது. மகா அலெக்சாண்டர் இந்தப் பட்டணத்தைக் கட்டினார். டைனோகிரேட்டஸ் (Dinocrates) என்பவருடைய மேற்பார்வையின்கீழ் இந்தப் பட்டணம் கட்டப்பட்டது. எபேசுவிலே தியானாளுக்கு ஒரு கோவில் கட்டப்பட்டு, மிகப்பெரிய பண்டிகைகள் கொண்டாடப்பட்டன. தாலமி சோட்டேர் (Ptolemy Soter) என்பவர் மிகப்பெரிய கலாசாலை ஒன்றை இந்தப் பட்டணத்தில் நிறுவினார். இந்தக் கலாசாலைக்கு மியூசியம் (Museum) என்று பெயர். இதில் கல்வி பெற்ற அறிஞர்களும் தத்துவ ஞானிகளும் கூடிவந்து, பல காரியங்களைக் குறித்து விவாதிப்பது வழக்கம். பாரோசின் கோபுரம் (The Tower of Pharos) அலெக்சந்திரியா பட்டணத்தில் அமைந்திருந்தது. பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பான செப்துவஜிந்த் புஸ்தகம் கிமு 285 ஆம் வருஷத்தில் அலெக்சந்திரியா பட்டணத்தில் மொழிபெயர்க்கப்பட்டது.

"சாதுரியவான்" (eloquent man) - பேச்சாற்றல் உள்ளவன். அலெக்சந்திரியாவின் கலாசாலையில் பயின்று, மிகவும் வல்லமையோடு உவமைகளையும் உவமானங்களையும் பயன்படுத்தி பேசக்கூடிய திறமை பெற்றவன்.

"வேதாகமங்களில் வல்லவன்" - நியாயப்பிரமாண புஸ்தகங்களிலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் தேர்ச்சி பெற்றவன். யூதருடைய மார்க்க முறைமையின் பிரகாரம் வேதாகமங்களை வியாக்கியானம் பண்ணுவதில் வல்லவன்.

உபதேசி instructed - κατηχέω - kateecheoo - 2727

வினைச்சொல் - உபதேசி, போதி, பேசு (to teach or instruct) (அப 18:25, அப 21:21,24, லூக்கா 1:4, ரோமர் 2:18)

அனலுள்ளவன் - ζέω - zeoo - 2204

வினைச்சொல் - அனலாயிரு, பிரியமாயிரு (to boil) ரோமர் 12:11

"யோவான் கொடுத்த ஸ்நானத்தைமாத்திரம் அறிந்தவனாயிருந்தான்" அப்பொல்லோ கர்த்தருடைய மார்க்கத்தில் உபதேசிக்கப்பட்டவன். ஆவியில் அனலுள்ளவனாக இருந்தான். கர்த்தருக்கடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம் பண்ணிக்கொண்டு வந்தான். ஆனாலும் யோவான் கொடுத்த ஸ்நானத்தைமாத்திரம் அறிந்தவனாயிருந்தான். பவுலின் உடன் ஊழியர்களான ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள் ஆகியோர் மூலமாக அப்பொல்லோவிற்குப் பூரண சுவிசேஷத்தை வெளிப்படுத்த கர்த்தர் சித்தம் கொண்டார் (அப 18:26). அதன் பின்பு, அப்பொல்லோ மற்ற விசுவாசிகளோடு சேர்ந்து ஊழியம் செய்தான் (அப் 18:27-28)

19 அதிகாரம்

3. பவுல் எபேசுவில் யோவானின் சீஷர்களைக் காண்கிறான் (மத் 3:6)

அப 19:1 அப்பொல்லோ என்பவன் கொரிந்து பட்டணத்திலே இருக்கையில் பவுல் மேடான தேசங்கள் வழியாய்ப் போய், எபேசுவுக்கு வந்தான்; அங்கே சில சீஷரைக் கண்டு,

அப 19:2 நீங்கள் விசுவாசிகளானபோது, பரிசுத்தஆவியைப் பெற்றீர்களா என்று கேட்டான். அதற்கு அவர்கள்: பரிசுத்த ஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை என்றார்கள்.

அப 19:3 அப்பொழுது அவன்: அப்படியானால் நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள் என்றான். அதற்கு அவர்கள்: யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பெற்றோம் என்றார்கள்.

அப 19:4 அப்பொழுது பவுல்: யோவான் தனக்குப் பின் வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்க வேண்டும் என்று ஜனங்களுக்குச் சொல்லி, மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தானே என்றான்.

அப 19:5 அதைக் கேட்டபோது அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்.

அப 19:6 அல்லாமலும் பவுல் அவர்கள் மேல் கைகளை வைத்தபோது, பரிசுத்தஆவி அவர்கள்மேல் வந்தார்; அப்பொழுது அவர்கள் அந்நிய பாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்.

அப 19:7 அந்த மனுஷரெல்லாரும் ஏறக்குறையப் பன்னிரண்டு பேராயிருந்தார்கள்.

"மேடான தேசங்கள்" (upper coasts) - பிரிகியா, கலாத்தியா ஆகியவற்றின் மேடான தீவுப் பகுதிகள்

"எபேசு" (Ephesus)- சின்ன ஆசியாவில் ஆகியோன் கடற்கரையில் உள்ள பட்டணம்.

"நீங்கள் விசுவாசிகளானபோது, பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா" - நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறோம் என்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சி கொடுக்கிறார் (ரோமர் 8:14-16) ஒரு பாவி தன் பாவத்திலிருந்து மனந்திரும்பி இரட்சிக்கப்படும்போது பரிசுத்த ஆவியானவரின் கிரியை அவனுக்குள் நடைபெறுகிறது (ரோமர் 8:9) அப்போஸ்தலர் பவுல் இந்த வசனத்தில் நீங்கள் விசுவாசிகளானபோது, பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா என்று குறிப்பிடுவது இவ்விரண்டைப் பற்றிய காரியமல்ல. பவுல் கூறுவது பரிசுத்த ஆவியானவருடைய ஞானஸ்நானமாகும். யோவான் ஸ்நானன் இந்த ஞானஸ்நானத்தைப் பற்றிப் பிரசங்கித்திருக்கிறான் (அப 1:4-5; மத் 3:11; லூக்கா 3:16; யோவான் 1:31-34; அப 1:4-5; அப 11:15-17) பரிசுத்த ஆவியானவரால் புதிய பிறப்பைப் பெற்றுக் கொள்வது என்பது வேறு. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் என்பது வேறு (யோவான் 3:1-5) பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வதற்கு விசுவாசிகளுக்குக் கொடுக்கப்படும் வல்லமையாகும் (லூக்கா 24:49; அப 1:4-8; அப 2:38-39; அப 5:32; அப 2:4) பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளும்போது ஜீவத்தண்ணீரின் நதியைப் பெற்றுக் கொள்கிறோம். பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப் பெற்றுக் கொள்கிறோம் (யோவான் 7:37-39) பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தின் மூலமாக நமக்கு ஆவிக்குரிய வரங்களும் அருளப்படுகிறது (1கொரி 12:4-11; மாற்கு 16:17-18; யோவான் 14:12) யோவானுடைய சீஷர்கள் தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் இயேசுவின் சீஷர்களே பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். இப்படிப்பட்ட பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றீர்களா என்று பவுல் இங்கு கேட்கிறார். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் சுவிசேஷத்தின் ஒரு பகுதி. அப்பொல்லோ அப 18:26 ஆவது வசனத்தில் இந்தச் சத்தியத்தைக் கற்றுக் கொண்டார்.

அப்போஸ்தலர் - தொகுப்புரை

19 அதிகாரம்

"நீங்கள் விசுவாசிகளானபோது" - ஒருவர் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து இவ்வளவு காலத்திற்குப் பின்பு தான் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று கால நிர்ணயம் எதுவும் இல்லை. (அப 10:46) இங்கு ஏறக்குறைய பன்னிரெண்டு பேரைப் பற்றி இந்த வசனப்பகுதியில் வாசிக்கிறோம். இவர்கள் 26 வருஷங்களுக்கு முன்பாக ஒரு வேளை தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி இருக்கலாம் என்றாலும் அப்பொல்லோவைப் போல இவர்களுக்கும் யோவானின் ஞானஸ்நானத்தைப் பற்றி மட்டுமே தெரிந்திருக்கிறது. இவர்கள் இன்னும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளவில்லை. ஒருவேளை இயேசு கிறிஸ்து இன்னும் பரமேறி மகிமையடையவில்லை என்று இவர்கள் நினைத்திருக்கலாம். (யோவான் 7:37-39; அப 1:4-8; அப 2:33-39) பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை நாம் விசுவாசத்தினால் பெற்றுக் கொள்கிறோம். (கலா 3:2; கலா 3:13-14; யோவான் 7:37-39)

ஒருவருக்கு இரட்சிப்பைப் பற்றி விசுவாசம் இருக்கலாம். அவர் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை அறியாதவராகவும் இருக்கலாம். (மாற்கு 11:22-24; மத் 17:20; மத் 21:22) ஒருவர் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் போதோ அல்லது அவரை விசுவாசித்த பின்போ அவர் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளலாம். நாம் பெறுவோம் என்று விசுவாசித்தால் நாம் பெற்றுக் கொள்ளலாம். (மாற்கு 11:22-24; அப 19:2-6)

"பரிசுத்தஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை" - யோவான் ஸ்நானன் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பற்றிப் பேசியபோது ஒருவேளை இவர்கள் அங்கு இல்லாமல் இருந்திருக்கலாம். (மத் 3:11; லூக்கா 3:16) ஒருவேளை அந்த உபதேசத்தை இவர்கள் கேள்விப்பட்டிருந்தும் அது அவர்களுக்குப் புரியாமல் இருந்திருக்கலாம். அல்லது இந்த 26 வருஷ இடைவெளியில் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பற்றி தாங்கள் கேள்விப்பட்டதை மறந்து போயிருக்கலாம்.

"அப்படியானால் நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள்" - இங்கு பவுல் ஞானஸ்நானம் என்று குறிப்பிடுவது பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தையே குறிக்கும். பவுல் தண்ணீர் ஞானஸ்நானத்தைப் பற்றிக் கேட்கவில்லை. (அப் 19:2-6) பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தை யோவான் ஸ்நானன் தன்னுடைய சீஷர்கள் எல்லோருக்குமே வாக்குப்பண்ணியிருந்தான். (மத் 3:11; லூக்கா 3:16; யோவான் 1:31-34) பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் அப்போஸ்தலர்களுக்கு மட்டும் என்றில்லாமல் எல்லா விசுவாசிகளுக்குமே உரியது. (மாற்கு 16:18)

"அப்பொழுது பவுல்........என்றான்" - கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் எல்லோருக்கும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது என்று யோவான் ஜனங்களுக்குச் சொன்னதாகப் பவுல் கூறுகிறான். (மத் 3:11; லூக்கா 3:16; யோவான் 1:31-34) பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் விசுவாசிகளுக்கு அருளப்பட்டது. அப்போது தான் யோவான் கூறிய வார்த்தையின் பொருளை அவனுடைய சீஷர்கள் புரிந்து கொள்கிறார்கள். மற்றவர்களுக்கும் இதைப் பற்றிக் கூறுகிறார்கள். (அப 11:15-17; அப 19:2-6)

"தனக்குப் பின் வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்கவேண்டும்" இரட்சிக்கப்படுவதற்கு இயேசு கிறிஸ்துவில் எவ்வாறு விசுவாசம் வைக்கிறோமோ அதைப் போல பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைக்க வேண்டும். (யோவான் 1:31-34; யோவான் 7:37-39) நாம் இயேசு கிறிஸ்துவில் எதைப் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசிக்கிறோமோ அதையே நாம் பெற்றுக் கொள்கிறோம்.

"அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்" - பன்னிரெண்டு பேரும் தண்ணீரில் ஞானஸ்நானம் பெறுகிறார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே என்பது இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் கொடுப்பதற்குக் கொடுத்திருக்கும் அதிகாரத்தினாலே என்று பொருள்படும். (மத் 28:19) பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்க வேண்டுமென்பது இயேசு கிறிஸ்துவின் ஞானஸ்நானப் பிரமாணம். யோவானுக்குத் தெளிவான அடையாளம் காண்பிக்கப்படும் வரையிலும், இயேசுவே கிறிஸ்து என்று தெரியவில்லை.

19 அதிகாரம்

(யோவான் 1:33) ஆகையினால், யோவான் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுப்பதற்குப் பதிலாக கர்த்தருடைய நாமத்தினாலே என்று ஞானஸ்நானம்கொடுத்திருப்பான்.இந்தபன்னிரெண்டு சீஷர்களும் ஏற்கெனவே யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தைப் பெற்றிருக்கிறார்கள் இப்பொழுது மறுபடியுமாக ஞானஸ்நானம் பெற்றுக் கொள்கிறார்கள்

"பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தார்"- (அப்8:12-23 அப்9:17-18 எபி 6:2)

"பரிசுத்தஆவி அவர்கள்மேல வந்தார்" - பரிசுத்த ஆவி ஒருவர்மீது வரும் வண்ணமாக அவர்மீது கைகளை வைக்கிறவர் பரிசுத்த ஆவியினால நிறைந்தவராக இருக்க வேண்டும். (ரோமர் 1:11 ரோமர் 15:29; 1தீமோ 4:14; 2தீமோ 1:6)

"அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசினார்கள்" - பெந்தெகொஸ்தே நாளில நடைபெற்றதுபோன்று, (அப 2:4), கொர்நேலியுவின வீட்டில நடைபெற்றது போன்று (அப 10:44-48) இங்கும். இவர்கள் அந்நிய பாஷைகளில பேசுகிறார்கள். அப 8:17-23 ஆகிய வசனங்களிலும் அந்நிய பாஷைகளில பேசினார்கள் அந்நியபாஷைகளில் பேசுவதைப்பற்றிவிளக்கும்வசனங்கள் ஏசா 28:11 மாற்கு 16:17, 1கொரி 12:4-11,28-31, 1கொரி 13:1-2 1கொரி 14:1-40)

"தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்" - பரிசுத்த ஆவியானவரின அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்ட போது விசுவாசிகள் தீர்க்கதரிசனம் கூறினார்கள்.(அப 2:11-21, அப் 13:1; அப 19:6; 1கொரி 12:4-11, 1கொரி 13:1-4. 1கொரி 14:1-40)

4. ஜெபாலயத்தில் பவுல் மூன்று மாதங்கள் பிரசங்கம் பண்ணி அங்கு ஒரு சபையை ஸ்தாபிக்கிறான்

அப 19:8 பின்பு பவுல் ஜெபஆலயத்தில் பிரவேசித்துதைரியமாய்ப் பிரசங்கித்து மூன்று மாதமளவும் தேவனுடைய ராஜ்யத்துக் கடுத்தவைகளைக் குறித்துச் சம்பாஷணைபண்ணி, புத்திசொல்லிக்கொண்டு வந்தான

"தேவனுடைய ராஜ்யம்" - (மத் 4:17 மத் 19:24)

5. ஜெபாலயத்திலிருந்து விசுவாசிகளை தனியாக பிரிக்கிறான் - திறன்னு என்பவனுடைய வித்தியா சாலையிலே அநுதினமும் சம்பாஷித்து வருகிறான்

அப் 19:9 சிலர் கடினப்பட்டு அவிசுவாசிகளாகிக் கூட்டத்திற்கு முன்பாக இந்த மார்க்கத்தை நிந்தித்தபோது அவன் அவர்களை விட்டு விலகி, சீஷரை அவர்களிலிருந்து பிரித்துக் கொண்டு, திறன்னு என்னும் ஒருவனுடைய வித்தியாசாலையிலே அநுதினமும் சம்பாஷித்துக் கொண்டுவந்தான்

அப 19:10 இரண்டு வருஷகாலம் இப்படி நடந்ததினாலே ஆசியாவில குடியிருந்த யூதரும் கிரேக்கருமாகிய எலலாரும கர்த்தராகிய இயேசுவின வசனத்தைக் கேட்டார்கள

"சிலர் கடினப்பட்டு அவிசுவாசிகளாகிக் கூட்டத்திற்கு முன்பாக இந்த மார்க்கத்தை நிந்தித்தார்கள்" கலகக்காரர்கள் பொதுவாக மூன்றுவிதமான காரியங்களைச் செய்வார்கள் அவையாவன,

1. தங்களுடைய இருதயத்தைக் கடினப்படுத்துவார்கள் ரோமர் 9:18 எபி 3:8,13,15 எபி 4:7 2கொரி 2:14-17

2. சத்தியத்தை விசுவாசிப்பதற்கு மறுப்பார்கள் (மத் 13:15)

3. சத்தியத்திற்கு எதிராக தீமையான காரியங்களைப பேசுவார்கள் (அப 9:1, அப் 13:45; அப 18:6)

"பவுல் அவர்களை விட்டு விலகி, சீஷரை அவர்களிலிருந்து பிரித்துக் கொண்டான்" விசுவாசிகளுக்குப் பிரச்சனை ஏற்படும்போது இதைத்தான் செய்ய முடியும். விசுவாசிகள் தங்களுக்கென்று ஒரு சபையை ஆரம்பிக்கிறார்கள் பவுல இங்கு மூன்று வருஷங்கள் தங்கியிருந்தான் (அப் 20:31) ஆசியாவில குடியிருந்த யூதரும கிரேக்கருமாகிய எலலாரும கர்த்தராகிய இயேசுவின் வசனத்தைக் கேட்டார்கள்

19 அதிகாரம்

"திறன்னு என்னும்ஒருவனுடைய வித்தியா சாலை" - இந்த பகுதியில திறன்னுவும் அவனுடைய வித்தியாசாலையும் மிகவும் பிரபல்யமானவை பவுல் இங்கு இரண்டு வருஷங்கள் தங்கியிருந்தான் யூதரும் கிரேக்கரும் இயேசுவின் திருவசனத்தைக் கேட்பதற்கு வந்தார்கள் (அப 19:10)

6. பவுல் மூலமாக நடைபெற்ற அற்புதங்கள்

அப் 19:11 பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார்

அப 19:12 அவனுடைய சரீரத்தில் இருந்து உறுமாலகளையும் கச்சைகளையும் கொண்டு வந்து வியாதிக்காரர்மேல போட வியாதிகள அவர்களைவிட்டு நீங்கிப் போயின பொல்லாத ஆவிகளும் அவர்களை விட்டுப புறப்பட்டன

"விசேஷித்த அற்புதங்கள்" -அற்புதம் என்றாலே அது விசேஷமானதுதான அதிலும் இந்த வசனத்தில விசேஷித்த அற்புதங்கள என்று கூறப்பட்டிருப்பது இதுவரையிலும் அவர்கள் கேளவிப்படாத அற்புதமான காரியங்களைக் குறிக்கும். (அப் 19:11-12)

7. பவுலைப் போன்று கிரியை நடப்பித்தவர்களை பொல்லாத ஆவி மேற்கொண்டது

அப் 19:13 அப்பொழுது தேசாந்தரிகளாய்த் திரிகிற மந்திரவாதிகளாகிய யூதரில் சிலர் பொல்லாத ஆவிகள பிடித்திருந்தவாகள மேல் கர்த்தராகிய இயேசுவின நாமத்தைச் சொல்லத் துணிந்து, பவுல பிரசங்கிக்கிற இயேசுவின்பேரில ஆணையிட்டு உங்களுக்குக் கட்டளையிடுகிறோம் என்றார்கள

அப 19:14 பிரதான ஆசாரியனாகிய ஸ்கேவா என்னும் ஓர யூதனுடைய குமாரர் ஏழு பேர் இப்படிச் செய்தார்கள்

அப 19:15 பொல்லாத ஆவி அவர்களை நோக்கி: இயேசுவை அறிவேன் பவுலையும் அறிவேன், நீங்கள் யார் என்று சொல்லி,

அப 19:16 பொல்லாத ஆவியையுடைய மனுஷன் அவர்கள்மேல் பாய்ந்து, பலாத்காரம்பண்ணி, அவர்களை மேற்கொள்ள, அவர்கள் நிர்வாணிகளும் காயப்பட்டவர் களுமாகி அந்த வீட்டை விட்டு ஓடிப் போனார்கள்

அப 19:17 இது எபேசுவிலே குடியிருந்த யூதர் கிரேக்கர் அனைவருக்கும் தெரியவந்தபோது அவர்களெல்லாரும் பயமடைந்தார்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமம் மகிமைப்பட்டது.

"தேசாந்தரிகளாய்த் திரிகிற மந்திரவாதிகளாகிய யூதர்" (vagabond Jews) - இவர்கள ஒவ்வொரு இடமாகச் சுற்றிக் கொண்டே இருப்பார்கள (அப 13:6; 1தீமோ 5:13) மந்திர தந்திரங்களைச் செய்வார்கள

"ஸ்கேவா" (Sceva) - இவன் ஒரு பிரதான ஆசாரியன எபேசுவிலுள்ள யூதருடைய ஆலோசனைச சங்கத்தின ஒரு உறுப்பினர்

"இயேசுவை அறிவேன பவுலையும் அறிவேன" பிசாசுகளின்மீது இயேசுவிற்கும் விசுவாசிகள அனைவருக்கும் அதிகாரம் உண்டு. (மாற்கு 16:17-18; யோவான்14:12)

மேற்கொள (overcame) - katakurieuo - katakyrieuoo - 2634

வினைச்சொல் - மேற்கொள், ஆட்சிசெய் (overpowered) (அப 19:16; மத் 20:25; மாற்கு 10:42; 1பேதுரு 5:3)

"கர்த்தராகிய இயேசுவின நாமம் மகிமைப பட்டது" - இயேசு கிறிஸ்துவின நாமத்தினாலே அற்புதங்களும், அடையாளங்களும் நடைபெறும் போது இயேசுவின நாமம் மகிமைப்படும். (மாற்கு 16:17-20)

19 அதிகாரம்

8. எபேசுவில் எழுப்புதல் பரவிற்று

அப் 19:18 விசுவாசித்தவர்களில் அநேகர் வந்து, தங்கள் செய்கைகளை வெளிப்படுத்தி அறிக்கையிட்டார்கள்

அப் 19:19 மாயவித்தைக் காரராயிருந்தவர்களில் அநேகர் தங்கள் புஸ்தகங்களைக் கொண்டுவந்து, எல்லாருக்கு முன்பாகச் சுட்டெரித்தார்கள் அவைகளின் கிரயத்தைத் தொகை பார்த்து, ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசாகக் கண்டார்கள்

அப் 19:20 இவ்வளவு பலமாய்க் கர்த்தருடைய வசனம் விருத்தியடைந்து மேற்கொண்டது.

"மாயவித்தைக்காரர்" (curious arts) - மந்திரதந்திரங்களைச் செய்கிறவர்கள் இதற்கான கிரேக்க வார்த்தை "பெரிகோஸ்" (periergos) என்பதாகும். (practicing magic) (அப் 19:19); (a busybody) (1 தீமோ 5:13) மந்திரவாதிகள் மரித்தோரைக்கூட உயிரோடு எழுப்புவதாக மாயஜாலம் பண்ணுகிறார்கள் தெரியாத காரியங்களை அறிவிப்பது, குறிசொல்லுவது வியாதிகளைக் குணப்படுத்துவது வியாதிகளை உண்டாக்குவது சொப்பனங்களுக்கு வியாக்கியானம் பண்ணுவது, குழந்தை பிறப்பதற்கு முன்பே அது ஆணா பெண்ணா என்று அறிவிப்பது அன்றாட ஜீவியத்தில் நட்சத்திரங்கள் ராசிகள் ஆகியவற்றின் கிரியைகளை அறிவிப்பது ஆகிய காரியங்களை மாயவித்தைக்காரர்கள் செய்து வந்தார்கள் இவர்கள் தாங்கள் செய்வது தவறு என்பதையும், அவை பிசாசின் கிரியைகள் என்பதையும் அறிக்கையிட்டார்கள் (அப் 19:18) இந்த மாயவித்தைகளுக்கெல்லாம் தனித்தனியாக புஸ்தகங்கள் உண்டு தங்களுடைய சந்ததியாருக்கும் சீஷர்களுக்கும் இவற்றைக் கற்றுக்கொடுப்பார்கள் அந்தப் புஸ்தகங்களையெல்லாம் கொண்டு வந்து எல்லாருக்கு முன்பாகச் சுட்டெரித்தார்கள் (லூக்கா 12:29) அந்த புஸ்தகங்களின் மொத்தக் கிரயம் ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசாகும்.

மாயவித்தைக்காரன் (curious arts) - περίεργος - periergos - 4021

பெரகை - மாயவித்தைக்காரரான, வீணலுவல்காரரான

9. பிரசங்க பிரயாணம் - தீமோத்தேயுவும் எரஸ்துவும் முன்பாகவே அனுப்பப் படுகிறார்கள்

அப் 19:21 இவைகள் முடிந்தபின்பு, பவுல் மக்கெதோனியா அகாயா என்னும் நாடுகளில் சுற்றிநடந்து எருசலேமுக்குப் போகும்படி ஆவியில் நிர்ணயம்பண்ணிக் கொண்டு: நான் அங்கே போனபின்பு ரோமாபுரியையும் பார்க்கவேண்டியதென்று சொல்லி,

அப் 19:22 தனக்கு உதவி செய்தவர்களில் இரண்டுபேராகிய தீமோத்தேயுவையும் எரஸ்துவையும் மக்கெதோனியாவுக்கு அனுப்பிவிட்டு, தான் பின்னும் சிலகாலம் ஆசியாவிலே தங்கினான்

"எருசலேமுக்குப் போகும்படி ஆவியில் நிர்ணயம்பண்ணிக் கொண்டான்" - தன்னுடைய ஆவியில் அல்லது தன்னுடைய மனதில் எருசலேமிற்குப் போக வேண்டுமென்று பவுல் தீர்மானம் பண்ணிக் கொண்டான் (2 கொரி 2:1) எருசலேமிற்குத் திரும்பிப் போகவேண்டும், அதன்பின்பு ரோமாபுரிக்குச் செல்ல வேண்டும் என்பது பவுலின் தீர்மானம். பவுல் ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தபோது பரிசுத்த ஆவியானவர் அவனுக்கு இனிமேல் நடக்கப்போகும் காரியங்களை வெளிப்படுத்தியிருக்கலாம்

"எரஸ்து" (Erastus) - (ரோமர் 16:23, 2 தீமோ 4:20)

10. பவுல் எபேசுவில் தங்குகிறான் - வெள்ளி தட்டான்களின் கலகம்

(1) கலகத்திற்கு காரணம்

அப் 19:23 அக்காலத்திலே இந்த மார்க்கத்தைக் குறித்துப் பெரிய கலகம் உண்டாயிற்று.

19 அதிகாரம்

அப 19:24 எப்படியென்றால் தெமேத்திரியு என்னும் பேர்கொண்ட ஒரு தட்டான் தியானாளின் கோவிலைப்போல வெள்ளியினால் சிறிய கோவில்களைச் செய்து, தொழிலாளிகளுக்கு மிகுந்த ஆதாயம் வருவித்துக் கொண்டிருந்தான்.

அப 19:25 இவர்களையும் இப்படிப்பட்ட தொழில்செய்கிற மற்ற வேலையாட்களையும் அவன் கூடிவரச்செய்து: மனுஷர்களே, இந்தத் தொழிலினால் நமக்கு நல்ல பிழைப்பு உண்டாயிருக்கிறதென்று அறிவீர்கள்.

அப 19:26 இப்படியிருக்க, கைகளினால் செய்யப்பட்ட தேவர்கள் தேவர்களல்லவென்று இந்தப் பவுல் என்பவன் சொல்லி, எபேசுவிலே மாத்திரமல்ல, கொஞ்சங்குறைய ஆசியா எங்கும் அநேக ஜனங்களுக்குப் போதித்து, அவர்களை வசப்படுத்திக்கொண்டான் என்று நீங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறீர்கள்.

அப 19:27 இதனால் நம்முடைய தொழில் அற்றுப்போகும்படியான அபாயம் நேரிட்டிருக்கிறதுமல்லாமல், மகா தேவியாகிய தியானாளுடைய கோவில் எண்ணமற்றுப் போகிறதற்கும், ஆசியா முழுவதும் பூச்சக்கரமும் சேவிக்கிற அவளுடைய மகத்துவம் அழிந்து போகிறதற்கும் ஏதுவாயிருக்கிறது என்றான்.

"இந்த மார்க்கம்" (that way) - இந்த வாக்கியம் கிறிஸ்தவ மார்க்கத்தையே குறிக்கும். (அப் 9:2; அப 16:17; அப 18:25-26; அப் 19:9,23; அப் 22:4; அப 24:14,22)

"தியானாளின் கோவிலைப்போல வெள்ளியினால் சிறிய கோவில்களைச் செய்தான்" - சிறிய கோவில்கள் (shrines) என்பதற்கான கிரேக்க வார்த்தை "நவோஸ்" (naos) என்பதாகும். தியானாளுக்கு அந்த ஊரில் பெரிய கோவில் ஒன்று இருந்தது. அந்தக் கோவிலுக்கு நடுவில் தியானாளின் விக்கிரகம் இருந்தது. இந்தத் தட்டான் அந்தக் கோவிலைப்போலவே ஒரு சிறிய மாதிரி உருவக் கோவிலை ஜனங்களுக்குச் செய்து கொடுத்தான். தங்களுடைய வீடுகளில் ஜனங்கள் இந்தச் சிறிய கோவில்களை வாங்கி வைத்து, அதை வழிபடுவார்கள். ஜனங்கள் மத்தியிலே சப்பரங்களில் தூக்கிச் செல்வதற்கும் இந்தச் சிறிய கோவில்களைப் பயன் படுத்தினார்கள். தியானாளின் கோவில் 220 வருஷங்களாகக் கட்டப்பட்டது. இதைக் கட்டுவதற்கு ஆசியா முழுவதும் பொருள் சேகர்த்தார்கள். இந்தக் கோவிலின் நீளம் 425 அடி, அகலம் 220 அடி. இந்தக் கோவிலில் 127 உயரமான தூண்கள் இருந்தன. ஒவ்வொரு தூணும் 60 அடி உயரமுடையது. 127 ராஜாக்கள் இந்தக் கோவிலைக் கட்டினார்கள். இந்தக் கோவில் முழுவதிலும் ஏராளமான விக்கிரகங்கள் இருந்தன.

கோவில்கள்(shrines)-ναός-naos - 3485

ஆண்பால் பெயர்ச்சொல் - தேவாலயம், ஆலயம்

"தொழிலாளிகளுக்கு மிகுந்த ஆதாயம் வருவித்துக் கொண்டிருந்தான்" - அந்த ஊரில் ஏராளமான தட்டான்கள் தியானாளுக்குச் சிறிய கோவில்களைச் செய்து வந்தார்கள். இவர்கள் எல்லாம் தொழிலாளிகள் (craftsmen) என்று அழைக்கப்பட்டார்கள். இவர்களுக்கென்று ஒரு சங்கம் இருந்தது. எகிப்தில் புதைபொருள் ஆய்வு நடத்திய போது இதுபோன்று ஏராளமான சங்கங்கள் இருந்ததாகத் தெரிய வருகிறது. தியானாளின் சிறிய கோவிலை வெள்ளியினாலும் சலவைக்கல்லினாலும் செய்து வந்தார்கள். தெமேத்திரியு என்பவன் தட்டான்களுக்கெல்லாம் தலைவன். இதுபோலவே மற்றத் தொழில்களைச் செய்தவர்களுக்கும் சங்கங்கள் இருந்தன.

தொழிலாளி (craftsmen) - τεχνίτης - technitees - 5079

ஆண்பால் பெயர்ச்சொல் தொழிலாளி, கட்டுநர்

"கைகளினால் செய்யப்பட்ட தேவர்கள் தேவர்களல்லவென்று இந்தப் பவுல் என்பவன் சொன்னான்" ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதில் ஆதி அப்போஸ்தலர்கள் வைராக்கியமாக ஊழியம் செய்து கொண்டிருந்தார்கள் என்பதற்கு இந்த வசனம் ஒரு சான்றாகும்.

19 அதிகாரம்

"மகா தேவியாகிய தியானாளுடைய கோவில் எண்ணமற்றுப் போகும்" - பவுல் கைகளினால் செய்யப்பட்ட தேவர்கள் தேவர்களல்லவென்று பிரசங்கம் பண்ணிக் கொண்டிருக்கிறான். ஜனங்கள் அவனுடைய பிரசங்கத்தைக் கேட்டு இயேசு கிறிஸ்துவின்மீது விசுவாசம் வைக்கிறார்கள். தியானாளுடைய வழிபாடு குறைவுபடுகிறது. தியானாளின் சிறிய கோவில்களைச் செய்து தட்டான்கள் பெரிய வியாபாரம் செய்து வந்தார்கள். அந்த வியாபாரம் எல்லாம் குறைந்து போயிற்று. ஜனங்கள் தியானாளையும், தியானாளுடைய கோவிலையும் மறந்து விடுவார்கள் என்று திறன்னு கூறுகிறான்.

தியானாளுடைய விக்கிரகத்தில் அவளுடைய சரீரம் முழுவதிலும் ஏராளமான மார்பகங்கள் இருக்கும். தோளிலிருந்து கால்கள் வரையிலும் அநேக மார்பகங்கள் உள்ளன. வேறுசில சிலைகளில் வயிறு வரையிலும் அநேக மார்பகங்கள் இருக்கும். கால்களை மிருகங்களின் தலைகள் மூடியிருக்கும். தியானாளை அந்த ஊருக்கே தாயாகக் கருதினார்கள். சகல சிருஷ்டிகளுக்கும் தியானாளே பால்கொடுத்து வளர்க்கிறாளாம். ஆகையினால் அவளுக்கு அநேக மார்பகங்களை வைத்து சிலை வடித்திருந்தார்கள். தியானாளும் செமிராமஸும் (Semiramus) ஒன்றே என்று ஒருசிலர் கூறுகிறார்கள். செமிராமஸ் பாபிலோனின் ராணி. நிம்ரோத்தின் மனைவி. இவள் மூலமாகவே பழங்கால புறஜாதி ஆராதனை முறைமைகள் எல்லாம் அறிமுகமாயிற்று.

(2) வெள்ளி தட்டான்கள் பவுலின் உடன்வழியக்காரர்களை அரங்க சாலைக்குள் கொண்டு செல்கிறார்கள்

அப 19:28 அவர்கள் இதைக் கேட்டு, கோபத்தால் நிறைந்து: எபேசியருடைய தியானாளே பெரியவள் என்று சத்தமிட்டார்கள்.

அப 19:29 பட்டணம் முழுவதும் கலகத்தினால் நிறைந்தது. பவுலுக்கு வழித்துணையாய் வந்த மக்கெதோனியராகிய [illegible] அரிஸ்தர்க்குவையும் அவர்கள் இழுத்துக் கொண்டு ஒருமனப்பட்டு அரங்க சாலைக்குப் பாய்ந்தோடினார்கள்.

"பட்டணம் முழுவதும் கலகத்தினால் நிறைந்தது" - லூக்கா 4:28

"காயு" (Gaius) - இவன் மக்கெதோனியன். ஆகையினால் அப்போஸ்தலர் 20:4 ஆவது வசனத்திலோ, ரோமர் 16:23, 1கொரி 1:14 ஆகிய வசனங்களிலோ கூறப்பட்டிருப்பவன் இவன் அல்ல.

"அரிஸ்தர்க்கு" (Aristarchus) - அப் 20:4, அப 27:2, கொலோ 4:10, பிலே 1:24

அரங்கசாலை (theatre) - θέατρον - theatron - 2302

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - அரங்கசாலை, வேடிக்கை (அப 19:29,31, 1கொரி 4:9) - பொது ஜனங்கள் கூடும் இடம். விளையாட்டு மைதானம். கொடிய மிருகங்களுக்குக் குற்றவாளிகளை ஜனங்கள் மத்தியிலே இரையாகப் போடும் இடம் (1கொரி 15:32)

(3) பவுல் கூட்டத்திற்குள் போக மனதாயிருந்தான் - ஆனால் அவனுடைய நண்பர்கள் அவனைப் போகவிடவில்லை

அப 19:30 பவுல் கூட்டத்துக்குள்ளே போக மனதாயிருந்தபோது சீஷர்கள் அவனைப் போகவிடவில்லை.

அப 19:31 ஆசியாநாட்டுத் தலைவரில் அவனுக்குச் சிநேகிதராயிருந்த சிலரும் அவனிடத்திற்கு ஆள் அனுப்பி, அரங்கசாலைக்குள் போகவேண்டாம் என்று எச்சரித்தார்கள்.

ஆசியாநாட்டுத்தலைவர் (chief, Asiarch) - Ἀσιάρχης - Asiarchees - 775

ஆண்பால் பெயர்ச்சொல் - ஆசியாநாட்டுத் தலைவர் - பணபலத்தினாலும் பராக்கிரமத்தினாலும் அக்காலத்தில் தலைவர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். பண்டிகைகள், விளையாட்டுக்கள் ஆகியவற்றிற்கு இவர்கள் தலைமை ஏற்பார்கள். பொதுவாக விழாக்களின் செலவுகளை இவர்களே பொறுப்பெடுத்துக் கொள்வார்கள்.

19 அதிகாரம்

(4) கூட்டத்தின் குழப்பம்

அப 19:32 கூட்டத்தில அமளியுண்டாகி, சிலர் இப்படியும் சிலர் அப்படியுமாகப் பேசினார்கள்; தாங்கள் கூடிவந்த காரணம் இன்னதென்று அநேகருக்குத் தெரியாதிருந்தது.

அப 19:33 அப்பொழுது யூதர்கள் அலெக்சந்தர் என்பவனை முன்னிறுத்தத் தள்ளுகையில் கூட்டத்திலே சிலர் அவனை முன்னே இழுத்துவிட்டார்கள்; அலெக்சந்தர் கையமர்த்தி, ஜனங்களுக்கு உத்தரவுசொல்ல மனதாயிரு

அப 19:34 அவன் யூதனென்று அவர்கள் அறிந்தபோது எபேசியருடைய தியானாளே பெரியவள் என்று இரண்டுமணி நேரமளவும் எல்லாரும் ஏகமாய்ச் சத்தமிட்டுக் கொண்டிருந்தார்கள்

"சிலர் இப்படியும் சிலர் அப்படியுமாகப் பேசினார்கள்" - ஜனங்கள் கூட்டத்தில் முரட்டாட்டம் பண்ணும்போது இப்படித்தான் பேசுவார்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பேசுவார்கள் தாங்கள் பேசுவதன் காரணம் ஒருவருக்கும் புரியாது. கொள்கையோ, கோட்பாடோ இல்லாமல் கூச்சல் போடுவார்கள்

கூட்டம் (assembly) - ἐκκλησία - ekkleesia - 1577

பெண்பால் பெயர்ச்சொல் சபை கூட்டம். சங்கம். கிறிஸ்தவ திருச்சபைக்கும் இந்தப் பெயர்தான் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆகையினால் எக்லேஷியா என்பது ஜனங்களுடைய கூட்டம் அவர்கள் நலகாரியத்திற்காக கூடியிருக்கிறார்கள் அல்லது தீயகாரியத்திற்காகக் கூடியிருக்கிறார்கள் என்பதற்கும் இந்த வார்த்தைக்கும் சம்மந்தமில்லை

"அலெக்சந்தர்" (Alexander)

1தீமோ 1:20, 2தீமோ 4:14 ஆகிய வசனங்களில் இவனைப் பற்றிய குறிப்பு உள்ளது; இவன் ஒரு யூதன் எபேசுவிலுள்ள யூதர்கள் இவனைத் தேர்ந்தெடுத்து, இந்தக் கலகத்திற்குக் காரணம் பவுலும், கிறிஸ்தவர்களும்தான் என்று பேசுவதற்கு அனுப்பினார்கள் புறஜாதியார்கள் யூதருக்கும், கிறிஸ்தவருக்கும் வித்தியாசம் பார்ப்பதில்லை. இந்தக் கலகத்திற்கு கிறிஸ்தவர்களைப் போல யூதரும் காரணம் என்று எபேசியர் நினைத்தார்கள் ஏனெனில் யூதரும் தியானாளை ஆராதிப்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் ஜனங்கள் அலெக்சந்தரைப் பேசவிடவில்லை எபேசியருடைய தியானாளே பெரியவள் என்று இரண்டுமணி நேரமளவும் எல்லாரும் ஏகமாய்ச் சத்தமிட்டுக்கொண்டிருந்தார்கள் (அப 19:34)

"அலெக்சந்தர் கையமர்த்தி, ஜனங்களுக்கு உத்தரவுசொல்ல மனதாயிருந்தான்" - இந்த வாக்கியத்தில் "உத்தரவுசொல்ல" என்பதற்கான கிரேக்க வார்த்தை "அப்பொலோஜியோமாய்" (apologeomai) என்பதாகும் (அப 19:33; அப 24:10; அப 25:8; அப 26:1,2,24; லூக்கா 12:11; லூக்கா 21:14; ரோமர் 2:15; 2கொரி 12:19) உத்தரவு சொல்லுதல் என்பதற்கு இந்த வாக்கியத்தில் பதில் கூறுதல் என்று பொருளல்ல. யூதருடைய சார்பாக மன்னிப்புக் கோருதல் என்று பொருள் இந்தக் கலகத்திற்கு யூதர்கள் காரணமல்ல. பவுலும் அவனுடைய நண்பர்களுமே காரணம் என்று எபேசியரிடம் யூதர் சார்பாக மன்னிப்புக் கோருவதற்கு அலெக்சந்தர் மனதாயிருந்தான்

உத்தரவு சொல் (defence) - ἀπολογέομαι - apologeomai - 626

வினைச்சொல் - மாறுத்தரமாகச் சொல், உத்தரவு சொல், பேசு மன்னிப்புகோருதல்

(5) பட்டணத்து சம்பிரதியானவன் ஜனங்களை அமர்த்துகிறான்

அப 19:35 பட்டணத்துச் சம்பிரதியானவன் ஜனங்களை அமர்த்தி: எபேசியரே, எபேசியருடைய பட்டணம் மகா தேவியாகிய தியானாளுக்கும் வானத்திலிருந்து விழுந்த சிலைக்கும் கோவிற்பரிசாரகியாயிருக்கிறதை அறியாதவன் உண்டோ?

19 அதிகாரம்

அப் 19:36 இது எதிர்பேசப்படாத காரியமாகையால் நீங்கள் ஒன்றும் பதறிச்செய்யாமல் அமர்ந்திருக்க வேண்டும்.

அப் 19:37 இந்த மனுஷரை இங்கே கொண்டு வந்தீர்கள்; இவர்கள் கோவில்கொள்ளைக் காரருமல்ல, உங்கள் தேவியைத் தூஷிக்கிறவர்களுமல்ல.

அப் 19:38 தெமேத்திரியுக்கும் அவனைச் சேர்ந்த தொழிலாளிகளுக்கும் ஒருவன்மேல் ஒரு காரியம் உண்டாயிருந்தால் நியாயம் விசாரிக்கிற நாட்களுண்டு, தேசாதிபதிகளும் இருக்கிறார்கள், ஒருவர்பேரிலொருவர் வழக்காடிக் கொள்ளட்டும்.

அப் 19:39 நீங்கள் வேறே யாதொரு காரியத்தைக்குறித்து விசாரிக்க வேண்டியதானால், அது நியாய சங்கத்திலே தீர்க்கப்படும்.

அப் 19:40 இன்றைக்கு உண்டான கலகத்தைக்குறித்து நாம் உத்தரவு சொல்லுகிறதற்கு ஏதுவில்லாதபடியால் இந்தக் கலகத்தைக்குறித்து நாங்கள் விசாரிக்கப்படும் போது, குற்றவாளி களாகிறதற்கு ஏதுவாயிருப்போமே என்று சொல்லி,

அப் 19:41 பின்பு கூட்டத்தை அனுப்பிவிட்டான்.

பட்டணத்துச் சம்பிரதியானவன் (townclerk) - γραμματεύς - grammateus - 1122

ஆண்பால் பெயர்ச்சொல் - பட்டணத்துச் சம்பிரதியானவன், வேதபாரகன் - இந்த வார்த்தை வேதாகமத்தில் 67 தடவைகள் வந்துள்ளது. 66 இடங்களில் வேதபாரகன் என்றும், இந்த வசனத்தில் மட்டுமே பட்டணத்துச் சம்பிரதியானவன் என்றும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது (மத் 2:4)

அமர்த்து (appeased) καταστέλλω katastelloo 2687

வினைச்சொல் - அமர்த்து, அமர்ந்திரு (quieted). (அப் 19:35, 36)

பட்டணத்துச் சம்பிரதியானவன் கூறிய [redacted]

1. தியானாள் எபேசியரின் தேவி. இதை அறியாதவன் யாருமில்லை. (அப் 19:35)
2. இது எதிர் பேசப்படாத காரியம் (அப் 19:36)
3. நீங்கள் ஒன்றும் பதறிச்செய்யாமல் அமர்ந்திருக்கவேண்டும். (அப் 19:36)
4. இந்த மனுஷரை இங்கே கொண்டு வந்தீர்கள்; இவர்கள் கோவிற் கொள்ளைக்காரருமல்ல, உங்கள் தேவியைத் தூஷிக்கிறவர்களுமல்ல (அப் 19:37)
5. இவர்கள் ஏதாவது குற்றம் செய்திருந்தால் இவர்களை நியாயம் விசாரிக்கிற நாட்களுண்டு. தேசாதிபதிகளும் இருக்கிறார்கள் (அப் 19:38-39)
6. இந்தக் கலகத்தைக்குறித்து நாங்கள் விசாரிக்கப்படும் போது, குற்றவாளி களாகிறதற்கு ஏதுவாயிருப்போம் (அப் 19:40)

"கோவிற்பரிசாரகி" (worshipper) கோவிலைச் சுத்தம் பண்ணுகிறவர்கள் (temple-sweeper) எபேசு பட்டணம் முழுவதும் மகா தேவியாகிய தியானாளுக்கு உரியது. இதன் கோவிலை மகா கனம் பொருந்திய செல்வந்தர்கள்கூட சுத்தம் பண்ணுவதைத் தங்களுக்குச் சிலாக்கியமாகக் கருதுகிறார்கள். கோவிலின் வாசலகதவைத் திறந்து விடுவது, கோவிலின் கதவை மூடுவது ஆகிய எல்லா வேலைகளையும் மிகவும் முக்கியமான நபர்கள் மனமுவந்து செய்து வருகிறார்கள். தியானாளுக்கு மிகப்பெரிய பலிகளையெல்லாம் செலுத்துகிறார்கள். மகா ராஜாவை பாதுகாப்பதே இந்த தியானாள்தான் என்று நினைத்து இந்தத் தியானாளை மிகவும் பாதுகாப்பாக வைத்திருக்கிறார்கள்.

19 அதிகாரம்

கோவிற் பரிசாரகி (worshipper) - νεωκόρος - neookoros - 3511

ஆண்பால் பெயர்ச்சொல் - கோவிற் பரிசாரகி

"வானத்திலிருந்து விழுந்த சிலை" (fell down from Jupiter) - தியானாளின் சிலை வானத்திலிருந்து விழுந்ததாக ஜனங்கள் நம்புகிறார்கள். நீண்ட காலத்திற்கு முன்பாகவே இக்காரியம் நடைபெற்றது. ஆகையினால் தியானாளின் சிலையை யார் செய்தது, எப்போது செய்தார்கள் என்று யாருக்கும் தெரியாது. தியானாள் வானத்திலிருந்து விழுந்ததாக அவளுடைய ஆசாரியர்கள்தான் தங்களுடைய சுயலாபத்திற்காகக் கூறி வந்தார்கள். தியானாளோடு சேர்ந்து, மேலும் பல பரிசுத்தமான பொருட்கள் வானத்திலிருந்து விழுந்ததாம்.

பதறிச்செய் (rashly) - προπετής - propetees - 4312

பெயரடை - பதறிச்செய்கிற துணிகரமுள்ள (headstrong) 2 தீமோ 3:4

கோவில் கொள்ளைக்காரர் (robbers) - ἱερόσυλος - hierosylos - 2417

ஆண்பால் பெயர்ச்சொல் - கோவில் கொள்ளைக்காரர் (plunderers of temples; spoilers of sacred places) - அப்போஸ்தலர்கள் ஜனங்களுடைய சிந்தையைத் தூண்டும் வண்ணமாகப் பிரசங்கம் பண்ணினார்கள். அவர்களுடைய ஆராதனையைக் கேலிசெய்யவில்லை.

"ஒருவர்பேரிலொருவர் வழக்காடிக் கொள்ளட்டும்" - தெமேத்திரியுக்கும் அவனைச் சேர்ந்த தொழிலாளிகளுக்கும் பவுலின்மீது வழக்கு இருந்தால் அவர்கள் முறைப்படி சட்டத்தின் பிரகாரம் நீதிமன்றத்தில் வழக்காடட்டும் என்று பட்டணத்து சம்பிரதியானவன் கூறுகிறான்.

வழக்காடு (implead) - ἐγκαλέω - enkaleoo - 1458

வினைச்சொல் - வழக்காடு, குற்றஞ்சாட்டு, விசாரிக்கப்படு, குற்றஞ்சாட்டப்படு (accuse or charge); அப் 19:38,40; அப் 23:28-29; அப் 26:2,7; ரோமர் 8:33

"குற்றவாளிகளாகிறதற்கு ஏதுவாயிருப்போமே" - ரோமர்கள் தங்களுடைய பிரதேசங்களில் எங்கும் கலகம் உண்டாவதை அனுமதிப்பதில்லை. அதை உடனே விசாரித்து அதற்குக் காரணமானவர்களைத் தண்டித்து விடுவார்கள். இங்கு நடைபெறும் கலகத்தைக் குறித்தும் ரோமர்கள் விசாரிப்பார்கள். ஆனால் இன்றைக்கு உண்டான கலகத்தைக்குறித்து பட்டணத்து சம்பிரதிக்கு உத்தரவு சொல்லுகிறதற்கு ஏதுவில்லை. அவன் விசாரிக்கப்படும்போது, ரோமர்கள் அவனைக் குற்றவாளியாகத் தீர்ப்புக் கூறிவிடுவார்கள். கலகம் பண்ணுகிறவனுக்கு மரண தண்டனை கொடுக்கப்படும். இங்கு நடைபெறும் கலகத்திற்கு பவுல் காரணமல்ல. ஆகையினால் இந்தக் கலகத்தைப் பற்றிய விசாரணை நடைபெறும் பொழுது தன்னுடைய உயிருக்கு ஆபத்து வந்துவிடும் என்று தெமேத்திரியு நினைத்துப் பார்க்கிறான். ஆகையினால் பட்டணத்து சம்பிரதி கூட்டத்தை அனுப்பிவிடும் போது தெமேத்திரியுவும் அவனுடைய கூட்டாளிகளும் அந்த இடத்தை விட்டுப் போய்விடுகிறார்கள்.

20 அதிகாரம்

11. மக்கெதோனியாவிற்கும் கிரேக்கத்திற்கும் பிரயாணம்

அப 20:1 கலகம் அமர்ந்தபின்பு பவுல் சீஷரைத் தன்னிடத்திற்கு வரவழைத்து, விடைபெற்றுக்கொண்டு, மக்கெதோனியாவுக்குப் போகப் புறப்பட்டான்

அப 20:2 அவன் அந்தத் திசைகளிலே சுற்றி நடந்து சீஷர்களுக்கு வெகுவாய்ப் புத்தி சொல்லி, கிரேக்கு தேசத்திலே சேர்ந்தான்

அப 20:3 அங்கே மூன்றுமாதம் சஞ்சரித்த பின்பு, அவன் கப்பல் ஏறி சீரியா தேசத்துக்குப்போக மனதாயிருந்த போது, யூதர்கள் அவனுக்குத் தீமை செய்யும்படி இரகசியமான யோசனை கொண்டிருந்தபடியால், மக்கெதோனியா தேசத்தின் வழியாய்த் திரும்பிப்போகத் தீர்மானம்பண்ணினான்

அப 20:4 பெரோயா ஊரானாகிய சோபத்தரும், தெசலோனிக்கேயரில் அரிஸ்தர்க்கும் செகுந்தும் தெர்பையானாகிய காயுவும் தீமோத்தேயும், ஆசியா நாட்டாராகிய தீகிக்குவும் துரோப்பீமும் ஆசியாநாடு வரைக்கும் அவனுக்கு வழித்துணையாய் வந்தார்கள்

அப 20:5 இவர்கள் முன்னாகப் போய், துரோவா பட்டணத்திலே எங்களுக்காகக் காத்திருந்தார்கள்

"கலகம்" (uproar) - அப 19:24-40 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் கலகம். (அப 21:34; அப 24:18; மத் 26:5, மத் 27:24, மாற்கு 5:38, மாற்கு 14:2)

விடைபெறு (embraced) - ἀσπάζομαι - aspazomai - 782

விடைச்சொல் கரங்களில் அணைத்துக் கொள்ளுதல் வாழ்த்து, வந்தனம் செய், விடை உத்தரவு பெறு, கண்டுகொள், சந்தி, அணைத்துக்கொள்-இதன் பிற மொழி பெயர்ப்புக்கள் "greet" (ரோமர் 16:2-11, 1கொரி 16:20; 2கொரி 13:12; பிலி 4:21 கொலோ 4:14; 1தெச 5:26; 2தீமோ 4:21 தீத்து 3:15; 1பேதுரு 5:14; 2யோவான் 1:13, 3யோவான் 1:14); "salute" (மத் 5:47, மத் 10:12; மாற்கு 9:15; மாற்கு 15:18 லூக்கா 1:40 லூக்கா 10:4, அப் 18:22 அப் 21:7,19 அப 25:13 ரோமர் 16:5-23 1கொரி 16:19 2கொரி 13:13 பிலி 4:21-22; கொலோ 4:10-15, 2தீமோ 4:19; தீத்து 3:15; பிலே 1:23 எபி 13:24; 1பேதுரு 5:13 3யோவான் 1:14); take leave of (அப் 21:6) embraced (அப் 20:1 எபி 11:13)

"மக்கெதோனியா" (Macedonia) - பவுல் பிலிப்பி தெசலோனிக்கே, பெரோயா ஆகிய பட்டணங்களுக்கும் வேறு சில இடங்களுக்கும் பிரயாணம் பண்ணினான்

"கிரேக்கு தேசம்" (Greece) - கிரேக்கு தேசத்தில் அத்தேனே கொரிந்து கெங்க்ரேயா ஆகிய பட்டணங்களுக்குப் பவுல் சென்றிருக்கலாம்

"மக்கெதோனியா தேசத்தின் வழியாய்த் திரும்பிப்போனான்" - பிலிப்பி பட்டணத்திற்கு திரும்பி வந்தான் (அப 20:6)

"பெரோயா ஊரானாகிய சோபத்தர்" (Sopater of Berea) இவனுடைய பெயர் இந்த வசனத்தில் மட்டுமே குறிப்பிடப் பட்டிருக்கிறது.

"அரிஸ்தர்க்கும், செக்குந்தும்" (Aristarchus and Secundus) (அப் 20:4 அப் 27:2 கொலோ 4:10 பிலே 1:24

"தெர்பையானாகிய காயு" (Gaius of Derbe) - (அப 19:29)

"தீமோத்தேயு" (Timotheus, Timothy)

"தீகிக்கு" (Tychicus) - பவுலின் நம்பிக்கைக்குரிய உடன் ஊழியன் (எபே 6:21 கொலோ 4:7; 2தீமோ 4:12; தீத்து 3:12

"துரோப்பீமு" (Trophimus) - பவுலின் மற்றொரு உடன் ஊழியன் (அப் 20:4, அப 21:29 2தீமோ 4:20

20 அதிகாரம்

12. பிலிப்பி பட்டணத்திலிருந்து துரோவா பட்டணத்திற்கு பிரயாணம்

அப் 20:6 புளிப்பில்லாத அப்பப்பண்டிகை நாட்களுக்குப்பின்பு நாங்கள் கப்பல் ஏறிப் பிலிப்பிபட்டணத்தைவிட்டு ஐந்து நாளைக்குள்ளே துரோவா பட்டணத்துக்கு அவர்களிடத்தில் வந்து, அங்கே ஏழுநாள் தங்கியிருந்தோம்.

13. வாரத்தின் முதல் நாளிலே அப்பம் பிட்கிறார்கள் - (1கொரி 10:16)

அப் 20:7 வாரத்தின் முதலநாளிலே அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து அவர்களுடனே சம்பாஷித்து நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான்.

அப் 20:8 அவர்கள் கூடியிருந்த மேல்வீட்டிலே அநேக விளக்குகள் வைத்திருந்தது.

"வாரத்தின் முதலநாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருந்தார்கள்" வாரத்தின் முதலநாள் என்பது ஞாயிற்றுக்கிழமையாகும்.

கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் சபை கூடிவருவதற்குக் காரணங்கள்

1 இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், மரணத்தின்மீதும் நரகத்தின்மீதும், கல்லறையின்மீதும் இயேசு கிறிஸ்து ஜெயம் பெற்றதையும் கொண்டாடுகிறார்கள் (மத் 28:1 மாற்கு 16:9; யோவான் 20:1)

2 கர்த்தர் தம்முடைய சீஷர்களுக்கு ஞாயிற்றுக்கிழமையில் தம்மை அதிகமாக வெளிப்படுத்தியிருக்கிறார் (மத் 28:1; மாற்கு 16:9; யோவான் 20:1,19,26)

3 யூதருடைய பழைய ஓய்வுநாளை இயேசு கிறிஸ்து முழுவதுமாகப் புறக்கணித்து விட்டார். இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு, சபை கூடி வருவதற்கு வாரத்தின் முதலாம் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையே பிரதான நாளாயிற்று. (மத் 28:1, மாற்கு 16:9; யோவான் 20:1,19,26

4 பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரி ஞாயிற்றுக்கிழமையில் அருளப்பட்டது. பெந்தெகொஸ்தே நாள் யூதருடைய ஏழு ஓய்வுநாட்களுக்குப் பின்பு வந்த வாரத்தின் முதலாவது நாளாகிய ஞாயிற்றுக் கிழமையாகும் (அப் 2:1 லேவி 23:15-21). கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியானவரும் ஞாயிற்றுக்கிழமையில் திருச்சபைக்குத் தம்மை வெளிப்படுத்தினார்கள். யூதருடைய ஓய்வுநாளை இருவருமே புறக்கணித்து விட்டார்கள்.

5 இயேசு கிறிஸ்துவோ அல்லது அப்போஸ்தலர்களோ யூதருடைய பழைய ஓய்வுநாளையோ அல்லது வேறு ஏதாவது குறிப்பிட்ட நாளையோ ஓய்வுநாளாக ஆசரிக்க வேண்டுமென்று கட்டளையிடவில்லை. மனுஷன் ஒரு குறிப்பிட்ட நாளுக்காகச் சிருஷ்டிக்கப்படவில்லை. (ரோமர் 14:5-6 கலா 5:9-11 கொலோ 2:14-17) ஒருவன் பாவத்தை எந்த நாளில் செய்தாலும், அது பாவமாகத்தான் இருக்கும். நியாயப் பிரமாணத்தை மீறுவது பாவம். (1யோவான் 3:4) ஒரு குறிப்பிட்ட நாளில் ஒரு காரியம் செய்வதினால் அது பாவமாவதில்லை. வாரத்தின் முதல் நாளில் பாவம் செய்தாலும் யூதருடைய பழைய ஓய்வுநாளில் பாவம் செய்தாலும், வாரத்தின் மற்ற நாட்களில் பாவம் செய்தாலும் பாவம் பாவமே.

6 புதிய உடன்படிக்கையில் எந்த நாளை ஓய்வுநாளாக ஆசரிக்க வேண்டுமென்று கூறப்படவில்லை. அதே சமயத்தில் பழைய உடன்படிக்கையும் ஒழிந்து போயிற்று. இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆதித் திருச்சபையார் வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையைச் சபையாகக் கூடி கர்த்தரை ஆராதிக்கும் நாளாக நியமித்துக் கொண்டார்கள் (மத் 28:1, மாற்கு 16:9; யோவான் 20:1,19,26, அப் 20:7; 1கொரி 16:2; வெளி 1:10

20 அதிகாரம்

7 பழைய உடன்படிக்கையில வாரத்தின் முதலாம் நாள் ஓய்வுநாளின் அடையாளமாய் இருக்கிறது.

(1) யூதருடைய ஓய்வுநாள் ஒவ்வொரு நாளாக மாறிக் கொண்டே வரும். ஒவ்வொரு ஏழு வருஷத்திலும் ஒவ்வொரு நாளிலும் ஓய்வுநாள் வரும். அதாவது வாரத்தின் ஏழு நாட்களும் ஏழு வருஷங்களில ஓய்வுநாளாக ஆசரிக்கப்படும் பெந்தெகொஸ்தே நாள் என்பது ஏழாம் ஓய்வுநாளுக்குப் பின்பு வரும் முதலாம் நாள் (லேவி 23:15-21)

2 முதற்கனிகளின் பண்டிகை ஞாயிற்றுக் கிழமையில வந்தது. இது இயேசு கிறிஸ்துவின உயிர்த்தெழுதலை அடையாளமாகக் குறிக்கிறது. (லேவி 23:9-14 மத் 28:1, யோவான் 20:1)

3 புளிப்பில்லாத அப்பப் பண்டிகையும், கூடாரங்களின பண்டிகையும் ஒரு ஞாயிற்றுக் கிழமையிலோ அல்லது இரண்டு ஞாயிற்றுக் கிழமைகளிலோ நடைபெறும். ஏனெனில் இது ஏழு நாட்களாகவும், எட்டு நாட்களாகவும் நடைபெறும் பண்டிகை. (லேவி 23:6-36)

8 தேவன வாரத்தின் முதலாம்நாளில தமது பிரமாணத்தைக் கொடுத்து அந்த நாளைக் கனப்படுத்தியிருக்கிறார் (யாத் 19:1,3,11 = லேவி 23:16, யாத் 12:2-18

9 வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகத்தைத் தேவன் வாரத்தின முதலாம் நாளில கொடுத்து அந்த நாளை மறுபடியுமாகக் கனப்படுத்தி இருக்கிறார் (வெளி 1:10)

"சீஷர்கள் கூடிவந்திருந்தார்கள்" - சீஷர்கள் கர்த்தரை ஆராதிப்பதற்காகவும் கர்த்தருடைய பந்தியில் அப்பம் பிட்குமபடியாகவும் கூடிவந்திருக்கிறார்கள் (1கொரி 10:16)

"அப்பம் பிட்டல்" - (மத் 26:26-30 1கொரி 10:16-22; 1கொரி 11:17-34 அப 2:42,46; அப் 20:7) நடு இராவிறகுப பின்பு இங்கு இராபபோஜனத்தில் பஙகுபெறுகிறார்கள்

"நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான்" - சுமார் 6 அல்லது 10 மணி நேரம் பவுல் பிரசங்கித்தான். மிகவும் நீண்ட பிரசங்கம் (அப 20:7,9,11)

14. ஐத்திகு உயிரோடு எழுப்பப் படுகிறான்

அப 20:9 அப்பொழுது ஐத்திகு என்னும பேர் கொண்ட ஒரு வாலிபன் ஜன்னலில உட்கார்ந்திருந்து, பவுல நெடுநேரம் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருக்கையில மிகுநத தூககமடைந்து நித்திரை மயககததினால சாயந்து மூனறாம் மெததையிலிருநது கீழே விழுநது மரிததவனாய எடுககபபட்டான

அப 20:10 உடனே பவுல இறங்கிப்போய, அவனமேல விழுநது அவனை அணைத்துக் கொண்டு, கலஙகாதிருஙகள இவன உயிர இவனுககுள இருககிறது எனறான

அப் 20:11 பினபு ஏறிப்போய, அப்பம் பிட்டுப் புசித்து விடியற்காலமளவும் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்து பினபு புறப்பட்டான

அப் 20:12 அந்த வாலிபனை அவர்கள உயிருள்ளவனாகக் கூட்டிக்கொண்டு வந்து, மிகுந்த ஆறுதலடைந்தார்கள

"பவுல் அவனமேல் விழுந்தான்" - பவுல் அவனை உயிரோடு எழுப்பினான் எலியாவும் (1இராஜா 17:17-24 எலிசாவும் (2இராஜா 4:33-35) இதுபோலவே செய்து மரித்தவரை உயிரோடு எழுப்பினார்கள்

20 அதிகாரம்

15. துரோவா பட்டணத்திலிருந்து மிலேத்து பட்டணத்திற்கு

அப 20:13 பவுல் ஆசோப்பட்டணம் வரைக்கும் கரைவழியாய் போக மனதாயிருந்தபடியால அவன் திட்டம்பண்ணியிருந்தபடியே, நாங்கள் கப்பல் ஏறி, அந்தப் பட்டணத்தில அவனை ஏற்றிக்கொள்ளும்படி முன்னாக அங்கே போயிருந்தோம்

அப 20:14 அவன் ஆசோப்பட்டணத்திலே எங்களைக் கண்டபோது, நாங்கள் அவனை ஏற்றிக்கொண்டு, மித்திலேனே பட்டணத்துக்கு வந்தோம்.

அப 20:15 அவவிடம்விட்டு, மறு நாளிலே கீயுதீவுக்கு எதிராக வந்து

அப 20:16 பவுல கூடுமானால பெந்தெகொஸ்தே பணடிகைநாளிலே எருசலேமிலிருக்க வேணடுமென்று தீவிரப்பட்டதினிமித்தம், தான் ஆசியாவிலே காலம்போக்காதபடிக்கு, எபேசு பட்டணத்தைக் கடந்து போக வேணடுமென்று தீமானித்ததினால மறுநாளிலே சாமுதீவு பிடித்து துரோகிலியோன் என்னும் துறையிலே தங்கி, மறுநாள மிலேத்து பட்டணத்துக்கு வந்தோம்

"அந்தப் பட்டணத்தில அவனை ஏற்றிக்கொள்ளும்படி முன்னாக அங்கே போயிருந்தோம்" - முன்னாக (go afoot) என்பது சுமார் 20 மைல ஆகும். (அப 18:23)

"ஆசியா" (Asia) - ஆசியா என்பது பொதுவாக சின்ன ஆசியாவையே குறிக்கும்.

16. மிலேத்துவிலிருந்து பவுல் எபேசுவுக்கு ஆள் அனுப்பி, சபையின் மூப்பரை வரவழைக்கிறான்

(1) ஆசியாவில் பவுலின் உண்மையுள்ள ஊழியம்

அப் 20:17 மிலேத்துவிலிருந்து அவன் எபேசுவுக்கு ஆள் அனுப்பி, சபையின மூப்பரை வரவழைத்தான்

அப 20:18 அவர்கள் தன்னிடத்தில் வந்து சேர்ந்தபொழுது, அவன் அவர்களை நோக்கி: நான் ஆசியாநாட்டில் வந்த முதல்நாள் தொடங்கி எல்லாக் காலங்களிலும் உங்களுடனே இன்னவிதமாய் இருந்தேன் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்

அப 20:19 வெகு மனத்தாழ்மையோடும் மிகுந்த கண்ணீரோடும் யூதருடைய தீமையான யோசனைகளால் எனக்கு நேரிட்ட சோதனைகளோடும், நான் கர்த்தரைச் சேவித்தேன்

"மிலேத்து" (Miletus) - எபேசுவிற்குத் தெற்கே 30 மைல தூரத்திலுள்ள பட்டணம் தன்னுடைய நேரத்தை மிச்சப்படுத்துவதற்காகவும் அப 19 ஆவது அதிகாரத்தில கூறப்பட்டிருக்கும் கலகம் மறுபடியும் ஏற்பட்டு விடாதவாறு தடுப்பதற்காகவும் பவுல எபேசுவிற்குப் போகாமல மிலேத்துவிலிருந்து ஆள அனுப்பினான

"சபையின மூப்பர்" - (அப் 14:23)

மனத்தாழ்மை (humility) - ταπεινοφροσύνη- tapeinophrosynee - 5012

பெண்பால பெயர்ச்சொல - தாழ்மை (அப 20:19, எபே 4:2, பிலி 2:3, கொலோ 2:18,23 கொலோ 3:12 1பேதுரு 5:5)

சோதனைகள (temptations) πειρασμός peirasmos 3986

ஆண்பால் பெயர்ச்சொல் - சோதனை, சோதித்தல் - பொதுவாக இந்தக் கிரேக்க வார்த்தை சோதனை என்றே மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது 1பேதுரு 4:12 ஆவது வசனத்தில் இது சோதிக்கப்படுதல் (trials) என்று பொருள்படும். (லூக்கா 22:28, 2கொரி 11:26)

20 அதிகாரம்

(2) கிறிஸ்துவிற்காக பவுலின் பக்தி வைராக்கியம்

அப 20:20 பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்துவைக்காமல், வெளியரங்கமாக வீடுகள்தோறும் உங்களுக்குப் பிரசங்கித்து, உபதேசம் பண்ணி,

அப 20:21 தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக் குறித்தும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதைக் குறித்தும் நான் யூதருக்கும் கிரேக்கருக்கும் சாட்சியாக அறிவித்தேன்.

மறைத்துவை (kept) - **ὑποστέλλω** - **hypostelloo** - 5288

விணைச்சொல் - மறைத்துவை, நீங்கு விலக்கிவிரி, பின்வாங்கு (அப 20:20,27; கலா 2:12; எபி 10:38) - இது ஒரு மருத்துவச்சொல் நோயாளிக்கு உணவு தராமல் உணவை மறைத்து வைப்பது என்னும் பொருளை இந்த வார்த்தை தரும்

"தேவனிடத்திற்கு மனந்திரும்புவது" (மத் 4:17, லூக்கா 13:3)

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பது" யோவான் 3:16 ரோமர் 3:24, ரோமர் 10:9-10; எபே 2:8)

(3) பாடுபடுவதற்கு பவுலின் பிரதிஷ்டை

அப் 20:22 இப்பொழுதும் நான் ஆவியிலே கட்டுண்டவனாய் எருசலேமுக்குப் போகிறேன்; அங்கே எனக்கு நேரிடுங்காரியங்களை நான் அறியேன்.

அப 20:23 கட்டுகளும் உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்த ஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறதை மாத்திரம் அறிந்திருக்கிறேன்.

அப 20:24 ஆகிலும் அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்.

"நான் ஆவியிலே கட்டுண்டவனாய் எருசலேமுக்குப் போகிறேன் - பரிசுத்த ஆவியானவர் பவுலைப் பலமுறை எச்சரித்திருக்கிறார் (அப 20:22-23) ஆனாலும் எருசலேமிற்குப் போகவேண்டுமென்று பவுல் தன்னுடைய ஆவியில் தீர்மானம் பண்ணியிருக்கிறார்.

"கட்டுகளும் உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறது" - நமக்கு முன்பாக என்ன வைக்கப்பட்டிருக்கிறது என்னென்ன காரியங்கள் எல்லாம் நம்முடைய ஜீவியங்களில் நடைபெறும் என்பதைப் பரிசுத்த ஆவியானவர் அறிந்து வைத்திருக்கிறார்.

"ஓட்டம்" (course) - பவுல் தன்னுடைய ஓட்டத்தை முடிப்பதற்கு அதாவது பவுல் மரிப்பதற்கு இன்னும் சுமார் பத்து வருஷங்கள் உள்ளது. அதாவது பவுல் இன்னும் 10 வருஷங்கள் பொறுமையோடு தனக்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஊழியத்தைக் கட்டுகளுக்கும், உபத்திரவங்களுக்கும் நடுவில் நிறைவேற்ற வேண்டும். (2தீமோ 4:7)

"தேவனுடைய கிருபையின் சுவிசேஷம்" - (அப் 13:32)

(4) பவுல் உண்மையுள்ளவனாகவும் சுத்தமுள்ளவனாகவும் இருக்கிறான்

அப் 20:25 இதோ, நான் உங்களுக்குள்ளே சஞ்சரித்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கம் பண்ணினதைக் கேட்டவர்களாகிய நீங்களெல்லாரும் இனி என் முகத்தைப் பார்க்கமாட்டீர்களென்று அறிந்திருக்கிறேன்.

அப்போஸ்தலர் - தொகுப்புரை

20 அதிகாரம்

அப் 20:26 தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்துவைக்காமல், எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே

அப் 20:27 எல்லாருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறேனென்பதற்கு உங்களை இன்றையத்தினம் சாட்சிகளாக வைக்கிறேன்

"தேவனுடைய ராஜ்யம்" -மத் 4:17 மத் 19:24

"தேவனுடைய ஆலோசனை" - இது வரையிலும் பவுலுக்கு வெளிப்படுத்தப் பட்டிருக்கும் தேவனுடைய சித்தம்.

"எல்லாருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறேன்" - யூதரோ புறஜாதியாரோ பவுல் மூலமாக இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷச் செய்தியைக் கேள்விப்பட்டிருந்தும், அவர்கள் மனந் திரும்பாமல் கெட்டுப்போவார்கள் என்றால் அவர்களுடைய இரத்தப்பழி அவர்கள்மீதே சுமரும். யூதருக்கும் புறஜாதியாருக்கும் பவுல் இயேசு கிறிஸ்துவின் மெய்யான வழியைத் தெரியப்படுத்தியிருக்கிறார்

(5) சபையில் பிளவுகளும் குழப்பங்களும் பற்றிய எச்சரிப்பு

அப் 20:28 ஆகையால், உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுய ரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்

அப் 20:29 நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்.

அப் 20:30 உங்களிலும் சிலர் எழும்பி சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார் களென்று அறிந்திருக்கிறேன்

அப் 20:31 ஆனபடியால், நான் மூன்று வருஷகாலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்திசொல்லிக் கொண்டு வந்ததை நினைத்து விழித்திருங்கள்

"உங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" - (மத் 7:29

மந்தை (flock) - ποίμνιον - **poimnion** - 4168

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - மந்தை - சிறிய மந்தை (**little flock**). (அப் 20:28,29 லூக்கா 12:32; 1பேதுரு 5:2-3) பரிசுத்த ஆவியானவர் தம்முடைய ஊழியக்காரர்களை ஒரு சிறிய மந்தைக்குக் கண்காணிகளாக நியமிக்கிறார் தேவனுடைய எல்லாச் சுதந்தரத்திற்கும் எந்த மனுஷனும் கண்காணியாக நியமிக்கப்படவில்லை தேவனுடைய ஊழியக்காரர்கள் எல்லோருமே தேவன் தங்களுக்குக் கொடுத்திருக்கும் சிறிய மந்தையை ஆவிக்குரியபோஜனத்தினால் மேய்த்து மிகுந்த எச்சரிப்போடு காத்தருக்கு ஊழியம் செய்ய வேண்டும்

"பரிசுத்த ஆவி" (Holy Ghost) - பரிசுத்த ஆவியானவர் ஆள்தத்துவப் பண்புடையவர் திருச்சபையில் பரிசுத்த ஆவியானவரே திரித்துவ தேவத்துவத்தின் கிரியைகளைச் செயல்படுத்துகிறார்

கண்காணிகள் (overseers) - ἐπίσκοπος - **episkopos** - 1985

ஆண்பால் பெயர்ச்சொல் - கண்காணியானவன் கண்காணி (அப் 20:28) - மூப்பர் **bishop**" (பிலி 1:1 (தீமோ 3:2 தீத்து 1:7, 1பேதுரு 2:25) மூப்பர் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கம் பண்ண வேண்டும். (அப் 14:23)

மேய் (feed) - ποιμαίνω **poimainoo** - 4165

வினைச்சொல் -மேய், அரசாளு, ஆளு "**feed**" (லூக்கா 17:7;யோவான் 21:16, அப் 20:28; 1கொரி 9:7, 1பேதுரு 5:2, யூதா1:12 வெளி 7:17) "**rule**" (மத் 2:6, வெளி 2:27 வெளி 12:5; வெளி 19:15

20 அதிகாரம்

"தேவனுடைய சபை" (church of God) - (அப் 7:38).

"தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்டார்" - திரித்துவத்தில இயேசுக்கிறிஸ்துவும் ஒருவர் என்பதற்கு இந்த வசனம் ஒரு சான்றாகும் (யோவான் 1:1-2,14 மீகா 5:2; ஏசா 7:14; ஏசா 9:6-7; எபி 1:8 1தீமோ 3:15; 1யோவான் 5:7

"சுயரத்தம்" (own blood) - (மத் 26:28 ரோமர் 3:24; எபே 1:7; கொலோ 1:20 1பேதுரு 1:18-23; வெளி 1:5; எபி 9:12-28 எபி 10:19; எபி 13:20

தீர்க்கதரிசன எண் - 10

"நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்..........." (அப் 20:29-30) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

கொடிதான (grievous) - βαρύς - barys - 926

பெயர்ச்சொல் - பாரமான, விசேஷித்தவை கனமான கொடிதான பாரயோசனையான (oppressive). (அப் 20:29; அப் 25:7; மத் 23:4,23 2கொரி 10:10; 1யோவான் 5:3)

"மந்தையைத் தப்பவிடாது" - மந்தையை பாதுகாக்காது, மந்தையை பராமரித்து மேய்க்காது. (ரோமர் 8:32; ரோமர் 11:21, 1கொரி 7:28; 2கொரி 1:23; 2கொரி 12:6, 2கொரி 13:2; 2பேதுரு 2:4)

"சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக் கொள்வார்கள்" - சபைகளில் பிரிவினையை உண்டாக்குவார்கள் நூதன உபதேசங்களைக் கூறுவார்கள் தங்களுக்கு ஆதரவாக சீஷர்களைத் தங்கள் பக்கமாகச் சேர்த்துக் கொள்வார்கள். அதற்கேற்ற பிரகாரம் மாறுபாடானவைகளைப் போதிப்பார்கள் இந்த வாக்கியம் எவ்வளவு சீக்கிரமாக நிறைவேறும் என்பதை வெளி 2:2,6,15-16,20 ஆகிய வசனங்களில் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

புத்திசொல் (warn) - νουθετέω - noutheteoo - 3560

வினைச்சொல் - புத்திசொல் "admonish" (ரோமர் 15:14, கொலோ 3:16; 1தெச 5:12, 2தெச 3:15) "warn" (அப் 20:31, 1கொரி 4:14 கொலோ 1:28 1தெச 5:14)

"கண்ணீரோடே புத்திசொன்னேன்" - பவுல் மனுஷர்மீது மனதுருக்கம் உள்ளவர் தேவனுடைய அன்பினாலும் இரக்கத்தினாலும் நிறைந்திருக்கிறார்

(6) தேவனிடத்தில் அவர்களை ஒப்புக் கொடுக்கிறான்

அப் 20:32 இப்பொழுது சகோதரரே நீங்கள் பக்திவிருத்தியடையவும் பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்தரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக் கொடுக்கிறேன்

"தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன்" - (அப் 17:3)

விருத்தியடை (build) - οἰκοδομέω - oikodomeoo - 3618

வினைச்சொல் - பக்தி, விருத்தியடை, துணிவுகொள், கட்டு (to edify, build up in the faith, build any kind of structure) (அப் 20:32, 1கொரி 3:1-14; எபே 2:20, கொலோ 2:7; யூதா 1:20). மனுஷன் அழிந்த நிலைமையில் இருக்கிறான் அவனுடைய சரீரமும், ஆவியும், ஆத்துமாவும் சீரழிந்து போயிற்று. அது பழுதுபார்க்கப்பட்டு, திரும்பவும் கட்டப்பட்டு புதிதாக்கப்பட வேண்டும். அப்போதுதான் பரிசுத்த ஆவியானவர் மூலமாகத் தேவன் மனுஷனுக்குள் வாசம் பண்ண முடியும். இந்த வசனத்தில் பக்தி விருத்தியடைதல் என்பது நமது ஆவிக்குரிய ஜீவியத்தில் புதுப்பித்துக் கட்டப்படுதல் என்று பொருள்

20 அதிகாரம்

மனுஷன் கட்டப்படவேண்டிய விதம்

1 அஸ்திபாரம் - இயேசு கிறிஸ்து (1கொரி 3:11-15; எபே 2:19-22)

2 கட்டப்படவேண்டிய திட்டம் - இயேசு கிறிஸ்துவின் சாயல் (2கொரி 3:18 கொலோ 3:10

3 கட்டுமானப்பொருள்கள் - இப்பொழுது பாவத்தினால் மாசுப்பிருக்கும் மனுஷனுடைய கிரியைகள் ரோமர் 3:23; ரோமர் 5:12-21 1தெச 5:23; சங் 51:5; எபே 2:1-9)

4 கட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் - தேவனுடைய வார்த்தை (the Word of God) ரோமர் 1:16; யோவான் 15:3 யோவான் 17:17;எபே 5:26. யாக் 1:18 1பேதுரு 1:23; எபி 4:12), கிறிஸ்துவின் இரத்தம் (the blood of Christ) மத் 26:28, எபே 1:7; கொலோ 1:20, வெளி 1:5 எபி 9-10), தேவனுடைய கிருபை (the grace of God) அப20:32;யோவான் 1:17;எபே 2:8-9) பரிசுத்த ஆவியானவரின் வரங்கள் (the gifts of the Spirit) 1கொரி 12:4-11

5 கட்டுகிறவர்கள் - தேவன் (God) (யோவான் 3:16; பிலி 2:13), கிறிஸ்து (Christ) (மத் 1:21; கலா 3:13 14 எபி 4:14 16, யோவான் 16:23 26) பரிசுத்த ஆவியானவர் (the Holy Spirit) (யோவான் 16:7 15 ரோமர்8:1 13,26;1கொரி6:11,தீத்து 3:5) தேவதூதர்கள் (angels) (எபி 1:14) மனுஷன் (man) (யோவான் 3:16, 2தீமோ 2 4; வெளி 22:17, 1கொரி 6, பிலி 2:12, 2பேதுரு 1:4-10; 1யோவான் 1:7, யூதா 1:20-24, எபே 4:11)

6 இலக்கு - புதிய சிருஷ்டிகள் (new creatures) 2கொரி5:17 (கிறிஸ்துவின் சாயலைத் திரும்ப பெறுவது (the restored image of Christ)

(2கொரி 3:18; எபே 2:19-22, எபே 4:13, எபே 5:27; கொலோ 3:10

7 விளைவு - கட்டி முடிக்கப்பட்டிருக்கும் கட்டடம் அதாவது தேவனிடத்தில் நித்திய காலமாக ஐக்கியமாக இருக்கும் வண்ணமாக மனுஷன் புதுப்பிக்கப் பட்டிருக்கிறான் (எபே 2:19-22 எபே 4:13,எபே 5:27 யோவான் 14:1-3 1தெச 4:13-17; வெளி 21-22)

சுதந்தரம் (inheritance) - κληρονομία - kleeronomia - 2817

பெண்பால பெயர்ச்சொல் - சுதந்தரம் (a possession) (அப 20:32 எபே 1:14,18; எபே 5:5; எபி 9:15 1பேதுரு 1:4)

(7) பவுலின் தன்னலமற்ற சேவை

அப 20:33 ஒருவனுடைய வெள்ளியை யாகிலும் பொன்னையாகிலும் வஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்கவில்லை

அப 20:34 நீங்கள் அறிந்திருக்கிறபடி எனக்கும் என்னுடனேகூட இருந்தவர்களுக்கும் வேண்டியவைகளுக்காக இந்தக் கைகளே வேலைசெய்தது

அப 20:35 இப்படிப் பிரயாசப்பட்டு, பலவீனரைத் தாங்கவும், வாங்குவதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று எல்லா விதத்திலேயும் உங்களுக்குக் காண்பித்தேன் என்றான்

"ஒருவனுடைய வெள்ளியையாகிலும் பொன்னையாகிலும் வஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்கவில்லை" இது உண்மையான ஊழியக்காரருடைய சுபாவம். கொடிதான ஓநாய்கள் சுயநலமுள்ளவை. பேராசை பிடித்தவை. ஆனால் உண்மையான ஊழியக்காரர்கள் பிறர் பொருளை இச்சிக்க மாட்டார்கள் (மத் 7:15; 1சாமு 12:3-5

20 அதிகாரம்

"எனக்கும் என்னுடனேகூட இருந்தவர்களுக்கும் வேண்டியவைகள்" - பவுல் தன்னையும், தன்னோடு கூட ஊழியம் செய்த ஊழியக்காரர்களையும் பராமரித்துப் போஷித்து வந்தான்

"எல்லா விதத்திலேயும் உங்களுக்குக் காண்பித்தேன்" பவுல் அவர்களுக்கு முன்மாதிரியாகக் காண்பித்தார் பிரயாசப்பட்டார் பலவீனரைத் தாங்கினார் வாங்குவதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று நினைத்தார் இந்த வாக்கியம் கர்த்தராகிய இயேசு சொன்னதாக உள்ளது ஆனால் இயேசு கிறிஸ்து எப்பொழுது, எங்கே இந்த வாக்கியத்தைக் கூறினார் என்று தெரியவில்லை

(8) கிறிஸ்தவரின் பிரியாவிடை - வசனம் 25

அப் 20:36 இவைகளைச் சொன்னபின்பு அவன் முழங்காற்படியிட்டு அவர்களெல்லாரோடுங்கூட ஜெபம் பண்ணினான்

அப் 20:37 அவர்களெல்லாரும் மிகவும் அழுது என் முகத்தை நீங்கள் இனிப் பார்க்க மாட்டீர்களென்று அவன் சொன்ன வார்த்தையைக்குறித்து அதிகமாய்த் துக்கப்பட்டு,

அப் 20:38 பவுலின் கழுத்தைக் கட்டிக் கொண்டு, அவனை முத்தஞ்செய்து கப்பல்வரைக்கும் அவனுடனே கூடப்போனார்கள்

21 அதிகாரம்

17. மிலேத்துவிலிருந்து தீரு பட்டணத்திற்கு

அப 21:1 நாங்கள் அவர்களை விட்டுப் பிரிந்து, துறைபெயர்ந்த பின்பு நேராயோடி கோஸ்தீவையும், மறுநாளில் ரோதுதீவையும் சேர்ந்து, அவ்விடம் விட்டுப் பத்தாரா பட்டணத்துக்கு வந்து,

அப 21:2 அங்கே பெனிக்கே தேசத்திற்குப் போகிற ஒரு கப்பலைக் கண்டு, அதிலே ஏறிப்போனோம்.

அப 21:3 சீப்புருதீவைக் கண்டு, அதை இடது புறமாக விட்டு, சீரியா நாட்டிற்கு ஓடி, தீருப்பட்டணத் துறையில் இறங்கினோம்; அங்கே கப்பலின் சரக்குகளை இறக்க வேண்டியதாயிருந்தது.

"நேராயோடி, கோஸ்தீவிற்கு வந்தோம்" - கோஸ்தீவு (Coos) (அப 18:23)

"ரோதுதீவு" (Rhodes) - ரோதுதீவில் மிகப் பிரமாண்டமான வெண்கல சிலை ஒன்று உள்ளது. ஹெலியோஸ் (Helios) என்னும் தேவதைக்கு இதை அர்ப்பணித்திருந்தார்கள். இது பழங்கால அற்புதங்களில் ஒன்று. இதன் உயரம் 106 அடி. இந்தச் சிலையின் இரண்டு கால்களுக்கு நடுவில் கப்பல்கள் தாராளமாகச் செல்லும் அந்த அளவிற்கு இந்தச் சிலை உயரமானது. சுமார் 66 வருஷங்களாக இந்தச் சிலை பிரசித்தி பெற்று விளங்கிற்று. கிமு 224 ஆம் ஆண்டு மிகப்பெரிய பூகம்பம் ரோதுதீவைத் தாக்கிற்று. அப்போது 66 வருஷங்களாக நிமிர்ந்து நின்ற சிலை கீழே விழுந்தது. இந்தத் தீவை சரசேனர் (Saracens) கி.பி. 672 ஆம் வருஷம் கைப்பற்றினார்கள். இந்தச் சிலையிலுள்ள வெண்கலத்தை இவர்கள் யூதருக்கு விற்றுவிட்டார்கள்.

"அவர்கள் சீப்புருதீவைக் கண்டார்கள்" - சீப்பு தீவு என்பது பழைய ஏற்பாட்டில் கித்தீம் (Kittim), சித்தீம் (Chittim) என்னும் தீவாகும். (எண் 24:24; ஏசா 23:12; எரே 2:10; எசே 27:6; தானி 11:30)

18. தீருவில் பரிசுத்த ஆவியானவர் பவுலை எருசலேமிற்கு போக வேண்டாமென்று தடை பண்ணுகிறார்

அப் 21:4 அவ்விடத்திலுள்ள சீஷரைக் கண்டுபிடித்து, அங்கே ஏழுநாள் தங்கினோம். அவர்கள் பவுலை நோக்கி: நீர் எருசலேமுக்குப் போகவேண்டாம் என்று ஆவியின் ஏவுதலினாலே சொன்னார்கள்.

"நீர் எருசலேமுக்குப் போகவேண்டாம்" - சீஷர்கள் பவுலை எருசலேமிற்குப் போக வேண்டாம் என்று ஆவியின் ஏவுதலினாலே சொன்னார்கள். பரிசுத்த ஆவியானவரும் எருசலேமிற்குப் போகவேண்டாம் என்று பவுலைப் பலமுறை எச்சரித்துக் கூறியிருக்கிறார் (அப 20:22-24). ஆனாலும் இந்த விஷயத்தில் எருசலேமிற்குப் போவதைப் பவுலின் சொந்தத் தீர்மானத்திற்கு ஆவியானவர் பவுலிடமே ஒப்புக் கொடுத்து விட்டார்.

19. தீருவிலிருந்து செசரியா பட்டணத்திற்கு பிரயாணம் - பிலிப்பென்னும் சுவிசேஷகன் உடைய வீட்டிலே பிரவேசிக்கிறான்

அப் 21:5 அந்த நாட்கள் நிறைவேறின பின்பு, நாங்கள் புறப்பட்டுப்போகையில், அவர்களெல்லாரும் மனைவிகளோடும் பிள்ளைகளோடுங்கூடப் பட்டணத்துக்குப் புறம்பே எங்களை வழிவிட்டனுப்பும்படி வந்தார்கள். அப்பொழுது கடற்கரையிலே நாங்கள் முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணினோம்.

அப 21:6 ஒருவரிடத்திலொருவர் உத்தரவு பெற்றுக்கொண்டபின்பு, நாங்கள் கப்பல் ஏறினோம்; அவர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிப் போனார்கள்.

21 அதிகாரம்

அப் 21:7 நாங்கள் கப்பல்யாத்திரையை முடித்து, தீருப்பட்டணத்தை விட்டு பித்தொலோமாய பட்டணத்துக்கு வந்து, சகோதரரை வினவி, அவர்களிடத்தில் ஒருநாள் தங்கினோம்.

அப் 21:8 மறுநாளிலே பவுலைச் சேர்ந்தவர்களாகிய நாங்கள் புறப்பட்டுச் செசரியாபட்டணத்துக்கு வந்து, ஏழுபேரில் ஒருவனாகிய பிலிப்பென்னும் சுவிசேஷகனுடைய வீட்டிலே பிரவேசித்து, அவனிடத்தில் தங்கினோம்.

அப் 21:9 தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற கன்னியாஸ்திரீகளாகிய நாலு குமாரத்திகள் அவனுக்கு இருந்தார்கள்.

"அவர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிப் போனார்கள்" - அப் 21:5 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் அவர்களெல்லாரும் மனைவிகளோடும் பிள்ளைகளோடுங்கூடப் பட்டணத்துக்குப் புறம்பே எங்களை வழிஅனுப்பி விட்டு திரும்பிப் போனார்கள்.

"நாங்கள் கப்பல்யாத்திரையை முடித்து தீருப்பட்டணத்தை விட்டு பித்தொலோமாய பட்டணத்துக்கு வந்தோம்" பவுலின் மிஷினெரி பிரயாணம் பித்தொலோமாய பட்டணத்தில் முடிவு பெற்றது.

"சகோதரர்" (brethren) - கிறிஸ்தவ மார்க்கம் வெளிநாடுகளிலும் பரவியிருந்தது. பல இடங்களிலும் கிறிஸ்தவர்கள் இருந்தார்கள். கிறிஸ்தவரே இந்த வசனத்தில் "சகோதரர்" என்று அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

"செசரியாபட்டணம்" (Caesarea) - தீருவிற்கு 60 மைல் தெற்கிலும் எருசலேமிற்கு இதே அளவு தூரத்திலுமுள்ள பட்டணம்.

"தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற கன்னியாஸ்திரீகளாகிய நாலு குமாரத்திகள் பிலிப்பெனனும் சுவிசேஷகனுக்கு இருந்தார்கள்"

ஸ்திரீகளும் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணலாம்

1. சுவிசேஷ புஸ்தகங்களில் நற்செய்தியை அறிவித்த பல ஸ்திரீகளைக் குறித்து நாம் வாசிக்கிறோம். மத் 28:1-10; லூக்கா 24:9-11; யோவான் 4:28-30; யோவான் 20:16-18.

2. அப் 2:14-21; யோவே 2:28-31 ஆகிய வசனங்களில் தேவன் தமது பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரியைப் பற்றிக் கூறியிருக்கும்போது ஸ்திரீகள்மீதும் பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரி ஊற்றப்படும் என்றும் அவர்கள் தீர்க்கதரிசனம் உரைப்பார்கள் என்றும் கூறியிருக்கிறார். "தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ மனுஷருக்குப் பக்திவிருத்தியும் புத்தியும் ஆறுதலும் உண்டாகத்தக்கதாகப் பேசுகிறான் .... தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ சபைக்குப் பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்" (1கொரி 14:3,4). தீர்க்கதரிசனம் உரைப்பது சபையாருக்கும், பொதுஜனங்களுக்கும் பக்திவிருத்தி உண்டாகப் பேசுவதாகும் (1கொரி 12:1-31; 1கொரி 14:1-6, 12, 24-26,29-33).

3. அப் 21:8-9 ஆகிய வசனங்களில் பிலிப்புவின் குமாரத்திகள் தீர்க்கதரிசினிகள் என்பது தெளிவாகிறது. அவர்களுடைய தந்தையைப் போல இந்த நான்கு கன்னியாஸ்திரீகளும் சுவிசேஷகிகளாக இருந்தார்கள். யோவே 2:28, 29 ஆகிய வசனங்களுக்கு இந்தக் காரியம் பரிபூரணமாக ஒத்திருக்கிறது. ஆதித் திருச்சபையில் யோவேலின் தீர்க்கதரிசனம் நிறைவேற்றது. (அப் 2:16). கடைசி நாட்களில் அப் 2:17-18 ஆகிய வசனங்களோடு இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும்.

21 அதிகாரம்

4 ரோமர் 16 ஆம் அதிகாரத்தில திருச்சபைகளில் கர்த்தருக்காக ஊழியம் செய்த பல ஸ்திரீகளைக் குறித்து நாம் வாசிக்கிறோம். அவர்களுடைய விவரம் வருமாறு. பெபேயாள் (Phebe) (ரோமர் 16:1-2) பிரிஸ்கில்லாள் (Priscilla) (ரோமர் 16:3-5), மரியாள் (Mary) திரிபேனாள் (Tryphena) திரிபோசாள் (Tryphosa) பெர்சியாள் (Persis), யூலியாள் (Julia) (ரோமர் 16:6-15)

5 பிலிப்பியிலிருந்த திருச்சபையில எயோதியாள் (Euodias), சிந்திகேயாள் (Syntyche) ஆகியோர் தலைவராக ஊழியம் செய்தார்கள் என்று பிலி 4:2 ஆவது வசனத்தில வாசிக்கிறோம்.

6 கொரிந்திய ஸ்திரீகள் சபையில் தீர்க்கதரிசனம் உரைத்து ஜெபம் பண்ணினார்கள் (1கொரி 11:4-5) ஸ்திரீகள் சபையில பிரசங்கம் பண்ணுவதை 1கொரி 14:34-35 ஆகிய வசனங்கள் தடை பண்ணவில்லை சபை ஆராதனைகளில அவர்கள தொந்தரவு பண்ணக்கூடாது. சபை ஆராதனை நடைபெறும்போது ஆராதனைக்கு அடுத்த காரியங்களில பயபக்தியோடு இருப்பதற்குப் பதிலாக ஸ்திரீகள் தங்கள கணவன்மார்களோடு பேசிக் கொண்டிருக்கக் கூடாது. (1கொரி 14:35 ஸ்திரீகளுக்கு புருஷன்மேல அதிகாரம் செலுத்த உத்தரவு இல்லை ஆனாலும் ஸ்திரீகள தங்களுடைய பொறுப்பையும் ஸ்தானத்தையும் உணர்ந்து ஊழியம் செய்யும்போது அவர்கள பிரசங்கம் பண்ணுவதற்குத் தடையேதும் இல்லை. (1தீமோ 2:11-15) கொரிந்துவிலுள்ள சபையில புருஷர்களும், ஸ்திரீகளும் ஜெபித்தார்கள் தீர்க்கதரிசனம் உரைத்தார்கள் இந்த ஊழியங்களை எல்லாம் செய்தபோது அவர்கள தங்களுக்கென்று ஒருசில ஒழுங்கு முறைகளை வகுத்துக் கொண்டார்கள் (1கொரி 14:24-32)

7 1கொரி 12 ஆவது அதிகாரத்தில் சபையை மானிட சரீரத்திற்குப் பவுல் ஒப்பிடுகிறார் ஆவிக்குரிய ஒன்பது வரங்களைப் பற்றி பவுல் கூறுகிறார் அவற்றுள் தீர்க்கதரிசனம் உரைப்பதும் ஒரு வரமாகும். திருச்சபையில் உள்ள எல்லா அங்கத்தினர்களுக்கும் அதாவது புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் தீர்க்கதரிசன வரம் அருளப்படும்.

8. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவன் ஸ்திரீகளை தீர்க்கதரிசினிகளாகப் பயன்படுத்தியிருக்கிறார் (யாத் 15:20 நியா 4:4; 2இராஜா 22:14 2நாளா 34:22; நெகே 6:14; ஏசா 8:3 லூக்கா 1:39-56 லூக்கா 2:36 நியாயப்பிரமாண முறைமையின் பிரகாரம் ஸ்திரீகளும் பலிகளைச் செலுத்தலாம் பண்டிகைகளில் பங்குபெறலாம் பொருத்தனைகளை ஏறெடுக்கலாம் உபா 12:11-18 லேவி 27)

தேவன் பயன்படுத்திய சாதாரண பொருட்கள்

1 கோல் (rod) (யாத் 4:2,17)

2 கழுதை (ass) (எண் 22:28)

3 கொம்பு (ram's horn) (யோசு 6:5)

4 தாற்றுக்கோல் (ox goad), ஆணி (nail), வாற்கோதுமை அப்பம் (barley cake), பானைகள (pitchers), தாடையெலும்பு (jawbone), இயந்திரக்கல் (millstone) நியா 3:31 நியா 4:21 நியா 7:13,20, நியா 9:53, நியா 15:15-19)

5 சால்வை (mantle) (2இராஜா 2:8

6 வாய்க்கால்கள் (ditches) (2இராஜா 3:16)

7 வெறும் பாத்திரங்கள் (empty vessels) (2இராஜா 4:3

21 அதிகாரம்

8 கலசத்தின் எண்ணெய் (cruise of oil), காகங்கள் (ravens) (1இராஜா 17:4,16)

9 பூச்சி (worm), பெருங்காற்று (wind), பெரிய மீன் (fish) ஆமணக்குச்செடி (goard) (யோனா 1:4,17 யோனா 4:6-7)

10 சேவல் (cock) (மாற்கு 14:72)

11 பலமுள்ளவைகளை அவமாக்கும்படி தேவன் பலவீனமானவைகளைத் தெரிந்தெடுத்திருக்கிறார் (1கொரி 1:18-21)

20. பவுலின் பாடுகளைக் குறித்து பரிசுத்த ஆவியானவர் மறுபடியும் எச்சரிக்கிறார் - வசனம் 4

அப 21:10 நாங்கள் அநேகநாள் அங்கே தங்கியிருக்கையில், அகபு என்னும் பேர்கொண்ட ஒரு தீர்க்கதரிசி யூதேயாவிலிருந்து வந்தான்.

அப 21:11 அவன் எங்களிடத்தில் வந்து, பவுலினுடைய கச்சையை எடுத்துத் தன் கைகளையும் கால்களையும் கட்டிக்கொண்டு: இந்தக் கச்சையையுடையவனை எருசலேமிலுள்ள யூதர் இவ்விதமாய்க் கட்டிப் புறஜாதியார் கைகளில் ஒப்புக்கொடுப்பார்கள் என்று பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறார் என்றான்.

"அகபு என்னும் பேர் கொண்ட ஒரு தீர்க்கதரிசி யூதேயாவிலிருந்து வந்தான்" Agabus இரண்டு இடங்களில் அகபுவின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (அப 11:28 அப 21:10) யூதேயாவின் மலைப்பகுதியிலிருந்து 2,000 அடி தாழ்வான செசரியா பட்டணத்திற்கு அகபு வந்தான்.

தீர்க்கதரிசன எண் - 11

"இந்தக் கச்சையையுடையவனை எருசலேமிலுள்ள யூதர் இவ்விதமாய்க் கட்டிப் புறஜாதியார் கைகளில் ஒப்புக்கொடுப்பார்கள்" (அப 21:11) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இந்தத் தீர்க்கதரிசனத்தின் மூலமாக பரிசுத்த ஆவியானவர் பவுலின் பிரயாணத்தைத் தடைபண்ணவில்லை. பவுல் எருசலேமிற்குப் போனால் அங்கு அவனுக்கு என்ன சம்பவிக்கும் என்பதை ஆவியானவர் முன்னறிவிக்கிறார்.

21. எருசலேமிற்கு சென்று அங்கு பாடு அனுபவிப்பதில் பவுல் உறுதியாக இருக்கிறான்

அப 21:12 இவைகளை நாங்கள் கேட்டபொழுது எருசலேமுக்குப் போக வேண்டாமென்று நாங்களும் அவ்விடத்தாரும் அவனை வேண்டிக்கொண்டோம்.

அப 21:13 அதற்குப் பவுல்: நீங்கள் அழுது என் இருதயத்தை ஏன் உடைந்துபோகப்பண்ணுகிறீர்கள்? எருசலேமில் நான் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காகக் கட்டப்படுவதற்கு மாத்திரமல்ல மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன் என்றான்.

அப 21:14 அவன் சம்மதியாதபடியினாலே கர்த்தருடைய சித்தம் ஆகக்கடவதென்று அமர்ந்திருந்தோம்.

"கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காகக் கட்டப்படுவதற்குமாத்திரமல்ல மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன்" தேவனுடைய ஊழியத்தைச் செய்வதற்குப் பவுல் ஆயத்தமாக இருந்தார். எப்படியாவது தேவனுடைய சுவிசேஷ ஊழியத்தைச் செய்ய வேண்டும் என்பதே பவுலின் பிரதான நோக்கம்.

பவுல் ஆயத்தமாக இருந்த காரியங்கள்

1 கட்டப்பட ஆயத்தமாக இருக்கிறார் (அப 21:13)

2 சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க ஆயத்தமாக இருக்கிறார் (ரோமர் 1:15)

21 அதிகாரம்

3 ஊழியம் செய்ய ஆயத்தமாக இருக்கிறார் (2கொரி 12:14)

4 மரிப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறார் (அப் 21:13; 2தீமோ 4:6)

பேதுருவும் "ஆண்டவரே காவலிலும் சாவிலும் உம்மைப் பின்பற்றிவர ஆயத்தமாயிருக்கிறேன்" என்றான் (லூக்கா 22:33)

22. செசரியா பட்டணத்திலிருந்து எருசலேமிற்கு பிரயாணம் - அப் 18:23-ல் துவங்கிய மூன்றாவது மிஷினெரி பிரயாணம் நிறைவு பெறுகிறது

அப் 21:15 அந்த நாட்களுக்குப்பின்பு நாங்கள் பிரயாண சாமான்களை ஆயத்தம் பண்ணிக் கொண்டு எருசலேமுக்குப் போனோம்.

அப் 21:16 செசரியா பட்டணத்திலுள்ள சீஷரில் சிலர் எங்களுடனேகூட வந்ததுமன்றி, சீப்புருதீவானாகிய மினாசோன் என்னும் ஒரு பழைய சீஷனிடத்திலே நாங்கள் தங்கும்படியாக அவனையும் தங்களோடே கூட்டிக் கொண்டு வந்தார்கள்

அப் 21:17 நாங்கள் எருசலேமுக்கு வந்தபோது, சகோதரர் எங்களைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டார்கள்

"பிரயாண சாமான்கள்" (carriages) - பிரயாணம் பண்ணுகிறவர்கள் தங்களோடு எடுத்துச் செல்லும் பொருட்கள் (சாமு 17:22)

"சீப்புருதீவானாகிய மினாசோன்" (Mnason of Cyrpus) - இவன் பழைய சீஷன் இவனுக்கு இதனால வயதாகிவிட்டது என்று பொருளல்ல இவன் ஆதியிலிருந்தே சீஷனாக இருக்கிறவன் இவனுடைய சொந்த ஊர் சீப்புரு தீவு இப்பொழுது இவன் எருசலேமில் வசித்து வருகிறான் செசரியா பட்டணத்திலிருந்து எருசலேமிற்குத் திரும்பி வருகிறான்

XIII. பவுல் கைதாபண்ணப்படுவதும் வழக்கு விசாரணைகளும் - (அப் 21:18-26:31)

1. தேவன் புறஜாதியாரிடத்தில் செய்தவைகளை பவுல் விவரித்துக் கூறுகிறான் - (15:4,12)

அப் 21:18 மறுநாளிலே பவுல் எங்களைக் கூட்டிக் கொண்டு, யாக்கோபினிடத்திற்குப் போனான் மூப்பரெல்லாரும் அங்கே கூடி வந்தார்கள்

அப் 21:19 அவர்களை அவன் வினவி, தன் ஊழியத்தினாலே தேவன் புறஜாதிகளிடத்தில் செய்தவைகளை ஒவ்வொன்றாய் விவரித்துச் சொன்னான்

"யாக்கோபு" (James) - இயேசு கிறிஸ்துவின் சகோதரன் (அப் 15:13-14)

"மூப்பர்" (elders) - (அப் 14:23)

"தன் ஊழியத்தினாலே தேவன் புறஜாதிகளிடத்தில் செய்தவைகளை ஒவ்வொன்றாய் விவரித்துச்சொன்னான்" எருசலேமிலுள்ள திருச்சபைக்குத் தன்னுடைய கடைசி மிஷினெரி பிரயாணத்தில் தேவன் செய்த காரியங்களைப் பவுல் அறிவிக்கிறான் (அப் 15:4,12)

2. யூதமார்க்க கிறிஸ்தவர்களை திருப்தி செய்வதற்காக யூத மார்க்கத்து பொருத்தனைகளை செய்யுமாறு யாக்கோபும், மூப்பர்களும் பவுலுக்கு ஆலோசனை கூறுகிறார்கள்

அப் 21:20 அதை அவர்கள் கேட்டுக் கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள் பின்பு அவர்கள் அவனை நோக்கி: சகோதரனே, யூதர்களுக்குள் அநேகமாயிரம் பேர் விசுவாசிகளாயிருக்கிறதைப் பார்க்கிறீரே அவர்களெல்லாரும் நியாயப் பிரமாணத்துக்காக வைராக்கியமுள்ளவர்களாயிருக்கிறார்கள்

அப்போஸ்தலர் - தொகுப்புரை

21 அதிகாரம்

அப 21:21 புறஜாதிகளிடத்திலிருக்கிற யூதரெல்லாரும் தங்கள் பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் பண்ணவும், முறைமைகளின்படி நடக்கவும் வேண்டுவதில்லையென்று நீர் சொல்லி, இவ்விதமாய் அவர்கள் மோசேயை விட்டுப் பிரிந்துபோகும்படி போதிக்கிறீரென்று இவர்கள் உம்மைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறார்கள்

அப் 21:22 இப்பொழுது செய்யவேண்டியது என்ன? நீர் வந்திருக்கிறீரென்று இவர்கள் கேள்விப்பட்டு, நிச்சயமாகக் கூட்டங் கூடுவார்கள்

அப 21:23 ஆகையால் நாங்கள் உமக்குச் சொல்லுகிறபடி நீர் செய்ய வேண்டும். அதென்னவென்றால் பிரார்த்தனை பண்ணிக் கொண்டவர்களாகிய நாலுபேர் எங்களிடத்தில் இருக்கிறார்கள்

அப 21:24 அவர்களை நீர் சேர்த்துக் கொண்டு, அவர்களுடனேகூடச் சுத்திகரிப்பு செய்து கொண்டு அவர்கள் தலைச்சவரம்பண்ணிக் கொள்வதற்குச் செல்லுமானதைச் செலவு செய்யும். அப்படிச் செய்தால் உம்மைக் குறித்துக் கேள்விப்பட்ட காரியங்கள் அபத்தமென்றும் நீரும் நியாயப் பிரமாணத்தைக் கைக்கொண்டு நடக்கிறவரென்றும் எல்லாரும் அறிந்து கொள்வார்கள்

"அதை அவர்கள் கேட்டுக் கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள்" ஒருமுறை "ஸ்தோத்திரம்" என்று கூறி கர்த்தரை மகிமைப்படுத்துவதை நிறுத்திவிடவில்லை இந்த வாக்கியத்தை "கர்த்தரை மகிமைப்படுத்திக் கொண்டேயிருந்தார்கள்" என்று வாசிக்க வேண்டும் அவர்கள் தொடர்ந்து தேவனை மகிமைப்படுத்திக் கொண்டேயிருந்தார்கள்

"யூதர்களுக்குள் அநேகமாயிரம்பேர் விசுவாசிகளாயிருக்கிறார்கள்" - கிறிஸ்தவ மார்க்கம் யூதர் மத்தியிலே மிகவும் வேகமாகப் பரவிற்று ஆனாலும் மோசேயின் பிரமாணத்தை விட்டு வேகமாக விலகிவர அவர்களுக்கு இன்னும் மனதில்லை.

"அவர்களெல்லாரும் நியாயப் பிரமாணத்துக்காக வைராக்கியம் உள்ளவர்களாயிருக்கிறார்கள்" - வைராக்கியம் என்பதற்கான கிரேக்க வார்த்தை "ஜெலோட்டேஸ்" (zeelootees) என்பதாகும். (enthusiast) அப 21:20; 22:3 1கொரி 14:12 கலா 1:14 தீத்து 2:14 இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தையும் மோசேயின் நியாயப் பிரமாணத்தையும் கலந்து விட்டால் அது கலப்படமான கிறிஸ்தவ உபதேசமாகவே இருக்கும் யூதமார்க்கமும் கிறிஸ்தவ மார்க்கமும் ஒன்றல்ல இவை வெவ்வேறானவை இக்காலத்தில் தேவன் எல்லா பலிமுறைகளையும் ஒழித்துவிடவில்லை இஸ்ரவேலின் எல்லா பிரமாணங்களையும் பண்டிகைகளையும் அகற்றிவிடவில்லை தேவன் யூதர்களுடைய கிரியைகளைப் பொறுத்துக் கொண்டு வந்தார் எருசலேம் பட்டணம் அழிக்கப்படும் வரையிலும் தேவன் தமது பொறுமையை அவர்கள்மீது காண்பித்தார் அதன் பின்பு, அவர்களால் யூதமார்க்கத்து பண்டிகைகளையோ பாரம்பரியங்களையோ சடங்குகளையோ ஆசரிக்க முடியவில்லை. இவ்வாறாக மோசேயின் பிரமாணத்தைக் கைக்கொள்ள முடியாதவாறு ஒரு சூழ்நிலையை உண்டுபண்ணி மோசேயின் நியாயப்பிரமாண காலத்தையே ஆண்டவர் மாற்றி அமைத்து விட்டார் தானி 9:26 ஓசி 3:4 5 மத் 23:36-39; லூக்கா 19:41-48

வைராக்கியம் (zealous) - ζηλωτής - zeelootees 2207

ஆண்பால் பெயர்ச்சொல் - வைராக்கியம், வைராக்கியமுள்ளவர் நாடுகிறவர்

21 அதிகாரம்

யூதர்கள் பவுலைக்குறித்துக் கேள்விப்பட்டிருக்கிற காரியங்கள்

1 யூதர்கள் மோசேயை விட்டு பிரிந்து போகவேண்டுமென்று பவுல் உபதேசம் பண்ணியதாகக் கேள்விப்பட்டிருக்கிறார்கள். யூதர் மத்தியிலே பவுல் இப்படிப்பட்ட காரியத்தை எங்கும் பிரசங்கம் பண்ணவில்லை. மோசேயும் மற்ற தீர்க்கதரிசிகளும் வரப்போகிற மேசியாவைக் குறித்து முன்னறிவித்திருக்கிறார்கள். அவர்கள் முன்னறிவித்திருக்கும் மேசியாவை ஏற்றுக் கொண்டு தேவனிடத்தில் திரும்பி வருமாறு பவுல் யூதருக்குப் பிரசங்கம் பண்ணினார் (அப் 9:20-22; அப் 13:16-41, 46-49; அப் 14:21-22; அப் 15:1-2; அப் 16:4-5; அப் 17:2-3, 22-32; அப் 19:8-20) விசுவாசிகளான புறஜாதியார் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுமாறு நிர்பந்தம் பண்ணக் கூடாது என்பது பவுலின் விருப்பம். முழு சபையாரும் பவுல் புறஜாதியாரைப் பற்றிக் கூறிய காரியத்தை அங்கீகரித்தார்கள் (அப் 15:1-35)

2 யூதரெல்லாரும் தங்கள் பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் பண்ண வேண்டுவதில்லை என்று பவுல் உபதேசம் பண்ணியதாகக் கேள்விப்பட்டிருக்கிறார்கள். ஆனால் பவுல் இவ்வாறு உபதேசம் பண்ணவில்லை. யூதரைப் பிரியப்படுத்துவதற்காகப் பவுல் தீமோத்தேயுவிற்கு விருத்தசேதனம் பண்ணினார் (அப் 16:2) விசுவாசிகளான புறஜாதியார் விருத்தசேதனம் பண்ண வேண்டியதில்லை என்றும், மோசேயின் முறைமைகளின்படி நடக்க வேண்டியதில்லை என்றும் பவுல் வலியுறுத்தினார் (அப் 15:1-35) விருத்தசேதனம் பண்ணுவது எந்த ஆத்துமாவையும் இரட்சிக்காது என்பதும், நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் எந்த மாம்சமும் நீதிமானாக்கப்பட முடியாது என்பதும் பவுலின் உபதேசமாகும். (ரோமர் 3:24-31; ரோமர் 4:1-21; கலா 3:19-25)

3 யூதரெல்லாரும் மோசேயின் முறைமைகளின்படி நடக்க வேண்டுவதில்லை என்று பவுல் உபதேசம் பண்ணியதாகக் கேள்விப்பட்டிருக்கிறார்கள். யூதர்கள் வேறு முறைமைகளைப் பின்பற்ற வேண்டுமென்று பவுல் எங்கும் பிரசங்கம் பண்ணவில்லை. மோசேயின் முறைமைகள் சாதாரண சடங்குகள்தான். இந்த முறைமை மனுஷரை இரட்சிக்காது. ஆகையினால் தன்னுடைய இரட்சிப்பிற்காக ஒருவன் மோசேயின் முறைமையைச் சார்ந்திருக்கக் கூடாது என்பதே பவுலின் உபதேசம். (ரோமர் 3:24; எபே 1:7; எபே 2:8-9; கொலோ 1:20; கொலோ 2:14-17)

முறைமை (custom) - ἔθος - ethos - 1485

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல்- முறைமை, வழக்கம் (rites, customs, habits, manners). இந்தக் கிரேக்க வார்த்தையின் மொழிபெயர்ப்புகள் "custom" (லூக்கா 1:9; லூக்கா 2:42; அப் 6:14; அப் 16:21; அப் 21:21; அப் 26:3; அப் 28:17), "manner" (யோவான் 19:40; அப் 15:1; அப் 25:16; எபி 10:25), "as one is wont" (லூக்கா 22:39)

பிரிந்து போதல் (forsake) - ἀποστασία - apostasia - 646

பெண்பால் பெயர்ச்சொல் - பிரிந்து போதல், விசுவாசதுரோகம் (apostasy) - (அப் 21:21; 2தெச 2:3)

"நாங்கள் உமக்குச் சொல்லுகிறபடி நீர் செய்யவேண்டும்" பண்டிகைக்கு ஏராளமான யூதர்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் மத்தியிலே பவுல் மூலமாகப் பிரச்சனை எதுவும் வரக்கூடாது என்று சபையின் மூப்பர்களும் அப்போஸ்தலர்களும் விரும்புகிறார்கள். ஆகையினால் பவுலிடம் நாங்கள் உமக்குச் சொல்லுகிறபடி நீர் செய்யவேண்டும் என்று ஆலோசனை கூறுகிறார்கள். இவ்வாறு செய்வது பவுலின் மனச்சாட்சியைப் பாதிக்கவில்லை.

21 அதிகாரம்

இதனால் பவுல் மாயமாலக்காரனாக ஆகவில்லை. யூதர் மத்தியிலே இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் இவ்வாறு விவேகமாக நடந்து கொள்வதும், ஞானமுள்ள செயலே.

"பிரார்த்தனை" (vow) - இது ஒருவேளை நசரேய பிரார்த்தனையாக (Nazarite vow) இருக்கலாம். இந்த நாலுபேரும் நசரேய பிரார்த்தனையின் முடிவில் இருக்கிறார்கள். ஆகையினால் அவர்கள் இப்பொழுது சுத்திகரிப்பு செய்துகொண்டு தலைச்சவரம் பண்ணிக் கொள்ளலாம். (அப் 21:24; எண் 6:1-8)

"அவர்களை நீர் சேர்த்துக்கொண்டு அவர்களுடனேகூடச் சுத்திகரிப்பு செய்து கொள்ளும்" - நசரேய பிரார்த்தனையின் சுத்திகரிப்பு முறைமைகளை இந்த வசனம் குறிப்பிடுகிறது. பவுல் கெங்கிரேயாவில் ஒரு பிரார்த்தனை செய்து கொண்டான் (அப் 18:18). ஆகையினால் பவுல் இந்தப் பிரார்த்தனையை ஒருவேளை இங்கு செய்து கொள்ளலாம்.

"அவர்கள் தலைச்சவரம்பண்ணிக் கொள்வதற்குச் செலவுமானதைச் செலவு செய்யும்" பிரார்த்தனை பண்ணிக்கொண்ட அந்த நாலுபேருக்கும் காணிக்கைகளைச் செலுத்துவதிலும், பலிகளைச் செலுத்துவதிலும் ஆகக்கூடிய செலவுகளில் பவுல் உதவி புரிய வேண்டும் (எண் 6:13-21)

> சவரம் பண்ணிக்கொள் (shave) - ξυράω - xyraoo - 3587
>
> வினைச்சொல் - சவரம் பண்ணிக்கொள், சிரை (அப் 21:24; 1கொரி 11:5-6)

"நீரும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு நடக்கிறவர்" - அவர்களை பவுல் சேர்த்துக்கொண்டு, அவர்களுடனேகூடத் தானும் சுத்திகரிப்பு செய்து கொண்டு அவர்கள் தலைச்சவரம்பண்ணிக் கொள்வதற்குச் செலவுமானதைப் பவுல் செலவு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் பவுலைக் குறித்துக் கேள்விப்பட்ட காரியங்கள் அபத்தமென்று விளங்கும்.

அத்துடன் பவுல் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு நடக்கிறவனென்றும் எல்லாரும் அறிந்து கொள்வார்கள். மோசேக்கு தான் ஒரு விரோதியல்ல என்பதைக் காண்பிப்பதற்காகவும், நியாயப்பிரமாணம் நன்மையானது பரிசுத்தமானது என்று தான் இன்னும் நம்புவதைக் காண்பிப்பதற்காகவும் பவுல் இந்தக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று சபையின் மூப்பர்களும், அப்போஸ்தலர்களும் பவுலுக்கு ஆலோசனை கூறுகிறார்கள். அவர்களுடைய ஆலோசனையின் பிரகாரம் பவுல் செய்தான். தனக்கும் நான்கு சகோதரருக்கும் தலைச்சவரம் பண்ணிக் கொள்வதற்குச் செலவுமானதைச் செலவு செய்தான். இந்தச் சடங்குகள் மூலமாக நீதிமானாக்கப்படலாம் என்று பவுல் நினைக்கவில்லை. இதை யூதருடைய சாதாரணமான சடங்காச்சாரமாகவே நினைத்து, பவுல் இவற்றில் பங்கு பெறுகிறான்.

> கைக்கொண்டு நட (walk) - στοιχέω - stoicheoo - 4748
>
> வினைச்சொல் - கைக்கொண்டு நட (to walk according to religious observances). (அப் 21:25; ரோமர் 4:12; கலா 5:25; கலா 6:16; பிலி 3:16)

2. **விசுவாசிகளான புறஜாதியார் பிரமாணங்களைக் கைக்கொள்வதில்லை** - (அப் 15:3-29; ரோமர் 3:21)

> அப் 21:25 விசுவாசிகளான புறஜாதியார் இப்படிப்பட்டவைகளைக் கைக்கொள்ளாமல் விக்கிரகங்களுக்குப் படைத்ததற்கும், இரத்தத்திற்கும், நெருக்குண்டு செத்ததற்கும், வேசித்தனத்திற்கும் விலகியிருக்க வேண்டுமென்று நாங்கள் தீர்மானம் பண்ணி, அவர்களுக்கு எழுதியனுப்பினோமே என்றார்கள்.

"விசுவாசிகளான புறஜாதியார் இப்படிப்பட்டவைகளைக் கைக்கொள்ளாமல் ... நாங்கள் தீர்மானம்பண்ணி, அவர்களுக்கு எழுதியனுப்பினோமே" அப் 15 ஆவது அதிகாரத்தில் சபையின் மூப்பர்களும், அப்போஸ்தலர்களும் தீர்மானம் பண்ணியதில் இன்னும் உறுதியாக இருக்கிறார்கள்.

21 அதிகாரம்

புறஜாதியார் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டியதில்லை. விருத்தசேதனம் பண்ண வேண்டிய அவசியம் புறஜாதியாருக்கு இல்லை.

4. மூப்பர்களின் ஆலோசனையை பவுல் பின்பற்றுகிறான் - 1கொரி 9:19-23

அப் 21:26 அப்பொழுது பவுல் அந்த மனுஷரைச் சேர்த்துக்கொண்டு, மறுநாளிலே அவர்களுடனேகூடத் தானும் சுத்திகரிப்பு செய்துகொண்டு, தேவாலயத்தில் பிரவேசித்து, அவர்களில் ஒவ்வொருவனுக்காக வேண்டிய பலிசெலுத்தித் தீருமளவும் சுத்திகரிப்பு நாட்களை நிறைவேற்றுவேனென்று அறிவித்தான்.

அப் 21:27 அந்த ஏழுநாட்களும் நிறைவேறி வருகையில் ஆசியா நாட்டிலிருந்து வந்த யூதர்கள் அவனை தேவாலயத்திலே கண்டு, ஜனங்களெல்லாரையும் எடுத்துவிட்டு, அவன்மேல் கைபோட்டு,

"பவுல் அந்த மனுஷரைச் சேர்த்துக் கொண்டு.... அவர்களில் ஒவ்வொருவனுக்காக வேண்டிய பலி செலுத்தித் தீருமளவும் சுத்திகரிப்பு நாட்களை நிறைவேற்றுவேனென்று அறிவித்தான்" யூதருடைய ஆத்துமாக்களை இரட்சிப்பிற்குள் வழிநடத்துவதற்காக பவுல் எதையும் செய்வதற்கு ஆயத்தமாக இருக்கிறார். நியாயப்பிரமாணத்தில் கூறப்பட்டிருக்கும் இந்த வழிபாட்டு முறைமையை பவுல் செய்த போதிலும் நியாயப்பிரமாணம் ஒழிந்துபோயிற்று என்பதில் பவுல் தீர்மானமாக இருக்கிறார் (ரோமர் 9:1-3; 1கொரி 9:20). பவுல் சுத்திகரிப்பு செய்த பிறகு, தேவாலயத்தில் யூதர்கள் அவரைப் பிடித்து அடிக்கிறார்கள். இதைத் தேவன் பவுலுக்குக் கொடுக்கும் நியாயத்தீர்ப்பாகக் கருதமுடியாது. ஏனெனில் எருசலேமிற்குச் சென்றால், அவருக்கு இந்தக் காரியங்களெல்லாம் நடைபெறும் என்று தேவன் பவுலை ஏற்கெனவே எச்சரித்திருக்கிறார் (அப் 20:22-23; அப் 21:11).

"ஆசியா நாட்டிலிருந்து வந்த யூதர்கள்" - பவுலை விரோதித்தவர்களில் இவர்கள் மிகவும் முக்கியமானவர்கள்.

5. யூதர்கள் பவுலைச் சூழ்ந்து கொண்டு அடிக்கிறார்கள் - புறஜாதியார் பவுலை விடுவிக்கிறார்கள்

அப் 21:28 இஸ்ரவேலரே, உதவி செய்யுங்கள்; நம்முடைய ஜனத்திற்கும் வேதப்பிரமாணத்திற்கும் இந்த ஸ்தலத்திற்கும் விரோதமாக எங்கும் எல்லாருக்கும் போதித்து வருகிறவன் இவன்தான்; இந்த தேவாலயத்திற்குள்ளே கிரேக்கரையும் கூட்டிக் கொண்டுவந்து, இந்தப் பரிசுத்த ஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தினான் என்று சத்தமிட்டார்கள்.

அப் 21:29 எபேசியனாகிய துரோப்பீமு என்பவன் முன்னே நகரத்தில் பவுலுடனே கூட இருக்கிறதைக் கண்டிருந்தபடியால், பவுல் அவனை தேவாலயத்தில் கூட்டிக்கொண்டு வந்திருப்பானென்று நினைத்தார்கள்.

அப் 21:30 அப்பொழுது நகரமுழுவதும் கலக்கமுற்றது; ஜனங்கள் கூட்டமாய் ஓடிவந்து, பவுலைப் பிடித்து, அவனை தேவாலயத்திற்குப் புறம்பே இழுத்துக் கொண்டுபோனார்கள்; உடனே கதவுகள் பூட்டப்பட்டது.

அப் 21:31 அவர்கள் அவனைக் கொலைசெய்ய எத்தனித்திருக்கையில், எருசலேம் முழுவதும் கலக்கமாயிருக்கிறதென்று போர்ச் சேவகரின் சேனாபதிக்குச் செய்தி வந்தது.

அப் 21:32 உடனே அவன் போர்ச்சேவகரையும் அவர்களுடைய அதிபதிகளையும் கூட்டிக்கொண்டு, அவர்களிடத்திற்கு ஓடினான். சேனாபதியையும் போர்ச்சேவகரையும் அவர்கள் கண்டபோது பவுலை அடிக்கிறதை விட்டு நிறுத்தினார்கள்.

சேனாபதி (chief captain) - χιλίαρχος chiliarchos 5506

21 அதிகாரம்

ஆண்பால் பெயர்ச்சொல் - பிரதான மனுஷர், தலைவன் சேனாபதி. சேனைத்தலைவர் - ஆயிரம் சேவகருக்குத் தலைவன் ரோமபடைத் தளபதி. யோவான் 18:12

கூட்டம் (band) - σπεῖρα - **speira** - 4686

பெண்பால் பெயர்ச்சொல் - கூட்டம் பட்டாளம் (cohort) (யோவான் 18:3)

6. பவுலை இரண்டு சங்கிலிகளினால் கட்டி கோட்டைக்குள்ளே கொண்டு வருகிறார்கள்

அப் 21:33 அப்பொழுது சேனாபதி கிட்டவந்து அவனைப் பிடித்து இரண்டு சங்கிலிகளினாலே கட்டும்படி சொல்லி, இவன் யார் என்றும் என்ன செய்தான் என்றும் விசாரித்தான்.

அப் 21:34 அதற்கு ஜனங்கள் பலவிதமாய்ச் சத்தமிட்டார்கள். சந்தடியினாலே நிச்சயத்தை அவன் அறியக்கூடாமல் அவனைக் கோட்டைக்குள்ளே கொண்டுபோகும்படி கட்டளையிட்டான்.

அப் 21:35 அவன் படிகளின்மேல் ஏறினபோது ஜனக்கூட்டம் திரண்டு பின்சென்று,

அப் 21:36 இவனை அகற்றும் என்று உக்கிரமாய்க் கூப்பிட்டபடியினாலே போர்ச்சேவகர் அவனைத் தூக்கிக் கொண்டு போக வேண்டியதாயிருந்தது.

"சேனாபதி கிட்ட வந்து அவனைப் பிடித்து இரண்டு சங்கிலிகளினாலே கட்டும்படி சொன்னான்" பவுலின் இரண்டு கைகளையும் இரண்டு சேவகர்களின் கையோடு சங்கிலிகளினால் சேர்த்துக் கட்டிவிட்டார்கள். குற்றவாளி தப்பிச் செல்ல முடியாதவாறு அக்காலத்தில் இவ்வாறு சங்கிலிகளினால் கட்டுவது வழக்கம்.

அகற்றும் (Away) - αἴρω - **airoo** - 142

வினைச்சொல் - அகற்று - மாற்கு 16:18 ஆவது வசனத்தில் சர்ப்பங்களை எடுப்பார்கள் என்றிருக்கிறது. தன்னுடைய விசுவாசத்தைக் காண்பிப்பதற்காக ஒரு சர்ப்பத்தைத் தன் கையினால் பிடிப்பது என்பது இந்த வார்த்தைக்குப் பொருளல்ல. கொல்லுதல் என்று இந்த வார்த்தை பொருள்படும். (லூக்கா 23:18; யோவான் 19:15)

7. ஜனங்களிடத்தில் பேசுவதற்கு தனக்கு உத்தரவாக வேண்டுமென்று பவுல் வேண்டிக் கொள்கிறான்

அப் 21:37 அவர்கள் பவுலைக் கோட்டைக்குள்ளே கொண்டுபோகிற சமயத்தில், அவன் சேனாபதியை நோக்கி: நான் உம்முடனே ஒரு வார்த்தை பேசலாமா என்றான். அதற்கு அவன்: உனக்குக் கிரேக்கு பாஷை தெரியுமா?

அப் 21:38 நீ இந்த நாட்களுக்குமுன்னே கலகமுண்டாக்கி, நாலாயிரங் கொலை பாதகரை வனாந்தரத்திற்குக் கொண்டு போன எகிப்தியன் அல்லவா என்றான்.

அப் 21:39 அதற்குப் பவுல்: நான் சிலிசியா நாட்டிலுள்ள கீர்த்திபெற்ற தர்சுபட்டணத்து யூதன்; ஜனங்களுடனே பேசும்படி எனக்கு உத்தரவாக வேண்டுமென்று உம்மை வேண்டிக் கொள்ளுகிறேன் என்றான்.

அப் 21:40 உத்தரவானபோது, பவுல் படிகளின் மேல் நின்று ஜனங்களைப் பார்த்துக் கையமர்த்தினான்; மிகுந்த அமைதலுண்டாயிற்று; அப்பொழுது அவன் எபிரெயு பாஷையிலே பேசத் தொடங்கினான்.

22 அதிகாரம்

"எகிப்தியன்" (Egyptian) - யோசேபஸ் (Josephus) இந்த எகிப்தியனைப் பற்றி எழுதியிருக்கிறார். இவன் தன்னை ஒரு தீர்க்கதரிசி என்று கூறிக்கொண்டான். தன்னைப் பின்பற்றுபவர்களிடம் எருசலேமின் அலங்கங்கள் அவர்களுக்கு முன்பாக விழும் என்று தீர்க்கதரிசனம் கூறினான். எருசலேம் பட்டணத்தின்மீது யுத்தம் பண்ணுவதற்குத் தனக்கு உதவி புரிவதற்காக ஜனங்களைச் சேர்த்தான். சுமார் 3,000 பேர் இந்த எகிப்தியனோடு சேர்ந்து கொண்டார்கள். ஆனால் இவனால் எருசலேமிற்குப் போகமுடியவில்லை. இவன் போகும்பொழுது ரோமாபுரியின் தேசாதிபதி தன்னுடைய போர்ச்சேவகர்களோடு இவனோடு போரிட்டு, இவனையும், இவனோடு வந்தவர்களையும் துரத்திவிட்டான். இந்தச் சண்டையில் சுமார் 400 எகிப்தியர்கள் கொல்லப்பட்டார்கள். 200 பேர் கைதிகளாக இழுத்துச் செல்லப்பட்டார்கள். இந்தச் சூழ்நிலையில் இந்த எகிப்தியன் தனக்கு விசுவாசமான போர்வீரர்களோடு தப்பிச் சென்று விட்டான். இந்தப் பவுல்தான் அந்த எகிப்தியன் என்று லீசியா (Lysias) நினைத்தான். ஜனங்களை மறுபடியும் ஒன்றுசேர்த்து, கலகம் பண்ணுவதற்காக அந்த எகிப்தியன் வந்துவிட்டான் என்றும், பவுலே அந்த எகிப்தியன் என்றும் லீசியா நினைத்தான்

இந்த வசனத்தில் 4,000 பேர் என்று வாசிக்கிறோம். யோசேபஸ் 30,000 பேர் என்று எழுதியிருக்கிறார். கிரேக்க மொழியில் டெல்டா என்னும் எழுத்து நான்கையும், லாம்டா என்னும் எழுத்து முப்பதையும் குறிக்கும். வேதபாரகர் புதிய ஏற்பாட்டினைப் பிரதியெடுத்த போது இந்த எழுத்து பிழை ஏற்பட்டிருக்கலாம். அல்லது எகிப்தியனோடு முதல் முறையாக 30,000 பேரும் அதன்பின்பு இரண்டாம் முறையாக 4,000 பேரும் சென்றிருக்கலாம்.

"தர்சு பட்டணம்" பவுல் தன்னுடைய பட்டணத்தைப் பற்றிக் கூறும்போது கீர்த்திபெற்ற தர்சு பட்டணம் என்று கூறுகிறான். உண்மையிலேயே ரோமப்பேரரசில் தர்சு சாதாரண பட்டணமல்ல. எல்லாவிதத்திலும் மிகவும் பிரசித்தி பெற்ற பட்டணமாகும்.

"உத்தரவானபோது" - பவுல் பேசுவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டது.

"அவன் எபிரெயு பாஷையிலே பேசத்தொடங்கினான்" - எபிரெய பாஷை கல்தேய-சீரியக் மொழியாகும் (The Chaldee Syriac)

22 அதிகாரம்

8. ஜனக்கூட்டத்திற்கு முன்பாக பவுல் கூறிய விளக்கம்

(1) கிறிஸ்தவர்களைப் பவுல் துன்புறுத்தினான் – (அப் 9:1)

அப் 22:1 சகோதரரே, பிதாக்களே நான் இப்பொழுது உங்களுக்குச் சொல்லப் போகிற நியாயங்களுக்குச் செவி கொடுப்பீர்களாக என்றான்

அப் 22:2 அவன் எபிரெயுபாஷையிலே தங்களுடனே பேசுகிறதை அவர்கள் கேட்ட பொழுது அதிக அமைதலாயிருந்தார்கள் அப்பொழுது அவன்

அப் 22:3 நான் யூதன் சிலிசியா நாட்டிலுள்ள தர்சுபட்டணத்திலே பிறந்து, இந்த நகரத்திலே கமாலியேலின் பாதத்தருகே வளர்ந்து, முன்னோர்களுடைய வேதப் பிரமாணத்தின் படியே திட்டமாய்ப் போதிக்கப்பட்டு, இன்றையத்தினம் நீங்களெல்லாரும் தேவனைக்குறித்து வைராக்கியமுள்ளவர்களாயிருக்கிறது போலநானும் வைராக்கியமுள்ளவனாய் இருந்தேன்

அப் 22:4 நான் இந்த மார்க்கத்தாராகிய புருஷரையும் ஸ்திரீகளையும் கட்டி சிறைச்சாலைகளில் ஒப்புவித்து மரணபரியந்தம் துன்பப்படுத்தினேன்

அப் 22:5 அதற்குப் பிரதான ஆசாரியரும் மூப்பர் யாவரும் சாட்சிகொடுப்பார்கள், அவர்கள் கையிலே நான் சகோதரருக்கு நிருபங்களை வாங்கிக் கொண்டு,தமஸ்குவிலிருக்கிறவர்களும் தண்டிக்கப் படும்படிக்கு, அவர்களைக் கட்டி, எருசலேமுக்குக் கொண்டுவரு ம்படி அவ்விடத்திற்குப் போனேன்

நியாயம் (defence) ἀπολογία apologia 627

பெண்பால் பெயர்ச்சொல் – நியாயம், எதிருத்தரவு, மாறுத்தரம், உத்தரவு (a verbal defense, speech) (அப் 22:1 அப் 25:16; 1கொரி 9:3 2கொரி 7:11; பிலி 1:7,17; 2தீமோ 4:16)

"கமாலியேல்" (Gamaliel) – (அப் 5:34) யூதமார்க்கத்திலே கமாலியேல் மிகச்சிறந்த ஆசிரியர் இவரிடம் கல்வி பெற்ற ஒருவருக்கு யூதமார்க்கத்தில் நல்ல தேர்ச்சி இருக்கும். பவுல் கமாலியேலின் பாதத்தருகே [illegible]ந்தவன் ஆகையினால் யூதமார்க்கத்தைக் குறித்து பவுல் அறியாமல் இருப்பதற்கு வாய்ப்பில்லை.

"தேவனைக்குறித்து வைராக்கியம் உள்ளவர்களாய் இருக்கிறதுபோல நானும் வைராக்கியமுள்ளவனாயிருந்தேன்" – யூத மார்க்கத்தை யூதர்கள் காத்துக் கொள்ள விரும்பினார்கள் அதுபோலவே பவுலும் ஒரு காலத்தில் யூதமார்க்கத்தில் மிகவும் வைராக்கியமாக இருந்தார் யூதமார்க்கத்தைப் பாதுகாப்பதற்காக கிறிஸ்தவர்களைப் பவுல் துன்புறுத்தினார் யூதமார்க்கத்தை விட்டுப் பிரிந்துபோன எல்லோரையும் அழிப்பதிலும் கொல்வதிலும் பவுல் மிகுந்த வைராக்கியமாக இருந்தார் (அப் 22:4; பிலி 3:5-6)

"நான் இந்த மார்க்கத்தாராகிய புருஷரையும் ஸ்திரீகளையும் கட்டி சிறைச்சாலைகளில் ஒப்புவித்து மரணபரியந்தம் துன்பப்படுத்தினேன்" – இந்த மார்க்கத்தார் என்பது கிறிஸ்தவ மார்க்கத்தாரைக் குறிக்கும். இவர்கள் இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தின் பிரகாரம் ஜீவிக்கிறவர்கள் (அப் 9:2; அப் 18:25-26 அப் 19:9,23 அப் 22:4; அப் 24:14,22)

"பிரதான ஆசாரியரும் மூப்பர் யாவரும் சாட்சிகொடுப்பார்கள்" – பவுல் கூறுவது உண்மை. இது ஒரு வரலாற்று நிகழ்ச்சி இதற்கு எல்லோருமே சாட்சி கூறுவார்கள் மூப்பர் என்பது இந்த வசனத்தில் சபையில் பொறுப்பேற்றிருந்த அனைவரையுமே குறிக்கும். ஆதித்திருச்சபையில் மூப்பர், கண்காணி ஆகிய வார்த்தைகள் அதிகமாக வழக்கத்தில் இருந்தன

மூப்பர்கள் (elders) πρεσβυτέριον presbyterion 4244

22 அதிகாரம்

பால்வேறுபாடற்ற பெயர்சொல - மூப்பர் (elders) (லூக்கா 22:66, அப 22:5) மூப்பராகிய சங்கத்தார் (presbytery) (1தீமோ 4:14)

"நிருபங்கள்" (letters) - (அப 9:1-2)

"தண்டிக்கப்படும்படிக்கு அவர்களைக் கட்டி, எருசலேமுக்குக் கொண்டுவரும்படி அவ்விடத்திற்குப் போனேன்" - பல தேசங்களில ஜனங்கள் தண்டிக்கப்பட்டதற்கான குறிப்புக்களை நாம வேதாகமத்தில வாசிக்கலாம். (இராஜா 18:7-10; எரே 26:21-23, அப் 9:2,14; அப 22:5

(2) பவுலின் மனமாற்றம் - (9:3-26:13)

அப 22:6 அப்படி நான் பிரயாணப்பட்டுத் தமஸ்குவுக்குச சமீபமானபோது, மத்தியான வேளையிலே, சடிதியாய வானத்திலிருந்து பேரொளி உண்டாகி என்னைச சுற்றிப் பிரகாசித்தது.

அப 22:7 நான் தரையிலே விழுந்தேன அப்பொழுது, சவுலே சவுலே, நீ என்னை ஏன துன்பப்படுத்துகிறாய் என்று என்னுடனே சொலலுகிற ஒரு சத்தத்தைக் கேட்டேன

அப 22:8 அதற்கு நான ஆண்டவரே, நீர் யார என்றேன அவர் நீ துன்பப்படுத்துகிற நசரேயனாகிய இயேசு நானே என்றார

அப 22:9 என்னுடனேகூட இருந்தவர்கள் வெளிச்சத்தைக கண்டு, பயமடைந்தார்கள் என்னுடனே பேசினவருடைய சத்தத்தையோ அவர்கள் கேட்கவில்லை

அப 22:10 அப்பொழுது நான் ஆண்டவரே, நான் என்னசெய்ய வேண்டும் என்றேன் அதற்குக் கர்த்தர், நீ எழுந்து, தமஸ்குவுக்குப போ; நீ செய்யும்படி நியமிக்கப்பட்டதெல்லாம் அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார்

அப 22:11 அந்த ஒளியின் மகிமையினாலே நான் பார்வையற்றுப்போன படியினால், என்னோடிருந்தவர்களால் கைலாகு கொடுத்து வழிநடத்தப்பட்டுத் தமஸ்குவுக்கு வந்தேன்

"நான் பிரயாணப்பட்டுத் தமஸ்குவுக்குச் சமீபமானபோது" - அப 22:6-16 ஆகிய வசனங்களில கூறப்பட்டிருக்கும் காரியங்களைத் தெளிவாகத் தெரிந்து கொளவதற்கு அப 9:1-18 ஆகிய வசனங்களை வாசிகக வேண்டும்

"நீ என்னை ஏன துன்பப்படுத்துகிறாய" - இயேசு கிறிஸதுவின விசுவாசிகளைத் துன்பப்படுத்துவது இயேசு கிறிஸதுவையே துன்பப்படுத்துவதற்குச சமமானது (மத் 19:29)

"நசரேயனாகிய இயேசு" (Jesus of Nazareth) இயேசு கிறிஸ்து தம்முடைய [illegible] வெளிப்படுத்தும்போது நசரேயனாகிய இயேசு என்று கூறினார முப்பது வருஷங்களுக்கு முன்பு அவர்கள் சிலுவையில அறைந்து கொன்ற தீர்க்கதரிசியை இந்த வார்த்தை விளக்குகிறது.

"என்னுடனேகூட இருந்தவர்கள் வெளிச்சத்தைக் கண்டார்கள்" பவுல கூறும் ஒவ்வொரு அனுபவத்தையும் உறுதி பண்ணுவதற்குச் சாட்சிகள இருக்கிறார்கள்

"என்னுடனே பேசினவருடைய சத்தத்தையோ அவர்கள் கேட்கவில்லை" பவுலோடுகூட இருந்தவர்கள் யோவான 12:28-30 ஆகிய வசனங்களில கூறப்பட்டிருக்கிற பிரகாரம் வெறும் சத்தத்தை மட்டும் கேட்டார்கள் அந்தச் சத்தத்தை அவர்களால வார்த்தைகளாகப் புரிந்து கொள்ள முடியவில்லை

22 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 12

"நீ எழுந்து, தமஸ்குவுக்குப் போ; நீ செய்யும்படி நியமிக்கப்பட்டதெல்லாம் அங்கே உனக்குச் சொல்லப்படும்" (அப் 22:10) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

(3) அனனியாவின் ஊழியம் - (9:10)

அப் 22:12 அப்பொழுது வேதப் பிரமாணத்தின்படியே பக்தியுள்ளவனும், அங்கே குடியிருக்கிற சகல யூதராலும் நல்லவனென்று சாட்சி பெற்றவனுமாகிய அனனியா என்னும் ஒருவன்

அப் 22:13 என்னிடத்தில் வந்துநின்று, சகோதரனாகிய சவுலே, பார்வையடைவாயாக என்றான்; அந்நேரமே நான் பார்வையடைந்து அவனை ஏறிட்டுப்பார்த்தேன்.

அப் 22:14 அப்பொழுது அவன்: நம்முடைய பிதாக்களின் தேவனுடைய திருவுளத்தை நீ அறியவும், நீதிபரரைத் தரிசிக்கவும், அவருடைய திருவாய் மொழியைக் கேட்கவும், அவர் [redacted] முன்னமே தெரிந்துகொண்டார்.

அப் 22:15 நீ கண்டவைகளையும் கேட்டவைகளையும் குறித்துச் சகல மனுஷருக்கு முன்பாக அவருக்குச் சாட்சியாயிருப்பாய்.

அப் 22:16 இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான்.

"அனனியா Ananias இவன் அப் 5:1-8 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருப்பவன் அல்ல இந்த அனனியா அப் 9:17-18 ஆகிய வசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறவன்

"பார்வையடைவாயாக" - பவுல் பார்வையடைந்தான் அத்தோடு இரட்சிக்கப்பட்டான் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டான் அதன் பின்பு ஞானஸ்நானம் பெற்றான் (அப் 9:17-18)

தேவன் பவுலைத் தெரிந்து கொண்டதற்குக் காரணம்

1. தேவன் பவுலைத் தெரிந்து கொண்டார் (அப் 22:14; கலா 1:15-16)
2. தேவனுடைய திருவுளத்தை அறிவதற்குப் பவுலைத் தெரிந்து கொண்டார் (அப் 22:14)
3. இயேசு கிறிஸ்துவைத் தரிசிப்பதற்குப் பவுலைத் தெரிந்துகொண்டார் (அப் 22:14,18; 1கொரி 9:1; 1கொரி 15:8; 2கொரி 12:1-4)
4. தேவனுடைய திருவாய்மொழியைக் கேட்பதற்குப் பவுலைத் தெரிந்து கொண்டார் (அப் 22:7,14)
5. எல்லா ஜனங்களுக்கும் விசேஷித்த சாட்சியாகத் தேவன் பவுலைத் தெரிந்து கொண்டார் (அப் 22:15; கலா 1:15-16)

"இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன?" பவுல் இரட்சிக்கப்பட்டு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் பெற்ற பின்பு, அனனியா இந்த வார்த்தையைப் பவுலிடம் கூறுகிறான் (அப் 9:17-18) நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்று அனனியா பவுலிடம் கூறுகிறான் ஆகையினால் தண்ணீரில் ஞானஸ்நானம் பெறுவது ஒருவனுடைய பாவத்தைக் கழுவாது. பாவம் மன்னிக்கப்படுவதற்காக யாரும் ஞானஸ்நானம் பெறுவதில்லை. ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு எடுத்துக்காட்டுகள் கிறிஸ்து **(Christ)** (மத் 3:16), எத்தியோப்பிய அதிகாரி **(the eunuch)** (அப் 8:37; 1யோவான் 5:1), புறஜாதியார் **(the Gentiles)** (அப் 10:44-48), யாரும் **(anyone else)** (1பேதுரு 3:21; 1கொரி 1:13-24)

22 அதிகாரம்

தண்ணீர் ஞானஸ்நானம் பவுலின் பாவங்களைக் கழுவாது

1 அப 22:12-16 ஆகிய வசனங்கள் அப 9:17-18 ஆகிய வசனங்களில கூறப் பட்டிருப்பதைப் போன்று முழுமையாகக் கூறவில்லை. இந்த வசனங்களில நாம் இவ்வாறு வாசிக்கிறோம்

(1) திரும்ப பார்வையடைதல் அப் 9:17-18

2) பரிசுத்த ஆவியானவரால நிரப்பப்படுதல (அப 9:17)

3 ஜெபத்திலிருந்து எழுந்திருத்தல அப 9:11,18)

4) தண்ணீரில ஞானஸ்நானம (அப 9:18)

2 தான் இயேசு கிறிஸ்துவின திரு இரத்தத்தில விசுவாசம வைப்பதினால இரட்சிக்கப்பட்டிருப்பதாகப் பவுல் பல இடங்களில சாட்சியாகக் கூறியிருக்கிறார் (ரோமர் 3:24-25 ரோமர் 5:9, எபே 1:7)

3 அனனியா பவுலைப் பார்த்து எழுந்திரு என்று கூறுவதற்கு முன்பாகவே பவுல் இரட்சிக்கப்பட்டிருக்கிறான் குணமாக்கப் பட்டிருக்கிறா பரிசுத்த ஆவியினால நிரப்பட்டிருக்கிறான அப் 22:16= அப 9:17-18)

4 "உன் பாவங்களை போகக் கழுவப்படு" - என்பது மற்ற சுத்திகரிப்பைப் போன்றே இதுவும் சடங்காச்சாரமான சுத்திகரிப்பு முறைமையாகும். (மத் 8:3-4=லேவி 14-15) கழுவப்படு என்பதற்கான கிரேக்க வார்த்தை "அபோலோவோ" **apolouo)** இந்த வார்த்தை இந்த வசனத்திலும் 1கொரி 6:11 ஆவது வசனத்திலும் மட்டுமே பயன்படுத்தப் பட்டிருக்கிறது. கொலோ 2:11 ஆவது வசனத்திலும "கையால் செய்யப்படாத" ஞான ஸ்நானமும்,இதே பொருளையே தரும்.

5. ஞானஸ்நானத்தினால் பாவங்கள் கழுவப்படும் என்று வேதவாக்கியம எதுவும் கூறவில்லை. நாம் கழுவப்படுகிற விதம்

(1)தேவனால் கழுவப்படுகிறோம். (சங் 51:1-13; தீத்து 2:11-13)

(2) கிறிஸ்துவால் கழுவப படுகிறோம். (மத் 1:21 வெளி 1:5)

(3) பரிசுத்த ஆவியினால் கழுவப் படுகிறோம். (1கொரி 6:11)

(4) கிருபையினால் விசுவாசத்தின் மூலமாகக் கழுவப்படுகிறோம் (எபே 2:8-9

(5) இயேசு கிறிஸ்துவின திருஇரத்தத்தில வைக்கும் விசுவாசத்தினால கழுவப படுகிறோம். (ரோமர் 3:24 25 ரோமர் 5:9; எபே 7 1யோவான 1:7, மத் 26:28 எபி 9:22; 1பேதுரு 1:18-23, வெளி 1:5)

(6) கிரியைகளில்லாமல விசுவாசத்தினால கழுவப படுகிறோம். (ரோமர் 2:24-31 ரோமர் 4:1-25; ரோமர் 5:1 கலா 3:19-29

(7 பாவங்களை அறிக்கை செய்வதினால கழுவப் படுகிறோம். (1யோவான் 1:9, ரோமர் 10:9-10, அப் 2:38, அப் 3:19)

(8) தேவனுடைய வார்த்தையினால கழுவப படுகிறோம். (1பேதுரு 1:23, யாக் 1:18; யோவான் 3:5, யோவான் 15:3, எபே 5:26

22 அதிகாரம்

6 அனனியா ஒரு யூதன் அவனுக்குச் சுத்திகரிப்பு முறைகளைப் பற்றி நன்றாகத் தெரியும். சுத்திகரிப்பு புறம்பானது, சடங்காச்சாரமானது. சுத்திகரிப்பின் மூலமாகக் கழுவப்படாத காரியங்கள்

1) குஷ்டம் (Leprosy) லேவி 14:1-9; லேவி 15:1-27)

2) குற்றம் (Guilt) (சங் 26:6; சங் 73:13)

3) பாவங்கள் (Sins) ஏசா 1:16; எரே 2:22)

4) துன்மார்க்கம் (Wickedness) (எரே 4:14)

5) தீட்டு, அசுத்தம் (Defilement) (மாற்கு 7:1-23)

இயேசு கிறிஸ்துவின் திரு இரத்தத்தினால் நமது பாவங்கள் கழுவப்படும் என்பதற்குச் சுத்திகரிப்புக்கள் ஓர் அடையாளமாக இருக்கிறது.

7 பரிசுத்த வேதாகமத்தில் மீட்பு, இரட்சிப்பு, மன்னிப்பு என்னும் பொருளுடைய வார்த்தைகள் 3,322 இடங்களில் வந்திருக்கிறது. தண்ணீர் ஞானஸ்நானம் இதற்குத் தேவை என்று எந்த வசனமும் கூறவில்லை

8 தண்ணீர் ஞானஸ்நானம் இல்லாமலும் தண்ணீர் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பாகவும் பாவங்கள் மன்னிக்கப் பட்டதற்கு வேதாகமத்தில் பல எடுத்துக்காட்டுக்கள் உள்ளன அவையாவன

(1) கிறிஸ்து (Christ) (மத் 3:16; லூக்கா 3:21)

(2) பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் (Old Testament saints) (எபி 11:1-40; லூக்கா 1:15,41, 46,67; லூக்கா 2:25-38

(3) திமிர்வாதக்காரன் (Palsied man) (மத் 9:1-7)

(4) ஆயக்காரன் (The publican) (லூக்கா 18:9-14)

(5) சகேயு (Zacchaeus) (லூக்கா 19:1-10)

(6) சிலுவையில் தொங்கிய கள்ளன் (Thief on the cross) (லூக்கா 23:43)

(7) ராஜாவின் மனுஷனுடைய வீட்டார் (The nobleman's house) (யோவான் 4:53

(8) பாவியான ஸ்திரீ (The sinner woman) (லூக்கா 7:48)

(9) ஏராளமான யூதர்கள் (Many Jews) (மத் 9:22, மாற்கு 5:34, மாற்கு 10:52 லூக்கா 17:19, லூக்கா 18:42, யோவான்7:31 யோவான்8:30-31 யோவான் ,45 யோவான் 12:11,42

(10) எத்தியோப்பிய அதிகாரி (The eunuch) (அப 8:37= 1யோவான் 5:1; ரோமர் 10:9-10, எபே 2:8-9)

(11) சப்பாணி (The lame man) (அப 3:16, அப் 4:12)

(12) பவுல் (Paul) (அப 9:18-19)

(13) கொர்நேலியுவும், அவனுடைய வீட்டாரும் (Cornelius and house) (அப 10:44-48; அப் 11:14-18, அப 15:7-11)

22 அதிகாரம்

(14) திரளான ஜனங்கள் சொஸ்தமாக்கப் பட்டார்கள் இரட்சிக்கப் பட்டார்கள் **(Multitudes both healed and saved)** (அப் 5:15-16, யாக் 5:14-15; மத் 13:15)

9 ஞானஸ்நானம் என்பது இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்கும் அடக்கத்திற்கும், உயிர்த்தெழுதலுக்கும் அடையாளமாகவும் **"figure"**, சாட்சியாகவும் **"witness"** இருப்பதாக பேதுருவும் யோவானும் கூறியிருக்கிறார்கள்

10 ஞானஸ்நானமானது மாம்ச அழுக்கை நீக்குதலாக இராது என்று பேதுரு தெளிவாகக் கூறுகிறார்

11 கையால் செய்யப்படாத விருத்த சேதனத்தினால் மாம்சத்திற்குரிய பாவ சரீரத்தைக் களைந்துபோட முடியும் என்று பவுல் தெளிவுபடுத்துகிறார் (கொலோ 2:11-13) பவுல் இப்போபட்ட ஞானஸ்நானத்தைத் தனது நிருபங்களில் எழுதியிருக்கிறார் (ரோமர் 6:1-8 1கொரி 12:13 கலா 3:29 எபே 4:5 கொலோ 2:12

12 தண்ணீர் ஞானஸ்நானம் என்பது இயேசு கிறிஸ்துவின் சரீரப்பிரகாரமான உண்மையான மரணத்தையும், அடக்கத்தையும் குறிப்பிடாமல் அவற்றிற்கு ஓர் அடையாளமாக மட்டுமே இருக்கிறது.

13 குஷ்டரோகி குணமானபின்பு, அவன் ஆசாரியரிடம் காண்பித்து, தன்னைச் சுத்திகரித்துக் கொள்ள வேண்டும். அதுபோலவே ஞானஸ்நானத்தினால் பாவங்களைக் கழுவுவது என்பது ஓர் அடையாளமே (மத் 8:3-4; லேவி 14:1-9; லேவி 15:1-27) இது வஸ்திரங்களை இரத்தத்தில் தோய்ப்பதுபோன்று ஓர் அடையாளமே ஆகும். (வெளி 7:13-14)

14. மறுபடியும் பிறக்கும் ஞானஸ்நானத்தைப் பற்றி பவுல் எங்கும் உபதேசம் பண்ணவில்லை. (1கொரி 1:13-24; 1கொரி 15:1-5 ரோமர் 1:16; ரோமர் 10:9-10 எபே 2:8-9)

15 ஞானஸ்நானமானது இரட்சிப்பிற்கு ஓர் உபாயம் என்று இயேசு கிறிஸ்து எங்கும் உபதேசம் பண்ணவில்லை. ஞானஸ்நானம் கொடுக்காமலேயே இயேசு கிறிஸ்து திரளான ஜனங்களுடைய பாவங்களை மன்னித்தார் இயேசு கிறிஸ்து தாமே யாருக்கும் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை. யோவான் 4:2 அவர் ஒரு வசனத்தில் விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான் என்று கூறியிருக்கிறார் (மாற்கு 16:16)

16 ஞானஸ்நானத்தினால் பாவமன்னிப்பு உண்டாகும் என்று கூறுவதற்கு ஒரு சிலர் மத் 3:6-8,11; மாற்கு 1:4-5; லூக்கா 3:3,8-16, அப் 2:38 மாற்கு 16:16 ஆகிய வசனங்களை மேற்கோளாகக் கூறுகிறார்கள் இந்த வசனங்கள் எதுவும் ஞானஸ்நானத்தினால் பாவமன்னிப்பு உண்டாகும் என்று கூறவில்லை பாவமன்னிப்பிற்காக அல்லது மனம் திரும்பியதற்காக ஞானஸ்நானம் பெறவேண்டும் என்னும் பொருளுடனே இந்த வசனங்கள் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (மத் 3:16) இந்த வசனங்களில் மனந்திரும்புதலும், விசுவாசமும் ஞானஸ்நானத்திற்கு முன்பாகக் கூறப்பட்டிருக்கிறது (மத் 28:19; அப் 2:38,41, அப் 8:12,37; அப் 10:44-48, அப் 18:8; அப் 19:4)

"கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்" - இதுதான் ஒருவனை இரட்சிக்கும். (அப் 2:21; ரோமர் 10:9-10, (யோவான் 9, லூக்கா 13:3 அதன்பின்பு, இரட்சிக்கப்பட்டிருக்கிறவர் ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமாக இருக்கிறார் பவுல் கூட இரட்சிக்கப்பட்டு, குணமாக்கப்பட்டு, பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றபின்பு, ஞானஸ்நானம் பெறுவதற்கு ஆயத்தமாக இருந்தார் (அப் 9:17-18)

22 அதிகாரம்

(4) தேவாலயத்தில் பவுலின் தரிசனம் - (அப 9:20-29; 26:19-20)

அப 22:17 பின்பு நான் எருசலேமுக்குத் திரும்பிவந்து தேவாலயத்திலே ஜெபம் பண்ணிக் கொண்டிருக்கையில் ஞான திருஷ்டியடைந்து, அவரைத் தரிசித்தேன்

அப 22:18 அவர் என்னை நோக்கி: நீ என்னைக் குறித்துச் சொல்லும் சாட்சியை இவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்; ஆதலால் நீ தாமதம் பண்ணாமல் சீக்கிரமாய் எருசலேமைவிட்டுப் புறப்பட்டுப் போ என்றார்

அப 22:19 அதற்கு நான்: ஆண்டவரே, உம்மிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்களை நான் காவலில் வைத்து ஜெபஆலயங்களிலே அடித்ததையும்,

அப 22:20 உம்முடைய சாட்சியாகிய ஸ்தேவானுடைய இரத்தம் சிந்தப்படுகிற போது, நானும் அருகே நின்று, அவனைக் கொலை செய்வதற்குச் சம்மதித்து, அவனைக் கொலை செய்தவர்களின் வஸ்திரங்களைக் காத்துக் கொண்டிருந்ததையும், இவர்கள் அறிந்திருக்கிறார்களே என்றேன்

அப 22:21 அதற்கு அவர்: நீ போ நான் உன்னைத் தூரமாய்ப் புறஜாதிகளிடத்திலே அனுப்புவேன் என்று சொன்னார் என்றான்

"நான் எருசலேமுக்குத் திரும்பிவந்தேன்" - (அப 9:26, கலா 1:18)

"ஞானதிருஷ்டி" (trance) - (அப 10:10)

"அவரைத் தரிசித்தேன்" - பவுல் கர்த்தரைக் கண்டார் (அப் 22:14,18; 1கொரி 9:1, 1கொரி 15:8 - 2கொரி 12:1-4)

"உம்மிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்களை நான் காவலில் வைத்து ஜெப ஆலயங்களிலே அடித்ததையும் — இவர்கள் அறிந்திருக்கிறார்களே" - (அப் 7:58, அப 8:1, அப 9:1-2 = அப் 22:19-20)

"நீ போ, நான் உன்னைத் தூரமாய்ப் புறஜாதிகளிடத்திலே அனுப்புவேன்" - இது பவுலின் விசேஷித்த ஊழிய அழைப்பாகும். பவுல் புறஜாதியாருக்கு அப்போஸ்தலராக இருந்தார். யூதருக்கும் பிரசங்கம் பண்ணினார். அதே வேளையில் புறஜாதியாருக்குத் தேவனுடைய வெளிப்பாட்டை எழுதிப் பிரசங்கிப்பது பவுலின் விசேஷித்த ஊழியமாக இருந்தது. இந்த வேளையிலிருந்து பவுல் யூதேயா, சமாரியா, சீரியா, பெனிக்கேயா, அரபியா, சிலிசியா, பிசீதியா, லிக்கவோனியா, பம்பிலியா, கலாத்தியா, பெர்கியா, மக்கெதோனியா, கிரேக்கு, ஆசியா, மத்தியதரைக்கடலிலுள்ள தீவுகள், ஆகியேன் கடலிலுள்ள தீவுகள், இத்தாலி, ஸ்பெயின் மற்றும் பல பகுதிகளுக்கும் பவுல் பிரயாணம் பண்ணுகிறார். பவுலைப்போன்று வேறு யாரும் பிரயாணம் பண்ணியதுமில்லை. காத்துருக்காக ஊழியம் செய்ததுமில்லை. சுவிசேஷ செய்தியைப் பிரசங்கம் பண்ணியதுமில்லை. பவுலின் நிருபங்களைத் தவிர மற்றவர்களின் நிருபங்கள் யூதருக்கே விசேஷமாக எழுதப்பட்டது. பல இடங்களில் கிறிஸ்தவ சபைகளை அதிக அளவில் ஸ்தாபித்தவர் அப்போஸ்தலர் பவுலே. இயேசு கிறிஸ்து சபையின் அஸ்திபாரம் என்றால் [illegible] சபையைக் கட்டுகிறவர் என்று கூறலாம். (1கொரி 3:10)

(5) ஜனக்கூட்டத்திலிருந்து பவுலைக் காப்பாற்றுகிறார்கள்

அப் 22:22 இந்த வார்த்தைவரைக்கும் அவனுக்குச் செவிகொடுத்தார்கள்; பின்பு: இப்படிப்பட்டவனை பூமியிலிருந்து அகற்ற வேண்டும், இவன் உயிரோடிருக்கிறது நியாயமல்லவென்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னார்கள்

அப 22:23 இவ்விதமாய் அவர்கள் கூக்குரலிட்டுத் தங்கள் மேல் வஸ்திரங்களை எறிந்துவிட்டு, ஆகாயத்திலே புழுதியைத் தூற்றிக் கொண்டிருக்கையில்,

22 அதிகாரம்

அப 22:24 சேனாபதி அவனைக் கோட்டைக்குள்ளே கொண்டுவரும்படி கட்டளையிட்டு, அவர்கள் அவனுக்கு விரோதமாய் இப்படிக் கூக்குரலிட்ட முகாந்தரத்தை அறியும் படிக்கு அவனைச் சவுக்கால் அடித்து விசாரிக்கச் சொன்னான்.

"இப்படிப்பட்டவனை பூமியிலிருந்து அகற்ற வேண்டும் - அகற்ற வேண்டும் என்பதற்குக் கொல்லவேண்டும் என்று பொருள் (அப 21:36) இஸ்ரவேல ஜனத்தாரை நூதன வழிபாட்டிற்கு யாராவது வழிநடத்தினால் அவன் கொல்லப்பட வேண்டும் (உபா 13:12-18)

அகற்ற வேண்டும் (Away) - αἴρω - airoo - 142

வினைச்சொல் - அகற்றவேண்டும் கொல்ல வேண்டும்.

"இவன் உயிரோடிருக்கிறது நியாயமல்ல" பவுலின் பிரசங்கம் செய்தி யூதருக்குக் குற்றமாகத் தெரிகிறது. பவுல் மூன்று காரியங்களைப் பிரசங்கம் பண்ணினார். அவற்றை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அவையாவன:

1. புறஜாதியாரும் யூதரும் சமமானவர்களே. இதை யூதர்கள் சகித்துக் கொள்ள மாட்டார்கள்.

2. தேவன் யூதரை ஒதுக்கிவைத்து விட்டு, புறஜாதியாரைத் தம்முடைய விசேஷித்த ஜனமாக அழைத்திருக்கிறார். இதையும் யூதர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தக் குற்றச்சாட்டிற்காகவே யூதர்கள் பவுலை விசாரிக்கிறார்கள் (மத் 21:33-46; ரோமர் 11)

3. சிலுவையில் அறையப்பட்ட இயேசு யூதருக்கு இடறலாய் இருக்கிறார். இதையும் யூதர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. (1கொரி 1:23)

"அவர்கள் கூக்குரலிட்டுத் தங்கள் மேல் வஸ்திரங்களை எறிந்துவிட்டு, ஆகாயத்திலே புழுதியைத் தூற்றிக் கொண்டிருந்தார்கள்" - பவுலின்மீது கல்லெறிந்து அவனைக் கொல்வதற்கு யூதர்கள் ஆயத்தமாக இருக்கிறார்கள். ஒருவன்மீது தங்களுடைய கோபத்தையும் விரோதத்தையும் காண்பிக்கும் விதம் இதுவே. (2சாமு 16:13)

"அவர்கள் அவனுக்கு விரோதமாய் இப்படிக் கூக்குரலிட்ட முகாந்தரத்தை அறியும்படிக்கு அவனைச் சவுக்கால் அடித்து விசாரிக்கச் சொன்னான்" - நூற்றுக்கதிபதியால் பவுலைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்த வழக்கின் முகாந்தரத்தையும் அவனால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. யூதர்களின் கோபம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. பவுல் செய்த குற்றத்தை நூற்றுக்கதிபதி தெரிந்து கொள்ள விரும்புகிறான். இதற்காகப் பவுலைச் சவுக்கால் அடித்து விசாரிக்கச் சொன்னான். ஒருவனைச் சவுக்கால் அடிக்கும்போது அவன் வலிதாங்காமல் தன்னுடைய குற்றத்தையெல்லாம் அறிக்கையிடுவான். இந்த முறைப்படி நூற்றுக்கதிபதி பவுலை விசாரிக்குமாறு கூறுகிறான்.

(6) பவுல் ஒரு ரோம பிரஜை

அப 22:25 அந்தப்படி அவர்கள் அவனை வாரினால் அழுந்தக் கட்டும்போது, பவுல் சமீபமாய் நின்ற நூற்றுக்கு அதிபதியை நோக்கி: ரோமனும் நியாயம் விசாரிக்கப்படாதவனுமாயிருக்கிற மனுஷனை அடிக்கிறது உங்களுக்கு நியாயமா என்றான்.

அப 22:26 நூற்றுக்கு அதிபதி அதைக் கேட்டு, சேனாபதியினிடத்திற்குப் போய், அதை அறிவித்து: நீர் செய்யப் போகிறதைக் குறித்து எச்சரிக்கையாயிரும், இந்த மனுஷன் ரோமன் என்றான்.

அப் 22:27 அப்பொழுது சேனாபதி பவுலினிடத்தில் வந்து: நீ ரோமனா? எனக்குச் சொல் என்றான். அதற்கு அவன்: நான் ரோமன் தான் என்றான்.

22 அதிகாரம்

அப் 22:28 சேனாபதி பிரதியுத்தரமாக, நான் மிகுந்த திரவியத்தினாலே இந்தச் சிலாக்கியத்தைச் சம்பாதித்தேன் என்றான் அதற்குப் பவுல், நானோ இந்தச் சிலாக்கியத்திற்குரியவனாகப் பிறந்தேன் என்றான்

அப் 22:29 அவனை அடித்து விசாரிக்கும் படி எத்தனமாயிருந்தவர்கள் உடனே அவனை விட்டுவிட்டார்கள் சேனாபதி அவன் ரோமனென்று அறிந்து அவனைக் கட்டுவித்ததற்காகப் பயந்தான்

அப் 22:30 பவுலின்மேல் யூதராலே ஏற்படுத்தப்பட்ட குற்றம் இன்னதென்று நிச்சயமாய் அறிய விரும்பி, அவன் மறுநாளிலே அவனைக் கட்டவிழ்த்து, பிரதான ஆசாரியரையும் ஆலோசனைச் சங்கத்தார் அனைவரையும் கூடிவரும்படி கட்டளையிட்டு, அவனைக் கூட்டிக்கொண்டுபோய், அவர்களுக்கு முன்பாக நிறுத்தினான்

சிலாக்கியம் (freedom)
πολιτεία politeia 4174

பெண்பால் பெயர்ச்சொல் - காணியாட்சிக்குரியவர், பிரஜை (citizenship - இந்த வசனத்திலும் எபே 2:12 ஆவது வசனத்திலும் மட்டுமே இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது இந்த வசனத்தின் மூலமாக ரோமப்பிரஜை உரிமையைக் கிரயம் செலுத்தி வாங்க முடியும் என்று தெரியவருகிறது

"நானோ இந்தச் சிலாக்கியத்திற்கு உரியவனாகப் பிறந்தேன்" - தர்சு (Tarsus) ஒரு முக்கியமான பட்டணம் இந்த ஊரிலுள்ளோர் எல்லோருமே ரோமப்பிரஜைகள் ஜூலியஸ் சீசர் (Julius Caesar) தர்சு பட்டணத்து ஜனங்களுக்கு இந்த சிலாக்கியத்தை விசேஷமாகக் கொடுத்திருந்தார் பவுல் தர்சு பட்டணத்தில் பிறந்ததினாலோ அல்லது பவுலின் தந்தை ரோமப்பேரரசில் முக்கியமான பணி ஆற்றியதினாலோ பவுலுக்கு ரோமப்பிரஜா உரிமை கொடுக்கப்பட்டிருக்கலாம் ரோமப்பேரரசின் பிரஜையைச் சரியானபடி விசாரியாமல், அவனைக் கட்டவோ அடிக்கவோ கூடாது. இதை மீறுவது மிகப்பெரிய குற்றம். இந்தக் குற்றத்திற்காக மரண தண்டனை கூட கொடுக்கப்படலாம். குற்றம்சுமத்தப்படும்போது தாங்கள் ரோமப்பேரரசின் குடிமக்கள் என்று கூறி தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ள வாய்ப்புள்ளது. சில சமயங்களில் இதற்காக விடுதலையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. (அப 22:29; அப 16:36-40)

23 அதிகாரம்

9. ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாக பவுலின் விவாதம்

(1) பவுலின் சாட்சி - (கலா 1:13, பிலி 3:5; 1தீமோ 1:13)

அப 23:1 பவுல் ஆலோசனைச் சங்கத்தாரை உற்றுப்பார்த்து, சகோதரரே இந்நாள் வரைக்கும் எல்லா விஷயங்களிலும் நான் நல்மனச் சாட்சியோடே தேவனுக்குமுன்பாக நடந்துவந்தேன் என்று சொன்னான்

அப 23:2 அப்பொழுது பிரதான ஆசாரியனாகிய அனனியா அவனுக்குச் சமீபமாய நின்றவர்களை நோக்கி, இவன் வாயில அடியுங்கள் என்று கட்டளையிட்டான்

"இந்நாள் வரைக்கும் எல்லா விஷயங்களிலும் நான் நல்மனச்சாட்சியோடே தேவனுக்குமுன்பாக நடந்துவந்தேன்" - இந்த வாக்கியத்தில் "நடந்து வந்தேன்" என்பதற்கான கிரேக்க வார்த்தை "பொலிட்டேயோமாய" (politeuomai) என்பதாகும். இதற்கு நல்ல பிரஜையாக ஜீவிப்பது, எல்லா சட்டதிட்டங்களுக்கும் கீழ்ப்படிந்து நற்குடிமகனாக இருப்பது என்று பொருள். இந்த வார்த்தை இந்த வசனத்திலும், பிலி 1:27 ஆவது வசனத்திலும் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. தான் யூதனாக இருந்தபோதும், கிறிஸ்தவராக இருக்கிற போதும் பவுல் உண்மையுள்ளவராகவும் மாய்மாலம் இல்லாதவராகவும் ஜீவித்து வருகிறார். இப்போது தான் ஒரு உண்மையான கிறிஸ்தவர் என்பதில் தெளிந்த மனச்சாட்சி உடையவராக இருக்கிறார். மனச்சாட்சி எப்போதுமே நம்மைச் சரியான வழியில் நடத்தும் என்பதற்கு உத்திரவாதம் இல்லை. ஏனெனில் தன்னுடைய மனச்சாட்சியின் பிரகாரமாகவே பவுல் யூதராக இருந்தபோது இயேசு கிறிஸ்துவின் பரிசுத்தவான்களைக் கொன்றுபோட்டார். மனசாட்சி மாறக்கூடியது (1தீமோ 4:1-2). நமது மனச்சாட்சியில் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம் வேரூன்றி வரும்போது அது நல்மனச்சாட்சியாக இருக்கும்

நடந்துவா (lived) - πολιτεύομαι - politeuomai - 4176

வினைச்சொல் - நடந்துவா, நடந்துகொள் (to live as a citizen, be a good citizen and obey all the laws)

(2) பிரதான ஆசாரியனை பவுல் கடிந்து கொள்கிறான்

அப் 23:3 அப்பொழுது பவுல் அவனைப் பார்த்து, வெள்ளையடிக்கப்பட்ட சுவரே, தேவன் உம்மை அடிப்பார்; நியாயப்பிரமாணத்தின்படி என்னை நியாயம் விசாரிக்கிறவராய் உட்கார்ந்திருக்கிற நீர் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாய் என்னை அடிக்கச் சொல்லலாமா என்றான்

அப 23:4 சமீபத்திலே நின்றவர்கள் தேவனுடைய பிரதான ஆசாரியரை வைகிறாயா என்றார்கள்

அப 23:5 அதற்குப் பவுல், சகோதரரே இவர் பிரதான ஆசாரியரென்று எனக்குத் தெரியாது. உன் ஜனத்தின் அதிபதியைத் தீது சொல்லாயாக என்று எழுதியிருக்கிறதே என்றான்

தீர்க்கதரிசன எண் - 18

"தேவன் உம்மை அடிப்பார்" (அப் 23:3) இந்தத் தீர்க்கதரிசனம் ஐந்து வருஷங்களுக்குப் பின்பு நிறைவேறிற்று. அனனியாவின் மகன் மூலமாக அவனுக்குப் பிரச்சனை வந்தது. தன் மகனுக்குத் தப்பி அனனியா ஓடி ஒழிந்திருக்கும் போது அவன் மகனே அவனைக் கொன்று போட்டான்

வெள்ளையடி (whited) - κονιάω koniaoo 2867

வினைச்சொல் - வெள்ளையடி (whitewashed) (மத் 23:27)

23 அதிகாரம்

"அதற்குப் பவுல் ... என்றான்" - பவுல் தனது முதலாவது விவாதத்தில் (அப 22:1-21) தான் ஒரு யூதன் என்றும் யூதமார்க்கத்து முறைமையின் பிரகாரம் கல்வி கற்றவன் என்றும் கூறினான். யூதமார்க்கத்தில் பவுல் வைராக்கியமாக இருந்து, ஏராளமான கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினான். ஆனால் அவனுடைய யூதஜனங்கள் பவுலை ஏற்றுக் கொள்ளவில்லை. பவுல் கல்வி கற்றவன். யூதமார்க்கத்து முறைமைகளை நன்கு அறிந்தவன். ஆத்துமாவின் இரட்சிப்புக்கு மோசேயின் நியாயப்பிரமாணமும் விருத்தசேதனமும் பயனற்றவை என்பதையும் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷமே முக்கியமானது என்பதையும் பவுலின் மூலமாக யூதருக்குத் தேவன் விளங்கப்பண்ணினார்.

பவுல் தனது இரண்டாவது விவாதத்தில் யூதரிடையே காணப்படும் மார்க்கப் பிரிவினையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்துகிறார். யூதர்களில் பரிசேயர் என்றும் சதுசேயர் என்றும் இரண்டு பிரிவினர் உள்ளனர். பவுல் ஒரு பரிசேயன். பரிசேயர்கள் மரித்தோரின் உயிர்த்தெழுதலை நம்புகிறவர்கள். தான் மரித்தோரின் உயிர்த்தெழுதலை நம்புவதினாலேயே தன்னை இவர்கள் விசாரிக்கிறார்கள் என்று பரிசேயர் மத்தியிலே பவுல் கூறுகிறான். இதனால் யூதர்கள் பரிசேயர் என்றும் சதுசேயர் என்றும் இரண்டு பிரிவாகப் பிரிகிறார்கள். பரிசேயர்கள் பவுலுக்கு ஆதரவாகப் பேசுகிறார்கள் (அப 23:6-10).

"சகோதரரே இவன் பிரதான ஆசாரியனென்று எனக்குத் தெரியாது" - அனனியா பிரதான ஆசாரியன் என்பது பவுலுக்குத் தெரியவில்லை. பிரதான ஆசாரியனின் பதவியை ரோமப்பேரரசரே நியமனம் செய்வார்கள். பவுல் ஜெருசலேமில் பணிபுரிந்த போது யோனத்தான் (Jonathan) என்பவன் பிரதான ஆசாரியனாக இருந்தான். அவனை பெஸ்டஸ் (Festus) என்பவன் கொன்று போட்டான். இதனால் பிரதான ஆசாரியருடைய பதவி காலியாக இருந்தது. அனனியா இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பிரதான ஆசாரியனாக நியமிக்கப்பட்டிருக்கிறான்.

"உன் ஜனத்தின் அதிபதியைத் தீது சொல்வாயாக" இவன்தான் பிரதான ஆசாரியன் என்பது பவுலுக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் அவனுக்குரிய மரியாதையைப் பவுல் கொடுத்திருப்பான் (யாத் 22:28). அனனியாவை சாகான் (sagan) என்று நினைத்தான். சாகான் என்பதற்குத் துணைப் பிரதான ஆசாரியன் என்று பொருள்.

(3) பவுலின் புதிய யுக்தி - பரிசேயருக்கு விண்ணப்பம்

> அப 23:6 பின்பு அவர்களில், சதுசேயர் ஒரு பங்கும் பரிசேயர் ஒரு பங்குமாயிருக்கிறார்களென்று பவுல் அறிந்து: சகோதரரே நான் பரிசேயனும் பரிசேயனுடைய மகனுமாயிருக்கிறேன். மரித்தோருடைய உயிர்த்தெழுதலைப் பற்றியும் நம்பிக்கையைக் குறித்தும் நான் நியாயம் விசாரிக்கப்படுகிறேன் என்று ஆலோசனைச் சங்கத்திலே சத்தமிட்டுச் சொன்னான்.

"பின்பு அவர்களில் சதுசேயர் ஒரு பங்கும் பரிசேயர் ஒரு பங்குமாயிருக்கிறார்களென்று பவுல் அறிந்து: சகோதரரே, நான் பரிசேயனும் பரிசேயனுடைய மகனுமாயிருக்கிறேன்" என்றான். தனக்கு நீதி வழங்கப்படமாட்டாது என்பது பவுலுக்கு நன்றாகத் தெரிகிறது. ஆகையினால் அங்குக் கூடியிருப்போர்களை இரண்டு பிரிவினராகப் பிரித்துவிட்டால், தனக்குச் சாதகமாக இருக்குமென்று பவுல் நினைக்கிறான். சதுசேயர்கள் யூதமார்க்கத்தின் பிரகாரமாகச் சரியாக ஜீவிப்பதில்லை என்று பரிசேயர்களுக்கு அவர்கள்மீது குற்றச்சாட்டு உள்ளது. பவுல் பரிசேயன் என்று தெரிந்ததும் பரிசேயர் எல்லோருமே பவுல் பக்கமாகச் சாய்ந்துவிடுகிறார்கள். பரிசேயருக்கும் சதுசேயருக்கும் வாக்குவாதமுண்டாயிற்று. கூட்டம் இரண்டாகப் பிரிந்தது.

"மரித்தோருடைய உயிர்த்தெழுதல்" கிறிஸ்தவ மார்க்கத்தின் அஸ்திபார உபதேசமே இயேசு கிறிஸ்துவும் அவர் மரித்து மூன்றாம் நாளில் தமது சரீரத்தில் உயிர்த்தெழுந்ததும் தான். இதை விசுவாசிக்கிறவர்கள் இரட்சிக்கப்படுகிறார்கள். விசுவாசியாதவர்கள் அழிந்து போகிறார்கள் (ரோமர் 10:9,10; 1கொரி 15:1-23).

23 அதிகாரம்

(4 பவுலின் யுக்தி வெற்றி பெறுகிறது - பரிசேயருக்கும், சதுசேயருக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று

அப 23:7 அவன் இப்படிச் சொன்னபோது, பரிசேயருக்கும் சதுசேயருக்கும் வாக்குவாதமுண்டாயிற்று, கூட்டம் இரண்டாகப் பிரிந்தது.

அப 23:8 என்னத்தினாலென்றால் சதுசேயர் உயிர்த்தெழுதல் இல்லையென்றும், தேவதூதனும் ஆவியும் இல்லையென்றும் சொல்லுகிறார்கள், பரிசேயரோ அவ்விரண்டும் உண்டென்று ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

"சதுசேயர் உயிர்த்தெழுதல் இல்லையென்றும், தேவதூதனும் ஆவியும் இல்லையென்றும் சொல்லுகிறார்கள், பரிசேயரோ அவ்விரண்டும் உண்டென்று ஒப்புக்கொள்ளுகிறார்கள்" - யூதமார்க்கத்திலுள்ள சதுசேயர், பரிசேயர் ஆகியோரின் கொள்கைகளை இந்த வசனம் மொத்தமாக விளக்குகிறது.

10. பவுலை மறுபடியும் மீட்கிறார்கள் - (22:22)

அப 23:9 ஆகையால் மிகுந்த கூக்குரல் உண்டாயிற்று. பரிசேய சமயத்தாரான வேதபாரகரில் சிலர் எழுந்து, இந்த மனுஷனிடத்தில் ஒரு பொல்லாங்கையும் காணோம். ஒரு ஆவி அல்லது ஒரு தேவதூதன் இவனுடனே பேசினதுண்டானால் நாம் தேவனுடனே போர்செய்வது தகாது என்று வாதாடினார்கள்.

அப 23:10 மிகுந்த கலகம் உண்டானபோது, பவுல் அவர்களால் பீறுண்டு போவானென்று சேனாபதி பயந்து, போர்ச்சேவகர் போய், அவனை அவர்கள் நடுவிலிருந்து இழுத்துக் கோட்டைக்குக் கொண்டுபோகும்படி கட்டளையிட்டான்.

"இந்த மனுஷனிடத்தில் ஒரு பொல்லாங்கையும் காணோம். ஒரு ஆவி அல்லது ஒரு தேவதூதன் இவனுடனே பேசினதுண்டானால் நாம் தேவனுடனே போர்செய்வது தகாது" - பரிசேயர்கள் இப்போது பவுலின் பக்கமாகப் பேசுகிறார்கள். தேவனிடமிருந்து பவுலுக்கு ஒரு செய்தி வந்திருக்குமென்றால் அதைப் பரிசேயர்கள் ஏற்றுக் கொள்ள ஆயத்தமாக இருக்கிறார்கள்.

"சேனாபதி" (chief captain) - (யோவான் 18:12)

11. கர்த்தர் பவுலிடம் பேசுகிறார்

அப 23:11 அன்று இராத்திரியிலே கர்த்தர் பவுலின் அருகே நின்று, பவுலே, திடன்கொள், நீ என்னைக்குறித்து எருசலேமிலே சாட்சிகொடுத்ததுபோல ரோமாவிலும் சாட்சிகொடுக்கவேண்டும் என்றார்.

"அன்று இராத்திரியிலே கர்த்தர் பவுலின் அருகே நின்றார்" - இயேசு கிறிஸ்து பவுலுக்கு மற்றும் ஒருமுறை தரிசனம் தருகிறார் (அப 22:8; 14:18; 1கொரி 9:1; 1கொரி 15:8; 2கொரி 12:1-4)

திடன்கொள் (Be of good cheer) - θαρσέω - tharseoo (2293)

வினைச்சொல் திடன்கொள் (take courage). (மத் 9:2,22; மத் 14:27; மாற்கு 6:50; மாற்கு 10:49; லூக்கா 8:48; யோவான் 16:33; அப 23:11)

தீர்க்கதரிசன எண் - 14

"நீ என்னைக்குறித்து எருசலேமிலே சாட்சி கொடுத்ததுபோல ரோமாவிலும் சாட்சிகொடுக்க வேண்டும்" (அப 23:11) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேற்றுது (அப 27, 28)

23 அதிகாரம்

12. பவுலைக் கொல்வதற்கு சதியாலோசனை

அப் 23:12 விடியற்காலமானபோது யூதரில் சிலர் ஒருமித்து, தாங்கள் பவுலைக் கொலை செய்யுமளவும் புசிப்பதுமில்லை குடிப்பதுமில்லை என்று சபதம் பண்ணிக் கொண்டார்கள்

அப் 23:13 இப்படிக் கட்டுப்பாடு பண்ணிக் கொண்டவர்கள் நாற்பது பேருக்கு அதிகமாயிருந்தார்கள்

அப் 23:14 அவர்கள் பிரதான ஆசாரியர்களிடத்திலும் மூப்பர்களிடத்திலும் போய்: நாங்கள் பவுலைக் கொலைசெய்யுமளவும் ஒன்றும் புசிப்பதில்லையென்று உறுதியான சபதம் பண்ணிக் கொண்டோம்.

அப் 23:15 ஆனபடியினால் நீங்கள் ஆலோசனைச் சங்கத்தாரோடே கூடப்போய், அவனுடைய காரியத்தை அதிக திட்டமாய் விசாரிக்க மனதுள்ளவர்கள் போலச் சேனாபதிக்குக் காண்பித்து, அவன் நாளைக்கு அவனை உங்களிடத்தில் கூட்டிக்கொண்டு வரும்படி அவரிடத்தில் கேட்பீர்களானால், அவன் கிட்ட வருகிறதற்குள்ளே நாங்கள் அவனைக் கொலைசெய்ய ஆயத்தமாயிருப்போம் என்றார்கள்

"தாங்கள் பவுலைக் கொலை செய்யுமளவும் புசிப்பதுமில்லை குடிப்பதுமில்லையென்று சபதம் பண்ணிக்கொண்டார்கள்" - தங்களுடைய சபதத்தை நிறைவேற்ற வேண்டும் அல்லது மடிய வேண்டும் என்பது இதன் பொருள்

சபதம் -(curse) · ἀνάθημα · anatheema 334

பலவேறுபாடு அல்லாத பெயர்ச்சொல் - சாபக்கேடு (அப் 23:14, ரோமர் 9:3; 1கொரி 12:3 1கொரி 16:22; கலா 1:8-9

"ஆனபடியினால் நீங்கள் ஆலோசனைச் சங்கத்தாரோடே கூடப்போய் ... அவன் கிட்ட வருகிறதற்குள்ளே நாங்கள் அவனைக் கொலைசெய்ய ஆயத்தமாயிருப்போம்" - இந்த சதியாலோசனை நிறைவேறவில்லை (அப் 23:16-30)

13. சதியாலோசனை கண்டுபிடிக்கப் படுகிறது

அப் 23:16 இந்தச் சர்ப்பனையைப் பவுலினுடைய சகோதரியின் குமாரன் கேள்விப்பட்டு, கோட்டைக்குள்ளே போய், பவுலுக்கு அறிவித்தான்

அப் 23:17 அப்பொழுது பவுல் நூற்றுக்கு அதிபதிகளில் ஒருவனை அழைத்து: இந்த வாலிபனைச் சேனாபதியினிடத்திற்குக் கூட்டிக் கொண்டுபோம், அவரிடத்தில் இவன் அறிவிக்கவேண்டிய ஒரு காரியம் உண்டு என்றான்

அப் 23:18 அந்தப்படியே, அவன் இவனைச் சேனாபதியினிடத்திற்குக் கூட்டிக் கொண்டுபோய்: காவலில் வைக்கப்பட்டிருக்கிற பவுல் என்னை அழைத்து, உமக்கொரு காரியத்தைச் சொல்ல வேண்டுமென்றிருக்கிற இந்த வாலிபனை உம்மிடத்திற்குக் கொண்டு போகும்படி கேட்டுக்கொண்டான் என்றான்

அப் 23:19 அப்பொழுது சேனாபதி அவனுடைய கையைப் பிடித்துத் தனியே அழைத்துக் கொண்டுபோய்: நீ என்னிடத்தில் அறிவிக்கவேண்டிய காரியம் என்னவென்று கேட்டான்

அப் 23:20 அதற்கு அவன்: யூதர்கள் பவுலின் காரியத்தை அதிக திட்டமாய் விசாரிக்க மனதுள்ளவர்கள்போல, நீர் நாளைக்கு அவனை ஆலோசனைச் சங்கத்தாரிடத்தில் கொண்டுவரும்படி உம்மை வேண்டிக் கொள்ள உடன்பட்டிருக்கிறார்கள்

23 அதிகாரம்

அப் 23:21 நீர் அவர்களுக்குச் சம்மதிக்க வேண்டாம்; அவர்களில் நாற்பதுபேருக்கு அதிகமானவர்கள் அவனைக் கொலை செய்யுமளவும் தாங்கள் புசிப்பதுமில்லை குடிப்பதுமில்லை என்று சபதம் பண்ணிக் கொண்டு, அவனுக்குப் பதிவிருந்து, உம்முடைய உத்தரவுக்காக இப்பொழுது காத்துக் கொண்டு ஆயத்தமாயிருக்கிறார்கள் என்றான்

அப் 23:22 அப்பொழுது சேனாபதி: நீ இவைகளை எனக்கு அறிவித்ததாக ஒருவருக்குஞ் சொல்லாதே என்று கட்டளையிட்டு, வாலிபனை அனுப்பிவிட்டான்

"பவுலினுடைய சகோதரியின் குமாரன்" - ரோமர் 16:7,11,21 ஆகிய வசனங்களைத் தவிர பவுலின் குடும்பத்தைப் பற்றி நாம் தெரிந்திருக்கும் காரியம் இது மட்டுமே.

சர்ப்பனை (lying in wait) - ἐνέδρα - enedra - 1747

பெண்பால் பெயர்ச்சொல் - சர்ப்பனை (அப் 23:16, 25:3

"கோட்டைக்குள்ளே போய், பவுலுக்கு அறிவித்தான்" இந்த வாலிபன் ஒருவேளை அவர்கள் சதியாலோசனை பண்ணும்போது அந்த வழியாக எதேச்சையாகப் போயிருந்திருக்கலாம் ஆகையினால் கோட்டைக்குள்ளே போய் அவன் பவுலுக்கு இதை உடனடியாக அறிவிக்கிறான்

"பவுல் நூற்றுக்கு அதிபதிகளில் ஒருவனை அழைத்தான்" - ரோமாபுரிக்குத் தான் போகவேண்டும் என்பது பவுலுக்கு ஏற்கெனவே தெரியும் அப் 23:11 ஆகையினால் விரோதிகளின் கைகளில் மடிந்து போகாதவாறு தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்குப் பவுல் தீர்மானம் பண்ணுகிறான்

"காவலில் வைக்கப்பட்டிருக்கிற பவுல்" Paul the prisoner - பவுல் இந்தப் பட்டத்தைத் தனக்குக் கிடைத்த சிலாக்கியமாகக் கருதினான் (எபே 3:1 எபே 4:1, 2தீமோ 1:8, பிலே 1:9)

"சேனாபதி அவனுடைய கையைப் பிடித்துத் தனியே அழைத்துக் கொண்டுபோனான்" - பவுல் கமாலியேலினுடைய பாதபடியில் கல்வி கற்றபோது இந்தச் சேனாபதியும் பவுலோடு கல்வி கற்றவன் என்று ஒருசிலர் கூறுகிறார்கள் இந்தச் சேனாபதி வயதில் சிறியவன். ஆகையினால், பவுலை அவனுடைய கையைப் பிடித்து, தனியே அழைத்துக் கொண்டு போனான்

14. பவுலை செசரியா பட்டணத்திலுள்ள தேசாதிபதியாகிய பேலிக்ஸினிடத்திற்கு அனுப்புகிறார்கள்

அப் 23:23 பின்பு அவன் நூற்றுக்கு அதிபதிகளில் இரண்டுபேரை அழைத்து, செசரியா பட்டணத்திற்குப் போகும்படி இருநூறு காலாட்களையும் எழுபது குதிரை வீரரையும் இருநூறு ஈட்டிக் காரரையும், இராத்திரியில் மூன்றாம்மணி வேளையிலே ஆயத்தம் பண்ணுங்களென்றும்,

அப் 23:24 பவுலை ஏற்றி, தேசாதிபதியாகிய பேலிக்ஸினிடத்திற்குப் பத்திரமாய்க் கொண்டு போகும்படிக்குக் குதிரைகளை ஆயத்தப் படுத்துங்களென்றும் சொன்னதுமன்றி,

"இருநூறு காலாட்களையும் எழுபது குதிரை வீரரையும் இருநூறு ஈட்டிக்காரரையும்" பவுலைச் செசரியாவிற்கு அனுப்ப வேண்டுமென்று சேனாபதி முடிவு பண்ணுகிறான் தேசாதிபதியாகிய பேலிக்ஸினிடத்திற்குப் பத்திரமாய்க் கொண்டுபோகும்படிக்குப் பவுலுக்குப் பாதுகாப்பாக 472 பேரை சேனாபதி அனுப்புகிறான்

"இராத்திரியில் மூன்றாம் மணி வேளையிலே ஆயத்தம் பண்ணுங்கள்" இராத்திரி மூன்றாம்மணி வேளை என்பது இரவு 9 மணி ஆகும். கோட்டையின் கதவு காலை 6 மணிக்குத்தான் திறக்கப்படும். யூதர்கள் பவுலைப் பிடிக்க வேண்டுமென்றால் காலை 6 மணிக்குப் பின்புதான் அவர்கள் கோட்டையை விட்டு வெளியேற முடியும். இவ்வாறு சேனாபதி தந்திரமாகத் திட்டமிட்டு, பவுலை இரவுவேளையில் அனுப்பிவிடுகிறான்

23 அதிகாரம்

"தேசாதிபதியாகிய பேலிக்ஸ்" (Felix the governor) - கிளாடியஸ் (Claudius) இராயனாக இருந்தபோது, பேலிக்ஸ் தேசாதிபதியாக இருக்கிறான். இராயனுடைய சிநேகிதன். இவன் ஒரு துன்மார்க்கன். இவனுக்கு மூன்று மனைவிகள் இருந்ததாகவும், ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு ராஜாவின் குமாரத்தி என்று வரலாறு கூறுகிறது. கிளாடியஸ் இராயன் பேலிக்ஸை கிபி. 52 ஆம் ஆண்டு யூதாவின் தேசாதிபதியாக நியமிக்கிறான்.

15. பேலிக்ஸிற்கு நிருபம்

அப 23:25 ஒரு நிருபத்தையும் எழுதினான். அதின் விவரமாவது:

அப 23:26 கனம்பொருந்திய தேசாதிபதியாகிய பேலிக்ஸுக்குக் கிலவுதியுலீசியா வாழ்த்துதல் சொல்லி அறிவிக்கிறது என்னவென்றால்:

அப 23:27 இந்த மனுஷனை யூதர் பிடித்துக் கொலைசெய்யப்போகிற சமயத்தில், நான் போர்ச்சேவகரோடே கூடப்போய், இவன் ரோமனென்று அறிந்து, இவனை விடுவித்தேன்.

அப 23:28 அவர்கள் இவன்மேல் சாட்டின குற்றத்தை நான் அறியவேண்டுமென்று இவனை அவர்கள் ஆலோசனைச் சங்கத்துக்குமுன் கொண்டுபோனேன்.

அப 23:29 இவன் அவர்களுடைய வேதத்திற்கடுத்த விஷயங்களைக் குறித்துக் குற்றஞ் சாட்டப்பட்டவனென்று விளங்கின தேயல்லாமல் மரணத்துக்காவது விலங்குக்காவது ஏற்ற குற்றம் யாதொன்றும் இவனிடத்தில் இல்லையென்று கண்டறிந்தேன்.

அப 23:30 யூதர்கள் இவனுக்கு விரோதமாய்ச் சர்ப்பனையான யோசனை செய்கிறார்களென்று எனக்குத் தெரியவந்தபோது, உடனே இவனை உம்மிடத்திற்கு அனுப்பினேன்; குற்றஞ் சாட்டுகிறவர்களும் இவனுக்கு விரோதமாய்ச் சொல்லுகிற காரியங்களை உமக்கு முன்பாக வந்து சொல்லும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டேன். சுகமாயிருப்பீராக, என்றெழுதினான்.

"ஒரு நிருபத்தையும் எழுதினான்" - சேனாபதி எழுதிய அந்த நிருபத்தை லூக்கா அப்படியே இந்த அதிகாரத்தில் தருகிறார். அக்காலத்தில் மேல் அதிகாரிகளுக்கு எவ்வாறு நிருபம் எழுதுவது என்பதை இந்த நிருபத்தை வாசித்து நாம் தெரிந்து கொள்ளலாம்.

"கிலவுதியுலீசியா" (Claudius Lysias) - எருசலேமில் சட்டம் ஒழுங்கு பிரச்சனைக்கு லீசியாவே பொறுப்பானவன். கைதிகளிடம் கரிசனையுடன் நடந்து கொள்பவன். பவுல்மீது பேலிக்ஸைவிடவும் (அப 24:27) பெஸ்துவை விடவும் (அப 25:9,14; அப் 26:24) அதிக மரியாதை வைத்திருந்தான்.

"கனம்பொருந்திய" (most excellent) - அக்காலத்தில் ஒரு அதிகாரிக்கு நிருபம் எழுதும்போது இதுபோன்று மரியாதை கொடுத்து எழுதுவது வழக்கம். அப 23:26; 24:3; அப 26:25; லூக்கா 1:3

தேசாதிபதி (governor) - ἡγεμών heegemoon - 22:32

ஆண்பால் பெயர்ச்சொல் - பிரபு, அதிபதி, தேசாதிபதி, அதிகாரி, உயர்தலைவருக்குப் பொதுவாகக் கொடுக்கப்படும் பெயர்

"இவன் ரோமனென்று அறிந்தேன்" - பவுலை அடிப்பதற்குக் கட்டளையிடும் வரையிலும் பவுல் ஒரு ரோமன் என்பது கிலவுதியுலீசியாவிற்குத் தெரியாது. (அப் 22:27)

"இவனை அவர்கள் ஆலோசனைச் சங்கத்துக்குமுன் கொண்டு போனேன்" - அப 22:30-23:10 ஆகிய வசனங்களைக் குறிக்கிறது.

23 அதிகாரம்

"மரணத்துக்காவது விலங்குக்காவது ஏற்ற குற்றம் யாதொன்றும் இவனிடத்தில் இல்லை" - இந்த அறிவிப்பு பவுலுக்குச் சாதகமாக இருக்கிறது. யூதர்கள பவுலின்மீது மிகுந்த கோபத்தோடு இருக்கிறார்கள் இப்படிப்பட்ட சூழ்நிலையில பவுலுக்கு மறுபடி தயவு தேவைப்படுகிறது.

"உடனே இவனை உம்மிடத்திற்கு அனுப்பினேன்" - யூதர்கள பவுலுக்கு விரோதமாய்ச் சர்ப்பனையான யோசனை செய்கிறார்கள் பேலிக்ஸ் மிகவும் முக்கியமானவர் ஆகையினால பவுலை அவர் விசாரிப்பது நலமாக இருக்குமென்று கிலவுதியுலீசியா நினைக்கிறான்

குற்றம் சாட்டினவர் (accusers) - κατήγορος - kateegoros - 2725

ஆண்பால் பெயர்சொல் - குற்றம் சாட்டினவர் (அப 23:30, 23:35, அப 24:8, அப 25:16,18, யோவான 8:10 வெளி 12:10)

சுகமாயிருப்பீராக (Farewell) - 'ρώννυμι - rhyoonnymi - 4517

வினைசொல - சுகமாயிருப்பீராக (be in good health)

16. பவுலையும் நிருபத்தையும் பேலிக்ஸிடம் ஒப்புக் கொடுக்கிறார்கள்

அப 23:31 போர்ச்சேவகர் தங்களுக்குக் கட்டளையிட்டபடியே பவுலைக் கூட்டிக் கொண்டு இராத்திரியிலே அந்திப்பத்திரி ஊருக்குப் போய்,

அப் 23:32 மறுநாளில் குதிரைவீரரை அவனுடனேகூடப் போகும்படி அனுப்பி விட்டு, தாங்கள் கோட்டைக்குத் திரும்பினார்கள்

அப 23:33 அவர்கள் செசரியா பட்டணத்தில் சேர்ந்து, நிருபத்தைத் தேசாதிபதியினிடத்தில கொடுத்து, பவுலையும் அவன் முன்பாக நிறுத்தினார்கள்

"அந்திப்பத்திரி" (Antipatris) - சாரோனின் (Sharon) சமவெளியிலுள்ள சிறிய பட்டணம். எருசலேமிலிருந்து 40 மைல் தூரத்தில் உள்ளது. யோசபஸ் இந்தப் பட்டணத்தை கபார்ஸாபா (Capharsaba) என்று அழைக்கிறார் ஏரோது ராஜா இந்தப் பட்டணத்தை மறுபடியுமாகக் கட்டினான் ஏரோதுவின தந்தையின் பெயர் அந்திப்பத்தர் (Antipater) அவனுடைய பெயரையே இந்தப் பட்டணத்திற்குச் சூட்டி இதற்கு அந்திப்பத்திரி என்று பெயரிட்டு அழைத்தான்

"செசரியா பட்டணம்" (Caesarea) - ஒரு காலத்தில தேசாதிபதியின அரண்மனை எருசலேமில இருந்தது ஆனால இப்போது செசரியாவில இருக்கிறது இது ஒரு துறைமுகப்பட்டிணமாக இருப்பதினால் ரோமாபுரியோடு தொடர்பு கொள்வதற்கு மிகவும் வசதியான பகுதி. ஏழாம் நூற்றாண்டு வரையிலும் இந்தப் பட்டணம் சிறந்து விளங்கிறது இங்கு ஏராளமான கிறிஸ்தவர்கள இருந்தார்கள இதன் வரலாற்றில செசரியா பட்டணம் இடித்து தரைமட்டமாக்கப்பட்டு, அழிக்கப்பட்டது தற்காலத்தில் இதன் இடிந்த சுவடுகளைக்கூட காணமுடியவில்லை

17. பவுலை ஏரோதின் அரண்மனையில் காவல் பண்ணும்படி பேலிக்ஸ் கட்டளையிடுகிறான்

அப் 23:34 தேசாதிபதி அதை வாசித்து எந்த நாட்டானென்று கேட்டு, சிலிசியா நாட்டானென்று அறிந்தபோது,

அப 23:35 உன்மேல் குற்றஞ் சாட்டுகிறவர்களும் வந்திருக்கும்போது உன காரியத்தைத் திட்டமாய்க் கேட்பேனென்று சொல்லி, ஏரோதின் அரமனையிலே அவனைக் காவல் பண்ணும்படி கட்டளையிட்டான்

அப்போஸ்தலர் – தொகுப்புரை

23 அதிகாரம்

"சிலிசியா" (Cilicia) - சிலிசியா சீரியா நாட்டில் உள்ளது. ஆகையினால் இது பேலிக்சின் அதிகாரத்தின்கீழ் வருகிறது.

"உன்மேல் குற்றஞ்சாட்டுகிறவர்களும் வந்திருக்கும்போது உன் காரியத்தைத் திட்டமாய்க் கேட்பேன்" பேலிக்ஸ் மிகவும் ஞானமாகச் செயல்படுகிறான். பவுலை உடனடியாக விசாரிக்கவில்லை. பவுலின்மீது குற்றம் சுமத்துகிறவர்கள் வந்தபின்பு, பவுலை விசாரிக்க விரும்புகிறான். ஒருவருடைய சாட்சியை மட்டும் கேட்டு, தீர்ப்பு கூறமுடியாது. இரண்டு பக்கமும் அவர்களுடைய விவாதங்களைக்கேட்டு, அதன்பின்பே தீர்ப்பு கூறமுடியும்.

அரமனை (judgment hall) - πραιτώριον - praitoorion - 4232

பல்வேறுபட்ட பெயர்ச்சொல் அரமனை நியாயம் விசாரிக்கும் மண்டபம். ஏரோதுராஜா இந்த அரண்மனையைக் கட்டினான். இந்த அரண்மனைக்கு அருகில் கைதிகளை அடைத்து வைப்பதற்குச் சிறைச்சாலைகளும் இருந்தன. ஏரோதுவின் அரண்மனையில் போர்ச்சேவகர்களுக்கும் குடியிருக்கும் பகுதிகள் இருந்தன (மத் 27:27, யோவான் 18:28).

24 அதிகாரம்

18. பேலிக்ஸிற்கு முன்பாக பவுல்

(1) பவுலுக்கு எதிரான குற்றச்சாட்டு

அப 24:1 ஐந்துநாளைக்குப்பின்பு பிரதான ஆசாரியனாகிய அனனியா மூப்பர்களோடும் தெர்த்துல்லு என்னும் ஒரு நியாய சாதுரியனோடுங்கூடப் போனான், அவர்கள் பவுலுக்கு விரோதமாய்த் தேசாதிபதியினிடத்தில் பிராதுபண்ணினார்கள்

அப் 24:2 அவன் அழைக்கப்பட்டபோது, தெர்த்துல்லு குற்றஞ்சாட்டத்தொடங்கி,

அப 24:3 கனம்பொருந்திய பேலிக்ஸே, உம்மாலே நாங்கள் மிகுந்த சமாதான சவுக்கியத்தை அநுபவிக்கிறதையும் உம்முடைய பராமரிப்பினாலே இந்த தேசத்தாருக்குச் சிறந்த நன்மைகள் நடக்கிறதையும் நாங்கள் எப்பொழுதும் எங்கும் மிகுந்த நன்றியறிதலுடனே அங்கிகாரம்பண்ணுகிறோம்.

அப 24:4 உம்மை நான் அநேக வார்த்தைகளினாலே அலட்டாதபடிக்கு நாங்கள் சுருக்கமாய்ச் சொல்வதை நீர் பொறுமையாய்க் கேட்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்

அப் 24:5 என்னவென்றால், இந்த மனுஷன் கொள்ளைநோயாகவும் பூச்சக்கரத்திலுள்ள சகல யூதர்களுக்குள்ளும் கலகம் எழுப்புகிறவனாகவும் நசரேயருடைய மதபேதத்துக்கு முதலாளியாகவும் இருக்கிறானென்று கண்டறிந்தோம்.

அப் 24:6 இவன் தேவாலயத்தையும் தீட்டுப்படுத்தப் பார்த்தான் நாங்கள் இவனைப் பிடித்து எங்கள் வேதப் பிரமாணத்தின்படியே நியாயந்தீர்க்க மனதாயிருந்தோம்

அப 24:7 அப்பொழுது சேனாபதியாகிய லீசியா வந்து மிகுந்த பலாத்காரமாய் இவனை எங்கள் கைகளிலிருந்து பறித்துக் கொண்டுபோய்,

அப 24:8 இவன்மேல் குற்றஞ்சாட்டுகிறவர்கள் உம்மிடத்தில் வரும்படி கட்டளையிட்டார் இவனிடத்தில் நீர் விசாரித்தால் நாங்கள் இவன்மேல் சாட்டுகிற குற்றங்கள் யாவையும் அறிந்து கொள்ளலாம் என்றான்

அப 24:9 யூதர்களும் அதற்கு இசைந்து இவைகள் யதார்த்தந்தான் என்றார்கள்

"பிரதான ஆசாரியனாகிய அனனியா" - (அப 23:5)

நியாயசாதுரியன் (orator) - ῥήτωρ - rheetoor - 4489

ஆண்பால் பெயர்ச்சொல் - நியாயசாதுரியன் (rhetor, advocate)

"தெர்த்துல்லு" (Tertullus) - நியாய சாதுரியனுடைய பெயர் தெர்த்துல்லு. இது ரோமருடைய பெயர் ஆனாலும் யூதருடைய சார்பாக இவன் வழக்காடுகிறான் (அப 24:2-9) தன்னுடைய மார்க்கத்திலிருந்து யூதமார்க்கத்திற்குத் தெர்த்துல்லு மாறியிருக்கிறான் என்று இவனைப் பற்றி வரலாறு ஆசிரியர்கள் கூறுகிறார்கள் யூதமார்க்கத்தார் தங்களுடைய வழக்கில் வாதாடுவதற்காக தெர்த்துல்லுவை நியமித்திருக்கிறார்கள் இவன் ரோமனாக இருந்து யூதமார்க்கத்திற்கு மாறியதினால் தேசாதிபதி இவன்மீது தவறான எண்ணம் கொண்டிருந்திருப்பான் என்னில் ரோமர்கள் பிற மார்க்கங்களுக்குத் தங்களை மாற்றிக் கொள்வது தடைபண்ணப்பட்டிருந்தது யூதர்கள் தங்கள் சார்பாக வழக்காடுவதற்குத் தெர்த்துல்லுவை நியமித்ததினால் தங்கள் அறியாமையை வெளிப்படுத்துகிறார்கள்

24 அதிகாரம்

தெர்த்துல்லு தேசாதிபதியிடம் கூறிய காரியங்கள்

1. தேசாதிபதியைப் புகழ்ந்து கூறுகிறான் (அப் 24:2-3)
2. பவுலின்மீது குற்றம் சுமத்துகிறான் (அப் 24:5)
3. குற்றத்தை விவரித்துக் கூறுகிறான் (அப் 24:6-8)

"உம்மாலே நாங்கள் மிகுந்த சமாதான சவுக்கியத்தை அநுபவிக்கிறோம்" - பேலிக்ஸ் ஒரு துன்மார்க்கன். ஆட்சி நடத்தத் தெரியாதவன். ஆனாலும் யூதேயாவிற்குப் பேலிக்ஸ் சில நன்மைகளைச் செய்திருக்கிறான். யூததேசத்தாரிடம் அடிக்கடி கொள்ளை நடத்திய கொள்ளைக் கும்பலைப் பேலிக்ஸ் அழித்தான் என்று யோசேபஸ் (Josephus) கூறுகிறார். எகிப்திய தீர்க்கதரிசியையும் பேலிக்ஸ் அழித்தான் (அப் 21:38). செசரியாவிலே யூதருக்கும் சீரியருக்கும் நடைபெற்ற உள்நாட்டுக் கலகத்தைப் பேலிக்ஸ் அடக்கினான். இவ்வாறாகப் பேலிக்சின் ஆட்சிக் காலத்திலே யூதர்கள் மிகுந்த சமாதான சவுக்கியத்தை அனுபவித்து வந்தார்கள்.

பராமரிப்பு (providence) πρόνοια - pronoia - 4307

பெண்பால் பெயர்ச்சொல் - பராமரிப்பு, பேணுதல் (care, oversight) (அப் 24:3; ரோமர் 13:14)

"நாங்கள் சுருக்கமாய்ச் சொல்வது" பேலிக்சின் நேரத்தைத் தெர்த்துல்லு வீணடிக்க விரும்பவில்லை. பேலிக்சிற்குப் பல அலுவல்கள் இருக்கும். ஆகையினால் தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் நேரத்திற்குள் தன்னுடைய விவாதத்தைக் கூறி முடித்து விடுவதாகத் தெர்த்துல்லு கூறுகிறான்.

அலட்டுதல் ἐγκόπτω enkoptoo 1465

வினைச்சொல் - அலட்டுதல், தடைப்பண்ணு, தடைப்படு, தடைசெய் (hinder) (அப் 24:4; ரோமர் 15:22; கலா 5:7; 1தெச 2:18; 1பேதுரு 3:7)

பொறுமை (clemency) - ἐπιείκεια - epieikeia - 1932

பெண்பால் பெயர்ச்சொல் - சாந்தம், பொறுமை (mildness, gentleness, fairness) (2கொரி 10:1)

"இந்த மனுஷன் கொள்ளைநோயாகவும்...... இருக்கிறானென்று கண்டறிந்தோம்" - தெர்த்துல்லு பவுலின்மீது நான்கு குற்றச்சாட்டுக்களைக் கூறுகிறான். அவையாவன.

1. பவுல் கொள்ளைநோயாக இருக்கிறான்
2. பூச்சக்கரத்திலுள்ள [redacted] யூதர்களுக்குள்ளும் கலகம் எழுப்புகிறவனாக இருக்கிறான்
3. நசரேயருடைய மதபேதத்துக்கு முதலாளியாக இருக்கிறான்
4. தேவாலயத்தைத் தீட்டுப்படுத்தப் பார்த்தான்

கொள்ளைநோய் (pestilence) - λοιμός - loimos - 3061

ஆண்பால் பெயர்ச்சொல் - உபத்திரவம், உதாசினன், உதாசினர் - (மத் 24:7; லூக்கா 21:11; அப் 24:5)

கலகம் (Sedition) - στάσις - stasis - 4714

பெண்பால் பெயர்ச்சொல் - கலகம், வாக்குவாதம் (stirring up of sedition) (அப் 24:5)

மதபேதம் (sect) - αἵρεσις - hairesis - 139

பெண்பால் பெயர்ச்சொல் - சமயத்தார், மதபேதம், சமயபேதம், மார்க்கபேதம், வேதப்புரட்டு (heresy) (அப் 5:17)

24 அதிகாரம்

பவுல் மூலமாகக் கொள்ளை நோய் வருகிறது என்று கூறாமல பவுலே கொள்ளை நோயாக இருக்கிறான் என்று தெர்த்துல்லு அவன்மீது குற்றம் சுமத்துகிறான் எல்லா யூதர்களுக்கு இடையேயும் பவுல் தவறான சத்தியங்களை உபதேசம் பண்ணி, குழப்பத்தையும் கலகத்தையும் உண்டு பண்ணுகிறான் என்பது பவுலமீது சுமத்தப்படும் குற்றச்சாட்டாகும்

"நசரேயர்" (the Nazarenes) - இயேசு கிறிஸ்துவின் விசுவாசிகளுக்கு நசரேயர் என்னும் பெயர் வழங்கப்பட்டு வந்தது. யூதர்கள் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்ளமாட்டார்கள் (அப 11:26) நசரேயர் என்னும் வார்த்தை மேசியாவைக் குறிக்கும் கிரேக்க வார்த்தையிலிருந்து வந்திருக்கிறது. ஆனாலும் தேசாதிபதியாகிய பேலிக்ஸ் முன்பாக கிறிஸ்தவர்களை நசரேயர் என்று அழைப்பதற்கு ஒப்புக் கொள்கிறார்கள் (அப 6:14, அப 22:8

"பவுல் தேவாலயத்தையும் தீட்டுப்படுத்தப் பார்த்தான" பவுலமீது சுமத்தப்பட்ட மிகவும் கடுமையான குற்றச்சாட்டு தேவாலயத்தைத் தீட்டுப்படுத்துகிற எவனையும் கொன்று போடுவதற்கு ரோமர்கள் யூதருக்கு ஏற்கெனவே அதிகாரம் கொடுத்திருந்தார்கள் ஆகையினால பவுலின்மீது சுமத்தப்பட்ட இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால், பவுலுக்கு மரண தண்டனை நிச்சயம் கிடைக்கும். ஆனால் அப 21:28-29 ஆகிய வசனங்களின் அடிப்படையில யூதர்கள பவுலின்மீது தவறான குற்றச்சாட்டுக்களைக் கூறுகிறார்கள இந்தப் பொய் குற்றச்சாட்டை யூதர்களால் நிரூபிக்க முடியாது.

"நாங்கள் இவனைப் பிடித்து எங்கள வேதப்பிரமாணத்தின்படியே நியாயந்தீர்க்க மனதாயிருந்தோம்" எங்களுடைய வேதப் பிரமாணத்தின்படியே பவுலைக் கொன்றுபோட விரும்பினோம். ஆனால் அந்த வேளையில சேனாபதியின தலைவன லீசியா எங்கள் மத்தியிலே வந்து எங்களிடமிருந்து பவுலை விடுவித்துக் கொண்டு போய்விட்டார சேனாபதியாகிய லீசியா பவுலை விடுவிக்கவில்லையென்றால், நாங்கள் பவுலை அந்நேரமே கொன்றுபோட்டிருப்போம் என்று யூதர்கள சார்பாகத் தெர்த்துல்லு தேசாதிபதியாகிய பேலிக்ஸிடம் கூறுகிறான்

"சேனாபதியாகிய லீசியா வந்து, மிகுந்த பலாத்காரமாய் இவனை எங்கள் கைகளிலிருந்து பறித்துக் கொண்டு போனான்" - தெர்த்துல்லு பவுலின் மீது குற்றஞ்சுமத்துவதுபோலவே, இப்போது சேனாபதியாகிய லீசியாவின்மீதும் குற்றம் சுமத்துகிறான் லீசியாவிற்கு ஆதரவாக ஏராளமான போர்ச்சேவகர்கள் சாட்சி கூறுவார்கள் ஆகையினால பவுலுக்கு இது சாதகமான காரியமே. பிசாசானவன் மறுபடியுமாக இந்த இடத்தில தன்னுடைய கிரியையைச் செய்கிறான் அதனால் சேனாபதியாகிய லீசியா வரும்வரையிலும் இந்த வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது (அப 24:22)

"யூதர்களும் அதற்கு இசைந்து இவைகள யதார்த்தந்தான் என்றார்கள்" - நீதிமன்றத்தில வழக்கு விசாரணை நடைபெறும்போது, அங்கு முறைப்படி என்னென்ன காரியங்கள எல்லாம் நடைபெற வேண்டுமோ அவையெல்லாம் கிரமமாக நடைபெறுகிறது அவையாவன

1 பேலிக்ஸின ஆதரவைப் பெறுவதற்காக அவனைப் புகழ்ந்து கூறுகிறார்கள

2 பேலிக்ஸின ஆட்சியில யூதர்கள சந்தோஷமாகவும், சவுக்கியமாகவும் இருக்கிறார்கள் என்றும், பேலிக்ஸிற்குக் கட்டுப்பட்டு நடப்பதாகவும் அறிவிக்கிறார்கள்

3 கைதுபண்ணப்பட்டிருப்பவனை ஒரு துன்மார்க்கனாக வர்ணிக்கிறார்கள் பொது அமைதிக்கு இடையூறு விளைவிக்கிறவன என்றும், மிகவும் பயங்கரமானவன என்றும் தேவாலயத்தைத் தீட்டுப்படுத்துகிறவன என்றும் பவுலின்மீது குற்றம் சுமத்துகிறார்கள

4 பவுலை உடனடியாக தண்டிக்க ஏற்பாடு பண்ணியதாகவும், ஆனாலும் சேனாபதியினுடைய தலையீட்டினால அவ்வாறு செய்ய முடியவில்லை என்றும் கூறுகிறார்கள்

24 அதிகாரம்

5 தாங்கள் உண்மையுள்ள பிரஜைகள் என்றும், தேசாதிபதிக்குத் திருப்திகரமாகத் தங்களுடைய வழக்குகளை நிரூபிப்பதாகவும் கூறுகிறார்கள்

6 பல சாட்சிகளையும் அழைக்கிறார்கள் மார்க்கத் தலைவர்களையும் எருசலேமிலுள்ள முக்கியமான நபர்களையும் பவுலுக்கு எதிராக சாட்சி கூறுவதற்காக அழைத்து வந்திருக்கிறார்கள்

(2) பேலிக்ஸ் முன்பாக பவுலின் விவாதம்

அப 24:10 பவுல் பேசும்படி தேசாதிபதி சைகைகாட்டினபோது, அவன் உத்தரவாக: நீர் அநேக வருஷகாலமாய் இந்த தேசத்தாருக்கு நியாயாதிபதியாயிருக்கிறீரென்றறிந்து, நான் என் காரியங்களைக்குறித்து அதிக தைரியத்துடன் உத்தரவு சொல்லுகிறேன்.

அப 24:11 நான் தொழுதுகொள்ளும்படியாக எருசலேமுக்குப் போனதுமுதல் இதுவரைக்கும் பன்னிரண்டு நாள்மாத்திரம் ஆயிற்றென்று நீர் அறிந்துகொள்ளலாம்.

அப 24:12 தேவாலயத்திலே நான் ஒருவரிடத்திலாவது தர்க்கம்பண்ணினதையும், நான் ஜெப ஆலயங்களிலாகிலும் நகரத்திலாகிலும் ஜனங்களுக்குள்ளே கலகம் எழுப்பினதையும், இவர்கள் கண்டதில்லை.

அப் 24:13 இப்பொழுது என்மேல் சாட்டுகிற குற்றங்களை இவர்கள் ரூபிக்கவுமாட்டார்கள்.

அப 24:14 உம்மிடத்தில் ஒன்றை ஒத்துக்கொள்ளுகிறேன்; அதென்னவென்றால், இவர்கள் மதபேதம் என்று சொல்லுகிற மார்க்கத்தின்படியே, எங்கள் முன்னோர்களின் தேவனுக்கு ஆராதனை செய்து, நியாயப்பிரமாணத்திலேயும் தீர்க்கதரிசிகள் புஸ்தகங்களிலேயும் எழுதியிருக்கிற எல்லாவற்றையும் நான் விசுவாசித்து,

அப 24:15 நீதிமான்களும் அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பது உண்டென்று இவர்கள் தேவனிடத்தில் நம்பிக்கைகொண்டிருக்கிறதுபோல நானும் நம்பிக்கைகொண்டிருக்கிறேன்.

அப 24:16 இதனால் நான் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்கப் பிரயாசப்படுகிறேன்.

அப 24:17 அநேக வருஷங்களுக்குப்பின்பு நான் என் ஜனத்தாருக்குத் தர்மப்பணத்தை ஒப்புவிக்கவும், காணிக்கைகளைச் செலுத்தவும் வந்தேன்.

அப 24:18 அப்பொழுது கூட்டமில்லாமலும் அமளியில்லாமலும் தேவாலயத்திலே சுத்திகரித்துக்கொண்டவனாயிருக்கையில், ஆசியா நாட்டாரான சில யூதர்கள் என்னைக் கண்டார்கள்.

அப் 24:19 அவர்களுக்கு என்பேரில் விரோதமான காரியம் ஏதாகிலும் உண்டாயிருந்தால் அவர்களே இங்கே வந்து உமக்கு முன்பாகக் குற்றஞ்சாட்டவேண்டும்.

அப் 24:20 நான் ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாக நின்றபோது அவர்கள் யாதொரு அநியாயத்தை என்னிடத்தில் கண்டதுண்டானால் இவர்களே அதைச் சொல்லட்டும்.

24 அதிகாரம்

அப 24:21 நான் அவர்களுக்குள்ளே நின்ற போது மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பதை குறித்து இன்று உங்களாலே நியாயந்தீர்க்கப் படுகிறேனென்று நான் சொன்ன ஒரு சொல்லின் நிமித்தமேயன்றி வேறொன்றினிமித்தமும் குற்றங் காணப்படவில்லையென்றான்

"பவுல பேசும்படி தேசாதிபதி சைகை காட்டினபோது, அவன் உத்தரவாக சொன்னது" - பவுல உத்தரவு சொன்னதை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். அவையாவன

1 அறிமுகம் - பேலிக்ஸ் பல வருஷங்களாக நியாயாதிபதியாக இருந்திருக்கிறார் ஆகையினால அவருக்கு இந்த வழக்கை விசாரிப்பதற்கு எல்லா தகுதிகளும் உள்ளது.

2 தன்மீது கூறப்பட்டிருக்கும் குற்றச் சாட்டுகளுக்கு பவுல கூறிய மறுப்புரை பவுலின்மீது தெர்த்துல்லு நான்கு குற்றச்சாட்டுகளைக் கூறினான் அவற்றை பவுல இவ்வாறு மறுத்துக் கூறுகிறார்

(1 தான ஒரு கொள்ளைநோய அல்ல. தேவனை உண்மையாகவே தொழுது கொள்கிறவன (அப 24:11)

(2 தேவாலயத்தைத் தீட்டுப் படுத்துகிறவன அல்ல

(3 எந்த இடத்திலும் யூதர்களுக்குள்ளே நான் கலகத்தை எழுப்பவில்லை (அப 24:12)

(4) எந்தப் பிரமாணத்தையும் நான் மீறியதாக அவர்களால நிரூபிக்க முடியாது. (அப 24:13

3 பவுலின் வாக்குறுதி - பவுல் தன்னுடைய விவாதத்தில் தன்னைப் பற்றி பன்னிரெண்டு காரியங்களைக் கூறுகிறான்

(1) யூதர்கள் என்னை மார்க்கபேதம் பணணுகிறவன் என்று கூறுகிறார்கள்

(2) நான் தேவனை உண்மையாகவே தொழுது கொள்கிறவன்

(3) நியாயப் பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகள் புஸ்தகங்களிலும் எழுதியிருக்கிறஎல்லாவற்றையும் நான விசுவாசிக்கிறேன் (அப 24:14

(4) நான் தேவனிடத்தில நம்பிக்கை வைத்திருக்கிறேன் (அப 24:15

(5) நீதிமான்களும் அநீதிமான்களுமாகியமரித்தோர் உயிர்த் தெழுந்திருப்பது உண்டென்று நான நம்பிக்கை கொண்டிருக்கிறேன (அப 24:15

(6) நான தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனசாட்சியை உடையவனாய் இருக்கப் பிரயாசப் படுகிறேன (அப 24:16

(7) நான என ஜனத்தாருக்குத் தாமபணத்தை ஒப்புவிக்கவும் காணிக்கைகளைச் செலுத்தவும் வந்தேன அப 24:17

(8) மோசேயின பிரமாணத்தின் பிரகாரமாக நான் தேவாலயத்திலே சுத்திகரித்துக் கொண்டது கூடாது என்று என்னைப் பிடித்திருக்கிறார்கள் (அப 24:18

(9) நான் கூட்டமில்லாமலும், அமளி இல்லாமலும் தேவாலயத்தில சுத்திகரித்துக் கொண்டேன அப் 24:18

24 அதிகாரம்

(10) தேவாலயத்தில் என்னைக் குற்றப் படுத்தியவர்கள் ஆசியா நாட்டாரான யூதர்கள் இங்கு இருப்பவர்கள் அல்ல (அப் 24:18-19)

(11) நான் ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாக நின்றபோது என்மீது குற்றம் சுமத்தும் இவர்கள் அங்கு என்மீது யாதொரு குற்றமும் சுமத்தவில்லை (அப் 24:20)

(12) மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பார்கள் என்று நான் விசுவாசிக்கிறேன் என்பதை அறிக்கையிட்டேன் இது மட்டுமே ஆலோசனைச் சங்கத்தில் அவர்கள் என்னிடத்தில் கண்ட ஒரே குற்றமாகும். (அப் 24:21)

"அநேக வருஷகாலமாய் இந்த தேசத்தாருக்கு நியாயாதிபதியாயிருக்கிற பேலிக்ஸ் கி.பி. 52 ஆம் ஆண்டிலிருந்து ஏழு வருஷமாகத் தேசாதிபதியாக இருக்கிறார் பொதுவாக தேசங்களின் தேசாதிபதிகள் அடிக்கடி மாற்றப்படுவார்கள் அப்போப்பட்ட சூழ்நிலையில் பேலிக்ஸ் ஏழு வருஷமாகத் தேசாதிபதியாக இருந்து, நியாயம் விசாரிப்பது நீண்டகாலம்தான்

"நான் தொழுது கொள்ளும்படியாக எருசலேமுக்குப் போனதுமுதல் இதுவரைக்கும் பன்னிரண்டு நாளமாத்திரம் ஆயிற்று" தேவாலயத்தில் பவுல் தன்னை ஏழு நாள் சுத்திகரிக்க வேண்டும். அதில் நான்கு நாள் ஆயிற்று (அப் 21:27) ஐந்தாம் நாளில் ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாகப் பவுல் தன்னுடைய விவாதத்தைக் கூறினார் (அப் 23:1-10) அன்று இரவு பவுல் கர்த்தரைக் கண்டார் (அப் 23:11) ஆறாம் நாளில் நாற்பது யூதர்கள் பவுலைக் கொல்ல வேண்டுமென்று சதி சர்ப்பனை பண்ணினார்கள் (அப் 23:12-22) அன்று இரவு போர்ச் சேவகர்கள் பவுலை அந்திபத்திரிக்கு அழைத்துச் சென்றார்கள் (அப் 23:23-31) ஏழாம் நாளிலே பவுலைச் செசரியாவிற்கு அழைத்து வந்து பேலிக்ஸ் முன்பாக நிறுத்தியிருக்கிறார்கள் (அப் 23:32-35) ஐந்து நாட்களுக்குப் பின்பு பேலிக்ஸ் முன்பாக பவுல் மறுபடியும் விசாரிக்கப்படுகிறார் (அப் 24:1)

"இப்பொழுது என்மேல் சாட்டுகிற குற்றங்களை இவர்கள் ரூபிக்கவுமாட்டார்கள்" - (அப் 24:5)

"உம்மிடத்தில் ஒன்றை ஒத்துக் கொள்ளுகிறேன்" - தேசாதிபதியாகிய பேலிக்ஸ் முன்பு பவுல் தன்னைப் பற்றி பன்னிரெண்டு காரியங்களைக் கூறி அவற்றை ஒத்துக் கொள்கிறார் (அப் 24:10)

"மதபேதம்" (heresy) - (அப் 5:17)

"எங்கள் முன்னோர்களின் தேவன்" (God of my fathers) - ரோமப்பேரரசின் சட்டப்படி அந்தப் பேரரசிற்குள் யாரும் புதிய மார்க்கத்தையோ புதிய தெய்வத்தையோ அறிமுகப்படுத்தக்கூடாது ஆகையினால் பவுல் கர்த்தரைப் பற்றிக்கூறும்போது "எங்கள் முன்னோர்களின் தேவன்" என்று கூறுகிறார் தன்மீது புதிய குற்றம் எதுவும் சுமத்தி விடாதவாறு பவுல் மிகுந்த எச்சரிக்கையோடு இவ்வாறு கூறுகிறார்

"நியாயப்பிரமாணம்" (the law) - கிறிஸ்தவர்கள் நியாயப்பிரமாணத்தின் கற்பனைகளினால் இப்போது இரட்சிக்கப் படவில்லை என்பதை பவுல் விசுவாசிக்கிறார் (அப் 15:1,24)

"மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பது" (resurrection of the dead) இந்த வாக்கியத்தில் பவுல் பரிசேயரிடமிருந்து தன்னை வித்தியாசப்படுத்திக் காண்பிக்கிறார் நீதிமான்கள் மட்டுமே உயிர்த்தெழுவார்கள் என்று பரிசேயர்கள் நம்புகிறார்கள் ஆனால் பவுலோ நீதிமான்களும் அநீதிமான்களும் உயிர்த்தெழுவார்கள் என்று கூறி தனக்கும் பரிசேயருக்கும் உள்ள வித்தியாசத்தை வெளிப்படுத்துகிறார் (1கொரி 15, யோவான் 5:28-29, வெளி 20:11-15)

அப்போஸ்தலர் - தொகுப்புரை

24 அதிகாரம்

நீதிமான் (just) - δικαιος - dikaios 1342

பொருள் - நீதிமானாயிருக்கிற நீதியுள்ள, நியாயமான, உண்மையுள்ள - நீதிமான் "just" 33 தடவைகள் (மத் 1:19; மத் 5:45; மத் 13:49; மத் 27:19,24; மாற்கு 6:20; லூக்கா 1:17; லூக்கா 2:25; லூக்கா 14:14; லூக்கா 15:7; லூக்கா 20:20; லூக்கா 23:50; யோவான் 5:30; அப் 3:14; அப் 7:52; அப் 10:22; அப் 22:14; அப் 24:15; ரோமர் 1:17; ரோமர் 2:13; ரோமர் 3:26; ரோமர் 7:12; கலா 3:11; பிலி 4:8; கொலோ 4:1; தீத்து 1:8; எபி 10:38; எபி 12:23; யாக் 5:6; 1பேதுரு 3:18; 2பேதுரு 2:7; 1யோவான் 1:9; வெளி 15:3); நீதிமான் "righteous" 41 தடவைகள் (மத் 9:13; மத் 10:41; மத் 13:17,43; மத் 23:28,29,35; மத் 25:37,46; மாற்கு 2:17; லூக்கா 1:6; லூக்கா 5:32; லூக்கா 18:9; லூக்கா 23:47; யோவான் 7:24; யோவான் 17:25; ரோமர் 3:10; ரோமர் 5:7,19; 2தெச 1:5,6; 1தீமோ 1:9; 2தீமோ 4:8; எபி 11:4; யாக் 5:16; 1பேதுரு 3:12; 1பேதுரு 4:18; 2பேதுரு 2:8; 1யோவான் 2:1,29; 1யோவான் 3:7,12; வெளி 16:5,7; வெளி 19:2; வெளி 22:11); நியாயம் "right" 5 தடவைகள் (மத் 20:4,7; லூக்கா 12:57; அப் 4:19; எபே 6:1); தகுதி, நியாயம் "meet" 2 தடவைகள் (பிலி 1:7; 2பேதுரு 1:13)

அநீதி (unjust) - ἄδικος adikos - 94

பொருள் - அநீதியுள்ள, அநீதியான அநீதிமான்கள், அநீதர் - தீயோர் அநீதியுள்ளவர் "unjust" 8 தடவைகள் (மத் 5:45; லூக்கா 16:10; லூக்கா 18:11; அப் 24:15; 1கொரி 6:1; 1பேதுரு 3:18; 2பேதுரு 2:9); அநீதி "unrighteous" 4 தடவைகள் (லூக்கா 16:11; ரோமர் 3:5; 1கொரி 6:9; எபி 6:10)

"குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்கப் பிரயாசப்படுகிறேன்" - ஒரு கலையைக் கற்பது போன்று பிரயாசப்படுதல். மருத்துவத் துறையில் ஒரு நோயைக் குணப்படுத்துவதற்கு எடுத்துக் கொள்ளும் பிரயாசங்களைப் போன்று என்று இந்த வாக்கியம் பொருள்படும்.

பிரயாசப்படு (exercise) - ἀσκέω - askeoo - 778

வினைச்சொல் - பிரயாசப்படு

"தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக" - சத்தியத்திற்கு விரோதமாகத் தன்னிடம் எந்த உபதேசமும் இல்லை. தேவனுக்கு விரோதமாக எந்த ஆராதனையும் தன்னிடத்தில் இல்லை. மனுஷனுக்கு விரோதமாகத் தன்னிடத்தில் எந்த கோபமோ கலகமோ துன்மார்க்கமோ இல்லை என்று பவுல் அறிவிக்கிறார்.

"அநேக வருஷங்களுக்குப் பின்பு" - பவுல் எருசலேமை விட்டு 6 அல்லது 7 வருஷங்களுக்கு முன்பாகவே புறப்பட்டுச் சென்று விட்டார் (அப் 24:10).

"என் ஜனத்தாருக்குத் தாமப்பணம்" - ஏழைகளுக்குத் தாமப்பணம் சேகரிப்பது பவுலின் ஊழியத்தில் ஒரு பகுதி. மத் 6:1; ரோமர் 15:26; 1கொரி 13:3; 1கொரி 16:1-3; 2கொரி 8:1-9:15; கலா 2:10

காணிக்கை (offerings) - προσφορά - prosphora - 4376

பெண்பால் பெயர்ச்சொல் - காணிக்கை (sacrifice) (அப் 21:26; அப் 24:17; ரோமர் 15:16; எபே 5:2; எபி 10:5, 8, 10, 14, 18; எண் 6:14-20)

"தேவாலயத்திலே சுத்திகரித்துக் கொண்டவனாயிருக்கையில் ஆசியா நாட்டாரான சில யூதர்கள் என்னைக் கண்டார்கள்" - தேவாலயத்தில் சுத்திகரிப்பிற்குக் காணிக்கைகளைச் செலுத்தும்போது அவர்கள் பவுலைக் கண்டார்கள் (எண் 6:14-20)

24 அதிகாரம்

"நான் சொன்ன ஒரு சொல்" - உயிர்த்தெழுதலைப் பற்றி பவுல் கூறிய சொல். (அப் 23:6)

(3) விசாரணை தள்ளி வைக்கப்படுகிறது – பவுலைக் கண்டிப்பில்லாமல் நடத்த உத்தரவாகிறது

அப் 24:22 இந்த மார்க்கத்தின் விஷயங்களை விவரமாய் அறிந்திருந்த பேலிக்ஸ் இவைகளைக் கேட்டபொழுது, சேனாபதியாகிய லீசியா வரும்போது உங்கள் காரியங்களைத் திட்டமாய் விசாரிப்பேன் என்று சொல்லி

அப் 24:23 பவுலைக் காவல் பண்ணவும், கண்டிப்பில்லாமல் நடத்தவும், அவனுக்கு ஊழியஞ்செய்கிறதற்கும் அவனைக் கண்டு கொள்ளுகிறதற்கும் வருகிற அவனுடைய மனுஷரில் ஒருவரையும் தடை செய்யாதிருக்கவும் நூற்றுக்கு அதிபதியானவனுக்குக் கட்டளையிட்டு, அவர்களைக் காத்திருக்கும் படி செய்தான்

"பவுலைக் காவல்பண்ணவும் கண்டிப்பில்லாமல் நடத்தவும்" பேலிக்ஸ் உத்தரவிடுகிறான். பவுல் ஒரு குற்றமும் செய்யவில்லை என்பதை பேலிக்ஸ் அறிந்திருக்கிறான். ஆனாலும் பவுலை விடுதலை பண்ணவில்லை. இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம். 1. யூதரைப் பிரியப்படுத்த விரும்புகிறான். 2. பவுலிடம் அல்லது அவனுடைய நண்பர்களிடம் பவுலை விடுதலை பண்ணுவதற்கு ஏதாவது பணம் வாங்க முடியுமா என்று பார்க்கிறான். (அப் 24:26-27)

கண்டிப்பு இல்லாமை (liberty)
ἄνεσις anesis 425

பெண்பால் பெயர்ச்சொல் – கண்டிப்பு இல்லாமை, அமைதி, இளைப்பாறுதல், சகாயம் (relaxation) - (அப் 24:23; 2கொரி 2:13; 2கொரி 7:5; 2கொரி 8:13; 2தெச 1:7)

10. பவுல் பேலிக்ஸிற்கு பிரசங்கம் பண்ணுகிறான்

அப் 24:24 சில நாளைக்குப்பின்பு பேலிக்ஸ் யூத ஸ்திரீயாகிய தன் மனைவி துருசில்லாளுடனேகூட வந்து பவுலை அழைப்பித்து கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தைக் குறித்து அவன் சொல்லக்கேட்டான்

அப் 24:25 அவன் நீதியையும் இச்சையடக்கத்தையும் இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில், பேலிக்ஸ் பயமடைந்து: இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயமானபோது உன்னை அழைப்பிப்பேன் என்றான்

அப் 24:26 மேலும், அவன் பவுலை விடுதலைபண்ணும்படி தனக்கு அவன் பணங்கொடுப்பானென்று நம்பிக்கை உள்ளவனாயிருந்தான். அதினிமித்தம் அவன் அநேகந்தரம் அவனை அழைத்து, அவனுடனே பேசினான்

"துருசில்லாள்" (Drusilla) - இவள் ஏரோது முதலாம் அகிரிப்பாவின் மகள் (king Herod Agrippa I) இவளுடைய முதல் கணவன் எமேசாவின் ராஜா அசிசுஸ் (king Azizus of Emesa). பேலிக்ஸ் துருசில்லாள் தள்ளிவைத்துவிட்டு, பேலிக்ஸை திருமணம் பண்ணுகிறாள். இவள் ஒரு யூத ஸ்திரீ. இவள் மூலமாக பேலிக்ஸ் யூதமார்க்கத்தைப் பற்றி அறிந்து வைத்திருக்கிறான். (அப் 24:22)

"கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தைக் குறித்து அவன் சொல்லக்கேட்டான்" - யூதமார்க்கத்தைக் குறித்து பேலிக்ஸ் தெளிவாகத் தெரிந்து கொள்ள விரும்பினான். இந்த வழக்கு விசாரணையில் தீர்ப்பு கொடுப்பதற்கு யூதமார்க்கத்தைப் பற்றிய ஞானமும் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய ஞானமும் தனக்கு அதிகம் தேவைப்படுவதாக நினைத்தான்

24 அதிகாரம்

ஆகையினால் பவுலை அழைத்து கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தைக் குறித்து தனக்கு விளக்கிக் கூறுமாறு கூறினான் அப 24:22

பவுல் பேலிக்ஸிடம் மூன்று காரியங்களைக் குறித்துப் பேசுகிறான் அவையாவன

1 நீதி

2 இச்சையடக்கம்

3 நியாயத்தீர்ப்பு

நீதி (justice) - δικαιοσύνη - dikaiosynee - 1343

பெண்பால பெயர்ச்சொல - நீதி நீதியான செய்கை (righteousness, right doing)

இச்சையடக்கம் (self-control) - ἐγκράτεια - enkrateia - 1466

பெண்பால பெயர்சொல இச்சையடக்கம் (chastity) உணவு ஆசைகள் ஆகிய எல்லாக காரியங்களிலும் இச்சையடக்கம (moderation with regard to the appetites, passions, and propensities of all kinds). (கலா 5:23 2பேதுரு 1:6 1கொரி 7:9, 1கொரி 9:25; தீத்து 1:8)

நியாயத்தீர்ப்பு (judgment) - κρίμα - krima - 2917

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - தீர்ப்பு, ஆக்கினை, நியாயத்தீர்ப்பு (judgment to come; a day of retribution) தீர்ப்பு "judgment" (மத் 7:2 யோவான் 9:39; அப் 24:25; ரோமர் 2:2-3; ரோமர் 5:16, ரோமர் 11:33; கலா 5:10; எபி 6:2; 1பேதுரு 4:17; 2பேதுரு 2:3; வெளி 17:1 வெளி 20:4) ஆக்கினை "condemnation" (லூக்கா 23:40 1கொரி 11:34; 1தீமோ 3:6; யாக் 3:1, யூதா 1:4) ஆக்கினைக்குட்படுத்துதல் "condemned" லூக்கா 24:20

பயந்த (afraid) - ἔμφοβος emphobos - 1719

பெயரடை - பயப்பட்ட பயந்த - பயப்படு "afraid" (லூக்கா 24:5 அப் 10:4; அப 22:9); கலங்கி, பயந்து "affrighted" (லூக்கா 24:37 வெளி 11:13) (trembled, terrified)

"எனக்குச் சமயமானபோது உன்னை அழைப்பிப்பேன்" - பரிசுத்த ஆவியானவர் ஒருவனுடைய பாவத்தைக் குறித்து உணர்த்தும்போது அவன் மனந்திரும்ப வேண்டும். அப்படி மனந்திரும்பாதவர்கள் இப்படித்தான் சாக்குப் போக்கு சொல்வார்கள்

"பவுலை விடுதலை பண்ணும்படி தனக்கு அவன் பணங்கொடுப்பானென்று நம்பிக்கையுள்ளவனாயிருந்தான்" - பவுலுக்கு அநேக நண்பர்கள் இருந்தார்கள் கிறிஸ்தவ மார்க்கத்தில் பவுல் முக்கியமானவராகவும் தலைவராகவும் இருப்பது பேலிக்ஸிற்குத் தெரிய வருகிறது. ஆகையினால் பவுலை விடுதலை பண்ணினால் தனக்கு ஏதாவது பணம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறான்

"அவன் அநேகந்தரம் அவனை அழைத்து அவனுடனே பேசினான்" பவுலிடம் பேலிக்ஸ் என்னென்ன காரியங்களை எல்லாம் பேசினான் என்று தெரியவில்லை. அப 24:25 ஆவது வசனத்தின் அடிப்படையில் பேலிக்ஸ் பேசி இருந்திருக்கலாம்.

20. செசரியா பட்டணத்தில் இரண்டு வருஷங்கள் அமைதி

அப 24:27 இரண்டு வருஷம் சென்றபின்பு பேலிக்ஸ் என்பவனுக்குப் பதிலாய் பொர்க்கியுபெஸ்து தேசாதிபதியாக வந்தான், அப்பொழுது பேலிக்ஸ் யூதருக்கு தயவுசெய்ய மனதாய் பவுலைக் காவலில் வைத்துவிட்டுப்போனான்

24 அதிகாரம்

"இரண்டு வருஷம்" - பேலிக்ஸ் பவுலை விடுதலை பண்ணுவதற்குத் தனக்குப் பணம் கிடைக்குமென்று எதிர்பார்த்தான். ஆனால் பவுலோ அவனுடைய நண்பர்களோ பேலிக்ஸிற்குப் பணம் கொடுக்கவில்லை. ஆகையினால் பவுல் தொடர்ந்து விடுவிக்கப்படாமல் விசாரணைக் கைதியாகவே இருக்கிறான். இரண்டு வருஷம் ஆயிற்று. லஞ்சம் கொடுத்திருந்தால் இரண்டு வருஷத்திற்கு முன்பே விடுதலை பெற்றிருக்கலாம். பவுல் எப்போதுமே தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதையே விரும்புகிறவன். (அப் 24:26)

"பொர்க்கியுபெஸ்து (Festus)" பேலிக்ஸின் பதவிகாலம் முடிவு பெறுகிறது. அவனுக்குப் பதிலாக கி.பி 60 ஆம் ஆண்டில் பொர்க்கியுபெஸ்து தேசாதிபதியாக நியமிக்கப்படுகிறான். யூதமார்க்கத்தின் ஆசாரியர்களுடைய ஆதரவு தனக்குத் தேவை என்று பெஸ்து நினைக்கிறான்.

"பேலிக்ஸ் யூதருக்கு தயவுசெய்ய மனதாய் பவுலைக் காவலில் வைத்துவிட்டுப்போனான்" - பேலிக்ஸ் முன்பாகப் பவுல் விசாரிக்கப்பட்டான். தனக்குப் பவுல் லஞ்சம் கொடுப்பான் என்று எதிர்பார்த்தான். ஒன்றும் கிடைக்கவில்லை. பவுலைப் பேலிக்ஸ் பலமுறை அழைத்துப் பேசினான். ஆனால் பேலிக்ஸிற்கு ஒரு லாபமும் கிடைக்கவில்லை. யூதர்கள் இந்தக் கால தாமதத்தை விரும்பவில்லை. பேலிக்ஸிற்கு எதிராக இராயனிடம் முறையிட வேண்டுமென்று யூதர்கள் தீர்மானம் பண்ணுகிறார்கள். ஆகையினால் யூதர்களைப் பிரியப்படுத்துவது தனக்கு நல்லது என்று நினைத்து பேலிக்ஸ் யூதருக்கு தயவுசெய்ய மனதாய் பவுலைக் காவலில் வைத்துவிட்டுப்போனான். யூதரைப் பிரியப்படுத்தவில்லையென்றால் இராயனுக்கு முன்பாக பேலிக்ஸ் விசாரிக்கப்படும்போது அவனுக்குத் தண்டனை கிடைக்க வாய்ப்புள்ளது.

25 அதிகாரம்

21. பவுலைக் கொல்வதற்கு புதிய ஆலோசனை

அப் 25:1 பெஸ்து என்பவன் நாட்டிற்கு அதிபதியாக வந்து மூன்றுநாளான பின்பு, செசரியாவிலிருந்து எருசலேமுக்குப் போனான்

அப் 25:2 அப்பொழுது பிரதான ஆசாரியனும் யூதரில் முதன்மையானவர்களும் அவனிடத்தில் வந்து, பவுலுக்கு விரோதமாகப் பிராதுபண்ணி

அப் 25:3 அவனை வழியிலே கொன்றுபோடும்படி சர்ப்பனையான யோசனையுள்ளவர்களாய், தங்கள்மேல் தயவுசெய்து, அவனை எருசலேமுக்கு அழைப்பிக்கவேண்டுமென்று வேண்டிக் கொண்டார்கள்

"பிரதான ஆசாரியனும் யூதரில் முதன்மையானவர்களும் அவனிடத்தில் வந்து பவுலுக்கு விரோதமாகப் பிராதுபண்ணினார்கள்" - பவுலுக்கு எதிராகத் தேசாதிபதியாகிய பெஸ்துவிடம் புதிய பிராது பண்ணுகிறார்கள். பவுலை வழியிலே கொன்றுபோடும்படி சர்ப்பனையான யோசனையுள்ளவர்களாய் இருக்கிறார்கள். அதற்காகப் பவுலை எருசலேமுக்கு அழைப்பிக்கவேண்டுமென்று வேண்டிக் கொண்டார்கள் (அப் 25:3).

22. பெஸ்து சதியை முறியடிக்கிறான்

அப் 25:4 அதற்கு பெஸ்து பிரதியுத்தரமாக, [illegible] செசரியாவிலே காவல்பண்ணியிருக்கிறதே, நானும் சீக்கிரமாக அங்கே போகிறேன்

அப் 25:5 ஆகையால் உங்களில் திராணியுள்ளவர்கள் கூடவந்து, அந்த மனுஷனிடத்தில் குற்றம் ஏதாகிலும் உண்டானால், அந்தக் குற்றத்தை அவன்மேல் சாட்டட்டும் என்றான்

"பவுலைச் செசரியாவிலே காவல் பண்ணியிருக்கிறதே" - பவுலை எருசலேமிற்கு அனுப்ப பெஸ்து சம்மதம் தெரிவிக்கவில்லை. பிரதான ஆசாரியனும் யூதரில் முதன்மையானவர்களும் பவுலை எருசலேமிற்கு அனுப்புமாறு பெஸ்துவிடம் விண்ணப்பம் பண்ணுகிறார்கள். பெஸ்து இவர்களுடைய விண்ணப்பத்தை அங்கீகரித்து பவுலை எருசலேமிற்கு அனுப்பியிருக்கலாம். ஆனால் அது தேவனுடைய திட்டமல்ல. பவுல் எருசலேமிற்குப் போனால், யூதர்கள் வழியிலேயே அவனைக் கொன்றுபோடுவார்கள். ஆகையினால் தேவனுடைய தீர்மானத்தின் பிரகாரமாக பவுல் செசரியாவிலேயே விசாரிக்கப்படட்டும் என்று பெஸ்து கூறிவிடுகிறான்

23. பெஸ்துவிற்கு முன்பாக பவுல்

அப் 25:6 அவன் அவர்களிடத்திலே எட்டுநாளாகிலும் பத்துநாளாகிலும் சஞ்சரித்து, பின்பு செசரியாவுக்குப் போய், மறுநாளிலே நியாயாசனத்தில் உட்கார்ந்து, பவுலைக் கொண்டு வரும்படி கட்டளையிட்டான்

அப் 25:7 அவன் வந்தபோது, எருசலேமிலிருந்துவந்த யூதர்கள் அவனைச் சூழ்ந்து நின்று, தங்களால் ரூபிக்கக்கூடாத அநேகம் கொடிய குற்றங்களை அவன்மேல் சாட்டினார்கள்

அப் 25:8 அதற்கு அவன் உத்தரவாக: நான் யூதருடைய வேதப்பிரமாணத்துக்காகிலும் தேவாலயத்துக்காகிலும் இராயருக்காகிலும் விரோதமாக ஒரு குற்றமும் செய்யவில்லையென்று சொன்னான்

அப் 25:9 அப்பொழுது பெஸ்து யூதருக்குத் தயவுசெய்ய மனதாய், பவுலை நோக்கி: நீ எருசலேமுக்குப் போய், அவ்விடத்திலே இந்தக் காரியங்களைக் குறித்து எனக்கு முன்பாக நியாயம் விசாரிக்கப்பட உனக்குச் சம்மதியா என்றான்

அப்போஸ்தலர் – தொகுப்புரை

25 அதிகாரம்

"எருசலேமிலிருந்துவந்த யூதர்கள் அவனைச் சூழ்ந்து நின்று, தங்களால் ரூபிக்கக்கூடாத அநேக கொடிய குற்றங்களை அவன்மேல் சாட்டினார்கள்" - பெஸ்து புதிய தேசாதிபதி. அவனுக்குப் பவுலைக் குறித்தும் இந்த வழக்கைக் குறித்தும் அதிகமாகத் தெரியாது. ஆகையினால் பவுலுக்கு விரோதமாகவும் தங்களுக்கு ஆதரவாகவும் பெஸ்துவைத் திருப்புவதற்கு யூதர்கள் முயற்சி பண்ணுகிறார்கள். பவுலின்மீது அநேக குற்றச்சாட்டுக்களைக் கூறுகிறார்கள். ஆனாலும் அந்தக் குற்றச்சாட்டுக்கள் எதையும் அவர்களால் ரூபிக்க முடியவில்லை.

"நான் யூதருடைய வேதப் பிரமாணத்துக்காகிலும் தேவாலயத்துக்காகிலும் இராயருக்காகிலும் விரோதமாக ஒரு குற்றமும் செய்யவில்லை" - என்று பவுல் பெஸ்துவிடம் கூறுகிறான். தன்மீது சுமத்தப்பட்ட ஒவ்வொரு குற்றச்சாட்டிற்கும் பவுல் பதில் கூறுகிறான். பவுல்மீது மூன்று விதமான குற்றச்சாட்டுக்களை யூதர்கள் சுமத்துகிறார்கள். அவையாவன

1. பவுல் யூதருடைய வேதப்பிரமாணத்திற்கு விரோதமாகக் குற்றம் செய்தான்
2. தேவாலயத்திற்கு விரோதமாகக் குற்றம் செய்தான்
3. இராயருக்கு விரோதமாகக் குற்றம் செய்தான்

தன்மீது சுமத்தப்பட்ட இந்த மூன்று குற்றச்சாட்டுக்களையும் பவுல் மறுத்துப் பேசுகிறான்.

"பெஸ்து யூதருக்குத் தயவுசெய்ய மனதாய் இருக்கிறான்" தன்மீது சுமத்தப்பட்ட எல்லாக் குற்றச்சாட்டுக்களுக்கும் பதில் கூறிவிட்டான். ஆகையினால் பெஸ்துவால் பவுலைத் தண்டிக்க முடியவில்லை. இருந்தபோதிலும் பெஸ்துவிற்கு யூதருடைய ஆதரவு தேவைப்படுகிறது. அவர்களுக்குப் பெஸ்து தயவு செய்ய விரும்புகிறான். யூதர்களுடைய விருப்பத்தின் பிரகாரம் பவுலை எருசலேமிற்கு அனுப்புவதற்கு முயற்சி பண்ணுகிறான்.

24. பவுல் இராயனுக்கு அபயமிடுகிறான்

அப 25:10 அதற்குப் பவுல், நான் இராயருடைய நியாயாசனத்துக்கு முன்பாக நிற்கிறேன், அதற்கு முன்பாக நான் நியாயம் விசாரிக்கப்படவேண்டியது. யூதருக்கு நான் அநியாயம் ஒன்றும் செய்யவில்லை, அதை நீரும் நன்றாய் அறிந்திருக்கிறீர்.

அப 25:11 நான் அநியாயஞ்செய்து மரணத்துக்குப் பாத்திரமானது ஏதாகிலும் நடப்பித்ததுண்டானால், நான் சாகாதபடிக்கு மனுக்கேட்கமாட்டேன்; இவர்கள் என்மேல் சாட்டுகிற குற்றங்கள் முற்றிலும் அபத்தமானால், அவர்களுக்குத் தயவுபண்ணும்பொருட்டு ஒருவரும் என்னை அவர்களுக்கு ஒப்புக்கொடுக்கலாகாது; இராயருக்கு அபயமிடுகிறேன் என்றான்.

அப 25:12 அப்பொழுது பெஸ்து தன் ஆலோசனைக்காரருடனே ஆலோசித்து: நீ இராயருக்கு அபயமிட்டாயே, இராயினிடத்திற்கே போகக்கடவாயென்று உத்தரவு சொன்னான்.

"நான் இராயருடைய நியாயாசனத்துக்கு முன்பாக நிற்கிறேன் அதற்கு முன்பாக நான் நியாயம் விசாரிக்கப்படவேண்டியது" - எருசலேமிற்குப் போவதற்குப் பவுலுக்கு மனதில்லை. இதே வழக்கை அங்கு மூன்றாம் முறையாக விசாரிப்பார்கள். அது மட்டுமல்லாமல் எருசலேமிற்குப் போகும் வழியில் தன்னை யூதர்கள் கொன்றுபோடுவார்கள் என்பதும் பவுலுக்குத் தெரிந்திருக்கிறது. ரோமாபுரிக்கும் போகவேண்டுமென்று தேவன் பவுலுக்கு ஏற்கெனவே கூறியிருக்கிறார். ஆகையினால் பவுல் இராயருக்கு அபயமிடுகிறார் (அப 25:10-12)

"யூதருக்கு நான் அநியாயம் ஒன்றும் செய்யவில்லை அதை நீரும் நன்றாய் அறிந்திருக்கிறீர்" பவுல் கூறிய இந்த வாக்கியத்தைப் பெஸ்துவும் அங்கீகாரம் பண்ணுகிறார் (அப 25:18-19

25 அதிகாரம்

"இராயருக்கு அபயமிடுகிறேன்" - பெஸ்து யூதருக்குத் தயவு செய்ய மனதாயிருக்கிறார் என்பது பவுலுக்குத் தெரிய வருகிறது. ஆகையினால் எருசலேமிற்குத் தன்னை அனுப்புவது பவுலுக்குப் பிடிக்கவில்லை. இதன் காரணத்திற்காகவே பவுல் இராயருக்கு அபயமிடுகிறார். ரோமப்பிரஜை ஒவ்வொருவருக்கும் இராயருக்கு அபயமிடும் உரிமை உள்ளது. தன்னுடைய ஜீவனைக் காத்துக் கொண்டு இயேசு கிறிஸ்துவிற்காகத் தொடர்ந்து ஊழியம் செய்வதற்கு இதைவிட வேறு வழியில்லை என்பதைப் பவுல் அறிந்து வைத்திருக்கிறார். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் ரோமப்பிரஜைகள் எவரும் இராயருக்கு அபயமிடும் முடிவைத்தான் எடுப்பார்கள். இராயருக்கு அபயமிடுவது ரோமருடைய சட்டத்தின் பிரகாரம் மிகவும் முக்கியமான பகுதி. ஒரு குற்றவாளி இராயருக்கு அபயமிட்டபின்பு, தேசாதிபதி அவனை விசாரிப்பதும், தேசாதிபதி அவனுக்குத் தண்டனை கொடுப்பதும் சட்டப்படி குற்றமாகும்.

"பெஸ்து தன் ஆலோசனைக்காரருடனே ஆலோசித்தான்" - பவுல் தேசாதிபதியிடம் இராயனுக்கு அபயமிடுகிறேன் என்று கூறும்போது ஒரு நிபந்தனையைக் கூறுகிறார். தான் இராயருடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்பதாகவும், அந்த நியாயாசனத்திற்கு முன்பாகவே தான் நியாயம் விசாரிக்கப்பட வேண்டும் என்பதும் பவுலின் வேண்டுகோள். பெஸ்து இதை ஏற்றுக் கொள்ளாமல், தன்னை எருசலேமிற்கு அனுப்பினால் தான் இராயனுக்கு அபயமிடுவதாக பவுல் நிபந்தனை விதிக்கிறார்.

"ஆலோசனைக்காரர்" (council) - ஒவ்வொரு தேசத்திலும் தேசாதிபதிக்கு ஆலோசனை கூறுவதற்கு ஆலோசனைக்காரர்கள் நியமிக்கப்பட்டிருப்பார்கள். தேசாதிபதி தீர்ப்புக் கூறுவதற்கு முன்பாக ஆலோசனைக் காரர்களிடம் கலந்து ஆலோசனை பண்ணிய பின்பே தீர்ப்புக் கூறுவது வழக்கம். இந்த ஆலோசனைச் சங்கம் பவுலின் விருப்பத்தின் பிரகாரம் பவுலை இராயரிடம் அனுப்பி விடலாம் என்று ஆலோசனை கூறுகிறது. ஆகையினால் பெஸ்து "இராயரிடத்திற்கே போகக்கடவாய்" என்று உத்தரவு சொன்னான்.

ஆலோசனைக்காரர் (council) - συμβούλιον - symboulion - 4824

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - ஆலோசனை, யோசனை, ஆலோசனைக் காரர்

"நீ இராயருக்கு அபயமிட்டாயே" - மூலபாஷை புதிய ஏற்பாட்டில் "நீ இராயருக்கு அபயமிட்டாயா" என்று பெஸ்து பவுலிடம் கேள்வி கேட்பதாக உள்ளது. பவுல் அதை உறுதி செய்த பின்பு, பெஸ்து பவுலை இராயரிடம் அனுப்புமாறு தீர்ப்பு கூறுகிறான்.

25. பெஸ்து அகிரிப்பா இராஜாவிடம் பவுலைப் பற்றி கூறுகிறான்

அப் 25:13 சிலநாள் சென்றபின்பு, அகிரிப்பா ராஜாவும் பெர்னீக்கேயாளும் பெஸ்துவைக் கண்டு கொள்ளும்படி செசரியாவுக்கு வந்தார்கள்.

அப் 25:14 அவர்கள் அங்கே அநேகநாள் சஞ்சரித்திருக்கையில், பெஸ்து பவுலின் சங்கதியை ராஜாவுக்கு விவரித்து: பேலிக்ஸ் காவலில் வைத்துப்போன ஒரு மனுஷன் இருக்கிறான்.

அப் 25:15 நான் எருசலேமில் இருந்த போது பிரதான ஆசாரியர்களும் யூதருடைய மூப்பர்களும் அவனைக் குறித்து என்னிடத்தில் பிராதுபண்ணி, அவனுக்கு விரோதமாகத் தீர்ப்புசெய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்.

அப் 25:16 அவர்களுக்கு நான் பிரதியுத்தரமாக: குற்றஞ்சாட்டப்பட்ட மனுஷன் குற்றஞ்சாட்டினவர்களுக்கு முகமுகமாய் நின்று சாட்டின குற்றத்துக்குத் தனக்காக எதிருத்தரவு சொல்ல அவனுக்கு இடங்கிடைக்கிறதற்கு முன்னே, குற்றஞ்சாட்டினவர்கள் பட்சமாய் அவனை மரணத்திற்கு ஒப்புக் கொடுக்கிறது ரோமருக்கு வழக்கமல்ல என்றேன்.

25 அதிகாரம்

அப் 25:17 ஆகையால் அவர்கள் இங்கே கூடி வந்தபோது, நான் எவ்வளவும் தாமதம் பண்ணாமல் மறுநாள் நியாயாசனத்தில் உட்கார்ந்து, அந்த மனுஷனைக் கொண்டு வரும்படி கட்டளையிட்டேன்

அப் 25:18 அப்பொழுது குற்றஞ்சாட்டினவர்கள் வந்துநின்று, நான் நினைத்திருந்த குற்றங்களில் ஒன்றையும் அவன்மேல் சுமத்தாமல்

அப் 25:19 தங்களுடைய மார்க்கத்தைக் குறித்தும் மரித்துப்போன இயேசு என்னும் ஒருவன் உயிரோடிருக்கிறான் என்று பவுல் சாதித்ததைக் குறித்தும் சில தர்க்கவிஷயங்களை அவன்பேரில் விரோதமாய்ச் சொன்னார்கள்

அப் 25:20 இப்படிப்பட்ட தர்க்க விஷயங்களைக் குறித்து எனக்குச் சந்தேகமிருந்தபடியினால், நீ எருசலேமுக்குப் போய், அங்கே இவைகளைக் குறித்து நியாயம் விசாரிக்கப்பட உனக்குச் சம்மதியா என்று கேட்டேன்

அப் 25:21 அதற்குப் பவுல், நான் இராயருக்கு முன்பாக நியாயம் விசாரிக்கப்படும்படிக்கு நிறுத்திவைக்கப்பட வேண்டுமென்று அபயமிட்டபோது, நான் அவனை இராயனிடத்திற்கு அனுப்புமளவும் காவல்பண்ணும்படி கட்டளையிட்டேன் என்றான்

அப் 25:22 அப்பொழுது அகிரிப்பா பெஸ்துவை நோக்கி: அந்த மனுஷன் சொல்லுகிறதை நானும் கேட்க மனதாயிருக்கிறேன் என்றான் அதற்கு அவன் நாளைக்கு நீர் கேட்கலாம் என்றான்

"அகிரிப்பா ராஜா" (Agrippa) - ஏரோது அகிரிப்பாவின் இரண்டாவது மகன் அப் 12 ஆவது வசனத்தில் இவனைப் பற்றிய குறிப்பு உள்ளது ஏரோது அகிரிப்பா (Herod Agrippa) மரிக்கும்போது, அகிரிப்பா சிறுவனாக இருந்தான் ராஜ்யபாரத்தை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் இல்லை கிபி 50 ஆம் ஆண்டில் கிலவுதியுராயன் (Claudius) காலசிஸ் (Chalcis) தேசத்திற்கு இராஜாவாக்கினான் இவனுடைய மாமன் இரண்டு வருஷங்களுக்கு முன்பு மரித்துப் போனான் அவன் பெர்னிக்கேயாளுடைய கணவன் இதன் பின்பு அபிலேனே (Abilene) துராகோனியா (Trachonitis) ஆகிய காற்பங்கு தேசங்களுக்கு (tetrarchies) அகிரிப்பா ராஜாவாக நியமிக்கப்பட்டான் இவன் ஒரு இதுமேயன் (Idumean) யூதருடைய பிரமாணத்தை நன்கு அறிந்திருந்தான் பிரதான ஆசாரியர்களை நியமிக்கும் அதிகாரம் இவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது ரோமரோடு இவன் நெருங்கிய பழக்கம் வைத்திருந்தான் யூதர்கள் எந்தக் கலகமும் செய்துவிடாதவாறு அவர்களைக் கட்டுப்பாட்டோடு ஆளுகை செய்தான் யூதர்கள் கலகம் பண்ணியபோது தீத்துவோடு தன்னுடைய ராணுவத்தையும் அனுப்பி எருசலேம் பட்டணத்தை அழித்துப் போட்டான்

"பெஸ்துவைக் கண்டுகொள்ளும்படி செசரியாவுக்கு வந்தார்கள்" புதிய தேசாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கும் பெஸ்துவை வாழ்த்துவதற்காகவும் அவனுக்குத் தங்களுடைய மரியாதையைத் தெரிவிப்பதற்காகவும் அகிரிப்பா இராஜாவும், பெர்னிக்கேயாளும் செசரியாவிற்கு வந்தார்கள்

"பேலிக்ஸ் காவலில் வைத்துப்போன ஒரு மனுஷன் இருக்கிறான்" - அகிரிப்பா இராஜாவிற்கு யூதருடைய பிரமாணங்கள் நன்றாகத் தெரியும் என்பது பெஸ்துவிற்குத் தெரிய வருகிறது. ஆகையினால் பவுலின் வழக்கைக் குறித்து பெஸ்து அகிரிப்பாவிடம் பேசுகிறான்

25 அதிகாரம்

"ரோமருக்கு வழக்கமல்ல" - ரோமருக்கு என்று சில வழக்கங்கள் உள்ளன. பல விஷயங்களில் யூதர்களைவிட புறஜாதியாராகிய ரோமர்கள் நீதியாகவும் நேர்மையாகவும் நடந்து கொள்கிறார்கள். ஒருவன்மீது குற்றம் சுமத்தப்பட்டால் அவனுக்குத் தன்னுடைய நியாயத்தை எடுத்துக்கூற யூதர்கள் அனுமதியளிக்கிறார்கள். அவனுக்கு வாய்ப்பு கொடுக்காமலேயே அவனைக் குற்றவாளியாகத் தீர்ப்பது ரோமருடைய வழக்கமல்ல. யூதர்கள் தங்களுடைய சொந்த மேசியாவையே கொலை செய்து விட்டார்கள். எந்தவித வழக்கு விசாரணையும் இல்லாமல் ஸ்தேவானைக் கொன்றுபோட்டார்கள். யூதர்கள் தங்களுடைய மார்க்கத்திற்கு நியாயமாக நடந்து கொள்வதாக நினைத்து அநியாயமாக நடந்து கொள்கிறார்கள்.

"நான் நினைத்திருந்த குற்றங்களில் ஒன்றையும் அவன்மேல் சுமத்தவில்லை" ரோமர்கள் காரணமில்லாமல் யாருக்கும் மரண தண்டனை கொடுக்கமாட்டார்கள். பவுல்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்காக பவுலுக்கு மரண தண்டனை கொடுக்க முடியாது. பெஸ்து தன் மனதில் பெரிய குற்றச்சாட்டுக்களை நினைத்திருந்தான். ஆனால் யூதர்கள் வேறு விதமாகப் பவுல்மீது குற்றம் சுமத்துகிறார்கள். யூதர்களும் பவுலும் இயேசுவைப் பற்றியும் தங்களுடைய மார்க்கத்தைப் பற்றியும் மரித்தோர் உயிர்த்தெழுதலைப் பற்றியும் மாறிமாறி பேசுகிறார்கள். பெஸ்துவிற்கு இவர்கள் பேசுவது ஒன்றும் புரியவில்லை. ஆகையினால் எருசலேமில் இந்த வழக்கை விசாரிக்கலாமா என்று பெஸ்து கேட்கும்போது, பவுல் ராயருக்கு அபயமிடுவதாகக் கூறிவிடுகிறார் அப் 25:14-27

"மார்க்கம்" (superstition) - பவுலுடைய விசுவாசம். கிறிஸ்தவ மார்க்கம்.

"மரித்துப்போன இயேசு என்னும் ஒருவன் உயிரோடிருக்கிறானென்று பவுல் சாதித்தது" - யூதருக்கும் பவுலுக்கும் இடையே நடைபெறும் விவாதத்தில் பெஸ்து புரிந்து கொண்டது இது மட்டுமே.

"இப்படிப்பட்ட தர்க்க விஷயங்களைக் குறித்து பெஸ்துவிற்குச் சந்தேகமிருந்தது" - பெஸ்துவிற்கு யூதமார்க்கத்தைப் பற்றியும் கிறிஸ்தவ மார்க்கத்தைப் பற்றியும் சரியாகத் தெரியவில்லை. எருசலேமிலே யூதருடைய தேவாலயம் உள்ளது. ஆகையினால் பவுலை அங்கு அழைத்துச் சென்று விசாரித்தால் இந்த வழக்கை விளங்கிக் கொள்வதற்குத் தனக்கு உபயோகமாக இருக்குமென்றும் தன்னுடைய சந்தேகங்கள் தீருமென்றும் பெஸ்து நினைத்தான்.

"இராயர்" - இந்த வசனத்தில் இராயர் என்பது அகஸ்து (Augustus) இராயனைக் குறிக்கும். இவனுடைய பெயராலேயே ஒரு மாதத்திற்கு ஆகஸ்ட் மாதம் (august) என்று பெயரிடப்பட்டிருக்கிறது. இந்தப் பெயருக்கு வணக்கத்திற்குரிய, போற்றுதற்குரிய, மதிப்புக்குரிய என்று பொருள். ஜூலியஸ் சீசர் மரித்த பின்பு ரோமப்பேரரசிற்குத் தங்களுடைய பெயர்களுக்கு முன்பு இப்படிப்பட்ட பட்டப் பெயர்களைச் சேர்த்துக் கொண்டார்கள்.

"அந்த மனுஷன் சொல்லுகிறதை நானும் கேட்க மனதாயிருக்கிறேன்" பவுல் சிறைக்கைதியாக இருக்கிறான். ஆனாலும் அவன் புகழ் பரவுகிறது. பவுல் சொல்வதைக் கேட்க இராஜாவும் விரும்புகிறான் (மத் 10:18; அப் 9:15). பவுலின் பெயர் ஏற்கெனவே யூதேயா, சமாரியா, சீரியா, ஆசியா, கிரேக்கு ஆகிய தேசங்களிலும், மேலும் பல தேசங்களிலும் பிரசித்தமாக இருந்தது. ஆகையினால் அகிரிப்பா ராஜா பவுல் கூறுவதைக் கேட்க வேண்டுமென்று விரும்புகிறான். அகிரிப்பா இராஜாவின் தந்தையாகிய ஏரோது அகிரிப்பா கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியவன். யாக்கோபைக் கொன்றவன் ஏரோது அகிரிப்பா. ஏற்ற வேளையில் மரிக்கவில்லையென்றால் எல்லா அப்போஸ்தலர்களையும் கொன்றுபோட்டிருப்பான். இந்த இடைப்பட்ட காலத்தில் அகிரிப்பா ராஜா கிறிஸ்தவ மார்க்கத்தைப் பற்றி ஏராளமாகக் கேள்விப்பட்டிருக்கிறான்.

25 அதிகாரம்

26. அகிரிப்பா இராஜாவிற்கு முன்பாக பவுல்

அப் 25:23 மறுநாளிலே அகிரிப்பாவும் பெர்னீக்கேயாளும் மிகுந்த ஆடம்பரத்துடனே வந்து சேனாபதிகளோடும் பட்டணத்துப் பிரதான மனுஷரோடுங்கூட நியாயஸ்தலத்தில் பிரவேசித்தார்கள் உடனே பெஸ்துவினுடைய கட்டளையின்படி பவுல் கொண்டுவரப்பட்டான்

அப் 25:24 அப்பொழுது பெஸ்து, அகிரிப்பா ராஜாவே, எங்களோடேகூட இவ்விடத்தில் வந்திருக்கிறவர்களே நீங்கள் காண்கிற இந்த மனுஷனைக்குறித்து யூதஜனங்களெல்லாரும் எருசலேமிலும் இவ்விடத்திலும் என்னை வருந்திக் கேட்டுக்கொண்டு, இவன் இனி உயிரோடிருக்கிறது தகாதென்று சொல்லிக் கூக்குரலிட்டார்கள்

அப் 25:25 இவன் மரணத்துக்குப் பாத்திரமான தொன்றையும் செய்யவில்லையென்று நான் அறிந்து கொண்டதினாலும், இவன்தானே இராயனுக்கு அபயமிட்டபடியினாலும் அவரிடத்தில் இவனை அனுப்பும்படி தீர்மானம்பண்ணினேன்

அப் 25:26 இவனைக்குறித்து ஆண்டவனுக்கு எழுதுகிறதற்கு நிச்சயப்பட்ட காரியமொன்றும் எனக்கு விளங்கவில்லை காவல் பண்ணப்பட்ட ஒருவன் செய்த குற்றங்களை எடுத்துக் காட்டாமல் அனுப்புகிறது புத்தியீனமான காரியமென்று எனக்குத் தோன்றுகிறபடியினாலே

அப் 25:27 இவனை விசாரித்துக் கேட்டபின்பு எழுதத்தக்க விசேஷம் எதாகிலும் எனக்கு விளங்கும்படி இவனை உங்களுக்கு முன்பாகவும் விசேஷமாய் அகிரிப்பா ராஜாவே, உமக்கு முன்பாகவும் கொண்டுவந்தேன் என்றான்

"அகிரிப்பாவும் பெர்னீக்கேயாளும் மிகுந்த ஆடம்பரத்துடனே வந்தார்கள்" - மிகுந்த ஆடம்பரமாக இருவரும் காட்சி தந்தார்கள் இந்த வாக்கியத்தைக் குறிப்பதற்கு இரண்டு கிரேக்க வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன அவையாவன

ஆடம்பரம் (pomp) - φαντασία - **phantasia** - 5325

பெண்பால் பெயர்ச்சொல் - ஆடம்பரம் (splendor, parade) (அப் 25:23)

காட்சியாயிரு (sight) - φαντάζω - **phantazoo** - 5324

வினைச்சொல் - காட்சியாயிரு (எபி 12:21)

சேனாபதிகள் (chief captains) - χιλίαρχος - **chiliarchos** - 5506

ஆண்பால் பெயர்ச்சொல் - தலைவன் சேனாபதி, சேனைத்தலைவர் - ரோமருடைய சேனையில் (1000) போர் வீரர்களுக்குத் தலைவன்

"பிரதான மனுஷர்" (principal men of the city) - செசரியா பட்டணத்தில் மிகவும் முக்கியமான பிரமுகர்கள்

"அப்பொழுது பெஸ்து . . ." பெஸ்து அங்கு கூடியிருக்கும் எல்லோருக்கும் பவுலைப் பற்றி அறிமுகம் செய்து வைக்கிறான் இப்பொழுது வழக்கு விசாரணை நடைபெறவில்லை ரோமாபுரியில்தான் இனிமேல் பவுலை விசாரிப்பார்கள் இங்கு பவுல் தன்னுடைய மார்க்கத்தைப் பற்றிக் கூறப்போகிறான் அதைக் கேட்பதற்காக பெஸ்துவும் அகிரிப்பா இராஜாவும் பெர்னீக்கேயாளும் சேனாபதிகளும் பட்டணத்து பிரதான மனுஷரும் நியாயஸ்தலத்திலே கூடிவந்திருக்கிறார்கள்

"இவன் மரணத்துக்குப் பாத்திரமான தொன்றையும் செய்யவில்லை" பவுல் குற்றமற்றவன் என்பதை பெஸ்து மறுபடியும் சாட்சியாக அறிவிக்கிறான் (அப் 25:18-19,25)

அப்போஸ்தலர் - தொகுப்புரை

25 அதிகாரம்

"இவனைக்குறித்து ஆண்டவனுக்கு எழுதுகிறதற்கு" இந்த வாக்கியத்தில் பெஸ்து ஆண்டவன் என்று இராயனைக் குறிப்பிடுகிறான் ஆனால் ரோமப்பேரரசர்கள் இந்தப் பட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை நீரோ மன்னனும் வேறுசில மன்னர்களும் தங்களை ஆண்டவன் என்று அழைப்பதை அங்கீகரித்தார்கள்

ஆண்டவர் (lord) - κύριος - kyrios - 2962

ஆண்பால் பெயர்ச்சொல் கர்த்தர் எஜமான் ஆண்டவர் ஐயா உடையவர் தேவரீர்

26 அதிகாரம்

27. அகிரிப்பா இராஜாவிற்கு முன்பாக பவுல் உத்தரவு சொல்கிறான்

(1) கிறிஸ்தவர்களின் உபத்திரவம் - அப ½

அப 26.1 அகிரிப்பா பவுலை நோக்கி நீ உனக்காகப் பேச உனக்கு உத்தரவாகிறது என்றான் அப்பொழுது பவுல் கையை நீட்டி தனக்காக உத்தரவு சொல்லத் தொடங்கினான்

அப 26.2 அகிரிப்பா ராஜாவே யூதர்கள் என்மேல் சாட்டுகிற சகல காரியங்களைக் குறித்தும் நான் இன்றைக்கு உமக்கு முன்பாக உத்தரவு சொல்லப் போகிறபடியினாலே என்னைப் பாக்கியவான் என்றெண்ணுகிறேன்

அப 26.3 விசேஷமாய் நீர் யூதருடைய சகல முறைமைகளையும் தர்க்கங்களையும் அறிந்தவரானதால் அப்படி எண்ணுகிறேன் ஆகையால் நான் சொல்வதைப் பொறுமையோடே கேட்கும்படி உம்மை வேண்டிக் கொள்ளுகிறேன்

அப 26.4 நான் என் சிறுவயது முதற்கொண்டு, எருசலேமிலே என் ஜனத்தாருக்குள்ளே இருந்தபடியால் ஆதிமுதல் நான் நடந்த நடக்கையை யூதரெல்லாரும் அறிந்திருக்கிறார்கள்

அப் 26.5 நம்முடைய மார்க்கத்திலுள்ள சமய பேதங்களில் மிகவும் கண்டிப்பான சமயத்துக்கு இசைந்தபடி பரிசேயனாய் நடந்தேனென்று சாட்சிசொல்ல அவர்களுக்கு மனதிருந்தால் சொல்லலாம்

அப 26.6 தேவன் நம்முடைய பிதாக்களுக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தம் நிறைவேறுமென்கிற நம்பிக்கைக்காகவே நான் இப்பொழுது நியாயத்தீர்ப்படைகிறவனாய் நிற்கிறேன்

அப 26.7 இரவும் பகலும் இடைவிடாமல் ஆராதனை செய்து வருகிற நம்முடைய பன்னிரண்டு கோத்திரத்தாரும் அந்த வாக்குத்தத்தம் நிறைவேறுமென்று நம்பியிருக்கிறார்கள் அகிரிப்பா ராஜாவே அந்த நம்பிக்கையினிமித்தமே யூதர்கள் என்மேல் குற்றஞ்சாட்டுகிறார்கள்

அப 26.8 தேவன் மரித்தோரை எழுப்புகிறது நம்பப்படாத காரியமென்று நீங்கள் எண்ணுகிறதென்ன?

அப 26.9 முன்னே நானும் நசரேயனாகிய இயேசுவின் நாமத்திற்கு விரோதமாய் அநேக காரியங்களை நடப்பிக்க வேண்டுமென்று நினைத்திருந்தேன்

அப 26.10 அப்படியே நான் எருசலேமிலும் செய்தேன் நான் பிரதான ஆசாரியர்களிடத்தில் அதிகாரம் பெற்று பரிசுத்தவான்களில் அநேகரைச் சிறைச்சாலைகளில் அடைத்தேன் அவர்கள் கொலை செய்யப்படுகையில் நானும் சம்மதித்திருந்தேன்

அப் 26.11 சகல ஜெபஆலயங்களிலும் நான் அவர்களை அநேகந்தரம் தண்டித்து தேவதூஷணம் சொல்லக் கட்டாயப்படுத்தினேன் அவர்கள்பேரில் மூர்க்கவெறி கொண்டவனாய் அந்நிய பட்டணங்கள் வரைக்கும் அவர்களைத் துன்பப்படுத்தினேன்

அப் 26.12 இப்படிச் செய்துவருகையில், நான் பிரதான ஆசாரியர்களிடத்தில் அதிகாரமும் உத்தரவும் பெற்று தமஸ்குவுக்குப்போகும்போது

"பவுல் கையை நீட்டி, தனக்காக உத்தரவு சொல்லத் தொடங்கினான்" பழங்காலத்தில் உத்தரவு சொல்லும்போது ஒருவன் தனது வலது கையை நீட்டி உத்தரவு சொல்வது வழக்கம். (அப 19.33)

அப்போஸ்தலர் – தொகுப்புரை

26 அதிகாரம்

பாக்கியவான் (happy) μακάριος - makarios - 3107

ஆண்பால் பெயர்ச்சொல் - பாக்கியவான், பாக்கியம் - இதன் மொழிபெயர்ப்புக்கள் பாக்கியம் பாக்கியவான் "happy" (யோவான் 13:17; அப் 26:2; ரோமர் 14:22 1கொரி 7:40; 1பேதுரு 3:14; 1பேதுரு 4:14), பாக்கியவான் "blessed" (மத் 5:3-11; மத் 11:6; மத் 13:16 மத் 16:17; மத் 24:46; லூக்கா 1:45 லூக்கா 6:20-22; லூக்கா 7:23 லூக்கா 10:23; லூக்கா 11:27-28 லூக்கா 12:37-43; லூக்கா 14:14-15, லூக்கா 23:29; யோவான் 20:29, அப் 20:35; ரோமர் 4:7-8; 1தீமோ 1:11; 1தீமோ 6:15; தீத்து 2:13; யாக் 1:12,25, வெளி 1:3; வெளி 14:13; வெளி 16:15; வெளி 19:9; வெளி 20:6; வெளி 22:7,14) அகிரிப்பாவிற்கு முன்பாக பேச வாய்ப்புக் கிடைத்ததனால் பவுல் தன்னைப் பாக்கியவானாகக் கருதுகிறான். அகிரிப்பா மிகவும் ஞானமுள்ள நியாயாதிபதி. யூதருடைய பழக்கவழக்கங்களை நன்கு தெரிந்தவன் (அப் 26:2-3)

முறைமைகள் (customs) - ἔθος - ethos - 1485

பால் வேறுபாடற்ற பெயர்சொல் - முறைமை, வழக்கம். இதன் மொழிபெயர்ப்புக்கள் "custom" (லூக்கா 1:9; லூக்கா 2:42; அப் 6:14; அப் 16:21; அப் 21:21, அப் 26:3; அப் 28:17); "manner" (யோவான் 19:40; அப் 15:1; அப் 25:16, எபி 10:25), "as one is wont" (லூக்கா 22:39)

தர்க்கங்கள் (questions) ζήτημα zeeteema 2213

பால் வேறுபாடற்ற பெயர்சொல் - தீர்மானம், விசாரணை, விஷயம், தர்க்கம், தர்க்கவிஷயம் (an inquiry) (அப் 26:3 அப் 15:2, அப் 18:15; அப் 23:29 அப் 25:19

"நான் என் சிறுவயதுமுதற்கொண்டு" - பவுலின் சிறுவயதுமுதல் வாலிப வயது வரையிலும். (மத் 19:20; மாற்கு 10:20, லூக்கா 18:21; 1தீமோ 4:12) பவுல் தர்சுவில் பிறந்தவன். வாலிபனாக இருந்தபோது எருசலேமில் கல்வி கற்றவன். யூதருடைய வழக்கத்தின் பிரகாரம் ஆண்மகனுக்கு 12 வயது ஆகும்போது அவனுக்கு வருஷாந்தர சடங்குகள் செய்வது வழக்கம். பவுலின் சகோதரியின் மகனுக்கும் அப் 23:16 ஆவது வசனத்தில் இதுபோன்ற சடங்குகள் நடைபெற்றிருக்கலாம்.

சிறுவயது (youth) - νεότης - neotees - 3503

பெண்பால் பெயர்ச்சொல் - சிறுவயது, இளமை

"ஆதிமுதல் நான் நடந்த நடக்கையை யூதரெல்லாரும் அறிந்திருக்கிறார்கள்" - பவுலுக்கும் ஏராளமான யூதர்களைத் தெரியும். அதுபோலவே யூதர்களுக்கும் பவுலை நன்றாகத் தெரியும்.

"நம்முடைய மார்க்கத்திலுள்ள சமய பேதங்கள்" - (அப் 5:17) யூதமார்க்கத்தில் இரண்டு முக்கியமான பிரிவினர்கள் இருந்தார்கள். அவர்களாவன 1. பரிசேயர் 2. சதுசேயர். பரிசேயர்கள் யூதமார்க்கத்து முறைமைகளைத் தீர்மானமாகக் கடைப்பிடிப்பவர்கள்

சமயபேதம் (sect) - αἵρεσις - hairesis - 139

பெண்பால் பெயர்சொல் - சமயத்தார், மதபேதம், சமயபேதம், மார்க்கபேதம், வேதபுரட்டு

"வாக்குத்தத்தம் நிறைவேறுமென்கிற நம்பிக்கை" - பவுல் எந்தப் பாவமும் செய்யவில்லை. மரித்தோர் உயிர்த்தெழுவார்கள் என்பது வாக்குத்தத்தம். அந்த வாக்குத்தத்தம் நிறைவேற வேண்டுமென்று பரிசேயர்கள் நம்புகிறார்கள். பவுல் இந்த நம்பிக்கையைப் பற்றி அறிவித்ததற்காக இப்பொழுது விசாரிக்கப் படுகிறார் (அப் 23:6; அப் 24:15,25; அப் 25:19

"தேவன் நம்முடைய பிதாக்களுக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தம்" (ஆதி 12:1-3; யோபு 19:26, சங் 16:10 சங் 17:15; ஏசா 26:19; தானி 12:2

26 அதிகாரம்

"பன்னிரண்டு கோத்திரத்தார்" - இஸ்ரவேல் புத்திரில் பன்னிரெண்டு கோத்திரத்தார் இருந்தார்கள். அவர்களில் பத்து கோத்திரத்தார் அழிந்துபோனதாக ஒருசிலர் நினைக்கிறார்கள். ஆனால் பவுல் பன்னிரெண்டு கோத்திரத்தாரும் இருப்பதாக நம்புகிறார். அவர்கள் உலகமெங்கும் சிதறியிருக்கிறார்கள்.

"முன்னே நானும் நசரேயனாகிய இயேசுவின் நாமத்திற்கு விரோதமாய் அநேக காரியங்களை நடப்பிக்கவேண்டுமென்று நினைத்திருந்தேன்" - (அப் 7:58; அப் 8:1-3; அப் 9:1-2; அப் 22:4-5)

"பரிசுத்தவான்கள்" (saints) - சுவிசேஷ புஸ்தகத்தில் ஒரு வசனத்தில் மட்டுமே இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது (மத் 27:52). அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் கிறிஸ்தவரைக் குறிப்பதற்கு இந்த வார்த்தை 4 வசனங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (அப் 9:13, 32, 41; அப் 26:10). நிருபங்களிலும், வெளிப்படுத்தின விசேஷத்திலும் இந்த வார்த்தை 56 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

"பரிசுத்தவான்களில் அநேகரைச் சிறைச்சாலைகளில் அடைத்தேன்; அவர்கள் கொலைசெய்யப்படுகையில் நானும் சம்மதித்திருந்தேன்" - பவுல் கிறிஸ்தவர்களைச் சிறையில் அடைத்தார்; துன்புறுத்தினார்; கொலைபண்ணினார்; இயேசு கிறிஸ்துவிற்கு எதிராகத் தூஷணவார்த்தை கூறுமாறு அவர்களைக் கட்டாயப்படுத்தினார் (அப் 26:9-12). ஆனால் எந்தக் கிறிஸ்தவர்களைப் பவுல் துன்புறுத்தினாரோ அந்தக் கிறிஸ்தவர்களில் இப்போது பவுலும் ஒருவர். அவர்களுக்கு பவுல் சாதகமாகப் பேசுகிறார்.

"அவர்கள்பேரில் மூர்க்கவெறி கொண்டவனாய்" - பவுல் கிறிஸ்தவர்களுக்கு எதிராக மூர்க்கவெறி கொண்டிருந்தார். தன்னுடைய யூத மார்க்கத்தில் மிகவும் வைராக்கியமாக இருந்தார்.

"அந்நியபட்டணங்கள்" (strange cities) - யூதருடைய ஆளுகைக்கு அப்பாற்பட்ட பட்டணங்களான தமஸ்கு வரைக்கும் சென்று பவுல் கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தினார் (அப் 26:12).

"பவுல் தமஸ்குவுக்குப்போகும்போது" - (அப் 9:1-18)

(2) பவுலின் மனமாற்றம் - (9:3; 23:6)

அப் 26:13 மத்தியான வேளையில், ராஜாவே, நான் வழியிலே சூரியனுடைய பிரகாசத்திலும் அதிகமான ஒளி வானத்திலிருந்து என்னையும் என்னுடனேகூடப் பிரயாணம் பண்ணினவர்களையும் சுற்றிப் பிரகாசிக்கக் கண்டேன்.

அப் 26:14 நாங்களெல்லாரும் தரையிலே விழுந்தபோது: சவுலே, சவுலே, நீ ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய்? முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாமென்று எபிரெயு பாஷையிலே என்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டேன்.

அப் 26:15 அப்பொழுது நான்: ஆண்டவரே, நீர் யார் என்றேன். அதற்கு அவர்: நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே.

அப் 26:16 இப்பொழுது நீ எழுந்து, காலூன்றி நில். நீ கண்டவைகளையும் நான் உனக்குத் தரிசனமாகிக் காண்பிக்கப்போகிறவைகளையும் குறித்து உன்னை ஊழியக்காரனாகவும் சாட்சியாகவும் ஏற்படுத்துகிறதற்காக உனக்குத் தரிசனமானேன்.

அப் 26:17 உன் சுயஜனத்தாரிடத்தினின்றும் அந்நிய ஜனத்தாரிடத்தினின்றும் உன்னை விடுதலையாக்கி,

அப் 26:18 அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக, அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டு தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு, நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும்பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார்.

26 அதிகாரம்

"மத்தியான வேளையில்......பிரகாசிக்கக் கண்டேன்" - மத்தியான வேளையிலே சூரியன் பிரகாசமாக இருந்தது. அந்தச் சூரியனுடைய பிரகாசத்திலும் அதிகமான ஒளி வானத்திலிருந்து தோன்றிற்று. பவுலோடு பிரயாணம் பண்ணினவர்களும் அந்த ஒளியைக் கண்டார்கள். இது ஒரு தெய்வீக சக்தியாக இருந்ததினால் பவுலும் அவனோடு கூட இருந்தவர்களும் தரையிலே விழுந்தார்கள் (அப் 26:14) பவுலோடு கூடச் சென்றவர்கள் ஒரு சத்தத்தைக் கேட்டார்கள். பவுல் பேசப்பட்ட சத்தத்தில் கூறப்பட்டிருக்கும் வார்த்தைகளைக் கேட்டார் (அப 9:7; அப 22:9)

முட்கள் (pricks) - κέντρον - kentron - 2759

பாலவேறுபாடற்ற பெயர்ச்சொல் - முள், கூர், கொடுக்கு (goads, spurs) - முள் "prick" (அப 9:5 அப 26:14) கொடுக்கு "sting" (1கொரி 15:55-56; வெளி 9:10)

ஊழியக்காரன் (minister) - ὑπηρέτης - hypeeretees - 5257

ஆண்பால் பெயர்ச்சொல் - சேவகன், வேலைக்காரன், பணிவிடைக்காரன், ஊழியக்காரன், உதவிக்காரன் - மேலதிகாரியினுடைய உத்தரவிற்குக் கட்டுப்பட்டுச் செயல்படுகிற வேலையாள். இதன் மற்ற மொழி பெயர்ப்புகள்: சேவகர் "servant" (மத் 26:58, மாற்கு 14:54,65; யோவான் 18:36); பணிவிடைக்காரன் ஊழியக்காரன் "minister" (லூக்கா 1:2, லூக்கா 4:20; அப 13:5; அப 26:16, 1கொரி 4:1); சேவகர் "officer" (மத் 5:25; யோவான் 7:32, 45-46, யோவான் 18:3,12,18,22; யோவான் 19:6, யோவான் 5:22- 26)

பவுல் இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு வேலை செய்யும் ஊழியக்காரன்

சாட்சி (witness) - μάρτυς - martys - 3144

ஆண்பால் பெயர்ச்சொல் - சாட்சி "witness" (மத் 18:16; மத் 26:65, மாற்கு 14:63; லூக்கா 24:48 அப 1:8,22; அப் 2:32; அப் 3:15, அப் 5:32; அப 6:13; அப 7:58 அப 10:39,41; அப 13:31; அப 22:15 அப 26:16; ரோமர் 1:9; 2கொரி 13:1 1தெச 2:5,10; 1தீமோ 5:19; 1தீமோ 6:12; 2தீமோ 2:2; எபி 10:28; எபி 12:1; 1பேதுரு 5:1; வெளி 1:5; வெளி 3:14; வெளி 11:3); "martyr" (அப 22:20; வெளி 2:13; வெளி 17:6) "record" (2கொரி 1:23; பிலி 1:8

தீர்க்கதரிசன எண் - 15

"நான் உனக்குத் தரிசனமாகிக் காண்பிக்கப்போகிறவைகளையும் குறித்து உன்னை ஊழியக்காரனாகவும் சாட்சியாகவும் ஏற்படுத்துகிறதற்காக உனக்குத் தரிசனமானேன்_____" (அப் 26:16-18) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று கிறிஸ்து பவுலோடு இன்னும் பேசுவார். பவுலைப் பாதுகாப்பார். பல ஜனங்கள் மத்தியில் தேவனுக்குத் தொடர்ந்து ஊழியம் செய்வார் (அப 26:18)

"உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன்" - தேவன் பவுலைப் புறஜாதியாரிடத்திற்கு அனுப்புகிறார். இது பவுலின் விசேஷித்த ஊழிய அழைப்பு. பவுல் இந்த அழைப்பிலிருந்து விலகிச் செல்லவில்லை

சுவிசேஷத்தின் ஆசீர்வாதங்கள்

1. கண்களைத் திறக்கும். (Open the eyes) (அப் 26:18; 2கொரி 4:4, எபே 1:8, வெளி 3:18; மத் 13:15-16)

2. இருளைவிட்டு ஒளியினிடத்திற்கு ஜனங்களைத் திருப்பும். (Turn people from darkness to light) (அப 26:18 லூக்கா 1:79; யோவான் 3:16-20, கொலோ 1:13)

3. சாத்தானுடைய அதிகாரத்திலிருந்து விடுவிக்கும். (Deliverance from Satan's power) (அப் 26:18 லூக்கா 4:18; கொலோ 1:13, 1யோவான் 5:18)

26 அதிகாரம்

4. பாவங்கள் மன்னிக்கப்படும். (Forgiveness of sins) (அப 26:18; அப 2:38; அப 3:19; அப 13:38-39 மத் 26:28; எபே 1:7)

5. சுதந்தரம். (An inheritance) (அப 26:18; அப 20:32; எபே 1:11-18 கொலோ 1:12-13; 1பேதுரு 1:4)

"விசுவாசத்தினாலே பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ளும்படியாக" (sanctified by faith) – பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ளும் விதம்.

1. பிதாவினால் (by the Father) யூதா 1:1; யோவான் 10:36)

2. கிறிஸ்துவினால் (by Christ) அப 26:18, 1கொரி 1:2,30)

3. பரிசுத்த ஆவியானவரால் (by the Holy Spirit) (ரோமர் 15:16; 2கொரி 6:11, 2தெச 2:13; 1பேதுரு 1:2)

4. தேவனுடைய வார்த்தையினால் (by the Word of God) (யோவான் 15:3 யோவான் 17:19, 2தெச 2:13; எபே 5:26; 1தீமோ 4:5

5. பாவநிவாரணத்தினால் (by the atonement) (எபி 10:10-14,29)

6. விசுவாசத்தினால் (by faith) (அப 26:18, எபே 2:8-9

(3) பவுலின் பிரசங்கம் – (9:20; 22:17)

அப 26:19 ஆகையால், அகிரிப்பா ராஜாவே, நான் அந்தப் பரம தரிசனத்துக்குக் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை.

அப் 26:20 முன்பு தமஸ்குவிலும் எருசலேமிலும் யூதேயா தேசமெங்குமுள்ளவர்களிடத்திலும், பின்பு புறஜாதியாரிடத்திலும் நான் போய், அவர்கள் தேவனிடத்திற்கு மனந்திரும்பிக் குணப்படவும் மனந்திரும்புதலுக்கேற்ற கிரியைகளைச் செய்யவும் வேண்டுமென்று அறிவித்தேன்

கீழ்ப்படியாத (disobedient) ἀπειθής - apeithees - 545

பொருள் – கீழ்ப்படியாத (லூக்கா 1:17; அப் 26:19; ரோமர் 1:30 தீத்து 1:16; தீத்து 3:3 2தீமோ 3:2)

"பரமதரிசனம்" (heavenly vision) – (அப் 9:3-18; அப 22:6-21; அப் 26:12-18

"அவர்கள் தேவனிடத்திற்கு மனந்திரும்பிக் குணப்படவும் மனந்திரும்புதலுக்கேற்ற கிரியைகளைச் செய்யவும் வேண்டும்" - எல்லா ஜனங்களுக்கும் பிரசங்கிக்கப்படவேண்டிய மூன்று காரியங்கள் உள்ளன அவையாவன

1. மனந்திரும்புதல் (Repentance) (லூக்கா 13:3

2. குணப்படுதல் (Conversion) (அப 3:19)

3. மனந்திரும்புதலுக்கேற்ற கிரியைகளைச் செய்தல் (Restitution) (மத் 3:8

(4) நான் கைது பண்ணப்பட்டதற்கு காரணம்

அப 26:21 இதினிமித்தமே யூதர்கள் தேவாலயத்திலே என்னைப் பிடித்துக் கொலைசெய்யப் பிரயத்தனம் பண்ணினார்கள்

அப் 26:22 ஆனாலும் தேவ அநுக்கிரகம் பெற்று நான் இந்நாள்வரைக்கும் சிறியோருக்கும் பெரியோருக்கும் சாட்சிகூறி வருகிறேன்

அப் 26:23 தீர்க்கதரிசிகளும் மோசேயும் முன்னமே சொல்லியிருந்தபடியே, கிறிஸ்து பாடுபடவேண்டியதென்றும், மரித்தோர் உயிர்த்தெழுதலில் அவர் முதல்வராகி, சுயஜனங்களுக்கும் அந்நிய ஜனங்களுக்கும் ஒளியை வெளிப்படுத்துகிறவரென்றும் சொல்லுகிறேனேயன்றி, வேறொன்றையும் நான் சொல்லுகிறதில்லை என்றான்

26 அதிகாரம்

"இதினிமித்தமே யூதர்கள் தேவாலயத்திலே என்னைப் பிடித்துக் கொலை செய்யப் பிரயத்தனம்பண்ணினார்கள்" - யூதர்கள் பவுலை வெறுத்தார்கள் அதற்கான காரணங்கள்

1 பவுல் கிறிஸ்தவ மார்க்கத்திற்கு மாறினார் (அப் 9:2-22; அப் 22:6-21, அப் 26:12-18)

2 நசரேயனாகிய இயேசுவை மேசியா என்று பிரசங்கம் பண்ணினார் (அப் 9:20-25,29; அப் 13:23; அப் 17:3; அப் 18:5; ரோமர் 1:3-6, 1கொரி 1:18-24)

3 மரித்த நீதிமானும், மரித்த அநீதிமானும் உயிர்த்தெழுவார்கள் என்று பிரசங்கம் பண்ணினார் (அப் 17:18,32; அப் 23:6-8; அப் 24:15,21; 1கொரி 15)

4 இயேசு கிறிஸ்துவின் மரணம் அடக்கம் பண்ணப்படுதல் உயிர்த்தெழுதல் ஆகிய சத்தியங்களைப் பிரசங்கம் பண்ணினார்

(அப் 13:30-39, அப் 17:3, அப் 17:18, அப் 26:23, 1கொரி 15)

5 கிறிஸ்துவின் மூலமாக இரட்சிப்பு உண்டு நியாயப்பிரமாணத்தின் மூலமாக இரட்சிப்பு இல்லை என்று பிரசங்கம் பண்ணினார் (அப் 13:23-39; அப் 15:1-12; அப் 20:21, அப் 26:17-18, 1கொரி 1:18-24, ரோமர் 3:24-31; ரோமர் 4:1-25; ரோமர் 5:1-11; ரோமர் 8:1-13; ரோமர் 10:4,9,10; எபே 1; பிலி 2; எபி 7:10)

6 இயேசு கிறிஸ்துவின் திருஇரத்தமே எல்லா பலிகளின் நிறைவேற்றமாக இருக்கிறது. மனுஷருடைய இரட்சிப்பிற்கு இயேசு கிறிஸ்துவின் இரத்தம் தேவை என்று பிரசங்கம் பண்ணினார் (அப் 17:3, அப் 20:20; அப் 26:17-23; ரோமர் 3:24-31; ரோமர் 5:1-11; கலா 3:13-29; எபே 1:7; கொலோ 1:14-20; எபி 7:10; 1தீமோ 1:15, 1கொரி 1:18-24)

7 புறஜாதியாருக்கும் இரட்சிப்பின் செய்தியைப் பிரசங்கம் பண்ணினார் (அப் 9:15; அப் 13:46-49; அப் 14:27; அப் 18:6; அப் 26:17-18, ரோமர் 9-11, 1கொரி 12:13; கலா 3:29)

அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 20

"கிறிஸ்து பாடுபடவேண்டும், மரித்தோர் உயிர்த்தெழுதலில் அவர் முதல்வராகி, சுயஜனங்களுக்கும் அந்நிய ஜனங்களுக்கும் ஒளியை வெளிப்படுத்த வேண்டும் (அப் 26:23; ஆதி 3:15, ஏசா 53; சங் 16:10)

"மரித்தோர் உயிர்த்தெழுதலில் அவர் முதல்வர்" - மரித்தோரின் உயிர்த்தெழுதலில் இயேசு கிறிஸ்துவே முதலாவது உயிர்த்தெழுந்தவர். மரித்தோர் அனைவரும் உயிர்த்தெழுவார்கள் என்பதற்கு இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் ஓர் அடையாளமாக இருக்கிறது (1கொரி 15:1-23; வெளி 1:5)

"அந்நிய ஜனங்களுக்கும் ஒளியை வெளிப்படுத்துகிறவர்" - புறஜாதிகளின் இரட்சிப்பைத் தீர்க்கதரிசிகள் முன்னறிவித்தார்கள் (ஏசா 11:10; ஏசா 42:1-6; ஏசா 49:6; ஏசா 60:3; ஏசா 62:2, ஏசா 66:12-21; எரே 16:19; மல் 1:11; ரோமர் 10:9-21)

(5) பவுல் பயித்தியக்காரன் என்று அவன்மீது குற்றச்சாட்டு

அப் 26:24 இவ்விதமாய் அவன் தனக்காக உத்தரவு சொல்லுகையில் பெஸ்து உரத்த சத்தமாய்: பவுலே நீ பிதற்றுகிறாய், அதிகக் கல்வி உனக்குப் பயித்தியமுண்டாக்குகிறது என்றான்.

கல்வி (letter) - γράμμα - gramma - 1121

பால்: வேறுபாடற்றப் பெயர்சொல் - கல்வி, எழுத்து, காகிதம், எழுத்துக்களைக் கற்றவர்

"அதிகக் கல்வி உனக்குப் பயித்தியமுண்டாக்குகிறது" பவுல் பயித்தியக்காரனாக இருந்தால் நாம் அவனுடைய பிரசங்கத்தைக் கேட்க வேண்டியதில்லை. அவன் பயித்தியக்காரன் அல்லவென்றால் அவனுடைய பிரசங்கத்தை நாம் கேட்க வேண்டும். கிறிஸ்தவர்களைப் பவுல் துன்புறுத்தியபோது அவனை யாரும் பயித்தியக்காரன் என்று கூறவில்லை.

26 அதிகாரம்

பவுலுக்கு எதிரான குற்றச்சாட்டு

1 விநோதமான மனமாற்றம் - மற்றவர்களுடைய மனமாற்றம்போல பவுலின் மனமாற்றம் அமையவில்லை (அப் 9:2-18; அப் 22:6-21; அப் 26:12-18)

2 விநோதமான ஊழியம் (1கொரி 4; 2கொரி 6)

(1) பிரபலமில்லாதது (அப் 9:20-25,29; அப் 13:8, 45, 50; அப் 14:2,5,19; அப் 16:19-24,39; அப் 17:5-9,32; அப் 18:12-17; அப் 19:23-41; அப் 21:27-32; அப் 22:22-24; அப் 23:10,12-25; அப் 24:1-9; அப் 28:4,16; 1கொரி 4:9-14; 2கொரி 6:11)

(2) பட்டணங்களதோறும் துரத்தப்பட்டான் (அப் 9:20-25; அப் 13:51; அப் 14:6; அப் 16:39)

(3) சபையை உடைக்கிறவன் (அப் 13:44-52; அப் 14:1-5; அப் 17:1-4; அப் 18:4-11; அப் 21:6-10)

(4) வியாபாரத்தைப் பாதிக்கச் செய்கிறவன் (அப் 16:16-24; அப் 19:18-20, 23-27)

(5) சிறைச்சாலையை உடைத்து விட்டு, தப்பிக்கிறவன் (அப் 16:25-40; அப் 22:25-30; அப் 23:18,35; அப் 24:27)

(6) பெரிய கலகங்களுக்குக் காரணமானவன் (அப் 13:45-52; அப் 14:19; அப் 16:19-24; அப் 17:5-8; அப் 18:12-17; அப் 19:23-41; அப் 21:27-40)

(7) சமாதானத்தையும், அமைதியையும் அழித்தவன் (அப் 9:23; அப் 13:45,50; அப் 14:19; அப் 16:19-24; அப் 17:5-17; அப் 18:12; அப் 19:23-41; அப் 21:27-40; அப் 22:22; அப் 24:5)

(8) மார்க்கக் காரியங்களுக்கு எதிர்த்து நின்றவன் (அப் 9:22,29; அப் 15:7-12; அப் 17:17; அப் 19:8-10)

(9) மதபேதவாதி (அப் 24:5,14)

(10) தன் கொள்கையில் வைராக்கியம் உடையவன் விட்டுக் கொடுக்காதவன் (கலா 2:5; அப் 15:2; அப் 16:3,37)

(11) நீண்ட நேரம் பிரசங்கம் பண்ணுகிறவன் (அப் 20:7-12)

(12) திருஷ்டாந்தப்படுத்துகிறவன் (அப் 17:3; அப் 19:19)

3 விநோதமான அனுபவங்கள்

(1) தூசியை உதறினான் (அப் 13:51)

(2) வஸ்திரத்தை மனுஷர்மீது உதறினான் (அப் 18:6)

(3) ஒருவனைக் குருடாக்கினான் (அப் 13:11)

(4) உறுமால்களையும், கைக்குட்டைகளையும் அபிஷேகம் பண்ணி வியாதியஸ்தரிடம் அனுப்பினான் (அப் 19:11-12)

(5) நடுஇரவில சிறைச்சாலையில அதிக சத்தத்தோடு கர்த்தரைத் துதித்துப் பாடி ஜெபம் பண்ணினான் (அப் 16:25)

(6) ஞானதிருஷ்டி அடைந்தான (அப் 9:2-18; அப் 16:9-10; அப் 18:9; அப் 22:17; அப் 23:11; அப் 27:23)

(7) அந்நிய பாஷைகளில்பேசி வியாக்கியானம் பண்ணினான (1கொரி 14:13-18)

(8) ஆவிக்குரிய வரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக ஜனங்களமீது கைகளை வைத்து ஜெபித்தான் அவர்களுக்காகத் தீர்க்கதரிசனம் கூறினான் (1தீமோ 4:14; 2தீமோ 1:6; ரோமர் 1:11; அப் 19:1-7; எபி 6:2)

26 அதிகாரம்

(9) வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்கினான் பிசாசுகளைத் துரத்தினான் விசேஷித்த அற்புதங்களைச் செய்தான் (அப் 14:3-18; அப் 15:12, அப் 16:18, அப் 19:11-20; ரோமர் 15:18-29)

(10) ஆவிகளைப் பகுத்தறிந்தான், ஜனத்தின்மீது நியாயத் தீர்ப்பை வரவழைத்தான் (அப் 13:6-11; அப் 16:18, 1கொரி 4:18-21; 1கொரி 5:5-6)

(11) தன்னைப் பாம்பு கடித்தபோது இயற்கையான வைத்தியம் எதுவும் செய்யவில்லை. (அப் 28:3-5)

(12) கல்லெறியுண்டான் மிலாறுகளால் அடிக்கப்பட்டான் பல துன்பங்களை அனுபவித்தான் அந்த வேளைகளிலும் வைத்திய சிகிச்சை எதுவும் செய்து கொள்ளாமல் உடனே புறப்பட்டு ஊழியம் செய்தான் (அப் 14:19-20; அப் 16:22-40, அப் 21:27-40; 2கொரி 11:24-28; 2கொரி 12:5-10)

4. விநோதமான உபதேசங்கள்

(1) கிரியைகளின் மூலமாக அல்லாமல் விசுவாசத்தினால் இரட்சிப்பு (ரோமர் 3:24-31; ரோமர் 4:1-8)

(2) பரிசுத்த ஆவியானவரின் வரங்கள் (1கொரி 12)

(3) விசுவாசிகளுக்குத் தேவனுடைய நிறைவான ஆசீர்வாதம் (எபே 3:19)

(4) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை (2தெச 1:7-10)

(5) பாவத்திலிருந்து விடுதலை (ரோமர் 6:14-23; ரோமர் 8:1-13, கலா 5:16-26)

பவுல் இவ்வாறு பல வழிகளில் விநோதமாகச் செயல்பட்டதினால் பெஸ்துவைப் போன்றவர்களுக்கு அவன் பயித்தியக்காரனாகத் தெரிகிறான் ஆனால் கிறிஸ்தவர்களாகிய நமக்கோ அவன் ஒரு முன்மாதிரியாகத் திகழுகிறான் பவுல் பயித்தியக்காரன் அல்ல. சத்தியமும் சொஸ்தபுத்தியுமுள்ள வார்த்தைகளைப் பேசுகிறவன் (அப் 26:25)

(6) நான் பயித்தியக்காரன் அல்ல என்று பவுல் கூறுகிறான்

அப் 26:25 அதற்கு அவன்: கனம் பொருந்திய பெஸ்துவே, நான் பயித்தியக்காரனல்ல சத்தியமும் சொஸ்தபுத்தியுமுள்ள வார்த்தைகளைப் பேசுகிறேன்

அப் 26:26 இந்தச் சங்கதிகளை ராஜா அறிந்திருக்கிறார் ஆகையால் தைரியமாய் அவருக்கு முன்பாகப் பேசுகிறேன்; இவைகளில் ஒன்றும் அவருக்கு மறைவானதல்லவென்று எண்ணுகிறேன் இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல

"இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல" – இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறு ஒரு மூலையில் நடைபெற்ற காரியமல்ல எல்லோருக்கும் பிரபலமானது. பவுல் இந்த வாக்கியத்தைக் கூறியபோது இது உண்மையான வாக்கியம் என்பதை அகிரிப்பா இராஜா அறிந்திருந்தான்

(7) அகிரிப்பா இராஜாவிடம் பவுலின் விண்ணப்பம்

அப் 26:27 அகிரிப்பா ராஜாவே, தீர்க்கதரிசிகளை விசுவாசிக்கிறீரா? விசுவாசிக்கிறீர் என்று அறிவேன் என்றான்

அப் 26:28 அப்பொழுது அகிரிப்பா பவுலை நோக்கி: நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப்பண்ணுகிறாய் என்றான்

26 அதிகாரம்

அப் 26:29 அதற்குப் பவுல்: நீர் மாத்திரமல்ல, இன்று என் வசனத்தைக் கேட்கிற யாவரும் கொஞ்சங்குறைய மாத்திரம் அல்ல, இந்தக் கட்டுகள் தவிர முழுவதும் என்னைப்போலாகும்படி தேவனை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.

"நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங் குறைய நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய்" - அகிரிப்பா ராஜா இயேசு கிறிஸ்துவைத் தன்னுடைய இரட்சகராக ஏற்றுக் கொண்டு, கிறிஸ்தவராக மாறும் நிலைமைக்கு வந்து விடுகிறான். பவுலுக்கும் அது தெரிய வருகிறது. ஆகையினால்தான் அகிரிப்பா ராஜா மட்டுமல்லாமல் எல்லோருமே இயேசு கிறிஸ்துவைத் தங்களுடைய இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பவுல் அறிவிக்கிறான் (அப் 26:29).

(8) அகிரிப்பா இராஜாவின் தீர்மானம்

அப் 26:30 இவைகளை அவன் சொன்னபோது, ராஜாவும் தேசாதிபதியும் பெர்னீக்கேயாளும் அவர்களுடனேகூட உட்கார்ந்திருந்தவர்களும் எழுந்து,

அப் 26:31 தனியே போய்: இந்த மனுஷன் மரணத்துக்காவது கட்டுகளுக்காவது பாத்திரமான தொன்றையும் செய்யவில்லையென்று தங்களுக்குள்ளே பேசிக்கொண்டார்கள்.

அப் 26:32 அகிரிப்பா பெஸ்துவை நோக்கி: இந்த மனுஷன் இராயனுக்கு அபயமிடாதிருந்தானானால் இவனை விடுதலைபண்ணலாகும் என்றான்.

"இந்த மனுஷன் மரணத்துக்காவது கட்டுகளுக்காவது பாத்திரமானதொன்றையும் செய்யவில்லை" - பவுல் யூதருக்கு எதிராக எந்தக் குற்றமும் செய்யவில்லை என்பதற்கு இவர்கள் கூறியது மெய்யான சாட்சியாகும்.

"இவனை விடுதலைபண்ணலாகும்" - அகிரிப்பா பவுலை உடனே விடுதலை பண்ண வேண்டும் என்று விரும்பினான். ஆனால் பவுல் ஏற்கெனவே இராயனுக்கு அபயமிட்டிருந்தான். பவுல் கூறிய அபயம் நீதிமன்றத்து ஆவணத்திலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதை மாற்றும் அதிகாரம் யாருக்கும் இல்லை.

27 அதிகாரம்

XIV. **பவுலின் ரோமாபுரிக்கு அனுப்பு சீறாக்கள்** - (அப் 27:1-28:16)

1. **செசரியா பட்டணத்திலிருந்து மீறாப் பட்டணத்திற்கு பிரயாணம்**

அப் 27:1 நாங்கள் இத்தாலியா தேசத்துக்குக் கப்பல் ஏறிப் போகும்படி தீர்மானிக்கப்பட்டபோது, பவுலையும் காவலில் வைக்கப்பட்டிருந்த வேறு சிலரையும் அகுஸ்து பட்டாளத்தைச்சேர்ந்த யூலியு என்னும் பேர்கொண்ட நூற்றுக்கு அதிபதியினிடத்தில் ஒப்புவித்தார்கள்.

அப் 27:2 அதிரமித்தியம் ஊர்க்கப்பலில் நாங்கள் ஏறி, ஆசியா நாட்டுக் கரைபிடித்தோடவேண்டுமென்று நினைத்துப் புறப்பட்டோம். மக்கெதோனியா தேசத்துத் தெசலோனிக்கே பட்டணத்தானாகிய அரிஸ்தர்க்கு எங்களுடனேகூட இருந்தான்.

அப் 27:3 மறுநாள் சீதோனைத் துறைபிடித்தோம். யூலியு பவுலைப் பட்சமாய் நடப்பித்து, அவன் தன் சிநேகிதரிடத்திலே போய்ப் பராமரிப்படையும்படிக்கு உத்தரவு கொடுத்தான்.

அப் 27:4 அவ்விடம்விட்டு நாங்கள் புறப்பட்டு, எதிர்காற்றாயிருந்தபடியினால், சீப்புரு தீவின் ஒதுக்கிலே ஓடினோம்.

அப் 27:5 பின்பு சிலிசியா பம்பிலியா நாடுகளின் கடல்வழியாய் ஓடி, லீசியா நாட்டு மீறாப்பட்டணத்தில் சேர்ந்தோம்.

"யூலியு" (Julius) அகஸ்து பட்டாளத்தைச் சேர்ந்தவன். ரோமாபுரிக்குப் பவுலோடு பிரயாணம் பண்ணினான். பவுல் மூலமாக நடைபெற்ற அநேக அற்புதங்களைக் கண்டு, அவருடைய நெருங்கிய நண்பனானான்.

"அதிரமித்தியம்" (Adramyttium) - இந்தப்பெயரில் பல ஊர்கள் உள்ளன. இது ஆசியா கடல் பகுதியில் உள்ள மீசியாவின் (Mysia) பட்டணமாகும்.

"ஆசியா நாட்டுக் கரைபிடித்தோடவேண்டுமென்று நினைத்துப் புறப்பட்டோம்" - ரோமாபுரிக்குப் பவுலின் பிரயாணம் ஆரம்பமாகிறது.

ரோமாபுரிக்குப் பவுலின் பிரயாணம்

1 செசரியா (Caesarea), சமாரியா (Samaria) (அப் 27:1)

2 சீதோன் (Sidon), பெனிக்கே (Phoenicia) (அப் 27:3)

3 சீப்புரு தீவு (Island of Cyprus) (அப் 27:4)

4 மீறா (Myra), லீசியா (Lycia) சின்ன ஆசியா (Asia Minor) (அப் 27:5)

5 சல்மோனே (Salmone) கிரேத்தாதீவு (Island of Crete) (அப் 27:7)

6 நல்ல துறைமுகம் (Fair Havens) லசேயாபட்டணம் (Lasea) கிரேத்தாதீவு (Crete) (அப் 27:8-44

7 மெலித்தா தீவு Melita (Malta) இத்தாலி (Italy) (அப் 28:1

8 சீரகூசா (Syracuse), சிசிலி (Sicily) (அப் 28:12)

9 ரேகியுதுறைமுகம் (Rhegium), இத்தாலி (Italy) (அப் 28:13

10 புத்தேயோலிபட்டணம் (Puteoli), இத்தாலி (Italy) (அப் 28:13

11 அப்பியபுரம் (Appu Forum), இத்தாலி (Italy) (அப் 28:15

12 ரோமாபுரி (Rome), இத்தாலி (Italy) (அப் 28:16-31)

27 அதிகாரம்

"அரிஸ்தர்க்கு" (Aristarchus) - (அப் 19:29; அப் 20:4) இவன் மக்கெதோனியா தேசத்துத் தெசலோனிக்கே பட்டணத்தான். ரோமாபுரிக்குப் பவுலோடு இவனும், லூக்காவும் பிரயாணம்பண்ணினார்கள் (கொலோ 4:10; பிலே 1:24)

2. இத்தாலியாவிற்கு கப்பல்களை மாற்றுகிறார்கள்

அப் 27:6 இத்தாலியாவுக்குப் போகிற அலெக்சந்திரியாபட்டணத்துக் கப்பலை நூற்றுக்கு அதிபதி அங்கே கண்டு எங்களை அதில் ஏற்றினான்.

அப் 27:7 காற்று எங்களைத் தடுத்தபடியினாலே, நாங்கள் அநேகநாள் மெதுவாய்ச் சென்று வருத்தத்தோடே கினீதுபட்டணத்திற்கு எதிரே வந்து, சல்மோனே ஊருக்கு எதிராய்க் கிரேத்தாதீவின் ஒதுக்கில் ஓடினோம்.

அப் 27:8 அதை வருத்தத்தோடே கடந்து, நல்ல துறைமுகம் என்னப்பட்ட ஒரு இடத்திற்கு வந்தோம்; லசேயாபட்டணம் அதற்குச் சமீபமாயிருந்தது.

அப் 27:9 வெகுகாலம் சென்று, உபவாசநாளும் கழிந்துபோனபடியினாலே, இனிக் கப்பல் யாத்திரை செய்கிறது மோசத்திற்கு ஏதுவாயிருக்குமென்று, பவுல் அவர்களை நோக்கி:

"உபவாசநாளும் கழிந்துபோனது" - ஏழாவது மாதத்தின் 10 ஆவது நாள் பாவநிவாரண நாளாகும் (the day of atonement). அக்டோபர் மாதம் முதல் வாரத்தில் இந்த நாள் வரும். இக்காலத்தில் மத்தியதரைக்கடலில் பெருங்காற்று வீசி கடல் பொங்கிக் கொண்டிருக்கும். பாவநிவாரண நாள் பண்டிகைக்குப் பின்பு யூதர்கள் யாரும் மத்திய தரைக்கடலில் பிரயாணம் பண்ணமாட்டார்கள். புயல் காற்று வீசும் காலமாகையால், பிரயாணத்திற்கு மிகவும் ஆபத்தானது.

3. பவுலின் ஆலோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை

அப் 27:10 மனுஷரே, இந்த யாத்திரையினாலே சரக்குக்கும் கப்பலுக்கும் மாத்திரமல்ல, நம்முடைய ஜீவனுக்கும் வருத்தமும் மிகுந்த சேதமும் உண்டாயிருக்குமென்று காண்கிறேன் என்று சொல்லி, அவர்களை எச்சரித்தான்.

அப் 27:11 நூற்றுக்கு அதிபதி பவுலினால் சொல்லப்பட்டவைகளைப் பார்க்கிலும் மாலுமியையும் கப்பல் எஜமானையும் அதிகமாய் நம்பினான்.

அப் 27:12 அந்தத் துறைமுகம் மழைக்காலத்திலே தங்குவதற்கு வசதியாயிராதபடியினால், அவ்விடத்தை விட்டுத் தென்மேற்கையும் வடமேற்கையும் நோக்கியிருக்கும் கிரேத்தாதீவிலுள்ள துறைமுகமாகிய பேனிக்ஸ் என்னும் இடத்தில் சேரக்கூடுமானால் சேர்ந்து மழைக்காலத்தில் தங்கும்படி அநேகம்பேர் ஆலோசனை சொன்னார்கள்.

அப் 27:13 தென்றல் மெதுவாயடித்தபடியால், தாங்கள் கோரினது கைகூடிவந்ததென்று எண்ணி, அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, கிரேத்தாதீவுக்கு அருகாக ஓடினார்கள்.

தீர்க்கதரிசன எண் - 14

"மனுஷரே, இந்த யாத்திரையினாலே சரக்குக்கும் கப்பலுக்கும் மாத்திரமல்ல, நம்முடைய ஜீவனுக்கும் வருத்தமும் மிகுந்த சேதமும் உண்டாயிருக்குமென்று காண்கிறேன்" (அப் 27:10) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"நூற்றுக்கு அதிபதி பவுலினால் சொல்லப்பட்டவைகளைப் பார்க்கிலும் மாலுமியையும் கப்பல் எஜமானையும் அதிகமாய் நம்பினான்"

இக்காலத்திலும் இப்படித்தான் நடைபெறுகிறது. ஜனங்கள் ஊழியக்காரர் மூலமாகச் சொல்லப்படுவதைப் பார்க்கிலும் அதிகாரமுள்ளவர்கள் சொல்வதை அதிகமாக நம்புகிறார்கள். கப்பலுக்கு மாலுமிதான் அதிகாரி. அவனுடைய சொற்படிதான் நூற்றுக்கு அதிபதி கேட்க வேண்டும். வேறு வழியில்லை. மேற்குப் பக்கத்திலுள்ள பேனிக்ஸ் (Phenice) என்னும் இடத்திற்குச் சென்று மாரிக்காலத்தை அங்கே செலவு பண்ண வேண்டுமென்பது அவர்களுடைய நோக்கம்.

27 அதிகாரம்

"தென்மேற்கையும் வடமேற்கையும் நோக்கியிருக்கும் கிரேத்தாதீவிலுள்ள துறைமுகமாகிய பேனிக்ஸ்" - பேனிக்ஸ் ஒரு துறைமுகப்பட்டினம். இதற்கு இரண்டு வழிகள் உள்ளன. இரண்டு வழிகளுக்கும் நடுவில் ஒரு தீவு உள்ளது. தென்மேற்கு காற்று வீசும்போது ஒரு வாசல் வழியாகவும் வடமேற்குக் காற்று வீசும்போது வேறொரு வழியாகவும் இந்தத் தீவிற்குப் பாதுகாப்பாக வந்து சேரலாம். ஆகையினால் புயல்காற்றுக் காலங்களில்கூட இது முக்கியமான துறைமுகப்பட்டினமாக விளங்கிறது.

"தென்றல் மெதுவாயடித்தது" - காற்று கப்பலுக்குச் சாதகமாக இருந்தது. ஆகையினால் பேனிக்ஸ் துறைமுகத்திற்குப் பாதுகாப்பாகப் போய் சேர்ந்துவிடலாம் என்று நம்பினார்கள். பவுல் "இந்த யாத்திரையினாலே சரக்குக்கும் கப்பலுக்கும் மாத்திரமல்ல, நமமுடைய ஜீவனுக்கும் வருத்தமும் மிகுந்த சேதமும் உண்டாயிருக்குமென்று காண்கிறேன்" (அப் 27:10) என்று ஏற்கனவே தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறான். இந்தத் தீர்க்கதரிசனம் தான் நிறைவேறப்போகிறது. மாலுமியின் வார்த்தையைவிட தேவனுடைய ஊழியக்காரரின் வார்த்தை வல்லமையானது.

4. புயல்காற்று வீசுகிறது - (சங் 107:21-30)

அப் 27:14 கொஞ்சநேரத்துக்குள்ளே யூரோக்கிலித்தோன் என்னும் கடுங்காற்று அதில் மோதிற்று.

அப் 27:15 கப்பல் அதில் அகப்பட்டுக் கொண்டு, காற்றுக்கு எதிர்த்துப் போகக்கூடாதபடியினால் காற்றின் போக்கிலே கொண்டு போகப்பட்டோம்.

அப் 27:16 அப்படிக் கிலவுதா எனப்பட்ட ஒரு சின்ன தீவின் ஒதுக்கிலே ஓடுகையில் வெகு வருத்தத்தோடே படவை வசப்படுத்தினோம்.

அப் 27:17 அதை அவர்கள் தூக்கியெடுத்த பின்பு, பல உபாயங்களைச்செய்து கப்பலைச்சுற்றிக்கட்டி, சொரிமணலிலே விழுவோமென்று பயந்து பாய்களை இறக்கி, இவ்விதமாய்க் கொண்டுபோகப்பட்டார்கள்.

அப் 27:18 மேலும் பெருங்காற்று மழையில் நாங்கள் மிகவும் அடிபட்டபடியினால், மறுநாளில் சில சரக்குகளைக் கடலில் எறிந்தார்கள்.

அப் 27:19 மூன்றாம் நாளிலே கப்பலின் தளவாடங்களை எங்கள் கைகளினாலே எடுத்து எறிந்தோம்.

அப் 27:20 அநேகநாளாய்ச் சூரியனாவது நட்சத்திரங்களாவது காணப்படாமல் இருந்த பெருங்காற்றுமழையும் அடித்துக் கொண்டிருந்தபடியினால், இனி தப்பிப் பிழைப்போமென்னும் நம்பிக்கை முழுமையும் அற்றுப்போயிற்று.

கடுங்காற்று (tempestuous) - τυφωνικός - typhoonikos - 5189

பெருஞ்சூறை - கடுங்காற்று (typhonic)

"யூரோக்கிலித்தோன்" (Euroclydon) கிழக்குத் திசையிலிருந்து வீசும் புயலுக்கு யூரோக்கிலித்தோன் என்று பெயர். இந்தக் காற்று எல்லாத் திசைகளிலும் சுழன்று சுழன்று வீசும். பொதுவாக இந்தப் புயல் காற்றில் சிக்கிவிட்டால், தப்பிக் கரை சேருவது கடினம்.

"கப்பல் அதில் அகப்பட்டுக்கொண்டது" - பவுல் பிரயாணம் பண்ணின கப்பல் யூரோக்கிலித்தோன் புயல் காற்றில் அகப்பட்டுக் கொண்டது. அவர்களால் காற்றுக்கு எதிர்த்துப் போகமுடியவில்லை. காற்றின் போக்கிலே கொண்டு போகப்பட்டார்கள்.

"கிலவுதா" (Clauda) - கிரேத்தா (Crete) கடற்கரையில் தென்மேற்கில் அமைந்துள்ள தீவு. இதன் தற்காலத்துப் பெயர் காசா (Gaza). பேனிக்ஸ் துறைமுகப்பட்டினத்திற்கு தெற்குப் பக்கமாக கிலவுதா அமைந்திருக்கிறது.

27 அதிகாரம்

"வெகு வருத்தத்தோடே படவை வசப்படுத்தினோம்" - அக்காலத்தில் புயல் அடிக்கும்போது தப்பிச் செல்வதற்காக கப்பலோடு சிறிய படகுகளையும் (Th lifeboat) ஏற்றிச் செல்வார்கள். கப்பலில் இடமில்லையென்றால் இந்தப் படவுகளைக் கயிறுகளால் கட்டி கடலில் இழுத்துச் செல்வார்கள். இப்போது புயல்காற்று வீசுகிறது. கப்பலில் செல்வது ஆபத்தானது. ஆகையினால் சிறிய படகில் ஏறி தப்பித்துச் செல்லலாம் என்று நினைக்கிறார்கள். அந்தப் படவைத் தங்கள் வசமாக இழுப்பதற்கு மிகவும் கடினமாக இருந்தது. வெகு வருத்தத்தோடே அந்தப் படவை வசப்படுத்தினார்கள்.

படவு (boat) - σκάφη - skaphee - 4627

பெண்பால் பெயர்ச்சொல் - படவு

"உபாயங்கள்" - அவர்கள் படவைத் தூக்கி எடுத்தார்கள். பல உபாயங்களைச் செய்து, படவைக் கப்பலைச் சுற்றிக் கட்டினார்கள். கப்பலின் உட்பகுதியில் நீளமான கயிறுகள் இருக்கும். இந்தக் கயிறுகளால்தான் படவைக் கடலிலிருந்து தூக்கி கப்பலுக்குள் கொண்டு கட்டுகிறார்கள்.

"சொரிமணல்" இந்த வசனத்தில் மட்டுமே நாம் இந்த வார்த்தையை வாசிக்கிறோம். ஆப்பிரிக்காவின் வடக்குக் கடற்கரையோரப் பகுதிகளில் சொரிமணல் நிறைந்த இரண்டு வளைகுடாப் பகுதிகள் உள்ளன. அவற்றுக்குப் பெரிய சொரிமணல் (Syrtis Major), சின்ன சொரிமணல் (Syrtis Minor) என்று பெயர். பொதுவாக இந்தப் பகுதிக்கு யாரும் கப்பலைச் செலுத்த மாட்டார்கள். சொரிமணலுக்குள் கப்பல் பதிந்து விட்டால் அதை மறுபடியும் வெளியே எடுப்பது கடினம்.

சொரிமணல் (quicksands) - Σύρτις Syrtis 4950

ஒரு பெண்ணின் பெயர் – சொரிமணல்

"பாய்களை இறக்கினார்கள்" - கப்பலைப் பாய்மரத்தின் உதவியினால்தான் இனிமேல் செலுத்த முடியும். புயற்காற்று அடிக்கும்போது மிகுந்த சிரமத்திற்குக்கிடையே அவர்கள் பாய்களை இறக்குகிறார்கள்.

"சில சரக்குகளைக் கடலில் எறிந்தார்கள்" - கப்பலின் எடை அதிகமாக இருக்கிறது. இந்தக் கப்பல் கோதுமைகளை ஏற்றிச் செல்கிறது. கப்பலின் எடையைக் குறைப்பதற்காகக் கப்பலிலுள்ள சில சரக்குகளைக் கடலில் எறிந்தார்கள்.

"கப்பலின் தளவாடங்களை எங்கள் கைகளினாலே எடுத்து எறிந்தோம்" - கப்பலில் மாலுமிகளும், பயணிகளும் கைதிகளும் சேவகர்களும் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோருமே இப்பொழுது புயல் காற்றிலிருந்து தப்பிப்பதற்காகக் கப்பலின் தளவாடங்களை எடுத்து எறிந்து கொண்டிருக்கிறார்கள். பவுல், லூக்கா, அரிஸ்தர்க்கு ஆகியோரும் வேலை செய்கிறார்கள்.

"கப்பலின் தளவாடங்கள்" - கடைகள், பாய்மரம், சாக்குமூட்டைகள், கப்பலில் பயன்படுத்தும் நாற்காலி, மேஜைகள் ஆகிய எல்லாப் பொருட்களும்.

காற்றுமழை (tempest) - χειμών - cheimoon - 5494

ஆண்பால் பெயர்ச்சொல் - மாரிகாலம், (winter) (மத் 24:20; மாற்கு 13:18; யோவான் 10:22; 2தீமோ 4:21) காற்றுமழை (foul weather) (மத் 16:3)

5. பவுலின் தரிசனமும் தீர்க்கதரிசனமும்

அப் 27:21 அநேகநாள் அவர்கள் போஜனம்பண்ணாமல் இருந்தபோது பவுல் அவர்கள் நடுவிலே நின்று: மனுஷரே, இந்த வருத்தமும் சேதமும் வராதபடிக்கு நீங்கள் என் சொல்லைக்கேட்டு, கிரேத்தாதீவை விட்டுப் புறப்படாமல் இருக்க வேண்டியதாயிருந்தது.

அப் 27:22 ஆகிலும், திடமனதாயிருங்களென்று இப்பொழுது உங்களுக்குத் தைரியஞ்சொல்லுகிறேன்; கப்பற் சேதமேயல்லாமல் உங்களில் ஒருவனுக்கும் பிராணச்சேதம் வராது.

27 அதிகாரம்

அப் 27:23 ஏனென்றால், என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவருமான தேவனுடைய தூதனானவன் இந்த இராத்திரியிலே என்னிடத்தில் வந்துநின்று.

அப் 27:24 பவுலே, பயப்படாதே. நீ இராயனுக்கு முன்பாக நிற்கவேண்டும் இதோ, உன்னுடனேகூட யாத்திரை பண்ணுகிற யாவரையும் தேவன் உனக்குத் தயவுபண்ணினார் என்றான்

அப் 27:25 ஆனபடியினால் மனுஷரே திடமனதாயிருங்கள் எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன்

அப் 27:26 ஆயினும் நாம் ஒரு தீவிலே விழ வேண்டியதாயிருக்கும் என்றான்

"அநேகநாள் அவர்கள் போஜனம் பண்ணாமல் இருந்தார்கள்" அவர்கள் போஜனம் பண்ணி பல நாட்களாகி விட்டது. (அப் 27:33,38

"என் சொல்லைக்கேட்டு" இந்த வருத்தமும் சேதமும் வராதபடிக்கு என் சொல்லைக்கேட்டு, கிரேத்தாதீவை விட்டுப் புறப்படாமல் இருக்கவேண்டியதாயிருந்தது. பவுல் அப் 27:10 ஆகிய வசனத்தில் தான் கூறிய தீர்க்கதரிசனத்தை அவர்களுக்கு நினைவுபடுத்துகிறான் ஆனாலும் அவர்களுக்கு மற்றொரு தீர்க்கதரிசனத்தைக் கூறி அவர்களை உற்சாகப்படுத்துகிறான்

தீர்க்கதரிசன எண் - 17

"ஆகிலும், திடமனதாயிருங்களென்று இப்பொழுது உங்களுக்குத் தைரியஞ் சொல்லுகிறேன் கப்பற் சேதமேயல்லாமல் உங்களில் ஒருவனுக்கும் பிராணச்சேதம் வராது." (அப் 27:22-26) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

6. தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறது

அப் 27:27 பதினாலாம் இராத்திரியான போது, நாங்கள் ஆதிரியாக் கடலிலே அலைவுபட்டு ஓடுகையில், நடுஜாமத்திலே கப்பலாட்கள் ஒரு கரை கிட்டிவருகிறதாகத் தோன்றிற்று

அப் 27:28 உடனே அவர்கள் விழுதுவிட்டு இருபது பாகமென்று கண்டார்கள் சற்றப்புறம் போனபொழுது, மறுபடியும் விழுது விட்டுப் பதினைந்து பாகமென்று கண்டார்கள்

அப் 27:29 பாறையிடங்களில் விழுவோமென்று பயந்து, பின்னணியத்திலிருந்து நாலு நங்கூரங்களைப் போட்டு, பொழுது எப்போது விடியுமோ என்றிருந்தார்கள்

அப் 27:30 அப்பொழுது கப்பலாட்கள் கப்பலை விட்டோடிப் போக வகைதேடி, முன்னணியத்திலிருந்து நங்கூரங்களைப் போடப் போகிற பாவனையாய்ப் படவைக் கடலில் இறக்குகையில்

அப் 27:31 பவுல் நூற்றுக்கு அதிபதியையும் சேவகரையும் நோக்கி, இவர்கள் கப்பலில் இராவிட்டால் நீங்கள் தப்பிப் பிழைக்க மாட்டீர்கள் என்றான்

அப் 27:32 அப்பொழுது போர்ச்சேவகர் படவின் கயிறுகளை அறுத்து அதைத் தாழ விழ விட்டார்கள்

அப் 27:33 பொழுது விடிகையில் எல்லாரும் போஜனம்பண்ணும்படி பவுல் அவர்களுக்குத் தைரியஞ்சொல்லி: நீங்கள் இன்று பதினாலுநாளாய் ஒன்றும் சாப்பிடாமல் பட்டினியாயிருக்கிறீர்கள்

அப் 27:34 ஆகையால் போஜனம் பண்ணும்படி உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன் நீங்கள் தப்பிப் பிழைப்பதற்கு அது உதவியாயிருக்கும் உங்கள் தலையிலிருந்து ஒரு மயிரும் விழாது என்றான்

27 அதிகாரம்

அப 27:35 இப்படிச் சொல்லி, அப்பத்தை எடுத்து, எல்லாருக்கும் முன்பாகவும் தேவனை ஸ்தோத்தரித்து அதைப் பிட்டுப் புசிக்கத் தொடங்கினான்

அப 27:36 அப்பொழுது எல்லாரும் திடமனப்பட்டுப் புசித்தார்கள்

அப 27:37 கப்பலில் இருநூற்றெழுபத்தாறு பேர் இருந்தோம்

அப 27:38 திருப்தியாகப் புசித்தபின்பு அவர்கள் கோதுமையைக் கடலிலே எறிந்து கப்பலை இலகுவாக்கினார்கள்

அப 27:39 பொழுது விடிந்தபின்பு, இன்ன பூமியென்று அறியாதிருந்தார்கள் அப்பொழுது சமமான கரையுள்ள ஒரு துறைமுகம் அவர்களுக்குத் தென்பட்டது, கூடுமானால் அதற்குள் கப்பலையோட்டப் யோசனையாயிருந்து.

அப 27:40 நங்கூரங்களை அறுத்துக் கடலிலே விட்டுவிட்டு, சுக்கான்களுடைய கட்டுகளைத் தளரவிட்டு, பெரும்பாயைக் காற்றுமுகமாய் விரித்து, கரைக்கு நேராய் ஓடி

அப 27:41 இருபுறமும் கடல் மோதிய ஒரு இடத்திலே கப்பலைத் தட்டவைத்தார்கள், முன்னணியம் ஊன்றி அசையாமலிருந்தது, பின்னணியம் அலைகளுடைய பலத்தினால் உடைந்து போயிற்று.

அப 27:42 அப்பொழுது காவலபண்ணப்பட்டவர்களில் ஒருவனும் நீந்தியோடிப்போகாதபடிக்கு அவர்களைக் கொன்றுபோடவேண்டுமென்று போர்ச்சேவகர் யோசனையாயிருந்தார்கள்

அப் 27:43 நூற்றுக்கு அதிபதி பவுலைக் காப்பாற்ற மனதாயிருந்து. அவர்களுடைய யோசனையைத் தடுத்து, நீந்தத்தக்கவர்கள் முந்திக் கடலில் விழுந்து கரையேறவும்

அப் 27:44 மற்றவர்களில் சிலர் பலகைகள் மேலும், சிலர் கப்பல் துண்டுகள்மேல் போய்க் கரையேறவும் கட்டளையிட்டான் இவ்விதமாய் எல்லாரும்தப்பிக் கரைசேர்ந்தார்கள்

அலைவுபட்டு ஓடு (driven up) - διαφέρω - diapheroo - 1308

வினைச்சொல் - கொண்டு போ, பிரசித்தமாயிரு, அலைவுபட்டு ஓடு, வித்தியாசமாயிரு - இது ஆதிரியாக் கடலில (Adriatic Sea) நடை பெறுகிறது.

"இருபது பாகம்" - 40 கெஜம்

"பதினைந்து பாகம்" - 30 கெஜம்.

"நாலு நங்கூரங்களைப்போட்டோம்" - தற்காலத்தில உள்ளதுபோன்று அக்காலத்தில் பெரிய நங்கூரங்கள் இல்லை ஆகையினால் சிறிய சிறிய நங்கூரங்களாகப பல நங்கூரங்களை அக்காலத்தில கடல் யாத்திரையில் தங்கள கப்பலகளில் எடுத்துச் சென்றார்கள

"அப்பொழுது கப்பலாட்கள் கப்பலை விட்டோடிப்போக வகைதேடினார்கள்" - கப்பல புயலில சிக்கித் தவிக்கிறது தப்பிப்பதற்கு யாருக்கும நம்பிக்கையில்லை கப்பலிலுள்ள மாலுமியும அவனுடைய வேலையாட்களும எப்படியாவது தப்பித்துவிட வேண்டுமென்று திட்டம பண்ணுகிறார்கள் முன்னணியத்திலிருந்து நங்கூரங்களைப போடப் போகிற பாவனையாய படவைக் கடலில இறக்க முயற்சி பண்ணுகிறார்கள இவர்களுடைய சதியைப் பவுல் பார்த்து விட்டான எலலோரும பாதுகாப்பாக கரைசேர வேண்டுமென்று பவுல விரும்புகிறான கப்பலாட்களுக்குததான கப்பலைச செலுத்தத் தெரியும. கப்பலில அவர்கள இல்லை யென்றால எலலோருக்கும மரணம் நிச்சயம் ஆகையினால பவுல நூற்றுக்கு அதிபதியையும் சேவகரையும் நோக்கி: இவர்கள் கப்பலில் இராவிட்டால நீங்கள் தப்பிப பிழைக்க மாட்டீர்கள என்றான

"அப்பொழுது, போர்ச்சேவகர் படவின கயிறுகளை அறுத்து, அதைத் தாழ விழவிட்டார்கள" - போர்ச்சேவகர்கள் பவுலின தீர்க்கதரிசனத்தை நம்புகிறார்கள் அவனுடைய வார்த்தையைக் கேட்டு, கப்பலாட்கள படவை இறக்கும்போது அதன கயிறுகளை அறுத்துவிடுகிறார்கள் படகு கடலுக்குள விழுந்து விடுகிறது. கப்பலாட்களால் தப்பித்துச் செல்ல முடியவில்லை அவர்கள் கப்பலிலேயே மற்றவர்களோடு இருந்து விடுகிறார்கள்

27 அதிகாரம்

"நீங்கள் இன்று பதினாலுநாளாய் ஒன்றும் சாப்பிடாமல் பட்டினியாயிருக்கிறீர்கள்" - நீண்ட நாட்களாக அவர்கள் ஒன்றும் சாப்பிடாமல் இருக்கிறார்கள். ஒருவேளை மரண பயத்தினால் அவர்கள் ஒன்றும் சாப்பிடாமல் இருந்திருக்கலாம். பவுல் அவர்களுக்குத் தைரியம்சொல்லி, அவர்களைச் சாப்பிடும்படி கூறுகிறான். (சங் 69:10)

போஜனம் பண்ணாமல் இருப்பது உபவாசம். மனுஷன் ஆதியிலே தான் விரும்பியதைப் புசித்து, பாவத்தில் விழுந்தான். உபவாசம் ஒரு மனுஷனுடைய ஆத்துமாவை தேவனுக்கு முன்பாகத் தாழ்த்துகிறது. (சங் 35:13) ஆத்துமாவைச் சிட்சிக்கிறது. (சங் 69:10) மனுஷனுடைய ஆசைகள் சிலுவையில் அறையப்பட்டு ஜெபத்தில் முழுக்கவனம் செலுத்தப்படுகிறது. (2சாமு 12:16-23, மத் 4:1-11) உபவாசம் பண்ணும்போது தேவனைக் கீழ்ப்படிதலோடும் வாஞ்சையோடும் தேடுகிறோம். (1கொரி 7:5) நமது சரீரத்திற்கு ஓய்வு கிடைக்கிறது. (மத் 6:16-18, மத் 9:15, லூக்கா 5:33) சோதனையிலிருந்து வெற்றியும், சாத்தானுடைய அந்தகார சக்திகளின்மீது வல்லமையும் நமக்கு வருகிறது. (மத் 4:1-11, மத் 17:14-21)

எல்லா விசுவாசிகளும் உபவாசம் பண்ணி ஜெபிக்க வேண்டும். எப்போது என்பதை மனுஷனே தீர்மானிக்க வேண்டும். (மத் 9:14,15, 1கொரி 7:5, அப் 13:1-5) மனுஷன் சிட்சிக்கப்படும்போதும் (2சாமு 12:16-23), நியாயத்தீர்ப்பின்கீழ் வரும்போதும் (1இராஜா 21:27), தேவையில் இருக்கும்போதும் (எஸ்றா 8:21), ஆபத்தில் இருக்கும்போதும் (எஸ் 4), கஷ்டப்படும்போதும் (தானி 6:18), இக்கட்டில் இருக்கும்போதும் (அப் 27:9-33), ஆவிக்குரிய யுத்தத்தில் பங்குபெறும்போதும் (மத் 4:1-11), ஜெபத்தில் இருக்கும்போதும் (அப் 9) நாம் உபவாசம் பண்ணவேண்டியது அவசியம்.

உபவாசம் பண்ணுவதற்கும் பட்டினியாக இருப்பதற்கும் வித்தியாசம் உள்ளது. உபவாசத்திற்கு ஒருசில ஒழுங்கு முறைகள் உள்ளன. போஜனம் பண்ணாமல் இருந்தாலும் ஒருசில காரியங்கள் உபவாசம் ஆகாது.

உபவாசம் அல்லாத காரியங்கள்

1 எந்த மாம்சமும் சாப்பிடாமல் மீன் மட்டும் சாப்பிடுவது.

2 ஒரு குறிப்பிட்ட பழச்சாறை மட்டும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அருந்துவது.

3 ஒரு குறிப்பிட்ட உணவு வகைகளை மட்டும் புசிக்காமல் மற்ற உணவு வகைகளை எல்லாம் புசிப்பது.

4 ஒருசில குறிப்பிட்ட களியாட்டுகளிலிருந்து விலகி மற்ற களியாட்டுகளில் பங்குபெறுவது.

5 புகைபிடித்தல், மதுபானம் அருந்துதல் மற்ற தீய பழக்கவழக்கங்கள் ஆகியவற்றிலிருந்து மட்டும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு விலகி இருந்து அக்காலத்தில் போஜனம் பண்ணிக் கொள்ளுதல்.

6 எல்லாக் களியாட்டுகளிலிருந்தும் விலகியிருந்து அதிகமாகப் போஜனம் பண்ணாமல் குறைவாகப்போஜனம் பண்ணுவது.

7 தன்னுடைய குடும்ப, சமுதாய காரியங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாமல், விலகியிருந்து போஜனம் [illegible].

"ஆகையால் போஜனம்பண்ணும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; நீங்கள் தப்பிப் பிழைப்பதற்கு அது உதவியாயிருக்கும்" உபவாசங்களுக்கும் ஒரு கால அளவு உண்டு. சரீரத்தில் நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பவர் நாற்பது நாட்களுக்கு உபவாசம் பண்ணலாம். சரீரத்தில் வியாதி கொண்டிருப்பவர்கள் அல்லது சரீரத்தில் வேறு பிரச்சனைகள் உடையவர்கள் உபவாசம் பண்ணும்பொழுது, தங்களால் எத்தனை நாட்களுக்கு உபவாசம் பண்ண முடியும் என்பதைச் சிந்தித்துத் தீர்மானம் பண்ண வேண்டும். (சங் 69:10)

தப்பிப் பிழைப்பது (health) - σωτηρία - sooteeria 4991

வேறுபால் வேர்ச்சொல் - இரட்சிப்பு, விடுதலை, இரட்சணியம், தப்பிப் பிழைப்பது. இதற்கு இரட்சிக்கப்படுதல் என்றும் பொருள் கூறலாம்.

27 அதிகாரம்

மனுஷர் இரட்சிக்கப்பட வேண்டிய காரியங்கள்

1 பாவங்கள் (Sins) (மத் 1:21 லூக்கா 7:50)

2 அமிழ்ந்துபோதல் (Drowning) (மத் 8:25; மத் 14:30)

3 ஜீவனை இழந்துபோதல் (Losing life) (மாற்கு 8:35; லூக்கா 9:24)

4 ஆத்துமாவை இழந்துபோதல் (Losing soul) (மத் 18:11; யாக் 1:21)

5 பாவியாக இருப்பது (Being a sinner) (1தீமோ 1:15)

6 சரீர மரணம் (Physical death) (எபி 5:7; 1தீமோ 2:15)

7 வியாதி (Sickness) (யாக் 5:15 மத் 9:22)

8 குருடு (Blindness) (மாற்கு 10:52 லூக்கா 18:42)

9 குஷ்டம் (Leprosy) (லூக்கா 17:19)

10 முடம் (Lameness) (அப 3:2; அப 4:9, அப 14:9)

11 பிசாசின் கிரியைகள் (Demon possession) (லூக்கா 8:36)

12 நித்திய மரணம் (Eternal death) (யாக் 5:19-20)

13 துர்மனச்சாட்சி (An evil conscience) (1பேதுரு 3:21)

14 நித்திய அக்கினி (Eternal fire) (யூதா 1:23)

15 கோபம் (Wrath) (ரோமர் 5:9-10)

16 அடிமைத்தனம் (Slavery) (யூதா 1:5)

தீர்க்கதரிசன எண் - 19

"உங்கள் தலையிலிருந்து ஒரு மயிரும் விழாது" (அப 27:34) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இது ஒரு வழக்குச் சொல். அவர்கள் யாரும் மரிக்கமாட்டார்கள். அவர்களுக்கு எந்தத் தீங்கும் நேராது என்பது இதன் பொருள்.

திடமனது (good cheer) - εὔθυμος - euthymos - 2115

மேலும் - திடமனதான, தைரியமான "more cheerfully". - (அப் 24:10, 27:36)

"கப்பலில் இருநூற்றெழுபத்தாறு பேர் இருந்தோம்" - கிரேக்க மொழியில் இருநூற்றெழுபத்தாறு ஆத்துமாக்கள் "souls" இருந்தோம் என்றிருக்கிறது. இந்த வாக்கியத்தில் ஆத்துமாக்கள் என்பது நபர்களையே குறிக்கும். மனுஷனுடைய உள்ளான ஆத்துமாவைக் குறிக்காது. (எபி 4:12; 1தெச 5:23; மாற்கு 8:36)

"கோதுமையைக் கடலிலே எறிந்தார்கள்" - பவுல் பிரயாணம் பண்ணியது சரக்குக் கப்பல். அக்காலத்தில் எகிப்து தேசம் கோதுமை களஞ்சியமாக விளங்குகிறது. உலகம் முழுவதற்கும் எகிப்து தேசத்திலிருந்து கோதுமை ஏற்றுமதியாகிறது. (அப 27:6)

சமமான கரை (bosom) - κόλπος - kolpos - 2859

ஆண்பால் பெயர்ச்சொல் - மடி, மார்பு. லூக்கா 6:38; லூக்கா 16:22, 23; யோவான் 1:18; யோவான் 13:23; அப் 27:39)

சுக்கான் (rudder) - πηδάλιον - peedalion - 4079

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் சுக்கான்

"பெரும்பாய்" (mainsail) - இந்த அதிகாரத்தில் கடலைப்பற்றி, கப்பலுடைய பொருட்கள் சம்பந்தமாக சுமார் 50 புதிய வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பரிசுத்த வேதாகமத்தில் வேறு எந்த புஸ்தகத்திலும் இதுபோன்ற வார்த்தைகள் பயன்படுத்தப்படவில்லை.

27 அதிகாரம்

"காவல்பண்ணப்பட்டவர்களில் ஒருவனும் நீந்தி ஓடிப்போகாதபடிக்கு அவர்களைக் கொன்றுபோடவேண்டும்" - என்று போர்ச்சேவகர் யோசனையாயிருந்தார்கள். ஏனெனில் கைதிகள் தப்பிச் சென்றுவிட்டால், அதற்கு ஈடாக போர்ச்சேவகர்களுக்கு மரண தண்டனை கொடுக்கப்படும்.

"நூற்றுக்கு அதிபதி பவுலைக் காப்பாற்ற மனதாயிருந்தான்" பவுல் குற்றம் புரியாதவன் என்பது நூற்றுக்கு அதிபதிக்குத் தெரியும். பவுல் ஒரு பக்திமான் நூற்றுக்கு அதிபதியிடம் நல்ல நண்பன் ஆகையினால், அவனைக் காப்பாற்ற மனதாயிருக்கிறான். போர்ச்சேவகருடைய யோசனையைத் தடுத்து விடுகிறான். கைதிகளை விடுவிக்குமாறும் அவர்களில் நீந்தத்தக்கவர்கள் முந்தி கடலில் விழுந்து கரைசேரட்டும் என்றும் கூறுகிறான்.

"இவ்விதமாய் எல்லாரும் தப்பிக் கரை சேர்ந்தார்கள்" பவுல் கூறிய தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறது. (அப் 27:22,31)

28 அதிகாரம்

7. மெலித்தா தீவில் கரைசேருகிறார்கள்

அப 28:1 நாங்கள் தப்பிக் கரைசேர்ந்த பின்பு அந்தத் தீவின்பேர் மெலித்தா என்று அறிந்தோம்

அப 28:2 அந்நியராகிய அந்தத் தீவார் எங்களுக்குப் பாராட்டின அன்பு கொஞ்சமல்ல அந்த வேளையிலே பிடித்திருந்த மழைக்காகவும் குளிருக்காகவும் அவர்கள் நெருப்பை மூட்டி, எங்கள் அனைவரையும் சேர்த்துக் கொண்டார்கள்

"மெலித்தா" (Melita) - இதன் தற்காலத்துப் பெயர் மால்தா (Malta). மத்தியதரைக்கடல் பகுதியில் சிசிலிக்குத் (Sicily) தெற்கே 50 மைல் தூரத்தில் அமைந்துள்ளது. இந்தத் தீவின் நீளம் 20 மைல் அகலம் 12 மைல் இந்தத் தீவிலுள்ள வளைகுடாவை பரிசுத்த பவுலின் வளைகுடா (St. Paul's Bay) என்று தற்காலத்தில் அழைக்கிறார்கள் இவ்விடத்தில் தான் அப 27 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கிற கப்பற்சேதம் ஏற்பட்டது.

"அந்நியர்" - இதற்கான கிரேக்க வார்த்தை "பார்பரோஸ்" (barbaros) என்பதாகும். இந்த வார்த்தையிலிருந்து பார்பேரியன் "barbarian" என்னும் வார்த்தை வந்திருக்கிறது (அப 28:4, ரோமர் 1:14, 1கொரி 14:11; கொலோ 3:11) இந்த வார்த்தைக்குப் பொதுவாக நாகரிகம் அற்றவர்கள் என்று தற்காலத்தில் பொருள் கூறுகிறோம். ஆனால் ரோமாபுரியாரின் காலத்தில் கிரேக்கர்கள் கிரேக்க மொழி பேசாதோர் அனைவரையுமே பார்பேரியன் என்றே அழைத்தார்கள். பவுலும் இந்த வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார் (1கொரி 14:11) பாஷையின் கருத்தை பவுல் அறியாத காரணத்தினால் அவனை அந்நியன் அதாவது பார்பேரியன் என்று குறிப்பிடுகிறார் எகிப்தியர்கூட தங்களுடைய மொழியைப் பேசாதவர்களை அந்நியர் என்று பொருள்படும் பார்பேரியன் என்றே அழைத்தார்கள்

அந்நியர் (barbarous)
βάρβαρος barbaros 915

பொருள் - அந்நியர், கிரேக்கருக்குப் புரியாத அந்நிய மொழி, புற தேசத்தான்

8. விரியன்பாம்பு பவுலின் கையை கவ்விக்கொள்கிறது - (மாற்கு 16:18; லூக் 10:19; சங் 91:13)

அப 28:3 பவுல் சில விறகுகளை வாரி அந்த நெருப்பின்மேல் போடுகையில் ஒரு விரியன்பாம்பு அனலுறைத்துப் புறப்பட்டு அவனுடைய கையைக் கவ்விக்கொண்டது.

அப 28:4 விஷப்பூச்சி அவன் கையிலே தொங்குகிறதை அந்நியராகிய அந்தத் தீவார் கண்டபோது இந்த மனுஷன் கொலைபாதகன் இதற்குச் சந்தேகமில்லை; இவன் சமுத்திரத்துக்குத் தப்பிவந்ததும் பழியானது இவனைப் பிழைக்க வொட்டவில்லையென்று தங்களுக்குள்ளே சொல்லிக் கொண்டார்கள்

அப 28:5 அவன் அந்தப் பூச்சியைத் தீயிலே உதறிப்போட்டு, ஒரு தீங்கும் அடையாதிருந்தான்

அப 28:6 அவனுக்கு வீக்கங்கண்டு, அல்லது அவன் சடிதியாய் விழுந்து சாவானென்று அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள்; நெடுநேரமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தும் ஒரு சேதமும் அவனுக்கு வராததைக் கண்டபோது வேறு சிந்தையாகி, இவன் தேவனென்று சொல்லிக்கொண்டார்கள்

அப் 28:7 தீவுக்கு முதலாளியாகிய புபிலியு என்னும் பேர்கொண்டவனுடைய நிலங்கள் அந்த இடத்திற்குச் சமீபமாயிருந்தது, அவன் எங்களை ஏற்றுக்கொண்டு, மூன்று நாள் பட்சமாய் விசாரித்தான்

விரியன்பாம்பு (viper) - ἔχιδνα echidna 2191

பெண்பால் பெயர்ச்சொல் - விரியன்பாம்பு (மத் 3:7, மத் 12:34, மத் 23:33; லூக்கா 3:7, அப் 28:3

28 அதிகாரம்

"இந்த மனுஷன் கொலைபாதகன்" - ஒரு விரியன்பாம்பு அனலுறைத்துப் புறப்பட்டு அவனுடைய கையைக் கவ்விக்கொண்டது. விஷபூச்சி அவன் கையிலே தொங்குகிறது. அந்நியராகிய அந்தத் தீவார் அதைக் கண்டபோது, இந்த மனுஷன் கொலை பாதகன் என்று கூறினார்கள். பவுல் சமுத்திரத்துக்குத் தப்பிவந்தபோதும், பழியானது இவனைப் பிழைக்கவொட்டவில்லையென்று தங்களுக்குள்ளே சொல்லிக் கொண்டார்கள். இது புறஜாதியாருடைய நம்பிக்கை. ஒருவனை பாம்பு கடித்து அவன் இறந்து விட்டால், அவன் ஒரு துன்மார்க்கன் எனவும் துன்மார்க்கனுக்குரிய தண்டனை அவனுக்குக் கிடைத்திருக்கிறது என்று நம்பினார்கள்.

"பவுல் அந்தப் பூச்சியைத் தீயிலே உதறிப்போட்டு, ஒரு தீங்கும் அடையாதிருந்தான்" - தன்னைக் கவ்விக் கொண்ட விரியன்பாம்பை பவுல் தீயிலே உதறிப் போட்டான். புறஜாதியார் மத்தியிலே அந்த விரியன்பாம்பை தூக்கிப்பிடித்து தான் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன், பாம்பு என்னை ஒன்றும் செய்யாது என்று பெருமைபாராட்டிக் கொள்ளவில்லை. ஆகையினால் மாற்கு 16:17-18 ஆகிய வசனங்களின் பொருளை நாம் சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும். பவுல் ஒரு தீங்கும் அடையாதிருந்தான். ஆகையினால் இங்கு மாற்கு 16:17-18 ஆவது வசனங்களில் கூறப்பட்டிருக்கிற வாக்குத்தத்தம் நிறைவேறுகிறது.

"அவன் சடிதியாய் விழுந்து சாவானென்று அவர்கள் பார்த்துக்கொண்டிருந்தார்கள்" - பவுலின் கையை விரியன்பாம்பு கவ்விவிட்டது. இதை மெலித்தா தீவார் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவனுக்கு வீக்கம் கண்டுவிடும் என்று எதிர்பார்க்கி றார்கள். பவுல் சடிதியாய் விழுந்து, செத்து போவான் என்று நினைத்தார்கள். பவுல் சாகப்போகிறான் என்பதை நெடுநேரமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவனுக்கு ஒரு சேதமும் வரவில்லை. பாம்பின் விஷம் கடிபட்டவனுடைய இரத்தத்திற்குள் கலந்துவிடும். இதனால் இரத்தம் உடனே உறைந்து, அவன் மடிந்துபோவான். உடம்பு வீங்கும். இதுதான் பாம்பு கொத்தியவர்களுக்கு நேரிடும் காரியம். பவுலுக்கும் இதே காரியம் நேரிடும் என்று அவனையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பவுல் மரித்துப்போகவில்லை. இதனால் பவுல் சாதாரண மனுஷன் அல்ல. அவன் ஒரு தேவன் என்று மெலித்தா தீவார் நினைக்கிறார்கள்.

"தேவன்" (god) - ஹெர்குலஸ் (Hercules) பெனிக்கேயரின் தெய்வம். மால்தா தீவார் ஹெர்குலஸை வழிபடு கிறவர்கள். ஹெர்குலஸ் தீமையைப்போக்கும் என்பது அவர்களுடைய நம்பிக்கை. பவுலே அந்த ஹெர்குலஸ் என்று மெலித்தா தீவார் நினைக்கிறார்கள். ஹெர்குலஸ் சிறுவனாக இருந்தபோது அவனுடைய தொட்டிலில் இரண்டு சர்ப்பங்கள் அவனைத் தீண்ட வந்தது. ஹெர்குலஸ் சிறுவனாக இருந்தாலும் இவ்விரண்டு சர்ப்பங்களையும் கொன்றுபோட்டான். பவுல் விரியன்பாம்பைத் தீயில் உதறிப்போட்டதினால், இவனே ஹெர்குலஸ் என்று மெலித்தா தீவார் நினைக்கிறார்கள்.

9. மெலித்தா தீவில் புபிலியுவினுடைய தகப்பன் குணமடைகிறான்

அப் 28:8 புபிலியுவினுடைய தகப்பன் ஜூரத்தினாலும் இரத்தபேதியினாலும் வருத்தப்பட்டுக் கிடந்தான்; பவுல் அவனிடத்திற்குப் போய் ஜெபம்பண்ணி, அவன் மேல் கைகளை வைத்து அவனைக் குணமாக்கினான்.

அப் 28:9 இது நடந்தபின்பு, தீவிலே இருந்த மற்ற வியாதிக்காரரும் வந்து குணமாக்கப்பட்டார்கள்.

அப் 28:10 அவர்கள் எங்களுக்கு அநேக மரியாதை செய்து, நாங்கள் கப்பல் ஏறிப் போகிறபோது எங்களுக்குத் தேவையானவைகளை ஏற்றினார்கள்.

ஜுரம் (fever) - πυρετός - pyretos 4446

ஆண்பால் பெயர்ச்சொல் - ஜுரம் (மத் 8:15; மாற்கு 1:31; லூக்கா 4:38-39; யோவான் 4:52; அப் 28:8

இரத்தபேதி (bloody flux) αίρω - airoo - 142

28 அதிகாரம்

விணைச்சொல - இரத்தபேதி (dysentery)

"பவுல் அவனைக் குணமாக்கினான்" - புறஜாதியாருடைய தீவிலே தேவனுடைய சுகமாக்கும் கிரியை நடைபெறுகிறது. தேவனுடைய கரம் கிரியை செய்வதை புறஜாதியார் காண்கிறார்கள். தங்கள் தீவிலிருந்த மற்ற வியாதிக்காரரையும் பவுலிடம் அழைத்து வருகிறார்கள்.

"தீவிலே இருந்த மற்ற வியாதிக்காரரும் வந்து, குணமாக்கப்பட்டார்கள்" - பவுலோடு லூக்காவும் இருக்கிறார். லூக்கா ஒரு மருத்துவர். வியாதியஸ்தருக்கு லூக்கா மருத்துவச் சிகிச்சை செய்தார். இதனால் மற்ற வியாதிக்காரர்கள் குணமாக்கப்பட்டார்கள் என்று ஒருசிலர் கூறுகிறார்கள். ஆனால் இதற்கு வேதத்தில் ஆதாரம் ஏதுமில்லை. பவுல் வியாதியஸ்தர் மேல் தனது கைகளை வைத்து, அவர்களைக் குணமாக்கினார் என்று மட்டுமே நாம் வேதவசனத்தில் வாசிக்கிறோம். பவுல் ரோமாபுரிக்குப் பிரயாணம் பண்ணியபோது தனக்கு மருத்துவச் சிகிச்சை செய்வதற்காக மருத்துவராகிய லூக்காவையும் தன்னோடு பவுல் அழைத்துச் சென்றார் என்று ஒருசிலர் கூறுகிறார்கள். இதுவும் தவறான கருத்தே. பவுல் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஜெபம் பண்ணும்போது தேவன் வியாதியைக் குணமாக்குகிறார். குணமாகும் வரமுடையோருக்குக் குணமாகும் மருத்துவம் தேவையில்லை. தேவனே பரம வைத்தியராக இருக்கிறார் (2தீமோ 4:20).

10. மெலித்தா தீவிலிருந்து ரோமாபுரிக்குப் பிரயாணம்

அப் 28:11 மூன்றுமாதம் சென்றபின்பு, அந்தத் தீவிலே மழைகாலத்திற்குத் தங்கியிருந்த மிதுனம் என்னும் அடையாளமுடைய அலெக்சந்திரியா பட்டணத்துக் கப்பலிலே நாங்கள் ஏறிப் புறப்பட்டு,

அப் 28:12 சீரகூசா பட்டணத்தைச் சேர்ந்து, அங்கே மூன்றுநாள் தங்கினோம்.

அப் 28:13 அவ்விடம்விட்டுச் சுற்றியோடி ரேகியுதுறைமுகத்துக்கு வந்து சேர்ந்தோம். மறுநாளில் தென்றற் காற்றெடுக்கையில் புறப்பட்டு, இரண்டாம் நாள் புத்தேயோலி பட்டணத்திற்கு வந்து,

அப் 28:14 அங்கே சகோதரரைக் கண்டோம்; அவர்கள் எங்களை ஏழுநாள் தங்களிடத்தில் இருக்கும்படி வேண்டிக் கொண்டார்கள். அந்தப்படி நாங்கள் இருந்து பின்பு ரோமாபுரிக்குப் போனோம்.

அப் 28:15 அவ்விடத்திலுள்ள சகோதரர்கள் நாங்கள் வருகிற செய்தியைக் கேள்விப்பட்டு, சிலர் அப்பியுபரமவரைக்கும் சிலர் மூன்று சத்திரமவரைக்கும் எங்களுக்கு எதிர்கொண்டுவந்தார்கள். அவர்களைப் பவுல் கண்டு, தேவனை ஸ்தோத்திரித்துத் தைரியமடைந்தான்.

அப் 28:16 நாங்கள் ரோமாபுரியில் சேர்ந்தபோது நூற்றுக்கு அதிபதி தன் காவலிலிருந்தவர்களைச் சேனாபதியினிடத்தில் ஒப்புக் கொடுத்தான். அப்பொழுது பவுல் தன்னைக் காத்திருக்கிற சேவகனுடனே தனித்துக் குடியிருக்கும்படி உத்தரவு பெற்றுக்கொண்டான்.

"மூன்றுமாதம் சென்றபின்பு" பவுல் மெலித்தா தீவிற்கு அக்டோபர் மாதம் வந்திருக்கிறார். இப்போது ஜனவரி அல்லது பிப்ரவரி மாதம் ஆயிற்று. இக்காலத்தில் மழைக்காலம் முடிந்துவிடும். காற்று மெதுவாக வீசும். இக்காலத்தில் பிரயாணம் பண்ணுவது பாதுகாப்பானது.

"அந்தத் தீவிலே மழைகாலத்திற்குத் தங்கியிருந்த மிதுனம் என்னும் அடையாளமுடைய அலெக்சந்திரியா பட்டணத்துக் கப்பல்" இது மற்றொரு சரக்குக் கப்பல். ஆப்பிரிக்க தேசத்திலிருந்து இத்தாலியா தேசத்திற்கு தானியங்களை ஏற்றிச் செல்லும் கப்பல். மழைக்காலத்தில் இந்தக் கப்பல் மெலித்தா தீவில் தங்கியிருந்தது. இப்போது சீதோஷண நிலை சாதகமாக இருந்ததினால் அவர்கள் மறுபடியும் பிரயாணம் பண்ணுகிறார்கள் (அப் 27:6)

28 அதிகாரம்

மிதுனம் (Castor and Pollux) Διόσκουροι - Dioskouroi - 359

ஓர் ஆணின் பெயர் - மிதுனம் - ஜூபிட்டர் (Jupiter), லீடா (Leda) ஆகியோரின் இரண்டு குமாரர்கள் இவர்கள் பரலோகத்திற்கு ஏறிச் சென்று அங்கு பிரகாசமான நட்சத்திரங்களாக ஜொலிக்கிறார்கள் என்று இவர்களைப் பற்றி பாரம்பரிய கதை ஒன்று உள்ளது. அந்த நட்சத்திரக் கூட்டத்தை ஜெமினி (Gemini) என்று அழைத்தார்கள் மாலுமிகள் மிதுன அடையாளத்தை நல்ல அடையாளமாகக் கருதினார்கள் இதனால் கப்பலின் பல பாகங்களில் மிதுன அடையாளத்தைப் பதித்திருந் தார்கள்

"சீரகூசா பட்டணம்" (Syracuse) - பழங்காலத்தில் பிரசித்தி பெற்ற பட்டணங் களில் ஒன்று. இது சிசிலியின் (Sicily) தலைநகரம் கி.மு. 730 ஆம் ஆண்டு இந்தப் பட்டணம் கட்டப்பட்டது. பவுல் இங்கு மூன்று நாள் தங்கியிருந்தார் அதிலிருந்து இந்தப் பட்டணத்திலும் கிறிஸ்தவ மார்க்கம் ஆரம்பமாயிற்று. (அப 28:12

"ரேகியுதுறைமுகம்" (Rhegium) இத்தாலியின் தென்பகுதியிலுள்ள பட்டணம் சிசிலிக்கு நேரெதிராக அமைந்திருக்கிறது. இதன் தற்காலத்துப் பெயர் ரெகக்யோ (Reggio)

"புத்தேயோலிபட்டணம்" (Puteoli) - நேப்பல்ஸ் வளைகுடாவில் (Bay of Naples) உள்ளது. இதன் தற்காலத்துப் பெயர் புச்சோலி (Pozzuoli) இது கி.மு. 470 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இந்தப் பட்டணத்தில் ஜூபிட்டர் செராபிஸ்க்கு (Jupiter Serapis) ஒரு கோவில் உள்ளது. இந்தக் கோவில் கிரேக்கர், ரோமர் ஆகியோருடைய கட்டிடக்கலையின் பிரகாரம் கட்டப்பட வில்லை. ஆசியாவிலுள்ள கட்டிட முறைமையின் பிரகாரம் இந்தக் கோவில் கட்டப்பட்டிருக்கிறது.

"அங்கே சகோதரரைக் கண்டோம்" - புத்தேயோலி பட்டணத்தில் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள் இவர்கள் ஒருவேளை பெந்தெகொஸ்தே நாளில் சுவிசேஷச் செய்தியைக் கேள்விப்பட்டிருக்கலாம். அப் 2-8 ஆகிய அதிகாரங்களில் எருசலேமில் நடந்ததாகக் கூறப்பட்டிருக்கும் ஆவிக்குரிய எழுப்புதலில் இவர்கள் இரட்சிக்கப்பட்டிருக் கலாம். பெந்தெகொஸ்தே நாளில் ரோமாபுரியி லிருந்தும் பலர் எருசலேமில் கூடி இருந்தார்கள் (அப 2:10) அதிலிருந்து இத்தாலியிலுள்ள அநேகர் இரட்சிக்கப் பட்டிருக்கிறார்கள் பெந்தெகொஸ்தே நாள் கி.பி. 30 ஆம் வருஷத்தில் நடைபெற்றது. பெந்தெகொஸ்தே நடைபெற்று 30 வருஷங்களுக்குப்பின்பு அதாவது கி.பி. 60 ஆம் வருஷத்தில் இங்குள்ள கிறிஸ்த வருக்குப் பவுல் நிருபம் எழுதியிருக்கிறார்

"அப்பியபுரம்" (Appii) - ரோமாபுரி யிலிருந்து 52 மைல் தூரத்தில் அமைந்தி ருக்கும் பட்டணம் ரோமாபுரியிலுள்ள கிறிஸ்தவர்கள் பவுலைச் சந்திப்பதற்காக அப்பியபுரத்திற்கு வருகிறார்கள் அவர்களைப் பவுல் கண்டு, தேவனை ஸ்தோத்திரித்துத் தைரியமடைந்தான்

"மூன்று சத்திரம்" (The three taverns) ரோமாபுரியிலிருந்து 33 மைல் தூரத்தில் அமைந்திருக்கிறது.

"நாங்கள் ரோமாபுரியில் சேர்ந்தபோது" - அப 19:21; அப் 23:11 ஆகிய வசனங்களின் நிறைவேறுதல்.

"ரோமாபுரி" (Rome) - இத்தாலியின் தலைநகரம். உலகப் பிரசித்தி பெற்ற பட்டணங்களில் ஒன்று. கி.மு. 753 ஆம் வருஷத்தில் ரோமுலஸ் Romulus என்னும் பேரரசன் இந்தப் பட்டணத்தை நிறுவினான்

"சேனாபதி" (captain of the guard) - இவர்கள் இராயனுடைய போர்வீரர்கள் நூற்றுக்கு அதிபதி தன் வசமாக ஒப்படைக்கப்பட்டிருந்த கைதிகளை இப்போது இராயனுடைய அதிகாரியான சேனாபதியினிடத்தில் ஒப்புக் கொடுக்கிறான்

11. ரோமாபுரியில் பவுல் யூதர்களுக்கு முன்பாக பவுல் கூறிய காரியங்கள் - (அப 23:1; 26:1)

28 அதிகாரம்

அப் 28:17 மூன்றுநாளைக்குப்பின்பு, பவுல் யூதரில் பிரதானமானவர்களை வரவழைத்தான் அவர்கள் கூடி வந்திருந்த போது, அவன் அவர்களை நோக்கி: சகோதரரே நம்முடைய ஜனங்களுக்கும் நம்முடைய முன்னோர்களின் முறைமைகளுக்கும் விரோதமான தொன்றையும் நான் செய்யாமலிருந்தும், கட்டப்பட்டவனாக எருசலேமிலிருந்து ரோமர் கைகளில் ஒப்புக் கொடுக்கப்பட்டேன்

அப் 28:18 அவர்கள் என்னை நியாயம் விசாரித்தபோது மரணத்துக் கேதுவான குற்றம் ஒன்றும் என்னிடத்தில் காணாத படியினால் என்னை விடுதலையாக்க மனதாயி ருந்தார்கள்

அப் 28:19 யூதர்கள் அதற்கு எதிர்பேசினபோது, நான் இராயனுக்கு அபயமிட வேண்டியதாயிருந்தது. ஆயினும் என் ஜனத்தார்மேல் யாதொரு குற்றஞ் சாட்ட வேண்டு மென்று நான் அப்படிச் செய்யவில்லை

அப் 28:20 இந்தக் காரியத்தினி மித்தமே உங்களைக் காணவும் உங்களுடனே பேசவும் உங்களை அழைப்பித்தேன் இஸ்ரவேலுடைய நம்பிக்கைக்காகவே இந்தச் சங்கிலி யால் கட்டப்பட்டிருக்கிறேன் என்றான்

"பவுல் யூதரில் பிரதானமானவர்களை வரவழைத்தான்" ரோமாபுரியில ஜெபாலயங்கள் இருந்தன. அவற்றின் மூப்பர்களைப் பவுல் வரவழைத்தான் தான் ரோமாபுரியில் இருப்பதற்கான காரணத்தை யூதருக்கு விளக்கிக் கூறவிரும்பினான் இராயனுக்கு அபயமிட வேண்டியதின் அவசியத்தையும், அவர்களுக்குத் தெரியப்படுத்த பவுல் மனதுள்ளவனாக இருந்தான் (அப் 28:19) யூதஜனங்களுக்கும் யூதமுறைமைகளுக்கும் விரோதமாகத் தான் ஒன்றும் செய்யவில்லை என்பதையும் பவுல் அவர்களுக்குத் தெளிவுபடுத்தினான் (அப் 28:19)

"நான் இராயனுக்கு அபயமிட வேண்டிய தாயிருந்தது" - (அப் 25:11)

"இஸ்ரவேலுடைய நம்பிக்கைக்காகவே இந்தச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிறேன்" - பவுல் குற்றம் ஒன்றும் செய்யவில்லை. ஆனாலும் கைதியாக இருக்கிறான் இஸ்ரவேலின் நம்பிக்கைக்காகவே, தான் இந்தச் சங்கிலியால் கட்டப்பட்டிருப்பதாகக் கூறுகிறான்

இஸ்ரவேலுடைய நம்பிக்கை

1 மரித்தோரின் உயிர்த்தெழுதல் (அப் 23:6; அப் 24:15,21; அப் 26:7-8)

2 மேசியாவைப் பற்றிய இஸ்ரவேலின் நம்பிக்கை. அவர் தாவீதின் ராஜ்யத்தைத் திரும்பக் கட்டுவார் (அப் 13:34; அப் 14:22; அப் 15:13-17 அப் 17:3,7,18; அப் 18:5,28; அப் 19:8; அப் 20:25)

3 இஸ்ரவேலின் இரட்சிப்பு (அப் 13:38-39; அப் 20:21 அப் 26:6-7,18; ரோமர் 9-11)

12. பவுல் யூதர்களுக்கு பிரசங்கம் பண்ணுகிறான்

அப் 28:21 அதற்கு அவர்கள் உன்னைக் குறித்து யூதேயாவிலிருந்து எங்களுக்குக் கடிதம் வரவுமில்லை. வந்த சகோதரரில் ஒருவனும் உன பேரிலொரு பொல்லாங்கை அறிவித்தது மில்லை, அதைப்பற்றிப் பேசினது மில்லை.

அப் 28:22 எங்கும் இந்த மதபேதத்துக்கு விரோதமாய்ப் பேசுகிறதாக நாங்கள் அறிந்திருக்கிற படியால் இதைக்குறித்து உன்னுடைய அபிப்பிராயம் என்னவென்று கேட்டறிய விரும்புகிறோம் என்றார்கள்

அப் 28:23 அதற்காக அவர்கள் ஒரு நாளைக்குறித்து, அநேகம்பேர் அவன் தங்கியிருந்த வீட்டிற்கு அவனிடத்தில் வந்தார்கள் அவன் காலமே தொடங்கி சாயங்காலமட்டும் மோசேயின் நியாயப் பிரமாணத்திலும், தீர்க்கதரிசிகளின் ஆகமங் களிலும் இருந்து இயேசுவைக் குறித்த விசேஷங்களை அவர்களுக்குப் போதித்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துச் சாட்சி கொடுத்து விஸ்தரித்துப் பேசினான்

28 அதிகாரம்

அப் 28:24 அவன் சொன்னவை களைச் சிலர் விசுவாசித்தார்கள் சிலர் விசுவாசியாதிருந்தார்கள்

"உன்னைக்குறித்து யூதேயாவிலிருந்து எங்களுக்குக் காகிதம் வரவுமில்லை." - ரோமாபுரியிலே பவுலுக்குச் சாதகமாக மூன்று காரியங்கள் நடைபெற்றிருக்கிறது. அவையாவன

1 பவுலைக்குறித்து யூதேயாவிலிருந்து ரோமாபுரியிலுள்ள யூதர்களுக்குக் காகிதம் வரவுமில்லை. அங்கிருந்து வந்த சகோதாரில் ஒருவனும் பவுலபேரில் ஒரு பொல்லாங்கை அறிவித்ததுமில்லை. அதைப்பற்றிப் பேசினதுமில்லை

2 யூதேயாவிலிருந்து பவுலோடு பிரயாணம் பண்ணி வந்திருக்கிறவர்கள் பவுலுக்குச் சாதகமாகவே பேசக்கூடியவர்கள்

3 பவுலின் உபதேசங்களை நியாயப் பிரமாணமும், தீர்க்கதரிசியின் ஆகமங்களும் ஆதரிக்கின்றன

"மதபேதம்" (sect) (அப் 5:17)

"உன்னுடைய அபிப்பிராயம் என்ன வென்று கேட்டறிய விரும்புகிறோம்" ரோமாபுரியிலுள்ள யூதர்கள் பவுலைக் குறித்து ஏற்கெனவே கேள்விப்பட்டிருக்கி றார்கள். யூதமார்க்கத்திற்கு விரோதமாகப் பவுல் பேசுவதாக அவர்கள் அறிந்திருக்கி றார்கள். இந்தச் சூழ்நிலையில் ரோமா புரியிலுள்ள யூதர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும் வாய்ப்பு பவுலுக்குக் கிடைக்கிறது. யூதர்கள் தங்களுடைய ஜெபாலயங்களில் கிறிஸ்தவர்களைச் சபித்தார்கள். எங்கெல்லாம் ஜெபாலயங்கள் இருக்கிறதோ அங்கெல்லாம் யூதமார்க்கத்தின் பிரபலமானவர்களை அனுப்பி அங்கு கிறிஸ்தவர்களுக்கு எதிரான காரியங்களை அவர்களுடைய ஜெபாலயங்களிலேயே உபதேசம் பண்ணினார்கள்

குறித்து (appointed) - τάσσω - tassoo - 5021

வினைச்சொல் - குறித்திரு, நியமிக்கப்படு, ஒப்புவித்திரு - பவுல் பேசுவதைக் கேட்பதற்காக அவர்கள் ஒரு நாளைக் குறித்தார்கள் (அப் 13:48)

விஸ்தரித்து பேச (expounded) - ἐκτίθημι - ektitheemi - 1620

வினைச்சொல் - விவரி, வெளியே போடு, விஸ்திரி, விஸ்தரித்து பேசு (set before them) (அப் 7:21; அப் 11:4; அப் 18:26; அப் 28:23) - கிறிஸ்துவில் வேதவாக்கியம் நிறைவேறியிருப்பதை பவுல் யூதர்களுக்கு எடுத்துக் கூறுகிறார்

"தேவனுடைய ராஜ்யம்" (kingdom of God) - (மத் 4:17, மத் 19:24)

"காலமே தொடங்கி சாயங்காலமட்டும்" - அங்குக் கூடியிருந்தோர் எல்லோருமே யூதர்கள். நியாயப்பிரமாணத்தையும் தீர்க்க தரிசிகளின் புஸ்தகங்களையும் ஏற்கெனவே கற்றுத் தெளிந்தவர்கள். அவர்கள் மத்தியிலே பவுல் ஒரு நாள் முழுவதும் பிரசங்கம் பண்ணுகிறார். ஏற்கெனவே அவர்களுக்கு வேதவாக்கியங்கள் நன்கு தெரியும். தங்கள் சிறுவயது முதற்கொண்டே வேதத்தைக் கற்று அறிந்தவர்கள். அப்போதப்பட்டவர்களிடம் ஒரே நாளில் பல காரியங்களைக் கூறமுடியும்

"அவன் சொன்னவைகளைச் சிலர் விசுவாசித்தார்கள், சிலர் விசுவாசியா திருந்தார்கள்" எல்லா இடங்களிலும் இதே காரியம்தான் நடைபெறுகிறது. சுவிசேஷத்தை நாம் விசுவாசத்தோடு பிரசங்கம் பண்ணுகிறோம். ஒருசிலர் அதை ஏற்றுக் கொண்டு இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். வேறு சிலரோ விசுவாசியாமல் போகிறார்கள்

13. பவுல் யூதர்களுக்குக் கூறிய கடைசி செய்தி - இரட்சிப்பு புறஜாதியாருக்கு அனுப்பப் பட்டிருக்கிறது

28 அதிகாரம்

அப 28.25 இப்படி அவர்கள் ஒருவரோடொருவர் ஒவ்வாமலிருந்து புறப்பட்டுப் போகையில், பவுல் அவர்களுக்குச் சொன்ன வாக்கியமாவது.

அப 28.26 நீங்கள் காதாரக்கேட்டும் உணராதிருப்பீர்கள், கண்ணாரக் கண்டும் பாராதிருப்பீர்கள்

அப 28.27 இவர்கள் கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து குணப்படாமலும், நான் இவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படிக்கு, இந்த ஜனத்தின் இருதயம் கொழுத்திருக்கிறது. காதுகளினால் மந்தமாய்க் கேட்டுத் தங்கள் கண்களை மூடிக் கொண்டார்கள் என்று இந்த ஜனத்தினிடத்தில் போய்ச் சொல்லு என்பதைப் பரிசுத்த ஆவி ஏசாயா தீர்க்கதரிசியைக் கொண்டு நம்முடைய பிதாக்களுடனே நன்றாய்ச் சொல்லியிருக்கிறார்

அப் 28.28 ஆதலால் தேவனுடைய இரட்சிப்பு புறஜாதியாருக்கு அனுப்பப்பட்டிருக்கிறதென்றும் அவர்கள் அதற்குச் செவிகொடுப்பார்களென்றும் உங்களுக்குத் தெரிந்திருக்கக்கடவது என்றான்

அப 28.29 இப்படி அவன் சொன்னபின்பு, யூதர்கள் தங்களுக்குள்ளே மிகவும் தர்க்கம்பண்ணிக் கொண்டு போய்விட்டார்கள்

"ஒருவரோடொருவர் ஒவ்வாமலிருந்தார்கள்" - ஜனங்கள் மத்தியிலே பிரிவினையை உண்டாக்க வந்தேன் என்று இயேசு கிறிஸ்து முன்னறிவித்தார் (மத் 10.34-36) அது இப்போது நிறைவேறுகிறது சில சமயங்களில் ஜனங்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதினாலும், ஏற்றுக் கொள்ளாமல் போவதினாலும் பிரிவினை உண்டாகிறது. (2கொரி 2.15-17

அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 21

"நீங்கள் காதாரக்கேட்டும் உணராதிருப்பீர்கள் கண்ணாரக்கண்டும் பாராதிருப்பீர்கள்" (அப 28.26-27, ஏசா 6.9-10) (மத் 13.14-15, யோவான் 12.40

ரோமர் - முன்னுரை

காலம்

கிபி 56-60 ஆம் ஆண்டில் பவுல் கொரிந்துவிலிருந்து இந்த நிருபத்தை எழுதினார் இது பவுலின் ஆறாவது நிருபமாகும் ரோமாபுரிக்கு பெபேயாள் (Phebe) மூலமாக இந்த நிருபம் அனுப்பப்பட்டது. (ரோமர் 16:1)

ஆசிரியர்

இந்த நிருபத்தின் ஆசிரியர் பவுல் இவர் புறஜாதியாரின் அப்போஸ்தலர் இவருடைய மறுபெயர் சவுல் அப 8:1 அப 9:1 அப 13:9 பென்யமீன் கோத்திரத்தான் ஆசியாவிலுள்ள தர்சு பட்டணத்தில் பிறந்தவன் (ரோமர் 11:1; பிலி 3:5 அப 9:11; அப 21:39; அப 22:3). பரிசேயன எருசலேமில் கல்வி கற்றவன் (அப 22:3, அப் 23:6; அப 26:4-5). ரோமப்பிரஜை அப 16:37 அப 22:25-28) கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியவன (அப 7:58 அப 8:1 அப 9:1 அப 22:4 கலா 1:13 பிலி 3:6 1தீமோ 1:13) கிறிஸ்துவைத் தன இரட்சகராக ஏற்றுக் கொண்டான அப 9:1-17) பவுல சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணினான கிறிஸ்தவ மார்க்கத்தின உபதேசங்களை மிகவும் தெளிவாக [illegible] கூறியிருக்கிறான அப 9:19-29 கலா 1:11-24, 2பேதுரு 3:15). அப்போஸ்தலன பவுலின வரலாற்றை அப 8-28 ஆகிய அதிகாரங்கள மூலமாகவும், அவர எழுதிய நிருபங்கள் மூலமாகவும் நாம் தெரிந்து கொள்ளலாம். புதிய ஏற்பாட்டில் உள்ள 14 நிருபங்களைப் பவுல் எழுதினார்

மையக்கருத்து

நிருபங்களின் வரிசையில ரோமருக்கு எழுதின நிருபம் முதலாவதாக வருகிறது. உபதேசப் பிரகாரமாகவும் வேதாகமம் கோர்க்கப்பட்டிருக்கிற பிரகாரமாகவும் இந்த நிருபம் முதலாவது வருவது சரியானது. கிறிஸ்தவத்தின அஸ்திபார உபதேசங்களைப் பவுல இந்த நிருபத்தில எழுதியிருக்கிறார ரோமருக்கு எழுதின நிருபத்தில பவுல எழுதியிருக்கும் உபதேசங்களை நாம் தெளிவாகக் கற்றுக் கொள்ள வேண்டும். இல்லையென்றால், கிறிஸ்தவத்தின் மெய்யான கோட்பாடுகளை நம்மால புரிந்து கொள்ள இயலாது. சபையின் அஸ்திபார உபதேசத்தை இந்த நிருபத்தில் நாம வாசிக்கிறோம். இந்த நிருபத்தில் கூறப்பட்டிருக்கும உபதேசங்களை நாம் தவறாகப் புரிந்து கொணடால் நமது கிறிஸ்தவ ஜீவியமே தவறானதாக இருக்கும்.

இந்த நிருபத்தில இரண்டு மையக்கருத்துக்கள் உள்ளன அவையாவன 1 பாவத்திற்கு எதிராகத் தேவனுடைய கோபம் வெளிப்பட்டிருக்கிறது 2 விசுவாசத்தின் மூலமாக வரும் நீதி நீதிமானாக்கப்படுவதற்கு ஆதாரமாக இருக்கிறது.

தேவனுக்கு முன்பாக எல்லா மனுஷரையும் ரோமர்கள் குற்ற உணர்வுடையவர்களாக ஆக்கிவிட்டார்கள் ஆகையினால இயேசு கிறிஸ்துவின் மூலமாக மனுஷருக்கு இரட்சிப்பு தேவைப்படுகிறது ரோமருக்குப பவுல எழுதின இந்த நிருபத்தில பல அதிகாரங்கள கிறிஸ்தவ உபதேசத்தை விளக்குவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது (ரோமர் 1:16-8:39) யூதர்களோடும். புறஜாதியாரோடும தேவன எவ்வாறு கிரியை நடப்பிக்கிறார் என்பதும், ஒவ்வொரு காலத்திலும தேவன அவர்களோடு எவ்வாறு உறவு வைத்திருப்பார் என்பதும் இந்த உபதேசப்பகுதியில விளக்கப்பட்டிருக்கிறது (ரோமர் 9:1-11:36) இரட்சிப்பினால் நடைமுறை வாழ்வில ஏற்படும் விளைவுகளை ரோமர் 12:1-16:27 ஆகிய வசனங்கள விளக்குகிறது.

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 16

வசனங்கள - 433

கேள்விகள - 87

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள் - 19

புதிய தீர்க்கதரிசனங்கள் - 4

வரலாற்றைக் குறிக்கும் வசனங்கள் - 388

ரோமர் - முன்னுரை

பொருளடக்கம்

I. முன்னுரை

1 ஆசிரியர் - அழைப்பும் ஊழியமும் (1:1)

2 தீர்க்கதரிசிகளின் மையக்கருத்து சுவிசேஷம் (1:2)

3 சுவிசேஷத்தின் மையக்கருத்து இயேசு கிறிஸ்து (1:3-6)

4 பவுலின் வாழ்த்துரை (1:7)

5 நல்ல பிரயாணத்திற்காக ஜெபம் (1:8-10)

6 பவுலின் பிரயாணத்தின் நோக்கம் (1:11-13)

7 பவுலின் பொறுப்பு - தன்னால் இயன்ற மட்டும் சுவிசேஷத்தை பிரசங்கிக்க விரும்புகிறான் (1:14-15)

8 எல்லா விசுவாசிகளுக்கும் இரட்சிப்பு உண்டாவதற்கு சுவிசேஷம் தேவபெலனாயிருக்கிறது (1:16-17)

II. முழு உலகமும் தேவனுக்கு முன்பாக குற்ற உணர்வோடு இருக்கிறது

1 தேவ கோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது (1:18)

2 உலகமும் காணப்படாதவைகளும் தேவனுடைய வெளிப்பாடாகும் (1:19-20)

3 உலகம் தேவனை விட்டு விலகிப்போனதன் பதினெட்டு நிலைகள்

(1) தேவன [illegible] அசுத்தத்திற்கு ஒப்புக் கொடுத்தார் (1:21-23)

(2) தேவனை விட்டு விலகிப் போனதினால் ஏற்பட்ட விளைவு - அசுத்த இச்சைகள் (1:24)

(3) தேவன் மனுஷருடைய ஆத்துமாக்களை தீட்டுப்பட ஒப்புக்கொடுத்தார் (1:25)

(4) தேவனை விட்டு விலகிப் போனதினால் ஏற்பட்ட விளைவு - இச்சை ரோகங்களும் சுபாவத்திற்கு விரோதமான அநுபோகமும் (1:26-27)

(5) தேவன் மனுஷருடைய ஆவிகளை தீட்டுப்பட ஒப்புக்கொடுத்தார் (1:28)

(6) தேவனை விட்டு விலகிப் போனதினால் ஏற்பட்ட விளைவு - ஆத்துமாவை அழிக்கும் 23 பாவங்கள் (1:29-31)

(7) தேவனை மறுதலிப்பதினால் ஏற்படும் இறுதி விளைவு - தேவன் தீர்மானித்த நீதியான நியாயத் தீர்ப்பை அவர்கள் அறிந்திருந்தும் அதற்காக அவர்கள் பயப் படுவதில்லை (1:32)

4 தேவ பக்தியின்மை - மன்னிக்கப்பட முடியாத பாவம் (2:1)

5 தேவனுடைய நியாயத்தீர்ப்பு சத்தியத்தின் படியே இருக்கிறது (2:2)

6. தேவனுடைய நியாயத்தீர்ப்பு - மனுஷனுடைய மனக்கடினத்திற்கும் குணப்படாத இருதயத்திற்கும் ஏற்றபடி இருக்கும் (2:3-6)

7 தேவனுடைய நியாயத்தீர்ப்பு சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல் அநியாயத்திற்குக் கீழ்ப் படிந்திருக்கிறவர்களுக்கோ உக்கிர கோபாக்கினை வரும் (2:7-11)

8 தேவனுடைய நியாயத்தீர்ப்பு - எவர்கள் நியாயப் பிரமாணத்துட்பட்டவர்களாய்ப் பாவஞ்செய்கிறார்களோ, அவர்கள் நியாய பிரமாணத்தினாலே ஆக்கினைத் தீர்ப்படைவார்கள் (2:12-16)

9 யூதனைக் குறித்த காரியம்

(1) யூதனுடைய பத்து அம்ச நிலைமை (2:17-20)

(2) யூதனுடைய ஆறு அம்ச பாவமும் தேவனை விட்டு அவன் பின்வாங்கியிருப்பதும் (2:21-24)

ரோமர் - முன்னுரை

(3) விருத்தசேதனம் பிரயோஜன முள்ளது (2:25-27)

(4) உண்மையான யூதனுக்கு விளக்கம் (2:28-29)

(5) கவிசேஷத்திற்குயூதனுடைய மூன்று அம்ச மறுப்புரை

அ) யூதனுடைய மேன்மை என்ன? (3:1-2)

ஆ) யூதனுடைய அவிசுவாசம் தேவனுடைய உண்மையை அவமாக்குமோ? (3:3-4)

இ) நம்முடைய அநீதி தேவனுடைய நீதியை விளங்கபண்ணினால என்ன சொல்லுவோம்? (3:5-8)

10. தேவனுக்கு முன்பாக முழு உலகமும் பாவத்திற்குட்பட்டிருக்கிறது

அ) யூதர், கிரேக்கர் யாவரும் பாவத்திற்குட் பட்டவர்கள் (3:9)

ஆ) முழு உலகமும் பாவத்திற்குட் பட்டிருப்பதற்கு பதினைந்து காரணங்கள் (3:10-18)

இ) நியாய பிரமாணத்தின் நோக்கம் உலகத்தார் யாவரையும் தேவனுக்கு முன்பாக ஆக்கினைத்தீர்ப்பிற்கு ஏதுவானவர்களாக ஆக்குகிறது (3:19-20)

III. இயேசு கிறிஸ்துவை பற்றும் விசுவாசத்தினால்நீதிமானாக்கப்படுதல இதுவே பாவத்திற்கு பரிகாரம

1 மனுஷன எவவாறு நீதிமானாக்கப படுகிறான் (3:21-26)

2 மனுஷன் நியாயப் பிரமாணத்தின் கிரியைகளில்லாமல விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப படுகிறான் (3:27-28)

3 விசுவாசத்தினால நீதிமானாக்கப படுவது உலகத்தின் பாவத்திற்கு பரிகாரமாகும் (3:29-31)

4 விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் - எடுத்துக்காட்டுக்கள்

(1) ஆபிரகாம் - ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது (4:1-3)

(2) நியாய பிரமாணமும் கிரியைகளும் இல்லாமல் எல்லா மனுஷரும் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட முடியும் (4:4-5)

(3) தாவீது - நியாய பிரமாணத்திற்கு உட்பட்டிருந்த தாவீது நியாய பிரமாணமும் கிரியைகளும் இல்லாமல் கிறிஸ்துவில வைக்கும் விசுவாசத்தினால்நீதிமானாக்கப் பட்டான் (4:6-8)

(4) எல்லா மனுஷரும் நியாய பிரமாணமும் கிரியைகளும் இல்லாமல கிறிஸ்துவில வைக்கும் விசுவாசத்தினால நீதிமானாக்கபட முடியும் (4:9)

(5) ஆபிரகாம் விருத்த சேதனமுள்ளவனாக இருப்பதற்கு இருபத்தினான்கு வருஷங்களுக்கு முன்பாகவே ஆபிரகாம் கிறிஸ்துவில வைக்கும் விசுவாசத்தினால நீதிமானாக்கப பட்டான (4:10-12)

(6) விசுவாசத்தினால நீதி மானாக்கப படுவது நியாய பிரமாணத்தினாலும் கிரியை களினாலும் உண்டானதல்ல (4:13-16)

(7) விசுவாசத்தினால நீதி மானாக்கப படுவதன விளக்கமும் எடுத்துக்காட்டும் (4:17-21)

(8) கிறிஸ்துவில விசுவாசம் வைக்கும் எல்லா மனுஷருக்கும் நீதிமானாக்கப்படுதல் உரியது (4:22-25)

ரோமர் - முன்னுரை

5 விசுவாசத்தினாலே நீதிமானாக்கப் படுவதன் பத்து அம்ச விளைவு (5:1-5)

6 விசுவாசத்தினாலே நீதிமானாக்கப் படுவதன் ஆதாரமும் எல்லா ஆசீர்வாதங்களும் (5:6-11)

IV. ஜென்ம பாவம்

1 ஆதாமின் பாவமும் மரணமும் (5:12-14)

2 ஆதாமிற்கும் கிறிஸ்துவிற்குமிடையே ஒன்பது வேறுபாடுகள் (5:15-21)

V. இரட்சிப்பு - பாவத்திலிருந்து மீட்கப் படுவதற்கு தெய்வீக உபாயம்

கிறிஸ்துவின் மூலமாகவும் பரிசுத்த ஆவியானவர் மூலமாகவும் பாவத்திற்கு மரிக்க வேண்டும் (6:1-2)

2 இயேசு கிறிஸ்துவிற்குள்ளாக ஞானஸ்நானம் (6:3-5)

3 நம்முடைய பழைய மனுஷன் கிறிஸ்துவுடனேகூட அறையப்பட வேண்டும் (6:6-10)

4 நம்மை பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர் களாகவும் எண்ணிக் கொள்ள வேண்டும் (6:11)

5 சாவுக்கேதுவான நம்முடைய சரீரத்தில் பாவம் ஆளுகை செய்யக்கூடாது நமது அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும் (6:12-14)

VI. பாவத்துடன் பழைய உறவும் தேவனுடன் புதிய உறவும் விளக்கம்

1 எஜமானும் அடிமையும்

(1) நாம் எதற்குக் கீழ்ப்படியும்படி நம்மை அடிமைகளாக ஒப்புக் கொடுக்கிறோமோ அதற்கே கீழ்ப் படிகிற அடிமை களாயிருக்கிறோம் (6:15-16)

(2) முன்னே நாம் பாவத்திற்கு அடிமைகளாக இருந்தோம் - இப்பொழுது நீதிக்கு அடிமைகளாக இருக்கிறோம் (6:17-18)

(3) பரிசுத்தமானதை நடப்பிக்கும் படி நம்முடைய அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக் கொடுக்க வேண்டும் (6:19-20)

(4) நாம் தேவனுக்கு அடிமைகளானதினால் பரிசுத்தமாகுதல் நமக்கு கிடைக்கும் பலன் முடிவோ நித்தியஜீவன் (6:21-23)

2 பாவத்துடன் பழைய உறவும் தேவனுடன் புதிய உறவும் - திருமணத்தின் மூலமாக விளக்கப்படுகிறது (7:1-6)

VII. நியாயப்பிரமாணத்திற்குக் கீழ் பாவத்திற்கு அடிமையாக இருந்த பவுலின் அனுபவம்

1 நியாயப்பிரமாணம் பாவமோ? அல்லவே (7:7)

2 நியாயப்பிரமாணம் இல்லாவிட்டால் பாவம் செத்ததாயிருக்கும் (7:8)

3 முன்னே நியாயப் பிரமாணமில்லாதவனாயிருந்த போது நான் ஜீவனுள்ளவனாயிருந்தேன் கற்பனை வந்தபோது பாவம் உயிர் கொண்டது, நான் மரித்தவனானேன் (7:9-11)

4 நியாயப்பிரமாணம் பரிசுத்த முள்ளதுதான் - ஆனால் பாவமே எனக்கு மரணமாயிற்று (7:12-14)

5 நன்மை செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன் ஆனால் நன்மை செய்வது என்னிடத்திலில்லை. ஏனெனில் நான் பாவத்திற்கு அடிமையாக இருக்கிறேன் (7:15-20)

6 என் மனதின் பிரமாணத்தின் பிரகாரம் நான் பாவத்திற்கு அடிமையல்ல (7:21-23)

7 புதிய எஜமானனை நான் காணும் வரையிலும் நிரந்தமான அடிமையாக இருக்கிறேன் (7:24-25)

ரோமர் - முன்னுரை

VIII. பாவத்திலிருந்தும் பிரமாணத்திலிருந்தும் முழுவதுமாக விடுதலை பெற்ற பவுலின் அனுபவம்

1 ஆக்கினைத்தீர்ப்பு இல்லை ஏன்? (8:1-5)

2 மாம்சத்தின்படி நடப்பதற்கும் ஆவியின்படி நடப்பதற்கும் வேறுபாடுகள் (8:6-13)

3 பாவத்திலிருந்து விடுதலை பெறுவதினால் உண்டாகும் விளைவுகள் (8:14-16)

4 பாவத்திலிருந்து விடுதலை பெறுவதினால் உண்டாகும் நித்திய விளைவுகள் (8:17-25)

5 விசுவாசிகளிடத்தில் திரித்துவ தேவனின் கிரியை

(1) பரிசுத்த ஆவியானவரின் கிரியை (8:26-27)

(2) பாவத்திலிருந்து விடுதலை பெற்றவர்களுடைய ஜீவியத்தில் தேவனுடைய கிரியை (8:28-33)

(3) பாவத்திலிருந்து விடுதலை பெற்றவர்களுடைய ஜீவியத்தில் கிறிஸ்துவினுடைய கிரியை (8:34-39)

IX. இஸ்ரவேலரின் காலம்

1 இஸ்ரவேலும் தேவனுடைய சர்வ ஆளுகையும்

(1) இஸ்ரவேலின்மீது பவுலின் அன்பு (9:1-3)

(2) யூதரின் சிலாக்கியம் (9:4-5)

(3) உண்மையான யூதன் (9:6-7)

(4) இயற்கையான இஸ்ரவேலும் ஆவிக்குரிய இஸ்ரவேலும் (9:8-13)

(5) தேவனுடைய இரக்கம் (9:14-18)

(6) தேவனுடைய சர்வ ஆளுகை (9:19-24)

2 இஸ்ரவேலின் தோல்வியும் அவிசுவாசமும்

(1) தோல்வி முன்னறிவிக்கப்பட்டது (9:25-29)

(2) தோல்விக்குக் காரணம் (9:30-33)

(3) அறியாமையும் கீழ்ப்படியாமையும் (10:1-3)

(4) கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார் (10:4)

(5) நியாயப்பிரமாணத்தின் நீதியும் கிறிஸ்துவின் நீதியும் (10:5-8)

(6) தேவனுடைய நீதியைப் பெற்றுக் கொள்ளும் விதம் (10:9-13)

(7) விசுவாசத்தைப் பெற்றுக் கொள்ளும் விதம் (10:14-17)

(8) இஸ்ரவேலின் மன்னிக்கப்படமுடியாத பாவம் (10:18-21)

3. இஸ்ரவேலின் தற்கால நிலைமையும் வருங்கால மீட்பும்

(1) கர்த்தர் இஸ்ரவேலை தள்ளிவிடவில்லை (11:1-4)

(2) நியாயப்பிரமாணத்தினால் அல்லாமல் கிருபையினால் மீதியாயிருந்தவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள் (11:5-6)

(3) அவிசுவாசத்தினாலும் மீறுதலினாலும் இஸ்ரவேலர்கள் குருடரானார்கள் (11:7-10)

(4) இஸ்ரவேலுக்குள்ளே வைராக்கியம் எழும்பிற்று (11:11-16)

(5) புறஜாதியாருக்கு எச்சரிப்பு (11:17-24)

(6) இஸ்ரவேலின் வருங்கால இரட்சிப்பு (11:25-32)

(7) தேவனுடைய மகத்துவம் (11:33-36)

ரோமர் - முன்னுரை

X. நடைமுறை உபதேசங்கள்

1 கிறிஸ்தவ மார்க்கத்தின் அஸ்திபாரம் (12:1-2)

2 கிறிஸ்துவின் சரீரமும் ஆவிக்குரிய வரங்களும் (12:3-8)

3 கிறிஸ்தவ சகோதரத்துவத்தை காத்துக்கொள்ள இருபது கட்டளைகள் (12:9-16)

4 உலகத்தில் கிறிஸ்தவ நடத்தையைக் காத்துக் கொள்ள ஏழு கட்டளைகள் (12:17-21)

5. கிறிஸ்தவரும் அதிகாரமும் அதிகாரிகளும் (13:1-7)

6 பிறரிடத்தில கிறிஸ்தவர்கள் நடந்து கொள்ள வேண்டிய விதத்தைக் கூறும் எட்டு கட்டளைகள் (13:8-10)

7 தேவனுக்கு முன்பாக கிறிஸ்தவர்கள நடந்து கொள்ள வேண்டிய விதத்தைக் கூறும் பன்னிரெண்டு கட்டளைகள் (13:11-14)

8 கிறிஸ்தவரும் சந்தேகமுள்ள காரியங்களும்

(1) விசுவாசத்தில் பலவீனமுள்ளவனை சேர்த்துக் கொள்ள வேண்டும் (14:1)

(2) சந்தேகமுள்ளவைகளை நியாயந் தீர்க்கக் கூடாது (14:2-9)

(3) கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக எல்லா கிறிஸ்தவரும் நிற்க வேண்டும் (14:10-12)

(4) கிறிஸ்தவருடைய பொறுப்பு (14:13-21)

(5) சந்தேகமுள்ள காரியங்களைக் குறித்து விசுவாசத்தின் பிரமாணம் (14:22-23)

(6) பலவீனருடைய பலவீனங்களைத் தாங்க வேண்டும் (15:1-3)

(7) கிறிஸ்தவர்கள் வேத வசனங்களை வாசித்து ஒருமனப்பட்டு ஜீவிக்க வேண்டும் (15:4-7)

(8) யூத மார்க்கத்து கிறிஸ்தவர்களும் புறஜாதி கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவில் ஒன்றாயிருக்கிறார்கள் (15:8-12)

XI. சாட்சியும் புத்திமதிகளும்

1 ரோமாபுரி சபையைக் குறித்து பவுலின் ஆர்வமும் நிச்சயமும் (15:13-14)

2 புறஜாதியார் மத்தியில தனது ஊழியத்தைக் குறித்து பவுலின் சாட்சி (15:15-16)

3 பவுலின் தத்துவமும் வல்லமையும் - வெற்றியின் இரகசியம் (15:17-21)

4 ரோமாபுரிக்குச் செல்ல பவுலின் வாஞ்சை (15:22-24)

5 எருசலேமிலிருந்த ஏழை பரிசுத்தவான்களுக்கு பவுலின் ஊழியம (15:25-28)

6 சுவிசேஷத்தின வல்லமையில பவுலின நம்பிக்கை (15:29)

7 எருசலேமிற்கும் ரோமாபுரிக்கும் தனது பிரயாணத்தைக் குறித்த ஜெபம் (15:30-33)

8 பெபேயாளைப் பற்றிய காரியம் (16:1-2)

9 கிறிஸ்தவ வாழ்த்துக்கள் (16:3-16)

10 ஸ்திரமான உபதேசத்திலும் ஒற்றுமையிலும் இருக்குமாறு புத்திமதி (16:17-18)

11 ரோமாபுரி கிறிஸ்தவரின் கீழ்ப்படிதல் (16:19-20)

12 மற்றவர்களிடமிருந்து வாழ்த்துக்கள் (16:21-24)

13. ஆசீர்வாதம் (16:25-27)

ரோமர் - தொகுப்புரை

1 அதிகாரம்

I. முன்னுரை - (ரோமர் 1:1-17)

1. ஆசிரியர் - அழைப்பும் ஊழியமும்

ரோமர் 1:1 இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரனும், அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனும், தேவனுடைய சுவிசேஷத்திற்காகப் பிரித்தெடுக்கப்பட்டவனுமாகிய பவுல்

"பவுல்" (Paul) - பவுலின் வரலாறு (அப் 7:58; அப் 8:1-3; அப் 9:1-30; அப் 11:25-30; அப் 12:25; அப் 13:1-28:31; கலா 1; பிலி 3; 1தீமோ 1; 2கொரி 11-12) எபிரெய நிருபத்தைத் தவிர பவுல் எழுதின மற்ற நிருபங்களிலும் பவுலின் பெயர் எழுதப்பட்டிருக்கிறது.

ஊழியக்காரன் (servant) - δοῦλος - doulos - 1401

பெயரடை - வேலைக்காரனாகிய, ஊழியக்காரனாகிய, அடிமையாயிருக்கிற (bondslave) ஒருவனுடைய உடைமைகளைத் தன்னுடைய உடைமைகளைப்போலப் பொறுப்பாகப் பார்க்கிறவன் (மத் 20:27; 1கொரி 6:19-20; 2கொரி 4:5)

அழைக்கப்பட்டவன் (called) - κλητός - kleetos - 2822

பெயரடை - அழைக்கப்பட்ட - பவுல் அப்போஸ்தல ஊழியத்திற்கு தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டு அழைக்கப்பட்டிருக்கிறவன் (ரோமர் 1:1; 1கொரி 1:1; கலா 1:15)

அப்போஸ்தலர் (apostle) - ἀποστολή - apostolee - 651

பெண்பால் பெயர்ச்சொல் - அனுப்பப்பட்டவர், அப்போஸ்தலப்பட்டம், அப்போஸ்தல ஊழியம், அப்போஸ்தலர் (அப் 15:33)

பிரித்தெடுக்கப்பட்டவன் (separated) - ἀφορίζω - aphorizoo - 873

வினைச்சொல் - பிரி, தள்ளிவிடு, பிரித்துவிடு, பிரித்துக்கொள், பிரித்தெடு, பிரிந்துபோ, set apart - "separate" (மத் 25:32; லூக்கா 6:22; அப் 13:2; அப் 19:9; ரோமர் 1:1; 2கொரி 6:17; கலா 1:15; கலா 2:12) "divide" (மத் 25:32) "sever" மத் 13:49

பவுல் தன்னுடைய ஜீவியத்தின் மூன்று பகுதிகளில் பிரித்தெடுக்கப்பட்டிருக்கிறான். அவையாவன:

1. பிறப்பின்போது - தேவனுடைய சித்தத்தினால் (கலா 1:15)
2. மனமாறுதலின்போது - யூதமார்க்கத்திலிருந்து சுவிசேஷத்திற்கு (அப் 9:15-16; 1தீமோ 1:15-16)
3. ஊழிய அழைப்பு - உலகப் பிரகாரமான வேலையிலிருந்து தேவனுடைய ஊழியத்திற்கு (அப் 13:2; அப் 26:16-18; 1தீமோ 1:12)

"தேவனுடைய சுவிசேஷம்" (the gospel of God) (ரோமர் 1:1-5)

1. சுவிசேஷத்திற்கு ஒரு விளக்கம் (ரோமர் 1:1-15)
2. வாக்குத்தத்தங்களின் நிறைவேற்றம் (அப் 1:2)
3. வெளிப்பாடு (கலா 1:11-12,16)
4. சுவிசேஷத்தின் கிரியை
   (1) தேவனுடைய சிருஷ்டிப்பு (அப் 1:20; எபே 3:9)
   (2) மனுஷனுடைய மீறுதல் (அப் 1:21-3:23)

1 அதிகாரம்

(3) தேவனுடைய அன்பும் இரக்கமும், கிருபையும் (1 யோவான் 1:17; யோவான் 3:16; தீத்து 2:11-12, தீத்து 3:5)

(4) தேவனுடைய கோபம் (ரோமர் 1:18-32)

(5) தேவனுடைய இரட்சிப்பு (ரோமர் 1:16; ரோமர் 3:24-31; யோவான் 3:16, 1யோவான் 1:9)

(6) தேவனுடைய திட்டம் (அப் 3:19-21; ரோமர் 8:19-25; எபே 1:10; வெளி 21-22)

(7) மனுஷனுடைய முடிவு - இரட்சிக்கப்படாதவர்கள் (மத் 25:41-46; வெளி 14:9-11, வெளி 20:10-15), இரட்சிக்கப்பட்டவர்கள் (யோவான் 14:1-3; வெளி 5:10; வெளி 21:1-22:5)

5 சுவிசேஷத்தின் வரலாற்று உண்மைகளும், தீர்க்கதரிசன உண்மைகளும் (லூக்கா 24:44; 1 கொரி 15:1-23)

6 சுவிசேஷத்தின் நியமனங்கள்

(1) தண்ணீர் ஞானஸ்நானம் (மத் 28:19)

(2) கர்த்தருடைய பந்தி (1கொரி 11:19-34)

7 சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுதல் (மத் 28:19-20; லூக்கா 24:47; அப் 1:8; 1கொரி 1:21)

8 சுவிசேஷத்தை உறுதிப்பண்ணுதல் (மாற்கு 16:15-20; ரோமர் 15:18-29; எபி 2:3-4)

2. **தீர்க்கதரிசிகளின் மையக்கருத்து சுவிசேஷம்** - (1பேதுரு 1:10; அப் 3:21)

ரோமர் 1:2 ரோமாபுரியிலுள்ள தேவப்பிரியரும்பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களுமாகிய அனைவருக்கும் எழுதுகிறதாவது

3. **சுவிசேஷத்தின் மையக்கருத்து இயேசு கிறிஸ்து** - (வசனம் 16-17)

ரோமர் 1:3 நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

ரோமர் 1:4 இயேசு கிறிஸ்துவைக்குறித்து தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பரிசுத்த வேதாகமங்களில் முன்னே தம்முடைய சுவிசேஷத்தைப் பற்றி வாக்குத்தத்தம் பண்ணினபடி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவானவர்

ரோமர் 1:5 மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார்

ரோமர் 1:6 அவர் சகல ஜாதிகளையும் அவர்களுக்குள் இயேசு கிறிஸ்துவினால் அழைக்கப்பட்டவர்களாகிய உங்களையும்

"இயேசுகிறிஸ்துவைக்குறித்து" சுவிசேஷத்தின் மையசெய்தி இயேசு கிறிஸ்து. அவரே வேதவாக்கியங்களின் நிறைவேறுதலாகவும் இருக்கிறார் (ரோமர் 1:2; லூக்கா 24:44, யோவான் 5:39, அப் 1:21-22)

"தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பரிசுத்த வேதாகமங்களில்" பிரமாணங்களிலும் தீர்க்கதரிசிகளிலும், சங்கீதங்களிலும் (லூக்கா 24:44, அப் 3:21, எபி 1:1)

1 அதிகாரம்

தீர்க்கப்பட்ட பண்ணு (declared) ὁρίζω horizoo 3724

வினைச்சொல் - தீர்மானி, நிர்ணயி ஏற்படுத்து, நியமி, குறி தீர்க்கப்பட்ட பண்ணு (marked out, manifested to be God's Son by a display of power) (அப் 10.38 யோவான் 10.10; லூக்கா 4.18-21)

"தீர்க்கப்பட்ட பண்ணினபடி" - இந்த வாக்கியத்தில 'படி' (according to) என்பதற்கான கிரேக்க வார்த்தை "கட்டா" (kata) என்பதாகும். பரிசுத்த ஆவியானவர் மூலமாக பரிசுத்த ஆவியானவர் இயேசு கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பினார் எல்லா ஜனங்களுக்கும் இதன் மூலமாக இயேசு கிறிஸ்துவே உண்மையான மேசியா இரட்சகர் என்று நிரூபிக்கிறார் அப் 2.22-36 அப் 13.5.26 அப் 4.10 அப் 5.30, அப் 17.31 இயேசு கிறிஸ்து தம்மைத் தேவனுடைய குமாரன் என்று கூறியதினால் யூதர்கள் அவரைச் சிலுவையில அறைந்து கொன்றார்கள் (யோவான் 8.40) இயேசு கிறிஸ்து தேவனுடைய ஒரேபேறான குமாரனாக இருக்கிறபடியினால தேவன் அவரை மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பினார் (ரோமர் 1.4

படியே (according) - κατά - kata - 2596

முன்னிடைச்சொல் - இல், படியே

"தேவனுடைய சுதன்" - தேவனானவர் அல்ல. அவருடைய குமாரன்

(1யோவான் 5.7

"தாவீதின் சந்ததியில பிறந்தவர்" ஏசா 9.6 ஏசா 11.1, மத் 1 லூக்கா 1.32 கலா 4

"மாம்சத்தின்படி" மனுஷ சுபாவத்தின் பிரகாரம் (எபி 2.7 18 ரோமர் 9.3 5 1தீமோ 3.16, 1யோவான் 4.2)

ஜாதிகள் (nations) - ἔθνος - ethnos - 1484

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - ஜாதிகள், அஞ்ஞானிகள், புறஜாதியார் ராஜ்யம், புறதேசத்தார் "Gentiles" (ரோமர் 4.17-18; ரோமர் 10.19, ரோமர் 16.26)

4. பவுலின் வாழ்த்துரை

ரோமர் 1.7 தமது நாமத்தினிமித்தம் விசுவாசத்துக்குக் கீழ்ப்படியப் பண்ணும் பொருட்டு, எங்களுக்குக் கிருபையையும் அப்போஸ்தல ஊழியத்தையும் அருளிச் செய்திருக்கிறார்

"தமது நாமத்தினிமித்தம் .....எங்களுக்குக் கிருபையையும் அப்போஸ்தல ஊழியத்தையும் அருளிச்செய்திருக்கிறார்" - கிறிஸ்துவின் மூலமாக கிருபையும் அப்போஸ்தல ஊழியமும் அருளப்பட்டிருக்கிறது.

"விசுவாசத்துக்குக் கீழ்ப்படியப் பண்ணும்பொருட்டு" - கிருபையின் காலத்தில மனுஷனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பரீட்சை மனுஷன் விசுவாசத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும் மனுஷனிடம் விசுவாசம் இல்லையென்றால், அவனால் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள முடியாது. (மாற்கு 16.16 யோவான் 3.16)

5. நல்ல பிரயாணத்திற்காக ஜெபம்

ரோமர் 1.8 உங்கள் விசுவாசம் உலகமெங்கும் பிரசித்தமாகிறபடியினாலே முதலாவது நான் உங்களெல்லாருக்காகவும் இயேசு கிறிஸ்து மூலமாய் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்

ரோமர் 1.9 நான் ஜெபம்பண்ணும் போதெல்லாம் இடைவிடாமல் உங்களை நினைத்துக் கொண்டிருக்கிறதைக் குறித்துத் தமது குமாரனுடைய சுவிசேஷத்தினாலே என் ஆவியோடு நான் சேவிக்கிற தேவன் எனக்குச் சாட்சியாயிருக்கிறார்

1 அதிகாரம்

ரோமர் 1:10 நீங்கள் ஸ்திரப்படுவதற்காக ஆவிக்குரிய சில வரங்களை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கும்.

"உலகமெங்கும்" - இந்த வாக்கியம் ரோமப்பேரரசைக் குறிக்கும். (லூக்கா 2:1)

"என் ஆவியோடு நான் சேவிக்கிற தேவன்" - பவுல் தேவனை அவருடைய ஆவியோடும், ஆத்துமாவோடும் சரீரத்திலும் சேவிக்கிறார் (1கொரி 6:19-20)

"ஆவிக்குரிய சில வரங்களை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கும்" - அப்போஸ்தலர் பவுலிடம் தேவனுடைய சம்பூரண ஆசீர்வாதங்கள் இருந்தது. (ரோமர் 15:29) அவர் விசுவாசிகள் மீது தனது கரங்களை வைத்து, ஆவிக்குரிய வரங்களை அவர்களும் பெற்றுக் கொள்ளுமாறு ஜெபித்தார் (1தீமோ 4:14; 2தீமோ 1:6; எபி 6:2)

"நீங்கள் ஸ்திரப்படுவதற்காக" - விசுவாசிகள் ஸ்திரப்பட வேண்டுமென்பதே ஆவிக்குரிய வரங்கள் அருளப்படுவதன் நோக்கமாகும் (1கொரி 1:7; 1கொரி 12:4-11,28-30; 1கொரி 14:1-40; ரோமர் 12:3-8; 1தீமோ 4:14; 1பேதுரு 4:11)

ஸ்திரப்படுத்து (established) - στηρίζω - steerizoo - 4741

வினைச்சொல் ஸ்திரப்படுத்து, திடப்படுத்து, நிலைநிறுத்து, உறுதிப்படு, உண்டாக்கப்படு (strengthen) லூக்கா 22:32; வெளி 3:2 (establish) (ரோமர் 1:11; ரோமர் 16:25; 1தெச 3:2,13; 2தெச 2:17; 2தெச 3:3; யாக் 5:8; 1பேதுரு 5:10; 2பேதுரு 1:12), (fix) (லூக்கா 16:26); (set) (லூக்கா 9:51)

6. பவுலின் பிரயாணத்தின் நோக்கம் - (15:22)

ரோமர் 1:11 உங்களிலும் என்னிலுமுள்ள விசுவாசத்தினால் உங்களோடேகூட நானும் ஆறுதலடையும்படிக்கும், உங்களைக் காண வாஞ்சையாயிருக்கிறபடியினாலே,

ரோமர் 1:12 எவ்விதத்திலாவது நான் உங்களிடத்தில் வருகிறதற்கு தேவனுடைய சித்தத்தினாலே எனக்கு நல்ல பிரயாணம் சீக்கிரத்தில் கிடைக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன்

ரோமர் 1:13 சகோதரரே, புறஜாதிகளான மற்றவர்களுக்குள்ளே நான் பலனை அடைந்ததுபோல உங்களுக்குள்ளும் சில பலனை அடையும்படிக்கு, உங்களிடத்தில் வர பலமுறை யோசனையாயிருந்தேன்; ஆயினும் இதுவரைக்கும் எனக்குத் தடையுண்டாயிற்று என்று நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை

"உங்களிலும் என்னிலுமுள்ள விசுவாசத்தினால் உங்களோடேகூட நானும் ஆறுதலடையும்படிக்கும்" - ஆவிக்குரிய வரங்கள் மூலமாக விசுவாசிகள் ஸ்திரப்படுகிறார்கள். இதன் மூலமாக பவுலுக்கும் விசுவாசிகளுக்கும் ஆசீர்வாதம் உண்டாகிறது. (1தீமோ 4:14)

"நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை" - ஜனங்கள் ஆவிக்குரிய காரியங்களைக் குறித்து அறியாமல் இருக்கக்கூடாது என்று பவுல் விரும்புகிறான். அந்தக் காரியங்களாவன

1. சகோதரரே, நீங்கள் உங்களையே புத்திமான்களென்று எண்ணாதபடிக்கு ஒரு இரகசியத்தை நீங்கள் அறிய வேண்டுமென்றிருக்கிறேன் (ரோமர் 11:25)
2. புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும் வரைக்கும் இஸ்ரவேலரில் ஒரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும். (ரோமர் 11:25)

1 அதிகாரம்

3 இப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் எவைகளை அறியவேண்டுமென்றிருக்கிறேனென்றால், நம்முடைய பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள்; எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்துவந்தார்கள் (1கொரி 10:1)

4 அன்றியும், சகோதரரே, ஆவிக்குரிய வரங்களைக் குறித்து நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை. (1கொரி 12:1)

5 ஆகையால் சகோதரரே, ஆசியாவில் எங்களுக்கு நேரிட்ட உபத்திரவத்தை நீங்கள் அறியாதிருக்க எங்களுக்கு மனதில்லை; என்னவெனில், பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக, எங்கள் பலத்துக்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று. (2கொரி 1:8)

6 அன்றியும், சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப்போலத் துக்கித்து அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை (1தெச 4:13)

"இதுவரைக்கும் எனக்குத் தடையுண்டாயிற்று" பவுல் ரோமாபுரிக்குச் சென்று அங்குள்ளவர்கள் மத்தியிலும் சுவிசேஷ ஊழியம் செய்ய விரும்பினார் ஆயினும் அவருக்கு அங்கு போகக்கூடாதபடிக்கு ஒருசில தடை உண்டாயிற்று. (2தெச 2:7)

7. பவுலின் பொறுப்பு - தன்னால் இயன்ற மட்டும் சுவிசேஷத்தை பிரசங்கிக்க விரும்புகிறான்

ரோமர் 1:14 கிரேக்கருக்கும், மற்ற அந்நியர்களுக்கும், ஞானிகளுக்கும், மூடருக்கும் நான் கடனாளியாயிருக்கிறேன்

ரோமர் 1:15 ஆகையால், ரோமாபுரியிலிருக்கிற உங்களுக்கும் என்னால் இயன்றமட்டும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க விரும்புகிறேன்

கடனாளி (debtor) - ὀφειλέτης - opheiletees - 3781

ஆண்பால் பெயர்ச்சொல் - கடனாளி, கடன்பட்டவன், குற்றவாளி - ஒரு காரியத்தைச் செய்யுமாறு கடமைப்பட்டிருப்பவர் ஒரு காரியத்தைச் செய்து முடிக்க வேண்டியவர் **(one under an obligation, bound to some duty)** (மத் 6:12; மத் 18:24; லூக்கா 13:4; ரோமர் 1:14; ரோமர் 8:12; ரோமர் 15:27)

"அந்நியர்கள்" **(Barbarians)** - (அப் 28:2)

மூடர் (unwise) - ἀνόητος - anoeetos - 453

பெயரடை - புத்தியில்லாத, மூடமான, புத்தியீனமான, மதிகேடான - **(unintelligent).** (லூக்கா 24:25; ரோமர் 1:14; கலா 3:1,3; 1தீமோ 6:9; தீத்து 3:3)

விருப்பம் (ready) - πρόθυμος - prothymos - 4289

பெயரடை - உற்சாகமுள்ள, விருப்பமான **(ready, willing)** (ரோமர் 1:15; மத் 26:41; மாற்கு 14:38)

8. எல்லா விசுவாசிகளுக்கும் இரட்சிப்பு உண்டாவதற்கு சுவிசேஷம் தேவ பெலனாயிருக்கிறது (1:2-3)

ரோமர் 1:16 கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது.

1 அதிகாரம்

ரோமர் 1:17 விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிற படி விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப் படுகிறது.

வெட்கப்படு (ashamed) - ἐπαισχύνομαι - epaischynomai - 1870

வினைச்சொல் - வெட்கப்படு (மாற்கு 8:38 லூக்கா 9:26 ரோமர் 1:16, 6:21 2தீமோ 1:8,12,16, எபி 2:11 எபி 11:16) இந்த வசனத்தில் பவுல் ஏசா 28:16 ஆவது வசனத்தை நிறைவேற்றுகிறார்

"கிறிஸ்துவின் சுவிசேஷம்" (gospel of Christ) - இந்த வாக்கியம் தேவனுடைய சுவிசேஷம் "gospel of God" என்னும் வாக்கியத்தின் மறுபெயராகும். (ரோமர் 1:1)

பெலன் (power) - δύναμις - dynamis - 1411

பெண்பால் பெயர்சொல் - பெலன் வல்லமை, பலத்த செய்கைகள் அற்புதங்கள் திறமை, பலம் சதத்துவம் சக்தி, கருத்து, உக்கிரம் மிகுதி (inherent power; the ability to reproduce itself, like a dynamo) ஒரு டைனமோ மின்சாரத்தைத் தானே உற்பத்தி செய்வது போன்றது. இங்கு கூறப்பட்டிருக்கிற பெலன் என்னும் வார்த்தை தானே பெலனை உற்பத்தி பண்ணிக் கொள்ளக்கூடியது.

சுவிசேஷம் தேவனுடைய பெலனாயிருக்கிறது

1 புதிய ஜீவனை உற்பத்தி பண்ணுவதற்கு (1பேதுரு 1:23)

2 இரட்சிப்பை உண்டாக்குவதற்கு (ரோமர் 1:16, எபே 1:13)

3 கிருபையை அளிப்பதற்கு (அப் 20:24)

4 விசுவாசத்தில் ஜனங்களை நிலைத்திருக்கச் செய்வதற்கு (ரோமர் 16:25)

5 விசுவாசத்தை உண்டாக்குவதற்கு (ரோமர் 10:17)

6 விடுதலை பண்ணுவதற்கு (யோவான் 8:31-36)

7 ஆவிக்குரிய ஜீவியத்தைப் போஷிப்பதற்கு (1பேதுரு 2:2)

8 சபையைச் சுத்திகரிப்பதற்கு (எபே 5:26)

9 ஜீவனை ஆராய்ந்து பார்ப்பதற்கு (எபி 4:12)

10 கிறிஸ்துவின் உடன்பங்காளிகளாக ஆக்குவதற்கு (எபே 3:6)

11 மரணத்தைப் பரிகரிப்பதற்கு (2தீமோ 1:10)

12 சமாதானத்தை உண்டுபண்ணுவதற்கு (ரோமர் 10:15)

13 பாதுகாப்பைத் தருவதற்கு (எபே 6:17)

14 சம்பூரண ஆசீர்வாதங்களைக் கொடுப்பதற்கு (ரோமர் 15:29)

இரட்சிப்பு (salvation) - σωτηρία - sooteeria - 4991

பெண்பால் பெயர்சொல் - இரட்சிப்பு, விடுதலை இரட்சணியம் "saved" (லூக்கா 1:71 ரோமர் 10:1) "deliver" (அப் 7:25) "health" (அப் 27:34) "saving" எபி 11:7

இரட்சிப்பு

பரிசுத்த வேதாகமத்தில் இரட்சிப்பு என்பது மிகவும் முக்கியமான வார்த்தை. சுவிசேஷச் செய்தி. அதன் மூலமாக மனுக்குலத்திற்கு உண்டாயிருக்கும் இரட்சிப்பு, தொடர்ந்து இரட்சிக்கப்பட்டுக் கொண்டிருத்தல் ஆகிய இரட்சிப்போடு தொடர்புடைய எல்லாப் பொருட்களையும் இந்த வார்த்தை விளக்கும். பழைய ஏற்பாட்டில் 119 தடவை இரட்சிப்பு என்னும்வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இரட்சிப்பு என்னும் தமிழ் வார்த்தையைக் குறிப்பதற்கு ஏழு எபிரெய சொற்களும், கிரேக்க சொற்களும் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இரட்சிப்பு என்னும் வார்த்தை பல பொருள்களைக் குறிக்கும் பொதுவான வார்த்தையாகும். இரட்சிப்பு, மீட்பு, விடுவிப்பு, ஆரோக்கியம் உதவி, க்ஷேமம், பாதுகாப்பு, ஜெயம் இரட்சகர் தற்காப்பு, பராமரிப்பு என்று இரட்சிப்பு என்னும் வார்த்தைக்குப் பொருள் கூறிக்கொண்டே போகலாம்.

1 அதிகாரம்

பரிசுத்த வேதாகமத்தில் இரட்சிப்பு என்னும் வார்த்தை ஒரு குறிப்பிட்ட காரியங்களை விளக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அவையாவன

1 ஆபத்திலிருந்து விடுதலை (யாத் 14)

2 சத்துருக்களிடமிருந்து ஜெயம் (சாமு 14)

3 சரீர சுகமாதல் (அப 3:6; அப 4:12)

4 பாவமன்னிப்பு (லூக்கா 19:9 ரோமர் 10:9-10; சங் 38:18-22 சங் 51:1-13; சங் 79:9

5 சிறைச்சாலையிலிருந்து விடுதலை பிலி 1:19

6 அடிமைத்தனத்திலிருந்து விடுதலை சங் 14

7 கோபாக்கினையிலிருந்து விடுதலை (1தெச 5:9

இரட்சிப்பிற்கு நாம் இவ்வாறு பலவிதமாகப் பொருள் கூறினாலும் பாவத்திலிருந்து ஒரு மனுஷன் விடுதலை பெறுவதையே இந்த வார்த்தை பிரதானமாக விளக்குகிறது

பாவங்களிலிருந்து விடுதலை பெறும் விதம்

1 பாவ அறிக்கை (ரோமர் 10:9- யோவான் 1:9

2 விசுவாசத்தின் மூலமாக கிருபை (எபே 2:8 9

3 பரிசுத்த ஆவியானவரின் பரிசுத்தமாக்கப் படுதல்

4 சத்தியத்தை விசுவாசித்தல் 2தெச 2:13)

5 தேவனுக்கேற்ற துக்கம் (2கொரி 7:10)

6 தேவனுடைய திருஇரத்தத்தில் விசுவாசம் வைப்பது (ரோமர் 3:25)

7 தேவனுடைய நாமத்தில் விசுவாசம் வைப்பது (அப 4:12)

"விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது" - தேவனுடைய நீதி சுவிசேஷத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது இரட்சிப்பிற்கு விசுவாசம் முக்கியமான நிபந்தனை விசுவாசிக்கிறவர்களால் மட்டுமே தேவன்தரும் இரட்சிப்பை பெற்றுக் கொள்ள முடியும்.

"விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" - இந்த வாக்கியம் ஆப 2:4 ஆவது வசனத்தின் மேற்கோளாகும். நீதிமான் தொடர்ந்து விசுவாசித்து பிழைக்க வேண்டும் விசுவாச ஜீவியத்தில் முன்னேறிச் செல்ல வேண்டும். (1யோவான் 1:7)

II. முழு உலகமும் தேவனுக்கு முன்பாக குற்ற உணர்வோடு இருக்கிறது - (ரோமர் 1:18-3:20)

1. தேவ கோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது

ரோமர் 1:18 சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது

"தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது" - சுவிசேஷத்தில் தேவகோபமும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது தேவகோபம் தேவனுடைய நீதியில் ஓர் அம்சமாகும்

"தேவகோபம்" (The wrath of God) இந்த வாக்கியம் வேதாகமத்தில் பத்து வசனங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (ரோமர் 1:18; சங் 78:31, யோவான் 3:36, எபே 5:6- கொலோ 3:6 வெளி 14:10 19 வெளி 15:1 7; வெளி 16:1

"எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய்" - தேவகோபம் அவபக்திக்கும் (ungodliness), அநியாயத்திற்கும் (unrighteousness) விரோதமாக வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. புறஜாதியார் அவபக்தியாய் ஜீவிக்கிறார்கள் ஆகையினால் அவர்கள் தேவனுடைய கோபத்திற்குப் பாத்திரராய் இருக்கிறார்கள் என்று ரோமர் 1:18 32 ஆகிய வசனங்களில் பவுல் நிரூபித்துக் கூறுகிறார் யூதர்களும் அவபக்தியாய் ஜீவிக்கிறார்கள் ஆகையினால் அவர்களும் தேவகோபத்திற்குப் பாத்திரவான்களே என்பதை ரோமர் 2:1-3:8 ஆகிய வசனங்களில் பவுல் நிரூபிக்கிறார் யூதரும் புறஜாதியாரும் குற்ற உணர்வுள்ளவர்களாகவே இருக்கிறார்கள் என்பது பவுலின் கருத்து (ரோமர் 3:9-20

ரோமர் - தொகுப்புரை

1 அதிகாரம்

அவபக்தி (ungodliness) ἀσέβεια asebeia 763

பெண்பால் பெயர்சொல் - அவபக்தி. துன்மார்க்கம் (impiety; no reverence for God or sacred things; irreligious) - தேவனிடத்திலும், தேவனுடைய பரிசுத்தமான காரியங்களிலிடத்திலும் பக்தியில்லாமல் இருப்பது. மார்க்க காரியங்களில் பங்குபெறாமல் இருப்பது. 2தீமோ 2:16 தீத்து 2:12 யூதா 1:18

அநியாயம் (unrighteousness) - ἀδικία - adikia - 93

பெண்பால் பெயர்ச்சொல் - அநீதி அக்கிரமம். அநீதம் (all wrongdoing; immorality; wickedness of heart and life) லூக்கா 16:8 ரோமர் 1:18,29 ரோமர் 2:8 ரோமர் 6:13

"சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற" அடக்கிவைத்தல் என்பது சிறைச்சாலையில் ஒரு கைதியைத் தப்பித்துச் செல்ல முடியாதவாறு அடக்கி வைத்தல் என்று பொருள்படும்

2. உலகமும் காணப்படாதவைகளும் தேவனுடைய வெளிப்பாடாகும்

ரோமர் 1:19 தேவனைக்குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது, தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்

ரோமர் 1:20 எப்படியென்றால் காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள் உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும், ஆதலால் அவர்கள்போக்குச்சொல்ல இடமில்லை

"எப்படியென்றால் காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள் உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும் - ரோமர் 1:20 ஆவது வசனம் ரோமர் 19 ஆவது வசனத்தை விளக்குகிறது. தேவத்துவம், நித்திய வல்லமை ஆகியவை காணப்படாதவைகளாகும். அவற்றை யாரும் காணமுடியாது. ஆனாலும் தேவனுடைய சிருஷ்டியின் காரியங்களில் காணப்படாத காரியங்கள் எல்லாம் தெளிவாய் காணப்படுகிறது. (உபா 29:29)

நித்திய (eternal) - ἀΐδιος - aidios - 126

பெயரடை - நித்திய (ரோமர் 1:20) யூதா 1:6)

தேவத்துவம் (Godhead) - θειότης - theiotees - 2305

பெண்பால் பெயர்ச்சொல் - தேவத்துவம் (Deity)

"ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை" - காணக்கூடாத காரியங்களைப் பற்றி அறியாமல் இருக்கிற ஜனங்களுக்குப் போக்குச் சொல்வதற்கு இடமில்லை (ரோமர் 2:1)

3. உலகம் தேவனை விட்டு விலகிப் போனதன் பதினெட்டு நிலைகள் - (ரோமர் 1:21-32)

(1) தேவன் மனுஷரை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார்

ரோமர் 1:21 அவர்கள் தேவனை அறிந்தும் அவரை தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள், உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது.

ரோமர் 1:22 அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி,

ரோமர் - தொகுப்புரை

1 அதிகாரம்

ரோமர் 1:23 அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்

அறிந்து (knew) - γινώσκω - ginooskoo - 1097

வினைச்சொல் - அறிந்திரு, உணர்ந்திரு, தெரிந்துகொள் - அனுபவத்தின் மூலமாக அறிந்து கொள்வது (to know by experience) (யோவான் 1:18, யோவான் 5:20, எபே 5:5)

"அவரை தேவனென்று மகிமைப் படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்" - அவர்கள் தேவனை ஒரு மாயையாக ஆக்கினார்கள் தேவனை வெளிப்படுத்துவதற்கு எல்லாவிதமான உருவங்களையும் அவருக்குக் கொடுத்தார்கள் (ரோமர் 1:23)

சிந்தனைகள் (imaginations) - διαλογισμός - dialogismos - 1261

ஆண்பால் பெயர்ச்சொல் - சிந்தனை, யோசனை, தாக்கம், குற்றாய்ந்து நிர்ணயித்தல் (reasonings) - தங்களைத் தாங்களே மூடராக்கிக் கொள்ளும் எண்ணங்கள்

அழிவில்லாத (uncorruptible) - αφθαρτος - aphthartos - 862

பெயரடை - அழிவில்லாத, அழியாத (ரோமர் 1:23, 1கொரி 9:25, 1கொரி 15:52, 1தீமோ 1:17, 1பேதுரு 1:4,23, 1பேதுரு 3:4)

"அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும் பிராணிகள்" - புறஜாதியார் காணக்கூடாத தேவத்துவத்தைப் பற்றி அறிவில்லாதவர்களாக இருக்கிறார்கள் தேவன் பறவைகளைப்போலவும், மிருகங்களைப் போலவும், ஊரும் பிராணிகளைப்போலவும் இருக்கலாம் என்று தங்களுடைய சிந்தனையில் வீணாகச் சிந்திக்கிறார்கள் தங்களுடைய சிந்தைப் பிரகாரமாகவே தேவனுக்கு விக்கிரகங்களைச் செய்கிறார்கள் (ரோமர் 1:23-32) தேவனுக்கு மனுஷ ரூபத்தைக் கொடுத்து விக்கிரகாராதனை செய்கிறார்கள் இதன் மூலமாகத் தேவனை மனுஷனாகப் பாவித்து வேசித்தனங்களிலும் விபச்சாரங்களிலும் பலவிதமான அசுசிகளிலும் பங்கு பெறுகிறார்கள்

(2) தேவனை விட்டு விலகிப்போனதினால் ஏற்பட்ட விளைவு - அசுத்த இச்சைகள்

ரோமர் 1:24 இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப் படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார்

"தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக் கொடுத்தார்" - அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப் படுத்துகிறார்கள் ஆகையினால் தேவன் அவர்களை ஆண்புணர்ச்சிக்காரர்களாகவும் பெண்புணர்ச்சிக்காரர்களாகவும் அசுத்தமானவர்களாகவும் ஆவதற்கு ஒப்புக் கொடுத்துவிட்டார்

அசுத்தம் (uncleanness) - ἀκαθαρσία - akatharsia - 167

(அ) அசுத்தம் - சரீரப்பிரகாரமான அசுத்தம் மத். 23:27 - ஆண்களும், பெண்களும் தங்களுடைய சரீரங்களை அவமானப் படுத்திக் கொள்ளும் அசுத்தங்கள் (ரோமர் 1:24, 2கொரி 12:21; கலா 5:19, எபே 4:19, எபே 5:3; கொலோ 3:5; 1தெச 4:7, 2பேதுரு 2:10)

(ஆ) ஆன்மீக அசுத்தம் ரோம. 1:24

ரோமர் - தொகுப்புரை

1 அதிகாரம்

(3) தேவன் மனுஷருடைய ஆத்துமாக்கள் தீட்டுப்பட ஒப்புக்கொடுத்தார்

ரோமர் 1:25 தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள் அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப் பட்டவர் ஆமென்

"தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள்" - மெய்யான தேவனை ஆவியோடும், உண்மையோடும் ஆராதிக்க வேண்டும். ஆனால் இவர்கள் தேவனை விக்கிரகங்களாக மாற்றிவிட்டார்கள் சத்தியத்தை விட்டு விலகிப்போய்விட்டார்கள் சிருஷ்டிகரைத் தொழுதுசேவியாமல் அவர் சிருஷ்டித்த சிருஷ்டிகளைத் தொழுது சேவிக்கிறார்கள் விக்கிரகங்கள் பொய்கள் "lies" என்று வேதவாக்கியங்களில் நாம் வாசிக்கிறோம். (ஏசா 44:20; எரே 10:14 எரே 13:25

(4) தேவனை விட்டு விலகிப் போனதினால் ஏற்பட்ட விளைவு - இச்சை ரோகங்களும் சுபாவத்திற்கு விரோதமான அநுபோகமும்

ரோமர் 1:26 இதினிமித்தம் தேவன் அவர்களை இழிவான இச்சை ரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார், அந்தப்படியே அவர்களுடைய பெண்கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றினார்கள்

ரோமர் 1:27 அப்படியே ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல், ஒருவர்மேலொருவர் விரகதாபத்தினாலே பொங்கி ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களுக்குள் அடைந்தார்கள்

"இதினிமித்தம் தேவன் அவர்களை இழிவான இச்சைரோகங்களுக்கு ஒப்புக் கொடுத்தார்" - இதனிமித்தம் என்பது ரோமர் 1:21-25 ஆகிய வசனங்களில் நாம் வாசிக்கும் தேவனுக்கு விரோதமான காரியங்களைக் குறிக்கும்.

இழிவான (vile) - ἀτιμία - atimia - 819

பெண்பால் பெயர்ச்சொல் - இழிவானது, கனவீனமானது (vile) (ரோமர் 1:26); (shame) (1கொரி 11:14); (reproach) (2கொரி 11:21); (dishonour) (ரோமர் 9:21; 1கொரி 15:43 2கொரி 6:8; 2தீமோ 2:20

இச்சை (affections) - πάθος - pathos - 3806

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - இச்சை, துர்இச்சை (affections) (ரோமர் 1:26; கொலோ 3:5) (lusts) (1தெச 4:5)

"பெண்கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றினார்கள்" - இது பெண்களின் ஓரினச் சேர்க்கை (lesbianism) எனப்படுகிறது

"ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல் ஒருவர்மேலொருவர் விரகதாபத்தினாலே பொங்கி, ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து" இது ஆண்களுடைய ஓரினச்சேர்க்கை (sodomy or homosexuality) (ஆதி 8:21; ஆதி 19:5; லேவி 20:13, உபா 23:17; 1இராஜா 14:24; 1இராஜா 15:12, 1இராஜா 22:46; 2இராஜா 23:7, யோவே 3:3 எபே 5:4 2தீமோ 3:1,3, 2பேதுரு 2:7-22; யூதா 1:7-19)

விரகதாபத்தினாலே பொங்கு (burned) - ἐκκαίω ekkaioo - 1572

வினைச்சொல் - விரகதாபத்தினாலே பொங்கு (were inflamed)

அவலட்சணம் (unseemly) - ἀσχημοσύνη ascheemosynee 808

1 அதிகாரம்

பெண்பால் பெயர்ச்சொல் - அவலட்சணம் அவமானம் (indecent)

அடைந்தார்கள் (receiving) ἀπολαμβάνω apolambanoo - 618

வினைச்சொல் - அழை வந்துசேர், அடை - (receiving back in full) தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களுக்குள் அடைந்தார்கள்

பலன் (recompence) - ἀντιμισθία - antimisthia - 489

பெண்பால் பெயர்ச்சொல் - பலன் பதிலீடு (retribution)

தப்பிதம் (error) - πλάνη - planee - 4106

பெண்பால் பெயர்ச்சொல் - ஏதேது தப்பிதம், வஞ்சகம் (wandering, wrong action, wickedness) - மத் 27:64, எபே 4:14; 1தெச 2:3 2தெச 2:11; யாக் 5:20 2பேதுரு 2:18; 2பேதுரு 3:17 1யோவான் 4:6. யூதா 1:11 ஆண்களும் பெண்களும் கூடாவபடி அநுபவிக்க வேண்டும். விரகதாபத்தினாலே பொங்கி அவலட்சணமானதை நடப்பிக்கக் கூடாது. அது தப்பிதம்

(5) தேவன் மனுஷருடைய ஆவிகளை தீட்டுப்பட ஒப்புக் கொடுத்தார்

ரோமர் 1:28 தேவனை அறியும் அறிவைப் பற்றிக் கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக் கொடுத்தார்

"தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார்" - தேவன் தப்பிதங்களைச் செய்தவர்களுக்கு மூன்று விதமான காரியங்களைக் கொடுக்கிறார்

1 அவர்கள் சரீரங்களை அவமானப்படுத்தத் தக்கதாக தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக் கொடுத்தார் (ரோமர் 1:24)

2 தேவன் அவர்களை இழிவான இச்சை ரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார் (ரோமர் 1:26)

3 தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக் கொடுத்தார் (ரோமர் 1:28)

கேடான (reprobate) - ἀδόκιμος - adokimos - 96

பெயரடை - கேடான, தேர்வில் தோற்றுப்போதல், ஆகாதவன், தகாத, பிரயோஜனமில்லாத (reprobate) (ரோமர் 1:28; 2கொரி 13:5,6,7 2தீமோ 3:8; தீத்து 1:16); (rejected) (எபி 6:8); (castaway) (1கொரி 9:27) - இயேசு கிறிஸ்து கேடான சிந்தை உடையவருடைய இருதயத்தில் வாசம் பண்ணுவதில்லை

தகுந்த (convenient) - καθήκω - katheekoo - 2520

வினைச்சொல் - நியாய, தகுந்த (பெயரடையாக பயன்படுத்தப்பட்டுள்ளது) (fit; proper) (அப் 22:22)

(6) தேவனை விட்டு விலகிப் போனதினால் ஏற்பட்ட விளைவு - ஆத்துமாவை அழிக்கும் 23 பாவங்கள் - (மாற்கு 7:14, 1கொரி 6:9; கலா 5:19, கொலோ 3:3)

ரோமர் 1:29 அவர்கள் சகலவித அநியாயத்தினாலும் வேசித்தனத்தினாலும், துரோகத்தினாலும், பொருளாசையினாலும், குரோதத்தினாலும் நிறைந்து, பொறாமையினாலும் கொலையினாலும், வாக்குவாதத்தினாலும், வஞ்சகத்தினாலும், வன்மத்தினாலும் நிறைந்தவர்களுமாய்,

ரோமர் - தொகுப்புரை

1 அதிகாரம்

ரோமர் 1:30 புறங்கூறுகிறவர்களுமாய், அவதூறு பண்ணுகிறவர்களுமாய், தேவ பகைஞருமாய், துராகிருதம் பண்ணுகிறவர்களுமாய், அகந்தையுள்ளவர்களுமாய், வீம்புக்காரருமாய், பொல்லாதவைகளை யோசித்துப் பிணைக்கிறவர்களுமாய், பெற்றாருக்குக்கீழ்ப்படியாதவர்களுமாய்,

ரோமர் 1:31 உணர்வில்லாதவர்களுமாய், உடன்படிக்கைகளை மீறுகிறவர்களுமாய், சுபாவ அன்பில்லாதவர்களுமாய், இணங்காதவர்களுமாய், இரக்கமில்லாதவர்களுமாய் இருக்கிறார்கள்.

"அவர்கள் சகலவித அநியாயத்தினாலும்........ நிறைந்தவர்களுமாய் இருக்கிறார்கள்" - (ரோமர் 1:29-31) - இவையெல்லாம் தேவனுக்கு எதிரான காரியங்களாகும்

தேவனுக்கு எதிராக உலகத்தார் செய்யும் காரியங்கள்

1 அவர்கள் தேவனை மகிமைப்படுத்தவில்லை. (ரோமர் 1:21)

2 அவர்கள் ஸ்தோத்திரியாமல் போனார்கள் (ரோமர் 1:21)

3 தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள் (ரோமர் 1:21)

4 உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. (ரோமர் 1:21)

5 அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லுகிறார்கள். (ரோமர் 1:22)

6 அவர்கள் பயித்தியக்காரரானார்கள் (ரோமர் 1:22)

7 அவர்கள் தேவனுடைய மகிமையை மாற்றினார்கள். (ரோமர் 1:23)

8 தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தினார்கள். (ரோமர் 1:24)

9 தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றினார்கள் (ரோமர் 1:25)

10 சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள் (ரோமர் 1:25)

11 சிருஷ்டிகரைத் தொழுது சேவிக்கவில்லை. (ரோமர் 1:25

12 அவர்கள் தங்களை இழிவான இச்சைரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார் (ரோமர் 1:26

13 பெண்கள் பெண்புணர்ச்சிக்காரர்கள் (lesbians) ஆனார்கள் (ரோமர் 1:26

14 ஆண்கள் ஆண்புணர்ச்சிக்காரர்கள் (sodomy) ஆனார்கள் (ரோமர் 1:27)

15 தேவனை அறியும் அறிவைப் பற்றிக் கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லை. (ரோமர் 1:28

16 கேடான சிந்தை உடையவர்கள் ஆனார்கள் (ரோமர் 1:28

17 சகலவிதமான வேசித்தனங்களினால நிறைந்தார்கள் (ரோமர் 1:28

18 சகலவிதமான குறைபாடுகளினால நிறைந்தார்கள் (ரோமர் 1:29-31)

19 அவர்கள் வரப்போகிற நியாயத்தீர்ப்பைக் குறித்து அக்கறையில்லாமல் இருந்தார்கள்

20 துன்மார்க்கத்தில பிரியப்பட்டார்கள் (ரோமர் 1:32)

நிறைந்து (filled) - πληρόω - pleerooo - 4137

வினைச்சொல் - நிறைவேற்று, நிரப்பு, முடி, பூரணமாயிரு (to fill up, complete)

அநீதி (unrighteousness) - ἀδικία - adikia 93

பெண்பால் பெயர்ச்சொல் - அநீதி, அக்கிரமம், அநீதம் (every vice contrary to justice and righteousness) (ரோமர் 1:18

ரோமர் - தொகுப்புரை

1 அதிகாரம்

வேசித்தனம் (fornication) - πορνεία - porneia - 4202

பெண்பால் பெயர்ச்சொல் - வேசித்தனம், விபச்சாரம் வேசிமார்க்கம் – திருமணமானவர்கள் செய்யும் பாலுறவு தவறுகளும் திருமணமாகாதவர்கள் செய்யும் பாலுறவு தவறுகளும் (மத் 5:32)

துரோகம் (wickedness) - πονηρία - poneeria - 4189

பெண்பால் பெயர்ச்சொல் – துர்குணம் துரோகம், பொல்லாப்பு, துஷ்டத்தனம் (depravity; iniquity; wicked acting of the evil nature; criminal)

பொருளாசை (covetousness) - πλεονεξία - pleonexia - 4124

பெண்பால் பெயர்ச்சொல் பொருளாசை, ஆவல், லோபத்தனம் (intense lust for gain). (லூக்கா 12:15)

குரோதம் (maliciousness) - κακία - kakia - 2549

பெண்பால் பெயர்ச்சொல் துர்க்குணம், குரோதம், பொறாமை (the vicious disposition and desires, rather than their exercise) – துர்க்கிரியைகளைச் செய்யாமல் துணமாககமான காரியங்களினால் மனது நிறைந்திருந்தது.

பொறாமை (envy) - φθόνος - phthonos - 5355

ஆண்பால் பெயர்ச்சொல் - பொறாமை, வைராக்கியம் (to pine away; the pain felt and malignity conceived at the sight of the blessing of another)

கொலை (murder) - φόνος - phonos 5408

ஆண்பால் பெயர்ச்சொல் – கொலை பாதகம், கொலை (murder) (மத் 15:19; மாற்கு 7:21; மாற்கு 15:7 லூக்கா 23:19,25; ரோமர் 1:29 கலா 5:21; வெளி 9:21); (slaughter) (கலா 9:1) (hating another) (1யோவான் 3:15)

வாக்குவாதம் (debate) - ἔρις - eris - 2054

பெண்பால் பெயர்ச்சொல் - வாக்குவாதம், விரோதம், சண்டை - (strife) (ரோமர் 13:13, 1கொரி 3:3, பிலி 1:15, 1தீமோ 6:4) (contention) (1கொரி 1:11; தீத்து 3:9,) (debate) (ரோமர் 1:29; 2கொரி 12:20 ; (variance) (கலா 5:20) - சண்டைபோடுவதற்கான தர்க்கம் - சத்தியத்திற்கு ஆதரவாக விவாதம் பண்ணுவதை இது குறிப்பிடாது (அப 9:29; அப் 15:2,7 அப 17:17 அப 19:8-9)

வஞ்சகம் (deceit) - δόλος - dolos - 1388

ஆண்பால் பெயர்ச்சொல் - தந்திரம், கபடம், வஞ்சகம், வஞ்சனை (lying, falsity) "guile" (யோவான் 1:47, 2கொரி 12:16, 1தெச 2:3, 1பேதுரு 2:1,22, 1பேதுரு 3:10, வெளி 14:5); "deceit" (மாற்கு 7:22, ரோமர் 1:29); craft (மாற்கு 14:1 ; "subtilty" (மத் 26:4, அப் 13:10)

பொறாமை (malignity) - κακοήθεια kakoeetheia - 2550

பெண்பால் பெயர்ச்சொல் - பொறாமை - இதனால் தீய சுபாவங்கள் உண்டாகும்.

வஞ்சகத்தினால் நிறைந்தவர் (whisperers) - ψιθυριστής - psithhyristees 5588

ஆண்பால் பெயர்ச்சொல் வஞ்சகத்தினால் நிறைந்தவர் புறங்கூறுகிறவர் மற்றவர்களை எப்போதும் குறைகூறுகிறவர்

ரோமர் - தொகுப்புரை

1 அதிகாரம்

புறங்கூறுகிறவர்கள் (Backbiters)
καταλαλος - katalalos - 2637

பெயரடை - புறங்கூறுகிறவர்களுமான (evil speakers; false accusers; slanderers of absent people)

தேவ பகைஞர் (haters of God)
θεοστυγής - theostygees - 2 3!¼

பெயரடை - தேவ பகைஞருமாய (hateful to God; atheists; condemners of sacred things; despisers of providence; scorners of good)

அகந்தை (despiteful) - ὑβριστής - hybristees - 5197

ஆண்பால் பெயர்ச்சொல் - தூஷித்தல் (insolent; stormy; boisterous)

அகந்தை (proud) - ὑπερήφανος - hypereephanos - 5244

பெயரடை அகந்தையுள்ள பெருமையுள்ள

வீம்புக்காரர் (boasters) - ἀλαζών - alazoon 2!3

ஆண்பால் பெயர்ச்சொல் வீம்புக்காரர் (self exalted, vain, and arrogant braggarts) (ரோமர் 1:30; 2தீமோ 3:2)

பொல்லாதவைகளை யோசித்துப் பிணைக்கிறவர் (inventors of evil things) - ἐφευρετής - epheuretees 2182

ஆண்பால் பெயர்ச்சொல் யோசித்துப் பிணைக்கிறவர் (originators of wicked, immoral, and sinful customs, rites, and fashions)

"பெற்றாருக்குக் கீழ்ப்படியாதவர்கள்" - பெற்றோருக்கு எதிர்த்து நிற்போர்கள் பெற்றோருக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுக்காதவர்கள்

"உணர்வில்லாதவர்கள்" - ஆவிக்குரிய காரியங்களை உணர்ந்து கொள்ளாதவர்கள் தங்களுடைய மார்க்கங்களில் வைராக்கியமாக இருந்து சத்தியத்தை ஏற்றுக் கொள்ளும் உணர்வற்றவர்கள்

"உடன்படிக்கைகளை மீறுகிறவர்கள்" - வாக்குத்தத்தங்களில் உண்மையில்லாது இருப்பவர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமற்றவர்கள் வஞ்சனையான எண்ணம் உடையவர்கள்

உடன்படிக்கைகளை மீறுகிறவர்கள் - ἀσύνθετος - asynthetos - 802

பெயரடை - உடன்படிக்கைகளை மீறுகிற

"சுபாவ அன்பில்லாதவர்கள்" - ரோமர் 1:24-28 ஆகிய வசனங்களில் சுபாவமான காரியங்களைப் பற்றியும் சுபாவத்திற்குப் புறம்பான காரியங்களைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது சுபாவ அன்பில்லாதவர்கள் சுபாவமான காரியங்களைச் செய்யாதவர்கள்

"இணங்காதவர்கள்" - கிரேக்கர் பல தெய்வங்களை வழிபட்டார்கள் அவற்றில் சில தெய்வங்கள் மிகவும் கோபமானவை என்று நம்பினார்கள் அந்தத் தெய்வத்தினுடைய கோபத்தை தணிக்கவே முடியாதாம். அந்தத் தெய்வம் எதற்கும் இணங்காதாம்.

இணங்காதவர்கள் (implacable)
ἄσπονδος - aspondos - 786

பெயரடை - இணங்காத (without libation)

இரக்கமில்லாதவர்கள் (unmerciful) - ἀνελεήμων - aneleeemoon - 41¼

பெயரடை - இரக்கமில்லாத (pitiless, destitute of all benevolence to the needy; cruel, merciless, irreconcilable; severe, unappeasable, unforgiving; unyielding)

1 அதிகாரம்

(7) தேவனை மறுதலிப்பதினால் ஏற்படும் இறுதி விளைவு - தேவன் தீர்மானித்த நீதியான நியாயத்தீர்ப்பை அவர்கள் அறிந்திருந்தும், அதற்காக அவர்கள் பயப்படுவதில்லை

ரோமர் 1:32 இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் மரணத்திற்குப் பாத்திரராயிருக்கிறார்களென்று தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பை அவர்கள் அறிந்திருந்தும் அவைகளைத் தாங்களே செய்கிறதுமல்லாமல், அவைகளைச் செய்கிற மற்றவர்களிடத்தில் பிரியப்படுகிறவர்களுமாயிருக்கிறார்கள்

2 அதிகாரம்

4. தேவ பக்தியின்மை - மன்னிக்கப்பட முடியாத பாவம்

ரோமர் 2:1 ஆகையால் மற்றவர்களைக் குற்றவாளியாகத் தீர்க்கிறவனே, நீ யாரானாலும் சரி போக்குச்சொல்ல உனக்கு இடமில்லை; நீ குற்றமாகத் தீர்க்கிறவைகள் எவைகளோ அவைகளை நீயே செய்கிறபடியால், நீ மற்றவர்களைக் குறித்துச் சொல்லுகிற தீர்ப்பினாலே உன்னைத்தானே குற்றவாளியாகத் தீர்க்கிறாய்.

"நீ மற்றவர்களைக் குறித்துச் சொல்லுகிற தீர்ப்பினாலே உன்னைத்தானே குற்றவாளியாகத் தீர்க்கிறாய்" - பவுல் இங்கு யூதருடைய பெயரைக் குறிக்காமலேயே அவர்களிடம் பேசுகிறார். அவர்கள் மற்றவர்களை குற்றவாளிகளாகத் தீர்க்கிறார்கள் (லூக்கா 18:19). அவர்கள் எவற்றைக் குற்றமென்று கூறுகிறார்களோ அதைத் தாங்களும் செய்கிறார்கள். ஆகையினால் அவர்களுக்குப் போக்குச் சொல்ல இடமில்லை. ரோமர் 1:21-32 ஆகிய வசனங்களில் தேவன் கடிந்து கூறியிருக்கும் காரியங்களை யூதர்களும் செய்கிறார்கள். புறஜாதியாருக்கு அவர்கள் செய்த பாவங்களுக்குரிய தண்டனை கிடைக்கும். அதுபோலவே யூதருக்கும் அவர்களுடைய பாவத்திற்கு ஏற்ற தண்டனை நிச்சயமாக கிடைக்கும்.

5. தேவனுடைய நியாயத்தீர்ப்பு சத்தியத்தின்படியே இருக்கிறது - (1:32)

ரோமர் 2:2 இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்களுக்கு தேவனுடைய நியாயத்தீர்ப்பு சத்தியத்தின்படியே இருக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.

6. தேவனுடைய நியாயத்தீர்ப்பு - மனுஷனுடைய மனக் கடினத்திற்கும் குணப்படாத இருதயத்திற்கும் ஏற்றபடி இருக்கும்

ரோமர் 2:3 இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்களைக் குற்றவாளிகளென்று தீர்த்தும் அவைகளையே செய்கிறவனே, நீ தேவனுடைய நியாயத்தீர்ப்புக்குத் தப்பிக்கொள்ளலாமென்று நினைக்கிறாயோ?

ரோமர் 2:4 அல்லது தேவதயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறதென்று அறியாமல், அவருடைய தயவு பொறுமை நீடியசாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை அசட்டைபண்ணுகிறாயோ?

ரோமர் 2:5 உன் மனக்கடினத்திற்கும் குணப்படாத இருதயத்திற்கும் ஏற்றபடி, தேவனுடைய நீதியுள்ள தீர்ப்பு வெளிப்படும் கோபாக்கினைநாளிலே உனக்காகக் கோபாக்கினையைக் குவித்துக்கொள்ளுகிறாயே.

ரோமர் 2:6 தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார்.

நினைக்கிறாய் (thinkest) - **λογίζομαι** - logizomai - 3049

வினைச்சொல் - ஆலோசனை பண்ணு, எண்ணு, தீர், யோசி, நினை, சிந்தி (to reckon, reason) - (ரோமர் 2:3,26; ரோமர் 3:28, ரோமர் 4:3-24, ரோமர் 6:11, ரோமர் 8:18,36, ரோமர் 9:8, ரோமர் 14:14)

"அவருடைய தயவு பொறுமை நீடியசாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை அசட்டைபண்ணுகிறாயோ?" யூதர்கள் குணப்படும்படியாக தேவதயவு அவர்களை ஏவுகிறது. ஆனால் அதை யூதர்கள் அசட்டைபண்ணுகிறார்கள். மனந்திரும்ப மனதில்லாது இருக்கிறார்கள்.

2 அதிகாரம்

"அவருடைய தயவின் ஐசுவரியம்" (riches of his goodness) - (ரோமர் 9:23; ரோமர் 11:33; எபே 1:7,18; எபே 2:7; எபே 3:8, 16; பிலி 4:19; கொலோ 1:27; கொலோ 2:2)

"நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறது" - யூதர்கள் குணப்படுவதற்கு மூன்று காரியங்கள் அவர்களை ஏவுகிறது. அவையாவன

1. தேவனுடைய தயவு
2. தேவனுடைய பொறுமை
3. தேவனுடைய நீடிய சாந்தம்

தயவு (Goodness) - χρηστότης - chreestotees - 5544

பெண்பால் பெயர்சொல் - தயவு, நன்மை, தயை - தேவன் தமது தயவினால் பாவிகளை மனந்திரும்புமாறு வழிநடத்துகிறார் (ரோமர் 2:4, ரோமர் 5:6-8)

பொறுமை (Forbearance) - ἀνοχή - anochee - 463

பெண்பால் பெயர்சொல் - பொறுமை - தேவன் பொறுமையுள்ளவர். பாவிகளை அழித்துப்போடாமல் அவர்கள்மீது பொறுமையுள்ளவராக இருக்கிறார். அவர்கள் ஜீவித்து இரட்சிக்கப்பட வேண்டுமென்று பொறுமையோடு காத்துக் கொண்டிருக்கிறார் (ரோமர் 2:4; ரோமர் 3:25; நெகே 9:30)

நீடிய சாந்தம் (Longsuffering) μακροθυμία - makrothymia - 3115

பெண்பால் பெயர்சொல் - நீடிய சாந்தம், நீடிய பொறுமை - தேவனுடைய நீடிய சாந்தத்தினால் அவருடைய இரக்கமும், தயவும் வெளிப்படுகிறது. தம்முடைய சாந்த குணத்தினாலே மனுஷர் தம்மோடு ஒப்புரவாவதற்கு அவர்களை வழிநடத்துகிறார் (ரோமர் 2:4; 1பேதுரு 3:20; 2பேதுரு 3:15)

"குணப்படுதல்" (repentance) - (மத் 4:17; லூக்கா 13:3)

"மனக்கடினம்" (hardness) - யூதர்கள் நீண்ட காலமாக தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணினார்கள். இதனால் அவர்களுடைய இருதயம் கடினமாயிற்று.

"குணப்படாத இருதயம்" (impenitent heart) - இருதயக்கடினத்தினிமித்தமாக யூதர்களுடைய இருதயம் குணப்படாமல் போயிற்று. எப்போதும் தேவனுக்கு எதிராகவே அவர்களுடைய இருதயம் சிந்தித்துக் கலகம் பண்ணுகிறது.

குவித்து வை (treasurest up) - θησαυρίζω - theesaurizoo - 2343

வினைச்சொல் - சேர்த்துவை, வை, குவி (increase, store up) (ரோமர் 2:5; மத் 6:19-20; லூக்கா 12:21; 1கொரி 16:2; 2கொரி 12:14; யாக் 5:3; 2பேதுரு 3:7) தேவனுடைய கோபாக்கினையை யூதர்கள் நிச்சயமாகப் பெற்றுக் கொள்வார்கள். ஏனெனில் இவர்கள் அதற்கேற்ற பிரகாரமாகக் காரியங்களைச் செய்கிறார்கள். தேவனுடைய தயவைப் புறக்கணித்து விட்டார்கள். தேவ கோபம் உண்டாகுமாறு கிரியை நடப்பிக்கிறார்கள். ஆகையினால் நீதியுள்ள தேவனுடைய தீர்மானத்தின் பிரகாரம் இவர்கள்மீது நியாயத்தீர்ப்பு உண்டாகும். (ரோமர் 2:6; மத் 11:22-24; மத் 23:14; வெளி 20:11-15)

2 அதிகாரம்

இறுதி நியாயத்தீர்ப்பு

துன்மார்க்கர்கள் தங்களுடைய துன்மார்க்கமான கிரியைகளுக்கு நித்திய தண்டனையைப் பெறப்போகும் இறுதி நியாயத்தீர்ப்பைப் பற்றி பவுல் இங்கு குறிப்பிடுகிறார் (வெளி 20:11-15; அப் 17:31; ரோமர் 2:16). இது வரும் கோபம் "the wrath to come" (மத் 3:7; 1தெச 1:10) என்றும் அழைக்கப்படுகிறது. கலகக்காரர்கள் கோபாக்கினையின் பிள்ளைகள் "children of wrath" (எபே 2:3; எபே 5:6) என்று அழைக்கப்படுகிறார்கள். கலகக் குணத்தின் நிமித்தமாக கலகக்காரர்களுக்குத் தேவனுடைய கோபம் இப்போதே வெளிப்பட்டிருக்கிறது. (ஏசா 11:4; ஏசா 16:46; உபா 9:7-8; லூக்கா 21:23; 1தெச 2:16) பூமியிலுள்ள ஜனங்களமீது கோபாக்கினையின் உக்கிரமான நாள் வரப்போகிறது. (வெளி 6:16-17; வெளி 14:19; வெளி 15:1, 7; வெளி 16:1,19; வெளி 18:3; வெளி 19:15) கோபாக்கினையின் அந்த நாளே இறுதி நியாயத்தீர்ப்பு. நித்திய நரகமும் ஆகும் (வெளி 14:9-11; வெளி 20:11-15; வெளி 21:8)

"தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார்" ஒவ்வொரு மனுஷனுடைய கிரியைக்காக தேவன் அவனுக்கு வெகுமதியையோ அல்லது தண்டனையையோ அளிப்பார்

7. தேவனுடைய நியாயத்தீர்ப்பு - சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல், அநியாயத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கிறவர்களுக்கோ உக்கிர கோபாக்கினை வரும்

ரோமர் 2:7 சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார்

ரோமர் 2:8 சண்டைக்காரராயிருந்து, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல், அநியாயத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கிறவர்களுக்கோ உக்கிரகோபாக்கினை வரும்.

ரோமர் 2:9 முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் பொல்லாங்குசெய்கிற எந்த மனுஷ ஆத்துமாவுக்கும் உபத்திரவமும் வியாகுலமும் உண்டாகும்.

ரோமர் 2:10 முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் எவன் நன்மை செய்கிறானோ அவனுக்கு மகிமையும் கனமும் சமாதானமும் உண்டாகும்

ரோமர் 2:11 தேவனிடத்தில் பட்சபாதமில்லை.

"சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து" - எல்லோருமே நற்கிரியைகளைச் சோர்ந்துபோகாமல் செய்து கொண்டிருக்க வேண்டும் (யோவான் 6:27 யோவான் 10:28

நாம் தேடவேண்டிய காரியங்கள்

1. மகிமை (Glory) (ரோமர் 2:7,10 ரோமர் 8:18; 2பேதுரு 1:3)
2. கனம் (Honor) (ரோமர் 2:7, 10 யோவான் 12:26, 1தெச 4:4
3. அழியா[redacted] (Immortality) (1பேதுரு 3:4
4. நித்திய ஜீவன் (Eternal life) (யோவான் 6:27; யோவான் 10:28

இவைகளைத் தேடும்போதுதான் தேவன் நமக்குக் கொடுப்பார் (ரோமர் 2:7 சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளை செய்ய வேண்டும். (ரோமர் 2:7,10) ஒரு மனுஷன் கீழ்ப்படிவதினால் அதன் வெகுமதியாக இவற்றைப் பெற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் தேவனுடைய கிருபையினால் இவை மனுஷனுக்கு ஏற்கெனவே வாக்குப் பண்ணப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே வாக்குப் பண்ணப்பட்டிருப்பவற்றை நாம் தேடும்போது தேவன் அவற்றை நமக்கு அளிக்கிறார் தேவன் தமது சித்தத்தின் பிரகாரம் செயல்படுகிறார் என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும். (பிலி 2:12; யாக் 1:21-27

2 அதிகாரம்

"உக்கிரகோபாக்கினை" (indignation and wrath) - கீழ்ப்படிந்து நன்மை செய்கிறவர்களுக்குத் தேவன் நன்மையைத் தருகிறார் கீழ்ப்படியாத துன்மார்க்கருக்குத் தேவனுடைய உக்கிரகோபாக்கினை வரும். எல்லோரும் அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்க பலனை நிச்சயமாகப் பெற்றுக் கொள்வார்கள் (ரோமர் 2:7-11)

"தேவனிடத்தில் பட்சபாதமில்லை" - (எபே 6:9; கொலோ 3:25; யாக் 2:1-10)

8. தேவனுடைய நியாயத்தீர்ப்பு - எவர்கள் நியாயப்பிரமாணத்துக் குட்பட்டவர்களாய்ப் பாவஞ் செய்கிறார்களோ, அவர்கள் நியாயப் பிரமாணத்தினாலே ஆக்கினைத் தீர்ப்படைவார்கள்

ரோமர் 2:12 எவர்கள் நியாயப் பிரமாணமில்லாமல் பாவஞ் செய்கிறார்களோ அவர்கள் நியாயப் பிரமாணமில்லாமல் கெட்டுப் போவார்கள் எவர்கள் நியாயப் பிரமாணத்துக்குட்பட்டவர்களாய் பாவஞ்செய்கிறார்களோ, அவர்கள் நியாயப் பிரமாணத்தினாலே ஆக்கினைத் தீர்ப்படைவார்கள்

ரோமர் 2:13 நியாயப்பிரமாணத்தைக் கேட்கிறவர்கள் தேவனுக்கு முன்பாக நீதிமான்களல்ல. நியாயப் பிரமாணத்தின்படி செய்கிறவர்களே நீதிமான்களாக்கப்படுவார்கள்

ரோமர் 2:14 அன்றியும் நியாயப் பிரமாணமில்லாத புறஜாதிகள் சுபாவமாய் நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறபோது, நியாயப் பிரமாணமில்லாத அவர்கள் தங்களுக்குத் தாங்களே நியாயப் பிரமாணமாயிருக்கிறார்கள்

ரோமர் 2:15 அவர்களுடைய மனச்சாட்சியுங்கூடச்சாட்சியிடுகிறதினாலும் குற்றமுண்டு குற்றமில்லையென்று அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்க்கிறதினாலும் நியாயப் பிரமாணத்திற்கேற்ற கிரியை தங்கள் இருதயங்களில் எழுதியிருக்கிறதென்று காண்பிக்கிறார்கள்

ரோமர் 2:16 என் சுவிசேஷத்தின்படியே, தேவன் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு மனுஷருடைய அந்தரங்கங்களைக்குறித்து நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் நாளிலே இது விளங்கும்.

"அவர்கள் நியாயப்பிரமாணமில்லாமல் கெட்டுப்போவார்கள்" - நியாயப் பிரமாணமில்லாமல் பாவஞ்செய்கிறவர்கள் நியாயப் பிரமாணமில்லாமல் கெட்டுப்போவார்கள் நியாயப்பிரமாணத்துக் குட்பட்டவர்களாய் பாவஞ்செய்கிறவர்கள் நியாயப் பிரமாணத்தினாலே ஆக்கினைத் தீர்ப்படைவார்கள் ரோமர் 2:7-11 ஆகிய வசனங்களில் தேவன் நமது கிரியைகளுக்குத் தக்கதாகப் பலனளிப்பார் என்று வாசிக்கிறோம் ரோமர் 2:12-16 ஆகிய வசனங்களில் தேவன் நமது நடத்தையை நாம் ஏற்றுக் கொண்ட சத்தியத்தின் பிரகாரமாக நியாயம் தீர்ப்பார் என்று வாசிக்கிறோம் புறஜாதியாருக்கு நியாயப்பிரமாணம் இல்லை ஆகையினால் துன்மார்க்கரான புறஜாதியார் நியாயப்பிரமாணம் இல்லாமல் நியாயந்தீர்க்கப்படுவார்கள்

"நியாயப்பிரமாணத்தைக் கேட்கிறவர்கள் தேவனுக்கு முன்பாக நீதிமான்களல்ல" நியாயப்பிரமாணத்தைக் கேட்டால் மட்டும் போதாது. அதற்குக் கீழ்ப்படிந்து அதற்கேற்ற பிரகாரமாக கிரியை நடப்பிக்க வேண்டும் நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவர்களே நீதிமான்களாக்கப்படுவார்கள் (ரோமர் 2:7-11; ரோமர் 10:8-21; யாக் 1:21-27, யாக் 2:14-26 1யோவான் 1:7)

"நியாயப் பிரமாணமில்லாத அவர்கள் தங்களுக்குத் தாங்களே நியாயப் பிரமாணமாயிருக்கிறார்கள்" புறஜாதியாருக்கு மோசேயின் நியாயப்பிரமாணம் கிடையாது. ஆனால் அவர்களே அவர்களுக்கு நியாயப் பிரமாணமாய் இருக்கிறார்கள் புறஜாதியாரை நியாயந்தீர்ப்பதற்கு மோசேயின் நியாயப் பிரமாணம் தேவையில்லை அவர்களுடைய நியாயப்பிரமாணமே அவர்களை நியாயந் தீர்ப்பதற்குப் போதுமானது.

2 அதிகாரம்

சுபாவமாய் நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்வது

புறஜாதியார் நியாயப்பிரமாணத்தைத் தங்களுடைய இயற்கையான சுபாவத்தின் பிரகாரம் கைக்கொள்கிறார்கள். இந்த நியாயப்பிரமாணம் அவர்களுடைய இருதயங்களில் எழுதப்பட்டிருக்கிறது. அவர்களுடைய மனச்சாட்சி நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று சாட்சி பகருகிறது. நியாயப்பிரமாணத்திற்கு அவர்கள் கீழ்ப்படியாமல் இருக்கும்போது அவர்களுடைய மனச்சாட்சியே அவர்களைக் கடிந்து கொள்கிறது. குற்றமுண்டு குற்றமில்லையென்று அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்க்கிறது. தேவன் தமது நியாயப்பிரமாணத்தை யூதருக்கு வெளிப்படுத்தியிருக்கிறது போன்றே புறஜாதியாருக்கும் அவர்களுடைய இருதயங்களில் வெளிப்படுத்தியிருக்கிறார். ஆகையினால் புறஜாதியாரை அவர்களுடைய கிரியைகளின் பிரகாரமாக தேவன் நியாயந்தீர்ப்பதற்கு இது போதுமானதாகும் (ரோமர் 2:15-16). நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதினாலோ அல்லது சுபாவத்தின் பிரகாரம் மனச்சாட்சிக்குக் கீழ்ப்படிந்து நடப்பதினாலோ எந்தவொரு ஆத்துமாவும் இரட்சிக்கப்படாது. இரட்சிக்கப்படுவதற்கு நாம் மறுபடியும் பிறக்க வேண்டியது அவசியமாம்.

"என் சுவிசேஷத்தின்படியே" - பவுல் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து வருகிறார். இந்தப் பிரசங்கத்தில் அவர் மூல உபதேசங்களின் அஸ்திபாரங்களைப் போடுகிறார். அவையே "பவுலின் சுவிசேஷமாகும்". இயேசு கிறிஸ்து மூலமாக தேவன் எல்லா ஜனங்களையும் நியாயந்தீர்ப்பார். அவர் பட்சபாதம் காண்பிக்கமாட்டார். மனுஷருடைய கிரியைகளின் பிரகாரம் அவர் மனுஷரை நியாயந்தீர்ப்பார். அவர்களுடைய அறிவின் பிரகாரம் அவர்களை நியாயந்தீர்க்க மாட்டார் (ரோமர் 2:7-16).

9. யூதனைக் குறித்த காரியம் - (2:17-3:8)

(1) யூதனுடைய பத்து அம்ச நிலைமை

ரோமர் 2:17 நீ யூதனென்று பெயர்பெற்று நியாயப் பிரமாணத்தின்மேல் பற்றுதலாயிருந்து தேவனைக்குறித்து மேன்மைபாராட்டி

ரோமர் 2:18 நியாயப்பிரமாணத்தினால் உபதேசிக்கப்பட்டவனாய், அவருடைய சித்தத்தை அறிந்து நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கிறாயே.

ரோமர் 2:19 நீ உன்னைக் குருடருக்கு வழிகாட்டியாகவும் அந்தகாரத்திலுள்ளவர்களுக்கு வெளிச்சமாகவும்

ரோமர் 2:20 பேதைகளுக்குப் போதகனாகவும் குழந்தைகளுக்கு உபாத்தியாயனாகவும் நியாயப் பிரமாணத்தின் அறிவையும் சத்தியத்தையும் காட்டிய சட்டமுடையவனாகவும் எண்ணுகிறாயே.

"நீ யூதனென்று பெயர்பெற்றாய்" - பவுல் இப்போது யூதரோடு வெளிப்படையாகப் பேசுகிறார். புறஜாதியார் தங்களுடைய சுபாவத்தின் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிகிறார்கள். ஆனால் யூதருக்கோ நியாயப் பிரமாணம் உபதேசிக்கப்பட்டிருக்கிறது. நியாயப்பிரமாணத்தை அறிந்து கொள்ளும் சிலாக்கியம் யூதருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் தேவன் யூதரை அவர்களுடைய நியாயப்பிரமாணத்தின் பிரகாரமாகவே நியாயந்தீர்க்கப் போவது நிச்சயம்.

"நியாயப் பிரமாணத்தின்மேல் பற்றுதலாயிருந்தாய்" யூதர்கள் தங்களுடைய இரட்சிப்பிற்கு மோசேயின் நியாயப் பிரமாணத்தின்மீதே நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.

(2) யூதனுடைய ஆறு அம்ச பாவமும் தேவனை விட்டு அவன் பின்வாங்கியிருப்பதும்

(1:21-32; 10:21)

ரோமர் 2:21 இப்படியிருக்க, மற்றவனுக்குப் போதிக்கிற நீ உனக்குத்தானே போதியாமலிருக்கலாமா? களவுசெய்யக் கூடாதென்று பிரசங்கிக்கிற நீ களவுசெய்யலாமா?

ரோமர் - தொகுப்புரை

2 அதிகாரம்

ரோமர் 2:22 விபசாரம் செய்யக் கூடாதென்று சொல்லுகிற நீ விபசாரம் செய்யலாமா? விக்கிரகங்களை அருவருக்கிற நீ கோவில்களைக் கொள்ளையிடலாமா?

ரோமர் 2:23 நியாயப்பிரமாணத்தைக் குறித்து மேன்மைபாராட்டுகிற நீ நியாயப்பிரமாணத்தை மீறி நடந்து தேவனைக் கனவீனம்பண்ணலாமா?

ரோமர் 2:24 எழுதியிருக்கிறபடி தேவனுடைய நாமம் புறஜாதிகளுக்குள்ளே உங்கள் மூலமாய்த் தூஷிக்கப்படுகிறதே.

அருவருப்பு (abhorrest) - βδελύσσομαι - bdelyssomai - 948

விணைச்சொல் - அருவரு (abominable) ரோமர் 2:22 வெளி 21:8

கொள்ளையிடு (commit sacrilege) - ἱεροσυλέω - hierosyleoo - 2416

விணைச்சொல் - கொள்ளையிடு (rob temples) - தேவாலயத்தைக் கொள்ளையிடுவது. தேவனுக்காகப் பிரதிஷ்டை பண்ணப்பட்ட பொருட்களைத் தனக்காகப் பயன்படுத்திக் கொள்வது. மல் 3:10-12 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற பிரகாரம் தேவனை வஞ்சிப்பது.

"நீ நியாயப்பிரமாணத்தை மீறி நடந்து தேவனைக் கனவீனம் பண்ணலாமா?" - யூதர்கள் தங்களுக்கு நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டிருப்பதற்காகப் பெருமை படுகிறார்கள். ஆனால் அவர்கள் நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்ளாமல் அதை மீறி நடக்கிறார்கள். இதன் மூலமாக அவர்கள் தேவனுடைய [illegible] தூஷித்து தேவனைக் கனவீனம் பண்ணுகிறார்கள். பிரதான ஆசாரியருடைய பட்டத்தை ஒரு வியாபாரப் பொருளாக்கிவிட்டார்கள். சந்தையிலே பொருட்களை வாங்கி விற்பதைப் போன்று பிரதான ஆசாரியருடைய பட்டத்தையும் பணத்திற்கு வாங்கி விற்கிறார்கள். ஏலியின் குமாரர்கள் தங்களுக்கு நியமிக்கப்பட்டிருந்த ஊழியத்தைச் சரியாகச் செய்யாமல் அலட்டிக் கொண்டிருந்தார்கள். அதே தவறைப் பலதலைமுறைகளாக ஆசாரியர்கள் செய்து வருகிறார்கள் (1சாமு 2:22; மத் 23). ஆசாரியர்களுடைய வேசித்தனங்களும் விபச்சாரங்களும் பல ஸ்திரீ விவாகங்களும் அவர்கள் நம்மும் நியாயப் பிரமாணத்திற்கு முரணானவை. அவர்கள் கொள்ளைக்காரர்கள், விபச்சாரக்காரர்கள், கொலைகாரர்கள். எல்லாப் பாவங்களும் நியாயப்பிரமாணத்தை நம்பும் அவர்களிடம் காணப்படுகிறது. (ரோமர் 1:18-32; ரோமர் 2:1-29; ரோமர் 3:10-18) தேவனுடைய நாமம் புறஜாதிகளுக்குள்ளே யூதர்கள் மூலமாய்த் தூஷிக்கப்படுகிறது.

"எழுதியிருக்கிறபடி" - (எசே 36:20,23)

(3) விருத்தசேதனம் பிரயோஜன முள்ளது

ரோமர் 2:25 நீ நியாயப் பிரமாணத்தைக் கைக்கொண்டு நடந்தால் விருத்தசேதனம் பிரயோஜனமுள்ளதுதான்; நீ நியாயப்பிரமாணத்தை மீறி நடந்தால் உன் விருத்தசேதனம் விருத்தசேதன மில்லாமையாயிற்றே.

ரோமர் 2:26 மேலும் விருத்தசேதனமில்லாதவன் நியாயப் பிரமாணத்துக் கேற்ற நீதிகளைக் கைக்கொண்டால் அவனுடைய விருத்தசேதனமில்லாமை விருத்த சேதனம் என்றெண்ணப்படுமல்லவா?

ரோமர் 2:27 சுபாவத்தின்படி விருத்தசேதனமில்லாதவனாயிருந்தும் நியாய பிரமாணத்தை நிறைவேற்றுகிற வனாயிருந்தால், அவன் வேத எழுத்தும் விருத்தசேதனமுமுள்ளவனாயிருந்தும், நியாய பிரமாணத்தை மீறுகிற உன்னைக் குற்றப்படுத்துவானல்லவா

2 அதிகாரம்

"நீ நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு நடந்தால் விருத்தசேதனம் பிரயோஜனமுள்ளது தான்; நீ நியாயப்பிரமாணத்தை மீறி நடந்தால் உன் விருத்தசேதனம் விருத்தசேதனமில்லாமையாயிற்றே" - நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்கிறவர்களுக்குத்தான் விருத்தசேதனம் பிரயோஜனமுள்ளது. யூதர்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளவில்லை என்றால் அவர்கள் விருத்தசேதனம் உடையவர்களாக இருந்தாலும் விருத்தசேதனம் இல்லாத புறஜாதியாரைப் போலவே இருக்கிறார்கள் (ரோமர் 2:12-16) ஏனெனில் விருத்தசேதனமானது மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதற்கு அடையாளமாக இருக்கிறது. புறஜாதியார் தங்கள் மாம்சத்தில் விருத்தசேதனம் பண்ணவில்லை ஆனால் தங்களுடைய சுபாவத்தில் பிரமாணத்தைக் கைக்கொள்கிறார்கள் ஆகையினால் அவர்கள் விருத்தசேதனம் உள்ளவர்களாகவே இருக்கிறார்கள் ஏனெனில் விருத்தசேதனமில்லாதவன் நியாயப்பிரமாணத்துக்கேற்ற நீதிகளைக் கைக்கொண்டால், அவனுடைய விருத்தசேதனமில்லாமை விருத்தசேதனம் என்றெண்ணப்படும். சுபாவத்தின்படி விருத்தசேதனமில்லாதவனாயிருந்தும் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறவனாயிருந்தால் அவன் வேத எழுத்தும் விருத்தசேதனமும் உள்ளவன் (ரோமர் 2:26-27) விருத்தசேதனமானது ஒரு சடங்காசாரம். இது ஆவிக்குரிய ரீதியாக இருதயத்தின் சுத்திகரிப்பைக் குறிப்பிடுகிறது. (எரே 4:4 10 எரே 9:26, எசே 44:7 9 ரோமர் 2:29

"அவன் (புறஜாதியான) வேத எழுத்தும் விருத்தசேதனமும் உள்ளவன்" புறஜாதியார்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளவதில்லை விருத்தசேதனம் பண்ணுவதில்லை. யூதர்கள் விருத்தசேதனம் பண்ணுகிறார்கள் ஆனால் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளவதில்லை ஆகையினால் புறஜாதியார் விருத்தசேதனம் இல்லாதவர்களாக இருந்தாலும் அவர்கள் விருத்தசேதனம் உடைய யூதரைக் குற்றப்படுத்துவார்கள் ஏனெனில் புறஜாதியான் சுபாவத்தின்படி விருத்தசேதனமில்லாதவன் ஆயினும் அவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறவனாய் இருக்கிறான்

(4) உண்மையான யூதனுக்கு விளக்கம்

(ஆதி 32:28; ரோமர் 9:6)

ரோமர் 2:28 ஆதலால் புறம்பாக யூதனானவன் யூதனல்ல, புறம்பாக மாம்சத்தில் செய்யப்படும் விருத்தசேதனமும் விருத்தசேதனமல்ல

ரோமர் 2:29 உள்ளத்திலே யூதனானவனே யூதன்; எழுத்தின்படி உண்டாகாமல் ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம் இப்படிப்பட்டவனுக்குரிய புகழ்ச்சி மனுஷராலே அல்ல, தேவனாலே உண்டாயிருக்கிறது

"புறம்பாக யூதனானவன் யூதனல்ல புறம்பாக மாம்சத்தில் செய்யப்படும் விருத்தசேதனமும் விருத்தசேதனமல்ல" உண்மையான யூதன் என்னப்படுகிறவன் தன் மாம்சத்தில் விருத்தசேதனம் பண்ணுகிறவன் அல்ல அதுபோலவே உண்மையான விருத்தசேதனம் என்பது மாம்சத்தில் செய்யப்படுகிற விருத்தசேதனமும் அல்ல உண்மையான யூதன் தன்னுடைய இருதயத்திலும் தன்னுடைய ஆவியிலும் விருத்தசேதனம் பண்ணிக் கொள்ளவேண்டும். இது மாம்சத்தில் விருத்தசேதனம் பண்ணுவதைவிட மேன்மையானது. இவ்வாறு பவுல் கூறுவதினால் ஒவ்வொரு கிறிஸ்தவரும் யூதர் என்று பொருள்படாது. ஒருவர் உண்மையிலேயே யூதராக இருக்கிறார் என்றால் அதாவது அவர் உண்மையிலேயே ஆபிரகாமின் வித்து என்றால் அவர் தன்னுடைய இருதயத்தில் விருத்தசேதனம் பண்ணிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அவர் வாக்குத்தத்தத்தின் பிள்ளையாக இருப்பார் (ரோமர் 2:28 29 ரோமர் 9:6 7

3 அதிகாரம்

(5) கவிசேஷத்திற்கு யூதனுடைய மூன்று அம்ச மறுப்புரை - ரோமர் 3:1-8

(அ) யூதனுடைய மேன்மை என்ன? - ரோமர் 9

ரோமர் 3:1 இப்படியானால் யூதனுடைய மேன்மை என்ன? விருத்த சேதனத்தினாலே பிரயோஜனம் என்ன?

ரோமர் 3:2 அது எவ்விதத்திலும் மிகுதியாயிருக்கிறது. தேவனுடைய வாக்கியங்கள் அவர்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டது விசேஷித்த மேன்மையாமே.

"விருத்தசேதனத்தினாலே பிரயோஜனம் என்ன?" - நியாயப்பிரமாணத்தைக் கைப்பற்றினால்தான் விருத்தசேதனத்திற்குப் பிரயோஜனம் உண்டு. (ரோமர் 3:25)

"அது எவ்விதத்திலும் மிகுதியாயிருக்கிறது. தேவனுடைய வாக்கியங்கள் அவர்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டது விசேஷித்த மேன்மையாமே" - ரோமர் 3:1 ஆவது வசனத்தில் யூதனுடைய மேன்மை என்ன? என்று கேட்கப்பட்டிருக்கும் கேள்விக்கு இந்த வசனம் பதிலைத் தருகிறது. தேவனுடைய வாக்கியங்கள் யூதரிடத்தில் ஒப்புவிக்கப்பட்டது இதுதான் யூதனுடைய மேன்மை. இந்த மேன்மையினால் எந்த யூதரும் இரட்சிக்கப்படுவதில்லை (ரோமர் 3:21-31, ரோமர் 4:1-25, ரோமர் 8:3-4, கலா 3:10-14)

(ஆ) யூதனுடைய அவிசுவாசம் தேவனுடைய உண்மையை அவமாக்குமோ? - (ரோமர் 10:11)

ரோமர் 3:3 சிலர் விசுவாசியாமற் போனாலுமென்ன? அவர்களுடைய அவிசுவாசம் தேவனுடைய உண்மையை அவமாக்குமோ?

ரோமர் 3:4 அப்படியாகமாட்டாது; நீர் உம்முடைய வசனங்களில் நீதியுள்ளவராய் விளங்கவும், உம்முடைய நியாயம் விசாரிக்கப்படும்போது வெற்றியடையவும் இப்படியாயிற்று என்று எழுதியிருக்கிறபடி, தேவனே சத்தியபரர் என்றும், எந்த மனுஷனும் பொய்யன் என்றும் சொல்வோமாக.

அவிசுவாசம் (unbelief) - ἀπιστία - apistia - 570

பெண்பால் பெயர்ச்சொல் - அவிசுவாசம் (மத் 13:58; மத் 17:20 மாற்கு 6:6; மாற்கு 9:24, மாற்கு 16:14; ரோமர் 3:3 ரோமர் 4:20; ரோமர் 11:20-23 1தீமோ 1:13; எபி 3:12,19.)

"அப்படியாகமாட்டாது" (God forbid) - அவர்களுடைய அவிசுவாசம் தேவனுடைய உண்மையை அவமாக்குமோ? (ரோமர் 3:3) என்னும் கேள்விக்கு இந்த வசனம் பதில் தருகிறது. புதிய ஏற்பாட்டில் "God forbid" என்னும் வாக்கியம் 15 தடவையும். (ரோமர் 3:4,6,31; ரோமர் 6:2,15 ரோமர் 7:7,13; ரோமர் 9:14; ரோமர் 11:1,11 லூக்கா 20:16; 1கொரி 6:15; கலா 2:17 கலா 3:21; கலா 6:14) பழைய ஏற்பாட்டில் 9 தடவையும் (ஆதி 44:7,17; யோசு 22:29 யோசு 24:16; 1சாமு 12:23; 1சாமு 14:45, 1சாமு 20:2; 1நாளா 11:19; யோபு 27:5) பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இந்த வாக்கியத்தின் சரியான மொழிபெயர்ப்பு "நான் இதைச் செய்யாதபடிக்கு என் தேவன் என்னைக் காத்துக் கொள்ளக் கடவர்" என்பதாகும். (1நாளா 11:19) ஆனால் நமது வேதாகமத்தில் "அப்படியாகமாட்டாது அப்படி ஆகக்கூடாது" என்னும் எதிர்மறை பொருளைத் தரும் வாக்கியத்தினால் மட்டுமே இது குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"தேவனே சத்தியபரர் எந்த மனுஷனும் பொய்யன்" தேவன் தம்முடைய வார்த்தையைக் காத்துக் கொள்ளவில்லை என்று யாரும் கூறக்கூடாது. தேவனைக் குற்றப்படுத்துவதற்கு முன்பாக மனுஷன் தன்னைத்தானே சோதித்துப் பார்க்க வேண்டும். தேவன் மனுக்குலத்திற்கு வாக்குத்தத்தத்தைக் கொடுக்கும்போது ஒருசில நிபந்தனைகளையும் அதோடு சேர்ந்தே கொடுத்திருக்கிறார் தேவனைக் குற்றப்படுத்துவதற்கு முன்பாக மனுஷன் அந்த நிபந்தனைகளை நிறைவேற்றியிருக்கிறானா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

3 அதிகாரம்

"உம்முடைய நியாயம் விசாரிக்கப்படும்" (thou art judged) - இந்த வாக்கியத்திற்கு இரண்டு விதமாகப் பொருள் கூறுகிறார்கள். தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுகிறாரா என்று மனுஷன் அவரைச் சோதித்துப் பார்ப்பது ஒரு வியாக்கியானம். மற்றொரு வியாக்கியானம் தேவன் மனுஷனை நியாயம் விசாரிக்கிறார். மனுஷர் மூலமாகவே மனுஷரை நியாயம் விசாரிக்கிறார். தேவன் தமது வழிகளில் எப்போதும் உண்மையுள்ளவர். ஆகையினால் அவர் நீதிபரராகவே இருக்கிறார் (சங் 119:86,138; உபா 7:9; 1கொரி 1:9; 1கொரி 10:13).

(இ) நம்முடைய அநீதி தேவனுடைய நீதியை விளங்கப்பண்ணினால் [redacted] சொல்லுவோம்? - ரோமர் 10

ரோமர் 3:5 நான் மனுஷர் பேசுகிறபிரகாரமாய்ப் பேசுகிறேன்; நம்முடைய அநீதி தேவனுடைய நீதியை விளங்கப்பண்ணினால் என்ன சொல்லுவோம்? கோபாக்கினையைச் செலுத்துகிற தேவன் அநீதராயிருக்கிறார் என்று சொல்லலாமா?

ரோமர் 3:6 அப்படிச் சொல்லக்கூடாது. சொல்லக்கூடுமானால் தேவன் உலகத்தை நியாயந்தீர்ப்பதெப்படி?

ரோமர் 3:7 அன்றியும், என் பொய்யினாலே தேவனுடைய சத்தியம் அவருக்கு மகிமையுண்டாக விளங்கினதுண்டானால், இனி நான் பாவியென்று தீர்க்கப்படுவானேன்?

ரோமர் 3:8 நன்மை வரும்படிக்குத் தீமைசெய்வோமாக என்றும் சொல்லலாமல்லவா? நாங்கள் அப்படிப் போதிக்கிறவர்களென்றும் சிலர் எங்களைத் தூஷித்துச் சொல்லுகிறார்களே; அப்படிப் போதிக்கிறவர்கள் மேல் வரும் ஆக்கினை நீதியாயிருக்கும்.

"நம்முடைய அநீதி தேவனுடைய நீதியை விளங்கப்பண்ணினால் என்ன சொல்லுவோம்? கோபாக்கினையைச் செலுத்துகிற தேவன் அநீதராயிருக்கிறார் என்று சொல்லலாமா?" மனுஷன் பாவம் பண்ணும்போது தேவன் அவன்மீது தமது இரக்கத்தைக் காண்பித்து அவனை மன்னிக்கிறார். தேவனுடைய இரக்கம் பெருக வேண்டும் என்பதற்காக மனுஷன் கூடுதலாகப் பாவம் செய்யக்கூடாது. நாம் அதிகமாகப் பாவம் செய்தால் தேவன் நம்மிடத்தில் அதிகமாகக் கிருபையாக இருப்பார், அதிகத் தயவுள்ளவராக இருப்பார் என்று எதிர்பார்க்கக்கூடாது. தேவன் கிருபை உள்ளவர். அதே வேளையில், அவர் நீதிபரர். பாவியின்மீது கிருபையாக இருக்கும் தேவன் பாவியை நியாயந்தீர்க்கிறவராகவும் இருக்கிறார். தேவன் நீதிபரராக இருப்பதினால் அவர் கோபாக்கினையைச் செலுத்துகிறார். ஆகையினால் அவரை அநீதராயிருக்கிறார் என்று சொல்லக்கூடாது.

"அப்படிச் சொல்லக்கூடாது (God forbid) - ரோமர் 3:5 ஆவது வசனத்தில் "நம்முடைய அநீதி தேவனுடைய நீதியை விளங்கப்பண்ணினால் என்ன சொல்லுவோம்? கோபாக்கினையைச் செலுத்துகிற தேவன் அநீதராயிருக்கிறார் என்று சொல்லலாமா?" என்னும் கேள்விக்கு இந்த வசனத்தில் "அப்படிச் சொல்லக்கூடாது" என்று பதில் கூறப்பட்டிருக்கிறது. பாவம் தேவனை மேன்மைப்படுத்தாது. ஒருவன் அதிகமாகப் பாவம் செய்வதினால் தேவன் அதிகக் கிருபை உள்ளவராக ஆகப்போவதில்லை. பாவியின்மீது தேவன் தமது கோபாக்கினையைக் காண்பிப்பார். இந்த உலகத்தை நியாயந்தீர்க்கிற நியாயாதிபதியாக இயேசு கிறிஸ்து இருக்கிறார். ஆகையினால் பாவியை அவர் நியாயந்தீர்க்கும்போது அவர் அநீதராக இருப்பதில்லை. எப்போதும் அவர் நீதிபரராகவே இருக்கிறார்.

"என் பொய்யினாலே தேவனுடைய சத்தியம் அவருக்கு மகிமையுண்டாக விளங்கினதுண்டானால், இனி நான் பாவியென்று தீர்க்கப்படுவானேன்?" ரோமர் 3:5 ஆவது வசனத்தில் பவுல் கூறியிருக்கும் சத்தியத்தை இந்த வசனத்திலும் தொடர்ந்து கூறுகிறார். நம்முடைய பொய்யினால் தேவனுடைய சத்தியம் மகிமை அடைவதில்லை. நம்முடைய முற்பிதாக்கள் தேவனுடைய உடன்படிக்கையை மீறி பாவம் செய்தார்கள். ஆயினும் தேவன் தமது கிருபையினால் அவர்களை மன்னித்தார். மன்னிக்கும் தேவன் நம்மை ஏன் பாவிகளாகத் தீர்க்க வேண்டும் என்று சிலர் கேள்வி எழுப்புகிறார்கள். இது தவறான உபதேசம் என்றும், அப்படிப் போதிக்கிறவர்கள் மேல் வரும் ஆக்கினை நீதியாயிருக்கும் என்றும் பவுல் கூறுகிறார். ஏனென்றால் தேவன் நீதிபரர். அவர் பாவியைப் பாவி என்று தீர்ப்பார்.

ரோமர் - தொகுப்புரை

3 அதிகாரம்

"நன்மை வரும்படிக்குத் தீமை செய்வோமாக - என்றும் சிலர் போதிக்கிறார்கள் இதுவும் தவறான உபதேசம் இப்படி போதிக்கிறவர்கள் மேலும் வரும் ஆக்கினை நீதியாயிருக்கும் என்பது பவுலின் கருத்து. ஒருவன் பாவம் செய்யும்போது தேவன் அவனை தமது மன்னிக்கும் கிருபையினால மன்னிக்கிறார் மனுஷன் பாவம் செய்தாலதான் தேவனுடைய மன்னிக்கும் கிருபை வெளிப்படும். தேவன் கிருபையுள்ளவர் என்பது உலகிற்குத் தெரிய வரும் என்று நினைத்து தேவனை மேன்மைப படுததுவதாக நினைத்து பாவம் செய்து கொண்டிருக்கக்கூடாது.

10. தேவனுக்கு முன்பாக முழு உலகமும் பாவத்திற்குட் பட்டிருக்கிறது – (ரோமர் 3:9-20)

(அ) யூதர், கிரேக்கர் யாவரும் பாவத்திற்குட்பட்டவர்கள்

ரோமர் 3:9 ஆனாலும் என்ன? அவாகளைப் பாாககிலும் நாஙகள விசேஷித்தவாகளா? எவவளவேனும விசேஷித்தவாகளலல. யூதர் கிரேககம யாவரும் பாவத்திற்குடபட்ட வா கள்ளனபதை முனபு திருஷடாநதப படுத்தினோமே

"ஆனாலும் என்ன? அவாகளைப்பாாக்கிலும் நாஙகள விசேஷித்தவாகளா? எவ்வளவேனும் விசேஷித்தவாகளலல" சுவிசேஷத்திற்கு யூதரும, கிரேக்கரும் ஒனறுபோலவே இருக்கிறாகள புறஜாதியாரைவிட யூதாகள சுவிசேஷத்திற்கு மேனமையானவாகள எனறு கருத முடியாது பவுல யூதருக்கு எழுதுவதில இது கடைசி பகுதியாகும். (ரோமர் 3:1-9) தேவனுக்கு முனபாக புறஜாதியாருககு என்ன சிலாக்கியம் இருக்கிறதோ அநதச் சிலாக்கியம் மட்டுமே யூதருககும் இருக்கிறது இந்த வசன பகுதிகளில யூதாகள கேட்கும் கேளவிகளுக்கு (ரோமர 3:1,3,5,7,9 பவுல பதில கூறியிருக்கிறார் (ரோமர 3:2, 4, 6, 8, 9)

"யூதர் கிரேக்கர் யாவரும் பாவத்திற்குட் பட்டவர்களென்பதை முன்பு திருஷ்டாந்தப் படுத்தினோமே" - பவுல் யூதர்களின் ஒவ்வொரு கேள்விகளுக்கும் பதில் கூறிவிட்டு. தனது கடைசி பதிலில் மறுபடியுமாகத் தனது பிரதான உபதேசத்திற்கு வருகிறார் (ரோமர் 1:18-3:20)

எல்லாரும் (யூதரும், புறஜாதியாரும்) வழிதப்பி ஏமாய்க் கெட்டுப்போனார்கள்

1. புறஜாதியார் தேவனுக்கு எதிராகப பாவம் செய்தார்கள் மெய் தேவனை ஆராதிப்பதற்குப பதிலாக விக்கிரகங்களை ஆராதித்தார்கள் (ரோமர் 1:18-32
2. யூதர்கள் சுயநீதியுடையவர்களாக இருந்து மற்றவர்களைக் குற்றப்படுத்துகிறார்கள் யூதர்கள் அதே பாவங்களைச் செய்வதினால் அவர்களும் குற்றமுடையவர்களே (ரோமர் 2:1-2
3. தேவனுடைய தயவு யூதரும் புறஜாதியாரும் குணப்படும்படி அவர்களை ஏவுகிறது. ஆகையினால இவ்விருவருமே பாவிகளாகவே இருக்கிறார்கள (ரோமர் 2:3-6
4. யூதரும் புறஜாதியாரும் சுவிசேஷத்திற்குக கீழ்ப்படியாமல பாவம் செய்கிறாாகள (ரோமா 2:7-3
5. யூதரும் புறஜாதியாரும் தாஙகள் பெற்றுக் கொணட சத்தியத்தின பிரகாரமாக நடக்கத் தவறிவிட்டாாகள் (ரோமர் 3:12-16)
6. யூதாகள நியாயப்பிரமாணத்தினால உபதேசிக்கப்பட்டவாகள் அவாகள் தேவனுடைய சித்தத்தை அறிந்து, நனமை தீமை இனனதென்று வகையறுக்கிறாகள் அப்படி இருந்தும் யூதாகள பாவம் செய்யும்போது அது மிகவும் கடுமையான பாவமாக இருக்கும். (ரோமா 2:17-29
7. யூதர் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாக பாவம் செய்து தாங்கள் செய்வது தவறல்ல என்று சாக்குப்போக்கு சொல்வதினால் அவாகளுடைய பாவம் மிகுதியாக இருக்கும். ரோமர் 3:1-9

3 அதிகாரம்

"பாவத்திற்குட்பட்டவர்கள்" - பாவம் ஒரு மனுஷனை மேற்கொண்டு அவனை அடிமைப் படுத்திவிடும் ஆற்றலுடையது. ரோமர் 5:12-21

(ஆ) முழு உலகமும் பாவத்திற்குட்பட்டிருப்பதற்கு பதினைந்து காரணங்கள் - (சங் 5:9; 10:7 14:1-4; 36:1; ஏசா 59:7; பிர 7:20)

ரோமர் 3:10 அந்தப்படியே: நீதிமான் ஒருவனாகிலும் இல்லை.

ரோமர் 3:11 உணர்வுள்ளவன் இல்லை, தேவனைத் தேடுகிறவன் இல்லை.

ரோமர் 3:12 எல்லாரும் வழிதப்பி ஏகமாய்க் கெட்டுப்போனார்கள் நன்மை செய்கிறவன் இல்லை ஒருவனாகிலும் இல்லை

ரோமர் 3:13 அவர்கள் தொண்டை திறக்கப்பட்ட பிரேதக்குழி தங்கள் நாவுகளால் வஞ்சனைசெய்கிறார்கள் அவர்களுடைய உதடுகளின் கீழே பாம்பின் விஷம் இருக்கிறது.

ரோமர் 3:14 அவர்கள் வாய் சபிப்பினாலும் கசப்பினாலும் நிறைந்திருக்கிறது.

ரோமர் 3:15 அவர்கள் கால்கள் இரத்தஞ்சிந்துகிறதற்குத் தீவிரிக்கிறது.

ரோமர் 3:16 நாசமும் நிர்ப்பந்தமும் அவர்கள் வழிகளிலிருக்கிறது.

ரோமர் 3:17 சமாதான வழியை அவர்கள் அறியாதிருக்கிறார்கள்;

ரோமர் 3:18 அவர்கள் கண்களுக்கு முன்பாகத் தெய்வபயமில்லை என்று எழுதியிருக்கிறதே.

"நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" யூதரும் புறஜாதியாரும் பாவத்தின் கீழ் இருக்கிறார்கள் யூதருடைய வேதவாக்கியமோ இதை உறுதி பண்ணுகிறது. ரோமர் 3:10-12 ஆகிய வசனங்கள் சங் 14:2-3, சங் 52:2-4, பிர 7:20 ஆகிய வசனங்களிலிருந்து எடுக்கப் பட்டிருக்கிறது. ரோமர் 3:13-18 ஆகிய வசனங்கள் சங் 5:9-10; சங் 10:7 சங் 36:1-2; சங் 140:3; ஏசா 59:7-8 ஆகிய வசனங்களிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது.

"எல்லாரும் வழிதப்பி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள் நன்மைசெய்கிறவன் இல்லை ஒருவனாகிலும் இல்லை" - எல்லாரும் என்பது உலகிலுள்ள எல்லாரையுமே குறிக்கும். இதற்கு யாருமே விலக்கு அல்ல. ஏசா 53:6 ரோமர் 1:21-32 ரோமர் 3:23; ரோமர் 5:12-21)

கெட்டுப்போ (unprofitable) - ἀχρειόω - achreiooo - 889

வினைச்சொல் - கெட்டுப்போ (to make useless) - உலகிலுள்ள எல்லா ஜனங்களுமே ஏகமாய்க் கெட்டுப்போய் விட்டார்கள்

"அவர்கள் தொண்டை திறக்கப்பட்ட பிரேதக்குழி" - எபிரெய பாஷையில் இந்த ஒரு வசைச்சொல் மரித்தவர்களுடைய சரீரத்தைப் பிரேதக்குழிகளில் அடக்கம் பண்ணுவார்கள் அந்தக் குழியைத் திறந்தபோது அதிலுள்ள சரீரம் அழுகிப்போயிருக்கும். துர்நாற்றம் வீசும். அதன் அழகிய சரீரத்தில் உதடுகள் இருக்கும். ஆனால் அது விஷத்தைப் போன்ற துர்நாற்றத்தையே வெளிப்படுத்தும் (ரோமர் 3:13-14)

பாம்பு (asps) - ἀσπίς - aspis - 785

ஆண்பால் பெயர்ச்சொல் - பாம்பு (adder) (சங் 140:3, உபா 32:33, யோபு 20:14-16; ஏசா 11:8

"அவர்கள் கண்களுக்கு முன்பாகத் தெய்வபயமில்லை" ரோமர் 1:32 ஆவது வசனத்தில் கூறப்பட்டதுபோன்று இருக்கிறார்கள் இங்கு யூதர்களின்மீதும், புறஜாதியார்மீதும் குற்றச்சாட்டு எதுவும் கூறப்படவில்லை ஆயினும் அவர்களுடைய வரலாற்றை ஆராய்ந்து பார்க்கும்போது அவர்கள் தேவனுக்கு எதிராக பண்ணிய கலகம் தெரியவரும்.

3 அதிகாரம்

(இ) நியாயப்பிரமாணத்தின் நோக்கம் - உலகத்தார் யாவரையும் தேவனுக்கு முன்பாக ஆக்கினைத் தீர்ப்பிற்கு ஏதுவானவர்களாக ஆக்குகிறது

ரோமர் 3:19 மேலும், வாய்கள் யாவும் அடைக்கப்படும்படிக்கும், உலகத்தார் யாவரும் தேவனுடைய ஆக்கினைத் தீர்ப்புக்கு ஏதுவானவர்களாகும் படிக்கும், நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் நியாயப் பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறதென்று அறிந்திருக்கிறோம்.

ரோமர் 3:20 இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு நியாயப் பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப் படுவதில்லை.

"நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறது". ரோமர் 3:10-18 ஆகிய வசனங்கள் தங்களுக்குப் பொருந்தாது என்று யூதர்கள் நினைக்கிறார்கள். ஆனால் நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்டிருக்கும் அனைவருக்குமே இந்த வசனங்கள் பொருந்தும் என்று பவுல் கூறுகிறார். நியாயப் பிரமாணத்தினால் அதை நம்புகிறவர்களுடைய வாய்கள் யாவும் அடைக்கப்பட்டு விட்டது. நியாயப்பிரமாணத்தினால் உலகத்தார் யாவரும் தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்புக்கு ஏதுவானவர்களானார்கள்.

"எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை". நியாயப் பிரமாணம் மனுஷனைக் குற்றப்படுத்தும். அது யாரையும் நீதிமானாக்காது. ஒருவன் நியாயப்பிரமாணத்தை மீறாமல் ஜீவித்தால் அவன் குற்றமில்லாதவனாக இருப்பான். குற்றமில்லாதவன் என்பதற்கு நீதிமான் என்பது பொருளல்ல. (ரோமர் 3:21-31; ரோமர் 7:7-25)

III. இயேசு கிறிஸ்துவை பற்றும் விசுவாசத்தினால் நீதிமானாக்கப் படுதல் - இதுவே பாவத்திற்கு பரிகாரம் - (ரோமர் 3:21-5:11)

1. மனுஷன் எவ்வாறு நீதிமானாக்கப் படுகிறான் - (வசனம் 21-31; 4:1-25; 5:1-11; 8:1-13; 10:4-17; அப் 10:43; 13:39; 2கொரி 5:14-21; கலா 3:19-29; எபே 1:7; 2:8-9; கொலோ 2:11-17; 1யோவான் 1:9)

ரோமர் 3:21 இப்படியிருக்க, நியாயப் பிரமாணமில்லாமல் தேவநீதி வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது; அதைக் குறித்து நியாயப் பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடுகிறது.

ரோமர் 3:22 அது இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே. விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள்மேலும் அது பலிக்கும்; வித்தியாசமே இல்லை.

ரோமர் 3:23 எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களாகி,

ரோமர் 3:24 இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப் படுகிறார்கள்;

ரோமர் 3:25 தேவன் பொறுமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களைத் தாம் பொறுத்துக்கொண்டதைக் குறித்துத் தம்முடைய நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும், தாம் நீதியுள்ளவரும் இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதி மானாக்குகிறவருமாய் விளங்கும்படி இக்காலத்திலே தமது நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும்,

ரோமர் 3:26 கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார்.

3 அதிகாரம்

"நியாயப்பிரமாணமில்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது" - புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷச் செய்தி தெளிவாக இருக்கிறது. இயேசு கிறிஸ்து தமது கிருபையினாலும் தமது கிருபாதார பலியினாலும் பாவிகளை மன்னிக்கிறார். இயேசு கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தினால் பாவிகளை நீதிமான்களாக்குகிறார். இவர்கள் நியாயப்பிரமாணம் இல்லாமலேயே நீதிமான்களாக்கப்படுகிறார்கள் (ரோமர் 3:21-31)

"தேவநீதி" (righteousness of God) - (ரோமர் 10:3

"அதைக்குறித்து நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடுகிறது" - அதைக் குறித்து என்பது இயேசு கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தினால் மனுஷன் நீதிமானாக்கப்படுவதைக் குறித்து என்று பொருள்படும். நியாயப்பிரமாணங்களிலும், தீர்க்கதரிசிகளின் புஸ்தகங்களிலும் இயேசு கிறிஸ்துவின் கிருபாதார பலியைப் பற்றி முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசிகளின் உபதேசங்களும் இல்லாமலேயே மனுஷன் இயேசு கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தினால் நீதிமானாக்கப் படுகிறான் (கொலோ 2:14-17, எபி 8:1-10:23 சங் 16:8-11; ஏசா 53, லூக்கா 24:44 யோவான் 5:39) இயேசு கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தினாலே மனுஷன் நீதிமானாக்கப் படுவது இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே.

"வித்தியாசமே இல்லை" விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள் மேலும் அது பலிக்கும். அவர்கள் யூதராக இருந்தாலும் புறஜாதியாராக இருந்தாலும் இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும்போது அவர்கள் நீதிமானாக்கப்படுகிறார்கள். இதில் யூதர் என்றும், புறஜாதியார் என்றும் வித்தியாசம் எதுவுமில்லை (ரோமர் 1:16, ரோமர் 2:7-11, 1கொரி 12:13, கலா 3:28)

"எல்லாரும் பாவஞ்செய்தார்கள்" - ஒருவன் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக தான் ஒரு பாவி என்பதை தேவனுடைய சமூகத்திலே உணர்ந்து அறிக்கையிட வேண்டும். (லூக்கா 13:3, அப் 2:38 அப் 3:19; ரோமர் 10:9-10; 1யோவான் 1:9

பவுலின் உபதேசம்

1 எல்லோரும் பாவம் செய்திருக்கிறார்கள் (ரோமர் 1:18-3:18,23)

2 தேவனுக்கு முன்பாக எல்லோரும் குற்ற உணர்வுடையவர்கள் (ரோமர் 3:19-20

3 நியாயப்பிரமாணம் ஒருவனையும் நீதிமானாக்காது. (ரோமர் 3:20

4 நியாயப்பிரமாணம் ஒருவனைக் குற்றப்படுத்த மட்டுமே செய்யும் (ரோமர் 3:20)

5 இயேசு கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தினால் தேவன் மீட்பை உண்டு பண்ணியிருக்கிறார் (ரோமர் 3:21-26)

6 யாரும் மேன்மைபாராட்ட முடியாது தன்னைத்தானே மனுஷனால் இரட்சித்துக் கொள்ள முடியாது (ரோமர் 3:27)

7 தேவனுடைய மீட்பின் திட்டத்தை ஏற்றுக் கொள்வதினாலேயே மனுஷன் நீதிமானாக்கப்படுகிறான் (ரோமர் 3:28

"தேவ மகிமையற்றவர்களானார்கள்" - மனுஷர் ஆதியிலே பெற்றிருந்த மகிமையை இழந்து விட்டார்கள் (ஆதி 1:26-28, சங் 8, வெளி 21 22)

"இலவசமாய் நீதிமான்களாக்கப்படுகிறார்கள்" (justified freely) - தேவன் பாவிகளைக் குற்றமற்றவர்களாக அறிவிக்கிறார். பரலோகத்தின் நீதிமன்றத்தில் பாவிகளைக் குற்றமற்றவர்களாக விடுதலை பண்ணி அவர்களை நீதிமான்களாக அங்கீகரிக்கிறார் (ரோமர் 5

3 அதிகாரம்

"கிருபை" (grace) - தேவன் மனுஷரிடத்தில் காண்பிக்கும் தயவு. தேவனுடைய கிருபையைப் பெற்றுக் கொள்வதற்கு மனுஷனுக்கு எந்தவித தகுதியும் இல்லை. தகுதியற்ற மனுஷனுக்குத் தேவன் காண்பிக்கும் தயவே கிருபை எனப்படும். (சங் 84:11)

"மீட்பு" (redemption) - வேதாகமத்தில் மீட்பு என்னும் சொல் பலவழிகளில் பொருள் தரும். அவையாவன

1. கிரயம் செலுத்தி மீட்பது (யாத் 21:8; கலா 3:13)
2. மீட்பின் கிரயம் செலுத்தி விடுவிப்பது (1தீமோ 2:6)
3. பாவத்தின் தண்டனையிலிருந்து விடுவிப்பது. (பாவமன்னிப்பு) (ரோமர் 3:24; எபே 1:7,14; எபே 4:30; கொலோ 1:14; எபி 9:15)
4. சாபத்திலிருந்து சாவ சிருஷ்டியையும் மீட்டு புதுப்பிப்பது. (ரோமர் 8:23)

மீட்பு (redemption) - ἀπολύτρωσις - apolytroosis - 629

பெண்பால் பெயர்ச்சொல் - மீட்பு, நிவிர்த்தி, விடுதலை -

"தம்முடைய நீதியைக் காண்பிக்கும் பொருட்டாக" - (மத் 26:28; எபே 1:7; கொலோ 1:20; வெளி 1:5) இயேசு கிறிஸ்துவின் பாவ நிவாரணபலியின்மீது விசுவாசம் வைக்காதவர்களைத் தேவன் நீதிமான்களாகத் தீர்ப்பதில்லை. (எபி 9:22; எபே 1:7)

"முற்காலத்தில் நடந்த பாவங்கள்" இந்த வாக்கியம் இரண்டுவிதமான காரியங்களைக் குறிக்கும். அவையாவன

1. பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களின் பாவங்கள் மன்னிக்கப்படுவது. (ரோமர் 3:25; எபி 9:15)
2. ஒவ்வொரு பாவியும் அவனுடைய முற்காலத்தில் செய்த பாவங்களுக்கு மனந்திரும்பும்போது அவை மன்னிக்கப்படுவது. (எபே 1:7; 1யோவான் 1:9)

"தேவன் பொறுமையாய் இருந்தார்" (forbearance of God) - (ரோமர் 2:4)

"கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார்" - இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் சிந்திய இரத்தத்தைத் தேவன் கிருபாதார பலியாக (propitiation) நியமித்திருக்கிறார்.

"கிருபாதார பலி" (propitiation) - இயேசு கிறிஸ்துவின் மூலமாக தேவன் பாவிக்குக் கிருபையுள்ளவராக இருக்கிறார். இது தேவனுடைய அன்பின் கிரியை. (எபி 9:5; 1யோவான் 2:2)

"இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய் விளங்கும்படி இக்காலத்திலே தமது நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும்" - தேவன் தமது நீதியை வெளிப்படுத்த இப்போது ஆயத்தமாக இருக்கிறார். இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தில் விசுவாசம் வைக்கிறவர்களை நீதிமான்களாக ஆக்குவதற்குத் தேவன் இப்போது ஆயத்தமாக இருக்கிறார். தமது கிருபையினால் பாவியை நீதிமானாக்குவதினால் தேவன் இப்போது நீதிபரராக இருக்கிறார். (ரோமர் 3:24-26)

நீதி (righteousness) δικαιοσύνη - dikaiosynee - 1343

பெண்பால் பெயர்ச்சொல் - நீதி

தேவநீதியைப் பற்றிய உபதேசங்கள்

1. சுவிசேஷத்தில் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. (ரோமர் 1:17)
2. நீதியினால் குற்றப்படுத்தப்படுவதில்லை. (ரோமர் 3:5)
3. நியாயப்பிரமாணம் இல்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது. (ரோமர் 3:21)

ரோமர் - தொகுப்புரை

3 அதிகாரம்

4 நீதியைக் குறித்து நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடுகிறது.

5 எல்லோருக்கும் ஒன்றுபோலவே இலவசமாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. (ரோமர் 3:22-25

6 நியாயப்பிரமாணம் இல்லாமல் தேவனுடைய நீதி விசுவாசத்தினாலே பலிக்கும் ரோமர் 3:22 ரோமர் 4:3,5,13,22

7 கிறிஸ்துவின் மூலமாகப் பாவங்களை மன்னிப்பது தேவனுடைய நீதியாய் இருக்கிறது. ரோமர் 3:25 1யோவான் 1:9

8 மனுக்குலத்தை இரட்சிப்பதற்குத் தேவன் எதிர்பார்க்கும் எல்லாக் காரியங்களையும் இயேசு கிறிஸ்து செய்து முடித்து விட்டபடியினால் இது கிறிஸ்துவினுடைய நீதியாய் இருக்கிறது. ரோமர் 5:18 2கொரி 1:30

9 கிருபையானது இயேசு கிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்திய ஜீவனுக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது. (ரோமர் 5:21)

10 பரிசுத்தவான்களிடம் தேவநீதி காணப்பட வேண்டும் ரோமர் 6:13, 20)

11 தேவநீதி ஜீவனைத் தருகிறது. ரோமர் 8:10

12 நியாயப்பிரமாணம் தேவநீதியை எதிர்பார்க்கிறது. நியாயப்பிரமாணத்தால் தேவநீதியைத் தரமுடியாது. (ரோமர் 8:4 ரோமர் 9:31, 32; ரோமர் 10:4-6)

13 பரிசுத்த ஆவியானவர் தேவநீதியை வெளிப்படுத்துகிறார் (ரோமர் 14:17)

14 தேவநீதியைப் பெற்றுக் கொள்வதற்கு நிபந்தனைகள் ரோமர் 3:22 ரோமர் 4:3, 5:1, ரோமர் 6:13, 19 ரோமர் 8:10 ரோமர் 10:9-10)

2. மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான் - (ரோமர் 3:21)

ரோமர் 3:27 இப்படியிருக்க, மேன்மைபாராட்டல் எங்கே? அது நீக்கப்பட்டதே. எந்தப்பிரமாணத்தினாலே? கிரியாப் பிரமாணத்தினாலேயா? அல்ல விசுவாசப் பிரமாணத்தினாலேயே.

ரோமர் 3:28 ஆதலால் மனுஷன் நியாயப் பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான் என்று தீர்க்கிறோம்.

"மேன்மைபாராட்டல் எங்கே?" - ரோமர் 3:27-28 ஆகிய வசனங்களில் பவுலுக்கும் யூதருக்கும் நடைபெறும் சம்பாஷணையை மறுபடியுமாக வாசிக்கிறோம் ரோமர் 3:9 ஆவது வசனத்திலிருந்து பவுல் யூதரைப் பற்றி விளக்கிக் கூறியிருக்கிறார் யூதரும் புறஜாதியாரைப் போலவே குற்றமுடையவர்கள் ஆக்கினைக்குட்பட்டவர்கள் கிறிஸ்துவின் மீட்பின் கிரியையினால் இரட்சிக்கப்பட வேண்டியவர்கள் ஆகையினால் யூதருக்குத் தங்களுடைய மார்க்கத்தைக் குறித்து மேன்மைபாராட்ட ஒன்றுமேயில்லை (ரோமர் 2:17-29) பவுல் இரண்டு பிரமாணங்களைப் பற்றிப் பேசுகிறார் அவையாவன 1 கிரியாப்பிரமாணம் 2 விசுவாசப்பிரமாணம். யூதர்கள் நியாயப் பிரமாணத்தின்படி கிரியை செய்து இரட்சிக்கப்படலாம் என்று நினைக்கிறார்கள் ஆனால் அவர்களால் முடியவில்லை கிரியாப்பிரமாணம் மன்னிப்பைத் தராது கிரியாப்பிரமாணத்தை நம்புகிறவர்கள் பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்க வேண்டும். பிரமாணத்தை மீறினால் நிச்சயம் தண்டனை கிடைக்கும். ஆகையினால் விசுவாசப் பிரமாணமே ஆத்தும இரட்சிப்பிற்கு ஏற்றது. இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்தால் நமது பாவங்கள் மன்னிக்கப்படும். பாவத்தின் சம்பளமாகிய மரணத்திலிருந்து நாம் விடுவிக்கப்படுவோம். (ரோமர் 3:27 28 எபே 2:8 9

"மேன்மைபாராட்டல்" (boasting) மனுஷன் பல காரியங்களைக் குறித்து மேன்மை பாராட்டிக் கொண்டிருக்கிறான் அவையாவன

3 அதிகாரம்

1 கொள்ளுதல் (bargains) (நீதி 20:14)

2 பாதுகாப்பு (security) நீதி 27:1)

3. மார்க்கம் (religion) (ரோமர் 2:17-29)

4 பெலன் (strength) (சாமு 17:8-10)

5. ஜெயம் (conquest) (ஏசா 10:8-16)

6 வரங்கள் (gifts) நீதி 25:14)

7 ஐசுவரியங்கள் (riches) (சங் 49:6)

8 பாவங்கள் (sins) சங் 94:4)

9 திட்டங்கள் (plans) (யாக் 4:13-17)

10. வல்லமை (power) (லூக்கா 10:17)

மேன்மைபாராட்டுகிறவர்கள் கர்த்தரைக் குறித்து மேன்மைபாராட்ட வேண்டும். வேறு எதைக்குறித்தும் மனுஷர் மேன்மைபாராட்டக் கூடாது. (2கொரி 10:12-18)

"மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான்" - இது பவுலின் முக்கியமான உபதேசம். கிரியைகள் முக்கியமா? விசுவாசம் முக்கியமா? என்று விவாதம் பண்ணும்போது பவுல் விசுவாசமே முக்கியம் என்று தீர்மானம் பண்ணுகிறான்.

3. விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுவது உலகத்தின் பாவத்திற்கு பரிகாரமாகும்

ரோமர் 3:29 தேவன் யூதருக்குமாத்திரமா தேவன்? புறஜாதிகளுக்கும் தேவனல்லவா? ஆம் புறஜாதிகளுக்கும் அவர் தேவன்தான்.

ரோமர் 3:30 விருத்தசேதன முள்ளவர்களை விசுவாசத்தினாலும், விருத்தசேதன மில்லாதவர்களை விசுவாசத்தின் மூலமாயும் நீதிமான்களாக்குகிற தேவன் ஒருவரே.

ரோமர் 3:31 அப்படியானால், விசுவாசத்தினாலே நியாயப் பிரமாணத்தை அவமாக்குகிறோமா? அப்படியல்ல; நியாயப்பிரமாணத்தை நிலை நிறுத்துகிறோமே.

"தேவன் யூதருக்குமாத்திரமா தேவன்?" - இந்தக் கேள்விக்கு ரோமர் 3:29-31 ஆகிய வசனங்களில் பதில் கூறப்பட்டிருக்கிறது.

அவமாக்கு (make void) - καταργέω - katargeoo - 2673

விளைச்சொல் - கெடு, அவமாக்கு, ஒழிந்துபோ, அழிந்துபோ, பரிகரி, நீக்கு, வியர்த்தமாக்கு (to make useless; without effect) (எபே 2:15)

"நியாயப்பிரமாணத்தை நிலை நிறுத்துகிறோமே" - விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுவதினால் நியாயப்பிரமாணம் அவமாக்கப்படவில்லை. கிறிஸ்தவ மார்க்கம் நியாயப்பிரமாணத்தை நிலைநிறுத்துகிறது. எவ்வாறெனில்

1 நியாயப் பிரமாணத்தின் சடங்காச்சாரங்கள் அனைத்துமே கிறிஸ்துவை [illegible] கொண்டிருக்கிறது என்று கிறிஸ்தவ மார்க்கம் அங்கீகரிக்கிறது. (லூக்கா 24:44; கொலோ 2:14-17; எபி 8:10)

2 இயேசு கிறிஸ்து நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றினார் (மத் 5:17)

3 இயேசு கிறிஸ்து நியாயப்பிரமாணத்தை முடித்தார் (ரோமர் 10:4)

4 நியாயப்பிரமாணம் எதிர்பார்க்கும் நீதியைக் கிறிஸ்தவ மார்க்கம் ஜனங்கள் மத்தியிலே நிறைவேற்றுகிறது. (ரோமர் 8:3)

5 நியாயப்பிரமாணத்தின் ஆவிக்குரிய கொள்கைகளையும் நீதிநெறி கொள்கைகளையும் கிறிஸ்தவ மார்க்கம் புதிய ஏற்பாட்டில் சேர்த்திருக்கிறது. (எபி 8:6)

ரோமர் - தொகுப்புரை

4 அதிகாரம்

4. விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் - எடுத்துக்காட்டுக்கள் - ரோமர் 4

(1) ஆபிரகாம் - ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது

ரோமர் 4:1 அப்படியானால், நம்முடைய தகப்பனாகிய ஆபிரகாம் மாம்சத்தின்படி என்னத்தைக் கண்டடைந்தான் என்று சொல்லுவோம்?

ரோமர் 4:2 ஆபிரகாம் கிரியைகளினாலே நீதிமானாக்கப்பட்டானாகில் மேன்மை பாராட்ட அவனுக்கு ஏதுவுண்டு; ஆகிலும் தேவனுக்குமுன்பாக மேன்மைபாராட்ட ஏதுவில்லை.

ரோமர் 4:3 வேதவாக்கியம் என்ன சொல்லுகிறது, ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்று சொல்லுகிறது.

"நம்முடைய தகப்பனாகிய ஆபிரகாம் மாம்சத்தின்படி என்னத்தைக் கண்டடைந்தான்" - ரோமர் 3:21-31 ஆகிய வசனங்களில் யூதரும், புறஜாதியாரும் விசுவாசத்தின் மூலமாகத் தேவனுடைய கிருபையினால் மட்டுமே இரட்சிக்கப்பட முடியும் என்பதை பவுல் விளக்கிக் கூறியிருக்கிறார் அதன் பின்பு ரோமர் 4:1-3 ஆகிய வசனங்களில் ஆபிரகாம் தாவீது ஆகியோர் எவ்வாறு நீதிமான்களாக்கப்பட்டார்கள் என்று பவுல் விளக்கி எழுதுகிறார் யூத தேசத்திற்கு ஆபிரகாம் பிதாவாக இருக்கிறவர் ஆனாலும் அவர் ஒரு புறஜாதியாராக இருந்தார் விருத்தசேதனம் பண்ணாதவராகவும் இருந்தார் விசுவாசத்தின் மூலமாகத் தேவனுடைய கிருபையினால் ஆபிரகாம் மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளும் வரையிலும் இதுதான் அவருடைய நிலைமை. அவருடைய காலத்தில் நியாயப் பிரமாணமும் கொடுக்கப்படவில்லை. ஆபிரகாமிற்கு 430 வருஷங்களுக்குப் பின்பே நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது (கலா 3:17) ஆகையினால் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்து நீதிமானாக்கப்படுவதற்கு ஆபிரகாமிற்கு வாய்ப்பே இல்லை. யூதரையும், புறஜாதியாரையும் சுவிசேஷம் எவ்வாறு இரட்சிக்கிறதோ அதே வழியிலேயே ஆபிரகாமும் மன்னிக்கப்பட்டார் என்று பவுல் விளக்குகிறார்

யூதர்கள் கிறிஸ்தவ மார்க்கத்தைக் குறை கூறுகிறார்கள் புறஜாதியார் ஆபிரகாமின் உடன்படிக்கைக்கு வருவதை எதிர்க்கிறார்கள் (ஆதி 12:1-3 ஆதி 17:4) ஆபிரகாம் விருத்தசேதனம் பண்ணிக் கொள்வதற்கு பல வருஷங்களுக்கு முன்பாகவே தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டார் ஆகையினால் நீதிமானாக்கப்படும் ஆசீர்வாதம் விருத்தசேதனத்தின் மூலமாக வரவில்லையென்று பவுல் விளக்கிக் கூறுகிறார் (ரோமர் 4:9-12 ஆதி 12:1-3 ஆதி 15:6 ஆதி 17:1-14) விருத்தசேதனம் பண்ணிக் கொள்வதற்கு முன்பாகவே ஆபிரகாம் ஆசீர்வதிக்கப்பட்டபடியினால் புறஜாதியாரும் ஆபிரகாமைப் போலவே ஆசீர்வதிக்கப்பட முடியும்.

"நம்முடைய தகப்பன்" - யூதர்கள் ஆபிரகாமை தங்களுடைய தகப்பன் என்று அழைக்கிறார்கள் (ரோமர் 4:5 லூக்கா 1:73 யோவான் 8:39; அப் 7:2)

"ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது" ஆபிரகாம் விருத்தசேதனம் பண்ணிக் கொள்வதற்கு முன்பாக அவன் தேவனை விசுவாசித்தான் (ஆதி 15:6)

(2) நியாயப் பிரமாணமும் கிரியைகளும் இல்லாமல் எல்லா மனுஷரும் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட முடியும் - (அப் 10:43)

ரோமர் 4:4 கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி கிருபையென்றெண்ணப்படாமல் கடனென்றெண்ணப்படும்.

ரோமர் 4:5 ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும்.

4 அதிகாரம்

"கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி கிருபை யென்றெண்ணப்படாமல் கடனென்றெண்ணப்படும்" - ஆபிரகாம் கிரியை செய்து நீதிமானாக்கப்பட்டிருந்தால் அவன் தேவனுடைய கிருபையினால் நீதிமானாக்கப்படவில்லை. அவனுடைய கிரியையின் கூலியாக நீதிமானாக்கப்பட்டிருக்கிறான். ஆபிரகாம் கிரியை ஒன்றும் நடப்பிக்காமல் தேவனிடத்தில் விசுவாசமாக ஆபிரகாம் இருந்தான். அந்த விசுவாசத்தினாலேயே அவன் நீதிமானாக்கப்பட்டான். நீதிமானாக்கப்படுவதைத் தேவன் ஆபிரகாமிருக்குக் கிரியையின் கூலியாகக் கொடுக்காமல், தமது கிருபையாகக் கொடுத்திருக்கிறார். ஆபிரகாம் புறஜாதியானாக இருந்து, விக்கிரகங்களை ஆராதித்து வந்த காலத்திலேயே தேவன் அவனை அழைத்தார். ஆபிரகாம் தேவன்மீது வைத்த விசுவாசத்தினால் தேவன் அவனை இலவசமாக நீதிமானாக்கினார். ஆபிரகாம் தன்னை நீதிமானாக்குவதற்கு எந்தக் கிரியையும் செய்யவில்லை. அவ்வாறாக எல்லாப் பாவிகளுமே இயேசு கிறிஸ்துவின்மீது வைக்கும் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படுகிறார்கள். நம்முடைய விசுவாசமே நமக்கு நீதியாக எண்ணப்படும். (ரோமர் 3:21-28; ரோமர் 5:1-11)

(3) தாவீது - நியாயப் பிரமாணத்திற்கு உட்பட்டிருந்த தாவீது நியாயப் பிரமாணமும் கிரியைகளும் இல்லாமல் கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தினால் நீதிமானாக்கப் பட்டான் - (சங் 32:1; 51:1-13; 91:16; 103:3)

ரோமர் 4:6 அந்தப்படி கிரியைகளில்லாமல் தேவனாலே நீதிமானென்றெண்ணப்படுகிற மனுஷனுடைய பாக்கியத்தைக் காண்பிக்கும் பொருட்டு,

ரோமர் 4:7 எவர்களுடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்டதோ, எவர்களுடைய பாவங்கள் மூடப்பட்டதோ, அவர்கள் பாக்கியவான்கள்.

ரோமர் 4:8 எவனுடைய பாவத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, அவன் பாக்கியவான் என்று தாவீது சொல்லியிருக்கிறான்.

"கிரியைகளில்லாமல் தேவனாலே நீதிமானென்றெண்ணப்படுகிற மனுஷனுடைய பாக்கியம்" - இதைக் குறித்து தாவீது சொல்லியிருக்கிறான். தாவீது நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்திருந்தான். அவன் எவ்வாறு கிரியைகளில்லாமல் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டான் என்று பவுல் குறிப்பிடுகிறார். (ரோமர் 4:6-7; சங் 32:1-2)

(4) எல்லா மனுஷரும் நியாயப் பிரமாணமும் கிரியைகளும் இல்லாமல் கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தினால் நீதிமானாக்கப் பட முடியும் - (ரோமர் 3:21)

ரோமர் 4:9 இந்தப் பாக்கியம் விருத்தசேதனமுள்ளவனுக்கு மாத்திரம் வருமோ, விருத்தசேதனமில்லாதவனுக்கும் வருமோ? ஆபிரகாமுக்கு விசுவாசம் நீதியாக எண்ணப்பட்டது என்று சொல்லுகிறோமே.

(5) ஆபிரகாம் - விருத்தசேதனமுள்ளவனாக இருப்பதற்கு இருபத்தினான்கு வருஷங்களுக்கு முன்பாகவே ஆபிரகாம் கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டான் - (ஆதி 12:1-3; 17:1-9)

ரோமர் 4:10 அது எப்பொழுது அவனுக்கு அப்படி எண்ணப்பட்டது? அவன் விருத்தசேதனமுள்ளவனாயிருந்த போதோ, விருத்தசேதனமில்லாதவனாயிருந்த போதோ? விருத்தசேதனமுள்ளவனாயிருந்த போதல்ல, விருத்தசேதனமில்லாதவனாயிருந்த போதே.

ரோமர் 4:11 மேலும், விருத்தசேதனமில்லாத காலத்தில் அவன் விசுவாசத்தினாலே அடைந்த நீதிக்கு முத்திரையாக விருத்தசேதனமாகிய அடையாளத்தைப் பெற்றான். விருத்தசேதனமில்லாதவர்களாய் விசுவாசிக்கிற யாவருக்கும் நீதி எண்ணப்படும் பொருட்டாக அவர்களுக்கு அவன் தகப்பனாயிருக்கும்படிக்கும்

ரோமர் - தொகுப்புரை

4 அதிகாரம்

ரோமர் 4:12 விருத்தசேதனத்தைப் பெற்றவர்களாய் மாத்திரமல்ல நம்முடைய தகப்பனாகிய ஆபிரகாம் விருத்தசேதனமில்லாத காலத்தில் அடைந்த விசுவாசமாகிய அடிச்சுவடுகளில் நடக்கிறவர்களாயுமிருக்கிறவர்களுக்குத் தகப்பனாயிருக்கும்படிக்கும் அந்த அடையாளத்தைப் பெற்றான்.

"விருத்தசேதனமில்லாத காலம்" - ஆபிரகாம் விருத்தசேதனம் பண்ணிக் கொண்டதற்கு 24 வருஷங்களுக்கு முன்பாகவே நீதிமானாக்கப் பட்டான். ஆகையினால் ஆபிரகாம் நீதிமானாக்கப்பட்ட காலம் விருத்தசேதனமில்லாத காலமாகும். (ஆதி 12:1-4; ஆதி 15:6; ஆதி 17:1-14)

"விருத்தசேதனமில்லாதவர்களாய் விசுவாசிக்கிற யாவருக்கும் நீதி எண்ணப்படும் பொருட்டாக அவர்களுக்கு அவன் தகப்பனாயிருக்கிறான்" - விருத்தசேதனம் பண்ணிக் கொள்வதற்கு முன்பாகவே ஆபிரகாம் நீதிமானாக்கப்பட்டான். புறஜாதியார் விருத்தசேதனம் பண்ணிக் கொள்ளாமல் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். இவர்களும் விசுவாசத்தின் மூலமாக தேவனுடைய கிருபையினால் நீதிமான்களாக்கப்படுகிறார்கள். இதன் மூலமாக ஆபிரகாம் புறஜாதியாருக்கும் தகப்பனாயிருக்கிறார்.

"ஆபிரகாம் அந்த அடையாளத்தைப் பெற்றான்" - ஆபிரகாம் யூதருக்குத் தகப்பன். யூதர்கள் ஆபிரகாமின் அடிச்சுவடுகளில் நடக்கிறார்கள். அவர்கள் விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்படுவதை நாட வேண்டும். ஆபிரகாம் புறஜாதியானாக இருந்தபோது தேவன் அவனோடு உடன்படிக்கை பண்ணினார். விசுவாசத்தில் ஆபிரகாம் புறஜாதியாருக்கும் தகப்பனாக இருக்கிறான். இதன்பின்பு, யூதர்கள் ஆபிரகாமின் உடன்படிக்கையில் பங்காளிகளாக இருக்கிறார்கள். விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுவது புறஜாதியாருக்கு உரியதாகிறது. சுவிசேஷம் புறஜாதியாருக்கு வந்த போது விருத்தசேதனம் இல்லாத காலத்தில் காணப்பட்ட விசுவாசத்தை இவர்கள் பற்றிக் கொண்டார்கள். ஆபிரகாமின் உடன்படிக்கையில் புறஜாதியார் ஏற்கெனவே சேர்க்கப்பட்டு விட்டார்கள். யூதர்கள் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால் அவர்களும் ஆபிரகாமின் உடன்படிக்கைக்குள் தங்களை இணைத்துக் கொள்ள வேண்டும்.

அடிச்சுவடு (steps) - ἴχνος - ichnos - 2487

பல வேறுபாடற்ற பெயர்ச்சொல் - அடிச்சுவடு (a track, footstep) (ரோமர் 4:12; 2கொரி 12:18; 1பேதுரு 2:21)

(6) விசுவாசத்தினால் நீதிமானாக்கப் படுவது நியாயப் பிரமாணத்தினாலும் கிரியை களினாலும் உண்டானதல்ல - (ரோமர் 3:21)

ரோமர் 4:13 அன்றியும், உலகத்தைச் சுதந்தரிப்பான் என்கிற வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்காவது அவன் சந்ததிக்காவது நியாயப் பிரமாணத்தினால் கிடையாமல் விசுவாசத்தினால் வருகிற நீதியினால் கிடைத்தது.

ரோமர் 4:14 நியாயப்பிரமாணத்தைச் சார்ந்தவர்கள் சுதந்தரவாளிகளானால் விசுவாசம் வீணாய்ப்போம், வாக்குத்தத்தமும் அவமாகும்.

ரோமர் 4:15 மேலும் நியாயப்பிரமாணம் கோபாக்கினையை உண்டாக்குகிறது; நியாயப் பிரமாணமில்லாவிட்டால் மீறுதலுமில்லை.

ரோமர் 4:16 ஆதலால், சுதந்தரமானது கிருபையினால் உண்டாகிறதாயிருக்கும் படிக்கு அது விசுவாசத்தினாலே வருகிறது; நியாயப் பிரமாணத்தைச் சார்ந்தவர்களாகிய சந்ததியாருக்கு மாத்திரமல்ல, நம்மெல்லாருக்கும் தகப்பனாகிய ஆபிரகாமுடைய விசுவாசத்தைச் சார்ந்தவர்களான எல்லாச் சந்ததியாருக்கும் அந்த வாக்குத்தத்தம் நிச்சயமாயிருக்கும் படிக்கு அப்படி வருகிறது.

ரோமர் - தொகுப்புரை

4 அதிகாரம்

"உலகத்தைச் சுதந்தரிப்பான்" - பூமியிலுள்ள எல்லா தேசங்களுக்கும் ஆபிரகாம் ஆசீர்வாதமாக இருக்கிறான் ஆபிரகாம் தன்னோடு ஆசீர்வதிக்கப்பட்டவர்களோடு உலகத்தைச் சுதந்தரிப்பான் (சங் 37:11; மத் 5:5 மத் 25:34;வெளி 5:10; வெளி 22:4-5)

"விசுவாசத்தினால் வருகிற நீதி" - உலகத்தைச் சுதந்தரிக்கும் வாக்குத்தத்தம் நியாயப்பிரமாணத்தின் மூலமாக வரவில்லை ஆபிரகாமின் உடன்படிக்கையான விசுவாசத்தின் மூலமாய் வருகிறது. (ரோமர் 4:13-16; ஆதி 12:1-3)

வீணாயபோ (made void) - κενόω - kenooo - 2758

வினைச்சொல் - வீணாய்போ அவத்தமாக்கு, வெறுமையாக்கு (has been emptied) (1கொரி 1:17 1கொரி 9:15 2கொரி 9:3, பிலி 2:7)

அவமாக்கு (none effect) - καταργέω - katargeoo - 2673

வினைச்சொல் - கெடு, அவமாக்கு ஒழிந்துபோ, அழிந்துபோ, பரிகரி நீக்கு, வியர்த்தமாக்கு ரோமர் 3:31)

"நியாயப்பிரமாணம் கோபாக்கினையை உண்டாக்குகிறது, நியாயப்பிரமாணமில்லாவிட்டால் மீறுதலுமில்லை" நியாயப்பிரமாணம் இருக்குமிடத்தில இரக்கத்திற்கும் மனனிப்பிற்கும் இடமில்லை நியாயப்பிரமாணம் கோபாக்கினையையும் தண்டனையையும் வருவிக்கும்

"கிருபையினால்" சுதந்தரமானது கிருபையினால உண்டாகிறது. ஆகையினால் சுதந்தரம் சகல ஜனங்களுக்கும் உரியது.

(7) **விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுவதன் விளக்கமும் எடுத்துக் காட்டும்** - (ஆதி 17:1-19)

ரோமர் 4:17 அநேக ஜாதிகளுக்கு உன்னைத் தகப்பனாக ஏற்படுத்தினேன் என்று எழுதியிருக்கிறபடி அவன் தான் விசுவாசித்தவருமாய், மரித்தோரை உயிர்ப்பித்து இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிறவருமாயிருக்கிற தேவனுக்கு முன்பாக நம்மெல்லாருக்கும் தகப்பனானான்

ரோமர் 4:18 உன் சந்ததி இவ்வளவாயிருக்கும் என்று சொல்லப்பட்டபடியே, தான் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான்

ரோமர் 4:19 அவன் விசுவாசத்திலே பலவீனமாயிருக்கவில்லை அவன் ஏறக்குறைய நூறு வயதுள்ளவனாயிருக்கும்போது தன் சரீரம் செத்துப்போனதையும் சாராளுடைய கர்ப்பம் செத்துப் போனதையும் எண்ணாதிருந்தான்

ரோமர் 4:20 தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய் சந்தேகப்படாமல்

ரோமர் 4:21 தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி தேவனை மகிமைப்படுத்தி விசுவாசத்தில வல்லவனானான

"அநேக ஜாதிகளுக்கு உன்னைத் தகப்பனாக ஏற்படுத்தினேன்" - ஆதி 17:4-5 ஆகிய வசனங்களிலிருந்து மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டுக் காலத்திற்கு முன்பாகவே இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேற்றுறு.

தேவனுடைய கிரியைகள்

1. மரித்தோரை உயிர்ப்பிக்கிறவர் உயிர்த்தெழுதல் (Resurrection) (ரோமர் 4:17; ரோமர் 8:11 யோவான் 5:21 யோவான் 6:63 1கொரி 15:22,35,45; 2கொரி 3:6, கலா 3:21 1தீமோ 6:13; 1பேதுரு 3:18

2. இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிறவர் - விசுவாசம் (Faith) (ரோமர் 4:17, ரோமர் 8:24-25 மத் 17:20, மத் 21:22 மாற்கு 9:23, மாற்கு 11:22-24; எபி 11:1)

4 அதிகாரம்

காணப்படாதவைகளை நிச்சயமாக நம்புவதே விசுவாசம் (எபி 11:1; 2பேதுரு 1:5; ஆதி 17; யோபு 38:4-7)

"தான் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், ஆபிரகாம் அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான்" - விசுவாசம் என்றால் என்ன என்பதை விளக்குவதற்குப் பவுல் இந்த வசனத்தில் ஆபிரகாமின் விசுவாசத்தை விளக்கிக் கூறுகிறான் (எபி 11:8; யாக் 2:8)

"உன் சந்ததி இவ்வளவாயிருக்கும்" - ஆதி 15:5 ஆவது வசனம் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"அவன் விசுவாசத்திலே பலவீனமாயிருக்கவில்லை" - ஆபிரகாம் ஏறக்குறைய நூறு வயதுள்ளவனாயிருந்தான். அவனுடைய சரீரம் செத்துப்போனது. சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனது. ஆனால் இதில் எதையும் ஆபிரகாம் எண்ணாதிருந்தான் (ஆதி 17:1; ஆதி 21:1-5)

"தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார்" ஆபிரகாம் தேவனை முழு நிச்சயமாக நம்பினான். தேவனை மகிமைப்படுத்தி விசுவாசத்தில் வல்லவனானான். தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிச்சயமாகவே நிறைவேற்றுவார் என்று நம்பினான். 25 வருஷங்களுக்குப் பின்பு இது நிறைவேறிற்று. ஆபிரகாம் நீதிமானாக்கப் படுவதற்கு அவனுடைய விசுவாசம் காரணமாயிற்று. ஆபிரகாமின் விசுவாசம் அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது (ரோமர் 4:3, 22; எபி 11:8, 12)

(8) கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும் எல்லா மனுஷருக்கும் நீதிமானாக்கப் படுதல் உரியது - (யோவான் 3:16, 36; 5:24)

ரோமர் 4:22 ஆகையால் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது.

ரோமர் 4:23 அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டதென்பது, அவனுக்காக மாத்திரமல்ல, நமக்காகவும் எழுதப் பட்டிருக்கிறது.

ரோமர் 4:24 நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவரை விசுவாசிக்கிற நமக்கும் அப்படியே எண்ணப்படும்.

ரோமர் 4:25 அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக் கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப் படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்.

"அவனுக்காகமாத்திரமல்ல நமக்காகவும் எழுதப்பட்டிருக்கிறது" - ஆதி 15:6 ஆவது வசனம் மனுக்குலத்தார் அனைவருக்கும் எழுதப்பட்டிருக்கிறது.

"நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவரை விசுவாசிக்கிற நமக்கும் அப்படியே எண்ணப்படும்" - சுவிசேஷத்தின் நிபந்தனை விசுவாசமாகும். தற்காலிக விசுவாசம் அல்ல. நிலைத்திருக்கும் விசுவாசம். தொடரும் விசுவாசம். நாம் தேவனை விசுவாசித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

"அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும் நாம் நீதிமான்களாக்கப் படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்" அவர் நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் (1பேதுரு 2:24) நம்மை நீதிமான்களாக்குவதற்காக அவர் உயிர்த்தெழுந்திருக்கிறார் (ரோமர் 5:10; 1கொரி 15:1-23)

நீதிமானாக்கப்படுதல்

1 விளக்கம் ஜனங்களைக் குற்றமற்றவர்கள் என்று தேவன் அறிவிக்கிறார். ஜனங்களைத் தமக்கு உகந்தவர்களாக அங்கீகரிக்கிறார். அவர்களை நீதிமான்களாகக் கருதுகிறார் (ரோமர் 3:25; ரோமர் 5:18) இதற்கான கிரேக்க வார்த்தை "டைகையோசிஸ்" **(dikaioosis)** என்பதாகும். இதற்கு இணையான மற்றொரு வார்த்தை "டைகையோமா" **(dikaiooma)** என்பதாகும் (ரோமர் 5:16

ரோமர் - தொகுப்புரை

4 அதிகாரம்

நீதி (justification) - δικαίωσις - dikaioosis - 1347

பெண்பால் பெயர்சொல் - நீதி

நீதி (justification) - δικαίωμα - dikaiooma - 1345

பால் வேறுபாடற்ற பெயர்சொல - நியாயம், தீர்ப்பு, நீதி, சடங்கு நீதியான செயல முறைமை

2 விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுகிறோம். (ரோமர் 3.24-4.25; ரோமர் 5:1; கலா 2:16, கலா 3:24)

3 நீதிமானாக்கப்படுவது மனுக்குலத்தார் அனைவருக்கும் பாவத்தின் பரிகாரமாய் இருக்கிறது. (ரோமர் 3.24-4.25)

4 நீதிமானாக்கப்படுவது ஆபிரகாமின் உடன்படிக்கையின் நிறைவேறுதலாகும் (ரோமர் 4:1-25)

5 விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுவதற்கு விளக்கம் நியாயப்பிரமாணத்துக்கு முன்பு ஆபிரகாம் நீதிமானாக்கப்பட்டான (ரோமர் 4:1-4:9-25) நியாயப் பிரமாணத்தின்கீழ் தாவீது நீதிமானாக்கப்பட்டான (ரோமர் 4:5-8)

6 விசுவாசிகள் யாரால அல்லது எதனால நீதிமானாக்கப்படுகிறார்கள்

(1) தேவன் (ரோமர் 3:26)

(2) கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் (ரோமர் 4:25)

(3) பரிசுத்த ஆவியானவர் (1கொரி 6:11)

(4) கிறிஸ்துவின் இரத்தம் (ரோமர் 3:24-28)

(5) கிருபை (ரோமர் 3:24 தீத்து 3:7)

(6) விசுவாசம் (அப் 13:39 ரோமர் 5:1)

(7) ஜெபம் (லூக்கா 18:14)

(8) கீழ்படிதல (ரோமர் 5:18)

7 விசுவாசத்தினால நீதிமானாக்கப்படுவதன் விளைவுகள்

(1) தேவனோடு சமாதானம் (ரோமர் 5:1)

(2) விசுவாசத்தினால் கிருபைக்குள் பிரவேசிப்பது (ரோமர் 5.2)

(3) கிருபையில் நிலைத்திருப்பது (ரோமர் 5.2)

(4) சந்தோஷமும், நம்பிக்கையும் (ரோமர் 5.2)

(5) உபத்திரவங்களிலசந்தோஷம் (ரோமர் 5.3-5)

(6) இருதயத்தில தேவனுடைய அன்பு (ரோமர் 5.5-8)

(7) பரிசுத்த ஆவியானவர் நமக்கு அருளப்படுகிறார் (ரோமர் 5:5; ரோமர் 8:9)

(8) தேவ கோபாக்கினை யிலிருந்து இரட்சிப்பு (ரோமர் 5:9-10)

"நீதிமானாக்கப்படுதல்" என்னும் வார்த்தையைப் பயன்படுத்தப்படும் விதம்

1 ஒருவன் நீதிமானாக்கப்பட்டிருக்கிறான் என்று அறிவித்தல (1தீமோ 3:16)

2 ஒரு காரியத்தைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கு (மத் 11:19)

3 துதிப்பதற்கு (லூக்கா 7:29)

4 எல்லா பாவங்களிலிருந்தும் சுத்திகரிக்கப் படுவதற்கு (1கொரி 4:4)

5 நீதிமானாக அறிவிக்கப்படுவதற்கு (மத் 12:37)

6 விடுவிக்கப்படுவதற்கு அல்லது தப்பித்துக் கொள்வதற்கு (அப் 13:39)

7 பாவத்தை மன்னிப்பதற்கு (லூக்கா 18:14; ரோமர் 3:20-28, ரோமர் 4:2, ரோமர் 5:1,9, ரோமர் 8:30, 1கொரி 6:11 கலா 2:16-17 கலா 3:11,24 கலா 5:4 தீத்து 3:7)

5 அதிகாரம்

5. விசுவாசத்தினாலே நீதிமானாக்கப் படுவதன் பத்து அம்ச விளைவு - (3:21)

ரோமர் 5:1 இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறபடியால் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்.

ரோமர் 5:2 அவர் மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலைகொண்டிருந்து, தேவமகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மை பாராட்டுகிறோம்.

ரோமர் 5:3 அதுமாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து,

ரோமர் 5:4 உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம்.

ரோமர் 5:5 மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப் பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது.

ரோமர் 5 ஆவது அதிகாரத்தில் அடங்கப்பட்டிருக்கும் ஆசீர்வாதங்கள்

1 நீதிமானாக்கப்படுதல் (ரோமர் 5:1,9)

2 தேவனிடத்தில் சமாதானம் (ரோமர் 5:1)

3 விசுவாசத்தினால் கிருபையில பிரவேசிக்கும் சிலாக்கியம் (ரோமர் 5:2)

4 கிருபையில் நிலைகொண்டிருத்தல் (ரோமர் 5:2)

5 தேவனிடத்தில் சந்தோஷம் (ரோமர் 5:2-3,11)

6 உபத்திரவங்களில் கிருபை (ரோமர் 5:3-5)

7 இருதயத்தில தேவ அன்பு (ரோமர் 5:5)

8 பரிசுத்த ஆவியானவர் (ரோமர் 5:5)

9 கோபாக்கினையிலிருந்து இரட்சிப்பு (ரோமர் 5:9-10)

10 இரத்தத்தினால் ஒப்புரவாக்கப்படுதல் (ரோமர் 5:10-11)

"அவர் மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால பெற்று நிலை கொண்டிருக்கிறோம்" - இயேசு கிறிஸ்துவினால நாம் தேவனிடத்தில் அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறோம். அதுமட்டுமல்ல தேவனுடைய குடும்பத்து அங்கத்தினர்களைப் போல நாம் அவரோடு நிலைகொண்டிருக்கிறோம் (எபே 2:18-22 எபே 3:12)

"கிருபை" - (சங 84:11)

"உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம்" - உபத்திரவம் பொறுமையையும் பொறுமை பரீட்சையையும் பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறது. பரீட்சைகளைத் தாங்கிக் கொள்ளும் தேவகிருபை நம்மிடத்தில உள்ளது. ஆகையினால சோதிக்கப்பட்ட பின்பு, நாம் பொன்னாக விளங்குவோம்.

பரீட்சை (experience) - δοκιμή - dokimee 1382

மொழியாக்கச் சொல் - பரீட்சை சோதித்தறிதல் அனுபவித்தல அத்தாட்சி, அறிதல் **"trial"** (2கொரி 8:2); **"experiment"** (2கொரி 9:13); **"proof"** (2கொரி 2:9; 2கொரி 13:3 பிலி 2:22); **"experience"** (ரோமர் 5:4

"நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது" ஆகையினால் நாம் உபத்திரவங்களிலும் மேன்மைபாராட்டுகிறோம். இதற்கான காரணங்கள்

ரோமர் - தொகுப்புரை

5 அதிகாரம்

1 நாம் நீதிமான்களாக்கப்பட்டிருப்பதும் சமாதானமும் (ரோமர் 5:1)

2 கிறிஸ்துவில் தேவனுடைய கிருபை ரோமர் 5.2

3 நமது இருதயங்களில் தேவ அன்பு ரோமர் 5.5

4 பரிசுத்த ஆவியானவரின் வல்லமை ரோமர் 5.5

6. விசுவாசத்தினாலே நீதிமானாக்கப் படுவதன் ஆதாரமும் [redacted] ஆசீர்வாதங்களும் - (2கொரி 5:14-21) (பேதுரு 2.24)

ரோமர் 5:6 அன்றியும் நாம பெலனற்றவர்களாயிருக்கும் போதே குறித்த காலத்தில கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார

ரோமர் 5:7 நீதிமானுக்காக ஒருவன மரிக்கிறது அரிது. நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன மரிக்கத் துணிவான

ரோமர் 5:8 நாம் பாவிகளாயிருக்கையில கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன நமமேல வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார

ரோமர் 5:9 இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே

ரோமர் 5:10 நாம் தேவனுக்குச் சத்துருக் களாயிருக்கையில அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப் பட்டோமானால ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே

ரோமர் 5:11 அதுவுமல்லாமல், இப்பொழுது ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப் பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துமூலமாய் நாம் தேவனைப்பற்றியும் மேன்மை பாராட்டுகிறோம்.

"நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே - நமது முந்திய காலத்தில் நாம் பெலனற்றவர்களாக இருந்தோம்.

நம்முடைய முந்திய நிலைமைகள்

1 பெலனற்றவர்கள் - பெலவீனர்களாக மரித்துக் கொண்டிருந்தோம் பாவத்தை எதிர்க்கவும் நன்மை செய்யவும் உதவியற்றவர்களாக இருந்தோம் தண்டத்திலிருந்து விடுதலை பெறுவதற்கும் பெலனற்றவர்களாக இருந்தோம். (ரோமர் 5.6

2 அக்கிரமக்காரர் - சாத்தானால் ஆளுகை செய்யப்பட்டு அவனுக்கு அடிமையாக இருந்தோம். பாவத்தில மூழ்கி தேவனுக்கு விலகியிருந்தோம் (ரோமர் 5.6)

3 பாவிகள் - எப்போதுமே இலக்கைத் தவறவிட்டவர்களாக இருந்தோம் பாவத்தில பிரியமாக இருந்தோம் (ரோமர் 5.8

4 சத்துருக்கள் தேவனையும் பரிசுத்தத்தையும் எதிர்க்கிறவர்களாக இருந்தோம. வெளிப்படையாகவே தேவனோடும் பரிசுத்தத்தோடும் யுத்தம் பண்ணினோம். (ரோமர் 5:10

"குறித்தகாலத்தில" (due time) - காலம் நிறைவேறினபோது (கலா 4.5)

"அக்கிரமக்காரருக்காக" - அக்கிரமக்காரருக்குப் பதிலாக. யூதர்கள் ஜனங்களை நான்கு பிரிவாகப் பிரித்தார்கள் அவர்கள் யாரென்ல

1. நீதிமான - என்னுடையது என்னுடையது. உன்னுடையது உன்னுடையது என்பான்

2 உதவுகிறவன் - என்னுடையது உன்னுடையது உன்னுடையது என்னுடையது என்பான்

ரோமர் - தொகுப்புரை

5 அதிகாரம்

3. பக்திமான் - என்னுடையது உன்னுடையது. உன்னுடையது உன்னுடையதாக இருக்கட்டும் என்பான்

4. அக்கிரமக்காரன் - என்னுடையது என்னுடையது. உன்னுடையது என்னுடையதாக இருக்கும் என்பான்

"மரிக்கத் துணிவான்" - ஜனங்கள் நண்பர்களுக்காகவும், தலைவர்களுக்காகவும் மரிக்கத் துணிகிறார்கள். விரோதிக்காக யாரும் மரிப்பதில்லை. ஆனால் இயேசு கிறிஸ்து நமக்காக மரித்தார். நாம் பாவிகளாகவும், துன்மார்க்கராகவும், பக்தியற்றவர்களாகவும், தேவனுக்கும் பரிசுத்தத்திற்கும் விரோதிகளாகவும் இருக்கும்போதே கிறிஸ்து நமக்காக மரித்தார் (ரோமர் 5:6-8; யோவான் 3:16)

கிறிஸ்துவின் மரணத்தினால் உண்டாயிருக்கும் ஆசீர்வாதங்கள்

1 ரோமர் 5 ஆவது அதிகாரத்தில் நாம் வாசிக்கும் பத்து ஆசீர்வாதங்கள்

2 விசுவாசத்தின் மூலமாக கிருபாதார பலி. (ரோமர் 3:26)

3 தேவனுடைய அன்பு வெளிப்படுதல் (ரோமர் 5:8)

4 மீட்பு (ரோமர் 3:24; எபே 1:7; தீத்து 2:14; 1பேதுரு 1:18-23; வெளி 5:9)

5 தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கை (எபே 5:2)

6 நமக்காகப் பதிலீடு (ரோமர் 5:6; கலா 1:4)

7 தேவனோடு சமாதானம் (கொலோ 1:20)

8 மீட்கும் பொருள் செலுத்தப்பட்டது (1தீமோ 2:6)

9 பரிசுத்தமாதல் (எபி 10:10-14)

10 மனுஷன் தேவனுக்குச் சமீபமாய் இருக்கிறான் (எபே 2:13)

11 பழைய பிரமாணம் அழிக்கப்பட்டது (எபே 2:14-17; கொலோ 2:14-17; 2கொரி 3:6-15)

12 சரீர சுகமாதல் (மத் 8:17; 1பேதுரு 2:24)

"நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே" - நாம் தேவனுக்குச் சத்துருக்களாக இருக்கும்போதே இயேசு கிறிஸ்து நமக்காக மரித்தார். நாம் ஒப்புரவாக்கப்பட்ட பின்பு, அவர் நமக்காக பெரிய காரியங்களை நிச்சயமாகவே செய்வார். இயேசு கிறிஸ்து தமது மரணத்தினாலே நம்மை இரட்சித்திருக்கிறார். ஆகையினால் அவர் தமது ஜீவனாலே நம்மை இரட்சிப்பது அதிக நிச்சயமாம். (ரோமர் 5:9-10; ரோமர் 8:31-34; எபி 7:25)

ஒப்புரவாகு (reconciled) - καταλλάσσω - katallassoo - 2644

விளைச்சொல் - ஒப்புரவாகு - விரோதியாக இருந்து நண்பனாக மாறுவது (ரோமர் 5:10; 1கொரி 7:11; 2கொரி 5:18-20)

"ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப்பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துமூலமாய் நாம் தேவனைப்பற்றியும் மேன்மைபாராட்டுகிறோம்" - யூதர்கள் நியாயப்பிரமாணத்தில் நம்பிக்கை வைத்து அதற்காக மேன்மை பாராட்டினார்கள். அது தவறான நம்பிக்கை. (ரோமர் 3:27). இயேசு கிறிஸ்துவின் மூலமாக நாம் தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டிருக்கிறோம். இது மெய்யான நம்பிக்கை. ஆகையினால் தேவனைப் பற்றி இயேசுகிறிஸ்து மூலமாக மேன்மை பாராட்டலாம். (ரோமர் 5:11; 1கொரி 1:31; 2கொரி 10:17)

ஒப்புரவாகுதல் (atonement) καταλλαγή - katallagee - 2643

பெயர்ச்சொல் - ஒப்புரவாகுதல் (reconciliation) (ரோமர் 5:11; ரோமர் 11:15; 2கொரி 5:18-19) - இந்த வசனத்தில் இதைப்பாவநிவாரணம் (atonement) என்று மொழிபெயர்க்கக் கூடாது. ஏனெனில் இது பகைமையை அகற்றி நட்பை உண்டாக்குவதையே குறிப்பிடுகிறது. இந்த ஒப்புரவாகுதல் பாவநிவாரணத்தின் விளைவு.

5 அதிகாரம்

IV. ஜென்ம பாவம் - (ரோமர் 5:12-21)

1. ஆதாமின் பாவமும் மரணமும்

ரோமர் 5:12 இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று.

ரோமர் 5:13 நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும் பாவம் உலகத்திலிருந்தது; நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் எண்ணப்படமாட்டாது.

ரோமர் 5:14 அப்படியிருந்தும் மரணமானது ஆதாம்முதல் மோசேவரைக்கும், ஆதாமின் மீறுதலுக்கொப்பாய்ப் பாவஞ்செய்யாதவர்களையும் ஆண்டுகொண்டது; அந்த ஆதாம் பின்பு வந்தவருக்கு முன்னடையாளமானவன்.

"ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது" எல்லா மனுஷரும் பாவம் செய்தார்கள் ஆகையினால் மரணம் எல்லோருக்கும் வந்தது. ரோமர் 5:12-21 ஆகிய வசனங்களில் கிறிஸ்துவின் கீழ்ப்படிதலினால் ஏற்பட்ட விளைவுகளைப் பவுல் விளக்கிக் காண்பிக்கிறார். ஆதாமின் கீழ்ப்படியாமையினால் இந்த உலகத்திற்குப் பெரும் தீங்கு ஏற்பட்டது. புறஜாதியார்கள் ஆதாமின் சந்ததியாராய் இருக்கிறார்கள். அவர்கள் ஆதாமின் பாவத்திலும் அந்தப் பாவத்தினால் ஏற்படும் விளைவுகளுக்கும் பங்காளிகளாக இருக்கிறார்கள். அவர்கள் இயேசு கிறிஸ்துவின் மீட்பில் பங்கு பெற வேண்டும். புறஜாதியாரைப் போலவே யூதரும் இரட்சிக்கப்பட வேண்டும். எல்லோரும் பாவம் செய்து விட்டார்கள். யூதரும் பாவம் செய்தார்கள். புறஜாதியாரும் பாவம் செய்தார்கள். ஆதாமின் மூலமாக மனுக்குலத்திற்குப் பாவம் வந்தது. இதனால் நாம் எல்லோருமே ஜென்ம பாவத்தை உடையவர்களாக இருக்கிறோம்.

(அப் 17:26) ஆதாம் பாவம் செய்ததினால் அந்தப் பாவத்தின் விளைவு அவனோடு நின்றுவிடவில்லை. அவனுடைய சந்ததி முழுவதும் அவன் செய்த பாவத்தின் சாபம் தொடர்கிறது. அவன் பாவத்தில் விழுந்தபோது, மனுக்குலம் முழுவதுமே பாவத்தில் விழுந்துவிட்டது. தேவன் ஆதாமோடு உடன்படிக்கை பண்ணினார். அந்த உடன்படிக்கை மனுக்குலம் முழுவதற்கும் உரியது. தேவனுடைய உடன்படிக்கைக்கு ஆதாம் கீழ்ப்படிந்தால் அவன் ஆசீர்வதிக்கப்படுவான். அவன் மூலமாக அந்த ஆசீர்வாதம் மனுக்குலம் முழுமைக்கும் வரும். ஆதாம் கீழ்ப்படியவில்லை என்றால் அவன் சபிக்கப்படுவான். அவன் மூலமாக அந்த சாபம் மனுக்குலம் முழுமைக்கும் வரும்.

பாவத்தைப் பற்றிய உபதேசம்

1. பாவம் இந்த உலகத்திற்கு ஒரு மனுஷனாலே வந்தது.
2. உலகம் சிருஷ்டிக்கப்பட்ட போது உலகத்தில் பாவம் இல்லை.
3. உலகத்திற்குப் புறம்பே இருந்து பாவம் வந்தது.
4. பாவத்தின் விளைவினால் மனுக்குலத்திற்கு மரணம் உண்டாயிற்று.
5. பாவத்தின் விளைவுகள் மனுக்குலம் முழுவதையும் பாதிக்கிறது (ரோமர் 5:12).
6. மோசேக்கு 2,500 வருஷங்களுக்கு முன்பாகவே உலகத்தில் பாவம் இருந்தது.
7. நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் எண்ணப்படமாட்டாது.
8. மோசேயின் பிரமாணத்தினால் பாவம் வரவில்லை.
9. மோசேயின் பிரமாணத்திற்கு முன்பாகவே தண்டனை வந்தது.
10. ஆதி 2:17 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிற ஆதாமின் மீறுதலினால் பாவமும், மரணமும் வந்தது.

5 அதிகாரம்

"ஆதாமின் மீறுதலுக்கொப்பாய்" - ஆதாமின் மீறுதலின் மூலமாக அவனுக்கு மரணம் வந்தது. அவன்மூலமாக எல்லோருக்கும் மரணம் வந்திருக்கிறது. (ஆதி 2:17; ரோமர் 5:12-21)

முன்னடையாளம் (figure) - τυπικώς - typikoos - 5179

ஆண்பால் பெயர்ச்சொல் - சொரூபம் மாதிரிரூபம், திருஷ்டாந்தம் முன்னடையாளம் (an outline, sketch)

2. ஆதாமிற்கும் கிறிஸ்து விற்குமிடையே ஒன்பது வேறுபாடுகள் - (1கொரி 15:21-22 45-50

ரோமர் 5:15 ஆனாலும் மீறுதலின் பலன் கிருபைவரத்தின் பலனுக்கு ஒப்பானதல்ல. எப்படியெனில், ஒருவனுடைய மீறுதலினாலே அநேகர் மரித்திருக்க, தேவனுடைய கிருபையும், இயேசுகிறிஸ்து என்னும் ஒரே மனுஷனுடைய கிருபையினாலே வரும் ஈவும் அநேகர்மேல் அதிகமாய்ப் பெருகியிருக்கிறது.

ரோமர் 5:16 மேலும் ஒருவன் பாவஞ்செய்ததினால் உண்டான தீர்ப்பு தேவன் அருளும் ஈவுக்கு ஒப்பானதல்ல. அந்தத் தீர்ப்பு ஒரே குற்றத்தினிமித்தம் ஆக்கினைக்கு ஏதுவாயிருந்தது; கிருபைவரமோ அநேக குற்றங்களை நீக்கி நீதிவிளங்கும் தீர்ப்புக்கு ஏதுவாயிருக்கிறது.

ரோமர் 5:17 அல்லாமலும் ஒருவனுடைய மீறுதலினாலே அந்த ஒருவன்மூலமாய் மரணம் ஆண்டுகொண்டிருக்க, கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசு கிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்கள் என்பது அதிக நிச்சயமாமே.

ரோமர் 5:18 ஆகையால் ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று.

ரோமர் 5:19 அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்.

ரோமர் 5:20 மேலும், மீறுதல் பெருகும்படிக்கு நியாயப்பிரமாணம் வந்தது; அப்படியிருந்தும் பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று.

ரோமர் 5:21 ஆதலால் பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டுகொண்டதுபோல, கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்திய ஜீவனுக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது.

"ஒருவனுடைய மீறுதலினாலே அநேகர் மரித்திருக்கிறார்கள்" - இயேசு கிறிஸ்துவின் கிருபையினாலே தேவனுடைய கிருபையும் ஈவும் அநேகர்மேல் அதிகமாய்ப் பெருகியிருக்கிறது.

ஆதாமிற்கும் கிறிஸ்துவிற்கும் இடையேயுள்ள வேறுபாடுகள்

1. ஆதாம் பழைய சிருஷ்டியின் தலைவன் (ஆதி 1:26) இயேசு கிறிஸ்து புதிய சிருஷ்டியின் தலைவர் (2கொரி 5:17-18; எபே 2:10)

2. ஆதாம் பாவம் செய்தான் (ஆதி 2:17, ஆதி 3:6; ரோமர் 5:12-21) கிறிஸ்து ஒருபாவமும் செய்யவில்லை. (1பேதுரு 2:22)

3. ஆதாம் தான் செய்த ஒரு பாவத்தினால் எல்லோரையுமே பாவிகளாக்கிவிட்டான் (ரோமர் 5:15) இயேசு கிறிஸ்து தமது கீழ்ப்படிதலினால் அநேகரை நீதிமான்களாக்கியிருக்கிறார் (ரோமர் 5:19, 2கொரி 5:21; எபி 10:10-14, 1பேதுரு 2:24)

ரோமர் - தொகுப்புரை

5 அதிகாரம்

4 ஆதாம் ஜீவாத்துமா ஆக்கப்பட்டான் இயேசு கிறிஸ்து உயிர்ப்பிக்கும் ஆவியாக ஆக்கப்பட்டார் (1கொரி 15:45)

5 ஆதாம் உலகத்திற்குரியவன் இயேசு கிறிஸ்து பரலோகத்திலிருந்து வந்த ஆண்டவர் (1கொரி 15:47)

6 ஆதாம் மரணத்தைக் கொண்டு வந்தான் (ரோமர் 5:12,17; 1கொரி 15:21) கிறிஸ்து ஜீவனைத் தருகிறார் (ரோமர் 5:17-18; யோவான் 10:10; 1கொரி 15:21-22)

7 ஆதாம் தன்னுடைய சந்ததியாருக்கு பாவ சுபாவத்தைத் தருகிறான் (ரோமர் 5:12,19; எபே 2:3; சங் 51:5) கிறிஸ்து தம்முடைய பிள்ளைகளுக்குப் பாவமில்லாத சுபாவத்தைத் தருகிறார் (ரோமர் 5:19, 2கொரி 5:17-18; 2பேதுரு 1:4)

8 ஆதாம் ஆக்கினையைக் கொண்டு வந்தான் (ரோமர் 5:16-18). கிறிஸ்து நீதிமானாக்குகிறார் (ரோமர் 5:18; ரோமர் 3:24, ரோமர் 4:25)

9 ஆதாம் தேவனுடைய கிருபையை இழந்துபோனான் (ரோமர் 5:15; ஆதி 2:17; ஆதி 3:6-24). கிறிஸ்து தேவனுடைய கிருபையை மனுக்குலத்திற்கு மீட்டுத் தந்தார் (ரோமர் 5:15-17; ரோமர் 3:24; யோவான் 1:17)

10 ஆதாம் தேவனுக்கு எரிச்சல் உண்டாக்கினான் (ரோமர் 5:15,17-18; ஆதி 3:6,17-24). கிறிஸ்து தேவனைப் பிரியப்படுத்தினார் (ரோமர் 5:18; மத் 3:17, மத் 7:5; 2பேதுரு 1:17)

11 ஆதாம் மூலமாக மரணம் ஆளுகை செய்கிறது (ரோமர் 5:12,14,17) கிறிஸ்து மூலமாக ஜீவன் ஆளுகை செய்கிறது (ரோமர் 5:17,18,21; யோவான் 3:16; யோவான் 10:10)

12 ஆதாம் பாவத்தைப் பெருக்குகிறான் (ரோமர் 5:20) கிறிஸ்து கிருபையைப் பெருக்குகிறார் (ரோமர் 5:20

"தேவனுடைய கிருபை அதிகமாய்ப் பெருகியிருக்கிறது" - தேவனுடைய கிருபை எப்போதும் அதிகமாகப் பெருகியிருக்கிறது. பாவம் செய்கிற எவனும் தேவனிடத்தில் மனந்திருந்தி வரும்போது அவனுக்கு தேவனுடைய கிருபை அதிகமாய் வெளிப்படும். (ரோமர் 5:15,17,20)

"ஜீவனை அடைந்து ஆளுவார்கள்" - ஆதாமின் மீறுதலினாலே இந்த உலகத்தை மரணம் ஆண்டு கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட உலகத்தில் இயேசு கிறிஸ்து மூலமாக நாம் கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெற்றுக் கொள்ளலாம். அப்போது நாம் ஜீவனை அடைந்து ஆளுவோம். இந்த உலகத்தில் மரணம் ஆண்டு கொண்டிருந்தாலும் தேவ பிள்ளைகள் ஜீவனை அடைந்து ஆளுவார்கள்.

"ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்" - ஆதாமின் பாவத்தின் மூலமாக மரண தண்டனை கொடுக்கப்பட்டது. உயிர்த்தெழுவதற்கு வாக்குத்தத்தம் இல்லாமல் இருந்த மனுக்குலத்தார் அனைவருக்கும் அந்த மரண தண்டனை கடந்து வந்தது. இதனால் அந்த ஒரே மனுஷனாகிய ஆதாமின் கீழ்ப்படியாமையினாலே மனுஷர் எல்லோரும் பாவிகளாக்கப்பட்டார்கள். இயேசு கிறிஸ்து மனுஷனுடைய ஸ்தானத்தைத் தெரிந்து கொண்டு, தமது கீழ்ப்படிதலினாலே மனுஷன்மீது விழுந்த சாபத்தையும், மரண தண்டனையையும் முற்றிலுமாக அழித்துப்போட்டார். முன்பு மனுஷனை மரணம் ஆண்டுகொண்டிருந்தது. இப்போது இயேசு கிறிஸ்துவின் மூலமாக மனுஷனை ஜீவன் ஆண்டுகொண்டிருக்கிறது. ஆதாமின் மூலமாக மனுஷன் பாவம் செய்யாமலேயே பாவியாக இருக்கிறான். இப்போது இயேசு கிறிஸ்துவின் நீதியினாலே மனுஷன் நீதியில்லாதவனாக இருந்தபோதிலும் இயேசு கிறிஸ்துவின்மீது வைக்கும் விசுவாசத்தினாலே அவன் நீதிமானாக்கப்பட்டிருக்கிறான்.

5 அதிகாரம்

"கீழ்ப்படிதல்" - மரணபரியந்தம் கீழ்ப்படிதல். (பிலி 2:8) இது ரோமர் 5:18 ஆவது வசனத்தின் நீதியான கிரியையாகும்.

"பாவம் பெருகின இடத்தில கிருபை அதிகமாய்ப் பெருகிற்று" - நியாயப்பிரமாணம் வந்த போது அது மனுஷனை பல வழிகளில ஆக்கினைக்குள்ளாக்கிறது. இயேசு கிறிஸ்து வெளிப்படும் வரையிலும் நியாயப்பிரமாணத்தின மூலமாக மனுக்குலத்திலே பாவம் பெருகிறது. கலா 3:19-25 இயேசு கிறிஸ்து வெளிப்பட்ட பின்பு, மனுக்குலத்திற்கு நித்திய ஜீவன வாக்கு பண்ணப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவைத் தங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்கிறவர்கள அனைவரையும் அவர் அவர்களுடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் மன்னிக்கிறார் அவர்களுக்கு ஏராளமான கிருபையைக் கொடுக்கிறார் நித்திய ஜீவனைக் கொடுக்கிறார் ரோமர் 5:20-21 (யோவான 14, வெளி 15) ஒருவன எவ்வளவு தான பாவம் செய்தவனாக இருந்தாலும், அவன இயேசு கிறிஸ்துவிடம் மனந்திருந்தி வரும்போது, அவனை மன்னிக்கும் பிரகாரமாக தேவனுடைய கிருபை பெருகியிருக்கிறது. தம்மிடத்தில வருகிற யாரையும் இயேசு கிறிஸ்து புறம்பே தள்ளுவதில்லை.

ரோமர் – தொகுப்புரை

6 அதிகாரம்

V. இரட்சிப்பு – பாவத்திலிருந்து மீட்கப்படுவதற்கு தெய்வீக உபாயம் – (ரோமர் 6:1-4)

1. கிறிஸ்துவின் மூலமாகவும் பரிசுத்த ஆவியானவர் மூலமாகவும் பாவத்திற்கு மரிக்க வேண்டும் – (ரோமர் 5:1-11; 8:1-13)

ரோமர் 6:1 ஆகையால் என்ன சொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்கு பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமா? கூடாதே.

ரோமர் 6:2 பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படி பிழைப்போம்?

"கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமா?" - யூதரும் புறஜாதியாரும் பாவிகளாக இருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தின் மூலமாக தேவனுடைய கிருபையினால் இவ்விரு பிரிவினரும் இரட்சிக்கப்பட வேண்டும். பாவத்தைக் குறித்து தேவனுடைய மனப்பாங்கு என்ன என்பதையும் பரிசுத்த ஜீவியம் ஜீவிப்பதற்கான இரகசியத்தையும் பவுல் இந்தப் பகுதியில் விளக்கிக் கூறுகிறார் (ரோமர் 6:1-8:39). இரட்சிப்பு தேவனுடைய ஈவு. பாவிகளைத் தேவன் தமது கிருபையினால் மன்னிக்கிறார். ஆனால் தேவனுடைய கிருபை பெருகட்டும் என்று நாம் பாவம் செய்துகொண்டே இருக்கக்கூடாது.

பாவத்திலே பிழைக்கக்கூடாது என்பதற்குக் காரணங்கள்

1 பாவத்திற்கு மரித்ததினால் பாவம் இனிமேல் பிழைக்காது. (ரோமர் 6:2-3)

2 ஆவிக்குரிய மரணத்திலிருந்து உயிர்த்தெழுதல் (ரோமர் 6:4-5)

3 புதிதான ஜீவனுள்ளவர்களாய் நாம் நடந்து கொள்கிறோம். (ரோமர் 6:4)

4 பாவத்திற்கு மரிப்பதும், பாவத்திலிருந்து உயிர்த்தெழுவதும் என்பதற்கு கிறிஸ்துவைப் போன்று நடப்பது என்று பொருள் (ரோமர் 6:5; 1பேதுரு 2:21-22; 1யோவான் 2:6; 1யோவான் 4:6,17)

5 நம்முடைய பழைய மனுஷன் இயேசு கிறிஸ்துவோடுகூட சிலுவையில் அறையப்பட்டு மரித்துவிட்டான் (ரோமர் 6:6; எபே 4:22-24; 1யோவான் 5:18)

6 பாவத்தின் சரீரம் அழிந்துவிட்டது. ஆகையினால் இனிமேல் நாம் பாவம் செய்யக்கூடாது. (ரோமர் 6:6)

7 நாம் பாவத்திற்கு நீங்கி விடுதலையாக்கப் பட்டிருக்கிறோம் (ரோமர் 6:7,18,22)

8 விசுவாசம் பாவத்தை மரித்துப் போனதாகக் காணகிறது. (ரோமர் 6:8)

9 பாவத்திற்கு நம்மேல் ஆளுகையில்லை (ரோமர் 6:9)

10 பாவம் சரீரத்தில் ஆளுகை செய்யாது (ரோமர் 6:12)

11 சரீரத்தைப் பாவத்திற்கு ஒப்புக் கொடுக்கக்கூடாது. (ரோமர் 6:13)

12 நாம் கிறிஸ்துவிற்கு விவாகம் பண்ணப்பட்டிருக்கிறோம். பாவத்தோடு நமக்குப் பங்கில்லை (ரோமர் 7:4)

13 நாம் ஆவியின்படியே நடக்கிறோம். (ரோமர் 8:1-4)

14 பாவம் மரணம் என்னும் பிரமாணத்திலிருந்து நாம் விடுவிக்கப் பட்டிருக்கிறோம். (ரோமர் 8:2)

15 நாம் ஆவியின் சிந்தை உடையவர்கள் (ரோமர் 8:6)

16 கிறிஸ்து நமக்குள் இருக்கிறார் (ரோமர் 8:10)

17 நாம் பாவத்திற்குக் கடனாளிகளல்ல. (ரோமர் 8:12)

6 அதிகாரம்

18 ஆவியானவர் நமக்குள் பாவத்தை அழிக்கிறார் (ரோமர் 8:13)

19 நாம் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல் விடுதலையின் ஆவியைப் பெற்றிருக்கிறோம். (ரோமர் 8:15)

20. பரிசுத்த ஆவியானவரும், இயேசு கிறிஸ்துவும் நமக்காகப் பரிந்து பேசி, நம்மைக் காத்துக் கொள்கிறார்கள் (ரோமர் 8:26-27,34)

2. இயேசு கிறிஸ்துவிற்குள்ளாக ஞானஸ்நானம் - (1கொரி 12:13; கலா 3:27; கொலோ 2:12)

ரோமர் 6:3 கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?

ரோமர் 6:4 மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்

ரோமர் 6:5 ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்

"கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள்" - இந்த ஞானஸ்நானம் தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறிப்பிடாமல் இயேசு கிறிஸ்துவிற்குள்ளாக ஞானஸ்நானம் பெறுவதைக் குறிப்பிடும் (ரோமர் 6:3-5; 1கொரி 12:13, கலா 3:28-29; எபே 4:5, கொலோ 2:11-13

"ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம்பண்ணப்பட்டோம்" - ஞானஸ்நானம் பண்ணுவது அடக்கம் பண்ணுவதற்கு அடையாளம் (அப் 8:38

"பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு" - இயேசு கிறிஸ்து சிலுவையிலே முழுவதுமாக மரித்தார் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் பாவத்திலிருந்து முழுவதுமாக விலகி வரவேண்டும். மரித்த பின்பு மரித்த சரீரத்திற்கும் அதன் ஆவிக்கும் எந்தவித சம்பந்தமுமில்லை. அதுபோலவே பாவத்திற்கு மரித்திருக்கிற விசுவாசிகளுக்கு இனிமேல் பாவத்தோடு எந்தவித சம்பந்தமும் இருக்கக்கூடாது (ரோமர் 6:3-5, யாக் 2:26)

"பிதாவின் மகிமை **(glory of the Father)** - மகிமையுள்ள வல்லமை **(Glorious power)**. மரித்த இயேசு கிறிஸ்துவை உயிர்த்தெழச் செய்வதற்குத் தேவனுடைய வல்லமை தேவையாயிருந்தது அதுபோலவே பாவத்தில் மரித்துப்போன பாவிகளை மறுபடியும் ஜீவனுள்ளவர்களாய் எழுப்புவதற்குத் தேவ வல்லமை தேவைப்படுகிறது. தேவனுடைய வல்லமையினால் பாவிகளாக இருந்தவர்கள் இப்போது இரட்சிக்கப்பட்டு புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்கிறார்கள் (2கொரி 5:17-18; எபே 4:22-24

புதிதானது **(newness)** - **καινότης** - **kainotees** - 2538

பெண்பால் பெயர்ச்சொல் - புதிதானது புதுமையானது (ரோமர் 6:4, 7:6

இணைக்கப்பட்டவர்கள் **σύμφυτος** - **symphytos** - 4854

பெயரடை இணைக்கப்பட்ட இணைக்கப்பட்டவர்கள் - ஒரே நேரத்தில் விதைக்கப்பட்டது இயேசு கிறிஸ்துவின் சரீரம் அடக்கம் பண்ணப்பட்டதும் ஞானஸ்நானத்தில் தண்ணீருக்குள் அடக்கம் பண்ணப்படுவதும் இணைத்துக் கூறப்பட்டிருக்கிறது. தெளிப்பு ஞானஸ்நானம் கொடுத்து அடக்கம் பண்ணவோ, நட்டவோ முடியாது (யோவான் 12:24; 1கொரி 15:36

6 அதிகாரம்

3. நம்முடைய பழைய மனுஷன் கிறிஸ்துவுடனே கூட அறையப்பட வேண்டும் - (ரோமர் 8:1-13; கலா 5:16-26; எபே 4:20-24; கொலோ 3:5-7)

ரோமர் 6:6 நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்து போகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்.

ரோமர் 6:7 மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே.

ரோமர் 6:8 ஆகையால் கிறிஸ்துவுடனேகூட நாம் மரித்தோமானால், அவருடனேகூடப் பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம்.

ரோமர் 6:9 மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம். மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை.

ரோமர் 6:10 அவர் மரித்தது பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார்; அவர் பிழைத்திருக்கிறது தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார்.

"பழைய மனுஷன்" - இது சாத்தானைக் குறிக்கும் சொல். கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து பிரபு (எபே 2:2; எபே 4:22-24; கொலோ 3:9; யோவான் 8:44; 1யோவான் 3:8; 1யோவான் 5:18). ஒருசிலர் பழைய மனுஷனைப் பழைய ஆதாமின் சுபாவம் என்று கூறுகிறார்கள். ஆனால் இது தவறான கருத்து. ஆதாம் சாத்தானுக்குத் தன்னை ஒப்புக் கொடுத்தான். இதனால் பாவத்தில் விழுந்தான். பாவம் செய்வதற்கு முந்தி இருந்ததுபோலவே, பாவம் செய்த பின்பும் அதே சரீரம், அதே ஆவி, அதே ஆத்துமா ஆதாமிற்கு ஆகியவை இருந்தன. ஆதாமில் ஒரு வேறுபாடு காணப்பட்டது. ஆதாம் பாவம் செய்யும் வரையிலும் கர்த்தர் அவனுடைய ஆண்டவராக இருந்தார். அவன் பாவம் செய்த பின்பு சாத்தான் அவனுடைய ஆண்டவன் ஆனான். பழைய மனுஷன் என்பது சாத்தானுடைய வல்லமையினால் ஆளுகை செய்யப்பட்டிருக்கும் மனுஷனுடைய சரீரம், ஆவி, ஆத்துமா ஆகியவற்றைக் குறிக்கும்.

"நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டது" - "பாவத்திற்கு மரித்தல்" **"dead to sin"** (ரோமர் 6:2) "அவரோடேகூடச் சிலுவையில் அறையப்படுதல்" **"crucified with him"** (ரோமர் 6:6) "கிறிஸ்துவுடனேகூட மரித்தல்" **"dead with Christ"** (ரோமர் 6:8) "நியாயப்பிரமாணத்திற்கு மரித்தல்" **"dead to the law"** (ரோமர் 7:4) ஆகிய வாக்கியங்கள் எபிரெயர் கிரேக்கர் மத்தியில் சாதாரணமாக வழக்கத்திலுள்ள வாக்கியமாகும். ஒரு காரியத்திற்கு அல்லது ஒரு நபருக்கு மரித்தல் என்பது அந்தக் காரியத்திலிருந்து அல்லது அந்த நபரிடமிருந்து முழுவதுமாகப் பிரிக்கப்பட்டிருப்பது என்று பொருள். ஒரு நபருக்காக அல்லது ஒரு காரியத்திற்காக ஜீவிப்பது என்பது அந்த நபரோடு அல்லது அந்தக் காரியத்தோடு தன்னை முழுவதுமாக ஒப்புக்கொடுத்து ஜீவிப்பது என்று பொருள். பழைய மனுஷன் சிலுவையில் அறையப்பட்டான் என்பதற்கு இனிமேல் பழையமனுஷனோடு அவனுக்கு எவ்விதத் தொடர்பும் இல்லை என்பது பொருள். 1யோவான் 5:18 ஆவது வசனத்தில் தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான் என்று வாசிக்கிறோம்.

ஒழிந்துபோ **(destroyed)**

καταργέω katargeo *2673*

வினைச்சொல் - கெடு, அவமாக்கு, ஒழிந்துபோ, அழிந்துபோ, பரிகரி, நீக்கு, விருத்தமாக்கு **(annulled)** (ரோமர் 3:31)

6 அதிகாரம்

"மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறான்" - பாவத்திற்கு மரித்தல் என்று கூறும்போது அந்த நபர் மரித்துவிட்டார் என்றோ அல்லது பாவம் மரித்துவிட்டது என்றோ பொருள்படாது. அந்த நபரும் உயிரோடு இருக்கிறார் பாவமும் உயிரோடு இருக்கிறது. ஒருவன் பாவத்திற்கு மரித்த பின்பு பாவமும் அவனும் சேர்ந்திருக்க மாட்டார்கள் என்பதே இதன் பொருளாகும். (ரோமர் 6:6)

"கிறிஸ்துவுடனேகூட நாம் மரித்தோம்" - நாம் நம்மைப் பற்றி எண்ணிக் கொள்ளும்போது கிறிஸ்துவுடனேகூட மரித்தோர்களாகவே நம்மை எண்ணிக் கொள்ள வேண்டும். (ரோமர் 6:8,11)

"மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம். மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை" - இயேசு கிறிஸ்துவின் சரீரம் மரித்தது. (யாக 2:26) அதன்பின்பு மூன்றாம் நாளில் அவர் தமது சரீரத்தில் உயிர்த்தெழுந்தார். இனிமேல் அவர் மரிக்கமாட்டார். மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை.

ஆண்டுகொள்வது (dominion) - κυριεύω - kyrieuoo – 2961

வினைச்சொல் - ஆளு, ஆட்சிசெய், மேற்கொள், ஆண்டவராயிரு, கர்த்தாவாயிரு, அதிகாரிகளாயிரு, ஆண்டுகொள்வது "lord it over." (ரோமர் 6:14; ரோமர் 7:1; ரோமர் 14:9; லூக்கா 22:25; 2கொரி 1:24; 1தீமோ 6:15). பாவம் விசுவாசியை ஆளக்கூடாது. விசுவாசியே பாவத்தை ஆளுகை செய்ய வேண்டும். (2கொரி 10:4-7; ரோமர் 8:13; கொலோ 3:5-10)

"அவர் மரித்தது, பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார்" - மனுஷருடைய பாவத்திற்காக இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்தார். மனுஷருடைய பாவத்திற்குப் பரிகாரமாகவும் பிராயச்சித்தமாகவும் சிலுவையில் கிருபாதார பலியாக மரித்தார். (1பேதுரு 2:24; எபி 10:10-14)

ஒரேதரம் (once) - ἐφάπαξ - ephapax - 2178

வினையடை - ஒரேதரம், ஒரேவேளை (once for all). (ரோமர் 6:10; 1கொரி 15:6; எபி 7:27; எபி 9:12; எபி 10:10)

4. நம்மை பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ள வேண்டும் (6:11) - (ரோமர் 8:1-13; எபே 4:20-24; கொலோ 3:5-17)

ரோமர் 6:11 அப்படியே நீங்களும் உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள்.

"தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள்" - நாம் நம்மைப் பாவத்திற்கு மரித்தவர்களாக எண்ணிக் கொள்ள வேண்டும். ஒரு தடவை நாம் மரித்துவிட்டபடியினால் இனிமேலும் பாவத்திற்கு மரித்துக் கொண்டிருக்கக் கூடாது. பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்து தேவனுக்காக நித்திய காலமாக ஜீவிக்க வேண்டும். (ரோமர் 6:9-10)

எண்ணிக்கொள் (reckon) - λογίζομαι - logizomai - 3049

வினைச்சொல் - ஆலோசனை பண்ணு, எண்ணிக்கொள், தீர், யோசி, நினை, சிந்தி (to count, reckon, impute) (ரோமர் 2:26; ரோமர் 4:3-24; ரோமர் 6:11; ரோமர் 8:18)

6 அதிகாரம்

5. **சாவுக்கேதுவான நம்முடைய சரீரத்தில் பாவம் ஆளுகை செய்யக்கூடாது - நமது அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும் -** (எபே 4:20-24; ரோமர் 8:13; கொலோ 3:5-17; கலா 5:16-26)

ரோமர் 6:12 ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக.

ரோமர் 6:13 நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக் கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்.

ரோமர் 6:14 நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால் பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது.

"உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக" இந்த வாக்கியத்தில் பாவமானது நம்மை ஆளுகை செய்யும் சாவாதிகாரியாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. மனுஷனை அவனுடைய விருப்பத்திற்கு எதிராக பாவம் அடக்கி ஆளுகிறது. பாவத்திற்கு நம்முடைய சரீரத்தில் இடம் தரக்கூடாது. பாவம் நம்மை ஆளுகை செய்யக்கூடாது.

"நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக" மனுஷனுக்கு சரீர இச்சைகள் உண்டு. அதுபோலவே பாவத்திற்கும் இச்சைகள் உண்டு.

பாவத்தின் இச்சைகள் சாத்தானின் இச்சைகளாகும். (யோவான் 8:44; எபே 2:2-3; 1யோவான் 2:17; 1யோவான் 3:8) மனுஷனுடைய இச்சைகள் அவனுடைய உள்ளத்திலிருந்து வரும் கேடான சிந்தைகளாகும். (யாக் 1:14; யாக் 4:1,3; 2தீமோ 4:3; 1தீமோ 4:2) ஒருகாலத்தில் மனுஷன் தன்னுடைய அவயவங்களைப் பாவத்திற்கு ஒப்புக் கொடுத்திருந்தான். அவன் இரட்சிக்கப்பட்ட பின்பு, தன்னுடைய அதே அவயவங்களைத் தேவனுக்கும் அவருடைய பரிசுத்த கிரியைகளுக்கும் ஒப்புக் கொடுக்கிறான். (ரோமர் 6:13,16,18-20,22; ரோமர் 8:9-13; கொலோ 3:5-10)

"நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக் கொடாதிருங்கள்" - சோதிக்கப்படுவது பாவமல்ல. சோதனைக்கு நம்மை ஒப்புக்கொடுப்பது பாவம். (யாக் 1:13-15) சாத்தானின் அந்தகார சக்தியாகவே பாவம் மனுஷனுக்குள் வருகிறது. நமக்குள் பாவத்தின் இச்சைகளாகவும் சாத்தானின் இச்சைகளாகவும் அவனுடைய கிரியை வெளிப்படுகிறது. நாம் பாவத்திற்கு நம்மை ஒப்புக்கொடுக்கும்போது சாத்தானுடைய பாவங்களை நமக்குச் சொந்தமாக்கிக் கொள்கிறோம். நாம் சோதிக்கப்படும்போது பாவத்திற்கு நம்மை ஒப்புக் கொடுக்கக்கூடாது. சோதனை எவ்வளவு பெரியதாகயிருந்தாலும் நாம் நம்மை பாவத்திற்கு ஒப்புக்கொடாதிருந்தால் நம்மிடத்தில் பாவம் இராது. (யோவான் 3:4; யாக் 1:13-15; யாக் 4:7; 1பேதுரு 5:8-9; எபே 4:27)

"உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்" நாம் நம்மைத் தேவனுக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும். நம்முடைய சித்தத்தைச் சாத்தானால் கட்டாயப்படுத்த முடியாது. தேவனும் நமது சுயசித்தத்தைக் கட்டாயப்படுத்தமாட்டார். ஆகையினால் நாம் நம்மைக் கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுத்து தேவனுடைய சித்தத்தைச் செய்கிறவர்களாக இருக்க வேண்டும்.

6 அதிகாரம்

ஆயுதங்கள் (instrument) - ὅπλον - hoplon - 3696

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - ஆயுதங்கள் (weapons). (ரோமர் 6:13, 13:12; யோவான் 18:3; 2கொரி 6:7; 2கொரி 10:4)

"பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது" - நாம் புதிய சிருஷ்டிகளாகும்போது தேவன் நம்மைப் பாவத்திலிருந்து விடுவிக்கிறார் (2கொரி 5:17-18; 1யோவான் 3:9; 1யோவான் 5:4-4:18) நாம் மறுபடியும் பாவம் செய்தால் அதற்குத் தேவன் காரணமல்ல. பாவம் செய்ய வேண்டுமென்று நாமே நம்மைச் சாத்தானுக்கு ஒப்புக் கொடுக்கிறோம். (ரோமர் 6:13)

"நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிற படியால்" - யூதமார்க்கத்தார் நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அதற்குக் கீழ்ப்படியும் பெலன் அவர்களிடத்தில் இல்லை. நாம் தேவனுடைய கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறோம். அதற்குக் கீழ்ப்படியும் வல்லமையைத் தேவன் நமக்குத் தருகிறார். அவர் நம்முடைய [illegible] மன்னிக்கிறார்.

VI. **பாவத்துடன் பழைய உறவும் தேவனுடன் புதிய உறவும் - விளக்கம்** - (ரோமர் 6:16-7:6)

1. **எஜமானும் அடிமையும்** - (ரோமர் 6:15-23)

(1) **நாம் எதற்குக் கீழ்ப்படியும்படி நம்மை அடிமைகளாக ஒப்புக் கொடுக்கிறோமோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறோம்**

ரோமர் 6:15 இதினால் என்ன? நாம் நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவஞ் செய்யலாமா? கூடாதே.

ரோமர் 6:16 மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்கள் என்று அறியீர்களா?

"கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிற படியால், பாவஞ்செய்யலாமா?" - பாவம் செய்யக்கூடாது. (ரோமர் 6:1, ரோமர் 3:5-8)

"எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக் கொடுக்கிறீர்களோ அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்கள் என்று அறியீர்களா?" - ஒருவன் சாத்தானுக்கும் பாவத்திற்கும் அடிமையாக இருந்துகொண்டு அதே வேளையில் தேவனுக்கும் நீதிக்கும் அடிமையாக இருக்க முடியாது. நாம் பாவம் செய்தால் சாத்தானுக்கும் பாவத்திற்கும் அடிமையாக இருக்கிறோம். (யோவான் 8:34; 1யோவான் 3:8) நாம் பாவம் செய்யும்போது சாத்தான் நம்முடைய ஆண்டவனாகிறான். பாவம் செய்வது சாத்தானுக்காகச் செய்யும் ஊழியம். நீதியாய் இருப்பது தேவனுக்குச் செய்யும் ஊழியம்.

(2) **முன்னே நாம் பாவத்திற்கு அடிமைகளாக இருந்தோம் - இப்பொழுது நீதிக்கு அடிமைகளாக இருக்கிறோம் (6:17-18)**

ரோமர் 6:17 முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம்.

ரோமர் 6:18 பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள்.

ரோமர் - தொகுப்புரை

6 அதிகாரம்

"உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம்" - உபதேச சட்டம் என்பது கல்சேஷத்தின் நற்செய்தியைக் குறிப்பிடுகிறது. கிறிஸ்தவ மார்க்கம் என்பது வார்ப்பிக்கப்படும் அச்சைப் போன்றது. ஒருவன் கிறிஸ்தவ உபதேசத்தை ஏற்றுக் கொள்ளும்போது அவன் கிறிஸ்துவின் அச்சு அடையாளங்களைப் பெற்றுக் கொண்டு அவருடைய சாயலாக இருக்கிறான் பரிசுத்த ஆவியானவரின் மூலமாக அவன் தேவனுடைய பரிசுத்தத்தைப் பெற்றுக் கொள்கிறான் (1கொரி 6:11; 2கொரி 3:18, எபே 4:24 சுவிசேஷத்தின உபதேசங்களுக்கு ஏற்ப விசுவாசிகள் வார்க்கப்படும்போது அவர்களுடைய இருதயத்தில் தேவனுடைய வார்த்தை ஆழமாகப் பதிந்திருக்கும். 2கொரி 3:1-3)

விடுதலையாக்கு (free) - ἐλευθερόω - eleutherooo - 1659

வினைசொல் - விடுதலையாக்கு சுயாதீனம் உண்டாக்கு (set free). (ரோமர் 6:18, 22; ரோமர் 8:2,21 யோவான் 8:32,36. கலா 5:1)

அடிமைகள் (servants) - δουλόω - doulooo - 1402

ஆண்பால் பெயர்சொல் அடிமைகளாக்கு, அடிமைப்படுத்து (to make a slave or servant)

அடிமைகள் (servants) - δοῦλος - doulos 1401

பொருள் வேலைக்காரனாகிய, ஊழியக்காரனாகிய, அடிமையாயிருக்கிற (மத் 20:27

"ஊழியக்காரன்" - மற்றவருடைய சித்தத்திற்குத் தன்னைப் பூரணமாக அர்ப்பணித்துக் கொண்டவன் வேதாகமத்தில் பலவேறு ஊழியக்காரர்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது ஊழியக்காரன் என்பதன் பொருள் சுயாதீன அடிமை என்பதாகும்.

1 மனுஷருடைய அடிமைகள் (கலா 3:28 எபே 6:8; கொலோ 3:11; வெளி 6:15

2 இராஜாவின் வேலைக்காரர்கள் (மத் 18:23-26; மத் 22:1-14 லூக்கா 15:17-22)

3 அதிகாரிகள் (யோவான் 18:18

4 பாவத்திற்கு அடிமையாக இருக்கும் பாவிகள் (யோவான் 8:34, ரோமர் 6:16-22; 2பேதுரு 2:19

5 கிறிஸ்துவின் சீஷர்கள் (மத் 10:24-25, ரோமர் 6:16-22; வெளி 19:5

6. தேவனுடைய ஊழியக்காரரான கிறிஸ்து (பிலி 2:7; ஏசா 42:1 ஏசா 52:11)

7 மோசேயும், எல்லாத் தீர்க்கதரிசிகளும் (எபி 3:5; வெளி 10:7; வெளி 11:18 வெளி 15:3)

8 எல்லா ஊழியக்காரர்களும், மூப்பர்களும் (மத் 20:27 மாற்கு 10:44; ரோமர் 1:1; கலா 1:10 யாக் 1:1; 2பேதுரு 1:1; யூதா 1:1

ஊழியக்காரன (servant) - δοῦλος - doulos - 1401

பொருள் - வேலைக்காரனாகிய, ஊழியக்காரனாகிய, அடிமையாயிருக்கிற

ஒருவன் தேவனுடைய ஊழியக்காரராக இருந்தாலும் பணிவிடைக்காரராக இருந்தாலும் அவன் தன்னைத் தானே தாழ்த்தி கிறிஸ்துவிற்காக ஊழியம் செய்ய வேண்டும். தேவனுடைய பிள்ளைகளை அதிகாரம் செலுத்தக்கூடாது. தேவ அன்போடும் மனதுருக்கத்தோடும், தேவனுடைய பிள்ளைகளுக்கு ஊழியம் செய்ய வேண்டும். (1பேதுரு 5:1 9, மாற்கு 9:35)

6 அதிகாரம்

(3) பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி நம்முடைய அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக் கொடுக்க வேண்டும்

ரோமர் 6:19 உங்கள் மாம்ச பலவீனத்தினிமித்தம் மனுஷர் பேசுகிறபிரகாரமாய்ப் பேசுகிறேன் அக்கிரமத்தை நடப்பிக்கும்படி முன்னே நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும் அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக் கொடுத்ததுபோல, இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள்

ரோமர் 6:20 பாவத்திற்கு நீங்கள் அடிமைகளாயிருந்த காலத்தில் நீதிக்கு நீங்கலானவர்களாயிருந்தீர்கள்

மனுஷபிரகாரம் (men) - ἀνθρώπινος - anthroopinos - 442

பெயரடை மானிட மனுஷத் தன்மையான, மனுஷபிரகாரம (manner of men) - (ரோமர் 6:19 1கொரி 2:4,13; 1கொரி 4:3 1கொரி 10:13; யாக் 3:7, 1பேதுரு 2:13

கிரேக்க ஆசிரியர்கள் ஒரு காரியத்தை எழுதும்போது அதை வாசிப்போர் புரிந்து கொள்ளும் விதமாகவே எழுதுவார்கள் கவிஞர்களும், தத்துவ ஞானிகளும் சாதாரண விஷயங்களைக்கூட மிகவும் கடினமான மொழிநடைகளைப் பயன்படுத்தி வாசிப்போருக்கு எளிதில் புரியாதவாறு எழுதுவார்கள் பவுல் இங்கு மனுஷர் பேசுகிற பிரகாரமாக பேசுகிறேன் என்று கூறுவது அவர்கள் புரிந்து கொள்ளும் விதத்தில் பேசுவதைக் குறிப்பிடும்

"உங்கள் மாம்ச பலவீனத்தினிமித்தம்" - அக்கிரமத்தை நடப்பிக்கும்படி முன்னே அவர்கள் அவர்களுடைய அவயவங்களை அசுத்தத்திற்கும் அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்தார்கள் அதுபோல இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி அவர்கள் தங்களுடைய அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று பவுல் வலியுறுத்திக் கூறுகிறார் அவர்கள் நீதியையும் பரிசுத்தத்தையும் நடப்பிக்க வேண்டும். (ரோமர் 6:19-20)

பரிசுத்தம் (holiness) - ἁγιασμός - hagiasmos - 38

ஆண்பால் பெயர்ச்சொல் - பரிசுத்தம் (ரோமர் 6:19,22; 1கொரி 1:30 1தெச 4:3,4,7; 2தெச 2:13 1தீமோ 2:15; எபி 12:14; 1பேதுரு 1:2

"பாவத்திற்கு நீங்கள் அடிமைகளாயிருந்த காலத்தில் நீதிக்கு நீங்கலானவர்களாயிருந்தீர்கள்" - ஒரு மனுஷன் ஒரே சமயத்தில் பரிசுத்தவானாகவும் பாவியாகவும் இருக்க முடியாது என்பதை பவுல் மறுபடியும் இங்கு வலியுறுத்திக் கூறுகிறார் ஒரு மனுஷன் ஒரேவேளையில் தேவனையும் சாத்தானையும் ஆராதிக்க முடியாது. அதாவது ஒரேசமயத்தில் ஒருவன் பாவத்திற்கும் நீதிக்கும் அடிமையாக இருக்க முடியாது (மத் 6:24)

(4) நாம் தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்த மாகுதல் நமக்கு கிடைக்கும் பலன், முடிவோ நித்தியஜீவன்

ரோமர் 6:21 இப்பொழுது உங்களுக்கு வெட்கமாகத் தோன்றுகிற காரியங்களினாலே அக்காலத்தில் உங்களுக்கு என்ன பலன் கிடைத்தது? அவைகளின் முடிவு மரணமே.

ரோமர் 6:22 இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன் முடிவோ நித்திய ஜீவன்

ரோமர் - தொகுப்புரை

6 அதிகாரம்

ரோமர் 6:23 பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால [redacted] நித்தியஜீவன்

"பலன்" (fruit) - நல்ல விளைவுகளையும், தீய விளைவுகளையும் குறிப்பதற்கு பவுல் பலன் என்னும் வார்த்தையை பயன் படுத்துகிறார் (ரோமர் 6:21-22; ரோமர் 7:4-5; கலா 5:22-23; எபே 5:9; பிலி 1:11,22 பிலி 4:17; எபி 12:11)

"அவைகளின் முடிவு மரணமே" - பாவத்தினால இரண்டு முக்கியமான விளைவுகள் ஏற்படும். அவையாவன

1 தற்காலத்தில வெட்கமும் வெறுமையும உண்டாகும். (ரோமர் 6:21)

2 வருங்காலத்தில நித்திய மரணமும் நரக ஆக்கினையும் கிடைக்கும (ரோமர் 6:21-23; ரோமர் 8:13; கலா 6:7-8; வெளி 20:6,10-15)

"இப்பொழுது நீங்கள பாவத்தினின்று விடுதலையா[redacted] இந்த ஜீவியத்தில ஜனங்கள இயேசு கிறிஸதுவின மூலமாக பாவத்திலிருந்து விடுதலையாக்கப் பட்டிருக்கிறார்கள் (2கொரி 5:17-18)

"தேவனுக்கு அடிமைகளானீர்கள்" - இதுவரையிலும் சாத்தானுக்கு அடிமைகளாக இருந்தவர்கள் இப்போது தேவனுக்கு அடிமைகளானார்கள் இதனால இதுவரையிலும் தீமை செய்தவர்கள இப்போது நன்மை செய்கிறார்கள (மத் 6:24

"முடிவோ நித்திய ஜீவன்" - நீதியினால் இரண்டு முக்கிய விளைவுகள் உண்டாகும். அவையாவன

1 தற்காலத்தில் ஜீவியத்தில் பரிசுத்தம் (ரோமர் 6:22)

2 வருங்காலத்தில் நித்திய ஜீவன் (ரோமர் 6:22-23; ரோமர் 8:13 கலா 6:7-8; யோவான் 6:27)

சம்பளம் (wages) - ὀψώνιον - opsoonion - 3800

பால வேறுபாடற்ற பெயர்ச்சொல் - சம்பளம், பணம் (recompense) (லூக்கா 3:14; ரோமர் 6:23, 1கொரி 9:7 2கொரி 11:8) தெய்வீக நீதியின பிரகாரம பாவிகளுக்கு அவர்களுக்குரிய சம்பளம் கொடுக்கப்படுகிறது பாவத்தின சம்பளம மரணம. இந்தச் சம்பளம் பாவிகளுக்கு நித்திய காலமாகக் கொடுக்கப்படும். லூக்கா (2:5 வெளி 20:11-15)

"தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால உண்டான நித்திய ஜீவன்" நித்திய ஜீவன தேவனுடைய கிருபை வரம். அதாவது இலவசமான வரம். (ரோமர் 5:15-18, எபே 2:8-9 யோவான 10:28 ஜனங்கள் தங்களுடைய பாவங்களின நிமித்தமாக நரகத்திற்குச் செலல வேண்டியவர்கள் அவர்கள நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வதற்கு வழியேயிலலை இயேசு கிறிஸது தம்மை விசுவாசிக்கிற ஒவ்வொருவருக்கும் நித்திய ஜீவனை இலவசமாகக் கொடுக்கிறார் (யோவான் 3:16; யோவான் 6:27 ரோமர் 3:24)

7 அதிகாரம்

2. பாவத்துடன் பழைய உறவும் தேவனுடன் புதிய உறவும் – திருமணத்தின் மூலமாக விளக்கப்படுகிறது

ரோமர் 7:1 நியாயப்பிரமாணத்தை அறிந்திருக்கிறவர்களுடனே பேசுகிறேன் சகோதரரே, ஒரு மனுஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப் பிரமாணம் அவனை ஆளுகிறதென்று அறியாமலிருக்கிறீர்களா?

ரோமர் 7:2 அதெப்படியென்றால், புருஷனையுடைய ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப் பிரமாணத்தின்படியே அவனுடைய நிபந்தனைக்கு உட்பட்டிருக்கிறாள்; புருஷன் மரித்த பின்பு புருஷனைப்பற்றிய பிரமாணத்தினின்று விடுதலையாயிருக்கிறாள்.

ரோமர் 7:3 ஆகையால், புருஷன் உயிரோடிருக்கையில் அவள் வேறொரு புருஷனை விவாகம்பண்ணினால் விபசாரியென்னப்படுவாள்; புருஷன் மரித்தபின்பு அவள் அந்தப் பிரமாணத்தினின்று விடுதலையானபடியால், வேறொரு புருஷனை விவாகம்பண்ணினாலும் விபசாரியல்ல.

ரோமர் 7:4 அப்படிப்போல, என் சகோதரரே, நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி, தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி, கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப் பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள்.

ரோமர் 7:5 நாம் மாம்சத்திற்கு உட்பட்டிருந்த காலத்தில் நியாயப் பிரமாணத்தினாலே தோன்றிய பாவ இச்சைகள் மரணத்திற்கு ஏதுவான கனிகளைக் கொடுக்கத்தக்கதாக நம்முடைய அவயவங்களிலே பெலன்செய்தது.

ரோமர் 7:6 இப்பொழுதோ நாம் பழமையான எழுத்தின்படியல்ல, புதுமையான ஆவியின்படி ஊழியஞ்செய்யத்தக்கதாக, நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணத்துக்கு நாம் மரித்தவர்களாகி, அதினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்.

"ஒரு மனுஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணம் அவனை ஆளுகிறது" - எல்லா ஜனங்களும் பரிசுத்தமாக ஜீவிக்க வேண்டுமென்று பவுல் ரோமர் 6 ஆவது அதிகாரத்தில் வலியுறுத்திக் கூறுகிறார். நியாயப்பிரமாணம் பாவத்திலிருந்தும் நரகத்திலிருந்தும் எந்த மனுஷனையும் விடுவிக்காது. ஆகையினால் யூதர்கள் நியாய பிரமாணத்திற்கு உட்பட்டிருக்க வேண்டிய அவசியமில்லை என்று பவுல் இந்த அதிகாரத்தில் விளக்கிக் கூறுகிறார். நியாய பிரமாணத்திற்கு உட்பட்டிருக்கிறவனை அது அவனுடைய மரணபரியந்தம் ஆளுகை செய்யும்.

"புருஷன் மரித்த பின்பு புருஷனைப் பற்றிய பிரமாணத்தினின்று விடுதலையாயிருக்கிறாள்" - புருஷனோ அல்லது மனைவியோ மரித்து விட்டால் அவர்களுடைய திருமண உடன்படிக்கை அந்த மரணத்துடன் முடிந்து விடுகிறது.

"கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப் பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள்" இயேசு கிறிஸ்து நியாயப்பிரமாணத்தையும் தீர்க்கதரிசனங்களையும் நிறைவேற்றினார். நியாயப்பிரமாணத்தை நீக்கிவிட்டார். ஆகையினால் யூதர்கள் இப்போது நியாயப் பிரமாணத்திற்கு மரித்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் இனிமேல் இயேசு கிறிஸ்துவோடு விவாக உடன்படிக்கையில் வந்து ஆவிக்குரிய நற்கிரியைகளைத் தங்கள் ஜீவியத்தின் மூலமாக வெளிப்படுத்த முடியும்.

"கிறிஸ்துவின் சரீரம்" (body of Christ) இந்த வாக்கியம் திருச்சபையைக் குறிக்காது. பலியிடப்பட்ட கிறிஸ்துவின் சரீரத்தைக் குறிக்கும். (எபே 2:15; கொலோ 1:18, 24)

"தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி" யோவான் 15:16 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் கனியைக் கொடுப்பது.

7 அதிகாரம்

"நாம் மாம்சத்திற்கு உட்பட்டிருந்த காலத்தில்" - நாம் ஒரு காலத்தில் மாம்சத்திற்கு உட்பட்டிருந்தோம். நியாயப்பிரமாணத்தின் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டவர்களாக இருந்தோம் (எபி 9:10) நம்முடைய சரீரத்தின் அவயவங்களில் பாவ இச்சைகள் நியாயப் பிரமாணத்தினால் கிரியை செய்தது. இதனால் மரணத்திற்கேதுவான கனிகளைக் கொடுத்தோம். நியாயப்பிரமாணத்தை மரண ஆக்கினைக்குத் தீர்க்க வேண்டும். ரோமர் 7:7-25 ஆகிய வசனங்களில் இந்தச் சத்தியம் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது.

"மாம்சத்திற்கு உட்பட்டிருந்த காலம்" - பாவத்தில ஜீவிக்கும் காலம். (ரோமர் 8:8-9)

இச்சைகள் (motions) - πάθημα - patheema - 3804

பால வேறுபாடற்ற பெயர்ச்சொல - இச்சை பாடு உபத்திரவம் **"suffering"** (ரோமர் 8:18, 2கொரி 1:5-7 பிலி 3:10, கொலோ 1:24 எபி 2:9-10 1பேதுரு 1:11 1பேதுரு 4:13, 1பேதுரு 5:1 **"affliction"** 2தீமோ 3:11 எபி 10:32 1பேதுரு 5:9), **"affections"** (கலா 5:24) **"motions"** (ரோமர் 7:5)

"நியாயப்பிரமாணத்தினாலே" (**by the law**) பாவ இச்சைகள் நியாயப்பிரமாணத்திற்கு எதிராகக் கிரியை செய்தது. நியாய பிரமாணத்தினால் பாவம் பெருகிறது. நியாய பிரமாணத்தினாலே பாவம் மிகுந்த பாவமுள்ளதாயிற்று (ரோமர் 7:13) நாம் எவ்வளவு பெரிய பாவியாக இருக்கிறோம் என்பதை நியாயப்பிரமாணம் வெளிப்படுத்துகிறது.

"நியாய பிரமாணத்தினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்" நியாய பிரமாணம் நம்மைப் பாவிகளாகத் தீர்க்கிறது. நியாயப்பிரமாணத்தின் மூலமாக பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு வழி எதுவும்இல்லை நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதற்கு அது மனுஷருக்கு எந்த பெலனையும் தரவில்லை. இப்படிப்பட்ட நியாயப்பிரமாணத்திலிருந்து இயேசு கிறிஸ்துவின் மூலமாக நாம் விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்.

"நம்மைக் கட்டியிருந்த நியாயப் பிரமாணத்துக்கு நாம் மரித்தவர்களானோம்" - நாம் நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்டிருந்த போது பாவங்களுக்கு மரித்தவர்களாக இருந்தோம். நம்மை நாமே விடுவித்துக் கொள்ள நமக்கு எந்த வழியும் இல்லாமல் இருந்ததினால் நாம் பாவத்தின் கட்டுக்களுக்கும் மரணத்தின் கட்டுக்களுக்கும் அடிமைகளாக இருந்தோம் இவற்றிலிருந்து நாம் விடுதலை பெறுவதற்கு நமக்கு எந்த வழியும் இல்லை.

"பழமையான எழுத்து" (**oldness of the letter**) - நியாயப்பிரமாணம் கலிசேஷத்திற்கு அடையாளமாக இருக்கிறது. கலிசேஷத்தினால மட்டுமே நியாயப்பிரமாணத்தை நிறைவேற்ற முடியும். நாம் இப்போது மெய் தேவனைச் சேவிக்கிறோம் நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்டு அதன சடங்குகளைப பழமையான எழுத்தின பிரகாரம் கைக்கொள்ள வேண்டிய அவசியம் நமக்கு இல்லை மெய்தேவனை நாம ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்க வேண்டும். நியாயப்பிரமாணத்தில கூறப்பட்டிருக்கும் சடங்காசசாரங்களைக் கடைப் பிடித்து தேவனை ஆராதிக்க வேண்டிய தேவை இனிமேல நமக்கு இல்லை

VII. நியாயப்பிரமாணத்திற்குக் கீழ் பாவத்திற்கு அடிமையாக இருந்த பவுலின் அனுபவம் - (ரோமர் 7:7-25)

1. நியாயப்பிரமாணம் பாவமோ? அல்லவே

ரோமர் 7:7 ஆகையால் என்ன சொல்லுவோம்? நியாயப்பிரமாணம் பாவமோ? அல்லவே. பாவம் இன்னதென்று நியாயப் பிரமாணத்தினால நான அறிந்தேனேயன்றி மற்றப்படி அறியவில்லை; இச்சியாதிருப்பாயாக என்று நியாயப்பிரமாணம் சொல்லாதிருந்தால இச்சை பாவம் என்று நான் அறியாமலிருப்பேனே

7 அதிகாரம்

"நியாயப்பிரமாணம் பாவமோ?" – நியாயப்பிரமாணம் பாவமல்ல நாம் எப்படி ஜீவிக்க வேண்டும் என்பதை நியாயப்பிரமாணம் வெளிப்படுத்துகிறது. அதுபோலவே பாவம் இன்னதென்று நியாயப்பிரமாணத்தின் மூலமாகவே நாம் அறிந்து கொள்கிறோம் ரோமர் 3:20; ரோமர் 4:15; ரோமர் 7:7; யோவான் 3:4

"இச்சியாதிருப்பாயாக" – யாத் 20:17 ஆவது வசனம் இங்கும், ரோமர் 13:9 ஆவது வசனத்திலும் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

2. நியாயப்பிரமாணம் இல்லாவிட்டால் பாவம் செத்ததாயிருக்கும்

ரோமர் 7:8 பாவமானது கற்பனையினாலே சமயம் பெற்றுச் சகலவித இச்சைகளையும் என்னில் நடப்பித்தது. நியாயப்பிரமாணம் இல்லாவிட்டால் பாவம் செத்ததாயிருக்குமே.

"பாவமானது கற்பனையினாலே சமயம் பெற்றுச் சகலவித இச்சைகளையும் என்னில் நடப்பித்தது" – பவுல் இந்த வசனத்தில் பாவத்தைச் சுயமாகக் கிரியை நடப்பிக்கும் ஓர் ஆவியாக வர்ணிக்கிறார். அது ஒரு காலத்தில் பவுலை ஆளுகை செய்தது. அவனுடைய உள்ளத்தில் பாவமான இச்சைகளை உண்டாக்கிற்று. பவுலின் ஜீவியத்தைப் பாவம் ஆளுகை செய்தது. நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாதவாறு பாவம் அவனைத் தடைபண்ணிற்று. நியாயப்பிரமாணம் வருவதற்கு முன்பாகப் பாவம் இந்த அளவிற்கு ஆற்றலோடு கிரியை நடப்பிக்கவில்லை நியாயப்பிரமாணம் வந்தவுடன் அது சில காரியங்கள் தவறு என்று அறிவித்ததினால் அவையெல்லாம் பாவமாயிற்று. நியாயப்பிரமாணத்தின் மூலமாக நமது ஜீவனுக்குள் பாவம் வந்தது. பவுல் பாவத்தின் இச்சைகளினால் நியாயப்பிரமாணத்தை மீறினார் பாவத்தின் தண்டனையைப் பவுல் அனுபவிக்க வேண்டும். (ரோமர் 7:8 – 9)

3 முன்னே நியாயப்பிரமாணம் இல்லாதவனாயிருந்த போது நான் ஜீவனுள்ளவனாயிருந்தேன். கற்பனை வந்தபோது பாவம் உயிர்கொண்டது, நான் மரித்தவனானேன்

ரோமர் 7:9 முன்னே நியாயப்பிரமாணமில்லாதவனாயிருந்த போது நான் ஜீவனுள்ளவனாயிருந்தேன் கற்பனை வந்தபோது பாவம் உயிர்கொண்டது நான் மரித்தவனானேன்

ரோமர் 7:10 இப்படியிருக்க, ஜீவனுக்கேதுவான கற்பனையே எனக்கு மரணத்துக்கேதுவாயிருக்கக் கண்டேன்

ரோமர் 7:11 பாவமானது கற்பனையினாலே சமயம்பெற்று என்னை வஞ்சித்து அதினாலே என்னைக் கொன்றது

உயிர்கொள் (revived) - **ἀναζάω** - **anazaoo** - 326

வினைச்சொல் - உயிர்கொள் திரும்பவும் உயிர்த்தெழு, உயிரடை (to live again). (ரோமர் 7:9, 14:9, லூக்கா 15:24,32, வெளி 20:5)

"ஜீவனுக்கேதுவான கற்பனையே எனக்கு மரணத்துக்கேதுவாயிருக்கக்கண்டேன்" நியாய பிரமாணம் பவுலைக் குற்றப்படுத்தி அவனுடைய ஆவிக்குரிய ஜீவியத்தைக் கொன்றுபோட்டது.

"பாவமானது கற்பனையினாலே சமயம்பெற்று என்னை வஞ்சித்து, அதினாலே என்னைக் கொன்றது" நியாய பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்க பவுலுக்குப் பெலனில்லை பவுல் உதவியற்றவனாக இருந்தான் பவுலின் பரிதாபமான நிலைமையைப் பாவம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது. பாவம் நியாய பிரமாணத்தைப் பயன்படுத்தி பவுலை வஞ்சித்துக் கொன்றது.

7 அதிகாரம்

4. நியாயப் பிரமாணம் பரிசுத்தமுள்ளது தான் – ஆனால் பாவமே எனக்கு மரணமாயிற்று

ரோமர் 7:12 ஆகையால் நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளதுதான் கற்பனையும் பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும் இருக்கிறது.

ரோமர் 7:13 இப்படியிருக்க நன்மையானது எனக்கு மரணமாயிற்றோ? அப்படியல்ல பாவமே எனக்கு மரணமாயிற்று. பாவம் கற்பனையினாலே மிகுந்த பாவமுள்ளதாகும்படிக்கும் அது நன்மையானதைக் கொண்டு எனக்கு மரணத்தை உண்டாக்கினதினாலே பாவமாகவே விளங்கும்படிக்கும் அப்படியாயிற்று.

ரோமர் 7:14 மேலும், நமக்குத் தெரிந்திருக்கிறபடி நியாயப்பிரமாணம் ஆவிக்குரியதாயிருக்கிறது. நானோ பாவத்துக்குக் கீழாக விற்கப்பட்டு மாம்சத்துக்குரியவனாயிருக்கிறேன்

"நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளதுதான்" - பவுல் நியாயப்பிரமாணத்தைக் குறைகூறவில்லை. ஏனெனில் அது பரிசுத்தமாயும், நீதியாயும் நன்மையாயும் இருக்கிறது

"நன்மையானது [illegible] மரணமாயிற்றோ?" நியாயப்பிரமாணம் பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும் இருக்கிறது என்று பவுல் கூறுகிறார் அதேவேளையில். பாவம் தன்னை நியாயப்பிரமாணத்தினால் வருசித்துக் கொன்று போட்டதாகவும் கூறுகிறார் ஆகையினால் யூதர்கள் பவுலிடம் "நன்மையானது உனக்கு மரணமாயிற்றோ?" என்று கேள்வி கேட்கிறார்கள் அதற்குப் பவுல் "அப்படியல்ல; பாவமே எனக்கு மரணமாயிற்று" என்று பதில் கூறுகிறார் நியாயப்பிரமாணம் பவுலைக் கொல்லவில்லை நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாதவாறு பாவம் அவனைத் தடை பண்ணிற்று. இதனால் பாவம் நியாயப் பிரமாணத்தினால் தன்னைக் கொன்றதாகப் பவுல் கூறுகிறார்

"நமக்குத் தெரிந்திருக்கிறபடி, நியாயப் பிரமாணம் ஆவிக்குரியதாயிருக்கிறது" - நியாயப்பிரமாணம் ஆவிக்குரிய பிரமாணமாகும். பரிசுத்தமான காரியங்களை நாம் கடைபிடிக்க வேண்டுமென்று நியாயப்பிரமாணம் வலியுறுத்துகிறது.

ஆவிக்குரியது (spiritual) - πνευματικός - pneumatikos - 4152

பொருள் - ஆவிக்குரிய ஞான ஆவிக்கேற்ற (non-carnal; religious)

ஆவிக்குரிய காரியங்கள்

1 பரிசுத்த ஆவியானவரின் காரியங்களைப் பின்பற்றுகிற மனுஷன் (1கொரி 2:15; 1கொரி 3:1 1கொரி 14:37; கலா 6:1; ஓசி 9:7

2 ஆவியானவரின் வரங்கள் (ரோமர் 1:11; 1கொரி 1:7 1கொரி 12:1; 1கொரி 14:1,12

3 நன்மைகள் (ரோமர் 15:27, 1கொரி 2:13; 1கொரி 9:11

4 உயிர்த்தெழுந்த சரீரம் (1கொரி 15:44-46

5 ஆவியானவரின் ஆசீர்வாதங்கள் (எபே 1:3)

6 சங்கீதம் கீர்த்தனை ஞானப்பாட்டுக்கள் (எபே 5:19)

7 ஞானமும், அறிவும் (கொலோ 1:9

8 பரிசுத்த ஆசாரியக்கூட்டம் (1பேதுரு 2:5)

9 பலிகள் (1பேதுரு 2:5)

10 நியாயப்பிரமாணம் - புதிய ஏற்பாட்டின் ஆவிக்குரிய காரியங்களுக்கு அடையாளமாய் இருக்கிறது. (ரோமர் 7:14)

11 ஞானபோஜனமும், ஞானபானமும் - ஞானக்கன்மலையாகிய இயேசு கிறிஸ்துவின் அடையாளம். (1கொரி 10:3-4)

7 அதிகாரம்

12 துன்மார்க்கம் - அசுத்த ஆவி தோன்றும் இடம் (எபே 6:12 எபே 2:2; யோவான் 8:44)

மாம்சத்துக்குரியவன் (carnal) σάρκινος - sarkinos - 4560

பௌரடை - சதையான (fleshly; natural; human) (ரோமர் 7:14 ரோமர் 15:27 1கொரி 3:1-4 2கொரி 3:3 2கொரி 10:4 எபி 7:16) - விழுந்துபோன மனுஷனின் பரிதாப நிலையைக் குறிக்கிறது. இவன் பாவத்திற்கு விற்கப் பட்டு அதற்கு அடிமையாக இருக்கிறான்

5 **நன்மை செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன் ஆனால் நன்மை செய்வது என்னிடத்திலில்லை. ஏனெனில் நான் பாவத்திற்கு அடிமையாக இருக்கிறேன்**

ரோமர் 7:15 எப்படியெனில் நான் செய்கிறது எனக்கே சம்மதியில்லை நான் விரும்புகிறதைச் செய்யாமல் நான் வெறுக்கிறதையே செய்கிறேன்

ரோமர் 7:16 இப்படி நான் விரும்பாததைச் செய்கிறவனாயிருக்க நியாயப்பிரமாணம் நல்லதென்று ஒத்துக்கொள்ளுகிறேனே

ரோமர் 7:17 ஆதலால் நான் அல்ல எனக்குள் வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது.

ரோமர் 7:18 அதெப்படியெனில் என்னிடத்தில், அதாவது, என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன், நன்மைசெய்ய வேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது; நன்மை செய்வதோ என்னிடத்திலில்லை

ரோமர் 7:19 ஆதலால் நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையையே செய்கிறேன்

ரோமர் 7:20 அந்தப்படி நான் விரும்பாததை நான் செய்தால், நான் அல்ல எனக்குள்ளே வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது.

"நான் விரும்புகிறதைச் செய்யாமல் நான் வெறுக்கிறதையே செய்கிறேன்" - ஆகையினால் செய்கிறது தனக்கே சம்மதியில்லை என்று தான் பவுல் கூறுகிறார் நியாயப்பிரமாணத்தைவிட பாவம் அதிக பெலனுள்ளது என்று ரோமர் 7:7-14 ஆகிய வசனங்களில் பவுல் வலியுறுத்திக் கூறினார் அதன்பின்பு பாவம் மனுஷனைவிட அதிக பெலனுள்ளது என்று ரோமர் 7:15-25 ஆகிய வசனங்களில் பவுல் விளக்குகிறார் ஏனெனில் மனுஷன் பாவத்திற்கு அடிமையாக இருக்கிறான்

"நான் வெறுக்கிறதையே செய்கிறேன்" - பாவத்திற்கு அடிமையாக இருக்க பவுலுக்குச் சம்மதம் இல்லை ஆகையினால் பாவத்தின் கிரியைகளைப் பவுல் வெறுக்கிறார்

"நியாயப்பிரமாணம் நல்லதென்று ஒத்துக் கொள்ளுகிறேன்" - பவுல் தான் விரும்பியதைச் செய்யாமல் வெறுக்கிறதையே செய்கிறார் இந்தக் காரியங்களைத் தான் செய்யவில்லை என்றும் தன்னை அடிமைப்படுத்தி தனக்குள் வாசம் பண்ணும் பாவ சுபாவமே இவற்றைச் செய்வதாகவும் பவுல் கூறுகிறார் ரோமர் 7:16-20

வாசமாயிருக்கிறது (dwelleth) - οἰκέω - oikeoo - 3611

வினைச்சொல் வாசமாயிரு. வாசம் பண்ணு ரோமர் 7:17,18,20, ரோமர் 8:9,11; 1கொரி 3:16, 1கொரி 7:12,13 1தீமோ 6:16

"நன்மைசெய்ய வேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது, நன்மைசெய்வதோ என்னிடத்திலில்லை" பவுலுக்கு ஒரு விருப்பம் இருக்கிறது. ஆனால் இந்த விருப்பத்தைப் பாவத்தின் ஆசைகள் ஆளுகை செய்கிறது. தனது சொந்த விருப்பத்தை நிறைவேற்ற பவுலுக்குப் பெலனில்லை.

7 அதிகாரம்

பவுல் தேவனுக்குப் பிரியமான காரியங்களைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறார். தேவனுடைய சித்தத்திற்கும் நியாயப்பிரமாணத்திற்கும் கீழ்ப்படிந்து நடக்க வேண்டுமென்பது பவுலின் விருப்பம். ஆனால் தான் விரும்பிய பிரகாரம் பவுலினால் நடக்க முடியவில்லை. தன்னை ஆளும் பாவம் தேவனுடைய சித்தத்திற்கும் நியாயப்பிரமாணத்திற்கும் கீழ்ப்படிவதற்குத் தன்னை அனுமதிப்பதில்லை என்றும், தான் பாவத்திற்கு அடிமையாக இருக்கிறேன் என்றும் பவுல் கூறுகிறார்.

6. என் மனதின் பிரமாணத்தின் பிரகாரம் நான் பாவத்திற்கு அடிமையல்ல

ரோமர் 7:21 ஆனபடியால் நன்மை செய்ய விரும்புகிற என்னிடத்தில் தீமையுண்டென்கிற ஒரு பிரமாணத்தைக் காண்கிறேன்.

ரோமர் 7:22 உள்ளான மனுஷனுக்கேற்றபடி தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் மேல் பிரியமாயிருக்கிறேன்.

ரோமர் 7:23 ஆகிலும் என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப் பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக் கொள்ளுகிறது.

"பிரமாணம்" (law) - பவுல் இந்த வசனத்தில் மனதின் பிரமாணம் அல்லது மனச்சாட்சியைப் பற்றி குறிப்பிடுகிறார். பவுலின் மனச்சாட்சி தேவனுக்கும் அவருடைய பிரமாணத்திற்கும் கீழ்ப்படிய வேண்டுமென்று விரும்புகிறது. (ரோமர் 7:16,21,23)

"தேவனுடைய நியாயப்பிரமாணம்" (law of God) - ரோமர் 7:3-16 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் மோசேயின் பிரமாணத்தைக் குறிப்பிடும் வாக்கியம்.

"உள்ளான மனுஷன்" (inward man) - இந்த வாக்கியம் ஆவிக்குரிய மனுஷனைக் குறிப்பிடும். (1கொரி 2:11; 2கொரி 4:16; எபே 3:16) மனுஷனுடைய ஆவி மரிப்பதில்லை. 1பேதுரு 3:4 மனுஷனுக்குள் இருக்கும் ஆத்துமா உணர்வுடையது. தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிய வேண்டுமென்பது பவுலுக்குத் தெரியும். அதற்குக் கீழ்ப்படிய பவுல் விரும்புகிறார். அதே வேளையில் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிவதினால் பவுல் தன்னுடைய உள்ளான மனுஷனில் அதாவது தன்னுடைய ஆவியிலும் ஆத்துமாவிலும் பிரியப்படுகிறார். (சங் 1:2)

"என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன்" - இந்த வாக்கியத்தில் வேறொரு பிரமாணம் என்பது பாவத்தின் பிரமாணத்தைக் (law of sin) குறிக்கும். (ரோமர் 7:23,25; ரோமர் 8:2) பாவத்தின் பிரமாணமானது சிந்தையின் பிரமாணத்தைவிட பெலனுள்ளது. சிந்தையின் பிரமாணம் எவ்வளவுதான் போராடினாலும் பாவத்தின் பிரமாணம் மனுஷனைச் சிறையாக்கிக் கொள்ளுகிறது. (ரோமர் 7:23,25) பாவம் தன்னை எப்போதாவது ஆளுகை செய்கிறது என்று கூறுவதற்குப் பதிலாக அது தன்னைச் சிறையாக்கிக் கொண்டுவிட்டதாகப் பவுல் குறிப்பிடுகிறார். அதாவது பாவம் பவுலை முழுவதுமாக ஆளுகை செய்கிறது. (ரோமர் 7:24)

7. புதிய எஜமானனை நான் காணும்வரையிலும் நிர்ப்பந்தமான அடிமையாக இருக்கிறேன்

ரோமர் 7:24 நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?

ரோமர் 7:25 நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். ஆதலால், நானே என் மனதினாலே தேவனுடைய நியாயப் பிரமாணத்துக்கும், மாம்சத்தினாலேயோ பாவப் பிரமாணத்துக்கும் ஊழியஞ் செய்கிறேன்.

7 அதிகாரம்

"நிர்ப்பந்தமான மனுஷன் நான்" - இந்த வாக்கியம் இரட்சிக்கப்பட்ட ஆத்துமாவைக் குறிப்பிடவில்லை. பாவத்திற்கு அடிமையாக இருக்கும் மனுஷனைக் குறிப்பிடுகிறது. பவுல் நியாயப்பிரமாணத்தின் பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் இப்போது இரட்சிக்கப்பட்டிருக்கிறார் (ரோமர் 8:1-4). பவுல் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக அவர் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டு, பாவத்தினால் சிறைவைக்கப்பட்டவராக இருந்தார். நிர்ப்பந்தமான மனுஷனாக இருந்தார். தமஸ்குவில் பவுல் மூன்று நாட்களாகப் பார்வையில்லாதிருந்தார். அப்போது அவருடைய ஆத்துமாவிற்கு இரட்சிப்பு உண்டாயிற்று (அப் 9:17-18). இரட்சிக்கப்படுவதற்கு முன்பாகவும் பவுலிடம் நல்மனசாட்சி இருந்தது (அப் 23:1; கலா 1:13-14; பிலி 3:6). பவுல் பார்வை இழந்திருந்த அந்த மூன்று நாட்களில் பவுலின் மனக்கண்கள் திறக்கப்பட்டன. நியாயப்பிரமாணத்தைத்தான் உண்மையிலேயே பூரணமாகக் கடைப்பிடிக்கவில்லை என்பதைப் பவுல் கண்டுகொண்டார். தான் பாவத்திற்கு அடிமையாக இருந்ததையும் பாவத்திலிருந்து விடுதலை பெறுவதற்குத் தனக்குப் பெலனும் உதவியும் இல்லை என்பதையும் பவுல் இந்த மூன்று நாட்களில் கண்டு கொண்டார். நியாயப்பிரமாணத்தை எப்படிக் கடைப்பிடிக்க வேண்டுமோ அப்படித்தான் கடைப்பிடிக்கவில்லை என்பதையும் பார்வை இழந்திருந்த இந்த மூன்று நாட்களில் பவுல் தனது மனக்கண்களினால் கண்டார். ஆகையினால் தன்னைப் பற்றி "நிர்ப்பந்தமான மனுஷன் நான்" என்று குறிப்பிடுகிறார்.

"இந்த மரணசரீரம்" - பூர்வகாலத்தில் குற்றவாளியைத் தண்டிப்பதற்கு ஒரு கொடூரமான முறையைப் பின்பற்றி வந்தார்கள். குற்றவாளியின் உடம்போடு ஒரு மரித்த சடலத்தைக் கட்டி வைத்துவிடுவார்கள். குற்றவாளி எங்கு சென்றாலும் அந்த மரித்த சடலத்தையும் தன்னோடு சுமந்து கொண்டே செல்ல வேண்டும். மரித்த சடலத்தின் துர்நாற்றம் தாங்கமுடியாமல் அந்தக் குற்றவாளி சிறிது சிறிதாக மூச்சுத்திணறி மரித்துபோவான். பவுல் இந்த வாக்கியத்தில் இந்த மரண சரீரம் என்று குறிப்பிடுவது அக்காலத்தில் குற்றவாளியோடு சேர்த்துக் கட்டப்பட்டிருக்கும் மரித்த சடலத்தைப் பற்றியே குறிப்பிடுகிறார்.

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்" - இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்? என்று தான் கேட்ட கேள்விக்கு "இயேசு கிறிஸ்து விடுதலையாக்கினார்" என்று பவுல் பதில் கூறுகிறார். அதற்காகப் பவுல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஸ்தோத்திரிக்கிறார். மனுஷனை மனுஷனுடைய பாவத்திலிருந்து இயேசு கிறிஸ்துவினால் மட்டுமே இரட்சிக்க முடியும் (மத் 1:21; ரோமர் 3:26; ரோமர் 10:9-10; 1யோவான் 1:9).

"ஆதலால் நானே என் மனதினாலே தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கும் மாம்சத்தினாலேயோ பாவப்பிரமாணத்துக்கும் ஊழியஞ்செய்கிறேன்" - இந்த வசனத்திற்குப் பலவிதமாக வியாக்கியானம் கூறுகிறார்கள். இந்த வாக்கியத்திற்கு வியாக்கியானம் கூறும்போது பவுல் பாவத்திலிருந்து இன்னும் இரட்சிக்கப்படவில்லை என்று வியாக்கியானம் பண்ணுகிறார்கள். இது தவறான வியாக்கியானம். ரோமருக்கு எழுதின நிருபத்தில் பவுல் கூறியிருக்கும் கருத்திற்கு இந்த வியாக்கியானம் முரணாக இருக்கிறது. இந்த வசனத்திற்கு முன்பும் பின்பும் பாவத்தின் பிரமாணத்திலிருந்து பூரணமான வெற்றி உள்ளது என்பதைப் பவுல் வலியுறுத்திக் கூறியிருக்கிறார் (ரோமர் 1:16-18; ரோமர் 2:8-11; ரோமர் 3:5-8,24-31; ரோமர் 4:1-24; ரோமர் 5:1-11; ரோமர் 6:1-23; ரோமர் 8:1-13).

8 அதிகாரம்

VIII. பாவத்தில் இருந்தும் பிரமாணத்தில் இருந்தும் முழுவதுமாக விடுதலை பெற்ற பவுலின் அனுபவம் – (ரோமர் 8)

1. ஆக்கினைத்தீர்ப்பு இல்லை – ஏன்?

ரோமர் 8:1 ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட் பட்டவர்களாயிருந்து மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை

ரோமர் 8:2 கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிறதே.

ரோமர் 8:3 அதெப்படியெனில் மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததை தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்

ரோமர் 8:4 மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்

ரோமர் 8:5 அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள் ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்

"கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாய் இருந்து மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை" - ரோமர் 7:7-24 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற பவுலின் அனுபவம் இந்த நிருபத்தை எழுதும்போது அவரிடம் இல்லை என்பதை இந்த வசனம் தெளிவுபடுத்துகிறது. இவ்வாறு விடாக்கிரானம் பண்ணுவதற்கான [illegible].

1. பவுலுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை. (ரோமர் 8:1)
2. பாவத்தின் பிரமாணத்திலிருந்து பவுல் விடுதலை பெற்றிருக்கிறார் (ரோமர் 8:2)
3. நித்திய மரணத்திலிருந்து பவுல் விடுதலை பெற்றிருக்கிறார் (ரோமர் 8:2)
4. பவுலின் பாவம் அவருடைய மாம்சத்தில் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டிருக்கிறது (ரோமர் 8:3
5. பவுல் நியாயப்பிரமாணத்தின் நீதியை நிறைவேற்றினார் ரோமர் 8:4
6. பவுலிடம் ஜீவனும் சமாதானமும் இருந்தது. (ரோமர் 8:6)
7. பவுல் ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தார் (ரோமர் 8:9-11)
8. பவுலின் சரீரம் பாவத்தின் நிமித்தம் மரித்ததாயிருந்தது (ரோமர் 8:10)
9. பவுலின் மாம்சம் சிலுவையில் அறையப்பட்டிருந்தது (ரோமர் 8:12-13
10. பவுல் மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படியே நடந்தார் (ரோமர் 8:1-4; கலா 5:16-26

இயேசு கிறிஸ்துவிற்குள் ஆசீர்வாதங்கள்

1. மீட்பு (Redemption) (ரோமர் 3:24, 1கொரி 1:30)
2. ஆக்கினையிலிருந்து விடுதலை (Freedom from condemnation) (ரோமர் 8:1)

ரோமர் – தொகுப்புரை

8 அதிகாரம்

3 ஜீவனுடைய ஆவி (Spirit of life) ரோமர் 8:2

4 தேவனுடைய அன்பு (Love of God) ரோமர் 8:39; 1தீமோ 1:14)

5 சத்தியம் (Truth) (ரோமர் 9:1)

6 ஒருமைப்பாடு (Unity) (ரோமர் 12:15 கலா 3:28)

7 விசுவாசம் (Faith) (அப 24:24; தீமோ 3:13

8 பரிசுத்தமாதல (Sanctification) 1கொரி 1:2,30

9 ஞானம் (Wisdom) (1கொரி 1:30 1கொரி 4:10

10 நீதி (Righteousness) (1கொரி 1:30)

11 பெற்றெடுத்தல (Begetting) 1கொரி 4:15

12 நம்பிக்கை (Hope) (1கொரி 15:19)

13 மரணத்தில பாதுகாப்பு (Security in death) (1கொரி 15:18)

14 உயிர்த்தெழுதல் (Resurrection) 1கொரி 15, 1தெச 4

15 சந்தோஷம் (Joy) (1கொரி 15:31)

16 தேவனுக்குள் ஸ்திரப்படுதல் (Establishment in God) (2கொரி 1:21

17 வெற்றி சிறக்கப்பண்ணுதல் (Triumph) (2கொரி 2:14)

18 கலப்பில்லாத வார்த்தை (Uncorrupt Word) (2கொரி 2:17)

19 நியாயப்பிரமாணம் ஒழிந்துபோயிற்று (Law abolished) (2கொரி 3:6-15)

20 புதிய சிருஷ்டி (New creation) (2கொரி 5:17-18

21 எளிமை (Simplicity) (2கொரி 11:3)

22 விடுதலை (Liberty) (கலா 2:4)

23 ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் (All spiritual blessings) (எபே 1:3)

24 வல்லமை (Power) (எபே 1:20

25 உன்னத ஸ்தலங்கள் (Heavenly places) (எபே 2:7)

26 தேவனுக்குச் சமீபம் (Nearness to God) (எபே 2:13)

27 நித்திய நோக்கம் (Eternal purpose) (எபே 3:11)

28 சுயதாழ்மை (Self humbling) (பிலி 3:14)

29 உன்னத அழைப்பு (High calling) (பிலி 3:14)

30 பரிபூரணம் (Perfection) (கொலோ 1:28

31 நித்திய ஜீவன் (Eternal life) (2தீமோ 1:1)

32 கிருபை (Grace) (2தீமோ 2:1

33 இரட்சிப்பு (Salvation) (2தீமோ 2:10

34 பாதுகாப்பு (Preservation) (யூதா 1:1)

ரோமர் – தொகுப்புரை

8 அதிகாரம்

ரோமருக்கு எழுதின நிருபத்தில் கூறப்பட்டிருக்கும் பிரமாணங்கள்

1 மோசேயின் பிரமாணம் (Law of Moses) (ரோமர் 2:12; ரோமர் 3:19 ரோமர் 7:12

2 சுபாவத்தின் பிரமாணம் (Law of nature) (ரோமர் 2:14-15)

3 விசுவாசத்தின் பிரமாணம் (Law of faith) (ரோமர் 3:27 ரோமர் 4:3-5,10-24

4 சிந்தையின் பிரமாணம் (Law of the mind) (ரோமர் 7:16,21,23)

5 பாவத்தின்பிரமாணம் (Law of sin) (ரோமர் 8:2 3:25, ரோமர் 8:2)

6 நீதியின் பிரமாணம் (Law of righteousness) (ரோமர் 9:31)

7 தேவனுடைய பிரமாணம் (Law of God) (ரோமர் 7:22,25)

8 ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் (Law of the Spirit of life) (ரோமர் 8:2

நியாயப்பிரமாணத்தினால் முடியாதவை

1 நீதிமானாக்குதல் (அப் 13:38-39 கலா 2:16

2 பாவம், மரணம் ஆகியவற்றிலிருந்து விடுதலை (ரோமர் 8:2)

3 ஆக்கினையிலிருந்து விடுதலை (ரோமர் 8:3-4

4 மீட்பு (ரோமர் 3:24-31; கலா 3:13-14)

5 சுதந்தரத்தைக் கொடுப்பது (ரோமர் 4:13-14)

6 நீதியை வருவிப்பது (ரோமர் 8:4)

7 பரிசுத்த ஆவியானவரை அருளுவது (கலா 3:2)

8 அற்புதங்களைச் செய்வது (கலா 3:5)

9 சாபத்திலிருந்து விடுதலை பெறுவது (கலா 3:10-14)

10 விசுவாசத்தை அருளுவது (கலா 3:12

11 கிருபையை அருளுவது (கலா 5:4)

12 பரிபூரணமாக்குவது (எபி 7:19

13 மனுஷனிடத்தில் பாவத்தைக் கட்டுப்படுத்துவது (ரோமர் 7:7-25 ரோமர் 8:2)

14 பாவத்திலிருந்து மனுஷனைப் பாதுகாப்பது ரோமர் 7:7-25 ரோமர் 8:7)

15 மனுஷனைக் கீழ்ப்படிய வைப்பது (எபி 7:18)

பலவீனம் (weak) - ἀσθενέω **astheneoo - 770**

வினைச்சொல் - வியாதியாயிரு, வியாதிப்பட்டிரு, பிணியாளியாயிரு, பலவீனமாயிரு (weak, impotent) மாம்சத்தை அடக்குவதற்கு நியாயப்பிரமாணத்திற்குப் பெலனில்லை. நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்பாகவே பாவம் மாம்சத்தை அடக்கி ஆளுகை செய்கிறது. (ரோமர் 5:20, கலா 3:1) நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிய பாவம் மாம்சத்தை அனுமதிக்காது. (ரோமர் 7:7-23

8 அதிகாரம்

"தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பினார்" - மனுஷனைப் பாவத்திலிருந்து மீட்பதற்குத் தேவனே அதற்குத் தேவையானவற்றைச் செய்கிறார். தேவனுடைய கிரியையினாலேயே மாம்சத்தைப் பாவத்தின் ஆளுகையிலிருந்து விடுவிக்க முடியும். நியாயப்பிரமாணம் எதிர்பார்க்கும் நீதியைத் தேவனுடைய கிருபையினாலேயே மனுஷனால் நிறைவேற்ற முடியும். (ரோமர் 8:3-4)

"பாவமாம்சத்தின் சாயல்" **(likeness of sinful flesh)** - தேவன் தமது ஒரேபேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைப் பாவமாம்சத்தின் சாயலாக அனுப்பினார். பாவத்தைப் போக்கும் பலியாகத் தேவன் இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பினார். ஆனாலும் இயேசு கிறிஸ்துவின் மாம்சத்தில் பாவம் எதுவும் இல்லை.

இயேசு கிறிஸ்து மாம்சத்தில் பாவம் செய்யவில்லை

1 கிறிஸ்து பாவத்தில் விழவில்லை. ஆகையினால் அவரிடத்தில் பாவமில்லை.

2 கிறிஸ்து தம்மைச் சாத்தானுக்கும், அவனுடைய ஆவிக்கும், அவனுடைய பாவ சுபாவத்திற்கும் ஒப்புக்கொடுக்கவில்லை.

3 இயேசு கிறிஸ்து ஸ்திரீயின் வயிற்றிலிருந்து வந்தபோதிலும் அவர் மனுஷனுடைய வித்து அல்ல. (ஆதி 3:15; ஏசா 7:14; ஏசா 9:6-7; மத் 1:18-25; லூக்கா 1:32-35; ரோமர் 8:3; கலா 4:4; பிலி 2:5-11; யோவான் 1:14; 1தீமோ 3:16; எபி 2:9-18). வேதவாக்கியங்களில் ஜாதிகளின் முற்பிதாவாக மனுஷனே கூறப்பட்டிருக்கிறான் (ஆதி 2:20-22; 2கொரி 11:3; ரோமர் 5:12-21). ஸ்திரீயின் பலவீனம் அல்ல, மனுஷனுடைய பலவீனம் அவனுடைய பிள்ளைகள்மீது சாபமாகக் கடந்து வருகிறது (யாத் 20:5; எசே 14:16; உபா 5:9; எரே 31:29-30; எசே 18:2-4).

4 தமது ஒரேபேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை மானிட சரீரத்தில் இந்த உலகத்திற்கு அனுப்புவதற்குத் தேவன் தெரிந்துகொண்ட பாத்திரமே கன்னி மரியாள். இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியானவரால் உண்டானவர். இயேசு கிறிஸ்து மனுஷனால் உண்டானவர் அல்ல. மனுஷனால் பாவமில்லாத சந்ததியை உண்டுபண்ண முடியாது. தேவன் பரிசுத்தமானவர். அவரால் பரிசுத்தமான சந்ததியை மட்டுமே உண்டாக்க முடியும். பாவமான சந்ததியைப் பரிசுத்தமான தேவனால் உண்டுபண்ண முடியாது. ஆதி 1:22-28 ஆகிய வசனங்களில் பலுகிப்பெருகும் பிரமாணம் கூறப்பட்டிருக்கிறது. இவ்வாறாக ஸ்திரீயின் மூலமாகத் தேவன் இயேசு கிறிஸ்துவை மாம்ச சாயலாக அனுப்பினார். அந்த மாம்சம் பாவத்தினால் ஆளுகை செய்யப்பட்டிருந்தது. இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்குப் பாவமாம்சத்தின் சாயலாகவே அனுப்பப்பட்டார். ஆனாலும் இயேசு கிறிஸ்துவின் மாம்சத்தைப் பாவமோ, சாத்தானோ ஆளுகை செய்யவில்லை. இயேசு கிறிஸ்து பாவமாம்சத்தின் சாயலைப் பெற்றிருந்தாலும் அவர் ஒருபாவமும் செய்யவில்லை. (1பேதுரு 2:22)

"மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நாம்" - நம்முடைய மாம்சத்தில் கிறிஸ்துவின் பிரகாரம் நடந்து பாவம் செய்யாமல் இருப்பது. இயேசு கிறிஸ்து மாம்சத்திலுள்ள எல்லாப் பாவங்களையும் கடிந்து கொண்டார். இதன் மூலமாக மாம்சம் பாவத்தில் தொடரவேண்டிய அவசியமில்லாமல் போயிற்று. (ரோமர் 6:1-23; ரோமர் 8:1-13; 2கொரி 5:17-18; 2கொரி 10:4-6; கலா 5:16-26)

சிந்தித்தல் (mind) - φρονέω **phroneoo** 5426

ரோமர் – தொகுப்புரை

8 அதிகாரம்

வினைச்சொல் – சிந்தி, அபிப்பிராயப்படு, எண்ணு, நினை, எண்ணங்கொள், சிந்தையாயிரு, நாடு, விசேஷித்துக்கொள் (set affections on) (ரோமர் 8:5, 12:3,16, ரோமர் 14:6, ரோமர் 15:5, கொலோ 3:2 – மாம்சத்தின் பாவங்களில் ஆசைப்படுகிறவர்கள் மாம்சத்திற்கு உரியவைகளைச் சிந்தித்துத் தங்களுடைய ஆசைகளை நிறைவேற்றுவார்கள் (கலா 5:19-21, 1கொரி 6:9-11; கொலோ 3:5-10, ரோமர் 1:29-32; மாற்கு 7:19-21, யாக் 1:13-15). ஆவிக்குரிய காரியங்களில் சிந்திக்கிறவர்கள் ஆவிக்குரிய பிரகாரமாக நடப்பார்கள் (கலா 5:22-23, 1கொரி 12:4-11, கொலோ 3:12-14)

2. மாம்சத்தின்படி நடப்பதற்கும் ஆவியின்படி நடப்பதற்கும் வேறுபாடுகள்

ரோமர் 8:6 மாம்சசிந்தை மரணம், ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்

ரோமர் 8:7 எப்படியென்றால் மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை, அது தேவனுடைய நியாயப் பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும் கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கிறது.

ரோமர் 8:8 மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்க மாட்டார்கள்

ரோமர் 8:9 தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்கு உட்பட்டவர்களாயிராமல் ஆவிக்கு உட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல.

ரோமர் 8:10 மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும் ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும்

ரோமர் 8:11 அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்

ரோமர் 8:12 ஆகையால் சகோதரரே, மாம்சத்தின்படி பிழைப்பதற்கு நாம் மாம்சத்துக்குக் கடனாளிகளல்ல

ரோமர் 8:13 மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்

"மாம்சசிந்தை" – மாம்சத்திற்குரிய பிரகாரம் சிந்திப்பது மாம்ச சிந்தை. ஆவிக்குரிய பிரகாரம் சிந்திப்பது ஆவியின் சிந்தை. (ரோமர் 8:5)

"மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை" – மாம்சசிந்தை மாம்சத்தின் ஆசைகளுக்குக் கீழ்ப்படியும். அது தேவனுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாது (ரோமர் 8:7) மாம்சம் பாவத்திற்குத் தன்னை ஒப்புக் கொடுத்திருப்பதனால் மாம்சத்தினால் தேவனுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படியவும் முடியாது. மாம்சம் தேவனுக்கு விரோதமாகக் கலகம் பண்ணுகிறது. இந்தக் கலகக்குணம் நின்றுபோனால் மாம்சம் பாவம் செய்யாது. தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணும் வரையிலும் மாம்சத்தினால் தேவனைப் பிரியப்படுத்த முடியாது. (ரோமர் 8:7-8

"கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல" – தேவனுடைய ஆவி நமக்குள் இருக்க வேண்டும். அப்போதுதான் நாம் மாம்சத்திற்குட்பட்டவர்களாக இராமல் ஆவிக்கு உட்பட்டவர்களாக இருப்போம். பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம் பண்ணுகிறார் ஆகையினால் நாம் ஆவிக்குரிய காரியங்களையே சிந்திக்க வேண்டும்.

ரோமர் - தொகுப்புரை

8 அதிகாரம்

(2கொரி 5:17,18) இயேசு கிறிஸ்து நமக்குள் இருக்கும்போது நமது சரீரம் பாவத்திற்கு மரித்ததாக இருக்கிறது. நாம நீதியின் நிமித்தம் ஜீவிக்கும்போது ஆவியானவர் நமமுடைய ஜீவியத்தை ஆளுகை செய்வார் (ரோமர் 8:10) நமக்குள் வாசம் பண்ணும் பரிசுத்த ஆவியானவர் சாவுக்கேதுவான நமது சரீரங்களைத் தம்முடைய ஆவியினாலே உயிர்ப்பிப்பார் (ரோமர் 8:9)

உயிர்ப்பி (quicken) - ζωοποιέω - zooopoieoo - 2227

விளைச்சொல - உயிர்ப்பி உயிர்கொடு (Make alive) (1கொரி 15:22); (give life) (2கொரி 3:6; கலா 3:21). (quicken) (யோவான் 5:21, யோவான் 6:63; ரோமர் 4:17 ரோமர் 8:11 1கொரி 15:36,45 1தீமோ 6:13; 1பேதுரு 3:18)

"மாம்சத்தின்படி பிழைப்பதறகு நாம மாம்சத்துக்குக் கடனாளிகளலல" - நாம மாம்சத்திறகு எநத வழியிலும கடனபட்டவாகள அலல ஆகையினால நாம மாமசத்தின பிரகாரம் ஜீவிக்கவேணடியதிலலை நமமுடைய ஜீவியத்தினமீது மாம்சத்திறகு எவவித ஆளுகையும் இலலை நாம் மாம்சத்தின பாவஙகளில ஜீவிக்ககூடாது. பாவத்தில தொடர்நது ஜீவித்தால், மரணம் நமககு நிசசயம. மாம்சத்தின கிரியைகளை பரிசுதத ஆவியானவரின உதவியினால மரணத்திறகு உட்படுத்த வேணடும். அப்போது நாம் பிழைப்போம். (ரோமர் 8:12-13; கலா 5:16-26; கொலோ 3:5-10)

மாம்சத்திற்குரிய ஜீவியத்திற்கும், ஆவிக்குரிய ஜீவியத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடுகள்

1 மாம்சத்துக்குரியவன் மாம்சத்தின்படி நடக்கிறான ஆவிக்குரியவன ஆவியின்படி நடக்கிறான (ரோமர் 8:5)

2 மாம்சத்துக்குரியவன் மாம்சத்திற்கு உரியதைச் சிந்திக்கிறான் ஆவிக்குரியவன் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறான்

3 மாம்சசிந்தை மரணம்.......ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம் (ரோமர் 8:6)

4 மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை........ஆவியின் சிந்தை தேவனுக்கு விரோதமான பகையல்ல. (ரோமர் 8:7)

5. மாமசசிந்தை தேவனுடைய நியாயப் பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமல் இருக்கிறது. ...ஆவியின் சிந்தை தேவனுடைய நியாயப் பிரமாணத்துக்குக் கீழ்ப்படிகிறது

6 மாமசசிந்தை தேவனுடைய நியாயப் பிரமாணத்துக்குக் கீழ்ப்படியக் கூடாமலும் இருக்கிறது ......ஆவியின் சிந்தை தேவனுடைய நியாயப் பிரமாணத்துக்குக் கீழ்ப்படியக்கூடியதாக இருக்கிறது

7 மாமசத்துக்குரியவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்கமாட்டார்கள் .....ஆவிக்குரியவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்கிறார்கள் (ரோமர் 8:8)

8 மாம்சத்துக்கு உரியவர்களிடம் தேவனுடைய ஆவி அவர்களில வாசமாக இராது ...... ஆவிக்குரியவர்களிடம் தேவனுடைய ஆவி அவர்களில வாசமாக இருக்கிறது.

9 மாமசத்துக்குரியவன கிறிஸ்துவின் ஆவியில்லாதவன ஆவிக்குரியவன கிறிஸதுவின ஆவி உடையவன (ரோமர் 8:9)

10 மாம்சத்துக்குரியவன பாவத்திற்கு ஜீவிக்கிறான ஆவிக்குரியவன பாவத்திற்கு மரித்திருக்கிறான

11 மாம்சத்துக்குரியவனுடைய ஆவி தேவனுக்கு மரித்திருக்கிறது. ஆவிக்குரியவனுடைய ஆவி தேவனுக்கு ஜீவிக்கிறது.

12 மாம்சத்திற்குரியவனிடம் கிறிஸ்து இல்லை. ஆவிக்குரியவனிடம் கிறிஸ்து ஜீவிக்கிறார் (ரோமர் 8:10)

8 அதிகாரம்

13. மாம்சத்திற்குரியவனுடைய ஜீவியம் பாவமான ஜீவியம். ஆவிக்குரியவனுடைய ஜீவியம் நீதியின் ஜீவியம்

14. மாம்சத்திற்குரியவனிடம் பரிசுத்த ஆவியானவர் இல்லை. ஆவிக்குரியவனிடம் பரிசுத்த ஆவியானவர் வாசம்பண்ணுகிறார்

15. மாம்சத்திற்குரியவனிடம் சரீரம் உயிர்ப்பிக்கப்பட மாட்டாது. ஆவிக்குரியவனிடம் சரீரம் உயிர்ப்பிக்கப்படும்.

16. மாம்சத்திற்குரியவன் மாம்சத்திற்குக் கடனாளியாக இருக்கிறான்___ ஆவிக்குரியவன் மாம்சத்திற்குக் கடனாளியாக இல்லை (ரோமர் 8:12)

17. மாம்சத்திற்குரியவனுக்கு ஆவியானவருடைய உதவியில்லை___ ஆவிக்குரியவனுக்கு ஆவியானவருடைய உதவி உண்டு (ரோமர் 8:13)

18. மாம்சத்திற்குரியவனுடைய முடிவு மரணம்___ஆவிக்குரியவனுடைய முடிவு ஜீவன்

3. பாவத்திலிருந்து விடுதலை பெறுவதினால் உண்டாகும் விளைவுகள்

ரோமர் 8:14 மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்

ரோமர் 8:15 அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப் பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்

ரோமர் 8:16 நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார்

"அடிமைத்தனத்தின் ஆவி" **(spirit of bondage)** - அடிமைத்தன ஆவியானவது சாத்தானுக்குரியது. (எபே 2:2 யோவான் 8:44 1யோவான் 3:8 எபி 2:14-15) பயத்திலும் பயங்கரத்திலும் கட்டப்படுவதற்கு நாம் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறவில்லை விடுதலையின் ஆவியையும் புத்திரசுவிகாரத்தின் ஆவியையும் பெற்றிருக்கிறோம் தேவன் நமது அடிமை விலங்குகள் எல்லாவற்றையும் உடைத்திருக்கிறபடியினாலே நாம் சுயாதீனமுடையவர்களாக இருக்கிறோம்

"புத்திரசுவிகாரத்தின் ஆவி" **(the Spirit of adoption)** - தேவன் நமக்குத் தரும் ஆவி (சகேயு 5:5; ரோமர் 8:2,9,11,15-16 கலா 4:4-6)

"புத்திரசுவிகாரம்" **(adoption, Sonship)** - (ரோமர் 8:15,23; ரோமர் 9:4, கலா 4:5 எபே 1:5) சுவிகார புத்திரராக இருக்கிறவர்கள் குடும்பத்திலுள்ள மற்ற அங்கத்தினர்களுக்கு என்னென்ன உரிமைகள் உள்ளனவோ அவைகள் அனைத்தையும் பெற்றுக் கொள்ளும் சிலாக்கியம் உடையவர்கள்

"அப்பா பிதாவே" **(Abba, Father)** அடிமைகள் தங்களுடைய எஜமான்களை அப்பா பிதாவே என்று அழைப்பதற்கு அவர்களுக்கு உரிமையில்லை

"ஆவியானவர்தாமே" - இந்த வாக்கியம் பரிசுத்த ஆவியானவருடைய ஆள்தத்துவத்தை விளக்குகிறது.

"நம்முடைய ஆவி" - நம்முடைய சிந்தை (1கொரி 2:11)

ரோமர் - தொகுப்புரை

8 அதிகாரம்

4. பாவத்திலிருந்து விடுதலை பெறுவதினால் உண்டாகும் நித்திய விளைவுகள்

ரோமர் 8:17 நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்.

ரோமர் 8:18 ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்.

ரோமர் 8:19 மேலும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக் கொண்டிருக்கிறது.

ரோமர் 8:20 அதேனென்றால், சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே,

ரோமர் 8:21 அந்தச் சிருஷ்டியானது சுய இஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தினவராலேயே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது.

ரோமர் 8:22 ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப்படுகிறது.

ரோமர் 8:23 அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம்.

ரோமர் 8:24 அந்த நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். காணப்படுகிறதை நம்புகிறது நம்பிக்கையல்ல; ஒருவன் தான் காண்கிறதை நம்பவேண்டுவதென்ன?

ரோமர் 8:25 நாம் காணாததை நம்பினோமாகில், அது வருகிறதற்குப் பொறுமையோடே காத்திருப்போம்.

தீர்க்கதரிசன எண் - 1

"நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும் ...." (ரோமர் 8:17-25) - நாம் தேவனுடைய பிள்ளைகள் மட்டுமல்லாமல் தேவனுடைய சுதந்தரராகவும் இருக்கிறோம் (ரோமர் 8:17; எபே 3:6; எபி 11:9; 1பேதுரு 3:7).

"அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்" - தேவனுக்காக நாம் பாடுகளை அனுபவிக்க வேண்டும். நீடிய பொறுமையோடு நமக்கு வரும் பாடுகளைச் சகித்துக் கொள்வதற்கு நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். (ரோமர் 8:17-18; கொலோ 1:24; 2தீமோ 2:12; 2தீமோ 3:12)

"கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு" - இயேசு கிறிஸ்துவிற்காகப் பாடுகளை அனுபவிக்கிற நாம் அவருடனேகூட மகிமை அடைவோம் (கொலோ 3:4; 1தெச 4:13-17; 1கொரி 15:23,51-58).

"இக்காலத்துப் பாடுகள்" - இக்காலத்தில் நமக்குப் பல பாடுகள் வரலாம். நமக்கு நித்திய மகிமை நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்த மகிமையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இக்காலத்துப் பாடுகள் ஒன்றுமேயில்லை (2கொரி 4:17; 1கொரி 2:9).

ஆவலோடே காத்துக் கொண்டிருத்தல் (expectation)

ἀποκαραδοκία

apokaradokia 603

8 அதிகாரம்

பெண்பால் பெயர்ச்சொல் - காத்துக்கொண்டிருத்தல். வாஞ்சை (anxious looking with outstretched body) பிலி 3:20)

சிருஷ்டி (creature) - κτίσις - ktisis - 2937

பெண்பால் பெயர்ச்சொல் - சிருஷ்டி உண்டாதல் கட்டளை (Creation) மாற்கு 10:6 மாற்கு 13:19 ரோமர் 1:20 ரோமர் 8:22 2பேதுரு 3:4 வெளி 3:14) (creature) மாற்கு 16:15 ரோமர் 1:25 ரோமர் 8:19-21,39 2கொரி 5:17; கலா 6:15 கொலோ 1:15,23 எபி 4:13 (building) எபி 9:11) (ordinance) 1பேதுரு 2:13) சர்வ சிருஷ்டியும் தனக்கு வந்திருக்கும் சாபங்கள் எப்போது அகன்று போகும் என்று காத்துக் கொண்டிருக்கின்றன

காத்துக்கொண்டிரு (wait) - ἀπεκδέχομαι - apekdechomai - 553

வினைச்சொல் காத்திரு காத்துக்கொண்டிரு எதிர்பார் (wait for) (ரோமர் 8:19,23,25 1கொரி 1:7 கலா 5:5) look for (பிலி 3:20 எபி 9:28; 1பேதுரு 3:20)

அழிவுக்குரியது (vanity) ματαιότης - mataiotees - 3153

பெண்பால் பெயர்ச்சொல் அழிவுக்குரிய, வீணான, வீண் (diappointing misery) (ரோமர் 8:20 எபே 4:17 2பேதுரு 2:18 இந்த வார்த்தை செப்டுவஜிந்திலும் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. பிர 1:14 பிர 2:11,17 பிர 9:9)

"அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும்" - புதிய வானமும் புதிய பூமியும் உண்டாக்கப்படும் காலத்தை இந்த வசனம் குறிக்கிறது (2பேதுரு 3:10-13 எபி 1:10-12 எபி 12:26-28 ஏசா 65:17 ஏசா 66:22-24 வெளி 21:22

அழிவு (corruption) φθορά - phthora - 5356

பெண்பால் பெயர்ச்சொல் - அழிவு, கேடு (moral corruption, decay, ruin, depravity, wickedness) (ரோமர் 8:21 1கொரி 15:42,50 கலா 6:8 2பேதுரு 1:4 2பேதுரு 2:12,19 "perish" (கொலோ 2:22) " be destroyed" (2பேதுரு 2:12)

"தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனம்" - நித்தியத்தின் மகிமை (1கொரி 2:9 ரோமர் 8:18

"சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப்படுகிறது" ஒரு கர்ப்ப ஸ்திரீ பிள்ளை பெறும்போது எவ்வாறு வேதனை அடைவாளோ அதுபோன்று சர்வ சிருஷ்டியும் பிரசவவேதனைப்பட்டு தவிக்கிறது.

"ஆவியின் முதற்பலனை கனைப் பெற்ற நாமுங்கூட" துன்மார்க்கர் மட்டுமல்லாமல், ஆவிக்குரியவர்களகூட அதாவது இரட்சிக்கப்பட்டவர்களகூட தேவனுடைய சரீர மீட்புக்குக் காத்துக் கொண்டிருக்கிறோம். புத்திர சுவிகாரம் எப்போது வருமென்று நமக்குள்ளே தவிக்கிறோம். (1கொரி 15:51-58, பிலி 3:21)

முதற்பலன் (first blessing) - ἀπαρχή - aparchee - 536

பெண்பால் பெயர்ச்சொல் முதற்பலன் மாம்சமான பாவமேலும் ஊற்றப்பட்ட ஆவியானவருடைய அருள்மாரி (ரோமர் 8:23 ரோமர் 11:16 ரோமர் 16:5, 1கொரி 15:20,23 1கொரி 16:15, யாக் 1:18; வெளி 14:4)

8 அதிகாரம்

தவி (groan) - στενάζω stenazoo - 4727

விணைச்சொல் - பெருமூச்சுவிடு, தவி, விரோதமாயிரு, துக்கத்தோடிரு **(to sigh deeply, bewail)** (ரோமர் 8:23, மாற்கு 7:34; 2கொரி 5:2,4 எபி 13:17; யாக் 5:9

ஏகமாய்த் தவி συστενάζω - systenazoo - 4959

விணைச்சொல் - ஏகமாய்த் தவி ரோமர் 8:22

"நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம்" - இந்த வாக்கியத்தில் புத்திர சுவிகாரம் என்பது அழிவுக்குரிய நமது சரீரங்கள் மறுரூபமடைந்து அழியாமைக்குரிய சரீரமாக மாறுவதைக் குறிக்கும் புத்திர சுவிகாரத்தின் மூலமாக ஒருவர் ஒரு குடும்பத்திலிருந்து மற்றொரு குடும்பத்திற்குரியவராக மாறுகிறார் அதுபோல தேவனுடைய பரிசுத்தவான்கள் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளுமாறு தேவனுடைய குடும்பத்தில் சுவிகார புத்திரராக ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள் (பிலி 3:21, 1கொரி 15:51-58)

"நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப் பட்டிருக்கிறோம்" - நாம் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வதற்கு முன்பாக பல காரியங்கள் நமக்கு நேரிடலாம் நமது இரட்சிப்பு தேவனிடத்தில் நாம் வைத்திருக்கும் நமது நம்பிக்கையின் மூலமாகவே வருகிறது (யோவான் 6:27)

5. விசுவாசிகளிடத்தில் திரித்துவ தேவனின் கிரியை

(1) பரிசுத்த ஆவியானவரின் கிரியை - (யோவான் 3:5 14:16-17,26 15:17-13,25-26; 1கொரி 12

ரோமர் 8:26 அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார் நாம் ஏற்றபடி வேண்டிக் கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலி ருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெரு மூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்

ரோமர் 8:27 ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின் படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால் இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்

பரிசுத்த ஆவியானவர் நமக்கு அருளும் ஆசீர்வாதங்கள்

1 பாவத்திலிருந்து விடுவிக்கிறார் (ரோமர் 8:2)

2 மரண தண்டனையிலிருந்து விடுவிக்கிறார் (ரோமர் 8:2

3 நீதியை நிறைவேற்றுகிறார் (ரோமர் 8:4-5)

4 விசுவாசிகளிடத்தில் வாசம் பண்ணுகிறார் (ரோமர் 8:9-11

5. ஜீவனைத் தருகிறார் (ரோமர் 8:10

6. அழிவுக்குரிய சரீரத்தை உயிர்ப்பிக்கிறார் (ரோமர் 8:11

7 ஆவிக்குரிய அவயவங்களை அழிக்கிறார் (ரோமர் 8:13)

8 தேவனுடைய பிள்ளைகளை வழிநடத்துகிறார் (ரோமர் 8:14

9 தேவனுடைய குடும்பத்தில் சுவிகாரம் எடுக்கிறார் (ரோமர் 8:15

10 பிள்ளைகளாய் இருக்கிறோம் என்று சாட்சி பகருகிறார் (ரோமர் 8:16

ரோமர் – தொகுப்புரை

8 அதிகாரம்

11 பலவீனங்களில் உதவி செய்கிறார் ரோமர் 8:26

12 பரிசுத்தவான்களுக்காக பரிந்துபேசி வேண்டுதல் செய்கிறார் ரோமர் 8:26

உதவிசெய்கிறார் (helpeth) - συναντιλαμβάνομαι - synantilambanomai - 4878

வினைச்சொல் - உதவிசெய். ஒருவருக்கொருவர் உதவி புரிதல் (joint help) இரண்டுபேர் ஒரே அளவு சுமையைத் தூக்கிச் செல்லும்போது ஒருவருக்கொருவர் உதவி புரிதல் அல்லது இருவரும் சேர்ந்து அந்தச் சுமையைத் தூக்குதல்.

"பலவீனங்கள்" (infirmities) - நமது சரீரப் பிரகாரமான சிந்தை பிரகாரமான நீதிநெறிப் பிரகாரமான பலவீனங்கள் மத் 8:17

"பெலவீனங்கள்" (infirmities) - இது சரீரத்தில் பெலவீனம், சிந்தையில் பெலவீனம். சரீர வியாதி ஆகியவற்றைக் குறிக்கும். இவையெல்லாவற்றையுமே இயேசு கிறிஸ்து சிலுவையில் சுமந்து, ஏசாயா 53 ஆவது அதிகாரத்தை நிறைவேற்றினார். எல்லா பெலவீனங்களும் வியாதியல்ல. ஆனால் வியாதிகள் பெலவீனத்தைத் தரும். லூக்கா 5:15; லூக்கா 7:21; லூக்கா 8:2, லூக்கா 13:11-12; யோவான் 5:5) ஆசாரியர்களுக்குப் பெலவீனம் இருந்தது. (எபி 5:2, எபி 7:28) அவர்கள் சரீரப்பிரகாரமாக ஆரோக்கியமாக இருந்தார்கள். ஆனாலும் பெலவீனமாக இருந்தார்கள் (லேவி 21:17-24)

எல்லா பரிசுத்தவான்களுமே ஏதாவது சில காரியங்களில் பெலவீனமானவர்களாக இருப்பார்கள் (ரோமர் 8:26) இந்தப் பெலவீனம் சரீர வியாதியைக் குறிக்கும் என்று கூறமுடியாது. (ரோமர் 14:1-2; ரோமர் 15:1)

பவுலுக்குச் சரீரத்தில் பாடுகளினால் பெலவீனம் இருந்தது. (2கொரி 11: 24-30, 2கொரி 12:5-10; கலா 4:13) அவனுடைய சரீரத்தில் வியாதியிருந்ததாகக் குறிப்பு எதுவும் இல்லை. பவுலின் சரீரத்தில் இருந்த முள் என்பது சாத்தானின் தூதனைக் குறிக்கும். அவன் பவுலுக்கு அடிகளையும், கலவரங்களையும் கிடைக்கச்செய்தான் (2கொரி 12:7)

சரீரம், ஆத்துமா, ஆவி, விசுவாசம், திறமை ஆகிய எதிலுமே பெலவீனம் இருக்க முடியும். அஸ்தினாய (astheneia) என்னும் கிரேக்கச்சொல்லே பெலவீனம், வியாதி என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

பலவீனம் (weakness) - ἀσθένεια - astheneia - 769

பெண்பால பெயர்ச்சொல் - பலவீனம் (weakness) (1கொரி 2:3; 1கொரி 15:43; 2கொரி 12:9 2கொரி 13:4; எபி 11:34) பிணி வியாதி (infirmity) ரோமர் 6:19 ரோமர் 8:26; 2கொரி 11:30; எபி 4:15 எபி 5:2; எபி 7:28

"நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால்" - நமது சிந்தையைப் பரிசுத்த ஆவியானவர் ஆளுகை செய்ய வேண்டும். அப்போதுதான் தேவனுடைய சித்தத்தின்மீது நமக்குப் பிரியமுண்டாகும். பரிசுத்த ஆவியானவர் நம்மை எவி வழிநடத்தவில்லையென்றால் நாம் ஜெபம் பண்ணும்போது தேவனுக்குப் பிரியமில்லாத பல தவறான காரியங்களுக்காக ஜெபித்துக் கொண்டிருப்போம். ஆகையினால் ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்.

வேண்டுதல் செய் (intercession) - ὑπερεντυγχάνω hyperentynchanoo - 5241

வினைச்சொல் - வேண்டுதல் செய், ஒருவருக்காக மற்றொருவர் வேண்டுதல் செய்வது.

பெருமூச்சுக்கள் (groaning) στεναγμός stenagmos 4726

ரோமர் - தொகுப்புரை

8 அதிகாரம்

ஆண்டால் பெயர்ச்சொல - பெருமூச்சு - இருதயத்திலிருந்து வெளிவரும் வார்த்தைகளால விவரிக்க முடியாத பெருமூச்சுக்கள (அப 7:34 ரோமர் 8:26)

"இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்" - இயேசு கிறிஸ்துவிற்கு ஆவியின் சிந்தை இன்னதென்று தெரியும். பிதாவாகிய தேவன் (யோவா 28:9; எரே 17:10) குமாரனாகிய தேவன் (வெளி 2:23) பரிசுத்த ஆவியானவராகிய தேவன் (யோவா 2:10) ஆகிய மூவருமே இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர்கள்

வேண்டுதல் செய்தல் (intercession) - ἐντυγχάνω - entynchanoo - 1793

வினைச்சொல - வேண்டுதல் செய். விண்ணப்பம் பண்ணு. வருந்திக்கேள் - இரட்சிப்பின் எல்லாப் பகுதிகளிலும் நம்முடைய சார்பாக வேண்டுதல் பண்ணுவது. தேவனோடு நமது காரியங்களைப் பரிந்து பேசுவது. (ரோமர் 8:27,34; ரோமர் 11:2 எபி 7:25) அப 25:24 ஆவது வசனத்தில "வருந்திக் கேட்டுக் கொள்ளுதல்" "deal with" என்று மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது.

(2) பாவத்திலிருந்து விடுதலை பெற்றவர்களுடைய ஜீவியத்தில் தேவனுடைய கிரியை - யோவான் 12:26; 14:26; 15:26, 16:23-26 2கொரி 3:3-6; பிலி 2:13; தீத்து 2:11-12)

ரோமர் 8:28 அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப் பட்டவர்களாய் தேவனிடத்தில அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்

ரோமர் 8:29 தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்

ரோமர் 8:30 எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார் எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான் களாக்கியுமிருக்கிறார் எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்

ரோமர் 8:31 இவைகளைக்குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?

ரோமர் 8:32 தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர் அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?

ரோமர் 8:33 தேவன் தெரிந்து கொண்டவர்கள்மேல குற்றஞ் சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர்

ஏதுவாக நட (work together) - συνεργέω - synergeoo - 4903

வினைச்சொல் - ஏதுவாக நட, கூடக்கிரியை நடப்பி, உடன் வேலை செய் (மாற்கு 16:20, ரோமர் 8:28, 1கொரி 16:16; 2கொரி 6:1; யாக் 2:22) தேவனுடைய பிள்ளைகளுக்கு ஆதரவாகத் தேவனுடைய பராமரிப்பானது அவர்கள் செய்யும் எல்லாக் காரியங்களிலும் ஏதுவாக இருக்கும். ஏனென்றால் தேவனுடைய பிள்ளைகள தேவனுடைய சித்தத்திற்கும் அவருடைய நோக்கத்திற்கும் கீழ்ப்படிந்து நடக்கிறார்கள்

முன்னறிதல (foreknow) προγινώσκω prginooskoo - 4267

8 அதிகாரம்

வினைச்சொல் - முன்னறி, முன்னறிதல் (to know beforehand. Knew before) (2பேதுரு 3:17); (foreknew) ரோமர் 8:29; ரோமர் 11:2). (foreordain) (1பேதுரு 1:20, ரோமர் 11:1); know (அப் 26:5)

முன்னறிவு (foreknowledge) - προγνωσις - prognoosis - 4268

பெண்பால் பெயர்ச்சொல் - முன்னறிவு (foreknowledge) (அப் 2:23; 1பேதுரு 1:2)

முன்குறித்திருக்கிறார் (predestinate) - προορίζω - proorizoo - 4309

வினைச்சொல் - முன்குறித்திரு ஏற்படுத்து (foreordain. Determine before) (அப் 4:28) (ordain) (1கொரி 2:7) (predestinate) ரோமர் 8:29-30 எபே 1:5,11). தேவன் முன்னறிகிறார் முன்குறித்திருக்கிறார் அதே சமயத்தில் அவர் எல்லோரையுமே இரட்சிப்பை பெற்றுக் கொள்ளுமாறு அழைக்கிறார் தேவனுடைய அழைப்பை ஏற்றுக் கொள்வதும் ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணிப்பதும் மனுஷருடைய சுயாதீன முடிவு. (யோவான் 3:16. 1தீமோ 2:4 2பேதுரு 3:9 வெளி 22:17) தேவனுடைய இரட்சிப்பை யாரெல்லாம் ஏற்றுக் கொள்கிறார்களோ அவர்களைத் தேவன் முன்னறிந்து முன்குறித்திருக்கிறார் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாக இருப்பதற்கு அவர்களை முன்னறிந்து முன்குறித்திருக்கிறார் (ரோமர் 8:29)

தேவனுடைய இரட்சிப்பின் அழைப்பை ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணிக்கிறவர்களை நித்திய நரகத்தில் பங்குபெறுமாறு முன்னறிந்து முன் குறித்திருக்கிறார் (ஏசா 66:22-24 வெளி 14:9-11 மத் 25:41-46)

ஒப்பாயிருப்பது (conformed) - σύμμορφος - symmorphos - 4832

பெயரடை - ஒப்பாயிருக்கிற (ரோமர் 8:29, பிலி 3:21) - மனுஷருடைய உயிர்த்தெழுந்த சரீரம் தேவனுடைய மகிமையுள்ள சரீரத்திற்கு ஒப்பாயிருக்கும். சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்கிறவர்கள் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருக்க வேண்டும் என்பதையே தேவன் முன்னறிந்து முன்குறித்திருக்கிறார்

முதற்பேறானவர் (firstborn) - πρωτότοκος - prootototokos - 4416

பெயரடை - முதற்பேறான முதற்பிறந்த (லூக்கா 2:7) கொலோ 1:15)

"எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார் எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார் எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்" தேவன் முன்குறித்து முன்னறிவித்திருக்கிறார் எல்லோரையும் இரட்சிக்கப்படுமாறு அழைக்க வேண்டுமென்று தேவன் முன்குறித்திருக்கிறார் ஆனால் இரட்சிக்கப்படுகிறவர்கள் மட்டுமே தேவனால் முன்குறிக்கப்பட்டவர்கள் அவர்களைத் தேவன் நீதிமான்களாக்கி மகிமைப்படுத்தியிருக்கிறார் இரட்சிக்கப்படும் அழைப்பு எல்லோருக்கும் பொதுவானது. ஆயினும் இரட்சிக்கப் பட்டவர்களுக்கு மட்டுமே தேவனுடைய சிலாக்கியம் உரியது. (யோவான் 3:16; 1தீமோ 2:4; 2பேதுரு 3:9, வெளி 22:17; மாற்கு 16:16, அப் 2:38, அப் 3:19) இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்கிறவர்கள் இரட்சிக்கப் படுகிறார்கள் இவர்களே தேவனால் முன்னறியப்பட்டு, முன்குறிக்கப்பட்டவர்கள் (ரோமர் 8:11-13,28

ரோமர் – தொகுப்புரை

8 அதிகாரம்

"தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?" - தேவன் நம்முடைய பட்சத்தில் இருக்கிறார் தம்முடைய ஆசீர்வாதங்களை நமக்கு இலவசமாகத் தருகிறார் தேவனே நமது நியாயாதிபதி இயேசு கிறிஸ்துவும் பரிசுத்த ஆவியானவரும் நமக்காகப் பரிந்து பேசுகிறவர்கள் ஆகையினால் கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மை யாராலும் அல்லது எதனாலும் பிரிக்க முடியாது. நம்முடைய சத்துருக்களிடமிருந்து இயேசு கிறிஸ்துவின் மூலமாக நாம் ஜெயம் கொள்கிறவர்களாக இருக்கிறோம்.

குற்றஞ்சாட்டு (charge) - ἐγκαλέω - enkaleoo - 1458

வினைச்சொல் - வழக்காடு. குற்றஞ்சாட்டு. விசாரிக்கப்படு. குற்றஞ்சாட்டப்படு (call to judicial account) (அப் 19:38)

தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் (elect) - ἐκλεκτός - eklektos - 1588

பெயரடை - தெரிந்துகொள்ளப்பட்ட (லூக்கா 18:7

(3) பாவத்திலிருந்து விடுதலை பெற்றவர்களுடைய ஜீவியத்தில் கிறிஸ்துவினுடைய கிரியை - (மத் 3:11, 16:18; யோவான் 1:33; 7:37-39; அப் 1:4-8; எபே 1:22; 4:11 எபி 2:14-18 14:16)

ரோமர் 8:34 ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர் அவரே எழுந்துமிருக்கிறவர் அவரே தேவனுடைய வலது பாரிசத்திலும் இருக்கிறவர், நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே

ரோமர் 8:35 உமது நிமித்தம் எந்நேரமும் கொலையுண்டுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப் போல எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும்,

ரோமர் 8:36 கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப்பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ?

ரோமர் 8:37 இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங் கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே

ரோமர் 8:38 மரணமானாலும் ஜீவனானாலும் தேவதூதர்களானாலும் அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும் நிகழ்காரியங் களானாலும் வருங்காரியங்களானாலும்

ரோமர் 8:39 உயர்வானாலும் தாழ்வானாலும் வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்க மாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்

இயேசு கிறிஸ்துவின் மீட்கும் கிரியைகள்

1. கிறிஸ்துவின் மரணம்
2. உயிர்த்தெழுதல்
3. பரமேறுதல்
4. பரிந்துபேசுதல்

"நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே" - (ரோமர் 8:27,34, எபி 7:25)

ரோமருக்கு எழுதின நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன வசனம் - 1

"உமது நிமித்தம் எந்நேரமும் கொலையுண்டுகிறோம் அடிக்கப்படும் ஆடுகளைப் போல எண்ணப்படுகிறோம்" (ரோமர் 8:36; சங் 44:22)

8 அதிகாரம்

"கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?" - கிறிஸ்து நம்மிடத்தில் அன்பாக இருக்கிறார் நம்மிடத்தில் அன்புகூருவதிலிருந்து கிறிஸ்துவை யாரும் தடைபண்ண முடியாது. அதுபோலவே நாமும் கிறிஸ்துவின்மீது அன்பாக இருக்கிறோம் அவர்மீது அன்புகூருவதிலிருந்து நம்மையும் யாரும் தடைபண்ண முடியாது. இங்கு பவுல் தடைபண்ணக்கூடிய ஏழு காரியங்களைப் பற்றிக் கூறுகிறார் இவை மனுஷனை மட்டுமே பாதிக்கும் இயேசு கிறிஸ்துவை பாதிக்காது. கிறிஸ்துவின்மீது நாம் அன்பாக இருப்பதற்கு இவை நம்மைத் தடைபண்ணுவதற்கு வாய்ப்புள்ளது. இயேசு கிறிஸ்துவின்மீது நாம் அன்புகூருவதற்குத் தடைபண்ணக்கூடிய எந்தக் காரியத்தையும் நமது ஜீவியத்தில் அனுமதிக்கக்கூடாது. இதில் எச்சரிக்கையாக இருப்போமென்றால் நமது ஆவிக்குரிய ஜீவியத்தில் பின்வாங்கிப் போகாமல் முன்னேறிச் செல்வோம்.

"அதிகாரங்கள்" (principalities) - எபே 2:2, எபே 6:12 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் சாத்தானுடைய [redacted].

"சிருஷ்டி" (creature) - சிருஷ்டிக்கப்பட்ட எந்தச் சிருஷ்டியும் (ரோமர் 8:19

"தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாது" - ரோமர் 8:35-39 ஆகிய வசனங்களில் 17 காரியங்களைப் பற்றி பவுல் குறிப்பிட்டிருக்கிறார் ஒருவர் ஆவியில் ஜீவித்து ஆவியில் நடக்கும்போது இந்தக் காரியங்கள் எதுவும் விசுவாசியைப் பாதிக்காது.

ரோமர் 8:35-39 ஆகிய வசனங்களில் பவுல் கூறியிருக்கும் தடையான காரியங்கள்

1. உபத்திரவம் (tribulation)
2. வியாகுலம் (distress)
3. துன்பம் (persecution)
4. பசி (famine)
5. நிர்வாணம் (nakedness)
6. நாசமோசம் (peril)
7. பட்டயம் (sword)
8. மரணம் (death)
9. ஜீவன் (life)
10. தேவதூதர்கள் (angels)
11. அதிகாரங்கள் (principalities)
12. வல்லமைகள் (powers)
13. நிகழ்காரியங்கள் (things present)
14. வருங்காரியங்கள் (things to come)
15. உயர்வு (height)
16. தாழ்வு (depth)
17. வேறெந்தச் சிருஷ்டி (any other creature)

ரோமர் 6:14-23; ரோமர் 8:1-13, கலா 5:16-26 ஆகிய வசனங்களில் பவுல் நமக்கு உபதேசமாகக் கூறியிருக்கிற காரியங்களின் பிரகாரம் ஒரு விசுவாசி தன்னுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நடந்து கொள்ளும்போது அவர் தனது ஆவிக்குரிய போராட்டத்தில் ஜெயம் பெறுவார்

"நிச்சயித்திருக்கிறேன்" ரோமர் 8:38-39 ஆகிய வசனங்களில் பவுல் ஒரு முக்கியமான உபதேசத்தைக் கூறியிருக்கிறார் தேவனிடத்தில் பவுல் அன்பு வைத்திருக்கிறார் இந்த அன்பிலிருந்து எந்தக் காரியமும் தன்னைப் பிரிக்கமுடியாது என்பதில் பவுல் நிச்சயமாக இருக்கிறார் அவருக்குள் எந்தச் சந்தேகமும் இல்லை. தேவனிடத்தில் பவுல் வைத்திருக்கும் அன்பு மிகவும் உறுதியானது ஆழமானது.

ரோமர் – தொகுப்புரை

9 அதிகாரம்

IX. **இஸ்ரவேலரின் காலம்** - (ரோமர் 9-11)

1. **இஸ்ரவேலும் தேவனுடைய சர்வ ஆளுகையும்** – (ரோமர் 9:1-24)

(1) இஸ்ரவேலின்மீது பவுலின் அன்பு

ரோமர் 9:1 எனக்கு மிகுந்த துக்கமும் இடைவிடாத மனவேதனையும் உண்டாயிருக்கிறது.

ரோமர் 9.2 நான் சொல்லுகிறது பொய்யல்ல. கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்லுகிறேன் என்று பரிசுத்த ஆவிக்குள் என் மனச்சாட்சியும் எனக்குச் சாட்சியாயிருக்கிறது.

ரோமர் 9.3 மாம்சத்தின்படி என் இனத்தாராகிய என் சகோதரருக்குப் பதிலாக நானே கிறிஸ்துவைவிட்டுச் சபிக்கப்பட்டவனாக வேண்டுமென்று விரும்புவேனே

"எனக்கு மிகுந்த துக்கமும் இடைவிடாத மனவேதனையும் உண்டாயிருக்கிறது" தன்னுடைய இனத்தாராகிய யூதஜனம் இயேசுகிறிஸ்துவின் நற்செய்தியைக் கேட்டு இரட்சிப்பை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதில் பவுல் மிகுந்த ஆர்வமுடையவராக இருக்கிறார் ஆனால் அவர்களோ இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ள மனதில்லாதவர்களாக இருக்கிறார்கள் இதனால் பவுலுக்கு மிகுந்த துக்கமும், இடைவிடாத மனவேதனையும் உண்டாயிருக்கிறது.

"நான் சொல்லுகிறது பொய்யல்ல கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்லுகிறேன்" ரோமர் 1-8 ஆகிய அதிகாரங்களில் தேவனுடைய கிருபையை பற்றி பவுல் விளக்கிக் கூறுகிறார் விசுவாசிக்கிற யாவருக்கும் அவர் யூதராக இருந்தாலும், புறஜாதியாராக இருந்தாலும் தேவனுடைய கிருபை அருளப்பட்டிருக்கிறது.

ரோமர் 9-11 ஆகிய அதிகாரங்களில் தேவன் யூதர்களை ஏன் அகற்றிப்போட்டார் என்பதற்கான காரணத்தை பவுல் எழுதியிருக்கிறார் அத்துடன் சுவிசேஷத்தின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு தேவன் புறஜாதியாரை எவ்வாறு அழைத்து தெரிந்தெடுத்திருக்கிறார் என்பதையும் பவுல் விளக்கிக் கூறுகிறார் தான் கூறுவது பொய்யல்ல என்றும், கிறிஸ்துவிற்குள் உண்மை என்றும் பவுல் வலியுறுத்தும்போது பரிசுத்த ஆவிக்குள் தனது மனச்சாட்சியும் தனக்குச் சாட்சியாக இருப்பதாக அறிவிக்கிறார்

"நானே கிறிஸ்துவை விட்டுச் சபிக்கப்பட்டவனாக வேண்டுமென்று விரும்புவேனே" - பவுல் சபிக்கப்படவேண்டிய அவசியம் எதுவும் இல்லை. ஆனால் யூதஜனங்களோ இயேசுகிறிஸ்துவை விட்டு சபிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள் அவர்களுக்குப் பதிலாகத் தானே சபிக்கப்பட்டவனாக வேண்டுமென்று பவுல் விரும்புகிறார் (யோவான் 15:13)

சபிக்கப்பட்டவன (accursed) - ἀνάθεμα - anathema - 331

பாலவேறுபாடு அல்லாத பொருச்சொல் தேவனுக்கென்று அர்ப்பணிக்கப்பட்டுள்ள ஒரு பொருள் தேவனுக்கென்று அர்ப்பணிக்கப்பட்டுள்ள ஒரு மிருகம் (ரோமர் 9.3 1கொரி 12.3 1கொரி 16:22 கலா 1:8-9

(2) யூதரின் சிலாக்கியம் (ரோமர் 2:17-29; 3:1-2)

ரோமர் 9:4 அவர்கள் இஸ்ரவேலரே புத்திரசுவிகாரமும் மகிமையும் உடன்படிக்கைகளும் நியாயப் பிரமாணமும் தேவாராதனையும் வாக்குத்தத்தங்களும் அவர்களுடையவைகளே

ரோமர் 9.5 பிதாக்கள் அவர்களுடையவர்களே மாம்சத்தின்படி கிறிஸ்துவும் அவர்களில் பிறந்தாரே இவர் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட சர்வத்திற்கும் மேலான தேவன் ஆமென்

ரோமர் - தொகுப்புரை

9 அதிகாரம்

"புத்திரசுவிகாரம்" **(adoption)** - தேவன் யூதர்களைச் சுவிகார புத்திரராகத் தெரிந்தெடுத்திருக்கிறார் (யாத் 4:22 உபா 14:1; உபா 32:18; எரே 31:9; ஓசி 11:1)

"மகிமை" **(glory)** - தேவனுடைய தெய்வீக பிரசன்னத்தை இந்த வார்த்தை விளக்குகிறது. (யாத் 16:7,10; யாத் 24:16-17 யாத் 40:34-35; லேவி 9:6,23 எண் 14:10,21; எண் 16:19,42; உபா 5:24 1சாமு 4:21-22; 1இராஜா 8:11)

"உடன்படிக்கைகள்" **(covenants)** - ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, மோசே தாவீது ஆகியோரோடும் இன்னும் மற்றவர்களோடும் தேவன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கைகள்

"நியாயப்பிரமாணம்" **(law)** - யூதருக்கு மட்டுமே நியாயப்பிரமாணம் கொடுக்கப் பட்டிருந்தது. (ரோமர் 2:12-16; ரோமர் 3:2 ரோமர் 9:4; உபா 5:3; உபா 29:14)

"தேவாராதனை" **(service of God)** - நியாயப்பிரமாணத்தில் கூறப்பட்டிருக்கும் சடங்குகள் (லேவி 1-12)

"வாக்குத்தத்தங்கள்" **(the promises)** - கானான் மேசியா ராஜ்யம் ஆகியவற்றைப் பற்றிய வாக்குத்தத்தங்கள்

"பிதாக்கள்" **(fathers)** - ஆபிரகாம் ஈசாக்கு, யாக்கோபு, பன்னிரெண்டு குமாரர்கள்

"மாம்சத்தின்படி கிறிஸ்துவும் அவர்களில் பிறந்தாரே" - (மத் 1:1-16, ரோமர் 1:3)

"சகலத்திற்கும் மேலான தேவன்" - (ரோமர் 2:28

(3) உண்மையான யூதன் - (2:28

ரோமர் 9:6 தேவவசனம் அவமாய்ப் போயிற்றென்று சொல்லக்கூடாது; ஏனென்றால், இஸ்ரவேல் வம்சத்தார் எல்லாரும் இஸ்ரவேலரல்லவே.

ரோமர் 9:7 அவர்கள் ஆபிரகாமின் சந்ததியாரானாலும் எல்லாரும் பிள்ளைகளல்லவே; ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் என்று சொல்லியிருக்கிறதே.

ரோமருக்கு எழுதின நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 2

"அவர்கள் ஆபிரகாமின் சந்ததியாரானாலும் எல்லாரும் பிள்ளைகளல்லவே ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும்____" (ரோமர் 9:7-14; ஆதி 17:15-19; ஆதி 18:10; ஆதி 25:1-34; மல் 1:1-3)

(4) இயற்கையான இஸ்ரவேலும் ஆவிக்குரிய இஸ்ரவேலும்

ரோமர் 9:8 அதெப்படியென்றால், மாம்சத்தின்படி பிள்ளைகளானவர்கள் தேவனுடைய பிள்ளைகளல்ல, வாக்குத்தத்தத்தின்படி பிள்ளைகளானவர்களே அந்தச் சந்ததி என்றெண்ணப்படுகிறார்கள்.

ரோமர் 9:9 அந்த வாக்குத்தத்தமான வார்த்தையாவது: குறித்த காலத்திலே வருவேன், அப்பொழுது சாராள் ஒரு குமாரனைப் பெறுவாள் என்பதே.

ரோமர் 9:10 இதுவுமல்லாமல், நம்முடைய பிதாவாகிய ஈசாக்கு என்னும் ஒருவனாலே ரெபெக்காள் கர்ப்பவதியானபோது,

ரோமர் 9:11 பிள்ளைகள் இன்னும் பிறவாமலும் நலவினை தீவினை ஒன்றும் செய்யாமலுமிருக்கையில், தெரிந்துகொள்ளுதலின்படியிருக்கிற அவருடைய தீர்மானம் கிரியைகளினாலே நிலைநிற்காமல் அழைக்கிறவராலே நிலைநிற்கும்படிக்கு,

9 அதிகாரம்

ரோமர் 9:12 மூத்தவன் இளையவனுக்கு ஊழியஞ்செய்வான் என்று அவளுடனே சொல்லப்பட்டது.

ரோமர் 9:13 அப்படியே, யாக்கோபைச் சிநேகித்து, ஏசாவை வெறுத்தேன் என்றும் எழுதியிருக்கிறது.

"வாக்குத்தத்தத்தின்படி பிள்ளைகளானவர்களே அந்தச் சந்ததி என்றெண்ணப்படுகிறார்கள்" - ரோமர் 4:1-25 கலா 3:13-14

"குறித்த காலத்திலே வருவேன் அப்பொழுது சாராள் ஒரு குமாரனைப் பெறுவாள்" - ஆதி 18:10)

"மூத்தவன் இளையவனுக்கு ஊழியஞ் செய்வான்" - (ஆதி 25:23)

"யாக்கோபைச் சிநேகித்து, ஏசாவை வெறுத்தேன்" - மல் 1:1-3) தேவன் இரண்டு குமாரர்களில் ஒருவனைச் சிநேகித்து, மற்றவனை வெறுப்பதினால தேவனிடத்தில அநீதி உண்டென்று சொல்லலாமா என்று பவுல் ஒரு கேள்வியைக் கேட்டு அதற்கு "சொல்லக்கூடாதே" என்று பதிலும் கூறுகிறார் யாக்கோபு, ஏசா ஆகிய இருவருடைய ஜீவியங்களையும் தேவன் முன்னறிந்திருக்கிறவர் தமது முன்னறிவின் பிரகாரமாகவே தேவன் யாக்கோபைத் தெரிந்து கொண்டார்

இதுபோலவே இஸ்ரவேல் ஜனங்களோடும், புறஜாதியாரோடும் தேவன் கிரியை நடப்பித்து வருகிறார் தேவன் இவ்விரு திறத்தாரையும் முன்னறிந்திருக்கிறவர் யூதர்கள் தேவனுக்கு எதிராகத் தொடர்ந்து கலகம் பண்ணி அவருக்குக் கீழ்ப்படியாமல் போவார்கள் என்பதையும் புறஜாதியார் தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணமாட்டார்கள் என்பதையும் தேவன் முன்னறிந்திருக்கிறார் அதன் பிரகாரமாகவே தேவன் இக்காலத்தில யூதரைத் தெரிந்தெடுப்பதற்குப் பதிலாகப் புறஜாதியாரைத் தெரிந்தெடுத்திருக்கிறார்

ஏசாவின் கிரியைகளுக்கோ யாக்கோபின் கிரியைகளுக்கோ, யூதர்ள் கிரியைகளுக்கோ, புறஜாதியார்ன் கிரியைகளுக்கோ தேவன் பொறுப்பானவர் அல்ல சுயமாகச் சிந்தித்து, தீர்மானம் எடுக்கும் சிலாக்கியத்தைத் தேவன் மனுக்குலத்திற்குக் கொடுத்திருக்கிறார் மனுஷனே தீர்மானம் பண்ணுகிறவன் ஆகையினால் தான் செய்யும் நற்செயலுக்கும் துர்ச்செயலுக்கும் மனுஷனே பொறுப்பாக இருக்கிறான் மனுஷனுடைய கிரியைக்குத் தேவனே பொறுப்பானவர் என்று கூறமுடியாது.

தேவன் பழைய ஏற்பாட்டுக்காலத்தில இஸ்ரவேல ஜனத்தைத் தெரிந்தெடுத்தார் தமது வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளாகுமாறு அவர்களோடு உடன்படிக்கை பண்ணினார் ஆனால் இஸ்ரவேல ஜனங்களோ தேவனோடு சுமார் 1800 வருஷங்களுக்கு மேலாகக் கலகம் பண்ணினார்கள தேவன் தமது இரட்சிப்பின் திட்டத்தை மனுஷர் மத்தியிலே நிறைவேற்ற வேண்டும் இதற்காகத் தேவன் முதலாவது யூதர்களைத் தெரிந்தெடுத்தார் அவர்கள தேவனுக்குக் கீழ்ப்படியாமல போனதினால இப்போது புறஜாதியாரைத் தெரிந்தெடுத்திருக்கிறார் தேவன தமது இரட்சிப்பின திட்டத்தைப் புறஜாதியார் மூலமாக நிறைவேற்றி வருகிறார (மத் 21:33-45)

(5) தேவனுடைய இரக்கம்

ரோமர் 9:14 ஆகையால் நாம் என்ன சொல்லுவோம்? தேவனிடத்திலே அநீதி உண்டென்று சொல்லலாமா? சொல்லக்கூடாதே.

ரோமர் 9:15 அவர் மோசேயை நோக்கி: எவன்மேல இரக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மேல இரக்கமாயிருப்பேன எவன் மேல உருக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன் மேல் உருக்கமாயிருப்பேன என்றார

ரோமர் 9:16 ஆகையால் விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல, இரங்குகிற தேவனாலேயாம்.

9 அதிகாரம்

ரோமர் 9:17 மேலும் என்னுடைய வல்லமையை உன்னிடத்தில் காண்பிக்கும்படியாகவும், என்னுடைய நாமம் பூமியில் எங்கும் பிரஸ்தாபமாகும்படியாகவும், உன்னை நிலைநிறுத்தினேன் என்று பார்வோனுடனே சொன்னதாக வேதத்தில் சொல்லியிருக்கிறது.

ரோமர் 9:18 ஆதலால் எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருக்கிறாரோ அவன்மேல் இரக்கமாயிருக்கிறார், எவனைக் கடினப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனைக் கடினப்படுத்துகிறார்.

"எவன் மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன் மேல் இரக்கமாயிருப்பேன்; எவன்மேல் உருக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மேல் உருக்கமாயிருப்பேன்" - யாத் 33:19. தமது இரக்கத்திற்கும் உருக்கத்திற்கும் தேவனே சர்வ ஆளுகை உடையவர். தேவன் தமது இரக்கத்தையும் மனதுருக்கத்தையும் மனுஷருக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். மனுஷர் அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு தேவன் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கும் காரியங்களையும் வெளிப்படுத்தியிருக்கிறார். தேவனுடைய நிபந்தனைகளை மனுஷர் ஏற்றுக் கொண்ட பின்பே, அவர்கள்மீது தேவன் இரக்கமாகவும், மனதுருக்கமாகவும் இருக்கிறார். மனந்திரும்பாத எந்த ஆத்துமாவையும் தேவன் இரட்சிப்பதில்லை. தேவனுடைய நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளும் எந்த ஆத்துமாவையும் அவர் ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பதுமில்லை. தேவனுடைய சித்தம் கிருபையுள்ளது. அதேசமயத்தில் நீதியுள்ளது.

"என்னுடைய வல்லமையை உன்னிடத்தில் காண்பிக்கும்படியாகவும், என்னுடைய நாமம் பூமியில் எங்கும் பிரஸ்தாபமாகும்படியாகவும் உன்னை நிலைநிறுத்தினேன்" - யாத் 9:16 ஆகிய வசனம் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

துன்மார்க்கமான பார்வோன் இராஜா தேவனுக்கு எதிர்த்து நிற்பதைக் குறித்து நாம் இந்த வேதவசனப்பகுதியில் வாசிக்கிறோம். தேவன் பார்வோனிடத்தில் பலகிரியைகளைச் செய்திருக்கிறார். பார்வோன் அந்த வாய்ப்புக்களைப் பயன்படுத்தி, தன்னுடைய துர்க்கிரியைகளுக்காக மனம்வருந்தி, தேவனிடத்தில் தன்னை ஒப்புக்கொடுத்து தன்னுடைய தண்டனையிலிருந்து தப்பித்திருக்கலாம். ஆனால் அவனோ தன்னுடைய இருதயத்தில் கடினம் உள்ளவனாக இருந்து தேவனுக்கு எதிராகத் தொடர்ந்து கலகம் பண்ணினான். பார்வோனின் பாவத்திற்காகவும் அவனுடைய கீழ்ப்படியாமைக்காகவும் அவனுடைய கடின இருதயத்திற்காகவும் தேவன் தமது நீதியான நியாயத்தின் பிரகாரம் அவனைத் தண்டித்தார்.

"எவன் மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருக்கிறாரோ அவன்மேல் இரக்கமாயிருக்கிறார்; எவனைக் கடினப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனைக் கடினப்படுத்துகிறார்" - தேவன் தாம் செய்யும் எல்லாக் கிரியைகளையும் நீதியாகவே செய்கிறார் என்று பவுல் இங்கு மறுபடியுமாக வலியுறுத்திக் கூறுகிறார். மனுஷரைத் தெரிந்தெடுக்கும் விஷயத்திலும், அவர்கள்மீது இரக்கம் காண்பிக்கும் விஷயத்திலும், அவர்களுடைய இருதயங்களைக் கடினப்படுத்தும் விஷயத்திலும் தேவன் நீதியாகவே கிரியை செய்கிறார்.

தேவன் தமது தெரிந்தெடுப்பில் நீதியானவர்

1. இஸ்மவேலுக்குப் பதிலாக ஈசாக்கு (ரோமர் 9:7-8; ஆதி 17)
2. ஏசாவிற்குப் பதிலாக யாக்கோபு (ரோமர் 9:9-13; ஆதி 25)
3. இஸ்ரவேலின் பாவிகளுக்குப் பதிலாக நீதிமான்கள் (ரோமர் 9:14-16; யாத் 32:32-33; யாத் 33:19)
4. பார்வோனுக்கும் எகிப்தியர்களுக்கும் பதிலாக இஸ்ரவேல் ஜனங்கள் (ரோமர் 9:17-18; யாத் 7:1-14:31)

9 அதிகாரம்

மேலே கூறப்பட்டிருக்கும் இந்த நான்கு காரியங்களிலும் தேவன் நீதியாகவே கிரியை செய்திருக்கிறார். தமது நீதியின் பிரகாரமாகவே இவர்களைத் தெரிந்தெடுத்திருக்கிறார். பவுல் இந்தக் காரியங்களை விளக்கிவிட்டு தேவன் யூதர் மத்தியிலும், புறஜாதியார் மத்தியிலும் கிரியை செய்யும் விதத்திற்கு வருகிறார். இஸ்ரவேல ஜனங்களைத் தள்ளிவிட்டு, தமது திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவன் புறஜாதியாரைத் தெரிந்தெடுத்தது நீதியான கிரியையே என்று பவுல் இந்த வசனங்களில் விளக்கிக் கூறுகிறார் (ரோமர் 9:19-11:36).

"கடினப்படுத்துகிறார்" (hardeneth) - தேவன் எந்த அடிப்படையில் மனுஷர்மீது தமது இரக்கத்தைக் காண்பிக்கிறாரோ அதே அடிப்படையிலேயே தேவன் எவனைக் கடினப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனைக் கடினப்படுத்துகிறார். தேவனுடைய கிருபையை ஏற்றுக் கொள்ள சித்தம் உடையவர்களுக்கு அவர் தமது கிருபையை அருளுகிறார். தேவகிருபையை ஏற்றுக் கொள்ளாதவர்களுடைய இருதயங்களைக் கடினப்படுத்துகிறார். அவர்களை இவ்வாறு நியாயந்தீர்க்கும்போது தேவன் நீதியாகவே கிரியை செய்கிறார். ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, தேவனுடைய இரக்கத்தை நாடுவதற்குச் சிலாக்கியம் பெற்றிருக்கிறார்கள். அதுபோலவே தேவனுக்கு முன்பாகத் தங்களை உயர்த்தி, தேவகிருபையைப் புறக்கணிக்க வேண்டுமென்று தீர்மானம் பண்ணுவதற்கும் மனுஷர் சுயாதீன சித்தமுடையவர்கள். தேவனிடத்தில் சரியான மனப்பான்மையோடு வரும்போது அவர்களுடைய கிருபை கிடைக்கும். தவறான மனப்பான்மையோடு தேவனிடத்தில் வரும்போது தேவன் அவர்களுடைய இருதயத்தைக் கடினப்படுத்துகிறார்.

இதை விளக்குவதற்கு மெழுகையும் களிமண்ணையும் எடுத்துக்காட்டாகக் கூறலாம். இவ்விரண்டையும் வெயிலில் வைக்கும்போது மெழுகு உருகிவிடுகிறது. களிமண் உலர்ந்து கட்டியாகிறது. மெழுகு உருகுவதும், களிமண் கட்டியாவதும் அவற்றின் சுபாவம். சூரியன் இவ்விரண்டின்மீதும் ஒன்று போலவே தனது வெப்பத்தை வெளிப்படுத்திற்று.

ஆனால் இவ்விரண்டு பொருட்களும் வெவ்வேறு விதமாகக் கிரியை செய்கின்றன. இந்தப் பொருட்களுக்கு வேறு வழியில்லை. அவை அவற்றின் சுபாவம். ஆனால் மனுஷனோ மெழுகிலிருந்தும் களிமண்ணிலிருந்தும் வேறுபட்டவன். ஆறறிவு உடையவன். சுயாதீனச் சித்தமுடையவன். தேவனுடைய கிருபை வெளிப்படும்போது இவன் சுயாதீனமாகச் சிந்தித்து அந்தக் கிருபையைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான கிரியைகளை மனுஷனால் செய்ய முடியும். தேவன் பார்வோனுடைய இருதயத்தைக் கடினப்படுத்தினார். தேவனுடைய சித்தத்திற்குப் பார்வோன் கீழ்ப்படியவேண்டும் இல்லையென்றால் அவனுடைய இருதயம் கடினப்படுத்தப்படும். இவ்விரண்டில் ஒன்றைப் பார்வோன் தனது சுயாதீன சித்தத்தினால் தெரிந்தெடுக்கவேண்டும். இக்காலத்திலும் தேவன் மனுஷர் மத்தியிலே இவ்வாறே கிரியை செய்கிறார். தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டுமா கீழ்ப்படிய வேண்டாமா என்பதை மனுஷனே தீர்மானம் பண்ணிக் கொள்ள வேண்டும். மனுஷனுடைய தீர்மானத்தின் பிரகாரம் தேவன் மனுஷனை நியாயந்தீர்ப்பார் (2கொரி 2:15-17).

(6) தேவனுடைய சர்வ ஆளுகை

ரோமர் 9:19 இப்படியானால், அவர் இன்னும் ஏன் குற்றம்பிடிக்கிறார்? அவர் சித்தத்திற்கு எதிர்த்து நிற்பவன் யார்? என்று நீ என்னுடனே சொல்லுவாய்.

ரோமர் 9:20 அப்படியானால், மனுஷனே, தேவனோடு எதிர்த்துத் தர்க்கிக்கிற நீ யார்? உருவாக்கப்பட்ட வஸ்து உருவாக்கினவனை நோக்கி: நீ என்னை ஏன் இப்படி உண்டாக்கினாயென்று சொல்லலாமா?

ரோமர் 9:21 மிதியிட்ட ஒரே களிமண்ணினாலே குயவன் ஒரு பாத்திரத்தைக் கனமான காரியத்துக்கும் ஒரு பாத்திரத்தைக் கனவீனமான காரியத்துக்கும் பண்ணுகிறதற்கு மண்ணின்மேல் அவனுக்கு அதிகாரம் இல்லையோ?

ரோமர் – தொகுப்புரை

9 அதிகாரம்

ரோமர் 9:22 தேவன் தமது கோபத்தைக் காண்பிக்கவும், தமது வல்லமையைத் தெரிவிக்கவும்,

ரோமர் 9:23 தாம் மகிமைக்காக எத்தனமாக்கின கிருபாபாத்திரங்கள் மேல் தம்முடைய மகிமையின் ஐசுவரியத்தைத் தெரியப்படுத்தவும் சித்தமாய், அழிவுக்கு எத்தனமாக்கப்பட்ட கோபாக்கினைப் பாத்திரங்கள் மேல் மிகவும் நீடிய சாந்தத்தோடே பொறுமையாயிருந்தாரானால் உனக்கு என்ன?

ரோமர் 9:24 அவர் யூதரிலிருந்து மாத்திரமல்ல, புறஜாதிகளிலுமிருந்து நம்மை அழைத்திருக்கிறாரே.

"இப்படியானால், அவர் இன்னும் ஏன் குற்றம்பிடிக்கிறார்?" - ரோமர் 3:7 ஆவது வசனத்தில் யூதர்கள் பவுலிடம் விவாதம் பண்ணியதுபோலவே இங்கும் விவாதம் பண்ணுகிறார்கள். இதற்கு (ரோமர் 9:20-24) ஆகிய வசனங்களில் சில கேள்விகளைக் கேட்டு, பவுல் அவர்களுக்குப் பதில் கூறுகிறார். தேவனை யாரும் குறைகூற முடியாது. தேவன் தமக்குப் பிரியமான காரியங்களைச் செய்வார் (எரே 18:1-17). தமக்குக் கீழ்ப்படிகிறவர்களை இரட்சிப்பதற்குத் தேவன் இன்னும் கிருபையுள்ளவர். கீழ்ப்படிகிறவர்கள் யூதராக இருந்தாலும், புறஜாதியாராக இருந்தாலும் அவர்களுக்குத் தேவனுடைய இரட்சிப்பு அருளப்படும். தங்களுடைய இருதயங்களைக் கடினப்படுத்தி தேவனுடைய சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் யூதராக இருந்தாலும், புறஜாதியாராக இருந்தாலும் அவர்களைத் தேவன் ஆக்கினைக்குள்ளாக்குகிறார். இது தேவனுடைய தெய்வீக நீதி. தமது நீதியைத் தேவன் நியாயமாகவும் நீதியாகவும் செய்து வருகிறார்.

"மகிமைக்காக எத்தனமாக்கின கிருபாபாத்திரங்கள்" (vessels of mercy) இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்ட யூதர்களையும், புறஜாதியாரையும் இந்த வாக்கியம் குறிக்கும். (ரோமர் 9:23-24

"அழிவுக்கு எத்தனமாக்கப்பட்ட கோபாக்கினைப் பாத்திரங்கள்" (vessels of wrath) - இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளாத யூதர்களையும் புறஜாதியாரையும் இந்த வாக்கியம் குறிக்கும். இவர்களிடம் காணப்படும் சுபாவங்கள்

1. இறுமாப்பு (stubborn) (ரோமர் 9:6)
2. பெருமை (proud) (ரோமர் 9:31)
3. கலகம் (rebellious) (ரோமர் 9:32)
4. அறியாமை (ignorant) (ரோமர் 10:3)
5. பொறாமை (jealous) (ரோமர் 10:19)
6. கோபம் (angry) (ரோமர் 10:19)
7. கீழ்ப்படியாமை (disobedient) (ரோமர் 10:21)
8. குருடு (blind) (ரோமர் 11:7)
9. விழுந்துபோதல் (fallen) (ரோமர் 11:12)
10. தள்ளிவிடுதல் (cast away) (ரோமர் 11:15)
11. முறித்துப்போடுதல் (broken off) (ரோமர் 11:20)
12. தப்பவிடாமல் இருத்தல் (spared not) (ரோமர் 11:21)
13. அவிசுவாசம் (unbelieving) (ரோமர் 11:23)
14. வெட்டப்படுதல் (cut off) (ரோமர் 11:24)

9 அதிகாரம்

2. இஸ்ரவேலின் தோல்வியும் அவிசுவாசமும் - ரோமர் 9.25-10 21; 33-8)

(1) தோல்வி முன்னறிவிக்கப்பட்டது

ரோமர் 9:25 அந்தப்படி, எனக்கு ஜனங்களல்லாதவர்களை என்னுடைய ஜனங்கள் என்றும் சிநேகிக்கப்படாதிருந்தவளைச் சிநேகிக்கப்பட்டவள் என்றும் சொல்லி அழைப்பேன்

ரோமர் 9:26 நீங்கள் என்னுடைய ஜனங்களல்லவென்று அவர்களுக்குச் சொல்லப்பட்ட இடத்திலே அவர்கள் ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளைகள் எனனப்படுவார்கள் என்று ஓசியாவின் தீர்க்கதரிசனத்தில்சொல்லியிருக்கிறது.

ரோமர் 9:27 அல்லாமலும் இஸ்ரவேல் புத்திரருடைய இலக்கம் சமுத்திரத்தின மணலத் தனையாயிருந்தாலும் மீதியாயிருப்பவாகள மாத்திரம் இரட்சிக்கப்படுவாாகள் எனறும்.

ரோமர் 9:28 அவர் நீதியோடே சீக்கிரமாயத் தம்முடைய காரியத்தை நிறைவேற்றுவாா; காத்தா பூமியிலே சீக்கிரமாகவே காரியத்தை நிறைவேற்றி முடிப்பார் எனறும் ஏசாயா இஸரவேலரைக்குறித்துச் சொலலுகிறான

ரோமர் 9:29 அல்லாமலும் ஏசாயா முன்னே சொன்னபடி, சேனைகளின் காத்தர் நமக்குள்ளே ஒரு சந்ததியை மீதியாக வைக்காதிருந்தாரானால் நாம் சோதோமைப்போலாகி கொமோராவுக்கு ஒத்திருப்போம்.

ரோமருக்கு எழுதின நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாடு தீர்க்கதரிசன எண் - 3

"அந்தப்படி எனக்கு ஜனஙகளலலாதவர்களை என்னுடைய ஜனஙகள் என்றும் சிநேகிக்கப படாதிருந்தவளைச் சிநேகிக்கப்பட்டவள் என்றும சொலலி அழைப்பேன் (ரோமர் 9.25 ஓசி 2 23

ரோமருக்கு எழுதின நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாடு தீர்க்கதரிசன எண் - 4

"நீஙகள் என்னுடைய ஜனங்களலலவென்று அவர்களுக்குச் சொலலபபட்ட இடத்திலே அவர்கள் ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளைகள் எனனப்படுவார்கள்" ரோமர் 9.26, ஓசி 1:10)

ரோமருக்கு எழுதின நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாடு தீர்க்கதரிசன எண் - 5

"அலலாமலும் இஸரவேல புத்திரருடைய இலககம சமுத்திரத்தின மணலத்தனையாயிருந்தாலும மீதியாயிருப்பவாகளமாத்திரம் இரட்சிக்கப்படுவாாகள அவா நீதியோடே சீக்கிரமாயத தம்முடைய காரியத்தை நிறைவேற்றுவார், காத்தர் பூமியிலே சீக்கிரமாகவே காரியத்தை நிறைவேற்றி முடிப்பார்" (ரோமர் 9:27-28; ஏசா 10:22-23

ரோமருக்கு எழுதின நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாடு தீர்க்கதரிசன எண் - 6

"சேனைகளின் கர்த்தர் நமக்குள்ளே ஒரு சந்ததியை மீதியாக வைக்காதிருந்தாரானால் நாம் சோதோமைப்போலாகி கொமோராவுக்கு ஒத்திருப்போம்" (ரோமர் 9.29, ஏசா 1:9

"சேனைகள்" (Sabaoth, Hosts) - (ரோமர் 9.29, யாக் 5:4, 1சாமு 1.3)

9 அதிகாரம்

"சோதோமைப்போலாகி கொமோராவுக்கு ஒத்திருப்போம்" - (Sodom, Gomorrah) (ஆதி 19)

(2) தோல்விக்குக் காரணம் - (10:3)

ரோமர் 9:30 இப்படியிருக்க நாம் என்னசொல்லுவோம்? நீதியைத் தேடாத புறஜாதியார் நீதியை அடைந்தார்கள்; அது விசுவாசத்தினாலாகும் நீதியே.

ரோமர் 9:31 நீதிப்பிரமாணத்தைத் தேடின இஸ்ரவேலரோ நீதிப்பிரமாணத்தை அடையவில்லை.

ரோமர் 9:32 என்னத்தினாலென்றால், அவர்கள் விசுவாசத்தினாலே அதைத் தேடாமல், நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேடினபடியால் அதை அடையவில்லை. இடறுதற்கான கல்லில் இடறினார்கள்.

ரோமர் 9:33 இதோ, இடறுதற்கான கல்லையும், தவறுதற்கான கன்மலையையும் சீயோனில் வைக்கிறேன்; அவரிடத்தில் விசுவாசமாயிருப்பவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை என்று எழுதியிருக்கிறபடியாயிற்று.

"இப்படியிருக்க நாம் என்னசொல்லுவோம்?" பவுல் இங்கு பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களைக் கூறுகிறார். தீர்க்கதரிசனங்கள் இவ்வாறு கூறுவதினால் நாம் என்ன சொல்வோம் என்று பவுல் ஒரு கேள்வி கேட்கிறார். இந்தக் கேள்விக்கு "நீதியைத் தேடாத புறஜாதியார் நீதியை அடைந்தார்கள் நீதிப்பிரமாணத்தைத் தேடின இஸ்ரவேலரோ நீதிப்பிரமாணத்தை அடையவில்லை" (ரோமர் 9:30-31) பதில் கூறுகிறார்.

"என்னத்தினாலென்றால்" - நீதிப் பிரமாணத்தைத் தேடின இஸ்ரவேலர் ஏன் நீதிப் பிரமாணத்தை அடையவில்லை. ஏனெனில் அவர்கள் அதை விசுவாசத்தினால் தேடவில்லை. நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் தேடினார்கள். ஆகையினால் அவர்கள் இடறுதற்கான கல்லில் இடறினார்கள் (ரோமர் 9:32-33)

"அவர்கள் விசுவாசத்தினாலே அதைத் தேடாமல் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேடினார்கள்" - கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தின் மூலமாகத் தேவனுடைய நீதியை பெறுக் கொள்ளும் வழியை யூதர்கள் அறியாமல் இருந்தார்கள் (ரோமர் 3:25-31; கலா 2:16; கலா 3:10-28) தங்களுடைய கிரியைகளின் மூலமாகத் தங்களுடைய சொந்த நீதியை நிலைநிறுத்த விரும்பினார்கள். ஆபிரகாமின் உடன்படிக்கை விசுவாசத்தின் மூலமாக வரும் தேவகிருபையினால் உண்டாயிற்று. யூதர்கள் இந்த உடன்படிக்கையையும் கைக்கொள்ள வில்லை. (ரோமர் 4:1-25; ஆதி 15:6) யூதர்கள் தங்களுடைய கிரியாப்பிரமாணத்திலேயே கவனம் செலுத்தினார்கள். நியாய பிரமாணத்தின் சடங்குகளைக் கைக்கொண்டால் தாங்கள் நீதிமான்களாக்கப்படுவோம் என்று நம்பினார்கள். இதற்காகவே தங்களுடைய புறம்பான சடங்குகளையெல்லாம் கடைப் பிடித்தார்கள். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம் மனுக்குலத்திற்கு வெளிப்படுத்தப் பட்டது. யூதரும் புறஜாதியாரும் தங்களுடைய இரட்சிப்பிற்காக எந்தக் கிரியையும் செய்யாமல் விசுவாசத்தினாலே தேவனுடைய இரட்சிப்பை இலவசமாகப் பெறுக் கொள்ளலாம் என்று இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷச் செய்தி கூறுகிறது. ஆனால் இதை ஏற்றுக் கொள்ள யூதர்களுக்கு மனமில்லை.

ரோமருக்கு எழுதின நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 7

"இதோ இடறுதற்கான கல்லையும், தவறுதற்கான கன்மலையையும் சீயோனில் வைக்கிறேன் அவரிடத்தில் விசுவாசமாயிருப்பவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை" (ரோமர் 9:33 ஏசா 8:14; ஏசா 28:16)

BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

ரோமர் - தொகுப்புரை

9 அதிகாரம்

"இடறுதலுக்கான கல்லையும் இடறுதற்கான கன்மலையையும் சீயோனில் வைக்கிறேன்" மனுகுலத்தை இரட்சிப்பதற்காக தேவன் தமது ஒரேபேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்திற்கு மேசியாவாக அதாவது இரட்சகராக அனுப்பினார் அவர் அனுப்பப்படும்போது, வல்லமையுள்ள ராஜாவாக அனுப்பப்படவில்லை

அவர் வருத்தம் நிறைந்தவராகவும் மனத்தாழ்மையுடையவராகவும் இந்த உலகத்திற்கு அனுப்பப்பட்டார் ஜனங்கள் ராஜாவை நம்புவார்கள் ராஜாவிற்கு வேறுவழியில்லாமல் எல்லோருமே கீழ்ப்படிவார்கள் ஆனால் இயேசு கிறிஸ்துவோ மனத்தாழ்மையுடையவராக இந்த உலகத்திற்கு அனுப்பப்பட்டார் அடிக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவைத் தங்களுடைய இரட்சிப்பிற்காக நம்புவது தங்களுக்கு மிகுந்த அவமானம் என்று யூதர்கள் கருதினார்கள் இயேசு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாக இருக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை. குழப்பம் அடைவதில்லை

10 அதிகாரம்

(3) அறியாமையும் கீழ்ப்படியாமையும்

ரோமர் 10:1 சகோதரரே, இஸ்ரவேலர் இரட்சிக்கப்படவேண்டும் என்பதே என் இருதயத்தின் விருப்பமும் நான் தேவனை நோக்கிச் செய்யும் விண்ணப்பமுமாயிருக்கிறது.

ரோமர் 10:2 தேவனைப் பற்றி அவர்களுக்கு வைராக்கியமுண்டென்று அவர்களைக் குறித்துச் சாட்சி சொல்லுகிறேன்; ஆகிலும் அது அறிவுக்கேற்ற வைராக்கியமல்ல.

ரோமர் 10:3 எப்படியென்றால், அவர்கள் தேவநீதியை அறியாமல், தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவநீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள்.

"இஸ்ரவேலர் இரட்சிக்கப்படவேண்டும்" - இஸ்ரவேலர் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவிடம் வரும்போது அவர்களை மன்னிப்பதற்குத் தேவன் சித்தம் உடையவராக இருக்கிறார் என்பதைப் பவுல் அறிந்து வைத்திருக்கிறார்.

"அது அறிவுக்கேற்ற வைராக்கியமல்ல" - யூதர்களுக்குத் தேவனைப் பற்றி வைராக்கியம் இருக்கிறது. ஆனால் அவர்களுடைய வைராக்கியம் அறியாமைக்குரிய வைராக்கியமாகும். (ரோமர் 10:2-3)

"தேவநீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள்" - யூதர்கள் தேவநீதியைப் பற்றி அறியாதிருக்கிறார்கள். அதை அறிந்து கொள்வதற்கு அவர்கள் முயற்சி பண்ணுவதில்லை. தங்களுடைய சுயநீதியை நிலைநிறுத்தவே அவர்கள் விரும்புகிறார்கள். இதனால் அவர்கள் தேவநீதிக்குக் கீழ்ப்படியாமல் தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணுகிறார்கள்.

(4) கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்

ரோமர் 10:4 விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்.

"விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்" - நியாயப்பிரமாணத்தின் பலிகள் ஓர் அடையாளம் மட்டுமே ஆகும். இயேசு கிறிஸ்துவே மெய்யான பலி. கிறிஸ்து தம்மை ஜீவபலியாக உலகத்தின் பாவங்களுக்காக ஒப்புக்கொடுத்தபடியினால் அவர் நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார். (எபே 2:14-15; கொலோ 2:14-17; எபி 8:5; எபி 10:1). நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது. (கலா 3:19-25; ரோமர் 5:20; எபி 9:10). நியாயப்பிரமாணம் மனுஷனை இரட்சிக்காது. அவனை ஆக்கினைக்குட்படுத்தும். தனக்கு இரட்சிப்பு தேவையென்பதை நியாயப்பிரமாணம் பாவிக்கு உணர்த்தும். பலிகளின் பிரமாணம் மற்றும் அடையாளங்கள், சடங்குகள், வெளிப்புறமான மார்க்கம் ஆகிய எல்லாப் பிரமாணங்களுக்கும் இயேசு கிறிஸ்து முடிவாயிருக்கிறார். இவை அனைத்துமே இயேசு கிறிஸ்துவை முன்னறிவிக்கிறது. அத்துடன் புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டிருக்கும் ஆவிக்குரிய சத்தியங்களுக்கு இவை அடையாளமாகவும் இருக்கிறது.

(5) நியாயப்பிரமாணத்தின் நீதியும் கிறிஸ்துவின் நீதியும்

ரோமர் 10:5 மோசே நியாயப்பிரமாணத்தினாலாகும் நீதியைக் குறித்து, இவைகளைச் செய்கிற மனுஷன் இவைகளால் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறான்.

ரோமர் 10:6 விசுவாசத்தினாலாகும் நீதியானது: கிறிஸ்துவை இறங்கிவரப் பண்ணும்படி பரலோகத்துக்கு ஏறுகிறவன் யார்?

10 அதிகாரம்

ரோமர் 10:7 அல்லது கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து ஏறிவரப் பண்ணும்படி பாதாளத்துக்கு இறங்குகிறவன் யார்? என்று உன் உள்ளத்திலே சொல்லாதிருப்பாயாக என்று சொல்லுகிறதுமன்றி.

ரோமர் 10:8 இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது என்றும் சொல்லுகிறது; இந்த வார்த்தை நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின் வார்த்தையே.

"இவைகளைச் செய்கிற மனுஷன் இவைகளால் பிழைப்பான்" - லேவி 18:5 ஆகிய வசனம் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. பரிபூரணமாகக் கீழ்ப்படிய வேண்டுமென்று நியாயப்பிரமாணம் நிபந்தனை விதிக்கிறது. ஆனால் எந்த மனுஷனாலும் இந்த நிபந்தனையை நிறைவேற்ற முடியாது. ஏனெனில் யாராலும் நியாயப்பிரமாணத்தின் விதிகளுக்குப் பரிபூரணமாகக் கீழ்ப்படிய முடியாது. ஆகையினால் நியாயப்பிரமாணம் எல்லா ஜனங்களையும் குற்றப்படுத்தி அவர்களைச் சாபத்திற்குட்படுத்துகிறது. (உபா 27:26, கலா 3:10-13, ரோமர் 3:19-20) நியாயப் பிரமாணத்தினால் யாரும் இரட்சிக்கப்பட முடியாது சுவிசேஷத்தினால் எல்லோரையும் இரட்சிக்க முடியும். (ரோமர் 10:6-13)

"பரலோகத்துக்கு ஏறுகிறவன் யார்?" - மனுஷன் பரிபூரணமாகக் கீழ்ப்படிய வேண்டுமென்று நீதியின் பிரமாணம் கூறுகிறது விசுவாசத்தினாலாகும் நீதியானது தங்களுடைய பாவங்களை அறிக்கையிட்டு, தேவனிடத்தில் தங்களை அர்ப்பணித்தால் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளலாம் என்று கூறுகிறது. பரிசுத்த ஆவியானவர் தேவனிடத்தில் தன்னை ஒப்புக் கொடுத்திருக்கும் ஆத்துமாவைப் பாவத்தின் பிரமாணம், மரணத்தின் பிரமாணம் ஆகியவற்றிலிருந்து விடுதலைபண்ணுகிறார் (ரோமர் 8:2) இரட்சிக்கப்பட்ட மனுஷனுடைய பழைய சுபாவத்தையும், பழைய ஜீவனையும் மறுரூபமாக்குகிறார் (2கொரி 5:17-18; 1கொரி 6:11) நியாயப் பிரமாணத்தின் நீதியை இரட்சிக்கப்பட்டிருக்கும் மனுஷனுக்குள் பரிசுத்த ஆவியானவர் நிறைவேற்றுகிறார் (ரோமர் 8:4) இரட்சிக்கப்பட்டிருக்கிறவர்களைப் பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவிற்குள் நீதிமான்களாக்குகிறார் (1கொரி 1:30; 2கொரி 5:21; ரோமர் 4:1-25; ரோமர் 10:6-13)

"கிறிஸ்துவை இறங்கிவரப்பண்ணும்படி பரலோகத்துக்கு ஏறுகிறவன் யார்?" - உபா 30:12-14 ஆகிய வசனங்கள் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது ஜனங்கள் இயேசு கிறிஸ்துவையோ சுவிசேஷத்தின் வார்த்தையையோ தேடி அலைய வேண்டியதில்லை. கிறிஸ்துவும் சுவிசேஷ வார்த்தையும் மனுஷருக்கு அருகிலேயே உள்ளது. மனுஷன் செய்ய வேண்டியதெல்லாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு சுவிசேஷ வார்த்தைக்குக் கீழ்ப்படிய வேண்டியது மட்டுமேயாகும் இது உபா 30:12-14 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பிரமாணத்தைப் போன்றிருக்கிறது அவர்கள் அதைத் தேட வேண்டியதில்லை அதை அங்கீகரித்திருந்தால் அவர்கள் ஏற்கெனவே பெற்றிருக்கிறார்கள் ஜனங்கள் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்றால் அந்தச் சுவிசேஷம் அவர்களிடத்தில் இருக்கிறது. அது அவர்களுடைய ஆத்துமாக்களை இரட்சிக்கிறது.

பாதாளம் (deep) - ἄβυσσος - Abussos - 12

பெண்பால் பெயர்ச்சொல் - ஆழம் காண முடியாத பாதாளம் **(bottomless, unbounded by any definite known limits)**

(அ) மரித்தவர்களின் இருப்பிடம் ரோம. 10:7

(ஆ) பிசாசுகளின் சிறைச்சாலை லூக். 8:31; வெளி. 20:3

இயேசு கிறிஸ்து பாதாளத்திற்கு இறங்கிச் சென்றார் அங்கு காவலில் வைக்கப்பட்டிருந்த மரித்த பரிசுத்தவான்களின் ஆவிகளை விடுவித்து, தம்மோடுகூடப் பரலோகத்திற்கு அழைத்துச் சென்றார் (மத் 12:40; எபே 4:8-10, எபி 2:14-15)

10 அதிகாரம்

"இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது" - சுவிசேஷச் செய்தி இப்போது தெளிவாக இருக்கிறது. அதற்குக் கீழ்ப்படிவது எளிது. இயேசு கிறிஸ்துவின் மரணம் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் ஆகியவற்றைப் பற்றிய செய்தி மனுஷருடைய இரட்சிப்பில ஆற்றலோடு கிரியை நடப்பிக்கிறது. இயேசுவின் சுவிசேஷச் செய்தி மனுஷருக்குச் சமீபமாய் இருப்பதினால மனுஷர் தங்களுடைய இருதயத்தில அதை ஏற்றுக் கொண்டு, தங்களுடைய வாயினால அதை எளிதாக அறிக்கை பண்ணலாம். (ரோமர் 10:8-13) இந்த வார்த்தை விசுவாச வார்த்தையாகும். ரோமர் 10:9-10 ஆகிய வசனங்களில கூறப்பட்டிருக்கிற சத்தியத்தை நாம் நமது இருதயத்திற்குள் விசுவாசித்து அதன் பிரகாரமாகச் செயல்படும்போது நாம இரட்சிக்கப்படுவோம்.

(6) தேவனுடைய நீதியைப் பெற்றுக் கொள்ளும் விதம் - யோவான 3:14

ரோமர் 10:9 என்னவென்றால கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.

ரோமர் 10:10 நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும். இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்.

ரோமர் 10:11 அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது.

ரோமர் 10:12 யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை. எல்லாருக்குங் கர்த்தரானவர் தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரியசம் பன்னராயிருக்கிறார்.

ரோமர் 10:13 ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்.

"கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்" - இரட்சிப்பின் நிச்சயத்தை விளக்கும் ஓர் எளிமையான வாக்கியம். இவை நிகுந்த வல்லமையுள்ள வார்த்தைகள்.

"அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை" - ஏசா 28:16, ஏசா 49:23 ஆகிய வசனங்களிலிருந்து மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை" - கிறிஸ்துவில எல்லா ஜனங்களும் சமம்.

"கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப் படுவான்" - யோவே 2:32 அப 2:21 ஆகிய வசனங்கள் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவில விசுவாசம் வைப்பது அவருடைய நாமத்தை அறிக்கையிடுவது ஆகிய இரண்டு காரியங்களும் ஒரே பலனையே தரும் (ரோமர் 10:9-13) தேவனுடைய நாமத்தை அறிக்கையிடுகிறவர்களுக்கு அவரிடத்தில விசுவாசம் இருக்கும். தேவனிடத்தில விசுவாசம் வைக்கிறவர்கள நிச்சயமாகவே தங்களுடைய தேவைகளுக்குத் தேவனை அழைப்பார்கள அதாவது தேவனிடத்தில் ஜெபம் பண்ணுவார்கள.

"கர்த்தர்" **(Lord)** - பழைய ஏற்பாட்டு எபிரெய பாஷையிலே கர்த்தர் என்னும் வார்த்தையைக் குறிப்பதற்கு "யெகோவா" **(Jehovah)** என்னும் எபிரெய வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. யெகோவா என்னும் பழைய ஏற்பாட்டு வார்த்தையைப் பவுல புதிய ஏற்பாட்டில கூறும்போது "கூரியோஸ்" **(kurios)** என்னும் கிரேக்க வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார். ரோமர் 10:9 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் இயேசு கிறிஸ்து பழைய ஏற்பாட்டில் யெகோவா என்னும் பெயருடையவர்.

ரோமர் - தொகுப்புரை

10 அதிகாரம்

கர்த்தர் (Lord) - κύριος - kyrios - 2962

ஆண்பால் பெயர்ச்சொல் - கர்த்தர் எஜமான், ஆண்டவர் ஐயா உடையவர், தேவரீர்

யெகோவா (Jehovah) - יהוה, יהוה - yeh-ho-vaw' - 3068

ஆ.பெ.சொ - கர்த்தர், ஆண்டவர் யெகோவா

(7) விசுவாசத்தைப் பெற்றுக் கொள்ளும் விதம்

ரோமர் 10:14 அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுது கொள்ளுவார்கள்? அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப் படுவார்கள்?

ரோமர் 10:15 அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே.

ரோமர் 10:16 ஆனாலும் சுவிசேஷத்துக்கு எல்லாரும் கீழ்ப்படியவில்லை. அதைக் குறித்து ஏசாயா: கர்த்தாவே, எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார் என்று சொல்லுகிறான்.

ரோமர் 10:17 ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.

சுவிசேஷத்தை விசுவாசிப்பதில் உள்ள நிலைகள்

1 இயேசு கிறிஸ்து சுவிசேஷத்தைக் கொடுத்தார் (ரோமர் 10:14)

2 சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும். (ரோமர் 10:14)

3 பிரசங்கம் பண்ணுவதற்குப் பிரசங்கிக்கிறவன் தேவை. (ரோமர் 10:14)

4 பிரசங்கம் பண்ணுவதற்கு பிரசங்கிக்கிறவனை அனுப்ப வேண்டும். (ரோமர் 10:15)

5 சுவிசேஷத்தைக் கேள்விப்படவேண்டும் (ரோமர் 10:14-15)

6 சுவிசேஷத்தை விசுவாசிக்க வேண்டும் (ரோமர் 10:16)

7 சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும் (ரோமர் 10:9-17)

ரோமருக்கு எழுதின நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 8

"சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள்" (ரோமர் 10:15; ஏசா 52:7). பழைய ஏற்பாட்டிலுள்ள ஏசா 52:7 ஆவது வசனத்தில் "உன் தேவன் ராஜரிகம் பண்ணுகிறாரென்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள்" என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆகையினால் ரோமர் 10:15 ஆவது வசனம் புதிய ஏற்பாட்டில் ஓரளவு மட்டுமே நிறைவேறியிருக்கிறது. ஆயிரம் வருஷ அரசாட்சியில் இந்த வசனம் பூரணமாக நிறைவேறும்.

ரோமருக்கு எழுதின நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 9

"கர்த்தாவே, எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்" (ரோமர் 10:16; ஏசா 53:1) யூதருடைய மனதில் ஒர் விரோதமான எண்ணம் உண்டாயிருக்கிறது.

10 அதிகாரம்

சுவிசேஷம் தேவனிடத்திலிருந்து வந்திருக்கும் என்றால், அதை எல்லா ஜனங்களும் விசுவாசிப்பார்கள். ஆனால் நடைமுறையில் எல்லா ஜனங்களும் சுவிசேஷத்தை விசுவாசிக்கவில்லை. ஆகையினால் சுவிசேஷமானது தேவனிடத்திலிருந்து வரவில்லை என்பது யூதருடைய எண்ணம். பவுல் யூதருடைய இந்தத் தவறான எண்ணத்திற்குப் பதில் கூறும் வகையில் ஏசா 53:1 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனத்தைக் கூறுகிறார். ஏராளமான ஜனங்கள் சுவிசேஷத்தை விசுவாசிக்க மாட்டார்கள். அதற்குக் கீழ்ப்படியமாட்டார்கள். தேவனே சுவிசேஷத்தை அனுப்பியவர். ஆனால் தமது சுவிசேஷச் செய்தியை விசுவாசித்து, ஏற்றுக்கொண்டு அதற்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று தேவன் யாரையும் கட்டாயப்படுத்துவதில்லை. (மாற்கு 16:16, யோவான் 3:16-20, ரோமர் 1:16)

(8) இஸ்ரவேலின் மன்னிக்கப்பட முடியாத பாவம்

ரோமர் 10:18 இப்படியிருக்க, அவர்கள் கேள்விப்படவில்லையா என்று கேட்கிறேன். கேள்விப்பட்டார்கள். அவைகளின் சத்தம் பூமியெங்கும், அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசிவரைக்கும் செல்லுகிறதே.

ரோமர் 10:19 இஸ்ரவேலர் அதை அறியவில்லையா என்று கேட்கிறேன். அறிந்தார்கள். முதலாவது, மோசே: எனக்கு ஜனங்களல்லாதவர்களைக் கொண்டு நான் உங்களுக்கு எரிச்சல் உண்டாக்குவேன், புத்தியீனமுள்ள ஜனங்களாலே உங்களுக்குக் கோபமூட்டுவேன் என்றான்.

ரோமர் 10:20 அல்லாமலும் ஏசாயா: என்னைத் தேடாதவர்களாலே கண்டறியப்பட்டேன். என்னை விசாரித்துக் கேளாதவர்களுக்கு வெளியரங்கமானேன் என்று தைரியங்கொண்டு சொல்லுகிறான்.

ரோமர் 10:21 இஸ்ரவேலரைக் குறித்தோ: கீழ்ப்படியாதவர்களும் எதிர்த்துப் பேசுகிறவர்களுமாயிருக்கிற ஜனங்களிடத்திற்கு நாள்முழுவதும் என் கைகளை நீட்டினேன் என்று அவன் சொல்லியிருக்கிறான்.

"அவர்கள் கேள்விப்படவில்லையா" - இந்த வசனத்தில் பவுல் யூதருடைய மற்றொரு கேள்விக்குப் பதில் கூறுகிறார். உலகத்திலுள்ள எல்லா யூதர்களும் சுவிசேஷச் செய்தியைக் கேள்விப்பட்டிருக்கிறார்களா என்று யூதர்கள் கேட்கிறார்கள். பவுல் இந்தக் கேள்விக்கு "யூதர்கள் கேள்விப்பட்டார்கள்" என்று பதில் கூறுகிறார். சுவிசேஷத்தின் சப்தம் பூமியெங்கும் செல்லுகிறது. சுவிசேஷத்தின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசிவரைக்கும் செல்லுகிறது.

"இஸ்ரவேலர் அதை அறியவில்லையா" - யூதருடைய மனதில் மூன்றாவது கேள்வி எழும்பியிருக்கிறது. சுவிசேஷத்தை இஸ்ரவேலர் ஏன் அறியவில்லை என்று கேட்கிறார்கள். பவுல் இந்தக் கேள்விக்கு "அவர்கள் அறிந்தார்கள்" என்று பதில் கூறியிருக்கிறார். மோசேயின் மூலமாகவும் ஏசாயாவின் மூலமாகவும் சுவிசேஷச் செய்தியானது இஸ்ரவேல் ஜனங்களுக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே தெளிவுபடுத்தப்பட்டிருப்பதாகக் கூறி பவுல் தனது கருத்தை வலியுறுத்துகிறார். (ரோமர் 10:19-21)

ரோமருக்கு எழுதின நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாடு தீர்க்கதரிசன எண் - 10

"எனக்கு ஜனங்களல்லாதவர்களைக் கொண்டு நான் உங்களுக்கு எரிச்சல் உண்டாக்குவேன், புத்தியீனமுள்ள ஜனங்களாலே உங்களுக்குக் கோபமூட்டுவேன்" (ரோமர் 10:19, உபா 32:21) இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுக்குக் கோபம் உண்டாக்கினார்கள்.

10 அதிகாரம்

எரிச்சல் உண்டாக்கினார்கள். மெய்யான தேவன் அல்லாததை யூதர்கள் தங்களுக்குத் தெய்வமாகத் தெரிந்துகொண்டு தேவனுக்குக் கோபம் மூட்டினார்கள். தேவன் யூதரைத் தம்முடைய ஜனமாகத் தெரிந்துகொண்டார். ஆனால் இப்போதோ தம்முடைய ஜனமாகத் தெரிந்துகொள்ளாத புறஜாதியாரைத் தேவன் தெரிந்துகொண்டதன் நிமித்தமாக இஸ்ரவேல் ஜனத்திற்குக் கோபமூட்டுகிறார்.

ரோமருக்கு எழுதின நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 11

"என்னைத் தேடாதவர்களாலே கண்டறியப்பட்டேன். என்னை விசாரித்துக் கேளாதவர்களுக்கு வெளியரங்கமானேன்" (ரோமர் 10:20-21; ஏசா 65:1-2) புறஜாதியார் இரட்சிப்பைத் தேடவில்லை. இரட்சிப்பைப் பற்றி தெரிந்துகொள்ளவும் இல்லை. ஆனாலும் அவர்கள் தங்களுடைய இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டார்கள் (ரோமர் 9:30). தேவன் இஸ்ரவேலை இரட்சிப்பதற்கு ஏராளமான காரியங்களைச் செய்திருந்தார். ஆனால் அவர்களோ பல நூற்றாண்டுகளாகத் தேவனுடைய சபதத்திற்குக் கீழ்ப்படியாமல், தங்களுடைய இருதயங்களைக் கடினப்படுத்தி, தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணினார்கள்.

பழைய ஏற்பாட்டு வசனங்களைப் பவுல் கூறியிருப்பதற்குக் காரணங்கள்

1 கருத்துக்களின் ஒற்றுமையை வெளிப்படுத்துவதற்கு (ரோமர் 10:6-8)

2 ஒரே மாதிரியான நிகழ்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கு (ரோமர் 2:24; ரோமர் 8:36; ரோமர் 9:27-29; ரோமர் 11:2-10; ரோமர் 15:21)

3 சத்திய உபதேசத்தை விளக்குவதற்கு (ரோமர் 1:17; ரோமர் 4:6-8,18-21; ரோமர் 9:20-21; ரோமர் 10:15; ரோமர் 15:3)

4 சத்திய உபதேசத்தை நிரூபிப்பதற்கு (ரோமர் 3:4,10-19; ரோமர் 4:3-17; ரோமர் 5:12-14; ரோமர் 9:7-17; ரோமர் 10:5,11,13; ரோமர் 12:19-20; ரோமர் 13:9; ரோமர் 14:11)

5 தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றத்தை நிரூபிப்பதற்கு (ரோமர் 9:25-26,33; ரோமர் 10:16,19,20-21; ரோமர் 11:26-27; ரோமர் 15:9-13)

11 அதிகாரம்

3.இஸ்ரவேலின் தற்கால நிலைமையும் வருங்கால மீட்பும் – (ரோமர் 11)

(1) சுவிசேஷம் இஸ்ரவேலை தள்ளிவிடவில்லை - (ரோமர் 3:3-4)

ரோமர் 11:1 இப்படியிருக்க, தேவன் தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிட்டாரோ என்று கேட்கிறேன். தள்ளிவிடவில்லையே. நானும் ஆபிரகாமின் சந்ததியிலும் பென்யமீன் கோத்திரத்திலும் பிறந்த இஸ்ரவேலன்.

ரோமர் 11:2 தேவன் தாம் முன்னறிந்துகொண்ட தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிடவில்லை. எலியாவைக்குறித்துச் சொல்லிய இடத்தில் வேதம் சொல்லுகிறதை அறியீர்களா? அவன் தேவனை நோக்கி:

ரோமர் 11:3 கர்த்தாவே, உம்முடைய தீர்க்கதரிசிகளை அவர்கள் கொலைசெய்து, உம்முடைய பலிபீடங்களை இடித்துப்போட்டார்கள்; நான் ஒருவன் மாத்திரம் மீதியாயிருக்கிறேன், என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்களே என்று இஸ்ரவேலுக்கு விரோதமாய் விண்ணப்பம்பண்ணினபோது,

ரோமர் 11:4 அவனுக்கு உண்டான தேவ உத்தரவு என்ன? பாகாலுக்கு முன்பாக முழங்காற்படியிடாத ஏழாயிரம்பேரை எனக்காக மீதியாக வைத்தேன் என்பதே.

"தேவன் தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிட்டாரோ" யூதர்கள் தேவனுடைய ஜனங்கள். அவர்களைத் தேவன் முழுவதுமாகவும், நிரந்தரமாகவும் தள்ளிவிடவில்லை. பவுலும் ஒரு யூதன். அவன் பென்யமீன் கோத்திரத்தான். தேவன் இஸ்ரவேலைத் தள்ளிவிடவில்லை என்பதற்கும், தம்மை விசுவாசிக்கிறவர்களை இரட்சிப்பதற்கு இயேசு கிறிஸ்து மனதுருக்கமுடையவர் என்பதற்கும் பவுல் ஒரு சாட்சியாக இருக்கிறான்.

"கர்த்தாவே, உம்முடைய தீர்க்கதரிசிகளை அவர்கள் கொலைசெய்து, உம்முடைய பலிபீடங்களை இடித்துப்போட்டார்கள்" - 1இராஜா 19:10-18 ஆகிய வசனங்களிலிருந்து மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. கிருபையினால் உண்டாகும் தெரிந்துகொள்ளுதலின்படி ஒரு பங்கு மீதியாக இருக்கிறது என்னும் உபதேசத்தை இந்த வாக்கியம் நிரூபிக்கிறது. (ரோமர் 11:5-6; ஏசா 1:9)

"பாகாலுக்கு முன்பாக முழங்காற்படியிடாத ஏழாயிரம்பேரை எனக்காக மீதியாக வைத்தேன்" - சபை எடுத்துக் கொள்ளப்பட்டபின்பு தானியேலின் எழுபதாவது வாரத்தில் முதல் மூன்றரை வருஷ காலத்தில் தேவன் 144,000 யூதர்களைத் தமக்காக மீதியாக வைத்திருப்பார் என்று இந்த வசனத்திற்கு வியாக்கியானம் கூறுகிறார்கள் (தானி 9:27; வெளி 7:1-8; வெளி 14:1-5)

"பாகால்" (Baal) - ஆகாப் யேசபேல் ஆகியோருடைய ஆட்சிக்காலத்தில் இஸ்ரவேல் தேசத்தில் பாகாலை வழிபடுவது பிரதானமாக இருந்தது. எலியா பாகாலோடு ஆவிக்குரிய காரியங்களில் போராடிக்கொண்டிருந்தான் (1இராஜா 18)

(2) நியாயப் பிரமாணத்தினால் அல்லாமல் கிருபையினால் மீதியாயிருந்தவர்கள் இரட்சிக்கப் பட்டார்கள் - (எரே 15:11; 23:3; 39:10; ஏசா 1:9)

ரோமர் 11:5 அப்படிப்போல இக்காலத்திலேயும் கிருபையினாலே உண்டாகும் தெரிந்துகொள்ளுதலின்படி ஒரு பங்கு மீதியாயிருக்கிறது.

ரோமர் 11:6 அது கிருபையினாலே உண்டாயிருந்தால் கிரியைகளினாலே உண்டாயிராது; அப்படியல்லவென்றால், கிருபையானது கிருபையல்லவே. அன்றியும் அது கிரியைகளினாலே உண்டாயிருந்தால் அது கிருபையாயிராது; அப்படியல்லவென்றால் கிரியையானது கிரியையல்லவே.

"ஒரு பங்கு மீதியாயிருக்கிறது" (remnant) - (ஏசா 1:9

ரோமர்- தொகுப்புரை

11 அதிகாரம்

"கிருபையினாலே உண்டாகும் தெரிந்துகொள்ளுதல் (election of grace) - விசுவாசிக்கிறவர்கள் அனைவருமே கிருபையினாலே உண்டாகும் தெரிந்து கொள்ளுதலின்படி இரட்சிக்கப்படுகிறார்கள் (லூக்கா 18:7)

"அது கிருபையினாலே உண்டாயிருந்தால் கிரியைகளினாலே உண்டாயிராது" - யூதர்களும் தேவனுடைய கிருபையினாலேயே இரட்சிக்கப் பட்டிருக்கிறார்கள். நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்வதினால் யாரும் இரட்சிக்கப் படுவதில்லை. இரட்சிப்பு கிரியைகளினாலே உண்டாயிராது. அது கிரியைகளினாலே உண்டாயிருந்தால் அது கிருபையாயிராது.

(3) அவிசுவாசத்தினாலும் மீறுதலினாலும் இஸ்ரவேலர்கள் குருடரானார்கள் - (வசனம் 25)

ரோமர் 11:7 அப்படியானால் என்ன? இஸ்ரவேலர் தேடுகிறதை அடையாமலிருக்கிறார்கள்; தெரிந்துகொள்ளப் பட்டவர்களோ அதை அடைந்திருக்கிறார்கள் மற்றவர்கள் இந்நாள்வரைக்கும் கடினப்பட்டிருக்கிறார்கள்

ரோமர் 11:8 கனநித்திரையின் ஆவியையும் காணாதிருக்கிற கண்களையும், கேளாதிருக்கிற காதுகளையும் தேவன் அவர்களுக்குக் கொடுத்தார் என்று எழுதியிருக்கிறபடியாயிற்று.

ரோமர் 11:9 அன்றியும், அவர்களுடைய பந்தி அவர்களுக்குச் சுருக்கும் கண்ணியும் இடறுதற்கான கல்லும் பதிலுக்குப் பதிலளித்தலுமாகக்கடவது.

ரோமர் 11:10 காணாதபடிக்கு அவர்களுடைய கண்கள் அந்தகாரப்படக் கடவது. அவர்களுடைய முதுகை எப்போதும் குனியப்பண்ணும் என்று தாவீதும் சொல்லியிருக்கிறான்

"அப்படியானால் என்ன?" - இஸ்ரவேல் ஜனங்கள் கிருபையினால் இரட்சிக்கப் படுகிறார்கள் கிருபையினாலே உண்டாகும் தெரிந்துகொள்ளுதலின்படி தேவன் ஒரு பங்கு மீதியாயிருக்கும் இஸ்ரவேல் ஜனங்களை இரட்சிக்கிறார் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் இரட்சிக்கப்படுகிறார்கள் தெரிந்து கொள்ளப் படாதவர்களுடைய கண்கள் அந்தகாரப் பட்டிருக்கிறது

ரோமருக்கு எழுதின நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாடு தீர்க்கதரிசன எண் - 12

"கனநித்திரையின் ஆவியையும், காணாதிருக்கிற கண்களையும் கேளாதிருக்கிற காதுகளையும் தேவன் அவர்களுக்குக் கொடுத்தார் (ரோமர் 11:8; ஏசா 29:10) தேவனுடைய வார்த்தை ஜனங்களுடைய மனக்கண்களைத் திறக்கிறது. அதே வார்த்தையே அவர்களுடைய கண்களை அந்தகாரப்படுத்தவும் செய்கிறது இதற்காக நாம் தேவனைக் குற்றப்படுத்த முடியாது கண்கள் அந்தகாரப்படுவது இஸ்ரவேல் ஜனங்களுடைய மனக்கடினத்தினித்தும் கீழ்ப்படியாமையின் நிமித்தமும் உண்டாயிற்று ஆகையினால் இந்தக் காரியத்திற்காக நாம் தேவனைக் குற்றப்படுத்தாமல் கலகம் பண்ணும் இஸ்ரவேல் ஜனங்களையே குற்றப்படுத்த வேண்டும் ரோமர் 9:12-18

ரோமருக்கு எழுதின நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாடு தீர்க்கதரிசன எண் - 13

"அவர்களுடைய பந்தி அவர்களுக்குச் சுருக்கும் கண்ணியும் இடறுதற்கான கல்லும் பதிலுக்குப் பதிலளித்தலுமாகக்கடவது. காணாதபடிக்கு அவர்களுடைய கண்கள் அந்தகாரப்படக்கடவது அவர்களுடைய முதுகை எப்போதும் குனியப்பண்ணும்" (ரோமர் 11:9-10; ரோமர் 69:22-23) அவர்களுடைய பந்தி என்பது அவர்களுடைய தெய்வீக பாரம்பரியின் ஆசீர்வாதங்களைக் குறிக்கும்.

(4) இஸ்ரவேலுக்குள்ளே வைராக்கியம் எழும்பிற்று

ரோமர் 11:11 இப்படியிருக்க, விழுந்து போகும்படிக்கா இடறினார்கள் என்று கேட்கிறேன் அப்படியல்லவே, அவர்களுக்குள்ளே வைராக்கியத்தை எழுப்பத்தக்கதாக அவர்களுடைய தவறுதலினாலே புறஜாதிகளுக்கு இரட்சிப்பு கிடைத்தது.

11 அதிகாரம்

ரோமர் 11:12 அவர்களுடைய தவறு உலகத்திற்கு ஐசுவரியமும் அவர்களுடைய குறைவு புறஜாதிகளுக்கு ஐசுவரியமுமாயிருக்க அவர்களுடைய நிறைவு எவ்வளவு அதிகமாய் அப்படியிருக்கும்

ரோமர் 11:13 புறஜாதியாராகிய உங்களுடனே பேசுகிறேன் புறஜாதிகளுக்கு நான் அப்போஸ்தலனாயிருக் கிறதினாலே என் இனத்தாருக்குள்ளே நான் வைராக்கியத்தை எழுப்பி, அவர்களில் சிலரை இரட்சிக்க வேண்டுமென்று.

ரோமர் 11:14 என் ஊழியத்தை மேன்மைப்படுத்துகிறேன்

ரோமர் 11:15 அவர்களைத் தள்ளிவிடுதல் [illegible] ஒப்புரவாகுதலாயிருக்க அவர்களை அங்கிகரித்துக் கொள்ளுதல் என்னமாயிராது, மரித்தோரிலிருந்து ஜீவன் உண்டானதுபோலிருக்கு மல்லவோ?

ரோமர் 11:16 மேலும் முதற்பலனாகிய மாவானது பரிசுத்தமாயிருந்தால் பிசைந்தமா முழுவதும் பரிசுத்தமாயிருக்கும்; வேரானது பரிசுத்தமாயிருந்தால், கிளைகளும் பரிசுத்தமாயிருக்கும்.

"விழுந்துபோகும்படிக்கா இடறினார்கள்" - நித்திய காலமாக அழிந்துபோவதற்காகவா இஸ்ரவேல் ஜனங்கள் இடறிப்போனார்கள் இல்லை அவர்களுடைய அழிவு தற்காலிகமானது. இதற்கு இடைப்பட்ட காலத்தில் அவர்களுக்குள்ளே வைராக்கியத்தை எழுப்பத்தக்கதாக புறஜாதி ஜனங்கள் அவர்களுடைய ஸ்தானத்தை எடுத்துக் கொள்கிறார்கள் இஸ்ரவேலருடைய தவறுதலினாலே புறஜாதிகளுக்கு இரட்சிப்பு கிடைத்தது. (ரோமர் 11:11; ரோமர் 10:19; உபா 32:21) யூதர்கள் தேவனைவிட்டு விலகிப் போனது புறஜாதியாருடைய இரட்சிப்பிற்குக் காரணமல்ல. யூதர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் புறஜாதியார் இரட்சிக்கப்படுவார்கள். (ஆதி 12:1-3; ரோமர் 4, கலா 6:8-10) அவிசுவாசிகளான இஸ்ரவேல் ஜனங்களால் புறஜாதியாருக்கு விசுவாசத்தைக்கொடுக்க முடியாது. கிறிஸ்து யூதரைப் புறக்கணித்து விட்டபடியினால் புறஜாதியாருடைய இரட்சிப்பு வேகமாக நடைபெறுகிறது. புறஜாதியார் அநேகர் இரட்சிக்கப்படுவதினால் இரட்சிக்கப்படாத யூதர்களுடைய இருதயங்களில் தாங்களும் இரட்சிக்கப் படவேண்டும் என்னும் வைராக்கியம் எழும்பவேண்டும் (அப் 13:46-48; அப் 28:28

இடறினார்கள் (stumbled) - πταίω - ptaioo - 4417

வினைச்சொல் - இடறு, தவறு இடறிவிழு **(to make a false step, mistake; to fail). (Stumble)** (ரோமர் 11:11); **(fall)** (2பேதுரு 1:10); **(offend)** (யாக் 2:10; யாக் 3:2

விழு (fall) - πίπτω - piptoo - 4098

வினைச்சொல் - விழு **(to fall down or out, meaning to be slain, or to lose one's favor or grace)** - இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் இடறி விழுந்தபடியினால் தேவனுடைய கிருபையையும் சிலாக்கியத்தையும் இழந்துபோனார்கள் புதிய ஏற்பாட்டில் "விழு" என்னும் இந்த வார்த்தை பொருளில் பலவசனங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது லூக்கா 8:13 அப் 1:25 ரோமர் 11:22 1கொரி 10:12 கலா 5:4; 1தீமோ 3:7; 1தீமோ 6:9 எபி 4:11; எபி 6:4-6; 2பேதுரு 1:10, 2பேதுரு 3:17; யூதா 1:24; வெளி 2:5

தவறு (fall) - παράπτωμα - paraptooma - 3900

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - தப்பிதம், பாவம், தவறு, குற்றம், அக்கிரமம், மீறுதல் **(a falling aside, when one should have stood upright; a moral fall, a fall from truth and grace) (Fall)** (ரோமர் 11:11-12) **(fault)** (கலா 6:1, யாக் 5:16); **(offence)** (ரோமர் 4:25, ரோமர் 5:15-20); **(trespass)** (மத் 6:14-15; மத் 18:35, மாற்கு 11:25-26; 2கொரி 5:19 எபே 2:1; கொலோ 2:13), **(sin)** (எபே 1:7; எபே 2:5; கொலோ 2:13

ரோமர்- தொகுப்புரை

11 அதிகாரம்

"அவர்களுக்குள்ளே வைராக்கியத்தை எழுப்பத்தக்கதாக" - புறஜாதியாருடைய இரட்சிப்பும் ஆசீர்வாதங்களும் யூதருக்குள்ளே வைராக்கியத்தை எழுப்பும். தங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்த ஆசீர்வாதங்களை மறுபடியும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்னும் ஆர்வத்தை அவர்கள் உள்ளத்தில் ஏற்படுத்தும்

"அவர்களுடைய தவறு உலகத்திற்கு ஐசுவரியமும் அவர்களுடைய குறைவு புறஜாதிகளுக்கு ஐசுவரியமுமாயிருக்கிறது" - இஸ்ரவேல் ஜனங்கள் கலகம் பண்ணியதினால் தேவனுடைய கிருபையின் ஐசுவரியங்கள் புறஜாதி உலகத்திற்குக் கிடைத்தது. இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய கிருபையின் ஆசீர்வாதங்களை மறுபடியுமாகப் பெற்றுக் கொண்டால் புறஜாதி உலகத்திற்கு நிறைவான ஆசீர்வாதம் உண்டாகும்.

"வைராக்கியம்" (emulation) - "jealousy" (ரோமர் 11:11)

"மரித்தோரிலிருந்து ஜீவன் உண்டானது போலிருக்குமல்லவோ?" யூதர்களைத் தள்ளிவிடுதல் உலகத்தை ஒப்புரவாக்குதலாய் இருக்கிறது. யூதர்களை அங்கீகரித்துக் கொள்ளுதல் மரித்தோரிலிருந்து ஜீவன் உண்டானதுபோலிருக்கும் இஸ்ரவேலைத் தள்ளிவிட்டு, புறஜாதியாரைத் தேவன் அங்கீகரித்ததினால் முழு உலகமும் இரட்சிக்கப்படுவதற்கு ஒரு வாய்ப்பு உண்டாயாகக் கிடைத்தது. இஸ்ரவேல் தேசம் முழுவதும் ஒரே நாளில் இரட்சிக்கப்படும்போது இந்த உலகத்திற்கு மிகப்பெரிய ஆசீர்வாதம் உண்டாகும். (ரோமர் 11:15,25-29; ஏசா 66:7-8, சக 12:10-13:1, சக 14:1-5,14,16-21)

"முதற்பலனாகிய மாவானது பரிசுத்தமாயிருந்தால் பிசைந்தமா முழுவதும் பரிசுத்தமாயிருக்கும்" முதற்பலன் என்பது சுவிசேஷத்தின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்ட முதலாவது யூதர்களைக் குறிக்கும். பிசைந்தமா முழுவதும் என்பது முடிவில் யூதருடைய முழு தேசமும் ஆசீர்வதிக்கப்பட்டு பரிசுத்தமாவதைக் குறிக்கும். (ரோமர் 11:16,25-29; ஏசா 66:7-8; சக 12:10-13:1, சக 14:1-21)

ஒலிவமரத்தின் வேரும், சாரமும் என்பது இயேசு கிறிஸ்துவையும், ஆபிரகாமின் உடன்படிக்கை, புதிய உடன்படிக்கை ஆகியவற்றின் மூலமாக உண்டாயிருக்கும் தேவனுடைய ஆசீர்வாதங்களைக் குறிக்கும் கிளைகள் என்பது இஸ்ரவேலரைக் குறிக்கும். உண்மையான விசுவாசிகள் திராட்சச்செடியின் கொடிகளைப் போல இருக்கிறார்கள் (யோவான் 15:1-8)

(5) புறஜாதியாருக்கு எச்சரிப்பு

ரோமர் 11:17 சில கிளைகள் முறித்துப் போடப்பட்டிருக்க, காட்டொலிவமரமாகிய நீ அவைகள் இருந்த இடத்தில் ஒட்ட வைக்கப்பட்டு, ஒலிவமரத்தின் வேருக்கும் சாரத்துக்கும் உடன் பங்காளியாயிருந்தாயானால்,

ரோமர் 11:18 நீ அந்தக் கிளைகளுக்கு விரோதமாய்ப் பெருமைபாராட்டாதே. பெருமை பாராட்டுவாயானால், நீ வேரைச் சுமக்காமல், வேர் உன்னைச் சுமக்கிறதென்று நினைத்துக்கொள்

ரோமர் 11:19 நான் ஒட்டவைக்கப்படுவதற்கு அந்தக் கிளைகள் முறித்துப் போடப்பட்டதென்று சொல்லுகிறாயே.

ரோமர் 11:20 நல்லது அவிசுவாசத்தினாலே அவைகள் முறித்துப்போடப்பட்டன. நீ விசுவாசத்தினாலே நிற்கிறாய், மேட்டிமைச் சிந்தையாயிராமல் பயந்திரு.

ரோமர் 11:21 சுபாவக்கிளைகளை தேவன் தப்பவிடாதிருக்க, உன்னையும் தப்பவிடமாட்டார் என்று எச்சரிக்கையாயிரு.

ரோமர் 11:22 ஆகையால், தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார்; விழுந்தவர்களிடத்திலே கண்டிப்பையும், உன்னிடத்திலே தயவையும் காண்பித்தார்; அந்தத் தயவிலே நிலைத்திருப்பாயானால் உனக்குத் தயவு கிடைக்கும்; நிலைத்திராவிட்டால் நீயும் வெட்டுண்டுபோவாய்.

11 அதிகாரம்

ரோமர் 11:23 அன்றியும், அவர்கள் அவிசுவாசத்திலே நிலைத்திராதிருந்தால் அவர்களும் ஒட்டவைக்கப்படுவார்கள்; அவர்களை மறுபடியும் ஒட்டவைக்கிறதற்கு தேவன் வல்லவராயிருக்கிறாரே

ரோமர் 11:24 சுபாவத்தின்படி காட்டொலிவ மரத்திலிருந்து நீ வெட்டப்பட்டு, சுபாவத்திற்கு விரோதமாய் நல்ல ஒலிவமரத்திலே ஒட்டவைக்கப்பட்டிருந்தால், சுபாவக்கிளைகளாகிய அவர்கள் தங்கள் சுய ஒலிவமரத்திலே ஒட்டவைக்கப்படுவது அதிக நிச்சயமல்லவா?

"சில கிளைகள் முறித்துப்போடப்பட்டிருக்க, காட்டொலிவமரமாகிய நீ அவைகள் இருந்த இடத்தில் ஒட்டவைக்கப்பட்டாய்" - இந்த வசனத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் ஒலிவ மரத்தின் கிளைகளுக்கும் புறஜாதி ஜனங்கள் காட்டொலிவமரத்திற்கும் ஒப்பனையாகக் கூறப்பட்டிருக்கிறார்கள் ஒலிவமரத்திலிருந்து ஒருசில கிளைகள் முறித்துப்போடப்பட்டன அதாவது இஸ்ரவேல ஜனங்களில் ஒருசிலர் தங்களுடைய அவிசுவாசத்தினால் தள்ளிவிடப்பட்டார்கள் முறித்துப்போடப்பட்ட கிளைகளுக்குப் பதிலாக காட்டொலிவமரத்தின் கிளைகள் அந்த இடத்தில் ஒட்டவைக்கப்பட்டன. அதாவது தள்ளப்பட்ட யூதர்களுக்குப் பதிலாகப் புறஜாதியார்கள் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளும்படியாகத் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்

"நீ அந்தக் கிளைகளுக்கு விரோதமாய்ப் பெருமைபாராட்டாதே" பவுல் இந்த வசனத்தில் புறஜாதியாருக்கு ஒருசில காரியங்களை எச்சரிப்பாகக் கூறுகிறார் யூதருடைய இடங்களில் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் புறஜாதியார்கள் தங்களைக் குறித்துப் பெருமைபாராட்டக் கூடாது. (ரோமர் 11:18-19) புறஜாதியார்கள் மேட்டிமை சிந்தையாய் இராமல் தேவனுக்குப் பயந்திருக்க வேண்டும் யூதர்களை அவர்களுடைய அவிசுவாசத்தின் நிமித்தம் தேவன் தப்பவிடாமல் முறித்துப்போட்டார் அதேபோன்று புறஜாதியார் அவிசுவாசிகளாக இருப்பார்கள் என்றால் அவர்களையும் தப்பவிடாமல் முறித்துப்போடுவது அதிக நிச்சயம். (ரோமர் 11:20-22)

"அந்தத் தயவிலே நிலைத்திருப்பாயானால் உனக்குத் தயவுகிடைக்கும்" - நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வதற்கு இது தேவனால் விதிக்கப்பட்டிருக்கும் நிபந்தனை (யோவான் 6:27) தம்முடைய தயவில் நிலைத்திராதவர்களை முறித்துப்போட வேண்டுமென்று தேவன் வாக்குப்பண்ணியிருக்கிறபடியினால் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதில் அவர் உண்மையுள்ளவராக இருப்பார் (ரோமர் 2:4)

"அவர்கள் அவிசுவாசத்திலே நிலைத்திராதிருந்தால் அவர்களும் ஒட்டவைக்கப்படுவார்கள்" - தேவனிடத்திலும், அவருடைய விசுவாசத்திலும் கிருபையிலும் புதுப்பித்துக் கொள்ள வேண்டுமென்றால் கர்த்தரை விசுவாசிப்பதில் நிலைத்திருக்க வேண்டும்

"மறுபடியும்" (again) - இந்த வார்த்தைக்குப் புதிதாக, மற்றும் ஒருமுறை என்று பொருள் கூறலாம். ஆயினும் மறுபடியும் என்று கூறும்போது அந்தக் காரியம் ஏற்கெனவே நடைபெற்றிருக்கிறது என்று பொருள்படுகிறது.

மனுஷர் மறுபடியும் செய்யக்கூடிய [redacted]

1. திரும்பவும் உயிர்ப்பிக்கப்படுதல் (Be revived again) (சங் 85:6)
2. தேவனிடத்திற்கு மறுபடியும் திரும்புதல் (Return to God again) (எரே 3:1, எசே 33:14)
3. பாவத்திலிருந்து மறுபடியும் திரும்புதல் (Turn from sin again) (எரே 25:5, எசே 18:27)
4. மறுபடியும் ஒலிவமரத்தில் ஒட்டவைக்கப்படுதல் (Be grafted into the olive tree again) (ரோமர் 11:23)
5. மூலஉபதேசங்களை மறுபடியும் உபதேசித்தல் (Be taught again) (எபி 5:12)
6. திரும்ப வனைதல் (Be made over again) (எரே 18:4)
7. மறுபடியும் பிறத்தல் (Be born again) (யோவான் 3:3-7; 1பேதுரு 1:3,23; கலா 4:19, யாக் 1:19-20)

ரோமர்- தொகுப்புரை

11 அதிகாரம்

மனுஷர் மறுபடியும் செய்யக்கூடாத காரியங்கள்

1 நீதியை விட்டு மறுபடியும் திரும்புதல எசே 3:20

2 பாவமான காரியங்களை மறுபடியும் கட்டுதல் (கலா 2:18)

3 மறுபடியும் அடிமைப்படும்படி விரும்புதல (கலா 4:9)

4 மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படுதல (மோசேயின் பிரமாணத்திற்குட்படுதல்) (கலா 5:1)

5 மறுபடியும் பாவம் செய்து மனந்திரும்புதல (எபி 6:6)

6 மதிகேட்டிற்குத் திரும்புதல் (சங் 85:8)

7 பாவத்தில மறுபடியும் சிக்குதல் 2பேதுரு 2:20-22

"சுபாவத்திற்கு விரோதமாய நல்ல ஒலிவ மரத்திலே ஒட்டவைக்கப்பட்டிருந்தாய" - கனிகொடாத கிளை கனிகொடுக்கும நல்ல மரத்தோடு பொதுவாக ஒட்டவைக்கப படுவதில்லை. இது சுபாவத்திற்கு விரோதமான காரியம்.

"சுபாவக்கிளைகளாகிய அவாகள தங்கள [redacted] ஒலிவமரத்திலே ஒட்ட வைக்கப்படுவது அதிக நிச்சயமல்லவா" கனிகொடுக்கும் நல்ல ஒலிவமரத்திலே காட்டொலிவமரத்தின கிளைகளை ஒட்டவைப்பது சுபாவத்திற்கு விரோதமான காரியம். தேவன் அந்தக காரியத்தைச் செய்யும்போது நல்ல ஒலிவமரத்தின சுபாவகிளைகளை அதாவது ஒலிவமரத்தின கிளைகளை நிச்சயமாகவே ஒட்ட வைப்பாா அதாவது யூதாகளை மறுபடியும் ஒன்றுகூட்டிச் சோப்பாா

(ஏ) இஸ்ரவேலின் வருங்கால இரட்சிப்பு - (ஏசா 66:7-8, சக 12:10-13:1)

ரோமர் 11:25 மேலும், சகோதரரே, நீங்கள உங்களையே புத்திமான்களென்று எண்ணாதபடிக்கு ஒரு இரகசியத்தை நீங்கள் அறியவேண்டுமென்றிருக்கிறேன் அதென்னவெனில், புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும்வரைக்கும் இஸ்ரவேலரில் ஒரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும்

ரோமர் 11:26 இந்தப்பிரகாரம் இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப படுவார்கள் மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து அவபக்தியை யாக்கோபைவிட்டு விலக்குவார் என்றும்.

ரோமர் 11:27 நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும்போது, இதுவே நான் அவர்களுடனே செய்யும் உடன்படிக்கை என்றும் எழுதியிருக்கிறது

ரோமர் 11:28 சுவிசேஷத்தைக்குறித்து அவர்கள் உங்கள் நிமித்தம பகைஞராயிருக்கிறார்கள் தெரிந்து கொள்ளுதலைக்குறித்து அவர்கள பிதாக்களினிமித்தம் அன்புகூரப பட்டவர்களாயிருக்கிறார்கள்

ரோமர் 11:29 தேவனுடைய கிருபை வரங்களும் அவாகளை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே

ரோமர் 11:30 ஆதலால நீஙகள முற்காலத்திலே தேவனுக்குக் கீழ்ப்படியாதிருந்து இப்பொழுது அவாகளுடைய கீழ்ப்படியாமையினாலே இரக்கம்பெற்றிருக்கிறதுபோல

ரோமர் 11:31 அவாகளும் இப்பொழுது கீழ்ப்படியாமலிருந்தும் பினபு உஙகளுக்குக் கிடைத்த இரக்கத்தினாலே இரக்கம் பெறுவாாகள

ரோமர் 11:32 எல்லாரமேலும் இரக்கமாயிருக்கத்தக்கதாக. தேவன எல்லாரையும் கீழ்ப்படியாமைக்குள்ளே அடைத்துப்போட்டாா

"ஒரு இரகசியத்தை நீஙகள் அறிய வேண்டுமென்றிருக்கிறேன" - (ரோமர் 11:25) இந்த இரகசியம் என்னவெனில், புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும வரைக்கும் இஸ்ரவேலரில ஒரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும என்பதாகும்.

11 அதிகாரம்

இரகசியம் (Mystery) - μυστήριον mysteerion 3466

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - இரகசியம் - ஏற்கெனவே மறைத்து வைக்கப்பட்டிருக்கும் காரியம் இப்போது முழுமையாக வெளிப்படுத்தப்படுகிறது. புதிய ஏற்பாட்டில் இரகசியம் என்னும் வார்த்தை முந்தைய காலத்தில் வெளிப்படுத்தப்படாத சத்தியம் தற்காலத்தில் ஜனங்களுக்கு முழுமையாக வெளிப்படுத்தப்பட்டிருப்பதைக் குறிக்கும். புதிய ஏற்பாட்டில் இரகசியம் என்னும் வார்த்தை 27 தடவை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் பழைய ஏற்பாட்டில் இந்த வார்த்தை எங்கும் காணப்படவில்லை

வேதாகமத்தில் காணப்படும் இரகசியங்கள்

1 பரலோக ராஜ்யமும், தேவனுடைய ராஜ்யமும் (The kindom of heaven and the kingdom of God) (மத் 13:11; மாற்கு 4:11; லூக்கா 8:10)

2 இஸ்ரவேலின் கடினமான மனது. (Israel's blindness) (ரோமர் 11:25)

3 கிறிஸ்துவில் இரட்சிப்பு (Salvation in Christ) (ரோமர் 16:25)

4 தேவனுடைய ஞானம் (The wisdom of God) (1கொரி 2:7)

5 தேவனுடைய உபதேசங்கள் (The doctrines of God) (1கொரி 4:1; கொலோ 2:2; 1தீமோ 3:16)

6 சுவிசேஷம் (The gospel) (எபே 6:19)

7 அறிவை உணர்த்தும் வசனம் (Gift of knowledge) (1கொரி 13:2)

8. பாஷைகளில் பேசுதல் (Speaking in tongues) (1கொரி 14:2,19 சபை எடுத்துக்கொள்ளப்படுதல் (The rapture of the church) (1கொரி 15.23,5-58 யோவான் 14:1-3; 1தெச 4:13-16

10 தேவனுடைய சித்தம் (God's will) (எபே 1:9)

11 சபை (The church) (எபே 3.1-9 எபே 5.32)

12 ஜனங்களுக்குள் கிறிஸ்து (Christ in people) (கொலோ 1:26-27)

13 கிறிஸ்துவினுடைய உபதேசங்கள் (Doctrines of Christ) கொலோ 4.3

14 அக்கிரமத்தின் ஆவி (Spirit of lawlessness) (2தெச 2:7)

15 சுவிசேஷத்தின் விசுவாசம் (Faith of the gospel) (1தீமோ 3:9)

16 ஏழு பொன்குத்துவிளக்குகள் (Seven candlesticks) (வெளி 1:20)

17 சாத்தானைத் தள்ளிவிடுவதில் தேவனுடைய தாமதம் (God's delay in casting out of Satan) (வெளி 10:7; வெளி 12:7-17)

18 மகாபாபிலோனின் இரகசியம் (Mystery Babylon) (வெளி 17:5,7)

தீர்க்கதரிசன எண் -2

"இஸ்ரவேலில் ஒரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும்." (ரோமர் 11:25-27) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. இயேசு கிறிஸ்து இஸ்ரவேலை மீட்பதற்காக வரும் வரையிலும் இஸ்ரவேலில் ஒரு பங்கு ஜனத்திற்குக் கடினமான மனதுண்டாயிருக்கும். (ரோமர் 11:25-29; ஏசா 66:7-8; சக 12:10 13:1; சக 14:1-21

11 அதிகாரம்

"புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும்" - (லூக்கா 21:24) புறஜாதியார் இனிமேல இரட்சிக்கப்படமாட்டார்கள் என்பது இந்த வாக்கியத்தின் பொருளல்ல. உபத்திரவக் காலத்தின் நடுவிலும் தேவன் யூதரையும் புறஜாதியாரையும் தொடர்ந்து இரட்சிப்பார் (அப் 2:16-21; வெளி 7:1-17; வெளி 15:2-4; வெளி 20:4-6) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது புறஜாதியாருடைய நிறைவு முடிவுபெறும் (ரோமர் 11:25-29; ஏசா 66:7-8; சக 12:10-13:1; சக 14:1-21) அப்போது புறஜாதியாருடைய காலமும் நிறைவுபெறும் (லூக்கா 21:24; வெளி 11:1-2; சக 14; மத் 25:31-46)

"இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்" - இயேசு கிறிஸ்து வரும்போது பாலஸ்தீன தேசத்தில் உயிரோடு இருக்கும் இஸ்ரவேல் தேசம் முழுமையையும் இந்த வாக்கியம் குறிக்கும். (சக 12:10-13:1; சக 14:1-5; மத் 24:30; ஏசா 66:7-8) இக்காலத்தில் இஸ்ரவேலில் மீதியாக இருக்கிறவர்கள் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள் (ஏசா 11:1-12; ஏசா 66:19-21; மத் 24:31)

"மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து அவபக்தியை யாக்கோபைவிட்டு விலக்குவார்" - ஏசா 27:9, ஏசா 59:20-21 ஆகிய வசனங்களிலிருந்து மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"சுவிசேஷத்தைக்குறித்து அவர்கள் உங்கள் நிமித்தம் பகைஞராயிருக்கிறார்கள்" - ஆனாலும் தெரிந்து கொள்ளுதலைக் குறித்து அவர்கள் பிதாக்களினிமித்தம் அன்புகூரப்பட்டவர்களாயிருக்கிறார்கள். தம்முடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்காகத் தேவன் அவர்களைத் தெரிந்தெடுத்திருக்கிறார். இஸ்ரவேல் ஜனங்களைப் பொருத்தவரையில் தேவனுடைய கிருபை வரங்களும் தேவன் அவர்களை அழைத்த அழைப்பும் இன்னும் மாறவில்லை. தங்களுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதற்கு முன்பாக இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவிடம் விசுவாசத்தோடு வரவேண்டும்.

"தேவனுடைய கிருபைவரங்களும் அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே" - இந்த வாக்கியம் தேவனுடைய வரங்களையும் இஸ்ரவேலருடைய அழைப்புகளையும் கூறுவதுபோலவே தேவன் அழைக்கும் எந்த நபரையும் குறிக்கும். தேவன் கொடுக்கும் எந்தக் கிருபை வரங்களையும் குறிக்கும். தேவன் ஒருபோதும் தவறு செய்வதில்லை. ஆகையினால் தமது மனதை மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியம் தேவனுக்கில்லை. ஜனங்கள் தேவனிடத்தில் தவறு பண்ணிவிடுகிறார்கள். இதனால் அவர்களை அழைத்த தமது அழைப்பைத் தேவனால் நிறைவேற்ற முடியவில்லை. ஆனாலும் அவர்கள் தேவனிடத்தில் மனந்திரும்பி விசுவாசத்தோடு வரும்போது தேவனுடைய அழைப்பு அவர்களிடத்தில் மாறுவதில்லை. அவர்களை அன்போடு தம்மிடம் ஏற்றுக் கொள்கிறார்.

"நீங்கள் முற்காலத்திலே தேவனுக்குக் கீழ்ப்படியாதிருந்தீர்கள்" - புறஜாதியார்கள் ஒரு காலத்தில் தேவனுடைய ராஜ்யத்தில் இடம் பெற்றிருக்கவில்லை. யூதர்களே அதில் இடம் பெற்றிருந்தார்கள். யூதர்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போனார்கள். இதனால் தேவனுடைய ராஜ்யத்திலிருந்து அவர்கள் தள்ளப்பட்டார்கள். இப்போது புறஜாதியார்கள் தேவனிடத்தில் இரக்கம் பெற்று தேவனுடைய ராஜ்யத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். தேவன் யூதர்களை மறுபடியுமாக அழைத்து வந்து [illegible] இராஜ்யத்தில் ஏற்றுக் கொள்வார் (சக 12:10-13:1)

"எல்லாமேலும் இரக்கமாயிருக்கத்தக்கதாக, தேவன் எல்லாரையும் கீழ்ப்படியாமைக்குள்ளே அடைத்துப்போட்டார்" - ரோமர் 3:19-20,23; கலா 3:22-23 ஆகிய வசனங்களைப் போலவே இந்த வசனமும் முடிவு பெறுகிறது. யூதரும் புறஜாதியாரும் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் இருக்கிறார்கள். இவ்விரு திறத்தாரும் தங்களுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்பி, தேவனிடத்தில் வரும்போது தேவனுடைய இரக்கத்தைப் பெற்றுக் கொள்வார்கள்.

11 அதிகாரம்

(7) தேவனுடைய மகத்துவம்

ரோமர் 11:33 ஆ! தேவனே ஐசுவரியம் ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள் அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்!

ரோமர் 11:34 கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் யார்? அவருக்கு ஆலோசனைக் காரனாயிருந்தவன் யார்?

ரோமர் 11:35 தனக்குப் பதில் கிடைக்கும் படிக்கு முந்தி அவருக்கு ஒன்றைக் கொடுத்தவன் யார்?

ரோமர் 11:36 சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது அவருக்கே என்றென்றைக்கும் மகிமை யுண்டாவதாக. ஆமென்

பதில்கிடைக்கும்படிக்குக் கொடு **(recompensed)** - **ἀνταποδίδωμι** **antapodidoomi** - 467

வினைச்சொல் - பதில் செய், பிரதிபலனைக் கொடு, செலுத்து **(repay).** (ரோமர் 11:35, 12:17, லூக்கா 14:14; 1தெச 3:9, 2தெச 1:6, எபி 10:30)

12 அதிகாரம்

X. நடைமுறை உபதேசங்கள் - (ரோமர் 12:1-15:12

1. கிறிஸ்தவ மார்க்கத்தின் அஸ்திபாரம் - (6:1-23; 8:1-13; எபே 4:20-24 கொலோ 3:5-10

ரோமர் 12:1 அப்படியிருக்க சகோதரரே நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப்பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன் இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை

ரோமர் 12:2 நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு [illegible] வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்

வேண்டிக்கொள் (beseech) - **παρακαλέω** - **parakaleoo** - 3870

வினைச்சொல் - வேண்டிக்கொள் வருந்தியழை, புத்திசொல், எச்சரி கேட்டுக்கொள், தேற்று, கடிந்துகொள் போதி, மன்றாடு(**to call aside**)- ஒரு குறிப்பிட்ட சத்தியத்தின் நிமித்தமாக வேண்டுகோள் விடுவிப்பது இந்த வசனத்தில் ரோமர் 1-8 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் அற்புதமான உபதேசங்களின் நிமித்தமாகப் பவுல் வேண்டிக் கொள்கிறார் அத்துடன் ரோமர் 9-11 ஆகிய அதிகாரங்களில் யூதரோடும், புறஜாதியாரோடும் தேவன் நடப்பிக்கும் அற்புதமானகிரியைகளின் மூலமாகவும் பவுல் வேண்டிக் கொள்கிறார் ரோமர் 12-15 ஆகிய அதிகாரங்களில் சுவிசேஷத்தை நடைமுறையில் எவ்வாறு செயல்படுத்துவது என்பதை விவரித்துக் கூறுகிறார் (ரோமர் 12:1-15:7)

இரக்கங்கள் (mercies) - **οἰκτιρμός** - **oiktirmos** - 3628

ஆண்பால் பெயர்ச்சொல் - இரக்கம் **(tender compassions)** (ரோமர் 12:1, 2கொரி 1:3; பிலி 2:1; கொலோ 3:12, எபி 10:28, மத் 9:36

"நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப்பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டும் - பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவனுடைய பலிபீடத்திற்கு ஜனங்கள் காணிக்கைகளையும் பலிகளையும் கொண்டு வருவார்கள் இப்போது ஜனங்கள் தேவனிடத்தில் தங்களையே ஜீவபலியாகக் கொண்டுவர வேண்டுமென்று பவுல் கூறுகிறார் பழைய ஏற்பாட்டுப் பலிகள் தேவனுக்கே முழுவதுமாக உரியவை அதுபோலவே புதிய ஏற்பாட்டுக் காலத்தில் நம்முடைய சரீரங்கள் கர்த்தருக்கே முழுவதுமாக உரியவை ஆகையினால் நாம் நம்முடைய சரீரத்தைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும்

சரீரத்தைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1 தேவனுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் (ரோமர் 11:1; ரோமர் 6:13-20).

2 ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும். (ரோமர் 12:1

3 பரிசுத்தமாக ஒப்புக் கொடுக்க வேண்டும். (ரோமர் 12:1, 1கொரி 3:17

4 தேவனுக்குப் பிரியமானதாக ஒப்புக் கொடுக்கவேண்டும். (ரோமர் 12:1

5 சரீரம் முழுவதும் வெளிச்சமாய் இருக்க வேண்டும். (மத் 6:22

6 பாவத்திற்கு மரித்ததாய் எண்ணிக்கொள்ள வேண்டும் (ரோமர் 6:11)

7 தேவனுக்கென்று பிழைத்திருக்கிறதாய் எண்ணிக் கொள்ள வேண்டும். (ரோமர் 6:11)

12 அதிகாரம்

8 பாவம் சரீரத்தை ஆளுகை செய்யக்கூடாது. (ரோமர் 6:12)

9 சரீரத்தின் செய்கைகளை அழிக்க வேண்டும். (ரோமர் 8:13)

10 சரீரத்தைக் கெடுத்துப்போடக்கூடாது. (1கொரி 3:17)

11 பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாக இருப்பதற்குச் சரீரத்தைத் தகுதிப் படுத்தவேண்டும். (1கொரி 3:16-17 1கொரி 6:13-20)

12 சரீரம் வேசித்தனத்திற்கல்ல கர்த்தருக்கே உரியது. (1கொரி 6:13-20)

13 சரீரத்தினால் தேவனை மகிமைப்படுத்த வேண்டும். (1கொரி 6:20)

14 சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்த வேண்டும். (1கொரி 9:27)

15 மாம்சத்திற்குரிய பாவ சரீரத்தைக் களைந்துபோட வேண்டும். (கொலோ 2:11)

"புத்தியுள்ள ஆராதனை" - ரோமர் 1:25 ஆவது வசனத்தில் பவுல் விக்கிரகாராதனையைப் பற்றி எழுதியிருக்கிறார். மெய் தேவனை நமது இருதயத்திலும், மனதிலும் ஆத்துமாவிலும் ஆராதிக்க வேண்டும்.

"நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் " இந்த வசனத்தில் பவுல் நமக்கு இரண்டு கட்டளைகளைக் கூறுகிறார். அவையாவன

1 நாம் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரிக்கக் கூடாது.

2 நமது மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாக வேண்டும்.

ஒத்திரு (conformed)

συσχηματίζω

syscheematizoo - 4964

வினைச்சொல் - ஒத்திரு - மற்றவருடைய எடுத்துக்காட்டைப் போன்று ஒத்திருத்தல். (to conform to another's example). (ரோமர் 12:2, 1பேதுரு 1:14)

பிரபஞ்சம் (world) - αἰών -aioon - 165

ஆண்பால் பெயர்ச்சொல் - காலம் உலகம், பிரபஞ்சம், ஆநாதி சதாகாலங்கள் (எபி 1:2 - இந்தக் காலத்திற்கு ஏற்ற வேஷம் தரிக்கக்கூடாது.

(அ) என்றென்றைக்கும் அதாவது கடந்த காலத்தில் - யோவான் 6:5 8(0:52

(ஆ) ஒரு குறிப்பிட்ட காலம் அதாவது இம்மை அல்லது மறுமை - மத் 12:32, மாற் 10:30

மறுரூபமாகுதல் (transformed) - μεταμορφόω - metamorphooo - 3339

வினைச்சொல் - மறுரூபமாகு. மறுரூபமடை - மத் 17:2, மாற்கு 9:2, ரோமர் 12:2; 2கொரி 3:18 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருப்பதைப் போன்று தெய்வீக மாற்றத்தினால் மறுரூபமடைதல் நமது மனம் புதிதாகிறதினாலே இந்த மறுரூபமாதல் நடைபெற வேண்டும். (தீத்து 3:5 2கொரி 4:16 கொலோ 3:10 எபி 6:6; எபே 4:23)

"தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று நீங்கள் பகுத்தறிய வேண்டும்" தேவனுடைய பிரியமும் பரிபூரணமுமான சித்தத்தில் ஆறு காரியங்கள் அடங்கியுள்ளன. அவையாவன

1 உங்கள் சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டும். (ரோமர் 12:1 1கொரி 3:16-17; 1கொரி 6:20)

2 உங்கள் சரீரத்தைப் பரிசுத்தமாக்க வேண்டும். (ரோமர் 12:1, 2கொரி 7:1)

ரோமர்- தொகுப்புரை

12 அதிகாரம்

3. உங்கள் சரீரத்தைத் தேவனுக்குப் பிரியமானதாக ஒப்புக்கொடுக்க வேண்டும். (ரோமர் 12:1)

4. தேவனுக்குப் புத்தியுள்ள ஆராதனை செய்ய வேண்டும். (ரோமர் 12:1)

5. இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரிக்கக்கூடாது. (ரோமர் 12:2)

6. இந்தப் பிரபஞ்சத்திலிருந்து மறுரூபமாக வேண்டும். (ரோமர் 12:2)

பரிபூரணம் (perfect) - τέλειος - teleios - 5046

பெயரடை - பூரண, பரிபூரணமான நிறைவான தேறின உத்தமமான - முழுமையானது. முடிவை அடைந்து விட்டது. முடிப்பதற்கு இனிமேல் ஒன்றும் இல்லாதது.

2. கிறிஸ்துவின் சரீரமும் ஆவிக்குரிய வரங்களும் - (1கொரி 12:1)

ரோமர் 12:3 அல்லாமலும்,எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது, உங்களில் எவனானாலும் தன்னைக்குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல் அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே,தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும்

ரோமர் 12:4 ஏனென்றால், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிலிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராததுபோல

ரோமர் 12:5 அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்.

ரோமர் 12:6 நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே நம்மில் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப் பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக்கடவன்

ரோமர் 12:7 ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும் போதிக்கிறவன் போதிக்கிறதிலும்,

ரோமர் 12:8 புத்திசொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன் பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன் முதாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக் கடவன் இரக்கஞ் செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன்

"எனக்கு" - இந்த வாக்கியம் தேவனுடைய கிருபையினால் பவுலுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அப்போஸ்தல ஊழியத்தைக் (Paul's apostleship) குறிக்கும். (ரோமர் 1:5; எபே 3:8)

"அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும்"- ஒருவனும் தன்னைக் குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணக் கூடாது தன்னைக் குறித்து பெருமைப்படக் கூடாது வாழ்க்கையில் முன்னேற வேண்டும். ஆனால் முன்னேற்றத்தில் பெருமைப்படக் கூடாது

"அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்" பவுல் இந்த வசனத்தில் கிறிஸ்துவின் சரீரத்தை ஒரு மனித சரீரத்தோடு ஒப்பிட்டுக் கூறுகிறார் (1கொரி 12:12-28)

"நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்கள்" - 1கொரி 12:4-11, 27-31 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் ஆவிக்குரிய வரங்களை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. நமக்கு அருளப்பட்ட தேவனுடைய கிருபையின்படியும், நம்முடைய விசுவாசத்தின் அளவின்படியும், நாம் இந்த வரங்களைப் பயன்படுத்த வேண்டும். (ரோமர் 12:3,6)

"தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற வரம்" ஜனங்களுக்குப் பக்தி விருத்தியுண்டாக்கவும், அவர்களுக்குப் புத்தி கூறவும் இந்த வரம் பயன்படுத்தப்படுகிறது. (1கொரி 14:3-6)

ரோமர்- தொகுப்புரை

12 அதிகாரம்

ஊழியம் (ministry) - διακονία diakonia 1248

பெண்பால் பெயர்ச்சொல் - வேலைகளைச் செய்தல், ஊழியம் உதவி, விசாரணை, தர்மசகாயம் - சபையிலுள்ள மூப்பரின் ஊழியம். (1தீமோ 3:8-13; மத் 20:26)

போதிக்கிறவன் (teacheth) - διδάσκαλος - didaskalos - 1320

ஆண்பால் பெயர்ச்சொல் - வேதபாரகன், வேதகன், போதகன், குரு - மற்றவர்களுக்குப் போதகம் பண்ணுகிறவன் (அப 13:1)

புத்திச்சொல் (exhorteth) - παρακαλέω - parakaleoo - 3870

வினைச்சொல் - வேண்டிக்கொள், வருந்தியழை, புத்திசொல், எச்சரி, கேட்டுக்கொள், தேற்று, கூடிநதுகொள், போதி, மன்றாடு (to call aside) - புத்திகூறி வேண்டிக்கொள்வது, ஆறுதல் கூறுவது, அறிவுரை கூறுவது. (make an appeal to by way of exhortation, entreaty, comfort, or instruction) (அப 4:36; எபி 10:25)

"பகிர்ந்து கொடுக்கிறவன்" - ஐசுவரியவான் மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கும் உதவிகளை இந்த வாக்கியம் குறிப்பிடும் (2கொரி 8:2, 2கொரி 9:11-13)

வஞ்சனையின்மை (simplicity) ἀντέχω - antechoo - 472

வினைச்சொல் - பற்று, தாங்கு (ரோமர் 12:8, 2கொரி 1:12, 2கொரி 8:2, 2கொரி 9:11,13, 2கொரி 11:3; எபே 6:5, கொலோ 3:22) வெளிவேஷத்திற்கோ விளம்பரத்திற்கோ தானதருமம் பண்ணக் கூடாது.

முதலாளி (ruleth) - προΐστημι - proisteemi 4291

வினைச்சொல் - முதலாளியாயிரு, நடத்து, விசாரணைசெய் - தலைவர், போதகர், மேய்ப்பர், சபையின் ஊழியக்காரர்களில் பொறுப்பெடுத்திருக்கிறவர் (ரோமர் 12:8, 1தெச 5:12; 1தீமோ 3:4,5,12; 1தீமோ 5:17; தீத்து 3:8,14)

ஜாக்கிரதை (diligence) - σπουδή - spoudee - 4710

பெண்பால் பெயர்ச்சொல் - சீக்கிரம், தீவிரம், ஜாக்கிரதை - (haste) (மாற்கு 6:25); (diligent) (ரோமர் 12:8; எபி 6:11; 2பேதுரு 1:5; யூதா 1:3); (earnest) (2கொரி 8:16); (carefulness) (2கொரி 7:11)

"இரக்கஞ்செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன்" - வியாதியஸ்தர்களைச் சந்திக்கிறவர்கள், தர்ம காரியங்களைப் பகிர்ந்து கொடுக்கிறவர்கள் உற்சாகமாகவும் இரக்க குணத்தோடும் சந்தோஷத்தோடும் செய்ய வேண்டும்

2. கிறிஸ்தவ சகோதரத்துவத்தை காத்துக்கொள்ள இருபது கட்டளைகள்

ரோமர் 12:9 உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக. தீமையை வெறுத்து நன்மையைப் பற்றிக் கொண்டிருங்கள்

ரோமர் 12:10 சகோதரசிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள், கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்

ரோமர் 12:11 அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்

ரோமர் 12:12 நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள், உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள், ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்

ரோமர்- தொகுப்புரை

12 அதிகாரம்

ரோமர் 12:13 பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவி செய்யுங்கள் அந்நியரை உபசரிக்க நாடுங்கள்

ரோமர் 12:14 உங்களைத் துன்பப படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள் ஆசீர்வதிக்க வேண்டியதேயன்றி சபியாதிருங்கள்

ரோமர் 12:15 சந்தோஷபடுகிறவர்களுடனே சந்தோஷபடுங்கள் அழுகிறவர்களுடனே அழுங்கள்

ரோமர் 12:16 ஒருவரோடொருவர் ஏகசிந்தையுள்ளவர்களாயிருங்கள் மேட்டிமையானவைகளைச் சிந்தியாமல தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள் உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள்

மாயமற்றது (dissimulation) - ἀνυπόκριτος -anypokritos - 505

பெயரடை - மாயமற்ற (undisguised, a real thing) (2கொரி 6:6, 1தீமோ 1:5; 2தீமோ 1:5 யாக் 3:17, 1பேதுரு 1:22)

"தீமையை வெறுங்கள்" - எல்லாத் தீமையான காரியங்களையும் வெறுக்க வேண்டும். அவற்றை நம்மைவிட்டு அகற்ற வேண்டும்

"நன்மையைப் பற்றிக்கொண்டிருங்கள்" நன்மையோடு ஒட்டிக் கொள்ள வேண்டும்.

"சகோதர சிநேகத்திலே ஒருவர் மேலொருவர் பட்சமாயிருங்கள்" சகோதர பாசத்தோடு பிறரிடத்தில அன்புகூரவேண்டும்.

"கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்" மற்றவர்களைக் கனம் பண்ணும்போது அவர்கள் நம்மைக் கனம் பண்ணுவதற்கு முன்பாக நாமே அவர்களை முதலாவதாகக் கனம் பண்ண வேண்டும்.

"அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்" - சோம்பேறியாகவோ, கவனக் குறைவாகவோ எப்போதும் இருக்கக்கூடாது.

"ஆவியிலே அனலாயிருங்கள்" - கர்த்தருக்குள் எப்போதும் வைராக்கியமாக இருக்க வேண்டும். தேவனுக்காகப் பற்றி எரிந்து கொண்டிருக்க வேண்டும்.

"கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்" - நமக்கு தனிப்பட்ட முறையில் ஆதாயங்களும், பாராட்டுக்களும் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் தேவனுடைய ஊழியத்திற்கென்று நம்முடைய ஜீவியத்தை ஒப்புக்கொடுக்க வேண்டும்.

"நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்" - நம்முடைய நம்பிக்கை நமக்கு சந்தோஷத்தைத் தரவேண்டும்

"உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்" - தேவபிள்ளைகளாகிய நமக்குப் பல உபத்திரவங்கள் வரலாம் எல்லா உபத்திரவங்களிலும் நாம் பொறுமையைக் காண்பிக்க வேண்டும்

"ஜெபத்திலே உறுதியாய்த்தரித்திருங்கள்" - தேவனிடத்தில எப்போதும் ஜெபித்துக் கொண்டிருக்க வேண்டும்

"பரிசுத்தவான்களுடைய குறைவில அவர்களுக்கு உதவிசெய்யுங்கள்" - தேவையுள்ள பரிசுத்தவான்களுக்குப் பொருளுதவி செய்து அவர்களை ஆதரிக்க வேண்டும்.

"அந்நியரை உபசரிக்க நாடுங்கள்" அந்நியரை உபசரிப்பதை நமது சுபாவமாக்கிக் கொள்ளவேண்டும்.

"உங்களைத் துன்பபடுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள் ஆசீர்வதிக்க வேண்டியதேயன்றி சபியாதிருங்கள்" நம்மைச் சிலர் தொடர்ந்து துன்பப்படுத்தலாம். அது அவர்களுக்கு வாடிக்கையாக இருக்கலாம். அவர்களையும் நாம் சபிக்காமல ஆசீர்வதிக்க வேண்டும்.

"சந்தோஷப படுகிறவர்களுடனே சந்தோஷப படுங்கள்" - மற்றவர்கள் ஆசீர்வதிக்கப பட்டிருக்கும்போது, அவர்களுடைய வாழ்வு வளம் பெற்றிருக்கும்போது நாம் அவர்கள்மீது பொறாமைபடாமல் அவர்களை மனதார ஆசீர்வதித்து வாழ்த்தவேண்டும்.

12 அதிகாரம்

"அழுகிறவர்களுடனே அழுங்கள்" - மற்றவர்கள்மீது நமக்குள்ள உண்மையான மனதுருக்கத்தை வெளிப்படுத்த வேண்டும்.

"ஒருவரோடொருவர் ஏகசிந்தையுள்ளவர்களாயிருங்கள் - மற்றவர்களுடைய சிந்தையைத் தெரிந்து கொண்டு அவர்களோடு ஏகசிந்தை உள்ளவர்களாய் இருக்க வேண்டும்

"மேட்டிமையானவைகளைச் சிந்தியாதிருங்கள் - தவறான வழியில் ஐசுவரியவானாக வேண்டும். பெரியவனாக வேண்டும் என்று பேராசைப்படக்கூடாது. தரித்திரரை ஒடுக்கக்கூடாது.

"தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள்" - தேவபக்தியுள்ளவர்களோடும், தாழ்மையானவர்களோடும் நாம் உண்மையான மனதோடு நட்புடன் பழகி அவர்களுடைய குறைகளைச் செவிகொடுத்து கேட்க வேண்டும். நம்மால் முடிந்த வரையில் அவர்களுக்கு உதவி புரிய வேண்டும்.

"உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள்" - வீண் பெருமையிலும் மாயையிலும் மூழ்கிவிடக்கூடாது.

4. உலகத்தில் கிறிஸ்தவ நடத்தையைக் காத்துக் கொள்ள ஏழு கட்டளைகள்
¬ வசனம் 2 யோவான் 15:18,
†யோவான் 2:15 யாக் 4:4

ரோமர் 12:17 ஒருவனுக்கும் தீமைக்குத் தீமைசெய்யாதிருங்கள் எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள்

ரோமர் 12:18 கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்

ரோமர் 12:19 பிரியமானவர்களே பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல் கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்

ரோமர் 12:20 அன்றியும், உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்கு போஜனங் கொடு; அவன் தாகமாயிருந்தால் அவனுக்குப் பானங் கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய்.

ரோமர் 12:21 நீ தீமையினாலே வெல்லப்படாமல் தீமையை நன்மையினாலே வெல்லு.

"ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்" - எந்த மனுஷனுக்கும் பதிலுக்குப் பதில் செய்து அவனை நாம் தண்டிக்கக்கூடாது.

"எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள்" - நம்முடைய தகுதிக்கு மீறி ஜீவிப்பதற்கு முயற்சி பண்ணக்கூடாது.

"கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்" - நாம் எல்லா மனுஷரோடும் சமாதானமாக இருக்க வேண்டும். சமாதானத்தைச் சீர்குலைக்கும் காரியங்களை நம்மால் தடுத்து நிறுத்தமுடியுமென்றால் அவற்றைத் தயங்காமல் தடுத்து நிறுத்தி எல்லா மனுஷரோடும் சமாதானமாய் இருக்க வேண்டும்

"பிரியமானவர்களே நீங்கள் பழிவாங்காமல் இருங்கள்" - நாம் யாரையும் பழிவாங்கக்கூடாது. எல்லாவற்றையும் கர்த்தர் பார்த்துக் கொள்வார் என்று பொறுமையோடு இருக்க வேண்டும்

"கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்" - நாம் யாரையும் பழிவாங்காமல், நமக்குத் தீங்கு செய்தவர்களைக் கர்த்தருடைய கோபாக்கினைக்கு ஒப்புக்கொடுத்துவிட வேண்டும். அத்துடன் அரசாங்கத்தின் சட்ட திட்டங்களுக்கும் நீதிநியாயங்களுக்கும் ஒப்புக்கொடுக்க வேண்டும். அரசு நீதியாய் செயல்படவில்லையென்றால், நமது பரம நீதிபரர் சகலத்தையும் பார்த்துக் கொள்வார்

"உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்கு போஜனங்கொடு" - நாம் நம்மைக் கவனிப்பது போன்று நம்முடைய சத்துருக்களையும் கவனிக்க வேண்டும். நாம் தேவனுக்குச் சத்துருக்களாக இருந்தபோது தேவன் நமக்கு நன்மை செய்தார் (ரோமர் 5:7,8) இதுபோலவே நாமும் நமது சத்துருக்களுக்கு நன்மை செய்ய வேண்டும். அவன் தாகமாயிருந்தால் அவனுக்குப் பானங்கொடுக்க வேண்டும். நாம் நம்முடைய சத்துருவிற்கு இப்படிச்செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவிப்போம். நீதி 25:21,22 ஆகிய வசனங்கள் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

ரோமர் - தொகுப்புரை

12 அதிகாரம்

"நீ தீமையினாலே வெல்லப்படாமல் தீமையை நன்மையினாலே வெல்லு" - தீமை நம்மிடத்தில் உள்ள நன்மையை வெல்லக்கூடாது. வென்றால், நம்மால் நன்மை செய்ய முடியாது. ஆகையினால் நாம் நன்மை செய்து தீமையை வெல்ல வேண்டும்.

சத்துருக்களிடம் நாம் நடந்து கொள்ள வேண்டிய விதம்

1. நமது சத்துருக்களை நேசிக்க வேண்டும் (மத் 5:44 லூக்கா 6:27)
2. நமது சத்துருக்களை ஆசீர்வதிக்க வேண்டும் (மத் 5:44 லூக்கா 6:28)
3. நமது சத்துருக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் (மத் 5:44)
4. நமது சத்துருக்களுக்காக ஜெபம் பண்ண வேண்டும் (மத் 5:44 லூக்கா 6:28)
5. நமது சத்துருக்களுக்குக் கடன் கொடுக்கவேண்டும் (லூக்கா 6:34-36)
6. நமது சத்துருக்களிடம் அன்புகூர வேண்டும் (லூக்கா 6:35-36)
7. நமது சத்துருக்களிடம் இரக்கம் காண்பிக்க வேண்டும் (லூக்கா 6:36)

சத்துருக்களை நேசித்தவர்களுக்கு எடுத்துக்காட்டுக்கள்

1. தேவன் (மத் 5:44 லூக்கா 6:35 ரோமர் 5:8)
2. ஆபிரகாம் (ஆதி 20:14-18)
3. தாவீது (1சாமு 24:17; சங் 35:12-14)
4. எலிசா (2இராஜா 6:22-23)
5. இயேசு (லூக்கா 23:34)
6. ஸ்தேவான் (அப் 7:60)
7. பவுல் (ரோமர் 9:3 ரோமர் 10:1)

ரோமர்- தொகுப்புரை

13 அதிகாரம்

5. கிறிஸ்தவரும் அதிகாரமும் அதிகாரிகளும் - மத் 22:21 பேதுரு 2:13-17

ரோமர் 13:1 எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக் கடவன் ஏனென்றால தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை. உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப் பட்டிருக்கிறது.

ரோமர் 13:2 ஆதலால அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்துநிற்கிறான அப்படி எதிர்த்துநிற்கிறவர்கள தங்களுக்குத் தாங்களே ஆக்கினையை வருவித்துக் கொள்ளுகிறார்கள

ரோமர் 13:3 மேலும் அதிகாரிகள நற்கிரியைகளுக்கல்ல துர்க்கிரியை களுக்கே பயங்கரமாயிருக்கிறார்கள ஆகையால நீ அதிகாரத்திற்குப் பயப்படாதிருக்க வேண்டுமானால நன்மைசெய். அதினால உனக்குப் புகழ்ச்சி உண்டாகும்.

ரோமர் 13:4 உனக்கு நன்மை உண்டாகும் பொருட்டு அவன தேவஊழியக் காரனாயிருக்கிறான் நீ தீமைசெய்தால் பயந்திரு; பட்டயத்தை அவன விருதாவாய்ப் பிடித்திருக்க வில்லை தீமைசெய்கிறவனமேல கோபாக்கினை வரப்பண்ணும்படி அவன நீதியைச் செலுத்துகிற தேவஊழியக் காரனாயிருக்கிறானே

ரோமர் 13:5 ஆகையால நீங்கள கோபாக்கினையினிமித்தம் மாத்திர மல்ல, மனச்சாட்சியினிமித்தமும் கீழ்ப்படிய வேண்டும்

ரோமர் 13:6 இதற்காகவே நீங்கள வரியையும் கொடுக்கிறீர்கள அவர்கள் இந்த வேலையைப் பார்த்து வருகிற தேவ ஊழியக்காரரா யிருக்கிறார்களே

ரோமர் 13:7 ஆகையால் யாவருக்கும் செலுத்தவேண்டிய கடமைகளைச் செலுத்துங்கள் எவனுக்கு வரியைச் செலுத்தவேண்டியதோ அவனுக்கு வரியையும் எவனுக்குத் தீர்வையைச் செலுத்தவேண்டியதோ அவனுக்குத் தீர்வையையும் செலுத்துங்கள் எவனுக்குப் பயப்படவேண்டியதோ அவனுக்குப் பயப்படுங்கள் எவனைக் கனம்பண்ண வேண்டியதோ அவனைக் கனம் பண்ணுங்கள்

குடிமக்களின் கடமைகள்

1 மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் (ரோமர் 13:1 தீத்து 3:1; 1பேதுரு 2:13-17)

2 மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியாமல இருக்க பயப்பட வேண்டும். (ரோமர் 13:3 நீதி 24:21)

3 நன்மை செய்ய வேண்டும் (ரோமர் 13:4; தீத்து 3:1)

4 வரி செலுத்த வேண்டும் (ரோமர் 13:1-7, மத் 22:17-21)

5 யாவருக்கும் செலுத்தவேண்டிய கடமைகளைச் செலுத்த வேண்டும் (ரோமர் 13:7

6 மேலான அதிகாரமுள்ளவர்களைக் கனம் பண்ண வேண்டும் (ரோமர் 13. 1-7; மத் 22:28 அப் 23:5; 1பேதுரு 2:13-17)

7 ராஜாக்களுக்காகவும் அதிகாரம் உள்ளவர் களுக்காகவும் வேண்டுதல் களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ண வேண்டும். (தீமோ 2:1 2

8 அரசாங்கனின் சட்டங்களுக்கு கீழ்ப்படிய வேண்டும். (ரோமர் 13:1-7, எஸ்றா 7:26)

9 ராஜாவை (மேலான அதிகாரம் உள்ளவர்களை) நம் மனதிலும் நிந்திக்கக்கூடாது. பிர 10:20

10 சமாதானத்திற்காக கிரியை செய்ய வேண்டும். (ரோமர் 12:18

13 அதிகாரம்

மேலான அதிகாரம் (higher powers) - ὑπερέχω - hyperechoo - 5242

வினைச்சொல் - மேலாயிரு, மேன்மையாயிரு (supreme powers). ரோமர் 13:1, பிலி 2:3 பிலி 3:8 பிலி 4:7; 1பேதுரு 2:13)

அரசாங்கம்

கிரேக்க மொழியில் அரசாங்கத்திற்கு "எக்ஸ்ஸோசியா" (exousia) என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு கொடுக்கப் பட்டிருக்கும் அதிகாரம் அல்லது நியமிக்கப் பட்டிருக்கும் அதிகாரம் (delegated authority) என்று பொருள் எல்லா அதிகாரங்களுமே நியமிக்கப்பட்டிருக்கிறது (appointed or determined) இதற்கான கிரேக்க வார்த்தை "டஸ்ஸோ" (tassoo) என்பதாகும். அதிகாரங்கள் தேவனால நியமிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம் தேவனுடைய திட்டம். ஜனங்களை நீதியாக ஆளுகை செய்வதற்கும். நீதியான சட்டங்களை நடைமுறையில செயல்படுத்துவதற்கும் நீதியான அரசாங்கம் தேவை ஆகையினால தேவன நீதியான அரசாங்கத்தை அங்கீகரிக்கிறார மேலான அதிகாரம உள்ளவர்களைத் தேவன நியமிக்கிறார அவர்களுடைய கிரியைகளுக்குத் தேவன பொறுப்பல்ல அவர்கள தங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் கடமைகளுக்குப் புறம்பாக செயல்படும்போது தேவன அவர்களை நியாயந்தீர்ப்பார் சுவிசேஷ ஊழியர்களைத் தேவன நியாயந்தீர்ப்பதுபோல அரசாங்க அதிகாரிகளையும் தேவன நியாயந்தீர்ப்பது நிச்சயம். (அப 13:48)

அதிகாரம் (power) - ἐξουσία - exousia 1849

பெண்பால் பெயர்ச்சொல் - அதிகாரம் வல்லமை, ஆதீனம்

நியமிக்கப்பட்டிருக்கிறது (appointed) - τάσσω tassoo 5021

வினைச்சொல் - குறித்திரு நியமிக்கப்படு, ஒப்புவித்திரு

அரசாங்கங்களைப் பற்றிய வேதாகம உபதேசங்கள்

1 அரசாங்கங்கள் தேவனால் நியமிக்கப் பட்டிருக்கிறது (ஆதி 9:1-7 ரோமர் 13:1-6 1பேதுரு 2:13-17

2 குற்றவாளிகளைத் தண்டித்து ஜனங்கள் மத்தியிலே சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்த வேண்டும் இதுவே அரசாங்கத்தைத் தேவன் நியமித்திருப்பதன் நோக்கமாகும் (ரோமர் 13:1-6; 1பேதுரு 2:13-17 ஆதி 9:6; ஏசா 11:4-9; ஏசா 65:20 தானி 2:21 தானி 4:17-25 தானி 5:2)

3 மனுஷருக்கு நன்மை ஏற்படவும் சமுதாயத்தில அமைதியும் முன்னேற்றமும் காணப்படவும் விசுவாசிகள அரசாங்கத்திற்கு ஆதரவாய் இருக்க வேண்டும் (ரோமர் 13:1 1பேதுரு 2:13-17

4 தங்களுடைய சொந்த தேசத்தில மட்டும சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்துவதோடு அரசாங்கங்கள தங்களுடைய பொறுப்புகளை மட்டுப் படுத்தக்கூடாது தனிமனிதர்களைப போல சில தேசங்களும் குற்றம் புரியும்போது அவைகளின்மீது போர தொடுத்து உலகம் முழுவதிலும் சட்டம் ஒழுங்கைப பராமரிக்க வேண்டும் இதற்காகவும அரசாங்கங்கள நியமிக்கப் பட்டிருக்கிறது (ரோமர் 13:1-5, 1பேதுரு 2:13-17, தானி 2:21 தானி 4:17-25 தானி 5:2)

5. அரசாங்கத்தை ஆளும் பொறுப்பை அவிசுவாசிகளுடையகையில கொடுத்து விட்டு, விசுவாசிகள் சும்மாயிருக்கக் கூடாது. நல்ல அரசு நடைபெறவில்லை யென்றால், சுவிசேஷ ஊழியம் செய்வது கடினம். தனி மனிதருக்கும், சமுதாயத்திற்கும் நன்மை செய்வதின் மூலமாக ஆத்துமாக்களை இரட்சிப்பிற்குள் வழி நடத்தலாம். (ரோமர் 13:1-6 1தீமோ 3:8-10) ஆகையினால தேர்தல் வரும்போது விசுவாசிகள தங்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் உரிமைகளைப் பயன்படுத்தி நல்ல அரசாங்கம் நியமிக்கப்பட தங்களுடைய கடமைகளைச் செய்ய வேண்டும்.

13 அதிகாரம்

6 மானிட சமுதாயத்தின் தேவையை உணர்ந்தே தேவன் அரசாங்கங்களை நியமித்திருக்கிறார் அரசாங்கம் மனுஷருக்கு நன்மை புரிய வேண்டும். தேவனுடைய சத்தியத்திற்கு அரசாங்கம் புறம்பாக நடக்காத போது அந்த அரசாங்கத்தோடு விசுவாசிகள் நிச்சயமாகவே ஒத்துழைக்க வேண்டும் ரோமர் 13:1-6

7 ஜனங்கள் மத்தியிலே சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்துவதற்காகவும், தேவன் அரசாங்கத்தை நியமித்திருக்கிறார் மேலான அதிகாரத்தில உள்ளவர்கள் குற்றவாளிகளைத் தண்டிக்கிறார்கள் பட்டயத்தை அவர்கள் விருதாவாய பிடித்திருக்கவில்லை தீமைசெய்கிறவன் மேல் கோபாக்கினை வரப்பண்ணுமபடி அவர்கள் நீதியைச் செலுததுகிற தேவ ஊழியக்காரராய் இருக்கிறார்கள் ரோமர் 13:1-6, 1பேதுரு 2:13-17)

"அதிகாரததிற்கு எதிர்த்து நிற்கிறவன தேவனுடைய நியமததிற்கு எதிர்தது நிற்கிறான"- அதிகாரம் தேவனுடைய நியமம அது தேவனால நியமிககபபட்டிருககிறது. ஆகையினால நாம அதிகாரததிற்கு எதிர்த்து நிற்ககூடாது. அப்படி எதிர்தது நிற்கிறவாகள தஙகளுக்குத தாஙகளே ஆக்கினையைவருவிததுக்கொளளுகிறாாகள

"அதிகாரிகள நற்கிரியைகளுககலல துர்க்கிரியைகளுக்கே பயஙகரமாயிருக கிறாாகள" அதிகாரிகளுடைய கடமைகளைப பவுல இஙகு எடுத்துக் கூறுகிறார நற்கிரியை செயகிறவாகளை அதிகாரிகள பயமுறுத்தக் கூடாது. சமுதாயத்திற்கு எதிராக துர்க்கிரியைகளைச செய்யும துன்மாாக்கருக்கு மட்டுமே அதிகாரிகள பயஙகரமானவாகளாக இருக்க வேணடும்

"நீ அதிகாரத்திற்குப பயபபடாதிருகக வேணடுமானால், நனமைசெய்" - நாம் நன்மை செய்யும்போது நமக்குப் புகழ்சசி உணடாகும் அரசாஙகத்தின சட்டஙகளுககு நாம் கீழ்ப்படிய வேணடும் இதனால் நாம் எதற்கும் பயபபட வேணடியதில்லை அதே சமயத்தில் அதிகாரிகளும் சட்ட ஒழுஙகை நியாயமாகப் பராமரிக்க வேணடும்.

ஊழியக்காரன் (minister) - διακονία - diakonia - 1248

பெண்பால் பெயர்ச்சொல் - வேலைகளைச் செய்தல், ஊழியம் உதவி, விசாரணை, தர்மசகாயம் சட்டத்திற்குஊழியக்காரன் (deacon or servant of the law) (மத் 20:26

"பட்டயத்தை அவன் விருதாவாய பிடித்திருக்கவிலலை" - ஜனங்களுக்கு நனமை உணடாகும பொருட்டு அதிகாரி தேவஊழியக் காரனாய இருக்கிறான் நனமையைப பாதுகாக்கவும் தீமையை அழிக்கவும் தேவன் அதிகாரிகளை நியமிததிருக்கிறார் அவர்கள் தீமை செயகிறவனமேல கோபாக்கினை வரப பணணுவார்கள ஆகையினால அரசாங் கததின அதிகாரிகள நீதியைச் செலுததுகிற தேவஊழியக்காரராய் இருககிறாாகள

"நீஙகள கோபாக்கினையினிமித்தம் மாததிரமலல மனசசாட்சியினிமிததமும் கீழ்ப்படியவேணடும்" - அரசாஙகத்தின சட்டஙகளுககு நாம் கீழ்ப்படிய வேணடும் தணடனைககுத தப்பித்துக் கொள்வதற்காக மட்டும் நாம் கீழ்ப்படிவதிலலை. நம்முடைய மனசசாட்சியின பிரகாரமும் நாம் கீழ்ப்படிய வேணடியது அவசியம்.

"இதறகாகவே நீஙகள் வரியையும் கொடுககிறீர்கள" சமுதாயத்தில் சட்ட ஒழுஙகை நிலைநிறுத்துவதற்கு அதிகாரிகள தேவனால் நியமிக்கபபட்டிருக்கும் தேவஊழியக்காரராய இருக்கிறாாகள் அவாகளுடைய வேலைகளை நாம் ஆதரிக்க வேணடும். அதற்காக நாம் செலுத்த வேணடிய வரியின் பஙகைச் செலுத்த வேண்டும். (ரோமர் 13:6-7)

13 அதிகாரம்

ஊழியக்காரர் (ministers) - λειτουργός - leitourgos - 3011

ஆண்பால் பெயர்ச்சொல் - ஊழியக்காரர் உதவிசெய்தவன் ஊழியஞ்செய்கிறவன் (public servant) அரசாங்க அதிகாரி ரோமர் 13:6; ரோமர் 15:16;பிலி 2:25 எபி 1:7 எபி 8:2) - அரசாங்க அதிகாரிகள் தேவனுடைய ஊழியக் காரர்கள் அவர்கள் தேவ பக்தி யற்றவர்களாகஇருந்தாலும் தங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் பொறுப்புக்களை உண்மையோடு செய்கிறார்கள் ஆகையினால் நாம் அவர்களுக்குரிய மரியாதையைக் கொடுத்து அவர்களுக்கு ஆதரவு தந்து அவர்களுக்குச் செலுத்த வேண்டிய கடமைகளைச் செலுத்த வேண்டும்.

"யாவருக்கும் செலுத்தவேண்டிய கடமைகளைச் செலுத்துங்கள் - பவுல் இந்த வசனத்தில் ஜனங்கள் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய ஒருசில கடமைகளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார் அவையாவன

1 வரியைச் செலுத்த வேண்டியவனுக்கு வரி செலுத்த வேண்டும்.

2 தீர்வையைச் வேண்டியவனுக்கு தீர்வை செலுத்த வேண்டும்

3 பயப்பட வேண்டியவனுக்குப் பயப்பட வேண்டும்

4 கனம் பண்ண வேண்டியவனைக் கனம் பண்ணவேண்டும்

நாம் அரசாங்கத்திற்குக் கடனாளிகளாக இருக்கக்கூடாது ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல் மற்றொன்றிலும் நாம் ஒருவனுக்கும் கடன்பட்டிருக்கக்கூடாது.

6. பிறரிடத்தில் கிறிஸ்தவர்கள் நடந்து கொள்ள வேண்டிய விதத்தைக் கூறும் எட்டு கட்டளைகள் (மத் 5:38-48, 1பேதுரு 2:11-12)

ரோமர் 13:8 ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல் மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள் பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்

ரோமர் 13:9 எப்படியென்றால், விபசாரம் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, இச்சியாதிருப்பாயாக என்கிற இந்தக் கற்பனைகளும் வேறே எந்தக் கற்பனையும் உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்கிற ஒரே வார்த்தையிலே தொகையாய் அடங்கியிருக்கிறது.

ரோமர் 13:10 அன்பானது பிறனுக்குப் பொல்லாங்குசெய்யாது ஆதலால் அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது

நாம் பிறரிடத்தில் அன்புகூருகிற போது நாம் செய்யாத காரியங்கள்

1 நீதிநெறிப் பிரமாணத்தை மீறுதல் (ரோமர் 13:8-10)

2 விபச்சாரம் செய்தல். (ரோமர் 13:9

3 வேசித்தனம்பண்ணுதல் (ரோமர் 13:9

4 கொலைசெய்தல் (ரோமர் 13:9

5 பிறரை வெறுத்தல் (ரோமர் 13:9-1யோவான் 3:15

6 பிறருடைய சொத்துக்களை அபகரித்துக்கொள்ளுதல் ரோமர் 13:9

7 மற்றவனுடைய நற்பெயரை அவமதித்தல் (ரோமர் 13:9)

8 மற்றவனுடைய பொருளை இச்சித்தல் (ரோமர் 13:9)

9 தன்னை மட்டுமே நேசித்தல் (ரோமர் 13:9)

10 பிறனுக்குப் பொல்லாங்கு செய்தல் (ரோமர் 13:10)

13 அதிகாரம்

"உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோல பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" - பவுல் இங்கு ஒருசில கட்டளைகளைக் கூறிவிட்டு, இந்தக் கற்பனைகளும் வேறு எந்த கற்பனையும் இந்த ஒரே வார்த்தையில் தொகையாய் அடங்கியிருக்கிறது என்று கூறுகிறார். ஆகையினால் பிறனிடத்தில் அன்புகூருவது பிரதான கற்பனையாக இருக்கிறது. (ரோமர் 13:9-10)

7.தேவனுக்கு முன்பாக கிறிஸ்தவர்கள் நடந்து கொள்ள வேண்டிய விதத்தைக் கூறும் பன்னிரெண்டு கட்டளைகள் - (1பேதுரு 2:9 2பேதுரு 1:5-11)

ரோமர் 13:11 நித்திரையைவிட்டு எழுந்திருக்கத்தக்க வேளை யாயிற்றென்று, நாம் காலத்தை அறிந்தவர்களாய், இப்படி நடக்க வேண்டும்; நாம் விசுவாசிகளான போது இரட்சிப்பு சமீபமாயிருந்ததைப் பார்க்கிலும் இப்பொழுது அது நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது.

ரோமர் 13:12 இரவு சென்றுபோயிற்று, பகல் சமீபமாயிற்று; ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளக்கடவோம்.

ரோமர் 13:13 களியாட்டும் வெறியும், வேசித்தனமும் காமவிகாரமும், வாக்குவாதமும் பொறாமையும் உள்ளவர்களாய் நடவாமல், பகலிலே நடக்கிறவர்களைப்போலச் சீராய் நடக்கக்கடவோம்.

ரோமர் 13:14 துர்இச்சைகளுக்கு இடமாக சரீரத்தைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுங்கள்.

விசுவாசிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டளைகள்

1 அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிடவேண்டும். (ரோமர் 13:12)

2 ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக் கொள்ளவேண்டும். (ரோமர் 13:12)

3 நல்ல நடத்தையுடன் சீராய் நடக்க வேண்டும். (ரோமர் 13:13)

4 களியாட்டும் வெறியும் உள்ளவர்களாய் நடக்கக்கூடாது. (ரோமர் 13:13)

5 வேசித்தனமும் காமவிகாரமும் இருக்கக்கூடாது. (ரோமர் 13:13)

6 வாக்குவாதமும் பொறாமையும் இருக்கக்கூடாது. (ரோமர் 13:13)

7 கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுபாவங்களைத் தரித்துக்கொள்ள வேண்டும். (ரோமர் 13:14)

8 துர்இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணக்கூடாது. (ரோமர் 13:14)

சீராய் (honestly) - εὐσχημόνως - euscheemonoos - 2156

வினையடை - சீராய், நலமொழுக்கமாய், யோக்கியமாய் **(decently)** (ரோமர் 13:13 1கொரி 14:40; 1தெச 4:12)

களியாட்டம் (rioting) - κῶμος - koomos - 2970

ஆண்பால் பெயர்சொல் - களியாட்டம் **(revelling)** (ரோமர் 13:13; கலா 5:21; 1பேதுரு 4:3)

வெறி (drunkenness) - μέθη - methee - 3178

பெண்பால் பெயர்சொல் - வெறி - குடிக்கும் பண்டிகைகள் ஆபாசமான பாடல்களும் வேசித்தனங்களும் விபசாரங்களும் நிறைந்த வெறி.

வேசித்தனம் (chambering) - κοίτη - koitee - 2845

பெண்பால் பெயர்ச்சொல் - படுத்திருத்தல், காமவிகாரம், விகாரமருசம் **(whoredoms, prostitutions, and all kinds of uncleanness)**

ரோமர்- தொகுப்புரை

13 அதிகாரம்

காமவிகாரம் (wantonness) - ἀσέλγεια - aselgeia - 766

பெண்பால் பெயர்ச்சொல் - காமவிகாரம் (licentiousness, all manner of uncleanness and sexual perversion). (Lasciviousness) (மாற்கு 7:22, 2கொரி 12:21 கலா 5:19; எபே 4:19 1பேதுரு 4:3 யூதா 1:4); (wantonness) (ரோமர் 13:13, 2பேதுரு 2:18); (filthy) (2பேதுரு 2:7).

"துர் இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருக்க வேண்டும் - துர் இச்சைகள் என்பது கலா 5:19-21; ரோமர் 1:21-32 1கொரி 6:9-11; கொலோ 3:5-10 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் மாம்சத்தின் கிரியைகளாகும்

"கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள்" - கிரேக்க மொழியில் ஒருவரைத் தரித்துக் கொள்ளுங்கள் என்னும் வாக்கியத்திற்கு அந்த நபரைப் போல ஆகுங்கள் என்று பொருள் அவரை அப்படியே பிரதிபலிக்க வேண்டும். அவரைப் போன்று சிந்தித்து அவரைப் போன்றே செயல்பட வேண்டும். இயேசு கிறிஸ்துவை நாம் தரித்துக் கொள்ள வேண்டும் என்பதற்கு நாம் இயேசு கிறிஸ்துவைப் போலாகவேண்டும் என்று பொருள்

14 அதிகாரம்

8. கிறிஸ்தவரும் சந்தேகமுள்ள காரியங்களும் - (ரோமர் 14:1-15:7; 1கொரி 8:1-10:33)

(1) விசுவாசத்தில் பலவீனமுள்ளவனை சேர்த்துக் கொள்ள வேண்டும்

ரோமர் 14:1 விசுவாசத்தில் பலவீனமுள்ளவனைச் சேர்த்துக் கொள்ளுங்கள்; ஆனாலும் அவனுடைய மன ஐயங்களைக் குற்றமாய நிர்ணயிக்காமலிருங்கள்.

பலவீனம் (weak) - ἀσθενέω - astheneoo - 770

வினைச்சொல் - வியாதியாயிரு, வியாதியாயகிட, வியாதிப்பட்டிரு, பிணியாளியாயிரு, பலவீனமாயிரு - விசுவாசத்தில் பெலன் இல்லாமல் பெலவீனமாக இருப்பது. (பிலி 2:26) அப்படிப்பட்டவர்களை நம்முடைய ஐக்கியத்தில் சேர்த்துக் கொள்ளலாம். நம்மால் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியாத சந்தேகப்படும்படியான அவர்களுடைய நடத்தைகளை நாம் தவிர்த்துக் கொள்ளலாம்.

(2) சந்தேகமுள்ள நடத்தைகளை நியாயந்தீர்க்கக் கூடாது - (1கொரி 8:1-8)

ரோமர் 14:2 ஒருவன் எந்தப் பதார்த்தத்தையும் புசிக்கலாமென்று நம்புகிறான்; பலவீனனோ மரக்கறிகளை மாத்திரம் புசிக்கிறான்.

ரோமர் 14:3 புசிக்கிறவன் புசியாதிருக்கிறவனை அற்பமாய் எண்ணாதிருப்பானாக; புசியாதிருக்கிறவனும் புசிக்கிறவனைக் குற்றவாளியாகத் தீர்க்காதிருப்பானாக; தேவன் அவனை ஏற்றுக்கொண்டாரே.

ரோமர் 14:4 மற்றொருவனுடைய வேலைக்காரனைக் குற்றவாளியாகத் தீர்க்கிறதற்கு நீ யார்? அவன் நின்றாலும் விழுந்தாலும் அவனுடைய எஜமானுக்கே அவன் உத்தரவாதி; அவன் நிலைநிறுத்தப்படுவான்; தேவன் அவனை நிலைநிறுத்த வல்லவராயிருக்கிறாரே.

ரோமர் 14:5 அன்றியும் ஒருவன் ஒருநாளை மற்றொருநாளிலும் விசேஷமாக எண்ணுகிறான்; வேறொருவன் எல்லா நாட்களையும் சரியாக எண்ணுகிறான்; அவனவன் தன்தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனாயிருக்கக்கடவன்.

ரோமர் 14:6 நாட்களை விசேஷித்துக் கொள்ளுகிறவன் கர்த்தருக்கென்று விசேஷித்துக் கொள்ளுகிறான்; நாட்களை விசேஷித்துக் கொள்ளாதவனும் கர்த்தருக்கென்று விசேஷித்துக் கொள்ளாதிருக்கிறான். புசிக்கிறவன் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறபடியால் கர்த்தருக்கென்று புசிக்கிறான்; புசியாதிருக்கிறவனும் கர்த்தருக்கென்று புசியாதிருந்து தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறான்.

ரோமர் 14:7 நம்மில் ஒருவனும் தனக்கென்று பிழைக்கிறதுமில்லை, [redacted] தனக்கென்று மரிக்கிறதுமில்லை.

ரோமர் 14:8 நாம் பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம், நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறோம்; ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம்.

ரோமர் 14:9 கிறிஸ்துவும் மரித்தோர்மேலும் ஜீவனுள்ளோர்மேலும் ஆண்டவராயிருக்கும்பொருட்டு, மரித்தும் எழுந்தும் பிழைத்துமிருக்கிறார்.

ரோமர்- தொகுப்புரை

14 அதிகாரம்

கருத்து வேறுபாடு உண்டாவதற்கு முக்கியமான காரணங்கள்

1 எதைப் புசிப்பது, எதைப் பானம் பண்ணுவது (ரோமர் 14:2-6,14-23 கொலோ 2:14-17 1தீமோ 4:1-6)

2 யாரோடு புசிப்பது. (அப் 11:3 1கொரி 5:9-12 2தெச 3:7-13 யூதா 1:12

3 எங்கு புசிப்பது (1கொரி 8:4-13 1கொரி 10:15-23; 1கொரி 11:17-22)

4 போஜனத்தை எங்கு வாங்குவது (1கொரி 10:25

5 எந்த நாளை ஓய்வுநாளாக அனுசரிப்பது (ரோமர் 14:5-6, கலா 4:9-11; கொலோ 2:14-17)

6 விருத்தசேதனம் பண்ணிக் கொள்ள வேண்டுமா, வேண்டாமா (அப் 15:1-24; ரோமர் 4:11, 1கொரி 7:19)

7 மோசேயின் பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டுமா வேண்டாமா (அப் 15:1)

8 என்னத்தை உடுத்துவது. என்ன பழக்கவழக்கங்களைக் கடைபிடிப்பது (1கொரி 11:4-16 1தீமோ 2:9-11 1பேதுரு 3:3-4

சக விசுவாசிகளிடையே விசுவாசிகளுடைய பொறுப்புகள்

1 தனிப்பட்ட முறையில் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் எல்லா விசுவாசிகளும் ஐக்கியமாக இருக்க வேண்டும் (ரோமர் 14:1)

2 ஒருவரையும் அற்பமாக எண்ணக்கூடாது. (ரோமர் 14:3)

3 ஒருவனையும் நியாயந்தீர்க்கக்கூடாது. (ரோமர் 14:3-13)

4 ஒவ்வொரு விசுவாசியையும் தேவனுடைய ஊழியக்காரனாக அங்கீகரிக்க வேண்டும். (ரோமர் 14:4)

5 தேவனை உண்மையாகப் பின்பற்றுகிற விசுவாசி விழுந்தாலும் தேவனால் நிலைநிறுத்தப்படுவான் என்று விசுவாசிக்க வேண்டும். (ரோமர் 14:4, 1யோவான் 1:7)

6 ஓய்வுநாளை ஆசரிக்கும் விதத்தைக் குறித்து நாம் நியாயந்தீர்க்கக்கூடாது. (1யோவான் 14:5-6; கலா 4:9-11 கொலோ 2:14-17)

7 மற்றவர்கள் புசிப்பதையும், பானம் பண்ணுவதையும் குறித்து ஒருவரையும் நியாயந் தீர்க்கக்கூடாது (ரோமர் 14:2-6,13-23 கொலோ 2:14-17; 1தீமோ 4:1-6 1கொரி 8:8-13; 1கொரி 10:23-31)

8 கர்த்தருக்காகவும் மற்றவர்களுக்காகவும் நாம் எல்லோரும் சமாதானத்தோடு ஜீவிக்க வேண்டும் (ரோமர் 14:8-9 13-23 1கொரி 8:8-13; 1கொரி 10:23-31 1பேதுரு 5:1-9

9 ஒருவனையும் குற்றவாளியாகத் தீர்க்கக்கூடாது. (ரோமர் 14:3-4,10, கலா 5:14-15; எபே 4:31-32

10 தன்னுடைய கிரியைகளுக்கு அவன் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான் என்று நம்ப வேண்டும். (ரோமர் 14:10-12; 2கொரி 5:10; மத் 12:37, மத் 16:27)

11 ஒருவனும் இடறுவதற்கு நாம் காரணமாக இருக்கக்கூடாது (ரோமர் 14:13)

12 புதிய ஏற்பாட்டில் எந்த மிருகமும் அசுத்த மிருகமாகப் பாகுபாடு பண்ணப்படவில்லை என்பதை அங்கீகரிக்க வேண்டும். (ரோமர் 14:14, 1கொரி 8:7-13; 1கொரி 10:23-31 கொலோ 2:14-17; 1தீமோ 4:1-6

13 மற்றவர்களுக்கு விசனம் உண்டாக்கும் காரியங்களைத் தவிர்த்து, அவர்களிடத்தில் அன்பை வெளிப்படுத்த வேண்டும். (ரோமர் 14:15, 1கொரி 8:8-13 1கொரி 10:23-31

ரோமர்- தொகுப்புரை

14 அதிகாரம்

14 நம்முடைய சுதந்தரத்தினால் இயேசு கிறிஸ்துவின் நாமத்தைத் தூஷிப்பதற்கு இடம் தரக்கூடாது. (ரோமர் 14:16-18; 1கொரி 8:8-13; 1கொரி 10:23-31)

15 சமாதானத்திற்கடுத்தவைகளையும் அந்நியோந்நிய பக்திவிருத்தி உண்டாக்கத்தக்கவைகளையும் நாடவேண்டும். (ரோமர் 14:19-20; 1கொரி 8:4-13; 1கொரி 10:13-31)

16 மற்ற விசுவாசிகள் இடறுகிறதற்காவது, தவறுகிறதற்காவது, பலவீனப்படுகிறதற்காவது ஏதாவது காரியங்கள் ஏதுவாக இருந்தால் அவைகளில் ஒன்றையும் செய்யக்கூடாது. (ரோமர் 14:21; 1கொரி 8:7-13; 1கொரி 10:23-31)

17 நம்முடைய விசுவாசம் தேவனுக்கு முன்பாக இருக்க வேண்டும். மற்றவர்களுக்கு முன்பாக நமது விசுவாசத்தைக் குறித்துப் பெருமை பாராட்டக்கூடாது. (ரோமர் 14:22; 1கொரி 8:9-13; 1கொரி 10:31)

18 ஒரு காரியத்தை நல்லதென்று நிச்சயித்திருப்போம் என்றால் அந்தக் காரியத்தில் நம்மை நாமே குற்றவாளிகளாகத் தீர்க்கக்கூடாது. (ரோமர் 14:22)

19 சந்தேகப்படும்படியான காரியம் எதையும் செய்யக்கூடாது. (ரோமர் 14:23; 1கொரி 8:7)

20 மற்றவர்களுடைய பலவீனங்களைத் தாங்க வேண்டும். அவர்கள் பலனடையும் வரையிலும் அவர்களுடைய பலவீனங்களைச் சகித்துக் கொள்ள வேண்டும். (ரோமர் 15:1-3; 1கொரி 8:7-13; 1கொரி 10:23-31)

"ஒருவன் ஒருநாளை மற்றொரு நாளிலும் விசேஷமாக எண்ணுகிறான்; வேறொருவன் எல்லா நாட்களையும் சரியாக எண்ணுகிறான்" - புதிய ஏற்பாட்டில் மோசேயின் பிரமாணங்கள் அங்கீகரிக்கப்படவில்லை. யூதருடைய ஓய்வு நாள் பிரமாணமும் புதிய ஏற்பாட்டில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. புதிய ஏற்பாடும் ஒரு குறிப்பிட்ட நாளை ஓய்வுநாளாக ஆசரிக்கவேண்டுமென்று கட்டளையிடவில்லை. ஆகையினால், ஒரு குறிப்பிட்ட நாளை விசேஷமாக எண்ணுகிறவன் தன்னுடைய மனதிலே முழு நிச்சயம் உடையவனாக இருக்க வேண்டும்.

"கிறிஸ்துவும் மரித்தோர்மேலும் ஜீவனுள்ளோர்மேலும் ஆண்டவராயிருக்கும் பொருட்டு, மரித்தும் எழுந்தும் பிழைத்துமிருக்கிறார்" - இயேசு கிறிஸ்து மரித்தார், அடக்கம் பண்ணப்பட்டார், மூன்றாம் நாளில் தமது சரீரத்தில் உயிர்த்தெழுந்தார் என்பதை நிரூபிக்கும் வசனம். (1கொரி 15:1-23)

(3) கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக எல்லா கிறிஸ்தவரும் நிற்க வேண்டும் - (மத் 16:27; 1கொரி 3:11-15; 2கொரி 5:10)

ரோமர் 14:10 இப்படியிருக்க, நீ உன் சகோதரனைக் குற்றவாளியென்று தீர்க்கிறதென்ன? நீ உன் சகோதரனை அற்பமாய் எண்ணுகிறதென்ன? நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே.

ரோமர் 14:11 அந்தப்படி, முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், [illegible] யாவும் தேவனை அறிக்கைபண்ணும் என்று என் ஜீவனைக்கொண்டு உரைக்கிறேன் என்பதாய்க் கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது.

ரோமர் 14:12 ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்.

தீர்க்கதரிசன எண் - 3

"நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே." (ரோமர் 14:10-12) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. மரித்த பரிசுத்தவான்கள் எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு, இயேசு கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக எல்லாப் பரிசுத்தவான்களும் நியாயந்தீர்க்கப் படுவார்கள். தங்களுடைய சரீரங்களில் அவர்கள் செய்த நன்மை தீமைகளுக்கேற்ப அவர்கள் நியாயந்தீர்க்கப் படுவார்கள். (ரோமர் 14:10-12; ரோமர் 2:12-16; 1கொரி 3:11-15; 2கொரி 5:10; கலா 6:8; எபே 6:8; கொலோ 3:24; லூக்கா 14:14; 2தீமோ 4:14; வெளி 2:23; வெளி 22:12)

ரோமர்- தொகுப்புரை

14 அதிகாரம்

"முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும். நாவு யாவும் தேவனை அறிக்கை பண்ணும் என்று என் ஜீவனைக் கொண்டு உரைக்கிறேன்" - ஏசா 45:23 ஆவது வசனம் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. பிலி 2:10

(4) கிறிஸ்தவருடைய பொறுப்பு - (1கொரி 8:9-13; 9:19-23; 10:23-33)

ரோமர் 14:13 இப்படியிருக்க நாம் இனிமேல் ஒருவரையொருவர் குற்றவாளிகளென்று தீர்க்காதிருப்போமாக. ஒருவனும் தன் சகோதரனுக்கு முன்பாக தடுக்கலையும் இடறலையும் போடலாகாதென்றே தீர்மானித்துக்கொள்ளுங்கள்

ரோமர் 14:14 ஒரு பொருளும் தன்னிலே தீட்டுள்ளதல்லவென்று கர்த்தராகிய இயேசுவுக்குள் அறிந்து நிச்சயித்திருக்கிறேன் ஒரு பொருளைத் தீட்டுள்ளதென்று எண்ணிக் கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு அது தீட்டுள்ளதாயிருக்கும்

ரோமர் 14:15 போஜனத்தினாலே உன் சகோதரனுக்கு விசனமுண்டாக்கினால், நீ அன்பாய் நடக்கிறவனல்ல. அவனை உன் போஜனத்தினாலே கெடுக்காதே. கிறிஸ்து அவனுக்காக மரித்தாரே

ரோமர் 14:16 உங்கள் நன்மை தூஷிக்கப்பட இடங்கொடாதிருங்கள்

ரோமர் 14:17 தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது.

ரோமர் 14:18 இவைகளிலே கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்கிறவன் தேவனுக்குப் பிரியனும் மனுஷரால் அங்கீகரிக்கப்பட்டவனுமாயிருக்கிறான்

ரோமர் 14:19 ஆனபடியால் சமாதானத்துக் கடுத்தவைகளையும், அந்நியோந்நிய பக்திவிருத்தி உண்டாக்கத் தக்கவைகளையும் நாடக்கடவோம்.

ரோமர் 14:20 போஜனத்தினிமித்தம் தேவனுடைய கிரியையை அழித்துப் போடாதே. எந்தப் பதார்த்தமும் சுத்தமுள்ளதுதான் ஆனாலும் இடறலுண்டாகப் புசிக்கிறவனுக்கு அது தீமையாயிருக்கும்.

ரோமர் 14:21 மாம்சம் புசிக்கிறதும், மதுபானம் பண்ணுகிறதும் மற்றெதையாகிலும் செய்கிறதும் உன் சகோதரன் இடறுகிறதற்காவது தவறுகிறதற்காவது பலவீனப்படுகிறதற்காவது ஏதுவாயிருந்தால் அவைகளில் ஒன்றையும் செய்யாமலிருப்பதே நன்மையாயிருக்கும்

"அவனை உன் போஜனத்தினாலே கெடுக்காதே. கிறிஸ்து அவனுக்காக மரித்தாரே" - ஒரு விசுவாசி மற்ற விசுவாசியைக் கெடுக்க முடியும் என்பதை இந்த வசனம் தெளிவுபடுத்துகிறது அப்படியாறு இல்லையென்றால் இந்த வசனம் வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்காது ஆகையினால் நாம் மற்ற விசுவாசிகளைக் கெடுக்காதவாறு எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

"தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாய் இருக்கிறது" தேவனுடைய ராஜ்யம் புசிப்போ குடிப்போ வெளியரங்கமான மார்க்கச் சடங்குகளோ அல்ல தேவனுடைய ராஜ்யத்தில் மூன்று காரியங்கள் உள்ளன அவையாவன

1 நீதி (ரோமர் 3:21 31 ரோமர் 4:1-25, ரோமர் 8:4)

2 சமாதானம் (ரோமர் 2:10, ரோமர் 5:1, ரோமர் 8:6; ரோமர் 10:15

3 சந்தோஷம் (ரோமர் 5:11, கலா 5:22 1பேதுரு 1:8)

14 அதிகாரம்

"இவைகளிலே கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்கிறவன் தேவனுக்குப் பிரியனும் மனுஷரால் அங்கிகரிக்கப்பட்டவனுமாயிருக்கிறான்" - ஒரு விசுவாசியிடம் நீதி, சமாதானம், பரிசுத்த ஆவியினால உண்டாகும் சந்தோஷம் ஆகியவை இருக்கும்போது அவனிடம் மேலும் மூன்று ஆசீர்வாதங்கள் இருக்கும் அவையாவன

1 அவன் கிறிஸ்துவின் ஊழியக்காரனாக இருக்கிறான்

2 அவன் தேவனுக்குப் பிரியமானவனாக இருக்கிறான்

3 அவன் மனுஷரால அங்கிகரிக்கப்பட்டவனாய் இருக்கிறான்

"சமாதானத்துக் கடுத்தவைகளையும் அந்நியோந்நிய பக்திவிருத்தி உண்டாக்கத் தக்கவைகளையும் நாடக்கடவோம்" - ரோமர் 14:17-18 ஆகிய வசனங்களில கூறப்பட்டிருக்கும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதற்கு அவற்றை உண்டாக்கத் தக்கவைகளை நாம் நாட வேண்டும். போஜனம் பண்ணுதல பானம் பண்ணுதல ஓய்வுநாள் ஆசரித்தல போன்ற தேவையில்லாத காரியங்களில் கவனம் செலுத்தக்கூடாது. அதற்குப் பதிலாக சமாதானத்துக் கடுத்தவைகளையும் அந்நியோந்நிய பக்திவிருத்தி உண்டாக்கத் தக்கவைகளையும் நாம் நாட வேண்டும்

"போஜனத்தினிமித்தம் தேவனுடைய கிரியையை அழித்துப்போடாதே" தேவனுடைய கிரியை உன்னதமானது. அதைப் போஜனத்தால அழித்துப் போடக்கூடாது. (கொலோ 2:14-17; 1தீமோ 4:1-6, 1கொரி 8:8-13, 1கொரி 10:23-31) போஜனம் பண்ணுவது, பானம் பண்ணுவது ஆகிய காரியங்களைக் குறித்து விவாதம் பண்ணி ஒரு ஆத்துமா இடறிப்போவதற்குக் காரணமாக இருக்கக்கூடாது. ரோமர் 14:13 15:20 21 1கொரி 8:7-13, 1கொரி 10:23-31)

"எந்தப் பதார்த்தமும் சுத்தமுள்ளதுதான் ஆனாலும் இடறலுண்டாகப் புசிக்கிறவனுக்கு அது தீமையாயிருக்கும்" – எல்லாப் பதார்த்தங்களும் புதிய ஏற்பாட்டுப் பிரமாணத்தின் பிரகாரமாக சுத்தம் உள்ளது தான் ஆனால் தன்னுடைய மனதில் குற்ற உணர்வோடு ஒரு பதார்த்தத்தைப் புசிக்கும் போது அது அவனுக்குத் தீமையாய் இருக்கும். (1கொரி 8:7-13; 1கொரி 10:23-31 1யோவான் 1:7;2பேதுரு 1:4-10;2பேதுரு 3:18

"அவைகளில் ஒன்றையும் செய்யாமலிருப்பதே நன்மையாயிருக்கும்"-நாம் போஜனம் பண்ணுவதும், பானம் பண்ணுவதும் மற்றவர்களுக்கு இடறலாக இருக்கக்கூடாது நம்முடைய பழக்க வழக்கங்கள் மற்றவர்கள் தவறுகிறதற்காவது பலவீனப்படுகிறதற்காவது ஏதுவாயிருந்தால அவற்றில் ஒன்றையும் செய்யக்கூடாது நம்முடைய சொந்த சந்தோஷத்தைவிட நம்முடைய சுயநன்மையை விட பிறருடைய சந்தோஷத்தையும் பிறருடைய நன்மையையும் நாடவேண்டும். (மத் 18:6-10 1கொரி 8:7-13 1கொரி 10:23-31)

"மாமசம் புசிக்கிறது" - புதிய ஏற்பாட்டுக் காலத்தில எந்த மாமசத்தையும் புசிப்பதற்கு நாம அனுமதிக்கப்பட்டிருக்கிறோம (ரோமர் 14:2 14-17; கொலோ 2:14-17 1தீமோ 4:1-6)

"மதுபானம்"(wine)-இந்தவார்த்தை எந்தப் பானத்தையும் குறிக்கும் பழச்சாறுகள் போன்ற பானத்தைக் குறிப்பதற்கு இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (ஏசா 65:8 போதையை ஏற்படுத்தக்கூடிய மதுபானத்தை இந்த வார்த்தை குறிப்பிடவில்லை (1கொரி 6:9-11, கலா 5:19-21

"மற்றெதையாகிலும் செய்கிறது" இந்த வசனத்தில குறிப்பிட்டிருக்கிற காரியங்களைத் தவிர. வேறு ஏதாவது காரியங்களைச் செய்கிறது மற்றவர்களுக்கு இடறுகிறதற்காவது தவறுகிறதற்காவது பலவீனப்படுகிறதற்காவது ஏதுவாயிருந்தால் அவைகளில் ஒன்றையும் செய்யக்கூடாது.

இடறு (stumbleth) - προσκόπτω - proskoptoo - 4350

வினைச்சொல் இடறு,மோது(to strike the foot against; to err from the truth) (யாக் 5:19-20) (Beat upon (until the thing is destroyed) (மத் 7:27); (dash against) (மத் 4:6, லூக்கா 4:11), (stumble) (யோவான் 11:9-10, ரோமர் 9:32, ரோமர் 14:21; 1பேதுரு 2:8

14 அதிகாரம்

தவறுதல் (offended) - σκανδαλίζω - skandalizoo - 4624

வினைச்சொல் - இடறலடை இடறலுண்டாக்கு (to offend) - இயேசு கிறிஸ்துவிடமிருந்து விலகிப்போவதை இந்த வாக்கியம் குறிப்பிடும். மத் 5:29-30; மத் 11:6; மத் 13:21,57; மத் 15:12; மத் 17:27; மத் 18:6-9; மத் 24:10; மத் 26:31-33; மாற்கு 4:17; மாற்கு 6:3; மாற்கு 9:42-47; மாற்கு 14:27-29; லூக்கா 7:23; லூக்கா 17:2; யோவான் 6:61; யோவான் 16:1; ரோமர் 14:21; 1கொரி 8:13; 2கொரி 11:29

பலவீனம் (weak) - ἀσθενέω - astheneoo - 770

வினைச்சொல் - வியாதியாயிரு, வியாதிப்பட்டிரு, வியாதிப்பட்டிரு, பிணியாளியாயிரு, பலவீனமாயிரு (strengthless) சரியானதற்கும் தவறானதற்கும் வித்தியாசம் காண முடியாதவாறு பலவீனமாக இருப்பது. இவர்கள் எது நன்மையானது, எது தீமையானது என்பதைத் தெரிந்து கொள்ள முடியாத அளவிற்குப் பலவீனராக இருக்கிறார்கள் (பிலி 2:26)

(5) சந்தேகமுள்ள காரியங்களைக் குறித்து விசுவாசத்தின் பிரமாணம் - (1கொரி 10:23)

ரோமர் 14:22 உனக்கு விசுவாசமிருந்தால் அது தேவனுக்கு முன்பாக உன்மட்டும் இருக்கட்டும். நல்லதென்று நிச்சயித்த காரியத்தில் தன்னைக் குற்றவாளியாக்காதவன் பாக்கியவான்.

ரோமர் 14:23 ஒருவன் சமுசயப்படுகிறவனாய்ப் புசித்தால், அவன் விசுவாசமில்லாமல் புசிக்கிறபடியினால் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுகிறான்; விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே.

"உனக்கு விசுவாசமிருந்தால்" - நாம் செய்யும் காரியம் தேவனால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது, வேதவாக்கியத்தின் பிரகாரம் அது சரியாக இருக்கிறது என்பதில் நமக்கு நிச்சயம் இருக்க வேண்டும். இது தேவனுக்கு உகந்ததுதான் என்னும் விசுவாசம் நம்மிடத்தில் காணப்பட வேண்டும்.

"நல்லதென்று நிச்சயித்த காரியத்தில் தன்னைக் குற்றவாளியாக்காதவன் பாக்கியவான்" - (ரோமர் 14:3)

"விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே" நாம் விசுவாசத்தினால் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். நாம் விசுவாசிக்கிற காரியத்தில் சந்தேகத்திற்கு இடமில்லை (ரோமர் 1:17; எபி 10:38). ஆகையினால் நாம் புசிக்கும் காரியத்திலும் விசுவாசத்தோடு புசிக்க வேண்டும். சமுசயப்படுகிறவனாய் அதாவது சந்தேகப்படுகிறவனாய் புசிக்கக்கூடாது. தேவனுடைய சித்தம் என்ன என்பதையும் தேவன் அங்கீகரித்த காரியங்கள் எவை என்பதையும் குறித்து நாம் நிச்சயமுள்ளவர்களாகவும், விசுவாசமுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும்.

15 அதிகாரம்

(6) பலவீனருடைய பலவீனங்களைத் தாங்க வேண்டும் - (1கொரி 8:9-13; 10:23-24)

ரோமர் 15:1 அன்றியும் பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல், பலவீனருடைய பலவீனங்களைத் தாங்கவேண்டும்.

ரோமர் 15:2 நம்மில் ஒவ்வொருவனும் பிறனுடைய பக்திவிருத்திக்கேதுவான நன்மையுண்டாகும்படி அவனுக்குப் பிரியமாய் நடக்கக்கடவன்.

ரோமர் 15:3 கிறிஸ்துவும் தமக்கே பிரியமாய் நடவாமல், உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தைகள் என்மேல் விழுந்தது என்று எழுதியிருக்கிறபடியே நடந்தார்.

"பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல், பலவீனருடைய பலவீனங்களைத் தாங்கவேண்டும்" - பலமுள்ளவர்கள் விசுவாசத்தில் பலவீனமுள்ளவர்களைத் தாங்க வேண்டும். அவர்களைச் சகித்துக் கொள்ள வேண்டும். அவர்களும் விசுவாசத்திலும் அறிவிலும் பலமுள்ளவர்களாகும் வரையிலும் அவர்களோடு பொறுமையோடு இருந்து அவர்களுக்கு ஆதரவாய் இருக்க வேண்டும் (ரோமர் 15:1-3).

ரோமருக்கு எழுதின நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாடு தீர்க்கதரிசன எண் - 14

"உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தைகள் என்மேல் விழுந்தது" (ரோமர் 15:3, சங் 69:9).

(7) கிறிஸ்தவர்கள் வேதவசனங்களை வாசித்து ஒருமனப்பட்டு ஜீவிக்க வேண்டும் - (2தீமோ 2:15; 3:16-17; எபே 4:1-3)

ரோமர் 15:4 தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது.

ரோமர் 15:5 நீங்கள் ஒருமனப்பட்டு நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனை ஒரே வாயினால் மகிமைப்படுத்தும்படிக்கு,

ரோமர் 15:6 பொறுமையையும் ஆறுதலையும் அளிக்கும் தேவன், கிறிஸ்து இயேசுவினுடைய மாதிரியின்படியே, நீங்கள் ஏகசிந்தையுள்ளவர்களாயிருக்கும்படி உங்களுக்கு அநுக்கிரகஞ்செய்வாராக.

ரோமர் 15:7 ஆதலால் தேவனுக்கு மகிமையுண்டாக, கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டதுபோல, நீங்களும் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுங்கள்.

"முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது" - முன்பு எழுதியிருக்கிறவைகள் என்பது பழைய ஏற்பாடு முழுவதையும் குறிக்கும் (1கொரி 10:1-11; 2தீமோ 2:15; 2தீமோ 3:15-16; யோவான் 5:39; லூக்கா 24:44).

"பொறுமையையும் ஆறுதலையும் அளிக்கும் தேவன்" - நாம் ஏகசிந்தையுள்ளவர்களாக இருக்க வேண்டும். இயேசு கிறிஸ்து இதற்கு முன்மாதிரியாக இருக்கிறார் (ரோமர் 15:4-7). சந்தேகமான காரியங்களை விவாதம் பண்ணுவதை விசுவாசிகள் தவிர்க்க வேண்டும் (ரோமர் 14:1). இதன் மூலமாக விசுவாசிகள் மத்தியிலே ஏகசிந்தையும் ஒருமனப்பாடும் உண்டாகும். நம்முடைய தேவன் பொறுமையையும் ஆறுதலையும் அளிக்கிறவர். இந்த விஷயத்தில் கிறிஸ்து இயேசுவினுடைய மாதிரியின்படியே நாம் ஏகசிந்தையுள்ளவர்களாயிருக்கும்படி நமக்கு அநுக்கிரகஞ்செய்வார். அப்போது ரோமர் 15:4-7 ஆகிய வசனங்கள் நிறைவேறும்.

"தேவனுக்கு மகிமையுண்டாக, கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டார்" அதுபோல நாமும் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ள வேண்டும். மற்ற விசுவாசிகள் தவறு செய்தாலும், விசுவாசத்தில் பலவீனமாக இருந்தாலும் அவர்களையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

15 அதிகாரம்

(8) யூத மார்க்கத்து கிறிஸ்தவர்களும் புறஜாதி கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவில் ஒன்றாயிருக்கிறார்கள் - 1கொரி 12:13; எபே 2:14-22 கலா 3:28

ரோமர் 15:8 மேலும், பிதாக்களுக்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தங்களை உறுதிப்பாக்கும்படிக்கு, தேவனுடைய சத்தியத்தினிமித்தம் இயேசுகிறிஸ்து விருத்தசேதன முள்ளவர்களுக்கு ஊழியக்காரரானாரென்றும்,

ரோமர் 15:9 புறஜாதியாரும் இரக்கம் பெற்றதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்துகிறார்கள் என்றும் சொல்லுகிறேன். அந்தப்படி இதினிமித்தம் நான் புறஜாதிகளுக்குள்ளே உம்மை அறிக்கைபண்ணி உம்முடைய நாமத்தைச் சொல்லி சங்கீதம் பாடுவேன் என்று எழுதியிருக்கிறது.

ரோமர் 15:10 மேலும், புறஜாதிகளே அவருடைய ஜனங்களோடேகூடக் களிகூருங்கள் என்கிறார்.

ரோமர் 15:11 மேலும், புறஜாதிகளே எல்லாரும் கர்த்தரைத் துதியுங்கள் ஜனங்களே எல்லாரும் அவரைப் புகழுங்கள் என்றும் சொல்லுகிறார்.

ரோமர் 15:12 மேலும், ஈசாயின் வேரும் புறஜாதியாரை ஆளும்படிக்கு எழும்புகிறவருமாகிய ஒருவர் தோன்றுவார் அவரிடத்தில் புறஜாதியார் நம்பிக்கையாயிருப்பார்கள் என்று ஏசாயா சொல்லுகிறான்.

"இயேசுகிறிஸ்து விருத்தசேதனம் உள்ளவர்களுக்கு ஊழியக்காரரானார்" தேவன் முற்பிதாக்களுக்கு வாக்குத்தத்தங்களை உண்டுபண்ணினார் அவற்றை உறுதியாக்கச் சித்தம் கொண்டார் தேவனுடைய சத்தியத்தின் நிமித்தம் இயேசுகிறிஸ்து விருத்தசேதனம் உள்ளவர்களுக்கு ஊழியக்காரரானார் யூதருக்கு ஊழியம் செய்யும் இயேசு கிறிஸ்து புறஜாதியாருக்கும் ஊழியம் செய்கிறார்

யூதர்களில் ஒருசிலர் தங்களுடைய விசுவாசத்தில் பலவீனமுள்ளவர்களாக இருக்கிறார்கள் அவர்களைப் புறஜாதியார் சகித்துக் கொள்ள வேண்டும் இயேசு கிறிஸ்துவின் மூலமாக வரும் தேவகிருபைக்காக தேவனை மகிமைப்படுத்த வேண்டும். (ரோமர் 15:8-9)

ரோமருக்கு எழுதின நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாடு தீர்க்கதரிசன எண் - 15

"இதினிமித்தம் நான் புறஜாதிகளுக்குள்ளே உம்மை அறிக்கை பண்ணி உம்முடைய நாமத்தைச் சொல்லி, சங்கீதம் பாடுவேன்" (ரோமர் 15:9 சங் 18:49)

பாடு (sing) - ψάλλω - psalloo - 5567

வினைச்சொல் - பாடு (ரோமர் 15:9 1கொரி 14:15; எபே 5:19 யாக் 5:13)

ரோமருக்கு எழுதின நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாடு தீர்க்கதரிசன எண் - 16

"புறஜாதிகளே அவருடைய ஜனங்களோடே கூடக் களிகூருங்கள்" (ரோமர் 15:10 உபா 32:43)

ரோமருக்கு எழுதின நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாடு தீர்க்கதரிசன எண் - 17

"புறஜாதிகளே எல்லாரும் கர்த்தரைத் துதியுங்கள் ஜனங்களே எல்லாரும் அவரைப் புகழுங்கள்" (ரோமர் 15:11 சங் 117:1)

புகழ் (laud) ἐπαινέω epaineoo 1867

வினைச்சொல் - மெச்சு, புகழ் (highly extol). (லூக்கா 16:8 ரோமர் 15:11, 1கொரி 11:2,17,22)

15 அதிகாரம்

ரோமருக்கு எழுதின நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 18

"ஈசாயின் வேரும் புறஜாதியாரை ஆளும்படிக்கு எழும்புகிறவருமாகிய ஒருவர் தோன்றுவார் அவரிடத்தில் புறஜாதியார் நம்பிக்கைவைப்பார்கள் (ரோமர் 15:12 ஏசா 11:10

ஆளு (reign) - ἄρχω - archoo - 757

வினைச்சொல் - ஆளு rule. மாற்கு 10:42, ரோமர் 15:12)

மேலே கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் தேவன் பட்சபாதம் உள்ளவர் அல்ல என்பதை விளக்குகிறது. தம்முடைய இரக்கங்களையும் கிருபையையும் யூதருக்கும், புறஜாதியாருக்கும் தேவன் ஒன்றுபோலவே வெளிப்படுத்துகிறார் தேவனை ஆராதிப்பதில் இவ்விரு திறத்தாரும் ஒன்றுபோலவே இருக்கிறார்கள் (1கொரி 12:13; கலா 3:28; கொலோ 3:11) யூதருடைய தீர்க்கதரிசிகளே இவற்றைக் கூறியிருப்பதினால் யூதர்கள் இந்த விவாதங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும்

XI. சாட்சியும் புத்திமதிகளும் - (ரோமர் 15:13-16:27)

1. ரோமாபுரி சபையைக் குறித்து பவுலின் ஆர்வமும் நிச்சயமும்

ரோமர் 15:13 பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக

ரோமர் 15:14 என் சகோதரரே, நீங்கள் நற்குணத்தினால் நிறைந்தவர்களும் சகல அறிவினாலும் நிரப்பப்பட்டவர்களும், ஒருவருக்கொருவர் புத்திசொல்ல வல்லவர்களுமாயிருக்கிறீர்களென்று நானும் உங்களைக் குறித்து நிச்சயித்திருக்கிறேன்

"நம்பிக்கையின் தேவன்" (the God of hope) - யூதருக்கும், புறஜாதியாருக்கும் கர்த்தர் நம்பிக்கையின் தேவனாக இருக்கிறார் இரு திறத்தாருக்கும் நித்திய இரட்சிப்பை வாக்குத்தத்தம் பண்ணுகிறார் பரிசுத்த ஆவியின் பலத்தினாலே நமக்கு நம்பிக்கை பெருகுகிறது. விசுவாசத்தினால் சந்தோஷமும் சமாதானமும் நம்மை நிரப்புகிறது. நம்பிக்கையின் தேவனே இவற்றை நமக்குள் நிரப்புகிறவர்

பவுல் நிச்சயித்திருக்கிற காரியங்கள்

1 தேவன் விசுவாசிகளைச் சந்தோஷத்தினால் நிரப்புவார்

2 தேவன் விசுவாசிகளைச் சமாதானத்தினால் நிரப்புவார்

3 விசுவாசத்தினால் நம்பிக்கை பெருகும்

4 விசுவாசிகளுக்கு ஆவியின் பெலன் உண்டாயிருக்கும்

5 விசுவாசிகள் நற்குணத்தினால் நிறைந்தவர்களாக இருப்பார்கள் (ரோமர் 15:14)

6 விசுவாசிகள் அறிவினால் நிரப்பப்பட்டிருப்பார்கள்

7 விசுவாசிகள் ஊழியம் செய்வதற்கு வல்லவர்களாக இருப்பார்கள்

விசுவாசிகளுக்கு இந்தச் சிலாக்கியங்கள் [redacted] கிடைக்குமென்று பவுல் நிச்சயித்திருக்கிறார் ஆனாலும் எல்லா விசுவாசிகளுக்கும் இந்தச் சிலாக்கியங்கள் கிடைக்கவில்லை (ரோமர் 8:38 39

2. புறஜாதியார் மத்தியில் தனது ஊழியத்தைக் குறித்து பவுலின் சாட்சி - (1-13)

ரோமர் 15:15 அப்படியிருந்தும், சகோதரரே புறஜாதியாராகிய பலி பரிசுத்த ஆவியினாலே பரிசுத்தமாக்கப்பட்டு, தேவனுக்குப் பிரியமான பலியாகும்படிக்கு, நான் தேவனுடைய சுவிசேஷ ஊழியத்தை நடத்தும் ஆசாரியனாயிருந்து புறஜாதிகளுக்கு இயேசுகிறிஸ்துவினுடைய ஊழியக்காரனாகும்பொருட்டு,

ரோமர்- தொகுப்புரை

15 அதிகாரம்

ரோமர் 15:16 தேவன் எனக்கு அளித்த கிருபையினாலே உங்களுக்கு ஞாபகப் படுத்தும்படிக்கு இவைகளை நான் அதிக தைரியமாய் எழுதினேன்

பரிசுத்தமாக்கப்படுதல் (sanctified)

ἁγιάζω - hagiazoo 37

வினைச்சொல் - பரிசுத்தப்படுத்துதல் பரிசுத்தப்படுதல், பரிசுத்தமாக்குதல் பரிசுத்தஞ்செய்தல் பரிசுத்தம் பண்ணுதல், பரிசுத்தமாக்கப்படுதல். to hallow (மத் 6:9; லூக்கா 11:2); be holy (வெளி 22:11); anctify or consecrate—set apart for a sacred purpose (மத் 23:17,19, யோவான் 10:36; யோவான் 17:17,19 அப 20:32; அப 26:18; ரோமர் 15:16 1கொரி 1:2 1கொரி 6:11 1கொரி 7:14 எபே 5:26 1தெச 5:23 1தீமோ 4:5, 2தீமோ 2:21 எபி 2:11 எபி 9:13, எபி 10:10,14,29 எபி 13:12 1பேதுரு 3:15 யூதா 1:1) (யோவான் 17:17 2தெச 2:13)

(அ) தேவனுக்காகப் பொருட்களையோ அல்லது நபர்களையோ வேறுபிரித்து அர்ப்பணித்தல் மத் 23:17 யோவா 10:36

(ஆ) சட்டப்பிரகாரமாக நீதிநெறிப் பிரகாரமாக பரிசுத்தப்படுத்துதல் 1கொரி 6:11 7:14

(இ) சடங்குகளின் மூலமாக ஒரு பொருளையோ அல்லது நபரையோ பரிசுத்தப்படுத்துதல் எபி. 9:13 2தீமோ 2:21

(ஈ) பரிசுத்தமுள்ளதை எண்ணுதல் மத். 6:9

"நான் அதிக தைரியமாய் எழுதினேன்" பவுல் புறஜாதியாருக்கு அப்போஸ்தல ஊழியம் செய்யுமாறு தேவனால் பிரதிஷ்டை பண்ணப்பட்டிருக்கிறார் தேவனுடைய சுவிசேஷத்தைப் புறஜாதியாருக்கு அறிவிக்க வேண்டியது பவுலின் கடமை. புறஜாதியார் தேவனுக்குப் பிரியமான பலியாக ஆகவேண்டும். புறஜாதியாராகிய பலி பரிசுத்த ஆவியினாலே பரிசுத்தமாக்கப்பட வேண்டும். ஆகையினால் பவுல் இந்தக் காரியங்களை அதிக நிச்சயத்தோடும் தைரியத்தோடும் எழுதுகிறார் ரோமர் 15:15-16

3. பவுலின் தத்துவமும் வல்லமையும் - வெற்றியின் இரகசியம் - (வசனம் 29; 1:11; அப 19:11)

ரோமர் 15:17 ஆதலால் நான் தேவனுக்குரியவைகளைக் குறித்து இயேசு கிறிஸ்துவைக்கொண்டு மேன்மைபாராட்ட எனக்கு இடமுண்டு.

ரோமர் 15:18 புறஜாதியாரை வார்த்தையினாலும் செய்கையினாலும் கீழ்ப்படியப்பண்ணும்படிக்கு அற்புத அடையாளங்களின் பலத்தினாலும் தேவ ஆவியின் பலத்தினாலும் கிறிஸ்துவானவர் என்னைக்கொண்டு நடப்பித்தவைகளைச் சொல்வதல்லாமல் வேறொன்றையும் சொல்ல நான் துணிவதில்லை

ரோமர் 15:19 இப்படி எருசலேம் துவக்கிச் சுற்றிலும் இல்லிரிக்கம் தேசமட்டுக்கும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பூரணமாய்ப் பிரசங்கித்திருக்கிறேன்

ரோமர் 15:20 மேலும் அவருடைய செய்தியை அறியாதிருந்தவர்கள் காண்பார்களென்றும் கேள்விப் படாதிருந்தவர்கள் உணர்ந்து கொள்வார்களென்றும் எழுதியிருக்கிறபடியே,

ரோமர் 15:21 நான் மற்றொருவனுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டாதபடிக்கு கிறிஸ்துவினுடைய நாமம் சொல்லப் படடிராத இடங்களில் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி நாடுகிறேன்

இயேசு கிறிஸ்து மூலமாக வரும் காரியங்கள்

1. சமாதானம் (Peace) (ரோமர் 5:1
2. ஜீவன் (Life) (ரோமர் 6:11
3. நித்திய ஜீவன் (Eternal life) (ரோமர் 6:23)

ரோமர்- தொகுப்புரை

15 அதிகாரம்

4 இரட்சிப்பிற்காக ஸ்தோத்திரங்கள் (Thanks for salvation) ரோமர் 7:25

5 மேன்மைபாராட்டுதல் (Boasting) ரோமர் 15:17

6 ஜெயம் (Victory) (1கொரி 15:57)

7 சுதந்தரம் (Heirship) (கலா 4:7)

8 காத்துக்கொள்ளுதல் (Keeping) (பிலி 4:7)

9 தேவமகிமை (God glorified) (1பேதுரு 4:11)

10 இரட்சிப்பு(Salvation) (2பேதுரு 2:20)

"இல்லிரிக்கம் தேசம்" (Illyricum) - மோனடேநெகரோ (Montenegro) அலபேனியா (Albania) யூகோஸ்லேவியா (Yugoslavia) ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய தேசம்.

"கிறிஸ்துவின சுவிசேஷத்தைப பூரணமாயப பிரசங்கித்திருக்கிறேன" புதிய ஏற்பாட்டில சுவிசேஷததைப பிரசங்கிப்பது என்பது சுவிசேஷ வார்ததையைப பிரசங்கிப்பதையும். சுவிசேஷ வார்ததையை உறுதிபபணணுவதையும் குறிக்கும் (ரோமர 15:18-21)

ரோமருக்கு எழுதின நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாடு தீர்க்கதரிசன எண் - 19

"அவருடைய செய்தியை அறியாதிருநதவாகள காணபாாகள கேளவிபபடாதிருநதவாகள உணாந்து கொள்வார்கள்" (ரோமர் 15:21; ஏசா 52:15)

4. ரோமாபுரிக்குச் செல்ல பவுலின் வாஞ்சை - (ரோமர் 1:8-13)

ரோமர் 15:22 உங்களிடத்தில வருகிறதற்கு இதினாலே அநேகநதரம் தடைபடடேன்

ரோமர் 15:23 இப்பொழுது இந்தத் திசைகளிலே எனக்கு இடமில்லாத படியினாலும், உங்களிடத்தில் வரும்படி அநேக வருஷமாய எனக்கு மிகுந்த விருப்பம் உண்டாயிருக்கிற படியினாலும்

ரோமர் 15:24 நான் ஸ்பானியா தேசத்திற்குப பிரயாணம் பணணுகையில் உங்களிடத்தில் வந்து உஙகளைக் கணடுகொள்ளவும உஙகளிடத்தில சற்றுத் திருப்தி யடைந்த பின்பு, அவவிடத்திற்கு உஙகளால வழிவிடடனுபபபடவும் எனக்குச் சமயங் கிடைக்குமென்று நமபியிருக்கிறேன்

"உங்களிடத்தில வருகிறதற்கு இதினாலே அநேகந்தரம தடைபடடேன் - சுவிசேஷச் செயதி பிரசங்கிக்கபபடாத இடங்களுக்குச் சென்று சுவிசேஷத்தைப பிரசங்கிக்க வேணடுமென்று பவுல் விரும்புகிறார் ஏறகெனவே சுவிசேஷச் செயதியைக் கேளவிப்படடவர்கள மூலமாகச் சுவிசேஷம் பிரசங்ககபபடாத இடங்களுக்குச் செலல பவுலுககுத் தடையுணடாயிறறு (ரோமர் 15:20-22)

"ஸ்பானியா (Spain) - பவுல் பல இடங்களில சுவிசேஷ ஊழியம் செயது முடிதது விடடா ஸபானியா தேசத்திறகுச சென்று அஙகுத தேவனுடைய ஊழியத்தைச் செயய வேணடுமென்று அவருக்கு மிகுநத விருப்பம் உணடாயிறறு, பவுல ஸ்பானியா தேசததிறகுச சென்றதறகு வேதாகமத்தில ஆதாரம எதுவும இல்லை வேதவாககியத்தின பிரகாரம் அவா எருசலேமிறகுத திரும்பிச சென்றாா அங்கிருநது கைதியாக ரோமாபுரிக்குப பவுலை அழைததுச் சென்றாாகள் (அப 21:1 28:31)

5. எருசலேமிலிருந்த ஏழை பரிசுத்தவான்களுக்கு பவுலின் ஊழியம் 2கொரி 9:1 கலா 2:10

ரோமர் 15:25 இப்பொழுதோ பரிசுத்தவான்களுக்கு உதவிசெய்யுங் காரியமாக நான எருசலேமுக்குப பிரயாணம் பண்ண எத்தனமாயிருக்கிறேன

15 அதிகாரம்

ரோமர் 15:26 மக்கெதோனியாவிலும் அகாயாவிலுமுள்ளவர்கள் எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்குள்ளே இருக்கிற தரித்திரருக்காகச் சில பொருள்சகாயஞ் செய்ய விருப்பங்கொண்டிருக்கிறார்கள்.

ரோமர் 15:27 இப்படிச்செய்வது நல்லதென்று எண்ணினார்கள்; இப்படிச் செய்கிறதற்கு அவர்கள் கடனாளிகளாயும் இருக்கிறார்கள். எப்படியென்றால், புறஜாதியார் அவர்களுடைய ஞானநன்மைகளில் பங்குபெற்றிருக்க, சரீரநன்மைகளால் அவர்களுக்கு உதவிசெய்ய இவர்கள் கடனாளிகளாயிருக்கிறார்களே.

ரோமர் 15:28 இந்தக் காரியத்தை நான் நிறைவேற்றி, இந்தப் பலனை அவர்கள் கையிலே பத்திரமாய் ஒப்புவித்தபின்பு, உங்கள் ஊர் வழியாய் ஸ்பானியாவுக்குப் போவேன்.

"நான் எருசலேமுக்குப் பிரயாணம்பண்ணப் எத்தனமாயிருக்கிறேன்" - பவுல் எருசலேமிற்குக் கடைசி முறையாகப் பிரயாணம் பண்ணப்போகிறார். அதன்பின்பு, ரோமாபுரிக்கும், ஸ்பானியா தேசத்திற்கும் பிரயாணம் பண்ண வேண்டுமென்பது பவுலின் திட்டமாகும். (ரோமர் 15:22-28)

"பரிசுத்தவான்களுக்கு உதவிசெய்யுங் காரியம்" - எருசலேமிலுள்ள ஏழை பரிசுத்தவான்களுக்கு உதவி செய்யும் பிரகாரமாகப் பவுல் தருமப்பணத்தைக் காணிக்கையாகச் சேகரித்திருக்கிறார் (ரோமர் 15:25-28, 1கொரி 16:1-4, 2கொரி 8-9). புறஜாதி மார்க்கத்திலிருந்து விசுவாசிகளானவர்கள் யூதமார்க்கத்திலிருந்து விசுவாசிகளான ஏழைகளுக்குத் தாராளமாக உதவி செய்து தங்களுடைய சகோதரசிநேக மனப்பான்மை வெளிப்படுத்துகிறார்கள்.

"புறஜாதியார் அவர்களுடைய ஞான நன்மைகளில் பங்குபெற்றிருக்க சரீர நன்மைகளால் அவர்களுக்கு உதவிசெய்ய இவர்கள் கடனாளிகளாயிருக்கிறார்களே" புறஜாதியாரிலிருந்து விசுவாசிகளானவர்கள் யூதர்களுக்குக் கடனாளிகளாக இருக்கிறார்கள். புறஜாதியார்கள் சுவிசேஷத்தைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவன் யூதர்களைப் பயன்படுத்தினார். யூதர்கள் மூலமாகவே கிறிஸ்து மாம்சத்தில் வெளிப்பட்டார். இவ்வாறாக, புறஜாதியார் யூதருடைய ஞானநன்மைகளில் பங்குபெற்றிருக்கிறார்கள். ஆகையினால் யூதர்களுக்குப் புறஜாதியார் சரீர நன்மைகளால் உதவி செய்ய வேண்டும்.

"உங்கள் ஊர் வழியாய் ஸ்பானியாவுக்குப் போவேன்" - எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களில் ஏழைகளாக இருப்பவர்களுக்குத் தருமப்பணத்தைச் சேகரித்து, அவர்களுக்கு உதவி புரிந்த பின்பு ரோமாபுரி வழியாய் ஸ்பானியா தேசத்திற்குப் போகவேண்டுமென்று பவுல் திட்டமிடுகிறார்.

6. சுவிசேஷத்தின் வல்லமையில் பவுலின் நம்பிக்கை - (ரோமர் 15:17-21; 12:3-8; 1கொரி 12)

ரோமர் 15:29 நான் உங்களிடத்தில் வரும்போது கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் சம்பூரணமான ஆசீர்வாதத்தோடே வருவேனென்று அறிந்திருக்கிறேன்.

"கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் சம்பூரணமான ஆசீர்வாதம்" - பவுல் அவர்களிடத்தில் வரும்போது தேவ ஆவியானவருடைய கிருபைகளோடும், வரங்களோடும் வருவதாக நிச்சயத்தோடு இருக்கிறார். தேவனுடைய சம்பூரணமான ஆசீர்வாதத்தையும் தேவனுடைய எல்லா வரங்களையும் ஆவியின் கனியையும் (1கொரி 12:4-11; கலா 5:22-23) ஒரு விசுவாசி பெற்றுக் கொள்ள முடியும் என்பதற்கு இந்த வாக்கியம் ஒரு சான்றாகும். அவர்கள் ஸ்திரப்படுவதற்காக ஆவிக்குரிய சில வரங்களை அவர்களுக்குக் கொடுக்கும்படிக்கு தனக்கு நல்ல பிரயாணம் சீக்கிரத்தில் கிடைக்க வேண்டுமென்று பவுல் ஏற்கெனவே விரும்பியிருந்தார் (ரோமர் 1:10-12)

7. எருசலேமிற்கும் ரோமாபுரிக்கும் தனது பிரயாணத்தைக் குறித்த ஜெபம்

ரோமர் 15:30 மேலும் சகோதரரே, தேவசித்தத்தினாலே நான் சந்தோஷத்துடனே உங்களிடத்தில் வந்து உங்களோடு இளைப்பாறும்படியாக,

ரோமர்– தொகுப்புரை

15 அதிகாரம்

ரோமர் 15:31 யூதேயாவிலிருக்கிற அவிசுவாசிகளுக்கு நான் தப்புவிக்கப்படும்படிக்கும் நான் எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்குச் செய்யப்போகிற தர்மசகாயம் அவர்களால் அங்கிகரிக்கப்படும்படிக்கும்.

ரோமர் 15:32 நீங்கள் தேவனை நோக்கிச் செய்யும் ஜெபங்களில் நான் போராடுவது போல நீங்களும் என்னோடுகூடப் போராட வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தமும், ஆவியானவருடைய அன்பினிமித்தமும், உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

ரோமர் 15:33 சமாதானத்தின் தேவன் உங்கள் எல்லாரோடுங்கூட இருப்பாராக. ஆமென்.

"யூதேயாவிலிருக்கிற அவிசுவாசிகளுக்கு நான் தப்புவிக்கப்படும்படிக்கு" யூதேயாவிலே தனக்கு உபத்திரவங்கள் உண்டாகும் என்று பவுல் எதிர்பார்த்தார் (அப் 21:27; 26:32)

"நீங்கள் தேவனை நோக்கிச் செய்யும் ஜெபங்களில் நான் போராடுவதுபோல நீங்களும் என்னோடுகூடப் போராட வேண்டும்" பவுல் விசுவாசத்தில் தேறினவராக இருந்தாலும், தேவனுடைய நிறைவைச் சம்பூரணமாகப் பெற்றுக் கொண்டதாகத் தன்னைப் பற்றி நினைக்கவில்லை. மற்ற பரிசுத்தவான்களுடைய ஜெபங்கள் தனக்குத் தேவையில்லை என்றும் பவுல் ஆவிக்குரிய இறுமாப்பில் ஊடுப்பம் செய்யவில்லை. தன்னோடுகூட மற்ற பரிசுத்தவான்களும் தனக்காக ஜெபம் பண்ண வேண்டுமென்று விரும்புகிறார்.

ரோமருக்கு எழுதின நிருபத்தில் தேவனைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிற சத்தியம்

1. சாட்சி (**A witness**) (ரோமர் 1:9)
2. அழிவில்லாதவர் (**Uncorruptible**) (ரோமர் 1:23)
3. பட்சபாதமில்லாதவர் (**Impartial**) (ரோமர் 2:11)
4. நியாயாதிபதி (**Judge**) (ரோமர் 2:16; ரோமர் 3:6)
5. எல்லா ஜனங்களுக்கும் தேவன் (**God of all people**) (ரோமர் 3:29)
6. பொறுமையையும், ஆறுதலையையும் அளிக்கும் தேவன் (**God of patience and consolation**) (ரோமர் 15:5)
7. நம்பிக்கையின் தேவன் (**God of hope**) (ரோமர் 15:13)
8. சமாதானத்தின் தேவன் (**God of peace**) (ரோமர் 15:33; ரோமர் 16:20)
9. தாம் ஒருவரே ஞானமுள்ளவர் (**Only wise One**) (ரோமர் 16:27)

16 அதிகாரம்

8. பெபேயாளைப் பற்றிய காரியம்

ரோமர் 16:1 கெங்கிரேயா ஊர் சபைக்கு ஊழியக்காரியாகிய நம்முடைய சகோதரி பெபேயாளை நீங்கள் கர்த்தருக்குள் பரிசுத்தவான்களுக் கேற்றபடி ஏற்றுக்கொண்டு,

ரோமர் 16:2 எந்தக் காரியத்தில் உங்கள் உதவி அவளுக்குத் தேவையாயிருக்கிறதோ அதிலே நீங்கள் அவளுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று அவளை உங்களிடத்தில் ஒப்புவிக்கிறேன். அவள் அநேகருக்கும் எனக்குங்கூட ஆதரவாயிருந்தவள்.

"பெபேயாள்" (Phebe) - கெங்கிரேயா சபையிலிருந்த பெண் ஊழியக்காரி. இவள் பெண்கள் மத்தியில் ஊழியம் செய்து வந்தாள். ஸ்திரீகளை ஞானஸ்நானத்திற்கு ஆயத்தம் பண்ணுவது, வியாதியஸ்தரையும் சிறைச்சாலையில் இருப்போரையும் சந்திப்பது ஆகிய ஊழியங்களைச் செய்து வந்தாள். பெண்கள் மத்தியில் நடைபெற்ற எல்லா ஊழியங்களையும் இவள் செய்து வந்தாள் என்று கூறுகிறார்கள். ரோமருக்கு எழுதின நிருபத்தை பெபேயாளே எடுத்துச் சென்றிருக்க வேண்டுமென்று திருச்சபை வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

ஊழியக்காரி (servant) - διάκονος - diakonos - 1249

ஆண்பால் அல்லது பெண்பால் பெயர்ச்சொல் - பணிவிடைக்காரன், ஊழியக்காரன், வேலைக்காரன், ஊழியஞ்செய்கிறவர், உதவிக்காரர் (மத் 20:26)

"கெங்கிரேயா" (Cenchrea) - கொரிந்துவிற்கு அருகிலுள்ள கடற்கரையில் அமைந்துள்ள பட்டினம்.

ஆதரவாயிருந்தவள் (succourer) παραστάτις - parastatis 4368

பெண்பால் பெயர்ச்சொல் - ஆதரவாயிருந்தவள் (protector) - அந்நியர்களைத் தங்களுடைய இல்லங்களில் ஏற்றுக் கொண்டு உபசரிக்கிறவர்களை இந்த வார்த்தை குறிப்பிடும். ரோமர் 12:8 1தீமோ 5:9-10 கெங்கிரேயா ஊருக்கு வந்த அப்போஸ்தலர்களையும் தேவஊழியர்களையும் பெபேயாள் ஏற்றுக் கொண்டு உபசரித்திருக்கலாம்.

9. கிறிஸ்தவ வாழ்த்துக்கள்

ரோமர் 16:3 கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாளையும் ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள். ரோமர் 16:4 அவர்கள் என் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள்; அவர்களைப்பற்றி நான்மாத்திரமல்ல, புறஜாதியாரில் உண்டான சபையாரெல்லாரும் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

ரோமர் 16:5 அவர்களுடைய வீட்டிலே கூடிவருகிற சபையையும் வாழ்த்துங்கள். அகாயாவிலே கிறிஸ்துவுக்கு முதற்பலனாகிய என் பிரியமான எப்பெனெத்தை வாழ்த்துங்கள்.

ரோமர் 16:6 எங்களுக்காக மிகவும் பிரயாசப்பட்ட மரியாளை வாழ்த்துங்கள்.

ரோமர் 16:7 அப்போஸ்தலருக்குள் பெயர்பெற்றவர்களும் எனக்கு முந்திக் கிறிஸ்துவுக்குள்ளானவர்களும் என் இனத்தாரும் என்னுடனேகூடக் காவலில் கட்டுண்டவர்களுமாயிருக்கிற அன்றோனீக்கையும் யூனியாவையும் வாழ்த்துங்கள்.

ரோமர் 16:8 கர்த்தருக்குள் எனக்குப் பிரியமான அம்பிலியாவை வாழ்த்துங்கள்.

ரோமர்– தொகுப்புரை

16 அதிகாரம்

ரோமர் 16:9 கிறிஸ்துவுக்குள் நம்மோடே உடன் வேலையாளாகிய உர்பானையும், என் பிரியமான ஸ்தாக்கியையும் வாழ்த்துங்கள்

ரோமர் 16:10 கிறிஸ்துவுக்குள் உத்தமனாகிய அப்பெல்லேயை வாழ்த்துங்கள் அரிஸ்தொபூலுவின் வீட்டாரை வாழ்த்துங்கள்

ரோமர் 16:11 என் இனத்தானாகிய ஏரோதியோனை வாழ்த்துங்கள் நர்கீசுவின் வீட்டாரில் கர்த்தருக்குட் பட்டவர்களை வாழ்த்துங்கள்

ரோமர் 16:12 கர்த்தருக்குள் பிரயாசப்படுகிற திரிபேனாளையும் திரிபோசாளையும் வாழ்த்துங்கள் கர்த்தருக்குள் மிகவும் பிரயாசப்பட்ட பிரியமான பெர்சியாளை வாழ்த்துங்கள்

ரோமர் 16:13 கர்த்தருக்குள் தெரிந்துகொள்ளப்பட்ட ரூபையும் எனக்கும் தாயாகிய அவனுடைய தாயையும் வாழ்த்துங்கள்

ரோமர் 16:14 அசிங்கிரீத்துவையும் பிலெகோனையும், எர்மாவையும், பத்திரொபாவையும், எர்மேயையும் அவர்களோடிருக்கிற சகோதரரையும் வாழ்த்துங்கள்

ரோமர் 16:15 பிலொலோகையும், யூலியாளையும், நேரேயையும், அவனுடைய சகோதரியையும், ஒலிம்பாவையும் அவர்களோடிருக்கிற பரிசுத்தவான்களெல்லாரையும் வாழ்த்துங்கள்

ரோமர் 16:16 ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்கள் கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்

"பிரிஸ்கில்லாளும், ஆக்கில்லாவும்" (Priscilla and Aquila) இவர்கள் ரோமாபுரிக்குத் திரும்பிச் சென்றிருக்க வேண்டும் இவர்களுடைய வீட்டில் ஒரு சபை கூடி வந்திருக்கலாம் (ரோமர் 16:3-4) வேதாகமத்தில் இவ்விருவரின் பெயரும் சேர்ந்தே வந்திருக்கிறது (அப் 18:2,18,26; ரோமர் 16:3; 1கொரி 16:19; 2தீமோ 4:19)

"எப்பனெத்து" (Epaenetus) - இந்த வசனத்தில மட்டுமே இவனுடைய பெயர் வந்திருக்கிறது. இவன் ஒருவேளை ஸ்தேவானுடைய வீட்டாராக இருக்கலாம். இவர்களுக்கு அகாயா நாட்டிலே முதற்பேறானவர்கள் என்னும் மறுபெயரும் உண்டு (1கொரி 16:15)

"மரியாள்" (Mary) - இவள் பவுலுக்காகவும் அவனுடைய உடன்ஊழியருக்காகவும் மிகவும் பிரயாசப்பட்டவள் இவள் யாரென்பதும் இவள் எவ்வாறு பிரயாசப்பட்டாள் என்பதும் நமக்குத் தெரியவில்லை.

"அன்றோனீக்கும் யூனியாவும் (Andronicus and Junia) - இவ்விருவரும் பவுலுக்கு முந்தியே இரட்சிக்கப்பட்டவர்கள் இவர்கள் பவுலின் இனத்தார் பவுலோடுகூட சிறையில அடைக்கப்பட்டிருந்தார்கள் பவுலோடு எப்போது சிறையில அடைக்கப்பட்டார்கள் என்பது தெரியவில்லை

ரோமர் 16:8-12 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பத்து சீஷர்கள்

1. அம்பிலி (Amplias)
2. உர்பான (Urbane)
3. ஸ்தாககி (Stachys)
4. அப்பெல்லே (Apelles)
5. அரிஸ்தொபூலு (Aristobulus)
6. ஏரோதியோன (Herodion)
7. நாக்கு (Narcissus)
8. திரிபேனாள் (Tryphena)
9. திரிபோசாள் (Tryphosa)
10. பெர்சியாள் (Persis)

"ஏரோதியோன்" - இந்த அட்டவணையில் கூறப்பட்டிருக்கும் பவுலின் மூன்றாவது உறவினன் (ரோமர் 16:7,11)

ரோமர்- தொகுப்புரை

16 அதிகாரம்

"ரூபு" (Rufus) - மாற்கு 15:21 ஆவது வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறவன் இவனாக இருக்கலாம் இவனுடைய தாய் பவுலுக்கும் தாயைப் போன்றவள்

ரோமர் 16:14-15 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பத்து பெயர்கள்

1 அசின்கிரீத்து (Asyncritus)

2 பிலெகோன் (Phlegon)

3 எர்மா (Hermas)

4 பத்திரோபா (Patrobas)

5 எர்மே (Hermes)

6 பிலொலோகு (Philologus)

7 யூலியாள் (Julia)

8 நேரே (Nereus)

9 நேரேயின் சகோதரி (Nereus' sister)

10 ஒலிம்பா (Olympas)

ரோமர் 16 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் எட்டு ஸ்திரீகள்

1 பெபேயாள் (Phebe) (ரோமர் 16:1)

2 பிரிஸ்கில்லாள் (Priscilla) (ரோமர் 16:3)

3 மரியாள் (Mary) (ரோமர் 16:6)

4 திரிபேனாள் (Tryphena) (ரோமர் 16:12)

5 திரிபோசாள் (Tryphosa) (ரோமர் 16:12)

6 பெர்சியாள் (Persis) (ரோமர் 16:12)

7 யூலியாள் (Julia) (ரோமர் 16:15)

8 நேரேயின் சகோதரி (sister of Nereus) (ரோமர் 16:15)

இவர்கள் அனைவருமே கர்த்தருடைய ஊழியக்காரிகள் சபையின் பெண் மூப்பர்கள் தீர்க்கதரிசினிகள் இவர்கள் கர்த்தருக்குள் பிரயாசப்பட்டவர்கள் ரோமர் 16:12 இவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள் ஆதித்திருச்சபையில் பெண் தீர்க்கதரிசினிகளும் இருந்தார்கள் அப் 21:9

"நேரே" (Nereus) - ஆகியேனிலுள்ள கடல் தெய்வத்திற்கு நேரே என்று பெயர் இந்தப் புறஜாதிப் பெயரே இவனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது

"ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்கள்" - இந்த நிருபத்தில் பவுல் ரோமாபுரியிலுள்ள பரிசுத்தவான்களுக்கு வாழ்த்து தெரிவிக்கும்போது பரிசுத்தவான்களின் அட்டவணையில் பேதுருவின் பெயர் காணப்படவில்லை திருச்சபை வரலாறு ஆசிரியர்கள் இதைப் பற்றி எழுதும்போது பவுல் ரோமருக்கு நிருபம் எழுதினபோது பேதுரு ரோமாபுரியில் இருந்ததாகக் கூறுகிறார்கள் ஆனால் பவுல் பேதுருவின் பெயரைக் குறிப்பிடவில்லை ஆகையினால் இந்நிருபம் எழுதப்படும்போது பேதுரு ரோமாபுரியில் இருந்திருப்பதற்கு ...ப்பில்லை

"பரிசுத்த முத்தம்" (holy kiss) - அக்காலத்தில் சமாதானம், நட்பு, சகோதர சிநேகம் ஆகியவற்றைப் பரிமாறிக் கொள்வதற்காக ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்தும் வழக்கம் இருந்தது கிறிஸ்தவ விசுவாசிகள் மட்டுமல்லாமல் கிழக்கு தேசங்களிலுள்ள ஜனங்கள் மத்தியிலும் இந்தப் பழக்கம் பொதுவாக இருக்கிறது. பரிசுத்த முத்தத்தைப் பற்றிய குறிப்பு ரோமர் 16:16 1கொரி 16:20 2கொரி 13:12 1தெச 5:26 1பேதுரு 5:14 ஆகிய வசனங்களில் காணப்படுகிறது.

16 அதிகாரம்

"கிறிஸ்துவின் சபையார்" (churches of Christ) - தற்காலத்தில் ஏராளமான சபை பிரிவினர்கள் இருக்கிறார்கள். தங்களுடைய சபை பிரிவிற்கு அவர்கள் கொடுத்திருக்கும் பெயர் வேதாகமத்தின் பிரகாரம் சரியானது என நிரூபிக்கிறார்கள். தங்களுடைய சபையே ஆதித்திருச்சபை என்று கூறுவதே இவர்களுடைய நோக்கம். சபையின் பெயர் எதுவாக இருந்தாலும், சபையின் அங்கத்தினர்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டு, ஆவியானவருடைய வரங்களினாலும் ஆவியின் கனியினாலும் நிறைந்திருந்து கர்த்தருக்காக ஊழியம் செய்ய வேண்டும். இந்த அடையாளத்தை வைத்துதான் ஒரு திருச்சபை கிறிஸ்துவின் சபையா இல்லையா என்பதை முடிவு பண்ண வேண்டும். பெயரை வைத்து முடிவு பண்ணக்கூடாது. (அப் 7:38)

10. ஸ்திரமான உபதேசத்திலும் ஒற்றுமையிலும் இருக்குமாறு புத்திமதி - (1கொரி 1:10)

ரோமர் 16:17 அன்றியும், சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலக வேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்.

ரோமர் 16:18 அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்து, நயவசனிப்பினாலும் இச்சகப் பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்.

எச்சரிக்கையாயிரு (mark) - σκοπέω - skopeoo - 4648

வினைச்சொல் - எச்சரிக்கையாயிரு, நோக்கு (look out for) - "look at" (2கொரி 4:18); "look on" (பிலி 2:4); "take heed" (லூக்கா 11:35); "consider" (கலா 6:1)

திருச்சபையில் சிலர் பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்குவார்கள். அவர்களைக் குறித்து நாம் மிகுந்த எச்சரிப்போடு இருக்க வேண்டும்.

கள்ளப்போதகர்களின் அடையாளங்கள்

1. விசுவாசிகள் மத்தியில் பிரிவினைகளை உண்டாக்குவார்கள்.
2. சத்தியத்திற்கு எதிராக உபதேசம் பண்ணுவார்கள். (ரோமர் 16:18)
3. அவர்கள் தேவனுக்கு ஊழியம் செய்யவில்லை. (ரோமர் 16:17-18)
4. தங்கள் வயிற்றுக்கே ஊழியம் செய்கிறார்கள். (ரோமர் 16:18; பிலி 3:19)
5. விசுவாசிகளை வஞ்சிப்பதற்கு நயவசனிப்பையும், இச்சகப் பேச்சையும் பயன்படுத்துகிறார்கள். (ரோமர் 16:18)
6. அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞர். (பிலி 3:18)
7. அவர்கள் சுவிசேஷத்திற்கு விலகி வேறு விதமாக நடக்கிறார்கள். (பிலி 3:18)
8. அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே. (பிலி 3:19)
9. அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள். (பிலி 3:19)
10. வேதபுரட்டுக்களைத் தந்திரமாக நுழைய பண்ணுகிறார்கள். (2பேதுரு 2:1; மத் 7:15)

11. ரோமாபுரி கிறிஸ்தவரின் கீழ்ப்படிதல்

ரோமர் 16:19 உங்கள் கீழ்ப்படிதல் யாவருக்கும் தெரியவந்திருக்கிறது. ஆகையால் உங்களைக்குறித்துச் சந்தோஷப்படுகிறேன். ஆனாலும் நீங்கள் நன்மைக்கு ஞானிகளும் தீமைக்குப் பேதைகளுமாயிருக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

ரோமர்- தொகுப்புரை

16 அதிகாரம்

ரோமர் 16:20 சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப்போடுவார். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனேகூட இருப்பதாக. ஆமென்.

"உங்கள் கீழ்ப்படிதல் யாவருக்கும் தெரியவந்திருக்கிறது" - மெய்யான தலைவர்களையும், பொய்யான தலைவர்களையும் அவர்களுடைய விசுவாசம் பக்தி, சுயநலமின்மை, உண்மை ஆகியவற்றின் மூலமாகக் கண்டுபிடிக்கலாம்.

"நீங்கள் நன்மைக்கு ஞானிகளும் தீமைக்குப் பேதைகளுமாயிருக்க வேண்டுமென்று விரும்புகிறேன்" - விசுவாசிகள் நன்மை தீமை அறியத்தக்கவர்களாக இருக்க வேண்டும். தீமையைத் தெரிந்தெடுக்காமல் நன்மையைத் தெரிந்தெடுக்க வேண்டும்.

தீர்க்கதரிசன எண் - 4

"சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப்போடுவார்" (ரோமர் 16:20) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை (வெளி 20:1-10)

நசுக்கு (bruise) - συντρίβω · syntriboo - 4937

வினைச்சொல் - நெரி, தகர், உடை, நொறுக்கு, கசக்கு, முறி, நசுக்கு, நொறுக்கு (crush in pieces, utterly defeat and bring to helplessness) (மத் 12:20, மாற்கு 5:4, மாற்கு 14:3, லூக்கா 4:18, லூக்கா 9:39, யோவான் 19:36, வெளி 2:27) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போதும் ஆயிரம் வருஷ அரசாட்சியின் முடிவின்போதும் சாத்தான் முழுவதுமாக நசுக்கப்படுவான். (வெளி 20:1-10)

12. மற்றவர்களிடமிருந்து வாழ்த்துக்கள்

ரோமர் 16:21 என் உடன் வேலையாளாகிய தீமோத்தேயும், என் இனத்தாராகிய லூகியும், யாசோனும், சொசிபத்தரும் உங்களை வாழ்த்துகிறார்கள்

ரோமர் 16:22 இந்த நிருபத்தை எழுதின தெர்தியுவாகிய நான் கர்த்தருக்குள் உங்களை வாழ்த்துகிறேன்

ரோமர் 16:23 என்னையும் சபையனைத்தையும் உபசரித்துவருகிற காயு உங்களை வாழ்த்துகிறான். பட்டணத்து உக்கிராணக்காரனாகிய ஏரastுவும் சகோதரனாகிய குவார்த்தும் உங்களை வாழ்த்துகிறார்கள்

ரோமர் 16:24 நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்

"தீமோத்தேயு" (Timotheus)- (அப் 16:1)

"லூகி" (Lucius) - இவன் அப் 13:1 ஆவது வசனத்தில் குறிப்பிட்டிருக்கும் நபராக இருக்கலாம். அல்லது லூக்கா சுவிசேஷத்தையும் அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தையும் எழுதிய லூக்காவாக இருக்கலாம்.

"யாசோன்" (Jason) - இவனைப் பற்றி சரியாகத் தெரியவில்லை. ஒருவேளை அப் 17:5,7 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் நபராக இருக்கலாம்.

"சொசிபத்தர்" (Sosipater) - அப் 20:4 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் சோபத்தராக இருக்கலாம். மூன்றாம் முறையாக பவுல் தன் இனத்தாரைப் பற்றிக் குறிப்பிடுகிறார் (ரோமர் 16:7,11)

"தெர்தியு" (Tertius) - இந்த நிருபத்தை எழுதினவன். பவுல் வாய்மொழியாகக் கூறியதை இவன் தன் கைப்பட எழுதியிருக்க வேண்டும். இவனைப் பற்றி வேறு குறிப்பு எதுவும் காணப்படவில்லை

16 அதிகாரம்

"காயு" (Gaius) - அப் 19:29 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் நபராகவோ அல்லது அப் 20:4 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் தெர்பையனாகிய காயுவாகவோ இருக்கலாம் இவனும் 1கொரி 1:14 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிறவனும் ஒரே நபர்

"ஏரஸ்து" (Erastus) - இவன் கொரிந்து பட்டணத்து உக்கிராணக்காரன் (பொருளாளர் பொக்கிஷதாரர்) (chamberlain) இவனும் 2தீமோ 4:20 அப் 19:22 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறவனும் ஒரே நபர்

"குவர்த்து"(Quartus)-இந்த வசனத்தில் மட்டுமே இவனைப் பற்றிய குறிப்பு உள்ளது.

13. ஆசீர்வாதம்

ரோமர் 16:25 ஆதிகாலமுதல் அடக்கமாயிருந்து, இப்பொழுது தீர்க்கதரிசன ஆகமங்களினாலே அநாதி தேவனுடைய கட்டளையின்படி வெளியரங்கமாக்கப்பட்டதும் சகல ஜாதிகளும் விசுவாசத்திற்குக் கீழ்ப்படியும்படிக்கு அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதுமாயிருக்கிற இரகசியத்தை வெளிப்படுத்துகிறதான

ரோமர் 16:26 இயேசுகிறிஸ்துவைப் பற்றிய பிரசங்கமாகிய என் சுவிசேஷத்தின்படியே உங்களை ஸ்திரப்படுத்த வல்லவரும்

ரோமர் 16:27 தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாயிருக்கிற தேவனுக்கு இயேசுகிறிஸ்துவின் மூலமாய் என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென்

"தீர்க்கதரிசன ஆகமங்கள்" (scriptures of the prophets) - வேதாகமத்தில் தீர்க்கதரிசன ஆகமங்களும் ஒரு பகுதியாகும்

"சகல ஜாதிகளும் விசுவாசத்திற்குக் கீழ்ப்படியும்படிக்கு" - எல்லோரும் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும் விசுவாசத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும்.

சகல ஜாதிகளும் விசுவாசத்திற்குக் கீழ்ப்படியும் படிக்கு அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிற காரியங்கள்

1. சுவிசேஷம் (ரோமர் 16:25
2. இயேசு கிறிஸ்துவைப் பற்றிய பிரசங்கம் (ரோமர் 16:26
3. இரகசியத்தின் வெளிப்பாடு (ரோமர் 16:25)
4. தீர்க்கதரிசன ஆகமங்கள் (ரோமர் 16:25)
5. தேவனுடைய கட்டளை (ரோமர் 16:25

ஒரு ஆத்துமா இரட்சிக்கப்பட வேண்டுமானால் அந்த ஆத்துமாவிற்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட வேண்டும் ரூபத வாக்கியம் வெளிப்படுத்தப்பட வேண்டும் அதை அந்த ஆத்துமா விசுவாசித்து தன்னுடைய இரட்சிப்பைத் தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். (மாற்கு 16:15-16 யோவான் 3:16-20; ரோமர் 1:16; ரோமர் 10:9-10; எபே 2:8-9 1யோவான் 1:9 எபி 11:6)

"இயேசுகிறிஸ்துவைப் பற்றிய பிரசங்கமாகிய என் சுவிசேஷத்தின்படியே உங்களை ஸ்திரப்படுத்த வல்லவர்" - ரோமர் 16:26,27 ஆகிய [redacted] தனியாகச் சேர்க்கப்பட்டவை பவுல் ரோமாபுரிக்குச் சென்றபோது இவ்விரு வசனங்களையும் தன்னுடைய நிருபத்தோடு சேர்த்ததாக ஒருசிலர் கூறுகிறார்கள் எபேசியருக்கு நிருபம் எழுதின பின்பு இவ்விரு வசனங்களையும் எழுதியிருக்க வேண்டுமென்றும் சிலர் கூறுகிறார்கள் எபேசியர் 3 ஆம் அதிகாரத்தில் பவுல் சுவிசேஷத்தின் இரகசியத்தைப் பற்றி எழுதியிருக்கிறார் இவ்விரு வசனங்களும், ஒருசில மூலபாஷைச்சுவடிகளில் ரோமர் 14:23 ஆவது வசனங்களுக்குப் பின்பு சேர்க்கப்பட்டிருக்கிறது. மற்றச் சுவடிகளில் ரோமர் 16 ஆவது அதிகாரத்தின் இறுதியிலே சேர்க்கப்பட்டிருக்கிறது. ஒருசில மூலச்சுவடிகளில் இவ்விரண்டு இடங்களிலும் இவ்விரண்டு வசனங்களும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

I கொரிந்தியர் - முன்னுரை

காலம்

எபேசுவில் பவுல் மூன்று ஆண்டுகள் தங்கியிருந்தார். இந்த மூன்றாம் ஆண்டின் இறுதியில் கி.பி. 54 ஆம் ஆண்டில் பவுல் இந்த நிருபத்தை எழுதினார்.

ஆசிரியர்

பவுல்

மையக்கருத்து

கிறிஸ்தவ ஜீவியமும் கிறிஸ்தவ நடத்தையும். பவுல் இந்த நிருபத்தை எழுதுவதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. அவையாவன:

1. ஒரு சில உபதேசங்களைக் குறித்து கொரிந்துவிலிருந்து விசுவாசிகள் பவுலிடம் விசாரித்து எழுதினார்கள் (1கொரி 7:1; 1கொரி 8:1-13).
2. கொரிந்து சபையில் காணப்பட்ட ஒரு சில பிரச்சனைகளையும், அந்தச் சபையைக் குறித்த நிலைமையையும் அங்கிருந்து வந்த சகோதரர்கள் பவுலுக்கு அறிவித்தார்கள் (1கொரி 1:11; 1கொரி 5:1; 1கொரி 11:18; 1கொரி 15:12).

இந்தக் காரியங்களுக்குப் பதில் கூறும் விதமாக பவுல் கொரிந்தியருக்கு முதலாம் நிருபத்தை எழுதுகிறார்.

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 16

வசனங்கள் - 437

கேள்விகள் - 113

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள் - 5

புதிய தீர்க்கதரிசனங்கள் - 13

வரலாற்றைக் குறிக்கும் வசனங்கள் - 377

பொருளடக்கம்

I. முன்னுரை

1. ஆசிரியரும் வாழ்த்துதலும் (1:1-3)
2. தேவனுக்கு ஸ்தோத்திரம் - காரணம் (1:4-6)
3. கொரிந்தியர்மீது பவுலின் வாஞ்சை (1:7)
4. வருங்காலத்தில் பவுலின் நம்பிக்கை (1:8-9)

II. ஊழியர்கள் மத்தியில் பிரிவினைகள் இருப்பதற்காக கடிந்துரை

1. ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய் இருக்க வேண்டும் (1:10)
2. சகோதரர்களுக்குள்ளே வாக்குவாதங்கள் கூடாது (1:11-13)
3. தண்ணீர் ஞானஸ்நானம் (1:14-17)
4. மானிட ஞானமும் சிலுவையைப் பற்றிய உபதேசமும் வெவ்வேறானவை (1:18-25)
5. கிறிஸ்தவர்களுடைய அழைக்கப்பட்ட அழைப்பும் அழைப்பின் காரணமும் (1:26-29)
6. கிறிஸ்துவே நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார் (1:30-31)
7. தேவனைப் பற்றிய சாட்சியை அறிவிப்பதும் அதன் தெய்வீக நோக்கமும் (2:1-5)
8. கிறிஸ்தவ வெளிப்பாடு தெய்வீக ஞானமாயிருக்கிறது (2:6-8)
9. ஆவிக்குரிய காரியங்கள் ஆவியினாலே வெளிப்படுத்தப்பட்டு உபதேசிக்கப்பட்டவை (2:9-16)

I கொரிந்தியர் – முன்னுரை

10 கொரிந்திய விசுவாசிகளின் மாம்சத்திற்குரிய நிலைமை (3:1-4)

11 உண்மையான ஊழியக்காரர்களுக்கு தேவன் மட்டுமே ஆசீர்வாதத்தின் ஆதாரமாயிருக்கிறார் (3:5-7)

12 ஊழியக்காரர்கள் தேவனுக்கு உடன் வேலையாட்களாய் இருக்கிறார்கள் (3:8-10)

13 ஒரே அஸ்திபாரம் (3:11)

14 இரண்டு விதமான கட்டிடங்கள் – இரண்டு விதமான விளைவுகள் (3:12-15)

15 தேவனுடைய ஆலயத்தைப் போல சரீரம் பரிசுத்தமாயிருக்க வேண்டும் (3:16-17)

16 மாம்சத்தில நம்பிக்கை வைப்பதற்கு எதிரான எச்சரிப்பு (3:18-23)

17 ஊழியக்காரரின் நியாயத்தீர்ப்பு (4:1-5)

18 தாழ்மையாக இருக்குமாறு புத்திமதி (4:6-8)

19 தாழ்மைக்கும் பாடுகளுக்கும் அப்போஸ்தல எடுத்துக்காட்டு (4:9-13)

20 பவுல் சுவிசேஷத்திற்கு அவர்களுடைய தந்தையாக இருக்கிறார் (4:14-17)

21 உண்மையான ஊழியக்காரரின் அழைப்பு கிரியை ஆகியவற்றிற்கு சான்று (4:18-21)

III. விபசாரமும் வழக்குகளும்

1 பிரசித்தமாய் சொல்லப்படுகிற பாவம் (5:1)

2 பாவத்தில இறுமாப்படைந்திருப்பது பிரிவினைகளுக்குக் காரணம் (5:2)

3 ஸ்தல சபையில பாவத்திற்கு நியாயம் தீர்க்கும் விதம் (5:3-5)

4 பாவம் என்னும் பழைய புளித்தமாவை புறம்பே கழித்துப் போடுங்கள் (5:6-8)

5 உலகத்திலுள்ள பாவிகளுக்கும் சபையிலுள்ள பாவிகளுக்கும் இடையிலுள்ள வேறுபாடு (5:9-11)

6 சபையில் பொல்லாதவனை தள்ளிப்போடுவதற்கு ஸ்தல சபைக்கு அதிகாரம் உள்ளது (5:12-13)

7 பரிசுத்தவான்கள் வழக்காடும்படி அநீதக்காரரிடத்தில போக துணியக்கூடாது (6:1)

8 பரிசுத்தவான்கள் தங்கள் வழக்குகளை தங்களுக்குள்ளே நியாயம் தீர்த்துக் கொள்ள வேண்டும் (6:2-3)

9 பரிசுத்தவான்கள் அநியாயத்தை சகித்துக் கொண்டு நஷ்டத்தை பொறுத்துக் கொள்ள வேண்டும் (6:4-8)

10 ஆத்துமாவை அழிக்கும் பாவங்கள் (6:9-10)

11 பாவத்தின்மீது வெற்றி பெறுவதன இரகசியம் (6:11-12)

12 சரீரம வேசித்தனத்திற்கல்ல கர்த்தருக்கே உரியது (6:13-18)

13 சரீரம் பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாய் இருக்கிறதினால அது பாவமில்லாமல இருக்க வேண்டும் (6:19-20)

IV. கிறிஸ்தவரும் திருமணமும்

1 திருமணமாகாத கிறிஸ்தவருக்கு ஆலோசனை (7:1-2)

2 திருமணமான கிறிஸ்தவருக்கு ஆலோசனை (7:3-6)

3 திருமணமாகாதவருக்கு ஆலோசனை (7:7-9)

4 திருமணமான கிறிஸ்தவருக்கு ஆலோசனையும் ஒழுங்குகளும் (7:10-16)

I கொரிந்தியர் – முன்னுரை

5. கர்த்தர் அவனவனை அழைத்தது எப்படியோ அப்படியே அவனவன் நடக்கக் கடவன் (7:17-24)

6. கன்னிகைகளைக் குறித்தும் விவாகம் இல்லாதிருக்கிற மனுஷனைக் குறித்தும் ஆலோசனை (7:25-28)

7. திருமணமான கிறிஸ்தவருக்கு ஆலோசனை (7:29-31)

8. திருமணமானவர்கள் திருமணமாகாதவர்கள் ஆகியோரின் பொறுப்பு (7:32-35)

9. தன் புத்திரிகையின் கன்னிப்பருவத்தைக் குறித்து பெற்றோருக்கு ஆலோசனை (7:36-38)

10. கிறிஸ்தவ விதவைகளுக்கு ஆலோசனை (7:39-40)

V. கிறிஸ்தவ விடுதலைகள்

1. அறிவு, அன்பு ஆகியவற்றால் ஏற்படும் விளைவுகள் (8:1-3)

2. பல விக்கிரகங்கள் ஆனால் ஒரே ஒரு மெய் தேவன் (8:4-5)

3. பிதாவாகிய தேவனும் இயேசு கிறிஸ்துவும் (8:6)

4. அறியாமை அடிமைத்தனத்தை உண்டுபண்ணும் (8:7-8)

5. கிறிஸ்தவ விடுதலையை தவறாக பயன்படுத்துவதும் அதன் விளைவும் (8:9-13)

VI. பவுலைப் பற்றிய விவாதங்களுக்கு பவுலின் மாறுத்தரம்

1. பவுலின் அப்போஸ்தல ஊழியம் (9:1-2)

2. மற்றவர்களைப் போல ஜீவிக்க பவுலுக்கு அதிகாரம் உண்டு (9:3-8)

3. மற்றவர்களைப் போன்று சுவிசேஷத்தினால் பிழைப்பு நடத்த பவுலுக்கு அதிகாரம் உண்டு (9:9-11)

4. பவுல் இந்த அதிகாரத்தைச் செலுத்தவில்லை (9:12-15)

5. சுவிசேஷத்தை பிரசங்கிப்பது பவுல்மேல் விழுந்த கடமை (9:16-18)

6. ஊழியம் செய்வதில் பவுலின் கொள்கை (9:19-23)

7. வெகுமதிக்கு நிபந்தனைகள் (9:24-27)

VII. இரண்டு காலங்கள்

1. பிரமாணத்தின் காலம்

(1) இஸ்ரவேலின் ஐந்து ஆசீர்வாதங்கள் (10:1-4)

(2) இஸ்ரவேலின் ஐந்து சாபங்கள் (10:5-11)

2. கிருபையின் காலம்

(1) விக்கிரகாராதனை பெருமை ஆகியவற்றிற்கு எதிராக கிறிஸ்தவருக்கு எச்சரிப்பு (10:12-14)

(2) மூன்று ஐக்கியங்கள்

(அ) சபையின் ஐக்கியம் (10:15-17)

(ஆ) இஸ்ரவேலின் ஐக்கியம் (10:18-19)

(இ) புறஜாதியாரின் ஐக்கியம் (10:20)

(3) கிறிஸ்தவருக்கு எச்சரிப்பு (10:21-22)

(4) கிறிஸ்தவருடைய விடுதலைகள் எப்போதும் ஞானத்தையும் பக்தி விருத்தியையும் உண்டாக்காது (10:23-24)

I கொரிந்தியர் - முன்னுரை

(5) கடையில் விற்கப்படுகிற எதையும் வாங்கி புசிக்கலாம் (10:25-26)

(6) அவிசுவாசிகளின் விருந்துகள் (10:27-30)

(7) நமது கிறிஸ்தவ உரிமைகளை தேவனுடைய மகிமைக்கென்றே செய்ய வேண்டும் (10:31-33)

VIII. கிறிஸ்தவ கட்டளைகள்

1 பவுலைப் பின்பற்றி கட்டளைகளைக் கைக்கொள்ள வேண்டும் என்னும் புத்திமதி (11:1-2)

2 புருஷனுக்கு கிறிஸ்து தலையாயிருக்கிறார் (11:3)

3 பொது ஆராதனைகளில் புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் ஒழுங்குகள் (11:4-12)

4 சுபாவம் போதிக்கிற காரியம் (11:13-15)

5 இதனால் பிரிவினைகளும் வாக்குவாதங்களும் உண்டானால் நமக்கு அப்படிப்பட்ட வழக்கமில்லையென்று அறியக்கடவன (16)

6 கொரிந்துவில் பொதுவாக காணப்பட்ட பிரிவினைகளும் மார்க்க பேதங்களும் (11:17-19)

7 கர்த்தருடைய இராப்போஜனத்தில் காணப்படும் பாவங்கள் (11:20-22)

8 கர்த்தருடைய இராப்போஜனம் கர்த்தரிடத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டது (11:23-26)

9 கர்த்தருடைய இராப்போஜனத்தில் அபாத்திரமாய் பங்கு பெறக்கூடாது (11:27-28)

10 அபாத்திரமாய் போஜனபானம் பண்ணுகிறதினால் ஏற்படும் விளைவு (11:29-30)

11 நியாயத்தீர்ப்பைத் தவிர்ப்பதற்கு வழி (11:31-32)

12 கொரிந்துவில் காணப்படும் குறைகளைக் குறித்து புத்திமதி (11:33-34)

IX. ஆவிக்குரிய வரங்கள்

1 இயேசுவை மகிமைப்படுத்தும் (12:1-3)

2 வரங்களில் வித்தியாசங்கள் உண்டு (12:4-6)

3 வரங்களின் நோக்கம் (12:7)

4 வரங்களின் எண்ணிக்கையும் விதமும் (12:8-10)

5 வரங்கள் பகிர்ந்து கொடுக்கப்படும் விதம் (12:11)

6 சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம் (12:12)

7 சரீரத்தில் அநேக அவயவங்கள் இருக்கிறது (12:13-14)

8 சரீரத்தின் அவயவங்கள் ஒன்றோடொன்று இசைந்திருக்கிறது (12:15-20)

9 சரீரத்தின் அவயவங்கள் ஒன்றுக்கொன்று துணைபுரியும் (12:21-23)

10 சரீரத்தின் அவயவங்கள் ஒன்றுக்கொன்று சிந்திக்கும் (12:24-26)

11 கிறிஸ்தவர் அனைவரும் கிறிஸ்துவின் சரீரமாயும் தனித்தனியே உறுப்புடையவராயும் இருக்கிறார்கள் (12:27-30)

12 ஆவிக்குரிய வரங்களைக் குறித்து ஒவ்வொரு கிறிஸ்தவரின் கடமை (12:31)

13 அன்பில்லாவிட்டால் வரங்களினால் பயனில்லை (13:1-3)

14 அன்பின் சுபாவம் (13:4-7)

I கொரிந்தியர் – முன்னுரை

15 வரங்கள் ஒழிந்துபோகும் - ஆனால அன்பும் மற்ற கிருபைகளும் ஒழியாது (13:8-13)

16 எல்லா வரங்களையும் விசேஷமாய தீர்க்கதரிசன வரத்தையும் விரும்புங்கள் (14:1-2)

17 தீர்க்கதரிசன வரமும் அந்நிய பாஷைகளும் (14:3-4)

18 அந்நிய பாஷைகளில் பேசுகிறவன் சபைக்கு பக்தி விருத்தியுண்டாகும்படி பேச வேண்டும் (14:5

19 அந்நிய பாஷைகளை பிரயோஜனம் உண்டாகும் விதத்தில பேசவேண்டும (14:6-11

20 சபைக்கு பக்தி விருத்தியுணடாகத் தக்கதாக ஆவிக்குரிய வரங்களில தேறும்படி நாடவேண்டும (14:12)

21 ஆவியோடும் விண்ணப்பம் பணண வேண்டும. கருத்தோடும் விண்ணப்பம பணண வேண்டும் (14:13-17)

22 பவுல அதிகமாய் பாஷைகளைப பேசினார் (14:18-19)

23 புத்தியிலே குழந்தை களாயிராதேயுங்கள (14:20)

24. அந்நிய பாஷைகள அவிசுவாசிகளுககு அடையாளமாய இருக்கிறது (14:21-22)

25 எலலோரும் அந்நிய பாஷைகளிலே பேசிக்கொள்ளும்போது ஏற்படும் காரியம் (14:23

26 எல்லாரும் தீர்க்கதரிசனம் சொலலும் போது ஏற்படும் காரியம் (14:24-25)

27 சகலமும் பக்தி விருத்திக்கேதுவாக செய்யப்படக்கடவது (14:26)

28 சபையில் அந்நிய பாஷையில பேசும் ஒழுஙகு (14:27-28)

29 தீர்க்கதரிசிகள் பேச வேண்டிய ஒழுங்கு (14:29-31)

30 தீர்க்கதரிசிகளுடைய ஆவிகள் தீர்க்கதரிசிகளுக்கு அடங்கி யிருக்கிறதே (14:32-33

31 சபையில் ஸ்திரீகள் குழப்பம் விளைவிக்கக் கூடாது (14:34-35)

32 இவைகள் கர்த்தருடைய கற்பனைகள் என்று ஒத்துக் கொள்ள வேண்டும் (14:36-38)

33. ஆவிக்குரிய வரங்களைக் குறித்து கடைசி எச்சரிப்பும் புத்திமதியும் (14:39-40)

X. உயிர்த்தெழுதலகள்

1 கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்து பவுலின் பிரசங்கம் (15:1-8)

2 ஊழியத்தில பவுலின் தாழமை (15:9-11)

3 கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலின முக்கியத்துவம் (15:12-19)

4 கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலின நிச்சயம் (15:20-22)

5. உயிர்த்தெழுதலின வரிசை (15:23)

6. உலகத்தின் முடிவு (15:24-28)

7 மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுகிறவர்கள (15:29)

8 மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால் பாடுகளினால் என்ன பிரயோஜனம் (15:30-32)

9 பாவம் செய்யாமல நீதிக்கேற்க விழித்துக் கொண்டு தெளிந்தவர்களாயிருங்கள் (15:33-34

10 மரித்தோர் எழுந்திருக்கும் விதம் (15:35-38)

11 உயிர்த்தெழுந்த சரீரங்களின் நிலைமை (15:39-44)

I கொரிந்தியர் - முன்னுரை

12 உயிர்த்தெழுதலின் அவசியம் (15:45-50)

13. உயிர்த்தெழுதலின் வேளையும் விதமும் (15:51-57)

14 கர்த்தருக்குள் நாம் படுகிற பிரயாசம் விருதாவாயிராது (15:58)

XI. முடிவுரையும் வாழ்த்துதல்களும்

1 பரிசுத்தவான்களுக்காக சேர்க்கப்படும் தர்மப்பணம் (16:1-4)

2 பவுலின் வருகை (16:5-9)

3 தீமோத்தேயுவும் அப்பொல்லோவும் (16:10-12)

4 ஐந்து கட்டளைகள் (16:13-14)

5 ஸ்தேவானுடைய வீட்டாரும் மற்ற சகோதரரும் (16:15-16)

6 பவுலை வந்து சந்தித்த சகோதரர்கள் (16:17-18)

7 வாழ்த்துதலும் ஆசீர்வாதமும் (16:19-24)

I கொரிந்தியர் – தொகுப்புரை

1 அதிகாரம்

I. முன்னுரை – *1:1-9*

1. ஆசிரியரும் வாழ்த்துதலும்

1கொரி 1:1 தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனாகிய பவுலும் சகோதரனாகிய சொஸ்தெனேயும்

1கொரி 1:2 கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கும், எங்களுக்கும் தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்ளுகிற அனைவருக்கும் எழுதுகிறதாவது:

1கொரி 1:3 நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

"அப்போஸ்தலர்" **(apostle)** (அப் 15:33)

"தேவனுடைய சித்தத்தினாலே" தேவனுடைய சொந்த நியமனமும் சித்தமும்

"சொஸ்தெனே" **(Sosthenes)** - அப் 18:17 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிற நபராக இருக்கலாம்

"தேவனுடைய சபை" **(church of God)** இந்த வாக்கியம் ஒருமையில் ஒன்பது இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (1கொரி 1:2; 1கொரி 10:32; 1கொரி 11:22; 1கொரி 15:9; அப் 20:28; 2கொரி 1:1; கலா 1:13; 1தீமோ 3:5,15) பன்மையில் மூன்று இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (1கொரி 11:16; 1தெச 2:14; 2தெச 1:4)

"கொரிந்து" **(Corinth)** - (அப் 18:1) கிபி 52 ஆம் ஆண்டில் பவுல் கொரிந்துவில் ஒரு சபையை ஸ்தாபித்தார்

பரிசுத்தப்படுத்துதல் **(sanctified)** - **ἁγιάζω - hagiazoo** - *37*

வினைச்சொல் - பரிசுத்தப்படுத்துதல், பரிசுத்தப்படுதல், பரிசுத்தமாக்குதல், பரிசுத்தஞ்செய்தல், பரிசுத்தம் பண்ணுதல், பரிசுத்தமாக்கப்படுதல். **(set apart, consecrate)** (யோவான் 17:17; ரோமர் 15:16; 2தெச 2:13)

(அ) தேவனுக்காக பொருட்களையோ அல்லது நபர்களையோ வேறுபிரித்து அர்ப்பணித்தல் மத். 23:17; யோவா 10:36

(ஆ) சடங்குப்பிரகாரமாக, நீதிநெறிப் பிரகாரமாக பரிசுத்தப்படுத்துதல் 1கொரி. 6:11; 7:14

(இ) சடங்குகளின் மூலமாக ஒரு பொருளையோ அல்லது நபரையோ பரிசுத்தப்படுத்துதல். எபி. 9:13; 2தீமோ 2:21

(ஈ) பரிசுத்தமுள்ளதை எண்ணுதல் மத். 6:9

[illegible] நிருபத்தில் வாழ்த்துக் கூறப்பட்டிருக்கிறவர்கள்

1. கொரிந்துவிலுள்ள தேவனுடைய சபை

2. கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள்

3. பரிசுத்தவான்கள் (அப் 9:13)

"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுது கொள்ளுகிற அனைவருக்கும்" இந்த நிருபம் எல்லா சபைகளுக்கும் பொதுவான சொத்தாக இருக்க வேண்டும் என்று பவுல் விரும்புகிறார்

"எங்களுக்கும் தங்களுக்கும்" இயேசு கிறிஸ்து எல்லா ஜனங்களுக்கும் இரட்சகர். ஒரு குறிப்பிட்ட தேசத்திற்கு மட்டுமோ அல்லது ஒரு குறிப்பிட்ட சபை பிரிவிற்கு மட்டுமோ அவர் இரட்சகர் என்று கூறமுடியாது. இயேசு கிறிஸ்து உலக இரட்சகர்

I கொரிந்தியர் – தொகுப்புரை

1 அதிகாரம்

"நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக" - தீமோத்தேயு, தீத்து ஆகிய நிருபங்களைத் தவிர பவுல் எழுதிய மற்ற எல்லா நிருபங்களிலும் இந்த வாழ்த்துரை வந்திருக்கிறது.

2. தேவனுக்கு ஸ்தோத்திரம் - காரணம்

1கொரி 1:4 கிறிஸ்துவைப்பற்றிய சாட்சி உங்களுக்குள்ளே ஸ்திரப்படுத்தப்பட்ட படியே.

1கொரி 1:5 நீங்கள் இயேசு கிறிஸ்துவுக்குள்ளாய் எல்லா உபதேசத்திலும் எல்லா அறிவிலும் மற்றெல்லாவற்றிலும் சம்பூரணமுள்ளவர்களாக்கப்பட்டிருக்கிற படியால்

1கொரி 1:6 அவர் மூலமாய் உங்களுக்கு அளிக்கப்பட்ட தேவகிருபைக்காக, நான் உங்களைக் குறித்து எப்பொழுதும் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்

இயேசு கிறிஸ்துவால் வரும் காரியங்கள்

1 நீதி (Righteousness) (ரோமர் 3:22)

2 தேவகிருபை (The grace of God) (ரோமர் 5:15)

3 நீதியின் ஆளுகை (Reign of righteousness) (ரோமர் 5:21)

4 கிருபையும், சத்தியமும் (Grace and truth) (1கொரி 1:4, யோவான் 1:17)

5 சமாதானம் (Peace) (அப் 10:36)

6 சிருஷ்டிப்பு (Creation) (எபே 3:9; கொலோ 1:16-18)

7 ஒப்புரவாதல் (Reconciliation) (2கொரி 5:18)

8 வெளிப்படுத்தப்படுதல் (Revelation) (கலா 1:12)

9 நீதிமானாக்கப்படுதல் (Justification) (கலா 2:16-17)

10 புத்திரசுவிகாரம் (Adoption) (எபே 1:6)

11 கிருபையின் ஐசுவரியங்கள் (Exceeding riches of grace) (எபே 2)

12 எல்லாத் தேவைகளும் சந்திக்கப்படுதல் (All needs supplied) (பிலி 4:19)

13 இரட்சிப்பு (Salvation) (1தெச 5:9)

14 ஆவிக்கேற்ற பலிகள் (Spiritual sacrifices) (1பேதுரு 2:5)

15. நல்மனச்சாட்சி (A good conscience) (1பேதுரு 3:21)

16 நித்திய மகிமைக்கு அழைப்பு (Calling to glory) (1பேதுரு 5:10)

17 உபதேசமும், அறிவும் (Utterance and knowledge) (1கொரி 1:5)

சாட்சி (testimony) - μαρτύριον - martyrion - 3142

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - சாட்சி - மத் 24:14, அப 4:33, அப் 7:44; யாக் 5:3 ஆகிய வசனங்களைத் தவிர மற்ற வசனங்களில் சாட்சி என்றே பொருள்படும். இந்த வசனங்களில் இந்த வார்த்தை இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம் என்று பொருள்படும் "சாட்சி "witness" என்று மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. அப்போஸ்தலர் பவுலும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைச் சாட்சி என்றே உறுதிபண்ணுகிறார் (ரோமர் 15:18-19,29, அப 15:4,12 அப 19:11) (மாற்கு 16:15)

1 அதிகாரம்

சம்பூரணமுள்ளவர்கள் (enriched)
πλουτίζω - ploutizoo - 4148

வினைச்சொல் - சம்பூரணமுள்ளவர்களாயிரு, ஐசுவரியவான்களாக்கு, சம்பூரணமுள்ளவர்களாக்கு - (1கொரி 1:5, 2கொரி 6:10, 2கொரி 9:11)

விசுவாசிகள் சம்பூரணமுள்ளவர்களாக ஆக்கப்பட்டிருக்கும் காரியங்கள்

1. எல்லா உபதேசத்திலும் (வாயின்மூலமாக வரும் பேச்சுகள் - utterance) சம்பூரணமுள்ளவர்களாக ஆக்கப்படுதல் - தீர்க்கதரிசனம் உரைத்தல், அந்நிய பாஷைகள் பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல் ஆகிய வரங்கள் (1கொரி 1:7, 1கொரி 12:4-11, 1கொரி 14:1-40)

2. சுவிசேஷத்தின் எல்லா உபதேசங்களிலும் சம்பூரணமுள்ளவர்களாக ஆக்கப்படுதல் - கிறிஸ்துவின் சாட்சி (1கொரி 1:5-6)

3. எல்லாவற்றிலும் சம்பூரணமுள்ளவர்களாக ஆக்கப்படுதல் - ஆவியானவரின் எல்லா வரங்களும் கனியும் (1கொரி 1:7, 1கொரி 12:4-11, 1கொரி 13:1-13, கலா 5:22-23)

3. கொரிந்தியர்மீது பவுலின் வாஞ்சை

1கொரி 1:7 - அப்படியே நீங்கள் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுவதற்குக் காத்திருக்கிறீர்கள்.

"நீங்கள் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய்" - சுவிசேஷம் பூரணமாகப் பிரசங்கிக்கப்பட்டு, உறுதிபண்ணப்பட்டிருக்கிறது. (1கொரி 1:6) விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரின் வரத்தில் குறைவில்லாதவர்களாக இருக்க வேண்டும். (1கொரி 1:7, 1கொரி 12:4-11)

தீர்க்கதரிசன எண் -1

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுவதற்குக் காத்திருக்கிறீர்கள்..." (1கொரி 1:7-8) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

காத்திரு (expecting) -
ἀπεκδέχομαι - apekdechomai - 553

வினைச்சொல் - காத்திரு, எதிர்பார் (eagerly expecting) - கர்த்தருடைய வருகைக்காக அல்லது இரட்சிப்பின் வரப்போகும் நம்பிக்கைக்காக காத்திருப்பது (ரோமர் 8:19)

வெளிப்படுதல் (coming) -
ἀποκάλυψις - apokalypsis - 602

பெண்பால் பெயர்ச்சொல் - ஒளி, வெளிப்படுதல், காண்பித்தல், தெளிவு (unveiling, revelation, manifestation) - வெளிப்படுதல் என்னும் போது இரகசியம் அகற்றப்படுவது, மூடி இருப்பது திறக்கப்படுவது என்று பொருள்படும். வெளிப்படுதலின் மூலமாக மறைவான இரகசியங்களை அனைவரும் காணமுடியும். (வெளி 1:1, ரோமர் 2:5, ரோமர் 16:25, 1கொரி 14:6,26, 2கொரி 12:1,7, கலா 1:12, கலா 2:2, எபே 1:17, எபே 3:3) வெளிப்படுதல் என்னும் சொல் ஒரு நபரைக் குறித்துப் பயன்படுத்தப்படும் போது, எல்லோரும் காணக்கூடிய விதத்தில் வெளிப்படுதல் என்று பொருள் (லூக்கா 2:33, ரோமர் 8:19, 1பேதுரு 1:7)

I கொரிந்தியர் – தொகுப்புரை

1 அதிகாரம்

வெளிப்படும் காரியங்கள்

1 சுவிசேஷ ஒளி (The gospel light) லூக்கா 2:32

2 வரப்போகும் நியாயத்தீர்ப்பு (The coming judgment) (ரோமர் 2:5)

3 முன்பு மறைக்கப்பட்டு இப்போது வெளிப்படுத்தப்பட்டிருக்கும் சத்தியங்கள் (Unveiling of truths previously hidden but now revealed) (ரோமர் 16:25 2கொரி 12:1,7; கலா 1:12; கலா 2:2 எபே 1:17; எபே 3:3, வெளி 1:1)

4 வரப்போகும் மகிமை (The coming glory) (1பேதுரு 4:13)

5 இயேசு கிறிஸ்துவின் இரண்டாம வருகை (The second coming of Christ) (1கொரி 1:7; 2தெச 1:7 பேதுரு 1:7,13)

6 தேவனுடைய புத்திரர் வெளிப்படுவது (Manifestation of the sons of God) (ரோமர் 8:19

இயேசு கிறிஸ்துவின் வருகையைக் குறிக்கும் நான்கு கிரேக்க வார்த்தைகள்

1 வெளிப்படுதல் (Coming) ἀποκάλεψις - apokalypsis - 602

பெண்பால் பெயர்ச்சொல் - ஒளி வெளிப்படுதல், காணப்பிக்தல், தெளிவு

2 பிரசன்னம் (appearing) - ἐπιφάνεια - epiphaneia - 2015

பெண்பால் பெயர்ச்சொல் - பிரசன்னம் (appearing) 1தீமோ 6:14 2தீமோ 4:1,8; தீத்து 2:13 2தெச 2:8, இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையையும் குறிக்கும். (2தீமோ 1:10)

3 வெளியரங்கமான (manifest) - φανερός - phaneros - 5318

பெயரடை - வெளியரங்கமான, பிரசித்த, புறம்பான (to shine, be manifest, be seen) (1யோவான் 2:28; 1யோவான் 3:2 1பேதுரு 5:4; கொலோ 3:4,

4 வெளிப்படுதல (coming) - παρουσία - parousia - 3952

பெண்பால பெயர்ச்சொல் - வருதல். தோன்றும் சமீபமாயிருததல (personal appearance, presence) இந்த வார்த்தை பொதுவாக இயேசு கிறிஸ்துவின வருகையைக் குறிப்பதினால சபை எடுத்துக் கொள்ளப்படுவதையும் இயேசு கிறிஸ்துவின இரண்டாம் வருகையையும் குறிக்கும். சபை எடுத்துக் கொள்ளப்படும்போது இயேசு கிறிஸது ஆகாயத்திலே பரிசுத்தவான்களுக்காக வருவார இரண்டாம் வருகையின போது பரலோகத்திலிருந்து பரிசுத்தவானகளோடு வருவார் சபை எடுத்துக் கொள்ளப்படுதல் (rapture) - (1கொரி 15:20-23, 1தெச 2:19, 1தெச 3:13; 1தெச 4:15; 1தெச 5:23, 2தெச 2:1 யாக் 5:7 8 1யோவான 2:28 இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை (the second coming) (மத் 24:3, 27,37,39, 2தெச 2:8, 2பேதுரு 1:16; 2பேதுரு 3:4

1 அதிகாரம்

4. வருங்காலத்தில் பவுலின் நம்பிக்கை - (1தெச 2:19; 3:13; 5:23)

1கொரி 1:8 நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாளிலே நீங்கள் குற்றஞ் சாட்டப்படாதவர்களாயிருக்கும்படி முடிவு பரியந்தம் அவர் உங்களை ஸ்திரப்படுத்துவார்.

1கொரி 1:9 தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்.

"முடிவு பரியந்தம் அவர் உங்களை ஸ்திரப்படுத்துவார்" - இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷமாகிய சாட்சி விசுவாசிகளை மத்தியிலே ஸ்திரப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த சுவிசேஷத்தின் மூலமாக இயேசு கிறிஸ்து தம்முடைய பிள்ளைகளை முடிவுபரியந்தம் ஸ்திரப்படுத்துவார். இதன் வாயிலாக இயேசு கிறிஸ்துவின் வருகையின்போது நாம் குற்றம் சாட்டப்படாதவர்களாக இருப்போம்.

குற்றம் சாட்டப்படாதவர் (blameless) - ἀνέγκλητος - anenkleetos - 410

பெயரடை - குற்றம் சாட்டப்படாத கண்டிக்கப்படாத (not accused, unimpeachable). (1கொரி 1:8 கொலோ 1:22; 1தீமோ 3:10, தீத்து 1:6-7)

"கர்த்தராகிய இயேசு கிறிஸ்வின் நாள்" (day of our Lord Jesus Christ) - தம்முடைய பரிசுத்தவான்களைத் தமக்காக எடுத்துக் கொள்வதற்காக இயேசு கிறிஸ்து வரப்போகும் நாள் (1கொரி 1:8; 1கொரி 5:5 2கொரி 1:14, பிலி 1:6, 10; பிலி 2:16)

"தேவன் உண்மையுள்ளவர்" (God is faithful) - யூதர் மத்தியிலே இந்த வாக்கியம் மிகவும் பிரபல்யமானது. தங்களுக்கும், தேவனுக்கும் இடையிலுள்ள உறவை யூதர்கள் இந்த வாக்கியத்தைக் கூறி உறுதிபண்ணிக் கொள்வார்கள். (1கொரி 1:9; 1கொரி 10:13; 2கொரி 1:18 1தெச 5:24; 2தெச 3:3)

ஐக்கியம் (fellowship) - κοινωνία - koinoonia - 2842

பெயர்ச்சொல் - அந்நியோந்நியம், ஐக்கியம், பங்கை ஏற்றுக்கொள்தல், பொருள், சகாயம், தர்மம், உடன்படு (the communion, fellowship) - இயேசு கிறிஸ்துவின் பாடுகளில் அவரோடு ஐக்கியமாக இருப்பது. இம்மையில் பரிசுத்த ஆவியானவருடைய வரங்களிலும் கிருபைகளிலும் ஐக்கியமாக இருப்பது மறுமையில் பரலோக ராஜ்யத்தின் மகிமைகளில் ஐக்கியமாக இருப்பது (2கொரி 13:14 1யோவான் 1:3 பிலி 3:10)

II. ஊழியர்கள் மத்தியில் பிரிவினைகள் இருப்பதற்காக கடிந்துரை - (1கொரி 1:10-4:21)

1. ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய் இருக்க வேண்டும்

1கொரி 1:10 சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல், ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே சொல்லப்படும் புத்திமதிகள்

1. நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவேண்டும்.

2. உங்களுக்குள் பிரிவினைகள் இருக்கக் கூடாது.

I கொரிந்தியர் – தொகுப்புரை

1 அதிகாரம்

1. நீங்கள் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்க வேண்டும்

இயேசு கிறிஸ்து விசுவாசிகளின் ஒற்றுமைக்காக ஜெபம் பண்ணியிருக்கிறார் யோவான் 17:11,21-22

பிரிவினைகள் (divisions) - σχίσμα - schisma - 4978

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல - பிறல். பிரிவினை (rent, schism) (1கொரி 1:10; 1கொரி 11:18 1கொரி 12:25; மத் 9:16; மாற்கு 2:21 யோவான் 7:43)

2. சகோதரர்களுக்குள்ளே வாக்குவாதங்கள் கூடாது - (3:1-9)

1கொரி 1:11 ஏனெனில், என் சகோதரரே உங்களுக்குள்ளே வாக்குவாதங்கள் உண்டென்று குலோவேயாளின வீட்டாரால உங்களைக்குறித்து எனக்கு அறிவிக்கப்பட்டது.

1கொரி 1:12 உங்களில் சிலர் நான் பவுலைச் சேர்ந்தவனென்றும் நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால், நான் இப்படிச் சொல்லுகிறேன்

1கொரி 1:13 கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுல் உங்களுக்காகச் சிலுவையிலறையப்பட்டானா? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்?

அறிவிக்கப்பட்டது (declared) δηλόω deelooo 1213

விளக்கச்சொல் - அறிவி, விளங்கப்பண்ணு, தெரியப்படுத்து (to make manifest) (1கொரி 1:11 1கொரி 3:13; கொலோ 1:8, எபி 9:8 எபி 12:27)

"குலோவேயாளின் வீட்டார்" - 1கொரி 16:17 ஆவது வசனத்தில கூறப்பட்டிருக்கிற ஸ்தேவான், பொர்த்துனாத்து, அகாயு ஆகியவர்களாக இருக்கலாம். இவர்கள் கொரிந்துவிலிருந்து வந்து அங்குள்ள சபைக் காரியங்களைப் பவுலிடம் பகிர்ந்து கொண்டார்கள் இவர்கள் ஒருவேளை குலோவேயாளின் குமாரர்களாக இருக்கலாம்

வாக்குவாதம் (contentions) - ἔρις - eris - 2054

பெண்பால பெயர்ச்சொல் - வாக்குவாதம், விரோதம், சண்டை (Strife) (ரோமர் 13:13; 1கொரி 3:3 பிலி 1:15; 1தீமோ 6:4); (contention) (1கொரி 1:11; தீத்து 3:9 ; (debate) (ரோமர் 1:29; 2கொரி 12:20) (variance) (கலா 5:20) - பிரிவினைகளினால வாக்குவாதங்கள் உண்டாகிறது. (1கொரி 1:10)

கொரிந்துவில் காணப்பட்ட நான்கு முக்கிய பிரிவினர்கள்

1 பவுலைச் சேர்ந்தவர்கள் (Paulians) - பவுல இந்தச் சபையை ஸ்தாபித்ததினால இவர்கள் பவுலைப் பின்பற்றினார்கள் அப 18:1-7 புறஜாதியாருக்கு விசேஷித்த அப்போஸ்தலனாகப் பவுல் அழைக்கப்பட்டிருந்ததினாலும் இவர்கள் பவுலைப் பின்பற்றுகிறவர்களாக இருக்கலாம். (ரோமர் 11:13)

2 அப்பொல்லோவைச் சேர்ந்தவர்கள் (Apollonians) - அப்பொல்லோ சிறந்த பேச்சாளர் நாவன்மையுடையவர் சாதுரியமாகப் பேசக்கூடியவர் ஆகையினால் சிலர் இவரைப் பின்பற்றியிருக்கலாம். (அப 18:24-19:1)

I கொரிந்தியர் – தொகுப்புரை

1 அதிகாரம்

3 கேபாவைச் சேர்ந்தவர்கள் (Cephians) - இவர்கள் பேதுருவை பின்பற்றுகிறவர்கள் பேதுரு யூதருக்கு அப்போஸ்தலனாக இருந்த படியினால் சிலர் இவனைப் பின்பற்றியிருக்கலாம் கலா 2:7-10

4 கிறிஸ்தவர்கள் (Christians) - இயேசு கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்கள் இவர்கள் மனுஷரை பின்பற்ற பிரியமற்றவர்கள் (1கொரி 1:12

8. **தண்ணீர் ஞானஸ்நானம்** - (1பேதுரு 3:21)

1கொரி 1:14 என் நாமத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தேனென்று ஒருவனும் சொல்லாதபடிக்கு.

1கொரி 1:15 நான் கிறிஸ்புவுக்கும் காயுவுக்குமேயன்றி, உங்களில் வேறொருவனுக்கும் ஞானஸ்நானங் கொடுக்கவில்லை. இதற்காக தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்

1கொரி 1:16 ஸ்தேவானுடைய வீட்டாருக்கும் நான் ஞானஸ்நானங் கொடுத்ததுண்டு. இதுவுமல்லாமல் இன்னும் யாருக்காவது நான் ஞானஸ்நானங் கொடுத்தேனோ இல்லையோ அறியேன்

1கொரி 1:17 ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினார் கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப்போகாதபடிக்கு, சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே அனுப்பினார்

"கிறிஸ்பு" (Crispus) - (அப் 18:8)

"காயு" (Gaius) - (ரோமர் 16:23) யோவான் தன்னுடைய மூன்றாம் நிருபத்தில் குறிப்பிட்டிருக்கும் தியோத்திரேப்பு என்பவனாக இருக்கலாம். (3யோவான் 1:9) யோவான் தன்னுடைய மூன்றாம் நிருபத்தைக் கொரிந்து சபைக்கு எழுதியதாகச் சிலர் கூறுகிறார்கள்

"ஸ்தேவான்" (Stephanas) - (1கொரி 1:11, 1கொரி 16:15-17)

தண்ணீர் ஞானஸ்நானத்தைப் பற்றிய உபதேசம்

1 பவுல் தண்ணீர் ஞானஸ்நானத்தை வலியுறுத்தவில்லை கிறிஸ்புவுக்கும் காயுவுக்குமேயன்றி, வேறொருவனுக்கும் பவுல் ஞானஸ்நானங் கொடுக்கவில்லை (1கொரி 1:14)

2 ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து பவுலை அனுப்பவில்லை சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினார் (1கொரி 1:17)

3 பாவத்திலிருந்து இரட்சிக்கப்படுவதற்கு ஞானஸ்நானம் தேவையற்றது (1கொரி 1:17-24) ஞானஸ்நானமானது இரட்சிப்பின் அடையாளம் மட்டுமே ஆகும். (1பேதுரு 3:21)

4 தண்ணீர் ஞானஸ்நானம் எடுப்பதற்கு முன்பாகவும், தண்ணீர் ஞானஸ்நானம் எடுக்காதவர்களையும் இயேசு கிறிஸ்து இரட்சித்திருக்கிறார் (1கொரி 1:17-21)

5. இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர் கட்டாயம் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்னும் அவசியமில்லை (1கொரி 1:17, யோவான் 4:2; மத் 4:17 24

6 சிலுவையைப் பற்றிய உபதேசமே இரட்சிக்கப்படுவதற்கு தேவபலனாய் இருக்கிறது. ஞானஸ்நானத்தில் இரட்சிக்கப்படுவதற்குத் தேவபலன் இல்லை (1கொரி 1:18 21, ரோமர் 1:16, ரோமர் 10:9-10; எபே 2:8 9

I கொரிந்தியர் – தொகுப்புரை

1 அதிகாரம்

7. விசுவாசமே ஆத்துமாவை இரட்சிக்கிறது. ஞானஸ்நானம் இரட்சிப்பதில்லை (1கொரி 1:21; யோவான் 3:15-20,36; யோவான் 5:24). ஒருவர் இரட்சிக்கப்பட்ட பின்பு ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும் (மத் 3:11; அப் 8:38)

"சாதுரிய ஞானம்" (wisdom of words) - பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகத்திற்கும் வல்லமைக்கும் மனுஷருடைய சாதுரிய ஞானத்தை இணையாகக் கூறமுடியாது. (1கொரி 2:4-5)

4. மானிட ஞானமும் சிலுவையைப் பற்றிய உபதேசமும் வெவ்வேறானவை

1கொரி 1:18 சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது; இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது.

1கொரி 1:19 அந்தப்படி: ஞானிகளுடைய ஞானத்தை நான் அழித்து, புத்திசாலிகளுடைய புத்தியை அவமாக்குவேன் என்று எழுதியிருக்கிறது.

1கொரி 1:20 ஞானி எங்கே? வேதபாரகன் எங்கே? இப்பிரபஞ்சத் தர்க்கசாஸ்திரி எங்கே? இவ்வுலகத்தின் ஞானத்தைத் தேவன் பைத்தியமாக்கவில்லையா?

1கொரி 1:21 எப்படியெனில், தேவஞானத்துக்கேற்றபடி உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிற்று.

1கொரி 1:22 யூதர்கள் அடையாளத்தைக் கேட்கிறார்கள், கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள்;

1கொரி 1:23 நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும், கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார்;

1கொரி 1:24 ஆகிலும் யூதரானாலும், கிரேக்கரானாலும், எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்குக் கிறிஸ்து தேவபெலனும் தேவஞானமுமாயிருக்கிறார்.

1கொரி 1:25 இந்தப்படி, தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது மனுஷருடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது; தேவனுடைய பலவீனம் என்னப்படுவது மனுஷருடைய பலத்திலும் அதிக பலமாயிருக்கிறது.

உபதேசம் (preaching) - λόγος - logos - 3056

ஆண்பால் பெயர்ச்சொல் - சொல், சொல்லுதல், வார்த்தை, கணக்கு, காரியம், புத்தி, ஞானம், வசனம், சங்கதி, பேச்சு, உபதேசம், கீர்த்தி, யோசனை, வாக்கியம் (word) (அப் 1:1)

கெட்டுப்போகிறவர் (perish) - ἀπόλλυμι - apollymi - 622

வினைச்சொல் - கொலை செய், அழி, கெடு, கொல், சங்கரி (மத் 10:28)

பைத்தியம் (foolishness) - μωρία - mooria - 3472

பெண்பால் பெயர்ச்சொல் - பைத்தியம் (silly, absurd, foolish) (1கொரி 1:18,21,23; 1கொரி 2:14; 1கொரி 3:19)

"இரட்சிக்கப்படுகிற நமக்கோ" - இரட்சிப்பு நிகழ்காலத்திற்கும் உரியது, வருங்காலத்திற்கும் பயனுள்ளது. (ரோமர் 13:11; பிலி 2:12; பிலி 5:8,9; 2தீமோ 1:9; 2தீமோ 3:15; 2தீமோ 4:18; 1பேதுரு 1:5)

1 அதிகாரம்

"அது தேவபெலனாயிருக்கிறது" - கிறிஸ்துவைப் பற்றிய உபதேசம் சுவிசேஷத்தைப் பற்றிய உபதேசம் சிலுவையைப் பற்றிய உபதேசம் ஆகியவை ஜனங்களுடைய ஆத்துமாவை இரட்சிக்கிறது. (1கொரி 1:18-24; ரோமர் 1:16)

1கொரிந்தியர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 1

"ஞானிகளுடைய ஞானத்தை நான் அழித்து, புத்திசாலிகளுடைய புத்தியை அவமாக்குவேன்" (1கொரி 1:19 ஏசா 29:14)

1கொரிந்தியர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 2

"ஞானி எங்கே? வேதபாரகன் எங்கே? இப்பிரபஞ்சத் தர்க்க சாஸ்திரி எங்கே? இவ்வுலகத்தின் ஞானத்தை தேவன் பைத்தியமாக்கவில்லையா?" (1கொரி 1:20 ஏசா 33:18)

உலகம் (world) - αἰών - aioon - 165

ஆண்பால் பெயர்சொல் - காலம் உலகம், பிரபஞ்சம், அநாதி சதாகாலங்கள் - உலகம் என்பது பொழுது, காலம் என்றும் பொருள்படும்

(அ) என்றென்றைக்கும் அதாவது கடந்த காலத்தில் - யோவான் 6:5, 80:32

(ஆ) ஒரு குறிப்பிட்ட காலம் அதாவது இம்மை அல்லது மறுமை மத். 12:32, மாற். 10:30

தர்க்க சாஸ்திரி (disputer) - דָּרַשׁ - daw-rash' - 1875

வினைச்சொல் - தேடு, விசாரி, நாடு, ஆராய், விண்ணப்பம் பண்ணு, விசாரணை செய்

தர்க்க சாஸ்திரி (propounder) - συζητητής - syzeeteetees - 4804

ஆண்பால் பெயர்ச்சொல் - தர்க்க சாஸ்திரி

"பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்க தேவனுக்குப் பிரியமாயிற்று" - யூதர்கள் மேசியாவை எதிர்பார்த்தார்கள் அவர் இராஜாதிராஜாவாக வல்லமையோடு வருவார் என்று நினைத்தார்கள் ஆனால் இயேசு கிறிஸ்துவோ மிகுந்த தாழ்மையுடையவராய் சிலுவையில் மரிக்கப்படுவதற்காக வந்தார் சிலுவையில் மரித்துப்போன இயேசு கிறிஸ்து தங்களுக்கு மேசியாவாக இருக்க முடியாது என்று யூதர்கள் நினைத்தார்கள் புறஜாதியார் கூட சிலுவையில் மரித்த இயேசு கிறிஸ்துவால் தங்களை இரட்சிக்க முடியாது என்று நினைத்து அவர் தரும் இரட்சிப்பை புறக்கணித்து விட்டார்கள் ஆனாலும், யூதராக இருந்தாலும், புறஜாதியாராக இருந்தாலும் விசுவாசிக்கிறவர்களுக்கு இயேசு கிறிஸ்து தேவஞானமாகவும், தேவனுடைய பெலனாகவும் இருக்கிறார் சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்து மனுஷனை இரட்சிப்பார் என்னும் உபதேசம் உலகத்தாருக்கு பைத்தியமாகத் தெரியலாம் ஆனால் பைத்தியமாகத் தோன்றுகிற அந்தப் பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிற்று

5. கிறிஸ்தவர்களுடைய அழைக்கப்பட்ட அழைப்பும் அழைப்பின் காரணமும்

1கொரி 1:26 எப்படியெனில் சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள் மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை வல்லவர்கள் அநேகரில்லை பிரபுக்கள் அநேகரில்லை

1கொரி 1:27 ஞானிகளை வெட்கப்படுத்தும் படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார் பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும் படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்து கொண்டார்

I கொரிந்தியர் – தொகுப்புரை

1 அதிகாரம்

1கொரி 1:28 உள்ளவைகளை அவமாக்கும் படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும் இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார்

1கொரி 1:29 மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமைபாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார்

தேவன் தெரிந்து கொண்ட காரியங்களும், அதற்கான காரணங்களும்

1. தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார் - ஞானிகளை வெட்கப்படுத்தும்படியாக
2. தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்து கொண்டார் - பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படியாக
3. உலகத்தின் இழிவானவைகளைத் தேவன் தெரிந்து கொண்டார் - உள்ளவைகளை அவமாக்கும்படியாக
4. அற்பமாய் எண்ணப்பட்டவைகளைத் தேவன் தெரிந்து கொண்டார் - பிரபுக்களை வெட்கப்படுத்தும்படியாக
5. இல்லாதவைகளைத் தேவன் தெரிந்து கொண்டார் - வல்லவர்களை வெட்கப்படுத்தும்படியாக

6. கிறிஸ்துவே நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்

1கொரி 1:30 அந்தப்படி நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள் எழுதியிருக்கிறபடி மேன்மைபாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மைபாராட்டத்தக்கதாக

1கொரி 1:31 அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்

1கொரிந்தியர் நிரூபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 8

"மேன்மைபாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மைபாராட்டக்கடவன் (1கொரி 1:31; எரே 9:23-24)

கிறிஸ்து நமக்காக ஆன காரியங்கள்

1. தேவனுடைய பெலன் (The power of God) (1கொரி 1:24)
2. தேவனுடைய ஞானம் (The wisdom of God) (1கொரி 1:24, 30)
3. தேவனுடைய நீதி (The righteousness of God) (1கொரி 1:30)
4. தேவனுடைய பரிசுத்தம் (The holiness of God) (1கொரி 1:30)
5. தேவனுடைய மீட்பு (The redemption of God) (1கொரி 1:30)

கிறிஸ்து நமக்காக ஆக்கப்பட்ட காரியங்கள்

1. கிறிஸ்து மாம்சமானார் (யோவான் 1:14)
2. ஸ்திரீயினிடத்தில் பிறந்தார் (கலா 4:4)
3. தாவீதின் சந்ததியில் பிறந்தார் (ரோமர் 1:3)
4. மனுஷர் சாயலானார் (பிலி 2:7)
5. தம்மைத்தாமே வெறுமையாக்கினார் (பிலி 2:7)
6. தேவதூதரிலும் சற்று சிறியவராக்கப்பட்டார் (எபி 2:7)

1 அதிகாரம்

7 நியாயப்பிரமாணத்திற்குக் கீழானார்
(கலா 4:5)

8 நமக்காகச் சாபமாக்கப்பட்டார்
(கலா 3:13)

9 நமக்காகப் பாவமாக்கப்பட்டார்
(2கொரி 5:21)

“பரிசுத்தம்” (sanctification)
(யோவான் 17:17, 1தெச 4:3; 2தெச 2:13)

2 அதிகாரம்

7. தேவனைப் பற்றிய சாட்சியை அறிவிப்பதும் அதன் தெய்வீக நோக்கமும் - (ரோமர் 15:18-19,29)

1கொரி 2:1 சகோதரரே நான் உங்களிடத்தில் வந்தபோது தேவனைப் பற்றிய சாட்சியைச் சிறந்த வசனிப்போடாவது ஞானத்தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை.

1கொரி 2:2 இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்.

1கொரி 2:3 அல்லாமலும் நான் பலவீனத்தோடும் பயத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும் உங்களிடத்தில் இருந்தேன்.

1கொரி 2:4 உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு,

1கொரி 2:5 என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது.

சிறந்தது (excellency) - ὑπεροχή - hyperochee 5247

பெண்பால் பெயர்ச்சொல் - சிறந்தது, அதிகாரம் (authority, preeminence) (1கொரி 2:1; 1தீமோ 2:2)

"தேவனைப்பற்றிய சாட்சி" (testimony of God) - (1கொரி 1:6)

"வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்" சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்துவை மட்டுமே பவுல் கொரிந்தியருக்கு அறிவிக்கத் தீர்மானம் பண்ணுகிறார். வேறெந்தவிதமான உலக ஞானத்தையோ, தத்துவங்களையோ அவர்களுக்குப் பிரசங்கிக்க பவுலுக்கு விருப்பம் இல்லை. இயேசு கிறிஸ்துவினால் வரும் இரட்சிப்பையும் சிலுவையின் மூலமாக வரும் ஆசீர்வாதங்களையும் கொரிந்தியர் குறைவில்லாமல் நிறைவாகப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று பவுல் விரும்புகிறார்.

"பலவீனத்தோடும் பயத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும்" - இந்த வாக்கியம் பவுலின் சரீரப் பிரகாரமான பலவீனத்தைக் குறிக்கலாம். அல்லது தேவனையே பவுல் முழுமையாகச் சார்ந்திருப்பதை விவரிக்கும் வாக்கியமாக இருக்கலாம். சரீரப் பிரகாரமான பலவீனம் என்றால் அந்த பலவீனம் அவர் கல்லால் எறியப்பட்டதினாலும் அடிக்கப்பட்டதினாலும் மற்ற பாடுகளை அனுபவித்ததினாலும் ஏற்பட்டிருக்கலாம். (2கொரி 11:24-27; கலா 4:13) பயமும், நடுக்கமும் மனதின் நிலைமையை வெளிப்படுத்துகிறது. தேவனைத் துக்கப்படுத்தி விடக்கூடாது. சத்தியத்தை அவமாகப் பேசிவிடக்கூடாது என்னும் பயம் பவுலிடம் இருந்தது. (1கொரி 9:27; 2கொரி 7:15; எபே 6:5)

"உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கவேண்டும்" ஜனங்களைக் கவருவதற்காக பவுல் சாதுரிய ஞானத்தைப் பயன்படுத்தவில்லை. மனுஷரைத் தன் பக்கம் இழுப்பதற்காகத் தன்னுடைய சுயஞானத்தை வெளிப்படுத்தவில்லை. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தினால் நிரப்பப்பட்டு, தேவனுடைய வல்லமையினால் இயேசு கிறிஸ்துவைப் பற்றியும் அவர் சிலுவையில் அறையப்பட்டதைப் பற்றியும் ஜனங்களுக்குப் பிரசங்கம் பண்ணினார். பவுல் பிரசங்கம் பண்ணிய வார்த்தைகளைத் தேவன் அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும் உறுதி பண்ணினார். (ரோமர் 15:18-19, 29; அப் 19:11) பவுல் கவிசேஷ ஊழியத்தில் இந்த முறைமையைக் கடைபிடிப்பதினால் கொரிந்தியருடைய விசுவாசம் தேவனுடைய பலத்தில் நின்றது. மனுஷருடைய ஞானத்தில் நிற்கவில்லை. (1கொரி 2:4-6)

2 அதிகாரம்

8. கிறிஸ்தவ வெளிப்பாடு தெய்வீக ஞானமாயிருக்கிறது -
யாக் 3:13-18

1கொரி 2:6 அப்படியிருந்தும் தேறினவர்களுக்குள்ளே ஞானத்தைப் பேசுகிறோம்; இப்பிரபஞ்சத்தின் ஞானத்தையல்ல, அழிந்து போகிறவர்களாகிய இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களுடைய ஞானத்தையுமல்ல.

1கொரி 2:7 உலகத் தோற்றத்திற்கு முன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும் மறைக்கப் பட்டதுமாயிருந்த இரகசியமான தேவஞானத்தையே பேசுகிறோம்.

1கொரி 2:8 அதை இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை; அறிந்தார்களானால் மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே.

தேறினவர்கள் (perfect) - τέλειος - teleios - 5046

பெரணட - பூரண, பரிபூரணமான நிறைவான, தேறின, உத்தமமான பிலி 3:15

"உலகத் தோற்றத்திற்கு முன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும் மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவஞானம்" இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சுவிசேஷமே தேவனுடைய ஞானமாகும். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இரட்சிப்பின் சுவிசேஷம் பூரணமாக வெளிப்படுத்தப்படாமல், மறைக்கப் பட்டிருந்தது. புதிய ஏற்பாட்டுக் காலத்திலோ இரட்சிப்பின் சுவிசேஷம் இயேசு கிறிஸ்துவின் மூலமாக பூரணமாக வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. இந்த உலகத்தை ஆளுகை செய்த ராஜாக்களுக்குக்கூட இந்த இரகசியம் வெளிப்படுத்தப்படவில்லை. அவர்களுக்கு இந்தச் சத்தியம் தெரிந்திருக்குமானால் அவர்கள் இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்திருக்கமாட்டார்கள். "உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கதரிசனஞ்சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனை பண்ணினார்கள். தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள். தங்கள்நிமித்தமல்ல, நமதுநிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டது. பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக்கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது; இவைகளை உற்றுப்பார்க்க தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்" (1பேதுரு 1:10-12). அப்போஸ்தலருடைய பிரசங்கத்தின் மூலமாகவும், புதிய ஏற்பாட்டு வசனங்களில் வெளிப்படுத்தப்பட்டிருப்பதன் மூலமாகவும், இந்த இரகசியம் இப்போது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது (ரோமர் 3:1-5; ரோமர் 11:25; ரோமர் 16:25-26; ரோமர் 2:9-16; கலா 1:12, 16; எபே 3:3-8; எபி 8:6; 2பேதுரு 3:16)

ஏற்படுத்து (ordained) - προορίζω - proorizoo - 4309

வினைச்சொல் முன்குறித்திரு, ஏற்படுத்து (predetermine) (ரோமர் 8:29) தம்மை விசுவாசிக்கிறவர்கள் அனைவருக்கும் நன்மை உண்டாவதற்கு ஏதுவாகத் தேவன் தமது திட்டத்தை வெளிப்படுத்த முன்குறித்திருக்கிறார்.

9. ஆவிக்குரிய காரியங்கள் ஆவியினாலே வெளிப்படுத்தப் பட்டு உபதேசிக்கப் பட்டவை - (யோவான் 2:27)

1கொரி 2:9 எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் [redacted] கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை.

2 அதிகாரம்

1கொரி 2:10 நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும் தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார்.

1கொரி 2:11 மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான்.

1கொரி 2:12 நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம்.

1கொரி 2:13 அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம்.

1கொரி 2:14 ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால் அவைகளை அறியவுமாட்டான்.

1கொரி 2:15 ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்; ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான்.

1கொரி 2:16 கர்த்தருக்குப் போதிக்கத்தக்கதாக அவருடைய சிந்தையை அறிந்தவன் யார்? எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது.

1கொரிந்தியர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 4

"தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை." (1கொரி 2:9; ஏசா 64:4)

1கொரி 2:9-14 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற காரியங்கள்

1. தேவன் ஆயத்தம் பண்ணினவைகள் (The things prepared by God) (1கொரி 2:9)
2. தேவனுடைய ஆழங்கள் (The deep things of God) (1கொரி 2:10)
3. மனுஷருக்குரியவைகள் (The things of man) (1கொரி 2:11)
4. தேவனுக்குரியவைகள் (The things of God) (1கொரி 2:11)
5. தேவனால் இலவசமாக அருளப்பட்டவைகள் (Things freely given by God) (1கொரி 2:12)
6. ஆவிக்குரியவைகள் (Spiritual things) (1கொரி 2:13)
7. தேவனுடைய ஆவிக்குரியவைகள் (The things of the Spirit of God) (1கொரி 2:14)

"மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்?" மனுஷனுக்குரியவைகள் என்பது மனுஷனுடைய அறிவு, சிந்தை, சித்தம் ஆகியவற்றைக் குறிப்பிடும். இவற்றை மட்டுமே மனுஷ ஆவியினால் அறிய முடியும். தேவனுக்குரியவைகளை அறிய வேண்டுமென்றால் பரிசுத்த ஆவியானவரால் மட்டுமே முடியும்.

I கொரிந்தியர் – தொகுப்புரை

2 அதிகாரம்

மூன்று ஆவிகள்

1 மனுஷனிலுள்ள ஆவி (The spirit of man) (1கொரி 2:11)

2 தேவனுடைய ஆவி (The Spirit of God) (1கொரி 2:11)

3 உலகத்தின் ஆவி (The spirit of the world) (1கொரி 2:12)

இரண்டுவிதமான ஞான வார்த்தைகள்

1 மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகள் (Words of man's wisdom)

2 பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகள் (Words of Holy Spirit wisdom)

சம்பந்தப்படுத்து (comparing) - συγκρίνω - synkrinoo - 4793

வினைச்சொல் - சம்பந்தப்படுத்து ஒப்பிடு (to compound; put together; to compare) (1கொரி 2:13, 2கொரி 10:12) செப்துவஜிந்த் பதிப்பில் சொப்பனங்களுக்கு அர்த்தம் சொல்வதற்கு இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (ஆதி 40:8, 16, 22; ஆதி 41:12-15)

இரண்டு விதமான மனுஷன்

1 ஜென்ம சுபாவமான மனுஷன் (The natural man)

2 ஆவிக்குரியவன் (The spiritual man)

ஜென்ம சுபாவமான மனுஷன் (natural man) - ψυχικός - psychikos - 5591

பெயரடை - ஜென்ம சுபாவமான, ஜென்ம (soulish) (1கொரி 2:14 1கொரி 15:44-46; யாக் 3:15, யூதா 1:19) - இவன் தன்னுடைய மாம்ச இச்சைகளால் ஆளுகை செய்யப்பட்டிருக்கிறான் மாம்சத்தின் பிரகாரமாக ஜீவிக்கிறான் (கலா 5:19-21; ரோமர் 1:29-32 1கொரி 6:9-11; கொலோ 3:5-10) ஆவிக்குரிய காரியங்கள் இவனுக்கு பைத்தியமாக இருக்கும். இவன் ஆவிக்குரிய ரீதியாக மரித்தவனாக இருக்கிறபடியினால் ஆவிக்குரிய காரியங்களின் மகத்துவங்களைக் இவனால் காணமுடியாது (எபே 2:1-9

ஆவிக்குரியவன் (spiritual) - πνευματικός - pneumatikoos - 4152

வினையடை ஆவிக்கேற்ப, ஞானார்த்தமாய் (spiritual) (1கொரி 2:15; 1கொரி 3:1 1கொரி 9:11; 1கொரி 14:37, 1கொரி 15:44-46, கலா 6:1 - பரிசுத்த ஆவியானவரின் ஆளுகையின்கீழ் ஜீவிக்கிறவன் ஆவிக்குரிய காரியங்களில் சிந்தையுள்ளவன் (ரோமர் 8:1-13, கலா 5:16-26). கிறிஸ்துவின் சிந்தை இவனிடம் இருக்கும். ஆவிக்குரிய காரியங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பான் (1கொரி 2:15-16) தன்னுடைய பாவங்களிலிருந்தும் மீறுதல்களிலிருந்தும் ஏற்பட்ட மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்து புதிய சிருஷ்டியாய் இருக்கிறவன் (2கொரி 5:17-18; எபே 2:1-9 எபே 4:22-24) தன்னுடைய மாம்ச இச்சைகளை இவன் சிலுவையில் அறைந்திருக்கிறான் (ரோமர் 6:12-13 கலா 2:20 கலா 5:24) அவற்றைத் தன்னை விட்டுக் கழற்றிப் போட்டான் (எபே 2:22-24; கொலோ 3:5-10)

I கொரிந்தியர் – தொகுப்புரை

2 அதிகாரம்

"ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்" - ஆவிக்குரியவன் எல்லாக் காரியங்களையும் ஆராய்ந்து பாவமான மனுஷருடைய நற்கிரியைகள் துர்க்கிரியைகள் ஆகியவற்றை நிதானித்து, பார்த்து தேவனுக்குரிய பிரியமான நற்செயல்களை மட்டுமே இவன் செய்வான். ஆகையினால் இவனிடத்தில் யாரும் குற்றம் கண்டுபிடிக்க முடியாது.

"கர்த்தருக்குப் போதிக்கத்தக்கதாக அவருடைய சிந்தையை அறிந்தவன் யார்?" - ஏசா 40:14 ஆகிய வசனம் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"கிறிஸ்துவின் சிந்தை" (the mind of Christ) கிறிஸ்துவின் ஆவியை உடையவர்கள் கிறிஸ்துவைப் போன்றே சிந்தித்து அவரைப் போன்றே கிரியை நடப்பிப்பார்கள். விசுவாசிகளிடத்தில் கிறிஸ்துவின் சிந்தை இருக்க வேண்டியது அவசியம்.

3 அதிகாரம்

10. கொரிந்திய விசுவாசிகளின் மாம்சத்திற்குரிய நிலைமை - (3:1-4)

1கொரி 3:1 மேலும், சகோதரரே, நான் உங்களை ஆவிக்குரியவர்களென்று எண்ணி உங்களுடனே பேசக் கூடாமல், மாம்சத்துக்குரியவர்களென்றும், கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்றும் எண்ணிப் பேச வேண்டியதாயிற்று.

1கொரி 3:2 நீங்கள் பெலனில்லாதவர்களானதால், உங்களுக்குப் போஜனங்கொடாமல், பாலைக் குடிக்கக் கொடுத்தேன்; இன்னமும் நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருக்கிறபடியால், இப்பொழுதும் உங்களுக்குப் பெலனில்லை.

1கொரி 3:3 பொறாமையும் வாக்குவாதமும் பேதகங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால் நீங்கள் மாம்சத்திற்குரியவர்களாயிருந்து மனுஷமார்க்கமாய் நடக்கிறீர்களல்லவா?

1கொரி 3:4 ஒருவன் நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், வேறொருவன் நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால் நீங்கள் மாம்சத்திற்குரியவர்களல்லவா?

"மாம்சத்துக்குரியவர்" (carnal) (ரோமர் 7:14) மாம்சத்துக்குரியவன் ஆவிக்குரியவனைப் போல ஜீவிப்பதில்லை. கிறிஸ்தவ விசுவாசத்தில் அவன் குழந்தையைப் போல இருக்கிறான். பொறாமை, வாக்குவாதம், பேதகம் ஆகியவை அவனிடத்தில் இருக்கிறது. (1கொரி 3:3-4) ஒருவனிடத்தில் இயல்பான பாவமில்லாத மாம்ச சுபாவம் இருப்பது தவறல்ல. ஆனால் அது பொறாமையாகவோ வாக்குவாதமாகவோ பேதகமாகவோ வளர்ந்து விடக்கூடாது. மாம்சத்தின் இந்தக் காரியங்கள் சபையில் கிரியை செய்யும்போது அங்கு பிரிவினை உண்டாகும். உண்பது உறங்குவது போன்ற மாம்சத்தின் சாதாரண கிரியைகள் பாவமாகாது. ஆனால் தேவனுடைய பிரமாணத்திற்கு எதிராக மாம்சத்தின் கிரியைகள் எதிர்த்து நிற்கும்போது அவை பாவமாகிறது. (1யோவான் 3:4)

"மாம்சத்துக்குரியவர்" (carnal) (ரோமர் 7:14) மாம்சத்துக்குரியவன் ஆவிக்குரியவனைப் போல ஜீவிப்பதில்லை. கிறிஸ்தவ விசுவாசத்தில் அவன் குழந்தையைப் போல இருக்கிறான். பொறாமை, வாக்குவாதம், பேதகம் ஆகியவை அவனிடத்தில் இருக்கிறது. (1கொரி 3:3-4) ஒருவனிடத்தில் இயல்பான பாவமில்லாத மாம்ச சுபாவம் இருப்பது தவறல்ல. ஆனால் அது பொறாமையாகவோ வாக்குவாதமாகவோ பேதகமாகவோ வளர்ந்து விடக்கூடாது. மாம்சத்தின் இந்தக் காரியங்கள் சபையில் கிரியை செய்யும்போது அங்கு பிரிவினை உண்டாகும். உண்பது உறங்குவது போன்ற மாம்சத்தின் சாதாரண கிரியைகள் பாவமாகாது. ஆனால் தேவனுடைய பிரமாணத்திற்கு எதிராக மாம்சத்தின் கிரியைகள் எதிர்த்து நிற்கும்போது அவை பாவமாகிறது. (1யோவான் 3:4)

மாம்சம் (carnal) - σάρκινος - sarkinos - 4560

பொருள் - சதையான

"கிறிஸ்துவுக்குள் குழந்தை" (babes in Christ) - கிறிஸ்தவ ஜீவியத்தில் துவக்க நிலையில் இருக்கிறவர்களைக் குறிப்பிடும் வார்த்தை. இவர்கள் ஆவிக்குரிய ஜீவியத்தை விட மாம்சத்திலேயே அதிகமாக ஜீவிக்கிறார்கள்.

"பால்" - கிறிஸ்தவ மார்க்கத்தின் ஆரம்ப உபதேசங்களைப் பவுல் இங்கு பால் என்று குறிப்பிடுகிறார். இவை விசுவாசத்தைப் பற்றிய சாதாரண சத்தியங்களாகும். (எபி 5:11-14; எபி 6:1)

"போஜனம்" (meat) - கிறிஸ்தவ ஜீவியத்தில் வளர்ச்சி பெற்றிருக்கிறவர்களுக்கு உபதேசிக்கப் படும் ஆழமான சத்தியங்கள். (எபி 5:11-14, எபி 6:1)

பாவத்தின் ஆதாரங்கள்

1. சிந்தைகள் - பொறாமை (envying)
2. வார்த்தைகள் - வாக்குவாதம் (strife)
3. செயல்கள் - பேதகங்கள் (divisions)

3 அதிகாரம்

பொறாமையினால் வாக்குவாதம் உண்டாகிறது. வாக்குவாதத்தினால் பேதகங்கள் உண்டாகின்றன

"நான் பவுலைச் சேர்ந்தவன்" - 1கொரி 1:12

11. உண்மையான ஊழியக்காரர்களுக்கு தேவன் மட்டுமே ஆசீர்வாதத்தின் ஆதாரமாயிருக்கிறார்

1கொரி 3:5 பவுல் யார்? அப்பொல்லோ யார்? கர்த்தர் அவனவனுக்கு அருள் அளித்தபடியே நீங்கள் விசுவாசிக்கிறதற்கு ஏதுவாயிருந்த ஊழியக்காரர்தானே

1கொரி 3:6 நான் நட்டேன் அப்பொல்லோ நீர்பாய்ச்சினான் தேவனே விளையச் செய்தார்

1கொரி 3:7 அப்படியிருக்க நடுகிறவனாலும் ஒன்றுமில்லை நீர்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை விளையச்செய்கிற தேவனாலே எல்லாமாகும்

"விளையச்செய்கிற தேவன்" - தேவன் தம்முடைய ஆசீர்வாதங்களினால் நம்மை ஆசீர்வதிக்க வேண்டும். தேவனுடைய ஆசீர்வாதம் இல்லையென்றால் நம்முடைய திறமைகளினாலும், பிரயாசங்களினாலும் பிரயோஜனம் ஒன்றுமில்லை. இந்த அதிகாரத்தில் மூன்று வசனங்களில் தேவன் விளையச் செய்கிறவராகக் கூறப்பட்டிருக்கிறார் (1கொரி 3:5,6,7)

12. ஊழியக்காரர்கள் தேவனுக்கு உடன் வேலையாட்களாயிருக்கிறார்கள் (1கொரி 12:28-30; 2கொரி 3; 6:1-10; எபே 4:7-13)

1கொரி 3:8 மேலும் நடுகிறவனும் நீர்பாய்ச்சுகிறவனும் ஒன்றாயிருக்கிறார்கள்; அவனவன் தன்தன் வேலைக்குத் தக்கதாய்க் கூலியைப் பெறுவான்

1கொரி 3:9 நாங்கள் தேவனுக்கு உடன் வேலையாட்களாயிருக்கிறோம் நீங்கள் தேவனுடைய பண்ணையும் தேவனுடைய மாளிகையுமாயிருக்கிறீர்கள்

1கொரி 3:10 எனக்கு அளிக்கப்பட்ட தேவகிருபையின்படியே புத்தியுள்ள சிற்பாசாரியைப்போல அஸ்திபாரம் போட்டேன் வேறொருவன் அதின் மேல் கட்டுகிறான் அவனவன் தான் அதின்மேல் இன்னவிதமாய்க் கட்டுகிறானென்று பார்க்கக்கடவன்

"ஒன்றாயிருக்கிறார்கள்" - பவுலும் அப்பொல்லோவும் உபதேசத்திலும் பிரயாசத்திலும் ஆவியிலும் ஊழியத்திலும் ஒன்றாயிருக்கிறார்கள் இவ்விருவருமே தேவனுடைய ஊழியத்திற்காகப் பிரதிஷ்டை பண்ணப்பட்டவர்கள் கொரிந்து சபையில் பிரிவினையை உண்டுபண்ணும் எண்ணமோ பேச்சோ செய்கையோ இவர்களிடத்தில் இல்லை

"தன்தன் வேலை" - ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய வேலைக்குத்தக்கதாக வெகுமதி அளிக்கப்படும். (1கொரி 3:8-15 மத் 16:27; ரோமர் 14:10-11, 2கொரி 5:10) வேலையில் வெற்றி பெற்றதற்காக வெகுமதி கொடுக்கப்படவில்லை. வேலையில் உண்மையோடும் நம்பிக்கையோடும் ஈடுபட்டதற்காக வெகுமதி கொடுக்கப்படுகிறது. (மத் 6:2,5,16)

"நாங்கள் தேவனுக்கு உடன் வேலையாட்களாயிருக்கிறோம்" தேவனுடைய ஊழியக்காரர்கள் தேவனுக்கு உடன் வேலையாட்களாக இருக்கிறார்கள் விசுவாசிகள் தேவனுடைய பண்ணையாகவும் அதாவது அவருடைய தோட்டமாகவும், அவருடைய மாளிகையாகவும் இருக்கிறார்கள் (எபே 2:19-22)

சிற்பாசாரி (masterbuilder) - ἀρχιτέκτων - architektoon - 753

ஆங்கிலச் சொல் - சிற்பாசாரி (architect) - திட்டம் தேவனுடையது. திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு பவுலிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

3 அதிகாரம்

"அவனவன் தான் அதின்மேல் இன்ன விதமாய்க் கட்டுகிறானென்று பார்க்கக்கடவன்" - பவுல் புத்தியுள்ள சிற்பாசாரியைப்போல அஸ்திபாரம் போட்டிருக்கிறார் அதன்மீது ஒவ்வொரு ஊழியக்காரரும் கட்டுகிறார்கள் அவர்களுடைய பிரசங்கமும் பவுலுடைய பிரசங்கமும் ஒன்றாய் இருக்க வேண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருக்கக்கூடாது.

13. ஒரே அஸ்திபாரம் - (மத் 16:18 எபே 2:19-22; 1பேதுரு 2:6-8)

1கொரி 3:11 போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது.

"அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்து" - கிறிஸ்துவே சபையின் அஸ்திபாரமாக இருக்கிறவர் பவுல் அல்ல நாம் அஸ்திபாரமாகிய கிறிஸ்துவின் மேலேயே சபையைக் கட்டி எழுப்ப வேண்டும் (எபே 2:19-22)

14. இரண்டு விதமான கட்டிடங்கள் - இரண்டு விதமான விளைவுகள் - (மத் 7:24-29)

1கொரி 3:12 ஒருவன் அந்த அஸ்திபாரத்தின் மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல், மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளைக் கட்டினால்,

1கொரி 3:13 அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும். அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும்.

1கொரி 3:14 அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான்

1கொரி 3:15 ஒருவன் கட்டினது வெந்துபோனால் அவன் நஷ்டமடைவான் அவனோ இரட்சிக்கப்படுவான் அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினது போலிருக்கும்.

தீர்க்கதரிசன எண் - 2

"ஒருவன் அந்த அஸ்திபாரத்தின் மேல் பொன் வெள்ளி விலையேறப்பெற்ற கல் மரம் புல் வைக்கோல் ஆகிய இவைகளைக் கட்டினால், அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும் நாளானது அதை விளங்கப் பண்ணும்_____ (1கொரி 3:12-15) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை மனுஷனுடைய வேலைப்பாடுகள் சோதிக்கப்படும் அது அக்கினியினால் சோதிக்கப்படும் அவன் எந்தப் பொருட்களை வைத்து அஸ்திபாரத்தின்மேல் கட்டுகிறான் என்பது முக்கியமானது பொன் வெள்ளி விலையேறப்பெற்ற கல் ஆகிய பொருட்களைக் கொண்டு ஒருசிலர் கட்டுகிறார்கள் வேறுசிலரோ மரம் புல் வைக்கோல் ஆகிய பொருட்களைக் கொண்டு கட்டுகிறார்கள் ஒவ்வொருவனுடைய வேலைப்பாடும் எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும். அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால் அவன் கூலியைப் பெறுவான் ஒருவன் கட்டினது வெந்துபோனால் அவன் நஷ்டமடைவான் அவனோ இரட்சிக்கப்படுவான் அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினது போலிருக்கும். (1கொரி 3:12-15)

விசுவாசிகளுடைய வேலைப்பாடுகளின் நியாயத்தீர்ப்பு

1. நியாயந்தீர்க்கப்படுகிறவர்கள் - விசுவாசிகள் (கலா 6:8 எபே 6:8, கொலோ 3:24; ரோமர் 14, 2கொரி 5:10)
2. காலம் - சபை எடுத்துக் கொள்ளப்படுவதற்கும், இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கும் இடைப்பட்ட காலம். (லூக்கா 14:14)
3. இடம் - பரலோகத்தில் (1கொரி 9:24-27 ரோமர் 14:10, 2கொரி 5:10)

I கொரிந்தியர் – தொகுப்புரை

3 அதிகாரம்

4 ஆதாரம் - நற்செயல்களும் துர்ச்செயல்களும் (1கொரி 3:11-15, 2கொரி 5:10; ரோமர்14; கொலோ 3 மத் 16:27; ரோமர் 2:6; 2தீமோ 4:14)

5 முடிவு - வெகுமதி கொடுக்கப்படும் அல்லது கொடுக்கப்படாது. ஒருவர் தன்னுடைய பாவங்களை இயேசு கிறிஸ்துவிடம் அறிக்கையிட்டு, பாவமன்னிப்பை பெற்றிருந்தால் அந்த ஆத்துமா அழிந்துபோகாது. (1கொரி 3:11-15) ஒரு வேலைக்காரருக்குக் கொடுக்கப்படும் வெகுமதியைப் போன்று அவர் செய்த நற்செயலுக்குத் தக்கதாக விசுவாசிக்கு வெகுமதி கொடுக்கப்படும். அவர் நற்செயல் ஒன்றும் செய்யவில்லை யென்றால் அந்த விசுவாசிக்கு ஒரு வெகுமதியும் கொடுக்கப்படமாட்டாது. (ரோமர் 14, 2கொரி 5:10,11)

[redacted] நியாயந்தீர்க்கப்படும் காரியங்கள்

1 உபதேசங்கள் (ரோமர் 2:14-16, ரோமர் 14

2 மற்றவர்களோடு நடந்து கொள்ளும் விதம் (மத் 18 ரோமர் 14)

3 மாம்ச இச்சைகள் (கொலோ 3, ரோமர் 1-2, ரோமர் 8:1-13 ரோமர் 14:1-23

4 வார்த்தைகள் (மத் 12:32-37, ரோமர் 14

5 மற்றவர்களைப் பாதிக்கும் காரியங்கள் - சண்டைகள், சச்சரவுகள், வீணான வார்த்தைகள், மதியீனங்கள் கண்ணியமில்லாத செயல்கள் வாக்குத்தத்தங்களை முறித்துப் போடுதல், தவறான நடத்தைகள் முதலியவை ரோமர் 1:29-32 ரோமர் 6:9-11, ▬ 5:19-21 கொலோ 3, எபே 4:1-32 எபே 5:1-33, ரோமர் 12:1-21; ரோமர் 14:1-23

6 தங்களைப் பாதிக்கும் காரியங்கள் - வாய்ப்புகளைப் பயன்படுத்தாமல் இருத்தல் தாலந்துகளைப் பிரயோஜனப் படுத்தாமல் இருப்பது, தாறுமாறான ஜீவியம், ஆவிக்குரிய ஸ்திரத்தன்மை இல்லாமை முதலியவை. (ரோமர் 2:14-16 எபி 2:1-4; கலா 5:1-26; கலா 6:1-10 கொலோ 3)

7 தேவனுக்கு எதிரான காரியங்கள் - கீழ்ப்படியாமை வேதவசனத்தின் வெளிச்சத்தில் நடக்க மறுப்பது பரிசுத்த ஆவியானவருக்கு ஒப்புக்கொடுக்க மறுப்பது. பரிசுத்த ஆவியானவரோடு கீழ்ப்படியாமல் இருப்பது முதலியவை (1கொரி 2 ரோமர் 12; எபே 4:1-32; எபே 5:1-33

"அவனோ இரட்சிக்கப்படுவான் அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினது போலிருக்கும்" - ஒருவன் கட்டினது எரிந்துபோனால் அவனுக்கு நஷ்டம் உண்டாகும். (1கொரி 3:15) அவை எரியவில்லையென்றால் அவனுக்கு நஷ்டம் ஏற்படாது. (1கொரி 3:14 அவன் கிறிஸ்துவிற்குள் இருக்கிறபடியினால் அவனுடைய கிரியைகளுக்கு என்ன நேர்ந்தாலும் அவன் இரட்சிக்கப்பட்டவனாகவே இருப்பான் அவனுடைய இரட்சிப்பிற்கு ஒன்றும் பாதிப்பில்லை. (1கொரி 3:13-15

15. தேவனுடைய ஆலயத்தைப் போல சரீரம் பரிசுத்தமாயிருக்க வேண்டும் - (6:13 20 ரோமர் 8:1 13 12:1 2; 2கொரி 7:1 கலா 5:24

1கொரி 3:16 நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும் தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?

1கொரி 3:17 ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார் தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது நீங்களே அந்த ஆலயம்.

I கொரிந்தியர் – தொகுப்புரை

3 அதிகாரம்

"அறியாதிருக்கிறீர்களா" - இந்த வாக்கியம் மென்மையாகக் கடிந்து கொள்ளும்போது பயன்படுத்தப்படுகிறது. புதிய ஏற்பாட்டில் 14 இடங்களில் இந்த வாக்கியத்தை நாம் வாசிக்கிறோம். 1கொரி 3:16 1கொரி 5:6. 1கொரி 6:3,9,15,16,19 1கொரி 9:24 மாற்கு 4:13 ரோமர் 6:3,16; ரோமர் 7:1 யாக் 4:4; 2சாமு 3:38 2நாளா 32:13 எசே 17:12

"நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள்" - பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுக்குள் வாசமாக இருப்பதினால அவர்கள தேவனுடைய ஆலயமாய இருக்கிறார்கள (லூக்கா 22:3)

கெடு (defile) - φθείρω - **phtheiroo** - 5351

வினைச்சொல - கெடு (to corrupt, spoil, ruin, waste, destroy) - "to corrupt" (1கொரி 15:33 2கொரி 7:2; 2கொரி 11:3; வெளி 19:2, யூதா 1:10; எபே 4:22) 1கொரி 3:17 ஆவது வசனம் சரீரத்தைக் கெடுக்கக்கூடிய பாவத்திற்கு எதிரான எச்சரிப்பாகும் வேசித்தனம, விபாசாரம குடிப்பழக்கம், போதை வஸதுககள ஆகியவை மனுஷனுடைய சரீரத்தைக கெடுக்கக் கூடியவை (2கொரி 7:1)

தீர்க்கதரிசன எண் - 3

"ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக கெடுத்தால், அவனை தேவன கெடுப்பார்" (1கொரி 3:17) இந்தத் தீர்க்கதரிசனம் நியாயத்தீர்ப்பு நாளில் நிறைவேறும்

"தேவனுடைய ஆலயம்" (temple of God) - இந்த வாக்கியம் மனுஷனுடைய சரீரத்தைக் குறிக்கும் (1கொரி 6:19-20; ரோமர் 12:1; 2கொரி 7:1)

10. மாம்சத்தில் நம்பிக்கை வைப்பதற்கு எதிரான எச்சரிப்பு - (பிலி 3:3-6 2கொரி 11:21-33)

1கொரி 3:18 ஒருவனும் தன்னைத் தானே வஞ்சியாதிருப்பானாக, இவ்வுலகத்திலே உங்களில் ஒருவன் தன்னை ஞானியென்று எண்ணினால் அவன் ஞானியாகும்படிக்கு பைத்தியக்காரனாகக் கடவன்

1கொரி 3:19 இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாகப பைத்தியமாயிருக்கிறது. அப்படியே. ஞானிகளை அவர்களுடைய தந்திரத்திலே பிடிக்கிறாரென்றும்

1கொரி 3:20 ஞானிகளுடைய சிந்தனைகள் வீணாயிருக்கிறதென்று கர்த்தர் அறிந்திருக்கிறாரென்றும் எழுதியிருக்கிறது

1கொரி 3:21 இப்படியிருக்க, ஒருவனும் மனுஷரைக் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பானாக எலலாம் உங்களுடையதே.

1கொரி 3:22 பவுலாகிலும். அப்பொல்லோவாகிலும் கேபாவாகிலும் உலகமாகிலும ஜீவனாகிலும் மரணமாகிலும் நிகழ காரியங்களாகிலும் வருங் காரியங்களாகிலும எலலாம் உஙகளுடையது.

1கொரி 3:23 நீஙகள் கிறிஸதுவினுடையவாகள கிறிஸ்து தேவனுடையவா

"உங்களில ஒருவன தன்னை ஞானியென்று எண்ணினால அவன ஞானியாகும்படிக்கு பைத்தியக்காரனாகக்கடவன" திருச்சபையில ஒருசிலர் தங்களை ஞானிகளைப போல கருதினார்கள் தஙகளுக்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டுமென்று விரும்பினார்கள் இப்படிப்பட்டவர்களை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. (1கொரி 1:34

I கொரிந்தியர் – தொகுப்புரை

3 அதிகாரம்

"ஞானிகளை அவர்களுடைய தந்திரத்திலே பிடிக்கிறார்" - யோபு 5:13 ஆவது வசனம் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. உலக ஞானம் ஒரு வியாபாரப் பொருளைப் போன்றது. தங்களுக்கு ஆதாயம் உண்டாக ஒருசிலர் உலக ஞானத்தைப் பயன்படுத்துகிறார்கள்

"ஞானிகளுடைய சிந்தனைகள் வீணாயிருக்கிறது" - சங் 94:11 ஆவது வசனம் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. உலக ஞானமுடையவர்கள் தங்களுடைய உலக ஆதாயத்திற்காக ஏதாவது திட்டங்களைத் தீட்டி செயல்படுத்திக் கொண்டே இருப்பார்கள் இவை வீணானவை

"ஒருவனும் மனுஷரைக் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பானாக" - கிறிஸ்துவின் சரீரத்தை யாரும் பிரிக்கக்கூடாது. விசுவாசிகள் ஏதாவது ஒரு பிரிவினரோடு சேர்ந்து சபை பிரிவதற்குக் காரணமாக இருக்கக்கூடாது (ரோமர் 16:17)

"எல்லாம் உங்களுடையது" - உலகக் காரியங்களாக இருந்தாலும் ஜீவனானாலும் மரணமானாலும் இம்மைக்குரிய காரியங்களானாலும் மறுமைக்குரிய காரியங்களானாலும் இயேசு கிறிஸ்துவின் தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது (ரோமர் 8:28)

4 அதிகாரம்

17. ஊழியக்காரரின் நியாயத்தீர்ப்பு - மத் 7:1-5)

1கொரி 4:1 இப்படியாக, எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக் காரரென்றும், தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக் காரரென்றும் எண்ணிக்கொள்ளக் கடவன்

1கொரி 4:2 மேலும் உக்கிராணக்காரன் உண்மை யுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம்.

1கொரி 4:3 ஆயினும் நான் உங்களாலேயாவது மனுஷருடைய நியாயநாளின் விசாரணை யினாலேயாவது தீர்ப்படைவது பெறுவது எனக்கு மிகவும் அற்பகாரியமாயிருக்கிறது. நானும் என்னைக் குறித்துத் தீர்ப்புச் சொல்லுகிறதில்லை

1கொரி 4:4 என்னிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் அறியேன் ஆகிலும் அதினாலே நான் நீதிமானாகிறதில்லை; என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே

1கொரி 4:5 ஆனதால், கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்கு முன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச் சொல்லாதிருங்கள் இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப் படுத்துவார் அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும்

"தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரர்" தேவனுடைய சுவிசேஷச் சத்தியத்திற்கு ஊழியக்காரர்கள் (ரோமர் 11:25

தீர்க்கதரிசன எண் - 4

"இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார் அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும்" (1கொரி 4:5) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. எல்லாக் காரியங்களுக்கும் கர்த்தரே நியாயாதிபதியாக இருக்கிறார் அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாக தேவன் எல்லோருக்கும் நியாயம் செய்வார் (1கொரி 4:4-5)

"கர்த்தர் வருமளவும்" - விசுவாசிகள் நியாயந்தீர்க்கப்படும் காலத்தை இந்த வாக்கியம் குறிக்கிறது. கர்த்தர் வருமளவும் என்பது இயேசு கிறிஸ்து சபையை எடுத்துக் கொள்ள வருவதைக் குறிக்கும் அவருடைய இரண்டாம் வருகையை இது குறிக்காது (யோவான் 14:1-3; 1கொரி 15:23,51-58; 1தெச 4:13-16; பிலி 3:20-21; 2தெச 2:7)

தேவன் செய்யப்போகும் காரியங்கள்

1. மறைந்திருக்கிற காரியங்களை வெளிச்சத்திற்குக் கொண்டுவருவார் (1கொரி 3:13)
2. மனுஷருடைய அந்தரங்கங்களை வெளிப்படுத்துவார் (ரோமர் 2:16
3. ஒவ்வொரு மனுஷனுக்கும் பலனளிப்பார் (1கொரி 3:8; 2கொரி 5:10; மத் 16:27; வெளி 22:12)

18. தாழ்மையாக இருக்குமாறு புத்திமதி - (பிலி 2:1-3, எபே 4:1-3, 1பேதுரு 5:5)

1கொரி 4:6 சகோதரரே எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணவேண்டாமென்று நீங்கள் எங்களாலே கற்றுக்கொள்ளவும் ஒருவனும் ஒருவனிமித்தம் மற்றொருவனுக்கு விரோதமாய் இறுமாப்படையாதிருக்கவும், நான் உங்கள் நிமித்தமும் என்னையும் அப்பொல்லோவையும் திருஷ்டாந்தமாக வைத்து இவைகளை எழுதினேன்

4 அதிகாரம்

1கொரி 4:7 அன்றியும் உன்னை விசேஷித்தவனாகும்படி செய்கிறவர் யார்? உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக் கொள்ளாதது யாது? நீ பெற்றுக்கொண்டவனானால் பெற்றுக்கொள்ளாதவன் போல் ஏன் மேன்மைபாராட்டுகிறாய்?

1கொரி 4:8 இப்பொழுது திருப்தியடைந்திருக்கிறீர்களே, இப்பொழுது ஐசுவரியமுள்ளவர்களாயிருக்கிறீர்களே, எங்களையல்லாமல் ஆளுகிறீர்களே; நீங்கள் ஆளுகிறவர்களானால் நலமாயிருக்கும், அப்பொழுது உங்களுடனேகூட நாங்களும் ஆளுவோமே.

"எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணவேண்டாம்" - கொரிந்திய சபையில பிரிவினை இருந்தது. இந்தப் பிரிவினைக்குக் கொரிந்து சபையில ஒருசிலர் காரணமாக இருந்தார்கள். ஆனால் பவுல் யாரையும் குறிப்பிடுத்தவில்லை. பிரிவினைக்கு எதிரான அவருடைய விவாதத்திற்குப் பவுல் தன் பெயரையும், அப்பொல்லோவின் பெயரையும் திருஷ்டாந்தமாக வைத்து எழுதியிருக்கிறார்.

இறுமாப்படைதல் (puffed up) - φυσιόω - physiooo - 5448

வினைச்சொல் - இறுமாப்படை, இறுமாப்பாயிரு (1கொரி 4:6,18-19; 1கொரி 5:2; 1கொரி 8:1; 1கொரி 13:4)

தீர்க்கதரிசன எண் - 5

"இப்பொழுது திருப்தியடைந்திருக்கிறீர்களே, இப்பொழுது ஐசுவரியமுள்ளவர்களாயிருக்கிறீர்களே, எங்களையல்லாமல் ஆளுகிறீர்களே; நீங்கள் ஆளுகிறவர்களானால் நலமாயிருக்கும். அப்பொழுது உங்களுடனேகூட நாங்களும் ஆளுவோமே" (1கொரி 4:8) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறவில்லை. பவுல் இந்த வசனத்தை வஞ்சகப்புகழ்ச்சியாக irony எழுதியிருக்கிறார். கொரிந்துவிலுள்ள விசுவாசிகள் திருப்தியடைந்திருப்பதாகவும் ஐசுவரியவான்களாக இருப்பதாகவும் ஆளுகை செய்வதாகவும் எழுதுகிறார். தங்களுடைய உதவி அவர்களுக்குத் தேவையில்லாமலேயே அவர்கள் ஆளுகை செய்வதாகக் கூறுகிறார். இந்த வசனத்தின் கடைசிப் பகுதியில் பவுல் ஆயிரம் வருஷ அரசாட்சியைக் குறிப்பிடுகிறார். அப்போது இயேசு கிறிஸ்துவோடு எல்லாப் பரிசுத்தவான்களும் இந்தப் பூமியை ஆட்சி புரிவார்கள் (2தீமோ 2:12; வெளி 1:6; வெளி 5:10; வெளி 20:4-6; வெளி 22:4-5; தானி 7:18,27)

10. தாழ்மைக்கும் பாடுகளுக்கும் அப்போஸ்தல எடுத்துக்காட்டு - (2கொரி 11:23)

1கொரி 4:9 எங்களுக்குத் தோன்றுகிறபடி தேவன் அப்போஸ்தலர்களாகிய எங்களை மரணத்துக்குக் குறிக்கப்பட்டவர்கள் போலக் கடைசியானவர்களாயக் காணப்படப்பண்ணினார்; நாங்கள் உலகத்துக்கும் தூதருக்கும் மனுஷருக்கும் வேடிக்கையானோம்.

1கொரி 4:10 நாங்கள் கிறிஸ்துவினிமித்தம் பைத்தியக்காரர், நீங்கள் கிறிஸ்துவில் புத்திசாலிகள்; நாங்கள் பலவீனர், நீங்கள் பலவான்கள்; நீங்கள் கனவான்கள், நாங்கள் கனவீனர்.

1கொரி 4:11 இந்நேரம்வரைக்கும் பசியுள்ளவர்களும், தாகமுள்ளவர்களும், நிர்வாணிகளும், குட்டுண்டவர்களும், தங்க இடமில்லாதவர்களுமாயிருக்கிறோம்.

1கொரி 4:12 எங்கள் கைகளினாலே வேலைசெய்து பாடுபடுகிறோம்; வையப்பட்டு, ஆசீர்வதிக்கிறோம்; துன்பப்பட்டு, சகிக்கிறோம்.

1கொரி 4:13 தூஷிக்கப்பட்டு, வேண்டிக் கொள்ளுகிறோம்; இந்நாள்வரைக்கும் உலகத்தின் குப்பையைப்போலவும், எல்லாரும் துடைத்துப்போடுகிற அழுக்கைப் போலவுமானோம்.

4 அதிகாரம்

"தேவன் அப்போஸ்தலர்களாகிய எங்களை மரணத்துக்குக் குறிக்கப்பட்டவர்கள் போலக் கடைசியானவர்களாயுக் காணப்பட பண்ணினார்" - பண்டைய ரோமப்பேரரசில போர்வீரர்கள் சிங்கங்களோடும் பல கொடிய விலங்குகளோடும் சண்டையிட்டு. தங்களுடைய வீரத்தைக் காண்பிப்பார்கள் இதைக் காண்பதற்கு அரங்கசாலையிலே திரளான ஜனங்கள் கூடிவந்திருப்பார்கள் காலையில முதலாவது சண்டைக்காட்சி ஆரம்பமாகும் போர்வீரர்களுக்கு ஆயுத்த ஆடைகளும். பாதுகாப்புக் கவசங்களும் அணிவிக்கப்படும் மாலையிலே அரங்கசாலையில மற்றொரு காட்சி அரங்கேற்றப்படும் இந்தக் காட்சியில் போர்வீரர்களுக்குப் பதிலாக மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளை அரங்கசாலைக்கு இழுத்து வருவார்கள அவர்களுக்குப் பாதுகாப்புக் கவசங்களோ ஆயுதங்களோ கொடுக்கப்பட மாட்டாது. நிர்வாணமாகப் படுவார்கள இவர்களைத்தான பண்டைய ரோமப்பேரரசில "மரணத்திற்குக் குறிக்கப்பட்டவாகள" என்று அழைப்பாாகள ஏனெனில இவாகளுக்கு நிச்சயம் மரணம் உண்டாகும். கொடிய விலங்குகள இவாகளைத் தாககி பீறிடும இவாகளுக்கும. தங்களைப் பாதுகாததுக கொள்ள ஒன்றுமில்லை காலையில முதலாவது நடைபெறுவது போாவீராகளுடைய வீரசெயல மாலையில கடைசியாக நடைபெறுவது மரணத்திற்கு குறிக்கப பட்டவாகளுடைய மரணம். ஆகையினாலதான பவுல இந்த வாக்கியத்தில "கடைசியானவாகள" என்று குறிப்பிடுகிறார் அப்போஸ்தலாகளுடைய பாடுகளை அரஙகசாலையிலே மரணத்திற்குக் குறிக்கப்பட்டவாகளுடைய பாடுகளோடு ஒப்பிட்டுக் கூறுகிறாா பழைய ஏற்பாட்டுக் காலத்தில தீாக்கதரிசிகள பாடுகளை அனுபவித்தாாகள புதிய ஏற்பாட்டுக் காலத்தில அப்போஸ்தலாகள பாடுகளை அனுபவிக்கிறாாகள "கடைசியானவாகள" என்பது தீாக்கதரிசிகளுக்குப் பின்பு, பாடுகளை அனுபவிக்கும் அப்போஸ்தலாகளையும் குறிக்கலாம்.

வேடிக்கை (spectacle) - θέατρον - theatron - 2302

பால் வேறுபாடற்ற பெயர்சொல்- அரங்கசாலை, வேடிக்கை (theatre) (அப் 19:29,31) - அப்போஸ்தலர்கள் உலகத்துக்கும் தூதருக்கும் மனுஷருக்கும வேடிக்கையாக இருக்கிறார்கள் கிறிஸ்துவின் பாடுகளை மனுஷருக்கும், தூதருக்கும் வெளிப்படுத்திக் காணபிக்கிறார்கள்

பைத்தியக்காரர் (fools) - μωρός - mooros - 3474

பெயரடை - மூடனான, புத்தியில்லாத. மதிகேடான பைத்தியமான புத்தியீனமான (1கொரி 1:25,27, - அரஙகசாலையிலே கூடியிருக்கும் ஜனஙகளுக்கு மரணத்திற்குக் குறிக்கப்பட்டவர்களுடைய பாடுகளும் வேதனைகளும வேடிக்கையாக இருக்கும். அவர்களுடைய பார்வைக்கு பாடுகளை அனுபவிக்கிறவர்கள பைத்தியக்காரர்கள போலக் காணப்படுவார்கள

கனவான் (honourable) - ἔνδοξος - endoxos - 1741

பெயரடை - மகிமையானது அலஙகார, கனவான (glorious) (லூக்கா 13:17; எபே 5:27 , (gorgeously) (லூக்கா 7:25 , (honourable) (1கொரி 4:10

"நாஙகள கனவீனர்" - 1கொரி 4:10 ஆவது வசனத்தில் பவுல் வஞ்சகப் புகழ்ச்சியாக எழுதியிருக்கிறாா அப்போஸ்தலர்கள் பைத்தியக்காரரும் அல்ல, பலவீனரும் அல்ல, கனவீனரும் அல்ல

நிர்வாணி (naked) - γυμνητεύω - gymneeteuoo 1130

வினைச்சொல் - நிர்வாணமாயிரு (scantily clothed)

குட்டுண்டவர் (buffeted) - κολαφίζω kolaphizoo 2852

4 அதிகாரம்

வினைச்சொல் - குட்டு அடி 1கொரி 4:11; மத் 26:67, மாற்கு 14:65; 2கொரி 12:7, 1பேதுரு 2:20.

தங்க இடமில்லாதவர்கள் (no certain dwellingplace) ἀστατέω astateoo - 790

வினைச்சொல் - தங்க இடமில்லாதவர் களாயிரு நாடோடிகளாகச் சுற்றித் திரிபவர்கள (to be a wanderer) - எங்கு தங்குவோம் என்று தெரியாமல ஊர்ஊராகச் சுற்றித் திரிந்து கிறிஸ்துவின் சுவிசேஷச் செய்தியை பிரசங்கம் பண்ணுகிறவர்கள

"எங்கள் கைகளினால வேலைசெய்து பாடுபடுகிறோம்" - அப 18:3 அப 20:34 1தெச 2:9 2தெச 3:8

"வையப்பட்டு ஆசீர்வதிக்கிறோம் துன்பப்பட்டு சகிக்கிறோம்" - தேவனுடைய கிருபை இருந்தால மட்டுமே ஒரு மனுஷனால இப்படிப்பட்ட பாடுகளைச சகித்துக் கொள்ள முடியும். 1கொரி 4:12 13 மாம்ச சுபாவமுடைய மனுஷன தனக்குப பிரச்சனை வரும்போது எதிர்த்து நிற்பான பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்று துடித்துக் கொண்டிருப்பான ஆவிக்குரியவனோ நீடிய பொறுமையோடு இருந்து, சகலத்தையும் சகித்துக் கொள்வான ரோமா 12:17 21 மத் 5:38 48

தூஷி (defamed) βλασφημέω blaspheemeoo 987

வினைச்சொல் தூஷி இகழ் தேவதூஷணம் சொல்லு (blasphemed)

அழுக்கு (filth) - κάθαρμα katharma 4027

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் ஓடு, ஆடு (sweeping) - மற்றவர்களுடைய நன்மைக்காகவும், பாதுகாப்பிற்காகவும் புறஜாதி தெய்வங்களுக்குப் பலியிடப்படும் ஆடு.

20\. பவுல் சுவிசேஷத்தினாலே அவர்களுடைய தந்தையாக இருக்கிறார் - 1தெச 2 1தீமோ 1:2; 2தீமோ 1:2

1கொரி 4:14 உங்களை வெட்கப படுத்தும்படிக்கு நான் இவைகளை எழுதவில்லை நீங்கள் எனக்குப்பிரியமான பிள்ளைகளென்று உங்களுக்குப் புத்திசொல்கிறேன்

1கொரி 4:15 கிறிஸ்துவுக்குள் பதினாயிரம உபாத்தியாயர்கள் உங்களுக்கு இருந்தாலும் தகப்பன்மார் அநேகர் உங்களுக்கு இல்லையே, கிறிஸ்து இயேசுவுக்குள் சுவிசேஷத்தினால நான் உங்களைப பெற்றேன

1கொரி 4:16 ஆகையால என்னைப பின்பற்றுகிறவர் களாகுங்களென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன

1கொரி 4:17 இதினிமித்தமாக. எனக்குப பிரியமும் கர்த்தருக்குள் உண்மையுமுள்ள என் குமாரனாகிய தீமோத்தேயுவை உங்களிடத்தில அனுப்பினேன்; நான எங்கும் எந்தச் சபையிலும் போதித்து வருகிறபிரகாரம் கிறிஸ்துவுக்குள்ளான என நடக்கைகளை அவன உங்களுக்கு ஞாபகப்படுத்துவான

"உங்களை வெட்கப்படுத்தும்படிக்கு நான இவைகளை எழுதவில்லை" கொரிந்தியரைக் குற்றப்படுத்துவதற்காகப் பவுல இந்த நிருபத்தை எழுதவில்லை. கொரிந்து சபையில பிரிவினை இருந்தது. ஒருசிலர அப்போஸ்தலர்களுடைய வேஷம தரித்து சபைக்குள நுழைந்து விடுவார்கள் அவர்களை அடையாளம் கண்டுபிடித்து, ஏற்றுக கொள்ளாமல புறக்கணிக்க வேண்டும். அதேசமயத்தில உண்மையான அப்போஸ்தலர்களும் சபைக்கு வருவார்கள் அவர்களை ஏற்றுக் கொண்டு அவர்கள் மூலமாகக் கொடுக்கப்படும தேவனுடைய செய்திக்குக் கீழ்ப்படிய வேண்டும். இதற்காகவே பவுல் கொரிந்தியருக்கு இந்த நிருபத்தை எழுதியிருக்கிறார் (1கொரி 4:14-17)

4 அதிகாரம்

"கிறிஸ்து இயேசுவுக்குள் சுவிசேஷத்தினால் நான் உங்களைப் பெற்றேன்" - கொரிந்தியருக்கு பல ஊழியக்காரர்கள் பிரசங்கம் பண்ணியிருக்கலாம் ஆனாலும் பவுல் மூலமாகவே அவர்களுக்கு இரட்சிப்பு வந்தது. ஆகையினால் பவுல் கொரிந்தியரைப் பற்றி நினைக்கும்போது அவர்களைப் பெற்றெடுத்த பிள்ளைகளைப் போன்று பாவிக்கிறார்

பின்பற்றுகிறவர் (followers) - μιμητής - mimeetees - 3402

ஆங்கில பெயர்ச்சொல் - பின்பற்றுகிறவர் (imitators) - பவுல் இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறார் அதுபோல கொரிந்தியரும் தன்னுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்ற வேண்டுமென்று உபதேசம் பண்ணுகிறார் (1கொரி 4:16; 1கொரி 11:1; எபே 5:1; 1தெச 1:6; 2தெச 2:14; எபி 6:12; 1பேதுரு 3:13)

"தீமோத்தேயு" (Timotheus) (அப் 16:1)

"எனக்குப் பிரியமும் கர்த்தருக்குள் உண்மையுமுள்ள என் குமாரன்" - விசுவாசத்தில் தீமோத்தேயு பவுலின் குமாரனாக இருக்கிறான் (அப் 16:1)

21. உண்மையான ஊழியக்காரரின் அழைப்பு கிரியை ஆகியவற்றிற்கு சான்று

(மத் 10:1-8; 16:18; மாற்கு 6:7-13; 16:17-20; லூக் 4:18; 10:1-20; 24:49; அப் 1:8; 2:43; 4:4; 5:12-16; ரோமர் 15:18-29; 1கொரி 12; 2கொரி 3:6-18; 6:1-10; 2தீமோ 2:15; 3:16-17)

1கொரி 4:18 நான் உங்களிடத்திற்கு வருகிறதில்லை என்கிறதாகச் சிலர் இறுமாப்படைந்திருக்கிறார்கள்

1கொரி 4:19 ஆகிலும் கர்த்தருக்குச் சித்தமானால் நான் சீக்கிரமாய் உங்களிடத்திற்கு வந்து, இறுமாப்படைந்திருக்கிறவர்களுடைய பேச்சையல்ல அவர்களுடைய பெலத்தையே அறிந்து கொள்வேன்

1கொரி 4:20 தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல பெலத்திலே உண்டாயிருக்கிறது.

1கொரி 4:21 உங்களுக்கு என்ன வேண்டும்? நான் பிரம்போடு உங்களிடத்தில் வர வேண்டுமோ? அல்லது அன்போடும் சாந்தமுள்ள ஆவியோடும் வரவேண்டுமோ?

"சிலர் இறுமாப்படைந்திருக்கிறார்கள்" - (1கொரி 4:6) பவுல் மறுபடியும் கொரிந்துவிற்கு வரமாட்டார் என்று நினைத்து அவர்களுடைய போதகர்களில் சிலர் இறுமாப்போடு இருந்தார்கள் ஆனால் பவுலோ கர்த்தருக்குச் சித்தமானால் சீக்கிரமாய் அவர்களிடத்திற்கு வந்து இறுமாப்படைந்திருக்கிறவர்களுடைய பேச்சையல்ல அவர்களுடைய பெலத்தையே அறிந்து கொள்ளுவதாகக் கூறுகிறார்

பலம் (power) - δύναμις - dynamis - 1411

பெண்பால் பெயர்ச்சொல் - வல்லமை, பலத்த செய்கைகள், அற்புதங்கள், திறமை, பலம், சத்துவம், சக்தி, கருத்து, உக்கிரம், மிகுதி (inherit power) - டைனமோவைப் போன்று வல்லமையைத் தொடர்ந்து உற்பத்தி செய்யும் ஆற்றல்

"தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல, பெலத்திலே உண்டாயிருக்கிறது" (மத் 4:17; 1கொரி 19:24)

பிரம்பு (rod) - ῥάβδος - rhabdos - 4464

பெண்பால் பெயர்ச்சொல் - தடி, பிரம்பு, செங்கோல், அடித்தகோல், கோல் (rod) (1கொரி 4:21; எபி 9:4; வெளி 2:27; வெளி 11:1; வெளி 12:5; வெளி 19:15) (staff) (மத் 10:10; மாற்கு 6:8; லூக்கா 9:3; எபி 11:21); (sceptre) (எபி 1:8)

I கொரிந்தியர் – தொகுப்புரை

4 அதிகாரம்

சாந்தம் (meekness) - πραΰτης - prautees - 4240

பெண்பால் பெயர்ச்சொல் சாந்தம் (1கொரி 4:21; 2கொரி 10:1; கலா 5:23; கலா 6:1; எபே 4:2; கொலோ 3:12; 1தீமோ 6:11; 2தீமோ 2:25; தீத்து 3:2)

5 அதிகாரம்

III. விபசாரமும் வழக்குகளும் - 5:1-6:20

1. பிரசித்தமாய் சொல்லப்படுகிற பாவம்

1கொரி 5:1 உங்களுக்குள்ளே விபசாரம் உண்டென்று பிரசித்தமாய்ச் சொல்லப் படுகிறதே. ஒருவன் தன் தகப்பனுடைய மனைவியை வைத்துக் கொண்டிருக்கிறானே அது அஞ்ஞானிகளுக்குள்ளும் சொல்லப் படாத விபசாரமாயிருக்கிறதே.

விபச்சாரம் (fornication) - πορνεία - porneia - 4202

பெண்பால் பெயர்ச்சொல் - வேசித்தனம், விபச்சாரம் வேசிமார்க்கம் - எல்லா அசுத்தங்களும் (all kinds of impurity; perversion, immorality)

"தகப்பனுடைய மனைவி" - 2கொரி 7:12 ஆவது வசனத்தின் பிரகாரம் தகப்பனும் உயிரோடு இருப்பதாக வாசிக்கிறோம் இந்த வசனத்தில் அநியாயம் செய்தவன் அநியாயம் செய்யப்பட்டவன் என்னும் குறிப்பு காணப்படுகிறது

2. பாவத்தில் இறுமாப்படைந்திருப்பது பிரிவினைகளுக்குக் காரணம்

1கொரி 5:2 இப்படிப்பட்ட காரியஞ் செய்தவனை நீங்கள் உங்களைவிட்டு நீக்காமலும் துக்கப்படாமலும் இறுமாப்படைந்திருக்கிறீர்கள்

"இறுமாப்படைந்திருக்கிறீர்கள்" - 1கொரி 4:6 கொரிந்துவிலுள்ள விசுவாசிகள் தங்களுடைய வரங்களையும் வல்லமைகளையும் குறித்து இறுமாப்போடு இருக்கிறார்கள் இதனால் அவர்களுக்குள் குழுப்பங்களும், பிரிவினைகளும் ஏற்பட்டிருக்கிறது. தங்களுக்குப் பிடித்தமான போதகர் யார் என்பதில் அதிகமாகக் கவனம் செலுத்தி சபையின் ஒழுங்குமுறையில் கவனம் செலுத்தத் தவறிவிட்டார்கள்

நீக்குதல் (taken away) - αἴρω - airoo - 142

வினைச்சொல் - சபையிலிருந்து விபச்சாரக்காரனை நீக்குதல் (1கொரி 5:2,13)

3. ஸ்தல சபையில் பாவத்திற்கு நியாயம் தீர்க்கும் விதம் - (மத் 18:15)

1கொரி 5:3 நான் சரீரத்தினாலே உங்களுக்குத் தூரமாயிருந்தும், ஆவியினாலே உங்களோடே கூட இருக்கிறவனாய், இப்படிச் செய்தவனைக் குறித்து நான் கூட இருக்கிறது போல

1கொரி 5:4 நீங்களும் என்னுடைய ஆவியும் நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் அதிகாரத்தோடே கூடிவந்திருக்கையில்

1கொரி 5:5 அப்படிப்பட்டவனுடைய ஆவி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே இரட்சிக்கப்படும்படி மாம்சத்தின் அழிவுக்காக நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அவனைச் சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று தீர்ப்புச் செய்கிறேன்

விபச்சாரம் செய்தவனை நியாயந்தீர்க்கும் விதம்

1. இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தோடு நியாயந்தீர்க்க வேண்டும்.

2. சபை அங்கத்தினரைக் கூடிவரச்செய்ய வேண்டும்.

3. பவுலுடைய ஆவியோடு ஒத்துப்போக வேண்டும்.

4. இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும்.

5. அவனைச் சாத்தானுக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும். (1கொரி 5:4,5)

I கொரிந்தியர் – தொகுப்புரை

5 அதிகாரம்

"மாம்சத்தின் அழிவுக்காக, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அவனைச் சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும்" - விபச்சாரக்காரனைச் சாத்தானுக்கு ஒப்புக் கொடுப்பதன் நோக்கம் அவனுடைய மாம்சத்தை அழிப்பதற்காகவே. இதைச் செய்யும்போது சபை அங்கத்தினர்கள் அவனோடு ஐக்கியம் எதுவும் வைத்துக் கொள்ளக்கூடாது. அவனுக்காக ஜெபம் பண்ணுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும். சாத்தான் அவனுடைய சரீரத்தை வருத்துவதற்கு அவனை ஒப்புக் கொடுத்துவிட வேண்டும். தன்னுடைய சரீர வருத்தத்தினால் அவன் மனந்திரும்பி முடிவில் அவனுடைய ஆத்துமா இரட்சிக்கப்படுவதற்கு வாய்ப்பு உண்டாகலாம். விபச்சாரக்காரனுடைய ஆத்துமாவை அழிக்க வேண்டுமென்பது பவுலின் நோக்கமல்ல. அவன் திருந்தவேண்டுமென்பதே பவுலின் விருப்பம். 2கொரி 2:6-7 ஆகிய வசனங்களிலிருந்து பவுலின் விருப்பம் நமக்குத் தெரிய வருகிறது. "அப்படிப்பட்டவனுக்கு அநேகரால் உண்டான இந்த தண்டனையே போதும். ஆதலால் அவன் அதிக துக்கத்தில் அமிழ்ந்துபோகாதபடிக்கு, நீங்கள் அவனுக்கு மன்னித்து ஆறுதல் செய்யவேண்டும்"

அழிவு (destruction) - ὄλεθρος - olethrios - 3639

ஆண்பால் பெயர்ச்சொல் - அழிவு வாதை (ruin, destruction, plague, pest) 1கொரி 5:5, 1தெச 5:3, 2தெச 1:9, 1தீமோ 6:9 - இந்த அழிவு மனுஷனைக் கொல்லவில்லை. மனுஷன் மனந்திருந்துவதற்கு இது உதவி புரியும். 2கொரி 2:7

"அப்படிப்பட்டவனுடைய ஆவி இரட்சிக்கப் படும்படி" - மனுஷனுக்கு வரும் பாடுகள் அவனை இரட்சிப்பதில்லை. அவன் மனந்திருந்தினால் மட்டுமே அவனுடைய ஆத்துமா இரட்சிக்கப்படும். சரீரத்தில் வேதனைகளும், பாடுகளும் உண்டாகும்போது மனுஷன் தேவனைத் தேடுவான். தன்னுடைய பாவங்களுக்காக மனந்திருந்தி, தேவனிடத்தில் தன்னை ஒப்புக் கொடுப்பதற்கு அதிக வாய்ப்பு இருக்கும். மற்றபடி சரீரப் பாடுகள் யாரையும் இரட்சிப்பதில்லை.

"அப்படிப்பட்டவனுடைய ஆவி இரட்சிக்கப் படும்படி" - மனுஷனுக்கு வரும் பாடுகள் அவனை இரட்சிப்பதில்லை. அவன் மனந்திருந்தினால் மட்டுமே அவனுடைய ஆத்துமா இரட்சிக்கப்படும். சரீரத்தில் வேதனைகளும் பாடுகளும் உண்டாகும்போது மனுஷன் தேவனைத் தேடுவான். தன்னுடைய பாவங்களுக்காக மனந்திருந்தி, தேவனிடத்தில் தன்னை ஒப்புக் கொடுப்பதற்கு அதிக வாய்ப்பு இருக்கும். மற்றபடி சரீரப் பாடுகள் யாரையும் இரட்சிப்பதில்லை.

"கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாள்" (day of the Lord Jesus) - 1கொரி 1:8

4. பாவம் என்னும் பழைய புளித்தமாவை புறம்பே கழித்துப் போடுங்கள்

1கொரி 5:6 நீங்கள் மேன்மை பாராட்டுகிறது நல்லதல்ல. கொஞ்சம் புளித்தமா பிசைந்த மா முழுவதையும் புளிப்பாக்குமென்று அறியீர்களா?

1கொரி 5:7 ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப் பட்டிருக்கிறாரே.

1கொரி 5:8 ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக் கடவோம்.

"மேன்மை பாராட்டுகிறது நல்லதல்ல" - தங்கள் வரங்களுக்காகவும், சிலாக்கியங்களுக் காகவும், வல்லமைகளுக்காகவும் விசுவாசிகள் மேன்மை பாராட்டுகிறது நல்லதல்ல. தங்களுக்குப் பிடித்த போதகர்களுக்காகக் கொரிந்து சபை விசுவாசிகள் விவாதம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். தங்களுடைய சபையில் வேசித்தனமும், விபச்சாரமும் மேலும் பல பாவங்களும் நுழைவதைக் கவனியாமல் இருந்து விட்டார்கள்.

I கொரிந்தியர் – தொகுப்புரை

5 அதிகாரம்

நல்லதல்லாத காரியங்கள்

1. அறிக்கையிடப்படாத பாவத்தில் பெருமைபாராட்டுவது (1கொரி 5:6)
2. நீதிமானைத் தண்டிப்பது (நீதி 17:26)
3. ஆத்துமா அறிவில்லாமல் இருப்பது (நீதி 19:2)
4. வழக்கிலே நீதிமானைத் தோற்கடிக்கிறதிற்கு துன்மார்க்கனுக்கு முகதாட்சணியம் பண்ணுவது. (நீதி 18:5)
5. நியாயத்திலே முகதாட்சணியம் பண்ணுவது. (நீதி 24:23)
6. மனுஷன் தனிமையாய் இருப்பது. (ஆதி 2:18)

நல்ல காரியங்கள்

1. தேவனை அண்டிக்கொண்டிருப்பது (சங் 73:28)
2. கர்த்தரைத் துதிப்பது (சங் 92:1)
3. உபத்திரவப்பட்டது (சங் 119:71)
4. தேவனைக் கீர்த்தனம் பண்ணுகிறது. (சங் 147:1)
5. கர்த்தருடைய இரட்சிப்பிற்கு நம்பிக்கையோடு காத்திருக்கிறது. (புல 3:26)
6. தன் இளம்பிராயத்தில் நுகத்தைச் சுமக்கிறது. (புல 3:27)
7. நல்விஷயத்தில் வைராக்கியம் பாராட்டுவது. (கலா 4:18)

"கொஞ்சம் புளித்தமா பிசைந்த மா முழுவதையும் புளிப்பாக்குமென்று அறியீர்களா?" தவறு செய்கிறவர்களைச் சபையிலிருந்து நீக்கி வைக்க வேண்டும். சபையில் அவர்களை அனுமதித்தால் அவர்கள் முழுச் சபையையும் கெடுத்துவிடுவார்கள். அவர்கள் மூலமாகச் சபையில் துன்மார்க்கம் பெருகும்.

"பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப் போடுங்கள்" - பஸ்கா பண்டிகைக்கு முன்பாக யூதர்கள் தங்கள் வீடுகளிலுள்ள பழைய புளித்தமா அனைத்தையும் வெளியே கழித்துப்போடுவார்கள். சபைக்கும் இப்போபட்ட ஆலோசனையை பவுல் கூறுகிறார். சபையில் காணப்படும் அசுத்தமான காரியங்களைப் புறம்பே கழித்துப்போடவேண்டும்.

"நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே" - கொரிந்து சபை விசுவாசிகள் இன்னும் புளிப்பில்லாதவர்களாகவே இருக்கிறார்கள். அவர்கள் நடுவே அசுத்தமான பாவ காரியங்கள் இன்னும் பரவவில்லை. தங்களை விட்டு அசுத்தமான பாவகாரியங்களைப் புறம்பே கழித்துப் போட்டால் அவர்கள் புதிதாய் பிசைந்த மாவைப்போல இருப்பார்கள். பாவங்களிலிருந்து முற்றிலும் விலகினவர்களாக இருப்பார்கள்.

"நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே" - நம்முடைய பாவங்களையெல்லாம் கழுவப்படும்படியாக இயேசு கிறிஸ்து பஸ்கா ஆட்டுக்குட்டியாகப் பலியிடப்பட்டார். (எபே 1:7; எபி 9:22; வெளி 1:5)

"புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக் கடவோம்" - பஸ்கா கடந்து போயிற்று. துப்புரவு, உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடு நாம் பஸ்காவை ஆசரிக்க வேண்டிய காலத்தில் இருக்கிறோம். ஆகையினால் துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவை நம்மைவிட்டு அகற்ற வேண்டும்.

5. உலகத்திலுள்ள பாவிகளுக்கும் சபையிலுள்ள பாவிகளுக்கும் இடையிலுள்ள வேறுபாடு

1கொரி 5:9 விபசாரக்காரரோடே கலந்திருக்கக் கூடாதென்று நிருபத்தில் உங்களுக்கு எழுதினேன்.

1கொரி 5:10 ஆனாலும், இவ்வுலகத்திலுள்ள விபசாரக்காரர், பொருளாசைக்காரர், கொள்ளைக்காரர், விக்கிரகாராதனைக்காரர் இவர்களோடு எவ்வளவும் கலந்திருக்கக் கூடாதென்று நான் எழுதவில்லை; அப்படியானால் நீங்கள் உலகத்தைவிட்டு நீங்கிப்போக வேண்டியதாயிருக்குமே.

I கொரிந்தியர் – தொகுப்புரை

5 அதிகாரம்

1கொரி 5:11 நான் உங்களுக்கு எழுதினதென்னவென்றால சகோதரனென்னபட்ட ஒருவன் விபசாரக் காரனாயாவது பொருளாசைக் காரனாயாவது விக்கிரகாராதனைக் காரனாயாவது உதாசினனாயாவது வெறியனாயாவது, கொள்ளைக் காரனாயாவது அவனோடே கலந்திருக்கக் கூடாது. அப்படிப்பட்டவனுடனே கூடப்புசிக்கவும் கூடாது.

"விபசாரக்காரரோடே கலந்திருக்கக் கூடாதென்று நிருபத்தில உங்களுக்கு எழுதினேன்" - பவுல நிருபத்தில உங்களுக்கு எழுதினேன் என்று கூறுவது இந்த நிருபத்தையோ அலலது ஏறகெனவே எழுதப்பட்டு அனுப்பப்படாத நிருபத்தையோ குறிக்கலாம் கொரிந்து சபையிலுள்ள நிலைமைகள தனக்குத தெரிவிக்கப்பட்ட பினபு. (1கொரி 16:17 பவுல முதலாவது எழுதியதையும். இப்போது எழுதுவதையும சேர்த்து இநத நிருபத்தில எழுதி அனுப்பியிருக்கலாம். (1கொரி 5:9 11)

"நீஙகள உலகத்தைவிட்டு நீங்கிப்போக வேணடியதாயிருக்குமே" விசுவாசிகள உலகத்தை விட்டு நீஙகிப்போக வேணடிய அவசியமிலலை அவாகள உலகத்திலேயே ஜீவிக்க வேணடும் இவவுலகத்தில பாவிகள இருக்கிறாாகள அவாகளோடு எவவளவும் கலநதிருக்கக்கூடாது என்று பவுல எழுதவிலலை. ஏனெனில நாம் இநத உலகத்தில் ஜீவிக்கும்போது பாவிகள மத்தியிலதான ஜீவிக்கிறோம் இவாகளோடு நாம எவவளவும் கலநதிருக்கக்கூடாதெனறால், நாம் இநத உலகத்தை விட்டு நீஙகிப்போக வேணடியதாயிருக்கும் நாம் பாவிகள மத்தியில் ஜீவித்தாலும் பாவிகளுடைய சுபாவஙகள் நமக்குள் நுழைந்துவிடாதவாறு மிகுநத எச்சரிப்போடு இருக்க வேணடும். (1கொரி 5:9, 1கொரி 15:33

8. சபையில் பொல்லாதவனை தள்ளிப் போடுவதற்கு ஸ்தல சபைக்கு அதிகாரம் உள்ளது

1கொரி 5:12 புறம்பே இருக்கிறவர்களைக் குறித்துத் தீர்ப்புச் செய்கிறது என் காரியமா? உள்ளே இருக்கிறவர்களைக் குறித்தல்லவோ நீஙகள் தீர்ப்புச் செய்கிறீர்கள்?

1கொரி 5:13 புறம்பே இருக்கிறவர்களைக் குறித்து தேவனே தீர்ப்புச் செய்வார் ஆகையால் அந்த பொலலாதவனை உங்களைவிட்டுத் தள்ளிப்போடுங்கள்

சபையிலிருந்து தள்ளிவிடுவதற்கு வேதாகமத்தின் அடிப்படையில் [redacted]

1. சமாதானமாக இருக்க மறுப்பது (மத் 18:15)
2. பிரிவினை உணடாக்குவது (ரோமர் 16:17)
3. விபசாரக்காரன் (1கொரி 5:11-13)
4. பொருளாசைக்காரன் (1கொரி 5:11-13)
5. விக்கிரகாராதனைக்காரன (1கொரி 5:11-13)
6. உதாசினன (1கொரி 5:11-13
7. வெறியன் (1கொரி 5:11-13)
8. கொளளைக்காரன (1கொரி 5:11-13
9. கர்த்தராகிய இயேசுவினிடத்தில அனபுகூராமல போதல (1கொரி 16:22
10. அவிசுவாசமும், ஒழுக்கக்கேடும் (2கொரி 6:14)
11. பின்மாற்றம் (2கொரி 13:1-2,10
12. ஒழுஙகற்று நடப்பது (2தெச 3:6
13. வசனத்திற்குக் கீழ்ப்படியாமை (2தெச 3:14)
14. விசுவாசத்தை மறுப்பது (1தீமோ 1:19-20
15. கள்ள உபதேசம் (1தீமோ 6:3 5, 2யோவான் 1:10)
16. வேதபுரட்டு (தீத்து 3:10-11

I கொரிந்தியர் - தொகுப்புரை

6 அதிகாரம்

7. பரிசுத்தவான்கள் வழக்காடும்படி அநீதக்காரரிடத்தில் போகத் துணியக்கூடாது

I கொரி 6:1 உங்களில் ஒருவனுக்கு வேறொருவனோடே வழக்குண்டானால், வழக்காடும்படி அவன் பரிசுத்தவான்களிடத்தில் போகாமல் அநீதக்காரரிடத்தில் போகத் துணிகிறதென்ன?

8. பரிசுத்தவான்கள் தங்கள் வழக்குகளை தங்களுக்குள்ளே நியாயம் தீர்த்துக் கொள்ள வேண்டும்

I கொரி 6:2 பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா? உலகம் உங்களால் நியாயந்தீர்க்கப்படுவதாயிருக்க, அற்ப வழக்குகளைத் தீர்க்க நீங்கள் அபாத்திரரா?

I கொரி 6:3 தேவதூதர்களையும் நியாயந்தீர்ப்போமென்று அறியீர்களா? அப்படியிருக்க, இந்த ஜீவனுக்கேற்றவைகளை நீங்கள் தீர்த்துக் கொள்ளக் கூடாதிருக்கிறது எப்படி?

தீர்க்கதரிசன எண் - 6

"பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா?" (I கொரி 6:2-3) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. இயேசு கிறிஸ்துவின் ஆயிரம் வருஷ அரசாட்சியையும், நித்திய அரசாட்சியையும் இது குறிக்கும். கர்த்தருடைய பரிசுத்தவான்கள் அவரோடுகூட ஆளுகை செய்வார்கள். பூமியிலுள்ள சகல தேசங்களையும் ஆளுகை செய்வார்கள். நித்திய காலமாக உலகத்தை நியாயந்தீர்ப்பதற்கு உதவி புரிவார்கள் (ஏசா 9:6-7, தானி 2:44-45, தானி 7:13-14,27, சக 14, மத் 19:28, லூக்கா 22:31-32, வெளி 1:6; வெளி 5:10; வெளி 7:15, வெளி 20:4, வெளி 22:5)

"உலகம் உங்களால் நியாயந்தீர்க்கப்படுவதாயிருக்க, அற்ப வழக்குகளைத் தீர்க்க நீங்கள் அபாத்திரரா?" - கர்த்தருடைய பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்கள். அப்பேர்ப்பட்டவர்கள் தங்களுடைய அற்ப வழக்குகளையும் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

நியாயந்தீர்த்தல் (judge) - κρίνω **krinoo** - 2919

வினைச்சொல் - வழக்காடு, நியாயந்தீர், தீர்மானி **(to judge; make a legal decision)** - தேவதூதர்களை நியாயந்தீர்ப்போமென்று கூறப்பட்டிருப்பதினால் தேவதூதர்களுக்குத் தண்டனை கொடுப்போம் என்பது பொருளல்ல. தேவதூதர்களைவிட தேவனுடைய பரிசுத்தவான்கள் உயர்த்தப்பட்டிருப்பார்கள் என்பது பொருள். ஆயிரம் வருஷ அரசாட்சியில் கர்த்தருடைய பரிசுத்தவான்கள் தேவதூதர்களையும் ஆளுகை செய்வார்கள். முழு உலகத்தையும் நியாயந்தீர்ப்பார்கள். பரிசுத்தவான்களே தேவனுடைய சுதந்தரராக இருக்கிறார்கள். தேவதூதர்களுக்கு இந்தச் சிலாக்கியம் கொடுக்கப்படவில்லை. சகலத்தையும் சுதந்தரித்துக் கொள்வதற்குப் பரிசுத்தவான்கள் இயேசு கிறிஸ்துவின் உடன் சுதந்தரராக இருக்கிறார்கள் (ரோமர் 8:17-18, கலா 5:21, எபி 6:12, வெளி 21:7) இக்காலத்திலும்கூட பரிசுத்தவான்கள் தேவதூதர்களுக்கு முன்மாதிரிகளாக இருக்கிறார்கள் (எபே 3:8-11, I கொரி 4:9, I கொரி 11:10) இரட்சிக்கப்பட்டவர்களுக்குத் தேவன் நியமித்திருக்கும் திட்டத்தைத் தெரிந்து கொள்வதற்குத் தேவதூதர்களும் ஆவலுடையவர்களாக இருக்கிறார்கள் (I பேதுரு 1:10-13)

"இந்த ஜீவனுக்கேற்றவைகளை நீங்கள் தீர்த்துக் கொள்ளக் கூடாதிருக்கிறது எப்படி?" - பரிசுத்தவான்கள் தேவதூதர்களையும் நியாயந்தீர்ப்பார்கள். அப்பேர்ப்பட்டவர்களால் இந்த ஜீவனுக்கேற்றவைகளை நிச்சயமாக நியாயந்தீர்க்க முடியும்.

6 அதிகாரம்

9. பரிசுத்தவான்கள் அநியாயத்தை சகித்துக் கொண்டு நஷ்டத்தை பொறுத்துக் கொள்ள வேண்டும்

1கொரி 6:4 இந்த ஜீவனுக்கேற்ற வழக்குகள் உங்களுக்கு இருந்தால் தீர்ப்புச்செய்கிறதற்கு, சபையில் அற்பமாய் எண்ணப்பட்டவர்களை நியமித்துக் கொள்ளுங்கள்.

1கொரி 6:5 உங்களுக்கு வெட்கம் உண்டாகும்படி இதைச் சொல்லுகிறேன். சகோதரனுக்கும் சகோதரனுக்கும் உண்டான வழக்கைத் தீர்க்கத்தக்க விவேகி ஒருவனாகிலும் உங்களுக்குள் இல்லையா?

1கொரி 6:6 சகோதரனோடே சகோதரன் வழக்காடுகிறான், அவிசுவாசிகளுக்கு முன்பாகவும் அப்படிச் செய்கிறான்.

1கொரி 6:7 நீங்கள் ஒருவரோடொருவர் வழக்காடுகிறது எவ்விதத்திலும் குற்றமாயிருக்கிறது. அப்படிச் செய்கிறதை விட நீங்கள் ஏன் அநியாயத்தைச் சகித்துக் கொள்ளுகிறதில்லை? ஏன் நஷ்டத்தைப் பொறுத்துக் கொள்ளுகிறதில்லை?

1கொரி 6:8 நீங்களே அநியாயஞ் செய்கிறீர்கள், நஷ்டப்படுத்துகிறீர்கள், சகோதரருக்கும் அப்படிச் செய்கிறீர்களே.

"தீர்ப்புச்செய்கிறதற்கு, சபையில் அற்பமாய் எண்ணப்பட்டவர்களை நியமித்துக் கொள்ளுங்கள்" சபையில் இருக்கிறவர்கள் பரிசுத்தவான்கள். விசுவாசியின் எந்த வழக்கையும் பரிசுத்தவான்களால் தீர்த்து வைக்க முடியும். பரிசுத்தவான்களால் தீர்க்க முடியாத வழக்காக இருந்தால் அந்த வழக்கை நியாயாதிபதியிடம் எடுத்துச் செல்லலாம். அந்த நியாயாதிபதியே சபையில் அற்பமாய் எண்ணப்பட்டவர் என்று பவுல் குறிப்பிடுகிறார். இதுவும் வஞ்சகப்புகழ்ச்சியில் கூறப்பட்டிருக்கும் வாக்கியம். சபையிலுள்ள பரிசுத்தவான்களுடைய தீர்ப்பை ஏற்றுக்கொண்டு அதற்குக் கீழ்ப்படியாதவர்களை வெட்கப்படுத்தும் விதமாக பவுல் இவ்வாறு வஞ்சகப் புகழ்ச்சியிலெழுதியிருக்கிறார் (1கொரி 6:4-6).

"நீங்கள் ஒருவரோடொருவர் வழக்காடுகிறது எவ்விதத்திலும் குற்றமாயிருக்கிறது" - சபையிலுள்ள விசுவாசிகளுக்குள் வழக்குகள் இருந்தால் அவற்றைச் சபைக்குள்ளேயே தீர்த்துக் கொள்ள வேண்டும். பரிசுத்தவான்களின் ஆலோசனைகளைக் கேட்டு, எல்லோரோடும் சமாதானமாக இருக்க நாடவேண்டும். கிறிஸ்துவுக்குள் தன்னுடைய சகோதரனாக இருக்கிறவனை நியாயாதிபதியினிடத்திலும் நீதிபதியிடத்திலும் இழுத்துச் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

10. ஆத்துமாவை அழிக்கும் பாவங்கள் - (ரோமர் 1:29; கலா 5:19; கொலோ 3:5)

1கொரி 6:9 அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும்,

1கொரி 6:10 திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை.

தீர்க்கதரிசன எண் - 7

"அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும் விக்கிரகாராதனைக்காரரும் விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும் ஆண்புணர்ச்சிக்காரரும் திருடரும், பொருளாசைக்காரரும் வெறியரும், உதாசினரும் கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை" (1கொரி 6:9-10)

I கொரிந்தியர் - தொகுப்புரை

6 அதிகாரம்

தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்காதவர்கள்

1 வேசிமார்க்கத்தார் (1கொரி 6:9)

2 விக்கிரகாராதனைக்காரர் (1கொரி 6:9)

3 விபசாரக்காரர் (1கொரி 6:9)

4 சுயபுணர்ச்சிக்காரர் (1கொரி 6:9)

5 ஆண்புணர்ச்சிக்காரர் (1கொரி 6:9)

6 திருடர் (1கொரி 6:10)

7 பொருளாசைக்காரர் (1கொரி 6:10)

8 வெறியர்

9 உதாசினர் (1கொரி 6:10)

10 கொள்ளைக்காரர் (1கொரி 6:10)

சுயபுணர்ச்சி (effeminate) - μαλακός - malakos - 3120

பெயரடை சுயபுணர்ச்சிக்காரன் (a catamite) சுபாவத்திற்கு விரோதமாகத் தன்னுடைய சரீரத்தை ஒப்புக் கொடுக்கிறவன் (யோவே 3:3) சில வசனங்களில் தொடுவதற்கு மென்மையாக இருப்பதை இந்த வார்த்தை குறியிடும் (மத் 11:8 லூக்கா 7:25)

ஆண் புணர்ச்சிக்காரர் (abusers) ἀρσενοκοίτης arsenokoitees - 733

ஆண்பால் பெயர்ச்சொல் ஆண் புணர்ச்சிக்காரர் (a sodomite; homosexual, sexual pervert) (1கொரி 6:9; 1தீமோ 1:10; ரோமர் 1:27)

"தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை" - மேலே கூறப்பட்டிருக்கும் பத்து பிரிவினரும் இரட்சிக்கப்படவும் மாட்டார்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கவும் மாட்டார்கள் (1கொரி 6:9,10; 2கொரி 13:1; கலா 5:21)

11. பாவத்தின்மீது வெற்றி பெறுவதன் இரகசியம் - (2கொரி 5:17; ரோமர் 8:1-13)

1கொரி 6:11 உங்களில் சிலர் இப்படிப் பட்டவர்களாயிருந்தீர்கள் ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும் நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள் பரிசுத்தமாக்கப் பட்டீர்கள் நீதிமான்களாக்கப்பட்டீர்கள்

1கொரி 6:12 எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு. ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது. எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு. ஆகிலும் நான் ஒன்றிற்கும் அடிமைப்பட மாட்டேன்

"உங்களில் சிலர் இப்படிப் பட்டவர்களாயிருந்தீர்கள்" (1கொரி 6:9 10) ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் முதலாவது ஐந்து பிரிவு, மகாபெரிய ஒழுக்கக்கேடு கொரிந்து சபையில் இருந்தவர்கள் இதுபோன்ற பாவங்களைச் செய்து அநியாயக்காரராக இருந்தார்கள் இப்போது அவர்கள் இரட்சிக்கப்பட்டு, சபையில் இருக்கிறார்கள்

ஆத்துமாவை இரட்சிக்கும் மூன்று காரியங்கள்

1 கழுவப்படுதல்

2 பரிசுத்தமாக்கப்படுதல்

3 நீதிமானாக்கப்படுதல்

கழுவப்படுதல் (Washed) ἀπολούω apolouoo 628

6 அதிகாரம்

வினைச்சொல் - கழுவப்படு - இந்த கிரேக்க வாக்கியத்தில் இரண்டு சொற்கள் உள்ளன ஒன்று "அபோ" (apo) மற்றொன்று "லோவோ" (louoo). ஒன்றிலிருந்து முழுவதுமாகக் கழுவப்படுதல் என்பது இவ்விரண்டு வார்த்தைகளையும் சேர்க்கும்போது கிடைக்கும் பொருளாகும். அப் 22:16 ஆவது வசனத்தில் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது பாவத்திலிருந்து முழுவதுமாகக் கழுவப்படுவதைக் குறிக்கும் தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறிக்காது. யோவே 2:32 அப 2:21; ரோமர் 10:9-14 ஆகிய வசனங்கள் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்வதைக் குறிக்கும் கொரி 6:9-10 ஆகிய வசனங்கள் பரிசுத்த ஆவியானவரால் இயேசு கிறிஸ்துவின் நாமத்தைத் தொழுதுகொள்ளும்போது எல்லாப் பாவங்களும் முழுவதுமாகக் கழுவப்படுவதைக் குறிக்கிறது.

ஒன்றிலிருந்து (away from) - ἀπό - apo - 575

முன்னிடைச் சொல் ஒரிடத்தில் இருந்து, துவக்கத்திலிருந்து

கழுவுதல் (wash) - λούω - louoo - 3068

வினைசொல் - கழுவு, குளிப்பாட்டு - எல்லாப் பாவங்களையும் கழுவுதல் (வெளி 1:5); பாதம் முழுவதையும் கழுவுதல் (யோவான் 13:10); முழு சரீரத்தையும் கழுவுதல் (அப 9:37; எபி 10:22); பன்றியைக் கழுவுதல் (2பேதுரு 2:22); பவுல், சீலா ஆகியோரின் காயங்களைக் கழுவுதல் (அப 16:33)

பரிசுத்தமாக்கப்படுதல் (Sanctified)

ἁγιάζω hagiazoo 37

வினைச்சொல் - பரிசுத்தப்படுத்துதல், பரிசுத்தப்படுதல் பரிசுத்தமாக்குதல், பரிசுத்தருசெய்தல், பரிசுத்தம் பண்ணுதல், பரிசுத்தமாக்கப்படுதல். (to hallow, consecrate) - பாவத்திலிருந்து வேறுபிரிந்து தேவனிடத்தில் சேருதல் யோவான் 17:17) 1கொரி 6:11 ஆவது வசனத்தில் நீதிமானாக்கப்படுவதற்கு முன்பாகப் பரிசுத்தமாக்கப்படுதல் என்றும் வாக்கிய முறைப்படி பயன்படுத்தப்பட்டிருக்கிறது. 1கொரி 6:11

(அ) தேவனுக்காக பொருட்களையோ அல்லது நபர்களையோ வேறுபிரித்து அர்ப்பணித்தல். மத். 23:17; யோவா 10:36

(ஆ) சட்டப்பிரகாரமாக, நீதிநெறிப் பிரகாரமாக பரிசுத்தப்படுத்துதல் 1கொரி 6:11 7:14

(இ) சடங்குகளின் மூலமாக ஒரு பொருளையோ அல்லது நபரையோ பரிசுத்தப்படுத்துதல். எபி. 9:13 2தீமோ 2:21

(ஈ) பரிசுத்தமுள்ளதை எண்ணுதல் மத். 6:9

நீதிமானாக்கப்படுதல் (Justified) - δικαιόω - dikaiooo - 1344

வினைச்சொல் - நீதியுள்ளதென்று ஒப்புக்கொள் நீதிமானென்று அறிக்கையிடு, நீதிமானாகு, நீதிசெய நீதிமான் என்று அறிவித்தல், குற்றம் செய்யாதவன் என்று அறிவித்தல் (to declare righteous or not guilty; justify) - "freed from sin" (ரோமர் 6:7); "justifier" (ரோமர் 3:26); "be righteous" (வெளி 22:11) ஒருவன் மனந்திருந்தி தேவனிடத்தில் வரும்போது அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்படுகிறது. அப்போதே அவன் நீதிமானாக்கப்படுகிறான் (லூக்கா 18:14; அப் 13:39 ரோமர் 3:24 28 30, ரோமர் 4:5 ரோமர் 5:1,9 1கொரி 6:11 கலா 2:16-17 கலா 3:8,24 தீத்து 3:5-7

6 அதிகாரம்

விசுவாசிகள் எப்பொழுது நீதிமானாக்கப் படுகிறார்கள்

1 கழுவப்பட்டுப் பரிசுத்தமாக்கப் படும்போது 1கொரி 6:11 2கொரி 5:17-18

2 மனந்திரும்பும்போது லூக்கா 18:13-14)

3 விசுவாசிக்கும்போது (அப் 13:38-39 ரோமர் 3:24-31 ரோமர் 4:5 ரோமர் 5:1 கலா 2-3

4 இரட்சிக்கப்படும்போது (ரோமர் 3:24 ரோமர் 5:9)

5 கிருபையில் பங்குபெறும்போது ரோமர் 3:24-25 ரோமர் 5:1-2 தீத்து 2:11-14 தீத்து 3:4-7)

6 தேவனுடைய அழைப்பை ஏற்றுக் கொள்ளும்போது (ரோமர் 8:30)

7 மறுபடியும் பிறக்கும்போது (தீத்து 3:4-7 1யோவான் 2:29 1யோவான் 3:9 1யோவான் 5:1 4:18 2கொரி 5:17-18

8 கிறிஸ்துவிடம் அழைத்து வரப்படும்போது (கலா 3:24 2கொரி 5:17-18 கலா 3:27)

9 ஒப்புரவாகும்போது (ரோமர் 5:9-11 2கொரி 5:17-21 கொலோ 1:20-23)

10 எல்லாப் பாவங்களும் மன்னிக்கப்படும் போது ஏசா 43:25 அப் 13:38-39 1கொரி 6:11

ஜனங்கள் தேவனிடத்தில் தங்களுடைய பாவங்களை அறிக்கையிட்டு, அவரோடு ஒப்புரவாகி தங்களுக்குப் பாவமன்னிப்பை பெற்றுக் கொள்கிறார்கள் (சங் 51:4 லூக்கா 7:29 ரோமர் 3:26 எசே 3:11 எசே 16:51-52; யோபு 9:20; யோபு 13:18; யோபு 32:2, லூக்கா 16:15) ஜனங்கள் இரட்சிக்கப்பட்ட பின்பு, தேவன் அவர்களை நீதிமான்களாக்குகிறார் (யோபு 11:2 யோபு 13:18 யோபு 27:5 யோபு 32:2 யோபு 33:32, நீதி 17:15 லூக்கா 10:29 லூக்கா 16:15), தேவன் ஒருவனை நீதிமானாக்கும்போது அவன் இனிமேல் குற்றவாளி அல்ல என்று அறிவிக்கிறார் (1கொரி 6:9-11 2கொரி 5:17-18 அப் 13:38-39) தேவன் ஒரு பாவியை நீதிமானாக்குவதற்கு முன்பு அவனைக் கழுவி சுத்திகரிக்கிறார் தன்னுடைய பாவங்கள் எல்லாம் சுத்திகரிக்கப்படாமல், இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்படாமல் இருக்கிறவனை தேவன் பரிசுத்தமாக்குவதில்லை. பரிசுத்தமாதல் பாவியைப் பாவமற்றவனாக ஆக்குகிறது நீதிமானாக்குதல் பாவியை நீதிமானாக அறிவிக்கிறது

தகுதி (expedient) - συμφέρω - sympheroo - 4851

வினைச்சொல் - நலமாயிரு, பிரயோஜனமாயிரு, தகுதியாயிரு (profitable) (1கொரி 6:12 யோவான் 11:50 யோவான் 16:7 அப் 20:20)

"நான் ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன்" - தனக்குப் பிரயோஜனமில்லாத, தகுதியில்லாத எந்தக் காரியமும் தன்னை ஆளுகை செய்வதற்குப் பவுல் அனுமதிப்பதில்லை (1கொரி 9:27

12. சரீரம் வேசித்தனத்திற்கல்ல, கர்த்தருக்கே உரியது

1கொரி 6:13 வயிற்றுக்குப் போஜனமும் போஜனத்துக்கு வயிறும் ஏற்கும் ஆனாலும் தேவன் இதையும் அதையும் அழியப்பண்ணுவார் சரீரமோ வேசித்தனத்திற்கல்ல கர்த்தருக்கு உரியது; கர்த்தரும் சரீரத்திற்கு உரியவர்

1கொரி 6:14 தேவன் கர்த்தரை எழுப்பினாரே நம்மையும் தமது வல்லமையினாலே எழுப்புவார்

1கொரி 6:15 உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று அறியீர்களா? அப்படியிருக்க, நான் கிறிஸ்துவின் அவயவங்களை வேசியின் அவயவங்களாக்கலாமா? அப்படிச் செய்யலாகாதே.

6 அதிகாரம்

1கொரி 6:16 வேசியோடு இசைந்திருக்கிறவன் அவளுடனே ஒரே சரீரமாயிருக்கிறானென்று அறியீர்களா? இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று சொல்லியிருக்கிறதே

1கொரி 6:17 அப்படியே கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்

1கொரி 6:18 வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள். மனுஷன் செய்கிற எந்தப் பாவமும் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும். வேசித்தனஞ்செய்கிறவனோ தன் சுயசரீரத்திற்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறான்

தீர்க்கதரிசன எண் - 8

"வயிற்றுக்குப் போஜனமும் போஜனத்துக்கு வயிறும் ஏற்கும். ஆனாலும் தேவன் இதையும் அதையும் அழியப்பண்ணுவார் சரீரமோ வேசித்தனத்திற்கல்ல. கர்த்தருக்கு உரியது. கர்த்தரும் சரீரத்திற்கு உரியவர் தேவன் கர்த்தரை எழுப்பினாரே நம்மையும் தமது வல்லமையினாலே எழுப்புவார்" (1கொரி 6:13-14) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை தேவன் உணவிற்குச் சுவையையும் சுவைக்கு உணவையும் உண்டாக்கினார் ஆனால் சரீரமோ கர்த்தருக்கே உரியது. வேசித்தனத்திற்காகத் தேவன் மனுஷருடைய சரீரத்தை உண்டாக்கவில்லை

"தேவன் கர்த்தரை எழுப்பினாரே நம்மையும் தமது வல்லமையினாலே எழுப்புவார்" இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் மரித்து அடக்கம் பண்ணப்பட்டார் தேவன் அவரை மூன்றாம் நாளில் உயிரோடு எழுப்பினார் தம்முடைய சொந்த வல்லமையினால் தேவன் நம்மையும் எழுப்புவார் என்பதற்கு இது ஓர் அச்சாரமாக இருக்கிறது. ஆகையினால் நாம் கர்த்தருக்குள் சந்தோஷமாக இருந்து, அவரை எந்நாளும் துதிக்கலாம்

"வேசியோடு இசைந்திருக்கிறவன் அவளுடனே ஒரே சரீரமாயிருக்கிறான்" - ஆதி 2:24 ஆவது வசனம் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது (மத் 19:5)

"வேசித்தனஞ் செய்கிறவனோ தன் சுயசரீரத்திற்கு விரோதமாய்ப் பாவஞ் செய்கிறான்" - எல்லாப் பாவமும் மனுஷனை அழித்துப்போடும். வேசித்தனமோ மனுஷனுடைய சரீரம் ஆத்துமா ஆவி ஆகிய அனைத்தையுமே அழித்துப்போடுகிறது

13. சரீரம் பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாய் இருக்கிறதினால் அது பாவமில்லாமல் இருக்க வேண்டும் - (1கொரி 3:16)

1கொரி 6:19 உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும் நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?

1கொரி 6:20 கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்

"உங்கள் சரீரமானது பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறது" (1கொரி 3:16-17 ரோமர் 12:1-2 2கொரி 7:1)

"கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே" - அடிமையானவன் தன் எஜமானனுக்கு முழுவதும் உரிமையானவன் நாமும் இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற திரு இரத்தத்தினால் கிரயத்திற்குக் கொள்ளப்பட்டிருக்கிறோம். ஆகையினால் நாம் நமக்குரியவர்கள் அல்ல. தேவனுக்குரியவர்கள் நம்முடைய சரீரங்களும் நம்முடைய ஆவியும் தேவனுக்கே உரியவை. ஆகையினால் நம்முடைய சரீரத்தினாலும் நம்முடைய ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்த வேண்டும். (1கொரி 6:19-20 1கொரி 7:23 1பேதுரு 1:18-23)

I கொரிந்தியர் - தொகுப்புரை

7 அதிகாரம்

IV. கிறிஸ்தவரும் திருமணமும் - 7:1-40

1. திருமணமாகாத கிறிஸ்தவருக்கு ஆலோசனை

1கொரி 7:1 நீங்கள் எனக்கு எழுதின காரியங்களைக் குறித்து நான் எழுதுகிறதென்னவென்றால், ஸ்திரீயைத் தொடாமலிருக்கிறது மனுஷனுக்கு நலமது.

1கொரி 7:2 ஆகிலும் வேசித்தனம் இராதபடிக்கு அவனவன் தன் சொந்த மனைவியையும், அவளவள் தன் சொந்த புருஷனையும் உடையவர்களாயிருக்க வேண்டும்.

"ஸ்திரீயைத் தொடாமலிருக்கிறது மனுஷனுக்கு நலமது" - கொரிந்து சபையிலே விசுவாசிகளிடம் சில தவறான பழக்கவழக்கங்கள் காணப்பட்டது. இவற்றைக் குறித்து பவுலிடம் தெளிவுபெற வேண்டுமென்று அவர்கள் பவுலுக்கு நிருபம் எழுதினார்கள். நிருபத்தைக் கொண்டு வந்தவர்கள் பவுலிடம் சபையின் காரியங்களைக் குறித்து கூறுகிறார்கள் (1கொரி 1:12; 1கொரி 16:17)

கொரிந்தியர் பவுலுக்கு எழுதின காரியங்கள்

1 விவாகம் [redacted] இருக்கிறவர்கள் (1கொரி 7:1-9)

2 விவாகம் பண்ணியிருக்கிறவர்களும் விவாகம் பண்ணாமலிருக்கிறவர்களும் (1கொரி 7:10-17)

3 விருத்தசேதனம் (1கொரி 7:18-24)

4 கன்னிகைகள் (1கொரி 7:25-40)

5 விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகள் (1கொரி 8:1-13)

6 பவுலின் அப்போஸ்தல ஊழியம் (1கொரி 9:1-27)

7 மோசேயின் காலமும், விசுவாசிகளின் காலமும் (1கொரி 10:1-13)

8 ஸ்திரீகளுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் பழக்கவழக்கங்கள் (1கொரி 11:2-16)

9 கர்த்தருடைய பந்தி (1கொரி 11:17-34)

10 ஆவிக்குரிய வரங்கள் (1கொரி 12:1-14:40)

11 உயிர்த்தெழுதல்கள் (1கொரி 15:1-58)

12 பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தருமப்பணம் (1கொரி 16:1-9)

"அவனவன் தன் சொந்த மனைவியையும் அவளவள் தன் சொந்த புருஷனையும் உடையவர்களாயிருக்கவேண்டும்" - யாரும் திருமணம் பண்ணிக் கொள்ளக்கூடாது என்று கட்டாயம் எதுவும் இல்லை. கிறிஸ்தவ மார்க்கம் திருமணம் செய்து கொள்வதற்கு அனுமதி அளிக்கிறது. திருமணத்திற்குச் சுவிசேஷம் தடையாக இருக்கவில்லை.

2. திருமணமான கிறிஸ்தவருக்கு ஆலோசனை

1கொரி 7:3 புருஷன் தன் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்யக் கடவன்; அப்படியே மனைவியும் தன் புருஷனுக்குச் செய்யக்கடவள்.

1கொரி 7:4 மனைவியானவள் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, புருஷனே அதற்கு அதிகாரி; அப்படியே புருஷனும் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, மனைவியே அதற்கு அதிகாரி.

1கொரி 7:5 உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் தடையிராதபடிக்கு இருவரும் சிலகாலம் பிரிந்திருக்க வேண்டுமென்று சம்மதித்தாலன்றி, ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாதிருங்கள்; உங்களுக்கு விரதத்துவம் இல்லாமையால் சாத்தான் உங்களைத் தூண்டி விடாதபடிக்கு, மறுபடியும் கூடி வாழுங்கள்.

I கொரிந்தியர் - தொகுப்புரை

7 அதிகாரம்

1கொரி 7:6 இதை நான் கட்டளையாகச் சொல்லாமல் யோசனையாகச் சொல்லுகிறேன்

செய்ய வேண்டிய கடமை (due benevolence) ὀφειλή - opheilee - 3782

பெண்பால் பெயர்ச்சொல் - கடன் வரி - 1கொரி 7:3, எபே 6:7 ஆகிய வசனங்களில் மட்டுமே இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கணவனும், மனைவியும் குடும்பக் காரியங்களில் ஒருவருக்கொருவர் ஒத்துழைத்து நடந்து கொள்ள வேண்டும். இதை அவர்கள் சரியாகச் செய்யவில்லையென்றால் அவர்கள் வேசித்தனத்திலே போய் முடிந்து விடுவதற்கு வாய்ப்புள்ளது.

"மனைவியானவள் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல" அப்படியே புருஷனும் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல. கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் உரியவர்கள். ஒருவரையொருவர் நேசித்து, தங்களுடைய சரீரத் தேவைகளைத் தாங்கள் இருவரும் சேர்ந்து பகிர்ந்து கொள்ள வேண்டும்.

"இருவரும் சிலகாலம் பிரிந்திருக்க வேண்டுமென்று சம்மதித்தாலன்றி ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருங்கள்" உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் கணவனும் மனைவியும் சிறிது காலம் பிரிந்திருக்க வேண்டும் என்று இருவரும் சேர்ந்து தீர்மானம் பண்ணினால் பிரிந்திருக்கலாம். கணவன், மனைவிக்குள் பிரிந்திருக்கும் விஷயத்தில் ஒற்றுமையில்லையென்றால் அவர்களுக்குச் சாத்தானுடைய சோதனை வரும். ஆகையினால், பிரிந்து வாழ முடியாதவர்கள் கூடிவாழலாம். இதில் தவறொன்றும் இல்லை.

3. திருமணமாகாதவருக்கு ஆலோசனை

1கொரி 7:7 எல்லா மனுஷரும் என்னைப் போலவே இருக்க விரும்புகிறேன். ஆகிலும் அவனவனுக்கு தேவனால் அருளப்பட்ட அவனவனுக்குரிய வரமுண்டு, அது ஒருவனுக்கு ஒருவிதமாயும் மற்றொருவனுக்கு வேறுவிதமாயும் இருக்கிறது.

1கொரி 7:8 விவாகமில்லாதவர்களையும் கைம்பெண்களையும் குறித்து நான் சொல்லுகிறது என்னவென்றால், அவர்கள் என்னைப்போல இருந்துவிட்டால் அவர்களுக்கு நலமாயிருக்கும்.

1கொரி 7:9 ஆகிலும் அவர்கள் விரத்தராயிருக்கக் கூடாதிருந்தால் விவாகம் பண்ணக்கடவர்கள்; வேகிறதைப் பார்க்கிலும் விவாகம் பண்ணுகிறது நலம்.

"எல்லா மனுஷரும் என்னைப்போலவே இருக்க விரும்புகிறேன்" - பவுல் திருமணம் செய்துகொள்ளவில்லை. தனி மனிதராக இருந்தார். தன்னைப்போலவே எல்லா மனுஷரும் இருக்க வேண்டுமென்று விரும்புகிறார். ஆனால் இது எளிதான காரியமல்ல. ஏனெனில் தேவன் ஒவ்வொருவனுக்கும் வரத்தை அருளியிருக்கிறார். ஒவ்வொருவனுடைய வரமும் வித்தியாசமானது. பவுலுக்கு அருளப்பட்ட வரத்தின் பிரகாரம் அவர் திருமணம் செய்து கொள்ளாமல் தனிமையாக இருக்கிறார். தன்னைப்போன்று தனிமையாக வாழுவதற்கு வரம் பெற்றவர்கள் திருமணம் செய்து கொள்ளாமல் தனித்திருப்பதைப் பவுல் விரும்புகிறார் (மத் 19:12)

"வேகிறதைப்பார்க்கிலும் விவாகம் பண்ணுகிறது நலம்." விவாகம் பண்ணாமல் இருக்கிறவர்கள் விரத்தராக இருக்க வேண்டும். இச்சையடக்கம் உடையவர்களாக காணப்பட வேண்டும். விவாகம் பண்ணாமல் இருந்து, மோக இச்சையில் சிக்குண்டு போவதைவிட விவாகம் பண்ணிக் கொள்வது [redacted].

விரத்தர் (contain) ἐγκρατεύομαι enkrateuomai 1467

I கொரிந்தியர் - தொகுப்புரை

7 அதிகாரம்

வினைச்சொல் - விரத்தராயிரு, இச்சையடக்கமாயிரு (have self control) - எல்லாக் காரியங்களிலும் இச்சையடக்கமாக இருப்பது. 1கொரி 7:9, 9:25 ஆகிய வசனங்களில் மட்டுமே இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. செப்துவஜிந்த் பதிப்பில் ஆதி 43:31, சாமு 13:12 ஆகிய வசனங்களில் நாம் இந்த வார்த்தையை வாசிக்கிறோம்.

வேகுதல் (burn) - πυρόω - pyrooo - 4448

வினைச்சொல் - வேகு, எரி, அக்கினியாயிரு, புடமிடு (be aflame) (1கொரி 7:9; 2கொரி 11:29; எபே 6:16; 2பேதுரு 3:12; வெளி 1:15, வெளி 3:18) - திருமணம் பண்ணிக் கொள்ளாமல் அவஸ்தைப்படுவதைவிட திருமணம் பண்ணிக் கொள்வது நலமானது.

4. **திருமணமான கிறிஸ்தவருக்கு ஆலோசனையும் ஒழுங்குகளும்** - (ரோமர் 7:1-3)

1கொரி 7:10 விவாகம் பண்ணிக் கொண்டவர்களுக்கு நானல்ல கர்த்தரே கட்டளையிடுகிறதாவது, மனைவியானவள் தன் புருஷனை விட்டுப் பிரிந்து போகக் கூடாது.

1கொரி 7:11 பிரிந்துபோனால் அவள் விவாகமில்லாதிருக்கக்கடவள்; அல்லது புருஷனோடே ஒப்புரவாகக்கடவள். புருஷனும் தன் மனைவியைத் தள்ளிவிடக்கூடாது.

1கொரி 7:12 மற்றவர்களைக்குறித்துக் கர்த்தர் அல்ல, நானே சொல்லுகிறதாவது; சகோதரனொருவனுடைய மனைவி அவிசுவாசியாயிருந்தும், அவனுடனே வாசமாயிருக்க அவளுக்குச் சம்மதமிருந்தால், அவன் அவளைத் தள்ளிவிடாதிருக்கக்கடவன்.

1கொரி 7:13 அப்படியே ஒரு ஸ்திரீயினுடைய புருஷன் அவிசுவாசியாயிருந்தும், அவளுடனே வாசமாயிருக்க அவனுக்குச் சம்மதமிருந்தால், அவள் அவனைத் தள்ளிவிடாதிருக்கக்கடவள்.

1கொரி 7:14 என்னத்தினாலெனில், அவிசுவாசியான புருஷன் தன் மனைவியால் பரிசுத்தமாக்கப்படுகிறான்; அவிசுவாசியான மனைவியும் தன் புருஷனால் பரிசுத்தமாக்கப்படுகிறாள்; இல்லாவிட்டால் உங்கள் பிள்ளைகள் அசுத்தமாயிருக்குமே; இப்பொழுதோ அவைகள் பரிசுத்தமாயிருக்கின்றன.

1கொரி 7:15 ஆகிலும், அவிசுவாசி பிரிந்து போனால் பிரிந்து போகட்டும், இப்படிப்பட்ட விஷயத்தில், சகோதரனாவது சகோதரியாவது அடிமைப்பட்டவர்களல்ல. சமாதானமாயிருக்கும்படிக்கே தேவன் நம்மை அழைத்திருக்கிறார்.

1கொரி 7:16 மனைவியானவளே, நீ உன் புருஷனை இரட்சிப்பாயோ அல்லவோ உனக்கு எப்படித் தெரியும்? புருஷனே, நீ உன் மனைவியை இரட்சிப்பாயோ அல்லவோ உனக்கு எப்படித் தெரியும்?

திருமணத்தைக் குறித்த கட்டளைகள்

1. அவனவன் தன் சொந்த மனைவியை உடையவனாக இருக்க வேண்டும் (1கொரி 7:2)
2. அவளவள் தன் சொந்த புருஷனை உடையவளாக இருக்க வேண்டும்.
3. புருஷன் தன் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்யக்கடவன் (1கொரி 7:3-4)
4. மனைவி தன் புருஷனுக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்யக்கடவள் (1கொரி 7:3-4)
5. புருஷனும் மனைவியும் சிலகாலம் பிரிந்திருக்க வேண்டுமென்று சம்மதித்தாலன்றி ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாதிருக்க வேண்டும். (1கொரி 7:5)

7 அதிகாரம்

6 உபவாசத்திற்கும், ஜெபத்திற்கும் சிலகாலம் பிரிந்திருந்தபின்பு, மறுபடியும் கணவனும், மனைவியும் சேர்ந்திருக்க வேண்டும். (1கொரி 7:5)

7 கணவனும் மனைவியும் விரத்தராயிருக்கக் கூடாதிருந்தால் அவர்கள் விவாகம் பண்ணக்கடவர்கள் (1கொரி 7:9)

8 மனைவியானவள் தன் புருஷனை விட்டுப் பிரிந்து போகக் கூடாது. (1கொரி 7:10)

9 மனைவியானவள் பிரிந்துபோனால் அவள் விவாகமில்லாதிருக்கக்கடவள் அல்லது புருஷனோடே ஒப்புரவாகக்கடவள் (1கொரி 7:11)

10 புருஷன் தன் மனைவியைத் தள்ளிவிடக்கூடாது. (1கொரி 7:11)

11 சகோதரனொருவனுடைய மனைவி அவிசுவாசியாயிருந்தும் அவனுடனே வாசமாயிருக்க அவளுக்குச் சம்மதமிருந்தால் அவன் அவளைத் தள்ளிவிடாதிருக்கக்
(1கொரி 7:12-16)

12 ஒரு ஸ்திரீயினுடைய புருஷன் அவிசுவாசியாயிருந்தும், அவளுடனே வாசமாயிருக்க அவனுக்குச் சம்மதமிருந்தால் அவள் அவனைத் தள்ளி விடாதிருக்கக்கடவள் (1கொரி 7:13-16)

13 அவிசுவாசி விசுவாசியோடு வாழச் சம்மதியாமல் பிரிந்து போனால் பிரிந்து போகட்டும். (1கொரி 7:15)

14 தேவன் புருஷனுக்கும், மனைவிக்கும் பகிர்ந்தபடியே கர்த்தர் அவர்களை அழைத்தபடியே அப்படியே அவர்கள் நடக்கக்கடவர்கள். (1கொரி 7:17-24) கணவனும், மனைவியும் ஒருவரையொருவர் தள்ளி விடுவதற்கும் வேறு நபரைத் திருமணம் செய்து கொள்வதற்கும் தங்களுடைய கிறிஸ்தவ விசுவாசத்தைக் காரணமாகக் கூறக்கூடாது.

15 நீ மனைவியோடே கட்டப்பட்டிருந்தால் அவிழ்க்கப்பட வகைதேடாதே. (1கொரி 7:27) திருமணமான புருஷன் கடந்தகால நிகழ்ச்சிகளுக்காகத் தன்னுடைய மனைவியைத் தள்ளிவிட முயற்சி பண்ணக்கூடாது (1கொரி 7:17-24)

16 நீ மனைவி இல்லாதவனாயிருந்தால், மனைவியைத் தேடாதே (1கொரி 7:27) ஒருவன் திருமணமானவனாக இருந்தால் அது அவனுக்குப் பாவமல்ல. (1கொரி 7:28)

17 மனைவிகளுள்ளவர்கள் மனைவிகளில்லாதவர்கள் போல இருக்க வேண்டும். (1கொரி 7:29-31) மோக இச்சைகளிலிருந்து விலகியிருக்க வேண்டும். (1கொரி 7:32-35)

18 ஒரு தந்தைக்குத் திருமண வயதில் மகள் இருக்கும்போது அவளுக்குத் திருமணம் செய்து வைக்கக்கடவன் கன்னிகையைத் திருமணம் செய்து கொடுப்பது தகப்பனுக்குப் பாவமல்ல (1கொரி 7:36-38)

19 மனைவியானவள் தன் புருஷன் உயிரோடிருக்குங் காலமளவும் பிரமாணத்தினால் கட்டப்பட்டிருக்கிறாள் (1கொரி 7:39) திருமண உடன்படிக்கை கணவனும், மனைவியும் உயிரோடு இருக்கும் காலம் வரையிலும் இருவரையும் கட்டுப்படுத்தும்

20 விசுவாசக் குடும்பத்தில் கணவனோ அல்லது மனைவியோ மரித்த பின்பு, அவர்கள் மறுமணம் செய்து கொள்ள விரும்பினால் வேறொரு விசுவாசியையே திருமணம் செய்து கொள்ள வேண்டும். (1கொரி 7:39)

"பிரிந்துபோதல்" (depart) தள்ளிவிடுதல் அல்லது விவாகரத்து செய்தல் என்பது இதன் பொருள் யூதருடைய வழக்கத்தில் புருஷனுக்குத் தன் மனைவியைத் தள்ளிவிடுவதற்கு எந்தளவிற்கு உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்த அளவிற்கு மனைவியும் தன்னுடைய புருஷனைத் தள்ளிவிடுவதற்கு அவளுக்கு உரிமைகொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் தன் புருஷனைத் தள்ளிவிட்ட மனைவி விவாகமில்லாது இருக்க வேண்டுமென்று பவுல் ஆலோசனை கூறுகிறார் அல்லது அவள் தன் புருஷனோடே ஒப்புரவாக வேண்டும் வேதவசனங்களில் கூறப்பட்டிருக்கும் அனுமதியின்படி கணவனோ மனைவியோ தள்ளிவிட்டால், அவர்கள் வேறொரு விசுவாசியை விவாகம் பண்ணிக் கொள்வதற்குத் தடையேதும் இல்லை. (1கொரி 7:15,27-28; மத் 5:32, மத் 19:6 இந்த விஷயத்தில் குற்றம் புரியாதவனைக் குற்றப்படுத்தக்கூடாது (எசே 18:2-4, 13, 17-32)

I கொரிந்தியர் - தொகுப்புரை

7 அதிகாரம்

"அவள் அவனைத்தள்ளி விடாதிருக்கக் கடவள்" - வேதாகமத்தில் புருஷனுக்கும் மனைவிக்கும் சம உரிமை கொடுக்கப் பட்டிருக்கிறது. (1கொரி 7:2-5, 10-16 27-40; கலா 3:28, கொலோ 3:11)

பரிசுத்தமாக்கப்படுதல் (sanctified)
ἁγιάζω - hagiazoo - 37

வினைச்சொல் - பரிசுத்தப்படுத்துதல் பரிசுத்தப்படுதல், பரிசுத்தமாக்குதல் பரிசுத்தஞ்செய்தல், பரிசுத்தம் பண்ணுதல் பரிசுத்தமாக்கப்படுதல். (யோவான் 17:17

(அ) தேவனுக்காகப் பொருட்களையோ அல்லது நபர்களையோ வேறுபிரித்து அர்ப்பணித்தல் மத். 23:17; யோவா 10:36

(ஆ) சட்டப்பிரகாரமாக, நீதிநெறிப் பிரகாரமாகப் பரிசுத்தப்படுத்துதல் கொரி. 6:11; 7:14

(இ) சடங்குகளின் மூலமாக ஒரு பொருளையோ அல்லது நபரையோ பரிசுத்தப்படுத்துதல் எபி 9:13 2தீமோ 2:21

(ஈ) பரிசுத்தமுள்ளதை எண்ணுதல் மத். 6:9

"உங்கள் பிள்ளைகள் அசுத்தமாயிருக்குமே, இப்பொழுதோ அவைகள் பரிசுத்தமாயிருக்கின்றன" - யூதர்கள் தங்களுக்குப் பிறந்த பிள்ளைகளை மட்டுமே பரிசுத்தமானவர்களாகக் கருதுவார்கள் புறஜாதியாரின் பிள்ளைகளை அசுத்தமானவர்களாகக் கருதுவார்கள் கிறிஸ்தவ விசுவாசிகளின் பிள்ளைகளைப் பரிசுத்தப் படுத்துவதற்கு எந்தச் சடங்குகளும் தேவையில்லை ஆகையினால் புருஷனோ அல்லது மனைவியோ அவிசுவாசியாய் இருந்தாலும் அவர்களுடைய வாழ்க்கைத்துணை விசுவாசியாக இருக்கும்போது அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகள் சுத்தமாக இருக்கின்றன

"சமாதானமாயிருக்கும்படிக்கே தேவன் நம்மை அழைத்திருக்கிறார்" - குடும்ப வாழ்க்கையில் அவிசுவாசி பிரிந்து போனால் பிரிந்து போகட்டும். இப்படிப்பட்ட விஷயத்தில் சகோதரனாவது சகோதரியாவது அடிமைப்பட்டவர்களல்ல. ஒருவர் கிறிஸ்தவராக இருப்பதினால் அவருடைய வாழ்க்கைத் துணை அவரோடு வாழ்வதற்குச் சம்மதியாமல், பிரிந்து போனால் பிரிந்து போகட்டும் என்று பவுல் கூறுகிறார் இந்தப் பிரிவு அவிசுவாசியின் மீறுதலின் நிமித்தமாக வந்தபடியினால் விசுவாசியை இதற்காகக் குற்றப்படுத்த வேண்டியதில்லை.

5. கர்த்தர் அவனவனை அழைத்தது எப்படியோ அப்படியே அவனவன் நடக்கக் கடவன்

1கொரி 7:17 தேவன் அவனவனுக்குப் பகிர்ந்தபடியே கர்த்தர் அவனவனை அழைத்தபடியே, அப்படியே அவனவன் நடக்கக்கடவன் எல்லாச் சபைகளிலேயும் இப்படியே திட்டம் பண்ணுகிறேன்

1கொரி 7:18 ஒருவன் விருத்தசேதனம் பெற்றவனாய் அழைக்கப்பட்டிருந்தால் விருத்தசேதன மில்லாதவனாயிருக்க வகைதேடானாக. ஒருவன் விருத்தசேதன மில்லாதவனாய் அழைக்கப் பட்டிருந்தால் விருத்தசேதனம் பெறாதிருப்பானாக.

1கொரி 7:19 விருத்தசேதனமும் ஒன்றுமில்லை விருத்த சேதனமில்லாமையும் ஒன்றுமில்லை, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறதே காரியம்.

1கொரி 7:20 அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே நிலைத்திருக்கக்கடவன்

1கொரி 7:21 அடிமையாய் நீ அழைக்கப் பட்டிருந்தால், கவலைப்படாதே நீ சுயாதீனனாகக் கூடுமானால் அதை நலமென்று அநுசரித்துக்கொள்

1கொரி 7:22 கர்த்தருக்குள் அழைக்கப் பட்ட அடிமையானவன் கர்த்தருடைய சுயாதீனனாயிருக்கிறான் அப்படியே அழைக்கப்பட்ட சுயாதீனன் கிறிஸ்துவினுடைய அடிமையாயிருக்கிறான்

7 அதிகாரம்

1கொரி 7:23 நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள் மனுஷருக்கு அடிமைகளாகாதிருங்கள்

1கொரி 7:24 சகோதரரே அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே தேவனுக்கு முன்பாக நிலைத்திருக்கக் கடவன்

"விருத்த சேதனமில்லாதவனாயிருக்க வகை தேடானாக" - மோசேயின் பிரமாணம் விருத்தசேதனத்தைப் பற்றிக்கூறுகிறது. விருத்தசேதனம் பெற்றவனாய் அழைக்கப் பட்டிருக்கிறவன் அப்படியே இருக்கட்டும். கொரிந்துவிலுள்ள விசுவாசிகள் பவுலிடம் விருத்தசேதனத்தைப் பற்றியும் கேட்டிருக்கிறார்கள் இதற்குப் பவுல் 1கொரி 7:18-20 ஆகிய வசனங்களில் பதில் கூறியிருக்கிறார்

"ஒருவன் விருத்தசேதனமில்லாதவனாய் அழைக்கப்பட்டிருந்தால் விருத்தசேதனம் பெறாதிருப்பானாக" - இரட்சிக்கப்படுவதற்கு விருத்தசேதனம் அவசியமில்லை ஆகையினால் தன்னுடைய இரட்சிப்பிற்காக யாரும் விருத்தசேதனம் பெற வேண்டியதில்லை

"அடிமையாய் நீ அழைக்கப்பட்டிருந்தால் கவலைப்படாதே" பவுலின் காலத்தில் அடிமைகள் இருந்தார்கள் அவர்களில் சிலர் விசுவாசிகளாகவும் இருந்தார்கள்

"நீ சுயாதீனனாகக்கூடுமானால் அதை நலமென்று அநுசரித்துக்கொள்" ஒருவன் அடிமையாக இருப்பதினால் அவனுடைய விசுவாசம் பலவீனமடைவதில்லை ஆயினும் அவன் சுயாதீனனாகக் கூடுமானால் தன்னுடைய அடிமைத்தனத்திலிருந்து சுயாதீனன் ஆகவேண்டும் தன்னுடைய சுயாதீனத்தைப் பயன்படுத்தி கிறிஸ்துவிற்கு ஊழியம் செய்ய வேண்டும் எஜமான் அடிமையைக் கிரயத்திற்கு வாங்கியிருக்கிறான் அடிமைகள் விடுதலை பெறவேண்டுமானால் அவர்களுக்குரிய கிரயத்தைச் செலுத்தியே விடுவிக்க முடியும். ஒருசில எஜமான்கள் தங்களுடைய ஆத்தும இரட்சிப்பிற்காக சில அடிமைகளை அக்காலத்தில் விடுதலை பண்ணினார்கள்

சுயாதீனர் (freeman)

ἀπελεύθερος apeleutheros 558

ஆண்பால் பெயர்ச்சொல் - சுயாதீனர் (absolutely free)

"நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள் மனுஷருக்கு அடிமைகளாகாதிருங்கள்" - அடிமையாக இருக்கிறவன் கிரயம் செலுத்தி தன் அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்படுகிறான் [illegible] மறுபடியும் தன்னை அடிமையாக விற்று விடக்கூடாது.

6. கன்னிகைகளைக் குறித்தும் விவாகம் இல்லாதிருக்கிற மனுஷனைக் குறித்தும் ஆலோசனை

1கொரி 7:25 அன்றியும் கன்னிகைகளைக் குறித்து கர்த்தரால் எனக்குக் கட்டளை இல்லை. ஆகிலும் நான் உண்மையுள்ளவனாயிருக்கிறதற்குக் கர்த்தரால் இரக்கம் பெற்று என் அபிப்பிராயத்தைத் தெரியப்படுத்துகிறேன்

1கொரி 7:26 அதென்னவெனில் இப்பொழுது உண்டாயிருக்கிற துன்பத்தினிமித்தம் விவாகமில்லாமலிருக்கிறது மனுஷனுக்கு நலமாயிருக்குமென்று எண்ணுகிறேன்

1கொரி 7:27 நீ மனைவியோடே கட்டப்பட்டிருந்தால், அவிழ்க்கப்பட வகைதேடாதே; நீ மனைவி இல்லாதவனாயிருந்தால் மனைவியைத் தேடாதே.

1கொரி 7:28 நீ விவாகம் பண்ணினாலும் பாவமல்ல; கன்னிகை விவாகம் பண்ணினாலும் பாவமல்ல. ஆகிலும் அப்படிப்பட்டவர்கள் சரீரத்திலே உபத்திரவப்படுவார்கள் அதற்கு நீங்கள் தப்பவேண்டுமென்றிருக்கிறேன்

கன்னிகைகள் (virgins) παρθένος parthenos 3933

7 அதிகாரம்

பெண்பால் பெயர்ச்சொல் - கன்னிகை, கன்னிப்பாஸ்திரீ - திருமணமாகாத கன்னி, கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகள் கன்னிகைகளைக்குறித்தும் பவுலிடம் கேள்விகள் கேட்டார்கள்

"விவாகமில்லாமலிருக்கிறது மனுஷனுக்கு நலமாயிருக்குமென்று எண்ணுகிறேன்" - கிறிஸ்தவர்களுக்கு இப்பொழுது துன்பம் உண்டாயிருக்கிறது. அவர்களுக்குப் பாதுகாப்பில்லை. இப்படிப்பட்ட துன்ப காலத்தில் விவாகமில்லாமல் இருப்பதே மனுஷனுக்கு நலமாயிருக்குமென்று பவுல் கூறுகிறார்

"நீ மனைவியோடே கட்டப்பட்டிருந்தால் அவிழ்க்கப்பட வகைதேடாதே" - அக்காலம் துன்பகாலமாக இருந்ததால் விவாகம் இல்லாமல் இருப்பது நலமாக இருந்தது. ஆயினும் திருமணமானவர்கள் தங்களுடைய வாழ்க்கைத் துணையைத் தள்ளிவிட முயற்சி பண்ணக்கூடாது. (1கொரி 7:27-28)

7. திருமணமான கிறிஸ்தவருக்கு ஆலோசனை

1கொரி 7:29 மேலும், சகோதரரே நான் சொல்லுகிறதென்னவெனில் இனிவரும் காலம் குறுகினதானபடியால், மனைவிகளுள்ளவர்கள் மனைவிகளில்லாதவர்கள் போலவும்

1கொரி 7:30 அழுகிறவர்கள் அழாதவர்கள் போலவும் சந்தோஷப்படுகிறவர்கள் சந்தோஷப்படாதவர்கள் போலவும், கொள்ளுகிறவர்கள் கொள்ளாதவர்கள் போலவும்.

1கொரி 7:31 இவ்வுலகத்தை அனுபவிக்கிறவர்கள் அதைத் தகாதவிதமாய் அனுபவியாதவர்கள் போலவும் இருக்க வேண்டும். இவ்வுலகத்தின் வேஷம் கடந்து போகிறதே.

தீர்க்கதரிசன எண் - 9

"இனிவரும் காலம் குறுகினதானபடியால், மனைவிகளுள்ளவர்கள் மனைவிகளில்லாதவர்கள் போலவும்" (1கொரி 7:29-31) ரோமப்பேரரசின் நீரோ மன்னன் மூலமாகக் கிறிஸ்தவர்களுக்கு உபத்திரவங்கள் உண்டாகும் என்பதை இந்த வசனம் முன்னறிவிக்கிறது.

துன்பம் வரப்போகிறதினால் செய்ய வேண்டிய [redacted]

1. எல்லா ஜனங்களும் கவலையற்றவர்களாக இருக்க வேண்டும் (1கொரி 7:32-33)
2. திருமணமானவர்கள் திருமணமாகாதவர்கள் போல இருக்க வேண்டும். (1கொரி 7:29)
3. அழுகிறவர்கள் அழாதவர்கள் போலிருக்க வேண்டும் (1கொரி 7:30)
4. சந்தோஷப்படுகிறவர்கள் சந்தோஷப்படாதவர்கள் போல இருக்க வேண்டும். (1கொரி 7:30)
5. கொள்ளுகிறவர்கள் கொள்ளாதவர்கள் போல இருக்க வேண்டும் (1கொரி 7:30)
6. இவ்வுலகத்தை அனுபவிக்கிறவர்கள் அதைத் தகாதவிதமாய் அனுபவியாதவர்கள் போல இருக்க வேண்டும். இவ்வுலகத்தின் வேஷம் கடந்து போகிறதே (1கொரி 7:31; 1யோவான் 2:17)

8. திருமணமானவர்கள், திருமணமாகாதவர்கள் ஆகியோரின் பொறுப்பு

1கொரி 7:32 நீங்கள் கவலையற்றவர்களாயிருக்க விரும்புகிறேன். விவாகமில்லாதவன் கர்த்தருக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று, கர்த்தருக்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான்

7 அதிகாரம்

1கொரி 7:33 விவாகம் பண்ணினவன் தன் மனைவிக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று உலகத்திற்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான்.

1கொரி 7:34 அதுபோலவே, மனைவியானவளுக்கும் கன்னிகைக்கும் வித்தியாசமுண்டு. விவாகமில்லாதவள் சரீரத்திலும் ஆத்துமாவிலும் பரிசுத்தமாயிருக்கும்படி கர்த்தருக்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறாள்; விவாகம் பண்ணினவள் தன் புருஷனுக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று உலகத்திற்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறாள்.

1கொரி 7:35 இதை நான் உங்களைக் கண்ணியில் அகப்படுத்த வேண்டுமென்று சொல்லாமல், உங்களுக்குத் தகுதியாயிருக்குமென்றும், நீங்கள் கவலையில்லாமல் கர்த்தரைப் பற்றிக்கொண்டிருக்க வேண்டுமென்றும், உங்கள் சுயப்பிரயோஜனத்துக்காகவே சொல்லுகிறேன்.

"விவாகமில்லாதவன் கர்த்தருக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று கர்த்தருக்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான்." விவாகமில்லாமல் தனிமையாக இருக்கிறவர் எந்தவிதமான இடையூறும் இல்லாமல் கர்த்தருடைய காரியங்களில் கவனம் செலுத்த முடியும். (1கொரி 7:32,34)

"விவாகம் பண்ணினவன் தன் மனைவிக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று உலகத்திற்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான்." விவாகம் பண்ணியவர்களுக்கோ குடும்பப் பொறுப்புக்கள் அதிகமாக இருக்கும். கர்த்தருடைய காரியங்களில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாகத் தன்னுடைய வாழ்க்கைத்துணையை எப்படிப் பிரியப்படுத்தலாம் என்று கவலைப்படுவான்.

பரிசுத்தம் (holy) ἅγιος hagios 40

பொருள் - அர்ப்பணிக்கப்பட்டுள்ள, வேறுபிரிக்கப்பட்டுள்ள புதிய, பரிசுத்த என்னும் பொருளை பொருளைப் பண்பில் தரும் (devoted, pure) - கன்னிகை ஆனவள் தேவனுக்குத் தன்னை அர்ப்பணித்திருக்கிறாள் தன்னுடைய ஆவியிலும், சரீரத்திலும் அவள் பரிசுத்தமாய் இருக்கிறாள் ஆகையினால் தேவனுடைய காரியங்களில் எவ்வித இடையூறும் இல்லாமல் அவளால் கவனம் செலுத்த முடிகிறது.

(அ) பரிசுத்த பிதாவின் பரிசுத்தம் தேவனுக்கும் மானிட பரிசுத்தத்திற்கும் இடையில் உள்ள இடைவெளியைக் குறிக்கும். யோவா 17:11

(ஆ) தேவனுக்கும் அவருடைய ஊழியத்துக்கும் அர்ப்பணிக்கப்பட்டுள்ள பொருட்கள் எபே 1:4 மத். 24:15

(இ) தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள நபர்கள் இவர்கள் தேவனுடைய பரிசுத்தத்தில் பங்குபெறுகிறார்கள் ரோம. 1:7; மாற். 6:20

தன் புத்திரிகையின் கன்னிப் பருவத்தைக் குறித்து பெற்றோருக்கு ஆலோசனை

1கொரி 7:36 ஆகிலும் ஒருவன் தன் புத்திரியின் கன்னிகைப்பருவம் கடந்துபோனதினாலே அவள் விவாகம் பண்ணாமலிருப்பது அவளுக்குத் தகுதியல்லவென்றும் அவள் விவாகம் பண்ணுவது அவசியமென்றும் நினைத்தால் அவன் தன் மனதின்படி செய்யக்கடவன்; அது பாவமல்ல, விவாகம் பண்ணட்டும்.

1கொரி 7:37 ஆயினும் அதற்கு அவசியத்தைக் காணாமல் தன் இருதயத்திலே உறுதியுள்ளவனாயும், சுயசித்தத்தின்படி செய்ய அதிகாரமுள்ளவனாயுமிருந்து, தன் புத்திரியின் கன்னிகைப் பருவத்தைக் காக்கவேண்டும் என்று தன் இருதயத்தில் தீர்மானிக்கிறவன் நன்மை செய்கிறான்.

7 அதிகாரம்

கொரி 7:38 இப்படியிருக்க, அவளை விவாகம்பண்ணிக்கொடுக்கிறவனும் நன்மைசெய்கிறான்; கொடாமலிருக்கிறவனும் அதிக நன்மைசெய்கிறான்.

"ஒருவன் தன் புத்திரியின் கன்னிகைப்பருவம் கடந்துபோனதினாலே" - பவுலின் காலத்தில் பெண்களுடைய திருமண காரியங்களை அவர்களுடைய பெற்றோரே முடிவு செய்தார்கள். தன்னுடைய மகளுக்குத் திருமணம் செய்து கொடுக்க வேண்டுமா அல்லது கன்னிகையாக வைத்திருக்க வேண்டுமா என்று அவளுடைய பெற்றோரே முடிவு செய்ய வேண்டும். தன் மகளை கன்னிகையாக வைத்திருக்க வேண்டும் என்று தீர்மானம் பண்ணிவிட்டு பின்பு, தன் மனதை மாற்றிக் கொண்டு தன் மகளுக்கு திருமணம் செய்து வைப்பது தவறல்ல.

"அவள் விவாகம் பண்ணுவது அவசியமென்றும் நினைத்தால்" - ஒரு கன்னிகை விவாகம் பண்ணிக் கொள்ள வேண்டுமென்று தீர்மானம் பண்ணினால் அவளுடைய பெற்றோர் அவளுக்கு விவாகம் பண்ணி வைக்க வேண்டும். அவள் கன்னியாகவே இருக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தக்கூடாது. (1கொரி 7:8-9)

"தன் புத்திரியின் கன்னிகைப் பருவத்தைக் காக்கவேண்டும் என்று தன் இருதயத்தில் தீர்மானிக்கிறவன் நன்மை செய்கிறான்" - ஒரு கன்னிகை தான் விவாகம் பண்ணாமல் இருக்க வேண்டும் என்று விரும்பும்போது அவளுடைய பெற்றோர் அவளை விவாகம் பண்ணுவதற்கு வற்புறுத்தக்கூடாது. 1கொரி 7:36-37 ஆகிய வசனங்களின் பிரகாரம் தன்னுடைய புத்திரியின் திருமணத்தை நடத்தி வைப்பதும் அல்லது அவளைக் கன்னிகையாகவே வாழச்செய்வதும் அவளுடைய தந்தையின் பொறுப்பு என்று தெரிய வருகிறது.

10. கிறிஸ்தவ விதவைகளுக்கு ஆலோசனை

1கொரி 7:39 மனைவியானவள் தன் புருஷன் உயிரோடிருக்குங் காலமளவும் பிரமாணத்தினால் கட்டப்பட்டிருக்கிறாள்; தன் புருஷன் மரித்தபின்பு தனக்கு இஷ்டமானவனும் கர்த்தருக்குட்பட்டவனுமாயிருக்கிற எவனையாகிலும் விவாகம் பண்ணிக்கொள்ள விடுதலையாயிருக்கிறாள்.

1கொரி 7:40 ஆகிலும் என்னுடைய அபிப்பிராயத்தின்படி அவள் அப்படியே இருந்துவிட்டால் பாக்கியவதியாயிருப்பாள். என்னிடத்திலும் தேவனுடைய ஆவி உண்டென்று எண்ணுகிறேன்.

"மனைவியானவள் தன் புருஷன் உயிரோடிருக்குங் காலமளவும் பிரமாணத்தினால் கட்டப்பட்டிருக்கிறாள்" - விதவை திருமணம் செய்து கொள்ளலாமா என்று கொரிந்துவிலுள்ள விசுவாசிகள் பவுலிடம் கேள்வி கேட்கிறார்கள். அவள் ஒரு விசுவாசியைத் திருமணம் செய்து கொள்ளலாம். அவிசுவாசியைத் திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்று பவுல் பதில் கூறுகிறார். ஆனாலும் விதவை, திருமணம் செய்து கொள்ளாமல் இருந்துவிட்டால் அவள் பாக்கியவதியாக இருப்பாள் என்றும் கூறுகிறார். (1கொரி 7:40; 1கொரி 7:27, 1கொரி 7:29)

I கொரிந்தியர் - தொகுப்புரை

8 அதிகாரம்

V. கிறிஸ்தவ விடுதலைகள் - 10:23-33; ரோமர் 14:1-15:7)

1. அறிவு, அன்பு ஆகியவற்றால் ஏற்படும் விளைவுகள்

1கொரி 8:1 விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்டவைகளைக் குறித்த விஷயத்தில், நமமெல்லாருக்கும் அறிவுஉண்டென்று நமக்குத் தெரியுமே அறிவு இறுமாப்பை உண்டாக்கும். அன்போ பக்தி விருத்தியை உண்டாக்கும்.

1கொரி 8:2 ஒருவன் தான் ஏதேனும் ஒன்றை அறிந்தவனென்று எண்ணிக் கொள்வானானால், ஒன்றையும் அறிய வேண்டியபிரகாரமாக அவன் இன்னும் அறியவில்லை

1கொரி 8:3 தேவனில் அன்பு கூருகிறவனெவனோ அவன் தேவனால் அறியப்பட்டிருக்கிறான்

பவுலின் விவாதங்கள்

1 அறிவு அடிப்படையாய் இருக்கிறது. 1கொரி 8:1-3

2 விக்கிரகங்கள் உண்மையான தெய்வங்கள் அல்ல. (1கொரி 8:4-5)

3 ஒரே ஒரு தேவன் மட்டுமே இருக்கிறார் 1கொரி 8:4-6)

4 ஜனங்கள் தேவனுக்கென்று உண்டாக்கப் பட்டிருக்கிறார்கள் (1கொரி 8:6

5 மெய்த்தேவனைப் பற்றிய அறிவு எல்லாரிடத்திலும் இல்லை (1கொரி 8:7

6 அறியாமையினாலும், மனச்சாட்சி பலவீனமாய் இருப்பதினாலும் பிரச்சனைகள் உண்டாகிறது. (1கொரி 8:7

7 விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட போஜனம் அந்தப் போஜனத்தை அசுசிப்படுத்தாது (1கொரி 8:8

8 போஜனமானது நம்மைத் தேவனுக்கு உகந்தவர்களாக ஆக்கமாட்டாது (1கொரி 8:8

9 அறிவும், விடுதலையும் பலவீனருக்குத் தடுக்கலாக இருக்கமுடியும் (1கொரி 8:9)

10 பலவானுடைய முன்மாதிரி பலவீனன் பாவம் செய்வதற்குக் காரணமாக அமைந்து விடும். (1கொரி 8:10)

11 கிறிஸ்து எல்லோருக்காகவும் மரித்தார் ஆனாலும் பாவம் செய்த ஆத்துமா அழிந்துபோகும் (1கொரி 8:11)

12 பலவீனமானவன் பாவம் செய்வதற்குக் காரணமாக இருக்கும் பலவானும் பாவம் செய்கிறவனாக இருக்கிறான் (1கொரி 8:12)

13 பலவான்கள் தங்களையும் பலவீனரையும் இரட்சித்துக் கொள்வதற்கு முன்மாதிரியாக ஜீவிக்க வேண்டும் (1கொரி 8:13

"நமமெல்லாருக்கும் அறிவு உண்டென்று நமக்குத் தெரியுமே" - கிறிஸ்தவமார்க்கத்தை ஏற்றுக் கொள்கிறவர்களுக்கு விக்கிரகங்களைப் பற்றியும் விக்கிரகாராதனையைப் பற்றியும் ஓரளவு தெரிந்திருக்கும். யூதருடைய சடங்குகளுக்கும் பிரமாணங்களுக்கும் கிறிஸ்தவ விசுவாசிகள் கட்டுப்பட்டவர்கள் அல்ல ஆனால் ஒருசிலர் இவற்றைக் குறித்த தங்களுடைய அறிவைப் பெருமைபாராட்டி இறுமாப்பு அடைகிறார்கள் இறுமாப்பினால் யாருடைய பக்தியும் விருத்தியடைவதில்லை அன்பு பக்தி விருத்தியை உண்டாக்கும்

"அறிவு" (Knowledge) - கொரிந்தியர் தங்களுடைய அறிவின் நிமித்தம் பெருமை உடையவர்களாக இருக்கிறார்கள் கிறிஸ்துவில் தங்களுக்கு உண்டாயிருக்கும் விடுதலையின் நிமித்தமாக மற்றவர்களைக் குற்றப் படுத்துகிறார்கள் அவர்களுடைய விடுதலை அவர்களைத் தைரியப்படுத்துவதினால் மற்றவர்களைக் குறித்து கவலையற்றவர்களாகவும், மற்றவர்களுடைய மனச்சாட்சிகளைக் குறித்து அசட்டையுடையவர்களாகவும் இருக்கிறார்கள்

8 அதிகாரம்

"இறுமாப்பு" – (1கொரி 4:6)

"அன்போ பக்திவிருத்தியை உண்டாக்கும்" - அன்பு எப்பொழுதுமே கட்டி எழுப்புகிறது. அன்பு இறுமாப்பை உண்டாக்காது. அன்பு இறுமாப்பை அழிக்கும். அன்பு தேவனிடமிருந்து வந்திருக்கிறது. ஆகையினால் இது பக்தி விருத்தி உண்டாக்குகிறது. (கொரி 13)

"ஒன்றையும் அறிய வேண்டிய பிரகாரமாக அவன் இன்னும் அறியவில்லை" - பெருமை உடையவன் ஞானத்தில் குறைவுடையவன். தனக்கு எல்லாம் தெரியும் என்று கூறுகிறவனுக்கு ஒன்றும் தெரியாது என்று பொருள். பெருமையுடையவன் இன்னும் அறிய வேண்டிய பிரகாரமாக எதையும் அறியவில்லை. மற்ற சகோதரருடைய பலவீனங்களையும், மென்மையான மனச்சாட்சிகளையும் அவர்களுடைய போஜனத்தின் நிமித்தமாகவும் பழக்கவழக்கங்களின் நிமித்தமாகவும் ஒருவன் குறைவுகூறுவானென்றால் அவன் அந்தச் சகோதரனையும் நேசிக்கவில்லை, தேவனையும் நேசிக்கவில்லை (மத் 22:36-40)

2. பல விக்கிரகங்கள் ஆனால் ஒரே ஒரு மெய் தேவன் – (எபே 4:4-6)

1கொரி 8:4 விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைப் புசிக்கிற விஷயத்தைப் பற்றி, உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லையென்றும், ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லையென்றும் அறிந்திருக்கிறோம்.

1கொரி 8:5 வானத்திலேயும் பூமியிலேயும் தேவர்கள் என்னப்படுகிறவர்கள் உண்டு. இப்படி அநேக தேவர்களும் அநேக கர்த்தாக்களும் உண்டாயிருந்தாலும்,

"விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைப் புசிக்கிற விஷயத்தைப் பற்றி" - ஆதித்திருச்சபையில் இரு பிரிவினர் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைப் புசிக்கிற விஷயத்தில் தர்க்கம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். ஒரு பிரிவினர் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதைப் பயன்படுத்துவது பாவமான செயல் என்று கூறினார்கள். மற்றொரு பிரிவினரோ விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளில் விக்கிரகங்களின் முத்திரை இல்லாவிட்டால் அவற்றைப் பயன்படுத்துவது பாவமல்ல என்று கூறினார்கள்.

"வானத்திலேயும் பூமியிலேயும் தேவர்கள் என்னப்படுகிறவர்கள் உண்டு" - விக்கிரகங்கள் மட்டுமல்லாமல் சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள், நதிகள், சமுத்திரங்கள், மரங்கள், பர்வதங்கள் ஆகிய எல்லாவற்றையுமே புறஜாதியார் தங்கள் தெய்வங்களாக வழிபட்டு வந்தார்கள்.

3. பிதாவாகிய தேவனும் இயேசு கிறிஸ்துவும் – (1.3, 1யோவான் 5.7 ஆதி 1:26)

1கொரி 8:6 பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது, அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம்.

"பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு" - அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது, அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இந்த வாக்கியத்தில் பிதாவாகிய தேவனும், இயேசு கிறிஸ்து என்னும் கர்த்தரும் தனித்தனியாகக் கூறப்பட்டிருக்கிறபடியினால் இவர்கள் இருவருமே தனித்தனி ஆளத்துவம் உடையவர்கள் என்பது தெரியவருகிறது. (யோவான் 1:1; 1யோவான் 5:7)

8 அதிகாரம்

4. அறியாமை அடிமைத்தனத்தை உண்டுபண்ணும் – (ரோமர் 14:1-23)

1கொரி 8:7 ஆகிலும், இந்த அறிவு எல்லாரிடத்திலும் இல்லை. சிலர் இற்றைவரைக்கும் விக்கிரகத்தை ஒரு பொருளென்று எண்ணி விக்கிரகத்துக்குப் படைக்கப்பட்டதைப் புசிக்கிறார்கள்; அவர்களுடைய மனச்சாட்சி பலவீனமாயிருப்பதால் அசுசிப்படுகிறது.

1கொரி 8:8 போஜனமானது நம்மை தேவனுக்கு உகந்தவர்களாக்க மாட்டாது; என்னத்தினாலெனில் புசிப்பதினால் நமக்கு ஒரு மேன்மையுமில்லை, புசியாதிருப்பதினால் நமக்கு ஒரு குறைவுமில்லை.

"அவர்களுடைய மனச்சாட்சி பலவீனமாயிருப்பதால் அசுசிப்படுகிறது" - மெய்த்தேவனைப் பற்றிய ஞானம் பலரிடத்தில் இல்லை. இவர்களுக்கு விக்கிரகங்களைப் பற்றியும் சரியாகத் தெரியவில்லை. இவர்களுடைய மனச்சாட்சி பலவீனமாக இருக்கிறது. புறஜாதி மார்க்கத்திலிருந்து விசுவாசியானவர்களில் சிலர் தங்களுடைய புறஜாதி பழக்கவழக்கங்களை இன்னும் கடைபிடித்து வருகிறார்கள். மெய்தேவனைப் பற்றிய பூரணமான அறிவு இவர்களுக்கு வரும்போது இவர்களிடம் காணப்படும் குறைபாடுகள் எல்லாம் அகன்றுபோகும். (1கொரி 8:9-13; 1கொரி 10:16-33; கொலோ 2:14-17; ரோமர் 14:1-15:3)

மனச்சாட்சி (conscience) - συνείδησις - syneideesis - 4893

பெண்பால் பெயர்சொல் - மனச்சாட்சி - ஒரு குறிப்பிட்ட பழக்கவழக்கத்தைப் பற்றிய எண்ணம். புறஜாதியார்கள் தங்கள் வாழ்நாள் முழுவதிலும் விக்கிரகத்தை ஒரு பொருள் என்று எண்ணினார்கள். அதற்குப் படைக்கப்பட்டதைப் புசித்து வந்தார்கள். விக்கிராராதனையின் ஒரு பகுதியாக இந்தக் காரியங்களையெல்லாம் செய்தார்கள். உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லையென்றும், ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லையென்றும் புறஜாதியார் அறிந்து கொள்ள வேண்டும். இந்த அறிவு வருமளவும் அவர்களுடைய மனச்சாட்சி பலவீனமாகவே இருக்கும்.

5. கிறிஸ்தவ விடுதலையை தவறாக பயன்படுத்துவதும் அதன் விளைவும் – (10:23)

1கொரி 8:9 ஆகிலும் இதைக் குறித்து உங்களுக்கு உண்டாயிருக்கிற அதிகாரம் எவ்விதத்திலும் பலவீனருக்கு தடுக்கலாகாதபடிக்குப் பாருங்கள்.

1கொரி 8:10 எப்படியெனில், அறிவுள்ளவனாகிய உன்னை விக்கிரகக் கோவிலிலே பந்தியிருக்க ஒருவன் கண்டால், பலவீனனாயிருக்கிற அவனுடைய மனச்சாட்சி விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்டவைகளைப் புசிப்பதற்குத் துணிவு கொள்ளுமல்லவா?

1கொரி 8:11 பலவீனமுள்ள சகோதரன் உன் அறிவினிமித்தம் கெட்டுப் போகலாமா? அவனுக்காகக் கிறிஸ்து மரித்தாரே.

1கொரி 8:12 இப்படிச் சகோதரருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்து, பலவீனமுள்ள அவர்களுடைய மனச்சாட்சியைப் புண் படுத்துகிறதினாலே நீங்கள் கிறிஸ்துவுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறீர்கள்.

1கொரி 8:13 ஆதலால் போஜனம் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்கினால், நான் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்காதபடிக்கு, என்றைக்கும் மாம்சம் புசியாதிருப்பேன்.

8 அதிகாரம்

"பலவீனருக்கு தடுக்கல்" - விக்கிரகம் ஒன்றுமில்லையென்று நாம் நினைத்தாலும் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதை புசியாமல் இருப்பது நல்லது. ஏனெனில் நாம் அதைப் புசிக்கும்போது பலவீனனாக இருக்கிற ஒருவன் விக்கிரகாராதனையின் ஒரு பகுதியாக அதைப் புசித்து விடுவான். அவனுக்கு மெய்த்தேவனைப் பற்றிய ஞானம் நம்மிடத்தில் இருப்பது போன்று இருப்பதில்லை. நாம் விக்கிரகம் ஒன்று இல்லையென்று நினைக்கிறோம். ஆனால் நாம் விக்கிரகத்திற்குப் படைக்கப்பட்டதைப் புசிப்பதைப் பார்த்து அந்த விக்கிரகத்தை ஒரு பொருளென்று எண்ணி விக்கிரகாராதனையின் ஒரு பகுதியாகப் புசிப்பான். விசுவாசத்திலும் மனச்சாட்சியிலும் பலவீனமாக இருக்கிறவன் இடறிவிழுவான். ஆகையினால் நாம் பலவீனருக்குத் தடுக்கலாக ஆகக்கூடாது. (1கொரி 8:9-13)

பலவீனம் (weak) - ἀσθενής - asthenees - 772

பெலனற்ற வியாதியுள்ள வியாதிப்பட்ட பலவீனமுள்ள பிணியாயுள்ள, பலனற்ற (Without strength) (ரோமர் 5:6) (weak) (மத் 26:41; மாற்கு 14:38; 1கொரி 1:27; 1கொரி 4:10 1கொரி 8:7,10 1கொரி 9:22; 1கொரி 11:30; 2கொரி 10:10; கலா 4:9; 1தெச 5:14; 1பேதுரு 3:7), (weakness) (1கொரி 1:25 எபி 7:18), (feeble) (1கொரி 12:22); (impotent) (அப் 4:9); (sick) (மத் 25:39,43,44; லூக்கா 10:9; அப் 5:15-16) - இந்த வார்த்தை பல இடங்களில் வியாதியைக் குறித்தாலும், இந்த வசனத்தில் விசுவாசத்தில் காணப்படும் பலவீனத்தையே குறிக்கிறது.

துணிவுகொள் (emboldened) οἰκοδομέω oikodomeoo 3618

வினைச்சொல் - பக்தி, விருத்தியடை, துணிவுகொள், கட்டு (to build up) (1கொரி 8:1) - பலவீனன் பலவானுடைய முன்மாதிரியைப் பின்பற்றுவான். கிறிஸ்தவர்களுக்கு உண்டாயிருக்கிற அதிகாரத்தின் மூலமாக அவர்களுக்கு ஒரு விடுதலை கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த விடுதலையை மனச்சாட்சியில் பலவீனமானவன் பின்பற்றி துணிவு கொண்டு இடறிவிழுந்து அழிந்து போகிறான் (1கொரி 8:1)

கெட்டுப்போதல் (perish) - ἀπόλλυμι - apollymi - 622

வினைச்சொல் - கொலை செய், அழி, கெடு, கொல், சங்கரி (to destroy, perish, be lost) (மத் 10:28; யோவான் 3:16; யோவான் 6:12; யோவான் 17:12; 2கொரி 4:3; மாற்கு 8:35)

"நீங்கள் கிறிஸ்துவுக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்கிறீர்கள்" - ஒருவன் கெட்டுப் போவதற்கு நாம் காரணமாக இருந்தால் இயேசு கிறிஸ்துவிற்கு எதிராக நாம் பாவம் செய்கிறோம். கல்வாரி சிலுவையிலே பாவிகளை இரட்சிப்பதற்காக இயேசு கிறிஸ்து மரித்தார். மற்றவர்கள் கெட்டுப்போவதற்கு நாம் காரணமாக இருந்தால் தேவனுடைய சித்தத்திற்கு எதிர்த்து நிற்கிறோம்.

புண்படுத்து (wound) - τύπτω - typtoo - 5180

வினைச்சொல் - அடி, அறை (to strike or smite the heart) (1கொரி 8:12); (to beat) (லூக்கா 12:45, லூக்கா 22:64; அப் 18:17, அப் 21:32); (to smite) (மத் 24:49; மத் 27:30; மாற்கு 15:19, லூக்கா 6:29; லூக்கா 18:13, லூக்கா 23:48; அப் 23:2-3)

இடறல் உண்டாக்குதல் (offend) - σκανδαλίζω - skandalizoo - 4624

வினைச்சொல் - இடறலடை, இடறலுண்டாக்கு - ஒருவனை அழிப்பதற்காக அவனுக்கு முன்பு ஒரு கண்ணியை வைத்தல். (1கொரி 8:13 ரோமர் 14:21; 2கொரி 11:29, மத் 5:29-30; மத் 18:6-9)

I கொரிந்தியர் - தொகுப்புரை

9 அதிகாரம்

VI. பவுலைப் பற்றிய விவாதங்களுக்கு பவுலின் மாறுத்தரம் - (9:1-27)

1. பவுலின் அப்போஸ்தல ஊழியம் - (2கொரி 7)

1கொரி 9:1 நான் அப்போஸ்தலனல்லவா? நான் சுயாதீனனல்லவா? நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நான் தரிசிக்கவில்லையா? கர்த்தருக்குள் நீங்கள் என் கிரியையாயிருக்கிறீர்களல்லவா?

1கொரி 9:2 நான் மற்றவர்களுக்கு அப்போஸ்தலனாயிரா விட்டாலும் உங்களுக்கல்லவோ அப்போஸ்தலனாயிருக்கிறேன்; கர்த்தருக்குள் நீங்கள் என் அப்போஸ்தல ஊழியத்திற்கு முத்திரையாயிருக்கிறீர்களே.

"நான் அப்போஸ்தலனல்லவா?" கொரிந்து சபையில் உள்ளவர்களில் சிலர் பவுலை அப்போஸ்தலராக அங்கீகரிக்கவில்லை (1கொரி 9:1-3)

பவுலின் அப்போஸ்தல ஊழியத்தை நிரூபிக்கும் காரியங்கள்

1 தான் ஒரு அப்போஸ்தலன் என்று அறிவிக்கிறார் (1கொரி 9:1)

2 மார்க்கப் பிரகாரமான எல்லா அடிமைத்தனத்திற்கும் உலகத்தின் அடிமைத்தனத்திற்கும் தான் விடுவிக்கப்பட்டு, அப்போஸ்தல ஊழியத்திற்குத் தன்னை முழுவதுமாக அர்ப்பணித்திருப்பதாகக் கூறுகிறார் (1கொரி 9:1)

3 இயேசு கிறிஸ்துவைத் தரிசித்தார் (1கொரி 9:1, 1கொரி 15:8)

4 கொரிந்து சபை ஸ்தாபிக்கப்பட்டதும் புறஜாதியார் இரட்சிக்கப்பட்டு இந்த சபையில் சேர்க்கப்பட்டதும் பவுலின் அப்போஸ்தல ஊழியத்தினால் நடைபெற்ற காரியங்களாகும் (1கொரி 9:1-2; அப 18)

5. பிரசங்கம் பண்ணுவதற்காக பவுல் விசேஷித்த விதமாகத் தன்னை பிரதிஷ்டை பண்ணியிருக்கிறார் (1கொரி 9:3-6)

6 சம்பளம் எதுவும் பெற்றுக் கொள்ளாமல் அப்போஸ்தல ஊழியத்தைச் செய்வதற்குப் பவுல் தன்னை ஒப்புக்கொடுத்திருக்கிறார் (1கொரி 9:7-15)

7 பவுலுக்கு உக்கிராண உத்தியோகம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. (1கொரி 9:16-18)

8 அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு பவுல் தன்னைத்தானே எல்லோருக்கும் அடிமையாக்கினார் (1கொரி 9:19-23)

9 கிறிஸ்தவ ஓட்டத்திற்கும், அப்போஸ்தல ஊழியத்திற்கும் பவுலிடம் தகுதி காணப்பட்டது. (1கொரி 9:24-27)

மேலே கூறியிருக்கும் காரியங்களைக் கூறி பவுல் தன்னை அப்போஸ்தலனாகக் கொரிந்தியருக்கு நிரூபித்துக் காண்பிக்கிறார்

முத்திரை (seal) - σφραγίς - sphragis - 4973

பெண்பால் பெயர்ச்சொல் - முத்திரை, முத்திரை மோதிரம். கிரேக்க தேசத்தில் ராஜாவின் அதிகாரம் பெற்றிருக்கிறவர்கள் ராஜமுத்திரையை உடைய முத்திரை மோதிரம் வைத்திருப்பார்கள். இது ராஜாங்கத்தின் அதிகாரத்தைக் குறிப்பிடும். கொரிந்தியர் இரட்சிக்கப்பட்டிருப்பது பவுலின் அப்போஸ்தல ஊழியத்திற்கு முத்திரை மோதிரம் போன்று அடையாளமாயிருக்கிறது.

I கொரிந்தியர் - தொகுப்புரை

9 அதிகாரம்

2. மற்றவர்களைப் போல் ஜீவிக்க பவுலுக்கு அதிகாரம் உண்டு

1கொரி 9:3 என்னை நியாயம் விசாரிக்கிறவர்களுக்கு நான் சொல்லுகிற மாறுத்தரமாவது.

1கொரி 9:4 புசிக்கவும் குடிக்கவும் எங்களுக்கு அதிகாரமில்லையா?

1கொரி 9:5 மற்ற அப்போஸ்தலரும் கர்த்தருடைய சகோதரரும், கேபாவும் செய்கிறதுபோல, மனைவியாகிய ஒரு சகோதரியைக் கூட்டிக்கொண்டு திரிய எங்களுக்கும் அதிகாரமில்லையா?

1கொரி 9:6 அல்லது, கைத்தொழில் செய்யாதிருக்கிறதற்கு எனக்கும் பானபாவுக்கும் மாத்திரந்தானா அதிகாரமில்லை?

1கொரி 9:7 எவன் தன் சொந்தப் பணத்தைச் செலவழித்து, தண்டிலே சேவகம் பண்ணுவான்? எவன் திராட்சத் தோட்டத்தை உண்டாக்கி, அதின் கனியிலே புசியாதிருப்பான்? எவன் மந்தையை மேய்த்து, அதின் பாலைச் சாப்பிடாதிருப்பான்?

1கொரி 9:8 இவைகளை மனுஷ வழக்கத்தின்படி சொல்லுகிறேனோ? நியாயப்பிரமாணமும் இவைகளைச் சொல்லுகிறதில்லையா?

"புசிக்கவும் குடிக்கவும் எங்களுக்கு அதிகாரமில்லையா?" பவுல் கொரிந்து சபையை ஸ்தாபித்தவர். கொரிந்து சபை பவுலைப் போஷிக்க வேண்டும். மற்றவர்கள் கொரிந்துசபையின் ஆதரவில் ஜீவிக்கிறார்கள். பவுலுக்கு அவர்களுடைய ஆதரவில் ஜீவிக்கக்கூடிய உரிமை இருந்தாலும் மற்றவர்களைப் போன்று பவுல் இந்த உரிமையைப் பயன்படுத்தவில்லை (1கொரி 9:12-15).

"மனைவியாகிய ஒரு சகோதரியைக் கூட்டிக் கொண்டு திரிய எங்களுக்கும் அதிகாரமில்லையா?" கர்த்தருடைய ஊழியக்காரனாகிய பேதுரு திருமணம் செய்திருக்கிறான். மற்ற அப்போஸ்தலர்களும் திருமணம் செய்திருக்கிறார்கள். ஆனால் பவுலோ தன்னுடைய சரீரத்தைக் கட்டுப்படுத்தி கர்த்தருடைய ஊழியத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும் என்பதற்காகத் திருமணம் செய்து கொள்ளாமல் இருக்கிறார். ஆனபோதிலும் கொரிந்தியர் பவுலைக் குறித்து விவாதம் பண்ணுகிறார்கள் (1கொரி 9:3-6). திருமணம் செய்து கொள்ள பவுலுக்கு அனுமதியுள்ளது. ஆயினும் அவர்கள் நிமித்தமாகவே பவுல் அந்த அனுமதியைப் பயன்படுத்தாமல் திருமணம் செய்து கொள்ளாமல் இருக்கிறார்.

1கொரிந்தியர் 9:6 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் சத்தியங்கள்

1. பவுலைப்போன்று பர்னபாவும் சபையால் போஷிக்கப்படாமல் கைத்தொழில் செய்து தன்னைப் போஷித்துக் கொள்கிறான் (அப் 4:36-37)
2. அப்போஸ்தலர்களைப் பொதுவாகச் சபைகளே போஷிக்க வேண்டும். அவர்கள் உலகப்பிரகாரமான வேலைகளைத் தங்களுடைய போஜனத்திற்காகச் செய்ய வேண்டியதில்லை.
3. பவுலும், பர்னபாவும் கூடாரம் பின்னும் தொழில் செய்து தங்களைப் போஷித்துக் கொண்டார்கள்.
4. கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு யாதொரு தடையும் உண்டாகாதபடிக்கு சில இடங்களில் பவுலும் பர்னபாவும் கைத்தொழில் செய்து தங்களைப் போஷித்துக் கொண்டார்கள் (1கொரி 9:12-15)

சொந்தப்பணம் (charge) - ὀψώνιον - opsoomon 3800

பல் வேறுபாடற்ற பொதுச்சொல் - சம்பளம், பணம் - போர்வீரனுக்குக் கொடுக்கப்படும் சம்பளம். (Wages) (லூக்கா 3:14; ரோமர் 6:23; 2கொரி 11:8)

I கொரிந்தியர் - தொகுப்புரை

9 அதிகாரம்

3. மற்றவர்களைப் போன்று சுவிசேஷத்தினால் பிழைப்பு நடத்த பவுலுக்கு அதிகாரம் உண்டு

1கொரி 9:9 போரடிக்கிற மாட்டை வாய்கட்டாயாக என்று மோசேயின் பிரமாணத்திலே எழுதியிருக்கிறதே. தேவன் மாடுகளுக்காகவே கவலையாயிருக்கிறாரோ?

1கொரி 9:10 நமக்காகத்தான் இதைச் சொல்லுகிறாரோ? உழுகிறவன் நம்பிக்கையோடே உழவும், போரடிக்கிறவன் தான் நம்புகிறதில் பங்கடைவேன் என்கிற நம்பிக்கையோடே போரடிக்கவும் வேண்டியதே. ஆகையால் அது நமக்காகவே எழுதியிருக்கிறது.

1கொரி 9:11 நாங்கள் உங்களுக்கு ஞானநன்மைகளை விதைத்திருக்க, உங்கள் சரீரநன்மைகளை அறுத்தால் அது பெரிய காரியமா?

"போரடிக்கிற மாட்டை வாய்கட்டாயாக" - உபா 25:4 ஆவது வசனம் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. 1 தீமோ 5:18

"உழுகிறவன் நம்பிக்கையோடே உழவும், போரடிக்கிறவன் தான் நம்புகிறதில் பங்கடைவேன் என்கிற நம்பிக்கையோடே போரடிக்கவும் வேண்டியதே" ஒவ்வொருவரும் தங்களுடைய உழைப்பின் பலனைப் பெற்றுக் கொள்ள வேண்டும் 1கொரி 9:7-11

ஞானநன்மைகள் (spiritual things) - πνευματικός - pneumatikos - 4152

பொருள் - ஆவிக்குரிய, ஞான, ஆவிக்கேற்ற 1கொரி 12:1; ரோமர் 7:14

சரீரநன்மைகள் (carnal things) - σαρκικός - sarkikos - 4559

பொருள் - மாம்சத்துக்குரிய, சரீர, மாம்ச (ரோமர் 7:14)

4. பவுல் இந்த அதிகாரத்தைச் செலுத்தவில்லை

1கொரி 9:12 மற்றவர்கள் உங்களிடத்திலே இந்த அதிகாரத்தைச் செலுத்தினால், அவர்களிலும் நாங்கள் அதிகமாய்ச் செலுத்தலாமல்லவா? அப்படியிருந்தும், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு யாதொரு தடையும் உண்டாகாதபடிக்கு, நாங்கள் இந்த அதிகாரத்தைச் செலுத்தாமல் எல்லாப் பாடும்படுகிறோம்.

1கொரி 9:13 ஆசாரிய ஊழியஞ் செய்கிறவர்கள் தேவாலயத்திற்குரியவைகளில் புசிக்கிறார்களென்றும், பலிபீடத்தை அடுத்துப் பணிவிடை செய்கிறவர்களுக்குப் பலிபீடத்திலுள்ளவைகளில் பங்கு உண்டென்றும் அறியீர்களா?

1கொரி 9:14 அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினால் பிழைப்பு உண்டாக வேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்.

1கொரி 9:15 அப்படியிருந்தும், நான் இவைகளில் ஒன்றையும் அநுபவிக்கவில்லை. இப்படி எனக்கு நடக்க வேண்டுமென்று இவைகளை நான் எழுதுகிறதுமில்லை. என் மேன்மை பாராட்டலை ஒருவன் அவத்தமாக்குகிறதைப் பார்க்கிலும் சாகிறது எனக்கு நலமாயிருக்கும்.

"நாங்கள் இந்த அதிகாரத்தைச் செலுத்தாமல் எல்லாப் பாடும்படுகிறோம்" - கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு யாதொரு தடையும் உண்டாகக்கூடாது என்னும் எண்ணம் பவுலின் மனதில் ஆழமாகப் பதிந்திருக்கிறது. ஆகையினால் பவுல் கொரிந்து சபையில் அதிகாரத்தைப் பயன்படுத்தாமல் பாடுகளை அனுபவிக்கிறார்.

"ஆசாரிய ஊழியஞ்செய்கிறவர்கள் தேவாலயத்திற்குரியவைகளில் புசிக்கிறார்கள்" ஆசாரிய ஊழியம் செய்கிறவர்கள் தங்களுடைய ஜீவனைத் தேவனுடைய ஊழியங்களுக்காக அர்ப்பணித்திருக்கிறவர்கள். தேவாலயத்தின் காரியங்களுக்காக இவர்கள் முழுமையாக ஊழியம் செய்கிறார்கள். இவர்களைத் தேவாலயம் போஷிக்க வேண்டும். இவர்கள் தேவாலயத்திற்குரியவைகளைப் புசிப்பார்கள். அதுபோலவே பலிபீடத்தை அடுத்துப் பணிவிடை செய்கிறவர்களுக்குப் பலிபீடத்திலுள்ளவைகளில் பங்கு உண்டு. இது தேவனால் நியமிக்கப்பட்ட ஒழுங்கு. இதுபோலவே சுவிசேஷ ஊழியம் செய்கிறவர்களைச் சுவிசேஷத்தைப் பெற்றுக் கொள்கிறவர்கள் போஷிக்க வேண்டும். இதுவும் தேவனுடைய நியமம் ஆகும். (1கொரி 9:11-15; கலா 6:6; எபி 7:1-4; லூக்கா 10:7; மத் 10:10)

9 அதிகாரம்

5. சுவிசேஷத்தை பிரசங்கிப்பது பவுல்மேல் விழுந்த கடமை

1கொரி 9:16 சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மை பாராட்ட எனக்கு இடமில்லை. அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ.

1கொரி 9:17 நான் உற்சாகமாய் அப்படிச் செய்தால் எனக்குப் பலன் உண்டு; உற்சாகமில்லாதவனாய்ச் செய்தாலும், உக்கிரான உத்தியோகம் எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதே.

1கொரி 9:18 ஆதலால் எனக்குப் பலன் என்ன? நான் சுவிசேஷத்தை பிரசங்கிக்கையில் அதைப்பற்றி எனக்கு உண்டாயிருக்கிற அதிகாரத்தை முற்றிலும் செலுத்தாமல், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைச் செலவில்லாமல் ஸ்தாபிப்பதே எனக்குப் பலன்.

"சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ" - சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது பவுலின் கடமை. இந்த ஊழியத்தைச் செய்வதற்காகப் பவுல் மேன்மை பாராட்ட முடியாது. (1கொரி 9:15)

"நான் உற்சாகமாய் அப்படிச் செய்தால் எனக்குப் பலன் உண்டு" - தேவனோடு மனப்பூர்வமாக ஒத்துழைத்து அப்போஸ்தல ஊழியத்தைச் செய்ய வேண்டுமென்று பவுல் விரும்புகிறார் (1கொரி 9:25). தன்னிடத்தில் எதிர்பார்க்கப்படும் கடமை என்று ஊழியம் செய்யாமல் ஊழியக்காரர்கள் மனப்பூர்வமாகவும், உற்சாகமாகவும் ஊழியம் செய்ய வேண்டும். தன்னிடம் எதிர்பார்க்கப்படும் அளவிற்கு அதிகமாகவே ஊழியக்காரர்கள் கர்த்தருக்காக ஊழியம் செய்ய வேண்டும். இப்படிப்பட்டவர்களுக்குத் தேவன் பலனளிப்பார்.

உக்கிரானம் (dispensation) 3622

οἰκονομία oikonomia ஒய்கொனோமியா

பெண்பால் பெயர்ச்சொல் - உக்கிரானம், உக்கிரான உத்தியோகம் (1கொரி 9:17; லூக்கா 16:2-4; எபே 1:10; எபே 3:2; கொலோ 1:25)

6. ஊழியம் செய்வதில் பவுலின் கொள்கை

1கொரி 9:19 நான் ஒருவருக்கும் அடிமைப்படாதவனாயிருந்தும், நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு, என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன்.

1கொரி 9:20 யூதரை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு யூதருக்கு யூதனைப் போலவும், நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவர்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவனைப் போலவுமானேன்.

1கொரி 9:21 நியாயப்பிரமாணமில்லாதவர்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு அவர்களுக்கு நியாயப்பிரமாணம் இல்லாதவனைப் போலவுமானேன். அப்படியிருந்தும் நான் தேவனுக்கு முன்பாக நியாயப்பிரமாணமில்லாதவனாயிராமல் கிறிஸ்துவின் பிரமாணத்துக்குள்ளானவனாயிருக்கிறேன்.

1கொரி 9:22 பலவீனரை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்குப் பலவீனருக்குப் பலவீனனைப் போலானேன்; எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்.

1கொரி 9:23 சுவிசேஷத்தில் நான் உடன் பங்காளியாகும்படிக்கு, அதினிமித்தம் இப்படிச் செய்கிறேன்.

"என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன்" - பவுல் ஒருவனுக்கும் அடிமைப்பட்டவரல்ல. ஆனாலும் எல்லா ஜனங்களையும் கிறிஸ்துவிற்கு ஆதாயப்படுத்த விரும்புகிறார். இதற்காக அவர் தன்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கி இருக்கிறார்.

9 அதிகாரம்

"யூதரை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு யூதருக்கு யூதனைப் போலவும்" - (அப் 16:3; அப் 21:26)

"அவர்களுக்கு நியாயப்பிரமாணம் இல்லாதவனைப் போலவுமானேன்" - கிறிஸ்துவின் பிரமாணத்திற்கு பவுல் உட்பட்டவராக இருக்கிறார். ஜனங்களை விட்டு வித்தியாசமாக பவுல் ஜீவிக்கவில்லை. மற்றவர்களைக் கிறிஸ்துவிற்காக ஆதாயப்படுத்தும் பிரகாரமாக அவர்களைப் போன்றே ஜீவிக்கிறார். (கலா 1:16; கலா 2:2-21)

"பலவீனருக்குப் பலவீனனைப் போலானேன்" - விசுவாசத்தில் பலவீனமாக இருக்கிறவர்களுக்குப் பவுல் தடைக்கல்லாக இருக்கவில்லை. அவர்களுடைய பலவீனமான மனச்சாட்சியைக் குற்றப்படுத்தும் காரியங்கள் எதையும் பவுல் செய்யாமல் பலவீனர் மத்தியிலே பலவீனரைப்போலவே இருந்தார். இவர்களையும் இயேசு கிறிஸ்துவிற்காக ஆதாயப்படுத்த வேண்டும் என்பதே பவுலின் நோக்கம். (ரோமர் 14:1-15:3; 1கொரி 8:1-13; 1கொரி 10:16-3:1)

"எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்" - பவுல் ஜனங்களை இரட்சிப்பதற்காகத் தன்னால் முடிந்த எல்லாவற்றையும் செய்கிறார். அவர்களைப் போலவே ஆனார். ஆனால் அவர்களுடைய பாவங்களில் பவுல் அவர்களோடு உடன்படவில்லை. (1கொரி 9:22-23)

7. வெகுமதிக்கு நிபந்தனைகள்

1கொரி 9:24 பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும், ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். 1கொரி 9:25 பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்.

1கொரி 9:26 ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்; ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணேன்.

1கொரி 9:27 மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்.

நாம் இரட்சிக்கப்படுவதற்குச் செய்ய வேண்டிய காரியங்கள்

1. பந்தயத்தைப் பெற்றுக் கொள்ளத் தக்கதாக ஓடவேண்டும். (1கொரி 9:24; எபி 12:1-3; கலா 2:2; கலா 5:7; பிலி 2:16; பிலி 3:14)

2. எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாய் இருக்க வேண்டும். (1கொரி 9:25; 2பேதுரு 1:4-10)

3. ஜெயம் பெறுவோம் என்னும் நம்பிக்கையோடு யுத்தம்பண்ண வேண்டும். (1கொரி 9:26; 1கொரி 4:9; 1கொரி 15:32; 1தீமோ 6:12; 2தீமோ 4:7)

4. சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்த வேண்டும். (1கொரி 9:27; ரோமர் 6:14-23; ரோமர் 8:12-13; ரோமர் 12:1-2; 1கொரி 3:16-17)

"நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்" - உலகப் பிரகாரமாக போராடி வெற்றி பெறுகிறவர்கள் கிரீடங்களைப் பெறுவார்கள். அது அழிவுள்ள கிரீடம். விசுவாசிகளாகிய நமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் கிரீடம் அழிவில்லாத கிரீடமாகும்.

"ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்; ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணேன்" நமது கிறிஸ்தவ ஜீவியத்தில் ஒரு இலக்கை நிர்ணயம் பண்ணி ஜீவிக்க வேண்டும். என்ன செய்கிறோம் என்பது புரியாமல், எங்கு போகிறோம் என்று தெரியாமல் நிச்சயமில்லாதவர்களாக இருக்கக்கூடாது.

9 அதிகாரம்

"என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்" - இதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்க வார்த்தை "ஹுபோபைஸோ" (hypopiazoo) என்பதாகும். இதற்கு ஒருவனைக் கண்ணுக்குக் கீழே அடித்தல், நைப்புடைத்தல் என்று பொருள் (1 கொரி 9:27; லூக்கா 18:5). தன்னுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் ஜெயம் பெற வேண்டும் என்பதற்காக பவுல் தன்னுடைய சரீரத்தை ஒடுக்கித் தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறார் (1 கொரி 9:26,27). தன்னுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் தனது சரீரமே தனக்கு விரோதியாக இருப்பதாகக் காண்கிறார். தன்னுடைய சரீரத்தைத் தன்னுடைய ஆத்துமாவிற்கு அடிமைப் படுத்துகிறார் (ரோமர் 8:12,13; கொலோ 3:5-10). தன்னுடைய சரீரத்தைத் தொடர்ந்து ஒடுக்கிக் கீழ்ப்படுத்திக் கொண்டே இருக்கிறார். இதனால் மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற பவுல் தன்னைக் காத்துக் கொள்கிறார். தன்னுடைய சரீரத்தைப் பவுல் அடக்கவில்லையென்றால் அவர் ஆகாதவனாகப் போய்விடுவார்.

கீழ்ப்படுத்து (keep under) - ὑπωπιάζω - hypopiazoo - 5299

வினைச்சொல் - அடக்கு, கீழ்ப்படுத்து

ஆகாதவன் (castaway) - ἀδόκιμος - adokimos - 96

பெயரடை - தேர்வில் தோற்றுப்போகுதல், ஆகாதவன், தகாத, பிரயோஜனமில்லாத (Reprobate) (ரோமர் 1:28; 2 கொரி 13:5,6,7; 2 தீமோ 3:8; தீத்து 1:16); (rejected) (எபி 6:8); (castaway) (1 கொரி 9:27) - கிறிஸ்துவற்றவன், புறக்கணிக்கப்பட்டவன்

10 அதிகாரம்

ஆண்பால் பெயர்ச்சொல் - சொரூபம் மாதிரிநிரூபம், திருஷ்டாந்தம் (பிலி 3:17) - வனாந்தரத்தில பொல்லாங்கானவைகளை இச்சித்த இஸ்ரவேலர்கள் தண்டிக்கப்பட்டார்கள் அதுபோலவே பின்வாங்கிபோன விசுவாசிகளுக்கும் தண்டனை கிடைக்கும். (ரோமர் 2:11-16 எபி 4:1-11; எபி 10:26-29)

இஸ்ரவேலரின் பாவங்கள்

1 பொல்லாங்கானவைகளை இச்சிப்பது (1கொரி 10:6; எண 11:4-15 சங் 106:14; கலா 5:19-21 2கொரி 6:9-11; ரோமர் 1:29-32 கொலோ 3:5-10; மாற்கு 7:19-21)

2 விக்கிரகாராதனை (1கொரி 10:7 யாத் 32:6-25; கலா 5:19-21 எபே 5:5; கொலோ 3:5 1கொரி 6:9)

3 வேசித்தனமும், விபச்சாரமும் (1கொரி 10:8, எண 25:1-9; கலா 5:19-21; 1கொரி 6:9-11 கொலோ 3:5

4 தேவனைப் பரீட்சை பார்ப்பது (1கொரி 10:9, யாத் 17:2, 7; எண 14:22, எண 21:4-10; உபா 6:16, சங் 78:17-18,41, 56; சங் 95:8 9 சங் 106:14

5 முறுமுறுப்பு (1கொரி 10:10; யாத் 15:24; யாத் 16:2 12; யாத் 17:3; எண 14:2,27 29,36; எண 16:11, 41 எண 17:5, 10, உபா 1:27; பிலி 2:14)

"அவாகள் இச்சித்தது போல" - (எண 11:4 15, சங் 106:14)

"ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து விளையாட எழுந்திருந்தார்கள்" - யாத் 32:6 ஆவது வசனம் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"ஒரே நாளில் இருபத்துமூவாயிரம் பேர் விழுந்துபோனார்கள்" - இவர்கள் வாதையால் மாண்டவர்கள். இதுபோக இஸ்ரவேலின் தலைவர்கள் அநேகர் கர்த்தருடைய சந்நிதானத்திற்கு முன்பாகத் தூக்கிப் போடப்பட்டார்கள் எல்லாம் சேர்ந்து 24,000 பேர் விழுந்துபோனார்கள் (எண் 25:1-9)

"கிறிஸ்து" (Christ) - கிரேக்க மூலபாஷை பதிப்புகள் சிலவற்றில் இந்த வார்த்தை "கர்த்தர்" என்றிருக்கிறது பழைய ஏற்பாட்டில் தேவனைக் குறிப்பதற்கு கர்த்தர் யெகோவா என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (ஆதி 19:24, இஸ்ரவேலரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவருமே விடுவித்து வழிநடத்தி வந்தார்கள் (மீகா 5:2; யோவான் 1:1-2; எபி 1:8; வெளி 1:8-11)

தேவனைப் பரீட்சை பார்க்கும் வழிகள்

1 முறுமுறுப்பு (யாத் 17:2 1கொரி 10:6

2 அவிசுவாசம் (யாத் 17:7; எபி 4:1-11

3 கலகம் (எண் 14:22; எண் 21:1-9

4 தேவனுக்கு எரிச்சலமூட்டுவது (சங் 78:17-18, 56)

5. பின்மாற்றம். (சங் 78:41, 56

6 இருதயத்தைக் கடினப்படுத்துவது (சங் 95:8-9)

7 இச்சையும், பாவமும் (சங் 106:14, யாத் 32)

8 விக்கிரகாராதனை (1கொரி 10:18-22, கொரி 10:6)

"பாம்புகளால் அழிக்கப்பட்டார்கள்" (எண 21:5-9; யோவான் 3:14

"அவர்களில் சிலர் முறுமுறுத்தார்கள்" - (1கொரி 10:6)

"சங்காரக்காரன்" - இஸ்ரவேல் ஜனங்களுக்கு வனாந்தரத்தில் பல வாதைகள் உண்டாயிற்று யாத் 12, 2சாமு 24:16; ஏசா 37:36 ஆகிய வசனப் பகுதிகளில நாம் வாசிப்பதுபோல இந்த வாதைகளுக்குச் சங்காரத்தூதனே காரணமாய் இருக்கிறான்

10 அதிகாரம்

VII. இரண்டு காலங்கள் - (10:1-33)

1. பிரமாணத்தின் காலம்

(1) இஸ்ரவேலின் ஐந்து ஆசீர்வாதங்கள்

1கொரி 10:1 இப்படியிருக்க சகோதரரே, நீங்கள் எவைகளை அறிய வேண்டுமென்றிருக்கிறேனென்றால் நம்முடைய பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள், எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்துவந்தார்கள்

1கொரி 10:2 எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்

1கொரி 10:3 எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தைப் புசித்தார்கள்

1கொரி 10:4 எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள் எப்படியெனில், அவர்களோடே கூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக் கன்மலை கிறிஸ்துவே

"நீங்கள் [redacted] அறியவேண்டுமென்றிருக்கிறேனென்றால்" கொரிந்தியர்கள் மனந்திருந்தி இருக்கிறார்கள் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள் கிறிஸ்தவ நியமங்களைக் கைக்கொள்கிறார்கள் ஆகையினால், தங்களுடைய இரட்சிப்பு பாதுகாப்பானது என்று நினைக்கிறார்கள் கிறிஸ்துவை விட்டு, எந்தக் காரியமும் தங்களைப் பிரிக்காது என்பது அவர்களுடைய நம்பிக்கை. விக்கிரகாராதனையின் பந்திகளில் பங்கு பெற்றாலும் தங்கள் இரட்சிப்பிற்கு ஒன்றும் பாதிப்பில்லை என்பது அவர்களுடைய எண்ணம். (1கொரி 8:4-13; 1கொரி 10:16-33)

இப்படி அவர்கள் எண்ணுவதினால்தான் பவுல் 1கொரி 9:27 ஆவது வசனத்தில் இவ்வாறு எழுதியிருக்கிறார் "மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்"

கிறிஸ்தவர்களைப் போலவே பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வனாந்தரத்தில் பிரயாணம் செய்த இஸ்ரவேலர்களுக்கும், சில ஒழுங்குகள் நியமிக்கப்பட்டிருந்தது கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானம் பெற்று கர்த்தருடைய பந்தியில் பங்குபெறுகிறார்கள் (1கொரி 10:2,3) வனாந்தரத்திலே இஸ்ரவேல் ஜனங்கள் ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்து, மன்னாவைப் புசித்தார்கள் அவர்கள் விக்கிரகாராதனைக்காரருடைய பந்திகளில் போஜனம் பண்ணி பாவம் செய்த போது தேவன் அவர்களை விலக்கி வைத்து அழித்துப் போட்டார் (1கொரி 10:5-11) கிறிஸ்தவர்களும் தங்களுடைய ஜீவியத்தில் தொடர்ந்து பாவம் செய்யும்போது தேவன் இயேசு கிறிஸ்துவிடமிருந்து விசுவாசிகளைப் பிரித்துவிடுவார் என்று பவுல் எச்சரித்து கூறுகிறார் (1கொரி 10:11-14; 1கொரி 6:9-11; கலா 5:19-21; ரோமர் 8:12-13; எபி 3:6,12-14; எபி 6:4-11; எபி 10:26-38)

"மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள்" - வனாந்தரத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் மேகத்துக்குக் கீழாக இருந்தபோது தெய்வீக பிரசன்னத்தில் இருந்தார்கள் பவுல் இதை "மேகத்தினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்" (1கொரி 10:2) என்று குறிப்பிடுகிறார்

கீழே (under) - ὑπό - hypo - 5259

முன்னிடைச்சொல் - ஆல், இல்

"எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்துவந்தார்கள்" - பவுல் இதை சமுத்திரத்தினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள் என்று குறிப்பிடுகிறார் (1கொரி 10:2) மேகத்தினாலும், சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்படுவது தண்ணீர் ஞானஸ்நானத்திற்கும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்திற்கும் ஒப்பிட்டுக் கூறப்பட்டிருக்கிறது. (மத் 3:6)

வழியாய் நடந்து வந்து (passed through) - διά - dia - 1223

10 அதிகாரம்

முன்னிடைச்சொல் - மூலமாக

ஞானம் (spiritual) - πνευματικός - pneumatikos 4152

பொருள் - ஆவிக்குரிய ஞான ஆவிக்கேற்ற (ரோமர் 7:14)

"போஜனம்" (meat) - (சங் 78:24-25 யோவான் 6:31, 33, 48; யாத் 16)

"ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்" - அடிக்கப்பட்ட கன்மலையிலிருந்து புறப்பட்ட தண்ணீர் (யாத் 17:6, எண் 20:11; சங் 78:15)

"அவர்களோடே கூட" (them) - கிரேக்க மூலபாஷை பதிப்புகளில் இதற்கான கிரேக்கச் சொல் இல்லை. வானத்திலிருந்து மன்னா பெய்தது. கன்மலையிலிருந்து வந்த தண்ணீர் அதற்குப் பின்பு நடைபெற்ற அற்புதம். இந்த நிகழ்ச்சியைக் குறிப்பதற்காக "அவர்களோடே கூட" என்னும் வார்த்தை பயன்படுத்தப் பட்டிருக்கலாம். (யாத் 16-17)

(2) இஸ்ரவேலின் ஐந்து சாபங்கள்

1கொரி 10:5 அப்படியிருந்தும் அவர்களில் அதிகமானபேர்களிடத்தில் தேவன் பிரியமாயிருந்ததில்லை. ஆதலால் வனாந்தரத்திலே அவர்கள் அழிக்கப் பட்டார்கள்.

1கொரி 10:6 அவர்கள் இச்சித்தது போல நாமும் பொல்லாங்கானவைகளை இச்சியாதபடிக்கு இவைகள் நமக்குத் திருஷ்டாந்தங்களாயிருக்கிறது.

1கொரி 10:7 ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து விளையாட எழுந்திருந்தார்கள் என்று எழுதியிருக்கிறபடி, அவர்களில் சிலர் விக்கிரகாராதனைக்காரர் ஆனது போல நீங்களும் ஆகாதிருங்கள்.

1கொரி 10:8 அவர்களில் சிலர் வேசித்தனம் பண்ணி, ஒரே நாளில் இருபத்துமூவாயிரம் பேர் விழுந்து போனார்கள்; அதுபோலவே நாமும் வேசித்தனம் பண்ணாதிருப்போமாக.

1கொரி 10:9 அவர்களில் சிலர் கிறிஸ்துவைப் பரீட்சை பார்த்து, பாம்புகளால் அழிக்கப்பட்டார்கள்; அதுபோல நாமும் கிறிஸ்துவைப் பரீட்சைபாராதிருப்போமாக.

1கொரி 10:10 அவர்களில் சிலர் முறுமுறுத்து சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள்; அதுபோலவே நீங்களும் முறுமுறுக்காதிருங்கள்.

1கொரி 10:11 இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்து, உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது.

"அழிக்கப்பட்டார்கள்" (overthrown, Slain) (1கொரி 10:8-10 எண் 11:1-3,34; எண் 14:16, 29-35,37 எண் 16:32,35,49 எண் 25:5-9)

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் தீய திருஷ்டாந்தங்கள்

1. கானானியர் (லேவி 18:2-3 லேவி 20:23)
2. பின்மாறிப்போன இஸ்ரவேல் (2நாளா 30:7; ஏசா 8:11, எரே 16:12, எரே 17:1-2; எசே 20:18, ஓசி 4:9, சக 1:4)
3. அகங்காரமும், இடும்புமுள்ளவன் (நீதி 22:24-25)
4. பரிசேயர் (மத் 23:1-3)
5. புறஜாதியார் (எபே 4:17)
6. வனாந்தரத்தில் இஸ்ரவேலர் (1கொரி 10:6-11)

திருஷ்டாந்தம் (examples) τυπικῶς typikoos 5179

I கொரிந்தியர் - தொகுப்புரை

10 அதிகாரம்

"நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி" - இப்போது விசுவாசிகளாக இருக்கிற நாம் விழுந்து போவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆகையினால் தான் இந்தக் காரியங்கள் நமக்கு எச்சரிப்பாக எழுதப்பட்டிருக்கிறது. நாம் கவனமாக ஜீவிக்கவில்லையென்றால் இஸ்ரவேல் ஜனங்களைப் போல அழிக்கப்பட்டு விடுவோம். இந்த வசனம் பாவம் செய்யும் பாவிகளுக்காக எழுதப்படாமல் பாவம் செய்யும் பரிசுத்தவான்களுக்கு எச்சரிப்பாக எழுதப்பட்டிருக்கிறது.

எச்சரிப்பு - νουθεσία - nouthesia - 3559

பெண்பால் பெயர்ச்சொல் - எச்சரிப்பு, போதனை, புத்திசொல்லுதல் (warning) 1கொரி 10:11; எபே 6:4; தீத்து 3:10

"உலகத்தின் முடிவுகாலம்" - இஸ்ரவேலரின் வனாந்தர பிரயாணம் மோசேயின் ஆரம்ப காலமாகும். நாம் இப்போது உலகத்தின் முடிவு காலத்தில் ஜீவிக்கிறோம். மோசேயின் காலத்தில் நடைபெற்றவை உலகத்தில் முடிவுகாலத்தில் ஜீவிக்கும் நமக்குத் திருஷ்டாந்தமாக எழுதப்பட்டிருக்கிறது.

2. கிருபையின் காலம்

(1) விக்கிரகாராதனை, பெருமை ஆகியவற்றிற்கு எதிராக கிறிஸ்தவருக்கு எச்சரிப்பு

1கொரி 10:12 இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்.

1கொரி 10:13 மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடு கூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.

1கொரி 10:14 ஆகையால் எனக்குப் பிரியமானவர்களே, விக்கிராகாராதனைக்கு விலகி ஓடுங்கள்.

"தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்" - இந்த வசனம் 1கொரி 10:1-12 ஆவது வசனங்களில் கூறப்பட்டிருக்கும் இஸ்ரவேலரின் முன்மாதிரியைப் பின்பற்றும் விசுவாசிகளுக்கும் பின்வாங்கிப்போன விசுவாசிகளுக்கும் எச்சரிப்பாக எழுதப்பட்டிருக்கிறது.

"உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல் சோதனையைத் தாங்கத்தக்கதாக சோதனையோடு கூட அதற்குத் தப்பிக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்" - விசுவாசிகளுக்குச் சோதனை உண்டு. நமக்கு நேரிடும் எல்லாச் சோதனைகளிலும் தேவன் நம்மைக் காத்துக் கொள்ள உண்மையுள்ளவராய் இருக்கிறார். 1கொரி 10:1-12 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் எச்சரிப்புகளுக்கு நாம் கீழ்ப்படியும்போது தேவன் நமக்கு உதவி புரிவார். தேவன் விதிக்கும் நிபந்தனைகளுக்குத் தொடர்ந்து கீழ்ப்படியாமல் ஜீவிப்போருக்குத் தேவனுடைய கிருபை வெளிப்படாது.

நமது விசுவாசத்தில் நாம் உறுதியாய் இருந்து ஜெபத்தில் இடைவிடாமல் தரித்திருந்து தேவனோடு ஐக்கியமாக இருக்க வேண்டும். சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து தேவனைச் சார்ந்திருக்கும் காலம் வரையிலும் மட்டுமே நாம் பரிசுத்தவான்களாகவே இருப்போம். (ஆதி 2:17; ஆதி 3:1-19; உபா 8:1-8; நீதி 1:10-17; நீதி 2:10-16; நீதி 4:14-5; நீதி 5:6-21; நீதி 6:27-28; நீதி 7:7-23; நீதி 9:15-17; நீதி 12:26; நீதி 14:27; நீதி 16:29; நீதி 19:27; நீதி 28:10; ஏசா 33:15-16; மத் 13:22; லூக்கா 8:13; ரோமர் 6:12-23; ரோமர் 8:12-13; ரோமர் 12:21; ரோமர் 14:13-21; 1கொரி 7:5; 1கொரி 8:9-13; 1கொரி 10:1-12; 2கொரி 2:11; 2கொரி 11:3; கலா 5:16-26; எபே 4:27; எபே 6:10-18; 1தீமோ 5:15; 1தீமோ 6:9-17; எபி 3:6,12-14; எபி 6:4-11; எபி 10:26-38; யாக் 1:2-16; யாக் 4:7; 2பேதுரு 2:9, 20-22; 2பேதுரு 3:17; 1யோவான் 2:15-17)

10 அதிகாரம்

சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாமல் தேவனைச் சார்ந்திராமல் ஜீவித்தோம் என்றால் நம்மால் நித்திய மரணத்திலிருந்தும், நித்திய ஆக்கினையிலிருந்தும் தப்பித்துக் கொள்ள முடியாது.

"விக்கிரகாராதனைக்கு விலகி ஓடுங்கள்" - (கலா 5:20; கொலோ 3:5; 1பேதுரு 4:3)

(2) மூன்று ஐக்கியங்கள்

(அ) சபையின் ஐக்கியம்

1கொரி 10:15 உங்களைப் புத்திமான்களென்று எண்ணிப் பேசுகிறேன்; நான் சொல்லுகிறதை நீங்களே நிதானித்துப்பாருங்கள்.

1கொரி 10:16 நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?

1கொரி 10:17 அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்கு பெறுகிறபடியால் அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்.

"நான் சொல்லுகிறதை நீங்களே நிதானித்துப்பாருங்கள்" கொரிந்தியரைப் பவுல் புத்திமான்கள் என்று எண்ணிப் பேசுகிறார். விக்கிரகாராதனையிலிருந்து விலகி ஓட வேண்டியதன் அவசியத்தைப் புத்திமான்கள் அறிந்து வைத்திருப்பார்கள்.

"நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம்... நாம் பிட்கிற அப்பம்" இந்த வாக்கியம் கர்த்தருடைய பந்தியைக் குறிப்பிடுகிறது. (1கொரி 11:23-29)

"அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்கு பெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்" - கர்த்தருடைய பந்தியில் பங்குபெறுகிற எல்லா விசுவாசிகளும் கிறிஸ்துவில் ஒரே மார்க்கத்தாராக இருக்கிறோம். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அங்கம் வகிக்கிறோம். (1கொரி 12:13; கொலோ 1:18,24; எபே 1:20-23; எபே 2:19-22; எபே 4:1-8)

(ஆ) இஸ்ரவேலின் ஐக்கியம்

1கொரி 10:18 மாம்சத்தின்படியான இஸ்ரவேலரைப் பாருங்கள்; பலிகளைப் புசிக்கிறவர்கள் பலிபீடத்தோடே ஐக்கியமாயிருக்கிறார்களல்லவா?

1கொரி 10:19 இப்படியிருக்க, விக்கிரகம் ஒரு பொருளென்றும், விக்கிரகத்துக்குப் படைக்கப்பட்டது ஒரு பொருளென்றும் நான் சொல்லுகிறேனோ?

(இ) புறஜாதியாரின் ஐக்கியம்

1கொரி 10:20 அஞ்ஞானிகள் பலியிடுகிறவைகளை தேவனுக்கு அல்ல, பேய்களுக்கே பலியிடுகிறார்களென்று சொல்லுகிறேன்; நீங்கள் பேய்களோடே ஐக்கியமாயிருக்க எனக்கு மனதில்லை.

"அஞ்ஞானிகள் பலியிடுகிறவைகளை தேவனுக்கு அல்ல பேய்களுக்கே பலியிடுகிறார்கள்" விக்கிரகம் ஒரு பொருளல்ல. விக்கிரகத்திற்குப் படைக்கப்பட்டதும் ஒரு பொருளல்ல. ஆயினும் விக்கிரகத்திற்குப் பலியிடுவது பேய்களுக்குப் பலியிடுவதற்குச் சமம். (1கொரி 10:18-20) விக்கிரகாராதனையில் பங்குபெறுகிறவர்கள் பேய்களோடே ஐக்கியமாக இருக்கிறார்கள். கிறிஸ்துவினிடத்தில் ஐக்கியமாக இருக்கிறவர்கள் விக்கிரகங்களோடும், பேய்களோடும் ஐக்கியமாக இருக்க முடியாது. (1கொரி 10:21)

(3) கிறிஸ்தவருக்கு எச்சரிப்பு

1கொரி 10:21 நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத்திலும் பானம்பண்ணக் கூடாதே; நீங்கள் கர்த்தருடைய போஜனபந்திக்கும் பேய்களுடைய போஜனபந்திக்கும் பங்குள்ளவர்களாயிருக்கக் கூடாதே.

10 அதிகாரம்

1கொரி 10:22 நாம் கர்த்தருக்கு எரிச்சலை மூட்டலாமா? அவரிலும் நாம் பலவான்களா?

நாம் செய்யக்கூடாத இரண்டு காரியங்கள்

1 இரண்டு பாத்திரங்களில் பானம் பண்ணக்கூடாது.

2 இரண்டு போஜன பந்திகளில் போஜனம் பண்ணக்கூடாது.

"நாம் கர்த்தருக்கு எரிச்சலை மூட்டலாமா? அவரிலும் நாம் பலவான்களா?" - தன்னுடைய பாவத்தினால் மனுஷன் கர்த்தருக்கு எரிச்சலை மூட்டுகிறான் (1கொரி 10:9) தம்முடைய ஜனத்திருக்குத் தம்மை அல்லாமல் வேறு தேவன் இருக்கக்கூடாது என்றும், அவர்கள் விக்கிரகங்களோடு ஐக்கியமாக இருக்கக் கூடாது என்றும் பிசாசுகளை ஆராதிக்கக் கூடாது என்றும் தேவன் உறுதியாகக் கட்டளையிட்டிருக்கிறார் கொரிந்தியரில் சிலர் இந்தக் கட்டளையை மீறி நடந்து கொள்கிறார்கள் ஆகையினால் தேவன் இவர்களை நியாயந்தீர்ப்பார் (1கொரி 8:4-13; 1கொரி 10:1-22

(4) கிறிஸ்தவருடைய விடுதலைகள் எப்போதும் ஞானத்தையும் பக்தி விருத்தியையும் உண்டாக்காது - (ரோமர் 14:1-23; 1கொரி 8

1கொரி 10:23 எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது. எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் பக்திவிருத்தியை உண்டாக்காது.

1கொரி 10:24 ஒவ்வொருவனும் தன் சுயபிரயோஜனத்தைத் தேடாமல் பிறனுடைய பிரயோஜனத்தைத் தேடக்கடவன்

"எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு" - ஆனால் எல்லாம் விசுவாசிகளுக்குத் தகுதியாயிராது. எல்லாம் பக்திவிருத்தியையும் உண்டாக்காது. நமக்கு எல்லாவற்றையும் அநுபவிக்க அதிகாரம் இருந்தாலும் மற்றவர்கள் இடறுவதற்கு ஏதுவான காரியங்களையோ மற்றவர்கள் பின்மாறிப்போவதற்கு ஏதுவான காரியங்களையோ செய்யக்கூடாது (1கொரி 10:23-33; 1கொரி 8:4-13; ரோமர் 14-15; கொலோ 2:14-17; 1தீமோ 4.

"ஒவ்வொருவனும் தன் சுயபிரயோஜனத்தைத் தேடாமல், பிறனுடைய பிரயோஜனத்தைத் தேடக்கடவன்" - மற்றவர்களுடைய ஆத்துமா எப்படிப் போனாலும் தனக்குக் கவலையில்லை என்று நினைத்து தன்னை மட்டும் திருப்திப்படுத்தக்கூடாது

(5) கடையில் விற்கப்படுகிற எதையும் வாங்கி புசிக்கலாம்

1கொரி 10:25 கடையிலே விற்கப்படுகிற எதையும் வாங்கிப்புசியுங்கள்; மனச்சாட்சியினிமித்தம் நீங்கள் ஒன்றையும் விசாரிக்க வேண்டியதில்லை

1கொரி 10:26 பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது.

கடைகள் (shambles) - μάκελλον - **makellon** - 3111

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - கடை, இறைச்சிக்கடை, சந்தை (slaughterhouse, market)

"மனச்சாட்சியினிமித்தம் நீங்கள் ஒன்றையும் விசாரிக்க வேண்டியதில்லை" கடையில் விற்கப்படும் பொருள் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதா என்று அவர்களிடம் கேள்விக் கேட்க வேண்டியதில்லை. (1கொரி 10:25-28; 1கொரி 8:7-13) யூதர்கள் இதுபோன்று அநேக கேள்விகளைக் கேட்பார்கள் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதா, யார் பலியிட்டது சுத்த மிருகமா அசுத்த மிருகமா என்று பலவிதமாகக் கேள்வி கேட்டுக் கொண்டிருப்பார்கள்

10 அதிகாரம்

"மனச்சாட்சியினிமித்தம்" - (1கொரி 8:7)

"பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது" - பூமியிலுள்ள சகல சிருஷ்டிகளும் கர்த்தருடையது. ஆகையினால் எதுவுமே அசுத்தமல்ல. சர்வமும் புசிப்பதற்கு உகந்தது. சத்தியத்தைத் தெரிந்திருக்கிறவர்களும், விசுவாசிகளும் எதையும் ஸ்தோத்திரத்தோடே போஜனம் பண்ணலாம். (1தீமோ 4:1-8; ரோமர் 14:14, 17, 20; தீத்து 1:15) ஆனாலும், நாம் போஜனம் பண்ணுவது பிறருக்கு இடையூறாக இருக்கக்கூடாது. (ரோமர் 14:1-15:3; 1கொரி 8:4-13; 1கொரி 10:23-33)

(6) அவிசுவாசிகளின் விருந்துகள்

1கொரி 10:27 அன்றியும் அவிசுவாசிகளில் ஒருவன் உங்களை விருந்துக்கு அழைக்கும்போது போக உங்களுக்கு மனதிருந்தால், மனச்சாட்சியினிமித்தம் ஒன்றையும் விசாரியாமல், உங்கள் முன் வைக்கப்படுகிற எதையும் புசியுங்கள்.

1கொரி 10:28 ஆயினும் இது விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதென்று ஒருவன் உங்களுக்குச் சொன்னால், அப்படி அறிவித்தவனி-னிமித்தமும் மனச்சாட்சியினிமித்தமும் புசியாதிருங்கள்; பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது.

1கொரி 10:29 உன்னுடைய மனச்சாட்சியைக் குறித்து நான் இப்படிச் சொல்லாமல், மற்றொருவனுடைய மனச்சாட்சியைக் குறித்தே சொல்லுகிறேன். என் சுயாதீனம் மற்றொருவனுடைய மனச்சாட்சியினாலே குற்றமாய் எண்ணப்பட வேண்டுவதென்ன?

1கொரி 10:30 மேலும் நான் அதை ஸ்தோத்திரிப்புடனே அநுபவித்தால், ஸ்தோத்திரித்து அநுபவிக்கிற பொருளைக் குறித்து நான் தூஷிக்கப்படுவானேன்?

"உங்கள் முன் வைக்கப்படுகிற எதையும் புசியுங்கள்" - உங்களை அவிசுவாசியானவன் விருந்திற்கு அழைக்கும்போது விருந்திற்குச் செல்லத் தடையேதும் இல்லை. அது விக்கிரகாராதனை சம்பந்தமான விருந்தாக இருக்குமென்றால் விசுவாசி அங்கு போகாமல் இருப்பது நல்லது. (1கொரி 10:18-28; 1கொரி 8:4-13)

"இது விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டது" - விருந்தில் பங்குபெறும்போது பரிமாறப்படும் போஜனம் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டது என்று அறிவிக்கப்படும்போது அதைப் புசிக்கக்கூடாது. நம்முடைய மனச்சாட்சியினிமித்தமும் நமக்கு அறிவித்தவனினிமித்தமும் நாம் அதைப் புசிக்கக்கூடாது. (1கொரி 10:28-29) கிறிஸ்தவராகிய நாம் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதையும் பேய்களுக்குப் படைக்கப்பட்டதையும் புசிக்கக் கூடாது என்பதை நம்மை விருந்திற்கு அழைத்தவனிடம் பக்குவமாக எடுத்துக் கூறவேண்டும். (1கொரி 10:20-22)

"ஸ்தோத்திரித்து அநுபவிக்கிற பொருளைக் குறித்து நான் தூஷிக்கப்படுவானேன்?" - விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட பொருளைப் புசிப்பது அந்த விக்கிரகங்களை ஆராதிப்பதற்குச் சமம். ஆகையினால்தான் அவற்றைப் புசிக்க வேண்டாம் என்று பவுல் வலியுறுத்திக் கூறுகிறார். (1கொரி 10:20-22) நாம் விக்கிரகத்திற்குப் படைக்கப்பட்டதைப் புசிப்பதை விசுவாசத்தில் பெலவீனமாக இருக்கும் ஒருவன் காணும்போது அவன் தன்னுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் இடறி விழுந்து விடுவான். மற்றவர்களைக் கிறிஸ்துவிற்காக ஆதாயம் பண்ணுகிறவர்கள் சகல காரியங்களிலும் மிகுந்த எச்சரிப்போடு நடந்து கொள்ள வேண்டும்.

(7) நமது கிறிஸ்தவ உரிமைகளை தேவனுடைய மகிமைக்கென்றே செய்ய வேண்டும்.

(ரோமர் 14:13-15:3; 1கொரி 8:9-13)

1கொரி 10:31 ஆகையால் நீங்கள் புசித்தாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்.

I கொரிந்தியர் - தொகுப்புரை

10 அதிகாரம்

1கொரி 10.32 நான் என் சுயபிரயோஜனத்தைத் தேடாமல் அநேகருடைய பிரயோஜனத்தைத் தேடி அவர்கள் இரட்சிக்கப்படும் படிக்கு, எல்லாத்திலும் எல்லாருக்கும் பிரியமாய் நடக்கிறதுபோல:

1கொரி 10.33 நீங்களும் யூதருக்கும் கிரேக்கருக்கும், தேவனுடைய சபைக்கும் இடறலற்றவர் களாயிருங்கள்

விசுவாசிகள் செய்ய வேண்டிய காரியங்கள்

1. தேவனுடைய மகிமைக்கென்று புசியுங்கள் (1கொரி 10.31)
2. தேவனுடைய மகிமைக்கென்று பானம் பண்ணுங்கள் (1கொரி 10.31)
3. எதைச் செய்தாலும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள் (1கொரி 10.31)
4. யூதருக்கு இடறலற்றவர்களாய் இருங்கள் (1கொரி 10.33)
5. புறஜாதியாருக்கு இடறலற்றவர்களாய் இருங்கள் (1கொரி 10.33)
6. சகல சகோதரருக்கும் இடறலற்றவர் களாய் இருங்கள் (1கொரி 10.33)
7. எல்லோருக்கும் பிரியமாய் நடக்க நாடுங்கள் (1கொரி 10.32)
8. எல்லாக் காரியங்களிலும் எல்லோருக்கும் பிரியமாய் நடக்க நாடுங்கள்
9. தன் சுய பிரயோஜனத்தைத் தேடாமல் மற்றவர்களுடைய பிரயோஜனத்தைத் தேடுங்கள் (1கொரி 10.32, 1கொரி 9.19-23)
10. ஜனங்களுடைய ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படும்படிக்கு எல்லாக் காரியங்களையும் செய்யுங்கள் (1கொரி 10.33)

I கொரிந்தியர் - தொகுப்புரை

11 அதிகாரம்

VIII. கிறிஸ்தவ கட்டளைகள் - 1கொரி 11:1-34.

1. பவுலைப் பின்பற்றி கட்டளை களைக் கைக்கொள்ள வேண்டும் என்னும் புத்திமதி

1கொரி 11:1 நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்.

1கொரி 11:2 சகோதரரே, நீங்கள் எல்லாவற்றிலும் என்னை நினைத்துக் கொண்டு, நான் உங்களுக்கு ஒப்புவித்தபடி நீங்கள் கட்டளைகளைக் கைக்கொண்டு வருகிறதினிமித்தம் உங்களைப் புகழுகிறேன்.

பின்பற்றுகிறவர் (followers) - μιμητής - mimeetees - 3402

ஆண்பால் பெயர்சொல் - பின்பற்றுகிறவர் (imitators) (1கொரி 4:16)

புகழ் (praise) - ἐπαινέω - epaineoo - 1867

வினைச்சொல் - மெச்சு, புகழ் commend (லூக்கா 16:8); (laud) (ரோமர் 15:11), (praise) (1கொரி 11:2,17,22)

கைக்கொள்ளுதல் (keep) κατέχω - katechoo - 2722

வினைச்சொல் - கட்டிக்கொள், நிறுத்திக்கொள் (hold fast) (1தெச 5:21; எபி 3:6,14; எபி 10:23)

கட்டளைகள் (ordinances) - παράδοσις - paradosis - 3862

பெண்பால் பெயர்ச்சொல் பாரம்பரியம், முறைமை (a handing down; doctrines, traditions) மத் 15:2-6; மாற்கு 7:3-13; கலா 1:14; கொலோ 2:8; 2தெச 2:15; 2தெச 3:6) - இந்த வசனத்தில் மட்டுமே பாரடோசிஸ் என்னும் கிரேக்க வார்த்தை "கட்டளை" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இந்த வசனத்தில் என்னென்ன கட்டளைகள் என்பதுவரிசையாகக்கூறப்பட வில்லை. கர்த்தருடைய பந்தி, தண்ணீர் ஞானஸ்நானம் ஆகிய இரண்டை மட்டும் கட்டளை என்று கூறாமல் சுவிசேஷத்தில் கூறப்பட்டி ருக்கும் எல்லாச் சத்தியங்களையுமே பவுல் கட்டளைகள் என்று கூறுகிறார்.

2. புருஷனுக்கு கிறிஸ்து தலையா யிருக்கிறார்

1கொரி 11:3 ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும், ஸ்திரீக்குப்புருஷன் தலையாயிருக்கிறா னென்றும், நீங்கள் அறியவேண்டு மென்று விரும்புகிறேன்.

1கொரி 11:3 ஆவது வசனத்தில் தலையாய் இருக்கிறவர்கள்

1. கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாயி ருக்கிறார்

2. புருஷனுக்கு கிறிஸ்து தலையாயி ருக்கிறார்

3. ஸ்திரீக்குப்புருஷன் தலையாயிருக் கிறான்

"கிறிஸ்துவுக்குத் தேவன் தலையா யிருக்கிறார்" தேவனும் கிறிஸ்துவும் தனித் தனியாக ஆளத்துவம் உடையவர்கள் (1தீமோ 2:5)

3. பொது ஆராதனைகளில் புருஷர் களுக்கும் ஸ்திரீகளுக்கும் ஒழுங்குகள் - (14:1-40)

1கொரி 11:4 ஜெபம் பண்ணுகிற போதாவது தீர்க்கதரிசனஞ் சொல்லு கிறபோதாவது தன் தலையை மூடிக் கொண்டிருக்கிற எந்த புருஷனும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறான்.

1கொரி 11:5 ஜெபம் பண்ணுகிற போதாவது தீர்க்கதரிசனஞ் சொல்லு கிறபோதாவது, தன் தலையை மூடிக் கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரீயும் தன் தலையைக் கனவீனப்படுத்து கிறாள்; அது அவளுக்குத் தலை சிரைக்கப்பட்டது போலிருக்குமே.

11 அதிகாரம்

1கொரி 11:6 ஸ்திரீயானவள் முக்காடிட்டுக் கொள்ளாவிட்டால் தலைமயிரையும் கத்தரித்துப்போடக்கடவள்; தலைமயிர் கத்தரிக்கப்படுகிறதும் சிரைக்கப்படுகிறதும் ஸ்திரீக்கு வெட்கமானால் முக்காடிட்டுக் கொண்டிருக்கக்கடவள்.

1கொரி 11:7 புருஷனானவன் தேவனுடைய சாயலும் மகிமையுமாயிருக்கிறபடியால் தன் தலையை மூடிக்கொள்ள வேண்டுவதில்லை; ஸ்திரீயானவள் புருஷனுடைய மகிமையாயிருக்கிறாள்.

1கொரி 11:8 புருஷன் ஸ்திரீயிலிருந்து தோன்றினவனல்ல, ஸ்திரீயே புருஷனிலிருந்து தோன்றினவள்.

1கொரி 11:9 புருஷன் ஸ்திரீக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவனல்ல, ஸ்திரீயே புருஷனுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவள்.

1கொரி 11:10 ஆகையால் தூதர்களினிமித்தம் ஸ்திரீயானவள் தலையின்மேல் முக்காடிட்டுக்கொள்ள வேண்டும்.

1கொரி 11:11 ஆகிலும் கர்த்தருக்குள் ஸ்திரீயில்லாமல் புருஷனுமில்லை, புருஷனில்லாமல் ஸ்திரீயுமில்லை.

1கொரி 11:12 ஸ்திரீயானவள் புருஷனிலிருந்து தோன்றுகிறதுபோல, புருஷனும் ஸ்திரீயினால் தோன்றுகிறான்; சகலமும் தேவனால் உண்டாயிருக்கிறது.

"தன் தலையை மூடிக் கொண்டிருக்கிற எந்த புருஷனும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறான்" - ஜெபம் பண்ணும்போதாவது தீர்க்கதரிசனம் சொல்லுகிறபோதாவது தங்கள் தலையை விசேஷித்த வஸ்திரத்தினால் மூடிக்கொள்கிறவர்கள் தங்கள் தலையைக் கனவீனப்படுத்துகிறார்கள் (1கொரி 11:4) இந்த வாக்கியம் யூதருடைய பாரம்பரிய பழக்க வழக்கத்திற்கு முரணான இருக்கிறது. யூதர்கள் தங்கள் தலைகளை மூடிக் கொள்ளாமல் ஜெபம் பண்ணவும் மாட்டார்கள்; தீர்க்கதரிசனம் உரைக்கவும் மாட்டார்கள். தேவனுடைய சமூகத்தில் தங்களுடைய முகத்தைக் காண்பிப்பதற்குத் தாங்கள் தகுதியற்றவர்கள் என்று நினைத்து யூதர்கள் தங்களுடைய முகங்களை மூடிக் கொள்வார்கள்.

கனவீனப்படுத்துகிறான் (dishonoureth)

καταισχύνω - kataischynoo - 2617

வினைச்சொல் - வெட்கப்படு, வேதனைப்படு (shame) (லூக்கா 13:17; ரோமர் 5:5; ரோமர் 9:33 ரோமர் 10:11; 1கொரி 11:22; 2கொரி 7:14; 2கொரி 9:4; 1பேதுரு 3:16); (confound) (1கொரி 1:27; 1பேதுரு 2:6); (dishonor) (1கொரி 11:4-5) - கிறிஸ்தவ மார்க்கத்தில் மூடி மறைப்பதற்கு ஒரு இரகசியமும் இல்லை. ஆகையினால் தேவனுடைய சமூகத்தில் நமது தலைகளை முக்காடிட்டுக் கொள்ள வேண்டிய அவசியம் எதுவுமில்லை.

"தன் தலையை மூடிக் கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரீயும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறாள்" - ஸ்திரீகளைப் பொறுத்த அளவில் அவர்களுடைய பாரம்பரிய பழக்கவழக்கத்தின் பிரகாரம் தங்கள் தலைகளை மூடிக் கொள்ள வேண்டுமென்று அவர்களுக்கு ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது.

ஸ்திரீகள் தங்கள் தலைகளை மூடிக் கொள்ள வேண்டும் என்பதற்குக் காரணங்கள்

1. ஸ்திரீகள் தங்கள் தலைகளை மூடிக் கொள்ளும் பழக்கம் காலாகாலமாக இருந்து வருகிறது. (ஆதி 24:65, ஆதி 38:14,19; ரூத் 3:15, ஏசா 3:23, உன் 5:7)
2. பொது இடங்களில் ஸ்திரீகள் தங்களுடைய தலைகளை மூடிக் கொள்ள வேண்டுமென்று யூதருடைய பிரமாணம் வலியுறுத்திக் கூறுகிறது.
3. கிரேக்கர்கள் மத்தியிலும், ரோமர்கள் மத்தியிலும் மேலும் பல தேசங்களிலும் ஸ்திரீகள் தங்கள் தலைகளை மூடிக் கொள்ளும் பழக்கம் இன்றும் இருக்கிறது.

11 அதிகாரம்

4. கிழக்கு தேசங்களில் வேசிகள் மட்டுமே தங்கள் தலைகளை மூடிக் கொள்ளாமல் இருப்பார்கள். கிறிஸ்தவ ஸ்திரீகள் வேசிகளிடமிருந்து தங்களை வேறுபிரித்துக் காண்பிப்பதற்காகத் தங்கள் தலைகளை மூடிக் கொள்கிறார்கள்.

5 தன் தலையை மூடிக் கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரீயும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறாள். தன் தலை என்பது தன்னுடைய புருஷனைக் குறிக்கும். (1கொரி 11:3) விபச்சாரத்திலும் வேசித்தனத்திலும் பிடிக்கப்பட்ட ஸ்திரீகளுடைய தலைகளைச் சிரைக்கும் வழக்கம் இருந்தது. (1கொரி 11:5-6; எண் 5:18) இதனால் தங்கள் மனைவிகளுடைய தலைகள் சிரைக்கப்படுவதை எந்தப் புருஷனும் விரும்புவதில்லை.

6 புருஷன் தன் தலையை முக்காடிட்டுக் கொள்ளக்கூடாது. ஏனெனில் புருஷன் தேவசாயலாகச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான். தேவனுக்கு மகிமையாக இருக்கிறான். ஸ்திரீ தன் தலையை முக்காடிட்டுக் கொள்ள வேண்டும். ஏனெனில் அவள் புருஷனுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவள். புருஷனுடைய மகிமையாக ஸ்திரீயானவள் இருக்கிறாள் (1கொரி 11:7-9)

7 தனமீது தன்னுடைய புருஷனுக்கு அதிகாரம் உண்டு என்பதை அங்கீகரிப்பதற்காக ஸ்திரீ தன் தலையை முக்காடிட்டுக் கொள்கிறாள். இதன் மூலமாகத் தன் தலையாகிய புருஷனுக்குத் தான் தாழ்மையோடு கீழ்ப்படிந்திருப்பதை வெளிப்படுத்துகிறாள். இதனால் ஸ்திரீயானவள் தேவதூதர்களுக்கும் ஒரு முன்மாதிரியாக இருக்கிறாள். தேவதூதர்கள் தேவனுக்கு முன்பாகத் தங்களைக் கீழ்ப்படுத்த வேண்டும். (1கொரி 11:10; 1கொரி 4:9; எபே 3:10-11; பிர 5:6; 1தீமோ 5:21)

8 ஸ்திரீ தன் கணவனோடு முழுவதுமாக இசைந்து ஒத்துழைக்க வேண்டும். தேவன் ஆசீர்வதிக்கும் பழக்கங்களைப் புருஷனும் மனைவியும் அங்கீகரிக்க வேண்டும். (1கொரி 11:11-12; 1தீமோ 2:9; 1பேதுரு 3:1-7)

9 கிறிஸ்தவ சபையில் ஸ்திரீகள் தங்கள் தலைகளை மூடி ஜெபம் பண்ணுகிறார்கள். தீர்க்கதரிசனம் உரைக்கிறார்கள். புறஜாதி மார்க்கங்களில் அவர்களுடைய பெண்சாமியார்கள் தங்கள் தலைகளை மூடிக் கொள்ளாமலேயே தங்களுடைய விக்கிரகங்களை வழிபடுகிறார்கள். புறஜாதியாரிடமிருந்து தங்களை வேறுபடுத்திக் காண்பிப்பதற்காகக் கிறிஸ்தவ ஸ்திரீகள் தங்கள் தலைகளை மூடிக் கொள்கிறார்கள்.

10 ஸ்திரீகளுக்கு இயல்பாகவே தலைமுடி நீளமாக இருக்கும். அவர்கள் தங்கள் தலைகளை மூடிக் கொள்ள வேண்டும் என்பதற்கு அவர்களுடைய நீண்ட கூந்தலும் ஒரு [redacted].

"ஜெபம் பண்ணுகிறபோதாவது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறபோதாவது" ஸ்திரீகள் சபையில் ஜெபம் பண்ணலாம். தீர்க்கதரிசனம் உரைக்கலாம் என்பதற்கு இந்த வசனமும் ஒரு சான்றாகும். (1கொரி 11:5; 1கொரி 14:3, 23-25,31; அப் 2:16-21; அப் 21:9; யோவே 2:28-32)

மூடிக்கொள்ளாதிருக்கிறது (uncovered) - **ἀκατακάλυπτος** **akatakalyptos** - 177

பெயரடை - மூடிக்கொள்ளாதிருக்கிற (unveiled) (1கொரி 11:5,13)

முக்காடிட்டுக்கொள்ளுதல் (covered) - **κατακαλύπτω** **katakalyptoo** 2619

வினைச்சொல் - முக்காடிடு, மூடிக்கொள் (veiled) (1கொரி 11:6,7)

I கொரிந்தியர் – தொகுப்புரை

11 அதிகாரம்

4. சுபாவம் போதிக்கிற காரியம்

1கொரி 11:13 ஸ்திரீயானவள் தேவனை நோக்கி ஜெபம் பண்ணுகையில், தன் தலையை மூடிக்கொள்ளாமலிருக்கிறது இலட்சணமாயிருக்குமோ என்று உங்களுக்குள்ளே நிதானித்துக் கொள்ளுங்கள்.

1கொரி 11:14 புருஷன் மயிரை நீளமாய வளர்க்கிறது அவனுக்குக் கனவீனமாயிருக்கிறதென்றும்.

1கொரி 11:15 ஸ்திரீ தன் மயிரை நீளமாய வளர்க்கிறது அவளுக்கு மகிமையாயிருக்கிறதென்றும் சுபாவமே உங்களுக்குப் போதிக்கிறதில்லையா? தலைமயிர் அவளுக்கு முக்காடாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதே.

முக்காடு (covering) - περιβόλαιον - peribolaion - 4018

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - முக்காடு,சால்வை - ஒரு பொருளைச் சுற்றிக் கட்டுவது என்பது இதன் பொருளாகும். (எபி 1:12) ஸ்திரீயின் நீண்டகூந்தலே அவளுக்கு முக்காடாக இருக்கிறது. பழைய பழக்கத்தின் பிரகாரம் ஸ்திரீகள் தங்கள் தலைகளை அதற்குரிய வஸ்திரத்தினால் முக்காடிட்டுக் கொண்டார்கள். பழைய வழக்கத்தை விரும்பாத ஸ்திரீகளுக்கு அவர்களுடைய நீளமான கூந்தலே அவர்களுக்கு முக்காடாக அமைந்திருக்கிறது.

5. இதனால் பிரிவினைகளும் வாக்குவாதங்களும் உண்டானால் நமக்கு அப்படிப்பட்ட வழக்கமில்லையென்று அறியக் கடவன் (14:12,26,40)

1கொரி 11:16 ஆகிலும் ஒருவன் வாக்குவாதஞ்செய்ய மனதாயிருந்தால் எங்களுக்கும் தேவனுடைய சபைகளுக்கும், அப்படிப்பட்ட வழக்கமில்லையென்றும் அறியக்கடவன்.

"ஒருவன் வாக்குவாதஞ்செய்ய மனதாயிருந்தால் எங்களுக்கும் தேவனுடைய சபைகளுக்கும் அப்படிப்பட்ட வழக்கமில்லையென்றும் அறியக்கடவன்" - கொரிந்து சபையில் சில ஸ்திரீகள் தங்களை ஆண்களுக்குச் சமமாகப் பாவித்துக் கொண்டார்கள். தேவனுக்கு முன்பாக ஆண், பெண் என்ற வித்தியாசம் இல்லை. தேவனுடைய ஆசீர்வாதங்கள் ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமாக உரியவை என்று விவாதம் பண்ணினார்கள் (கலா 3:28; கொலோ 3:11). சபையில் ஆண்களைப் பேசவிடாமல் தங்களுடைய உரிமையை நிலைநாட்டுவதற்காக பெண்களே ஜெபம் பண்ணிக்கொண்டும், தீர்க்கதரிசனம் உரைத்துக் கொண்டும் இருந்தார்கள். 1கொரி 11:1-16 ஆகிய வசனத்தின் மூலமாக தான் இதை அனுமதிக்கவில்லை என்பதைப் பவுல் தெளிவுபடுத்துகிறார். இது சம்பந்தமாக தான் வாக்குவாதம் செய்ய விரும்பவில்லை என்றும் கூறிவிடுகிறார்.

6. கொரிந்துவில் பொதுவாக காணப்பட்ட பிரிவினைகளும் மார்க்க பேதங்களும்

1கொரி 11:17 உங்களைப் புகழாமல் இதைக்குறித்து உங்களுக்குக் கட்டளைகொடுக்கிறேன், நீங்கள் கூடிவருதல் நன்மைக்கேதுவாயிராமல் தீமைக்கேதுவாயிருக்கிறதே.

1கொரி 11:18 முதலாவது, நீங்கள் சபையிலே கூடி வந்திருக்கும்போது உங்களில் பிரிவினைகள் உண்டென்று கேள்விப்படுகிறேன்; அதில் சிலவற்றை நம்புகிறேன்.

1கொரி 11:19 உங்களில் உத்தமர்கள் இன்னாரென்று வெளியாகும்படிக்கு மார்க்கபேதங்களும் உங்களுக்குள்ளே உண்டாயிருக்க வேண்டியதே.

கொரிந்து சபையில் காணப்பட்ட ஒழுங்கீனங்கள் (1கொரி 11:17-34)

1. பிரிவினைகள் (1கொரி 11:18)
2. மார்க்கபேதங்கள் (1கொரி 11:19, அப் 5:17)
3. சுயநலம் (1கொரி 11:21)
4. சபையை அசட்டை பண்ணுதல் (1கொரி 11:22)

I கொரிந்தியர் – தொகுப்புரை

11 அதிகாரம்

5. இல்லாதவர்களை வெட்கப்படுத்துதல் (1கொரி 11:22)

6. கர்த்தருடைய பந்தியில் அபாத்திரராகப் பங்குபெறுதல் (1கொரி 11:27-30)

7. தங்களைத்தாங்களே நிதானித்து அறியாமலிருத்தல் (1கொரி 11:31-34)

"மார்க்கபேதங்களும் உங்களுக்குள்ளே உண்டாயிருக்க வேண்டியதே" - (அப் 5:17)

7. கர்த்தருடைய இராப்போஜனத்தில் காணப்படும் பாவங்கள் - (2பேதுரு 2:13; யூதா 12)

1கொரி 11:20 நீங்கள் ஓரிடத்தில் கூடிவரும்போது அவனவன் தன்தன் சொந்த போஜனத்தை முந்திச் சாப்பிடுகிறான்; ஒருவன் பசியாயிருக்கிறான், ஒருவன் வெறியாயிருக்கிறான்.

1கொரி 11:21 இப்படிச் செய்கிறது கர்த்தருடைய இராப்போஜனம் பண்ணுதலல்லவே.

1கொரி 11:22 புசிக்கிறதற்கும் குடிக்கிறதற்கும் உங்களுக்கு வீடுகள் இல்லையா? தேவனுடைய சபையை அசட்டைபண்ணி, இல்லாதவர்களை வெட்கப்படுத்துகிறீர்களா? உங்களுக்கு நான் என்ன சொல்லுவேன்? இதைக் குறித்து உங்களைப் புகழுவேனோ? புகழேன்.

வெறி (drunken) - μεθύω - methyoo - 3184

வினைச்சொல் - வெறிகொள், வெறியாயிரு (to be drunken; intoxicated) (1கொரி 11:21; மத் 24:49; அப் 2:15 1தெச 5:7; வெளி 17:2,6; யோவான் 2:10) - போஜனத்தினால் நிறைந்திருப்பதையும், மதுபானத்தால் நிறைந்திருப்பதையும் இந்த வாக்கியம் குறிப்பிடும்.

"இப்படிச் செய்கிறது கர்த்தருடைய இராப்போஜனம் பண்ணுதலல்லவே" - ஆதித்திருச்சபையில் அன்பின் விருந்துகள் என்று அழைக்கப்படும் சமுதாய விருந்துக் களைக் கொடுத்தார்கள் (2பேதுரு 2:13, யூதா 1:12). கிரேக்கருடைய வழக்கத்தின் பிரகாரம் இந்த அன்பின் விருந்துகளில் பங்குபெறுகிறவர்கள் தங்களுடைய வீடுகளிலிருந்து தங்களுக்குப் போஜனபதார்த்தங் களைக் கொண்டு வருவார்கள். ஐசுவரிய வான்களுக்குப் போஜனம் பண்ண தாராள மாகப் போஜனபதார்த்தங்கள் இருக்கும். ஏழைகளுக்குப் புசிக்க ஒன்றும் இராது (1கொரி 11:20). இவ்வாறு செய்வது கர்த்தருடைய பந்தி ஆகாது.

"தேவனுடைய சபையை அசட்டை பண்ணுகிறீர்கள்" - சபையில் செல்வந்தர் களும் ஏழைகளும் இருப்பார்கள். ஐசுவரிய வான்கள் தங்களுடைய பெருந்தீனியினால் ஏழைகளை வெட்கப்படுத்துகிறார்கள். இதனால் சபையில் ஏழை, பணக்காரன் என்று பிரிவினை வந்து விடுகிறது (1கொரி 11:18-19). பசியாயிருக்கிறவன், வெறித்திருக்கிறவன் என்றும் பாகுபாடு சபையில் உண்டாகிறது. (1கொரி 11:21-22). இப்போதைய பிரச்சனைகளுக்குக் காரணமாக இருக்கிறவர்கள் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவதற்கு அபாத்திரராய் இருக்கிறார்கள். இதனால் அவர்களுக்கு வியாதியும் மரணமும் உண்டாகிறது (1கொரி 11:27-30).

8. கர்த்தருடைய இராப்போஜனம் கர்த்தரிடத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டது - (கலா 1:12, எபே 3:3)

1கொரி 11:23 நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக் கொண்டேன், என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து,

1கொரி 11:24 ஸ்தோத்திரம் பண்ணி, அதைப்பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.

11 அதிகாரம்

1கொரி 11:25 போஜனம் பண்ணின பின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து, இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும் போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.

1கொரி 11:26 ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.

"நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்" - இயேசு கிறிஸ்துவிடமிருந்து பவுல் தெய்வீக வெளிப்பாட்டை நேரடியாகப் பெற்றிருக்கிறார் (1கொரி 11:23-34, கலா 2:2)

காட்டிக்கொடுக்கப்பட்டார் (betrayed) - παραδίδωμι - paradidoomi - 3860

வினைச்சொல் - காவலில் வை, ஒப்புக்கொடு, ஒப்புவி, காட்டிக்கொடு (delivered) (1கொரி 11:2,23; யோவான் 18:30; அப் 3:13; ரோமர் 8:32)

"இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது" - திருவிருந்தில் பிட்கப்படும் அப்பம் இயேசு கிறிஸ்துவின் சரீரத்திற்கு அடையாளமாக இருக்கிறது. அப்பம் பிட்கப்படுவதைப் போன்று இயேசு கிறிஸ்துவின் சரீரமும் நமக்காகப் பிட்கப்பட்டது (ஏசா 52:14; ஏசா 53:4,5; 1பேதுரு 2:24)

"என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" இயேசு கிறிஸ்துவின் வருகை வரையிலும் அவரை நினைவுகூரும்படி நாம் கர்த்தருடைய பந்தியில் பங்குபெற வேண்டும் (1கொரி 11:24-26) இயேசு கிறிஸ்துவின் வருகைக்குப் பின்பு, பரலோக ராஜ்யத்தில் நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவோம் (லூக்கா 22:16,18-20,30; மத் 26:29)

"இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது" - ஜனங்களுடைய பாவங்களை நீக்குவதற்காக இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் தமது திருஇரத்தத்தைச் சிந்தினார். திருவிருந்தில் நாம் பானம் பண்ணும் பாத்திரம் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்திற்கு அடையாளமாக இருக்கிறது (மத் 26:28; எபே 1:7; கொலோ 1:20; அப் 20:28; வெளி 1:5; வெளி 5:9; 1யோவான் 1:7) இயேசு கிறிஸ்து தமது இரத்தத்தின் மூலமாக நம்மோடு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தி இருக்கிறார் (எபி 8:6; எபி 9:15-22) இந்தப் புதிய உடன்படிக்கையில் தேவன் நமக்கு பல வாக்குத்தத்தங்களை வாக்குப்பண்ணியிருக்கிறார்.

"நீங்கள் இதைப் பானம்பண்ணும் போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" - ஒருசிலர் கர்த்தருடைய பந்தியைத் தினமும் ஆசரிக்கிறார்கள் (அப் 2:46) ஒருசிலர் வாரம் ஒருமுறையும் வேறுசிலர் மாதம் ஒருமுறையும் கர்த்தருடைய பந்தியை ஆசரிக்கிறார்கள் (அப் 20:7) நாம் கர்த்தருடைய பந்தியை எப்போது ஆசரித்தாலும் இயேசு கிறிஸ்துவை நினைவுகூரும்படியாக அவர் வரும்வரையிலும் ஆசரிக்க வேண்டும். (1கொரி 11:25; லூக்கா 22:19)

நீக்கப்பட்டவை என் - 10

"நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" (1கொரி 11:26) கர்த்தருடைய பந்தியை இத்தனை நாளுக்கு ஒருமுறை ஆசரிக்க வேண்டும் என்னும் நியதி வேதவாக்கியத்தில் குறிப்பிடப்படவில்லை. கர்த்தருடைய பந்தியை நாம் எப்பொழுது ஆசரித்தாலும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறோம். கிறிஸ்துவின் வருகை வரையிலும் நாம் கர்த்தருடைய பந்தியை ஆசரிக்க வேண்டும்.

9. கர்த்தருடைய இராபோஜனத்தில் அபாத்திரனாய் பங்குபெறக் கூடாது

1கொரி 11:27 இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான்.

I கொரிந்தியர் – தொகுப்புரை

11 அதிகாரம்

1கொரி 11:28 எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து இந்த அப்பத்தில் புசித்து இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன்

அபாத்திரம் (unworthily)
ἀναξίως - anaxioos - 371

வினையடை - அபாத்திரமாக (irreverently; unworthy; unfit) (1கொரி 11:27,29)

கர்த்தருடைய பந்தியில் அபாத்திரமாய்ப் பங்குபெறுதல்

1 கர்த்தருடைய பந்தியில் பொறாமையோடும், பிரிவினையோடும் பங்கு பெறுதல் (1கொரி 11:18)

2 கர்த்தருடைய பந்தியில் மார்க்க பேதங்களோடு பங்குபெறுதல் (1கொரி 11:19)

3 கர்த்தருடைய பந்தியில் பெருந்தீனியோடும், குடிவெறியோடும் பங்கு பெறுதல் (1கொரி 11:21-22)

4 கர்த்தருடைய பந்தியில் தேவனையும், தேவனுடைய சபையையும் அசட்டை பண்ணி பங்குபெறுதல். (1கொரி 11:22)

5 கர்த்தருடைய பந்தியில் இல்லாதவர்களை வெட்கப்படுத்திப் பங்கு பெறுதல் (1கொரி 11:22)

6 கர்த்தருடைய பந்தியில் அதன் உண்மைப் பொருளைப் புரியாமல் அவிசுவாசத்தோடு பங்குபெறுதல் (1கொரி 11:27-30)

7 கர்த்தருடைய பந்தியில் பாவ ஜீவியத்தோடும், பாவஅறிக்கை பண்ணாமலும் பங்குபெறுதல் (1கொரி 11:27-30)

8 கர்த்தருடைய பந்தியில் தன்னைத் தான் சோதித்தறியாமல் அபாத்திரனாகப் பங்குபெறுதல் (1கொரி 11:31-32)

"எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து இந்த அப்பத்தில் புசித்து, இந்தப்பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன்" - கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுகிற ஒவ்வொருவரும் தன்னைத்தானே சோதித்துப் பார்க்க வேண்டும். தன்னிடத்தில் பாவம் காணப்படுமானால் அதைக் கர்த்தரிடத்தில் அறிக்கையிட்டு அவருடைய மன்னிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும். கர்த்தருடைய பந்தியில் அபாத்திரனாகப் பங்குபெறுவதை விட பங்குபெறாமல் இருப்பதே சிறந்தது. (1யோவான் 1:7; கொலோ 2:6-7; கொலோ 3:5-10; ரோமர் 6:14-23; ரோமர் 8:1-13; கலா 5:16-26)

10. அபாத்திரமாய் போஜனபானம் பண்ணுகிறதினால் ஏற்படும் விளைவு

1கொரி 11:29 என்னத்தினாலெனில் அபாத்திரமாய்ப் போஜனபானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்

1கொரி 11:30 இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள் அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்

"கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால்" - கர்த்தருடைய பந்தியில் அப்பமும் இரசமும் பரிமாறப்படுகிறது. அப்பம் இயேசு கிறிஸ்துவினுடைய சரீரத்திற்கு அடையாளமாகவும் இரசம் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்திற்கு அடையாளமாகவும் இருக்கிறது. கர்த்தருடைய பந்தியில் பங்குபெறுகிறவர்கள் இதை நிதானித்து அறியவேண்டும். இதனால் வரும் ஆசீர்வாதங்களைப் புரிந்து கொண்டு கர்த்தருடைய பந்தியில் பங்குபெற வேண்டும்.

நிதானித்தல் (distinguish)
διακρίνω - diakrinoo - 1252

வினைச்சொல் - நிதானி, சந்தேகப்படு, வாக்குவாதம் பண்ணு, வித்தியாசமாய் இரு, செய், வழக்கைத்தீர் தூக்கித்துப் பேசு,

போதகம் பண்ணு, இழுத்துவிடு "make to differ" (அப் 15:9; 1கொரி 4:7, யூதா 1:22); "judge" (1கொரி 6:5; 1கொரி 11:31; 1கொரி 14:29); "contend"

I கொரிந்தியர் – தொகுப்புரை

11 அதிகாரம்

அப் 11:2; யூதா 1:9; "be partial" யாக் 2:4; "doubt" (மத் 21:21 மாற்கு 11:23; அப் 10:20 அப் 11:12; ரோமர் 14:23 ; "waver" (யாக் 1:6); "stagger" ரோமர்4:20; "discern" 1கொரி 11:29; மத் 16:3)

"இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள் அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்" - கர்த்தருடைய பந்தியில் பரிமாறப்படும் அப்பம் இயேசு கிறிஸ்துவின் சரீரத்திற்கு அடையாளம் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். (கொரி 11:29) இயேசு கிறிஸ்துவின் தழும்புகளாலே நாம் குணமாக்கப்பட்டோம் குணமாக்கப்படுகிறோம். (ஏசா 53:4-5, மத் 8:17; 1பேதுரு 2:24) தனக்கு வியாதி வரக்கூடாது என்றும், நியமிக்கப்பட்ட காலத்திற்கு முன்பே மரிக்கக்கூடாது என்றும் ஒருவன் விரும்பினால் அவன் இயேசு கிறிஸ்துவினால் வரும் சுகமாகும் ஆசீர்வாதங்களையும் பாவமன்னிப்பையும் பெற்றுக் கொள்ள வேண்டும். விசுவாசம் இல்லாமல் இவற்றைப் பெற்றுக் கொள்வது இயலாத காரியம். (மத் 17:20; மத் 21:22, மாற்கு 9:23; மாற்கு 11:22-24, யோவான் 14:12-15 யோவான் 15:7,16 யோவான் 16:23-26

11. நியாயத்தீர்ப்பைத் தவிர்ப்பதற்கு வழி

1கொரி 11:31 நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்.

1கொரி 11:32 நாம் நியாயந்தீர்க்கப்படும் போது உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு, கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம்.

"நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்" - நாம் நம்மை நிதானித்து அறியவேண்டும். கல்வாரி சிலுவையிலே இயேசு கிறிஸ்து நிறைவேற்றிய பாவநிவாரண கிரியைகளை விசுவாசிக்க வேண்டும். அப்போது தேவன் நமக்காக நியமித்து வைத்திருக்கும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வோம். அதே சமயத்தில் கர்த்தருடைய பந்தியில் அபாத்திரராகப் பங்குபெறாமல் இருந்தால் தேவனுடைய கோபத்திலிருந்தும் தப்பித்துக் கொள்வோம். நாம் விதைத்ததை அறுப்போம். நம்மிடத்தில் பாவம் உண்டென்று நாம் உணர்த்தப்படுவோம் என்றால் தேவனிடத்தில் மன்னிப்பைக் கேட்க வேண்டும். அவர் நம்மை மன்னிப்பதில் இரக்கம் நிறைந்தவர் நாம் நம்மை நிதானித்து அறியாமற்போனால் தேவன் நம்மை நியாயந்தீர்ப்பார் நம்மைச் சிட்சிப்பார் (1கொரி 11:31-32

12. கொரிந்துவில் காணப்படும் குறைகளைக் குறித்து புத்திமதி

1கொரி 11:33 ஆகையால், என் சகோதரரே, நீங்கள் போஜனம் பண்ணக் கூடிவரும் போது, ஒருவருக்காக ஒருவர் காத்திருங்கள்

1கொரி 11:34 நீங்கள் ஆக்கினைக்கேதுவாகக் கூடிவராதபடிக்கு, ஒருவன் பசியிருந்தால் வீட்டிலே சாப்பிடக்கடவன் மற்றக் காரியங்களை நான் வரும்போது திட்டம் பண்ணுவேன்

"நீங்கள் போஜனம் பண்ணக் கூடிவரும் போது ஒருவருக்காக ஒருவர் காத்திருங்கள்" கர்த்தருடைய பந்தியில் பங்குபெறும்போது அதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் ஒழுங்கு முறைகளைக் கடைபிடிக்க வேண்டும் நமது பசியைத் திருப்திப்படுத்துவதற்காகக் கர்த்தருடைய பந்தியில் நாம் பங்குபெறவில்லை. நமது வீடுகளில் நமது வயிற்றுப் பசியைப் போக்கிக் கொள்ளலாம். கர்த்தருடைய ஆலயத்தில் அவருடைய பந்தியில் பங்குபெறும்போது ஒழுங்காகவும், கிரமமாகவும் பங்குபெறவேண்டும். ஒருவருக்கொருவர் காத்திருந்து கர்த்தருடைய பந்தியில் பங்குபெற வேண்டும். (1கொரி 11:33-34

12 அதிகாரம்

IX. ஆவிக்குரிய வரங்கள் - (1கொரி 1:7; 12:1-14:40; ரோமர் 1:11; 12:3-8 15:18-29; எபே 4:7-16; 1தீமோ 4:14 2தீமோ 1:6; எபி 2:4; 1பேதுரு 4:10-11)

1. இயேசுவை மகிமைப்படுத்தும் - யோவான் 16:3-4)

1கொரி 12:1 அன்றியும், சகோதரரே ஆவிக்குரியவரங்களைக் குறித்து நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை

1கொரி 12:2 நீங்கள் அஞ்ஞானிகளாயிருந்தபோது ஏவப்பட்டபடியே ஊமையான விக்கிரகங்களிடத்தில் மனதைச் செலுத்தினீர்களென்று உங்களுக்குத் தெரியும்.

1கொரி 12:3 ஆதலால் தேவனுடைய ஆவியினாலே பேசுகிற எவனும் இயேசுவைச் சபிக்கப்பட்டவனென்று சொல்லமாட்டானென்றும், பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தரென்று ஒருவனும் சொல்லக் கூடாதென்றும், உங்களுக்குத் தெரிவிக்கிறேன்

ஆவிக்குரிய (spiritual) - πνευματικός - pneumatikos - 4152

பொருள் - ஆவிக்குரிய ஞான ஆவிக்கேற்ற (things of the Spirit) ரோமர் 7:14

"நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை" (ரோமர் 1:13)

"நீங்கள் அஞ்ஞானிகளாயிருந்தபோது" - கொரிந்தியர்கள் விசுவாசிகளாக ஆவதற்கு முன்பாக அஞ்ஞானிகளாக இருந்தார்கள் ஊமையான விக்கிரகங்களிடத்தில் மனதைச் செலுத்தினார்கள்

"தேவனுடைய ஆவியினாலே பேசுகிற எவனும்" யூதர்கள் இயேசுவைச் சபிக்கப்பட்டவன் என்று கூறினார்கள் கிறிஸ்தவர்களை யூதர்கள் துன்புறுத்திய போது, இயேசு கிறிஸ்துவை மறுதலிக்குமாறும் அவரைச் சபிக்கப்பட்டவர் என்று அறிவிக்குமாறும் வற்புறுத்துவார்கள் தேவனுடைய ஆவியினாலே பேசுகிற எவனும் இயேசுவைச் சபிக்கப்பட்டவரென்று சொல்ல மாட்டான் அதே சமயத்தில் பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தரென்றும் ஒருவனும் சொல்லக் கூடாது.

2. வரங்களில் வித்தியாசங்கள் உண்டு - (ரோமர் 12:3-8; எபி 2:4; 1பேதுரு 4:10)

1கொரி 12:4 வரங்களில் வித்தியாசங்கள் உண்டு, ஆவியானவர் ஒருவரே

1கொரி 12:5 ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே

1கொரி 12:6 கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு, எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே

[illegible] **தேவனின் கிரியை** (1கொரி 12:4-6)

1. பரிசுத்த ஆவியானவரால் ஆவிக்குரிய வரங்கள் (Spiritual gifts)
2. இயேசு கிறிஸ்துவால் ஊழியங்கள் (Administrations)
3. பிதாவாகிய தேவனால் கிரியைகள் (Operations)

பரிசுத்த ஆவியானவரின் ஊழியங்கள்

1. இயேசுவை மகிமைப்படுத்துகிறார் (1கொரி 12:3; யோவான் 16:13-14)
2. அனுக்கிரகங்களை ஈவுகிறார் (1கொரி 12:7-11)
3. கிறிஸ்துவின் சரீரத்தை உண்டாக்குகிறார் (1கொரி 12:13)
4. விசுவாசிகளுக்குப் பெலன் தருகிறார் (1கொரி 12:13)
5. அன்பை வெளிப்படுத்துகிறார் (1கொரி 13:1-13; ரோமர் 5:5

I கொரிந்தியர் – தொகுப்புரை

12 அதிகாரம்

6 அந்நிய பாஷைகளில இரகசியங் களைப பேசுகிறார் (1கொரி 12:10 1கொரி 14:2,13-19,21-23, 26-28)

7 அந்நிய பாஷைகளின் இரகசியங்களை வியாக்கியானம் பண்ணுகிறார் (1கொரி 12:10; 1கொரி 15:5,13,26-28)

8. தீர்க்கதரிசனத்தின் மூலமாகப பக்திவிருத்தி உண்டுபண்ணுகிறார் (1கொரி 14:3-3)

9 பாஷைகளில விசுவாசிகளுக்குப பக்திவிருத்தியுண்டாக்கிறார் (1கொரி 12:4

10 விசுவாசிகளுக்கு வரங்களை அருளுகிறார் (1கொரி 12:8-10 ரோமர் 12:6 1தீமோ 4:14)

ஊழியம் (administration) - διακονία - diakonia - 1248

பெண்பால பெயர்சொல் - வேலைகளைச் செய்தல, ஊழியம் உதவி, விசாரணை, தாமசகாயம (services; ministries; offices) - இயேசு கிறிஸதுவே இநத ஊழியங்களைச் செயகிறார் (எபே 1:22 எபே 4:11

கிரியைகள் (operations) ἐνέργημα - energeema - 1755

பால் வேறுபாடற்ற பெயாசசொல் - கிரியை, செயகை (workings) 1கொரி 12:6,10 ஆகிய வசனங்களில் மட்டும் பயனபடுத்தபபட்டிருக்கிறது. பிதாவாகிய தேவனே கிரியைகளை நடபபிககிறவா (1கொரி 12:5, 1கொரி 11:3; 1கொரி 15:28; எபி 1:3

3. வரங்களின் நோக்கம் (14:4-6,12,17,24,26,31; ரோமர் 12:3)

1கொரி 12:7 ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கபபட்டிருக்கிறது.

அநுக்கிரகம் (manifestation) - φανέρωσις - phaneroosis - 5321

பெண்பால் பெயர்சொல் - அநுக்கிரகம் வெளிப்படுத்துதல் (making visible) - காணக்கூடிய விதமாகத் தோன்றுதல், சுகமாதல் அற்புதங்கள், தீர்க்கதரிசனங்களின் நிறைவேறறம் அந்நியபாஷைகள் வியாக்கியானம் பண்ணுதல் ஆகியவை எல்லாமே மனுஷர் காணக் கூடிய பிரகாரமாக இருக்கும்

4. வரங்களின் எண்ணிக்கையும் விதமும் – (ரோமர் 12:3-8; எபி 2:4; 1பேதுரு 4:10-11)

1கொரி 12:8 எப்படியெனில் ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப போதிக்கும் வசனமும் வேறொரு வனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும்

1கொரி 12:9 வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும் வேறொருவனுக்கு அந்த ஆவியினாலே குணமாக்கும் வரங்களும்

1கொரி 12:10 வேறொருவனுக்கு அறபுதங்களைச் செயயும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும் வேறொருவனுக்கு ஆவிகளைப பகுத்தறிதலும் வேறொரு வனுக்கு பறபல பாஷைகளைப பேசுதலும் வேறொருவனுக்கு பாஷைகளை வியாக்கியானம் பண்ணு தலும் அளிக்கப்படுகிறது.

வரங்களைப் பற்றிய காரியங்கள்

1. வரங்களின பெயர்களும், எண்ணிக்கையும் (1கொரி 12:8-10

2 வரங்களை அளிக்கிறவர் யார் (1கொரி 12:4, 8-11

3 வரங்களைச் செயலபடுத்துகிறவர் யார் (1கொரி 12 4-6,11

12 அதிகாரம்

4 நோக்கம் - தேவனுடைய வார்த்தையை உறுதிப்படுத்துவதற்காக மாற்கு 16:17-20; யோவான் 14:12 அப 1:1-8; ரோமர் 12:3-8; ரோமர் 15: 8-19,29; 1கொரி 1:7; 1கொரி 12:11 28-31; 1கொரி 14:1-40; எபி 2:3-4)

5. வரங்களை யார் பெற்றிருக்க வேண்டும் - எல்லா விசுவாசிகளும் 1கொரி 12:8-11; 1கொரி 1:7; ரோமர் 1:11; ரோமர் 12:3-8; யோவான் 7:37-39; யோவான் 14:12; மாற்கு 16:17-20

6 ஒருவர் எல்லா வரங்களையும் பெற்றிருக்க முடியுமா - முடியும். (மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23 மாற்கு 11:22-24 யோவான் 14:12 யோவான் 15:7,16; எபே 3:19; யாக் 1:5-8

7 யாராவது எல்லா வரங்களையும் பெற்றிருக்கிறாரா - பெற்றிருக்கிறார் யோவான் 3:34, ரோமர் 15:29; அப 5:12, அப 14:9

8 பழைய ஏற்பாட்டுக் காலத்தில வரங்களின் அநுக்கிரகம் காணப்பட்டதா? ஆம். காணப்பட்டது. அப 1:5, அப் 2:4

9 வரங்களைத் தவறாகப் பயன்படுத்த முடியுமா - முடியும். (பிர 2:9, எண் 20:7-13= உபா 32:48-52 1கொரி 13:1-3 1கொரி 14:1-40))

10 பின்வாங்கிப்போன நிலைமையிலும் வரங்களைப் பயன்படுத்த முடியுமா - முடியும் (பிர 2:9; 1கொரி 13:1-3)

11 அசுத்த ஆவியின் கிரியை வெளிப்படும் என்று பயப்பட வேண்டுமா? - வேண்டாம். தேவனுடைய பிள்ளையின் மூலமாகத் தேவஆவியானவர் மட்டுமே கிரியை செய்வார் (லூக்கா 11:11-13)

12 வரங்கள் நிரந்தரமானதா? தற்காலிகமானதா? - ஒருவர் தனிப்பட்ட ஈவாகப் பெற்றிருக்கும்போது அது நிரந்தரமானது. (ரோமர் 11:29)

13 நம்முடைய சித்தத்தின் பிரகாரம் வரங்களைப் பயன்படுத்த முடியுமா - முடியும். (1கொரி 14:15,23-32 1தீமோ 4:14; 2தீமோ 1:6

14 வரங்களைப் பயன்படுத்தாமல் புறக்கணிக்க முடியுமா? - முடியும் (1தீமோ 4:14; 2தீமோ 1:6)

15 வரங்களை எப்பொழுது பயன்படுத்த வேண்டும் - தேவைப்படும்போது (1கொரி 12:7; 1கொரி 14:3-6,12,17,26 ரோமர் 12:3-8)

16 வரங்களை எங்கு பயன்படுத்த வேண்டும் - தேவைப்படும் இடங்களில (1கொரி 12:7,12-31 1கொரி 14:1-40)

17 வரங்களை எவ்வாறு பெற்றுக் கொள்வது - விசுவாசத்தினாலும், ஜெபத்தினாலும் (1கொரி 12:31 1கொரி 14:1; மத் 7:7-11

18 இன்று நமக்கு வரங்கள் தேவையா - ஆம் தேவை. (மாற்கு 16:15-20 யோவான் 10:10; அப 1:8; அப 10:38; ரோமர் 1:11; 1கொரி 1:7; 1கொரி 12:1-31

19 எந்த வரங்கள் நமக்குத் தேவையென்று நாம் தெரிந்து கொள்ள முடியுமா? - முடியும். (1கொரி 12:31 1கொரி 14:1,12)

20 நாம் வரங்களைப் பெற்றிருக்கிறோம் என்பதை எவ்வாறு அறிந்து கொள்வது - பரிசுத்த ஆவியானவர் நம்மூலமாகக் கிரியை செய்து தமது நோக்கத்தை நிறைவேற்றுவதன் மூலமாக அறிந்து கொள்ளலாம். (1கொரி 12 4-11,28 31; 1கொரி 14:1-40

21 இந்தக் காலம் முழுவதும் வரங்கள் தொடர்ந்து கிரியை செய்யுமா? ஆம். கிரியை செய்யும். (மத் 5:3 மத் 28:20; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; மாற்கு 16:15-20, யோவான் 7:37-39, யோவான் 14:12-17,26; யோவான் 15:26, யோவான் 16:13-15, அப 1:4-8, அப 2:38-39; அப் 5:32, 1கொரி 1:7)

12 அதிகாரம்

வரங்கள்

வரங்களை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். அவையாவன

1. வெளிப்படுத்தலின் வரங்கள் (Gifts of revelation)
2. ஏவுதலின் வரங்கள் (Gifts of inspiration)
3. வல்லமையின் வரங்கள் (Gifts of power)

வெளிப்படுத்தலின் வரங்கள்

1. ஞானத்தைப் போதிக்கும் வசனம். (The word of wisdom) (1இராஜா 3:16-28, மத் 2:20; லூக்கா 22:10-12 யோவான் 2:22-24; யோவான் 4:16-19; அப் 26:16; அப் 27:21-25 1கொரி 5.)
2. அறிவை உணர்த்தும் வசனம். (The word of knowledge) (ஆதி 1:1-2:25; 1சாமு 3:7-15; 2இராஜா 6:8-12; அப் 9:11-12; மத் 16:16 யோவான் 1:1-3; அப் 5:3-4 அப் 21:11, எபே 3)
3. ஆவிகளைப் பகுத்தறிதல் (Discerning of spirits) (மத் 9:4 லூக்கா 13:16; யோவான் 2:25; அப் 13:9-10, அப் 16:16; 1தீமோ 4:1-4, 1யோவான் 4:1-6)

ஏவுதலின் வரங்கள்

1. தீர்க்கதரிசனம் உரைத்தல் (Prophecy) (அப் 3:21, அப் 11:28; அப் 21:11; 2பேதுரு 1:21; 1கொரி 14:23-32
2. பற்பல பாஷைகளைப் பேசுதல் (Divers kinds of tongues) (ஏசா 28:11, மாற்கு 16:17; அப் 2:4; அப் 10:44-48; அப் 19:1-7; 1கொரி 12:10,28-31, 1கொரி 13:1-3; 1கொரி 14:2,22,26,27-32
3. பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல் (The interpretation of tongues) (1கொரி 12:10 1கொரி 14:5,13-15,27-28

வல்லமையின் வரங்கள்

1. விசுவாசம் (Faith) (ரோமர் 4:17, யாக் 1:5-8; மத் 17:20; மத் 21:22 மாற்கு 9:23; மாற்கு 11:22-24; எபி 11:6; எபி 12:1-3)
2. குணமாக்கும் வரங்கள் (The gifts of healing) (மாற்கு 16:18; யோவான் 14:12; 1கொரி 12:9
3. அற்புதங்களைச் செய்யும் சக்தி (The working of miracles) (1கொரி 15:10, 27-31; எபி 2:3-4; சங் 107; யாத் 7:10-14:21; 2இராஜா 4:1-44; 2இராஜா 6:1-7 மத் 17:20 மாற்கு 9:23; மாற்கு 11:22-24. யோவான் 14:12

5. **வரங்கள் பகிர்ந்து கொடுக்கப்படும் விதம்** - (ரோமர் 1:11; 1தீமோ 4:14. 2தீமோ 1:6)

1கொரி 12:11 இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்

6. **சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்** - (10:17, ரோமர் 12:4-5; எபே 4:4-6

1கொரி 12:12 எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப் பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்

"அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்" - இந்த வசனத்தில் சபையே "கிறிஸ்து" என்று அழைக்கப்படுகிறது. சபையானது சரீரத்திற்கு ஒப்பிட்டுக்கூறப்படுகிறது. ஒரே சரீரத்தில் பல அவயவங்கள் இருக்கும் (1கொரி 12:12-28) அதுபோலவே கிறிஸ்துவின் சபையில் பலவிதமான அங்கத்தினர்கள் இருப்பார்கள்

I கொரிந்தியர் – தொகுப்புரை

12 அதிகாரம்

7. சரீரத்தில் அநேக அவயவங்கள் இருக்கிறது – (யோவான் 3:5, ரோமர் 6:3-5, கலா 3:26-27, கொலோ 2:11-17, 2கொரி 5:14-21, 1யோவான் 1:9, 5:1-4)

1கொரி 12:13 நாம் யூதராயினும் கிரேக்கராயினும், அடிமைகளாயினும் சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்.

1கொரி 12:14 சரீரமும் ஒரே அவயவமாயிராமல் அநேக அவயவங்களாயிருக்கிறது.

"யூதராயினும், கிரேக்கராயினும்" - யூதரும் புறஜாதியாரும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் சேர்க்கப்படுகிறார்கள் (எபே 2:11-18; எபே 3:1-6, கொலோ 1:18,24)

"எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம்" - கிறிஸ்துவின் சரீரம் எவ்வாறு உண்டாக்கப்படுகிறது என்பதை இந்த வசனம் விளக்குகிறது. பரிசுத்த ஆவியானவர் இரட்சிக்கப்படுகிறவர்களுக்குப் புது சிருஷ்டியைக் கொடுத்து அவர்களைச் சபைக்கு அழைத்து வருகிறார். "ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்" என்பது பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைக் குறிக்காது. கிறிஸ்துவின் சரீரத்திற்குள் அதாவது சபைக்குள் சேர்க்கப்படுவதைக் குறிக்கும். பரிசுத்த ஆவியானவரே சரீரத்திற்குள் ஞானஸ்நானம் கொடுத்து அழைத்து வருகிறார். விசுவாசி ஞானஸ்நானம் பெறுகிறார். பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தில் இயேசு கிறிஸ்துவே ஞானஸ்நானம் கொடுக்கிறவர். விசுவாசி பரிசுத்த ஆவிக்குள் ஞானஸ்நானம் பெறுகிறார் (மத் 3:16)

"ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்" - இந்த வாக்கியம் தேவனுடைய வல்லமையில் பங்கு பெறுவதைக் குறிக்கும். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் கூட இயேசு கிறிஸ்துவிற்குச் சுவிகாரபுத்திரர்களாக இருந்து, அதற்குரிய சிலாக்கியங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். (ரோமர் 8:15, யோவான் 3:34; யோவான் 7:37)

8. சரீரத்தின் அவயவங்கள் ஒன்றோடொன்று இசைந்திருக்கிறது – (எபே 2:19-22; 4:16, 5:30-33)

1கொரி 12:15 காலானது நான் கையாயிராதபடியினாலே நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவமாயிராதோ?

1கொரி 12:16 காதானது நான் கண்ணாயிராதபடியினாலே, நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவமாயிராதோ?

1கொரி 12:17 சரீரம் முழுவதும் கண்ணானால், செவி எங்கே? அது முழுவதும் செவியானால், மோப்பம் எங்கே?

1கொரி 12:18 தேவன் தமது சித்தத்தின்படி அவயவங்களை ஒவ்வொன்றையும் சரீரத்தில் வைத்தார்.

1கொரி 12:19 அவையெல்லாம் ஒரே அவயவமாயிருந்தால், சரீரம் எங்கே?

1கொரி 12:20 அவயவங்கள் அநேகமாயிருந்தும் சரீரம் ஒன்றே.

"அது சரீரத்தின் அவயவமாயிராதோ?" - சரீரத்தில் பல அவயவங்கள் உள்ளன. தான் அந்தச் சரீரத்தின் அவயவம் அல்ல என்று ஒரு அவயவம் கூறினாலும் அது இன்னும் சரீரத்தில் அவயவமாகத்தான் இருக்கிறது. தேவனுடைய சரீரமாகிய சபையில் இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் எல்லோரும் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தேவனுக்கு முன்பாகவும், மனுஷருக்கு முன்பாகவும் பரிசுத்தமாக ஜீவிக்க வேண்டும். (அப் 7:38, 1கொரி 12:27-28; ரோமர் 12:3-5; கலா 3:28, எபே 1:22-23; எபே 2:19-22; எபே 3:1-6, எபே 4:1-13; கொலோ 1:18,24

12 அதிகாரம்

"தேவன் தமது சித்தத்தின்படி அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்தில் வைத்தார்" - தேவன் தமக்குப் பிரியமானவர்களைச் சபையில் அங்கத்தினர்களாகச் சேர்த்து வருகிறார். தேவனைப் பிரியப்படுத்த வேண்டுமென்று விரும்புகிற விசுவாசி சபையில் தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பொறுப்பை முறுமுறுப்பில்லாமல், கலகம் பண்ணாமல், பிரிவினை உண்டாக்காமல் உற்சாகமாகச் செய்ய வேண்டும்.

9. சரீரத்தின் அவயவங்கள் ஒன்றுக்கொன்று துணைபுரியும் - 1:10; 3:8-10; 2கொரி 6:1-10; எபே 4:3

1கொரி 12:21 கண்ணானது கையைப் பார்த்து: நீ எனக்கு வேண்டுவதில்லையென்றும், தலையானது கால்களை நோக்கி: நீங்கள் எனக்கு வேண்டுவதில்லையென்றும் சொல்லக் கூடாது.

1கொரி 12:22 சரீர அவயவங்களில் பலவீனமுள்ளவைகளாய்க் காணப்படுகிறவைகளே மிகவும் வேண்டியவைகளாயிருக்கிறது.

1கொரி 12:23 மேலும், சரீர அவயவங்களில் கனவீனமாய்க் காணப்படுகிறவைகளுக்கே அதிக கனத்தைக் கொடுக்கிறோம்; நம்மில் இலட்சணமில்லாதவைகளே அதிக அலங்காரம் பெறும்.

"சரீர அவயவங்களில் பலவீனமுள்ளவைகளாய்க் காணப்படுகிறவைகளே மிகவும் வேண்டியவைகளாயிருக்கிறது" சரீரத்திற்குள்ளே இருதயம், நுரையீரல், கல்லீரல், வயிறு, சிறுநீரகம் போன்ற உறுப்புகள் உள்ளன. இவை சரீரத்திற்குள்ளே இருந்தாலும் இவை மிகவும் முக்கியமான அவயவங்கள். நமது சரீரத்தில் வெளியே தெரியும் அவயவங்களை நாம் அலங்கரிக்கிறோம். ஆனாலும் வெளியே தெரியாமல் சரீரத்திற்குள்ளே இருக்கும் அவயவங்களை மிகவும் வேண்டியவைகளாகவும் முக்கியமானவைகளாகவும் இருக்கிறது.

இலட்சணமில்லாத (uncomely) ἀσχήμων - ascheemoon - 809

பொருள் - இலட்சணமில்லாத (shapeless; unseemly, shameful)

10. சரீரத்தின் அவயவங்கள் ஒன்றுக்கொன்று சிந்திக்கும் - 13:1-13; எபே 4:31-32; 2 பிலி 2:1-4; 1பேதுரு 3:8-13

1கொரி 12:24 நம்மில் இலட்சணமுள்ளவைகளுக்கு அலங்கரிப்பு வேண்டியதில்லை.

1கொரி 12:25 சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல் அவயவங்கள் ஒன்றைக்குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு, தேவன் கனத்தில் குறைவுள்ளதற்கு அதிக கனத்தைக் கொடுத்து, இப்படிச் சரீரத்தை அமைத்திருக்கிறார்.

1கொரி 12:26 ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப்பாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும்.

இலட்சணமுள்ளது (comely) - εὐσχήμων - euscheemoon - 2158

பொருள் - கனம்பொருந்திய, இலட்சணமுள்ள, தகுதியான

"தேவன் கனத்தில் குறைவுள்ளதற்கு அதிக கனத்தைக் கொடுத்து இப்படிச் சரீரத்தை அமைத்திருக்கிறார்" சரீரத்தில் இலட்சணமுள்ள அவயவங்களையும், இலட்சணமில்லாத அவயவங்களையும் தேவன் சேர்த்து அமைத்திருக்கிறார். கனத்தில் குறைவுள்ளதற்கே தேவன் அதிக கனத்தைக் கொடுக்கிறார். ஒரு சரீரம் நன்றாகச் செயல்பட வேண்டுமென்றால், அதிலுள்ள எல்லா அவயவங்களும் சேர்ந்து ஒற்றுமையாக ஒன்றுக்கொன்று இணைந்து கிரியை செய்ய வேண்டும். சபை ஊழியத்திலும் விசுவாசிகள் அனைவரும் ஒருமனதோடு தேவநாம மகிமைக்காக ஊழியம் செய்ய வேண்டும். (1கொரி 12:24-26)

12 அதிகாரம்

11. கிறிஸ்தவர் அனைவரும் கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயும் இருக்கிறார்கள் - (ரோமர் 12:4-8 எபே 4:7-16)

1கொரி 12:27 நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்

1கொரி 12:28 தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும் ஊழியங்களையும் ஆளுகைகளையும் பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார்

1கொரி 12:29 எல்லாரும் அப்போஸ்தலர்களா? எல்லாரும் தீர்க்கதரிசிகளா? எல்லாரும் போதகர்களா? எல்லாரும் அற்புதங்களைச் செய்கிறவர்களா?

1கொரி 12:30 எல்லாரும் குணமாக்கும் வரங்களுடையவர்களா? எல்லாரும் அந்நியபாஷைகளைப் பேசுகிறார்களா? எல்லாரும் வியாக்கியானம் பண்ணுகிறார்களா?

"நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும் தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்" - விசுவாசிகள் எல்லோரும் சேர்ந்தே கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை அமைக்கிறார்கள் (1கொரி 12:13; எபே 2:19-22; எபே 4:1-6; கொலோ 1:18,24)

"அப்போஸ்தலர்" - (அப் 15:34)

"தீர்க்கதரிசிகள்" - (அப் 11:28; 1சாமு 19:20)

"போதகர்கள்" - (அப் 13:1)

"அற்புதங்கள்" - (யோவான் 2:11)

ஊழியம் (help) - ἀντίλημψις - antileempsis - 484

பெண்பால் பெயர்ச்சொல் - ஊழியர்கள், உதவி, உதவிபுரியும் திறமை (a support, help, succourer; an aid) - 1கொரி 12:28 ஆவது வசனத்தில் மட்டுமே இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. தேவன் சபையில் நியமித்து வைத்திருக்கும் எந்த உதவியையும் இந்த வார்த்தை குறிக்கும். மூப்பர்கள், ஊழியக்காரர்கள் ஆகியோரின் உதவிகளை மட்டும் குறிப்பிடாமல் எல்லா உதவிகளையும் குறிக்கும். (ரோமர் 16:3,9; 1கொரி 16:16; 2கொரி 1:11,24) இந்த வார்த்தை ஆட்களை மட்டும் என்று குறிப்பிடாமல் ஆவிக்குரிய வரங்களையும் குறிப்பிடுகிறது. இந்த வரங்கள் உதவி புரிவதற்கு ஜனங்களைத் தகுதிப்படுத்துகிறது

ஆளுகை (government) - κυβέρνησις - kyberneesis - 2941

பெண்பால் பெயர்ச்சொல் - ஆளுகை (a steering; piloting; guiding) - சபையில் தேவன் நியமித்திருக்கும் எல்லா ஆளுகைகளையும் குறிக்கும். இந்த வாக்கியம் ஆளுகை செய்யும் அதிகாரத்தையோ ஆளுகை செய்கிறவர்களையோ குறிக்காது. சபையில் பிரச்சனைகள் வரும்போது தேவனுடைய விசேஷித்த ஞானத்தையும் அறிவையும் பெற்று சபைக்குச் செய்யப்படும் உதவிகளைக் குறிக்கும். ஞானத்தை உணர்த்தும் வசனம், அறிவை உணர்த்தும் வசனம், ஆவிகளைப் பகுத்தறிதல் ஆகிய மூன்று வரங்களும் ஆளுகையில் பயன்படும்.

"எல்லாரும் அந்நியபாஷைகளைப் பேசுகிறார்களா? எல்லாரும் வியாக்கியானம் பண்ணுகிறார்களா?" - இந்த வசனத்தின் மூலமாகப் பவுல் ஒரு காரியத்தை வலியுறுத்துகிறார். எல்லா விசுவாசிகளும் அப்போஸ்தலர்களோ, தீர்க்கதரிசிகளோ, போதகர்களோ அல்ல. எல்லா விசுவாசிகளும் 1கொரி 12:8-10 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் எல்லா வரங்களையும் பெற்றிருப்பதில்லை. இதனால் விசுவாசிகள் எல்லா வரங்களையும் பெற்றுக் கொள்ள முடியாது என்பதும் இதன் பொருளல்ல.

12 அதிகாரம்

12. ஆவிக்குரிய வரங்களைக் குறித்து ஒவ்வொரு கிறிஸ்தவரின் கடமை

- (1கொரி 12 - 14 12:20 37-40)

1கொரி 12:31 இப்படியிருக்க முக்கியமான வரங்களை நாடுங்கள் இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்குக் காண்பிக்கிறேன்

"முக்கியமான வரங்களை நாடுங்கள்" எல்லா விசுவாசிகளும் உண்மையான மனதோடு வரங்களை நாடிப் பெற்றுக் கொள்ளவேண்டும் (1கொரி 14:1)

நாடுங்கள் (covet) ζηλόω **zeelooo** 2206

வினைச்சொல் - பொறாமைகொள், வைராக்கியங்கொள், நாடு, வைராக்கியம் பாராட்டு, ஜாக்கிரதையாயிரு **(eager rivalry, strong passion for a thing).** (அப் 5:17)

மேன்மையானது **(best)** - **κρείττων - kreittoon** - 2909

பெயரடை - நலமான, நன்மைக் கேதுவான நன்மையான முக்கியமான விசேஷித்த மேன்மையான **(stronger; better; greater; superior)** - இந்த வார்த்தையை இவ்வாறு மொழிபெயர்க்கலாம் **"best"** (1கொரி 12:31) **and "better"** (1கொரி 7:9 38; 1கொரி 11:17 பிலி 1:23 எபி 1:4 எபி 6:9 எபி 7:7,19,22 எபி 8:6,9 23 எபி 10:34 எபி 11:35,40 எபி 12:24 1பேதுரு 3:17, 2பேதுரு 2:21) கிறிஸ்துவின் சரீரமாகிய சபை சீராகச் செயல்படுவதற்குப் பரிசுத்த ஆவியானவரின் எல்லா வரங்களுமே தேவை

13 அதிகாரம்

13. அன்பில்லாவிட்டால் வரங்களினால் பயனில்லை – (கலா 5:22)

1கொரி 13:1 நான் மனுஷர் பாஷைகளையும் தூதர்பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிரா விட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்

1கொரி 13:2 நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்க சகல விசுவாசமுள்ளவ னாயிருந்தாலும், அன்பு எனக்கிரா விட்டால் நான் ஒன்றுமில்லை

1கொரி 13:3 எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத் தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை

"நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்" ஒரு மனுஷன் தன் விசுவாசத்திலிருந்து பின்வாங்கிப் போன நிலைமையிலும் அவனால் வரங்களைப் பயன்படுத்த முடியும் என்பதைப் பவுல் இங்கு தெளிவுபடுத்துகிறார் (1கொரி 13:1-3) சாலொமோன் பாவம் செய்து பின்வாங்கிப் போனாலும் "எனக்குமுன் எருசலேமிலிருந்த எல்லாரைப் பார்க்கிலும் நான் பெரியவனும் திரவிய சம்பன்னனுமானேன் என் ஞானமும் என்னோடேகூட இருந்தது" என்று தன்னைப் பற்றிக் கூறுகிறான். (பிர 2:9)

"மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும்" அந்நிய பாஷைகளில் பேசுகிறவர்கள் பூலோகத்தின் பாஷை களையும், தேவதூதர்களின் பாஷைகளையும் பேசுவதற்கு வாய்ப்புள்ளது.

14. அன்பின் சுபாவம் – (யோவான் 3:16; ரோமர் 5:8, 2கொரி 5:14-21, கலா 5:22-23; 1யோவான் 3:1-18; 4:7-21)

1கொரி 13:4 அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமை யில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது.

1கொரி 13:5 அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது,

1கொரி 13:6 அநியாயத்தில் சந்தோஷப் படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும்.

1கொரி 13:7 சகலத்தையும் தாங்கும் சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத் தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்

அன்பு (Charity) - ἀγάπη - agapee - 26

பெண்பால பெயர்சொல் - அன்பு (spontaneous and divine love) - வரங்கள் ஒழிந்துபோனாலும் அன்பு ஒழிந்துபோகாது

(அ) மெய்மையான கிறிஸ்தவ அன்பு - 1கொரி 13:1

(ஆ) தேவன் மனிதர் மீது வைக்கும் அன்பு ரோம. 5:8

(இ) மனிதன் தேவன் மீது காட்டும் அன்பு - யோவா 12:25

(ஈ) மனிதன் மனிதனிடம் காட்டும் அன்பு யோவா 13:35

(உ) பண்மையில அன்பின் விருந்துகள் கிறிஸ்தவ ஐக்கியம் சிறந்து விளங்க சான்று பகரும் விருந்து யூதா 12

தெய்வீக அன்பின் சுபாவங்கள்

1. நீடிய சாந்தம்
2. தயவு
3. பொறாமையின்மை
4. தன்னைப் புகழாது
5. இறுமாப்பாயிராது
6. அயோக்கியமானதைச் செய்யாது.

I கொரிந்தியர் – தொகுப்புரை

13 அதிகாரம்

7 தற்பொழிவை நாடாது

8 சினமடையாது

9 தீங்கு நினையாது

10 அநியாயத்தில் சந்தோஷப்படாது

11 சத்தியத்தில் சந்தோஷப்படும்

12 சகலத்தையும் தாங்கும்

13. சகலத்தையும் விசுவாசிக்கும்

14. சகலத்தையும் நம்பும்

15. சகலத்தையும் சகிக்கும்.

16. அன்பு ஒருக்காலும் ஒழியாது

15. வரங்கள் ஒழிந்துபோகும் - ஆனால் அன்பும் மற்ற சிறுமைகளும் ஒழியாது

1கொரி 13:8 அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்க தரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம் அறிவானாலும் ஒழிந்துபோம்

1கொரி 13:9 நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது.

1கொரி 13:10 நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்து போம்.

1கொரி 13:11 நான் குழந்தையாயிருந்த போதுகுழந்தையைப்போலப் பேசினேன் குழந்தையைப்போலச் சிந்தித்தேன் குழந்தையைப்போல யோசித்தேன் நான் புருஷனானபோதோ குழந்தைக் கேற்றவைகளை ஒழித்து விட்டேன்

1கொரி 13:12 இப்பொழுது கண்ணா டியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம் அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம், இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்து கொள்ளுவேன்

1கொரி 13:13 இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது இவைகளில் அன்பே பெரியது.

தீர்க்கதரிசன எண் - 11

"அன்பு ஒருக்காலும் ஒழியாது; தீர்க்க தரிசனங்களானாலும் ஒழிந்துபோம் அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம். " (1கொரி 13:8-13)

ஒழிந்துபோகும் காரியங்கள்

1. தீர்க்கதரிசனங்கள்
2. அந்நிய பாஷைகள்
3. அறிவு

ஒழிந்துபோதல் (fail) - καταργέω - katargeoo - 2673

வினைச்சொல் - கெடு, அவமாக்கு, ஒழிந்துபோ அழிந்துபோ பரிகரி, நீக்கு, விருத்தமாக்கு (to make useless or void; abolish; leave unemployed) (ரோமர் 3:3; ரோமர் 4:14; கலா 3:17; கலா 5:4) - இந்த வார்த்தை 1கொரி 13:8,10,11 ஆகிய வசனங்களில் "fail," "vanish away," "done away" "put away" என்றும் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோகும். (1கொரி 13:9-10) தற்காலத்தில் ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு விதமான பாஷைகள் உள்ளன. ஒரு பாஷையைப் பேசுவோருக்கு வேறு பாஷையில் பேசினால் புரியாது. நாம் பரலோகத்தில் நித்திய காலமாக ஜீவிக்கும்போது எல்லோரும் புரிந்து கொள்ளும் பாஷையைப் பேசுவோம் மற்றவர்கள் பேசும் பாஷையும் நமக்குப் புரியும். (1கொரி 13:9-10)

நிறைவானது (perfect) - τέλειος teleios 5046

பெரிய, பூரண பரிபூரண மான, நிறைவான தேறின உத்தமமான முடிவடைந்துள்ள காரியம். தீர்க்கதரிசனங்கள் நிறைவேறும்போது அவை முடிவு பெறுகிறது. அந்நிய பாஷைகளும் நமது அறிவும் நிறைவானது வரும்போது ஒழிந்துபோகும். எல்லோரும் புரியும் விதத்தில் பேசுவது நிறைவானதாக இருக்கும்.

I கொரிந்தியர் – தொகுப்புரை

13 அதிகாரம்

மனுஷன் புருஷனானபோது ஒழித்துவிடும் காரியங்கள்

1 குழந்தையைப்போலப் பேசுதல்

2 குழந்தையைப்போலச் சிந்தித்தல்

3 குழந்தையைப்போல யோசித்தல்

ஒழித்துவிடுதல் (put away) - καταργέω - katargeoo - 2673

வினைச்சொல் - கெடு, அவமாக்கு, ஒழிந்துபோ, அழிந்துபோ, பங்கி நீக்கு, வியர்த்தமாக்கு (1கொரி 13:8)

வரும் காரியங்கள் நமக்கு மறைவாக இராமல் தெளிவாகத் தெரியும்போது தீர்க்கதரிசனம் நமக்குத் தேவைப்படாது. (1கொரி 13:12) நமக்கு எல்லா பாஷைகளும் புரியும்போது அந்நிய பாஷைகளின் வரமும் தேவைப்படாது. நமக்கு முழுமையான தெய்வீக ஞானம் பரிபூரணமாகக் கிடைக்கும்போது நாம் அரைகுறை ஞானத்தினால் அவதிப்பட வேண்டியதில்லை. இவ்வாறாக நிறைவான காரியங்கள் வரும்போது குறைவான காரியங்களை நம்மை விட்டு ஒழித்து விடுவோம்.

கண்ணாடி (glass) - ἔσοπτρον - esoptron - 2072

பால்வேறுபாடற்ற பெயர்ச்சொல்- கண்ணாடி (mirror) (1கொரி 13:12 யாக் 1:23)

நிழலாட்டம் (darkly) - αἴνιγμα - ainigma - 135

பால் வேறுபாடு அல்லாத பெயர்ச்சொல் - நிழலாட்டம் (a dark saying, riddle, enigma) - நம்முடைய வருங்காலம் ஒரு சொப்பனத்தைப் போன்று இருக்கிறது. அது எவ்வாறு இருக்கும் என்பதை நம்மால் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. நமது தற்காலத்து அனுபவங்களின் பிரகாரம் வருங்காலத்தைச் சிந்தித்துப் பார்க்கிறோம்.

"நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்து கொள்ளுவேன்" நாம் பரலோகத்திலும், பூமியிலும் ஒருவரையொருவர் நித்திய காலமாக அறிந்து கொள்வோம். (1கொரி 15:35-58)

நித்தியமாக நிலைத்திருக்கும் காரியங்கள்

1. விசுவாசம் (faith)
2. நம்பிக்கை (hope)
3. அன்பு (divine love)

14 அதிகாரம்

16. எல்லா வரங்களையும் விசேஷமாய் தீர்க்கதரிசன வரத்தையும் விரும்புங்கள் – (12:30)

1கொரி 14:1 அன்பை நாடுங்கள்; ஞானவரங்களையும் விரும்புங்கள்; விசேஷமாய்த் தீர்க்க தரிசன வரத்தை விரும்புங்கள்.

1கொரி 14:2 ஏனெனில், அந்நிய பாஷையில் பேசுகிறவன், ஆவியினாலே இரகசியங்களைப் பேசினாலும் அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிற படியினாலே அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான்.

நாம் விரும்ப வேண்டிய மூன்று [redacted]

1 அன்பை நாடவேண்டும். (1கொரி 13:4)

2 ஞானவரங்களை விரும்ப வேண்டும். (1கொரி 12:31)

3 தீர்க்கதரிசன வரத்தை விரும்ப வேண்டும்.

அந்நிய பாஷைக்கும், தீர்க்கதரிசனத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடுகள்

1 அந்நிய பாஷைகளில் பேசுகிறவன் தேவனிடத்தில் பேசுகிறான்; தீர்க்கதரிசனம் சொல்லுகிறவன் மனுஷருக்கு பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான். (1கொரி 14:2, 3)

2 அந்நிய பாஷைகளில் பேசும்போது இரகசியங்களை ஒருவனும் அறிந்து கொள்ள முடியாது. தீர்க்கதரிசனத்தில் பேசுகிறவற்றை அறிந்து கொள்ள முடியும். (1கொரி 14:3-4)

3 அந்நிய பாஷைகள் பேசுகிறவனுக்குப் பக்தி விருத்தி உண்டாக்கும். தீர்க்கதரிசனம் கூறுகிறவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பக்திவிருத்தி உண்டாகும். (1கொரி 14:3, 4)

4 அந்நிய பாஷையின் மூலமாகத் தேவனிடத்தில் பேச முடிகிறது; தீர்க்கதரிசனத்தின் மூலமாக மனுஷருக்குப் பக்திவிருத்தியும் புத்தியும், ஆறுதலும் உண்டாக்கத் தக்கதாகப் பேசமுடிகிறது. (1கொரி 14:2-4)

5 தீர்க்கதரிசனம் சொல்லுகிறவன் அந்நிய பாஷைகளில் பேசுகிறவனைவிட மேன்மையுள்ளவன். அந்நிய பாஷைகள் அர்த்தம் கூறப்பட்டு, அதை ஜனங்கள் புரிந்து கொண்டால்தான் பிரயோஜனமாய் இருக்கும். (1கொரி 14:5)

6 அந்நிய பாஷைகளுக்கு அர்த்தம் கூறாவிட்டால் ஜனங்களுக்குப் பிரயோஜனமாய் இராது. தீர்க்கதரிசனம் ஜனங்களுக்குப் பிரயோஜனமாய் இருக்கும். (1கொரி 14:5-13, 27-28)

7 அந்நிய பாஷையில் பேசுகிறவன் அதின் அர்த்தத்தையும் சொல்லத்தக்கதாக ஜெபம் பண்ண வேண்டும். தீர்க்கதரிசியின் வார்த்தைகள் தன்னுடைய பாஷையில் இருப்பதினால் தான் கூறியதற்கு அர்த்தம் கூறுவதற்காக அவன் ஜெபம் பண்ண வேண்டியதில்லை. (1கொரி 14:3-13)

8 அந்நிய பாஷையின் கருத்தை அறியாதவன் பேசுகிறவனுக்கு அந்நியனாய் இருப்பான்; பேசுகிறவனும் கேட்கிறவனுக்கு அந்நியனாய் இருப்பான். தீர்க்கதரிசனத்தில் இந்தப் பிரச்சனை இல்லை. (1கொரி 14:3,11)

9 ஆவிக்குரிய வரங்களெல்லாம் சபைக்குப் பக்திவிருத்தி உண்டாக்கத் தக்கதாக அருளப்பட்டிருக்கிறது. (1கொரி 14:12) இந்த விஷயத்தில் தீர்க்கதரிசனம் கூறும் வரம் அந்நிய பாஷைகளில் பேசும் வரத்தைவிட மேன்மையானது. (1கொரி 14:1-6,27-28)

10 அந்நிய பாஷைகளில் பேசுவதினால் பேசுகிறவனுடைய ஆவிக்குப் பக்திவிருத்தி உண்டாகிறது. தீர்க்கதரிசனம் அனைவருக்கும் பிரயோஜனமானது. (1கொரி 14:1-5, 14-15,24-25)

I கொரிந்தியர் - தொகுப்புரை

14 அதிகாரம்

11 அந்நிய பாஷைகளில் பேசுவது பேசுகிறவருக்கு ஆசீர்வாதம். ஆனாலும் சபையில் அந்நிய பாஷையில் 10,000 வார்த்தைகள் பேசுவதைவிட மற்றவர்களை உயர்த்தும்படி தன்னுடைய சொந்த பாஷையில் ஐந்து வார்த்தைகளில் தீர்க்கதரிசனம் கூறுவது ஆசீர்வாதமாக இருக்கும். (1கொரி 14, 17-19

12 அந்நிய பாஷைகள் அவிசுவாசிகளுக்கு அடையாளம் தீர்க்கதரிசனம் விசுவாசிகளுக்கு அடையாளம் 1கொரி 14:21-22

13 சபையார் எல்லாரும் ஏகமாய் கூடிவந்து, எல்லாரும் அந்நிய பாஷைகளிலே பேசிக்கொள்ளும்போது இவர்களுக்கு பைத்தியம் பிடித்துவிட்டது என்று அவிசுவாசிகள் கேலிபண்ணுவார்கள் (1கொரி 14:23-25

14 எல்லா வரமும் சபையின் பக்திவிருத்திக்கு ஏதுவாகச் செய்யப்படவேண்டும் (1கொரி 14:26) இந்த விஷயத்தில் தீர்க்கதரிசன வரம் சபையின் பக்தி விருத்திக்கேதுவாக நன்றாகக் கிரியை செய்கிறது. (1கொரி 14:5,23-25)

15 அந்நிய பாஷையில் பேசும்போது ஒவ்வொருவராகப் பேசவேண்டும் ஒருவன் அர்த்தத்தையும் சொல்லவேண்டும். இரண்டு அல்லது மூன்று பேர் மட்டுமே பேசவேண்டும். (1கொரி 14:3,27-31

16 தீர்க்கதரிசிகள் இரண்டு அல்லது மூன்று பேர் பேசலாம் மற்றவர்கள் நிதானிக்க வேண்டும் (1கொரி 14:27-32

"அந்நிய பாஷையில் பேசுகிறவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான்" அந்நிய பாஷையில் பேசுகிறவன் ஆவியினாலே இரகசியங் களைப் பேசுகிறான் பரிசுத்த ஆவியானவர் மூலமாகவே மனுஷர் அந்நிய பாஷைகளில் பேசுகிறார்கள் வேதாகமத்தில் இது முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. ஏசாயா (ஏசா 28:11-12; 1கொரி 14:21) யோவேல் (யோவே 2 28-32= அப் 2:16 இயேசு (மாற்கு 16:17; யோவான் 15:26, யோவான் 16:13-15) இந்தக் காரியம் நிறைவேறியிருக்கும் வசனங்கள் அப் 2:4 அப் 10:44-48; அப் 19:1-7; 1கொரி 12:8-10,28-31; 1கொரி 13:1-3; 1கொரி 14:1-40)

17. தீர்க்கதரிசன வரமும் அந்நிய பாஷைகளும்

1கொரி 14:3 தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ மனுஷருக்கு பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகத்தக்கதாகப் பேசுகிறான்

1கொரி 14:4 அந்நியபாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ சபைக்கு பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்

18. அந்நிய பாஷைகளில் பேசுகிறவன் சபைக்கு பக்தி விருத்தியுண்டாகும் படி பேச வேண்டும்

1கொரி 14:5 நீங்களெல்லாரும் அந்நிய பாஷைகளைப் பேசும்படி விரும்புகிறேன் ஆகிலும் அந்நிய பாஷைகளில் பேசுகிறவன் சபைக்கு பக்திவிருத்தி உண்டாகும்படிக்கு அர்த்தத்தையும் சொல்லாவிட்டால் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன் அவனிலும் மேன்மையுள்ளவன் ஆதலால் நீங்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவர்களாக வேண்டுமென்று அதிகமாய் விரும்புகிறேன்

19. அந்நிய பாஷைகளை பிரயோஜனம் உண்டாகும் விதத்தில் பேசவேண்டும்

1கொரி 14:6 மேலும், சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்து உங்களுக்கு இரகசியங்களை வெளிப்படுத்துவதற்காவது, அறிவுண்டாக்குவதற்காவது தீர்க்கதரிசனத்தை அறிவிக்கிறதற்காவது, போதகத்தைப் போதிக்கிறதற்காவது ஏதுவானதைச் சொல்லாமல், அந்நிய பாஷைகளில் பேசினால் என்னாலே உங்களுக்குப் பிரயோஜனம் என்ன?

14 அதிகாரம்

1கொரி 14:7 அப்படியே புல்லாங்குழல் சுரமண்டலம் முதலாகிய சத்தமிடுகிற உயிரில்லாத வாத்தியங்கள் தொனிகளில் வித்தியாசம் காட்டாவிட்டால், குழலாலே ஊதப்படுகிறதும் சுரமண்டலத்தாலே வாசிக்கப்படுகிறதும் இன்னதென்று எப்படித் தெரியும்?

1கொரி 14:8 அந்தப்படி எக்காளமும் விளங்காத சத்தமிட்டால் எவன் யுத்தத்திற்கு ஆயத்தம்பண்ணுவான்?

1கொரி 14:9 அதுபோல, நீங்களும் தெளிவான பேச்சை நாவினால் வசனியாவிட்டால் பேசப்பட்டது இன்னதென்று எப்படித் தெரியும்? ஆகாயத்தில் பேசுகிறவர்களாயிருப்பீர்களே.

1கொரி 14:10 உலகத்திலே எத்தனையோ விதமான பாஷைகள் உண்டாயிருக்கிறது, அவைகளில் ஒன்றும் அர்த்தமில்லாததல்ல.

1கொரி 14:11 ஆயினும், பாஷையின் கருத்தை நான் அறியாமலிருந்தால் பேசுகிறவனுக்கு அந்நியனாயிருப்பேன், பேசுகிறவனும் எனக்கு அந்நியனாயிருப்பான்.

தெளிவானது (intelligible) εὔσημος - euseemos - 2154

பொருள் - தெளிவான (easy to be understood)

"எத்தனையோவிதமான பாஷைகள்" - உலகத்தில் ஆயிரக்கணக்கான பாஷைகள் உள்ளன. இவை எல்லாமே பேசுகிறவர்களுக்குப் புரியும் அர்த்தமுள்ளவை.

20. சபைக்கு பக்தி விருத்தியுண்டாகத் தக்கதாக ஆவிக்குரிய வரங்களில் தேறும்படி நாட வேண்டும் - 14:4, 5, 17, 26, 40

1கொரி 14:12 நீங்களும் ஆவிக்குரிய வரங்களை நாடுகிறவர்களானபடியால், சபைக்குப் பக்தி விருத்தி உண்டாகத் தக்கதாக அவைகளில் தேறும்படி நாடுங்கள்.

21. ஆவியோடும் விண்ணப்பம் பண்ண வேண்டும், கருத்தோடும் விண்ணப்பம் பண்ண வேண்டும்

1கொரி 14:13 அந்தப்படி அந்நியபாஷையில் பேசுகிறவன் அதின் அர்த்தத்தையும் சொல்லத்தக்கதாக விண்ணப்பம் பண்ணக்கடவன்.

1கொரி 14:14 என்னத்தினாலெனில், நான் அந்நிய பாஷையிலே விண்ணப்பம் பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும்.

1கொரி 14:15 இப்படியிருக்க, செய்யவேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்.

1கொரி 14:16 இல்லாவிட்டால், நீ ஆவியோடு ஸ்தோத்திரம் பண்ணும்போது, கல்லாதவன் உன் ஸ்தோத்திரத்திற்கு ஆமென் என்று எப்படிச் சொல்லுவான்? நீ பேசுகிறது இன்னதென்று அவன் அறியானே.

1கொரி 14:17 நீ நன்றாய் ஸ்தோத்திரம் பண்ணுகிறாய், ஆகிலும் மற்றவன் பக்திவிருத்தியடையமாட்டானே.

"அந்தப்படி அந்நியபாஷையில் பேசுகிறவன் அதின் அர்த்தத்தையும் சொல்லத்தக்கதாக விண்ணப்பம்பண்ணக்கடவன்" இது அந்நிய பாஷையில் பேசுகிற எல்லோருக்கும் கூறப்பட்டிருக்கும் கட்டளை.

"நான் அந்நிய பாஷையிலே விண்ணப்பம் பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி என் கருத்து பயனற்றதாயிருக்கும்" - இந்தக் காரணத்திற்காகத்தான் அந்நிய பாஷையில் பேசுகிறவன் தான் பேசியதன் அர்த்தத்தையும் சொல்லத்தக்கதாக ஜெபம் பண்ண வேண்டுமென்று பவுல் வலியுறுத்திக் கூறுகிறார். அந்நிய பாஷைகள் வியாக்கியானம் பண்ணப்படவில்லையென்றால் அதனால் யாருக்கும் பக்திவிருத்தி உண்டாகாது.

14 அதிகாரம்

"நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன் கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்" - நான் அந்நிய பாஷையிலும் ஜெபம் பண்ணுவேன். (1கொரி 14:14) என்னுடைய பாஷையிலும் ஜெபம் பண்ணுவேன் (1கொரி 14:14-16)

"நான் ஆவியோடும் பாடுவேன் கருத்தோடும் பாடுவேன்" - நான் அந்நிய பாஷையிலும் பாடுவேன் (1கொரி 14:14) என்னுடைய பாஷையிலும் பாடுவேன்

"கல்லாதவன் உன் ஸ்தோத்திரத்திற்கு ஆமென் என்று எப்படிச் சொல்லுவான்?" - நாம் பந்தியில் அமர்ந்திருக்கும்போது நமது போஜனத்திற்காகக் கர்த்தரை ஸ்தோத்திரம் பண்ணும்போது அந்நிய பாஷையில் ஸ்தோத்திரம் பண்ணினால் அது நம்மோடு பந்தியில் இருப்பவர்களுக்குப் புரியாது. அவர்களால் ஆமென் என்று சொல்ல முடியாது. ஆகையினால் சரியான இடத்தில் வரங்களைச் சரியாகப் பயன்படுத்துவதற்கு நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

22. பவுல் அதிகமாய் பாஷைகளைப் பேசினார் - (14:2-4)

1கொரி 14:18 உங்களெல்லாரிலும் நான் அதிகமாய் பாஷைகளைப் பேசுகிறேன், இதற்காக என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்.

1கொரி 14:19 அப்படியிருந்தும், நான் சபையிலே அந்நியபாஷையிலே பதினாயிரம் வார்த்தைகளைப் பேசுகிறதிலும், மற்றவர்களை உணர்த்தும்படி என் கருத்தோடே ஐந்து வார்த்தைகளைப் பேசுகிறதே எனக்கு அதிக விருப்பமாயிருக்கும்.

"உங்களெல்லாரிலும் நான் அதிகமாய் பாஷைகளைப் பேசுகிறேன்" - சபையிலுள்ள மற்ற விசுவாசிகளைவிட பவுல் அந்நிய பாஷைகளில் அதிகமாகப் பேசக் கூடியவர். ஆனால் அந்நிய பாஷைகளில் பேசுவதற்கென்று நேரமும், இடமும் உள்ளது. அதைக் கவனத்தில் கொண்டு அந்நிய பாஷைகளில் பேச வேண்டும்.

அந்நிய பாஷைகளில் பேசக்கூடாத வேளைகளும், இடங்களும்

1 நமக்கு அன்பு இராவிட்டால் நாம் அந்நிய பாஷையில் பேசுவதினால் யாருக்கும் பயன் இல்லை. (1கொரி 13:1-3)

2 சபை ஆராதனைகளில் அந்நிய பாஷைக்கு அர்த்தம் சொல்லுகிறவன் இல்லாதபோது அந்நிய பாஷைகளில் பேசுவது பக்திவிருத்தியை உண்டாக்காது. (1கொரி 14:5,27-28)

3 ஜனத்திற்குச் சத்தியத்தை அறிவிக்கும் வேளையில் அந்நிய பாஷையில் பேசுவதினால் பயனில்லை. (1கொரி 14:6-13, 19,23-25)

4 போஜன பந்தியில் அமர்ந்திருக்கும் போது அந்நிய பாஷையில் ஸ்தோத்திரம் பண்ணுவதினால் பயனில்லை. (1கொரி 14:16-17)

5 சபையார் எல்லாரும் ஏகமாய் கூடிவந்து எல்லாரும் அந்நிய பாஷைகளில் பேசினால் அங்கு வரும் அவிசுவாசிகளுக்குப் பிரயோஜனமாயிராது. (1கொரி 14:23-25)

6 அந்நிய பாஷையில் இரண்டு அல்லது மூன்று பேர் பேசிய பின்பு அதற்கு மேலும் அந்நிய பாஷையில் பேசுவது தேவையற்றது. (1கொரி 14:27)

"நான் சபையிலே அந்நியபாஷையிலே பதினாயிரம் வார்த்தைகளைப் பேசுகிறதிலும் மற்றவர்களை உணர்த்தும்படி என் கருத்தோடே ஐந்து வார்த்தைகளைப் பேசுகிறதே எனக்கு அதிக விருப்பமாயிருக்கும்" பவுல் இவ்வாறு கூறுவதினால் அவர் அந்நிய பாஷையைக் குறைத்து மதிப்பிடுகிறார் என்று கூறமுடியாது. சபை ஆராதனையில் அந்நிய பாஷை தேவையில்லை என்று பவுல் கருதுவதாக முடிவு பண்ணிவிடக்கூடாது. சபைக்கு வருகிறவர்களுக்கு அந்நிய பாஷைகளின் அநேக வார்த்தைகளைவிட அவர்கள் புரிந்து கொள்ளும்விதமாகக் கருத்தோடு பேசப்படும் ஒருசில வார்த்தைகளே அவர்களுக்குப் பக்திவிருத்தியை உண்டாக்கும்.

14 அதிகாரம்

"மற்றவர்களை உணர்த்தும்படி" - ஆவிக்குரிய வரங்களின் நோக்கங்களைப் பவுல் இங்கு எடுத்துக் கூறுகிறார் மற்றவர்களை உணர்த்துவதற்காகவும் மற்றவர்களின் ஆவிக்குரிய நன்மைகளுக்காகவும் வரங்களைப் பயன்படுத்த வேண்டும். நம்மிடத்திலுள்ள வரங்களை நம்முடைய சுய பெருமைக்காக வெளிப்படுத்தக்கூடாது. (கொரி 14:1,3-9, 11-13,15-17,19,23-25 26-28 31,40)

23. புத்தியிலே குழந்தைகளாயிராதேயுங்கள்

கொரி 14:20 சகோதரரே நீங்கள் புத்தியிலே குழந்தைகளாயிராதேயுங்கள் துர்க்குணத்திலே குழந்தைகளாயும், புத்தியிலோ தேறினவர்களாயுமிருங்கள்

மனுஷருடைய வளர்ச்சியின் மூன்று நிலைகள்

1 குழந்தை

2 பிள்ளை

3 தேறினவன்

குழந்தைகள் (children) - νήπιος neepios 3516

பெயரடை பாலகரான குழந்தையாயிருக்கிற சிறுபிள்ளையான மழலைப் பேசக்கூட பேசத்தெரியாத சிறிய குழந்தை இந்தக் குழந்தைக்குப் பாவத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது.

குழந்தைபோல செயல்படு (be ye children) - νηπιάζω - neepiazoo - 3515

வினைச்சொல் - குழந்தைபோல செயல்படு

பிள்ளை (child) παιδίον paidion 3813

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பிள்ளை பாலகன் சிறுபிள்ளை, குழந்தை - பள்ளியில் பயிலச் செல்லும் பிள்ளைப் பருவம்.

தேறினவன் (mature) - τέλειος - teleios - 5046

பெயரடை - பூரண, பரிபூரணமான நிறைவான தேறின, உத்தமமான - சீர் வளர்ச்சியிலும், அறிவிலும் தேறினவன்

24. அந்நிய பாஷைகள் அவிசுவாசிகளுக்கு அடையாளமாய் இருக்கிறது - ஏசா 28:9-11

1கொரி 14:21 மறுபாஷைக்காரராலும் மறு உதடுகளாலும் இந்த ஜனங்களிடத்தில் பேசுவேன், ஆகிலும் அவர்கள் எனக்குச் செவி கொடுப்பதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார் என்று வேதத்தில் எழுதியிருக்கிறதே.

1கொரி 14:22 அப்படியிருக்க, அந்நிய பாஷைகள் விசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல் அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது தீர்க்கதரிசனமோ அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல் விசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது

"வேதம்" (law) முழு வேதாகமத்தையும் குறிப்பதற்கு யூதர்கள் வேதம் என்னும் சொல்லைப் பயன்படுத்துகிறார்கள் நியாயப்பிரமாண புஸ்தகம், தீர்க்கதரிசனம் சங்கீதம் எல்லாம் சேர்ந்ததே வேதமாகும் (லூக்கா 24:44; யோவான் 10:34, யோவான் 15:25)

1கொரிந்தியர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனம் எண் - 5

"மறுபாஷைக்காரராலும், மறு உதடுகளாலும் இந்த ஜனங்களிடத்தில் பேசுவேன் ஆகிலும் அவர்கள் எனக்குச் செவிகொடுப்பதில்லை யென்று கர்த்தர் சொல்லுகிறார்" (1கொரி 14:21; ஏசா 28 11-12) கிறிஸ்து பிறப்பதற்கு 700 வருஷங்களுக்கு முன்பாகவே இந்தத் தீர்க்கதரிசனம் முன்னறிவிக்கப்பட்டது.

14 அதிகாரம்

"அந்நியபாஷைகள் அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது" - அந்நிய பாஷைகளில் பேசுவதன் நோக்கம் என்ன என்பதைப் பவுல் தெளிவுபடுத்துகிறார். விசுவாசிகள் அந்நிய பாஷைகளில் பேசுவதை அவிசுவாசிகள் கேட்கும்போது பரிசுத்த ஆவியானவரின் தெய்வீக வல்லமையைப் புரிந்து கொள்கிறார்கள் (ஏசா 28:11-1, அப் 2:1-11; அப் 10:44-48 அப் 19:1-7; 1கொரி 14) அந்நிய பாஷைகள் அவிசுவாசிகளுக்கு அடையாளமாக இருப்பதுபோன்று தீர்க்கதரிசனம் விசுவாசிகளுக்கு அடையாளமாக இருக்கிறது.

25. எல்லோரும் அந்நிய பாஷைகளிலே பேசிக்கொள்ளும்போது ஏற்படும் காரியம் - (14:27-28)

1கொரி 14:23 ஆகையால் சபையாரெல்லாரும் ஏகமாய்க் கூடிவந்து, எல்லாரும் அந்நிய பாஷைகளிலே பேசிக்கொள்ளும்போது கல்லாதவர்களாவது, அவிசுவாசிகளாவது உள்ளே பிரவேசித்தால் அவர்கள் உங்களைப் பைத்தியம் பிடித்தவர்களென்பார்களல்லவா?

"அவர்கள் உங்களைப் பைத்தியம் பிடித்தவர்களென்பார்களல்லவா?" - அந்நிய பாஷைகளை நேரம், காலம் இடம் தெரியாமல் தாறுமாறாகப் பயன்படுத்தும் போது மற்றவர்கள் விசுவாசிகளைப் பார்த்து இவ்வாறுதான் கூறுவார்கள். பெந்தெகொஸ்தே நாளில் மேலறையில் 120 பேரும் அந்நிய பாஷையில் பேசியபோது அங்குக் கூடிவந்தவர்கள் இவர்களைப் பார்த்து கேலிபண்ணினார்கள். பேதுரு அந்நிய பாஷையில் பேசுவதை உடனே நிறுத்திவிட்டு, தன்னுடைய சொந்த பாஷையில் எல்லோரும் புரிந்து கொள்ளும் பிரகாரமாகப் பிரசங்கம் பண்ணினான் (அப் 2:1-14)

26. எல்லாரும் தீர்க்கதரிசனம் சொல்லும் போது ஏற்படும் காரியம்

1கொரி 14:24 எல்லாரும் தீர்க்கதரிசனஞ் சொல்லுகையில் அவிசுவாசியொருவன் அல்லது கல்லாதவனொருவன், உள்ளே பிரவேசித்தால் அவன் எல்லாராலும் உணர்த்துவிக்கப்பட்டும், எல்லாராலும் நிதானிக்கப்பட்டும் இருப்பான்

1கொரி 14:25 அவனுடைய இருதயத்தின் அந்தரங்கங்களும் வெளியரங்கமாகும்; அவன் முகங்குப்புற விழுந்து, தேவனைப் பணிந்துகொண்டு, தேவன் மெய்யாய் உங்களுக்குள்ளே இருக்கிறாரென்று அறிக்கையிடுவான்

"அவன் முகங்குப்புற விழுந்து தேவனைப் பணிந்துகொள்வான்" - ஆவிக்குரிய வரங்களின் முக்கிய நோக்கம் ஜனங்களுக்கு அவர்களுடைய பாவங்களை உணர்த்துதி. ஆவிக்குரிய ஜீவியத்தில் அவர்களை வளரச்செய்வதாகும். அவிசுவாசியினுடைய இருதயத்தின் அந்தரங்கம் தீர்க்கதரிசன வரத்தின் மூலமாக வெளியரங்கமாகும்போது அவன் தேவனிடத்தில் தன்னை ஒப்புக்கொடுப்பான். தன்னுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி தன்னை மன்னிக்குமாறு இயேசு கிறிஸ்துவிடம் விண்ணப்பம் பண்ணுவான். இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் மனுஷருடைய பாவங்களை நீக்குவதற்காகவே மரித்தார் (யோவான் 3:16)

27. சகலமும் பக்தி விருத்திக்கேதுவாக செய்யப்படக்கடவது

1கொரி 14:26 நீங்கள் கூடிவந்திருக்கிற போது, உங்களில் ஒருவன் சங்கீதம் பாடுகிறான், ஒருவன் போதகம் பண்ணுகிறான், ஒருவன் அந்நிய பாஷையைப் பேசுகிறான், ஒருவன் இரகசியத்தை வெளிப்படுத்துகிறான், ஒருவன் வியாக்கியானம்பண்ணுகிறான். சகோதரரே, இது என்ன? சகலமும் பக்திவிருத்திக்கேதுவாகச் செய்யப்படக் கடவது.

14 அதிகாரம்

புதிய ஏற்பாட்டுச் சபையில் நடைபெறும் காரியங்கள்

1 சங்கீதம் பாடுதல் (எபே 5 கொலோ 3)

2 உபதேசங்களைப் போதிப்பது (2தீமோ 4:2-4; அப் 2:42)

3 அந்நிய பாஷைகளும், வியாக்கியானங்களும் (1கொரி 14:27)

4 தீர்க்கதரிசனங்கள் (1கொரி 14:3,24-25, 29-30)

5 ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுதல் (எபி 10:25)

6 கர்த்தருடைய பந்தியும், அன்பின் விருந்தும் (1கொரி 10:16-17; 1கொரி 11:17-34; யூதா 1:12)

7 வேதவாக்கியம் வாசிப்பது (லூக்கா 4:16, கொலோ 4:16, 1தெச 5:27 1தீமோ 4:13)

8 ஜெபங்கள் (அப் 2:42; அப் 4:24-31)

9 வரங்கள் கிரியை செய்வது - குணப்படுத்துதல், விசுவாசம், அற்புதங்களைச் செய்தல் முதலியன (அப் 3:6, அப் 5, 12 16, அப் 8:5-8 அப் 15:12, அப் 19:11)

10 ஆவிகளைப் பகுத்தறிதலும் நிதானித்தறிதலும் (அப் 5:1-11 அப் 13:6-11, 1கொரி 5)

11 ஊழிய அறிக்கை சமர்ப்பிப்பதும் ஊழியக் காரியங்களை விவாதிப்பதும் (அப் 4:23, அப் 6:1-7; அப் 11:1-18, அப் 15:1-35)

12 ஞானஸ்நானம் (அப் 2:41; அப் 8:12; அப் 16:33)

13 பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும் வரங்களையும் பெற்றுக் கொள்வதற்காக தலையின்மீது கைகளை வைத்து ஜெபிப்பது (அப் 8:14-19; அப் 9:17-18, அப் 19:1-7; 1தீமோ 4:14; 2தீமோ 1:6, எபி 6)

14 பிரசங்கம் பண்ணுதல் (அப் 2:14, அப் 8:4-5,35 அப் 10:33-44, 1கொரி 1:18-24)

15 மிஷினெரிகளை அனுப்புதல் (அப் 13:1-4; அப் 15:36-40; கலா 2:9-10)

16 தருமப்பணம் சேகரித்தல் (அப் 11:29 1கொரி 16:2)

17 சமபாஷணை பண்ணுதல் (அப் 19:8-10; கலா 2)

18 தங்கள் செய்கைகளை வெளிப்படுத்தி அறிக்கையிடுதல் (அப் 19:18; யாக் 5:16)

19 சபையின் வழக்குகளை விசாரிப்பது (மத் 18:15-18; 1கொரி 5-6, அப் 5 அப் 11; கலா 2:1-14)

20 சபைக்குப் புதிய அங்கத்தினர்களைச் சேர்ப்பது (அப் 2:41)

28. சபையில் அந்நிய பாஷையில் பேசும் ஒழுங்கு

1கொரி 14:27 யாராவது அந்நிய பாஷையிலே பேசுகிறதுண்டானால், அது இரண்டுபேமட்டில் அல்லது மிஞ்சினால் மூன்றுபேமட்டில் அடங்கவும் அவர்கள் ஒவ்வொருவராய்ப் பேசவும் ஒருவன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும்

1கொரி 14:28 அர்த்தஞ் சொல்லுகிறவனில்லாவிட்டால் சபையிலே பேசாமல் தனக்கும் தேவனுக்கும் தெரியப் பேசக்கடவன்

"அந்நிய பாஷை" (unknown tongue) - பாஷை என்றாலே அது பேசுபவருக்கும், அவரோடு சம்பாஷணை பண்ணுகிறவருக்கும் புரிந்திருக்கும். இங்கு அந்நிய பாஷை என்னும் வாக்கியமானது ஆவியின் வரங்களில் ஒன்றான பாஷைகளின் வரத்தைக் குறிப்பிடுகிறது. தான் பேசுகிற பாஷையின் பொருளை அந்நிய பாஷையில் பேசுகிறவர் புரிந்து வைத்திருப்பதில்லை. (1கொரி 14:2)

I கொரிந்தியர் – தொகுப்புரை

14 அதிகாரம்

"அது இரண்டுபேர்மட்டில் அல்லது மிஞ்சினால் மூன்றுபேர்மட்டில் அடங்கவும்" - சபை ஆராதனையில் அந்நிய பாஷையில் பேசுவது வேதாகமத்தில் ஒழுங்குபடுத்தப் பட்டிருக்கிறது. ஒரு ஆராதனையில் அதிக பட்சமாக மூன்று பேர் அந்நிய பாஷைகளில் பேசலாம். ஒருவன் அந்த பாஷையின் அர்த்தத்தையும் சொல்ல வேண்டும். இரண்டாவது நபர் அந்நிய பாஷையில் பேசுவதற்கு முன்பாக முதலாவது நபர் அந்நிய பாஷையில் பேசியதற்கு அர்த்தம் சொல்லப்பட்டிருக்க வேண்டும் அந்நிய பாஷையில் பேசுகிறவர் தான் பேசிய பாஷையின் அர்த்தத்தைச் சொல்ல வேண்டும் என்று ஜெபம் பண்ண வேண்டும் (1கொரி 14:13) அந்நிய பாஷையில் பேசியவரே அதன் அர்த்தத்தையும் சொல்லலாம் அவர் மூலமாக அர்த்தம் சொல்லப்படாவிட்டால் பாஷையை வியாக்கியானம் பண்ணும் வரமுடைய வேறொருவர் அதன் அர்த்தத்தைச் சொல்லலாம் மூன்று பேர் அந்நிய பாஷையில் பேசிய பின்பு, அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும். அர்த்தம் சொல்லுகிறவன் இல்லாவிட்டால் சபையில் அந்நிய பாஷையில் பேசாமல் தனக்கும் தேவனுக்கும் தெரிய பேசிக்கொள்ள வேண்டும். (1கொரி 14:27-28,32). பரிசுத்த வேதாகமம் அந்நிய பாஷையில் பேசும் வரத்தை எவ்வாறு செயல்படுத்த வேண்டுமென்று தெளிவாகக் கூறுகிறது. நாம் அதற்குக் கீழ்ப்படிந்து நடக்கும்போது நாமும் சபையிலுள்ள மற்றவர்களும் பக்திவிருத்தியடையலாம் (1கொரி 14:32-33,37-38)

29. தீர்க்கதரிசிகள் பேச வேண்டிய ஒழுங்கு

1கொரி 14:29 தீர்க்கதரிசிகள் இரண்டு பேராவது மூன்றுபேராவது பேசலாம், மற்றவர்கள் நிதானிக்கக் கடவர்கள்

1கொரி 14:30 அங்கே உட்கார்ந்திருக்கிற மற்றொருவனுக்கு ஏதாகிலும் வெளிப்படுத்தப்பட்டால் முந்திப் பேசினவன் பேசாமலிருக்கக் கடவன்

1கொரி 14:31 எல்லாரும் கற்கிறதற்கும் எல்லாரும் தேறுகிறதற்கும், நீங்கள் அனைவரும் ஒவ்வொருவராகத் தீர்க்கதரிசனஞ்சொல்லலாம்.

"தீர்க்கதரிசிகள் இரண்டுபேராவது மூன்று பேராவது பேசலாம், மற்றவர்கள் நிதானிக்கக் கடவர்கள்" - தீர்க்கதரிசிகள்கூட இரண்டு அல்லது மூன்று செய்திகளை மட்டுமே கூறலாம். அவர்கள் கூறிய தீர்க்கதரிசனச் செய்தியைச் சபையார் நிதானித்து அறிய வேண்டும். தேவனுடைய சத்தியம் தீர்க்கதரிசனம் கூறுகிறவர் மூலமாக வெளிப்படுத்தப்படுகிறதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். அந்நிய பாஷைகளானாலும் தீர்க்கதரிசனங்களானாலும் வேதவாக்கியத்தின் பிரகாரம் உள்ளதா என்பதைச் சபையார் நிதானித்து அறிய வேண்டும். (உபா 18:10-12,20; ஏசா 8:19-20; வெளி 22:18-19) அந்நிய பாஷையில் பேசப்படும் செய்தியோ தீர்க்கதரிசனச் செய்தியோ வேதவாக்கியத்திற்கு ஒத்திருக்கவில்லையென்றால் அந்தச் செய்தி தேவனுடைய செய்தியல்ல என்றும் அந்த நபர் தேவஆவியினால் பேசாமல் தன்னுடைய சொந்த ஆவியினால் பேசுகிறார் என்றும் நாம் நிதானித்து அறியவேண்டும் (கொரி 14:1-3; உபா 13:1-9 உபா 18:20-23 எசே 23:25-29,32; எசே 13:2-3

"அங்கே உட்கார்ந்திருக்கிற மற்றொருவனுக்கு ஏதாகிலும் வெளிப்படுத்தப் பட்டால் முந்திப் பேசினவன் பேசாமலிருக்கக் கடவன்" - சபையில் பேசுகிற எல்லோருமே தெய்வீக வெளிப்பாட்டைக் கூறுகிறார்கள் என்று உறுதியாகக் கூறமுடியாது ஆகையினால் ஒவ்வொரு செய்தியையும் நாம் நிதானித்து அறிய வேண்டியது மிகவும் அவசியம். (1கொரி 14:29)

"அனைவரும் ஒவ்வொருவராகத் தீர்க்கதரிசனஞ்சொல்லலாம்" புருஷர்கள் ஸ்திரீகள் ஆகிய அனைவருமே தீர்க்கதரிசனம் கூறுவதற்கு அனுமதிக்கப் பட்டிருக்கிறார்கள் (1கொரி 11:5-6; அப் 2:16-21)

30. தீர்க்கதரிசிகளுடைய ஆவிகள் தீர்க்கதரிசிகளுக்கு அடங்கியிருக்கிறதே

1கொரி 14:32 தீர்க்கதரிசிகளுடைய ஆவிகள் தீர்க்கதரிசிகளுக்கு அடங்கியிருக்கிறதே.

I கொரிந்தியர் – தொகுப்புரை

14 அதிகாரம்

1கொரி 14.33 தேவன் கலகத்திற்கு தேவனாயிராமல் சமாதானத்திற்கு தேவனாயிருக்கிறார்; பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லாவற்றிலேயும் அப்படியே இருக்கிறது.

"தீர்க்கதரிசிகளுடைய ஆவிகள் தீர்க்கதரிசிகளுக்கு அடங்கியிருக்கிறதே" - பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்று ஒருவர் அந்நிய பாஷையில் பேசும்போது அல்லது தீர்க்கதரிசனம் கூறும்போது அவர் தன்னுடைய ஆவியை அவித்துப்போடக் கூடாது என்று கூறுகிறோம். (1தெச 5.19) ஆவியை அவித்துப்போடக்கூடாது என்று நினைத்து, வேதவாக்கியத்திற்குப் புறம்பான காரியங்களை நாம் செய்து கொண்டிருக்கக் கூடாது. செய்தால், சபையில் குழப்பமும் பிரிவினையும் உண்டாகும். சபைக்குப் பக்தி விருத்தி உண்டாகாது. பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு அந்நிய பாஷையில் பேசுகிறவன் சபையில் குழப்பத்தை உண்டாக்கமாட்டான் சபையின் ஒழுங்கு முறைகளைத் தாறு மாறாக்க மாட்டான் சகலமும் ஒழுங்காகவும் கிரமமாகவும் நடப்பதற்கு ஆதாரவாக இருப்பான் ஏனென்றால் அந்நிய பாஷையில் பேசும் வரத்தைத் தேவனே விசுவாசிகளுக்கு அருளுகிறவர் (1கொரி 14.32-33)

31. சபையில் ஸ்திரீகள் குழப்பம் விளைவிக்கக் கூடாது

1கொரி 14.34 சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள் பேசும் படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை. அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும். வேதமும் அப்படியே சொல்லுகிறது.

1கொரி 14.35 அவர்கள் ஒரு காரியத்தைக் கற்றுக் கொள்ள விரும்பினால், வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாரிக்கக் கடவர்கள்; ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே

"அவர்கள் அமர்ந்திருக்கவேண்டும். வேதமும் அப்படியே சொல்லுகிறது" சபையில் ஸ்திரீகள் ஜெபம் பண்ணலாம். தீர்க்கதரிசனம் கூறலாம் இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் செய்தி இந்தக் கருத்திற்கு முரணானது அல்ல (ஆதி 3.16 1கொரி 11.5,13, 14.35, அப் 2.16-21, அப் 21.9, யோவே 2.28-32

32. இவைகள் கர்த்தருடைய கற்பனைகள் என்று ஒத்துக் கொள்ள வேண்டும்

1கொரி 14.36 தேவவசனம் உங்களிடத்திலிருந்தா புறப்பட்டது? அது உங்களிடத்துக்கு மாத்திரமா வந்தது?

1கொரி 14.37 ஒருவன் தன்னைத் தீர்க்கதரிசியென்றாவது, ஆவியைப் பெற்றவனென்றாவது எண்ணினால், நான் உங்களுக்கு எழுதுகிறவைகள் கர்த்தருடைய கற்பனைகளென்று அவன் ஒத்துக்கொள்ளக்கடவன்

1கொரி 14.38 ஒருவன் அறியாதவனாயிருந்தால் அவன் அறியாதவனாயிருக்கட்டும்.

"தேவவசனம் உங்களிடத்திலிருந்தா புறப்பட்டது? அது உங்களிடத்துக்கு மாத்திரமா வந்தது?" - வேதவசனம் விசுவாசிகளிடமிருந்து புறப்படவில்லை ஒரு குறிப்பிட்ட விசுவாசிக்கு மட்டுமென்றோ அல்லது ஒரு குறிப்பிட்ட சபைக்கு மட்டுமென்றோ வேதவசனம் கொடுக்கப்படவும் இல்லை ஒவ்வொரு சபையிலும் ஒழுங்கு முறைகளும் பழக்க வழக்கங்களும் வித்தியாசமாக இருக்கலாம் ஆவிக்குரிய வரங்களைப் பெற்றுக் கொள்கிறவர் அந்த வரங்களைக் குறித்து ஞானமுள்ளவராக இருக்க வேண்டும். (ஆதி 14.36-38)

33. ஆவிக்குரிய வரங்களைக் குறித்து கடைசி எச்சரிப்பும் புத்திமதியும்

1கொரி 14.39 இப்படியிருக்க, சகோதரரே, தீர்க்கதரிசனஞ்சொல்ல நாடுங்கள், அந்நிய பாஷைகளைப் பேசுகிறதற்கும் தடைபண்ணாதிருங்கள்

1கொரி 14.40 சகலமும் நலலொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது.

பாடின் முடிவுரையில் கூறும் காரியங்கள்

1. தீர்க்கதரிசனஞ்சொல்ல நாடுங்கள் (ஆதி 14.1)
2. அந்நிய பாஷைகளைப் பேசுகிறதற்குத் தடைபண்ணாதிருங்கள்
3. சகலமும் நலலொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது

15 அதிகாரம்

X. உயிர்த்தெழுதல்கள்

1. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்து பவுலின் பிரசங்கம் - (மத் 28; மாற்கு 16; லூக் 24 யோவான் 20-21; அப் 1:1-11)

1கொரி 15:1 அன்றியும், சகோதரரே நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு அதிலே நிலைத்திருக்கிறீர்கள்

1கொரி 15:2 நான் உங்களுக்குப் பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால் அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றபடி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே

1கொரி 15:3 நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து,

1கொரி 15:4 அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்து

1கொரி 15:5 கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார்

1கொரி 15:6 அதன்பின்பு அவர் ஐந்நூறு பேருக்கு அதிகமான சகோதரருக்கு ஒரேவேளையில் தரிசனமானார், அவர்களில் அநேகர் இந்நாள்வரைக்கும் இருக்கிறார்கள் சிலர் மாத்திரம் நித்திரையடைந்தார்கள்

1கொரி 15:7 பின்பு யாக்கோபுக்கும், அதன்பின்பு அப்போஸ்தலரெல்லாருக்கும் தரிசனமானார்

1கொரி 15:8 எல்லாருக்கும் பின்பு, அகாலப்பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார்

சுவிசேஷத்தைக் குறித்து மனுஷருடைய கடமைகள்

1 சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ண வேண்டும். (1கொரி 15:1; மாற்கு 16:15)

2 சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். (1கொரி 15:1 யோவான் 1:12)

3 சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும். (1கொரி 15:1 ரோமர் 1:5; ரோமர் 6:17)

4 சுவிசேஷத்தைக் கைக்கொள்ள வேண்டும். (1கொரி 15:2; எபி 3:6 எபி 12:14; எபி 10:23)

5 சுவிசேஷத்தை இருதயத்திலிருந்து விசுவாசிக்க வேண்டும். (1கொரி 15:2; ரோமர் 1:16; ரோமர் 10:9-10 யோவான் 3:16-20)

இரட்சிப்பின் சுவிசேஷத்திலுள்ள நான்கு முக்கிய பாகங்கள்

1 கிறிஸ்துவின் மரணம் (1கொரி 15:3; ரோமர் 5:6-10; 1கொரி 4:14-21 கொலோ 1:20, எபி 9:15

2 கிறிஸ்து அடக்கம்பண்ணப்பட்டது (1கொரி 15:4; மத் 26:12; யோவான் 12:7; ரோமர் 6:4, கொலோ 2:12

3 கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் (1கொரி 15:4,12, ரோமர் 14:9, 2கொரி 5:15; 1தெச 4:14)

4. உயிர்த்தெழுந்த பின்பு கிறிஸ்துவின் கிரியைகள் (யோவான் 2:14 1கொரி 15:5-8)

கைக்கொள்ளுதல் (keep in memory) - κατέχω - katechoo - 2722

வினைச்சொல் - கட்டிக்கொள் நிறுத்திக்கொள் (hold fast) (1தெச 5:21, எபி 3:6; எபி 10:23) (hold) (ரோமர் 1:18, ரோமர் 7:6; எபி 3:14); (retain) (பிலே 1:13), (stay) (லூக்கா 4:42); (let) (2தெச 2:7) (keep) (லூக்கா 8:15; 1கொரி 11:2), (keep in memory) (1கொரி 15:2); (take) (லூக்கா 14:9); (seize on) (மத் 21:38), (possess) (1கொரி 7:30; 2கொரி 6:10), (have) (யோவான் 5:4) (make toward) (அப் 27:40)

I கொரிந்தியர் – தொகுப்புரை

15 அதிகாரம்

"உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே" - எந்த நோக்கமும் இல்லாமல் விருதாவாக விசுவாசம் வைப்பதற்கும் வாய்ப்புள்ளது. (லூக்கா 8:13; யாக் 2:19)

"கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார்" - (சங் 16:10; சங் 22; ஏசா 52:14; ஏசா 53:3-12)

"வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில உயிர்த்தெழுந்தார்" - (ஏசா 53:12; சங் 16:10; யோனா 1:17; மத் 12:40; லூக்கா 11:29)

"கேபா" (Cephas) - பேதுரு (லூக்கா 24:34; மாற்கு 16:14)

"பன்னிருவர்" - மத்தியாவையும் சேர்த்து பன்னிரெண்டு அப்போஸ்தலர்கள (அப் 1:26) இவர்களில பவுல ஒருவராகச் சேர்க்கப்படவில்லை (1கொரி 15:7-8)

"அவர் ஐந்நூறுபேருக்கு அதிகமான சகோதரருக்கு ஒரேவேளையில தரிசனமானார்" - மத் 28:16 ஆவது வசனத்தை ஒத்திருக்கிறது.

"பின்பு யாக்கோபுக்கும்" இயேசு கிறிஸ்துவின சகோதரன (கலா 1:19; லூக்கா 8:19)

"எல்லாருக்கும் பின்பு அகாலப்பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார்" பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில பவுல ஒருவராகச் சேர்க்கப்படவில்லை. (1கொரி 15:5-8) ஆதியிலிருந்து இயேசு கிறிஸ்துவைத் தங்கள் கண்களால கண்ட சாட்சிகளாக இருந்த படியினால அவர்கள அப்போஸ்தலர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்கள

அகாலப்பிறவி (untimely born) - εκτρωμα - ektrooma 1626

பாலவேறுபாடற்ற பெயர்சொல் - அகாலப்பிறவி உரிய காலத்திற்கு முன்பாகப் பிறப்பது (a child untimely born; an abortion) இந்த வசனத்தில் மட்டுமே இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. செப்துவஜிந்தில் யோபு 3:16; பிர 6:3 ஆகிய வசனங்களில நாம் இந்த வார்த்தையை வாசிக்கலாம்.

இயேசு கிறிஸ்து பன்னிரெண்டு அப்போஸ்தலர்களைத் தெரிந்தெடுத்த போது பவுல இயேசு கிறிஸ்துவின் சீஷனாக இருக்கவில்லை. அதனால பவுல் தன்னை அகாலப்பிறவி என்று குறிப்பிடுகிறார் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இஸ்ரவேல் தேசத்தின் பிறப்பை இந்த வார்த்தை குறிக்கும் என்று சிலர் கூறுகிறார்கள் (ஏசா 66:6-7; ரோமர் 11:25-29; சக 12:10-13)

2. ஊழியத்தில் பவுலின் தாழ்மை - (4:8-12; 6:3-10)

1கொரி 15:9 நான் அப்போஸ்தலரெல்லாரிலும் சிறியவனாயிருக்கிறேன் தேவனுடைய சபையைத் துன்பப்படுத்தினதினாலே நான் அப்போஸ்தலனென்று பேர்பெறுவதற்கும் பாத்திரன் அல்ல

1கொரி 15:10 ஆகிலும் நான் இருக்கிறது தேவ கிருபையினாலே இருக்கிறேன அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை அவர்களெல்லாரிலும் நான அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன் ஆகிலும் நான் அல்ல என்னுடனே இருக்கிற தேவ கிருபையே அப்படிச் செய்தது

1கொரி 15:11 ஆகையால நானாகிலும் அவர்களாகிலும் இப்படியே பிரசங்கித்து வருகிறோம் நீங்களும் இப்படியே விசுவாசித்திருக்கிறீர்கள

"நான் அப்போஸ்தலனென்று பேர் பெறுவதற்கும் பாத்திரன அல்ல" - பவுல் தேவனுடைய சபையைத் துன்பப்படுத்தினான பன்னிரெண்டு அப்போஸ்தலர்களும் தெரிந்தெடுக்கப்பட்ட பின்பே பவுல தெரிந்தெடுக்கப்பட்டான ஆகையினால இவன ஏற்ற காலத்தில அப்போஸ்தலனாகத் தெரிந்தெடுக்கப்படாத அகாலப்பிறவி போன்று இருக்கிறான மற்ற அப்போஸ்தலர்களைவிட பவுல நன்றாகப் பிரசங்கம் பண்ணக்கூடியவன தேவனுடைய நித்திய ராஜ்யத்தில இயேசு கிறிஸ்துவின பன்னிரெண்டு சீஷர்களும் இஸ்ரவேல தேசத்தை ஆளுகை செய்வார்கள் (மத் 19:28; லூக்கா 22:30; வெளி 21:14) அந்தப் பன்னிரெண்டு பேரோடு பவுல் சமமாக இருக்க முடியாது பவுல் தன்னைப் பற்றிக் கூறும்போது எல்லா அப்போஸ்தலர்களிலும் தான் சிறியவன் என்றும் அபாத்திரன என்றும் கூறுகிறான் (1தீமோ 1:11-16)

I கொரிந்தியர் – தொகுப்புரை

15 அதிகாரம்

"அவர்களெல்லாரிலும் நான் அதிகமாயப் பிரயாசப்பட்டேன்" - தன்னுடனே இருக்கிற தேவகிருபையினாலே மற்ற எல்லோரையும்விட பவுல இயேசு கிறிஸ்துவிற்காக அதிகமாக ஊழியம செயதான் (2கொரி 11. 16-28)

3. கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலின் முக்கியத்துவம் - வசனம் 3-8; ரோமர் 5:10; 6:5-10, 8:1

1கொரி 15:12 கிறிஸது மரித்தோரிலிருந்து எழுந்தாரென்று பிரசங்கிக்கபபட்டிருக்க மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லை யென்று உங்களில சிலர் எபபடிச் சொலலலாம்?

1கொரி 15:13 மரித்தோரின் உயிர்தெழுதலில்லாவிட்டால கிறிஸ்துவும் எழுநதிருககவிலலையே

1கொரி 15:14 கிறிஸது எழுநதிருககவிலலையெனறால எஙகள பிரசஙகமும் விருதா உஙகள விசுவாசமும் விருதா

1கொரி 15:15 மரித்தோர் உயிரதெழாவிட்டால, தேவன எழுபபாத கிறிஸ்துவை அவர் எழுப்பினாரென்று நாஙகள் தேவனைக் குறித்துச சாட்சிசொன்னதினாலே, தேவனுககாகப பொயசாட்சி சொலலுகிறவாகளாகவும் காணபபடுவோமே

1கொரி 15:16 மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், கிறிஸ்துவும் எழுநதிருககவிலலை

1கொரி 15:17 கிறிஸ்து எழுநதிராவிட்டால, உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும். நீங்கள இன்னும் உஙகள் பாவஙகளில இருப்பீாகள

1கொரி 15:18 கிறிஸ்துவுக்குள நித்திரையடைந்தவாகளும் கெட்டிருப்பாாகளே

1கொரி 15:19 இம்மைக்காகமாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர் களாயிருந்தால், எல்லா மனுஷரைப பார்க்கிலும் பரிதபிக்கப படத் தக்கவர்களாயிருப்போம்.

"மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லையென்று உங்களில் சிலர் எப்படிச் சொலலலாம்?" - இயேசு கிறிஸ்து உயிர்த்தெழவில்லை என்று கொரிந்து சபையில் சில கள்ள அப்போஸ்தலர்கள் உபதேசமபண்ணி வந்தார்கள் (2கொரி 11:13-15)

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்ததற்குச் சான்றுகள்

1. வேதவாக்கியத்தின் மூலமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. (1கொரி 15. 1-4; யோபு 19:25; சங் 16:10; தானி 12:2; மத் 28; மாறகு 16; லூக்கா 24; யோவான் 20-21; அப் 2:27
2. நடைபெறற நிகழ்ச்சியின் மூலமாக நிரூபிககப்பட்டிருககிறது (1கொரி 15:5-8; யோவான 21:14; எபே 1:20; வெளி 1:12-18
3. இயேசு கிறிஸது உயிரத்தெழவிலலை என்று கூறுகிறவாகள தஙகளுக்குள் ஒற்றுமையிலலாமல இருககிறாாகள (1கொரி 15:12-19)
4. இயேசு கிறிஸது உயிாத்தெழுந்த சத்தியம் அறிக்கையிடப்படுவதன மூலமாக நிரூபிககப்படுகிறது. (கொரி 15:20-22)
5. முன்னறிவிக்கப்பட்டதினால் நிரூபிக்கப்பட்டது (1கொரி 15:23-56)
6. இயேசு கிறிஸ்துவின உயிாத்தெழுதலை மறுதலிக்கிறவாகள் ஒன்றுககொன்று முரணாகக் கூறுகிறாாகள (1கொரி 15:29)
7. இயேசு கிறிஸ்துவின் உயிாத்தெழுதலை விசுவாசித்து அவருக்காக எல்லாவற்றையும் தியாகம் பண்ணியோர் மூலமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது (1கொரி 15:30-34

15 அதிகாரம்

8 இயற்கையின் மூலமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. (1கொரி 15:33-49)

9 தேவனுடைய ராஜ்ஜியத்தைச் சுதந்தரித்துக் கொள்வதற்கும் தேவனுடைய வாக்குத்தத்தங்களைச் சுதந்தரித்துக் கொள்வதற்கும் நமக்கு நித்திய சரீரம் தேவைப்படுகிறது. (1கொரி 15:50-54)

10 மரணத்தின்மீது வெற்றி பெறும் தீர்க்கதரிசனம் நிறைவேறியதன் மூலமாக நிரூபிக்கப்படுகிறது. (1கொரி 15: 54-57)

கிறிஸ்து உயிர்த்தெழுந்திருக்கவில்லை என்றால் விருதாவாய்ப் போகும்

1 நம்முடைய உயிர்த்தெழுதலுக்கு உத்தரவாதம் இல்லை. (1கொரி 15:12-13, 20-23)

2 நம்முடைய பிரசங்கம் விருதாவாய் இருக்கும். (1கொரி 15:14)

3 நம்முடைய விசுவாசம் விருதாவாய் இருக்கும். (1கொரி 15:14,17)

4 நாம் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப் பிரசங்கிக்கிறவர்கள். ஆகையினால் நாம் பொய்யராக இருப்போம். (1கொரி 15:15)

5 நாம் இன்னும் நமது பாவங்களில் இருப்போம். (1கொரி 15:17)

6 மரித்தவர்கள் எல்லோரும் கெட்டிருப்பார்கள் (1கொரி 15:18)

7 நமக்கு நம்பிக்கை இராது. (1கொரி 15:19)

8 நாம் பரிதபிக்கப்படத் தக்கவர்களாயிருப்போம். (1கொரி 15:19)

9 நாம் புத்தியீனர்களாக இருப்போம். (1கொரி 15:30-32)

10 இயற்கை பொய்யானதாக இருக்கும். (1கொரி 15:35-49)

11 வாக்குத்தத்தங்கள் பொய்யானவையாக இருக்கும். (1கொரி 15:50-54)

12 தீர்க்கதரிசனங்கள் பொய்யானவையாக இருக்கும். (1கொரி 15:55-56)

4. கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலின் நிச்சயம் - (தானி 12:2; யோவான் 5:28-29; 1தெச 4:13-18; வெளி 20:4-6,11-15)

1கொரி 15:20 கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்

1கொரி 15:21 மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று.

1கொரி 15:22 ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்

"கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்" - கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் ஒரு உண்மைச் சம்பவம். எல்லோரும் உயிர்த்தெழுவார்கள் என்பதைக் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நிச்சயப்படுத்துகிறது. (1கொரி 15:20-22)

முதற்பலன (firstfruit) - ἀπαρχή - aparchee - 536

பெண்பால் பெயர்ச்சொல் - முதற்பலன் (firstfruits) - ஒரு காரியத்தின் ஆரம்பம். (ரோமர் 8:23) இயேசு கிறிஸ்துவே முதலாவதாக உயிர்த்தெழுந்தார்

"நித்திரையடைந்தவர்கள்" மரணத்தைக் குறிக்கும் வாக்கியம். (1கொரி 15:6,18,51; 1கொரி 11:30; யோவான் 11:11; 1தெச 4:13-17; 2பேதுரு 3:4) இது ஆத்தும நித்திரையைக் குறிக்காது. சரீர நித்திரையைக் குறிக்கும். மரிக்கும் பொழுது சரீரம் மரித்து மண்ணுக்குத் திரும்புகிறது (யாக் 2:26; ஆதி 3:19) ஆத்துமாவும், ஆவியும் நித்தியமானவை. (1பேதுரு 3:4

15 அதிகாரம்

"மனுஷனால் மரணம் உண்டானபடியால்" - ஆதாமின் மூலமாகச் சரீர மரணம் உண்டாயிற்று. பாவத்தின் சம்பளமாக நித்திய மரணம் மனுஷனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (1கொரி 15:22) எல்லோருக்கும் மரணம் வந்தது. (ரோமர் 5:12-21). மரித்தோர் வருங்காலத்தில உயிர்த்தெழும்போது சரீரமும் உயிர்த்தெழும் (1கொரி 15 35-54 தானி 12:2 யோவான் 5:28-29). ஒருவன் இரட்சிக்கப்படாமல மரித்துப்போனால அவன் ஆக்கினைத் தீர்ப்பிற்குரதுவாக நியாயந்தீர்க்கப்படுவான் (எபி 9:27, எபே 2:1-9; 1யோவான் 1:9)

தீர்க்கதரிசன எண் - 12

"மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று___" (1கொரி 15:21-28). இயேசு கிறிஸ்துவின் மூலமாக எல்லா ஜனங்களுக்கும் சரீர உயிர்த்தெழுதல உண்டாயிருக்கிறது. (1கொரி 15:22 யோவான் 5:25-29; யோவான் 11:22-26 வெளி 1:18)

"எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" - எல்லோரும் சரீரப் பிரகாரமாக உயிர்ப்பிக்கப்படுவார்கள் ஆவிக்குரிய ரீதியாக எல்லோரும் உயிர்ப்பிக்கப்படுவதில்லை (தானி 12:2, யோவான் 5:28-29; வெளி 20 4-6,11-15). ஒருவர் ஆவிக்குரிய ரீதியாக உயிர்ப்பிக்கப்பட வேண்டுமென்றால் அவர் தன்னுடைய பாவங்களுக்காக மனம் வருந்தி, இயேசு கிறிஸ்துவிடம் பாவ அறிக்கை செய்து, பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும். (யோவான் 3:16-20; 1தீமோ 2:4 2பேதுரு 3:9; வெளி 22:17) இரட்சிக்கப்பட்டவர்களும், இரட்சிக்கப்படாதவர்களும் தங்கள் சரீரத்தில் உயிர்த்தெழுவார்கள் (யோவான் 5:28 29)

5. உயிர்த்தெழுதலின் வரிசை - யோவான் 5:28 29; பிலி 3:11 21; 1தெச 4:13, வெளி 20:4-15)

1கொரி 15:23 அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான் முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில அவருடையவர்கள உயிர்ப்பிக்கப்படுவார்கள

வரிசை (order) - τάγμα - tagma - 5001

பாலவேறுபாடற்ற பெயர்ச்சொல் - வரிசை (rank, company) - செப்துவஜிந்தில் இந்த வார்த்தை போர்வீரர்களின் கூட்டத்தைக் குறிக்கிறது. (எண் 2:2; 2சாமு 23:13)

முதலாவது உயிர்த்தெழுதலில் எடுத்துக் கொள்ளப்படுகிறவர்கள்

1. கிறிஸ்துவும், அநேக பரிசுத்தவான்களும் - கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு அவர்கள உயிர்த்தெழுவார்கள் (1கொரி 15:20,23; மத் 27:52-53; எபே 4:8-10
2. அவர் வருகையில அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள் (1கொரி 15:23,51-54; யோவான் 14:1-3; லூக்கா 21:34-36; 2கொரி 5:1-8 எபே 5:27; பிலி 3:11,20-21; 1தெச 2:19; 1தெச 3:13, 1தெச 4:13-17, 1தெச 5:9,23; 2தெச 2:1,7, கொலோ 3:4; யாக் 5:7-8, 1யோவான் 2:28 1யோவான் 3:2; 1பேதுரு 5:4 கிறிஸ்துவில இருக்கிறவர்கள் மரித்தவர்களாக இருந்தாலும் ஜீவனுள்ளவர்களாக இருந்தாலும் எடுத்துக் கொள்ளப்படுவார்கள் கிறிஸ்துவில இருக்கிற யாரும் இந்தப் பூமியில கைவிடப்படமாட்டார்கள் (1தெச 4:16 17)
3. தானியேலின் எழுபதாவது வாரத்தின் முதலாவது மூன்றரை வருஷத்தில இரட்சிக்கப்பட்ட 144,000 யூதர்கள் (வெளி 7:1-8). இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பு மூன்றரை வருஷத்தில் இது நிறைவேறும். (வெளி 12:5, வெளி 14:1-5; ஏசா 66:7-8, தானி 12:1

15 அதிகாரம்

4. சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு உபத்திரவக்காலத்தில் இரட்சிக்கப்பட்ட பரிசுத்தவான்கள், தானியேலின் எழுபதாவது வாரகாலம் முழுவதிலும் இரட்சிக்கப்பட்டவர்கள் (வெளி 6:1-19:21). இரத்தச்சாட்சியாக முதலாவது மரித்தவர்கள் (வெளி 6:9-11) சபை எடுத்துக் கொள்ளப படும்போது தேவன் தம்முடைய பரிசுத்தவான்களை மத்திய ஆகாயத்திற்கு அழைத்துச் சென்று ஆட்டுக்குட்டியானவருடைய கலியாண விருந்தில பங்குபெறச் செய்வார் (வெளி 7:9-17; வெளி 15. 2-4 வெளி 19:1-21, வெளி 20:4-6, யூதா 1:14, சக 14:5

6. **உலகத்தின் முடிவு** - (அப 3:21; 2பேதுரு 3:10-13; வெளி 21-22 ஏசா 66:22-24

1கொரி 15:24 அதனபினபு முடிவு உணடாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகார த்தையும் வல்லமையையும் பரிகரித்து தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜயத்தை ஒப்புக் கொடுப்பார்

1கொரி 15:25 எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப் போடும் வரைக்கும், அவர் ஆளுகை செய்யவேண்டியது.

1கொரி 15:26 பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம்

1கொரி 15:27 சகலத்தையும் அவருடைய பாதத்திற்குக் கீழ்ப்படுத் தினாரே, ஆகிலும் சகலமும் அவருக் குக் கீழ்ப்படுத்தப் பட்டதென்று சொல்லியிருக்கும்போது, சகலத்தையும் அவருக்குக் கீழ்ப்படுத்தினவர் கீழ்ப படுத்தப்படவில்லை யென்பது வெளிய ரங்கமாயிருக்கிறது.

1கொரி 15:28 சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்போது, தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பதற்கு குமாரன் தாமும் தமக்குச் சகலத் தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப பட்டிருப்பார்

"அதன்பின்பு முடிவு உண்டாகும்" - இது ஆயிரம் வருஷத்தின் முடிவைக் குறிக்கும். ஆயிரம் வருஷ அரசாட்சி யின்போது இயேசு கிறிஸ்து சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரிப்பார் அதன்பின்பு, இயேசு கிறிஸ்து பிதாவாகிய தேவனிடம் இந்த ராஜ்யத்தை ஒப்புக் கொடுப்பார் (1கொரி 15:24-28; வெளி 20:1-10 வெளி 21:1-22:5)

முடிவு (end) - τέλος - telos - 5056

பாலவேறுபாடற்ற பெயர்ச்சொல் - முடிவு, அழிவு, அந்தம், தொந்தரவு, விலகிப்போதல் - 1கொரி 1:8 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் முடிவும் இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் முடிவும் ஒன்றல்ல. இயேசுகிறிஸ்துவின் வருகையின்போது ஒரு முடிவு உண்டாகிறது ஆனால் இந்த வசனத்தில கூறப்பட்டிருக்கும் முடிவு ஆயிரம வருஷ அரசாட்சியின் முடிவைக் குறிக்கும் (வெளி 20:1-10 வெளி 21:1-22:5

முடிவிற்கு முன்பாக நடைபெறும் காரியங்கள்

1 ஆயிரம் வருஷ அரசாங்கம் தேவனிடம் ஒப்புக்கொடுக்கப்படும். (1கொரி 15:24. வெளி 21:1-22:5)

2 சகல துரைத்தனங்களும், சகல அதிகாரமும், வல்லமையும் பரிகரிக்கப படும். (1கொரி 15:24. எபே 1:23 எபி 2:6-9; வெளி 20:7-10)

3 மரணம் பரிகரிக்கப்படும். (1கொரி 15:26; வெளி 20:7-15, வெளி 21:3-5

4 எல்லாச் சத்துருக்களையும் இயேசு கிறிஸ்து தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடுவார் (1கொரி 15:27-28, வெளி 20:1-15; எபே 1:10

5 தேவனே சகலத்திலும் சகலமுமாய இருப்பார் (1கொரி 15:28; வெளி 21:1-22:5

"குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார்" எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்தி ற்குக் கீழாக்கிப் போடும்வரைக்கும் இயேசு கிறிஸ்து ஆளுகை செய்து கொண்டிருப்பார் (ஏசா 9:6-7; தானி 2:44-45, தானி 7:13-14,18,27; சக 14; லூக்கா 1:32-33, வெளி 5:10; வெளி 11:15; வெளி 22:5

15 அதிகாரம்

"தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பார்" - பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் இணைந்து நித்திய காலமாக ஆளுகை செய்வார்கள்

7. மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுகிறவர்கள்

1கொரி 15:29 மேலும் மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் என்ன செய்வார்கள்? மரித்தவர்களுக்காக ஏன் ஞானஸ்நானம் பெறுகிறார்கள்?

மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுவது வேதவாக்கியத்தின் பிரகாரம் [redacted]

1 ஒவ்வொரு உபதேசமும் இரண்டு அல்லது மூன்று சாட்சிகளினால் நிரூபிக்கப்பட வேண்டும். (2கொரி 13:1, மத் 18:16, உபா 19:15-18) இந்த வசனம் மட்டுமே மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் எடுப்பதைப் பற்றி குறிப்பிடுகிறது.

2 கொரிந்து சபையில் பல தவறுகளும் மார்க்கபேதங்களும் காணப்பட்டன (1கொரி 11:19). மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுவது அவைகளில் ஒன்று

3 தண்ணீர் ஞானஸ்நானம் ஒருவரையும் இரட்சிப்பதில்லை. மனந்திரும்பி பாவ மன்னிப்பைப் பெறுகிறவர்கள் மட்டுமே இரட்சிக்கப்படுவார்கள் (மத் 3:11) ஆகையினால் மரித்தவருக்காக ஒருவர் ஞானஸ்நானம் எடுப்பதினால் மரித்தவர் இரட்சிக்கப்படுவதற்கு வாய்ப்பில்லை அவர் மரித்துப்போய் விட்டபடியினால் அவரால் இனிமேல் மனந்திரும்ப முடியாது. லூக்கா 13:1-5 ரோமர் 10:9-10, எபே 2:8-9, 1யோவான் 1:9)

4 இரட்சிப்பு என்பது ஒரு தனிநபருடைய சொந்த அனுபவம். ஒருவருக்காக இன்னொருவர் இரட்சிப்பைப் பெற முடியாது. ஒவ்வொருவரும் தனித் தனியாகத் தன்னுடைய இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும். (மாற்கு 16:16; லூக்கா 13:1-5 யோவான் 3:16-20; அப் 4:12 ரோமர் 1:16; ரோமர் 10:9-10 எபே 2:8-9; வெளி 22:17

5. மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் எடுக்கலாம் என்று வேதத்தில் எங்கும் உபதேசம் பண்ணப்படவில்லை. அதற்கு எடுத்துக்காட்டும் இல்லை

6 கொரிந்து சபையில் பல கள்ளப் போதகர்கள் நுழைந்திருக்கிறார்கள் மார்க்கபேதங்களை உபதேசம் பண்ணுகிறார்கள் சபைக்குள் குழப்பத்தை உண்டுபண்ணுகிறார்கள் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை அவர்கள் நம்புவதில்லை ஆனால் மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் எடுக்கலாம் என்று ஒரு தவறான உபதேசத்தைக் கூறுகிறார்கள் இப்படிப்பட்ட தவறான காரியத்தைச் சபையிலிருந்து அகற்ற வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகவே பவுல் இந்த வசனத்தில் இதைப் பற்றி இவ்வாறு எழுதியிருக்கிறார்

8. மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால் பாடுகளினால் என்ன பிரயோஜனம்

1கொரி 15:30 நாங்களும் ஏன் எந்நேரமும் நாசமோசத்திற்கு ஏதுவாயிருக்கிறோம்?

1கொரி 15:31 நான் அநுதினமும் சாகிறேன் அதை நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினால் உங்களைக் குறித்து, நான் பாராட்டுகிற மேன்மையைக் கொண்டு சத்தியமாய்ச் சொல்லுகிறேன்

1கொரி 15:32 நான் எபேசுவிலே துஷ்ட மிருகங்களுடனே போராடினேனென்று மனுஷர் வழக்கமாய்ச் சொல்லுகிறேன் அப்படிப் போராடினதினாலே எனக்குப் பிரயோஜனமென்ன? மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், புசிப்போம் குடிப்போம், நாளைக்குச் சாவோம் என்று சொல்லலாமே?

15 அதிகாரம்

"நான் அநுதினமும் சாகிறேன்" - தன்னுடைய புறம்பான மனுஷன் ஒவ்வொரு நாளும் அழிந்துபோவதைப் பவுல் இங்குக் குறிப்பிடுகிறார் (2கொரி 4:16) ஒவ்வொரு நாளும் பாவத்திற்குச் சாவது என்பது அநுதினமும் பாவம் செய்து கொண்டிருப்பதற்குச் சமம் பவுல் இப்படிப்பட்ட உபதேசத்தை இங்கு கூறவில்லை நாம் எல்லோரும் பாவத்திற்கு ஒருதரம் மரிக்க வேண்டும். அதன்பின்பு நாம் எப்போதுமே பாவத்திற்கு மரித்தவர்களாக இருக்க வேண்டும். (ரோமர் 6:6-11; கலா 2:20) சுவிசேஷத்தின் நிமித்தமாகப் பவுலுடைய ஜீவனுக்கு எப்போதுமே ஆபத்து இருந்தது. நான் அநுதினமும் சாகிறேன் என்று பவுல் கூறுவது அவருடைய ஜீவனுக்கு ஏற்பட்டிருக்கும் மரண ஆபத்தைக் குறிக்கலாம் (1கொரி 15:30-32)

"நான் எபேசுவிலே துஷ்டமிருகங்களுடனே போராடினேன்" - பவுல் எபேசுவிலே மிருகக் குணமுடைய மனுஷரோடு போராடினார் (அப 19:28-31, தீத்து 1:12, 2பேதுரு 2:12 யூதா 1:10) ரோமருடைய விளையாட்டு அரங்கங்களில் மிருகங்களோடு யுத்தம் பண்ணும் விளையாட்டும் அக்காலத்தில் உண்டு பவுல் இந்த வசனத்தில் இந்த விளையாட்டைப் பற்றிக் குறிப்பிடவில்லை 2கொரி 11:23-28 ஆகிய வசனங்களில் தனக்கு நேரிட்ட கஷ்டங்களைப் பற்றி பவுல் கூறியிருக்கிறார் அதில் தான் துஷ்டமிருகங்களோடு போராடினதாகக் கூறவில்லை

"புசிப்போம் குடிப்போம், நாளைக்குச் சாவோம்" - ஏசா 22:13 ஆவது வசனம் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

9. பாவம் செய்யாமல் நீதிக்கேற்க விழித்துக் கொண்டு தெளிந்தவர்களாயிருங்கள்

1கொரி 15:33 மோசம்போகாதிருங்கள் ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்

1கொரி 15:34 நீங்கள் பாவஞ் செய்யாமல் நீதிக்கேற்க விழித்துக் கொண்டு, தெளிந்தவர் களாயிருங்கள் சிலர் தேவனைப்பற்றி அறிவில்லாதிருக்கிறார்களே உங்களுக்கு வெட்கமுண்டாக இதைச் சொல்லுகிறேன்

சம்பாஷணை (communication) - ὁμιλία homilia - 3657

பேச்சொல் - கூட்டம் (associations) - தீயவர்கள் நல்லவர்களைக் கெடுத்து விடுகிறார்கள் அத்தேனே தேசத்து கவிஞன் ஒருவன் எழுதியிருப்பதைப் பவுல் இங்கு மேற்கோளாகக் கூறியிருக்கிறார்

"நீங்கள் பாவஞ்செய்யாமல் நீதிக்கேற்க விழித்துக்கொண்டு, தெளிந்தவர்களாயிருங்கள்" - உயிர்த்தெழுதலின் நிமித்தமாக நாம் பாவம் செய்வதை விட்டுவிட்டு நீதிக்குத் திரும்ப வேண்டும் குழப்பம் இல்லாமல் தெளிந்தவர்களாக இருக்க வேண்டும்

10. மரித்தோர் எழுந்திருக்கும் விதம் - (யோவான் 5:28-29, 12:24, தானி 12:2)

1கொரி 15:35 ஆகிலும், மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள் எப்படிப்பட்ட சரீரத்தோடே வருவார்களென்று ஒருவன் சொல்வானாகில்

1கொரி 15:36 புத்தியீனனே, நீ விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்க்க மாட்டாதே.

1கொரி 15:37 நீ விதைக்கிறபோது இனி உண்டாகும் மேனியை விதையாமல் கோதுமை அல்லது மற்றொரு தானியத்தினுடைய வெறும் விதையையே விதைக்கிறாய்

1கொரி 15:38 அதற்குதேவன் தமது சித்தத்தின்படியே மேனியைக் கொடுக்கிறார் விதை வகைகள் ஒவ்வொன்றிற்கும் அதற்கேற்ற மேனியையே கொடுக்கிறார்

15 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 13

"மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள்...." (1கொரி 15:35-56) இந்தத் தீர்க்கதரிசனம் சபை எடுத்துக் கொள்ளப்படும்போது நிறைவேறும்

உயிர்த்தெழுதல்

உயிர்த்தெழுதலை (The Resurrection) விளக்குவதற்குப் பவுல் கோதுமை விதையும் மற்ற விதைகளும் விதைக்கப்பட்ட பின்பு, எவ்வாறு முளைக்கிறது என்பதை எடுத்துக்காட்டாகக் கூறுகிறார்

1. நாம் விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்க்கமாட்டாது. (1கொரி 15:36 யோவான் 12:24)
2. செத்துப்போன விதை அப்படியே திரும்ப முளைக்காது. தன்னைப் போன்ற விதைகளை அது முளைக்கச் செய்யும். (1கொரி 15:37; யோவான் 12:24)
3. புதிய விதைகளை உற்பத்திச் செய்வதற்கு முன்பாக விதைக்கப்பட்ட விதை அழிய வேண்டும். (யோவான் 12:24)
4. செத்துப்போகாத விதை எத்தனை வருஷம் ஆனாலும் பலன் தராமல் அப்படியே இருக்கும்

"ஒவ்வொன்றிற்கும் அதற்கேற்ற மேனியையே கொடுக்கிறார்" ஒவ்வொரு மனுஷனும் அவன் உயிர்த்தெழுந்த பின்பு தன்னுடைய சரீரத்தையே பெற்றுக் கொள்வான். மனுஷர் மனுஷரைப் போலவும் ஸ்திரீகள் ஸ்திரீகளைப் போலவும் உயிர்த்தெழுந்த பின்பும் இருப்பார்கள். உயிர்த்தெழுந்த சரீரம் மரிப்பதில்லை. இந்த விஷயத்தில் உயிர்த்தெழுந்த சரீரங்கள் இயேசுகிறிஸ்துவின் சரீரத்தைப் போன்றிருக்கும். (1கொரி 15:39-54 பிலி 3:21)

11. **உயிர்த்தெழுந்த சரீரங்களின் நிலைமை** – (லூக் 24:39; அப் 1:11, பிலி 3:21)

1கொரி 15:39 எல்லா மாம்சமும் ஒரேவிதமான மாம்சமல்ல; மனுஷருடைய மாம்சம் வேறே, மிருகங்களுடைய மாம்சம் வேறே, மச்சங்களுடைய மாம்சம் வேறே, பறவைகளுடைய மாம்சம் வேறே.

1கொரி 15:40 வானத்துக்குரிய மேனிகளுமுண்டு, பூமிக்குரிய மேனிகளுமுண்டு; வானத்துக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே, பூமிக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே.

1கொரி 15:41 சூரியனுடைய மகிமையும் வேறே, சந்திரனுடைய மகிமையும் வேறே, நட்சத்திரங்களுடைய மகிமையும் வேறே; மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது.

1கொரி 15:42 மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும்; 43 கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும்.

1கொரி 15:44 ஜென்மசரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்; ஜென்மசரீரமுமுண்டு, ஆவிக்குரிய சரீரமுமுண்டு.

"எல்லா மாம்சமும் ஒரேவிதமான மாம்சமல்ல" மனுஷர் பார்ப்பதற்கு ஒன்றுபோல இருந்தாலும் ஒவ்வொரு [illegible] வித்தியாசமானவர்களே. ஒவ்வொரு மனுஷருக்கும் இடையில் ஏதாவது ஒரு வித்தியாசம் காணப்படும்.

வானத்துக்குரிய மேனிகள் (celestial bodies) - ἐπουράνιος - epouranios 2032

பொருள் - பரம, வானத்துக்குரிய, உன்னதத்திலுள்ள (எபே 1:3) - சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள் ஆகியவற்றிற்கு வெவ்வேறு மகிமை உண்டு. அதுபோலவே, வானத்துக்குரியவைகளுக்கும் பூமிக்குரியவைகளுக்கும் வெவ்வேறு மகிமை இருக்கும். (1கொரி 15:40-41)

15 அதிகாரம்

பூமிக்குரியது (terrestrial) ἐπίγειος - epigeios - 1919

பொருள் – பூமிக்குரிய, லௌகீக

"மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும்" – உயிர்த்தெழுந்த சரீரம் மரிக்காது. ஆனாலும் அவற்றின் மகிமைகளில் வித்தியாசம் இருக்கும். நம்முடைய சரீரம் அழிவுள்ளதாக விதைக்கப் படுகிறது. (1கொரி 15:21-22) அழிவில்லா ததாக உயிர்த்தெழுகிறது. (1கொரி 15:5 -54) மகிமையில்லாமல விதைக்கப் படுகிறது (ஆதி 3:19) மகிமையில உயிர்த் தெழுகிறது. பிலி 3:21 கொலோ 3:4) பலவீனததில விதைக்கப்படுகிறது. (யாக் 10-1 பலததில உயிர்ததெழுகிறது. (1கொரி 15:53-56; 2கொரி 5:4) ஜென்ம சரீரங்களாக விதைககப்படுகிறது. (யோவான் 5:28-29 தானி 12:2 ஆவிக்குரிய சரீரங்களாக உயிர்ததெழுகிறது. (1கொரி 15:44 பிலி 3:21

அழிவு (corruption) - φθορά - phthora - 5356

பெண்பால பெயர்சொல அழிவு கேடு (ரோமர் 8:21

அழிவில்லாதது (incorruption) ἀφθαρσία - aphtharsia - 861

பெண்பால் பெயர்சொல அழியாமை, அழிவில்லாதது அழியாதது, ஆரோக்கியமானது - உயிர்த்தெழுந்த சரீரங்கள் (1கொரி 15:42,50,53,54 அழியாத நித்தியம் (ரோமர் 2:7; 2தீமோ 1:10)

ஆவிக்குரிய சரீரம் (spiritual body) - πνευματικός - pneumatikos - 4152

பொருள் - ஆவிக்குரிய ஞான ஆவிக்கேற்ற (ரோமர் 7:14) - இந்தச் சரீரத்திலும் மாம்சம், எலும்புகள் ஆகியவை இருக்கும். (லூக்கா 24:39; யோவான் 4:24, பிலி 3:21)

ஜென்மசரீரம் (natural body) - ψυχικός - psychikos - 5591

பொருள் - ஜென்ம சுபாவமான, ஜென்ம (1கொரி 2:14

12. உயிர்த்தெழுதலின் அவசியம்

1கொரி 15:45 அந்தபடியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்து மாவானான் என்றெழுதியிருக்கிறது பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவி யானார்

1கொரி 15:46 ஆகிலும் ஆவிக்குரிய சரீரம் முந்தினதலல, ஜென்மசரீரமே முந்தினது ஆவிக்குரிய சரீரம் பிந்தினது.

1கொரி 15:47 முந்தின மனுஷன் பூமியிலிருந்துண்டான மண்ணா னவன்; இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்து வந்த கர்த்தர்

1கொரி 15:48 மண்ணானவன் எப்படிப்பட்டவனோ மண்ணான வர்களும் அப்படிப்பட்டவர்களே வானத்துக்குரியவர் எப்படிப்பட்டவரோ வானததுக்குரியவர்களும் அப்படிப் பட்டவர்களே

1கொரி 15:49 மேலும் மண்ணான வனுடைய சாயலை நாம் அணிந் திருக்கிறதுபோல வானவருடைய சாய லையும் அணிந்துகொள்வோம்

1கொரி 15:50 சகோதரரே, நான சொல்லுகிறதென்னவெனில, மாம்சமும் இரததமுமதேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிக்க மாட்டாது; அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிப்பதுமிலலை.

"முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாததுமாவானான்" ஆதி 2:7 ஆகிய வசனம் மேறகோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

ஆதாமிற்கும், கிறிஸ்துவிற்கும் இடையேயுள்ள வேறுபாடுகள்

1. முந்தின ஆதாம் - பிந்தின ஆதாம் (1கொரி 15:45
2. ஜீவாத்துமா - உயிர்ப்பிக்கிற ஆவி (1கொரி 15:45)
3. ஜென்ம சரீரம் - ஆவிக்குரிய சரீரம் (1கொரி 15:46)

15 அதிகாரம்

4. பூமியிலிருந்து உண்டான மண்ணானவன் - வானத்திலிருந்து வந்த கர்த்தர் (1கொரி 15:47)

5. மனுஷன் மட்டும் - மனுஷனும் தேவனும் (1கொரி 15:47)

6. முந்தின மனுஷன் - இரண்டாம் மனுஷன் (1கொரி 15:47)

"மண்ணானவன் எப்படிப்பட்டவனோ மண்ணானவர்களும் அப்படிப்பட்டவர்களே வானத்துக்குரியவர் எப்படிப்பட்டவரோ வானத்துக்குரியவர்களும் அப்படிப்பட்டவர்களே" - பூமிக்குரிய சரீரம் பூமிக்குரிய பிரகாரமாக இருக்கும். உயிர்த்தெழுந்த சரீரம் வானத்திற்குரிய சரீரங்களைப்போல இருக்கும் (1கொரி 15:48-49)

சாயல் (image) - εἰκών - **eikoon** - 1504

பெண்பால் பெயர்சொல் - உருவம் சாயல், நிழல், சொரூபம், ரூபம் **(likeness, profile; statue, physical resemblance)** (1கொரி 15:49, 1கொரி 11:7, மத் 22:20; அப் 19:35; ரோமர் 1:23, ரோமர் 8:29; ரோமர் 11:4; 2கொரி 4:4, கொலோ 1:15; எபி 10:1; வெளி 13:14-15; வெளி 14:9-11, வெளி 15:2; வெளி 16:2; வெளி 19:20; வெளி 20:4). பூமிக்குரிய சரீரம் எவ்வாறு உண்மையாய் இருக்கிறதோ அதுபோன்று ஆவிக்குரிய சரீரமும் உண்மையாய் இருக்கும் (ஆதி 5:3, ஆதி 9:6, யாத் 20:4, லேவி 26:1, சங் 73:20, சங் 106:19, ஏசா 40:19-20; ஏசா 44:9-17; ஏசா 45:20; எரே 10:14, எரே 51:17)

"மாம்சமும் இரத்தமும் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது" - பூமிக்குரிய மனுஷனால் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்க முடியாது. ஆனால் தேவனுடைய இராஜ்யத்திற்குள் அவனால் பிரவேசிக்க முடியும் (மத் 5:5, மத் 25:34, ரோமர் 8:17, சங் 37:11)

"அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிப்பதுமில்லை" - நமது சரீரத்திலிருந்து அழிவுள்ளது ஒதுக்கி வைக்கப்படும். அழியாமை நமது உயிர்த்தெழுந்த சரீரத்திற்குள் இடம் பெறும். (1கொரி 15:51-54) மாம்சமும், இரத்தமும் ஆவிக்குரிய சரீரத்தில் அல்லது மகிமையில் இடம்பெறுவதில்லை. (1கொரி 15:42-49) ஆனால் மாம்சமும் எலும்பும் ஆவிக்குரிய சரீரத்தில் இடம் பெறும். (லூக்கா 24:39, பிலி 3:21)

13. **உயிர்த்தெழுதலின் வேளையும் விதமும்** - வெளி 20:4-5, யோவான் 14:1-3, 1தெச 4:16, பிலி 3:21; கொலோ 3:4

1கொரி 15:51 இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும் போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்.

1கொரி 15:52 எக்காளம் தொனிக்கும். அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்.

1கொரி 15:53 அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும்.

1கொரி 15:54 அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்.

1கொரி 15:55 மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?

1கொரி 15:56 மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம்.

1கொரி 15:57 நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.

15 அதிகாரம்

"நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை" - இது ஒரு இரகசியம். சரீரப் பிரகாரமாக எல்லோரும் மரிப்பதில்லை. சபை எடுத்துக் கொள்ளப்படும்போது உயிரோடு இருக்கும் பரிசுத்தவான்கள் தங்களுடைய மரணத்தை ருசிபார்ப்பதற்கு முன்பாகவே இயேசு கிறிஸ்துவால் எடுத்துக் கொள்ளப்படுவார்கள் (1தெச 4:13-17). மரித்த பரிசுத்தவான்கள் உயிரோடு எழுப்பப்படுவார்கள். அப்போது உயிரோடிருக்கும் பரிசுத்தவான்கள் மறுரூபமடைவார்கள். இதற்காக ஆகும் நேரம் ஒரு க்ஷணப்பொழுது ஆகும். (1கொரி 15:52). இயேசு கிறிஸ்துவின் வருகையின்போது இரண்டு முறை எக்காளம் தொனிக்கும். முதலாவது எக்காளம் தொனிக்கும்போது மரித்த பரிசுத்தவான்கள் மறுரூபமடைவார்கள். இரண்டாம் எக்காளம் தொனிக்கும்போது உயிரோடு இருக்கும் பரிசுத்தவான்கள் மறுரூபமடைவார்கள். இவர்கள் மரித்து உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களோடு சேர்ந்து கர்த்தரைத் தரிசிப்பார்கள் (1கொரி 15:52, 1தெச 4:16-17)

- இல ἐν - en - 1722

முன் இடைச்சொல் - ஆல், இல் உடன்

நிமிஷம் (atom of time) - ατομος - atomos - 823

பொருள் - நிமிஷத்தில் பிரிக்கமுடியாத பகுதி - க்ஷணப்பொழுது

அழிவில்லாதது (incorruptible) - αφθαρτος - aphthartos - 862

பொருள் - அழிவில்லாத, அழியாத (immortal) தேவனுடைய அழிவில்லாத தன்மையை 1தீமோ 1:17 ஆவது வசனம் குறிக்கிறது. மனுஷனுடைய ஆவியைப் பற்றி 1பேதுரு 3:4 ஆவது வசனம் விளக்குகிறது.

சாவுக்கேதுவானது (mortal) - θνητός - thneetos - 2349

பொருள் - சாவுக்கேதுவாகிய, மரணமான (mortal, human) (1கொரி 15:53-54; ரோமர் 6:12; ரோமர் 8:11; 2கொரி 4:11; 2கொரி 5:4)

"மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது" - ஏசா 25:8 ஆவது வசனம் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

விழுங்கப்பட்டது (swallowed) - καταπίνω - katapinoo - 2666

வினைச்சொல் - விழுங்கு, அமிழ (swallow) (1கொரி 15:54; மத் 23:24; 2கொரி 2:7; 2கொரி 5:4; எபி 11:29; 1பேதுரு 5:8; வெளி 12:16)

ஜெயம் (victory) - νῖκος - nikos - 3534

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - ஜெயம் (1கொரி 15:54,55,57; மத் 12:20)

"மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?" - ஓசி 13:14 ஆவது வசனம் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

கூர் (sting) - κέντρον - kentron - 2759

பால்வேறுபாடற்ற பெயர்ச்சொல் - முள், கூர், கொடுக்கு (a goad, sting) (1கொரி 15:55-56; அப் 9:5; அப் 26:14; வெளி 9:10) நமது மரணத்தில் பாவம் ஒரு முள்ளைப்போன்று இருக்கிறது (1கொரி 15:56). நாம் மரிக்கும் வரையிலும் நமது பாவம் கூர்மையான முள்ளைப்போன்று நம்மைக் குத்திக் கொண்டே இருக்கும். (ரோமர் 6:23)

I கொரிந்தியர் – தொகுப்புரை

15 அதிகாரம்

பாதாளம் (grave) - ᾅδης - hadees - 86

ஆண்பால் பெயர்ச்சொல் - பாதாளம் இறந்தவர்கள் பாதாளத்தில் தற்காலிகமாகத் தங்கும் இடம் (hell) - கிறிஸ்து உயிர்த்தெழுவதற்கு முன்பாக பாதாளத்தில் நீதிமான்களுடைய ஆவிகளும் துன்மார்க்கருடைய ஆவிகளும் இருந்தன இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு பாதாளத்தில் சிறைப்பட்டிருந்த நீதிமான்களுடைய ஆவிகளை விடுவித்து தம்மோடு அழைத்துச் சென்றுவிட்டார் (எபே 4:8-10; எபி 2:14-15). இப்போது பாதாளத்தில் துன்மார்க்கருடைய ஆவிகள் மட்டுமே தங்கியிருக்கின்றன ஆயிரம் வருஷ அரசாட்சியின் கடைசியில் பாதாளத்தில் உள்ள துன்மார்க்கருடைய ஆவிகள் உயிர்த்தெழும். (வெளி 20:11-15) இவர்கள் உயிர்த்தெழும் வரையிலும் மரணத்தின் கூர் இவர்களைக் குத்திக் கொண்டேயிருக்கும். (1கொரி 15:24-28 வெளி 20:11-15 வெளி 21:1-7) ஆயிரம் வருஷ அரசாட்சியின் முடிவில் துன்மார்க்கர் நியாயந்தீர்க்கப்பட்டு நரகத்திற்கு நித்திய காலமாகப் பாடுகளை அனுபவிக்கத் தள்ளப்படுவார்கள் (வெளி 20:11-15) (லூக்கா 16:19-31 சங் 9:17)

"மரணத்தின் கூர் பாவம்" பாவம் ஒரு முள்ளைப் போன்றது. இது ஒருவன் மரிக்கும் வரையிலும் அவனைக் குத்திக் கொண்டே இருக்கும். (ஆதி 2:17; எசே 18:4, ரோமர் 6:23 ரோமர் 7:7-25 ரோமர் 8:12-13)

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவன்" பாவத்திலிருந்து விடுதலை பெறுவதற்கும் நித்திய மரணத்தின் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கும் நியாயப்பிரமாணம் நமக்கு உதவி புரியாது. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோ இவற்றிலிருந்து நம்மை விடுவித்து நமக்கு ஜெயம் கொடுக்கிறார்

(ரோமர் 8:2-4; மத் 1:21; எபே 1:7 எபே 2:8-9; 2கொரி 5:17-18, எபி 7:25 1யோவான் 1:7-9; 1யோவான் 3:5-6, 1யோவான் 5:18)

14. கர்த்தருக்குள் நாம் படுகிற பிரயாசம் விருதாவாயிராது

1கொரி 15:58 ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும் அசையாதவர்களாயும் கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக.

ஜெயங்கொடுக்கும் காரியங்கள்

1 உறுதிப்பட்டவர்களாய் இருப்பது

2 அசையாதவர்களாய் இருப்பது

4 கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாய் இருப்பது (1கொரி 15:58 மத் 10:42; 1கொரி 3:8)

உறுதிப்பட்டது (settled) - ἑδραῖος - hedraios - 1476

பெயரடை - உறுதியான, உறுதிப்பட்ட, உறுதியான (be seated, settled) - கிறிஸ்துவில் உண்டாகும் ஜெயத்தைப் பற்றிய சத்தியத்திலும் உயிர்த்தெழுதலைப் பற்றிய சத்தியத்திலும் உறுதி உள்ளவராக இருப்பது. (1கொரி 15:58 1கொரி 7:37)

அசையாதது (unmoveable) ἀμετακίνητος ametakineetos 277

பெயரடை - அசையாத - சுவிசேஷத்தின் நம்பிக்கையிலிருந்தும், இயேசு கிறிஸ்துவில் நாம் வைக்கும் விசுவாசத்திலிருந்தும் எதுவும் அல்லது யாரும் நம்மை அசைக்கக்கூடாது. (1கொரி 15:58)

16 அதிகாரம்

XI. முடிவுரையும் வாழ்த்துதல்களும் - (1கொரி 16:1-24)

1. பரிசுத்தவான்களுக்காக சேர்க்கப்படும் தர்மப்பணம்

1கொரி 16:1 பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மப்பணத்தைக் குறித்து நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள்.

1கொரி 16:2 நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்.

1கொரி 16:3 நான் வரும்போது உங்கள் உபகாரத்தை எருசலேமுக்குக் கொண்டு போகும்படிக்கு, நீங்கள் தகுதியுள்ளவர்களாகக் குறிக்கிறவர்கள் எவர்களோ, அவர்களிடத்தில் நிருபங்களைக் கொடுத்து, அவர்களை அனுப்புவேன்.

1கொரி 16:4 நானும் போகத்தக்கதானால், அவர்கள் என்னுடனேகூட வரலாம்.

"பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மப்பணம்" - கொரிந்துவிலுள்ள விசுவாசிகள் அப்போஸ்தலன் பவுலிடம் 12 காரியங்களைக் குறித்து விவரம் கேட்டார்கள் (2கொரி 7:1) அவற்றுள் இது பன்னிரெண்டாவது காரியமாகும். யூதேயாவிலுள்ள கிறிஸ்தவர்களுக்குப் பல துன்பங்கள் உண்டாயிற்று. ஆகையினால் அவர்களுக்கு மற்றவர்களுடைய உதவி தேவைப்படுகிறது.

"நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள்" பவுல் இந்த வசனத்தில் கலாத்தியரை எடுத்துக் காட்டாகக் கூறுகிறார் (ரோமர் 15:26; 2கொரி 8-9; 2கொரி 9:2)

"வாரத்தின் முதல்நாள்" - இது ஞாயிற்றுக் கிழமையைக் குறிக்கும். (யோவான் 20:1,19,26; அப் 20:7). யூதர்கள் ஒவ்வொரு ஓய்வுநாளிலும் ஜெபாலயத்திற்கு வரும்போது தங்களுடைய தருமப்பணத்தைக் கொண்டுவருவார்கள். இதே பழக்கத்தை பவுலும் பின்பற்றி கிறிஸ்தவர்கள் சபை கூடும் ஞாயிற்றுக் கிழமையில் தங்களுடைய தருமப்பணத்தைக் கொண்டு வருமாறு கூறுகிறார்.

"நீங்கள் தகுதியுள்ளவர்களாகக் குறிக்கிறவர்கள் எவர்களோ அவர்களிடத்தில் நிருபங்களைக் கொடுத்து, அவர்களை அனுப்புவேன்" - ஒரு சபையிலிருந்து மற்றொரு சபைக்கு நிருபங்களைக் கொடுத்து அனுப்புவதற்கு ஆதித்திருச்சபையார் அதற்குத் தகுதியான பரிசுத்தவான்களைத் தேர்ந்தெடுத்திருந்தார்கள். அவர்கள் மூலமாகவே நிருபங்களும் மற்ற செய்திகளும் பல சபைகளுக்குக் கொடுத்து அனுப்பப்பட்டன.

2. பவுலின் வருகை - (2கொரி 1:15)

1கொரி 16:5 நான் மக்கெதோனியா நாட்டின் வழியாய்ப் போகிறபடியால் மக்கெதோனியா நாட்டைக் கடந்த பின்பு உங்களிடத்திற்கு வருவேன்.

1கொரி 16:6 நான் எங்கே போனாலும் நீங்கள் என்னை வழிவிட்டனுப்பும்படிக்கு, நான் உங்களிடத்தில் சிலகாலம் தங்கவேண்டியதாயிருக்கும். ஒருவேளை மாரிகாலம் முடியும் வரையும் இருப்பேன்.

1கொரி 16:7 இப்பொழுது வழிப்பிரயாணத்திலே உங்களைக் கண்டுகொள்ளமாட்டேன்; கர்த்தர் உத்தரவு கொடுத்தால் உங்களிடத்தில் வந்து சிலகாலம் தங்கியிருக்கலாமென்று நம்புகிறேன்.

1கொரி 16:8 ஆகிலும் பெந்தெகொஸ்தே பண்டிகைவரைக்கும் எபேசு பட்டணத்தில் இருப்பேன்.

1கொரி 16:9 ஏனெனில் இங்கே பெரிதும் அநுகூலமுமான கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது, விரோதஞ்செய்கிறவர்களும் அநேகர் இருக்கிறார்கள்.

BELLWETHER INTERNATIONAL
GOOD NEWS PUBLISHERS

16 அதிகாரம்

"நான் மக்கெதோனியா நாட்டின் வழியாய்ப் போகிறபடியால்" - பவுல் இந்த நிருபத்தை எழுதிய போது அவர் எபேசு பட்டணத்தில் இருந்தார். பெந்தெகொஸ்தே பண்டிகை வரையிலும் இங்கு தங்கியிருக்க வேண்டுமென்று விரும்புகிறார். அதன் பின்பு அவர் மக்கெதோனியா நாட்டிற்குச் சென்றார். மழைக்காலம் முடியும் வரையிலும் அவர்களோடு தங்கியிருக்க வேண்டு மென்பது பவுலின் திட்டமாகும் (1கொரி 16:5-9)

3. தீமோத்தேயுவும் அப்பொல்லோவும்

1கொரி 16:10 தீமோத்தேயு உங்களிடத்திற்கு வந்தானேயாகில் அவன் உங்களிடத்தில் பயமில்லாமலி ருக்கப் பாருங்கள், என்னைப் போல அவனும் கர்த்தருடைய கிரியையை நடப்பிக்கிறானே

1கொரி 16:11 ஆனபடியினால் ஒருவனும் அவனை அற்பமாய் எண்ணாதிருப்பானாக; சகோதர ரோடே கூட அவன் வருகிறதற்கு நான் காத்திருக்கிறபடியால் என்னிடத் தில் வரும்படிக்கு அவனைச் சமாதா னத்தோடே வழிவிட்டனுப்புங்கள்

1கொரி 16:12 சகோதரனாகிய அப்பொல்லோவைக் குறித்தோ வெனில், சகோதரரோடேகூட உங்களி டத்தில் வரும்படிக்கு அவனை மிகவும் வேண்டிக் கொண்டேன் ஆகிலும் இப்பொழுது வர அவனுக்கு மன தில்லை. அவனுக்கு நற்சமயம் உண்டாயிருக்கும்போது வருவான்

"என்னைப் போல அவனும் கர்த்தருடைய கிரியையை நடப்பிக்கிறானே" பவுலைப் போல தீமோத்தேயுவினிடத்திலும் அப்போஸ்தல வல்லமை இருந்தது (1தீமோ 4:14, 2தீமோ 1:6

"சகோதரரோடேகூட அவன் வருகிறதற்கு நான் காத்திருக்கிறபடியால்" தீமோத்தேயு கொரிந்துவில் பவுலைக் கண்டான்

"சகோதரனாகிய அப்பொல்லோவைக் குறித்தோவெனில் சகோதரரோடேகூட உங்களிடத்தில் வரும்படிக்கு அவனை மிகவும் வேண்டிக்கொண்டேன்" - அப்பொல்லோவின் பிரயாணத்தைக் குறித்து பவுல் பொறாமை கொள்ளவில்லை என்பதை இந்த வசனம் விளக்குகிறது (1கொரி 1:12, 1கொரி 3:5

4. ஐந்து கட்டளைகள் – (கலா 5:1 பிலி 4:1; 1தெச 3:8; 2தெச 2:15)

1கொரி 16:13 விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள் திடன் கொள்ளுங்கள்

1கொரி 16:14 உங்கள் காரியங்களெல்லாம் அன்போடே செய்யப்படக் கடவது.

விசுவாசிகளுக்குப் பவுல் கூறும் கட்டளைகள்

1 விழித்திருங்கள்

2 விசுவாசத்திலே நிலைத்திருங்கள் (கலா 5:1; பிலி 1:27; பிலி 4:1 1தெச 3:8, 2தெச 2:15)

3 புருஷராயிருங்கள் (1கொரி 14:20 எபே 4:14)

4 திடன் கொள்ளுங்கள் (லூக்கா 1:80, லூக்கா 2:40; எபே 3:16

5 உங்கள் காரியங்களையெல்லாம் அன்போடே செய்யுங்கள் (1கொரி 13:4)

6 பரிசுத்தவான்களுக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள் (1கொரி 16:15-16

ஏன் விழித்திருக்க வேண்டும்

1. இயேசு கிறிஸ்து இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதி ருக்கிறபடியினால் விழித்திருங்கள் (மத் 24:42)

2 நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள் (மத் 26:41)

I கொரிந்தியர் – தொகுப்புரை

16 அதிகாரம்

3 மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள் (லூக்கா 21:36)

4 கொடிதான ஓநாய்களின் நிமித்தமாக விழித்திருங்கள் (அப் 20:29)

5 ஜெபத்தில் விழித்திருங்கள் (கொலோ 4:3; 1பேதுரு 4:7)

6 விழித்துக் கொண்டு தெளிந்தவர்களாய் இருங்கள் (1தெச 5:6)

7 எல்லாக் காரியங்களிலும் விழித்திருங்கள் (2தீமோ 4:5)

5. ஸ்தேவானுடைய வீட்டாரும் மற்ற சகோதரரும்

1கொரி 16:15 சகோதரரே ஸ்தேவானுடைய வீட்டார் அகாயா நாட்டிலே முதற்பலனானவர்களென்றும், பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்யும்படிக்குத் தங்களை ஒப்புவித்திருக்கிறார்களென்றும் அறிந்திருக்கிறீர்களே

1கொரி 16:16 இப்படிப்பட்டவர்களுக்கும், உடன் வேலையாட்களாய்ப் பிரயாசப்படுகிற மற்ற யாவருக்கும் நீங்கள் கீழ்ப்படிந்திருக்கவேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்

"ஸ்தேவான்" (Stephanas) - (1கொரி 1:16

"அகாயா நாட்டிலே முதற்பலனானவர்கள்" - கிரேக்கு தேசத்திலே முதலாவதாக இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள். (1கொரி 15:20

ஒப்புவித்திருக்கிறார்கள் (addicted) τάσσω tassoo 5021

வினைச்சொல் குறித்திரு, நியமிக்கப்படு. ஒப்புவித்திரு - பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்யும்படிக்கு தங்களை ஒப்புக் கொடுத்திருக்கிறார்கள் (அப் 13:48 கர்த்தருடைய பிள்ளைகளுக்கு நன்மை செய்கிறவர்கள் அதைக் கர்த்தருக்கே செய்கிறார்கள் (மத் 25:34-46

6. பவுலை வந்து சந்தித்த சகோதரர்கள்

1கொரி 16:17 ஸ்தேவான், பொர்த்துனாத்து அகாயுக்கு என்பவர்கள் வந்ததற்காகச் சந்தோஷமாயிருக்கிறேன், நீங்கள் எனக்குச் செய்ய வேண்டியதாயிருந்ததை அவர்கள் செய்திருக்கிறார்கள்

1கொரி 16:18 அவர்கள் என் ஆவிக்கும் உங்கள் ஆவிக்கும் ஆறுதல் செய்தார்கள்; இப்படிப்பட்டவர்களை அங்கிகாரம்பண்ணுங்கள்

"ஸ்தேவான் (Stephanas) பொர்த்துனாத்து (Fortunatus) அகாயுக்கு (Achaicus)" - கொரிந்து சபையில் உள்ளவர்கள் இவர்கள் மூலமாக கொரிந்து சபையார் அப்போஸ்தலர் பவுலுக்கு நிருபம் எழுதி அனுப்பினார்கள்

குறைவு (lacking) - ὑστέρημα - hystereema - 5303

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - வறுமை, குறைவு (லூக்கா 21:4, 2கொரி 8:14; 2கொரி 9:12, 2கொரி 11:9; பிலி 2:30; கொலோ 1:24, 1தெச 3:10) - பவுல் இந்த மூன்று சகோதரர்கள் மூலமாக கொரிந்துவிலிருந்து அனுப்பப்பட்ட தரும பணத்தையும் உதவிகளையும் பவுல் பெற்றுக் கொள்கிறார்

7. வாழ்த்துதலும் ஆசீர்வாதமும்

1கொரி 16:19 ஆசியா நாட்டிலுள்ள சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள் ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் தங்கள் வீட்டிலே கூடுகிற சபையோடுங் கூடக் கர்த்தருக்குள் உங்களை மிகவும் வாழ்த்துகிறார்கள்

16 அதிகாரம்

1கொரி 16:20 சகோதரரெல்லாரும் உங்களை வாழ்த்துகிறார்கள். ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடே வாழ்த்துங்கள்.

1கொரி 16:21 பவுலாகிய நான் என் கையெழுத்தாலே உங்களை வாழ்த்துகிறேன்.

1கொரி 16:22 ஒருவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் அன்புகூராமற் போனால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்; கர்த்தர் வருகிறார்.

1கொரி 16:23 கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனேகூட இருப்பதாக.

1கொரி 16:24 கிறிஸ்து இயேசுவுக்குள்ளான என்னுடைய அன்பு உங்களெல்லாரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.

"ஆசியா நாட்டிலுள்ள சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்" பவுல் இந்த நிருபத்தை எழுதும்போது ஆசியாவிலுள்ள எபேசுவிலிருந்து எழுதுகிறார். ஒருசிலர் பவுல் இந்த நிருபத்தைப் பிலிப்பியிலிருந்து எழுதினதாகக் கூறுகிறார்கள். (1கொரி 16:8)

"ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும்" (Aquila and Priscilla) - (அப் 18:2 ரோமர் 16:3)

"தங்கள் வீட்டிலே கூடுகிற சபை" - கொரிந்துவிலே இவர்களுடைய வீட்டில் விசுவாசிகள் ஒன்றுகூடி தேவனை ஆராதித்தார்கள்.

"பவுலாகிய நான் என் கையெழுத்தாலே உங்களை வாழ்த்துகிறேன்" - (கொலோ 4:18 2தெச 3:17 ரோமர் 16:22)

"அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன், கர்த்தர் வருகிறார்" (let be Anathema Maranatha) - யூதர்கள் இயேசு கிறிஸ்துவைச் சபிக்கப்பட்டவன் என்று கூறினார்கள். பவுல் அப்போஸ்தலன் இயேசு கிறிஸ்துவினிடத்தில் அன்புகூராதவனைச் சபிக்கப்பட்டவன் என்று கூறுகிறார். மாரநாதா என்பதற்குக் கர்த்தர் வருகிறார் என்று பொருள் (1கொரி 12:3)

II கொரிந்தியர் – முன்னுரை

காலம்

கி.பி. 60 ஆம் ஆண்டில் பவுல் இந்த நிருபத்தை பிலிப்பி பட்டணத்திலிருந்து எழுதினார். அப். 19:23-20:3 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகளுக்குப் பின்பு இந்த நிருபம் எழுதப்பட்டிருக்கலாம் (2கொரி 1:8)

ஆசிரியர்

பவுல் (2கொரி 1:1)

மையக்கருத்து

பவுல் இந்த நிருபத்தை எழுதுவதற்கு இந்த [illegible] இருந்தன. அவையாவன:

1. தனது முதலாம் நிருபத்தின் மூலமாகக் கொரிந்துவிலுள்ள விசுவாசிகளைப் பவுல் கடிந்து கொண்டு திருத்தினார். இதன் மூலமாக இரட்சிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதலாக பவுல் இந்த நிருபத்தை எழுதியிருக்கிறார் (2கொரி 1:1-2:17; 7:1-16)

2. உண்மையான கிறிஸ்தவ ஊழியத்தைப் பற்றி உபதேசம் பண்ணுவதற்காக பவுல் இந்த நிருபத்தை எழுதியிருக்கிறார் (2கொரி 3:1-6:18)

3. யூதேயாவிலுள்ள பரிசுத்தவான்களுக்கு உதவி புரிவதற்காக தருமப்பணம் சேர்ப்பதைப் பற்றியும் கொடுப்பதில் உள்ள ஆசீர்வாதங்களை விளக்கியும் பவுல் இந்த நிருபத்தை எழுதியிருக்கிறார் (2கொரி 8:1-9:15)

4. தன்னுடைய அப்போஸ்தல ஊழியத்தை உறுதிபண்ணும் விதமாகப் பவுல் இந்த நிருபத்தை எழுதியிருக்கிறார் (2கொரி 10:1-12:18)

5. கீழ்ப்படியாமையை எச்சரிக்கும் விதமாகப் பவுல் இந்த நிருபத்தை எழுதியிருக்கிறார் (2கொரி 12:19-13:14)

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 13

வசனங்கள் - 257

கேள்விகள் - 29

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள் - 4

புதிய தீர்க்கதரிசனங்கள் - 4

வரலாற்றைக் குறிக்கும் வசனங்கள் - 249

பொருளடக்கம்

I. முன்னுரை: ஆசிரியரும் வாழ்த்தும் (1:1-2)

II. பவுலின் சாட்சி

1. மீட்புக்களுக்காகவும் ஆசீர்வாதங்களுக்காகவும் தேவனுக்கு ஸ்தோத்திரம் (1:3-11)
2. பவுலினுடைய ஊழியத்தின் சுபாவம் (1:12)
3. நிருபத்தின் நோக்கம் (1:13-14)
4. பவுலின் பிரயாண திட்டம் (1:15-16)
5. பவுல் தனது கிரியைகளை உறுதிப்படுத்துகிறார் (1:17-24)
6. முதலாம் நிருபத்திலிருந்து குறிப்பு (2:3-11)
7. தீத்துவைக் குறித்து கலக்கம் (2:12-13)

III. புதிய ஏற்பாட்டு ஊழியம்

1. கிறிஸ்துவிற்குள் எப்பொழுதும் வெற்றி (2:14)
2. ஆத்துமாவை இரட்சிக்கும் ஊழியமும் ஆத்துமாவை அழிக்கும் ஊழியமும் (2:15-16)
3. உண்மையுள்ள துப்புரவான ஊழியம் (2:17)

II கொரிந்தியர் - முன்னுரை

IV எருசலேமிலுள்ள ஏழைப் பரிசுத்தவான்களுக்கு தர்மப்பணம் சேகரிப்பு

1 மக்கெதோனியா நாட்டு சபைகள் (8:1-5)

2 தீத்துவின் ஊழியம் - புத்திமதி (8:6-7)

3 பவுலின் விண்ணப்பத்திற்குக் காரணங்கள் (8:8-12)

4 கொடுப்பதில சமநிலை (8:13-15)

5 தீத்துவை கொரிந்துவிற்கு அனுப்புகிறார் (8:16-23)

6 உண்மையுள்ளவர்களாக இருக்கும்படி விண்ணப்பம் (8:24)

7 பக்தி வைராக்கியத்திற்காக புகழ்ந்துரை (9:1-2)

8 மற்றவர்களிடம் இவர்களைக் குறித்து புகழ்ந்த பிரகாரம் வாழ வேண்டும் என்னும் விண்ணப்பம் (9:3-5)

9 உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் (9:6-9)

10 தேவன் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச் செய்வார் (9:10-15)

V. பவுல் தனது அப்போஸ்தல ஊழியத்தை உறுதிப்பண்ணுகிறார்

1 பவுலின் போராயுதங்கள் (10:1-5)

2 கிரியைகளோடு வருகிறார் (10:6-11)

3 பவுலின் அதிகாரமும் புகழ்ச்சியும் தேவனிடமிருந்து வந்தவை (10:12-18)

4 தனது மேன்மை பாராட்டலை சகித்துக் கொள்ளுமாறு விண்ணப்பம் (11:1-4)

5 மற்ற அப்போஸ்தலர்களோடு சமநிலை (11:5-6)

6 பவுலின் கிருபையுள்ள பிரசங்கம் (11:7-11)

7 கள்ள அப்போஸ்தலர்கள் கூடவுள்ள வேலையாட்களைக் குறித்து எச்சரிப்பு (11:12-15)

8 மேன்மை பாராட்டுவதைக் குறித்து சகித்துக் கொள்ளுமாறு விண்ணப்பம் (11:16-20)

9 மாம்சத்தில் சமநிலை (11:21-22)

10 ஊழியத்திலும் பாடுகளிலும் சமநிலை (11:23-27)

11 ஸ்தானத்திலும் பொறுப்பிலும் சமநிலை (11:28-29)

12 பவுலின் மேன்மை பாராட்டுதல் என்பதற்கு தேவனே சாட்சி (11:30-33)

13 தரிசனங்கள் தேவனுடைய வெளிப்பாடுகள் ஆகியவற்றில் சமநிலை (12:1-6)

14 பொறுமையிலும் வல்லமையிலும் சமநிலை (12:7-12)

15. அவர்களை வருத்தப் படுத்தாதிருந்ததற்காக மன்னிப்பு கோருகிறார் (12:13)

16 பவுலின் பிரயாண ஆயத்தம் (12:14-16)

17 தீத்துவின் மேன்மை பாராட்டுதல் (12:17-18)

18 மறுபடியும் வரும்போது அவர்களை நியாயந்தீர்க்கும் அதிகாரம் பவுலுக்கு உள்ளது (12:19-21)

19 பவுலின் பிரயாண ஆயத்தம் (13:1-4)

20 தெளிவு பெறுமாறு புத்திமதி (13:5-10)

21 பிரிந்து போகும்போது புத்திமதி (13:11-12)

22 வாழ்த்தும் ஆசீர்வாதமும் (13:13-14)

II கொரிந்தியர் – தொகுப்புரை

1 அதிகாரம்

I. முன்னுரை: ஆசிரியரும் வாழ்த்தும்

2கொரி 1:1 தேவனுடைய சித்தத்தினாலே இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பவுலும் சகோதரனாகிய தீமோத்தேயும் கொரிந்து பட்டணத்திலுள்ள தேவனுடைய சபைக்கும் அகாயா நாடெங்குமுள்ள எல்லாப் பரிசுத்தவான்களுக்கும் எழுதுகிறதாவது.

2கொரி 1:2 நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

"அப்போஸ்தலன்" (apostle) - அப 15:33

"தீமோத்தேயு" (Timothy) பவுலோடு இணைந்து ஊழியம் செய்தவன். பிலிப்பியர், கொலோசெயர் ஆகிய நிருபங்களைப் பவுல் எழுதிய போது தீமோத்தேயுவின் பெயரைச் சேர்த்து எழுதியிருக்கிறார். தெசலோனிக்கேயருக்கு எழுதின இரண்டு நிருபங்களிலும் பவுல் சீலாவின் பெயரைச் சேர்த்து எழுதியிருக்கிறார்.

"அகாயா" (Achaia) - கிரேக்கம் (Greece) இந்த நிருபம் கிரேக்க நாட்டிலுள்ள எல்லா சபைகளுக்கும் எழுதி அனுப்பப்பட்டது.

"நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக" - கிருபையும், சமாதானமும் பிதாவாகிய தேவனிடத்திலிருந்து வருவதுபோலவே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் வருகிறது.

II. பவுலின் சாட்சி - (2கொரி 1:3-2:13)

1. ஈட்டுக்களுக்காகவும் ஆசீர்வாதங்களுக்காகவும் தேவனுக்கு ஸ்தோத்திரம்

2கொரி 1:3 நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும் இரக்கங்களின் பிதாவும் சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம்.

2கொரி 1:4 தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல்செய்கிறவர்.

2கொரி 1:5 எப்படியெனில், கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில் பெருகுகிறதுபோல, கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது.

2கொரி 1:6 ஆதலால் நாங்கள் உபத்திரவப்பட்டாலும் அது உங்கள் ஆறுதலுக்கும் இரட்சிப்புக்கும் ஏதுவாகும்; நாங்கள் ஆறுதலடைந்தாலும் அதுவும் உங்கள் ஆறுதலுக்கும் இரட்சிப்புக்கும் ஏதுவாகும்; நாங்கள் பாடுபடுகிறதுபோல நீங்களும் பாடுபட்டுச் சகிக்கிறதினாலே அந்த இரட்சிப்பு பலன்செய்கிறது.

2கொரி 1:7 நீங்கள் எங்களோடேகூடப் பாடுபடுகிறதுபோல எங்களோடேகூட ஆறுதலும் அடைகிறீர்களென்று நாங்கள் அறிந்து, உங்களைக்குறித்து உறுதியான நம்பிக்கையுள்ளவர்களாயிருக்கிறோம்.

2கொரி 1:8 ஆகையால் சகோதரரே, ஆசியாவில் எங்களுக்கு நேரிட்ட உபத்திரவத்தை நீங்கள் அறியாதிருக்க எங்களுக்கு மனதில்லை; என்னவெனில், பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக, எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று.

1 அதிகாரம்

2கொரி 1:9 நாங்கள் எங்கள்மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன் மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம்

2கொரி 1:10 அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களைத் தப்புவித்தார், இப்பொழுதும் தப்புவிக்கிறார் இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம்

2கொரி 1:11 அநேகர்மூலமாய் எங்களுக்கு உண்டான தயவுக்காக அநேகரால் எங்கள் நிமித்தம் ஸ்தோத்திரங்கள் செலுத்தப்படும் பொருட்டு, நீங்களும் விண்ணப்பத்தினால் எங்களுக்கு உதவிசெய்யுங்கள்

தேவனை அழைக்கும் விதம்

1 நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவன் (The Father of our Lord Jesus Christ) (2கொரி 1:3; 2கொரி 11:31 எபே 1:3, எபே 3:14, கொலோ 1:3)

2 இரக்கங்களின் பிதா (The Father of Mercies) (2கொரி 1:3)

3 சகலவிதமான ஆறுதலின் தேவன் (The God of all Comfort) (2கொரி 1:3)

4 மகிமையின் பிதா (The Father of Glory) (எபே 1:17)

5 எல்லாருக்கும் ஒரே தேவன் (The Father of All) (எபே 4:6)

6 ஆவிகளின் பிதா (The Father of Spirits) (எபி 12:9)

7 சோதிகளின் பிதா (The Father of Lights) (யாக் 1:17)

8 சமாதானத்தின் தேவன் (The God of Peace) (பிலி 4:9)

ஆறுதல் (comfort) - παράκλησις - parakleesis - 3874

பெண்பால் பெயர்ச்சொல் - ஆறுதல், புத்திசொல்லுதல் (அப 13:15)

ஆறுதல்செய்தல் (comforteth) - παρακαλέω - parakaleoo - 3870

வினைச்சொல் - வேண்டிக்கொள் வருந்தியழை, புத்திச்சொல், எச்சரி, கேட்டுக்கொள், தேற்று, கடிந்துகொள், போதி, மன்றாடு "beseech" (2கொரி 2:8 2கொரி 5:20 2கொரி 6:1 2கொரி 10:1 2கொரி 12:8) "desire" (2கொரி 8:6, 2கொரி 12:18) "exhort" (2கொரி 9:5) "comfort" (2கொரி 1:4,6; 2கொரி 2:7, 2கொரி 7:6,7,13)

உபத்திரவம் (tribulation) - θλῖψις - thlipsis - 2347

பெண்பால் பெயர்ச்சொல் - உபத்திரவம் வருத்தம் (burdened) (2கொரி 8:13), anguish (யோவான் 16:21), (affliction) (மாற்கு 4:17; மாற்கு 13:19; அப 7:10-11 அப் 20:23; 2கொரி 2:4, 2கொரி 4:17, 2கொரி 6:4; 2கொரி 8:2 பிலி 1:16 பிலி 4:14; கொலோ 1:24; 1தெச 1:6, 1தெச 3:3,7; எபி 10:33, யாக் 1:27), (tribulation) (மத் 13:21, மத் 24:21,29, மாற்கு 13:24; யோவான் 16:33, அப் 14:22; ரோமர் 2:9; ரோமர் 5:3, ரோமர் 8:35; ரோமர் 12:12, 2கொரி 1:4, 2கொரி 7:4; எபே 3:13; 2தெச 1:4,6, வெளி 1:9; வெளி 2:9,10,22, வெளி 7:14); (persecution) (அப் 11:19), (trouble) (1கொரி 7:28)

II கொரிந்தியர் – தொகுப்புரை

1 அதிகாரம்

பாடுகள் (sufferings) - παθημα
patheema - 3804

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - இச்சை, பாடு, உபத்திரவம் - கிறிஸ்துவிற்காக நாம் அனுபவிக்கும் பாடுகளைக் குறிக்கும். இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் ஊழியம் செய்த போது அவருக்கு ஏற்பட்ட பாடுகளை இந்த வார்த்தை குறிப்பிடாது. (ரோமர் 7:5)

"கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது" - கிறிஸ்துவிற்காக நாம் எந்தளவிற்குப் பாடுகளை அனுபவிக்கிறோமோ அந்த அளவிற்கு இயேசு கிறிஸ்துவினால் நமக்குக் கிருபையும், ஆறுதலும் பெருகும். (1கொரி 10:13)

உபத்திரவப்படுதல் (afflicted) - θλίβω - thliboo - 2346

வினைச்சொல் - இடுக்கு, நெருக்கு, உபத்திரவப்படு, ஆக்கினைசெய் (narrow) (மத் 7:14); (suffer tribulation) (1தெச 3:4) (throng) (மாற்கு 3:9); (afflict) (2கொரி 1:6, 1தீமோ 5:10; எபி 11:37), (trouble) 2கொரி 4:8; 2கொரி 7:5 2தெச 1:6-7

"அது உங்கள் ஆறுதலுக்கும் இரட்சிப்புக்கும் ஏதுவாகும்" - 2கொரி 1:6-7 ஆகிய வசனங்களின் மையக்கருத்து இதுதான். நாம் உபத்திரவப்பட்டாலும் ஆறுதல் அடைந்தாலும் அது நமது நன்மைக்கு ஏதுவாகவே இருக்கும்.

எங்களோடே கூட அடைகிறவர்கள் (partakers) κοινωνός koinoonos 2844

ஆண்பால் பெயர்ச்சொல் - உடன்பட்டவர், கூட்டாளி, பங்காளி, ஐக்கியமானவர் (partaker) (2கொரி 1:7; மத் 23:30 1கொரி 10:18;1பேதுரு 5:1;2பேதுரு 1:4), (partner) (லூக்கா 5:10 2கொரி 8:23; பிலே 1:17), (companion) (எபி 10:33); (have fellowship with) (1கொரி 10:20)

"எங்களோடேகூட ஆறுதலும் அடைகிறீர்கள்" - கிறிஸ்துவுக்காகப் பாடுகளை அனுபவிக்கிறவர்கள் அவருடைய கிருபையிலும் ஆறுதலிலும் பங்கு பெறுவார்கள்

அறியாதிருக்கக்கூடாத காரியங்கள்

1 உபத்திரவங்களில் தேவன் உண்மையுள்ளவராக இருப்பார் (2கொரி 1:8-10)

2 கலிசேஷத்தின் பொறுப்பு (ரோமர் 1:11-18)

3 ஆவிக்குரிய வரங்கள் (1கொரி 12

4 இஸ்ரவேலைக் குறித்த தேவனுடைய நோக்கம். (ரோமர் 11:25-32)

5 உயிர்த்தெழுதலும் வருங்கால ஜீவியமும் (1தெச 4:13-18

6 பின்வாங்கிப் போனவர்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு (1கொரி 10:1-13)

"ஆசியாவில் எங்களுக்கு நேரிட்ட உபத்திரவம்" - (அப் 13:44-20:3)

"மரித்தோரை எழுப்புகிற தேவன்" - இந்த வாக்கியம் அப் 14:19 ஆகிய வசனத்தைக் குறிக்கலாம்.

"எங்களுக்கு உண்டான தயவு" - மரணத்திலிருந்து மீட்கப்பட்டதைப் பவுல் தேவனுடைய தயவாக இங்கு குறிப்பிடுகிறார் (2கொரி 1:10-11)

II கொரிந்தியர் – தொகுப்புரை

1 அதிகாரம்

"நீங்களும் விண்ணப்பத்தினால் எங்களுக்கு உதவிசெய்யுங்கள் - ஆவியின் வரங்கள் அனைத்தையும் பவுல் உடையவராக இருந்தாலும் பரிசுத்தவான்கள் தனக்காக விண்ணப்பம் பண்ண வேண்டுமென்று பவுல் விரும்புகிறார். அவர்களுடைய விண்ணப்பத்தைத் தனக்குச் செய்யப்படும் உதவியாகவே பவுல் பாவிக்கிறார்.

2. பவுலினுடைய ஊழியத்தின் சுபாவம்

2கொரி 1:12 மாம்சத்திற்கேற்ற ஞானத்தோடே நடவாமல், தேவனுடைய கிருபையினால் நாங்கள் உலகத்திலேயும், விசேஷமாக உங்களிடத்திலேயும், கபடில்லாமல் திவ்விய உண்மையோடே நடந்தோமென்று எங்கள் மனது எங்களுக்குச் சொல்லுஞ் சாட்சியே எங்கள் புகழ்ச்சியாயிருக்கிறது.

புகழ்ச்சி (rejoicing) - καύχησις - **kaucheesis** - 2746

பெண்பால் பெயர்ச்சொல் - மேன்மை புகழ்ச்சி (boasting) (ரோமர் 3:27; 2கொரி 7:14; 2கொரி 8:24; 2கொரி 9:4; 2கொரி 11:10,17) (glorying) (2கொரி 7:4; ரோமர் 15:17); (rejoicing) (1கொரி 15:31; 2கொரி 1:12; 1தெச 2:19; யாக் 4:16)

பவுலின் மனசாட்சியைப் பற்றிய சாட்சி

1 கபடமில்லாதது

2 திவ்விய உண்மையானது.

3 மாம்சத்திற்கேற்ற ஞானமுடையதல்ல

4 தேவனுடைய கிருபையினால் சாரமேற்றப்பட்டது.

கபடமின்மை (simplicity) - ἁπλότης - **haplotees** - 572

பெண்பால் பெயர்ச்சொல் - வஞ்சனையில்லாமை, கபடமின்மை உதாரத்துவம், உதாரகுணம், உண்மை (2கொரி 8:2)

திவ்விய உண்மை

1 குற்றத்தை உணர்த்தும் (ஆதி 20)

2 மன்னிப்பை உண்டாக்கும் (மத் 18:35)

3 கட்டளையிடும் (யோசு 24:14; 1கொரி 5:8)

4 சத்தியத்தின் சுபாவம் (1பேதுரு 2:2)

திவ்விய சுபாவம் வெளிப்படும் விதம்

1 நமது ஊழியம் (எபே 6:5-7; 1கொரி 10:31; தீத்து 2:7)

2 தேவனிடத்தில் நாம் வைக்கும் அன்பு (2கொரி 8:8,24)

3 இயேசுவிடத்தில் நாம் காண்பிக்கும் அன்பு (எபே 6:24)

4 நமது விசுவாசம் (1தீமோ 1:5)

5 பிறரிடத்தில் நாம் அன்பு கூருவது (ரோமர் 12:9)

6 நமது பிரசங்கம் (2கொரி 2:17; 1தெச 2:3-5)

7 நமது நடத்தை (2கொரி 1:12)

திவ்விய உண்மையுடையவர்களுக்கு எடுத்துக்காட்டுகள்

1 செபுலோன் புத்திரர் (Men of Zebulun) (1நாளா 12:33)

2 எசேக்கியா (Hezekiah) (ஏசா 38:3)

3 நாத்தான்வேல் (Nathanael) (யோவான் 1:47)

4 இயேசு கிறிஸ்து (Jesus Christ) (1பேதுரு 2:22)

1 அதிகாரம்

5. பவுல் (Paul) (2கொரி 1:1)

6. தீமோத்தேயு (Timothy) (2தீமோ 1:5)

7. லோவிசாள், ஐனிக்கேயாள் (Lois and Eunice) (2தீமோ 1:5)

2கொரிந்தியரில் கூறப்பட்டிருக்கும் மூன்று திவ்விய காரியங்கள்

1. திவ்விய உண்மை (Godly sincerity) (2கொரி 1:12)

2. தேவனுக்கேற்ற துக்கம் (Godly sorrow) (2கொரி 7:10)

3. தேவ வைராக்கியம் (Godly jealousy) (2கொரி 11:2)

மாம்சத்திற்கேற்ற ஞானம் (fleshly wisdom) - σαρκικός - sarkikos - 4559

பெயரடை - மாம்சத்துக்குரிய, சரீர மாம்ச (ரோமர் 7:14)

நடப்பது (conversation) - ἀναστρέφω - anastrephoo - 390

வினைச்சொல் - சுற்றி கவிழ்த்துப்போடு, திரும்பிவா, நடக்கவேண்டிய பிரகாரமாக நட - ஜீவியத்தின் காலம், ஜீவியத்தின் நடத்தை, ஒருவருடைய பேச்சு, செயல் சிந்தை ஆகியவை அனைத்தும். இதன் பிற மொழிபெயர்ப்புகள "conversation" (2கொரி 1:12; எபே 2:3), "overthrow" (யோவான் 2:15), "return" (அப் 5:22; அப் 15:16), "be used" (எபி 10:33), "behave" (1தீமோ 3:15), "live" (எபி 13:18; 2பேதுரு 2:18); "abide" (மத் 17:22); "pass" (1பேதுரு 1:17)

உலகம் (world) - κόσμος - kosmos - 2889

ஆண்பால் பெயர்ச்சொல் - உலகம், அலங்காரிப்பு, லௌகிகம்

அதிகமதிகமாய் (more abundantly) - περισσῶς - perissoos - 4057

வினையடை - அதிகமாய், மூர்க்கமாய், அதிகமதிகமாய் (more abundantly) (2கொரி 1:12; 2கொரி 2:4; 2கொரி 7:15; 2கொரி 11:23; 2கொரி 12:15; 1தெச 2:17); (more exceedingly) (மாற்கு 15:14; 2கொரி 7:13; கலா 1:14); (much more) (பிலி 1:14); (more frequent) (2கொரி 11:23); (more earnest heed to) (எபி 2:1); (rather) (எபி 13:19)

3. நிருபத்தின் நோக்கம்

2கொரி 1:13 என்னென்றால், நீங்கள் வாசித்தும் ஒத்துக்கொண்டுமிருக்கிற காரியங்களையேயன்றி, வேறொன்றையும் நாங்கள் உங்களுக்கு எழுதவில்லை; முடிவுபரியந்தமும் அப்படியே ஒத்துக்கொள்வீர்களென்று நம்பியிருக்கிறேன்.

2கொரி 1:14 கர்த்தராகிய இயேசுவினுடைய நாளிலே நீங்கள் எங்களுக்குப் புகழ்ச்சியாயிருப்பதுபோல நாங்களும் உங்களுக்குப் புகழ்ச்சியாயிருக்கிறதை ஒருவாறு ஒத்துக்கொண்டிருக்கிறீர்களே.

"நீங்கள் வாசித்தும் ஒத்துக்கொண்டுமிருக்கிற காரியங்கள்" பவுல் கொரிந்தியருக்கு எழுதின முதலாவது நிருபத்தை அவர்கள் வாசித்து ஒத்துக்கொண்டார்கள்.

தீர்க்கதரிசன எண் - 1

"கர்த்தராகிய இயேசுவினுடைய நாள்" (2கொரி 1:14)

II கொரிந்தியர் – தொகுப்புரை

1 அதிகாரம்

"கர்த்தராகிய இயேசுவினுடைய நாளிலே நீங்கள் எங்களுக்குப் புகழ்ச்சியாயிருப்பதுபோல" - கர்த்தருடைய நாளில் அவருடைய சமூகத்தில் தங்கள் ஊழியத்தின் மூலமாக இவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள் என்று பவுலும் அவருடைய உடன் ஊழியர்களும் சமர்ப்பிக்கும் போது அவர்களுக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும். இரட்சிக்கப்பட்ட கொரிந்தியரும் இப்போது சந்தோஷமாக இருக்கிறார்கள் இந்தச் சந்தோஷமும் அவர்களுக்குப் பவுல் மூலமாகவே வந்திருக்கிறது. தங்களைத் தேவனுடைய ஊழியக்காரர் என்று கொரிந்தியர் அங்கீகரித்திருக்கிறார்கள் (1தெச 2:18-20, 1தெச 1:1)

"ஒருவாறு ஒத்துக்கொண்டிருக்கிறீர்களே" - கொரிந்தியருக்கு எழுதின முதலாவது நிருபத்திலுள்ள சத்தியங்களை அவர்கள் அங்கீகரித்திருக்கிறார்கள். பவுல் அவர்களை அங்கீகரித்திருப்பதுபோல அவர்களும் பவுலை அங்கீகரித்திருக்கிறார்கள் (2கொரி 1:13-14)

4. பவுலின் பிரயாண திட்டம் - (1கொரி 16:5, 2கொரி 12:14-16, 13:1)

2கொரி 1:15 நான் இப்படிப்பட்ட நம்பிக்கையைக் கொண்டிருக்கிறபடியினால் உங்களுக்கு இரண்டாந்தரமும் பிரயோஜனமுண்டாகும்படி முதலாவது உங்களிடத்தில் வரவும்,

2கொரி 1:16 பின்பு உங்கள் ஊர்வழியாய் மக்கெதோனியா நாட்டுக்குப் போகவும், மக்கெதோனியாவை விட்டு மறுபடியும் உங்களிடத்திற்கு வரவும், உங்களால் யூதேயா தேசத்துக்கு வழிவிட்டனுப்பப்படவும் யோசனையாயிருந்தேன்

பிரயோஜனம் (benefit) χάρις charis 5485 பேர்ச்சொல் - கிருபை, ஆதாயம், ஈவு, நன்மை, நன்றி, ஆசீர்வாதம் (grace, favor) பவுலின் இரண்டாவது மிஷினெரி பிரயாணத்தின்போது அவர்களுக்கு வரும் பிரயோஜனத்தை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. கொரிந்தியர்கள் ஏற்கெனவே பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறார்கள் (1கொரி 1:2,30, 1கொரி 6:11). அவர்களை மறுபடியும் பரிசுத்தப்படுத்துவதற்கு கிருபையின் இரண்டாம் கிரியையை இந்த வசனம் கூறுவதாக ஒருசிலர் வியாக்கியானம் பண்ணுகிறார்கள் இது தவறான வியாக்கியானம் ஆகும்.

"மக்கெதோனியாவை விட்டு மறுபடியும் உங்களிடத்திற்கு வரவும்" - பவுல் இந்த நிருபத்தை எழுதி முடிப்பதற்கு முன்பாக தனது இரண்டாம் மிஷினெரி பிரயாணத்தை முடித்திருக்க வேண்டுமென்று தெரிய வருகிறது. (2கொரி 12:14, 2கொரி 13:1). மூன்றாம் முறை அவர்களிடத்திற்கு வருவதைப் பவுல் இங்கு குறிப்பிடுகிறார்

5. பவுல் தனது கிரியைகளை உறுதிப்படுத்துகிறார்

2கொரி 1:17 இப்படி நான் யோசித்தது வீணாக யோசித்தேனோ? அல்லது ஆம் ஆம் என்கிறதும், அல்ல, அல்ல என்கிறதும் என்னிடத்திலே இருக்கத்தக்கதாக, நான் யோசிக்கிறவைகளை மாம்சத்தின்படி யோசிக்கிறேனோ?

2கொரி 1:18 நாங்கள் உங்களுக்குச் சொன்ன வார்த்தை ஆம் அல்ல என்று இருக்கவில்லை, அதற்கு உண்மையுள்ள தேவனே சாட்சி,

2கொரி 1:19 என்னாலும் சில்வானுவினாலும் தீமோத்தேயுவினாலும் உங்களுக்குள்ளே பிரசங்கிக்கப்பட்ட தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவும் ஆம் என்றும் அல்ல என்றும் இராமல், ஆம் என்றே இருக்கிறார்

2கொரி 1:20 எங்களால் தேவனுக்கு மகிமையுண்டாகும்படி தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே.

II கொரிந்தியர் – தொகுப்புரை

1 அதிகாரம்

2கொரி 1:21 உங்களோடேகூட எங்களையும் கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தி, நம்மை அபிஷேகம் பண்ணினவர் தேவனே.

2கொரி 1:22 அவர் நம்மை முத்திரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார்.

2கொரி 1:23 மேலும் நான் உங்களைத் தப்பவிடும்படிக்கே இதுவரைக்கும் கொரிந்து பட்டணத்திற்கு வராதிருக்கிறேனென்று என் ஆத்துமாவின்பேரில் தேவனையே சாட்சியாகக் கோருகிறேன்.

2கொரி 1:24 உங்கள் விசுவாசத்திற்கு நாங்கள் அதிகாரிகளாயிராமல், உங்கள் சந்தோஷத்திற்குச் சகாயராயிருக்கிறோம்; விசுவாசத்தினாலே நிலைநிற்கிறீர்களே.

வீண் (lightness) - ἐλαφρία - elaphria - 1644

பெலமுள்ள பொய்சொல் (fickleness)

"நான் யோசிக்கிறவைகளை மாம்சத்தின்படி யோசிக்கிறேனோ?" மனுஷர் தங்களுடைய யோசனைகளை நாளுக்குநாள் நேரத்திற்கு நேரம் இடத்திற்கு இடம் மாற்றிக் கொள்வார்கள். ஒருநாள் ஒரு காரியத்திற்கு ஆம் என்பார்கள். மறுநாள் அதே காரியத்திற்கு இல்லை என்று கூறிவிடுவார்கள். பவுல் கூறும் காரியங்கள் எல்லாமே உண்மையானது. அவர் நேரத்திற்கு நேரம் இடத்திற்கு இடம் தன்னுடைய கருத்தை மாற்றிப் பேசுகிறவர் அல்ல. இதற்கு உண்மையுள்ள தேவனே சாட்சி என்று பவுல் கூறுகிறார் (2கொரி 1:20-22)

பிரசங்கிக்கப்பட்டது (preached) κηρύσσω keeryssoo 2784

வினைச்சொல் - பிரசங்கி, பிரசங்கம் பண்ணு, பிரசித்தம் பண்ணு, கூறு - "proclaim" (லூக்கா 12:3 வெளி 5:2); "publish" (மாற்கு 1:45; மாற்கு 5:20 மாற்கு 7:36; மாற்கு 13:10 லூக்கா 8:39); "preach" (2கொரி 1:19; 2கொரி 4:5 2கொரி 11:4)

"எங்களால் தேவனுக்கு மகிமையுண்டாகும்படி" - தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அவருடைய ஊழியக்காரர்கள் மூலமாக உறுதிபண்ணப்பட்டிருக்கிறது. தேவனுக்கு மகிமை உண்டாகும்படி அவை நிறைவேறுகிறது. தம்முடைய ஊழியக்காரர்கள் பிரசங்கம் பண்ணும் சுவிசேஷச் செய்தியைத் தேவன் அற்புதங்களாலும், அடையாளங்களாலும் உறுதிபண்ணுகிறார்.

"ஆம்" (yea) -தேவனுடைய வாக்குத்தத்தங்கள் எல்லாமே மெய்யானவை. அவை எப்போதுமே ஆம் என்றே இருக்கிறது. தேவனுடைய வாக்குத்தத்தங்களை விசுவாசிக்கிறவர்களுக்கு அவை எப்போதும் ஆம் என்றேயிருக்கும். இல்லை என்று இருக்காது.

"ஆமென்" (Amen) - இந்த வார்த்தைக்கு உண்மை அல்லது சத்தியம் என்று பொருள் (யோவான் 1:51)

தேவனுடைய ஆசீர்வாதங்கள் (2கொரி 1:21-22)

1. விசுவாசத்திலுள்ள ஜனங்களை ஸ்திரப்படுத்துகிறார் (ரோமர் 15:8)
2. வல்லமையினால் அபிஷேகம் பண்ணுகிறார் (லூக்கா 4:18; அப் 10:38; எபி 1:9; 1யோவான் 2:27)
3. விசுவாசிகளை முத்திரிக்கிறார். தமக்குரியவர்களென்று விசுவாசிகளை முத்திரைபிடுகிறார் (ரோமர் 4:11; 2தீமோ 2:19; எபே 1:13; எபே 4:30)
4. விசுவாசிகளுடைய இருதயங்களில் ஆவி என்னும் அச்சாரத்தைக் கொடுத்திருக்கிறார் - புத்திர சுவிகாரத்தின் ஆவி (ரோமர் 8:14-16; கலா 4:4-7)

II கொரிந்தியர் – தொகுப்புரை

1 அதிகாரம்

"மேலும் நான் உங்களைத் தப்பவிடும்படிக்கே இதுவரைக்கும் கொரிந்துபட்டணத்திற்கு வராதிருக்கிறேன்" - 2கொரி 1:6 ஆவது வசனத்திற்கு பவுல் மறுபடியுமாக வருகிறார் தான் கூறுவதற்கு உண்மையுள்ள தேவனே சாட்சி என்று பவுல் தனது நிருபத்தில் உறுதிபண்ணுகிறார் கொரிந்தியரிடத்திற்குப் பவுல் சென்றிருப்பார் என்றால் அவர்களை அவர்களுடைய தவறுகளின் நிமித்தம் நிச்சயமாக நியாயம் தீர்த்திருப்பார்

ஆகையினால் பவுல் கொரிந்து பட்டணத்திற்குப் போகாததினால் பவுல் மூலமாக வரும் குற்றச்சாட்டுகளிலிருந்து அவர்கள் தப்பித்துக் கொண்டார்கள் (2கொரி 1:23 24

"உங்கள் விசுவாசத்திற்கு நாங்கள் அதிகாரிகளாயிராமல் உங்கள் சந்தோஷத்திற்குச் சகாயராயிருக்கிறோம்" கொரிந்து சபைக்கு அவர்களை ஆளுகை செய்வதற்காக பவுல் போகவில்லை அவர்களுக்கு உதவி புரிவதற்காகவே பவுல் அங்கு செல்ல விரும்புகிறார்

2 அதிகாரம்

2கொரி 2:1 நான் துக்கத்துடனே உங்களிடத்தில் மறுபடியும் வராதபடிக்கு எனக்குள்ளே தீர்மானித்துக் கொண்டேன்.

2கொரி 2:2 நான் உங்களைத் துக்கப்படுத்தினால், என்னாலே துக்கமடைந்தவனேயல்லாமல், எவன் என்னைச் சந்தோஷப்படுத்துவான்?

"நான் துக்கத்துடனே உங்களிடத்தில் மறுபடியும் வராதபடிக்கு எனக்குள்ளே தீர்மானித்துக்கொண்டேன்" - பவுல் கொரிந்தியருக்கு எழுதின முதலாவது நிருபத்தில் அவர்களுடைய துர்க்குணங்களையெல்லாம் அகற்ற வேண்டுமென்று எழுதியிருந்தார். அவர்கள் தங்களுடைய தீய பழக்கவழக்கங்களிலிருந்து விடுதலை பெற்று வந்த பின்பே அவர்களிடத்தில் போகவேண்டுமென்று பவுல் விரும்புகிறார். அவர்கள் இன்னும் துன்மார்க்கத்தில் ஜீவித்தால் பவுல் அவர்களிடத்தில் துக்கத்தோடுதான் போவார். அவர்கள் மனந்திரும்பி தங்களுடைய பாவங்களைவிட்டு விலகியிருக்கும்போது பவுல் அவர்கள் மத்தியில் சந்தோஷத்தோடு போக விரும்புகிறார் (2கொரி 2:1-2).

6. முதலாம் நிருபத்திலிருந்து குறிப்பு (1கொரி 5; 2கொரி 7:8-16)

2கொரி 2:3 என்னுடைய சந்தோஷம் உங்களெல்லாருக்கும் சந்தோஷமாயிருக்குமென்று, நான் உங்களெல்லாரையும் பற்றி நம்பிக்கையுள்ளவனாயிருந்து, நான் வரும்போது, என்னைச் சந்தோஷப்படுத்த வேண்டியவர்களால் நான் துக்கமடையாதபடிக்கு, அதை உங்களுக்கு எழுதினேன்.

2கொரி 2:4 அன்றியும், நீங்கள் துக்கப்படும்படிக்கு எழுதாமல், உங்கள்மேல் நான் வைத்த அன்பின் மிகுதியை நீங்கள் அறியும்படிக்கே, மிகுந்த வியாகுலமும் மன இடுக்கமும் அடைந்தவனாய், அதிகக் கண்ணீரோடே உங்களுக்கு எழுதினேன்.

2கொரி 2:5 துக்கமுண்டாக்கினவன் எனக்கு மாத்திரமல்ல, ஒருவாறு உங்களெல்லாருக்கும் துக்கமுண்டாக்கினான்; நான் உங்கள் எல்லார்மேலும் அதிக பாரஞ்சுமத்தாதபடிக்கு இதைச் சொல்லுகிறேன்.

2கொரி 2:6 அப்படிப்பட்டவனுக்கு அநேகரால் உண்டான இந்த தண்டனையே போதும்.

2கொரி 2:7 ஆதலால் அவன் அதிக துக்கத்தில் அமிழ்ந்துபோகாதபடிக்கு நீங்கள் அவனுக்கு மன்னித்து ஆறுதல்செய்யவேண்டும்.

2கொரி 2:8 அந்தப்படி உங்கள் அன்பை அவனுக்குக் காண்பிக்கும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

2கொரி 2:9 நீங்கள் எல்லாவற்றிலேயும் கீழ்ப்படிந்திருக்கிறீர்களோ என்று உங்களைச் சோதித்தறியும்படி இப்படி எழுதினேன்.

2கொரி 2:10 எவனுக்கு நீங்கள் மன்னிக்கிறீர்களோ அவனுக்கு நானும் மன்னிக்கிறேன்; மேலும் எதை நான் மன்னித்திருக்கிறேனோ அதை உங்கள்நிமித்தம் கிறிஸ்துவினுடைய சந்நிதானத்திலே மன்னித்திருக்கிறேன்.

2கொரி 2:11 சாத்தானாலே நாம் மோசம்போகாதபடிக்கு அப்படிச் செய்தேன்; அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே.

"நான் வரும்போது என்னைச் சந்தோஷப்படுத்த வேண்டியவர்களால் நான் துக்கமடையாதபடிக்கு அதை உங்களுக்கு எழுதினேன்" - கொரிந்தியர் மத்தியில் துன்மார்க்கமான காரியங்கள் பல காணப்பட்டன. அவைகளிலிருந்து அவர்கள் குணப்பட வேண்டுமென்று பவுல் தனது முதலாவது நிருபத்தில் எழுதியிருந்தார். தன்னுடைய நிருபத்தைப் படித்து அவர்கள் மனந்திரும்பி, இரட்சிக்கப்பட்டால் பவுலுக்குச் சந்தோஷம் உண்டாகும். கொரிந்தியரிடத்தில் செல்லும்போது அவர்கள் தங்களுடைய இரட்சிக்கப்பட்ட ஜீவியத்தினால் தனக்குச் சந்தோஷம் உண்டாக்க வேண்டுமென்று பவுல் விரும்புகிறார்.

2 அதிகாரம்

"மிகுந்த வியாகுலமும் மன இடுக்கமும் அடைந்தவனாய் அநேகக் கண்ணீரோடே உங்களுக்கு எழுதினேன் - தன்னுடைய ஊழியத்தில் கொரிந்தியருக்கு அவர்களுடைய பாவத்தின் நிமித்தம் நியாயத்தீர்ப்பு வழங்குவது தனக்கு மிகவும் கடினமாக பகுதியாக இருக்கிறது என்று பவுல் வர்ணிக்கிறார் ஆகையினால்தான் தான் கொரிந்துவிற்குச் செல்வதற்கு முன்பாக பவுல் அவர்களுக்கு நிருபத்தை எழுதினார் அவர்களுக்குத் துக்கம் உண்டாக்க வேண்டுமென்பது பவுலின் நோக்கமல்ல அவர்களைக் குறித்து தான் கரிசனையோடு இருப்பதையும். அவர்கள்மீது தான் அன்பாக இருப்பதையும் தெரிவிப்பதே பவுலின் நோக்கமாகும்.

"துக்கமுண்டாக்கினவன் எனக்கு மாத்திரமல்ல ஒருவாறு உங்களெல்லாருக்கும் துக்கமுண்டாக்கினான்" - கொரிந்து சபையில பவுலின் நிருபத்தை வாசித்து இரட்சிக்கப் படாதவர்கள் பவுலைத் துக்கப்படுத்துகிறார்கள் அவர்கள் பவுலைத் துக்கப்படுத்துவதோடு தங்களையும் துக்கப்படுத்திக் கொள்கிறார்கள் கொரிந்து சபையில ஒருசிலர் இரட்சிக்கப் பட்டவர்களாகவும். வேறுசிலர் இரட்சிக்கப் படாதவர்களாகவும் இருக்கிறார்கள் இரட்சிக்கப்படாதவர்கள் நிமித்தமாக கொரிந்து சபையில எல்லோருக்கும் துக்கம் உண்டாகிறது.

"அப்படிப்பட்டவனுக்கு அநேகரால உண்டான இந்த தண்டனையே போதும்" - கொரி 5 ஆவது அதிகாரத்தில பவுல கூறியிருக்கும் வேசித்தனம். விபசாரம் ஆகிய பாவங்களைச் செய்தவர்களை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. விபச்சாரக்காரரோடு கலந்திருக்கக் கூடாது என்று பவுல தனது நிருபத்தில எழுதியிருந்தார் அவர்கள் சபையின ஐக்கியத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருந்தார்கள் விபச்சாரக்காரர் மனம் திரும்பியபோதும். தேவன் அவர்களை மன்னித்த போதும் சபையார் அவர்களை மன்னிப்பதற்கு ஆயத்தமாக இல்லை பவுல தன்னுடைய இரண்டாம் நிருபத்தில மனந்திரும்பிய விபச்சாரக்காரரை மன்னித்து விடுமாறு எழுதுகிறார்

விபச்சாரக்காரன் அதிக துக்கத்தில் அமிழ்ந்துபோகாதபடிக்கு, நீங்கள் அவனுக்கு மன்னித்து ஆறுதல்செய்யவேண்டும் என்று பவுல கொரிந்தியருக்குப் புத்தி கூறுகிறார் (2கொரி 2:6-8)

தண்டனை (punishment) - ἐπιτιμία - epitimia - 2009

> பொதுவான பெயர்ச்சொல் - தண்டனை (censure) - எல்லாச் சிலாக்கியங்களையும் உரிமைகளையும் இழந்துபோதல் என்பது இந்த வார்த்தையின் பொருளாகும் விபச்சாரக்காரர் தங்கள் சபையிலிருந்த சிலாக்கியங்கள் உரிமைகள் ஆகிய அனைத்தையும் இழந்துவிட்டார்கள் (1கொரி 5)

"அநேகர்" (many, the majority)

"அதிக துக்கத்தில அமிழ்ந்துபோகாதபடிக்கு நீங்கள் அவனுக்கு மன்னித்து ஆறுதல் செய்யவேண்டும்" - விபச்சாரக்காரன் ஏற்கெனவே அதிகத் தண்டனையை அனுபவித்திருக்கிறான் அவன் மனந்திரும்ப வேண்டும் என்பதுதான் அவனைத் தண்டிப்பதன் நோக்கம் இப்போது விபசாரக்காரன் மனந்திரும்பி இருப்பதினால் தண்டனையின நோக்கம் நிறைவேறியிருக்கிறது. ஆகையினால சபையானது அவனை மன்னித்து தன்னோடு மறுபடியும் சேர்த்துக் கொள்ள வேண்டும். சபை அவனை மன்னிக்கவில்லையென்றால் அவன் தன்னுடைய ஜீவனை அழித்துக் கொள்ளும் ஆபத்திற்கு வந்துவிடுகிறான்

"ஆதலால், உங்கள் அன்பை அவனுக்குக் காண்பிக்கும்படி உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்" - விபச்சாரக்காரன் கலிசேஷத்திற்கு அவமானத்தை உண்டு பண்ணினான் சபைக்குத் தூஷணத்தைக் கொண்டு வந்தான் ஆனாலும் இப்போது அவன் மனந்திருந்தி, இரட்சிக்கப்பட்டிருப்பதினால அவன் செய்த தவறுகள் எல்லாவற்றையும் சபையார் மன்னித்து அவனிடத்தில அன்புகூர்ந்து, அவனை மறுபடியும் சபையில சேர்த்துக் கொள்ள வேண்டும்.

2 அதிகாரம்

"எவனுக்கு நீங்கள் மன்னிக்கிறீர்களோ அவனுக்கு நானும் மன்னிக்கிறேன்" - இயேசு கிறிஸ்து மனந்திரும்பிய பாவியை மன்னிக்கும் போது நாம அவனை மன்னியாதிருப்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல மன்னிக்கும் சுபாவம் நம்மிடத்தில் வரவேண்டும். (எபே 4:32 மத் 18:21-35) மனந்திரும்பி இரட்சிக்கப் பட்டவர்களை நாம் மன்னித்து நம்மிடத்தில ஏற்றுக் கொள்ளவில்லையென்றால சாத்தான் அவர்களுடைய உள்ளத்தில கிரியை செய்து அவர்களை மோசம்போக்கி விடுவான் (2கொரி 2:11; யாக் 4:7; 1பேதுரு 5:8-9)

தந்திரங்கள் (devices) - νόημα - noeema - 3540

பால வேறுபாடற்ற பெயர்ச்சொல - தந்திரம், மனது, எண்ணம் சிந்தைகள(thought) (2கொரி 10:5) (devices) (2கொரி 2:11), (minds) (2கொரி 3:14; 2கொரி 4:4 2கொரி 11:3; பிலி 4:7) - சாத்தான தந்திரம் உடையவன ஒவ்வொரு வாய்ப்பையும் பயனபடுத்தி அவன எலலோரையும் வஞ்சிக்கக் கூடியவன (1கொரி 10:13; 1பேதுரு 5:8-9 எபே 6:10-18) சாத்தானுடைய தந்திரங்களைச் சபையானது தெரிந்து வைத்திருந்து அவனுடைய கிரியைகளுக்கு இடம் கொடுக்கக கூடாது.

7. தீத்துவைக் குறித்து கலக்கம் - (7:5-6

2கொரி 2:12 மேலும் நான கிறிஸ்துவின சுவிசேஷத்தைப பிரசங்கிக்கும்படி துரோவா பட்டணத்தில் வந்தபோது, கர்த்தராலே எனக்குக் கதவு திறக்கப்பட்டிருக்கையில,

2கொரி 2:13 நான் என் சகோதரனாகிய தீத்துவைக் காணாததினாலே என் ஆவிக்கு அமைதலில்லாதிருந்தது. ஆதலால் நான் அவர்களிடத்தில் அனுப்புவித்துக் கொண்டு, மக்கெதோனியா நாட்டுக்குப் புறப்பட்டுப் போனேன்

"நான் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப பிரசங்கிக்கும்படி துரோவாபட்டணத்தில் வந்தபோது" - பவுல தன்னுடைய இரண்டாம் மிஷினெரி பிரயாணத்தினபோது துரோவா பட்டணத்திற்கு வந்தார் (அப் 16:6-8 ஒருவேளை பவுலின் மூன்றாவது மிஷினெரி பிரயாணத்தையும் இந்த வாக்கியம் குறிக்கலாம். (அப் 18:23) இவற்றில் எந்த மிஷினெரி பிரயாணத்தை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது என்பது தெளிவாகத் தெரியவில்லை. 2கொரி 8:6-8

III. புதிய உடன்படிக்கையின் ஊழியம் - (2கொரி 2:14-7:16

1. கிறிஸ்துவிற்குள் எப்பொழுதும் வெற்றி (2:14) - (கொலோ 2:10 1யோவான் 5:4-5; ரோமர் 8:28-39

2கொரி 2:14 கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப் பண்ணி, எலலா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.

"கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி" கிறிஸ்துவிற்குள் வெற்றி என்பது சாத்தானின் சகல அந்தகாரச் சக்திகளின்மீதும் நமக்குள்ள ஆளுகையைக் குறிக்கும். (கொலோ 2:14-17, எபே 2:14-15) ரோமப்பேரரசில யுத்தத்தில் வெற்றி பெற்ற படைத்தளபதிகளைக் கௌரவிப்பதற்காக நகரவீதிகளில அவர்களை ஊர்வலமாக அழைத்து வருவார்கள அதுபோன்ற வெற்றியைப பவுல இங்கு குறிப்பிடுகிறார்

வாசனை (savour) ὀσμή - osmee 3744

2 அதிகாரம்

பெண்பால் பெயர்ச்சொல் – பரிமளம் வாசனை (aroma) (2கொரி 2:14,16; யோவான் 12:3; எபே 5:2; பிலி 4:18) கிறிஸ்துவில் தங்களுக்குக் கிடைத்திருக்கும் வெற்றி இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிறது.

2. ஆத்துமாவை இரட்சிக்கும் வழியும் ஆத்துமாவை அழிக்கும் வழியும் - (மாற்கு 16:15-16; ரோமர் 2:7-16; 2தெச 1:8-25)

2கொரி 2:15 இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளேயும் நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம்.

2கொரி 2:16 கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே மரணத்திற்கேதுவான மரண வாசனையாகவும், இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கேதுவான ஜீவ வாசனையாகவும் இருக்கிறோம். இவைகளை நடப்பிக்கிறதற்கு எவன் தகுதியானவன்?

நற்கந்தம் (sweet savour) - εὐωδία - euoodia - 2175

பெண்பால் பெயர்சொல் – நற்கந்தம் சுகந்தவாசனை sweet perfume (2கொரி 2:15, எபே 5:2, பிலி 4:18) – இந்த வார்த்தையும் 2கொரி 2:14 ஆவது வசனத்தில் உள்ள வார்த்தையும் வெவ்வேறானவை. தேவனுடைய ஊழியக்காரர்கள் இயேசு கிறிஸ்துவின் மூலமாக தேவனுக்கு நற்கந்தமாகவும், சுகந்தவாசனையுமாகவும் இருக்கிறார்கள். கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே மரணத்திற்கேதுவான மரண வாசனையாகவும், இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கேதுவான ஜீவவாசனையாகவும் இருக்கிறார்கள்.

3. உண்மையுள்ள நற்புரவான ஊழியம் - (மத் 7:15-20; 22:16; பிலி 1:10-18)

2கொரி 2:17 அநேகரைப்போல, நாங்கள் தேவவசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்ட பிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவசந்நிதியில் பேசுகிறோம்.

கலப்பு (corrupt) - καπηλεύω - kapeeleuoo - 2585

வினைச்சொல் – லாபம் சம்பாதி (adulterate) – புதிய ஏற்பாட்டில் இந்த வசனத்தில் மட்டுமே இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. செப்துவஜிந்தில் ஏசா 1:22 ஆவது வசனத்தில் நாம் இந்த வார்த்தையை வாசிக்கிறோம். தண்ணீரோடு திராட்சை ரசத்தைக் கலப்பதை இந்த வார்த்தை குறிக்கும். கள்ள அப்போஸ்தலர்கள் தேவனுடைய வார்த்தையை தங்களுடைய சொந்த கருத்துக்களோடு கலந்து கொரிந்தியருக்கு உபதேசம் பண்ணுகிறார்கள் (2கொரி [illegible]). நாம் தேவனுடைய ஊழியத்தைச் செய்யுமாறு அழைக்கப்பட்டிருக்கிறவர்கள். தேவவசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்ட பிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவசந்நிதியில் பேச வேண்டும் (2தீமோ 4:1-4).

"துப்புரவு" (sincerity) – தேவனுடைய வார்த்தையைக் கலப்படம் இல்லாமல் துப்புரவாக வைத்திருக்க வேண்டும். மனுஷரிடத்தில் தேவனுடைய வார்த்தையைப் பேசும்போது நம்முடைய சொந்த சிந்தனைகளையும் சொந்த கருத்துக்களையும் கலந்துவிடாமல் வேதவசனத்தில் துப்புரவாகப் பேசவேண்டும்.

II கொரிந்தியர் – தொகுப்புரை

3 அதிகாரம்

4. தேவன் தகுதிப்படுத்தியுள்ள ஊழியம் - யோவான் 14:12 மாற்கு 16:17-20 அப் 1:4-8 10:38 எபி 2:1-4

2கொரி 3:1 எங்களை நாங்களே மறுபடியும் மெச்சிக் கொள்ளத் தொடங்குகிறோமோ? அல்லது சிலருக்கு வேண்டியதாயிருக்கிறது போல உங்களுக்கு உபசார நிருபங்களை அனுப்பவும் உங்களிடத்தில உபசார நிருபங்களைப் பெறறுக்கொளளவும் எங்களுக்கு வேண்டியதோ?

2கொரி 3.2 எங்கள் இருதயங்களில எழுதப்பட்டும். சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எஙகள நிருபம நீஙகளதானே

2கொரி 3:3 ஏனெனில நீங்கள எஙகள ஊழியத்தினால உணடாகிய கிறிஸதுவின நிருபமாயிருக்கிறீர்கள என்று வெளியரஙகமாயிருக்கிறது. அது மையினாலலல. ஜீவனுளள தேவனுடைய ஆவியினாலும், கற்பலகைகளிலலல. இருதயஙகளாகிய சதையான பலகைகளிலேயும் எழுதப்பட்டிருக்கிறது.

2கொரி 3:4 நாஙகள தேவனுக்கு முனபாகக் கிறிஸதுவின மூலமாய இப்படிப்பட்ட நம்பிக்கையைக் கொணடிருக்கிறோம்

2கொரி 3.5 எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பது போல ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எஙகளாலே தகுதியானவாகள அலல. எஙகளுடைய தகுதி தேவனால் உணடாயிருக்கிறது.

"எங்களை நாங்களே மறுபடியும் மெச்சிக்கொள்ளத் தொடஙகுகிறோமோ?" 2கொரி 9 ஆவது அதிகாரத்தில் பவுல் தன்னை மெச்சிக் கொணடார

"சிலருக்கு வேண்டியதாயிருக்கிறது போல, உங்களுக்கு உபசார நிருபங்களை அனுப்பவும்" - பவுல் கொரிந்தியருக்கு உபசார நிருபங்களை அனுப்ப வேண்டியதில்லை. அவர்களிடத்திலிருந்து உபசார நிருபங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டியதும் இல்லை. ஏனெனில் கொரிந்தியர் பவுலின் இருதயத்தில் எழுதப்பட்டும் சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற பவுலின் நிருபமாக இருக்கிறார்கள் 2கொரி 3:2

"ஜீவனுள்ள தேவனுடைய ஆவியினாலும் கற்பலகைகளிலல்ல இருதயங் களாகிய சதையான பலகைகளிலேயும் எழுதப் பட்டிருக்கிறது" - கொரிந்தியர்கள் பவுலின் நிருபங்கள் மட்டுமல்ல. (2கொரி 3:2) அவர்கள் இயேசு கிறிஸ்துவின் நிருபமாகவும் இருக்கிறார்கள பரிசுத்த ஆவியானவர் மூலமாக பவுல அவர்களுக்கு ஊழியம் செய்திருக்கிறார்

"நாங்கள் தேவனுக்கு முன்பாகக் கிறிஸதுவின மூலமாய இப்படிப்பட்ட நமபிக்கையைக் கொணடிருக்கிறோம" - கொரிந்தியாகள தேவனுடைய கிரியையாக இருக்கிறார்கள தேவனுடைய கிருபையினாலேயே பவுல அவர்களை இரட்சிப்பிறகுள வழிநடத்தினார (2கொரி 3:4-5). பவுல கொரிந்தியரிடத்தில இயேசு கிறிஸதுவின மூலமாக நமபிக்கை வைததிருக்கிறார்

5. புதிய ஏற்பாட்டு ஊழியம் - பழைய ஏற்பாட்டு ஊழியமல்ல - (கலா 4:21

2கொரி 3:6 புது உடன்படிக்கையின ஊழியக்காராயிருக்கும் படி, அவரே எங்களைத் தகுதியுளளவாகளாக்கினா அந்த உடனபடிக்கை எழுத்திற்குரிய தாயிராமல ஆவிக்குரிய தாயிருக்கிறது எழுத்து கொலலுகிறது ஆவியோ உயிரபிக்கிறது.

2கொரி 3:7 எழுத்துக்களினால் எழுதப்பட்டுக் கற்களில பதிந்திருந்த மரணத்துக்கேதுவான ஊழியத்தைச் செய்த மோசேயினுடைய முகத்திலே மகிமைப்பிரகாசம் உணடானபடியால, இஸ்ரவேல புத்திரர் அவன் முகத்தை நோக்கிப் பாாக்கக்கூடாதிருந்தாாகளே

II கொரிந்தியர் – தொகுப்புரை

3 அதிகாரம்

2கொரி 3:8 ஒழிந்து போகிற மகிமையையுடைய அந்த ஊழியம் அப்படிப்பட்ட மகிமையுள்ளதாயிருந்தால், ஆவிக்குரிய ஊழியம் எவ்வளவு அதிக மகிமையுள்ளதாயிருக்கும்?

பழைய உடன்படிக்கைக்கும், புதிய உடன்படிக்கைக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள்

1 பழைய ஏற்பாடு (Old Testament) (2கொரி 3:14) - புதிய ஏற்பாடு (New Testament) (2கொரி 3:6)

2 முதலாவது உடன்படிக்கை (First covenant) (எபி 8:7; எபி 9:1) - இரண்டாவது உடன்படிக்கை (Second covenant) (எபி 8:7 எபி 10:1-9)

3 மோசேயின் மூலமாக வந்தது (Came by Moses) (யோவான் 1:17) இயேசு கிறிஸ்துவின் மூலமாக வந்தது (Came by Christ) எபி 8:6; எபி 9:15

4 மோசேயின் பிரமாணம் (Law of Moses) (அப் 13:38-39) கிறிஸ்துவின் பிரமாணம் (Law of Christ) (கலா 6:2)

5 பாவத்தின் பிரமாணம் (Law of sin) (ரோமர் 7:23, ரோமர் 8:2) - நீதியின் பிரமாணம் (Law of righteousness) (ரோமர் 9:31)

6 மாம்சத்தின் பிரமாணம் (Law of the flesh) (ரோமர் 7:5-6) - ஆவியின் பிரமாணம் (Law of the Spirit) (ரோமர் 8:2)

7 விசுவாசத்தின் பிரமாணமல்ல (Not of faith) (கலா 3:12) - விசுவாசத்தின் பிரமாணம் (Law of faith) (ரோமர் 3:27)

8 அடிமைத்தனத்தின் நுகம் (Yoke of bondage) (கலா 5:1) - விடுதலையின் பிரமாணம் (Law of liberty) (யாக் 1:25)

9 கிறிஸ்துவால் முடிவு பெற்றது (Ended by Christ) (ரோமர் 10:4) - கிறிஸ்துவால் ஆரம்பிக்கப்பட்டது (Started by Christ) (எபி 8:6 எபி 10:9)

10 மரணத்தைத் தருகிறது (Brought death) (2கொரி 3:7) - ஜீவனைத் தருகிறது (Brought life) (ரோமர் 8:2; கலா 3)

11 குற்ற உணர்வு உண்டாக்குகிறது (Makes guilty) (2கொரி 3:9) - விடுவிக்கிறது (Makes free) (கலா 5:1; யோவான் 8)

12 நிழல் (A shadow) (கொலோ 2:14-17) - பிரத்தியட்சம் (The reality) (எபி 10:1-18)

13 நிறைவேறிற்று (Fulfilled) (மத் 5:17-18) - நடைமுறையில் உள்ளது (Now in force) (எபி 8:6, எபி 10:9)

14 நீதியை எதிர்பார்க்கிறது (Demands righteousness) (லூக்கா 10:28) - நீதியைத் தருகிறது (Gives righteousness) (யோவான் 1:17, யோவான் 3:16)

15 பூரண குறைச்சலாக்குகிறது (Makes imperfect) (எபி 7:19) - பரிபூரணமாக்குகிறது (Makes perfect) (எபி 7:19)

II கொரிந்தியர் – தொகுப்புரை

3 அதிகாரம்

16. மகிமையுள்ளது (Glorious) (2கொரி 3:7) - அதிக மகிமையுள்ளது (More glorious) (2கொரி 3:8-10)

17. இரட்சிக்க வல்லமையற்றது (Powerless to save) (எபி 9:9; எபி 10:4) - முற்றும் முடிய இரட்சிக்கிறது (Saves to uttermost) (எபி 7:25)

18. பல பலிகள் (Many sacrifices) (எபி 9:12-13) - ஒரே பலி (One sacrifice) (எபி 10:12)

19. தற்காலிக ஆசாரியர் (Temporary priest) (எபி 7:23) - நித்திய ஆசாரியர் (Eternal priest) (எபி 7:17)

20. பாவங்களை நினைவுகூருகிறது (Remembers sins) (எபி 10:3) - பாவங்களை மன்னிக்கிறது (Forgets sins) (எபி 8:12, எபி 10:17)

21. வருஷாந்திர பாவநிவாரணம் (Yearly atonement) (எபி 10:3) - நித்திய பாவநிவாரணம் (Eternal atonement) (எபி 10:14)

22. பாவமுள்ள ஊழியம் (Sinful ministry) (எபி 5:1-4) பாவமில்லாத ஊழியம் (Sinless ministry) (எபி 7:26)

23. ஆரோனின் ஆசாரியத்துவ முறைமை (Aaronic priesthood) (எபி 7:11) - மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவ முறைமை (Melchisedek) (எபி 5:5-10; எபி 7:21)

24. லேவி கோத்திரத்திற்குரியது (Of Levi) (எபி 7:11) - யூதா கோத்திரத்திற்குரியது (Of Judah) (எபி 7:14)

25. மிருகங்களின் பலிகள் (Animal sacrifices) (எபி 9:12) - இயேசு கிறிஸ்துவின் (மனுஷ) பலி (Human sacrifice) (எபி 9:14-28)

26. பூமிக்குரிய கூடாரம் (Earthly tabernacle) (எபி 9:2) - பரலோகத்திற்குரிய கூடாரம் (Heavenly tabernacle) (எபி 8:2)

27. பாவமுள்ள மத்தியஸ்தர் (Sinful mediator) (கலா 3:19) - பாவமில்லாத மத்தியஸ்தர் (Sinless mediator) (1தீமோ 2:5)

28. சுதந்திரமில்லை (No inheritance) (ரோமர் 4:13) - நித்திய சுதந்தரம் (Eternal inheritance) (எபி 9:15)

29. மிருகத்தின் இரத்தத்தினால் நிவாரணம் உண்டாயிற்று (Ratified by animal blood) (எபி 9:16-22) - கிறிஸ்துவின் இரத்தத்தினால் நிவாரணம் உண்டாயிற்று (Ratified by the blood of Christ) (மத் 26:28)

30. கிரியைகளின் பிரமாணம் (Law of works) (ரோமர் 3:26-31) - கிருபையின் பிரமாணம் (Law of grace) (யோவான் 1:17)

31. கோபாக்கினையை உண்டாக்குகிறது (Works wrath) (ரோமர் 4:15) - கோபாக்கினையிலிருந்து இரட்சிக்கிறது (Saves from wrath) (ரோமர் 5:9)

32. இரட்சிக்கக்கூடாதது (Could not redeem) (எபி 10:4) - இரட்சிக்கிறது (Redeems) (கலா 3:13, எபி 9:12-15)

33. திருப்திப்படுத்தக்கூடாதது (Could not satisfy) (ஏசா 1:13-14) - தேவனைத் திருப்திப்படுத்துகிறது. (Does satisfy God) (எபி 10:15-18)

II கொரிந்தியர் – தொகுப்புரை

3 அதிகாரம்

34. அற்புதம் செய்யும் வல்லமை இல்லை (No miracle power) (எபி 7:18) - அற்புதங்கள் செய்கிறது (Miracles) (கலா 3:1-5; யோவான் 14:12)

35. அழிவு முன்னறிவிக்கப்பட்டது (Abolishment predicted) (ஓசி 2:11) - நிலைநிறுத்துவது முன்னறிவிக்கப்பட்டது (Establishment predicted) (எபி 8:7)

36. விருத்தசேதனம் உண்டு (Circumcision) (யாத் 12:48) - விருத்தசேதனம் இல்லை. (No circumcision) (ரோமர் 4:9-25)

37. மாற்றம் அடைந்தது (Made to change) (எபி 9; கலா 3) - நித்தியனாக்கப்பட்டது (Made eternal) (எபி 13:20)

38. தவறானது (Faulty) (எபி 8:7) பரிபூரணமானது (Perfect) (யாக் 1:25)

39. பலவீனமானது (Weak) (எபி 7:18) - பலமுள்ளது (Strong) (எபி 7:25)

40. பிரயோஜனமற்றது (Unprofitable) (எபி 7:18) - பிரயோஜனம் உள்ளது (Profitable) (எபி 7:19,25)

41. இயல்பான நடத்தை (Natural program) (எபி 9:10-14) - ஆவிக்குரிய நடத்தை (Spiritual program) (2கொரி 3:6,13)

42. அன்றாட செயல் (Daily program) (எபி 7:27) - முடிவு பெற்ற செயல் (Finished program) (எபி 10:10-18)

43. பலவீனமுள்ள ஆசாரியர்கள் (Weak priests) (எபி 5:2; எபி 7:28) - பரிபூரணமான ஆசாரியர் (Perfect priest) (எபி 7:26)

44. நியாயப் பிரமாணத்தினால் ஆசாரியர்கள் (Priests by law) (எபி 7:28) - ஆணையிடுவதினால் ஆசாரியர் (Priest by an oath) (எபி 7:21,28)

45. இரட்சிப்பு இல்லை (No salvation) (எபி 10:2-4) - நித்திய இரட்சிப்பு உண்டு (Eternal salvation) (எபி 5:9; எபி 10:10)

46. மகிமை உடையது (Self-honored) (எபி 5:4) - தேவனால் மகிமைப் படுத்தப்படும் ஆசாரியர் (God-honored priest) (எபி 5:5)

47. பரிபூரணமானது ஒன்றுமில்லை (Nothing perfect) (எபி 7:19) - பரிபூரணப் படுத்துகிறது (Makes perfect) (எபி 7:19, எபி 10:14)

48. மத்தியஸ்தர் யாருமில்லை (No intercessors) (ஏசா 59:16) - மத்தியஸ்தர் உண்டு (Two intercessors) (ரோமர் 8:26,34, எபி 7:25)

49. அதிகக் கிரயம் செலுத்த வேண்டும் (Costly program) (எபி 5:1, எபி 9:9) - எல்லோருக்கும் இலவசமானது (Free for all) (எபே 2:8; வெளி 22:17)

50. பூமிக்குரிய பிரதிநிதிகள் (Earthly agents) (எபி 5:1-4) - பரலோகத்துப் பிரதிநிதி (Heavenly agent) (எபி 9:24; எபி 10:12)

51. எப்போதும் தோல்வி (Monotonous failure) (எபி 10:11) - மகிமையுள்ள வெற்றி (Glorious success) (எபி 10:10-18)

II கொரிந்தியர் – தொகுப்புரை

3 அதிகாரம்

52 தேவனிடத்தில் கிட்டிச் சேரமுடியாது (No personal access to God) (எபி 9:7) - தேவனிடத்தில் கிட்டிச் சேர முடியும் (Personal access to God) (எபி 4:14-16; எபி 10:19)

53 பலபலிகள் (Many offerings) (எபி 9:12-13) - ஒரே பலி (One offering) (எபி 10:10-14)

54 நல்ல வாக்குத்தத்தங்கள் (Good promises) (உபா 28:1-14) - விசேஷித்த வாக்குத்தத்தங்கள் (Better promises) (எபி 8:6)

55 நல்ல உடன்படிக்கை (A good covenant) (ரோமர் 7:12) - விசேஷித்த உடன்படிக்கை (A better covenant) (எபி 7:22 எபி 8:6

56 பல ஆசாரியர்கள் (Many priests) (எபி 7:23) - ஒரே ஆசாரியர் (One priest) (எபி 7:24-28)

57 பல பாடுகள் (Many sufferings) (எபி 9:12-13) - ஒரே பாடு (One suffering) (எபி 9:26; எபி 10:14)

58 தற்காலத்து காரியங்கள் (Present things) (எபி 9:9) - வரப்போகிற காரியங்கள் (Things to come) (எபி 10:1

59 ஆசரிப்புக் கூடாரத்திற்கு அடையாளம் (Typical tabernacle) (எபி 9) - மெய்யான ஆசரிப்புக்கூடாரம் (True tabernacle) (எபி 8:2; எபி 9:11)

60 செத்த கிரியைகள் (Dead works) (எபி 9:14) - ஜீவனுள்ள சேவை (Living service) (எபி 9:14)

61 சீனாய் மலையில் ஏற்படுத்தப்பட்டது (Made at Sinai) (கலா 4:24 - கல்வாரியில் ஏற்படுத்தப்பட்டது (Made at Calvary) (மத் 26:28

62 இரக்கம் இல்லை (No mercy) (எபி 10:28) - பூரண இரக்கம் (Complete mercy) (எபி 8:12

63 கையால் செய்யப்பட்ட காரியங்கள் (Handmade things) (எபி 9:1-5,24 - கையால் செய்யப்பட்டதல்ல (Not handmade) (எபி 9:23-24)

64 தூதர்களால் கொடுக்கப்பட்டது (Given by angels) (கலா 3:19) - பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட்டது (By the Holy Spirit) (எபி 10:15-18)

65. பழைய வழி (An old way) (எபி 8:13) - புதிய ஜீவனுள்ள வழி (New and living way) (எபி 10:19-20

66. உதவி புரிய முடியாத ஊழியக்காரர்கள் (Helpless ministers) (எபி 7:18) - உதவி புரியும் ஊழியக்காரர்கள் (Able ministers) (2கொரி 3:6)

67 மாம்ச ஊழியம் (Carnal ministry) (எபி 9:9-10) - ஆவிக்குரிய ஊழியம் (Spiritual ministry) (2கொரி 3:6

68 மரணத்துக்கேதுவான ஊழியம் (Ministration of) (2கொரி 3:6,8 - ஜீவனுக்கேதுவான பரிசுத்த ஆவியானவரின் ஊழியம் (Ministration of Spirit and life) (2கொரி 3:7)

69 ஆக்கினைத்தீர்ப்பு கொடுக்கும் ஊழியம் (Ministration of condemnation) (2கொரி 3:9 நீதியைக் கொடுக்கும் ஊழியம் (Ministration of righteousness) (2கொரி 3:9

3 அதிகாரம்

70 மகிமை முக்காடு போட்டுக் கொண்டது (Glory covered) (2கொரி 3:13) – மகிமை வெளியரங்கமாக இருக்கிறது. (Glory uncovered) (1கொரி 18)

71 அடிமைத்தனத்தைத் தருகிறது (Brings bondage) (கலா 4:24-25) - விடுதலையைத் தருகிறது. (Brings liberty) 2கொரி 3:17)

72 நியாயந்தீர்க்க முடியாது (Cannot justify) (கலா 2:16) - நியாயந்தீர்க்கும் (Can justify) (அப 13:38-39

73 சாபத்தைத் தருகிறது (Brings a curse) (கலா 3:10) - சாபத்திலிருந்து விடுவிக்கிறது (Redeems from it) (கலா 3:13

74 கிரியைகளினால ஜீவிக்கிறது (Live by works) (கலா 3:10) - விசுவாசத்தினால ஜீவிக்கிறது (Live by faith) (கலா 3:11)

75 ஜீவனைக் கொடுக்க முடியாது (Cannot give life) (கலா 3:21) - ஜீவனைக் கொடுக்க முடியும். (Can give life) (யோவான் 6:63-68)

76 பாவத்தை வெளிப்படுத்துகிறது (Exposes sin) (கலா 3:19) பாவத்தை மூடுகிறது (Covers sin) (ரோமர் 4:1-8)

77 நியாயப்பிரமாணத்தின் கீழ் உள்ளது (Under law) (ரோமர் 6:14-15) கிருபையின்கீழ் உள்ளது. (Under grace) (கலா 3:22-25)

78 துன்பத்தை உண்டாக்குகிறது (Engenders persecution) (கலா 4:29) – பொறுமையைத் தருகிறது (Engenders tolerance) (1கொரி 13)

79 நீங்கிப்போயிற்று (Done away) (2கொரி 3.7-14) – நீங்கவில்லை (Not done away) (2கொரி 3:11

80 ஒழிந்துபோயிற்று (Abolished) (2கொரி 3:13) – இன்னும் இருக்கிறது (Remains) (2கொரி 3:11

81 புறம்பே தள்ளப்பட்டது (Cast out) (கலா 4:30) – புறம்பே தள்ளப்படவில்லை. (Not cast out) (எபி 8:6)

82 எடுத்துப் போடப்பட்டது (Taken away) (எபி 10:9) - எடுத்துப்போடப்படவில்லை (Not taken away) (எபி 10:9)

83 குலைத்துப்போடப்பட்டது (Blotted out) (கொலோ 2:14-17) - குலைத்துப்போடப்படவில்லை (Not blotted out) (எபி 8:6)

84. ஆணையினால் உண்டாக்கப்படவில்லை (Not by an oath) (எபி 7:20-21) - ஆணையினால் உண்டாக்கப்பட்டது (Made by an oath) (எபி 7:20-21)

85 இஸ்ரவேல் ஜனங்களுக்கு மட்டும் உரியது (For Israel only) (உபா 4:7-8; உபா 5:3) - எல்லா ஜனங்களுக்கும் உரியது (For all people) (மத் 26:28

"எழுத்துக்களினால எழுதப்பட்டுக் கற்களில பதிந்திருந்த மரணத்துக்கேதுவான ஊழியம்" - மோசேயின எல்லாப் பிரமாணங்களைப் போலவே பத்து கட்டளைகளும் ஒழிந்துபோயிற்று. (அப் 15:1 புதிய உடன்படிக்கையில பத்து கற்பனைகளில் ஒருசில கற்பனைகள மட்டுமே கொரிந்தியருக்குக் கூறப்பட்டிருக்கிறது. (அப 15:24) மோசேயின் பிரமாணத்தில் பத்து கற்பனை ஒரு பகுதி மட்டுமே ஆகும். (யாத் 24:12; யாத் 31:18, யாத் 34:1-4, உபா 4:13; உபா 5:22; உபா 9:9-11 உபா 10:1 3)

II கொரிந்தியர் – தொகுப்புரை

3 அதிகாரம்

"மோசேயினுடைய முகத்திலே மகிமைப் பிரகாசம் உண்டானபடியால், இஸ்ரவேல் புத்திரர் அவன் முகத்தை நோக்கிப் பார்க்கக் கூடாதிருந்தார்களே" - (யாத் 19:16 யாத் 34:33-35)

■ **மகிமையுள்ள ஊழியமும் நீதியைக் கொடுக்கும் ஊழியமும்** - (மத் 18:18; ரோமர் 2:7-10; 14:17)

2கொரி 3:9 ஆக்கினைத்தீர்ப்புக் கொடுக்கும் ஊழியம் மகிமையுள்ளதாயிருந்தால் நீதியைக் கொடுக்கும் ஊழியம் அதிக மகிமையுள்ளதாயிருக்குமே.

2கொரி 3:10 இப்படியாக, மகிமைப்பட்டிருந்த அந்த ஊழியம் இந்த ஊழியத்திற்கு உண்டாயிருக்கிற சிறந்த மகிமைக்கு முன்பாக மகிமைப்பட்டதல்ல.

2கொரி 3:11 அன்றியும், ஒழிந்து போவதே மகிமையுள்ளதாயிருந்தால், நிலைத்திருப்பது அதிக மகிமையுள்ளதாயிருக்குமே.

அப்போஸ்தலரின் ஊழியம் மோசேயின் ஊழியத்தைவிட மகிமையானது என்பதற்குக் காரணங்கள்

1. மோசேயின் ஊழியம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் உரியது (2கொரி 3:7, [illegible] 3:19,25 கலா 4:30, எபி 9:9-10)

2. ஒரு குறிப்பிட்ட ஸ்தலமான பாலஸ்தீன தேசத்தில் மட்டும் அமுலில் இருந்தது (உபா 5:16, உபா 11:9, உபா 28:8 உபா 31:13)

3. ஒரு குறிப்பிட்ட ஜனமான யூத ஜனத்திற்கு மட்டும் மோசேயின் பிரமாணம் உரியது (உபா 5:3 ரோமர் 2:12-16)

4. அப்போஸ்தலருடைய ஊழியமான புதிய உடன்படிக்கையின் ஊழியமோ எல்லாக் காலத்திற்கும் எல்லாத் தேசத்திற்கும் எல்லா ஜனங்களுக்கும் உரியது. (மத் 26:28 மாற்கு 16:15-16; லூக்கா 24:47, யோவான் 3:16; அப் 1:8 ரோமர் 10:9-14 1கொரி 12:13

7. **நம்பிக்கை, வெளிச்சம், விடுதலை ஆகியவற்றின் ஊழியம்** - (கலா 5:1 எபி 7:19; 8:6

2கொரி 3:12 நாங்கள் இப்படிப்பட்ட நம்பிக்கையை உடையவர்களாதலால் மிகவும் தாராளமாய்ப் பேசுகிறோம்.

2கொரி 3:13 மேலும், ஒழிந்துபோவதின் முடிவை இஸ்ரவேல் புத்திரர் நோக்கிப் பாராதபடிக்கு, மோசே தன் முகத்தின்மேல் முக்காடு போட்டுக் கொண்டதுபோல நாங்கள் போடுகிறதில்லை.

2கொரி 3:14 அவர்களுடைய மனது கடினப்பட்டது; இந்நாள்வரைக்கும் பழைய ஏற்பாடு வாசிக்கப்படுகையில் அந்த முக்காடு நீங்காமலிருக்கிறது; அது கிறிஸ்துவினாலே நீக்கப்படுகிறது.

2கொரி 3:15 மோசேயின் ஆகமங்கள் வாசிக்கப்படும்போது, இந்நாள் வரைக்கும் முக்காடு அவர்கள் இருதயத்தின்மேல் இருக்கிறதே.

2கொரி 3:16 அவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்பும்போது, அந்த முக்காடு எடுபட்டுப்போம்.

2கொரி 3:17 கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு.

முக்காடு (vail) κάλυμμα **kalymma** - 2571

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் முக்காடு (2கொரி 3:13,14,15,16)

"ஒழிந்துபோவதின் முடிவு" பழைய உடன்படிக்கை ஒழிந்துபோயிற்று. (அப் 15:5, 2கொரி 3:7,11,14)

II கொரிந்தியர் – தொகுப்புரை

3 அதிகாரம்

"அவர்களுடைய மனது கடினப்பட்டது. இந்நாள்வரைக்கும் பழைய ஏற்பாடு வாசிக்கப் படுகையில், அந்த முக்காடு நீங்காமலிருக்கிறது. அது கிறிஸ்துவினாலே நீக்கப்படுகிறது" - ஒளியைப் பார்க்கக்கூடாதபடிக்குத் தங்களுடைய கண்களை மூடிக்கொண்டு நியாயப் பிரமாணத்தின்மீது நம்பிக்கையாக இருக்கிறவர்கள் குருடரைப்போல இருக்கிறார்கள். பழைய உடன்படிக்கை அகற்றப்பட்டது என்பதை அறியாமலேயே அவர்கள் இன்னும் அதை நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

தீர்க்கதரிசன எண் - 2

"அவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்பும் போது அந்த முக்காடு எடுபட்டுப்போம்" (2கொரி 3:16)

திரும்பு (turn to) - ἐπιστρέφω - epistrephoo - 1994

வினைச்சொல் - திரும்பு "converted" மத் 13:15 மாற்கு 4:12 லூக்கா 22:32 யோவான் 12:40 அப் 3:19 அப் 28:27; யாக் 5:19-20; "turn again" (மாற்கு 13:16; லூக்கா 17:4, கலா 4:9 2பேதுரு 2:22) மனுஷருடைய இருதயம் கர்த்தரிடத்தில் திரும்பும்போது அவர்களுடைய ஆவிக்குரிய குருடான கண்கள் திறக்கப்படும்.

8. மறுரூபப்படுத்தும் ஊழியம் - (2கொரி 5:17, ரோமர் 8:13; 8:1-23, எபே 4:20-24, கொலோ 3:5-10)

2கொரி 3:18 நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறது போலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத் தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப் படுகிறோம்.

"நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறது போலக்காண்கிறோம்" - நியாயப் பிரமாணம் நிழலாகவும் அடையாளமாகவும் முக்காட்டிற்குள் இருக்கிறது. வரப்போகிற நல்ல காரியங்களுக்கு இது அடையாளமாகும். (எபி 10:1) பழைய உடன்படிக்கைக்கும், புதிய உடன்படிக்கைக்கும் பல வேறுபாடுகள் உள்ளன. புதிய உடன்படிக்கையில் பாரம்பரியங்களும், சடங்குகளும், நியமங்களும் ஆசரிக்கப் படுவதில்லை. புதிய உடன்படிக்கையில் கர்த்தருடைய பந்தியும் தண்ணீர் ஞானஸ்நானமும் மட்டுமே நியமிக்கப்பட்டிருக்கிற நியமங்களாகும். சுவிசேஷம் மிகவும் எளிமையானது. சுவிசேஷத்தினால் வரும் ஆசீர்வாதங்களை வெவித குழப்பமும் இல்லாமல் மிகவும் எளிமையாக நாம் பெற்றுக் கொள்ளலாம்.

"ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத் தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்" - "மறுரூபமானார்" - உருவத்தை மாற்றுதல் என்பது இதன் பொருள் (to change the form) இந்த வாக்கியம் மத் 17:2, மாற்கு 9:2; ரோமர் 12:2, 2கொரி 3:18 ஆகிய வசனங்களிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது தவிர மோசே (யாத் 34:29-35) ஸ்தேவான் (அப் 6:15) ஆகியோரின் மறுரூபமாதலையும் நாம் ஒப்பிட்டு வாசிக்கலாம்.

மறுரூபமாகு (transfigured) μεταμορφόω metamorphooo - 3339

வினைச்சொல் - மறுரூபமாகு, மறுரூபபட்டு

II கொரிந்தியர் – தொகுப்புரை

4 அதிகாரம்

9. உத்தமமான ஊழியம் – (8:21 அப 6:3; ரோமர் 12:17; 13:13 பிலி 4:8, 1தீமோ 2:2)

2கொரி 4:1 இப்படிப்பட்ட ஊழியத்தை உடையவர்களாகிய நாங்கள் இரக்கம் பெற்றிருப்பதால் சோர்ந்து போகிறதில்லை

2கொரி 4:2 வெட்கமான அந்தரங்க காரியங்களை நாங்கள் வெறுத்து தந்திரமாய் நடவாமலும் தேவ வசனத்தைப் புரட்டாமலும், சத்தியத்தை வெளிப்படுத்துகிறதினாலே தேவனுக்கு முன்பாக எல்லா மனுஷருடைய மனச்சாட்சிக்கும் எங்களை உத்தமரென்று விளங்கப் பண்ணுகிறோம்.

பவுலின் ஊழியம்

1 எல்லா இடங்களிலும் கிறிஸ்துவிற்குள் வெற்றிசிறக்கப்பண்ணுகிறார் 2கொரி 2:14

2 இரட்சிக்கப் படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கேதுவான ஜீவவாசனை (2கொரி. 2:16

3 கெட்டுப் போகிறவர்களுக்குள்ளே மரணத்திற்கேதுவான மரணவாசனை (2கொரி 2:16

4. துப்புரவான சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுதல் (2கொரி 2:17)

5 ஜனங்களைக் கிறிஸ்துவின் நிருபங்களாக்குதல் (2கொரி 3:3)

6 புது உடன்படிக்கையின் ஊழியக்காரராய் இருக்கும் தெய்வீக தகுதி (2கொரி 3:6)

7 உயிர்ப்பிக்கும் ஊழியம் (2கொரி 3:6)

8 பரிசுத்த ஆவியானவர் (2கொரி 3:8,17 18

9 நீதி (2கொரி 3:9)

10. சிறந்த மகிமை (2கொரி 3:10-11

11 விடுதலை (2கொரி 3:17

12 மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபமடைதல் (2கொரி 3:18

ஊழியம் (ministry) - διακονία - diakonia 1248

வேலைகளைச் செய்தல், ஊழியம், உதவி, விசாரணை, தர்மசகாயம் - பெண்பால் பெயர்ச்சொல் (மத் 20:26

ஊழியமும், இரக்கமும் பெற்றிருக்கிறவர்களுடைய கடமைகள்

1 சோர்ந்துபோகக்கூடாது. (2கொரி 4:1

2 வெட்கமான அந்தரங்கக்காரியங்களை வெறுக்க வேண்டும்

3 தந்திரமாய் நடக்கக்கூடாது (2கொரி 4:2)

4 தேவவசனத்தைப் புரட்டக்கூடாது (2கொரி 4:2

5 எல்லா ஜனங்களுக்கும் சத்தியத்தை வெளிப்படுத்த வேண்டும் (2கொரி 4:2)

6 தேவனுக்கு முன்பாகவும், மனுஷருக்கு முன்பாகவும் சுத்தமான மனசாட்சியைக் காத்துக் கொள்ள வேண்டும். 2கொரி 4:2

சோர்ந்துபோதல் (faint) - ἐκκακέω - ekkakeoo - 1573

வினைச்சொல் - சோர்ந்துபோ, சோர்ந்துபோன இருதயம் (to be faint-hearted) (2கொரி 4:1,16, லூக்கா 18:1; கலா 6:9; எபே 3:13

"வெட்கமான அந்தரங்க காரியங்கள்" - துணிகரக்குறைவு காரியங்கள் அவை வெட்கக்கேடானவை.

வெட்கம் (dishonesty) αἰσχύνη aischynee 152

II கொரிந்தியர் – தொகுப்புரை

4 அதிகாரம்

பெண்பால் பெயர்ச்சொல் - வெட்கம் இலச்சை, அவமானம், அவலட்சணம் **"shame"** (லூக்கா 14:9; பிலி 3:19, எபி 12:2; யூதா 1:13; வெளி 3:18)

(அ) ஓர் உணர்வு 2கொரி 4:2

(ஆ) ஓர் அனுபவம் எபி 12:8

(இ) செயல்கள்

தந்திரம் (craftiness) - πανουργία - panourgia - 3834

பெண்பால் பெயர்ச்சொல் - தந்திரம் - முரட்டனைப் போல செயல்படுதல் பரிசுத்தமான காரியங்களை அசுத்தமான வழிகளில் செய்தல். **"craftiness"** (2கொரி 4:2, லூக்கா 20:23; 1கொரி 3:19, எபே 4:14);**"subtilty"** 2கொரி 11:3

தந்திரமாய் நடப்பது (deceitfully) - δολόω - doloo - 1389

வினைச்சொல் - தந்திரமாய் நட **(to beguile, ensnare; to counterfeit; adulterate; disguise)**

வெளிப்படுத்துதல் (manifestation) φανέρωσις - phaneroosis - 5321

பெண்பால் பெயர்ச்சொல் - அநுக்கிரகம், வெளிப்படுத்துதல் இந்த வசனத்திலும் 1கொரி 12:7 ஆவது வசனத்திலும் மட்டுமே இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. சுவிசேஷத்தின் சத்தியங்களை வெளிப்படுத்துவதற்கு ஆவிக்குரிய வரங்கள் உபாயங்களாக இருக்கின்றன. தன்னுடைய பிரசங்கச் செய்தி அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதிபண்ணப்பட வேண்டும் என்று பவுல் விரும்புகிறார் (அப் 19:11 ரோமர் 15:18-19,29; எபி 2:3-4)

10. சுயநலமில்லாத ஊழியம் - (யோவான் 16:13-15; பிலி 1:12-19)

2கொரி 4:3 எங்கள் சுவிசேஷம் மறைபொருளாயிருந்தால் கெட்டுப்போகிறவர்களுக்கே அது மறைபொருளாயிருக்கும்.

2கொரி 4:4 தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்

2கொரி 4:5 நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும் எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம்.

2கொரி 4:6 இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்சொன்ன தேவன் இயேசுகிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்

மறைபொருள் (hid) - καλύπτω - kalyptoo - 2572

வினைச்சொல் - மூடு, மறைபொருளாயிரு, மறைத்துக்கொள் **(to cover, veil)** (மத் 8:24; மத் 10:26, லூக்கா 8:16; லூக்கா 23:30, 1பேதுரு 4:8) **hide** (2கொரி 4:3, யாக் 5:20) ஒருசிலருக்குச் சுவிசேஷம் மறைவாய் இருக்கிறது. இதற்கு அவர்கள் தங்களுடைய ஆவிக்குரிய கண்களைச் சுவிசேஷத்தைக் காணக்கூடாதவாறு மூடியிருப்பதே காரணமாகும். (2கொரி 3:13-16; மத் 13:14-16) ஒருவன் சுவிசேஷச் செய்தியை தன் காதுகளால் கேட்கும்பொழுது அதைத் தன் இருதயத்தில் ஏற்றுக் கொள்ள வேண்டும். சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளாதவாறு எவன் தன் இருதயத்தை மூடிக் கொள்கிறானோ அவன் பாவத்தின் பிடியிலும் சாத்தானுடைய ஆளுகையிலும் இருப்பான் (2கொரி 4:3-4)

II கொரிந்தியர் – தொகுப்புரை

4 அதிகாரம்

"தேவனுடைய சாயல்" - கொலோ 1:15 எபி 1:3; 2கொரி 3:18

"மகிமையான சுவிசேஷம்" - மகிமையின் சுவிசேஷம் (1தீமோ 1:11

"தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு" - சுவிசேஷம் அவிசுவாசிகளுக்கு மறைவாக இருப்பதற்கு அவர்களே காரணம் (2கொரி 3:13-16 மத் 13:14

"இப்பிரபஞ்சத்தின் தேவனானவன்" - சாத்தான் யோவான் 8:44 யோவான் 12:31 யோவான் 14:30; யோவான் 16:11; எபே 2:2 1யோவான் 3:9 1யோவான் 5:18)

"இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்ன தேவன்" - ஆதி 1:3 ஆகிய வசனத்தின் குறிப்பு. ஆகும் சுவிசேஷத்தின் ஒளி நம்முடைய இருளடைந்த இருதயங்களில் பிரகாசிக்கிறது. ஆதி 1:2 ஆவது வசனத்தில் இருளில் சூரியன் உதிப்பதைப் போன்று இருக்கிறது.

"இயேசு கிறிஸ்துவின் முகம்" - இயேசு கிறிஸ்துவின் பிரசன்னம்

11. வல்லமையின் ஊழியம் - (மத் 18:18)

2கொரி 4:7 இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல் தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்.

மண்பாண்டங்கள் (earthen vessels)

ὀστράκινος ostrakinos
3749

பெயரடை - மண், மண்ணுமான - (2கொரி 4:7, 2தீமோ 2:20) கிழக்கு தேசங்களில் முக்கியமான பொருட்களைத் தண்ணீர்ப் பதத்திலிருந்து பாதுகாப்பதற்காக மண்பாண்டங்களில் மறைத்து வைப்பார்கள் (எரே 32:14) நம்முடைய சரீரங்களில் சுவிசேஷத்தின் வெளிச்சத்தின் மூலமாக காணப்படும் பரிசுத்த ஆவியானவருடைய வல்லமை வாசம் பண்ணுகிறது. மண்பாண்டம் உடைந்து போகக்கூடியது. மதிப்பு குறைந்தது. நமது சரீரமும் மண்பாண்டத்தைப் போன்றதுதான் இந்த மண்பாண்டத்திற்குள் விலை மதிக்க முடியாத பொக்கிஷமான பரிசுத்த ஆவியானவருடைய வல்லமை வாசம்பண்ணுகிறது.

12. பாடுகளின் ஊழியம் - (11:23; 1கொரி 4:9; பிலி 3:10; ரோமர் 8:18 2தீமோ 2:12; 3:12; 1பேதுரு 4:1

2கொரி 4:8 நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப் போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை;

2கொரி 4:9 துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை.

2கொரி 4:10 கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு, இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம்.

2கொரி 4:11 எப்படியெனில், சாவுக்கேதுவான எங்கள் மாம்சத்திலே இயேசுவினுடைய ஜீவனும் விளங்கும்படிக்கு, உயிரோடிருக்கிற நாங்கள் எப்பொழுதும் இயேசுவினிமித்தம் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறோம்.

2கொரி 4:12 இப்படி மரணமானது எங்களிடத்திலும், ஜீவனானது உங்களிடத்திலும் பெலன்செய்கிறது.

II கொரிந்தியர் – தொகுப்புரை

4 அதிகாரம்

பாடுகளைப் பற்றிய நான்கு வாக்கியங்கள்

1 எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப் போகிறதில்லை

2 கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறது இல்லை

3 துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப் படுகிறதில்லை

4 கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை

முதல் இரண்டு பாடுகள் மனயுத்தத்தைக் குறிக்கிறது. மூன்றாவது பாடு ஒட்டப் பந்தயத்தையும், நான்காவது பாடு குத்துச்சண்டையையும் குறிக்கிறது. (2கொரி 4:8-9)

சரீரத்தில் சுமந்து திரிகிறோம் (bearing about in the body) - περιφέρω - peripheroo - 4064

வினைச்சொல் - சுமந்துகொள், சுமந்துதிரி, அடியுண்டோடு, அலைப்புண்டு திரி, அடிபட்டு அலை **(to carry about with one; to whirl)** (2கொரி 4:10; மாற்கு 6:55; எபே 4:14; எபி 13:9; யூதா 1:12)

இயேசு கிறிஸ்துவின் நிமித்தமாக தனக்கு மரண தண்டனை கொடுக்கப்பட்டது போன்று பவுல் இங்கு வர்ணிக்கிறார். இயேசுகிறிஸ்துவின் நிமித்தமாகவும் சுவிசேஷ செய்தியின் நிமித்தமாகவும் எந்த வேளையிலும் [illegible] மரித்துப்போக ஆயத்தமாக இருக்கிறார் (2கொரி 4:11). கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய அச்சு அடையாளங்களைத் தன்னுடைய சரீரத்திலே தரித்துக் கொண்டிருப்பதாகப் பவுல் தன்னைப் பற்றி விளக்கிக் கூறுகிறார் (கலா 6:17).

மரணம் (dying) - νέκρωσις - mekroosis - 3500

பெண்பால் பெயர்ச்சொல் - செத்துப்போதல், மரணம் (making dead; a dead condition) (2கொரி 4:10; ரோமர் 4:19) - கிறிஸ்துவுடனே கூட தான் சிலுவையில் அறையப்பட்டிருப்பதாகப் பவுல் கூறுகிறார் (கலா 2:20). இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த ஜீவியத்தின் வல்லமை பவுலின் சரீரத்தின் மூலமாக வெளிப்படுகிறது. பவுலின் மூலமாக நடைபெறும் அற்புதங்கள் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குச் சாட்சி பகருகிறது. (2கொரி 4:10-12)

"சாவுக்கேதுவான மாம்சம்" **(mortal flesh)** - (1கொரி 15:53)

"இப்படி மரணமானது எங்களிடத்திலும், ஜீவனானது உங்களிடத்திலும் பெலன் செய்கிறது. கொரிந்தியர் ஜீவிக்க வேண்டும் என்பதற்காகப் பவுல் மரண ஜீவியத்தை ஜீவித்துக் கொண்டிருக்கிறார். கொரிந்தியர் கிறிஸ்துவிற்காக ஜீவிக்க வேண்டும் என்பதற்காகப் பவுல் மரிப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறார்.

13. தைரியமும் விசுவாசமுமுள்ள ஊழியம் - (அப் 4:13,20; ரோமர் 9:1; 1தீமோ 1:11-12)

2கொரி 4:13 விசுவாசித்தேன், ஆகையால் பேசினேன் என்று எழுதியிருக்கிறபடி, நாங்களும் அந்த விசுவாசத்தின் ஆவியை உடையவர்களாயிருந்து, விசுவாசிக்கிறபடியால் பேசுகிறோம்.

2கொரி 4:14 கர்த்தராகிய இயேசுவை எழுப்பினவர் எங்களையும் இயேசுவைக் கொண்டு எழுப்பி, உங்களுடனேகூடத் தமக்குமுன்பாக நிறுத்துவாரென்று அறிந்திருக்கிறோம்.

II கொரிந்தியர் – தொகுப்புரை

4 அதிகாரம்

2கொரி 4:15 தேவனுடைய மகிமை விளங்கும்படிக்கு கிருபையானது அநேகருடைய ஸ்தோத்திரத்தினாலே பெருகும்படிக்கு, இவையெல்லாம் உங்கள் நிமித்தம் உண்டாயிருக்கிறது.

"விசுவாசித்தேன், ஆகையால் பேசினேன்" - சங் 116:10 ஆவது வசனம் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

தீர்க்கதரிசன எண் - 8

"கர்த்தராகிய இயேசுவை எழுப்பினவர் எங்களையும் இயேசுவைக்கொண்டு எழுப்பி உங்களுடனேகூடத் தமக்குமுன்பாக நிறுத்துவார்" 2கொரி 4:14

"தேவனுடைய மகிமை" - தேவனுடைய மகிமை விளங்க வேண்டும் என்பதற்காகக் கிருபையானது அநேகருடைய ஸ்தோத்திரத்தினாலே பெருகுகிறது. தனக்குப் பல பாடுகள் வந்தாலும் கொரிந்தியர் இரட்சிக்கப்பட்டால் போதும். தன்னுடைய பாடுகளைப் பற்றி பரவாயில்லை என்று பவுல் நினைக்கிறார். தேவனுடைய கிருபை ஏராளமான ஆத்துமாக்களை இரட்சிக்கும். இதனால் இரட்சிக்கப்பட்ட அநேக ஆத்துமாக்கள் தேவனை மகிமைப்படுத்துவார்கள். அநேகர் ஸ்தோத்திரம் பண்ணும்போது தேவகிருபை இன்னும் பெருகும். இன்னும் அநேகர் இரட்சிக்கப்படுவார்கள். இதையெல்லாம் நினைத்துப் பார்க்கும்போது தனக்கு நேரிட்டிருக்கிற பாடுகள் ஒன்றுமல்ல என்று பவுல் நினைக்கிறார்.

14. நித்திய காரியங்களின் ஊழியம் - (ரோமர் 2:7-16; 8:17-25)

2கொரி 4:16 ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்துபோகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது.

2கொரி 4:17 மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது.

2கொரி 4:18 ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்.

"நாங்கள் சோர்ந்து போகிறதில்லை" - தேவனை மகிமைப்படுத்துவதற்காக ஆத்துமாக்களை ஆதாயம் செய்யும் ஊழியத்தில் பவுலும் அவருடைய உடன் ஊழியரும் சோர்ந்துபோவதில்லை. எல்லாப் பாடுகளையும் சகித்துக் கொள்கிறார்கள். பாடுகள், சோதனைகள், வேதனைகள் ஆகியவற்றின் மூலமாகப் புறம்பான மனுஷன் அதாவது பவுலின் சரீரம் சிறிது சிறிதாக அழிந்து கொண்டிருக்கிறது. ஆனாலும் பவுலின் உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறது.

"புறம்பான மனுஷன்" (outward man) - மனுஷனுடைய சரீரத்தைக் குறிக்கும் இந்த வார்த்தை இந்த வசனத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

அழிதல் (perish) - διαφθείρω - diaphtheiroo - 1311

வினைச்சொல் - கெடு, அழி, சேதமாக்கு (corrupted, destroyed) லூக்கா 12:33; 1தீமோ 6:5; வெளி 8:9; வெளி 11:18

"உள்ளான மனுஷன்" (inward man) - மனுஷனுடைய ஆத்துமாவையும், ஆவியையும் இந்த வாக்கியம் குறிக்கிறது. சரீரத்தில் காணப்படும் மெய்யான மனுஷன் இவனே. யாக 2:26; எபி 4:12; எபி 12:23; 1தெச 5:23; வெளி 6:9; 2கொரி 5:8

புதிதாக்கப்படுகிறது (renewed) - ἀνακαινόω - anakainooo - 341

வினைச்சொல் - புதிதாக்கு (2கொரி 4:16; கொலோ 3:10)

II கொரிந்தியர் – தொகுப்புரை

4 அதிகாரம்

இலேசான உபத்திரவம் (light affliction)
ἐλαφρός - elaphros - 1645

பொருள் இலகுவான இலேசான
2கொரி 4:17 மத் 11:30

"நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது" - தற்காலத்தில் இயேசுவின் நிமித்தமாக ஒருசில பாடுகளும் உபத்திரவங்களும் வரலாம் இவை மிகவும் இலேசானவை. வருங்காலத்தில் நமக்காக நியமிக்கப்பட்டிருக்கும் சிலாக்கியங்களை நினைத்துப் பார்க்கும் போது இந்தப் பாடுகளும் உபத்திரவங்களும் ஒன்றுமேயில்லை (ரோமர் 8:17-18)

"காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள் காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்"

ஆகையினால் பவுல் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளையே நோக்கியிருக்கிறார்

5 அதிகாரம்

15. வருங்காலத்தைப் பற்றிய நம்பிக்கையின் ஊழியம் - (யோவான் 14:1-3; 1தெச 4:13-18; பிலி 1:21-24; 3:20-21; தீத்து 2:13-14)

2கொரி 5:1 பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்.

2கொரி 5:2 ஏனெனில், இந்தக் கூடாரத்திலே நாம் தவித்து, நம்முடைய பரம வாசஸ்தலத்தைத் தரித்துக்கொள்ள மிகவும் வாஞ்சையுள்ளவர்களாயிருக்கிறோம்.

2கொரி 5:3 தரித்துக் கொண்டவர்களானால் நிர்வாணிகளாய்க் காணப்படமாட்டோம்.

2கொரி 5:4 இந்தக் கூடாரத்திலிருக்கிற நாம் பாரஞ்சுமந்து தவிக்கிறோம். இந்தப் போர்வையைக் களைந்துபோடவேண்டுமென்று விரும்பாமல், மரணமானது ஜீவனாலே விழுங்கப்படுவதற்காகப் போர்வை தரித்தவர்களாயிருக்கவேண்டுமென்று விரும்புகிறோம்

2கொரி 5:5 இதற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறவர் தேவனே, ஆவியென்னும் அச்சாரத்தை நமக்குத் தந்தவரும் அவரே

2கொரி 5:6 நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்

2கொரி 5:7 இந்தத் தேகத்தில் குடியிருக்கையில் கர்த்தரிடத்தில் குடியிராதவர்களாயிருக்கிறோமென்று அறிந்தும், எப்பொழுதும் தைரியமாயிருக்கிறோம்.

2கொரி 5:8 நாம் தைரியமாகவேயிருந்து, இந்தத் தேகத்தை விட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம்.

கூடாரம் (tabernacle) - σκηνοποιός - skeenopoios - 4635

பொருள் - கூடாரம் பண்ணுகிற தொழிலாளி **(tent)** (2கொரி 5:1, 2கொரி 5:4)

அழிந்துபோதல் (dissolved) - καταλύω - katalyoo - 2647

வினைச்சொல் - அழி இடி **(dissolve)** (2கொரி 5:1) **(throw down)** (மத் 24:2; மாற்கு 13:2; லூக்கா 21:6); **(overthrow)** (அப் 5:39); **(destroy)** (மத் 5:17; மத் 26:61; மத் 27:40; மாற்கு 14:58; மாற்கு 15:29; அப் 6:14; ரோமர் 14:20; கலா 2:18) **(come to nought)** (அப் 5:38); **(lodge)** (லூக்கா 9:12); **(be guest)** (லூக்கா 19:7). சரீரம் மரிக்கும்போது அது மறுபடியும் மண்ணுக்குத் திரும்புகிறது (ஆதி 3:19) நாம் உயிர்த்தெழுந்த பின்பு நித்திய காலமாக ஜீவிப்பதற்கு பரலோகத்தில் நமக்கு நித்திய வீடு ஒன்று உள்ளது. உயிர்த்தெழுந்த சரீரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முன்பாக இப்பொழுதுள்ள சரீரம் அழிய வேண்டும். பூமிக்குரிய கூடாரத்தில் நாம் அழிந்து போகிறவர்களாக இருக்கிறோம். (2கொரி 5:5) இந்தக் கூடாரத்தில் நாம் தவிக்கிறோம், பரம வாசஸ்தலத்தைத் தரித்துக் கொள்ள மிகவும் வாஞ்சையுள்ளவர்களாக இருக்கிறோம். (2கொரி 5:2-5)

“தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டு” - நாம் மரித்து, உயிர்த்தெழுந்த பின்பு பரலோகத்தில் நாம் வாசம் பண்ணுவதற்காக நமக்கு கைவேலையல்லாத நித்திய வீடு ஒன்று உள்ளது (2கொரி 5:1-5, 1கொரி 15:35-54)

5 அதிகாரம்

"மரணமானது ஜீவனாலே விழுங்கப் படுவதற்காகப் போர்வை தரித்தவர்களாயிருக்க வேண்டுமென்று விரும்புகிறோம்" - 1கொரி 15:35-54 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற பிரகாரம் அழியாமையைத் தரித்துக் கொள்வதை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. சபை எடுத்துக் கொள்ளப் படும்போது இந்தக் காரியம் நடைபெறும். (1தெச 4:13-16; பிலி 3:21)

"ஆவியென்னும் அச்சாரம்" (earnest of the Spirit) - தேவன் நமக்கு அச்சாரத்தைக் கொடுத்திருக்கிறார். பரிசுத்த ஆவியானவரின் முதற்பலனை நமக்கு அருளியிருக்கிறார். நாம் உயிர்த்தெழுவோம். நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வோம் என்பதற்குப் பரிசுத்த ஆவியானவர் நமக்கு அச்சாரமாகவும், அடையாளமாகவும் இருக்கிறார்.

"இந்தத் தேகத்தில் குடியிருக்கையில் கர்த்தரிடத்தில் குடியிராதவர்களாயிருக்கிறோமென்று அறிந்தும், எப்பொழுதும் தைரியமாயிருக்கிறோம்" நாம் பூமியில் இந்தச் சரீரத்தில் ஜீவிக்கும்போது நமது தற்காலிக வீட்டில் குடியிருக்கிறோம். தற்காலிக வீட்டில் இருந்துகொண்டு நித்திய வீட்டிலும் இருக்க முடியாது. நாம் இந்த உலகத்தில் நமது சரீரத்தில் ஜீவிக்கும் வரையிலும் கர்த்தரோடு நித்திய வீட்டில் குடியிருக்கும் சிலாக்கியம் நமக்குக் கிடைப்பதில்லை.

"இந்தத் தேகத்தை விட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம்" மரணம் இந்தச் சரீரத்தை விட்டுப் பிரிதல் ஆகியவை நடைபெற்ற பின்பு தான் நாம் கர்த்தரோடு பரலோகத்தில் நித்திய காலமாக ஜீவிக்க முடியும். (பிலி 1:21-24; எபி 12:23; யாக் 2:26; வெளி 6:9-11) பவுல் தன்னுடைய மரண நாளை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒருவன் நீதிமானாக இருந்து மரித்துப் போனால் அவனுடைய உள்ளான மனுஷன் கல்லறைக்குச் செல்லாமல் பரலோகத்திற்குச் செல்லும்.

ஒருவன் துன்மார்க்கனாக இருந்து மரித்துப் போனால் அவனுடைய உள்ளான மனுஷன் நரகத்திற்குச் சென்று தன்னுடைய சரீர உயிர்த்தெழுதலுக்காக அங்கு காத்துக் கொண்டிருக்கும். (லூக்கா 16:19-31; வெளி 20:11-15)

16. தேவனை பிரியப்படுத்தும் ஊழியம் – (1கொரி 3:11-15; 9:27; எபே 4:11-16; 6:10-18; பிலி 2:12-16)

2கொரி 5:9 அதினிமித்தமே நாம் சரீரத்தில் குடியிருந்தாலும் குடியிராமற் போனாலும் அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம்.

2கொரி 5:10 ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்.

2கொரி 5:11 ஆகையால், கர்த்தருக்குப் பயப்படத்தக்கதென்று அறிந்து மனுஷருக்குப் புத்திசொல்லுகிறோம்; தேவனுக்கு முன்பாக வெளியரங்கமாயிருக்கிறோம்; உங்கள் மனச்சாட்சிக்கும் வெளியரங்கமாயிருக்கிறோம் என்று நம்புகிறேன்.

2கொரி 5:12 இதினாலே நாங்கள் உங்களுக்கு முன்பாக எங்களை மறுபடியும் மெச்சிக்கொள்ளாமல், இருதயத்திலல்ல வெளிவேஷத்தில் மேன்மை பாராட்டுகிறவர்களுக்கு எதிரே எங்களைக் குறித்து நீங்கள் மேன்மை பாராட்டும்படிக்கு ஏதுவுண்டாக்குகிறோம்.

2கொரி 5:13 நாங்கள் பைத்தியங் கொண்டவர்களென்றால் தேவனுக்காக அப்படியிருக்கும்; தெளிந்த புத்தியுள்ளவர்கள் என்றால் உங்களுக்காக அப்படியிருக்கும்.

II கொரிந்தியர் – தொகுப்புரை

5 அதிகாரம்

"அதினிமித்தமே நாம் சரீரத்தில குடியிருந்தாலும் குடியிராமற்போனாலும் அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம்" - நமக்கு மரணம் ஏற்பட்டு இந்தச் சரீரத்தை விட்டுப் பிரியும்போது கர்த்தரிடத்தில் செல்வோம் ஆகையினால நாம் இந்தச் சரீரத்தில இருந்தாலும் மரித்துப்போனாலும் கர்த்தர் நம்மை அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளும் வண்ணமாக ஜீவிக்க வேண்டும். இந்தச் சரீரத்திலிருந்து பிரிந்திருக்கும் நாள் கர்த்தரோடு பரலோகத்தில சேர்ந்திருக்கும் நாளாகும். (2கொரி 5:8-9

தீர்க்கதரிசன எண் - 4

"ஏனென்றால, சரீரத்தில அவனவன் செய்த நன்மைகளாவது தீமைகளாவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்" (2கொரி 5:10) கிறிஸ்துவின் நியாயாசனத்தை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. பரிசுத்தவான்கள் உயிர்த்தெழுந்த பின்பு சரீரத்தில அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு. நாம் கிறிஸ்துவின நியாயாசனத்திற்கு முன்பாக நியாயந் தீர்க்கப்படுவோம ரோமர் 14:10 கொரி 3:11-15

பயம் (terror) - φόβος - phobos - 5401

ஆண்பால் பெயர்ச்சொல் - பயம் (2கொரி 5:11; ரோமர் 13:3; 1பேதுரு 3:14) நமக்கு ஒரு நியாயத்தீர்ப்பு உண்டு ஆகையினால நாம் எல்லோருமே இந்த ஜீவியத்தில தேவபயத்துடன் ஜீவிக்க வேண்டும்.

தெளிந்த புத்தியுள்ளவர் (sober) σωφρονέω soophroneoo 4993

வினைச்சொல் - புத்தி தெளிந்திரு, தெளிந்த எண்ணம், தெளிந்த புத்தி, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிரு (be of sound mind) (2கொரி 5:13 மாற்கு 5:15; லூக்கா 8:35 ரோமர் 12:3; தீத்து 2:6; 1பேதுரு 4:7)

17. **ஒப்புரவாகுதலின் ஊழியம்** - (மத் 28:18-20; மாற்கு 16:15-20 அப 1:8)

2கொரி 5:14 கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது ஏனென்றால எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும்

2கொரி 5:15 பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும் படி அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம

2கொரி 5:16 ஆகையால, இதுமுதற் கொண்டு, நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம், நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும் இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி அறியோம்

2கொரி 5:17 இப்படியிருக்க ஒருவன கிறிஸ்துவுக்குள்ளிருந்தால புது சிருஷ்டியாயிருக்கிறான பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின

2கொரி 5:18 இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது அவர் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி. ஒப்புரவாக்குதலின ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக் கொடுத்தார்

2கொரி 5:19 அதென்னவெனில், தேவன உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல் கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின உபதேசத்தை எங்களிடத்தில ஒப்புவித்தார்

II கொரிந்தியர் – தொகுப்புரை

5 அதிகாரம்

நெருக்கி ஏவுகிறது (constraineth)
συνέχω - synechoo - 4912

வினைச்சொல் - கூடக்கிட அடைத்துக்கொள், வருத்தப்பட்டுக்கிட "press" (அப் 18:5) "throng" (லூக்கா 8:45) சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளுமாறு ஜனங்களிடம் வலியுறுத்திக் கூறுவது.

"எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க எல்லாரும் மரித்தார்கள்" - கிறிஸ்து எல்லாருக்காகவும் மரித்தார் ஆகையினால் நாம் எல்லோருமே மரித்தவர்களாக இருக்கிறோம் அவர் நமக்காக மரித்து உயிர்த்தெழுந்தார் ஆகையினால் நாம் அவருக்காக ஜீவிக்க வேண்டும். நாம் இனிமேல் நமக்காக ஜீவிக்காமல் இயேசு கிறிஸ்துவிற்காக ஜீவிக்க வேண்டும். (2கொரி 5:14-15)

"நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம்" - பவுல் எந்த மனுஷனையும் நம்பவில்லை. பவுல் இயேசு கிறிஸ்துவை மாம்சப் பிரகாரமாக அறியாமல் ஆவிக்குரிய பிரகாரமாகவே அறிந்திருக்கிறார்

"ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்" ஆகையினால் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியக்கூடாது கிறிஸ்துவைக்கூட மாம்சத்தின்படி அறியக்கூடாது. எல்லோரும் மனந்திரும்பி, இரட்சிக்கப்பட வேண்டும் அப்போது இரட்சிக்கப்பட்டிருக்கிற நாம் ஆவிக்குரிய பிரகாரமாக தேவனுடைய சுவிகாரபுத்திரராக இருப்போம். இரட்சிக்கப்படாமல் மாம்சத்தின் பிரகாரமாக கிறிஸ்துவிலுள்ள உறவைக் கூறுவதினால் ஒரு பயனும் இல்லை

சுவிசேஷத்தின் தூண்டுதல் மற்றும் ஆசீர்வாதங்கள்

1 ஒருவனைக் கிறிஸ்துவிற்குள் அழைத்து வருகிறது. லூக்கா 22:3 2கொரி 5:17

2 புதுச்சிருஷ்டியாய் இருக்கிறான் (2கொரி 5:17)

3 பழையவைகள் ஒழிந்துபோயின (2கொரி 5:17)

4 எல்லாம் புதிதாயின (2கொரி 5:17)

5 தேவனாலே உண்டாயிருக்கிறது (2கொரி 5:18, ரோமர் 6:14-23 ரோமர் 8:1-13; கலா 5:16-26

6 தேவனோடு மனுஷன் ஒப்புரவாகிறான் (2கொரி 5:18; ரோமர் 5:10 எபே 2:14-18; கொலோ 1:20-21

7 ஒப்புரவாக்குதலின் ஊழியத்தில் பங்குபெறுகிறான் (2கொரி 5:18-20, 2கொரி 1:18-24)

8 ஒப்புரவாகுதலின் உபதேசத்தைத் தம்முடைய பிள்ளைகளுக்குத் தேவன் ஒப்புவித்திருக்கிறார் (2கொரி 5:19 மாற்கு 16:15-20)

9 கிறிஸ்துவிற்காகத் தேவனுடைய ஸ்தானாபதியாக இருக்கிறான் (2கொரி 5:20; நீதி 13:17)

10 கிறிஸ்துவில் தேவனுடைய நீதியாக இருக்கிறான் (2கொரி 5:2 ரோமர் 3:21, 31 ரோமர் 8:4

பழைய (old) - ἀρχαῖος - archaios - 744

பெயரடை - பூர்வ, பூர்வகாலம், பழைய, அநேகநாட்களுக்கு முன்னே (ancient, original)

ஒழிந்துபோன பழைய காரியங்கள்

1. பழைய மனுஷன் (யோவான் 8:44, எபே 2:2; 2கொரி 4:4, 1யோவான் 3:8; 1யோவான் 5:18

2 நியாயப்பிரமாணத்தின் மீறுதல் - பாவங்கள் (1 யோவான் 3:4, ரோமர் 4:15; யாக் 1:13-15) பாவமான கிரியைகள் மாற்கு 7:19-21, ரோமர்1:18-32; 2கொரி 6:9-11, கலா 5:19-21; கொலோ 3:5-10 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

II கொரிந்தியர் – தொகுப்புரை

5 அதிகாரம்

ஒழிந்து போன பழைய மனுஷனின் பெயர்கள்

1 பழைய மனுஷன் (ரோமர் 6:6, எபே 4:22; கொலோ 3:9)

2 பாவம் (யோவான் 1:29 யோவான் 8:34; யோவான் 6:4-8:2)

3 பாவசரீரம் (ரோமர் 6:6)

4 சாத்தானின் வல்லமை (அப 26:18)

5. இந்த மரண சரீரம் (ரோமர் 7:24)

6 மாம்சத்தின் இச்சைகள் (எபே 2:3)

7 கண்களின் இச்சை யோவான் 2:15-17)

8 ஜீவனத்தின் பெருமை (யோவான் 2:15 17

9 மாம்சத்தின் கிரியைகள் (கலா 5:19)

10 உலகம் (1யோவான் 2:15-17, யாக் 4:4

11 இச்சை ரோகங்கள் (ரோமர் 1:26,29)

12 மனதின் இச்சைகள் (எபே 2:3)

13 பாவத்தின் இச்சைகள் (ரோமர் 6:11-12)

14 பாவ இச்சைகள் (ரோமர் 7:5)

15 பாவம், மரணம் ஆகியவற்றின் பிரமாணம் (ரோமர் 7:7-8:2)

16 மாம்ச சிந்தை (ரோமர் 8:1-13)

17 இப்பிரபஞ்சத்தின் தேவன் (2கொரி 4:4

18 வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகள் (எபே 6:12)

19 உங்கள் பிதாவின் இச்சைகள் (யோவான் 8:44)

20 எனக்குள் வாசம்பண்ணுகிற பாவம் (ரோமர் 7:17)

21 ஆகாயத்து அதிகாரப்பிரபுவாகிய ஆவி (எபே 2:2)

22 மாமசத்திற்குரிய பாவ சரீரம் (கொலோ 2:11; கலா 5:24; ரோமர் 8

நம்மிடத்தில் காணப்படும் உள்ளான பாவங்களும் புறம்பான பாவங்களும் நம்மைவிட்டுக் கடந்துபோக வேண்டும் நம்மிடத்தில பாவம் இருந்தால நம்மால கிறிஸதுவில நிலைத்திருக்க முடியாது (2கொரி 5:17-18; எபே 4:24, 1யோவான் 5:18; ரோமர் 6:6-23; ரோமர் 8:1-13 1தெச 4:3; 2தெச 2:13

ஒப்புரவாகுதலின் உபதேசம்

1 இயேசு கிறிஸது ஜனங்களைத் தம்மோடு ஒப்புரவாக்குகிறார்

2 ஜனங்களுடைய பாவங்களை அறிக்கையிட்டு தம்மிடத்தில ஒப்புரவாகியிருக்கிறவர்களுடைய பாவங்களைத் தேவன நினைத்துப் பாராபதில்லை ரோமர் 4:7 8

3 தம்மோடு ஒப்புரவாகி இருக்கிறவர்களிடத்தில ஒப்புரவாகுதலின வார்த்தையை ஒப்புவித்திருக்கிறார்

4 தம்மோடு ஒப்புரவாகியிருக்கிறவர்களை கிறிஸதுவின ஸ்தானாபதிகளாக ஆக்கியிருக்கிறார் (2கொரி 5:20 ரோமர் 5:10)

5 நாம் தேவனுடைய நீதியாகும்படிக்கு இயேசு கிறிஸ்துவைத் தேவன் நமக்காகப் பாவமாக்கினார் (2கொரி 5:21)

II கொரிந்தியர் - தொகுப்புரை

5 அதிகாரம்

18. வேண்டிக் கொள்ளுதலின் ஊழியம் - அப 26:3 ரோமா 12:1 கொரி 1:10 எபே 4:1 1பேதுரு 2:11

2கொரி 5.20 ஆனபடியினாலே தேவனானவர் எங்களைக்கொண்டு புத்தி சொல்லுகிறதுபோல நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக் கொள்ளுகிறோம்.

2கொரி 5:21 நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்

"நமக்காகப் பாவமாக்கினார்" **(Sin- offering)** (எபே 5.2, யாத் 29:14, லேவி 4.3; லேவி 6.25, எண 8:8 சங் 40.6)

6 அதிகாரம்

2கொரி 6:1 தேவனுடைய கிருபையை நீங்கள் விருதாவாய்ப் பெறாதபடிக்கு உடன் வேலையாட்களாகிய நாங்கள் உங்களுக்குப் புத்திசொல்லுகிறோம்.

2கொரி 6:2 அநுக்கிரக காலத்திலே நான் உனக்குச் செவிகொடுத்து இரட்சணிய நாளிலே உனக்கு உதவி செய்தேன் என்று சொல்லியிருக்கிறாரே இதோ இப்பொழுது அநுக்கிரகாலம், இப்பொழுதே இரட்சணிய நாள்

2கொரிந்தியர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 1

"அநுக்கிரக காலத்திலே நான் உனக்குச் செவிகொடுத்து இரட்சணியநாளிலே உனக்கு உதவிசெய்தேன் என்று சொல்லியிருக்கிறாரே இதோ இப்பொழுது அநுக்கிர காலம். இப்பொழுதே இரட்சணிய நாள்" (2கொரி 6.2, ஏசா 49:8)

19. குற்றம் சாட்டப்படாத அர்ச்சிக்கப் பட்ட ஊழியம் - 1கொரி 1:8; பிலி 2:15; 1தீமோ 3:2 தீத்து 1:6-7

2கொரி 6:3 இந்த ஊழியம் குற்றப்படாத படிக்கு, நாங்கள் யாதொன்றிலும் இடறல் உண்டாக்காமல், எவ்விதத்தினாலேயும் எங்களை தேவஊழியக்காரராக விளங்கப் பண்ணுகிறோம்

2கொரி 6:4 மிகுந்த பொறுமையிலும், உபத்திரவங் களிலும் நெருக்கங்களிலும், இடுக்கண்களிலும்

2கொரி 6:5 அடிகளிலும் காவல்களிலும், கலகங்களிலும் பிரயாசங்களிலும், கண்விழிப்புகளிலும், உபவாசங்களிலும்,

2கொரி 6:6 கற்பிலும், அறிவிலும் நீடிய சாந்தத்திலும் தயவிலும் பரிசுத்த ஆவியிலும், மாயமற்ற அன்பிலும்,

2கொரி 6:7 சத்தியவசனத்திலும் தேவனுடைய பலத்திலும் நீதியாகிய வலதிடதுபக்கத்து ஆயுதங்களைத் தரித்திருக்கிறதிலும்,

2கொரி 6:8 கனத்திலும் கனவீனத்திலும் துர்க்கீர்த்தியிலும் நற்கீர்த்தியிலும் எத்தரென்னப் பட்டாலும் நிஜஸ்தராகவும்

2கொரி 6:9 அறியப்படாதவர் களென்னப்பட்டாலும் நன்றாய் அறியப்பட்டவர்களாகவும், சாகிறவர்கள் என்னப்பட்டாலும் உயிரோடிருக்கிறவர் களாகவும், தண்டிக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் கொல்லப்படாதவர் களாகவும்

2கொரி 6:10 துக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும் தரித்திரர் என்னப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறவர்களாகவும் ஒன்றுமில்லாதவர்களென்னப்பட்டாலும் சகலத்தையும் உடையவர்களாகவும் எங்களை விளங்கப்பண்ணுகிறோம்

இடறல் (offence) - προσκοπή - proskopee - 4349

பெண்பால் பெயர்சொல் - இடறல் (cause of offense) - ஊழியக் காரர்கள் தவறு புரியும்போது அது கவிசேஷ ஊழியத்தையே பாதிக்கும்

ஊழியக்காரர்கள் தங்களை விளங்கப் பண்ண வேண்டிய விதம்

1 இடறல் உண்டாக்காத குணம் (2கொரி 6.3)

2 மிகுந்த பொறுமை (2கொரி 6:4

3 உபத்திரவங்கள்

4 நெருக்கங்கள்

5 இடுக்கண்கள்

6 அடிகள் (2கொரி 6.5)

7 காவல்கள்

6 அதிகாரம்

8 கலகங்கள்

9 பிரயாசங்கள்

10 கண்விழிப்புகள்

11 உபவாசங்கள்

12 கற்பு (2கொரி 6:6

13 அறிவு

14 நீடிய சாந்தம்

15 தயவு

16 பரிசுத்த ஆவி

17 மாயமற்ற அன்பு

18 சத்திய வசனம் (2கொரி 6:7)

19 திவ்விய பலம்

20 ஆயுதங்கள்

21 கனம் (2கொரி 6:8

22 கனவீனம்

23 துர்க்கீர்த்தி

24 நற்கீர்த்தி

25 நிஜஸ்தர்

26 அறியப்பட்டவர்கள் (2கொரி 6:9)

27 உயிரோடிருக்கிறவர்கள்

28 கொல்லப்படாதவர்கள்

29 சந்தோஷப்படுகிறவர்கள் (2கொரி 6:10)

30 ஐசுவரியவான்களாக்குகிறவர்கள்

31 சகலத்தையும் உடையவர்கள்

ஆயுதம் (armour) - ὅπλον - hoplon - 3696

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - ஆயுதம் arms and armor (எபே 6:11)

20. மனதுருக்கமுள்ள ஊழியம் - (மத் 18:27-35; எபி 5:2; 1பேதுரு 3:8 1யோவான் 3:17)

2கொரி 6:11 கொரிந்தியரே, எங்கள் வாய் உங்களோடே பேசத் திறந்திருக்கிறது எங்கள் இருதயம் பூரித்திருக்கிறது.

2கொரி 6:12 எங்கள் உள்ளம் உங்களைக் குறித்து நெருக்கமடையவில்லை, உங்கள் உள்ளமே எங்களைக்குறித்து நெருக்கமடைந்திருக்கிறது

2கொரி 6:13 ஆதலால் அதற்குப் பதிலாக நீங்களும் பூரிப்பாகுங்களென்று பிள்ளைகளுக்குச்சொல்லுகிறேன்

"எங்கள் வாய் உங்களோடே பேசத் திறந்திருக்கிறது" - எபிரெய வழக்குச் சொல் விடுதலையோடு பேசுவதை இந்த வாக்கியம் குறிப்பிடும். (நியா 11:35; சங் 78:2; சங் 109:2; நீதி 8:6; நீதி 31:26 எசே 24:27; எசே 29:21; மத் 5:2 அப 8:35

"எங்கள் இருதயம் பூரித்திருக்கிறது" - கொரிந்தியர்களை ஏற்றுக்கொள்ளும் விதமாக பவுலின் இருதயம் விசாலமாக இருக்கிறது.

"எங்கள் உள்ளம் உங்களைக்குறித்து நெருக்கமடையவில்லை, உங்கள் உள்ளமே எங்களைக்குறித்து நெருக்கமடைந்திருக்கிறது" - பவுல் கொரிந்தியர்மீது அதிகமாக அன்புகூருகிறார் தன்னிடத்திலும் அவர்கள் அதிகமாக அன்புகூரவேண்டுமென்று விரும்புகிறார் (2கொரி 6:12 13

உள்ளம் (bowel) - σπλάγχνον - splanchnon - 4698

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - உருக்கம், உள்ளம் (inward parts) - (அப 1:18, 2கொரி 6:12; 2கொரி 7:15, லூக்கா 1:78; பிலி 1:8; பிலி 2:1, கொலோ 3:12; பிலே 1:7,12,20, 1யோவான் 3:17)

21. வேறுபிரிக்கும் ஊழியம் - (அப 3:2 ரோமர் 1:1; 12:1-2; யோவான் 15:18, யாக் 4:4; 1யோவான் 2:15, எபி 7:26

II கொரிந்தியர் – தொகுப்புரை

6 அதிகாரம்

2கொரி 6:14 அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக. நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது?

2கொரி 6:15 கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது?

2கொரி 6:16 தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன் அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே.

2கொரி 6:17 ஆனபடியால் நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

2கொரி 6:18 அப்பொழுது நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்கள் என்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்.

"அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக" இராணுவத்தில் பயன்படுத்தப்படும் வாசகம். ஒவ்வொரு இராணுவ வீரனும் தன்னுடைய பதவிக்குத் தகுந்தபடி நடந்துகொள்ள வேண்டும். விசுவாசிகள் அவிசுவாசிகளோடு விக்கிரகாராதனைக் காரியங்களிலும் தேவனுடைய நாமத்தைத் தூஷிக்கும் இதர காரியங்களிலும் கலந்து கொள்ளக்கூடாது. (1கொரி 8:1-13; 1கொரி 10:16-33)

"நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது?" இந்தக் கேள்விக்கு இல்லை என்பதே தெளிவான பதிலாகும். நீதி அநீதியோடு கலக்கமுடியாது. ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியம் இருக்க முடியாது. கிறிஸ்துவும் பேலியாளும் இசைந்திருக்க முடியாது. தேவனுடைய ஆலயத்திற்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தம் இருக்க முடியாது.

பேலியாள் (Belial) - בְּלִיַּעַל - bel-e-yah' - H1100

ஆபெலொ - பேலியாள், பொல்லாதவன், துர்ச்சனப் பிரவாகம், தீங்கு, துஷ்டன் - புதிய ஏற்பாட்டில் இந்த வசனத்தில் மட்டுமே பேலியாள் என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது ஒரு எபிரெய வார்த்தையாகும். இதற்கு பிரயோஜனமற்றது பொல்லாதது துஷ்டத்தனமானது என்று பொருள் (உபா 13:13; நியா 19:22; நியா 20:13; 1சாமு 1:16; 1சாமு 2:12; 1சாமு 10:27; 1சாமு 25:17,25; 1சாமு 30:22; 2சாமு 16:7; 2சாமு 20:1; 2சாமு 23:6; 1இராஜா 21:10,13; 2நாளா 13:7). பழைய ஏற்பாட்டில் துன்மார்க்கர் பேலியாளின் மக்கள் என்று அழைக்கப்பட்டிருப்பதைப் போன்று புதிய ஏற்பாட்டில் துன்மார்க்கர் பிசாசின் பிள்ளைகள் என்று அழைக்கப்பட்டிருக்கிறார்கள் (மத் 13:38; அப் 13:10; 1யோவான் 3:10)

2கொரிந்தியர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 2

"நான் அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன் அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள்" (2கொரி 6:16; லேவி 26:12)

"நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே" - (1கொரி 3:16-17; 1கொரி 6:19-20; 2கொரி 6:16; லூக்கா 22:3)

2கொரிந்தியர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 3

"ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமான [redacted] தொடாதிருங்கள்" (2கொரி 6:17; ஏசா 52:11)

II கொரிந்தியர் – தொகுப்புரை

6 அதிகாரம்

அசுத்த (unclean) - ἀκάθαρτος - akathartos - 169

பெயரடை - அசுத்த (foul)

(அ) சடங்காச்சாரத்தின் படி தீட்டும் அசுத்தமாகவும் இருப்பது

(ஆ) ஆன்மீக அசுத்தம் எபே 5:5

அசுத்தமானவை

1. அசுத்த ஆவி (லூக்கா 4:33)
2. தீட்டும் அசுத்தமுமான போஜனம் (அப் 10:14,28; அப் 11:8)
3. அசுத்தமாயிருக்கும் பிள்ளைகள் (1கொரி 7:14)
4. அசுத்தம் (எபே 5:5)
5. அசுத்தமானது (2கொரி 6:17)

"உங்களுக்குப் பிதாவாயிருப்பேன் நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்" - 2சாமு 7:14 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருப்பதைப் போல வாக்குத்தத்தம். தேவன் தம்முடைய பிள்ளைகளைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றிருக்கிறார் (எபே 3:14, மத் 7:11) உலகப்பிரகாரமான பெற்றோரால் நம்மைப் பூரணமாகப் பராமரிக்க முடியாது ஏனென்றால் அவர்களும் குறையுடையவர்களே ஆனால் நம்முடைய கர்த்தரோ சர்வ வல்லமையுள்ளவர் சகலமும் அவருக்குரியது. நாம் [illegible] கர்த்தருடைய குமாரராகவும் குமாரத்திகளாகவும் இருக்கும்போது நம்மை அவர் ஒரு குறைவும் இல்லாமல் பாதுகாத்துப் பராமரிப்பார்

7 அதிகாரம்

22. பரிசுத்தமான ஊழியம் - யோவான் 15:3; 17:16, 1கொரி 3:16-17; 6:9-20; எபே 4:17-32; 5:1-7; கலா 5:16-26; கொலோ 3:5-17; எபி 12:14)

2கொரி 7:1 இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலை தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்.

"இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள்" - 2கொரி 7:16-18 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் வாக்குத்தத்தங்கள்

வாக்குத்தத்தங்கள் நிறைவேற நிபந்தனைகள் (2கொரி 6:14-7:1)

1. அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்பட்டக் கூடாது. 2கொரி 6:14-16

2. அவிசுவாசிகள் நடுவிலிருந்து புறப்பட்டுப் போகவேண்டும். (2கொரி 6:17

3. அவிசுவாசிகள் நடுவிலிருந்து பிரிந்து போகவேண்டும். (2கொரி 6:17)

4. அசுத்தமானதைத் தொடக்கூடாது. (2கொரி 6:17

5. மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக் கொள்ள வேண்டும். (2கொரி 7:1; மாற்கு 7:19-21; ரோமர் 1:18-32 1கொரி 6:9-11 கலா 5:19-21 கொலோ 3:5-10)

6. பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்த வேண்டும். (2கொரி 7:1, எபே 1:4, எபே 4:24 கலா 5:24, ரோமர் 6:14-23 ரோமர் 8:1-13 எபி 12:12-15)

23. ஐக்கியத்தை விரும்பும் மனுஷ ஊழியம் - (அப் 2:42; கலா 2:9, பிலி 1:5, 2:1; 3:10; 1யோவான் 1:3,7

2கொரி 7:2 எங்களுக்கு இடங்கொடுங்கள்; நாங்கள் ஒருவனுக்கும் அநியாயஞ்செய்யவில்லை, ஒருவனையும் கெடுக்கவில்லை, ஒருவனையும் வஞ்சிக்கவில்லை.

2கொரி 7:3 உங்களைக் குற்றவாளிகளாக்கும் பொருட்டாக இப்படி நான் சொல்லுகிறதில்லை; முன்னே நான் சொல்லியபடி, உங்களுடனேகூடச் சாகவும் கூடப் பிழைக்கவுந்தக்கதாக எங்கள் இருதயங்களில் நீங்கள் இருக்கிறீர்கள்.

2கொரி 7:4 மிகுந்த தைரியத்தோடே உங்களுடன் பேசுகிறேன், உங்களைக் குறித்து மிகவும் மேன்மை பாராட்டுகிறேன், ஆறுதலால் நிறைந்திருக்கிறேன்; எங்களுக்கு உண்டான சகல உபத்திரவத்திலேயும் பரிபூரண சந்தோஷமாயிருக்கிறேன்.

இடங்கொடு (Receive) - χωρέω - chooreoo - 5562

வினைச்சொல் - ஏற்றுக்கொள், இடங்கொடு(make room) - உங்களுடைய இருதயங்களை எங்களுக்குத் திறந்து கொடுங்கள் (2கொரி 6:11-12

அப்போஸ்தலருக்கு ஏன் இடங்கொடுக்க வேண்டும்?

1. அவர்கள் ஒருவனுக்கும் அநியாயஞ் செய்யவில்லை

2. அவர்கள் ஒருவனையும் கெடுக்கவில்லை

3. அவர்கள் ஒருவனையும் வஞ்சிக்கவில்லை

கொரிந்தியரிடம் வந்திருக்கும் கள்ளப் போதகர்கள் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்காமல் வேறொரு இயேசுவைப் பிரசங்கித்து அவர்களைக் குழப்பிவிட்டார்கள். 2கொரி 11:4 அவர்கள் கொரிந்தியரை அடிமைத்தனத்திற்குள் கீழ்ப்படுத்தி தங்களை மேன்மைப்படுத்திக் கொண்டார்கள் (2கொரி 11:12-15,20) கொரிந்தியருடைய கண்களைத் திறக்கும் வண்ணமாகப் பவுல் இந்தக் காரியங்களை அவர்களுக்குக் கூறுகிறார் (2கொரி 7:2-3

II கொரிந்தியர் – தொகுப்புரை

7 அதிகாரம்

"முன்னே நான் சொல்லியபடி உங்களுடனே கூடச் சாகவும் கூடப் பிழைக்கவுந்தக்கதாக எங்களிருதயங்களில் நீங்கள் இருக்கிறீர்கள்" - (2கொரி 3:2 2கொரி 6:14; லூக்கா 22:3)

"மிகுந்த தைரியத்தோடே உங்களுடன் பேசுகிறேன்" - பவுல் கொரிந்தியரைக் குறித்து மேன்மை பாராட்டி ஆறுதலால் நிறைந்திருக்கிறார். தனக்கு உண்டான எல்லா உபத்திரவங்களிலும் பவுல் பரிபூரண சந்தோஷமாக இருக்கிறார். கொரிந்தியரைப் பற்றிய நினைவு பவுலுக்கு ஆறுதலைக் கொடுக்கிறது. தனக்கு நேரிடும் உபத்திரவங்களை எளிமையாக எண்ண வைக்கிறது.

24. போராட்டங்களும் பயங்களும் நிறைந்த ஊழியம் - 1கொரி 2:3; 2கொரி 11:3; பிலி 2:12 2தீமோ 1:15; 4:10,16

2கொரி 7:5 எப்படியென்றால், நாங்கள் மக்கெதோனியா நாட்டிலே வந்தபோது எங்கள்சரீரத்திற்கு இளைப்பாறுதல் ஒன்றுமில்லாமல், எப்பக்கத்திலேயும் உபத்திரவப்பட்டோம்; புறம்பே போராட்டங்களும்உள்ளேபயங்களும்இருந்தன

2கொரி 7:6 ஆகிலும் சிறுமைப்பட்டவர்களுக்கு ஆறுதல் செய்கிற தேவன் தீத்து வந்ததினாலே எங்களுக்கு ஆறுதல்செய்தார்

2கொரி 7:7 அவன் வந்ததினாலே மாத்திரமல்ல, உங்கள் வாஞ்சையையும், உங்கள் துக்கிப்பையும், என்னைப்பற்றி உங்களுக்கு உண்டான பக்தி வைராக்கியத்தையும் அவன் கண்டு உங்களால் அடைந்த ஆறுதலைத் தெரியப்படுத்தினதினாலும், நானும் ஆறுதலடைந்து அதிகமாய்ச் சந்தோஷப்பட்டேன்

"நாங்கள் மக்கெதோனியா நாட்டிலே வந்தபோது" துரோவாவை விட்டுப் புறப்பட்ட பின்பு (2கொரி 2:12,13) பவுல் இரண்டாம் நிருபத்தை இங்கிருந்து எழுதினார்

"புறம்பே போராட்டங்களும் இருந்தன" - புறஜாதியார் யூதர், கள்ளச்சகோதரர் ஆகியோர் மூலமாக வந்த எதிர்ப்புகள் (2கொரி 11:26)

"உள்ளே பயங்களும் இருந்தன" - கொரிந்தியருக்குத் தான் எழுதிய முதலாவது நிருபத்தினால் ஏற்பட்டிருக்கும் விளைவுகளையும், அந்த நிருபத்திற்கு அவர்கள் கீழ்ப்படிந்திருக்கிறார்களா என்பதையும் அறிந்து கொள்ளப் பவுல் ஆர்வத்துடன் இருந்தார். தீத்து பவுலைச் சந்தித்து கொரிந்தியர் அவர்மீது அன்பாக இருப்பதையும் அவருக்குக் கீழ்ப்படிந்து இருப்பதையும் அறிவிக்கிறார். இதனால் பவுலுக்கு மிகுந்த ஆறுதல் உண்டாயிற்று (2கொரி 7:5-7)

25. துக்கப்படுத்தும் ஊழியம் - 2:3-11 எபி 5:2; 2தீமோ 1:15; 4:10,16

2கொரி 7:8 ஆதலால் நான் நிருபத்தினாலே உங்களைத் துக்கப்படுத்தியிருந்தும், அந்த நிருபம் கொஞ்சப் பொழுதாகிலும் உங்களைத் துக்கப்படுத்தினதென்று கண்டு நான் மனஸ்தாபப்பட்டிருந்தும் இப்பொழுது மனஸ்தாபப்படுகிறதில்லை

2கொரி 7:9 இப்பொழுது சந்தோஷப்படுகிறேன் நீங்கள் துக்கப்பட்டதற்காக அல்ல, மனந்திரும்புகிறதற்கேதுவாகத் துக்கப்பட்டதற்காகவே சந்தோஷப்படுகிறேன் நீங்கள் ஒன்றிலும் எங்களால் நஷ்டப்படாதபடிக்கு, தேவனுக்கேற்ற துக்கம் அடைந்தீர்களே

2கொரி 7:10 தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது.

2கொரி 7:11 பாருங்கள் நீங்கள் தேவனுக்கேற்ற துக்கமடைந்ததுண்டே அது உங்களிடத்தில் எவ்வளவு ஜாக்கிரதையையும்,குற்றந்தீர எவ்வளவு வெறுப்பையும் எவ்வளவு பயத்தையும் எவ்வளவு ஆவலையும், எவ்வளவு பக்தி வைராக்கியத்தையும், எவ்வளவு கண்டிப்பையும் உண்டாக்கிற்று. இந்தக் காரியத்திலே நீங்கள் எல்லா விதத்திலும் உங்களைச் சுத்தவான்களென்று விளங்கப்பண்ணினீர்கள்

II கொரிந்தியர் – தொகுப்புரை

7 அதிகாரம்

2கொரி 7:12 ஆதலால் நான் உங்களுக்கு அப்படி எழுதியிருந்தும் அநியாயஞ் செய்தவனிமித்தமுமல்ல, அநியாயஞ் செய்யப்பட்டவனிமித்தமுமல்ல, தேவனுக்குமுன்பாக உங்களைக் குறித்து எங்களுக்கு உண்டாயிருக்கிற ஜாக்கிரதை உங்களுக்கு வெளிப்படும் பொருட்டே அப்படி எழுதினேன்.

2கொரி 7:13 இதினிமித்தம் நீங்கள் ஆறுதலடைந்ததினாலே நாங்களும் ஆறுதலடைந்தோம். விசேஷமாகத் தீத்துவினுடைய ஆவி உங்கள் அனைவராலும் ஆறுதலடைந்ததினாலே அவனுக்கு உண்டான சந்தோஷத்தினால அதிக சந்தோஷப்பட்டோம்.

2கொரி 7:14 இப்படியிருக்க உங்களுக்கு புகழ்ச்சியாய் நான் அவனுடனே சொன்ன யாதொன்றைக்குறித்தும் வெட்கப்பட மாட்டேன்; நாங்கள் சகலத்தையும் உங்களுக்குச் சத்தியமாய்ச் சொன்னது போல, தீத்துவுடனே நாங்கள் உங்களுக்குப் புகழ்ச்சியாய்ச் சொன்னதும் சத்தியமாக விளங்கிற்றே.

2கொரி 7:15 மேலும் நீங்களெல்லாரும் கட்டளைக்கு அமைந்து, பயத்தோடும் நடுக்கத்தோடும் தன்னை ஏற்றுக் கொண்டதை அவன் நினைக்கையில் அவனுடைய உள்ளம் உங்களைப்பற்றி அதிக அன்பாயிருக்கிறது.

2கொரி 7:16 ஆகையால் எல்லா விதத்திலும் உங்களைக்குறித்து எனக்குத் திடநம்பிக்கை உண்டாயிருக்கிறதென்று சந்தோஷப்படுகிறேன்.

"நானமனஸ்தாபப்பட்டிருந்தும் இப்பொழுது மனஸ்தாபப்படுகிறதில்லை" தன்னுடைய முதலாவது நிருபத்தின் மூலமாகப் பவுல் கொரிந்தியரைத்துக்கப்படுத்தினார். இதற்காகப் பவுல்மனஸ்தாபப்பட்டார். ஆனாலும்தன்னுடைய நிருபத்தின் மூலமாகக் கொரிந்தியர்கள் மனந்திரும்பியதாலும், ஆவிக்குரிய காரியங்களில் வளர்ச்சி பெற்றதாலும் தங்களுடைய முதலாவது நிருபத்திற்காகப் பவுல் இப்போது மனஸ்தாபப்படவில்லை.

"இப்பொழுது சந்தோஷப்படுகிறேன்" - கொரிந்தியர்கள் துக்கப்பட்டதற்காகப் பவுல் சந்தோஷப்படவில்லை. அவர்கள் மனந்திரும்பியதற்காகச் சந்தோஷப்படுகிறார். அவருடைய துக்கம் மனந்திரும்புகிறதற்கு ஏதுவாக இருந்தது. தேவனுக்கேற்ற துக்கம் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது. (2கொரி 7:9-10)

"நீங்கள் ஒன்றிலும் எங்களால் நஷடப் படாதபடிக்கு தேவனுக்கேற்ற துக்கம் அடைந்தீர்களே" - கொரிந்தியர்கள் மனந்திரும்பி விட்டார்கள். ஆகையினால் பவுல் அவர்களை நியாயந்தீர்க்க வேண்டிய அவசியம் இல்லாமல் போயிற்று. கொரிந்தியருக்கு ஒரு நஷ்டமும் ஏற்படவில்லை.

2கொரி 7:8-10 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் மூன்று விதமான துக்கங்கள்

1. பவுலின் துக்கம் - தன்னுடைய முதலாவது நிருபத்தில் கொரிந்தியரை அதிகமாக வருந்தச் செய்ததாகப் பவுல் சற்று துக்கப்பட்டார் (2கொரி 7:8)
2. தேவனுக்கேற்ற துக்கம் - இது இரட்சிப்புக்கேதுவானமனந்திரும்புதலை உண்டாக்குகிறது. (2கொரி 7:8-10)
3. லௌகீக துக்கம் - மரணத்தை உண்டாக்குகிறது. (2கொரி 7:10)

துக்கப்பட்டவர்களுக்கு எடுத்துக்காட்டுக்கள்

1. காயீன் (ஆதி 4:13-14)
2. ஆகார் (ஆதி 21:17)
3. அடிமைத்தனத்தில் இஸ்ரவேலர் (யாத் 3:7-10)
4. யோசேப்பிற்காக யாக்கோபு (ஆதி 37:34-35)
5. பென்யமீனுக்காக யாக்கோபு (ஆதி 43:14)
6. மலடியாக இருந்ததினால் அன்னாள் (1சாமு 1:15)
7. சவுல் - புறக்கணிக்கப்பட்டபோது (1சாமு 15:24,30)

7 அதிகாரம்

8 அப்சலோமிற்காகத் தாவீது (2சாமு 18:33-19:8)

9 மரியாளும், மார்த்தாளும் (யோவான் 11:19-40)

10 இயேசு (ஏசா 53:3; மத் 26:37-44)

11 யூதாஸ்காரியோத்து - இயேசுவைக் காட்டிக் கொடுத்ததற்காக (மத் 27:3-5)

12 கொரிந்தியர் (2கொரி 7:8-12)

தேவனுக்கேற்ற துக்கம் உண்டாக்கும் காரியங்கள்

1 ஜாக்கிரதை

2 குற்றந்தீருதல்

3 பாவத்தின்மீது வெறுப்பு

4 தேவபயமும் பாவத்தினால் ஏற்படும் விளைவும்

5 காரியங்களைச் சரிசெய்து கொள்ள வேண்டும் என்னும் ஆவல்

6 சரியான காரியத்தைச் செய்ய வேண்டும் என்னும் பக்திவைராக்கியம்

7 குற்றம் செய்தவர்களைத் தண்டிப்பதில் கண்டிப்பு

"அநியாயஞ் செய்தவனிமித்தமுமல்ல, அநியாயஞ்செய்யப்பட்டவனிமித்தமுமல்ல" - 2கொரி 5 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் வேசித்தனம் செய்தவர்கள் விபச்சாரம் செய்தவர்கள் ஆகியோரைப் பற்றிய குறிப்பு.

"உங்களுக்கு புகழ்ச்சியாய் நான் அவனுடனே சொன்ன யாதொன்றைக் குறித்தும் வெட்கப்படமாட்டேன்" - பவுல் கொரிந்தியருக்குச்சகலத்தையும் சத்தியமாகச் சொன்னார். கொரிந்தியரைக் குறித்து பவுல் தீத்துவிடம் புகழ்ச்சியாய் கூறுகிறார். பவுலுடைய புகழ்ச்சிக்குக் கொரிந்தியர்கள் பாத்திரவான்களாக இருக்கிறார்கள் (2கொரி 7:13-14). தீத்துவின் உள்ளம் கொரிந்தியரைப் பற்றி அதிக அன்பாய் இருக்கிறது. கொரிந்தியர்கள் பயத்தோடும் நடுக்கத்தோடும் பவுலை ஏற்றுக் கொண்டார்கள். அதன் நிமித்தமாகவும், தீத்து அவர்கள்மீது அன்பாக இருக்கிறான் (2கொரி 7:15).

"எல்லாவிதத்திலும் உங்களைக்குறித்து எனக்குத் திடநம்பிக்கை உண்டாயிருக்கிறதென்று சந்தோஷப்படுகிறேன்" கொரிந்தியர் மத்தியில் ஏற்பட்டிருந்த பிரிவினை இப்போது அகன்றுவிட்டது. கள்ள அப்போஸ்தலர்கள் கொரிந்தியரிடத்தில் குழப்பத்தை உண்டுபண்ணியதினால் பவுல் கொரிந்துவிற்கு வந்து அவர்களைக் கடிந்து கொள்ள வேண்டுமென்று விரும்பினார் (1கொரி 4:19-21). ஆனால் இப்போது கொரிந்தியர் மனந்திருந்தி தன்னுடைய நிருபத்தை ஏற்றுக் கொண்டபடியினால் பவுல் அவர்கள்மீது திடநம்பிக்கையாக இருந்து, சந்தோஷப்படுகிறார்.

II கொரிந்தியர் - தொகுப்புரை

8 அதிகாரம்

IV எருசலேமிலுள்ள ஏழைப் பரிசுத்தவான்களுக்கு தர்மப் பணம் சேகரிப்பு (2கொரி 8:1-9:15 அப 11:27-30; 1கொரி 16:1)

1. மக்கெதோனியா நாட்டு சபைகள்

2கொரி 8:1 அன்றியும் சகோதரரே மக்கெதோனியா நாட்டுச் சபைகளுக்கு தேவன் அளித்த கிருபையை உங்களுக்கு அறிவிக்கிறோம்

2கொரி 8:2 அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப் படுகையில் கொடிய தரித்திரமுடையவர் களாயிருந்தும் தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள்

2கொரி 8:3 மேலும் அவர்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார் களென்பதற்கு, நான் சாட்சியாயிருக்கிறேன்

2கொரி 8:4 தங்கள் உபகாரத்தையும் பரிசுத்த வான்களுக்குச் செய்யப்படும் தாம ஊழியத்தின் பங்கையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளும்படி அவர்கள் எங்களை மிகவும் வேண்டிக்கொண்டார்கள்

2கொரி 8:5 மேலும் நாங்கள் நினைத்தபடிமாத்திரம் கொடாமல் தேவனுடைய சித்தத்தினாலே முன்பு தங்களைத்தாமே கர்த்தருக்கும், பின்பு எங்களுக்கும் ஒப்புக்கொடுத்தார்கள்

"மக்கெதோனியா நாட்டுச் சபைகளுக்கு தேவன் அளித்த கிருபையை உங்களுக்கு அறிவிக்கிறோம்" எருசலேமிலுள்ள ஏழைப் பரிசுத்தவான்களுக்கு மக்கெதோனியா நாட்டுச் சபைகள் தாராளமாக உதவி புரிகிறார்கள் பவுல் இங்கு அவர்களைப் பற்றி எழுதுகிறார் (2கொரி 8:1-5)

"அவர்கள் கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும் மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள்" - மக்கெதோனியர்கள் ஏழைகள் உபத்திரவத் தினாலே சோதிக்கப் படுகிறவர்கள் ஆனாலும் யூதேயாவிலுள்ள ஏழைச் சகோதரர்களுக்கு உதவி புரிவதற்காக அவர்கள் மிகுந்த சந்தோஷமடைகிறார்கள்

உதாரத்துவம் (liberality) - ἁπλότης - haplotees - 572

மூலபாஷைச் சொல் - வஞ்சனையில்லாமை, கபடமின்மை, உதாரத்துவம், உதாரகுணம், உண்மை **(simplicity)** (ரோமர் 12:8; 2கொரி 1:12 2கொரி 11:3); **(singleness)** (எபே 6:5 கொலோ 3:22 **(liberality)** (2கொரி 8:2; 2கொரி 9:13) **(bountifulness)** (2கொரி 9:11)

நாம் உதாரத்துவமாய் இருக்க வேண்டியவர்களும், வேண்டியவைகளும்

1 தேவன் (யாத் 22:29-30 யாத் 25:1-8 யாத் 35:4-29 யாத் 36:3-6 யாத் 38:8 லேவி 19:5 எண் 35:8

2 இஸ்ரவேலின் பண்டிகைகள் (உபா 12:6-19

3 ஊழியக்காரர்கள் (உபா 12:19 உபா 14:27-29 உபா 18:1-8 நீதி 3:9, 1கொரி 9; கலா 6:6 மல 3

4 ஏழைகள் (உபா 24:19-22 சங் 41:1-3 சங் 112:5-9 நீதி 11:24, நீதி 13:7, நீதி 14:21 நீதி 19:17; நீதி 22:9, நீதி 28:27 மத் 6:1-4; மத் 19:21, மத் 25:34-46 லூக்கா 3:10-11 லூக்கா 6:38 லூக்கா 11:41 லூக்கா 12:33-34 அப் 20:35, ரோமர் 12:8-13 1கொரி 16:1-3 2கொரி 8-9; எபே 4:28, 1தீமோ 6:18 எபி 6:10; எபி 13:16; 1யோவான் 3:17

உதாரத்துவமாய் இருந்தவர்களுக்கு எடுத்துக்காட்டுக்கள்

1 பார்வோன் (ஆதி 45:18-20

2 இஸ்ரவேலர் (யாத் 35:21-29, யாத் 36:3-7)

8 அதிகாரம்

3 தாவீது (2சாமு 8:11; 1இராஜா 7:51)

4 பர்சில்லாய 2சாமு 17:27-29 2சாமு 19:32)

5 அர்வானா (2சாமு 24:22-23)

6 இஸ்ரவேலர் (1நாளா 29:6-9,16-17)

7 சாலொமோன் (1இராஜா 4:29 இராஜா 6:1-38)

8 சேபாவின் ராஜஸ்திரீ (1இராஜா 10:10)

9 சாஸ்திரி (மத் 2:11)

10 நூற்றுக்கதிபதி (லூக்கா 7:4-5)

11 நல்ல சமாரியன் (லூக்கா 10:33)

12 ஏழை விதவை (லூக்கா 21:2-4)

"தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க" - மக்கெதோனியா சபையார் தங்களுடைய திராணிக்கு மிஞ்சியும் கொடுத்தார்கள் மனப்பூர்வமாகக் கொடுத்தார்கள் தங்களுடைய உதவிகளை அப்போஸ்தலர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பது அவர்களை மிகவும் வேண்டிக் கொண்டார்கள் (2கொரி 8:3-5)

"தேவனுடைய சித்தத்தினாலே முன்பு தங்களைத்தாமே கர்த்தருக்கும் பின்பு எங்களுக்கும் ஒப்புக்கொடுத்தார்கள்" ஊழியங்களுக்கும் ஏழைகளுக்கும் பொருளுதவி செய்வதன் இரகசியம் இதுதான் ஒருவன் தன்னைக் கர்த்தரிடத்தில் ஒப்புக் கொடுக்கும்போது கர்த்தருடைய எல்லா உபதேசங்களுக்கும் அவன் மனப்பூர்வமாகக் கீழ்ப்படிகிறான்

2. தீத்துவின் ஊழியம் - புத்திமதி

2கொரி 8:6 ஆதலால் தீத்து இந்தத் தர்மகாரியத்தை உங்களிடத்தில் தொடங்கினபடியே, அதை முடிக்கவும் வேண்டுமென்று அவனைக் கேட்டுக்கொண்டோம்

2கொரி 8:7 அல்லாமலும், விசுவாசத்திலும், போதியிலும் அறிவிலும் எல்லாவித ஜாக்கிரதையிலும், எங்கள்மேலுள்ள உங்கள் அன்பிலும் மற்றெல்லாக்காரியங்களிலும், நீங்கள் பெருகியிருக்கிறதுபோல, இந்தத் தர்மக்காரியத்திலும் பெருகவேண்டும்

"தர்மகாரியம்"(grace)-2கொரி 8:1,6,7,19 2கொரி 9:14 ஆகிய வசனங்களில் ஏழைகளின்மீது இரக்கமாக இருப்பதே தர்மகாரியம் என்று அழைக்கப்படுகிறது

கொரிந்து சபையின் ஆசீர்வாதங்கள்

1 எல்லாவற்றிலும் பெருகினார்கள் (2கொரி 8:7)

2 விசுவாசத்தில் பெருகினார்கள் (2கொரி 8:7; 2கொரி 12:9)

3 போதிப்பு - அந்நிய பாஷைகள், பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல் தீர்க்கதரிசனம் ஆகிய வரங்களில் விருத்தி அடைந்தார்கள் (2கொரி 8:7; 1கொரி 12:10 1கொரி 14:1-40)

4 அறிவில் விருத்தியடைந்தார்கள் (2கொரி 8:7, 1கொரி 12:8)

5 எல்லாவித ஜாக்கிரதையிலும் விருத்தியடைந்தார்கள் (2கொரி 8:7, 2கொரி 7:11)

6 அன்பில் விருத்தியடைந்தார்கள் (2கொரி 8:7; 1கொரி 13:1-13)

7 கொடுக்கும் கிருபையில் பெருகினார்கள் (2கொரி 8:7, 2கொரி 8:6)

3. பவுலின் விண்ணப்பத்திற்குக் காரணங்கள்

2கொரி 8:8 இதை நான் கட்டளையாகச் சொல்லாமல், மற்றவர்களுடைய ஜாக்கிரதையைக் கொண்டு, உங்கள் அன்பின் உண்மையைச் சோதிக்கும் பொருட்டே சொல்லுகிறேன்

8 அதிகாரம்

2கொரி 8:9 நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு உங்கள்நிமித்தம் தரித்திரரானாரே.

2கொரி 8:10 இதைக்குறித்து என் யோசனையை உங்களுக்கு அறிவிக்கிறேன்; இதைச் செய்கிறதற்கு மாத்திரமல்ல, செய்ய வேண்டுமென்று உற்சாகப்படுகிறதற்கும் ஒரு வருஷமாய் ஆரம்பம்பண்ணின உங்களுக்கு இது தகுதியாயிருக்கும்.

2கொரி 8:11 ஆகையால் அதை இப்பொழுது செய்து நிறைவேற்றுங்கள்; கொடுக்கவேண்டும் என்கிற விருப்பமுண்டாயிருந்ததுபோல, உங்களுக்கு உள்ளவைகளில் எடுத்து அதை நிறைவேற்றுதலும் உண்டாவதாக.

2கொரி 8:12 ஒருவனுக்கு மனவிருப்பமிருந்தால், அவனுக்கு இல்லாததின்படியல்ல, அவனுக்கு உள்ளதின்படியே அங்கிகரிக்கப்படும்.

"இதை நான் கட்டளையாகச் சொல்லாமல்" பவுல் இதைக் கட்டளையாகச் சொல்லவில்லை. ஏனெனில் அவர்களுடைய ஆஸ்திகளின்மேல் பவுலுக்கு அதிகாரமில்லை. அவர்களுடைய ஆத்துமாக்களுக்கு மட்டுமே பவுல் உத்தரவாதம் அளித்தார். தர்மகாரியத்தில் கொரிந்தியர் பெருக வேண்டும். மற்ற சபையார் தர்மகாரியம் செய்வதில் உதாரத்துவமாக இருப்பது போன்று கொரிந்தியரும் தாராளமாக உதவிபுரிய வேண்டுமென்று பவுல் வலியுறுத்துகிறார் (2கொரி 8:2-5).

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே" கொடுக்கும்கிருபை கட்டளையின் மூலமாக வரவில்லை (2கொரி 8:8). மற்ற சபைகளின் முன்மாதிரியினால் வருகிறது (2கொரி 8:2-5). இயேசு கிறிஸ்துவே நமக்கு முன்மாதிரியாக இருக்கிறார். எல்லா சபைகளும் ஐசுவரியவான்களாக ஆகவேண்டும் என்பதற்காக அவர் தரித்திரரானார்.

"அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே" - இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் ஏழைக் குடும்பத்தில் பிறந்தார். மாட்டுத் தொழுவத்தில் பிறந்ததிலிருந்து கல்வாரிச் சிலுவையில் மரிக்கும் வரையிலும் அவருக்கென்று சொத்து சுகம் எதுவுமில்லை. அவர் அடக்கம்பண்ணப்பட்ட கல்லறைகூட அவருக்குச் சொந்தமானதல்ல. ஆனாலும் மனுஷனாக இருந்த இயேசு கிறிஸ்து நித்திய காலமாகத் தேவனாகவும் இருக்கிறார் (மீகா 5:1-2; யோவான் 1:1-2). தமது வாயின் வார்த்தையினால் இந்த உலகத்தைச் சிருஷ்டித்தார். இந்த உலகமும் இதிலுள்ள சர்வ சிருஷ்டிகளும் இயேசுகிறிஸ்துவிற்கே உரியது (எபே 3:9; யோவான் 1:3; கொலோ 1:15-18). தமது தெய்வீகத்துவத்தையும் எல்லா ஐசுவரியங்களையும் ஒதுக்கி வைத்துவிட்டு, பாவிகளை இரட்சிப்பதற்காக மனுஷ ரூபம் எடுத்தார். ஐசுவரியவானாக இருந்த இயேசு கிறிஸ்து நமக்காகத் தரித்திரரானார். மனுஷருடைய பாவங்களுக்குப் பதிலீடாகக் கல்வாரி சிலுவையில் தமது திருஇரத்தத்தைச் சிந்தி மரித்தார். தம்மிடத்தில் விசுவாசம் வைக்கிற யாவரையும் இரட்சிக்கிறார் (யோவான் 3:16). இரட்சிக்கப்படுகிறவர்கள் தேவனுடைய சுதந்தரவாளிகளாகவும், தேவனுடைய எல்லா ஐசுவரியங்களுக்கும் கிறிஸ்துவோடு உடன் சுதந்தரராகவும் இருக்கிறார்கள் (பிலி 2:5-11; யோவான் 3:16; ரோமர் 8:17-18; கொலோ 3:1-4; வெளி 1:5-6; வெளி 5:10; வெளி 11:15; வெளி 22:4-5).

"ஒரு வருஷமாய் ஆரம்பம்பண்ணினது" - ஒரு வருஷ காலமாக ஏழைகளுக்கு உதவும் பழக்கத்தைக் கொரிந்தியர் ஆரம்பித்து இருக்கிறார்கள் (2கொரி 8:10-12).

4. கொடுப்பதில் சமநிலை

2கொரி 8:13 மற்றவர்களுக்குச் சகாயமும் உங்களுக்கு வருத்தமும் உண்டாகும்படியல்ல, சமநிலையிருக்கும்படியாகவே சொல்லுகிறேன்.

II கொரிந்தியர் - தொகுப்புரை

8 அதிகாரம்

2 கொரி 8:14 எப்படியெனில் மிகுதியாய்ச் சேர்த்தவனுக்கு அதிகமானதுமில்லை, கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்குக் குறைவானதுமில்லை என்று எழுதியிருக்கிறபிரகாரம்

2 கொரி 8:15 சமநிலைப் பிரமாணத்தின்படியே, அவர்களுடைய செல்வம் உங்கள் வறுமைக்கு உதவும்படிக்கு இக்காலத்திலே உங்களுடைய செல்வம் அவர்களுடைய வறுமைக்கு உதவுவதாக.

"மற்றவர்களுக்குச் சகாயமும் உங்களுக்கு வருத்தமும் உண்டாகும்படியல்ல, சமநிலையிருக்கும்படியாகவே சொல்லுகிறேன்" - பெறுகிறவர்களுக்குச் சகாயமும் கொடுக்கிறவர்களுக்கு வருத்தமும் உண்டாகக்கூடாது. கொரிந்தியருடைய தேவைகளெல்லாம் சந்திக்கப்பட்ட பின்பு, தங்களிடத்தில் தங்களுடைய தேவைகளுக்கு அதிகமாக இருக்கும் பொருட்களைத் தேவைப்படுவோருக்கு உதவிபுரிய வேண்டும். சூழ்நிலைகள் காலத்திற்கு ஏற்ற பிரகாரமாக மாறலாம். இப்போது கொரிந்தியர் கொடுக்கிறவர்களாகவும், யூதேயாவிலுள்ள கிறிஸ்தவர்கள் பெறுகிறவர்களாகவும் இருக்கிறார்கள். காலம் மாறினால் கொரிந்தியர் பெறுகிறவர்களாகவும், யூதேயாவிலுள்ள கிறிஸ்தவர்கள் கொடுக்கிறவர்களாகவும் இருப்பார்கள் (2 கொரி 8:13,14).

"மிகுதியாய்ச் சேர்த்தவனுக்கு அதிகமானதுமில்லை, கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்குக் குறைவானதுமில்லை" யாத் 16:18 ஆவது வசனம் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

5. தீத்துவை கொரிந்துவிற்கு அனுப்புகிறார் - (12:17)

2 கொரி 8:16 அன்றியும், உங்களுக்காக இப்படிப்பட்ட ஜாக்கிரதை உண்டாயிருக்கும்படி தீத்துவின் இருதயத்தில் அருளின தேவனுக்கு ஸ்தோத்திரம்.

2 கொரி 8:17 நாங்கள் கேட்டுக்கொண்டதை அவன் அங்கிகரித்ததுமல்லாமல், அவன் அதிக ஜாக்கிரதையாயிருந்து, தன் மனவிருப்பத்தின்படியே உங்களிடத்திற்கு வரப் புறப்பட்டான்.

2 கொரி 8:18 சுவிசேஷ ஊழியத்தில் எல்லாச் சபைகளிலும் புகழ்ச்சிபெற்ற ஒரு சகோதரனை அவனோடேகூட அனுப்பியிருக்கிறோம்.

2 கொரி 8:19 அதுமாத்திரமல்ல, கர்த்தருக்கு மகிமையுண்டாகவும், உங்கள் மனவிருப்பம் விளங்கவும், எங்கள் ஊழியத்தினாலே சேர்க்கப்படும் தர்மப்பணத்தைக் கொண்டுபோகையில் எங்களுக்கு வழித்துணையாயிருக்கும்படி, அவன் சபைகளால் தெரிந்து ஏற்படுத்தப்பட்டவனாயும் இருக்கிறான்.

2 கொரி 8:20 எங்கள் ஊழியத்தினாலே சேர்க்கப்படும் இந்த மிகுதியான தர்மப்பணத்தைக்குறித்து ஒருவனும் எங்களைக் குற்றப்படுத்தாதபடிக்கு நாங்கள் எச்சரிக்கையாயிருந்து,

2 கொரி 8:21 கர்த்தருக்கு முன்பாக மாத்திரமல்ல, மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுகிறோம்.

2 கொரி 8:22 மேலும், அநேக காரியங்களில் ஜாக்கிரதையுள்ளவனென்று நாங்கள் பலமுறை கண்டறிந்தவனும், இப்பொழுது உங்கள்மேலுள்ள மிகுந்த நம்பிக்கையினாலே அதிக ஜாக்கிரதையுள்ளவனுமாகிய நம்முடைய சகோதரனையும் இவர்களோடேகூட அனுப்பியிருக்கிறோம்.

2 கொரி 8:23 தீத்துவைக்குறித்து ஒருவன் விசாரித்தால், அவன் எனக்குக் கூட்டாளியும், உங்களுக்காக என் உடன்வேலையாளுமாயிருக்கிறானென்றும்; எங்கள் சகோதரரைக் குறித்து ஒருவன் விசாரித்தால், அவர்கள் சபைகளுடைய ஸ்தானாபதிகளும், கிறிஸ்துவுக்கு மகிமையுமாயிருக்கிறார்களென்றும் அறியக்கடவன்.

II கொரிந்தியர் - தொகுப்புரை

8 அதிகாரம்

"சுவிசேஷ ஊழியத்தில் எல்லாச் சபைகளிலும் புகழ்ச்சிபெற்ற ஒரு சகோதரனை அவனோடே கூட அனுப்பியிருக்கிறோம்" - இந்தச் சகோதரன் யாரென்று தெரியவில்லை. எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்கு கொடுக்கப்படும் தருமப்பணத்தைப் பெற்றுக் கொள்வதற்காக பவுல் தீத்துவையும், அவரோடுகூட இந்தச் சகோதரரையும் அனுப்பி வைக்கிறார் (2கொரி 8:16-18)

"அவன் சபைகளால் தெரிந்து ஏற்படுத்தப்பட்டவனாயும் இருக்கிறான்" - பவுலோடு வேறு சிலரும் பிரயாணம் பண்ணியிருக்கிறார்கள். தீமோத்தேயு, சீலா, தீத்து, லூக்கா மேலும் பலரும் பவுலோடு பிரயாணம் பண்ணியவர்கள். பவுல் தனியாகச் சென்று எந்தச் சபையிலும் தருமப்பணத்தைச் சேகரிக்கவில்லை. தருமப்பணத்தைச் சேகரிப்பதற்கு ஒரு சகோதரனை மட்டும் தனியாக அனுப்பவில்லை (2கொரி 8:16-20). தேவனுக்கு முன்பாகவும், மனுஷருக்கு முன்பாகவும் யாரும் தன்னைக் குற்றப்படுத்தாதபடிக்கு பவுல் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்கிறார் (2கொரி 8:20-23)

ஸ்தானாபதி (messengers) - ἀπόστολος - apostolos - 652

ஆண்பால் பெயர்ச்சொல் - அப்போஸ்தலர், அப்போஸ்தலன், அனுப்பப்பட்டவன், ஸ்தானாபதி. பன்னிரண்டு சீஷர்களைக் குறிப்பதற்கும் (மத் 10:2) (apostles) முக்கியமான கிறிஸ்தவத் தலைவர்களைக் குறிப்பதற்கும் (அப் 14:14, 15:33) புதிய ஏற்பாட்டில் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

6. உண்மையுள்ளவர்களாக இருக்கும்படி விண்ணப்பம்

2கொரி 8:24 ஆதலால் உங்கள் அன்பையும், நாங்கள் உங்களைக்குறித்துச் சொன்ன புகழ்ச்சியையும், சபைகளுக்கு முன்பாக அவர்களுக்குத் திருஷ்டாந்தப்படுத்துங்கள்

9 அதிகாரம்

7. பக்தி வைராக்கியத்திற்காக புகழ்ந்துரை

2கொரி 9:1 பரிசுத்தவான்களுக்குச் செய்யவேண்டிய தர்மசகாயத்தைக் குறித்து, நான் அதிகமாக உங்களுக்கு எழுதவேண்டுவதில்லை.

2கொரி 9:2 உங்கள் மனவிருப்பத்தை அறிந்திருக்கிறேன்; அகாயா விலுள்ளவர்கள் ஒருவருஷமாக ஆயத்தமாயிருக்கிறார்களென்று நான் மக்கெதோனியருடனே சொல்லி, உங்களைப் புகழ்ந்தேனே; உங்கள் ஜாக்கிரதை அநேகரை எழுப்பி விட்டதுமுண்டு.

"அகாயாவிலுள்ளவர்கள் ஒருவருஷமாக ஆயத்தமாயிருக்கிறார்களென்று நான் மக்கெதோனியருடனே சொல்லி, உங்களைப் புகழ்ந்தேனே" - மக்கெதோனியாவிலுள்ள சபைகளிடம் பவுல் அகாயாவிலுள்ள சபையாரைப் பற்றிப் புகழ்ந்து கூறுகிறார். ஒரு வருஷத்திற்கு முன்பாகவே ஏழைப் பரிசுத்தவான்களுக்கு உதவி புரிய அவர்கள் ஆயத்தமாக இருக்கிறார்கள் (2கொரி 8:10) ஏழைகளுக்கு உதவி புரிய வேண்டும் என்னும் ஆர்வம் அவர்களிடம் அதிகமாக இருந்தது. அதைக் கண்ட மற்றவர்களும் ஏழைகளுக்கு உதவி புரிய முன்வருகிறார்கள். ஆகையினால் "உங்கள் ஜாக்கிரதை அநேகரை எழுப்பிவிட்டது முண்டு" என்று பவுல் எழுதுகிறார்.

8. மற்றவர்களிடம் இவர்களைக் குறித்து புகழ்ந்த பிரகாரம் வாழ வேண்டும் என்னும் விண்ணப்பம்

2கொரி 9:3 அப்படியிருந்தும், உங்களைக் குறித்து நாங்கள் சொன்ன புகழ்ச்சி இந்தக் காரியத்தில் வீணாய்ப்போகாமல், நான் சொன்னபடி நீங்கள் ஆயத்தப் பட்டவர்களாயிருப்பதற்கு, இந்தச் சகோதரரை அனுப்பினேன்.

2கொரி 9:4 மக்கெதோனியர் என்னுடனேகூட வந்து, உங்களை ஆயத்தப்படாதவர்களாகக் கண்டால், இவ்வளவு நிச்சயமாய் உங்களைப் புகழ்ந்ததற்காக நீங்கள் வெட்கப் படுவீர்களென்று நாங்கள் சொல்லாமல், நாங்களே வெட்கப்பட வேண்டியதாயிருக்கும்.

2கொரி 9:5 ஆகையால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற உங்கள் தானதர்மமானது லோபத்தனமாய்க் கொடுக்கப் பட்டதாயிராமல், உதாரத்துவமாய்க் கொடுக்கப் பட்டதாயிருக்கும்படியாக அதை ஆயத்தப் படுத்துகிறதற்குச் சகோதரரை ஏவி, உங்களிடத்தில் முன்னதாக அனுப்புவது எனக்கு அவசியம் என்று காணப்பட்டது.

"நான் சொன்னபடி நீங்கள் ஆயத்தப் பட்டவர்களாயிருப்பதற்கு இந்தச் சகோதரரை அனுப்பினேன்" - அகாயாவிலுள்ள சபையார் தருமப்பணத்தை ஆயத்தமாக வைத்திருக்கிறார்கள். மக்கெதோனியாவிலிருந்து சகோதரர்கள் பவுலோடு அகாயாவிற்கு வரும் போது தருமப்பணம் ஆயத்தமாக இருக்க வேண்டும். அப்போதுதான் பவுல் அவர்களைக் குறித்துச் சொன்ன புகழ்ச்சி வீணாய்ப் போகாமல் மெய்யாய் இருக்கும் (2கொரி 9:4). ஆகையினால் சகோதரர்கள் அகாயாவிற்கு வருவதற்கு முன்பாக அவர்கள் தருமப்பணத்தை ஆயத்தமாக வைத்திருக்கு மாறு எழுதுகிறார். அவர்களுடைய தானதர்மமானது லோபத்தனமாய்க் கொடுக்கப்பட்ட தாயிராமல் உதாரத்துவமாய்க் கொடுக்கப் பட்டதாயிருக்க வேண்டும் (2கொரி 9:5).

9. உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்

2கொரி 9:6 பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், சிறுகவிதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்.

2கொரி 9:7 அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

II கொரிந்தியர் – தொகுப்புரை

9 அதிகாரம்

2கொரி 9:8 மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும் சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்.

2கொரி 9:9 வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான்; அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும் என்று எழுதியிருக்கிறபடியாகும்.

"சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான்; பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்" - இது இயற்கையின் பிரமாணம். வேதாகமத்தில் இந்தப் பிரமாணத்தை இயேசு கிறிஸ்து (லூக்கா 6:38), சாலொமோன் (பிர 11:1; நீதி 11:24-25; நீதி 19:17; நீதி 22:9), தாவீது (சங் 18:25; சங் 41:1-2) ஆகியோர் கூறியிருக்கிறார்கள்.

மனுஷன் கொடுக்க வேண்டிய விதம்

1 மனதில் நியமித்தபடியே கொடுக்க வேண்டும்.

2 விசனமில்லாமல் கொடுக்க வேண்டும்.

3 கட்டாயப்படுத்தாமல் கொடுக்க வேண்டும்.

4 உற்சாகமாய் கொடுக்க வேண்டும்.

தேவன் பிரியமுள்ளவராய் இருக்கும் காரியங்கள்

1 அந்நியர் (உபா 10:18)

2 நீதி (சங் 11:7)

3 நியாயத்தீர்ப்பு (சங் 37:28)

4 சீயோனின் வாசல்கள் (சங் 87:2)

5 நீதிமான் (சங் 146:8)

6 உற்சாகமாய் கொடுக்கிறவன் (2கொரி 9:7)

7 தேவனால் சிட்சிக்கப்படுகிறவன் (எபி 12:6)

உற்சாகம் (cheerful) - ἱλαρός **hilaros** - 2431

பொருள் - உற்சாகமான (**joyful, hilarious**) கட்டாயப்படுத்தப்படாமல் முறுமுறுப்பில்லாமல் மனதில் உற்சாகத்தோடு கொடுப்பது.

தேவன் எதைச் செய்ய வல்லவராய் இருக்கிறார்?

1. இப்போது இருப்பதைப் பார்க்கிலும் அதிகமாய் கர்த்தர் உமக்குக் கொடுக்கக்கூடும். (2நாளா 25:9)

2 உங்களைத் தப்புவிக்க வல்லவராய் இருக்கிறார் (தானி 3:17)

3 தேவன் இந்தக் கல்லுகளினாலே பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராய் இருக்கிறார் (மத் 3:9)

4 ஆத்துமாவையும், சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவர் (மத் 10:28)

5. அவர்களை மறுபடியும் ஒட்ட வைக்கிறதற்கு தேவன் வல்லவராய் இருக்கிறார் (ரோமர் 11:23)

6 தேவன் அவனை நிலைநிறுத்த வல்லவராய் இருக்கிறார் (ரோமர் 14:4)

7 தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராய் இருக்கிறார் (2கொரி 9:8)

8 அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ள வல்லவராய் இருக்கிறார் (பிலி 3:21)

9 நான் அவரிடத்தில் ஒப்புக் கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக் கொள்ள வல்லவராயிருக்கிறார் (2தீமோ 1:12)

10 அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராய் இருக்கிறார் (எபி 2:18)

11 தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமை உள்ளவர் (எபி 5:7)

II கொரிந்தியர் - தொகுப்புரை

9 அதிகாரம்

12 அவர்களை முற்று முடிய இரட்சிக்க வல்லவராய் இருக்கிறார் (எபி 7:25)

"நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயு மிருக்கும்படியாக" - எல்லா விசுவாசிகளிடத்திலும் இந்த ஆசீர்வாதம் பூரணமாக இருக்க வேண்டும். இந்த ஆசீர்வாதம் ஒருவரிடம் இல்லையென்றால் சுவிசேஷத்தினால் வரும் பராமரிப்பில் அவர் குறைவுடையவராகவே இருக்கிறார். நாம் விதைக்கும் அளவுக்குத் தக்கதாக அறுவடை செய்வோம். (2கொரி 9:6). இது இயற்கையின் பிரமாணம். 2கொரி 9:9-10 ஆகிய வசனங்களின் பிரகாரம் தேவனே நீதியின் விளைச்சலை வர்த்திக்கச் செய்கிறவர். விதையை அளித்துப் பெருகப் பண்ணுகிறவர். நாம் ஏழைகளுக்குக் கொடுப்பது நமக்கே திரும்பிக் கொடுக்கப்படும். (2கொரி 9:6; லூக்கா 6:38) நாம் விதையை விதைத்தால் அறுவடையை அறுப்போம். (2கொரி 9:10)

"சகலவித நற்கிரியைகளிலும்" - ஏழைக்கு உதவுவது ஒரு நற்கிரியை. சகலவித நற்கிரியைகள் என்பது இந்த நற்கிரியை யையும், மேலும் பல நற்கிரியைகளையும் குறிக்கும். விசேஷமாக சுவிசேஷத்தின் அற்புதமான கிரியைகளை இந்த வாக்கியம் குறிக்கிறது. (1கொரி 15:58)

2கொரிந்தியர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 4

"வாரியிறைத்தான் ஏழைகளுக்குக் கொடுத்தான்; அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும்" (2கொரி 9:9; சங் 112:9)

10. தேவன் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச் செய்வார்

2கொரி 9:10 விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறதற்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து, அதைப் பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச்செய்வார்.

2கொரி 9:11 தேவனுக்கு எங்களால் ஸ்தோத்திரமுண்டாவதற்கு ஏதுவாயிருக்கும் மிகுந்த உதாரகுணத்திலே நீங்கள் எவ்விதத்திலும் சம்பூரணமுள்ளவர்களாவீர்கள்.

2கொரி 9:12 இந்தத் தர்மசகாயமாகிய பணிவிடை பரிசுத்தவான்களுடைய குறைகளை நீக்குகிறதுமல்லாமல், அநேகர் தேவனை ஸ்தோத்திரிப்பதினாலே சம்பூரண பலனுள்ளதாயும் இருக்கும்.

2கொரி 9:13 அவர்கள் இந்தத் தர்மசகாயத்தினாலாகிய நன்மையை அனுபவித்து, நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கீழ்ப்படிதலோடே அறிக்கையிட்டிருக்கிறதினிமித்தமும், தங்களுக்கும் மற்ற அனைவருக்கும் நீங்கள் உதாரத்துவமாய்த் தர்மஞ்செய்கிறதினிமித்தமும் அவர்கள் தேவனை மகிமைப்படுத்தி,

2கொரி 9:14 உங்களுக்காக வேண்டுதல் செய்து, தேவன் உங்களுக்கு அளித்த மிகவும் விசேஷித்த கிருபையினிமித்தம் உங்கள்மேல் வாஞ்சையாயிருக்கிறார்கள்.

2கொரி 9:15 தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்.

வர்த்திக்கச்செய் (ministereth) - ἐπιχορηγέω - epichoreegeoo - 2023

விளைச்சொல் - அளி, வர்த்திக்கச்செய், வளர்த்தேறு, கூட்டு (to supply; to aid). (2கொரி 9:10; கலா 3:5; 2பேதுரு 1:11) விதைக்கிறவனுக்கு விதையைக் கொடுக்கிறவரும் புசிக்கிறவனுக்கு ஆகாரத்தைக் கொடுக்கிறவரும் தேவனே. எல்லாம் தேவனிடமிருந்தே வருகிறது. தேவனுடைய பராமரிப்பில்லாமல் நமக்கு ஒன்றும் கிடைக்காது. தமது பராமரிப்பை எவ்வாறு வழங்க வேண்டும் என்பது தேவனுக்கு உரிய காரியம். தேவனே நீதியை விளைச்சலை வர்த்திக்கச் செய்கிறார். தேவன் விதைப்பை ஆசீர்வதித்து சுவிசேஷத்தைப் பெருகச் செய்கிறார்.

II கொரிந்தியர் – தொகுப்புரை

9 அதிகாரம்

அளி (minister) - χορηγέω - choreegeoo - 5524

வினைச்சொல் - அளி, தந்தருள் - (2கொரி 9:10, 1பேதுரு 4:11)

"தேவனுக்கு எங்களால் ஸ்தோத்திர முண்டாவதற்கு ஏதுவாயிருக்கும் மிகுந்த உதாரகுணத்திலே நீங்கள் எவ்விதத்திலும் சம்பூரணமுள்ளவர்களாவீர்கள்" - தம்முடைய நாம மகிமைக்காக தேவன் ஐசுவரியங்களை வர்த்திக்கப் பண்ணுகிறார் 2கொரி 9:9-10 ஆகிய வசனங்களைத் தனியாக வாசிக்க வேண்டும் 2கொரி 9:11 ஆவது வசனத்தை 2கொரி 9:8 ஆவது வசனத்தோடு சேர்த்து வாசிக்க வேண்டும்

"இந்தத் தர்மசகாயமாகிய பணிவிடை" - 2கொரி 9:4 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் ஊழியம்.

பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்வதினால் உண்டாகும் நன்மைகள்

1. பரிசுத்தவான்களுடைய [illegible] நீக்குகிறது
2. அநேகர் தேவனை ஸ்தோத்திரிப்பதினாலே சம்பூரண பலனுள்ளதாய் இருக்கிறது.
3. தர்மசகாயம் பண்ணுகிறவன் தான் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்திருப்பதை வெளிப்படுத்துகிறான் 2கொரி 9:13 1யோவான் 3:17
4. இந்தத் தர்மசகாயத்தினாலாகிய நன்மையை அனுபவித்தவர்கள் தேவனை மகிமைப்படுத்தி தங்களுக்கு உதவிசெய்தவர்களுக்காக வேண்டுதல் செய்கிறார்கள் 2கொரி 9:14)

அனுபவித்தல் (experiment) - δοκιμή dokimee 1382

பெண்பால் பெயர்ச்சொல் - பரீட்சை சோதித்தறிதல் அனுபவித்தல், அத்தாட்சி, அறிதல் 2கொரி 2:9

"நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கீழ்ப்படிதலோடே அறிக்கை பண்ணியிருக்கிறதினிமித்தமும், தங்களுக்கும் மற்ற அனைவருக்கும் நீங்கள் உதாரத்துவமாய்த் தர்மஞ்செய்கிறதினிமித்தமும்" - தர்மம் செய்கிறவர்கள் தங்களுடைய விசுவாச அறிக்கைக்கு ஏற்ற பிரகாரமாக கிரியை செய்கிறார்கள் அதினால் உதவி பெறுகிறவர்கள் தேவனை ஸ்தோத்திரிக்கிறார்கள் தருமம் செய்வது நமது கிறிஸ்தவ விசுவாசத்தையும் பிரமாணித்து நாம அன்புகூருவதையும் வெளிப்படுத்துகிறது (1யோவான் 3:17

"தேவன் உங்களுக்கு அளித்த மிகவும் விசேஷித்த கிருபை" தேவன் கொரிந்தியரை ஆசீர்வதித்திருக்கிறார் பிறருக்கு உதவி செய்யும் அளவிற்கு அவர்களுக்கு பொருளையும் இருதயத்தையும் தேவன் கொடுத்திருக்கிறார் கொரிந்தியர் மனோவாஞ்சையாக உதவி செய்வதற்கு தேவனுடைய கிருபையே ஆதாரமாக இருக்கிறது.

சொல்லிமுடியாத ஈவு (unspeakable gift) ἀνεκδιήγητος anekdieegeetos 41

பெயரடை - சொல்லிமுடியாத, தேவன் தமது ஒரேபேறான குமாரனை நமக்கு ஈவாகக் கொடுத்திருக்கிறார் (யோவான் 4:10 2கொரி 8:9 ரோமர் 9:5; ரோமர் 11:33,36, 1கொரி 15:57; கலா 1:4; எபே 3:10, 1தீமோ 1:17)

10 அதிகாரம்

V. பவுல் தனது அப்போஸ்தல ஊழியத்தை உறுதிபண்ணுகிறார் - 2கொரி 10:1-13:14 (1கொரி 9 கலா 1:1-2)

1. பவுலின் போராயுதங்கள்

2கொரி 10:1 உங்களுக்கு முன்பாக இருக்கும்போது தாழ்மையாயும் தூரத்திலே இருக்கும்போது உங்கள்மேல் கண்டிப்பாயும் இருக்கிற பவுலாகிய நான் கிறிஸ்துவின் சாந்தத்தையும் தயவையும் முன்னிட்டு உங்களுக்கு புத்தி சொல்லுகிறேன்

2கொரி 10:2 எங்களை மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் என்று எண்ணுகிற சிலரைக்குறித்து நான் கண்டிப்பாயிருக்கவேண்டுமென்று நினைத்திருக்கிற தைரியத்தோடே, உங்கள் முன்பாக இருக்கும்போது, நான் கண்டிப்புள்ளவனாயிராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருக்க உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்

2கொரி 10:3 நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும் மாம்சத்தின்படி போர் செய்கிறவர்களல்ல

2கொரி 10:4 எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது.

2கொரி 10:5 அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்

"கிறிஸ்துவின் சாந்தத்தையும் தயவையும் முன்னிட்டு உங்களுக்கு புத்திசொல்லுகிறேன்" - 2கொரி 8-9 ஆகிய அதிகாரங்களில் பரிசுத்தவான்களுக்குத் தருமப்பணம் சேகரிப்பதைக் குறித்துப் பவுல் தனது ஆலோசனைகளில் கூறியிருக்கிறார் 2கொரி 10 ஆவது அதிகாரத்தில் கொரிந்துவிலுள்ள கள்ள அப்போஸ்தலர்களைக் குறித்துப் பவுல் எச்சரித்துக் கூறுகிறார் (2கொரி 10:1-10)

"நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும், மாம்சத்தின்படி போர் செய்கிறவர்களல்ல" - 2கொரி 10:1-2 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்களைப் பவுல் மறுத்துக் கூறுகிறார் அவர் மாம்சத்தில் ஜீவிக்கிறவராக இருந்தாலும் மாம்சத்தின் பிரகாரமாகப் போர்செய்யவில்லை. (2கொரி 10:3-5) அவருடைய போராயுதங்கள் மாம்சத்திற்கேற்றவைகள் அல்ல. 2கொரி 10:4-5 எபே 6:10-18 1தீமோ 1:18 2தீமோ 2:3-5 ரோமர் 13:12

ஆவிக்குரிய போராயுதங்களின் வெற்றிகள்

1 அரண்களை நிர்மூலமாக்குகிறது (2கொரி 10:4)

2 தர்க்கங்களையும், மேட்டிமைகளையும் நிர்மூலமாக்குகிறது (2கொரி 10:5)

3 எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறது (2கொரி 10:5) மத் 15:19, மாற்கு7:21-22,1கொரி 13:5 கலா 5:19 பிலி 4:8; ஆதி 6:5; நீதி 15:26, ஏசா 55:7; ஏசா 59:7; எரே 4:14

4 எல்லாக் கீழ்ப்படியாமைக்குந்தக்க நீதியுள்ள தண்டனையைச் செலுத்த ஆயத்தமாயிருக்கிறது (2கொரி 10:6)

2. கிரியைகளோடு வருகிறார் - (12:19, 1கொரி 4:18-21)

2கொரி 10:6 உங்கள் கீழ்ப்படிதல் நிறைவேறும்போது எல்லாக் கீழ்ப்படியாமைக்குந்தக்க நீதியுள்ள தண்டனையைச் செலுத்த ஆயத்தமாயுமிருக்கிறோம்.

2கொரி 10:7 வெளித்தோற்றத்தின்படி பார்க்கிறீர்களா? ஒருவன் தன்னைக் கிறிஸ்துவுக்குரியவனென்று நம்பினால், தான் கிறிஸ்துவுக்குரியவனாயிருக்கிறது போல நாங்களும் கிறிஸ்துவுக்குரியவர்களென்று அவன் தன்னிலேதானே சிந்திக்கக்கடவன்

II கொரிந்தியர் - தொகுப்புரை

10 அதிகாரம்

2கொரி 10:8 மேலும், உங்களை நிர்மூலமாக்குகிறதற்கல்ல, உங்களை ஊன்றக் கட்டுகிறதற்குக் கர்த்தர் எங்களுக்குக் கொடுத்த அதிகாரத்தைக்குறித்து, நான் இன்னும் சற்றே அதிகமாய் மேன்மை பாராட்டினாலும் நான் வெட்கப்படுவதில்லை. 2கொரி 10:9 நான் நிருபங்களாலே உங்களைப் பயமுறுத்துகிறவனாய்த் தோன்றாதபடிக்கு இதைச் சொல்லுகிறேன்

2கொரி 10:10 அவனுடைய நிருபங்கள் பாரயோசனையும் பலமுமுள்ளவைகள் சரீரத்தின் தோற்றமோ பலவீனமும் வசனம் அற்பமுமாயிருக்கிறதென்கிறார்களே

2கொரி 10:11 அப்படிச் சொல்லுகிறவன் நாங்கள் தூரத்திலிருக்கும்போது எழுதுகிற நிருபங்களால் வசனத்தில் எப்படிப்பட்டவர்களாயிருக்கிறோமோ அப்படிப்பட்டவர்களாகவே சமீபத்திலிருக்கும்போதும் கிரியையிலும் இருப்போம் என்று சிந்திக்கக்கடவன்

"வெளித்தோற்றத்தின்படி பார்க்கிறீர்களா?" - தன்னுடைய வெளித்தோற்றம் எப்படியிருந்தாலும் அவர்களைப் போலவே தானும் கிறிஸ்துவிற்குரியவன் என்று அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்

வெட்கப்படுதல் (ashamed)
αἰσχύνομαι - aischynomai- 153

வெட்கப்படுதல் - புதிய ஏற்பாட்டில் இது செயல்வினை வடிவத்தில் மட்டுமே வந்துள்ளது (2கொரி 10:8 லூக்கா 16:3, பிலி 1:20, 1பேதுரு 4:16 1யோவான் 2:28) தேவன் தனக்குக் கொடுத்திருக்கும் தெய்வீக வல்லமைக்காகப் பவுல் மேன்மை பாராட்டுகிறார் இதற்காக வெட்கப்படவில்லை. பவுல் கொரிந்தியரிடம் போகும்போது தன்னுடைய நிருபங்களில் எழுதியிருப்பதுபோல தான் வல்லமை உள்ளவர் என்பதை நிரூபிப்பார் 2கொரி 10:8 11

3. பவுலின் அதிகாரமும் புகழ்ச்சியும் தேவனிடமிருந்து வந்தவை -
(3:1-5 ரோமர் 15:18-19,29, அப் 19:11-12)

2கொரி 10:12 ஆகிலும் தங்களைத் தாங்களே மெச்சிக் கொள்ளுகிற சிலருக்கு நாங்கள் எங்களைச் சரிசமாக்கவும் ஒப்பிடவும் துணியமாட்டோம் தங்களைக்கொண்டு தங்களை அளந்துகொண்டு, தங்களுக்கே தங்களை ஒப்பிட்டுக் கொள்ளுகிற அவர்கள் புத்திமான்களல்ல.

2கொரி 10:13 நாங்கள் அளவுக்கு மிஞ்சி மேன்மை பாராட்டாமல், உங்களிடம் வரைக்கும் வந்தெட்டத் தக்கதாக தேவன் எங்களுக்கு அளந்து பகிர்ந்த அளவுப் பிரமாணத்தின்படியே மேன்மை பாராட்டுகிறோம்

2கொரி 10:14 உங்களிடத்தில் வந்தெட்டாதவர்களாய் நாங்கள் அளவுக்கு மிஞ்சிப்போகிறதில்லை நாங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து உங்களிடம்வரைக்கும் வந்தோமே.

2கொரி 10:15 எங்கள் அளவைக் கடந்து மற்றவர்களுடைய வேலைக்கட்டுக்கு மேன்மை பாராட்டமாட்டோம்.

2கொரி 10:16 ஆகிலும் உங்கள் விசுவாசம் விருத்தியாகும்போது மற்றவர்களுடைய எல்லைகளுக்குள்ளே செய்யப்பட்டவைகளை நாங்கள் செய்ததாக மேன்மைபாராட்டாமல், உங்களுக்கு அப்புறமான இடங்களில் சுவிசேஷத்தைப்பிரசங்கிக்கத்தக்கதாக, எங்கள் அளவின்படி உங்களால் மிகவும் பெருகி விருத்தியடைவோமென்று நம்பிக்கையாயிருக்கிறோம்.

2கொரி 10:17 மேன்மைபாராட்டுகிறவன் கர்த்தரைக்குறித்தே மேன்மைபாராட்டக் கடவன்

2கொரி 10:18 தன்னைத்தான் புகழுகிறவன் உத்தமனல்ல, கர்த்தரால் புகழப்படுகிறவனே உத்தமன்

10 அதிகாரம்

"தங்களைக்கொண்டு தங்களை அளந்துகொண்டு, தங்களுக்கே தங்களை ஒப்பிட்டுக்கொள்ளுகிற அவர்கள் புத்திமான்களல்ல" - ஒருசிலர் தங்களைத் தாங்களே மெச்சிக்கொள்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் புத்திமான்களல்ல. அவர்களோடு பவுல் தன்னை ஒப்பிட்டுப் பார்க்க விரும்பவில்லை.

"தேவன் எங்களுக்கு அளந்து பகிர்ந்த அளவுப்பிரமாணத்தின்படியே மேன்மைபாராட்டுகிறோம்" - விளையாட்டு மைதானத்தில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவதைப் பவுல் இங்கு உவமானமாகக் கூறுகிறார். விளையாட்டுத் திடலுக்கு அளவுகளும் விதிகளும் நியமிக்கப்பட்டிருக்கும். ஓட்டப் பந்தயத்தில் ஓடுகிறவர் தான் ஓடவேண்டிய அளவு வரையிலும் ஓடவேண்டும். அதுபோலவே தேவன் பவுலுக்கும் ஒரு அளவைக் குறித்து வைத்திருக்கிறார் (2 கொரி 10:13,15,16)

அளவு (measure) - μέτρον - metron - 3358

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - அளவு

"நாங்கள் அளவுக்கு மிஞ்சிப் போகிறதில்லை" - பவுல் தன்னுடைய மிஷினெரி பிரயாணத்தில் மேற்கு திசையில் அவர்களைத் தாண்டிச் செல்லவில்லை. மக்கெதோனியாவிலிருந்து தெற்கு முகமாகத் திரும்பி கிரேக்க தேசத்தில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து அங்கு சபைகளை ஸ்தாபித்தார்.

"எங்கள் அளவைக் கடந்து மற்றவர்களுடைய வேலைக்குட்பட்டு மேன்மைபாராட்டமாட்டோம்" - தங்கள் மூலமாகத் தேவன் நடப்பிக்கும் காரியத்திற்காக மட்டுமே பவுல் மேன்மை பாராட்டுகிறார். மற்றவர்கள் ஊழியம் செய்யும் இடங்களில் பவுல் சபையை ஸ்தாபிக்க விரும்பவில்லை. பரிசுத்த ஆவியானவர் தங்களுக்குப் பகிர்ந்து கொடுத்திருக்கும் அளவுக்குட்பட்ட ஸ்தலங்களிலேயே பவுல் ஊழியம் செய்து வருகிறார். தான் ஊழியம் செய்யும் இடங்களில் விசுவாசிகளுடைய விசுவாசம் விருத்தியான பின்பு அந்த இடத்தை விட்டுப்புறப்பட்டுச் சென்று மற்ற இடங்களிலும் சுவிசேஷ ஊழியம் செய்து பவுல் சபைகளை ஸ்தாபிக்கிறார் (2 கொரி 10:15-16)

"மேன்மைபாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மைபாராட்டக்கடவன்" - எரே 9:24 ஆவது வசனம் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. தன்னைத் தான் புகழுகிறவன் உத்தமனல்ல, கர்த்தரால் புகழப்படுகிறவனே உத்தமன் (2 கொரி 10:17-18)

11 அதிகாரம்

4. தனது மேன்மை பாராட்டலை சகித்துக் கொள்ளுமாறு விண்ணப்பம்

2கொரி 11:1 என் புத்தியீனத்தை நீங்கள் சற்றே சகித்தால் நலமாயிருக்கும். என்னைச் சகித்துமிருக்கிறீர்களே.

2கொரி 11:2 நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காக தேவ வைராக்கியமான வைராக்கியங் கொண்டிருக்கிறேன்.

2கொரி 11:3 ஆகிலும், சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்தது போல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப் பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன்.

2கொரி 11:4 எப்படியெனில், உங்களிடத்தில் வருகிறவன் நாங்கள் பிரசங்கியாத வேறொரு இயேசுவைப் பிரசங்கித்தானானால், அல்லது நீங்கள் பெற்றிராத வேறொரு ஆவியையும், நீங்கள் ஏற்றுக்கொள்ளாத வேறொரு சுவிசேஷத்தையும் பெற்றீர்களானால், நன்றாய்ச் சகித்திருப்பீர்கள்.

"என் புத்தியீனத்தை நீங்கள் சற்றே சகித்தால் நலமாயிருக்கும்; என்னைச் சகித்துமிருக்கிறீர்களே" தன்னுடைய புத்தியீனத்தைக் கொரிந்தியர் சகித்துக் கொள்ள வேண்டுமென்று பவுல் விரும்புகிறார். தன்னை எதிர்க்கிறவர்கள் தங்களைப் பற்றி மேன்மை பாராட்டுகிறார்கள். அதைக் கொரிந்தியர்களும் அங்கீகரிக்கிறார்கள். அந்தக் கள்ள அப்போஸ்தலர்களுக்கு எதிராகத் தன்னைப் பற்றி மேன்மை பாராட்டிக் கூறுவது பவுலுக்கு அவசியமாக இருக்கிறது. (2கொரி 11:16; 2கொரி 12:6)

புத்தியீனம் (folly) - ἀφροσύνη - aphrosynee - 877

பெண்பால் பெயர்ச்சொல் - மதிகேடு, புத்தியீனம் (2கொரி 11:1,17,21; மாற்கு 7:22; 2கொரி 11:16)

"உங்களுக்காக தேவவைராக்கியமான வைராக்கியங் கொண்டிருக்கிறேன்" - புருஷனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற கன்னிகையை மிகவும் கவனமாகப் பராமரிப்பார்கள். அவளுக்குத் தேவையான கல்வியைக் கற்றுக் கொடுத்து முறையான பயிற்சிகளைக் கொடுத்து திருமணத்தின் நிமித்தமாக சுத்தமாகப் பாதுகாத்து வளர்ப்பார்கள்.

"கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக் கொடுக்க நியமித்திருக்கும் கற்புள்ள கன்னிகை" - தன் மூலமாக இரட்சிக்கப்பட்டவர்களைக் கற்புள்ள கன்னிகையாக இயேசு கிறிஸ்துவிடம் ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று பவுல் விரும்புகிறார். முழுச் சபையையும் இயேசு கிறிஸ்துவிடம் கற்புள்ள கன்னிகையாக ஒப்புக் கொடுப்பது பவுலின் ஊழியமல்ல. ஒவ்வொரு ஊழியக்காரரும் தங்கள் மூலமாக இரட்சிக்கப்பட்டவர்களை இயேசு கிறிஸ்துவிடம் கற்புள்ள கன்னிகையாக ஒப்புக் கொடுக்க வேண்டும் (1தெச 2:19)

"உங்கள் மனதும் கிறிஸ்துவைப் பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோ" தன் மூலமாக இரட்சிக்கப்பட்டவர்கள் கிறிஸ்துவை விட்டு வழிவிலகிப் போய் விடுவார்களோ என்று பவுல் பயப்படுகிறார். சாத்தான் ஏவாளை வஞ்சித்து தேவனிடமிருந்து அவளைப் பிரித்து விட்டது போல நடந்து விடுமோ என்று பவுல் பயப்படுகிறார்.

"உங்களிடத்தில் வருகிறவன் நாங்கள் பிரசங்கியாத வேறொரு இயேசுவைப் பிரசங்கித்தானானால்" பவுல் கொரிந்துவை விட்டுப் புறப்பட்டுச் சென்ற பின்பு, அங்கு கள்ள அப்போஸ்தலர்கள் வந்து மாறுபட்ட போதகங்களைப் பிரசங்கம் பண்ணுகிறார்கள்.

5. மற்ற அப்போஸ்தலர்களோடு சமநிலை

2கொரி 11:5 மகா பிரதான அப்போஸ்தலரிலும், நான் ஒன்றிலும் குறைவுள்ளவனல்லவென்று எண்ணுகிறேன்.

11 அதிகாரம்

2கொரி 11:6 நான் பேச்சிலே கல்லாதவனாயிருந்தாலும், அறிவிலே கல்லாதவனல்ல; எந்த விஷயத்திலும் எல்லாருக்குமுன்பாகவும் உங்களுக்குள்ளே நாங்கள் வெளிப்பட்டிருக்கிறோம்.

"மகா பிரதான அப்போஸ்தலரிலும், நான் ஒன்றிலும் குறைவுள்ளவனல்லவென்று எண்ணுகிறேன்" - பவுல் பேச்சிலே கல்லாதவனாயிருந்தாலும், அறிவிலே கல்லாதவனல்ல. மற்ற அப்போஸ்தலர்களைவிட பவுல் எந்தவிதத்திலும் குறைந்தவரும் அல்ல. 2கொரி 10:4-2,10; 11:5-6

6. பவுலின் கிருபையுள்ள பிரசங்கம்

2கொரி 11:7 நீங்கள் உயர்த்தப்படும்படி நான் என்னைத்தானே தாழ்த்தி, தேவனுடைய சுவிசேஷத்தை இலவசமாய் உங்களுக்குப் பிரசங்கித்ததினாலே குற்றஞ்செய்தேனோ?

2கொரி 11:8 உங்களுக்கு ஊழியஞ்செய்யும்படிக்கு, மற்ற சபைகளிடத்தில் சம்பளத்தைப் பெற்று, அவர்களைக் கொள்ளையிட்டேன்.

2கொரி 11:9 நான் உங்களோடிருந்து குறைவுபட்டபோதும், ஒருவனையும் நான் வருத்தப்படுத்தவில்லை; மக்கெதோனியாவிலிருந்து வந்த சகோதரர் என் குறைவை நிறைவாக்கினார்கள்; எவ்விதத்திலேயும் உங்களுக்குப் பாரமாயிராதபடிக்கு ஜாக்கிரதையாயிருந்தேன், இனிமேலும் ஜாக்கிரதையாயிருப்பேன்.

2கொரி 11:10 அகாயா நாட்டின் திசைகளிலே இந்தப் புகழ்ச்சி என்னைவிட்டு நீங்குவதில்லையென்று என்னிலுள்ள கிறிஸ்துவினுடைய சத்தியத்தைக் கொண்டு சொல்லுகிறேன்.

2கொரி 11:11 இப்படிச் சொல்லவேண்டியதென்ன? நான் உங்களைச் சிநேகியாதபடியினாலேயோ? தேவன் அறிவார்.

"தேவனுடைய சுவிசேஷத்தை இலவசமாய் உங்களுக்குப் பிரசங்கித்ததினாலே குற்றஞ் செய்தேனோ?" பவுல் தன் சொந்தக் கைகளினால் வேலை செய்து தன்னைப் போஷித்துக் கொண்டார். மற்ற சபைகளிடத்தில் உதவியைப்பெற்றுக்கொண்டு கொரிந்தியருடைய ஆத்துமாக்களை இரட்சிப்பதற்கு ஊழியம் செய்தார்.

கொள்ளையிடுதல் (robbed) - συλάω - sylaoo - 4813

வினைச்சொல் - கொள்ளையிடு (to take from; to take away) - மற்ற சபைகளிலிருந்து உதவிகளைப் பெற்றுக் கொண்டு கொரிந்தியர் மத்தியில் சுவிசேஷ ஊழியம் செய்தார்.

"அகாயா நாட்டின் திசைகளிலே இந்தப் புகழ்ச்சி என்னைவிட்டு நீங்குவதில்லை" - அகாயா நாட்டின் திசைகளிலுள்ள எந்த சபைகளிலிருந்தும் பவுல் பணத்தைப் பெற்றுக் கொள்ளவில்லை என்பது இதன் மூலமாகத் தெரிய வருகிறது.

"இப்படிச் சொல்லவேண்டியதென்ன? நான் உங்களைச் சிநேகியாதபடியினாலேயோ?" - பவுல் கொரிந்தியரைச் சிநேகிக்கிறார். ஆனாலும் பவுலின் விரோதிகள் அவர்மீது குற்றம் சுமத்துகிறார்கள். அவர்களுடைய குற்றச் சாட்டிற்குப் பதில் கூறும்விதமாக பண விஷயத்தில் தான் நேர்மையோடு நடந்து கொண்டதைப் பல வசனங்களின் மூலமாகப் பவுல் உறுதிபண்ணுகிறார்.

7. கள்ள அப்போஸ்தலர்கள் போடுமன்ன வேஷங்களைக் குறித்து எச்சரிப்பு - (மத் 7:15-23; 24:24, 1தீமோ 4:1-8, 2தீமோ 3:5; 4:1-4; 2தெச 2:8-12

2கொரி 11:12 மேலும், எங்களை விரோதிக்கச் சமயந்தேடுகிறவர்களுக்குச் சமயம் கிடையாதபடிக்கு, தங்களைக் குறித்து மேன்மைபாராட்டுகிற காரியத்தில் அவர்கள் எங்களைப்போலக் காணப்படும்படி, நான் செய்வதையே இன்னும் செய்வேன்.

II கொரிந்தியர் – தொகுப்புரை

11 அதிகாரம்

2கொரி 11:13 அப்படிப்பட்டவர்கள் கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின்வேஷத்தைத் தரித்துக் கொண்டவர்களாயிருக்கிறார்கள்

2கொரி 11:14 அது ஆச்சரியமல்ல சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே

2கொரி 11:15 ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக் காரருடைய வேஷத்தைத் தரித்துக் கொண்டால் அது ஆச்சரியமல்லவே. அவர்கள் முடிவு அவர்கள் கிரியைகளுக்குத் தக்கதாயிருக்கும்.

2கொரிந்தியர் நிருபத்தில் கூறப் பட்டிருக்கும் கள்ள ஊழியக்காரர்களின் அடையாளங்கள்

1 வெட்கமான அந்தரங்க காரியங்களை விரும்புகிறார்கள் (2கொரி 4:2)

2 தந்திரமாய்நடக்கிறார்கள் (2கொரி4:2)

3 தேவவசனத்தைப் புரட்டுகிறார்கள் (2கொரி 4:2)

4 மாம்சத்தில் நடந்து மாம்சத்தின்படி போர்செய்கிறார்கள் (2கொரி 10:3)

5 வெளித் தோற்றத்தின்படி பார்க்கிறார்கள். (2கொரி 10:7, 1சாமு 16:7, மத் 23:27-28)

6 தங்களைத்தாங்களே மெச்சிக் கொள்கிறார்கள். (2கொரி 10:12)

7 தங்களைக் கொண்டு தங்களை அளந்துகொள்கிறார்கள் (2கொரி10:12)

8 மற்றவர்களுடைய எல்லைக்குள்ளே செய்யப்பட்டவைகளைத் தாங்கள் செய்ததாக மேன்மை பாராட்டுகிறார்கள். (2கொரி 10:15-16)

9 வருமானத்தில் ஆசைப்படுகிறார்கள் (2கொரி 11:7-12)

10 கள்ள அப்போஸ்தலர்கள் உயர்ந்த பதவியைநாடுகிறார்கள் (2கொரி 11:13)

11 அவர்கள் கபடமுள்ள வேலையாட்கள் (2கொரி 11:13)

12 அவர்கள் கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக் கொண்டவர்களாக இருக்கிறார்கள் (2கொரி 11:13)

13 நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக் கொள்கிறார்கள் (2கொரி 11:15)

14 மேன்மைபாராட்டுவதற்குச் சமயம் பார்க்கிறார்கள் (2கொரி 11:12)

15 தங்களைத் தாங்களே உயர்த்தி பாராட்டுகிறார்கள் (2கொரி 11:18)

16 அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் அவர்களுக்குள் நடப்பிக்கப்படவில்லை (2கொரி 12:12)

கள்ள ஊழியக்காரரின் மற்ற அடையாளங்கள்

1 தேவனாகிய கர்த்தர் விதித்த வழியை விட்டு விலகும்படி ஜனங்களை நடத்துவார்கள் (உபா 13:1-5)

2 கர்த்தர் கட்டளையிடாத வார்த்தைகளை, அவர் நாமத்தினாலே சொல்வார்கள் (உபா 18:20)

3 அறிவைத் தரும் வார்த்தைகளை விட்டு விலகச்செய்யும் போதகங்களைப் பரப்புவார்கள் (நீதி 19:27; ஏசா 3:12, எரே 23:32)

4 தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமையென்றும் சொல்வார்கள் (ஏசா 5:20, எரே 7, எரே 14; எரே 32)

5 அவர்கள் விடியற்காலத்து வெளிச்சம் இல்லாதவர்களாயிருப்பார்கள் (ஏசா 8:19-20)

6 அவர்கள் பொய்ப்போதகம் பண்ணுகிறவர்கள் (ஏசா 9:14-16

II கொரிந்தியர் – தொகுப்புரை

11 அதிகாரம்

7 மதுபானத்தால் வழிதப்பிய பாவிகளாக ஜீவிக்கிறார்கள். (ஏசா 28:7)

8. ஆவிக்குரியவைகளில் அறியாமை உள்ளவர்களாக இருக்கிறார்கள் (ஏசா 29:10-11; ஏசா 56:10-12; எரே 2:8; ஓசி 4:6)

9 யதார்த்தமாய் தரிசனஞ்சொல்லாமல் இதமான சொற்களை உரைப்பார்கள் (ஏசா 30:10)

10 அவர்கள் தூக்க மயக்கமாயப் புலம்புகிறவர்கள் படுத்துக் கொள்ளுகிறவர்கள், நித்திரைப்பிரியர் (ஏசா 56:10-12)

11 அவர்கள் ஒவ்வொருவரும் பொய்யர் (எரே 6:13; எசே 22:27)

12 கர்த்தரைத் தேடாமற்போனார்கள் (எரே 10:21)

13. கர்த்தரின் மேய்ச்சலின் ஆடுகளைக் கெடுத்துச் சிதறடிப்பார்கள் (எரே 12:10, எரே 23:1)

14 கர்த்தரின் நாமத்தைக் கொண்டு பொய்யாய்த் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள். (எரே 14:13-16)

15 கள்ளத்தீர்க்கதரிசிகள், விபசாரம் பண்ணி, வஞ்சகமாய் நடப்பார்கள் (எரே 23:14)

16 அவர்கள், ஒருவனும் தன் பொல்லாப்பை விட்டுத் திரும்பாதபடிக்குச் செய்வார்கள் (எரே 23:14, எசே 13:22)

17 கள்ளத்தீர்க்கதரிசிகள் கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள் (எரே 48:10, எசே 13:10; ரோமர் 16:18; எபே 4:14; கொலோ 2:4-8; 2தீமோ 3:6-13)

18 அவர்கள் பாவிகளாயிருக்கிறார்கள் (எசே 22:25-28)

19 கள்ளத்தீர்க்கதரிசிகள் பொய்யர்களாயிருக்கிறார்கள் (எரே 23:14; எசே 13:19-22)

20 மந்தையை மேய்க்காமல் கொடுங்கோலர்களாயிருக்கிறார்கள் (எசே 34:2-3)

21 அவிசுவாசிகளாயிருக்கிறார்கள் (எசே 34:4-10)

22 கூலிக்கு உபதேசித்து, பணத்துக்குக் குறிசொல்லி, பேராசையுடன் இருக்கிறார்கள் (மீகா 3:11)

23 மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதிக்கிறார்கள் (மத் 15:9)

24 அக்கிரமச் செய்கைகளைச் செய்கிறார்கள் (மத் 7:15-23)

25. குருடருக்கு வழிகாட்டுகிற குருடராயிருக்கிறார்கள் (மத் 15:14)

26 கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறார்கள் (ரோமர் 16:17; 1கொரி 11:18; பிலி 1:15-16)

27 தேவ வசனத்தைக் கலப்பாய்ப் பேசுகிறார்கள் (2கொரி 2:17)

28 பிசாசுகளின் உபதேசங்களைப் போதிக்கிறார்கள் (1தீமோ 4)

29 தேவன் படைத்த போஜன பதார்த்தங்களை விலக்க வேண்டுமென்று பொய்யர்கள் கட்டளையிடுவார்கள் (1தீமோ 4:2)

30 அவர்கள் அடங்காதவர்களும், வீண்பேச்சுக்காரர்களுமாயிருக்கிறார்கள் (1தீமோ 6:3-21; 2தீமோ 2:14-18; தீத்து 1:10-14)

31 கள்ளத்தீர்க்கதரிசிகள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப் பண்ணுவார்கள் (2பேதுரு 2:1; 2யோவான் 1:7-11)

32 தங்களைக் கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலிப்பார்கள் (2பேதுரு 2:1; 1யோவான் 4:1-6)

11 அதிகாரம்

33 கள்ளத்தீர்க்கதரிசிகள் கர்த்தரை விசுவாசிக்கிறவர்களை ஆதாயத்திற்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொள்வார்கள் 2பேதுரு 2:1-19 யூதா 1:4-11

34 கள்ளத்தீர்க்கதரிசிகள் ஆட்டுத் தோலைப் போர்த்துக் கொண்டு வருகிற ஓநாயைப்போல கபடதாரிகள் மத் 7:15; மத் 23:1-33; லூக்கா 11:35)

சாத்தான் தரித்துக் கொள்ளும் வேஷங்கள்

1 சர்ப்பம் 2கொரி 11:3; ஆதி 3:15 லூக்கா 10:19 வெளி 12:9,15 வெளி 20:3

2 லிவியாதான் என்னும் வலுசர்ப்பம் (யோபு 41, ஏசா 27:1)

3 சிவப்பான பெரியவலுசர்ப்பம்(வெளி 12, வெளி 13:4, வெளி 16:13-வெளி 20:2)

4 ஒளியின் தூதன் (2கொரி 11:14)

5 கெர்ச்சிக்கிற சிங்கம் (1பேதுரு 5:8 சங் 91:13)

6 பறவைகள் (மத் 13:4,19)

7 தேள்கள் (லூக்கா 10:19)

8 ஓநாய (யோவான் 10:12)

9 வேட்டைக்காரன் (சங் 91:3)

10 விரியன்பாம்பு (சங் 91:13)

8. மேன்மை பாராட்டியதைக் குறித்து சகித்துக் கொள்ளுமாறு விண்ணப்பம்

2கொரி 11:16 பின்னும் நான் சொல்லுகிறேன்; ஒருவனும் என்னைப் புத்தியீனனென்று எண்ணவேண்டாம். அப்படி எண்ணினால், நானும் சற்றே மேன்மைபாராட்டும்படி, என்னைப் புத்தியீனனைப்போலாகிலும் ஏற்றுக் கொள்ளுங்கள்

2கொரி 11:17 இப்படி நான் சொல்லுகிறது கர்த்தருக்கேற்றபடி சொல்லாமல், மேன்மை பாராட்டும் தைரியத்தினாலே புத்தியீனனைப் போலச் சொல்லுகிறேன்

2கொரி 11:18 அநேகர் மாம்சத்திற்கேற்றபடி மேன்மை பாராட்டிக் கொள்ளுகையில், நானும் மேன்மை பாராட்டுவேன்

2கொரி 11:19 நீங்கள் புத்தியுள்ளவர்களாயிருந்து புத்தியில்லாதவர்களைச் சந்தோஷமாய்ச் சகித்திருக்கிறீர்களே

2கொரி 11:20 ஒருவன் உங்களைச் சிறையாக்கினாலும் ஒருவன் உங்களைப் பட்சித்தாலும் ஒருவன் உங்களைக் கைவசப்படுத்தினாலும் ஒருவன் தன்னை உயர்த்தினாலும் ஒருவன் உங்களை முகத்தில் அறைந்தாலும் சகித்திருக்கிறீர்களே

புத்தியீனன் (fool) - ἄφρων - aphroon - 878

மொரட - மதிகேடான, பேதை, புத்தியீன, புத்தியில்லாத, மதியற்ற (senseless; witless; crazed; silly). "fool" (2கொரி 11:16,19 2கொரி 12:6,11 லூக்கா 11:40; லூக்கா 12:20 1கொரி 15:36 ; "foolish" (ரோமர் 2:20; 1பேதுரு 2:15 , "unwise" (எபே 5:17) (2கொரி 11:1

"கர்த்தருக்கேற்றபடி சொல்லாமல், மேன்மை பாராட்டும் தைரியத்தினாலே புத்தியீனனைப்போலச்சொல்லுகிறேன்" பவுல் அப்போஸ்தல ஊழியம் செய்யுமாறு அழைக்கப்பட்டிருக்கிறவன் தன்னுடைய விரோதிகளுக்கெல்லாம் பதில் சொல்ல வேண்டிய அவசியம் பவுலுக்கு இல்லை. ஆனாலும் தன்னுடைய அப்போஸ்தல ஊழியத்தை அவர்கள் குறை கூறும்போது பவுல் தன்னை மேன்மைபாராட்டி தன்னுடைய அப்போஸ்தல ஊழியத்தை நிரூபிக்கிறார் (2கொரி 5:12-16; 2கொரி 10:7-18, 2கொரி 11:1-33; 2கொரி 12:1-21) தன்னை மேன்மைபாராட்டுவதன்மூலமாக தேவனுடைய நாமம் தூஷிக்கப்படக்கூடாது என்பதில் பவுல் மிகுந்த எச்சரிப்போடு இருக்கிறார்

II கொரிந்தியர் - தொகுப்புரை

11 அதிகாரம்

"நீங்கள் புத்தியுள்ளவர்களாயிருந்து புத்தியில்லாதவர்களைச் சந்தோஷமாயச் சகித்திருக்கிறீர்களே" - கொரிந்தியர்கள் பவுலைப் புத்தியீனன் என்று தீர்மானம் பண்ணி விட்டார்கள். ஆகையினால் தன்னுடைய புத்தியீனத்தைச் சகித்துக் கொள்ளுமாறு பவுல் அவர்களிடம் கூறுகிறார்.

கொரிந்தியர்கள் சகித்துக் கொண்டவர்கள்

1. தங்களுடைய ஆத்துமாக்களைச் சிறையாக்கினவர்கள்
2. தங்களுடைய பணத்தைப் பட்சித்தவர்கள்
3. தங்களைக் கைவசப்படுத்தினவர்கள்
4. தங்களைத் தாங்களே உயர்த்தினவர்கள்
5. தங்களை முகத்தில் அறைந்தவர்கள்

சிறையாக்குதல் (bondage) - καταδουλόω - katadoulooo - 2615

வினைச்சொல் சிறையாக்கு அடிமைகளாக்கு (enslave) (2 கொரி 11:20; கலா 2:4)

பட்சித்தல் (devour) κατεσθίω katesthioo 2719

வினைச்சொல் - பட்சித்துப்போடு, புசி, அழித்துப்போடு (மத் 23:14; மாற்கு 12:40; லூக்கா 20:47; கலா 5:15; வெளி 11:5)

9. மாம்சத்தில் சமநிலை (கலா 1:13,14; பிலி 3:4-6)

2கொரி 11:21 நாங்கள் பலவீனரானது போல எங்களுக்கு வந்த கனவீனத்தைக் குறித்துப் பேசுகிறேன். ஒருவன் எதிலே துணிவுள்ளவனாயிருக்கிறானோ, அதிலே நானும் துணிவுள்ளவனாயிருக்கிறேன்; இப்படிப் புத்தியீனமாய்ப் பேசுகிறேன்.

2கொரி 11:22 அவர்கள் எபிரெயரா? நானும் எபிரெயன். அவர்கள் இஸ்ரவேலரா? நானும் இஸ்ரவேலன். அவர்கள் ஆபிரகாமின் சந்ததியாரா? நானும் ஆபிரகாமின் சந்ததியான்.

பவுல் மேன்மைபாராட்டும் காரியங்கள்

1. ஒருவன் எதிலே துணிவுள்ளவனாயிருக்கிறானோ அதிலே நானும் துணிவுள்ளவனாயிருக்கிறேன் (2 கொரி 11:21)
2. அவர்கள் எபிரெயரா? நானும் எபிரெயன் (2 கொரி 11:22)
3. அவர்கள் இஸ்ரவேலரா? நானும் இஸ்ரவேலன் (2 கொரி 11:22)
4. அவர்கள் ஆபிரகாமின் சந்ததியாரா? நானும் ஆபிரகாமின் சந்ததியான் (2 கொரி 11:22)
5. அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரரா? நான் அதிகம் (2 கொரி 11:23)
6. நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன் (2 கொரி 11:23)
7. அதிகமாய் அடிபட்டவன் (2 கொரி 11:23)
8. அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன் (2 கொரி 11:23)
9. அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன் (2 கொரி 11:23)
10. ஐந்துதரம் அடிபட்டேன் (2 கொரி 11:24)
11. மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன் (2 கொரி 11:25)
12. ஒருதரம் கல்லெறியுண்டேன் (2 கொரி 11:25; அப் 14:19)
13. மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன் (2 கொரி 11:25)
14. கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன் (2 கொரி 11:25)
15. அநேகந்தரம் பிரயாணம் பண்ணினேன் (2 கொரி 11:26)

II கொரிந்தியர் – தொகுப்புரை

11 அதிகாரம்

16 ஆறுகளால் வந்த மோசங்களில் இருந்தேன் (2கொரி 11:26)

17 கள்ளரால் வந்த மோசங்களில் இருந்தேன் (2கொரி 11:26)

18 என்சுயஜனங்களால் (யூதர்களால்) வந்த மோசங்களில் இருந்தேன் (2கொரி 11:26)

19 அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களில் இருந்தேன் (2கொரி 11:26)

20 பட்டணங்களில் உண்டான மோசங்களில் இருந்தேன் (2கொரி 11:26)

21 வனாந்தரத்தில் உண்டான மோசங்களில் இருந்தேன் (2கொரி 11:26)

22 சமுத்திரத்தில் உண்டான மோசங்களில் இருந்தேன் (2கொரி 11:26)

23 கள்ளசகோதரரிடத்தில் உண்டான மோசங்களில் இருந்தேன் (2கொரி 11:26)

24 பிரயாசத்திலும், வருத்தத்திலும் இருந்தேன் (2கொரி 11:27)

25 அநேகமுறை கண்விழிப்புகளில் இருந்தேன் (2கொரி 11:27)

26 பசியிலும் தாகத்திலும் இருந்தேன் (2கொரி 11:27)

27 அநேகமுறை உபவாசங்களில் இருந்தேன் (2கொரி 11:27)

28 குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன் (2கொரி 11:27)

29 எல்லாச் சபைகளைக்குறித்தும் உண்டாயிருக்கிற கவலை புவலை நாள்தோறும் நெருக்குகிறது. (2கொரி 11:28)

30 தேவனிடத்தில் பெலன் (2கொரி 11:29-2கொரி 12:10)

31 சபைகளுக்காக வைராக்கியம் (2கொரி 11:29)

32 பல பலவீனங்கள் (2கொரி 11:30-2கொரி 12:5,9)

33 தேவனை மெய்யாகப் பற்றிக் கொண்டார் (2கொரி 11:31-2கொரி 12:6)

34 அற்புதமான விடுதலைகள் (2கொரி 11:32-33)

35 மேன்மைபாராட்டுகிறது அவசியமாக இருக்கிறது. (2கொரி 12:1)

36 தரிசனங்களும், வெளிப்பாடுகளும் (2கொரி 12:1)

37 வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுதல் (2கொரி 12:2-4)

38 அறிவைக் கடந்த அனுபவங்கள் (2கொரி 12:2-3)

39 மனுஷர் பேசப்படாத வார்த்தைகளைக் கேட்டது. (2கொரி 12:3)

40 விசேஷித்த அறிவு (2கொரி 12:4)

41 சுய மகிமையிலிருந்து விடுதலை (2கொரி 12:5)

42 சத்தியமானதைப்பேசுதல் (2கொரி 12:6)

43 மௌனமை பாராட்ட மனதாயிருத்தல் (2கொரி 12:6)

44 விசேஷித்த பாடுகள் (2கொரி 12:7)

45 தேவனிடமிருந்து பதில்கள் (2கொரி 12:9)

46 தேவனுடைய சித்தத்தை புரிந்து கொள்ளுதல் (2கொரி 12:9)

47 தனிமேது கிறிஸ்துவின் பலம் இருந்தது (2கொரி 12:9)

48 பெலவீனங்களில் பிரியப்படுதல் (2கொரி 12:10)

49 கிறிஸ்துவிற்காகச் சகித்துக் கொள்ளுதல் (2கொரி 12:10)

11 அதிகாரம்

50 தேவை ஏற்பட்டால் ஒழிய மேன்மை பாராட்டாமல் இருத்தல் (2கொரி 12:11)

51 மகா பிரதான அப்போஸ்தலரோடு குறைவில்லாமல் இருத்தல் 2கொரி 12:11

52 மேன்மையும் தாழ்மையும் (2கொரி 12:11)

53 அப்போஸ்தல அடையாளங்கள் (2கொரி 12:12

54 சுயநலமின்மை (2கொரி 12:13-16)

55 நியாயந்தீர்க்கும் வல்லமை 2கொரி 12:21; 2கொரி 13:10)

10. ஊழியத்திலும் பாடுகளிலும் சமநிலை – (அப 9:16; பிலி 3:10)

2கொரி 11:23 அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரரா? நான் அதிகம்; புத்தியீனமாய்ப் பேசுகிறேன்; நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன் அதிகமாய் அடிபட்டவன் அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன் அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன்

2கொரி 11:24 யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்

2கொரி 11:25 மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன் ஒருதரம் கல்லெறியுண்டேன் மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன் கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன்

2கொரி 11:26 அநேகந்தரம் பிரயாணம் பண்ணினேன், ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும் பட்டணங்களில் உண்டான மோசங்களிலும் வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும் சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச் சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும்,

2கொரி 11:27 பிரயாசத்திலும், வருத்தத்திலும் அநேகமுறை கண் விழிப்புகளிலும், பசியிலும் தாகத்திலும் அநேகமுறை உபவாசங்களிலும் குளிரிலும் நிர்வாணத்திலும் இருந்தேன்

புத்தியீனம் (fool) - παραφρονέω - paraphroneoo - 3912

வினைச்சொல் - புத்தியீனமாயிரு (2பேதுரு 2:16)

"நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன் அதிகமாய் அடிபட்டவன்" - ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட சபைகளில் ஊழியம் செய்வதற்குப் பதிலாகச் சபைகள் இல்லாத புதிய இடங்களில் சபைகளை ஸ்தாபிக்க [illegible] விரும்புகிறார்

"அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன்"-(அப16:23 அப21:33-28:31

"அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன்"-(1கொரி 15:31 2கொரி 4:11

"யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்" - (உபா 25:3) முக்கியமான குற்றவாளிகளைத் தவிர யூதர்கள் யாரையும் இரண்டு முறை அடிப்பதில்லை ஆனால் அவர்கள் கிறிஸ்தவர்களை இரக்கமில்லாமல் தாறுமாறாக அடித்தார்கள் பவுலை ஐந்துதரம் அடித்தார்கள்

"மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன்" ரோமர்கள் குற்றவாளிகளை மிலாறுகளைக் கொண்டு அடிப்பது வழக்கம் (அப 16:22

"ஒருதரம் கல்லெறியுண்டேன்" லீஸ்திராவில நடைபெற்ற நிகழ்ச்சி (அப 14:19

"மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன்" - ஒரு கப்பல் சேதம் மட்டுமே வேதவாக்கியத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது (அப 27:41-28:1)

"அநேகந்தரம் பிரயாணம்பண்ணினேன்" - பவுலின் மூன்று மிஷினெரி பிரயாணங்கள் வேதவசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது (அப 13:1-3; அப 15:41, அப 18:23 2கொரி 11:23 27 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் வேதவசனங்களில் குறிப்பிடப்படவில்லை

11 அதிகாரம்

11. ஸ்தானத்திலும் பொறுப்பிலும் சமநிலை – (11:5; 1கொரி 9)

2கொரி 11:28 இவை முதலானவைகளையல்லாமல், எல்லாச் சபைகளைக் குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது.

2கொரி 11:29 ஒருவன் பலவீனனானால் நானும் பலவீனனாகிறதில்லையோ? ஒருவன் இடறினால் என் மனம் எரியாதிருக்குமோ?

"எல்லாச் சபைகளைக்குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது" - பவுலுக்கு 2கொரி 11:23-27 ஆகிய வசனங்களில் கூறப்பட்ட புறம்பான பாடுகளும் இருந்தன. சபைகளைக் குறித்த கவலைகளினால் அவருக்கு உள்ளான பாடுகளும் இருந்தன.

"ஒருவன் இடறினால் என் மனம் எரியாதிருக்குமோ?" - ஒருவன் இடறிப்போனால் பவுல் வைராக்கியத்தோடு அவனை மீட்டுக் கொள்வார். இடறிப்போகிறவர்கள் இடறிப் போகட்டும் என்று பவுல் கவனக்குறைவாக இருக்க மாட்டார்.

12. பவுலின் மேன்மை பாராட்டுதல் உண்மையானவை என்பதற்கு தேவனே சாட்சி

2கொரி 11:30 நான் மேன்மை பாராட்ட வேண்டுமானால், என் பலவீனத்திற்கடுத்தவைகளைக் குறித்து மேன்மைபாராட்டுவேன்.

2கொரி 11:31 என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவுமானவர் நான் பொய் சொல்லுகிறதில்லையென்று அறிவார்.

2கொரி 11:32 தமஸ்குபட்டணத்து அரேத்தா ராஜாவினுடைய சேனைத் தலைவன் என்னைப்பிடிக்க வேண்டுமென்று தமஸ்கருடைய பட்டணத்தைக் காவல்வைத்துக் காத்தான்.

2கொரி 11:33 அப்பொழுது நான் கூடையிலே வைக்கப்பட்டு, ஜன்னலிலிருந்து மதில் வழியாய் இறக்கிவிடப்பட்டு, அவனுடைய கைக்குத் தப்பினேன்.

"நான் மேன்மைபாராட்டவேண்டுமானால் என் பலவீனத்திற்கடுத்தவைகளைக் குறித்து மேன்மைபாராட்டுவேன்" - தேவன் தனக்குக் கொடுத்திருக்கும் வரங்களைக் குறித்தோ அல்லது தன்னுடைய அறிவைக் குறித்தோ பவுல் மேன்மை பாராட்டவில்லை. இயேசு கிறிஸ்துவிற்காகத் தான் பட்ட பாடுகளைக் குறித்தே பவுல் மேன்மைபாராட்டுகிறார்.

"பலவீனத்திற்கடுத்தவைகள்" (infirmities) - (2கொரி 12:10)

"தமஸ்குபட்டணத்து அரேத்தா ராஜாவினுடைய சேனைத்தலைவன்" (அப் 9:23)

"அரேத்தா ராஜா" (Aretas) - ஏரோது அந்திப்பாவின் (Herod Antipas) மாமனார் (மத் 14:3)

II கொரிந்தியர் - தொகுப்புரை

12 அதிகாரம்

13. தரிசனங்கள் தேவனுடைய வெளிப்பாடுகள் ஆகியவற்றில் சமநிலை

2கொரி 12:1 மேன்மைபாராட்டுகிறது எனக்குத் தகுதியல்லவே; ஆகிலும் கர்த்தர் அருளிய தரிசனங்களையும் வெளிப்படுத்தல் களையும் சொல்லுகிறேன்.

2கொரி 12:2 கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷனை அறிவேன்; அவன் பதினாலு வருஷத்திற்கு முன்னே மூன்றாம் வானம்வரைக்கும் எடுக்கப்பட்டான்; அவன் சரீரத்திலி ருந்தானோ சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானோ, அதை அறியேன்; தேவன் அறிவார்.

2கொரி 12:3 அந்த மனுஷன் பரதீசுக்குள் எடுக்கப்பட்டு, மனுஷர் பேசப்படாததும் வாக்குக்கெட்டாதது மாகிய வார்த்தைகளைக் கேட்டானென்று அறிந்திருக்கிறேன்.

2கொரி 12:4 அவன் சரீரத்திலி ருந்தானோ சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானோ, அதை அறியேன்; தேவன் அறிவார்.

2கொரி 12:5 இப்படிப்பட்டவனைக் குறித்து மேன்மைபாராட்டுவேன்; ஆனாலும் என்னைக்குறித்து என் பலவீனங்களிலேயன்றி வேறொன் றிலும் மேன்மைபாராட்டமாட்டேன்.

2கொரி 12:6 சத்தியமானதைப் பேசுகிறேன், நான் மேன்மைபாராட்ட மனதாயிருந்தாலும், நான் புத்தியீனனல்ல; ஆனாலும் ஒருவனும் என்னிடத்தில் காண்கிறதற்கும் என்னாலே கேட்கிறதற்கும் மேலாக என்னை எண்ணாதபடிக்கு அப்படிச் செய்யாதிருப்பேன்.

"மேன்மைபாராட்டுகிறது எனக்குத் தகுதியல்லவே" தன்னுடைய ஊழியத்தைக் குறித்து மேன்மைபாராட்டுவது ஊழியக் காரர்களுக்குத் தகுதியான காரியமல்ல.

ஆனால் இங்கு பவுலின் நிலைமை வித்தியாசமாக இருக்கிறது. கொரிந்துவில் இருக்கும் பவுலின் விரோதிகள் பவுலின் ஊழியத்தைக் குறித்துப் பலவேறு விதமான கேள்விகளை எழுப்பி, பிரச்சனை உண்டுபண்ணுகிறார்கள். அவர்களுக்குப் பதில் கூறும்விதமாகக் கர்த்தர் தனக்கு அருளிய தரிசனங்களையும் வெளிப்படுத்தல்களையும் சொல்லி பவுல் தன்னை மேன்மைபாராட்டுகிறார்.

வெளிப்படுத்தல்கள் (revelations) - ἀποκάλυψις- apokalypsis- 602

பெண்பால் பெயர்ச்சொல் - ஒளி, வெளிப்படுத்தல் காண்பித்தல் தெளிவு - இதற்கு முன்பு அறியப்படாதிருந்த காரியத்தை வெளிப்படுத்துதல். கர்த்தரால் மட்டுமே அறியப்படாத இரகசியங்களை வெளிப்படுத்த முடியும்.

"பதினாலு வருஷத்திற்கு முன்னே" - கிறிஸ்து மரித்து 14 வருஷங்களுக்குப் பின்பு நடைபெற்ற சம்பவம். இக்காலத்தைக் கி.பி. 46 ஆம் வருஷம் என்று கூறலாம். பவுல் இந்தத் தரிசனத்தை எங்கு கண்டார் என்பது தெரியவில்லை.

"மூன்றாம் வானம்வரைக்கும் எடுக்கப் பட்டான்" 1தெச 4:16-17 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் சம்பவத்தைப் போன்றது. மூன்றாம் வானம் வரைக்கும் எடுக்கப்பட்டதைக் குறித்து பவுலுக்கு எந்தவித சந்தேகமும் இல்லை. இதில் உறுதியாக இருக்கிறார் (2கொரி 12:2,4). மூன்றாம் வானம் வரைக்கும் எடுக்கப்பட்டவர் சரீரத்திலிருந்தானோ சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானோ என்பது பவுலுக்குத் தெரியவில்லை (2கொரி 12:2-3).

மூன்று வானங்கள்

1. மேகங்கள் (The clouds or atmospheric heavens) (ஆதி 1:8; சங் 77:17-18; சங் 104:2-3)

2. நட்சத்திரங்களுள்ள வானம் (The starry space) (ஆதி 15:5; ஆதி 22:17; ஆதி 26:4; உபா 1:10; ஏசா 13:10; ஏசா 14:13)

12 அதிகாரம்

3. வானமண்டலம் (The planet heaven) (ஆதி 1:1; ஏசா 14:12-14 ஏசா 66:1; வெளி 21:2,10)

"அவன் சரீரத்திலிருந்தானோ சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானோ அதை அறியேன்" – ஏனோக்கு, எலியா, யோவான் ஆகியோரைப் போன்று அவன் சரீரத்தில் இருந்திருக்கலாம். ஆதி 5:24 2இராஜா 2 வெளி 4:1 நமது சரீரத்தை விட்டு ஆத்துமா பிரிந்து செல்லும் போது அது உணர்வுள்ளதாக இருக்கும். 2கொரி 5:8 பிலி 1:21-24; எபி 12:23

"பரதீசு" (paradise) - பரதீசு மூன்றாம் வானத்தில் இருக்கிறது. லூக்கா 16:22 2கொரி 12:2-4

"மனுஷர் பேசப்படாதது வாக்குக்கடங்காததுமாகிய வார்த்தைகள்" - அவன் கேட்ட வார்த்தைகளை மனுஷனுடைய உதடுகளினாலோ நாவுகளினாலோ பேசமுடியாது. அவற்றை மறுபடியும் திரும்பக் கூறமுடியாத அளவிற்கு அவை மிகவும் பக்தியான வார்த்தையாகும். இந்த வார்த்தைகளைக் கூறுவதற்குப் பவுல் தடை பண்ணப்பட்டிருந்தார். ஏழு இடிகளும் தங்கள் சத்தங்களை முழங்கினபோது யோவான் அதை எழுத வேண்டுமென்று இருந்தான். அப்பொழுது ஏழு இடிமுழக்கங்கள் சொன்னவைகளை நீ எழுதாமல் முத்திரைபோடு என்று வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று. (வெளி 10:4) இதுபோன்று பவுலும் தான் கேட்டதை எழுதக் கூடாதவாறு தடைபண்ணப்பட்டிருக்கலாம்.

"இப்படிப்பட்டவனைக்குறித்து மேன்மை பாராட்டுவேன்" - தன்னைக் குறித்துப் பவுல் மேன்மை பாராட்டுவதில்லை. தன்னுடைய பலவீனங்களைக் குறித்தும் கிறிஸ்துவிற்காகத் தான் அனுபவித்த பாடுகளைக் குறித்தும் பவுல் மேன்மைபாராட்டுகிறார். (2கொரி 12:1-5 2கொரி 11:30)

"பலவீனங்கள்" (infirmities) (2கொரி 12:10)

"நான் மேன்மைபாராட்ட மனதாயிருந்தாலும், நான் புத்தியீனனல்ல" - பவுல் தன்னைக் குறித்து மேன்மை பாராட்ட விரும்பினால் அவருக்குத் தடை ஒன்றும் இல்லை. அவர் தாராளமாகத் தன்னைக் குறித்து மேன்மைபாராட்டலாம். 2கொரி 10:16 பவுல் தன்னைப் பற்றி மேன்மையாகக் கூறினாலும் அவர் கூறுவது மெய்யானவை என்பதைத் தேவன் அறிந்திருக்கிறார். ஆனாலும் தன்னை மிகைப்படுத்திக் கூறுவதற்குப் பவுலுக்கு மனதில்லை.

14. பொறுமையிலும் வல்லமையிலும் சமநிலை - (அப 9:1-2 ரோமர் 1:1; 15:18-29, 1கொரி 4:18-21)

2கொரி 12:7 அன்றியும், எனக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளுக்குரிய மேன்மையினிமித்தம் நான் என்னை உயர்த்தாதபடிக்கு, என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்னை நான் உயர்த்தாதபடிக்கு என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது.

2கொரி 12:8 அது என்னைவிட்டு நீங்கும்படிக்கு நான் மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டேன்.

2கொரி 12:9 அதற்கு அவர்: என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால் கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்.

2கொரி 12:10 அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்; ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும் நிந்தைகளிலும் நெருக்கங்களிலும் துன்பங்களிலும் இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்.

2கொரி 12:11 மேன்மைபாராட்டி, புத்தியீனனானேன்; நீங்களே இதற்கு என்னைப் பலவந்தப்படுத்தினீர்கள். நான் ஒன்றுமில்லையென்றாலும், மகா பிரதான அப்போஸ்தலருக்கும் நான் எவ்வளவும் குறைந்தவனாயிராதபடியால், உங்களாலே மெச்சிக்கொள்ளப்பட வேண்டியதாயிருக்கிறதே.

12 அதிகாரம்

2கொரி 12:12 அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் எல்லாவிதமான பொறுமையோடும், அதிசயங்களோடும், அற்புதங்களோடும், வல்லமைகளோடும், உங்களுக்குள்ளே நடப்பிக்கப்பட்டதே.

உயர்த்துதல் (exalted) - ὑπεραίρομαι - hyperairomai - 5229

வினைச்சொல் - உயர்த்துதல் - இந்த வசனத்தில் மட்டுமே இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அந்திக்கிறிஸ்து எல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்தி, தன்னைத் தேவன் என்று அழைத்துக் கொண்டான் (2தெச 2:4). தன்னைத்தான் உயர்த்தி லூசிபர் விழுந்து போனான் (ஏசா 14:12-14; எசே 28:11-17; 1தீமோ 3:6). தேவன் பவுலுக்கு அதிகமான வெளிப்பாடுகளைக் கொடுத்திருக்கிறார். அதைக் குறித்துப் பவுல் மேன்மை பாராட்டக்கூடாது. பவுலைத் தாழ்மைப்படுத்துவதற்காக அவருடைய மாம்சத்தில் தேவன் ஒரு முள்ளைக் கொடுத்திருக்கிறார்.

தூதன் (messenger) - ἄγγελος - angelos - 32

ஆண்பால் பெயர்ச்சொல் - தூதன். தூதர் - சாத்தானுடைய தூதன் என்பது வியாதியைக் குறிக்காது. இவன் பவுலைப் பின்தொடர்ந்து வந்த சாத்தானுடைய தூதன். எப்பொழுதெல்லாம் பவுல் தன்னைக் குறித்து உயர்த்த முயற்சி பண்ணுகிறாரோ அப்பொழுதெல்லாம் இந்தத்தூதன் பவுலைக் குட்டுவான். 2கொரி 11:23-27 ஆகிய வசனங்களில் சாத்தானின் தூதன் தனக்கு ஏற்படுத்திய இடையூறுகளை உண்டு பண்ணினான் என்று பவுல் வரிசையாக அட்டவணையிடுகிறார். அந்த அட்டவணையில் நோய் ஒரு இடையூறாகக் கூறப்படவில்லை.

முள் (thorn) - σκόλοψ - skolops - 4647

ஆண்பால் பெயர்ச்சொல் - முள் - செப்துவஜிந்தில் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (எண் 33:55; எசே 28:24; ஓசி 2:6) - இந்த வசனங்களில் முள் என்னும் வார்த்தை நோயைக் குறிப்பிடவில்லை.

குட்டு (buffet) - κολαφίζω - kolaphizoo - 2852

வினைச்சொல் - குட்டு, அடி (to cuff; to box on the ear) (மத் 26:67; மாற்கு 14:65; 1கொரி4:11; 2கொரி 12:7; 1பேதுரு 2:20)

"என் கிருபை உனக்குப் போதும்" - பவுலின் பலவீனத்தில் தேவனுடைய பலம் பூரணமாய் விளங்கும். சாத்தானின் தூதன் தேவனுடைய சித்தத்தின் பிரகாரமாகவே பவுலைக்குட்டுகிறான். அந்தத்தூதனால் வரும் வேலைப்பாடுகளையும் தாங்கிக்கொள்வதற்குத் தேவனுடைய கிருபை பவுலுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிரச்சனைகள் வரும்போது தேவனையும் அவருடைய வல்லமையையும் மட்டுமே சார்ந்திருக்கும் சுபாவத்தைப் பவுல் தனக்குள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். (2கொரி 12:8, 9)

"ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன்" - கிறிஸ்துவின் வல்லமை தன்மேல் தங்க வேண்டுமென்பதற்காகத் தன்னுடைய பலவீனங்களைக் குறித்து மேன்மை பாராட்ட பவுல் கற்றுக் கொண்டார். (2கொரி 12:9-10; அப் 9:16)

பவுலின் மாம்சத்தில் கொடுக்கப்பட்டிருந்த முள்ளினால் அவருக்கு நேரிட்ட காரியங்கள்

1. பலவீனம் (weakness)
2. நிந்தை (insult)
3. நெருக்கங்கள் (necessities)
4. துன்பங்கள் (persecutions)
5. இடுக்கண்கள் (distresses)

12 அதிகாரம்

பலவீனம் (weakness) - ἀσθένεια - astheneia 769

பெண்பால் பெயர்ச்சொல் - பலவீனம் பிணி வியாதி - மரணத்தில் சரீர பலவீனம் (1கொரி 15:43;2கொரி 13:4) **(infirmity of body)** (மத் 8:17 லூக்கா 5:15; லூக்கா 8:2 லூக்கா 13:11-12; யோவான் 5:5 யோவான் 11:4; அப் 28:9;1தீமோ 5:23) ஒரு தேசத்தின்மீது எதிரி நாட்டார் படையெடுத்து வரும்போது அவர்களுடைய படை வல்லமையுள்ளதாக இருந்தால் இவர்கள் பலவீனமாக இருப்பார்கள் (எபி 11:34) **(weakness of human nature)** (ரோமர் 6:19; ரோமர் 8:26, கலா 4:13;எபி 4:15;எபி 5:2;எபி 7:28), **(weakness of human ability)** (1கொரி 2:3) சாத்தானுடைய தூதனுக்கு முன்பாக பவுல உதவியற்றவனாகவும் பலவீனனாகவும் இருக்கிறான் (2கொரி 11:30, 2கொரி 12:5,9-10) தன்னுடைய மாம்சத்தில் ஒரு முள் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் பவுல் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்துவந்தார் (2கொரி 12:12) ஆகையினால் பவுலின் மாம்சத்தின் முள் என்பது ஒரு வியாதி அல்ல என்பது தெளிவாகிறது. (மத் 8:17 ஏசா 53:4-5, 1பேதுரு 2:24) தன்னுடைய ஊழியத்தின் கடைசி நாட்கள் வரையிலும் பவுல வியாதியஸ்தர்களைக் குணப்படுத்திய குறிப்பு வேதாகமத்திலே காணப்படுகிறது. (மத் 8:17, அப் 19:11, அப் 28:3-9

நிந்தை (insult) - ὕβρις - hybris - 5196

பெண்பால் பெயர்ச்சொல் - சேதம் நிந்தை **(reproaches)** (2கொரி 12:10); **(hurt)** (அப் 27:10), **(harm)** (அப் 27:21)

நெருக்கங்கள் (necessities) ἀνάγκη anankee - 318

பெண்பால் பெயர்ச்சொல் - நெருக்கங்கள், அவசியம், அகத்தியம், வேண்டும் **(necessities)** (2கொரி 12:10 2கொரி 6:4, 2கொரி 9:7; 1கொரி 7:37, 1கொரி 9:16; பிலே 1:14; எபி 7:12, எபி 9:16,23); **(distress)** (லூக்கா 21:23; 1கொரி 7:26

துன்பங்கள் (persecutions) διωγμός - diogmos - 1375

ஆண்பால் பெயர்ச்சொல் - உபத்திரவம், துன்பம் (2கொரி 12:10 மத் 13:21; மாற்கு 4:17;மாற்கு 10:30 அப் 8:1; அப் 13:50; ரோமர் 8:35 2கொரி 12:10;2தெச 1:4;2தீமோ 3:11

இடுக்கண்கள் (distresses) - στενοχωρία - stenochooria - 4730

பெண்பால் பெயர்ச்சொல் - உபத்திரவம், துன்பம், நெருக்கம் (2கொரி 12:10; 2கொரி 6:4. ரோமர் 8:35) **(anguish)** (ரோமர் 2:9

பலவீனங்கள் நிந்தைகள் நெருக்கங்கள் துன்பங்கள் இடுக்கண்கள் ஆகிய பாடுகள் மூலமாகச் சாத்தானுடைய தூதன் பவுலைக் குட்டுகிறான் இவை பவுலின் மாம்சத்தில் முள்ளாக இருக்கிறது (2கொரி 12:7-10)

"நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்" - சாத்தானுடைய தூதன் பவுலைக் குட்டும்போது தேவன் வாக்குத்தத்தம் [illegible]ணியிருக்கும் கிருபையை பவுல் நோக்கிப் பார்க்கிறார் (2கொரி 12:9) தேவனுடைய கிருபையைப் பெற்றுக் கொண்டு தேவனுடைய வல்லமையில் பெலப்படுகிறார் (2கொரி 12:10) தேவனுடைய வல்லமை பவுலின்மீது ஒரு கூடாரம்போல தங்கியிருக்கிறது. (2கொரி 12:9)

"மேன்மைபாராட்டி, புத்தியீனனாயினேன், நீங்களே இதற்கு என்னைப் பலவந்தப்படுத்தினீர்கள்" - பவுல் தன்னை மேன்மைப்படுத்தியதினால் புத்தியீனனானார் கொரிந்தியரே பவுலை மேன்மைப்படுத்தும்படி பலவந்தம் பண்ணினார்கள் (2கொரி 11:16 பவுலின் அப்போஸ்தல ஊழியத்தைப் பற்றிக் கொரிந்தியர் நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள் தன்னைப் பற்றி அவர்கள் கொரிந்துவிலிருக்கும் கள்ளப்போதகர்களிடம் சாட்சி பகர முடியும். (2கொரி 12:11-12

12 அதிகாரம்

"அப்போஸ்தலருக்குரிய அடையாளங்கள்" - அப்போஸ்தலருடைய ஊழியங்களில் அற்புதங்களும், அடையாளங்களும் நடைபெற்றது. அவர்கள் மூலமாகப் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷச் செய்தி நிரூபிக்கப்பட வேண்டும்

15. அவர்களை வருத்தப் படுத்தாதிருந்ததற்காக மன்னிப்பு கோருகிறார்

2கொரி 12:13 எதிலே மற்றச் சபைகளுக்குக் குறைவாயிருந்தீர்கள்? நான் உங்களை வருத்தப் படுத்தாதிருந்ததே உங்களுக்குக் குறைவு. இந்த அநியாயத்தை எனக்கு மன்னியுங்கள்

16. பவுலின் பிரயாண ஆயத்தம் - (1:15)

2கொரி 12:14 இதோ உங்களிடத்திற்கு மூன்றாந்தரம் வர ஆயத்தமாயிருக்கிறேன்; நான் உங்களை வருத்தப்படுத்துவதில்லை. நான் உங்களுடையதையல்ல, உங்களையே தேடுகிறேன். பெற்றாருக்குப் பிள்ளைகளல்ல, பிள்ளைகளுக்குப் பெற்றாரே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்க வேண்டும்.

2கொரி 12:15 ஆதலால், நான் உங்களில் எவ்வளவு அதிகமாய் அன்புகூருகிறேனோ அவ்வளவு குறைவாய் உங்களால் அன்புகூரப்பட்டிருந்தாலும், மிகவும் சந்தோஷமாய் நான் உங்கள் ஆத்துமாக்களுக்காகச் செலவுபண்ணவும் செலவு பண்ணப்படவும் விரும்புகிறேன்.

2கொரி 12:16 அப்படியாகட்டும், நான் உங்களுக்குப் பாரமாயிருக்கவில்லை; ஆனாலும், உபாயமுள்ளவனாயிருந்து தந்திரத்தினாலே உங்களைப் பிடித்தேனாம்.

"உங்களிடத்திற்கு மூன்றாந்தரம் வர ஆயத்தமாயிருக்கிறேன்" - கொரிந்தியரிடத்தில் வருவதற்கு இதற்கு முன்பாக இரண்டு முறை திட்டமிட்டார். ஆனால் அவரால் அங்கு செல்ல முடியவில்லை. இப்போது மூன்றாந்தரமாக அவரிடத்தில் வர ஆயத்தமாக இருக்கிறார் (1கொரி 16:5; 2கொரி 1:15-16; 2கொரி 13:1,2)

"பிள்ளைகளுக்குப் பெற்றாரகளே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டும்" - பவுல் கொரிந்தியருடைய இரட்சிப்பை மட்டுமே விரும்புகிறார். அவர்களுடைய பொக்கிஷங்களை விரும்பவில்லை (2கொரி 12:14-16)

"உபாயமுள்ளவனாயிருந்து, தந்திரத்தினாலே உங்களைப் பிடித்தேனாம்" - கொரிந்தியரைப் பவுல் தந்திரத்தினால் பிடித்துக் கொண்டதாக அவருடைய விரோதிகள் பவுல்மீது குற்றம் சுமத்துகிறார்கள். 2கொரி 12:17-18 ஆகிய வசனங்களில் பவுல் கேட்கும் கேள்விகள் மூலமாக அவர்களுடைய குற்றச்சாட்டுகளுக்குப் பதில் கூறுகிறார்

17. தீத்துவின் மேன்மை பாராட்டுதல் - (8:6,16)

2கொரி 12:17 நான் உங்களிடத்திற்கு அனுப்பினவர்களில் எவன் மூலமாயாவது உங்களிடத்தில் பொழிவைத் தேடினதுண்டா?

2கொரி 12:18 தீத்து உங்களிடத்தில் வரும்படி நான் அவனைக் கேட்டுக் கொண்டு, அவனுடனேகூட ஒரு சகோதரனை அனுப்பினேன்; தீத்து உங்களிடத்தில் ஏதாகிலும் பொழிவைத் தேடினானா? நாங்கள் ஒரே ஆவியையுடையவர்களாய், ஒரே அடிச்சுவடுகளில் நடந்தோமல்லவா?

"நாங்கள் ஒரே ஆவியையுடையவர்களாய், ஒரே அடிச்சுவடுகளில் நடந்தோமல்லவா?" இது தேவனுடைய ஊழியக்காரர்கள் அனைவரிடமும் காணப்பட வேண்டிய சுபாவம்.

12 அதிகாரம்

18. மறுபடியும் வரும்போது அவர்களை நியாயம் தீர்க்கும் அதிகாரம் பவுலுக்கு உள்ளது - (1கொரி 4:18-21; 2கொரி 10:6-11)

2கொரி 12:19 நாங்கள் யோக்கியர்களென்று விளங்கும்படி உங்களிடத்தில் பேசுகிறோமென்று எண்ணுகிறீர்களோ? தேவனுக்கு முன்பாகக் கிறிஸ்துவுக்குள் பேசுகிறோம். பிரியமானவர்களே, சகலத்தையும் உங்கள் பக்திவிருத்திக்காகச் செய்கிறோம்.

2கொரி 12:20 ஆகிலும் நான் வந்து உங்களை என் மனதின்படியிருக்கிறவர்களாகக் காணாமலும், நானும் உங்கள் மனதின்படியிருக்கிறவனாகக் காணப்படாமலுமிருப்பேனோவென்றும்; விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், வாக்குவாதங்கள், புறங்கூறுதல்கள், கோட்சொல்லுதல்கள், இறுமாப்புகள், கலகங்கள் ஆகிய இவைகள் உங்களுக்குள்ளே உண்டாயிருக்குமோவென்றும்,

2கொரி 12:21 மறுபடியும் நான் வருகிறபோது, என் தேவன் உங்களிடத்தில் என்னைத் தாழ்த்தும்படிக்கு, முன் பாவஞ்செய்தவர்களாகிய அநேகர் தாங்கள் நடப்பித்த அசுத்தத்தையும் வேசித்தனத்தையும் காமவிகாரத்தையும் விட்டு மனந்திரும்பாமலிருக்கிறதைக் குறித்து நான் துக்கப்படவேண்டியதாயிருக்குமோவென்றும் பயந்திருக்கிறேன்.

"சகலத்தையும் உங்கள் பக்திவிருத்திக்காகச் செய்கிறோம்" கொரிந்தியரிடத்திற்குப் போவதற்குப் பவுல் வெட்கப்பட்டு தீத்துவை அங்கு அனுப்பினார் என்று நினைக்க வேண்டியதில்லை. கொரிந்தியருக்குப் பக்தி விருத்தி உண்டாக்க வேண்டும். அதற்காகவே இரண்டு சகோதரர்களை அங்கு அனுப்புகிறார்.

பவுல் பயந்திருக்கும் மூன்று காரியங்கள்

1. கொரிந்தியரைத் தன்னுடைய மனதின்படியிருக்கிறவர்களாகக் காணாமலிருப்பாரோ என்று பயப்படுகிறார்.
2. பவுலும் கொரிந்தியருடைய மனதின்படியிருக்கிறவனாகக் காணப்படாமலிருப்பாரோ என்று பயப்படுகிறார்.
3. கொரிந்தியர் அசுத்தத்தையும் வேசித்தனத்தையும் காமவிகாரத்தையும் விட்டு மனந்திரும்பாமலிருக்கிறதைக் குறித்து, தான் துக்கப்படவேண்டியதாயிருக்குமேயென்று பவுல் பயப்படுகிறார் (2கொரி 12:21; 2கொரி 10:8-11; 2கொரி 13:10; 1கொரி 4:18-20)

விசுவாசிகளிடம் காணக்கூடாத காரியங்கள்

1. வாக்குவாதங்கள் (**Debates: wranglings**) (ரோமர் 1:29)
2. பொறாமைகள் (**Envyings: jealousies**) (அப் 5:17)
3. கன்னடகள் (**Wraths: indignation**) (ரோமர் 2:8)
4. கோபங்கள் (**Strifes: contentions**) (ரோமர் 2:8)
5. பின்மாறல்கள் (**Backbitings: slanders**) (1பேதுரு 2:1)
6. முறுமுறுப்புகள் (**Whisperings: murmurs**) (1கொரி 10:10)
7. எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணுதல் (**Swellings: puffed up feelings**) (1கொரி 4:6)
8. கலகங்கள் (**Tumults: uproars**) (லூக்கா 21:9)

13 அதிகாரம்

19. பவுலின் பிரயாண ஆயத்தம் – (1-15)

2கொரி 13:1 இந்த மூன்றாந்தரம் நான் உங்களிடத்திற்கு வருகிறேன். சகல காரியங்களும் இரண்டுமூன்று சாட்சிகளுடைய வாக்கினால் நிலைவரப்படும்.

2கொரி 13:2 நான் இரண்டாந்தரம் உங்களிடத்திலிருந்தபோது சொன்னது போல, இப்பொழுது தூரமாயிருந்தும் உங்களிடத்திலிருக்கிறவனாக, நான் மறுபடியும் வந்தால் தப்பவிடமாட்டேனென்று முன்பு பாவஞ்செய்தவர்களுக்கும் மற்ற எல்லாருக்கும் முன்னறிவித்து எழுதுகிறேன்.

2கொரி 13:3 கிறிஸ்து எனக்குள்ளே பேசுகிறாரென்பதற்கு அத்தாட்சி தேடுகிறீர்களே; அவர் உங்களிடமாய்ப் பலவீனரல்ல, உங்களிடத்தில் வல்லவராயிருக்கிறார்.

2கொரி 13:4 ஏனெனில் அவர் பலவீனத்தால் சிலுவையில் அறையப்பட்டிருந்தும், தேவனுடைய வல்லமையினால் பிழைத்திருக்கிறார்; அப்படி நாங்களும் அவருக்குள் பலவீனராயிருந்தும், உங்களிடமாய் விளங்கிய தேவனுடைய வல்லமையினால் அவருடனேகூடப் பிழைத்திருப்போம்.

"இந்த மூன்றாந்தரம் நான் உங்களிடத்திற்கு வருகிறேன்" (2கொரி 12:14)

"சகல காரியங்களும் இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினால் நிலைவரப்படும்" - வேதவாக்கியங்களை வியாக்கியானம் பண்ணும் முறைமை இந்த வசனத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு உபதேசத்தையும் இரண்டு அல்லது மூன்று வசனங்கள் நிரூபிக்க வேண்டும். (உபா 19:15, மத் 18:16)

"நான் இரண்டாந்தரம் உங்களிடத்திலிருந்தபோது சொன்னதுபோல" - பவுல் கொரிந்துவில் இரண்டாம் முறையாக இருந்தார் என்று இந்த வசனம் குறிப்பிடுகிறது. இரண்டாம் முறையாகக் கொரிந்தியரோடு இருந்தபோது அவர்களுக்குக் கூறியவற்றைப் பவுல் இப்போது மறுபடியும் முன்னறிவிக்கிறார். மூன்றாம் முறையாகக் கொரிந்தியரிடம் வருவதற்குப் பவுல் பிரயாமாக இருக்கிறார் (2கொரி 12:14). பவுல் முதலாம் முறையாகக் கொரிந்துவிற்குச் சென்றபோது அங்கு சபையை ஸ்தாபித்தார் என்றும், பவுலின் இரண்டாம் பிரயாணமும் மூன்றாம் பிரயாணமும் கொரிந்தியருக்கு அவர் எழுதின இரண்டு நிருபங்களையும் குறிக்கும் என்று ஒருசிலர் வியாக்கியானம் பண்ணுகிறார்கள். இது தவறான வியாக்கியானம். பவுல் தான் அனுபவித்த பல பாடுகளைப் பற்றி எழுதியிருக்கிறார் (2கொரி 11:23-28). இவை எப்போது நடந்தது என்று தெளிவாகத் தெரியவில்லை. மேலும் மூன்றாம் முறையாகக் கொரிந்தியரிடம் போவதற்குத் தன்னுடைய வாஞ்சையைப் பவுல் வெளிப்படுத்தியிருப்பதினால் அவர் இரண்டாம் முறையாக நிச்சயமாகவே கொரிந்துவிற்குச் சென்றிருப்பார் என்பது தெளிவாகிறது. (2கொரி 12:14)

"நான் மறுபடியும் வந்தால் தப்பவிடமாட்டேன்" கொரிந்துவிற்குப் பவுல் மேற்கொண்ட பிரயாணம் அவருடைய நிருபங்களைக் குறிக்கவில்லை. அவருடைய உண்மையான பிரயாணத்தையே குறிக்கிறது என்பதை இந்த வாக்கியம் விளக்குகிறது. மறுபடியும் கொரிந்துவிற்குப் பவுல் செல்லும்போது அவர்களைக் கண்டித்துணர்த்துவார்.

"கிறிஸ்து எனக்குள்ளே பேசுகிறாரென்பதற்கு அத்தாட்சி தேடுகிறீர்களே" கொரிந்தியர்கள் இரட்சிக்கப்பட்டிருப்பதும், அவர்கள் பெற்றிருக்கும் ஆவிக்குரிய வரங்களும் கிறிஸ்து பவுலுக்குள்ளே பேசுகிறார் என்பதற்கு அத்தாட்சிகளாகும். (1கொரி 12

13 அதிகாரம்

பலவீனம் (weakness) - ἀσθένεια - astheneia 769

பெண்பால் பெயர்ச்சொல் – பலவீனம் பிணி வியாதி "infirmities" 2கொரி 12:10 - இது வியாதியைக் குறிக்காது. இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டது கிறிஸ்துவின் பலவீனத்தையும் தோல்வியையும் வெளிப்படுத்துவதாக ஜனங்கள் நினைத்தார்கள் மரணத்திலிருந்து தப்பித்துக் கொள்ள இயேசு கிறிஸ்துவிற்கு வல்லமையில்லை என்றும் நினைத்தார்கள் கல்வாரி சிலுவையில் இயேசு கிறிஸ்து தமது திருஇரத்தத்தைச் சிந்தி மரித்தது அவருடைய வல்லமையை வெளிப்படுத்துகிறது. கொலோ 2:14-17 பேதுரு 2:24 1கொரி 1:18 24 நாமும் இயேசு கிறிஸ்துவிற்குள் பலவீனராக இருக்கிறோம் அந்தப் பலவீனமே நமக்கு ஜீவனையும் வல்லமையையும் கொடுக்கிறது. (2கொரி 12:9-10) நாம் இயேசு கிறிஸ்துவின் பக்கமாக இருப்பதினால் உலகத்தாருக்குப் பலவீனரைப் போல காணப்படுகிறோம் தோல்வி அடைபவர்கள் போல இருக்கிறோம். இயேசு கிறிஸ்துவின் பலவீனமே அவருடைய பெலனாக இருக்கிறது. அதுபோலவே நமது பெலவீனம் நமது பெலனாகவும், நமது தோல்வி நமது வெற்றியாகவும் இருக்கும். (2கொரி 12:9-10)

20. தெளிவு பெறுமாறு புத்திமதி

2கொரி 13:5 நீங்கள் விசுவாசமுள்ளவர்களோ என்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள் உங்களை நீங்களே பரிட்சித்துப் பாருங்கள் இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரிட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள்

2கொரி 13:6 நாங்களோ பரிட்சைக்கு நில்லாதவர்களல்லவென்பதை அறிவீர்களென்று நம்புகிறேன்

2கொரி 13:7 மேலும் நீங்கள் ஒரு பொல்லாங்கும் செய்யாதிருக்கும்படியாக, தேவனை நோக்கி விண்ணப்பம் பண்ணுகிறேன் நாங்கள் பரிட்சைக்கு நின்றவர்களென்று காணப்படும் பொருட்டல்ல, நாங்கள் பரிட்சைக்கு நில்லாதவர்கள்போலிருந்தாலும் நீங்கள் நலமானதைச் செய்யும் பொருட்டே விண்ணப்பம்பண்ணுகிறேன்

2கொரி 13:8 சத்தியத்திற்கு விரோதமாக நாங்கள் ஒன்றுஞ் செய்யக்கூடாமல் சத்தியத்திற்கு அநுகூலமாகவே செய்யக்கூடும்

2கொரி 13:9 நாங்கள் பலவீனரும் நீங்கள் பலமுள்ளவர்களாயிருக்கையில் சந்தோஷப்படுகிறோம், நீங்கள் நற்சீர் பொருந்தும்படிக்கும் விண்ணப்பம் பண்ணுகிறோம்

2கொரி 13:10 ஆனதால் இடித்துப் போடவல்ல, ஊன்றக் கட்டவே கர்த்தர் எனக்குக் கொடுத்த அதிகாரத்தின்படி நான் உங்களிடத்தில் வந்திருக்கும் போது, கண்டிதமாய் நடவாதபடிக்கும், நான் தூரமாயிருந்து இவைகளை எழுதுகிறேன்

பவுல் கொரிந்தியருக்குக் கூறியிருக்கும்

1. நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள் (2கொரி 13:5
2. இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியுங்கள் (2கொரி 13:5
3. நற்சீர் பொருந்துங்கள் (2கொரி 13:11
4. ஆறுதலடையுங்கள் (2கொரி 13:11
5. ஏகசிந்தையாயிருங்கள் (2கொரி 13:11
6. சமாதானமாயிருங்கள் (2கொரி 13:11

13 அதிகாரம்

7 ஒருவரையொருவர் வாழ்த்துங்கள் 2கொரி 13:12

சோதித்து அறிதல் (Examine)
πειράζω - peirazoo - 3985

வினைச்சொல் – சோதி, சோதனைக் காரணமாயிரு, பிரயத்தனம் பண்ணு, சோதனைக்குட்படுத்து, பரீட்சை பார் முயற்சி செய்,தூண்டிவிடு(try) எபி 11:17 வெளி 2:2,10; வெளி 3:10) (prove) யோவான் 6:6); (examine) 2கொரி 13:5); (tempter) (மத் 4:3 1தெச 3:5); (assay) (அப் 16:7);(go about) அப் 24:6); (tempt) (மத் 4:1)

பரீட்சித்துப்பார்த்தல (to prove) -
δοκιμάζω - dokimazoo - 1381

வினைச்சொல - நிதானி சோதித்துப்பார் வகையறு, பகுத்தறி பரீட்சைபார் தகுதியைக்குறி கண்டறி "try" (1கொரி 3:13 1தெச 2:4 1பேதுரு 1:7;1யோவான 4:1) "prove" (லூக்கா 14:19;ரோமர் 12:2 2கொரி 8:8,22; 2கொரி 13:5 கலா 6:4, எபே 5:10; 1தெச 5:21 1தீமோ 3:10; எபி 3:9); "examine" 1கொரி 11:28 "discern" (லூக்கா 12:56); "approve" ரோமர் 2:18, 1கொரி 16:3; பிலி 1:10), "allow" (ரோமர் 14:22 1தெச 2:4); "like" (ரோமர் 1:28)

நற்சீர்பொருந்துதல (Be perfect) -
καταρτίζω - katartizoo - 2675

வினைச்சொல் - பழுதுபார் உண்டாகும்படி செய், தேறியிரு, எத்தனமாக்கு, சீர்பொருந்தியிரு, நிறைவாக்கு, ஆயத்தம்பண்ணு, சீர்படுத்து "mend" (மத் 4:21; மாற்கு 1:19); "restore" (கலா 6:1) fit (ரோமர் 9:22); "prepare" (எபி 10:44); "frame" (எபி 9:3) "perfectly joined together" (1கொரி 1:10); "be and make perfect" (மத் 21:16; லூக்கா 6:40, 1தெச 3:10; 2கொரி 13:11; எபி 13:21 1பேதுரு 5:10)

ஆறுதலடைதல் (good comfort) -
παρακαλέω -parakaleoo - 3870

வினைச்சொல் - வேண்டிக்கொள், வருந்தியழை, புத்திச்சொல், எச்சரி, கேட்டுக்கொள், தேற்று, கடிந்துகொள், போதி, மன்றாடு (2கொரி 1:4)

சிந்தை (to think) - φρονέω - phroneoo - 5426

வினைச்சொல-சிந்தி, அபிப்பிராயபடு, எண்ணு, நினை, எண்ணங்கொள், சிந்தையாயிரு நாடு,விசேஷித்துக்கொள் (ரோமர் 12:16; ரோமர் 15:5; பிலி 2:2 பிலி 3:16; 1கொரி 1:10

ὁ - ho - 3588

கிரேக்க மொழியில சிறப்புச்சுட்டு - குறிப்பிட்ட நபர்களையோ அல்லது பொருட்களையோ குறிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படுகிறது, வலியுறுத்தும் இலக்கணக்கூறாகவும் பயன்படுத்த படுகிறது.

αὐτός - autos - 846

பிரதிப பெயர்ச்சொல - அவன அவள், அது

சமாதானமாயிருத்தல் (Live in peace) -
εἰρηνεύω - eireeneuoo - 1514

வினைசசொல் - சமாதானமாயிரு, சமாதான முள்ளவர்களாயிரு (ரோமர் 12:18 - எபி 12:14

"இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால அறியீர்கள்" இயேசு கிறிஸ்து ஒருவனிடத்தில இருக்கும்பொழுது அவன் புதுசிருஷ்டியாயிருக்கிறான (2கொரி 5:17,18 அவன பரீட்சைக்கு நிற்பான அவனிடத்தில தேவனுடைய சுபாவமும் தேவனுடைய வல்லமையும் காணபடும்.

II கொரிந்தியர் – தொகுப்புரை

13 அதிகாரம்

"பரீட்சைக்கு நில்லாதவர்கள்" (reprobates) - (1கொரி 9:27)

"நீங்கள் ஒரு பொல்லாங்கும் செய்யாதிருக்கும்படியாக, தேவனை நோக்கி விண்ணப்பம்பண்ணுகிறேன்" - கொரிந்தியர்கள் தீமையான காரியங்களைச் செய்தால் பவுல் தனது அப்போஸ்தல அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்களைத் தண்டிப்பார். பவுலைப் பற்றி அவருடைய விரோதிகள் தவறாகக் கூறுகிறார்கள். தான் பரீட்சைக்கு நில்லாதவன்போல இருந்தாலும் கொரிந்தியர் நன்மையானதைச் செய்ய வேண்டும் என்று பவுல் விண்ணப்பம் பண்ணுகிறார். அவர்கள் நன்மையானதைச் செய்யவில்லையென்றால் தேவன் தனக்குக் கொடுத்த அதிகாரத்தின் நிமித்தமாகப் பவுல் அவர்களைக் கடிந்து கொள்ள வேண்டியது இருக்கும். சத்தியத்திற்கு விரோதமாகப் பவுல் ஒன்றுஞ்செய்யக் கூடாமல் சத்தியத்திற்கு அநுகூலமாகவே செய்யக்கூடும். (2கொரி 13:7-10)

"நாங்கள் பலவீனரும் நீங்கள் பலமுள்ளவர்களுமாயிருக்கையில், சந்தோஷப்படுகிறோம்" - கொரிந்தியர்கள் பலமுள்ளவர்களாகவும், கடிந்து கொள்ளப்படாதவர்களாகவும் இருக்கும்போது பவுல் சந்தோஷப்படுகிறார். அவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சியையும் கடிந்து கொள்ளத் தேவையற்ற நீதியான ஜீவியத்தையும் குறிக்கும்.

"நான் உங்களிடத்தில் வந்திருக்கும்போது கண்டிதம்பண்ணாதபடிக்கும், நான் தூரமாயிருந்து இவைகளை எழுதுகிறேன்" - பவுல் கொரிந்தியரை நிருபங்கள் மூலமாகப் புத்தி சொல்லித் திருத்துகிறார். ஆகையினால் பவுல் அவர்களிடத்தில் நேரில் செல்லும்போது அவர்களைக் கண்டிதம் பண்ண வேண்டிய அவசியம் இராது.

21. பிரிந்து போகும்போது புத்திமதி

2கொரி 13:11 கடைசியாக, சகோதரரே, சந்தோஷமாயிருங்கள்; நற்சீர் பொருந்துங்கள், ஆறுதலடையுங்கள், ஏகசிந்தையாயிருங்கள், சமாதானமாயிருங்கள், அப்பொழுது அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணராகிய தேவன் உங்களோடேகூட இருப்பார்.

2கொரி 13:12 ஒருவரையொருவர் பரிசுத்தமுத்தத்தோடு வாழ்த்துங்கள்.

22. வாழ்த்தும் ஆசீர்வாதமும்

2கொரி 13:13 பரிசுத்தவான்கள் எல்லாரும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்.

2கொரி 13:14 கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் உங்களனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.

"கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும் தேவனுடைய அன்பும் பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும்" - திரித்துவத்தில் உள்ள பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவருமே தனித் தனியாக ஆள்தத்துவ பண்புடையவர்கள் என்பதை இந்த வாக்கியம் விளக்குகிறது.

திரித்துவத்தின் விளக்கம்

1. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபை - பிதாவாகிய தேவனுடைய குமாரன் (யோவான் 3:17; 1யோவான் 5:7)

2. தேவனுடைய அன்பு - பிதாவாகிய தேவன் (யோவான் 3:16; 1கொரி 13:1-13; ரோமர் 5:8)

3. பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியம் (பிலி 2:1; ரோமர் 8:14-16)

ஐக்கியம் (communion) - κοινωνία - koinoonia - 2842

பெண்பால் பெயர்ச்சொல் - அந்நியோந்நியம், ஐக்கியம், பங்கை ஏற்றுக்கொள்ளுதல், பொருள், சகாயம், தானம், உடன்பாடு (communion) (1கொரி 10:16; 2கொரி 6:14; 2கொரி 13:14); (communicate) (பிலே 1:6; எபி 13:16), (fellowship) (அப் 2:42; 1கொரி 1:9; 2கொரி 8:4; கலா 2:9; எபே 3:9; பிலி 1:5; பிலி 2:1; பிலி 3:10; 1யோவான் 1:3,6-7); (contribution) (ரோமர் 15:26); (distribution) (2கொரி 9:13)

கலாத்தியர் - முன்னுரை

காலமும், இடமும்

கிபி. 68-ஆம் ஆண்டில் பவுல் இந்த நிருபத்தை ரோமாபுரியிலிருந்து எழுதினார்

ஆசிரியர்

பவுல் (கலா 1:1)

மையக்கருத்து

பவுல் இந்த நிருபத்தை எழுதுவதற்குக் காரணங்கள்

1 கலாத்தியர்களில் சிலர் இயேசு கிறிஸ்துவை விட்டு பின்வாங்கிப்போனார்கள் யூதேயாவிலிருந்து வந்த யூதமார்க்கத்து உபதேசியார்களைப் பின்பற்றி நியாயப்பிரமாணத்தின் கிரியைகளுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்தார்கள் இவர்களைத் திருத்துவதற்காக பவுல் இந்த நிருபத்தை எழுதியிருக்கிறார்

2 யூதருடைய பழைய உடன்படிக்கைக்கும், கிறிஸ்தவ விசுவாசிகளுடைய புதிய உடன்படிக்கைக்கும் இடையேயுள்ள தொடர்புகளை விவரித்து பவுல் இந்த நிருபத்தில் எழுதியிருக்கிறார்

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 6

வசனங்கள் - 149

கேள்விகள் - 19

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள் - 4

புதிய தீர்க்கதரிசனங்கள் - 2

வரலாற்றைக் குறிக்கும் வசனங்கள் 144

பொருளடக்கம்

I. முன்னுரை

1 ஆசிரியரும் வாழ்த்தும் (1:1-5)

2 நிருபத்தின் கருத்தும் எழுதப்பட்ட சூழ்நிலையும் (1:6-10)

II. பவுலின் சுவிசேஷம்

1 இயேசு கிறிஸ்துவிடமிருந்து நேரடியாக வந்த வெளிப்பாடு (1:11-12)

2 பவுலின் முந்தைய ஜீவியம் (1:13-14)

3 பவுலின் சுவிசேஷமும் ஊழியமும் தேவனிடமிருந்து வந்தவை - மனுஷருடைய யோசனையின்படியானது அல்ல (1:15-24)

4 பதினாலு வருஷம் சென்ற பின்பு - தன் சுவிசேஷத்தையும் மற்ற அப்போஸ்தலருடைய சுவிசேஷத்தையும் பவுல் ஒப்பிடுகிறார் (2:1-2)

5 பவுலின் உடன் ஊழியன் தீத்து - கிரேக்கன் - விருத்தசேதனம் பண்ணிக் கொள்ளும்படிக்கு கட்டாயம் பண்ணப்படவில்லை (2:3-5)

6 பவுலின் சுவிசேஷம் புறஜாதி கிறிஸ்தவர்களுக்கு நிறைவானது (2:6)

7 விருத்தசேதனம் உள்ளவர்களுக்கும் விருத்தசேதனம் இல்லாதவர்களுக்கும் இரண்டு விதமான பிரசங்கங்கள் (2:7-10)

8 பேதுருவையும் மற்றவர்களையும் அவர்களுடைய மாயமாலத்திற்காகவும் தவறான உபதேசத்திற்காகவும் பவுல் கடிந்து கொள்கிறார் (2:11-14)

III. கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுதல்

1 யூதரும் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட முடியும் (2:15-16)

கலாத்தியர் - முன்னுரை

2 யூதமார்க்கத்தின் ஸ்திரமற்ற தன்மை (2:17-18)

3 விசுவாசிகள் கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டிருக்கிறார்கள் - நியாயப்பிரமாணத்திற்கு மரித்திருக்கிறார்கள் (2:19-20)

4 நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால் கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே (2:21)

5 விசுவாசக்கேள்வியினாலே ஆவியைப் பெற்றிருக்கிறோம் - நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே பெறவில்லை (3:1-4)

6 நமக்கு ஆவியை அளித்து நமக்குள்ளே அற்புதங்களை நடப்பிக்கிறவர் அதை விசுவாசக் கேள்வியினாலேயே செய்கிறார் (3:5)

7 நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு 430 வருஷங்களுக்கு முன்பாகவே ஆபிரகாம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டான் (3:6)

8 விசுவாச மார்க்கத்தார் அனைவரும் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டார்கள் (3:7-9)

9 நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள் (3:10-12)

10 கிறிஸ்து நமக்காக சாபமாகி நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார் (3:13-14)

11 ஆபிரகாமின் விசுவாச உடன்படிக்கையை நியாயப்பிரமாணமானது தள்ளி வியர்த்தமாக்கமாட்டாது (3:15-18)

12 நியாயப்பிரமாணத்தின் உண்மையான நோக்கம் (3:19-20)

13 நியாயப்பிரமாணம் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு விரோதமானது அல்ல (3:21-24)

14 விசுவாசம் நியாயப்பிரமாணத்திலிருந்து விசுவாசிகளை விடுதலை பண்ணுகிறது (3:25)

15 விசுவாசத்தினால் விசுவாசிகள் தேவனுடைய குடும்பத்தில் புத்திரராயும் சுதந்திரராயும் இருக்கிறார்கள் (3:26-29)

16 சுதந்தரவாளி (4:1-3)

17 கிறிஸ்து நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக் கொண்டு அவர்களை தேவனுடைய புத்திரராக ஆக்குகிறார் (4:4-5)

18 புத்திரராயும் சுதந்தரராயும் இருப்பதற்கு ஆதாரம் (4:6-7)

19 நாம் தேவனை அறியாமலிருந்தபோது சுபாவத்தின்படி தேவர்களல்லாதவர்களுக்கு அடிமைகளாயிருந்தோம் (4:8-11)

20 ஆதியிலிருந்த ஆனந்த பாக்கியத்தைக் கொண்டிருக்குமாறு கலாத்தியருக்கு விண்ணப்பம் (4:12-16)

21 நியாயப் பிரமாணக்காரர்கள் பாவத்திற்கும் அடிமைத்தனத்திற்கும் நம்மை மறுபடியும் உட்படுத்துவார்கள் (4:17-18)

22 கிறிஸ்து நம்மிடத்தில் உருவாகுமளவும் நமக்காக பவுல் மறுபடியும் கர்ப்ப வேதனைப்படுகிறார் (4:19-20)

23 கிருபையும் பிரமாணமும் ஒன்றுக்கொன்று முரண்பாடுடையவை (4:21-31)

24 மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்திற்குட்படாமல் இருக்க வேண்டும் என்னும் எச்சரிப்பு (5:1)

25 நியாயப் பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிறவர்களுக்கு கிறிஸ்துவும் கிருபையும் விருதாவாக இருக்கும் (5:2-6)

கலாத்தியர் - முன்னுரை

26 நியாயப்பிரமாணத்தை மறந்து விட்டு கிறிஸ்துவிடமும் தேவனுடைய கிருபையிடமும் வருமாறு அழைப்பு 5.7-12

27 நியாயப்பிரமாணத்திற்கும் மாம்ச ஜீவியத்திற்கும் திரும்பி போவதற்கு எதிராக கடைசி எச்சரிப்பு (5.13-15)

IV. நடைமுறை உபதேசங்கள்

1 பாவத்தின்மீது வெற்றி பெறுவதன் இரகசியம் (5.16-18

2 மாம்சத்தின் கிரியைகள் (5.19-21)

3 ஆவியின் கனி (5.22-23)

4. ஆவிக்குரிய ஜீவியம் (5.24-26)

5 மாம்சத்திற்கென்று விதைப்பதும் ஆவிக்கென்று விதைப்பதும் (6.7-8)

6 நன்மை செய்கிறதில் சோர்ந்து போகக்கூடாது (6.9-11)

7 புறஜாதியார் பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்று யூதர்கள் விரும்புவதற்கு காரணம் (6.12-13)

8 புறஜாதியாரும் யூதரும் பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டியதில்லை என்பதற்கு காரணம் (6.14-16

9 முடிவுரையும் ஆசீர்வாதமும் (6.17-18

கலாத்தியர் - தொகுப்புரை

1 அதிகாரம்

I. முன்னுரை

1. ஆசிரியரும் வாழ்த்தும்

கலா 1:1 மனுஷராலுமல்ல மனுஷன் மூலமாயுமல்ல இயேசுகிறிஸ்துவினாலும், அவரை மரித்தோரிலிருந் தெழுப்பின பிதாவாகிய தேவனாலும் அப்போஸ்தலனாயிருக்கிற பவுலாகிய நானும்.

கலா 1:2 என்னுடனேகூட இருக்கிற சகோதரரெல்லாரும் கலாத்தியா நாட்டிலுள்ள சபைகளுக்கு எழுதுகிறதாவது,

கலா 1:3 பிதாவாகிய தேவனாலும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

கலா 1:4 அவர் நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்,

கலா 1:5 அவருக்கு என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

"இயேசுகிறிஸ்துவினாலும் அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின பிதாவாகிய தேவனாலும்" தேவத்துவத்தில் இயேசு கிறிஸ்துவும், பிதாவும் தனித்தனியாக ஆள்தத்துவம் பண்டின இருப்பதை இந்த வாக்கியம் விளக்குகிறது. (யோவான் 1:1-2; யோவான் 5:7

"அப்போஸ்தலன்" (apostle) (அப் 15:33

'கலாத்தியா நாட்டிலுள்ள சபைகள்' - கலாத்தியா ஆசியா மைனரிலுள்ள ஒரு பிரதேசம். இங்குள்ள எல்லாச் சபைகளுக்கும் இந்த நிருபம் எழுதப்பட்டிருக்கிறது. கலாத்தியா என்னும் பெயரில் எந்தப் பட்டணமும் இல்லை. இந்த நிருபம் எழுதப்பட்ட போது கலாத்தியாவில் எத்தனை சபைகள் இருந்தன என்பதும் தெரியவில்லை. கலாத்தியாவிலுள்ள எல்லாச் சபைகளிலும் பொதுவான பிரச்சனைகள் இருந்தன என்பது இந்த நிருபத்தின் மூலமாகத் தெரிய வருகிறது. (கலா 1:6)

கிறிஸ்து தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்ததற்குக் காரணங்கள்

1. நம்முடைய பாவங்களுக்காக (கலா 1:4 மத் 1:21 மத் 26:28 1கொரி 15:3 1பேதுரு 2:24
2. இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று நம்மை விடுவிக்கும்படியாக (கலா 1:4 தீத்து 2:14)
3. சபைக்காக - கிறிஸ்து வேத வாக்கியத்தினால் சபையைப் பரிசுத்தப் படுத்தும்படியாக (எபே 5:25-26
4. எல்லாரையும் மீட்கும் பொருளாக (1தீமோ 2:6)
5. நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக் கொள்ளும்படியாக (தீத்து 2:14)

2. நிருபத்தின் கருத்தும் எழுதப்பட்ட சூழ்நிலையும்

கலா 1:6 உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப் பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்.

கலா 1:7 வேறொரு சுவிசேஷம் இல்லையே. சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல

கலாத்தியர் - தொகுப்புரை

1 அதிகாரம்

கலா 1:8 நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல் நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்

கலா 1:9 முன் சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன் நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்

கலா 1:10 இப்பொழுது நான் மனுஷரையா, தேவனையா, யாரை நாடிப் போதிக்கிறேன்? மனுஷரையா பிரியப்படுத்தப்பார்க்கிறேன்? நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே.

கலாத்தியரிடம் காணப்பட்ட தவறுகள்

1 வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்பினார்கள் (கலா 1:6)

2 கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிற கள்ளப் போதகர்களை அனுமதித்தார்கள் (கலா 1:7 கலா 5: 8 12)

3 இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாமல் மயக்கமடைந்திருந்தார்கள். (கலா 3:1; கலா 5:7

4 இயேசு கிறிஸ்துவை மறுபடியுமாகச் சிலுவையில் அறைகிறார்கள் (கலா 3:1

5 சுவிசேஷத்தின் ஆசீர்வாதங்களை மோசேயின் பிரமாணத்தினால் வரும் ஆசீர்வாதங்கள் என்று கூறுகிறார்கள். (கலா 3:2)

6 ஆவியினால் ஆரம்பம் பண்ணினார்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவு பெறப் போகிறார்கள் (கலா 3:3

7 சுவிசேஷத்தின் ஆசீர்வாதங்களை இழந்து போனதினால் சுவிசேஷத்திற்காக வீணாயப் பாடுகளைப் பட்டார்கள் (கலா 3:4)

8 நீதிமானாக்கப் படுவதற்குக் கிரியைகளின் பிரமாணத்திற்கு மறுபடியுமாகத் திரும்புகிறார்கள் (கலா 3:10-12; கலா 5:4

9 பலனற்றதும், வெறுமையானதுமான வழிபாடுகளுக்கு மறுபடியும் திரும்புகிறார்கள் (கலா 4:9,

10 மறுபடியும் அடிமைப்படும்படி விரும்புகிறார்கள் (கலா 4:9,21,

11 மறுபடியும் ஓய்வுநாட்களையும், பிரமாணத்தின் பண்டிகைகளையும் ஆசரிக்கும்படி திரும்பிப் போகிறார்கள் (கலா 4:9-10)

12 பவுல் அவர்களுக்கு சத்தியத்தைச் சொன்னதினாலே அவனைச் சத்துருவாகக் காணுகிறார்கள் (கலா 4:16)

13 தவறான காரியங்களுக்கு வைராக்கியம் பாராட்டுகிறார்கள் (கலா 4:17-18

14 பின்வாங்கிப் போய்விட்டார்கள் ஆகையினால் அவர்கள் மறுபடியும் பிறக்க வேண்டி[redacted] இருக்கிறார்கள் கலா 4:19

15 மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்திற்கு உட்பட்டிருக்கிறார்கள் (கலா 5:1)

16 விருத்தசேதனம் பண்ண வேண்டுமென்று மறுபடியும் தீர்மானம் பண்ணுகிறார்கள் (கலா 5:2

17 கிருபையினின்று விழுந்துபோனார்கள் (கலா 1:6, கலா 5:4

கலாத்தியர் - தொகுப்புரை

1 அதிகாரம்

18 சுயாதீனத்தை ஒரு வாய்ப்பாக பயன்படுத்தி சரீரத்தைப் பாவம் செய்வதற்கு ஒப்புக்கொடுத்தார்கள் (கலா 5:13)

19 ஒருவரையொருவர் கடித்துப் பட்சித்தார்கள் (கலா 5:15,26)

20 கிறிஸ்துவின் சிலுவையினிமித்தம் வரும் பாடுகளுக்குத் தப்பித்து ஓட வழிதேடுகிறார்கள் (கலா 6:12)

"வேறொரு சுவிசேஷம்" - இந்த வாக்கியம் நியாயப்பிரமாணத்தைக் குறிக்கும்

வேறொரு சுவிசேஷமாகிய நியாயப் பிரமாணத்தினால் செய்ய முடியாத காரியங்கள்

1 நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப் படுவதில்லை (கலா 2:16; கலா 3:11; கலா 5:4)

2 நியாயப் பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட் பட்டிருக்கிறார்கள் (கலா 3:10)

3 நியாயப்பிரமாணமோ விசுவாசத்திற்குரியதல்ல. (கலா 3:12)

4 நியாயப் பிரமாணத்தினால் சுதந்தரமானது உண்டாகாது. (கலா 3:18)

5 நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம் ஆகையினால் பாவத்தைப் பாவமானதாக ஆக்குவதற்கே நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது. (கலா 3:19; ரோமர் 3:19-20 ரோமர் 7:13; 1யோவான் 3:4)

6 இயேசு கிறிஸ்து வரும்வரையிலும் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது (கலா 3:19, 23-25; எபி 7:28 எபி 9:9-10 லூக்கா 16:16)

7 நியாயப்பிரமாணம் உயிரைக் கொடுக்காது. (கலா 3:21)

8 நியாயப்பிரமாணம் நீதியைக் கொடுக்காது. (கலா 3:21)

9 நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது (கலா 3:24-26 மத் 11:13 லூக்கா 16:16)

10 கிறிஸ்துவர்கள் நியாயப் பிரமாணத்திற்கு உட்பட்டவர்கள் அல்ல. (கலா 3:19-25 அப 15:24)

11 நியாயப்பிரமாணம் நம்மை குமாரர்களாக்காமல் அடிமைப் பட்டவர்களாக்குகிறது (கலா 4:1-3)

12 அடிமைத்தனத்தைக் கொடுக்கிறது (கலா 4:9,24; கலா 5:1)

13 நியாயப்பிரமாணம் அக்காலத்து மார்க்கம். (கலா 4:10)

14 நியாயப்பிரமாணத்தினால் புதிய பிறப்பைக் கொடுக்க முடியாது (கலா 4:28-31)

15. நியாயப்பிரமாணம் அகற்றப்பட்டு விட்டது. (கலா 4:21-31)

16 விருத்தசேதனம் தேவை என்று நியாயப்பிரமாணம் கூறுகிறது (கலா 5:2-3)

17 நியாயப் பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற யாவரும் கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தவர்கள் (கலா 5:4)

"புரட்டுதல்" (pervert) இயேசு கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்து திரும்பவும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு அதற்குக் கீழ்ப்படிவது. (கலா 5:4)

கிறிஸ்துவினுடைய சுவிசேஷம் கலாத்தியருக்குக் கூறப்பட்டிருக்கும் விதம்

1 கிறிஸ்துவின் கிருபை கலா 1:6

கலாத்தியர் – தொகுப்புரை

1 அதிகாரம்

2 வெளிப்பாடு (கலா 1:11-12)

3 மனுஷனுடையதல்ல, மனுஷனிடமிருந்து வந்ததுமல்ல (கலா 1:11)

4 நீதிமானாக்குகிறது. (கலா 2:16)

5. ஆவியை வழங்குகிறது. (கலா 3:2)

6 அற்புதங்களை நடப்பிக்கிறது. (கலா 3:5)

7 நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொள்கிறது. (கலா 3:13)

8 விசுவாசத்திற்குரியது. (கலா 3:22-25)

9 நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்டவர்களை மீட்கிறது. (கலா 3:13)

10 நம்மை அடிமைகளாக்காமல் குமாரர்களாக்குகிறது. (கலா 4:6)

11 நம்மைச் சுயாதீனமுள்ளவர்களாக்குகிறது. (கலா 4:26 கலா 5:1,13)

12 புதிய பிறப்பைத் தருகிறது. (கலா 4:21-31)

13 விருத்தசேதனத்தை அழிக்கிறது. (கலா 5:2)

14. நியாயப்பிரமாணத்தை அகற்றுகிறது. (கலா 5:18)

15 சுவிசேஷம் கிறிஸ்துவின் பிரமாணமாகும் (கலா 6:2)

"வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்" சுவிசேஷம் கலாத்தியருக்குப் பிரசங்கிக்கப்பட்டது. கலாத்தியர்கள் சுவிசேஷத்தையும், அதன் மூலமாக வரும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொண்டார்கள். ஆகையினால் கிருபையிலிருந்து அகற்றப்படுவதும் (கலா 1:6) கிருபையிலிருந்து விழுந்துபோவதும் (கலா 5:4) சுவிசேஷத்திலிருந்து பின்வாங்கிப் போகும் காரியமாகும்.

கலாத்தியரில் போதிக்கப்பட்டிருக்கும் உபதேசங்கள்

1 கிறிஸ்தவர்கள் கிருபையிலிருந்து விழுந்து போகவும் கிறிஸ்துவினிடமிருந்து அகற்றப்படவும் முடியும். (கலா 1:6-8; கலா 2:21 கலா 3:1-5; கலா 4:8-11,19 கலா 5:4, 19-21 கலா 6:1-8

2 பவுலின் சுவிசேஷம் தேவனிடமிருந்து வந்த வெளிப்பாடு (கலா 1:11-2:14)

3 விசுவாசத்தினால் மட்டுமே ஒருவன் நீதிமானாக்கப்படுவான் கிரியைகளினால் யாரும் நீதிமானாக்கப்படுவதில்லை (கலா 2:15-3:29

4 கிறிஸ்தவர்களால் பாவத்திலிருந்து விலகி ஜெயஜீவியம் செய்ய முடியும் (கலா 2:20-3:5; கலா 5:16-6:8

5 பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் எல்லா விசுவாசிகளுக்கும் உரியது (கலா 3:1-5:13-14

6 மோசேயின் பிரமாணம் முழுவதுமாக ஒழிக்கப்பட்டுவிட்டது. (கலா 3:10-29, கலா 4:21-31 கலா 5:1

7 கிறிஸ்துவைவிட்டுப் பின்வாங்கிப் போனவர்கள் மறுபடியும் கிறிஸ்துவிற்குள் பிறந்து தேவனுடைய கிருபைக்குத் திரும்ப வேண்டும் (கலா 1:6-8, கலா 2:17 21 கலா 3:1 5 10 12, கலா 4:19 கலா 5:1 4. 7 16 26 கலா 6:1 8

8 நியாயப்பிரமாணத்திற்கு மறுபடியும் திரும்பிச் செல்கிறவர்கள் அதற்குப் பூரணமாகக் கீழ்ப்படிய வேண்டும். கீழ்ப்படியாதவர்கள் சபிக்கப்பட்டவர்களாகவே இருப்பார்கள் (கலா 3:1 5 10 12 கலா 4:21 5:4

"சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்" (அப் 23:14)

1 அதிகாரம்

II. **பவுலின் சுவிசேஷம்** - (கலா 1:11-2:14 எபே 3

1. இயேசு கிறிஸ்துவிடமிருந்து நேரடியாக வந்த வெளிப்பாடு

கலா 1:11 மேலும், சகோதரரே, என்னால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் மனுஷருடைய யோசனையின்படியானதல்லவென்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.

கலா 1:12 நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை; இயேசுகிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார்.

2. பவுலின் முந்தைய ஜீவியம் - (அப் 9:1-21; 22:1-21; 26:1-20 பிலி 3:4-6

கலா 1:13 நான் யூதமார்க்கத்திலிருந்தபோது என்னுடைய நடக்கையைக் குறித்துக் கேள்விப்பட்டிருப்பீர்கள்; தேவனுடைய சபையை நான் மிகவும் துன்பப்படுத்தி, அதைப் பாழாக்கி;

கலா 1:14 என் ஜனத்தாரில் என் வயதுள்ள அநேகரைப்பார்க்கிலும் யூதமார்க்கத்திலே தேறினவனாய், என் பிதாக்களுடைய பாரம்பரிய நியாயங்களுக்காக மிகவும் பக்திவைராக்கியமுள்ளவனாயிருந்தேன்.

நடக்கை (conversation) - ἀναστροφή - anastrophee - 391

பெண்பால் பெயர்ச்சொல் - நடக்கை, நடத்தை, நடந்துகொள்ளுதல் (manner of life) (2கொரி 1:12)

“தேவனுடைய சபையை நான் மிகவும் துன்பப்படுத்தி, அதைப் பாழாக்கினேன்” - பவுல் கிறிஸ்தவர்களை அதிகமாகத் துன்புறுத்தி அவர்களைக் கொன்றுபோட்டார். இயேசு கிறிஸ்துவிற்கு எதிராக யுத்தம் பண்ணினார். இந்த நிகழ்ச்சிகளை பவுல் ஒருபோதும் மறக்காமல் பல வசனங்களில் இதைப் பற்றிக் குறிப்பிடுகிறார் (அப் 22:5; அப் 26:9-11; அப 1:13, 23; பிலி 3:6 1தீமோ 1:13)

“என் ஜனத்தாரில் என் வயதுள்ள அநேகரைப்பார்க்கிலும் யூதமார்க்கத்திலே தேறினவன்” - யூதருடைய பாரம்பரிய நியாயங்களில் பவுல் மிகவும் பக்திவைராக்கியம் உள்ளவராக இருந்தார். வேதத்தைப் பற்றி நன்றாக அறிந்திருந்தார்.

3. பவுலின் சுவிசேஷமும் ஊழியமும் தேவனிடமிருந்து வந்தவை - மனுஷருடைய யோசனையின் படியானது அல்ல

கலா 1:15 அப்படியிருந்தும், நான் என் தாயின் வயிற்றிலிருந்ததுமுதல் என்னைப் பிரித்தெடுத்து, தம்முடைய கிருபையினால் அழைத்ததேவன்

கலா 1:16 தம்முடைய குமாரனை நான் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கும்பொருட்டாக, அவரை எனக்குள் வெளிப்படுத்தப் பிரியமாயிருந்தபோது, உடனே நான் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் யோசனைபண்ணாமலும்,

கலா 1:17 எனக்கு முன்னே அப்போஸ்தலரானவர்களிடத்திலே எருசலேமுக்குப் போகாமலும், அரபி தேசத்திற்குப் புறப்பட்டுப்போய், மறுபடியும் தமஸ்கு ஊருக்குத் திரும்பிவந்தேன்.

கலா 1:18 மூன்று வருஷம் சென்றபின்பு, பேதுருவைக் கண்டுகொள்ளும்படி நான் எருசலேமுக்குப் போய், அவனிடத்தில் பதினைந்துநாள் தங்கியிருந்தேன்.

கலா 1:19 கர்த்தருடைய சகோதரனாகிய யாக்கோபைத் தவிர, அப்போஸ்தலரில் வேறொருவரையும் நான் காணவில்லை.

கலாத்தியர் – தொகுப்புரை

1 அதிகாரம்

கலா 1:20 நான் உங்களுக்கு எழுதுகிற இவைகள் பொய்யல்லவென்று தேவனுக்கு முன்பாக நிச்சயமாய்ச் சொல்லுகிறேன்

கலா 1:21 பின்பு, சீரியா சிலிசியா நாடுகளின் புறங்களில் வந்தேன்

கலா 1:22 மேலும் யூதேயாதேசத்திலே கிறிஸ்துவுக்குள்ளான சபைகளுக்கு முகமறியாதவனாயிருந்தேன்

கலா 1:23 முன்னே நம்மைத் துன்பப்படுத்தினவனே தான் அழிக்கத்தேடின விசுவாசத்தை இப்பொழுது பிரசங்கிக்கிறான் என்பதைமாத்திரம் அவர்கள் கேள்விப்பட்டிருந்து,

கலா 1:24 என்னைப்பற்றி தேவனை மகிமைப்படுத்தினார்கள்

"என் தாயின் வயிற்றிலிருந்தது முதல் என்னைப் பிரித்தெடுத்த தேவன் (ரோமா 1:1)

"தம்முடைய கிருபையினால் அழைத்த தேவன்" பவுலினிடத்தில் ஒரு தகுதியும் இல்லை ஆனாலும் தேவன் தமது கிருபையினாலே தமது ஊழியத்தைச் செய்யுமாறு பவுலை அழைத்தார்

"தம்முடைய குமாரனை நான் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கும் பொருட்டாக" இதற்காகவே தேவன் தமது கிருபையினால் பவுலை அழைத்தார்

புறஜாதியார் (heathen) - ἔθνος ethnos - 1484

பால் வேறுபாடற்ற பொதுச்சொல் - அஞ்ஞானிகள், புறஜாதியார் ராஜ்யம் புறதேசத்தார் "Gentiles" "nations" "people" - இந்த வாக்கியத்தில் புறஜாதியார் என்னும் சொல் யூதரல்லாதோரைக் குறிக்கும். (1கொரி 10:32, 1கொரி 12:13)

"மாம்சத்தோடும் இரத்தத்தோடும்" - மனுஷன் மனுஷத்துவம் (மத் 16:17, 1கொரி 15:50)

"எனக்கு முன்னே அப்போஸ்தலரானவர்களிடத்திலே எருசலேமுக்குப் போகாமலும்" - பவுல் தன்னுடைய ஊழிய அழைப்பையும், சுவிசேஷத்தின் வெளிப்பாட்டையும் மற்ற அப்போஸ்தலர்களைப்போலவே இயேசு கிறிஸ்துவிடமிருந்து நேரடியாகப் பெற்றுக் கொண்டார் (1கொரி 1:1-3:21-22 கலா 1:12,15; கலா 2:2; எபே 3:1-8 2தீமோ 3:16-17)

"அரபி தேசம்" (Arabia) - அக்காலத்தில் அரபி தேசம் என்பது தமஸ்குவிலிருந்து கிழக்கில் யோர்தான் வரையிலும் தெற்கில் ஏதோம் வரையிலும் உள்ள பிரதேசம் ஆகும். இதன் தலைநகரம் பெத்ரா (Petra) (2கொரி 11:32-33; மத் 14:3). தமஸ்குவிற்கு வருவதற்கு முன்பாகப் பவுல் அரபி தேசத்தில் எவ்வளவு காலம் தங்கியிருந்தார் என்று தெரியவில்லை. அரபி தேசத்திலும் தமஸ்குவிலும் பவுல் மூன்று வருஷங்கள் தங்கியிருந்தார் (கலா 1:17-18) அரபி தேசத்தில் பவுல் தேவனுடைய வெளிப்பாட்டைப் பெற்றிருக்க வேண்டுமென்று ஒருசிலர் கருதுகிறார்கள் இது மெய்யாகவும் இருக்கலாம் (கலா 1:15-18) மற்ற அப்போஸ்தலர்களைப் பவுல் காணச்செல்வதற்கு முன்பாகவே அவர் தேவனுடைய வெளிப்பாட்டைப் பெற்றிருந்தார் பவுல் மனுஷரிடமிருந்து தேவ வெளிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளவில்லை பேதுருவோடு உபதேசக் காரியங்களை விவாதிக்கும் அளவிற்குப் பவுல் தேர்ச்சி பெற்றிருந்தார் (கலா 1:16-18)

"கர்த்தருடைய சகோதரனாகிய யாக்கோபு" இயேசு கிறிஸ்துவின் தாயாகிய மரியாள் பெற்றெடுத்த மற்றொரு குமாரன்

"பின்பு, சீரியா சிலிசியா நாடுகளின் புறங்களில் வந்தேன்" பரிசுத்தவான்களைக் கைது பண்ணுவதற்காகப் பவுல் எருசலேமை விட்டுப் புறப்பட்டுச் சென்றார் (அப் 9) அதன் பின்பு தமஸ்குவிலிருந்து தப்பிச் சென்று அரபி தேசத்திற்குச் சென்று திரும்பவும் தமஸ்குவிற்கு வந்தார் (கலா 1:17; 2கொரி 11:32-33, அப் 9:23-25) மூன்று வருஷங்களுக்குப் பின்பு பவுல் எருசலேமிற்குச் சென்றார் (அப் 1:18, அப் 9:26-27) அதன் பின்பு சீரியா, சிலிசியா ஆகிய நாடுகளின் புறங்களிலே வந்து தர்சுவிலுள்ள தன்னுடைய வீட்டிற்கு வந்தார் (கலா 1:21-23; அப் 9:28-30, அப் 22:17-21)

கலாத்தியர் – தொகுப்புரை

2 அதிகாரம்

4. பதினாலு வருஷம் சென்ற பின்பு - தன் சுவிசேஷத்தையும் மற்ற அப்போஸ்தலருடைய சுவிசேஷத்தையும் பவுல் ஒப்பிடுகிறார்

கலா 2:1 பதினாலு வருஷம் சென்றபின்பு, நான் தீத்துவைக் கூட்டிக்கொண்டு, பர்னபாவுடனேகூட மறுபடியும் எருசலேமுக்குப் போனேன்.

கலா 2:2 நான் தேவ அறிவிப்பினாலே போய், புறஜாதிகளிடத்தில் நான் பிரசங்கிக்கிற சுவிசேஷத்தை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தேன்; ஆயினும் நான் ஓடுகிறதும் ஓடினதும் வீணாகாதபடிக்கு எண்ணிக்கையுள்ளவர்களுக்கே தனிமையாய் விவரித்துக் காண்பித்தேன்.

"பதினாலு வருஷம் சென்றபின்பு, நான் தீத்துவைக் கூட்டிக்கொண்டு, பர்னபாவுடனேகூட மறுபடியும் எருசலேமுக்குப் போனேன்" - கலா 2:1 (1:18 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பிரயாணத்திற்கு 14 வருஷங்களுக்குப் பின்பு பவுல் எருசலேமிற்குப் பிரயாணம் பண்ணுகிறார். இந்தப் பிரயாணம் அப் 11:30 ஆவது வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பிரயாணமா அல்லது அப் 15:4 ஆவது வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பிரயாணமா என்பது தெளிவாகத் தெரியவில்லை. 2கொரி 12:2 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் 14 வருஷங்களை இந்த நிகழ்ச்சியோடு நாம் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

விவரித்துக் காண்பித்தல் (communicated) - ἀνατίθημι anatitheemi 394 வினைச்சொல் - விசாரணைக்காக ஒரு காரியத்தை விவரித்துக் கூறு அல்லது அறிவி (declared) - இது அப்போஸ்தலர் 15 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் காரியமாக இருக்கலாம். ஆதித் திருச்சபையில் காணப்பட்ட மார்க்கப் பேதங்களையும் உபதேச பேதங்களையும் குறித்து விவாதம் பண்ணுவதற்காக பவுலும், பர்னபாவும் மற்றும் பலரும் கூடி வந்தார்கள் (அப் 20:21) எருசலேமிலுள்ள ஏழைப் பரிசுத்தவான்களுக்குத் தருமப்பணத்தைச் சேகரித்து அங்கு கொண்டு சென்றபோது பவுல் எருசலேமில் அதிக நாட்கள் தங்கவும் இல்லை. உபதேசக் காரியங்களைக் குறித்து விவாதம் பண்ணவும் இல்லை.

"நான் ஓடுகிறதும் ஓடினதும் வீணாகாதபடிக்கு எண்ணிக்கையுள்ளவர்களுக்கே தனிமையாய் விவரித்துக் காண்பித்தேன்" - புறஜாதியாருக்குச் சுவிசேஷத்தை விவரித்துக் காண்பிப்பதற்கு முன்பாகப் பவுல் அப்போஸ்தலர்கள் மத்தியில் தன்னுடைய ஊழியத்தைக் குறித்து விவரித்துக் காண்பித்தார் (அப் 15:4,12). தன்னுடைய ஊழியம் வீணாய்ப் போகக்கூடாது என்பதை மனதில் கொண்டு பவுல் இவ்வாறு ஞானமாகச் செயல்படுகிறார் (கலா 2:2). ஒருசில சகோதரர்கள் பக்க வழியாய் நுழைந்து பவுலையும் அவருடைய உடன் ஊழியர்களையும் உளவுபார்த்தார்கள் (கலா 2:4,5). இவர்கள் மூலமாகத் தன்னுடைய ஊழியம் தடைபடாமல் நடைபெற வேண்டுமென்பதற்காகவும் பவுல் இவ்வாறு ஞானமாகச் செயல்படுகிறார். இந்த ஆலோசனைகளுக்குப் பின்பு தீத்து கிரேக்கனாயிருந்தும் விருத்தசேதனம்பண்ணிக் கொள்ளும்படிக்குக் கட்டாயம் பண்ணப்படவில்லை (கலா 2:3).

5. பவுலின் உடன் ஊழியன் தீத்து - கிரேக்கன் - விருத்தசேதனம் பண்ணிக்கொள்ளும் படிக்கு கட்டாயம் பண்ணப்படவில்லை

கலா 2:3 ஆனாலும் என்னுடனேகூட இருந்த தீத்து கிரேக்கனாயிருந்தும் விருத்தசேதனம்பண்ணிக்கொள்ளும்படிக்குக் கட்டாயம்பண்ணப்படவில்லை.

2 அதிகாரம்

கலா 2:4 கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு உண்டான சுயாதீனத்தை உளவுபார்த்து நம்மை நியாயப்பிரமாணத்திற்கு அடிமைகளாக்கும்பொருட்டாகப் பக்கவழியாய் நுழைந்த கள்ளச் சகோதரர் நிமித்தம் அப்படியாயிற்று.

கலா 2:5 சுவிசேஷத்தின் சத்தியம் உங்களிடத்திலே நிலைத்திருக்கும்படி நாங்கள் ஒரு நாழிகையாகிலும் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து இணங்கவில்லை.

கள்ளச்சகோதரர் (false) - ψευδάδελφος - pseudadelphos - 5569

ஆண்பால் பெயர்ச்சொல் - கள்ளச்சகோதரர் (2 கொரி 11:26; கலா 2:4)

பக்கவழியாய் நுழைந்தவன் (unawares) - παρείσακτος - pareisaktos - 3920

பெயரடை - பக்கவழியாய் நுழைந்தவன் (brought in stealthuly)

6. பவுலின் சுவிசேஷம் புறஜாதி கிறிஸ்தவர்களுக்கு நிறைவானது

கலா 2:6 அல்லாமலும், எண்ணிக்கையுள்ளவர்களாயிருந்தவர்கள் எனக்கு ஒன்றும் போதிக்கவில்லை; அவர்கள் எப்படிப்பட்டவர்களாயிருந்தாலும் எனக்குக் கவலையில்லை; தேவன் மனுஷரிடத்தில் பட்சபாதமுள்ளவரல்லவே.

"எண்ணிக்கையுள்ளவர்களாயிருந்தவர்கள் எனக்கு ஒன்றும் போதிக்கவில்லை" - இந்த வாக்கியத்தில் பவுல் எண்ணிக்கையுள்ளவர்கள் என்று குறிப்பிடுவது அப்போஸ்தலர்களைக் குறிக்கும் வார்த்தையாகும். பவுலின் சுவிசேஷத்தோடு அவர்கள் எதையும் கூட்டவில்லை.

7. விருத்தசேதனம் உள்ளவர்களுக்கும் விருத்தசேதனம் இல்லாதவர்களுக்கும் இரண்டு விதமான பிரசங்கங்கள்

கலா 2:7 அதுவுமல்லாமல், விருத்தசேதனமுள்ளவர்களுக்கு அப்போஸ்தலனாயிருக்கும்படி பேதுருவைப் பலப்படுத்தினவர் புறஜாதிகளுக்கு அப்போஸ்தலனாயிருக்கும்படி என்னையும் பலப்படுத்தினபடியால்,

கலா 2:8 விருத்தசேதனமுள்ளவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி பேதுருவுக்குக் கையளிக்கப்பட்டதுபோல விருத்தசேதனமில்லாதவர்களுக்குப் பிரசங்கிக்கும்படி அது எனக்கும் கையளிக்கப்பட்டதென்று அவர்கள் கண்டு,

கலா 2:9 எனக்கு அளிக்கப்பட்ட கிருபையை அறிந்தபோது, தூண்களாக எண்ணப்பட்ட யாக்கோபும், கேபாவும், யோவானும், நாங்கள் விருத்தசேதனமுள்ளவர்களுக்கும், நாங்கள் புறஜாதிகளுக்கும் பிரசங்கிக்கும்படி அந்நியோந்நிய ஐக்கியத்திற்கு அடையாளமாக எனக்கும் பர்னபாவுக்கும் வலதுகை கொடுத்து,

கலா 2:10 தரித்திரரை நினைத்துக்கொள்ளும்படிக்குமாத்திரம் சொன்னார்கள்; அப்படிச் செய்யும்படி அதற்கு முன்னமே நானும் கருத்துள்ளவனாயிருந்தேன்.

"அதுவுமல்லாமல்" பவுலின் திட்டங்களை அப்போஸ்தலர்கள் மாற்றவில்லை. புறஜாதியாருக்கு வேறொரு சுவிசேஷத்தை அறிவிக்குமாறும் கூறவில்லை. புறஜாதியார் மத்தியில் வேறொரு முறையில் சுவிசேஷ ஊழியம் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தவும் இல்லை. பவுலின் உபதேசமும், மற்ற அப்போஸ்தலர்களுடைய உபதேசமும் ஒன்றுபோலவே உள்ளன. ஒரே ஆதாரத்திலிருந்தே இந்த உபதேசம் வந்திருக்கிறது. ஆகையினால் மற்ற அப்போஸ்தலர்கள் பவுலை ஆசீர்வதித்து புறஜாதியார் மத்தியில் ஊழியம் செய்ய அனுப்புகிறார்கள் (கலா 2:7-10)

கலாத்தியர் – தொகுப்புரை

2 அதிகாரம்

"விருத்தசேதனமில்லாதவர்களுக்குச் சுவிசேஷம்" (gospel of the uncircumcision) - சுவிசேஷத்திற்குப் பவுலின் நாட்களில் இப்படி ஒரு பெயர் கொடுக்கப்பட்டிருந்தது. புறஜாதியார்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப் பட்டபடியினால் இவ்வாறு பெயர் வழங்கப்படலாயிற்று. யூதர்கள் மத்தியில் செய்யப்படும் சுவிசேஷத்திற்கு "விருத்தசேதனமுள்ளவர்களுக்குச் சுவிசேஷம்" (gospel of the circumcision) என்னும் பெயர் வழங்கலாயிற்று. அக்காலத்தில் யூதமார்க்கத்திலிருந்து விசுவாசிகளான கிறிஸ்தவர்கள் மோசேயின் பிரமாணங்களில் சிலவற்றைக் கடைப்பிடித்து வந்தார்கள். இதற்கு ஆதித்திருச்சபையார் அனுமதி கொடுத்தனர். ஆனாலும் அந்தப் பிரமாணங்களைப் புறஜாதியாரும் கடைப்பிடிக்க வேண்டுமென்று அவர்கள் கட்டாயப்படுத்தவில்லை (அப் 15).

"விருத்தசேதனம் இல்லாதவர்களுக்குப் பிரசங்கிக்கும்படி அது எனக்கும் கையளிக்கப் பட்டது" விருத்தசேதனமுள்ளவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி பேதுருவுக்குக் கையளிக்கப்பட்டது. பேதுருவின் ஊழியத்திலும் பவுலின் ஊழியத்திலும் அப்போஸ்தல ஊழியத்தின் அடையாளங்கள் நடைபெற்றன (2கொரி 12:12). பேதுரு யூதர் மத்தியிலே அற்புதங்களைச் செய்தார். பவுல் புறஜாதியார் மத்தியிலே அற்புதங்களைச் செய்தார் (அப் 15:12).

"யாக்கோபு" (James) - இயேசு கிறிஸ்துவின் சகோதரன் (கலா 1:19).

"கேபா" (Cephas) - பேதுரு (யோவான் 1:42, 1கொரி 1:12).

"யோவான்" (John) இயேசு கிறிஸ்துவிற்கு அன்பாய் இருந்த சீஷன் (மத் 4:21). பவுலின் நிருபங்களில் இந்த வசனத்தில் மட்டுமே யோவானின் பெயர் கூறப்பட்டிருக்கிறது.

"தூண்களாக எண்ணப்பட்டவர்கள்" - அப்போஸ்தலர்கள் மத்தியில் யாக்கோபும் கேபாவும் யோவானும் பிரபல்யமானவர்கள். ஆதித்திருச்சபைகளுக்குப் பேதுரு மட்டுமே பிரதான தலைவராக இருந்தார் என்று கூற இயலாது. பேதுருவைப் போல யோவானும், யாக்கோபும் ஆதித்திருச்சபைகளுக்கு முக்கியமான தலைவர்களாக இருந்தார்கள்.

தூண்கள் (pillars) - στῦλος - stylos - 4769

ஆணபால் பெயர்ச்சொல் - தூண் ஸ்தம்பம் கலா 2:9, 1தீமோ 3:15, வெளி 3:12, வெளி 10:1. நியாயப் பிரமாணத்தில் தேர்ச்சி பெற்றவர்களுக்கும், மிகவும் முக்கியத்துவம் உடையவர்களுக்கும் பெரிய காரியங்களைச் சாதித்தவர்களுக்கும் "தூண்கள்" என்னும் சிறப்புப் பெயர் வழங்கப்பட்டது.

"வலதுகை கொடுத்தார்கள்" (right hands of fellowship) - இந்த வாக்கியம் நம்பிக்கை, நட்பு, யூதர் மதத்தில் ஐக்கியம் ஆகிய பொருளைத் தரும்.

"புறஜாதி" (heathen, Gentiles) - (கலா 1:16).

"விருத்தசேதனமுள்ளவர்கள்" (circumcision) - யூதர்கள் (கலா 2:7, பிலி 3:2).

"தரித்திரர்" (poor) - யூதேயாவிலுள்ள ஏழை விசுவாசிகளைக் குறிக்கும் வார்த்தை. நண்பர்கள் இவர்களைக் கைவிட்டுவிட்டார்கள். உறவினர்கள் இவர்களை வெளியே துரத்தி விட்டார்கள். வியாபாரம் செய்வதற்கு இவர்களுடைய உரிமைகள் பறிக்கப்பட்டிருந்தன (2கொரி 8-9).

கருத்தோடிருத்தல் (forward) - σπουδάζω spoudazoo 4704

2 அதிகாரம்

பொறாமை - கருத்தோடிரு, ஜாக்கிரதையாயிரு, பிரயத்தனம் பண்ணு (zealous) (கலா 2:10 எபே 4:3; 1தெச 2:17; 2தீமோ 2:15; 2தீமோ 4:9,21; தீத்து 3:12; எபி 4:11 2பேதுரு 1:10,15; 2பேதுரு 3:14)

8. **பேதுருவையும் மற்றவர்களையும் அவர்களுடைய மாய்மாலத்திற்காகவும் தவறான உபதேசத்திற்காகவும் பவுல் கடிந்து கொள்கிறார்**

கலா 2:11 மேலும், பேதுரு அந்தியோகியாவுக்கு வந்தபோது அவன்மேல் குற்றஞ் சுமந்ததினால் நான் முகமுகமாய் அவனோடே எதிர்த்தேன்

கலா 2:12 எப்படியெனில் யாக்கோபினிடத்திலிருந்து சிலர் வருகிறதற்குமுன்னே அவன் புறஜாதியாருடனே சாப்பிட்டான் அவர்கள் வந்தபோதோ, விருத்த சேதனமுள்ளவர்களுக்குப் பயந்து விலகிப் பிரிந்தான்

கலா 2:13 மற்ற யூதரும் அவனுடனேகூட மாயம் பண்ணினார்கள் அவர்களுடைய மாயத்தினாலே பர்னபாவும் இழுப்புண்டான்

கலா 2:14 இப்படி அவர்கள் சுவிசேஷத்தின் சத்தியத்திற்கேற்றபடி சரியாய் நடவாததை நான் கண்டபோது, எல்லாருக்கும் முன்பாக நான் பேதுருவை நோக்கிச் சொன்னது என்னவென்றால், யூதனாயிருக்கிற நீர் யூதர் முறைமையாக நடவாமல், புறஜாதியார் முறைமையாக நடந்து கொண்டிருக்க, புறஜாதியாரை யூதர் முறைமையாக நடக்கும்படி நீர் எப்படிக் கட்டாயம்பண்ணலாம்.'

"பேதுரு" (Peter) - புதிய ஏற்பாட்டின் ஒருசில பதிப்புக்களில் கேபா "Cephas" என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த வசனத்தில் பேதுரு அல்லது கேபா என்று குறிப்பிடப்பட்டிருக்கிறவர் அப்போஸ்தலர் பேதுருவைக் குறிப்பவரா அல்லது வேறு யாராவது நபரைக் குறிப்பவரா என்று ஒருசிலர் விவாதம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள் வேதவாக்கியத்தில் பேதுருவைத் தவிர வேறு யாருக்கும் கேபா என்னும் பெயர் கொடுக்கப்படவில்லை (கலா 2:9,14; யோவான் 1:42; 1கொரி 1:12)

"அவர்கள் வந்தபோதோ, விருத்த சேதனமுள்ளவர்களுக்குப் பயந்து விலகிப் பிரிந்தான்" - யாக்கோபினிடத்திலிருந்து சிலர் வருகிறதற்குமுன்னே பேதுரு புறஜாதியாருடனே சாப்பிட்டான் யூதர்களுக்கும் புறஜாதியாருக்கும் இடையே இருந்த பிரிவினையாகிய சுவர் இடிந்து விழுந்தது என்று பேதுரு பிரசங்கம் பண்ணினான் ஆனால் யாக்கோபினிடத்திலிருந்து ஒருசில யூதர்கள் வந்தபோதோ பேதுரு பயந்துபோய் புறஜாதியார் மத்தியில் தான் வைத்திருந்த ஐக்கியத்தை விலக்கிக் கொண்டு அவர்களைவிட்டுப் பிரிந்து போய்விட்டான் பவுல் இதை மாய்மாலமான செயல் என்று வர்ணிக்கிறார்

மாயம்(dissimulation) - ὑπόκρισις - hypokrisis - 5272

பொருள் பெயர்ச்சொல் - மாயம், நடிப்பு (playing, acting a part; hypocrisy) (மத் 23:28; மாற்கு 12:15 லூக்கா 12:1, 1தீமோ 4:2, 1பேதுரு 2:1 இவர்கள் ஒருவிதமாகவும் இவர்களுடைய பிரசங்கம் வேறு விதமாகவும் இருக்கிறது. தாங்கள் விசுவாசிப்பதை மற்றவர்களுக்குப் பிரசங்கிக்கிறார்கள் (கலா 2:14)

"சுவிசேஷத்தின் சத்தியத்திற்கேற்றபடி சரியாய் நடக்கவில்லை" பேதுருவும், அவனோடு கூட இருந்த யூதர்களும் சுவிசேஷத்தின்படி ஜீவிக்காமல் மாயமாக ஜீவியம் பண்ணினார்கள்

2 அதிகாரம்

"புறஜாதியாரை யூதர் முறைமையாக நடக்கும்படி நீர் எப்படிக் கட்டாயம்பண்ணலாம்?" - பவுல் பேதுருவையும், மாய்மாலமாக நடந்த யூதரையும் நேரடியாகக் கடிந்து கொள்கிறார் (அப் 10:10-15,28-34; அப் 11:1-18; அப் 15:7-11). பேதுரு பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பாக பயந்த [illegible] உடையவனாயிருந்தான் (மத் 26:69-75). பெந்தெகொஸ்தே நாளில் தான் பெற்ற தைரியத்தில் ஒரு பகுதியை பேதுரு இப்போது இழந்துவிட்டான் (அப் 2:14,40; அப் 3:12; அப் 4:8-13; அப் 5:29-32). தவறு செய்யாதவன் ஒருவனும் இல்லை (1கொரி 10:13).

III. கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுதல் – (கலா 2:15-3:12; ரோமர் 3:21-5:11; எபே 2:1-10)

1. யூதரும் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட முடியும்

கலா 2:15 புறஜாதியாரில் பிறந்த பாவிகளாயிராமல், சுபாவத்தின்படி யூதராயிருக்கிற நாமும் இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலேயன்றி, நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலே மனுஷன் நீதிமானாக்கப் படுவதில்லையென்று அறிந்து, நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலல்ல கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான் களாக்கப்படும்படிக்குக் கிறிஸ்து இயேசுவின்மேல் விசுவாசிகளானோம்.

கலா 2:16 நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே.

"சுபாவத்தின்படி யூதர்" – யூத தேசத்தின் பிரஜைகள் யூதப் பெற்றோர்களுக்குப் பிறந்தவர்கள்.

"புறஜாதியாரில் பிறந்த பாவிகள்" - தேவனைப் பற்றியும் நியாயப்பிரமாணத்தைப் பற்றியும் அறிவில்லாத புறஜாதியாரை அக்காலத்தில் புறஜாதியாரில் பிறந்த பாவிகள் என்று அழைத்தார்கள்.

"கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே யன்றி நியாய பிரமாணத்தின் கிரியைகளினாலே மனுஷன் நீதிமானாக்கப்படுவதில்லை" - ஒரு மனுஷன் எவ்வாறு நீதிமானாக்கப்படுகிறான் என்பதை இந்த வாக்கியம் தெளிவாக விளக்குகிறது (ரோமர் 1:16-17; ரோமர் 3:24-28; ரோமர் 5:1-11; ரோமர் 8:1-4; ரோமர் 10:9-10; அப் 13:38-39; கலா 3:11-28; 2கொரி 5:14-21; எபே 2:8-9; 1யோவான் 1:9).

2. யூதமார்க்கத்தின் ஸ்திரமற்ற தன்மை

கலா 2:17 கிறிஸ்துவுக்குள் நீதிமான்களாக்கப்படும்படி நாடுகிற நாமும் பாவிகளாகக் காணப்படுவோமானால் கிறிஸ்து பாவத்திற்குக் காரணரோ? அல்லவே.

கலா 2:18 நான் இடித்துப் போட்டவைகளையே நான் மறுபடியும் கட்டினால் பிரமாணத்தை மீறுகிறவனென்று காணப்படுவேன்.

"கிறிஸ்து பாவத்திற்குக் காரணரோ? அல்லவே" – கிறிஸ்துவுக்குள் நீதிமானாக்கப்படும்படி நாடுகிற நாமும் பாவிகளாகக் காணப்படுவோம். ஆனாலும் நமது பாவத்திற்குக் கிறிஸ்து காரணமல்ல.

"நான் இடித்துப்போட்டவைகளையே நான் மறுபடியும் கட்டினால் பிரமாணத்தை மீறுகிறவனென்று காணப்படுவேன்" – கிறிஸ்துவின் மரணத்தினால் நியாயப்பிரமாணம் இடித்துப் போடப்பட்டது. இதை நாம் மறுபடியும் கட்டக்கூடாது. திரும்பவும் கட்டுவது இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதற்கு எதிரான செயல். இதைச் செய்யும்போது நாம் கிறிஸ்துவிற்கு எதிராகக் கலகம் பண்ணுகிறவர்களாக இருப்போம் (எபே 2:14-15; கொலோ 2:14-17; 2கொரி 3:6-15; எபி 7:11; 10:18).

2 அதிகாரம்

3. விசுவாசிகள் கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப் பட்டிருக்கிறார்கள் - நியாயப் பிரமாணத்திற்கு மரித்திருக்கிறார்கள்

கலா 2:19 தேவனுக்கென்று பிழைக்கும்படி நியாயப் பிரமாணத்தினாலே நான் நியாயப் பிரமாணத்திற்கு மரித்தேனே

கலா 2:20 கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும் பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்.

"தேவனுக்கென்று பிழைக்கும்படி நியாயப் பிரமாணத்தினாலே நான் நியாயப் பிரமாணத்திற்கு மரித்தேனே" பவுல் நியாயப் பிரமாணத்திற்கு மரித்தார். தேவனுக்கென்று பிழைக்கும்படியாக பவுல் நியாயப்பிரமாணத்திற்கு மரித்தார். தனக்காக நியாயப்பிரமாணம் இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைந்ததாகக் கூறுகிறார். ஆகையினால் இயேசு கிறிஸ்துவுடனேகூட பவுலும் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறார். இயேசு கிறிஸ்து உயிரோடு எழும்பிய போது தானும் உயிரோடு எழும்பியதாகவும் பவுல் கூறுகிறார் (கலா 2:19-20)

"கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப் பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்தார். ஆகையினால் நியாயப் பிரமாணத்தின் மூலமாக இரட்சிப்பு இல்லை என்பது தெளிவாகிறது. பவுல் கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டு அவரோடே கூட பிழைத்தும் இருக்கிறார். ஆகையினால் தனக்குள் பிழைத்திருப்பது தானல்ல, கிறிஸ்துவே தனக்குள் பிழைத்திருப்பதாகக் கூறுகிறார். பவுல் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, தன்னில் அன்புகூர்ந்து தனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருப்பதாகப் பவுல் கூறுகிறார்.

"கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப் பட்டேன்; ஆயினும் பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" - இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்தார். ஆகையினால் நியாயப் பிரமாணத்தின் மூலமாக இரட்சிப்பு இல்லை என்பது தெளிவாகிறது. பவுல் கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டு அவரோடேகூட பிழைத்தும் இருக்கிறார். ஆகையினால் தனக்குள் பிழைத்திருப்பது தானல்ல, கிறிஸ்துவே தனக்குள் பிழைத்திருப்பதாகக் கூறுகிறார். பவுல் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, தன்னில் அன்புகூர்ந்து தனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருப்பதாகப் பவுல் கூறுகிறார்.

"தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்" (கலா 3:11; ரோமர் 1:17; எபி 10:23-38)

4. நீதியானது நியாயப் பிரமாணத்தினாலே வருமானால் கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே - (5:1-6, ரோமர் 4:13-16)

கலா 2:21 நான் தேவனுடைய கிருபையை விருதாவாக்குகிறதில்லை; நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால் கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே.

விருதாவாக்குதல் (frustrate) ἀθετέω atheteoo 1:4

2 அதிகாரம்

வினைச்சொல் - மறு, வியர்த்தமாக்கு, தள்ளிவிடு, அசட்டைப் பண்ணு (set aside; disregard) - பவுல் தேவனுடைய கிருபையை விருதாவாக்குவதில்லை. (1தீமோ 5:12) நீதி, நீதிமானாக்கப்படுதல், இரட்சிப்பு ஆகியவை நியாயப் பிரமாணத்தினால் வரவில்லை. அவை நியாயப் பிரமாணத்தினால் வருமென்றால் கிறிஸ்து மரித்தது வீணாய் இருக்கும். நீதி, நீதிமானாக்கப்படுதல், இரட்சிப்பு ஆகியவை நியாயப்பிரமாணத்தினால் வராமல் கிறிஸ்துவின் மரணத்தின் மூலமாகவே வருகிறது. கிறிஸ்துவின் மரணம் நமது இரட்சிப்பிற்கு மிகவும் பயனுள்ளது. நியாயப்பிரமாணம் நமது இரட்சிப்பிற்குப் பயனற்றது.

கலாத்தியர் - தொகுப்புரை

3 அதிகாரம்

5. **விசுவாசக் கேள்வியினாலே ஆவியைப் பெற்றிருக்கிறோம் - நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலே பெறவில்லை** - யோவான் 7:37-39; கலா 3:13-14)

கலா 3:1 புத்தியில்லாத கலாத்தியரே நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற் போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்குமுன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே

கலா 3:2 ஒன்றைமாத்திரம் உங்களிடத்தில் அறிய விரும்புகிறேன்: நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசுவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே ஆவியைப் பெற்றீர்கள்?

கலா 3:3 ஆவியினாலே ஆரம்பம் பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவு பெறப் போகிறீர்களோ? நீங்கள் இத்தனை புத்தியீனரா?

கலா 3:4 இத்தனை பாடுகளையும் வீணாய்ப் பட்டீர்களோ? அவைகள் வீணாய்ப்போயிற்றே.

புத்தியில்லாதவன் (foolish)- ἀνόητος - anoeetos - 453

பெயரடை - புத்தியில்லாத, மூடமான, புத்தியீனமான, மதிக்கேடான (senseless), "unwise" (ரோமர் 1:14), "fool" (லூக்கா 24:25), "foolish" (கலா 3:1,3, 1தீமோ 6:9; தீத்து 3:3)

மயக்குதல் (bewitched) βασκαίνω baskainoo 940

வினைச்சொல் - மயக்கு - மற்றவர்களைக் குறித்து தவறான வார்த்தைகளைப் பேசுதல், சாபமிடுதல், துஷ்டப்பார்வை பார்த்தல், புதிய ஏற்பாட்டில் இந்த வார்த்தை இந்த வசனத்தில் மட்டும் வந்தாலும் செப்துவஜிந்தில் உபா 28:54-56 ஆகிய வசனங்களில் வினைச்சொல்லாகவும், நீதி 23:6 நீதி 28:22 ஆகிய வசனங்களில் பெயர்ச்சொல்லாகவும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

கீழ்ப்படிதல் (obey) - ἐπισείω - episeioo - 3982

வினைச்சொல் - ஏவிவிடு நம்பிக்கையாயிரு, சம்மதப்படுத்து நம்பியிரு, வசமாக்கு, புத்திசொல் உடன்படு, போதனை செய், கீழ்ப்படி நிச்சயித்திரு, திடன்கொள் "persuade," "assure," "trust," "obey," (அப் 5:36-37; ரோமர் 2:8; கலா 3:1; கலா 5:7; எபி 13:17; யாக் 3:3)

பிரத்தியட்சமாய் வெளிப்படுதல் (write afore)- προγράφω - prographoo - 4270

வினைச்சொல் - முன்பு எழுதியிரு, பூர்வத்திலே எழுதியிரு, முன் வெளிப்படுத்து - வெளிப்படையாக எழுதுதல், எல்லா ஜனங்களுக்கும் பொதுவாக அறிவித்தல். "write afore" (ரோமர் 15:4, எபே 3:3), "ordain before" (யூதா 1:4

நியாயப்பிரமாணத்தினால் [illegible] முடியாத காரியங்கள் (கலா 3:3-5

1. நியாயப் பிரமாணத்தினால் பரிசுத்த ஆவியை அளிக்க முடியாது.

2. நியாயப் பிரமாணத்தினால் பரிபூரணத்தைக் கொடுக்க முடியாது.

3. நியாயப் பிரமாணத்தினால் அற்புதங்களை நடப்பிக்க முடியாது.

3 அதிகாரம்

"இத்தனை பாடுகளையும் வீணாய்ப் பட்டீர்களோ" - கலாத்தியர்கள் ஒரு காலத்தில் இயேசு கிறிஸ்துவிற்காக பாடுகளை அனுபவித்தார்கள் இப்போது இயேசு கிறிஸ்துவை விட்டு விலகி நியாயப் பிரமாணத்தின் கிரியைகளுக்குத் திரும்பவும் சென்றால் கிறிஸ்துவிற்காக அவர்கள் பட்ட பாடுகளெல்லாம் வீணாய்ப் போய்விடும் (கலா 1:6 கலா 3:1-5; கலா 5:1-4)

6. நமக்கு ஆவியை அளித்து நமக்குள்ளே அற்புதங்களை நடப்பிக்கிறவர் அதை விசுவாசக் கேள்வியினாலேயே செய்கிறார் - (1கொரி 12:1-31; 14:1-40 ரோமர் 12:3-8

கலா 3:5 அன்றியும் உங்களுக்கு ஆவியை அளித்து, உங்களுக்குள்ளே அற்புதங்களை நடப்பிக்கிறவர் அதை நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ விசுவாசக் கேள்வியினாலேயோ எதினாலே செய்கிறார்?

"உங்களுக்கு ஆவியை அளித்து உங்களுக்குள்ளே அற்புதங்களை நடப்பிக்கிறவர்" இந்த வசனத்தில் பவுல் தன்னைப் பற்றிக் குறிப்பிடுகிறார் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகமும் அற்புதங்களை நடப்பிப்பதும் விசுவாசத்தினால் சுவிசேஷத்தின் மூலமாக வருகிறது நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் இவை வருவதில்லை

7. நியாயப்பிரமாணம் கொடுக்கப் படுவதற்கு 430 வருஷங்களுக்கு முன்பாகவே ஆபிரகாம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப் பட்டான் - (ரோமர் 4:1 25, கலா 3:15-18, ஆதி 12)

கலா 3:6 அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது

"அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது" - ஆதி 15:6; ரோமர் 4:3-5 ஆகிய வசனங்கள் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

8. விசுவாச மார்க்கத்தார் அனைவரும் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டார்கள் - (ரோமர் 3:21-31, 4:4-5, 17-25; 5:1-11

கலா 3:7 ஆகையால் விசுவாச மார்க்கத்தார்கள் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக.

கலா 3:8 மேலும் தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான்களாக்குகிறாரென்று வேதம் முன்னாகக் கண்டு: உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்குச் சுவிசேஷமாய் முன்னறிவித்தது.

கலா 3:9 அந்தப்படி விசுவாசமார்க்கத்தார் விசுவாசமுள்ள ஆபிரகாமுடன் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்

"ஆகையால் விசுவாசமார்க்கத்தார்கள் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக" - இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கிறவர்கள் ஆபிரகாமோடு ஆசீர்வதிக்கப்படுவார்கள் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு 430 வருஷங்களுக்கு முன்பாகவே அவன் விருத்தசேதனம் பண்ணிக் கொள்வதற்கு முன்பாகவே விசுவாசத்தினால் ஆபிரகாம் நீதிமானாக்கப்பட்டான் (கலா 3: 7-18) இது உண்மையான சத்தியம். ஆகையினால் இரட்சிப்பிற்கு நியாயப்பிரமாணம் அவசியமற்றதாக இருக்கிறது இந்த வாக்கியம் யூதருக்கு மிகவும் முக்கியமான சத்தியம். ஏனென்றால் ஆபிரகாம் விசுவாசத்தினால் இரட்சிக்கப்பட்டான் என்று யூதரும் விசுவாசிக்கிறார்கள் நியாயப்பிரமாணமும் விருத்தசேதனக் கட்டளையும் கொடுக்கப் படுவதற்கு முன்பாகவே ஆபிரகாமின் விசுவாசம் அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது (ஆதி 15:6) ஆபிரகாமின் விசுவாச வாழ்க்கையை எடுத்துக்கூறி விசுவாசத்தினால் நாம் இரட்சிக்கப்படுகிறோம் என்பதை பவுல் கலாத்தியருக்கு விளக்கிக் கூறுகிறார்

3 அதிகாரம்

கலாத்தியர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 1

"மேலும் தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான்களாக்குகிறாரென்று வேதம் முன்னாகக் கண்டு: உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்குச் சுவிசேஷமாய் முன்னறிவித்தது" கலா 3:8 ஆதி 12:3) இது எல்லா ஜாதிகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் சுவிசேஷமாகும். இந்த வாக்குத்தத்தத்தில் பங்கு பெறுகிறவர்கள் எல்லோரும் விசுவாசத்தினால் நீதிமானாக்கப் படுகிறார்கள் இவர்கள் நியாய பிரமாணத்தின் கிரியைகளையும் விருத்தசேதன கட்டளையையும் நிறைவேற்றாமல் விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்படுகிறார்கள்

9. நியாயப் பிரமாணத்தின் கிரியைக் காரராகிய யாவரும் சாபத்திற்குட் பட்டிருக்கிறார்கள் - 53

கலா 3:10 நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட் பட்டிருக்கிறார்கள் நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப் பட்டவைகளையெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறதே.

கலா 3:11 நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லை யென்பது வெளியரங்கமாயிருக்கிறது. ஏனெனில் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே.

கலா 3:12 நியாயப்பிரமாணமோ விசுவாசத்திற்குரியதல்ல; அவைகளைச் செய்கிற மனுஷனே அவைகளால் பிழைப்பான்

"நியாய பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள்" - நியாய பிரமாணத்தின் கிரியைகளுக்கு முழுமையாகக் கீழ்படிவது இயலாத காரியம். நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப் பட்டவைகளையெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறது. (கலா 3:1-12 யாக் 2:10) ஆகையினால் நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள்

சாபம் (curse) - κατάρα - katara - 2671

பெண்பால் பெயர்ச்சொல் - சாபம் (கலா 3:10, கலா 3:13 எபி 6:8; யாக் 3:10; 2பேதுரு 2:14)

"நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப் பட்டவைகளையெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன்" - உபா 27:26 ஆவது வசனம் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது

"நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப் பட்டவைகளையெல்லாம்" நியாய பிரமாணக்கிரியைக்காரன் நியாய பிரமாணப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளெல்லாம் செய்ய வேண்டும். (கலா 3:10-12, யாக் 2:10) பத்து கட்டளைகள், அதனுடன் பண்டிகைகள் சடங்குகள் பலிகள் ஆகிய அனைத்தும் நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப் பட்டிருக்கிறது. நியாய பிரமாணக் கிரியைக்காரன் இவை அனைத்தையும் பூரணமாகச் செய்யவேண்டும். (அப் 15:1,24, 2கொரி 3:6-15)

கலாத்தியர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 2

"நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லையென்பது வெளியரங்கமாயிருக்கிறது. ஏனெனில், விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" (கலா 3:11; ஆப 2:4, ரோமர் 1:17, எபி 10:38)

கலாத்தியர் – தொகுப்புரை

3 அதிகாரம்

"விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" - நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லை. நியாயப்பிரமாணம் விசுவாசத்திற்குரியதல்ல. நீதிமான் விசுவாசத்தினால் பிழைக்கிறான். நியாயப்பிரமாணத்தின் கிரியைகளைச் செய்கிறவர்கள் அதில் எழுதப்பட்டிருக்கும் எல்லாக் காரியங்களையும் செய்ய வேண்டும். (கலா 3:10-12; யாக் 2:10)

"அவைகளைச் செய்கிற மனுஷனே அவைகளால் பிழைப்பான்" - லேவி 18:5 ஆகிய வசனம் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

10. கிறிஸ்து நமக்காக சாபமாகி நியாயப் பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்

கலா 3:13 மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி கிறிஸ்து நமக்காகச் சாபமாகி நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்.

கலா 3:14 ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும் ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும் படியாகவும் இப்படியாயிற்று.

மீட்டுக்கொள்ளுதல் **(redeemed)** - ἐξαγοράζω - **exagorazoo** - 1805

வினைச்சொல் - மீட்டுக்கொள், பிரயோஜனப்படுத்திக்கொள் **(to buy from; redeem)** (கலா 3:13; கலா 4:5; எபே 5:16; கொலோ 4:5)

நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து இயேசு கிறிஸ்து நம்மை மீட்டுக் கொண்டார் (1கொரி 6:19-20; 1பேதுரு 1:18-21). நாம் இனிமேல் நியாய பிரமாணத்திற்கு அடிமைகள் அல்ல. நியாயபிரமாணத்திற்கு அடிமைகளாக விற்கப்பட்ட நம்மை இயேசு கிறிஸ்து மீட்டுக் கொண்டார். நியாய பிரமாணத்தின் மரண தண்டனையிலிருந்தும் கிறிஸ்து நம்மை மீட்டுக் கொண்டார். நியாயபிரமாணம் நமக்குச் சாபமாக இருந்தது. இந்தச் சாபத்திலிருந்து மீட்க இயேசு கிறிஸ்து நமக்காகப் பாவநிவாரண பலியானார்.

கலாத்தியர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 8

"மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன்" (கலா 3:13; உபா 21:23). மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட குற்றவாளி அன்றைய தினமே அடக்கம் பண்ணப்படுவது வழக்கம். (உபா 21:22-23)

கிறிஸ்து மரித்ததற்கான காரணங்கள்

1. ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாக (ஆதி 15:6; ரோமர் 4; கலா 3:6-14)

2. ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாக (மத் 3:11; யோவான் 7:37-39; அப் 1:4-8; அப் 2:33-39; அப் 11:14-18; அப் 15:7-13). இது ஒரு வாக்குத்தத்தமாகக் கூறப்பட்டிருக்கிறது. (லூக்கா 24:49; அப் 1:4-8; அப் 2:33-39; கலா 3:14)

3 அதிகாரம்

"கிறிஸ்து இயேசுவினால் விசுவாசத்தினால்" - மேலே கூறப்பட்டிருக்கிற இரண்டு ஆசீர்வாதங்களும் இயேசு கிறிஸ்துவினாலும் விசுவாசத்தினாலும் நமக்கு வருகிறது. (ரோமர் 3:24-31; ரோமர் 5:1-11; அப 13:38-39) தம்முடைய விசுவாசிகளை இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியினால அபிஷேகம் பண்ணுகிறார் (மத் 3:11 மாற்கு 1:8; லூக்கா 3:16; லூக்கா 24:49, யோவான் 7:37-39; அப 1:4-5; அப 2:33, அப 11:15-18). இதுபற்றி கொலோ 2:14 ஆவது வசனமும் தெளிவுபடுத்துகிறது.

"ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும்" - எல்லா ஆசீர்வாதங்களும் மீட்பின் மூலமாகவும் இயேசுகிறிஸ்துவின் பாவநிவாரண பலியின் மூலமாகவும் நமக்கு வருகிறது. கலா 3:13-14 எல்லா ஆசீர்வாதமும் என்று சொல்லும்போது அதில் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகமும் அடங்கியிருக்கிறது. நியாய பிரமாணத்தினால வந்த சாபங்களை இயேசு கிறிஸ்துவின பாவநிவாரண பலி அகற்றுகிறது. இயேசு கிறிஸ்துவின தழும்புகளால நாம் குணமடைகிறோம் (ஏசா 53:4-5, மத் 8:17; 1பேதுரு 2:24) இயேசு கிறிஸ்துவின பாடுகள மூலமாக நமது சரீரங்களில நாம் சரீரசுகமாதலகளைப் பெற்றுக் கொள்கிறோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் இயேசு கிறிஸ்து காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார (ஏசா 53:5, 1பேதுரு 2:24)

11. ஆபிரகாமின் விசுவாச உடன்படிக்கையை நியாயப் பிரமாணமானது தள்ளி வியர்த்தமாக்கமாட்டாது

கலா 3:15 சகோதரரே மனுஷர் முறைமையின்படி சொல்லுகிறேன மனுஷர்களுக்குள்ளே உறுதிபண்ணப்பட்ட உடன்படிக்கையை ஒருவனும் தள்ளுகிறதுமில்லை. அதினோடே ஒன்றையும் கூட்டுகிறதுமில்லை

கலா 3:16 ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கும் என்று ஒருவனைக்குறித்துச் சொல்லியிருக்கிறார் அந்தச் சந்ததி கிறிஸ்துவே.

கலா 3:17 ஆதலால் நான் சொல்லுகிறதென்னவெனில் கிறிஸ்துவை முன்னிட்டு தேவனால் முன் உறுதி பண்ணப்பட்ட உடன்படிக்கையை நானூற்றுமுப்பது வருஷத்திற்குப்பின்பு உண்டான நியாயப்பிரமாணமானது தள்ளி வாக்குத்தத்தத்தை வியர்த்தமாக்கமாட்டாது

கலா 3:18 அன்றியும், சுதந்தரமானது நியாய பிரமாணத்தினாலே உண்டானால அது வாக்குத் தத்தத்தினாலே உண்டாயிராது தேவன அதை ஆபிரகாமுக்கு வாக்குத் தத்தத்தினாலே அருளிச்செய்தாரே

"மனுஷர்களுக்குள்ளே உறுதிபண்ணப்பட்ட உடன்படிக்கையை ஒருவனும் தள்ளுகிறதுமில்லை அதினோடே ஒன்றையும் கூட்டுகிறதுமில்லை" - உடன்படிக்கை செய்யும்போது அந்த உடன்படிக்கையை உறுதிபண்ணுவதற்காக அதில முத்திரையிடுவார்கள உடன்படிக்கை பண்ணுகிறவர்கள கையொப்பமிடுவார்கள இரண்டு அல்லது மூன்று சாட்சிகளும் அந்த உடன்படிக்கையில கையொப்பமிடுவார்கள் இவ்வாறு முறைப்படி செய்யும்போது அந்த உடன்படிக்கை உறுதிபண்ணப்படுகிறது உறுதிபண்ணப்பட்ட உடன்படிக்கையை ஒருவனும தள்ளுகிறதுமில்லை அதினோடே ஒன்றையும் கூட்டுகிறதுமில்லை ஆபிரகாமின உடன்படிக்கையும் தேவனுடைய வாக்குத்தத்தங்களும் உறுதிபண்ணப்பட்ட உடன்படிக்கையாகும். நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு 430 வருஷங்களுக்கு முன்பாகவே தேவன் ஆபிரகாமோடு உடன்படிக்கை பண்ணினார் மோசேயின உடன்படிக்கை ஆபிரகாமின் உடன்படிக்கையை வியர்த்தமாக்கவில்லை சுதந்தரம் நியாயப்பிரமாணத்தினால உண்டாகவில்லை ஆபிரகாமின் உடன்படிக்கையினாலேயே சுதந்தரம் உண்டாயிற்று (கலா 3:15-18)

3 அதிகாரம்

கலாத்தியர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 4

"அந்தச் சந்ததி கிறிஸ்துவே" (கலா 3:16 ஆதி 3:15; ஆதி 21:12)

"கிறிஸ்துவை முன்னிட்டு (in Christ) - இந்த வாக்கியத்தைக் "கிறிஸ்துவினால்" "because of Christ" என்று அர்த்தம் கொள்ள வேண்டும்.

முன்னிட்டு (for, because of, on account of) - εἰς - eis - 1519

முன்னிடைச்சொல் - நோக்கி, மூலம் (மத் 3:11

"நானூற்றுமுப்பது வருஷத்திற்குப்பின்பு உண்டான நியாயப்பிரமாணமானது தள்ளி வாக்குத்தத்தத்தை வியர்த்தமாக்கமாட்டாது" - (யாத் 12:40-41)

12. நியாயப் பிரமாணத்தின் உண்மையான நோக்கம்

கலா 3:19 அப்படியானால், நியாய பிரமாணத்தின் நோக்கமென்ன? வாக்குத்தத்தத்தைப்பெற்ற சந்ததி வருமளவும் அது அக்கிரமங்களினிமித்தமாகக் கூட்டப்பட்டு தேவதூதரைக் கொண்டு மத்தியஸ்தன் கையிலே கட்டளையிடப்பட்டது.

கலா 3:20 மத்தியஸ்தன் ஒருவனுக்குரியவனல்ல தேவனோ ஒருவர்

"வாக்குத்தத்தத்தைப்பெற்ற சந்ததி வருமளவும்" கிறிஸ்து வருமளவும் நியாயப்பிரமாணம் அமுலில் இருந்தது. (மத் 11:13, லூக்கா 16:16; 2கொரி 3:6-14; எபி 7:28, எபி 9:9 10)

நியாயப்பிரமாணத்தைப் பற்றிய காலக் குறிப்புகள்

1. வாக்குத்தத்தத்தைப்பெற்ற சந்ததி வருமளவும் (கலா 3:19
2. விசுவாசம் வருகிறதற்கு முன்னே (கலா 3:23)
3. கிறிஸ்துவினிடத்தில் (கலா 3:24)
4. விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே (கலா 3:25)
5. குறித்த காலமளவாக்கும் (கலா 4:2-5)
6. நிறைவேற்றுகிறதற்கே (மத் 5:17-18
7. யோவான் வரைக்கும் (மத் 11:13 லூக்கா 16:16)
8. கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாய் இருக்கிறார் (ரோமர் 10:4
9. ஒழிந்துபோகிறது (2கொரி 3:7-14)
10. இப்போதும் இருக்கிறது (கலா 4:21-31
11. நியாயப்பிரமாணத்திற்குப் பின்பு (எபி 7:28)
12. சீர்திருத்தல் உண்டாகும் காலம் வரைக்கும். (எபி 9:10)
13. சிலுவையின்மேல் ஆணி அடித்து (கொலோ 2:14-17)
14. ஆனால் இப்பொழுது (எபே 2:13-16
15. அதன்பின்பு (கிறிஸ்துவின் பலி (எபி 9:16- எபி 8:13

"தேவதூதரைக் கொண்டு மத்தியஸ்தன் கையிலே கட்டளையிடப்பட்டது" (உபா 33:2; சங் 68:17; அப் 7:53, எபி 2:2

மத்தியஸ்தன் (mediator) μεσίτης mesitees 3316

3 அதிகாரம்

ஆண்பால் பெயர்ச்சொல் - மத்தியஸ்தன் - மோசே (யோவான் 1:17; உபா 5:5) கிறிஸ்து புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராய் இருக்கிறார் (1தீமோ 2:5; எபி 8:6; எபி 9:15; எபி 12:24) பிதாவாகிய தேவனும் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவும் தனித்தனியாக ஆள்தத்துவமுடையவர்கள் என்பதை இந்த வாக்கியம் விளக்குகிறது.

"தேவனோ ஒருவர்" (God is one) - யூதருக்கும், புறஜாதியாருக்கும் ஒரே தேவனே இருக்கிறார் (எபே 4:5-6; 1தீமோ 2:5; ரோமர் 3:30) மோசே யூதருக்கு மட்டுமே மத்தியஸ்தராக இருந்தார். இயேசு கிறிஸ்து புறஜாதியாருக்கும் மத்தியஸ்தராக இருக்கிறார்.

13. நியாயப் பிரமாணம் தேவனுடைய வாக்குத் தத்தங்களுக்கு விரோதமானது

[redacted]

கலா 3:21 அப்படியானால், நியாயப் பிரமாணம் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு விரோதமா? அல்லவே. உயிரைக் கொடுக்கத்தக்க நியாயப்பிரமாணம் அருளப்பட்டிருந்ததானால் நீதியானது நியாயப் பிரமாணத்தினால் உண்டாயிருக்குமே.

கலா 3:22 அப்படியிராதபடியால் இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கிற வாக்குத்தத்தம் விசுவாசமுள்ளவர்களுக்கு அளிக்கப்படும்படி, வேதம் எல்லாரையும் ஏகமாய்ப் பாவத்தின்கீழ் அடைத்துப்போட்டது.

கலா 3:23 ஆதலால் விசுவாசம் வருகிறதற்கு முன்னே, வெளிப்படப்போகிற விசுவாசத்திற்கு ஏதுவாக நாம் அடைக்கப்பட்டவர்களாய் நியாயப் பிரமாணத்தின்கீழ் காவல்பண்ணப் பட்டிருந்தோம்.

கலா 3:24 இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது.

"அப்படியானால் நியாயப்பிரமாணம் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு விரோதமா?" - நியாயப்பிரமாணம் நீதியையும், உயிரையும் கொடுக்காது. எல்லோரும் பாவம் செய்தவர்கள் என்று நியாயப்பிரமாணம் அறிவிக்கிறது (ரோமர் 11:32) பாவம் செய்த அனைவருக்கும் நியாயப்பிரமாணம் மரண தண்டனை கொடுக்கிறது. பாவம் செய்தவர்கள் எல்லோருமே மரிக்க வேண்டியவர்கள். நமது பாவத்திற்காக நாம் செலுத்த வேண்டிய தண்டனையை இயேசு கிறிஸ்து நமக்காகச் செலுத்தினார். இயேசு கிறிஸ்துவின்மீது நாம் விசுவாசம் வைக்கும்போது நமக்கு நியமிக்கப் பட்டிருந்த மரண தண்டனையிலிருந்து மீட்கப்பட்டு ஜீவனைப் பெற்றுக் கொள்கிறோம் (கலா 3:22-23)

உபாத்தி (schoolmaster)- παιδαγωγός - paidagoogos - 3807

ஆண்பால் பெயர்ச்சொல் உபாத்தியாயர், உபாத்தி - பிள்ளைகளுக்கு உரிய வயது வரும்வரையிலும் அவர்களைப் பாதுகாத்து பராமரிப்பவர். உரிய வயது வந்தபின்பு இவர்கள் உபாத்தியின் கட்டுப்பாடுகளிலிருந்து விடுவிக்கப்பட்டு, சுயமாகச் செயல்படுவார்கள். நமக்கு விசுவாசம் வந்தபின்பு நாம் இனிமேலும் உபாத்தியாகிய நியாயப் பிரமாணத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் அல்ல (கலா 3:25) நாம் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே தேவனுடைய புத்திரராயிருக்கிறோம். ஆகையினால் மோசேயின் பிரமாணத்திற்குக் கட்டுப் பட்டவர்களாக இராமல் விடுதலை பெற்றவர்களாக இருக்கிறோம். (கலா 3:26)

கலாத்தியர் – தொகுப்புரை

3 அதிகாரம்

14. விசுவாசம் நியாயப் பிரமாணத்திலிருந்து விசுவாசிகளை விடுதலை பண்ணுகிறது

கலா 3.25 விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே

15. விசுவாசத்தினால் விசுவாசிகள் தேவனுடைய குடும்பத்தில் புத்திரராயும் சுதந்திரராயும் இருக்கிறார்கள்

கலா 3.26 நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே

கலா 3.27 ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே

கலா 3.28 யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்

கலா 3.29 நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால் ஆபிரகாமின் சந்ததியாராயும் வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்

"கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள்" இந்த ஞானஸ்நானம் தண்ணீர் ஞானஸ்நானம் பெறுவதைக் குறிப்பிடாது. கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் (கலா 3.27; ரோமர் 6:2-8; கொலோ 2:12) என்பது இயேசு கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குள்ளான ஞானஸ்நானத்தைக் குறிக்கும். (1கொரி 12:13)

"கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே" - கிறிஸ்துவின் சுபாவம், அவருடைய சிந்தை ஆகியவற்றை நமது சுபாவமாகவும், நமது சிந்தையாகவும் ஆக்குவது. நமது அன்றாட ஜீவியத்தில் இயேசு கிறிஸ்துவைப் போலவே ஜீவிப்பது (கலா 5.24; 2கொரி 5:17-18; ரோமர் 6:1-14; ரோமர் 8:1-13) இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி அவருடைய கிரியைகளைச் செய்வது (யோவான் 14:12-15; 1பேதுரு 2:21; 1பேதுரு 4:1-2; ரோமர் 13:14)

"யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை" - இயேசு கிறிஸ்துவிற்குள் அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை. ஆணென்றும் பெண்ணென்றுமில்லை. எல்லா இனமும் எல்லா வகுப்பாரும், எல்லாப் பாலர்களும் இயேசு கிறிஸ்துவிற்குள் ஒன்றாக இருக்கிறார்கள். சுவிசேஷத்தின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளும் உரிமைகளும் சிலாக்கியங்களும் அனைவருக்கும் சமமாகவே வழங்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவைத் தலையாகக் கொண்டு அனைவரும் ஒரே சரீரமாகச் செயல்படுகிறார்கள் (1கொரி 12:13,28-31; எபே 1:20-23; எபே 2:19-22; கொலோ 3:11) யூதருக்கும் புறஜாதியாருக்கும் இடையிலுள்ள வேறுபாடு அகற்றப்பட்டிருக்கிறது. நாம் எல்லோரும் இயேசு கிறிஸ்துவிற்குள் ஒன்றாய் இருக்கிறோம்.

"நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்" பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் ஆளத்துவப் பணியில் தனித்தனி நபர்கள். ஒற்றுமையில் மூவரும் ஒன்றாய் இருக்கிறார்கள் (யோவான் 17:11,21-22; 1யோவான் 5:7)

விசுவாசிகள் அனைவருக்கும் சமமாகக் கொடுக்கப்படும் ஆசீர்வாதங்கள்

1. எல்லாரும் தேவனுடைய புத்திரராய் இருக்கிறார்கள் (கலா 3.26)
2. எல்லாரும் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்களாக இருக்கிறார்கள் (கலா 3.27)
3. எல்லாரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டிருக்கிறார்கள் (கலா 3.27)

கலாத்தியர் – தொகுப்புரை

3 அதிகாரம்

4. எல்லாரும் இயேசு கிறிஸ்துவிற்குள் ஒன்றாய் இருக்கிறார்கள் (கலா 3:28)

5. எல்லாரும் கிறிஸ்துவினுடையவர்கள் (கலா 3:29 கலா 5:24)

6. எல்லாரும் ஆபிரகாமின் சந்ததியாராய் இருக்கிறார்கள் (கலா 3:29)

7. எல்லாரும் வாக்குத்தத்தத்தின்படி சுதந்தரராய் இருக்கிறார்கள் (கலா 3:29)

4 அதிகாரம்

16. சுதந்தரவாளி

கலா 4.1 பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில் சுதந்தர வாளியானவன் எல்லாவற்றிற்கும் எஜமானாயிருந்தும் அவன் சிறுபிள்ளையாயிருக்குங் காலமளவும் அவனுக்கும் அடிமை யானவனுக்கும் வித்தியாசமில்லை.

கலா 4.2 தகப்பன் குறித்த காலம் வரைக்கும் அவன் காரியக்காரருக்கும் வீட்டு விசாரணைக்காரருக்கும் கீழ்ப்பட்டிருக்கிறான்.

கலா 4.3 அப்படியே நாமும் சிறுபிள்ளைகளாயிருந்த காலத்தில் இவ்வுலகத்தின் வழிபாடுகளுக்கு அடிமைப்பட்டவர்களாயிருந்தோம்.

"சுதந்தரவாளியானவன் எல்லாவற்றிற்கும் எஜமானாயிருந்தும், அவன் சிறுபிள்ளையாயிருக்குங் காலமளவும் அவனுக்கும் அடிமையானவனுக்கும் வித்தியாசமில்லை" உரிய வயது வரும் வரையிலும் சுதந்தரவாளிக்கும் அடிமைக்கும் வித்தியாசம் இல்லை (கலா 4:1, 2). அதுபோலவே கிறிஸ்து வரும்வரையிலும் நாம் நியாயப்பிரமாணத்திற்கு அடிமையான பிள்ளைகளாக இருந்தோம். நியாயப்பிரமாணத்திலிருந்து நம்மை விடுவிப்பதற்காக இயேசு கிறிஸ்து வந்தார். அதன்பின்பு நாம் நியாயப் பிரமாணத்திற்கு விடுவிக்கப்பட்டிருக்கிறோம். தேவனுடைய சுவிகார புத்திரர்களாக ஆனோம். (கலா 4:1-7)

இவ்வுலகத்தின் வழிபாடுகள் (elementary rules) - στοιχεῖον - stoicheion 4747

பால் வேறுபாடற்ற பொதுச்சொல். அடிப்படை சத்தியம், உபதேசம். பூதமாக்கத்தின் அடிப்படை உபதேசங்கள் (கலா 4:3, 9; கொலோ 2:8, 20; எபி 5:12; 2பேதுரு 3:10-12)

17. கிறிஸ்து நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப் பட்டவர்களை மீட்டுக் கொண்டு அவர்களை தேவனுடைய புத்திரராக ஆக்குகிறார்

கலா 4:4 நாம் புத்திர சுவிகாரத்தையடையும்படி நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக,

கலா 4.5 காலம் நிறைவேறினபோது ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாய பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார்.

"நியாய பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக் கொள்ளத்தக்கதாக" - சாத்தானுக்கும் பாவத்திற்கும் அடிமைகளாக இருப்பவர்களையும் நியாயப்பிரமாணத்தை மீறியதற்காக மரண தண்டனை பெற்றிருப்பவர்களையும் விடுவிப்பதற்கு முழுக்கிரயம் செலுத்துவதற்காக (கலா 3:13, 21)

மீட்பின் சுவிசேஷத்தின் முக்கிய [redacted]

1. தேவனுடைய குமாரன் மூலமாக உலகத்தை மீட்கும் தேவனுடைய திட்டம். (கலா 4:4; ஆதி 3:15, ஏசா 7:14; ஏசா 9:6-7, மத் 1:18-25)

2. காலம் நிறைவேறினபோது தேவனுடைய குமாரனின் வெளிப்பாடு (கலா 4:4; தானி 9:24-26, மத் 1:18-25)

3. தேவனுடைய குமாரன் வெளிப்படும் சூழ்நிலைகள் - ஸ்திரீயினிடத்தில் பிறந்தவர், நியாயபிரமாணத்திற்குக் கீழானவர், பரிபூரண பலியாக இருக்கிறவர் (கலா 4:4-5, யோவான் 3:16; எபி 10:4-18)

4. தேவனுடைய குமாரனின் மரணத்தின் மூலமாக மீட்பு (கலா 4:5, ரோமர் 3:24; 1பேதுரு 2:24; எபே 1:7, எபி 9:15)

4 அதிகாரம்

5. விசுவாசிக்கிறவர்கள் எல்லோரையும் சுவிகாரத்தின் மூலமாக புத்திரராக ஏற்றுக் கொள்வது (கலா 4:6; ரோமர் 8:14-16; எபே 1:5)

6. பரிசுத்த ஆவியானவரை அனுப்புதல் (கலா 4:6; ரோமர் 8:9-16; கலா 3:14)

7. எல்லா புத்திரர்களுக்கும் சுதந்தரம் கலா 4:7; ரோமர் 8:14-18; எபே 1:11 பேதுரு 1:4

"காலம் நிறைவேறினபோது ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப் பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார்" - மனுக்குலத்தை மீட்பதற்குத் தேவன் ஏற்ற வேளையைத் தெரிந்தெடுத்து தமது ஒரேபேறான குமாரனை இந்த உலகத்திற்கு அனுப்பினார் (கலா 4:4-5) இந்தக் காலம் தீர்க்கதரிசிகளை முன்னறிவித்த காலத்தின் நிறைவேற்றமாகும். ஆதி 3:15 ஆதி 12:1-3 ஏசா 7:14; ஏசா 9:6-7

18. புத்திரராயும் சுதந்தரராயும் இருப்பதற்கு ஆதாரம் - ரோமர் 8:14-18

கலா 4:6 மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால் அப்பா பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்

கலா 4:7 ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனா யிருக்கிறாய். நீ புத்திரனேயானால் கிறிஸ்துமூலமாய் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்.

"நீங்கள் புத்திராயிருக்கிறபடியினால்" - நாம் தேவனுடைய புத்திரராய் இருக்கிறபடியினால் பரிசுத்த ஆவியானவர் மூலமாக இதன் முழுமையான அடையாளத்தைப் பெற்றுக் கொள்கிறோம். தேவனை அப்பா பிதாவே என்று கூப்பிடுகிறோம். தேவன் தமது குமாரனுடைய ஆவியை நம்முடைய இருதயங்களில் அனுப்பினார் (கலா 4:6-7 ரோமர் 8:14-16

19. நாம் தேவனை அறியாமலிருந்த போது, சுபாவத்தின்படி தேவர்களல்லாதவர்களுக்கு அடிமைகளாயிருந்தோம்

கலா 4:8 நீங்கள் தேவனை அறியாமலிருந்தபோது, சுபாவத்தின்படி தேவர்களல்லாதவர் களுக்கு அடிமைகளாயிருந்தீர்கள்

கலா 4:9 இப்பொழுதோ நீங்கள் தேவனை அறிந்திருக்க, அல்லது தேவனாலே அறியப் பட்டிருக்க. பெலனற்றதும் வெறுமையானதுமான அவ்வழிபாடுகளுக்கு நீங்கள் மறுபடியும் திரும்பி மறுபடியும் அவைகளுக்கு அடிமைப்படும்படி விரும்புகிறதெப்படி?

கலா 4:10 நாட்களையும் மாதங்களையும் காலங்களையும் வருஷங்களையும் பார்க்கிறீர்களே

கலா 4:11 நான் உங்களுக்காகப் பிரயாசப்பட்டது வீணாய்ப்போயிற்றோ என்று உங்களைக் குறித்துப் பயந்திருக்கிறேன்

"நீங்கள் தேவனை அறியாமலிருந்தபோது" - இக்காலத்தில் கலாத்தியர்கள் சுபாவத்தின்படி தேவர்களல்லாதவர்களுக்கு அடிமைகளாயிருந்தார்கள் விக்கிரகாராதனைக்காரர்களாக இருந்தார்கள் யூதமார்க்கத்திற்கு மறுபடியும் திரும்பினார்கள் கலா 4:9,12 சிறிது காலம் கிறிஸ்துவைப் பின்பற்றினார்கள் (கலா 5:7) அதன்பின்பு கிறிஸ்துவையும் சுவிசேஷத்தையும் விட்டு விலகி நியாயப் பிரமாணத்திற்கு மறுபடியும் அடிமைகளானார்கள் (கலா 4:6-7 கலா 3:1-5; கலா 4:9-10; கலா 5:4 9

பெலனற்றதும் வெறுமையானதுமான வழிபாடுகள்

1. ஓய்வுநாட்களையும், நியாயப் பிரமாணத்தின் விசேஷித்த நாட்களையும் ஆசரித்தல் (கலா 4:10, கொலோ 2:14-17 ரோமர் 14:5-6

2. மாதங்களை ஆசரித்தல் (கலா 4:10, கொலோ 2:14-17

4 அதிகாரம்

3. இஸ்ரவேலின் பண்டிகைகளாக வருஷத்தில் சில குறிப்பிட்ட நாட்களை ஆசரித்தல். (கலா 4:10 லேவி 23; கொலோ 2:14-17)

4. வருஷங்களை ஆசரித்தல் - வருஷாந்திர பாவநிவாரணங்கள் இஸ்ரவேலின் பூமியின் வருஷங்கள் முதலியவை. கலா 4:10; லேவி 23 லேவி 25

"உங்களைக்குறித்துப்பயந்திருக்கிறேன்" - பவுல் கலாத்தியருக்காகப் பிரயாசப்பட்டது வீணாய்ப்போயிற்றோ என்று அவர்களைக் குறித்துப் பயந்திருக்கிறார். நாட்களையும் மாதங்களையும், காலங்களையும் வருஷங்களையும் பார்ப்பதினால் அவர்கள் மார்க்கக் காரியங்களைச் சரியாகச் செய்வதாக நினைக்கிறார்கள். இவற்றை பக்தியுடன் ஆசரிப்பதினால் தாங்கள் நீதிமானாகலாம் என்று நினைக்கிறார்கள். சுவிசேஷத்திற்குப் பதிலாக நியாயப்பிரமாணத்தை நம்புவது வீணான நம்பிக்கை.

20. ஆதியிலிருந்த ஆனந்த பாக்கியத்தைக் கொண்டிருக்குமாறு கலாத்தியருக்கு விண்ணப்பம்

கலா 4:12 சகோதரரே, என்னைப்போலாகுங்கள் என்று உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; நான் உங்களைப்போலுமானேனே, எனக்கு நீங்கள் அநியாயம் ஒன்றும் செய்யவில்லை.

கலா 4:13 உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, நான் சரீர பலவீனத்தோடு முதலாந்தரம் உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தேன்.

கலா 4:14 அப்படியிருந்தும், என் சரீரத்தில் உண்டாயிருக்கிற சோதனையை நீங்கள் அசட்டைபண்ணாமலும், அரோசியாமலும், தேவதூதனைப்போலவும், கிறிஸ்து இயேசுவைப்போலவும், என்னை ஏற்றுக்கொண்டீர்கள்.

கலா 4:15 அப்பொழுது நீங்கள் கொண்டிருந்த ஆனந்த பாக்கியம் எங்கே? உங்கள் கண்களைப் பிடுங்கி எனக்குக் கொடுக்கக்கூடுமானால், அப்படியும் செய்திருப்பீர்கள் என்று உங்களுக்குச் சாட்சியாயிருக்கிறேன்.

கலா 4:16 நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொன்னதினாலே உங்களுக்குச் சத்துருவானேனோ?

"நான் சரீர பலவீனத்தோடு முதலாந்தரம் உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தேன்" - சுவிசேஷத்திற்காக பவுல் பட்ட பாடுகள் சிலவற்றை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. (2கொரி 11:23-28 2கொரி 12:7-10)

சோதனை(temptation) - πειρασμός - peirasmos - 3986

ஆண்பால் பெயர்ச்சொல் - சோதனை, சோதித்தல் **(any kind of temptation, trial)** (மத் 6:13; மத் 26:41; மாற்கு 14:38 லூக்கா 4:13; லூக்கா 8:13; லூக்கா 11:4; லூக்கா 22:28, 40, 46; அப் 20:19; 1கொரி 10:13, கலா 4:14. 1தீமோ 6:9; எபி 3:8 யாக் 1:2,12 1பேதுரு 1:6; 1பேதுரு 4:12, 2பேதுரு 2:9; வெளி 3:10)

"உங்கள் கண்களைப் பிடுங்கி எனக்குக் கொடுக்கக்கூடுமானால் அப்படியும் செய்திருப்பீர்கள்" - பவுலுக்குக் கண்நோய் ஏதாவது இல்லை. தன்மீது கலாத்தியர்கள் மிகுந்த அன்போடு இருக்கிறார்கள் என்பதை விளக்கும் ஒரு வழக்குச்சொல். அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவித்ததினால் தன்மீது அவர்கள் வைத்துள்ள அன்பு குறைந்துவிட்டதோ அல்லது மாறிவிட்டதோ என்று பவுல் கலாத்தியரிடம் கேட்கிறார்.

21. நியாயப் பிரமாணக்காரர்கள் பாவத்திற்கும் அடிமைத்தனத்திற்கும் நம்மை மறுபடியும் உட்படுத்துவார்கள்

கலா 4:17 அவர்கள் உங்களை நாடி வைராக்கியம் பாராட்டுகிறார்கள், ஆகிலும் நல்மனதோடே அப்படிச் செய்யாமல், நீங்கள் அவர்களை நாடி வைராக்கியம் பாராட்டும்பொருட்டு உங்களைப் புறம்பாக்க விரும்புகிறார்கள்.

4 அதிகாரம்

கலா 4:18 நல்விஷயத்தில வைராக்கியம் பாராட்டுவது நல்லதுதான் அதை நான் உங்களிடத்தில் இருக்கும்பொழுது மாத்திரமல்ல, எப்பொழுதும் பாராட்ட வேண்டும்

"அவர்கள் உங்களை நாடி வைராக்கியம் பாராட்டுகிறார்கள்" - கள்ளபோதகர்கள் அவர்களுடைய அன்பை பெறுவதற்காக அவர்களை நாடி வைராக்கியம் பாராட்டுகிறார்கள் கலாத்தியர்கள் கள்ளபோதகர்களை நம்பும்போது பவுலை விரோதிப்பார்கள் அவர்களுடைய உபதேசத்தின் பிரகாரமாகவே நடந்து கொள்வார்கள் நல்விஷயத்தில வைராக்கியம பாராட்டுவது நல்லதுதான் (கலா 4:17-18) ஆனால் கள்ளபோதகர்கள் பவுலுக்கு விரோதமாக வைராக்கியம பாராட்டுகிறார்கள

22. கிறிஸ்து நம்மிடத்தில் உருவாகுமளவும் நமக்காக பவுல் மறுபடியும் கர்ப்ப வேதனைப் படுகிறார் - (1:6, 5:4)

கலா 4:19 என் சிறுபிள்ளைகளே கிறிஸ்து உங்களிடத்தில உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப் படுகிறேன

கலா 4:20 உங்களைக்குறித்து நான சந்தேகப்படுகிறபடியால. நான இப்பொழுது உங்களிடத்தில் வந்திருந்து. வேறு வகையாகப்பேச விரும்புகிறேன

கர்ப்பவேதனை(travail) - ὠδίνω - oodinoo - 5605

வினைச்சொல் - கர்ப்ப வேதனைப்படு, பிரசவ வேதனைப்படு (birth pangs, travail) (கலா 4:19,27; வெளி 12:2)

- கலாத்தியர்களை இயேசு கிறிஸ்துவிடம் ஆதாயம் பண்ணுவதறகாக பவுல் பிரசங்கங்கள், ஜெபங்கள் கண்ணீர்கள் ஆகியவற்றால் பிரயாசப்பட்டார் தன்னுடைய ஊழியத்தின் மூலமாக இரட்சிக்கப்பட்டவர்களைப் பவுல் தன்னுடைய பிள்ளைகளாகக் கருதினார் ஆனால் இப்பொழுதோ அவர்கள் தேவனை விட்டு விலகிப்போய்விட்டார்கள் அவர்கள் தேவனிடத்தில திரும்பி வருவதறகாகவும் இயேசு கிறிஸ்து அவர்களிடத்தில உருவாகும் அளவும் அவர்களுக்காக பவுல மறுபடியும் கர்ப்ப வேதனைப்படுகிறார் அவர்கள கிருபையிலிருந்து விழுந்துவிட்டார்கள (கலா 1:6-8; கலா 3:1-5; கலா 4:19; கலா 5:4) அவர்கள் கிறிஸ்துவிற்குள தங்களை மறுபடியும புதுப்பித்துக் கொள்ள வேண்டும் அவர்கள மறுபடியும பிறக்க வேண்டும் இந்தப்பிறப்பு சரீரப்பிரகாரமான பிறப்பைக் குறிக்காது. ஜெபத்தில ஆத்துமாவின வேதனையைக் குறிக்கும்.

மறுபடியும(again) - πάλιν - palin - 3825

வினையடை - மறுபடியும், மேலும், இன்னும், அன்றியும் (again; restore once more; anew)

புதிய பிறப்பு

1 ஆவிக்குரிய மாற்றம் சரீர மாற்றமல்ல கலா 4:29, யோவான் 3:1-8)

2 இருதயம் சித்தம், சிந்தனை, ஆவல்கள் ஜீவன் நடத்தை ஆகியவற்றில மாற்றம் சரீரத்தில ஏற்படும் மாற்றமல்ல. (2கொரி 5:17-18)

கலாத்தியர் - தொகுப்புரை

4 அதிகாரம்

3 எஜமான்களை மாற்றுவது - சரீரம் ஆத்துமா, ஆவியை மாற்றுவதல்ல. (ரோமர் 6:17-23; ரோமர் 8:1-4)

4 சாத்தானின் குடும்பத்திலிருந்து தேவனுடைய குடும்பத்திற்குள் சுவீகார புத்திரராக அங்கீகரிக்கப்படுவது (ரோமர் 8:14-16; கலா 4:5; எபே 1:5)

5 சாத்தானுக்கும், பாவத்திற்கும் ஊழியம் செய்வதற்குப் பதிலாகத் தேவனுக்கும் பரிசுத்தத்திற்கும் ஊழியம் செய்யுமாறு தன்னைப் பிரதிஷ்டை பண்ணுவது. (ரோமர் 6:16-22; ரோமர் 8:1-13; கொலோ 3:5-10; கலா 5:16-26)

6 தன்னுடைய நீதியிலும், பரிசுத்தத்திலும் புதுப்பித்துக் கொள்வது. (எபே 4:23-24; கொலோ 3:10; சங் 51:10) புதிய பிறப்பு என்பது பரிசுத்த ஆவியினால் பிறப்பதைக் குறிக்காது. தேவனுடைய ஒரேபேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்து பரிசுத்த ஆவியினால் பிறந்தார் (யோவான் 1:14,18; யோவான் 3:16)

7 சுபாவத்தின் மாற்றம் (ரோமர் 3:24-25; 2கொரி 5:17; தீத்து 3:5)

8 ஆசாரத்தின் மாற்றம் - தேவனுடைய சமூகத்திற்கு முன்பாக புதிய பிரதிஷ்டையோடு நிற்பது. (ரோமர் 5:1-2; எபே 2:1-9; தீத்து 2:11-14; 2பேதுரு 3:18; 1யோவான் 3:8-10)

9 சுபாவம், ஊழியம் ஸ்தானம் ஆகியவற்றில் ஜெயம். (கலா 5:22-23; 1கொரி 13; ரோமர் 3:24-31; ரோமர் 5:1-11; 2தீமோ 2:21; தீத்து 2:11-14)

10 ஒருபாவி மனந்திரும்பி இரட்சிக்கப்படும்போது அவருடைய ஜீவியத்தில் ஏற்படும் ஆவிக்குரிய மாற்றங்களும் சுபாவங்களின் மாற்றங்களும் (மாற்கு 1:15; 2கொரி 5:17,18; ரோமர் 1:16; ரோமர் 10:9-10; எபே 2:8-9; 1யோவான் 1:9)

இரட்சிக்கப்பட்ட நபர் மறுபடியும் பாவம் செய்யும்போது தேவனுடைய பிரமாணத்தை அவர் மீறுகிறார். அவருக்குப் பாவத்தின் சம்பளமாகிய மரணம் நியமிக்கப்படுகிறது. (யாக் 1:13-15; யாக் 5:19-20; ரோமர் 6:1-23; ரோமர் 8:1-13; யோவான் 8:34; 2பேதுரு 2:19-22; எபி 6:4-9; எபி 10:26-29; கலா 5:4, 19-21; 2கொரி 6:9-11; 1யோவான் 3:8-10; எசே 18:4)

மனுஷர் பல தடவை மறுபடியும் பிறக்க முடியும்

1 ஆதாம் பாவம் செய்யும் வரையிலும் எல்லா ஜனங்களும் நித்திய ஜீவனைப் பெற்றிருந்தார்கள். ஆதாம் பாவம் செய்யாமல் இருந்திருந்தால் எல்லா ஜனங்களும் நித்திய காலமாக ஜீவித்திருப்பார்கள். (ஆதி 2:17; ரோமர் 5:12-21) யோவான் 3:1-8 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் புதிய பிறப்பானது மறுபடியும் பிறப்பதைக் குறிக்கும். மரண தண்டனையை அகற்றிவிட்டு தன்னுடைய ஜீவன் மீட்கப்படுவதைக் குறிக்கும். (ஏசா 59:2; மத் 1:21; யோவான் 3:16; எபே 2:1-9) இது ஒருமுறை நடைபெறும்போது பலமுறை நடப்பதற்கு வாய்ப்புள்ளது.

2 நமது சத்துருக்களை நாம் ஏழுஎழுபது தரம் அதாவது 490 தரம் மன்னிக்க வேண்டுமென்று கர்த்தர் நமக்கு உபதேசிக்கிறது. (மத் 18:21-22) நமக்கு இதை உபதேசிக்கும் கர்த்தர் இந்தக் காரியத்தைத் தம்முடைய நடைமுறையிலும் செயல்படுத்தி நம்மை பலதரம் மன்னிப்பார்.

3 ஒரு விசுவாசி பாவம் செய்யும்போது இயேசுகிறிஸ்து பிதாவிடத்தில் அந்த நபருக்காக பரிந்து பேசுகிறார் (1யோவான் 2:1,2) பின்வாங்கிப் போனவர்களைத் தேவனிடத்தில் மறுபடியும் கூட்டிச்சேர்க்க வேண்டியதில்லை என்றால் நமக்காகப் பரிந்து பேசவேண்டிய அவசியமுமிராது.

கலாத்தியர் - தொகுப்புரை

4 அதிகாரம்

4 நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார் (1 யோவான் 1:9)

5 பேதுரு மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டான். இயேசுவை தேவனுடைய குமாரன் என்றும் கிறிஸ்து என்றும் அறிக்கையிட்டான். இதன் மூலமாக அவனுக்குப் புதிய பிறப்பு கிடைத்தது. (யோவான் 3:3, மத் 16:16) பரிசுத்த ஆவியானவர் அவனுக்குள் இருந்தார். சுவிசேஷ வசனங்களைப் பிரசங்கம் பண்ணினான். வியாதியஸ்தர்களைக் குணமாக்கினான் (மத் 10:1-20) இப்பேர்ப்பட்ட பேதுரு தம்மை மறுதலித்து பின்வாங்கிப்போவான் என்றும் மறுபடியும் இரட்சிக்கப்படுவான் என்றும் இயேசுகிறிஸ்து முன்னறிவித்தார் (லூக்கா 22:31-34) இரட்சிக்கப்பட்டவர்கள் பாவம்செய்யும்போது அவர்கள் தம்முடைய பாவங்களை மறுபடியும் அறிக்கையிட்டு பேதுருவைப் போல தேவனுடைய இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும் (மத் 26:69-75)

6 ஒருவன் மறுபடியும் இரட்சிக்கப்படுவதைக் குறித்து யாக்கோபு இவ்வாறு உபதேசம் பண்ணுகிறார் "சகோதரரே, உங்களில் ஒருவன் சத்தியத்தைவிட்டு விலகிமோசம் போகும்போது மற்றொருவன் அவனைத் திருப்பினால் தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன்

7 தேவனால் மனுஷனை மறுபடியும் ஒட்ட வைக்க முடியும் என்று பவுல் உபதேசம் பண்ணியிருக்கிறார்

8 பிசாசானவனுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிபட்டிருக்கிற அவர்கள் மறுபடியும் மயக்கத்தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும், சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்க வேண்டும் என்று பவுல் உபதேசம் பண்ணுகிறார்

9 பின்வாங்கிப்போனவர்களும் கலா 4:9 தேவனுடைய கிருபையிலிருந்து விழுந்தவர்களும் (கலா 1:6-8 கலா 3:1-5 கலா 4:9 கலா 5:4 மறுபடியும் பிறப்பதைக் குறித்து பவுல் உபதேசம் பண்ணியிருக்கிறார்

10 ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், அவனைச் சீர்பொருந்த பண்ணவேண்டும் என்பது பவுலின் உபதேசம். (கலா 6:1)

11 தேவையட்டால மனந்திரும்புதலின் அஸ்திபாரத்தை மறுபடியும் போடலாம் (எபி 6:1) மார்க்கபேதம் உள்ளவர்கள் மனந்திரும்ப மாட்டார்கள் (எபி 6:4-9 எபி 10:26-29) பின்வாங்கிப்போனவர்கள் இயேசு கிறிஸ்துவின் மீது இன்னும் விசுவாசமாகவே இருப்பார்கள். தங்களுடைய பாவங்களில் எவ்வளவுதான் மூழ்கிப்போயிருந்தாலும் கிறிஸ்துவில் அவர்கள் வைத்திருக்கும் விசுவாசம் புதுப்பிக்கப்படுவதற்கு வாய்ப்பிருக்கிறது.

12 மறுபடியும் மனமாற்றமடைவதைக் குறித்து இயேசு கிறிஸ்து உபதேசம் பண்ணியிருக்கிறார்

13 காணாமல்போய் கண்டுபிடிக்கப்பட்ட ஆடு, வெள்ளிக்காசு, கெட்டகுமாரன் ஆகியோரைப் பற்றி இயேசு கிறிஸ்து லூக்கா 15 ஆவது அதிகாரத்தில் உவமையாகக் கூறியிருக்கிறார்

14 தாவீது பாவம் செய்த பின்பு, மறுபடியும் புதுப்பிக்கப்பட்டான்

15 தம்முடைய நிபந்தனைகளைக் கைக்கொண்டால் தேவன் இஸ்ரவேலரை மீட்டுக் கொள்வதாகத் திரும்பத் திரும்ப வாக்குப் பண்ணியிருக்கிறார்

கலாத்தியர் - தொகுப்புரை

4 அதிகாரம்

"உங்களைக்குறித்து நான் சந்தேகப்படுகிற படியால், நான் இப்பொழுது உங்களிடத்தில் வந்திருந்து வேறுவகையாகப் பேச விரும்புகிறேன்" - கலாத்தியர்கள் பின்வாங்கிப் போய் விட்டார்கள் ஆகையினால் பவுல் அவர்களைக் கடினமாகக் கடிந்து கொள்ளாமல் மெதுவாகக் கடிந்து கொண்டு அவர்களை மறுபடியுமாக இயேசு கிறிஸ்துவினிடத்தில் அழைத்து வர முயற்சி பண்ணுகிறார்

23. கிருபையும் பிரமாணமும் ஒன்றுக்கொன்று முரண்பாடுடையவை - (2கொரி 3.6-15, எபே 2:15 கொலோ 2:14-17 மத் 11:13 அப் 15:5-29 கலா 1:6 3:19-25 5:1-5 எபி 7:11-28; 8:6-18; 9:1-22; 10:1-8)

கலா 4.21 நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிருக்க விரும்புகிற நீங்கள் நியாயப்பிரமாணம் சொல்லுகிறதைக் கேட்கவில்லையா? இதை எனக்குச் சொல்லுங்கள்

கலா 4.22 ஆபிரகாமுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள் என்று எழுதியிருக்கிறது, ஒருவன் அடிமையானவளிடத்தில் பிறந்தவன் ஒருவன் சுயாதீனமுள்ளவளிடத்தில் பிறந்தவன்

கலா 4:23 அடிமையானவளிடத்தில் பிறந்தவன் மாம்சத்தின்படி பிறந்தான் சுயாதீனமுள்ளவளிடத்தில் பிறந்தவன் வாக்குத்தத்தத்தின்படி பிறந்தான்

கலா 4:24 இவைகள் ஞான அர்த்தமுள்ளவைகள்; அந்த ஸ்திரீகள் இரண்டு ஏற்பாடுகளாம்; ஒன்று சீனாய்மலையிலுண்டான ஏற்பாடு, அது அடிமைத்தனத்திற்குள்ளாகப் பிள்ளை பெறுகிறது, அது ஆகார் என்பவள் தானே

கலா 4.25 ஆகார் என்பது அரபி தேசத்திலுள்ள சீனாய்மலை, அந்த ஆகார் இப்பொழுதிருக்கிற எருசலேமுக்குச் சரி; இவள் தன் பிள்ளைகளோடேகூட அடிமைப் பட்டிருக்கிறாளே

கலா 4.26 மேலான எருசலேமோ சுயாதீனமுள்ளவள் அவளே நம்மெல்லாருக்கும் தாயானவள்

கலா 4.27 அந்தப்படி பிள்ளைபெறாத மலடியே, மகிழ்ந்திரு; கர்ப்பவேதனைப் படாதவளே, களிப்பாய் எழும்பி ஆர்ப்பரி, புருஷனுள்ளவளைப்பார்க்கிலும் அநாத ஸ்திரீக்கே அதிக பிள்ளைகளுண்டு என்று எழுதியிருக்கிறது

கலா 4:28 சகோதரரே, நாம் ஈசாக்கைப்போல வாக்குத்தத்தத்துப் பிள்ளைகளாயிருக்கிறோம்

கலா 4:29 ஆகிலும் மாம்சத்தின்படி பிறந்தவன் ஆவியின்படி பிறந்தவனை அப்பொழுது துன்பப்படுத்தினதுபோல இப்பொழுதும் நடந்துவருகிறது

கலா 4.30 அதைக்குறித்து வேதம் என்ன சொல்லுகிறது. அடிமையானவளின் மகன் சுயாதீனமுள்ளவளுடைய குமாரனோடே சுதந்தரவாளியாயிருப்பதில்லை ஆகையால் அடிமையானவளையும் அவளுடைய மகனையும் புறம்பே தள்ளு என்று சொல்லுகிறது.

கலா 4.31 இப்படியிருக்க, சகோதரரே நாம் அடிமையானவளுக்குப் பிள்ளைகளாயிராமல் சுயாதீனமுள்ளவாளுக்கே பிள்ளைகளாயிருக்கிறோம்.

"ஆபிரகாமுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள் என்று எழுதியிருக்கிறது. ஒருவன் அடிமையானவளிடத்தில் பிறந்தவன், ஒருவன் சுயாதீனமுள்ளவளிடத்தில் பிறந்தவன்" - ஆதி 16:15, ஆதி 21:1-8 ஆகிய வசனங்களில் எழுதப்பட்டிருக்கிறது.

"மாம்சத்தின்படி" இவனுடைய பிறப்பில் தெய்வீக வல்லமை ஒன்றும் வெளிப்படவில்லை இவனுடைய பெற்றோர் சாதாரண ஜனங்களாகவே இருந்தார்கள்

4 அதிகாரம்

"வாக்குத்தத்தத்தின்படி" - இவனுடைய பெற்றோர் வயது முதிர்ந்தவர்கள். சரீரப் பிரகாரமாக ஈசாக்கைப் பெற்றெடுப்பதற்கு வாய்ப்பில்லை. தெய்வீக வல்லமை அவருக்கு கிரியை செய்ததினால் வாக்குத்தத்தத்தின் பிரகாரமாக ஈசாக்கு பிறந்தான்.

"ஞான அர்த்தமுள்ளவைகள்" **(allegory, an extended simile, a symbolic representation)** - சாராள் புதிய உடன்படிக்கையையும், ஆகார் பழைய உடன்படிக்கையையும் பிரதிபலிக்கிறார்கள். ஆகார் மோசேயின் பிரமாணத்திற்கு ஒப்பானவள். மோசேயின் பிரமாணம் அடிமைத்தனத்திற்குள்ளாகப் பிள்ளைபெறுகிறது. (கலா 4:24-25,30) சாராள் புதிய பிரமாணத்தை வெளிப்படுத்துகிறாள். அடிமைத்தனத்திலிருந்து இருந்த பிரமாணம் [redacted] விடுவிக்குது. தேவனிடத்தில் கொண்டு வருகிறது. புதிய பிறப்பின் மூலமாக புதிய பிரமாணம் நம்மைத் தேவனுடைய புத்திரர்களாக ஆக்குகிறது. (கலா 4:26-31) பழைய உடன்படிக்கை அகற்றப்பட்டு விட்டது. இனிமேல் அது அமுலில் இல்லை. (அப் 15:1,24, கலா 4:30)

"அது அடிமைத்தனத்திற்குள்ளாகப் பிள்ளைபெறுகிறது" - சடங்குகளையும் பண்டிகைகளையும் கொண்டாட வேண்டும் என்னும் அடிமைத்தனத்திற்குள் நியாயப் பிரமாணம் பிள்ளைகளைக் கொண்டு வருகிறது. (கலா 2:16; கலா 4:9; கலா 5:1; அப் 15:10). பழைய பிரமாணம் பூமியிலுள்ள எருசலேமிற்கு ஒப்பானது. இது தன் பிள்ளைகளோடேகூட அடிமைப்பட்டிருக்கிறது. (கலா 4:25)

"மேலான எருசலேமோ சுயாதீனமுள்ளவள், அவளே நம்மெல்லாருக்கும் தாயானவள்" - (எபி 11:10,16; எபி 12:22-23; எபி 13:14; வெளி 3:12; வெளி 21:1-22:5) புதிய எருசலேமில் தேவன் வாசம் பண்ணுகிறார். தம்முடைய குடும்பத்திற்குள் தேவன் நம்மைச் சுவிகார புத்திரராக அங்கீகரிக்கிறார். (கலா 4:26-27)

"பிள்ளைபெறாத மலடியே, மகிழ்ந்திரு, கர்ப்பவேதனைப்படாதவளே, களிப்பாய் எழும்பி ஆர்ப்பரி, புருஷனுள்ளவளைப்பார்க்கிலும் அநாத ஸ்திரீக்கே அதிக பிள்ளைகளுண்டு" - ஏசா 54:1 ஆவது வசனம் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"நாம் ஈசாக்கைப்போல வாக்குத்தத்தத்துப் பிள்ளைகளாயிருக்கிறோம்" - கிறிஸ்தவ விசுவாசிகள் வாக்குத்தத்தத்தின் பிள்ளைகள். ஈசாக்கைப் போல புதிய உடன்படிக்கையின் பிள்ளைகள். ஈசாக்கைத் துன்பப்படுத்தினது போல நம்மையும் துன்பப்படுத்துவார்கள். (கலா 4:28-29)

"மாம்சத்தின்படி பிறந்தவன் ஆவியின்படி பிறந்தவனை அப்பொழுது துன்பப்படுத்தினான்" - (ஆதி 21:9) பழைய ஏற்பாட்டுக் காலத்திலும் மனுஷர்கள் மறுபடியும் பிறந்தார்கள். (கலா 4:29; உபா 12:18; சங் 19:7; சங் 32:1-2; சங் 51:10-13; சங் 103:3; ஏசா 1:16-18). சிலுவையில் வரப்போகிற நியாயதீர்ப்பை விசுவாசித்து அவர்கள் புதிய பிறப்பின் அனுபவத்தைப் பெற்றுக் கொண்டார்கள். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் ஜீவிக்கும் நாமோ நமது புதிய பிறப்பிற்குக் கல்வாரி சிலுவையை நோக்கிப் பார்க்கிறோம்.

"அடிமையானவளின் மகன் சுயாதீனமுள்ளவளுடைய குமாரனோடே சுதந்தரவாளியாயிருப்பதில்லை" ஆபிரகாமின் வீட்டிலிருந்து ஆகாரும் இஸ்மவேலும் வெளியே துரத்தப்பட்டார்கள். ஈசாக்கோடு அவர்களுக்குச் சுதந்தரவீதம் எதுவும் கொடுக்கப்படவில்லை. இதுபோலவே, மோசேயின் பிரமாணத்தையும், சுவிசேஷத்தையும் கலப்படம் பண்ண முடியாது. இவ்விரண்டும் வெவ்வேறு உடன்படிக்கைகள். பழைய உடன்படிக்கை அகற்றப்பட்டது. புதிய உடன்படிக்கை மட்டுமே தற்பொழுது அமுலில் உள்ளது. (கலா 4:30-31)

"அடிமையானவளையும், அவளுடைய மகனையும் புறம்பே தள்ளு" - ஆதி 21:10 ஆவது வசனம் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. கிறிஸ்தவ மார்க்கத்தில் பழைய உடன்படிக்கை தேவையற்றது. கிறிஸ்தவர்கள் மோசேயின் பிரமாணத்திற்கு அடிமையானவர்கள் அல்ல. ஆகையினால் பழைய ஏற்பாட்டுப் பிரமாணங்களை நாம் புறம்பே தள்ளிவிடலாம். (அப் 15:1,24)

5 அதிகாரம்

24. மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்திற்குட்படாமல் இருக்க வேண்டும் என்னும் எச்சரிப்பு - அப 15:24; கலா 3:10-15; 5:1 எபி 7:11-10:18

கலா 5:1 ஆனபடியினாலே நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்

கலாத்தியர் 5:1 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1 நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல் இருங்கள் (கலா 5:1 கலா 3:10-12 கொலோ 2:14-17)

2 கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள் (கலா 5:1 அப 15:10)

"கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமை" மோசேயின் பிரமாணத்திலிருந்து இயேசு கிறிஸ்து நம்மை விடுவித்திருக்கிறார் (ரோமர் 10:4 எபே 2:14-15 கொலோ 2:14-17)

"சுயாதீன நிலைமை" புதிய உடன்படிக்கையின் சுவிசேஷத்தின் சுயாதீன நிலைமையை இந்த வார்த்தை குறிப்பிடுகிறது. (கலா 4:21-31; யாக் 1:25 யாக் 2:12) பழைய உடன்படிக்கை அடிமைத்தனத்திற்கும் பாவத்திற்கும் மரணத்திற்கும் உட்பட்டது. புதிய உடன்படிக்கை சுயாதீனத்திற்கும், நீதிக்கும் ஜீவனுக்கும் உரியது. பழைய உடன்படிக்கையின் சாபத்திலிருந்தும் அதன் எல்லா விளைவுகளிலிருந்தும் மேசியா விடுதலையைத் தருகிறார் (ஏசா 61:1; லூக்கா 4:18) எல்லா விசுவாசிகளும் இந்தச் சுயாதீனத்தை அனுபவிக்கலாம். (ரோமர் 8:21, 1கொரி 8:9, 1கொரி 10:29; கலா 2:4 கலா 5:13; 1பேதுரு 2:16) பரிசுத்த ஆவியானவர் நமக்கு இந்தச் சுயாதீனத்தைத் தருகிறவர் (2கொரி 3:17) இந்தச்சுயாதீனத்தை நாம் தவறாகப் பயன்படுத்தக்கூடாது. நமக்குச் சுயாதீனம் இருப்பதினால் நாம் எந்தப் பாவமும் செய்து கொள்ள நமக்கு அனுமதி உண்டு என்றும் நினைக்கக்கூடாது (1கொரி 8:9; கலா 5:13; 1பேதுரு 2:16)

"நிலைகொண்டிருங்கள்" (Stand fast) - (1கொரி 16:13)

உட்படுதல் (entangled) - ἐκκλίνω - ekklinoo - 1578

வினைச்சொல் - விட்டுவிலகு, வழிதப்பி விட்டு நீங்கு (to be held or caught; entangled in) - நியாய பிரமாணத்தைக் கைக்கொள்வதிலிருந்து முழுவதுமாக விலகி வரவேண்டும் நாம் தேவனுடைய பிரமாணத்திற்கு உட்பட்டவர்கள் யூதமார்க்கத்துச் சடங்குகளுக்கும் பண்டிகைகளுக்கும் விசேஷித்த காலங்களும் வருஷங்களுக்கும் நாட்களுக்கும் நாம் உட்பட்டவர்கள் அல்ல (கொலோ 2:14-17, எபே 2:14-15)

"அடிமைத்தனத்தின் நுகம்" (yoke of bondage) மோசேயின் பிரமாணத்திற்கு உட்படுதல் யூதமார்க்கத்து சடங்குகள் பண்டிகைகள் ஆகியவற்றை ஆசரித்தல் ஆகியவை அடிமைத்தனத்தின் நுகம் என்று அழைக்கப்படுகிறது. (கலா 4:24 அப 15:10) ஒருவன் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று தீர்மானம் பண்ணினால் அவன் நியாயப்பிரமாணம் கூறுவது அனைத்திற்கும் கீழ்ப்படிய வேண்டும். (கலா 3:10-12 கலா 5:3 யாக் 2:10)

25. நியாயப் பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிறவர்களுக்கு கிறிஸ்துவும் கிருபையும் விருதாவாக இருக்கும் - (2:21; ரோமர் 4:13-16)

கலா 5:2 இதோ, நீங்கள் விருத்தசேதனம் பண்ணிக்கொண்டால் கிறிஸ்துவினால் உங்களுக்கு ஒரு பிரயோஜனமுமிராது என்று பவுலாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்

5 அதிகாரம்

கலா 5:3 மேலும், விருத்தசேதனம் பண்ணிக்கொள்ளுகிற எந்த மனுஷனும் நியாயப்பிரமாணம் முழுவதையும் நிறைவேற்றக் கடனாளியாயிருக்கிறான் என்று மறுபடியும் அப்படிப்பட்டவனுக்குச் சாட்சியாகச் சொல்லுகிறேன்.

கலா 5:4 நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்.

கலா 5:5 நாங்களோ நீதி கிடைக்குமென்று ஆவியைக்கொண்டு விசுவாசத்தினால் நம்பிக்கையோடே காத்திருக்கிறோம்.

கலா 5:6 கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனமும் விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது; அன்பினால் கிரியைசெய்கிற விசுவாசமே உதவும்.

"கிறிஸ்துவினால் உங்களுக்கு ஒரு பிரயோஜனமுமிராது" - விருத்தசேதனம் பண்ண வேண்டுமென்று தன்னைக் கட்டாயப்படுத்திக் கொள்கிறவர் நியாயப்பிரமாணம் கூறுவது அனைத்தையும் கீழ்ப்படிவதற்கு அடிமைப்பட்டவராக இருக்கிறார். நியாயப்பிரமாணத்தின் மூலமாகத்தான் நீதிமானாக்கப்பட முடியும் என்று நினைக்கிறார். இப்படிப்பட்டவர்களுக்கு கிறிஸ்துவின்மீது வைக்கும் விசுவாசத்தினால் எந்தப் பயனும் இராது. (கலா 5:3-4) புதிய பிரமாணத்தை நாம் கைக்கொள்ள வேண்டுமா அல்லது பழைய பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டுமா என்று நாம் தீர்மானம் பண்ண வேண்டும். (கலா 5:2-3) நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்று நாம் தீர்மானம் பண்ணினால் கிருபையினின்று நாம் விழுந்துவிடுவோம். (கலா 5:4; கலா 1:6-8; கலா 3:3-5; கலா 4:9-31)

"விருத்தசேதனம்பண்ணிக் கொள்ளுகிற எந்த மனுஷனும் நியாயப் பிரமாணம் முழுவதையும் நிறைவேற்றக் கடனாளியாயிருக்கிறான்" - விருத்தசேதனம் பண்ணுவது நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதற்கு ஓர் அடையாளமாக இருக்கிறது. ஆகையினால் விருத்தசேதனம் பண்ணுகிறவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் நிறைவேற்ற வேண்டும். விருத்தசேதனம் பண்ணிக் கொள்ளாதவன் நியாயப்பிரமாணக் கட்டளைகளைக் கைக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. நாம் புதிய உடன்படிக்கையின் கீழ் இருக்கிறோம். ஆகையினால் நாம் புதிய உடன்படிக்கையின் கட்டளைகளுக்கும் பிரமாணங்களுக்கும் கீழ்ப்படிவது நமக்குப் போதுமானதாக இருக்கிறது.

"கிருபையினின்று விழுந்தீர்கள்" - ஒரு நபர் தேவனுடைய கிருபையிலிருந்து விழமுடியும், விழுவதற்கு வாய்ப்புள்ளது என்பதை இந்த வசனம் தெளிவுபடுத்துகிறது. (கலா 1:6-8; கலா 2:21; கலா 3:3-5; கலா 4:9-10,19; அப 13:43; 2கொரி 6:1; எபி 12:15; யூதா 1:4)

தொடரும் கிருபையின் இரகசியங்கள்

1. ஆவியில் ஜீவித்து நடக்க வேண்டும். (கலா 5:5; கலா 5:16-26; ரோமர் 8:1-13; கொலோ 3:5-10)
2. நம்பிக்கையோடே காத்திருக்க வேண்டும். (கலா 5:5; ரோமர் 8:24; எபி 3:6, 12-14; எபி 6:19)
3. கிறிஸ்துவில் தொடர்ந்து இருக்க வேண்டும். (கலா 5:6; யோவான் 15:1-8; கொலோ 2:6-7; எபி 3:14)
4. விசுவாசத்தில் தொடர்ந்து இருக்க வேண்டும். (கலா 5:6; கொலோ 1:23)

26. நியாயப்பிரமாணத்தை மறந்துவிட்டு கிறிஸ்துவிடமும் தேவனுடைய கிருபையிடமும் வருமாறு அழைப்பு - (கலா 1:6, 4:19; 5:14)

கலா 5:7 நீங்கள் நன்றாய் ஓடினீர்களே; சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போக உங்களுக்குத் தடைசெய்தவன் யார்?

கலாத்தியர் – தொகுப்புரை

5 அதிகாரம்

கலா 5:8 இந்த போதனை உங்களை அழைத்தவரால் உண்டானதல்ல.

கலா 5:9 புளிப்புள்ள கொஞ்சமாவானது பிசைந்த மாவனைத்தையும் உப்பப்பண்ணும்.

கலா 5:10 நீங்கள் வேறுவிதமாய்ச் சிந்திக்கமாட்டீர்களென்று நான் கர்த்தருக்குள் உங்களைக் குறித்து நம்பிக்கையாயிருக்கிறேன்; உங்களைக் கலக்குகிறவன் எப்படிப்பட்டவனாயிருந்தாலும் தனக்கேற்ற ஆக்கினையை அடைவான்.

கலா 5:11 சகோதரரே, இதுவரைக்கும் நான் விருத்தசேதனத்தைப் பிரசங்கிக்கிறவனாயிருந்தால் இதுவரைக்கும் என்னத்திற்குத் துன்பப்படுகிறேன்? அப்படியானால் சிலுவையைப் பற்றி வரும் இடறலொழிந்திருக்குமே.

கலா 5:12 உங்களைக் கலக்குகிறவர்கள் தறிப்புண்டு போனால் நலமாயிருக்கும்.

"நீங்கள் நன்றாய் ஓடினீர்களே" - ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலும் கலாத்தியர்கள் வெற்றியுள்ள கிறிஸ்தவ ஜீவியம் ஜீவித்திருக்கிறார்கள் (கலா 1:6-8, கலா 3:1-5, கலா 4:9-19; கலா 5:1-4) கிறிஸ்தவ ஜீவியம் இங்கு மறுபடியுமாக ஓர் ஓட்டப்பந்தயத்தோடு ஒப்பிடப்பட்டிருக்கிறது. (1கொரி 9:24, எபி 12:1)

"சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போக உங்களுக்குத் தடைசெய்தவன் யார்?" ஒரு காலத்தில் சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து ஜீவித்த கலாத்தியர்கள் இப்போது சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல் ஜீவிக்கிறார்கள் (கலா 1:6-8, கலா 3:1)

"புளிப்புள்ள கொஞ்சமாவானது பிசைந்த மாவனைத்தையும் உப்பப்பண்ணும்" கொஞ்ச பாவம், அல்லது ஒரு தவறான உபதேசம், ஒருவருடைய முழு ஜீவியத்தையும் அவருடைய முழு நடத்தையையும் பாதிக்கும். (1கொரி 5:6, யாக் 2:10)

"நான் கர்த்தருக்குள் உங்களைக் குறித்து நம்பிக்கையாயிருக்கிறேன்" - கலாத்தியர்கள் தங்களுடைய பின்மாற்றமான நிலைமையிலிருந்து எழுந்து மறுபடியும் இயேசு கிறிஸ்துவிடம் வருவார்கள் என்று பவுல் நம்புகிறார். அவர்களைக் கலக்குகிறவன் எப்படிப்பட்டவனாயிருந்தாலும் தனக்கேற்ற ஆக்கினையை அடைவான் என்றும் பவுல் நம்பிக்கையோடு இருக்கிறார் (கலா 5:10-12)

"விருத்தசேதனத்தைப் பிரசங்கிக்கிறவனாயிருந்தால் இதுவரைக்கும் என்னத்திற்குத் துன்பப்படுகிறேன்?" - தீமோத்தேயு விருத்தசேதனம் பண்ணிக்கொண்டான் (அப் 16:3) ஆகையினால் பவுல் விருத்தசேதனத்தைக் குறித்து பிரசங்கம் பண்ணியதாக ஒருசிலர் கூறுகிறார்கள். ஆனால் பவுல் இதை மறுக்கிறார். பவுல் விருத்தசேதனத்தைப் பிரசங்கித்தால் யூதர்கள் அவரைத் துன்புறுத்த மாட்டார்கள்.

27. நியாயப்பிரமாணத்திற்கும் மாம்ச ஜீவியத்திற்கும் திரும்பிப் போவதற்கு எதிராக கடைசி எச்சரிப்பு

கலா 5:13 சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள்; இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்.

கலா 5:14 உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக, என்கிற இந்த ஒரே வார்த்தையிலே நியாயப்பிரமாணம் முழுவதும் நிறைவேறும்.

கலா 5:15 நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப் பட்சித்தீர்களானால், அழிவீர்கள், அப்படி ஒருவராலொருவர் அழிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

5 அதிகாரம்

"நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள்" - நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலை பெற்று சுயாதீனமாக இருக்குமாறு கிறிஸ்தவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். நமக்குச் சுயாதீனம் இருப்பதினால் நாம் நீதிநெறியாக வாழவேண்டிய பொறுப்பு நமக்கு இல்லை என்று அர்த்தம் கூறக்கூடாது. புதிய உடன்படிக்கையும் நமது நீதிநெறி வாழ்வை வலியுறுத்துகிறது. உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பது புதிய ஏற்பாட்டுப் பிரமாணமாகும். (கலா 5:13-14, மத் 19:19, ரோமர் 13:9)

"நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப் பட்சித்தீர்களானால் அழிவீர்கள்" - ஒரு விசுவாசி மற்றொரு விசுவாசியைக் கடித்துப் பட்சிக்கக்கூடாது. ஒருவரையொருவர் அழிக்க நினைக்கக்கூடாது. ஒருவருக்கொருவர் ஆதரவாக இருக்க வேண்டும். மற்றவர்களை அழிக்க நினைக்கும் விசுவாசி இயேசு கிறிஸ்துவின் கிருபையிலிருந்து விழுந்து போனவராகவும், பிணமாறிப்போன ஜீவியம் உடையவராகவும் இருப்பார். (கலா 5:15, கலா 1:6-8, கலா 3:1-5, கலா 5:4)

IV. நடைமுறை உபதேசங்கள் (5:16-6:18)

1. பாவத்தின்மீது வெற்றி பெறுவதன் இரகசியம் - (ரோமர் 8:1-13)

கலா 5:16 பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்.

கலா 5:17 மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது.

கலா 5:18 ஆவியினால் நடத்தப்படுவீர்களானால், நீங்கள் நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களல்ல.

ஜெயஜீவியம் ஜீவிப்பதற்கான இரகசியங்கள்

1. கிறிஸ்துவின் சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருக்க வேண்டும். நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்வதை அகற்ற வேண்டும். (கலா 5:1-3)

2. சத்தியத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும். விசுவாசத்தினால் தேவனுடைய கிருபையைக் கொண்டு நாம் நீதிமானாக்கப்படுகிறோம் என்னும் விசுவாசத்தில் நிலைத்திருக்க வேண்டும். (கலா 4-15)

3. ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ள வேண்டும். (கலா 5:16-17)

4. ஆவியினால் நடத்தப்பட வேண்டும். (கலா 5:18)

5. நமது மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைய வேண்டும். (கலா 5:19-21,24)

6. நம்முடைய அன்றாட ஜீவியத்தில் ஆவியின் கனியை வெளிப்படுத்திக் காண்பிக்க வேண்டும். (கலா 5:22-23)

7. ஆவியினாலேயே பிழைத்திருக்க வேண்டும். (கலா 5:25-26)

"மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது" இந்த வசனத்தைப் பலவிதமாக வியாக்கியானம் பண்ணுகிறார்கள். ஆவிக்கு விரோதமாக மாம்சம் தொடர்ந்து போராடும் என்றும், இதில் மாம்சம் தோற்றுப்போகும் என்றும் இந்த மாம்சத்தினால் ஜெயஜீவியம் ஜீவிக்க முடியாது என்றும் ஒருசிலர் வியாக்கியானம் பண்ணுகிறார்கள். இது தவறான உபதேசம். இந்த வசனம் கலாத்தியருடைய ஆவிக்குரிய நிலைமையை விளக்குகிறது. சுய முயற்சியினாலும் மாம்சத்தினாலும் பரிபூரண ஜீவனைப் பெற்றுக் கொள்ளலாம் என்று முயற்சி செய்கிறவர்கள் தோற்றுப்போவார்கள். (கலா 1:6-8, கலா 3:1-5, கலா 5:1-9,13-15,26) தேவனுடைய கிருபையில் ஜீவிக்கிறவர்களுக்கு தோல்வி இல்லை.

5 அதிகாரம்

ஜெயஜீவியம் உண்டு. விசுவாசிகள் தேவனுடைய கிருபையில் தொடர்ந்து ஜீவிக்க வேண்டும் பரிசுத்த ஆவியானவருடைய வழிநடத்துதலின்படி ஆவிக்கேற்றபடி நடக்க வேண்டும் (கலா 5:16,18,22-24; ரோமர் 6:14-23 ரோமர் 8:1-13; 2கொரி 10:5-7; எபே 6:10-18; கொலோ 3:5-10; 1யோவான் 1:7-9 1யோவான் 3:8-10; 1யோவான் 5:1-4, 18)

"ஆவியினால் நடத்தப்படுவீர்களானால் நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களல்ல" - கலாத்தியர்கள் தேவனுடைய கிருபையிலிருந்து விழுந்து திரும்பவும் நியாய பிரமாணத்திற்கு அடிமைகளாகிவிட்டார்கள் (கலா 1:6-8 கலா 3:1-5; கலா 4:9-11,21-31; கலா 5:1-4) அவர்கள் தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தை மறுபடியும் பெற்றுக் கொள்ள வேண்டும். அவர்களுடைய ஜீவியத்தில் பரிசுத்த ஆவியானவர் மறுபடியுமாகக் கிரியை செய்வதற்கு அவர்கள் அனுமதிக்க வேண்டும் (கலா 3:1-5) நியாயப்பிரமாணத்தை விட்டு விலகி வரும்போது அதற்கு இனிமேல் அவர்கள் அடிமைகளாய் இருப்பதில்லை. அவர்களுடைய ஆவி அவர்களுடைய மாம்சத்திற்கு எதிராக இனிமேல் போராட வேண்டிய அவசியம் இராது. (கலா 5:17) தங்களுடைய மாம்சத்தையும், அதின் ஆசை இச்சைகளையும் மறுபடியும் சிலுவையில் அறையும்போது அவர்களால் கிறிஸ்தவ ஜீவியத்தை மறுபடியும் ஜீவிக்க முடியும். (கலா 5:16, 22-24)

2. மாம்சத்தின் கிரியைகள்

மாற்கு 7:14; ரோமர் 1:29 1கொரி 6:9

கலா 5:19 மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம்,

கலா 5:20 விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள்,

கலா 5:21 பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல் இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மாம்சத்தின் கிரியைகள்

1. விபசாரம் (adultery)
2. வேசித்தனம் (fornication)
3. அசுத்தம் (uncleanness)
4. காமவிகாரம் (lewdness)
5. விக்கிரகாராதனை (idolatry)
6. பில்லிசூனியம் (sorcery)
7. பகைகள் (hatred)
8. விரோதங்கள் (contentions)
9. வைராக்கியங்கள் (jealousies)
10. கோபங்கள் (outbursts of wrath)
11. சண்டைகள் (selfish ambitions)
12. பிரிவினைகள் (dissensions)
13. மார்க்கபேதங்கள் (heresies)
14. பொறாமைகள் (envy)
15. கொலைகள் (murders)
16. வெறிகள் (drunkenness)
17. களியாட்டுகள் (revelries)

விபச்சாரம் (Adultery) - μοιχάω - moichaoo 3429

வினைச்சொல் - விபச்சாரஞ்செய் - (மத் 5:32; மத் 19:9; மாற்கு 10:11-12

5 அதிகாரம்

விபச்சாரம் (Adultery) - μοιχεία - moicheia - 3430

பெண்பால் பெயர்ச்சொல் - விபச்சாரம் - ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையில் தகாத உறவு திருமணமானவர்களும், திருமணமாகாதவர்களும் இதில் அடங்குவார்கள் மத் 15:19 மாற்கு 7:21 யோவான் 8:3 கலா 5:19

விபச்சாரம் (Adultery) - μοιχεύω - moicheuoo - 3431

பெண்பால் பெயர்ச்சொல் - விபச்சாரஞ்செய் மத் 5:27-28 மத் 19:18 மாற்கு 10:19 லூக்கா 16:18 லூக்கா 18:20 யோவான் 8:4 ரோமர் 2:22 ரோமர் 13:9 யாக் 2:11 வெளி 2:22

வேசித்தனம் (Fornication) - πορνεία - porneia - 4202

பெண்பால் பெயர்ச்சொல் வேசித்தனம், விபச்சாரம் வேசிமார்க்கம் - விபசாரத்தைப் போன்ற பாவம் - தகாத உறவு. மத் 5:32)

அசுத்தம் (Uncleanness) ἀκαθαρσία akatharsia 167

(அ) அசுத்தம் - சரீரப்பிரகாரமான அசுத்தம் மத் 23:27 (sodomy, homosexuality, lesbianism, pederasty, bestiality) (கலா 5:19 மத் 23:27 ரோமர் 1:21-32 ரோமர் 6:19; 2கொரி 12:21 எபே 4:19 எபே 5:3; கொலோ 3:5; 1தெச 2:3, 1தெச 4:7 2பேதுரு 2; யூதா)

(ஆ) ஆவிக அசுத்தம் ரோம 1:24

காமவிகாரம் (Lasciviousness) ἀσέλγεια - aselgeia - 766

பெண்பால் பெயர்ச்சொல் - காமவிகாரம் (licentiousness, lustfulness, unchastity, and lewdness) - "lasciviousness" (மாற்கு 7:22 2கொரி 12:21 கலா 5:19 எபே 4:19 1பேதுரு 4:3 யூதா 1:4 "wantonness" (ரோமர் 13:13 2பேதுரு 2:18 "filthy" (2பேதுரு 2:7

விக்கிரகாராதனை (Idolatry) - εἰδωλολατρία - eidoololatria - 1495

பெண்பால் - பெயர்ச்சொல் விக்கிரகாராதனை (image-worship) (1கொரி 10:14 கலா 5:20 கொலோ 3:5 1பேதுரு 4:3 - ஒரு குறிப்பிட்ட பொருள் அல்லது காரியத்தின்மீது பிருந்த பற்று வைப்பதும் விக்கிரகாராதனை எனப்படுகிறது. (எபே 5:5 கொலோ 3:5

சூனியம் (Witchcraft) - φαρμακεία - pharmakeia - 5331

பெண்பால் பெயர்ச்சொல் - பில்லி சூனியம், சூனியம் (sorcery, practice of dealing with evil spirits; magical incantations and casting spells and charms upon one by means of drugs and potions of various kinds) (கலா 5:20 வெளி 9:21 வெளி 18:23 வெளி 21:8 வெளி 22:15 லூக்கா 12:29

பகை (Hatred) - ἔχθρα echthra 2189

5 அதிகாரம்

பெண்பால் பெயர்ச்சொல் - பகை (Bitter dislike, abhorrance, malice enmity) (லூக்கா 23:12 ரோமர் 8:7; எபே 2:15-16; யாக் 4:4) (hatred) (கலா 5:20)

விரோதம் (Variance) - ἔρις - eris - 2054

பெண்பால் பெயர்ச்சொல் - வாக்குவாதம், விரோதம், சண்டை (Dissensions, discord, quarreling, debating; and disputes) (ரோமர் 1:29)

வைராக்கியம் (Emulations) - ζῆλος - zeelos - 2205

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் அல்லது ஆண்பால் பெயர்ச்சொல் - வைராக்கியம் பொறாமை ஊக்கிரதை, கோபாக்கினை, வெறுப்பு (envies, jealousies) "zeal" (யோவான் 2:17; ரோமர் 10:2; 2கொரி 7:11; 2கொரி 9:2; பிலி 3:6 கொலோ 4:13); "fervent mind" (2கொரி 7:7), "envy" (அப் 13:45 ரோமர் 13:13; 1கொரி 3:3 2கொரி 12:20; யாக் 3:14,16) "jealousy" (2கொரி 11:2) "indignation" (அப் 5:17 எபி 10:27) "emulation" (கலா 5:20)

உக்கிரம் (Wrath) - θυμός - thymos 2372

ஆண்பால் பெயர்ச்சொல் - உக்கிரம், கோபம் (Turbulent passions, domestic and civil turmoils, rage; determined and lasting anger) - "wrath" (கலா 5:20 லூக்கா 4:28; அப் 19:28 2கொரி 12:20; எபே 4:31 கொலோ 3:8; எபி 11:27 வெளி 12:12; வெளி 14:8,10,19 வெளி 15:1,7; வெளி 16:1 வெளி 18:3); "indignation" (ரோமர் 2:8); "fierceness" (வெளி 16:19; வெளி 19:15)

சண்டை (Strife) - ἐριθεία - eritheia - 2052

பெண்பால் பெயர்ச்சொல் - சண்டை, விரோதம், வாதம் "strife" (கலா 5:20; 2கொரி 12:20; பிலி 2:3 யாக் 3:14,16); "contention" (பிலி 1:16; ரோமர் 2:8 (Disputations; jangling; strife about words; angry contentions; contest for superiority or advantage; strenuous endeavor to equal or pay back in kind the wrongs done to one)

பிரிவினை (Seditions) - διχοστασία - dichostasia - 1370

பெண்பால் பெயர்ச்சொல் - பிரிவினை, பேதங்கள் "divisions" (ரோமர் 16:17 1கொரி 3:3) "seditions, parties, and factions" (கலா 5:20) Popular disorder, stirring up strife in religion, government, home, or any other place

பொறாமைகள் (Envyings) φθόνος - phthonos 5355

கலாத்தியர் - தொகுப்புரை

5 அதிகாரம்

ஆண்பால் பெயர்ச்சொல் - பொறாமை, வைராக்கியம் (கலா 5:21; மத் 27:18; மாற்கு 15:10; ரோமர் 1:29; பிலி 1:15; 1தீமோ 6:4; தீத்து 3:3; யாக் 4:5; 1பேதுரு 2:1) (Pain, ill will, and jealousy at the good fortune or blessings of another; the most base of all degrading and disgraceful passions)

கொலைகள் (Murders) - φόνος - phonos - 5408

ஆண்பால் பெயர்ச்சொல் - கொலை பாதகம், கொலை (மத் 15:18) (to kill; to spoil or mar the happiness of another; hatred) (1யோவான் 3:15).

வெறி (Drunkeness) - μέθη - methee - 3178

பெண்பால் பெயர்ச்சொல் - வெறி (Living intoxicated; a slave to drink; drinking bouts) (கலா 5:21; லூக்கா 21:34; ரோமர் 13:13)

களியாட்டம் (Revellings) - κῶμος - koomos - 2970

ஆண்பால் பெயர்ச்சொல் களியாட்டம் (கலா 5:21; 1பேதுரு 4:3); (rioting (ரோமர் 13:13) (Lascivious and boisterous feastings, with obscene music, and other sinful activities, pleasures; carousings)

பாவப்பிரிவினைகள்

1. இச்சைகளின் பாவங்கள்

(1) விபசாரம்

(2) வேசித்தனம்

(3) அசுத்தம்

(4) காமவிகாரம்,

2. விக்கிரகாராதனையும், சூனியமும்

3. உணர்ச்சியின் பாவங்கள்

(1) பகைகள்

(2) விரோதங்கள்

(3) வைராக்கியங்கள்

(4) கோபங்கள்

(5) சண்டைகள்

(6) பிரிவினைகள்

(7) மார்க்கபேதங்கள்

(8) பொறாமைகள்

(9) கொலைகள்

4. வெறியும், களியாட்டும்

தீர்க்கதரிசன எண் - 1

"இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை" (கலா 5:21). இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் பாவிகள். இவர்கள் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவிடம் தங்களுடைய பாவங்களை அறிக்கையிட வேண்டும். இந்தப் பாவக் கிரியைகளைத் தங்களுடைய ஜீவியத்திலிருந்து அகற்றிப்போட வேண்டும். இல்லையென்றால் இவர்களால் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்க முடியாது (1கொரி 6:9,10). தன்னை இரட்சிக்கப்பட்டவன் என்று கூறிக்கொண்டு இந்தப் பாவங்களைச் செய்வானென்றால் அவன் தன்னைத்தான் சோதித்துப் பார்க்க வேண்டும்.

5 அதிகாரம்

3. ஆவியின் கனி - (1கொரி 13 எபே 5:9; பிலி 4:8

கலா 5:22 ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம் நீடியபொறுமை, தயவு, நற்குணம் விசுவாசம்.

கலா 5:23 சாந்தம், இச்சையடக்கம் இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை

ஆவியின் கனி (கலா 5:22-23)

1 அன்பு (love)

2 சந்தோஷம் (joy)

3 சமாதானம் (peace)

4 நீடியபொறுமை (longsuffering)

5 தயவு (kindness)

6 நற்குணம் (goodness)

7 விசுவாசம் (faithfulness)

8 சாந்தம் (gentleness)

9 இச்சையடக்கம் (self control)

அன்பு (Love) - ἀγάπη - agapee - 26

பெண்பால் பெயர்ச்சொல் - அன்பு (divine love. A strong, ardent, tender, compassionate, devotion to the well-being of someone) (1கொரி 13:4)

(அ) மேன்மையான கிறிஸ்தவ அன்பு - 1கொரி 13:4

(ஆ) தேவன் மனிதர் மீது வைக்கும் அன்பு ரோம 5:8

(இ) மனிதன் தேவன் மீது காட்டும் அன்பு - யோவா 12; 25

(ஈ) மனிதன் மனிதனிடம் காட்டும் அன்பு - யோவா 13:35

(உ) பன்மையில் - அன்பின் விருந்துகள், கிறிஸ்தவ ஐக்கியம் சிறந்து விளங்க சான்று பகரும் விருந்து யூதா 12

சந்தோஷம் (Joy) - χαρά - chara - 5479

பெண்பால் பெயர்ச்சொல் - சந்தோஷம் (the emotional excitement, gladness, delight over blessings received or expected for self and for others)

சமாதானம் (Peace) - εἰρήνη - eireenee - 1515

பெண்பால் பெயர்ச்சொல் - சமாதானம், பத்திரம் (the state of quietness, rest, repose, harmony, order, and security in the midst of turmoil, strife, and temptations) (ஏசா 45:7)

நீடிய பொறுமை (Longsuffering) - μακροθυμία - makrothymia 3115

பெண்பால் பெயர்ச்சொல் - நீடிய சாந்தம், நீடிய பொறுமை (patient endurance, to bear long with the frailties, offenses, injuries, and provocations of others, without murmuring, repining, or resentment) (1கொரி 13:4-7; 2கொரி 6:4-6, எபே 4:1-2; கொலோ 1:11 கொலோ 3:12-13; 1தீமோ 1:16, 2தீமோ 3:10; 2தீமோ 4:2

தயவு (Gentleness) χρηστότης chreestotees 5544

5 அதிகாரம்

பெண்பால் பெயர்ச்சொல் - தயவு நன்மை, தயை (a disposition to be gentle, soft-spoken, kind, even-tempered, cultured, and refined in character and conduct) (2தீமோ 2:24-26, தீத்து 3:1-2; யாக் 3:17)

நற்குணம் (Goodness) - ἀγαθωσύνη - agathoosynee - 19

பெயரடை - நற்குணம் (ரோம 15:14 எபே 5:9; கலா 5:22) (the state of being good, kind, virtuous, benevolent, generous, and God-like in life and conduct) யாத் 33:19 யாத் 34:6; சங் 23:6, சங் 31:19 சங் 33:5; சங் 107:9 ரோமர் 2:4 எபே 5:9 மத் 5:44-48 லூக்கா 6:27-32

விசுவாசம் (Faith) - πίστις - pistis - 4102

பெண்பால் பெயர்சொல் விசுவாசம், நிச்சயம், உண்மை (the living, divinely implanted, acquired, and created principle of inward and wholehearted confidence, assurance, trust, and reliance in God and all that He says)

சாந்தம் (Meekness) - πραΰτης - prautees - 4240

பெண்பால் பெயர்சொல் - சாந்தம் (the disposition to be gentle, kind, indulgent, even balanced in tempers and passions, and patient in suffering injuries without feeling a spirit of revenge) (சங் 25:9

இச்சையடக்கம் (Temperance) ἐγκράτεια - enkrateia - 1466

பெண்பால் பெயர்ச்சொல் - இச்சையடக்கம் (self control, a moderation in the indulgence of the appetites and passions) (நீதி 23:1-3; நீதி 25:16; தானி 1:8-16 ரோமர் 13:14; 2கொரி 9:25-27 பிலி 4:5; 1தெச 5:6-8 தீத்து 2:2-3,11-12; 2பேதுரு 1:5-10)

"இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை" - நியாயபிரமாணம் பாவத்தை மட்டுமே கண்டிக்கிறது. நீதியைக் கண்டிப்பதில்லை ஆகையினால் ஆவியின் கனியை உடையவரை எந்தப்பிரமாணமும் கண்டிப்பதில்லை. (ரோமர் 3:19-20; ரோமர் 7:13; கலா 3:19, 1தீமோ 1:9-10

4. ஆவிக்குரிய ஜீவியம் - 2கொரி 5:17 ரோமர் 6:16-23; 8:1-13; 1யோவான் 2:29; 3:5-10; 5:1-5,18

கலா 5:24 கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்

கலா 5:25 நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால் ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம்.

கலா 5:26 வீண் புகழ்ச்சியை விரும்பாமலும் ஒருவரையொருவர் கோபமூட்டாமலும் ஒருவர்மேல் ஒருவர் பொறாமைகொள்ளாமலும் இருக்கக்கடவோம்.

"கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்" கிறிஸ்தவ விசுவாசிகள் அனைவரும் இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும். (2கொரி 5:17-18 ரோமர் 6:6-23 ரோமர் 8:1-13)

5 அதிகாரம்

பரிசுத்தவான்களுக்கு நேரிடும் பொதுவான சோதனைகள்

1 வீண் புகழ்ச்சியை விரும்புதல் (கலா 5:26; கலா 6:12-13; பிலி 2:1-3; கொலோ 2:18)

2 ஒருவரையொருவர் கோபமூட்டுதல் (பிலி 2:1-3; எபே 4:31-32; கொலோ 3:8-10)

3 ஒருவர்மேல் ஒருவர் பொறாமை கொள்ளுதல் (ரோமர் 13:13; 1கொரி 3:3; 2கொரி 12:20; 1தீமோ 6:4; தீத்து 3:3; யாக் 3:14-16; 1பேதுரு 2:1)

6 அதிகாரம்

கலா 6:1 சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால் ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப்பண்ணுங்கள்; நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக் குறித்து எச்சரிக்கையாயிரு.

கலா 6:2 ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்.

கலா 6:3 ஒருவன் தான் ஒன்றுமில்லாதிருந்தும், தன்னை ஒரு பொருட்டென்று எண்ணினால், தன்னைத்தானே வஞ்சிக்கிறவனாவான்.

கலா 6:4 அவனவன் தன்தன் சுயக்கிரியையைச் சோதித்துப்பார்க்கக்கடவன்; அப்பொழுது மற்றவனைப் பார்க்கும்போதல்ல, தன்னையே பார்க்கும்போது மேன்மை பாராட்ட அவனுக்கு இடமுண்டாகும்.

கலா 6:5 அவனவன் தன்தன் பாரத்தைச் சுமப்பானே.

கலா 6:6 மேலும், திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன் உபதேசிக்கிறவனுக்குச் சகல நன்மைகளிலும் பகிர்ந்துகொடுக்கக்கடவன்.

அகப்படுதல் (overtaken) - προλαμβάνω - prolambanoo - 4301

வினைச்சொல் - முந்திக்கொள் (found out, detected). (மாற்கு 14:8, 2கொரி 11:21 கலா 6:1)

குற்றம் (fault) - παράπτωμα paraptooma 3900

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - தப்பிதம், பாவம், தவறு, குற்றம் அக்கிரமம், மீறுதல் (ரோமர் 11:11)

ஆவிக்குரியவர்கள் (spiritual) - πνευματικός - pneumatikos 4152

பெயரடை - ஆவிக்குரிய ஞான, ஆவிக்கேற்ற (ரோமர் 7:14)

சீர்பொருந்தப்பண்ணுதல் (restore) - καταρτίζω - katartizoo 2675

வினைச்சொல் - பழுதுபார், உண்டாகும்படி செய், தேறியிரு, எத்தனமாக்கு, சீர்பொருந்தியிரு, நிறைவாக்கு ஆயத்தம்பண்ணு, சீர்படுத்து (2கொரி 13:5; கலா 4:19). - இயேசு கிறிஸ்துவிடமும் அவருடைய கிருபைக்கும் திரும்பக் கொண்டு வருதல்

"சாந்தமுள்ள ஆவி" (spirit of meekness) - (கலா 5:22)

"நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக் குறித்து எச்சரிக்கையாயிரு" - ஒருவனும் தன்னைத்தான் உயர்த்தக்கூடாது. ஒவ்வொருவரும் தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் மிகுந்த எச்சரிப்போடு இருக்க வேண்டும். (1கொரி 10:13, 1கொரி 13:1-13)

"ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்" - விழுந்துபோன சகோதரனை மேலும் துன்புறுத்தக்கூடாது. கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றும் விதமாக ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்க வேண்டும். மற்றவர்களிடத்தில் அன்பையும் இரக்கத்தையும் கரிசனையையும் காண்பிக்க வேண்டும். (கலா 6:1-2; யோவான் 13:34; யோவான் 15:12)

"தன்னைத்தானே வஞ்சிக்கிறவனாவான்" - ஒருவன், தான் ஒன்றுமில்லாதிருந்தும், தன்னை ஒரு பொருட்டென்று எண்ணினால், அவன் தன்னைத்தானே வஞ்சிக்கிறான் (கலா 6:3-4; ஏசா 65:5; மாற்கு 2:16, லூக்கா 18:9-14; அப் 10:28,45, ரோமர் 3:1-23). மாய்மாலக்காரரும், பொறுமையற்றோரும் தங்களைத் தாங்களே வஞ்சிக்கிறார்கள்.

6 அதிகாரம்

மார்க்கவேதியுடையவர்களுக்கு எடுத்துக்காட்டுக்கள்

1 யோசுவா (எண் 11:27-29)

2 யூதர்களில் சிலர் (யோவான் 4:9,27 யோவான் 9: 28-34)

3 சமாரியர்களில் லூக்கா 9:52-53)

4 சீஷர்கள் (மத் 19:13 லூக்கா 9:49-56

5 சவுல் (அப் 9:1-5; அப் 22:3-4 அப் 26:9

6 ஆதிக் கிறிஸ்தவர்களில சிலர் அப் 11:1-3

"அவனவன் தன்தன் சுயகிரியையைச் சோதித்துப்பார்க்கக்கடவன்" - இதைச் செய்யும்போது மற்றவனைப் பார்க்கும்போதல்ல. தன்னையே பார்க்கும்போது மேன்மை பாராட்ட அவனுக்கு இடமுண்டாகும். (கலா 6:2-4)

பாரம் (burden) - φορτίον - phortion - 5413

பால வேறுபாடற்ற பெயர்சொல - சுமை, பாரம் (load, responsibility) மத் 11:30, மத் 23:4, லூக்கா 11:46)

பாரம் (grief) - βάρος - baros - 922

பாலவேறுபாடற்ற பெயர்சொல கஷ்டம், பாரம், உபத்திரவம் (burden, grief, misery, and pressure of another) (கலா 6:2)

பகிர்ந்துகொடு (communicate) κοινωνέω - koinooneoo - 2841

வினைச்சொல் - உதவிசெய், பங்குபெறு, பகிர்ந்துகொடு, உடன்படு, பங்காளிகளாயிரு (share with; be partaker of) (ரோமர் 15:27; 1தீமோ 5:22; எபி 2:14; 1பேதுரு 4:13; 2யோவான் 1:11); (communicate, distribute) (ரோமர் 12:13; கலா 6:6, பிலி 4:15

5. **மாம்சத்திற்கென்று விதைப்பதும் ஆவிக்கென்று விதைப்பதும்** - (5:19-26; ரோமர் 8:1-13

கலா 6:7 மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்

கலா 6:8 தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான்

பரியாசம் பண்ணு (mocked) - μυκτηρίζω - mykteerizoo - 3456

வினைச்சொல - பரியாசம் பண்ணு (to turn up the nose at). இந்த வசனத்தில மட்டுமே இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது (லூக்கா 16:14; லூக்கா 23:35

நீங்கள் பின்னால் - 2

"மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்____" (கலா 5:7-9 இது மாறாத பிரமாணமாகும் (ஆதி 1:11-12,21, 24-25,29)

"தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால அழிவை அறுப்பான்" அதுபோலவே தன் ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான் ஒவ்வொரு மனுஷனும் தன்னுடைய முடிவிற்கு அவனே காரணமாக இருக்கிறான் (கலா 6:7-8 மாம்சத்தை விதைத்து விட்டு, நித்திய ஜீவனை அறுப்போம் என்று எதிர்பார்க்கக்கூடாது. கலா 6:8 கலா 5:19-21; 1கொரி 6:9-11; ரோமர் 1:29-32 அதுபோலவே ஆவியை விதைத்து விட்டு விழுந்துபோவோம் என்றும் எதிர்பார்க்கக்கூடாது.

6 அதிகாரம்

6. நன்மை செய்கிறதில் சோர்ந்து போகக்கூடாது - (மத் 5:16)

கலா 6:9 நன்மைசெய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக. நாம் தளர்ந்து போகாதிருந்தால ஏற்றகாலத்தில் அறுப்போம்

கலா 6:10 ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக்கடவோம்

கலா 6:11 என் கையெழுத்தாய் எவ்வளவு எழுதினேனென்று பாருங்கள்

சோர்ந்துபோதல (weary) - ἐκκακέω - ekkakeoo - 1574

வினைச்சொல - சோர்ந்துபோ (lose heart) "faint" (லூக்கா 18:1 2கொரி 4:1,16 எபே 3:13) "weary" கலா 6:9 2தெச 3:13

"ஏற்றகாலம்" (due season, proper season) - (பிர 3; 1தீமோ 2:6 தீமோ 6:15; தீத்து 1:3) கண்ணீரோடு விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடு அறுப்பது நிச்சயம். (கலா 6:7-8)

தளர்ந்துபோதல் (faint) - ἐκλύω eklyoo 1590

வினைச்சொல் - தளர்ந்துபோ தொய்ந்துபோ, சோர்ந்துபோ (மத் 9:36; மத் 15:32; மாற்கு 8:3; கலா 6:9, எபி 12:3, 5)

விசுவாசிகளுக்குக் கடைப்பிடிக்கும் கட்டளைகள் (கலா 5:25-6:10)

1 ஆவிக்கேற்றபடி நடக்கக் கடவோம். (கலா 5:25

2 வீண்புகழ்ச்சியை விரும்பாமல் இருக்கக் கடவோம். (கலா 5:26

3 ஒருவரையொருவர் கோபமூட்டாமல் இருக்கக்கடவோம் (கலா 5:26

4 ஒருவர்மேல் ஒருவர் பொறாமை கொள்ளாமல் இருக்கக்கடவோம். (கலா 5:26)

5 குற்றத்தில அகப்பட்டிருக்கும் சகோதரனை சீர்பொருந்தப் பண்ணக்கடவோம். கலா 6:1

6 சோதிக்கப்படாதபடிக்கு நம்மைக் குறித்து எச்சரிக்கையாய இருக்கக்கடவோம். (கலா 6:1)

7 ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்கக் கடவோம். (கலா 6:2)

8 நம்முடைய கிரியையைச் சோதித்துப் பார்க்கக்கடவோம். (கலா 6:4

9 அவனவன் தன்தன் பாரத்தைச் சுமக்கக் கடவன் (கலா 6:5

10 உபதேசத்திற்கு ஆதரவாக இருக்கக் கடவோம். (கலா 6:6

11 மோசம்போகாதிருக்கக் கடவோம். (கலா 6:7)

12 நன்மை செய்கிறதில சோர்ந்துபோகாமல இருப்போமாக. (கலா 6:9)

13 யாவருக்கும் நன்மை செய்யக் கடவோம். (கலா 6:10

எழுத்து (letter) - γράμμα - gramma - 1121

பால் வேறுபாடற்றப் பெயர்ச்சொல் - சீட்டு, எழுத்து, காகிதம் (that which is written; letters of the alphabet) (லூக்கா 23:38, யோவான் 7:15; ரோமர் 2:27,29; ரோமர் 6:6, 2கொரி 3:6); (letters, epistles) (அப் 28:21); (books) (யோவான் 5:47, 2கொரி 3:7); (bill, receipt) (லூக்கா 16:6-7); (Scriptures) (2தீமோ 3:15) பவுல் தான் எழுதிய நிருபங்களைத் தன கைப்பட்டவே எழுதியிருக்கிறார்

6 அதிகாரம்

7. புறஜாதியார் பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்று யூதர்கள் விரும்புவதற்கு காரணம்

கலா 6:12 மாம்சத்தின்படி நல்வேஷமாய்க் காணப்பட விரும்புகிறவர்கள் எவர்களோ அவர்கள் தாங்கள் கிறிஸ்துவினுடைய சிலுவையினிமித்தம் துன்பப்படாதபடிக்கே உங்களை விருத்தசேதனம் பண்ணிக் கொள்ளக் கட்டாயம்பண்ணுகிறார்கள்

கலா 6:13 விருத்தசேதனம் அடைந்திருக்கிற அவர்களும் நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்ளாமலிருக்கிறார்கள்; அப்படியிருந்தும் அவர்கள் உங்கள் மாம்சத்தைக் குறித்து மேன்மை பாராட்டும்படிக்கு நீங்கள் விருத்தசேதனம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார்கள்

"மாம்சத்தின்படி நல்வேஷமாய்க் காணப்பட விரும்புகிறவர்கள்" நல்வேஷம் என்பது விருத்தசேதனத்தையும் யூதமார்க்கத்தின் பாரம்பரிய பண்டிகைகளையும் குறிக்கும் இரட்சிக்கப்படாதவர்கள் இவைகளைக் கைக்கொள்கிறார்கள் பலவீனமான கிறிஸ்தவர்கள்கூட யூதமார்க்கத்திற்குத் திரும்பிச் செல்ல சோதிக்கப்படுகிறார்கள் இவர்கள் கிறிஸ்துவினுடைய சிலுவையின் நிமித்தம் வரும் துன்பங்களைச் சகித்து கொள்ள மனதில்லாதவர்கள் (கலா 6:12-13)

8. புறஜாதியாரும் யூதரும் பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டியதில்லை என்பதற்கு காரணம்

கலா 6:14 நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக, அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது; நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்

கலா 6:15 கிறிஸ்து இயேசுவுக்குள் விருத்தசேதனமும் ஒன்றுமில்லை, விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை புது சிருஷ்டியே காரியம்.

கலா 6:16 இந்த பிரமாணத்தின்படி நடந்து வருகிறவர்கள் எவர்களோ, அவர்களுக்கும், தேவனுடைய இஸ்ரவேலருக்கும், சமாதானமும் இரக்கமும் உண்டாயிருப்பதாக.

"வேறொன்றையுங் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக" - (ரோமர் 3:4)

"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக - ஒருசிலர் விருத்தசேதனத்திலும் பாரம்பரியங்களிலும் பண்டிகைகளிலும் திரளான ஜனங்கள் தங்கள் மார்க்கத்திற்கு வந்திருக்கிறார்கள் என்று கூறிக்கொள்வதிலும் மேன்மை பாராட்டுகிறார்கள் ஆனால் பவுலோ கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தே மேன்மைபாராட்டுகிறார் விருத்தசேதனமோ பாரம்பரியங்களோ பண்டிகைகளோ வெறுமையானவை. பயனற்றவை புதுசிருஷ்டியே காரியம் (கலா 6:15; 2கொரி 5:17-18; எபே 2:10; எபே 4:23-24; கொலோ 3:10)

பிரமாணம் (rule) - κανών - kanoon - 2583

ஆங்கில வார்த்தை - பிரமாணம், அளவு எல்லை ஒழுங்கு கிறிஸ்தவ மார்க்கத்தின் ஒழுங்கு விருத்தசேதனம் மோசேயின் பிரமாணம் ஓய்வுநாள் ஆசரிப்பு ஆகியவை எதுவுமில்லாமல் இயேசு கிறிஸ்துவின் மூலமாக மனுக்குலத்திற்கு இரட்சிப்பு உண்டு என்பதே கிறிஸ்தவ மார்க்கத்தின் பிரமாணமாகும். (கலா 1:6-8; கலா 2:15-21; கலா 3:13-14, 19-29; கலா 4:1-10; கலா 5:1-7, 11; கலா 6:12-15)

"தேவனுடைய இஸ்ரவேலருக்கும்" - தேவனுடைய இஸ்ரவேல் என்பது இயேசு கிறிஸ்துவைத் தங்களுடைய இரட்சகராக ஏற்றுக் கொண்ட யூதரைக் குறிக்கும். (ரோமர் 2:29; ரோமர் 9:6)

6 அதிகாரம்

9. முடிவுரையும் ஆசீர்வாதமும்

கலா 6:17 இனிமேல் ஒருவனும் எனக்கு வருத்தம் உண்டாக்காதிருப்பானாக. கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக்கொண்டிருக்கிறேன்

கலா 6:18 சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை உங்கள் ஆவியுடனேகூட இருப்பதாக. ஆமென்

அச்சடையாளங்கள் (marks) - στίγμα - stigma 4742

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - அச்சு அடையாளம் - இந்த வசனத்தில் மட்டுமே இந்த வார்த்தை பயன்படுத்தப் பட்டிருக்கிறது அடிமைகளுக்கு அடையாளமாக அவர்களுடைய சரீரத்தில் அடையாளமிடுவார்கள் பவுல் தன்னை இயேசுகிறிஸ்துவின் அடிமையாகப் பாவிக்கிறார் தன்னுடைய அடிமை ஊழியத்திற்கு இயேசு கிறிஸ்துவின் அச்சடையாளங்களைத் தன்னுடைய சரீரத்தில் தரித்துக் கொண்டிருக்கிறார் ஒருசிலர் தங்களுடைய விருத்தசேதன அடையாளத்தில் மேன்மை பாராட்டுகிறார்கள் கலா 6:12-14 ஆனால் பவுலோ இயேசு கிறிஸ்துவிற்காகப் பாடுகளை அனுபவித்ததினால் உண்டான அடையாளங்களில் மேன்மை பாராட்டுகிறார் (2 கொரி 11:23-28

எபேசியர் - முன்னுரை

காலமும் இடமும்

கி.பி. 64 ஆம் ஆண்டு பவுல் இந்த நிருபத்தை ரோமாபுரியிலிருந்து எழுதினார். கொலோசெயர், பிலேமோன் ஆகிய நிருபங்களோடு இந்த நிருபத்தையும் பவுல் தீகிக்கு மூலமாகக் கொடுத்து அனுப்பினார். பவுலின் நிருபங்களில் இந்த நிருபம் பொதுவான நிருபமாகும்.

ஆசிரியர்

பவுல்

தலைப்பு

எபே 1:1 ஆவது வசனத்தில் "எபேசுவிலே" "at Ephesus" என்னும் வார்த்தை உள்ளது. ஒருசில மூலபாஷைச் சுவடிகளில் இந்த வார்த்தை காணப்படவில்லை. இந்த இடத்தில் எந்த சபையின் பெயரையும் சேர்த்துக் கொள்வதற்கு ஏதுவாக ஒருவேளை "எபேசுவிலே" என்னும் வார்த்தை அகற்றப்பட்டிருக்கலாம். கொலோசெயர் நிருபத்தில் லவோதிக்கேயருக்கு நிருபம் எழுதப்பட்டதற்கான குறிப்பு காணப்படுகிறது. (கொலோ 4:16)

மையக்கருத்து

பவுல் ரோமருக்கு எழுதின நிருபம் முதலாவது உபதேச நிருபமாகும். இயேசு கிறிஸ்துவின் மரணம், அடக்கம் பண்ணப்படுதல், உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் விசுவாசிகளுடைய ஸ்தானத்தைக் குறித்து ரோமருக்கு எழுதின நிருபம் விளக்குகிறது. பவுல் எபேசியருக்கு எழுதின நிருபம் இரண்டாவது உபதேச நிருபமாகும். உன்னதங்களில் இயேசு கிறிஸ்துவோடு விசுவாசிகள் அமர்ந்திருப்பதைக் குறித்து இந்த நிருபம் விளக்குகிறது. சபை ஆராதனையின் ஒழுங்குமுறைகளை விவரிப்பதற்குப் பதிலாக சபையைப் பற்றிய உன்னத சத்தியங்களை இந்த நிருபம் விளக்குகிறது.

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 6

வசனங்கள் - 155

கேள்வி - 1

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனம் - 1

புதிய தீர்க்கதரிசனங்கள் - 9

வரலாற்றைக் குறிக்கும் வசனங்கள் - 146

பொருளடக்கம்

I. முன்னுரை - ஆசிரியரும் வாழ்த்தும் (1:1-2)

II. கிருபையில் விசுவாசியின் ஸ்தானம்

1. கிறிஸ்துவில் ஒன்பது ஆசீர்வாதங்கள்

(1) ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதிக்கிறார் (1:3)

(2) கிறிஸ்துவுக்குள் நம்மை பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு தெரிந்து கொண்டார் (1:4)

(3) நமக்கு சுவிகார புத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார் (1:5)

(4) நமக்கு தம்முடைய கிருபையின் மகிமையைத் தந்தருளினார் (1:6)

(5) கிறிஸ்துவின் இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது (1:7)

(6) சகல ஞானத்தோடும் புத்தியோடும் நம்மிடத்தில் பெருகப் பண்ணினார் (1:8)

(7) தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை நமக்கு அறிவித்தார் (1:9,10)

(8) கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்து கொள்ளப்பட்டோம் (1:11-12)

எபேசியர் - முன்னுரை

9. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரைப் போடப்பட்டோம் (1:13-14)

2. ஆசீர்வாதத்திற்காக ஐந்து அம்ச ஜெபம் (1:15-19)

3. வல்லமையின் பத்து அம்ச மகத்துவம் (1:20-23)

4. சாத்தானிலும் பாவங்களிலும் நம்முடைய பழைய நிலைமை (2:1-3)

5. நித்திய மீட்பின் ஆதாரமும் நோக்கமும் (2:4-7)

6. மனுஷர் இரட்சிக்கப்படும் விதம் (2:8-10)

7. புறஜாதியாரின் பழைய நிலைமையின் ஏழு அம்சங்கள் (2:11-12)

8. கிறிஸ்து இயேசுவிற்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினால் புறஜாதியாரின் தற்போதைய நிலைமை (2:13)

III. சபை

1. யூதரும் புறஜாதியாரும் புதிய ஏற்பாட்டு சபையில் இருக்கிறார்கள் (2:14-22)

2. சபை - பவுலுக்கு விசேஷித்த வெளிப்பாடு (3:1-4)

3. சபையின் இரகசியம் முற்காலங்களில் மறைக்கப்பட்டிருந்தது இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது (3:5-9)

4. தேவனுடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் தெரிய வருகிறது (3:10-12)

5. தேவனுடைய பரிபூரணமான ஆசீர்வாதங்களுக்காக பத்து அம்ச ஜெபம் (3:13-21)

IV. விசுவாசிகள் நடக்க வேண்டிய விதம்

1. அழைப்பிற்கு பாத்திரவான்களாக அன்பிலும் ஒற்றுமையிலும் நடக்க வேண்டும் (4:1-3)

2. தேவனுடைய ஒற்றுமை (4:4-6)

3. தமது சரீரத்திற்கு கிறிஸ்துவின் வரங்கள் (4:7-11)

4. வரங்களின் நோக்கம் (4:12-16)

5. புறஜாதியார் நடக்கும் விதம் (4:17-19)

6. களைந்துபோட வேண்டியவை (4:20-22)

7. தரித்துக் கொள்ள வேண்டியவை (4:23-24)

8. கிறிஸ்தவருக்கு இருபது கட்டளைகள் (4:25-32)

9. தேவனைப் பின்பற்றுவதற்கு இரண்டு கட்டளைகள் (5:1-2)

10. பொதுவான ஆறு பாவங்கள் (5:3-4)

11. தேவனுடைய இராஜ்ஜியத்தை சுதந்தரமடையாத ஐந்து பிரிவினர் (5:5-7)

12. கிறிஸ்தவருக்கு பதினைந்து கட்டளைகள் (5:8-21)

V. விசுவாசிகளின் குடும்ப வாழ்வு

1. மனைவிகளின் கடமைகள் (5:22-24)

2. புருஷர்களின் கடமைகள் (5:25-33)

3. பிள்ளைகளின் கடமைகள் (6:1-3)

4. பிதாக்களின் கடமைகள் (6:4)

5. வேலைக்காரரின் கடமைகள் (6:5-8)

6. எஜமானர்களின் கடமைகள் (6:9)

VI. விசுவாசிகளின் ஆவிக்குரிய போராட்டம்

1. விசுவாசிகளின் வல்லமை (6:10)

2. விசுவாசிகளின் எதிரி (6:11-12)

3. விசுவாசிகளின் சர்வாயுத வர்க்கம் (6:13-17)

4. விசுவாசிகளின் ஆதாரம் (6:18-20)

VII. முடிவுரையும் ஆசீர்வாதமும் (6:21-24)

எபேசியர் - தொகுப்புரை

1 அதிகாரம்

I. முன்னுரை - ஆசிரியரும் வாழ்த்தும்

எபே 1:1 தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனாகிய பவுல், எபேசுவில் கிறிஸ்து இயேசு வுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்களுக்கு எழுதுகிறதாவது.

எபே 1:2 நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

"இயேசு கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலன்" - (அப 15:33)

"பரிசுத்தவான்கள்" - இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்திருப்பதினால் பரிசுத்தமாக்கப் பட்டிருக்கிறவர்களும் தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் காத்திருக்கு உண்மையோடு ஜீவிப்பவர்களும். (அப 9:13)

"எபேசு" (Ephesus) ஆசியா மைனரிலுள்ள முக்கியமான வணிக மையம் காயஸ்டர் நதி (Cayster River) ஆழமான கடலில் கலக்கும் இடத்தில கடற்கரையோரத்தில் அமைந்திருக்கும் முக்கியமான வியாபார மையம். சிமிர்னாவிலிருந்து (Smyrna) தெற்கே 50 மைல் தூரத்தில் இப்பட்டினம் அமைந்திருக்கிறது. இங்கு தியானாளின் கோவில் உள்ளது. ஆதி காலத்து அற்புதங்களில் தியானாளின் கோவிலையும் ஒரு முக்கியமான அற்புதமாகக் கருதினார்கள் (அப 19:27) தற்பொழுது இப்பட்டினம் இடிந்து சிதைந்து காணப்படுகிறது. வெளி 2:5 ஆவது வசனம் இப்பட்டணத்திற்கு நிறைவேறிற்று.

"கிருபை" (Grace) - இந்த நிருபத்தில கிருபை என்னும் சொல் 12 தடவைகள் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (எபே 1:2, 6-7 எபே 2:5-8, எபே 3:2,7-8; எபே 4:7,29 எபே 6:24

II. கிருபையில் விசுவாசியின் ஸ்தானம் - (எபே 1:3-2:13 ரோமர் 5:1-11)

1. கிறிஸ்துவில் ஒன்பது ஆசீர்வாதங்கள்

(1) ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதிக்கிறார் - (1கொரி 12-14 2பேதுரு 1:5-11)

எபே 1:3 நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவன்" - இந்த வசனத்தில பிதாவாகிய தேவனும் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவும் தனித்தனியாக ஆள்தத்துவம் உடையவர்கள் என்பது தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. (யோவான் 5:7 தேவன் இயேசு கிறிஸ்துவின் பிதாவாகவும், தேவனாகவும் இருக்கிறார் (எபே 1:17 யோவான் 3:16 யோவான் 20:17 1கொரி 11:3)

ஸ்தோத்திரம் (Blessed) - εὐλογητός - eulogeetos - 2128

மேசை - ஸ்தோத்திரம் (மாற்கு 14:61; லூக்கா 1:68, ரோமர் 1:25; ரோமர் 9:5, 2கொரி 1:3 2கொரி 11:31; 1பேதுரு 1:3)

ஆசீர்வதி (bless) - εὐλογέω - eulogeoo - 2127

வினைச்சொல் - ஆசீர்வதி, ஸ்தோத்திரி, துதி "bless" and "praise" (லூக்கா 1:64)

தேவன் நமக்குச் செய்திருக்கும் காரியங்கள்

1 அவர் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார் (எபே 1:3)

எபேசியர் தொகுப்புரை

1 அதிகாரம்

2 அவர் நம்மைத் தெரிந்து கொண்டார் எபே 1:4

3 அவர் நம்மை முன்குறித்திருக்கிறார் எபே 1:5,11

4 அவர் நம்மை ஏற்றுக் கொண்டார் (எபே 1:6

5 அவர் நம்மை மீட்டுக் கொண்டார் எபே 1:7

6 அவர் தம்முடைய கிருபையை நம்மிடத்தில் பெருகப்பண்ணினார் எபே 1:8

7 தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை நமக்கு அறிவித்தார் எபே 1:10

8 அவருடைய சுதந்தரமாகும்படி நம்மைத் தெரிந்து கொண்டார் (எபே 1:12,14)

9 அவர் நம்மை முத்திரை போட்டிருக்கிறார் (எபே 1:13)

"ஆவிக்குரிய சகல ஆசீர்வாதம்" - விசுவாசிகளுக்கு இயேசுகிறிஸ்துவின் மூலமாகக் கொடுக்கப்பட்டிருக்கும் வாக்குத்தத்தங்களும், ஆசீர்வாதங்களும் (எபே 1:3; 2கொரி 1:20 சங் 34:9-10 சங் 84:11, மத் 21:22, மாற்கு 11:22-24, யோவான் 14:12-15 யோவான் 15:7,16)

"ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள்" - மனுஷர் மத்தியிலே தேவனுடைய கிரியை வெளிப்படுவதற்கு பரிசுத்த ஆவியானவருடைய கிருபைகளும், வரங்களும் மனுஷருக்குத் தேவைப்படுகிறது. இவையே ஆவிக்குரிய ஆசீர்வாதங்களாகும். (ரோமர் 7:14; 1கொரி 12:1-31, கலா 5:21)

ஆசீர்வாதம் (blessing)
εὐλογία eulogia - 2129

பெண்பால் பெயர்ச்சொல் - ஆசீர்வாதம், நயவசனம், தானதர்மம், துதித்தல் ஸ்தோத்திரம் உதாரத்துவம் - **"blessing"** (எபே 1:3 ரோமர் 15:29; 1கொரி 10:16 கலா 3:14; எபி 6:7; எபி 12:17 யாக் 3:10; 1பேதுரு 3:9 வெளி 5:12-13; வெளி 7:12), **"fair speeches"** (ரோமர் 16:18 **"bounty"** (2கொரி 9:5), **"bountifully"** (2கொரி 9:6)

உன்னதம் (heavenly) - **ἐπουράνιος** - **epouranios** - 2032

பெயரடை - பரம, வானத்துக்குரிய, உன்னதத்திலுள்ள **"heaven"** (பிலி 2:10); **"heavenly"** (மத் 18:35 யோவான் 3:12; 1கொரி 15:48-49 எபே 1:3, 20; எபே 2:6; எபே 3:10 2தீமோ 4:18; எபி 3:1; எபி 6:4 எபி 8:5; எபி 9:23; எபி 11:16 எபி 12:22); **"high places"** (எபே 6:12); **"celestial"** (1கொரி 15:40)

(2) கிறிஸ்துவுக்குள் நம்மை பரிசுத்த முள்ளவர்களும் குற்றமில்லாத வர்களுமாயிருப்பதற்கு தெரிந்து கொண்டார்

எபே 1:4 தமக்குமுன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியே.

தெரிந்துகொண்டார் (chosen) - **ἐκλέγομαι** - eklegomai - 1586

வினைச்சொல் - தெரிந்துகொள் **(choose)** (மாற்கு 13:20; லூக்கா 6:13, லூக்கா 10:42; லூக்கா 19:7, யோவான் 6:70; யோவான் 13:18 யோவான் 15:16,19; அப் 1:2, 24 அப் 6:5; அப் 13:17; அப் 15:22,25 1கொரி 1:27-28; எபே 1:4, யாக் 2:5 **(make choice)** (அப் 15:7)

1 அதிகாரம்

"உலகத்தோற்றம்" - ஆதாமின் காலத்திற்கு முன்பாக லூசிபர் இந்த உலகத்தில் ஆளுகை செய்த காலம். (மத் 13:35)

"தேவனுடைய தெரிந்தெடுப்பு" - இந்த பூமியை ஆளும் அதிகாரத்திலிருந்து லூசிபரைத் தேவன் அகற்றுவதற்கு முன்பாகவே அவர் தம்முடைய பிள்ளைகளைத் தெரிந்து கொண்டார். இயேசு கிறிஸ்துவைத் தங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும் ஆதாமின் சந்ததியாரை அன்பில் பரிசுத்த முள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்குத் தேவன் தெரிந்து கொண்டார். எல்லா விசுவாசிகளுக்கும் தேவன் தெரிந்து கொண்ட திட்டம் இதுவே. தேவனுடைய தெரிந்தெடுக்கும் திட்டம் மிகவும் தெளிவாக உள்ளது. இத்திட்டத்தை ஏற்றுக் கொள்வதும், ஏற்றுக் கொள்ளாமல் போவதும் மனுஷருடைய செயலே. தேவனுக்கு முன்பாக நாம் எல்லோருமே பரிசுத்த முள்ளவர்களாகவும் குற்றமில்லாதவர்களாகவும் இருப்பதற்குத் தேவன் நம்மை அழைத்திருக்கிறார். அதற்காகவே தெரிந்தெடுத்திருக்கிறார். தேவனுடைய இந்த அழைப்பை நாம் ஏற்றுக் கொண்டு அவர் நமக்கு நியமித்திருக்கும் நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படியும்போது தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வோம். (யோவான் 3:16-20; மாற்கு 16:15-16; 1தீமோ 2:4; 2பேதுரு 3:9; வெளி 22:17) தேவன் மனுக்குலத்தார் அனைவரையும் தெரிந்தெடுத்து அழைக்கிறார். ஆனாலும் தேவனுடைய அழைப்பை ஏற்றுக் கொள்கிறவர்கள் மட்டுமே தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். (எபே 1:5; ரோமர் 8:29)

குற்றமில்லாதவர் (without blame) ἄμωμος - amoomos - 299

பெயரடைமாக இல்லாத. குற்றமில்லாத, பிழையற்ற, குற்றமற்ற, பழுதற்ற (எபே 1:4; எபே 5:27; கொலோ 1:22; எபி 9:14; 1பேதுரு 1:19; யூதா 1:24; வெளி 14:5)

(3) **நமக்கு சுவிகார புத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார்** - (கலா 4:4; ரோமர் 8:28-29; 1பேதுரு 1:2-5)

எபே 1:5 பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக,

"தாம் நமக்குத் தந்தருளின" - தேவன் நம்மைத் தம்முடைய கிருபைக்குள் கொண்டு வந்திருக்கிறார்.

"பிரியமானவர்" (the beloved) - (மத் 3:17; மத் 17:5; லூக்கா 3:22; 2பேதுரு 1:17)

(4) **நமக்கு தம்முடைய கிருபையின் மகிமையைத் தந்தருளினார்** - (2:14-22; 2கொரி 5:14-21; கொலோ 2:11-17)

எபே 1:6 தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார்.

முன் குறித்திருக்கிறார் (predestinated) - προορίζω - proorizoo - 4309

வினைச்சொல் - முன்குறித்திரு, ஏற்படுத்து - (ரோமர் 8:29) தம்முடைய பிள்ளைகள் எல்லோரையும் தமக்குச் சுவிகார புத்திரராகும்படி தேவன் முன்குறித்திருக்கிறார். ஆனாலும் ஒருவர் தேவனுடைய பிள்ளையாக ஆவது அவருடைய சுயாதீன தீர்மானத்தையும், முடிவையும் பொருத்தே அமைகிறது. (யோவான் 3:15-20; வெளி 22:17; 1தீமோ 2:4; 2பேதுரு 3:9)

சுவிகாரம் (adoption) - υἱοθεσία - huiothesia - 5206

பெண்பால் பெயர்ச்சொல் - புத்திர சுவிகாரம், சுவிகார புத்திரன், குமாரன் (எபே 1:5; ரோமர் 8:15, 23; ரோமர் 9:4; கலா 4:5) இந்தச் சுவிகாரம் தேவனுடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாகவும், தேவனுடைய தயவுள்ள சித்தத்தின்படியேயும் விசுவாசிகளுக்குக் கிடைக்கிறது. எபே 1:5-6

1 அதிகாரம்

(5) **கிறிஸ்துவின் இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது** - மத் 26:28, கொலோ 1:14, ரோமர் 3:25

எபே 1:7 அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது.

"இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு" - தம்முடைய கிருபையை வெளிப்படுத்துவதற்காகவும் நம்மைச் சுவிகார புத்திரராக ஏற்றுக் கொள்வதற்கும் தேவன் செலுத்திய கிரயம் இயேசுகிறிஸ்துவின் திருஇரத்தமாகும். (ரோமர் 3:24-25, ரோமர் 8:23, 1கொரி 1:30, கொலோ 1:14, எபி 12:15, வெளி 5:9-10)

மெய்யான ஐசுவரியங்கள்

1. அவருடைய கிருபையின் ஐசுவரியம் (எபே 1:7)
2. பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் (எபே 1:18)
3. கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியம் (எபே 3:8)
4. மகிமையின் ஐசுவரியங்கள் (Riches of glory) (எபே 3:16, ரோமர் 9:23)
5. அவருடைய நன்மையின் ஐசுவரியங்கள் (ரோமர் 2:4)
6. ஞானம், அறிவு ஆகியவற்றின் ஐசுவரியங்கள் (ரோமர் 11:33)
7. மகிமையில் ஐசுவரியங்கள் (Riches in glory) (பிலி 4:19)
8. கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக நமக்குள் இருக்கும் ஐசுவரியம் (கொலோ 1:27)
9. பிதாவாகிய தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் உரிய இரகசியத்தை அறிந்து கொள்ளுகிற உணர்வின் பூரண நிச்சயத்தினுடைய எல்லா ஐசுவரியம் (கொலோ 2:2)
10. எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையாகிய ஐசுவரியம் (எபி 11:26)

(6) **சகல ஞானத்தோடும் புத்தியோடும் நம்மிடத்தில் பெருகப் பண்ணினார்** - (1கொரி 1:30)

எபே 1:8 அந்தக் கிருபையை அவர் சகலஞானத்தோடும் புத்தியோடும் எங்களிடத்தில் பெருகப் பண்ணினார்

"சகலஞானம்" - நம்முடைய வாழ்க்கையில் எது நல்ல இலக்குகள் அவற்றை அடைவதற்குச் சரியான வழிகள் எவை என்பதை ஞானத்தின் மூலமாக நாம் தீர்மானம் பண்ணுகிறோம். புத்தி என்பது ஞானத்தை நடைமுறையில் செயல்படுத்துவதாகும். நம்முடைய இலக்கை அடைவதற்கு சரியான வேளை எது, எவ்வாறு செயல்பட்டால் நல்ல விளைவுகள் உண்டாகும் என்று நடைமுறையில் செயல்படுவது புத்தியாகும்.

புத்தி (prudence) - φρόνησις phroneesis - 5428

பெண்பால் பெயர்ச்சொல் புத்தி (லூக்கா 1:17, எபே 1:8)

(7) **தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை நமக்கு அறிவித்தார்** (சங் 33:12, மத் 11:25, 1கொரி 2:9-10)

எபே 1:9 காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்பட வேண்டுமென்று,

எபேசியர் - தொகுப்புரை

1 அதிகாரம்

எபே 1:10 தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார்

தீர்க்கதரிசன எண் - 1

"காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டும்" (எபே 1:10) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை ஆயிரம் வருஷ அரசாட்சியில இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும் அப்போது எல்லாச் சத்துருக்களும் அழிந்து போவார்கள் சகல சிருஷ்டிகளும் ஒன்றாகக் கூட்டப்படும் இந்தக் காலம் லூசிபர் ஆதாம் ஆகியோர் கலகம் பண்ணியதற்கு முன்பு இருந்த உலகத்தைப் போன்று இருக்கும். (1கொரி 15:24-28 வெளி 20:1-15 வெளி 21:1-22:5)

காலம் (dispensation) - οἰκονομία - oikonomia - 3622

பெண்பால் பெயர்ச்சொல் - உக்கிராணம். உக்கிராண உத்தியோகம். காரியம் (stewardship) (லூக்கா 16:2-4) (dispensation) (1கொரி 9:17 எபே 1:10; எபே 3:2; கொலோ 1:25 1தீமோ 1:4

காலங்கள்

வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் காலங்கள்

1. அநீதியுள்ள உக்கிராணக்காரன் செய்ததும், அவனுடைய காலமும் (லூக்கா 16:1-9)
2. சுவிசேஷத்தின் காலம் (1கொரி 9:17) உக்கிராண உத்தியோகம் கிருபையின் சுவிசேஷத்தைப் பவுல் செய்த காலம்
3. தேவனுடைய கிருபையின் காலம் (எபே 3:2)
4. தேவனுடைய காலம் (கொலோ 1:25) - தேவன் தமது கிருபையைப் பவுலுக்குக் கொடுத்த காலம்.
5. காலங்கள் நிறைவேறின காலம் - இக்காலத்தில் பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படும் பூமியிலுள்ள எல்லாக் கலகங்களும் ஒடுக்கப்படும். (எபே 1:10 1கொரி 15:24-28 வெளி 20)

மற்ற காலங்கள்

1. தூதர்களுடைய காலங்கள் (ஆதி 1:1 ஏசா 14:12-14; எசே 28:11-17)
2. மீட்கப்பட்ட உண்மையுள்ள தூதர்களின் நித்திய காலம் (வெளி 21-22; ஏசா 66:22-24. 2பேதுரு 3:13)

மனுஷருடைய காலங்கள்

1. அறியாமையின காலம் (ஆதி 3
2. மனச்சாட்சியின காலம் (ஆதி 4-8)
3. மானிட ஆளுகையின காலம் (ஆதி 9-11)
4. வாக்குத்தத்தத்தின காலம் (ஆதி 12:1- யாத் 12:36)
5. பிரமாணத்தின காலம் (யாத் 12:37- மத் 3)
6. கிருபையின காலம் (மத் 4:1 வெளி 19:21)
7. ஆயிரம் வருஷ தெய்வீக அரசாட்சியின காலம் (வெளி 20:1-5

"காலங்கள் நிறைவேறும்போது" - பூமியில் பரீட்சைத்தகாலம் முடிவுபெறும்போது காலங்கள் நிறைவேறுகிறது. இயேசு கிறிஸ்து காலங்கள் நிறைவேறும்போது இந்தப் பூமியை ஆளுகை செய்வதற்காக மறுபடியும் வருவார் பூமியிலுள்ள எல்லாக் கலகங்களையும் ஒடுக்குவார் இந்தப் பூமியில மறுபடியும் தமது தெய்வீக ஆட்சியை நிலைநிறுத்துவார் இப்பூமியில் கலகம் ஏற்படுவதற்கு முன்பு இருந்த ஒரு திவ்வியமான சூழ்நிலை மறுபடியும் ஏற்படுத்தப்படும் (1கொரி 15:24 28

1 அதிகாரம்

"தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியம்" (mystery of his will) - புறஜாதியாரும் யூதரோடு இயேசு கிறிஸ்துவின் ஆசீர்வாதங்களுக்கு பங்குடையவர்களாக இருப்பார்கள். புறஜாதியார்கள் விருத்தசேதனம் பண்ணிக் கொள்ளாமலும், மோசேயின் பிரமாணத்தைக் கைக்கொள்ளாமலும் இந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வார்கள் (எபே 3:1-6; ரோமர் 11:25)

(8) கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்து கொள்ளப்பட்டோம் - ரோமர் 8:17; 1பேதுரு 1:2-5)

எபே 1:11 மேலும் கிறிஸ்துவின் மேல் முன்னே நம்பிக்கையாயிருந்த நாங்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கும்படிக்கு,

எபே 1:12 தமது சித்தத்தின் ஆலோசனைக்குத் தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே நாங்கள் முன் குறிக்கப்பட்டு கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்து கொள்ளப்பட்டோம்.

"கிறிஸ்துவின் மேல் முன்னே நம்பிக்கையாயிருந்த நாங்கள்" ஆதித்திருச்சபையார் இயேசுகிறிஸ்துவில் முதன்முதலாக நம்பிக்கை வைத்தார்கள்.

"கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்திரமாகும் படி தெரிந்து கொள்ளப்பட்டோம்" எபே 1:3-9 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் மற்ற ஆசீர்வாதங்களோடு சேர்ந்து நமக்கு சுதந்தரவீதும் உண்டாயிருக்கும். வாக்குத்தத்தத்தின் மூலமாக இந்தச் சுதந்தரத்தை நாம் இப்போது இயேசுகிறிஸ்துவில் பெற்றிருக்கிறோம். நம்முடைய சுதந்தரத்திற்குப் பரிசுத்த ஆவியானவர் நமக்கு அச்சாரமாக இருக்கிறார் (எபே 1:13-14) நாம் தேவனுடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படும்போது நமது சுதந்தரம் பரிபூரணமாக வெளிப்படும். (மத் 5:5; மத் 19:29; மத் 25:34; 1கொரி 6:9-10; 1கொரி 15:50; கலா 5:21; எபே 1:14,18; எபே 5:5; கொலோ 1:12; கொலோ 3:24; எபி 6:12; எபி 9:15; 1பேதுரு 1:4; வெளி 21:7)

"முன் குறிக்கப்பட்டிருக்கிறவர்கள்" - (எபே 1:5)

"தீர்மானம்" (the purpose) - தேவனுடைய தீர்மானம் எபே 1:3-5, 12; எபே 2:7,10; எபே 3:6, 10-11 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

"தமது சித்தத்தின் ஆலோசனைக்குத் தக்கதாக" - (ரோமர் 8:28)

(9) வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரைப் போடப்பட்டோம் - (4:30; யோவான் 3:5; தீத்து 3:5

எபே 1:13 நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளான போது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள்.

எபே 1:14 அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்திரத்தின் அச்சாரமாயிருக்கிறார்.

"இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளான போது" - சுவிசேஷத்தை அவர்கள் கேட்டு இயேசுகிறிஸ்துவை விசுவாசித்த போது (எபே 1:12-13)

"விசுவாசிகளானபோது" கிரேக்க மொழியில் இந்த வாக்கியம் தொடர் நிகழ்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையினால் இந்த வாக்கியத்திற்கு "விசுவாசித்துக் கொண்டிருக்கும்போது" என்று பொருள் எடுத்துக் கொள்ள வேண்டும். நாம் இயேசு கிறிஸ்துவைத் தொடர்ந்து விசுவாசித்துக் கொண்டிருக்கும்போது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியானவரால் நாம் இயேசு கிறிஸ்துவிற்குள் முத்திரை போடப்பட்டிருப்போம். கலா 3:14

எபேசியர் - தொகுப்புரை

1 அதிகாரம்

முத்திரை போடப்படுவதற்கான காரணங்கள்

1 பாதுகாப்பிற்காக (மத் 27:66; வெளி 20:3)

2 நிருபத்திலுள்ள செய்தியை மறைத்து வைத்திருப்பதற்காக (வெளி 10:4; வெளி 22:10; உபா 32:34)

3 சாட்சியினால் உறுதிபண்ணுவதற்காக (யோவான் 3:33; யோவான் 6:27; ரோமர் 15:28)

4 உரியவரை உறுதிபண்ணுவதற்காக (2கொரி 1:22; எபே 1:13; எபே 4:30; வெளி 7:3-8) மனந்திரும்புகிற ஒவ்வொருவருக்கும் சுதந்தரம் கொடுக்கப்படுகிறது. (ரோமர் 8:9, 14-16; 2கொரி 1:22; எபே 1:13; எபே 4:30) பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றிருக்கும் விசுவாசி தேவனால் முத்திரையிடப்பட்டிருக்கிறார். இந்த முத்திரையின் மூலமாக அவர் பரலோகத்திலுள்ள தேவனுடைய குடும்பத்திற்கு உரியவராக இருக்கிறார்.

அச்சாரம் (earnest) - **ἀρραβών arraboon** - 728

ஆண்பால் பெயர்ச்சொல் - அச்சாரம் **(earnest-money; pledge; first-payment)** (எபே 1:14; 2கொரி 1:22; 2கொரி 5:5). பரிசுத்த ஆவியானவர் புத்திர சுவிகாரத்தின் ஆவியாய் இருக்கிறார். இந்த ஜீவியத்தில் அருளப்பட்டிருக்கும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாக இருக்கிறது. அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக நாம் மீட்கப்படும்போது நம்முடைய சுதந்தரம் பரிபூரணமாக இருக்கும். (2கொரி 1:21, 22; ரோமர் 8:17-24; 2கொரி 5:1-10; 1பேதுரு 1:4-13)

தீர்க்கதரிசன எண் - 2

"அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள்" (எபே 1:14) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

சொந்தம் (possession)

περιποίησις - peripoieesis - 4047

பெண்பால் பெயர்ச்சொல் - சொந்தம் அடைதல், ஈடேறுதல் **(keeping safe; gaining possession)** - இது மீட்பின் முழுமையைக் குறிக்கும்

தேவனுக்குச் சொந்தமானவர்கள் அடையப்போகும் காரியங்கள்

1 கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமை (2தெச 2:14)

2 கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக இரட்சிப்பு (1தெச 5:9)

3 இயேசு கிறிஸ்துவின் மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுதல் (எபே 1:14)

4 ஆத்துமா ஈடேறுதல் (எபி 10:39)

5 தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததி (1பேதுரு 2:9)

2. ஆசீர்வாதத்திற்காக ஐந்து அம்ச ஜெபம்

எபே 1:15 ஆனபடியினாலே, கர்த்தராகிய இயேசுவின்மேலுள்ள உங்கள் விசுவாசத்தையும், பரிசுத்தவான்களெல்லார் மேலுமுள்ள உங்கள் அன்பையுங் குறித்து நான் கேள்விப்பட்டு,

எபே 1:16 இடைவிடாமல் உங்களுக்காக ஸ்தோத்திரம் பண்ணி, என் ஜெபங்களில் உங்களை நினைத்து,

எபே 1:17 நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்து கொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருள வேண்டுமென்றும்,

எபேசியர் - தொகுப்புரை

1 அதிகாரம்

எபே 1:18 தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்திரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்,

எபே 1:19 தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்றும் வேண்டிக் கொள்கிறேன்.

எபேசியரைக் குறித்துப் பவுல் கேள்விப்பட்ட காரியங்கள்

1 கர்த்தராகிய இயேசுவின்மேலுள்ள அவர்கள் விசுவாசம்

2 பரிசுத்தவான்களெல்லார் மேலுமுள்ள அவர்கள் அன்பு - இது அவர்களுடைய உண்மையான மனமாற்றத்தை நிரூபிக்கிறது. (யோவான் 13:35)

எபேசியருக்காகப் பவுல் செய்த காரியங்கள்

1 அவர்களுக்காக இடைவிடாமல் ஸ்தோத்திரம் பண்ணினார்

2 தன் ஜெபங்களில் அவர்களை இடைவிடாமல் நினைத்தார்

ஸ்தோத்திரம் பண்ணு (give thanks)
εὐχαριστέω eucharisteoo
2168

வினைச்சொல் - ஸ்தோத்திரம் பண்ணு, நன்றியறி - பவுல் தனது நிருபங்களில் ஸ்தோத்திரம் பண்ணுதல் என்னும் வார்த்தையை 23 இடங்களில் பயன்படுத்தியிருக்கிறார். புதிய ஏற்பாட்டின் மற்ற புஸ்தகங்களில் இந்த வார்த்தை 14 தடவைகள் மட்டுமே பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

எபேசியருக்காகப் பவுல் ஜெபித்த காரியங்கள்

1 ஞானத்தை அளிக்கிற ஆவி (எபே 1:17)

2 தெளிவை அளிக்கிற ஆவி (எபே 1:17)

3 சத்தியத்தைப் பூரணமாக விளங்கிக் கொள்ளுதல் (எபே 1:18)

4 இயேசு கிறிஸ்து எபேசியரை அழைத்ததினாலே எபேசியருக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை (எபே 1:18; எபே 3:16)

5 பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்திரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் (எபே 1:18; எபே 1:7)

6 விசுவாசிக்கிறவர்களாகிய எபேசியரிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம். (எபே 1:19; எபே 3:19-20)

7 எபேசியர் தேவனுடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்பட வேண்டும். (எபே 3:16)

8 கிறிஸ்து அவர்கள் இருதயங்களில் வாசமாயிருக்க வேண்டும். (எபே 3:17; லூக்கா 22:3)

9 அவர்கள் அன்பிலே வேரூன்றி நிலைபெற்றவர்களாக இருக்க வேண்டும். (எபே 3:17)

10 ஆவிக்குரிய காரியங்களைப் புரிந்து கொள்ள வேண்டும். (எபே 3:18)

11 தேவனுடைய அறிவுக்கெட்டாத அன்பை அறிந்து கொள்ள வல்லவர்களாக இருக்க வேண்டும். (எபே 3:19)

1 அதிகாரம்

12 தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவேண்டும். (எபே 3:19)

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தேவன்" (God of our Lord Jesus Christ) - (எபே 1:3)

"மகிமையின் பிதா" (the Father of glory) - எல்லாப் பரிசுத்தவான்களுக்கும் காரண கர்த்தாவாக இருக்கிறவர் அவர்களுக்கு மகிமையை அருளுகிறவர்

"ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவி" (spirit of wisdom and revelation) - எபேசியர்கள் ஏற்கெனவே பரிசுத்த ஆவியானவரின் அச்சாரமாகிய சுதந்தரத்தைப் பெற்றிருக்கிறார்கள் இனிமேல் அவர்கள் ஆவியானவரின் அச்சாரத்தோடு அவருடைய நிறைவையும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று பவுல் எபேசியருக்காக ஜெபிக்கிறார் (எபே 3:16-21, யோவான் 3:34)

"பிரகாசமுள்ள மனக்கண்கள்" - மனுஷனுடைய ஆவி தேவனுடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவத்தைப் பிரகாசமுள்ள மனக்கண்களால் அறியும். (1கொரி 2:11) சரீரத்திற்குக் கண்ணைப்போன்று உள்ளான மனுஷனுக்கு அவனுடைய ஆவி கிரியை செய்கிறது ஒருசில மூலபாஷை பதிப்புக்களில் "பிரகாசமுள்ள மனக்கண்கள்" என்னும் வாக்கியம் "உங்களுடைய இருதயத்தின் கண்கள்" "the eyes of your heart" என்று எழுதப்பட்டிருக்கிறது.

மனக்கண்கள் மூலமாக நாம் தெரிந்து கொள்ளக்கூடியவை

1 அவருடைய அழைப்பின் நம்பிக்கை (எபே 1:18

2 மகிமையின் ஐசுவரியம் (எபே 1:18)

3 அவருடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் (எபே 1:19)

"விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம்" - விசுவாசிக்கிறவர்களுக்கு தேவனுடைய வல்லமை கொடுக்கப்படும் என்பதை பவுல் தன்னுடைய நிருபங்களில் வலியுறுத்திக் கூறியிருக்கிறார் விசுவாசிகளுக்கு மட்டுமே தேவனுடைய வல்லமை கொடுக்கப்படும். அவிசுவாசிகளுக்குக் கொடுக்கப்படமாட்டாது. (எபே 3:16-21; எபே 6:10-18; 1கொரி 1:7 1கொரி 4:18-20; 1கொரி 12:1-11

3. வல்லமையின் பத்து அம்ச மகத்துவம் - (மத் 28:18, யோவான் 14:12-15; 1பேதுரு 3:22)

எபே 1:20 எல்லாத் துரைத்தனத்துக்கும் அதிகாரத்துக்கும் வல்லமைக்கும் கர்த்தத்துவத்துக்கும் இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக.

எபே 1:21 அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்து

எபே 1:22 எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி.

எபே 1:23 எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்

தீர்க்கதரிசன எண் - 3

"இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும்" (எபே 1:21) இந்தக் காலமும் இனிமேல் வரப்போகிற காலமும். எபே 2:7 மத் 12:31-32; வெளி 20:1-22:5

இயேசு கிறிஸ்துவிற்குப் பிதாவாகிய தேவன் செய்திருக்கும் காரியங்கள்

1 இயேசு கிறிஸ்துவை மரணத்திலிருந்து உயிரோடு எழுப்பினார் (எபே 1:20, 1கொரி 15:1-23; யோவான் 21:14

1 அதிகாரம்

2 அவரை உன்னதங்களில் தம்முடைய வலதுபாரிசத்தில் உட்காரும்படி செய்தார் (எபே 1:21; சங் 110:1,5; மத் 26:64; மாற்கு 16:19; அப 2:33-34; அப 7:55-56 ரோமர் 8:34; பிலி 2:9-11 கொலோ 3:1; எபி 1:3,13; எபி 10:12 எபி 12:2; 1பேதுரு 3:22)

3 தமக்குக் கீழ் அவருக்கு எல்லா வல்லமைகளின்மீதும் நன்மை தீமைகளின் மீதும் அதிகாரத்தைக் கொடுத்தார் (எபே 1:21 எபே 3:10; எபே 6:12; ரோமர் 8:38 பிலி 2:9-11; கொலோ 1:15-18 கொலோ 2:10-17; 1பேதுரு 3:22 வெளி 13:7,18 வெளி 11:15 வெளி 19:11-20:10)

4 பிதாவாகிய தேவனுடைய நாமத்தைத் தவிர எல்லா நாமத்திற்கும் மேலாய உயர்ந்த நாமத்தை அவருக்குக் கொடுத்தார் (எபே 1:21 1கொரி 11:3; பிலி 2:9-11; எபி 1:4)

5 எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினார் (எபே 1:22; கொலோ 1:16-18 கொலோ 2:10-17; எபி 2:5-18 1கொரி 15:24-28

6 சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார் (எபே 1:22; கொலோ 1:18, 24; 2கொரி 11:3

கிறிஸ்துவின் தலைமைத்துவம்

1 எல்லாத் துரைத்தனம் (எபே 1:20; கொலோ 2:10

2 எல்லா அதிகாரம் (எபே 1:20; கொலோ 2:10)

3 எல்லா வல்லமை (எபே 1:20

4 எல்லாக் கர்த்தத்துவம் (எபே 1:20 கொலோ 1:16-18

5 எல்லா நாமம் (எபே 1:20; பிலி 2:9 எபி 1:4)

6 இம்மை (எபே 1:20)

7 மறுமை (எபே 1:20)

8 எல்லாவற்றையும் (எபே 1:22 எபி 2:8-9)

9 சபை (எபே 1:22-23; எபே 4:15 எபே 5:23-31; கொலோ 1:18,24 கொலோ 2:19)

10 எல்லோரும் (1கொரி 11:3)

11 மூலைக்குத் தலைக்கல் (மத் 21:42 லூக்கா 20:17; அப 4:11; 1பேதுரு 2:7)

12 ஜனங்கள் (ஏசா 55:4)

13 எல்லாரிலும் எல்லாம் (ரோமர் 9:5 கொலோ 3:11)

14 தம்முடைய வீட்டிற்கு மேற்பட்டவர் (எபி 3:6)

"சரீரமான சபை" சபையும் கிறிஸ்துவின் சரீரமும் ஒரே பொருளைத் தரும் வார்த்தைகளாகும் (எபே 1:22-23; கொலோ 1:18,24)

"எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவு" திருச்சபையிலுள்ள ஏராளமான அங்கத்தினர்கள் தலையைப பரிபூரணமாக்குகிறார்கள் விசுவாசிகளே கிறிஸ்துவின் சரீரமாக இருக்கிறார்கள் (1கொரி 12:12-13,27) தம்மைத் தலையாகக் கொண்டிருக்கும் விசுவாசிகளுக்கு இயேசு கிறிஸ்து எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறார் (எபே 1:23; எபே 3:16-21 யோவான் 1:16)

2 அதிகாரம்

4. சாத்தானிலும் பாவங்களிலும் நம்முடைய பழைய நிலைமை - (சங் 51:5; ரோமர் 5:12-21 1யோவான் 3:8,5:19; யோவான் 8:44)

எபே 2:1 அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார்

எபே 2:2 அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றவைகளாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்ற படியாகவும் நடந்து கொண்டீர்கள்

எபே 2:3 அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின் படியே நடந்து நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து சுபாவத்தினாலே மற்றவர்களைப் போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் மரித்த காரியங்கள்

1. பிழைத்து மரித்திருக்கும் ஜனங்கள் (எபே 2:1,5; மத் 8:22; 2கொரி 5:14, கொலோ 2:13, 1தீமோ 5:6)
2. மரித்து, பிழைத்திருக்கும் ஜனங்கள் (ரோமர் 6:2,7-14; கொலோ 2:20 கொலோ 3:3, 2தீமோ 2:11)
3. மரித்ததாயும், ஜீவனுள்ளதாயும் இருக்கும் சரீரங்கள் (ரோமர் 8:10)
4. செத்த சரீரங்கள் (யாக் 2:26; யோவான் 5:28-29
5. செத்த கிரியைகள் (எபி 6:1; எபி 9:14)
6. செத்த விசுவாசம் (யாக் 2:17, 20, 26)
7. செத்த பாவம் (ரோமர் 7:8)

அக்கிரமங்கள் (trespasses) - παράπτωμα - paraptooma - 3900

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - தப்பிதம், பாவம், தவறு, குற்றம், அக்கிரமம், மீறுதல் - நேர்மையாக ஜீவிக்கும் ஒருவர் தவறு செய்து விழுந்து விடுவது, கடமையிலிருந்து தவறுதல், மீறுதல். (ரோமர் 11:11)

பாவங்கள் (sins) - ἁμαρτία - hamartia - 266

பெண்பால் வினைப்பெயர் - பாவம் தோல்வி, இலக்கைத் தவறவிடுதல் சிந்தனை, செயல், வார்த்தை ஆகியவற்றில் செய்யும் பாவம் (யோவான் 1:29)

(அ) பாவச் செயல் (1கொரி. 15:17)

(ஆ) பாவத்தில் மூழ்கியிருத்தல் எப்பொழுதும் பாவத்தில் இருத்தல் (யோவா 1:21), (ரோம. 3:9)

பாவிகளின் நிலைமை

1. இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாக நடந்து கொள்கிறார்கள் (எபே 2:2)
2. ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய சாத்தானின் ஆவிக்கேற்றபடியாக நடந்து கொள்கிறார்கள் (எபே 2:2)
3. தங்களுடைய மாம்ச இச்சையின் படியே நடந்து கொள்கிறார்கள் (எபே 2:3, கலா 5:19-21, கொலோ 3:5-10, ரோமர் 1:19-32)
4. தங்களுடைய மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்கிறார்கள் (எபே 2:3 2கொரி 7:1 1யோவான் 2:15-17
5. சுபாவத்தினாலே மற்றவர்களைப் போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாய் இருக்கிறார்கள் (எபே 2:3 சங் 51:5, யோவான் 8:44 ரோமர் 5:12-21)

உலகம் (world) - κόσμος - kosmos 2889

ஆண்பால் பெயர்ச்சொல் - உலகம், அலங்கரிப்பு, லௌகிகம் சாத்தானுடைய உலகக் கிரியைகள்

2 அதிகாரம்

"ஆகாயத்து அதிகாரப் பிரபு" (the prince of the power of the air) - வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் பழைய மனுஷன் கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இது கிரியை செய்கிறது. (ரோமர் 6:6; யோவான் 8:44; 1யோவான் 3:8; 1யோவான் 5:18) சாத்தான் ஆகாயத்தின் பிரபுவாக இருக்கிறான். ஆகாயத்தில் அசுத்த ஆவிகள் சாத்தானுடைய ஆளுகையின் கீழ் கிரியை செய்கின்றன. (2கொரி 5:17; எபே 2:2; எபே 3:10; எபே 6:11-12; கொலோ 2:10; 1பேதுரு 3:22; வெளி 12)

பிரபு (prince) - ἄρχων - archoon - 758

ஆண்பால பெயர்ச்சொல் - தலைவன், அதிகாரி, அதிபதி, பிரபு

"இப்பொழுது கிரியைசெய்கிற ஆவி" - ஒருவர் இந்த ஆவியைத் தன்னை விட்டு அகற்றிப்போட்டால் அவருடைய பழைய மனுஷன் அவருக்குள் கிரியை செய்யாது. அவர் தன்னுடைய பழைய மனுஷனுக்கு அடிமைப்பட்டவரும் அல்ல. (எபே 2:2; எபே 4:27; எபே 6:10-18; 1யோவான் 3:8-10; 1யோவான் 5:18; யாக் 4:7; 1பேதுரு 5:8-9) இந்த ஆவி கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் மட்டுமே கிரியை செய்யும். (2கொரி 5:17-18; 1யோவான் 3:8-10; 1யோவான் 5:18; ரோமர் 6:14-23)

"கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்" - சாத்தானுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்து சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல் ஜீவிக்கும் ஜனங்களைக் குறிக்கும் எபிரெய வழக்குச்சொல். (யோவான் 17:12) துன்மார்க்கமே இவர்களுடைய பிதா. (மத் 13:38; யோவான் 8:44; 1யோவான் 3:8-10; 1யோவான் 5:18)

"முற்காலத்திலே...நடந்து" - நாம் ஜீவித்த விதம். (2கொரி 1:12)

"சுபாவத்தினாலே மற்றவர்களைப் போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்" - மனுஷன் பாவத்தில் பிறந்திருக்கிறான். ஆகையினால் சுபாவத்தின் பிரகாரம் மனுஷன் பாவியாகவே இருக்கிறான். (ரோமர் 2:14; ரோமர் 5:12-21; யாக் 3:6; சங் 51:5)

5. **நித்திய மீட்பின் ஆதாரமும் நோக்கமும்** - (ரோமர் 3:21)

எபே 2:4 **தேவனோ** இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே,

எபே 2:5 அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்.

எபே 2:6 கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தமமுடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச் செய்வதற்காக,

எபே 2:7 கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடே கூட எழுப்பி, உன்னதங்களில் அவரோடே கூட உட்காரவும் செய்தார்.

தேவன் செய்திருக்கும் காரியங்கள்

1. அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார் (எபே 2:1,5)
2. நம்மில் அன்புகூர்ந்தார் (எபே 2:4)
3. கிருபையினாலே நம்மை இரட்சித்தார் (எபே 2:5, 8-9)
4. உன்னதங்களில் அவரோடே கூட உட்காரச் செய்தார் (எபே 2:7,10)
5. அவர் நம்மிடத்தில் தயவு வைத்தார் (எபே 2:6,10)
6. நம்மைக் கிறிஸ்து இயேசுவிற்குள் சிருஷ்டித்தார் (எபே 2:10)
7. கிறிஸ்து இயேசுவிற்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினால் நம்மைச் சமீபமாக்கினார் (எபே 2:13)

2 அதிகாரம்

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் மூன்றுவிதமான மரணங்கள்

1 சரீர மரணம் – சரீரத்திலிருந்து உள்ளான மனுஷன் பிரிக்கப்படுவது. (யாக் 2:26)

2 ஆவிக்குரிய மரணம் – பாவத்தின் நிமித்தமாக ஒரு மனுஷன் தேவனிடமிருந்து பிரிக்கப்படுவது. (எபே 2:1,5; ஏசா 59:2; மத் 8:22; கொலோ 2:13; 1தீமோ 5:6)

3 நித்திய மரணம் - மனுஷன் பாவத்தில் ஜீவித்து தேவனிடமிருந்து பிரிந்து வாழவேண்டுமென்று தீர்மானம் பண்ணுவதினால் தேவனிடத்திலிருந்து நித்திய காலமாகப் பிரிக்கப்படுவது. (மத் 10:28; மத் 25:41,46; வெளி 2:11; வெளி 14:9-11; வெளி 20:11-15; வெளி 21:8; வெளி 22:15; ஏசா 66:22-24) இந்த மரணம் இரண்டாம் மரணம் அல்லது தேவனிடமிருந்து இரண்டாம் முறையாகப் பிரிக்கப்படுதல் என்று அழைக்கப்படுகிறது. (வெளி 2:11; வெளி 20:14; வெளி 21:8)

மனுஷன் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான். அந்த நோக்கத்திலிருந்து பிரிக்கப்படுவதே மரணம் என்னப்படுகிறது. சரீர மரணத்தில் மனுஷனுடைய சரீரம் மரித்து மண்ணுக்குத் திரும்புகிறது. (ஆதி 3:19; யாக் 2:26) ஆவியும் ஆத்துமாவும் அழியாதவை. சரீரம் மரித்தாலும் ஆவியும், ஆத்துமாவும் பரலோகத்திலோ அல்லது நரகத்திலோ மரிக்காமல் உயிரோடு இருக்கும். (1பேதுரு 3:4; லூக்கா 12:5; லூக்கா 16:23)

"நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார்" பாவங்களினாலும் மீறுதல்களினாலும் [redacted] மரணத்திலிருந்து ஆவிக்குரிய பிரகாரமாக உயிர்த்தெழுதல். (எபே 2:1; 5,6) சரீர உயிர்த்தெழுதலைப் போன்றே ஆவிக்குரிய உயிர்த்தெழுதலும் நிச்சயமானது முழுமையானது. (2கொரி 5:17-18)

தீர்க்கதரிசன எண் - 4

"கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச் செய்வதற்காக, கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடே கூட எழுப்பி, உன்னதங்களில் அவரோடே கூட உட்காரவும் செய்தார்" (எபே 2:6,7) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. ஒவ்வொரு காலங்களிலும் என்னென்ன காரியங்கள் நடைபெற வேண்டுமென்று தேவன் ஏற்கெனவே தீர்மானம் பண்ணியிருக்கிறார் (ஆதி 9:14-18; ஆதி 8:22; சங் 72:5,17; சங் 89:34-37; எபே 2:7)

6. மனுஷர் இரட்சிக்கப்படும் விதம் - (ரோமர் 10:9-10; 1யோவான் 1:9; 1கொரி 6:11; யோவான் 3:16)

எபே 2:8 கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய [redacted].

எபே 2:9 ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல

எபே 2:10 ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்

"கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் இது உங்களால் உண்டானதல்ல இது தேவனுடைய ஈவு" பாவங்களில் மரித்திருக்கிறவர்கள் அந்த மரணத்திலிருந்து ஆவிக்குரிய ரீதியாக எவ்வாறு உயிர்த்தெழுகிறார்கள் என்பதை இந்த வசனம் எளிமையாகவும் தெளிவாகவும் விளக்குகிறது. (எபே 2:8-10; ரோமர் 10:9-10; யோவான் 3:16; 1யோவான் 1:9)

செய்கை (workmanship) - ποίημα poieema 4161

2 அதிகாரம்

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - உண்டாக்கப்படுதல் செய்கை (handiwork or new creation) ரோமர் 1:20, எபே 2:10) - 2கொரி 5:17-18; எபே 4:23-24 தீத்து 2:11-14)

ஆயத்தம்பண்ணுதல் (ordained) - προετοιμάζω proetoimazoo - 4282

வினைச்சொல் - எத்தனமாக்கு ஆயத்தப்படுத்து (ரோமர் 9:23 எபே 2:10) மறுஜென்மத்தின் மூலமாக நற்கிரியைகளைச் செய்கிறதற்குத் தேவன் ஜனங்களை ஆயத்தப்படுத்துகிறார்

7. புறஜாதியாரின் பழைய நிலைமையின் ஏழு அம்சங்கள்

எபே 2:11 ஆனபடியினால் முன்னே மாம்சத்தின்படி புறஜாதியாராயிருந்து மாம்சத்தில் கையினாலே செய்யப்படுகிற விருத்தசேதன முடையவர்களால் விருத்தசேதன மில்லாதவர்களென்னப்பட்ட நீங்கள்

எபே 2:12 அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும் இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும் நம்பிக்கை யில்லாதவர்களும் இவ்வுலகத்தில் தேவனற்றவர் களுமாயிருந்தீர்களென்று நினைத்துக் கொள்ளுங்கள்

"புறஜாதியார்" (Gentiles) - பவுல் பொதுவாகப் புறஜாதியாருக்கே தனது நிருபங்களை எழுதியிருக்கிறார் (எபே 2:11, 19, எபே 3:1, 8; எபே 4:17)

புறஜாதியாரின் பழைய நிலைமை

1 விருத்தசேதன மில்லாதவர்கள் (எபே 2:11

2 கிறிஸ்துவைச் சேராதவர்கள் எபே 2:12

3 இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்கள் (எபே 2:12

4 வாக்குத்தத்தத்தின் உடன் படிக்கைகளுக்கு அந்நியர் (எபே 2:12

5 தேவனிடத்தில் நம்பிக்கை யில்லாதவர்கள் (எபே 2:12

6 இவ்வுலகத்தில் தேவனற்றவர்கள் (எபே 2:12)

கையினால் செய்யப்பட்டது (made by hands) - χειροποίητος - cheiropoieetos - 5499

பெயரடை - கையினால் செய்யப்பட்ட, கை வேலையாகிய (மாற்கு 14:58; அப் 7:48; அப் 17:24; எபே 2:11 எபி 9:11, 24) (ரோமர் 2:28-29 யூதர்கள் விருத்தசேதனத்தின் மூலமாக செய்யப் பட்டவர்கள்

புறம்பானவர் (aliens) - ἀπαλλοτριόω - apallotriooo - 526

வினைச்சொல் - புறம்பானவர் அந்நியர் (to estrange) (எபே 2:12, 4:18 கொலோ 1:2

காணியாட்சி (commonwealth) - πολιτεία - politeia - 4174

பெண்பால் பெயர்ச்சொல் - காணியாட்சிக்குரியவர், பிரஜை - ஒரு பிரஜையின் உரிமைகள் (அப் 22:28, எபே 2:11)

அந்நியர் (stranger) - ξένος - xenos - 3581

பெயரடை - அந்நியனான, புதுமையான, சகையான "stranger" (மத் 25:35-44; மத் 27:7; அப் 17:21, எபே 2:12,19, எபி 11:13 3யோவான் 1:5); "strange" (அப் 17:18; எபி 13:9, 1பேதுரு 4:12), "host" (ரோமர் 16:23)

"வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகள்" - ஆபிரகாம் மோசே தாவீது ஆகியோரோடு தேவன் செய்து கொண்ட உடன்படிக்கைகள் மூலமாக யூதருக்குப் பூமிக்குரிய ஆசீர்வாதங்களும், பரலோகத்திற்குரிய ஆசீர்வாதங்களும் வாக்குப்பண்ணப் பட்டிருக்கிறது (ஆதி 12:1-3; யாத் 20, 2சாமு 7)

2 அதிகாரம்

8. கிறிஸ்து இயேசுவிற்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினால் புறஜாதியாரின் தற்போதைய நிலைமை

எபே 2:13 முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்

கிறிஸ்தவர்களின் தற்காலத்து நிலைமை

1 கிறிஸ்து இயேசுவிற்குள் இருக்கிறார்கள் (எபே 2:13)

2 கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானார்கள் (எபே 2:13)

3 தேவனோடு சமாதானம் பெற்றிருக்கிறார்கள் (எபே 2:14)

4 இஸ்ரவேலோடு ஒன்றாய் இருக்கிறார்கள் (எபே 2:14-16)

5 சபையின் அங்கமாக இருக்கிறார்கள் (எபே 2:15-16)

6 தேவனோடு ஒப்புரவாகி இருக்கிறார்கள் (எபே 2:16)

7 பரிசுத்த ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறார்கள் (எபே 2:18)

8 பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாராய் இருக்கிறார்கள் (எபே 2:19)

9 மெய்யான அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டிருக்கிறார்கள் (எபே 2:20; 2கொரி 3:9)

10 தேவனுடைய வாசஸ்தலமாக இருக்கிறார்கள். (எபே 2:22)

"முன்னே தூரமாயிருந்த நீங்கள்" - புறஜாதியார் (எபே 2:11)

"கிறிஸ்துவின் இரத்தத்தினாலே" - இயேசு கிறிஸ்துவின் மரணத்தினாலே. (ரோமர் 5:9; பிலி 2:8; கொலோ 1:14,20; எபி 10:19-23)

III. சபை - (மத் 16:18; 18:15; ரோமர் 12:4; 1கொரி 10:17; 12:12; எபே 1:22; 2:14-3:21; 4:12; 5:21; கொலோ 1:18,24; 1தீமோ 3:15; எபி 12:23)

1. யூதரும் புறஜாதியாரும் புதிய ஏற்பாட்டு சபையில் இருக்கிறார்கள்

எபே 2:14 எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து

எபே 2:15 சட்டதிட்டங்களாகிய நியாயப் பிரமாணத்தைத் தமமுடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம் பண்ணி,

எபே 2:16 பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார்.

எபே 2:17 அல்லாமலும் அவர் வந்து, தூரமாயிருந்த உங்களுக்கும் சமீபமாயிருந்த அவர்களுக்கும் சமாதானத்தைச் சுவிசேஷமாக அறிவித்தார்.

எபே 2:18 அந்தப்படியே நாம் இருதிறத்தாரும் ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் மூலமாய்ப் பெற்றிருக்கிறோம்.

எபே 2:19 ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து,

எபே 2:20 அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக் கல்லாயிருக்கிறார்;

2 அதிகாரம்

எபே 2:21 அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது.

எபே 2:22 அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்.

கிறிஸ்து நமக்கு இருக்கிற விதம்

1. சமாதானம் (எபே 2:14)
2. ஞானம் (1கொரி 1:30)
3. நீதி (1கொரி 1:30)
4. பரிசுத்தம் (1கொரி 1:30)
5. மீட்பு (1கொரி 1:30)
6. ஒளி (யோவான் 8:12)
7. வழியும், சத்தியமும், ஜீவனும் (யோவான் 14:6)

"இருதிறத்தாரையும் ஒன்றாக்கினார்" யூதரும், புறஜாதியாரும் கிறிஸ்துவில் ஒன்றாயிருக்கிறார்கள். (எபே 2:14,16; எபே 3:6; எபே 4:4-6; 1கொரி 12:13; கலா 3:28; கொலோ 3:11; ரோமர் 1:16; ரோமர் 10:9-13)

"பிரிவினையாகிய நடுச்சுவர்" (wall of partition) - யூதரையும், புறஜாதியாரையும் பிரிக்கும் நடுச்சுவரை இயேசு கிறிஸ்து தகர்த்தார். தேவாலயத்தில் யூதரும் புறஜாதியாரும் கூடி வந்திருக்கும்போது இவ்விரு பிரிவினருக்கும் இடையில் ஆறடி உயரத்தில் ஒரு நடுச்சுவர் கட்டப்பட்டிருக்கும். புறஜாதியார் இந்தச் சுவரைத் தாண்டி யூதர்கள் கூடியிருக்கும் இடத்திற்குச் செல்லக்கூடாது. இந்தத் தடையை மீறும் புறஜாதியாருக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்படும். யூதர்கள் புறஜாதியாரோடு கலவாமல் தனித்து ஜீவிப்பதையே விரும்பினார்கள். தங்களுக்கு அருகாமையில் வசிக்கும் புறஜாதியார் தேசத்திற்கும் தங்களுக்குமிடையே இயற்கையான எல்லையாகிய ஆறோ அல்லது மலையோ எல்லையாக இருக்க வேண்டுமென்று விரும்பினார்கள். யூதர்கள் செல்லும் இடங்களில் எல்லாம் தங்களுடைய பிரமாணங்களையும் ஆசார முறைமைகளையும் பண்டிகைகளையும் விசேஷித்த நாட்களையும் மாதங்களையும் வருஷங்களையும் கடைபிடித்து புறஜாதியாரிடமிருந்து தங்களை வேறுபிரித்தே ஜீவித்து வந்தார்கள். இதுவே பிரிவினையாகிய நடுச்சுவர் ஆகும். இயேசு கிறிஸ்து மோசேயின் பிரமாணத்தையும் அதன் கட்டளைகளையும் நியமங்களையும் சடங்குகளையும் அகற்றிவிட்டு ஒரு புதிய பிரமாணத்தை ஏற்படுத்தினார். இயேசு கிறிஸ்துவின் புதிய பிரமாணத்தின் பிரகாரம் யூதரும் புறஜாதியாரும் ஒன்றாயிருக்கிறார்கள். இவர்களுக்கிடையே புதிய பிரமாணத்தில் தடையாகிய நடுச்சுவர் இல்லை. தேவாலயத்தில் திரைச்சீலை இரண்டாகக் கிழிந்தது. இயேசு கிறிஸ்து யூதருக்கும் புறஜாதியாருக்கும் நடுவிலுள்ள பிரிவினைச் சுவரைத் தகர்த்ததைக் குறிப்பிடுகிறது. யூதர் மாத்திரம் அல்லாமல் புறஜாதியாரும் தேவனுடைய பரிசுத்த சந்நிதிக்குள் பிரவேசிக்க முடியும். இவ்வாறாக பழைய பிரமாணம் ஒழிந்தது. புதிய பிரமாணம் உண்டாயிற்று.

நடுச்சுவர் (wall of partition)

μεσότοιχον - mesotoichon 3320

பால்: வேறுபாடற்ற பெயர்ச்சொல்
நடுச்சுவர்

பிரிவினை (partition) - φραγμός phragmos 5418

ஆண்பால் பெயர்ச்சொல் - வேலி, பிரிவினை (a fence, protection, defense). (மத் 21:33; மாற்கு 12:1; லூக்கா 14:23; எபே 2:14)

2 அதிகாரம்

ஒழித்தல் (abolished) - καταργέω - katargeoo – 2673

விணைச்சொல் - கெடு, அவமாக்கு, ஒழிந்துபோ, அழிந்துபோ, பரிகரி நீக்கு, வியர்த்தமாக்கு (make of no effect) (ரோமர் 3:3; ரோமர் 4:14, கலா 3:17; கலா 5:4); (come and bring to naught) (1கொரி 1:28, 1கொரி 2:6); (done away) (1கொரி 13:10; 2கொரி 3:7,11,14), (fail) (1கொரி 13:8); (cease) (கலா 5:11); (vanish away) (1கொரி 13:8 ; (make void) (ரோமர் 3:31); (cumber) (லூக்கா 13:7); (deliver) (ரோமர் 7:6); (loose) (ரோமர் 7:2), (put away) (1கொரி 13:11); (put down) (1கொரி 15:24); (destroy) (ரோமர் 6:6, 1கொரி 6:13; 1கொரி 15:26; 2தெச 2:8; எபி 2:14) (abolish) (2கொரி 3:13; எபே 2:15, 2தீமோ 1:10)

"சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தை இயேசு கிறிஸ்து தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்தார்" - இயேசு கிறிஸ்து ஒழித்த நியாயப் பிரமாணங்கள் முழுவதுமாக ஒழிந்து போயிற்று. அவை ஒன்றுமில்லாமலாயிற்று. இயேசு கிறிஸ்து சட்டதிட்டங்களையெல்லாம் ஒழித்தார். பாவத்தை வெளிப்படுத்துவதற்காக நியாயப்பிரமாணம் உண்டாயிற்று. (ரோமர் 3:19-20; ரோமர் 7:13; கலா 3:19 25) இயேசு கிறிஸ்து வரும்வரையிலும் யூத ஜனத்தாரை ஒரு தனிப்பட்ட ஜாதியாக வைத்திருப்பதற்காக நியாயப் பிரமாணம் கொடுக்கப்பட்டது. இயேசு கிறிஸ்து வந்தபின்பு, நியாயப்பிரமாணம் தேவையற்றது.

சட்டதிட்டம் (ordinance) - δόγμα dogma 1378

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - கட்டளை, சட்டம், சட்டதிட்டம் "decree" (லூக்கா 2:1; அப் 16:4, அப் 17:7) "ordinance" (எபே 2:15; கொலோ 2:14)

"தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்தார்" - இயேசு கிறிஸ்து தமது மரணத்தினாலே சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தை ஒழித்தார் (எபே 2:14-15; கொலோ 2:14-17 2கொரி 3:6-15)

"இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து இப்படிச் சமாதானம் பண்ணினார்" - நியாயப்பிரமாணத்தினால யூதருக்கும் புறஜாதியாருக்கும் நடுவே பிரிவினையும் பகையும் உண்டாயிற்று. இவ்விருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரு புதிய மனுஷனாகச் சிருஷ்டிக்க வேண்டுமென்று தேவன் திட்டமிட்டார். தேவனுடைய திருச்சபையே யூதரும், புறஜாதியாரும் அடங்கிய புதிய மனுஷனாகும். எல்லா மனுஷருக்கும் இயேசு கிறிஸ்து இவ்வாறு சமாதானம் பண்ணுகிறார். (எபே 3:6; 1கொரி 12:13, கலா 3:28 கொலோ 3:11)

ஒப்புரவாக்குதல் (reconcile) - ἀποκαταλλάσσω - apokatallassoo - 604

விணைச்சொல் - ஒப்புரவாக்கு (to bring together again) (எபே 2:16, கொலோ 1:20-21)

"பகையைச் சிலுவையினால் கொன்று" - நியாயப்பிரமாணத்தின் மூலமாகப் பகை உண்டாயிற்று. அந்தப் பகை கொல்லப்படும்போது பகையை உண்டுபண்ணும் நியாயப்பிரமாணம் அழிக்கப்படுகிறது. (எபே 2:14-15)

"தூரமாயிருந்த உங்களுக்கும்" புறஜாதியார் (எபே 2:11-13)

"சமீபமாயிருந்த அவர்களுக்கும்" யூதஜாதியார் (எபே 2:11-13)

2 அதிகாரம்

கிறிஸ்துவின் கிரியைகள்

1 கிறிஸ்து நமக்காக மரித்தார் (எபே 2:13)

2 கிறிஸ்து நம்முடைய சமாதான காரணரானார் (எபே 2:14)

3 யூதரையும், புறஜாதியாரையும் ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்தார் (எபே 2:14-16)

4 யூதருக்கும், புறஜாதியாருக்கும் நடுவில பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்தார் (எபே 2:14-16)

5 நியாயப்பிரமாணத்தை ஒழித்தார் (எபே 2:15)

6 யூதருக்கும், புறஜாதியாருக்கும் சமாதானம் பண்ணினார் (எபே 2:15-16)

7 மனுஷரைத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார் (எபே 2:16)

8 யூதருக்கும், புறஜாதியாருக்கும் இடையே இருந்த பகையைச் சிலுவையினால் கொன்றார் (எபே 2:15-16)

9 எல்லா மனுஷருக்கும் சமாதானத்தைச் சுவிசேஷமாக அறிவித்தார் (எபே 2:17)

10 எல்லோரும் பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை உண்டு பண்ணியிருக்கிறார் (எபே 2:18)

"அவர் மூலமாய்" - பிதாவாகிய தேவனும், குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் தனித்தனியே வெவ்வேறு ஆள்தத்துவம் உடையவர்கள் என்பதை விளக்கும் பல வசனங்களில் இந்த வசனமும் ஒன்றாகும் (யோவான் 5:7)

சேரும் சிலாக்கியம் (access) - προσαγωγή - prosagoogee - 4318

பெண்பால் பெயர்ச்சொல் - அடைதல், சேர்தல் (the privilege of entrance) (எபே 2:18, 3:12, ரோமர் 5:2)

"ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல்" - (அப 7:6,29; எபே 2:13, 1பேதுரு 2:11) புறஜாதியார் இனி அந்நியரோ அல்லது பரதேசிகளோ அல்ல. அவர்கள் தேவனுடைய வீட்டாராய் இருக்கிறார்கள் பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாராகவும் இருக்கிறார்கள் (எபே 2:19; பிலி 2:20)

அந்நியர் (foreigners) - πάροικος - paroikos - 3941

பெயரடை - அந்நியர், அந்நியதேசத்தில் சஞ்சரிப்பவர்

வீட்டார் (household) - οἰκεῖος - oikeios - 3609

பெயரடை - குடும்பத்தாரான வீட்டாரான (the domestics) (கலா 6:10; எபே 2:19, 1தீமோ 5:8

"அஸ்திபாரம்" - கட்டடம் அஸ்திபாரத்தின்மீது கட்டப்படும் (மத் 7:25) இயேசு கிறிஸ்துவே மெய்யான அஸ்திபாரமாக இருக்கிறார் (1கொரி 3:11) அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் கிறிஸ்தவ மார்க்கத்தின் அஸ்திபாரத்தில் பங்கு வகிக்கிறார்கள் மற்றவர்கள் அஸ்திபாரத்தின்மீது சுவராகக் கட்டப்படுகிறார்கள் எல்லா விசுவாசிகளுமே தேவனுடைய ஆலயமாகவும், பரிசுத்த ஆவியானவர் மூலமாக தேவனுடைய வாசஸ்தலமாகவும் இருக்கிறார்கள்

அஸ்திபாரம் (foundation) θεμέλιον - themelion - 2310

பெயர்ச்சொல் - ஆதாரம், அஸ்திபாரம்

மூலைக்கல் (chief cornerstone) ἀκρογωνιαῖος akrogooniaios 204

2 அதிகாரம்

பெயரடை - மூலைக்கல் எபே 2:20 (1பேதுரு 2:6 - (அப் 4:11; சங் 118:22 ஏசா 28:16

இசைவாய்க்கூட்டி இணைக்கப்படுதல் **(fitly framed together) - συναρμολογέω - synarmologeoo** - 4883

வினைச்சொல் - இசைவாய்க்கூட்டு இணை, இசைவாய்க்கூட்டி இணைக்கப்படு **(harmoniously fitted together)** (எபே 2:20, 4:16)

“கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது” இயேசு கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் புதிய விசுவாசிகள் சேர்ந்து கொண்டே இருக்கிறார்கள்

“தேவனுடைய வாசஸ்தலம்” - தேவனுக்கு ஆளத்துவப் பணியும் சரீரத் தத்துவப் பணியும் உள்ளது. ஒவ்வொரு பரிசுத்தவானும் தேவனைப் பிரதிபலிக்கிறவராகவும் தேவன் செய்யும் கிரியைகளை இந்த உலகத்தில் தேவனுக்காகச் செய்கிறவராகவும் இருக்கிறார். தேவனோடு ஐக்கியமாக இருக்கும் விசுவாசியினிடத்தில் மட்டுமே தேவன் வாசம் பண்ணுகிறார் (லூக்கா 22:3)

வாசஸ்தலம் **(habitation) - κατοικητήριον - katoikeeteerion** - 2732

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல்- வாசஸ்தலம், குடியிருப்பு **(a dwelling place)** (எபே 2:22, வெளி 18:2

3 அதிகாரம்

2. சபை - பவுலுக்கு விசேஷித்த வெளிப்பாடு

எபே 3:1 இதினிமித்தம், பவுலாகிய நான் புறஜாதியாராயிருக்கிற உங்கள் பொருட்டுக் கிறிஸ்து இயேசுவினி மித்தம் கட்டுண்டவனாயிருக்கிறேன்.

எபே 3.2 உங்களுக்காக எனக்கு அளிக்கப்பட்டிருக்கிற தேவ கிருபைக்குரிய நியமமும் இன்னதென்று கேட்டிருப்பீர்களே.

எபே 3:3 அதென்னவெனில் புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரருமாய் ஒரே சரீரத்திற்குள்ளான வர்களுமாய் கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத்துக்கு உடன் பங்காளிகளுமாயிருக்கிறார்களென்கிற இந்த இரகசியத்தை அவர் எனக்கு வெளிப்படுத்தி அறிவித்தார்.

எபே 3:4 இதைக் குறித்து நான் முன்னமே சுருக்கமாய் எழுதியிருக்கிறேன்.

"கட்டுண்டவனாயிருக்கிறேன்" கிறிஸ்துவில் யூதஜாதியாரும் புறஜாதியாரும் சமமானவர்கள். இதன் நிமித்தமாக பவுல் புறஜாதியாருக்காக இயேசு கிறிஸ்துவின் கைதியாக இருக்கிறார்.

நியமம் (dispensation) - οἰκονομία - oikonomia - 3622

பெண்பால் பெயர்ச்சொல் - உக்கிராணம், நியமம் (stewardship) (எபே 1:10)

"இரகசியம்" (mystery) - (மத் 13:11)

உடன் சுதந்தரர் (fellowheirs) - συγκληρονόμος synkleeronomos 4789

ஆண்பால் பெயர்ச்சொல் - உடன் சுதந்தரர், உடன்சுதந்தரித்துக்கொள் (joint heirs). (ரோமர் 8:17 எபே 3.3, எபி 11:9, 1பேதுரு 3.7

ஒரே சரீரம் (same body) - σύσσωμος - syssoomos - 4954

பெயரடை - ஒரே சரீரத்திற்குள்ளான (Members-of-a-joint-body; a new body) - ஏற்கெனவே இருக்கும் யூத சரீரத்திற்குள் இணைவதை இது குறிப்பிடாது. (எபே 2:15; எபே 4:13)

உடன்பங்காளி (partakers) - 4830 συμμέτοχος - symmetochos - ஸுமமெடோகோஸ்

பெயரடை - உடன்பங்காளி (joint-partakers) - (எபே 3:3, 5:7

3. சபையின் இரகசியம் முற்காலங்களில் மறைக்கப்பட்டிருந்தது இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது

எபே 3:5 அதை நீங்கள் வாசிக்கையில் கிறிஸ்துவின் இரகசியத்தைக் குறித்து எனக்கு உண்டாயிருக்கிற அறிவை அறிந்து கொள்ளலாம்.

எபே 3:6 இந்த இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ் தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது போல முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை.

எபே 3:7 தேவனுடைய பலத்த சத்துவத்தால் எனக்கு அளிக்கப்பட்ட வரமாகிய அவருடைய கிருபையினாலே இந்தச் சுவிசேஷத்துக்கு ஊழியக்காரனானேன்.

எபே 3:8 பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனாகிய நான் கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

3 அதிகாரம்

எபே 3:9 தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே.

"கிறிஸ்துவின் இரகசியம்" - புறஜாதியாரைத் தேவன் இரட்சிப்பது ஒரு இரகசியமல்ல. ஆதாமின் சந்ததியார் அனைவரும் தேவனுடைய சமூகத்திலிருந்து விழுந்து போய்விட்டார்கள். அவர்களைப் பழைய நிலைமைக்கு மீட்டுக் கொண்டு வரவேண்டும் (ஆதி 3:15). ஆபிரகாமும் ஒரு புறஜாதியான். எல்லாத் தேசங்களையும் ஆசீர்வதிக்கும் வித்து அவனிடத்திலிருந்து உண்டாயிற்று. (ஆதி 12:1-3; (8) புறஜாதியாருடைய இரட்சிப்பைத் தீர்க்கதரிசிகள் முன்னறிவித்தார்கள் (ரோமர் 9:24-33; ரோமர் 10:19-21) புறஜாதியாருடைய இரட்சிப்பின் இரகசியம் கடந்த காலத்தில் தேவனிடத்தில் ஒரு மறைபொருளாக இருந்தது. நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளாமலேயே புறஜாதியார் இரட்சிக்கப்பட முடியும் என்பதே அந்த இரகசியமாகும். நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளிலிருந்து யூதரும் புறஜாதியாரும் விடுவிக்கப்படுகிறார்கள். சபையாகிய ஒரு புதிய சரீரமாக பரிசுத்த ஆவியானவர் இவர்களை உண்டு பண்ணுகிறார் (1கொரி 12:12-13, 27-31; எபே 1:22-23; எபே 3:3-11; எபே 4:11-16; எபே 5:23-33; கொலோ 1:18,24). யூதரும் புறஜாதியாரும் ஒன்றாயிருப்பது புதிய பிரமாணத்தின் பிரகாரம் ஏற்படுகிறது. புதிய பிரமாணத்தில் யூதருக்கும் புறஜாதியாருக்கும் இடையே பட்சபாதம் எதுவுமில்லை. இருதிறத்தாரும் சமமானவர்கள் (எபே 2:14-15; 1கொரி 12:13; கலா 3:27-28; கொலோ 1:18-29; கொலோ 3:10-11; எபி 11:10-16; எபி 13:14; வெளி 21:9-10) இதுவே புதிய வெளிப்பாடு ஆகும் (எபே 3:3-9; கலா 1:12; கலா 2:2; கலா 3:13-14)

முற்காலம் (generation) - γενεά genea 1074

பெண்பால் பெயர்ச்சொல் - தலைமுறை, சந்ததி, வம்சம், காலம், பூர்வகாலம், முற்காலம்

முற்காலம் (generation) - αἰών - aioon 165

ஆண்பால் பெயர்ச்சொல் - காலம், உலகம், பிரபஞ்சம், அநாதி, சதாகாலங்கள்

(அ) என்றென்றைக்கும் அதாவது கடந்த காலத்தில் - யோவான் 6:5; 80,32

(ஆ) ஒரு குறிப்பிட்ட காலம் அதாவது இம்மை அல்லது மறுமை - மத் 12:32; மாற் 10:30

ஊழியக்காரன் (minister) - διάκονος - diakonos - 1249

ஆண்பால் அல்லது பெண்பால் பெயர்ச்சொல் - பணிவிடைக்காரன், ஊழியக்காரன், வேலைக்காரன், ஊழியஞ்செய்கிறவர், உதவிக்காரர் (a deacon) - தேவனிடமிருந்து நேரடியாகக் கட்டளைகளைப் பெற்று தேவனுக்காக ஊழியம் செய்கிறவர்

அளவற்றது (unsearchable) - ἀνεξιχνίαστος - anexichniastos - 421

பெயரடை - ஆராயப்படாத, இரகசியமான, அளவற்றது (untraceable) - (ரோமர் 11:33; எபே 3:8) தேவனுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றும்போது மனுக்குலத்தைக் குறித்த அவருடைய திட்டத்தைத் தெரிந்து கொள்ளலாம். (எபே 2:7; எபே 3:8-9)

தீர்க்கதரிசன எண் - 5

"தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானம்" (எபே 3:11) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. இயேசு கிறிஸ்து தம்முடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதியாருக்கும் வெளிப்படுத்த சித்தம் கொண்டிருக்கிறார் (எபே 1:4-12; எபே 2:7; எபே 3:9-11; 1கொரி 15:24-29; வெளி 21-22)

3 அதிகாரம்

அநாதி (world) - αἰών - aioon - 165

ஆண்பால் பெயர்ச்சொல் – காலம் உலகம், பிரபஞ்சம், அநாதி, சதாகாலங்கள் (ages; beginning of the ages)

அ. என்றென்றைக்கும் அதாவது கடந்த காலத்தில் – யோவான் 6:5; 80:32

ஆ. ஒரு குறிப்பிட்ட காலம் அதாவது இம்மை அல்லது மறுமை - மத். 12:32; மாற். 10:30

4. தேவனுடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் தெரிய வருகிறது

எபே 3:10 உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக.

எபே 3:11 இயேசுகிறிஸ்துவைக் கொண்டெல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு இந்தக் கிருபை எனக்கு அளிக்கப் பட்டிருக்கிறது.

எபே 3:12 அவரைப் பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் நமக்கு தைரியமும் திடநம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கிறது.

"உன்னதங் களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும்" யூதரும், புறஜாதியாரும் ஒரே சரீரமாக ஆக்கப்பட்டிருப்பது தேவனுடைய அநந்த ஞானம் ஆகும். இந்த ஞானத்தைச் சபையின் மூலமாக உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் தெரியப்படுத்த தேவன் சித்தம் கொண்டிருக்கிறார் எபே 3:10-11 எபே 6:12

"இப்பொழுது தெரியவரும் பொருட்டாக" (எபே 1:3)

"அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய்" - சபையானது தேவனுக்குத் தன்னைக் கீழ்ப்படுத்தி தேவனுடைய அநந்த ஞானத்தைப் பெற்றுக் கொள்ளும்போது உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் தேவனுடைய நித்திய நோக்கம் கற்பித்துத் தரப்படும். (எபே 3:10-11; எபே 1:11; எபே 2:7 சபையைப் பற்றிய உபதேசம் சபையின் ஸ்தானம் ஒற்றுமை சபை நடக்க வேண்டிய விதம் சபையின் முடிவு ஆகியவற்றைப் பற்றிய காரியங்களைப் பவுல் தனது நிருபங்களில் எழுதியிருக்கிறார் (ரோமர் 12; 1கொரி 12; எபே 2-5 கொலோ 1)

ஐக்கியம் (fellowship) - κοινωνία - koinoonia - 2842

பெண்பால் பெயர்ச்சொல் - அந்நியோந்நியம், ஐக்கியம், பங்கை ஏற்றுக்கொள்தல், பொருள், சகாயம் தர்மம், உடன்படு (signifying a fellowship or a religious community) (2கொரி 13:14)

உக்கிராணம் (stewardship) - οἰκονομία - oikonomia - 3622

பெண்பால் பெயர்ச்சொல் உக்கிராணம்

"இயேசுகிறிஸ்துவைக் கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவன் (யோவான் 1:3; கொலோ 1:15-18

மனுஷன் கற்றுக்கொள்ள வேண்டிய காரியங்கள்

1. எல்லாக் காரியங்களிலும் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும். (எபே 3:9-11

2. தேவனுடைய பிரமாணங்கள் நீதியானவை, முடிவானவை. (சங் 119:89; ஏசா 55:11, 2தீமோ 3:16-17)

3. மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான் (கலா 6:7-8

4. பாவத்தின் சம்பளம் மரணம். (ஆதி 2:17; எசே 18:4; ரோமர் 6:23

3 அதிகாரம்

5 தேவனுடைய நியதிகளைக் கைக்கொள்ளும்போது மனுஷருடைய பாவங்கள் மன்னிக்கப்படும். (2கொரி 7:10; 1யோவான் 1:9)

6 தேவனுடைய இராஜ்யமே நீதியானது. (ஏசா 9:6-7; வெளி 20)

7 தேவனுக்குச் சுயாதீனமாகவும் அன்போடும் கீழ்ப்படிவது மனுஷருக்கு உத்தமமான காரியம் (மத் 22:37 யோவான் 3:16 வெளி 22:17 எபே 3:10)

8 பூமியில் மனுஷர் செழித்திருப்பதற்கு நீதியும், நியாயமும் செழித்திருக்க வேண்டும். எபே 1:4-12 எபே 2:7 எபே 3:9-11 வெளி 11:15-18 1கொரி 15:24-28

9 தேவரீரே சகலத்தையும் சிருஷ்டித்தவர் (எபே 1:4-12 வெளி 4:11 வெளி 5:11-14 கொலோ 1:15-18)

10 தம்மிடத்தில் மனந்திரும்பி வருபவர்களை மன்னிப்பதற்குத் தேவன் இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராகவும், கிருபை பெருத்தவராகவும் இருக்கிறார் (ரோமர் 1:5,16, ரோமர் 3:24-26, ரோமர் 16:26 எபே 2:4-10 தீத்து 2:11-14 தீத்து 3:5-6)

11 தேவனே மாத்திரமே நீதிபரர் (ஏசா 57:33, வெளி 4:8; வெளி 6:10 வெளி 15:4

12 தேவனுக்கு எதிராக கலகக்காரர்கள் கூறும் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பொய்யானவை (ஏசே 28:16 எபே 6:16, வெளி 12:10)

13 தேவன் நடப்பிக்கும் எல்லாக் கிரியைகளும் தமது சிருஷ்டிகளின் நன்மைக்கு ஏதுவாகவே அமைந்திருக்கிறது (மத் 7:7-11, எபே 2:7 வெளி 4:11)

14 தேவன் இதுவரையிலும் நீதியாகக் கிரியை செய்ததுபோன்று வேறு யாரும் கிரியை செய்ததில்லை (1கொரி 11:3, 1கொரி 15:24-28; எபே 2:9-11 கொலோ 1:15-18; வெளி 4:11

15 தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணுகிறவர்கள் தேவனுடைய கோபாக்கினைக்கு ஆளாவார்கள் (ஏசா 66:22-24 வெளி 14:9-11 மத் 25:41, 46 மாற்கு 9:43-48

16 இரட்சிக்கப்பட்டு தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து செயல்படுகிறவர்கள் அவருடைய நித்திய சுதந்தரராக இருப்பார்கள் அவருக்குக்கீழ் இராஜாக்களாகவும் ஆசாரியர்களாகவும் இருந்து இந்த உலகத்தை நித்திய காலமாக ஆளுகை செய்வார்கள் (தானி 7:18,27 ரோமர் 8:17 1கொரி 6:2-3; எபே 2:7; எபே 3:9-11 2தீமோ 2:12; வெளி 1:6; வெளி 5:10 வெளி 22:4-5

கிறிஸ்துவில் நமக்கு உண்டாயிருக்கும் ஆசீர்வாதங்கள்

1 தைரியமும் ஜெபத்தில் சுதந்தரமாக விண்ணப்பம் பண்ணும் சிலாக்கியமும். (பிலி 4:6)

2 ஜெபத்திற்குப் பதில் கிடைக்கும் என்னும் திட நம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியம் (எபி 4:14-16 எபி 10:19-23

3 இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசம். (எபே 3:12 எபி 12:2 அப 3:16 கலா 2:20

5. தேவனுடைய பரிபூரணமான ஆசீர்வாதங்களுக்காக பத்து அம்ச ஜெபம் எபே 4:1 5:2 ரோமர் 8:12,13,14 கலா 5 கொலோ 3 1தெச 5 1பேதுரு 2 1யோவான் 2,3,4,5

எபே 3:13 ஆகையால் உங்கள் நிமித்தம் நான் அநுபவிக்கிற உபத்திரவங்களினால் நீங்கள் சோர்ந்துபோகாதிருக்க வேண்டிக் கொள்ளுகிறேன்; அவைகள் உங்களுக்கு மகிமையாயிருக்கிறதே.

3 அதிகாரம்

எபே 3:14 இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக் குடும்பத்துக்கும் நாமகாரணராகிய.

எபே 3:15 நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால் படியிட்டு.

எபே 3:16 நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும்.

எபே 3:17 விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும். நீங்கள் அன்பிலே வேரூன்றி. நிலைபெற்றவர்களாகி

எபே 3:18 சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும். நீளமும் ஆழமும் உயரமும் இன்னதென்று உணர்ந்து.

எபே 3:19 அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும் அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ண வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன்

எபே 3:20 நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும்நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே. நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு.

எபே 3:21 சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக ஆமென்

"நான் அநுபவிக்கிற உபத்திரவங்கள்" - பவுல் எபேசியரின் நிமித்தமாக பல உபத்திரவங்களை அனுபவித்தார் இதனால் அவர்கள் சோர்ந்து போக வேண்டாமென்று வேண்டிக் கொள்கிறார் பவுலின் உபத்திரவங்கள் எபேசியருக்கு நன்மையாகவும் மகிமையாகவும் இருக்கிறது தங்களுடைய நீதியைக் காத்துக் கொள்வதற்கு பவுலின் உபத்திரவங்கள் அவர்களுக்கு உதவி புரியும்

குடும்பம் (family) - **πατριά** - **patria** - 3965

பெண்பால பெயர்ச்சொல் - வம்சம் குடும்பம் (லூக்கா 2:4, அப 3:25, எபே 2:14)

"முழுக்குடும்பம்" - தேவனுடைய வித்தாக இருக்கும் அனைவரையும் இந்த வாக்கியம் குறிக்கும். நேரடியான சிருஷ்டிப்பினாலோ பெற்றெடுப்பினாலோ சுவிகாரத்தினாலோ தேவனுடைய பிள்ளைகளாக இருக்கும் அனைவரையும் இந்த வாக்கியம் குறிக்கும் அதனுடன் கடந்த காலம் நிகழ்காலம் வருங்காலம் ஆகிய மூன்று காலங்களிலும் உள்ள தேவனுடைய பிள்ளைகளும் இக்குடும்பத்தில் அங்கம் வகிக்கிறார்கள் துரைத்தனங்கள் அதிகாரங்கள் ஆளுகைகள் பூலோகத்திற்குரியவைகள் பரலோகத்திற்குரியவைகள் தேவதூதர்கள் மனுஷர்கள், சரீரம் ஆவி. ஸ்தாபகர்கள் விழுந்து இரட்சிக்கப்பட்டவர்கள் ஆகிய அனைவரையும் இந்த வாக்கியம் குறிக்கிறது (எபே 1:21-23; எபே 3:10; 1பேதுரு 3:22 ஒருசிலர் முழுக்குடும்பம் என்பது தேவனுடைய சபையை மட்டும் குறிக்கும் என்று வியாக்கியானம் பண்ணுகிறார்கள் ஆவிக்குரிய உலகத்தில் சேராபீன்கள், கேருபீன்கள் பிரதான தூதர்கள் சாதாரண தூதர்கள் இரட்சிக்கப்பட்ட மனுஷருடைய ஆவிகள் ஆகிய அனைவரும் இருக்கிறார்கள் (எபி 12:23 மாம்சத்திற்குரிய உலகத்தில் யூதரும் புறஜாதியாரும் இருக்கிறார்கள் இவர்களில் சிலர் பரலோகத்திலும் பலர் பூலோகத்திலும் இருக்கிறார்கள் பரலோகத்திலும், பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பம் என்பது தேவனுடைய குடும்பத்தில் அங்கம் வகிக்கும் அனைவரையும் குறிக்கிறது.

3 அதிகாரம்

"நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால் படியிட்டு" - ஒருசிலர் தாமாகவே கர்த்தரை நோக்கி முழங்கால் படியிடுகிறார்கள் மற்றவர்களுடைய முழங்கால்கள் ஏற்ற காலத்தில் தேவனுக்கு முன்பாக கட்டாயமாக முடங்கும். (ஏசா 45:23; பிலி 2:10)

முழங்கால் படியிட்டு ஜெபித்தவர்களுக்கு எடுத்துக்காட்டுக்கள்

1. சாலொமோன் (1இராஜா 8:54 2நாளா 6:13)
2. எலியா (1இராஜா 18:42)
3. எஸ்றா (எஸ்றா 9:5)
4. தானியேல் (தானி 6:10)
5. இயேசு (லூக்கா 22:41)
6. ஸ்தேவான் (அப் 7:60)
7. பேதுரு (அப் 9:40)
8. பவுல் (அப் 20:36; அப் 21:5 எபே 3:14)

வேரூன்றுதல் (rooted) - ῥιζόω rhizooo - 4492

விணைச்சொல் - வேரூன்று வேர்கொள் (எபே 3:17, கொலோ 2:7)

நிலைபெறுதல் (grounded) - θεμελιόω - themelioo - 2311

விணைச்சொல் - அஸ்திபாரம் போடு, நிலைபெறு, நிலைநிறுத்து (founded)

அன்பு தரையைப் போன்றது. நாம் இந்த அன்பில் அஸ்திபாரமிட்டு வேரூன்றி நிலை பெற்று வளர்ச்சி பெற வேண்டும்.

தேவனுடைய அன்பின் சுபாவங்கள்

1. எல்லையற்றது - அகலம் (எபே 3:18)
2. முடிவற்றது - நீளம் (எபே 3:18)
3. ஆழம் காணமுடியாதது - ஆழம் (எபே 3:18)
4. அளவிட முடியாதது - உயரம் (எபே 3:18)

தேவனுடைய அன்பின் அகலமும், நீளமும் ஆழமும் உயரமும் மிகப்பெரியது நாம் தேவனுடைய அன்பில் எப்போதும் மூழ்கியிருக்க வேண்டும். தேவனுடைய அன்பு மாறாதது. நித்திய காலத்திற்கும் உரியது. பாவிகளை இரட்சிக்கும் அளவிற்கு இயேசு கிறிஸ்து தம்மைத் தாழ்த்தினார் அதே வேளையில் தமது தெய்வீக மகிமையில் அவர் உயர்ந்தவராகவும் இருக்கிறார் தேவனுடைய அன்பு மனுஷருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற மிகப்பெரிய ஈவு ஆகும் (யோவான் 3:16 கிறிஸ்துவின் மரணம் மனுஷர் மீது அவர் வைத்திருக்கும் அளவற்ற அன்பை வெளிப்படுத்துகிறது (ரோமர் 5:5-10) மனுஷர்மீது பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரி ஊற்றப்படுவதும் மனுஷருடைய ஜீவியத்தை மறுரூபமாக்குவதும் அவர்களுடைய ஜீவியத்தில் கிரியை செய்வதும் மனுஷர்மீது பரிசுத்த ஆவியானவர் வைத்திருக்கும் அன்பை வெளிப்படுத்துகிறது (யோவான் 16:7-15)

"தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும்" இது சாத்தியமான காரியம் எபே 1:17-19 யோவான் 14:12

"நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமை" தேவனுடைய வாக்குத்தத்தங்களின் பிரகாரம் அவரிடமிருந்து நாம் பெற்றுக் கொள்ளும் காரியங்களுக்கு அளவேயில்லை. (2பேதுரு 1:4)

தீர்க்கதரிசன எண் - 6

"சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக" (எபே 3:21) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

4 அதிகாரம்

IV. விசுவாசிகள் நடக்க வேண்டிய விதம்

1. அழைப்பிற்குப்பாத்திரவான்களாக அன்பிலும் ஒற்றுமையிலும் நடக்க வேண்டும்

எபே 4:1 ஆதலால், கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்திமதியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து,

எபே 4:2 மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி,

எபே 4:3 சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்ளுவதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்.

எபேசியருக்குப் பவுல் கூறும் புத்திமதிகள்

1 நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து கொள்ளுங்கள். (எபே 4:1)

2 மிகுந்த மனத்தாழ்மையுடன் நடந்து கொள்ளுங்கள் (எபே 4:2 அப் 20:19; 1பேதுரு 5:5)

3 சாந்தமுடன் நடந்து கொள்ளுங்கள் (எபே 4:2; மத் 5:5)

4 நீடிய பொறுமையுடன் நடந்து கொள்ளுங்கள் (எபே 4:2 1கொரி 13)

5 அன்பினால் ஒருவரையொருவர் தாங்குங்கள் (எபே 4:3)

6 சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள். (எபே 4:3)

ஜாக்கிரதையாயிருப்பது (Endeavouring) - σπουδάζω - spoudazoo - 4704

பொருள் - கருத்தோடிரு, ஜாக்கிரதையாயிரு, பிரயத்தனம் பண்ணு (be forward) (கலா 2:10) (be diligent) (தீத்து 3:12; 2பேதுரு 3:14); (do diligence) (2தீமோ 4:9,21); (give diligence) (2பேதுரு 1:10); (labor) (எபி 4:11) (endeavour) (எபே 4:3; 1தெச 2:17 2பேதுரு 1:15); (study) (2தீமோ 2:15)

2. தேவனுடைய ஒற்றுமை - (1கொரி 12; ரோமர் 21; யோவான் 17)

எபே 4:4 உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே சரீரமும் ஒரே ஆவியும் உண்டு;

எபே 4:5 ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும்,

எபே 4:6 எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார் மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்.

எபே 4:4-6 ஆகிய வசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் "ஒரே" என்னும் காரியங்கள்

1 ஒரே சரீரம் - சபை

2 ஒரே ஆவி - பரிசுத்த ஆவியானவர்

3 ஒரே நம்பிக்கை - கிறிஸ்தவ அழைப்பு

4 ஒரே கர்த்தர் - கர்த்தராகிய இயேசு கிறிஸ்து

5 ஒரே விசுவாசம் - சுவிசேஷத்தின் கோட்பாடுகள்

6 ஒரே ஞானஸ்நானம் - கிறிஸ்துவின் சரீரத்திற்குள் ஞானஸ்நானம். (1கொரி 12:13; கலா 3:27 கொலோ 2:12; ரோமர் 6:3-7)

4 அதிகாரம்

7 ஒரே தேவன் - எல்லாருக்கும் ஒரே பிதாவானவர்

"ஒரே ஞானஸ்நானம்" - முழுக்குதல் லூக்கா 16:24 வெளி 19:13 யோவான் 13:26 பாடுகளில் மூழ்கியிருத்தல் (மத் 20:22-23; லூக்கா 12:50) அடக்கம் பண்ணுதல் (ரோமர் 6:3-7, கொலோ 2:12)

ஞானஸ்நானம் பெறு (baptized) - βαπτίζω - baptizoo - 907

விணைச்சொல் - முழுக்கு, கழுவு ஞானஸ்நானம் பெறு, ஞானஸ்நானம் கொடு, ஸ்நானம் பண்ணு, கைகழுவு

கழுவு - βάπτω - baptoo - 911

விணைச்சொல் - கழுவு

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் ஏழு விதமான ஞானஸ்நானங்கள்

1 யோவான் ஸ்நானனின் தண்ணீர் ஞானஸ்நானம் (மத் 3; மாற்கு 1 லூக்கா 3; லூக்கா 7:29-30, யோவான் 1:31-33; யோவான் 3:23-26, யோவான் 10:40; அப் 1:5; அப் 11:16, அப் 19:3

2 தண்ணீரில் கிறிஸ்துவின் ஞானஸ்நானம் (யோவான் 3:22; யோவான் 4:1-2

3 பாடுகளின் ஞானஸ்நானம் (லூக்கா 12:50)

4 மேகத்திலும், கடலிலும் ஞானஸ்நானம் (1கொரி 10:2

5 தண்ணீரில் விசுவாசிகளின் ஞானஸ்நானம் (மத் 28:19 மாற்கு 16:16, அப் 2:38-41 அப் 8:12-16,36-38; அப் 9:18 அப் 10:47-48; அப் 16:15,33 அப் 18:8, அப் 19:5; அப் 22:16; 1கொரி 1:13-17; 1பேதுரு 3:21)

6 கிறிஸ்துவிற்குள்ளும், அவருடைய சரீரத்திற்குள்ளும் ஞானஸ்நானம் (ரோமர் 6:3-7, 1கொரி 12:13; கலா 3:27, கொலோ 2:12

7 பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் (மத் 3:11,14 மத் 20:22-23; மாற்கு 1:8 மாற்கு 10:38-39; லூக்கா 3:16, யோவான் 1:33; யோவான் 7:37-39 அப் 1:5; அப் 11:16; அப் 19:2-3,

விசுவாசிகள் எடுக்க வேண்டிய ஞானஸ்நானம்

1 கிறிஸ்துவிலும் அவருடைய சரீரத்திற்குள்ளும் ஒருவர் மனந்திரும்பி புதிதாய் பிறக்கும்போது எடுக்க வேண்டிய ஞானஸ்நானம் இது ஒரே ஞானஸ்நானம் என்று அழைக்கப்படுகிறது. (எபே 4:5) இந்த ஞானஸ்நானம் மட்டுமே ஒரு ஆத்துமாவை இரட்சிக்கும் அந்த ஆத்துமாவை கிறிஸ்துவின் சரீரத்திற்குள் கொண்டு வரும்

2 ஒருவர் இரட்சிக்கப்பட்ட பின்பு எடுக்கும் தண்ணீர் ஞானஸ்நானம் (மத் 3:11)

3 பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம். தெய்வீக வல்லமையை பெற்றுக் கொள்வதற்காக விசுவாசி இந்த ஞானஸ்நானம் பெறவேண்டும் தண்ணீர் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பாகவே (அப் 10:44-48) அல்லது தண்ணீர் ஞானஸ்நானம் எடுத்த பின்போ (அப் 1:4-8, அப் 2:1-11 அப் 8:12-21; அப் 19:1-7) ஒரு விசுவாசி பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்வார்

கிறிஸ்துவிற்குள்ளும் அவருடைய சரீரத்திற்குள்ளும் நமக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறவர் பரிசுத்த ஆவியானவர் (1கொரி 12:13)

பரிசுத்த ஆவியில் நமக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறவர் இயேசு கிறிஸ்து. (மத் 3:11; யோவான் 1:31-33

ஊழியக்காரர்கள் நமக்கு தண்ணீரில் ஞானஸ்நானம் கொடுக்கிறார்கள் (மத் 28:19)

எபேசியர் - தொகுப்புரை

4 அதிகாரம்

3. நமது சரீரத்திற்கு கிறிஸ்துவின் வரங்கள் - (1கொரி 12:1)

எபே 4:7 கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப் பட்டிருக்கிறது.

எபே 4:8 ஆதலால் அவர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப் பட்டவர்களைச் சிறையாக்கி மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார் என்று சொல்லி யிருக்கிறார்.

எபே 4:9 ஏறினார் என்பதினாலே அவர் அதற்கு முன்னே பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார் என்று விளங்குகிறதல்லவா?

எபே 4:10 இறங்கினவரே எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக எல்லா வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு ஏறினவருமாயிருக்கிறார்.

எபே 4:11 மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப் பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத் தக்க பூரண புருஷராகும் வரைக்கும்

"நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது" கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாகத் தேவனுடைய கிருபை விசுவாசிகளுக்கு வித்தியாசமான அளவுகளில் அளிக்கப்படுகிறது. (ரோமர் 12:3, யோவான் 3:34)

எபேசியர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன வசன - 1

"அவர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப் பட்டவர்களைச் சிறையாக்கி மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார்" எபே 4:8 சங் 68:18 இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்து நாற்பது நாட்களுக்குப் பின்பு அவர் பரமேறிய போது இக்காரியம் நடைபெற்றது. (அப் 1:3-11; லூக்கா 24:51; மாற்கு 16:19)

இயேசு கிறிஸ்து உன்னதத்திற்கு ஏறிய போது செய்த காரியங்கள்

1. பூமியின் தாழ்விடங்களில் சிறைப்பட்டிருந்த நீதிமான்களின் ஆவிகளை விடுதலையாக்கினார் (எபே 4:8, சங் 68:18)
2. சிறைப்பட்டிருந்த இவர்களை இயேசு கிறிஸ்து சிறையாக்கி பரலோகத்திற்கு அழைத்துச் சென்றார் (எபே 4:8 சங் 68:18)
3. மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார் (எபே 4:8,11)

உன்னதம் (high) - ΰψος - hypsos - 5311

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - உன்னதம், உயரம் "height" (எபே 3:18; வெளி 21:16)

"சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி" - ஆபேலின் காலத்திலிருந்து இயேசு கிறிஸ்துவின் காலம் வரையிலும் மரித்துப்போன பரிசுத்தவான்களைச் சாத்தான் பூமியின் தாழ்விடமான பாதாளத்தில் சிறையில் வைத்திருந்தான். இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு, அவர் பூமியின் இந்த தாழ்விடத்திற்குச் சென்று சிறைப் பட்டிருந்தவர்களைத் தமக்குச் சிறையாக மீட்டுக்கொண்டு பரலோகத்திற்கு அழைத்துச் சென்றார். இதன்மூலமாக இயேசு கிறிஸ்து மரணத்தையும் நரகத்தையும் ஜெயித்து தமது பரிசுத்தவான்களை விடுவித்தார் (எபி 2:14-15; லூக்கா 16:23) இவர்களை விடுவித்தபின்பு பூமியின் தாழ்விடங்களாகும் (எபே 4:8-10; மத் 12:40) இந்தத் தாழ்விடங்களில் பரிசுத்தவான்கள் மரித்த பின்பு தங்களுடைய ஆத்துமாவிலும் ஆவியிலும் உயிரோடு இருந்தார்கள். இவர்களைச்சாத்தான் சிறைவைத்திருந்தான். இதன் வாயிலாக மரித்தோரின் ஆத்துமா மரிப்பதில்லை என்று தெரிய வருகிறது. மரித்துப்போன ஆத்துமாவைச் சாத்தானால் சிறைப்பிடித்து வைக்க முடியாது. பூமியின் தாழ்விடங்களிலிப்போது பரிசுத்தவான்களின் ஆத்துமாக்கள் எதுவும் இல்லை. அவர்கள் அனைவரையும் இயேசு கிறிஸ்து விடுவித்து தம்மோடு பரலோகத்திற்கு அழைத்துச் சென்றுவிட்டார். ஆகையினால் இப்போது கிறிஸ்தவ விசுவாசி மரிக்கும்போது அவருடைய ஆத்துமா பூமியின் தாழ்விடங்களுக்குச் செல்வதில்லை. அதற்குப் பதிலாக அந்த ஆத்துமா பரலோகத்திற்குச் சென்றுஜீவிக்கும். தன்னுடைய சரீரத்தின் உயிர்த்தெழுதலுக்காகக் காத்துக் கொண்டிருக்கும். (2கொரி 5:8; பிலி 1:21-24, எபி 12:22-23; வெளி 6:9-11)

4 அதிகாரம்

"சிறைப்பட்டவர்கள்" (captivity) - இந்தப் பூமியில் யுத்தம் பண்ணும் ராஜா ஜெயம் பெறும்போது எல்லோரையும் சிறைபிடித்துச் செல்வதுபோன்று இயேசு கிறிஸ்து பாதாளத்திலுள்ள பரிசுத்தவான்களின் ஆத்துமாக்களைச் சிறைபிடித்து தம்மோடு பரலோகத்திற்கு அழைத்துச் சென்றார் (2கொரி 2:14) இயேசு கிறிஸ்துவோடு சிறைபிடித்துச் செல்லப்பட்டவர்களில் சிலர் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு உயிர்த்தெழுந்தவர்கள் (மத் 27:52-53) மற்றவர்கள் பாதாளத்தில் சாத்தானால் சிறைபிடித்து வைக்கப்பட்டிருந்தவர்கள் (எபி 2:14-15; எபி 12:23)

சிறையாக்குதல் (captive) - αἰχμαλωσία - aichmaloosia - 161

பெண்பால் பெயர்ச்சொல் - சிறையாக்குதல், சிறைப்படுதல் (எபே 4:8; வெளி 13:10)

சிறைப்பட்டவர்கள் (captive) - αἰχμάλωτος - aichmalootos - 164

பெயரடை - சிறைப்பட்டவர்கள் (லூக்கா 21:24; ரோமர் 7:23; 2கொரி 10:5)

"மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார்" - சங் 68:18 ஆவது வசனம் இவ்வாறு கூறுகிறது "மனுஷர்களுக்காகவும் வரங்களைப் பெற்றுக் கொண்டீர்" "Thou hast received gifts for men". இயேசு கிறிஸ்து கொடுத்த வரங்களை மனுஷர்கள் பெற்றுக் கொண்டார்கள் இயேசு கிறிஸ்து மனுஷனாக அவதரித்து இந்த வரங்களைப் பெற்றுக் கொண்டு மனுஷருக்கு இவற்றைக் கொடுத்தார் இவை மனுஷருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் தேவனுடைய வரங்களாகும்

தேவனுடைய வரங்கள்

1. கிறிஸ்து (யோவான் 3:16 யோவான் 4:10; 2கொரி 9:15 எபி 6:4)
2. பரிசுத்த ஆவியானவர் (அப் 2:33,38-39; அப் 5:32; அப் 8:20; அப் 11:17)
3. இரட்சிப்பு (ரோமர் 5:15-18; எபே 2:8-9)
4. நித்திய ஜீவன் (ரோமர் 6:23)
5. கிருபை (எபே 3:7; எபே 4:7)
6. ஆவிக்குரிய வரங்கள் (ரோமர் 12:6; 1கொரி 1:7; 1கொரி 12:4-11, 28-31 1தீமோ 4:14; 2தீமோ 1:6; எபி 2:4; 1பேதுரு 4:10)
7. ஊழியக்காரர்கள் (எபே 4:11)
8. அனைத்து நற்காரியங்களும் (மத் 7:11 லூக்கா 11:13; பிலி 4:17; யாக் 1:17

வரங்கள் (gifts) - δόμα - doma - 1390

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - ஈவு, வரம், பலன் (மத் 7:11; லூக்கா 11:13; எபே 4:8 பிலி 4:17

"அவர் அதற்கு முன்னே பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார்" இயேசுகிறிஸ்து பரலோகத்திற்குப் பரமேறுவதற்கு முன்பாக பாதாளத்திற்கு இறங்கினார் (சங் 16:10; மத் 12:40 இயேசு கிறிஸ்து தெய்வத்துவத்திலிருந்து மனுஷத்துவத்திற்கு இறங்கியது மட்டுமல்லாமல் மனுஷத்துவத்திலிருந்து மரணத்திற்கும் இறங்கினார் (பிலி 2:5-11 அதுமட்டுமல்லாமல் பூமியின் தாழ்விடமான நரகத்திற்கும் இறங்கி, நரகத்தை ஜெயித்து அங்கு சாத்தானால் சிறைபிடிக்கப்பட்டிருந்த நீதிமான்களின் ஆத்துமாக்களை விடுதலைபண்ணினார் (எபே 4:8-10; சங் 16:10; சங் 68:18; மத் 12:40; எபி 2:14-15)

4 அதிகாரம்

"பூமியின் தாழ்விடங்கள்" (lower parts of the earth) - நரகம் பூமியின் தாழ்விடங்களில் உள்ளது. ஒருசிலர் பூமியின் மேலுள்ள கல்லறைகளை நரகம் என்று கூறுகிறார்கள். இது தவறான விளக்கம். (மத் 12:40; சங் 16:10; சங் 63:9; யோபு 11:8; உபா 32:22; ஏசா 14:9; ஏசா 66:22-24; நீதி 9:18; நீதி 15:24; எசே 31:14-18; எசே 32:18-24) பரலோகம் உன்னத வானத்தில் உள்ளது. நரகம் பூமியின் தாழ்விடங்களில் உள்ளது.

"எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக" - மனுஷருக்குக் கொடுக்கப்படும் எல்லாவிதமான ஆவிக்குரிய, சரீரப்பிரகாரமான, பொருட்களின் பிரகாரமான வரங்களின் ஊற்றாக இயேசு கிறிஸ்து இருக்கிறார். தம்முடைய பிள்ளைகளின் தேவைகளுக்குத் தக்கதாக இயேசுகிறிஸ்து அவர்களுக்குத் தாராளமாக வரங்களை அருளுகிறார் (யாக் 1:5-8,17; மத் 7:11; மத் 21:22; மாற்கு 11:22-24; யோவான் 14:12-15; யோவான் 15:7,16; சங் 34:9-10; சங் 84:11)

தீர்க்கதரிசன எண் - 7

"நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும், ... ஏற்படுத்தினார்" (எபே 4:11-13) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

பரிபூரணம் (fulfilled) - τέλειος - teleios 5046

பொருள் - பூரண, பரிபூரணமான நிறைவான, தேறின, உத்தமமான that which has reached maturity (மத் 5:48; 1கொரி 2:6; பிலி 3:15)

நிறைவு (fulness) - πλήρωμα - pleerooma 4138

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - அதிகம் நிறைவு, பரிபூரணம், சம்பூரணம் (எபே 1:23; எபே 3:19)

4. வரங்களின் நோக்கம் - (1கொரி 12:7)

எபே 4:12 பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும்

எபே 4:13 அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்

எபே 4:14 நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்

எபே 4:15 அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார்

எபே 4:16 அவராலே சரீரம் முழுதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத் தக்கதாய்க் கிரியை செய்கிறபடியே, அது அன்பினாலே தனக்கு பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது.

ஊழியக்காரரின் கடமைகள்

1. பரிசுத்தவான்களைச் சீர்பொருந்தச் செய்ய வேண்டும். (எபே 4:12

4 அதிகாரம்

2 சுவிசேஷ ஊழியத்தின் வேலையைச் செய்ய வேண்டும். (எபே 4:12)

3 கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காக ஊழியம் செய்ய வேண்டும் (எபே 4:12)

4 விசுவாசத்தில் ஜனங்களை ஒருமைப்பட்டவர்களாக்க வேண்டும் (எபே 4:13)

5 அறிவில் ஜனங்களை ஒருமைப்பட்டவர்களாக்க வேண்டும். (எபே 4:13)

6 சபையைக் கிறிஸ்துவில் சீர்பொருந்தச் செய்ய வேண்டும். (எபே 4:11)

7 ஜனங்களைக் கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத் தக்க பூரண புருஷராக்க வேண்டும். (எபே 4:13)

தன்னுடைய பலவீனங்களையும் தோல்விகளையும், மாம்ச கிரியைகளையும் குறைபாடுகளையும் தன்னுடைய மார்க்கம் அங்கீகரிக்குமா என்று மனுஷன் தன்னுடைய மார்க்கத்தை ஆராய்ந்து பார்க்கிறான். ஆனால் ஒருசிலரே அந்த மார்க்கத்தின் மூலமாக தேவனுடைய வாக்குத்தத்தங்களைப் பெற்றுக் கொண்டு பூரண புருஷராக வளர்ச்சியடைய முடியுமா என்று முயற்சி பண்ணுகிறார்கள். கிறிஸ்தவ மார்க்கத்தில் நாம் அடைந்த தோல்விகளுக்கு சாக்குப்போக்குகளைக் காண முடியாது. இதற்குப் பதிலாக நாம் அடைய வேண்டிய இலக்கையும், அதை எவ்வாறு அடைந்து வெற்றி பெறுவது என்பதற்கான வழிவகைகளையும் கிறிஸ்தவ மார்க்கம் போதிக்கிறது.

ஐந்துவிதமான ஊழியக்காரர்கள்

1 அப்போஸ்தலர் (Apostles) (அப் 15:33)

2 தீர்க்கதரிசிகள் (Prophets) (அப் 11:27)

3 சுவிசேஷகர் (Evangelists)

4 மேய்ப்பர் (Pastors)

5 போதகர் (Teachers) (அப் 13:1)

சுவிசேஷகர் (Evangelists) εὐαγγελιστής
euangelistees - 2099

ஆண்பால் பெயர்ச்சொல் - சுவிசேஷகர், நற்செய்தி அறிவிப்பவர் (a bringer of glad tidings) (அப் 21:8; எபே 4:11; 2தீமோ 4:5)

மேய்ப்பர் (Pastor) - ποιμήν - **poimeen** - 4166

ஆண்பால் பெயர்ச்சொல் - மேய்ப்பர் - "shepherd" (மத் 9:36; மத் 25:32; மத் 26:31; மாற்கு 6:34; மாற்கு 14:27; லூக்கா 2:8-20; யோவான் 10:2-16; எபி 13:20; 1பேதுரு 2:25)

மேய்ப்பர் (shepherd) - רָעָה - raw-aw' - 7462

வினைச்சொல் - மேய், புசி, இரைமேய்க்கு, போஷி, மேய்த்துக்கொள், மேய்ந்திரு, பட்சி, நொறுக்கு அடித்துக் கொண்டுபோ, பிழைப்பூட்டு, மேய்க்கிறவனாயிரு, மேய்ப்பர், ஆதரி, தரி, தோழன், தொந்திப்பானவன், மேய்விடு "pastor" (எரே 2:8; எரே 3:15; எரே 10:21; எரே 12:10; எரே 17:16; எரே 22:22; எரே 23:1-2) "shepherd" (சங் 23:1; சங் 80:1; எசே 34:1-23; சக 13:7; எபி 13:20; 1பேதுரு 2:25; எபே 4:11)

ஊழியக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் பெயர்கள்

1 ஸ்தானாபதிகள் (Ambassadors) (2கொரி 5:20)

2 தூதர்கள் (Angels) (வெளி 1:20; வெளி 2:1)

3 மூப்பர்கள் (Elders) (1தீமோ 5:17; 1பேதுரு 5:1)

எபேசியர் - தொகுப்புரை

4 அதிகாரம்

4 மனுஷரைப் பிடிக்கிறவர்கள் (Fishers of Men) (மத் 4:19 மாற்கு 1:17)

5 வேலையாட்கள் (Laborers) (1தெச 3:2)

6 தேவனுடைய மனுஷன் (Men of God) (உபா 33:1; 1தீமோ 6:11)

7 வெளிச்சம் (Lights) (மத் 5:14 யோவான் 5:35)

8 சேனைகளுடைய கர்த்தரின் தூதர்கள் (Messengers) (2கொரி 8:23 மல் 2:7)

9 ஊழியக்காரர்கள் (Ministers) (2கொரி 3:6 2கொரி 6:4; ரோமர் 15:16)

10 கண்காணிகள் (Overseers) (அப 20:28)

11 பிரசங்கிக்கிறவர்கள் (Preachers) (ரோமர் 10:14; 1தீமோ 2:7)

12 ஊழியக்காரர்கள் (Servants) (தீத்து 1:1, யூதா 1:1; யாக் 1:1)

13 சேவகர்கள் (Soldiers) (பிலி 2:25, 2தீமோ 2:3-4)

14 உக்கிராணக்காரர்கள் (Stewards) (தீத்து 1:7, 1பேதுரு 4:10)

15 ஜாமக்காரர் (Watchmen) (ஏசா 62:6, எசே 33:7)

16 சாட்சிகள் (Witnesses) (அப 1:8; அப 5:32, அப 26:16)

17 உடன் வேலையாட்கள் (Workers) (2கொரி 6:1)

18 நட்சத்திரங்கள் (Stars) (வெளி 1:20 வெளி 2:1)

பூரண புருஷருடைய ஆசீர்வாதங்கள்

1 வளர்ந்தவர்கள் - இனி குழந்தைகளல்ல (எபே 4:14)

2 விசுவாசத்தில் நிலைத்திருக்கிறவர்கள் - பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்கள் அல்ல (எபே 4:14, யாக் 1:6-8)

3 சத்தியத்தில் வேரூன்றி நிலைத்திருக்கிறவர்கள் - மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கு ஏதுவான தந்திரமுள்ள போதகங்களினால் ஏமாற்றப்படாதவர்கள் (எபே 4:14; யோவான் 8:32-36 எபே 3:17; கொலோ 2:6-7 2பேதுரு 1:12)

4 வஞ்சிக்க முடியாதவர்கள் - பொய்யையும் மெய்யையும் வேறுபிரித்து நிதானித்து அறியக்கூடியவர்கள் (எபே 4:14 2தீமோ 2:15; எபி 5:13-14 யோவான் 8:32-36)

5 அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு பேசுகிறவர்கள் (எபே 4:15 ரோமர் 15:14 கொலோ 3:16)

6 ஆவிக்குரிய காரியங்களில் தொடர்ந்து வளர்ச்சி பெறுகிறவர்கள் (எபே 4:15 1பேதுரு 2:2; 2பேதுரு 3:18)

7 கிறிஸ்துவில் மற்ற விசுவாசிகளோடே இசைந்து கிரியை செய்யக்கூடியவர்கள் (எபே 4:16, 2கொரி 1:10 2கொரி 13:11)

"போதகமாகிய பலவித காற்று" - ஆகாயத்து அந்தகார பிரபுவாகிய சாத்தானுடைய பொல்லாத உபதேசங்கள் (எபே 2:2; 1தீமோ 4:1; 2கொரி 4:4)

சூது (sleight) - κυβεία - kybeia - 2940

பெண்பால் பெயர்ச்சொல் - சூது தந்திரம் (cube) - மனுஷனால் வெல்ல முடியாத தந்திரங்கள் தந்திரமான போதகங்களோடு விளையாடுகிறவர்கள் நித்திய ஜீவனைப்பெற்றுக்கொள்ளமாட்டார்கள்

4 அதிகாரம்

வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரம் (cunning craftiness) - πανουργία - panourgia 3834

பெண்பால் பெயர்ச்சொல் - தந்திரம் (cheating, subtlety) - தந்திரங்கள் மூலமாக ஆத்துமாக்களை அழிப்பது. (எபே 4:14; எபே 4:27; எபே 6:11; 1தீமோ 4:1; 2கொரி 4:4; மத் 13:19) பொய்யைச் சத்தியம் போலவே பேசி, ஜனங்களை நம்ப வைப்பது. கள்ள போதகர்கள் இப்பேர்ப்பட்ட தந்திரங்களைச் செய்வதில் வல்லவர்கள்

"வஞ்சிக்கிறதற்கேதுவான" - கள்ள போதகர்கள் கள்ளம் கபடமில்லாத ஆத்துமாக்களைத் தங்களுடைய தந்திரங்களினால் ஏமாற்றி வஞ்சித்து விடுகிறார்கள்

"அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார்" இந்த வசனத்தில் பவுல் சத்தியம் என்று கூறுவது முழு சுவிசேஷத்தையும் குறிக்கும் இந்தச் சத்தியம் இயேசு கிறிஸ்துவை மையமாகக் கொண்டிருக்கிறது. திருச்சபையைக் கட்டுகிறது. எல்லாவிதமான தவறுகளையும் களைந்துபோட்டு, சத்தியத்தை மட்டுமே சபையில் நிலைக்கச் செய்கிறது. இதனால் ஒரு சரீரம் வளருவதுபோன்று தேவனுடைய சபையும் வளருகிறது. (எபே 4:15-16)

5. புறஜாதியார் நடக்கும் விதம்

எபே 4:17 ஆதலால், கர்த்தருக்குள் நான் உங்களுக்குச் சாட்சியாகச் சொல்லி எச்சரிக்கிறது என்னவெனில், மற்றப் புறஜாதிகள் தங்கள் வீணான சிந்தையிலே நடக்கிறது போல நீங்கள் இனி நடவாமலிருங்கள்

எபே 4:18 அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதய கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்து,

எபே 4:19 உணர்வில்லாதவர்களாய், சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிக்கும்படி, தங்களைக் காமவிகாரத்திற்கு ஒப்புக் கொடுத்திருக்கிறார்கள்

புறஜாதியாரின் பழைய தன்மைகள்

1. வீணான சிந்தை (Vain in mind) (எபே 4:17; எபே 2:11)
2. புத்தியில் அந்தகாரம் (Dark in understanding) (எபே 4:18; எபே 2:12)
3. தேவனுடைய ஜீவனுக்கு அந்நியர் (Alien to God's life) (எபே 4:18; எபே 2:12)
4. தேவனைப் பற்றிய அறியாமை (Ignorant of God) (எபே 4:18; எபே 2:12)
5. இருதயகடினம் (Blind in heart) (எபே 4:18; 2கொரி 4:4)
6. உணர்வில்லாமை (Past feeling) (எபே 4:19; எபே 2:12)
7. காமவிகாரம் (Lustful) (எபே 4:19; கலா 5:19)
8. அசுத்தம் (Unclean - homosexual) (எபே 4:19; கலா 5:19)
9. பேராசை (Greedy) (எபே 4:19; எபே 5:3; 2கொரி 6:10)

நடப்பித்தல் (work) - ἐργασία - ergasia - 2039

பெண்பால் பெயர்ச்சொல் - பிரயாசம், ஆதாயம், நடப்பித்தல் - பிழைப்பிற்காக ஒரு தொழிலைச் செய்தல். புறஜாதியார்கள் எபே 4:17-19 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பாவங்களைச் செய்வதற்குத் தங்களை ஒப்புக் கொடுத்திருக்கிறார்கள்

எபேசியர் - தொகுப்புரை

4 அதிகாரம்

6. களைந்துபோட வேண்டியவை - கொலோ 3:8

எபே 4:20 நீங்களோ இவ்விதமாய்க் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவில்லை

எபே 4:21 இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே, நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து, அவரால் போதிக்கப்பட்டீர்களே

எபே 4:22 அந்தப்படி, முந்தின நடக்கைக்குரியமோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு,

பரிசுத்தவான்களின் ஜீவியம்

1 கிறிஸ்துவைக் கற்றுக் கொண்டார்கள் (எபே 4:20; மத் 11:28-30)

2 கிறிஸ்துவினிடத்தில் சத்தியத்தைக் கேட்டு, அவரால் போதிக்கப் பட்டார்கள் (எபே 4:21)

3 பழைய மனுஷனைக் களைந்து போட்டார்கள் எபே 4:22 2கொரி 5:17

4 உள்ளத்திலே புதிதான ஆவி உள்ளவர்களாக இருக்கிறார்கள் (எபே 4:23)

5 புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டார்கள் (எபே 4:24; 2கொரி 5:17

6 பொய்யைக் களைந்து மெய்யை பேசுகிறார்கள் (எபே 4:25)

7 கோபம் கொண்டாலும் பாவம் செய்யாமல் இருக்கிறார்கள் எபே 4:26

8 பிசாசுக்கு இடம் கொடாமல் இருக்கிறார்கள் (எபே 4:27)

9 திருடாமல் இருக்கிறார்கள் எபே 4:28)

10 தங்கள் ஜீவியத்திற்காக வேலை செய்கிறார்கள் (எபே 4:28

11 ஏழைகளுக்கும் குறைச்சல் உள்ளவர்களுக்கும் கொடுத்து உதவி புரிகிறார்கள் (எபே 4:28

12 தங்கள் நாவினால் நல்ல வார்த்தைகளையே பேசுகிறார்கள் (எபே 4:29)

13 தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாமல் இருக்கிறார்கள் (எபே 4:30)

14 சகலவிதமான கசப்பு, கோபம், மூர்க்கம், கூக்குரல், தூஷணம் மேலும் துர்க்குணங்களையும் தங்களை விட்டு நீக்கிவிட்டார்கள் (எபே 4:31)

15 கிறிஸ்துவைப்போல இவர்களும் ஒருவருக்கொருவர் தயவாயும் மனதுருக்கமாயும் இருந்து ஒருவருக்கொருவர் மன்னிக்கிறார்கள் (எபே 4:32

16 தேவனைப் பின்பற்றுகிறார்கள் (எபே 5:1)

17 கிறிஸ்துவைப் போல அன்பிலே நடந்து கொள்கிறார்கள் (எபே 5:2

18 வேசித்தனம், அசுத்தம், பொருளாசை ஆகியவை இவர்களிடம் இல்லை இவற்றின் பெயரைக்கூட இவர்கள் சொல்லமாட்டார்கள் (எபே 5:3-4, மாற்கு 7:19-21, ரோமர் 1:18-32, 1கொரி 6:9-11, கலா 5:19-21 கொலோ 3:5-10

"பழைய மனுஷன்" இது பிசாசின் ஆவியையும் அவனுடைய சுபாவத்தையும் குறிக்கும். (2கொரி 5:17

7. தரித்துக் கொள்ள வேண்டியவை - (கொலோ 3:10)

எபே 4:23 உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி,

எபே 4:24 மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்

4 அதிகாரம்

புதிதானது (renewed) - ἀνανεόομαι - ananeoomai - 365

வினைச்சொல் - புதிதாக்கு - நம்முடைய வாழ்வில் நாம் ஒரு திசையில் போய்கொண்டிருக்கும்போது முழுவதுமாக வேறொரு புதிய திசையில் செல்லுதல் (2கொரி 5:17-18) நம்முடைய சிந்தையின் மாயையைக் களைந்துவிட்டு அதைப் புதுப்பிக்க வேண்டும் (எபே 4:17) அத்துடன் நமது சிந்தையின் இருள் குருட்டுத்தன்மை ஆகியவற்றைக் களைந்து அவற்றைப் புதுப்பிக்க வேண்டும். (எபே 4:18) இயேசு கிறிஸ்துவைக் கற்றுக் கொள்ளும் புதிதான சிந்தை நமக்குள் உண்டாக வேண்டும். (எபே 4.20-21)

"தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை" மறுபடியும் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனிடத்தில் காணப்படும் தேவனுடைய ஆவியையும் அவருடைய சுபாவத்தையும் இந்த வாக்கியம் குறிக்கும் எபே 4:23-24 2பேதுரு 1:4. ரோமர் 8:9,14-16

பரிசுத்தம் (holiness) - ὁσιότης - horiotees - 3742

பெண்பால் பெயர்சொல் - பரிசுத்தம் (லூக்கா 1:75, எபே 4:24)

தரித்துக்கொள்ளுதல் (put on) ἐνδύω - endyoo - 1746

வினைச்சொல் - உடுத்து வஸ்திரந்தரி (to be clothed with) (லூக்கா 24:49, 1தெச 5:8) மறுபடியும் பிறந்தவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் புதிய சுபாவத்தைத் தரித்துக் கொள்ள வேண்டும் இந்தப் புதிய சுபாவம் நீதியையும், பரிசுத்தத்தையும் வெளிப்படுத்த வேண்டும் (எபே 4:23-24)

8. கிறிஸ்தவருக்கு இருபது கட்டளைகள்

எபே 4.25 அன்றியும், நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறபடியால் பொய்யைக் களைந்து அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன்

எபே 4.26 நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள் சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது

எபே 4.27 பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்

எபே 4.28 திருடுகிறவன் இனித் திருடாமல் குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி தன் கைகளினால் நலமான வேலை செய்து பிரயாசப்படக்கடவன்

எபே 4.30 அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்

எபே 4.31 சகலவிதமான கசப்பும் கோபமும் மூர்க்கமும் கூக்குரலும் தூஷணமும் மற்று எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது.

எபே 4.32 ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்

களைதல் (putting away) - ἀποτίθημι - apotitheemi - 659

வினைச்சொல் - தள்ளு, விட்டுவிடு, ஒழித்துவிடு, களைதல் இந்த வாக்கியத்தில் இதன் கிரேக்க வார்த்தை இறந்தகால வினைமுற்றாக (aorist participle) பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தையை "களைந்து விட வேண்டும்" "having put away" என்று பொருள் கொள்ள வேண்டும்.

எபேசியர் - தொகுப்புரை

4 அதிகாரம்

"பொய்" - மறுபடியும் பிறந்தவர்கள் பொய்யைக் களைந்துவிட வேண்டும். சாத்தான் பொய்க்குப் பிதாவாக இருக்கிறான். பொய்யைக் களைதல் என்பது சாத்தானை நம்மை விட்டு அகற்றிப்போடுதல் என்று பொருள் (யோவான் 8:44; 2தெச 2:9). நாம் பொய்கூறும்போது இதனால் பிறருக்கு பாதிப்பு இல்லையென்றாலும், அல்லது நாம் கூறும் பொய்யினால் பிறருக்கு ஆதாயம் ஏற்படும் என்றாலும் நாம் பொய்கூறுவதால் தவறு ஒன்றும் இல்லையென்று புறஜாதியார் நினைக்கிறார்கள். எபேசியர்கள் இந்த உபதேசத்தை ஏற்கெனவே அதிகமாகக் கேள்விப்பட்டவர்கள். ஆகையினால் பொய்யைக் குறித்த கிறிஸ்தவ உபதேசத்தை எபேசியருக்கு எடுத்துக் கூறுவது பவுலுக்கு அவசியமாயிற்று. இந்த வசனத்தின் ஒரு பகுதி சக 8:16 ஆவது வசனத்திலிருந்து மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

'o - ho - 3588

கிரேக்க மொழியில் சிறப்புச்சுட்டு - குறிப்பிட்ட நபர்களையோ அல்லது பொருட்களையோ குறிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படுகிறது. வலியுறுத்தும் இலக்கணக்கூறாகவும் பயன்படுத்தப் படுகிறது.

பொய் (lying) - ψεῦδος - pseudos - 5579

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பொய்

"கோபம்" - சாத்தான் மனுஷருக்குள் கோபத்தை உண்டுபண்ணுகிறான். கோபம் மனுஷனைப் பாவம் செய்யத் தூண்டுகிறது. நாம் கோபப்பட்டு நமது ஜீவியத்தில் பிசாசிற்கு இடம் கொடுத்துவிடக்கூடாது (எபே 4:26,27). கோபம், கோபப்படுதல் ஆகிய வார்த்தைகள் வேதாகமத்தில் 278 தடவைகள் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டில் இந்த வார்த்தையை 12 இடங்களில் மட்டுமே நாம் காணகிறோம். தேவன் மனுஷனுடைய உள்ளத்தைக் கோபப்படுவதற்காகச் சிருஷ்டிக்கவில்லை. தேவன் மனுஷனுடைய உள்ளத்தைப் பாவமற்றதாகவே சிருஷ்டித்திருக்கிறார். ஆனால் நாம் நம்முடைய உள்ளத்தைத் தவறாகப் பயன்படுத்தி தீமைக்கு விட்டுக்கொடுக்கும்போது தேவன் அதைக் கடிந்து கொள்கிறார். மனுஷருடைய பாவத்தின் நிமித்தம் தேவன் மனுஷர்மீது பலவேளைகளில் கோபம் கொண்டிருக்கிறார் (எண் 11:1,10,33; எண் 12:9; எண் 14:11; சங் 7:11). ஒரு மனுஷன் கோபப்படும்போது அதற்குரிய காரணம் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும் (மத் 5:22; ரோமர் 1:18; யாக் 1:19). கோபப்படுவதற்குச் சுவிசேஷம் இடம் அளிக்கிறது (மாற்கு 3:5). ஆனால் பாவத்தைச் சுவிசேஷம் அனுமதிப்பதில்லை.

கோபம் (angry) - ὀργίζω - orgizoo - 3710

வினைச்சொல் - கோபித்துக்கொள், கோபமடை (to make angry, provoke to anger, irritate) (எபே 4:26; மத் 5:22; மத் 18:34; மத் 22:7; லூக்கா 14:21; லூக்கா 15:28; வெளி 11:18; வெளி 12:17)

கெட்டது (corrupt) - σαπρός - sapros - 4550

பெயரடை - கெட்ட, ஆகாத (useless, putrid, obscene) (மத் 7:17-18; மத் 12:33; மத் 13:48; லூக்கா 6:43)

"தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்" - எபே 4:17-5:18 ஆகிய வசனங்களில் தடைபண்ணப்பட்டிருக்கும் காரியங்களைச் செய்து நாம் தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தக்கூடாது.

கசப்பு (bitterness) - πικρία - pikria - 4088

பெண்பால் பெயர்ச்சொல் - கசப்பு (bitterness, malice, venom) (அப் 8:23; ரோமர் 3:14; எபே 4:31; எபி 12:15)

கோபம் (wrath) - θυμός - thymos - 2372

4 அதிகாரம்

ஆண்பால் பெயர்ச்சொல் - உக்கிரம், கோபம் (any vehement passion, anger, wrath, hatred) (கலா 5:20)

மூர்க்கம் (anger) - ὀργή - orgee - 3709

பெண்பால் பெயர்ச்சொல் - கோபம், கோபாக்கினை (anger) (எபே 4:31; மாற்கு 3:5; கொலோ 3:8); (indignation) (வெளி 14:10) (vengeance) (ரோமர் 3:5) (wrath) (ரோமர் 3:7; லூக்கா 3:7, லூக்கா 21:23, யோவான் 3:36 ரோமர் 1:18, ரோமர் 2:5,8, ரோமர் 4:15; ரோமர் 5:9, ரோமர் 11:22; ரோமர் 12:19 ரோமர் 13:4-5, எபே 2:3; எபே 5:6, கொலோ 3:6; 1தெச 1:10; 1தெச 2:16, 1தெச 5:9, 1தீமோ 2:8; எபி 3:11 எபி 4:3 யாக் 1:19-20 வெளி 6:16-17; வெளி 11:18, வெளி 16:19 வெளி 19:15)

கூக்குரல் (clamour) - κραυγή kraugee - 2906

பெண்பால் பெயர்ச்சொல் - சத்தம் கூக்குரல், அலறுதல் (uproar) (எபே 4:31, மத் 25:5; அப் 23:9; எபி 5:7 வெளி 14:18, வெளி 21:4)

தூஷணம் (evil speaking) - βλασφημία blaspheemia 988

பெண்பால் பெயர்ச்சொல் - தூஷணம் (மத் 12:31)

துர்க்குணம் (malice) - κακία - kakia - 2549

பெண்பால் பெயர்ச்சொல் - துர்க்குணம், குரோதம், பொறாமை (malice) (எபே 4:31; 1கொரி 5:8; 1கொரி 14:20; கொலோ 3:8; தீத்து 3:3; 1பேதுரு 2:1); (evil) (மத் 6:34); (naughtiness) (யாக் 1:21); (maliciousness) (ரோமர் 1:29 1பேதுரு 2:1) (wickedness) (அப் 8:22)

[illegible] (kind) - χρηστότης - chreestotees - 5543

பெயரடை - மேதுவான, நல்ல, நன்மையான, தயவான, தயவுள்ள (kind) (எபே 4:32, லூக்கா 6:35), (good) (1கொரி 15:33, 1கொரி 2:4), (gracious) (1பேதுரு 2:3) (easy) (மத் 11:30)

மனஉருக்கம் (tenderhearted) - εὔσπλαγχνος eusplanchnos - 2155

பெயரடை மனஉருக்கமுள்ள (tenderly compassionate) (எபே 4:32, 1பேதுரு 3:8)

"நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னிடுங்கள்" இயேசு கிறிஸ்து நம்மை மன்னித்திருக்கிறார் நாமும் மற்றவர்களை மன்னிக்க வேண்டும். (மத் 6:14-15, மத் 18:21-35; கொலோ 3:13)

5 அதிகாரம்

■ தேவனைப் பின்பற்றுவதற்கு இரண்டு கட்டளைகள்

எபே 5.1 ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப் போல தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி,

எபே 5.2 கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்.

பின்பற்றுகிறவர்கள் (followers) - μιμηταί - mimeetees - 3402

ஆண்பால் பெயர்ச்சொல் - பின்பற்றுகிறவர் (imitators) - ஒருவருடைய பேச்சு, நடத்தை, ஜீவிக்கும் விதம் ஆகியவற்றை அப்படியே பின்பற்றுவது. (1கொரி 4:16) பிள்ளைகள் தங்களுடைய பெற்றோரைப் பின்பற்றுவதைப் போன்று விசுவாசிகள் தேவனைப் பின்பற்ற வேண்டும். தேவனுடைய செயல்கள், வார்த்தைகள், சுபாவங்கள், வழிகள், கிருபைகள், ஆவி ஆகியவற்றை விசுவாசிகளாகிய நாம் பின்பற்றி ஜீவிக்க வேண்டும்.

கிறிஸ்துவினுடைய பலியின் அம்சங்கள்

1. காணிக்கை - லேவி 2:1 தேவனிடமிருந்து பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களுக்கு நன்றி செலுத்துவது.

2. பலி - பாவத்திற்காகச் செலுத்தப்படுவது (லேவி 1:9, லேவி 3:16, மத் 26:28, 1பேதுரு 2:24)

'சுகந்த வாசனை' (sweetsmelling savour) - இயேசு கிறிஸ்துவின் காணிக்கையும் பலியும் தேவனைப் பிரியப்படுத்துகிறது. விழுந்துபோன மனுக்குலம் இயேசு கிறிஸ்துவின் பலியின் மூலமாக மறுபடியும் மீட்கப்பட வாய்ப்பு உண்டாயிற்று (ரோமர் 8:18-24)

10. பொதுவான ஆறு பாவங்கள்

எபே 5:3 மேலும், பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும் மற்றெந்த அசுத்தமும் பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர்முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங் கூடாது.

எபே 5.4 அப்படியே வம்பும் புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள்; ஸ்தோத்திரஞ்செய்தலே [illegible].

பரிசுத்தவான்களுக்குத் தடைபண்ணப்பட்டிருக்கும் காரியங்கள் (எபே 5.5-6

1. வேசித்தனம் (Fornication) (எபே 5:32)

2. அசுத்தம் (Uncleanness)

3. பொருளாசை (Covetousness) (லூக்கா 12:15)

4. வம்பு

5. புத்தியீனமான பேச்சு

6. பரியாசம்

வம்பு (Filthiness) - αἰσχρότης - aischrotees 151

பெண்பால் பெயர்ச்சொல் - வம்பு (ugliness, baseness, vileness, shame, infamy)

புத்தியீனமான பேச்சு (Foolish talking) - μωρολογία - moorologia 3473

5 அதிகாரம்

பெண்பால் பெயர்ச்சொல் - புத்தியீனமான பேச்சு (speaking foolishly; idle, stupid talk)

பரியாசம் (Jesting) - εὐτραπελία - eutrapelia - 2160

பெண்பால் பெயர்ச்சொல் - பரியாசம் (ribaldry; indecency)

11. தேவனுடைய இராஜ்ஜியத்தின் சுதந்தரமடையாத ஐந்து [redacted]

எபே 5.5 விபசாரக்காரனாவது அசுத்தனாவது, விக்கிரகாராதனைக் காரனாகிய பொருளாசைக்காரனாவது தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தர [redacted] யென்று அறிந்திருக்கிறீர்களே

எபே 5.6 இப்படிப் பட்டவைகளினிமித்தமாகக் கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் மேல் தேவகோபாக்கினை வருவதால் ஒருவனும் உங்களை வீண் வார்த்தைகளினாலே மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

எபே 5.7 அவர்களுக்குப் பங்காளிகளாகாதிருங்கள்

தீர்க்கதரிசன எண் - 8

"விபசாரக்காரனாவது, அசுத்தனாவது விக்கிரகாராதனைக் காரனாகிய பொருளாசைக் காரனாவது தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தரமடைவதில்லை____" (எபே 5.5-6) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தரமடையாதவர்கள்

1. விபச்சாரக்காரன்
2. அசுத்தன்
3. விக்கிரகாராதனைக் காரனாகிய பொருளாசைக்காரன்
4. ஏமாற்றுகிறவர்கள்
5. கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்

விபசாரக்காரன் (Whoremongers) - πόρνος - pornos - 4205

ஆண்பால் பெயர்ச்சொல் - விபசாரக்காரர், வேசிக்கள்ளர் (a male prostitute; a sexually immoral man) - "fornicator" (1கொரி 5.9-11) 1கொரி 6.9 எபி 12.16) "whoremonger" (எபே 5.5; 1தீமோ 1.10; எபி 13.4; வெளி 21.8; வெளி 22.15

அசுத்தன் (Unclean persons) - ἀκάθαρτος - akathartos - 169

பொருள் - அசுத்த (homosexual, pervert) (லூக்கா 4.33)

(அ) சடங்காச்சாரத்தின் படி தீட்டும் அசுத்தமாகவும் இருப்பது

(ஆ) ஆவிமீக அசுத்தம் எபே 5.5

கிறிஸ்தவ விசுவாசிகளுக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. பாவிகளுக்குப் பங்காளிகளாகாதிருங்கள் எபே 5.5-7
2. வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள் (எபே 5.8-9)
3. கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப் பாருங்கள் (எபே 5.10)
4. கனியற்ற அந்தகாரக்கிரியைகளுக்கு உடன்படாமல் இருங்கள் (எபே 5.11-13

5 அதிகாரம்

5 கனியற்ற அந்தகாரக்கிரியைகளைக் கடிந்து கொள்ளுங்கள் (எபே 5:11-13)

6 தூங்குகிற நீங்கள் விழித்து மரித்தோரை விட்டு எழுந்திருங்கள் (எபே 5:14)

7 கவனமாக நடந்து கொள்ளுங்கள் (எபே 5:15)

8 ஞானமுள்ளவர்களைப் போல் நடந்து கொள்ளுங்கள் (எபே 5:15,17)

9 காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள் (எபே 5:16)

10 கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள் (எபே 5:17)

11 மதுபான வெறிகொள்ளாமல் இருங்கள் (எபே 5:18)

12 ஆவியினால் நிறைந்திருங்கள் (எபே 5:18)

13 சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொள்ளுங்கள் (எபே 5:19)

14 நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள் (எபே 5:20)

15 தேவபயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள் (எபே 5:21)

12. கிறிஸ்தவருக்கு பதினைந்து கட்டளைகள்

எபே 5:8 முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள் இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள் வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள்

எபே 5:9 ஆவியின் கனி, சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும்.

எபே 5:10 கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப் பாருங்கள்

எபே 5:11 கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்து கொள்ளுங்கள்

எபே 5:12 அவர்களால் ஒளிப்பிடத்தில் செய்யப்படும் கிரியைகளைச் சொல்லுகிறதும் அவலட்சணமாயிருக்கிறதே.

எபே 5:13 அவைகளெல்லாம் கடிந்து கொள்ளப்பட்டு வெளிச்சத்தினால் வெளியரங்கமாகும். வெளியரங்கமாக்குகிறதெல்லாம் வெளிச்சமாயிருக்கிறது

எபே 5:14 ஆதலால், தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று சொல்லியிருக்கிறார்

எபே 5:15 ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப் போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப் போல கவனமாய் நடந்து கொள்ளப்பார்த்து

எபே 5:16 நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்

எபே 5:17 ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ளுங்கள்

எபே 5:18 துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினால் நிறைந்து

எபே 5:19 சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப் பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி.

எபேசியர் - தொகுப்புரை

5 அதிகாரம்

எபே 5:20 நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து

எபே 5:21 தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்

"ஆவியின் கனி" - (கலா 5:22)

"அந்தகாரக்கிரியைகள் (works of darkness) - புறஜாதி மார்க்கத்தார்கள் குகைகளுக்கும். இரகசியமான இடங்களுக்கும் சென்று தங்களுடைய மார்க்கங்களின் இரகசியங்களைக் கற்றுக் கொள்வார்கள் தாங்கள் கேட்டதையும் கண்டதையும் மற்றவர்களுக்கு அறிவிக்காமல் இரகசியமாகக் காத்துக் கொள்வார்கள் கொலோ 1:21 ரோமர் 13:12, எபி 6:1

கடிந்துகொள்ளுதல் (reprove) - **ἐλέγχω** - **elenchoo** - 1651

வினைச்சொல் - குற்றத்தையுணர்த்து கடிந்துகொள், கண்டி, கண்டனம் பண்ணு. கலக்கம் உண்டாக்கு, தீர்க்கப்படு **(testify, convince, and reprove their secret vices)**

"அவர்களால் ஒளிப்பிடத்தில் செய்யப்படும் கிரியைகளைச் சொல்லுகிறதும். அவலட்சண மாயிருக்கிறதே" புறஜாதியாருடைய இரகசியமான பழக்கவழக்கங்களை நமது வாயினால் பேசுவதற்குக்கூட அவை அவலட்சணமாய் இருக்கிறது. (2கொரி 11:4)

"தூங்குகிற நீ விழித்து. மரித்தோரை விட்டு எழுந்திரு" ஏசா 61:2 ஆகிய வசனங்களின் கருத்துச் சுருக்கம்.

கவனமாய் நடப்பது **(circumspectly)** - **ἀκριβῶς** **akriboos** 199

வினையடை - திட்டமாய், கவனமாய், நன்றாய் **(circumspectly)** (எபே 5:15); **(perfectly)** (அப் 18:26; அப் 23:15, 20, 1தெச 5:2); **(perfect)** (லூக்கா 1:3, அப் 24:22); **(diligently)** (மத் 2:8 அப் 18:25) - சுவிசேஷ உபதேசத்தின் பிரகாரம் நாம் மிகுந்த கவனத்தோடு ஜீவிக்க வேண்டும். சாத்தானின் தந்திரங்களையெல்லாம் அறிந்து அதிக ஞானத்தோடு ஜீவிக்க வேண்டும்.

"நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்" - ஆத்தும ஆதாயம் செய்வதற்கு வாய்ப்பு கிடைக்கும்போது அந்த வாய்ப்பை வீணாக்கி விடாமல் பயன்படுத்த வேண்டும்.

மதியற்றவர்கள் **(unwise)** - **ἄφρων** - **aphroon** - 878

பெயரடை - மதிகேடான, பேதை. புத்தியீன. புத்தியில்லாத. மதியற்ற **(senseless, crazed)** (மத் 11:16

வெறிகொள்ளுதல் **(drunk)** - **μεθύσκω** - **methyskoo** - 3182

வினைச்சொல் - வெறிகொள் (மத் 12:45; எபே 5:18, 1தெச 5:7)

துன்மார்க்கம் **(excess)** - **ἀσωτία** - **asootia** - 810

பெயரடை பெயர்ச்சொல் - வெறிகொள்ளாதது. அடங்காதது துன்மார்க்கம் **(debauchery of every kind).** (லூக்கா 15:13, எபே 5:18, தீத்து 1:6, 1பேதுரு 4:4

"ஆவியினால் நிறைந்திருங்கள்" - இது ஒவ்வொரு விசுவாசிக்கும் கொடுக்கப்படும் சிலாக்கியமாகும். (ரோமர் 8:9,14-16) நமக்குப் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் ஒரளவு மட்டுமே அருளப்பட்டிருக்கிறது. நாம் பரிசுத்த ஆவியானவரின் பரிபூரண நிறைவை நாடிப் பெற்றுக் கொள்ள வேண்டும். (மத் 3:11 லூக்கா 11:13; லூக்கா 24:4) யோவான் 1:31-34 யோவான் 3:34. யோவான் 7:37-39. யோவான் 4:12 அப் 1:4-8; அப் 2:38-39; அப் 5:32

5 அதிகாரம்

"சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டு களினாலும்" - சங்கீதம், கீர்த்தனை ஞானப்பாட்டு ஆகியவற்றிற்கு இடையேயுள்ள வேறுபாடு தெளிவாகத் தெரியவில்லை. சங்கீதம் என்பது சங்கீத புஸ்தகத்தைக் குறிக்கும். கீர்த்தனையும் ஞானப்பாட்டும் சங்கீதங்களையும், அக்காலத்தில் யூதர் மத்தியில் பிரபலமாயிருந்த ஸ்தோத்திரப் பாடல்களையும் குறிக்கும். (மத் 26:30 எபே 5:19, கொலோ 3:16; யாத் 15:1-2 எண் 21:17, உபா 31:19, 21-22,30 நியா 5:12, உன் 1:1; ஏசா 5:1; ஏசா 26:1 ஏசா 42:10) பரிசுத்த ஆவியில் நிறைந்து பாடுவதையும் இந்த வாக்கியம் குறிக்கலாம் (1கொரி 14:15-16)

பாட்டுகள் (songs) - ᾠδή - oodee - 5603

பெண்பால் பெயர்சொல் - பாட்டு (song of thanksgiving). (எபே 5:19, கொலோ 3:16 வெளி 5:9, வெளி 14:3, வெளி 15:3)

பாடு (sing) - ψάλλω - psalloo - 5567

வினைச்சொல் - பாடு (making melody) - நரம்பு இசைக்கருவியை மீட்டுவது. (ரோமர் 15:9; 1கொரி 14:15 எபே 5:19, யாக் 5:13)

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே" இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் மட்டுமே நாம் தேவனிடத்தில் கிட்டிச் சேர முடியும். (மாற்கு 16:17, யோவான் 14:12-15 யோவான் 16:23-26, கொலோ 3:17 1தீமோ 2:4, எபி 10:19)

"தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்" சபையின் அங்கத்தினர்கள் யாரும் இறுமாப்புடன் இருந்து சபையின் அமைதியையும் ஒற்றுமையையும் பாதிக்கும் விதத்தில் நடந்து கொள்ளக்கூடாது.

V. விசுவாசிகளின் குடும்ப வாழ்வு

1. **மனைவிகளின் கடமைகள்** - (கொலோ 3:18; தீத்து 2:3-5 1பேதுரு 3:1-6, 1தீமோ 2:9-15, 5:2-16 1கொரி 14:34-35)

எபே 5:22 மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறது போல உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள்.

எபே 5:23 கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்.

எபே 5:24 ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்.

மனைவிகளுக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறது போல உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படிய வேண்டும். (எபே 5:22)
2. கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான் என்பதை அங்கீகரிக்க வேண்டும். (எபே 5:23)
3. சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். (எபே 5:24)
4. புருஷனிடத்தில் பயபக்தியாய் இருக்க வேண்டும். (எபே 5:33)

5 அதிகாரம்

"எந்தக் காரியத்திலேயும்" - நியாயமான நேர்மையான எல்லாக் காரியங்களையும் குறிக்கும் எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று கூறப்பட்டிருப்பதினால் புருஷனுடைய பாவமான துன்மார்க்கமான காரியங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பது பொருளல்ல. மனைவியானவள் தன்னுடைய ஆத்துமாவையும் காத்துக் கொள்ள வேண்டிய கடமையுடையவளாக இருக்கிறாள் (மத் 22:37 லூக்கா 14:26-27) கிறிஸ்து சபையை நேசிப்பது போல புருஷனும் தன் மனைவியை நேசிக்க வேண்டும். இந்த நேசத்தின் அடிப்படையிலேயே மனைவியானவள் தன் புருஷனிடத்தில் அன்புகூருவாள் (எபே 5:25, 28, 33)

2. புருஷர்களின் கடமைகள் - கொலோ 3:19; தீத்து 2:2,6 பேதுரு 3:7

எபே 5:25 புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள் அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து,

எபே 5:26 தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறதற்கும்,

எபே 5:27 கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்.

எபே 5:28 அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவித்து அவர்களில் அன்புகூரவேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான்.

எபே 5:29 தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே, கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறது போல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான்.

எபே 5:30 நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்.

எபே 5:31 இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்.

எபே 5:32 இந்த இரகசியம் பெரியது; நான் கிறிஸ்துவைப் பற்றியும் சபையைப் பற்றியும் சொல்கிறேன்.

எபே 5:33 எப்படியும், உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்புகூருவது போலத் தன் மனைவியினிடத்திலும் அன்புகூரக்கடவன்; மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக் கடவள்.

புருஷர்களுக்குக் கூறப்பட்டிருக்கும் கடமைகள்

1. கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்க வேண்டும். (எபே 5:23)
2. புருஷர்கள் தங்கள் மனைவிகளில் அன்புகூரவேண்டும். (எபே 5:25)
3. புருஷர்கள் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூரவேண்டும். (எபே 5:28, 33)
4. புருஷன் தன் சொந்த சரீரமாக இருக்கும் தன் மனைவியைப் போஷிக்க வேண்டும்.
5. புருஷன் தன் சொந்த சரீரமாக இருக்கும் தன் மனைவியைக் காப்பாற்ற வேண்டும்.

எபேசியர் - தொகுப்புரை

5 அதிகாரம்

6 ஒரே மாம்சமாக இணைக்கப்பட்டிருக்க வேண்டும். (எபே 5:30-31)

7 புருஷர்கள் தங்கள் மனைவிகளின் நிமித்தம் தங்களுடைய தாயையும் தகப்பனையும் விட்டுப் பிரிந்து வரவேண்டும். (எபே 5:31)

8 புருஷர்கள் தங்கள் மனைவிகளோடு இசைந்திருக்க வேண்டும். (எபே 5:31, மத் 19:5)

போஷித்தல் (nourish) - ἐκτρέφω - ektrepoo - 1625

வினைச்சொல் - போஷி, வளர் (bring up, care for, protect) (எபே 5:29; எபே 6:4, வெளி 12:6)

காப்பாற்றுதல் (cherish) - θάλπω - thalpoo - 2282

வினைச்சொல் - காப்பாற்று (to foster, warm in one's bosom) (எபே 5:29; 1தெச 2:7)

கிறிஸ்துவும் சபையும்

1 கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறார் (எபே 5:23)

2 கிறிஸ்து சபைக்கு இரட்சகராயிருக்கிறார் (எபே 5:23)

3 சபையானது கிறிஸ்துவுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் (எபே 5:24)

4 கிறிஸ்து சபையில் அன்புகூர்ந்து சபைக்காக தம்மையே அர்ப்பணித்தார் (எபே 5:25)

5 கிறிஸ்து சபையைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரிக்கிறார் (எபே 5:26)

6 கிறிஸ்து சபையைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் பரிசுத்தமாக்குகிறார் எபே 5:26

7 கிறிஸ்து சபையைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்கிறார் (எபே 5:27 யோவான் 14:1-3; 1தெச 4:16, 1கொரி 15:23,51-58; கொலோ 3:4

8 கிறிஸ்து தமது சபையை மகிமையுள்ள சபையாக ஆக்குகிறார் (எபே 5:27 1கொரி 6:11; 2கொரி 3:18

9 கிறிஸ்து சபையைக் கறைதிரையற்றதாக ஆக்குகிறார் (எபே 5:27)

10 கிறிஸ்து சபையைப் பூரணப்படுத்துகிறார் (எபே 5:27)

11 கிறிஸ்து சபையைப் பரிசுத்தமாக்குகிறார் (எபே 5:27)

12 கிறிஸ்து சபையைப் பிழையற்றதாக ஆக்குகிறார் (எபே 5:27)

13 கிறிஸ்து சபையைப் போஷிக்கிறார் (எபே 5:29)

14 கிறிஸ்து சபையைக் காப்பாற்றுகிறார் (எபே 5:29)

15. சபை கிறிஸ்துவின் அவயவமாய் இருக்கிறது. (எபே 5:30-32 1கொரி 12:12-13,27)

16 சபை கிறிஸ்துவுடன் இசைந்து ஒன்றாய் இருக்கிறது. (எபே 5:30-32 1கொரி 6:17 ரோமர் 12:4-5

பரிசுத்தப்படுத்துதல் (sanctify) ἁγιάζω - hagiazoo - 37

வினைச்சொல் - பரிசுத்தப்படுத்துதல், பரிசுத்தப்படுதல், பரிசுத்தமாக்குதல், பரிசுத்தஞ்செய்தல் பரிசுத்தம் பண்ணுதல், பரிசுத்தமாக்கப்படுதல். (set apart or consecrate, referring to the new birth) (யோவான் 3:5)

(அ) தேவனுக்காக பொருட்களையோ அல்லது நபர்களையோ வேறுபிரித்து அர்ப்பணித்தல் மத் 23:17, யோவான் 10:36

5 அதிகாரம்

(ஆ) சட்டம் பிரகாரமாக நீதிநெறிப் பிரகாரமாக பரிசுத்தப்படுத்துதல் 1கொரி 6:11 7:14

இ) சடங்குகளின் மூலமாக ஒரு பொருளையோ அல்லது நபரையோ பரிசுத்தப்படுத்துதல் எபி 9:13 2தீமோ 2:21

ஈ) பரிசுத்தமுள்ளதை என்னுதல் மத். 6:9

தீர்க்கதரிசன எண் - 9

"கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்" (எபே 5:27) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை

மகிமையானது (Glorious) - ἔνδοξος - endoxos - 1741

பெயரடை மகிமையானது அலங்கார, கனவான் (லூக்கா 7:25, லூக்கா 13:17; 1கொரி 4:10 எபே 5:27) - மகிமையான சுவிசேஷத்தினால் சபையும் மகிமையாக இருக்கிறது. (1கொரி 4:4 1தீமோ 1:11) தேவனுடைய மகிமையான வல்லமை சபையில் கிரியை செய்து சபையை கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக ஆக்குகிறது. தேவனுடைய பிள்ளைகளின் மகிமையான சுதந்தரத்தினாலும் (ரோமர் 8:21) தேவனுடைய பிள்ளைகள் பெற்றுக் கொள்ளப்போகும் மகிமையான சரீரங்களினாலும் (பிலி 3:21) தேவனுடைய சபை மகிமையாய் இருக்கிறது.

கறை (spot) σπίλος spilos 4696

ஆண்பால் பெயர்ச்சொல் - கறை (blemish). (எபே 5:27 2பேதுரு 2:13)

திரை (wrinkle) - ῥυτίς - rhytis - 4512

பெண்பால் பெயர்ச்சொல் - திரை (wrinkle, no mark of age)

பிழையற்றது (without blemish) - ἄμωμος - amoomos - 299

பெயரடை - மாசு இல்லாத, குறறமில்லாத, பிழையற்ற, குற்றமற்ற, பழுதற்ற (faultless) (எபே 1:4)

"தங்கள் சொந்த சரீரங்கள்" - ஸ்திரீயானவள் மனுஷனுடைய ஒரு பகுதியாகவும் அவனோடு ஒரே மாம்சமாகவும் இருக்கிறாள் (எபே 5:28-32) ஆதி 2:21-25)

"நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும் அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்" - (எபே 4:25; ரோமர் 12:4-5; 1கொரி 6:15, 1கொரி 12:27)

இசைந்திருத்தல் (joined unto) - προσκολλάω - proskollaoo - 4347

வினைச்சொல் - இசைந்திரு, சேர்ந்திரு (glue on to; cemented to) (மத் 19:5; மாற்கு 10:7, அப் 5:36, எபே 5:31)

பயபக்தி (reverence) - φοβέομαι - phobeomai - 5399

வினைச்சொல் - பயப்படு, பயந்திரு (to strike with fear; to frighten) "reverence", "be afraid", "fear" (வெளி 1:17; வெளி 2:10) மனைவியானவள் தனனுடைய புருஷனைத் தன் தலையாக பாவித்து, அவனிடத்தில் பயபக்தியாய் இருக்க வேண்டும் (எபே 5:23-24, 1கொரி 11:3)

6 அதிகாரம்

3. பிள்ளைகளின் கடமைகள் - கொலோ 3:20

எபே 6:1 பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கீழ்ப்படியுங்கள், இது நியாயம்

எபே 6:2 உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும்.

எபே 6:3 உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாம் கற்பனையாயிருக்கிறது.

பிள்ளைகளுக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள் (கொலோ 3:20)

1 தங்கள் பெற்றாருக்குக் கீழ்ப்படிய வேண்டும். (எபே 6:1)

2 தங்கள் பெற்றாரைக் கனம் பண்ண வேண்டும். (எபே 6:3)

பிள்ளைகள் தங்கள் பெற்றாருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதற்குக் காரணங்கள்

1 இது நியாயம் (எபே 6:1)

2 இது வாக்குத்தத்தமுள்ள கற்பனை (எபே 6:3; யாத் 20:12)

3 பிள்ளைகளுக்கு நன்மை உண்டாயிருக்கும் (எபே 6:2)

4 பிள்ளைகளுடைய வாழ்நாள் நீடித்திருக்கும் (எபே 6:2)

4. பிதாக்களின் கடமைகள் - (கொலோ 3:21)

எபே 6:4 பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப் படுத்தாமல் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக.

பெற்றாருக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள் (கொலோ 3:21)

1 உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல் இருக்க வேண்டும்

2 உங்கள் பிள்ளைகளைக் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் வளர்க்க வேண்டும்

சிட்சை (nurture) - παιδεία - paideia - 3809

பெண்பால் பெயர்ச்சொல் - போதனை படிப்பிக்குதல் சிட்சை (child training; education; discipline; correction). "instruction" (2 தீமோ 3:16); "chastening" (எபி 12:5, 7, 11); "chastisement" (எபி 12:8)

போதனை (admonition) - νουθεσία - nouthesia - 3559

பெண்பால் பெயர்ச்சொல் - எச்சரிப்பு, போதனை புத்திசொல்லுதல் (warning, admonition, reproof) (1 கொரி 10:11; எபே 6:4; தீத்து 3:10)

5. வேலைக்காரரின் கடமைகள் - (கொலோ 3:22; தீத்து 2:9)

எபே 6:5 வேலைக்காரரே, நீங்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல, சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கும் பயத்தோடும் நடுக்கத்தோடும் கபடமற்ற மனதோடும் கீழ்ப்படிந்து,

6 அதிகாரம்

எபே 6:6 மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல் கிறிஸ்துவின் ஊழியக்காரராக மனப்பூர்வமாய் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள்

எபே 6:7 அடிமையானவனானாலும் சுயாதீனமுள்ளவனானாலும் அவனவன் செய்கிற நன்மையின்படியே கர்த்தரிடத்தில் பலனை அடைவானென்று அறிந்து

எபே 6:8 மனுஷருக்கென்று ஊழியஞ் செய்யாமல் கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ்செய்யுங்கள்

வேலைக்காரருக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1 உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்குக் கீழ்ப்படியுங்கள் (கொலோ 3:22)

2 உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்குப் பயத்தோடும் நடுக்கத்தோடும் கபடமற்ற மனதோடும் ஊழியம் செய்யுங்கள் (எபே 6:5)

3 மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல் இருங்கள் (எபே 6:6; கொலோ 3:22)

4 கிறிஸ்துவின் ஊழியக்காரராக மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள் (எபே 6:6)

5 அவனவன் செய்கிற நன்மையின்படியே கர்த்தரிடத்தில் பலனை அடைவானென்று அறிந்து ஊழியம் செய்யுங்கள் (எபே 6:7; கொலோ 3:23)

6 மனுஷருக்கென்று ஊழியஞ் செய்யாமல், கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ்செய்யுங்கள் (எபே 6:8; கலா 6:7-8; கொலோ 3:24-25)

6. எஜமான்களின் கடமைகள் - (1தீமோ 6:1; 1கொரி 7:17; 1பேதுரு 2:18; மத் 24:45-51; 25:1-30; கொலோ 4:1; 1தீமோ 6:2)

எபே 6:9 எஜமான்களே, அப்படியே நீங்களும் வேலைக்காரருக்குச் செய்ய வேண்டியவைகளைச் செய்து அவர்களுக்கும் உங்களுக்கும் எஜமானானவர் பரலோகத்தில் இருக்கிறாரென்றும் அவரிடத்தில் பட்சபாதம் இல்லையென்றும் அறிந்து கடுஞ்சொல்லை விட்டுவிடுங்கள்

எஜமான்களுக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள் (கொலோ 4:1)

1 வேலைக்காரருக்குச் செய்ய வேண்டியவைகளைச் செய்யுங்கள் (எபே 6:9; கொலோ 4:1)

2 அவர்களுக்கும் உங்களுக்கும் எஜமானானவர் பரலோகத்தில் இருக்கிறாரென்றும், அவரிடத்தில் பட்சபாதம் இல்லையென்றும் அறிந்து கொள்ளுங்கள் (எபே 6:9)

3 கடுஞ்சொல்லை விட்டுவிடுங்கள் (எபே 6:9; ரோமர் 2:11; கொலோ 4:1)

VI. விசுவாசிகளின் ஆவிக்குரிய போராட்டம் - (எபே 6:10-20; 2கொரி 10:3-5; ரோமர் 6:1-8; கலா 5:13-26; 1பேதுரு 5:8)

1. விசுவாசிகளின் வல்லமை

எபே 6:10 கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்

6 அதிகாரம்

பரிசுத்தவான்களுக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1 கர்த்தரில் பலப்படுங்கள் (எபே 6:10)

2 கர்த்தருடைய சத்துவத்தின் வல்லமையில் பலப்படுங்கள் (எபே 6:10)

3 தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொள்ளுங்கள் (எபே 6:11)

4 சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நில்லுங்கள் (எபே 6:13-14)

5 சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டிக் கொள்ளுங்கள் (எபே 6:14)

6 நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்துக் கொள்ளுங்கள் (எபே 6:14)

7 சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்துக் கொள்ளுங்கள் (எபே 6:15)

8 விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொள்ளுங்கள் (எபே 6:16)

9 இரட்சணியமென்னும் தலைச்சீராவை எடுத்துக் கொள்ளுங்கள் (எபே 6:17)

10 தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தை எடுத்துக்கொள்ளுங்கள் (எபே 6:17)

11 ஆவியினாலே ஜெபம் பண்ணுங்கள் (எபே 6:18)

12 மிகுந்த மனஉறுதியோடும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள் (எபே 6:18)

பலப்படுதல் (strong) **ἐνδυναμόω** **endynamooo** 1743

வினைச்சொல் - பலப்படு, திடன்கொள் (to acqure strength) **"strengthen"** (பிலி 4:13, 2தீமோ 4:17); **"enable"** (1தீமோ 1:12); **"be strong"** (ரோமர் 4:20; எபே 6:10; 2தீமோ 2:1; எபி 11:34); **"increase in strength"** (அப் 9:22)

2. **விசுவாசிகளின் எதிரி** - (மாற்கு 16:17; யோவான் 15:18; ரோமர் 8:1-13; கலா 5:16-21; யாக் 4:7; 1பேதுரு 5:8)

எபே 6:11 நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள்

எபே 6:12 ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும் இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும் வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.

"தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்" (லூக்கா 24:4)

சர்வாயுதவர்க்கம் (armour) - **πανοπλία** - **panoplia** - 3833

பெண்பால் பெயர்ச்சொல் - ஆயுதவர்க்கம் சர்வாயுதவர்க்கம் - எபே 6:13-17 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருப்பவை. (எபே 6:11,13; லூக்கா 11:22)

தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தின் ஆசீர்வாதங்கள்

1. பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாவோம். (எபே 6:11-14)

2 தீங்கு நாளிலே எல்லாப் போராட்டங்களையும் எதிர்த்து நிற்கலாம். (எபே 6:13)

6 அதிகாரம்

3. பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களை யெல்லாம் அவித்துப் போடலாம். (எபே 6:16)

தந்திரங்கள் (wiles) - μεθοδεία - methodeia - 3180

பெண்பால் பெயர்ச்சொல் - தந்திரம் - மனுஷனுடைய ஆத்துமாவை அழிக்கும் தந்திரங்கள்

போராட்டம் (wrestle) - πάλη - palee - 3823

பெண்பால் பெயர்ச்சொல் - போராட்டம்

'மாம்சத்தோடும் இரத்தத்தோடும்' - (கலா 1:16; 1கொரி 15:50)

நாம் போராட வேண்டிய காரியங்கள்

1. துரைத்தனங்கள்
2. அதிகாரங்கள்
3. இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகள்
4. வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகள்

துரைத்தனங்கள் (powers) - ἀρχή - archee - 746

பெண்பால் பெயர்ச்சொல் - ஆதி, ஆதிமுதல், ஆரம்பம், முதல் அதிகாரமுள்ளவர்கள், அதிகாரம் துரைத்தனம், துவக்கம், மூலைபதேசம் உலகமுண்டானது முதல், உலகத்தை சிருஷ்டித்தது முதல் (principalities) - சாத்தானுடைய இராஜ்ஜியத்தில் ஆளுகை செய்யக்கூடியவர்கள் (எபே 6:12; எபே 1:21; கொலோ 2:10)

அதிகாரங்கள் (authorities) ἐξουσία - exousia - 1849

பெண்பால் பெயர்ச்சொல் - அதிகாரம், வல்லமை, ஆதீனம் - ஆட்சி புரிபவர்களிடமிருந்து அதிகாரங்களைப் பெற்று அவர்களுடைய சித்தங்களை நிறைவேற்றுகிறவர்கள் (எபே 6:12; எபே 1:21; கொலோ 2:10)

லோகாதிபதிகள் (world-rulers) - κοσμοκράτωρ - kosmokratoor - 2888

ஆண்பால் பெயர்ச்சொல் - லோகாதிபதி - இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகள் (world-rulers of the darkness of this age, the spirit world-rulers) (தானி 10:13-21; எபே 1:21; எபே 6:12; கொலோ 1:16-18)

ஆவிகளுடையது (spiritual) - πνευματικός - pneumatikos - 4152

பெயரடை - ஆவிக்குரிய ஞான ஆவிகேற்ற (spiritual wickedness) - சாத்தானுடைய பொல்லாத ஆவிகளுடைய காரியங்கள் (எபே 6:12; எபே 1:21; கொலோ 1:16-18)

ὁ - ho - 3588

கிரேக்க மொழியில் சிறப்புசுட்டு - குறிப்பிட்ட நபர்களையோ அல்லது பொருட்களையோ குறிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படுகிறது. வலியுறுத்தும் இலக்கணக்கூறாகவும் பயன்படுத்தப் படுகிறது.

பொல்லாதது (wickedness) πονηρία - poneeria - 4189

பெண்பால் பெயர்ச்சொல் - துர்குணம், துரோகம், பொல்லாப்பு, துஷ்டத்தனம்

வான மண்டலங்கள் (high places) - ἐπουράνιος - epouranios - 2032

6 அதிகாரம்

பெயரடை - பரம, வானத்துக்குரிய, உன்னதத்திலுள்ள **(heavenlies)** எபே 1:3

3. **விசுவாசிகளின் சர்வாயுத வர்க்கம்** - (ரோமர் 13:12; 1தெச 5:8; 2கொரி 6:7)

எபே 6:13 ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்.

எபே 6:14 சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்,

எபே 6:15 சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்,

எபே 6:16 பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள்.

எபே 6:17 இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.

"தீங்குநாள்" தீங்குநாளிலே நாம் சாத்தானுடைய அந்தகாரச் சக்திகளை எதிர்த்து நிற்க வேண்டும். தேவனுக்காக சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்க வேண்டும். நமக்குத் துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும் சாத்தானுடைய சகல கிரியைகளோடும் போராட்டங்கள் உண்டு (எபே 6:12). போராட்டத்தில் நாம் வெற்றி பெற்று, சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்பதற்குத் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக் கொள்ள வேண்டும். (எபே 6:13-18)

சர்வாயுத வர்க்கத்தின் இரண்டு வகைகள்

1. தற்காப்பிற்காக பயன்படுத்தப்படும் பாதுகாப்பு ஆயுதங்கள்
   - (1) தலைச்சீரா
   - (2) கச்சை
   - (3) மார்க்கவசம்
   - (4) பாதரட்சை
   - (5) கேடகம்
2. வெற்றி பெறுவதற்காகச் சத்துருக்களைத் தாக்கும் ஆயுதம்
   - (1) பட்டயம்

தலைச்சீரா (helmet) - περικεφαλαία - **perikephalaia** - 4030

பெண்பால் பெயர்ச்சொல் - தலைச்சீரா - தலையைப் பாதுகாப்பதற்கு

கச்சை ζώνη - zoonee - 2223

பெண்பால் பெயர்ச்சொல் - கச்சை

மார்க்கவசம் (breastplate) - θώραξ - **thoorax** - 2382

பெண்பால் பெயர்ச்சொல் - மார்க்கவசம்

பாதரட்சை - ὑποδέω - **hypodeoo** - 5265

வினைச்சொல் - பாதரட்சையைப் போட்டுக்கொள் - பாதரட்சையைத் தொடுத்துக்கொள்

கேடகம் (shield) θυρεός **thyreos** 2375

6 அதிகாரம்

ஆண்பால் பெயர்ச்சொல் - கேடகம்

பட்டயம் (sword) - **Μάχαιρα** - **Machaira** - 3162

பெண்பால் பெயர்ச்சொல் - பட்டயம் கத்தி

"சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் - இராணுவத்தில் பயன்படுத்தப்படும் வாக்கியம். போர்வீரர்கள் வெற்றி பெற்றவர்களாகவும் மறுபடியும் போரிடுவதற்கு ஆயத்தமுள்ளவர்களாகவும் நிற்க வேண்டும். (எபே 6:11)

கிறிஸ்தவ விசுவாசிகளுடைய சர்வாயுத [redacted]

1. சத்தியம் என்னும் கச்சை (எபே 6:14)
2. நீதியென்னும் மார்க்கவசம். (எபே 6:14)
3. சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சை (எபே 6:15)
4. விசுவாசமென்னும் கேடகம். (எபே 6:16)
5. இரட்சணியமென்னும் தலைச் சீரா (எபே 6:17)
6. தேவவசனமாகிய ஆவியின் பட்டயம் (எபே 6:17)

"நீதியென்னும் மார்க்கவசம்" - (ஏசா 11:5 ஏசா 59:17)

"சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சை" - (மாற்கு 6:9; அப் 12:8 ஏசா 52:7; ரோமர் 10:15)

ஆயத்தம் (preparation) - **ἑτοιμασία** **hetoimasia** 2091

பெண்பால் - பெயர்ச்சொல் ஆயத்தம் (being prepared; readiness) சுவிசேஷம் மனுஷனைத் தேவனோடு சமாதானம் பண்ணி அவரைச் சந்திப்பதற்கு மனுஷனை ஆயத்தம் பண்ணுகிறது.

அக்கினியாஸ்திரம் (dart) - **βέλος** **belos** 956

பாலவேறுபாடற்ற பெயர்ச்சொல் - அக்கினியாஸ்திரம் (missile thrown, the javelin, spear, arrow, stone from a sling) கிறிஸ்தவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் ஆசைகள், தீய சிந்தனைகள் ஆகியவை அக்கினியாஸ்திரம்போல் தாக்கும் (1கொரி 10:13-14; 2கொரி 10:4-6 யாக் 1:13-15; ரோமர் 6:12 1யோவான் 2:15-17)

"பொல்லாங்கன்" (the wicked) - இது சாத்தானைக் குறிக்கும். பொல்லாங்கு செய்கிற அனைவருக்கும் சாத்தான் தலைவன் (மத் 13:19,38; 1யோவான் 2:13-14; 1யோவான் 3:12; 1யோவான் 5:18). இந்த வார்த்தை துன்மார்க்கரையும் குறிக்கிறது (ஏசா 11:4; 2தெச 2:8; 2பேதுரு 2:7; 2பேதுரு 3:17)

எடுத்துக்கொள் (take) - **δέχομαι** - **dechomai** - (2209)

வினைச்சொல் - ஏற்றுக்கொள் ஏந்திக்கொள், வாங்கு, அங்கீகரி **"receive"; "accept"**

"இரட்சணியமென்னும் தலைச் சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும்" - (எபே 6:17, 1தெச 5:8 - ஏசா 59:17)

வசனம் (word) - **ῥῆμα** - **rheema** - 4487

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - வார்த்தை, மொழி வாக்கு, வசனம், காரியம், சொல்லப்பட்டது, சொன்ன உத்தரவு, வாக்கியம், சங்கதி - தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தை (மத் 4:4-7, லூக்கா 4:32; அப் 11, ஏசா 8:20) பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையோடு இசைந்து கிரியை செய்வார் நமக்குச் சோதனைகள் வரும்போது வேதவசனங்களைத் திடனளித்து அவற்றை மேற்கோளாகக் கூற வேண்டும்.

6 அதிகாரம்

4. விசுவாசிகளின் ஆதாரம் - (ரோமர் 8:26; மத் 7:7-11; யோவான் 14:12-15)

எபே 6:18 எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்

எபே 6:19 சுவிசேஷத்திற்காகச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிற ஸ்தானாபதியாகிய நான் அதைப்பற்றிப் பேசவேண்டியபடி தைரியமாய்ப் பேசத்தக்கதாக

எபே 6:20 நான் தைரியமாய் என் வாயைத் திறந்து சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிக்கிறதற்கு எனக்கு வாக்குக் கொடுக்கப்படும்படி எனக்காகவும் விண்ணப்பம் பண்ணுங்கள்

"எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ண வேண்டும் - தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தில் ஜெபம் ஒரு ஆயுதமாகக் கூறப்படவில்லை ஆனால் சாத்தானுடைய கிரியைகளுக்கு எதிராகப் போரிடும்போது ஜெபம் முக்கியமான காரியமாயிருக்கிறது. மிகவும் அவசியம். (யாக் 4:7; 1பேதுரு 5:8-9)

"சகலவிதமான வேண்டுதல்" - தனி ஜெபம், பொது ஜெபம், சபையில் ஜெபம் குடும்ப ஜெபம்.

விண்ணப்பம் (supplication) - δέησις - deeesis - 1162

பெண்பால் பெயர்ச்சொல் - வேண்டுதல், ஜெபம் பண்ணுதல் விண்ணப்பம் (entreating) - ஜெபத்திற்குப் பதில் கிடைக்கும் வரையிலும் கர்த்தரிடம் தொடர்ந்து விண்ணப்பம் பண்ணுவது (லூக்கா 18:1-8) "request" (பிலி 1:4); "supplication" (அப் 1:14; எபே 6:18; பிலி 4:6 1தீமோ 2:1; 1தீமோ 5:5)

"மிகுந்த மனஉறுதியோடு விழித்துக் கொண்டிருங்கள்" - தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்திருந்தாலும் நாம் மன உறுதியோடு விழித்துக் கொண்டிருக்க வில்லையென்றால் நாம் அணிந்திருக்கும் ஆயுதங்களினால் பிரயோஜனமிராது (மாற்கு 13:33; லூக்கா 21:36; எபி 13:17)

மனஉறுதி (perseverance) - προσκαρτέρησις - proskartereesis - 4343

பெண்பால் பெயர்ச்சொல் - உறுதி (to adhere firmly to) (அப் 1:14) (Be close in pursuit of; always intent upon your object in prayer) (ரோமர் 12:12)

ஸ்தானாபதி (ambassador) - πρεσβεύω - presbeuoo - 4243

வினைச்சொல் - ஸ்தானாபதி - ராஜாவின் பிரதிநிதி (2கொரி 5:20; எபே 6:19)

"சங்கிலி" (bonds, Chains) - (அப் 28:20; 2தீமோ 1:16)

ஊழியக்காரர்களுக்காக ஜெபம் பண்ண வேண்டிய காரியங்கள்

1. அபிஷேகம் பண்ணப்பட்ட வார்த்தையைப் பேச வேண்டும்.
2. பேசவேண்டியபடி தைரியமாய் பேச வேண்டும்.
3. சுவிசேஷத்தைத் தெளிவாய்ப் பிரசங்கிக்க வேண்டும்.

6 அதிகாரம்

VII. முடிவுரையும் ஆசீர்வாதமும்

எபே 6:21 அன்றியும், எனக்கடுத்த காரியங்களும், என் சுக செய்திகளும் உங்களுக்குத் தெரியவரும்படிக்கு, அவைகளையெல்லாம் நமக்குப் பிரியமான சகோதரனும் கர்த்தருக்குள் உண்மையுள்ள ஊழியக்காரனுமாயிருக்கிற தீகிக்கு உங்களுக்கு அறிவிப்பான்.

எபே 6:22 நீங்கள் எங்கள் செய்திகளை அறியவும், அவன் உங்கள் இருதயங்களுக்கு ஆறுதல் செய்யவும் அவனை உங்களிடத்தில் அனுப்பினேன்.

எபே 6:23 பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் சகோதரருக்குச் சமாதானமும் விசுவாசத்தோடு கூடிய அன்பும் உண்டாவதாக.

எபே 6:24 நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் அழியாத அன்புடனே அன்புகூருகிற யாவரோடும் கிருபை உண்டாயிருப்பதாக. ஆமென்.

"தீகிக்கு" (Tychicus) - (அப் 20:4; கொலோ 4:7; 2தீமோ 4:12; தீத்து 3:12) இவன் ஒரு எபேசியனாக இருக்கலாம்.

அழியாதது (sincerity) - ἀφθαρσία - aphtharsia - 861

மூல மொழிச்சொல் - அழியாமை, அழிவில்லாதது, அழியாதது, ஆரோக்கியமானது (incorruption) (1கொரி 15:42); (immortality) (ரோமர் 2:7)

பிலிப்பியர் – முன்னுரை

காலமும் இடமும்

கிபி 64 ஆம் ஆண்டு பவுல் இந்த நிருபத்தை ரோமாபுரியிலிருந்து எழுதினார் இந்த நிருபத்தை எழுதுவதற்கான காரணம் பிலி 4:10-18 ஆகிய வசனங்களில வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆசிரியர்

பவுல

மையக்கருத்து

கிறிஸதவருடைய ஜீவியத்தில் காணப்படும் சந்தோஷம். தன்னுடைய பாடுகளிலும் உபத்திரவங்களிலும் பவுல மிகுந்த சந்தோஷமாக இருந்தார் இந்த நிருபத்தில "சந்தோஷம்" என்னும் வார்த்தை 14 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த நிருபத்தின மையக்கருத்தே "சந்தோஷம்" என்பதாகும். (பிலி 3:1) விசுவாசிகள் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் காரியங்களில சந்தோஷமாக இருக்க வேண்டும்

1 மற்ற விசுவாசிகளோடு ஐக்கியமாக இருப்பதில சந்தோஷமாக இருக்க வேண்டும். (பிலி 1:3-11)

2 சுவிசேஷத்தின நிமித்தம் பாடுகளை அனுபவிக்கும்போது சந்தோஷமாக இருக்க வேண்டும் (பிலி 1:12-30)

3 பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்யும் போது சந்தோஷமாக இருக்க வேண்டும் பிலி 2:1-18)

4 ஊழியக்காரர் உண்மையோடு இருந்து சந்தோஷமாக இருக்க வேண்டும். (பிலி 2:19 – 3:1)

5 மாம்சத்தில் சந்தோஷப்படாமல் கர்த்தருக்குள் சந்தோஷமாய் இருக்க வேண்டும் (பிலி 3:1-21)

6 ஒற்றுமையில் சந்தோஷமாக இருக்க வேண்டும். (பிலி 4:1-3)

7 எல்லாவற்றிலும் எப்பொழுதும் சந்தோஷமாக இருக்க வேண்டும். (பிலி 4.4-23)

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 4

வசனங்கள் - 104

கேள்வி - 1

புதிய தீர்க்கதரிசனங்கள் - 5

வரலாறறைக் குறிக்கும் வசனங்கள் - 96

பொருளடக்கம்

I. முன்னுரை

1 ஆசிரியரும வாழ்த்துரையும் (1:1-2)

2 ஸ்தோத்திரமும் ஜெபமும் (1:3-5)

3 விசுவாசிகளுக்காக கர்த்தரிடத்தில நம்பிக்கை (1:6-7)

4 ஆசீர்வாதத்திற்காக நானகு அம்ச ஜெபம் (1:8-11)

II. உபத்திரவத்திலும் கிறிஸதவ வெற்றி

1 சுவிசேஷத்திற்காக உபத்திரவப் படுவதினால ஏற்படும் விளைவு (1:12-19)

2 ஜீவனிலும் மரணத்திலும் கிறிஸ்தவ பிரதிஷ்டை (1:20-24)

3 ஊழியத்தை தொடர்ந்து செய்வதற்கு கர்த்தர் விடுதலை பண்ணுவார் என்னும் நம்பிக்கை (1:25-26)

4. கிறிஸ்துவிற்காக பாடுகளை அனுபவிப்பதில் உறுதியாய் தரித்திருக்க வேண்டும் (1:27-30)

பிலிப்பியர் - முன்னுரை

III. கிறிஸ்தவ ஜீவியம் - கிறிஸ்தவ ஜீவியத்திற்கு நான்கு எடுத்துக்காட்டுக்கள்

1. கிறிஸ்தவ ஜீவியத்திற்கு ஓர் விண்ணப்பம் (2:1-4)

2. கிறிஸ்துவின் முன்மாதிரி

(1) சுயதாழ்மையின் ஏழு அம்சம் (2:5-8)

(2) ஏழு அம்ச உயர்வு (2:9-11)

3. இரட்சிப்பின் கிரியை (2:12-16)

4. பவுலின் முன்மாதிரி - மரணத்திற்குப் பிரதிஷ்டை (2:17-18)

5. தீமோத்தேயுவின் முன்மாதிரி - சுயநலமில்லாமல் ஊழியத்திற்குக் கீழ்ப்படிதல் (2:19-24)

6. எப்பாப்பிரோதீத்துவின் முன்மாதிரி - சுய தியாகமும் அதிக உழைப்பும் (2:25-30)

IV. கிறிஸ்தவ ஜீவியத்தின் இலக்கு

1. பூதமாரக்கத்தாருக்கு எதிரான எச்சரிப்பு (3:1-2)

2. மாம்சத்தில நம்பிக்கை வைக்கக்கூடாது (3:3-4)

3. பவுலுடைய மாம்சத்தின் எட்டு அம்ச மேன்மை (3:5-6)

4. கிறிஸ்தவ இலக்கின் எட்டு அம்சம்

(1) கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ள வேண்டும் (3:7-8)

(2) கிறிஸ்துவிற்குள் இருக்கிறவனென்று காணப்பட வேண்டும் (3:9)

(3) கிறிஸ்துவை வல்லமையிலும் பாடுகளிலும் மரணத்திலும் அறிய வேண்டும் (3:10)

(4) பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாட வேண்டும் (3:11-12)

(5) கிறிஸ்து இயேசுவிற்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கி தொடர வேண்டும் (3:13-14)

(6) ஒரே ஒழுங்காய் நடந்து கொண்டு ஒரே சிந்தையாய் இருக்க வேண்டும் (3:15-16)

(7) அப்போஸ்தலரின் முன்மாதிரியை பின்பற்ற வேண்டும் (3:17-19)

(8) கிறிஸ்துவோடு மகிமை அடைய வேண்டும் (3:20-21)

V. விசுவாசிகளுக்கு புத்திமதிகள்

1. கர்த்தரிடத்தில நிலைத்திருக்க வேண்டும் (4:1)

2. கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாய் இருக்க வேண்டும் (4:2-4)

3. சாந்த குணம் வெளிப்படவேண்டும் (4:5-7)

4. கிறிஸ்தவ நீதிநெறி பண்பின் பிரகாரம் ஜீவிக்க வேண்டும் (4:8)

5. அப்போஸ்தல முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும் (4:9)

VI. பவுலின் உபத்திரவங்களில் பிலிப்பியரின் கரிசனை

1. கடந்த காலத்தில் விசாரிக்கவில்லை (4:10)

2. எந்த நிலைமையிலிருந்தாலும் பவுல் மன இரம்மியமாயிருக்க கற்றுக் கொண்டார் (4:11-13)

3. பிலிப்பியரின் பராமரிப்பிற்கு புகழுரை (4:14-18)

4. தேவனுடைய பராமரிப்பின் வாக்குத்தத்தம் (4:19)

5. முடிவுரையும் ஆசீர்வாதமும் (4:20-23)

1 அதிகாரம்

I. முன்னுரை

1. ஆசிரியரும் வாழ்த்துரையும்

பிலி 1:1 இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரராகிய பவுலும் தீமோத்தேயும், பிலிப்பி பட்டணத்திலே கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும் கண்காணிகளுக்கும், உதவிக் காரருக்கும் எழுதுகிறதாவது:

பிலி 1:2 நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

"தீமோத்தேயு" (Timotheus, Timothy) - (2கொரி 1:1) இந்தக் காலத்தில் தீமோத்தேயு பவுலோடு ரோமாபுரியில் இருந்தார் (பிலி 2:19)

"இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரர்" (servants of Jesus Christ) - (மத் 20:27)

"கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள்" (saints in Christ Jesus) - (அப் 9:13)

கண்காணிகள் (bishops)
ἐπίσκοπος - episkopos - 1985

ஆண்பால் பெயர்ச்சொல் கண்காணிப்பாளவன், கண்காணி - வசனத்தைப் பிரசங்கம் பண்ணும் மூப்பர் (a preaching elder) (அப் 20:28, அப் 14:23)

"உதவிக்காரர்" (deacons) - (மத் 20:26) இந்த வசனப் பகுதியில் மட்டுமே கண்காணிகளும், உதவிக்காரரும் இணைந்து கூறப்பட்டிருக்கிறார்கள்

"பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும்" திரித்துவத்தில் பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் தனித்தனியாக ஆள்தத்துவப் பண்புடையவர்கள் என்னும் சத்தியத்தை இந்த வசனமும் விளக்குகிறது.

2. ஸ்தோத்திரமும் ஜெபமும்

பிலி 1:3 சுவிசேஷம் உங்களுக்கு அறிவிக்கப்பட்ட நாள்முதல் இதுவரைக்கும் நீங்கள் அதற்கு உடன்பட்டவர்களானபடியால்,

பிலி 1:4 நான் பண்ணுகிற ஒவ்வொரு விண்ணப்பத்திலும் [illegible] அனைவருக்காகவும் எப்போதும் சந்தோஷத்தோடே விண்ணப்பம் பண்ணி

பிலி 1:5 உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி

விண்ணப்பம் பண்ணுதல் (prayer) -
δέησις - deeesis - 1162

பெண்பால் பெயர்ச்சொல் - வேண்டுதல், ஜெபம் பண்ணுதல் விண்ணப்பம் supplication (எபே 6:18) "prayer", "request."

அந்நியோந்நிய ஐக்கியம் (fellowship) -
κοινωνία - koinoonia - 2842

பெண்பால் பெயர்ச்சொல் - அந்நியோந்நியம் ஐக்கியம், பங்கை ஏற்றுக்கொள்ளுதல் பொருள் சகாயம், தர்மம் உடன்படு 2கொரி 13:14

நம்பிக்கையாயிருப்பது (confident)
πείθω - episeioo - 3982

வினைச்சொல் - எவிவிடு நம்பிக்கையாயிரு, சம்மதப்படுத்து, நம்பியிரு, வசமாக்கு புத்திசொல், உடன்படு, போதனை செய், கீழ்ப்படி, நிச்சயித்திரு, திடன்கொள் "persuade" "trust", "obey", "confidence", "assure," "believe," "agree," "yield," and "make one's friend"

பிலிப்பியர் - தொகுப்புரை

1 அதிகாரம்

தாம் துவக்கி வைக்கும் காரியத்தை முடித்து வைப்பதில தேவன் உண்மையுள்ளவர் பவுல் இதை முழுமையாக நம்பினார்

தீர்க்கதரிசன எண் - 1

"இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம்" - பிலி 1:6 இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை இயேசு கிறிஸ்துவின் நாளில் இந்த நற்கிரியையின் ஒரு பகுதி நிறைவேறும் (1கொரி 1:8) இயேசு கிறிஸ்துவின் நாளில சரீரத்தின் மீட்பு நிறைவேறும். (பிலி 3:21; ரோமர் 8:17-24, 1பேதுரு 1:5-13)

3. விசுவாசிகளுக்காக கர்த்தரிடத்தில் நம்பிக்கை

பிலி 1:6 நான் உங்களை நினைக்கிற பொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்

பிலி 1:7 என் கட்டுகளிலும் நான் சுவிசேஷத்திற்காக உத்தரவுசொல்லி அதைத் திடப்படுத்திவருகிறதிலும் நீங்கள் அனைவரும் எனக்கு அளிக்கப்பட்ட கிருபையில பங்குள்ளவர்களானதால உங்களை என் இருதயத்தில தரித்துக் கொண்டிருக்கிற படியினாலே உங்களெல்லாரையுங் குறித்து நான இப்படி நினைக்கிறது எனக்குத் தகுதியாயிருக்கிறது.

தேவன் நம்மிடத்தில் நற்கிரியையைத் தொடங்கி முடிப்பதற்கு நிபந்தனைகள்

1 தேவனுடைய கிருபையைப் பெற்றிருக்க வேண்டும். (பிலி 1:6)

2 தேவனுடைய கிருபையில பங்குள்ளவர்களாக இருக்க வேண்டும். (பிலி 1:7)

3 அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய் பெருக வேண்டும். (பிலி 1:9)

4 உத்தமமானவைகளை ஒப்புக்கொள்ள வேண்டும். (பிலி 1:9)

5. கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களாக இருக்க வேண்டும். (பிலி 1:11)

6 கிறிஸ்துவின் நாளுக்கென்று இடறலற்றவர்களாக இருக்க வேண்டும். (பிலி 1:11)

7 நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாக இருக்க வேண்டும். (பிலி 1:10)

8 கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக நடந்து கொள்ள வேண்டும். (பிலி 1:27

9 ஒரே ஆவியிலே உறுதியாய் நின்று ஒரே ஆத்துமாவினாலே சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகக் கூடப்போராட வேண்டும் (பிலி 1:27

10 எதிர்க்கிறவர்களால் ஒன்றிலும் மருளாதிருக்க வேண்டும். (பிலி 1:27

11 கிறிஸ்துவின் நிமித்தமாய் பாடுபட வேண்டும். (பிலி 1:29

12 கிறிஸ்துவோடு ஏகசிந்தை உள்ளவர்களாக இருக்க வேண்டும் (பிலி 2:2)

13 ஏக அன்பு உள்ளவர்களாக இருக்க வேண்டும். (பிலி 2:2

14 மற்றவர்களோடு இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்திக்க வேண்டும். (பிலி 2:2 பிலி 4:16

15 ஒன்றையும் வாதினாலாவது வீண் பெருமையினாலாவது செய்யக் கூடாது. (பிலி 2:3)

16 மனத் தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக் கடவீர்கள் (பிலி 2:3)

17 அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக. (பிலி 2:4)

பிலிப்பியர் – தொகுப்புரை

1 அதிகாரம்

18 கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது. (பிலி 2:5)

19 இரட்சிப்பை... பயத்தோடும்... நடுக்கத்தோடும் கீழ்ப்படிய வேண்டும். (பிலி 2:12)

20 அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்பட வேண்டும். (பிலி 2:12-13)

21 எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்ய வேண்டும். (பிலி 2:16)

22 குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும் தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்க வேண்டும் (பிலி 2:15)

23 ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசிக்க வேண்டும். (பிலி 2:16)

24 நாய்களுக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும். பொல்லாத வேலையாட்களுக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும். சுன்னத்துக்காரருக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும் (பிலி 3:2)

25 கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடர வேண்டும். (பிலி 3:13-16)

26 ஒரே ஒழுங்காய் நடந்துகொண்டு, ஒரே சிந்தையாயிருக்க வேண்டும்.

27 பவுலோடே கூடப் பின்பற்றுகிறவர்களாக இருக்க வேண்டும். கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரை அடையாளம் கண்டு அவர்களைப் பின்பற்றாதிருக்க வேண்டும். (பிலி 3:17-20)

28 கர்த்தருக்குள் நிலைத்திருக்க வேண்டும். (பிலி 4:1)

29 கிறிஸ்துவின் ஊழியக்காரர்களுக்கு உதவியாயிருக்க வேண்டும். (பிலி 4:3)

30 கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாய் இருக்கவேண்டும் (பிலி 4:4)

31 உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருக்க வேண்டும். (பிலி 4:5)

32 ஒன்றுக்குங் கவலைப்படாதிருக்க வேண்டும் (பிலி 4:6)

33 உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தே[illegible] தெரியப்படுத்த வேண்டும். (பிலி 4:6)

34. சரியான காரியங்களைச் சிந்தித்துக்கொண்டிருக்க வேண்டும். (பிலி 4:8)

35. பவுலினிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ அவைகளையே செய்ய வேண்டும். (பிலி 4:9)

தகுதி (meet) - δίκαιος - dikaios - 1342

பொருள் - நீதிமானாயிருக்கிற, நீதியுள்ள, நியாயமான, உண்மையுள்ள **(righteous, just)**

"உங்களை என் இருதயத்தில் தரித்துக்கொண்டிருக்கிறபடியினாலே" (லூக்கா 22:3)

உத்தரவு சொல்லுதல் (defence) - ἀπολογία - apologia 627

பொருள் பொச்சொல் - நியாயம், எதிருத்தரவு, மாறுத்தரம், உத்தரவு, **(speech in defense)** (அப் 22:1)

1 அதிகாரம்

திடப்படுத்துதல் (confirmation) βεβαίωσις - bebaioosis - 951

பெண்பால் பெயர்ச்சொல் - திடப்படுத்துதல், உறுதிபண்ணுதல் - உறுதிபண்ணுவதற்கு சட்டரீதியாகப் பயன்படுத்தும் வார்த்தை. (எபி 6:16) (making fast, sure, establishing)

பங்குள்ளவர்கள் (partaker) συγκοινωνός - synkoinoonos - 4791

ஆண்பால் பெயர்ச்சொல் - கூட உடன்படுகிறவர், பங்குள்ளவர்கள் (joint-partakers of a thing) (பிலி 1:7; ரோமர் 11:17; 2கொரி 9:23) (companion) (வெளி 1:9)

"கிருபை" (grace) - (ரோமர் 12:3; யோவான் 1:17)

4. ஆசீர்வாதத்திற்காக நான்கு அம்ச ஜெபம்

பிலி 1:8 இயேசு கிறிஸ்துவின் உருக்கமான அன்பிலே உங்களெல்லார் மேலும் எவ்வளவோ வாஞ்சையாயிருக்கிறேன் என்பதற்குத் தேவனே எனக்குச் சாட்சி.

பிலி 1:9 மேலும் உத்தமமானவைகளை நீங்கள் ஒப்புக்கொள்ளத்தக்கதாக உங்கள் அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய் பெருகவும்,

பிலி 1:10 தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி இயேசு கிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகி,

பிலி 1:11 நீங்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமாயிருக்கவும் வேண்டுதல் செய்கிறேன்.

சாட்சி (witness) μάρτυς - martys - 3144

ஆண்பால் பெயர்ச்சொல் - சாட்சி (martyr) (அப் 22:20; வெளி 2:13; வெளி 17:6); (record) (பிலி 1:8; 2கொரி 1:23)

"உருக்கமான அன்பு" (bowels) - (2கொரி 6:12)

பவுல் பிலிப்பியரிடம் வேண்டிக் கொள்ளும் காரியங்கள் (பிலி 1:9-11)

1. உங்கள் அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய் பெருக வேண்டும்.
2. உத்தமமானவைகளை நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும்.
3. கிறிஸ்துவின் நாள் வரையிலும் (முடிவுபரியந்தம்) உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும்.
4. கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமாயிருக்க வேண்டும்.
5. நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாய் இருக்க வேண்டும்.

உணர்வு (discernment) - αἴσθησις - aistheesis - 144

பெண்பால் பெயர்ச்சொல் - உணர்வு

உத்தமமானவைகள் (excellent) διαφέρω - diapheroo - 1308

வினைச்சொல் - கொண்டு போ, பிரசித்தமாயிரு, அலைவுபட்டு ஓடு, வித்தியாசமாயிரு, கலிசேஷத்திலிருந்து வேறுபடும் காரியங்களை நாம் ஒப்புக்கொள்ளக்கூடாது. 1தெச 5:22

"நீதியின் கனிகள்" (fruits of righteousness) விசுவாசத்தின் மூலமாக இந்தக் கனிகள் வருகிறது. (2கொரி 5:17-18; ரோமர் 5:1-11)

1 அதிகாரம்

துப்புரவானவர்கள் (sincere) - εἰλικρινής eilikrinees 1506

பொருள் - துப்புரவான உண்மையான (pure, uncorrupted) - சூரிய ஒளியினால் சோதித்துப் பார்க்கக்கூடியது. (பிலி 1:10, 2பேதுரு 3:1) (1கொரி 5:8)

இடறலற்றவர்கள் (without offence) - ἀπρόσκοπος - aproskopos - 677

பொருள் - குற்றமற்ற, இடறலற்ற (not striking against; not stumbling; void of offense to God or man; neither stumbling nor causing others to stumble) (பிலி 1:10 அப் 24:16; 1கொரி 10:32 பேதுரு 1:17)

"கிறிஸ்துவின் நாள்" (the day of Christ) - (1கொரி 1:8)

II. உபத்திரவத்திலும் கிறிஸ்துவின் வெற்றி

1. சுவிசேஷத்திற்காக உபத்திரவப் படுவதினால் ஏற்படும் விளைவு - (பிலி 1:12-30; மத் 26:36, 1கொரி 4:9 2கொரி 4:8 6:3; 11:23, ரோமர் 8:35-39, எபி 11:33-40)

பிலி 1:12 சகோதரரே, எனக்குச் சம்பவித்தவைகள் சுவிசேஷம் பிரபலமாகும்படிக்கு ஏதுவாயிற்றென்று நீங்கள் அறிய மனதாயிருக்கிறேன்

பிலி 1:13 அரமனையெங்கும் மற்ற யாவருக்கும் என் கட்டுகள் கிறிஸ்துவுக்குள்ளான கட்டுகளென்று வெளியரங்கமாகி

பிலி 1:14 சகோதரரில் அநேகர் என் கட்டுகளாலே கர்த்தருக்குள் திடன் கொண்டு பயமில்லாமல் திருவசனத்தைச் சொல்லும்படி அதிகமாய்த் துணிந்திருக்கிறார்கள்

பிலி 1:15 சிலர் பொறாமையினாலும் விரோதத்தினாலும், சிலர் நல்மனதினாலும் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறார்கள்

பிலி 1:16 சிலர் என் கட்டுகளோடே உபத்திரவத்தையுங்கூட்ட நினைத்து, சுத்த மனதோடே கிறிஸ்துவை அறிவியாமல் விரோதத்தினாலே அறிவிக்கிறார்கள்

பிலி 1:17 சுவிசேஷத்திற்காக நான் உத்தரவு சொல்ல ஏற்படுத்தப் பட்டவனென்று அறிந்து, சிலர் அன்பினாலே அறிவிக்கிறார்கள்

பிலி 1:18 இதினாலென்ன? வஞ்சகத்தினாலாவது உண்மையினாலாவது, எப்படியாவது கிறிஸ்து அறிவிக்கப்படுகிறார் அதனால் சந்தோஷப்படுகிறேன் இன்னமும் சந்தோஷப்படுவேன்

பிலி 1:19 அது உங்கள் வேண்டுதலினாலும் இயேசு கிறிஸ்துவினுடைய ஆவியின் உதவியினாலும் எனக்கு இரட்சிப்பாக முடியுமென்று அறிவேன்

"எனக்குச் சம்பவித்தவைகள் சுவிசேஷம் பிரபலமாகும்படிக்கு ஏதுவாயிற்று" இயேசுகிறிஸ்துவிற்காக பவுல் பாடுகளை அனுபவித்தார் சுவிசேஷப் பிரபலயத்திற்கு பவுலின் பாடுகள் உதவி புரிந்தன. கிறிஸ்துவிற்காக வைராக்கியத்தோடு சுவிசேஷப் பிரபலய ஊழியம் செய்யுமாறு பவுலின் பாடுகள் மற்ற விசுவாசிகளை ஊக்குவித்தது. பிலி 1:12-19

அரமனை (palace) πραιτώριον - praitoorion - 4232

பால்வேறுபாடற்ற பெயர்ச்சொல் அரமனை - ரோமாபுரியில் ராயனுக்கு முன்பாக பவுல் நியாயம் விசாரிக்கப்பட்ட இடம். (பிலி 4:22)

பிலிப்பியர் - தொகுப்புரை

1 அதிகாரம்

"என் கட்டுகளோடே உபத்திரவத்தையும் கூட்ட நினைத்து" - (2கொரி 1:4)

"எப்படியாவது, கிறிஸ்து அறிவிக்கப்படுகிறார்" - வஞ்சகத்தினாலாவது, உண்மையினாலாவது, கிறிஸ்து அறிவிக்கப்படுகிறார் (யோவான் 15:22)

இரட்சிப்பு (salvation) - σωτηρία - sooteeria - 4991

பெண்பால் பெயர்ச்சொல் - இரட்சிப்பு, விடுதலை, இரட்சணியம் - கட்டுகள், சிறையிருப்பு ஆகியவற்றிலிருந்து தற்காலிக விடுதலையை இந்த வாக்கியம் குறிக்கும். விசுவாசிகளின் ஜெபத்தினாலும், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினாலும் இந்த இரட்சிப்பு கிடைக்கும்.

2. ஜீவனிலும் மரணத்திலும் கிறிஸ்தவ பிரதிஷ்டை

பிலி 1:20 நான் ஒன்றிலும் வெட்கப்பட்டுப்போகாமல், எப்பொழுதும் போல இப்பொழுதும், மிகுந்த தைரியத்தோடே, ஜீவனாலாகிலும் சாவினாலாகிலும், கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவாரென்று எனக்கு உண்டாயிருக்கிற வாஞ்சைக்கும் நம்பிக்கைக்கும் தக்கதாய், அப்படி முடியும்.

பிலி 1:21 கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்.

பிலி 1:22 ஆகிலும் சரீரத்தில் பிழைத்திருக்கிறதினாலே என் கிரியைக்குப் பலனுண்டாயிருப்பதால், நான் தெரிந்து கொள்ளவேண்டியது இன்னதென்று அறியேன்.

பிலி 1:23 ஏனெனில் இவ்விரண்டினாலும் நான் நெருக்கப்படுகிறேன்; தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனே கூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும்.

பிலி 1:24 அப்படியிருந்தும், நான் தரித்திருப்பது உங்களுக்கு அதிக அவசியம்.

"கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவாரென்று எனக்கு உண்டாயிருக்கிற வாஞ்சைக்கும் நம்பிக்கைக்கும் தக்கதாய், அப்படி முடியும்" - பவுலுக்குப் பல சோதனைகள் வந்தன. தேவனுடைய கிருபை எல்லாச் சூழ்நிலைகளிலும் தன்னைத் தாங்கும் என்று பவுல் முழு நிச்சயத்தோடு இருந்தார். ஜீவனையும் சாவையும் சந்திப்பதற்கு பவுல் ஆயத்தமாக இருந்தார். தன்னுடைய சரீரத்தினால் கிறிஸ்து மகிமைப்பட வேண்டும் என்பது மட்டுமே பவுலின் வாஞ்சையாக இருந்தது.

"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" தன்னுடைய பாடுகளில் தான் சந்திக்க வேண்டியவற்றை பவுல் தெளிவாக நிதானித்துக் கூறுகிறார் (பிலி 1:21, 24)

தெரிந்து கொள்ளவேண்டியது (make known) - γνωρίζω - gnoorizoo - 1107

வினைச்சொல் - அறிவி, தெரிவி, விளக்கு **(make known; declare ; certify)** (கலா 1:11), **(give to understand)** (1கொரி 12:3), **(do to wit)** (2கொரி 8:1)

நெருக்கப்படுதல் (strait) - συνέχω - synechoo - 4912

வினைச்சொல் - கூட்டக்கட்டு, அடைத்துக்கொள், வருத்தப்படுத்து, நெருக்கு **(being pressed)** ஜீவன், மரணம் ஆகிய இரண்டு ஆசைகளினால் பவுல் நெருக்கப்படுகிறார்.

பிலிப்பியர் – தொகுப்புரை

1 அதிகாரம்

விட்டுப் பிரிதல் (betwixt) - ἐκ - ek - 1537

முன்னிடைச்சொல் - இல், ஆல் இலிருந்து, விட்டு, இடத்தில் முதல் தரம் இல்லாமல், ஆறாம் வேற்றுமையுடன் உடைய இன் கொண்டு, புறம்பே, முதற்கொண்டு, ஒடு, வழியாய், தொடங்கி (of, out of, from, with, between) யோவான் 3:25

பிலி 1:21-24 ஆகிய வசனங்களில் பவுல் கூறியிருக்கும் சத்தியங்கள்

1 கிறிஸ்து எனக்கு ஜீவன் (பிலி 1:21)

2 சாவு எனக்கு ஆதாயம் (பிலி 1:21)

3 சரீரத்தில் பிழைத்திருக்கிறதினாலே என் கிரியைக்குப் பலனுண்டாயிருக்கிறது. (பிலி 1:22)

4 தேகத்தைவிட்டுப் பிரிந்திருக்க எனக்கு ஆசையுண்டு (பிலி 1:23)

5 கிறிஸ்துவுடனே கூட இருக்க எனக்கு ஆசையுண்டு (பிலி 1:23 2கொரி 5:8)

6 அது அதிக நன்மையாயிருக்கும். (பிலி 1:23)

7 நான் சரீரத்தில் தரித்திருப்பது உங்களுக்கு அதிக அவசியம் (பிலி 1:24) (யாக் 2:26) (எபி 12:22-23; எபே 4:8-10) 1பேதுரு 3:4, வெளி 6:9-11)

3. ஊழியத்தைத் தொடர்ந்து செய்வதற்கு கர்த்தர் விடுதலை பண்ணுவார் என்னும் நம்பிக்கை

பிலி 1:25 இந்த நிச்சயத்தைக் கொண்டிருந்து, நான் மறுபடியும் உங்களிடத்தில் வருகிறதினால் என்னைக் குறித்து உங்களுடைய மகிழ்ச்சி கிறிஸ்து இயேசுவுக்குள் பெருகும்படிக்கு,

பிலி 1:26 உங்கள் விசுவாசத்தின் வர்த்தனைக்காகவும் சந்தோஷத்துக்காகவும் நான் பிழைத்து உங்களனைவரோடுங்கூட இருப்பேனென்று அறிந்திருக்கிறேன்

"இந்த நிச்சயத்தைக் கொண்டிருந்து" - தான் விடுவிக்கப்படப்போவதைக் குறித்து பவுல் நிச்சயத்தோடு இருக்கிறார் (பிலி 1:19, 25-26) இரண்டு வருஷங்களுக்குப் பின்பு பவுல் விடுவிக்கப்பட்டார் (அப் 28:30)

4. கிறிஸ்துவிற்காக பாடுகளை அனுபவிப்பதில் உறுதியாய் தரித்திருக்க வேண்டும்

பிலி 1:27 நான் வந்து உங்களைக் கண்டாலும் நான் வராமலிருந்தாலும் நீங்கள் ஒரே ஆவியிலே உறுதியாய் நின்று ஒரே ஆத்துமாவினாலே சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகக் கூடப்போராடி எதிர்க்கிறவர்களால் ஒன்றிலும் மருளாதிருக்கிறீர்களென்று உங்களைக் குறித்து நான் கேள்விப்படும்படி எவ்விதத்திலும் நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்து கொள்ளுங்கள்

பிலி 1:28 நீங்கள் மருளாதிருக்கிறது அவர்கள் கெட்டுப்போகிறதற்கும் நீங்கள் இரட்சிக்கப்படுகிறதற்கும் அத்தாட்சியாயிருக்கிறது. இதுவும் தேவனுடைய செயலே

பிலி 1:29 ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது

பிலி 1:30 நீங்கள் என்னிடத்தில் கண்டதும் எனக்கு உண்டென்று இப்பொழுது கேள்விப்படுகிறதுமான போராட்டமே உங்களுக்கும் உண்டு

நடந்துகொள் (conversation) - πολιτεύομαι - politeuomai - 4176

வினைச்சொல் - நடந்துவா, நடந்துகொள் (to exercise citizenship behave like citizens) நாம் சுவிசேஷத்தின் பிரகாரம் நடந்து கொள்ளும்போது பரலோகத்தின் பிரஜைகளாக இருப்போம்.

பிலிப்பியர் - தொகுப்புரை

1 அதிகாரம்

பிரஜை (citizenship) - **πολίτευμα** - **politeuma** - 4175

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - குடியிருப்பு, பிரஜை (அப் 3:20)

கூட்டப்போராடுதல் (striving together) - **συναθλέω** - **synathleoo** - 4866

வினைச்சொல் - கூட்டப்போராடு கூட்டப்பிரயாசப்படு (wrestling together) - சுவிசேஷத்தின் சத்துருக்களுக்கு எதிராக விசுவாசிகளோடு சேர்ந்து கூட்டப்போராட வேண்டும் (பிலி 1:27, 4:3)

"எதிர்க்கிறவர்கள்" (adversaries) சபை துன்புறுத்தப்பட்டதை இந்த வாக்கியம் விளக்குகிறது.

கெட்டுப்போதல் (perdition) **ἀπώλεια** - **apooleia** – 684

பெண்பால் பெயர்ச்சொல் - அழிவு கேடு, நாசம், மரணம், வீண் "**perdition**" (பிலி 1:28, யோவான் 17:12; 2தெச 2:3; 1தீமோ 6:9; எபி 10:39; 2பேதுரு 3:7; வெளி 17:8,11 ; "**destruction**" (மத் 7:13; ரோமர் 9:22, பிலி 3:19; 2பேதுரு 2:1; 2பேதுரு 3:16); "**perish**" (அப் 8:20); "**to die**" (அப் 25:16); "**waste**" (மத் 26:8 மாற்கு 14:4); "**pernicious way**" (2பேதுரு 2:2); "**damnation**" (2பேதுரு 2:3);"**damnable**" (2பேதுரு 2:1)

இரட்சிப்பு (salvation) - **σωτηρία** - **sooteeria** - 4991

பெண்பால் பெயர்ச்சொல் - இரட்சிப்பு, விடுதலை, இரட்சணியம் (பிலி 1:28 பிலி 2:12) இந்த வசனங்களில் இந்த வாக்கியம் ஆத்தும இரட்சிப்பைக் குறிக்கும். பிலி 1:19 ஆவது வசனத்தில் இந்த வாக்கியம் சிறைச்சாலையிலிருந்து பவுல் விடுவிக்கப்படுவதைக் குறிக்கும்

போராட்டம் (conflict) - **ἀγών**- **agoon** - 73

ஆண்பால் பெயர்ச்சொல் (**contest for a prize; a struggle; battle**) (எபி 12:1).

(அ) விளையாட்டுப்போட்டி, ஓட்டம்

(ஆ) கிறிஸ்தவ வாழ்க்கையின் போராட்டம் பிலி 1:30

(இ) ஆர்வத்தினால் ஏற்படும் மனப்போராட்டம் 2 கொலோ 2:1

"என்னிடத்தில் கண்டது" (அப் 16:19-40) பவுல் விசாரிக்கப்படுவது.

2 அதிகாரம்

III. கிறிஸ்தவ ஜீவியம் - கிறிஸ்தவ ஜீவியத்திற்கு நான்கு எடுத்துக்காட்டுக்கள்

1. கிறிஸ்தவ ஜீவியத்திற்கு ஓர் விண்ணப்பம்

பிலி 2:1 ஆதலால் கிறிஸ்துவுக்குள் யாதொரு ஆறுதலும், அன்பினாலே யாதொரு தேறுதலும், ஆவியின் யாதொரு ஐக்கியமும், யாதொரு உருக்கமான பட்சமும் இரக்கங்களும் உண்டானால்,

பிலி 2:2 நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள்.

பிலி 2:3 ஒன்றையும் வாதினாலாவது வீண் பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்.

பிலி 2:4 அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக.

நாம் கவனிக்க வேண்டிய நான்கு கேள்விகள்

1. கிறிஸ்துவுக்குள் யாதொரு ஆறுதல் (அப் 13:15)
2. அன்பினாலே யாதொரு தேறுதல்
3. ஆவியின் யாதொரு ஐக்கியம் (2கொரி 13:14)
4. யாதொரு உருக்கமான பட்சமும் இரக்கங்களும் (ரோமர் 12:1; 2கொரி 6:12)

ஆறுதல் (comfort) - **παραμύθιον** - **paramythion** - 3890

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - ஆறுதல் (stimulating force)

ஐக்கியம் (fellowship) - **κοινωνία** - **koinoonia** - 2842

பெண்பால் பெயர்ச்சொல் - அந்நியோந்நியம், ஐக்கியம், பங்கை ஏற்றுக்கொள்தல், பொருள், சகாயம், தாமம் உட்பட (2கொரி 13:14)

உருக்கமான பட்சம் (bowels) - **σπλάγχνον** - **splanchnon** - 4698

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - உருக்கம், உள்ளம் (2கொரி 6:12)

இரக்கம் (mercies) - **οἰκτιρμός** - **oiktirmos** - 3628

ஆண்பால் பெயர்ச்சொல் - இரக்கம் (ரோமர் 12:1)

"ஏக சிந்தையும் ஏக அன்பும்" - பவுலைப் போல சிந்தித்து அவரைப் போலவே விசுவாசிகளிடத்தில் அன்புகூருதல்

"இசைந்த ஆத்துமாக்கள்" - (2கொரி 13:5)

"என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள்" - பிலிப்பியர் 1:2-16 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் காரியங்களை நிறைவேற்றுவதன் மூலமாகப் பவுலின் சந்தோஷத்தை நிறைவாக்கலாம்.

"ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல்" சுய லாபத்திற்காகவோ வீண்பெருமைக்காகவோ பிறரை எதிர்க்கக்கூடாது.

"மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்" - நம்மைப் பற்றி நாம் மிகுந்த தாழ்மையோடு எண்ணிக் கொள்ள வேண்டும். நம்முடைய உண்மையான சுபாவம் என்ன என்பதும் நம்முடைய பலவீனங்கள் என்ன என்பதும் நமக்குத் தெரியும். நமது குறைகளை மறந்து விடாமல் நம்மைக் குறித்து மனத்தாழ்மையோடு எண்ணிக் கொள்ள வேண்டும்.

2 அதிகாரம்

"அவனவன் தனக்கானவைகளையல்ல பிறருக்கானவைகளையும் நோக்குவானாக" - பரிசுத்த ஆவியானவர் நமக்குக் கொடுத்திருக்கும் வரங்களிலும் கிருபைகளிலும் நம்மை நாமே மேன்மை பாராட்டக் கூடாது. மற்றவர்களும் தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்னும் ஆர்வம் நம்மிடம் காணப்பட வேண்டும். மற்றவர்களை ஆவியானவர் ஆசீர்வதிக்கும்போது அவர்களோடு சேர்ந்து நாமும் சந்தோஷப்பட வேண்டும்

2. கிறிஸ்துவின் முன்மாதிரி

(1) சுயதாழ்மையின் ஏழு அம்சம்

பிலி 2:5 கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது.

பிலி 2:6 அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்.

பிலி 2:7 தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்

பிலி 2:8 அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தினார்

"கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தை இயேசு கிறிஸ்து தேவனுடைய ரூபமாக இருந்த போதிலும் அவர் தம்மைத்தாமே வெறுமையாக்கினார் அடிமையின் ரூபமெடுத்தார் மனுஷ சாயலானார் இயேசு கிறிஸ்துவிடம் காணப்பட்ட இப்போப்பட்ட சிந்தை நம்மிடத்திலும் காணப்பட வேண்டும்.

இயேசு கிறிஸ்து தம்மைத் தாழ்த்திய விதம்

1 தம்மைத்தாமே வெறுமையாக்கினார் (பிலி 2:7)

2 அவர் தேவனுடைய ரூபத்தைத் துறந்தார் (பிலி 2:6)

3 அவர் தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணவில்லை. (பிலி 2:6

4. அடிமையின் ரூபமெடுத்தார் (பிலி 2:7

5 மனுஷர் சாயலானார் (பிலி 2:7

6 தம்மைத்தாமே தாழ்த்தினார் (பிலி 2:8)

7 மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவரானார் (பிலி 2:8)

இருப்பது (being) - ὑπάρχω - hyparchoo - 5225

வினைச்சொல் - வாழ், இரு (**though existing; subsisting**) - நித்திய காலமாகவே இயேசு கிறிஸ்து தேவனுடைய ரூபமாக இருக்கிறார் (ஏசா 7:14; ஏசா 9:6-7, மீகா 5:2, யோவான் 1:1 2, எபி 1:8 வெளி 1:8 11

ரூபம் (form) - μορφή - morphee - 3444

பெண்பால் பெயர்ச்சொல் - ரூபம், உருவானது (**the outward form that strikes the vision, the external appearance**) (பிலி 2:6, 7; மாற்கு 16:12

2 அதிகாரம்

வெறுமையாக்குதல் (make void) - κενόω - kenooo - 2758

வினைச்சொல் - வினாய்போ அவத்தமாக்கு. வெறுமையாக்கு to empty out, drain. "make void" (ரோமர் 4:14; 1கொரி 9:15); "make of none effect" (1கொரி 1:17); "be in vain" (2கொரி 9:3); "make of no reputation" (பிலி 2:7) இயேசு கிறிஸ்து நித்திய காலமாகவே தேவனாக இருக்கிறவர் (மீகா 5:1-2 யோவான் 1:1-2; எபி 1:8 வெளி 1:8-11) ஆயினும் இயேசு கிறிஸ்து இந்தப் பூமியில் ஜீவித்த காலத்தில் மனுஷ ரூபமானார் ஏசா 7:14; ஏசா 9:6-7; மத் 1:18-25 யோவான் 1:1-2,14; 1தீமோ 3:16)

இயேசு கிறிஸ்து பூமியில் ஜீவித்த காலத்தில் வெறுமையாக்கிய காரியங்கள்

1 தேவனுக்குச் [redacted] இருப்பது பிலி 2:6-7, யோவான் 14:28 1கொரி 11:3

2 தேவனுடைய ரூபம் (பிலி 2:6-8, பிலி 3:21, மத் 1:18-25; லூக்கா 1:35, யோவான் 1:14, லூக்கா 24:37-40 சக 13:6, கலா 4:4, ரோமர் 8:3)

3 அழியாத சரீரம் (1கொரி 15:3 சங் 16:10 1பேதுரு 2:24, பேதுரு 3:18

4 உலகம் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பு பிதாவோடுகூட இயேசு கிறிஸ்துவிற்கு இருந்த மகிமை (யோவான் 12:23; யோவான் 17:5; மத் 16:27; பிலி 2:5-11

5 வானத்திலும் பூமியிலும் இயேசு கிறிஸ்துவின் அதிகாரம். இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு இந்த அதிகாரம் அவருக்குத் திரும்பக் கொடுக்கப்பட்டது. (மத் 28:18 பிலி2:9-11; எபே1:20-23; 1பேதுரு 3:22)

6 நித்திய காலமாக பிதாவோடுகூட இருந்த இயேசு கிறிஸ்துவிடம் தெய்வீக சுபாவங்களும், அற்புதங்களைச் செய்யும் வல்லமையும் இருந்தன. இயேசு கிறிஸ்து பூமியில் ஜீவித்த காலத்தில் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளும் வரையிலும் அவர் அற்புதங்கள் எதையும் செய்யவில்லை (யோவான் 2:11; யோவான் 3:34. ஏசா 11:1-2; ஏசா 42:1-7; ஏசா 61:1-2 லூக்கா 3:21-22; லூக்கா 4:16-21 மத் 12:28; அப் 10:38) அவர் பூமியில் ஜீவித்த காலத்தில் தாமாக எதையும் செய்யவில்லை. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தின் மூலமாக பிதாவின் சித்தத்தையே தாம் செய்வதாக இயேசு கிறிஸ்து கூறினார் (யோவான் 8:28)

குமாரன் பிதாவோடு ஐக்கியமாக இருக்கும் காரியங்கள்

1 குமாரன் தாமாக ஒன்றும் செய்வதில்லை (யோவான் 5:17,19 யோவான் 8:18

2 குமாரன் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை (யோவான் 5:30)

3 தமக்குச் சித்தமானதைக் குமாரன் தேடாமல் பிதாவிற்குச் சித்தமானதைத் தேடுகிறார் (யோவான் 5:30, யோவான் 6:38

4 குமாரனின் உபதேசம் அவருடையதாய் இராமல், அவரை அனுப்பின பிதாவுடையதாய் இருக்கிறது. (யோவான் 7:16 யோவான் 8:26,38

5 குமாரன் தன் சுயமாய் ஒன்றுஞ் சொல்லாமல் பிதா அவருக்குப் போதித்தபடியே சொல்கிறார் (யோவான் 8:28

6 பிதாவிற்கு பிரியமானவைகளையே குமாரன் எப்பொழுதும் செய்கிறார் (யோவான் 8:29

7 குமாரன் சுயமாய் வரவில்லை பிதாவினிடத்திலிருந்து வந்திருக்கிறார் யோவான் 8:42 யோவான் 16:28

2 அதிகாரம்

8 குமாரன் தமக்கு மகிமையைத் தேடுகிறதில்லை. (யோவான் 8:50,54)

9 குமாரன் சொல்லுகிற வசனங்களை அவர் சுயமாய்ச் சொல்லவில்லை அவரிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்து வருகிறார். (யோவான் 10:25,37-38, யோவான் 14:10-11)

இயேசு கிறிஸ்துவின் மனுஷத்துவம்

1 மனுஷ சாயலுக்கு ஏற்ற பிரகாரமாக இயேசு கிறிஸ்து தம்மை வரையறைப்படுத்திக் கொண்டார் (பிலி 2:6-8; எபி 2:14-18 எபி 5:8-9)

2 இந்தப் பூமியில் இயேசு கிறிஸ்து மனுஷனாக ஜீவித்த காலத்தில் அவர் தேவனுடைய பிரதிநிதியாக கிரியை நடப்பித்தார் (யோவான் 8:28, அப் 10:38)

3 இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை நாம் பின்பற்றும் விதமாக அவர் நமக்கு முன்மாதிரியாக ஜீவித்தார் (1பேதுரு 2:21)

4 சாத்தான் இயேசு கிறிஸ்துவையும் சோதித்தான் அந்தச் சோதனைகளை இயேசு கிறிஸ்து தமது மனுஷ ரூபத்திலே மேற்கொண்டார் (எபி 4:14-16, எபி 5:7-9)

5 ஏசாயா தீர்க்கதரிசி இயேசு கிறிஸ்துவைப் பற்றி முன்னறிவிக்கும்போது தீமையை வெறுக்கவும், நன்மையைத் தெரிந்து கொள்ளவும் அறிகிறதற்குமுன்னே உள்ள பிள்ளைப் பருவத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார் (ஏசா 7:14-16)

6 மேசியாவைப் பற்றி ஏசாயா கூறும்போது "அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை, அவரைப் பார்க்கும்போது, நாம் அவரை விரும்பத் தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது. அவர் அசட்டைபண்ணப் பட்டவரும் மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்" என்று அவரை ஒரு சாதாரண மனுஷனாகவே வர்ணிக்கிறார் (ஏசா 53:1-12) பரிசுத்த ஆவியானவர் இயேசு கிறிஸ்துவின் மேல் தங்கி இருப்பார் என்றும் ஏசாயா மேசியாவைப் பற்றி இவ்வாறு முன்னுரைக்கிறார் "ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார்" (ஏசா 11:2)

7 மேசியாவின் பிறப்பைப் பற்றி ஏசாயா முன்னறிவிக்கும்போது அவர் சாதாரண மனுஷரைப் போலவே பிறப்பார் என்று கூறியிருக்கிறார் (ஏசா 50:4-11)

8 பரிசுத்த ஆவியானவர் மேசியாவின் மேல் அமர்ந்த படியினாலே அவர் புறஜாதிகளுக்கு நியாயத்தை வெளிப்படுத்துவதாக ஏசாயா மேசியாவின் மனுஷத்துவத்தைப் பற்றி முன்னறிவிக்கிறார் (ஏசா 42:1-7, ஏசா 61:1-2) எல்லாக் காரியங்களிலும் இயேசு கிறிஸ்து தம்மைத் தாமே வெறுமையாக்கி மனுஷ சாயலானார் (பிலி 2:6-8, எபி 2:14-18; எபி 5:8-9)

2 அதிகாரம்

9 இயேசுகிறிஸ்து இந்தப் பூமியில் ஒரு பாலகனாக பிறந்தார் என்று வரலாறு கூறுகிறது. அவர் சரீரத்திலும் ஆத்துமாவிலும், ஆவியிலும் வளர்ச்சி பெற்றார் (1கொரி 2:11) பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பெலன் கொண்டு, ஞானத்தினால் நிறைந்தது. தேவனுடைய கிருபையும் அவர்மேல் இருந்தது. இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும் தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார் (லூக்கா 2:40,52) இயேசு கிறிஸ்து பூமியில் இருந்த காலத்தில் அவர் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தையும் வரங்களையும் பெற்ற பின்புங்கூட அவர் அறிந்து கொள்ளக் கூடாத காரியங்கள் இருந்தன "அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார் (மாற்கு 13:32) இயேசு கிறிஸ்து தாம் அனுபவித்த பாடுகளின் மூலமாகத் தாழ்மையைக் கற்றுக் கொண்டார் (எபி 4:14-16; எபி 5:7-9)

10 இந்தப் பூமியில் இயேசு கிறிஸ்து அற்புதங்களைச் செய்த போது தமது தெய்வீக வல்லமையினால் இவற்றைச் செய்வதாகக் கூறாமல் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் பிதாவின் சித்தத்தைச் செய்வதாகவே கூறியிருக்கிறார் (யோவான் 8:28; மத் 12:28; லூக்கா 4:16-21)

11 இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு விசுவாசிகள் பெலனடைவதைப் பற்றிக் கூறும்போது அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தினால் பெலனடைவார்கள் என்று மட்டுமே கூறினார். தமது தெய்வீக சுபாவத்தினால் விசுவாசிகள் பெலனடைவார்கள் என்று இயேசு கூறவில்லை. "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும் பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" என்று இயேசு கூறினார் (மத் 10:1-20; மத் 16:18; மத் 18:18; லூக்கா 10; லூக்கா 24:49; மாற்கு 16:15-20; யோவான் 14:12-15; அப் 1:4-8)

12 தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக இயேசு கிறிஸ்துவை உயர்த்தினார். தாம் உயர்த்தப்படும் அளவிற்கு இயேசு கிறிஸ்து தம்மையே தாழ்த்தியிருக்கிறார் (பிலி 2:9-11; எபே 1:20-23; கொலோ 1:15-23; கொலோ 1:15-23; 1பேதுரு 3:22)

"மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி" - இயேசு கிறிஸ்து தம்முடைய தேவரூபத்திலிருந்து மனுஷ ரூபத்திற்குத் தம்மைத் தாழ்த்தினார். சிலுவையின் மரணபரியந்தம் தம்மைத் தாழ்த்தினார். இயேசு கிறிஸ்து பாவம் அறியாதவராக இருந்தபோதிலும் மனுக்குலத்தின் பாவங்களையெல்லாம் சிலுவையில் சுமந்து தீர்த்தார் (பிலி 2:8; 1பேதுரு 2:24)

(2) ஏழு விதம் உயர்வு

பிலி 2:9 ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி,

பிலி 2:10 இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும்

பிலி 2:11 பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.

தேவன் இயேசு கிறிஸ்துவை உயர்த்திய விதம்

1 தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினார் (பிலி 2:9; எபே 1:21)

பிலிப்பியர் - தொகுப்புரை

2 அதிகாரம்

2 எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார் (பிலி 2:9)

3 இயேசு கிறிஸ்துவின் நாமத்தை உச்சரிக்கும்போதே எல்லா முழங்கால்களும் முடங்கும்படி செய்தார் (பிலி 2:10)

4 வானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படி செய்தார் (பிலி 2:10)

5 பூதலத்தோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படி செய்தார் (பிலி 2:10)

6 பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படி செய்தார் (பிலி 2:10)

7 இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கு செய்தார் (பிலி 2:11)

தீர்க்கதரிசன எண் - 2

"இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும் பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" (பிலி 2:10 11) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை

உயிர்வாழும் மூன்று உலகங்கள்

1 வானம் (Heaven) (பிலி 2:10; யோபு 1:6, யோபு 2:1; தானி 4:35; கொலோ 1:15 18; வெளி 12:12; வெளி 13:6

2 பூமி (Earth) (பிலி 2:10 கொலோ 1:16, வெளி 12:12)

3 பூமியின்கீழ் (Underworld)

பூமியின்கீழ் (Underworld) - **καταχθόνιος katachthonios** - 2709

பெயரடை - பூமியின்கீழ் (**under the earth; subterranean, infernal world**) (பிலி 2:10; சங் 16:10; மத் 12:40, எபே 4:8-10) தூதர்கள் வாழுமிடம் (2பேதுரு 2:4; யூதா 1:6-7; 1பேதுரு 3:19) ஆதாமிற்கு முந்தைய சந்ததிகளும், பிசாசுகளும் வாழுமிடம் (லூக்கா 8:31; வெளி 9:1-2; வெளி 20:3,7) பாதாளம் (சங் 9:17, சங் 16:10; சங் 71:20, நீதி 9:18; நீதி 15:24; ஏசா 14:9 எசே 31:14-18; எசே 32:18-27; லூக்கா 16:1-31; வெளி 20:11-15) மற்ற ஜீவராசிகள் வாழுமிடம் (பிலி 2:10 வெளி 5:13)

3. இரட்சிப்பின் கிரியை

பிலி 2:12 ஆதலால், எனக்குப் பிரியமானவர்களே நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே, நான் உங்களுக்குச் சமீபமாயிருக்கும்பொழுது மாத்திரமல்ல நான் தூரமாயிருக்கிற இப்பொழுதும் அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்

பிலி 2:13 ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்

பிலி 2:14 நான் வீணாக ஓடினதும் வீணாகப் பிரயாசப்பட்டதும் இல்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு, ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசிக்கிற நீங்கள்

பிலி 2:15 கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே, குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு,

பிலிப்பியர் - தொகுப்புரை

2 அதிகாரம்

பிலி 2:16 எல்லாவற்றையும் முறு முறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்

"உங்கள் இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படுங்கள்" - நமது இரட்சிப்பு நிறைவேற வேண்டும் அது நிறைவேறும் வரையிலும் நாம் அதற்காக பிரயாசப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும் (ரோமர் 6:22 ரோமர் 8:23 பிலி 3:21; 1பேதுரு 1:5-13) அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் நாம் பிரயாசப்பட வேண்டும். ஏனெனில் இரட்சிக்கப்பட்டவர்கள் கூட தாங்கள் பெற்ற இரட்சிப்பை இழந்து போவதற்கு வாய்ப்புள்ளது. (1கொரி 9:27 1கொரி 10:12-14; எபி 6:4-9; எபி 10:26-39 2பேதுரு 2:20-22)

"தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்" - தன்னுடைய இரட்சிப்பு நிறைவேற மனுஷன் பிரயாசப்படவில்லையென்றால் தேவன் அவனோடு தொடர்ந்து கிரியை செய்யமாட்டார் மனுஷனுக்கு சுயாதீன சித்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தனது விருப்பத்தை மனுஷனால் நிறைவேற்ற முடியும். இந்த விருப்பத்தையும் செய்கையையும் தேவனே தமது தயவுள்ள சித்தத்தின் பிரகாரம் மனுஷனுக்குக் கொடுத்திருக்கிறார் தன்னுடைய இரட்சிப்பு நிறைவேறுவதற்காக மனுஷன் தன்னுடைய விருப்பத்தையும், செய்கையையும் பயன்படுத்த வேண்டும் தேவன் மனுஷனுக்குக் கொடுத்திருக்கும் சிலாக்கியங்களைப் பயன்படுத்தாமல் இரட்சிப்பை இழந்து போனவர்களுக்குத் தேவன் பொறுப்பானவர் அல்ல. எல்லோருக்குமே விருப்பமும் செய்கையும் உண்டு ஆனாலும் தங்களுடைய இரட்சிப்பை நிறைவேற்ற எல்லா மனுஷரும் தங்களுடைய விருப்பங்களையும், செய்கைகளையும் பயன்படுத்துவதில்லை. (யோவான் 3:16-20; மாற்கு 16:15 16, 1யோவான் 1:9 வெளி 22:17)

கீழ்ப்படிவதினால் உண்டாகும் ஆசீர்வாதங்கள்

1 தேவனுக்கு முன்பாக குற்றமற்றவர்கள்

2 மனுஷருக்கு முன்பாக கபடற்றவர்கள்

3 தேவனுடைய மாசற்ற பிள்ளைகள் (ரோமர் 8:14-16)

4 மனுஷரால் குற்றப்படுத்தப்படாதவர்கள்

5 சுடர்களைப்போல பிரகாசிக்கிறவர்கள் (மத் 5:14-16) சந்திரனையும் சூரியனையும் போல பிரகாசிக்கிறவர்கள் (ஆதி 1:14-18)

6 ஜீவவசனத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறவர்கள் (2கொரி 4:4)

குற்றமற்றது (Blameless) - ἄμεμπτος - amemptos - 273

பொருள் - குற்றமற்ற, பிழையற்ற, குற்றம் சாட்டப்படாத, பிழையில்லாத (பிலி 3:6; லூக்கா 1:6; 1தெச 3:13 எபி 8:7)

கபடற்றது (Harmless) - ἀκέραιος - akeraios - 185

பொருள் - கபடற்ற பேதை (மத்தேயு 10:16) "simple" (ரோமர் 16:19)

குற்றமில்லாதது (without blame) - ἄμωμος - amoomos - 299

பொருள் - மாசு இல்லாத, குற்றமில்லாத, பிழையற்ற, குற்றமற்ற, பழுதற்ற "without blame" (எபே 1:4, 2பேதுரு 3:14)

4. பவுலின் முன்மாதிரி - மரணத்திற்குப் பிரதிஷ்டை - (1:20-24; 2தீமோ 4:6)

பிலி 2:17 மேலும், உங்கள் விசுவாசமாகிய பலியின் மேலும் ஊழியத்தின் மேலும் நான் வார்க்கப்பட்டுப்போனாலும், நான் மகிழ்ந்து, உங்களனைவரோடுங்கூடச் சந்தோஷப்படுவேன்

2 அதிகாரம்

பிலி 2:18 இதினிமித்தம் நீங்களும் மகிழ்ந்து, என்னோடே கூடச் சந்தோஷப்படுங்கள்

5. தீமோத்தேயுவின் முன்மாதிரி - சுய நலமில்லாமல் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிதல்

பிலி 2:19 அன்றியும், நானும் உங்கள் செய்திகளை அறிந்து மனத்தேறுதல் அடையும்படிக்குச் சீக்கிரமாய்த் தீமோத்தேயுவை உங்களிடத்தில் அனுப்பலாமென்று கர்த்தராகிய இயேசுவுக்குள் நம்பியிருக்கிறேன்

பிலி 2:20 அதேனென்றால், உங்கள் காரியங்களை உண்மையாய் விசாரிக்கிறதற்கு என்னைப்போல மனதுள்ளவன் அவனையன்றி வேறொருவனும் என்னிடத்திலில்லை.

பிலி 2:21 மற்றவர்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குரியவைகளைத் தேடாமல் தங்களுக்குரியவைகளையே தேடுகிறார்கள்

பிலி 2:22 தகப்பனுக்குப் பிள்ளை ஊழியஞ் செய்வதுபோல, அவன் என்னுடனே கூட சுவிசேஷத்தினிமித்தம் ஊழியஞ் செய்தானென்று அவனுடைய உத்தம குணத்தை அறிந்திருக்கிறீர்கள்

பிலி 2:23 ஆகையால் என் காரியங்கள் இன்னபடி நடக்கும் என்று நான் அறிந்தவுடனே அவனை அனுப்பலாமென்று நினைத்திருக்கிறேன்

பிலி 2:24 அன்றியும் நானே சீக்கிரத்தில் வருவேனென்று கர்த்தருக்குள் நம்பிக்கையாயிருக்கிறேன்

"அவனுடைய உத்தமகுணத்தை அறிந்திருக்கிறீர்கள்" அப் 16:1-3, அப் 17:14) "அவன் என்னுடனே கூட" - தீமோத்தேயு பவுலுக்காக ஊழியம் செய்யவில்லை. பவுலோடுகூட தேவனுக்காக ஊழியம் செய்தான் (1கொரி 16:10)

"என் காரியங்கள் இன்னபடி நடக்கும்" - பவுல் தான் சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப் படப்போவதைக் குறித்து அதிக நிச்சயத்தோடு இருந்தார் (பிலி 2:24, பிலி 1:19,25-26)

6. எப்பாப்பிரோதீத்துவின் முன் மாதிரி - சுய தியாகமும் அதிக உழைப்பும்

பிலி 2:25 மேலும், என் சகோதரனும், உடன்வேலையாளும் உடன் சேவகனும் உங்கள் ஸ்தானாபதியும் என் குறைச்சலுக்கு உதவி செய்தவனுமான எப்பாப்பிரோதீத்துவை உங்களிடத்தில் அனுப்பவேண்டுமென்று [illegible]

பிலி 2:26 அவன் உங்களெல்லாரையும் வாஞ்சையுள்ளவனும் தான் வியாதிப் பட்டதை நீங்கள் கேள்விப் பட்டதினாலே மிகவும் வியாகுலப் படுகிறவனுமாயிருந்தான்

பிலி 2:27 அவன் வியாதிப்பட்டு மரணத்திற்குச் சமீபமாயிருந்தது மெய்தான், ஆகிலும் தேவன் அவனுக்கு இரங்கினார் அவனுக்கு இரங்கினதுமல்லாமல் துக்கத்தின்மேல் துக்கம் எனக்கு உண்டாகாதபடிக்கு எனக்கும் இரங்கினார்

பிலி 2:28 ஆகையால் நீங்கள் அவனை மறுபடியும் கண்டு சந்தோஷப்படவும், என் துக்கங் குறையவும் அவனை அதிசீக்கிரமாய் அனுப்பினேன்

பிலி 2:29 ஆனபடியினாலே நீங்கள் கர்த்தருக்குள் மிகுந்த சந்தோஷத்தோடே அவனை ஏற்றுக்கொண்டு, இப்படிப் பட்டவர்களைக் கனமாய் எண்ணுங்கள்

[illegible] 2:30 ஏனெனில் நீங்கள் எனக்குச் செய்ய வேண்டிய ஊழியத்திலே உங்கள் குறைவை நிறைவாக்கும்படிக்கு அவன் தன் பிராணனையும் எண்ணாமல், கிறிஸ்துவின் ஊழியத்தினிமித்தம் மரணத்திற்குச் சமீபமாயிருந்தான்

பிலிப்பியர் – தொகுப்புரை

2 அதிகாரம்

எப்பாப்பிரோதீத்துவைப் பற்றிய காரியங்கள்

1. கிறிஸ்துவில் பவுலின் சகோதரன் (பிலி 2:25)
2. பவுலின் உடன் வேலையாள்
3. பவுலின் உடன் சேவகன்
4. உங்கள் ஸ்தானாபதி
5. பவுலுக்கு உதவி செய்தவன்
6. வியாதிப்பட்டவன் (பிலி 2:26-30)
7. குணமடைந்தவன் (பிலி 2:27-29)

உடன்வேலையாள் (Companion) - συνεργός - synergos - 4904

பெயரடை - உடன் வேலைசெய்யும் உடன் வேலையாளான சகாயரான (fellow- labourer) (பிலி 4:3)

உடன் சேவகன் (Fellowsoldier) - συστρατιώτης - systratiootees - 4961

ஆண்பால் பெயர்சொல் - உடன் சேவகன் (பிலே 1:2)

அனுப்பப்பட்டவன் (messenger) ἀπόστολος - apostolos - 652

ஆண்பால் பெயர்சொல் அப்போஸ்தலர், அப்போஸ்தலன் அனுப்பப்பட்டவன், ஸ்தானாபதி பன்னிரண்டு சீஷர்களைக் குறிப்பதற்கும் (மத் 10:2) (apostle) (அப் 15:33) முக்கியமான கிறிஸ்தவத் தலைவர்களைக் குறிப்பதற்கும் புதிய ஏற்பாட்டில் இச்சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது.

உதவிசெய்தவன் (Minister) λειτουργός leitourgos 3011

ஆண்பால பெயர்சொல் - ஊழியக்காரர், உதவிசெய்தவன் ஊழியஞ்செய்கிறவன் (public servant) (ரோமர் 13:6, எபே 4:18)

வியாகுலப்படுதல் (heaviness) - ἀδημονέω - adeemoneoo - 85

வினைமடை - வியாகுலப்படுதல் heavily burdened. (மத் 26:37 மாற்கு 14:33, பிலி 2:26)

வியாதி (sick) - ἀσθενέω - astheneoo - 770

வினைச்சொல - வியாதியாயிரு, வியாதிப்படு, வியாதிப்பட்டிரு, பிணியாளியாயிரு, பலவீனமாயிரு

எப்பாப்பிரோதீத்து வியாதிப்பட்டிருந்தான் பவுல இந்த நிருபத்தை எழுதிய போது அவன் மறுபடியும் குணமடைந்தான் அவன கிறிஸதுவின் ஊழியத்தின் நிமித்தம் மரணத்திற்கும் சமீபமாக இருந்தான (பிலி 2:30) கர்த்தருக்கு ஊழியம் செய்ததினால அவனுக்கு வியாதி வரவில்லை ஓய்வில்லாமல ஊழியம் செய்ததினால அவன சரீரத்தில களைப்படைந்து பலவீனமாக இருந்தான இந்த வசனத்தில வியாதி என்பது அவனுடைய சரீர பலவீனத்தையே குறிக்கும்

பலவீனமான வியாதிகள்

1. விசுவாசத்தில பலவீனம் (Weak faith) (ரோமர் 4:19; ரோமர் 14:1,2,21, 1கொரி 8:9-12, 2கொரி 12:10 2கொரி 13:4)
2. பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் (Weak law) (ரோமர் 8:3)
3. பலவீனமான ஜனங்கள் (ஏழைகள் (Weak (poor) people) (அப் 20:35)
4. தைரியத்திலும், வல்லமையிலும் பலவீனம் (Weak in boldness and power) (2கொரி 11:21,29, 2கொரி 12:10; 2கொரி 13:3,4,9

பிலிப்பியர் - தொகுப்புரை

2 அதிகாரம்

பவுலின் உடன் ஊழியனான எப்பாப்பிரோதித்து வியாதியாக இருந்ததினால் அவனைக் குணப்படுத்தும் வல்லமை பவுலை விட்டு நீங்கிப்போயிற்று என்பது பொருளல்ல. அற்புதங்களைச் செய்யும் வல்லமை பவுலிடம் இருந்தது. (அப் 19:11,12). கிறிஸ்துவின் கவிசேஷத்தினால் உண்டாகும் நிறைவான ஆசீர்வாதத்தைப் பவுல் பெற்றிருந்தார் (ரோமர் 15:18,19,29). மற்ற ஊழியக்காரர்கள்மீது பவுல் [illegible] கரங்களை வைத்து ஜெபித்து அவர்களை அபிஷேகித்தார் (அப் 19:6,7; ரோமர் 1:11; 1தீமோ 4:14; 2தீமோ 1:6).

"தேவன் அவனுக்கு இரங்கினார்" - எப்பாப்பிரோதித்து வியாதிப்பட்டு மரணத்திற்குச் சமீபமாக இருந்தான். பவுல் அவனுக்காக ஜெபித்தார். தேவன் ஜெபத்திற்குப் பதில் கொடுத்து அவனைக் குணப்படுத்தினார். தேவனுடைய ஊழியக்காரர்கள் கடினமாக உழைக்க வேண்டும். அதே சமயத்தில் தேவையான அளவு ஓய்வு எடுத்துக் கொண்டு தங்களுடைய சரீரங்களையும் பராமரித்துக் கொள்ள வேண்டும்.

"அவன் தன் பிராணனையும் எண்ணாமல் கிறிஸ்துவின் ஊழியத்தினிமித்தம் மரணத்திற்குச் சமீபமாயிருந்தான்" கிறிஸ்துவின் ஊழியத்தில் எப்பாப்பிரோதித்து ஓய்வில்லாமல் தொடர்ந்து பாடுபட்ட படியினாலே சரீரத்தில் பெலவீனமடைந்தான்.

3 அதிகாரம்

IV. கிறிஸ்தவ ஜீவியத்தின் இலக்கு

1. யூதமார்க்கத்தாருக்கு எதிரான எச்சரிப்பு

பிலி 3:1 மேலும், என் சகோதரரே கர்த்தருக்குள் சந்தோஷப்படுங்கள் எழுதினவைகளையே எழுதுவது எனக்கு வருத்தமல்ல அது உங்களுக்கு நலமாயிருக்கும்.

பிலி 3:2 நாய்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள், பொல்லாத வேலையாட்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள், சுன்னத்துக்காரருக்கு எச்சரிக்கையாயிருங்கள்

"கர்த்தருக்குள் சந்தோஷப்படுங்கள்" - நமது சந்தோஷம் எப்போதும் கர்த்தருக்குள்ளேயே இருக்க வேண்டும்.

"எழுதினவைகளையே எழுதுவது" - அப்போஸ்தலர் பவுல் மற்றவர்களுக்கு எழுதின அதே உபதேசங்களையே இப்போது பிலிப்பியருக்கும் எழுதுகிறார்

பவுல் யூதர்களை அழைப்பதற்கு பயன்படுத்திய பெயர்கள்

1. நாய்கள் - யூதர்கள் மற்றவர்களை நாய்கள் என்று அழைத்தார்கள் பவுல் இப்போது யூதர்களையே நாய்கள் என்று அழைக்கிறார் (மத் 15:26-27)
2. பொல்லாத வேலையாட்கள் (Evil workers) - யூதமார்க்கத்தை உபதேசிப்பவர்கள் (Judaizing teachers)
3. சுன்னத்துக்காரர் (The concision, mutilators) புறஜாதியார்கள் தங்களுடைய மார்க்க வழிபாட்டின் ஒரு பகுதியாக தங்களுடைய சரீரங்களைக் கீறிக்கொண்டார்கள் (லேவி 21:5; 1இராஜா 18:28)

யூதருடைய விருத்தசேதன முறைமை புறஜாதியார் தங்களுடைய சரீரங்களைக் கீறிக்கொள்வதற்கு ஒப்பாய் இருப்பதாக பவுல் கூறுகிறார்

சுன்னத்துக்காரர் (mutilators) - κατατομή - katatomee - 2699

பெண்பால் பெயர்ச்சொல் - சுன்னத்துக்காரர்

2. மாம்சத்தில் நம்பிக்கை வைக்கக் கூடாது

பிலி 3:3 ஏனெனில், மாம்சத்தின் மேல் நம்பிக்கையாயிராமல் ஆவியினாலே தேவனுக்கு ஆராதனைசெய்து கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மைபாராட்டுகிற நாமே விருத்தசேதனமுள்ளவர்கள்

பிலி 3:4 மாம்சத்தின் மேல் நம்பிக்கை வைக்க வேண்டுமானால் நானும் வைக்கலாம் வேறொருவன் மாம்சத்தின் மேல் நம்பிக்கையாயிருக்க நினைத்தால் நான் அதிகமாய் அப்படிச் செய்யலாம்.

பவுல் கிறிஸ்தவரைப் பற்றிக் கூறும் காரியங்கள்

1. உண்மையான விருத்தசேதனமுள்ளவர்கள் (ரோமர் 2:29)
2. ஆவியினாலே தேவனுக்கு ஆராதனை செய்கிறவர்கள் (யோவான் 4:24)
3. கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மை பாராட்டுகிறவர்கள் (பிலி 3:1; பிலி 4:4; 1பேதுரு 1)
4. மாம்சத்தின் மேல் நம்பிக்கையாயிராதவர்கள் (பிலி 3:3-4; 2கொரி 5:16)

3 அதிகாரம்

3. பவுலுடைய மாம்சத்தின் எட்டு அம்ச மேன்மை – (அப் 23:1, கலா 1:13-14; 2கொரி 11:22 ரோமர் 9:1-3)

பிலி 3:5 நான் எட்டாம் நாளில் விருத்த சேதனமடைந்தவன் இஸ்ரவேல் வம்சத்தான், பென்யமீன் கோத்திரத்தான், எபிரெயரில் பிறந்த எபிரெயன், நியாயப்பிரமாணத்தின்படி பரிசேயன் நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாதவன்

பிலி 3:6 பக்திவைராக்கியத்தின்படி சபையைத் துன்பப்படுத்தினவன் நியாய பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாதவன்

"எட்டாம் நாளில் விருத்த சேதனமடைந்தவன்" – (ஆதி 17:9-14, லேவி 12:3)

"இஸ்ரவேல் வம்சத்தான்" (stock of Israel) – (ஆதி29:21 30:25 ஆதி 35:16-29)

"பரிசேயன்" (Pharisee) – (மத் 3:7)

"பக்திவைராக்கியம்" zeal – (அப 7:58 அப 8:1-3; அப 9:1-2; கலா 1:13)

"குற்றஞ்சாட்டப்படாதவன்" (blameless) யூதமார்க்கத்தின் சமய நெறிகளைப் பவுல் சீராகக் கடைபிடித்து வந்தவர் பக்தி வைராக்கியம் மிகுந்தவர் (பிலி 3:4-6, கலா 1:13 14, 2கொரி 11:22)

4. கிறிஸ்தவ இலக்கின் எட்டு அம்சம்

(1) கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ள வேண்டும் (1கொரி 9:24-27, மத் 7:21 23)

பிலி 3:7 ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவை களெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன்

பிலி 3:8 அது மாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன்

"கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன்" பவுல் தனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினார் பிலி 3:4-6 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் சிலாக்கியங்களையும் யூதர் மத்தியிலே தனக்கு உண்டாயிருந்த மரியாதையையும் யூதமார்க்கத்தில் தனக்கிருந்த மேன்மையையும் பவுல் கிறிஸ்துவிற்காக நஷ்டமென்று எண்ணுகிறார்

நஷ்டம் (loss) - ζημία - zeemia - 2209

பெண்பால் பெயர்ச்சொல் - சேதம் நஷ்டம் - வியாபாரத்தில் ஏற்படும் நஷ்டம் கப்பலில் பிரயாணம் செய்து புயல் காற்றில் சிக்கிக் கொள்ளும்போது கப்பலிலுள்ள கனமான பொருட்களைக் கடலிற்குள் மாலுமிகள் தாங்களாகவே தூக்கி எறிந்து கப்பலை இலகுவாக்குவார்கள் பவுல் தனக்கு லாபமாக இருந்தவைகளை நஷ்டமென்று எண்ணி தன்னை விட்டு அகற்றுகிறார் பிலி 3:8 அப் 27:10 21)

"என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக" இந்த அறிவின் மேன்மைக்காகவே பவுல் எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறார் தன்னுடைய ஆத்துமாவை இரட்சிப்பதற்கு பவுல் கர்த்தரையே முழுவதுமாகச் சார்ந்திருக்கிறார்

பவுலின் அடையாளங்கள்

1 ஆவியினால் தேவனுக்கு ஆராதனை செய்கிறார் (அப 3:3 யோவான் 4:24

2 இயேசு கிறிஸ்துவிற்குள் மேன்மை பாராட்டுகிறார் (பிலி 3:1,3, பிலி 4:4

பிலிப்பியர் – தொகுப்புரை

3 அதிகாரம்

3 மாம்சத்தின்மேல் நம்பிக்கையாய் இருக்கவில்லை (பிலி 3:3-8)

4 தனக்கு லாபமாயிருந்தவை களெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணுகிறார் (பிலி 3:7-8)

5 கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறார் (பிலி 3:8)

6 நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை [redacted] இருக்கவில்லை (பிலி 3:9)

7 கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவின் மேன்மையை நாடுகிறார் (பிலி 3:8,12)

8 பின்னானவைகளை மறக்கிறார் (பிலி 3:13)

9 முன்னானவைகளை நாடுகிறார் (பிலி 3:13)

10 கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறார் (பிலி 3:14)

11 மற்றவர்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிற முன்மாதிரியாக இருக்கிறார் (பிலி 3:15-19)

12 கர்த்தராய் இருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார் (பிலி 3:20)

பவுலின் ஆவல்கள்

1 கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ள வேண்டும் (பிலி 3:9)

2 கிறிஸ்துவிற்குள் இருக்கிறவனென்று காணப்பட வேண்டும் (பிலி 3:9)

3 கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசம் மூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாய் இருக்க வேண்டும் (பிலி 3:9)

4 கர்த்தரை அறிய வேண்டும் (பிலி 3:10)

5 அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையை அறியவேண்டும் (பிலி 3:10)

6 அவருடைய பாடுகளின் ஐக்கியத்தை அறிய வேண்டும் (பிலி 3:10)

7 அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாக வேண்டும் (பிலி 3:10)

8 மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்திருப்பதற்கு தகுதியாக வேண்டும் (பிலி 3:11)

9 தேறினவனாக இருக்க வேண்டும் (பிலி 3:12-13)

10 பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கி தொடரவேண்டும் (பிலி 3:14)

11 மற்ற விசுவாசிகளோடு ஒருவராக இருக்க வேண்டும் (பிலி 3:15-19)

12 தன்னுடைய அற்பமான சரீரம் இயேசு கிறிஸ்துவின் மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபமடையவேண்டும் (பிலி 3:21)

(2) கிறிஸ்துவிற்குள் இருக்கிறவனென்று காணப்படவேண்டும்

- (2கொரி 5:17; கொலோ 2:10

பிலி 3:9 நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும் படிக்கும்,

3 அதிகாரம்

ஆதாயப்படுத்திக் கொள்ளுதல (win) - κερδαίνω - kerdainoo - 2770

வினைச்சொல் - ஆதாயப்படுத்திக் கொள், சம்பாதி. சம்பாத்தியம் பண்ணு. "win" (பிலி 3:8); "won" (1பேதுரு 3:1); "gain" (மத் 16:26; மத் 18:15 மத் 25:17,20,22; மாற்கு 8:36. லூக்கா 9:25; அப் 27:21 1கொரி 9:19-22

"கிறிஸ்துவுக்குள்" - (2கொரி 5:17-18; லூக்கா 22:3)

"நியாயப்பிரமாணத்தினால வருகிற சுயநீதியை உடையவனாயிராமல" - இரட்சிக்கப்படுவதற்கு மனுஷனுடைய சுயநீதி போதுமானதலல. (ஏசா 64:6, லூக்கா 18:9-14; ரோமர் 10:1-13)

"கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால வருகிறதும் விசுவாசமூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதும்" தேவனுடைய நீதி இயேசு கிறிஸ்துவின மூலமாகவும் (1கொரி 1:30) விசுவாசத்தினாலும் (ஆதி 15:6, ரோமர் 3:22-26; ரோமர் 4:1-25 ரோமர் 9:30-31, ரோமர் 10:1-13) வருகிறது.

(3) கிறிஸ்துவை வல்லமையிலும் பாடுகளிலும் மரணத்திலும் அறியவேண்டும் (யோவான் 14:12; கலா 2:20, 1பேதுரு 4:1)

பிலி 3:10 இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின வல்லமையையும். அவருடைய பாடுகளின ஐக்கியத்தையும அறிகிறதற்கும். அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற் குள்ளாகி. எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும்.

"நான் அவரை அறிகிறதற்கு" - இதுவே நித்திய ஜீவன் (யோவான் 17:3)

"அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமை" - பவுல் தன்னுடைய சரீரம் உயிர்த்தெழ வேண்டுமென்று ஆவலோடு இருக்கிறார் (பிலி 3:11,21; 1கொரி 15 2கொரி 5)

"அவருடைய பாடுகளின் ஐக்கியம்" - இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் நமது பாவங்களுக்காகப் பாடுகளை அனுபவித்தார் அவருடைய கல்வாரி பாடுகளில் நாம் பங்குபெற முடியாது. ஆனாலும் சிலுவையின் நிமித்தம் வரும பாடுகளையும். சத்தியத்தினிமித்தம வரும் பாடுகளையும் நாம ஏற்றுக் கொள்ள வேண்டும் (2கொரி 1:5-7; கொலோ 1:24 1பேதுரு 4:13)

ஒப்பானது (conformable) - συμμορφίζω - symmorphizoo - 4833

வினைச்சொல - ஒப்பாயிரு - அப்போஸ்தலர் பவுல இயேசு கிறிஸ்துவையும் அவருடைய உயிர்த்தெழுதலின வல்லமையையும் அறிய விரும்புகிறார் அதே சமயத்தில இயேசு கிறிஸ்துவின பாடுகளில பங்குபெறவும் அவருடைய மரணத்திற்கு ஒப்பான மரணத்திற்குள்ளாக வேண்டுமென்றும் விரும்புகிறார்

தீர்க்கதரிசன எண் - 3

"நான மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும் படிக்கும்" (பிலி 3:11) இந்தத் தீர்க்கதரிசனம இன்னும் நிறைவேறவில்லை

"மரித்தோரிலிருந்து" மரித்தோரில் ஒருசிலர் உயிரோடு எழுந்திருப்பார்கள் மரித்த துன்மார்க்கர்கள் உயிரோடு எழுந்திருப்பதற்கு முன்பாக மரித்துப்போன பரிசுத்தவான்கள் முதலாவதாக உயிரோடு எழும்புவார்கள் லூக்கா 20:35 லூக்கா 21:36 1கொரி 15:23,51-54, பிலி 3:21; 1தெச 4:13-17; வெளி 20:4-6

3 அதிகாரம்

இதிலிருந்து (from among) - ἐκ - ek - 1537

முன்னிடைச்சொல் - இல, ஆல இதிலிருந்து, விட்டு, இடத்தில, முதல தரம் இல்லாமல. ஆறாம வேற்றுமையுடன் உடைய, இன் கொண்டு, புறம்பே, முதற்கொண்டு, ஒடு, வழியாய், தொடங்கி

மரித்தோர் (dead) - νεκρός - nekros - 3498

பெயரடை - மரிததோர் செத்துப போனவர்கள

(4) **பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாட வேண்டும்** - (வெளி 20:4-6 1தெச 4:16; 1கொரி 15:23; 51 58)

பிலி 3:8 அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன் குப்பையுமாக எண்ணுகிறேன

பிலி 3:12 நான் அடைந்தாயிற்று அல்லது முற்றும் தேறினவனானேன என்று எண்ணாமல், கிறிஸது இயேசுவினால நான் எதறகாகப பிடிக்கபபட்டேனோ அதை நான பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன

பவுல் இன்னும் அடைய வேண்டிய காரியங்கள்

1 உயிர்த்தெழுதல அல்லது பந்தயபபொருள் (பிலி 3:11-12,14) பவுல் இன்னும் முதிர்ச்சியடைய விலலை (பிலி 3:20-21

2 தேறுதல் (Perfection) - பவுல் தன்னுடைய சரீரத்தில் உயிர்த் தெழுந்து மகிமை அடைவதையே தேறுதல் என்று குறிப்பிடுகிறார்

தேறுதல் (Perfection) - τελειόω - teleiooo - 5048

வினைச்சொல் - முடி, தேறு நிறைவேற்று,பூரணபபடுத்து (to make a full end; consummate) (பிலி 3:12). (perfect) (பிலி 3:12 லூக்கா13:32; யோவான் 17:23; 2கொரி 12:9; எபி 2:10; எபி 5:9 எபி 7:19; எபி 9:9; எபி 10:1,14. எபி 11:40; எபி 12:23; யாக் 2:22 1யோவான்2:5; 1யோவான் 4:12,17-18) (fulfil) லூக்கா 2:43 யோவான் 19:28 (finish) (யோவான் 4:34 யோவான் 5:36; யோவான 17:4. அப 20:24)

தொடருதல் (to pursue) - διώκω - diookoo - 1377

வினைசசொல தொடருதல பிலி 3:6 இல துன்பபபடுத்துதல் பிலி 3:14 இல தொடருதல 50 இடங்களில இந்த வார்த்தை துன்பபடுத்துதல "persecute" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. (மத் 5:10-12,44; மத் 10:23,........ "follow after" (பிலி 3:12, ரோமர் 9:30-31; ரோமர் 14:19, 1கொரி 14:1; 1தீமோ 6:11); "ensue" (1பேதுரு 3:11); " follow" (லூக்கா 17:23; 1தெச 5:15, 2தீமோ 2:22; எபி 12:14); "given to" (ரோமர் 12:13)

3 அதிகாரம்

பிடித்துக் கொள்ளுதல் (apprehend) - καταλαμβάνω katalembanoo - 2638

வினைச்சொல் - பிடி பற்றிக்கொள்ளு, அடைபடு, அடை பெறு, அறி to seize upon; lay hold of; take possession of; bring to an end. "apprehend" (பிலி 3:12-13); overtake (1தெச 5:4); "take" (மாற்கு 9:18 யோவான் 8:3); "attain to" (ரோமர் 9:30); "obtain" (1கொரி 9:24); "come upon" (யோவான் 12:35); "comprehend" (யோவான் 1:5; எபே 3:18); "perceive" (அப் 4:13; அப் 10:34); "find" (அப் 25:25)

பவுல் பந்தயப் பொருளாகிய உயிர்த்தெழுதலை இன்னும் பிடிக்கவில்லை (பிலி 3:12-14,20-21)

(5) கிறிஸ்து இயேசுவிற்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கி தொடர வேண்டும் - (வெளி 5:10; 20:4-6; ரோமர் 8:17)

பிலி 3:13 சகோதரரே, அதைப் பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை. ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி

பிலி 3:14 கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்

"ஒன்று செய்கிறேன்" என்று பவுல் கூறிய [redacted]

1. பின்னானவைகளை மறக்கிறார் (2கொரி 9:24-27, பிலி 3:13)

2. முன்னானவைகளை நாடுகிறார் (பிலி 3:13)

3. இலக்கை நோக்கி தொடருகிறார் (பிலி 3:14)

"தேவன் அழைத்த பரம அழைப்பு" - பரலோக அழைப்பு

(6) ஒரே ஒழுங்காய் நடந்து கொண்டு ஒரே சிந்தையாய் இருக்க வேண்டும் - (1கொரி 1:10 எபே 4:1-16; 1பேதுரு 3:8-13)

பிலி 3:15 ஆகையால், நம்மில் தேறினவர்கள் யாவரும் இந்தச் சிந்தையாயிருக்கக் கடவோம், எந்தக் காரியத்திலாவது நீங்கள் வேறே சிந்தையாயிருந்தால், அதையும் தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துவார்

பிலி 3:16 ஆகிலும் நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ, அதுமுதல் ஒரே ஒழுங்காய் நடந்து கொண்டு, ஒரே சிந்தையாயிருப்போமாக.

தேறினது (perfect) - τέλειος - teleios - 5046

பெயரடை - பூரண, பரிபூரணமான, நிறைவான, தேறின, உத்தமமான (mature; complete) - குழந்தைகளுடைய வளர்ச்சியை இந்த வார்த்தை குறிப்பிடாது. புருஷராகும் வளர்ச்சியையே இந்த வார்த்தை விளக்கும். கிறிஸ்தவ ஞானத்தில் தெளிவாக உபதேசிக்கப்பட்டு தேர்ச்சி அடைந்திருப்பதை இந்த வார்த்தை குறிப்பிடும். (2கொரி 2:6, 2கொரி 14:20; எபே 4:13 கொலோ 1:28; யாக் 1:4, யாக் 3:2, எபி 5:14; 1யோவான் 4:18

3 அதிகாரம்

(7) அப்போஸ்தலரின் முன் மாதிரியைப் பின்பற்ற வேண்டும் - (4:9; 1கொரி 11:1; 1தெச 1:6, 1தீமோ 4:12)

பிலி 3:17 சகோதரரே, நீங்கள் என்னோடேகூடப் பின்பற்றுகிறவர்களாகி, நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள்.

பிலி 3:18 ஏனெனில், அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள்; அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன், இப்பொழுதும் கண்ணீரோடும் சொல்லுகிறேன்.

பிலி 3:19 அவர்களுடைய முடிவு அழிவு; அவர்களுடைய தேவன் வயிறு; அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே; அவர்கள் பூமிக்குடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள்.

கூடப்பின்பற்றுகிறவர்கள் (followers) συμμιμηταί symmimeetees - 4831

ஆண்பால் பெயர்சொல் கூடப்பின்பற்றுகிறவர் (fellow-imitators) - (எபே 5:1; 1கொரி 4:16)

நோக்குதல் (mark) - σκοπέω - skopeoo - 4648

வினைச்சொல் - எச்சரிக்கையாயிரு நோக்கு (ரோமர் 16:17)

மாதிரி (ensample) τυπικῶς typikoos 5179

ஆண்பால் பெயர்ச்சொல் - சொரூபம், மாதிரிரூபம், திருஷ்டாந்தம் (example) (பிலி 3:17; 1கொரி 10:6,11, 1தெச 1:7; 2தெச 3:9; 1தீமோ 4:12 1பேதுரு 5:3); (pattern) (தீத்து 2:7, எபி 8:5); (manner) (அப் 23:25); (fashion) (அப் 7:44); (form) (ரோமர் 6:17); (figure) (அப் 7:43 ரோமர் 5:14); (print) (யோவான் 20:25)

கள்ளப்போதகர்களைப் பற்றிய காரியங்கள்

1 அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞர் (பிலி 3:18)

2 அவர்களுடைய முடிவு அழிவு (பிலி 3:19; 2கொரி 11:14-15; எபி 6:8 2பேதுரு 2:20)

3 அவர்களுடைய தேவன் வயிறு (பிலி 3:19; ரோமர் 16:18 ஏசா 56:10-12; எசே 13:19)

4 அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சை (பிலி 3:19)

5 அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள் (பிலி 3:19, ரோமர் 8:5-6; 2பேதுரு 3:3,13-20; மத் 7:15)

(8) கிறிஸ்துவோடு மகிமை அடைய வேண்டும் கொலோ 3:4 1கொரி 15:23, 51-58, ரோமர் 8:17

பிலி 3:20 நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

பிலி 3:21 அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்.

3 அதிகாரம்

குடியிருப்பு (conversation) - πολίτευμα - politeuma - 4175

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - குடியிருப்பு, பிரஜை (citizenship; city; civil rights, state; society; government)

"கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்" - கர்த்தருடைய வருகையையும், சபை எடுத்துக் கொள்ளப் படுவதையும் விசுவாசிகள் எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் இந்த நிகழ்ச்சி எந்த வேளையிலும் நடைபெறலாம். (பிலி 3:20; தீத்து 2:13) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும் சபையை எடுத்துக் கொள்வதற்காக இயேசு கிறிஸ்து மத்திய ஆகாயத்திற்கு வருவதும் வெவ்வேறான நிகழ்ச்சிகளாகும். (2தெச 2:7; வெளி 1:19; வெளி 4:1) சபை எடுத்துக் கொள்ளப் படுவதற்கும் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கும் இடையில் குறைந்தபட்சம் ஏழு வருஷம் இடைவெளி இருக்குமென்று வேத பண்டிதர்கள் கூறுகிறார்கள் மகா உபத்திரவத்திற்கு முன்பு சபை எடுத்துக் கொள்ளப்படும் இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகையில் உபத்திரவ காலத்திற்கு பின்பு நடைபெறும் (1தெச 4:16= மத் 24:29) சபை எடுத்துக் கொள்ளப்படுதல் பரிசுத்தவான்களுக்காக நடைபெறுவது யோவான் 14:1-3 லூக்கா 21:36; 1கொரி 15:23,51-54, 1தெச 4:13-17, 2தெச 2:1,7; பிலி 3:21 கொலோ 3:4 இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பூமியில் தமது அரசாட்சியை ஸ்தாபிப்பதற்காக பரிசுத்தவான்களோடு பூமிக்கு வருவார் (சக 14:5; யூதா 1:14; வெளி 19:11-21)

தீர்க்கதரிசன எண் - 4

"அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" (பிலி 3:21) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை

மறுரூபப்படுத்துதல் (refashion) μετασχηματίζω metascheematizoo - 3345

வினைச்சொல் - வேஷத்தைத் தரி, திருஷ்டாந்தம் (transform, change the fashion of; refashion) "transform" (2கொரி 11:13-15); "transfer in a figure" (1கொரி 4:6); "change" (பிலி 3:21)

அற்பம் (vile) - ταπείνωσις - tapeinoosis - 5014

பெண்பால் பெயர்ச்சொல் - தாழ்மை தாழ்த்துதல் கீழ்ப்படுத்துதல் (humiliation) (அப 8:33); (low estate) (லூக்கா 1:48; யாக் 1:10); (vile) (பிலி 3:21) - தேவன் மனுஷனைத் தமது சாயலாகவும், தமது ரூபத்தின் பிரகாரமாகவும் சிருஷ்டித்தார் (ஆதி 1:26-3 சங் 8:3-6) ஆனால் மனுஷனோ பாவத்தில் விழுந்து தன்னுடைய மகிமையான சரீரத்தை அற்பமான சரீரமாக ஆக்கி விட்டான் (2கொரி 4:16, ரோமர் 1:18-32 ரோமர் 6:19; ஆதி 3:19)

ஒப்பாயிருக்கிறது (conformed) - σύμμορφος - symmorphos - 4832

பெயரடை - ஒப்பாயிருக்கிறது (conformed to) - (ரோமர் 8:29 அழிவுக்குரிய சரீரம் அழியாத சரீரமாக மாறும். பௌதிக சரீரம் ஆவிக்குரிய சரீரமாக மாறும். அற்பமான சரீரம் மகிமையான சரீரமாக மாறும். (1கொரி 15:35-58 கிறிஸ்துவின் மகிமையடைந்த சரீரத்தைப் போன்று நமது சரீரத்திலும் எலும்பும் தசையும் இருக்கும் (லூக்கா 24:39; சக 13:6)

"அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க இயேசு கிறிஸ்துவின் வல்லமையான செயல் நமது அற்பமான சரீரத்தை மகிமையான சரீரமாக மறுரூபப்படுத்தும். இது ஒரு க்ஷணப்பொழுதில் நடைபெறும் காரியமாகும். (1கொரி 15:51) எல்லாக் காரியங்களையும் இயேசு கிறிஸ்து தமக்கு முற்றுமுழுமையாகக் கீழ்ப்படுத்திக் கொள்வார் (1கொரி 15:24-28, எபி 2:9-18)

4 அதிகாரம்

V. விசுவாசிகளுக்கு புத்திமதிகள்

1. கர்த்தரிடத்தில் நிலைத்திருக்க வேண்டும் - (1கொரி 16:13; கலா 5:1; 1தெச 3:8)

பிலி 4:1 ஆதலால், எனக்குப் பிரியமும் வாஞ்சையுமான சகோதரரே, எனக்குச் சந்தோஷமும் கிரீடமுமானவர்களே, பிரியமானவர்களே, இந்தப்படியே கர்த்தருக்குள் நிலைத்திருங்கள்.

"எனக்குச் சந்தோஷமும் கிரீடமுமானவர்களே" - (1தெச 2:19-20)

2. கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாய் இருக்க வேண்டும் - (2கொரி 1:10; எபே 4:1-3)

பிலி 4:2 கர்த்தருக்குள் ஒரே சிந்தையாயிருக்க எயோதியாளுக்கும் சிந்திகேயாளுக்கும் புத்தி சொல்லுகிறேன்.

பிலி 4:3 அன்றியும், என் உத்தம கூட்டாளியே, அவர்களுக்கு உதவியாயிருக்கும்படி உன்னையும் வேண்டிக்கொள்ளுகிறேன்; அவர்கள் கிலேமெந்தோடும் மற்ற என் உடன் வேலையாட்களோடுங்கூடச் சுவிசேஷ விஷயத்தில் என்னோடேகூட மிகவும் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது.

பிலி 4:4 கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்.

"எயோதியாளுக்கும் சிந்திகேயாளுக்கும் புத்தி சொல்லுகிறேன்" - இவ்விருவரும் சபையின் மூப்பர்களாக இருந்திருக்கலாம். இவர்களுக்குள் ஏதோ ஒரு காரணத்திற்காக கருத்து வேறுபாடு ஏற்பட்டிருக்க வேண்டும். ஆகையினால் இவர்கள் இருவரும் கர்த்தருக்குள் ஒரே சிந்தையாயிருக்க வேண்டுமென்று பவுல் இவர்களுக்குப் புத்தி சொல்லுகிறார் (பிலி 4:3)

கூட்டாளி (yokefellow) - σύζυγος - syzygos - 4805

பொருள் - கூட்டாளியான (comrade; friend) - பவுல் இந்த வார்த்தையை இந்த வசனத்திலும் பிலி 2:25 எப்பாப்பிரோதீத்துவைக் குறிப்பதற்கும் பயன்படுத்துகிறார்

"சுவிசேஷ விஷயத்தில் என்னோடேகூட மிகவும் பிரயாசப்பட்டார்கள்" - இந்த வாக்கியம் பிலி 4:2 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் எயோதியாளையும் சிந்திகேயாளையும் குறிக்கலாம்

பிரயாசப்படுதல் (laboured) - συναθλέω - synathleoo - 4866

வினைச்சொல் - கூடப்போராடு, கூடப்பிரயாசப்படு (பிலி 1:27)

"கிலேமெந்து" (Clement) - இவர் ரோமபுரியின் பேராயராக இருந்து கொரிந்தியருக்கு ஒரு நிருபம் எழுதினார் என்று திருச்சபை வரலாறு கூறுகிறது. இவருடைய நிருபம் இன்னும் பாதுகாக்கப்பட்டு வருகிறது

உடன் வேலையாட்கள் (fellowlabourers) - συνεργός - synergos - 4904

பொருள் - உடன் வேலைசெய்யும் உடன் வேலையாளான சகாயரான (பிலி 4:3; 1தெச 3:2; பிலே 1:1,24); **fellowworker** (கொலோ 4:11); **workfellow** (ரோமர் 16:21); **labourers together** (1கொரி 3:9); **companion in labour** (பிலி 2:25); **fellowhelper** (2கொரி 8:23; 3யோவான் 1:8); **helper** (ரோமர் 16:3,9; 2கொரி 1:24)

"ஜீவபுஸ்தகம்" (book of life) - (யாத் 32:32-33; சங் 69:28; வெளி 3:5; வெளி 13:8; வெளி 17:8; வெளி 20:15; வெளி 22:19) பிலி 4:3

4 அதிகாரம்

3. சாந்த குணம் வெளிப்பட வேண்டும் - (மத் 6:25-34; கலா 5:22-23)

பிலி 4:5 உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக. கர்த்தர் சமீபமாயிருக்கிறார்.

பிலி 4:6 நீங்கள் ஒன்றுக்குங் கவலைப் படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்.

பிலி 4:7 அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்.

சாந்தகுணம் (moderation) - **ἐπιεικής - epieikees** - 1933

பெயரடை - சாந்தமான பொறுமையுள்ள (mildness; patience; kindness; moderation; meekness; gentleness). (பிலி 4:5; 1தீமோ 3:3 தீத்து 3:2; யாக் 3:17; 1பேதுரு 2:18)

"கர்த்தர் சமீபமாயிருக்கிறார்" - மாரநாதா என்னும் வார்த்தைக்குச் சமமான வார்த்தை (1கொரி 16:22). கர்த்தர் நியாயாதிபதியாக இருந்து துன்மார்க்கரைத் தண்டிப்பதற்குச் சமீபமாக இருக்கிறார்.

"ஒன்றுக்குங் கவலைப்படாமல்" - கவலைப்படுவது ஆத்துமாவை அழித்துப் போடும். கர்த்தர் மட்டுமே நமக்கு உதவி புரியக்கூடியவர். கர்த்தரிடத்தில் ஜெபிக்கும் போது அவர் தமது கிருபையை நமக்கு வெளிப்படுத்துவார். ஆகையினால் நமது விண்ணப்பங்களை ஸ்தோத்திரங்களோடே கர்த்தரிடம் தெரிவிக்க வேண்டும். (பிலி 4:6; 1தெச 5:18) ஒன்றுக்குங்கவலைப்படக்கூடாது.

ஒன்றுக்குங்கவலைப்படாமல் (careful for nothing) - **μηδείς** - meedeis - 3367

பெயரடை - ஒருவரும், ஒருவனும், ஒன்றிலும், ஒன்றுக்கும்

கவலைப்படு (be anxious) **μεριμνάω** - merimnaoo 3309

வினைச்சொல் - கவலைப்படு "be careful" (பிலி 4:6; லூக்கா 10:41); "have care" (1கொரி 7:32-34; 1கொரி 12:25; பிலி 2:20); "take thought" (மத் 6:25-34; மத் 10:19; லூக்கா 12:11,22-26)

"தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" - நமது விண்ணப்பங்கள் எதுவாக இருந்தாலும் அவற்றைத் தேவனிடம் தெரியப்படுத்த வேண்டும். தேவன் நம்முடைய தேவைகளைக் குறித்துக் கரிசனையுடையவர். ஆகையினால் நமது ஆவிக்குரிய தேவைகளுக்கும் லௌகீக தேவைகளுக்கும் கர்த்தரையே சார்ந்திருக்க வேண்டும்.

காத்துக்கொள் (shall keep) - **φρουρέω** - phroureoo - 5432

வினைச்சொல் - காவல் வை, காவல் பண்ணு, காத்துக்கொள் (arrison; keep watch or guard) (keep) (பிலி 4:7; கலா 3:23; 1பேதுரு 1:5) (keep with a garrison) (2கொரி 11:32)

கவலைப்படாமல் இருப்பதற்கு இரகசியங்கள்

1. தேவசமாதானம் நம்முடைய இருதயங்களையும் நமது சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவிற்குள்ளாகக் காத்துக் கொள்ள வேண்டும். பிலி 4:7
2. ஒன்றுக்குங்கவலைப்படாமல் எல்லாவற்றையும் குறித்து நம்முடைய விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்த வேண்டும். (பிலி 4:6; யாக் 4:7)

4 அதிகாரம்

3 சரியான காரியங்களையே சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும். (பிலி 4:8)

4 கர்த்தரை உறுதியாய் பற்றிக் கொள்ளும் மனதுடையவர்களாக இருக்க வேண்டும். (ஏசா 26:3)

5 ஆவிக்குரிய போராயுதங்களைப் பயன்படுத்த வேண்டும் (2கொரி 10:4-6

6 தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக் கொள்ள வேண்டும். (எபே 6:10-18

7 தேவனிடத்தில் விசுவாசமாக இருக்க வேண்டும். (மத் 6:25-34 மத் 7:7-11; மத் 17:20; மத் 21:22 மாற்கு 11:22-24

8 ஆவியில் ஜீவித்து நடக்க வேண்டும். (கலா 5:16-26; ரோமர் 6:14-23, ரோமர் 8:1-13

9 நம்பிக்கையை இழந்துபோகக் கூடாது. (எபி 3:6,12-14; எபி 6:11-12 எபி 10:19-23,35-39)

10 நமது கவலைகளையெல்லாம் கர்த்தர்மேல் வைத்து விட வேண்டும் 1பேதுரு 5:7

4. கிறிஸ்தவ நீதிநெறி பண்பின் பிரகாரம் ஜீவிக்க வேண்டும் - கலா 5:22-23, 2பேதுரு 1:5-11)

பிலி 4:8 கடைசியாக சகோதரரே உண்மையுள்ளவை களெவைகளோ ஒழுக்கமுள்ள வைகளெவைகளோ நீதியுள்ளவைகளெ வைகளோ கற்புள்ள வைகளெவைகளோ அன்புள்ளவைகளெ வைகளோ நற் கீர்த்தியுள்ளவைகளெவைகளோ புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்

நாம் சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டிய கா[redacted]

1 உண்மையுள்ளவைகள் (2தீமோ 2:15, 2தீமோ 3:16-17)

2 ஒழுக்கமுள்ளவைகள் (1தீமோ 3:8,11 தீத்து 2:2)

3 நீதியுள்ளவைகள் (ரோமர் 3:24-31 ரோமர் 8:4; 2பேதுரு 1:4-10)

4 கற்புள்ளவைகள் (ரோமர் 12:1-2 2கொரி 3:16-17; 2கொரி 7:1

5. அன்புள்ளவைகள் (2கொரி 13:4-8 கலா 5:22-23)

6 நற்கீர்த்தியுள்ளவைகள் (ரோமர் 13:1-10 2பேதுரு 1:4-10)

நல்லொழுக்க சிந்தனைகள் (Honest things) - σεμνός - semnos - 4586

பெரண்ட - உண்மையுள்ள நல்லொழுக்கமுள்ள (decent, honorable, Christian)

5. அப்போஸ்தல முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும்

பிலி 4:9 நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ அவைகளையே செய்யுங்கள் அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்

நாம் செய்ய வேண்டிய காரியங்கள்

1 கற்றவை - கிறிஸ்தவ நடத்தைகள்

2 அடைந்தவை - கிறிஸ்தவ ஆசீர்வாதங்கள்

3 கேட்டவை - கிறிஸ்தவ உற்தேசங்கள்

4. கண்டவை - கிறிஸ்தவ அற்புதங்கள்

பிலிப்பியர் - தொகுப்புரை

4 அதிகாரம்

விசுவாசிகள் நற்காரியங்களைச் சிந்தித்துக் கொண்டிருந்தால் மட்டும் போதுமானதல்ல. அவர்கள் அவற்றை நடைமுறையில் செயல்படுத்தவும் வேண்டும். (மத் 7:7-11; மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; மாற்கு 16:17-18; யோவான் 14:12-15; யோவான் 15:7,16; யோவான் 16:23-26; எபி 11; யாக் 1)

VI. பவுலின் உபத்திரவங்களில் பிலிப்பியரின் கரிசனை

1. கடந்த காலத்தில் விசாரிக்கவில்லை

பிலி 4:10 என்னை விசாரிப்பதற்கு நீங்கள் இப்பொழுது மறுபடியும் மனமலர்ந்த படியினாலே கர்த்தருக்குள் மிகவும் சந்தோஷப்பட்டேன்; இப்படிச் செய்ய எண்ணங்கொண்டிருந்தீர்கள், சமயம்மாத்திரம் உங்களுக்கு நேரிடவில்லை.

"சமயம்மாத்திரம் உங்களுக்கு நேரிடவில்லை" - பிலிப்பியர்கள் சில காலமாக அப்போஸ்தலர் பவுலுக்கு உதவி புரிவதை நிறுத்தி விட்டார்கள். தற்போது மறுபடியுமாக உதவி புரிய ஆரம்பித்திருக்கிறார்கள். தனக்கு உதவி புரியுமாறு பவுல் எந்த விசுவாசியையும் நிர்பந்தம் பண்ணவில்லை. அதேசமயத்தில் தனக்கு உதவி புரிந்தவர்களுக்கு பவுல் நன்றி கூற மறந்ததுமில்லை. (பிலி 4:11-19)

2. எந்த நிலைமையிலிருந்தாலும் பவுல் மன ரம்மியமாயிருக்க கற்றுக் கொண்டார்

பிலி 4:11 என் குறைச்சலினால் நான் இப்படிச் சொல்லுகிறதில்லை. ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மன ரம்மியமாயிருக்கக் கற்றுக் கொண்டேன்.

பிலி 4:12 தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்; எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன்.

பிலி 4:13 என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு.

நாம் கற்றுக்கொள்ள வேண்டிய [redacted]

1. எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்க (பிலி 4:11)
2. தாழ்ந்திருக்க (பிலி 4:12)
3. வாழ்ந்திருக்க (பிலி 4:12)
4. எவ்விடத்திலும் (பிலி 4:12)
5. எல்லாவற்றிலும் (பிலி 4:12)
6. திருப்தியாயிருக்க (பிலி 4:12)
7. பட்டினியாயிருக்க (பிலி 4:12)
8. பரிபூரணமடைய (பிலி 4:12)
9. குறைவுபட (பிலி 4:12)
10. கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய (பிலி 4:13; மத் 17:20; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 14:12-15; யோவான் 15:7,16)

3. பிலிப்பியரின் பராமரிப்பிற்கு புகழ்ந்துரை

பிலி 4:14 ஆகிலும் நீங்கள் என் உபத்திரவத்தில் என்னோடே உடன்பட்டது நலமாயிருக்கிறது.

பிலி 4:15 மேலும், பிலிப்பியரே, சுவிசேஷத்தின் ஆரம்பத்திலே நான் மக்கெதோனியாவிலிருந்து புறப்பட்ட போது, கொடுக்கல் வாங்கல் காரியத்தில் நீங்கள் மாத்திரம் எனக்கு உடன்பட்டதேயல்லாமல், வேறொரு சபையும் உடன்படவில்லை என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

4 அதிகாரம்

பிலி 4:16 நான் தெசலோனிக்கேயிலிருந்தபோதும், என் குறைச்சலை நீக்கும்படி நீங்கள் இரண்டொருதரம் அனுப்பினீர்கள்

பிலி 4:17 உபகாரத்தை நான் நாடாமல், உங்கள் கணக்குக்குப் பலன் பெருகும் படியே நாடுகிறேன்

பிலி 4:18 எல்லாம் எனக்குக் கிடைத்தது, பரிபூரணமும் உண்டாயிருக்கிறது; உங்களால் அனுப்பப்பட்டவைகளைச் சுகந்த வாசனையும் தேவனுக்குப் பிரியமான உகந்த பலியுமாக எப்பாப்பிரோதீத்துவின் கையிலே பெற்றுக்கொண்டபடியால் நான் திருப்தியடைந்திருக்கிறேன்

உபத்திரவம் (affliction) - θλῖψις - thlipsis - 2347

பெண்பால் பெயர்ச்சொல் - உபத்திரவம், வருத்தம் **"burdened"** 2கொரி 8:13; **"anguish"** யோவான் 16:21; **"persecution"** அப் 11:19; **"trouble"** 1கொரி 7:28; 2கொரி 1:4,8). இந்த வார்த்தை சரீர வியாதியைக் குறிப்பிடாது. (2கொரி 1:4)

"சுவிசேஷத்தின் ஆரம்பத்திலே நான் மக்கெதோனியாவிலிருந்து புறப்பட்டபோது" (அப் 16:12-40)

உடன்படுதல் (communicated)

κοινωνέω - koinooneoo - 2841

வினைச்சொல் - உதவிசெய், பங்குபெறு, பகிர்ந்துகொடு, உடன்படு, பங்காளிகளாயிரு (கலா 6:6)

"என் குறைச்சலை நீக்கும்படி நீங்கள் இரண்டொருதரம் அனுப்பினீர்கள்" - பவுல் தெசலோனிக்கேயா சபையை ஆரம்பித்த போது தன்னுடைய தேவைகளின் ஒரு பகுதியை தானே சுயாதீனமாகச் சந்தித்துக் கொண்டார். பிலிப்பியிலிருந்து வந்த உதவியின் மூலமாகவும் பவுலின் தேவைகள் ஓரளவு சந்திக்கப்பட்டது. (2தெச 3:7-9)

"உபகாரத்தை நான் நாடாமல்" - தனக்கு மேலும் உதவி கிடைக்கும் என்று எண்ணி பவுல் பிலிப்பியரைப் புகழவில்லை. அவர்களுடைய கணக்குக்குப் பலன் பெருகும்படியே நாடுகிறார்

"உங்கள் கணக்கு" - நம் ஒவ்வொருவருக்கும் பரலோகத்தில் ஒரு கணக்கு உள்ளது. (சங் 144:3; எபி 13:17; 1பேதுரு 4:5) நம்முடைய துன்மார்க்கமான செய்கையின் மூலமாக தேவனுடைய கோபாக்கினையை நமது கணக்கில் சேர்த்து வைக்கலாம். (ரோமர் 2:5) நல்ல செய்கையின் மூலமாக தேவனுடைய வெகுமதியையும் நமது கணக்கில் சேமித்து வைக்கலாம். (ரோமர் 14:1-12; 1கொரி 3:11-15; 2கொரி 5:10; கலா 3:6) நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தைக்கும் நாம் கணக்கொப்புவிக்க வேண்டும் (மத் 12:36) நாம் கொடுக்கும் ஒவ்வொரு கலசம் தண்ணீரும் நாம் செய்யும் செய்ய மறுக்கும் ஒவ்வொரு உதவியும் நமது கணக்கில் எழுதப்படும். (மத் 6:1-18; மத் 10:41-42; மத் 16:27; லூக்கா 6:23,35; 1கொரி 3:8-15; 1கொரி 9:17).

"எப்பாப்பிரோதீத்துவின் கையிலே பெற்றுக் கொண்டபடியால் நான் திருப்தியடைந்திருக்கிறேன்" - பிலிப்பியர் எப்பாப்பிரோதீத்துவின் மூலமாகப் பவுலுக்கு உதவிகளை அனுப்பினார்கள். அவர்களுடைய உதவி சுகந்தவாசனையாகவும் தேவனுக்குப் பிரியமான உகந்த பலியாகவும் இருக்கிறது (எபே 5:2)

வாசனை (odour) - ὀσμή - osmee - 3744

பெண்பால் பெயர்ச்சொல் - பரிமளம், வாசனை **(aroma)** (2கொரி 2:14

சுகந்தவாசனை (sweet smell) - εὐωδία - euoodia 2175

பெண்பால் பெயர்ச்சொல் - நற்கந்தமான சுகந்தவாசனை **(sweet perfume)** (2கொரி 2:15; எபே 5:2)

4 அதிகாரம்

4. தேவனுடைய பராமரிப்பின் வாக்குத்தத்தம்

பிலி 4:19 என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்

"என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" பிலிப்பியர் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருந்தார்கள் ஆகையினால் இவர்களுக்கு பவுல் இந்த ஆசீர்வாதமான வாக்குத்தத்த வசனத்தைக் கூறுகிறார் உண்மையுள்ள விசுவாசிகள் அனைவருக்குமே இந்த வாக்குத்தத்தம் சொந்தமானது. (பிலி 4:14-18)

5. முடிவுரையும் ஆசீர்வாதமும்

பிலி 4:20 நம்முடைய பிதாவாகிய தேவனானவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென்

பிலி 4:21 கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் யாவருக்கும் வாழ்த்துதல் சொல்லுங்கள் என்னோடிருக்கிற சகோதரர்கள் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்

பிலி 4:22 பரிசுத்தவான்கள் அனைவரும் விசேஷமாக இராயனுடைய அரமனையிலுள்ளவர்களும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்

பிலி 4:23 நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபை உங்களனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்

"இராயனுடைய அரமனையிலுள்ளவர்கள்" இக்காலத்தில் ரோமாபுரியில் நீரோ மன்னனாக இருந்தான் இவன் மிகவும் கொடியவன் ஆயினும் இவனுடைய குடும்பத்தாரில் சிலர் இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்திருந்தார்கள் அவர்கள் யார் என்னும் விவரம் நமக்குத் தெரியவில்லை. நீரோ மன்னனின் ராணி பாப்பேயா (Poppaea) மெய்யான தேவனை ஆராதனை செய்தாள் என்று யோசிபஸ் (Josephus) என்னும் திருச்சபை வரலாற்று ஆசிரியர் எழுதியிருக்கிறார்

கொலோசெயர் - முன்னுரை

காலமும் இடமும்

கி.பி. 64 ஆம் ஆண்டு பவுல் இந்த நிருபத்தை ரோமாபுரியிலிருந்து எழுதினார். தீகிக்கு மூலமாக, பவுல் இந்த நிருபத்தை எபேசியருக்கும் பிலேமோனுக்கும் அனுப்பினார்.

ஆசிரியர்

பவுல்

மையக்கருத்து

1. நியாயப்பிரமாணம், மார்க்கச் சடங்குகள், லௌகிக ஞானம் மாயமான தந்திரங்கள் ஆகியவற்றிலிருந்து விடுதலை
2. ஜீவியத்திலும் நடத்தையிலும் இயேசு கிறிஸ்துவோடு மெய்யான பூரண ஐக்கியம்
3. நாம் கிறிஸ்துவுடனேகூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்தவர்கள். கட்டளைகள், மார்க்கச் சடங்குகள், பண்டிகை நாட்கள், ஓய்வுநாட்கள் ஆகியவை மரித்தவருக்குப் பயனற்றவை
4. தேவனிடத்தில் விசுவாசம் வைப்பதன் மூலமாக நமது பரிசுத்தம் வெளிப்படுகிறது. (கொலோ 1:23; 2:6-7; 3:1-17)

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் 4

வசனங்கள் 95

கேள்வி 1

புதிய தீர்க்கதரிசனங்கள் 2

பொருளடக்கம்

I. முன்னுரை

1. ஆசிரியரும் வாழ்த்துரையும் (1:1-2)
2. கொலோசேயிலுள்ள கிறிஸ்தவர்களுக்காக தேவனுக்கு ஸ்தோத்திரம் (1:3-8)
3. கொலோசேயிலுள்ள கிறிஸ்தவர்களுக்காக ஜெபம் - கிருபையில் வளர்ச்சி பெற வேண்டும் (1:9-11)
4. தேவனுடைய கிரியையின் இரண்டு அம்சங்கள் (1:12-13)

II. கிறிஸ்துவின் உபதேசம்

1. கிறிஸ்துவின் மீட்கும் ஊழியம் (1:14)
2. கிறிஸ்து அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமானவர் (1:15)
3. கிறிஸ்துவின் சிருஷ்டிக்கும் கிரியை (1:16)
4. கிறிஸ்து எல்லாவற்றிற்கும் முந்தினவர் (1:17)
5. கிறிஸ்து ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர் (1:18-19)
6. கிறிஸ்துவின் ஒப்புரவாக்கும் ஊழியம் (1:20-22)

III. நடைமுறை உபதேசங்கள்

1. கிறிஸ்துவில் மீட்படைவதற்கு நிபந்தனை (1:23)
2. சபைக்காக பவுலின் ஊழியமும் பாடுகளும் (1:24-25)
3. உள்ளாக வாசம் செய்யும் கிறிஸ்துவின் இரகசியம் (1:26-27)
4. பவுலின் வல்லமையின் ஊழியம் (1:28-29)
5. சபைக்காக பவுலின் பாடுகளும் அதன் நோக்கமும் (2:1-3)
6. கிறிஸ்துவில் எவ்வாறு நிலைத்திருப்பது (2:4-7)
7. கிறிஸ்துவின் பரிபூரணத்தோடு லௌகிக ஞானத்தையும் மாயமான தந்திரத்தையும் சேர்க்கக் கூடாது (2:8-10)
8. தண்ணீருக்குள் ஞானஸ்நானமல்ல - கிறிஸ்துவிற்குள் ஞானஸ்நானம் - மீட்பின் இரகசியம் (2:11-13)

கொலோசெயர் – முன்னுரை

9 நியாயப்பிரமாணங்களையெல்லாம் கிறிஸ்து சிலுவையின்மேல் ஆணி அடித்து அலகைகளின்மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார் (2:14-17)

10 மாயமான காரியங்களுக்கும் பிசாசின் மார்க்கங்களுக்கும் எதிரான எச்சரிப்பு (2:18-19)

11 சத்தியத்திற்கு விரோதமாக இருக்கும் மார்க்க நடபடிகள் அனைத்திற்கும் விலகியிருக்க வேண்டும் (2:20-23)

2 எதை நாடவேண்டும் (3:1-3)

3 சபை எடுத்துக்கொள்ளப்படுதல் (3:4)

14 எதை அழித்துப்போட வேண்டும் (3:5-7)

15 எதைக் களைந்துபோட வேண்டும் (3:8-9)

16 எதைத் தரித்துக் கொள்ள வேண்டும் (3:10-14)

17 கிறிஸ்தவ ஜீவியத்திற்கும் ஆராதனைக்கும் ஏழு அம்ச புத்திமதி (3:15-17)

IV. விசுவாசிகளின் குடும்ப வாழ்வு

1 மனைவிகளின் கடமைகள் (3:18

2 புருஷரின் கடமைகள் (3:19

3. பிள்ளைகளின் கடமைகள் (3:20

4. பிதாக்களின் கடமைகள் (3:21

5. வேலைக்காரரின்கடமைகள் (3:22-25

6. எஜமான்களின் கடமைகள் (4:1

V. கடைசி புத்திமதிகள்

1 ஜெபிக்க வேண்டுமென்றும் விழித்திருக்க வேண்டுமென்றும் ஏழு அம்ச வேண்டுகோள் (4:2-6

2 கனிசேஷத்தில் இருந்து உடன் ஊழியர்களைப் பற்றிய காரியங்கள் (4:7-11)

3 சகோதரரிடமிருந்து வாழ்த்துக்கள் (4:12-14)

4 முடிவுரை (4:15-17)

5 வாழ்த்துரையும் ஆசீர்வாதமும் (4:18

கொலோசெயர் – தொகுப்புரை

1 அதிகாரம்

I. முன்னுரை

1. ஆசிரியரும் வாழ்த்துரையும்

கொலோ 1:1 தேவனுடைய சித்தத்தினாலே இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பவுலும் சகோதரனாகிய தீமோத்தேயும்

கொலோ 1:2 கொலோசெ பட்டணத்திலே கிறிஸ்துவுக்குள் பரிசுத்தவான்களும் விசுவாசிகளுமாயிருக்கிற சகோதரர்களுக்கு எழுதுகிறதாவது. நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

"தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பவுல்" - தேவனுடைய சித்தத்தினாலே பவுல் இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலன் ஆனான். பவுலின் அப்போஸ்தல அழைப்பிற்கும் மனுஷனுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. (அப 15:33, கலா 1:15-2:10)

"தீமோத்தேயு" (Timotheus, Timothy) - (2கொரி 1:1) ரோமாபுரியிலே தீமோத்தேயு பவுலோடுகூட இருந்தவன் (பிலி 2:19)

"பரிசுத்தவான்கள்" - மறுபடியும் பிறந்து இரட்சிக்கப்பட்டவர்கள் அனைவரும் பரிசுத்தவான்கள் ஆவர் (அப 9:13)

"கொலோசெ" (Colosse) - பிரிகியாவிலுள்ள (Phrygia) பட்டணம். லவோதிக்கேயாவிலிருந்து (Laodicea) ஒருசில மைல்கள் தூரத்தில் இருந்தது. இவ்விரு பட்டணங்களுமே காலத்தால் அழிந்துவிட்டன. சமீபகாலமாக புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் இவ்விரு பட்டணங்களையும் தேடிக் கண்டுபிடித்து வருகிறார்கள். பவுல் கொலோசெயருக்கு நிருபம் எழுதின ஒருசில வருஷங்களுக்குப் பின்பு இந்தப் பட்டணம் பூகம்பத்தினால் அழிந்துவிட்டதாக யூசிபியஸ் (Eusebius) என்னும் வரலாற்று ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

"நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும்" - பிதாவாகிய தேவனும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் தனித்தனியே வெவ்வேறு ஆளத்துவமுடையவர்கள் (1யோவான் 5:7, 2யோவான் 1:3, யோவான் 5:16)

2. கொலோசெயிலுள்ள கிறிஸ்தவர்களுக்காக தேவனுக்கு ஸ்தோத்திரம்

கொலோ 1:3 கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள உங்கள் விசுவாசத்தையும், பரிசுத்தவான்களெல்லார்மேலுமுள்ள உங்கள் அன்பையுங் குறித்து நாங்கள் கேள்விப்பட்டு,

கொலோ 1:4 பரலோகத்தில் உங்களுக்காக வைத்திருக்கிற நம்பிக்கையினிமித்தம்

கொலோ 1:5 நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரஞ்செலுத்தி, எப்பொழுதும் உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம்.

கொலோ 1:6 அந்த நம்பிக்கையைக் குறித்து நீங்கள் முன்னமே சத்தியவசனமாகிய சுவிசேஷத்தினாலே கேள்விப்பட்டீர்கள்; அந்த சுவிசேஷம் உலகமெங்கும் பரம்பிப் பலன் தருகிறதுபோல உங்களிடத்திலும் வந்து, நீங்கள் அதைக்கேட்டு, தேவகிருபையைச் சத்தியத்தின்படி அறிந்து கொண்ட நாள்முதல் அது உங்களுக்குள்ளும் பலன்தருகிறதாயிருக்கிறது.

கொலோ 1:7 அதை எங்களுக்குப் பிரியமான உடன் வேலையாளும் உங்களுக்காகக் கிறிஸ்துவின் உண்மையான ஊழியக்காரனுமாயிருக்கிற எப்பாப்பிராவினிடத்தில் நீங்கள் கற்றறிந்திருக்கிறீர்கள்.

கொலோ 1:8 ஆவிக்குள்ளான உங்கள் அன்பையும் அவனே எங்களுக்குத் தெரியப்படுத்தினான்.

"கிறிஸ்து இயேசுவின்மேலுள்ள உங்கள் விசுவாசத்தையும் பரிசுத்தவான்களெல்லார் மேலுமுள்ள உங்கள் அன்பையுங் குறித்து நாங்கள் கேள்விப்பட்டு" கொலோசெயர் 1:3 ஆவது வசனமும் எபே 1:15 ஆவது வசனமும் கருத்தாலும், வார்த்தைகளாலும் ஒன்றுபோல் உள்ளன

கொலோசெயர் – தொகுப்புரை

1 அதிகாரம்

கொலோசெயருடைய ஆசீர்வாதங்கள்

1 இயேசு கிறிஸ்துவின்மேல் விசுவாசம் வைத்திருந்தார்கள் (கொலோ 1:4)

2 பரிசுத்தவான்கள் எல்லார்மேலும் அன்பாக இருந்தார்கள் (கொலோ 1:4)

3 நித்திய ஜீவன் மீது நம்பிக்கை வைத்திருந்தார்கள் (கொலோ 1:5, தீத்து 1:2)

4 சுவிசேஷத்தைக் கேள்விப் பட்டிருந்தார்கள் (கொலோ 1:6)

5 அவர்கள் பலன் தந்தார்கள் (கொலோ 1:6)

6 தேவகிருபையைச் சத்தியத்தின்படி அறிந்து கொண்டார்கள் (கொலோ 1:6)

வைத்திருப்பது (laid up) - ἀπόκειμαι - apokeimai - 606

வினைச்சொல் வைத்திருப்பது (stored away) (லூக்கா 19:20; கொலோ 1:4, 2தீமோ 4:8; எபி 9:27)

"அந்த சுவிசேஷம் உலகமெங்கும் பரம்பிப் பலன் தருகிறதுபோல, உங்களிடத்திலும் வந்து" - உலகம் முழுவதும் பிரயாணம் பண்ணும் ஒருவருக்கு ஒப்பாக சுவிசேஷம் இங்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டிருக்கிறது. யூதேயாவில் ஆரம்பித்து சீரியா வழியாகப் பிரயாணம் செய்து, ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா ஆகிய தேசங்கள் வழியாகச் சுவிசேஷம் பிரயாணம் செய்து இப்போது கொலோசெ பட்டணத்திற்கு வந்திருக்கிறது. சுவிசேஷம் உலகம் முழுவதும் சென்று பலன் தந்திருக்கிறது. சுவிசேஷம் இன்னும் உலகின் பல பாகங்களுக்கும் பிரயாணம் செய்து பூமியில் பலனைத் தருகிறது. ஆயிரக்கணக்கான மொழிகளில் பரிசுத்த வேதாகமம் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. உலகமெங்கிலும் சுவிசேஷச் செய்தியானது பரவியுள்ளது.

"எப்பாப்பிரா" (Epaphras) - ரோமாபுரியில் பவுலோடு சிறையில் அடைக்கப்பட்டிருந்தவன். சுவிசேஷ ஊழியக்காரன். கொலோசெயிலுள்ள விசுவாசிகளில் ஒருவன் (கொலோ 4:12; பிலே 1:23)

3. கொலோசெயிலுள்ள கிறிஸ்தவர்களுக்காக ஜெபம் - கிருபையில் வளர்ச்சி பெற வேண்டும்

கொலோ 1:9 இதினிமித்தம் நாங்கள் அதைக் கேட்ட நாள்முதல் உங்களுக்காக இடைவிடாமல் ஜெபம் பண்ணுகிறோம். நீங்கள் எல்லா ஞானத்தோடும் ஆவிக்குரிய விவேகத்தோடும் அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும்,

கொலோ 1:10 சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும்,

கொலோ 1:11 சந்தோஷத்தோடே கூடிய எல்லாப் பொறுமையும் நீடிய சாந்தமும் உண்டாவதற்கு, மகிமையான அவருடைய வல்லமையின்படி எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும் உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம்.

பவுல் கொலோசெயருக்காக விண்ணப்பம் பண்ணும் காரியங்கள்

1 தேவனுடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்பட வேண்டும் (கொலோ 1:9)

2 எல்லா ஞானத்தோடும் நிரப்பப்பட வேண்டும். (கொலோ 1:9)

3 ஆவிக்குரிய விவேகத்தோடு இருக்க வேண்டும். (கொலோ 1:9)

4 கர்த்தருக்குப் பாத்திரராய் நடந்து கொள்ள வேண்டும். (கொலோ 1:10)

5 கர்த்தருக்குப் பிரியமுண்டாக நடந்து கொள்ள வேண்டும். (கொலோ 1:10)

1 அதிகாரம்

6 சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தரவேண்டும்

7 தேவனுடைய அறிவில் விருத்தியடைய வேண்டும்.

8 எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப் படவேண்டும். (கொலோ 1:11)

9 கர்த்தருடைய மகிமையான வல்லமையைப் பெற்றிருக்க வேண்டும்

10 எல்லாப்பொறுமையும் உடையவர்களாக இருக்க வேண்டும். (கொலோ 1:11)

11 எல்லா நீடிய சாந்தமும் உடையவர்களாக இருக்க வேண்டும் (கொலோ 1:11)

12 சந்தோஷத்தோடே இருக்க வேண்டும். (கொலோ 1:11)

4. தேவனுடைய கிரியையின் இரண்டு அம்சங்கள்

கொலோ 1:12 ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்திரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கினவரும்

கொலோ 1:13 இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்

"ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்திரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கினவர்" பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் நாம் பங்குபெறுவதற்கு இயேசு கிறிஸ்து நம்மைத் தகுதி உள்ளவர்களாக ஆக்கி இருக்கிறார் சாத்தானுடைய வல்லமையிலிருந்து விடுவிக்கப்பட்டு தேவனுடைய ராஜ்யத்தில் இடம் பெற்றிருக்கும் எல்லா விசுவாசிகளுக்கும் கவிசேஷங்களில் கூறப்பட்டிருக்கும் வாக்குத்தத்தங்கள் சொந்தமானவை (கொலோ 1:12-13; அப் 26:18 2கொரி 1:20 யோவான் 14:12-15)

விடுதலையாக்கு (translated) - μεθιστάνω methistanoo 3179

வினைச்சொல் - தள்ளு, வசப்படுத்து, பேர்த்தெடு, விடுதலையாக்கு (to transfer, exchange, remove), "translate" (கொலோ 1:13), "remove" (அப் 13:22 1கொரி 13:2), "put out of" (லூக்கா 16:4), "turn away" (அப் 19:26) சாத்தானிடமிருந்தும் அவனுடைய இருளின் அந்தகாரத்திலிருந்தும் இயேசுகிறிஸ்து நம்மை விடுதலையாக்கி இருக்கிறார் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக நமக்கு இரத்த மீட்பு உண்டாயிருக்கிறது (கொலோ 1:14)

II. கிறிஸ்துவின் உபதேசம்

1. கிறிஸ்துவின் மீட்கும் ஊழியம் - (வசனம் 20; 2:11-17, எபே 1:3-14; 2:14-22; எபி 1:1-12; 1யோவான் 5)

கொலோ 1:14 (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது.

"(குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது" (கொலோ 1:14=எபே 1:7, கொலோ 1:9-11= எபே 1:15-18; எபே 3:13-21)

2. கிறிஸ்து அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமானவர் - (எபி 1:3; யாக் 3:9)

கொலோ 1:15 அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்

சுரூபம் (image) εἰκών - eikoon - 1504

கொலோசெயர் – தொகுப்புரை

1 அதிகாரம்

பெண்பால் பெயர்ச்சொல் - சுரூபம் சாயல், நிழல், சொரூபம், ரூபம் (a figure, image, likeness). சரீரப பிரகாரமான வெளிப்படையான சுரூபம். (மத் 22:20; மாற்கு 12:16. லூக்கா 20:24; ரோமர் 1:23, 1கொரி 11:7; 1கொரி 15:49 2கொரி 4:4; கொலோ 1:15; எபி 10:1 வெளி 13:14-15; வெளி 14:9-11; வெளி 15:2; வெளி 16:2; வெளி 19:20 வெளி 20:4) ஆவிக்குரிய சுரூபத்தைக் குறிப்பிடுவதற்கு இந்த வார்த்தை மூன்று வசனங்களில பயன்படுத்தப படடிருக்கிறது. (ரோமர் 8:29; 2கொரி 3:18 கொலோ 3:10

"தேவன் ஆவியாயிருக்கிறார்" - தேவன் சூரியனோ சந்திரனோ நட்சத்திரங்களோ அல்ல அவர் கல்லோ உலோகமோ மரமோ மிருகமோ, மனுஷனோ அல்ல அவர் காற்றோ ஜலமோ அக்கினியோ அல்ல. அவர் ஆவியாயிருக்கிறார்

அவர் ஒரு நபர் அவருக்கு ஆவி. ஆத்துமா, சரீரம் ஆகியவை உள்ளது. மனுஷருக்கு எலும்புகளும், சதைகளும் இருப்பது போன்று. தேவனுக்கு இராது. மற்றபடி தேவன் மனுஷனைப் போல ஒரு நபராகவே இருக்கிறார் (யோபு 13:8; எபி 1:3 தேவனுக்கு ஆவிக்குரிய சரீரம் உள்ளது. (தானி 7:9-14; தானி 10:5-19) ரூபம் shape (யோவான் 5:37); சாயல (form) (பிலி 2:5-7); மனுஷனுடைய ரூபமும், சாயலும் உள்ளது. (image and likeness of a man) (ஆதி 1:26; ஆதி 9:6, எசே 1:26 28, 1தீமோ 3:9)

வேதாகமத்தில் தேவனுடைய சரீர உறுப்புக்களாக நாம் வாசிக்கும் காரியங்கள்

1 பின்பகுதிகள் (back parts) (யாத் 33:23

2 இருதயம் (heart) (ஆதி 6:6. ஆதி 8:21

3 கைகளும், விரல்களும் (hands and fingers) (சங் 8:3-6; எபி 1:10; வெளி 5:1 7)

4 வாய் (mouth) (எண் 12:8)

5 உதடுகளும், நாவும் (lips and tongue) (ஏசா 30:27)

6 பாதங்கள் (feet) (எசே 1:27 யாத் 24:10)

7 கண்கள் (eyes) (சங் 11:4; சங் 18:24, சங் 33:18)

8 காதுகள் (ears) (சங் 18:6)

9 தலைமுடி, தலை, முகம், கைகள் (hair, head, face, arms) (தானி 7:9-14; தானி 10:5-19 வெளி 5:1-7; வெளி 22:4-6

10 இடுப்பு (loins) (எசே 1:26-28 எசே 8:1-4)

தேவனுக்குச் சரீரப பிரசன்னம் உள்ளது (ஆதி 3:8 ஆதி 18:1-22) ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மற்ற நபர்கள் போவதுபோலவே போகிறார் (ஆதி 3:8 ஆதி 11:5; ஆதி 18:1-5,22 33 ஆதி 19:24 ஆதி 32:24-32; ஆதி 35:13 சக 14:5 தானி 7. 9-14; தீத்து 2:13)

தேவனிடம் உள்ள காரியங்கள்

1 சத்தம் (voice) (சங் 29, வெளி 10:3-4)

2 சுவாசம் (breath) (ஆதி 2:7

3 முகரூபம் (countenance) (சங் 11:7

தேவன் செய்யும் காரியங்கள்

1 வஸ்திரம் தரிக்கிறார் (He wears clothes) தானி 7:9 14. தானி 10:5-19)

2 போஜனம் பண்ணுகிறார் (eats) (ஆதி 18:1-8; யாத் 24:11

கொலோசெயர் – தொகுப்புரை

1 அதிகாரம்

3 ஓய்வு எடுக்கிறார் (rests) (ஆதி 2:1-4; எபி 4:4)

4 பரலோகத்தில் வாசம்பண்ணுகிறார் (dwells in a mansion and in a city located on a material planet called Heaven) (யோவான் 14:1-3; எபி 11:10-16, எபி 13:14, வெளி 21)

5 சிங்காசனத்தில் அமர்ந்திருக்கிறார் (sits on a throne) (ஏசா 6; தானி 7:9-14; வெளி 4:1-5; வெளி 22:3-6)

6 நடக்கிறார் (walks) (ஆதி 3:8 ஆதி 18:1-8,22,33)

7 ஏறிப்போகிறார் (rides) (சங் 18:10 சங் 68:17; சங் 104:3, எசே 1)

தேவனுடைய உணர்வுகள்

1 துக்கம் (grief) (ஆதி 6:6)

2 கோபம் (anger) (1இராஜா 11:9)

3 மனம்வருந்துதல் (repentance) ஆதி 6:6

4. வைராக்கியம் (jealousy) (யாத் 20:5)

5. வெறுப்பு (hate) (நீதி 6:16)

6 அன்பு (love) (யோவான் 3:16)

7 பரிதாபம் (pity) (சங் 103:13)

8 ஐக்கியம் (fellowship) (1யோவான் 1:3-7

9 சந்தோஷம் (pleasure and delight) (சங் 147:10

10 உணர்வுகள் (other soul passions like other beings) (கலா 5:22 23)

தேவனுடைய ஆள்தத்துவப் பண்புகள்

1 தனிப்பட்ட ஆவி (personal spirit) (சங் 143:10; ஏசா 30:1)

2 சிந்தை (mind) (ரோமர் 11:34)

3 ஞானம் (intelligence) (ஆதி 1:26 ரோமர் 11:33)

4 சித்தம் (will) (ரோமர் 8:27 ரோமர் 9:19)

5 வல்லமை (power) (எபே 1:19 எபே 3:7,20; எபி 1:3

6. சத்தியம் (truth) (சங் 91:4)

7 விசுவாசமும், நம்பிக்கையும் (faith and hope) (ரோமர் 12:3 1கொரி 13:13)

8 நீதி (righteousness) (சங் 45:4

9 உண்மை (faithfulness) (1கொரி 10:13)

10 அறிவும், ஞானமும் (knowledge and wisdom) (ஏசா 11:2 1தீமோ 1:17)

11 சிந்தனை (reason) (ஏசா 1:18

12 பகுத்தறிவு (discernment) (எபி 4:12)

13. மாறாத தன்மை (immutability) (எபி 6:17)

தேவன் தம்மைச் சரீரப்பிரகாரமாகப் பல இடங்களில் வெளிப்படுத்தியிருக்கிறார் (ஆதி 18; ஆதி 32:24-30; யாத் 24:9-11, யோசு 5:13-15; ஏசா 6; தானி 7:9-13, எசே 1; அப் 7:56-59; வெளி 4-5) மனுஷன் தேவனுடைய ரூபமாகவும், தேவனுடைய சாயலாகவும் இருக்கிறான் தேவனைக் காணமுடியாது அவருடைய ரூபமாகவும், சாயலாகவும் இருக்கும் மனுஷன் மூலமாக தேவனை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். (ரோமர் 1:20)

கொலோசெயர் - தொகுப்புரை

1 அதிகாரம்

அதரிசனம் (invisible) - ἀόρατος - aoratos - 517

பொருள் - காணப்படாத, அதரிசனமான கொலோ 1:15-16; ரோமர் 1:20 1தீமோ 1:17; எபி 11:27) ஒரு பொருள் வெகு தொலைவில் இருக்கும்போது அது நமது பார்வைக்குத் தெரியாது. உயர்ந்த மலையிலிருந்து பார்த்தாலும் 30 மைலுக்கு அப்பாலுள்ள பட்டணம் நமது கண்களுக்குத் தெரிவதில்லை. இவ்வாறு காணமுடியாமல் இருப்பது அதரிசனம் எனப்படுகிறது. அதரிசனமான தேவன் உண்மையிலேயே இருக்கிறார் அவரைக் கிட்டிச் சேரும்போது அவரைக் காணமுடியும்

தேவனைக் காணமுடியும் என்பதற்குச் சான்றுகள்

1 தேவன் ஒரு சரீரத்தினால் அறியப்பட்டிருக்கிறார் (யோவான் 4:24)

2 தேவனுடைய சாயலாக மனுஷன் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான் (ஆதி 1:26-27; ஆதி 9:6)

3 தேவன் ஆபிரகாமோடு போஜனம் பண்ணினார் (ஆதி 18:8)

4 யாக்கோபு தேவனோடு போராடினான் (ஆதி 32:24)

5 எழுபத்தி நான்கு பேர் தேவனோடு போஜனம் பண்ணினார்கள் யாத் 24:9-11

6 மோசே தேவனை முகமுகமாகத் தரிசித்தான் (யாத் 33:11; 18-23 1தீமோ 6:16

7 யோசுவாவும், இஸ்ரவேல் அனைவரும் தேவனைக் கண்டார்கள் (யோசு 5:13-15

8 கிதியோன் தேவனைத் தரிசித்தான் (நியா 6:11-23

9 சிம்சோனின் பெற்றோர் தேவனைத் தரிசித்தார்கள். (நியா 13:3-23)

10 தாவீது தேவனைத் தரிசித்தான் (1நாளா 21:16-17)

11 யோபு தேவனைத் தரிசித்தான் (யோபு 42:5

12 ஏசாயா தேவனைத் தரிசித்து அவரை விளக்கி இருக்கிறார் (ஏசா 6

13 ஆமோஸ் கர்த்தரைத் தரிசித்தான் (ஆமோ 9:1)

14 எசேக்கியேல் தேவனை விளக்கிக் கூறியிருக்கிறார் (எசே 1:26-28 எசே 10:20; எசே 40:3=எசே 43:7 எசே 43:7; எசே 47:1-6)

15 தானியேல் தேவனைத் தரிசித்து அவருடைய வஸ்திரங்கள், சரீரம், முடி ஆகியவற்றை விளக்கிக் கூறியிருக்கிறார் (தானி 7:9-14; தானி 10:5-6)

16 ஸ்தேவான் தேவனையும் கிறிஸ்துவையும் தரிசித்தான் (அப் 7:56

17 யோவான் தேவனை விளக்கிக் கூறியிருக்கிறார் (வெளி 4:2-5 வெளி 5:1-7)

18 எல்லோரும் தேவனைத் தரிசிப்போம் (வெளி 21:3-4 வெளி 22:4

முந்தின பேறு (Firstborn) - πρωτότοκος - prototokos - 4416

பொருள் - முதற்பேறான, முதற்பிறந்த (கொலோ 1:15,18; மத் 1:25; லூக்கா 2:7; ரோமர் 8:29; எபி 11:28; எபி 12:23) (firstbegotten) (எபி 1:6; வெளி 1:5) இயேசு கிறிஸ்து மரியாளின் வயிற்றில் முதலாவதாகப் பிறந்தவர் (மத் 1:25; லூக்கா 2:7) எகிப்தியரின் தலைச்சன் பிள்ளைகளைக் குறிப்பதற்கு இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது (எபி 11:28) இந்த வார்த்தை பொதுவாக குடும்பத்தில் முதலாவது பிறப்பவரையும் தேவனுடைய குடும்பத்தில் முந்தினபேறுமாக இருக்கிற இயேசு கிறிஸ்துவையும் குறிக்கும். குமாரத்துவம் பொதுவாக இயேசு கிறிஸ்துவின் மானிடத் தன்மையையே விளக்கும். இந்த வார்த்தை அவருடைய தெய்வீக தன்மையை விளக்காது. (அப் 13:33

கொலோசெயர் – தொகுப்புரை

1 அதிகாரம்

முந்தினபேறு என்னும் வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கும் விதம்

1 பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமை யோவான் 1:14

2 பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார் யோவான் 1:18

3 தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ (யோவான் 3:16; 1யோவான் 4:9)

4 தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராத படியினால் (யோவான் 3:18)

5 இன்று நான் உன்னை ஜெநிப்பித்தேன் (சங் 2:7; அப் 13:33; எபி 1:5 எபி 5:5)

6 நான் அவருக்குப் பிதாவாய் இருப்பேன் அவர் எனக்குக் குமாரனாய் இருப்பார் (எபி 1:5)

முந்தின பேறு என்னும் வாக்கியம் இயேசுவைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப் பட்டிருக்கும் விதம்

1 சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர் (கொலோ 1:15)

2 மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர் (கொலோ 1:18)

3 அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவர் (ரோமர் 8:29)

4 பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபை (எபி 12:23)

5 தமது முதற்பேறானவர் (எபி 1:5-6)

6 மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவர் (வெளி 1:5)

3. கிறிஸ்துவின் சிருஷ்டிக்கும் கிரியை - (யோவான் 1:3, எபே 3:9, எபி 1:2-3)

கொலோ 1:16 ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது.

"அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது" - இயேசு கிறிஸ்து தேவனுடைய ஒரேபேறான குமாரன் அவர் நித்திய காலமாகவே தேவத்துவத்தில் சம அந்தஸ்தோடு இருக்கிறவர் (ஏசா 7:14 ஏசா 9:6-7; மீகா 5:2; யோவான் 1:1-2; எபி 1:8 வெளி 1:8-11) தேவனுடைய முதற்பேறானவர் என்பது இயேசு கிறிஸ்துவின் மனுஷத்துவத்தைக்குறிக்கும் வார்த்தையாகும் (அப் 13:33) இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் மனுஷனாக அவதரிப்பதற்கு முன்பாகவே இந்த உலகம் சிருஷ்டிக்கப்படும் போது அவர் சிருஷ்டியின் திட்டத்தில் கிரியை நடப்பித்தவர் (ஏசா 9:6 யோவான் 1:3; எபே 3:9; எபி 1:3)

"பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளும்" - பூமியில் உள்ளவைகளைப்போலவே பரலோகத்தில் உள்ளவைகளும் இருக்கும் அங்கு காணக்கூடிய பல பொருட்கள் இருக்கும் (ஆதி 1:1 நீதி 8:27)

"காணப்படாதவைகள்" சிருஷ்டிக்கப் பட்டிருக்கிற அனைத்தும் [redacted] கூடியவைகளே ஆயினும் ஒரு சில சிருஷ்டிகள் காணப்படாதவைகளாக இருக்கின்றன மானிட சரீரத்திற்கு ஒரு வரையறை உண்டு அந்த வரையறைக்குட் பட்டுத்தான் மனுஷனுடைய சரீரம் கிரியை நடப்பிக்கும். பூட்டிய கதவின் வழியாக இயேசு கிறிஸ்து உள்ளே நுழைந்தது நமது மானிட சரீரத்தின் வரையறைக்கு அப்பாற்பட்ட காரியமாகும் (யோவான் 20:19, லூக்கா24:31,35-43) மானிட வரையறைக்குட் பட்டவர்களால் காணக் கூடாத காரியங்கள் மானிட வரையறைக்குட்படாதவர்களால் காணக்கூடியதாக இருக்கலாம். (யோவான் 4:24)

கொலோசெயர் – தொகுப்புரை

1 அதிகாரம்

"சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது" - இதுவே எல்லா சிருஷ்டிப்புக்களின் பிரதான முடிவாகும். (கொலோ 1:16-18; எபே 1:9-11 வெளி 4:11; வெளி 5:13-14)

4. கிறிஸ்து எல்லாவற்றிற்கும் முந்தினவர் - (மீகா 5:2; யோவான் 1:1-2

கொலோ 1:17 அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர் எல்லாம் அவருக்குள்ளே நிலைநிற்கிறது.

"அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர்" - அவர் நித்தியமானவர் (ஏசா 7:14; ஏசா 9:6-7; மீகா 5:1-2; யோவான் 1:1-2; எபி 1:8 வெளி 1:8-11 சங் 90 2

"எல்லாம் அவருக்குள்ளே நிலைநிற்கிறது" - இயேசு கிறிஸ்து எல்லாவற்றையும் சிருஷ்டித்ததோடு மட்டுமல்லாமல் அவரே எல்லாவற்றையும் நிலை நிறுத்துகிறார் (கொலோ 1:16, எபி 1:3

5. கிறிஸ்து ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர் - (வசனம் 24, எபே 1:20-23, 1பேதுரு 3:22)

கொலோ 1:18 அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர் எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்

கொலோ 1:19 சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும்.

"அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்" - (மத் 16:18; 1கொரி 12:12 13,27, எபே 1:22, எபே 4:15; எபே 5:23-33, கொலோ 1:18,24

"சபை" - சபையும், கிறிஸ்துவின் சரீரமும் ஒரே பொருளைக் குறிக்கும் வார்த்தையாகும். "சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்" (எபே 1:22 23); "அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்" (கொலோ 1:18); "அவருடைய சரீரமாகிய சபைக்காக" (கொலோ 1:24

"அவரே ஆதியும்" - (யோவான் 1:1-2 வெளி 1:8-11; வெளி 2:8; வெளி 3:14

"மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்" - (கொலோ 1:15 வெளி 1:5; 1கொரி 15:20)

"எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி" - (எபே 1:20-23; பிலி 2:9-11; கொலோ 1:18-19 கொலோ 2:9; எபி 1:3, மத் 28:18 1பேதுரு 3:22)

6. கிறிஸ்துவின் ஒப்புரவாக்கும் ஊழியம் - (1தீமோ 2:4; 2கொரி 5:14-21)

கொலோ 1:20 அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று.

கொலோ 1:21 முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும் பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாகவும் அவருடைய மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்

கொலோ 1:22 நீங்கள் கேட்ட சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையைவிட்டு அசையாமல், ஸ்திரமாயும் உறுதியாயும் விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால் அப்படியாகும்.

"அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கினார்" - (மத் 26:28, எபே 1:7, 1பேதுரு 2:24)

கொலோசெயர் – தொகுப்புரை

1 அதிகாரம்

"யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும்" – (ரோமர் 5:10, 2கொரி 5:14-21; எபே 1:10; எபே 2:16 கொலோ 1:20-22; எபி 2:1)

"பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் - ஆயிரம் வருஷ அரசாட்சியில் இது நிறைவு பெறும் (1கொரி 15:24-28; எபே 1:10; வெளி 20)

"முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும்" - இது ஒருகுறிப்பிட்ட புறஜாதியாரைக் குறிக்கும் வாக்கியமாகும் எபே 2:11-18; எபே 4:17-19

"அவருடைய மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்" - (மத் 26:26-28; ரோமர் 7:4; 1பேதுரு 2:24)

"பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாகவும்" - இதுவே நாம் இரட்சிக்கப படுவதின் நோக்கமாகும் (கொலோ 1:22,28, எபே 1:4; 1தெச 3:13 தெச 5:23, எபி 12:14

"விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால்" - இந்த வாக்கியத்தில் கூறப்பட்டிருக்கும் - "ஆல்" என்னும் வார்த்தை ஒரு நிபந்தனையைக் குறிக்கிறது. வேதாகமத்தில் இதுபோன்று 1522 நிபந்தனைச் சொற்கள் உள்ளன (உபா 8:19 எசே 33:13,18 யோவான் 8:31-36; யோவான் 15:6,10,14, ரோமர் 8:12-13; ரோமர் 11:23; 1கொரி 3:17, 1கொரி 15:2; கலா 6:1; 1தெச 3:8, 2தீமோ 2:11-13,21; எபி 3:6,12-14; எபி 6:4-9, எபி 10:26-39; 2பேதுரு 1:4-10, 2பேதுரு 2:20-22, 1யோவான் 1:7)

கொலோ 1:22 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நிபந்தனைகள்

1 சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையைவிட்டு அசையாமல் இருக்க வேண்டும்.

2 விசுவாசத்தில் நாம் ஸ்திரமாய் இருக்க வேண்டும்.

3 விசுவாசத்தில் நாம் உறுதியாய் இருக்க வேண்டும்.

4 விசுவாசத்திலே நிலைத்திருக்க வேண்டும்.

"சுவிசேஷத்தினாலஉண்டாகும் நம்பிக்கை" (hope of the gospel) - நித்திய ஜீவனின் நம்பிக்கை. (அப 23:6; ரோமர் 8:21-25; கொலோ 1:27; தீத்து 1:2; தீத்து 2:13 தீத்து 3:7; எபி 3:6; 1பேதுரு 1:3-13)

III. நடைமுறை உபதேசங்கள் - (கொலோ 1:21-3:17)

1. கிறிஸ்துவில் மீட்படைவதற்கு நிபந்தனை - (எபி 3:6; 12-14; 4:11; 6:11-12; 1பேதுரு 1:5; 2பேதுரு 1:5-11)

கொலோ 1:23 அந்தச் சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது; அதற்கென்றே பவுலாகிய நான ஊழியக்காரனானேன்

"வானத்தின கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும்" - சுவிசேஷம் எந்தவிதமான பாரபட்சமும் இல்லாமல சகலசிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. ஆயினும் இன்னும் அநேகா இந்தச சுவிசேஷத்தைக் கேள்விப்படவில்லை (லூக்கா 2:1)

2. சபைக்காக பவுலின் ஊழியமும் பாடுகளும் - (1கொரி 4:9-13, 2கொரி 4:8-18; 6:3-10, 11:23-27

கொலோ 1:24 இப்பொழுது நான உங்கள் நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன

கொலோ 1:25 ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து இப்பொழுது அவருடைய பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியமாகிய தேவவசனத்தைப் பூரணமாய்த் தெரியப்படுத்துகிறதற்கு

கொலோசெயர் - தொகுப்புரை

1 அதிகாரம்

"கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்" - நம்முடைய பாவங்களைப் போக்குவதற்காக நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் பலபாடுகளை அனுபவித்தார். அவர் அனுபவித்த பாடுகளில் நாம் பங்குபெற முடியாது. ஆனாலும் அவருடைய சத்தியத்திற்காகவும், சபைக்காகவும் பாடுகள் அனுபவிக்க வேண்டிய சூழ்நிலைகள் நமக்கு வரும்போது நாம் அவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டும். (ரோமர் 8:18; 2தீமோ 3:12)

"ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து இப்பொழுது அவருடைய பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியம்" - சுவிசேஷத்தின் சிலாக்கியங்களில் யூதர்கள் பங்குபெறுவதைப் போன்று புறஜாதியாரும் பங்குபெறுவார்கள். சபையில் யூதருக்குக் கிடைக்கும் ஆசீர்வாதம் புறஜாதியாருக்கும் கிடைக்கும். (எபே 2:14-22; எபே 3:1-7 கொரி 12:13 புறஜாதியாரும் கிறிஸ்துவில் பங்குபெறுவார்கள் (கொலோ 1:27

"தேவ வசனத்தைப் பூரணமாய்த் தெரியப்படுத்துகிறதற்கு" - சுவிசேஷத்தை அதன் பரிபூரணத்தில் பிரசங்கம் பண்ணுவதற்கு

3. உள்ளாக வாசம் செய்யும் கிறிஸ்துவின் இரகசியம் - (ரோமர் 8:10, 2கொரி 5:17)

கொலோ 1:26 உங்கள் பொருட்டு தேவனால் எனக்கு அளிக்கப்பட்ட உத்தியோகத்தின்படியே நான் அந்தச் சபைக்கு ஊழியக்காரனானேன்

கொலோ 1:27 புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார். கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்.

"உங்கள் பொருட்டு தேவனால் எனக்கு அளிக்கப்பட்ட உத்தியோகம்" - (எபே 1:10)

கிறிஸ்துவைப் பற்றிய சத்தியங்கள்

1 இராஜ்யத்தின் தலைவராக இருக்கிறவர் (கொலோ 1:13; வெளி 20

2 மீட்பர் (கொலோ 1:14 மத் 26:28 கலா 4:5)

3 அதரிசனமான தேவனுடைய தற்சுரூபம் (கொலோ 1:15)

4 சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர் (கொலோ 1:16)

5 சகலத்தையும் சிருஷ்டித்தவர் (கொலோ 1:16

6 நித்தியமானவர் (கொலோ 1:17 மீகா 5:2)

7 சகலத்தையும் நிலைநிறுத்துகிறவர் (கொலோ 1:17, எபி 1:3)

8 சபையாகிய சரீரத்திற்கு தலையானவர் (கொலோ 1:18,24; எபே 5

9 எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கிறவர் (கொலோ 1:18)

10 மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர் (கொலோ 1:18

11 அவரே ஆதியானவர் (கொலோ 1:18-19; கொலோ 2:9)

12 தேவனுடைய பரிபூரணமானவர் (கொலோ 1:19; கொலோ 2:9

13 தேவனுக்கும் மனுஷனுக்கும் மத்தியஸ்தராக இருக்கிறவர் (கொலோ 1:20-22; 2கொரி 5:14-21 1தீமோ 2:4-6)

14 பரிசுத்தவான்களுக்குள் இருக்கிறவர் (கொலோ 1:27; லூக்கா 22:3

கொலோசெயர் – தொகுப்புரை

1 அதிகாரம்

4. பவுலின் வல்லமையின் ஊழியம் - (ரோமர் 1:1 15:18-29 அப் 19:11)

கொலோ 1:28 எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம்

கொலோ 1:29 அதற்காக நான் எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன்

"கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவன்" - (பிலி 3:12,15)

"அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன்" - கிறிஸ்துவிற்குள் ஒவ்வொருவரையும் தேறினவனாக நிறுத்தும்படிக்கு பவுல் பிரயாசப்படுகிறார் தேவன் தனக்குக் கொடுத்திருக்கும் தாலந்து அனைத்தையும் பவுல் இதற்காகவே பயன்படுத்துகிறார் (கொலோ 1:28

"வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற" தெய்வீக வல்லமை (Power) எபே 1:19, ரோமர் 15:29)

2 அதிகாரம்

5. சபைக்காக பவுலின் பாடுகளும் அதன் நோக்கமும்

கொலோ 2:1 உங்களுக்காகவும் லவோதிக்கேயாவிலிருக்கிறவர்களுக்காகவும், சரீரத்தில் என் முகத்தைக் காணாதிருக்கிற மற்றெல்லாருக்காகவும் மிகுந்த போராட்டம் எனக்கு உண்டென்று நீங்கள் அறிய விரும்புகிறேன்.

கொலோ 2:2 அவர்களுடைய இருதயங்கள் தேற்றப்பட்டு அவர்கள் அன்பினால் இணைக்கப்பட்டு, பிதாவாகிய தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் உரிய இரகசியத்தை அறிந்து கொள்ளுகிற உணர்வின் பூரண நிச்சயத்தினுடைய எல்லா ஐசுவரியத்திற்கும் உரியவர்களாக வேண்டுமென்றே இப்படி விரும்புகிறேன்.

கொலோ 2:3 அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது.

"லவோதிக்கேயா" (Laodicea) கொலோசெக்கு அருகிலுள்ள பட்டணம். பிரிகியாவில் உள்ளது.

"சரீரத்தில் என் முகத்தைக் காணாதிருக்கிற மற்றெல்லாருக்காகவும்" இந்த வாக்கியத்தினால் அப்போஸ்தலர் பவுல் கொலோசெ பட்டணத்திற்கோ அல்லது லவோதிக்கேயா பட்டணத்திற்கோ செல்லவில்லை என்று முடிவு செய்துவிடக் கூடாது. பவுல் இந்த பட்டணத்தில் ஊழியம் செய்து அங்கிருந்து வெளியேறிய பின்பு ஏராளமானோர் இரட்சிக்கப்பட்டார்கள். அவர்களுடைய முகத்தைப் பவுல் காணவில்லை. புதிய விசுவாசிகளைப் பற்றி இந்த வாக்கியம் விளக்குகிறது.

அவர்களுக்கு நடைபெற வேண்டுமென்று பவுல் விரும்பும் காரியங்கள்

1 அவர்களுடைய இருதயங்கள் தேற்றப்பட வேண்டும்.

2 அவர்கள் அன்பினால் இணைக்கப்பட வேண்டும்.

3 பூரண அறிவையும் பூரண நிச்சயத்தையும் அவர்கள் பெற்றிருக்க வேண்டும்.

4 தேவனுக்குரிய இரகசியத்தை அவர்கள் அறிந்து கொள்ளவேண்டும்.

5. பிதாவுக்குரிய இரகசியத்தை அவர்கள் அறிந்து கொள்ளவேண்டும்.

6 கிறிஸ்துவுக்குரிய இரகசியத்தை அவர்கள் அறிந்து கொள்ளவேண்டும்

பூரணநிச்சயம் (full assurance) - πληροφορία - pleerophoria - 4136

பெண்பால் பெயர்ச்சொல் - முழுநிச்சயம், பூரணநிச்சயம்

நாம் பூரண நிச்சயம் பெற்றிருக்க வேண்டிய காரியங்கள்

1 அறிந்து கொள்ளுகிற உணர்வு (கொலோ 2:2)

2 சுவிசேஷம் (1தெச 1:5)

3. நம்பிக்கை (எபி 6:11)

4. விசுவாசம் (எபி 10:22

"பிதாவாகிய தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் உரிய இரகசியம்" இந்த வாக்கியம் சுவிசேஷத்தின் இரகசியங்களைக் குறிப்பிடுகிறது. தேவனாலும் கிறிஸ்துவினாலும் இந்த இரகசியம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. (கொலோ 1:26-27; கொலோ 4:3 மத் 13:11 ரோமா 16:25, 1கொரி 2:7 1கொரி 4:1; எபே 1:9; எபே 3:1-9 எபே 5:32, எபே 6:19; 1தீமோ 3:9,16)

"அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது" - இந்த வசனத்தில் "அவருக்குள்" "in whom" என்னும் வாக்கியம் "அதற்குள்" "in which" என்றிருக்க வேண்டும். இது கொலோ 2:2 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் இரகசியங்களைக் குறிக்கும். சுவிசேஷத்தின் இந்த இரகசியங்களில் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது (ரோமர் 11:33

2 அதிகாரம்

6. கிறிஸ்துவில் எவ்வாறு நிலைத்திருப்பது - (2கொரி 10:4-5; கலா 5:16-26; எபே 6:10-18)

கொலோ 2:4 ஒருவனும் நயவசனிப்பினாலே உங்களை வஞ்சியாதபடிக்கு இதைச் சொல்லுகிறேன்.

கொலோ 2:5 சரீரத்தின்படி நான் தூரமாயிருந்தும், ஆவியின்படி உங்களுடனே கூட இருந்து, உங்கள் ஒழுங்கையும், கிறிஸ்துவின் மேலுள்ள உங்கள் விசுவாசத்தின் உறுதியையும் பார்த்துச் சந்தோஷப்படுகிறேன்.

கொலோ 2:6 ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு,

கொலோ 2:7 நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக.

வஞ்சித்தல் (beguile) - παραλογίζομαι - paralogizomai - 3884

வினைச்சொல் - வஞ்சி (deceive). (கொலோ 2:4, யாக் 1:22) சுவிசேஷத்திற்கு எதிரான காரியங்களை வார்த்தை நயத்தோடு கூறி ஜனங்களை வஞ்சிப்பது.

"சரீரத்தின்படி நான் தூரமாயிருந்தும் ஆவியின்படி உங்களுடனே கூட இருந்து" - கொலோசெ பட்டணத்திலுள்ள விசுவாசிகளுக்குப் பவுல் ஓர் அந்நியர் அல்ல. கொலோசெ சபை சகல ஒழுங்குகளோடும் ஆரோக்கியமான உபதேசங்களோடும் கிறிஸ்துவில் விசுவாசத்தோடும், ஆவிக்குரிய ரீதியாக வளர்ச்சி பெற்றிருந்தது.

"நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே" - (கொலோ 2:6-7) ஒருவர் இரட்சிக்கப்படும் போது அவர் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாகிறார். அவர் இயேசு கிறிஸ்துவின்மேல் கட்டப்பட்டு அவருக்குள் நடந்து கொள்கிறார். அவர் விசுவாசத்தில் உறுதிப்பட்டு ஸ்தோத்திரத்தோடே அதில் பெருகுகிறார்.

விசுவாசிகள் செய்ய வேண்டிய [redacted]

1. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டபடியே நடந்து கொள்ள வேண்டும். (கொலோ 2:6)
2. கிறிஸ்துவிற்குள் வேர்கொண்டவர்களாக இருக்க வேண்டும். (கொலோ 2:7)
3. கிறிஸ்துவின்மேல் கட்டப்பட்டவர்களாக இருக்க வேண்டும். (கொலோ 2:7)
4. விசுவாசத்தில் உறுதிப்பட்டிருக்க வேண்டும். (கொலோ 2:7)
5. விசுவாசத்தில் பெருக வேண்டும். (கொலோ 2:7)
6. விசுவாசத்தில் சந்தோஷமாக இருக்க வேண்டும். (கொலோ 2:7)
7. வஞ்சனையைக் குறித்து எச்சரிப்போடு இருக்க வேண்டும். (கொலோ 2:4,8, 18-19)
8. போஜனத்தைக் குறித்து ஒருவனும் குற்றப்படுத்தக்கூடாது. (கொலோ 2:16)
9. பானத்தைக் குறித்து ஒருவனும் குற்றப்படுத்தக்கூடாது. (கொலோ 2:16)
10. பண்டிகைநாளையும், மாதப்பிறப்பையும், ஓய்வுநாட்களையும் குறித்து ஒருவனும் குற்றப்படுத்தக்கூடாது. (கொலோ 2:16)
11. உலகத்தின் வழிபாடுகளுக்கும், அதன் பாவமானவழிகளுக்கும் மரித்தவர்களாக இருக்க வேண்டும். (கொலோ 2:20-23; 1யோவான் 2:15-17, ரோமர் 12:1-2; யாக் 4:4)
12. மேலானவைகளைத் தேட வேண்டும். (கொலோ 3:1)

2 அதிகாரம்

13 மேலானவைகளை நாட வேண்டும். கொலோ 3:2

14 பாவங்களை உண்டுபண்ணுகிற அவயவங்களை அழித்துப் போட வேண்டும். (கொலோ 3:5)

15 பழைய மனுஷனைக் களைந்துபோட வேண்டும். (கொலோ 3:9)

16 ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருக்க வேண்டும். (கொலோ 3:9)

17 புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ள வேண்டும். (கொலோ 3:10-12)

18 ஒருவரையொருவர் தாங்க வேண்டும். (கொலோ 3:13)

19 ஒருவருக்கொருவர் மன்னிக்க வேண்டும். (கொலோ 3:13)

20 பூரண சற்குணத்தின் கட்டாகிய தெய்வீக அன்பைத் தரித்துக் கொள்ள வேண்டும். (கொலோ 3:14)

21 தேவ சமாதானம் இருதயங்களை ஆளுகை செய்ய வேண்டும் கொலோ 3:15

22 நன்றி அறிதல் உள்ளவர்களாக இருக்க வேண்டும். (கொலோ 3:15)

23 கிறிஸ்துவின் வசனம் விசுவாசிகளுக்குள் வாசம்பண்ண வேண்டும். கொலோ 3:16)

24. ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லிக் கொள்ள வேண்டும். (கொலோ 3:16

25 இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாட வேண்டும். (கொலோ 3:16)

26 எதைச் செய்தாலும் அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்ய வேண்டும். (கொலோ 3:17

27 பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரிக்க வேண்டும். (கொலோ 3:17)

28 இடைவிடாமல் ஜெபம் பண்ண வேண்டும். (கொலோ 4:2)

29 ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருக்க வேண்டும். (கொலோ 4:2)

30 ஞானமாக நடந்து கொள்ள வேண்டும் (கொலோ 4:5)

31 காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ள வேண்டும். (கொலோ 4:5

32 விசுவாசிகளுடைய வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயும் இருக்க வேண்டும் (கொலோ 4:6)

7. கிறிஸ்துவின் பரிபூரணத்தோடு [redacted] ஞானத்தையும் [redacted] தந்திரத்தையும் சேர்க்கக் கூடாது

கொலோ 2:8 லௌகிக ஞானத்தினாலும் மாயமான தந்திரத்தினாலும் ஒருவனும் உங்களைக் கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் அது மனுஷருடைய பாரம்பரியத்தையும் உலக வழிபாடுகளையும் பற்றினது கிறிஸ்துவைப் பற்றினதல்ல

கொலோ 2:9 ஏனென்றால் தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது.

கொலோ 2:10 மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரண முள்ளவர்களாயிருக்கிறீர்கள்

கொள்ளை கொண்டுபோதல் (spoil)

συλαγωγέω - sylagoogeoo - 4812

கொலோசெயர் – தொகுப்புரை

2 அதிகாரம்

வினைச்சொல் – கொள்ளை கொண்டுபோ (to carry off as booty or plunder; to rob and despoil) – விசுவாசிகளுக்கு இப்படிப்பட்ட எச்சரிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. விசுவாசிகளிடமிருந்து கிறிஸ்துவையும், அவருடைய ஆசீர்வாதங்களையும்கொள்ளையாகக் கொண்டுபோகப்படும் ஆகையினால் ஒவ்வொரு விசுவாசியும் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும். (யோவான் 10:28-29; ரோமர் 8:35-39)

ஞானிகள் விசுவாசிகளைக் கொள்ளையாகக் கொண்டுபோகும் வழிகள்

1. லௌகிக ஞானம். (கொலோ 2:8)
2. மாயமான தந்திரம் (கொலோ 2:4,8,18-19)
3. மனுஷர்களின் பாரம்பரிய நியாயம் (கொலோ 2:8)
4. உலகவழிபாடுகள் (கொலோ 2:8,14-23; கலா 4:3)
5. விருத்தசேதனம் (கொலோ 2:11-13; அப் 15:1; ரோமர் 4:9-16; கலா 5:1-11)
6. மோசேயின் நியாயப்பிரமாணம் (கொலோ 2:14-17)
7. மனுஷருடைய கற்பனைகளும் போதனைகளும் (கொலோ 2:18-23)

லௌகிகஞானம் (philosophy)

φιλοσοφία – philosophia – 5385

பெண்பால் பெயர்ச்சொல் – லௌகிகஞானம் – மோசேயின் பிரமாணம், மனுஷருடைய பாரம்பரிய நியாயம், உலக வழிபாடுகள் ஆகியவற்றை இந்த வார்த்தை குறிப்பிடும். (மத் 15:2-13; கலா 1:14; கொலோ 2:8)

"உலகவழிபாடுகள்" – சுவிசேஷத்திற்கு எதிரான வழிகளும் உலகக்கோட்பாடுகளும். (கலா 4:3)

"கிறிஸ்துவைப் பற்றினதல்ல" – நம்மை இரட்சிப்பதற்காக இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் மரித்தார். யூதருடைய பாரம்பரியங்களும் மனுஷருடைய லௌகிக ஞானமும் இயேசு கிறிஸ்துவின் எளிமையான சுவிசேஷத்திற்கு ஒத்ததல்ல. (கொலோ 1:20-25)

"[illegible] பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் (இயேசு கிறிஸ்துவிற்குள்) வாசமாயிருக்கிறது" – தேவத்துவத்தின் பரிபூரணத்தை இயேசு கிறிஸ்துவில் மட்டுமே நாம் சரீரப்பிரகாரமாகக் காண முடியும். யூதமார்க்கத்தின் கொள்கைகளினாலோ புறஜாதியாருடைய லௌகிக ஞானத்திலோ தேவத்துவத்தின் பரிபூரணத்தைக் காண முடியாது. இயேசு கிறிஸ்து தம்மையே ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து மனுக்குலத்திற்கு மீட்பை உண்டுபண்ணினார் (கலா 2:14-17; மத் 26:26-28; ரோமர் 7:6; எபே 2:16; எபி 10:1-18; 1பேதுரு 2:24). யூதமார்க்கத்தில் இரட்சிப்பின் நிழலைத்தான் காண முடியும். மெய்யான இரட்சிப்பைக் காண முடியாது. இயேசு கிறிஸ்து சரீரப் பிரகாரமாக தேவத்துவத்தின் பரிபூரணமாக வெளிப்பட்டிருக்கிறார். மனுஷரை ஆசீர்வதிப்பதற்காக இயேசு கிறிஸ்து மனுஷராக அவதரித்தார் (ஏசா7:14;ஏசா9:6;மத் 1:18-25; லூக்கா 1:34-35). பரிசுத்த ஆவியானவர் இயேசு கிறிஸ்துவின்மீது பரிபூரணமாகத் தங்கி அவருடைய சரீரத்தின் மூலமாகக் கிரியை நடப்பித்தார் (ஏசா 11:2; ஏசா 42:1-7; ஏசா 61:1-2; யோவான் 3:34; அப் 10:38). மீட்பின் பரிபூரணம் தேவத்துவத்திலிருந்து இயேசு கிறிஸ்துவின் சரீரத்தின் மூலமாக வெளிப்பட்டது. இதன் மூலமாகவே நாமும் பரிபூரணம் அடைந்திருக்கிறோம். இயேசு கிறிஸ்து எல்லா அதிகாரத்திற்கும் துரைத்தனங்களுக்கும் தலைவராக இருக்கிறார் (கொலோ 2:10; கொலோ 1:16-18; எபே 1:20-23; பிலி 2:9-11; 1பேதுரு 3:22)

2 அதிகாரம்

சரீரப்பிரகாரமாக (bodily) - σωματικῶς - soomatikoos - 4985

வினையடை - சரீரப்பிரகாரமாக

தேவத்துவம் (Deity) - θεότης - theotees - 2320

பெண்பால் பெயர்ச்சொல் - தேவத்துவம்

8. தண்ணீருக்குள் ஞானஸ்நானமல்ல - கிறிஸ்துவிற்குள் ஞானஸ்நானம் - மீட்பின் இரகசியம் - (ரோமர் 6:3-8; 1கொரி 12:13; கலா 3:27)

கொலோ 2:11 அல்லாமலும், நீங்கள் கிறிஸ்துவைப்பற்றும் விருத்த சேதனத்தினாலே மாம்சத்துக்குரிய பாவசரீரத்தைக்களைந்துவிட்டதினால கையால செய்யப்படாத விருத்த சேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள

கொலோ 2:12 ஞானஸ்நானத்திலே அவரோடே கூட அடக்கம்பண்ணப் பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரி லிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடே கூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள

கொலோ 2:13 உங்கள பாவங்களினாலேயும், உங்கள மாம்ச விருத்த சேதனமில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடுகூட உயிர்ப்பித்து, அக்கிரமங் களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து.

"கையாலசெய்யப்படாதவிருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள்" - கிறிஸ்து விருத்தசேதனம் பெற்றுக் கொண்டு நியாயப் பிரமாணத்தைமுழுமையாக நிறைவேற்றினார் இதனால அவர் தேவனுக்கும், மனுஷனுக்கும் முன்பாக மெய்யான மத்தியஸ்தரானார ஆகையினால நாம் இப்பொழுது இயேசு கிறிஸ்துவின் மூலமாக மோசேயின பிரமாணங்களுக்கு விடுவிக்கப்பட்டிருக் கிறோம் கல்வாரி சிலுவையில் இயேசு கிறிஸ்து சிந்திய திருஇரத்தத்தின மூலமாக நாம் இரட்சிக்கப் பட்டிருக்கிறோம். (கொலோ 2:11 17, கொலோ 1:14,20-25; 1பேதுரு 2:24)

"ஞானஸ்நானத்திலே அவரோடே கூட அடக்கம்பண்ணப்பட்டவர்களாகவும்" - இந்த வாக்கியம் தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறிப்பதில்லை. (மத் 3:11) கிறிஸ்துவிற்குள்ளும் பரிசுத்த ஆவியானவர் மூலமாக அவருடைய சரீரமாகிய சபைக்குள்ளும் நாம் எடுத்துக் கொள்ளும் ஞானஸ்நானத்தைக் குறிக்கும். (ரோமர் 6:1-10; 1கொரி 12:13; கலா 3:27) தண்ணீர் ஞானஸ்நானம் ஆவிக்குரிய ஞானஸ்நானத்திற்கு ஓர் அடையாளமாகும். (1பேதுரு 3:21)

"அவரோடே கூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்" - பாவங்களிலும் மீறுதல்களிலும் மரித்த நிலைமையிலிருந்து ஆவிக்குரிய ரீதியாக உயிர்த்தெழுவதை ஞானஸ்நானம் குறிக்கிறது. (எபே 2:1-9) உயிர்த்தெழ வைப்பது தேவனுடைய கிரியை. தண்ணீரில ஞானஸ்நானம் கொடுக்கிறவர் யாரையும் உயிர்த்தெழ வைப்பதில்லை. (2கொரி 12:13; ரோமர் 6:1-10; கலா 3:27) ஆகையினால நமது விசுவாசம் மரித்தோரிலிருந்து எழுப்பின தேவனுடைய செயலின்மீதுதான இருக்க வேண்டுமே ஒழிய ஞானஸ்நானம் கொடுக்கிறவர்மீது இருக்கக் கூடாது.

"மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடு கூட உயிர்ப்பித்து" - எபே 2:1,5,11 ஆகிய வசனங்களில கூறப்பட்டிருக்கும் உபதேசத்திற்கு இந்த வாக்கியம் ஒத்திருக்கிறது. இந்த ஞானஸ்நானம் ஊழியக்காரர் கொடுக்கும் தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறிப்பிடவில்லை தேவனுடைய கிரியையை இந்த வசனம் குறிப்பிடுகிறது. நமது பாவங்களினாலேயும் நமது மாம்ச விருத்தசேதனமில்லா மையினாலேயும் மரித்தவர்களாயிருந்த நம்மையும் அவரோடு கூட உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் நமக்கு மன்னித்தார் தண்ணீர் ஞானஸ்நானத்தின மூலமாக எந்த ஊழியக்காரராலும் இந்தக் கிரியையைச் செய்ய முடியாது. இது தேவனால் மட்டுமே செய்யக்கூடிய காரியம்.

9. நியாயப்பிரமாணங்களையெல்லாம் கிறிஸ்து சிலுவையின்மேல் ஆணி அடித்து அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார் (கலா 4:2)

கொலோ 2:14 நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்து

2 அதிகாரம்

கொலோ 2:15 துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து கொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையில் வெற்றி சிறந்தார்

கொலோ 2:16 ஆகையால் போஜனத்தையும் பானத்தையும் குறித்தாவது, பண்டிகை நாளையும் மாதப்பிறப்பையும் ஓய்வு நாட்களையும் குறித்தாவது, ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக

கொலோ 2:17 அவைகள் வரும் காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது. அவைகளின் பொருள் கிறிஸ்துவைப் பற்றினது.

குலைத்து (Blotting) - ἐξαλείφω - exaleiphoo - 1813

வினைச்சொல் - துடை, நிவர்த்திசெய், குலை, கிறுக்கிப்போடு (blot out) (கொலோ 2:14; அப் 3:19 வெளி 3:5) (wipe away) (வெளி 7:17; வெளி 21:4 ஏற்கெனவே எழுதப்பட்ட எழுத்தை வேறொரு மையினாலோ அல்லது வேறு ஏதாவது ஒரு பொருளினாலோ எழுத்தின் சுவடில்லாமல் அழிப்பது.

கையெழுத்து (handwriting) χειρόγραφον cheirographon - 5498

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - கையெழுத்து (something written by hand; written decree) - மோசேயின் நியாயப்பிரமாணம் முழுவதையும் இந்த வார்த்தை குறிக்கும்

கட்டளைகள் (ordinances) δόγμα dogma 1378

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - கட்டளை, சட்டம், சட்டதிட்டம் (அப் 16:4)

"நமக்கு எதிரிடையாகவும்" - மோசேயின் நியாயப்பிரமாணம் நமக்கு எதிரிடையாக உள்ளது. இதை முழுவதுமாக அகற்றிப் போட வேண்டும். மோசேயின் நியாயப்பிரமாணம் இருக்கும் இடத்தில் இரட்சிப்பை முழுவதுமாக அனுபவிக்க முடியாது. நியாயப்பிரமாணத்தில் மீட்புக்கு இடமில்லை. நியாயப்பிரமாணத்தை மீறியதற்காக அது மனுஷனைச் சபித்துக் கொல்லும். மனுஷனுடைய இரட்சிப்புக்கு நியாயப்பிரமாணம் வழிகாட்டாது. (ரோமர் 8:3; கலா 1:6; கலா 3:5,19; 2கொரி 3:6

"அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து" - இயேசு கிறிஸ்து நமக்கு எதிரிடையாக இருந்த நியாயப்பிரமாணத்தை நமக்கு நடுவில இராதபடி எடுத்துப்போட்டார் ஆகையினால தாம் இனிமேல் நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கும் நித்திய மரணத்திற்கும் உடன்பட்டவர்கள் அல்ல நியாயப்பிரமாணம் நமக்கு நடுவிலிராதபடி எடுத்துப்போடப்பட்டு விட்டது. அதை மறுபடியும் தேடிச் சென்று பிடித்து நமக்கு நடுவில வைத்துக் கொள்ளக்கூடாது நமது பாதையிலிருந்து அதை எப்போதும் விலக்கியே வைத்திருக்க வேண்டும்

"கையெழுத்தை குலைத்து" - இயேசு கிறிஸ்து நியாயப்பிரமாணத்தைக் குலைத்தார் நமது வழியின் நடுவிலிராதபடி அதை எடுத்து சிலுவையினமேல ஆணி அடித்தார் இதனால நியாயப்பிரமாணத்தின் மூலமாக வரும தணடனைகள நமக்கு ஒன்றுமில்லாமல போயிற்று தேவனுக்கு முன்பாக நமமால புதிய ஜீவனைத் துவங்க முடியும். நமமைக் கொல்லுகிறவனை இயேசு கிறிஸ்து அழித்துப் போட்டார் எல்லா மனுஷருக்கும் குற்ற உணர்வையும், மரணத்தையும் உண்டுபண்ணும் காரியத்தை இயேசு கிறிஸ்து சிலுவையில அறைந்து விட்டார் (ரோமர் 3:19-20, ரோமர் 6:23, ரோமர் 8:2-3; 2கொரி 3:6-7, எபே 2:14-16

கிறிஸ்துவின் வெற்றிகள்

I. நியாயப்பிரமாணத்தை ஒழித்துவிட்டார்

(1) நியாயப்பிரமாணத்தைக் குலைத்தார் (கொலோ 2:14

(2) அதை நடுவில் இராதபடி எடுத்துப்போட்டார் (கொலோ 2:14

(3) சிலுவையினமேல் ஆணி அடித்தார் கொலோ 2:14

கொலோசெயர் – தொகுப்புரை

2 அதிகாரம்

2 நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுபவர்கள் மீது வெற்றி சிறந்தார்

1) துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து கொண்டார் (கொலோ 2:15)

2) அவர்களை வெளியரங்கமான கோலமாக்கினார் (கொலோ 2:15)

3) அவைகளின் மேல் சிலுவையில் வெற்றி சிறந்தார் (கொலோ 2:15, அப 2:23-36; அப 3:13-18; 1கொரி 1:18-24; எபே 2:16, கொலோ 1:20-22)

உரிதல் (spoiled) - ἀπεκδύομαι - apekdyomai - 554

வினைச்சொல் - உரி, களைந்து போடு - ஒருவருடைய வஸ்திரங்களை உரிந்துபோடுதல். **(to strip off clothes of another). (spoil)** (கொலோ 2:15), **(put off)** (கொலோ 3:9) சாத்தானுடைய அதிகாரத்தை இயேசு கிறிஸ்து உரித்துப் போட்டார். நியாயப்பிரமாணம் ஒழிக்கப்பட்டது. ஆகையினால் சாத்தானால் இனிமேல் மனுஷர்மீது குற்றம் சுமத்த முடியாது. மனுஷர் இனிமேல் நியாயப்பிரமாணத்திற்கோ அல்லது சாத்தானுக்கோ அடிமையாக இருக்க வேண்டிய அவசியமில்லை. ரோமர் 7:5-25

"சாத்தானை வெளியரங்கமான கோலமாக்கினார்" சாத்தானுக்கு வெளிப்படையாக அவமானத்தை உண்டுபண்ணினார்

வெளியரங்கமான கோலமாக்குதல் **(shame) - παραδειγματίζω paradeigmatizoo** 3856

வினைச்சொல் - அவமானப்படுத்து வெளியரங்கமான கோலமாக்குதல் **(to expose to public infamy and shame)** (மத் 1:19, எபி 6:6 **public shame**) - யுத்தத்தில் வெற்றி பெற்றவன் தோல்வி அடைந்தவனை எல்லோருக்கும் தெரியும் விதமாக இழுத்து வருவான். சாத்தானும் அவனால் பயன்படுத்தப்பட்டவர்களும் இயேசு கிறிஸ்துவிற்கு அவமானத்தை உண்டுபண்ணுவதற்காக எல்லோருக்கும் தெரியும் விதத்தில் அனைவருக்கும் முன்பாக அவரைச் சிலுவையில் அறைந்தார்கள். இதன் மூலமாக அவர்கள் இயேசு கிறிஸ்துவின்மீது வெற்றி பெற்றதாக நினைத்தார்கள். ஆனால் அதே சிலுவையே அவர்களுக்கு அவமானமாயிற்று. அவர்களைத் தோல்வியுறச் செய்தது. (கொலோ 2:15; கொலோ 1:20-22; அப 2:23; அப 3:13-18; அப் 5:28; 1யோவான் 3:8)

மற்றவர்களைக் குற்றப்படுத்தாதிருக்க வேண்டிய காரியங்கள்

1. எதைப் போஜனம் பண்ணுவது (கொலோ 2:16, 1தீமோ 4, ரோமர் 14)

2. எதைப் பானம்பண்ணுவது (கொலோ 2:16; 1கொரி 10:31)

3. எந்த நாளைப் பண்டிகை நாளாக ஆசரிப்பது (கொலோ 2:16, கலா 4)

4. எந்த மாதப்பிறப்பை ஆசரிப்பது (கொலோ 2:16)

5. எந்த ஓய்வுநாட்களை ஆசரிப்பது (கொலோ 2:16, ரோமர் 14:5-6, கலா 4:9)

"போஜனம்" **(meat)** - நியாயப்பிரமாணத்தில் கூறப்பட்டிருக்கும் சுத்தமான மிருகங்களும், அசுத்தமான மிருகங்களும். (லேவி 11; உபா 14) புதிய பிரமாணத்தின் பிரகாரம் எந்தப் போஜனத்தையும் புசிக்கலாம். (ரோமர் 14, 1கொரி 8, 1கொரி 10; கொலோ 2:14-17, 1தீமோ 4:1-8)

2 அதிகாரம்

"பானம்" (drink) - நியாயப்பிரமாணத்தில் பானம் பண்ணுவதைக் குறித்துக் கடினமான கட்டளை எதுவும் இல்லை. (உபா 14:24-26) ஆயினும் மதுபானம் அருந்துவதைத் தேவன் கடிந்து கூறுகிறார் (நீதி 20:1; நீதி 31:4-7; ஏசா 5:11-23) விசுவாசிகளாகிய நாம் புதிய உடன்படிக்கையில் தேவன் நமக்கு கூறியிருக்கும் காரியங்களைக் கவனித்து பார்க்க வேண்டும். "நீங்கள் புசித்தாலும் குடித்தாலும், எதைச் செய்தாலும் எல்லாவற்றையும்தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்" (1கொரி 10:31) மதுபான வெறி கொள்வதை புதிய உடன்படிக்கை கடிந்து கூறுகிறது. ஆகையினால் எதை பானம் பண்ண வேண்டும் எதை பானம் பண்ணக்கூடாது என்பதை விசுவாசி தீர்மானம் பண்ண வேண்டும். (லூக்கா 21:34; ரோமர்13:13 1கொரி 6:9-11 கலா 5:19-21)

"பண்டிகை நாள்" (holyday) - யூதருக்கு பல பண்டிகை நாட்கள் உண்டு. பல ஓய்வுநாட்களையும், பண்டிகைகளையும் மாதப்பிறப்புகளையும் அவர்கள் ஆசரித்து வந்தார்கள் அவற்றை ஆசரிக்க வேண்டுமென்று யூதமார்க்கம் மனுஷனைக் கட்டாயப்படுத்திற்று. (லேவி 23; 1நாளா 23 2நாளா 31) புதிய உடன்படிக்கையில் பண்டிகை நாட்களை ஆசரிக்க வேண்டும் என்ற கட்டளையே இல்லை. (கொலோ 2:14-17; ரோமர்14:5-6, கலா 4:9-10)

"ஓய்வுநாட்கள்" (sabbath days) மோசேயின் பிரமாணத்தில் கூறப்பட்டிருக்கும் எல்லா ஓய்வுநாட்களையும் இந்த வார்த்தை குறிக்கும். இவை அனைத்துமே புதிய உடன்படிக்கையில் ஒழிக்கப்பட்டுவிட்டது. ஏசா 1:13-15, ஓசி 2:11 ஆகிய தீர்க்க தரிசனங்கள் நிறைவேறிற்று. விசுவாசிகள் எந்த நாளையும் ஓய்வுநாளாக ஆசரிக்கலாம். (கொலோ 2:14-17; ரோமர் 14:5-6; கலா 3:9-10) விசுவாசிகளாகிய நாம் இயேசு கிறிஸ்துவில் அனுபவிக்கப்போகும் ஓய்விற்கு இந்த ஓய்வுநாட்கள் ஒரு நிழலாக இருக்கிறது. (கொலோ 2:17; மத் 11:28-30; எபி 4:3,10-11, எபி 10:1)

10. மாயமான காரியங்களுக்கும் பிசாசின் மார்க்கங்களுக்கும் எதிரான எச்சரிப்பு

கொலோ 2:18 கணுக்களாலும் கட்டுகளாலும் உதவிபெற்று இணைக்கப்பட்டு, தேவவளர்ச்சியாய் வளர்ந்தேறுகிற சரீர முழுவதையும் ஆதரிக்கிற தலையைப் பற்றிக் கொள்ளாமல்

கொலோ 2:19 மாயமான தாழ்மையிலும், தேவதூதர்களுக்குச் செய்யும் ஆராதனையிலும் விருப்பமுற்று காணாதவைகளிலே துணிவாய் நுழைந்து, தன் மாம்சசிந்தையினாலே வீணாய் இறுமாப்புக்கொண்டிருக்கிற எவனும் உங்கள் பந்தயப்பொருளை நீங்கள் இழந்துபோகும்படி உங்களை வஞ்சியாதிருக்கப்பாருங்கள்

"சரீர முழுவதையும் ஆதரிக்கிற தலையைப் பற்றிக் கொள்ளாமல்" - சரீரத்திற்குத் தலையே பிரதானம் சரீரத்தின் எல்லா அவயவங்களும் தங்களுடைய ஜீவனுக்காக தலையையே சார்ந்திருக்கின்றன சபையில் தலையாகிய கிறிஸ்துவிற்கே முதலிடம் தர வேண்டும்.

"உங்கள் பந்தயப்பொருளை நீங்கள் இழந்துபோகும்படி உங்களை வஞ்சியாதிருக்கப் பாருங்கள்" நம்முடைய பந்தயப் பொருளை யாரும் எடுத்துக் கொள்ளக்கூடாது. நாம் கிறிஸ்துவைக் கண்டுகொண்டோம். பரிசுத்த ஆவியினாலும் கிருபையினாலும் நமது பாவத்திலிருந்து விடுதலை பெற்றிருக்கிறோம். ஆவியில் ஆரம்பம் பண்ணியிருக்கிற நாம் மாம்சத்தில் முடிவு பெற்றுவிடக்கூடாது. (கலா 3:1-5

கள்ள மார்க்கங்களைப் பற்றிய காரியங்கள்

1 மாயமான தாழ்மை - மனுஷருடைய கற்பனைகளின்படியும் போதனைகளின்படியும் நடந்து தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே என்கிற கட்டளைகளுக்கு உட்படுகிறது. (கொலோ 2:18,20-23; கொலோ 2:8

2 தேவதூதர்களுக்குச் செய்யும் ஆராதனை

2 அதிகாரம்

3 காணாதவைகளிலே துணிவாய் நுழைவது – எல்லா தரிசனங்களும் தேவனிடமிருந்தும், தேவதூதரிடமிருந்தும் வருவது என்று நம்புவது. கொலோ 2:18; உபா 18; எரே 23; எசே 13

4 புதிய கண்டுபிடிப்புக்களையும், மானிட அறிவையும் நம்பி ஒரு மார்க்கத்தை உண்டுபண்ணுவது. கொலோ 2:18 ரோமர் 1:21-23 கொலோ 2:8 1தீமோ 6:20

5 கிறிஸ்துவையும், சுவிசேஷத்தையும் மையமாகப் பெற்றிருக்காத மார்க்கம். கொலோ 2:19; எபே 4:14 எபே 5:11-12; 2கொரி 11:14-15 மத் 7:15

ஆராதனை **(worshipping)** - θρησκεία - **threeskeia** – 2356

பெண்பால் பெயர்ச்சொல் சமயம் ஆராதனை, தேவபக்தி, பக்தி (கொலோ 2:18) **religion** (அப் 26:5 யாக் 1:26-27), **cult or religion of angels and demons** (கொலோ 2:18,23, 1தீமோ 4:1-8)

11. சத்தியத்திற்கு விரோதமாக இருக்கும் மார்க்க நடபடிகள் அனைத்திற்கும் விலகியிருக்க வேண்டும்

கொலோ 2:20 நீங்கள் கிறிஸ்துவுடனே கூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்தீர்களானால் இன்னும் உலக வழக்கத்தின்படி பிழைக்கிறவர்கள்போல,

கொலோ 2:21 மனுஷருடைய கற்பனைகளின்படியும் போதனைகளின்படியும் நடந்து, தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே என்கிற கட்டளைகளுக்கு உட்படுகிறதென்ன?

கொலோ 2:22 இவையெல்லாம் அநுபவிக்கிறதினால் அழிந்துபோகுமே

கொலோ 2:23 இப்படிப்பட்ட போதனைகள் சுய இஷ்டமான ஆராதனையையும் மாயமான தாழ்மையையும் சரீர ஒடுக்கத்தையும் பற்றி ஞானமென்கிற பேர்கொண்டிருந்தாலும் இவைகள் மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது

"உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்தீர்களானால் இன்னும் உலக வழக்கத்தின்படி பிழைக்கிறவர்கள்போல" - விசுவாசிகள் கிறிஸ்துவுடனேகூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்தவர்கள் ஆகையினால் அசுத்தமானதைத் தொடக்கூடாது, ருசிபார்க்கக்கூடாது, தீண்டக்கூடாது என்னும் கட்டளைகளுக்கு விசுவாசிகள் உட்பட்டவர்கள் அல்ல (லேவி 11, 15, உபா 14) இவை மனுஷருடைய பாரம்பரியங்கள் புதிய உடன்படிக்கையில் இவை தேவனிடமிருந்து வந்தவை அல்ல. (கொலோ 2:20-23)

"உலகத்தின் வழிபாடுகள்" (கலா 4; கொலோ 2:8)

"மனுஷருடைய கற்பனைகளின்படியும் போதனைகளின்படியும் நடந்து" - (மத் 15:9, மாற்கு 7:7; 1தீமோ 4:1)

"இவைகள் மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது" இயேசு கிறிஸ்துவையும் சுவிசேஷத்தையும் மையமாகக் கொண்டிராத எந்தப் போதனையும் ஒன்றுக்கும் பிரயோஜனமற்றது. (ரோமர் 1:21-25)

3 அதிகாரம்

12. எதை நாடவேண்டும் - (மத் 5:8;6:33, 22:37)

கொலோ 3:1 நீங்கள் கிறிஸ்துவுடனேகூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்.

கொலோ 3:2 பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்.

கொலோ 3:3 ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள்; உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனேகூட தேவனுக்குள் மறைந்திருக்கிறது.

"நீங்கள் கிறிஸ்துவுடனேகூட எழுந்ததுண்டானால்" - கொலோ 2:20 ஆவது வசனத்தில் "கிறிஸ்துவுடனேகூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்ததுண்டானால்" என்று எழுதிய பவுல் இந்த வசனத்தில் "எழுந்ததுண்டானால்" என்று எழுதுகிறார். கிறிஸ்துவுடனேகூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்தவன் மரித்தவனைப்போல நடந்து கொள்ள வேண்டும். கிறிஸ்துவுடனேகூட எழுந்தவன் ஜீவன் உள்ளவனைப்போல நடந்து கொள்ள வேண்டும். (கொலோ 3:1-5)

"மேலானவைகளைத் தேடுங்கள்" (கொலோ 3:17)

"கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடம்" தேவனும், இயேசு கிறிஸ்துவும் தனித்தனியாக வெவ்வேறு ஆள்த்துவப் பண்புடையவர்கள் என்பதை விளக்கும் வசனம் (அப் 2:33)

"பூமியிலுள்ளவைகளையல்ல மேலானவைகளையே நாடுங்கள்" - பரலோகத்திற்கு அடுத்த காரியங்களை நாம் நாட வேண்டும்.

விசுவாசிகள் மரித்திருக்கும் காரியங்கள்

1 பாவம் (Sin) (ரோமர் 6:2,7,11; 1பேதுரு 2:24)

2 நியாயப்பிரமாணம் (The law) (ரோமர் 7:4; கலா 2:19)

3. உலகத்தின் வழிபாடுகள் (The rudiments of the world) (கொலோ 2:20)

13. சபை எடுத்துக்கொள்ளப்படுதல் - (1தெச 4:13)

கொலோ 3:4 நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்.

தீர்க்கதரிசன எண் - 1

"நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்" (கொலோ 3:4) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. இந்தத் தீர்க்கதரிசனம் சபை எடுத்துக் கொள்ளப்படுவதைக் குறிக்கிறது. எப்பொழுது சபை எடுத்துக் கொள்ளப்படும் என்பது நமக்குத் தெரியாது. (யோவான் 14:1-3; 1தெச 4:16)

"நம்முடைய ஜீவன்" நம்முடைய நித்திய ஜீவன் இயேசு கிறிஸ்துவில் இருக்கிறது. (யோவான் 17:2-3; ரோமர் 5:10, 1யோவான் 5:11-13)

வெளிப்படுத்தல் (appear) - φανερόω - phaneroo - 5319

வினைச்சொல் - வெளியரங்கமாக்கு, வெளிப்படுத்து, தரிசனமாகு, விளங்கப்பண்ணு, தோன்று (to make visibly manifest) "make manifest" (கொலோ 3:4, கொலோ 1:26; யோவான் 1:31; யோவான் 3:21; யோவான் 9:3, ரோமர் 16:26, 1கொரி 4:5; 2கொரி 2:14.

3 அதிகாரம்

2கொரி 4:10-11; 2கொரி 5:11 2கொரி 11:6, எபே 5:13; 2தீமோ 1:10 எபி 9:8; 1யோவான் 2:19; வெளி 15:4); "manifest" (மாற்கு 4:22 யோவான் 17:6; ரோமர் 3:21; தீத்து 1:3; 1யோவான் 1:2; 1யோவான் 3:5,8 1யோவான் 4:9); "manifest forth" யோவான் 2:11); "declare manifestly" (2கொரி 3:3); "be manifest" (1தீமோ 3:16; 1பேதுரு 1:20); "show one's self" (யோவான் 21:1,14); "appear" (மாற்கு 16:12,14 2கொரி 5:10; 2கொரி 7:12 கொலோ 3:4; எபி 9:26; 1பேதுரு 5:4; 1யோவான் 2:28; 1யோவான் 3:2; வெளி 3:18) இயேசு கிறிஸ்து தம்முடைய சபையை எடுத்துக் கொள்வதற்கு வரும்போது தம்மைத் தம்முடைய பரிசுத்தவான்களுக்கு வெளிப்படுத்துவார் (யோவான் 14:1-3; 1தெச 4:16-17 1யோவான் 2:28 1யோவான் 3:2) நாமும் அவரோடேகூட அந்த மகிமையிலே வெளிப்படுவோம். இந்த உலகத்தை ஆளுகை செய்வதற்கு இயேசு கிறிஸ்து மறுபடியும் தம்முடைய மகிமையோடு இந்த பூமிக்கு வருவார் அவருடைய பரிசுத்தவான்களும் அப்போது அவரோடு கூட வருவார்கள். (யோவான் 14:1-3; 1தெச 4:16-17, எபே 5:27, 1தெச 2:12; யூதா 1:24) மகிமை என்னும் வார்த்தை 1தீமோ 3:16, 2பேதுரு 1:17 ஆகிய வசனங்களில் பரலோகத்தைக் குறிக்கிறது.

14. எதை அழித்துப்போட வேண்டும்

ரோமர் 1:29-32; 8:13; கலா 5:19, 1கொரி 6:9; மாற்கு 7:14; 2தீமோ 3:1-9

கொலோ 3:5 ஆகையால், விபசாரம் அசுத்தம், மோகம், துர்இச்சை விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள்

கொலோ 3:6 இவைகளின் பொருட்டே கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினைவரும்.

கொலோ 3:7 நீங்களும் முற்காலத்தில் அவர்களுக்குள்ளே சஞ்சரித்தபோது, அவைகளைச் செய்து கொண்டு வந்தீர்கள்

அழித்துப் போடுதல் (Mortify) - νεκρόω - nekrooo - 3499

வினைச்சொல் - செத்துப்போ, அடித்துப்போடு, செத்தவனாயிரு (put to death) (கொலோ 3:5); (be dead) (ரோமர் 4:19; எபி 11:12

கொல்லுதல் (kill) - θανατόω - thanatooo - 2289

வினைச்சொல் - மரணமடை, கொலைசெய், செத்துப்போ, கொல்லப்படு (mortify) (ரோமர் 8:13); (kill) (ரோமர் 8:36; 2கொரி 6:9 ; (put to death) (மத் 26:59; மத் 27:1; மாற்கு 14:55; 1பேதுரு 3:18 ; (cause to be put to death) (மத் 10:21 மாற்கு 13:12; லூக்கா 21:16); (become dead) (ரோமர் 7:4

அழித்துப்போட வேண்டிய காரியங்கள்

1 விபசாரம் (மத் 5:32)

2 அசுத்தம்

3 மோகம் (ரோமர் 1:26)

4. துர்இச்சை

5. விக்கிரகாராதனையான பொருளாசை

துர்இச்சை (evil) - κακός - kakos - 2556

பொல்லாத, கொடிய, பொல்லாத, பொல்லாப்புசெய்கிற, தீமைகளை அநுபவித்த, தகாத, கெடுதியான தீங்கு அடைந்த, தீமைசெய்கிற, துராக்கிரமமான ஆகாத, துர் இச்சையான துஷ்ட (Evil concupiscence, evil, wicked, depraved desire, lust, passion, appetite) "evil" (கொலோ 3:5, மாற்கு 7:21; etc); "ill" (ரோமர் 13:10) "harm" (அப் 16:28, அப் 28:5); "evil things" (லூக்கா 16:25, ரோமர் 1:30; 2கொரி 10:6 , "bad" (2கொரி 5:10); "noisome" (வெளி 16:2); "wicked" (மத் 21:41

கொலோசெயர் – தொகுப்புரை

3 அதிகாரம்

இச்சை (concupiscence)
ἐπιθυμία - epithymia - 1939

பெண்பால் பெயர்ச்சொல் - இச்சை ஆசை (any strong or vehement desire) - ஒருசில இடங்களில் இந்த வார்த்தை நல்ல ஆவல்களைக் குறிக்கும் மற்ற இடங்களில் பொதுவாக இது துர்இச்சையையே குறிக்கும். " desire" (லூக்கா 2:15 பிலி 1:23; 1தெச 2:17) "concupiscence" (ரோமர் 7:8 கொலோ 3:5; 1தெச 4:5); "lust" யோவான் 8:44; ரோமர் 1:24. எபே 2:3

பொருளாசை (Covetousness) -
πλεονεξία - pleonexia - 4124

பெண்பால் பெயர்சொல் - பொருளாசை, ஆவல், லோபத்தனம் "covetousness" (மாற்கு 7:22 லூக்கா 12:15; ரோமர் 1:29; 2கொரி 9:5, எபே 5:3; கொலோ 3:5; 1தெச 2:5; 2பேதுரு 2:3); "covetous practice" (2பேதுரு 2:14) "greediness" (எபே4:19) பொருளாசை விக்கிரகாராதனைக்கு ஒப்பாகக் கூறப்பட்டிருக்கிறது. ஏனென்றால் நாம் எதன்மீது ஆசைப்படுகிறோமோ அது ஒரு விக்கிரகம் ஆகிறது. (லூக்கா 12:15)

"கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்" (கொலோ 3:6-7=எபே 2:2-3)

15. எதைக் களைந்துபோட வேண்டும் - (எபே 4:20)

கொலோ 3:8 இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவை களையெல்லாம் விட்டு விடுங்கள்

கொலோ 3:9 ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள் பழைய மனுஷனையும் அவன்செய்கைகளையும் களைந்து போட்டு,

விட்டுவிட வேண்டிய காரியங்கள்

1 கோபம் (Anger) (கொலோ 3:8 எபே 4:26)

2 மூர்க்கம் (Wrath) (கொலோ 3:8

3 பொறாமை (Malice) (கொலோ 3:8 எபே 4:31)

4 தூஷணம் (Blasphemy) (கொலோ 3:8 மத் 12 31

5 வம்பு வார்த்தைகள் (Filthy communication, foul language) (எபே 4:29; எபே 5:4

6 பொய் (Lying) (கொலோ 3:9 எபே 4:25)

7 பழைய மனுஷன் (The old man) (கொலோ 3:9 2கொரி 5:17

"பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும்" - (2கொரி 5:17

ஒழிந்துபோன பழைய காரியங்கள்

1 பழைய மனுஷன (யோவான 8:44, எபே 2:2; 2கொரி 4:4; 1யோவான 3:8 - 1யோவான 5:18

2 நியாயப்பிரமாணத்தின மீறுதல பாவங்கள (1 யோவான 3:4 ரோமர 4:15 யாக் 1:13-15 பாவமான கிரியைகள் மாற்கு 7:19-21; ரோமர்1:18-32 2கொரி 6:9-11 கலா 5:19 21 கொலோ 3:5-10 ஆகிய வசனங்களில கூறப்பட்டிருக்கிறது.

ஒழிந்து போன பழைய மனுஷனின் பெய[redacted]

1 பழைய மனுஷன (ரோமர் 6:6, எபே 4:22; கொலோ 3:9

2 பாவம் (யோவான் 1:29 யோவான் 8:34; யோவான 6:4 8:2

3 பாவசரீரம் (ரோமர் 6:6)

4 சாத்தானின் வல்லமை (அப் 26:18

கொலோசெயர் – தொகுப்புரை

3 அதிகாரம்

5. இந்த மரண சரீரம் (ரோமர் 7:24)
6. மாம்சத்தின் இச்சைகள் (எபே 2:3)
7. கண்களின் இச்சை (1யோவான் 2:15-17)
8. ஜீவனத்தின் பெருமை (1யோவான் 2:15-17)
9. மாம்சத்தின் கிரியைகள் (கலா 5:19)
10. உலகம் (1யோவான் 2:15-17; யாக் 4:4)
11. இச்சை ரோகங்கள் (ரோமர் 1:26,29)
12. மனதின் இச்சைகள் (எபே 2:3)
13. பாவத்தின் இச்சைகள் (ரோமர் 6:11-12)
14. பாவ இச்சைகள் (ரோமர் 7:5)
15. பாவம், மரணம் ஆகியவற்றின் பிரமாணம் (ரோமர் 7:7-8:2)
16. மாம்ச சிந்தை (ரோமர் 8:1-13)
17. இப்பிரபஞ்சத்தின் தேவன் (2கொரி 4:4)
18. வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகள் (எபே 6:12)
19. உங்கள் பிதாவின் இச்சைகள் (யோவான் 8:44)
20. எனக்குள் வாசம்பண்ணுகிற பாவம் (ரோமர் 7:17)
21. ஆகாயத்து அதிகாரப்பிரபுவாகிய ஆவி (எபே 2:2)
22. மாம்சத்திற்குரிய பாவ சரீரம் (கொலோ 2:11, கலா 5:24; ரோமர் 8)

நம்மிடத்தில் காணப்படும் உள்ளான பாவங்களும், புறம்பான பாவங்களும் நம்மைவிட்டுக் கடந்துபோக வேண்டும்.

நம்மிடத்தில் பாவம் இருந்தால் நம்மால் கிறிஸ்துவில் நிலைத்திருக்க முடியாது (2கொரி 5:17-18; எபே 4:24; 1யோவான் 5:18; ரோமர் 6:6,23 ரோமர் 8:1-13 1தெச 4:3; 2தெச 2:13)

16. எதைத் தரித்துக் கொள்ள வேண்டும் - (எபே 4:23)

கொலோ 3:10 தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்கள்

கொலோ 3:11 அதிலே கிரேக்கனென்றும் யூதனென்றுமில்லை, விருத்தசேதனமுள்ளவனென்றுமில்லை, விருத்தசேதனமில்லாதவனென்றுமில்லை, புறஜாதியானென்றும் புறதேசத்தானென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை. கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார்

கொலோ 3:12 ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும் தயவையும் மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு,

கொலோ 3:13 ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால் கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்

கொலோ 3:14 இவையெல்லாவற்றின் மேலும் பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக் கொள்ளுங்கள்

தரித்துக் கொள்ள வேண்டிய காரியங்கள் (கொலோ 3:10,12)

1 புதிதாக்கப்பட்ட புதிய மனுஷன் (எபே 4:24)

2 கிருபையுள்ள உள்ளங்கள் (2கொரி 6:12)

3 தயவு (1கொரி 13:4)

3 அதிகாரம்

4 மனதின் தாழ்மை

5 சாந்தம் (1கொரி 13:4)

6 நீடிய பொறுமை (1கொரி 13:4)

7 பொறுமை (கலா 5:22)

8 மன்னிப்பு (மத் 18:35)

9 தெய்வீக அன்பு (1கொரி 13:4)

"புதிய மனுஷன்" (new man) - (எபே 4:24 மறுபடியும் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனிடத்தில் காணப்படும் தேவனுடைய ஆவியையும், அவருடைய சுபாவத்தையும் இந்த வாக்கியம் குறிக்கும். (எபே 4:23-24 2பேதுரு 1:4 ரோமர் 8:9,14-16)

"பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட" - 2கொரி 5:17-18 எபே 4:23-24)

அறிவு (knowledge) - ἐπίγνωσις - epignoosis - 1922

பெண்பால் பெயர்ச்சொல் அறிவு அறிந்துகொள்ளுதல், ஞானம் (full and true knowledge) (கொலோ 1:10 கொலோ 1:9-10 ரோமர் 1:28 ரோமர் 3:20, ரோமர் 10:2; எபே 1:17 எபே 4:13 பிலி 1:9 1தீமோ 2:4, 2தீமோ 3:7 எபி 10:26 2பேதுரு 1:2,3,8 2பேதுரு 2:20) (acknowledge) (கொலோ 2:2; 2தீமோ 2:25, தீத்து 1:1; பிலே 1:6) புறஜாதி மார்க்கத்தார் தேவனைப் பற்றிய அறியாமையில் இருக்கிறார்கள். கிறிஸ்தவ மார்க்கம் தேவனைப் பற்றிய மெய்யான பரிபூரணமான அறிவை உபதேசிக்கிறது. (அப் 15:18 எபே 2:7, எபே 3:9-11)

சாயல் (image) εἰκών eikoon 1504

பெண்பால் பெயர்ச்சொல் சுரூபம், சாயல், நிழல், சொரூபம். சுரூபம் (கொலோ 1:15 தேவனுடைய ஆவிக்குரிய சாயலை இந்த வார்த்தை குறிப்பிடுகிறது. (கொலோ 3:10 ரோமர் 8:29; 2கொரி 3:18)

மனுஷன் பூரண அறிவைப் பெற்றிருக்க வேண்டுமென்பது தேவனுடைய திட்டம். இதற்காக அவர் மனுஷனைப் புதுப்பிக்கிறார் (2தீமோ 1:7 2பேதுரு 1:3-13

"அதிலே கிரேக்கனென்றும் யூதனென்றும் இல்லை. அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை" - புதிதாக்கப்பட்ட மனுஷர்களிடையே எவ்வித வேறுபாடும் இல்லை. நிறம், மொழி, கலாச்சாரம், ஆண், பெண் ஆகிய பாகுபாடுகளின் அடிப்படையில் எவ்வித பட்சபாதமும் இல்லை. (1கொரி 12:13 கலா 3:28)

"புறதேசத்தான்" (Scythian) - அடிமைகள்

"கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார்" - எல்லா விசுவாசிகளுக்கும் இயேசு கிறிஸ்துவே எல்லாமுமாக இருக்கிறார் (ரோமர் 8:9-8

"தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்" - தேவன் யூதமார்க்கத்தாரை மட்டும் தெரிந்து கொள்ளாமல் எல்லா இனங்களிலிருந்தும் தம்முடைய பிள்ளைகளைத் தெரிந்து கொள்கிறார். ஆகையினால் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்பது தேவனுடைய பிள்ளைகள் எல்லோரையும் குறிக்கும் வார்த்தையாகும். (லூக்கா 18:7

விசுவாசிகளின் சுபாவங்கள்

1 பரிசுத்தர்

2 தேவனுடைய பிரியர்

பரிசுத்தம் (Holy) - ἅγιος - hagios - 40

பெயரடை - அர்ப்பணிக்கப்பட்டுள்ள, வேறுபிரிக்கப்பட்டுள்ள, புதிய, பரிசுத்த என்னும் பொருளை பெயரடைப் பணியில் தரும் (ரோமர் 11:16 ரோமர் 12:1 2கொரி 3:17 எபே 1:4 எபே 2:21 எபே 3:5; எபே 5:27 கொலோ 1:22 கொலோ 3:12 1தெச 5:27 1தீமோ 8 தீத்து 1:8 எபி 3:1 1பேதுரு 1:15-16 1பேதுரு 2:5,9 1பேதுரு 3:5, 2பேதுரு 1:21 2பேதுரு 3:2 வெளி 22:11

கொலோசெயர் – தொகுப்புரை

3 அதிகாரம்

அ) பரிசுத்த பிதாவின் பரிசுத்தம் தேவனுக்கும் மானிட பரிசுத்தத்திற்கும் இடையில் உள்ள இடைவெளியைக் குறிக்கும். யோவா 17:11

ஆ) தேவனுக்கும் அவருடைய ஊழியத்துக்கும் அர்ப்பணிக்கப்பட்டுள்ள பொருட்கள் எபே. 1:4; மத். 24:15

இ) தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள நபர்கள் இவர்கள் தேவனுடைய பரிசுத்தத்தில் பங்குபெறுகிறார்கள் ரோம. 1:7; மாற். 6:20

அன்பு செலுத்துதல (Beloved) - ἀγαπάω - agavaoo - 25

வினைச்சொல - அன்பு செலுத்துதல் சிநேகித்தல, அன்பு கூருதல் (ரோமர் 1:7 2கொரி 7:1; கொலோ 3:12 1தெச 1:4; 2தெச 2:13; 1யோவான் 3:2; 1யோவான் 4:1,7,11)

(அ) தேவன் மனிதனிடம் காட்டும் அன்பு யோவா 3:16

(ஆ) கிறிஸ்து தனி மனிதனிடம் காட்டும் அன்பு மாற்கு 10:21

(இ) ஒரு மனிதன் மற்ற மனிதர்களிடம் காட்டும் அன்பு 2கொரி 12:15

(ஈ) மனிதர் உலகப்பிரகாரமான பொருட்களிடம் காட்டும் அன்பு லூக். 11:43. இந்தச் சொல் பொதுவாக தன்னலம் கருதாத நீதியான கிறிஸ்தவ அன்பைக் குறிக்கும்

"அன்பு (charity) - ஒவ்வொரு விசுவாசிக்கும் தெய்வீக அன்பு ஓர் அலங்காரமான வஸ்திரமாக இருக்க வேண்டும் விசுவாசிகள் இந்த வஸ்திரத்தை எப்பொழுதும் தரித்தவர்களாக இருக்க வேண்டும் அன்பே மெய்யான பரிபூரணம் அன்பு இல்லையென்றால் ஒன்றுமில்லை. (மத் 5:43-48; 1கொரி 13 கொலோ 3:10

பூரணம் (perfectness) τελειότης - teleiotees 5047

பெண்பால் பெயர்ச்சொல் - பூரணம் (கொலோ 3:14, எபி 6:1

17. கிறிஸ்தவ ஜீவியத்திற்கும் ஆராதனைக்கும் ஏழு அம்ச புத்திமதி

கொலோ 3:15 தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது, இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள் நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள்

கொலோ 3:16 கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக. சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பக்தியுடன் பாடி

கொலோ 3:17 வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும் அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்

ஆளுதல (rule) - βραβεύω - brabeuoo - 1018

வினைச்சொல் - ஆளு (to be an umpire; to arbitrate, direct, govern)

பரிபூரணம் (richly) - πλουσίως - plousioos - 4146

வினையடை - பரிபூரணமாய், சம்பூரணமாய் (கொலோ 3:16, 1தீமோ 6:17; தீத்து 3:6, 2பேதுரு 1:11

"சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும்" - (எபே5:19) ஆவிக்குரிய ஜீவனுக்குரியவைகளே ஞானப் பாட்டுக்களாகும்.

கொலோசெயர் – தொகுப்புரை

3 அதிகாரம்

விசுவாசிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டளைகள்

1 மேலானவைகளைத் தேடவேண்டும். (கொலோ 3:1)

2 மேலானவைகளை நாட வேண்டும் கொலோ 3:2

3 பாவங்களை உண்டுபண்ணுகிற அவயவங்களை அழித்துப்போட வேண்டும். (கொலோ 3:5-7)

4 பழைய மனுஷனையும், அவன் செய்கைகளையும் களைந்துபோட வேண்டும். (கொலோ 3:8-9)

5 புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ள வேண்டும். (கொலோ 3:10-12)

6 ஒருவரையொருவர் தாங்க வேண்டும். (கொலோ 3:13 1கொரி 13)

7 எல்லோரையும் மன்னிக்க வேண்டும் (கொலோ3:13, மத் 18:35)

8 தெய்வீக அன்பைத் தரித்துக் கொள்ள வேண்டும். ((கொலோ 3:14; 1கொரி 13

9 தேவ சமாதானம் இருதயங்களை ஆளுகை செய்ய வேண்டும். (கொலோ 3:15

10 பரிசுத்த வேதாகமத்தை அறிந்திருக்க வேண்டும் கொலோ 3:16 2தீமோ 2:15, 2தீமோ 3:16-17)

11 ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லிக் கொள்ள வேண்டும். (கொலோ 3:16

12 கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே வார்த்தையினாலும் கிரியையினாலும் கிரியை செய்ய வேண்டும் (கொலோ 3:17 யோவான் 16:23).

IV. விசுவாசிகளின் குடும்ப வாழ்வு

1. மனைவிகளின் கடமைகள் - (எபே 5:22)

கொலோ 3:18 மனைவிகளே கர்த்தருக்கேற்கும்படி, உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்

"மனைவிகளே, கர்த்தருக்கேற்கும்படி, உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்" - (எபே 5:22,24)

மனைவிகளுக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1 கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறது போல உங்கள் சொந்த புருஷருக்குக் கீழ்ப்படிய வேண்டும் (எபே 5:22

2 கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான் என்பதை அங்கீகரிக்க வேண்டும். (எபே 5:23

3 சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறது போல மனைவிகளும் தங்கள் சொந்த புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் (எபே 5:24)

4 புருஷனிடத்தில் பயபக்தியாய் இருக்க வேண்டும். (எபே 5:33)

2. புருஷரின் கடமைகள் - (எபே 5:25)

கொலோ 3:19 புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள் அவர்கள்மேல் கசந்து கொள்ளாதிருங்கள்

"புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள், அவர்கள்மேல் கசந்து கொள்ளாதிருங்கள்" - (எபே 5:25

புருஷர்களுக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1 கிறிஸ்துசபைக்குத் தலையாயிருக்கிறது போல புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்க வேண்டும். (எபே 5:23)

3 அதிகாரம்

2. புருஷர்கள் தங்கள் மனைவிகளில் அன்புகூரவேண்டும். (எபே 5:25)

3. புருஷர்கள் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூர வேண்டும். (எபே 5:28, 33)

4. புருஷன் தன் சொந்த சரீரமாக இருக்கும் தன் மனைவியைப் போஷிக்க வேண்டும்.

5. புருஷன் தன் சொந்த சரீரமாக இருக்கும் தன் மனைவியைக் காப்பாற்ற வேண்டும்.

3. பிள்ளைகளின் கடமைகள் - (எபே 6:1)

கொலோ 3:20 பிள்ளைகளே, உங்களைப் பெற்றாருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்; இது கர்த்தருக்குப் பிரியமானது.

"பிள்ளைகளே, உங்களைப் பெற்றாருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்" (எபே 6:1-3)

பிள்ளைகளுக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள் (கொலோ 3:20)

1. தங்கள் பெற்றாருக்குக் கீழ்ப்படிய வேண்டும். (எபே 6:1)

2. தங்கள் பெற்றாரைக் கனம் பண்ண வேண்டும். (எபே 6:3)

பிள்ளைகள் தங்கள் பெற்றாருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதற்குக் காரணங்கள்

1. இது நியாயம் (எபே 6:1)

2. இது வாக்குத்தத்தமுள்ள கற்பனை (எபே 6:3, யாத் 20:12)

3. பிள்ளைகளுக்கு நன்மை உண்டாயிருக்கும். (எபே 6:2)

4. பிள்ளைகளுடைய வாழ்நாள் நீடித்திருக்கும். (எபே 6:2)

4. பிதாக்களின் கடமைகள் - (எபே 6:2)

கொலோ 3:21 பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் திடனற்றுப்போகாதபடி, அவர்களுக்குக் கோபமூட்டாதிருங்கள்.

"பிதாக்களே உங்கள் பிள்ளைகள் திடனற்றுப்போகாதபடி, அவர்களுக்குக் கோபமூட்டாதிருங்கள்" - (எபே 6:4)

திடனற்றுப் போதல் (be discouraged) - ἀθυμέω - athymeoo - 120

வினைச்சொல் - திடனற்றுப் போ

5. வேலைக்காரரின் கடமைகள் - (எபே 6:5)

கொலோ 3:22 வேலைக்காரரே, சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்து, நீங்கள் மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், தேவனுக்குப் பயப்படுகிறவர்களாகக் கபடமில்லாத இருதயத்தோடே ஊழியஞ்செய்யுங்கள்.

கொலோ 3:23 நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து,

கொலோ 3:24 எதைச் செய்தாலும், அதை மனுஷருக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்.

கொலோ 3:25 அநியாயஞ்செய்கிறவன் தான் செய்த அநியாயத்துக்கேற்ற பலனை அடைவான்; பட்சபாதமே இல்லை.

"வேலைக்காரரே, ... கபடமில்லாத இருதயத்தோடே ஊழியஞ்செய்யுங்கள்" (எபே 6:5-8)

BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

கொலோசெயர் – தொகுப்புரை

3 அதிகாரம்

வேலைக்காரருக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1 உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்குக் கீழ்ப்படியுங்கள் (கொலோ 3:22)

2 உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்குப் பயத்தோடும் நடுக்கத்தோடும் கபடமற்ற மனதோடும் ஊழியம் செய்யுங்கள் (எபே 6:5)

3 மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல் இருங்கள் (எபே 6:6; கொலோ 3:22)

4 கிறிஸ்துவின் ஊழியக்காரராக மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள் (எபே 6:6)

5 அவனவன் செய்கிற நன்மையின்படியே கர்த்தரிடத்தில் பலனை அடைவானென்று அறிந்து ஊழியம் செய்யுங்கள் (எபே 6:7; கொலோ 3:23)

6 மனுஷருக்கென்று ஊழியஞ் செய்யாமல் கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ்செய்யுங்கள் (எபே 6:8; கலா 6:7-8; கொலோ 3:24-25)

தீர்க்கதரிசன எண் - 2

"நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து, அநியாயஞ்செய்கிறவன் தான் செய்த அநியாயத்துக்கேற்ற பலனை அடைவான்; பட்சபாதமே இல்லை" (கொலோ 3:23-25) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

கொலோசெயர் – தொகுப்புரை

4 அதிகாரம்

6. எஜமான்களின் கடமைகள் - (எபே 6.9)

கொலோ 4:1 எஜமான்களே உங்களுக்கும் பரலோகத்தில் எஜமான் இருக்கிறாரென்று அறிந்து வேலைக்காரருக்கு நீதியும் செவ்வாயுமானதைச் செய்யுங்கள்

"வேலைக்காரருக்கு நீதியும் செவ்வாயுமானதைச் செய்யுங்கள் - (எபே 6.9)

எஜமான்களுக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள் (கொலோ 4:1)

1. வேலைக்காரருக்குச் செய்ய வேண்டியவைகளைச் செய்யுங்கள் (எபே 6:9; கொலோ 4:1)
2. அவர்களுக்கும் உங்களுக்கும் எஜமானானவர் பரலோகத்தில் இருக்கிறாரென்றும் அவரிடத்தில பட்சபாதம் இல்லையென்றும் அறிந்து கொள்ளுங்கள் (எபே 6:9)
3. கடுஞ்சொல்லை விட்டுவிடுங்கள் (எபே 6:9, ரோமர் 2:11, கொலோ 4:1)

V. கடைசி புத்திமதிகள்

1. ஜெபிக்க வேண்டுமென்றும் பரிசுத்தமாயிருக்க வேண்டுமென்றும் ஏழு அம்ச வேண்டுகோள்

கொலோ 4:2 இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடனே ஜெபத்தில் விழித்திருங்கள்

கொலோ 4:3 கிறிஸ்துவினுடைய இரகசியத்தினிமித்தம் கட்டப்பட்டிருக்கிற நான் அந்த இரகசியத்தைக் குறித்துப் பேச வேண்டியபிரகாரமாய்ப் பேசி, அதை வெளிப்படுத்துவதற்கு,

கொலோ 4:4 திருவசனம் செல்லும்படியான வாசலை தேவன் திறந்தருளும்படி எங்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுங்கள்

கொலோ 4:5 புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து, காலத்தைப் பிரயோஜனப் படுத்திக்கொள்ளுங்கள்

கொலோ 4:6 அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்ல வேண்டுமென்று நீங்கள் அறியும் படிக்கு உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக

இடைவிடாமல் (Continue) - προσκαρτερέω - proskartereoo - 4342

வினைச்சொல் - நெருங்கிவா, உறுதியாய்த் தரி, ஒருமனப்படு, பற்றிக்கொள், இடைவிடாமல் பண்ணு (to be earnest toward a thing; persevere; be constantly diligent; attend to it continually or regularly) (ரோமர் 12:12, கொலோ 4:2, அப 1:14)

இடைவிடாமல் ஜெபம் பண்ணுவதினால் எளிதாக நடைபெறக்கூடிய காரியங்கள்

1. பாவங்களை உண்டுபண்ணுகிற அவயவங்களை அழித்துப்போடலாம் (கொலோ 3:5)
2. பழைய மனுஷனையும், அவன் செய்கைகளையும் களைந்துபோடலாம் (கொலோ 3:9)
3. புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளலாம் (கொலோ 3:10)
4. கொலோ 3:17 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் காரியங்களைச் செய்யலாம்
5. மனைவிகள் கர்த்தருக்கேற்கும்படி தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியலாம் (கொலோ 3:18)
6. புருஷர்கள் தங்கள் மனைவிகள்மீது கசந்துகொள்ளாமல் அன்புகூரலாம் (கொலோ 3:19)

கொலோசெயர் – தொகுப்புரை

4 அதிகாரம்

7 பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு எல்லாக் காரியத்திலும் கீழ்ப்படியலாம். கொலோ 3.20

8 பிதாக்கள் தங்கள் பிள்ளைகளை நேசிக்கலாம் (கொலோ 3.21)

9 வேலைக்காரர் தேவனுக்குப் பயப்படுகிறவர்களாக கபடமில்லாத இருதயத்தோடே ஊழியம் செய்யலாம் கொலோ 3.22-25

10 எஜமான்கள் தங்கள் வேலைக்காரருக்கு நீதியும் செம்மையுமானதைச் செய்யலாம் கொலோ 4:1

மேலே கூறப்பட்டிருக்கும் காரியங்களை நடைமுறையில் செயல்படுத்துவதற்கு நமக்குக் கடினமாக இருக்கும்போது தேவனுடைய கிருபை நமக்கு உதவி புரிய வேண்டுமென்று ஜெபிக்க வேண்டும்.

எல்லா விசுவாசிகளும் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டிய காரியங்கள்

1 இடைவிடாமல் ஜெபம் பண்ண வேண்டும். (கொலோ 4.2)

2 ஜெபத்தில் விழித்திருக்க வேண்டும் (கொலோ 4.2

3 தேவனுக்கு ஸ்தோத்திரம் பண்ண வேண்டும். (கொலோ 4:2)

4 ஊழியக்காரருக்காகவும் அவர்களுடைய ஊழியங்களுக்காகவும் ஜெபிக்க வேண்டும் கொலோ 4.3)

5 சவிசேஷத்தின் ஜெயத்திற்காக ஜெபிக்க வேண்டும் கொலோ 4.3 4)

6 மனுஷருக்கு முன்பாக கிறிஸ்தவ ஜீவியம் ஜீவிக்க வேண்டும். கொலோ 4.5

7 தேவனுக்காகக் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ள வேண்டும் கொலோ 4.5)

8 அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்ல வேண்டுமென்று அறிந்திருக்க வேண்டும். (கொலோ 4:6)

சாரமேறினது (seasoned) - ἀρτύω - artyoo - 741

வினைச்சொல் - சாரமுண்டாக்கு. சாரமாக்கு, சாரமேறினதாயிரு (spice, seasoning) (மாற்கு 9:50 லூக்கா 14.34, கொலோ 4:6) நமது வார்த்தைகள் எப்போதும் பாவத்தை எதிர்த்து நிற்க வேண்டும் அதே சமயத்தில் பரிசுத்தமானதாகவும் ஞானமுள்ளதாகவும் கிருபை பொருந்தியதாகவும் ஆவிக்குரியதாகவும் இருக்க வேண்டும்.

2. சுவிசேஷத்தில் ஐந்து உடன் ஊழியர்களைப் பற்றிய காரியங்கள்

கொலோ 4:7 பிரியமான சகோதரனும், உண்மையுள்ள ஊழியக்காரனும் கர்த்தருக்குள் எனக்கு உடன் வேலையாளுமாயிருக்கிற தீகிக்கு என்பவன் என் செய்திகளையெல்லாம் உங்களுக்கு அறிவிப்பான்

கொலோ 4:8 உங்கள் செய்திகளை அறியவும், உங்கள் இருதயங்களைத் தேற்றவும்

கொலோ 4:9 அவனையும், உங்களிலொருவனாயிருக்கிற உண்மையும் பிரியமுமுள்ள சகோதரனாகிய ஒநேசிமு என்பவனையும் உங்களிடத்தில் அனுப்பியிருக்கிறேன் அவர்கள் இவ்விடத்துச் செய்திகளையெல்லாம் உங்களுக்கு அறிவிப்பார்கள்

கொலோ 4:10 என்னோடேகூடக் காவலிருக்கிற அரிஸ்தர்க்கு உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறான் பர்னபாவுக்கு இனத்தானாகிய மாற்கும் வாழ்த்துதல் சொல்லுகிறான், இவனைக் குறித்துக் கட்டளை பெற்றீர்களே இவன் உங்களிடத்தில் வந்தால் இவனை அங்கிகரித்துக் கொள்ளுங்கள்

கொலோசெயர் – தொகுப்புரை

4 அதிகாரம்

கொலோ 4:11 யுஸ்து என்னப்பட்ட இயேசுவும் வாழ்த்துதல் சொல்லுகிறான் விருத்த சேதனமுள்ளவர்களில் இவர்கள் மாத்திரம் தேவனுடைய ராஜ்யத்தின் பொருட்டு என் உடன் வேலையாட்களாயிருந்து, எனக்கு ஆறுதல் செய்துவந்தவர்கள்

"தீகிக்கு" (Tychicus) - (அப 20:4)

"ஒநேசிமு" (Onesimus) - கொலோசெ பட்டணத்தான் ரோமாபுரியில் பவுலின் ஊழியத்தின் மூலமாக இரட்சிக்கப்பட்டவன் பிலேமோனின் அடிமையாக இருந்து ஓடிப்போனவன் (பிலே 1:10)

"அரிஸ்தர்க்கு" (Aristarchus) - ரோமாபுரியில் பவுலோடு சிறைச்சாலையில் இருந்தவன் அப 19:29

"மாற்கு" (Marcus) - யோவான் மாற்கு. (John Mark) (அப 12:12

"யுஸ்து என்னப்பட்ட இயேசுவும்" (Justus) - (அப 18:7), அப 1:23 ஆவது வசனத்தில் சீட்டுப் போடுவதற்கு இரண்டு பெயரையும் தெரிந்தெடுத்திருந்தார்கள் இந்த யுஸ்துவும், அவனும் ஒரே நபரா என்பது சரியாகத் தெரியவில்லை

"எனக்கு ஆறுதல் செய்துவந்தவர்கள்" தீகிக்கு, ஒநேசிமு, அரிஸ்தர்க்கு, மாற்கு யுஸ்து ஆகியோர் பவுலின் உடன் ஊழியக்காரர்களாக இருந்தவர்கள் அரிஸ்தர்க்கு, மாற்கு, யுஸ்து ஆகிய மூவரும் யூதர்கள் இக்காலத்தில் ரோமாபுரியில் பவுல் பேராயராக இல்லை இந்த நிருபம் கி.பி 64 ஆம் ஆண்டில் எழுதப்பட்டது. இக்காலத்தில்தான் பேதுரு பேராயராக இருந்தார் என்று ஒருசிலர் கூறுகிறார் வேறு சிலரோ கி.பி 29-67 ஆகிய வருஷங்களில் பேதுரு பேராயராக இருந்தார் என்று கூறுகிறார்கள் பவுல் பேதுருவின் பெயரை வேண்டுமென்றே குறிப்பிடவில்லையா என்பதும் தெரியவில்லை பேதுரு ரோமாபுரியில் இருந்ததற்கான தெளிவான சான்று எதுவும் கிடைக்கவில்லை

3. சகோதரரிடமிருந்து வாழ்த்துக்கள்

கொலோ 4:12 எப்பாப்பிராவும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறான் உங்களைச் சேர்ந்தவனும் கிறிஸ்துவின் ஊழியக்காரனுமாகிய இவன் நீங்கள் தேவனுக்குச் சித்தமானவைகளெல்லாவற்றிலும் தேறினவர்களாயும் பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலைநிற்க வேண்டுமென்று தன் ஜெபங்களில் உங்களுக்காக எப்பொழுதும் போராடுகிறான்

கொலோ 4:13 இவன் உங்களுக்காகவும் லவோதிக்கேயருக்காகவும் எராப்போலியருக்காகவும் மிகுந்த ஜாக்கிரதையுள்ளவனாயிருக்கிறானென்பதற்கு நான் சாட்சியாயிருக்கிறேன்

கொலோ 4:14 பிரியமான வைத்தியனாகிய லூக்காவும் தேமாவும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்

"எப்பாப்பிரா" (Epaphras) - (கொலோ 1:7)

"நீங்கள் தேவனுக்குச் சித்தமானவைகளெல்லாவற்றிலும் தேறினவர்களாயும் பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலைநிற்கவேண்டும்" ஆதித்திருச்சபையின் பிரசங்கியார்களுடைய உள்ளத்தில் விசுவாசிகளைக் குறித்து இப்படிப்பட்ட வாஞ்சையே ஆழமாகப் பதிந்திருந்தது.

"லவோதிக்கேயா" (Laodicea) - கொலோசெக்கு மேற்கே பிரிகியாவில் உள்ளது. (வெளி 3:14)

"எராப்போலி" (Hierapolis) - கொலோசெக்கு அருகே பிரிகியாவில் உள்ள பட்டணம். அக்காலத்தில் இது ஒரு பரிசுத்த பட்டணம் என்று அழைக்கப்பட்டது. ஏனெனில் இந்தப் பட்டணத்தில் அப்பொல்லோ தியானாள், ஊகியா அஸ்குலேபியஸ் ஆகிய புறஜாதி தெய்வங்களுக்கு கோவில்கள் கட்டப்பட்டிருந்தன

"தேமா" (Demas) - பவுலை விட்டு பின்வாங்கிப் போய்விட்டவன் (2 தீமோ 4:10, பிலே 24)

கொலோசெயர் – தொகுப்புரை

4 அதிகாரம்

4. முடிவுரை

கொலோ 4:15 லவோதிக்கேயாவிலிருக்கிற சகோதரரையும், நிம்பாவையும் அவன் வீட்டில் கூடுகிற சபையையும் வாழ்த்துங்கள்

கொலோ 4:16 இந்த நிருபம் உங்களிடத்தில் வாசிக்கப்பட்டபின்பு இது லவோதிக்கேயா சபையில் வாசிக்கப்படும்படி செய்யுங்கள் லவோதிக்கேயாவிலிருந்து வரும் நிருபத்தை நீங்களும் வாசியுங்கள்

கொலோ 4:17 அர்க்கிப்பைக் கண்டு நீ கர்த்தரிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றும்படி கவனமாயிருப்பாயாக என்று சொல்லுங்கள்

"நிம்பா" (Nymphas) லவோதிக்கேயாவிலிருந்த கிறிஸ்தவன் இவனுடைய வீட்டில் தேவனை ஆராதிப்பதற்காக சபையார் கூடிவந்தார்கள்

"இந்த நிருபம் உங்களிடத்தில் வாசிக்கப்பட்டபின்பு________ நிருபத்தை நீங்களும் வாசியுங்கள்" ஒரு சபைக்கு எழுதப்பட்ட நிருபத்தை அக்காலத்தில் மற்ற சபைகளிலும் வாசித்தார்கள் லவோதிக்கேயாவிலிருந்து வந்த நிருபத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று இங்கு விளக்கப்படவில்லை

அது எபேசியருக்கு எழுதின நிருபமாக இருக்கலாம் என்று ஒருசிலர் கருதுகிறார்கள் வேறுசிலரோ லவோதிக்கேயாவிலிருந்து அப்போஸ்தலருக்கு எழுதப்பட்ட நிருபமாக இருக்கலாம் என்று கருதுகிறார்கள் மற்றும் சிலர் இந்த நிருபம் லவோதிக்கேயருக்கு எழுதப்பட்டது என்றும் அது பிறகாலத்தில் காணாமல் போய்விட்டதும் என்று கருதுகிறார்கள்

"அர்க்கிப்பு" (Archippus) - இந்த வசனத்தில் மட்டுமே கூறப்பட்டிருக்கும் இவனைப் பற்றி வேறு எதுவும் தெளிவாகத் தெரியவில்லை இவன் தேவனுடைய ஊழியக்காரனென்றும் தன்னுடைய ஊழியத்தில் கவனமாக இருந்தவனென்றும் தெரியவருகிறது கவனமாயிருப்பாயாக என்று அவனுக்கு ஆலோசனை கூறப்பட்டிருப்பதினால் அவன் ஊழியத்தில் கவனமில்லாமல் இருந்தான் என்று முடிவு செய்துவிடக்கூடாது.

5. வாழ்த்துரையும் ஆசீர்வாதமும்

கொலோ 4:18 பவுலாகிய நான் என் கையினால் எழுதி, உங்களை வாழ்த்துகிறேன் நான் கட்டப்பட்டிருக்கிறதை நினைத்துக் கொள்ளுங்கள் கிருபை உங்களோடிருப்பதாக. ஆமென்

"பவுலாகிய நான் என் கையினால் எழுதி, உங்களை வாழ்த்துகிறேன்" - இந்த வாழ்த்துதல் மட்டும் பவுல் தன் கைப்பட எழுதியதாகும். இந்த நிருபத்திலுள்ள மற்ற வசனங்களை பவுல் தன் வாயினால் கூற மற்றவர்கள் எழுதினார்கள்

I தெசலோனிக்கேயர் - முன்னுரை

காலமும் இடமும்

கி.பி. 54 ஆம் ஆண்டு பவுல் இந்த நிருபத்தை கொரிந்துவிலிருந்து எழுதினார். பவுல் எழுதிய 14 நிருபங்களில் இதுவே முதலாவது எழுதப்பட்ட நிருபமாகும்.

ஆசிரியர்

பவுல்

மையக்கருத்து

பவுல் ஏற்கெனவே புதிய விசுவாசிகளுக்கு உபதேசம் பண்ணியிருந்த அடிப்படை சத்தியங்களை உறுதிபண்ணுகிறார்.

2 பரிசுத்தத்தில் தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டுமென்று புத்தி கூறுகிறார்.

3 கிறிஸ்துவிற்குள் ஏற்கெனவே நித்திரையடைந்திருக்கிறவர்களைக் குறித்து ஆறுதல் கூறுகிறார்.

4 இந்த நிருபத்தில் கூறப்பட்டிருக்கும் சத்தியங்கள் சுமார் ஒரு மாதக்காலத்தில் உபதேசம் பண்ணப்பட்டவையாகும். (அப் 17:1-9)

5 பவுலின் ஊழியத்தின் மூலமாக இரட்சிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் புறஜாதி மார்க்கத்திலிருந்து வந்தவர்கள். பவுல் எல்லோருக்கும் தேவனுடைய வல்லமையை உபதேசம் பண்ணினார். புதிய விசுவாசிகள் தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்தினார்கள். (1தெச 1:8; 1தெச 2:13-14; 1தெச 3:6; 2தெச 1:3,11; 2தெச 2:17)

6 இந்த நிருபத்தின் எல்லா அதிகாரத்திலும் கர்த்தருடைய வருகையைப் பற்றி பவுல் கூறியிருக்கிறார். (1தெச 1:10; 1தெச 2:12,19; 1தெச 3:13; 1தெச 4:13-18; 1தெச 5:1-11)

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 5

வசனங்கள் - 89

கேள்விகள் - 3

புதிய தீர்க்கதரிசனங்கள் - 5

வரலாற்றைக் குறிக்கும் வசனங்கள் - 69

பொருளடக்கம்

I. முன்னுரை

1 ஆசிரியரும் வாழ்த்துரையும் (1:1)

2 ஜெபமும் ஸ்தோத்திரமும் (1:2)

II. முன்மாதிரியான சபை - சபையின் நான்கு அம்ச ஆசீர்வாத நிலைமை (1:3-4)

III. முன்மாதிரியான சுவிசேஷகர் - பிரசங்கம் பண்ணியதை உறுதி பண்ணுகிறார் (1:5)

IV. முன்மாதிரியான விசுவாசிகள் - சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டு அதை மற்றவர்களுக்கும் அறிவிக்கிறார்கள் (1:6-10)

V. முன்மாதிரியான ஊழியக்காரர்

1 தைரியமும் உபத்திரவமும் (2:1-2)

2 கண்ணியமும் பரிசுத்தமும் (2:3)

3 நம்பிக்கையும் விசுவாசமும் (2:4)

4 வார்த்தையில் எளிமையும் சுயநலமின்மையும் (2:5)

5 தாழ்மையும் மற்றவரைக் குறித்த கரிசனையும் (2:6)

6 பட்சமும் அன்பும் (2:7-8)

7 சுயதியாகம் (2:9)

8 பிழையில்லாத நடத்தை (2:10)

I தெசலோனிக்கேயர் – முன்னுரை

9 பெற்றோரின் பராமரிப்பும் பயிற்சியும் (2:1-12)

10 சுவிசேஷத்தின் வல்லமை அதை விசுவாசிக்கிற யாவருக்குள்ளும் பெலன் செய்கிறது (2:13)

11 சத்தியத்தை எதிர்க்கும் சாத்தானோடும் துன்மார்க்கரோடும் போராட்டம் (2:14-18)

12 பிரயாசத்திற்கு வெகுமதிகள் (2:19-20)

VI. சபையைக் குறித்து பவுலின் கரிசனை

1 தீமோத்தேயுவின் ஊழியம் (3:1-5)

2 தீமோத்தேயு பவுலிடம் அறிவித்தது (3:6)

3 பவுலின் ஜெபமும் [illegible] விசுவாசத்தில பரிபூரணம் அடையவேண்டும் என்னும் வாஞ்சையும் (3:7-13)

VII. விசுவாசிகள் நடக்க வேண்டிய விதமும் ஆனந்தபாக்கிய நம்பிக்கையும்

1 தேவனைப் பிரியப்படுத்தி பக்தியுடன் நடக்க வேண்டும் என்னும் புத்திமதி (4:1-2)

2 உண்மையான பரிசுத்தமாதல் (4:3-7)

3 அன்பில பெருக வேண்டும் என்னும் கட்டளை (4:8-10)

4. யோக்கியமாய் நடந்து உலகத்தில் முன்மாதிரியாக ஜீவிக்க வேண்டும் (4:11-12)

5 சபை எடுத்துக்கொள்ளபடும் விதமும் பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களும் (4:13-18)

VIII. கர்த்தருடைய நாள்

1 கர்த்தருடைய நாளை எவ்வாறு தெரிந்து கொள்வது (5:1-3)

2 கர்த்தருடைய நாள் விசுவாசிகளை திருடனைப்போல பிடித்துக் கொள்ளக்கூடாது (5:4-5)

3 கர்த்தருடைய நாளைக் குறித்து விசுவாசிகள் செய்ய வேண்டிய காரியம் (3:6-8)

4 கர்த்தருடைய நாளுக்கு முன்பாக விசுவாசிகள் எடுத்துக் கொள்ளபடுவார்கள் (5:9-11)

IX. நடைமுறை உபதேசங்கள்

1 ஊழியக்காரரை மதிக்க வேண்டும் (5:12-13)

2 கிறிஸ்துவின் வருகையின் நிமித்தம் கிறிஸ்தவருக்கு பதினான்கு கட்டளைகள் (5:14-22)

3 சபை எடுத்துக் கொள்ளப்படும்போது நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகியவை குற்றமற்றதாயிருக்கும்படி காக்கபட வேண்டும் (5:23-24)

X. முடிவுரையும் ஆசீர்வாதமும் (5:25-28)

I தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

1 அதிகாரம்

I. முன்னுரை

1. ஆசிரியரும் வாழ்த்துரையும்

1தெச 1:1 பவுலும், சில்வானும் தீமோத்தேயும், பிதாவாகிய தேவனுக்குள்ளும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள்ளும் இருக்கிற தெசலோனிக்கேயர் சபைக்கு எழுதுகிறதாவது, நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

"பவுல்" (Paul) - பவுல் தன்னைப் பற்றி எழுதும்போது பொதுவாக "அப்போஸ்தலனாகிய பவுல்" என்று எழுதுவது வழக்கம். ஆயினும் 1, 2 தெசலோனிக்கேயர், பிலிப்பியர், பிலேமோன் ஆகிய நிருபங்களில் பவுல் தன்னைச் சாதாரணமாக "பவுல்" என்றே குறிப்பிடுகிறார். இந்தச் சபையார் பவுலின்மீது அதிகமாக அன்பு வைத்திருந்தார்கள். ஆகையினால் தன்னுடைய அப்போஸ்தல அதிகாரத்தை இவர்கள் மத்தியில் வலியுறுத்த வேண்டிய அவசியம் பவுலுக்கு ஏற்படவில்லை.

"சில்வானு" (Silvanus) மறுபெயர் சீலா (Silas). பவுலின் இரண்டாம் மிஷினெரி பிரயாணத்தின்போது உடன் சென்றவர். மக்கெதோனியாவிலுள்ள சபைகளை ஸ்தாபிப்பதில் சில்வானுவும் (சீலாவும்) பங்கு பெற்றிருந்தார் (அப் 15:40; 18:18).

"பிதாவாகிய தேவனுக்குள்ளும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள்ளும் இருக்கிற தெசலோனிக்கேயர் சபை" தெசலோனிக்கேயருக்கு எழுதின இரண்டு நிருபங்களில் மட்டுமே இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது. மற்ற நிருபங்களில் பவுலின் வாழ்த்துதல் வேறு விதமாக இருக்கும்.

"நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக" பிதாவாகிய தேவனும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் தனித்தனியாக வெவ்வேறு ஆள்தத்துவப் பண்புடையவர்கள் என்று இந்த வசனம் இரண்டு முறை வலியுறுத்திக் கூறுகிறது. விசுவாசிகள் பிதாவாகிய தேவனுக்குள்ளும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிற்குள்ளும் இருக்கிறார்கள். இவர்களிடமிருந்து பவுல் மூலமாக விசுவாசிகளுக்கு வாழ்த்துதல் வருகிறது.

2. ஜெபமும் ஸ்தோத்திரமும்

1தெச 1:2 தேவனுக்குப் பிரியமான சகோதரரே, உங்கள் விசுவாசத்தின் கிரியையும், உங்கள் அன்பின் பிரயாசத்தையும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள உங்கள் நம்பிக்கையின் பொறுமையையும், நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக, நாங்கள் இடைவிடாமல் நினைவுகூர்ந்து

நினைவுகூரவேண்டிய காரியங்கள்

1. விசுவாசத்தின் கிரியை (Work of faith) - புறஜாதியார்கள் விக்கிரகாராதனையிலிருந்து மெய்யான தேவனிடத்திற்கு மனம் திரும்பியிருக்கிறார்கள்.

2. அன்பின் பிரயாசம் (Labor of love) - ஜீவனுள்ள மெய்யான தேவனை ஆராதிக்கிறார்கள்.

3. நம்பிக்கையின் பொறுமை (Patience of hope) - பரலோகத்திலிருந்து தேவகுமாரன் வருவதற்கு பொறுமையோடு காத்திருக்கிறார்கள்.

"விசுவாசத்தின் கிரியை" இவர்களுடைய விசுவாசம் செத்த விசுவாசமோ அல்லது தூக்கம் பண்ணும் விசுவாசமோ அல்ல. இவர்களுடைய விசுவாசம் ஜீவனுள்ளது, உண்மையுள்ளது. கிரியை நடப்பிக்கக் கூடியது (1தெச 1:3,5-8; 1தெச 2:13-14; 2தெச 1:3,11; 2தெச 2:17; 2தெச 3:1,9)

I தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

1 அதிகாரம்

"அன்பின் பிரயாசம்" - அவர்களுடைய விசுவாசத்தின் கிரியையை அன்பின் பிரயாசம் தாங்குகிறது. விசுவாசம் மட்டும் இருந்தால் போதாது. நாம் விசுவாசத்தோடு கிரியையும் நடப்பிக்க வேண்டும் தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் வரங்களை அன்புடன் பயன்படுத்த வேண்டும் (கொரி 13)

II. முன்மாதிரியான சபை - சபையின் நான்கு அம்ச ஆசீர்வாத நிலைமை - (அப 2:42-47; 4:32-37; 5:12-16)

1தெச 1:3 நீங்கள் தெரிந்துகொள்ளப் பட்டவர்களென்று நாங்கள் அறிந்து

1தெச 1:4 எங்கள் ஜெபங்களில் இடைவிடாமல் உங்களைக் குறித்து விண்ணப்பம் பண்ணி உங்களெல்லாருக்காகவும் எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கிறோம்

"தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்" பவுல் இங்கே கூறி வரும் புறஜாதியார் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் (லூக்கா 18:7) இஸ்ரவேல ஜனங்கள் தங்கள் பாவத்தில் விழுந்து தேவனை மறுதலித்து விட்டார்கள் ஆகையினால் சுவிசேஷத்திற்கு பிரதிநிதிகளாக இருக்குமாறு தேவன் அவர்களை அங்கீகரிக்கவில்லை அவர்களுடைய இடத்தில் தேவன் புறஜாதியாரைத் தெரிந்து கொண்டார் (மத் 21:43, மத் 23:37-39, ரோமர் 11:11-29). தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் இறுமாப்போடு இருக்க முடியாது. மிகுந்த எச்சரிப்போடு இருக்க வேண்டும் ஏனெனில் தேவனுடைய தெரிந்தெடுப்பு நிபந்தனைக்குட்பட்டது. தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டவர் பாவத்தில் விழும்போது அவர் தன்னுடைய தெரிந்தெடுப்பின் சிலாக்கியத்தை இழந்து போகிறார் தேவன் யூதமார்க்கத்தாரை 2,300 வருஷங்களாக தம்முடைய பிள்ளைகளாகத் தெரிந்து கொண்டார் ஆனால் இப்போது அவர்கள் தேவனால் புறக்கணிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள் (ரோமர் 11)

"எங்கள் ஜெபங்களில் இடைவிடாமல் உங்களைக் குறித்து விண்ணப்பம்பண்ணி, உங்களெல்லாருக்காகவும் எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கிறோம் - பிலி 1:3-4 கொலோ 1:3 ஆகிய வசனங்களில் இதே கருத்தும், இதே வார்த்தைகளும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

III. முன்மாதிரியான சுவிசேஷகர் - பிரசங்கம் பண்ணியதை உறுதி பண்ணுகிறார் - (மத் 4:23; 10:1-8 28:19-20; மாற்கு 16:15-20; அப் 1:1-8 ரோமர் 15:18-19,29; 1கொரி 2:4 4:18-21; எபி 2:1-4

1தெச 1:5 எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடே மாத்திரமல்ல வல்லமையோடும் பரிசுத்த ஆவியோடும் முழுநிச்சயத்தோடும் வந்தது நாங்களும் உங்களுக்குள்ளே இருந்தபோது உங்கள் நிமித்தம் எப்படிப்பட்டவர்களாயிருந்தோமென்று அறிந்திருக்கிறீர்கள்

சுவிசேஷம் பிரசங்கிக்கப்படவேண்டிய விதம்

1 வசனத்தோடு **(In word)** (1தெச 1:5, மத் 28:20; மாற்கு 16:15, லூக்கா 24:47; 1கொரி 1:18-24

2 வல்லமையோடு **(In power)** (1தெச 1:5 மத் 17:20 மாற்கு 16:16-17; லூக்கா 24:49 யோவான் 14:12; 1கொரி 4:20

3 பரிசுத்த ஆவியோடு **(In the Holy Spirit)** (1தெச 1:5 லூக்கா 24:49 அப 1:4-8; ரோமர் 15:18-20,29, எபி 2:4)

4 முழு நிச்சயத்தோடு **(In much assurance)** (1தெச 1:5, கொலோ 2:2

"பரிசுத்த ஆவியோடும், முழுநிச்சயத்தோடும்" - சுவிசேஷத்தை பரிசுத்த ஆவியோடும் முழு நிச்சயத்தோடும் வல்லமையோடும் பவுல் பிரசங்கம் பண்ணினார் அதற்காக அவர் பல பாடுகளையும் அனுபவித்தார் (1தெச 1:6, அப 17)

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

1 அதிகாரம்

IV. **முன்மாதிரியான விசுவாசிகள் - சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டு அதை மற்றவர்களுக்கும் அறிவிக்கிறார்கள்** - (மாற்கு 16:17-20; அப் 8:4; 11:19-21; பிலி 1:7)

1தெச 1:6 நீங்கள் மிகுந்த உபத்திரவத்திலே, பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே, திருவசனத்தை ஏற்றுக்கொண்டு, எங்களையும் கர்த்தரையும் பின்பற்றுகிறவர்களாகி

1தெச 1:7 இவ்விதமாய் மக்கெதோனியாவிலும் அகாயாவிலுமுள்ள விசுவாசிகள் யாவருக்கும் மாதிரிகளானீர்கள்

1தெச 1:8 எப்படியெனில் உங்களிடத்திலிருந்து கர்த்தருடைய வசனம் மக்கெதோனியாவிலும் அகாயாவிலும் தொனித்ததுமல்லாமல் நாங்கள் அதைக்குறித்து ஒன்றும் சொல்ல வேண்டியதாயிராதபடிக்கு தேவனைப்பற்றின உங்கள் விசுவாசம் எங்கும் பிரசித்தமாயிற்று.

1தெச 1:9 ஏனென்றால், அவர்கள் தாமே எங்களைக் குறித்து, உங்களிடத்தில் நாங்கள் அடைந்த பிரவேசம் இன்னதென்பதையும் ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு, நீங்கள் விக்கிரகங்களை விட்டு தேவனிடத்திற்கு மனந்திரும்பினதையும்,

1தெச 1:10 அவர் மரித்தோரிலிருந்து எழுப்பினவரும், இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவருமாயிருக்கிற அவருடைய குமாரனாகிய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை நீங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறதையும் அறிவிக்கிறார்களே

பின்பற்றுகிறவர் (followers) **μιμητής - mimeetees** - 3402

ஆண்பால் பெயர்ச்சொல் - பின்பற்றுகிறவர் (1கொரி 4:16)

உபத்திரவம் (affliction) - **θλῖψις - thlipsis** - 2347

பெண்பால் பெயர்ச்சொல் - உபத்திரவம், வருத்தம் (பிலி 4:14)

"பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே" - தேவனுடைய வார்த்தையை பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே ஏற்றுக் கொள்ள வேண்டும். விசுவாசிகளிடத்தில் இந்த சந்தோஷம் எப்பொழுதும் காணப்பட வேண்டும். ஆதித்திருச் சபையில் தேவனுடைய வல்லமை வெளிப்பட்டுக் கொண்டேயிருந்தது. அதனால் விசுவாசிகள் எப்போதும் பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே கஷ்டத்தை ஏற்றுக் கொண்டார்கள். அப்பேர்ப்பட்ட தெய்வீக வல்லமை தற்காலத்திலும் திருச்சபைகளில் வெளிப்பட வேண்டும். (1தெச 1:3,5; 1தெச 2:13-14; 2தெச 1:3,11; 2தெச 2:17; 2தெச 3:19; எபி 2:4)

மாதிரிகள் (ensamples) - **τυπικῶς - typikoos** - 5179

ஆண்பால் பெயர்ச்சொல் - சொரூபம், மாதிரிரூபம், திருஷ்டாந்தம் (பிலி 3:17) - மக்கெதோனியாவிலும் அகாயாவிலும் உள்ள சபைகளுக்கு இந்த விசுவாசிகள் மாதிரிகளானார்கள் (1தெச 1:7-8). விசுவாசத்தின் பொறுமைக்காக மட்டுமல்லாமல் விசுவாசிக்கிறவர்கள் மூலமாக நடைபெறும் அற்புதங்களுக்கும், அடையாளங்களுக்கும் இவர்கள் மாதிரிகளானார்கள் (1தெச 2:13-14; 2தெச 1:11). இவர்கள் கர்த்தரையும், அப்போஸ்தலரையும் பின்பற்றினார்கள் (1தெச 1:6). யூதேயாவிலுள்ள திருச்சபையார் தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்தினார்கள் (1தெச 2:14; அப் 2:43; அப் 3:6; அப் 5:16; அப் 6:3,8; அப் 11:21)

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

1 அதிகாரம்

தொனித்தது (sounded out) ἐξηχέω - exeecheoo - 1837

வினைச்சொல் - தொனி (to sound forth; publish) - தெசலோனிக்கேயரிலிருந்து ஊழியக்காரர்கள் தேவனுடைய வசனத்தைப் பிரசங்கிக்கவும், தேவனுடைய வார்த்தையை உறுதி பண்ணவும் மக்கெதோனியா அகாயா ஆகிய பிற இடங்களுக்கும் சென்றார்கள். ஆதித்திருச்சபையார் இயேசு கிறிஸ்துவின் பிரதான கற்பனைக்குக் கீழ்ப்படிந்தார்கள் (மத் 28:19-20; மாற்கு 16:15-20; லூக்கா 24:47; யோவான் 17:17-19; அப் 1:4-8). இவர்களோடு தெசலோனிக்கேயரிலிருந்து சென்ற பணியாளர்களும் சுவிசேஷச் செய்தியைப் பல இடங்களுக்கும் எடுத்துச் சென்றார்கள்.

“தேவனைப்பற்றின உங்கள் விசுவாசம் எங்கும் பிரசித்தமாயிற்று” - புறஜாதியார் இவர்களுடைய விசுவாசத்தையும் வல்லமையையும் குறித்து அனுதினமும் பேசிக் கொண்டிருந்தார்கள். இவர்கள் மூலமாக வல்லமையான கிரியை வெளிப்படவில்லை என்றால், இவர்களைப் பற்றி யாரும் பேசமாட்டார்கள். இவர்களுடைய விசுவாசமும் எங்கும் பிரசித்தமாகாது.

“நீங்கள் விக்கிரகங்களை விட்டு தேவனிடத்திற்கு மனந்திரும்பினதையும்” இவர்கள் விசுவாசிகளாக இருக்கிறவர்கள். ஒருகாலத்தில் விக்கிரகங்களுக்கு ஆராதனை செய்த புறஜாதியாராக இருந்தார்கள். இப்போதோ அவர்கள் ஜீவனுள்ள மெய்யான தேவனை ஆராதிக்குமாறு மனந்திரும்பியிருக்கிறார்கள். பரலோகத்திலிருந்து தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து வருவதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் (1தெச 1:10).

“ஜீவனுள்ள மெய்யான தேவன்” - புறஜாதியார்கள் ஜீவனில்லாத விக்கிரகங்களை ஆராதனை செய்து வந்தார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோ ஜீவனுள்ள மெய்யான தேவன்.

1தெச 1:9-10 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் கிறிஸ்தவ உபதேசங்கள்

1. மனந்திரும்புதல் (1தெச 1:9; மத் 18:3)
2. ஜீவனுள்ள மெய்யான தேவன் (1தெச 1:9; யோவான் 17:3)
4. விக்கிரகங்களை விட்டுவிடுதல் (1தெச 1:9; 1கொரி 8)
4. தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து (1தெச 1:10; யோவான் 3:16)
5. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை (1தெச 1:10)
6. இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் (1தெச 1:10)
7. இனிவரும் கோபாக்கினையினின்று நீங்கலாக்கி இரட்சிக்கப்படுதல் (1தெச 1:10)

தீர்க்கதரிசனம் எண் - 1

“அவர் மரித்தோரிலிருந்தெழுப்பினவரும் இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவருமாயிருக்கிற அவருடைய குமாரனாகிய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறதையும்” (1தெச 1:10) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

I தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

2 அதிகாரம்

V முன்மாதிரியான ஊழியக்காரர்

1. தைரியமும் உபத்திரவமும் - (அப் 4:13; பிலி 1:12-20)

1தெச 2:1 சகோதரரே, நாங்கள் உங்களிடத்தில் பிரவேசித்தது வீணாயிருக்கவில்லை என்று நீங்களே அறிந்திருக்கிறீர்கள்

1தெச 2:2 உங்களுக்குத் தெரிந்திருக்கிற படி முன்னே பிலிப்பிபட்டணத்திலே நாங்கள் பாடுபட்டு நிந்தையடைந்திருந்தும் வெகு போராட்டத்தோடே தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குச் சொல்லும் படி, நம்முடைய தேவனுக்குள் தைரியங் கொண்டிருந்தோம்.

சத்தியத்தைப் பற்றிய அறிவு

தெசலோனிக்கேயர் சத்தியத்தைப் பற்றி அறிந்திருக்கும் காரியங்களைப் பவுல் இந்த நிருபத்தில் பல வசனங்களில் கூறியிருக்கிறார் அவையாவன

1 நாங்களும் உங்களுக்குள்ளே இருந்தபோது உங்களை நிமித்தம் எப்படிப் பட்டவர்களாயிருந்தோமென்று அறிந்திருக்கிறீர்களே (1தெச 1:5)

2 நாங்கள் உங்களிடத்தில் பிரவேசித்தது வீணாயிருக்கவில்லை என்று நீங்களே அறிந்திருக்கிறீர்கள் (1தெச 2:1)

3 உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி முன்னே பிலிப்பி பட்டணத்திலே நாங்கள் பாடுபட்டு நிந்தையடைந்திருந்தும். வெகு போராட்டத்தோடே தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குச் சொல்லும் படி நம்முடைய தேவனுக்குள் தைரியங் கொண்டிருந்தோம். (1தெச 2:2)

4 உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி நாங்கள் ஒருக்காலும் இச்சகமான வசனங்களைச் சொல்லவுமில்லை. பொருளாசையுள்ளவர்களாய் மாயம் பண்ணவுமில்லை. (1தெச 2:5)

5. தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல, நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும் தேறுதலும் எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்கள் (1தெச 2:12)

6 இப்படிப்பட்ட உபத்திரவங்களைச் சகிக்க நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோம் என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே நமக்கு உபத்திரவம் வருமென்று நாங்கள் உங்களிடத்திலிருந்தபோது உங்களுக்கு முன்னறிவித்தோம் அப்படியே வந்து நேரிட்டதென்றும் அறிந்திருக்கிறீர்கள் 1தெச 3:3-4

7 கர்த்தராகிய இயேசுவினாலே நாங்கள் உங்களுக்குக் கொடுத்த கட்டளைகளை அறிந்திருக்கிறீர்களே (1தெச 4:2)

8 தேவனை அறியாத அஞ்ஞானிகளைப் போல மோக இச்சைக்குட்படாமல் உங்களில் அவனவன் தன்தன் சரீர பாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து (1தெச 4:4-5)

9 இரவிலே திருடன் வருகிறவிதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள் 1தெச 5:2

10 கர்த்தருக்குள் உங்களை விசாரணை செய்கிறவர்களாயிருந்து உங்களுக்குப் புத்திசொல்லுகிறவர்களை நீங்கள் மதித்து அவர்களுடைய கிரியையினிமித்தம் அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம். (1தெச 5:12)

11 அவன் தன் காலத்திலே வெளிப்படும் படிக்கு இப்பொழுது அவனைத் தடை செய்கிறது இன்னதென்றும் அறிந்திருக்கிறீர்களே (2தெச 2:6-8)

I தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

2 அதிகாரம்

12 இன்னவிதமாய் எங்களைப் பின்பற்ற வேண்டுமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே (2 தெச 3:7)

"அறியாமலிருக்கிறீர்களா" என்று பவுல் கூறியிருக்கும் காரியங்கள்

1 கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமல் இருக்கிறீர்களா?

2 மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக் கொடுக்கிறீர்களோ அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்கள் என்று அறியீர்களா?

3 நியாயப் பிரமாணத்தை அறிந்திருக்கிறவர்களுடனே பேசுகிறேன், சகோதரரே, ஒரு மனுஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணம் அவனை ஆளுகிறதென்று அறியாமல் இருக்கிறீர்களா? (ரோமர் 7:1; 1 தெச 2:12-16)

4 நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? (1 கொரி 3:16)

5 நீங்கள் மேன்மை பாராட்டுகிறது நல்லதல்ல, கொஞ்சம் புளித்தமா பிசைந்த மா முழுவதையும் புளிப்பாக்குமென்று அறியீர்களா? (1 கொரி 5:6)

6 பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்கள் என்று அறியீர்களா? (1 கொரி 6:2)

7 தேவதூதர்களையும் நியாயந்தீர்ப்போமென்று அறியீர்களா? (1 கொரி 6:3)

8 அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை என்று அறியீர்களா? (1 கொரி 6:9)

9 உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று அறியீர்களா? (1 கொரி 6:15)

10 வேசியோடு இசைந்திருக்கிறவன் அவளுடனே ஒரே சரீரமாயிருக்கிறான் என்று அறியீர்களா? (1 கொரி 6:16)

11 உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறது என்றும், நீங்கள் உங்களுடையவர்களல்ல என்றும் அறியீர்களா? (1 கொரி 6:19-20)

12 பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள், ஆகிலும் ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? (1 கொரி 9:24)

"வீணாயிருக்கவில்லை" - நல்லதொரு சபை ஸ்தாபிக்கப்பட்டது. (அப் 17)

"முன்னே பிலிப்பி பட்டணத்திலே நாங்கள் பாடுபட்டு நிந்தையடைந்திருந்தும்" - (அப் 16:16-40)

போராட்டம் (contention) - ἀγών - agoon - 73

ஆண்பால் பெயர்ச்சொல் **(conflict)** (பிலி 1:30)

(அ) விளையாட்டுப்போட்டி, ஓட்டம்

(ஆ) கிறிஸ்தவ வாழ்க்கையின் போராட்டம் பிலி 1:30

(இ) ஆர்வத்தினால் ஏற்படும் மனப்போராட்டம் 2 கொலோ 2:1

2 அதிகாரம்

2. கண்ணியமும் பரிசுத்தமும் - 2கொரி 4:1-2; அப் 20:26, 1தீமோ 4:12)

1தெச 2:3 எங்கள் போதகம் வஞ்சகத்தினாலும் துராசையினாலும் உண்டாகவில்லை அது கபடமுள்ளதாயுமிருக்கவில்லை

போதகம் (exhortation) - παράκλησις - parakleesis - 3874

பெண்பால் பெயர்ச்சொல் - ஆறுதல் புத்திசொல்லுதல் (அப் 13:15)

மெய்யான போதகத்தின் அம்சங்கள்

1 வஞ்சகத்தினால் உண்டாகவில்லை.

2 துராசையினால் உண்டாகவில்லை

3 கபடமுள்ளதாயிருக்கவில்லை

வஞ்சகம் (deceit) - πλάνη - planee - 4106

பெண்பால் பெயர்சொல் - எத்து தப்பிதம், வஞ்சகம் (fraudulence; straying from orthodoxy, piety) "deceit" (1தெச 2:3); "deceive" எபே 4:14 ; "delusion" (2தெச 2:3); "error" (மத் 27:64 ரோமர் 1:27, யாக் 5:20, 2பேதுரு 2:18; 2பேதுரு 3:17, 1யோவான் 4:6; யூதா 1:11).

துராசை (uncleanness) ἀκαθαρσία akatharsia 167

(அ) அசுத்தம் சரீரபிரகாரமான அசுத்தம் மத். 23:27

ஆ) ஆன்மீக அசுத்தம் ரோம 1:24 (கொலோ 3:5; ரோமர் 8:12-13)

கபடம் (guile) δόλος - dolos - 1388

ஆண்பால் பெயர்ச்சொல் - தந்திரம், கபடம் வஞ்சகம், வஞ்சனை (ரோமர் 1:29; அப் 13:10)

3. நம்பிக்கையும் விசுவாசமும் - (1தீமோ 1:11-12; ரோமர் 7:14-15)

1தெச 2:4 சுவிசேஷத்தை எங்களிடத்தில் ஒப்புவிக்கத்தக்கதாய், தேவன் எங்களை உத்தமரென்றெண்ணின படியே, நாங்கள் மனுஷருக்கு அல்ல, எங்கள் இருதயங்களைச் சோதிக்கிற தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகிறோம்.

சோதித்துப்பார் (allowed) - δοκιμάζω - dokimazoo - 1381

வினைச்சொல் - நிதானி, சோதித்துப்பார் வகையறு, பகுத்தறி, பரிசைபார் தகுதியைக்குறி, கண்டறி (test) (2கொரி 13:5

பவுலுடைய பிரசங்கத்தின் அம்சங்கள்

1 வீணாயிருக்கவில்லை (1தெச 2:1, 3:20

2 நிந்தனைகளுக்கு நடுவில் பிரசங்கம் பண்ணினார் (1தெச 2:2

3 வெகுபோராட்டத்திற்கு நடுவில் பிரசங்கம் பண்ணினார் (1தெச 2:2

4 தைரியத்தோடே பிரசங்கம் பண்ணினார் (1தெச 2:2)

5 வஞ்சகத்தினால் பிரசங்கம் பண்ணவில்லை (1தெச 2:3

6 அவருடைய போதகம் துராசையினால் உண்டாகவில்லை (1தெச 2:3)

7 அவருடைய போதகம் கபடமுள்ளதாயிருக்க வில்லை. (1தெச 2:3

8 தேவன் சுவிசேஷத்தை பவுலிடம் ஒப்படைத்தார் (1தெச 2:4)

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

2 அதிகாரம்

9 மனுஷருக்கல்ல, தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசினார் (1தெச 2:4)

10 இச்சகமான வசனங்களைச் சொல்லவில்லை. (1தெச 2:5)

11 பொருளாசையுள்ளவராய் மாயம் பண்ணவில்லை. (1தெச 2:5 லூக்கா 12:15)

12 மனுஷரால் வரும் மகிமையைத் தேடவில்லை (1தெச 2:6)

13 எந்தவித பொருளாதார ஆதாயத்தை எதிர்பாராமல் ஊழியம் செய்தார் (1தெச 2:6,9)

14 பொறுமையோடும், பட்சமாகவும் நடந்து கொண்டார் (1தெச 2:7,14)

15 அன்புடன் பிரசங்கம் பண்ணினார் (1தெச 2:15)

16 தன்னுடைய ஜீவனை இழப்பதற்கும் ஆதாயமாக இருந்தார் (1தெச 2:16)

17 இரவும், பகலும் வேலை செய்தார் (1தெச 2:9)

18 தான் பிரசங்கித்த பிரகாரம் ஜீவித்தார் (1தெச 2:10)

19 அவருடைய பிரசங்கம் பூரணமாக இருந்தது. (1தெச 2:11)

20 அவருடைய நோக்கம் சரியானது. (1தெச 2:12)

21 சுவிசேஷத்தின் மூலமாக ஏற்பட்ட நல்ல விளைவுகளுக்காக தேவனை இடைவிடாமல் ஸ்தோத்திரம் பண்ணினார் (1தெச 2:13-20)

"மனுஷருக்கு அல்ல, எங்கள் இருதயங்களைச் சோதிக்கிற தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகிறோம்" - (கலா 1:10 எபி 11:6)

4. **வார்த்தையில் எளிமையும் சுயநலமின்மையும்**- (1கொரி 2:1-5 2தெச 2:7-9; அப 20:33-35)

1தெச 2:5 உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, நாங்கள் ஒருக்காலும் இச்சகமான வசனங்களைச் சொல்லவுமில்லை பொருளாசையுள்ளவர்களாய் மாயம் பண்ணவுமில்லை; தேவனே சாட்சி.

இச்சகம் (cloke) - πρόφασις - **prophasis** - 4392

பெண்பால் பெயர்ச்சொல் - வஞ்சகம் பார்வை பாவனை இச்சகம் (pretense, excuse) "cloke" (1தெச 2:5; யோவான் 15:22; "shew" லூக்கா 20:47; "colour" (அப 27:30; "pretence" (மத் 23:14, மாற்கு 12:40, பிலி 1:18

"பொருளாசை" - (லூக்கா 12:15)

5. **தாழ்மையும் மற்றவரைக் குறித்த கரிசனையும்** - (அப 20:33-35)

1தெச 2:6 நாங்கள் கிறிஸ்துவின் அப்போஸ்தலராக உங்களுக்குப் பாரமாயிருக்கக் கூடியவர்களானாலும் உங்களிடத்திலாவது மற்றவர்களிடத்திலாவது மனுஷரால் வரும் மகிமையை நாங்கள் தேடவில்லை

"நாங்கள் கிறிஸ்துவின் அப்போஸ்தலராக உங்களுக்குப் பாரமாயிருக்கக் கூடியவர்களானாலும்" பவுல் அப்போஸ்தல ஊழியம் செய்து வருகிறார் இந்த ஊழியத்திற்காக விசுவாசிகளிடத்தில் ஊதியத்தைப் பெற்றுக் கொள்ளும் உரிமையுள்ளவர் (லூக்கா 10:7, 1கொரி 9:7-18; கலா 6:6) ஆயினும் பவுல் இந்த உரிமைகளைப் பயன்படுத்தி விசுவாசிகளிடமிருந்து எந்தவிதமான ஊதியத்தையும் பெற்றுக் கொள்ளவில்லை.

2 அதிகாரம்

6. பட்சமும் அன்பும் - 2தீமோ 2:22-26 கலா 5:22-23)

1தெச 2:7 உங்களிடத்தில் பட்சமாய் நடந்து கொண்டோம். பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறது போல

1தெச 2:8 நாங்கள் உங்கள் மேல் வாஞ்சையாயிருந்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குக் கொடுத்ததுமல்லாமல் நீங்கள் எங்களுக்குப் பிரியமானவர்களான படியினாலே, எங்கள் ஜீவனையும் உங்களுக்குக் கொடுக்க மனதாயிருக்கிறோம்.

பட்சம் (gentle) - νήπιος - neepios - 3516

பெயரடை - பட்சம் பாலகரான குழந்தையாயிருக்கிற சிறுபிள்ளையான (simple minded)

பால் கொடுக்கிற தாய் (nurse) - τροφός - trophos - 5162

பெண்பால் பெயர்சொல் அம்மா தாதி (nurse, feeder) இந்த வார்த்தை தன் பிள்ளைகளுக்குப் பால் கொடுக்கும் தாயைக் குறிக்கும்

7. சுயதியாகம் (அப் 20:33-35 2தெச 2:7-9

1தெச 2:9 சகோதரரே, நாங்கள் பட்ட பிரயாசமும் வருத்தமும் உங்களுக்கு ஞாபகமாயிருக்கும்; உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு இரவும் பகலும் நாங்கள் வேலைசெய்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களிடத்தில் பிரசங்கித்தோம்

8. பிழையில்லாத நடத்தை - (2கொரி 6:3; எபே 1:4; பிலி 2:15 1தீமோ 3:2,10; தீத்து 1:6-7, 2பேதுரு 3:14)

1தெச 2:10 விசுவாசிகளாகிய உங்களுக்குள்ளே நாங்கள் எவ்வளவு பரிசுத்தமும் நீதியும் பிழையின்மையுமாய் நடந்தோமென்பதற்கு நீங்களும் சாட்சி, தேவனும் சாட்சி.

கிறிஸ்தவ ஜீவியத்தில் காணப்பட வேண்டிய முக்கியமான குணங்கள்

1 பரிசுத்தம்

2 நீதி

3 பிழையின்மை

பரிசுத்தம் (Holily) - ὁσίως - hosioos - 3743

வினையடை - பரிசுத்தமாய் - தேவனுக்கு ஏதுவான பரிசுத்தம்

நீதி (Justly) - δικαίως - dikaioos - 1346

வினையடை - நியாயப்படி நீதிக்கேற்ப, நீதியுமாய், நியாயமாய் (righteous, just) மனுஷனுக்கு ஏற்ற நீதி

பிழையின்மை (Unblameably) ἀμέμπτως amemptoos - 274

வினையடை - பிழையின்மையாய், குற்றமற்றதாய் தேவனுக்கும் மனுஷனுக்கும் முன்பாகப் பிழையற்ற நடத்தையும், ஜீவியமும்.

9. பெற்றோரின் பராமரிப்பும் பயிற்சியும் - (எபே 1:15-19, 3:13-21

1தெச 2:11 மேலும், தம்முடைய ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்க வேண்டுமென்று,

2 அதிகாரம்

1தெச 2:12 தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும் தேறுதலும் எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்கள்

"தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்க வேண்டும்" – (எபே 4:1)

"தம்முடைய ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் [illegible] அழைத்த தேவன்" - எல்லா விசுவாசிகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் உன்னதமான அழைப்பு.

மூன்றுவிதமான ஊழியம்

1 புத்தி சொல்லுதல்

2 தேற்றுதல்

3 எச்சரிப்பு சொல்லுதல்

எச்சரிப்பு (Exhortation) - παρακαλέω - parakaleoo - 3870

விணைச்சொல் - வேண்டிக்கொள், வருந்தியழை, புத்திசொல், எச்சரி, கேட்டுக்கொள், தேற்று, கடிந்துகொள், போதி, மன்றாடு (2கொரி 1:4)

தேற்று (Comforting) - παραμυθέομαι - paramutheomai - 3888

விணைச்சொல் - ஆறுதல் சொல், தேற்று (1தெச 2:14, 5:14, யோவான் 11:19,31)

எச்சரி (testify) - μαρτύρομαι - martyromai 3143

விணைச்சொல் - சாட்சியாக வை, சாட்சியாகச்சொல் "record" (அப் 20:26) "testify" (கலா 5:3, எபே 4:17

"தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல" - பவுலிடம் ஒரு போதகருடைய ஆவி இருந்தது. விசுவாசிகளை தாயைப்போல நேசித்து தந்தையைப் போல புத்தி கூறி ஆதரிக்கிறார் (1தெச 2:7,11)

10. சுவிசேஷத்தின் வல்லமை அதை விசுவாசிக்கிற யாவருக்குள்ளும் பெலன் செய்கிறது - (மத் 18:18

1தெச 2:13 ஆகையால், நீங்கள் தேவவசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்டபோது, அதை மனுஷர் வசனமாக ஏற்றுக் கொள்ளாமல், தேவவசனமாக ஏற்றுக் கொண்டதினாலே நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரஞ்செலுத்துகிறோம். அது மெய்யாகவே தேவவசனந்தான்; விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது

"இடைவிடாமல்" - (1தெச 1:3; 1தெச 2:13; 1தெச 5:17, 2தெச 1:3; ரோமர் 1:9)

"நீங்கள் தேவவசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்டபோது" - தெசலோனிக்கேயர் தேவவசனத்தை மனுஷர் வசனமாக ஏற்றுக் கொள்ளாமல் தேவ வசனமாகவே ஏற்றுக் கொண்டார்கள் விசுவாசிக்கிற அவர்களுக்குள் தேவ வார்த்தை கிரியை நடப்பிக்கிறது

பலன் செய்தல் (effectually) ἐνεργέω energeoo - 1754

விணைச்சொல் - விளங்கச்செய், கையளி, உண்டாக்கு, பலன் செய் "work effectually" (1தெச 2:13, கலா 2:8, 2கொரி 1:6); "effectual fervent" (யாக் 5:16); "show forth one's self" (மத் 14:2; மாற்கு 6:14), "do" (பிலி 2:13); "be mighty in" (கலா 2:8); "to work" (ரோமர் 7:5, 1கொரி 12:6,11 2கொரி 4:12 கலா 3:5 கலா 5:6 எபே 1:11,20; எபே 2:2 எபே 3:20; பிலி 2:13; கொலோ 1:29, 2தெச 2:7) தேவனுடைய வார்த்தைக்கு வல்லமையுள்ளது. விசுவாசிகளுடைய ஜீவியத்தில் அது பலன் செய்கிறது. (சங் 19:7; சங் 107:20, யோவான் 15:7, ரோமர் 1:16; ரோமர் 10:17; எபி 4:12

2 அதிகாரம்

11. சத்தியத்தை எதிர்க்கும் சாத்தானோடும் துன்மார்க்கரோடும் போராட்டம் - (பிலி 1:27-30, கொலோ 2:1, 1தெச 2:18)

1தெச 2:14 எப்படியெனில், சகோதரரே, யூதேயா தேசத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான தேவனுடைய சபைகளை நீங்கள் பின்பற்றினவர்களாகி, அவர்கள் யூதராலே எப்படி பாடுபட்டார்களோ அப்படியே நீங்களும் உங்கள் சுய ஜனங்களாலே பாடுபட்டீர்கள்.

1தெச 2:15 அந்த யூதர்கள் கர்த்தராகிய இயேசுவையும், தங்கள் தீர்க்கதரிசிகளையும் கொலை செய்தவர்களும், எங்களைத் துன்பப்படுத்தினவர்களும், தேவனுக்கேற்காதவர்களும், மனுஷர் யாவருக்கும் விரோதிகளுமாயிருந்து,

1தெச 2:16 புறஜாதியார் இரட்சிக்கப்படுவதற்கு நாங்கள் அவர்களோடே பேசாதபடிக்குத் தடைபண்ணுகிறார்கள்; இவ்விதமாய் எக்காலத்திலும் தங்கள் பாவங்களை நிறைவாக்குகிறார்கள்; அவர்கள்மேல் கோபாக்கினை பூரணமாய் வந்திருக்கிறது.

1தெச 2:17 சகோதரரே, நாங்கள் இருதயத்தினபடி உங்களோடிருந்து, சரீரத்தின்படி கொஞ்சக்காலம் உங்களை விட்டுப் பிரிந்திருந்தபடியினாலே, உங்கள் முகத்தைப் பார்க்க வேண்டுமென்று மிகுந்த ஆசையோடே அதிகமாய்ப் பிரயத்தனம் பண்ணினோம்.

1தெச 2:18 ஆகையால் நாங்கள் உங்களிடத்தில் வர இரண்டொருதரம் மனதாயிருந்தோம், பவுலாகிய நானே வர மனதாயிருந்தேன்; சாத்தானோ எங்களைத் தடைபண்ணினான்.

"யூதேயா தேசத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான" - ரோமாபுரியிலுள்ள சபையைப் பற்றியும் அந்தச் சபைக்கு பேதுரு பேராயராக இருந்தது பற்றியும் குறிப்பு எதுவும் இல்லை. யூதேயா தேசத்திலுள்ள சபையே பிரதான சபையாகவும் மற்ற விசுவாசிகளுக்கு மாதிரி சபையாகவும் விளங்கிறது.

"நீங்களும் உங்கள் சுய ஜனங்களாலே பாடுபட்டீர்கள்" - யூதரும், புறஜாதியாரும் தங்களுடைய சொந்த ஜனங்களால் பாடுகளை அனுபவித்தார்கள். எல்லா இடங்களிலும் ஸ்தாபிக்கப்பட்ட சபைகளை யூதர்கள் துன்புறுத்தினார்கள். புறஜாதி தேசங்களில் கிறிஸ்தவ மார்க்கத்திற்கு எதிராக புறஜாதி ஜனங்கள் கலகம் பண்ணினார்கள் (அப 13:6,45,50, அப 14:2,5,19, அப 15:1-2,5, அப 16:3, அப 17:5,13, அப 18:5-6)

யூத ஜனங்கள் செய்த பாவங்கள்

1. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் கொலை செய்தார்கள் (1தெச 2:15, மத் 2:23)
2. தங்கள் தீர்க்கதரிசிகளைக் கொலை செய்தார்கள் (1தெச 2:15, மத் 23)
3. சபையைத் துன்பப்படுத்தினார்கள்
4. தேவனுக்கு ஏற்காதவர்களாக இருந்தார்கள் (1தெச 2:15, அப 7:51)
5. மனுஷர் யாவருக்கும் விரோதிகளாக இருந்தார்கள் (1தெச 2:15, மத் 23)
6. புறஜாதியார் இரட்சிக்கப்படுவதற்கு தடை பண்ணினார்கள் (1தெச 2:16)
7. தங்கள் பாவங்களை நிறைவாக்கினார்கள் (1தெச 2:16)

"அவர்கள் மேல் கோபாக்கினை பூரணமாய் வந்திருக்கிறது" யூதமார்க்கத்தார் தேவனுக்கும், தேவனுடைய சபையாருக்கும் எதிராக பாவம் செய்தபடியினால் தேவனுடைய கோபாக்கினை அவர்கள்மீது பூரணமாக வந்திருக்கிறது. (லேவி 26, உபா 28, உபா 32, மத் 23:34-39, லூக்கா 21:20-24, ரோமர் 11, 1தெச 2:15)

2 அதிகாரம்

பிரிந்திரு (being taken) ἀπορφανίζω aporphanizoo 642

வினைச்சொல் - பிரிந்திரு (having been bereaved) - தன்னுடைய பிள்ளைகளை விட்டு பிரிந்திருக்கும் பெற்றோருக்குப் பவுல் தன்னை ஒப்பிட்டுக் கூறுகிறார் (1தெச 2:7,11) பிள்ளைகளைப் பிரிந்திருக்கும் பெற்றோர் அவர்களையே நினைத்து வருந்திக் கொண்டிருப்பார்கள். அதுபோன்ற வருத்தம் பவுலுக்கும் இருந்தது. அவர்களைக் காண வேண்டுமென்று பவுல் பலமுறை முயற்சி செய்தும் சாத்தானுடைய தடையினால் அவர்களைக் காணமுடியவில்லை (1தெச 2:18)

தடைபண்ணு (hindered) - ἐγκόπτω - enkoptoo - 1465

வினைச்சொல் - தடைபண்ணு, தடைபடு, தடைசெய் (hinder) (1தெச 2:18; ரோமர் 15:22) (be tedious unto) (அப் 24:4). பவுல் தன்னுடைய பாடுகளைப் பற்றி 2கொரி 11:23-28 ஆகிய வசனங்களில் குறிப்பிட்டிருக்கிறார். சாத்தான் பவுலை இந்த பாடுகள் மூலமாகத் தடை பண்ணியிருக்கலாம்.

12. பிரயாசத்திற்கு வெகுமதிகள் - (1கொரி 3:9-15, 2கொரி 2:10)

1தெச 2:19 எங்களுக்கு நம்பிக்கையும் சந்தோஷமும் மகிழ்ச்சியின் கிரீடமுமாயிருப்பவர்கள் யார்? நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது அவருடைய சந்நிதானத்திலே நீங்களல்லவா அப்படியிருப்பீர்கள்.

1தெச 2:20 நீங்களே எங்களுக்கு மகிமையும் சந்தோஷமுமாயிருக்கிறீர்கள்

தீர்க்கதரிசன எண் - 2

"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது அவருடைய சந்நிதானத்திலே நீங்களல்லவா அப்படியிருப்பீர்கள்" (1தெச 2:19) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது" - சபையை எடுத்துக் கொள்வதற்காக இயேசு கிறிஸ்து மத்திய ஆகாயத்தில் வருவதைக் குறிக்கும். இந்த வாக்கியம் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிக்காது. (1தெச 3:13; 1தெச 4:13-17; 1தெச 5:8; 2தெச 2:7)

சபை எடுத்துக் கொள்ளப்படுவதும், இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும்

இவ்விரண்டும் வெவ்வேறு நிகழ்ச்சிகள். இவ்விரண்டு நிகழ்ச்சிகளுக்கு இடையில் குறைந்த பட்சம் ஏழு வருஷம் இடைவெளி உள்ளது.

சபை எடுத்துக் கொள்ளப்படுவது முதலாவது நடைபெறும் நிகழ்ச்சியாகும். இயேசு கிறிஸ்து மத்திய ஆகாயத்திற்கு வந்து சபையை எடுத்துக் கொள்வார். மத்திய ஆகாயத்தில் தம்முடைய பரிசுத்தவான்களைச் சந்தித்து அவர்களைத் தம்மோடு பரலோகத்திற்கு அழைத்துச் செல்வார். பரலோகத்தில் அவர்களைப் பிதாவின் சமூகத்தில் ஆயத்தப்படுத்துவார் அவர்கள் இயேசு கிறிஸ்துவோடு பரலோகத்தில் வாசம் பண்ணுவார்கள். அக்காலத்தில் பூமியில் மகா உபத்திரவக்காலம் உண்டாயிருக்கும் (1தெச 3:13 யோவான் 14:3) பரிசுத்தவான்களை இயேசு கிறிஸ்து மத்திய ஆகாயத்தில் சந்தித்த பின்பு அவர் அங்கேயே தங்கிவிடுவதில்லை. (1தெச 4:13-17) ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தும் பரிசுத்தவான்களின் நியாயத்தீர்ப்பும் பரலோகத்தில் நடைபெறும். பூமியில் மகா உபத்திரவக்காலம் முடிந்த பின்பு இயேசு கிறிஸ்து தம்முடைய பரிசுத்தவான்களோடு பூமிக்கு வருவார் (2கொரி 5:10; வெளி 19) சபை எடுத்துக் கொள்ளப்படுவது என்பது இயேசு கிறிஸ்து தம்முடைய பரிசுத்தவான்களைப் பரலோகத்திற்கு அழைத்துச் செல்வதற்காக மத்திய ஆகாயத்திற்கு வரும் நிகழ்ச்சியைக் குறிக்கும்.

I தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

2 அதிகாரம்

இயேசு கிறிஸ்து தம்முடைய பரிசுத்தவான்களோடு பூமிக்கு வருவது இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை என்னப்படுகிறது. மகா உபத்திரவத்திற்கு முன்பாக எடுத்துக் கொள்ளப்பட்ட பரிசுத்தவான்கள் இயேசு கிறிஸ்துவோடு பூமிக்கு வருவார்கள் (வெளி 11-19 21) ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் காரியங்கள் நிறைவேறின பின்பு இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நடைபெறும்.

சபை எடுத்துக் கொள்ளப்படுவதை விளக்கும் வசனங்கள்

1 உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறியினாலும் லவுகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள்மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள் (லூக்கா 21.34)

2 உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு ...... ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன் ...... நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன் (யோவான் 14:1-3)

3 இதோ ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன். நாமெல்லாரும் நித்திரை அடைவதில்லை. ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது ஒரு நிமிஷத்திலே ஒரு இமைப்பொழுதிலே நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம். (1கொரி 15:51-56)

4 கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார் (எபே 5.25-27)

5 அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன் (பிலி 3:8) நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது. அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார் (பிலி 3.20-21) பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்து போனாலும் தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம் ...... அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம். (2கொரி 5.1-9)

6 நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத் துக்கித்து அறியாதிருக்க எனக்கு மனதில்லை. . . இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள் (1தெச 4.13-18)

எங்களுக்கு நம்பிக்கையும் சந்தோஷமும் மகிழ்ச்சியான கிரீடமுமாயிருப்பவர்கள் யார்? நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது அவருடைய சந்நிதானத்திலே நீங்களல்லவா அப்படியிருப்பீர்கள் (1தெச 2.19)

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்போது நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக. (1தெச 3:13)

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

2 அதிகாரம்

தேவன் நம்மை கோபாக்கினைக்கென்று நியமிக்காமல் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் இரட்சிப்படைவதற்கென்று நியமித்தார் (1தெச 5:9)

சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும் படி காக்கப்படுவதாக. (1தெச 5:23)

7 நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையையும் நாம் அவரிடத்திலே சேர்க்கப்படுவதையுங் குறித்து, நாங்கள் உங்களை வேண்டிக்கொள்ளுகிறது. (2தெச 2:1)

அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியைசெய்கிறது; ஆனாலும் தடை செய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது வெளிப்படாது. நீக்கப்படும்போது அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார் (2தெச 2:7-8)

8 நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள் (கொலோ 3:4)

அவர் வெளிப்படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப் போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருங்கள் (1யோவான் 2:28)

பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். (1யோவான் 3:2)

பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள் (1பேதுரு 5:4)

9 கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று முன்மாரியும் பின்மாரியும் வருமளவும் நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான். நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே. (யாக் 5:7-8)

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை விளக்கும் வசனங்கள்

1. அந்த ராஜாக்களின் நாட்களிலே பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து உருண்டுவந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதைத் தீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும். இனிமேல் சம்பவிக்கப்போகிறதை மகா தேவன் ராஜாவுக்குத் தெரிவித்திருக்கிறார்; சொப்பனமானது நிச்சயம், அதின் அர்த்தம் சத்தியம் என்றான் (தானி 2:44-45)

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

2 அதிகாரம்

இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ, மனுஷ குமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார். அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டு வரப்பட்டார். சகல ஜனங்களும் ஜாதியாரும் பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரிகமும் கொடுக்கப்பட்டது. அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும், அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும். (தானி 7:13-14, தானி 1:8, தானி 2:7)

2 இதோ கர்த்தருடைய நாள் வருகிறது உன்னில் கொள்ளையானது உன் நடுவிலே பங்கிடப்படும்......என் தேவனாகிய கர்த்தர் வருவார். தேவரீரோடே எல்லாப் பரிசுத்தவான்களும் வருவார்கள் (சக 14:1-5)

கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார். அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார். அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும் (சக 14:9)

எருசலேமுக்கு விரோதமாக வந்திருந்த எல்லா ஜாதிகளிலும் மீதியான யாவரும் சேனைகளின் கர்த்தராகிய ராஜாவைத் தொழுது கொள்ளும்படிக்கும், கூடாரப் பண்டிகையை ஆசரிக்கும்படிக்கும் வருஷாவருஷம் வருவார்கள். அந்நாள்முதல் சேனைகளுடைய கர்த்தரின் ஆலயத்திலே யாதொரு கானானியனும் இருப்பதில்லை (சக 14:16-21)

3 அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப்படும். சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும். நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும். வானத்தின் ஒருமுனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள் (மத் 24:29-3)

4 அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். அந்தப்படி இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும் நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார் (மத் 25:31-46)

5 தேவனை அறியாதவர்களுக்கும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு

6 கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும் ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும் வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்.......... அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும் அவருடைய வல்லமைபொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள் (2தெச 1:7-10)

நீக்கப்படும்போது அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான். அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார் (2தெச 2:8)

7 எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கும் அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்துவந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தமும் தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான் (யூதா 1:14-15)

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

2 அதிகாரம்

8 இதோ, மேகங்களுடனே வருகிறார்
கண்கள் யாவும் அவரைக் காணும்
அவரைக் குத்தினவர்களும் அவரைக்
காண்பார்கள் பூமியின்
கோத்திரத்தாரெல்லாரும் அவரைப்
பார்த்துப் புலம்புவார்கள். அப்படியே
ஆகும், ஆமென் (வெளி 1:7)
(தெச 19 11 21 1தெச 20 1 3
ஏசா 63:3-6; யோவே 3)

3 அதிகாரம்

VI. சபையைக் குறித்து பவுலின் கரிசனை

1. தீமோத்தேயுவின் ஊழியம்

¹தெச 3:1 ஆகையால், நாங்கள் இனிப் பொறுத்திருக்கக்கூடாமல் அத்தேனே பட்டணத்தில் தனித்துவிடப்படுகிறது நன்மையென்று நினைத்து,

¹தெச 3:2 இந்த உபத்திரவங்களினாலே ஒருவனும் அசைக்கப்படாதபடிக்கு உங்களைத் திடப்படுத்தவும், உங்கள் விசுவாசத்தைப் பற்றிய உங்களுக்குப் புத்திசொல்லவும் நம்முடைய சகோதரனும் தேவ ஊழியக்காரனும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் எங்கள் உடன் வேலையாளுமாகிய தீமோத்தேயுவை அனுப்பினோம்.

¹தெச 3:3 இப்படிப்பட்ட உபத்திரவங்களைச் சகிக்க நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே.

¹தெச 3:4 நமக்கு உபத்திரவம் வருமென்று நாங்கள் உங்களிடத்திலிருந்த போது உங்களுக்கு முன்னறிவித்தோம்; அப்படியே வந்து நேரிட்டதென்றும் அறிந்திருக்கிறீர்கள்.

¹தெச 3:5 ஆகையால் நான் இனிப் பொறுத்திருக்கக்கூடாமல் எங்கள் வேலை வீணாய்ப் போகத்தக்கதாகச் சோதனைக்காரன் உங்களைச் சோதனைக்குட்படுத்தினதுண்டோவென்று, உங்கள் விசுவாசத்தை அறியும்படிக்கு, அவனை அனுப்பினேன்.

"நாங்கள் இனிப் பொறுத்திருக்கக் கூடாமல்" - தெசலோனிக்கேயில் உள்ள விசுவாசிகள் எவ்வாறு இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்வதில் பவுல் மிகுந்த ஆவலாக இருந்தார். ஏனெனில் அவர்கள் உபத்திரவங்களின் நடுவே கடந்து வந்தார்கள். அவர்களுடைய நன்மையை அறிந்து கொள்வதில் பவுல் இனிமேலும் தாமதிக்க விரும்பவில்லை. ஆகையினால் தீமோத்தேயுவை பவுல் அவர்களிடத்தில் அனுப்பினார் (1தெச 3:1-5).

உடன் வேலையாள் (fellowlabourer) - συνεργός - synergos - 4904

பொருள் - உடன் வேலைசெய்யும் உடன் வேலையாளான, சகாயரான (பிலி 4:3)

உபத்திரவம் (afflictions) - θλῖψις - thlipsis - 2347

பெண்பால் பெயர்ச்சொல் - உபத்திரவம் வருத்தம் (பிலி 4:14)

உபத்திரவம் (tribulation) - θλίβω - thliboo - 2346

வினைச்சொல் - இடுக்கு, நெருக்கு, உபத்திரவப்படு, ஆக்கினைசெய் (2கொரி 1:6)

"சோதனைக்குட்படுத்தினதுண்டோ" - சாத்தான் ஒரு சோதனைக்காரன். விசுவாசிகளைச் சோதனைக்குட்படுத்துவதற்கு அவன் பல உபாயங்களைப் பயன்படுத்துவான். அவனுடைய சோதனைகளிலிருந்து நாம் வெற்றி பெற்று வரவேண்டும். சாத்தானிடம் நாம் விவாதம் பண்ணவும் கூடாது. அவனுடைய இரக்கத்திற்காக அவனிடம் கெஞ்சவும் கூடாது. சாத்தானை நாம் எதிர்த்து நிற்கும்போது அவன் நம்மை விட்டு ஓடிப்போவான் (யாக் 4:7; 1பேதுரு 5:8-9; எபே 6:10-18; 2கொரி 10:4-7; 2கொரி 2:11).

"சோதனைக்காரன்" (tempter, the devil) - (மத் 4:1-3; லூக்கா 4:2)

3 அதிகாரம்

கிருபையைப் பற்றிய சத்தியம்

தன்னுடைய சுவிசேஷ வேலை வீணாய் போய்விடுமோ என்று பவுல் சந்தேகப்படுகிறார். ஏனெனில் சாத்தான் விசுவாசிகளைச் சோதனைக்குட்படுத்தி அவர்களைத் தோல்வியுறச் செய்வதற்கு வாய்ப்புள்ளது. தேவனுடைய கிருபையைப் பற்றி பவுலுக்கு நன்றாகத் தெரியும். சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாமல் எதிர்த்து நிற்பவர்களிடத்தில் தேவகிருபை கிரியை செய்யாது. தேவனுடைய கிருபையை யாரும் தங்களுடைய சொந்த முயற்சியினால் பெற்றுக் கொள்ளவும் முடியாது. ஆனாலும் தேவகிருபையின் ஆசீர்வாதங்களை அனுபவிப்பதற்கு நாம் ஒருசில நிபந்தனைகளைக் கைக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். தேவன் யாருக்கும் நிபந்தனையற்ற கிருபையைத் தருவதில்லை. சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதோருக்கும் தேவகிருபை வரும் என்று எதிர்பார்க்க முடியாது.

எல்லோரையும் இரட்சிக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். ஆயினும் தேவனுடைய சப்தத்திற்குச் செவிகொடுத்து அவருடைய சுவிசேஷச் செய்திக்குக் கீழ்ப்படிவோரை மட்டுமே தேவன் தமது கிருபையினால் இரட்சிக்கிறார் (ரோமர் 2:11). தேவனுடைய பரிசுத்தவான்கள் வெளிச்சத்தில் நடந்து சுவிசேஷத்திற்கு உண்மையாய் நடந்து கொள்ளும்போது மட்டுமே தேவகிருபை அவர்களுக்குப் பலன் செய்கிறது (யோவான் 1:7). தேவன் கிருபையுள்ளவர். அவருடைய கிருபையைப் பெற்றுக் கொள்வதற்கு அவர் எதிர்பார்க்கும் நிபந்தனைகளை நிறைவேற்றுவது நமக்கு நியமிக்கப் பட்டிருக்கிறது. (தீத்து 2:11 12)

கிருபை (grace) χάρις charis 5485

பொருட்சொல்: கிருபை, ஆதாயம், ஈவு, நன்மை, நன்றி, ஆசீர்வாதம்

கிருபையைப் பெற்றிருப்போரின் [redacted]

1 ஒருசிலர் தேவனுடைய கிருபையை விருதாவாய் பெற்றிருக்கிறார்கள் (2கொரி 6:1)

2 ஒருசிலர் தேவனுடைய கிருபையை விருதாவாக்குகிறார்கள் (கலா 2:21)

3 ஒருசிலர் கிருபையிலிருந்து விழுந்து விடுகிறார்கள் (கலா 1:6-8; கலா 5:4)

4 ஒருசிலர் தேவனுடைய கிருபையை இழந்து போகிறார்கள் (எபி 12:15)

5 ஒருசிலர் தேவனுடைய கிருபையைக் காமவிகாரத்திற்கு ஏதுவாகப் புரட்டுகிறார்கள் (யூதா 1:4)

6 கிருபை பெருகும்படிக்கு ஒருசிலர் பாவத்தில் நிலைநிற்கிறார்கள் (ரோமர் 6:1)

7 ஒருசிலர் தேவனுடைய கிருபையில் நிலை கொண்டிருக்கிறார்கள். வேறுசிலரோ நிலைகொண்டிராமல் இருக்கிறார்கள் (அப 13:43)

8 ஒருசிலர் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்து கொடுத்து உதவி செய்கிறார்கள் (1பேதுரு 4:10)

9 இயேசு கிறிஸ்துவின் கிருபையில் ஒருசிலர் வளருகிறார்கள். ஒருசிலர் வளரவில்லை (2பேதுரு 3:18)

10 ஒருசிலர் கிருபையை ஏற்றுக் கொள்கிறார்கள். ஒருசிலர் கிருபையைப் புறக்கணித்துத் தள்ளிவிடுகிறார்கள் (யோவான் 3:16; வெளி 22:17; எபி 12:15; யாக் 4:6)

தேவனுடைய கிருபை செய்யக்கூடிய காரியங்கள்

1 தேவகிருபை உலகத்தை இரட்சிக்கும் (ஆதி 6:8; எபே 2:8 9)

2 தேவகிருபை மனுஷருக்கு எல்லா நல்ல ஈவுகளையும் தரும். (சங் 84:11)

I தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

3 அதிகாரம்

3 தேவகிருபை மனுஷரை மனந்திருந்த வைக்கும். (சக 12:10)

4 தேவகிருபை மேலான ஆசீர்வாதங்களைத் தரும். (அப 4:33)

5 தேவகிருபை இரட்சிப்பைத் தரும் (தீத்து 2:11-12 எபே 2)

6 கிருபை விசுவாசத்தைத் தரும். (அப 18:28)

7 கிருபையினாலே நீதிமான்களாக்கப் படுகிறோம். (ரோமர் 3:24-25 தீத்து 3:6)

8 கிருபை பாவத்தை மேற்கொள்ளும். (ரோமர் 5:20)

9 கிருபை நீதியினாலே நித்திய ஜீவனுக்கு ஏதுவாக ஆட்கொள்ளும். (ரோமர் 5:21)

10 தேவகிருபை ஒருவனைத் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவனாக ஆக்கும். (ரோமர் 11:5-6)

11 கிருபை தைரியத்தைத் தரும். (ரோமர் 15:15)

12 கிருபை கிறிஸ்துவில் பங்குபெற வைக்கும். (1கொரி 10:30)

13 கிருபை வல்லமையைத் தரும். (1கொரி 15:10)

14 கிருபை உதாரத்துவமாக ஏவும். (2கொரி 8:1 2,6-9; 2கொரி 9:8)

15 கிருபை நீடிய பொறுமையைத் தரும். (2கொரி 12:9)

16 கிருபை ஊழியங்களை ஊழியம் செய்வதற்கு அழைக்கும். (கலா 1:15)

17 கிருபையினால் ஐசுவரியம் பெருகும். (எபே 2:7)

18 கிருபை துதித்துப் பாடுவதற்கு ஏவும். (கொலோ 3:16)

19 கிருபையினால் ஒருவருடைய பேச்சு சாரமாக்கப்படும். (கொலோ 4:6)

20 கிருபை பெலனைத் தரும் (2தீமோ 2:1)

21 கிருபை உபதேசிக்கும். (தீத்து 2:11-12)

22 கிருபை பாடுகளை அனுபவிக்கும்போது உதவி செய்யும் (எபி 2:9)

23. கிருபை தேவைப்படும்போது உதவி புரியும். (எபி 4:16)

24 கிருபை ஸ்திரத்தன்மையைத் தரும் (எபி 13:9)

25. கிருபை ஜீவனைத் தரும் (1பேதுரு 3:7)

26. கிருபை தேவனுக்குப் பிரியமான ஆராதனை செய்ய உதவி புரியும். (எபி 12:28)

27 கிருபை பரிபூரணமாகப் பெருகும் (1தீமோ 1:14)

28. கிருபை நம்பிக்கையைத் தரும் (2தெச 2:16)

29 கிருபை பிரசங்கம் பண்ணும் ஆற்றலைத் தரும். (எபே 3:8)

30 கிருபை ஜீவியங்களை மாற்றும் (1கொரி 15:10)

தேவனுடைய கிருபை இருந்தபோதிலும் நாம் கவனமாக இருக்க வேண்டிய காரியங்கள்

1 இப்போது இரட்சிக்கப்பட்டிருக்கிற நாம் வருங்காலத்தில் பாவம் செய்தால் நமக்கு ஆக்கினைத்தீர்ப்பு உண்டு (யோவான் 5:14 யோவான் 8:34 ரோமர் 6:1-23; ரோமர் 8:12-13 கலா 5:21; 2கொரி 5:10

I தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

3 அதிகாரம்

2 நாம் பெற்றிருக்கிற இரட்சிப்பைக் காத்துக் கொள்வதற்கு ஒவ்வொரு நாளும் இரட்சிப்பின் நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். (1யோவான் 1:7 ரோமர் 6:1-23; ரோமர் 8:1-13 யாக் 5:19-20; கலா 5:19-21 கொலோ 1:23; கொலோ 2:6-7)

3 நமக்குச் சுயாதீனச் சித்தம் இருக்கிறது. (கொலோ 1:23 யோவான் 1:7; ரோமர் 6:16-23, வெளி 22:17)

4 நாம் பாவம் செய்யும்போது நாம பாவத்தில விழுகிறோம ரோமர் 8:12-13; 1கொரி 6:9-11 கலா 5:19-21; கலா 6:7-8 யாக் 5:19-20 எபி 6:4-6 எபி 10:26-29 2பேதுரு 2:20-21)

5 இரட்சிக்கப்பட்டவர்கள் பிரமாணத்தை மீறி பாவம் செய்யும்போது அவர்களுக்கு மரண ஆக்கினைத் தீர்ப்பு உண்டு. (ரோமர் 6:16-23, ரோமர் 8:12-13; எபி 10:26-29, யாக் 5:19-20; எசே 18:4,20-24. எசே 33:12-13,18)

6 பாவம் செய்கிற ஆத்துமா சாகவே சாகும். (எசே 18:4; ரோமர் 6:16-23 ரோமர் 8:12-13, கலா 5:19-21 கலா 6:7-8 1கொரி 6:9-11 வெளி 21:8

7 நமது பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு நாம் தேவனிடம் நமது பாவங்களைக் குறித்து அறிக்கை செய்ய வேண்டும். (1யோவான் 1:7,9; வெளி 2:5,16. வெளி 3:19, லூக்கா 13:1-5 அப் 2:38

8 அறிக்கை செய்யப்பட்ட பாவங்கள் மட்டுமே மன்னிக்கப்படும். (1யோவான் 1:9; வெளி 2:5,16,22 வெளி 3:19; லூக்கா 13:1-5 அப் 2:38; மாற்கு 6:12 ரோமர் 2:4-6; 2கொரி 7:10)

9 பாவத்தைக் குறித்து மனுஷருக்குப் பொறுப்புண்டு. (ரோமர் 14:10 2கொரி 5:10; கலா 5:19-21, கலா 6:7-8; ரோமர் 14:12)

10 ஒருவன் பின்வாங்கிப்போகும்போது அவனுடைய பின்மாற்றத்திற்கு அவனே பொறுப்பேற்க வேண்டும் (1தீமோ 2:4; 2பேதுரு 3:9 வெளி 2:5; வெளி 3:2, யாக் 5:19-20; கலா 5:19-21

11 நாம் வருங்காலத்தில் பாவம் செய்தால் அப்போது அந்தப் பாவத்தையும் அறிக்கை செய்ய வேண்டும். இரட்சிக்கப்பட்டவர்கள் பாவமே செய்ய மாட்டார்கள் என்று கூறமுடியாது (1யோவான் 1:7,9; வெளி 2:5,22; வெளி 3:2 யாக் 5:19-20

12 அறிக்கை செய்யப்படாத பாவங்களைத் தேவன் மன்னிப்பதில்லை (2நாளா 7:14 2கொரி 7:9-10 1யோவான் 1:9 2தீமோ 2:25 வெளி 2:5 வெளி 3:2)

13 மனிதன் பாவம் செய்ய வேண்டுமென்று சித்தம் கொள்ளும்போது தேவன் அவனைக் கட்டிப்போடுவதில்லை (ரோமர் 6:16-23 ரோமர் 8:1-13; 1யோவான் 1:7; எபி 6:4-9; எபி 10:26-29

14 தேவனுக்குக் கீழ்ப்படிய மறுப்போருக்கு நித்திய ஜீவன் வாக்குப்பண்ணப்படவில்லை (யாக் 5:19-20 2கொரி 3:16-17; 2கொரி 6:19-20, 2கொரி 9:27; எசே 33:12-20

15 நாம் தேவனுக்குச் சுயாதீனமாகக் கீழ்ப்படிய வேண்டும். (வெளி 22:17, யோவான் 3:16-20; ரோமர் 6:16-23, ரோமர் 8:1-13; கலா 1:6-8, கலா 5:4 கலா 6:7-8 1யோவான் 1:7

16 இயேசு கிறிஸ்து தேவனுடைய ஒரேபேறான குமாரன் விசுவாசிகளாகிய நாம் தேவனுடைய பிள்ளைகள் (யோவான் 1:14,18, யோவான் 3:16)

I தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

3 அதிகாரம்

17 ஒருவன் தொடர்ந்து பாவம் செய்யும்போது தேவன் அவனை ஆசீர்வதிப்பதில்லை. (எசே 18:4 ரோமர் 6:16-23; ரோமர் 8:1-13 கலா 5:19-21; யாக் 5:19-20)

18 இரட்சிக்கப்படாதவர்கள் பாவம் செய்தாலும் இரட்சிக்கப்பட்டவர்கள் பாவம் செய்தாலும் பாவம் பாவமே பாவத்தில் பட்சபாதமில்லை (ரோமர் 6:16 -23; ரோமர் 8:12-13 2கொரி 6:9-11 கலா 5:19-21 கொலோ 1:5-10 2பேதுரு 2:20-22)

19 பாவிகளாக இருந்தாலும் பரிசுத்தவான்களாக இருந்தாலும் அவர்கள் செய்யும் பாவங்களுக்காக தேவன் அவர்களை ஆக்கினைக் குள்ளாகத் தீர்ப்பார் (ரோமர் 6:16-23, ரோமர் 8:12-13, ரோமர் 14:10-12, கலா 5:19-21; கலா 6:7-8 எசே 18:4,24-28; எசே 33:12-16, வெளி 2:5,16,22 வெளி 3:2)

20. பாவம் செய்யாமல் நீதிநெறிப் பிரகாரம் ஜீவிக்க வேண்டுமென்று மனுஷன் தன்னுடைய சுயாதீனச் சித்தத்தினால் தீர்மானம் பண்ணிக் கொள்ள வேண்டும் (யோவான் 3:16-20 யோவான் 7:17 யோவான் 8:34 2பேதுரு 1:9 வெளி 22:17)

21 சாத்தானையும் பாவத்தையும் சேவிப்பவர்களுக்குத் தேவன் நித்திய ஜீவனைக் கொடுப்பதில்லை (மத் 6:24 ரோமர் 6:16-23; ரோமர் 8:1-13 கலா 5:19-21 கலா 6:7-8 1யோவான் 3:8)

22 ஒருவன் வேண்டுமென்றே பாவம் செய்யும்போது அவன் தன்னுடைய நீதிநெறி வாழ்வில் விழுந்து விடுகிறான் (ரோமர் 6:16-23 ரோமர் 8:1-13; எபி 6:4-9 எபி 10:26-29, எசே 33:12-20)

23. தேவனுடைய கிருபையை மனுஷன் தன்னுடைய சுய இஷ்டப்படி பயன்படுத்த முடியாது. (ரோமர் 7:16 1யோவான் 1:7; எபி 3:6,12-14 எபி 10:26-29)

24 விதைப்பும் அறுப்பும் என்னும் பிரமாணத்தைத் தேவனுடைய கிருபை ஆதரிக்கிறது. (கலா 6:7-8 ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13 எசே 18:4,24-28; எசே 33:12-16 வெளி 2:5-22

25. தேவனுடைய சிலாக்கியங்கள் நிபந்தனைகளுக்குட்பட்டவை (2கொரி 6:1; கலா 1:6-8; கலா 2:21 கலா 5:4; எபி 12:15; யாக் 5:19-20

26 தேவன் நியமித்துள்ள நியதிகளுக்குக் கீழ்ப்படியாமல் தேவஆசீர்வாதத்தைப் பெறுறுக் கொள்ள முடியாது (ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13 கலா 5:19-21; கலா 6:7-8 யாக் 5:19-20; எபி 10:26-29 யோவான் 6:27)

27 தேவன் நியமித்துள்ள நியதிகளுக்குக் கீழ்ப்படியாமல் பாவமில்லாமல் ஜீவிக்க முடியாது. (1கொரி 3:16-17; ரோமர் 6:16-23, ரோமர் 8:12-13 கலா 5:16-26 கலா 6:7-8; எபி 6:1-9, எபி 10:26-29 எபி 12:14-15

28 தேவனுடைய ராஜ்ஜியத்தில் தேவனே ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் இருக்கிறார் (ஆதி 2:17; ரோமர் 6:16-23, ரோமர் 8:12-13; 1கொரி 6:9-11 கலா 5:19-21 கலா 6:7-8

29 கலகக்காரர்களையும், முரட்டாட்டக் காரர்களையும் தேவன் ஆதரிப்பதில்லை (எசே 18:4, ரோமர் 6:23 ரோமர் 8:12-13, கலா 6:7-8

30 ஒருவன் கலகம் செய்து பாவத்தில் தொடர்ந்து விழுந்திருக்கும்போது தேவன் அவனுக்கு மன்னிப்பையும், நித்திய ஜீவனையும் வாக்குப் பண்ணவில்லை (யாத் 32:32-33 எசே 18:4; எசே 33:10-20 ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13 கலா 5:19-21 கலா 6:7-8

I தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

3 அதிகாரம்

2. தீமோத்தேயு பவுலிடம் அறிவித்தது

1தெச 3:6 இப்பொழுது தீமோத்தேயு உங்களிடத்திலிருந்து எங்களிடத்தில் வந்து, உங்கள் விசுவாசத்தையும் அன்பையும் குறித்தும், நீங்கள் எப்பொழுதும் எங்களைப் பட்சமாய் நினைத்துக் கொண்டு, நாங்கள் உங்களைக் காண வாஞ்சையாயிருக்கிறது போல நீங்களும் எங்களைக் காண வாஞ்சையாயிருக்கிறீர்கள் என்பதைக் குறித்தும், எங்களுக்கு நற்செய்தி சொன்னதினாலே.

"எங்களுக்கு நற்செய்தி சொன்னதினாலே" - பொதுவாக நற்செய்தி சொல்வது என்பது சுவிசேஷச் செய்தியை அறிவிப்பதையே குறிக்கும். ஆனால் இந்த வசனத்திலும், லூக்கா 1:19 ஆவது வசனத்திலும் நற்செய்தி சொல்வது என்பது சாதாரணமான நல்ல செய்தியைக் கூறுவதைக் குறிக்கிறது. (மத் 24:14) தெசலோனிக்கேயருடைய விசுவாசம், அன்பு, பவுல்மீது அவர்கள் வைத்திருக்கும் கரிசனை ஆகியவையே இங்கு கூறப்பட்டிருக்கும் நற்செய்தியாகும்.

3. பவுலின் ஜெபமும் அவர்கள் விசுவாசத்தில் பரிபூரணம் அடைய வேண்டும் என்னும் வாஞ்சையும்

1தெச 3:7 சகோதரரே, எங்களுக்கு நேரிட்ட எல்லா இக்கட்டிலும் உபத்திரவத்திலும் உங்கள் விசுவாசத்தினாலே உங்களைக் குறித்து ஆறுதலடைந்தோம்.

1தெச 3:8 நீங்கள் கர்த்தருக்குள் நிலைத்திருந்தால் நாங்கள் பிழைத்திருப்போம்.

1தெச 3:9 மேலும், நம்முடைய தேவனுக்கு முன்பாக நாங்கள் உங்களைக்குறித்து அடைந்திருக்கிற மிகுந்த சந்தோஷத்தினிமித்தம், நாங்கள் தேவனுக்கு எவ்விதமாய் ஸ்தோத்திரம் செலுத்துவோம்?

1தெச 3:10 உங்கள் முகத்தைக் கண்டு, உங்கள் விசுவாசத்தின் குறைவுகளை நிறைவாக்கும்பொருட்டு, இரவும் பகலும் மிகவும் வேண்டிக் கொள்ளுகிறோமே.

1தெச 3:11 நம்முடைய பிதாவாகிய தேவனும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் உங்களிடத்திற்கு எங்களை நேராக வழிநடத்துவாராக.

1தெச 3:12 நாங்கள் உங்களிடத்தில் வைத்திருக்கிற அன்புக்கொப்பாய், நீங்களும் ஒருவரிடத்தில் ஒருவர் வைக்கும் அன்பிலும் மற்றெல்லாரிடத்தில் வைக்கும் அன்பிலும் கர்த்தர் உங்களைப் பெருகவும் நிலைத்தோங்கவும் செய்து,

1தெச 3:13 இவ்விதமாய் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்போது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக.

"நீங்கள் கர்த்தருக்குள் நிலைத்திருந்தால் நாங்கள் பிழைத்திருப்போம்" நாம் பிழைத்திருப்பதற்கு நாமும் கர்த்தருக்குள் நிலைத்திருக்க வேண்டும். (எபி 3:6,12-14)

நிறைவாக்கு (perfect) - καταρτίζω katartizoo - 2675

வினைச்சொல் - பழுதுபார், உண்டாகும்படி செய், தேறியிரு, எத்தனமாக்கு, சீர்பொருந்தியிரு, நிறைவாக்கு, ஆயத்தம்பண்ணு, சீர்ப்படுத்து **(arrange; adjust)** (2கொரி 13:5)

3 அதிகாரம்

"நம்முடைய பிதாவாகிய தேவனும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும்" - பிதாவாகிய தேவனும், குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் தனித்தனியாக வெவ்வேறு ஆள்தத்துவம் உடையவர்கள் என்பதை இந்த வசனம் விளக்குகிறது. கிறிஸ்துவின் கர்த்தத்துவத்தையும் இந்த வாக்கியம் வலியுறுத்துகிறது. (யோவான் 5:7)

தீர்க்கதரிசன எண் - 8

"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்போது" (தெச 3:13) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. மத்திய ஆகாயத்தில் தம்முடைய பரிசுத்தவான்களைச் சந்திப்பதற்காக இயேசு கிறிஸ்து வருவார் (1தெச 4:16) இந்த நிகழ்ச்சி சபை எடுத்துக் கொள்ளப்படுதல் என்னப்படுகிறது. பிதாவாகிய தேவனுக்கு முன்பாக இயேசு கிறிஸ்து தம்முடைய பரிசுத்தவான்களை அழைத்து வருவார். தேவன் அவர்களைக் கறைதிரையில்லாமல் பரிசுத்தப்படுத்துவார். அதுவரையிலும் இரட்சிப்பும், நித்திய ஜீவனும் மனுஷருக்கு நிபந்தனையின் பேரிலேயே கொடுக்கப்பட்டிருக்கிறது. (யோவான் 6:27) சபை எடுத்துக் கொள்ளப்படும்போது மனுஷர் கறைதிரையில்லாத பரிசுத்த ஜீவனைப் பெற்றுக் கொள்கிறார்கள். தேவனுடைய வாக்குத்தத்தம் இவர்களுக்கு நிறைவேறுகிறது. (மத் 7:13-14, மத் 18:8-9 மத் 19:28-29; மாற்கு 10:29-30 லூக்கா 18:29-30; ரோமர் 2:7, ரோமர் 6:21-23; கலா 6:7-8; 1தீமோ 1:16 1தீமோ 4:8; 1தீமோ 6:12,19; தீத்து 1:2 தீத்து 3:7, 1பேதுரு 1:5,9,13; 1பேதுரு 3:7, 1யோவான் 2:25, யூதா 1:20-24, தானி 12:2, யோவான் 6:27)

பிழையற்றது (unblameable) - ἄμεμπτος - amemptos - 273

> பொருள் - குற்றமற்ற, பிழையற்ற, குற்றம் சாட்டப்படாத, பிழையில்லாத (பிலி 2:15)

"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்போது" - (சக 14:5, யூதா 1:14) ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சியை இது குறிப்பிடவில்லை. இந்த வசனங்களில் இயேசு கிறிஸ்து தம்முடைய பரிசுத்தவான்களோடு பூமிக்கு ஆளுகை செய்வது பற்றி கூறப்பட்டிருக்கிறது. இது இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை என்னப்படுகிறது. (2தெச 2:7) மத்திய ஆகாயத்தில் தம்முடைய பரிசுத்தவான்களைச் சந்தித்து அவர்களைப் பரலோகத்திலுள்ள பிதாவிடம் அழைத்து வருவதை (தெச 3:13) ஆவது வசனம் குறிப்பிடுகிறது. (1தெச 4:16-17; யோவான் 14:1-3)

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

4 அதிகாரம்

VII. விசுவாசிகள் நடக்க வேண்டிய விதமும் ஆனந்தபாக்கிய நம்பிக்கையும்

1. தேவனைப் பிரியப்படுத்தி பக்தியுடன் நடக்க வேண்டும் என்னும் புத்திமதி

1தெச 4:1 அன்றியும், சகோதரரே, நீங்கள் இன்னின்ன பிரகாரமாய் நடக்கவும், தேவனுக்குப் பிரியமாயிருக்கவும் வேண்டுமென்று நீங்கள் எங்களால் கேட்டு ஏற்றுக்கொண்டபடியே, அதிகமதிகமாய்த் தேறும்படிக்கு, கர்த்தராகிய இயேசுவுக்குள் உங்களை வேண்டிக்கொண்டு புத்திசொல்லுகிறோம்.

1தெச 4:2 கர்த்தராகிய இயேசுவினாலே நாங்கள் உங்களுக்குக் கொடுத்த கட்டளைகளை அறிந்திருக்கிறீர்களே.

“நீங்கள் இன்னின்ன பிரகாரமாய் நடக்கவும் தேவனுக்குப் பிரியமாயிருக்கவும் வேண்டுமென்று” விசுவாசிகள் கிறிஸ்துவிற்குள் பரிபூரணமாக இருக்க வேண்டும் என்று பவுல் எப்போதும் ஆவலுடையவராக இருக்கிறார் (1தெச 2:7,11-12, 1தெச 3:10,13, 1தெச 4:1-7, 1தெச 5:12-23)

2. உண்மையான பரிசுத்தமாதல் (1கொரி 1:30; 2கொரி 6:14-18; 7:1 எபி 12:14)

1தெச 4:3 நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி, நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருந்து,

1தெச 4:4 தேவனை அறியாத அஞ்ஞானிகளைப்போல மோக இச்சைக்குட்படாமல்,

1தெச 4:5 உங்களில் அவனவன் தன்தன் சரீர பாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து,

1தெச 4:6 இந்த விஷயத்தில் ஒருவனும் மீறாமலும் தன்சகோதரனை வஞ்சியாமலும் இருக்கவேண்டும்; முன்னமே நாங்கள் உங்களுக்குச் சொல்லி, சாட்சியாக எச்சரித்தபடியே, இப்படிப்பட்ட விஷயங்களெல்லாவற்றையுங்குறித்துக் கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவராயிருக்கிறார்.

1தெச 4:7 தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல, பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்.

தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு செய்ய வேண்டிய காரியங்கள் (1தெச 4:3-18)

1. வேசி மார்க்கத்திற்கு விலகியிருக்க வேண்டும். (1தெச 4:3; மத் 5:32)
2. அவனவன் தன்தன் சரீர பாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டு கொள்ள வேண்டும். (1தெச 4:5)
3. அஞ்ஞானிகளைப் போல மோக இச்சைக்கு உட்படக்கூடாது. (1தெச 4:4; கொலோ 3:5)
4. ஒருவனும் தன் சகோதரனை வஞ்சிக்கக்கூடாது. (1தெச 4:6,7)
5. பரிசுத்தமாக நடந்து கொள்ள வேண்டும். (1தெச 4:7, ரோமர் 1:24)
6. தேவனை அசட்டை பண்ணக்கூடாது (1தெச 4:8)
7. ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும். (1தெச 4:9, 1கொரி 13)
8. அன்பிலே அதிகமாய்ப் பெருக வேண்டும். (1தெச 4:10, 1தெச 3:12)
9. அமைதலுள்ளவர்களாய் இருக்கும்படி நாட வேண்டும். (1தெச 4:12, 2தீமோ 2:15)

I தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

4 அதிகாரம்

10 ஒவ்வொருவனும் தனது சொந்த அலுவல்களைப் பார்க்க வேண்டும். 1தெச 4:12

11 ஒவ்வொருவனும் தனது சொந்த கைகளினால் வேலை செய்ய வேண்டும். (1தெச 4:12; 1கொரி 4:12 எபே 4:28; 2தெச 3:10)

12 மனுஷருக்கு முன்பாக யோக்கியமாய நடக்க வேண்டும். (1தெச 4:11)

13 நம்பிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும். (1தெச 4:13-17)

14 ஒருவரையொருவர் தேற்ற வேண்டும். 1தெச 4:18

பரிசுத்தம் (sanctification) - ἁγιασμός - hagiasmos - 38

ஆங்கில வேர்ச்சொல் - பரிசுத்தம் (consecration) "holiness" ரோமர் 6:19,22; 1தெச 4:7 தீமோ 2:15; எபி 12:14) "sanctification" (1கொரி 1:30 1தெச 4:3-4; 2தெச 2:13, 1பேதுரு 1:2

"தன்தன் சரீர பாண்டத்தை பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து" - புருஷரும் (தெச 4:3 2கொரி 4:7, 2தீமோ 2:21) ஸ்திரீகளும் (1தெச 4:4, 1பேதுரு 3:7) தங்கள் சரீரத்தைப் பரிசுத்தமாயும், கனமாயும் ஆளவேண்டும்

3. அன்பில் பெருக வேண்டும் என்னும் கட்டளை - (1கொரி 13; 1யோவான் 3:11-18; 4:11-21)

1தெச 4:8 ஆகையால் அசட்டை பண்ணுகிறவன் மனுஷரை அல்ல தமது பரிசுத்த ஆவியை நமக்குத் தந்தருளின தேவனையே அசட்டை பண்ணுகிறான்

1தெச 4:9 சகோதர சிநேகத்தைக் குறித்து நான் உங்களுக்கு எழுத வேண்டுவதில்லை நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும்படிக்கு தேவனால் போதிக்கப்பட்டவர்களாயிருக்கிறீர்களே

1தெச 4:10 அந்தபடி நீங்கள் மக்கெதோனியா நாடெங்கும் உள்ள சகோதரரெல்லாருக்கும் செய்துவருகிறீர்கள் சகோதரரே அன்பிலே நீங்கள் இன்னும் அதிகமாய் பெருகவும்.

"தமது பரிசுத்த ஆவியை நமக்குத் தந்தருளின தேவனையே அசட்டை பண்ணுகிறான்" - மனுஷர் செய்யும் பாவங்களில் சில தேவனுக்கு நேர் விரோதமானவை. கொலைபண்ணுதல் (ஆதி 9:6) விசுவாசியை வஞ்சித்தல் (மத் 18:10 லூக்கா 10:16; 1தெச 4:8), மனுஷனை அவமானபடுத்துதல் (மத 25:31-46) இயேசு கிறிஸ்துவையும் சுவிசேஷத்தையும் ஏற்றுக் கொள்ளாமல் மறுதலித்தல் (யோவான் 12:48

"தமது பரிசுத்த ஆவியை நமக்குத் தந்தருளின தேவன்" - ஒவ்வொரு விசுவாசியும் மறுபடியும் பிறக்கும்போது அவரிடத்தில் பரிசுத்த ஆவியானவர் ஏராளமாய் இருக்கிறார் (ரோமர் 8:14 (கலா 4:6) கிறிஸ்துவின் ஆவி இல்லாதவன் அவருடையவன் அல்ல (ரோமர் 8:9 பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் என்பது தேவனுடைய ஆவியின் நிறைவை பெற்றுக் கொள்வதாகும். யோவான் 1:34 அப 1:4-8; அப 2:4)

சகோதரசிநேகம் (brotherly love) - φιλαδελφία - philadelphia - 5360

ஆங்கில வேர்ச்சொல் - சகோதரசிநேகம் (brotherly, sisterly love) brotherly love (1தெச 4:9; ரோமர் 12:10, எபி 13:1, love of the brethren (1பேதுரு 1:22, brotherly kindness (2பேதுரு 1:7 Philadelphia (வெளி 1:11, வெளி 3:7)

4 அதிகாரம்

போதிக்கப்படுதல் (taught) - θεοδίδακτος - theodidaktos - 2312

ஆண்பால் பெயர்ச்சொல் - தெய்வீகக் காரியங்களைப் பேசுபவர் - விசுவாசிகள் மத்தியில் தெய்வீக அன்பைப் போதிப்பது. (யோவான் 6:45) தேவன் தமது ஒரேபேறான குமாரனைத் தந்து நம்மீதுள்ள தமது அன்பை வெளிப்படுத்தியிருக்கிறார் (யோவான் 3:16; 1யோவான் 3:1). நாம் பாவிகளாகவும் தேவனுக்குச் சத்துருக்களாகவும் இருக்கையில் தேவன் தமது அன்பை நம்மீது வெளிப்படுத்தியிருக்கிறார் (ரோமர் 5:5-10) தேவன் தம்முடைய சத்துருக்களிடத்தில் தமது அன்பை இலவசமாய் வெளிப்படுத்தியிருக்கும்போது நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர வேண்டும். (1யோவான் 3:11-23; 1யோவான் 4:7-21)

"சகோதரரே அன்பிலே நீங்கள் இன்னும் அதிகமாய்ப் பெருகவும்" - சகோதர சிநேகத்தில் தெசலோனிக்கேய சபையார் இன்னும் அதிகமாய்ப் பெருக வேண்டும் (1தெச 3:12; 2கொரி 9:10)

4. யோக்கியமாய் நடந்து உலகத்தில் முன்மாதிரியாக ஜீவிக்க வேண்டும் (ரோமர் 12:9-16, 1தீமோ 4:12-16)

1தெச 4:11 புறம்பேயிருக்கிறவர்களைப் பற்றிய யோக்கியமாய் நடந்து ஒன்றிலும் உங்களுக்குக் குறைவில்லாதிருக்கும் படிக்கு.

1தெச 4:12 நாங்கள் உங்களுக்குக் கட்டளையிட்டபடியே அமைதலுள்ளவர்களாயிருக்கும்படி நாடவும், உங்கள் சொந்த அலுவல்களைப் பார்க்கவும், உங்கள் சொந்தக் கைகளினாலே வேலைசெய்யவும் வேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறோம்.

நாடுதல் (study) - φιλοτιμέομαι - philotimeomai - 5389

வினைச்சொல் - நாடு (to be ambitious, pursue eagerly; strive and aspire to, prize above measure) "study" (1தெச 4:11); "strive" (ரோமர் 15:20); "labour" (2கொரி 5:9). இந்த வார்த்தையும் 2தீமோ 2:15 ஆவது வசனத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் வார்த்தையும் ஒரே பொருளுடையது அல்ல

அமைதியாயிரு (be quiet) - ἡσυχάζω - heesychazoo - 2270

வினைச்சொல் - பேசாமல் இரு, ஓய்ந்திரு, அமைதியாயிரு "be quiet" (1தெச 4:11); "rest" (லூக்கா 23:56); "cease" (அப் 21:14); "hold one's peace" (லூக்கா 14:4; அப் 11:18)

5. சபை எடுத்துக்கொள்ளப்படும் விதமும் பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களும் - (லூக் 21:34-36; யோவான் 14:1-3; 1கொரி 15:23,51-58; 2கொரி 5:1-8; எபே 5:27; பிலி 3:11, 20-21; 1தெச 2:19; 3:13; 5:9,23; 2தெச 2:1, 7-8; கொலோ 3:4; யாக் 5:7-8; 1யோவான் 2:28; 3:2; 1பேதுரு 5:4; வெளி 1:19

1தெச 4:13 அன்றியும், சகோதரரே, நித்திரையடைந்தவர்கள் நிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை

1தெச 4:14 இயேசுவானவர் மரித்துப் பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரை அடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டு வருவார்

4 அதிகாரம்

1தெச 4:15 கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது, கர்த்தருடைய வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரை அடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வதில்லை.

1தெச 4:16 ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.

1தெச 4:17 பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள் மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்.

1தெச 4:18 ஆகையால் இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்.

தீர்க்கதரிசன எண் - 4

"சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை." (1தெச 4:13-5:10) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை (2கொரி 1:8)

1தெசலோனிக்கேயர் 4:14-17 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் வெளிப்பாடுகள்

1 இயேசு கிறிஸ்துவிற்குள் மரித்தவர்கள் பரலோகத்திலிருந்து அழைத்து வரப்படுவார்கள். அவர்களுக்கு உயிர்த்தெழுந்த சரீரங்கள் கொடுக்கப்படும். (1தெச 4:14; யோவான் 5:28-29; 1கொரி 15:20-23,35-58; பிலி 3:21)

2 இக்காலத்தில் கிறிஸ்துவிற்குள் உயிரோடு இருக்கிறவர்கள் மரிக்காமல் மறுரூபமடைவார்கள் (1தெச 4:15-17; 1கொரி 15:51-58; 2கொரி 5:1-10; பிலி 3:21)

3 இந்த நிகழ்ச்சி இயேசு கிறிஸ்து மத்திய ஆகாயத்திற்குத் தமது சபையை எடுத்துக் கொள்ள வரும் காரியமாகும். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை என்பது இதற்குப்பின்பு நடைபெறும் நிகழ்ச்சியாகும். (1தெச 4:15-17; 2தெச 2:7; வெளி 4:1)

4 பரிசுத்தவான்களை மறுரூபப்படுத்துவதற்கு கர்த்தர் தாமே பரலோகத்திலிருந்து மத்திய ஆகாயத்திற்கு இறங்கி வருவார் (1தெச 4:16; யோவான் 14:1-3; 1கொரி 15:23,51-58; பிலி 3:21)

5 கிறிஸ்துவிற்குள் மரித்தவர்கள் கிறிஸ்துவிற்குள் ஜீவிக்கிறவர்களுக்கு முன்பாக எழுந்திருப்பார்கள் (1தெச 4:16; 1கொரி 15:23,51-58; பிலி 3:21; யோவான் 5:28-29)

6 சபையாரும் ஆபேல் முதல் இக்காலம் வரையிலும் கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர் அனைவரும் அநித்திய சரீரத்திலிருந்து நித்திய சரீரத்திற்கு மாற்றப்படுவார்கள் (1தெச 4:17; யோவான் 14:1-3; லூக்கா 21:36; 1கொரி 15:23,51-58; பிலி 3:21; 2கொரி 5:1; கொலோ 3:4; 2தெச 2:7; எபே 5:27)

கிறிஸ்தவருடைய நம்பிக்கைகள்

1 இரட்சிப்பு (Salvation) (ரோமர் 8:20-25; ரோமர் 15:4,13; 1தெச 5:8; 2தெச 2:16; 1பேதுரு 1)

2 நீதி (Righteousness) (கலா 5:5)

3 தேவனுடைய அழைப்பு (God's calling) (எபே 1:18; எபே 4:4)

4 நித்திய சுதந்தரம் (Eternal inheritance) (கொலோ 1:5; எபே 1:11-18; எபி 9:15; 1பேதுரு 1:4)

I தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

4 அதிகாரம்

5 தேவனுடைய மகிமை (God's glory) (ரோமர் 5:1-5; கொலோ 1:27)

6 உயிர்த்தெழுதல் (Resurrection) அப 23:6; அப 24:15; 1தெச 4:13 தீத்து 2:13; 1யோவான் 3:3)

7 நித்திய ஜீவன் (Eternal life) 1கொரி 13:13; 1கொரி 15:19 எபே 2:12; கொலோ 1:23; தீத்து 1:2 தீத்து 3:7; எபி 3:6; எபி 6:11,18,19 எபி 7:19; 1பேதுரு 1:3-13)

8 பரலோகத்தில் பாதுகாப்பாக இருப்பது (Converts safe in heaven) (1தெச 2:19

"இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தார்" - இயேசு கிறிஸ்துவின் மரணம் அவரை விசுவாசிப்போருக்கு இரட்சிப்பின் நிச்சயத்தைத் தருகிறது. (மத் 26:28; ரோமர் 5:6-11, 1பேதுரு 2:24) அவருடைய உயிர்த்தெழுதல் எல்லா மனுஷருக்கும் உயிர்த்தெழுதலின் நிச்சயத்தைத் தருகிறது. (1தெச 5:10 யோவான் 14:19, ரோமர் 5:10; ரோமர் 6:5-8, 1கொரி 15:4-23, 2தீமோ 2:11)

"நித்திரையடைந்தவர்கள்" நித்திரை என்பது சரீரத்தின் மரணத்தைக் குறிப்பிடும் (1தெச 4:14-16, 1தெச 5:10; உபா 31:16 2சாமு 7:12; 1இராஜா 1:21; யோபு 7:21 சங் 13:3, தானி 12:2; மாற்கு 5:39 லூக்கா 8:52, யோவான் 11:11-14, அப 13:36, 1கொரி 11:30; 1கொரி 15:51; யாக் 2:26) மேலே கூறப்பட்டிருக்கும் வசனங்களில் நித்திரை என்னும் வார்த்தை மரணத்தோடு தொடர்புபடுத்தியே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மத் 27:52; 1கொரி 15:20 ஆகிய வசனங்களில் "நித்திரையடைந்திருத்தல்" என்பது மரணத்தையே குறிக்கும் பழைய ஏற்பாட்டில் தன் பிதாக்களோடு நித்திரையடைந்தான் என்னும் வாக்கியம் மரணத்தைக் குறிக்கும் விதமாக 36 இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. நித்திரை என்னும் வார்த்தை ஆத்துமாவின் நித்திரையைக் குறிப்பதில்லை ஏனெனில் ஆத்துமா மரிக்காது. அது நித்தியமானது. (1பேதுரு 3:4) இந்த வசனத்தில் "இயேசுவிற்குள் நித்திரையடைந்தவர்கள்" என்னும் வாக்கியம் இயேசு கிறிஸ்துவில் மரித்தவர்கள் என்று பொருள்படும். (1தெச 4:14,16)

"தேவன் அவரோடேகூடக் கொண்டு வருவார்" - விசுவாசிகள் மரித்தவுடன் பரலோகத்திற்குச் சென்று விடுவார்கள் தங்களுடைய மரித்த சரீரங்களின் உயிர்த்தெழுதலுக்காக அவர்கள் பரலோகத்தில் காத்துக் கொண்டிருப்பார்கள் (2கொரி 5:8; பிலி 1:21-24; எபி 12:22-23 வெளி 6:9-11) இயேசு கிறிஸ்து பரலோகத்திலிருந்து மத்திய ஆகாயத்திற்கு இறங்கிவரும்போது பரலோகத்திலுள்ள பரிசுத்தவான்களும் அவரோடே வருவார்கள் (1தெச 4:17) அப்போது அவர்களுடைய மரித்த சரீரங்கள் ஒருகணப்பொழுதிலே மறுரூபமாகி அவர்களுடைய ஆத்துமாக்களோடு மறுபடியும் இணைந்து கொள்ளும். (1கொரி 15:51-58)

"கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு" - கர்த்தருடைய வெளிப்பாட்டின் மூலமாக என்று பொருள் (கலா 1:12)

"கர்த்தருடைய வருகை" - சபையை எடுத்துக் கொள்வதற்காக இயேசு மத்திய ஆகாயத்தில் கிறிஸ்துவின் வருகையை இந்த வாக்கியம் குறிக்கும். (1தெச 4:17 இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை இந்த வாக்கியம் குறிப்பிடவில்லை (சக 14 வெளி 19; மத் 24:29-31, மத் 25:31-46, யூதா 1:14)

முந்திக்கொள் (prevent) - φθάνω - phthanoo - 5348

வினைச்சொல் - வா, அடை, முந்திக்கொள், தேறியிரு (to come before, first) prevent (1தெச 4:15, attain (ரோமர் 9:31; பிலி 3:16); come (மத் 12:28; லூக்கா 11:20, 2கொரி 10:14, 1தெச 2:16) - ஏற்கெனவே மரித்த பரிசுத்தவான்கள் முதலாவது உயிர்த்தெழுவார்கள் அதன்பின்பு உயிரோடிருக்கும் பரிசுத்தவான்கள் மறுரூபமடைவார்கள் மத்திய ஆகாயத்தில் கர்த்தரைச் சந்திப்பதற்காக மரித்து உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களும், உயிரோடிருந்து மறுரூபமான பரிசுத்தவான்களும் செல்வார்கள் (1தெச 4:16-17)

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

4 அதிகாரம்

ஆரவாரம் (shout) - κέλευσμα keleusma - 2752

பால்வேறுபாடற்ற பெயர்ச்சொல் - ஆரவாரம் (a cry of incitement; an order; command in war; the call of preparation for action) - அப 12:22 ஆவது வசனத்தில் "ஆர்ப்பரித்தார்கள்" என்னும் வார்த்தை பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இதற்கான கிரேக்க வார்த்தையும், இந்த வசனத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்க வார்த்தையும் வெவ்வேறானவை. யோவான் 11:43 ஆவது வசனத்தில் "லாசருவே வெளியே வா" என்று இயேசு கிறிஸ்து உரத்த சத்தமாகக் கூப்பிட்டார். இது ஒரு கட்டளையாகும். பிரதான தூதனாகிய மிகாவேல் பிசாசுடனே "தர்க்கித்துப் பேசினான்" (யூதா 1:9) இஸ்ரவேல் ஜனங்கள் இடிமுழக்கங்களையும் மின்னல்களையும் மலை புகைகிறதையும் கண்டார்கள் (யாத் 20:18-19; எபி 12:18-21,26) இவ்வாறாக பல வசனங்களில் பலவிதமான ஆரவாரங்களையும் எக்காள சத்தங்களையும் குறித்து நாம் வாசிக்கிறோம்.

"தேவ எக்காளம்" (trump of God) - வெளி 11:15-13:18 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் ஏழாவது எக்காளமும் இந்த எக்காளமும் வெவ்வேறானவை. தானியேலின் எழுபதாவது வாரத்திற்கு முன்பாக சபை எடுத்துக் கொள்ளப்படும்போது தேவஎக்காளம் தொனிக்கப்படுகிறது. (1தெச 4:16; 2தெச 2:7; வெளி 4:1) எழுபதாவது வாரத்தின் மத்தியில் ஆண்பிள்ளை எடுத்துக் கொள்ளப்படும் போது தேவஎக்காளம் தொனிக்கப்படுகிறது (வெளி 11:15-13:18) முதலாவது தேவ எக்காளமாகும். (1தெச 4:16) மற்றது ஏழாவது தூதனுடைய எக்காளமாகும். (வெளி 11:15) ஒரு நிமிஷப் பொழுதிலே ஒரு நிகழ்ச்சி நடைபெறப்போகிறது என்பதை தேவ எக்காளம் அறிவிக்கிறது. (1கொரி 15:51-58) ஏழாவது தூதனுடைய எக்காளம் பல நிகழ்ச்சிகளை அறிவிக்கிறது. (வெளி 10:7; வெளி 11:15-13:18) தேவ எக்காளம் ஆசீர்வாதமான எக்காளமாகும். (1தெச 4:16-17) ஏழாவது தூதனின் எக்காளம் மனுஷருக்கு அழிவை அறிவிக்கும் எக்காளமாகும். (வெளி 8:13; வெளி 11:15; வெளி 12:12) தேவ எக்காளம் வெளி 6:1-9:21 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் முதலாவது ஆறு எக்காளங்களுக்கும் ஏழாவது முத்திரைக்கும் முந்தியது. ஏழாவது தூதனின் எக்காளம் இவற்றிற்குப் பிந்தியது. (வெளி 11:15; 1கொரி 15:23)

சபை எடுத்துக் கொள்ளப்படுவதில் பங்கு பெறுவதற்கு நிபந்தனைகள்

1. இயேசுகிறிஸ்துவிற்குள் இருக்க வேண்டும். (1தெச 4:14,16; 2கொரி 5:17-18)
2. கிறிஸ்துவினுடையவர்களாக இருக்க வேண்டும். (1கொரி 15:23; கலா 5:24)
3. ஆசீர்வதிக்கப் பட்டவர்களாகவும் பரிசுத்தமானவர்களாகவும் இருக்க வேண்டும். (வெளி 20:4-6; எபி 12:14)
4. நன்மை செய்கிறவர்களாக இருக்க வேண்டும். (யோவான் 5:28-29)
5. பாத்திரராக இருக்க வேண்டும். (லூக்கா 21:36)
6. சபையைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். (1கொரி 12:13; எபே 1:20-23; எபே 4:4-6; எபே 5:27; கொலோ 1:18,24)
7. சுத்தமுள்ளவர்களாக இருக்க வேண்டும். (1யோவான் 3:2-3)
8. கறைதிரையற்றவர்களாக இருக்க வேண்டும். (எபே 5:27)
9. ஆவியில் ஜீவித்து நடக்க வேண்டும். (கலா 5:17-21)
10. வெளிச்சத்தில் நடக்க வேண்டும். (1யோவான் 1:7; கொலோ 2:6)

"உயிரோடிருக்கும் நாமும்" - 2தெச 2:7; வெளி 4:1)

I தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

4 அதிகாரம்

எடுத்துக்கொள்ளப்படுதல் (caught up)
ἁρπάζω - harpazoo - 726

வினைச்சொல் - இழு பற்றிக்கொள், பிடித்துக்கொள், பீறு எடுத்துக்கொள் (to carry off; grasp hastily; snatch up; to seize and overpower; to plunder) (யோவான் 10:28) - இந்த வார்த்தையிலிருந்துதான் சபை எடுத்துக் கொள்ளப்படுதல் என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (மத் 13:19; அப் 8:39; 2கொரி 12:2,4; 1தெச 4:17; வெளி 12:5)

"மேகங்கள் மேல்" - இந்த வாக்கியம் உண்மையான மேகங்களைக் குறிப்பிடும். மேகங்கள் என்பது ஜனத்திரளைக் குறிப்பதாக ஒருசிலர் வியாக்கியானம் பண்ணுகிறார்கள். இந்த வியாக்கியானத்தைவிட மேகங்கள் என்பதை மெய்யான மேகங்கள் என்று கூறுவதே சிறந்தது.

சபை எடுத்துக் கொள்ளப்படுவதன் நோக்கங்கள்

1 தாம் வாக்குத்தத்தம் பண்ணிய பிரகாரம் தம்முடனேகூட இருப்பதற்காக (1தெச 4:17; யோவான் 14:1-3, எபே 5:27)

2 மரித்த துணமாக்களிலிருந்து வேறுபிரித்து இயேசு கிறிஸ்துவிற்குள் நித்திரையடைந்தவர்களை உயிரோடு எழுப்புவதற்காக. (1தெச 4:14, 16-17; பிலி 3:11, வெளி 20:4-6)

3 புதிய எருசலேமிலே கர்த்தருடனேகூட நித்திய காலமாக இருப்பதற்கும் வெகுமதிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் கர்த்தர் தம்முடைய பரிசுத்தவான்களைப் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்வதற்காக. (1தெச 4:17; 1தெச 3:13; யோவான் 14:1-3; 2கொரி 5:10, எபி 12:22-23; வெளி 19:1-10, வெளி 21:9-10)

4 பரிசுத்தவான்களின் அழிவுள்ள சரீரங்களை அழியாத சரீரங்களாக மாற்றுவதற்காக. (1தெச 4:16-17, 1கொரி 15:35-58; பிலி 3:21)

5 தேவனுக்கு முன்பாக பரிசுத்தவான்களை நிறுத்துவதற்காக. (1தெச 4:17; 1தெச 3:13; யோவான் 14:1-3; யூதா 1:24; வெளி 19:1-10)

6 சரீரத்திலும், ஆத்துமாவிலும், ஆவியிலும் பரிசுத்தவான்களை முழுமையடையச் செய்வதற்காக (1தெச 4:16-17; 1தெச 5:23; பிலி 3:21)

7 முன்மாரி பின்மாரி ஆகியவற்றின் கனியைப் பெற்றுக் கொள்வதற்காக (யாக் 5:7; யோவான் 14:1-3)

8 மகா உபத்திரவத்திலிருந்து பரிசுத்தவான்களைத் தப்பிக்க வைப்பதற்காக. (வெளி 6:1-19:21, 1தெச 4:16-17; 1தெச 5:9; லூக்கா 21:36; வெளி 4:1)

9 அக்கிரமக்காரனைத் தடை செய்கிறவனை நீக்குவதற்காக. (2தெச 2:7, வெளி 4:1)

10 அந்திக்கிறிஸ்துவின் வெளிப்பாட்டை அனுமதிப்பதற்காக. (2தெச 2:7, வெளி 4:1)

"எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்" உபத்திரவக்காலத்தில் பரிசுத்தவான்கள் கர்த்தருடனே பரலோகத்தில் இருப்பார்கள் (2தெச 2:7; வெளி 4:1) அர்மகெதோனுக்கு இயேசு கிறிஸ்துவோடு சேர்ந்து வருவார்கள் (சக 14:1-5; மத் 24:27-31; மத் 25:31-46; யூதா 1:14; வெளி 19:11-21) பரிசுத்தவான்கள் பரலோகத்தில் புதிய எருசலேமில் ஜீவிப்பார்கள். ஆயிரம் வருஷ அரசாட்சியில் இயேசு கிறிஸ்துவோடு பூமியில் ஆளுகை செய்வார்கள் (வெளி 20:4-10, வெளி 21:9-10; எபி 12:22-23) இதன் பின்பு புதிய எருசலேமிலிருந்து புதிய பூமிக்கு நித்திய காலமாக ஜீவிக்க வருவார்கள் (வெளி 21, வெளி 22)

I தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

5 அதிகாரம்

VIII. கர்த்தருடைய நாள் - (2தெச 2:2; 2பேதுரு 3:10)

1. கர்த்தருடைய நாளை எவ்வாறு தெரிந்து கொள்வது

1தெச 5:1 சகோதரரே, இவைகள் நடக்குங் காலங்களையும் சமயங்களையுங் குறித்து உங்களுக்கு எழுதவேண்டுவதில்லை

1தெச 5:2 இரவிலே திருடன் வருகிறவிதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள்

1தெச 5:3 சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும் போது கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறதுபோல அழிவு சடிதியாய் அவர்கள்மேல் வரும். அவர்கள் தப்பிப்போவதில்லை

"இவைகள் நடக்குங் காலங்களையும் சமயங்களையுங்குறித்து" சபை எடுத்துக் கொள்ளப்படும் நாளையும் கர்த்தருடைய நாளையும் இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. (2தெச 2:7, வெளி 4:1)

"கர்த்தருடைய நாள்" (the day of the Lord) - கர்த்தருடைய நாள் என்பது ஆயிரம் வருஷ அரசாட்சியைக் குறிக்கும். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையிலிருந்து ஆயிரம் வருஷ அரசாட்சியின் இறுதிப் பகுதியில் சாத்தான் கலகம் பண்ணும் காலம் வரையிலும் உள்ள நாட்கள் கர்த்தருடைய நாள் என்னப்படுகிறது (வெளி 19:11 20:10) இந்தப் பூமியை ஆட்சி செய்வதற்கு கர்த்தர் வரும் வரையிலும் கர்த்தருடைய நாள் வராது. (ஏசா 2:12, ஏசா 13:6,9; ஏசா 34:8 ஏசா 61:2, ஏசா 63:1-6; எரே 46:10 எசே 30:3, தானி 2:44-45; தானி 7:13-14 ஆமோ 5:18, யோவே 2; ஒப 15; செப் 1:8,18, செப் 2:2-3; சக 14; மல் 4; மத் 24:29-31; மத் 25:31-46; 1தெச 5:2, 2தெச 1:7-10; 2தெச 2:1-12; யூதா 1:14, வெளி 19:11-21; வெளி 20:1-10)

"இரவிலே திருடன் வருகிறவிதமாய்" - 1தெச 5:2-4; 2பேதுரு 3:10; வெளி 3:3 வெளி 16:15 ஆகிய வசனங்களில் கர்த்தருடைய நாள் எப்படி வருமென்று இவ்வாறு விளக்கப் பட்டிருக்கிறது. வெளி 3:3 ஆவது வசனத்தில் சர்தை சபையின் நியாயத் தீர்ப்பைக் குறித்து கூறப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் வருகையும் திருடன் வருகிற விதமாக இருக்கும். (மத் 24:4)

"அழிவு சடிதியாய் அவர்கள்மேல் வரும்" - தானியேலின் எழுபதாவது வாரத்தில் முதல் மூன்றரை வருஷங்களில் அந்திக்கிறிஸ்து பத்து ராஜ்யங்களை வெற்றி பெறுவான் (தானி 7:23-24; வெளி 13, வெளி 17) தானியேலின் இறுதி மூன்றரை வருஷங்களில் மேலும் பல தேசங்களைச் சாத்தான் வெற்றி பெறுவான் (தானி 11:40-45) உலகத்தில் சமாதானமும் பாதுகாப்பும் உண்டாயிருக்கிறது என்று உலகத்தார் நினைப்பார்கள் இனிமேல் யுத்தங்கள் நடைபெறாது என்றும் கருதுவார்கள் (சக 14) சமாதானத்தின் காலத்தையும் ஆசீர்வாதத்தின் காலத்தையும் ஜனங்கள் எதிர்நோக்கியிருப்பார்கள் எருசலேம் பாதி கைப்பற்றப்பட்டிருக்கும்போது கர்த்தர் சடிதியாய் வருவார் அர்மெகதோனில் எல்லா தேசங்களின்மீதும் அழிவு சடிதியாய் வரும். (சக 14 யோவே 3 வெளி 19:1-2)

சடிதி (sudden) - αἰφνίδιος - aiphnidios - 160

எதிர்பாராத, நினையாத, சடிதியாய (லூக்கா 21:34 1கொரி 5:5, 1தெச 5:3)

"கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறதுபோல" பிள்ளை பிறக்கும் காலத்தில் கர்ப்பவதிகளுக்கு வேதனை உண்டாகும். வேதனை உண்டாகும்போது தனக்கு பிள்ளை பிறக்கப்போகிறது என்பதை அவள் அறிந்திருப்பாள் ஆனாலும் எந்த நாளில், எந்த வேளையில் தனக்குப் பிள்ளை பிறக்கும் என்பது கர்ப்பவதிக்குத் தெரியாது அதுபோலவே கர்த்தருடைய நாளும் எப்போது வரும் என்று யாருக்கும் தெரியாது. (மத் 24:36,39,42 51; மத் 25:13 மாற்கு 13:32)

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

5 அதிகாரம்

"அவர்கள் தப்பிப்போவதில்லை" - எல்லா தேசங்களின்மீதும் அழிவு சடிதியாய் வரும். தேசத்தின் பட்டணங்கள் பூமியதிர்ச்சியினால் அழிந்து விழும். அர்மெகதோனில் நடைபெறும் யுத்தத்தில் தேசத்தின் சேனைகளில் ஆறில் ஒரு பகுதியைத் தவிர மற்றவர்கள் அழிக்கப்படுவார்கள் (எசே 39:2 சக 14:1-5,16-21 வெளி 19:11-21). ஆயிரம் வருஷ அரசாட்சியில் பங்குபெறுவதற்காக பலர் ஜீவனோடு விடப்படுவார்கள் (சக 14:16-21, ஏசா 2:1-4; மத் 25:31-46).

2. கர்த்தருடைய நாள் விசுவாசிகளை திருடனைப்போல பிடித்துக் கொள்ளக்கூடாது

1தெச 5:4 சகோதரரே, அந்த நாள் திருடனைப்போல உங்களைப் பிடித்துக் கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்களல்லவே.

1தெச 5:5 நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும் பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள்; நாம் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்களல்லவே.

"நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்களல்லவே" - விசுவாசிகள் கர்த்தருடைய நாளைக் குறித்து அந்தகாரத்தில் இருக்கவில்லை. (1தெச 5:1-2,4-5,9) வேதவசனம் இதைக் குறித்துத் தெளிவாக உபதேசிக்கிறது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குக் குறைந்தபட்சம் ஏழு வருஷங்களுக்கு முன்பாகவே இயேசுகிறிஸ்து சபையை எடுத்துக் கொள்வதற்காக மத்திய ஆகாயத்திற்கு வருவார் (1தெச 5:2-5, 2தெச 2:1, வெளி 4:1).

புறஜாதியாரை நியாயம் தீர்ப்பதற்காகத் தேவன் இரவு வேளையில் அவர்கள் கவனக் குறைவாகவும், நித்திரையாகவும் இருக்கும்போது வருவார் என்று யூதமார்க்கத்தார் தங்களுடைய பாரம்பரியத்தின்படி நம்புகிறார்கள். பகற்காலத்தில் தாங்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளும் போது தேவன் தங்களை நியாயம் விசாரிப்பார் என்பதும் யூதமார்க்கத்தாரின் நம்பிக்கையாகும். சபை எடுத்துக் கொள்ளப்படும்போது கைவிடப்பட்ட யூதருக்கும் புறஜாதியாருக்கும் திருடன் வருகிற பிரகாரமாய் கர்த்தருடைய நாள் அவர்கள்மீது வரும். தேவனுடைய பரிசுத்தவான்கள் மட்டுமே மறுரூபமடைந்து கர்த்தருடைய நாளிலிருந்து தப்புவார்கள் (1தெச 5:4-5,9; லூக்கா 21:36; 2தெச 2:7).

"நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும் பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள்; நாம் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்களல்லவே" - சடிதியான அழிவு வரும்போது விசுவாசிகள் அதிலிருந்து தப்பித்துக் கொள்வார்கள் (1தெச 5:4-5,9). ஏனெனில் விசுவாசிகள் வெளிச்சத்தின் பிள்ளைகளாகவும் பகலின் பிள்ளைகளாகவும் இருக்கிறார்கள். அவர்கள் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்கள் அல்ல. இருளின் பிள்ளைகளுக்கே சடிதியான அழிவு நியமிக்கப்பட்டிருக்கிறது (1தெச 5:9; 2தெச 2:7).

3. கர்த்தருடைய நாளைக் குறித்து விசுவாசிகள் செய்ய வேண்டிய காரியம்

1தெச 5:6 ஆகையால், மற்றவர்கள் தூங்குகிறதுபோல நாம் தூங்காமல், விழித்துக் கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம்.

1தெச 5:7 தூங்குகிறவர்கள் இராத்திரியிலே தூங்குவார்கள்; வெறி கொள்ளுகிறவர்கள் இராத்திரியிலே வெறிகொள்ளுவார்கள்.

1தெச 5:8 பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களாயிருந்து, விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்துக் கொண்டிருக்கக்கடவோம்.

5 அதிகாரம்

அழிவு சடுதியாய் வரும்போது தப்பித்துக் கொள்ளும் வழிகள்

1 தூங்காமல் இருக்க வேண்டும் (1தெச 5:6-7)

2 விழித்துக் கொண்டிருக்க வேண்டும் (மத் 24:42-51; 1தெச 5:6)

3 தெளிந்தவர்களாக இருக்க வேண்டும். (1தெச 5:6-8)

4 விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும் இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்துக் கொண்டிருக்க வேண்டும். (1தெச 5:8; எபே 6:10-18)

விசுவாசிகளாகிய நாம் தூங்காமல் விழித்திருந்து தெளிந்த புத்தியுள்ளவர்களாக இருந்தால் மட்டும் போதாது. நாம் விசுவாசத்தின் போராட்டத்தையும் போராடி நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள வேண்டும். (1தீமோ 6:12; 1கொரி 9:24-27)

தூங்காமல் (Not sleep) - καθεύδω - katheudoo - 2518

வினைச்சொல் - நித்திரையாயிரு, நித்திரைபண்ணு, தூங்கு (to repose one's self in sleep, sleeping, indifferent, careless, unfaithful virgins) (மத் 25:5) இயேசுகிறிஸ்துவோடு விழித்திருந்து ஜெபிக்க முடியாமல் தூங்கிய சீஷர்கள் (மத் 26:45) மாறுபாடாக ஜீவித்து பின்வாங்கிப்போன மனுஷன் (எபே 5:14; 1தெச 5:6,7,8)

தெளிந்தவர்களாயிரு (Be sober) - νήφω neephoo 3525

வினைச்சொல் - தெளிந்தவர்களாயிரு, புத்தியுள்ளவர்களாயிரு, மனத்தெளிவுள்ளவனாயிரு (to drink no intoxicants; live soberly, righteously) (தீத்து 2:11-12) be sober (1தெச 5:6,8; 1பேதுரு 1:13; 1பேதுரு 5:8) watch (2தீமோ 4:5; 1பேதுரு 4:7) புறஜாதியார் மத்தியில் பகலில் மதுபானம் அருந்தி தெளிவில்லாமல் இருப்பது அவமானமான காரியமாகக் கருதப்படுகிறது. ஆகையினால் தேவனுடைய பிள்ளைகள் எப்போதும் தெளிந்தவர்களாக இருக்க வேண்டும்.

இரட்சிப்பின் நம்பிக்கை - இரட்சிப்புக்கு ஏற்ற ஒரு நம்பிக்கை. இரட்சிப்பின் ஆசீர்வாதங்களை நாம் நித்திய ஜீவனில் அனுபவிப்போம் (1தெச 5:8; ரோமர் 8:20-25; 2தெச 2:16; 1பேதுரு 1:5,9,13) நாம் நித்திய ஜீவனைப் பெற்றிருந்தாலும் நித்திய ஜீவனும் ஒரு நம்பிக்கையே (தீத்து 1:2; தீத்து 3:7; எபி 3:6; எபி 6:11,17,18-19; 1பேதுரு 1:3,4) நாம் மரித்த பின்புதான் நம்மால் நித்திய ஜீவனை அனுபவிக்க முடியும். (மத் 7:13-14; மத் 18:8-9; மத் 19:28-29; மாற்கு 10:29-30; லூக்கா 18:29-30; ரோமர் 2:7; ரோமர் 6:21-23; கலா 6:7-8; 1தீமோ 1:16; 1தீமோ 4:8; 1தீமோ 6:12,19; 1பேதுரு 1:5,9,13; 1பேதுரு 3:7; 1யோவான் 2:25; யூதா 1:20-24; தானி 12:2; யோவான் 5:28-29)

4. **கர்த்தருடைய நாளுக்கு முன்பாக விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப்படுவார்கள்** (2தெச 2:7; வெளி 1:19)

1தெச 5:9 தேவன் நம்மை கோபாக்கினைக்கென்று நியமிக்காமல், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் இரட்சிப்படைவதற்கென்று நியமித்தார்.

1தெச 5:10 நாம் விழித்திருப்பவர்களானாலும், நித்திரை அடைந்தவர்களானாலும், தம்முடனே கூட நாம் ஏகமாய்ப் பிழைத்திருக்கும்படி அவர் நமக்காக மரித்தாரே.

I தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

5 அதிகாரம்

1தெச 5:11 ஆகையால் நீங்கள் செய்து வருகிறபடியே, ஒருவரையொருவர் தேற்றி, ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்யுங்கள்.

"தேவன் நம்மை கோபாக்கினைக்கென்று நியமிக்காமல்" - சடிதியான அழிவு, மகா உபத்திரவக்காலம் ஆகியவற்றில் பங்கு பெறுவதற்காக தேவன் நம்மை நியமிக்கவில்லை (1தெச 5:2-3; வெளி 6:1-19:21; மத் 24:15-21). நித்திய நரகத்தில் தள்ளப்படுவதற்காகவும் தேவன் நம்மை நியமிக்கவில்லை. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் நாம் இரட்சிப்படைவதற்கென்று நம்மை நியமித்திருக்கிறார். தம்மோடு தம்முடைய பரிசுத்தவான்கள் நித்திய காலமாக ஜீவிக்க வேண்டும் என்பதற்காகவே தேவன் தமது சபையை எடுத்துக் கொள்ளப்போகிறார் (1தெச 5:9-10; 1தெச 4:13-18; 2தெச 2:7; வெளி 4:1).

"நாம் விழித்திருப்பவர்களானாலும் நித்திரையடைந்தவர்களானாலும்" (1தெச 4:13-18 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் சபை எடுத்துக் கொள்ளப்படுவதைப் பற்றிய காரியங்கள் கர்த்தருக்குள் நித்திரையடைந்த பரிசுத்தவான்களுக்காகவும், கர்த்தருக்குள் ஜீவிக்கிற பரிசுத்தவான்களுக்காகவும் நடைபெறும் காரியமாகும் (1தெச 5:1-3,9; மத் 24:15-21; வெளி 6:1-19:21).

"ஒருவரையொருவர் தேற்றி ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்யுங்கள்" 1தெச 4:18 ஆம் வசனத்திலும் இந்தக் கருத்து கூறப்பட்டிருக்கிறது. சபை எடுத்துக் கொள்ளப்படும்போது விசுவாசிகள் எடுத்துக் கொள்ளப்படுவதினால் அவர்கள் சடிதியான அழிவிலிருந்தும், உபத்திரவக் காலத்திலிருந்தும் பங்குபெறாமல் தப்பித்துக் கொள்வார்கள். சபை எடுத்துக் கொள்ளப்படும்போது கைவிடப்பட்டவர்கள் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக சடிதியான அழிவை அனுபவிப்பார்கள் (வெளி 6:1-19:21; 2தெச 2:7).

IX. நடைமுறை உபதேசங்கள்

1. **ஊழியக்காரரை மதிக்க வேண்டும்** - (எபி 13:7,17)

1தெச 5:12 அன்றியும், சகோதரரே, உங்களுக்குள்ளே பிரயாசப்பட்டு, கர்த்தருக்குள் உங்களை விசாரணை செய்கிறவர்களாயிருந்து, உங்களுக்குப் புத்திசொல்லுகிறவர்களை நீங்கள் மதித்து,

1தெச 5:13 அவர்களுடைய கிரியையினிமித்தம் அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம். உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள்.

மதித்தல் (over) - προΐστημι - proisteemi - 4291

விணைச்சொல் - முதலாளியாயிரு, நடத்து, விசாரணைசெய் (to set over; be at the head of; be the chief) be over (1தெச 5:12); rule (ரோமர் 12:8; 1தீமோ 3:4,5,12; 1தீமோ 5:17); maintain (தீத்து 3:8,14)

அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், போதகர்கள், உபதேசிக்கிறவர்கள் மேலும் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிறவர்களானோர் விசுவாசிகளுக்குப் புத்தி சொல்லுகிறார்கள். அவர்களை நாம் மதித்து நடக்க வேண்டும் (எபே 4:11; 1கொரி 12:28).

"அவர்களுடைய கிரியையினிமித்தம் அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளும்படி" ஊழியக்காரர்களை மதித்தால் மட்டும் போதாது. அவர்கள்மீது மிகவும் அன்பாக நடந்து கொள்ள வேண்டும்.

மிகவும் (very highly) - περισσός - perissos - 4053

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

5 அதிகாரம்

பெயரடை - மிஞ்சின, விசேஷித்த மேன்மையுள்ள, அதிக, மிகவும் உறுதியாய், பரிபூரணமான beyond measure (மாற்கு 6:51); exceedingly abundantly above (எபே 3:20); exceedingly (1தெச 3:10); very highly (1தெச 5:13); more abundantly (யோவான் 10:10); more (மத் 5:37,47); superfluous (2கொரி 9:1); advantage (ரோமர் 3:1) ஊழியக்காரர்களை நாம் அவர்களுடைய ஊழியங்களின் நிமித்தம் மதிக்க வேண்டும்.

2. கிறிஸ்துவின் வருகையின் நிமித்தம் கிறிஸ்தவருக்கு பதினான்கு கட்டளைகள்

1தெச 5:14 மேலும், சகோதரரே, நாங்கள் உங்களுக்குப் போதிக்கிறதென்னவென்றால்: ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லுங்கள், திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலவீனரைத் தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள்.

1தெச 5:15 ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமைசெய்யாதபடி பாருங்கள், உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மைசெய்ய நாடுங்கள்.

1தெச 5:16 எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்.

1தெச 5:17 இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்.

1தெச 5:18 எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

1தெச 5:19 ஆவியை அவித்துப் போடாதிருங்கள்.

1தெச 5:20 தீர்க்கதரிசனங்களை அற்பமாயெண்ணாதிருங்கள்.

1தெச 5:21 எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்.

1தெச 5:22 பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்.

ஒழுங்கில்லாதவர்கள் (unruly) - ἄτακτος - ataktoos - 814

வினையடை - ஒழுங்கற்று (2தெச 3:6,7,11) - பாதை விலகி நடந்து சபையில் தங்களுடைய கடமையை நிறைவேற்றாதவர்கள்

பலவீனர் (feebleminded) - ὀλιγόψυχος - oligopsychos - 3642

பெயரடை - பலவீனமான (fainthearted) - யுத்தத்தில் நம்பிக்கையில்லாமல் இருதயம் சோர்ந்துபோய் பலவீனமாக இருக்கிறவன்

தாங்கு (support) - ἀντέχω - antechoo - 472

வினைச்சொல் - பற்று, தாங்கு (to hold one's hand; to shade one's eyes; to be a help) support (1தெச 5:14); hold fast (தீத்து 1:9); hold to (மத் 6:24, லூக்கா 16:13)

1தெச 5 ஆவது அதிகாரத்தில் பவுல் கூறியிருக்கும் புத்திமதிகள்

1. நாம் ஆவிக்குரிய ரீதியாகத் தூங்காமல் இருக்க வேண்டும். (1தெச 5:6)

2. விரோதிகளைக் குறித்து மிகுந்த எச்சரிப்போடு விழித்துக் கொண்டிருக்க வேண்டும். (1தெச 5:6

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

5 அதிகாரம்

3 மதுபான வெறி கொள்ளாமல தெளிந்தவர்களாக இருக்க வேண்டும். (1தெச 5:6-7)

4 தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக் கொள்ள வேண்டும் (1தெச 5:8; எபே 6)

5 ஒருவரையொருவர் தேற்ற வேண்டும். (1தெச 5:11; 1தெச 4:18)

6 ஒருவருக்கொருவர் பக்தி விருத்தி உண்டாகும்படி செய்ய வேண்டும். (1தெச 5:11)

7 ஊழியக்காரர்களை மதிக்க வேண்டும் (1தெச 5:12)

8 ஊழியக்காரர்களை மிகவும் அன்பாய எண்ணிக் கொள்ள வேண்டும் (1தெச 5:13)

9 உங்களுக்குள்ளே சமாதானமாயிருக்க வேண்டும். (1தெச 5:13)

10 ஒழுங்கில்லாதவர்களுக்கு புத்தி சொல்ல வேண்டும். (1தெச 5:14)

11 திடனற்றவர்களைத் தேற்ற வேண்டும் (1தெச 5:14)

12 பலவீனரைத் தாங்க வேண்டும் (1தெச 5:14; 1கொரி 8:10)

13 எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாய் இருக்க வேண்டும். (1தெச 5:14)

14. ஒருவனுக்கும் தீமை செய்யக்கூடாது. (1தெச 5:15)

15 உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும் எப்பொழுதும நன்மை செய்ய நாட வேண்டும். (1தெச 5:15)

16 எப்பொழுதும் சந்தோஷமாயிருக்க வேண்டும். (1தெச 5:16)

17 எல்லாக் காரியங்களைக் குறித்தும் எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும். (1தெச 5:17)

18 எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்ய வேண்டும். (1தெச 5:18)

19 ஆவியை அவித்துப்போடக்கூடாது. (1தெச 5:19)

20 தீர்க்கதரிசனங்களை அற்பமாய எண்ணக்கூடாது. (1தெச 5:20)

21 எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ள வேண்டும். (1தெச 5:21)

22 பொல்லாங்காய் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டுவிலக வேண்டும். (1தெச 5:22)

8. சபை எடுத்துக் கொள்ளப்படும் போது தம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகியவை குற்றமற்றதாயிருக்கும் படி காக்கப்பட வேண்டும் - (1கொரி 15:51-58; 2கொரி 5:1-8; பிலி 3:21; 1தெச 3:13; எபே 5:27

1தெச 5:23 சமாதானத்தின தேவன தாமே உங்களைமுற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவிஆத்துமா சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும் போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக.

1தெச 5:24 உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்

தீர்க்கதரிசன எண் - 5

"சமாதானத்தின தேவன் தாமே உங்களைமுற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவிஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக. உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர் அவர் அப்படியே செய்வார்" (1தெச 5:23-24) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

I தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

5 அதிகாரம்

தெசலோனிக்கேயர் 5 ஆவது அதிகாரத்தில கூறப்பட்டிருக்கும் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிகிறவரைச் சமாதானத்தின் தேவன் பரிசுத்தப்படுத்துவார் பரிசுத்தப்படுத்துதல என்பதற்கு தேவனுக்காகவும் அவருடைய ஊழியத்திற்காகவும் வேறுபிரிப்பது என்று பொருள்

"ஆவி" - (யோவான் 4:1)

ஆத்துமா (soul) - ψυχή - psychee - 5590

பெண்பால பெயர்சொல் - பிராணன் ஜீவன், ஆத்துமா, மனம், உயிர் (life; soul or spiritual part in contrast to the material body; a departed soul; also the spirit which still retains the shape and size of its living owner; the seat of the desires, feelings, passions, appetites, emotions) புதிய ஏற்பாட்டில ஆத்துமா என்பதற்கான கிரேக்க வார்த்தை "பசைக்கி" (psychee) என்பதாகும இதற்கு இணையான எபிரெய வார்த்தை "நேபேஷ்" (nephesh) அப் 2:27 = சங் 16:10 1கொரி 15:45=ஆதி 2:7

ஜீவன - נֶפֶשׁ - neh'-fesh - 5315

பெண்பால் பெயர்சொல் - ஐந்து ஜீவன, ஆத்துமா, உயிர, ஜனம் பிராணன, சம்மதி, மனது, மனம் பேர், பிறப்பு, ஆசை, இருதயம் பிராணி, செத்தவன், இறந்து போன பிணம், மனிதன மிருகத்துக்கு மிருகம், சவம், பிரேதம். யாதொருவா உள்ளம், இஷ்டம். ஆவல. பசி. உட்கருத்து. ஜீவனுக்கு ஜீவன சுவாசம், சித்தம். இச்சை போஜனம் நெஞ்சு, மனுஷர்

"ஆத்துமா"

1. மிருகங்களின் ஜீவன்கள் (வெளி 8:9 வெளி 16:3)

2. தனிப்பட்ட மனுஷன் (அப் 2:41,43, அப 3:23; அப 7:14 அப 27:37, ரோமர் 2:9 ரோமர் 13:1 1கொரி 15:45 யாக் 5:20 1பேதுரு 3:20 2பேதுரு 2:14 வெளி 6:9 வெளி 18:13; வெளி 20:4)

3. மனுஷனுடைய ஜீவன் - இது அழிந்துபோகும், இரட்சிக்கப்படும் - இரட்சிக்கப்பட்ட ஜீவன் (மத் 2:20 மத் 6:25; மத் 10:39; மத் 16:25 மத் 20:28; மாற்கு 3:4; மாற்கு 8:35; மாற்கு 10:45; லூக்கா 6:9 லூக்கா 9:24,56 லூக்கா 12:22-23 லூக்கா 14:26; லூக்கா 17:33 யோவான் 10:11-17; யோவான் 12:25 யோவான் 13:37-38; யோவான் 15:13 அப 15:26; அப 20:10,24. அப 27:10,22; ரோமர் 11:3; ரோமர் 16:4; பிலி 2:30 1கொரி 3:16; வெளி 12:11

4. மனுஷனுடைய ஜீவன் - இது அழிந்துபோகும், இரட்சிக்கப்படும் - இரட்சிக்கப்பட்ட ஆத்துமா (மத் 10:28 மத் 16:26, மாற்கு 8:36-37, லூக்கா 12:20 லூக்கா 21:19 1தெச 2:8 1தெச 5:23 எபி 4:12 எபி 6:19; எபி 10:39 எபி 13:17 யாக் 1:21; 1பேதுரு 1:9, 1பேதுரு 2:11,25 1பேதுரு 4:19

5. மனுஷன தன்னை "என ஆத்துமா" என்று அழைப்பது. (மத் 11:29, மத் 12:18; மத் 26:38, மாற்கு 14:34, லூக்கா 1:46 லூக்கா 12:19 யோவான 12:27; எபி 10:38 1பேதுரு 1:22)

6. ஒருவனுடைய வல்லமைகள் (மத் 22:37; லூக்கா 2:35, லூக்கா 10:27; அப் 4:32. 3யோவான் 1:2, எபே 6:6; பிலி 1:27)

"சரீரம்" - ஒருவனுடைய ஆத்துமாவும், ஆவியும் அவனுடைய சரீரத்தில் உள்ளது. இந்தச் சரீரம் மாிக்கும்போது மறுபடியும மண்ணுக்குத் திரும்புகிறது (ஆதி 3:19 உயிர்த்தெழும்போது அழிந்து போகும சரீரம் அழியாத நித்திய சரீரத்தைப் பெற்றுக் கொள்கிறது (1கொரி 15:54-58

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

5 அதிகாரம்

வரும்போது (unto) - έν - en - 1722

முன் இடைச்சொல் - ஆல் இல் உடன் "at" (1தெச 2:19 1தெச 3:13) - சபை எடுத்துக் கொள்ளப்படும்போது விசுவாசிகள் தேவனுக்கென்றும், அவருடைய சித்தத்திற்கென்றும் முழுவதுமாக வேறு பிரிக்கப்படுவார்கள் அவர்களுடைய சரீரமும் ஆத்துமாவும், ஆவியும் [illegible] பெறும். (1கொரி 15:51-58 பிலி 3:21 ரோமர் 8:18-25, 1யோவா 3:1-3)

"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது" இந்த நிருபத்தின் ஒவ்வொரு அதிகாரத்திலும் கர்த்தருடைய வருகையானது ஒவ்வொரு விதமாக எழுதப்பட்டிருக்கிறது. (1தெச 1:10 1தெச 2:19 1தெச 3:13; 1தெச 4:13-18 1தெச 5:23)

X. முடிவுரையும் ஆசீர்வாதமும்

1தெச 5:25 சகோதரரே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்

1தெச 5:26 சகோதரரெல்லாரையும் பரிசுத்த முத்தத்தோடே வாழ்த்துங்கள்

1தெச 5:27 இந்த நிருபம் பரிசுத்தமான சகோதரர் யாவருக்கும் வாசிக்கப்படும் படி செய்ய வேண்டுமென்று கர்த்தர் பேரால் ஆணையிட்டு உங்களுக்குச் சொல்லுகிறேன்

1தெச 5:28 நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனே கூட இருப்பதாக ஆமென்

"சகோதரரே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்" - பவுல் தன்னுடைய நிருபத்தில் பரிசுத்தவான்கள் தனக்காக ஜெபம் பண்ண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறார் விசுவாசிகள் செய்யும் பொருளாதார உதவிகளை விட அவர்கள் கர்த்தரிடத்தில் தனக்காக ஏறெடுக்கும் ஜெபம் அதிக பிரயோஜனமுள்ளதென்று பவுல் கருதுகிறார்

"சகோதரரெல்லாரையும் பரிசுத்த முத்தத்தோடே வாழ்த்துங்கள்" - இது கிழக்கத்திய தேசங்களில் நிலவி வரும் ஒரு கலாச்சாரப் பழக்கமாகும்.

"யாவருக்கும் வாசிக்கப்படும்படி செய்ய வேண்டும்" சில சமயங்களில் பவுல் எழுதி அனுப்பின நிருபங்களை எல்லா சபைகளிலும் வாசிக்காமல் விட்டுவிட்டார்கள் தெசலோனிக்கேயரிலும் அதன் சுற்றிலுமுள்ள ஒருசில சபைப் பிரிவினார்கள் பவுலின் நிருபத்தை வாசிக்காமல் தடுத்திருக்கலாம். ஆகையினால் தன்னுடைய நிருபத்தைச் சகோதரர் யாவருக்கும் வாசிக்கும்படி செய்ய வேண்டுமென்று பவுல் கர்த்தர் பேரில் ஆணையிட்டு அவர்களுக்குக் கூறுகிறார்

"கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை" பவுல் தன்னுடைய நிருபத்தைத் துவங்கும்போதும் முடிக்கும்போதும் கிறிஸ்துவின் கிருபையைக் குறிப்பிடுகிறார்

II தெசலோனிக்கேயர் - முன்னுரை

காலமும் இடமும்

கிபி 54 அல்லது 55 ஆம் ஆண்டில் பவுல் இந்த நிருபத்தைக் கொரிந்துவிலிருந்து எழுதினார்

ஆசிரியர்

பவுல்

மையக்கருத்து

1 கர்த்தருடைய நாளிலும் அந்த நாளுக்கு முன்பு நடைபெறப்போகிற நிகழ்ச்சிகளையும் தெசலோனிக்கேயருக்கு அறிவுறுத்துவது.

2 கள்ளப்போதகர்கள் தாங்களாகவே ஒரு நிருபம் எழுதி அதைப் பவுல் எழுதிய நிருபமாக சபையில் வாசித்தார்கள் கர்த்தருடைய நாளைக் குறித்து பவுல் தன்னுடைய உபதேசத்தை மாற்றிக் கொண்டார் என்று கூறி அவர்கள் புதிய விசுவாசிகளைக் குழப்பினார்கள் இப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் புதிய விசுவாசிகளுக்குக் கர்த்தருடைய நாளைக் குறித்த தனது உபதேசத்தைப் பவுல் மறுபடியும் தெளிவுபடுத்துகிறார் (2 தெச 2:5) தன்னுடைய உபதேசத்தைத் தான் மாற்றிக் கொள்ளவில்லையென்றும் கள்ளப் போதகர்களின் கள்ள நிருபத்திற்கும் தனக்கும் எவ்வித சம்பந்தமுமில்லையென்றும் பவுல் உறுதி கூறுகிறார் (2 தெச 2:1 3)

3 சத்தியத்தில் விசுவாசிகள் நிலைத்திருக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறார் (2 தெச 2:15 17)

4 கர்த்தருடைய நாளுக்கு முன்பு விசுவாசத் துரோகமும் அந்திக்கிறிஸ்துவும் வெளிப்படும் என்று உபதேசம் பண்ணுகிறார்

5 அந்திக் கிறிஸ்து வெளிப்படுவதற்கு முன்பு சபை எடுத்துக் கொள்ளப்படும். (2 தெச 2:1-12)

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 3

வசனங்கள் - 47

கேள்வி - 1

புதிய தீர்க்கதரிசனங்கள் - 2

வரலாற்றைக் குறிக்கும் வசனங்கள் - 31

பொருளடக்கம்

I. முன்னுரை

1 ஆசிரியரும் வாழ்த்துரையும் (1:1-2)

2 விசுவாசிகளிடத்தில் காணப்படும் நான்கு ஆசீர்வாதங்களுக்காக ஸ்தோத்திரம் (1:3-4)

3 தேவன் நியாயமான தீர்ப்புச் செய்கிறவர் என்பதற்கு அத்தாட்சி (1:5-6)

II. கர்த்தருடைய நாள்

1 கிறிஸ்துவின் இரண்டாம் வருகை அந்த நாளில் துவங்குகிறது (1:7 10)

2 கிறிஸ்துவின் வருகையின் நிமித்தம் விசுவாசிகளுக்காக ஜெபம் (1:11-12)

3 [redacted] எடுத்துக் கொள்ளப்படுதல், கிறிஸ்துவின் இரண்டாம் வருகை ஆகியவற்றின் நிமித்தம் விசுவாசிகளுக்கு வேண்டுகோள் (2:1 2)

4 கர்த்தருடைய நாளுக்கு முன்பாக நடைபெறும் இரண்டு காரியங்கள் விசுவாச துரோகமும் கேட்டின் மகனாகிய பாவ மனுஷனின் (அந்திக்கிறிஸ்து) வெளிப்பாடும் (2:3 5)

5 அந்திக்கிறிஸ்துவின் வெளிப்பாட்டிற்கு முன்பாக நடைபெறும் காரியம் - சபை முதலாவது எடுத்துக் கொள்ளப்படும் அதன் பின்பு அந்திக்கிறிஸ்து வெளிப்படுவான் (2:6-8

II தெசலோனிக்கேயர் - முன்னுரை

6 அந்திக்கிறிஸ்துவின் வல்லமை (2:9-10)

7 விசுவாச துரோகத்தையும் வஞ்சகத்தையும் தேவன் அனுமதித்ததற்கு காரணங்கள் (2:11-12)

III. புத்திமதிகளும் ஜெபங்களும்

1 இரட்சிப்பின் இரண்டு உபாயங்களுக்காக ஸ்தோத்திரம் (2:13-14)

2 இரண்டு கட்டளைகள் - நிலை கொண்டிருக்க வேண்டும் (2:15)

3 ஆறுதலுக்காகவும் நற்கிரியைகளின் மீது ஆசீர்வாதங்களுக்காகவும் ஜெபம் (2:16-17)

4 சுவிசேஷத்தின் வெற்றிக்காகவும் சத்துருவிடமிருந்து விடுதலை பெறுவதற்காகவும் ஜெபம் (3:1-2)

5 தேவனிடத்தில் பவுலின் நம்பிக்கை (3:3-5)

6 சபையில் ஒழுங்கற்று நடக்கிற விசுவாசியை நடத்த வேண்டிய விதம் (3:6)

7 பவுலின் முன்மாதிரியான நடத்தை (3:7-9)

8 யாதொரு வேலையும் செய்யாமல் வீண் அலுவற்காரராய் ஒழுங்கற்று திரிகிறவர்களுக்கு கட்டளைகள் (3:10-12)

9 நன்மை செய்வதிலே சோர்ந்து போகாமல் இருங்கள் (3:13)

10 சபையில் கீழ்ப்படியாமல் கலகம் பண்ணும் விசுவாசியை நடத்த வேண்டிய விதம் (3:14-15)

11 முடிவுரையும் ஆசீர்வாதமும் (3:16-18)

II தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

1 அதிகாரம்

I. முன்னுரை

1. ஆசிரியரும் வாழ்த்துரையும்

2தெச 1:1 பவுலும் சில்வானும் தீமோத்தேயும், நம்முடைய பிதாவாகிய தேவனுக்குள்ளும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள்ளும் இருக்கிற தெசலோனிக்கேயர் சபைக்கு எழுதுகிறதாவது.

2தெச 1:2 நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

"பவுல்" (Paul) - (2தெச 1:1)

"சில்வானு" (Silvanus) - (2தெச 1:1)

"தீமோத்தேயு" (Timotheus, Timothy)

"நம்முடைய பிதாவாகிய தேவனுக்குள்ளும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள்ளும்" (2தெச 1:1)

"தெசலோனிக்கேயர் சபைக்கு" (2தெச 1:1)

2. விசுவாசிகளிடத்தில் காணப்படும் நான்கு ஆசீர்வாதங்களுக்காக ஸ்தோத்திரம்

2தெச 1:3 சகோதரரே, நாங்கள் எப்பொழுதும் உங்களுக்காக தேவனை ஸ்தோத்திரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். உங்கள் விசுவாசம் மிகவும் பெருகுகிறபடியினாலும், நீங்களெல்லாரும் ஒருவரிலொருவர் வைத்திருக்கிற அன்பு அதிகரிக்கிறபடியினாலும் அப்படிச் செய்கிறது தகுதியாயிருக்கிறது.

2தெச 1:4 நீங்கள் சகிக்கிற சகல துன்பங்களிலும் உபத்திரவங்களிலும் பொறுமையையும் விசுவாசத்தையும் காண்பிக்கிற நிமித்தம் உங்களைக்குறித்து நாங்கள் தேவனுடைய சபைகளில் மேன்மை பாராட்டுகிறோம்.

கடனாளி (bound) ὀφείλω opheiloo - 3784

வினைச்சொல் - கடன்படு, கடனாளி (be under an obligation to do a thing). "bound" (2தெச 1:3; 2தெச 2:13); "be guilty" (மத் 23:18); "behoved" (எபி 2:17); "must needs" (1கொரி 5:10); "need so require" (1கொரி 7:36); "duty" (லூக்கா 17:10; ரோமர் 15:27); "should" (1கொரி 9:10); "ought" (யோவான் 13:14; யோவான் 19:7; அப் 17:29; ரோமர் 15:1; 1கொரி 11:7,10; 2கொரி 12:11,14; ரோமர் 5:28; எபி 5:3,12; 1யோவான் 2:6; 1யோவான் 3:16; 1யோவான் 4:11; 3யோவான் 1:8); "owe" (மத் 18:28; லூக்கா 7:41; லூக்கா 16:5,7; ரோமர் 13:8; பிலே 1:18); "due" (மத் 18:34; 1கொரி 7:3); "be indebted" (லூக்கா 11:4); "debt" (மத் 18:30); "be a debtor" (மத் 23:16)

தெசலோனிக்கேயருக்காகத் தேவனை ஸ்தோத்திரிக்க வேண்டிய காரியங்கள்

1. விசுவாசம் மிகவும் பெருகுகிறபடியினால் (2தெச 1:3)
2. ஒருவரிலொருவர் வைத்திருக்கிற அன்பு அதிகரிக்கிறபடியினால் (2தெச 1:3; 2கொரி 13:4)
3. அவர்கள் சகிக்கிற சகல துன்பங்களிலும் உபத்திரவங்களிலும் பொறுமையைக் காண்பிக்கிறதினிமித்தம் (2தெச 1:4)

II தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

1 அதிகாரம்

4. அவர்கள் சகிக்கிற சகல துன்பங்களிலும் உபத்திரவங்களிலும் விசுவாசத்தைக் காணபிக்கிறதினிமித்தம் (2தெச 1:4)

மிகவும் பெருகுதல (groweth exceedingly) - ὑπεραυξάνω hyperauxanoo - 5232

வினைச்சொல - மிகவும் பெருகு (to abound beyond measure, to grow exceedingly healthy and fruitful) - நலல நிலத்தில விதைக்கபபட்டு வளரும நலல மரம நன்றாக வளர்ந்து அதிகமாகக் கனி கொடுபபது போனறது. விசுவாசம என்பது கிருபையின விதைகளில ஒன்றாகும் இந்த விசுவாசம ஒவவொரு விசுவாசியினிடத்திலும் வளர்ந்து வலலமையோடு கிரியை நடபபிககும். 2தெச 1:3 மத் 17:20 மத் 21:22 மாறகு 9:23 மாறகு 11:22-24

அனபு (charity) - ἀγάπη - agapee - 26

பெணபால பெயாசசொல அனபு (2கொரி 13:4) - அவாகளில எலலோருக்குமே அனபு அதிகரித்திருநதது. 2தெச 1:3 1தெச 3:12

(அ) மேனமையான கிறிஸதவ அனபு 1கொரி 13:3

(ஆ) தேவன் மனிதா மீது வைககும் அனபு ரோம 5:8

(இ) மனிதன் தேவன் மீது காட்டும் அனபு - யோவா 3:2, 2:5

(ஈ) மனிதன் மனிதனிடம் காட்டும் அனபு - யோவா 13:35

(உ) புன்மையில் - அன்பின விருந்துகள கிறிஸதவ ஐக்கியம் சிறந்து விளங்க சான்று பகரும் விருந்து யூதா 12

"அதிகரிக்கிறது" - 1தெச 3:12 ஆகவது வசனத்தில "பெருகுதல்" என்னும பொருளைத் தருகிறது.

"உங்களைக்குறித்து நாங்கள் தேவனுடைய சபைகளில் மேன்மை பாராட்டுகிறோம்" - மறற சபைகளில் பவுல் தெசலோனிக்கேயரை ஓர் எடுத்துக்காட்டாக விளக்கிக் கூறுகிறார் கிருபையினால் தெசலோனிக்கேயர் துன்பங்களிலும் உபத்திரவங்களிலும் பொறுமையையும், விசுவாசத்தையும காணபிக்கிறதை மற்ற சபைகளுக்கும எடுத்துக்காட்டாகக் கூறுகிறார்

மேன்மைபாராட்டு (glory) - καυχάομαι - kauchaomai - 2744

வினைச்சொல - மேன்மைபாராட்டு. பெருமைபாராட்டு. புகழ (to boast, vaunt oneself) "glory" (2தெச 1:4 ரோமர் 5:3 1கொரி 1:29-31 1கொரி 3:21 1கொரி 4:7 2கொரி 5:12 2கொரி 7:14 2கொரி 10:8 15-16 2கொரி 12:1,5,6,9 கலா 6:13-14) "glorying" (2கொரி 12:11) "rejoice" (ரோமர் 5:2 பிலி 3:3 யாக 1:9 யாக் 4:16) "joy" (ரோமர் 5:11) "boast" (ரோமர் 2:17,23, 2கொரி 7:14 2கொரி 9:2 2கொரி 10:8,13,16 2கொரி 11:16 எபே 2:9)

"நீங்கள் சகிக்கிற சகல துன்பங்களிலும் உபத்திரவங்களிலும் பொறுமையையும் விசுவாசத்தையும் காணபிக்கிறதினிமித்தம்" - அப் 17:5-13, 1தெச 2:14 ஆகிய வசனங்கள மூலமாகத் தெசலோனிக்கேயா யூதாகள மூலமாகவும், தஙகள பட்டணத்தார மூலமாகவும் பல பாடுகளையும் இன்னலகளையும் துன்பங்களையும் அனுபவித்து வந்தாாகள் என்பது தெரிய வருகிறது. இந்த உபத்திரவங்களின நடுவிலும் அவாகள் கர்த்தருடைய சுவிசேஷத்தை விசுவாசத்தோடு பற்றிக் கொண்டாாகள் அவாகளுடைய ஜீவியங்களில் சுவிசேஷத்தின வலலமை கிரியை நடபபித்தது. அவாகள் உபத்திரவத்தின் நிமித்தமாக சுவிசேஷத்திலிருந்து வழிவிலகிச் செலலவிலலை உபத்திரவம மெயயான சபையை ஒருபோதும பாதிக்காது.

II தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

1 அதிகாரம்

3. தேவன் நியாயமான தீர்ப்புச் செய்கிறவர் என்பதற்கு அத்தாட்சி

2தெச 1:5 நீங்கள் தேவனுடைய ராஜ்யத்தினிமித்தம் பாடு அநுபவிக்கிறவர்களாயிருக்க அந்த ராஜ்யத்திற்கு நீங்கள் பாத்திரரென்றெண்ணப்படும்படிக்கு, தேவன் நியாயமான தீர்ப்புச் செய்கிறவரென்பதற்கு, அதுவே அத்தாட்சியாயிருக்கிறது.

2தெச 1:6 உங்களை உபத்திரவப் படுத்துகிறவர்களுக்கு உபத்திரவத்தையும், உபத்திரவப்படுகிற உங்களுக்கு எங்களோடேகூட இளைப்பாறுதலையும் பிரதி பலனாகக்கொடுப்பது தேவனுக்கு நீதியாயிருக்கிறதே.

பாடு அநுபவிப்பதினால் ஏற்படும் விளைவுகள்

1 தேவன் நியாயமான தீர்ப்புச் செய்கிறவரென்பதற்கு பாடு அனுபவிப்பது அத்தாட்சியாயிருக்கிறது. (2தெச 1:5-6)

2 தேவனுடைய ராஜ்யத்தின் நிமித்தம் பாடு அனுபவிப்பவர்கள் அந்த ராஜ்யத்திற்குப் பாத்திரர் என்று தேவனால் எண்ணப்படுவதற்கு பாடு அனுபவிப்பது அத்தாட்சியாயிருக்கிறது. (2தெச1:5-6)

"தேவன் நியாயமான தீர்ப்புச் செய்கிறவர்" தேவனுடைய எல்லாத் தீர்ப்புகளும் நியாயமானவை. தேவனுடைய விதைப்பு, அறுப்பு என்னும் பிரமாணத்தின் பிரகாரமாகவே தேவனுடைய நீதியான தீர்ப்பு அமைந்திருக்கும். (2தெச 1:5-6; கலா 6:7-8; உபா 32:4). தேவன் மனுஷனை நியாயந்தீர்க்கும்போது மனுஷனுடைய நீதியை எதிர்பார்க்கிறார் (லேவி 19:15,35; உபா 1:17; உபா 16:18-19; உபா 24:17)

"அந்த ராஜ்யத்திற்கு நீங்கள் பாத்திரரென்றெண்ணப்படும்படிக்கு" - (லூக்கா 21:36; அப் 5:41; எபி 3:3)

"உங்களை உபத்திரவப் படுத்துகிறவர்களுக்கு உபத்திரவத்தையும், பிரதிபலனாகக் கொடுப்பது தேவனுக்கு நீதியாயிருக்கிறதே" - உபத்திரவப் படுகிறவர்களுக்கு இளைப்பாறுதலையும் உபத்திரவப் படுத்துகிறவர்களுக்கு உபத்திரவத்தையும் மேசியா வரும்போது கொடுப்பார் (2தெச 1:6-7) இந்தக் காலத்தில் உபத்திரவப்படுத்துகிறவர்களுக்கு தண்டனை கொடுக்கப்படும். உபத்திரவப் படுகிறவர்கள் இளைப்பாறுதல் அடைந்து தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள் (மத் 16:27; மத் 25:31-46; சக 14; வெளி 19)

II. கர்த்தருடைய நாள் - (2தெச 1:7 - 2:12)

1. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை அந்த நாளில் துவங்குகிறது

2தெச 1:7 தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு,

2தெச 1:8 கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்.

2தெச 1:9 அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத் தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும் அவர் வரும்போது

2தெச 1:10 அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும் அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்களாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்

II தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

1 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 1

"தேவனை அறியாதவர்களுக்கும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும் போது அப்படியாகும்____" (2தெச 1:7-10) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை

தேவனுடைய நீதியுள்ள ஆக்கினையை அடையப்போகிறவர்கள்

1. தேவனை அறியாதவர்கள் (2கொரி 4:4, மத் 13:19)
2. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்கள் (யோவான் 3:17-20,36; அப் 7:51 ரோமர் 1:21-32

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் காலம்

1. உபத்திரவக்காலம் முடிந்தவுடன் (மத் 24:29; மத் 25:31 வெளி 19:11-21)
2. ஆயிரம் வருஷ அரசாட்சியின் ஆரம்பத்தில (வெளி 19:11-21; வெளி 20:1-10)
3. அந்திக்கிறிஸ்து மூன்றரை வருஷங்கள் ஆட்சி செய்த பின்பு (வெளி 13:5; வெளி 19:11-21; 2தெச 2:7-8)
4. இந்தக் காலத்தின் முடிவில் (மத் 13:38-43, 47-50 மத் 24:3,29-31; மத் 25:31-46)
5. பழைய ரோமப்பேரரசிற்குள் பத்து ராஜ்ஜியங்கள் ஸ்தாபிக்கப்பட்ட பின்பு (தானி 2:44-45; தானி 7:23-24, வெளி 13:1-18; வெளி 19:11-21)
6. லோத்து, நோவா ஆகியோரின் நாட்களில் நடந்ததுபோன்று ஜனங்கள் சீர்கெட்டுப் போய் இருக்கும் நாட்களில (மத் 24:37-51; லூக்கா 17:22-27; 2தீமோ 3:1-13, 2தீமோ 4:1-4; 2பேதுரு 2
7. சபையின் காலத்திற்குப் பின்பு (2தெச 2:7-8; அப 15:13-18 யூதா 1:14; சக 14:5)
8. எருசலேமை அதின் சத்துருக்கள் சுற்றி வளைத்து அந்தப் பட்டணத்தில் பாதியைக் கைப்பற்றிய போது (சக 14:1-5, 14-21, யோவே 3)
9. நித்திரையடைந்த பரிசுத்தவான்கள் உயிர்த்தெழுந்த பின்பும், மரித்த அக்கிரமக்காரர் உயிர்த்தெழுவதற்கு ஆயிரம் வருஷங்களுக்கு முன்பும் (வெளி 20:1-15 சக 14:5 யூதா 1:14
10. வெளி 4-19 ஆகியவற்றில கூறப்பட்டிருக்கும் காரியங்களெல்லாம் நிறைவேறினபின்பு (வெளி 19:11-21 வெளி 20:1-10)
11. ஆயிரம் வருஷ அரசாட்சிக்கு முன்பு சாத்தான் கட்டப்படும் காலத்தில (வெளி 20:1-7)
12. இஸ்ரேல் மீட்கப்பட்டு மனந்திரும்பும் போது தாவீதின் சிங்காசனத்தில இஸ்ரவேலின் மீது கிறிஸ்து தமது ஆட்சியைத் துவங்குவார் (ஏசா 9:6-7, ஓசி 3:4-5 லூக்கா 1:32-33 எசே 36:23-28 எசே 37:16-28

கர்த்தருடைய இரண்டாம் வருகையைப் பற்றி சாட்சியாகக் கூறியவர்கள்

1. ஏனோக்கு (Enoch) (யூதா 1:14-15
2. யாக்கோபு (Jacob) (ஆதி 49:10)
3. பிலேயாம் (Balaam) (எண் 24:7, 17-19)
4. மோசே (Moses) (உபா 4:27-31, உபா 30:1-11; உபா 31:29
5. யோபு (Job) (யோபு 19:25-27

II தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

1 அதிகாரம்

6 தாவீது (David) (சங் 22:26-31 சங் 72:1-17

7 ஏத்தான் (Ethan) (சங் 89:1-37)

8 சங்கீதக்காரன் (An unknown psalmist) (சங் 102:16)

9 ஏசாயா (Isaiah) (ஏசா 9:6-7 ஏசா 59:20; ஏசா 63:1-6)

10 எரேமியா (Jeremiah) (எரே 3:14-25 எரே 23:5-6

11 எசேக்கியேல் (Ezekiel) (எசே 38:19-23 எசே 39:21 எசே 43:7

12 தானியேல் (Daniel) (தானி 2:44-45 தானி 7:13-27

13 ஓசியா (Hosea) (ஓசி 3:4-5 ஓசி 5:15; ஓசி 11:9; ஓசி 13:10)

14. யோவேல் (Joel) (யோவே 2:1-11 யோவே 3:1-21

15 ஆமோஸ் (Amos) (ஆமோ 1:2 ஆமோ 9:11-15

16 ஒபதியா (Obadiah) (ஒப 1:15-21)

17 மீகா (Micah) மீகா 1:3-4 மீகா 4:1-7

18 செப்பனியா (Zephaniah) (செப 1:7-8, 14-18 செப 3:8-20)

19 ஆகாய் (Haggai) ஆகாய் 2:6-9, 21-23)

20 சகரியா (Zechariah) (சக 2:10-11, சக 8:3-8, 23; சக 12:1-14, சக 13:8-9, சக 14:1-21)

21 மல்கியா (Malachi) (மல் 3:2-5, மல் 4:1-6)

22 இயேசு (Jesus) (மத் 16:27 மத் 19:28; மத் 23:38-39 மத் 24:1-25:46; மத் 26:64 லூக்கா 21)

23 பேதுரு (Peter) அப் 3:20-21 1பேதுரு 1:7,13 2பேதுரு 1:16 2பேதுரு 3:3-4)

24. யாக்கோபு (James) (அப் 15:13-18

25 பவுல் (Paul) (ரோமர் 11:25-27 1தெச 1:7-10; 2தெச 2:1, 8-12 1தீமோ 6:14; 2தீமோ 4:1,8; தீத்து 2:13; எபி 9:28)

26. யோவான் (John) (யோவான் 14:28; வெளி 1:7; வெளி 11:15; வெளி 16:15 வெளி 19:11-21; வெளி 22:20

27 தூதர்கள் (Angels) (அப் 1:11; லூக்கா 1:32-33)

28. கர்த்தருடைய பந்தி (Lord's Supper) (1கொரி 11:26

29 கர்த்தருடைய ஜெபம் (Lord's prayer) (மத் 6:10)

30 யூதா (Jude) (யூதா 1:14-15, 24

கர்த்தர் வரும் விதம்

1. மின்னலைப்போல (மத் 24:27
2. அழிவோடு (மத் 24:38-51, மத் 25:31-46; 1தெச 5:2, 2தெச 1:7-10; 2தெச 2:8, யூதா 1:14-15; சக 14; வெளி 19:11-21
3. காணக்கூடிய பிரகாரமாக (மத் 24:29-31; 2தெச 1:7-10, வெளி 1:7; வெளி 19:11-21, சக 14
4. அக்கினியோடு (2தெச 1:7-10, 2தெச 2:8; எசே 38:17-21, மல் 4:1-6

II தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

1 அதிகாரம்

5 கோபாக்கினையோடு (வெளி 14:14-20, வெளி 19:11-21; யூதா 1:14-15, 2தெச 1:7-10)

6 வல்லமையோடும், மகிமையோடும் (மத் 16:27; மத் 24:27-31 மத் 25:31-46)

7 பரிசுத்தவான்களோடும், தேவ தூதர்களோடும். (சக 14:5 மத் 24:29-31; மத் 25:31-46 1தெச 1:7-10; யூதா 1:14, வெளி 17:14; வெளி 19:14)

8 மேகங்கள் நடுவே (மத் 24:29-31, மத் 26:64; வெளி 1:7; தானி 7:13-14)

9 நியாயாதிபதியாகவும், ராஜாவாகவும (வெளி 19:11-21; ஏசா 11; சக 14, மத் 25:31-46

10 திருடன வருகிற விதமாக (1தெச 5:2-4, வெளி 16:15)

கர்த்தருடைய இரண்டாம் வருகையைப் பற்றிய தவறான கருத்துக்கள்

1 பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகம் கர்த்தருடைய இரண்டாம் வருகை என்று கூறுவது. பெந்தெகொஸ்தே நாளில இயேசு கிறிஸ்து வரவில்லை தேற்றரவாளனாகிய பரிசுதத ஆவியானவா வந்தாா (யோவான்14:16 26, யோவான 15:26, யோவான 16:7 15)

2 ஒவ்வொருவரும் மனந்திரும்பும்போது கா்த்தா வருகிறாா் என்று கூறுவது. (மத் 18:3, யோவான 3:3 8; அப 3:19; அப் 26:18; யாக் 5:19-20)

3 ஒவ்வொரு நிமிஷத்திலும் மனுஷன் மரிக்கும்போது கா்த்தா வந்து அவனுடைய ஜீவனை எடுத்துக் கொள்கிறாா் என்று கூறுவது. (யாக் 2:26, 1கொரி 15:26)

4 கிபி 70 ஆம் ஆண்டு எருசலேமின் அழிவின்போது கா்த்தா் வந்தாா் என்று கூறுவது (லூக்கா 21:20-24, கா்த்தா் வரும்போது அவா் எருசலேமைத் திரும்பக் கட்டுவாா் (சக 14:1-21)

5 சுவிசேஷத்தைப பிரசங்கம் பண்ணுவது கா்த்தருடைய வருகையைக் குறிக்கும் என்று கூறுவது. (மத் 24:27-51 மத் 25:31-46; 2தெச 1; வெளி 19)

6 இயேசு கிறிஸ்துவின் வருகை என்பது ஆவிக்குரிய வருகை என்று கூறுவது (சக 14; மத் 24:29-31; 2தெச 1 வெளி 19)

7 இயேசு கிறிஸ்து பூமியில இருந்தபோது, சபை ஸ்தாபிக்கப்பட்டது இயேசு கிறிஸ்துவின வருகை என்று கூறுவது. (மத் 16:18; 2கொரி 3:11 எபே 2:19-22; அப 15:13-16

"வானத்திலிருந்து" (from heaven) - (தானி 7:13; மத் 24:29; வெளி 19:11-21)

வல்லமையின தூதா் (mighty angels) - δύναμις - dynamis - 1411

பெண்பால் பெயா்சொல - வல்லமை பலதத செய்கைகள், அற்புதங்கள், திறமை, பலம், சத்துவம், சக்தி, கருதது உக்கிரம், மிகுதி (inherent power, "the angels of His power") - கலகம் பண்ணுவோரிடையே ஒழுங்கை நிலைநிறுத்துவதற்காக தேவனுடைய தூதாகள தேவனுக்கு உதவி புரிகிறாா்கள் (எபே 3:9-10, எபே 6:12, வெளி 12:7-12; தானி 10:11-21

ஜுவாலை (flaming fire) - φλόξ - phlox - 5395

பெண்பால் பெயா்சொல் - ஜுவாலை (flame of fire) (லூக்கா 16:24, அப 7:30; எபி 1:7; வெளி 1:14, வெளி 2:18; வெளி 19:12

II தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

1 அதிகாரம்

கர்த்தருடைய இரண்டாம் வருகையின் நோக்கங்கள்

1 இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கு நீதியுள்ள ஆக்கினையை செலுத்தும்படிக்கு. (2தெச 1:7-10; யூதா 1:14-15; வெளி 19:11-21)

2 தேசங்களை நியாயந்தீர்ப்பதற்கு. (மத் 25:31-46; சங் 67:4; சங் 96:10-13; சங் 98:9)

3 தம்முடைய ஆளுகையை ஸ்தாபிப்பதற்கு. (சங் 72:11; ஏசா 2:1-4; சக 14; மல் 1:11; வெளி 11:15; வெளி 20:1-10)

4 இஸ்ரவேலை மீட்பதற்கு (சக 14; ரோமர் 11:25-29; ஏசா 63:1-6; மத் 25:31-46; வெளி 19)

5 சத்துருக்களை அழிப்பதற்கு (யூதா 1:14-15; 2தெச 1:7-10; 2தெச 2:8-12; வெளி 19:11-21; சக 14)

6 தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்ஜியத்தையும் மறுபடியும் நிலை நிறுத்துவதற்கு. (ஏசா 9:6-7; எரே 30:7-11; எசே 37:20-26; ஓசி 3:5-6; லூக்கா 1:31-3; அப் 15:13-16)

7 சிருஷ்டிகளை அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பதற்கு. (ரோமர் 8:21-24; ஏசா 11:1-2; ஏசா 35:1-8; ஏசா 65:20-25)

8 இரட்சிப்பைத் தருவதற்கு. (ஏசா 11:9; ஏசா 49:6; ஏசா 52:7; பேதுரு 1:5-13; ரோமர் 11:25-29)

9 எல்லோருக்கும் நீதியைச் சரிக்கட்டுவதற்கு. (ஏசா 11:1-9; ஏசா 42:1-4; எரே 23:5-6; 1கொரி 15:24-28)

10 எல்லா தேசங்களின்மீதும் ஆளுகை செய்வதற்கு. (தானி 2:44-45; தானி 7:13-14; சக 14; வெளி 11:15)

11 உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களை பூமியின்மீது நித்திய காலமாக ஆட்சி புரிய வைப்பதற்கு. (மத் 19:28; 1கொரி 6:1-3; வெளி 2:26; வெளி 5:10; வெளி 20:4-9; தானி 7:18-27)

12 இஸ்ரவேலைக் கூட்டிச் சேர்ப்பதற்கு (ஆதி 49:10; ஏசா 11:10-12; ஏசா 66:19-21; மத் 24:31)

13 பூமியில் கலகக்காரர்களை ஒடுக்குவதற்கு. (1கொரி 15:24-28; வெளி 2:27; வெளி 11:15; வெளி 19:11-21)

14 யூதருடைய தேவாலயத்தை மறுபடியும் கட்டுவதற்கு. (எசே 43:7; சக 6:12-13)

15 தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துவதற்கு. (ஏசா 4:2-6; ஏசா 35:2; ஏசா 40:5; ஏசா 60:1-9; எசே 39:21; மத் 16:27; மத் 25:31)

16 பூமியிலிருந்து சாபத்தை அகற்றுவதற்கு (ஏசா 35; ஏசா 65:20-25; மீகா 4:1-7; 1கொரி 15:24-28; 1கொரி 21:1-7; 1கொரி 22:3)

17 சமாதானத்தையும் வளமையையும் பூமிக்குத் தருவதற்கு. (ஏசா 2:1-4; ஏசா 35:1-8; மீகா 4:1-7)

18 புறஜாதியாரின் காலங்களை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு (லூக்கா 21:24; ரோமர் 11:25; சக 14)

19 பூமியைப் பற்றிக் கொள்வதற்கு (சங் 2; வெளி 11:15)

20 சீயோனைக் கட்டுவதற்கு. (சங் 102:16; எசே 37:1-28; எசே 40:4-48:35)

21 உலகத்தில் சுவிசேஷ ஊழியம் செய்வதற்கு. (ஏசா 2:1-4; ஏசா 11:9; ஏசா 52:7; ஏசா 66:19-24; மல் 1:11; சக 8:23; சக 10:1; சக 14:16-21)

II தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

1 அதிகாரம்

26. அர்மெகதோனில் யுத்தம் செய்து மனுஷனுடைய ஆளுகையை நிலை நிறுத்துவதற்கு. (வெளி 19:11-21; மத் 5:5; மத் 25:31-46; சங் 8)

27. தெய்வீக ஆளுகையை ஸ்தாபிப்பதற்கு. (சங் 2; ஏசா 2:1-4; ஏசா 4:1-3; தானி 2:44-45; தானி 7:13-14; சக 14:9; வெளி 20)

28. வானத்திலும், பூமியிலும் உள்ள எல்லோரையும் கூட்டிச் சேர்ப்பதற்கு. எபே 1:10)

29. ஒவ்வொருவரையும் சொஸ்தமாக்குவதற்கு. (ஏசா 32:1-5; ஏசா 33:24; ஏசா 35:5)

30. தேவன் ஆபிரகாமோடும் தாவீதோடும் செய்துகொண்ட உடன்படிக்கைகளையும் மற்ற உடன்படிக்கைகளையும் நிறைவேற்றுவதற்கு. (ஆதி 12:1-3; 2சாமு 7)

31. பரிசுத்தவான்கள் மகிமையடைவதற்கு (2தெச 1:9,12; மத் 25:31-46)

32. விசுவாசிகளினால் ஆச்சரியப்படுவதற்கு. (2தெச 1:9)

33. தேவனுடைய நித்திய சாபரஸ்தலமாகப் பூமியை ஆயத்தம் பண்ணுவதற்கு. (ஏசா 35; சக 14; வெளி 20-22; 1கொரி 15:24-28)

34. ஆதியிலே தேவன் மனுஷனைக் குறித்துக் கொண்டிருந்த சித்தத்தையும் திட்டத்தையும் நிறைவேற்றுவதற்கு. (ஆதி 1:26-31; ஆதி 8:22; ஆதி 9:12; சங் 8; 1கொரி 15:24-28; வெளி 20-22)

தண்டனை (punishment) - δίκη - dikee 1349

பெண்பால் பெயர்ச்சொல் - தீர்ப்பு, தண்டனை, பலி, ஆக்கினை (penalty awarded by a judge; sufferpunishment. punishment) (2தெச 1:9); judgment (அப் 25:15); vengeance (அப் 28:4; யூதா 1:7). நித்திய அழிவே இங்கு கொடுக்கப்படும் தண்டனையாகும். அழிவு என்பதற்கான கிரேக்க வார்த்தை "ஒலெத்ரொஸ்" (olethrios)

அழிவு (ruin) - ὀλέθριος - olethrios - 3639

ஆண்பால் பெயர்ச்சொல் - அழிவு (ruin; undoing; that which causes destruction, a plague, pest) destruction (2கொரி 5:5; 1தெச 5:3; 2தெச 1:9; 1தீமோ 6:9). இந்த அழிவு நித்தியமானது. மனுஷனுக்கு இந்த அழிவு வந்த பின்பு அவன் மறுபடியும் மனந்திரும்பி தேவனுடைய இரட்சிப்பை பெறுவதற்கு வாய்ப்பில்லை. அவன் தேவனைவிட்டும் அவருடைய பிரசன்னத்திலிருந்தும், அவருடைய வல்லமையின் மகிமையிலிருந்தும் நித்தியமாகப் பிரிக்கப்பட்டு விடுகிறான் (2தெச 1:10; எபி 9:27). தேவனைவிட்டுப் பிரிக்கப்படுவதே மிகப்பெரிய தண்டனை. அத்துடன் சேர்ந்து அவன் நித்திய நரகத்திலும் தள்ளப்படுகிறான் (மத் 8:12; மத் 13:49-51; மத் 25:41,46; மாற்கு 9:43-49; வெளி 14:9-11; வெளி 20:11-15; ஏசா 66:22-24)

"நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்" இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது அவர் தேசங்களை நியாயம் விசாரிப்பார். வெள்ளாடுகளை நித்திய அக்கினியிலே தள்ளுவார் (மத் 25:31-46). இது பொதுவான நியாயத்தீர்ப்போ அல்லது துன்மார்க்கருடைய மரணமோ அல்ல. இது இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது ஜீவனோடு இருப்பவர் மீது வழங்கப்படும் தீர்ப்பாகும். (2தெச 1:10; மத் 25:31-46) துன்மார்க்கமான தேசத்தாரை இயேசு கிறிஸ்து நியாயம் தீர்ப்பதோடு பரிசுத்தவான்களில் அவர் மகிமைப்பட்டு, விசுவாசிகளிடத்தில் ஆச்சரியப்படுவார்

II தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

1 அதிகாரம்

மகிமைப்படுதல் (be glorified)
ἐνδοξάζομαι
endoxazomai - 1740

வினைச்சொல் - மகிமைப்படுத்து (to adorn with glory) - பரிசுத்தவான்கள் மீது காணப்படும் ஆசீர்வாதங்களில் தேவனுடைய மகிமை விளங்குகிறது. (2தெச 1:10,12)

கூட மகிமைப்படு (glorified together) - συνδοξάζω - **syndoxazoo** - 4888

வினைச்சொல் - கூட மகிமைப்படு (glorified together) (ரோமர் 8:17-18)

மகிமையானது (glorious) - ἔνδοξος - **endoxos** - 1741

பெயரடை மகிமையானது அலங்கார, கனமான (glorious and honorable) (லூக்கா 13:17; 2கொரி 4:10 எபே 5:27)

மகிமைப்படுத்து (extol) δοξάζω
doxazoo - 1392

வினைச்சொல் மகிமைப்படுத்து புகழ், மேன்மைப்படுத்து, உயர்த்து (glorify, extol) 2தெச 3:1)

ஆச்சரியப்படு (be admired) θαυμάζω - **thaumazo** - 2296

வினைச்சொல் ஆச்சரியப்படு, அதிசயப்படு பிரமித்துப்போதற்மொழிவு "**admire**" (2தெச 1:10; யூதா 1:16); "**marvel at,**" (லூக்கா 7:9 யோவான் 5:28; கலா 1:6 "**wonder at,**" (லூக்கா 24:12, அப 7:31)

2. கிறிஸ்துவின் வருகையின் நிமித்தம் விசுவாசிகளுக்காக ஜெபம்

2தெச 1:11 ஆகையால் நம்முடைய தேவனும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் அளிக்கும் கிருபையின்படியே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமம் உங்களிடத்திலும் நீங்கள் அவரிடத்திலும் மகிமைப்படும்பொருட்டாக,

2தெச 1:12 நம்முடைய தேவன் உங்களைத் தமது அழைப்புக்குப் பாத்திரராக்கவும் தமது தயையுள்ள சித்தம் முழுவதையும் விசுவாசத்தின் கிரியையையும் பலமாய் உங்களிடத்தில் நிறைவேற்றவும் வேண்டுமென்று எப்பொழுதும் உங்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறோம்.

தெசலோனிக்கேயருக்காகப் பவுல் ஜெபிக்கும் காரியங்கள்

1 தேவன் அவர்களைத் தமது அழைப்புக்குப் பாத்திரராக்க வேண்டும்

2 தமது தயையுள்ள சித்தம் முழுவதையும் அவர்களிடத்தில் நிறைவேற்ற வேண்டும்.

3 விசுவாசத்தின் கிரியையைப் பலமாய் அவர்களிடத்தில் நிறைவேற்ற வேண்டும்.

4 கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமம் அவர்களிடத்திலும் அவர்கள் இயேசு கிறிஸ்துவினிடத்திலும் மகிமைப்பட வேண்டும். (2தெச 1:12

II தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

2 அதிகாரம்

3. சபை எடுத்துக் கொள்ளப்படுதல், கிறிஸ்துவின் இரண்டாம் வருகை ஆகியவற்றின் நிமித்தம் விசுவாசிகளுக்கு வேண்டுகோள்

2தெச 2:1 அன்றியும், சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையையும், நாம் அவரிடத்திலே சேர்க்கப்படுவதையும் குறித்து, நாங்கள் உங்களை வேண்டிக்கொள்ளுகிறது என்னவென்றால்,

2தெச 2:2 ஒரு ஆவியினாலாவது, வார்த்தையினாலாவது, எங்களிடத்திலிருந்து வந்ததாய்த் தோன்றுகிற ஒரு நிருபத்தினாலாவது, கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருக்கிறதாகச் சொல்லப்பட்டால், உடனே சஞ்சலப்படாமலும் கலங்காமலும் இருங்கள்.

தீர்க்கதரிசன எண் - 2

"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகையையும் நாம் அவரிடத்திலே சேர்க்கப்படுவதையும் குறித்து..." (2தெச 2:1,2) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகை" இந்த வாக்கியம் இயேசு கிறிஸ்துவின் இரண்டு வருகைகளையும் குறிக்கலாம். ஒன்று பரிசுத்தவான்களை எடுத்துக் கொள்வதற்காக இயேசு கிறிஸ்து மத்திய ஆகாயத்திற்கு வருவது. (1தெச 3:13; 1தெச 4:13-18) மற்றொன்று இயேசு கிறிஸ்து தம்முடைய பரிசுத்தவான்களோடு பூமிக்கு வருவது. (மத் 24:3)

சேர்க்கப்படுதல் (gathering together)
ἐπισυναγωγή
episynagoogee 1997

பெண்பால் பெயர்ச்சொல் - கூடிவருதல் (a gathering together in one place) (2தெச 2:1; எபி 10:25; மத் 23:37; மத் 24:31) இந்த வாக்கியத்தில் இயேசு கிறிஸ்து மத்திய ஆகாயத்தில் பரிசுத்தவான்களைத் தம்மிடத்தில் சேர்த்துக் கொள்கிறார். (1தெச 4:13-18) இந்த வாக்கியம் சபை எடுத்துக் கொள்ளப்படுவதைக் குறிக்கும். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிக்காது.

தெசலோனிக்கேயரைச் சஞ்சலப்படவும் கலக்கவும் வைத்த காரியங்கள்

1. ஆவி
2. வார்த்தை
3. நிருபம்

ஆவியானவர் வெளிப்படுத்தாத காரியங்களை ஆவியானவர் வெளிப்படுத்தியதாகக் கூறி ஒருசில கள்ளப்போதகர்கள் தெசலோனிக்கேயரைச் சஞ்சலப்படுத்தி வந்தார்கள். தங்களுடைய வார்த்தை சாதுரியத்தினால் விசுவாசிகளைக் கலங்கப் பண்ணினார்கள். பவுல் எழுதாத நிருபங்களைப் பவுல் எழுதியதாகக் கூறி அவர்களிடம் கொண்டு வந்து கொடுத்தார்கள். கர்த்தருடைய நாளைக் குறித்து பவுல் உபதேசம் பண்ணாத காரியங்களெல்லாம் அந்தக் கள்ள நிருபத்தில் இருந்தன. (2தெச 2:2)

4. கர்த்தருடைய நாளுக்கு முன்பாக நடைபெறும் இரண்டு காரியங்கள் - விசுவாச துரோகமும் கேட்டின் மகனாகிய பாவ மனுஷனின் (அந்திக்கிறிஸ்து) வெளிப்பாடும்

2தெச 2:3 எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது.

II தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

2 அதிகாரம்

2தெச 2:4 அவன் எதிர்த்து நிற்கிறவனாயும், தேவனென்னப்படுவதெதுவோ ஆராதிக்கப்படுவதெதுவோ அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்

2தெச 2:5 நான் உங்களிடத்திலிருந்தபோது இவைகளைச் சொன்னது உங்களுக்கு ஞாபகமில்லையா?

"ஒருவனும் உங்களை மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" - விசுவாசிகளை அமைதிப்படுத்துவதற்காகவும் இயேசு கிறிஸ்துவின் நாள் இன்னும் வரவில்லை என்னும் சத்தியத்தை அவர்களுக்கு உறுதிப்பண்ணுவதற்காகவும் பவுல் இந்த நிருபத்தை தெசலோனிக்கேயருக்கு எழுதினார். கர்த்தருடைய நாளுக்கு முன்பாக அந்திக்கிறிஸ்துவும் விசுவாசத் துரோகமும் முதலாவது வரவேண்டும். இவற்றிற்கு முன்பாக சபை எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் (2தெச 2:3-8). கள்ளப்போதகர்கள் இந்த உபதேசத்தைத் திருத்தி கள்ள நிருபம் எழுதி அனுப்பினார்கள். ஆகையினால் ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென்று பவுல் அவர்களை எச்சரித்துக் கூறுகிறார்.

கர்த்தருடைய நாளுக்கு முந்தி தேவைப்பட வேண்டிய நிகழ்ச்சிகள்

1. விசுவாசத்துரோகம்
2. கேட்டின் மகனாகிய பாவ மனுஷன் வெளிப்படுதல்

விசுவாச துரோகம் (Falling away) ἀποστασία apostasia 646

பெண்பால் பெயர்ச்சொல் - பிரிந்து போதல் விசுவாசதுரோகம் **(defection, revolt, apostasy)** - (அப் 21:21; 2தெச 2:3) திருமண உறவில் ஏற்படும் நம்பிக்கைத் துரோகத்தைப் பற்றி மத் 5:31; மத் 19:7; மாற்கு 10:4 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. இந்த வாக்கியத்தில் நம்பிக்கைத் துரோகம் என்று கூறப்பட்டிருப்பது சபை எடுத்துக் கொள்ளப்படுவதற்கும், இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கும் இடைப்பட்ட காலத்திலுள்ள மகா உபத்திரவக் காலத்தில் காணப்படும் மகா பெரிய விசுவாசத் துரோகத்தைக் குறிக்கிறது (மத் 24:4-31; வெளி 6:1-19:21)

சபை எடுத்துக் கொள்ளப்படும்போது கிறிஸ்துவிற்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். அதன் பின்பு கிறிஸ்துவிற்குள் ஜீவிக்கும் பரிசுத்தவான்கள் மறுரூபமடைவார்கள் (1கொரி 15:51-58; 1தெச 4:13-18). கிறிஸ்துவினுடையவர்கள் ஒருவரும் சபை எடுத்துக் கொள்ளப்படுவதில் கைவிடப்படுவதில்லை. சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு ஏற்படும் விளைவுகளினால் திரளான ஜனங்கள் இரட்சிக்கப்படுவார்கள் (அப் 2:16-21; வெளி 6:9-11; வெளி 7:1-2; வெளி 2:17). இக்காலத்தில் இரட்சிக்கப்படாதவர்களுடைய இருதயங்கள் கடினப்பட்டு இரட்சிக்கப்பட்டவர்களை அழிக்க வகை தேடுவார்கள் (வெளி 9:20-21; வெளி 16:2, 9, 11). வெளி 17 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் மகா வேசியானவள் தானியேலின் எழுபதாவது வாரத்தின் முதலாவது மூன்றரை வருஷக் காலத்தில் ஏராளமான கிறிஸ்தவர்களை அழிப்பாள். அப்போது அந்திக்கிறிஸ்து தேசங்களின்மீது ஆட்சி புரிவான் (வெளி 6:9-11; வெளி 17:6). தானியேலின் எழுபதாவது வாரத்தின் நடுவில் அந்திக் கிறிஸ்து பூரணமாக அதிகாரம் செலுத்தும்போது பத்து ராஜாக்களோடு சேர்ந்து மகா வேசியை அழிப்பான் (வெளி 6:9-11; வெளி 17:6). மிருகத்தை ஆராதிப்பதை ஸ்தாபிப்பான். அவனையும் அவனுடைய சொரூபத்தையும் ஆராதிக்காத மறுப்பவர்களைக் கொன்று போடுவான் (வெளி 7:9-17; வெளி 13:15-18; வெளி 14:9-13; வெளி 15:2-4; வெளி 16:6-11; வெளி 17:2-4, 16-17)

II தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

2 அதிகாரம்

5. அந்திக் கிறிஸ்துவின் வெளிப்பாட்டிற்கு முன்பாக நடைபெறும் காரியம் – சபை முதலாவது எடுத்துக் கொள்ளப்படும் அதன் பின்பு அந்திக்கிறிஸ்து வெளிப்படுவான்

2தெச 2:6 அவன் தன் காலத்திலே வெளிப்படும்படிக்கு, இப்பொழுது அவனைத் தடை செய்கிறது இன்னதென்றும் அறிந்திருக்கிறீர்களே

2தெச 2:7 அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியைசெய்கிறது. ஆனாலும் தடைசெய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது வெளிப்படாது.

2தெச 2:8 நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான். அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார்.

அக்கிரமத்தைத் தடைசெய்கிறவன்

1. அவனைப் பற்றி ஏற்கெனவே அறியப் பட்டிருக்கிறது. (2தெச 2:6)
2. கேட்டின் மகனை அவன் தடைசெய்வான் (2தெச 2:6-7)
3. அந்திக் கிறிஸ்துவின் வெளிப்பாட்டை தடை பண்ணும் அளவிற்கு வல்லமையுள்ளவன் (2தெச 2:6-8)
4. பூமியிலிருந்து அக்கிரமக்காரனை அகற்றும் வரையிலும் அவன் அக்கிரமக்காரனைத் தடைசெய்வான் (2தெச 2:7-8
5. வேதவசனத்தில் அவன் "அவன்" என்று அழைக்கப்படுகிறான் (2தெச 2:7)
6. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக அவன் பூமியிலிருந்து நீக்கப்படுவான் (2தெச 2:7-8
7. அந்திக் கிறிஸ்துவை அழிப்பதற்கு இயேசு கிறிஸ்து வரும்போது அக்கிரமக்காரன் இங்கு இருக்க மாட்டான் (2தெச 2:7-8)

"தடைசெய்கிறவன்" என்பது இவற்றில் ஒன்றாக இருக்கலாம்

1. அரசாங்கங்கள் (2தெச 13:1-7 1பேதுரு 2:13)
2. பரிசுத்த ஆவியானவர் (யோவான் 16:7-15)
3. சபை (மத் 5:13; 1கொரி 2:5-6; எபே 6:12-18; 2கொரி 10:4-7

அந்திக் கிறிஸ்து வெளிப்படும் முன்பு இந்த உலகத்திலிருந்து தடை செய்கிறவன் நீக்கப்பட வேண்டும். (2தெச 2:6-8) தடை செய்கிறவன் என்பது அரசாங்கங்களாக இருக்க முடியாது ஏனெனில் அந்திக் கிறிஸ்து பல ராஜ்ஜியங்களை ஆளுகை செய்வான் (தானி 7:24 தானி 11:40-45) பூமியின் மற்ற பகுதிகளில் தடை செய்கிறவன் நீக்கப்படும்போது மற்ற ராஜாக்கள் பல ராஜ்ஜியங்களை ஆளுகை செய்வார்கள் (வெளி 11:15 வெளி 16:13-16)

தடை செய்கிறவன் என்பது பரிசுத்த ஆவியானவரைக் குறிக்காது. ஏனெனில் பரிசுத்த ஆவியானவர் இந்த உலகத்தில் உபத்திரவக்காலம் முழுவதிலும் நித்திய காலமாகவும் இருப்பார் (யோவான் 14:16 அப் 2:16-21; வெளி 12:17, வெளி 6:9-10, சக 12:10-13:1) இப்பொழுது போலவே உபத்திரவக் காலத்திலும் திரளான ஜனங்கள் இரட்சிக்கப்படுவார்கள் (அப் 2:16-2 அப் 12:5-17; அப் 15:2-4; அப் 20:4-6

தடை செய்கிறவன் என்பது சபையாக இருக்கலாம். அந்திக் கிறிஸ்து வருவதற்கு முன்பாக சபை எடுத்துக் கொள்ளப்படும். ஆகையினால் சபையே அக்கிரமக்காரனாகிய அந்திக் கிறிஸ்து வருவதைத் தடை செய்கிறதாக இருக்கிறது. சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு அந்திக் கிறிஸ்து இந்தப் பூமிக்கு வருகிறான் (1தெச 4:16

II தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

2 அதிகாரம்

"தடை செய்கிறவன்" - தடை செய்கிறவன் என்று ஆண்பால விகுதி பயன்படுத்தப்பட்டிருப்பதினால இந்த வார்த்தை பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கும் என்று சிலர் கருதுகிறார்கள். சபையானது கிறிஸ்துவின் மணவாட்டியாக இருப்பதினால் ஆண்பால விகுதிச் சொல்லை இதற்குப் பயன்படுத்த முடியாது என்பது இவர்களுடைய விவாதம். சபை கிறிஸ்துவின் மணவாட்டி தான் ஆயினும் சபை மனுஷன் என்றும் (எபே 2:15; எபே 4:13) கிறிஸ்துவின் சரீரம் என்றும் 2கொரி 12:12-13:27; எபே 1:22-23 கொலோ 1:18, 24 அழைக்கப்படுகிறது. ஆகையினால சபையை ஆண்பால சுட்டுச் சொல்லால் குறிக்கப்பட்டிருப்பது ஏற்றுக் கொள்ளக்கூடியதே.

கேட்டின் மகனைத் தடை செய்கிறவன் சபையே. ஏனென்றால சபையே பூமியிலிருந்து எடுத்துக் கொள்ளப்படுகிறது. 2தெச 2:7 ஆவது வசனத்தில தடை செய்கிறவன என்று கூறப்பட்டிருப்பது சபையையே குறிக்கும் சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு கேட்டின மகனாகிய அந்திக் கிறிஸ்து வெளிப்படுவான ஏழு வருஷங்களுக்குப் பின்பு இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகையின்போது அந்திக் கிறிஸ்துவை அழிப்பார் 2தெச 2:7, 8)

அந்திக் கிறிஸ்து வெளிப்படுவதற்கு முன்பாக சபை எடுத்துக் கொள்ளப்படும்

சபை எடுத்துக் கொள்ளப்படும் வரையிலும் அது கேட்டின மகனாகிய அந்திக் கிறிஸ்துவைத் தடைபண்ணும் சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு கேட்டின மகன் வெளிப்படுவான் தானியேலின் எழுபதாவது வாரத்திற்கு முன்பாகவும் வெளி 6:1-19:21 ஆகிய வசனங்களில கூறப்பட்டிருக்கும் மகா உபத்திரவக் காலத்திற்கு முன்பாகவும் சபையானது எடுத்துக் கொள்ளப்படும். தானி 9:27 ஆவது வசனத்தின் பிரகாரம் அந்திக் கிறிஸ்து இந்தப் பூமியில ஏழு வருஷம் இருப்பான் இஸ்ரவேலோடு அவன ஏழு வருஷ உடன்படிக்கை செய்து கொள்வான்

"தடை செய்கிறவன் நீக்கப்படும்போது அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்" - சபை எடுத்துக் கொள்ளப்படும் வரையிலும் அந்திக் கிறிஸ்துவினால் வெளிப்பட முடியாது. (2தெச 2:7-8) சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு தான் அந்திக் கிறிஸ்து வெளிப்படுவான் (1தெச 4:13-16) அந்திக் கிறிஸ்துவின் நாட்களிலும் வெளி 6:1-19:21, மத் 24:15-21 தானி 12:1 ஆகிய வசனங்களில கூறப்பட்டிருக்கும் உபத்திரவக் காலத்தின் நாட்களிலும் சபை எடுத்துக் கொள்ளப்படும் போது எடுத்துக் கொள்ளப்பட்ட பரிசுத்தவான்கள் இங்கு இருக்க மாட்டார்கள்

"அக்கிரமக்காரன்" (that Wicked) - இவனுக்குப் பல பெயர்கள் உள்ளன சின்ன கொம்பு "little horn" (தானி 7:8,24 தானி 8:9, 23); வரப்போகிற பிரபு "the prince that shall come" (தானி 9:26-27); வடதிசை ராஜா "the king of the north" (தானி 11:36-45); பாவ மனுஷன் "the man of sin" (1தெச 2:3,4,8); மிருகம் "the beast" (வெளி 13:1-18; வெளி 14:9-11; வெளி 15:2-4; வெளி 16:2-6; வெளி 17:1-18; வெளி 19:20; வெளி 20:10)

அந்திக் கிறிஸ்துவைக் குறித்த உண்மைகள்

1. பாவ மனுஷன் "the man of sin" என்று அழைக்கப்படுகிறான ஏனென்றால இவன கேட்டின மகன அக்கிரமக்காரன 2தெச 2:3,8, 12 வெளி 13:1-18 வெளி 14:9-11 வெளி 15:2-4 வெளி 16:2-12 ஆகிய வசனங்களில கூறப்பட்டிருக்கும் துர் உபதேசங்களுக்குத் தலைவன
2. கேட்டின மகன் "the son of perdition" இவனுடைய கலகத்தின நிமித்தமாக இவனுக்கு அழிவு நியமிக்கப்பட்டிருக்கிறது. யூதாசைப்போல இவன் தன்னைச் சாத்தானுக்கு விற்றுப் போட்டவன் (2தெச 2:3, 8-12 வெளி 13:2 தானி 8:24; தானி 11:37-39
3. அந்திக் கிறிஸ்து வெளிப்படுவான் (2தெச 2:3)

II தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

2 அதிகாரம்

4 அந்திக் கிறிஸ்து தேவனுக்கு எதிர்த்து நிற்கிறவன் (2தெச 2:4)

5 தேவனுக்கு மேலாகத் தன்னை உயர்த்துகிறவன் (2தெச 2:4)

6 தேவனுக்குரிய ஆராதனையைத் தனக்கு ஏற்றுக் கொள்வான் (2தெச 2:4)

7 எருசலேமில் யூதருடைய வருங்கால ஆலயமாகிய தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல உட்கார்ந்து கொள்ளுவான் (2தெச 2:4; தானி 8:10-14,23-27; தானி 9:27; தானி 11:36-45; தானி 12:1-7; மத் 24:15-21; வெளி 11:1-2; வெளி 13:1-18; வெளி 14:9-11; வெளி 15:2-4; வெளி 16:2-12; வெளி 20:4-6)

8 தன்னைத்தானே தேவனென்று காண்பித்துக் கொள்ளுவான் (2தெச 2:4)

9 அவன் வெளிப்படுவதற்கு ஒரு காலம் உண்டு. (2தெச 2:6)

10 அவனுடைய வெளிப்பாட்டை ஒன்று தடை செய்கிறது. (2தெச 2:7; லூக்கா 4:42)

11 அக்கிரமத்தின் இரகசியம் வெளிப்படுவதற்கு இப்பொழுதே கிரியை செய்கிறது. (2தெச 2:7)

12 தடை செய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படும் முன்னே அக்கிரமக்காரன் வெளிப்படமாட்டான் (2தெச 2:7)

13 தடை செய்கிறவன் இந்தப் பூமியிலிருந்து நீக்கப்படும்போது அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான் (2தெச 2:7-8)

14 வெளிப்படுத்தப்பட்ட அக்கிரமக்காரன் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரையிலும் இந்தப் பூமியில் இருப்பான் அர்மெகதோனில் நடைபெறும் யுத்தத்தில் தன்னுடைய சேனைகளை வழிநடத்துவான் இயேசு கிறிஸ்து அவனை அங்கு அழிப்பார் (2தெச 2:8; வெளி 19:11-21; தானி 7:24-28; தானி 8:23-27; தானி 9:27; தானி 11:36-45; தானி 12:1-7; மத் 24:15-31)

15. அக்கிரமக்காரன் ஒரு மனுஷன் அர்மெகதோனில் இயேசு கிறிஸ்து அவனைக் கொன்று போடுவார் (2தெச 2:8; தானி 7:11; தானி 8:25; ஏசா 11:4; வெளி 19:11-21). இந்த அக்கிரமக்காரன் என்னப்படுகிறவன் யூதாஸ்காரியோத்து அல்ல. அவன் ஏற்கெனவே மரித்து விட்டவன் (எபி 9:27)

16. அக்கிரமக்காரன் சாத்தானுடைய பிரதிநிதி. உலகத்தின் சர்வாதிகாரியாக எழும்ப வேண்டுமென்று இவன் கடைசி முறையாக முயற்சி பண்ணுகிறான் (2தெச 2:9; தானி 8:24; தானி 11:37-39; வெளி 13:2)

17 சாத்தானிடமிருந்து அக்கிரமக்காரன் அற்புதங்களைச் செய்யும் சக்திகளைப் பெற்றிருக்கிறான் (2தெச 2:9; தானி 8:24; தானி 11:37-39; வெளி 13:2, 11-18; வெளி 16:13-16; வெளி 19:20; மத் 24:24

18 அக்கிரமக்காரன் வஞ்சிக்கிறவன் (2தெச 2:10; தானி 8:24-25; தானி 9:27; தானி 11:36-45; மத் 24:15-31; வெளி 13:1-18; வெளி 19:20

19 கெட்டுப்போகிறவர்கள் மட்டுமே இந்த அக்கிரமக்காரனைப் பின்பற்றுவார்கள் (2தெச 2:10-12; வெளி 13:1-18; வெளி 14:9-11; வெளி 16:13-16; வெளி 19:20)

20 சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிறவர்கள் அக்கிரமக்காரனால் வஞ்சிக்கப்படுவார்கள் (2தெச 2:11-12

2 அதிகாரம்

21 அக்கிரமக்காரன் ஒரு பொய்யன் கொடிய வஞ்சகன் (2தெச 2:11-12 தானி 8:10-14,25 தானி 11:39)

"அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம் பண்ணுவார்" - அந்திக்கிறிஸ்து யாராக இருந்தாலும் அவன் பல தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றுகிறான் அர்மெகதோனில் இயேசு கிறிஸ்து அந்திக் கிறிஸ்துவை அழித்துப் போடுவார் (தானி 7:11 ஏசா 11:4 வெளி 19:19-21)

அழித்தல் (consume) - ἀναλίσκω - analiskoo - 355

வினைச்சொல் - அழி (to kill, destroy) (2தெச 2:8; லூக்கா 9:54 கலா 5:15) இயேசு கிறிஸ்து அந்திக் கிறிஸ்துவை அழிப்பார் (தானி 7:11 தானி 8:23-25 தானி 9:27, தானி 11:45 ஏசா 11:4) இயேசு கிறிஸ்து அந்திக்கிறிஸ்துவை அழித்து அவனை எரியும் அக்கினி நரகத்தில் தள்ளிவிடுவார் (மத் 25:41 46 வெளி 19:20, வெளி 20:10)

நாசம்பண்ணுதல் (destroy) καταργέω - katargeoo - 2673

வினைச்சொல் - கெடு, அவமாக்கு ஒழிந்துபோ அழிந்துபோ பரிகரி நீக்கு, வியர்த்தமாக்கு (எபே 2:15)

6. அந்திக்கிறிஸ்துவின் வல்லமை - (தானி 8:24, வெளி 13:1-18; 19:20)

2தெச 2:9 அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும்,

2தெச 2:10 கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும்சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப் படத்தக்கதாயச் சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற் போனபடியால் அப்படி நடக்கும்.

"அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும்" - அந்திக் கிறிஸ்துவின் ஆயத்தமும், வெளியாகும் சாத்தானுடைய கிரியையாகும். பாதாளத்திலுள்ள சாத்தானுடைய தூதன் வெளிப்பட்டு கடைசி நாட்களில் சாத்தானுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காக பூமியிலுள்ள அந்திக் கிறிஸ்துவை பயன்படுத்திக் கொள்வான் அவனிடம் சாத்தானின் வல்லமை இருக்கும் (2தெச 2:8-9; தானி 8:24; தானி 11:36-39 மத் 24:24; வெளி 13; வெளி 16:13-16 வெளி 19:20)

"கெட்டுப் போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும்" - சத்தியத்தை மறுதலித்தவர்களை சாத்தான் வஞ்சிப்பான் இதற்காக அவன் சகலவிதமான வஞ்சகத்தையும் பயன்படுத்துவான் (2தெச 2:10-12 1தீமோ 4:1-8; 2தீமோ 3:5; 1தீமோ 4:1-5 மத் 24:24, வெளி 13, வெளி 19:20)

"இரட்சிக்கப் படத்தக்கதாய்ச் சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும்" இக்காலத்தில் தேவன் கொடிய வஞ்சகத்தை அனுமதிக்கிறார் (2தெச 2:10-12) மனுஷன் நரகத்திற்குப் போக வேண்டுமென்று தீர்மானம் பண்ணிவிட்டால் தேவனால் அவனை எவ்வாறு தடுக்க முடியும்? (மத் 25:41 ரோமர் 1:24-32)

7. விசுவாச துரோகத்தையும் வஞ்சகத்தையும் தேவன் அனுமதித்ததற்கு காரணங்கள்

2தெச 2:11 ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப் படும்படிக்கு,

II தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

2 அதிகாரம்

2தெச 2:12 அவர்கள் பொய்யை விசுவாசிக்கத் தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்

"அவர்கள் பொய்யை விசுவாசிக்கத் தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்" - யாரும் கெட்டுப்போவது தேவனுடைய சித்தமல்ல. எல்லோரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்பதே தேவனுக்குப் [redacted]. (ரோமர் 1:21-32 யோவான் 3:16-20 2தீமோ 2:4. 2பேதுரு 3:9; வெளி 22:17). ஆயினும் ஒருவன் தொடர்ந்து தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணிக் கொண்டிருந்தால் தேவன் அவனை அவனுடைய சொந்த வழியிலேயே விட்டுவிடுவார். அவனுடைய அழிவை அவனே தேடிக் கொள்வான். தேவன் யாரையும் கட்டாயப் படுத்துவதில்லை. தங்களுடைய ஆத்துமாக்களை அழித்துப் போடவேண்டுமென்று தீர்மானமாக இருப்பவர்களைத் தேவன் இரட்சிப்பதில்லை. ஆகையினால்தான், சுவிசேஷத்தை விசுவாசிக்காதவர்களுக்கு கொடிய வஞ்சகத்தைத் தேவன் அனுப்புகிறார். மெய்யை விசுவாசிக்காத அவர்கள் இனிமேல் பொய்யை விசுவாசிப்பார்கள் (கலா 6:7-8 ஏசா 45:7)

III. புத்திமதிகளும் ஜெபங்களும்

1. இரட்சிப்பின் இரண்டு உபாயங்களுக்காக ஸ்தோத்திரம்

2தெச 2:13 கர்த்தருக்குப் பிரியமான சகோதரரே, நீங்கள் ஆவியினாலே பரிசுத்த மாக்கப்படுகிறதினாலும் சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும் இரட்சிப்படையும்படிக்கு, ஆதிமுதல் தேவன் உங்களைத் தெரிந்துகொண்டபடியினாலே, நாங்கள் உங்களைக்குறித்து எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்.

2தெச 2:14 நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையை அடையும்பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்

இரட்சிப்படையும்படிக்கு தேவன் தெரிந்து கொள்ளும் வழிகள்

1. ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறது.

2. சத்தியத்தை விசுவாசிக்கிறது.

இவ்விரண்டு காரியங்கள் மூலமாக அல்லாமல் வேறு எந்த வழியிலும் யாரும் தேவனுடைய இரட்சிப்பை பெற்றுக் கொள்ள முடியாது. பரிசுத்தமில்லாமலும் சத்தியத்தை விசுவாசியாமலும் தான் இரட்சிக்கப்பட்டதாக யாரும் கூறமுடியாது. (யோவான் 17:17)

பரிசுத்தம் (consecration) - ἁγιασμός - hagiasmos - 38

ஆங்கில பெயர்ச்சொல் - பரிசுத்தம் - தேவனுக்காக வேறுபிரிக்கப்படுவது "sanctify", "sanctified", "sanctification", "sanctifieth"

பரிசுத்தமாக்கப்படுதல் என்பதற்குத் தேவனுடைய பயன்பாட்டிற்காக வேறுபிரிக்கப் படுதல் என்று பொருள். பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்படுதல், பழைய மனுஷனைக் களைந்து போடுதல், மாம்ச சுபாவத்தை அகற்றுதல் ஆகியவற்றிற்குப் பரிசுத்தமாக்கப் படுதல் என்று பொருள் கூறுவதற்குப் பதிலாக தேவனுடைய பயன்பாட்டிற்காக வேறு பிரிக்கப்படுதல் என்று பொருள்கூறுவது சிறப்பானதாக இருக்கும். இயேசு கிறிஸ்து ஒரு பாவமும் அறியாதவர். அவரும் பரிசுத்தமாக்கப் பட்டார் (யோவான் 10:36; யோவான் 17:19) ஒருவன் தன்னைத் தேவனுக்கென்றும் தேவனுடைய ஊழியத்திற்கென்றும் வேறுபிரித்து பிரதிஷ்டை பண்ணிக்கொள்ளும்போது தேவனுடைய பரிசுத்தமாக்கும் கிரியை அவனுக்குள் ஆரம்பமாகிறது. அவன் தன்னுடைய பரிசுத்தத்தில் தொடர்ந்து வளர்ச்சி பெற வேண்டும். (1கொரி 1:30 1கொரி 6:11; 2தெச 2:13; 1யோவான் 1:7-9, 1யோவான் 3:8-10; 1யோவான் 5:1-4,18

II தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

2 அதிகாரம்

பரிசுத்தமாக்கப்படுதல் என்னும் வாக்கியத்திற்குப் பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்படுதல் என்று பொருள் கூறுவதை விட தேவனுக்கென்று வேறுபிரிக்கப்படுதல் என்று பொருள் கூறுவது சிறப்பாக இருக்கும். தேவன் மனுஷரையும், பொருட்களையும் பரிசுத்தமாக்குகிறார்.

தேவன் பரிசுத்தப்படுத்திய பொருட்கள்

1 ஆலயம் (2கொரி 5:17)

2 ஆசரிப்புக் கூடாரமும், அதன் பணிமுட்டுக்களும் (யாத் 29:43-30:29 லேவி 8:10-15)

3 ஆசாரியரின் வஸ்திரங்கள் (லேவி 8:30)

4 வீடுகளும், நிலங்களும் (லேவி 27:9-29)

5 போஜனம் (1தீமோ 4:3-5)

6 சாலொமோனின் தேவாலயமும் பணிமுட்டுக்களும். (2நாளா 7:16-20 2நாளா 29:17-19)

7 வாசல்களும், கதவுகளும் (நெகே 3:1)

8 சீனாய் மலை (யாத் 19:23)

9 காணிக்கைகள் (யாத் 29:27)

10 ஏரோது கட்டிய தேவாலயம் (மத் 23:17)

தேவன் பரிசுத்தமாக்கிய மனுஷர்கள்

1 பிதாவாகிய தேவன் (லேவி 10:3; எண் 20:13, ஏசா 5:16; எசே 20:41 எசே 28:22-25; எசே 36:23; எசே 38:16; எசே 39:27; 1பேதுரு 3:15)

2 கிறிஸ்து (யோவான் 10:36, யோவான் 17:17-19)

3 தேவனுடைய நாமம் (ஏசா 29:23, எசே 36:23)

4 பாவம் செய்ய ஆரம்பிப்பதற்கு முன்பு சிறு குழந்தைகள் (எரே 1:5 லூக்கா 1:15-17; கலா 1:15, லூக்கா 1:35; யோவான் 10:36)

5 கிறிஸ்துவைப் பற்றித் தெரியாத புறஜாதியார்கள் (ஏசா 13:3; 1கொரி 7:14)

6 தேவனைப் பரிசுத்தப்படுத்தும் விசுவாசிகள் அவர்கள் தேவனிடம் பழைய மனுஷன் இருப்பதாக நினைப்பதில்லை. (1பேதுரு 3:15)

7 கிறிஸ்து தம்மைத்தாமே பரிசுத்தப்படுத்தினார் ஆயினும் அவரிடத்தில் பழைய மனுஷனின் சுபாவம் இல்லை. (யோவான் 17:19)

8 ஒருசிலர் பலமுறை பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறார்கள் ஆகையினால் பரிசுத்தமாக்கப்படுதல் என்பது ஒரு குறிப்பிட்ட பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்படுவதைக் குறிப்பிடாது (யாத் 19:14,22; யாத் 28:41 யாத் 29:33,44; யாத் 30:29 லேவி 8:30)

9 ஜனங்கள் தங்களைத் தாங்களே பரிசுத்தப்படுத்திக் கொண்டார்கள் (லேவி 11:44; லேவி 20:7)

10 தங்களைத்தாங்களே பரிசுத்தப் படுத்திக் கொண்ட ஜனங்களை (லேவி 11:44; லேவி 20:7) மோசே பரிசுத்தப் படுத்தினார் (யாத் 19:10-14) தேவன் பரிசுத்தப்படுத்தினார் (யாத் 29:43,44 யாத் 31:13 லேவி 20:8 லேவி 21:8, 15, 23 லேவி 22:9, 16)

11 இஸ்ரவேலின் முதற்பிறப்பு அனைத்தும் பிறப்பிலேயே பரிசுத்தமாக்கப்பட்டது. (யாத் 13:2; எண் 8:17)

12 சீஷர்கள் பரிசுத்தமாக்கப்பட்டார்கள் (யோவான் 13:10; 15:3) அவர்கள் மேலும் மேலும் பரிசுத்தமாக்கப்பட்டார்கள் (யோவான் 10:36; 17:17-19)

13 பாவமில்லாமலேயே ஏழாவது நாள் பரிசுத்தமாக்கப்பட்டது (ஆதி 2:3-4)

II தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

2 அதிகாரம்

பரிசுத்தமாக்கப்படுவதில் பாவத்திற்குப் பங்கு இல்லையென்ற போதிலும் ஒரு நபரிடத்திலோ அல்லது ஒரு பொருளிடத்திலோ பாவமோ அசுத்தமோ காணப்படுமானால் தேவனிடத்தில் அந்த நபரை அல்லது அந்தப் பொருளை அர்ப்பணிப்பதற்கு முன்பாக அங்குக் காணப்படும் பாவத்தையும் அசுத்தத்தையும் சுத்திகரிக்க வேண்டும்.

பரிசுத்தமாக்கப்படுவதில் பயன்படுத்தப்படும் பிரதிநிதிகள்

1. தேவன் (ஆதி 2:3; லேவி 21:15,23; லேவி 22:9; யோவான் 10:36; 1 தெச 5:23; யூதா 1:1)
2. இயேசு கிறிஸ்து (1கொரி 1:30; எபே 5:26; எபி 2:11; எபி 10:10,14; எபி 13:12)
3. பரிசுத்த ஆவியானவர் (ரோமர் 15:16; 1கொரி 6:11; 2தெச 2:13; 1பேதுரு 1:2)
4. மோசே (யாத் 19:10,14; யாத் 40:13; லேவி 8:10-15, 30; லேவி 21:8; எண் 7:1)
5. யோசுவா (யோசு 7:13)
6. ஆசாரியர் (1நாளா 15:14; 2நாளா 30:24; யாத் 19:22)
7. விசுவாசிகள் (லேவி 11:44; லேவி 20:7; மத் 23:17,19; எபி 9:13)

தேவனும், இயேசு கிறிஸ்துவும் பரிசுத்த ஆவியானவரும் [illegible] பரிசுத்தப்படுத்தும் பிரதிநிதியாக இருக்கிறார்கள். ஆயினும் பல சமயங்களில மனுஷனே தன்னைப் பரிசுத்தப்படுத்தும் பிரதிநிதியாக இருக்கிறான். தன்னைத் தேவனுக்கென்று பரிசுத்தப்படுத்த வேண்டுமா என்று தீர்மானம் பண்ண வேண்டியவன் மனுஷனே. வேறுபிரிக்கும் காரியத்தில் தேவனும், மனுஷனும் இணைந்து கிரியை செய்ய வேண்டும். பரிசுத்த வேதாகமத்தில் 75 வசனங்களில் மனுஷன் பரிசுத்தமாக்கப்படுவதாகவும் 40 வசனங்களில் பொருட்கள் பரிசுத்தமாக்கப்படுவதாகவும் 14 வசனங்களில் தேவன் தம்மைப் பரிசுத்தப் படுத்திக் கொள்வதாகவும் வாசிக்கிறோம் (லேவி 10:3; எண் 20:12-13; எண் 27:14; எசா 5:16; எசா 8:13; எசா 29:23; எசே 20:41; எசே 28:22, 25; எசே 36:23; எசே 38:16; எசே 39:27).

பரிசுத்தப்படுத்த வேண்டுமென்னும் கட்டளைகள்

1. ஆசாரியர்கள் தங்களைப் பரிசுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும் (யாத் 19:22; 1நாளா 15:14; 2நாளா 29:15,34; 2நாளா 30:3,5, 15, 24; 2நாளா 31:18)
2. அவர்களைப் பரிசுத்தப்படுத்து (யாத் 19:10; யாத் 28:41; யாத் 29:33; யாத் 30:29; லேவி 8:11; லேவி 21:23)
3. அவனைப் பரிசுத்தப்படுத்து (லேவி 8:12; லேவி 21:8,15)
4. உன்னைப் பரிசுத்தப்படுத்து (லேவி 11:44; லேவி 20:7; எண் 11:18; யோசு 3:5; 1சாமு 16:5; 1நாளா 15:12; 2நாளா 29:5)
5. ஜனங்களைப் பரிசுத்தப்படுத்து (யாத் 19:14; யோசு 7:13)
6. ஆரோனையும் அவன் வஸ்திரங்களையும் பரிசுத்தப்படுத்து. (லேவி 8:30)
7. இஸ்ரவேல் புத்திரருக்குள் முதற்பேறனைத்தையும் எனக்குப் பரிசுத்தப்படுத்து. (யாத் 13:2)
8. அதைப் பரிசுத்தப்படுத்து. (பர்வதம்) (யாத் 19:23)
9. அசைவாட்டப்படுகிற மார்க்கண்டத்தைப் பரிசுத்தப்படுத்து. (யாத் 29:27)
10. பலிபீடத்தைப் பரிசுத்தப்படுத்து (யாத் 29:36-37; யாத் 40:10)

II தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

2 அதிகாரம்

11 சேனைகளின் கர்த்தரையே பரிசுத்தம் பண்ணுங்கள் (ஏசா 8:13)

12 யாக்கோபின் பரிசுத்தரைப் பரிசுத்தப் படுத்துங்கள். (ஏசா 29:23)

13. பரிசுத்த உபவாச நாளை நியமியுங்கள் யோவே 1:14; யோவே 2:15)

14 தேசத்தைப் பரிசுத்தப்படுத்து. யோவே 2:18

15. கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள் (1பேதுரு 3:15)

பரிசுத்த வேதாகமத்தில் பரிசுத்தம் பண்ணும் கட்டளைகளோடு பரிசுத்தம் பண்ணாததைக் குறித்து குற்றச்சாட்டுக்களும் உள்ளன (உபா 32:50,51 எண 27:14)

பரிசுத்தமாக்கப்படுவதின் ஆரம்பம்

ஆதாமிற்கு முன்பாகவே தேவனுடைய திட்டத்தில் பரிசுத்தமாதல் ஆரம்பமாயிற்று. (எபே 1:4) ஆயினும் அனுபவத்தில் பரிசுத்தமாதல் இவ்வாறு ஆரம்பிக்கிறது.

1 பரிசுத்தமாதல் மூலமாக ஒருவர் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்கிற போது. (2தெச 2:13, ரோமர் 1:16)

2 ஒருவர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்கிற போது. (2கொரி 1:30)

3 ஒருவர் மறுபடியும் பிறக்கிற போது. (1யோவான் 2:29 1யோவான் 3:7-10; 1யோவான் 4:7,17 1யோவான் 5:1-5,18, 1பேதுரு 1:15-23)

4 பரிசுத்தமாதல் மூலமாக ஒருவர் தேவனால் தெரிந்து கொள்ளப்படுகிற போது. (1பேதுரு 1:2-4; எபே 1:4)

5 ஒருவர் நீதிமானாக்கப்படுகிற போது. (1கொரி 1:30; 1யோவான் 1:29 1யோவான் 3:7-10 1யோவான் 5:1-5:18)

6 ஒருவர் பரிசுத்தத்தில் சிருஷ்டிக்கப்படுகிற போது. (எபே 4:24)

7 பழைய மனுஷனாகிய சாத்தான் களையப்படுகிற போது. (ரோமர் 6. எபே 4:22-24; கொலோ 3:8-10 2கொரி 5:17-18)

8 ஒருவன் பாவத்தில் மரிக்கிற போது (ரோமர் 6)

9 ஆவியானவரால் ஒருவர் கிறிஸ்துவிற்குள் ஞானஸ்நானம் பண்ணப்படும்போது. (ரோமர் 6; ரோமர் 8:12-13; 1யோவான் 3:7-10, 1யோவான் 5:1-5,18

10 ஒருவர் பாவத்தில் ஜீவிப்பதை நிறுத்தும்போது. (ரோமர் 6 ரோமர் 8:12-13; 1யோவான் 3: 7-10 1யோவான் 5:1-5,18

11 ஒருவர் சாத்தானிடமிருந்து திரும்பி, தேவனிடத்திற்கு வந்து பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்கிற போது. (அப 26:18)

12 தேவனால் ஏற்றுக் கொள்ளப்படுகிற போது. (ரோமர் 15:16)

13 ஒருவர் கிறிஸ்துவுக்குள்ளாகி புதிய சிருஷ்டியாகிற போது (2கொரி 5:17-18)

14 ஒருவர் கிறிஸ்துவினுடையவராகி, அவர் தன்னுடைய மாம்சத்தைச் சிலுவையில் அறைகிற போது. (கலா 5:24 எபே 4:24

15 ஒருவர் தன்னுடைய பாவத்திலிருந்து கழுவப்பட்டு நீதிமானாகிறபோது (1கொரி 6:11; எபே 5:25-26, வெளி 1:5)

16 ஒருவர் கிறிஸ்துவோடு ஒன்றாகும்போது. (எபி 2:11 2கொரி 5:17-19; ரோமர் 8:1-13

17 தன்னுடைய பாவத்திற்குப் பலியாக இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்கிற போது. (எபி 10:4-14, 1கொரி 1:30)

II தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

2 அதிகாரம்

18 ஒருவர் கிறிஸ்துவின் இரத்தத்தினால சுத்திகரிக்கப்படுகிற போது. எபி 10:29 1யோவான் 1:7-9)

19 ஒருவர் சாத்தானிடமிருந்தும் அவனுடையஅடிமைத்தனத்திலிருந்தும் இரட்சிக்கபபடுகிற போது. (எபி 7:25 யோவான் 3:8-10; 1யோவான் 5:18)

20 இரட்சிக்கபபடுகிற போது. லூக்கா 1:68-77 1கொரி 1:30 எபி 9:12-15; 1பேதுரு 1:18-23)

21 ஒருவர் சத்தியத்தை விசுவாசிக்கிற போது. 1தெச 2:13

22 ஒருவர் விபச்சாரத்திலிருந்து இரட்சிகபபடுகிற போது. 1தெச 4:3-4; கலா 5:24; 1கொரி 6:9-11

23 ஒருவர் தேவனுடைய ஆலயமாக ஆகும்போது 1கொரி 3:16-17 1கொரி 6:19-20 ரோமா 8:9)

24 ஒருவர் தேவனோடு ஒப்புரவாகும்போது. (2கொரி 5:17-21 கொலோ 1:20-23 ரோமா 5:1-11)

25 ஒருவா விசுவாசத்தினால இரட்சிக்கபபட்டு பரிசுத்தமாக்கபபடும் போது அப் 11:4-18 அப் 15:7-11)

26 ஒருவர் தேவனிடத்தில் கீழ்படிதலோடு வரும்போது. 1பேதுரு 1:2 ரோமா 6:16-23 ரோமா 8:12-13

27 தேவனைக் காணபதற்காக ஒருவர் உயிர்த்தெழுதலுக்கு ஆயத்தமாகும் போது (எபி 12:14. வெளி 20:4-6)

28 கிருபையினால ஒருவருக்கு இரட்சிப்பு வந்து ஆவியினால அவா புதுபபிக்கப படுகிற போது. தீத்து 2:11-13 தீத்து 3:5

29 ஒருவர் இரட்சிக்கப்பட்டு, அவருடைய பாவங்களெல்லாம் மறைக்கப்படும் போது. (அப் 3:19-21; அப் 26:18

30 எல்லாப் பாவங்களும் நீங்கி சுத்திகரிக்கபபடும்போது. எபி 1:3 எபி 10:1-18 2பேதுரு 1:4-10

ஒருசிலர் உடனடியாகப் பரிசுத்தமாக்கப படுகிறார்கள் சிலர் தொடர்ந்து பரிசுத்தமாக்கப பட்டுக் கொண்டிருக்கிறார்கள் ஒருசிலர் பரிசுத்தத்தின் நிறைவைப பெறுகிறார்கள்

தொடர்ந்து பரிசுத்தமாக்கப்பட்டுக் கொண்டிருப்பது

1 இயேசு கிறிஸ்துவின் உபதேசம் (லூக்கா 9:23 யோவான் 8:31 யோவான் 14:26 யோவான் 15:3 யோவான் 16:13-16

2 லூக்காவின உபதேசம். (அப 13:43 அப 14:22; அப 15:41; அப 16:5 அப 18:26)

3 அப்போஸ்தலர் பவுலின உபதேசம் (ரோமர் 1:17 ரோமர் 2:7 ரோமா 4:12 ரோமா 6:3-22 ரோமர் 7:4-6 ரோமா 8:1-13 ரோமர் 11:20-22 ரோமா 12:1-2 ரோமா 14:19 1கொரி 1:7-10 1கொரி 11:31-34 1கொரி 15:58 1கொரி 16:13 2கொரி 3:18 2கொரி 5:9 2கொரி 7:1 2கொரி 10:4-6 2கொரி 13:1 கலா 5:1,13,16-26 எபே 3:16-21 எபே 4:1-32; எபே 5:1-18, எபே 6:1-18 பிலி 1:6,9,25-27 பிலி 2:12-15 பிலி 3:7-15 பிலி 4:8-9 கொலோ 1:9-23 கொலோ 2:3-9, கொலோ 3:1-17 கொலோ 4:12 1தெச 2:2-13 1தெச 3:1-12 1தெச 5:11-23 2தெச 1:3-5 2தெச 2:13-17 2தெச 3:3 1தீமோ 1:18 1தீமோ 4:12-16, 1தீமோ 5:21-22 1தீமோ 6:12-14 2தீமோ 1:13-14 2தீமோ 2:4,19-26 தீத்து 2:7-14; எபி 3:6,12-14 எபி 4:11 எபி 5:9,14 எபி 6:1-2,11-12; எபி 10:23-39, எபி 12:12 எபி 13:20-21

2 அதிகாரம்

4 யாக்கோபின் உபதேசம். (யாக் 1:4, 12, 22-27; யாக் 2:14-26; யாக் 3:2; யாக் 4:4-10; யாக் 5:1-12)

5 பேதுருவின் உபதேசம் (1பேதுரு 1:5-16; 1பேதுரு 2:1-12; 1பேதுரு 3:8-12; 1பேதுரு 4:1-19; 1பேதுரு 5:1-10; 2பேதுரு 1:4-10; 2பேதுரு 3:14-18)

6 யோவானின் உபதேசம் (1யோவான் 1:6-9; 1யோவான் 2:1-6, 24-29; 1யோவான் 3:1-10; 1யோவான் 5:1-18; 2யோவான் 1:1, 6, 8; 3யோவான் 1:4, 11)

7 யூதாவின் உபதேசம். (யூதா 1:3, 20-24)

பரிசுத்தமாக்கப்படுவதின் நிறைவு

1 இயேசுவின் உபதேசம். (மத் 10:22; மத் 19:27-29; மத் 25:46; மாற்கு 10:29-30; லூக்கா 21:36; யோவான் 4:36; யோவான் 6:27; யோவான் 12:25; யோவான் 14:1-3)

2 பவுலின் உபதேசம் (அப் 26:18; ரோமர் 2:7-10; ரோமர் 5:21; ரோமர் 6:22-23; ரோமர் 8:17-18, 23-25; ரோமர் 13:11; 1கொரி 1:7-8; 1கொரி 15:4-6, 23, 51-58; 2கொரி 4:16-18; 2கொரி 5:9; கலா 6:7-8; எபே 1:4, 13-14; எபே 4:13-16; எபே 5:26-27; பிலி 1:6; பிலி 3:7-14, 20-21; கொலோ 3:4; 1தெச 1:10; 1தெச 2:19; 1தெச 3:13; 1தெச 4:13-18; 1தெச 5:23; எபி 3:6, 12-14; எபி 6:1, 12, 18-19; எபி 10:23, 35-39)

3 மற்றவர்களின் உபதேசங்கள் (யாக் 5:7; 1பேதுரு 1:3-13; 1பேதுரு 4:13; 1பேதுரு 5:10; 2பேதுரு 3:14; 1யோவான் 3:1-3; யூதா 1:24)

மகிமையை அடையும் பொருட்டாக செய்ய வேண்டிய காரியங்கள்

1 நிலைகொண்டிருக்க வேண்டும் (2தெச 2:14-15)

2 உபதேசித்த முறைமைகளைக் கைக்கொள்ள வேண்டும். (2தெச 2:15; 2தெச 3:6)

சுவிசேஷத்தில் கூறப்பட்டிருக்கும் நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படியாமல் பரலோகத்திற்கு எப்படியாவது தானாகப் போய்விடலாம் என்று நினைப்பது தவறு. பரலோகத்திற்குப் போகவேண்டுமானால் அவர் அழைக்கப்பட்டிருக்க வேண்டும். அவர் தன்னுடைய அழைப்பிற்கு உண்மையுள்ளவராகவும் இருக்க வேண்டும் (ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13; 1கொரி 9:27; கலா 5:19-21; 1தெச 3:8; 1தீமோ 5:11-15; 1தீமோ 6:9-20; 2தீமோ 2:12, 17-18; யாக் 5:19-20; எபி 3:6, 12-14; எபி 4:1-11; எபி 6:4-9; எபி 10:23-39; எபி 12:14-15; 1பேதுரு 1:5-13; 2பேதுரு 1:3-10; 2பேதுரு 2:20-22)

2. இரண்டு கட்டளைகள் - நிலைகொண்டிருக்க வேண்டும் (1கொரி 16:13; கலா 5:1; பிலி 4:1; 1தெச 3:8)

2தெச 2:15 ஆகையால், சகோதரரே, நீங்கள் நிலைகொண்டு, வார்த்தையினாலாவது நிருபத்தினாலாவது நாங்கள் உங்களுக்கு உபதேசித்த முறைமைகளைக் கைக்கொள்ளுங்கள்.

3. ஆறுதலுக்காகவும் நற்கிரியைகளின் மீது ஆசீர்வாதங்களுக்காகவும் ஜெபம்

2தெச 2:16 நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும், நம்மிடத்தில் அன்புகூர்ந்து நித்திய ஆறுதலையும் நல்நம்பிக்கையையும் கிருபையாய் நமக்குக் கொடுத்திருக்கிற நம்முடைய பிதாவாகிய தேவனும்,

2தெச 2:17 உங்கள் இருதயங்களைத் தேற்றி, எல்லா நல்வசனத்திலும் நற்கிரியையிலும் உங்களை ஸ்திரப்படுத்துவாராக.

II தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

2 அதிகாரம்

2தெச 2:16,17 ஆகிய வசனங்களில் தேவனைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் சத்தியங்கள்

1. அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்திருக்கிறார் (2தெச 2:16, யோவான் 3:16)
2. நமக்கு நித்திய ஆறுதலைக் கொடுத்திருக்கிறார் (2தெச 2:16, அப 13:45)
3. அவர் நமக்கு நல்நம்பிக்கையைக் கிருபையாய்க் கொடுத்திருக்கிறார் ((2தெச 2:16)
4. நம்முடைய இருதயங்களைத் தேற்றுகிறார் (2தெச 2:17)
5. எல்லா நல்வசனத்திலும் நம்மை ஸ்திரப்படுத்துகிறார் (2தெச 2:17
6. எல்லா நற்கிரியையிலும் நம்மை ஸ்திரப்படுத்துகிறார் (2தெச 2:17

II தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

3 அதிகாரம்

4. சுவிசேஷத்தின் வெற்றிக்காகவும் சத்துருவிடமிருந்து விடுதலை பெறுவதற்காகவும் ஜெபம்

2தெச 3:1 கடைசியாக, சகோதரரே உங்களிடத்தில் கர்த்தருடைய வசனம் பரம்பி மகிமைப்படுகிறபோது எவ்விடத்திலும் பரம்பி மகிமைப்படும்படிக்கும்

2தெச 3:2 துர்க்குணராகிய பொல்லாத மனுஷர் கையினின்று நாங்கள் விடுவிக்கப்படும்படிக்கும். எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள் விசுவாசம் எல்லாரிடத்திலுமில்லையே.

மகிமைப்படுத்து (glorified) - δοξάζω - doxazoo - 1392

வினைச்சொல் - மகிமைப்படுத்து புகழ், மேன்மைப்படுத்து, உயர்த்து "be made glorious" (2கொரி 3:10); "have glory" (மத் 6:2; 2கொரி 3:10); "full of glory" (1பேதுரு 1:8); "honor" (யோவான் 8:54; 2கொரி 12:26) "magnify" (ரோமர் 11:13)

பவுலுக்காக வேண்டிக் கொள்ள வேண்டிய காரியங்கள் (2தெச 3:1-2)

1 சுவிசேஷம் எவ்விடத்திலும் தடையில்லாமல் பரவ வேண்டும்.

2 சுவிசேஷம் மகிமைப்பட வேண்டும்.

3 துர்க்குணராகிய பொல்லாத மனுஷர் கையினின்று அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும்

பவுல் தன்னுடைய நிருபத்தில் தனக்காக வேண்டிக் கொள்ளுமாறு விசுவாசிகளைக் கேட்டுக் கொள்கிறார் இவ்வாறு கேட்டுக் கொள்ளும் நிருப ஆசிரியர் பவுல் மட்டுமே ஆவார் (ரோமர் 15:30, 2கொரி 1:11, எபே 6:19 பிலி 1:19 கொலோ 4:3; பிலே 1:22; எபி 13:18)

துர்க்குணராகிய பொல்லாதவர் (unreasonable) - ἄτοπος - atopos - 824

பெயரடை - தகாத, சேதமான, பொல்லாத (out of place under nodiscipline, absurd, disgusting; disorderly) "unreasonable" (2தெச 3:2) "amiss" (லூக்கா 23:41); "harm" (அப் 28:6) "wickedness" (அப் 25:5)

விசுவாசம் (faith) - πίστις - pistis - 4102

பெண்பால் பெயர்ச்சொல் - விசுவாசம், நிச்சயம், உண்மை confidence, faithfulness, trust, pledge of good faith belief (2தெச 2:13); fidelity (தீத்து 2:10) assurance (அப் 17:31); faith (எபி 11:1-39; எபி 12:2) - கர்த்தர் உண்மையுள்ளவர் மனுஷர் கர்த்தரிடத்தில் விசுவாசம் வைத்திருக்க வேண்டும். 2தெச 3:2-3

5. தேவனிடத்தில் பவுலின் நம்பிக்கை

2தெச 3:3 கர்த்தரோ உண்மையுள்ளவர் அவர் உங்களை ஸ்திரப்படுத்தி, தீமையினின்று விலக்கிக் காத்துக்கொள்ளுவார்

2தெச 3:4 மேலும் நாங்கள் கட்டளையிடுகிறவைகளை நீங்கள் செய்து வருகிறீர்களென்றும் இனிமேலும் செய்வீர்களென்றும் உங்களைக் குறித்துக் கர்த்தருக்குள் நம்பிக்கையாயிருக்கிறோம்.

2தெச 3:5 கர்த்தர் உங்கள் இருதயங்களை தேவனைப்பற்றும் அன்புக்கும் கிறிஸ்துவின் பொறுமைக்கும் நேராய் நடத்துவாராக.

"கர்த்தரோ உண்மையுள்ளவர்" - பன்னிரெண்டு வசனங்களில் தேவனும், கிறிஸ்துவும் உண்மையுள்ளவர் என்று எழுதப்பட்டிருக்கிறது (உபா 7:9, ஏசா 49:7, 1கொரி 1:9 1கொரி 10:13 2தெச 3:3 எபி 10:23; எபி 11:11 1பேதுரு 4:19, 1யோவான் 1:9 வெளி 1:5 வெளி 3:14 வெளி 19:11)

II தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

3 அதிகாரம்

பவுலின் நம்பிக்கை

1 கர்த்தர் தம்முடைய பரிசுத்தவான்களை ஸ்திரப்படுத்தி, தீமையினின்று விலக்கிக் காத்துக்கொள்ளுவார் (2தெச 3:3)

2 கர்த்தருடைய பரிசுத்தவான்கள் தாங்கள் கட்டளையிடுகிறவைகளைச் செய்து வருகிறார்களென்றும் இனிமேலும் செய்வார்களென்றும் அவர்களைக் குறித்துக் கர்த்தருக்குள் பவுல் நம்பிக்கையாயிருக்கிறார் (2தெச 3:4)

3 கர்த்தர் அவர்கள் இருதயங்களைத் தேவனைப்பற்றும் அன்புக்கும் கிறிஸ்துவின் பொறுமைக்கும் நேராய் நடத்துவார் என்று பவுல் நம்பிக்கையாயிருக்கிறார் (2தெச 3:5)

6. சபையில் ஒழுங்கற்று நடக்கிற விசுவாசியை நடத்த வேண்டிய விதம் - (மத் 18:15-17; அப் 5:1-11; 1கொரி 5:1-13)

2தெச 3:6 மேலும், சகோதரரே எங்களிடத்திலே ஏற்றுக்கொண்ட முறைமையின்படி நடவாமல் ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும் நீங்கள் விட்டு விலக வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குக் கட்டளையிடுகிறோம்

பவுல் தெசலோனிக்கேயருக்கு இட்ட கட்டளைகள்

1 ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும் நீங்கள் விட்டு விலக வேண்டும். (2தெச 3:6)

2 ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாது. (2தெச 3:10)

3 அமைதலோடே வேலை செய்ய வேண்டும். (2தெச 3:12)

4 தங்கள் சொந்தச் சாப்பாட்டைச் சாப்பிட வேண்டும். (2தெச 3:12)

5 நன்மை செய்வதிலே சோர்ந்து போகாமல் இருக்க வேண்டும் (2தெச 3:13)

6 வசனத்திற்குக் கீழ்ப்படியாதோருடன் கலவாதிருக்க வேண்டும். (2தெச 3:14)

7 வசனத்திற்குக் கீழ்ப்படியாதோருக்குப் புத்தி சொல்ல வேண்டும். (2தெச 3:15)

"எங்களிடத்திலே ஏற்றுக்கொண்ட முறைமையின்படி நடவாமல் ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும்" - இந்த வாக்கியம் தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கடமையை நிறைவேற்றாமல் இருக்கிறவனைக் குறிக்கும். இப்பேர்ப்பட்டவர்கள் தங்களுடைய சொந்த விருப்பத்தையே நிறைவேற்றுவார்கள். நாம் கிறிஸ்துவின் ஊழியக்காரராகச் செயல்படும் போது கிறிஸ்துவிற்குப் பிரியமானதையே நிறைவேற்றுவதற்குப் பிரயாசப்பட வேண்டும். நமக்குப் பிரியமானதை நிறைவேற்றுவதற்குப் பிரயாசப்படக்கூடாது

ஒழுங்கற்று நடப்பது (disorderly) - ἀτάκτως - ataktoos - 814

வினையடை - ஒழுங்கற்று (2தெச 3:11)

ஒழுங்கற்று நட (disorderly) ἀτακτέω - atakteoo - 812

வினைச்சொல் - ஒழுங்கற்று நட (to behave disorderly (2தெச 3:7)

out of order; not in order of battle; not at one's post of duty; undisciplined, irregular, lawless; and disorderly)

முறைமை (tradition) - παράδοσις paradosis 3862

பெண்பால் பெயர்ச்சொல் - பாரம்பரியம், முறைமை (2கொரி 11:2

II தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

3 அதிகாரம்

7. பவுலின் முன்மாதிரியான நடத்தை - (அப் 20:17-36; பிலி 3:17; 4:9)

2தெச 3:7 இன்னவிதமாய் எங்களைப் பின்பற்ற வேண்டுமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே; நாங்கள் உங்களுக்குள்ளே ஒழுங்கற்று நடவாமலும்,

2தெச 3:8 ஒருவனிடத்திலும் இலவசமாய்ச் சாப்பிடாமலும், உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு இரவும் பகலும் பிரயாசத்தோடும் வருத்தத்தோடும் வேலைசெய்து சாப்பிட்டோம்.

2தெச 3:9 உங்கள்மேல் பாரஞ்சுமத்துவதற்கு அதிகாரம் எங்களுக்கு இல்லையென்பதினாலே அப்படிச் செய்யாமல், நீங்கள் எங்களைப் பின்பற்றும்படிக்கு நாங்கள் உங்களுக்கு மாதிரியாயிருக்க வேண்டுமென்றே அப்படிச் செய்தோம்.

பின்பற்றுதல் (follow) - **μιμέομαι - mimeomai** - 3401

வினைச்சொல் - பின்பற்று (imitate) (2தெச 3:7,9; எபி 13:7; 3யோவான் 1:11; 2கொரி 4:16) - கிறிஸ்து நமக்கு முன்மாதிரியாக ஜீவித்ததுபோன்று பவுலும் மற்ற விசுவாசிகளுக்கு மத்தியில் முன்மாதிரியாக ஜீவித்தார் (1தீமோ 1:16)

"ஒருவனிடத்திலும் இலவசமாய்ச் சாப்பிடாமலும்" - பவுல் இரவும் பகலும் பிரயாசத்தோடும் வருத்தத்தோடும் வேலை செய்து சாப்பிட்டார். அவர் யாருக்கும் பாரமாய் இருக்கவில்லை. விசுவாசிகள் தன்னைப் பின்பற்றி ஜீவிக்க வேண்டும் என்று பவுல் விரும்பினார். அவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்பதற்காக பவுல் மற்றவர்களுடைய உழைப்பில் சாப்பிடாமல் தன்னுடைய உழைப்பில் சாப்பிட்டார் (2தெச 3:8-9)

8. யாதொரு வேலையும் செய்யாமல் வீண் அலுவற்காரராய் ஒழுங்கற்று திரிகிறவர்களுக்கு கட்டளைகள்

2தெச 3:10 ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்குக் கட்டளையிட்டோமே.

2தெச 3:11 உங்களில் சிலர் யாதொரு வேலையும் செய்யாமல், வீண் அலுவற்காரராய், ஒழுங்கற்றுத் திரிகிறார்களென்றும் கேள்விப்படுகிறோம்.

2தெச 3:12 இப்படிப்பட்டவர்கள் அமைதலோடே வேலைசெய்து தங்கள் சொந்தச் சாப்பாட்டைச் சாப்பிட வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே அவர்களுக்குக் கட்டளையிட்டுப் புத்திசொல்லுகிறோம்.

"ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாது" - தேவன் ஆதாமைப் பார்த்து "உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்" (ஆதி 3:19) என்று சபித்தார். இந்தச் சாபத்தின் விளைவாகவே மனுஷர் கடினமாக வேலை செய்து சாப்பிட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஒருவேலையும் செய்யாமல் சும்மாயிருப்பது ஒரு சாபம். இவ்வாறு சோம்பேறியாக ஒரு வேலையும் செய்யாமல் சும்மாயிருப்பவருக்கு உதவி செய்வதும் தவறு. ஒவ்வொருவனும் தனக்கு நியமிக்கப்பட்டிருக்கிற பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும்.

"கேள்விப்படுகிறோம்" - தெசலோனிக்கேயரில் சிலர் யாதொரு வேலையும் செய்யாமல் வீண் அலுவற்காரராய், ஒழுங்கற்றுத் திரிகிறார்களென்றும் பவுல் கேள்விப்பட்டார். யார் மூலமாக பவுல் இவ்வாறு கேள்விப்பட்டார் என்று இந்த நிருபத்தில் எழுதப்படவில்லை.

"யாதொரு வேலையும் செய்யாமல்" - ஒரு வேலையும் செய்யாமல் சும்மா ஊர் சுற்றுவது. பிரச்சனைகளை உண்டுபண்ணுவதற்காக மாசக்கக் காரியங்களைப் பேசி கலகம் உண்டாக்குவது.

II தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

3 அதிகாரம்

வீண் அலுவற்காரராயிருப்பது (busy bodies) - περιεργάζομαι - periergazomai - 4020

வினைச்சொல் - வீண் அலுவற்காரராயிரு - தேவையில்லாத காரியங்களில் மிகவும் உற்சாகமாக ஈடுபடுவது. தாங்கள் செய்யக் கூடாத காரியங்கள் அனைத்தையும் செய்வது. பிறருடைய அலுவல்களில் தலையிடுவது. இப்பேர்ப்பட்டவர்கள் மற்றவர்களுக்கு சாபமாகவே இருப்பார்கள்

9. நன்மை செய்வதிலே சோர்ந்து போகாமல் இருங்கள் - (கலா 6:9, மத் 5:16

2தெச 333 சகோதரரே, நீங்கள் நன்மை செய்வதிலே சோர்ந்துபோகாமலிருங்கள்

"சகோதரரே நீங்கள் நன்மை செய்வதிலே சோர்ந்துபோகாமலிருங்கள்" வீண் அலுவற்காரருக்கும் சோம்பேறிகளுக்கும் யாரும் உதவி செய்ய வேண்டியதில்லை ஆயினும் ஏழைகளுக்குத் தொடர்ந்து உதவி புரிய வேண்டும். பவுலின் நிருபத்தில் ஏழைகளுக்கு உதவி புரிய வேண்டும் என்னும் கட்டளை இங்கு இரண்டாம் முறையாகக் கூறப்பட்டிருக்கிறது. (கலா 6:9)

10. சபையில் கீழ்ப்படியாமல் கலகம் பண்ணும் விசுவாசியை நடத்த வேண்டிய விதம்

2தெச 3:14 மேலும், இந்த நிருபத்தில் சொல்லிய எங்கள் வசனத்துக்கு ஒருவன் கீழ்ப்படியாமற்போனால் அவனைக் குறித்துக்கொண்டு, அவன் வெட்கப்படும் படிக்கு அவனுடனே கலவாதிருங்கள்

2தெச 3:15 ஆனாலும் அவனைச் சத்துருவாக எண்ணாமல், சகோதரனாக எண்ணி, அவனுக்குப் புத்திசொல்லுங்கள்

"இந்த நிருபத்தில் சொல்லிய எங்கள் வசனத்துக்கு ஒருவன் கீழ்ப்படியாமற் போனால்" - பவுலின் முதலாவது நிருபத்திற்கு ஒருசிலர் கீழ்ப்படியவில்லை கீழ்ப்படியாதோரும் சபையில் தொடர்ந்து அங்கம் வைத்தார்கள் இப்போது அவர்களைத் தள்ளிவிட வேண்டுமென்று பவுல் தெசலோனிக்க சபைக்குக் கூறுகிறார் "அவனைக் குறித்துக்கொண்டு. அவன் வெட்கப்படும்படிக்கு அவனுடனே கலவாதிருங்கள்" கீழ்ப்படியாதவர்களைச் சத்துருக்களாக எண்ணக்கூடாது அவனை ஒரு சகோதரனாக எண்ணி. அவனுக்குப் புத்தி கூற வேண்டும். ஏனெனில் அவனுடைய ஆத்துமாவும் விலையேறப்பெற்றது (2தெச 3:14 15

11. முடிவுரையும் ஆசீர்வாதமும்

2தெச 3:16 சமாதானத்தின் கர்த்தர்தாமே எப்பொழுதும் சகலவிதத்திலும் உங்களுக்குச் சமாதானத்தைத் தந்தருளுவாராக. கர்த்தர் உங்களெல்லாரோடுங்கூட இருப்பாராக.

2தெச 3:17 பவுலாகிய நான் என் கையெழுத்தாலே உங்களை வாழ்த்துகிறேன் நிருபங்கள்தோறும் இதுவே அடையாளம், இப்படியே எழுதுகிறேன்

2தெச 3:18 நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்களெல்லாரோடுங்கூட இருப்பதாக. ஆமென்

I தீமோத்தேயு - முன்னுரை

காலமும் இடமும்

கி.பி. 67-ஆம் ஆண்டில் இந்த நிருபத்தை மக்கெதோனியாவிலிருந்து எழுதினார் (1 தீமோ 1:3)

ஆசிரியர்

பவுல்

மையக்கருத்து

1 தீமோத்தேயு, 2 தீமோத்தேயு, தீத்து ஆகிய மூன்று நிருபங்களும் போதக நிருபங்கள் என்று அழைக்கப்படுகின்றன. உபதேசம், சபையின் ஆராதனை ஒழுங்குகள் ஆகியவற்றைப் பற்றிய உபதேசங்கள் போதக நிருபங்களில் உள்ளன.

போதக நிருபங்களில் 1 தீமோத்தேயு முதலாவது எழுதப்பட்ட நிருபமாகும்.

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 6

வசனங்கள் - 113

கேள்வி - 1

புதிய தீர்க்கதரிசனங்கள் - 2

வரலாற்றைக் குறிக்கும்வசனங்கள் - 106

பொருளடக்கம்

I. முன்னுரை - ஆசிரியரும் வாழ்த்துரையும் (1:1-2)

II. வேற்றுமையான உபதேசங்களும் கட்டுக்கதைகளும்

1. கள்ள உபதேசம் (1:3)
2. கட்டுக்கதைகளும் முடிவில்லாத வம்ச வரலாறுகளும் (1:4)
3. கிறிஸ்தவருடைய சுபாவம் (1:5)
4. விலகிப்போவதற்கு காரணம் (1:6-7)
5. நியாயப்பிரமாணத்தின் நோக்கம் (1:8-10)
6. பவுல் ஓர் எடுத்துக்காட்டு
   (1) நம்பிக்கையும் உண்மையுமுள்ள ஊழியக்காரன் (1:11-12)
   (2) பாவிகளில் பிரதான பாவி (1:13-15)
   (3) எல்லா பாவிகளும் இரட்சிக்கப் படுவதற்கு திருஷ்டாந்தம் (1:16)
7. பரிபூரணமான இராஜரிகமாக உண்மையான தேவனுக்கு ஸ்தோத்திரம் (1:17)
8. தீமோத்தேயுவிற்குக் கட்டளை (1:18-20)

III. ஜெபமும் ஸ்திரீகளும்

1. எல்லா மனுஷருக்காகவும் ஜெபம் பண்ண வேண்டும் (2:1-3)
2. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்று தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார் (2:4)
3. தேவனுக்கும் மனுஷனுக்கும் கிறிஸ்து ஒருவரே மத்தியஸ்தராக இருக்கிறார் (2:5-6)
4. சுவிசேஷத்தை பிரபலியப்படுத்தும் தேவனுடைய முறைமை (2:7)
5. எங்கு, எப்படி ஜெபிக்க வேண்டும் (2:8)
6. ஸ்திரீகள் தங்களை தகுதியான வஸ்திரங்களினால் அலங்கரித்து எளிமையாய் இருக்க வேண்டும் (2:9-10)
7. திரீயானவள் அடக்கமுடையவளாயிருக்க வேண்டும் (2:11-14)

I தீமோத்தேயு – முன்னுரை

8 பிள்ளைபபேற்றினாலே இரட்சிக்கப படுவதற்கு நிபந்தனையுள்ள வாக்குத்தத்தம் (2:15

IV. சபையின் கண்காணிகளுக்கு தகுதிகள்

1 ஊழியக்காரரின் பதினேழு தகுதிகள் (3:1-7

2 உதவிக்காரரின் பதிமூன்று தகுதிகள் (3:8-13

V. ஊழியக்காரருக்கு கட்டளைகள்

1 ஊழியக்காரர்கள் முன்மாதிரியாக இல்லக்க வேண்டும் (3:14-15)

2 ஊழியக்காரரின் செய்தி (3:16)

3 ஊழியக்காரருக்கு எதிர்ப்பு - பிறகாலங்களிலே வரும் பின்மாற்றமும் பிசாசுகளின் உபதேசங்களும் (4:1-5)

4 நல்ல ஊழியக்காரனாக எவ்வாறு இருப்பது (4:6-11

5 ஊழியக்காரர்கள் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும் (4:12

6 ஊழியக்காரருக்கு ஒன்பது கட்டளைகள் (4:13-16)

VI. சமுதாயத்திலுள்ள வெவ்வேறு பிரிவினர்

1 புருஷரும் ஸ்திரீகளும் (5:1-2)

2 முதிர் வயதுள்ள விதவைகள் (5:3-10)

3 இளவயதுள்ள விதவைகள் (5:11-15)

4 உத்தம விதவையானவர்களுக்கு உதவி (5:16)

5 சபையின் மூப்பர்கள் (5:17-19)

6 சபையில் பாவம் செய்கிறவர்கள் (5:20)

7 தீமோத்தேயுவிற்குக் கட்டளை (5:21-25)

8 வேலைக்காரர்களின் கடமைகள் (6:1

9 எஜமான்களின் கடமைகள் (6:2

10 கள்ளபோதகர்களின் பதினைந்து அடையாளங்கள் (6:3-5

11 பண ஆசை, ஐசுவரியம் ஆகியவற்றின் ஆபத்துக்கள் (6:6-10

12 தீமோத்தேயுவிற்குப் பத்து கட்டளைகள் (6:11-14)

13 தேவனுடைய பிரசன்னமாகுதலும் அவரைப் பற்றிய விளக்கமும் (6:15-16

14 தீமோத்தேயுவிற்கு கடைசி கட்டளை ஐசுவரியமுள்ளவருக்கு ஆலோசனைகள் (6:17-21)

1 அதிகாரம்

I. முன்னுரை - ஆசிரியரும் வாழ்த்துரையும்

1தீமோ 1:1 நம்முடைய இரட்சகராயிருக்கிற தேவனும் நம்முடைய நம்பிக்கையாயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் கட்டளையிட்டபடியே இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலனாயிருக்கிற பவுல்

1தீமோ 1:2 விசுவாசத்தில் உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதுகிறதாவது, நம்முடைய பிதாவாகிய தேவனாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

"அப்போஸ்தலன்" (apostle) -(அப 15:33)

கட்டளை (commandment) - ἐπιταγή - epitagee - 2003

பெண்பால் பெயர்ச்சொல் - கட்டளை அதிகாரம் " commandment" ரோமர் 16:26, 1கொரி 7:6,25 2கொரி 8:8; 1தீமோ 1:1; தீத்து 1:3) "authority" தீத்து 2:15) தேவனுடைய கட்டளையினால் தான் இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாக இருப்பதாகப் பவுல் இங்கு கூறுகிறார் இது நியமனத்தின் பிரகாரமாக இருக்கலாம் தீத்து 1:3)

"இரட்சகர்" (Saviour) 19 வசனங்களில் தேவன் "இரட்சகர்" என்று அழைக்கப் பட்டிருக்கிறார் (1தீமோ 1:1, 1தீமோ 2:3, 1தீமோ 4:10; லூக்கா 1:47, தீத்து 1:3, தீ 2சாமு 22:3; சங் 106:21, ஏசா 43:3,11, ஏசா 45:15,21; ஏசா 49:26; ஏசா 60:16;ஏசா 63:8; எரே 14:8; ஓசி 13:4) 16 வசனங்களில் இயேசு கிறிஸ்து "இரட்சகர்" என்று அழைக்கப்பட்டிருக்கிறார் (லூக்கா 2:11, யோவான் 4:42; அப் 5:31; அப 13:23;எபே 5:23; பிலி 3:20 2தீமோ 1:10; தீத்து 1:4,தீத்து 2:13; தீத்து 3:6, 1பேதுரு 1:11 2பேதுரு2 20;1பேதுரு 3 2,18 1யோவான் 4:14)

"கர்த்தராகிய இயேசுகிறிஸ்து" - திரித்துவத்தில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் தனித்தனியாக வெவ்வேறு ஆள்தத்துவப் பண்புடையவர்கள் என்பதைக் குறிக்கும் வாக்கியம். 1யோவான் 5:7

"நம்முடைய நம்பிக்கையாயிருக்கிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்து" - எல்லாக் காரியங்களுக்கும் இயேசு கிறிஸ்துவே நமது நம்பிக்கையாக இருக்கிறார்

கிறிஸ்தவருடைய நம்பிக்கைகள்

1. இரட்சிப்பு (Salvation) (ரோமர் 8:20-25; ரோமர் 15:4,13; 1தெச 5:8 2தெச 2:16; 1பேதுரு 1:3)
2. நீதி (Righteousness) (கலா 5:5
3. தேவனுடைய அழைப்பு (God's calling) (எபே 1:18; எபே 4:4)
4. நித்திய சுதந்தரம் (Eternal inheritance) (கொலோ 1:5 எபே 1:11-18; எபி 9:15, 1பேதுரு 1:4
5. தேவனுடைய மகிமை (God's glory) (ரோமர் 5:1-5; கொலோ 1:27
6. உயிர்த்தெழுதல் (Resurrection) (அப் 23:6; அப 24:15; 1தெச 4:13, தீத்து 2:13; 1யோவான் 3:3
7. நித்திய ஜீவன் (Eternal life) (1கொரி 13:13 1கொரி 15:19 எபே 2:12, கொலோ 1:23; தீத்து 1:2, தீத்து 3:7, எபி 3:6; எபி 6:11,18,19 எபி 7:19 1பேதுரு 1:3-13)
8. பரலோகத்தில் பாதுகாப்பாக இருப்பது (Converts safe in heaven) (1தெச 2:19)

"விசுவாசத்தில் உத்தம குமாரன்" சுவிசேஷத்தின் மூலமாகப் பவுலுக்குக் கிடைக்கப் பெற்ற குமாரன் (அப 16:1-3, 1தீமோ 1:2,18; 2தீமோ 1:2; 2தீமோ 2:1

I தீமோத்தேயு – தொகுப்புரை

1 அதிகாரம்

"நம்முடைய பிதாவாகிய தேவனாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக" - தீமோத்தேயு, தீத்து ஆகிய இருவருக்கும் பவுல் இவ்வாறு விசேஷித்த விதமாக வாழ்த்துதல் கூறுகிறார்

II. வேற்றுமையான உபதேசங்களும் கட்டுக்கதைகளும்

1. கள்ள உபதேசம்

தீமோ 1:3 வேற்றுமையான உபதேசங்களைப் போதியாதபடிக்கும் விசுவாசத்தினால் விளங்கும் தெய்வீக பக்திவிருத்திக்கு ஏதுவாயிராமல் தர்க்கங்களுக்கு ஏதுவாயிருக்கிற கட்டுக்கதைகளையும் முடிவில்லாத வம்சவரலாறுகளையும் கவனியாதபடிக்கும், நீ சிலருக்குக் கட்டளையிடும்பொருட்டாக.

கட்டுக்கதை (fables) - μῦθος - mythos - 3454

ஆண்பால் பெயர்ச்சொல் கட்டுக்கதை வரலாற்றுப் பிரகாரமாக நிரூபிக்கப்படாத வாய்மொழியாகக் கூறப்படும் கட்டுக்கதை (1தீமோ 1:4; 1தீமோ 4:7; 2தீமோ 4:4; தீத்து 1:14; 2பேதுரு 1:16)

முடிவில்லாத (endless) - ἀπέραντος - aperantos - 562

பெயரடை - முடிவில்லாத (endless, boundless, infinite; something that cannot be passed through, settled)

வம்சவரலாறு (genealogies) - γενεαλογία - genealogia - 1076

பெண்பால் பெயர்ச்சொல் - முன்னோர்கள் வம்சவரலாறு (genealogy, a record of descent, lineage) (1தீமோ 1:4; தீத்து 3:9) புறஜாதியார்கள் தங்களுடைய வம்ச வரலாறுகளைத் தங்களுடைய தெய்வங்களோடு தொடர்புபடுத்தி பெருமை பாராட்டிக் கொள்வார்கள். யூதரும் சமாரியரும் தங்களுடைய முன்னோர்களைக் குறித்துப் பெருமைப்படுவார்கள் (மத் 3:9; யோவான் 4:12; யோவான் 8:39) முடிவில்லாத வம்ச வரலாறுகளில் பெருமை பாராட்டுவதைக் குறித்து பவுல் எச்சரித்துக் கூறுகிறார் (2கொரி 5:16; 2கொரி 11:22; பிலி 3:4-6) கிறிஸ்துவிற்குள் பட்சபாதம் எதுவுமில்லை. ஒருவருடைய வம்சவரலாறு எப்படிப்பட்டதாக இருந்தாலும் தேவனுடைய பார்வையில் விசுவாசிகள் எல்லோரும் சமமே. (1கொரி 12:13; கொலோ 3:11)

தர்க்கங்கள் (questions) - ζήτησις - zeeteesis - 2214

பெண்பால் பெயர்ச்சொல் - வாக்குவாதம், தர்க்கம், தர்க்கவிஷயம் (a searching after; investigation) "question" (1தீமோ 1:4; 1தீமோ 6:4; யோவான் 3:25; அப் 25:20; 2தீமோ 2:23; தீத்து 3:9) விசுவாசிகள் மத்தியில் தர்க்கங்கள் பிரிவினைகளையும் விரோதங்களையும் உண்டுபண்ணுகிறது.

பக்திவிருத்தி (edifying) - οἰκονομία - oikonomia - 3622

பெண்பால் பெயர்ச்சொல் உக்கிராணம் (எபே 1:10)

"நீ சிலருக்குக் கட்டளையிடும் பொருட்டாக" - இந்த வாக்கியத்தில் சிலர் என்பது யூதமார்க்கத்துப் போதகர்களைக் குறிக்கும். இவர்கள் கிறிஸ்தவ விசுவாசிகளை மோசேயின் பிரமாணத்தைக் கைக்கொள்ளுமாறு தொடர்ந்து வற்புறுத்தி வந்தார்கள் (1தீமோ 1:3, 4, 6, 7)

"வேற்றுமையான உபதேசங்கள்" சுவிசேஷத்திற்கு எதிரான உபதேசம் வேற்றுமையான உபதேசம் எனப்படுகிறது. மோசேயின் பிரமாணத்தில் உள்ள உபதேசங்கள் புதிய ஏற்பாட்டில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

I தீமோத்தேயு – தொகுப்புரை

1 அதிகாரம்

2. கட்டுக்கதைகளும் முடிவில்லாத வம்ச வரலாறுகளும்

1தீமோ 1:4 நான் மக்கெதோனியாவுக்குப் போகும்போது உன்னை எபேசு பட்டணத்திலிருக்க வேண்டிக்கொண்டபடியே செய்வாயாக.

"நான் மக்கெதோனியாவுக்குப் போகும்போது உன்னை எபேசு பட்டணத்திலிருக்க வேண்டிக் கொண்டபடியே செய்வாயாக" - இந்த நிகழ்ச்சி எப்பொழுது நடைபெற்றது என்று தெளிவாகத் தெரியவில்லை. இந்த வேளையில் பவுல் சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப் பட்டிருந்தாக ஒருசிலர் கருதுகிறார்கள். விடுதலை பெற்ற பவுல் ஆசியாவிற்கும், அதன்பின்பு மக்கெதோனியாவிற்கும் ஊழியம் செய்வதற்காகப் பிரயாணம் பண்ணினார். தான் செய்து வந்த ஊழியங்களைத் தொடர்ந்து செய்வதற்காகப் பவுல் தீமோத்தேயுவை எபேசுவில் தங்கியிருக்குமாறு கேட்டுக் கொண்டிருந்திருக்கலாம்.

3. கிறிஸ்தவருடைய சுபாவம்

கலா 5:22-23

1தீமோ 1:5 கற்பனையின் பொருள் என்னவெனில், சுத்தமான இருதயத்திலும் நல்மனச்சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே.

பொருள் (end) - τέλος - telos - 5056

பால்வேறுபாடற்ற பெயர்ச்சொல் பொருள், முடிவு, அழிவு, அந்தம், தொடர்ந்தரவு, விலகிப்போதல். கட்டுக்கதைகளும் வம்சவரலாறுகளும் பிரிவினையை உண்டாக்கும். தேவனைப் பற்றும் விசுவாசமோ அன்பைப் பெருகப் பண்ணும்.

அன்பினால் உண்டாகும் ஆசீர்வாதங்கள்

1 சுத்தமான இருதயம் (மத் 5:8)

2 நல்மனச்சாட்சி

3 மாயமற்ற விசுவாசம்

மனச்சாட்சி (conscience)

συνείδησις - syneideesis - 4893

பெண்பால் பெயர்ச்சொல் - மனச்சாட்சி (the faculty, power, principle which decides the lawfulness of our actions and affections, approves, condemns them; the moral faculty, sense; consciousness of actions; the eye, judge, and guide of the inner man - மனச்சாட்சி என்னும் சொல் பழைய ஏற்பாட்டில் இடம்பெறவில்லை.

மனச்சாட்சியின் வகைகள்

1 கடிந்துகொள்ளப்பட்ட மனச்சாட்சி (Awakened) (யோவான் 8:9)

2 சூடுண்ட மனச்சாட்சி (Seared) (1தீமோ 4:2)

3 ஆராதனை செய்கிறவனுடைய மனச்சாட்சி (Purged) (எபி 9:9,14, எபி 10:2)

4 சுத்த மனச்சாட்சி (Pure) (அப் 24:16, 1தீமோ 3:9; 2தீமோ 1:3)

5 பலவீனமான மனச்சாட்சி (Weak) (1கொரி 8:7, 12, 13)

6 அசுத்த மனச்சாட்சி (Defiled) (தீத்து 1:15)

7 சாட்சி சொல்லும் மனச்சாட்சி (Witnessing) (ரோமர் 2:14,15; ரோமர் 9:1; 2கொரி 1:12)

8 நல்மனச்சாட்சி (Good) (அப் 23:1; 1தீமோ 1:5,19; 1பேதுரு 2:19; 1பேதுரு 3:16,21; எபி 13:18)

I தீமோத்தேயு - தொகுப்புரை

1 அதிகாரம்

9 மனஸ்தாபப்படும் மனச்சாட்சி (Convicting, healthy) (மத் 27:3)

10 திருப்திப்படும் மனச்சாட்சி (Satisfied) (1கொரி 10:25-29)

11 துர்மனச்சாட்சி (Evil) (எபி 10:22)

12 பூரணமனச்சாட்சி (Perfect) (எபி 9:9)

4. விலகிப்போவதற்கு காரணம் - (2தீமோ 3:7; 1கொரி 14:38)

1தீமோ 1:6 இவைகளைச் சிலர் நோக்காமல் வீணபேச்சுக்கு இடங்கொடுத்து விலகிப்போனார்கள்

1தீமோ 1:7 தாங்கள் சொல்லுகிறது இன்னதென்றும், தாங்கள் சாதிக்கிறது இன்னதென்றும் அறியாதிருந்தும், நியாயப்பிரமாண போதகராயிருக்க விரும்புகிறார்கள்

விலகிப் போதல் (swerved) - ἀστοχέω - astocheoo - 795

வினைச்சொல் - விலகிப்போ, வழுவிப்போ, விலகு (to miss the mark; to fail) (1தீமோ 1:6); err (1தீமோ 6:21, 2தீமோ 2:18)

வீணபேச்சு (vain jangling) - ματαιολογία - mataiologia 3150

பெண்பால் பெயர்ச்சொல் வீணபேச்சு (empty arguments; many words with little sense, that sense not worth hearing) (தீத்து 1:10)

விரும்பு (Desiring) - θέλω - theloo - 2309

வினைச்சொல் - மனதாயிரு, விரும்பு, கேள், வேண்டுமென்றிரு, சம்மதி, சித்தமாயிரு, இஷ்டமாயிரு (wish, desire) இன்றும் அநேகர் தங்களுக்குத் தகுதியில்லாத காரியங்களையெல்லாம் விரும்புகிறார்கள் (2தீமோ 3:7)

5. நியாயப்பிரமாணத்தின் நோக்கம் - (ரோமர் 3:19; கலா 3:19)

1தீமோ 1:8 ஒருவன் நியாயப்பிரமாணத்தை நியாயப்படி அநுசரித்தால், நியாயப் பிரமாணம் நல்லதென்று அறிந்திருக்கிறோம்

1தீமோ 1:9 எங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, நியாயப்பிரமாணம் நீதிமானுக்கு விதிக்கப்படாமல் அக்கிரமக்காரருக்கும், அடங்காதவர்களுக்கும், பக்தியில்லாதவர்களுக்கும், பாவிகளுக்கும், அசுத்தருக்கும், சீர்கெட்டவர்களுக்கும், தாய் தகப்பன்மாரை அடிக்கிறவர்களுக்கும், கொலைபாதகருக்கும்,

1தீமோ 1:10 வேசிக்கள்ளருக்கும், ஆண் புணர்ச்சிக்காரருக்கும், மனுஷரைத் திருடுகிறவர்களுக்கும், பொய்யருக்கும், பொய்யாணை இடுகிறவர்களுக்கும்,

நியாயப்பிரமாணம் யாருக்கு விதிக்கப்பட்டிருக்கிறது

1 அக்கிரமக்காரர் (Lawless)

2 அடங்காதவர்கள் (Disobedient)

3 பக்தியில்லாதவர்கள் (Ungodly)

4 பாவிகள் (Sinners)

5 அசுத்தர் (Unholy)

6 சீர்கெட்டவர்கள் (Profane)

7 தாயதகப்பன்மாரை அடிக்கிறவர்கள் (Patricides)

8 தாயைக் கொலை செய்கிறவர் (Matricides)

9 கொலைபாதகர் (Murderers)

I தீமோத்தேயு – தொகுப்புரை

1 அதிகாரம்

10 விபச்சாரக்காரர் (Whoremongers)

11 ஆண்புணர்ச்சிக்காரர் (Sexual perverts)

12 மனுஷரைத் திருடுகிறவர் (Menstealers)

13. பொய்யர் (Liars)

14 பொய்யாணை யிடுகிறவர் (Perjurers)

15. ஆரோக்கியமான உபதேசத்திற்கு எதிரிடையாய் இருக்கிறவர்கள் தீமோ 1:10; கலா 5:21

அக்கிரமக்காரர் (Lawless) - ἄνομος - anomos - 459

பொருள் - அக்கிரமமான சட்டத்துக்குப் புறம்பான (contempt for law; no rule of moral conduct."lawless" (1தீமோ 1:9) "without law" (1கொரி 9:21), "unlawful" (2பேதுரு 2:8) "transgressor" (மாற்கு 15:28 லூக்கா 22:37), "wicked" (அப 2:23, 2தெச 2:8)

அடங்காதவர் (Disobedient) - ἀνυπότακτος-anypotaktos- 506

பொருள் - அடங்காத, கீழ்படியாத (not under subjection; undisciplined) "disobedient" (1தீமோ 1:9), "not put under" (எபி 2:8), " unruly" (தீத்து 1:6,10)

பக்தியில்லாதவர் (Ungodly) - ἀσεβής asebees 765

பொருள் - பாவி, அக்கிரமக்காரர் பக்தியில்லாதவர் அவபக்தியுள்ளவர் தேவபக்தி யில்லாதவர் (irreligious) 1தீமோ 1:9 1பேதுரு 4:18; 2பேதுரு 2:5 2பேதுரு 3:7, யூதா 1:4,15)

பாவிகள் (Sinners) - ἁμαρτωλός - hamartoolos - 268

பொருள் - பாவமான, பாவிகளான பாவமுள்ள (transgressors of law) " sinner", "sinful" (மாற்கு 8:38 லூக்கா 5:8 லூக்கா24:7 ரோமர் 7:13)

பரிசுத்தமில்லாதவர் (Unholy) ἀνόσιος - anosios - 462

பொருள் - அசுத்தமான, பரிசுத்தமில்லாத (totally depraved; the utter opposite of holiness within and without) (1தீமோ 1:9, 2தீமோ 3:2)

சீர்கேடானவர் (Profane) - βέβηλος - bebeelos - 952

பொருள் - சீர்கெட்ட, சீர்கேடான (not fit to attend public worship)(1தீமோ 1:9; 1தீமோ 4:7 1தீமோ 6:20 2தீமோ 2:16 எபி 12:16)

தகப்பனமாரை அடிக்கிறவர் (Patricides) -πατραλῴας-patralooas- 3964

ஆண்பால் பெயர்சொல் - தகப்பனமாரை அடிக்கிறவன் கொலைபாதகர் (those who strike or slay their father)

தாயைக் கொலைசெய்கிறவர் (Matricides) - μητραλῴας - meetralooas - 3389

ஆண்பால் பெயர்ச்சொல் - தாயைக் கொலைசெய்பவர் (those who strike or slay their mother)

கொலை பாதகர் (Murderers) - ἀνδροφόνος androphonos 409

ஆண்பால் பெயர்ச்சொல் - கொலை பாதகர் (those who take any human life contrary to law)

1 அதிகாரம்

விபசாரக்காரர் (Whoremongers) - πόρνος - pornos - 4205

ஆண்பால் பெயர்ச்சொல் - விபசாரக்காரர், வேசிக்கள்ளர் (male prostitutes)

ஆண் புணர்ச்சிக்காரர் (Sexual perverts) - ἀρσενοκοίτης - arsenokoitees - 733

ஆண்பால் பெயர்ச்சொல் - ஆண் புணர்ச்சிக்காரர் (those guilty of unnatural sexual practices) 1கொரி 6:9

மனுஷரைத் திருடுகிறவர் (Menstealers) - ἀνδραποδιστής - andraopdistees - 405

ஆண்பால் பெயர்ச்சொல் - மனுஷரைத் திருடுகிறவர் ஆட்களைக் கடத்துகிறவர்கள் அடிமைகளைத் திருடி விற்பனை செய்பவர்கள் (kidnappers; those who steal slaves and sell and buy them, who hold men for ransom)

பொய்யர் (Liars) - ψεύστης - pseustees - 5583

ஆண்பால் பெயர்ச்சொல் - பொய்யர் (saying for truth what is known to be false) (1தீமோ 1:10, யோவான் 8:44-45; ரோமர் 3:4, தீத்து 1:12; 1யோவான் 1:10; 1யோவான் 2:4,22; 1யோவான் 4:20; 1யோவான் 5:10)

பொய்யாணையிடுகிறவர் (Perjurers) - ἐπίορκος - epiorkos - 1965

பெயரடை - பொய்யாணையிடுகிற (those who lie under oath)

6. பவுல் ஓர் எடுத்துக்காட்டு

(1) நம்பிக்கையும் உண்மையுமுள்ள ஊழியக்காரன்

1தீமோ 1:11 நித்தியானந்த தேவனுடைய மகிமையான சுவிசேஷத்தின்படி எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிற ஆரோக்கியமான உபதேசத்திற்கு எதிரிடையாயிருக்கிற மற்றெந்தச் செய்கைக்கும் விரோதமாய் விதிக்கப்பட்டிருக்கிறது

1தீமோ 1:12 என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால் அவரை ஸ்தோத்திரிக்கிறேன்

நித்தியானந்த தேவன் (blessed God) - μακάριος - makarios - 3107

ஆண்பால் பெயர்ச்சொல் - பாக்கியம், நித்தியானந்த தேவன் blessed (1தீமோ 6:15) happy; (மத் 5:3-11)

ஊழியம் (ministry) - διακονία - diakonia - 1248

பெண்பால் பெயர்ச்சொல் - வேலைகளைச் செய்தல், ஊழியம், உதவி, விசாரணை, தர்மசகாயம் - (service, deaconship to mankind) (மத் 20:26)

(2) பாவிகளில் பிரதான பாவி

(மத் 12:31; ரோமர் 10:9-10; 1யோவான் 1:9; 2:1-2; 3:5)

1தீமோ 1:13 முன்னே நான் தூஷிக்கிறவனும், துன்பப்படுத்துகிறவனும், கொடுமை செய்கிறவனுமாயிருந்தேன்; அப்படியிருந்தும், நான் அறியாமல் அவிசுவாசத்தினாலே அப்படிச் செய்தபடியினால் இரக்கம் பெற்றேன்

I தீமோத்தேயு – தொகுப்புரை

1 அதிகாரம்

1தீமோ 1:14 நம்முடைய கர்த்தரின் கிருபை கிறிஸ்து இயேசுவின்மேலுள்ள விசுவாசத்தோடும் அன்போடுங்கூட என்னிடத்தில் பரிபூரணமாய்ப் பெருகிற்று.

1தீமோ 1:15 பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி நான்.

பவுலின் பழைய சுபாவங்கள்

1 கிறிஸ்துவை தூஷிக்கிறவன் (1தீமோ 1:13)

2 கிறிஸ்தவனைத் துன்பப்படுத்துகிறவன் (அப் 8:1-3)

3 பரிசுத்தவான்களைக் கொலைசெய்து கொடுமை செய்கிறவன் (அப் 9:1)

4 சுவிசேஷத்தை அறியாதவன் (1தீமோ 1:13)

5 கிறிஸ்தவ மார்க்கத்தை விசுவாசியாதவன் (1தீமோ 1:13)

6 பாவிகளில் பிரதானபாவி (1தீமோ 1:15)

பரிபூரணமாய்ப் பெருகு (exceeding abundant) - ὑπερπλεονάζω - hyperpleonazoo - 5250

வினைச்சொல் - பரிபூரணமாய்ப் பெருகு (superabounded over all) ரோமர் 5:20

தீமோத்தேயு, தீத்து ஆகிய நிருபங்களில் பவுல் கூறியிருக்கும் உண்மையும், அங்கீகரிப்புக்குப் பாத்திரமுமான வார்த்தைகள்

1 பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் (1தீமோ 1:15; 1தீமோ 4:10; மத் 1:21; யோவான் 3:16 கலா 1:4)

2 தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும், இனி வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளது (1தீமோ 4:8-10)

3 நாம் அவரோடேகூட மரித்தோமானால் அவரோடே பிழைத்துமிருப்போம் (2தீமோ 2:11-13)

4 தேவனிடத்தில் விசுவாசமானவர்கள் நற்கிரியைகளைச் செய்ய ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும் (தீத்து 3:8; 1தீமோ 3:1; வெளி 21:5; வெளி 22:6)

"பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது" - முழு உலகமும் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அங்கீகரிக்க வேண்டும். பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு கல்வாரி சிலுவையில் மரித்தார். அவர் முழு உலகத்திற்காகவும் மரித்தார். அவருடைய மரணத்தின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதற்கு உலகிலுள்ள அனைவருக்கும் உரிமையுள்ளது (யோவான் 3:16-20,36; யோவான் 5:24)

"அவர்களில் பிரதான பாவி நான்" - 1தீமோ 1:15 ஆவது வசனத்தில் பவுல் தன்னுடைய பாவத்தைக் குறித்து விளக்குகிறார்

பிரதான(chief)- πρῶτος-prootos- 4413

பெயரடை - முந்தின, முதலாவதான, மூத்தவனான, மூப்பரான, ஆதியான (first in rank) (1தீமோ 1:15, மத் 20:27, மாற்கு 6:21, மாற்கு 10:44, அப் 13:50; அப் 16:12, அப் 17:4, அப் 25:2; அப் 28:7,17)

(3) எல்லா பாவிகளும் இரட்சிக்கப்படுவதற்கு திருஷ்டாந்தம்

1தீமோ 1:16 அப்படியிருந்தும், நித்திய ஜீவனை அடையும்படி இனிமேல் இயேசு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாயிருப்பவர்களுக்குத் திருஷ்டாந்தம் உண்டாகும் பொருட்டுப் பிரதான பாவியாகிய என்னிடத்தில் அவர் எல்லா நீடிய பொறுமையையும் காண்பிக்கும்படிக்கு இரக்கம்பெற்றேன்.

I தீமோத்தேயு - தொகுப்புரை

1 அதிகாரம்

"இரக்கம்பெற்றேன்" - பாவிகளை இரட்சிப்பதற்காக இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார். ஆகையினால் பவுல் தேவனிடமிருந்து இரக்கம் பெற்றிருக்கிறார். இயேசு கிறிஸ்துவில் விசுவாசமாயிருக்கிறவர்களுக்கு நித்திய ஜீவன் உண்டு என்னும் திருஷ்டாந்தம் உண்டாகும் பொருட்டு தேவன் பவுலைத் தெரிந்தெடுத்திருக்கிறார்.

7. பரிபூரணமான இரட்சிப்பிற்காக உண்மையான தேவனுக்கு ஸ்தோத்திரம்

தீமோ 1:17 நித்தியமும் அழிவில்லாமையும் அதரிசனமுமுள்ள ராஜனுமாய், தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்கு, கனமும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்.

பிதாவாகிய தேவனைப் பற்றி 1தீமோ 1:17 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் சத்தியங்கள்

1 நித்திய ராஜா

2 அழிவில்லாத ராஜா

3 அதரிசனமுள்ள ராஜா

4. தாம் ஒருவரே ஞானமுள்ள தேவன்

அரசாளு (King eternal) βασιλεύω basileuoo 935

வினைச்சொல் - அரசாளு, ராஜாவாயிரு, ஆண்டுகொள், ஆளு, ஆளுகைசெய், ராஜ்ய பாரம் பண்ணு

'o ho - 3588

கிரேக்க மொழியில் சிறப்புச்சுட்டு குறிப்பிட்ட நபர்களையோ அல்லது பொருட்களையோ குறிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படுகிறது. வலியுறுத்தும் இலக்கணக்கூறாகவும் பயன்படுத்தப்படுகிறது.

αἰών - aioon - 165

ஆண்பால் பெயர்ச்சொல் - காலம், [redacted] பிரபஞ்சம், அநாதி, சதாகாலங்கள் (ஏசா 9:6 எபி 10:10)

(அ)என்றென்றைக்கும் அதாவது கடந்த காலத்தில் - யோவான் 6:5; 8:0,32

(ஆ)ஒரு குறிப்பிட்ட காலம் அதாவது இம்மை அல்லது மறுமை - மத். 12:32 மாற். 10:30

அழிவில்லாத (Immortal) - αφθαρτος - aphthartos - 862

பெயரடை - அழிவில்லாத, அழியாத (incorruptible) - மனுஷனுடைய ஆத்துமாவும் ஆவியும் அழியாதது (1பேதுரு 3:4) அழியாத மற்ற காரியங்கள் (ரோமர் 1:23 1கொரி 9:25 1கொரி 15:52 1பேதுரு 1:4,23) தேவன் அழிவில்லாதவர் மனுஷனுடைய ஆவியும் அழிவில்லாதது

அதரிசனமான (Invisible) - ἀόρατος - aoratos - 517

பெயரடை காணப்படாத, அதரிசனமான (கொலோ 1:16)

"தாம் ஒருவரே ஞானமுள்ள தேவன்" - தேவனே ஞானத்தின் ஆதாரமாக இருக்கிறவர் (1தீமோ 6:16)

8. தீமோத்தேயுவிற்குக் கட்டளை

(1தீமோ 4:12; 5:21; 6:11; 2தீமோ 1:6

1தீமோ 1:18 குமாரனாகிய தீமோத்தேயுவே, உன்னைக்குறித்து முன் உண்டான தீர்க்கதரிசனங்களின்படியே, நீ அவைகளை முன்னிட்டு நல்ல போராட்டம் பண்ணும்படி இந்தக் கட்டளையை உனக்கு ஒப்புவிக்கிறேன், நீ விசுவாசமும் நலமனச்சாட்சியும் உடையவனாயிரு.

1தீமோ 1:19 இந்த நலமனச்சாட்சியைச் சிலர் தள்ளிவிட்டு, விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தினார்கள்.

I தீமோத்தேயு - தொகுப்புரை

1 அதிகாரம்

1தீமோ 1:20 இமெனேயும் அலெக்சந்தரும், அப்படிப்பட்டவர்கள் அவர்கள் தூஷியாதபடி சிட்சிக்கப்பட அவர்களைச் சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுத்தேன்

"உன்னைக்குறித்து முன் உண்டான தீர்க்க தரிசனங்களின்படியே" - தீமோத்தேயுவிற்கு ஆவிக்குரிய வரங்கள் அருளப்பட்ட போது கூறப்பட்ட தீர்க்கதரிசனங்களாக இருக்கலாம் (1தீமோ 4:14; 2தீமோ 1:6)

ஆத்துமாவை இரட்சிப்பதற்குத் தேவையான காரியங்கள்

1. நல்ல போராட்டம் பண்ண வேண்டும். (1தீமோ 1:18; 2தீமோ 2:4)
2. விசுவாசம் உடையவராக இருக்க வேண்டும். (1தீமோ 1:19, 1தீமோ 3:9 எபி 3:6,12-14; எபி 4:11 எபி 6:4-9 எபி 10:23, 26-29, 36-39)
3. நல்மனச்சாட்சி உடையவராக இருக்க வேண்டும். (1தீமோ 1:19)

தள்ளிவிடு (put away) - ἀπωθέω - apootheoo - 683

வினைச்சொல் - [illegible] தீர்த்துக்கொள் தள்ளிவிடு (thrust away; drive away; beat off; banish, to repel; reject; disdain) "put away" (1தீமோ 1:19) "put from" (அப் 13:46), "thrust from" (அப் 7:27,39), "cast away" (ரோமர் 11:1 2)

கப்பலைச் சேதப்படுத்து (shipwreck) - ναυαγέω nauageoo - 3489

வினைச்சொல் - கப்பலைச் சேதப்படுத்து (shipwreck; crash, smash, be ruined) (2கொரி 11:25, 1தீமோ 1:19)

விசுவாசத்தைப் பற்றிய சத்தியங்கள்

1. விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்த முடியும். (1தீமோ 1:19)
2. விசுவாசத்தைத் தள்ளிவிடலாம் (1தீமோ 1:19)
3. விசுவாசத்தினின்று திரும்ப முடியும். (அப் 13:8)
4. விசுவாசம் வீணாய்ப் போகும். (ரோமர் 4:14)
5. விசுவாசம் வீணாயிருக்கும். (1கொரி 15:17)
6. விசுவாசத்தைப் பற்றிக் கொள்ளலாம் அல்லது தள்ளிவிடலாம். (1தீமோ 1:19)
7. விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள் (1தீமோ 4:1)
8. விசுவாசத்தை மறுதலிக்கலாம் (1தீமோ 5:8; வெளி 2:13)
9. விசுவாசத்தை விட்டுவிடலாம் (1தீமோ 5:12)
10. விசுவாசத்தை விட்டு வழுவி விடலாம் (1தீமோ 6:10,21)
11. விசுவாசத்தைக் கவிழ்த்துப்போடலாம். (2தீமோ 2:18)
12. விசுவாச விஷயத்தில் பரீட்சைக்கு நில்லாமல் போகலாம். (2தீமோ 3:8)
13. விசுவாசத்தைக் காத்துக் கொள்ளலாம் அல்லதுஇழந்துபோகலாம் (2தீமோ 4:7)
14. விசுவாசம் இல்லாமல் போகலாம். (மாற்கு 4:40; லூக்கா 8:25)
15. விசுவாசம் போதுமானதாக இருக்கலாம் அல்லது ஒழிந்துபோகலாம். (லூக்கா 22:32)
16. விசுவாசம் அவமாகலாம். (ரோமர் 3:3)
17. விசுவாசம் செத்துப்போகலாம். (யாக் 2:17, 20, 26)

I தீமோத்தேயு - தொகுப்புரை

1 அதிகாரம்

18. விசுவாசத்திற்குக் கீழ்ப்படியலாம் அல்லது கீழ்ப்படியாமல் போகலாம். அப் 6:7

19. விசுவாசத்தின்மேல் உறுதிப்படுத்திக் கொள்ளலாம். அல்லது விசுவாசத்தை அழித்துப் போடலாம். (யூதா 1:20)

20. விசுவாசத்தில் தொடர்ந்து இருக்கலாம் அல்லது விசுவாசத்திலிருந்து விலகிப் போகலாம் (அப் 14:22 கொலோ 1:23, எபி 10:39

"இமெனே" (Hymenaeus) - இவன் தன்னுடைய விசுவாசத்தை இழந்தான் தேவதூஷணம் சொல்லுகிறவனான (1 தீமோ 1:19-20) இவன் ஒரு கள்ளப்போதகன் மற்றவர்களுடைய விசுவாசத்தை அழித்துப் போட்டான் (2 தீமோ 2:16-18)

"அலெக்சந்தர்" (Alexander) - இமெனேயைப் போலவே இவனும் தன்னுடைய விசுவாசத்தை இழந்தான் (1 தீமோ 1:19-20) சுவிசேஷத்திற்கு விரோதியானான் (2 தீமோ 4:14 (5 அப [illegible]) இவ்விருவரும் தங்களுடைய விசுவாசத்தைச் சேதப்படுத்துவதற்கு முன்பாக நல்மனச்சாட்சி உடையவர்களாகவும், தேவனிடத்தில் விசுவாசம் வைத்தவர்களாகவும் இருந்தார்கள் (1 தீமோ 1:19)

"அவர்கள் தூஷியாதபடி சிட்சிக்கப்பட அவர்களைச் சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுத்தேன்" (1 கொரி 5:5

I தீமோத்தேயு – தொகுப்புரை

2 அதிகாரம்

III. ஜெபமும் ஸ்திரீகளும்

1. எல்லா மனுஷருக்காகவும் ஜெபம் பண்ண வேண்டும்

1தீமோ 2:1 நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்திமதியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்.

1தீமோ 2:2 நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும் அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்ய வேண்டும்.

1தீமோ 2:3 நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது.

விசுவாசிகளுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் கடமைகள்

1 விண்ணப்பம் பண்ண வேண்டும் (எபே 6:18)

2 ஜெபம் பண்ண வேண்டும். (1தீமோ 2:1; 1தீமோ 5:5)

3 வேண்டுதல் செய்ய வேண்டும். (1தீமோ 2:1; ரோமர் 8:26-27,34; எபி 7:25; ஏசா 53:12)

4 ஸ்தோத்திரம் பண்ண வேண்டும். (1தீமோ 2:1)

நாம் யாருக்காக ஜெபம் பண்ண வேண்டும் (1தீமோ 2:1-3)

1 எல்லா மனுஷருக்காகவும்

2 ராஜாக்களுக்காகவும்

3 அதிகாரமுள்ள யாவருக்காகவும்

2. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்று தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார் (2பேதுரு 3:9; யோவான் 3:16; வெளி 22:17)

1தீமோ 2:4 எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்.

தேவனுக்குச் சித்தமான காரியங்கள்

1. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட வேண்டும். (மாற்கு 16:15; யோவான் 3:16; 2பேதுரு 3:9; வெளி 22:17)

2 எல்லா மனுஷரும் சத்தியத்தை அறிகிற அறிவை அடைய வேண்டும் (எபி 4:12; 2தீமோ 3:16)

3. தேவனுக்கும் மனுஷனுக்கும் கிறிஸ்து ஒருவரே மத்தியஸ்தராக இருக்கிறார் - (2கொரி 5:14-21; ரோமர் 3:25; எபே 2:14-22; பிலி 2:5-11; கொலோ 2:11-17)

1தீமோ 2:5 தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே.

1தீமோ 2:6 எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது.

"தேவன் ஒருவரே" - நமது தேவன் திரித்துவப் பண்புடையவர். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் தனித்தனியே வெவ்வேறு ஆளத்துவப் பண்புடையவர்கள் (1கொரி 8:6; எபே 4:4-6; யோவான் 17:11,21,22; 1யோவான் 5:7; உபா 6:4)

மத்தியஸ்தர் (mediator) - **μεσίτης** - **mesitees** - 3316

ஆங்கிலச் சொல்- மத்தியஸ்தர். மனுஷனுடைய பாவத்தின் நிமித்தமாக தேவனுக்கும், மனுஷனுக்கும் இடையே பகை உண்டாயிற்று. இந்தப் பகையைப் போக்குவதற்காகத் தேவனுக்கும், மனுஷனுக்கும் நடுவில் ஒரு மத்தியஸ்தர் தேவைப்படுகிறது (கலா 3:20)

2 அதிகாரம்

"மீட்கும் பொருள்" (ransom) - இரண்டு விதமான மீட்கும் பொருள்கள் உள்ளன. ஒன்று ஒரு அடிமையை மீட்பதற்காகச் செலுத்தப்படும் மீட்கும் பொருள். கிரேக்க மொழியில் இதற்கு "லூட்ரோன்" (lytron) என்று பெயர். மற்றொன்று ஒருவரை மீட்பதற்காக வேறொருவரைப் பணையமாக வைப்பது. ஒரு ஜீவனை மீட்பதற்கு ஈடாக வேறொரு ஜீவனைத் தருவது. இது மற்றொரு விதமான மீட்கும் பொருளாகும். இதற்கு கிரேக்க மொழியில் "அண்டிலூட்ரோன்" (antilytron) என்று பெயர்.

மீட்கும் பொருள் (ransom) - ἀντίλυτρον - antilytron - 487

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - மீட்கும் பொருள் - ஒரு ஜீவனை மீட்பதற்கு வேறொரு ஜீவனை ஈடாகக் கொடுப்பது.

மீட்கும் பொருள் (ransom) - λύτρον - lytron - 3083

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் மீட்கும் பொருள் ஒரு அடிமையை மீட்பதற்குக் கிரயம் செலுத்துவது.

4. சுவிசேஷத்தை பிரபலியப்படுத்தும் தேவனுடைய முறைமை (மத் 4:23; 10:7; மாற்கு 6:7-13; 16:15-20; லூக் 10:1-20; அப் 1:8; ரோமர் 15:18-29; 1கொரி 1:17-21)

I தீமோ 2:7 இதற்காகவே நான் பிரசங்கியாகவும், அப்போஸ்தலனாகவும், புறஜாதிகளுக்கு விசுவாசத்தையும் சத்தியத்தையும் விளங்கப்பண்ணுகிற போதகனாகவும் நியமிக்கப்பட்டிருக்கிறேன்; நான் பொய் சொல்லாமல் கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்லுகிறேன்.

5. எங்கு எப்படி ஜெபிக்க வேண்டும் - (மத் 6:5-15; 7:7-11; மாற்கு 11:22-24; லூக் 11:1-13; 18:1-14; யோவான் 14:12-15; 15:7,16; 16:23-26)

I தீமோ 2:8 அன்றியும், புருஷர்கள் கோபமும் தர்க்கமுமில்லாமல் பரிசுத்தமான கைகளை உயர்த்தி, எல்லா இடங்களிலேயும் ஜெபம்பண்ணவேண்டுமென்று விரும்புகிறேன்.

புருஷர்கள் கோபமும் தர்க்கமுமில்லாமல் பரிசுத்தமான கைகளை உயர்த்தி, எல்லா இடங்களிலேயும் ஜெபம்பண்ணவேண்டும் - கைகளை உயர்த்தி ஜெபம் பண்ணுவது யூதர்கள் மத்தியிலே காணப்படும் பொதுவான வழக்கமாகும். விண்ணப்பம் பண்ணும்போதும் ஒப்பந்தம் பண்ணும்போதும் யூதர்கள் தங்கள் கைகளை உயர்த்துவார்கள். இவ்வாறு கைகளை உயர்த்தும்போது அவர்களுக்கு பிறர்மீது கோபமோ தர்க்கமோ இருக்கக்கூடாது.

6. ஸ்திரீகள் தங்களை தகுதியான வஸ்திரங்களினால் அலங்கரித்து எளிமையாய் இருக்க வேண்டும் - (I பேதுரு 3:3-4; ஏசா 3:16-24)

I தீமோ 2:9 ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினாலாவது பொன்னினாலாவது முத்துக்களினாலாவது விலையேறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல்,

I தீமோ 2:10 தகுதியான வஸ்திரத்தினாலும் நாணத்தினாலும் தெளிந்த புத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும் தங்களை அலங்கரிக்கவேண்டும்.

I தீமோத்தேயு - தொகுப்புரை

2 அதிகாரம்

"மயிரைப் பின்னுதல்" - இந்த வசனத்தில் இதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்க வார்த்தை "ப்ளெக்மா" (plegma) என்பதாகும். இதற்கு பின்னல் வலை பின்னப்பட்டிருக்கிற எந்தப் பொருளும் என்று பொருள். தலை முடிக்கான கிரேக்க வார்த்தை "ட்ரிக்ஸ்" (trix) என்பதாகும். ஆகையினால் இந்த வசனத்தில் மயிரைப் பின்னுதல் என்பது தலை முடியைப் பின்னுவதையும், அதற்குமேல் வைக்கப்படும் அலங்காரமான பொருட்களையும் குறிக்கும். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் சில ஸ்திரீகள் தங்கள் தலைக்கு அலங்காரமாக நீளமான கொம்புகளை வைப்பது வழக்கம். அவற்றைப் பொன்னாலும், முத்துக்களாலும் செய்தார்கள். தங்களுடைய தலை முடிகளில் இந்தக் கொம்புகளை இணைத்து பின்னிவிடுவார்கள். அத்துடன் இந்தக் கொம்புகளில் விலையேறப்பெற்ற வஸ்திரங்களையும் தொங்கவிட்டு தங்களுடைய முகத்தை மூடிக்கொள்வார்கள்.

மயிரைப் பின்னுதல் (broided hair) - πλέγμα - plegma - 4117

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் மயிரைப் பின்னுதல்

மயிர் (hair) - θρίξ - thrix - 2359

பெண்பால் பெயர்ச்சொல் மயிர், தலைமயிர், கூந்தல்

கிழக்குத் தேசத்து ஸ்திரீகள் தங்களை அலங்கரிப்பதற்காக வெள்ளியையும், பொன்னையும், முத்துக்களையும் அதிகமாகப் பயன்படுத்தினார்கள். சில சமயங்களில் புருஷர்களகூட தங்களை இவற்றால் அலங்கரிப்பது உண்டு. (ஆதி 24:47; யாத் 32:2; யாத் 35:22; நியா 8:24; ஏசா 3:16-24; யோபு 2:11)

விலையேறப்பெற்ற வஸ்திரம் (costly array) - πολυτελής - polytelees - 4185

பெயரடை விலையேறப்பெற்ற (மாற்கு 14:3; 1தீமோ 2:9; 1பேதுரு 3:4) புருஷர்களும் ஸ்திரீகளும் சமுதாயத்தில் அங்கீகரிக்கப்பட்ட தூய்மையான வஸ்திரங்களையே அணிய வேண்டும். விலையேறப்பெற்ற வஸ்திரங்களை அணிந்து ஆடம்பரமாய் இருக்கக்கூடாது என்பது பவுலின் கருத்து. (மாற்கு 14:3; 1பேதுரு 3:3,4)

"தகுதியான வஸ்திரத்தினாலும் ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும் தங்களை அலங்கரிக்க வேண்டும்" - புருஷரைப் போலவே ஸ்திரீகளும் தேவனிடம் ஜெபம் பண்ண வேண்டும். (1தீமோ 2:8) தகுதியான வஸ்திரங்களையே ஸ்திரீகள் அணிய வேண்டும்.

அலங்கரி (adorn) - κοσμέω - kosmeoo - 2885

வினைச்சொல் - ஜோடி, சிங்காரி, ஆயத்தப்படுத்து, அலங்கரி (to order, arrange, deck, adorn, embellish) "adorn" (1தீமோ 2:9; லூக்கா 21:5; தீத்து 2:10; 1பேதுரு 3:5; வெளி 21:2) "to trim" (மத் 25:7); "garnish" (மத் 12:44; மத் 23:29; லூக்கா 11:25; வெளி 21:19)

தகுதியான (modest) - κόσμιος - kosmios - 2887

பெயரடை - யோக்கியதையுள்ள, தகுதியான (well ordered, moderate, regular, well behaved) "modest" (1தீமோ 2:9) "of good behavior" (1தீமோ 3:2)

வஸ்திரம் (apparel) - καταστολή - katastolee - 2689

பெண்பால் பெயர்ச்சொல் - வஸ்திரம், தோற்றம் (apparel, equipment, dress, clothing)

நாணம் (shamefacedness) - αἰδώς - aidoos - 127

பெண்பால் பெயர்ச்சொல் - நாணம், பக்தி (sense of honor; regard for others; respect; reverence, self restraint, modesty, bashfulness toward men; not being bold, forward, "reverence" (எபி 12:28)

2 அதிகாரம்

தெளிந்த புத்தி (sobriety) - σωφροσύνη - soophrosynee - 4997

பெண்பால் பெயர்ச்சொல் - சொஸ்த புத்தி, தெளிந்த புத்தி (discretion; self-control; chastity; temperance) "soberness" "sobriety" (1தீமோ 2:9,15; அப் 26:25; 2தீமோ 1:7; தீத்து 2:4, 12)

7. ஸ்திரீயானவள் அடக்கமுடையவளாயிருக்க வேண்டும் - ஆதி 3:16; 1கொரி 11:3; 1பேதுரு 3:1-6

1தீமோ 2:11 ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து, அமைதலோடு கற்றுக்கொள்ளக்கடவள்.

1தீமோ 2:12 உபதேசம்பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; அவள் அமைதலாயிருக்கவேண்டும்.

1தீமோ 2:13 என்னத்தினாலெனில், முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான், பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள்.

1தீமோ 2:14 மேலும், ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை, ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள்.

அடக்கம் (subjection) - ὑποταγή - hypotagee - 5292

பெண்பால் பெயர்ச்சொல் - கீழ்ப்படிதல், அடக்கம் (1தீமோ 2:11, 3:4; 1கொரி 14:34-35; 2கொரி 9:13; கலா 2:5)

அதிகாரஞ்செலுத்து (usurp authority) αὐθεντέω - authenteoo - 831

வினைச்சொல் - அதிகாரஞ்செலுத்து (to have power over) - ஸ்திரீகள் புருஷர்மீது அதிகாரம் செலுத்தக்கூடாது. ஸ்திரீகள் உபதேசம் பண்ணலாம், ஜெபிக்கலாம், தீர்க்கதரிசனம் உரைக்கலாம். புருஷருடைய அதிகாரத்திற்கு உட்பட்டு, மற்ற காரியங்களையும் செய்யலாம். (1கொரி 14:34-35)

"அவள் அமைதலாயிருக்கவேண்டும்" - சபை ஆராதனைகளிலும், பொதுமக்கள் கூடும் இடங்களிலும் அக்காலத்தில் புருஷர்களே பேசுவார்கள். கேள்விகளைக் கேட்பார்கள். தங்களுக்குப் புரியாததைப் பேசுவோரிடம் இடைமறித்தும் விளக்கம் கேட்பார்கள். இந்தச் சிலாக்கியங்கள் அக்காலத்தில் ஸ்திரீகளுக்குக் கொடுக்கப்படவில்லை.

"முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான், பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள்" - புருஷருடைய தலைமைத்துவத்தை வலியுறுத்துவதற்கு ஆதாம் முதலாவதாக சிருஷ்டிக்கப்பட்டதைப் பவுல் காரணமாகக் கூறுகிறார் (1தீமோ 2:13-14; 2கொரி 11:3)

8. பிள்ளைப்பேற்றினாலே இரட்சிக்கப்படுவதற்கு நிபந்தனையுள்ள வாக்குத்தத்தம்

1தீமோ 2:15 அப்படியிருந்தும், தெளிந்த புத்தியோடே விசுவாசத்திலும் அன்பிலும் பரிசுத்தத்திலும் நிலைகொண்டிருந்தால் பிள்ளைப்பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள்.

"பிள்ளைப்பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள்" - ஸ்திரீகளுக்குப் பிள்ளைப்பேறு ஒரு வேதனையான காலம். இதில் சில ஸ்திரீகள் மரித்துப்போவதும் உண்டு. ஸ்திரீகள் தேவபக்தி உடையவர்களாக இருக்க வேண்டும். அப்போது அவர்கள் தங்களுடைய பிள்ளைப்பேற்றின்போது தங்களுடைய ஜீவனையும், தங்களுடைய பிள்ளைகளின் ஜீவனையும் இரட்சித்துக் கொள்வார்கள்.

I தீமோத்தேயு - தொகுப்புரை

2 அதிகாரம்

ஸ்திரீயானவள் நிலைகொண்டிருக்க வேண்டிய காரியங்கள்

1 விசுவாசம் (கொலோ 1:23)

2 அன்பு (2கொரி 13:4

3 பரிசுத்தம். (1தெச 4:3)

4 தெளிந்த புத்தி (1தீமோ 2:9)

3 அதிகாரம்

IV. சபையின் கண்காணிகளுக்கு தகுதிகள்

1. ஊழியக்காரரின் பதினேழு தகுதிகள் - (அப் 20:17,28; தீத்து 1:5-9; 1 பேதுரு 5:1-8

1தீமோ 3:1 கண்காணிப்பை விரும்புகிறவன் நல்லவேலையை விரும்புகிறான், இது உண்மையான வார்த்தை.

1தீமோ 3:2 ஆகையால் கண்காணியானவன் குற்றஞ்சாட்டப்படாதவனும் ஒரே மனைவியை உடைய புருஷனும், ஜாக்கிரதையுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், யோக்கியதையுள்ளவனும் அந்நியரை உபசரிக்கிறவனும், போதக சமர்த்தனுமாய் இருக்கவேண்டும்.

1தீமோ 3:3 அவன் மதுபானப்பிரியனும், அடிக்கிறவனும் இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாயிராமல், பொறுமையுள்ளவனும், சண்டைபண்ணாதவனும் பண ஆசையில்லாதவனுமாயிருந்து

1தீமோ 3:4 தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப்பண்ணுகிறவனுமாயிருக்கவேண்டும்.

1தீமோ 3:5 ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால் தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?

1தீமோ 3:6 அவன் இறுமாப்படைந்து பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு, [redacted] சீஷனாயிருக்கக்கூடாது.

1தீமோ 3:7 அவன் நிந்தனையிலும் பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு, புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனாயுமிருக்க வேண்டும்.

கண்காணிப்பு (bishop) - ἐπισκοπή - episkopee - 1984

பெண்பால் பெயர்ச்சொல் - கண்காணிப்பு (overseer, bishop, or preaching elder) (அப் 20:28

கண்காணிகளின் தகுதிகள்

1 குற்றஞ்சாட்டப்படாதவன் (1தீமோ 5:7; 1தீமோ 6:14)

2 ஒரே மனைவியை உடைய புருஷன் (2கொரி 9:5)

3 ஜாக்கிரதையுள்ளவன்

4 தெளிந்த புத்தியுள்ளவன் (1தீமோ 2:9, 15; 2தீமோ 1:7; தீத்து 2:4, 6, 12

5 யோக்கியதையுள்ளவன்

6 அந்நியரை உபசரிக்கிறவன்

7 போதகசமர்த்தன்

8 மதுபானப்பிரியன் அல்லாதவன்

9 அடிக்காதவன்

10 இழிவான ஆதாயத்தை இச்சியாதவன்

11 பொறுமையுள்ளவன்

12 சண்டைபண்ணாதவன்

13 பண ஆசையில்லாதவன்

14 தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவன்

15 நூதன (புதிய) சீஷனாய் இல்லாதவன்

16 புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவன்

குற்றம் சாட்டப்படாதவன் (Blameless in conduct) - ἀνεπίληπτος anepileemptos 423

பெயரடை - குற்றம் சாட்டப்படாத (1தீமோ 3:2, 5:7; 1தீமோ 6:14

I தீமோத்தேயு - தொகுப்புரை

3 அதிகாரம்

ஜாக்கிரதையுள்ளவன் (Vigilant) νηφαλέος - neephaleos - 3524

பொருள் - தெளிந்த புத்தியுள்ள (drinking no wine; sober) "vigilant" (1தீமோ 3:2); "sober" (1தீமோ 3:11; தீத்து 2:2)

தெளிந்த புத்தியுள்ளவன் (Sober) - σώφρων - soophroon - 4998

பொருள் - தெளிந்த புத்தியுள்ள (of sound mind; discreet; prudent; moderate; self-controlled; temperate) "sober" (1தீமோ 3:2 தீத்து 1:8); "temperate" (தீத்து 2:5) "discreet" (தீத்து 2:5)

யோக்கியதையுள்ளவன் (good behavior) - κόσμιος - kosmios - 2887

பொருள் - யோக்கியதையுள்ள தகுதியான (1தீமோ 2:9)

அந்நியரை உபசரிக்கிறவன் (hospitality) -φιλόξενος- philoxenos - 5382

பொருள் - உபசரிக்கிற (lover of strangers) (ரோமர் 12:13 1தீமோ 3:2, தீத்து 1:8; 1பேதுரு 4:9)

போதக சமர்த்தன் (Apt to teach) - διδακτικός - didaktikos - 1317

பொருள் - போதக சமர்த்தனான (capable of teaching) (1தீமோ 3:2 2தீமோ 2:24

மதுபானப்பிரியன (winebibber) πάροινος paroinos - 3943

பொருள் - மதுபானப் பிரியனாயிருக்கிற (a winebibber) (1தீமோ 3:2, தீத்து 1:7)

அடிக்கிறவன் (striker) - πλήκτης - pleektees - 4131

ஆண்பால் பெயர்ச்சொல் - அடிக்கிறவன் (quarrelsome; one ready to strike back at those who displease him, persecutor of those who differ with him) (தீத்து 1:7)

இழிவான ஆதாயத்தை இச்சியாதவன் (Not greedy of filthy lucre) - αἰσχροκερδής - aischrokerdees - 146

பொருள் - இழிவான ஆதாயத்தை இச்சியாதவன் (not desirous of base gain; not using wrong methods to raise money to increase his own income (1தீமோ 3:3,8; தீத்து 1:7)

பொறுமையுள்ளவன் (Patient) - ἐπιεικής - epieikees - 1933

பொருள் - சாந்தமான பொறுமையுள்ள (meek, gentle) (1தீமோ 3:3, பிலி 4:5)

சண்டை பண்ணாதவன் (Not a brawler) - ἄμαχος - amachos - 269

பொருள் - சண்டை பண்ணாத (not contentious, but quiet, peaceable) (தீத்து 3:2

பண ஆசையில்லாதவன் (Not covetous) - ἀφιλάργυρος - aphilargyros - 866

பொருள் - பண ஆசையில்லாத (not a lover of money; not desiring the office for the sake of personal gain) (எபி 13:5, லூக்கா 12:15)

3 அதிகாரம்

நூதன சீஷன் (novice) - νεόφυτος - neophytos - 3504

பெயரடை - நூதன புதிய விசுவாசி **(new convert to the faith)**

நல்லொழுக்கம் (gravity) - σεμνότης - semnotees - 4587

பெண்பால் பெயர்சொல் - நல்லொழுக்கம் **(solemnity; dignity; majesty) "gravity"** (1தீமோ 3:4 தீத்து 2:7) **"honesty"** (1தீமோ 2:2)

"அவன் இறுமாப்படைந்து பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு நூதன சீஷனாயிருக்கக்கூடாது" - புதிய விசுவாசியைக் கண்காணியின் ஊழியத்திற்கு அமர்த்தக் கூடாது. அவருக்கு ஆவிக்குரிய அனுபவம் குறைவாகவே இருக்கும். அவர் இன்னும் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெற வேண்டியவர். பொதுவாக ஒருவருக்கு ஒரு பொறுப்பைக் கொடுத்தவுடன் அவர் பெருமைபட்டு இறுமாப்படைந்து விடுவதற்கு வாய்ப்புள்ளது. ஊழியத்தில் ஒருவர் ஒரு பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு முன்பாகவே அவர் பெருமையையும், இறுமாப்பையும் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்க வேண்டும்.

சாத்தான் தன் பெருமையினால் அழிந்துபோனான். இந்த உலகத்தைப் பராமரிக்கும் பொறுப்பு ஆதியிலே லூசிபராகிய சாத்தானுக்குக் கொடுக்கப்பட்டது. ஆதாமின் சிருஷ்டிப்பிற்கு முன்பாக லூசிபர் சிறிது காலம் தன் பணியை ஒழுங்காகச் செய்து வந்தான். ஆனால் பெருமை அவனைச் சூழ்ந்து கொண்டது. தேவனுக்குக் கீழ்படிந்திருப்பதற்குப் பதிலாகத் தேவனுக்குச் சமமாகத் தன்னை உயர்த்தினான். இதன் விளைவாக அவன் தன்னுடைய ஸ்தானத்தை இழந்து போனான். இதுபோலவே கிறிஸ்தவ ஊழியத்தில் பதவியில் இருக்கிறவர்கள் மிகுந்த மனத்தாழ்மையோடும், எச்சரிப்போடும் தங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டும். இல்லையேல் அவர்கள் பெருமையும், இறுமாப்பும் அடைந்து தங்களுக்கு நியமிக்கப்பட்ட ஊழியத்தை இழந்துபோவார்கள்.

இறுமாப்பு (pride) - τυφόομαι typhoomai - 5187

வினைச்சொல் - இறுமாப்பு அடை **(to make dull, senseless, conceited, silly, stupid, absurd) "lifted up"** (1தீமோ 3:6); **"be proud"** (1தீமோ 6:4); **"be high-minded"** (2தீமோ 3:4)

"அவன் நிந்தனையிலும், பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு" - கண்காணிகள் சபைக்கு வெளியே உள்ள ஜனங்களாலும் நற்சாட்சி பெற்றிருக்க வேண்டும். இல்லையேல் அவர்கள் பிசாசின் கண்ணியிலும் நிந்தனையிலும் விழுவதற்கு வாய்ப்புள்ளது. பின்வாங்கிப் போகிறவர்கள் தங்களுடைய பழைய பாவ வாழ்க்கையில் விழுந்து விடுவார்கள். இது தெரிந்து தான் பிசாசானவன் விசுவாசிகளுக்கு பல கண்ணிகளை வைக்கிறான். அவற்றில் பல அவர்களுடைய பழைய பாவ வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டவை.

கண்ணி (snare)- παγίς - pagis - 3803

பெண்பால் பெயர்சொல் - கண்ணி (1தீமோ 3:7, 6:9; லூக்கா 21:35 ரோமர் 11:9; 2தீமோ 2:26)

2. உதவிக்காரரின் பதிமூன்று தகுதிகள்

(அப் 6:3)

1தீமோ 3:8 அந்தப்படியே, உதவிக்காரரும் இருநாக்குள்ளவர்களாயும், மதுபானப் பிரியராயும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாயும் இராமல், நல்லொழுக்கமுள்ளவர்களாயும்,

1தீமோ 3:9 விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்த மனச்சாட்சியிலே காத்துக்கொள்ளுகிறவர்களாயும் இருக்கவேண்டும்.

I தீமோத்தேயு – தொகுப்புரை

3 அதிகாரம்

1தீமோ 3:10 மேலும், இவர்கள் முன்னதாகச் சோதிக்கப்படவேண்டும்; குற்றஞ்சாட்டப்படாதவர்களானால் உதவிக்காரராக ஊழியஞ்செய்யலாம்.

1தீமோ 3:11 அந்தப்படியே ஸ்திரீகளும் நல்லொழுக்கமுள்ளவர்களும் அவதூறு பண்ணாதவர்களும் தெளிந்த புத்தியுள்ளவர்களும் எல்லாவற்றிலேயும் உண்மையுள்ளவர்களுமாயிருக்கவேண்டும்.

1தீமோ 3:12 மேலும், உதவிக்காரரானவர்கள் ஒரே மனைவியையுடைய புருஷருமாய், தங்கள் பிள்ளைகளையும் சொந்தக் குடும்பங்களையும் நன்றாய் நடத்துகிறவர்களுமாயிருக்கவேண்டும்.

1தீமோ 3:13 இப்படி உதவிக்காரருடைய ஊழியத்தை நன்றாய்ச் செய்கிறவர்கள் தங்களுக்கு நல்ல நிலையையும், கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தில் மிகுந்த தைரியத்தையும் அடைவார்கள்.

உதவிக்காரரின் தகுதிகள்

1 நல்லொழுக்கமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

2 இரு நாக்குள்ளவர்களாக இருக்கக்கூடாது.

3 மதுபானப்பிரியராக இருக்கக்கூடாது. (ஏசா 65:8; 1தீமோ 3:8)

4 இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாக இருக்கக்கூடாது. (1தீமோ 3:8, 3:2; 1பேதுரு 5:2)

5 விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்த மனச்சாட்சியிலே காத்துக் கொள்ளுகிறவர்களாக இருக்க வேண்டும். (மாற்கு 9:23; மாற்கு 11:22-24; 16:17-18; 1தெச 1:3; 1தீமோ 3:9)

6 சோதிக்கப்பட வேண்டும். (1தீமோ 3:6, 10)

7 குற்றஞ்சாட்டப்படாதவர்களாக இருக்க வேண்டும்.

8 உதவிக்காரருடைய மனைவிகளும் தகுதியுள்ளவர்களாக இருக்க வேண்டும். 1தீமோ 3:11

9 ஒரே மனைவியையுடைய புருஷனாக இருக்க வேண்டும். (1தீமோ 3:12)

10 தங்களுடைய பிள்ளைகளையும் சொந்த குடும்பங்களையும் நன்றாய் நடத்துகிறவர்களாக இருக்க வேண்டும் (1தீமோ 3:4-5, 12)

நல்லொழுக்கம் (Grave) - σεμνός - semnos - 4586

பொருள் - உண்மையுள்ள நல்லொழுக்கமுள்ள "grave" (1தீமோ 3:4; தீத்து 2:2) "honest" (பிலி 4:8)

இரு நாக்குள்ளவர் (doubletongued) - δίλογος - dilogos - 1351

பொருள் - இரு நாக்குள்ள (liars; saying different things to different persons on the same subject)

குற்றஞ்சாட்டப்படாதவர் (Blameless) - ἀνέγκλητος - anenkleetos - 410

பொருள் - குற்றஞ்சாட்டப்படாதவர் (1தீமோ 3:10) "blameless" (1தீமோ 3:10; 1கொரி 1:8; தீத்து 1:6, 7) "unreprovable" கொலோ 1:22

"உதவிக்காரர்" (deacons) (மத் 20:26)

உதவிக்காரருடைய மனைவிகளின் தகுதிகள்

1 நல்லொழுக்கமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். (1தீமோ 3:11)

2 அவதூறு பண்ணாதவர்களாக இருக்க வேண்டும்.

3 அதிகாரம்

3 தெளிந்த புத்தியுள்ளவர்களாக இருக்க வேண்டும்

4 எல்லாவற்றிலேயும் உண்மையுள்ளவர் களுமாயிருக்க வேண்டும் (1தீமோ 3:11)

அவதூறு பண்ணாதவர்கள் (Not slanderers) διάβολος - diabolos - 1228

பெயரடை - பிசாசான, அவதூறு செய்கிறவன் (devils) யோவான் 6:70

தெளிந்த புத்தியுள்ளவர் (Sober) - νηφαλέος - neephaleos - 3524

பெயரடை - தெளிந்த புத்தியுள்ளவர் மதுபான மயக்கத்தில இராதவர் (not drinkers of wine) (1தீமோ 3:2)

உதவிக்காருடைய ஊழியத்தை நன்றாய் செய்கிறவர்கள் அடைவதும் பெருமதிகள்

1 தங்களுக்கு நல்ல நிலையை அடைவார்கள்

2 கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தில மிகுந்த தைரியத்தை அடைவார்கள்

அடைதல (to preserve) - περιποιέω - peripoieoo - 4046

வினைச்சொல் - சம்பாதி, அடை (to preserve, acqure, keep safe, protect for oneself a good degree, rank among Christians) (1தீமோ 3:13; அப 20:28)

தைரியம் (boldness) - παρρησία - parreesia - 3954

பெண்பால் பெயர்ச்சொல் - வினையடையாகவும் பயனபடும். தாராளம்,வெளிப்படுத்துதல், தெளிவு வெளிப்படை, தைரியம் freedom of speech. "boldness of speech" (2கொரி 7:4); "plainness of speech" (2கொரி 3:12 ; "freely" (அப 2:29);"confidence"(அப் 28:31 எபி 3:6; எபி 10:35; 1யோவான் 2:28 1யோவான் 3:21; 1யோவான் 5:14 "boldness" and "boldly" (யோவான் 7:26; அப 4:13,29,31 எபே 3:12; எபே 6:19; பிலி 1:20 1தீமோ 3:13; பிலே 1:8; எபி 4:16 எபி 10:19; 1யோவான் 4:17, "openly" (மாற்கு 8:32, யோவான் 7:4,13; யோவான் 11:54 யோவான் 18:20; கொலோ 2:15 "plainly" (யோவான் 10:24, யோவான் 11:14; யோவான் 16:25,29

V. ஊழியக்காரருக்கு கட்டளைகள்

1. ஊழியக்காரர்கள் முன்மாதிரியாக ஜீவிக்க வேண்டும்

1தீமோ 3:14 நான் உன்னிடத்திற்குச் சீக்கிரமாய் வருவேனென்று நம்பியிருக்கிறேன்

1தீமோ 3:15 தாமதிப்பேனாகில தேவனுடைய வீட்டிலே நடக்கவேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன், அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது.

"நான் உன்னிடத்திற்குச் சீக்கிரமாய் வருவேனென்று நம்பியிருக்கிறேன் பவுல தீமோத்தேயுவினிடத்தில் சீக்கிரமாய் வர வேண்டுமென்று விரும்புகிறார் அவ்வாறு வர முடியாமல் போனாலும் சபையை நன்றாக நடத்துவதற்குரிய பயிற்சிகளையும், ஆலோசனைகளையும் தீமோத்தேயு பெற்றிருக்கிறார் (1தீமோ 3:14-15)

புதிய ஏற்பாட்டுச் சபைக்கு வழங்கப் பட்டிருக்கும் பெயர்கள்

1. தேவனுடைய வீடு (1தீமோ 3:15, எபே 2:19-22; கலா 6:10

2 ஜீவனுள்ள தேவனுடைய சபை (1தீமோ 3:15; எபே 3:15; எபே 5:3

3 அதிகாரம்

1 சத்தியத்திற்குத் தூணும் ஆதாரமும் 1தீமோ 3:15-16

சபை தேவனுடைய தலைமைத்துவத்தை வலியுறுத்துகிறது. (1கொரி 11:3; எபே 1:10) லூசிபர் இந்தச் சத்தியத்தில் நிலைத்திருக்க வில்லை. (யோவான் 8:44; ஏசா 14:12-14 எசே 28:11-17) பிசாசானவன் சபையின் சத்தியத்தை மறுதலிக்கிறான் (யோவான் 2:18-23) நூற்காலத்தில சபையானது இந்தச் சத்தியத்தை வெளிப்படுத்துகிறது. (எபே 3:10 எபே 4:11-16. எபே 5:24; எபி 13:7,17; 1பேதுரு 5:1-6)

ஒப்புக்கொள்ளுகிறபடியே (without controvers) - `ομολογουμένως-homologoumenoos-3672

வினையடை - ஒப்புக்கொள்ளுகிறபடியே (confessedly)

2. ஊழியக்காரரின் செய்தி - மத் 4:23; 28:20; மாற்கு 16:15 1கொரி 1:18-27; 2:1-4; 15:1-28 2தீமோ 2:15, 3:16-17)

1தீமோ 3:16 அன்றியும் தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக் கொள்ளுகிறபடியே மகாமேன்மை யுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார் ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப் பட்டார்

தேவபக்திக்குரிய இரகசியத்தின் அம்சங்கள்

1 மகாமேன்மையுள்ளது (1தீமோ 3:16, யோவான் 1:16,17; எபே 3:19; கொலோ 1:19 கொலோ 2:9)

2 தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார் (1தீமோ 3:16; ஏசா 7:14; ஏசா 9:6-7; மத் 1:18-25; லூக்கா 1:26-56, லூக்கா 2:1-39; யோவான் 1:14 ரோமர்8:3; கலா 4:4. எபி 1:5,6. எபி 2:6,18

3 ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப் பட்டார் (1தீமோ 3:16 அப 2:22-28,36; அப 3:14-18 ரோமர் 1:3-4; எபே1:20-23;பிலி 2:5-11 கொலோ1:15-24; கொலோ 2:14-17, எபி 1:3-9, எபி 2:5-18; 1பேதுரு 3:22

4 தேவதூதர்களால் காணப்பட்டார் (1தீமோ 3:16 2கொரி 4:9 எபே 3:9-10 1பேதுரு 1:10-12)

5 புற ஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார் (1தீமோ 3:16 1கொரி 12:13; கலா 3:28 எபே 2:11-18 எபே 3:1-6 கொலோ 3:11

6 உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார் (1தீமோ 3:16; மத் 4:23-24; மத் 9:35 லூக்கா 4:16-19; எபே 2:17)

7 மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப் பட்டார் (1தீமோ 3:16; லூக்கா 24:51 எபே 1:20-23; பிலி 2:9-11

தரிசனம் கொடு (Seen of angels) - ὀπτάνομαι - optanomai - 3700

வினைச்சொல - தரிசனம் கொடு (to discern clearly)

ஏறெடு (received up) - ἀναλαμβάνω - analambanoo - 353

வினைசசொல - எடு, ஏற்று, கூட்டு, பிடி ஏறெடு "received up" (1தீமோ 3:16 மாற்கு 16:19, லூக்கா 9:51 அப் 10:16), "taken up" (அப 1:2,11,22 அப் 7:43), and "take" (அப 20:13-14, அப 23:31 எபே 6:13,16; 2தீமோ 4:11

தேவபக்தி (godliness) - εὐσέβεια - eusebeia 2150

பெண்பால் பெயர்ச்சொல் - பக்தி, தேவபக்தி(reverence toward God, piety; religion) "godliness" (1தீமோ 3:16; 1தீமோ 2:2; 1தீமோ 4:7-8; 1தீமோ 6:3-11; 2தீமோ 3:5, தீத்து 1:1;2பேதுரு 1:3-7, 2பேதுரு 3:11 "holiness" (அப் 3:12)

4 அதிகாரம்

3. ஊழியக்காரருக்கு எதிர்ப்பு - பிற்காலங்களிலே வரும் பின்மாற்றமும் பிசாசுகளின் உபதேசங்களும் - (2தீமோ 3:1-8 4:3-4; மத் 10:11-22; 24:24 2கொரி 11:13-15; 2பேதுரு 2)

தீமோ 4:1 ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து விசுவாசத்தைவிட்டு விலகிப் போவார்கள்

தீமோ 4:2 விவாகம் பண்ணாதிருக்கவும்.

தீமோ 4:3 விசுவாசிகளும் சத்தியத்தை அறிந்தவர்களும் ஸ்தோத்திரத்தோடே அநுபவிக்கும்படி தேவன் படைத்த போஜன பதார்த்தங்களை விலக்கவும் வேண்டுமென்று அந்தப் பொய்யர் கட்டளையிடுவார்கள்

1தீமோ 4:4 தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது. ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல

1தீமோ 4:5 அது தேவவசனத்தினாலும் ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படும்

வெளிப்படையாய் (expressly) - ῥητῶς - rheetoos - 4490

வினையடை - வெளிப்படையாய் (manifestly; in express words; openly)

"பிற்காலங்களைக்" குறிக்கும் வாக்கியங்கள்

1 பிற்காலங்கள் (Latter times) - ஆயிரம் வருஷ அரசாட்சிக்கு முன்பு வரும் காலத்தின் கடைசி வருஷங்கள் (1தீமோ 4:1)

2 கடைசி வருஷங்கள் (Latter years) - அர்மெகதோனும் இக்காலத்தின் இறுதியும் (எசே 38:8-16)

3 பிற்காலம் (Latter days) - வருங்கால உபத்திரவகாலம் (எண் 24:14; உபா 4:30; உபா 31:29 எரே 23:20; எரே 30:24; எரே 48:47 எரே 49:39; தானி 2:28; தானி 10:14)

4 கடைசி நாள் (Latter day) - ஆயிரம் வருஷ அரசாட்சி (யோபு 19:25)

5 கடைசி நாட்கள் (Latter days) - ஆயிரம் வருஷ அரசாட்சி (ஓசி 3:5)

6 முடிவு காலம் (Last days) - ஆயிரம் வருஷ அரசாட்சிக்கு முந்தைய காலத்தின் முடிவு (தானி 8:19 2தீமோ 3:1; யாக் 5:3 2பேதுரு 3:3; யூதா 1:18)

7 கடைசி நாட்கள் (Last day) - சபை எடுத்துக் கொள்ளப்படுதல் - ஆயிரம் வருஷ அரசாட்சிக்கும், இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கும் குறைந்த பட்சம் ஏழு வருஷத்திற்கு முந்தியது (யோவான் 6:39, 40 44,54; யோவான் 11:24)

8 கடைசி நாட்கள் (Last days) - மகா உபத்திரவகாலம் அல்லது இக்காலத்தின் கடைசி ஏழு வருஷங்கள் (அப 2:16-21)

9 கடைசி நாட்கள் (Last days) - சபையை எடுத்துக் கொள்வதற்கு இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகை. (எபி 1:1-2)

10 கடைசி காலங்கள் (Last times) - சபையை எடுத்துக் கொள்வதற்கு இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகை (1பேதுரு 1:20)

11 கடைசி காலம் (Last time) - அப்போஸ்தலர்களின் காலங்களும், சபைக் காலம் முழுவதும் (1யோவான் 2:18)

12 கடைசிக் காலம் (Last time) - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை (1பேதுரு 1:5)

I தீமோத்தேயு – தொகுப்புரை

4 அதிகாரம்

3 கடைசி நாட்கள் (Last days) - ஆயிரம் வருஷ அரசாட்சி (ஆதி 49:1 ஏசா 2:1; மீகா 4:1)

14 கடைசி நாள் (Last day) - ஆயிரம் வருஷ அரசாட்சியின் முடிவு

தீர்க்கதரிசன எண் - 1

"ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவி கொடுத்து விசுவாசத்தைவிட்டு விலகிப்போவார்கள் ..." 1 தீமோ 4:1-5 இந்தத் தீர்க்கதரிசனம் இன்றும் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

பொய்யருடைய உபதேசங்களும், அவர்களுடைய மாயத்தினாலே வஞ்சிக்கப்படுகிறவர்களுக்கு நேரிடும் காரியங்களும்

1 விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள் ஒருவர் விசுவாசத்திலிருந்து விலகிப் போக முடியும் தன்னிடத்தில் இல்லாத ஒரு காரியத்திலிருந்து யாராலும் விலகிப்போக முடியாது. விசுவாசம் எல்லாரிடத்திலும் இல்லை என்று பவுல் கூறுகிறார் (2 தெச 3:2) ஆகையினால் விசுவாசிகளாக இருக்கிறவர்களால் மட்டுமே தங்களுடைய விசுவாசத்திலிருந்து விலகிப்போக முடியும் ஆகையினால் விசுவாசிகள் மிகுந்த எச்சரிப்போடு தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தை ஜீவிக்க வேண்டும் கவனமில்லாமல் ஜீவிக்கும் விசுவாசிகள் விசுவாசத்தை விட்டும், தேவனைவிட்டும் பிரிந்து போய்விடுவார்கள் (எபி 3:12)

2 வஞ்சிக்கிற ஆவிகளுக்குச் செவி கொடுப்பார்கள் இந்த ஆவிகள் மனுஷரை வஞ்சிக்கும் பிசாசுகள் இவை துன்மார்க்கத்திற்கு மனுஷரை அழைத்துச் செல்லும் சாத்தான் பல பிசாசுகளுக்கு மனுஷரை வஞ்சிக்கும் வேலையைக் கொடுத்திருக்கிறான்

3 பிசாசுகளின் உபதேசங்களுக்குச் செவிகொடுப்பார்கள் - தேவன்மீது மனுஷன் வைத்திருக்கும் விசுவாசத்திலிருந்து அவனைப் பிரித்து அவனை வழுவிலகச் செய்வது பிசாசுகளின் பிரதான வேலை விசுவாசத்தை விட்டு விலகும்போது அவன் தன்னுடைய பரிசுத்த ஜீவியத்தை இழந்துபோகிறான் தன்னுடைய விலையேறப்பெற்ற ஆத்துமாவை அழித்துப் போடுகிறான் கள்ளபோதகர்களும் தேவனால் வெளிப்படுத்தப்படாத சத்தியங்களைத் தேவன் வெளிப்படுத்தியது என்று கூறுகிறவர்களும் பிசாசின் பிரதிநிதிகள் ஆவார்கள் (2 கொரி 11:14-15) தேவன் இருக்கிறார் என்பதை மறுதலிப்பதும் கிறிஸ்துவின் தெய்வீக தன்மையைப் புறக்கணிப்பதும் பிசாசின் உபதேசங்களாகும்

4 மாயத்தினாலே பொய்யைப் பேசுவார்கள் - (1 தீமோ 4:2 தேவனுடைய வெளிப்பாடு தங்களிடம் இல்லாதிருந்தும் தாங்கள் கூறுவது தேவனுடைய வெளிப்பாடு என்று சிலர் பொய் கூறுகிறார்கள்

5 அவர்கள் மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யர் (1 தீமோ 4:2 பழங்காலத்தில் குற்றவாளிகளுக்குச் சூடான இரும்பினால் சூடு போடுவது வழக்கம் மற்றவர்களிடமிருந்து இவர்களை வேறுபிரித்துக் காண்பிப்பதற்காக இவ்வாறு குற்றவாளிகளுக்குச் சூடுபோட்டார்கள்

6 விவாகம் பண்ணாதிருக்க வேண்டும் என்று கட்டளையிடுவார்கள் (1 தீமோ 4:3 வஞ்சிக்கிற ஆவியையுடையவர்கள் திருமணம் தேவையில்லை என்று கூறிவந்தார்கள் மனம் போனபோக்கிலே எப்படியும் வாழலாம் யாருடனும் வாழலாம் என்பது இவர்களுடைய உபதேசமாகும். வேதாகமத்தில் திருமண உறவு அங்கீகரிக்கப்பட்ட ஓர் உறவாகும். விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும் விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருக்க வேண்டும். (எபி 13:4; 1 கொரி 7)

I தீமோத்தேயு – தொகுப்புரை

4 அதிகாரம்

7 தேவன் படைத்த போஜன பதார்த்தங்களை விலக்க வேண்டும் என்பார்கள் (1தீமோ 4.3) ஒருசில போஜனத்தைத் தீட்டானது என்று கூறி ஒருசிலர் விலக்கி ஒதுக்குகிறார்கள் (1தீமோ 4.3-4) புதிய உடன்படிக்கையில வேத வாக்கியத்தின் பிரகாரம் எந்த போஜனத்தையும்தீட்டானது என்றுகூறி ஒதுக்குவதற்கு ஆதாரம் இல்லை (ஆதி 9.1-7; ரோமர் 14.1-6)

விலகிப்போ (depart from) - ἀφίστημι - aphisteemi - 868

வினைச்சொல் - நீங்கு, விலகிப்போ பின்வாங்கிப்போ, அகன்றுபோ, இடு விட்டுவிடு, விட்டுப்பிரி, விட்டுவிலகு (to put away; remove; separate; to revolt from) "depart from" (1தீமோ 4.1; லூக்கா 2.37 லூக்கா 4.13 லூக்கா 13.27, அப 12.10 அப 15.38; அப 19.9; அப 22.29, 2கொரி 12.8 2தீமோ 2.19; எபி 3.12). "refrain from" (அப 5.38); "fall away" லூக்கா 8.13) "withdraw" (1தீமோ 6.5

வஞ்சிக்கிற (seducing) - πλάνος - planos - 4108

பெயரடை - சத்துருவின்பட்ட வஞ்சிக்கிற (leading astray) "seducing" 1தீமோ 4.1) "deceiver" (மத் 27.63, 2கொரி 6.8, 2யோவான் 1.7)

பொய்யான (Speaking lies) - ψευδολόγος - pseudologos - 5573

பெயரடை - பொய்யான (speakers of lies in pretended revelations; putting on an act of self denial and mortification of the flesh in order to prove their false doctrines to be truth)

சூடு (hot iron) - καυστηριάζω - kausteeriazoo 2743

வினைச்சொல் - சூடு (to sear with a red hot iron; to brand, to be seared in conscience)

"ஸ்தோத்திரத்தோடே அநுபவிக்கும்படி தேவன் படைத்த போஜன பதார்த்தங்கள்" - தேவன் விலங்குகளைச் சிருஷ்டித்ததின் நோக்கமே மனுஷன் அவற்றைப் புசித்து அநுபவிக்க வேண்டும் என்பதற்காகத்தான் ஆகையினால் தேவன் படைத்த எந்த போஜனபதார்த்தங்களையும் நாம் ஸ்தோத்திரத்தோடே அநுபவிக்கலாம் (ஆதி 1.29-30; ஆதி 9.3-4)

"தேவன் படைத்ததெல்லாம் நலமாயிருக்கிறது ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல" - இது ஒரு புதிய வெளிப்பாடல்ல (ஆதி 9.3-4; அப 10.14,28 அப 11.8; ரோமர் 14.14) இஸ்ரவேலருக்கு ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகவே ஒருசில விலங்குகளைப் புசிக்கக்கூடாது என்று தேவன் தடைபண்ணியிருந்தார் (லேவி 11 உபா 14)

"அது தேவவசனத்தினாலும் ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படும்" தேவனுடைய கட்டளையின் பிரகாரம் போஜனமானது வேறுபிரிக்கப்பட்டு பரிசுத்தமாக்கப்படுகிறது. ஆதி 1.29 ஆதி 9.3

4. நல்ல ஊழியக்காரனாக எவ்வாறு இருப்பது - (2தீமோ 2.15, 3.16-17, 2கொரி 2.14-7.16

1தீமோ 4.6 இவைகளை நீ சகோதரருக்குப் போதித்துவந்தால், விசுவாசத்திற்குரிய வார்த்தைகளிலும் நீ அநுசரித்த நற்போதகத்திலும் தேறினவனாகி, இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல ஊழியக்காரனாயிருப்பாய்.

1தீமோ 4.7 சீர்கேடும் கிழவிகள் பேச்சுமாயிருக்கிற கட்டுக்கதைகளுக்கு விலகி, தேவபக்திக்கேதுவாக முயற்சி பண்ணு.

I தீமோத்தேயு – தொகுப்புரை

4 அதிகாரம்

1தீமோ 4:8 சரீரமுயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது; தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும் இனிவரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது.

1தீமோ 4:9 இந்த வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமாயிருக்கிறது.

1தீமோ 4:10 இதினிமித்தம் பிரயாசப்படுகிறோம், நிந்தையும் அடைகிறோம்; ஏனெனில் எல்லா மனுஷருக்கும், விசேஷமாக விசுவாசிகளுக்கும் இரட்சகராகிய ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறோம்.

1தீமோ 4:11 இவைகளை நீ கட்டளையிட்டுப் போதித்துக்கொண்டிரு.

நல்ல ஊழியக்காரன் செய்யும் காரியங்கள்

1 மெய்யான உபதேசங்களைக் காத்துக் கொள்ளவேண்டும். (1தீமோ 1:3)

2 வேற்றுமையான உபதேசங்களைப் போதிக்கக்கூடாது. (1தீமோ 1:4, 1தீமோ 4:7, 1தீமோ 6:20)

3 சுத்த இருதயத்தை உடையவராக இருக்க வேண்டும் (1தீமோ 1:5)

4 நல்மனச்சாட்சி உடையவராக இருக்க வேண்டும் (1தீமோ 1:5,19)

5 மாயமற்ற விசுவாசம் உடையவராக இருக்க வேண்டும். (1தீமோ 1:5,19)

6 அழைப்புக்கு உண்மையுள்ளவராக இருக்க வேண்டும் (1தீமோ 1:12)

7 பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட்டிருக்க வேண்டும். (1தீமோ 1:15)

8 மற்றவர்களுக்குத் திருஷ்டாந்தம் உண்டாகும் பொருட்டு முன்மாதிரியாக இருக்க வேண்டும் (1தீமோ 1:16, 1தீமோ 4:12)

9 நல்ல போராட்டம் பண்ண வேண்டும். (1தீமோ 1:18)

10 எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும், ஜெபங்களையும், வேண்டுதல்களையும், ஸ்தோத்திரங்களையும் பண்ண வேண்டும். (1தீமோ 2:1-8)

11 கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ண வேண்டும். (1தீமோ 2:2)

12 எல்லா பக்தியோடும், நல்லொழுக்கத்தோடும் ஜீவனம் பண்ண வேண்டும் (1தீமோ 2:2)

13 கண்காணிக்குரிய தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்.

14 தேவனுக்கு உரியவராக நடந்து கொள்ள வேண்டும். (1தீமோ 3:15)

15. சத்தியத்தின் அடிப்படைகளைக் காத்துக் கொள்ள வேண்டும் (1தீமோ 3:16)

16 பொய்யருடைய உபதேசங்களையும் அவர்களுடைய மாயத்தினாலும் வஞ்சிக்கப்படுகிறவர்களுக்கு நேரிடும் காரியங்களையும் குறித்து மனுஷருக்கு எச்சரிக்க வேண்டும்.

17 சகோதரருக்குச் சத்தியத்தைப் போதித்து நினைவுபடுத்த வேண்டும் (1தீமோ 4:6)

18 விசுவாசத்தையும் நல்ல உபதேசத்தையும் காத்துக் கொள்ள வேண்டும். (1தீமோ 4:6)

19 சரீர முயற்சிகளைவிட தேவபக்திக்கு முக்கியத்துவம் தரவேண்டும் (1தீமோ 4:7-8)

20 தேவபக்திக்கு ஏதுவாக முயற்சி பண்ண வேண்டும். (1தீமோ 4:10)

21 வாசிக்கிறதிலும் புத்தி சொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். (1தீமோ 4:13)

22 வரங்களை முறைப்படி பயன்படுத்த வேண்டும். (1தீமோ 4:14)

I தீமோத்தேயு – தொகுப்புரை

4 அதிகாரம்

23 தனக்கு நியமிக்கப்பட்டிருக்கிற கடமைகளைச் சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும். (1தீமோ 4:15-16)

24 எல்லாப் பிரிவினரிடமும் நீதியாய் நடந்து கொள்ள வேண்டும். (1தீமோ 5:1-6:2)

25 தன்னைச் சுத்தவானாகக் காத்துக் கொள்ள வேண்டும். (1தீமோ 5:22)

26 போதும் என்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம் என்று எண்ண வேண்டும். (1தீமோ 6:6-8)

27 பண ஆசைகளிலிருந்தும் மாமிசத்தின் இச்சைகளிலிருந்தும் விலகியிருக்க வேண்டும். (1தீமோ 6:9-11)

28 ஆவியின் கனியை அடையும்படி நாடவேண்டும். (1தீமோ 6:11)

29 விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடி நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்ள வேண்டும். (1தீமோ 6:12)

30 தேவனுக்கு முன்பாகக் குற்றமற்றவராகவும், மனுஷருக்கு முன்பாக உண்மையுள்ளவராகவும் ஜீவிக்க வேண்டும் (1தீமோ 6:14 19)

"கிழவிகள் பேசும் புனைக்கதைகளைப்போன்ற கட்டுக்கதைகள்" யூதருடைய இலக்கியங்களில் சில கட்டுக்கதைகளையே கூறுகின்றன. இவை வேடிக்கையானவை. நம்பமுடியாதவை. (1தீமோ 1:4)

முயற்சிபண்ணு (exercise) - γυμνάζω - gymnazoo - 1128

வினைச்சொல் - முயற்சிபண்ணு. பழகு. எபி 5:14; எபி 12:11, 2பேதுரு 2:14 (1தீமோ 4:7-8, 1கொரி 9:24-27)

பிரயோஜனமுள்ளது (profitable) ὠφέλιμος - oophelimos - 5624

பெயரடை - பிரயோஜனமான நற்கிரியையான (1தீமோ 4:8 2தீமோ 3:16, தீத்து 3:8)

தேவபக்தியின் பிரயோஜனம்

1. எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது. (2பேதுரு 1:3)
2. இந்த ஜீவனுக்குப் பிரயோஜனமுள்ளது (மாற்கு 10:30-31)
3. பின்வரும் ஜீவனுக்கும் பிரயோஜனமுள்ளது. (ரோமர் 6)

"இனிவரும் ஜீவனுக்கும்" - இந்த வாக்கியம் நித்திய ஜீவனைக் குறிக்கும். இரட்சிக்கப்பட்டவர்கள் இந்த ஜீவியத்தின் முடிவில் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வார்கள் (மத் 7:13-14 மாற்கு 10:29-30 ரோமர் 6:22-23 ரோமர் 8:12-13 கலா 6:7-8) நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவன் கூறியிருக்கும் நிபந்தனைகளுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும். (யோவான் 6:27)

"இந்த வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமாயிருக்கிறது" - (1தீமோ 1:15)

நித்திய ஜீவன்

1. கிறிஸ்துவிடமிருந்து வருகிறது (யோவான் 6:37 45,65)
2. அவருடைய சரீரத்தைப் புசிப்பது அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணுவது (யோவான் 6:50,51,53,58
3. கிரியை நடப்பித்தல் (யோவான் 6:27
4. அறுவடை - ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுதல் (யோவான் 4:35-38
5. இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுத்தல் (யோவான் 12:25)
6. தேவனையும் கிறிஸ்துவையும் தெரிந்து கொள்ளுதல் (யோவான் 17:2-3
7. சரியான வாசலில் உட்பிரவேசித்தல் (மத் 7:13-14)
8. தீங்கு செய்யாதிருத்தல் (மத் 18:8-9
9. கற்பனைகளைக் கைக்கொள்ளுதல் (மத் 19:17)

I தீமோத்தேயு - தொகுப்புரை

4 அதிகாரம்

10 எல்லாவற்றையும் வெறுத்தல் மத் 19:27-29 மாற்கு 10:28-30 லூக்கா 18:28-30

11 பாவத்திலிருந்து விலகி ஜீவித்தல் ரோமர் 5:21; ரோமர் 6:16-23 ரோமர் 8:1-13; தீத்து 2:11-14)

12 நற்கிரியைகளைத் தொடர்ந்து செய்து நித்திய ஜீவனை நாடுதல் ரோமர் 2:7

13 ஆவிக்காக விதைத்தல் (கலா 6:7-8)

14 விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடுதல் (1தீமோ 6:12,19)

15 தெளிந்த புத்தியுள்ளவர்களாக இருத்தல் தீத்து 1:2 தீத்து 3:7 1பேதுரு 1:5,9,13 ரோமர் 8:24)

16 சோதனைகளைத் தாங்கிக் கொள்ளுதல் யாக் 1:12)

17 நித்திய ஜீவனின் வாக்குத்தத்தம் நமக்குள் இருக்க வேண்டும் - தேவனிடத்திலும் கிறிஸ்துவிடத்திலும் நாம் தொடர்ந்து இருக்க வேண்டும். (1யோவான் 2:24-25, 1யோவான் 5:11-20)

18 எல்லோரையும் நேசித்தல் (1யோவான் 3:14 15)

19 தேவனுடைய அன்பில் நம்மைக் காத்துக்கொண்டு, நித்திய ஜீவனை நோக்கிப் பார்த்தல் (யூதா 1:20-24)

20 பாவத்தை மேற்கொள்ளுதல் (வெளி 2:7,11,17,26; வெளி 3:5,12,21)

21 மரணம் வரையிலும் உண்மையுள்ளவர்களாக இருத்தல் (வெளி 2:10, எபி 12:14-15)

22 சுவிசேஷத்தை விசுவாசித்து அதற்குக் கீழ்ப்படிதல் யோவான் 3:15 19:36 யோவான் 4:14; யோவான் 5:24 யோவான் 6:40,47,54; 2கொரி 5:17, ரோமர் 1:5

23 மறுபடியும் பிறத்தல், கிறிஸ்துவின் சத்திய வசனத்தைக் கேட்டு, அதற்குக் கீழ்ப்படிதல் யோவான் 3 யோவான் 10:27-29

நாம் இப்போது நித்திய ஜீவனைப் பெற்றுக் கொண்டு, அதைக் காத்துக்கொள்ள வேண்டும் மேலே கூறப்பட்டிருக்கும் நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். நாம் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்க வேண்டும். (மத் 7:13, மத் 18:8-9; மத் 19:17; ரோமர் 6:22); நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள வேண்டும். (ரோமர் 6:23; யாக் 1:12; 1பேதுரு 1:13 வெளி 2:10); ஆத்துமாக்களை அறுவடை செய்ய வேண்டும். (கலா 6:7-8); வரப்போகும் உலகத்தில் நாம் நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ள வேண்டும் (மத் 19:27-29; மாற்கு 10:28-30 லூக்கா 18:28-30 ஜீவியத்தின் முடிவில் நித்திய ஜீவன் பலனாகக் கிடைக்கும் (ரோமர் 6:22, யோவான் 3:16)

"எல்லா மனுஷருக்கும்....இரட்சகராகிய ஜீவனுள்ள தேவன்" - (1தீமோ 1:1

"எல்லா மனுஷருக்கும், விசேஷமாக விசுவாசிகளுக்கும்" - இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையிலே தமது திருஇரத்தத்தைச் சிந்தி மார்த்து மனுக்குலத்தார் அனைவருக்கும் இரட்சிப்பை அருளியிருக்கிறார் ஆயினும் விசுவாசத்தினால் இதை அங்கீகரிக்கிறவர்கள் மட்டுமே இரட்சிக்கப்படுகிறார்கள் மற்றவர்கள் இன்னும் இரட்சிக்கப்படவில்லை (யோவான் 3:16)

5. ஊழியக்காரர்கள் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும் (3:1 7

1தீமோ 4:12 உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும் நடக்கையிலும், அன்பிலும் ஆவியிலும், விசுவாசத்திலும் கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு.

I தீமோத்தேயு – தொகுப்புரை

4 அதிகாரம்

மாதிரி (example) - τυπικῶς - typikoos - 5179

ஆண்பால் பெயர்ச்சொல் – சொரூபம் மாதிரிநிரூபம் திருஷ்டாந்தம் (பிலி 3:17)

முன்மாதிரியாக இருக்க வேண்டிய காரியங்கள்

1. வார்த்தை
2. நடக்கை
3. அன்பு
4. ஆவி
5. விசுவாசம்
6. கற்பு

"வார்த்தை" - சத்தியத்தை உபதேசம் பண்ண வேண்டும். ஆத்துமாவை இரட்சிக்கும் தேவனுடைய வார்த்தையையே பிரசங்கம் பண்ண வேண்டும். (ரோமர் 1:16. ரோமர் 10:17; 2தீமோ 3:16; யாக் 1:18 1பேதுரு 1:23)

"ஆவி" இந்த வார்த்தை பரிசுத்த ஆவியைக் குறிக்குமென்றால் இது ஆவியானவருடைய வரங்களைப் பயன்படுத்துவதையே குறிக்கும் அதனுடன் நம்முடைய ஜீவியத்திலும், நடத்தையிலும் பரிசுத்த ஆவியானவருக்கு ஒப்புக்கொடுத்து ஜீவிக்க வேண்டியதையும் குறிக்கும். (2கொரி 12 கலா 5:22 23) இந்த வார்த்தை மனுஷனுடைய ஆவியைக் குறிக்குமென்றால், நாம் எந்த விதத்தில் எல்லாக் காரியங்களையும் செய்ய வேண்டும் என்பதைக் குறிக்கும்

நடக்கை (behavior) ἀναστροφή - anastrophee - 391

பெண்பால் பெயர்ச்சொல் – நடக்கை நடத்தை, நடந்துகொள்ளுதல் (the whole conduct of life in domestic, public relations; behavior) "conversation" (1தீமோ 4:12; கலா 1:13; எபே 4:22 எபி 13:7; யாக் 3:13; 1பேதுரு 1:15,18, 1பேதுரு 2:12; 1பேதுரு 3:1,2,16, 2பேதுரு 2:7; 2பேதுரு 3:11

(conversation) ἀναστρέφω anastrephoo - 390

வினைச்சொல் - சஞ்சரி, கவிழ்த்துப்போடு, திரும்பிவா, நடக்கவேண்டிய பிரகாரமாக நட (2கொரி 1:12)

அன்பு (charity)- ἀγάπη -agapee - 26

பெண்பால் பெயர்ச்சொல் - அன்பு (love) (1கொரி 13:4)

(அ) மேன்மையான கிறிஸ்தவ அன்பு - 1கொரி 13:1

(ஆ) தேவன் மனிதர் மீது வைக்கும் அன்பு ரோம. 5:8

(இ) மனிதன் தேவன் மீது காட்டும் அன்பு - யோவா 1:2, 2:5

(ஈ) மனிதன் மனிதனிடம் காட்டும் அன்பு - யோவா 13:35

(உ) பன்மையில் - அன்பின் விருந்துகள், கிறிஸ்தவ ஐக்கிய சிறந்து விளங்க அன்று பகரும் விருந்து யூதா 12

விசுவாசம் (faith) - πιστός - pistos - 4103

பெயரடை - உண்மையான, உண்மையுள்ள நிச்சயமான விசுவாசமுள்ள (often used in the sense of faithfulness) 2தெச 3:2

கற்பு (purity) - ἁγνεία hagneia - 47

பெண்பால் பெயர்ச்சொல் - கற்பு (1தீமோ 4:12, 5:2)

6. **ஊழியக்காரருக்கு ஒன்பது கட்டளைகள்** - (3:1-7, 14-16, 4:1-12; 2தீமோ 2:15)

1தீமோ 4:13 நான் வருமளவும் வாசிக்கிறதிலும் புத்திசொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிரு.

I தீமோத்தேயு – தொகுப்புரை

4 அதிகாரம்

1தீமோ 4:14 மூப்பராகிய சங்கத்தார் உன்மேல் கைகளை வைத்தபோது தீர்க்கதரிசனத்தினால் உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப் பற்றி அசதியாயிராதே.

1தீமோ 4:15 நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி இவைகளையே சிந்தித்துக் கொண்டு இவைகளிலே நிலைத்திரு.

1தீமோ 4:16 உன்னைக் குறித்தும் உபதேசத்தைக்குறித்தும் எச்சரிக்கையாயிரு. இவைகளில் நிலைகொண்டிரு. இப்படிச் செய்வாயானால் உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக்கொள்ளுவாய்.

தீமோத்தேயுவிற்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1 வாசிக்கிறதில் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும் (1தீமோ 4:13)

2 புத்தி சொல்லுகிறதில் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். (1தீமோ 4:13)

3. உபதேசிக்கிறதில் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். (1தீமோ 4:13)

4 ஆவிக்குரிய வரங்களைப் பற்றி அசதியாய் இருக்கக்கூடாது. (1தீமோ 4:14)

5. ஆவிக்குரிய காரியங்களைச் சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும். (1தீமோ 4:15)

6 தேறுகிறது யாவருக்கும் விளங்க வேண்டும். (1தீமோ 4:15)

7 உன்னைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும். (1தீமோ 4:16)

8 உபதேசத்தைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும். (1தீமோ 4:16)

9 அந்த உபதேசங்களில் நிலைகொண்டிருக்க வேண்டும். (1தீமோ 4:16)

புத்திசொல்லுதல் (exhortation) - παράκλησις parakleesis- 3874

பெண்பால் பெயர்ச்சொல் - ஆறுதல், புத்திசொல்லுதல் (அப் 13:15)

உபதேசம் (doctrine) - διδασκαλία didaskalia 1319

பெண்பால் பெயர்ச்சொல் - உபதேசம், போதனை teaching (ரோமர் 12:7), learning (ரோமர் 15:4); doctrine (மத் 15:9; மாற்கு 7:7; எபே 4:14 கொலோ 2:22; 1தீமோ 1:10 1தீமோ 4:1,6,13,16; 1தீமோ 5:17 1தீமோ 6:1, 3; 2தீமோ 3:10,16 2தீமோ 4:3 தீத்து 1:9; தீத்து 2:1,7,10

அசதியாயிரு (Neglect) - ἀμελέω - ameleoo - 272

வினைச்சொல் - அசட்டைப் பண்ணு, அசதியாயிரு, கவலையற்றிரு, புறக்கணி (மத் 22:5; 1தீமோ 4:14 எபி 2:3; எபி 8:9; 2பேதுரு 1:12)

வரம்(gift)-χάρισμα-charisma - 5486

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - வரம், கிருபை, தயவு (grace, favor) "free gift" (ரோமர் 5:15-16), "gift" (ரோமர் 1:11 ரோமர் 6:23 ரோமர் 11:29, ரோமர் 12:6 1கொரி 1:7 1கொரி 7:7; 1கொரி 12:4,9,28,30,31 2கொரி 1:11 1தீமோ 4:14;2தீமோ1:6 1பேதுரு 4:10)

தீமோத்தேயுவிற்குக்கொடுக்கப்பட்டிருக்கும் தேவனுடைய வரங்களையும் தேவனுடைய கிருபைகளையும் இந்த வார்த்தை குறிப்பிடுகிறது. இதனால் பலவற்றைச் செய்த ஊழியங்களைத் தீமோத்தேயுவினாலும் செய்யமுடியும் (1தீமோ 4:14 2தீமோ 1:6 1கொரி 16:10) இந்த வரம் மூப்பராகிய சங்கத்தார் தங்கள் கைகளை தீமோத்தேயுவின்மீது வைத்து அவனுக்கு தீர்க்கதரிசனம் கூறியபோது வந்தது. தீமோத்தேயு தேவனால் பயன்படுத்தப்படுவான் என்பதை அவனுக்குக்கூறப்பட்ட தீர்க்கதரிசனம் முன்னறிவித்தது (1தீமோ 1:18; 1தீமோ 4:14)

மூப்பர் (presbytery) πρεσβυτέριον presbyterion 4244

பால்வேறுபாடற்ற பெயர்ச்சொல் மூப்பர் (அப் 22:5)

I தீமோத்தேயு – தொகுப்புரை

5 அதிகாரம்

VI. சமுதாயத்திலுள்ள வெவ்வேறு பிரிவினர்

1. புருஷரும் ஸ்திரீகளும்

தீமோ 5:1 முதிர்வயதுள்ளவனைக் கடிந்துகொள்ளாமல், அவனைத் தகப்பனைப் போலவும், பாலிய புருஷரைச் சகோதரரைப்போலவும்

தீமோ 5:2 முதிர்வயதுள்ள ஸ்திரீகளைத் தாய்களைப்போலவும் பாலிய ஸ்திரீகளை எல்லாக் கற்புடன் சகோதரிகளைப்போலவும் பாவித்து புத்திசொல்லு.

முதிர்வயதுள்ளவன் (elder) - πρεσβύτερος - presbyteros - 4245

பெயர்ச்சொல் - முன்னோரான மூப்பரான, முதிர் வயதுள்ள - வயதில் முதுமையானவரை இந்த வார்த்தை குறிப்பிடுகிறது. 1தீமோ 5:17 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருப்பது சபையின் மூப்பர் (அப் 22:5) முதிர்வயது உள்ளவரொருவர் தவறு செய்யும்போது அவரை தந்தையைப் போல மதித்து அவருக்குத்தக்க ஆலோசனை சொல்ல வேண்டும். அவரைக் கடிந்து கொள்ளக்கூடாது.

கடிந்துகொள் (rebuke) ἐπιπλήσσω - epipleessoo - 1969

வினைச்சொல் - கடிந்துகொள்

பல பிரிவினருக்கும் கட்டளைகள்

1 முதிர்வயதுள்ளவர் (1தீமோ 5:1)

2 பாலிய புருஷர் (1தீமோ 5:1)

3 முதிர்வயதுள்ள ஸ்திரீகள் (1தீமோ 5:2)

4 பாலிய ஸ்திரீகள் (1தீமோ 5:2)

5 முதிர்வயதுள்ள விதவைகள் (1தீமோ 5:3-10,16)

6 இளவயதுள்ள விதவைகள் (1தீமோ 5:11-15)

7 சபையின் மூப்பர்கள் (1தீமோ 5:17-19)

8 பாவம் செய்தவர்கள் (1தீமோ 5:20)

9 வேலைக்காரர் (1தீமோ 6:1)

10 எஜமான்கள் (1தீமோ 6:2)

11 போதிக்கிறவர் (1தீமோ 6:3-5)

12 ஐசுவரியவான்கள் (1தீமோ 6:9-10, 17-19)

2. முதிர் வயதுள்ள விதவைகள் - (எபே 5:22)

1தீமோ 5:3 உத்தம விதவைகளாகிய விதவைகளைக் கனம்பண்ணு.

1தீமோ 5:4 விதவையானவளுக்குப் பிள்ளைகளாவது பேரன் பேத்திகளாவது இருந்தால் இவர்கள் முதலாவது தங்கள் சொந்தக் குடும்பத்தைத் தேவபக்தியாய் விசாரித்து, பெற்றார் செய்த நன்மைகளுக்குப் பதில் நன்மைகளைச் செய்யக் கற்றுக்கொள்ளக்கடவர்கள்; அது நன்மையும் தேவனுக்கு முன்பாகப் பிரியமுமாயிருக்கிறது.

1தீமோ 5:5 உத்தம விதவையாயிருந்து தனிமையாயிருக்கிறவள் தேவனிடத்தில் நம்பிக்கையுள்ளவளாய், இரவும் பகலும் வேண்டுதல்களிலும் ஜெபங்களிலும் நிலைத்திருப்பாள்.

1தீமோ 5:6 சுகபோகமாய் வாழ்கிறவள் உயிரோடே செத்தவள்.

1தீமோ 5:7 அவர்கள் குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருக்கும்படி இவைகளைக் கட்டளையிடு.

1தீமோ 5:8 ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும் அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்.

5 அதிகாரம்

1தீமோ 5:9 அறுபது வயதுக்குக் குறையாதவளும், ஒரே புருஷனுக்கு மனைவியாயிருந்தவளுமாகி

1தீமோ 5:10 பிள்ளைகளை வளர்த்து அந்நியரை உபசரித்து பரிசுத்தவான்களுடைய கால்களைக் கழுவி, உபத்திரவப்படுகிறவர்களுக்கு உதவிசெய்து, சகலவித நற்கிரியைகளையும் ஜாக்கிரதையாய் நடப்பித்து, இவ்விதமாய் நற்கிரியைகளைக் குறித்து நற்சாட்சி பெற்றவளுமாயிருந்தால், அப்படிப்பட்ட விதவையையே விதவைகள் கூட்டத்தில் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

கனம்பண்ணு (Honour) - τιμάω - timaoo - 5091

வினைச்சொல் - கனம் பண்ணு, மதிக்கப்படு, கிரியமாக்கு (respect; revere; reward; support) honor (1தீமோ 5:3; மத் 15:4-8; மத் 19:19 மாற்கு 7:6,10; மாற்கு 10:19 லூக்கா 18:20; யோவான் 5:23, யோவான் 8:49; யோவான் 12:26, அப் 28:10; எபே 6:2; 1பேதுரு 2:17) value (மத் 27:9

பேரன் பேத்திகள் (nephews) - ἔκγονος - ekgonos - 1549

பெயரடை - பேரன் பேத்தி (children; descendants) - ஒரு விதவைக்கு உதவி செய்ய வேண்டுமானால் அவளை ஆதரிப்பதற்கு உற்றார் உறவினரோ நண்பர்களோ இருக்கக்கூடாது.

உத்தம விதவைகளுக்குத் தகுதிகள்

1 பிள்ளைகளாவது, பேரன் பேத்திகளாவது இருக்கக்கூடாது. (1தீமோ 5:4

2 தனிமையாகவும், தேவையுள்ளவளாகவும் இருக்க வேண்டும். (1தீமோ 5:5)

3 தேவனிடத்தில் நம்பிக்கையுள்ளவளாய் இருக்க வேண்டும். (1தீமோ 5:5

4 இரவும் பகலும் வேண்டுதல்களிலும், ஜெபங்களிலும் நிலைத்திருக்க வேண்டும். (1தீமோ 5:5

5. சுகபோகமாய் வாழக்கூடாது (1தீமோ 5:6)

6 குற்றஞ்சாட்டப்படாதவளாக இருக்க வேண்டும். (1தீமோ 5:7)

7 அறுபது வயதிற்குக் குறையாதவளாய் இருக்க வேண்டும். (1தீமோ 5:9

8 ஒரே புருஷனுக்கு மனைவியாய் இருந்திருக்க வேண்டும். (1தீமோ 5:9)

9 சகலவித நற்கிரியைகளையும் ஜாக்கிரதையாய் நடப்பிக்க வேண்டும் (1தீமோ 5:10)

10 பிள்ளைகளை வளர்க்க வேண்டும் (1தீமோ 5:10)

11 அந்நியரை உபசரிக்க வேண்டும் (1தீமோ 5:10)

12 பரிசுத்தவான்களுக்குச் சேவை புரிய வேண்டும். (1தீமோ 5:10)

13 உபத்திரவப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். (1தீமோ 5:10)

14 நற்கிரியைகளைக் குறித்து நற்சாட்சி பெற்றவளாக இருக்க வேண்டும் (1தீமோ 5:10)

சுகபோகமாய் வாழுதல் (pleasure) - σπαταλάω - spatalaoo - 4684

வினைச்சொல் - சுகபோகமாய் வாழ (to live riotously, wantonly) (யாக் 5:5)

"உயிரோடே செத்தவள்" - இந்த வாக்கியம் சரீர மரணத்தைக் குறிக்கவில்லை. அவள் தன்னுடைய பாவத்தினால் தேவனிடமிருந்து பிரிந்து ஆவிக்குரிய ரீதியாக மரணம் அடைந்திருக்கிறாள்

I தீமோத்தேயு - தொகுப்புரை

5 அதிகாரம்

கட்டளையிடு (charge) παραγγέλλω parangelloo 3853

வினைச்சொல் - கட்டளையிடு, கற்பி, கட்டளைகொடு "charge" (1தீமோ 5:7 1தீமோ 1:3 1தீமோ 6:13,17 லூக்கா 5:14 லூக்கா 8:56 அப் 16:23 அப்23:22 "declare" 1கொரி 11:17) "command" மத் 10:5 மாற்கு 6:8 மாற்கு8:6 லூக்கா 8:29 லூக்கா 9:21 அப் 1:4 அப் 4:18 அப் 5:28,40 அப் 10:42; அப் 15:5; அப் 16:18; அப் 17:30 அப் 23:30 1கொரி 7:10 1தெச 4:11 2தெச 3:4,6,10,12 1தீமோ 4:11

விசாரித்தல் (provide) - προνοέω - pronoeoo - 4306

வினைச்சொல் - நாடு, விசாரி (to observe, plan, provide beforehand) ரோமர் 12:17 2கொரி 8:21

அவிசுவாசி (infidel) - ἄπιστος - apistos - 571

பெயரடை - அவிசுவாசி, விசுவாசமில்லாத, உண்மையில்லாத, நம்பபடாத "infidel" (1தீமோ 5:8 2கொரி 6:15 "unbelieving" 1கொரி 7:14,15 தீத்து 1:15 வெளி 21:8) "unbeliever" (1கொரி 12:46 1கொரி 6:6 1கொரி 14:23 2கொரி 6:14) "faithless" (மத் 17:17 மாற்கு 9:19 லூக்கா 9:41 யோவான் 20:27) " incredible" அப் 26:8) "believe not" 1கொரி 7:12,13 1கொரி 10:27 1கொரி 14:22,24 2கொரி 4:4

"அறுபது வயதுக்குக் குறையாதவளும் ஒரே புருஷனுக்கு மனைவியாயிருந்தவளுமாகி, அப்படிப்பட்ட விதவையையே விதவைகள் கூட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும்"

திருச்சபை விதவைகளுக்கு உதவி புரிவதற்காக விதவைகளின் பட்டியலைத் தயாரித்து வைத்திருந்தார்கள் அவர்களுக்கு எந்தெந்த வழிகளில் உதவி புரிய வேண்டும் என்பதையும் யாருக்கு உதவி புரிய வேண்டுமென்பதையும் திருச்சபை ஏற்கெனவே தீர்மானம் பண்ணியிருந்தது. இந்த விதவைகள் பலரைத் திருமணம்செய்து அடிக்கடி விவாகரத்து செய்தவர்களாக இருக்கக்கூடாது.

"பரிசுத்தவான்களுடைய கால்களைக் கழுவி" - பாதரட்சைகளோடு தங்களுடைய வீடுகளுக்கு வரும் விருந்தினர்களுடைய கால்களைக் கழுவும் வழக்கம் அக்காலத்தில் கிழக்கு தேசங்களில் இருந்தது (யோவான் 13)

உபத்திரவப்படுகிறவர்கள் (afflicted) - θλίβω - thliboo - 2346

வினைச்சொல் - இடுக்கு, நெருக்கு, உபத்திரவபடு, ஆக்கினைசெய (2கொரி 1:6)

3. இளவயதுள்ள விதவைகள் - (எபே 5:22)

1தீமோ 5:11 இளவயதுள்ள விதவைகளை அதிலே சேர்த்துக்கொள்ளாதே, ஏனெனில் அவர்கள் கிறிஸ்துவுக்கு விரோதமாய்க் காமவிகாரங் கொள்ளும் போது விவாகம் பண்ண மனதாகி,

1தீமோ 5:12 முதலில் கொண்டிருந்த விசுவாசத்தை விடுவதினாலே ஆக்கினைக்குட்படுவார்கள்

1தீமோ 5:13 அதுவுமல்லாமல், அவர்கள் சோம்பலுள்ளவர்களாய், வீடுவீடாய்த் திரிந்து பழகுவார்கள் சோம்பலுள்ளவர்களாய் மாத்திரமல்ல, அலப்புகிறவர்களாயும் வீணலுவற்காரிகளாயும் தகாத காரியங்களைப் பேசுகிறவர்களாயுமிருப்பார்கள்

1தீமோ 5:14 ஆகையால் இளவயதுள்ள விதவைகள் விவாகம்பண்ணவும், பிள்ளைகளைப் பெறவும், வீட்டை நடத்தவும், விரோதியானவன் நிந்திக்கிறதற்கு இடமுண்டாக்காமலிருக்கவும் வேண்டுமென்றிருக்கிறேன்

5 அதிகாரம்

1தீமோ 5:15 ஏனெனில் இதற்குமுன்னே சிலர் சாத்தானைப் பின்பற்றி விலகிப்போனார்கள்

"இளவயதுள்ள விதவைகளை அதிலே சேர்த்துக்கொள்ளாதே" - விதவைகளுக்கு உதவி பண்ணும்போது அவர்களுக்குத் திருச்சபையின் ஊழியத்தில் ஒருசில பொறுப்புகளும் கொடுக்கப்பட்டிருந்தது. இந்த ஊழியத்தைச் செய்வதற்கு இளவயதுள்ள விதவைகளைத் தகுதிபெறுவர்களாகக் கருதினார்கள். ஏனெனில் இவர்கள் தேவனுடைய ஊழியத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதற்குப் பதிலாகத் தங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஊழியத்தை விட்டு வாய்ப்பு வரும்போது திருமணம் செய்து கொண்டு உலகப்பிரகாரமாக வாழ ஆசைப்படுவார்கள்

திருமணம் செய்து கொள்வது பாவமல்ல ஆயினும் தேவனிடத்தில் செய்துகொண்ட பொருத்தனையை நிறைவேற்றுவது மிகவும் அவசியம் திருமணம் எல்லோருக்கும் கனமுள்ளது (எபி 13:4) இளவயதுள்ள விதவைகள் மறுபடியும் திருமணம்செய்து கொள்ளலாம் என்று பவுல் ஆலோசனை கூறுகிறார் (1தீமோ 5:11-15)

காமவிகாரங்கொள்ளுதல் (wax wanton) - καταστρηνιάω - katastreeniaoo - 2691

வினைச்சொல் - விரோதமாய் காமவிகாரங்கொள் (to behave insolently toward) (1தீமோ 5:11-15)

ஆக்கினை (damnation) - κρίμα - krima - 2917

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - தீர்ப்பு, ஆக்கினை, நியாயத்தீர்ப்பு (a judgment; sentence) "damnation" when meaning loss of soul (1தீமோ 5:12,மத் 23:14; மாற்கு 12:40; லூக்கா 20:47, ரோமர் 3:8), "condemnation" (1தீமோ 3:6; யாக் 3:1; யூதா 1:4) It is used of men condemning Christ to death (லூக்கா 23:40; லூக்கா 24:20 ; of God's "vengeance" on rebels (வெளி 18:20); of "judgment" where the loss of the soul is meant (மத் 7:2; யோவான் 9:39 அப் 24:25; ரோமர் 2:2-3, ரோமர் 5:16; ரோமர் 11:33; கலா 5:10 எபி 6:2; 1பேதுரு 4:17; 2பேதுரு 2:3 வெளி 17:1); of "power of judgment" to the saints (வெளி 20:4); of "going to law" (1கொரி 6:7); of " condemnation" of saints (1கொரி 11:34); of human and divine "damnation" (ரோமர் 13:2); of men "damning" themselves (1கொரி 11:29

விடுவது (cast off) - ἀθετέω - atheteoo - 114

வினைச்சொல் - மறு, வியர்த்தமாக்கு தள்ளிவிடு, அசட்டைப் பண்ணு "cast off" (1தீமோ 5:12); " reject" (மாற்கு6:26 மாற்கு 7:9 லூக்கா 7:30, யோவான் 12:48); "despise" (லூக்கா 10:16, 1தெச 4:8; எபி 10:28 யூதா 1:8); "bring to nothing" (1கொரி 1:19) "disannul" (கலா 3:15) "frustrate" (கலா 2:21

சோம்பல் (idle) - ἀργός - argos - 692

பெயரடை - வீணான, சும்மா, சோம்பேறி, சோம்பலுள்ள (doing nothing; lazy) "idle" (1தீமோ 5:13, மத் 12:36; மத் 20:3,6), "slow" (தீத்து 1:12);"barren" (2பேதுரு 1:8

திரிதல் (wandering about) - περιέρχομαι - perierchomai - 4022

வினைச்சொல் - திரி, சுற்றியோடு (to go about aimlessly as a vagrant) "wander about" (1தீமோ 5:13, எபி 11:37); "vagabond" (அப் 19:13 , "fetch a compass" (அப் 28:13

I தீமோத்தேயு - தொகுப்புரை

5 அதிகாரம்

தகாத காரியங்களைப் பேசுகிறவர்கள் (tattlers) - φλύαρος phlyaros - 5397

பொருள் - தகாத காரியங்களைப் பேசுகிறவர்களான (silly talker; a fool; prater) (3 யோவான் 1:10)

வீணலுவற்காரர் (busybodies) - περίεργος - periergos - 4021

பொருள் - மாயவித்தைக்காரரான வீணலுவற்காரரான "busy-body" (தீமோ 5:13) "curious arts" அப 19:19

இளவயதுள்ள விதவைகளுக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1 விவாகம்பண்ண (1தீமோ 5:14 எபி 13:4; 1கொரி 7

2 பிள்ளைகளைப் பெற (1தீமோ 5:14 ஆதி 1:28

3 வீட்டை நடத்த (1தீமோ 5:14)

4 விரோதியானவன் நிந்திக்கிறதற்கு இடமுண்டாக்காமலிருக்க (1தீமோ 5:14-15

ஒருசில இளம் விதவைகள் வழுவிப்போன விதம்

1 கிறிஸ்துவுக்கு விரோதமாய் காமவிகாரம் கொண்டார்கள் (1தீமோ 5:11)

2 விவாகம் பண்ண மனதாகி தங்களுடைய பொருத்தனையை முறித்துப்போட்டார்கள் (1தீமோ 5:11)

3 முதலில் கொண்டிருந்த விசுவாசத்தை விட்டுவிட்டார்கள் (1தீமோ 5:12)

4 சோம்பலுள்ளவர்களாய் இருக்கப் பழகுவார்கள் (1தீமோ 5:13)

5 அலப்புகிறவர்களாய் இருப்பார்கள் (1தீமோ 5:13)

6 வீணலுவற்காரர்களாய் இருப்பார்கள் (1தீமோ 5:13)

7 சாத்தானைப் பின்பற்றி விலகிப் போவார்கள் (1தீமோ 5:15)

4. உத்தம விதவையானவர்களுக்கு உதவி

1தீமோ 5:16 விசுவாசியாகிய ஒருவனிடத்திலாவது ஒருத்தியிடத்திலாவது விதவைகளிருந்தால் அவர்கள் இவர்களுக்கு உதவிசெய்யக்கடவர்கள் சபையானது உத்தமவிதவைகளானவர்களுக்கு உதவிசெய்ய வேண்டியதாகையால் அந்தப் பாரத்தை அதின்மேல் வைக்கக்கூடாது.

"விசுவாசியாகிய ஒருவனிடத்திலாவது ஒருத்தியிடத்திலாவது விதவைகளிருந்தால் - விதவைகளைப் பராமரிக்கும் பொறுப்பு சபைக்கு இருப்பதைப் போன்று விசுவாசிகளுக்கும் உள்ளது. விசுவாசிகளும் விதவைகளை ஆதரிக்க வேண்டும்

5. சபையின் மூப்பர்கள் - (1தீமோ 3:1-3 தீத்து 1:5-9; 1பேதுரு 5)

1தீமோ 5:17 நன்றாய் விசாரணைசெய்கிற மூப்பர்களை விசேஷமாகத் திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ண வேண்டும்.

1தீமோ 5:18 போரடிக்கிற மாட்டை வாய்க்கட்டாயாக என்றும், வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்றும் வேதவாக்கியம் சொல்லுகிறதே.

1தீமோ 5:19 மூப்பனானவனுக்கு விரோதமாக ஒருவன் செய்யும் பிராதை இரண்டு மூன்று சாட்சிகள் இல்லாமல் நீ ஏற்றுக்கொள்ளக்கூடாது

"இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ணவேண்டும்" - நன்றாய் விசாரணை செய்கிற மூப்பர்களையும் போதித்து உபதேசம் பண்ணுகிற பிரசங்கியார்களையும் அதிகமாய் கனப்படுத்த வேண்டும். ((1தீமோ 5:17-18, 1கொரி 9:6-14; கலா 6:6, எபி 7:1-10 அப 14:23)

I தீமோத்தேயு – தொகுப்புரை

5 அதிகாரம்

"போரடிக்கிற மாட்டை வாய்க்கட்டாயாக" - உபா 25:4; 2கொரி 9:9 ஆவது வசனம் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான்" - மத் 10:10 லூக்கா 10:7 ஆவது வசனம் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

பிராது (accusation) - **κατηγορία** - kateegoria - *2724*

பெண்பால் பெயர்ச்சொல் - குற்றம் பிராது (bring a charge against; accuse) (லூக்கா 6:7 யோவான் 18:29; தீத்து 1:6)

"இரண்டு மூன்று சாட்சிகள்" (உபா 19:15; மத் 18:16; 2கொரி 13:1)

6. சபையில் பாவம் செய்கிறவர்கள் - (கலா 6:1; மத் 18:15-17)

1தீமோ 5:20 மற்றவர்களுக்குப் பயமுண்டாகும்படி பாவஞ்செய்தவர்களை எல்லாருக்கும் முன்பாகக் கடிந்துகொள்.

கடிந்துகொள் (rebuke) - **ἐλέγχω** - elenchoo - 1651

வினைச்சொல் - குற்றத்தையுணர்த்து கடிந்துகொள் கண்டி கண்டனம் பண்ணு. கலக்கம் உண்டாக்கு. தீர்க்கப்படு (test; trial, examine) (யோவான் 16:8)

7. தீமோத்தேயுவிற்குக் கட்டளை - (1:18, 6:13, 2தீமோ 1:6)

1தீமோ 5:21 நீ பட்சபாதத்தோடே ஒன்றும் செய்யாமலும், விசாரிக்குமுன் நிர்ணயம் பண்ணாமலும் இவைகளைக் காத்து நடக்கும்படி தேவனுக்கும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும், தெரிந்துகொள்ளப்பட்ட தூதருக்கும் முன்பாக உறுதியாய்க் கட்டளையிடுகிறேன்.

1தீமோ 5:22 ஒருவன்மேலும் சீக்கிரமாய்க் கைகளை வையாதே, மற்றவர்கள் செய்யும்பாவங்களுக்கும் உடன்படாதே. உன்னைச் சுத்தவானாகக் காத்துக்கொள்.

1தீமோ 5:23 நீ இனிமேல் தண்ணீர் மாத்திரம் குடியாமல், உன் வயிற்றுக்காகவும், உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும் கொஞ்சம் திராட்சரசமும் கூட்டிக்கொள்.

1தீமோ 5:24 சிலருடைய பாவங்கள் வெளியரங்கமாயிருந்து நியாயத்தீர்ப்புக்குமுந்திக்கொள்ளும் சிலருடைய பாவங்கள் அவர்களைப் பின்தொடரும்.

1தீமோ 5:25 அப்படியே சிலருடைய நற்கிரியைகளும் வெளியரங்கமாயிருக்கும் அப்படி இராதவைகளும் மறைந்திருக்கமாட்டாது.

கட்டளையிடு (charge) - **διαμαρτύρομαι** - diamartyromai - (263)

வினைச்சொல் - சாட்சியாக அறிவி. சாட்சிகூறு. திருஷ்டாந்தரப்படுத்து தெரிவி. தெரிந்துகொள், எச்சரி. பிரசங்கம் பண்ணு (to call solemnly to witness) "charge" (1தீமோ 5:21 2தீமோ 2:14; 2தீமோ 4:1) "witness" (அப் 20:23), "testify" (லூக்கா 16:28 அப் 2:40 அப் 8:25; அப் 10:42; அப் 18:5, அப் 20:21,24; அப் 23:11; அப் 28:23, 1தெச 4:6; எபி 2:6)

தீமோத்தேயுவிற்கு யாருக்கு முன்பாகக் கட்டளை கொடுக்கப்படுகிறது

1. தேவன்
2. இயேசு கிறிஸ்து
3. தெரிந்துகொள்ளப்பட்ட தூதர்

"தெரிந்துகொள்ளப்பட்ட தூதர்" - தூதர்கள் எல்லோருமே தெரிந்துகொள்ளப்படவில்லை. தூதர்களில் மூன்றில் ஒரு பகுதிக்கு மேற்பட்டோர் லூசிபரோடு சேர்ந்து தேவனுக்கு எதிராகக் கலகம்பண்ணினார்கள் (வெளி 12:4,7-12; ஏசா 14:12-14) இந்த வாக்கியத்தில் தெரிந்துகொள்ளப்பட்ட தூதர் என்பது தேவனுக்கு எதிராக கலகம் பண்ணாத தூதர்களைக் குறிக்கும். (லூக்கா 18:7)

5 அதிகாரம்

தீமோத்தேயுவிற்குக் கொடுக்கப் பட்டிருக்கும் கட்டளைகள்

1 பட்சபாதத்தோடே ஒன்றும் செய்யக்கூடாது. (1தீமோ 5:21)

2 விசாரிக்குமுன் நிருணயம் பண்ணக் கூடாது. (1தீமோ 5:21)

3 ஒருவன்மேலும் சீக்கிரமாய்க் கைகளை வைக்கக்கூடாது. (1தீமோ 5:22)

4 மற்றவர்கள் செய்யும்பாவங்களுக்கும் உடன்படக்கூடாது. (1தீமோ 5:22)

5 தன்னைச் சுத்தவானாக காத்துக் கொள்ள வேண்டும். (1தீமோ 5:22)

6 இனிமேல் தண்ணீர் மாத்திரம் குடியாமல், தன் வயிற்றினிமித்தமும் தனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும், கொஞ்சம் திராட்சரசமும் கூட்டிக் கொள்ளலாம். (1தீமோ 5:23)

"ஒருவன்மேலும் சீக்கிரமாய்க் கைகளை வையாதே" - ஊழியத்திற்கு அவசரப்பட்டு யாரையும் பிரதிஷ்டை பண்ணக்கூடாது. ஒவ்வொருவரையும் சோதித்துப் பார்க்க வேண்டும். ஊழியத்திற்கு அவர் உண்மையுள்ளவர் என்பது நிரூபிக்கப்பட வேண்டும். அதன் பின்பே அவனை ஊழியத்திற்குப் பிரதிஷ்டை பண்ணும் விதமாக அவர்மீது கைகளை வைத்து ஜெபிக்க வேண்டும். (1தீமோ 4:14; 5:22; 2தீமோ 1:6; எபி 6:1-2)

"உன்னைச் சுத்தவானாக காத்துக்கொள்" - ஊழியத்திற்குத் தகுதியில்லாதோரைப் பிரதிஷ்டை பண்ணும் தவறைச் செய்யக்கூடாது. (1தீமோ 5:24)

சுத்தவான் (pure) ἁγνός - hagnos - 53

பொருள் - சுத்த, கற்புள்ள pure (1தீமோ 5:22; பிலி 4:8; யாக் 3:17; 1யோவான் 3:3); clear (2கொரி 7:11) chaste (2கொரி 11:2; தீத்து 2:5; 1பேதுரு 3:2)

(அ) நபர்கள் 2கொரி 7:11; 11:2

(ஆ) பொருட்கள் பிலி 4:8; யாக் 3:17

"கொஞ்சம் திராட்சரசமும் கூட்டிக்கொள்" - கிரேக்கர்கள் தண்ணீரோடு திராட்சை ரசமும் பருகுவது வழக்கம். ஒரு பங்கு திராட்சை ரசத்தில் மூன்று பங்கு தண்ணீர் கலந்து பருகுவார்கள். தொடர்ந்து தண்ணீர் மட்டும் பருகுகிறவர்களுக்கு வயிற்றுப் பிரச்சனை வரும் என்பது கிரேக்கருடைய நம்பிக்கை. தீமோத்தேயுவின் தந்தை ஒரு கிரேக்கன் (அப 16:1) தன் தந்தையின் வழக்கத்தினால் தீமோத்தேயுவிற்கும் திராட்சை ரசம் பருகும் பழக்கம் இருந்தது. ஆயினும் இயேசு கிறிஸ்துவைத் தன் இரட்சகராக ஏற்றுக்கொண்டபின்பு தீமோத்தேயு திராட்சை ரசம் பருகுவதை நிறுத்திவிட்டார். தீமோத்தேயுவின் உடல்நிலை காரணமாக திராட்சரசத்தில் தண்ணீர் கலந்து பருகுவதற்குப்பவுல் ஆலோசனை கூறுகிறார். இந்தத் திராட்சரசம் மதுபானமல்ல.

வேதத்தில் இரண்டுவிதமான திராட்சரசங்களைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. ஒன்று மதுபானம். (நீதி 20:1; ஏசா 5:11,22; ஏசா 24:9; ஏசா 28:7; ஏசா 29:9) மற்றொன்று சாதாரண திராட்சைப்பழச்சாறு. திராட்சைப் பழங்களைக்கூட திராட்சை ரசம் என்று பழைய ஏற்பாட்டுக் காலத்தில் அழைக்கப்பட்டது. "ஒரு திராட்சக்குலையில் இரசம் காணப்படும்போது" (ஏசா 65:8) பவுல் இங்கு கூறுவது மதுபான வெறிகொள்ளும் திராட்சைரசமல்ல.

(கலா 5:19-21; 1கொரி 6:9-11)

கிழக்கு தேசத்தில் தண்ணீரைக் கிணற்றிலிருந்தும் மண் பாண்டங்களிலிருந்தும் தோல்பைகளில் எடுத்து வருவார்கள். அது பழைய தண்ணீராகவும், அதில் கிருமிகள் இருப்பதற்கும் வாய்ப்புள்ளது. இதனால் பவுலுடைய உடல்நலம் கெட்டுப்போயிற்று. இதற்காக அவர்கள் திராட்சைப்பழ இரசத்தைத் தண்ணீரோடு கலந்து பருகினார்கள்.

"சிலருடைய பாவங்கள் வெளியரங்கமாயிருந்து நியாயத்தீர்ப்புக்கு முந்திக்கொள்ளும்" - தற்காலத்தில் சிலருடைய பாவங்களும் நற்கிரியைகளும் வெளியரங்கமாக இருக்கும். வேறுசிலருடைய காரியங்கள் இரகசியமாக இருக்கும். ஆயினும் எதுவும் நிரந்தரமாக மறைவாயிருப்பதில்லை. நியாயத்தீர்ப்பு நாளில் எல்லாம் வெளிப்படும். (1தீமோ 5: 24-25)

6 அதிகாரம்

8. வேலைக்காரர்களின் கடமைகள் - (எபே 6:5; 1கொரி 7:17; கொலோ 3:22; 1பேதுரு 2:18; தீத்து 2:9; மத் 24:45-51; 25:1-30)

1தீமோ 6:1 தேவனுடைய நாமமும் உபதேசமும் தூஷிக்கப்படாதபடிக்கு அடிமைத்தன நுகத்திற்குட்பட்டிருக்கிற வேலைக்காரர் யாவரும் தங்கள் எஜமான்களை எல்லாக் கனத்திற்கும் பாத்திரரென்று எண்ணிக் கொள்ளக் கடவர்கள்

வேலைக்காரர் (servants) - δοῦλος - doulos - (40)

பெயரடை - வேலைக்காரனாகிய, ஊழியக்காரனாகிய

அடிமையாயிருக்கிற (slaves) - கிறிஸ்தவ வேலைக்காரர்கள் தங்களுடைய எஜமான்களை மரியாதையாகவும், கனமுள்ளவர்களாகவும் நடத்த வேண்டும். எஜமான்களை நிந்திப்பதினால் இயேசு கிறிஸ்துவின் திருநாமம் தூஷிக்கப்படும். அதற்கு விசுவாசிகளாக இருக்கும் வேலைக்காரர் இடம்தரக்கூடாது.

9. எஜமான்களின் கடமைகள் (எபே 6:9; கொலோ 4:1)

1தீமோ 6:2 விசுவாசிகளாகிய எஜமான்களை உடையவர்கள், தங்கள் எஜமான்கள் சகோதரரா யிருக்கிறதினாலே அவர்களை அசட்டைபண்ணாமல், நல்வேலையின் பலனைப் பெற்றுக் கொள்ளுகிற அவர்கள் விசுவாசிகளும் பிரியருமாயிருக்கிறபடியால் அவர்களுக்கு அதிகமாய் ஊழியஞ் செய்யக்கடவர்கள். இப்படியே போதித்துப் புத்திசொல்லு.

"விசுவாசிகளாகிய எஜமான்களை உடையவர்கள்" - கிறிஸ்தவ எஜமான்களும் தங்களுடைய வேலைக்காரரைக் கிறிஸ்துவிற்குள் தங்களுடைய சகோதரராகப் பாவித்து நடத்த வேண்டும். (1தீமோ 6:2; கலா 3:28; கொலோ 3:11) பவுல் அடிமைத் தனத்தைப் பற்றிக் கூறியிருப்பதினால் கிறிஸ்தவ மார்க்கம் அடிமைத்தனத்தை அங்கீகரிக்கிறது என்று பொருள்படாது. எஜமான்களுக்கும் வேலைக்காரருக்கும் இடையே இருக்க வேண்டிய நல்ல உறவையே பவுல் இங்கு எடுத்துக் கூறுகிறார்.

10. கள்ளப்போதகர்களின் பதினைந்து அடையாளங்கள் - (4:1-5; 2தீமோ 3:1-8; 4:1-4; 2பேதுரு 2; 1யோவான் 4:1-6; யூதா 4-19)

1தீமோ 6:3 ஒருவன் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் ஆரோக்கியமான வசனங்களையும் தேவபக்திக்கேற்ற உபதேசங்களையும் ஒப்புக் கொள்ளாமல், வேற்றுமையான உபதேசங்களைப் போதிக்கிறவனானால்

1தீமோ 6:4 அவன் இறுமாப்புள்ளவனும் ஒன்றும் அறியாதவனும் தர்க்கங்களையும் வாக்குவாதங்களையும் பற்றி நோய் கொண்டவனுமாயிருக்கிறான்; அவைகளாலே பொறாமையும் சண்டையும் தூஷணங்களும் பொல்லாத சமுசயங்களும் உண்டாகி,

1தீமோ 6:5 கெட்ட சிந்தையுள்ளவர்களும் சத்திய மில்லாதவர்களும் தேவபக்தியை ஆதாயத்தொழிலென்று எண்ணுகிறவர் களுமாயிருக்கிற மனுஷர்களால் உண்டாகும் மாறுபாடான தர்க்கங்களும் பிறக்கும்; இப்படிப்பட்டவர்களை விட்டு விலகு.

வேற்றுமையான உபதேசங்களைப் போதிக்கிறவர்களின் சுபாவங்கள்

1. சத்தியத்திற்கு விரோதமானவன் (1தீமோ 6:3)
2. இறுமாப்புள்ளவன் (1தீமோ 6:4)
3. ஒன்றும் அறியாதவன் (1தீமோ 6:4)
4. தர்க்கங்களையும் வாக்குவாதங்களையும் பற்றிக்கொண்டவன்
5. நோய்கொண்டவன் (1தீமோ 6:4)

6 அதிகாரம்

6. பொறாமையுள்ளவன் (1தீமோ 6:4)

7. சண்டையும், தூஷணையும் பண்ணுகிறவன் (1தீமோ 6:4)

8. பொல்லாத சம்சயங்களைப் பண்ணுகிறவன் (1தீமோ 6:4)

9. கெட்ட சிந்தையுள்ளவன் (1தீமோ 6:4)

10. சத்தியம் இல்லாதவன் (1தீமோ 6:5)

11. மாறுபாடான தர்க்கங்களை உடையவன் (1தீமோ 6:5; 1தீமோ 4:1)

12. தேவபக்தியை ஆதாயத்தொடு எண்ணுகிறவன் (1தீமோ 6:5)

நோய் கொண்டவனாயிரு (to be sick) - νοσέω - noseoo - 3552

வினைச்சொல் - நோய் கொண்டவனாயிரு (to be sick; metaphorically, to be obsessed over questions of the law) (1தீமோ 6:4) - நியாயப்பிரமாணத்தைக் குறித்து தேவையில்லாமல் எதையாவது தாக்கம் பண்ணிக் கொண்டேயிருக்கிறவன்

ஆரோக்கியம் (wholesome) - ὑγιαίνω - hygiainoo - 5198

வினைச்சொல் - சுகமடைந்திரு சுகமாயிரு "wholesome" (1தீமோ 6:3), "whole" (லூக்கா 5:31 லூக்கா 7:10); "sound" (1தீமோ 1:10 2தீமோ 1:13 2தீமோ 4:3 தீத்து 1:9,13; தீத்து 2:1-2); "health" (3யோவான 1:2) - ஆரோக்கியமான வசனங்கள் என்பது ஆத்துமாவின் ஆரோக்கியத்தையும், சரீரத்தின் ஆரோக்கியத்தையும் குறிக்கும்.

விசுவாசிகள் எப்படிப்பட்டவர்களை விட்டு விலகவேண்டும்

1. கெட்ட சிந்தையுள்ளவர்கள் (1தீமோ 6:3-5)

2. சத்தியம் இல்லாதவர்கள் (2தெச 3:6)

3. தேவபக்தியை ஆதாயத்தொழில் என்று எண்ணுகிறவர்கள் (1தீமோ 3:5)

விட்டுவிலகு (withdraw) - ἀφίστημι - aphisteemi - 868

வினைச்சொல் - நீங்கு, விலகிப்போ, பின்வாங்கிப்போ, அகன்றுபோ, இழு, விட்டுவிடு, விட்டுப்பிரி, விட்டுவிலகு

11. பண ஆசை, ஐசுவரியம் ஆகியவற்றின் ஆபத்துக்கள்

1தீமோ 6:6 போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்

1தீமோ 6:7 உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டுவந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம்

1தீமோ 6:8 உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக்கடவோம்.

1தீமோ 6:9 ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள்

1தீமோ 6:10 பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் இதை இச்சித்து விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்

தேவபக்தி (godliness) - εὐσέβεια - eusebeia 2150

பெண்பால் பெயர்ச்சொல் - பக்தி, தேவபக்தி (1தீமோ 3:16) - உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக்கடவோம் - போதுமென்ற மனதுடனே கூடிய தேவபக்திதான் விசுவாசிகளுக்கு ஆசீர்வாதமானது (1தீமோ 6:6-8)

I தீமோத்தேயு - தொகுப்புரை

6 அதிகாரம்

ஐசுவரியவான்களாக விரும்பு கிறவர்களுக்கு வரும் ஆபத்துக்கள்

1 பிசாசின் சோதனையில விழுகிறார்கள். (1தீமோ 6.9)

2 பிசாசின் கண்ணியில் விழுகிறார்கள் 1தீமோ 6.9

3 மதிகேடான இச்சைகளில் விழுகிறார்கள் (1தீமோ 6.9)

4 சேதப்படுத்தும் இச்சைகளில விழுகிறார்கள் (1தீமோ 6.9)

5 கேட்டிலும், அழிவிலும் அமிழ்ந்து போகிறார்கள் (1தீமோ 6.9)

6 பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராய் இருக்கிறது. (1தீமோ 6.10)

7 விசுவாசத்தை விட்டு வழுவச்செய்கிறது. (1தீமோ 6.10)

8 அநேக வேதனைகள் வருகிறது. 1தீமோ 6.10

9 இறுமாப்புள்ள சிந்தையுள்ளவர்களாக இருக்கிறார்கள் (1தீமோ 6.17)

10 நிலையற்ற ஐசுவரியத்தின்மேல நம்பிக்கை உள்ளவர்கள் (1தீமோ 6.17)

ஐசுவரியம் மனுஷருக்கு ஒரு கண்ணியாகவே இருக்கிறது. ஐசுவரியம பெருகும்போது மனுஷன் தேவனுக்கு விரோதமாக எழும்புகிறான ஆகையினால மனுஷர் ஐசுவரியத்தை விரும்புவது அபாயகரத்துக்கு கேடாகவே முடியும் என்று வேதவாக்கியம்எச்சரிக்கிறது. (உபா 6.10-17, சங் 52.3-7, சங் 73.1-22; நீதி 23.4-5 நீதி 28.20-22; நீதி 30.8-9; எரே 9.23 எசே 28.5 மத் 6.19; லூக்கா 6.24; லூக்கா 12.15-20; லூக்கா 16.13-31; 1தீமோ 6.4-19 யாக் 1.9-11 யாக் 5.1-3)

கண்ணி(snare)- παγίς - pagis - 3803

பெண்பால் பெயர்ச்சொல் - கண்ணி (a net; trap) 1தீமோ 3.7 1தீமோ 6.9 லூக்கா 21.35; ரோமர் 11.9 2தீமோ 2.26 - காடுகளில் மிருகங்களைப் பிடிப்பதற்காக பள்ளம் தோண்டி அதன்மேல் இலைகளை வைத்து மூடுவார்கள் அது பள்ளம் என்று தெரியாமல் விலங்குகள் அதனுள் விழுந்து சிக்கிக்கொள்ளும்.

"மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகள்" - ஒருவருக்கு ஐசுவரியம் பெருகும்போது அவர் தேவன்மீது நம்பிக்கை வையாமல அழிந்துபோகும் ஐசுவரியத்தின்மீது நம்பிக்கை வைக்கிறார் அது அவர்களுடைய ஆத்துமாவைச் சேதப்படுத்தும் 1தீமோ 6.9-10

அமிழ்த்து (drown) - βυθίζω - bythizoo - 1036

வினைச்சொல் - அமிழ்த்து **"sink"** (லூக்கா 5.7)

அழிவு (destruction) - ὀλέθριος - olethrios - 3639

ஆண்பால பெயர்ச்சொல் - அழிவு (1கொரி 5.5)

"கேடு" perdition - (பிலி 1.28)

"பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது" பணம் தீமையானதல்ல பணத்தாசையே தீமையானது. இது எல்லாத் தீமைக்கும் காரணமானது. (1தீமோ 6.9-10) எல்லோருமே பணத்தாசையினால கர்த்தரை விட்டு விலகி பாவத்தில விழுந்துபோனார்கள் என்று கூறமுடியாது. ஆபிரகாம் ஆசாபும் பணத்தாசையினால பாவம் செய்யவில்லை (ஆதி 13 எசா 14.12-14 எசே 28.13-17 1தீமோ 3.6). காயீன் (ஆதி 4), சோதோம், கொமோரா ஊரார் (ஆதி 19), தாவீது (2சாமு 12) ஆகியோர் பாவத்தில் விழுவதற்கு பணத்தாசை காரணமாக இல்லை ஒருசிலரே பணத்தாசையோடு இருந்து அதன் தீமையை அனுபவிக்கிறார்கள் (1தீமோ 6.9-10)

இச்சித்தல் (coveted) - ὀρέγω - oregoo 3713

வினைச்சொல் - விரும்பு, இச்சைசெய **(covet)** (1தீமோ 6.10) **(desire)** (1தீமோ 3.1; எபி 11.16)

I தீமோத்தேயு – தொகுப்புரை

6 அதிகாரம்

வழுவுதல் (erred) - ἀποπλανάω - apoplanaoo - 635

வினைச்சொல் - நெருக்கு, அழி (err) 1தீமோ 6:10 (seduce) மாற்கு 13:22 - இயேசு கிறிஸ்துவிடம் தாங்கள் ஒரு காலத்தில் வைத்திருந்த அன்பைவிட்டு வழுவி விடுகிறார்கள் (1தீமோ 6:21).

வேதனைகள் (sorrows) - ὀδύνη - odynee - 3601

பெண்பால் பெயர்ச்சொல் - வேதனை (ரோமர் 9:2; 1தீமோ 6:10) - மிருகங்கள் கண்ணியில் சிக்கிக் கொள்ளும்போது பள்ளத்திற்குள் நட்டப்பட்டிருக்கும் கூரான கம்புகள் அவற்றைக் குத்தும். அதுபோலவே பணத்தாசை பிடித்தவர்கள் அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக் கொள்கிறார்கள்.

12. **தீமோத்தேயுவிற்குப் பத்து கட்டளைகள்** - (1:18; 4:12; 5:21; 2தீமோ 2:6)

1தீமோ 6:11 நீயோ தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும், தேவ பக்தியையும், விசுவாசத்தையும், அன்பையும், பொறுமையையும், சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு.

1தீமோ 6:12 விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்; அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்; அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணினவனுமாயிருக்கிறாய்.

1தீமோ 6:13 நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துபிரசன்னமாகும் வரைக்கும், நீ இந்தக் கற்பனையை மாசில்லாமலும் குற்றமில்லாமலும் கைக்கொள்ளும்படிக்கு,

1தீமோ 6:14 எல்லாவற்றையும் உயிரோடிருக்கச்செய்கிற தேவனுடைய சந்நிதானத்திலேயும், பொந்தியு பிலாத்துவின் முன்னின்று நல்ல அறிக்கையைச் சாட்சியாக விளங்கப் பண்ணின கிறிஸ்து இயேசுவினுடைய சந்நிதானத்திலேயும் உனக்குக் கட்டளையிடுகிறேன்.

"தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடு" - விசுவாசிகள் சில காரியங்களை விட்டு விலகியோடவேண்டும். (1தீமோ 6:10) பணத்தாசையில் விழுகிறவர்களுக்கு அழிவு நிச்சயம்.

விசுவாசிகள் நாடவேண்டிய காரியங்கள்

1. நீதி (Righteousness) (ரோமர் 3:26)
2. தேவபக்தி (Godliness) (1தீமோ 3:16)
3. விசுவாசம் (Faith) (2தெச 3:2)
4. அன்பு (Love) (2கொரி 13:4)
5. பொறுமை (Patience) (சங் 37:7)
6. சாந்தகுணம் (Meekness) (சங் 25:9; கலா 5:23)

தீமோத்தேயுவிற்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு (1தீமோ 6:12)
2. நித்தியஜீவனைப் பற்றிக்கொள் (1தீமோ 6:12)
3. கிறிஸ்து வரும்வரையிலும் இந்தக் கற்பனையைக் கைக்கொள் (1தீமோ 6:12-14)
4. ஐசுவரியவான்களுக்குப் புத்திசொல்.
5. உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதைக் காத்துக் கொள் (1தீமோ 6:20)
6. சீர்கேடான வீண்பேச்சுக்களிலிருந்து விலகு (2தீமோ 6:20; 2தீமோ 2:16)

6 அதிகாரம்

7 ஞானமென்று பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கு விலகு (1தீமோ 6.20)

ஒப்புவிக்கப்படுதல (trust) παραθήκη - paratheekee - 3866

பெண்பால் பெயர்ச்சொல் - ஒப்புக்கொடுத்தது (trust, deposit) 1தீமோ 6.20; 2தீமோ 1:14 (1தீமோ 3:16 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் காரியங்கள் தீமோத்தேயுவிடம் ஒப்புவிக்கப் பட்டிருக்கிறது.

ஞானம் (knowledge) - γνῶσις - gnoosis - 1108

பெண்பால் பெயர்ச்சொல் - அறிவு ஞானம், விவேகம் (knowledge acquired by learning, effort, experience) "science" (1தீமோ 6.20) "knowledge" (லூக்கா 1.77 லூக்கா 11.52; ரோமர் 2:20, ரோமர் 11.33, 1தீமோ 2:6,7,14 2தீமோ 2:24-26; பிலி 1:13-17)

காத்துக்கொள (lay hold) - ἐπιλαμβάνομαι - epilambanomai - 1949

வினைச்சொல் - பிடி, எடு, அலை சேர்த்துக்கொள கைகொடு, பற்றிக்கொள (to lay hold; seize; to attain to) "lay hold on" (1தீமோ 6:12,19; லூக்கா 23:26), "catch" (மத் 14.31; அப் 16:19), "take on" (எபி 2:16); "take by" (மாற்கு 8:23; அப் 23:19; எபி 8:9); "take" (லூக்கா 9:47; லூக்கா 14:4; அப் 9:27; அப் 17:19; அப் 18:17, அப் 21:30,33); "take hold of" (லூக்கா 20:20,26)

தீமோத்தேயு இரட்சிக்கப்பட்டவன் நித்திய ஜீவன அவனுக்கு வாக்குப்பண்ணப் பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்து வரும்வரையிலும் தன்னுடைய ஆத்துமாவை கறைதிரையில்லாமல் காத்துக் கொள்ள வேண்டும். (1பேதுரு 1:5,9,13 நித்திய ஜீவன் நமக்கு ஒரு நம்பிக்கையாக கொடுக்கப் பட்டிருக்கிறது (ரோமர் 8:24-25; 1கொரி 13:13, கலா 5:5; எபே 4:4; கொலோ 1:5; 1தெச 5:8 1தீமோ 6:12,19; தீத்து 1:2 தீத்து 3:7) நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்ளுமாறு பவுல் தீமோத்தேயுவை இரண்டு முறை வலியுறுத்துகிறார் (1தீமோ 6:12,19 எபி 6:18-19) (யோவான் 6.27)

பேர்பெற்றிருப்பது (professed) - ὁμολογέω - homologeoo - 3670

வினைச்சொல் - சொல், அறிக்கை பண்ணு, வாக்குகொடு, அறிக்கையிடு "profess" (1தீமோ 6:12; மத் 7:23; தீத்து 1:16); "promise" (மத் 14:7); "give thanks" (எபி 13:15) "confess" (மத் 10:32; லூக்கா 12:8 யோவான் 1:20; யோவான் 9:22 யோவான் 12:42; அப் 23:8, அப் 24:14, ரோமர் 10:9-10; எபி 11:13; 1யோவான் 1:9; 1யோவான் 4:2,3,15 2யோவான் 1:7)

"மாசில்லாமலும் குற்றமில்லாமலும்" - கறைதிரையில்லாமல (1தீமோ 3:2; 1தீமோ 5:7

தீர்க்கதரிசன வசனம் - 2

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துபிரசன்னமாகும்வரைக்கும் ...." (1தீமோ 6:14-15) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை சபை எடுத்துக் கொள்ளப்படும் வரையிலும் எல்லாப் பரிசுத்தவான்களும் தங்களைக் காத்துக் கொள்ள வேண்டும். (1தெச 2:19; 1தெச 3:13, 1தெச 4:13-17) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை (தீத்து 2:13; 1தீமோ 4:1)

கட்டளையிடு (charge) - παραγγέλλω parangelloo 3853

வினைச்சொல் - கட்டளையிடு, கற்பி, கட்டளைக்கொடு (1தீமோ 5:7

"நல்ல அறிக்கையைச் சாட்சியாக விளங்கப்பண்ணின கிறிஸ்து இயேசு" (மாற்கு 14:61-62; யோவான் 18:36-37

I தீமோத்தேயு - தொகுப்புரை

6 அதிகாரம்

13. தேவனுடைய பிரசன்னமாகுதலும் அவரைப் பற்றிய விளக்கமும் - 1கொரி 15:24-28

1தீமோ 6:15 அந்தப் பிரசன்னமாகுதலை தேவன் தம்முடைய காலங்களில் வெளிப்படுத்துவார். அவரே நித்தியானந்தமுள்ள ஏக சக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தாவும்.

தீமோ 6:16 ஒருவராய், சாவாமையுள்ளவரும் சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும் மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும் காணக் கூடாதவருமாயிருக்கிறவர்; அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக. ஆமென்.

"அந்தப் பிரசன்னமாகுதலை தேவன் தம்முடைய காலங்களில் வெளிப்படுத்துவார்" - (வெளி 11:15; வெளி 19:11-21; சக 14:1-9 தானி 2:44-45, தானி 7:13-14; ஏசா 9:6-7)

"தம்முடைய காலங்கள்" - (எபே 1:10)

சக்கராதிபதி (Potentate) - δυνάστης - dynastees - 1413

ஆண்பால் பெயர்சொல் பலவான் சக்கராதிபதி (a mighty prince, a ruler) "mighty" (லூக்கா 1:52) "of great authority" (அப் 8:27)

"ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும்" - தேவனுக்கும், கிறிஸ்துவிற்கும் இந்த வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (தீமோ 6:15, வெளி 17:14, வெளி 19:16)

சாவாமை (immortality) - ἀθανασία athanasia 110

பெண்பால் பெயர்ச்சொல் சாவாமை (1கொரி 15:53-54) - மனுஷனுடைய ஆவியும் ஆத்துமாவும் மரிப்பதில்லை (1பேதுரு 3:4) உயிர்த்தெழும்போது மனுஷருக்குச் சாவாத சரீரம் கொடுக்கப்படும்.

(1கொரி 15:51-58, தீமோ 1:17) தேவன் சாவாமை உள்ளவர் அவரால் சாகும் மனுஷருக்குச் சாவாத சரீரத்தைக் கொடுக்க முடியும்.

"சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரும் மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும் காணக் கூடாதவருமாயிருக்கிறவர்" - தேவன் தமது மகிமையில் வாசம்பண்ணுகிறார். அந்த மகிமையை ஒருவரும் காணமுடியாது. தேவன் தாமே தமது மகிமையை மனுஷருக்கு அவ்வப்போது வெளிப்படுத்தியிருக்கிறார் (யாத் 33:11-23, யோவான் 4:24)

14. தீமோத்தேயுவிற்கு கடைசி கட்டளை - ஐசுவரிய முள்ளவருக்கு ஆலோசனைகள் - (யாக் 5:1-7)

1தீமோ 6:17 இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தை உள்ளவர்களாயிராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கை வையாமலும், நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைக்கவும்,

1தீமோ 6:18 நன்மைசெய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும் உதாரகுணமுள்ளவர்களுமாயிருக்கவும்,

1தீமோ 6:19 நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு.

1தீமோ 6:20 ஓ தீமோத்தேயுவே, உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக்கொண்டு, சீர்கேடான வீண்பேச்சுகளுக்கும், ஞானமென்று பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு.

1தீமோ 6:21 சிலர் அதைப் பாராட்டி, விசுவாசத்தை விட்டு வழுவிப்போனார்கள். கிருபையானது உன்னோடேகூட இருப்பதாக. ஆமென்.

I தீமோத்தேயு - தொகுப்புரை

6 அதிகாரம்

ஐசுவரியமுள்ளவர்களுக்குக் கட்டளைகள்

1 இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாய் இருக்கக்கூடாது. (1தீமோ 6:17)

2 நிலையற்ற ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கைவைக்கக்கூடாது. (1தீமோ 6:17)

3 நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளை நமக்குச் சம்பூரணமாயக் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைக்கவேண்டும். (1தீமோ 6:17)

4. நன்மை செய்ய வேண்டும். (1தீமோ 6:18)

5 நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாக வேண்டும். (1தீமோ 6:18

6 தாராளமாயக் கொடுக்கிறவர்களாக இருக்க வேண்டும். (1தீமோ 6:18

7 உதாரகுணமுள்ளவர்களுமாயிருக்கவும்

8 வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பரலோகத்தில் பொக்கிஷமாக வைக்க வேண்டும் (1தீமோ 6:19)

9 நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ள வேண்டும். (1தீமோ 6:19

II தீமோத்தேயு – முன்னுரை

காலமும் இடமும்

கிபி 68 ஆம் ஆண்டு இந்த நிருபத்தைப் பவுல் ரோமாபுரியிலிருந்து எழுதினார் அப்போஸ்தலர் 28 ஆம் அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிற பிரகாரம் பவுல் இந்த நிருபத்தை எழுதிய போது சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப் பட்டிருக்கலாம். சுமார் கிபி 64 ஆம் ஆண்டு விடுவிக்கப்பட்ட பின்பு சுமார் 5 அல்லது 6 வருஷங்கள் பவுல் கிழக்கு திசையில் பிரயாணம் பண்ணி மக்கெதோனியா ஆசியா ஆகிய தேசங்களுக்குச் சென்றார் (பிலி 1:26; பிலி 2:24; பிலே 1:22; 1 தீமோ 1:3; தீத்து 3:12) 2 தீமோத்தேயு நிருபத்தை எழுதிய பின்பு பவுல் மறுபடியுமாகக் கைது பண்ணப்பட்டு ரோமாபுரிக்கு அனுப்பப்பட்டார்

ஆசிரியர்

பவுல்

மையக்கருத்து

தீமோத்தேயு, 2 தீமோத்தேயு, தீத்து ஆகிய மூன்று நிருபங்களும் போதக நிருபங்கள் என்று அழைக்கப்படுகிறது. இவற்றுள் 2 தீமோத்தேயு நிருபம் கடைசியாக எழுதப்பட்டதாகும். சபை ஒழுங்கு உபதேசம் ஆகியவற்றைக் குறித்து பவுல் இந்த நிருபத்தில் எழுதியிருக்கிறார்

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் 4

வசனங்கள் 83

புதிய தீர்க்கதரிசனங்கள் 7

வரலாற்றைக் குறிக்கும் வசனங்கள் - 68

பொருளடக்கம்

I. முன்னுரை

1 ஆசிரியரும் வாழ்த்துரையும் (1:1-2)

2 தீமோத்தேயுவிற்காக ஸ்தோத்திரம் (1:3-5)

II. ஊழியம் செய்யுமாறு கட்டளை

1 தீமோத்தேயுவிற்கு மூன்று கட்டளைகள் (1:6-8)

2 தேவனுடைய ஏழு அம்ச கிரியை (1:9-10)

3 தமது ஊழியத்தை விரிவாக்கும் தேவனுடைய முறைமை (1:11-12)

4 தீமோத்தேயுவிற்கு இரண்டு கட்டளைகள் (1:13-14)

5 பவுலை விட்டு விலகியவர்கள் (1:15)

6 ஒநேசிப்போருவிற்காக ஜெபம் (1:16-18)

7 தீமோத்தேயுவிற்கு எட்டு கட்டளைகள் (2:1-8)

8 சுவிசேஷத்தின் நிமித்தம் பவுல் அனுபவித்த துன்பம் (2:9-10)

9 உண்மையுள்ள ஐந்து வார்த்தைகள் (2:11-13)

10 தீமோத்தேயுவிற்கு ஐந்து கட்டளைகள் (2:14-16)

11 சத்தியத்தை விட்டு விலகுவதனால் ஏற்படும் விளைவு (2:17-18)

12 சத்தியத்தின் விளைவு (2:19-21)

13 தீமோத்தேயுவிற்கு எட்டு கட்டளைகள் (2:22-24)

14 உண்மையான ஊழியக்காரனுடைய சுபாவமும் கடமையும் (2:25-26)

III. சத்தியத்தை விட்டு விலகுதல்: கிறிஸ்துவின் வருகைக்கு இருபத்திரண்டு அடையாளங்கள்

1. கடைசி நாட்களின் தன்மை (3:1)

2 சத்தியத்தை விட்டு விலகுபவர்களின் பதினெட்டு சுபாவங்கள் (3:2-4)

3. சத்தியத்தை விட்டு விலகுபவர்களின் ஏழு பாவங்கள் (3:5-9)

II தீமோத்தேயு - முன்னுரை

IV. சொந்த குறிப்புக்களும் கட்டளைகளும்

1 பவுலின் ஜீவியம் ஊழியம் ஆகியவற்றின் ஒன்பது அம்ச சுபாவம் (3:10-11)

2 மாண்ட அனுபவத்தின் இரண்டு மாறாத பிரமாணங்கள் (3:12-13)

3 தீமோத்தேயுவிற்குக் கட்டளை (3:14)

4 வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது (3:15-17)

5 தீமோத்தேயுவிற்கு ஏழு கட்டளைகள் (4:1-2)

6 சத்தியத்தை விட்டு விலகுவது மறுபடியும் முன்னறிவிக்கப்படுகிறது (4:3-4)

7 தீமோத்தேயுவிற்கு நான்கு கட்டளைகள் (4:5)

8 தனது மரணத்தைப் பற்றி பவுலின் சாட்சி (4:6-8)

9 தீமோத்தேயுவிற்கு ஐந்து கட்டளைகள் (4:9-13)

10 பவுலை விட்டு விலகியவன் (4:14-16)

11 சாத்தானிடமிருந்தும் துன்மார்க்கரிடமிருந்தும் பவுலின் இரட்சிப்பு (4:17-18)

V. நிருபத்தின் முடிவுரை - சகோதரர்களுக்கு வாழ்த்துக்கள் (4:19-22)

II தீமோத்தேயு - தொகுப்புரை

1 அதிகாரம்

I. முன்னுரை

1. ஆசிரியரும் வாழ்த்துரையும்

2 தீமோ 1:1 கிறிஸ்து இயேசுவினால் உண்டாயிருக்கிற ஜீவனைப்பற்றிய வாக்குத்தத்தத்தின்படி தேவனுடைய சித்தத்தினாலே, இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாயிருக்கிற பவுல்.

2 தீமோ 1:2 பிரியமுள்ள குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதுகிறதாவது: பிதாவாகிய தேவனாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

"அப்போஸ்தலன்"(apostle)- (அப 15.33)

"கிறிஸ்து இயேசுவினால் உண்டாயிருக்கிற ஜீவனைப்பற்றிய வாக்குத்தத்தம்" - நித்திய ஜீவன் என்பது ஒரு வாக்குத்தத்தமே. இந்த ஜீவன் முடிவு பெற்று நாம் ஆவிக்குரிய ரீதியாக விதைக்கப்படும்போது நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்கிறோம். (யோவான் 6.27)

"குமாரன்" (son) - (1 தீமோ 1:2)

"கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக" தீமோத்தேயு தீத்து ஆகியோருக்குப் பவுல் இவ்வாறு விசேஷித்த விதமாக வாழ்த்துதல் கூறுகிறார்

"பிதாவாகிய தேவனாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினாலும் பிதாவும், இயேசு கிறிஸ்துவும் தனித்தனியாக வெவ்வேறு ஆள்தத்துவம் படைத்தவர்கள் என்பதை விளக்கும் வாக்கியம்

2. தீமோத்தேயுவிற்காக ஸ்தோத்திரம்

2 தீமோ 1:3 நான் இரவும் பகலும் இடைவிடாமல் என் ஜெபங்களில் உன்னை நினைத்து, உன் கண்ணீரை ஞாபகம்பண்ணி, சந்தோஷத்தால் நிறையப்படும்படிக்கு உன்னைக் காண வாஞ்சையாயிருந்து,

2 தீமோ 1:4 உன்னிலுள்ள மாயமற்ற விசுவாசத்தை நினைவுகூருகிறதினால், என் முன்னோர்கள் முதற்கொண்டு சுத்த மனச்சாட்சியோடே ஆராதித்து வரும் தேவனை நான் ஸ்தோத்திரிக்கிறேன்

2 தீமோ 1:5 அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும் உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது; அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன்

"உன் கண்ணீரை ஞாபகம்பண்ணி, சந்தோஷத்தால் நிறையப்படும்படிக்கு உன்னைக் காண வாஞ்சையாயிருந்து" - பவுல் தீமோத்தேயுவின்மீதும் அவனுடைய தாயார் பாட்டி ஆகியோர்மீதும் மிகுந்த அன்பு வைத்திருந்தார் (2 தீமோ 1:3-5)

"சுத்த மனச்சாட்சியோடே ஆராதித்து வரும் தேவனை நான் ஸ்தோத்திரிக்கிறேன்" - அறியாமையினால் பவுல் ஒருகாலத்தில் சபையைத் துன்புறுத்தினார். அப்போதுங்கூட தான் தேவனைப் பிரியப்படுத்துவதாகவே நினைத்தார்

"மாயமற்ற விசுவாசம்" - (1 தீமோ 1:5

"அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன்" மாயமற்ற விசுவாசம் தீமோத்தேயுவிற்குள் நிலைத்திருந்தது. (2 பேதுரு 1:1; 2 பேதுரு 1)

"முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும்" இந்தக் குடும்பத்தில் இவள் முதலாவதாக கர்த்தரை தன் இரட்சகராக ஏற்றுக்கொண்டாள் அதன் பின்பு, அவளுடைய மகளாகிய ஐனிக்கேயாள் இரட்சிக்கப்பட்டாள் இப்போது தீமோத்தேயுவும் இரட்சிக்கப்பட்டிருக்கிறான் இரட்சிப்பு பாரம்பரியமாக வருவதில்லை. ஜெபத்தின் மூலமாகவும் தனிப்பட்ட முறையில் இயேசு கிறிஸ்துவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்வதன் மூலமாகவே ஒருவன் இரட்சிக்கப்படுகிறான் தீமோத்தேயுவின் தந்தை கிரேக்கு தேசத்தார் (அப 16:1) அவர் ஒரு புறதேசத்தாராக இருந்தபடியினால் தன்னுடைய மகனுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் அவர் ஏதாவது உதவி புரிந்தாரா என்பது தெரியவில்லை.

II தீமோத்தேயு - தொகுப்புரை

1 அதிகாரம்

பாட்டி (grandmother) - μάμμη mammee - 3125

பெண்பால் பெயர்ச்சொல் - பாட்டி

II. ஊழியம் செய்யுமாறு கட்டளை - (2தீமோ 1:6-2:26)

1. தீமோத்தேயுவிற்கு ஆன்று கட்டளைகள் - (1:13; 2:1,3,14,22 3:14; 4:1,5,9; 1தீமோ 1:18; 4:12; 5:21, 6:11-21)

2தீமோ 1:6 இதினிமித்தமாக, நான் உன்மேல் என் கைகளை வைத்ததினால் உனக்கு உண்டான தேவவரத்தை நீ அனலூட்டி எழுப்பி விடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன்.

2தீமோ 1:7 தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.

2தீமோ 1:8 ஆகையால் நம்முடைய கர்த்தரைப் பற்றிய சாட்சியைக் குறித்தாவது, அவர் நிமித்தம் கட்டப்பட்டிருக்கிற என்னைக் குறித்தாவது, நீ வெட்கப்படாமல், தேவ வல்லமைக்கேற்றபடி சுவிசேஷத்திற்காக என்னோடேகூடத் தீங்கநுபவி.

"இதினிமித்தமாக, நான் உன்மேல் என் கைகளைவைத்ததினால் உனக்கு உண்டான தேவவரத்தை நீ அனலூட்டி எழுப்பி விடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன்" தனக்குள் இருக்கும் ஆவிக்குரிய வரத்தை அனலூட்டி எழுப்பிவிடுமாறு பவுல் தீமோத்தேயுவிற்கு நினைப்பூட்டுகிறார் தனனிடத்திலுள்ள தேவவல்லமையின் பிரகாரம் தீமோத்தேயு உடத்திரவத்திலும் உண்மையுள்ளவனாக இருக்கவேண்டும். (2தீமோ 1:6 8 தேவவரம் இந்த வசனத்தில் ஒரு நெருப்புக்கு ஒப்புமையாகக் கூறப்பட்டிருக்கிறது. நெருப்பை அனல்மூட்டி எழுப்பிவிட்டுக் கொண்டேயிருக்க வேண்டும். இல்லையெனில், அது அணைந்துபோகும்.

அனல்மூட்டு (stir up) ἀναζωπυρέω - anazoopyreoo - 329

விணைச்சொல் - அனல்மூட்டு, எழுப்பிவிடு (to kindle up the fire, to add fresh fuel to it)

ஒருவர் தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஆவிக்குரிய வரங்களை ஏற்ற பிரகாரம் பயன்படுத்த வேண்டும் இல்லையெனில் வரங்களை அந்த நபர் இழந்துபோக வேண்டியது வரலாம். வரங்களைக் குறித்து அசதியாக இருக்கக்கூடாது என்று பவுல் 1தீமோ 4:14 ஆவது வசனத்தில் எச்சரித்துக் கூறுகிறார் வரங்களைப் பயன்படுத்துவதற்குப் பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகம் தொடர்ந்து இருக்க வேண்டும் அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப் பெற்றுக் கொண்டதைப் பல வசனங்களில் வாசிக்கிறோம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும், ஜெபத்தில் தொடர்ந்து தரித்திருந்து பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரியைத் தொடர்ந்து பெற்றுக் கொண்டார் (லூக்கா 3:21) பவுல் பரிசுத்த ஆவியானவரின் நிறைவிற்காக ஜெபித்தார் (பிலி 1:19; எபே 3:14-21)

2தீமோ 1:6 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் தேவவரத்தின் அம்சங்கள்

1 பயமுள்ள ஆவி (Spirit of boldness) (ரோமர் 8:15)

2 வல்லமையுள்ள ஆவி (Spirit of power) (லூக்கா 24:49, அப 1:8, 1கொரி 16:10; 1தீமோ 4:14

3 அன்புள்ள ஆவி (Spirit of love (1கொரி 13:4)

4 தெளிந்த புத்தியுள்ள ஆவி (Spirit of a sound mind, understanding, judgment) (கலா 5:22-23)

பயம் (fear) δειλία deilia 1167

பெண்பால் பெயர்ச்சொல் - பயம் (cowardice)

II தீமோத்தேயு – தொகுப்புரை

1 அதிகாரம்

பலம் (power) - δύναμις - dynamis - 1411

பெண்பால் பெயர்ச்சொல் - வல்லமை பலத்த செய்கைகள், அற்புதங்கள் திறமை, பலம், சத்துவம், சக்தி, கருத்து, உக்கிரம், மிகுதி (inherent power; power to reproduce itself) - ஒரு டைனமோ மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டுமென்றால் அது தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்க வேண்டும். அதுபோலவே ஒருவர் தன்னுடைய ஜீவியத்தில் தேவனுடைய வார்த்தை வல்லமையோடு பயன்படுத்த வேண்டுமென்றால் அவர் அந்த வார்த்தைத் தொடர்ந்து அனலூட்டி எழுப்பிக் கொண்டிருக்க வேண்டும். (2தீமோ 1:6; 1தீமோ 4:14)

அன்பு (love) - ἀγάπη - agapee - 26

பெண்பால் பெயர்ச்சொல் - அன்பு 1கொரி 13:4

அ) மேன்மையான கிறிஸ்தவ அன்பு 1கொரி 13:4

ஆ) தேவன் மனிதர் மீது வைக்கும் அன்பு ரோம 5:8

இ) மனிதன் தேவன் மீது காட்டும் அன்பு - யோவா 1:2 2:5

ஈ) மனிதன் மனிதனிடம் காட்டும் அன்பு - யோவா 13:35

உ) பண்டையில் அன்பின் விருந்துகள் கிறிஸ்தவ ஐக்கியம் சிறந்து விளங்க சான்று பகரும் விருந்து. யூதா 12

"தெளிந்த புத்தி" (sound mind) (1தீமோ 2:9, 1தீமோ 3:2, தீத்து 2:4,6,12)

அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவிற்குக் கூறியிருக்கும் கட்டளைகள்

1 சுவிசேஷத்தைக் குறித்து வெட்கப்படக் கூடாது. (2தீமோ 1:8; 2தீமோ 2:15; 2தீமோ 1:5;ரோமர் 1:16; லூக்கா 9:26)

2 சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்களைக் குறித்து வெட்கப்படக் கூடாது.(2தீமோ 1:8,16; லூக்கா 9:26

3 சுவிசேஷத்திற்காகத் தீங்கு அனுபவிப்பதில் பங்கு பெற வேண்டும். (2தீமோ 1:8 2தீமோ 4:5 கொலோ 1:24

2. தேவனுடைய ஏழு அம்ச கிரியை

2தீமோ 1:9 அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல் தம்முடைய தீர்மானத்தின்படியும் ஆதிகாலமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும் நம்மை இரட்சித்து பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்

2தீமோ 1:10 நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து பிரசன்னமானதினாலே அந்தக் கிருபை இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டது. அவர் மரணத்தைப் பரிகரித்து ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்

தேவனுடைய கிரியைகள்

1 அவர் நம்மை இரட்சித்தார்

2 அவர் நம்மை பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்

3 தம்முடைய தீர்மானத்தின்படியும், கிருபையின்படியும் நம்மை ஆசீர்வதித்தார்

4 ஆதிகால முதல் நம்மைக் குறித்து தீர்மானம் பண்ணியிருக்கிறார்

"ஆதிகாலமுதல்" (before the world began) - நித்திய காலம்.

இயேசு கிறிஸ்துவின் கிரியைகள்

1 தம்முடைய பிரசன்னத்தினாலே தேவனுடைய கிருபையை வெளிப்படுத்தினார்

2 மரணத்தைப் பரிகரித்தார்

II தீமோத்தேயு – தொகுப்புரை

1 அதிகாரம்

3 சுவிசேஷத்தினாலே ஜீவனை வெளியரங்கமாக்கினார்

4 சுவிசேஷத்தினாலே அழியாமையை வெளியரங்கமாக்கினார்

பரிகரித்தல் (abolished) - καταργέω - katargeoo - 2673

வினைச்சொல் - கெடு, அவமாக்கு, ஒழிந்துபோ, அழிந்துபோ, பரிகரி, நீக்கு, வியர்த்தமாக்கு - ஆயிரம் வருஷ அரசாட்சியின் முடிவில் மரணம் பூரணமாகப் பரிகரிக்கப்படும். (1கொரி 15:24-28; வெளி 21:4; வெளி 22:3)

"ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்" - இயேசு கிறிஸ்து சுவிசேஷத்தின் மூலமாக ஜீவனையும், அழியாமையையும் வெளிப்படுத்தினார். தம்முடைய ஜீவியத்தின் மூலமாக ஜீவியத்தின் அழியாமைக்கு உத்தரவாதம் அருளினார். சுவிசேஷத்தில் விசுவாசம் வைக்கிறவர்களுக்கு நித்திய ஜீவன் உண்டு.

3. தமது ஊழியத்தை விசுவாசிக்கும் தேவனுடைய முறைமை - 1தீமோ 2:7

2தீமோ 1:11 அதற்கு நான் பிரசங்கியாகவும், அப்போஸ்தலனாகவும், புறஜாதியாருக்குப் போதகனாகவும் நியமிக்கப்பட்டேன்.

2தீமோ 1:12 அதினிமித்தம் நான் இந்தப் பாடுகளையும் அனுபவிக்கிறேன்; ஆயினும், நான் வெட்கப்படுகிறதில்லை; ஏனென்றால் நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்; நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக் கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்.

அப்போஸ்தலன் பவுலைப் பற்றிய [redacted]

1 சுவிசேஷத்திற்குப் பிரசங்கியாக நியமிக்கப்பட்டார்

2 சுவிசேஷத்திற்கு அப்போஸ்தலனாக நியமிக்கப்பட்டார்

3 புறஜாதியாருக்குப் போதகனாக நியமிக்கப்பட்டார்

4 சுவிசேஷத்திற்காகப் பாடுகளை அனுபவித்தார் (2தீமோ 1:12)

5 சுவிசேஷத்திற்காகவோ, தேவனுக்காகவோ, கிறிஸ்துவிற்காகவோ அவர் வெட்கப்படவில்லை. (2தீமோ 1:12; ரோமர் 1:16)

6 தான் விசுவாசித்திருக்கிறவர் இன்னாரென்று அறிந்திருந்தார் (2தீமோ 1:12)

7 தேவன் தன்னிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக் கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்திருந்தார்

ஒப்புக்கொடுத்தது (guard) - παραθήκη - paratheekee - 3866

பெண்பால் பெயர்ச்சொல் - ஒப்புக்கொடுத்தது (deposited) (2தீமோ 1:12; 2தீமோ 4:8; 1தீமோ 6:14)

4. தீமோத்தேயுவிற்கு இரண்டு கட்டளைகள் - (1:6; 1தீமோ 1:18; 5:21; 6:11)

2தீமோ 1:13 நீ கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தோடும் அன்போடும் என்னிடத்தில் கேட்டிருக்கிற ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக்கொண்டிரு.

2தீமோ 1:14 உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை நமக்குள்ளே வாசம்பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே காத்துக்கொள்.

II தீமோத்தேயு – தொகுப்புரை

1 அதிகாரம்

அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவிற்குக் கூறிய கட்டளைகள்

1. ஆரோக்கியமான வசனங்களில சட்டத்தைக் கைக்கொண்டிருக்க வேண்டும்
2. நற்பொருளை பரிசுத்த ஆவியினாலே காத்துக் கொள்ள வேண்டும்

சட்டம் (Hold fast the form) - ὑποτυπωσις - hypotypoosis - 5296

பெண்பால பெயர்ச்சொல - திருஷ்டாந்தம் (a sketch; outline; plan; copy) (1தீமோ 1:16) of sound words (2தீமோ 1:13) - இரட்சிப்பின திட்டம் மனுஷனுடைய கண்டுபிடிப்பலல [illegible] தேவனால திட்டமிடப்பட்டவை (2தீமோ 1:9 எபே 1:4) இயேசு கிறிஸதுவின மூலமாக இரட்சிப்பின திட்டம் இப்போது வெளிப்பட்டிருக்கிறது. (2தீமோ 1:10 யோவான 3:16, 1பேதுரு 2:24)

ஒப்புவிக்கப்பட்டது (guard) παραθήκη - paratheekee - 3866

பெண்பால் பெயர்சொல ஒப்புக்கொடுத்தது, ஒப்புவிக்கப்பட்டது (deposit, a thing given to keep) பரிசுத்த ஆவியானவரால ஒப்புவிக்கப்பட்டது (2தீமோ 1:14) இது சுவிசேஷத்தைக் குறிக்கும். (2தீமோ 1:13; 1தீமோ 3:16) பரிசுத்த ஆவியானவரும், தேவனுடைய வரங்களும் இந்த நோக்கத்திற்காகவே தீமோத்தேயுவிற்கு அருளப் பட்டிருக்கிறது. (2தீமோ 1:6,14; 1தீமோ 4:14

5. பவுலை விட்டு விலகியவர்கள் - (4:14-17)

2தீமோ 1:15 ஆசியா நாட்டிலிருக்கிற யாவரும், அவர்களில் பிகெல்லு எர்மோகெனே முதலாய என்னைவிட்டு விலகினார்களென்று அறிந்திருக்கிறாய்.

"ஆசியா நாட்டிலிருக்கிற யாவரும், என்னைவிட்டு விலகினார்கள்" - ஆசியாவில் இருந்த கிறிஸ்தவர்கள் ரோமாபுரிக்கு வந்தார்கள் பவுல பாடுகள் அனுபவிப்பதைக் கண்டபோது அவர்கள் பவுலின் மீது இரக்கம் காண்பிக்கவில்லை இரண்டு பேருடைய பேர்களை மட்டும் பவுல் இங்குக் குறிப்பிடுகிறார் ஆசியாவிலுள்ள எலலாக் கிறிஸதவரும பவுலைக் கைவிட்டுவிட்டார்கள் என்று கூறமுடியாது. (2தீமோ 1:5; 2தீமோ 4:10-22)

"பிகெல்லு எர்மோகெனே" (Phygellus and Hermogenes) - இவர்களைப பற்றி அதிகமான விவரஙகள ஒன்றும் தெரியவில்லை

6. ஒநேசிப்போருவிற்காக ஜெபம்

2தீமோ 1:16 ஒநேசிப்போருவின வீட்டாருக்குக் கர்த்தா இரக்கங்கட்டளையிடுவாராக அவன அநேகந்தரம் என்னை இளைப்பாற்றினான என விலங்கைக் குறித்து அவன் வெட்கப்படவிலலை,

2தீமோ 1:17 அவன ரோமாவில் வந்திருந்தபோது அதிக ஜாக்கிரதையாய் என்னைத் தேடிக் கண்டுபிடித்தான்

2தீமோ 1:18 அந்நாளிலே அவன் கர்த்தரிடத்தில இரக்கத்தைக் கண்டடையும்படி, கர்த்தா அவனுக்கு அனுக்கிரகஞ்செய்வாராக; அவன் எபேசுவிலே செய்த பறபல உதவிகளையும் நீ நன்றாய் அறிந்திருக்கிறாயே

II தீமோத்தேயு - தொகுப்புரை

1 அதிகாரம்

"ஒநேசிப்போரு" (Onesiphorus) - இவன் ஆசியா நாட்டில் இருந்தவன். பவுலுடைய விலங்கைக் குறித்து இவன் வெட்கப்படவில்லை. பவுல் எபேசுவில் இருந்தபோது ஒநேசிப்போரு பவுலுக்கு உதவிபுரிந்தான் 2தீமோ 1:16-18; 2தீமோ 4:19

"என் விலங்கைக்குறித்து அவன் வெட்கப்படவில்லை" பவுலின் விலங்கைக் குறித்து ஒருசிலர் வெட்கப்பட்டார்கள். பவுல் இயேசு கிறிஸ்துவிற்காக பாடுகளை அனுபவித்து வந்தார். சிறைச்சாலையில் இருந்தார். ஆயினும் அவர் இயேசு கிறிஸ்துவின் மீது வைத்திருந்த விசுவாசத்தை விட்டுவிடவில்லை. அவருக்குப் பழக்கமானவர்கள் பவுலைக் கைவிட்டு விட்டபோதிலும் அவர் மனந்தளர்ந்துபோகவில்லை. கிறிஸ்துவின் உண்மையான ஊழியக்காரராக இருந்தார்.

"கர்த்தர் அவனுக்கு அனுக்கிரகஞ் செய்வாராக" - எபேசுவிலும் ரோமாபுரியிலும் ஒநேசிப்போரு பவுலுக்குப் பற்பல உதவிகளைச் செய்திருந்தான். அவனுக்காகப் பவுல் ஜெபிக்கிறார். கர்த்தர் அவனுக்கு அனுக்கிரகம் செய்ய வேண்டுமென்பது பவுலின் வாஞ்சை. ஒரு ஊழியக்காரருக்கு விருந்து உபசரிப்பதினால் யாருடைய ஆத்துமாவும் இரட்சிக்கப்படப் போவதில்லை. ஆனாலும் நல்ல மனப்பான்மையோடு ஒருவருக்கு உதவி புரியும்போது அவர் அதற்கேற்ற பலனையும் வெகுமதியையும் தேவனிடமிருந்து பெற்றுக் கொள்வார் (மத் 6:1,5; மத் 10:40-42)

"அந்நாளிலே" - கிறிஸ்துவின் நாள் (1கொரி 1:8)

II தீமோத்தேயு - தொகுப்புரை

2 அதிகாரம்

7. தீமோத்தேயுவிற்கு எட்டு கட்டளைகள் - (2தீமோ 1:18 ; 5:21; 6:11)

2தீமோ 2:1 ஆதலால், என் குமாரனே நீ கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில் பலப்படு.

2தீமோ 2:2 அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க [illegible] மனுஷர்களிடத்தில் ஒப்புவி.

2தீமோ 2:3 நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச் சேவகனாயத் தீங்கநுபவி.

2தீமோ 2:4 தண்டில் சேவகம் பண்ணுகிற எவனும், தன்னைச் சேவகமெழுதிக் கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி பிழைப்புக் கடுத்த அலுவல்களில் சிக்கிக் கொள்ளமாட்டான்.

2தீமோ 2:5 மேலும் ஒருவன் மல்லயுத்தம் பண்ணினாலும் சட்டத்தின்படி பண்ணாவிட்டால் முடிசூட்டப்படான்.

2தீமோ 2:6 பிரயாசப்பட்டுப் பயிரிடுகிறவன் பலனில் முந்திப் பங்கடையவேண்டும்.

2தீமோ 2:7 நான் சொல்லுகிறவைகளைச் சிந்தித்துக்கொள்; கர்த்தர் எல்லாக் காரியங்களிலும் உனக்குப் புத்தியைத் தந்தருளுவார்.

2தீமோ 2:8 தாவீதின் சந்ததியில் பிறந்த இயேசுகிறிஸ்து, என் சுவிசேஷத்தின் படியே, மரித்தோரிலிருந் தெழுப்பப் பட்டவரென்று நினைத்துக் கொள்.

அப்போஸ்தலன் பவுல் தீமோத்தேயுவிற்குக் கூறியிருக்கும் கட்டளைகள்

1. கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில் பலப்படு. (2தீமோ 2:1)
2. சத்தியத்தை உண்மையுள்ள மனுஷரிடத்தில் ஒப்புவி. (2தீமோ 2:2)
3. நல்ல போர்ச்சேவகனாய தீங்கனுபவி. (2தீமோ 2:3)
4. பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ளாதே. (2தீமோ 2:4)
5. சட்டத்தின்படி முடிசூட்டப்பட முயற்சி பண்ணு. (2தீமோ 2:5)
6. நான் சொல்லுகிறவைகளைச் (சத்தியத்தை) சிந்தித்துக் கொள் (2தீமோ 2:7)
7. இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவர் என்று நினைத்துக் கொள் (2தீமோ 2:8)

"அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை" - பவுல் தீமோத்தேயுவை ஊழியத்திற்குப் பிரதிஷ்டை பண்ணி அவனுக்கு சுவிசேஷத்தின் சத்தியத்தை அநேக சாட்சிகளுக்கு முன்பாக அறிவித்தார் (1தீமோ 4:14; 1தீமோ 6:12 2தீமோ 1:6 2தீமோ 2:2) இந்தச் சத்தியத்தை தீமோத்தேயு உண்மையுள்ள மனுஷரிடத்தில் ஒப்புவிக்க வேண்டும்.

கிறிஸ்தவருக்குப் பண்படுத்தப் பட்டிருக்கும் ஒப்பனைப்பெயர்

1. போர்ச்சேவகன் (2தீமோ 2:3-4)
2. மல்யுத்தம் பண்ணுகிறவன் (2தீமோ 2:5)
3. பயிரிடுகிறவன் (2தீமோ 2:6

2 அதிகாரம்

நல்ல போர்ச்சேவகன் பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக் கொள்ளமாட்டான் தனக்கென்று சில கட்டுப்பாடுகளை நியமித்துக் கொள்வான். அதுபோலவே மல்யுத்தம் பண்ணுகிறவனும் சட்டத்தின்படி தான் மல்யுத்தம் பண்ணுவான் பயிரிடுகிறவன் விவசாயத்தின் இயற்கையான பிரமாணங்களின் பிரகாரம் பயிரிடுவான் இதுபோலவே தேவனுடைய ஊழியக்காரனும் பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக் கொள்ளாமல் முறைப்படி ஊழியம் செய்து தனக்கு வைக்கப்பட்டிருக்கும் கிரீடத்தையும் நித்திய ஜீவனையும் பெற்றுக் கொள்ள வேண்டும்

"நான் சொல்லுகிறவைகளைச் சிந்தித்துக் கொள்" - பவுல் இந்த வசனங்களில் உவமைகளாகக் கூறுகிறார் இவற்றைப் புரிந்து கொள்வதற்கும். ஜீவியத்தில் நடைமுறைப்படுத்துவதற்கும் கர்த்தர் அவனுக்குப் புத்தியைத் தந்தருளுவார்

"தாவீதின் சந்ததியில் பிறந்த இயேசுகிறிஸ்து. என் சுவிசேஷத்தின்படியே. மரித்தோரிலிருந்தெழுப்பப்பட்டவரென்று நினைத்துக்கொள்" நாம் எப்பேர்ப்பட்ட துன்பத்தை அனுபவித்தாலும். இயேசு கிறிஸ்துவையும். அவருடைய பாடுகளையும் நினைத்துக் கொள்ள வேண்டும் தேவன் இயேசு கிறிஸ்துவை உயிரோடு எழுப்பியிருக்கும்போது அவர் நம்மையும் உயிர்த்தெழச்செய்வது நிச்சயம்

8. சுவிசேஷத்தின் நிமித்தம் பவுல் அனுபவித்த துன்பம் - 2கொரி 4:8

2தீமோ 2:9 இந்தச் சுவிசேஷத்தினிமித்தம் நான் பாதகனைப்போலக் கட்டப்பட்டு. துன்பத்தை அநுபவிக்கிறேன்; தேவ வசனமோ கட்டப்பட்டிருக்கவில்லை

2தீமோ 2:10 ஆகையால், தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் கிறிஸ்து இயேசுவினால் உண்டான இரட்சிப்பை நித்திய மகிமையோடே பெற்றுக் கொள்ளும்படி, சகலத்தையும் அவர்கள் நிமித்தமாகச் சகிக்கிறேன்

பாதகன் (evil doer) - κακοῦργος - kakourgos - 2557

பெரிய குற்றவாளிகளான, துன்பத்தை அனுபவிக்கிற (malefactors) (லூக்கா 23:32,33,39, 2தீமோ 2:10) வரப்போகிற நித்திய ஜீவனை நினைத்து, தற்காலத்தில் அனுபவிக்கும் துன்பத்தைச் சந்தோஷமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். (2தீமோ 2:9-10)

"சகலத்தையும் அவர்கள் நிமித்தமாகச் சகிக்கிறேன்" - இந்த வாக்கியத்தில் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்பது புறஜாதியாரிலிருந்து இரட்சிக்கப்படுகிறவர்களைக் குறிக்கும். பவுல் இவர்களுக்காகவே கட்டப்பட்டிருக்கிறார் (லூக்கா 18:7

9. உண்மையுள்ள ஐந்து வார்த்தைகள்

2தீமோ 2:11 இந்த வார்த்தை உண்மையுள்ளது, என்னவெனில், நாம் அவரோடேகூட மரித்தோமானால் அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்

2தீமோ 2:12 அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடே கூட ஆளுகையும் செய்வோம் நாம் அவரை மறுதலித்தால் அவரும் நம்மை மறுதலிப்பார்

2தீமோ 2:13 நாம் உண்மையில்லாதவர்களாயிருந்தாலும், அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார், அவர் தம்மைத்தாம் மறுதலிக்க மாட்டார்

தீர்க்கதரிசன எண் - 1

"இந்த வார்த்தை உண்மையுள்ளது. என்னவெனில் நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்;......" (2தீமோ 2:11-13) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை

உண்மையுள்ள வார்த்தைகள்

1. நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம் 2தீமோ 2:11 ரோமர் 6:8 2கொரி 5:15)

II தீமோத்தேயு - தொகுப்புரை

2 அதிகாரம்

2 அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம் (2தீமோ 2:12; ரோமர் 8:17-18)

3 நாம் அவரை மறுதலித்தால் அவரும் நம்மை மறுதலிப்பார் (2தீமோ 2:12; மாற்கு 8:38; லூக்கா 9:26)

4 நாம் உண்மையில்லாதவர்களாயிருந்தாலும், அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்; அவர் தம்மைத்தாம் மறுதலிக்கமாட்டார் (2தீமோ 2:13)

தேவன் பொய் கூறமாட்டார். தம்முடைய வார்த்தைக்கும், தம்முடைய சுபாவத்திற்கும் முரணாக நடந்து கொள்ளமாட்டார். பாவத்தைச் சபிப்பதும், நீதியை ஆசீர்வதிப்பதும் தேவனுக்குச் சித்தமான காரியம்.

10. தீமோத்தேயுவிற்கு ஐந்து கட்டளைகள் (பார்க்க: 1தீமோ 1:18; 5:12; 6:11)

2தீமோ 2:14 இவைகளை அவர்களுக்கு நினைப்பூட்டி, ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாமல் கேட்கிறவர்களைக் கவிழ்த்துப் போடுகிறதற்கேதுவான வாக்குவாதம் செய்யாதபடிக்கு கர்த்தருக்கு முன்பாக அவர்களுக்கு எச்சரித்துப் புத்திசொல்லு.

2தீமோ 2:15 நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும், உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு.

2தீமோ 2:16 சீர்கேடான வீண்பேச்சுகளுக்கு விலகியிரு; அவைகளால் கள்ளபோதகர்கள் (அவர்கள்) அதிக அவபக்தியுள்ளவர்களாவார்கள்.

அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவிற்குக் கூறியிருக்கும் கட்டளைகள்

1 2தீமோ 2:1-13 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் காரியங்களை மனுஷருக்கு நினைப்பூட்டு

2 ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாமல் கேட்கிறவர்களைக் கவிழ்த்துப் போடுகிறதற்கேதுவான வாக்குவாதம் செய்யாதபடிக்கு கர்த்தருக்கு முன்பாக அவர்களுக்கு எச்சரித்துப் புத்தி சொல்லு (2தீமோ 2:14)

3 நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும், உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு (2தீமோ 2:15)

4 சீர்கேடான வீண்பேச்சுகளுக்கு விலகியிரு (2தீமோ 2:16)

கவிழ்த்துப்போடு (subverting) - καταστροφή - katastrophee - 2692

பெண்பால் பெயர்ச்சொல் - கவிழ்த்துப்போடு (an overturning; overthrowing; catastrophe) "subverting" (2தீமோ 2:14); "overthrow" (2பேதுரு 2:6)

உத்தமன் (approved) - δόκιμος - dokimos 1384

பெயரடை - அங்கீகரிக்கப்பட்ட, உத்தமனாகிய, பரீட்சைக்கு நின்ற "approved" (2தீமோ 2:15; ரோமர் 14:18; ரோமர் 16:10; 1கொரி 11:19; 2கொரி 10:18; 2கொரி 13:7); "tried" (யாக் 1:12); ஆகாதவனுக்கு எதிர்பதம்

ஆகாதவன் (disapproved) - ἀδόκιμος - adokimos 96

பெயரடை - தேர்வில் தோற்றுப்போகுதல், ஆகாதவன், தகாத, பிரயோஜனமில்லாத (castaway) (1கொரி 9:27)

II தீமோத்தேயு – தொகுப்புரை

2 அதிகாரம்

ஊழியக்காரன் (workman) ἐργάτης ergatees 2040

ஆண்பால் பெயர்ச்சொல் - வேலையாள் ஊழியக்காரன் "workman" 2தீமோ2:15,மத் 10:10, அப் 19:25); "worker" (லூக்கா 13:27 2கொரி 11:13 பிலி 3:2 "labourer" மத் 9:37-38 மத் 20:1-2,8 லூக்கா 10:2,7 1தீமோ 5:18 யாக் 5:4

நிதானமாய்பகு (rightly dividing) - ὀρθοτομέω - orthotomeoo - 3718

வினைச்சொல் - நிதானமாய்பகு (set straight; handle right) - உண்மையான பொருளைக் கூறுவதோடு ஏற்ற வேளையில் ஏற்ற ஜனங்களுக்கு ஏற்ற செய்தியையும் கொடுக்க வேண்டும். (மாற்கு 4:12 மாற்கு 4:20 மாற்கு 4:22-23)

வீண்பேச்சு (vain babbling) - κενοφωνία - kainophoonia - 2757

பெண்பால் பெயர்சொல் வீண்பேச்சு (vain talk; babbling; increasing ungodliness) (1தீமோ 6:20, 2தீமோ 2:16)

11. சத்தியத்தை விட்டு விலகுவதனால் ஏற்படும் விளைவு

2தீமோ 2:17 அவர்களுடைய வார்த்தை அரிபிளவையைப்போலப் படரும்; இமெநேயும் பிலேத்தும் அப்படிப்பட்டவர்கள்,

2தீமோ 2:18 அவர்கள் சத்தியத்தை விட்டு விலகி, உயிர்த்தெழுதல் நடந்தாயிற்றென்று சொல்லி, சிலருடைய விசுவாசத்தைக் கவிழ்த்துப் போடுகிறார்கள்.

படருதல் (eat) - νομή - nomee – 3542

பெண்பால் பெயர்ச்சொல் - மேய்ச்சல் (have pasture) (யோவான் 10:9 2தீமோ 2:17) தவறான உபதேசங்கள் ஓர் ஆத்துமாவை அரிபிளவையைப் போலப் படர்ந்து அந்த ஆத்துமாவிற்கு நித்திய மரணத்தைக் கொடுக்கும்.

"இமெநே" (Hymenaeus) - இவனைப் பற்றி அதிகமான குறிப்பு காணப்படவில்லை. இவன் விசுவாசத்திலிருந்து விலகிவிட்டான். உயிர்த்தெழுதல் ஏற்கெனவே நடைபெற்று விட்டது என்று விசுவாசிகள் மத்தியில் தவறான உபதேசத்தைப் பிரசங்கித்தான். மற்றவர்களுடைய விசுவாசத்திற்குத் தடையாக இருந்த இவனைப் பவுல் சாத்தானிடம் ஒப்புக்கொடுத்தார். (2தீமோ 2:17-18 1தீமோ 1:19-20)

"பிலேத்து" (Philetus) - இவனைப் பற்றியும் அதிகமாக ஒன்றும் தெரியவில்லை. இவனும் இமெநேயைப்போலவே விசுவாசத்தை விட்டு விலகி வந்தவன்.

கவிழ்த்துப்போடு (overthrow) - ἀνατρέπω - anatrepoo - 396

வினைச்சொல் கவிழ்த்துப்போடு (overturn) (2தீமோ 2:18 தீத்து 1:11)

12. சத்தியத்தின் விளைவு

2தீமோ 2:19 ஆகிலும் தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது. கர்த்தர் தம்முடையவர்களை அறிவாரென்பதும், கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தைவிட்டு விலகக் கடவனென்பதும் அதற்கு முத்திரையாயிருக்கிறது.

2தீமோ 2:20 ஒரு பெரிய வீட்டிலே பொன்னும் வெள்ளியுமான பாத்திரங்களுமல்லாமல், மரமும் மண்ணுமான பாத்திரங்களுமுண்டு; அவைகளில் சில கனத்திற்கும் சில கனவீனத்திற்குமானவைகள்.

II தீமோத்தேயு – தொகுப்புரை

2 அதிகாரம்

2தீமோ 2:21 ஆகையால் ஒருவன் இவைகளை விட்டுத் தன்னைச் சுத்திகரித்துக்கொண்டால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும், எஜமானுக்கு உபயோகமானதும் எந்தநற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான்

"தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது" - தேவனுடைய சத்தியம் உறுதியான அஸ்திபாரத்தைப் போன்றது. எத்தனை பேர் விசுவாசத்தை விட்டு வழிவிலகிப்போனாலும், தேவனுடைய சத்தியம் மாறாதது. தேவனுடைய உறுதியான அஸ்திபாரத்தின்மீது ஜனங்கள் தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தைக் கட்டி எழுப்ப வேண்டும். தாங்கள் எவ்வாறு கட்டுகிறார்கள் என்னும் அடிப்படையில் ஒவ்வொருவரும் நியாயந்தீர்க்கப்படுவார்கள் (1கொரி 3:1-15)

சுத்திகரித்துக் கொள்ள வேண்டிய காரியங்கள்

1. பிழைப்புக்கடுத்த அலுவல்கள் 2தீமோ 2:4
2. பின்மாற்றங்கள் (2தீமோ 2:12)
3. அவிசுவாசம் (2தீமோ 2:13)
4. விசுவாசத்தை அழிக்கும் கள்ள உபதேசங்கள் (2தீமோ 2:14,18)
5. சீர்கேடான வீண்பேச்சுக்கள் 2தீமோ 2:16-17
6. விசுவாசத்தைக் கவிழ்த்துப்போடும் கள்ளபோதகர்கள் (2தீமோ 2:17-18)
7. எல்லா அநியாயங்கள் (2தீமோ 2:19-20)

சுத்திகரித்துக் கொள்ளுதலினால் உண்டாகும் ஆசீர்வாதங்கள்

1. கனத்துக்குரிய பாத்திரம்
2. பரிசுத்தமாக்கப்படுதல் (யோவான் 17:17)
3. எஜமானுக்கு உபயோகமான பாத்திரம்.
4. எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்ட பாத்திரம் (மாற்கு 16:15-20; யோவான் 14:12; அப் 1:8)

உபயோகமானது (useful) - εὔχρηστος - euchreestos - 2173

பொருள் - பிரயோஜனமுள்ள, உபயோகமான (useful, profitable) (பிலே 1:11)

13. தீமோத்தேயுவிற்கு எட்டு கட்டளைகள் - (1தீமோ 1:18; 5:12; 6:11)

2தீமோ 2:22 அன்றியும் பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுதுகொள்ளுகிறவர்களுடனே நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு.

2தீமோ 2:23 புத்தியீனமும் அயுக்தமுமான தர்க்கங்கள் சண்டைகளைப் பிறப்பிக்குமென்று அறிந்து அவைகளுக்கு விலகியிரு.

2தீமோ 2:24 கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமல் எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதகசமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்கவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவிற்குக் கூறியிருக்கும் கட்டளைகள்

1. பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோட வேண்டும். (1தீமோ 6:11; கலா 5:19-21; கொலோ 3:5-10)
2. நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாட வேண்டும். (2தீமோ 2:22; 1தீமோ 6:11)

II தீமோத்தேயு – தொகுப்புரை

2 அதிகாரம்

3 புத்தியீனமும் அயுக்தமுமான தர்க்கங்கள் சண்டைகளைப் பிறப்பிக்குமென்று அறிந்து அவைகளுக்கு விலகியிருக்க வேண்டும். (2தீமோ 2:23)

4 மனுஷரோடு சண்டைபண்ணக்கூடாது. (2தீமோ 2:24)

5 எல்லா இடத்திலும் சாந்தமுள்ளவனாக இருக்க வேண்டும். (2தீமோ 2:24)

6 போதகசமர்த்தனாக இருக்க வேண்டும். (2தீமோ 2:24)

7 தீமையைச் சகிக்கிறவனாக இருக்க வேண்டும். (2தீமோ 2:24)

8 எதிர் பேசுகிறவர்களுக்குச் சத்தியத்தைச் சாந்தமாய் உபதேசிக்க வேண்டும். (2தீமோ 2:25-26)

"சுத்த இருதயம்" - நமது ஜெபத்திற்குப் பதில் கிடைக்க வேண்டுமென்றால் நமது இருதயம் சுத்தமாய் இருக்க வேண்டும் (2தீமோ 2:19-21; சங் 66:18

"புத்தியீனமும் அயுக்தமுமான தர்க்கங்கள் சண்டைகளைப் பிறப்பிக்கும்" - (1தீமோ 1:4)

சண்டைபண்ணுதல் (strive) μάχομαι - machomai - 3164

வினைச்சொல் - வாக்குவாதம் பண்ணு, சண்டைபண்ணு (to fight; contend in battle; quarrel; wrangle, dispute) strive (2தீமோ 2:24, யோவான் 6:52 அப் 7:26 fight (யாக் 4:2)

சாந்தமுள்ளவன் (gentle) - ἤπιος eepios 2261

பொருள் - பட்சமான, சாந்தமுள்ள (mild) (1தெச 2:7, 2தீமோ 2:24)

போதக சமர்த்தன் (apt to teach) - διδακτικός - didaktikos - 1317

பொருள் - போதக சமர்த்தனுமான (capable of teaching) (1தீமோ 3:2, 2தீமோ 2:24

தீமையைச் சகிக்கிறவன் (patient) - ἀνεξίκακος - anexikakos - 420

பொருள் - சாந்த குணமுள்ள, ஒரு தவறை பொறுமையோடே சகித்துக் கொள்ளுதல் (enduring evil)

14. உண்மையான ஊழியக்காரனுடைய அடையாளமும் கடமையும் - (2கொரி 2:14-7:16)

2தீமோ 2:25 எதிர்பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத்தக்கதாகவும்.

2தீமோ 2:26 பிசாசினவனுடைய இஷ்டத்தின்படி செய்ய அவனால் பிடிபட்டிருக்கிற அவர்கள் மறுபடியும் மயக்கந்தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும் சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்கவேண்டும்

"சாந்தம்" (meekness) - (1கொரி 4:21

உபதேசி (instructing) - παιδεύω - paideuoo - 3811

வினைச்சொல் - தண்டி கற்பிக்கப்படு, போதிக்கப்படு, உபதேசி (எபி 12:6) - எதிர்பேசுகிறவர்களுக்குச் சத்தியத்தைச் சாந்தமாக உபதேசிக்க வேண்டும். இதனால் அவர்களும் மனந்திருந்துவதற்கு வாய்ப்பு உண்டாகும். (1கொரி 5:5 1தீமோ 1:19-20 இதைச் செய்வதற்குத் தீமோத்தேயுவிற்குத் தேவனுடைய வல்லமை தேவைப்படும். (1கொரி 4:19-21; 1கொரி 16:10)

II தீமோத்தேயு – தொகுப்புரை

2 அதிகாரம்

மயக்கந்தெளி (recover) - ἀνανήφω - ananeephoo - 366

வினைச்சொல் - மயக்கந்தெளி (become sober again, to recover from captivity) - எல்லோருமே கண்ணியில் விழுவதற்கு வாய்ப்புள்ளது. எச்சரிப்போடு இல்லையென்றால் சாத்தானுடைய கண்ணியில் விழுவது நிச்சயம்.

பிடிபட்டிருத்தல் (taken captive) - ζωγρέω - zoogreoo - 2221

வினைச்சொல் - பிடி பிடிக்கிறவனாயிரு (alive) (லூக்கா 5:10) (2தீமோ 2:26) சாத்தான் ஜனங்களைப் பிடித்து வைத்திருக்கிறான். சாத்தானிடமிருந்து ஊழியக்காரர்கள் ஜனங்களை விடுவித்து அவர்களை கர்த்தருடைய ஜனமாகப் பிடித்து வரவேண்டும்.

II தீமோத்தேயு - தொகுப்புரை

3 அதிகாரம்

III. சத்தியத்தை விட்டு விலகுதல் - கிறிஸ்துவின் வருகைக்கு இருபத்தி ரெண்டு அடையாளங்கள்

1. கடைசி நாட்களின் பண்பு

2தீமோ 3:1 மேலும், கடைசிநாட்களில கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக.

தீர்க்கதரிசன எண் - 2

"கடைசிநாட்களில கொடிய காலங்கள் வரும் ...." 2தீமோ 3:1-5) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

கொடிய (fierce) - χαλεπός - chalepos - 5467

மெரடை - கொடிய (hard; difficult; grievous) "fierce" மத் 8.28

2. சத்தியத்தை விட்டு விலகுபவர்களின் பதினெட்டு சுபாவங்கள் (மத் 23:1-36; 24:9-12 அப 20:29-30; ரோமர் 1:18-2:1 2கொரி 11:12 15; 1தீமோ 4:1 5 2தீமோ 4:1-4, பிலி 3:18 19, 2தெச 2:1-12; எபி 6:4-6; 10:26 29 2பேதுரு 2; யூதா 4-19; வெளி 13,17)

2தீமோ 3:2 எப்படியெனில். மனுஷர்கள் தற்பிரியராயும் பணப்பிரியராயும், வீம்புக்காரராயும் அகந்தையுள்ளவர்களாயும். தூஷிக்கிறவர்களாயும். தாய் தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாத வர்களாயும், நன்றியறியாதவர்களாயும் பரிசுத்தமில்லாதவர்களாயும்,

2தீமோ 3:3 சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும் அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும் கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும்.

2தீமோ 3:4 துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும்

துன்மார்க்கருடைய சுபாவங்கள்

1 தற்பிரியர் (Lovers of themselves) (2தீமோ 3:2)

2 பணப்பிரியர் (Covetous) (2தீமோ 3:2)

3 வீம்புக்காரர் (Boasters) (2தீமோ 3.2

4 அகந்தையுள்ளவர் (Proud) (2தீமோ 3:2)

5 தூஷிக்கிறவர் (Blasphemers) (2தீமோ 3:2 மத் 12.31)

6 தாய் தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்கள் (Disobedient to parents) (ரோமர் 1.30, 2தீமோ 3.2

7 நன்றியறியாதவர்கள் (Unthankful) (2தீமோ 3.2

8 பரிசுத்தமில்லாதவர்கள் (Unholy) (2தீமோ 3:2)

9 சுபாவ அன்பில்லாதவர்கள் (Without natural affection) (ரோமர் 1.31, 2தீமோ 3.3

10 இணங்காதவர்கள் (Truce breakers) ரோமர் 1.31, 2தீமோ 3.3)

II தீமோத்தேயு – தொகுப்புரை

3 அதிகாரம்

11 அவதூறு செய்கிறவர்கள் (False accusers) (2தீமோ 3:3)

12 இச்சையடக்க மில்லாதவர்கள் (Incontinent) (2தீமோ 3:3)

13 கொடுமையுள்ளவர்கள் (Fierce) (2தீமோ 3:3)

14 நல்லோரைப் பகைக்கிறவர்கள் (Despisers of good men) (2தீமோ 3:3)

15 துரோகிகள்(Traitors) (2தீமோ 3:4)

16 துணிகரமுள்ளவர்கள் (Heady) (2தீமோ 3:4)

17 இறுமாப்புள்ளவர்கள் (Highminded) (2தீமோ 3:4)

18 சுகபோகப்பிரியர் (Lovers of pleasure) (2தீமோ 3:4)

19 தேவபக்தியின் வேஷத்தைத் தரித்திருக்கிறவர்கள் (Having a form of godliness) (2தீமோ 3:5)

20 தேவபக்தியின் பெலனை மறுதலிக்கிறவர்கள் (Denying the power of godliness) (2தீமோ 3:5)

21 சத்தியத்தை அறிந்து உணராதவர்களுடைய வீடுகளில் தங்களைப் பக்திமான்களைப்போல காண்பித்து நுழைந்து விடுகிறவர்கள் (Use their show of piety to gain entrance into homes to deceive) (2தீமோ 3:6)

22 பெண்பிள்ளைகளைத் தங்கள் வசப்படுத்திக் கொள்கிறவர்கள் (Capture for their own pleasure silly (foolish) women whom they deceive) (2தீமோ 3:6)

23 ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்கள் (Ever learning fallacies but never the knowledge of the truth) (2தீமோ 3:7)

24 சத்தியத்திற்கு எதிர்த்து நிற்கிறவர்கள் (Resist truth) (2தீமோ 3:8)

25 துர்புத்தியுள்ள மனுஷர்கள் (Have corrupt minds) (2தீமோ 3:8)

26 விசுவாச விஷயத்தில் பரீட்சைக்கு நில்லாதவர்கள் (Reprobate concerning faith) (2தீமோ 3:8)

27 பொல்லாதவர்கள் (They are evil) (2தீமோ 3:13)

28 எத்தர்கள் (They seduce women—entice them to surrender chastity) (2தீமோ 3:6,13)

29 மேன்மேலும் கேடுள்ளவர்கள் (They increase in evil) (2தீமோ 3:13)

30 மோசம்போக்குகிறவர்களும் மோசம் போகிறவர்களும் (They deceive and are themselves deceived) (2தீமோ 3:13)

தற்பிரியர் (selfish) - φιλέω - phileoo - 5367

பொருள் - தற்பிரியரான (fond of oneself, selfish)

பணப்பிரியர் (Covetous) - φιλάργυρος - philagyros - 5366

பொருள் - பொருளாசைக்காரரான, பணப்பிரியரான (fond of money) (லூக்கா 16:14, 2தீமோ 3:2)

வீம்புக்காரர் (Boasters) - ἀλαζών - alazoon 213

ஆணவமாய் பொய்சொல் - வீம்புக்காரர் (braggarts, self exalted) (ரோமர் 1:30, 2தீமோ 3:2)

II தீமோத்தேயு – தொகுப்புரை

3 அதிகாரம்

அகந்தையுள்ளவர் (Proud) - ὑπερήφανος - hypereephanos - 5244

பொருள் - அகந்தையுள்ள பெருமையுள்ள (self important) ரோமர் 1:30;

நன்றியறியாதவர் (Unthankful) - ἀχάριστος - acharistos - 884

பொருள் - நன்றியறியாத (ungrateful) லூக்கா 6:35 2தீமோ 3:2

பரிசுத்தமில்லாதவர் (Unholy) - ἀνόσιος - anosios - 462

பொருள் - அசுத்தமான பரிசுத்தமில்லாத (without piety; no reverence)

அவதூறு செய்கிறவர் (False accusers) - διάβολος - diabolos - 1228

பொருள் - பிசாசான, அவதூறு செய்கிறவன (slanderer; adversary) யோவான் 6:70 யோவான் 8:44

இச்சையடக்கமில்லாதவர் (Incontinent) ἀκρατής - akratees - 193

பொருள் - இச்சையடக்கமில்லாத (no control of appetites and passions)

கொடுமையானவர் (Fierce) - ἀνήμερος - aneemeros - 434

பொருள் - கொடுமையான (wild; savage, uncivilized)

பகைக்கிறவர் (Despise) ἀφιλάγαθος aphilagathos - 865

பொருள் - பகைக்கிற (unfriendly to good men)

துரோகிகள் (Traitors) - προδότης - prodotees - 4273

ஆண்பால் பெயர்சொல் - துரோகி (betrayers) (லூக்கா 6:16 அப் 7:52, 2தீமோ 3:2)

துணிகரமுள்ளவர் (Heady) προπετής - propetees - 4312

பொருள் - பதறிச்செய்கிற, துணிகரமுள்ள (rash; hasty; reckless; headstrong) "rashly" (அப் 19:36)

இறுமாப்புள்ளவர் (Highminded) - τυφόομαι - typhoomai - 5187

வினைச்சொல் - இறுமாப்பு அடை (senseless; conceited; silly) (1தீமோ 3:6)

வேஷம் (semblance) - μόρφωσις - morphoosis - 3446

பெண்பால் பெயர்சொல் - காட்டுதல் வேஷம் (a semblance; sketch; form) (ரோமர் 2:20, 2தீமோ 3:2) - விசுவாச அறிக்கையே இவர்களுடைய மார்க்கம். இவர்களுடைய இருதயங்களில் விசுவாச அறிக்கை கிரியை நடப்பிக்கவில்லை

3. **சத்தியத்தை விட்டு விலகுபவர்களின் ஏழு பாவங்கள்** (எரே 2:3 1 2 1 4 எசே 13:1 23 34:1 6 மத் 23)

2தீமோ 3:5 தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களுமாயிருப்பார்கள். இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு.

2தீமோ 3:6 பாவங்களால் நிறைந்து, பற்பல இச்சைகளால் இழுப்புண்டு

II தீமோத்தேயு – தொகுப்புரை

3 அதிகாரம்

2தீமோ 3:7 எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற பெண்பிள்ளைகளுடைய வீடுகளில் இப்படிப்பட்டவர்கள் நுழைந்து அவர்களை வசப்படுத்திக் கொள்ளுகிறார்கள்

2தீமோ 3:8 யந்நேயும் யம்பிரேயும் மோசேக்கு எதிர்த்து நின்றதுபோல இவர்களும் சத்தியத்துக்கு எதிர்த்து நிற்கிறார்கள் இவர்கள் துர்புத்தியுள்ள மனுஷர்கள், விசுவாச விஷயத்தில் பரீட்சைக்கு நில்லாதவர்கள்

2தீமோ 3:9 ஆனாலும், இவர்கள் அதிகமாய்ப் பலப்படுவதில்லை அவர்களிருவருடைய மதிகேடு எல்லாருக்கும் வெளிப்பட்டதுபோல இவர்களுடைய மதிகேடும் வெளிப்படும்.

"யந்நேயும் யம்பிரேயும்" (Jannes and Jambres) இவர்கள் மோசேயை எதிர்த்து நின்ற மந்திரவாதிகள் தேவன் இவர்களைத் தடை பண்ணும் வரையிலும் இவர்கள் சாத்தானுடைய கிரியைகளை வெளிப்படுத்தினார்கள் (2தீமோ 3:8,9; யாத் 7:11-12,22; யாத் 8:7,18,19)

IV. சொந்த குறிப்புகளும் கட்டளைகளும் (2தீமோ 3:10-4:18)

1. பவுலின் ஜீவியம், ஊழியம் ஆகியவற்றின் ஒன்பது அம்சங்கள் (2கொரி 2:14 17:16)

2தீமோ 3:10 நீயோ என் போதகத்தையும் நடக்கையையும் நோக்கத்தையும் விசுவாசத்தையும் நீடிய சாந்தத்தையும் அன்பையும் பொறுமையையும்,

2தீமோ 3:11 அந்தியோகியா, இக்கோனியா, லீஸ்திரா என்னும் பட்டணங்களில் எனக்கு உண்டான துன்பங்களையும் பாடுகளையும் நன்றாய் அறிந்திருக்கிறாய், எவ்வளவோ துன்பங்களைச் சகித்தேன் இவையெல்லாவற்றினின்றும் கர்த்தர் என்னை நீங்கலாக்கிவிட்டார்

பவுலைப் பற்றி நன்றாய் அறியப்பட்டிருக்கும் காரியங்கள்

1. பவுலின் போதகம்
2. நடக்கை (2தீமோ 3:10)
3. நோக்கம்
4. விசுவாசம் (2தீமோ 3:10)
5. நீடிய சாந்தம் (2தீமோ 3:10)
6. அன்பு (2தீமோ 3:10)
7. பொறுமை
8. கிறிஸ்துவிற்காக அனுபவித்த துன்பங்கள் (2தீமோ 3:11)
9. பாடுகள்

உபதேசம் (teaching) - διδασκαλία didaskalia - (3:9)

பெண்பால் பெயர்ச்சொல் - உபதேசம், போதனை

பாடு (Affliction) - πάθημα - patheema 3:8(4

பால வேறுபாடற்ற பெயர்ச்சொல் இச்சை, பாடு, உபத்திரவம் (ரோமர் 7:5, 2தீமோ 3:11

"அந்தியோகியா, இக்கோனியா, லீஸ்திரா என்னும் பட்டணங்களில் எனக்கு உண்டான துன்பங்களையும்"

(அப் 13:14,50; அப் 14:1-7,19-21)

3 அதிகாரம்

2. மானிட அனுபவத்தின் இரண்டு மாறாத பிரமாணங்கள்

2தீமோ 3:12 அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்

2தீமோ 3:13 பொல்லாதவர்களும் எத்தர்களுமானவர்கள் மோசம் போக்குகிறவர்களாகவும், மோசம் போகிறவர்களாகவுமிருந்து மேன்மேலும் கேடுள்ளவர்களாவார்கள்

தீர்க்கதரிசன எண் - 8

“கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் ....” 2தீமோ 3:12 இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

தேவபக்தி (godly) - εὐσεβῶς - euseboos - 2153

வினையடை - தேவபக்தியாய (2தீமோ 3:12, தீத்து 2:12)

3. தீமோத்தேயுவிற்குக் கட்டளை

2தீமோ 3:14 நீ கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் நிலைத்திரு; அவைகளை இன்னாரிடத்தில் கற்றாய் என்று நீ அறிந்திருக்கிறதுமல்லாமல்

“நீ கற்று நிச்சயித்துக்கொண்டவைகளில் நிலைத்திரு” - (அப் 14:22)

4. வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப் பட்டிருக்கிறது - ரோமர் 1:16 எபி 4:12 யோவான் 12:48 எபே 5:26; 1பேதுரு 1:23

2தீமோ 3:15 கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத் தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும்.

2தீமோ 3:16 வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக

2தீமோ 3:17 அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.

பரிசுத்தம் (holy) - ἱερός - hieros - 2413

பெயரடை - ஆசாரிய, பரிசுத்த (2தீமோ 3:15, 1கொரி 9:13)

வேதஎழுத்துக்கள் (scripture) γράμμα - gramma 1121

பல் வேறுபாடற்றப் பொதுச்சொல் - சிட்டு, எழுத்து, காகிதம் (கலா 6:11)

II தீமோத்தேயு – தொகுப்புரை

3 அதிகாரம்

வேதாகமம் (Scripture) - γραφή - graphee 1124

பெண்பால் பெயர்ச்சொல் - வேதம் வேத வாக்கியம். வேதாகமம் (2தீமோ 3:16; மத் 21:42 மத் 22:29; மத் 26:54-56, மாற்கு 12:10,24; மாற்கு 14:49 மாற்கு 15:28; லூக்கா 4:21 லூக்கா 24:27,32,45; யோவான் 2:22 யோவான் 5:39; யோவான் 7:38,42 யோவான் 10:35; யோவான் 13:18 யோவான் 17:12; யோவான் 19:24-37 யோவான் 20:9; அப 1:16, அப 8:32,35; அப 17:2,11 அப 18:24,28 ரோமர் 1:2 ரோமர் 4:3; ரோமர் 9:17 ரோமர் 10:11; ரோமர் 11:2, ரோமர் 15:4. ரோமர் 16:26 1கொரி 15:3-4 கலா 3:8,22 கலா 4:30; 1தீமோ 5:18 2தீமோ 3:16; யாக் 2:8,23; யாக் 4:5 1பேதுரு 2:6; 2பேதுரு 1:20 2பேதுரு 3:16

தேவனுடைய வார்த்தையால் செய்யக் கூடிய காரியங்கள்

1 இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கும் (2தீமோ 3:15; ரோமர் 1:16 யாக் 1:21)

2 விசுவாசத்தை உண்டாக்கும். (2தீமோ 3:15; ரோமர் 10:17)

3 இயேசு கிறிஸ்துவை அறிவிக்கும். (2தீமோ 3:15, யோவான் 5:39 1கொரி 15:1-8.)

4 பக்திவிருத்தி அடையச்செய்யும். (அப 20:32)

5 சுதந்தரத்தைக் கொடுக்கும். (அப் 20:32)

6. உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும் நீதியைப் படிப்பிக்குதலுக்கும் தேவனுடைய வார்த்தை பிரயோஜனமுள்ளது (2தீமோ 3:17)

7 தேவனுடைய மனுஷனைத் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படிச் செய்யும். (2தீமோ 3:16)

"கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே. இரட்சிப்பு" - மனுஷருடைய இரட்சிப்பு அவர்களுடைய கிரியைகளினாலோ பாரம்பரிய பழக்கவழக்கங்களினாலோ தண்ணீர் ஞானஸ்நானத்தினாலோ வரவில்லை. இயேசு கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தின் மூலமாகவே மனுஷருக்கு இரட்சிப்பு வருகிறது. (2தீமோ 3:15 எபே 2:8-9; ரோமர் 3:24-31

பரிசுத்த வேதாகமத்திற்குக் கொடுக்கப் பட்டிருக்கும் பெயர்கள்

1 வேதவாக்கியம் (The Scripture) (மாற்கு 15:28; யோவான் 7:38)

2 வேதவாக்கியங்கள் (The Scriptures) (லூக்கா 24:27; யோவான் 5:39

3 வாக்குத்தத்தங்கள் (The Promises) (ரோமர் 9:4-5, ரோமர் 15:8

4 தேவனுடைய வாக்கியங்கள் (The Oracles of God) ரோமர் 3:2, எபி 5:12; 1பேதுரு 4:11

5. ஜீவவாக்கியங்கள் (The Lively Oracles) (அப 7:38)

6 மோசேயின் நியாயப்பிரமாணம், தீர்க்கதரிசனங்களின் ஆகமங்கள், சங்கீதங்கள் (The Law of Moses, the Prophets, and the Psalms) (லூக்கா 24:25,44)

7 கர்த்தருடைய வேதம் (The Law of the Lord) (சங் 1:2)

II தீமோத்தேயு - தொகுப்புரை

3 அதிகாரம்

8 நியாயப்பிரமாணம், தீர்க்கதரிசனங்கள் (The Law and the Prophets) (மத் 5:17; மத் 11:13; அப் 13:15)

9 கர்த்தருடைய புஸ்தகம் (The Book of the Lord) (ஏசா 34:16)

10 தேவவசனம் (The Word of God) (மாற்கு 7:13; ரோமர் 10:17)

11 ஆவியின் பட்டயம் (The Sword of the Spirit) (எபே 6:17)

12 பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு (The Old and New Testament) (2கொரி 3:6-15)

13 முதலாம் உடன்படிக்கை, இரண்டாம் உடன்படிக்கை (The First and Second Covenant) (எபி 8:7)

14 கிறிஸ்துவின் வசனம் (The Word of Christ) (கொலோ 3:16)

15 ஜீவவசனம் (The Word of Life) (பிலி 2:14)

16 சத்திய எழுத்து (The Scripture of Truth) (தானி 10:21)

17 சத்திய வசனம் (The Word of Truth) (2தீமோ 2:15)

18 கிறிஸ்துவின் சுவிசேஷம் (The gospel of Christ) (ரோமர் 1:16)

19 விசுவாசத்தின் வார்த்தை (The Word of Faith) (ரோமர் 10:8)

20 கர்த்தருடைய வசனம் (The Word of the Lord) (2தெச 3:1)

21 நீதியின் வசனம் (The Word of Righteousness) (எபி 5:13)

வேதாகமம் மனுஷருக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் வழிகள்

1 மனுஷர் கேட்கக்கூடிய விதத்தில் தேவனுடைய சத்தம் (Audible voice of God) (யாத் 19:19; உபா 5; மத் 3:16-17; யோவான் 12:28)

2 தூதர் (Angels) (அப் 7:38; எபி 2:2)

3 தீர்க்கதரிசிகள் (Prophets) (அப் 3:21; எபி 1:1)

4 இயேசு கிறிஸ்து (Jesus Christ) (எபி 1:1; வெளி 1)

5 அப்போஸ்தலர் (Apostles) (அப் 1:2; எபே 4)

6 தரிசனங்கள் (Visions) (ஏசா 6; தானி 7-8; எசே 1)

7 சொப்பனங்கள் (Dreams) (தானி 2; மத் 1:20; மத் 2:12)

8 வெளிப்பாடு (Revelation)

9 ஏவப்படுதல் (Inspiration) (2தீமோ 3:15-17)

தேவ ஆவியினால் அருளப்படுதல் (Inspiration of God) - θεόπνευ στος - theopneustos - 2:15

மொழிபெ - தேவ ஆவியினால் அருளப்படுதல் (God-breathed) - மனுஷனைக் குறித்த தமது திட்டத்தைத் தேவன் சத்திய வார்த்தையின் மூலமாக வெளிப்படுத்த விரும்பினார். இதற்காக அவர் தமது பரிசுத்தவான்களைத் தெரிந்தெடுத்தார். பரிசுத்த ஆவியானவர் அவர்களை விசேஷித்த விதமாக ஏவி, தமது வார்த்தைகளை எழுதச்செய்தார்.

பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் சத்தியங்கள் மாறாமல் ஒன்றுபோல இருக்க வேண்டுமென்பதற்காக ஆவியானவர் வேதாகம ஆசிரியர்களை ஏவினார். ஆவியினால் ஏவப்படும்போது எல்லா ஆசிரியர்களும் ஒரே விதமான வார்த்தைகளையே பயன்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. பரிசுத்த ஆவியானவர் வேதாகம ஆசிரியர்களை ஏவியபோது அவர்கள் சத்தியவசனங்களைத் தங்களுடைய சொந்த மொழிநடையிலேயே எழுதினார்கள்.

II தீமோத்தேயு - தொகுப்புரை

3 அதிகாரம்

தெய்வீக வெளிப்படுத்துதல் புதிய சத்தியத்தை வெளிப்படுத்தும். ஆவியானவரால் ஏவப்படுதல் வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தை எழுதுவதற்கு. ஏவும் வெளிப்படுத்துதல் இல்லாமல் ஏவப்பட்டதற்குச் சான்றுகள் உள்ளன. (லூக்கா 1:1-4) வெளிப்படுத்துதலோடு ஏவப்பட்டதற்கும் வேதாகமத்தில் சான்றுகள் உள்ளன (வெளி 1:1-11) தெளிவுபடுத்துதல் (illumination) இல்லாமல் வெளிப்படுத்தப்பட்டதற்கு 1பேதுரு 1:11; 1கொரி 14:14-19 ஆகிய வசனங்களைச் சான்றாகக் கூறலாம். தெளிவுபடுத்துதலோடு வெளிப்படுத்தப்பட்டு ஏவப்பட்டதற்கு 1கொரி2:12-16; 1கொரி 14:30 ஆகிய வசனங்களைச் சான்றாகக் கூறலாம்.

வேதாகமத்தில் சாத்தானும் மனுஷரும் கூறிய பொய்கள், கள்ள உபதேசங்கள், மனுஷருடைய பாவங்கள் ஆகியவற்றை வாசிக்கிறோம். ஏவப்படுதல் என்பது ஏவப்பட்டு எழுதப்பட வேண்டிய எதையும் குறிக்கலாம். அது சாத்தானுடைய பொய்யாகவும் இருக்கலாம் தேவன் கூறிய சத்திய வார்த்தையாகவும் இருக்கலாம். வேதாகமத்தில் ஒரு வாக்கியம் இடம் பெற்றிருப்பதினால் அதைத் தேவன் அங்கீகரித்திருக்கிறார் என்று பொருளல்ல. அந்த வாக்கியம் சாத்தானுடையதா தூஉபதேசமா என்பதை நாம் நிதானித்து அறியவேண்டும். சாத்தானுடைய பொய்களுக்குத் தேவன் பொறுப்பேற்க முடியாது.

தேவஆவியினால் வெவ்வேறு விதமாக ஏவப்படுதல்

1 வேதாகமத்திலுள்ள சில வசனங்களைத் தேவன் வார்த்தைக்கு வார்த்தை ஏவியிருக்கிறார் (யாத் 32:16; உபா 5:4-24; மத் 3:17)

2 பரிசுத்த ஆவியானவர் தீர்க்கதரிசிகளுடைய வாயில் சில வார்த்தைகளைப் போட்டார். ஆவியானவர் அவர்களை ஏவிய பிரகாரம் அவர்கள் பேசினார்கள் (யாத் 4:12; எண் 23:5; எசே 2:7; எசே 3:10-11; அப் 3:21)

3. பரிசுத்த ஆவியானவர் தங்களை வழிநடத்துகிற பிரகாரம் அவர்கள் வார்த்தைகளை எழுதினார்கள் (யாத் 34:27; 2பேதுரு 1:21)

4 சில சமயங்களில் பரிசுத்த ஆவியானவர் ஆசிரியர்களுக்குச் சத்தியத்தை ஏவினார். அவர்கள் தங்களுடைய சொந்த வார்த்தைகளில் அவற்றை எழுதுவதற்குப் பரிசுத்த ஆவியானவர் அவர்களை வழி நடத்தினார் (தானி 12:8-9; லூக்கா 1:1-4; யோவான் 20:30-31; அப் 1:1-2)

பரிசுத்த ஆவியானவர் வேதாகம ஆசிரியர்களை ஏவும்போது அவர்களுடைய புலன்களையும் திறமைகளையும் பயன்படுத்தினார். ஆசிரியர்கள் கடந்தகாலத்தில் நடந்த நிகழ்ச்சிகளையும் தற்காலத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் வருங்காலத்தில் நடைபெறப்போகும் நிகழ்ச்சிகளையும் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினால் எழுதினார்கள். ஆசிரியர்கள் எழுதும்போது அவர்கள் எழுதியவற்றை ஆவியானவர் மேற்பார்வையிட்டு பிழை எதுவும் காணப்படாமல் காத்துக் கொண்டார்.

பரிசுத்த வேதாகமம் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டது என்பதற்குச் சான்றுகள்

1. பரிசுத்த வேதாகமத்தில் காணப்படும் ஒற்றுமை. வேதாகமத்தில் 66 புஸ்தகங்கள் உள்ளன. இவற்றை 40 ஆசிரியர்கள் எழுதினார்கள். சுமார் 1800 வருஷங்களாக வேதாகமம் எழுதப்பட்டது. பல தேசங்களில் எழுதினார்கள். ஒருசில ஆசிரியர்கள் எழுதியதை மற்ற ஆசிரியர்கள் கண்ணால் கண்டதுகூட இல்லை. ஆயினும் பரிசுத்த வேதாகமத்தில் ஓர் ஒற்றுமை காணப்படுகிறது. கருத்தில் முரண்பாடு எதுவும் இல்லை.

2 பரிசுத்த வேதாகமத்தின் மகத்துவம். உலகத்தில் பல புஸ்தகங்கள் எழுதப்பட்டாலும் பரிசுத்த வேதாகமத்தைப்போல மகத்துவமுள்ள தெய்வீக புஸ்தகம் வேறு எதுவும் இல்லை. வேதாகமத்திலுள்ள புஸ்தகங்களின்தோற்றம், உபதேசங்கள், வரலாறுகள், தீர்க்கதரிசனங்கள், வெளிப்பாடுகள், தற்காலத்து இரட்சிப்பு, வருங்காலத்து நித்திய ஜீவன் ஆகியவற்றைப் பரிசுத்த வேதாகமத்தைப் போன்று வேறு எந்த புஸ்தகமும் தெளிவாக விளக்கவில்லை

II தீமோத்தேயு – தொகுப்புரை

3 அதிகாரம்

3 இந்த உலகத்தில் பரிசுத்த வேதாகமத்தின் தாக்கம். பரிசுத்த வேதாகமம் கோடிக்கணக்கான ஜனங்களை ஆசீர்வதித்திருக்கிறது. மனுஷனுக்கு உன்னதமான நம்பிக்கையை வேதாகமம் தருகிறது.

4 பரிசுத்த வேதாகமத்தை ஏற்றுக் கொள்வோரின் கூட்டம். பரிசுத்த வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்று பக்தியுள்ளோரும், கண்ணியம் உள்ளோரும், ஞானமுள்ளோரும் அங்கீகரிக்கிறார்கள். அவ பக்தியுள்ளோரும், துன்மார்க்கரும் மட்டுமே பரிசுத்த வேதாகமத்தைத் தேவனுடைய வார்த்தை என்று அங்கீகரியாமல் ஒதுக்கித் தள்ளிவிடுகிறார்கள்

5 மனுஷன் தன்னுடைய சொந்த முயற்சியினால் பரிசுத்த வேதாகமத்தை எழுதியிருக்க முடியாது. வேதாகமத்தின் எந்தவொரு பகுதியையும் யாரும் கூட்டவோ குறைக்கவோ முடியவில்லை

6 பரிசுத்த வேதாகமத்தை நல்ல மனுஷர்கள் எழுதியிருக்க வேண்டும். மனுஷருடைய எல்லா பாவங்களையும் வேதாகமம் கடிந்துரைக்கிறது. துன்மார்க்கர் பாவத்தைக் கடிந்து கூறுவதில்லை. நல்லோர்கூட பரிசுத்த ஆவியானவரின் ஏவுதல் இல்லையென்றால், மற்றவர்களுடைய பாவங்களைக்கடிந்து கூறமாட்டார்கள்

7 மனுஷருடைய தற்காலத் தேவைகளையும், வருங்காலத் தேவைகளையும் பரிசுத்த வேதாகமம் சந்திக்கிறது. தேவனுடைய பிள்ளைகளுக்குப் பல ஆசீர்வாதங்கள் வாக்குத்தத்தமாகக் கூறப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு நித்திய ஜீவனும் இரட்சிப்பும் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது.

8. பரிசுத்த வேதாகமம் காலத்தால் மாற்றமடையாமல் பாதுகாக்கப் பட்டிருக்கிறது. இதை அழிப்பதற்குப் பல ராஜ்யங்களும், பல மார்க்கங்களும் முயற்சி பண்ணின. ஆனால் அவையெல்லாம் வீணாயிற்று. பரிசுத்த வேதாகமம் இன்றும் அழிக்கமுடியாத ஜெயமுள்ள புஸ்தகமாக விளங்குகிறது

9 பரிசுத்த வேதாகமத்தில் காணப்படும் பரலோகத்தைப் பற்றிய காரியங்களும் நித்தியத்தைப் பற்றிய காரியங்களும் இவை தேவனுக்குரியவை என்பதை உறுதி பண்ணுகிறது.

10 மனுஷருடைய ஆத்துமா பரிசுத்த வேதாகமத்தின்மீது ஈர்க்கப்படுகிறது. மனுஷருடைய ஆத்துமாவிற்குத் தேவையான ஆவிக்குரிய போஜனம் வேதாகமத்தில் உள்ளது

11 வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் ஆழமான கருத்துக்கள் வேதாகமத்தின் உபதேசங்கள் மனுக்குலத்திற்கு உரியவை ஏற்றுக் கொள்வதற்கு உகந்தவை. இதில் கூறப்பட்டிருக்கும் வாக்குத்தத்தங்கள் நம்பத்தகுந்தவை.

12 நிறைவேறியுள்ள தீர்க்கதரிசனங்கள் வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனங்களில் 5,000 தீர்க்கதரிசனங்கள் நிறைவேறியுள்ளன. ஒருசில தீர்க்கதரிசனங்கள் ஆயிரம் வருஷங்களுக்கு முன்பாக முன்னறிவிக்கப் பட்டவை. இவை தவிர, இன்னும் 3000 தீர்க்கதரிசன வசனங்கள் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன. மற்றவை வருங்காலத்தில் நிறைவேறும்.

13 அற்புதங்கள் வேதாகமத்தில் நூற்றுக்கணக்கான அற்புதங்கள் எழுதப்பட்டிருக்கிறது. வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் வாக்குத்தத்தங்களை ஆதாரமாகக் கொண்டு ஜெபிப்பவர்களுடைய வாழ்வில் அநுதினமும் அற்புதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

II தீமோத்தேயு – தொகுப்புரை

3 அதிகாரம்

14 பரிசுத்த வேதாகமத்தின் பரிபூரணம். இது விஞ்ஞான ரீதியாகவும் வரலாற்று ரீதியாகவும் பிழையில்லாமல் சரியாக இருக்கிறது. வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் வரலாறு தவறானது என்று இதுவரையிலும் யாரும் நிரூபித்ததில்லை.

15. பரிசுத்த வேதாகமத்தின் அங்கீகரிக்கும் தன்மை. இதில் கூறப்பட்டிருக்கும் காரியங்கள் எல்லா தேசங்களிலும் எல்லாக் காலங்களிலும் வாழும் ஜனங்களுடைய ஜீவனுக்கு ஏற்றவை.

16 பரிசுத்த வேதாகமத்தின் ஆவிக்குரிய நீதிநெறி வல்லமை. மனுஷருடைய ஆவிக்குரிய தேவையையும் நீதிநெறித் தேவையையும் இது பரிபூரணமாகச் சந்திக்கிறது.

7 பரிசுத்த வேதாகமத்தின் உபதேசங்கள் இதில் காணப்படும் தெய்வீக உபதேசங்கள் தேவனுக்கும் மனுஷருக்கும் இடையேயுள்ள உறவைப் புதுப்பித்து மனுஷருக்கு நித்திய ஆசீர்வாதங்களைத் தருகிறது.

8 வேதாகமத்தில் காணப்படும் சான்றுகள் வேதாகம ஆசிரியர்கள் 3,800 தடவைகளுக்குமேல் தாங்கள் பேசியதும், எழுதியதும் தேவனிடமிருந்து வந்ததாக எழுதியிருக்கிறார்கள்.

19 வரலாற்றுச் சான்றுகள் பூதப்பொருளாராய்ச்சியாளர்களும் புராணவியலாளர்களும் மற்றும் உலகிலுள்ள வரலாற்று ஆசிரியர்கள் பலரும் பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் காரியங்கள் உண்மையானவை என்று அங்கீகரித்து வேதாகம வசனங்களைத் தங்களுடைய நூல்களில் மேற்கோளாகக் கூறியிருக்கிறார்கள்.

20 ஏராளமான சான்றுகள் பரிசுத்த வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்பதையும் வேதாகம புஸ்தகங்களை அதன் ஆசிரியர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதினார்கள் என்பதையும் நிரூபிப்பதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. அவற்றை எல்லாம் எழுதுவதற்கு இடம் போதாது.

பரிசுத்த வேதாகமத்தைக் குறித்து ஒரு கருத்துரை

பரிசுத்த வேதாகமம் ஒரு மந்திர புஸ்தகமல்ல. இந்தப் புஸ்தகம் ஒரு மந்திரக்கோலைப்போல எந்தவிதமான மந்திர தந்திரங்களையும் செய்யாது. பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் சத்தியங்கள் மனுஷருடைய வாழ்வில் இம்மையிலும் மறுமையிலும் அற்புதங்களை நடப்பிக்கும். இந்த அற்புதம் ஒருவருடைய வாழ்வில் நடைபெற வேண்டுமென்றால் அவர் வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் உபதேசங்களைக் கைக்கொண்டு அதன் நிபந்தனைகளுக்கு விசுவாசத்தோடும் உண்மையோடும் கீழ்ப்படிய வேண்டும்.

எல்லாவற்றின் ஆரம்பமும், முடிவும் வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது. மிகவும் எளிமையான மொழிநடையில் எழுதப்பட்டிருப்பதினால் அதிகமாகக் கல்வி கல்லாதவர் கூட வேதவசனங்களை வாசித்துப் புரிந்து கொள்ள முடியும். வேதவசன[redacted] தனக்குத் தானே வியாக்கியானம் பண்ணிக்கொள்ளும். ஆகையினால் புரிந்து கொள்ள முடியாத சத்தியங்கள் என்று வேதாகமத்தில் எதுவுமில்லை.

இலக்கிய நடையைப் பொறுத்தளவில் இதுவரையில் உலகில் வெளிவந்துள்ள இலக்கியங்களில் பரிசுத்த வேதாகமமே மிகச்சிறந்ததாகும். வேதாகமம் 66 புஸ்தகங்கள் அடங்கியுள்ள தெய்வீக நூலகம். ஒவ்வொரு புஸ்தகமும் அளவில் வித்தியாசமானவை. சிலபுஸ்தகங்கள் வரலாற்றையும் வேறுசில புஸ்தகங்கள் பாடல்களையும் தீர்க்கதரிசனங்களையும், நிருபங்களையும் பிரமாணங்களையும், உவமைகளையும் கொண்டுள்ளன. எல்லாவிதமான இலக்கிய நடைகளும் வேதாகமத்தில் உள்ளன.

3 அதிகாரம்

பரிசுத்த வேதாகமம் தேவனுடைய சிந்தையையும், மனுஷனுடைய நிலைமையையும், இரட்சிப்பின் வழியையும் பாவிகளின் அழிவையும் விசுவாசிகளின் சந்தோஷத்தையும் வெளிப்படுத்துகிறது. பரிசுத்த வேதாகமத்தின் உபதேசங்கள் புனிதமானவை. இதில் கூறப்பட்டிருக்கும் வரலாறுகள் உண்மையானவை. மனுஷருக்கு ஆறுதலான விஷயங்களும் எச்சரிப்பான விஷயங்களும் வேதாகமத்தில் உண்டு.

வேதாகமத்தில் பரலோகம் திறக்கப்படுகிறது. பாதாளத்தின் வாசல்கள் அடைக்கப்படுகிறது. கிறிஸ்துவே பிரதான செய்தியாக இருக்கிறார். நமது நன்மையே வேதாகமத்தின் மையக்கருத்து. தேவனுடைய மகிமை வேதாகமத்தின் முடிவு. வேதத்தை வாசிக்கும்போது அதிலுள்ள செய்திகள் நமது இருதயத்தை நிரப்பும், நம்மை வழிநடத்தி ஆளுகை செய்யும். நம்மை நீதிக்கு நேராகவும், பரிசுத்தத்திற்கு நேராகவும் வழிநடத்தும்.

வேதாகமத்தை மெதுவாகவும் அடிக்கடியும், ஜெபத்துடனும் தியானத்துடனும், ஆவலுடனும் தொடர்ந்து வாசிக்க வேண்டும். வேதாகமத்திலுள்ள செய்திகள் நமக்குள் ஒன்றாகும் வரையிலும் அதைத் திரும்பத்திரும்ப வாசிக்க வேண்டும். இதனால் விசுவாசம் வளரும். வேதாகமத்திலுள்ள செய்திகள் நமக்கு இம்மையிலும், மறுமையிலும் பயனுள்ளவை.

தேறின (perfect) - **ἄρτιος** - **artios** - 739

பெயரடை - தேறின (**complete; exactly fitted as a joint**)

தகுதி உள்ளவனாக்கு (**accomplish**) - **ἐξαρτίζω** - **exartizoo** - 1822

வினைச்சொல் - நிறைவேற்று, தகுதி உள்ளவனாகு (**to finish out; equip fully**) "**accomplish**" (அப் 21:5)

பிரயோஜனமுள்ளது (**profitable**) **ὠφέλιμος** **oophelimos** 5624

பெயரடை - பிரயோஜனமான, நற்கிரியையான (**to convince men of truth**) "**profitable**" (2தீமோ 3:16; 1தீமோ 4:8; தீத்து 3:8) "**profit**" (1தீமோ 4:8)

உபதேசம் (**teaching**) - **διδασκαλία** - **didaskalia** - 1319

பெண்பால் பெயர்ச்சொல் - உபதேசம், போதனை (1தீமோ 4:13)

கடிந்துகொள்ளுதல் (**reproof**) - **ἔλεγμος** - **elegmos** - 1650

ஆண்பால் பெயர்ச்சொல் - கடிந்துகொள்ளுதல் நிச்சயம் (**reproof**) (2தீமோ 3:16) (**evidence**) (எபி 11:1)

சீர்திருத்தம் (**correction**) - **ἐπανόρθωσις** **epanorthoosis** - 1882

பெண்பால் பெயர்ச்சொல் - சீர்திருத்தம் (**to restore things to their proper use and place, correcting false theories and practices**)

படிப்பிக்குதல் (**instruction**) - **παιδεία** - **paideia** 3809

பெண்பால் பெயர்ச்சொல் - போதனை, படிப்பிக்குதல், சிட்சை (எபே 6:4

II தீமோத்தேயு – தொகுப்புரை

4 அதிகாரம்

5. தீமோத்தேயுவிற்கு ஏழு கட்டளைகள் - (1-6)

2தீமோ 4:1 நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாகவும் அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது,

2தீமோ 4:2 சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி கடிந்துகொண்டு, புத்திசொல்லு.

தீர்க்கதரிசன எண் - 4

"நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது" (2தீமோ 4:1) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை

கட்டளையிடுதல் (charge) - διαμαρτύρομαι - diamartyromai – 1263

விணைச்சொல் - சாட்சியாக அறிவி, சாட்சிக்கூறு, திருஷ்டாந்தப்படுத்து தெரிவி, தெரிந்துகொள், எச்சரி பிரசங்கம் பண்ணு (1தீமோ 5:21) - தேவனுக்கு முன்பாகவும், இயேசு கிறிஸ்துவிற்கு முன்பாகவும் பவுல் கட்டளையிடுகிற படியினால் தேவனும் இயேசு கிறிஸ்துவும் தனித்தனியாக வெவ்வேறு ஆள்தத்துவ பண்புடையவர்கள் என்பது தெரியவருகிறது. (2தீமோ 4:1)

நியாயந்தீர்த்தல் (judge) κρίνω krinoo 2919

விணைச்சொல் - வழக்காடு, நியாயந்தீர், தீர்மானி (make a legal, other decision) "to esteem" (ரோமர் 14:5); "think" (அப் 26:8); "determine" (அப 3:13; அப் 20:16; அப 25:25; அப் 27:1; 1கொரி 2:2; 2கொரி 2:1; தீத்து 3:12); "conclude" (அப 21:25); "decree" (1கொரி 7:37); "ordain" (அப் 16:4); "condemn" (யோவான் 3:17-18; அப 13:27; ரோமர் 14:22); "damn" (2தெச 2:12); "avenge" (வெளி 18:20); "call to question" (அப 23:6; அப் 24:21); "sue at law" (மத் 5:40; 1கொரி 6:1, 6); "my sentence is" (அப் 15:19); "judge" (2தீமோ 4:1)

தேவன் நியாயந்தீர்க்கப்போகிற இரு பிரிவர்

1. உயிரோடிருக்கிறவர்கள்
2. மரித்தவர்கள்

உயிரோடிருக்கிறவர்களும், மரித்தவர்களும் தேவனுடைய நியாயத்தீர்ப்பைச் சந்திக்க வேண்டும். இயேசு கிறிஸ்து சபையை எடுத்துக் கொள்வதற்கு மத்திய ஆகாயத்திற்கு வரும்போது கிறிஸ்துவிற்குள் உயிரோடிருக்கிறவர்களும் கிறிஸ்துவிற்குள் மரித்தவர்களும் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கும் அவருடைய ஆயிரம் வருஷ அரசாட்சி ஆரம்பமாவதற்கு ஏழு வருஷத்திற்கு முன்பும் சபை எடுத்துக் கொள்ளப்படுதல் நடைபெறும் (2தெச 2:7; 1தெச 4:16) இந்த ஏழு வருஷ காலத்தில் இயேசு கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக, சபை எடுத்துக் கொள்ளப்படும் போது எடுத்துக் கொள்ளப்பட்டவர்கள் நியாயம் விசாரிக்கப்படுவார்கள் (1கொரி 3:11-15; 2கொரி 5:10) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது தேசங்கள் நியாயந்தீர்க்கப்படும் (மத் 25:31-46) ஆயிரம் வருஷங்களுக்குப் பின்பு துன்மார்க்கர் நியாயந்தீர்க்கப்படுவார்கள் (வெளி 20:4-15) ஆயிரம் வருஷ அரசாட்சியின் முடிவில் எல்லா நியாய விசாரிப்புக்களும் முடிவு பெறும். பாவம் செய்தவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அவர்கள் நரகத்திற்குப் பாத்திரராக இருந்தால் நரகத்தில் தள்ளப்படுவார்கள் (ஏசா 11:3-10; ஏசா 65:20)

II தீமோத்தேயு - தொகுப்புரை

4 அதிகாரம்

(at) - καί - kai - 2532

இடைச்சொல் - உம், அல்லது - வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு நியாயத்தீர்ப்புக்கள் நடைபெறும்

அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவிற்குக் கூறியிருக்கும் கட்டளைகள்

1 திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு (2தீமோ 4.2)

2 சமயம் வாய்த்தாலும் பிரசங்கம் பண்ணு (2தீமோ 4.2)

3 சமயம் வாய்க்காவிட்டாலும் பிரசங்கம் பண்ணு 2தீமோ 4.2

4. கண்டனம் பண்ணு

5. கடிந்துகொள்

6 புத்திசொல்லு (2தீமோ 4.2)

7 எல்லாவற்றிலும் மனம் தெளிவுள்ளவனாயிரு (2தீமோ 4.5)

8 தீங்கநுபவி (2தீமோ 4.5)

9 சுவிசேஷகனுடைய வேலையைச் செய் (2தீமோ 4.5)

10 உன் ஊழியத்தை நிறைவேற்று.

கண்டனம் பண்ணு (Reprove)
ἐλέγχω - elenchoo - 1651

வினைச்சொல் - குற்றத்தையுணர்த்து கடிந்துகொள், கண்டி, கண்டனம் பண்ணு, கலக்கம் உண்டாக்கு, தீர்க்கப்படு (confute, convict; convince) (யோவான் 16:8

கடிந்து கொள் (Rebuke)
ἐπιτιμάω epitimaoo 2008

வினைச்சொல் - அதட்டு, கடிந்து கொள் (to penalize, find fault with; rebuke sharply) "rebuke" (2தீமோ 4:2; மத் 8:26; மத் 16:22 மத் 17:18; மத் 19:13; மத் 20:31 மாற்கு 1:25; மாற்கு 4:39, மாற்கு 8:32-33; மாற்கு 9:25 லூக்கா 4:35-41 லூக்கா 8:24, லூக்கா 9:42,55 லூக்கா 17:3 லூக்கா 18:15,39; லூக்கா 19:39 லூக்கா 23:40; யூதா 1:9,; "charge"(மத் 12:16; மாற்கு 3:12 மாற்கு 8:30; மாற்கு 10:48 லூக்கா 9:21)

6. சத்தியத்தை விட்டு விலகுவது மறுபடியும் முன்னறிவிக்கப்படுகிறது - (2தீமோ 3:2)

2தீமோ 4:3 ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல் செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு,

2தீமோ 4:4 சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்து போகுங்காலம் வரும்.

தீர்க்கதரிசன எண் - 6

"அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும்" (2தீமோ 4:3,4 இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

கடைசி காலத்தில் நடைபெறும் சம்பவங்கள்

1 அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல் இருப்பார்கள் (2தீமோ 4:3)

II தீமோத்தேயு – தொகுப்புரை

4 அதிகாரம்

2 இச்சைகளிலும், பாவத்திலும் பெருகுவார்கள். (2தீமோ 4:3)

3 தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக் கொள்வார்கள் (2தீமோ 4:3)

4 செவித்தினவுள்ளவர்களாக ஆவார்கள்

5. அவர்கள் சத்தியத்திற்குச் செவியை விலக்குவார்கள் (2தீமோ 4:4)

6 கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்து போவார்கள்

"கட்டுக்கதைகள்"(fables)- (1தீமோ 1:4)

7. தீமோத்தேயுவிற்கு நான்கு கட்டளைகள் - (1:6)

2தீமோ 4:5 நீயோ எல்லாவற்றிலும் மனத் தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று.

8. தனது மரணத்தைப் பற்றி பவுலின் சாட்சி - (பிலி 1:20-26)

2தீமோ 4:6 ஏனென்றால், நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப் படுகிறேன்; நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது.

2தீமோ 4:7 நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்.

2தீமோ 4:8 இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது; நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்.

பவுலின் சாட்சி

1 இப்பொழுதே பானபலியாக வார்க்கப் படுகிறார் (2தீமோ 4:6)

2 அவருடைய தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது (2தீமோ 4:6)

3 நல்ல போராட்டத்தைப் போராடினார் (2தீமோ 4:7)

4 ஓட்டத்தை முடித்தார் (2தீமோ 4:7)

5. விசுவாசத்தைக் காத்துக்கொண்டார் (2தீமோ 4:7)

தீர்க்கதரிசன எண் - 8

"இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது; நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்" (2தீமோ 4:8), இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை

2தீமோ 4:6-7 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பவுலின் முயற்சிகளுக்கு நீதியின் கிரீடம் அவருக்கு வெகுமதியாக வைக்கப்பட்டிருக்கிறது

"அந்நாளிலே" - கிறிஸ்துவின் நாளிலே (The day of Christ) (1கொரி 1:8)

9. தீமோத்தேயுவிற்கு ஐந்து கட்டளைகள் - (1:6)

2தீமோ 4:9 நீ சீக்கிரமாய் என்னிடத்தில் வரும்படி ஜாக்கிரதைப்படு.

2தீமோ 4:10 ஏனென்றால், தேமா இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்து என்னைவிட்டுப் பிரிந்து தெசலோனிக்கே பட்டணத்துக்குப் போய்விட்டான்; கிரேஸ்கே கலாத்தியா நாட்டிற்கும், தீத்து தல்மாத்தியா நாட்டிற்கும் போய்விட்டார்கள்.

2தீமோ 4:11 லூக்கா மாத்திரம் என்னோடே இருக்கிறான். மாற்குவை உன்னோடே கூட்டிக்கொண்டுவா; ஊழியத்தில் அவன் எனக்குப் பிரயோஜனமுள்ளவன்.

II தீமோத்தேயு - தொகுப்புரை

4 அதிகாரம்

2தீமோ 4:12 தீகிக்குவை நான் எபேசுவுக்கு அனுப்பினேன்

2தீமோ 4:13 துரோவா பட்டணத்திலிருக்கிற கார்ப்பு என்பவன் வசத்தில் நான் வைத்துவந்த மேலங்கியையும் புஸ்தகங்களையும், விசேஷமாய்த் தோற்சுருள்களையும், நீ வருகிறபோது எடுத்துக்கொண்டுவா

"நீ சீக்கிரமாய் என்னிடத்தில் வரும்படி ஜாக்கிரதைப்படு" - தான் மரிப்பதற்கு முன்பாக பவுல் தீமோத்தேயுவைக் காண வாஞ்சையாக இருக்கிறார். நல்ல போராட்டத்தைப் போராடி ஓட்டத்தை முடித்து விசுவாசத்தைக் காத்துக் கொண்டவருடைய மரணம் எப்படியிருக்கும் என்பதைப் பவுல் தீமோத்தேயுவிற்குக் காண்பிக்க விரும்பியிருக்கலாம். பவுலின் கடைசி நாட்களில் அவருக்குத் துணையாக தீமோத்தேயுதேவைப்பட்டார். (2தீமோ 4:10-13)

"தேமா இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்து, என்னைவிட்டுப் பிரிந்து தெசலோனிக்கே பட்டணத்துக்குப் போய் விட்டான்" - தேமா (Demas) ஒரு காலத்தில் பவுலோடு சேர்ந்து ஊழியம் செய்தவன் (கொலோ 4:14; பிலே 1:24) அவனுடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் குளிர்ச்சியடைந்து பின்வாங்கிப் போய்விட்டான். அவன் இப்போது இப்பிரபஞ்சத்தின்மீது ஆசை வைத்திருக்கிறான். இந்த உலகத்தின்மீது ஆசை வைத்திருக்கிறவர்கள் தேவனிடத்தில் அன்புகூரமாட்டார்கள் (யோவான் 2:15-17) தேவனுடைய அன்பு ஒருவனிடத்தில் இல்லையென்றால் அவன் இரட்சிக்கப்பட்டவனாக இருக்க முடியாது. (யோவான் 13:35; யோவான் 14:15,23; யோவான் 15:9-12; 1கொரி 16:22) தேமா ஒரு காலத்தில் இரட்சிக்கப்பட்டு கர்த்தருக்காக ஊழியம் செய்தாலும் அவன் தன்னுடைய இரட்சிப்பைக் காத்துக் கொள்ளவில்லை. இரட்சிக்கப்பட்டவர்கள் மிகுந்த எச்சரிப்போடு தங்களுடைய இரட்சிப்பைக் காத்துக் கொள்ள வேண்டும்.

இப்பிரபஞ்சம் (present world) - αἰών - **aioon** 165

ஆங்கிலச் பெயர்ச்சொல் - காலம், உலகம், பிரபஞ்சம், அநாதி, சதாகாலங்கள் (age) Present age (தீத்து 2:11)

(அ) என்றென்றைக்கும் அதாவது கடந்த காலத்தில் - யோவான் 6:5; 80:32

(ஆ) ஒரு குறிப்பிட்ட காலம் அதாவது இம்மை அல்லது மறுமை - மத். 12:32 மாற். 10:30

"கிரேஸ்கே" (Crescens) - இவனைப் பற்றி அதிகமான குறிப்பு எதுவும் காணப்படவில்லை. இவனும் தீத்துவும் கிறிஸ்துவின் ஊழியக்காரர்களாக பவுலை விட்டு பிரிந்து வேறு நாட்டிற்குப் போய்விட்டார்கள். தேமாவைப்போல இவர்கள் பின்வாங்கிப்போய்விடவில்லை

"தீத்து" (Titus) - (தீத்து 1:4

"லூக்கா மாத்திரம் என்னோடே இருக்கிறான்" - லூக்கா எழுதின சுவிசேஷத்தையும் அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தையும் எழுதியவன்

"மாற்கு" (Mark) யோவான் என்னப்பட்ட மாற்கு. பர்னபாவின் உறவினன். பவுலோடு தொடர்ந்துகூட ஊழியம் செய்ய முடியாத வாலிபன் இப்பொழுது விசுவாசத்தில் ஸ்திரமாகவும் உண்மையுள்ள ஊழியக்காரனாகவும் இருக்கிறான் (அப் 12:12)

"தீகிக்கு" (Tychicus) - (அப் 20:4

மேலங்கி (cloke) - φαιλόνης - **phailonees** - 5341

ஆங்கிலப் பெயர்ச்சொல் - மேலங்கி - பயணம் பண்ணும்போது குளிருக்குப் போர்த்திக் கொள்ளும் அங்கியாகவோ அல்லது பிரயாணப் பையாகவோ இருக்கலாம்.

"புஸ்தகங்கள்" என்ன புஸ்தகங்கள் என்று தெளிவாகத் தெரியவில்லை.

II தீமோத்தேயு - தொகுப்புரை

4 அதிகாரம்

"தோற்சுருள்கள் (parchments) - யூதருடைய புஸ்தகங்களாக இருக்கலாம் அல்லது செப்துவஜிந்தின் பிரதியாக இருக்கலாம்

10. பவுலை விட்டு விலகியவன் - 1:15-16

2 தீமோ 4:14 கன்னானாகிய அலெக்சந்தர் எனக்கு வெகு தீமைசெய்தான்; அவனுடைய செய்கைக்குத்தக்கதாகக் கர்த்தர் அவனுக்குப் பதிலளிப்பாராக.

2 தீமோ 4:15 நீயும் அவனைக்குறித்து எச்சரிக்கையாயிரு; அவன் நம்முடைய வார்த்தைகளுக்கு மிகவும் எதிர்த்துநின்றவன்.

2 தீமோ 4:16 நான் முதல்விசை உத்தரவுசொல்ல நிற்கையில் ஒருவனும் என்னோடேகூட இருக்கவில்லை. எல்லோரும் என்னைக் கைவிட்டார்கள்; அந்தக் குற்றம் அவர்கள் மேல் சுமராதிருப்பதாக.

"கன்னானாகிய அலெக்சந்தர் எனக்கு வெகு தீமைசெய்தான்" - (1 தீமோ 1:20)

"அவனுடைய செய்கைக்குத்தக்கதாகக் கர்த்தர் அவனுக்குப் பதிலளிப்பாராக" (கலா 6:7, 8)

"அவன் நம்முடைய வார்த்தைகளுக்கு மிகவும் எதிர்த்துநின்றவன்" அலெக்சந்தர் சுவிசேஷத்திற்கு எதிர்த்து நின்றவன்

"நான் முதல்விசை உத்தரவுசொல்ல நிற்கையில் ஒருவனும் என்னோடேகூட இருக்கவில்லை" பவுல் முதல்விசை உத்தரவு சொன்னது அலெக்சந்தர் சுவிசேஷத்திற்கு எதிர்த்து நின்றபோதாக இருக்கலாம் (2 தீமோ 4:15) அல்லது பவுல் நீரோ மன்னனுக்கு முன்பாக உத்தரவு சொன்ன போதாக இருக்கலாம். அப்பொழுது பவுலுக்கு ஆதரவாக ஒருவரும் அவரோடுகூட நிற்கவில்லை

11. சாத்தானிடமிருந்தும் துன்மார்க்கரிடமிருந்தும் பவுலின் இரட்சிப்பு - (ரோமர் 16:20, 2 கொரி 1:10, 2 தீமோ 3:11, 1 தெச 2:18)

2 தீமோ 4:17 கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று, என்னாலே பிரசங்கம் நிறைவேறுகிறதற்காகவும், புறஜாதியாரெல்லாரும் கேட்கிறதற்காகவும் என்னைப் பலப்படுத்தினார்; சிங்கத்தின் வாயிலிருந்தும் நான் இரட்சிக்கப்பட்டேன்.

2 தீமோ 4:18 கர்த்தர் எல்லாத் தீமையினின்றும் என்னை இரட்சித்து, தம்முடைய பரமராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார்; அவருக்குச் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

"கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று" - ஒருவரும் பவுலுக்குத் துணையாக நில்லாவிட்டாலும் கர்த்தர் பவுலுக்குத் துணையாக நின்றார். பவுலைக் கர்த்தர் பலப்படுத்தினார். அந்தக் குறிப்பிட்ட பிரச்சனையிலிருந்து பவுலை விடுதலை பண்ணினார். புறஜாதியார் மத்தியில் பவுலின் ஊழியத்தை ஆசீர்வதித்தார்.

"சிங்கத்தின் வாயிலிருந்தும் நான் இரட்சிக்கப்பட்டேன்" பவுல் ஒரு ரோமப் பிரஜை. அக்காலத்தில் ரோமப்பிரஜைகளைச் சிங்கத்திற்கு இரையாகப்போட்டு கொல்லும் தண்டனைகளைக் கொடுக்கமாட்டார்கள். இந்த வாக்கியம் இப்படிப்பட்ட தண்டனையிலிருந்து பவுல் நீங்கலாகியிருந்ததைக் குறிக்கலாம். இது ஒரு வழக்குச்சொல்லாகவும் இருக்கலாம். கொடிய தீமைகளிலிருந்து கர்த்தர் பவுலைக் காத்துக் கொண்டார் என்னும் பொருளையும் இந்த வாக்கியம் தரலாம்.

தீர்க்கதரிசன எண் - 7

"கர்த்தர் எல்லாத் தீமையினின்றும் என்னை இரட்சித்து, தம்முடைய பரமராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார்" (2 தீமோ 4:18) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

II தீமோத்தேயு – தொகுப்புரை

4 அதிகாரம்

V. திருபத்தின் முடிவுரை - சகோதரர்களுக்கு வாழ்த்துக்கள் - 4:1-2

2தீமோ 4:19 பிரிஸ்காளுக்கும் ஆக்கில்லாவுக்கும், ஒநேசிப்போருவின் வீட்டாருக்கும் என் வாழ்த்துதலைச் சொல்லு.

2தீமோ 4:20 எரஸ்து கொரிந்து பட்டணத்தில் இருந்துவிட்டான் துரோப்பீமுவை மிலேத்துவில் வியாதிப்பட்டவனாக விட்டு வந்தேன்

2தீமோ 4:21 மாரிகாலத்துக்குமுன் நீ வருந்துசேரும்படி ஜாக்கிரதைப்படு. ஐபூலுவும், புதேருகும் லீனுவும் கலவுதியாளும், மற்றெல்லாச் சகோதரரும் உனக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்

2தீமோ 4:22 கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உன் ஆவியுடனேகூட இருப்பாராக. கிருபை உங்களோடிருப்பதாக ஆமென்

"ஆக்கில்லா" (Aquila) - அப் 18:2 ரோமர் 16:3 1கொரி 16:19

"ஒநேசிப்போரு" (Onesiphorus) - (2தீமோ 1:16)

"எரஸ்து" (Erastus) - அப் 19:22; ரோமர் 16:23

"துரோப்பீமு" (Trophimus) - அப 20:4 அப 21:29

வியாதிப்பட்டவன் (sick) - ἀσθενέω - astheneoo - 770

வினைச்சொல் - வியாதியாயிரு, வியாதிப்படு, வியாதிப்பட்டிரு, பிணியாளியாயிரு, பலவீனமாயிரு (weak, not necessarily diseased) (பிலி 2:26-27)

"ஐபூலுவும் புதேருகும், லீனுவும், கலவுதியாளும் மற்றெல்லாச் சகோதரரும் உனக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்" இந்த நான்கு பேர்களின் பெயர்களும் இந்த வசனத்தில் மட்டுமே காணப்படுகிறது.

தீத்து - முன்னுரை

காலமும் இடமும்

கிபி 67 ஆம் ஆண்டில் பவுல் இந்த நிருபத்தை மக்கெதோனியாவிலிருந்து எழுதினார் (1தீமோ 1:3)

ஆசிரியர்

பவுல்

மையக்கருத்து

போதக நிருபங்களில் தீத்து இரண்டாவது எழுதப்பட்ட நிருபமாகும். சபையின் ஆராதனை ஒழுங்குகள் உபதேசங்கள் கிறிஸ்தவரிடம் காணப்படவேண்டிய தகுதிகள் ஆகியவற்றை இந்த நிருபம் விளக்குகிறது. தீத்துவிற்கு எழுதப்பட்ட நிருபமும் 1தீமோத்தேயு நிருபமும் பல விஷயங்களில் ஒத்திருக்கின்றன. சபை ஒழுங்கு, ஆரோக்கியமான உபதேசம் ஆகியவற்றில் இவ்விரு நிருபங்களும் கவனம் செலுத்துகின்றன. விசுவாசத் துரோகமும், கள்ள உபதேசமும் உண்டாகும் காலங்களில் ஒரு விசுவாசி எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைக் குறித்து 2தீமோத்தேயு நிருபம் விளக்குகிறது.

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 3

வசனங்கள் - 46

புதிய தீர்க்கதரிசனம் - 1

வரலாற்றைக் குறிக்கும் வசனங்கள் - 45

பொருளடக்கம்

I. முன்னுரை ஆசிரியரும் வாழ்த்துதலும் (1:1-4)

II. ஊழியக்காரரின் பதினேழு தகுதிகள் (1:5-9)

III. ஊழியக்காரரிடம் இருக்கக்கூடாத பதினேழு குணங்கள் (1:10-16)

IV. ஊழியம் செய்யுமாறு கட்டளைகள்

1 தீத்துவிற்கு முப்பது கட்டளைகள்

(1) முதிர் வயதுள்ள புருஷர்களுக்கு உபதேசிக்க வேண்டிய காரியம் (2:1-2)

(2) முதிர் வயதுள்ள ஸ்திரீகளுக்கு உபதேசிக்க வேண்டிய காரியம் (2:3)

(3) பாலிய ஸ்திரீகளுக்கு உபதேசிக்க வேண்டிய காரியம் (2:4-5)

(4) பாலிய புருஷருக்கு உபதேசிக்க வேண்டிய காரியம் (2:6-8)

(5) வேலைக்காரருக்கு உபதேசிக்க வேண்டிய காரியம் (2:9-10)

2 கர்த்தருக்கு எல்லா மனுஷரும் கீழ்ப்படிய வேண்டும் தேவகிருபையைக் குறித்து பத்து உபதேசங்கள் (2:11-15)

3 கிறிஸ்துவின் ஊழியத்தின் நோக்கம் (2:14)

4 தீத்துவிற்கு பத்து கட்டளைகள் (2:15)

5 பாவிகளின் ஒன்பது அம்ச விளக்கம் (3:1-2)

6 மனுஷர் என் எவ்வாறு இரட்சிக்கப்படுகிறார்கள் (3:3-7)

7 தீத்துவிற்கு எட்டு கட்டளைகள் (3:8-14)

8 முடிவுரையும் ஆசீர்வாதமும் (3:15)

தீத்து – தொகுப்புரை

1 அதிகாரம்

I. முன்னுரை - ஆசிரியரும் வாழ்த்துதலும் - (ரோமர் 1:1-4)

தீத்து 1:1 தேவனுடைய ஊழியக்காரனும், இயேசு கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனுமாகிய பவுல், பொதுவான விசுவாசத்தின்படி உத்தம குமாரனாகிய தீத்துவுக்கு எழுதுகிறதாவது;

தீத்து 1:2 பிதாவாகிய தேவனாலும் நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

தீத்து 1:3 பொய்யுரையாத தேவன் ஆதிகால முதல் நித்திய ஜீவனைக்குறித்து வாக்குத்தத்தம் பண்ணி, அதைக்குறித்த நம்பிக்கையைப்பற்றி தேவபக்திக்கேதுவான சத்தியத்தை அறிகிற அறிவும் விசுவாசமும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு உண்டாகும்படி,

தீத்து 1:4 ஏற்றகாலங்களிலே நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய கட்டளையின்படி எனக்கு ஒப்புவிக்கப்பட்ட பிரசங்கத்தினாலே தமது வார்த்தையை வெளிப்படுத்தினார்.

"தேவனுடைய ஊழியக்காரன்" - இந்த வசனத்தில் மட்டுமே பவுல் தன்னைத் தேவனுடைய ஊழியக்காரனாகக் குறிப்பிடுகிறார். ரோமர் 1:1, பிலி 1:1 ஆகிய வசனங்களில் பவுல் தன்னை இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனாக அழைத்துக் கொள்கிறார்.

ஊழியக்காரன் (servant) - δοῦλος - doulos - 1401

பொருள் - வேலைக்காரனாகிய, ஊழியக்காரனாகிய, அடிமையாயிருக்கிற **bondslave** (மத் 20:26-27)

"இயேசு கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலன்" - (அப் 15:33)

"தீத்து" (Titus) - தீமோத்தேயுவைப் போல தீத்துவும் பவுலின் ஊழியத்தின் மூலமாக இரட்சிக்கப்பட்டவன். பவுலின் உடன் ஊழியக்காரன் (தீத்து 1:4; 2கொரி 2:13; 2கொரி 7:6-14; 2கொரி 8:23; 2கொரி 12:17-18; கலா 2:1-3). கிரேத்தா தீவிலே உள்ள சபைகளுக்குப் பவுல் இவனைப் பொறுப்பானவனாக நியமித்தார் (தீத்து 1:5)

"பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும்" - பிதாவாகிய தேவனும் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் தனித்தனியாக வெவ்வேறு ஆள்தத்துவம் பண்புடையவர்கள் என்பதை விளக்கும் [illegible].

அப்போஸ்தல ஊழியத்தில் காணப்படும் காரியங்கள்

1. தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு உண்டாயிருக்கும் விசுவாசம்.
2. தேவபக்திக்கேதுவான சத்தியத்தை அறிகிற அறிவு.

விசுவாசம் (faithfulness) - πίστις - pistis - 4102

பொருள் பொருள்சொல் விசுவாசம், நிச்சயம், உண்மை **(faithfulness)** (2தெச 3:2)

அறிவு (knowledge) - ἐπίγνωσις - epignoosis - 1922

பொருள் பொருள்சொல் - அறிவு, அறிந்துகொள்ளுதல், ஞானம் **(full knowledge)** (கொலோ 3:10) **of the truth which is after godliness** (தீத்து 1:1)

தீத்து – தொகுப்புரை

1 அதிகாரம்

"தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்" (God's elect) - பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவன் யூதர்களைத் தம்முடைய ஜனமாகத் தெரிந்து கொண்டார் அவர்கள் தேவ[illegible] கீழ்ப்படியாமல் போனதினால் தேவன் அவர்களைத் தள்ளிவிட்டு அவர்களுக்குப் பதிலாகத் தம்முடைய விசுவாசிகளைத் தம்முடைய ஜனமாகத் தெரிந்து கொண்டார் (மத் 21:43; மத் 23:37-39; லூக்கா 8:7, ரோமர் 9-11)

தேவபக்தி (godliness) - εὐσέβεια - eusebeia - 2150

பெண்பால் பெயர்ச்சொல் - பக்தி தேவபக்தி (piety) (1தீமோ 3:16)

"நித்திய ஜீவனைக்குறித்த நம்பிக்கை" (hope of eternal life) - நித்திய ஜீவன் விசுவாசிகளுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கும் ஆசீர்வாதம். நாம் மரித்த பின்பு நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்வோம். ஆகையினால் இது ஒரு நம்பிக்கையே. (யோவான் 3:16 36 யோவான் 5:24, யோவான் 10:28-29, ரோமர் 8:24-25) நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்வதற்கு நாம் இயேசு கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டும் (யோவான் 5:11 12 யோவான் 6:27, 15:1 8 கலா 1:6 8, கலா 4:19, கலா 5:4,

தேவனால் செய்ய முடியாத காரியங்கள்

1 பொய்யுரைக்க மாட்டார் (தீத்து 1:2)

2 தம்மைத்தாம் மறுதலிக்க மாட்டார் (2தீமோ 2:13)

3 தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப் படுகிறவர் அல்லர் (யாக் 1:13)

வாக்குத்தத்தம் பண்ணு (promised) ἐπαγγέλλομαι epangellomai 1861

வினைச்சொல் - வாக்குத்தத்தம் பண்ணு, பாராட்டு, ஒத்துக்கொள் (announce; command, give orders) "promise" (தீத்து 1:2 மாற்கு 14:11; அப் 7:5; ரோமர் 4:21, கலா 3:19; எபி 6:13; எபி 10:23, எபி 11:11; எபி 12:26, யாக் 1:12; யாக் 2:5; 2பேதுரு 2:19 1யோவான் 2:25 "profess" (1தீமோ 2:10; 1தீமோ 6:21)

"தேவன் ஆதிகால முதல் நித்திய ஜீவனைக்குறித்து வாக்குத்தத்தம் பண்ணினார்" - யாருக்கு இந்த வாக்குத்தத்தம் பண்ணினார் என்பது தெரியவில்லை. மனுஷர் சிருஷ்டிக்கப் படுவதற்கு முன்பாகவே அவர்களுக்குத் தேவன் நித்திய ஜீவனை வாக்குத்தத்தம் பண்ணினாரா என்பதும் தெளிவாகத் தெரியவில்லை. ஆதிகால முதலே மனுஷரை மீட்டு அவர்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்க வேண்டும் என்னும் திட்டம் தேவனிடத்தில் இருந்தது. ஆதாமின் காலத்திற்கு முன்பாகவே தேவன் மனுக்குலத்திற்கு நித்திய ஜீவனைக் குறித்து [illegible] பண்ணியிருந்திருக்க வேண்டும் (ஆதி 1:1-2 ஏசா 14:12-14 எசே 4:23-26; எசே 28:11-17, மத் 13:35 2பேதுரு 3:5 8) நித்திய ஜீவனைப் பற்றிய அறிவிப்பும் வாக்குத்தத்தமும் நமது காலத்தில் மிகவும் தெளிவாக அறிவிக்கப் பட்டிருக்கிறது. (தீத்து 1:3; எபே 1:4 எபே 3:1-6)

காலம் (ages of time) - χρόνος - chronos - 5550

ஆண்பால் பெயர்ச்சொல் - காலம் (ages of time) (தீத்து 1:2, 2தீமோ 1:9; ரோமர் 16:25)

நித்திய (eternity) - αἰώνιος - aioonios 166

பெயரடை - நித்திய "eternal", "everlasting"

(அ) துவக்கமோ அல்லது முடிவோ அல்லாத, அநாதி ரோம 16:25

(ஆ) துவக்கம் இல்லாத ரோம 16:25

(இ) முடிவு இல்லாத

தீத்து - தொகுப்புரை

1 அதிகாரம்

அஸ்திபாரம் (disruption) καταβολή - katabolee - 2602

பெண்பால் பெயர்ச்சொல் - தோற்றம் உண்டாதல் அஸ்திபாரம் (disruption, overthrow of the world) (மத் 13:35)

அஸ்திபாரம் (founding) - θεμέλιον - themelion - 2310

பெயர்ச்சொல் - ஆதாரம், அஸ்திபாரம்

"எனக்கு ஒப்புவிக்கப்பட்ட பிரசங்கம்" - பவுலின் ஊழியம். (அப 9:15-17 கலா 1:15-16) கலா 2:2

கட்டளை (commandment) - ἐπιταγή - epitagee - 2003

பெண்பால் பெயர்ச்சொல் - கட்டளை அதிகாரம் (1தீமோ 1:1)

II. ஊழியக்காரரின் பதினேழு தகுதிகள் - (1தீமோ 3:1-13)

தீத்து 1:5 நீ குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும்படிக்கும், நான் உனக்குக் கட்டளையிட்டபடியே, பட்டணங்கள்தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும், உன்னைக் கிரேத்தாதீவிலே விட்டு வந்தேனே

தீத்து 1:6 குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியையுடைய புருஷனும் துன்மார்க்கரென்றும் அடங்காதவர்களென்றும் பேரெடுக்காத விசுவாசமுள்ள பிள்ளைகளை உடையவனுமாகிய ஒருவனிருந்தால் அவனையே ஏற்படுத்தலாம்

தீத்து 1:7 ஏனெனில், கண்காணியானவன் தேவனுடைய உக்கிராணக்காரனுக்கேற்ற விதமாய், குற்றஞ்சாட்டப்படாதவனும், தன் இஷ்டப்படி செய்யாதவனும், முற்கோபமில்லாதவனும், மதுபானப் பிரியமில்லாதவனும், அடியாதவனும், இழிவான ஆதாயத்தை இச்சியாதவனும்

தீத்து 1:8 அந்நியரை உபசரிக்கிறவனும், நல்லோர்மேல் பிரியமுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், நீதிமானும், பரிசுத்தவானும், இச்சையடக்கமுள்ளவனும்

தீத்து 1:9 ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்திசொல்லவும், எதிர்பேசுகிறவர்களைக் கண்டனம்பண்ணவும் வல்லவனுமாயிருக்கும்படி தான் போதிக்கப்பட்டதற்கேற்ற உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக்கொள்ளுகிறவனுமாயிருக்க வேண்டும்

"கிரேத்தாதீவு" (Crete) - ஆகியான் கடலிலுள்ளது (Aegean Sea) இது 40 மைல் நீளமும், 30 மைல் அகலமும் கொண்டது. அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகம் எழுதப்பட்ட பின்பு கிரேத்தாதீவில் பவுல் சபைகளை ஸ்தாபித்தார் ஏனெனில் கிரேத்தா தீவைப் பற்றிய குறிப்பு அப்போஸ்தலர் நடபடிகள் புஸ்தகத்தில் காணப்படவில்லை. பவுல் சிறிது காலம் சிறைச்சாலையிலிருந்து விடுதலை செய்யப்பட்டிருந்தார் அக்காலத்தில் அவர் கிரேத்தா தீவிற்குச் சென்று சபையை ஸ்தாபித்தார்

ஏற்படுத்து (ordain) - καθιστάνω - kathistanoo - 2525

வினைச்சொல் - வை, ஏற்படுத்து, வழிநடத்து, நியமி, ஆக்கு "ordain" (தீத்து 1:5; எபி 5:1, எபி 8:3), "appoint" (அப 6:3), "conduct" (அப 17:15); "set" (எபி 2:7), "make ruler" (மத் 24:45-47, மத் 25:21-23, லூக்கா12:42-44); "make" (லூக்கா 12:14; அப் 7:10,27,35, ரோமர் 5:19; எபி 7:28; 2பேதுரு 1:8)

தீத்து - தொகுப்புரை

1 அதிகாரம்

மூப்பர் (elders) - πρεσβύτερος - presbyteros - 4245

பெயரடை - முன்னோரான மூப்பரான முதிர் வயதுள்ள அப் 14:23

கட்டளையிடு (appointed) διατάσσω - diatassoo - 1299

வினைச்சொல் - கட்டளையிடு கட்டளை கொடு, திட்டம் பண்ணு "appoint" (தீத்து 1:5; லூக்கா 3:13 அப் 7:44; அப் 20:13); "ordain" (1கொரி 7:17; 1கொரி 9:14; கலா 3:19); "give order" (1கொரி 16:1); "command" (மத் 11:1 லூக்கா 8:55, லூக்கா 17:9-10; அப் 18:2; அப் 23:31; அப் 24:23) "set in order" (1கொரி 11:34)

மூப்பருடைய தகுதிகள்

குற்றஞ்சாட்டப்படாதவன் (Blameless)

2 ஒரே மனைவியையுடைய புருஷன் (Husband of one wife) (2கொரி 9:5

3 துன்மார்க்கரென்றும் அடங்காதவர்களென்றும் பேரெடுக்காத விசுவாசமுள்ள பிள்ளைகளை உடையவன் (Having faithful children) (தீத்து 1:6 1தீமோ 3:4-5,12)

4 தன் இஷ்டப்படி செய்யாதவன் (Not self willed) (தீத்து 1:7)

5 முற்கோபமில்லாதவன் (Not soon angry) (தீத்து 1:7)

6 மதுபானப்பிரியமில்லாதவன் (Not given to wine) தீத்து 1:7)

7 அடியாதவன் (No striker) (தீத்து 1:7).

8 இழிவான ஆதாயத்தை இச்சியாதவன் (Not given to filthy lucre) (தீத்து 1:7)

9 அந்நியரை உபசரிக்கிறவன் (A lover of hospitality) (தீத்து 1:8)

10 நல்லோர்மேல் பிரியமுள்ளவன் (A lover of good men) (தீத்து 1:8

11 தெளிந்த புத்தியுள்ளவன் (Sober) (தீத்து 1:8)

12 நீதிமான் (Just) (தீத்து 1:8)

13 பரிசுத்தவான் (Holy) (தீத்து 1:8

14 இச்சையடக்கமுள்ளவன் (Temperate) (தீத்து 1:8)

15 உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக்கொள்ளுகிறவன் (Holding fast to sound doctrine) (தீத்து 1:9)

16 ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்திசொல்லவும் எதிர்பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும் வல்லவன் (Able to exhort believers, and convince the gainsayers) (தீத்து 1:9, 1தீமோ 3:2,8)

குற்றஞ்சாட்டப்படாதவன் (Blameless) - ἀνέγκλητος - anenkleetos - 410

பெயரடை - குற்றம் சாட்டப்படாத, கண்டிக்கப்படாத (blameless) (தீத்து 1:6-7; 1கொரி 1:8, 1தீமோ 3:10); (unreproveable) (கொலோ 1:22)

தன் இஷ்டப்படி செய்கிறவன் (stubborn) αὐθάδης - authadees - 829

தீத்து - தொகுப்புரை

1 அதிகாரம்

பெயரடை - தன் இஷ்டப்படி செய்யும், அகங்கார (stubborn; headstrong, unfeeling; selfwilled) தீத்து 1:6 2பேதுரு 2:10

முற்கோபமில்லாதவன் (Not soon angry) - ὀργίλος - orgilos - 3711

பெயரடை - கோபமில்லாத (prone to anger; hot-headed; passionate)

மதுபானப்பிரியன் (winebibber) - πάροινος - paroinos - 3943

பெயரடை - மதுபானப் பிரியனாயிருக்கிற (1தீமோ 3:3 தீத்து 1:6)

அடிக்கிறவன (striker) - πλήκτης - pleektees - 4131

ஆண்பால் பெயர்ச்சொல் அடிக்கிறவன (quarrelsome; one ready to strike back at those who displease him; persecutor of those who differ with him) (1தீமோ 3:3, தீத்து 1:6)

இழிவான ஆதாயம் (filthy lucre) - αἰσχροκερδής - aischro kerdees - 146

பெயரடை - இழிவான ஆதாயத்தை இச்சிக்கிற (desirous of base gain, using wrong methods to raise money to increase his own income) (தீத்து 1:7; 1தீமோ 3:3,8)

அந்நியரை உபசரிக்கிறவன (lover of) φιλόξενος philoxenos 5382

பெயரடை - உபசரிக்கிறவன் (lover of strangers) (தீத்து 1:8 1தீமோ 3:2; 1பேதுரு 4:9, ரோமர் 12:13)

நல்லோர்மேல் பிரியமுள்ளவன் (lover of goodness) φιλάγαθος philagathos - 5358

பெயரடை - பிரியமுள்ள (lover of goodness)

தெளிந்த புத்தியுள்ளவன் (Sober) - σώφρων - soophroon - 4998

பெயரடை - தெளிந்த புத்தியுள்ள (of sound mind; prudent; moderate; self-controlled) sober (தீத்து 1:8; 1தீமோ 3:2); temperate (தீத்து 2:2); discreet (தீத்து 2:5)

நீதிமான் (Just) - δίκαιος - dikaios - 1342

பெயரடை - நீதிமானாயிருக்கிற நீதியுள்ள, நியாயமான, உண்மையுள்ள (just, righteous, right , meet)

பரிசுத்தவான (Holy) - ὅσιος - hosios - 3741

பெயரடை - பரிசுத்தமான, கிருபையான holy (தீத்து 1:8, 1தீமோ 2:8; எபி 7:26, வெளி 15:4 , mercies (அப் 13:34), Holy One (அப் 2:27; அப 13:35)

இச்சையடக்கமுள்ளவன் (Temperate) - ἐγκρατής - enkrtees - 1468

பெயரடை - இச்சையடக்கமுள்ள (having control of oneself, self disciplined)

பற்றிக்கொள்ளுகிறவன் ἀντέχω - antechoo 472

வினைச்சொல் - பற்று, தாங்கு (1தெச 5:14)

தீத்து – தொகுப்புரை

1 அதிகாரம்

“துன்மார்க்கரென்றும் அடங்காதவர்களென்றும் பேரெடுக்காத விசுவாசமுள்ள பிள்ளைகள்” – ஊழியக்காரர்களுடைய பிள்ளைகளுக்கு இப்பேர்ப்பட்ட தகுதிகள் இருக்க வேண்டும்

கண்காணி (bishop) - ἐπίσκοπος - episkopos - 1985

ஆண்பால் பெயர்ச்சொல் - கண்காணியானவன், கண்காணி (அப் 20:28)

எதிர்பேசுகிறவர் (gainsayers) - ἀντιλέγω - antilegoo - 483

வினைச்சொல் - விரோதமாகப் பேசு (இல்லையென்று சாதி, விரோதித்து தூஷி, விரோதி என்று சொல்லு) எதிர்த்துப்பேசு (contradicters of truth) “gainsayer” (தீத்து 1:9 ரோமர் 10:21); “speak against” (லூக்கா 2:34; யோவான் 19:12 அப் 13:45; அப் 28:19-22); “answer again” (தீத்து 2:9); “contradict” (அப் 13:45); “deny” (லூக்கா 20:27)

எதிர்பேசுகிறவர்களின் குணங்கள்

1 அடங்காதவர்கள் (Unruly) (தீத்து 1:10)

2 வீண்பேச்சுக்காரர் (Vain talkers) (தீத்து 1:10)

3 மனதை மயக்குகிறவர்கள் (Deceivers) (தீத்து 1:10)

4 முழுக்குடும்பங்களையும் கவிழ்த்துப்போடுகிறவர்கள் (Subvert (overthrown) whole houses) (தீத்து 1:11; 2தீமோ 2:18)

5 தகாதவைகளை உபதேசிக்கிறவர்கள் (Teach false doctrines) (தீத்து 1:11)

6 இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்கள் (Greedy of money) (தீத்து 1:11; பிலி 1:21 பிலி 3:7)

7 பொய்பேசுபவர் (Liars) (தீத்து 1:12)

8 துஷ்டமிருகங்கள் (Evil beasts) (தீத்து 1:12)

9 பெருவயிற்றுச் சோம்பேறிகள் (Slow bellies) (தீத்து 1:12)

10 விசுவாசத்தில் பலவீனர் (Unsound in faith) (தீத்து 1:13)

11 கட்டுக்கதைகளை நம்புகிறவர்கள் (Consecrated to false doctrines (தீத்து 1:13)

12 மனுஷருடைய கற்பனைகளுக்குச் செவிகொடுக்கிறவர்கள் (Obey human commandments) (தீத்து 1:13; மத் 15)

13 சத்தியத்தை விட்டு விலகுகிறவர்கள் (Reject truth) (தீத்து 1:13, 2தீமோ 4:1-4)

14 அசுத்த முள்ளவர்களும், அவிசுவாசமுள்ளவர்களும் (Unclean and unbelieving) (தீத்து 1:15

15 தேவனை அறிந்திருக்கிறோமென்று அறிக்கை மட்டும் பண்ணுகிறவர்கள் (Only profess godliness) (தீத்து 1:16; 2தீமோ 3)

16 அவர்களுடைய புத்தியும் மனச்சாட்சியும் அசுத்தமாயிருக்கிறது (Defiled in mind and conscience) (தீத்து 1:15)

தீத்து - தொகுப்புரை

1 அதிகாரம்

17 தங்கள் ஜீவியத்திலும் நடத்தையிலும் தேவனை மறுதலிக்கிறார்கள் **(Deny God in life and conduct)** (தீத்து 1:16)

18 அருவருக்கப் படத்தக்கவர்கள் **(Abominable—unnatural in lusts)** (தீத்து 1:16)

19 தேவனுக்கும் சத்தியத்திற்கும் கீழ்ப்படியாதவர்கள் **(Disobedient to God and truth)** (தீத்து 1:16)

20. எந்த நற்கிரியையுஞ்செய்ய ஆகாதவர்கள் **(Reprobate to all good works)** (தீத்து 1:16)

III. ஊழியக்காரரிடம் இருக்கக்கூடாத பதினேழு குணங்கள் - (1:5-9 தீமோ 3)

தீத்து 1:10 அநேகர், விசேஷமாய் விருத்தசேதனமுள்ளவர்கள், அடங்காதவர்களும் வீண்பேச்சுக்காரரும் மனதை மயக்குகிறவர்களுமாயிருக்கிறார்கள்

தீத்து 1:11 அவர்களுடைய வாயை அடக்கவேண்டும். அவர்கள் இழிவான ஆதாயத்துக்காகத் தகாதவைகளை உபதேசித்து முழுக்குடும்பங்களையும் கவிழ்த்துப் போடுகிறார்கள்

தீத்து 1:12 கிரேத்தாதீவார் ஓயாப்பொய்யர், துஷ்டமிருகங்கள் பெருவயிற்றுச் சோம்பேறிகள் என்று அவர்களிலொருவனாகிய அவர்கள் தீர்க்கதரிசியானவனே சொல்லியிருக்கிறான்

தீத்து 1:13 இந்தச் சாட்சி உண்மையாயிருக்கிறது. இதுமுகாந்தரமாக, அவர்கள் யூதருடைய கட்டுக்கதைகளுக்கும். சத்தியத்தை விட்டு விலகுகிற மனுஷருடைய கற்பனைகளுக்கும் செவிகொடாமல்

தீத்து 1:14 விசுவாசத்திலே ஆரோக்கியமுள்ளவர்களாகும்படி, நீ அவர்களைக் கண்டிப்பாய்க் கடிந்துகொள்

தீத்து 1:15 சுத்தமுள்ளவர்களுக்குச் சகலமும் சுத்தமாயிருக்கும் அசுத்தமுள்ளவர்களுக்கும் அவிசுவாசமுள்ளவர்களுக்கும் ஒன்றும் சுத்தமாயிராது அவர்களுடைய புத்தியும் மனச்சாட்சியும் அசுத்தமாயிருக்கும்.

தீத்து 1:16 அவர்கள் தேவனை அறிந்திருக்கிறோமென்று அறிக்கை பண்ணுகிறார்கள் கிரியைகளினாலோ அவரை மறுதலிக்கிறார்கள் அவர்கள் அருவருக்கப் படத்தக்கவர்களும் கீழ்ப்படியாதவர்களும் எந்த நற்கிரியையுஞ்செய்ய ஆகாதவர்களுமாயிருக்கிறார்கள்

"விருத்தசேதனமுள்ளவர்கள்" - நியாயப்பிரமாணத்தை உபதேசம் பண்ணும் யூதமார்க்கத்துப் போதகர்கள்

"அவர்களுடைய வாயை அடக்கவேண்டும்" - யூதமார்க்கத்துப் போதகர்கள் இழிவான ஆதாயத்துக்காகத் தகாதவைகளை உபதேசித்து முழுக்குடும்பங்களையும் கவிழ்த்துப் போடுகிறார்கள் ஆகையினால் அவர்களுடைய உபதேசம் பொய்யானது என்று வலியுறுத்திக் கூறுவது ஊழியக்காரர்களுடைய கடமையாகும்

"அவர்கள் தீர்க்கதரிசியானவனே" - கி.மு. 538 ஆம் ஆண்டு வாழ்ந்த எபிமெனிடஸ் (Epimenides) என்ற தீர்க்கதரிசியை இந்த வாக்கியம் குறிக்கிறது அவன் பல கவிதைகளை எழுதி அக்காலத்தில் தீர்க்கதரிசனம் உரைத்து [illegible].

பெருவயிற்றுச் சோம்பேறிகள் **(slow bellies)** - ἀργός - argos 692

பொருள் - வீணான, சும்மா, சோம்பேறி, சோம்பலுள்ள **(idle)** (1தீமோ 5:13)

"சுத்தமுள்ளவர்களுக்குச் சகலமும் சுத்தமாயிருக்கும்" தேவன் சிருஷ்டித்த எல்லா மிருகங்களும் விசுவாசிகளுக்குப் புசிக்கத் தகுந்தவை (ரோமர் 14 1கொரி 8 1தீமோ 4:4)

தீத்து - தொகுப்புரை

2 அதிகாரம்

IV. ஊழியம் செய்யுமாறு கட்டளைகள் - (2:1-3:14)

1. தீத்துவிற்கு முப்பது கட்டளைகள் - 2:1-10; 2தீமோ 1:6

(1) முதிர் வயதுள்ள புருஷர்களுக்கு உபதேசிக்க வேண்டிய காரியம் - எபே 5:25

தீத்து 2:1 நீயோ ஆரோக்கியமான உபதேசத்துக்கேற்றவைகளைப் பேசு.

தீத்து 2:2 முதிர்வயதுள்ள புருஷர்கள் ஜாக்கிரதையுள்ளவர்களும் நல்லொழுக்க முள்ளவர்களும் தெளிந்த புத்தியுள்ளவர்களும் விசுவாசத்திலும் அன்பிலும் பொறுமையிலும் ஆரோக்கிய முள்ளவர்களுமா யிருக்கும்படி புத்திசொல்லு.

"நீயோ ஆரோக்கியமான உபதேசத்துக்கேற்றவைகளைப் பேசு" - தீத்து 1:10-16 ஆகிய வசனங்களில் யூதமார்க்கத்தாரைப் பற்றியும் அவர்களுடைய துர்உபதேசத்தைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. தீத்து அவர்களுக்கு எதிராக மெய்யான உபதேசங்களையும் ஆரோக்கியமான உபதேசத்துக் கேற்றவைகளையும் பேசவேண்டும்.

ஆரோக்கியமான உபதேசத்துக் கேற்றவைகளை யாரிடம் பேசவேண்டும்

1 முதிர்வயதுள்ள புருஷர்களிடம் தீத்து 2:1-2

2 முதிர்வயதுள்ள ஸ்திரீகளிடம் (தீத்து 2:3-4)

3 பாலிய ஸ்திரீகளிடம் (தீத்து 2:4-5)

4 வாலிப புருஷரிடம் தீத்து 2:6-8)

5 வேலைக்காரரிடம் (தீத்து 2:9-10)

6 மனுஷரிடம் - கிருபையைக் குறித்து (தீத்து 2:11-12)

7 மனுஷரிடம் - சபை எடுத்துக் கொள்ளப் படுவதையும் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையையும் குறித்து (தீத்து 2:13)

8 மனுஷரிடம் - மீட்பைக் குறித்து (தீத்து 2:14-15)

முதிர்வயதுள்ள புருஷருக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1 தெளிந்த புத்தியுள்ளவர்களாக இருக்க வேண்டும். (Be sober)

2 நல்லொழுக்கமுள்ளவர்களாக இருக்க வேண்டும். (Grave)

3 ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்க வேண்டும். (Temperate)

4 விசுவாசத்தில் ஆரோக்கிய முள்ளவர்களாக இருக்க வேண்டும் (Sound in faith) (2தெச 3:2

5. அன்பில் ஆரோக்கியமுள்ளவர்களாக இருக்க வேண்டும் (Sound in love) (1கொரி 13:4)

6 பொறுமையில் ஆரோக்கிய முள்ளவர்களாக இருக்க வேண்டும் (Sound in patience) (சங் 37:7

தெளிந்த புத்தியுள்ளவராயிருப்பது (Be sober) νηφαλέος **neephaleos** - 3524

பெயரடை - தெளிந்த புத்தியுள்ள **(drinking no wine, sober) vigilant** (1தீமோ 3:2), **sober** (1தீமோ 3:11; தீத்து 2:2)

நல்லொழுக்கமுள்ள (Grave) σεμνός **semnos** 4586

தீத்து - தொகுப்புரை

2 அதிகாரம்

பொருள் - உண்மையுள்ள, நல்லொழுக்கமுள்ள grave (தீத்து 2:4; தீத்து 2:2) honest (பிலி 4:8)

ஜாக்கிரதையுள்ளவர் (Temperate)
σώφρων - soophroon - 4998

பொருள் - தெளிந்த புத்தியுள்ள (of sound mind; prudent; moderate; self-controlled) sober (தீத்து 2:8; 1தீமோ 3:2) temperate (தீத்து 2:2); discreet (தீத்து 2:5)

(2) முதிர் வயதுள்ள ஸ்திரீகளுக்கு உபதேசிக்க வேண்டிய காரியம் - (எபே 5:22)

தீத்து 2:3 முதிர்வயதுள்ள ஸ்திரீகளும் அப்படியே பரிசுத்தத்துக்கேற்றவிதமாய் நடக்கிறவர்களும் அவதூறு பண்ணாதவர்களும் மதுபானத்துக்கு அடிமைப்படாதவர்களுமாயிருக்கவும்

முதிர்வயதுள்ள ஸ்திரீகளுக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. பரிசுத்தத்துக்கேற்ற விதமாய் நடக்கிறவர்களாய் இருக்க வேண்டும் (Live holy) (எபே 5:22-33 கொலோ 3:18, 1தீமோ 2:9-12 1பேதுரு 3:1-6)
2. அவதூறுபண்ணாதவர்களாக இருக்க வேண்டும் (Be not slanderers)
3. மதுபானத்துக்கு அடிமைப்படாதவர்களாய் இருக்க வேண்டும். (Not given to wine)
4. நற்காரியங்களைப் போதிக்கிறவர்களாய் இருக்க வேண்டும். (Be teachers of good things) (தீத்து 2:3)
5. பாலிய ஸ்திரீகளுக்கு புத்தி சொல்லுகிறவர்களாய் இருக்க வேண்டும். (Teach the young women) (தீத்து 2:4)

அவதூறு செய்கிறவர் (slanderer) - διάβολος diabolos - (228)

பொருள் - பிசாசான, அவதூறு (செய்கிறவன்) (யோவான் 6:70)

(3) பாலிய ஸ்திரீகளுக்கு உபதேசிக்க வேண்டிய காரியம் - (1தீமோ 5:11 எபே 5:22)

தீத்து 2:4 தேவவசனம் தூஷிக்கப்படாதபடிக்கு பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும் தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும்

தீத்து 2:5 தெளிந்த புத்தியுள்ளவர்களும் கற்புள்ளவர்களும் வீட்டில் தரித்திருக்கிறவர்களும் நல்லவர்களும் தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாயிருக்கும்படி அவர்களுக்குப் படிப்பிக்கத்தக்க நற்காரியங்களைப் போதிக்கிறவர்களுமாயிருக்கவும் முதிர்வயதுள்ள ஸ்திரீகளுக்குப் புத்திசொல்லு.

பாலிய ஸ்திரீகளுக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருக்க வேண்டும். (To be sober) (1தீமோ 2:9)
2. தங்கள் புருஷரிடத்தில் அன்புள்ளவர்களாய் இருக்க வேண்டும். (To love their husbands)
3. தங்கள் பிள்ளைகளிடத்தில் அன்புள்ளவர்களாய் இருக்க வேண்டும். (To love their children)
4. தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருக்க வேண்டும். (To be discreet)

தீத்து - தொகுப்புரை

2 அதிகாரம்

5 கற்புள்ளவர்களாக இருக்க வேண்டும். (To be chaste)

6 வீட்டில் தரித்திருக்கிறவர்களாக இருக்க வேண்டும். (To be homemakers)

7 நல்லவர்களாக இருக்க வேண்டும் (To be good)

8 தங்கள் புருஷர்களுக்குக் கீழ்படிகிறவர்களாக இருக்க வேண்டும். (To be obedient to their husbands) (எபே 5:22,33 கொலோ 3:18, 1பேதுரு 3:1-6)

தெளிந்த புத்தியுள்ளவர் (prudent) - σώφρων - soophroon - 4998

பொருள் - தெளிந்த புத்தியுள்ள (of sound mind; prudent; moderate; self-controlled) sober (தீத்து 2:8; 1தீமோ 3:2), temperate (தீத்து 2:2); discreet (தீத்து 2:5)

கற்புள்ளவர் (chaste) - ἁγνός - hagnos - 53

பொருள் - சுத்த, கற்புள்ள (2கொரி 7:11 2கொரி 11:2; பிலி 4:8 1தீமோ 5:22, தீத்து 2:4, யாக் 3:17 1பேதுரு 3:2, 1யோவான் 3:3)

(அ) நபர்கள் 2கொரி. 7:11; 11:12

(ஆ) பொருட்கள் பிலி. 4:28; யாக். 3:17

வீட்டில் தரித்திருக்கிறவர் (homemakers) - οἰκουργός oikourgos - 3626

பொருள் - தரித்திருக்கிற (caring for and working at home)

நல்லவர் (good) - ἀγαθός - agathos - 18

பொருள் - நல்லவர் சரீரப் பிரகாரமாகவோ அல்லது ஆன்மீகப் பிரகாரமாகவோ நன்றாக இருப்பவரைக் குறிப்பிடும் (virtuous) (தீத்து 2:5)

(அ) பரிபூரணமாக இருக்கும் தேவன் தம்மை நல்லவர் என்று குறிப்பிட்டுள்ளார் மாற்கு 10:18

(ஆ) நல்லோர் - இவர்கள் தீயோருக்கு எதிர்பதமாக இருப்பவர்கள் மத். 5:45, 22:10

(இ) நல்ல நிலம் - லூக். 8:8 நல்ல மரம் மத். 7:17

(ஈ) தன்னிலை பெயர்ச்சொல் - நன்மை செய்கிறவன் ரோம 2:10 நன்மைக்கேதுவாக நடப்பது ரோம 8:28 பல வேறுபாடற்ற நன்மைச் செல்வ. நன்மைகள் லூக். 1:53 நன்மையான எந்த ஈவும் யாக். 1:17

(4) பாலிய புருஷருக்கு உபதேசிக்க வேண்டிய காரியம் (எபே 5:25 2தீமோ 2:6)

தீத்து 2:6 அப்படியே, பாலிய புருஷரும் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருக்கவும் நீ புத்திசொல்லி.

தீத்து 2:7 நீயே எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பித்து,

தீத்து 2:8 எதிரியானவன் உங்களைக்குறித்துச் சொல்லத்தக்க சொல்லுகிறதற்கு ஒன்றுமில்லாமல் வெட்கப்படத்தக்கதாக, உபதேசத்திலே விகற்பமில்லாதவனும், நல்லொழுக்க முள்ளவனும் குற்றம்பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனத்தைப் பேசுகிறவனுமாயிருப்பாயாக.

தீத்து – தொகுப்புரை

2 அதிகாரம்

பாலிய புருஷருக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1 தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருக்க வேண்டும். (To be sober minded)

2 நற்கிரியைகளுக்கு மாதிரியாக இருக்க வேண்டும். (To be a pattern of good works)

3 உபதேசத்திலே விகற்பமில்லாதவர்களாகவும், நல்லொழுக்கமுள்ளவர்களாகவும், குற்றம்பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனத்தைப் பேசுகிறவர்களாகவும் இருக்க வேண்டும். (To be uncorrupt, grave, and sincere in teaching) (தீத்து 2:6

4 எதிரியானவன் பொல்லாங்கு சொல்லுகிறதற்கு ஒன்றுமில்லாதவர்களாக இருக்க வேண்டும் (To have sound speech that cannot be condemned) (தீத்து 2:8

தெளிந்த புத்தியுள்ளவா (sober minded) - σωφρονέω - soophroneoo - 4993

வினைச்சொல் - புத்தி தெளிந்திரு, தெளிந்த எண்ணம், தெளிந்த புத்தி. தெளிந்த புத்தியுள்ளவர்களாயிரு (sober in mind) (தீத்து 2:6, மாற்கு 5:15; லூக்கா 8:35; 2கொரி 5:13; ரோமர் 12:3; 1பேதுரு 4:7

மாதிரி (pattern) τυπικῶς typikoos 5179

ஆண்பால் பெயர்ச்சொல் - சொரூபம் மாதிரிஉருவம். திருஷ்டாந்தம் (பிலி 3:17

ஆரோக்கியமான (healing) - ὑγιής - hygiees - 5199

பெயரடை - சொஸ்தமான, சுகமான, ஆரோக்கியமான sound (தீத்து 2:8 whole (மத் 12:13; மத் 15:31, மாற்கு 3:5 மாற்கு 5:34 லூக்கா 6:10; யோவான் 5:4-15 யோவான் 7:23; அப் 4:10. ஆரோக்கியம் என்பது ஆவிக்குரிய ஆரோக்கியத்தையும் சரீர ஆரோக்கியத்தையும் குறிக்கும். (மத் 8:17; 1பேதுரு 2:24; யாக் 5:14

(5) வேலைக்காரருக்கு உபதேசிக்க வேண்டிய காரியம் - (எபே 6:5)

தீத்து 2:9 வேலைக்காரர் நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய உபதேசத்தை எல்லாவற்றிலும் அலங்கரிக்கத்தக்கதாக.

தீத்து 2:10 தங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்திருந்து எதிர்த்துப்பேசாமல் எல்லாவற்றிலும் பிரியமுண்டாக நடந்து கொள்ளவும், திருடாமலிருந்து சகலவிதத்திலும் நலலுண்மையைக் காண்பிக்கவும் புத்தி சொல்லு.

வேலைக்காரருக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1 தங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் (Be obedient) (எபே 6:5)

2 எல்லாவற்றிலும் பிரியமுண்டாக நடந்து கொள்ள வேண்டும். (Please masters in all things) (தீத்து 2:9

3 தங்கள் எஜமான்களுக்கு எதிர்த்துப் பேசாமல் இருக்க வேண்டும். (Do not contradict or gainsay orders)

4 திருடாமலிருக்க வேண்டும். (Do not steal the goods of the master entrusted to you) (தீத்து 2:10, அப 5:2 3)

2 அதிகாரம்

5 சகலவிதத்திலும் நலலுண்மையைக் காண்பிக்க வேண்டும் (Show faithfulness in all things) (தீத்து 2:10)

2. சுவிசேஷத்திற்கு எல்லா மனுஷரும் கீழ்ப்படிய வேண்டும் - தேவகிருபையைக் குறித்து பத்து உபதேசங்கள்

தீத்து 2:11 ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி,

தீத்து 2:12 நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம்பண்ணி,

தீத்து 2:13 நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும் மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது.

தேவகிருபையின் ஆசீர்வாதங்கள்

1 இரட்சிப்பை அளிக்கிறது. (தீத்து 2:11 எபே 2:8-9

2 எல்லா மனுஷருக்கும் பிரசன்னமாகியிருக்கிறது. (தீத்து 2:11; யோவான் 3:16 வெளி 22:17)

3 மனுஷருக்குப் போதிக்கிறது.

தேவகிருபை மனுஷருக்குப் போதிக்கும் காரியங்கள்

1 அவபக்தியை வெறுக்க வேண்டும். (தீத்து 2:12

2 லௌகிக இச்சைகளை வெறுக்க வேண்டும். (தீத்து 2:12)

3 தெளிந்த புத்தியுள்ளவர்களாக ஜீவனம் பண்ண வேண்டும். (தீத்து 2:12, தீத்து 1:8; தீத்து 2:2-7)

4 நீதியுள்ளவர்களாக ஜீவனம் பண்ண வேண்டும். (தீத்து 2:12; எபி 12:14 ரோமர் 6:14-23; ரோமர் 8:12-13)

5. தேவபக்தியுள்ளவர்களாக ஜீவனம் பண்ண வேண்டும். தீத்து 2:12 2தீமோ 3:12

6 இந்த ஜீவியத்தில நேர்மையாக ஜீவனம் பண்ண வேண்டும் (தீத்து 2:12)

7 சபை எடுத்துக் கொள்ளப்படுவதையும் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையையும் எதிர்பார்க்க வேண்டும் (தீத்து 2:13 பிலி 3:20)

போதித்தல (Teaching) - παιδεύω - paideuoo - 3811

வினைச்சொல - தண்டி, கற்பிக்கப்படு, போதிக்கப்படு, உபதேசி (instruction as to children) (2தீமோ 2:25)

தீர்க்கதரிசன எண் - 1

"நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது" தீத்து 2:13 இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. சபை எடுத்துக் கொள்ளப்படுவதற்காக ஜனங்கள் அந்நாளில் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள் சபை எப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும் என்று ஒரு குறிப்பிட்ட நாளோ நேரமோ வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டவில்லை. (தீத்து 2:12, பிலி 3:20)

தீத்து – தொகுப்புரை

2 அதிகாரம்

3. கிறிஸ்துவின் ஊழியத்தின் நோக்கம் – (யோவான் 9:39)

தீத்து 2:14 அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்தி வைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி நமக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார்

கிறிஸ்துவின் மரணத்தினால் தேவ ஜனத்திற்குக் கிடைக்கும் சிலாக்கியங்கள்

1 அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டார் (மத் 26:28 கொலோ 1:14-22, வெளி 1:5)

2 தமக்குரிய சொந்த ஜனங்களாகவும் நற்கிரியைகளைச் செய்ய பக்தி வைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரித்தார் (கலா 3:14)

4. தீத்துவிற்கு பத்து கட்டளைகள் - (2:1; 3:8; 2தீமோ 1:6)

தீத்து 2:15 இவைகளை நீ பேசி, போதித்து சகல அதிகாரத்தோடும் கடிந்துகொள் ஒருவனும் உன்னை அசட்டைபண்ண இடங்கொடாதிருப்பாயாக

அப்போஸ்தலர் பவுல் தீத்துவிற்குக் கூறியிருக்கும் புத்திமதிகள்

1 இவைகளை நீ பேச வேண்டும்

2 இவைகளை நீ போதிக்க வேண்டும்

3. சகல அதிகாரத்தோடும் கடிந்துகொள்ள வேண்டும்.

4 ஒருவனும் உன்னை அசட்டைபண்ண இடங்கொடுக்கக்கூடாது.

தீத்து - தொகுப்புரை

3 அதிகாரம்

5. பாவிகளின் ஒன்பது அம்ச விளக்கம்

தீத்து 3:1 துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் கீழ்ப்படிந்து அடங்கியிருக்கவும், சகலவிதமான நற்கிரியைகளையும் செய்ய ஆயத்தமாயிருக்கவும்,

தீத்து 3:2 ஒருவனையும் தூஷியாமலும், சண்டைபண்ணாமலும், பொறுமையுள்ளவர்களாய் எல்லா மனுஷருக்கும் சாந்தகுணத்தைக் காண்பிக்கவும் அவர்களுக்கு நினைப்பூட்டு.

விசுவாசிகள் நினைவுக்குக் கூறப்படவேண்டிய செய்திகள்

1. துரைத்தனங்களுக்கு கீழ்ப்படிந்து அடங்கியிருக்க வேண்டும். (தீத்து 3:1; ரோமர் 13:1-8; 1பேதுரு 2:13-18)

2. அதிகாரங்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்கியிருக்க வேண்டும். (தீத்து 3:1; ரோமர் 13:1-8)

3. சகலவிதமான நற்கிரியைகளையும் செய்ய ஆயத்தமாயிருக்க வேண்டும். (தீத்து 3:1)

4. ஒருவனையும் தூஷிக்கக் கூடாது. (தீத்து 3:2; யாக் 3)

5. சண்டைபண்ணாமலிருக்க வேண்டும். (தீத்து 3:2; 1தீமோ 3:3)

6. பொறுமையுள்ளவர்களாய் இருக்க வேண்டும். (தீத்து 3:2; பிலி 4:5)

7. எல்லா மனுஷருக்கும் சாந்தகுணத்தைக் காண்பிக்க வேண்டும். (கலா 5:22-23)

6. மனுஷர் ஏன் எவ்வாறு இரட்சிக்கப்படுகிறார்கள்

தீத்து 3:3 ஏனெனில், முற்காலத்திலே நாமும் புத்தியீனரும், கீழ்ப்படியாதவர்களும், வழிதப்பி நடக்கிறவர்களும், பலவித இச்சைகளுக்கும் இன்பங்களுக்கும் அடிமைப்பட்டவர்களும், துர்க்குணத்தோடும் பொறாமையோடும் ஜீவனம் பண்ணுகிறவர்களும், பகைக்கப்படத்தக்கவர்களும், ஒருவரையொருவர் பகைக்கிறவர்களுமாயிருந்தோம்.

தீத்து 3:4 நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய தயவும், மனுஷர்மேலுள்ள அன்பும் பிரசன்னமானபோது,

தீத்து 3:5 நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்.

தீத்து 3:6 தமது கிருபையினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டு, நித்திய ஜீவனுண்டாகும் என்கிற நம்பிக்கையின்படி சுதந்தரராகத்தக்கதாக,

தீத்து 3:7 அவர் நமது இரட்சகராகிய இயேசுகிறிஸ்து மூலமாய், அந்தப் பரிசுத்த ஆவியை நம்மேல் சம்பூரணமாய்ப் பொழிந்தருளினார்.

பாவிகளுடைய குணங்கள்

1. புத்தியீனர் (Foolish)

2. கீழ்ப்படியாதவர்கள் (Disobedient) (தீத்து 3:3; எபே 2:1-3)

3. வழிதப்பி நடக்கிறவர்கள் (Deceived) (தீத்து 3:3; 2கொரி 4:4; வெளி 12:9)

4. பலவித இச்சைகளுக்கும் இன்பங்களுக்கும் அடிமைப்பட்டவர்கள் (Serving divers lusts and pleasures) (தீத்து 3:3; கலா 5:19-21; எபே 2:1-3)

தீத்து - தொகுப்புரை

3 அதிகாரம்

5 துர்க்குணத்தோடும் பொறாமையோடும் ஜீவனம்பண்ணுகிறவர்கள் (Living in malice and envy) (தீத்து 3:3)

6 பகைக்கப்படத்தக்கவர்கள் (Hateful) தீத்து 3:3

7 ஒருவரையொருவர் பகைக்கிறவர்கள் (Hating one another) (தீத்து 3:3)

புத்தியீனர் (Foolish) - ἀνόητος - anoeetos - 453

பெயரடை - புத்தியில்லாத, மூடமான, புத்தியீனமான, மதிக்கேடான foolish (தீத்து 3:3; கலா 3:1,3; 1தீமோ 6:9), unwise (ரோமர் 1:14); fool (லூக்கா 24:25)

ஆத்தும இரட்சிப்பின் அம்சங்கள்

1 தேவனுடைய தயவும் மனுஷர்மேலுள்ள அன்பும் பிரசன்னமாதல் (தீத்து 3:4)

2 மனுஷர் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சிக்கவில்லை (தீத்து 3:5; எபே 2:8-9)

3 தமது இரக்கத்தின் படியே அவர் நம்மை இரட்சித்தார் (தீத்து 3:5)

4 இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலும், வார்த்தையினாலும் நம்மைக் கழுவினார் (தீத்து 3:5; மத் 26:28; எபே 5:26; கொலோ 1:14, 22; 1பேதுரு 1:18-23; யாக் 1:18)

5 பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினால் அவர் நம்மை இரட்சித்தார் (தீத்து 3:5; யோவான் 3:5; எபே 4:24; ரோமர் 12:2)

6 நமது இரட்சகராகிய இயேசுகிறிஸ்து மூலமாய், அந்தப் பரிசுத்த ஆவியை நம்மேல் சம்பூரணமாய்ப் பொழிந்தருளினார் (தீத்து 3:7; ரோமர் 5:5; ரோமர் 8:14-16; 2கொரி 12:13)

7 தேவனுடைய கிருபையினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டு, நித்திய ஜீவனுண்டாகும் என்கிற நம்பிக்கையின்படி சுதந்தரராக்கப்பட்டோம். (தீத்து 3:6; ரோமர் 3:24-31; ரோமர் 5:1-11; எபே 2:8-9)

"நித்திய ஜீவனுண்டாகும் என்கிற நம்பிக்கை" - (தீத்து 1:2; யோவான் 6:27)

பொழிந்தருளுதல் (shed on) - ἐκχέω - ekcheoo - 1632

வினைச்சொல் - சிந்து, கொட்டு, ஊற்று, பொழி, சரிந்துபோ (to pour forth; bestow; to gush out; run greedily out; shed abroad; to spill out freely) (தீத்து 3:6; யோவான் 7:37-39; அப் 2:16-21,33; அப் 10:45; யூதா 2:28-29)

சம்பூரணம் (abundantly) - πλουσίως - plousioos - 4146

வினையடை - பரிபூரணமாய், சம்பூரணமாய் (தீத்து 3:6; கொலோ 3:16; 1தீமோ 6:17; 2பேதுரு 1:11)

7. தீத்துவிற்கு எட்டு கட்டளைகள் (2:1,15; 2தீமோ 1:6)

தீத்து 3:8 இந்த வார்த்தை உண்மையுள்ளது; தேவனிடத்தில் விசுவாசமானவர்கள் நற்கிரியைகளைச் செய்ய ஜாக்கிரதையாயிருக்கும்படி நீ இவைகளைக்குறித்துத் திட்டமாய்ப் போதிக்கவேண்டுமென்று விரும்புகிறேன்; இவைகளே நன்மையும் மனுஷருக்குப் பிரயோஜனமுமானவைகள்.

தீத்து - தொகுப்புரை

3 அதிகாரம்

தீத்து 3:9 புத்தியீனமான தர்க்கங்களையும், வம்சவரலாறுகளையும், சண்டைகளையும் நியாயப்பிரமாணத்தைக்குறித்து உண்டாகிற வாக்குவாதங்களையும் விட்டு விலகு; அவைகள் அப்பிரயோஜனமும் வீணுமாயிருக்கும்.

தீத்து 3:10 வேதப்புரட்டனாயிருக்கிற ஒருவனுக்கு நீ இரண்டொருதரம் புத்தி சொன்னபின்பு அவனைவிட்டு விலகு,

தீத்து 3:11 அப்படிப்பட்டவன் நிலைதவறி, தன்னிலேதானே ஆக்கினைத் தீர்ப்புடையவனாய் பாவஞ்செய்கிறவனென்று அறிந்திருக்கிறாயே.

தீத்து 3:12 நான் அர்த்தெமாவையாவது தீகிக்குவையாவது உன்னிடத்தில் அனுப்பும் போது, நீ நிக்கொப்போலிக்கு என்னிடத்தில் வர ஜாக்கிரதைப்படு; மாரிகாலத்திலே அங்கே தங்கும்படி தீர்மானித்திருக்கிறேன்.

தீத்து 3:13 நியாயசாஸ்திரியாகிய சேனாவுக்கும் அப்பொல்லோவுக்கும் ஒரு குறைவுமில்லாதபடிக்கு அவர்களை ஜாக்கிரதையாய் விசாரித்து வழிவிட்டனுப்பு.

தீத்து 3:14 நம்முடையவர்களும் கனியற்றவர்களாயிராதபடி குறைவுகளை நீக்குகிறதற்கேதுவாக நற்கிரியைகளைச் செய்யப் பழகட்டும்.

"இந்த வார்த்தை உண்மையுள்ளது" (1தீமோ 1:15)

"திட்டமாய் போதிக்க வேண்டும்" (1தீமோ 1:7) நாம் நற்கிரியைகளைச் செய்ய ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். (தீத்து 3:8,14; தீத்து 2:14; 2தீமோ 2:21; மத் 5:16

"புத்தியீனமான தர்க்கங்களை விட்டு விலகு" - (1தீமோ 1:4)

அப்பிரயோஜனமும் வீணுமாயிருக்கும் [redacted]

1. புத்தியீனமான தர்க்கங்கள்
2. வம்சவரலாறுகள்
3. சண்டைகள்
4. நியாயப்பிரமாணத்தைக் குறித்து உண்டாகிற வாக்குவாதங்கள்

வேதப்புரட்டன் (heretick) - αἱρετικός - hairetikos - 141

பொருள் - வேதப்புரட்டன் (one who maintains opposition to truth) (அப 5:17)

விலகு (reject) - παραιτέομαι - paraiteomai - 3868

வினைச்சொல் - மன்னி, விலக்கு, வேண்டிக்கொள் (beg off) "reject" (தீத்து 3:10); "avoid" (2தீமோ 2:23); "entreat" (எபி 12:19); "make excuse" (லூக்கா 14:18); "refuse" (அப 25:11; 1தீமோ 4:7; 1தீமோ 5:11; எபி 12:25)

வேதப்புரட்டினால் உண்டாகும் விளைவுகள்

1. நிலைதவறுதல்
2. பாவம் செய்தல்
3. தன்னிலேதானே ஆக்கினைத் தீர்ப்படைதல்

பாவம் (Sin) - ἁμαρτάνω - hamartanoo - 264

தீத்து – தொகுப்புரை

3 அதிகாரம்

வினைச்சொல் - குற்றம் செய், பாவஞ்செய், பெற்றுக்கொள்ளத் தவறு, நியதியின் படி நடக்கத்தவறு (miss a mark or aim; to wander from the right path that leads to life; go in the path of destruction) "sin" (தீத்து 3:11; மத் 18:21; மத் 27:4; லூக்கா 15:18-21; யோவான் 5:14; யோவான் 8:11; யோவான் 9:2-3; ரோமர் 2:12; ரோமர் 3:23; ரோமர் 5:12-16; ரோமர் 6:15; 1கொரி 6:18; 1கொரி 7:28,36; 1கொரி 8:12; 1கொரி 15:34; எபே 4:26; 1தீமோ 5:20; எபி 3:17; எபி 10:26; 2பேதுரு 2:4; 1யோவான் 3:10; 1யோவான் 2:1; 1யோவான் 3:6-9; 1யோவான் 5:16-18); "to trespass" (மத் 18:15; லூக்கா 17:3-4); "offend" (அப் 25:8); "faults" (1பேதுரு 2:20)

(அ) சட்டப்பிரகாரமாக தவறு செய்தல் (அப் 25:8); ஆவிக்குரிய ஆனமீகப்பிரகாரமாக தவறு செய்தல் (ரோம 3:23; 5:12)

(ஆ) நீதி நெறிக்குப் புறம்பாகத் தவறு செய்தல், ஒருவருக்கு விரோதமாகப் பாவஞ்செய்தல் (1கொரி 6:18); மனிதர்கள் மத்தியில் தவறு செய்தல் (18:15)

(இ) தேவனுடைய சித்தத்தை மீறுதல், அதிலும் சிறப்பாக தேவன் வெளிப்படுத்தியுள்ள சித்தத்தை மீறி அவருக்கு எதிராக பாவஞ்செய்தல் (மத் 27:2)

"அர்த்தெமா" (Artemas) - இவனைப் பற்றிய குறிப்பு வேறு வசனங்களில் காணப்படவில்லை.

"தீகிக்கு" (Tychicus) - (அப் 20:4)

"நிக்கொப்போலி" (Nicopolis) - எபிரேசின் (Epirus) பட்டணம். இது அம்ராசியா (Ambracia) வளைகுடாவில் அக்தியத்திற்கு (Actium) அருகில் உள்ளது. நிக்கொப்போலி என்னும் பெயரில் வேறொரு பட்டணம் துரோவாவில் (Thrace) நேசஸ் (Nessus) நதிக்கரையில் அமைந்திருக்கிறது.

"மாரிகாலத்திலே அங்கே தங்கும்படி தீர்மானித்திருக்கிறேன்" - பவுல் சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார். தனக்குப் பிரியமான இடத்தில் மாரிகாலத்தில் தங்கியிருக்க விரும்புகிறார்.

"சேனா" (Zenas) - இவனைப் பற்றிய குறிப்பு வேறு வசனங்களில் காணப்படவில்லை.

"அப்பொல்லோ" (Apollos) - அப் 18:24

8. முடிவுரையும் ஆசீர்வாதமும்

தீத்து 3:15 என்னோடிருக்கிற யாவரும் உனக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள். விசுவாசத்திலே நம்மைச் சிநேகிக்கிறவர்களுக்கு வாழ்த்துதல் சொல்லு. கிருபையானது உங்களெல்லாரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.

பிலேமோன் – முன்னுரை

காலமும் இடமும்

கி.பி. 64 ஆம் ஆண்டில் பவுல் ரோமாபுரியிலிருந்து இந்த நிருபத்தை எழுதினார்

ஆசிரியர்

பவுல்

மையக்கருத்து

பிலேமோன் என்பவன் கொலோசே பட்டணத்திலுள்ள ஒரு விசுவாசி. இவனிடத்தில் ஒநேசிமு என்பவன் அடிமையாக இருந்தான். இவன் தன்னுடைய எஜமானை வஞ்சித்து விட்டு ரோமாபுரிக்குத் தப்பியோடி விட்டான். அங்கு பவுலின் ஊழியத்தின் மூலமாக ஒநேசிமு இரட்சிக்கப்பட்டான். பவுல் பிலேமோனுக்கு ஒரு நிருபத்தை எழுதி அதை ஒநேசிமு மூலமாகக் கொடுத்து அனுப்புகிறார். ஒநேசிமுவை மன்னித்து ஏற்றுக் கொள்ளுமாறு பவுல் பிலேமோனுக்கு இந்த நிருபத்தில் எழுதியிருக்கிறார்

புள்ளிவிவரங்கள்

அதிகாரம் - 1

வசனங்கள் - 25

பொருளடக்கம்

I. ஆசிரியரும் வாழ்த்துரையும் (1-3)

II. பிலேமோனின் சுபாவம் (4-7)

III. ஒநேசிமுவுக்காக பவுலின் மன்றாட்டு (8-19)

IV. கர்த்தருக்குள் பவுல் பிலேமோன் ஆகியோரின் ஐக்கியம் (20-22)

V. முடிவுரையும் ஆசீர்வாதமும் (23-25)

பிலேமோன் – தொகுப்புரை

1 அதிகாரம்

I. ஆசிரியரும் வாழ்த்துரையும்

பிலே 1:1 கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டப்பட்டவனாயிருக்கிற பவுலும் சகோதரனாகிய தீமோத்தேயும் எங்களுக்குப் பிரியமுள்ளவனும் உடன் வேலையாளுமாயிருக்கிற பிலேமோனுக்கும்,

பிலே 1:2 பிரியமுள்ள அப்பியாளுக்கும், எங்கள் உடன் போர்ச்சேவகனாகிய அர்க்கிப்புவுக்கும் உம்முடைய வீட்டிலே கூடிவருகிற சபைக்கும் எழுதுகிறதாவது:

பிலே 1:3 நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

"கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டப்பட்டவன்" – எபே 3:1; எபே 4:1; 2தீமோ 1:8

"பிலேமோன்" (Philemon) – இந்த நிருபத்தில் இவனைப் பற்றி கூறப்பட்டிருக்கும் செய்திகளைத் தவிர வேறு விபரம் எதுவும் தெரியவில்லை. இவன் கொலோசே பட்டணத்தில் உள்ள விசுவாசி. இவனுடைய வீட்டில் சபை ஆராதனை நடைபெற்று வந்தது. (பிலே 1:2)

உடன் வேலையாள் (fellowlabourer) - συνεργός - synergos - 4904

பெயரடை - உடன் வேலைசெய்யும் உடன் வேலையாளான, சகாயரான (பிலி 4:3)

"அப்பியாள்" (Apphia) – வரலாற்றின் பிரகாரம், அப்பியாள் என்பவள் பிலேமோனின் மனைவியென்றும், அர்க்கிப்பு (Archippus) அவர்களுடைய குமாரன் என்றும் தெரிய வருகிறது. பிலேமோனின் வீட்டிலே கூடி வருகிற சபைக்கு அர்க்கிப்பு போதகராக இருந்தான் (கொலோ 4:17)

உடன்போர்ச்சேவகன் (fellowsoldier) συστρατιώτης systratiootees - 4961

ஆண்பால் பெயர்ச்சொல் - உடன் சேவகன் (பிலி 2:25; பிலே 1:2)

"நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும்" – பிதாவாகிய தேவனும் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் தனித்தனியாக வெவ்வேறு ஆள்தத்துவம் உடையவர்கள் என்பதை விளக்கும் வாக்கியம்.

II. பிலேமோனின் ஜெபாவும்

பிலே 1:4 கர்த்தராகிய இயேசுவினிடத்திலும் எல்லாப் பரிசுத்தவான்களிடத்திலுமுள்ள உம்முடைய அன்பையும் உம்முடைய விசுவாசத்தையும் நான் கேள்விப்பட்டு,

பிலே 1:5 என் ஜெபங்களில் உம்மை நினைத்து, எப்பொழுதும் என் தேவனுக்கு ஸ்தோத்திரஞ்செய்து,

பிலே 1:6 உங்களிலுள்ள சகல நன்மைகளும் தெரியப்படுகிறதினாலே உம்முடைய விசுவாசத்தின் ஐக்கியம் கிறிஸ்து இயேசுவுக்காகப் பலன்தர வேண்டுமென்று வேண்டுதல் செய்கிறேன்.

பிலே 1:7 சகோதரனே, பரிசுத்தவான்களுடைய உள்ளங்கள் உம்மாலே இளைப்பாறுதலடைந்தபடியால், உம்முடைய அன்பினாலே மிகுந்த சந்தோஷமும் ஆறுதலும் அடைந்திருக்கிறோம்.

பிலேமோனின் குணாதிசயங்கள் (பிலே 1:5-7)

1. கர்த்தராகிய இயேசுவினிடத்தில் அன்பும், விசுவாசமும் வைத்திருந்தார்
2. தன்னுடைய விசுவாசத்தை வெளிப்படுத்தினார்
3. பரிசுத்தவான்களை உபசரித்தார்

பிலேமோன் - தொகுப்புரை

1 அதிகாரம்

அந்நியோந்நியம் (communication) - κοινωνία - koinoonia - 2842

பெண்பால் பெயர்ச்சொல் - அந்நியோந்நியம், ஐக்கியம், பங்கை ஏற்றுக்கொள்தல், பொருள், சகாயம் தர்மம், உடன்படு (fellowship, communion) (2கொரி 13:14)

ஆறுதல் (consolation) - παράκλησις - parakleesis - 3874

பெண்பால் பெயர்ச்சொல் - ஆறுதல் புத்திசொல்லுதல் (அப் 13:15)

III. ஒநேசிமுக்காக பவுலின் மன்றாட்டு

பிலே 1:8 ஆகையால், பவுலாகிய நான் முதிர்வயதுள்ளவனாகவும், இயேசுகிறிஸ்துவினிமித்தம் இப்பொழுது கட்டப்பட்டவனாகவும் இருக்கிறபடியால்,

பிலே 1:9 நீர் செய்யத்தக்கதை உமக்குக் கட்டளையிடும்படிக்குக் கிறிஸ்துவுக்குள் நான் துணியத்தக்கவனாயிருந்தாலும் அப்படிச் செய்யாமல் அன்பினிமித்தம் மன்றாடுகிறேன்

பிலே 1:10 என்னவென்றால், கட்டப்பட்டிருக்கையில் நான் பெற்ற என் மகனாகிய ஒநேசிமுக்காக உம்மை மன்றாடுகிறேன்

பிலே 1:11 முன்னே அவன் உமக்குப் பிரயோஜனமில்லாதவன் இப்பொழுதோ உமக்கும் எனக்கும் பிரயோஜனமுள்ளவன்

பிலே 1:12 அவனை நான் உம்மிடத்திற்கு அனுப்புகிறேன் என் உள்ளம் போலிருக்கிற அவனை நீர் ஏற்றுக் கொள்ளும்,

பிலே 1:13 சுவிசேஷத்தினிமித்தம் கட்டப்பட்டிருக்கிற எனக்கு ஊழியஞ் செய்யும் படி உமக்குப் பதிலாக அவனை என்னிடத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமென்றிருந்தேன்

பிலே 1:14 ஆனாலும் நீர் செய்யும் நன்மையைக் கட்டாயத்தினாலல்ல, மனப்பூர்வமாய்ச் செய்யத்தக்கதாக, நான் உம்முடைய சம்மதியில்லாமல் ஒன்றும் செய்ய எனக்கு மனதில்லை

பிலே 1:15 அவன் என்றென்றைக்கும் உம்முடையவனாயிருக்கும் படிக்கும், இனிமேல் அவன் அடிமையானவனாகவல்ல, அடிமையானவனுக்கு மேலானவனாகவும் பிரியமுள்ள சகோதரனாகவுமிருக்கும் படிக்கும் கொஞ்சக்காலம் உம்மைவிட்டுப் பிரிந்துபோனானாக்கும்.

பிலே 1:16 எனக்கு அவன் பிரியமான சகோதரனானால் உமக்கு சரீரத்தின்படியேயும் கர்த்தருக்குள்ளும் எவ்வளவு பிரியமுள்ளவனாயிருக்க வேண்டும்

பிலே 1:17 ஆதலால், நீர் என்னை உம்மோடே ஐக்கியமானவனென்று எண்ணினால், என்னை ஏற்றுக் கொள்வதுபோல அவனையும் ஏற்றுக் கொள்ளும்.

பிலே 1:18 அவன் உமக்கு யாதொரு அநியாயஞ்செய்ததும், உம்மிடத்தில் கடன்பட்டதும் உண்டானால், அதை என் கணக்கிலே வைத்துக்கொள்ளும்

பிலே 1:19 பவுலாகிய நான் இதை என் சொந்தக்கையாலே எழுதினேன், நானே அதைச் செலுத்தித் தீர்ப்பேன் நீர் உம்மைத்தாமே எனக்குக் கடனாகச் செலுத்த வேண்டுமென்று நான் உமக்குச் சொல்ல வேண்டியதில்லையே

"பவுலாகிய நான் முதிர்வயதுள்ளவன்" - ஸ்தேவான் கல்லெறியுண்டு கொலையுண்ட போது பவுலுக்கு சுமார் 25 வயதாக இருக்கலாம். (அப் 7:58) அவ்வாறாயின் பவுலுக்குத் தற்போது சுமார் 56 வயதாகும். இந்த வசனத்தில் முதிர்வயதுள்ளவன் என்னும் சொல்லுக்கு ஸ்தானிகன் (ambassador) என்று பொருள்கூறலாம். பவுல் இயேசு கிறிஸ்துவின் ஸ்தானிகன்

பிலேமோன் – தொகுப்புரை

1 அதிகாரம்

முதிர்வயதுள்ளவன் (aged) - πρεσβεύτής - presbeutees - 4246

ஆண்பால் பெயர்ச்சொல் - கிழவன் முதிர்வயதுள்ளவன் (an old man) (பிலே 1:9; லூக்கா 1:18; தீத்து 2:2) -

"ஒநேசிமு" (Onesimus) - இவன் பிலேமோனின் அடிமை. தன் எஜமானை விட்டு ஓடிவிட்டான் இப்போது ரோமாபுரியில் பவுலின் ஊழியத்தின் மூலமாக ஒநேசிமு இரட்சிக்கப்பட்டிருக்கிறான் (பிலே 1:10-19 கொலோ 4:9)

"என் உள்ளம் போலிருக்கிற அவனை நீர் ஏற்றுக்கொள்ளும்" - ஒருவர் கிறிஸ்தவராகத்தை ஏற்றுக் கொள்வதினால் அவர் சட்டதிட்டங்களுக்கும் நீதிநியாயங்களுக்கும் அப்பாற்பட்டவர் என்று கூறமுடியாது. தனக்கு உதவியாக ஒநேசிமுவைப் பவுல் வைத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார் ஆயினும் பிலேமோனின் அனுமதியில்லாமல் அவ்வாறு செய்ய பவுல் விரும்பவில்லை பிலே 1:13

"நான் உம்முடைய சம்மதியில்லாமல் ஒன்றும் செய்ய எனக்கு மனதில்லை" பவுல் கேட்டுக் கொண்டால் பிலேமோன் நிச்சயமாகவே ஒநேசிமுவை அவரிடத்தில் தங்கியிருந்து அவருக்கு உதவி செய்ய அனுமதித்திருப்பான் ஆனால் பவுல் அவ்வாறு எந்த விண்ணப்பமும் பிலேமோனிடம் பண்ணவில்லை

"நீர் செய்யும் நன்மையைக் கட்டாயத்தினாலல்ல, மனப்பூர்வமாய்ச் செய்யத்தக்கதாக" பவுல் பிலேமோனைக் கட்டாயப் படுத்தவில்லை. ஒநேசிமுவைக் குறித்து பிலேமோன் சுயாதீனமாக எந்தத் தீர்மானத்தையும் எடுத்துக் கொள்ளுமாறு பவுல் கூறுகிறார்

"அவன் என்றென்றைக்கும் உம்முடையவனாயிருக்கும்படிக்கும், கொஞ்சக் காலம் உம்மைவிட்டுப் பிரிந்துபோனானாக்கும்" - ஒநேசிமு பிலேமோனைவிட்டு அடிமையாகவும் உண்மையில்லாதவனாகவும் பிரிந்துபோனான் இப்பொழுது ஒநேசிமு இரட்சிக்கப்பட்டவன் ஆகையினால் அவன் இனிமேல் பிலேமோனுக்கு உண்மையுள்ள அடிமையாக இருப்பான் அவனை அடிமையாளவனாக ஏற்றுக் கொள்ளாமல், கிறிஸ்துவில் ஒரு சகோதரனாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பவுல் பிலேமோனுக்கு ஆலோசனை கூறுகிறார் (பிலே 1:15-16)

"நீர் என்னை உம்மோடே ஐக்கியமானவனென்று எண்ணினால் என்னை ஏற்றுக்கொள்வதுபோல அவனையும் ஏற்றுக்கொள்ளும்" - பிலேமோன் தன்னை ஒரு நண்பனாக ஏற்றுக் கொண்டால் ஒநேசிமுவையும் ஒரு நண்பனாக ஏற்றுக் கொள்ளுமாறு பவுல் கூறுகிறார் அவன் பட்ட கடனை தானே செலுத்தித் தீர்ப்பதாகவும் கூறுகிறார் (பிலே 1:17)

IV. கர்த்தருக்குள் பவுல், பிலேமோன் ஆகியோரின் ஐக்கியம்

பிலே 1:20 ஆம் சகோதரனே, கர்த்தருக்குள் உம்மாலே எனக்குப் பிரயோஜனமுண்டாகட்டும் கர்த்தருக்குள் என் உள்ளத்தை இளைப்பாறப்பண்ணும்.

பிலே 1:21 நான் சொல்லுகிறதிலும் அதிகமாய்ச் செய்வீரென்று அறிந்து இதற்கு நீர் இணங்குவீரென்று நிச்சயித்து உமக்கு எழுதியிருக்கிறேன்

பிலே 1:22 மேலும் உங்கள் விண்ணப்பங்களினாலே நான் உங்களுக்கு அநுக்கிரகிக்கப் படுவேனென்று நம்பியிருக்கிறபடியால் நான் இருக்கும்படிக்கு ஓரிடத்தை எனக்காக ஆயத்தம்பண்ணும்.

பிலேமோன் – தொகுப்புரை

1 அதிகாரம்

"கர்த்தருக்குள் என் உள்ளத்தை இளைப்பாறுபண்ணும்" - பிலேமோன் ஒநேசிமுவை மன்னித்துவிட்டான் என்னும் செய்தியைக் கேட்கும்போது பவுலின் உள்ளத்தில் சந்தோஷம் உண்டாகும். தான் சொல்லுகிறதிலும் அதிகமாய் பிலேமோன் செய்வான் என்று பவுல் அறிந்திருக்கிறார் (பிலே 1:20-21)

"நான் இருக்கும்படிக்கு ஓரிடத்தை எனக்காக ஆயத்தம்பண்ணும்" - தான் விடுதலை பெறப்போவதைக் குறித்து பவுல் நிச்சயத்தோடு இருக்கிறார். சபைகளை மறுபடியும் சந்திக்கும் வாய்ப்பு தனக்குக் கிடைக்கும் என்பதைப் பவுல் உறுதியாக நம்புகிறார்

V முடிவுரையும் ஆசீர்வாதமும்

பிலே 1:23 கிறிஸ்து இயேசுவினிமித்தம் என்னோடேகூடக் காவலில் வைக்கப்பட்டிருக்கிற எப்பாப்பிராவும்,

பிலே 1:24 என் உடன்வேலையாட்களாகிய மாற்குவும் அரிஸ்தர்க்கும் தேமாவும் லூக்காவும் உமக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்

பிலே 1:25 நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் ஆவியுடனே கூட இருப்பதாக. ஆமென்

"எப்பாப்பிரா" (Epaphras) - (கொலோ 1:7, கொலோ 4:12)

"மாற்கு" (Marcus) - யோவான் என்னப்பட்ட மாற்கு. (John Mark) (அப் 12:12)

"அரிஸ்தர்க்கு" (Aristarchus) - (அப் 19:29, அப் 20:4, அப் 27:2, கொலோ 4:10)

"தேமா" (Demas) - (2தீமோ 4:10)

"லூக்கா" (Lucas) - லூக்கா எழுதின சுவிசேஷத்தையும் அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தையும் எழுதியவர்

எபிரெயர் - முன்னுரை

காலமும் இடமும்

கிபி 68 ஆம் ஆண்டில் பவுல் இந்த நிருபத்தை ரோமாபுரியிலிருந்து எழுதினார் கலாத்தியர் 2 தீமோத்தேயு ஆகிய நிருபங்களோடு பவுல இந்த நிருபத்தையும் அங்கிருந்து எழுதினார்

ஆசிரியர்

இந்நிருபத்தின் ஆசிரியர் பவுல என்று ஒரு சிலரும். பவுலைத் தவிர வேறொருவர் இதை எழுதியிருக்கிறார் என்று வேறுசிலரும் கூறியிருக்கிறார்கள் இந்த நிருபத்தின் ஆசிரியர் பவுல என்று கூறுவதே சிறப்பாக இருக்கும் அதற்கான காரணங்கள

1 இந்த நிருபத்தில காணபபடும சிந்தனைகளும். கருத்துக்களும பவுலுடையவை. மொழிநடையில இந்த நிருபம் மறற நிருபஙகளைவிட மாறுபட்டு இருககிறது. பவுல இந்த நிருபத்தை யூதருககு எழுதின படியினால யூதரைபபோன்று யூத மொழிநடையில இதை எழுதியிருககிறார் பவுலின மறற நிருபஙகள புறஜாதி சபையாருககு எழுதபபட்டவை. மேலும இந்த நிருபத்தை லூககா கிரேகக மொழியில மொழி பெயாத்திருககிறார இதனால இதன மொழிநடையில சில மாறறஙகளிருபபதறகு வாயபபுளளது.

2 பவுல இந்த நிருபத்தை யூதருககு எழுதியிருபபதாக பேதுரு உறுதி பண்ணுகிறார (2 பேதுரு 3:15 16)

3 கிபி 70 ஆம் ஆண்டிலிருநது கிபி 73 ஆம் ஆணடு வரையிலும் நூற்றுக்கும் மேறபட்ட பழஙகால ஆசிரியாகள எபிரெயருக்கு எழுதின நிருபத்தைப பவுல எழுதியதாகவே கூறியிருக்கிறாாகள இவாகள கிரேக்கம். லத்தீன ஆகிய மொழிகளில பல இலக்கியஙகளை எழுதியவாகள

4 எபிரெயருக்கு எழுதின நிருபத்தை பவுல் எழுதியதாக லவோதிக்கேயா சங்கத்தார் (council of Laodicea) கிபி 363 ஆம் ஆணடில் அங்கிகரித்திருக்கிறாாகள இதைத் தொடர்ந்து கிபி 397-இல் கார்த்தேஜ் சங்கத்தாரும் (council of Carthage). கிபி 370-இல் சீரியா சபையாரும் (Syrian churches) எபிரெய நிருப ஆசிரியர் பவுல் என்று அங்கிகரித்திருக்கிறார்கள் இவர்களைத் தவிர ஆதித்திருச்சபையாரும் கிரேக்க திருச்சபையாரும் கிழக்கு தேசத்து திருச்சபையாரும எபிரெய நிருப ஆசிரியர் பவுல் என்று அங்கிகரித்திருக்கிறார்கள்

5. கிபி 500 ஆம் ஆண்டு எழுதபபட்ட அலெக்சந்திரிய சுவடிகளின் (Alexandrian manuscripts) எபிரெய நிருபத்தின் ஆசிரியர் பவுல் என்றே கூறபபட்டிருக்கிறது

6. லத்தீன் திருச்சபையாரில் சிலர் இந்த நிருபத்தின் ஆசிரியராகப பவுலை அங்கிகரிகக வில்லை நிருபத்தின முன்னுரையில பவுலின் பெயர் காணபபடாமல இருபபதே இதற்குக் காரணம். பவுலின் மறற நிருபங்கள அனைத்திலும முன்னுரையில பவுலின பெயர் எழுதபபட்டிருக்கும். இந்த நிருபத்தில பவுலின பெயர் குறிபபிடப படாமல இருபபதறகு இரணடு காரணங்கள் உள்ளன அவையாவன

(1) பவுல இந்த நிருபத்தை எபிரெய பாஷையில எழுதினாா யூதமாாககததாரோ பவுலை அங்கிகரிக்காமல வெறுத்தாாகள பவுல கூறும் எதையும் அவாகள் செவிகொடுக்க கேட்க மறுத்தாாகள் ஆகையினால பவுல இந்த நிருபத்தில தனது பெயரைக் குறிபபிடாமல விட்டிருக்கலாம் என்று ஏசேபியஸ் (Eusebius) என்ற திருச்சபை வரலாற்று ஆசிரியா விளக்குகிறாா பவுல் எபிரெய பாஷையில எழுதிய இந்த நிருபத்தில் லூக்கா கிரேக்கு பாஷையில் மொழிபெயர்த்தாா ஆகையினால இநத நிருபத்தின் மொழிநடையும அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தின மொழிநடையும் ஒன்றுபோல உள்ளன

எபிரெயர் - முன்னுரை

(2) புதிய ஏற்பாட்டின் பழைய கையெழுத்துப் பிரதிகளில் கலாத்தியருக்கு எழுதின நிருபத்தின் பின்பகுதியில் "எபிரெயருக்கு" என்னும் தலைப்பு காணப்படுகிறது. ஆகையினால் எபிரெயர் நிருபம் கலாத்தியர் நிருபத்தின் ஒரு பகுதி என்று ஒருசிலர் கூறுகிறார்கள். அவ்வாறாயின், கலாத்தியர் 1:1 ஆவது வசனத்தில் பவுல் நிருப ஆசிரியராகக் கூறப்பட்டிருப்பது எபிரெய நிருபத்திற்கும் பொருந்தும். கலாத்தியர் நிருபத்தில் பவுல் "என் கையெழுத்தாய் எவ்வளவு எழுதினேன் என்று பாருங்கள்" - "a large letter" என்றும் "தேவனுடைய இஸ்ரவேலர்" "The Israel of God" என்று எழுதியிருக்கிறார். இவை எபிரெயர் நிருபத்திற்கு நல்ல முன்னுரையாக உள்ளது.

7 எபிரெய நிருபத்தில் இந்த நிருபத்தைப் பவுல் எழுதவில்லையென்று எந்தக் கருத்தும் காணப்படவில்லை. இந்த நிருபத்தில் காணப்படும் மையக் கருத்துக்கள் பவுல் இந்த நிருபத்தை எழுதினார் என்பதற்கு ஆதாரமாகவே உள்ளன. அவையாவன

1 கலாத்தியர் நிருபமும் எபிரெயர் நிருபமும் பழைய பிரமாணம் ஒழிக்கப்பட்டதை விரிவாக எடுத்துக் கூறுகிறது.

2 இவ்விரண்டு நிருபங்களிலும் ஆசிரியர் அவர்களை வந்து பார்க்க விரும்புவதைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. (கலா 4:20 எபி 13:19)

(3 புதிய ஏற்பாட்டு நூலாசிரியர்களில் பவுல் மட்டுமே தனக்காக ஜெபிக்குமாறு விசுவாசிகளைக் கேட்டுக் கொள்ளும் வழக்கத்தைக் கொண்டிருந்தார் (எபி 13:18, 2தெச 3:1

4 எபிரெயர் நிருபத்தில் காணப்படும் ஆவிக்குரிய ஆலோசனைகளும் புத்திமதிகளும் பவுலின் மற்ற நிருபங்களில்காணப்படும் ஆவிக்குரிய ஆலோசனைகளுக்கும் புத்திமதிகளுக்கும்ஒத்திருக்கின்றன (எபி 12:3= கலா 6:9, எபி 12:14=ரோமர் 12:18; எபி 13:1-3= எபே 5:2-4; எபி 13:16=பிலி 4:18; எபி 5:12=1கொரி 3:2 எபி 8:1=எபே 1:20; எபி 8:6 எபி 9:15,எபி 12:24; கலா 3:19-20, 1தீமோ 2:5; எபி 10:1=கொலோ 2:17 எபி 10:33=1கொரி 4:9; எபி 13:9= எபே 4:14; எபி 13:10 =1கொரி 9:13, 1கொரி 10:18; எபி 13:20-21= ரோமர் 15:33; ரோமர் 16:20 2கொரி 13:11; பிலி 4:9; 1தெச 5:23, எபி 13:22 =அப் 24:16

(5) கலாத்தியர் நிருபமும், எபிரெயர் நிருபமும் இத்தாலியா தேசத்திலிருந்து எழுதப் பட்டவையாகும்.

(6) புதிய ஏற்பாட்டு நூலாசிரியர்களில் பவுல் மட்டுமே சிறைச்சாலையிலிருந்து நிருபம் எழுதியவர் தன்னுடைய விடுதலையை எதிர்பார்த்தவர் (எபி 13:19,23= பிலி 1:7-8,13,26 பிலி 2:23-24)

(7) பவுலைத் தவிர வேறு யாரும் தீமோத்தேயுவின் பெயரைக் குறிப்பிடவில்லை. பவுல் தன்னுடைய நிருபங்களில் 20 தடவை தீமோத்தேயுவின் பெயரைக் குறிப்பிட்டிருக்கிறார் (எபி 13:23) பவுல் தீமோத்தேயுவைப் பற்றி மற்றொரு இடத்தில் குறிப்பிடும்போது அவனைத் தன்னுடைய சகோதரனாகக் குறிப்பிட்டிருக்கிறார் (2கொரி 1:1 கொலோ 1:1 1தெச 3:2

(8) பவுல் தன்னுடைய நிருபங்களில் எப்படி முடிவுரை எழுதுவாரோ அதுபோன்ற முடிவுரையே எபிரெயர் நிருபத்தில் காணப்படுகின்றது.

மையக்கருத்து

1. இயேசு கிறிஸ்து தேவனாக இருக்கிறார்

2 இயேசு கிறிஸ்து எல்லா மனுஷரையும், தேவதூதரையும்விட மேன்மையானவர்

3 யூதமார்க்கமும், நியாயப்பிரமாணமும் முடிவு பெற்று விட்டது.

4 யூதமார்க்கத்திலிருந்த கிறிஸ்தவர்கள் விசுவாசத்தில் உறுதி பண்ணப் படுகிறார்கள்

5 எல்லா ஜனங்களுக்கும் புதிய உடன்படிக்கையின் உபதேசங்கள் கூறப்பட்டிருக்கிறது.

எபிரெயர் – முன்னுரை

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் – 13

வசனங்கள் – 303

கேள்விகள் – 17

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள் – 27

புதிய தீர்க்கதரிசனங்கள் – 3

வரலாற்றைக் குறிக்கும் வசனங்கள் – 270

பொருளடக்கம்

I. கிறிஸ்து தீர்க்கதரிசிகளைப் பார்க்கிலும் விசேஷித்தவர் – ஒரு காரணம் (1:1-3)

II. கிறிஸ்து தேவதூதரைப் பார்க்கிலும் விசேஷித்தவர்

1 கிறிஸ்துவின் குமாரத்துவமும் சுதந்திரமும் (1:4-7)

2 கிறிஸ்துவின் தெய்வத்துவமும் இராஜரீகமும் அபிஷேகமும் சிருஷ்டிகரும் வல்லமையும் நித்தியமும் (1:8-12)

3 கிறிஸ்து உயர்ந்தவர் (1:13-14)

4 கிறிஸ்துவின் உடன்படிக்கையின் சாட்சி (2:1-4)

5 கிறிஸ்துவின் யுத்தமும் தேவனுக்கு எதிராக கலகம் பண்ணுவோர்மீது இறுதியில் வெற்றியும் (2:5-8)

6 கிறிஸ்துவின் மீட்கும் கிரியை (2:9-13)

7 மரணம், பாதாளம் ஆகியவற்றின்மீது கிறிஸ்துவின் வெற்றியும் அடிமைத்தனத்திற்குள்ளான நீதிமான்களை யாவரையும் கிறிஸ்து விடுதலை பண்ணுவதும் (2:14-15)

8 சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய கிறிஸ்து வல்லவராக இருக்கிறார் (2:16-18)

III. கிறிஸ்து மோசேயைப் பார்க்கிலும் விசேஷித்தவர்

1 கிறிஸ்துவின் பரம அழைப்பு (3:1-2)

2 கிறிஸ்து சிருஷ்டிகர் (3:3-4)

3 கிறிஸ்துவின் தெய்வீக குமாரத்துவம் (3:5-6)

IV. எச்சரிப்புக்களும் புத்திமதிகளும்

1 இஸ்ரவேல் ஏன் விழுந்துபோயிற்று (3:7-9)

2 இஸ்ரவேலின்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு (3:10-11)

3 பரிசுத்த சகோதரருக்கு எச்சரிப்புக்கள் - தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் (3:12-13)

4 கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாக இருப்பதற்கு நிபந்தனை (3:14)

5 இஸ்ரவேலின் தோல்வியை நினைத்துப் பார்த்து கிறிஸ்தவர்கள் எச்சரிப்புடன் இருக்குமாறு ஆலோசனை (3:15-19)

6 இஸ்ரவேலைப் போல பின்வாங்கிப்போய் விடாதவாறு நாம் பயந்திருக்கக்கடவோம் (4:1-2)

7 விசுவாசம் இளைப்பாறுதலைத் தரும் (4:3)

8 தேவனுடைய இளைப்பாறுதலின் ஆதாரங்கள் (4:4)

9 இளைப்பாறுதலின் நிபந்தனை - விசுவாசத்தினால் கிறிஸ்துவில் இளைப்பாறுதலைப் பெற்றுக் கொள்ள வேண்டும் (4:5-7)

V. கிறிஸ்து யோசுவாவைப் பார்க்கிலும் விசேஷித்தவர்

1 கிறிஸ்துவைப் போல யோசுவாவால் உண்மையான இளைப்பாறுதலைத் தரமுடியாது (4:8-10)

2 விசுவாசத்தினால் மாத்திரமே இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்க முடியும் (4:11-13)

எபிரெயர் - முன்னுரை

VI. கிறிஸ்து ஆசாரியரைப் பார்க்கிலும் விசேஷித்தவர்

1 கிறிஸ்து பாவமில்லாத இரட்சிக்கக்கூடிய பிரதான ஆசாரியர் (4:14-16)

2 பூமியின் ஆசாரியர்கள் பாவமுடையவர்கள் - [redacted] இவர்களால் இரட்சிக்க முடியாது (5:1-3)

3 ஆரோனின் ஆசாரிய முறைமையைவிட கிறிஸ்துவின் ஆசாரிய முறைமை மேன்மையானது - தேவன் கிறிஸ்துவை உயர்த்தினார் (5:4-6)

4 கிறிஸ்து பரிபூரணமானவர் மனுஷரை இரட்சிக்கக்கூடியவர் - மற்ற ஆசாரியர்களால் மனுஷரை இரட்சிக்க முடியாது (5:7-10)

VII. எச்சரிப்புக்களும் புத்திமதிகளும்

1 எபிரெய கிறிஸ்தவரின் ஆவிக்குரிய நிலைமை (5:11-14)

2 மறுதலித்துப் போகக்கூடாது என்று கிறிஸ்தவருக்கு எட்டு அம்ச கட்டளை (6:1-3)

3 மறுதலித்துப்போனவர்களின் பழைய ஆசீர்வாதங்கள் (6:4-5)

4 கிறிஸ்தவர்கள் ஏன் மறுதலித்துப் போகக்கூடாது என்பதற்கு காரணம் (6:6)

5 கிறிஸ்தவரும் மறுதலித்துப்போனவரும் - விளக்கம் (6:7-9)

6 அசதியாயிராமல் முடிவு வரையும் நீடிய பொறுமையுடன் இருக்க வேண்டும் (6:10-12)

7 வாக்குத்தத்தங்களின் ஆசீர்வாதங்களை ஆபிரகாம் சுதந்தரித்துக் கொண்ட விதம் (6:13-15)

8 தேவன் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவர்களில் உண்மையுள்ளவராயிருக்கிறார் (6:16-18)

VIII. மெல்கிசேதேக்கு ஆபிரகாம், லேவி ஆகியோரைப் பார்க்கிலும் கிறிஸ்து விசேஷித்தவர்

1 கிறிஸ்து நமது நம்பிக்கையும் முன்னோடியுமானவர் (6:19-20)

2 சாலேமின் இராஜாவும் ஆசாரியனுமான மெல்கிசேதேக்கு (7:1-2)

3 மெல்கிசேதேக்கு தகப்பனும் தாயும் வம்ச வரலாறும் இல்லாதவன் (7:3)

4 மெல்கிசேதேக்கு ஒரு சாதாரண மனுஷன் - கிறிஸ்து தேவனுடைய குமாரன் (7:4)

5 ஆபிரகாம், லேவி ஆகியோரைப் பார்க்கிலும் மெல்கிசேதேக்கு விசேஷித்தவன் (7:5-7)

6. ஆபிரகாமும் லேவியும் மெல்கிசேதேக்கிற்கு தசமபாகம் செலுத்தினார்கள் (7:8-10)

IX. கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் ஆரோனின் ஆசாரியத்துவத்தைப் பார்க்கிலும் விசேஷமானது

1 கிறிஸ்துவின் பிரமாணமும் ஆசாரியத்துவமும் மாறாதவை (7:11-12)

2 தேவனுடைய தெரிந்தெடுப்பு - யூதா கோத்திரம் (7:13-14)

3 கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின்படி ஆசாரியராகாமல் அழியாத ஜீவனுக்குரிய வல்லமையின்படியே ஆசாரியரானார் (7:15-17)

4 கிறிஸ்துவின் விசேஷித்த நம்பிக்கை (7:18-19)

5 கிறிஸ்துவின் விசேஷித்த பிரதிஷ்டை (7:20-21)

6 கிறிஸ்துவின் விசேஷித்த உடன்படிக்கை (7:22)

7 கிறிஸ்து மாறிப்போகாத ஆசாரியத்துவம் உள்ளவர் (7:23-24)

8 கிறிஸ்து முற்றுமுடிய இரட்சிக்க வல்லவர் (7:25)

எபிரெயர் - முன்னுரை

9 கிறிஸ்துவின் விசேஷித்த தன்மையும் சுபாவமும் (7:26)

10 கிறிஸ்துவின் செய்து முடிக்கப்பட்ட மீட்பு (7:27)

11 கிறிஸ்து பரிபூரண குமாரன் (7:28)

12 கிறிஸ்துவின் மகத்துவமான ஸ்தானம் (8:1)

13 கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்தில் கிறிஸ்து ஆசாரிய ஊழியம் செய்கிறார் (8:2-5)

14 விசேஷித்த வாக்குத்தத்தங்களின் பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கைக்கு கிறிஸ்து மத்தியஸ்தராயிருக்கிறார் (8:6)

X. பழைய உடன்படிக்கையைப் பார்க்கிலும் கிறிஸ்துவின் உடன்படிக்கை விசேஷமானது

1 கிறிஸ்துவின் உடன்படிக்கையின் புத்தம் புதிய மேன்மை (8:7-13)

2 பழைய உடன்படிக்கையின் ஆசரிப்புக் கூடாரம் - புதிய உடன்படிக்கையின் கூடாரத்திற்கு ஓர் அடையாளம் (9:1-5)

3 பழைய உடன்படிக்கையின் பிரகாரம் தேவனுடைய சமுகத்தில் எல்லோரும் எப்போதும் பிரவேசிக்க முடியாது - புதிய உடன்படிக்கையின் பிரகாரம் நித்தமும் பிரவேசிக்கலாம் (9:6-7)

4 பழைய உடன்படிக்கையின் காணிக்கைகளும் பலிகளும் ஊழியக்காரரை பூரணப்படுத்தக் கூடாதவைகளாம் (9:8-9)

5 பழைய உடன்படிக்கையின் பலிகள் தற்காலிகமானவை - சரீரத்திற்கேற்ற சடங்குகள் மாத்திரமே (9:10)

6 புதிய உடன்படிக்கையின் பலி நித்திய மீட்பை நமக்கு உண்டுபண்ணுகிறது (9:11-12)

7 பழைய உடன்படிக்கையின் பலிகள் நமது பாவங்களை நீக்காது - புதிய உடன்படிக்கையின் பலியாகிய கிறிஸ்துவினுடைய இரத்தம் நமது மனச்சாட்சியை செத்த கிரியைகளற நிச்சயமாக சுத்திகரிக்கும் (9:13-15)

8 புதிய உடன்படிக்கையை உண்டு பண்ணுவதற்கு கிறிஸ்துவின் மரணம் தேவையானது (9:16-17)

9 பழைய உடன்படிக்கை மிருகங்களின் இரத்தத்தினால் ஏற்பட்டது (9:18-22)

10 புதிய உடன்படிக்கை கிறிஸ்துவின் இரத்தத்தினால் உண்டானது (9:23-24)

11 பழைய உடன்படிக்கையில் பல பலிகள் இருந்தன - புதிய உடன்படிக்கையில் கிறிஸ்து ஒரேதரம் பலியிடப்பட்டார் (9:25-28)

12 நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல் அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறது (10:1-4)

13 கிறிஸ்து பழைய உடன்படிக்கையை அகற்றிப்போட்டார் (10:5-9)

14 பழைய உடன்படிக்கை பெலனற்றது - புதிய உடன்படிக்கை நம்மை நித்திய ஜீவனுக்கு அழைத்துச் செல்லும் வல்லமையுடையது (10:10-18)

XI. எச்சரிப்புகளும் புத்திமதிகளும்

1 ஒவ்வொரு விசுவாசியும் ஆசாரியராயிருக்கிறார் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க வேண்டும் (10:19-23)

2 ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக் கடவோம் (10:24-25)

3 மறுதலித்துப் போனவர்களின்மீது நித்திய ஆக்கினைத்தீர்ப்பு வரும் (10:26-31)

4 பொறுமையுடன் போராட்டத்தைச் சகித்து விசுவாசத்தில் தொடர்ந்து ஜீவிக்க வேண்டும் (10:32-37)

5 பின்வாங்கிப்போவதற்கும் கெட்டுப் போவதற்கும் எதிரான எச்சரிப்பு (10:38-39)

எபிரெயர் - முன்னுரை

XII. பழைய ஏற்பாட்டு விசுவாச வீரர்களைப் பார்க்கிலும் கிறிஸ்து விசேஷித்தவர்

1 விசுவாசம் என்றால் என்ன? (11:1-2)

2 தேவனுடைய சிருஷ்டிக்கும் விசுவாசம் (11:3)

3 ஆபேல் - பாவநிவாரண பலியும் காணிக்கைகளும் (11:4)

4 ஏனோக்கு - எடுத்துக் கொள்ளப்படும் விசுவாசம் (11:5)

5 விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம் (11:6)

6 நோவா - உண்டுபண்ணும் விசுவாசம் (11:7)

7 ஆபிரகாம் - கீழ்ப்படியும் விசுவாசம் (11:8-10)

8 சாராள் - ஜீவனைக் கொடுக்கும் விசுவாசம் (11:11-12)

9 ஆபேலிலிருந்து ஆபிரகாம், சாராள் வரையிலும் - பொறுமையும் நம்பிக்கையுமுள்ள விசுவாசம் (11:13-16)

10 ஆபிரகாம் - சோதிக்கப்பட்ட விசுவாசம் (11:17-19)

11 ஈசாக்கு - வருங்காரியங்களைக் குறித்த விசுவாசம் (11:20)

12 யாக்கோபு - தீர்க்கதரிசன விசுவாசம் (11:21)

13 யோசேப்பு - கட்டளைக் கொடுக்கும் விசுவாசம் (11:22)

14 அம்ராம், யோகெபேத் - பயமில்லாத விசுவாசம் (11:23)

15 மோசே - தியாகமுள்ள பாடுகளை அனுபவித்து நீடிய பொறுமையோடு இருக்கும் விசுவாசம் (11:24-27)

16 மோசேயும் இஸ்ரவேலும் பாதுகாக்கும் விசுவாசம் (11:28-29)

17 யோசுவாவும் இஸ்ரவேலும் - வெற்றி பெறும் விசுவாசம் (11:30)

18 ராகாப் - விடுதலை பண்ணும் விசுவாசம் (11:31)

19 விசுவாசத்தினாலே பழைய ஏற்பாட்டு வீரர்கள் செய்த காரியங்கள் (11:32-38)

20 எல்லா பரிசுத்தவான்களும் பூரணராக்கப் படவேண்டும் (11:39-40)

21 கிறிஸ்து நமது விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிறார் (12:1-4)

XIII. எச்சரிப்புக்களும் புத்திமதிகளும்

1 தகப்பனுடைய சிட்சை - கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணக் கூடாது (12:5-6)

2 தகப்பன் சிட்சிக்கும்போது நாம் புத்திரர் என்பது உறுதியாயிருக்கிறது (12:7-8)

3 தேவனுக்கு கீழ்ப்படிவதின் ஞானம் (12:9)

4 தற்காலத்திலும் பிற்காலத்திலும் சிட்சையினால் ஏற்படும் விளைவு (12:10-11)

5. தேவனை விட்டு விலகுவதால் ஏற்படும் மாற்றங்கள் (12:12-15)

6. ஏசாவைக் குறித்த எச்சரிப்பு (12:16-17)

7 விசுவாசிகள் சீனாய்மலைக்கும் அடிமைப் பிரமாணத்திற்கும் வந்து சேரவில்லை (12:18-21)

8 விசுவாசிகள் தேவனுடைய கிருபையினிடத்தில் வந்து சேர்ந்திருக்கிறார்கள் (12:22-24)

9 கலகம் பண்ணுவதற்கெதிரான எச்சரிப்பு (12:25)

10 வானங்களும் பூமியும் வருங்காலத்தில் புதுப்பிக்கப்படும் (12:26-29)

பரிசுத்த வேதாகமம் - தொகுப்புரை

THE HOLY BIBLE - EDITORIAL COLLECTION

எபிரெயர் - முன்னுரை

11. கிறிஸ்தவ ஜீவியத்தைக் குறித்து எழு கட்டளைகள் (13:1-6)

12. ஊழியக்காரர்களை மதிக்க வேண்டும் (13:7)

13. இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் (13:8)

14. கள்ள உபதேசங்களுக்கு எதிரான எச்சரிப்பு (13:9)

15. இரண்டு பலிபீடங்கள் (13:10-13)

16. நமது வருங்கால வீடு (13:14)

17. விசுவாசியின் ஸ்தோத்திரபலி (13:15-16)

18. ஊழியக்காரர்களுக்குக் கீழ்ப்படியுங்கள் (13:17)

19. ஜெபத்திற்காக வேண்டுதல்கள் (13:18-19)

20. அப்போஸ்தல ஆசீர்வாதம் (13:20-21)

21. ஆலோசனையும் ஆசீர்வாதமும் (13:22-25)

1 அதிகாரம்

I. கிறிஸ்து தீர்க்கதரிசிகளைப் பார்க்கிலும் விசேஷித்தவர் - எட்டு காரணம்

எபி 1:1 பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும் தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன்

எபி 1:2 இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்.

எபி 1:3 இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்தார்.

"தேவன்" பிதாவாகிய தேவன் (1கொரி 8:6, 2கொரி 11:3; மத் 28:19, 2கொரி 13:14, எபே 4:4-6; 1யோவான் 5:7)

"பங்குபங்காகவும் வகைவகையாகவும்" பல வழிகளில் பல பகுதிகளாக (ஏசா 28:10) இந்தப் பங்குகள் எல்லாவற்றிலிருந்து ஒரு முழுமையான சத்தியத்தை நாம் பெற்றுக் கொள்கிறோம். பலவேறு தொனிகள் சேர்ந்து ஒரு இசையாக இசைப்பது போன்று இது உள்ளது. மனுஷனைக் குறித்து தேவன் ஒரே ஒரு திட்டமே வைத்திருக்கிறார். இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்றும் உலகத்தின் இரட்சகர் என்றும் எல்லாத் தீர்க்கதரிசிகளும் பூரணமாகவும் ஒற்றுமையாகவும் சாட்சி பகருகிறார்கள் (அப் 10:43)

பூர்வகாலங்களில் (in time past) πάλαι - palai - 3819

விளைவுடை - அப்பொழுதே, அதற்குள்ளே (of old) (மத் 11:21 மாற்கு 15:44 லூக்கா 10:13; எபி 1:1, 2பேதுரு 1:9, யூதா 1:4)

மூலமாய் (by) - ἐν - en - 1722

முன் இடைச்சொல் - ஆல், இல், உடன், மூலமாய் - தீர்க்கதரிசிகள் மூலமாய் பரிசுத்த ஆவியானவர் தீர்க்கதரிசிகளிடத்தில் வாசம் பண்ணி அவர்கள் மூலமாகப் பேசுகிறார். இன்றைய தினம் மனுஷரிடத்திலும் ஆவியானவர் அதுபோலவே வாசம்பண்ணுகிறார் (லூக்கா 22:3) பழைய ஏற்பாட்டுக் காலத்திலும் மனுஷர்கள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றிருந்தார்கள்

கிறிஸ்து தீர்க்கதரிசிகளைவிட மேன்மையானவர்

1. தீர்க்கதரிசிகளைச் சிருஷ்டித்தவர் (Creator of prophets) எபி 1:3
2. தீர்க்கதரிசிகளின் கர்த்தா (Lord and Master of prophets) (எபி 1:1-2; மத் 22:41-46, 1பேதுரு 1:10-13)
3. தேவனுடைய ஒரேபேறான குமாரன் (Only begotten Son of God) (எபி 1:1-3; யோவான் 1:18 யோவான் 3:16-20)
4. மாம்சத்தில் வெளிப்பட்ட தேவன் (God manifest in flesh) (யோவான் 1:14
5. பாவமில்லாதவர் (Sinless) (1பேதுரு 2:21-22)
6. தேவனுடைய ஆவியை அளவில்லாமல் பெற்றிருக்கிறவர் (Had greater anointing) (யோவான் 3:34

1 அதிகாரம்

7 தீர்க்கதரிசிகள் எழுதியவற்றின் நிறைவேற்றம். (Fulfillment of their writings) லூக்கா 24:25,44-45 1பேதுரு 1:10-13

8 சர்வத்திற்கும் சுதந்தரவாளி. (Heir of all things) (எபி 1:2)

9 இவரைக் கொண்டு உலகங்கள் உண்டாக்கப்பட்டது. (Planner of the ages) (எபி 1:2

10 தேவனுடைய மகிமையின் பிரகாசம். (Brightness of God's glory) எபி 1:3

11 தேவனுடைய தன்மையின் சொரூபம். (Express image of God's person) (எபி 1:3; பிலி 2:5-11)

12 சர்வத்தையும் தாங்குகிறவர் (Upholder of all things) (எபி 1:3)

13 தேவனுடைய பரிபூரணமான பலி. (God's perfect sacrifice) (எபி 1:3,9 எபி 9:11-28 எபி 10:1-18)

14 தீர்க்கதரிசிகளின் இரட்சகர் (Savior of prophets) (எபி 1:3; எபி 7:25 1பேதுரு 1:10-13)

15 தீர்க்கதரிசிகளை விட உயர்த்தப்பட்டவர் (Exalted higher than prophets) (எபி 1:3; 1பேதுரு 3:22)

மூலமாய் (by) ἐν - en - 1722

முன் இடைச்சொல் ஆல் இல் உடன், மூலமாய் இந்த வசனத்தில் "குமாரன் மூலமாய்" என்று வாசிக்கிறோம். "அவர் மூலமாய்" என்று பிரதி பெயர்ச்சொல் இங்கு பயன்படுத்தப்படவில்லை. இயேசு கிறிஸ்து தேவனுடைய ஒரேபேறான குமாரன் என்பதை இந்த வாக்கியம் உறுதிபண்ணுகிறது. (யோவான் 1:14,18; யோவான் 3:16,18) பழைய ஏற்பாட்டில் தேவன் பலர் மூலமாகப் பல வழிகளில் மனுஷரிடத்தில் பேசினார் புதிய ஏற்பாட்டிலோ தமது ஒரேபேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்து மூலமாகவே மனுஷரிடம் பேசுவதைத் தேவன் தெரிந்தெடுத்தார் குமாரன் நியாயப் பிரமாணத்தையும், தீர்க்க தரிசனங்களையும் நிறைவேற்றி புதிய உடன்படிக்கையை உண்டு பண்ணியிருக்கிறார் (மத் 26:28 அப 1:2)

கிறிஸ்துவைப் பற்றிய சத்தியங்கள்

1 தேவன் கிறிஸ்து மூலமாய் நமக்கு திருவுளம் பற்றினார் (பேசினார் (எபி 1:2)

2 சர்வத்திற்கும் சுதந்தரவாளி. (எபி 1:2

3 கிறிஸ்துவைக் கொண்டு உலகங்களை உண்டாக்கினார் எபி 1:2

4 தேவனுடைய மகிமையின் பிரகாசம் (எபி 1:3)

5 தேவனுடைய தன்மையின் சொரூபம் (எபி 1:3)

6 சர்வத்தையும் தாங்குகிறவர் (எபி 1:3

7 உலகத்தின் இரட்சகர் பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணினவர் (எபி 1:3)

8 பரமேறி உயர்த்தப்பட்டிருக்கிறவர் (எபி 1:3)

நியமித்தல் (appointed) - τίθημι - titheemi - 5087

வினைச்சொல் - வை, அமர், நியமி. படியிடு, போடு, நிர்ணயம் பண்ணு, அடைந்துகொள், கொடு, ஏற்படுத்து, ஸ்தாபி, ஆலோசனை சொல், படியிடு appoint (எபி 1:2; மத் 24:51, லூக்கா 12:46; 2தீமோ 1:11 1பேதுரு 2:8); ordain (யோவான் 15:16; 1தீமோ 2:7); set forth யோவான் 2:10)

1 அதிகாரம்

"சர்வத்துக்கும் சுதந்தரவாளி" - (ரோமர் 8:17-18; 1பேதுரு 1:4; அப் 26:18)

"இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்" - உலகங்கள் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தைக் குறிக்கும். இயேசு கிறிஸ்து உலகங்களை அல்லது காலங்களைத் திட்டமிடுவதில் தேவனுடைய பிரதிநிதியாக இருந்தார். மனுஷனைக் குறித்த தேவனுடைய திட்டத்தைச் செயல்படுத்தினார். இந்தப் பொருளில் பார்க்கும்போது இயேசு கிறிஸ்து நித்திய பிதாவாக இருக்கிறார் (ஏசா 9:6). காலங்களைத் திட்டமிடுவதோடு இவர் எல்லா சிருஷ்டிப்புக்களையும் திட்டமிட்டார் (கொலோ 1:15-18; யோவான் 1:3; எபே 3:9)

உலகம் (world) - αἰών - aioon - 165

ஆண்பால் பெயர்ச்சொல் - காலம், உலகம், பிரபஞ்சம், அநாதி, சதாகாலங்கள் **(age—a period of time whether long, short) "world"** (எபி 1:2; மத் 12:32; மத் 13:39) **"age"** (எபே 2:7; கொலோ 1:26); **"course"** (எபே 2:2)

(அ) என்றென்றைக்கும் அதாவது கடந்த காலத்தில் - யோவான் 6:5; 8:32

(ஆ) ஒரு குறிப்பிட்ட காலம் அதாவது இம்மை அல்லது மறுமை (மத் 12:32; மாற் 10:30)

பிரகாசம் (brightness) - **ἀπαύγασμα - apaugasma** - 541

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பிரகாசம் (reflection)

மகிமை (glory) - **δόξα - doxa** - 1391

பெண்பால் பெயர்ச்சொல் - மகிமை, மகத்துவம், துதி, கனம் **"glory"** (எபி 1:3; எபி 2:7,9,10; எபி 3:3; எபி 9:5; எபி 13:21); **"glorious"** (ரோமர் 8:21; 2கொரி 4:4; பிலி 3:21; கொலோ 1:11); **"praise"** (யோவான் 9:24; யோவான் 12:43; 1பேதுரு 4:11); **"honor"** (யோவான் 5:41,44; யோவான் 8:54; 2கொரி 6:8; வெளி 19:7); **"worship"** (லூக்கா 14:10); **"dignity"** (2பேதுரு 2:10; யூதா 1:8)

சொரூபம் (express image) - **χαρακτήρ - charakteer** - 5481

ஆண்பால் பெயர்ச்சொல் - சொரூபம் **(exact expression, impression as when metal is pressed into a die, or as a seal upon wax)**

தன்மை (confidence) - **ὑπόστασις - hypostasis** - 5287

பெண்பால் பெயர்ச்சொல் - நிச்சயம், தைரியம், தன்மை, நம்பிக்கை **person** (எபி 1:3); **substance** (எபி 11:1); **confidence** (2கொரி 11:17; எபி 3:14); **confident** (2கொரி 9:4). சரீரம் ஆத்துமா ஆகியவற்றில் காணப்படும் தெய்வீகத்தின் அம்சங்களைக் குறிப்பிடும்.

"தம்முடைய வல்லமையுள்ள வசனம்" - சகலமும் அவருடைய வல்லமையுள்ள வசனத்தினால் நிலைத்திருக்கிறது. சகலமும் தாங்கப்படுகிறது.

"தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணினார்" இயேசு கிறிஸ்துவின் பாவ நிவாரண பலியின் மூலமாக மட்டுமே மனுக்குலத்திற்கு பாவ மன்னிப்பு ஏற்பட்டிருக்கிறது. தண்ணீர் ஞானஸ்நானத்தினாலோ கர்த்தருடைய பந்தியில் பங்குபெறுவதினாலோ எந்தவிதமான மார்க்கச்சடங்குகளை ஆசரிப்பதினாலோ யாரும் இரட்சிக்கப்படுவதில்லை (மத் 26:28; ரோமர் 3:24,25; ரோமர் 5:1-11; கொலோ 1:14,22; எபி 9:22; 1யோவான் 1:7-9; 1பேதுரு 1:18-23; 1பேதுரு 2:24; வெளி 1:5; வெளி 5:8-10)

1 அதிகாரம்

"உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்தார்" - (மத் 26:64; மாற்கு 16:19; அப் 2:33-34; அப் 7:56; ரோமர் 8:34; எபே 1:20; கொலோ 3:1; எபி 1:3,13; எபி 8:1; எபி 12:2; 1 பேதுரு 3:22)

II. கிறிஸ்து தேவதூதரைப் பார்க்கிலும் விசேஷித்தவர் - (எபி 1:4-2:18)

1. கிறிஸ்துவின் குமாரத்துவமும் சுதந்திரமும் - (லூக் 1:35; யோவான் 3:16; 5:17-47)

எபி 1:4 இவர் தேவதூதரைப் பார்க்கிலும் எவ்வளவு விசேஷித்த நாமத்தைச் சுதந்தரித்துக் கொண்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர்களிலும் மேன்மையுள்ளவரானார்.

எபி 1:5 எப்படியெனில், நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்றும்; நான் அவருக்குப் பிதாவாயிருப்பேன், அவர் எனக்குக் குமாரனாயிருப்பார் என்றும், அவர் தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் சொன்னதுண்டா?

எபி 1:6 மேலும், தமது முதற்பேறானவரை உலகத்தில் பிரவேசிக்கச்செய்தபோது: தேவதூதர் யாவரும் அவரைத் தொழுதுகொள்ளக்கடவர்கள் என்றார்.

எபி 1:7 தேவதூதரைக்குறித்தோ: தம்முடைய தூதர்களைக் காற்றுகளாகவும், தம்முடைய ஊழியக்காரரை அக்கினி ஜுவாலைகளாகவும் செய்கிறார் என்று சொல்லியிருக்கிறது.

மேன்மையுள்ளவர் (better) κρείττων kreittoon 2909

பெரிய, நலமான, நன்மைக்கேதுவான, நன்மையான, முக்கியமான, விசேஷித்த, மேன்மையான (stronger, mightier, greater, more excellent)

கிறிஸ்து இவர்களைவிட மேன்மையுள்ளவர்

1 தீர்க்கதரிசிகள் (The prophets) (எபி 1:1-3)

2 தூதர்கள் (Angels) (எபி 1:4-2:18)

3 மோசே (Moses) (எபி 3:1-18)

4 யோசுவா (Joshua) (எபி 4:1-13)

5 பிரதான ஆசாரியர் (The High Priest) (எபி 4:14-6:12)

6. மெல்கிசேதேக்கு (Melchizedek) (எபி 7:1-10)

7 ஆபிரகாம் (Abraham) (எபி 6:13-7:10)

8 ஆரோனும் உலகத்திலுள்ள ஆசாரியரும் (Aaron and other earthly priests) (எபி 7:11-8:6)

9 பழைய உடன்படிக்கையின் பலி (The old covenant sacrifices) (எபி 8:7-10:39)

10 பழைய உடன்படிக்கையில் விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றவர்கள் (The old covenant faith-worthies) (எபி 11:1-12:2)

11 பெற்றோரும், மற்றோரும் (Parents and others) (எபி 12:3-13:25)

"தேவதூதர்" - யூதமார்க்கத்தார் தேவதூதர்களை மேன்மையாக எண்ணினார்கள். தேவனோடு அவற்றைத் தொடர்புபடுத்தினார்கள்.
யூதமார்க்கத்தாருக்கு தேவதூதர்களைக் குறித்த சத்தியத்தைப் பவுல் தெரியப்படுத்த விரும்புகிறார். இயேசு கிறிஸ்து தேவன். தேவதூதர் யாவரும் இயேசு கிறிஸ்துவைத் தொழுதுகொள்ளுகிறார்கள் என்று பவுல் உபதேசம் பண்ணுகிறார் (எபி 1:6)

எபிரெயர் - தொகுப்புரை

1 அதிகாரம்

கிறிஸ்து தேவதூதரைப் பார்க்கிலும் விசேஷித்தவர்

1 தேவதூதரைப் பார்க்கிலும் விசேஷித்த நாமத்தைச் சுதந்தரித்துக் கொண்டார் எபி 1:4

2 தேவனுடைய ஒரேபேறான குமாரன் எபி 1:5

3 தேவதூதர் யாவரும் கிறிஸ்துவைத் தொழுதுகொள்கிறார்கள் (எபி 1:6)

4 தேவதூதர்களைச் சிருஷ்டித்தவர் எபி 1:7; கொலோ 1:15-18)

5 திரித்துவத்தில அங்கம் வகிக்கிறவர் எபி 1:8 யோவான் 1:1

6 நித்தியமானவர் - சிருஷ்டிக்கப்பட்டவர் அல்ல (எபி 1:8

7 நித்திய ராஜா (எபி 1:8)

8 தேவன் கிறிஸ்துவை மட்டுமே ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார் எபி 1:9)

9 உலகங்களைச் சிருஷ்டித்தவர் எபி 1:10

10 சகல சிருஷ்டிகளையும் புதுப்பிக்கிறவர் (எபி 1:11 12

11 கிறிஸ்து மட்டுமே உயர்த்தப்பட்டவர் எபி 1:13

12 தேவதூதர்களை இயக்குகிறவர் (எபி 1:14

13 தேவதூதர் மூலமாய் சொல்லப்பட்ட வசனத்திற்கு விரோதமான செய்கைக்குத் தண்டனை கிடைக்கும் அந்தத் தண்டனையைவிட இயேசு கிறிஸ்து மூலமாய் சொல்லப்பட்ட வசனத்திற்கு விரோதமான செய்கைக்கு அதிக தண்டனை கிடைக்கும். (எபி 2:1-3)

14 இயேசு கிறிஸ்துவின் வார்த்தை அதிகமாக உறுதிப்படுத்தப் பட்டிருக்கிறது (எபி 2:3-4

15 தேவதூதரைவிட கிறிஸ்து அதிகமாக வெற்றி சிறந்தவர் (எபி 2:5,8

16 தேவதூதரைவிட அதிக அதிகாரம் உள்ளவர் (எபி 2:6-7)

17 தேவதூதரைவிட சிறியவராக்கப் பட்டிருந்தவர் (எபி 2:9)

18 மகிமையினாலும், கனத்தினாலும் முடிசூட்டப்பட்டவர் (எபி 2:9)

19 தேவதூதரைவிட அதிக அன்புள்ளவர் (எபி 2:9)

20 சகலமும் கிறிஸ்துவிற்காக உண்டாக்கப் பட்டது. (எபி 2:10

21 சகலத்தையும் உண்டாக்கினார் (எபி 1:10)

22 மனுஷரை இரட்சிக்கிறவர் (எபி 2:10)

23 உபத்திரவங்களினாலே பூரணப்படுத்தப் பட்டவர் (எபி 1:10)

24 மனுஷரைப் பரிசுத்தஞ்செய்கிறவர் (எபி 1:11)

25 மனுஷருக்குச் சகோதரரானவர் (எபி 1:11 13)

26 தேவனுடைய நாமத்தை மனுஷருக்கு அறிவிக்கிறவர் (எபி 1:12)

27 சபையின் நடுவில் தேவனுடைய துதியைப் பாடுகிறவர் (எபி 1:12)

28 தேவனிடத்தில் பூரண நம்பிக்கையாய் இருக்கிறவர் (எபி 1:13)

29 தேவனுக்காகப் பரிசுத்தவான்களைச் சுதந்தரராகப் பெற்றிருக்கிறவர் (எபி 1:13)

30 மானிடத்தன்மையில் பங்குள்ளவர் (எபி 1:14-18)

31 மரணத்தை அழிப்பதற்காக மரித்தவர் (எபி 1:14)

எபிரெயர் - தொகுப்புரை

1 அதிகாரம்

32 மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழித்தவர் (எபி 1:14 யோவான் 3:8)

33 பாதாளத்திலிருந்து ஜனங்களை விடுதலை பண்ணியவர் (எபி 1:15 எபே 4:8-10; மத் 12:40; சங் 16:10)

34 மனுஷனை மீட்பதற்காக மனுஷருக்கு ஒப்பானவர் (எபி 1:17)

35 சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்வதற்காக தாமே சோதிக்கப்பட்டு சோதனையை வென்றவர் (எபி 1:18)

இயேசு கிறிஸ்து தமது விசேஷித்த நாமத்தைச் சுதந்தரித்துக் கொண்ட வழிகள்

1 பிறப்பின் மூலமாக (மத் 1:21)

2 சுதந்தரத்தின் மூலமாக (எபி 1:4)

3 வெற்றிகளின் மூலமாக (பிலி 2:5-11)

எபிரெயர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 1

"நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன்" (எபி 1:5; சங் 2:7) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறியுள்ளது.

எபிரெயர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 2

"நான் அவருக்குப் பிதாவாயிருப்பேன் அவர் எனக்குக் குமாரனாயிருப்பார்" (எபி 1:5, 2சாமு 7:14) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறியுள்ளது.

எபிரெயர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 3

"தேவதூதர் யாவரும் அவரைத் தொழுதுகொள்ளக்கடவர்கள்" (எபி 1:6 உபா 32:43) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறியுள்ளது. செப்துவஜிந்த் பதிப்பிலுள்ள உபா 32:43 ஆவது வசனம் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது "let all the angels of God worship him."

"தம்முடைய தூதர்களைக் காற்றுகளாகவும் தம்முடைய ஊழியக்காரரை அக்கினி ஜுவாலைகளாகவும் செய்கிறார்" - சங் 104:4 ஆவது வசனம் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது

2. கிறிஸ்துவின் தெய்வத்துவமும், இராஜரீகமும், அபாரவமும், சிருஷ்டிக்கும் வல்லமையும், நித்தியமும் - (சங் 45:6-7 ஏசா 9:6-7; யோவான் 1:1-3 கொலோ 1:16-18)

எபி 1:8 குமாரனை நோக்கி: தேவனே உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்கும் உள்ளது உம்முடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது.

எபி 1:9 நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர் ஆதலால், தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார் என்றும்,

எபி 1:10 கர்த்தாவே, நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர், வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியைகளாயிருக்கிறது.

எபி 1:11 அவைகள் அழிந்துபோம், நீரோ நிலைத்திருப்பீர் அவைகளெல்லாம் வஸ்திரம்போலப் பழைமையாய்ப்போம்

1 அதிகாரம்

எபி 1:12 ஒரு சால்வையைப்போல அவைகளைச் சுருட்டுவீர் அப்பொழுது மாறிப்போம், நீரோ மாறாதவராயிருக்கிறீர், உம்முடைய ஆண்டுகள் முடிந்துபோவதில்லை என்றும் சொல்லியிருக்கிறது.

எபிரெயர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 4

"தேவனே உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது. உம்முடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது" (எபி 1:8-9; சங் 45:6-7) இந்தத் தீர்க்கதரிசனம் இன்றும் நிறைவேறவில்லை

"செங்கோல்" (sceptre) - அரச அதிகாரம் ஆகியவற்றிற்கு அடையாளம். (சங் 2:9; வெளி 2:27

"நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர்" - நியாயமாக ஆளுகை செய்யும் நீதிமானிடம் காணப்பட வேண்டிய குணம்

"உம்முடைய தேவன் உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம்பண்ணினார்" குமாரனைக் குறித்து தீர்க்கதரிசி கூறிய வாக்கியம் பிதாவும், குமாரனும் இந்த வசனத்தில் தேவனாகக் கூறப்பட்டிருக்கிறார்கள் (எபி 1:8-9

கிறிஸ்துவின் ஊழியங்கள்

இயேசு கிறிஸ்து தீர்க்கதரிசி, ஆசாரியன் ராஜா ஆகிய மூன்று ஊழியங்களுக்கும் அபிஷேகம் பண்ணப்பட்டார் வேறு யாரும் இவ்வாறு மூன்று ஊழியங்களுக்கும் அபிஷேகம் பண்ணப்படவில்லை ஒருசிலர் தீர்க்கதரிசிகளாக, ஒருசிலர் ஆசாரியர்களாக, ஒருசிலர் ராஜாக்களாக அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறார்கள் ஆனால் இயேசு கிறிஸ்துவோ இம்மூன்று ஊழியங்களுக்கும் அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறார் இயேசு கிறிஸ்துவின் அபிஷேக விவரம்

1. மனுக்குலத்தார் அனைவருக்கும் இயேசு கிறிஸ்து தீர்க்கதரிசியாக இருக்கிறார் (எபி 1:1-2

2. எல்லா இனத்தாருக்கும் இயேசு கிறிஸ்து பிரதான ஆசாரியராக இருக்கிறார் (எபி 3:1 எபி 4:14-16 எபி 5:6; எபி 6:20; எபி 7:11-17

3. எல்லா தேசங்களுக்கும் இயேசு கிறிஸ்து ராஜாவாக இருக்கிறார் (தானி 7:13-14 ஏசா 9:6-7 சக 14:9 லூக்கா 1:32-33 மத் 25:31-46 வெளி 11:15 வெளி 22:4-5

எபிரெயர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 5

"கர்த்தாவே நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர் வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியைகளாயிருக்கிறது ...." (எபி 1:10-12 சங் 102:25-27) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை ஆயிரம் வருஷ அரசாட்சியின் இறுதியில் இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும் வானமும் பூமியும் அப்போது புதுப்பிக்கப்படும் (எபி 1:10-12; எபி 12:25-28, ரோமர் 8:21-25 2பேதுரு 3:10-13)

"பூமியை அஸ்திபாரப்படுத்தினீர்" (மத் 13:35)

கர்த்தருடைய கரத்தின் கிரியைகள்

1. பூமி (சங் 8:3,6; சங் 90:2; சங் 95:5

2. வானங்கள் (சங் 8:3 சங் 19:1 சங் 102:25)

3. சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள் ஆகியவை (சங் 8:3; ஏசா 40:26, ஏசா 45:12; ஏசா 48:13, எபி 1:10

4. ஜீவனுள்ள சிருஷ்டிகள் (ஆதி 1:20-27 ஆதி 2:7-25; யோபு 26:13, ரோமர் 9:20; 1தீமோ 2:13

5. சகலமும் (நீதி 26:10)

அழிந்துபோதல் (perish) - ἀπόλλυμι apollymi 622

1 அதிகாரம்

வினைச்சொல் - கொலை செய், அழி கெடு, கொல், சங்கரி (mar, ruin, never annihilation) (மத் 10:28) பூமி நித்தியமானது (பிர 1:4 சங் 104:5) இந்த வசனத்தில அழிந்துபோகும் என்பது அது வஸ்திரம்போல பழைமையாய்ப் போகும் என்று பொருள்படும் (எபி 1:13; லூக்கா 12:33)

மாறுதல் (changed) - ἀλλάσσω - allassoo - 236

வினைச்சொல் - மாற்று மறுரூபமாக்கப் படு, மாறிப்போ வேறுவகைப்படுத்து (to make other than it is; to alter; change, as in note, above)

2. கிறிஸ்து உயர்த்தவர் - அப் 2:33-36; பிலி 2:5-11; எபே 1:21 பேதுரு 3:22

எபி 1:13 மேலும், நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும் வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில உட்காரும் என்று தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் அவர் சொன்னதுண்டா?

எபி 1:14 இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களின்நிமித்தமாக ஊழியஞ் செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவி களாயிருக்கிறார்களல்லவா?

எபிரெயர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 6

"நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப்போடும் வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில உட்காரும்" (எபி 1:13; சங் 110:1) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"அனுப்பப்படும் பணிவிடை ஆவிகள்" - இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களுக்கு ஊழியம் செய்யும்படிக்கு தூதர்கள் அனுப்பப்படுகிறார்கள் இவர்களுக்குப் பணிவிடை ஆவிகள் என்று பெயர் அப்போஸ்தலர்கள் தேவனுடைய சுவிசேஷ செய்தியை அறிவித்து ஜனங்களுக்கு ஊழியம் செய்ய அனுப்பப்பட்டவர்கள் அதுபோலவே இந்தத் தூதர்கள் இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களுக்கு ஊழியம் செய்வதற்காக அனுப்பப்பட்டவர்கள் (மத் 10:5,16; மாற்கு 3:14; மாற்கு 6:7) ஒரு குறிப்பிட்ட ஊழியத்திற்காக அப்போஸ்தலர்கள் அனுப்ப படுகிறார்கள் அப்போஸ்தலர்கள் தங்களுடைய அப்போஸ்தல அழைப்பைக் காத்துக் கொள்ள வேண்டும். நிரந்தர அப்போஸ்தல அழைப்பு யாருக்கும் கொடுக்கப்படவில்லை மத்தேயு 7 ஆவது அதிகாரத்தில சீஷர்கள் ஊழியத்தில தோல்வியடைந்ததற்கு அவர்கள் தங்களுடைய அழைப்பைத் தவறாகப் புரிந்து கொண்டதே காரணமாகும் பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின்பு விசுவாசிகளுக்கு வல்லமை அருளப்பட்டிருக்கிறது. (அப் 1:8)

அனுப்பு (send) - ἀποστέλλω - apostelloo - 649

வினைச்சொல் - அனுப்பு, அனுப்பிவிடு, துரத்திவிடு (to send forth as a messenger with a commission, the sender remaining behind)

சுதந்தரிக்கப்போகிறவர் (heirs) κληρονομέω kleeronomeoo - 2816

வினைச்சொல் - சுதந்தரித்துக்கொள், சுதந்தரி, சுதந்தரவாளியாயிரு heirs (எபி 1:14; கலா 4:30); obtain by inheritance (எபி 1:4 ,to inherit (மத் 5:5; மத் 19:29; மத் 25:34, மாற்கு 10:17; லூக்கா 10:25, லூக்கா 18:18; 1கொரி 6:9-10, 1கொரி 15:50; கலா 5:21; எபி 6:12 எபி 12:17; 1பேதுரு 3:9; வெளி 21:7

2 அதிகாரம்

4. கிறிஸ்துவின் உடன்படிக்கையின் சாட்சி - 8.6. யோவான் 1:17 5.31-39; 14.6-15)

எபி 2:1 ஆகையால், நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு, அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும்.

எபி 2:2 ஏனெனில் தேவதூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனத்திற்கு விரோதமான எந்தச் செய்கைக்கும் கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரத்தக்கதாக அவர்களுடைய வசனம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க,

எபி 2:3 முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும்,

எபி 2:4 அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும் தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வோம்.

"கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும்" தேவன் தமது குமாரன் மூலமாக நம்மோடு பேசியிருக்கிறார். அவர் பேசியிருப்பது நமது நித்திய ஜீவனுக்கு மிகவும் முக்கியமானது. ஆகையினால் நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு நமது ஜீவியத்தில் அவற்றுக்கு மிகவும் முக்கியத்துவம் தந்து கீழ்ப்படிய வேண்டும்.

விசுவாசிகள் மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனித்துக் காத்துக் கொள்ள வேண்டிய [redacted]

1. கேட்டவை (Hearing) (எபி 2:1)
2. எச்சரிக்கை (Heeding) (எபி 3:12)
3. புத்திசொல்லுதல் (Exhorting) (எபி 3:13)
4. பயந்திருத்தல் (Fearing) (எபி 4:1)
5. கிரியை செய்தல் (Laboring) (எபி 4:11)
6. சேருதல் (Coming) (எபி 4:16 எபி 10:19-22)
7. நீங்குதல் (Leaving) (எபி 6:1)
8. காண்பித்தல் (Showing) (எபி 6:11-12)
9. சேருதல் (Drawing) எபி 10:22
10. உறுதியாய் இருத்தல் (Holding) (எபி 3:6 எபி 10:23)
11. தள்ளிவிடுதல் (Laying) எபி 12:1
12. நோக்குதல் (Looking) (எபி 12:2 எபி 15)
13. நினைத்துக் கொள்ளுதல் (Considering) எபி 12:3
14. நிமிர்த்துதல் (Lifting) எபி 12:12
15. செவ்வைப்படுத்துதல் (Making) (எபி 12:13)
16. நாடுதல் (Following) (எபி 12:14)
17. புறப்பட்டுப்போதல் (Going) (எபி 13:13)
18. கீழ்ப்படிந்து அடங்குதல் (Obeying) (எபி 13:17)

விட்டுவிலகு (slip) παραρρέω pararreoo 3901

2 அதிகாரம்

வினைச்சொல் - விட்டுவிலகு (to flow beside, past; to slip away from one's memory) - நம்முடைய பழைய பாவங்களிலிருந்து இயேசு கிறிஸ்து நம்மைச் சுத்திகரித்து இரட்சித்திருக்கிறார் இந்தச் சத்தியத்தை நாம் விட்டு விலகக்கூடாது. (2பேதுரு 1:4-10)

"தேவதூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனம் - தேவதூதர்கள் மூலமாய்க் கொடுக்கப் பட்ட பிரமாணம். அப 7:53 கலா 3:19 தேவதூதர்கள் மூலமாக ஒருசிலருக்கு விசேஷித்த செய்தி கூறப்பட்டது. லோத்தின் மனைவி. (ஆதி 19:17-26) சிம்சோன் நியா 13:5; நியா 16:19-22)

உறுதி (stedfast) - βέβαιος - bebaios - 949

பெயரடை - நிச்சயமான, உறுதியான stedfast (எபி 2:2; எபி 3:14 எபி 6:19; 2கொரி 1:7); firm (எபி 3:6); sure (ரோமர் 4:16, 2பேதுரு 1:10,19); of force (எபி 9:17)

விரோதமான செய்கை (transgression) - παράβασις parabasis 3847

பெண்பால் பெயர்ச்சொல் - மீறுதல் அக்கிரமம். விரோதமான செய்கை (எபி 2:2, 9:15; ரோமர் 4:15; ரோமர் 5:14, கலா 3:19; 1தீமோ 2:14) "breaking the law" (ரோமர் 2:23)

கீழ்ப்படியாமை (disobedience) παρακοή - parakoee 3876

பெண்பால் பெயர்ச்சொல் - கீழ்ப்படியாமை (unwillingness to hear) (எபி 2:2; ரோமர் 5:19; 2கொரி 10:6

தண்டனை (recompence) - μισθαποδοσία - misthapodosia - 3405

பெண்பால் பெயர்ச்சொல் - தண்டனை, பலன் (payment of wages; recompense for breaking law) (எபி 2:2; எபி 10:35 எபி 11:26)

"அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டது" - கர்த்தர் மூலமாய அறிவிக்கப்பட்டது அக்காலத்தில் உறுதியாக்கப் பட்டதுபோன்று தற்காலத்திலும் உறுதியாக்கப் பட்டிருக்கிறது. (மத் 18:18 மத் 28:20; மாற்கு 16:15-20; லூக்கா 24:49, அப 1:4-8; 1கொரி 12:4-11)

"தேவன் தாமே சாட்சி கொடுத்தது மாயிருக்கிற இவ்வளவு பெரியதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலை யற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்வோம்" - நாம் இயேசு கிறிஸ்துவின்மீது வைக்கும் விசுவாசத் தினாலும் தேவனுடைய கிருபையினாலும் இரட்சிக்கப் பட்டிருந்தாலும் நமக்கும் பொறுப்புகள் கொடுக்கப்பட்டிருக்கிறது ஆகையினால் நமது இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருக்கக் கூடாது

கவலையற்றிருப்பது (neglect) - ἀμελέω - ameleoo - 272

வினைச்சொல் - அசட்டைப் பண்ணு, அசதியாயிரு. கவலையற்றிரு, புறக்கணி neglect (எபி 2:3, 1தீமோ 4:14); be negligent (2பேதுரு 1:12 ; regard not (எபி 8:9); make light of (மத் 22:5

இரட்சிப்பு ஏன் பெரிதானது

1. இதன் ஸ்தாபகர் - கர்த்தர் மூலமாய அறிவிக்கப்பட்டது (எபி 2:3
2. இதன் கிரயம் - தேவனுடைய ஒரேபேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மரணம். (யோவான் 3:16, கொலோ 1:20; 1பேதுரு 2:24
3. இதன் விஸ்தீரணம்

2 அதிகாரம்

(1) காலமும், நித்தியமும் 2கொரி 6.2 ஏசா 45:17, எபி 5:9

(2) யூதரும் புறஜாதியாரும் ரோமர் 1:16

4. இதன் ஆசீர்வாதங்கள்

(1) சரீர சுகமாதல் (அப் 3:16, அப் 4:9-12; மத் 8:17 1பேதுரு 2:24; யாக் 5:14)

(2) ஆத்தும இரட்சிப்பு (1பேதுரு 1:9; 2கொரி 7:10; எபே 1:7, எபே 2:8-9

(3) மீட்புக்கள் (யாத் 14:13, 1சாமு 14:45, ஏசா 33:2)

(4) சந்தோஷமும், சமாதானமும் சங் 20:5; சங் 51:12 ஏசா 12:3, ரோமர் 5:1-2)

(5) பாதுகாக்கப்படுதல் (ஏசா 26:1

(6) அனுதின ஆசீர்வாதங்கள் சங் 68:19

5 இதன் நித்தியத்துவம் - பாதாளத்தில் இருந்தவர்களகூட இரட்சிக்கப்பட்டு நித்திய ஜீவனை அனுபவிப்பதற்காவ பரலோகத்திற்கு உயர்த்தப் பட்டிருக்கிறார்கள். (எபே 3:18 அப் 13:47, சங் 98:3; ஏசா 49:6)

6 இதன் தெய்வீக ஆதாரம் (சங் 25:5 சங் 37:39)

7 இதன் உறுதிப்பாடு (எபி 2:3-4 மாற்கு 16:15-20)

8 இதன் அடிப்படைத் தகுதிகள் - கிருபையும், விசுவாசமும் (ரோமர் 3:24-31; எபே 2:8-9; தீத்து 2:11)

9 இதன் வியாபகம் (அப் 4:12)

10 இதன் எளிமை யோவான் 3:16 ரோமர் 1:16 ரோமர் 10:9-10, 1யோவான் 1:9

தேவன் சாட்சி கொடுக்கும் விதம்

1. அற்புதங்களும், அடையாளங்களும் (மாற்கு 16:15-20; அப் 2:43 அப் 5:16; அப் 10:38; 1கொரி 12:4-11

2 பலவிதமான பலத்த செய்கைகள் (அப் 2:43; அப் 19:11)

3 பரிசுத்தஆவியின் வரங்கள் (1கொரி 12:4-11,28-31 ரோமர் 1:11 எபி 2:4)

சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்களுக்கு இந்த வல்லமை இன்றும் கொடுக்கப்படுகிறது (எபி 2:3)

5. கிறிஸ்துவின் யுத்தமும் தேவனுக்கு எதிராக [redacted] பண்ணுவோர்மீது இறுதியில் வெற்றியும் - (1கொரி 15:24-28 மத் 25:31; கொலோ 2:14; யூதா 14, வெளி 11:15; 12:7-12, 19:11-20:15

எபி 2:5 இனிவரும் உலகத்தைக்குறித்துப் பேசுகிறோமே, அதை அவர் தூதர்களுக்குக் கீழ்ப்படுத்தவில்லை

எபி 2:6 ஒருவன் ஒரு இடத்திலே சாட்சியாக: மனுஷனை நீர் நினைக்கிறதற்கும் மனுஷனுடைய குமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம்?

எபி 2:7 அவனை தேவதூதரிலும் சற்றுச் சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனுக்கு முடிசூட்டி, உம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் அவனை அதிகாரியாக வைத்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர் என்று சொன்னான்.

எபி 2:8 சகலத்தையும் அவனுக்குக் கீழ்ப்படுத்தினார் என்கிற விஷயத்தில், அவர் அவனுக்குக் கீழ்ப்படுத்தாத பொருள் ஒன்றுமில்லை. அப்படியிருந்தும் இன்னும் அவனுக்குச் சகலமும் கீழ்ப்பட்டிருக்கக் காணோம்.

2 அதிகாரம்

"இனிவரும் உலகம்" - மேசியாவின் இராஜ்ஜியம்

எபிரெயர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 7

"மனுஷனை நீர் நினைக்கிறதற்கும் மனுஷனுடைய குமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம்" - (எபி 2:6-7; சங் 8:4-6) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை

"உம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் அவனை அதிகாரியாக வைத்து" - சந்திரன் சூரியன் நட்சத்திரங்கள் ஆகியவற்றை ஆளுகை செய்யும் அதிகாரத்தைத் தேவன் மனுஷருக்குக் கொடுத்திருக்கிறார் (சங் 8:3-6)

"சகலத்தையும் அவனுக்குக் கீழ்ப்படுத்தினார்" - ஆயிரம் வருஷ அரசாட்சியின்போது இயேசு கிறிஸ்துவின் சத்துருக்கள் ஒடுக்கப்பட்டு பூமியிலிருந்து அகற்றப்படுவார்கள் (1கொரி 15:24-28; எபே 1:10; வெளி 20)

6. கிறிஸ்துவின் மீட்கும் கிரியை
(கொலோ 2:14-17; 1பேதுரு 2:24; பிலி 2:5-11)

எபி 2:9 என்றாலும் தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்தபடியினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம்

எபி 2:10 ஏனென்றால் தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினவர் அநேகம் பிள்ளைகளை மகிமையிலே கொண்டுவந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது

எபி 2:11 எப்படியெனில், பரிசுத்தஞ் செய்கிறவரும் பரிசுத்தஞ் செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்; இதினிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல்,

எபி 2:12 உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவிலே உம்மைத் துதித்துப் பாடுவேன் என்றும்

எபி 2:13 நான் அவரிடத்தில் நம்பிக்கையாயிருப்பேன் என்றும், இதோ நானும் தேவன் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் என்றும் சொல்லியிருக்கிறார்

"தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு" - இயேசு கிறிஸ்து தேவதூதரிலும் சற்று தாழ்வானவராகச் சிருஷ்டிக்கப்பட்டார். தேவதூதர்கள் நித்தியமானவர்கள். அவர்கள் மரிக்கமாட்டார்கள் (மத் 22:30). ஒவ்வொரு மனுஷருக்காகவும் இயேசு கிறிஸ்து மரணத்தை ருசிபார்க்க வேண்டும். ஆகையினால் தேவதூதருக்கும் தாழ்வாக மனுஷனாக அவதரித்தார்

"தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினவர் அநேகம் பிள்ளைகளை மகிமையிலே கொண்டுவந்து சேர்க்கையில்" - அநேக பிள்ளைகளை இரட்சித்து மகிமையிலே கொண்டுவந்து சேர்க்க வேண்டுமென்பது இயேசு கிறிஸ்துவின் சித்தம். இதில் தெய்வீக ஞானமும் நீதியும் வெளிப்படுகிறது. மனுஷருக்கு இரட்சிப்பு உண்டாகுவதற்காகவே இயேசு கிறிஸ்து பல உபத்திரவங்களை அனுபவிப்பதற்குத் தம்மை ஒப்புக்கொடுத்தார்

"இரட்சிப்பின் அதிபதி" - இரட்சிப்பின் ஸ்தாபகர் உபத்திரவப்படாமல் மரிக்க முடியாது. மரிக்காமல் பாவத்திற்கு நிவாரணம் பண்ண முடியாது. பாவநிவாரண கிரியையை நிறைவேற்றாமல் அவரால் பரிபூரணப்படுத்தப்படவும் முடியாது.

பூரணப்படுத்துகிறது (perfect)
τελειόω teleioo 5048

2 அதிகாரம்

வினைச்சொல் - முடி, தேறு நிறைவேற்று, பூரணப்படுத்து (make a full end; complete) - உபத்திரவங்களை அனுபவியாமல் மரணத்தை ருசிபார்க்காமல் இயேசு கிறிஸ்துவின் ஊழியம் பூரணபடாது. பிலி 3:12

"இதினிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல்" - இயேசு கிறிஸ்து மனுஷரைப் பரிசுத்தப்படுத்துகிறார். தேவனுடைய ஊழியத்திற்காக அவர் மனுஷரை வேறுபிரித்து பரிசுத்தப்படுத்துகிறார். பரிசுத்தமாக்கப் பட்டவர்கள் தேவனுடைய குடும்பத்தில் அங்கம் வகிக்கிறார்கள். ஒரே குடும்பத்தில் உள்ள பரிசுத்தவான்களை இயேசு கிறிஸ்து "சகோதரர்" என்று அழைக்கிறார்.

எபிரெயர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 8

"உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதித்துப் பாடுவேன்" (எபி 2:12; சங் 22:22) இந்த தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

எபிரெயர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 9

"நான் அவரிடத்தில் நம்பிக்கையாயிருப்பேன்" எபி 2:13; 2சாமு 22:3 இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

எபிரெயர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 10

"இதோ நானும், தேவன் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும்" (எபி 2:13; ஏசா 8:18) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

7. **மரணம், பாதாளம் ஆகியவற்றின் மீது கிறிஸ்துவின் வெற்றியும் அடிமைத்தனத் திற்குள்ளான நீதிமான்கள் யாவரையும் கிறிஸ்து விடுதலை பண்ணுவதும்** - (எபே 4:7-11)

எபி 2:14 ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும்,

எபி 2:15 ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார்.

"பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப் போல மாம்சத்தையும் இரத்தத் தையும் உடையவரானார்" - மனுஷரை இரட்சிப்பதற்காக இயேசு கிறிஸ்து மனித அவதாரம் எடுத்தார். மனுஷருடைய பாவங்களைப் போக்குவதற்காக கிறிஸ்து இயேசு கல்வாரி சிலுவையில் பாவநிவாரண பலியாக மரிக்க வேண்டியது அவசியமாயிற்று. இயேசு கிறிஸ்து ஒரு பாவமும் செய்யாதவர். ஆகையினால் அவருக்குப் பாவமன்னிப்பு தேவையில்லை. மனுக்குலத்தின் பாவத்தை மன்னிப்பதற்காக கிறிஸ்து மரிக்க வேண்டியது. இருப்பதினால் அவர் மனுஷருடைய இடத்தில் மனுஷருடைய பாவங்களுக்காக மரித்தார். அதற்காக இயேசு கிறிஸ்து மனுஷரைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார். பிசாசானவனை அழிக்கும் படியாகவும் மனுஷரை மரண பயத்திலிருந்து விடுதலை பண்ணும் படியாகவும் இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் மரித்தார்.

2 அதிகாரம்

"ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத் திருந்தவர்களை யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் ஆயத்தமானார்" - இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் மரிப்பதற்கு முன்பாக இவ்வுலகில் ஏராளமான பரிசுத்தவான்கள் மரித்துப்போனார்கள். அவர்களைச் சாத்தான் பாதாளத்தில் சிறையாக்கி வைத்திருந்தான். அந்த நீதிமான்களின் ஆத்துமாக்களை விடுதலை பண்ணுவதற்காக இயேசு கிறிஸ்து பூமியின் தாழ்விடங்களுக்குச் சென்று சாத்தானின் சிறையிருப்பிலிருந்து மீட்டு அவர்களைத் தமக்குச் சிறையாகக் கொண்டார். அவர் முதலாவதாக நரகத்திற்கு இறங்கி (சங் 16:10, அப் 2:27) அதன்பின்பு பூமியின் தாழ்விடங்களுக்கு இறங்கிப்போனார் (எபே 4:8-10, மத் 12:40) பூமியின் தாழ்விடங்களில் சாத்தானால் சிறைபிடிக்கப்பட்டிருந்தவர்களை இயேசு கிறிஸ்து விடுதலை செய்து பரலோகத்திற்கு பரமேறினார் (எபே 4:8-10) இந்த நிகழ்ச்சியினால் சங் 68:18 ஆவது வசனம் நிறைவேறுகிறது.

இயேசு கிறிஸ்து பூமியின் தாழ்விடங்களுக்குச் செல்வதற்கு முன்பாக மரித்துப் போன பரிசுத்தவான்களின் ஆத்துமாக்கள் எல்லாம் பாதாளத்திற்குச் சென்றன. அங்கு துன்மார்க்கருடைய ஆத்துமாக்களோடு தங்கியிருந்தன. ஆயினும் பாதாளத்தில் துன்மார்க்கருக்கும் நீதிமான்களுக்கும் நடுவில பெரிய பிளவு உண்டாயிருந்தது (லூக்கா 16:19-31)

இப்போது மரித்துப்போகும் பரிசுத்தவான்களின் ஆத்துமாக்கள் பூமியின் தாழ்விடங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை. தங்களுடைய விருப்பத்திற்கு மாறாக அவர்கள் சாத்தானால் சிறைபிடித்து வைக்கப்படமாட்டார்கள். தற்காலத்தில் பரிசுத்தவான்கள் மரிக்கும்போது அவர்களுடைய ஆத்துமாக்கள் உடனடியாகப் பரலோகத்திற்குச் செல்லும். அங்கு அவை தங்களுடைய சரீரங்களின் உயிர்த்தெழுதலுக்காகக் காத்திருக்கும் (2 கொரி 5:8 பிலி 1:21-24, எபி 12:23, வெளி 6:9-11)

தற்காலத்தில் மரித்துப்போகும் துன்மார்க்கருடைய ஆத்துமாக்கள் பாதாளத்திற்குச் செல்லும். ஆயிரம் வருஷ அரசாட்சியின் இறுதிக்காலம் வரையிலும் அவை பாதாளத்திலேயே தங்கியிருக்கும்.

அதன்பின்பு மரணமும் பாதாளமும் துன்மார்க்கருடைய ஆத்துமாக்களை ஒப்புவிக்கும். அவர்கள் உயிர்த்தெழுந்து தங்களுடைய சரீரங்களோடு சேர்ந்து கொண்டு பின்பு நியாயந்தீர்க்கப்பட்டு நித்திய நரகத்திற்கு அனுப்பப்படுவார்கள் (வெளி 20:11-15)

8. **சோதிக்கப் படுகிறவர்களுக்கு உதவிசெய்யக்கிறிஸ்து வல்லவராக இருக்கிறார்** (4:4-16; 1கொரி 10:13)

எபி 2:16 ஆதலால் அவர் தேவதூதருக்கு உதவியாகக் கை கொடாமல் ஆபிரகாமின் சந்ததிக்கு உதவியாகக் கைகொடுத்தார்

எபி 2:17 அன்றியும், அவர் ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக, தேவ காரியங்களைக் குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும் படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்தது

எபி 2:18 ஆதலால் அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்

"அவர் தேவதூதருக்கு உதவியாகக் கைகொடாமல், ஆபிரகாமின் சந்ததிக்கு உதவியாகக் கைகொடுத்தார்" இயேசு கிறிஸ்து தேவதூதரைவிட மேன்மையானவர் என்று பவுல் வலியுறுத்திக் கூறுகிறார். இயேசு கிறிஸ்து தேவதூதரைப்போன்று அவதாரம் எடுக்காமல் ஆபிரகாமின் வித்தாகிய மனுக்குலத்தில் ஒருவராக அவதாரம் எடுத்தார். எல்லாவிதத்திலும் தம்முடைய சகோதரராகிய மனுக்குலத்திற்கு ஒப்பானார். தேவகாரியங்களைக் குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராக இருந்தார். தம்முடைய சொந்த பாவநிவாரண பலியின் மூலமாக மனுக்குலத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்தார். இயேசு கிறிஸ்து சோதிக்கப்பட்டு பாடுபட்டார். இதனால் சோதிக்கப்படுகிறவர்களுக்கு அவர் உதவி செய்ய வல்லவராயிருக்கிறார்.

"பிரதான ஆசாரியர்" எபிரெயர் நிருபத்தில் இந்த வாக்கியம் இயேசு கிறிஸ்துவைக் குறிப்பிடுகிறதற்கு 15 இடங்களில் பயன்படுத்தப் பட்டிருக்கிறது (எபி 2:17 எபி 3:1; எபி 4:14-15; எபி 5:1-10 எபி 6:20 எபி 7:26-27; எபி 8:1,3, எபி 9:11,25 எபி 10:21 எபி 13:11)

3 அதிகாரம்

III. கிறிஸ்து மோசேயைப் பார்க்கிலும் விசேஷித்தவர் - (3:1-6; உபா 18:15-19; யோவான் 1:17)

1. கிறிஸ்துவின் பரம அழைப்பு (3:1-2) - (1:3; 8:1-6; 12:2)

எபி 3:1 இப்படியிருக்க, பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்.

எபி 3:2 மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்ததுபோல, இவரும் தம்மை ஏற்படுத்தினவருக்கு உண்மையுள்ளவராயிருக்கிறார்.

"பரிசுத்த சகோதரரே" - தேவனிடத்தில் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட தேவபிள்ளைகள் தங்கள் ஜீவியத்திலும் நடத்தையிலும் பரிசுத்தமாக இருக்கிறவர்கள் (அப் 9:13).

"பரம அழைப்பிற்குப் பங்குள்ளவர்கள்" - தேவனுடைய பரிசுத்தவான்கள் எல்லோரும் பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்கள். தேவனுடைய ஆசீர்வாதங்களில் பங்குபெறுகிறவர்கள். தேவனுடைய அழைப்பு முதலாவதாக இஸ்ரவேல் தேசத்தாருக்குக் கொடுக்கப்பட்டது. மேசியா வரும்போது அதாவது இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது ஜீவனோடு இருக்கிறவர்கள் பூமியை நிரப்புவார்கள். சபையை எடுத்துக் கொள்வதற்காக இயேசு கிறிஸ்து வரும்போது இரட்சிக்கப்பட்டிருக்கிற யூதர்களும், புறஜாதியாரும் இயேசு கிறிஸ்துவோடு அவருடைய இரண்டாம் வருகையில் பூமிக்கு வந்து ராஜாக்களாகவும் ஆசாரியர்களாகவும் பூமியை ஆளுகை செய்வார்கள். நித்திய காலமாக பூமியை ஆளுகை செய்வதற்கு அவர்கள் தேவனுக்கு உதவி புரிவார்கள். (வெளி 1:5-6; வெளி 5:10; வெளி 22:4-5) தேவனுடைய பரிசுத்தவான்களுடைய அழைப்பு பரம அழைப்பாகும். ஆயினும் பூமியிலுள்ள மனுக்குலத்தார் அனைவரும் பாவம் செய்யாமல் இரட்சிக்கப்பட்டிருப்பார்கள் என்றால் அனைவரும் பரம அழைப்பிற்குப் பங்குள்ளவர்களாக இருப்பார்கள் (ஆதி 1:27-31; மத் 22:30; லூக்கா 20:34-35; எபி 11:10-16; எபி 12:22-23)

பங்குள்ளவர் (partner) - μέτοχος - metochos - 3353

பெயரடை - கூட்டாளியான தோழரான பங்குள்ள partaker (எபி 3:14; எபி 6:4; எபி 12:8); partner (லூக்கா 5:7); fellow (எபி 1:9)

"அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியரும்" - யூதருடைய பிரதான ஆசாரியர் தேவனுடைய அப்போஸ்தலர் என யூதமார்க்கத்தாரால் போற்றப்படுகிறார்கள். மோசேயின் திட்டம் புதிய ஏற்பாட்டில் தொடரவில்லை. நியாயப் பிரமாணத்திலும் ஆசாரியத்துவத்திலும் புதிய பிரமாணத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன (எபி 7:11-17)

அறிக்கை பண்ணுதல் (profession) - ὁμολογία - homologia - 3671

பெண்பால் பெயர்சொல் - அறிக்கை (agreement; terms of surrender; confession) "profession" (எபி 3:1; எபி 4:14; எபி 10:23; 1தீமோ 6:12; 2கொரி 9:13); "confession" (1தீமோ 6:13)

"மோசே தேவனுடைய வீட்டில் எங்கும்" - மோசேயின் வீடு என்பது இஸ்ரவேல் தேசத்தைக் குறிக்கும். கிறிஸ்துவின் வீடு என்பது சபையைக் குறிக்கும். (எண் 12:7; எபி 2:9-13; எபி 3:6)

2. கிறிஸ்து சிருஷ்டிகர் (யோவான் 1:3; எபே 3:9; கொலோ 1:15-18)

எபி 3:3 வீட்டை உண்டுபண்ணினவன் வீட்டைப்பார்க்கிலும் அதிக கனத்திற்குரியவனாயிருக்கிறான்; அதுபோல, மோசேயைப்பார்க்கிலும் இவர் அதிக மகிமைக்குப் பாத்திரராயிருக்கிறார்.

3 அதிகாரம்

எபி 3:4 ஏனெனில், எந்த வீடும் ஒருவனால் உண்டாக்கப்படும். எல்லாவற்றையும் உண்டுபண்ணினவர் தேவன்

கிறிஸ்து மோசேயைப் பார்க்கிலும் அதிக மகிமைக்குப் பாத்திரராயிருக்கிறார்

1 அவர் பரம அழைப்புக்குப் பங்குள்ளவர் எபி 3:1

2 நாம் அறிக்கை பண்ணுகிற அப்போஸ்தலர் (எபி 3:1)

3 நாம் அறிக்கை பண்ணுகிற பிரதான ஆசாரியர் (எபி 3:1)

4 கிறிஸ்து தமது வீடாகிய தமது சபையைக் கட்டுகிறார் (எபி 3:6) மோசே தன்னுடைய வீடாகிய இஸ்ரவேலைக் கட்டவில்லை. (எபி 3:3)

5 கிறிஸ்து எல்லாவற்றையும் உண்டு பண்ணின தேவன் (எபி 3:4; எபி 1:2, எபே 3:9, கொலோ 1:15-18)

6 கிறிஸ்து தமது வீட்டிற்குக் குமாரனாக இருக்கிறார் மோசே பணிவிடைக் காரனாய் இருந்தான் (எபி 3:5-6)

7 கிறிஸ்து தன்னைவிட உயர்ந்தவர் என்பதை மோசே முன்னறிந்திருந்தான் (எபி 3:5 உபா 18:15 19

3. கிறிஸ்துவின் தெய்வீக குமாரத்துவம் - (ஏசா 7:14; 9:6-7 மத் 1:18-25; யோவான் 3:16; எபி 1:5 7

எபி 3:5 சொல்லப்படப்போகிற காரியங்களுக்குச் சாட்சியாக, மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான்

எபி 3:6 கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார், நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மை பாராட்டலையும் முடிவுபரியந்தும் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், நாமே அவருடைய வீடாயிருப்போம்.

"சொல்லப்படப்போகிற காரியங்களுக்குச் சாட்சியாக" - மோசேயின் பிரமாணமும், அவருடைய தீர்க்கதரிசனங்களில் சிலவும் இயேசு கிறிஸ்துவின் பாடுகளுக்கும், கர்சேஷத்தின் சத்தியங்களுக்கும் சாட்சி பகர்ந்தன மேசியா வரும்போது இவை அறிவிக்கப்படும். (மத் 5:17 மத் 11:13 லூக்கா 16:16; லூக்கா 24:25-27,44-46,

"நாமே அவருடைய வீடாயிருப்போம்" - இயேசு கிறிஸ்து கட்டுகிற வீட்டைக் குறித்து பவுல் இங்கு விவரிக்கிறார் நாமே கிறிஸ்துவின் வீடாக இருக்கிறோம் நாம் அவருடைய வீடாக இருப்பதற்கு நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மை பாராட்டலையும் முடிவுபரியந்தும் உறுதியாகப் பற்றிக் கொண்டிருக்க வேண்டும்

உறுதியாய்ப் பற்றிக்கொள்ளுதல் **(hold fast) - κατέχω - katechoo** - 2722

வினைச்சொல் - கட்டிக்கொள் நிறுத்திக்கொள் **hold fast** (எபி 3:6, எபி 10:23; 1தெச 5:21); **withhold** (2தெச 2:6); **hold** (ரோமர் 1:18 ரோமர் 7:6; எபி 3:14); **retain** (பிலே 1:13); **stay** (லூக்கா 4:42); **let** (2தெச 2:7); **keep** (லூக்கா 8:15 1கொரி 11:2); **keep in memory** (1கொரி 15:2); **take** (லூக்கா 14:9); **seize on** (மத் 21:38); **possess** (1கொரி 7:30); **make toward** (அப் 27:40)

"நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியம்" - மனுஷனுடைய பாவங்கள் மனுஷனைத் தேவனிடமிருந்து பிரித்து விட்டது தேவனுடைய மன்னிப்பைப் பெறும்போது தேவனைக் கிட்டிச் சேரலாம் என்னும் நம்பிக்கையும், நிச்சயமும் விசுவாசிகளுக்கு உண்டாயிருக்கும். (ஏசா 59:1-2) பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவனைக் கிட்டிச் சேரும் சிலாக்கியம் மனுஷருக்கு அனுமதிக்கப்படவில்லை தேவன் நியாயப்பிரமாணத்தைக் கொடுத்த பர்வதத்தை மனுஷரோ அல்லது விலங்குகளோ தொடுவதற்குத் தடைபண்ணப்பட்டிருந்தார்கள்

3 அதிகாரம்

தேவாலயத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரதான ஆசாரியர் வருஷத்திற்கு ஒருமுறை உள்ளே செல்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தார். அதுவும் தன்னைச் சரியாகச் சுத்திகரிப்பு செய்து கொள்ளாமல் அவரால் தேவனைக் கிட்டிச் சேர முடியாது.

தற்காலத்தில் வாழும் நமக்கோ இயேசு கிறிஸ்துவின் திருஇரத்தத்தின் மூலமாகத் தேவனை அறுதினமும் கிட்டிச் சேரும் சிலாக்கியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. (எபி 10:19-23; எபே 2:18) நமக்கு உதவி தேவைப்படும்போது தேவனுடைய கிருபாசனத்திற்கு நம்பிக்கையோடும் தைரியத்தோடும் செல்லலாம். (எபி 4:14-16) இந்த நம்பிக்கையினால் உண்டாகும் தைரியத்தையும், மேன்மைபாராட்டுதலையும் நாம் முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருப்போமாகில் நாமே அவருடைய வீடாக இருப்போம். (எபி 3:6) நம்மிடத்தில் பாவம் இருக்குமென்றால் தேவனைக் கிட்டிச் சேரும் சிலாக்கியம் நமக்குக் கொடுக்கப்படமாட்டாது. தேவனும் நம்முடைய ஜெபத்திற்குப் பதில் கொடுக்கமாட்டார். (யோவான் 3:20-21; 1 யோவான் 5:14-15) See சங் 66:18

தைரியம் (confidence) - παρρησία - parreesia - 3954

பெண்பால் பெயர்சொல் - வினையடையாகவும் பயன்படும் தாராளம், வெளிப்படுத்துதல், தெளிவு, வெளிப்படை, தைரியம்

"நம்பிக்கை" (hope) - நித்திய ஜீவனைப் பற்றிய நம்பிக்கை. (தீத்து 1:2)

"உறுதி" (firm, stedfast) - (எபி 2:2)

முடிவுபரியந்தம் நாம் செய்ய வேண்டிய காரியங்கள்

1. இரட்சிக்கப்படுவதற்கு முடிவு பரியந்தம் நிலைத்திருக்க வேண்டும். (மத் 10:22; மத் 24:13; மாற்கு 13:13)
2. நித்திய ஜீவனைப் பற்றிய நம்பிக்கையை உறுதியாய்ப் பற்றிக் கொள்ள வேண்டும். (எபி 3:6)
3. நாம் ஆரம்பித்துக் கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக் கொள்ள வேண்டும். (எபி 3:14)
4. நம்பிக்கையின் பூரண நிச்சயம் உண்டாகும்படி முடிவுபரியந்தம் ஜாக்கிரதையைக் காண்பிக்க வேண்டும். (எபி 6:12)
5. ஜெயம் கொண்டு முடிவுபரியந்தம் கிறிஸ்துவின் கிரியைகளைக் கைக்கொள்ள வேண்டும். (வெளி 2:26)

IV. எச்சரிப்புக்களும் புத்திமதிகளும் - (எபி 3:7-4:7)

1. இஸ்ரவேல் ஏன் விழுந்துபோயிற்று - (எபி 4:2; ரோமர் 9:25-33; 10:1-3; 11:7-32)

எபி 3:7 ஆகையால் பரிசுத்தஆவியானவர் சொல்லுகிறபடியே: இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில்

எபி 3:8 வனாந்தரத்திலே கோபமூட்டின போதும் சோதனைநாளிலும் நடந்தது போல, உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்.

எபி 3:9 அங்கே உங்கள் பிதாக்கள் என்னைச் சோதித்து, என்னைப் பரீட்சைபார்த்து, நாற்பது வருஷகாலம் என் கிரியைகளைக் கண்டார்கள்.

"ஆகையால்" (wherefore) நித்திய ஜீவனைப் பற்றிய நம்பிக்கையை உறுதியாகப் பற்றிக் கொள்ளாமல் கைவிட்டு விடுவதற்கு வாய்ப்புள்ளது. (எபி 3:6) இந்த வசனத்தில் பரிசுத்த ஆவியானவர் பாவிகளை எச்சரிக்காமல் விசுவாசிகளை எச்சரிக்கிறார். இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்திலே தேவனுக்குக் கோபமூட்டி தேவனைவிட்டுப் பிரிந்து போனார்கள். (எபி 3:7-14) ஆகையால் விசுவாசிகளாகிய நாம் பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறபடி கேட்டு, அவருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து மிகுந்த எச்சரிப்போடு ஜீவித்து, நித்திய ஜீவனைப் பற்றிய நம்பிக்கையை உறுதியாய்ப் பற்றிக் கொள்ள வேண்டும்.

3 அதிகாரம்

எபிரெயர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 11

"இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில் வனாந்தரத்திலே கோபமூட்டின போதும், சோதனை நாளிலும் நடந்ததுபோல உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்" (எபி 3:7-8; சங் 95:7-11) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இந்த வார்த்தை இஸ்ரவேலரை எச்சரிப்பதற்காகக் கூறப்பட்டது. பவுல் இந்த வார்த்தைகளை விசுவாசிகளை எச்சரிப்பதற்காக மேற்கோளாகப் பயன்படுத்துகிறார். சோதனையின் மூலமாகவும் பாவத்தினாலும் விசுவாசிகள் தங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய ஜீவனையும் இளைப்பாறுதலையும் இழந்து போவதற்கு வாய்ப்புள்ளது.

விசுவாசிகளுக்குக் கூறப்பட்டிருக்கும் எச்சரிப்புகள்

1 நாம் கேட்ட சத்தியங்களை விட்டு விலகாதபடிக்கு அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய் கவனிக்க வேண்டும். (எபி 2:1)

2 இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்குத் தப்பித்துக் கொள்ள முடியாது. (எபி 2:4)

3 கிறிஸ்துவினுடைய வீடாக இருக்கும் நாம் நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும், மேன்மை பாராட்டுதலையும் முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருக்க வேண்டும். (எபி 3:6)

4 சகோதரரே ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள் (எபி 3:12)

5 உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள் (எபி 3:13)

6 நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருப்போமாகில், கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம். (எபி 3:14)

7 அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப் போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம் (எபி 4:1-2)

8 அந்தத் திருஷ்டாந்தத்தின்படி ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்துபோகாதபடிக்கு, நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக் கடவோம் (எபி 4:11)

9 நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருக்கக் கடவோம். (எபி 4:14)

10 மறுதலித்துப் போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப் படுத்துகிறபடியால், மனந் திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம். (எபி 6:4-9)

11 நீங்கள் அசதியாயிராமல், வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள் (எபி 6:1)

12 உங்களுக்கு நம்பிக்கையின் பூரண நிச்சயமுண்டாகும்படி நீங்கள் யாவரும் முடிவுபரியந்தம் அப்படியே ஜாக்கிரதையைக் காண்பிக்கவேண்டும். (எபி 6:12)

3 அதிகாரம்

13. நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ள வேண்டும். (எபி 6:18-19)

14. நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக் கடவோம். எபி 10:23

15. நாம் வேண்டுமென்றே பாவம் செய்தால் தேவனுடைய நியாயத்தீர்ப்பும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையும் நமக்கு நிச்சயமாய் வரும். (எபி 10:26-31)

16. மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள் எபி 10:35

17. விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் பின்வாங்கிப் போவானானால் அவன் மேல் தேவனுடைய ஆத்துமா பிரியமாயிராது. எபி 10:38,39)

18. பாரமான யாவற்றையும் நம்மைச் சுற்றி நெருங்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட வேண்டும். (எபி 12:1)

19. முடமாயிருக்கிறது பிசகிப்போகாமல் சொஸ்தமாகும்படிக்கு, உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வை படுத்துங்கள் (எபி 12:13)

20. ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்துபோகாதபடிக்கும், யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பிக் கலக்கமுண்டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்படாதபடிக்கும், ஒருவனும் வேசிக்கள்ளனாகவும், சீர் கெட்டவனாகவும் இராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள் (எபி 12:15-17)

21. பேசுகிறவருக்கு நீங்கள் செவிகொடுக்க மாட்டோமென்று விலகாதபடி எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், பூமியிலே பேசினவருக்குச் செவிகொடுக்க மாட்டோமென்று விலகினவர்கள் தப்பிப்போகாமலிருக்க, பரலோகத்திலிருந்து பேசுகிறவரை நாம் விட்டு விலகினால் எப்படித் தப்பிப்போவோம்? (எபி 12:25)

22. அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக் கொள்ளக்கடவோம். நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே (எபி 12:28-29)

"உங்கள் இருதயங்களைக் கடினப் படுத்தாதிருங்கள்" - தேவனுடைய சப்தத்தைக் கேட்காமல் இருப்பதற்கும் தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்துவதற்கும் விசுவாசிகளுக்கு வாய்ப்புள்ளது. வனாந்தரத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய சப்தத்திற்குக் கீழ்ப்படியாமல் தங்களுடைய இருதயங்களைக் கடினப்படுத்தினார்கள் இதனால் தேவனுடைய சமுகத்திலிருந்து அவர்கள் விலக்கப்பட்டார்கள் இந்த நிகழ்ச்சியை பவுல் ஓர் எடுத்துக்காட்டாகப் பயன்படுத்தி விசுவாசிகளை எச்சரிக்கிறார் (எபி 3:7-14 ?

கோபமூட்டுதல் **(provocation)** - **παραπικρασμός** - **parapikrasmos** - 3894

ஆண்பால் பெயர்ச்சொல் - கோபமூட்டு **(to embitter; provoke; cause bitter provocation)** (எபி 3:8,15,16) - "சோதனை நாள்" என்பது இஸ்ரவேல் ஜனத்தாரின் நாற்பது வருஷ வனாந்தர அனுபவத்தைக் குறிக்கும் (சங் 95:8-11 எபி 3:8-9,15-17

பரீட்சைப்பார்த்தல் **(proved)** - **δοκιμάζω** - **dokimazoo** - 1381

வினைச்சொல் - நிதானி, சோதித்துப்பார், வகையறு, பகுத்தறி, பரீட்சையாய் உறுதிசெய்க(ம்), கண்டறி **(to put to the test; tested Me)** (2 கொரி 13:5)

2. **இஸ்ரவேலின்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு** (எண் 14:1-45, எபி 2:1-4 4:2

எபி 3:10 ஆதலால் நான் அந்தச் சந்ததியை அரோசித்து அவர்கள் எப்பொழுதும் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனமென்றும் என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி,

3 அதிகாரம்

எபி 3:11 என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன் என்றார்.

அரோசித்தல் (grieved) - προσοχθίζω - prosochthizoo - 4360

வினைச்சொல் - அரோசி (to be angry with; to be soffended at) (எபி 3:10,17) - செப்துவஜிந்த் பதிப்பிலுள்ள சங் 95:8 இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

8. பரிசுத்த சகோதரருக்கு எச்சரிப்புக்கள் - தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் - வசனம் 1, 12-14, 4:11, 6:4-12, 10:26-39, 12:14-17

எபி 3:12 சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்.

எபி 3:13 உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள்.

"சகோதரரே, நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்" பவுல் விசுவாச சகோதரர்களை எச்சரித்துக் கூறுகிறார். வனாந்தரத்தில் இஸ்ரவேல் ஜனங்களுடைய தோல்விகளை எடுத்துக்காட்டாகக் கூறி பவுல் விசுவாசிகளை எச்சரிக்கிறார். எகிப்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்களைத் தேவன் விடுவித்து அழைத்து வந்தார். ஆசீர்வாதங்கள், வளமான வாழ்வு, நித்திய ஓய்வு ஆகிய வாக்குத்தத்தங்கள் இஸ்ரவேல் ஜனத்தாருக்குக் கொடுக்கப்பட்டது.

ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ தங்களுடைய பாவங்களினாலும், அவிசுவாசத்தினாலும் தங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. அவர்கள் வனாந்தரத்தில் விழுந்தார்கள். தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டார்கள். இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளுடைய இருதயம் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போவதற்கு வாய்ப்புள்ளது. ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கு ஏதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளுக்குள் இருப்பதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் விசுவாசிகள் எப்போதும் நிருந்த எச்சரிப்போடு இருக்க வேண்டுமென்று பவுல் எச்சரித்துக் கூறுகிறார் (எபி 3:12-14).

தேவனைவிட்டு விலகிப்போகும் நிலைகள்

1. தேவனுடைய சப்தத்தைக் கேட்க மறுப்பது. (எபி 3:7)
2. தேவனுடைய சப்தத்தைக் கேட்காமல் தேவனுக்குக்கீழ்ப்படியாமல் தங்களுடைய இருதயங்களைக் கடினப்படுத்துவது (எபி 3:8,13,15)
3. தேவனுக்கு எதிராக இருதயங்களைக் கடினப்படுத்துவதினால் உண்டாகும் அவிசுவாசம். (எபி 3:12)
4. ஜீவனுள்ள தேவனைவிட்டு விலகுவது (எபி 3:12)
5. தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணி, தேவனைப் பரீட்சை பார்த்து அவருக்குக் கோபமூட்டுவது (எபி 3:8, 9,16)
6. எப்பொழுதும் பாவம் செய்து, பாவத்தை ஜீவியத்தில் ஒரு வழக்கமாக்கிக் கொள்வது. கவனக்குறைவான ஜீவியம் செய்வது. தேவனுடைய பிரமாணங்களுக்கு எதிர்த்து நிற்பது. (எபி 3:10,17)
7. தேவனைவிட்டு விலகிப்போதல்: தேவனிடத்தில் வைக்கும் விசுவாசம், அவருடைய மீட்பின் கிரியை ஆகியவற்றை விசுவாசியாமல் பின்வாங்கிப் போவது. இப்போப்பட்டவர்கள் மறுபடியும் இரட்சிக்கப்படுவதற்கு வாய்ப்பேயில்லை. ஏனெனில் தேவனிடத்தில் இவர்கள் தாங்கள் வைத்திருந்த விசுவாசத்தை விட்டு முழுவதுமாக விலகிப்போய் விட்டார்கள் (எபி 3:17,18-19)

3 அதிகாரம்

"நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்" - இந்த வாக்கியமும் விசுவாசிகளுக்கே கூறப்பட்டிருக்கிறது. பாவிகள் ஒருவருக்கொருவர் புத்தி சொல்ல வேண்டுமென்று பவுல் இங்கு அறிவுரை கூறவில்லை. பாவிகள் ஏற்கனவே தேவனைவிட்டுப் பிரிந்து பாவத்தில் ஜீவிக்கிறவர்கள். விசுவாசிகள் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகக்கூடாது. இதற்காக ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொள்ள வேண்டும்.

4. கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ள [redacted] இருப்பதற்கு நிபந்தனை - (வசனம் 6, 12-14; 4:11; 6:4-6,12; 10:22-23, 26-29, 35-39; 12:14-15)

எபி 3:14 நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருப்போமாகில் கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்.

"கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்" - நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில் நமக்கு கிறிஸ்துவினிடத்தில் பங்கு இருக்கும். இரட்சிக்கப்படுவதற்கு விசுவாசிகள் கீழ்ப்படிய வேண்டிய நிபந்தனைகளைப் பவுல் இங்கு வலியுறுத்திக் கூறுகிறார். நாம் ஆரம்பத்தில் கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருக்க வேண்டும். இல்லையெனில் நமது இரட்சிப்பை நாம் இழந்து போகவேண்டியது வரும். (எபி 3:6)

5. இஸ்ரவேலின் தோல்வியை நினைத்துப் பார்த்து கிறிஸ்தவர்கள் எச்சரிப்புடன் இருக்குமாறு ஆலோசனை - (ரோமர் 11:17-24; 1கொரி 10:1-11)

எபி 3:15 இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், கோபமூட்டுதலில் நடந்ததுபோல உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள் என்று சொல்லியிருக்கிறதே.

எபி 3:16 கேட்டவர்களில் கோபமூட்டினவர்கள் யார்? மோசேயினால் எகிப்திலிருந்து புறப்பட்ட யாவரும் அப்படிச் செய்தார்களல்லவா?

எபி 3:17 மேலும், அவர் நாற்பது வருஷமாய் யாரை அரோசித்தார்? பாவஞ்செய்தவர்களையல்லவா? அவர்களுடைய சவங்கள் வனாந்தரத்தில் விழுந்துபோயிற்றே.

எபி 3:18 பின்னும் என்னுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லையென்று அவர் யாரைக்குறித்து ஆணையிட்டார்? கீழ்ப்படியாதவர்களைக்குறித்தல்லவா?

எபி 3:19 ஆதலால், அவிசுவாசத்தினாலே அவர்கள் அதில் பிரவேசிக்கக் கூடாமற்போனார்களென்று பார்க்கிறோம்.

எபிரெயர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 12

"இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், கோபமூட்டுதலில் நடந்ததுபோல உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்" (எபி 3:15; சங் 95:7-8) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. பவுல் மூன்றாம் முறையாக தேவனுடைய சத்தத்தைக் கேட்பது பற்றி வலியுறுத்திக் கூறுகிறார். (எபி 3:7,8,15) தேவனுடைய சத்தம் நமக்குக் கேட்கப்படும்போது நாம் அதைக் கவனித்துக் கேட்டு, அதற்குக் கீழ்ப்படிய வேண்டியது மிகவும் அவசியம்.

3 அதிகாரம்

தேவன் ஆணையிடும் காரியங்கள்

1 பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும் (எசே 18:4)

2 எனக்கு விரோதமாய் பாவம் செய்தவன் எவனோ அவன் பேரை என் புஸ்தகத்திலிருந்து கிறுக்கிப் போடுவேன் (யாத் 32:32-33; வெளி 3:5; வெளி 22:19)

3 நீதிமான் தன் நீதியைவிட்டு விலகி, அநீதிசெய்து, அதிலே செத்தால், அவன் செய்த தன் அநீதியினிமித்தம் அவன் சாவான் (எசே 18:26; எசே 33:18)

4 பாவத்தின் சம்பளம் மரணம். (ரோமர் 6:23; ரோமர் 8:12-13; கலா 5:21; கலா 6:7-8)

5 மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள் (ரோமர் 8:12-13)

6 அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை (1கொரி 6:9-11)

7 ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் அவனைத் தேவன் கெடுப்பார் (1கொரி 3:17; 1கொரி 6:9-11; ரோமர் 8:12-13; வெளி 21:8)

8 மாம்சத்தின் கிரியைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை (கலா 5:19-21)

9 ரோமர் 1:21-32 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் காரியங்களைச் செய்கிறவர்கள் மரணத்திற்குப் பாத்திரராய் இருக்கிறார்கள் (ரோமர் 1:21-32)

10 நாம் அவரை மறுதலித்தால் அவரும் நம்மை மறுதலிப்பார் (2தீமோ 2:12)

11 தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார் (ரோமர் 2:6)

12 அவனவன் செய்கிற நன்மையின்படியே காத்தரித்தில் பலனை அடைவான் (கலா 6:7-8)

மேலே கூறப்பட்டிருக்கும் வசனங்களும் இன்னும் அநேக வசனங்களும் எல்லோருக்கும் பொருந்தும். தேவன் ஆணையிடும் காரியங்கள் பாவிகளுக்கும், பரிசுத்தவான்களுக்கும் உரியவை. அவர் வாக்கு மாறாத தேவன்

4 அதிகாரம்

6. இஸ்ரவேலைப் போல பின்வாங்கிப் போய்விடாதவாறு நாம் பயந்திருக்கக்கடவோம் - (ரோமர் 11:17-24; கலா 3:7-14)

எபி 4:1 ஆனபடியினாலே, அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப் போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம்.

எபி 4:2 ஏனெனில், சுவிசேஷம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதுபோல நமக்கும் அறிவிக்கப்பட்டது; கேட்டவர்கள் விசுவாசமில்லாமல் கேட்டபடியினால், அவர்கள் கேட்ட வசனம் அவர்களுக்குப் பிரயோஜனப்படவில்லை.

"பின்வாங்கிப் போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம்" - பரிசுத்த சகோதரருக்குப் (எபி 3:1,6,12-14) பவுல் இந்த எச்சரிப்பைக் கூறுகிறார். தேவனுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் விசுவாசிகளுக்கு உண்டாயிருக்கிறது. இது நித்திய ஜீவனைப் பற்றிய வாக்குத்தத்தமாகும். (எபி 4:14; எபி 9:15; 1யோவான் 2:25)

"உங்களில் ஒருவனும் அதை அடையாமல்" விசுவாசிகள் தேவபயத்தோடு தேவனுக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கவில்லையென்றால், அவர்கள் நித்திய ஜீவனை இழந்து போவதற்கு வாய்ப்புள்ளது. (எபி 3:1,6,12-14)

"சுவிசேஷம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது" நியாயப்பிரமாணத்திற்கு 430 வருஷங்களுக்கு முன்பாக சுவிசேஷம் ஆபிரகாமிற்கு அறிவிக்கப்பட்டது. (கலா 3:8; ஆதி 12:1-3) நியாயப்பிரமாணத்தின் கீழ் ஜீவித்த இஸ்ரவேலருக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. (ரோமர் 9:6-8; ரோமர் 10:7-21)

"விசுவாசமில்லாமல்" விசுவாசத்தைக் கலக்காமல். மானிட சரீரத்தில் நாம் உட்கொள்ளும் உணவுடன் சரீரத்தில் சுரக்கும் அமிலங்கள் கலக்கும். அமிலங்கள் நாம் உட்கொள்ளும் உணவுடன் சீராகக் கலக்கவில்லையென்றால் அந்த உணவு நமது சரீரத்தில் ஜீரணமாகாது. நமக்கு ஜீவனுக்குப் பதிலாக அது மரணத்தையே கொண்டுவரும். அதுபோலவே சுவிசேஷமும் விசுவாசத்தோடு கலக்க வேண்டும். விசுவாசிக்கிறவர்களை மட்டுமே தேவன் ஆசீர்வதிப்பார் (மாற்கு 16:15-20; யோவான் 3:16; ரோமர் 1:16; ரோமர் 10:9-10; எபி 11:6; யாக் 1:5-8)

கலக்குதல் (mixed) - **συγκεράννυμι** - **synkerannymi** - 4786

வினைச்சொல் - சேர்த்து அமைத்திரு, சேர் **(to mix together; mingle; to blend together; temper by mixing) mix** (எபி 4:2) **temper together** (1கொரி 12:24)

7. விசுவாசம் இளைப்பாறுதலைத் தரும் - (ரோமர் 3:1-31; 4:1-25; 5:1-11; எபே 2:8-9)

எபி 4:3 விசுவாசித்தவர்களாகிய நாமோ அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம்; அவருடைய கிரியைகள் உலகத்தோற்றமுதல் முடிந்திருந்தும், இவர்கள் என்னுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லையென்று என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன் என்றார்.

"இவர்கள் என்னுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லையென்று என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன்" - சங் 95:11 ஆவது வசனம் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

தோற்றம் (foundation) - **καταβολή** **katabolee** 2602

பெண்பால் பெயர்ச்சொல் - தோற்றம், உண்டாதல், அஸ்திபாரம்

உலகம் (world) **κόσμος** - **kosmos** - 2889

4 அதிகாரம்

ஆண்பால் பெயர்ச்சொல் - உலகம் அலங்கரிப்பு, லௌகிகம்

8. தேவனுடைய இளைப்பாறுதலின் அம்சங்கள்

எபி 4:4 மேலும், தேவன் தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்து ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார் என்று ஏழாம்நாளைக் குறித்து ஓரிடத்தில் சொல்லியிருக்கிறார்

"தேவன் தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்து ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்" - ஆதி 2:2-3 ஆகிய வசனங்கள் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

9. இளைப்பாறுதலின் நிபந்தனை - விசுவாசத்தினால் கிறிஸ்துவில் இளைப்பாறுதலைப் பெற்றுக் கொள்ள வேண்டும் - (வசனம் 10, மத் 11:28; ரோமர் 5:2; 8:4; 25 கலா 3:14. எபே 2:8-9)

எபி 4:5 அன்றியும், அவர்கள் என்னுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லை என்றும் அந்த இடத்திலேதானே சொல்லியிருக்கிறார்

எபி 4:6 ஆகையால், சிலர் அதில் பிரவேசிப்பது இன்னும் வரப்போகிற காரியமாயிருக்கிறபடியினாலும், சுவிசேஷத்தை முதலாவது கேட்டவர்கள் கீழ்ப்படியாமையினாலே அதில் பிரவேசியாமற் போனபடியினாலும்,

எபி 4:7 இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில் உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள் என்று வெகுகாலத்திற்குப்பின்பு தாவீதின் சங்கீதத்திலே சொல்லியிருக்கிறபடி இன்று என்று சொல்வதினாலே பின்னும் ஒருநாளைக் குறித்திருக்கிறார்

"அவர்கள் என்னுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லை" - சங் 95:7-11 ஆகிய வசனங்களைப் பற்றிய குறிப்பு

"இன்னும் வரப்போகிற காரியம்" (must) - கிரேக்க மொழியில் "must" என்னும் பொருளைக் குறிப்பதற்கு வார்த்தை எதுவும் இல்லை. ஆகையினால் இது "it remains for some to enter it" என்று மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. "அதில் பிரவேசிப்பது இன்னும் வரப்போகிற காரியம்" தேவனுடைய இளைப்பாறுதலில் பிரவேசிக்குமாறு தேவன் எல்லோருக்கும் அழைப்பு கொடுக்கிறார். ஆனாலும் அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க வேண்டுமா அல்லது பிரவேசிக்க வேண்டாமா என்று மனிதன்தான் தீர்மானம் பண்ண வேண்டும். இரட்சிக்கப்பட வேண்டுமென்று விரும்புகிற அனைவரையும் இரட்சிக்க வேண்டுமென்று தேவன் சித்தம் கொண்டிருக்கிறார் (யோவான் 3:16; 1தீமோ 2:4; 2பேதுரு 3:9 வெளி 22:17)

எபிரெயர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 18

"இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில் உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்" (எபி 4:7, சங் 95:7-8). சங்கீதம் 95-ஐ பவுல் இங்கு தீர்க்கதரிசனமாகப் பயன்படுத்துகிறார். வனாந்தரத்தில் இஸ்ரவேல ஜனங்கள் தங்களுடைய இருதயங்களைக் கடினப்படுத்தி தேவனுக்கு விரோதமாக எழும்பி, தேவனைவிட்டு பின்வாங்கிப்போனார்கள். அது போன்று நாம் நமது இருதயத்தைக் கடினப்படுத்த வேண்டாம் என்று பவுல் விசுவாசிகளுக்கு எச்சரிப்பாகக் கூறுகிறார்.

V. கிறிஸ்து யோசுவாவைப் பார்க்கிலும் விசேஷித்தவர் - (வசனம் 8-13)

1. கிறிஸ்துவைப் போல யோசுவாவால் உண்மையான இளைப்பாறுதலைத் தரமுடியாது - (மத் 11:28)

எபி 4:8 யோசுவா அவர்களை இளைப்பாறுதலுக்குட்படுத்தியிருந்தால், பின்பு அவர் வேறொரு நாளைக் குறித்துச் சொல்லியிருக்கமாட்டாரே

4 அதிகாரம்

எபி 4:9 ஆகையால், தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனிவருகிறதாயிருக்கிறது.

எபி 4:10 ஏனெனில், அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவன் தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்ததுபோல, தானும் தன் கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பான்.

"யோசுவா" (Jesus) - ஆங்கிலத்தில் இந்த வார்த்தை "Joshua" என்றே இருக்க வேண்டும். செப்துவஜிந்தில் யோசுவா என்னும் பெயர் (Iesous) என்று மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. இதற்கு இயேசு அல்லது இரட்சகர் (Jesus or Savior) என்று பொருள். இந்த வழக்கத்தைப் பின்பற்றி அப்போஸ்தலர் பவுல் யோசுவாவை இங்கு இயேசு என்று அழைக்கிறார். எபி 4:8-9

யோசுவா (Joshua) - יְהוֹשׁוּעַ - yeh-ho-shoo'-ah - 3091

ஆ.யெசொ - யோசுவா

யெகோவா இரட்சிக்கிறார்

கிறிஸ்து யோசுவாவை விட மேன்மையானவர்

1 இயேசு தேவனுடைய ஒரேபேறான குமாரன். யோசுவா தேவனுடைய ஒரேபேறான குமாரனல்ல. (எபி 3:5-7, எபி 4:14)

2 கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் இப்போது இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறார்கள். (எபி 4:3,10; மத் 11:28-30) யோசுவா இஸ்ரவேல் ஜனங்களை இளைப்பாறுதலுக்குட் படுத்தவில்லை. (எபி 4:8)

3 கிறிஸ்து உண்மையான இளைப் பாறுதலைக் கொடுத்திருக்கிறார். யோசுவாவின் கீழ் இருந்த ஓய்வுநாட்கள் இந்த இளைப்பாறுதலுக்கு ஓர் அடையாளமே. (எபி 4:9-10; கொலோ 2:14-17)

4 கிறிஸ்து நித்திய ஓய்வைக் கொடுத்திருக்கிறார். யோசுவா அப்படிப்பட்ட ஓய்வைக் கொடுக்கவில்லை. (எபி 4:8-10)

5 கிறிஸ்து இம்மையிலும், மறுமையிலும் இளைப்பாறுதலைக் கொடுத்திருக்கிறார். யோசுவா அப்படிப்பட்ட இளைப்பாறுதலைக் கொடுக்கவில்லை. (எபி 4:8-10; மத் 11:28-30)

தேவனுடைய ஜனங்களுக்கு இனி வருகிறதாயிருக்கிற இளைப்பாறுகிற [illegible]

1 ஆதி 2:1-4 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருப்பது தேவனுடைய ஓய்வுநாளாகும். அது மனுஷருடைய ஓய்வுநாளல்ல.

2 யாத் 20:8-11 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருப்பது தேவனுடைய ஜனங்களுக்கு இனி வரப்போகிற இளைப்பாறும் காலமல்ல.

3 வாக்குத்தத்த தேசத்தில் கொடுக்கப்படும் இளைப்பாறுதல் தேவனுடைய ஜனங்களுக்கு இனி வரப்போகிற இளைப்பாறும் காலமல்ல. (எபி 4:7-10)

4 தேவனுடைய ஜனங்களுக்கு இனி வரப்போகிற இளைப்பாறும் காலம் என்பது கிறிஸ்துவில் நமக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் இளைப்பாறுதலாகும். (மத் 11:28-30; எபி 4:3)

5 தேவனுடைய ஜனங்களுக்கு இனி வரப்போகிற இளைப்பாறும் காலம் என்பது மறுமையில் நாம் அனுபவிக்கப் போகிற நித்திய இளைப்பாறுதல் ஆகும். (எபி 3:11,18; எபி 4:1,5,9-11; வெளி 14:13)

4 அதிகாரம்

"இளைப்பாறு" என்னும் வினைச்சொல்லின் கிரேக்க வார்த்தைகள்

1 இளைப்பாறு (Rest) - **ἀναπαύω** - **anapauoo** - 373

வினைச்சொல் - இளைப்பாறுதல் தா இளைப்பாறு, ஆறுதலடை, தங்கியிரு **(to cause, permit one to cease from labor)** (மத் 11:28; மத் 26:45 மாற்கு 6:31; மாற்கு 14:41 1பேதுரு 4:14; வெளி 6:11 வெளி 14:13)

2 இளைப்பாறு (quiet) - **καταπαύω** - **katapauoo** - 2664

வினைச்சொல் - அமர்ந்து இளைப்பாறு, ஓய்ந்திரு **(to make quiet; cause one to be at rest)** (எபி 4:4,8)

3 தங்கு (rest upon) - **ἐπαναπαύομαι** - **epanapauomai** - 1879

வினைச்சொல் - பற்றுதலாய் இரு தங்கு **(rest upon, cause to rest upon)** (லூக்கா 10:6; ரோமர் 2:17)

4 ஓய்ந்திரு (cease) - **ἡσυχάζω** **heesychazoo** - 2270

வினைச்சொல் - பேசாமல் இரு, ஓய்ந்திரு, அமைதியாயிரு **(cease from labor)** (லூக்கா 23:56)

5 தங்கியிரு (lodge) - **κατασκηνόω** **kataskeenooo** 2681

வினைச்சொல் - அடையத்தக்கதாகயிரு, தங்கியிரு **(lodge, pitch one's tent)** (அப 2:26)

6. தங்கு (dwell) - **ἐπισκηνόω** - **episkeenooo** - 1981

வினைச்சொல் - தங்கு **(take possession of, dwell in, on)** (2கொரி 12:9)

"இளைப்பாறுதல்" என்னும் பெயர்ச்சொல்லின் கிரேக்க வார்த்தைகள்

1 இளைப்பாறுகிற காலம் (sabbath rest) - **σαββατισμός** - **sabbatismos** - 4520

ஆண்பால் பெயர்ச்சொல் - இளைப்பாறுகிற காலம் **(sabbath rest; keeping the sabbath; rest from toils and trouble, in the life to come)** (எபி 4:9)

2 இளைப்பாறுதல் (cessation) - **ἀνάπαυσις** - anapausis - 372

பெண்பால் பெயர்ச்சொல் - இளைப்பாறுதல், ஓய்வு **(cessation of motion, business, labor)** (மத் 11:29; மத் 12:43; வெளி 4:8 வெளி 14:11)

3 இளைப்பாறுதல் (put to rest) - **κατάπαυσις** - katapausis - 2663

பெண்பால் பெயர்ச்சொல் - தங்கியிருத்தல், இளைப்பாறுதல் **(put to rest; resting place, cessation from labor so that the weary body may be rested and refreshed)** (அப 7:49; எபி 3:11,18; எபி 4:1,3,5,10,11)

4. கண்டிப்பு இல்லாமை (relief) - **ἄνεσις** - **anesis** - 425

பெண்பால் பெயர்ச்சொல் - கண்டிப்பு இல்லாமை, அமைதி, இளைப்பாறுதல், சகாயம் **(relief)** (2கொரி 2:13; 2கொரி 7:5; 2தெச 1:7)

4 அதிகாரம்

5 இளைப்பாறுதல் (reposing) κοίμησις - koimeesis - 2838

பெண்பால் பெயர்ச்சொல் - இளைப்பாறுதல் (reposing, reclining) (யோவான் 11:13)

6. சமாதானம் (peace) - εἰρήνη - eireenee - 1515

பெண்பால் பெயர்ச்சொல் - சமாதானம், பத்திரம் "peace", rest (அப் 9:31)

2. விசுவாசத்தினால் மாத்திரமே இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்க முடியும் -

கொலோ 2:14-17 கலா 4:9-10 ரோமர் 14:5-6

எபி 4:11 ஆகையால், அந்த திருஷ்டாந்தத்தின்படி, ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்து போகாதபடிக்கு, நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம்.

எபி 4:12 தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.

எபி 4:13 அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது. அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்.

"இளைப்பாறுதல்" (rest) - இது ஓய்வுநாளை விட மேன்மையானது. ஓய்வுநாளை யாரும் ஆசரிக்கலாம். ஒருவர் ஓய்வுநாளில் பிரவேசிப்பதற்கு அவர் வேலை செய்திருக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவின் இளைப்பாறுதல் என்பது ஓய்வுநாளைவிட மேன்மையானது. இது நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வாக்குத்தத்தமாகும். பின்வாங்கிப்போனவன் தேவனுடைய இளைப்பாறுதலில் பிரவேசிக்க மாட்டான். ஆகையினால நாம் மிகுந்த எச்சரிப்போடும் பயத்தோடும் தேவனுடைய இளைப்பாறுதலில் பங்கு பெறுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்க வேண்டும். எபி 4:1

தேவனுடைய வார்த்தையைப் பற்றிய [redacted]

1 ஜீவனுள்ளது

2 வல்லமையுள்ளது

3 இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானது

4 ஆத்துமாவையும் ஆவியையும் பிரிக்கத் தக்கதாக உருவக் குத்துகிறது

5 கணுக்களையும் ஊனையும் பிரிக்கத் தக்கதாக உருவக் குத்துகிறது

6 இருதயத்தின் நினைவுகளை வகையறுக்கிறது.

7 யோசனைகளை வகையறுக்கிறது

ஜீவித்திரு (to live) - ζάω - zaoo - 2198

வினைச்சொல் - பிழைத்திரு, உயிரோடிரு, ஜீவித்திரு, வாழ்ந்திரு, சுகசரி, உண்டாயிரு, ஜீவனம் பண்ணு, ஜீவன் (to live; to be full of vigor; be strong; powerful, active) "quick" (எபி 4:12, அப் 10:42; 2தீமோ 4:1; 1பேதுரு 4:5; "lively" (அப் 7:38, 1பேதுரு 1:3, 1பேதுரு 2:5; "to live", "be alive"

ஜீவன் (living) ζωή zooee - 2222

பெண்பால் பெயர்ச்சொல் - ஜீவன், இம்மை (வெளி 4:6)

4 அதிகாரம்

வல்லமை (Powerful) - ἐνεργής - energees 1756

பொருள் - அநுகூலமான, பயனுள்ள வல்லமையான "effectual" (1கொரி 16:9; பிலே 1:6)

இருபுறமும் கருக்குள்ளது (twoedged) - δίστομος - distomos - 1366

பொருள் - இருபுறமும் (வெளி 1:16 வெளி 2:12)

பட்டயம் (sword) - Μάχαιρα - Machaira - 3162

பொருள் பொருள் - பட்டயம் கத்தி (எபி 4:12; எபி 11:34,37 எபே 6:17; மத் 10:34; மத் 26:47-55 மாற்கு 14:43-48; லூக்கா 21:24, லூக்கா22:36-52; யோவான் 18:10-11 அப 12:2; அப 16:27; ரோமர் 8:35, ரோமர் 13:4, வெளி 6:4 வெளி 13:10,14

தேவனுடைய வார்த்தையின் விவரணங்கள்

1 கன்மலையை நொறுக்கும் சம்மட்டி (எரே 23:29)

2 அக்கினி (எரே 23:29)

3 கண்ணாடி (யாக் 1:23)

4 அழிவில்லாத வித்து (1பேதுரு 1:23)

5 தண்ணீர் (எபே 5:26)

6 தீபம் (சங் 119:105)

7 மாரியும் உறைந்த மழையும் (ஏசா 55:10)

8 பட்டயம் (எபி 4:12, எபே 6:17)

9 எற்றப்பட்ட நாண் (ஆப 3:9)

10 பொன் (சங் 19:7-10)

11 விசுவாசத்தையும் நித்திய ஜீவனையும் கொடுக்கும் வல்லமை (ரோமர் 10:17 1பேதுரு 1:23)

12 ஆவிக்குரிய போஜனம்

(1) களங்கமில்லாத ஞானப்பால் (1பேதுரு 2:2)

(2) அப்பம் (மத் 4:4)

(3) பலமான ஆகாரம் (எபி 5:11-14

(4) மதுரமுள்ளதேன் (சங் 19:10

"ஆத்துமாவையும் ஆவியையும் உருவக் குத்துகிறது" - மனுஷருடைய சரீரத்திலுள்ள கணுக்களையும் ஊனையும் பிரித்து ஆவியையும் ஆத்துமாவையும் உருவக் [illegible]. தேவனுடைய வார்த்தையானது மனுஷனுக்கு உள்ளாக இருக்கும் ஆத்துமாவையும் இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறது.

சிருஷ்டி (creature) - κτίσις - ktisis - 2937

பொருள் பொருள் - சிருஷ்டி உண்டாக்குதல், கட்டளை (created thing) (ரோமர் 8:22 சிருஷ்டிகளுடைய சிந்தனைகள் ஆவல்கள், மனதின் எண்ணங்கள் எல்லாமே தேவனுடைய கண்களுக்கு முன்பாக வெளியரங்கமாக இருக்கிறது.

VI. கிறிஸ்து ஆசாரியரைப் பார்க்கிலும் விசேஷித்தவர்- (4:14-5:10, 7:1-8:6

1. கிறிஸ்து பாவமில்லாத இரட்சிக்கக் கூடிய பிரதான ஆசாரியர் 4:1

எபி 4:14 வானங்களின் வழியாய் பரலோகத்திற்குப்போன தேவ குமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக் கடவோம்.

4 அதிகாரம்

எபி 4:15 நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல் எல்லாவிதத்திலும் நம்மைப்போல சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்

எபி 4:16 ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக் கடவோம்

"தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால்" - இயேசு கிறிஸ்து நமது பிரதான ஆசாரியர் என்று பவுல் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறார் (எபி 2:17; எபி 3:1) ஆயினும் தனது கருத்தைப் பவுல் இதுவரையிலும் நிரூபிக்கவில்லை. எபி 4:13-10:39 ஆகிய வசனங்களில் பவுல் தனது கருத்தைத் தெளிவாக விளக்கிக் கூறுகிறார்

கிறிஸ்து மற்ற ஆசாரியர்களைவிட மேலானவர்

1 இயேசு கிறிஸ்து மட்டுமே தேவனுடைய ஒரேபேறான குமாரன (எபி 4:14; எபி 1:5,7; எபி 5:5; யோவான் 3:16)

2 லேவிக்குரிய ஆசாரிய வம்சத்தில் இயேசு கிறிஸ்து பிறக்கவில்லை (எபி 7:11-14; மத் 1:1)

3 நமக்கு ஊழியம் செய்வதற்காக இயேசு கிறிஸ்து வானங்கள் வழியாய் பரலோகத்திற்குப் போனார் (எபி 4:14; எபி 7:25; ரோமர் 8:34)

4 இயேசு கிறிஸ்து பாவமில்லாதவராய் இருக்கிறார் (எபி 4:3,15)

5 இயேசு கிறிஸ்து எப்பொழுதும் உயிரோடு இருக்கிறவராய் இருக்கிறார் (எபி 4:16; எபி 7:25)

6 இயேசு கிறிஸ்து மனுஷரில் தெரிந்து கொள்ளப்படவும் இல்லை, மனுஷரால் நியமிக்கப்படவும் இல்லை. தேவனே இயேசு கிறிஸ்துவை உயர்த்தி, வானத்திலிருந்து அவரை அனுப்பி பிரதான ஆசாரியராக நியமித்திருக்கிறார் (எபி 5:1,5; யோவான் 3:16; அப் 10:38)

7 இயேசு கிறிஸ்து மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராக இருக்கிறார் (எபி 5:6,10,20)

8 இயேசு கிறிஸ்து பூரணரானார் (எபி 5:9)

9 தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்கு இயேசு கிறிஸ்து காரணராக இருக்கிறார் (எபி 5:9)

10 தேவனிடத்தில் சேரும் வழியை இயேசு கிறிஸ்து உண்டுபண்ணியிருக்கிறார் (எபி 4:14-16; எபி 10:19-23)

போதல் (passed into) - διέρχομαι - dierchomai - (1330)

வினைச்சொல் - நுழை, கட, போ, பிரயாணம் பண்ணு (go, pass through; arrive at) (எபி 4:14; லூக்கா 4:30; 1கொரி 10:1; 1கொரி 16:5)

அறிக்கை (profession) - ὁμολογία - homologia - (3671)

பெண்பால் பெயர்ச்சொல் - அறிக்கை (எபி 3:1)

பரிதபித்தல் (touched) - συμπαθέω - sympatheoo (4834)

வினைச்சொல் - பரிதபி (sympathize) (எபி 4:15; எபி 10:34)

"பலவீனங்கள்" (infirmities) - (மத் 8:17)

4 அதிகாரம்

"எல்லாவிதத்திலும் நம்மைப்போல சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியர்" - மனுஷரைப் போலவே இயேசு கிறிஸ்துவும் எல்லாக் காரியங்களிலும் சோதிக்கப்பட்டார். ஆயினும் அவர் ஒரு பாவமும் செய்யவில்லை.

சேருதல் (come) - προσέρχομαι - proserchomai - 4334

வினைச்சொல் - சேர் (draw near) (எபி 4:16; 7:25; எபி 10:1,22; எபி 11:6; எபி 12:18,22)

தைரியம் (boldly) - παρρησία - parreesia - 3954

பெண்பால் பெயர்ச்சொல் - வினையடையாகவும் பயன்படும் - தாராளம், வெளிப்படுத்துதல், தெளிவு, வெளிப்படை, தைரியம் (அப் 4:13)

"கிருபாசனம்" (throne of grace) - கிருபாசனத்திலிருந்தே எல்லாக் கிருபைகளும் புறப்பட்டு வருகிறது. இரண்டு கேருபீன்களுக்கு நடுவில் இஸ்ரவேல் ஜனத்தாரின் ஆசரிப்புக் கூடாரத்தில் தேவனுடைய கிருபாசனம் இருந்தது. பிரதான ஆசாரியர் வருஷத்திற்கு ஒரு முறை பாவநிவாரண இரத்தத்தோடு இங்கு பிரவேசிக்கலாம். இவர் ஏதாவது பாவம் செய்திருந்தால் மகா பரிசுத்த ஸ்தலத்தில் மடிந்து போவார். ஆகையினால் பிரதான ஆசாரியர் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் போகும்போது மிகுந்த நடுக்கத்தோடும் பயத்தோடும் போவார். புதிய உடன்படிக்கையின் பிரகாரம் தேவனுடைய கிருபாசனத்தண்டையில் விசுவாசிகள் நடுக்கமில்லாமலும், பயமில்லாமலும் தைரியமாகவும் அனுதினமும் எப்பொழுது வேண்டுமானாலும் போகலாம். இந்தச் சுதந்தரத்தையும், நம்பிக்கையையும் விடுதலையையும் விசுவாசிகள் முடிவுபரியந்தம் காத்துக் கொள்ள வேண்டும். (அப் 4:13)

தேவனிடமிருந்து நாம் எதிர்பார்க்கும் ஆசீர்வாதங்கள்

1. இரக்கம்
2. கிருபை

இரக்கம் (pity) - ἔλεος - eleos - 1656

பெயர்ச்சொல் - இரக்கம் பாவவேறுபாடற்ற (mercy, pity, compassion) (எபி 4:16; மத் 9:13; மத் 12:7; மத் 23:23; லூக்கா 1:50,54,58,72,78; லூக்கா 10:37; ரோமர் 9:23; ரோமர் 11:31; ரோமர் 15:9; கலா 6:16; எபே 2:4; 1தீமோ 1:2; 2தீமோ 1:2,16,18; தீத்து 1:4; தீத்து 3:5; யாக் 2:13; யாக் 3:17; 1பேதுரு 1:3; 2யோவான் 1:3; யூதா 1:2,21; யாத் 34:6-7; உபா 4:31; 2நாளா 30:9; நெகே 9:17; சங் 86:15; சங் 103:17; சங் 111:4; சங் 130:7; சங் 145:8)

சகாயம் செய்யும் கிருபையை அடையும் வழிகள்

1. கிருபாசனம் தேவனைச் சந்திக்கும் இடம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். (எபி 4:16)

2. இயேசு கிறிஸ்துவின் பாவநிவாரண இரத்தத்தின் மூலமாக நாம் கிருபாசனத்தண்டையில் தைரியத்தோடு வரலாம் என்னும் நம்பிக்கையும் நிச்சயமும் நமக்கு வரவேண்டும். (எபி 10:19-20)

3. கிருபாசனத்தண்டையில் கீழ்ப்படிதலோடு வரவேண்டும். (எபி 4:16; எபி 10:22-23)

4. தேவைப்படும் சமயத்தில் இரக்கமும், சகாயம் செய்யும் கிருபையும் வேண்டுமென்று தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ண வேண்டும். (எபி 4:16)

5. தைரியமாய் கிருபாசனத்தண்டையில் சேரவேண்டும். (எபி 4:16)

எபிரெயர் · தொகுப்புரை

4 அதிகாரம்

6 நமது தேவைகளை விண்ணப்பம் பண்ணும்போது பக்தியோடும் உண்மையோடும் இருக்க வேண்டும் (யாக் 5:16, லூக்கா 11:5-13)

7 ஏற்ற சமயத்தில் நாம் தேவனிடமிருந்து பதிலைப் பெறுவோம் என்று விசுவாசிக்க வேண்டும் (எபி 11:6. யாக் 1:5-8; மத் 17:20; மத் 21:22; மாற்கு 11:22-24)

5 அதிகாரம்

2. பூமியின் ஆசாரியர்கள் பாவமுடையவர்கள் - மனுஷரை இவர்களால் இரட்சிக்க முடியாது - (7:23, 27-28)

எபி 5:1 அன்றியும், மனுஷரில் தெரிந்து கொள்ளப்பட்ட எந்தப் பிரதான ஆசாரியனும் பாவங்களுக்காகக் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தும்படி மனுஷருக்காக தேவ காரியங்களைப் பற்றி நியமிக்கப்படுகிறான்.

எபி 5:2 தானும் பலவீனமுள்ளவனானபடியினாலே, அறியாதவர்களுக்கும் நெறிதப்பிப் போனவர்களுக்கும் இரங்கத் தக்கவனாயிருக்கிறான்.

எபி 5:3 அதினிமித்தம் அவன் ஜனங்களுடைய பாவங்களுக்காகப் பலியிட வேண்டியதுபோல தன்னுடைய பாவங்களுக்காகவும் பலியிட வேண்டியதாயிருக்கிறது.

"மனுஷருக்காக தேவகாரியங்களைப்பற்றி நியமிக்கப்படுகிறான்" - மனுஷரில் தெரிந்து கொள்ளப்பட்ட எந்தப் பிரதான ஆசாரியனும் பாவங்களுக்காகக் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தும்படி நியமிக்கப்பட்டிருக்கிறான் (லேவி 21:10)

செலுத்துதல் (offer) - προσφέρω
prospheroo - 4374

வினைச்சொல் - கொடு, கொண்டுவா, செலுத்து, ஒப்புவி to offer (எபி 5:1,3,7; எபி 8:3,4; எபி 9:7,28; எபி 10:1,12; எபி 11:4,17); deal with (எபி 12:7), put to (யோவான் 19:29); present unto (மத் 2:11); do (யோவான் 16:2); bring to (மத் 4:24; மத் 5:23; மத் 8:16; மத் 9:2,32; மத் 12:22; மத் 14:35; மத் 17:16; மத் 18:24; மத் 19:13; மத் 22:19; மத் 25:20; மாற்கு 10:13; லூக்கா 12:11; லூக்கா 18:15; லூக்கா 23:14)

இரங்கத்தக்கவன் (compassion)
μετριοπαθέω
metriopatheoo 3356

வினைச்சொல் - இரங்கத் தக்கவனாயிரு (to be moderate, merciful toward) - பிரதான ஆசாரியன் நெறி தப்பிப் போனவர்களுக்கும் அறியாதவர்களுக்கும் இரங்குகிறான். இவனும் பலவீனமுள்ளவன். தண்டிக்க வேண்டிய இடத்தில் மன்னிப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறான் (எபி 5:2-3)

"அறியாதவர்கள்" (ignorant) - (லேவி 4:2,22,27; எண் 15:28)

"நெறிதப்பிப் போனவர்கள்" (out of the way) - (லேவி 5:1-6:7)

"தானும் பலவீனமுள்ளவனானபடியினாலே" - பிரதான ஆசாரியனும் பலவீனமுள்ளவன். ஆகையினால் மற்றவர்களை மன்னித்து அவர்களைத் தண்டிப்பதற்கு நிதானமாக நடந்து கொள்கிறான் (எபி 5:2-3)

3. ஆரோனின் ஆசாரிய முறைமையைவிட கிறிஸ்துவின் ஆசாரிய முறைமை மேன்மையானது - தேவன் கிறிஸ்துவை உயர்த்தினார் - (6:20; 7:1-11, 20-28; 8:1-6)

எபி 5:4 மேலும், ஆரோனைப்போல தேவனால் அழைக்கப்பட்டாலொழிய, ஒருவனும் இந்தக் கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை.

எபி 5:5 அந்தப்படியே கிறிஸ்துவும் பிரதான ஆசாரியராகிறதற்குத் தம்மைத்தாமே உயர்த்தவில்லை; நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்று அவரோடே சொன்னவரே அவரை உயர்த்தினார்.

5 அதிகாரம்

எபி 5:6 அப்படியே வேறொரு இடத்திலும்: நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று சொல்லியிருக்கிறார்.

எபிரெயர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 14

"நீர் என்னுடைய குமாரன் இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன்" (எபி 5:5; சங் 2:7) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (அப் 13:33)

எபிரெயர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 15

"நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர்" (எபி 5:6; சங் 110:4) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"என்றென்றைக்கும்" (for ever) இயேசு கிறிஸ்து என்றென்றைக்கும் ஆசாரியராக இருக்கிறார். ஆகையினால் நித்திய ஆராதனை இருக்கும் என்பது தெளிவாகிறது. (எபி 5:6; எபி 6:20; எபி 7:3,17,21).

முறைமை (order) - τάξις - taxis - 5010

பலவேறுபாடற்ற சொல்

முறைமை, கிரமம், ஒழுங்கு (order, arrangement, rank, position) (எபி 5:6,10; எபி 6:20; எபி 7:11,17,21; லூக்கா 1:8; 1கொரி 14:40; கொலோ 2:5) இயேசு கிறிஸ்து என்றென்றைக்கும் ஆசாரியராக இருக்கிறபடியினால் இனிமேல் ஆசாரிய சந்ததி எதுவும் தேவைப்படுவதில்லை. மனுஷர் தேவனிடத்தில் நேரடியாகச் சேரலாம். ஆகையினால் தேவனுக்கும் மனுஷருக்கும் நடுவில் மனுஷ மத்தியஸ்தர் இனிமேல் தேவையில்லை.

"மெல்கிசேதேக்கு" (Melchisedec) - (எபி 7:1)

4. **கிறிஸ்து பரிபூரணமானவர், மனுஷரை இரட்சிக்கக்கூடியவர் - மற்ற ஆசாரியர்களால் மனுஷரை இரட்சிக்க முடியாது** - (7:25-28; 8:1-6; 9:6-28; 10:10-23)

எபி 5:7 அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு,

எபி 5:8 அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு,

எபி 5:9 தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி,

எபி 5:10 மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான பிரதான ஆசாரியர் என்று தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார்.

கிறிஸ்துவைப் பற்றிய சத்தியங்கள்

1. இயேசு கிறிஸ்து தமது மாம்சத்தில் இருந்த நாட்களில் பாடுகளை அனுபவித்தார் (எபி 5:7)

2. தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி வேண்டுதல் செய்தார் (எபி 5:7)

3. மரணத்திலிருந்து இரட்சிக்குமாறு ஜெபித்தார். ஆனால் சிலுவை மரணத்திலிருந்து தம்மைத் தப்பிக்க வைக்குமாறு இயேசு கிறிஸ்து ஜெபிக்கவில்லை. அவருக்கு சிலுவை மரணம் உண்டாயிற்று.

எபிரெயர் - தொகுப்புரை

5 அதிகாரம்

4 கல்வாரி சிலுவையில இயேசு கிறிஸ்து மரிப்பதற்கு முன்பாக கெத்செமனே தோட்டத்தில சாத்தானின் வல்லமைகள் அவரைக் கொன்றுபோட முயற்சி பண்ணிற்று. இந்த மரணத்திலிருந்து தம்மை இரட்சிக்குமாறு இயேசு கிறிஸது ஏறெடுத்த விண்ணப்பம் கேட்கப்பட்டு. அவர் இரட்சிக்கப்பட்டார் கலவாரி சிலுவையிலே உலகத்தின் பாவத்திறகு நிவாரணமாக இயேசு கிறிஸது பலியானார் தம்மைக் குறித்த தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றினார் (மத் 26:39; லூக்கா 22:43-44 பேதுரு 2:24; கலா 3:13)

5 இயேசு கிறிஸ்து தேவகுமாரனாய இருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்படிதலைக் கற்றுக்கொண்டார்

6 தம்முடைய பாடுகளினால இயேசு கிறிஸ்து பூரணராக்கப்பட்டார்

7 தமக்குக் கீழ்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணமானார்

8 மெல்கிசேதேக்கின முறைமையின படியான பிரதான ஆசாரிய என்று தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார

VII. எச்சரிப்புக்களும் புத்திமதிகளும் (5:11-6:20)

1. எபிரெய கிறிஸ்தவரின் ஆவிக்குரிய நிலைமை

எபி 5:11 இந்த மெல்கிசேதேக்கைப்பற்றி நாம் விஸ்தாரமாய்ப் பேசலாம். நீங்கள் கேளவியில மந்தமுள்ளவர்களானபடியால், அதை விளங்கப்பண்ணுகிறது அரிதாயிருக்கும்.

எபி 5:12 காலத்தைப் பார்த்தால் போதகராயிருக்க வேண்டிய உங்களுக்கு தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்க வேண்டியதாயிருக்கிறது நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத் தக்கவர்களானீர்கள்

எபி 5:13 பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிற படியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான்

எபி 5:14 பலமான ஆகாரமானது [illegible] தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானேந்திரியங் களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்.

"அதை விளங்கப்பண்ணுகிறது அரிதாயிருக்கும்" - கிறிஸ்துவைப் பற்றி நாம் விஸ்தாரமாய் பேசலாம் அவை இரகசியமல்ல. ஆனாலும் கேட்கிறவர்கள் கேளவியில மந்தமுள்ளவர்களாக இருக்கிறார்கள் ஆகையினால இயேசு கிறிஸதுவைப் பற்றிய சத்தியத்தை அவர்களுக்கு விளங்கப் பண்ணுகிறது அரிதாயிருக்கும்

மந்தம் (dull) - νωθρός - noothros - 3576

பொருள் - மந்தமுள்ள, அசதியான dull (எபி 5:11) slothful (எபி 6:12) - இயேசு கிறிஸதுவைப் பற்றிய சத்தியம் குழப்பமானதல்ல ஆனால் இயேசு கிறிஸதுவைக் குறித்து கேளவிப் படுகிறவர்கள் தங்களுடைய மார்க்கப் பாரம்பரியங்களின நிமித்தமாக குழப்பமடைந்திருக்கிறார்கள் ஆகையினால அவர்கள் கேள்வியில மந்தமுள்ளவர்களாக இருக்கிறார்கள் (மத 13:14-15 அப 28:27)

"காலத்தைப் பார்த்தால போதகராயிருக்க வேண்டிய உங்களுக்கு" விசுவாசிகள் என்று அவர்கள் தங்களைப் பல வருஷங்களாக கூறி வருகிறார்கள் தங்கள் அனுபவத்தின பிரகாரம் அவர்கள் போதகராக இருக்க வேண்டும். ஆனால் அவர்கள் சத்தியங்களைக் கேட்பதிலும், புரிந்து கொள்வதிலும் மந்தமுள்ளவர்களாக இருக்கிறார்கள் அவர்களுக்கு தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதாயிருக்கிறது. அவர்கள் இன்னும் ஆவிக்குரிய ரீதியாக வளர்ச்சி பெறவில்லை பால உண்ணும் குழந்தையைப் போல வளர்ச்சியற்றிருக்கிறார்கள்

எபிரெயர் தொகுப்புரை

5 அதிகாரம்

(1கொரி 3:2; 1பேதுரு 2:2). "பாலை உண்ணத் தக்கவர்கள்" என்பது எபிரெய வழக்குச் சொல். ஒரு மார்க்கத்தின் ஆரம்ப நிலையை இது குறிப்பிடுகிறது. துவக்க நிலையில் உள்ளவர்களைக் குறிப்பதற்கு இந்த வாக்கியத்தை யூதமார்க்கத்து ஆசிரியர்கள் பயன்படுத்தினார்கள்.

பழக்கமில்லாதவன் (unskilful) - **ἄπειρος** - apeiros - 552

பெயரடை - பழக்கமில்லாத (inexperienced)

குழந்தைகளின் சுபாவங்கள்

1. கேள்வியில் மந்தமுள்ளவர்கள் (எபி 5:11)
2. நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவர்கள் (எபி 5:13)

பூரண வயது (full age) - **τέλειος** - teleios - 5046

பெயரடை - பூரண, பரிபூரணமான, நிறைவான, தேறின, உத்தமமான (one who has reached full maturity as to age, qualification, by initiation) (1கொரி 14:20; பிலி 3:15)

பூரண வயதுள்ளவர்களின் சுபாவங்கள்

1. போதகராக இருக்கிறார்கள்
2. நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாக இருக்கிறார்கள்

ஞானேந்திரியங்கள் (senses) - **αἰσθητήριον** - aistheeteerion - 145

பால்வேறுபாடு இல்லாத பெயர்ச்சொல் - ஞானேந்திரியங்கள் (organs of sense, as the eyes, ears, nose, tongue, palate, fingers, and the nervous system in general) - மனுஷருடைய ஐம்புலன்கள் அவர்களுடைய ஆத்துமாக்களோடு தொடர்புடையவை. ஐம்புலன்கள் மூலமாக மனுஷருடைய ஆத்துமா ஆசீர்வதிக்கப்பட்டு பூரணமடைகிறது.

முயற்சிசெய்தல் (exercised) - **γυμνάζω** - gymnazoo - 1128

வினைச்சொல் - முயற்சிபண்ணு, பழகு (to train stripped of clothes, as in gymnastic exercises) (எபி 5:14; எபி 12:11; 1தீமோ 4:7; 2பேதுரு 2:14)

பகுத்தறிதல் (discern) - **διάκρισις** - diakrisis - 1253

பெண்பால் பெயர்ச்சொல் - குற்றமாய் நிதானித்தல், பகுத்தறிதல் (to discriminate; the faculty of distinguishing, judgment) (எபி 5:14; ரோமர் 14:1; 1கொரி 12:10)

எபிரேயர்- தொகுப்புரை

6 அதிகாரம்

2. மறுதலித்துப் போகக்கூடாது என்று கிறிஸ்தவருக்கு எட்டு அம்ச கட்டளை

எபி 6:1 ஆகையால் கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களை நாம் விட்டு செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல் தேவன்பேரில வைக்கும் விசுவாசம்.

எபி 6.2 ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம், கைகளை வைக்குதல மரித்தோரின் உயிர்த்தெழுதல நித்திய நியாயத்தீர்பபு என்பவைகளாகிய அஸதிபாரத்தை மறுபடியும் போடாமல பூரணராகும்படி கடந்து போவோமாக.

எபி 6.3 தேவனுக்குச் சித்தமானால இப்படியே செய்வோம்.

"ஆகையால" - விசுவாசிகள் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில முன்னேற்றம் இல்லாமல இன்னும் ஆவிக்குரிய அனுபவத்தில குழந்தை பருவத்திலேயே இருக்கிறார்கள "ஆகையால" என்று கூறி பவுல் இந்த அதிகாரத்தை ஆரம்பிக்கிறார

ஆவிக்குரிய முதிர்ச்சி பெறுவதற்கு நாம் செய்ய வேண்டிய காரியங்கள்

1 மூல உபதேச வசனங்களை நாம் விட்டு விட வேண்டும் - தொடர்ந்து குழந்தைப பருவத்திலேயே நிலைத்திருக்கக்கூடாது.

2 பூரணராகும்படி நாம் கடந்து போக வேண்டும் - பலமான போஜனத்தை உட்கொள்ளும் அளவிற்கு, உபதேசம் பண்ணும் அளவிற்கு நாம் வளர்ச்சி பெறும் வரையிலும் ஓய்ந்திருக்க கூடாது. (எபி 5:13 14; எபி 6:1)

கடந்து போதல் (go on) - φέρω - pheroo - 5342

வினைச்சொல் - கொண்டு வா கொண்டுபோ, சுமந்து கொள், பலன் தா, கொடு, காட்டு, நீட்டு, அடி தாங்கு பொறுமையாயிரு, உண்டாக்கு.

அசை, ஏவு, சகி - காற்றினால் ஒரு படகு செலவதைப் போன்று கடந்து செல்லுதல் (அப் 27:15-17 பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளை முன்னேறிச் செல்ல வைக்கும் வல்லமையாகக் கிரியை நடப்பிக்கிறார் (அப 2:2-4,2பேதுரு 1:21 ரோமர் 8:14

போடுதல் (laying) - καταβάλλω - kataballoo - 2598

வினைச்சொல் - தள்ளு, போடு (casting down, overthrow) (மத் 13:35, எபி 6:1; 2கொரி 4:9; வெளி 12:10) - ஏறகெனவே போட்ட அஸ்திபாரத்தை மறுபடியும் போடக் கூடாது அதே சமயத்தில் ஏறகெனவே போட்ட அஸ்திபாரத்தை அழித்துப் போடவும் கூடாது. (எபி 6:1-2)

அஸ்திபாரம (foundation) - θεμέλιον - themelion - 2310

பெயர்ச்சொல - ஆதாரம், அஸ்திபாரம் (மத் 13:35)

கிறிஸ்தவ மார்க்கத்தின் அஸ்திபாரங்கள்

1 மனந்திரும்புதல் (Repentance) (எபி 6:1; மத் 4:17)

2 இயேசு கிறிஸ்துவின மூலமாக தேவனிடத்தில வைக்கும் நம்பிக்கை (Faith in God through Christ) (எபி 6:1 ரோமர் 3:24-25 ரோமர் 5:1-11 1கொரி 1:18-24 1கொரி 15:1-8

3 ஸ்நானங்கள் (Baptisms) (மத் 3:6

4 கைகளை வைக்குதல் (Laying on Hands)

5 மரித்தோரின் உயிர்த்தெழுதல் (Resurrection of the dead) (எபி 6:2; 1கொரி 15, 1தெச 4:13-16, 2தெச 2:7)

6 நித்திய நியாயத்தீர்பபு (Eternal judgment) (எபி 6:2, மத் 25:46, வெளி 14:9-11; வெளி 20:11-15 ஏசா 66:22-24

எபிரெயர்– தொகுப்புரை

6 அதிகாரம்

பலவிதமான ஸ்நானங்கள்

1 இயேசு கிறிஸ்துவிற்குள் ஞானஸ்நானம் (Baptism into Christ)

2 தண்ணீர் ஞானஸ்நானம் (Water baptism) (மத் 28:19)

3 ஆவியானவரின் ஞானஸ்நானம் (Spirit baptism) (மத் 3:6)

எப்பொழுது கைகளை வைக்க வேண்டும்

மனுஷரை ஆசீர்வதிக்கும்போது (Blessing men) (ஆதி 48:14)

2 காணிக்கைகளைச் செலுத்தும்போது (Making offerings) (லேவி 8:10)

3 பிரதிஷ்டை பண்ணும்போது Ordaining (எண் 27:18,23)

4 ஆவியினால் நிறைவதற்கு ஜெபிக்கும் போது(ImpartingSpirit) (உபா 34:9)

5 சிறுபிள்ளைகளை ஆசீர்வதிக்கும்போது (Blessing children) (மத் 19:15)

6 வியாதியஸ்தரைச் சொஸ்தமாக்கும் போது (Healing sick) (மாற்கு 6:25, மாற்கு 16:18; லூக்கா 4:40, லூக்கா 13:13, அப் 5:12; அப் 28:8)

7 அற்புதங்களைச் செய்யும்போது (Performing miracles) (அப் 19:11)

8 வரங்களுக்காக ஜெபிக்கும்போது (Imparting gifts) (1தீமோ 4:14, 2தீமோ 1:6, எபி 6:2)

9 பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ் நானத்திற்காக ஜெபிக்கும் போது (Imparting the Spirit baptism) (அப் 8:17-24; அப் 9:17; அப் 19:6)

செத்தது(dead)- νεκρός- nekros - 3498

பெரடை - மரித்தோரான, செத்துப்போன

கிரியைகள் (works) - ἔργον - ergon - 2041

பாலவேறுபாடற்ற பெயர்ச்சொல் - கிரியை, வேலை, ஊழியம் வேலைப்பாடு (எபி 9:14, பழைய சுபாவத்தின் கிரியைகள் இதனால் மரணம் உண்டாகும். பிரமாணங்களை மீறுவதினாலும் பாவம் செய்வதினாலும்மரணம் உண்டாகிறது (எபே 2:1-8; கலா 5:19-21; ரோமர் 1:21-32; 1கொரி 6:9-11 கொலோ 3:5-10; மாற்கு 7:19-21

"ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம்" - வேதாகமத்தில் ஏழு விதமான ஸ்நானங்களைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது (மத் 3:6)

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் ஏழு விதமான ஞானஸ்நானங்கள்

1 யோவான் ஸ்நானனின் தண்ணீர் ஞானஸ்நானம் (மத் 3, மாற்கு 1; லூக்கா 3; லூக்கா 7:29-30, யோவான் 1:31-33; யோவான் 3:23-26 யோவான் 10:40; அப் 1:5; அப் 11:16, அப் 19:3)

2 தண்ணீரில் கிறிஸ்துவின் ஞானஸ்நானம் (யோவான் 3:22 யோவான் 4:1 2

3 பாடுகளின் ஞானஸ்நானம் (லூக்கா 12:50)

4 மேகத்திலும், கடலிலும் ஞானஸ்நானம் (1கொரி 10:2)

5 தண்ணீரில் விசுவாசிகளின் ஞானஸ்நானம்(மத்28:19, மாற்கு 16:16, அப் 2:38 41 அப் 8:12-16,36-38, அப் 9:18 அப் 10:47 48 அப் 16:15,33; அப் 18:8; அப் 19:5, அப் 22:16 1கொரி 1:13-17,1பேதுரு 3:21

6 அதிகாரம்

6 கிறிஸ்துவிற்குள்ளும், அவருடைய சரீரத்திற்குள்ளும் ஞானஸ்நானம் (ரோமர் 6.3-7; 1கொரி 12:13 கலா 3:27; கொலோ 2:12)

7 பரிசுத்தஆவியானவரின் ஞானஸ்நானம் (மத் 3:11,14; மத் 20:22-23 மாற்கு 1:8; மாற்கு 10:38-39 லூக்கா 3:16; யோவான்1:33 யோவான் 7:37-39; அப் 1:5 அப் 11:16; அப் 19:2-3)

நியாயத்தீர்ப்பு (judgment) - κρίμα - krima - 2917

பால் வேறுபாடற்ற பெயர்சொல - தீர்ப்பு, ஆக்கினை, நியாயத்தீர்ப்பு

3. மறுதலித்துப்போனவர்களின் பழைய ஆசீர்வாதங்கள்

எபி 6:4 ஏனெனில், ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும் பரமஈவை ருசி பார்த்தும்,பரிசுத்தஆவியைப் பெற்றும்

எபி 6:5 தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும்,

4. கிறிஸ்தவர்கள் ஏன் மறுதலித்துப் போகக்கூடாது என்பதற்கு காரணம் (1தீமோ 4:1-5,2தீமோ 3:1-9, 4:1-4, 2தெச 2:8 12; எபி 10:26-29; 2பேதுரு 2:1-22; யூதா 4-10, ரோமர் 1:18 32, பிலி 3:18)

எபி 6:6 மறுதலித்துப்போனவர்கள் தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப் படுத்துகிறபடியால் மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம்

எபி 6:4-8 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் அடிப்படை சத்தியங்கள்

1 விசுவாசிகள் தேவனை மறுதலித்துப் போனவர்களாக ஆக முடியும். அவர்கள் ஏற்கெனவே போட்ட மனந்திரும்புதல் என்னும் அஸ்திபாரத்தை அழித்துப் போட்டபடியினால் அவர்கள் மனந்திரும்புதல் என்னும் அஸ்திபாரத்தை மறுபடியும் போட வேண்டும். (எபி 6:1-2 எபி 2:1-4; வெளி 2:5

2 விசுவாசிகள் தேவனைப் பூரணமாக மறுதலித்து தங்களுடைய ஆத்துமாவை இழந்து போக முடியும் இவ்வாறு மறுதலித்துப் போனவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம். (எபி 6:4-9; எபி 10:26-29 2பேதுரு 2:20-22)

மறுதலித்துப்போனவர்களின் பழைய நிலைமைகள்

1 அவர்கள் ஒரு தரம் பிரகாசிப்பிக்கப் பட்டவர்கள் இப்பொழுது அவர்கள் பிரகாசிப்பிக்கப்படவில்லை (எபி 6:4 பிரகாசிப்பிக்கப்பட்டவர்கள் என்பது இரட்சிக்கப் பட்ட விசுவாசிகளைக் குறிக்கும். (எபே 1:18, எபி 10:32; சங் 19:7 8 லூக்கா 1:34 36 தேவனுடைய பரிசுத்தவான்கள் "வெளிச்சத்தின் பிள்ளைகள்" "children of light" என்று அழைக்கப்படுகிறார்கள் (எபே 5:8, கொலோ 1:12; 1தெச 5:5 இரட்சிக்கப்பட்ட ஜனங்களே வெளிச்சத்தில் நடக்கிறவர்களாக கூறப்பட்டிருக்கிறார்கள் (மத் 5:14 15, லூக்கா 16:8; யோவான் 3:20 2 யோவான் 8:12 யோவான் 12 36, ரோமர் 13:12; எபே 5:14 கொலோ 1:12, 1யோவான் 1:7; 1யோவான் 2:9 10 இரட்சிக்கப் படாதவர்கள் சுவிசேஷத்தின் ஒளியை விட்டு இருளில் இருக்கிறார்கள் (2கொரி 4:4, எபே 4:18; எபே 5:8 கொலோ 1:13, 1தெச 5:5 1பேதுரு 2:9, 1யோவான் 1:6; 1யோவான் 2:8 11

6 அதிகாரம்

2 பரமஈவை ருசிபார்த்தவர்கள் (எபி 6:4)

3. பரிசுத்த ஆவியைப் பெற்றவர்கள் எபி 6.4

4 தேவனுடைய நல்வார்த்தையை ருசிபார்த்தவர்கள் (எபி 6:5) இதுவரை இரட்சிக்கப்பட்டிருக்கிறவர்கள் என்பது பொருள் மத் 13:20-23; லூக்கா 8:13-15; யோவான் 15:3 அப் 2:41 அப் 4:4 அப் 8:14; அப் 11:1 அப் 17:11; ரோமர் 10:9-10 எபே 5:26. யாக் 1:18-25; 1பேதுரு 1:18-21) தேவனுடைய வார்த்தையை தங்கள் இருதயத்தில் பெற்றிருக்கிறவர்கள் இரட்சிக்கப்பட்டிருப்பார்கள்

5 இனிவரும் உலகத்தின் பெலன்களை ருசிபார்த்திருக்கிறார்கள் எபி 6:5) பெலனை ருசிபார்ப்பது என்பதற்கு நித்திய ஜீவனை அனுபவிப்பது என்று பொருள் இப்படிப்பட்ட வாக்கியம் பொதுவாக நித்திய ஜீவனையே குறிக்கும். (மத் 10:30; லூக்கா 18:30 லூக்கா 20:35, எபி 10:26-29)

ருசிபார் (to taste) - γεύομαι - geuomai - 1089

வினைச்சொல் - ருசிபார், புசி, சாப்பிடு (have experience of) "to eat" (அப் 10:10; அப் 20:11, அப் 23:14) "to taste" (எபி 6:4,5; எபி 2:9, மத் 16:28; மத் 27:34, மாற்கு 9:1, லூக்கா 9:27; லூக்கா 14:24, யோவான் 2:9; யோவான் 8:52; கொலோ 2:21, 1பேதுரு 2:3)

பெற்றிருக்கிறவர் (partner) -μέτοχος - metochos - 3353

பெயர்ச்சொல் - கூட்டாளியான, தோழனான பங்குள்ள (partner, fellow with) (எபி 3:1) - பங்கு பெறுகிறவர்கள் விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரிடத்தில் பங்கு பெற்றிருக்கிறார்கள் அவிசுவாசிகளுக்குப் பரிசுத்த ஆவியானவரிடத்தில் பங்கில்லை. (ரோமர் 8:9-16) தேவ பக்தியில்லாதவரிடத்தில் பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார் என்று கூறுவது தேவதூஷணம். (யோவான் 14:17 யூதா இதே கருத்தை வலியுறுத்திக் கூறியிருக்கிறார் (யூதா 1:19

5. கிறிஸ்தவரும் மறுதலித்துப்போனவரும் - விளக்கம் - (மத் 7:15-29

எபி 6:7 எப்படியெனில், தன்மேல் அடிக்கடி பெய்கிற மழையைக் குடித்து, தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கு ஏற்றபயிரை முளைப்பிக்கும் நிலமானது தேவனால் ஆசீர்வாதம் பெறும்.

எபி 6:8 முள்செடிகளையும் முள்பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ தகாததாயும் சபிக்கப்படுகிறதற்கு ஏற்றதாயுமிருக்கிறது; சுட்டெரிக்கப்படுவதே அதின் முடிவு.

எபி 6:9 பிரியமானவர்களே, நாங்கள் இப்படிச் சொன்னாலும், நன்மையானவைகளும் இரட்சிப்புக்குரியவைகளுமான காரியங்கள் உங்களிடத்தில் உண்டாயிருக்கிறதென்று நம்பியிருக்கிறோம்.

"நன்மையானவைகளும் இரட்சிப்புக் குரியவைகளுமான காரியங்கள் உங்களிடத்தில் உண்டாயிருக்கிறதென்று நம்பியிருக்கிறோம்" - ஒருசில விசுவாச சகோதரர்கள் தங்கள் விசுவாசத்தை விட்டு பின்வாங்கிப்போய் தேவனை மறுதலித்து விட்டார்கள் (எபி 6:4-8). பல எபிரெய விசுவாசிகளைப் பற்றிக் குறிப்பிடும்போது அவர்கள் பின்மாறிப்போகாமல் தங்களுடைய இரட்சிப்பைக் குறித்து கவனமுள்ளவர்களாக இருப்பார்கள் என்று குறிப்பிடுகிறார் கவனக் குறைவாக ஜீவித்தால் தங்கள் இரட்சிப்பை இழந்து தேவனுடைய நியாயத் தீர்ப்பைப் பெறுக் கொள்வார்கள் (எபி 2:2-3

6. அசதியாயிராமல் முடிவு வரையும் நீடிய பொறுமையுடன் இருக்க வேண்டும் - (3:6, 12-13, 14

எபி 6:10 ஏனென்றால், உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே.

6 அதிகாரம்

எபி 6:11 நீங்கள் அசதியாயிராமல், வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களைப் பின்பற்றுகிறவர்களாயிருந்து

எபி 6:12 உங்களுக்கு நம்பிக்கையின் பூரண நிச்சயமுண்டாகும்படி நீங்கள் யாவரும் முடிவுபரியந்தம் அப்படியே ஜாக்கிரதையைக் காண்பிக்க வேண்டுமென்று ஆசையாயிருக்கிறோம்.

"தேவன் அநீதியுள்ளவரல்லவே" - தேவன் தமது வாக்குத்தத்தங்கள் மூலமாக மனுஷருக்குக் கடமைப்பட்டவராக இருக்கிறார். தமது நீதியினாலும், உண்மையினாலும் அவர் தமது வாக்குத்தத்தங்களைக் காத்துக் கொள்கிறவர். அவர் அநீதியுள்ளவரல்ல.

"பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்தது" - யூதேயாவிலுள்ள ஏழை பரிசுத்தவான்களுக்குப் பொருள் உதவி செய்ததை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. (2கொரி 8:4)

பின்பற்றுகிறவர் (followers) - μιμητής - mimeetees - 3402

ஆண்பால் பெயர்சொல்

பின்பற்றுகிறவர் (imitators) (1கொரி 4:16) - விசுவாசத்திற்கு அடையாளமாகப் பவுல் ஆபிரகாமைக் கூறுகிறார் (எபி 6:12-15). இதன் பின்பு எபிரெயர் 11 ஆம் அதிகாரத்தில் விசுவாச வீரர்களின் பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கிறது. (எபி 11:1-12:3)

"நீங்கள் யாவரும் முடிவுபரியந்தம் அப்படியே ஜாக்கிரதையைக் காண்பிக்க வேண்டுமென்று ஆசையாயிருக்கிறோம்" - விசுவாசிகள் முடிவு பரியந்தம் நித்திய ஜீவனைப் பற்றிய நம்பிக்கையில் நிச்சயமுள்ளவர்களாக இருக்கவேண்டும். இதனால் அவர்கள் இறுதியில் வாக்குத்தத்தத்தின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வார்கள் (எபி 6:11,12; எபி 2:3; எபி 3:6,12-14; எபி 4:1,2,6,11; எபி 6:4-8). சோம்பேறிகள் நம்பிக்கையையும், விசுவாசத்தையும் இழந்து போவார்கள்.

7. வாக்குத்தத்தங்களின் ஆசீர்வாதங்களை ஆபிரகாம் சுதந்தரித்துக் கொண்ட விதம் - (ஆதி 22:16-17; ரோமர் 4:17-21; யாக் 2:20-26)

எபி 6:13 ஆபிரகாமுக்கு தேவன் வாக்குத்தத்தம் பண்ணினபோது, ஆணையிடும்படி தம்மிலும் பெரியவர் ஒருவருமில்லாதபடியினாலே தமது பேரிலே தானே ஆணையிட்டு:

எபி 6:14 நிச்சயமாகவே நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன்னைப் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றார்.

எபி 6:15 அந்தப்படியே, அவன் பொறுமையாய்க் காத்திருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெற்றான்.

"தமது பேரிலே தானே ஆணையிட்டு" - தேவனே பெரியவர். அவரை விட பெரியவர் யாருமில்லை. ஆகையினால் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதாகத் தேவன் தமது பேரிலேயே ஆணையிடுகிறார்.

எபிரெயர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 16

"நிச்சயமாகவே நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன்னைப் பெருகவே பெருகப்பண்ணுவேன்" (எபி 6:14, ஆதி 22:17) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெற்றான்" - ஈசாக்கின் பிறப்பை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது.

8. தேவன் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவர்களில் உண்மையுள்ளவராயிருக்கிறார் - (1தீமோ 2:13; ஏசா 55:11)

எபி 6:16 மனுஷர் தங்களிலும் பெரியவர் பேரில் ஆணையிடுவார்கள்; உறுதி பண்ணும்படிக்கு ஆணையிடுதலே சகல விவாதத்திற்கும் முடிவு.

6 அதிகாரம்

எபி 6:17 அந்தப்படி, தேவனும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களுக்குத் தமது ஆலோசனையின் மாறாத நிச்சயத்தைப் பரிபூரணமாய்க் காண்பிக்கும்படி சித்தமுள்ளவராய், ஓர் ஆணையினாலே அதை ஸ்திரப்படுத்தினார்.

எபி 6:18 நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதலுண்டாகும்படிக்கு, எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார்.

"பெரியவர்" (greater) - அதிகாரத்தில் உள்ளவர், ஒப்பந்தம் பண்ணுகிறவர், ஒப்பந்தத்தை மீறுகிறவரைத் தண்டிக்கிறவர்

உறுதிபண்ணுதல் (confirmation) - βεβαίωσις - bebaioosis - 951

பெண்பால் பெயர்ச்சொல் - திடப்படுத்துதல், உறுதிபண்ணுதல் பிலி 1:7

"வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்கள்" விசுவாசத்தின் பிள்ளைகள் (ரோமர் 4)

"தமது ஆலோசனையின் மாறாத நிச்சயம்" இயேசு கிறிஸ்துவின் மூலமாகப் புறஜாதியாருக்கும் இரட்சிப்பு உண்டு. இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கிறவர்கள் அனைவரும் இரட்சிக்கப்படுவார்கள். இந்த வாக்குத்தத்தம் யூதருக்கும், புறஜாதியாருக்கும் உரியது. தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தில் மாறாதவர் (கலா 3:13-14, 2 கொரி 12:13, ரோமர் 3:26)

"இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதலுண்டாகும்படிக்கு எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன்" - இந்த வாக்கியம் இரண்டு சத்தியங்களைக் குறிக்கிறது. அவையாவன

1. தேவனுடைய ஆணையும் வாக்குத்தத்தமும் (எபி 6:13) அல்லது ஆபிரகாமிற்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தை உறுதி பண்ணும் இரண்டு ஆணைகள் (எபி 6:13)

2. மெல்கிசேதேக்கின் முறைமையின் பிரகாரம் இயேசு கிறிஸ்துவை நித்திய பிரதான ஆசாரியராக ஆக்குவது. (எபி 7:21)

ஆறுதல் (consolation) - παράκλησις-parakleesis- 3874

பெண்பால் பெயர்ச்சொல் - ஆறுதல், புத்திசொல்லுதல் அப் 13:15

"நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு" - இந்த வாக்கியத்தில் அடைக்கலப் பட்டணத்தைப் பற்றியும் அந்தப் பட்டணத்திற்குத் தங்களுடைய பாதுகாப்பிற்காக வருகிறவர்களைப் பற்றியும் மறைமுகக் குறிப்பு (allusion) உள்ளது (எண் 35, யோசு 20:2-3) பாவிகள் இயேசு கிறிஸ்துவிடம் ஓடி வரலாம். அவரிடத்தில் நித்திய அடைக்கலத்தையும் பாதுகாப்பையும் பெற்றுக் கொள்ளலாம். (யோவான் 3:16)

VIII. மெல்கிசேதேக்கு, ஆபிரகாம், லேவி ஆகியோரைப் பார்க்கிலும் கிறிஸ்து விசேஷித்தவர் - (6:19-7:10)

1. கிறிஸ்து தமது நம்பிக்கையும் முன்னோடியுமானவர் - (சங் 110:4, எபி 7:11-17)

எபி 6:19 அந்த நம்பிக்கை நமக்கு நிலையும் உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது.

எபி 6:20 நமக்கு முன்னோடினவராகிய இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நித்திய பிரதான ஆசாரியராய் நமக்காக அந்தத் திரைக்குள் பிரவேசித்திருக்கிறார்.

எபிரெயர்- தொகுப்புரை

6 அதிகாரம்

"அந்த நம்பிக்கை நமக்கு நிலையும் உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது"

அடைக்கலப் பட்டணத்தை மறைமுகக் குறிப்பாகக் கூறிய பின்பு பவுல் ஒரு துறைமுகத்தில் பாதுகாப்பாக இருக்கும் கப்பலை மறைமுகக் குறிப்பாகக் கூறுகிறார்

நல்ல துறைமுகத்தில் ஒரு கப்பல் நங்கூரம் பாய்ச்சப்பட்டிருக்கும் போது அது நிலையாகவும் உறுதியாகவும் இருக்கும் அதுபோலவே நித்திய ஜீவனின் நம்பிக்கையைப் பெற்றிருக்கிறவர்கள் பரலோகத்தில் பாதுகாப்பாக நங்கூரம் பாய்ச்சப்பட்டிருக்கிறார்கள்
(எபி 6:19-20)

"நமக்கு முன்னோடினவராகிய இயேசு" - இயேசு கிறிஸ்து நமது பிரதான ஆசாரியர் அவர் பரலோகத்திற்கு நமக்கு முன்னோடினவர் பரலோகத்தில் தேவனோடு நாம் பாதுகாப்பாக இருக்கும் வரையிலும் அவர் நமக்காகப் பரிந்து பேசுகிறவர்

7 அதிகாரம்

2. சாலேமின் இராஜாவும் ஆசாரியனுமான மெல்கிசேதேக்கு - (ஆதி 14:18-20)

எபி 7:1 இந்த மெல்கிசேதேக்கு சாலேமின் ராஜாவும், உன்னதமான தேவனுடைய ஆசாரியனுமாயிருந்தான் ராஜாக்களை முறியடித்துவந்த ஆபிரகாமுக்கு இவன் எதிர்கொண்டுபோய், அவனை ஆசீர்வதித்தான்

எபி 7:2 இவனுக்கு ஆபிரகாம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான் இவனுடைய முதற்பேராகிய மெல்கிசேதேக்கு என்பதற்கு நீதியின் ராஜா என்றும் பின்பு சாலேமின் ராஜா என்பதற்குச் சமாதானத்தின் ராஜா என்றும் அருத்தமாம்

மெல்கிசேதேக்கைப் பற்றிய செய்திகள்

1 சாலேமின் ராஜா - சாலேம் என்பது எருசலேமின் பழைய பெயர் (எபி 7:1 ஆதி 14:18

2 ஆபிரகாமின் நாளில் தேவனுடைய ஆசாரியனாக இருந்தான் (எபி 7:1, ஆதி 14:18

3 ராஜாக்களை முறியடித்துவந்த ஆபிரகாமுக்கு இவன் எதிர்கொண்டு போனான் (எபி 7:1, ஆதி 14:16-18)

4 மெல்கிசேதேக்கிற்கு ஆபிரகாம் எல்லாவற்றிலும்தசமபாகம்கொடுத்தான (எபி 7:2, ஆதி 14:16-24)

5 மெல்கிசேதேக்கு என்பதற்கு நீதியின ராஜா என்று அர்த்தம். (எபி 7:2)

6 சாலேமின ராஜா என்பதற்குச் சமாதானத்தின் ராஜா என்று அர்த்தம் (எபி 7:2 ஆதி 14:18

7 மெல்கிசேதேக்கு தகப்பனும் தாயும் வம்சவரலாறும் இல்லாதவன்

8 தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவிற்கு மெல்கிசேதேக்கு ஒப்பானவன் கிறிஸ்து மெல்கிசேதேக்கின் ஆசாரிய முறைமையின்படி ஆசாரியராக்கப்பட்டிருக்கிறார் (எபி 7:3 எபி 5:6,10 எபி 6:15-20 எபி 7:1-10, 15-2 இயேசுகிறிஸ்துவின்தெய்வத்துவத்தின் பிரகாரம் அவருக்குப் பிறப்போ மரணமோ இல்லை. இயேசு கிறிஸ்துவின் மனுஷத்துவத்தின் பிரகாரம் அவர் தேவனுடைய ஒரேபேறான குமாரன் (அப 13:33

9 மெல்கிசேதேக்கு ஒரு சாதாரண மனுஷன் (எபி 7:4)

10 [illegible]தக்கு ஆபிரகாமைவிட பெரியவர் (எபி 7:4-7)

பவுல் எபிரெயர் நிருபத்தில் மெல்கிசேதேக்கைப் பற்றிக் குறிப்பிடுவதற்கு காரணம்

1 சங்கீதம் 110-இல் தீர்க்கதரிசனமாகக் கூறப்பட்டிருக்கிறவர் இயேசு கிறிஸ்துவே என்பதைத் தெளிவுபடுத்துகிறார் யூதமார்க்கத்தார் 110 ஆவது சங்கீதம் வரப்போகிற மேசியாவைப் பற்றிக் குறிப்பிடுவதாக விசுவாசிக்கிறார்கள்

2 இயேசு கிறிஸ்து ஆரோனுடைய ஆசாரிய முறைமையின் பிரகாரம் ஆசாரியராக இல்லை ஆகையினால் யூதர்கள் இயேசு கிறிஸ்துவின ஆசாரியத்துவத்தை அங்கீகரிக்கவில்லை இவர்களுடைய முரணான கருத்திற்கு விடையளிப்பதற்காக மெல்கிசேதேக்கின ஆசாரிய முறைமையின்படி இயேசு கிறிஸ்து ஆசாரியராக்கப்பட்டிருக்கிறார் என்பதைப் பவுல் வலியுறுத்திக் கூறுகிறார் (லேவி 21:10-15

யூதமார்க்கத்தின் பிரகாரம் இயேசு கிறிஸ்து ஆசாரியராக அங்கீகரிக்கப்படாமல் இருப்பதற்கு மேலும் சில காரணங்கள் உள்ளன. அவையாவன

1. யூதமார்க்கத்தமைந்தவன் ஆசாரியராக ஆக முடியாது

2 அடிமை ஆசாரியராக ஆக முடியாது.

எபிரெயர்- தொகுப்புரை

7 அதிகாரம்

3 லேவியின் மகன் ஆசாரியராக ஆக முடியாது - யூதர்கள் இயேசு கிறிஸ்துவின் கன்னிகையமான பிறப்பை அங்கீகரிக்க வில்லை

4 நிதின்ரியரின் தேவாலயத்தில் ஆசாரியருக்கு ஊழியம் செய்கிறவன் குமாரன் ஆசாரியராக ஆக முடியாது.

5. சாதாரண தொழில் புரிபவர்களுடைய குமாரன் ஆசாரியராக ஆக முடியாது. யோசேப்பு தச்ச வேலை செய்து வந்தவன்

மெல்கிசேதேக்கு ஆரோனின் முறைமையின் பிரகாரம் ஆசாரியராகவில்லை ஆனாலும் இவர் உன்னதமான தேவனுடைய ஆசாரியராக இருந்தார் இவர் ஒரு கானானியர் யூதருடைய முறைமையின் பிரகாரம் யூதரல்லாதவர் ஆசாரியராக இருக்க முடியாது. வம்சவரலாறு இல்லாதவரும் ஆசாரியராக இருக்க முடியாது. மெல்கிசேதேக்கு தகப்பனும் தாயும் வம்சவரலாறும் இல்லாதவன் இவனை யூதர்கள் நீதியின் ராஜாவாகவும் சமாதானத்தின் ராஜாவாகவும் அங்கீகரித்தார்கள் யூதர்கள் மெல்கிசேதேக்கை ஒரு புறஜாதியானாக கருதி ஒதுக்கி வைக்கவில்லை

"எல்லாவற்றிலும் தசமபாகம் ஆதிகாலத்தில் யுத்தத்தில் கிடைத்த கொள்ளைப்பொருளில் பத்தில் ஒரு பகுதியைத் தாங்கள் ஆராதிக்கும் தெய்வத்திற்குக் கொடுக்கும் வழக்கம் இருந்தது

3. மெல்கிசேதேக்கு தகப்பனும் தாயும் வம்ச வரலாறும் இல்லாதவன் - (சங்கீதம் 6; மீகா 5:1 2 யோவான் 1:1 2)

எபி 7.3 இவன் தகப்பனும் தாயும் வம்சவரலாறும் இல்லாதவன் இவன் நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடையவனாயிராமல், தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவனாய் என்றென்றைக்கும் ஆசாரியனாக நிலைத்திருக்கிறான்

வம்ச வரலாறு இல்லாதவன் (without genealogy) - ἀγενεαλόγητος - agenealogeetos - 35

பொருள் - வம்ச வரலாறு இல்லாதவன் - மெல்கிசேதேக்கின் தகப்பனும் தாயும் யாரென்று குறிப்பிடப்படவில்லை. (எபி 7:3,6) ஆயினும் அவனுக்கு மாம்சத்தின் பிரகாரமாக தகப்பனும், தாயும் இருந்தார்கள் அவர்களின் பெயர்கள் பிறப்பு பதிவேட்டில் குறிக்கப்படவில்லை. இயேசு கிறிஸ்து துவக்கமும் முடிவும் இல்லாதவர் இதனால் மெல்கிசேதேக்கு இயேசு கிறிஸ்துவிற்கு ஒப்பானவராக இருக்கிறார் (மீகா 5.2 ஏசா 9:6-7; யோவான் 1:1-2; எபி 1:8 வெளி 1:8-11

4. மெல்கிசேதேக்கு ஒரு சாதாரண மனுஷன் - கிறிஸ்து தேவனுடைய குமாரன் (மத் 1:18-25 லூக்கா 1:35 யோவான் 1:1-2; ஏசா 7:14 9:6-7 1தீமோ 3:16)

எபி 7:4 இவன் எவ்வளவு பெரியவனாயிருக்கிறான் பாருங்கள் கோத்திரத்தலைவனாகிய ஆபிரகாம் முதலாய் கொள்ளையிடப்பட்ட பொருள்களில் இவனுக்குத் தசமபாகம் கொடுத்தான்

"இவன் எவ்வளவு பெரியவனாயிருக்கிறான் பாருங்கள்" மெல்கிசேதேக்கு ஒரு மனுஷன் யூதமார்க்கத்தின் தகப்பனான ஆபிரகாமை விட பெரியவன் மெல்கிசேதேக்கிற்குத் தகப்பனும் தாயும் இல்லையென்பதினால் இவனுடைய பூர்வீகம் இரகசியமானது அல்ல இவன் ஒரு தெய்வீக நபரும் அல்ல இவன் சாதாரண மனுஷன் தான்

கிறிஸ்து மெல்கிசேதேக்கைவிடப் பெரியவர்

1. கிறிஸ்து வருங்கால எருசலேமின் நித்திய ராஜா (எசே 43:7; எசே 48:35, சக 14; வெளி 20) மெல்கிசேதேக்கு கடந்த காலத்தில் சாலேமின் ராஜாவாக சிறிது காலம் இருந்தான் (எபி 7:1)

2. கிறிஸ்து நித்திய ஆசாரியராக இருக்கிறார் (எபி 6:20, எபி 7:17 மெல்கிசேதேக்கு தற்காலிக ஆசாரியராக இருந்தான் (எபி 7:1)

7 அதிகாரம்

3 கிறிஸ்து தேவனாக இருக்கிறார் (எபி 1:8; யோவான் 1:1-2,14) மெல்கிசேதேக்கு சாதாரண மனுஷனாக இருந்தான் (எபி 7:4)

4 கிறிஸ்து நீதியின் நித்திய ராஜாவாக இருக்கிறார் (எரே 23:6) மெல்கிசேதேக்கு நீதியின் தற்காலிக ராஜாவாக இருந்தான் (எபி 7:2)

5 கிறிஸ்து நித்திய சமாதான ராஜாவாக இருக்கிறார் (ஏசா 9:6) மெல்கிசேதேக்கு தற்காலிக சமாதான ராஜாவாக இருந்தான் (எபி 7:2)

6 கிறிஸ்து நித்தியமானவர் (எபி 1:8; யோவான் 1:1-2; மீகா 5:2; ஏசா 9:6) மெல்கிசேதேக்கு நித்தியமானவன் அல்ல (எபி 7:3,6)

7 கிறிஸ்து நித்தியமானவர் அவருக்கு தகப்பனோ தாயோ அவருடைய தெய்வத்துவத்தில் இல்லை. அவருக்குத் துவக்கமும் முடிவுமில்லை (மீகா 5:2) மெல்கிசேதேக்கிற்குத் தகப்பனும் தாயும் இருந்தார்கள் இவர்களுடைய பெயர்கள் பதிவேடுகளில் குறிக்கப்படவில்லை (எபி 7:3,6)

8 இயேசு கிறிஸ்து நமக்கு முன்னோடி மெல்கிசேதேக்கு நித்திய ஆசாரியத்துவத்திற்கு ஒப்பானவன் (எபி 6:20; எபி 7:17)

கோத்திரத் தலைவன் (patriarch)

πατριάρχης patriachees- 3966

ஆண்பால் பெயர்ச்சொல் - கோத்திரத் தலைவன், கோத்திரபிதா (father, chief of a family, tribe) (எபி 7:4; அப் 2:29; அப் 7:8-9)

5. ஆபிரகாம், லேவி ஆகியோரைப் பார்க்கிலும் மெல்கிசேதேக்கு விசேஷித்தவன் - (ஆதி 14:18-20)

எபி 7:5 லேவியின் புத்திரரில் ஆசாரியத்துவத்தை அடைகிறவர்களும், ஆபிரகாமின் அரையிலிருந்து வந்தவர்களாகிய சகோதரரான ஜனங்களின் கையிலே நியாயப்பிரமாணத்தின்படி தசமபாகம் வாங்குகிறதற்குக் கட்டளை பெற்றிருக்கிறார்கள்

எபி 7:6 ஆகிலும் அவர்களுடைய வம்சவரிசையில் வராதவனாகிய இவன் ஆபிரகாமின் கையில் தசமபாகம் வாங்கி, வாக்குத்தத்தங்களைப் பெற்றவனை ஆசீர்வதித்தான்

எபி 7:7 சிறியவன் பெரியவனாலே ஆசீர்வதிக்கப்படுவான், அதற்குச் சந்தேகமில்லை.

"ஆபிரகாமின் அரையிலிருந்து வந்தவர்கள்" - ஆபிரகாமின் சந்ததியார் இவர்களும் தசமபாகம் செலுத்த வேண்டும் அவ்வாறாயின் புறஜாதியாரும், திருச்சபையாரும் நித்திய ஆசாரியராகிய இயேசு கிறிஸ்துவிற்குத் தசமபாகம் செலுத்த வேண்டியது மிகவும் அவசியம்

"அவர்களுடைய வம்சவரிசையில் வராதவனாகிய இவன்" - மெல்கிசேதேக்கு ஆசாரிய வம்சத்தில் வராதவன் (எபி 7:5) யூதமார்க்கத்தார் ஆசாரிய வம்சத்தில் வந்தவர்களை மட்டுமே ஆசாரியர்களாக அங்கீகரிப்பார்கள் ஆனால் அவர்கள் மெல்கிசேதேக்கைத் தேவனுடைய ஆசாரியன் என்றும் ஆபிரகாமைவிடப் பெரியவர் என்றும் அங்கீகரித்திருக்கிறார்கள் இதன் மூலமாக யூதர்கள் ஒருவரை ஆசாரியராக அங்கீகரிப்பதற்கு வம்சவரலாறு முக்கியமானதல்ல என்பது தெளிவாகிறது யூதமார்க்கத்தார் இயேசு கிறிஸ்துவை மெல்கிசேதேக்கின் முறைமையின் பிரகாரம் நித்திய ஆசாரியர் என்றும், சங் 110 இயேசு கிறிஸ்துவின் மூலமாக நிறைவேறுகிறது என்றும் அங்கீகரிக்க வேண்டும்.

"ஆபிரகாமின் கையில் தசமபாகம் வாங்கி, வாக்குத்தத்தங்களைப் பெற்றவனை ஆசீர்வதித்தான்" லேவியர்கள் இஸ்ரவேல் ஜனங்களிடமிருந்து தசமபாகங்களை வாங்கி அவர்களை ஆசீர்வதித்தார்கள் மெல்கிசேதேக்கு ஆபிரகாமிடமிருந்து தசமபாகம் வாங்கி அவனை ஆசீர்வதித்தான் ஆபிரகாம் தேவனிடமிருந்து வாக்குத்தத்தங்களைப் பெற்றவன் (எபி 7:5-6) ஆபிரகாம் தசமபாகம் செலுத்தியிருப்பதினால் அவருடைய ஆவிக்குரிய வித்தாகிய நாமும் நித்திய ஆசாரியராகிய இயேசு கிறிஸ்துவிற்குத் தசமபாகம் செலுத்த வேண்டும். இயேசு கிறிஸ்து ஆரோனின் முறைமையின் பிரகாரம் ஆசாரியராகாமல் மெல்கிசேதேக்கின் முறைமையின் பிரகாரம் ஆசாரியரானார் (எபி 7:9-21)

7 அதிகாரம்

கிறிஸ்து ஆபிரகாமைவிட மேன்மையவர்

1 கிறிஸ்து திரித்துவத்தில் அங்கம் வகிக்கிறவர் ஆபிரகாமோடு அவர் உடன்படிக்கை பண்ணி ஆபிரகாமிற்கு வாக்குத்தத்தங்களைக் கொடுத்தார் (எபி 6:13-15; 1யோவான் 5:7)

2 இயேசு கிறிஸ்து ஆபிரகாமின் நம்பிக்கையாய் இருக்கிறார் (எபி 6:16-20; கொலோ 1:27)

3 கிறிஸ்து நித்தியமானவர் (எபி 6:20, யோவான் 8:58, எபி 1:8 வெளி 1:8-11)

4 கிறிஸ்து இரட்சகர் ஆபிரகாமை ஆசீர்வதிக்கிறவர் (எபி 6:20 எபி 7:7 கலா 3:13-18,26-29)

5 கிறிஸ்து ஆபிரகாமின் நித்திய பிரதான ஆசாரியர் மெல்கிசேதேக்கு இதற்கு ஒப்பானவனாக இருந்தான (எபி 6:20 எபி 7:3,7-10,14-21)

6 ஆபிரகாம் கிறிஸ்துவின் நித்திய ஆசாரியத்துவத்திற்கு தசமபாகம் செலுத்தினான (எபி 7:2,4,10)

7 இயேசு கிறிஸ்து ஆபிரகாமின் தேவனுடைய ஒரேபேறான குமாரன (எபி 7:3 யோவான 1:14,18 யோவான 3:16)

6. ஆபிரகாமும் லேவியும் மெல்கிசேதேக்கிற்கு தசமபாகம் செலுத்தினார்கள்-(ரோமர் 4:12, 16, எபி 5:6 6:20 7:15 8:6)

எபி 7:8 அன்றியும், இங்கே மரிக்கிற மனுஷர்கள் தசமபாகம் வாங்குகிறார்கள் அங்கேயோ பிழைத்திருக்கிறான் என்று சாட்சிபெற்றவன் வாங்கினான்

எபி 7:9 அன்றியும், மெல்கிசேதேக்கு ஆபிரகாமுக்கு எதிர்கொண்டு போனபோது, லேவியானவன் தன் தகப்பனுடைய அரையிலிருந்தபடியால்

எபி 7:10 தசமபாகம் வாங்குகிற அவனும் ஆபிரகாமின் மூலமாய்த் தசமபாகம் கொடுத்தான் என்று சொல்லலாம்.

"இங்கே மரிக்கிற மனுஷர்கள் தசமபாகம் வாங்குகிறார்கள்" - மரிக்கிறவர்கள் தசமபாகம் வாங்கும்போது ஜீவிக்கிறவர்கள் நிச்சயமாகவே தசமபாகம் வாங்கலாம் தற்கால ஆசாரியர்கள் தசமபாகம் வாங்குவதினால் நித்திய பிரதான ஆசாரியர் நிச்சயமாகவே தசமபாகம் வாங்கலாம்

"பிழைத்திருக்கிறான் என்று சாட்சிபெற்றவன்" - மெல்கிசேதேக்கின் மரணத்தைக் குறித்தும் அவனுடைய ஆசாரியத்துவத்தின் முடிவைக் குறித்தும் குறிப்பு எதுவுமில்லை ஆகையினால் அவன் நித்தியமான இயேசு கிறிஸ்துவிற்கு ஒப்பானவனாக இருக்கிறான் (ஏசா 9:6 மீகா 5:2; எபி 1:8; வெளி 1:8-11)

"லேவியானவன் தன் தகப்பனுடைய அரையிலிருந்தபடியால்" - தன்னுடைய தகப்பனின் வம்சவரலாற்றின் பிரகாரம்

"தசமபாகம் வாங்குகிற அவனும் ஆபிரகாமின் மூலமாய்த் தசமபாகம் கொடுத்தான்" - தசமபாகத்தைப் பெற்றுக் கொள்கிறவர்கள் தங்களுடைய சொந்த வருமானத்திலிருந்து தசமபாகம் கொடுக்க வேண்டும். தன்னுடைய சந்ததியார் எல்லோருக்கும் தசமபாகம் செலுத்துவதற்கு ஆபிரகாம் முன் உதாரணமாக இருந்தான (எபி 7:9-10)

IX. கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் ஆரோனின் ஆசாரியத்துவத்தைப் பார்க்கிலும் விசேஷமானது - (7:11-8:6)

1. கிறிஸ்துவின் பிரமாணமும் ஆசாரியத்துவமும் மாறாதவை - (7:16-24; 8:6; கலா 4:21)

எபி 7:11 அல்லாமலும், இஸ்ரவேல் ஜனங்கள் லேவிகோத்திர ஆசாரிய முறைமைக் குட்பட்டிருந்தல்லவோ நியாயப்பிரமாணத்தைப் பெற்றார்கள் அந்த ஆசாரிய முறைமையினாலே பூரணப்படுதல் உண்டாயிருக்குமானால், ஆரோனுடைய முறைமையின்படி அழைக்கப்படாமல் மெல்கிசே தேக்கினுடைய முறைமையின்படி அழைக்கப்பட்ட வேறொரு ஆசாரியர் எழும்பவேண்டுவதென்ன?

7 அதிகாரம்

எபி 7:12 ஆசாரியத்துவம் மாற்றப்பட்டிருக்குமேயானால், நியாயப்பிரமாணமும் மாற்றப்பட வேண்டியதாகும்.

பூரணப்படுதல் (perfection)

τελείωσις - teleioosis - 5050

பெண்பால் பெயர்ச்சொல் - பூரணப்படுதல், நிறைவேறுதல் **(completing, finishing of anything, so as to leave nothing imperfect, wanting) "perfection" "performance"** (லூக்கா 1:45) - லேவியரின் முறைமை நிழலாட்டமாக இருக்கிறது. கிறிஸ்துவின் நித்திய ஆசாரியத்துவமும், லேவியரின் ஆசாரியத்துவமும் ஒன்றல்ல. பூரணமான ஆசாரிய முறைமைக்கு லேவியர்கள் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார்கள். ஆனாலும் லேவியரின் ஆசாரிய முறைமை பூரணமானதல்ல.

"இஸ்ரவேல் ஜனங்கள் லேவிகோத்திர ஆசாரிய முறைமைக்குட்பட்டிருந்தல்லவோ நியாயப்பிரமாணத்தைப் பெற்றார்கள்" - ஆசாரிய முறைமை ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்பாகவே நியாயப்பிரமாணம் இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. (யாத் 40:12-14)

"அந்த ஆசாரிய முறைமையினாலே பூரணப்படுதல் உண்டாயிருக்குமானால், ஆரோனுடைய முறைமையின்படி அழைக்கப்படாமல், மெல்கிசேதேக்கினுடைய முறைமையின்படி அழைக்கப்பட்ட வேறொரு ஆசாரியன் எழும்பவேண்டுவதென்ன?" நித்திய ஆசாரியத்துவத்திற்கு மெல்கிசேதேக்கு ஒப்பானவன். லேவியருடைய முறைமை துவங்குவதற்கு 400 வருஷங்களுக்கு முன்பு மெல்கிசேதேக்கு ஆசாரிய ஊழியம் செய்து வந்தான். லேவியருடைய முறைமையின் பிரகாரம் ஆசாரிய ஊழியம் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு 600 வருஷங்களுக்குப் பின்பு தாவீது பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையினால் "மெல்கிசேதேக்கின் முறைமையின் பிரகாரம் பூரணமான நித்திய பிரதான ஆசாரியர் எழும்புவார்" என்று முன்னறிவித்தான்.

"ஆசாரியத்துவம் மாற்றப்பட்டிருக்குமேயானால் நியாயப்பிரமாணமும் மாற்றப்பட வேண்டியதாகும்" - ஆரோனின் ஆசாரிய முறைமை இப்பொழுது ஒழிக்கப்பட்டு விட்டது. இதற்கு முந்திய மெல்கிசேதேக்கின் ஆசாரிய முறைமை மறுபடியும் வந்திருக்கிறது. ஆகையினால் நியாயப்பிரமாணம் மாற்றப்பட வேண்டியது அவசியமாக இருக்கிறது. அத்துடன் நியாயப்பிரமாணத்தில் கூறப்பட்டிருக்கும் பலிமுறைமைகளும் ஒழிக்கப்பட வேண்டும். ஏனென்றால் நியாயப்பிரமாண பலிமுறைகள் பரிபூரணத்தைத் தராது. மனுஷனைத் தேவனிடத்தில் ஒப்புரவாக்காது. மனுஷனைப் பரிசுத்தப்படுத்தாது. பாவங்களை அகற்றாது. (எபி 7:12; எபி 10:5-10) ஆகையினால் தேவன் நியாயப்பிரமாணத்தையும் ஆசாரியத்துவத்தையும் மாற்றுவதற்குத் திட்டமிட்டார். இயேசு கிறிஸ்துவை ஒரே பிரதான ஆசாரியராகவும், பாவ நிவாரண பலியாகவும் தேவன் மனுக்குலத்தாருக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.

2. தேவனுடைய தெரிந்தெடுப்பு - யூதா கோத்திரம் - (சங் 110:4; எபி 7:1-8)

எபி 7:13 இவைகள் எவரைக்குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறதோ, அவர் வேறொரு கோத்திரத்துக்குள்ளானவராயிருக்கிறாரே; அந்தக் கோத்திரத்தில் ஒருவனாகிலும் பலிபீடத்து ஊழியம் செய்ததில்லையே.

எபி 7:14 நம்முடைய கர்த்தர் யூதா கோத்திரத்தில் தோன்றினாரென்பது பிரசித்தமாயிருக்கிறது; அந்தக் கோத்திரத்தாரைக்குறித்து மோசே ஆசாரியத்துவத்தைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையே.

"இவைகள் எவரைக்குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறதோ அவர் வேறொரு கோத்திரத்துக்குள்ளானவராயிருக்கிறாரே" இவைகள் மேசியாவைக் குறித்து சொல்லப்பட்டிருக்கிறது. மேசியா லேவி கோத்திரத்திலிருந்து வந்தவர் அல்ல.

"நம்முடைய கர்த்தர் யூதாகோத்திரத்தில் தோன்றினாரென்பது பிரசித்தமாயிருக்கிறது" - யூதருடைய வம்சவரலாற்றின் பிரகாரம் இயேசு கிறிஸ்து யூதா கோத்திரத்தில் தோன்றியவர். இதை வலியுறுத்திக் கூறுகிறார் மத்தேயு. லூக்கா ஆகியோரும் கிறிஸ்து யூதா கோத்திரத்திலிருந்து வந்தவர் என்று விளக்கிக் கூறியிருக்கிறார்கள்.

7 அதிகாரம்

தோன்றுதல் (sprang out)
ἀνατέλλω anatelloo 393

வினைச்சொல் - உதி, உதிக்கபண்ணு, எழு, உதயமாகு தோன்று (hath risen) sun rising மத்4:16,மத் 5:45,மத் 13:6,மாற்கு 4:6, மாற்கு 16:2; யாக் 1:11; 2பேதுரு 1:19 லூக்கா 12:54 - கிறிஸ்து யூதா கோத்திரத்திலிருந்து தோன்றியவர் இஸ்ரவேலுக்கு வெளிச்சத்தையும் தமது ஜனங்களுக்கு அறிவையும் கொடுப்பதற்காக இயேசு கிறிஸ்து நீதியின் சூரியனாகத் தோன்றினார் ஏசா 9:1-2; ஏசா 11:1; மத் 4:16, லூக்கா 1:77-79

3. கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின்படி ஆசாரியராகாமல் அழியாத ஜீவனுக்குரிய வல்லமையின்படியே ஆசாரியரானார் - (8:6-13 9:23-24 10:9-23)

எபி 7:15 அல்லாமலும் மெல்கிசேதேக்குக்கு ஒப்பாய் வேறொரு ஆசாரியர் எழும்புகிறார் என்று சொல்லியிருப்பதினால் மேற்சொல்லியது மிகவும் பிரசித்தமாய் விளங்குகிறது

எபி 7:16 அவர் மாம்ச சம்பந்தமான கட்டளையாகிய நியாயப்பிரமாணத்தின்படி ஆசாரியராகாமல்,

எபி 7:17 நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று சொல்லிய சாட்சிக்குத்தக்கதாக அழியாத ஜீவனுக்குரிய வல்லமையின்படியே ஆசாரியரானார்

பிரசித்தமாயுள்ளது(abundantlymanifest)
κατάδηλος- katadeelos - 2612

பெயரடை - பிரசித்தமாயுள்ள - லேவியருடைய ஆசாரிய முறைமையை மாற்ற வேண்டுமென்று தேவன் திட்டமிட்டார் மேசியா மெல்கிசேதேக்கின் ஆசாரிய முறைமையின் பிரகாரம் வருவார் என்று சங்கீதம் 110 கூறுகிறது. அவர் ஆசாரியராக மட்டுமல்ல, தீர்க்கதரிசியாகவும், ராஜாவாகவும் இருந்தார் (எபி 7:1-10) லேவி கோத்திரத்திலிருந்து வந்த ஆசாரியர்கள் ஆசாரிய ஊழியம் மட்டுமே செய்து வந்தார்கள் அவர்களில் யாரும் ஒன்றுக்கும் மேற்பட்ட ஊழியங்களைச் செய்வதற்கு அபிஷேகம் பண்ணப்படவில்லை.

மாம்சம் சம்பந்தம் (carnal) - σάρκινος - sarkinos - 4560

பெயரடை - சதையான (ரோமர் 7:14) - மாம்சம் என்பது எப்போதுமே பாவத்தைக் குறிப்பதில்லை சில சமயங்களில் இந்த வார்த்தை மனுஷிகத்தையும் குறிக்கும் இயேசு கிறிஸ்து ஆரோனின் முறைமையின் பிரகாரமாக ஆசாரியராக்கப்படவில்லை ஆரோனின் ஆசாரிய முறைமையில் ஆரோனுக்குப் பின்பு யாராவது ஒரு மனுஷன் ஆசாரியராக வேண்டும் இயேசு கிறிஸ்துவோ நித்திய ஆசாரியர் இவர் மெல்கிசேதேக்கின் முறைமையின் பிரகாரம் ஆசாரியராக்கப்பட்டவர் (எபி 7:16-17

எபிரேயர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 17

"நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர்" (எபி 7:17 சங் 110:4

4. கிறிஸ்துவின் விசேஷித்த நம்பிக்கை (6:16-20 ரோமர் 5:1-11, 8:1-4 தீத்து 1:2)

எபி 7:18 முந்தின கட்டளை பெலனற்றதும் பயனற்றதுமாயிருந்ததினிமித்தம் மாற்றப்பட்டது.

எபி 7:19 நியாயப்பிரமாணமானது ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை, அதிக நன்மையான நம்பிக்கையை வருவிப்பதோ பூரணப்படுத்துகிறது அந்த நம்பிக்கையினாலே தேவனிடத்தில் சேருகிறோம்.

7 அதிகாரம்

மாற்றப்படுதல் (disannulling) ἀθέτησις - atheteesis - 115

பெண்பால் பெயர்ச்சொல் - நீக்குதல் மாற்றப்படுதல் (abolition, rejection) "disannulling" (எபி 7:18) "put away" (எபி 9:26) - எபி 7:16-18 ஆகிய வசனங்களில் ஆசாரியத்துவத்தைப் பற்றி கூறப்பட்டிருக்கிற கட்டளைகள் மாற்றப்பட்டன அத்துடன் பத்து கற்பனைகளையும் சேர்த்து எல்லாக் கற்பனைகளும் மாற்றப்பட்டன

பயனற்றது (unprofitableness) - ἀνωφελής - anoophelees - 512

பெயரடை - அப்பிரயோஜனமான பயனற்ற (எபி 7:17, தீத்து 3:9)

நியாயப்பிரமாணம் எதற்குப் பயனற்றது

1 பாவத்திலிருந்து இரட்சிப்பதற்கு (எபி 9:15, எபி 10:1-18)

2 பரிபூரணப்படுத்துவதற்கு (எபி 7:19 எபி 10:1)

3 நித்திய சுதந்தரத்தைக் கொடுப்பதற்கு (ரோமர் 4:13)

4 பாவத்திலிருந்தும், மரணத்திலிருந்தும் விடுவிப்பதற்கு (ரோமர் 8:2-3)

5 விசுவாசத்தைக் கொடுப்பதற்கு (கலா 3:12)

6 ஜீவனை அளிப்பதற்கு (2கொரி 3:7, கலா 3:21)

7 மனச்சாட்சியைச் சுத்தப்படுத்துவதற்கு (எபி 9:9, எபி 10:1-4)

8 அற்புதங்கள் செய்வதற்கு (எபி 7:18, ரோமர் 8:3)

9 தேவனிடத்தில் சேருவதற்கு (எபி 9:7-8, எபி 10:19-23)

10 இரக்கத்தைத் தருவதற்கு (எபி 10:28)

11 நீதிமானாக்குவதற்கு (கலா 2:16 ரோமர் 4)

12 நீதியைத் தருவதற்கு (ரோமர் 3:21-25)

13 ஆவியானவரை அருளுவதற்கு (கலா 3:1-5,14)

14 சத்தியத்தை வெளிப்படுத்துவதற்கு (கொலோ 2:14-17; எபி 8:5; எபி 10:1)

15. பரிசுத்தப்படுத்துவதற்கு (எபி 10:9-14)

வருவித்தல் (bringing in) - ἐπεισαγωγή - epeisagoogee - 1898

பெண்பால் பெயர்ச்சொல் - வருவித்தல் (superintroduction) - பழைய ஏற்பாட்டை எடுத்துவிட்டு அதன் இடத்தில் புதிய ஏற்பாடாகிய சுவிசேஷத்தை வருவிப்பது

கிறிஸ்து ஆரோனைவிட மேலானவர்

1 பூரணப்படுத்துகிறார் (எபி 7:11,19 எபி 10:14)

2 மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நித்திய பிரதான ஆசாரியராக இருக்கிறார் (எபி 6:20 எபி 7:1-2)

3 உயர்ந்த பிரமாணத்தின் பிரகாரம் ஆசாரியரானார் (எபி 7:16)

4 நித்திய பிரதான ஆசாரியர் (எபி 7:16-17,21)

5 பெலமுள்ள பயனுள்ள பிரமாணத்தின் ஆசாரியர் (எபி 7:18)

6 அதிக நம்பிக்கையின் ஆசாரியர் (எபி 7:19)

7 தேவனிடத்தில் சேரும் நல்ல வழியாகிய ஆசாரியர் (எபி 7:19; எபி 10:19-23)

8 தேவனுடைய ஆணையின்படி ஆசாரியராக்கப்பட்டவர் (எபி 7:21, சங் 110:4)

9 விசேஷித்த உடன்படிக்கைக்கு பிணையாளியானவர் (எபி 7:22, எபி 8:6)

எபிரெயர்– தொகுப்புரை

7 அதிகாரம்

10 நிலைத்திருக்கக் கூடியவர் (எபி 7:23-25,28; எபி 10:12-14)

11 இரட்சிக்க வல்லவர் (எபி 7:25; எபி 10:7-18)

12 எப்பொழுதும் வேண்டுதல் செய்கிறவர் (எபி 7:25)

13 பரிசுத்தர் குற்றமற்றவர் மாசில்லாதவர் பாவிகளுக்கு விலகினவர் (எபி 7:26-27)

14 வானங்களில் உயர்ந்தவர் (எபி 7:26; எபி 1:3; எபி 8:1; எபி 12:1-2)

15 நாடோறும் பலியிட வேண்டாதவர் (எபி 7:27; எபி 10:10-14)

16 ஒரேதரம் பலியிடப்பட்டவர் (எபி 7:27; எபி 10:10-14)

17 பலவீனமில்லாதவர் (எபி 7:28; மத் 8:17)

18 நித்தியமாக ஏற்படுத்தப்பட்டவர் (எபி 7:28)

19 பரலோக ஆலயத்தில் சத்தியத்திற்கு ஆசாரிய ஊழியம் செய்கிறவர் (எபி 8:1-2; எபி 9:11)

20 மெய்யானவற்றிற்கு ஆராதனை செய்கிறவர் (எபி 8:4-5; எபி 10:1-4)

21 விசேஷித்த ஊழியம் உடையவர் (எபி 8:6)

22 விசேஷித்த வாக்குத்தத்தங்களின் படி விசேஷித்த உடன்படிக்கையின் மத்தியஸ்தர் (எபி 8:6)

"அந்த நம்பிக்கையினாலே தேவனிடத்தில் சேருகிறோம்" இயேசு கிறிஸ்துவின் பாவநிவாரண பலியினாலும் புதிய உடன்படிக்கையினாலும் தேவனிடத்தில் கிட்டிச் சேரும் சிலாக்கியம் நமக்கு கிடைத்திருக்கிறது. நியாயப்பிரமாணத்தின் மூலமாக எந்த மனுஷரும் தேவனிடத்தில் சேரமுடியாது. (எபி 7:19; எபி 10:19-23)

5. கிறிஸ்துவின் விசேஷித்த பிரதிஷ்டை (7:28; 9:6-28; 10:1-23)

எபி 7:20 அன்றியும், அவர்கள் ஆணையில்லாமல் ஆசாரியராக்கப்படுகிறார்கள்; இவரோ: நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார், மனம்மாறாமலும் இருப்பார் என்று தம்முடனே சொன்னவராலே ஆணையோடே ஆசாரியரானார்.

எபி 7:21 ஆனதால், இயேசுவானவர் ஆணையின்படியே ஆசாரியராக்கப்பட்டது எவ்வளவு விசேஷித்தகாரியமோ

எபிரெயர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 18

"நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார்; மனம்மாறாமலும் இருப்பார் என்று தம்முடனே சொன்னவராலே ஆணையோடே ஆசாரியரானார்" (எபி 7:21; சங் 110:4) தேவன் தமது ஆணையை நிச்சயமாகவே நிறைவேற்றுவார். லேவியரின் ஆசாரியத்துவத்தையும் மோசேயின் பிரமாணத்தையும் தேவன் தமது ஆணையினால் உறுதிப்படுத்தவில்லை. தமது விருப்பத்தின் பிரகாரம் அதை மாற்றுவதற்கோ அல்லது ஒழிப்பதற்கோ தேவனுக்கு உரிமையுண்டு.

வேதாகமத்தில் தேவன் ஆணையிட்டிருக்கும் காரியங்கள்

1 ஆபிரகாமிற்கு இடப்பட்ட ஆணை (ஆதி 12:1-3; ஆதி 15:18-21; ஆதி 22:16-18; லூக்கா 1:72-74; எபி 6:13-14)

2 ஈசாக்கில் உறுதிபண்ணப்பட்ட ஆணை (ஆதி 26:3; சங் 105:9-11; எரே 11:5)

3 யாக்கோபில் உறுதிபண்ணப்பட்ட ஆணை (ஆதி 28:13-15; சங் 105:9-11)

4 இஸ்ரவேலில் உறுதிபண்ணப்பட்ட ஆணை (உபா 29:13-15)

7 அதிகாரம்

5 கலகம்பண்ணிய இஸ்ரவேலர்களிடம் இட்ட ஆணை (உபா 1:34-35; எபி 3:7,18; எபி 4:3; சங் 95:11)

6 மோசே கீழ்ப்படியாதபோது இட்ட ஆணை (உபா 4:21)

7 தாவீதினிடத்தில இட்ட ஆணை (2சாமு 7; சங் 89:4,35; சங் 132:11; அப் 2:30-32)

8 அந்திக்கிறிஸ்துவை அழிக்குமாறு இஸ்ரவேலரிடத்தில இட்ட ஆணை (ஏசா 14:24-27; வெளி 19:11-21)

9 தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று சர்வ சிருஷ்டிக்கும் இட்ட ஆணை (ஏசா 45:23; பிலி 2:9-11)

10 தேவாலயத்தில அழிவைப் பற்றி இட்ட ஆணை (எரே 22:5)

11 போஸறாவின பாழும் நிந்தையும் பற்றிய ஆணை (எரே 49:13)

12 பாபிலோனின நித்திய அழிவைக் குறித்த ஆணை (எரே 51:14; ஏசா 13; 14)

13 மேசியாவையும், அவருடைய நித்திய ஆசாரியத்துவத்தையும் குறித்த ஆணை (சங் 110:4; எபி 7:21,28)

14 நியாயப்பிரமாணத்தின இடத்தில புதிய உடன்படிக்கை எடுத்துக் கொள்வது பற்றிய ஆணை (ஏசா 49:8; ஏசா 59:21; ஏசா 61:8; எரே 32:40; ரோமா 11:27; எபி 8:6-13; எபி 10:16)

6. கிறிஸ்துவின் விசேஷித்த உடன்படிக்கை (8:6-13; 9:13-28; மத் 26:28)

எபி 7:22 அவ்வளவு விசேஷித்த உடன்படிக்கைக்குப் பிணையாளியானார்

பிணையாளி (surety) ἔγγυος - engyos 1450

பொறுப்பேற்கும் பிணையாளி (giving surety, bail) புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்கள் தம்முடைய பிள்ளைகள் அனைவருக்கும் கிடைக்கும் என்பதற்கு இயேசு கிறிஸ்து பிணையாளியானார். தேவனுக்கும் மனுஷருக்கும் நடுவில் கிறிஸ்து இயேசு மத்தியஸ்தராக இருக்கிறார் (எபி 8:6; எபி 9:15)

"விசேஷித்த உடன்படிக்கை" - மோசேயின் பிரமாணமாகிய பழைய உடன்படிக்கையை விட புதிய உடன்படிக்கை விசேஷமானது. (2கொரி 3:6)

7. கிறிஸ்து மாறிப்போகாத ஆசாரியத்துவம் உள்ளவர் - (7:16-21; 28; 9:11-28; 10:10-23)

எபி 7:23 அன்றியும் அவர்கள் மரணத்தினிமித்தம் நிலைத்திருக்கக் கூடாதவர்களானபடியால் ஆசாரியராக்கப் படுகிறவர்கள் அநேகராயிருக்கிறார்கள்

எபி 7:24 இவரோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறபடியினாலே மாறிப் போகாத ஆசாரியத்துவமுள்ளவராயிருக்கிறார்

"மாறிப்போகாத ஆசாரியத்துவமுள்ளவராயிருக்கிறார்" - ஆரோனின ஆசாரிய ஊழியம் அவனுக்குப் பின்பு மற்ற மனுஷருக்குக் கொடுக்கப்பட்டது. இயேசு கிறிஸ்துவிடம் கொடுக்கப்பட்ட நித்திய ஆசாரியத்துவ ஊழியம் வேறு யாருக்கும் கொடுக்கப்படுவதில்லை (எபி 7:23-24)

8. கிறிஸ்து முற்றுமுடிய இரட்சிக்க வல்லவர் (9:11-28; 10:3-23)

எபி 7:25 மேலும் தமது மூலமாய் தேவனிடத்தில சேருகிறவர்களுக்காக வேண்டுதல செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவரானபடியால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்

"அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவரானபடியால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" இயேசு கிறிஸ்து தம்மைத் தாமே பாவநிவாரண பலியாக ஒப்புக் கொடுத்திருக்கிறார். எல்லா மனுஷருடைய பாவங்களையும் அவரால் மன்னிக்க முடியும். எல்லாச் சூழ்நிலைகளிலும் எல்லா வேளைகளிலும் எல்லா இடங்களிலும் இயேசு கிறிஸ்துவால ஜனங்களை முற்றுமுடிய இரட்சிக்க முடியும்.

7 அதிகாரம்

வேண்டுதல் செய்தல் (intercession) - ἐντυγχάνω entynchanoo- 1793

வினைச்சொல் - வேண்டுதல் செய், விண்ணப்பம் பண்ணு, வருந்திக்கேள் (to light upon; fall in with; meet with, intercede with and for) "intercession" எபி7:25 ரோமர் 8:27,34 ரோமர் 11:2) "deal with" (அப் 25:24)

வேண்டுதல் செய்வதன் நோக்கங்கள்

1 ஒரு காரணத்திற்காக ஒருவரிடத்தில் வருவது. எபி 7:25, ரோமர் 8:27,34)

2 மற்றவர்கள் சார்பாக நீதிமன்றத்தில் வழக்காடுதல் ஏசா 59:9-18 தீமோ 2:1

3 மற்றவர்களுக்காக ஜெபித்தல் (ஏசா 53:12 லூக்கா 22:44 ரோமர் 8:26-27,34 எபி 7:25)

4 ஒரு நபரை அல்லது ஒரு காரியத்தை ஆதரித்தல் (எரே 7:16; எரே 27:18 எரே 36:25

5 ஒருவரிடம் மற்றவரைக் குறித்து பரிந்துரை செய்தல் (ரோமர் 8:26-27)

6 ஏதாவது உதவியைச் செய்தல் ரோமர் 8:26-27

7 ஒருவர்மீது குற்றம் சுமத்துதல் (ரோமர் 11:2, அப் 25:24)

9. கிறிஸ்துவின் விசேஷித்த தன்மையும் சுபாவமும் - (1:1-9; 2:9-18, 7:16 8:1, 9:24)

எபி 7:26 பரிசுத்தரும், குற்றமற்றவரும் மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார்

கிறிஸ்துவின் சுபாவமும், ஸ்தானமும்

1 பரிசுத்தர் (எபி 7:26, 1பேதுரு 2:22

2 குற்றமற்றவர்

3 மாசில்லாதவர்

4 பாவிகளுக்கு விலகினவர்

5 வானங்களில் உயர்ந்தவர் (எபி 7:26 எபே 1:20-23; பிலி 2:9-11 1பேதுரு 3:22)

குற்றமற்றவர் (Harmless) - ἄκακος - akakos - 172

பெயரடை - கபடில்லாத, குற்றமற்ற (without evil) "simple" (ரோமர் 16:18)

மாசில்லாதவர் (Undefiled) - ἀμίαντος - amiantos - 283

பெயரடை - மாசில்லாத, அசுசிப்படாத, மாசற்ற (யாக் 1:27; 1பேதுரு 1:4) - இயேசு கிறிஸ்துவின் ஜீவியத்திலும், நடத்தையிலும் ஒரு மாசும் இல்லை. சர்ப பிரகாரமாக அவரிடத்தில் ஒரு குறைவும் இல்லை

விலகினவர் (separate) - χωρίζω - choorizoo - 5563

வினைச்சொல் பிரி, விட்டுப்போ, விட்டுப்பிரி, விலகு "separate" (எபி 7:26) ரோமர் 8:35,39) "put asunder" (மத் 19:6, மாற்கு 10:9) - இயேசு கிறிஸ்து பரிபூரண ஜீவியம் ஜீவித்தார் பாவமான வழிகளில் அவர் பாவிகளோடு பிணைக்கப்படவில்லை.

10. கிறிஸ்துவின் செய்து முடிக்கப்பட்ட மீட்பு - (1:3, 10:10, 14: 12:2)

எபி 7:27 அவர் பிரதான ஆசாரியர்களைப் போல முன்பு சொந்த பாவங்களுக்காகவும், பின்பு ஜனங்களுடைய பாவங்களுக்காகவும் நாடோறும் பலியிடவேண்டுவதில்லை; ஏனெனில் தம்மைத்தாமே பலியிட்டதினாலே இதை ஒரேதரம் செய்து முடித்தார்

7 அதிகாரம்

செலுத்துதல் (offer up) - ἀναφέρω - anapheroo - 399

வினைச்சொல் - கட்டிக்கொண்டு எடு, எடுத்துக்கொள், செலுத்து, சுமர் **"offer up"** (எபி 7:27; எபி 13:15 யாக் 2:21; 1பேதுரு 2:5); **"bear"** எபி 9:28, 1பேதுரு 2:24); **"lead," "carry," "bring up"** (மத் 17:1 மாற்கு 9:2; லூக்கா 24:51)

"ஒரேதரம்" - இயேசு கிறிஸ்து பாவமில்லாதவர் ஆகையினால் தமக்காக அவர் எந்த பலியும் இயேசு செலுத்தவில்லை. (எபி 7:26 1பேதுரு 2:22) எல்லா பாவிகளுக்கும் தம்மை ஒரேதரம் பலியாகச் செலுத்தினார் எல்லா மனுஷருக்காகவும் ஒரேதரம் தமது மரணத்தை ருசிபார்த்தார் (எபி 2:9-15, 1பேதுரு 2:24)

கிறிஸ்துவின் நித்திய மனுஷ சரீரம்

இயேசு கிறிஸ்து தமது சரீரத்தைப் பலியாகச் செலுத்தினார் எல்லா மனுஷருக்கும் பாவ நிவாரண பலியாக இயேசு கிறிஸ்து பலியிடப்பட வேண்டும் என்பது தேவனுடைய சித்தம் (எபி 10:1-14) மனுஷருடைய பாவங்களுக்காக இயேசு கிறிஸ்து தமது சரீரத்தில் மரித்த படியினால மனுஷருடைய உயிர்த்தெழுதலுக்காக அவர் தமது சரீரத்தில் உயிர்த்தெழுந்தார் எபி 7:25 ஆவது வசனத்தில "எப்பொழுதும் உயிரோடிருக்கிறவர்" என்பதன் பொருள் "அவர் உயிர்த்தெழுந்து எப்பொழுதும் ஜீவிக்கிறார்" என்பதாகும் இயேசு கிறிஸ்து இந்தப் பூமியில எந்த சரீரத்தில் ஜீவித்து மரித்தாரோ அந்த சரீரத்தில் நித்திய காலமாக ஜீவிப்பார் (லூக்கா 24:39, அப் 1:11 சக 13:6) தேவனிடத்தில் கிறிஸ்து மனுஷருக்காக பரிந்து பேசும்போது அவர் தமது உயிர்த்தெழுந்த மானிட சரீரத்திலேயே இருப்பார் பரலோகத்தில இயேசு கிறிஸ்து மனுஷர் சார்பாக பரிந்து பேசுவார் (யோவான் 3:16 ரோமர் 3:21-26 ரோமர் 10:9-10)

11. கிறிஸ்து பரிபூரண குமாரன் - 5:9 9:11 10:14

எபி 7:28 நியாயப்பிரமாணமானது பெலவீனமுள்ள மனுஷர்களைப் பிரதான ஆசாரியராக ஏற்படுத்துகிறது நியாயப் பிரமாணத்திற்குப்பின்பு உண்டான ஆணையோடே விளங்கிய வசனமோ என்றென்றைக்கும் பூரணமான குமாரனை ஏற்படுத்துகிறது.

"நியாயப்பிரமாணத்திற்குப்பின்பு" நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்ட பின்பு உண்டான தேவனுடைய ஆணையை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. ஆரோனின் ஆசாரியத்துவத்திற்குப் பதிலாக [illegible] தேக்கின ஆசாரிய முறைமையின்படி ஒரு பிரதான ஆசாரியர் எழும்பப்படுவாரென்று தேவன் ஆணையிட்டார் (சங் 110:4). நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டு 600 வருஷங்களுக்குப் பின்பு தேவன் இவ்வாறு ஆணையிட்டார் தமது ஆணையினால் உறுதிப்பண்ணப்படாத பழைய பிரமாணத்தைத் தேவன ஒழித்தார் (எபி 7:11 22 28) இயேசு கிறிஸ்துவின ஆசாரியத்துவம் நித்தியமானது ஆகையினால் புதிய உடன்படிக்கையும் நித்தியமானது.

எபிரெயர்– தொகுப்புரை

8 அதிகாரம்

12. கிறிஸ்துவின் மகத்துவமான ஸ்தானம் - (1.3; 7.26; 9.23-28 10.19-23

எபி 8:1 மேற்சொல்லியவைகளின் முக்கியமான பொருளென்னவெனில், பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலதுபாரிசத்திலே [redacted]நதிருக்கிறவருமான.

முக்கியமான பொருள் (sum) - κεφάλαιον - kephalaion - 2774

பால்வேறுபாடற்ற பெயர்ச்சொல - திரவியம், முக்கியமான பொருள் (main point) (அப 22:28, எபி 8:1)

கிறிஸ்துவைப் பற்றிய சத்தியங்கள்

1 நமது பிரதான ஆசாரியர் (எபி 3:1 எபி 6:20, எபி 7:11-28)

2 தேவனுடைய வலது பாரிசத்தில உட்கார்ந்திருக்கிறவர் (எபி 8:1; எபி 1:3 எபி 12:2 ரோமர் 8:34, எபே 1:20)

3 பரலோகத்திலுள்ள மெய்யான காரியங்களுக்கு ஊழியம் செய்கிறவர் நியாயப்பிரமாணம் பரலோகத்தின மெய்யான காரியங்களுக்குச் சாயலாகவும், நிழலாகவும் இருக்கிறது. (எபி 8:2-6, எபி 9:22-28 எபி 10:1-12)

4 பரலோக ஆசாரியர் (எபி 8:1-5 எபி 9:23-24

5 புதிய உடன்படிக்கையின மத்தியஸ்தர் (எபி 8:6, எபி 9:15, மத் 26:28)

6 மெய்யான ஒரே பலியானவர் (எபி 8:3; எபி 9:11-28; எபி 10:1-18, 1பேதுரு 2:24)

7 எல்லா ஆசீர்வாதங்களுக்கும் ஆதாரமாக இருக்கிறவர்

கிறிஸ்து நமக்கு அருளும் ஆசீர்வாதங்கள்

1 கிருபையும், இரக்கமும் (எபி 8:12

2 பாவமன்னிப்பு (எபி 8:12; எபி 10:1-18

3 வரப்போகிற நன்மைகள் (எபி 9:11 எபி 10:1)

4 நித்திய இரட்சிப்பு (எபி 9:12-15)

5 சுத்திகரிக்கப்பட்ட மனச்சாட்சி (எபி 9:14)

6 நித்திய சுதந்தரம் (எபி 9:15)

7 நமக்காக தேவனுடைய சமூகத்தில் பிரத்தியட்சமாகும் படி பிரவேசித்திருக்கிறார் (எபி 9:24)

8 மனுஷருடைய சத்துருக்கள்மீது வெற்றி (எபி 10:13)

9 பரிசுத்தமாக்கப்படுதல் (எபி 10:10)

10 பூரணபடுத்துதல் (எபி 10:14)

11 பாவங்களை மறப்பது (எபி 10:17-18

12 தேவனிடத்தில பிரவேசிப்பதற்கு புதிதும், ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணியிருக்கிறார் (எபி 10:19)

13. கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்தில் கிறிஸ்து ஆசாரிய ஊழியம் செய்கிறார் - (7:19,25,27-28 9:11-28

எபி 8:2 பரிசுத்த ஸ்தலத்திலும், மனுஷரால அல்ல, கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்திலும் ஆசாரிய ஊழியஞ் செய்கிறவருமாயிருக்கிற பிரதான ஆசாரியர் நமக்கு உண்டு.

எபி 8:3 ஒவ்வொரு பிரதான ஆசாரியனும் காணிக்கைகளையும் பலி களையும் செலுத்தும்படி நியமிக்கப் படுகிறான்; ஆதலால செலுத்தும் படிக்கு ஏதோ ஒன்று இவருக்கும் அவசியம் வேண்டியதாயிருக்கிறது.

எபி 8:4 பூமியிலே அவர் இருப் பாரானால் ஆசாரியராயிருக்கமாட்டார், ஏனென்றால், நியாயப்பிரமாணத்தின் படி காணிக்கை களைச் செலுத்துகிற ஆசாரியர்கள் இருக்கிறார்களே

8 அதிகாரம்

எபி 8:5 இவர்கள்செய்யும் ஆராதனை பரலோகத்திலுள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும் ஒத்திருக்கிறது; அப்படியே, மோசே கூடாரத்தை உண்டுபண்ணப்போகையில், மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே நீ எல்லாவற்றையும் செய்ய எச்சரிக்கையாயிரு என்று தேவன் அவனுக்குக் கட்டளையிட்டார்

ஊழியஞ்செய்கிறவர் (minister) - λειτουργός - leitourgos - 3011

ஆண்பால் பெயர்ச்சொல் - ஊழியக்காரர் உதவிசெய்தவன் ஊழியஞ்செய்கிறவன் (public servant, officer) (ரோமர் 13:6) - இயேசு கிறிஸ்து பரலோகத்தின் காரியங்களுக்கு ஊழியக்காரர் மனுஷருடைய இரட்சிப்பிற்காகவும் அவர்களுடைய நித்திய ஜீவனுக்காகவும் இயேசு கிறிஸ்து ஊழியம் செ[illegible] வருகிறார் கிறிஸ்துவின் ஊழியத்திலும் சேவையிலும் பங்கு பெறுவதற்கும் ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கும் அனைவருக்கும் உரிமையுள்ளது. (எபி 8:2-6, எபி 9:11-15,23-24)

பரிசுத்த ஸ்தலம் (sanctuary) - ἅγιος - hagios - 39

பெயரடை - அர்ப்பணிக்கப்பட்டுள்ள வேறுபிரிக்கப்பட்டுள்ள, புதிய, பரிசுத்த என்னும் பொருளை பெயரடையில் தரும் (hobes, referring to the holy of holies of the heavenly temple, tabernacle) (எபி 8:2, எபி 9:3,8; எபி 10:19)

(அ) பரிசுத்த பிதாவின் பரிசுத்தம் தேவனுக்கும் மானிட பரிசுத்தத்திற்கும் இடையில் உள்ள இடைவெளியைக் குறிக்கும் யோவா 17:11

(ஆ) தேவனுக்கும் அவருடைய ஊழியத்துக்கும் அர்ப்பணிக்கப்பட்டுள்ள பொருட்கள் எபே 1:4; மத் 24:15

(இ) தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள நபர்கள் இவர்கள் தேவனுடைய பரிசுத்தத்தில் பங்குபெறுகிறார்கள் ரோம 1:7; மாற் 6:20

கூடாரம் (tabernacle) - σκηνή - skeenee - 4633

பெண்பால் பெயர்ச்சொல் - கூடாரம் வீடு, வாசஸ்தலம் "tabernacle", "habitation" (லூக்கா 16:9)

சரித்திரமான கூடாரங்கள்

1 தற்காலிக கூடாரங்கள் (Temporary dwellings) (மத் 17:4; மாற்கு 9:5

2 மோளோகினுடைய கூடாரம் (Tabernacle of Moloch) (அப் 7:43-44)

3 தாவீதின் ராஜ்ஜியம் (Kingdom of David) (அப் 15:16)

4 பரலோகத்தில் கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரம் (Heavenly sanctuary) (எபி 8:2; எபி 9:11

5 மோசேயின் ஆசரிப்புக் கூடாரம் (Mosaic tabernacle) (எபி 8:5, எபி 9:2,6,8,21; எபி 13:10

6 குடியிருக்கும் கூடாரங்கள் (Tents of dwelling) (எபி 11:9

7 பரிசுத்த நகரம் (The Holy City) (வெளி 13:6; வெளி 21:2,23

பரலோகத்தின் கூடாரம் தேவனுடைய ஆலயம் என்றழைக்கப்படுகிறது. (ஏசா 6:1, வெளி 3:12; வெளி 7:15, வெளி 11:19 வெளி 14:15,17; வெளி 15:5-8, வெளி 16:1,17

நியமிக்கப்படுதல் (ordained) καθιστάνω kathistanoo 2525

8 அதிகாரம்

வினைச்சொல் - வை. ஏற்படுத்து வழிநடத்து. நியமி. ஆக்கு (தீத்து 1:5)

தேவனிடம் செலுத்த வேண்டிய இரண்டு காரியங்கள்

1 தேவனுடைய ஆளுகையையும் பராமரிப்பையும் அங்கீகரிப்பதற்காக அவருக்குச் செலுத்த வேண்டிய காணிக்கைகள்

2 நம்மிடம் பாவமுள்ளது என்பதை அங்கீகரித்து அந்தப் பாவத்தின் நிவாரணத்திற்காக தேவனுக்குச் செலுத்த வேண்டிய பலிகள்

"ஆதலால் செலுத்தும்படிக்கு ஏதோ ஒன்று இவருக்கும் அவசியம் வேண்டியதாயிருக்கிறது" - எல்லா ஆசாரியர்களும் பலி செலுத்த வேண்டியது மிகவும் அவசியம். ஆகையினால் இயேசு கிறிஸ்துவிற்கு பலிசெலுத்தும்படிக்கு ஏதோ ஒன்று அவசியம் வேண்டியதாயிருக்கிறது. (எபி 10:1-12)

"பூமியிலே அவர் இருப்பாரானால் ஆசாரியராயிருக்கமாட்டார்" எருசலேமிலுள்ள தேவாலயத்து ஊழியங்களை ஆசாரியர்களே இன்றும் செய்து வருகிறார்கள் ஆகையினால் எருசலேமின் தேவாலயத்தில் ஆசாரிய ஊழியத்தை நிறைவேற்றுவது இயேசு கிறிஸ்துவிற்கு இயலாத காரியம் ஏனெனில் இயேசு லேவி கோத்திரத்தில் பிறக்காமல் யூதா கோத்திரத்தில் பிறந்தவர் ஆசாரியத்துவம் லேவியருக்கு மட்டுமே உரியது யூதா கோத்திரத்தாருக்கு உரியது அல்ல. பரலோகத்தின் காரியங்களுக்கு லேவியர்கள் எருசலேமின் தேவாலயத்தில் நிழலான ஆராதனை செய்து வருகிறார்கள் மெய்யான ஆராதனை பரலோகத்தில் நடைபெறும் அதற்கு இயேசு கிறிஸ்து தாமே பிரதான ஆசாரியராக இருப்பார் எபி 8 4 5

"மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே நீ எல்லாவற்றையும் செய்ய எச்சரிக்கையாயிரு" - யாத் 25:9,40 ஆகிய வசனங்கள் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

மாதிரி (pattern) - τυπικῶς - typikoos - 5179

ஆண்பால் பெயர்ச்சொல் - மாதிரி, சொரூபம் மாதிரிரூபம், திருஷ்டாந்தம் (பிலி 3:17)

14. விசேஷித்த வாக்குத்தத்தங்களின் பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கைக்கு கிறிஸ்து மத்தியஸ்தரா யிருக்கிறார்-(7:22; 8:1-13; 9:14-28)

எபி 8:6 இவரோ விசேஷித்த வாக்குத்தத்தங்களின் பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கைக்கு எப்படி மத்தியஸ்தராயிருக்கிறாரோ அப்படியே முக்கியமான ஆசாரிய ஊழியத்தையும் பெற்றிருக்கிறார்

"முக்கியமான ஆசாரிய ஊழியம்" - ஏனெனில் இந்த ஊழியம் விசேஷித்த வாக்குத்தத்தங்களின்பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கையாக இருக்கிறது (எபி 8:6; எபி 7:22, 2கொரி 3:6-18

ஊழியம் (ministry) - λειτουργία - leitourgia - 3009

பெண்பால் பெயர்சொல் பணிவிடை ஊழியம் பணி "ministry" (எபி 8:6; எபி 9:21 ; "ministration" (லூக்கா 1:23 ; "service" (2கொரி 9:12 பிலி 2:17,30

மத்தியஸ்தர் (mediator) - μεσίτης - mesitees - 3316

ஆண்பால் பெயர்சொல் மத்தியஸ்தன் (கலா 3:20)

எபிரெய நிருபத்தில் கூறப்பட்டிருக்கும் "முக்கியமான" காரியங்கள்

1 நம்பிக்கை (Hope) (எபி 7:19

2 உடன்படிக்கை(Testament) எபி 7 22

3. உடன்படிக்கை (Covenant) (எபி 8:6

எபிரெயர்- தொகுப்புரை

8 அதிகாரம்

4 வாக்குத்தத்தங்கள் (Promises) (எபி 8:6

5 பலிகள் (Sacrifices) (எபி 9:23)

6 அதிக மேன்மையும், நிலையுள்ளதுமான சுதந்தரம் (Substance) (எபி 10:34)

7 பரமதேசம் (Country) (எபி 11:16)

8 உயிரோடெழுந் திருத்தல (Resurrection) (எபி 11:35)

9 விசேஷித்தநன்மை(Thing)(எபி 11:40)

10 நன்மையானவைகள் (Things) (எபி 12:24

"வாக்குத்தத்தங்கள் (promises) - புதிய ஏற்பாட்டில 750 வாக்குத்தத்தங்கள் உள்ளன

X. பழைய உடன்படிக்கையைப் பார்க்கிலும் கிறிஸ்துவின் உடன்படிக்கை விசேஷமானது - (8:7-10:18)

1. கிறிஸ்துவின் உடன்படிக்கையின் பத்து அம்ச மேன்மை

எபி 8:7 அந்த முதலாம் உடன்படிக்கை பிழையில்லா திருந்ததானால, இரண்டாம உடன்படிக்கைக்கு இடம் தேட வேண்டுவதில்லையே.

எபி 8:8 அவாகளைக் குற்றப்படுத்தி அவாகளை நோக்கி: இதோ, காத்தா சொலலுகிறதென்னவென்றால் இஸ்ரவேல குடும்பத்தோடும் யூதா குடும்பத் தோடும் நான் புது உடன் படிக்கையை ஏற்படுத்துங்காலம் வருகிறது.

எபி 8:9 அவாகளுடைய பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து கொண்டு வரும்படிக்கு நான் அவாகளுடைய கையைப் பிடித்த நாளிலே அவாகளோடு பண்ணின உடன் படிக்கையைப் போல இது இருப்ப தில்லை, அந்த உடன்படிக்கையிலே அவர்கள் நிலைநிற்க வில்லையே. நானும் அவர்களை புறக்கணித்தேன் என்று காத்தா சொலலுகிறாா

எபி 8:10 அந்த நாட்களுக்குப்பின்பு நான் இஸ்ரவேல குடும்பத்தாரோடே பண்ணும் உடன்படிக்கையாவது, என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன் நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்

எபி 8:11 அப்பொழுது சிறியவன் முதற்கொண்டு பெரியவன்வரைக்கும் எல்லாரும் என்னை அறிவார்கள் ஆகையால், கர்த்தரை அறிந்துகொள் என்று ஒருவன் தன் அயலானுக்கும் ஒருவன் தன் சகோதரனுக்கும் போதிக்கவேண்டுவதில்லை

எபி 8:12 ஏனெனில் நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொலலுகிறார்

எபி 8:13 புது உடன்படிக்கை என்று அவர் சொலலுகிறதினாலே முந்தினதை பழமையாக்கினார் பழமையானதும் நாள்பட்டது மாயிருக்கிறது உருவழிந்து போகக் காலம் சமீபித்திருக்கிறது.

"அந்த முதலாம் உடன்படிக்கை பிழையில்லா திருந்ததானால" மோசேயின உடன்படிக்கை பிழையோடு இருந்தது பிழையில்லாத பூரணமான உடன்படிக்கை வருவதற்காக இந்த பிழையுள்ள உடன்படிக்கையானது அகற்றப்பட வேண்டும்

"இரண்டாமஉடன்படிக்கை" முதலாம்உடன படிக்கைஇரட்சிப்பையும் நித்திய ஜீவனையும் தரவில்லை. ஆகையினால் இரண்டாம் உடன்படிக்கை தேவையாயிருக்கிறது.

"அவாகளைக் குற்றப்படுத்தி" - எரே 31:31-34 ஆகிய வசனங்கள இஸ்ரவேல் ஜனங்கள உடன்படிக்கையை மீறிவிட்டதாக அவாகளைக் குறித்து குறைகூறுகிறது. எபி 8:7 ஆவது வசனமோ பழைய உடன்படிக்கையே பிழையோடு இருப்பதாக கூறுகிறது. ஆகையினால இந்த வசனத்தில் "அவாகளைக் குற்றப்படுத்தி" என்பது யூதாகளிடத்தில் குற்றம் காணுதல் என்று பொருளாகலாம். உடன்படிக்கையில குற்றம் காணுதல் என்று பொருள்படாது.

8 அதிகாரம்

எபிரெயர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 11

"இதோ, கர்த்தர் சொல்லுகிறதென்னவெனில், இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் நான் புது உடன்படிக்கையை ஏற்படுத்துங்காலம் வருகிறது" (எபி 8:8-12; எரே 31:31-34)

"யூதா குடும்பத்தோடும்" - இஸ்ரவேலின் எல்லா கோத்திரத்தாரோடும்

"உடன்படிக்கையைப் போல இது இருப்பதில்லை" - புதிய உடன்படிக்கை பழைய உடன்படிக்கையைப் போல இல்லை. தன்மையிலும், கருத்திலும் ஷரத்துக்களிலும் புதிய உடன்படிக்கையும் பழைய உடன்படிக்கையும் அதிகமாய் வேறுபட்டிருக்கிறது.

உடன்படிக்கை (covenant) - διαθήκη - diatheekee - 1242

பெண்பால் பெயர்ச்சொல் - உடன்படிக்கை, ஆணை, ஏற்பாடு, சாசனம் "covenant" (லூக்கா 1:72; அப் 3:25; அப் 7:8; ரோமர் 9:4; ரோமர் 11:27; [redacted] 3:15,17; கலா 4:24; எபே 2:12; எபி 8:6-10; எபி 9:4; எபி 10:16,29; எபி 12:24; எபி 13:20) "testament" (மத் 26:28; மாற்கு 14:24; லூக்கா 22:20; 1கொரி 11:25; 2கொரி 3:6,14; எபி 7:22; எபி 9:15-20; வெளி 11:19)

இயேசு கிறிஸ்துவினுடைய புதிய உடன்படிக்கையின் விசேஷித்த அம்சங்கள்

1 என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைப்பேன் (எபி 8:10) அவர்கள் சத்தியத்தைப் பற்றி தெளிவு பெற்று பரிபூரண ஞானமுடையவர்களாக இருப்பார்கள்

2 அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன் (எபி 8:10) அவர்களுடைய எண்ணங்கள் செயல்கள் எல்லாம் சுத்திகரிக்கப்படும். இதனால் அவர்கள் என்னுடைய வார்த்தைக்கு மனப்பூர்வமாகக் கீழ்ப்படிவார்கள்

3 நான் அவர்கள் தேவனாயிருப்பேன் அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் (எபி 8:10) நான் அவர்களைப் புதிய சிருஷ்டியாக்கி, என்னோடு அவர்களை நித்தியமாகச் சேர்த்துக் கொள்ளுவேன் (2கொரி 5:17)

4 சிறியவன் முதற்கொண்டு பெரியவன்வரைக்கும் எல்லாரும் என்னை அறிவார்கள் (எபி 8:11)

5 நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னிப்பேன் (எபி 8:12)

6 அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் (எபி 8:12) தேவனுடைய பிள்ளைகள் உண்மையாய் மனந்திரும்பி, தங்கள் பாவங்களிலிருந்து விலகி வரவேண்டும். (சக 12:10-13:1; ரோமர் 11:25-29)

பழமையானது (old) - παλαιόω - palaiooo - 3822

வினைச்சொல் - பழமையாய்ப்போ, பழமையாக்கு, பழமையானதாயிரு (to annul; be antiquated, no longer in force; to be obsolete, out of date) "old", "decay" (எபி 8:13) "wax old" (லூக்கா 12:33; எபி 1:11)

நாளடைந்தது (waxeth old) - γηράσκω - geeraskoo - 1095

வினைச்சொல் - முதிர் வயதுள்ளவனாயிரு, பழமையானதாயிரு (to grow aged, become old, infirm) (யோவான் 21:18; எபி 8:13)

எபிரெயர்- தொகுப்புரை

8 அதிகாரம்

உருவழிந்து போதல (vanish away) - ἀφανισμός- aphanismos - 854

ஆங்கில மூலச்சொல் உருவழிந்து போதல - கிரேக்கருடைய சட்டம் சம்பந்தமான சொல். ஒரு சட்டம் காலாவதியாகி நாளடைவில் அதனபின்பு அது செயல்படாமல போய், அகற்றப் பட்டதை இந்த வாக்கியம் குறிப்பிடும்

9 அதிகாரம்

2. பழைய உடன்படிக்கையின் ஆசரிப்புக் கூடாரம் - புதிய உடன் படிக்கையின் கூடாரத்திற்கு ஓர் அடையாளம் - (8:1-2,5; 9:24; 10:1)

எபி 9:1 அன்றியும், முதலாம் உடன்படிக்கையானது ஆராதனைக்கேற்ற முறைமைகளும் பூமிக்குரிய பரிசுத்த ஸ்தலமும் உடையதாயிருந்தது.

எபி 9:2 எப்படியெனில், ஒரு கூடாரம் உண்டாக்கப்பட்டிருக்கிறது; அதின் முந்தின பாகத்தில குத்துவிளக்கும் மேஜையும், தேவசமுகத்தப்பங்களும் இருந்தன அது பரிசுத்த ஸ்தலமென்னப்படும்.

எபி 9:3 இரண்டாந்திரைக்குள்ளே மகா பரிசுத்த ஸ்தலமென்னப்பட்ட கூடாரம் இருந்தது.

எபி 9:4 அதிலே பொன்னாற்செய்த தூபகலசமும், முழுவதும் பொற்றகடு பொதிந்திருக்கப்பட்ட உடன்படிக்கை பெட்டியும் இருந்தன அந்த பெட்டியிலே மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரமும், ஆரோனுடைய துளிர்த்த கோலும் உடன்படிக்கையின கற்பலகைகளும் இருந்தன

எபி 9:5 அதற்கு மேலே மகிமையுள்ள கேருபீன்கள் வைக்கப்பட்டு கிருபாசனத்தை நிழலிட்டிருந்தன இவைகளைக் குறித்து விவரமாய்ப்பேச இப்பொழுது சமயமில்லை

முறைமைகள் (ordinances) - δικαίωμα - dikaiooma - 1345

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - நியாயம், தீர்ப்பு, நீதி, சட்டநுகு, நீதியான செயல்,முறைமை (rites and ceremonies)ordinances(எபி 9:1,10); judgment (ரோமர் 1:32; வெளி 15:4); righteousness (ரோமர்2:26; ரோமர்5:18; ரோமர்8:4;வெளி19:8); justification (ரோமர் 5:16)

பூமிக்குரியது (worldly) - κοσμικός - kosmikos - 2886

பெயரடை - லௌகிக, பூமிக்குரிய (earthly; of the world) (எபி 9:1, தீத்து 2:12) - மோசேயினால் செய்யப்பட்ட ஆசரிப்புக் கூடாரத்தை இந்த வாக்கியம் குறிக்கும். (எபி 8:5, எபி 9:23-24)

"கூடாரம்" - (எபி 8:2)

பரிசுத்த ஸ்தலத்தில் இருப்பவை

1 பொன்குத்துவிளக்கு (The golden candlestick) எபி 9:2 யாத் 25:31-40

2 பொன்னாற்செய்த தூபகலசம் (The golden altar of incense) (எபி 9:2 யாத் 30:1-10)

3 தேவசமுகத்தப்பம் (The table of showbread) (எபி 9:2 யாத் 25:23-30)

"இரண்டாந் திரை" (second veil) - இரண்டாந்திரை பரிசுத்த ஸ்தலத்தையும் மகா பரிசுத்த ஸ்தலத்தையும் வேறுபிரித்தது. முதலாம் திரை பரிசுத்த ஸ்தலத்தை ஆசரிப்புக் கூடாரத்தின் பிராகாரத்திலிருந்து வேறுபிரித்தது. இதனால் பரிசுத்த ஸ்தலத்திற்குள் ஜனங்கள் எட்டிப்பார்க்க முடியாமல் இருந்தார்கள் (யாத் 26:31-38

"மகா பரிசுத்த ஸ்தலம்" உடன்படிக்கை பெட்டி இருந்த இடம். (எபி 9:4 5, யாத் 25:10-22)

"உடன்படிக்கைப் பெட்டி" (ark of the covenant) - தேவாலயத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் இந்த பெட்டி வைக்கப்பட்டிருந்தது. இது 3 x 3 x 5 அடி அளவுள்ளது. இதனுள் இருந்தவை.

1. மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரம் (எபி 9:4; யாத் 16:32-34)

2 ஆரோனுடைய துளிர்த்த கோல். (எண் 17)

எபிரெயர்- தொகுப்புரை

9 அதிகாரம்

3 உடன்படிக்கையின் கற்பலகைகள் - பத்து கற்பனைகள் எழுதப்பட்டிருந்த இரண்டு கற்பலகைகள் (2கொரி 3:3,7 யாத் 25:16)

மகா பரிசுத்த ஸ்தலத்தில் உடன்படிக்கை பெட்டியோடு பொன்னால் செய்த தூபகலசமும் இருந்தது. (லேவி 16:12)

"அதற்கு மேலே மகிமையுள்ள கேருபீன்கள் வைக்கப்பட்டுக் கிருபாசனத்தை நிழலிட்டிருந்தன" - இந்த வாக்கியம் உடன்படிக்கை பெட்டியின் மூடியை விளக்குகிறது. (யாத் 25:10-22) இரண்டு கேருபீன்கள் தங்களுடைய இறகுகளை விரித்து கிருபாசனத்தை நிழலிட்டிருந்தன. இது தேவனுடைய சிங்காசனத்திற்கும் அவருடைய தெய்வீக பிரசன்னத்திற்கும் அடையாளமாகும் (யாத் 25:18-22)

3. பழைய உடன்படிக்கையின் பிரகாரம் தேவனுடைய சமுகத்தில் எல்லோரும் எப்போதும் பிரவேசிக்க முடியாது - புதிய உடன் படிக்கையின் பிரகாரம் நித்தமும் பிரவேசிக்கலாம் - (10:19-23)

எபி 9:6 இவைகள் இவ்விதமாய் ஆயத்தமாக்கப்பட்டிருக்க, ஆசாரியர்கள் ஆராதனை முறைமைகளை நிறைவேற்றும்படிக்கு முதலாங் கூடாரத்திலே நித்தமும் பிரவேசிப்பார்கள்

எபி 9:7 இரண்டாங்கூடாரத்திலே பிரதான ஆசாரியன்மாத்திரம் வருஷத்திற்கு ஒருதரம் இரத்தத்தோடே பிரவேசித்து, அந்த இரத்தத்தைத் தனக்காகவும் ஜனங்களுடைய தப்பிதங்களுக்காகவும் செலுத்துவான்

"வருஷத்திற்கு ஒருதரம்" பாவநிவாரண நாளைக் குறிக்கும் (லேவி 16:34 லேவி 23:27). பிரதான ஆசாரியன் பாவ நிவாரண நாளின்போது வருஷத்திற்கு ஒருமுறை மட்டும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்லுவான் இதனால் முதலாங்கூடாரம் நிற்குமளவும் பரிசுத்த ஸ்தலத்திற்குப் போகிற மார்க்கம் இன்னும் வெளிப்படவில்லையென்று பரிசுத்த ஆவியானவர் தெரியப் படுத்தியிருக்கிறார்

(எபி 9:8) இப்பொழுது இயேசு கிறிஸ்துவின் மரணத்தின் மூலமாக பரிசுத்த ஸ்தலத்திற்குள் போகிற மார்க்கம் வெளிப்பட்டிருக்கிறது. (எபி 10:19-23)

4. பழைய உடன்படிக்கையின் காணிக்கைகளும் பலிகளும் ஊழியக்காரரை பூரணப்படுத்தக் கூடாதவைகளாம் - (5:1-3; 7:27)

எபி 9:8 அதினாலே, முதலாங்கூடாரம் நிற்குமளவும் பரிசுத்த ஸ்தலத்திற்குப் போகிற மார்க்கம் இன்னும் வெளிப்படவில்லையென்று பரிசுத்த ஆவியானவர் தெரியப்படுத்தியிருக்கிறார்

எபி 9:9 அந்தக் கூடாரம் இக்காலத்திற்கு உதவுகிற ஒப்பனையாயிருக்கிறது; அதற்கேற்றபடியே செலுத்தப்பட்டுவருகிற காணிக்கைகளும் பலிகளும் ஆராதனை செய்கிறவனுடைய மனச்சாட்சியைப் பூரணப்படுத்தக் கூடாதவைகளாம்.

ஒப்பனை (figure) - παραβολή - parabolee - 3850

பொருள் பொருள் - உவமை ஒப்பனை பழமொழி பாவனை (எபி 11:19 "figure," "parable," (மாற்கு 4:30 லூக்கா 4:22) கிறிஸ்துவிலுள்ள மெய்யான காரியங்களுக்கு ஒப்பனை (எபி 8:5; எபி 10:1)

5. பழைய உடன்படிக்கையின் பலிகள் தற்காலிகமானவை - சரீரத்திற்கேற்ற சடங்குகள் மாத்திரமே - (10:1-9)

எபி 9:10 இவைகள் சீர்திருத்தல் உண்டாகும் காலம்வரைக்கும் நடந்தேறும்படி கட்டளையிடப்பட்ட போஜன பானங்களும், பலவித ஸ்நானங்களும் சரீரத்திற்கேற்ற சடங்குகளுமேயல்லாமல் வேறல்ல.

"சரீரத்திற்கேற்ற சடங்குகளுமேயல்லாமல் வேறல்ல" - ஆசரிப்புக் கூடாரமும், அதில் நடைபெற்ற ஆராதனை முறைமைகளும் வரப்போகிற காரியங்களுக்கு ஒரு ஒப்பனையாகவே இருந்தன. இயேசு கிறிஸ்து வரும்போது உண்மையான பாவ நிவாரணமும் உண்மையான ஆராதனையும் நடைபெறும்.

9 அதிகாரம்

(எபி 9:10) இயேசு கிறிஸ்துவின் காலமே சீர்திருத்தல் உண்டாகும் காலமாகும். ஆசரிப்புக் கூடாரத்தில் நடைபெற்ற பலவிதமான ஸ்நானங்கள் சரீரத்திற்கேற்ற சடங்குகளே. இவை ஆத்துமாவை இரட்சிக்காது. "சரீரத்திற்கேற்ற" என்பது இயற்கையான மனுஷ சரீரத்தைக் குறிக்கும். இது பாவஜீவியத்தைக் குறிப்பதில்லை (ரோமர் 7:14) இந்தச் சடங்குகள் பாவமானவை என்றால் இதை ஆசரிக்க வேண்டுமென்று கர்த்தர் கட்டளையிட்டிருக்க மாட்டார். மேலும் நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் நிழலாகவும் இராது. (எபி 8:5; எபி 10:1)

நடந்தேறும்படி கட்டளையிடப்பட்டது (imposed) - ἐπίκειμαι - epikeimai - 1945

விணைச்சொல் - நெருக்கு, கேட்டுக் கொண்டேயிரு (to be laid upon; imposed on) "imposed on" (எபி 9:10); "press upon" (லூக்கா 5:1); and "lie upon" (யோவான் 11:38; யோவான் 21:9; அப் 27:20; 1கொரி 9:16) - போஜன பானங்களும், பலவிதமான ஸ்நானங்களும் நடந்தேறும்படி தேவனால் கட்டளையிடப்பட்டவை. இவை சீர்திருத்தல் உண்டாகும் காலம்வரைக்கும் நடந்தேற வேண்டியவை.

"காலம்வரைக்கும்" - (கலா 3:19)

நியாயப்பிரமாணத்தைப் பற்றிய காலக் குறிப்புக்கள்

1 வாக்குத்தத்தத்தைப்பெற்ற சந்ததி வருமளவும் (கலா 3:19)

2 விசுவாசம் வருகிறதற்கு முன்னே (கலா 3:23)

3 கிறிஸ்துவினிடத்தில் (கலா 3:24)

4 விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே. (கலா 3:25)

5 குறித்த காலம்வரைக்கும் கலா 4:2-5)

6 நிறைவேற்றுகிறதற்கே (மத் 5:17-18)

7 யோவான் வரைக்கும் (மத் 11:13 லூக்கா 16:16)

8 கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாய் இருக்கிறார் (ரோமர் 10:4)

9 ஒழிந்துபோகிறது (2கொரி 3:7-14)

10 இப்போதும் இருக்கிறது (கலா 4:21-31)

11 நியாயப்பிரமாணத்திற்குப் பின்பு (எபி 7:28)

12 சீர்திருத்தல் உண்டாகும் காலம் வரைக்கும். (எபி 9:10)

13 சிலுவையின்மேல் ஆணி அடித்து (கொலோ 2:14-17)

14 ஆனால் இப்பொழுது (எபே 2:13-16)

15. அதன்பின்பு (கிறிஸ்துவின் பலி (எபி 9-16; எபி 8:13)

சீர்திருத்தல் (reformation) - διόρθωσις - diorthoosis - 1357

பெண்பால் பெயர்ச்சொல் - சீர்திருத்தம் (a making straight; correcting; amending of a fault; reformation) - மோசேயின் நியாயப்பிரமாணத்திலுள்ள பலவீனங்களும், தவறுகளும் சீர்திருத்தப்பட வேண்டும். அதற்காக மோசேயின் பிரமாணம் ஒழிக்கப்பட்டு புதிய பரிபூரண உடன்படிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. நியாயப்பிரமாணத்தில் செய்ய முடியாத காரியங்களை யெல்லாம் புதிய பிரமாணத்தினாலும் செய்ய முடியும். (எபி 7:11 19:27 28)

6. புதிய உடன்படிக்கையின் பலி நித்திய மீட்பை நமக்கு உண்டுபண்ணுகிறது - (7:24, 9:15, 10:10 23)

எபி 9:11 கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப் பட்டதாகிய இந்தச் சிருஷ்டிசம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல பெரிதும் உத்தமுமான கூடாரத்தின் வழியாகவும்,

9 அதிகாரம்

எபி 9:12 வெள்ளாட்டுக்கடா இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்

"வரப்போகிற நன்மைகள்" - நியாயப்பிரமாணத்தில் நிழலாகக் குறிக்கப் பட்டிருக்கிற காரியங்கள் இயேசு கிறிஸ்துவின் மூலமாக நிஜமான காரியமாயிற்று. (எபி 10:1)

வழியாக (by) - διά - dia - 1223

முன்னிடைச்சொல் - வழியாக மூலமாக (through) - நமக்காக இயேசு கிறிஸ்து தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து நித்திய மீட்பை உண்டுபண்ணினார் எபி 9:11,24

"கூடாரத்தின் வழியாக அல்ல" - ஆசரிப்புக் கூடாரம் கையினால் செய்யப்பட்டது, பூமிக்குரியது. இயேசு கிறிஸ்து கையினால் செய்யப்பட்ட இந்தச் சிருஷ்டி சம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமுமான கூடாரத்தின் வழியாக மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்தார்

சிருஷ்டி (creation) - κτίσις - ktisis - 2937

பெண்பால் பெயர்ச்சொல் - சிருஷ்டி உண்டாதல், கட்டளை (building, creation) (ரோமர் 8:19)

"வெள்ளாட்டுக்கடா இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல தம்முடைய சொந்த இரத்தத்தினாலும்" இயேசு கிறிஸ்து பூமிக்குரிய கூடாரத்தில் ஊழியம் செய்யவில்லை நித்திய மீட்பை உண்டுபண்ணாத வெள்ளாட்டுக்கடா இளங்காளை ஆகியவற்றின் இரத்தத்தையும் செலுத்தவில்லை அவர் தம்முடைய சொந்த இரத்தத்தையே செலுத்தி மனுக்குலத்திற்கு நித்திய மீட்பை உண்டுபண்ணினார்

"ஒரேதரம்" - மனுக்குலத்தார் அனைவருக்கும் இயேசு கிறிஸ்து ஒரேதரம் பாவநிவாரண பலியைச் செலுத்தினார் ஆசரிப்புக் கூடாரத்தின் ஆசாரியர்களைப் போல இயேசு கிறிஸ்து அனுதினமும் பாவநிவாரண பலி செலுத்த வேண்டியதில்லை. எபி 7:27 எபி 9:6-7,25-28; எபி 10:1-18

உண்டுபண்ணுதல் (obtained) - εὑρίσκω - heuriskoo - 2147

வினைச்சொல் - காண, கண்டுபிடி, சம்பாதித்துக்கொள் உண்டுபண்ணு (to find; discover; procure; obtain) "obtain" (எபி 9:12; "get" (லூக்கா 9:12); "perceive" (அப் 23:29; "find" எபி 4:16 எபி 11:5; எபி 12:17) - மனுஷருக்கு நித்திய மீட்பை இயேசு கிறிஸ்து கண்டுபிடித்து அதை உண்டு பண்ணினார் மனுஷருடைய இடத்தில் தாமே மரித்து மனுக்குலத்தின் பாவநிவாரண பலியாகப் பலியானார் (மத் 26:28 எபி 2:9-15; 1பேதுரு 2:24

"நித்திய" - இயேசு கிறிஸ்து செலுத்திய பாவநிவாரண கிரயம் நித்திய காலத்திற்கும் ஏற்றது. இதன் தன்மையிலும் ஆற்றலிலும் இது நித்தியமானது. மனுஷர் மூலமாக பாவநிவாரண பலி நித்தியமாகவில்லை மனுஷர் இயேசு கிறிஸ்துவின் பாவநிவாரண பலியை ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் இயேசு கிறிஸ்துவின் பாவநிவாரண பலி நித்தியமானது. அது மனுஷருக்கு நித்திய மீட்பை உண்டுபண்ணும் வல்லமையுள்ளது. மனுஷர் நித்திய மீட்பை பெற்றுக் கொள்வதற்கு ஒருசில நிபந்தனைகளைக் கைக்கொள்ளவேண்டும். (யோவான் 6:27; எபி 3:7

மீட்பு (redemption) - λύτρωσις - lytroosis - 3085

பெண்பால் பெயர்ச்சொல் - மீட்பு a ransoming (a ransom price of redemption; an atonement, a release on receipt of a ransom price) (மத் 20:28; மாற்கு 10:45

9 அதிகாரம்

மீட்கும் பொருள் (atonement) - λύτρον - lytron - 3083

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - மீட்கும் பொருள்

மீட்டுக்கொள் (to redeem) - λυτρόω - lytrooo - 3084

வினைச்சொல் - மீட்டு இரட்சி. மீட்டுக்கொள் (to redeem) (1பேதுரு 1:18 லூக்கா 24:21 தீத்து 2:14; லூக்கா 1:68; லூக்கா 2:38)

7. பழைய உடன்படிக்கையின் பலிகள் நமது பாவங்களை நீக்காது - புதிய உடன்படிக்கையின் பலியாகிய கிறிஸ்துவினுடைய இரத்தம் நமது மனச்சாட்சியை செத்த கிரியைகளற நிச்சயமாக சுத்திகரிக்கும் - (10:4; மத் 26:28; ரோமர் 3:25; 5:9; எபே 1:7; 2:13 எபி 10:19 1யோவான் 1:7 1பேதுரு 1:18; வெளி 1:5; 5:9)

எபி 9:13 அதெப்படியெனில், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தமும், தீட்டுப்பட்டவர்கள்மேல் தெளிக்கப்பட்ட கடாரியின் சாம்பலும் சரீரசுத்தியுண்டாகும்படி பரிசுத்தப் படுத்துமானால்,

எபி 9:14 நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக் கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!

எபி 9:15 ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்திசெய்யும் பொருட்டு அவர் மரணமடைந்து அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்

"காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தமும் தீட்டுப்பட்டவர்கள்மேல் தெளிக்கப்பட்ட கடாரியின் சாம்பலும், சரீரசுத்தியுண்டாகும்படி பரிசுத்தப் படுத்துமானால்" - பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தீட்டுப்பட்டவர்கள்மீது காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தத்தையும், கடாரியின் சாம்பலையும் தெளிக்கும் வழக்கம் இருந்தது. இது தீட்டுப்பட்டவர்களைச் சரீரசுத்தியுண்டாகும்படி பரிசுத்தப்படுத்தும் என்று யூதமார்க்கத்தார் நம்பினார்கள். இந்தப் பிரமாணங்களைக் கைக்கொள்வதினால் அவர்களுக்குத் தற்காலிக மீட்பு உண்டாயிற்று. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் காளை வெள்ளாட்டுக்கடா இவற்றின் இரத்தத்தைவிட வல்லமையுள்ளது. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் மனுஷருடைய சகல பாவங்களையும் நீக்கி, அவர்களை நிரந்தரமாகச் சுத்திகரிக்கும் வல்லமையுள்ளது. தேவனுக்கு ஊழியம் செய்வதற்காக விசுவாசிகளுடைய மனச்சாட்சியை இயேசு கிறிஸ்துவின் இரத்தம் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது நிச்சயம். (எபி 9:13-15)

"சரீரசுத்தியுண்டாகும்" - நியாயப் பிரமாணத்தின் சடங்குகள் சரீரத்தை மட்டுமே சுத்திகரிக்கும். ஆனால் இயேசு கிறிஸ்துவின் திருஇரத்தமோ மனுஷருடைய ஆத்துமாவையும் ஆவியையும் சுத்திகரித்து அவர்களைத் தேவனோடு ஒப்புரவாக்கும் வல்லமையுள்ளது. எபி 9:14-15 கொலோ 1:14 22 1யோவான் 1:7, வெளி 1:5)

"நித்திய ஆவி" (eternal Spirit) - பரிசுத்த ஆவியானவர் நித்திய ஆவியானவராயிருக்கிறார் (1யோவான் 5:7)

நித்திய ஆவியினால் நடைபெற்ற காரியங்கள்

1. கிறிஸ்து ஜெநிப்பிக்கப்பட்டார் (மத் 1:18 25; லூக்கா 1:35)
2. கிறிஸ்து உபதேசிக்கப்பட்டார் (ஏசா 50:4; லூக்கா 2:40,52)
3. கிறிஸ்து சோதிக்கப்பட்டார் (மத் 4:1; லூக்கா 4:1)
4. கிறிஸ்து கிரியை நடப்பித்தார் (மத் 12:28 லூக்கா 4:14-21; அப் 10:38; ஏசா 11:1-2; ஏசா 42:1-7; ஏசா 61:1-2

9 அதிகாரம்

5. கிறிஸ்து தம்மைத்தாமே ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தார் (எபி 9:14)

6. ஆவியானவர் கிறிஸ்துவை உயிர்த்தெழச் செய்தார் (ரோமர் 8:11)

7. கிறிஸ்து நீதியுள்ளவரென்று விளங்கப் பட்டார் (1தீமோ 3:16)

"செத்த கிரியைகள்" (dead works) - (எபி 6:1)

"முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்திசெய்யும் பொருட்டு" - இதற்காகவே இயேசு கிறிஸ்து புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தரானார். இயேசு கிறிஸ்துவின் மரணத்தின் மூலமாக பாவங்கள் மன்னிக்கப்பட்டு, மனுஷர் நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்கிறார்கள்.

மத்தியஸ்தர் (mediator) - μεσίτης - mesitees - 3316

ஆண்பால் பெயர்ச்சொல் - மத்தியஸ்தன் (கலா 3:20)

புது உடன்படிக்கை (new testament) - διαθήκη - diatheekee - 1242

பெண்பால் பெயர்ச்சொல் உடன்படிக்கை, ஆணை, ஏற்பாடு சாசனம் (எபி 8:9)

"அவர் மரணமடைந்து" - அவருடைய மரணத்தினால் என்று பொருள்படும். இயேசு கிறிஸ்துவின் மரணத்தினால் மட்டுமே மனுஷர்கள் தங்களுடைய பாவத்திற்குத் தண்டனையான மரணத்திலிருந்து விடுவிக்கப் பட்டு இரட்சிக்கப்படுகிறார்கள் (மத் 26:28; ரோமர் 5:6-11; ரோமர் 6:10 ரோமர் 14:9; 1கொரி 15:3; 2கொரி 5:14-21; கொலோ 1:14-22 எபி 2:9-15; எபி 9:15; 1பேதுரு 2:24)

"முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்திசெய்யும் பொருட்டு" பழைய ஏற்பாட்டுக் கால பரிசுத்தவான்களை இரட்சிப்பதற்காக இயேசு கிறிஸ்து மரித்தார். புதிய ஏற்பாட்டுக் கால விசுவாசிகள் தங்களுடைய விசுவாசத்தினால் ஏற்கெனவே நடைபெற்ற இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தைப் பின்நோக்கிப் பார்ப்பதுபோல பழைய ஏற்பாட்டுக் காலத்துப் பரிசுத்தவான்கள் இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தைத் தங்களுடைய விசுவாசத்தினால் தரிசித்தார்கள் (எபி 11:1-40)

"அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்து கொள்வதற்காக" - தேவன் எல்லோரையும் அழைக்கிறார். ஆயினும் தேவனுடைய நிபந்தனைகளைக் கைக்கொள்ளுகிறவர்கள் மட்டுமே அழைக்கப் பட்டவர்களுக்கான ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வார்கள். சுவிசேஷத்தின் சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து நடப்போமானால் நமது இம்மை ஜீவியத்தின் முடிவில் நித்திய சுதந்தரத்தை அடைந்து கொள்வோம். (1கொரி 9:25-27; 2தீமோ 4:8; யாக் 1:12 1பேதுரு 1:4-5,9,13; 2பேதுரு 1:4-10)

8. **புதிய உடன்படிக்கையை உண்டு பண்ணுவதற்கு கிறிஸ்துவின் மரணம் தேவையானது** - (மத் 26:28; 1பேதுரு 2:24)

எபி 9:16 ஏனென்றால், எங்கே மரணசாதனமுண்டோ, அங்கே அந்தச் சாதனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாக வேண்டும்.

எபி 9:17 எப்படியெனில் மரணமுண்டான பின்பே மரணசாதனம் உறுதிப்படும்; அதை எழுதினவன் உயிரோடிருக்கையில் அதற்குப் பெலனில்லையே.

"எங்கே மரணசாதனமுண்டோ" - அங்கே அந்தச் சாதனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாக வேண்டும். மீட்பின் உடன்படிக்கைகள் எல்லாம் குற்றவாளியின் மரணத்தினால் உறுதிபண்ணப்படும். (ஆதி 15:9-18)

சாதனத்தை எழுதுபவன் (testator) - διατίθεμαι diatithemai (1303)

வினைச்சொல் - ஏற்படுத்து, சாதனத்தை எழுது (arrange, to make a covenant with, appoint; to dispose of by a will, make a testament) "testator" (எபி 9:16, 17), "make" (அப் 3:25; எபி 8:10; எபி 10:16), "appoint" (லூக்கா 22:29)

9 அதிகாரம்

"எங்கே மரணசாதனமுண்டோ, அங்கே அந்தச் சாதனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாக வேண்டும்" - இந்த வாக்கியம் இயேசு கிறிஸ்துவின் மரணத்தைக் குறிப்பிடுகிறது. மனுஷரோடு புதிய உடன்படிக்கையை உண்டுபண்ணும் பொறுப்பு இயேசு கிறிஸ்துவிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த உடன்படிக்கையில் பங்குபெறும் மனுக்குலத்தார் தங்களுடைய பாவத்தின் நிமித்தம் மரணத்திற்குப் பாத்திரவான்களாக இருக்கிறார்கள். தங்களுடைய பாவங்களிலிருந்து மனுஷருக்கு மீட்பு உண்டாக வேண்டும். இந்த மீட்பிற்காக பாவநிவாரண பலி செலுத்தப்படுதல் வேண்டும். இவர்களை மீட்பதற்காக இவர்களோடு உடன்படிக்கை செய்துகொண்ட இயேசு கிறிஸ்து பாவநிவாரண பலியாகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார். இயேசு கிறிஸ்து மனுஷரோடு பண்ணிய உடன்படிக்கை அவருடைய மரணத்தின் மூலமாக உறுதிபண்ணப் பட்டிருக்கிறது. (எபி 9:17)

9. பழைய உடன்படிக்கை மிருகங்களின் இரத்தத்தினால் ஏற்பட்டது - (9:11-15, 10:1-9)

எபி 9:18 அந்தப்படி முதலாம் உடன்படிக்கையும் இரத்தமில்லாமல் பிரதிஷ்டைபண்ணப்படவில்லை

எபி 9:19 சட்டப்படியெல்லா, மோசே நியாயப் பிரமாணத்தின்படி, சகல ஜனங்களுக்கும் எல்லாக் கட்டளைகளையும் சொன்ன பின்பு, இளங்காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தத்தைத் தண்ணீரோடும், சிவப்பான ஆட்டு மயிரோடும், ஈசோப்போடுங்கூட எடுத்து, புஸ்தகத்தின்மேலும் ஜனங்களெல்லார் மேலும் தெளித்து,

எபி 9:20 தேவன் உங்களுக்குக் கட்டளையிட்ட உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்று சொன்னான்

எபி 9:21 இவ்விதமாக, கூடாரத்தின் மேலும் ஆராதனைக்குரிய சகல பணிமுட்டுகளின்மேலும் இரத்தத்தைத் தெளித்தான்

எபி 9:22 நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது.

"அந்தப்படி முதலாம் உடன்படிக்கையும் இரத்தமில்லாமல் பிரதிஷ்டை பண்ணப்படவில்லை" - உடன்படிக்கையை உறுதிபண்ணுவதற்கு இரத்தம் சிந்துதல் அவசியமாயிற்று. மோசேயின் உடன்படிக்கை முதலாம் உடன்படிக்கை என்று அழைக்கப்படுகிறது. இந்த உடன்படிக்கையும் இரத்தத்தோடு பிரதிஷ்டை பண்ணப்பட்டது (எபி 9:18-22)

பிரதிஷ்டை பண்ணுதல் (dedicated) - ἐγκαινίζω - enkainizoo - 1457

வினைச்சொல் - பிரதிஷ்டை பண்ணு (inaugurated) (எபி 9:18, 10:20)

"தேவன் உங்களுக்குக் கட்டளையிட்ட உடன்படிக்கையின் இரத்தம் இதுவே" - யாத் 24:4-8 ஆகிய வசனங்கள் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது (மத் 26:28)

ஆராதனை (ministry) - λειτουργία - leitourgia - 3009

பெண்பால் பெயர்சொல் - பணிவிடை, ஊழியம், பணி (service) (எபி 8:6)

"நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங் குறைய எல்லாம்" ஒருசில காரியங்கள் தண்ணீரினாலும் அக்கினியினாலும் சுத்திகரிக்கப்பட்டது (எண் 31:23) வேறுசில சாம்பல் தெளிப்பினால் சுத்திகரிக்கப்பட்டது (எண் 19:2-10) இவையெல்லாமே முதலாவதாக இரத்தத்தினால் சுத்திகரிக்கப்படும்.

"இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்" இந்த வாக்கியம் நியாயப்பிரமாணத்தின் பிரகாரம் சடங்குகளால் சுத்திகரிக்கப்படுவதைக் குறிப்பிடும். (எபி 9:13) பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்படுவதை இது குறிப்பிடாது. (எபி 10:4)

9 அதிகாரம்

"இரத்தஞ்சிந்துதலில்லாமல்" - இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் மட்டுமே பாவ மன்னிப்பு உண்டாகும். வேறு வழியில் பாவமன்னிப்பு உண்டாக வாய்ப்பேயில்லை

இயேசு கிறிஸ்துவின் திருஇரத்தத்தினால் உண்டாகும் ஆசீர்வாதங்கள்

1 ஆத்துமாவிற்கு நிவாரணம் **(Atonement for the soul)** (லேவி 17:11; ரோமர் 3:24 ரோமர் 5:11; கொலோ 1:20)

2 பாவங்களிலிருந்து மன்னிப்பு **(Remission of sins)** (மத் 26:28 ரோமர் 3:24-25; எபி 9:22; எபே 1:7)

3 ஜீவனும், சமாதானமும் **(Life and peace)** (ரோமர் 5; கொலோ 1:20)

4 இரட்சிப்பு **(Redemption)** ரோமர் 3:24-25; எபே 1:7; எபி 9:12-15 பேதுரு 1:18-23; வெளி 5:9)

5 நீதிமானாக்கப்படுதல் **(Justification)** ரோமர் 5:9; கலா 3:6-14, அப் 13:38-39

6 பிரவேசிக்கச் செய்தல் **(Brought close)** (எபே 2:13; எபி 10:19)

7 சுத்தமனசாட்சி **(Pure conscience)** (எபி 9:14

8 பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்படுதல் **(Cleansing from sin)** (1யோவான் 1:7)

9 பரிசுத்த மாக்கப்படுதல் **(Sanctification)** (எபி 10:10 14, எபி 13:20

10 புதிய உடன்படிக்கை **(New covenant)** (மத் 26:28; எபி 10:29; எபி 12:24, எபி 13:20)

11 புதிய பிறப்பு **(New birth)** (1பேதுரு 1:18-23)

12 ஜெயிக்கும் வல்லமை **(Overcoming power)** (வெளி 12:11)

13. சபையில் சேர்க்கப்படுதல் **(Church membership)** (அப் 20:28

14 இரட்சிப்பு **(Salvation)** (சங் 51 எபி 9:15)

10. புதிய உடன்படிக்கை கிறிஸ்துவின் இரத்தத்தினால் உண்டானது - (எபி 9:13)

எபி 9:23 ஆதலால், பரலோகத்திலுள்ளவைகளுக்குச் சாயலானவைகள் இப்படிப்பட்ட பலிகளினாலே சுத்திகரிக்கப்பட வேண்டியதாயிருந்தது பரலோகத்திலுள்ளவைகளோ இவைகளிலும் விசேஷித்த பலிகளாலே சுத்திகரிக்கப்படவேண்டியதாமே

எபி 9:24 அந்தப்படி, மெய்யான பரிசுத்த ஸ்தலத்துக்கு அடையாளமான கையினால் செய்யப்பட்டதாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்திலே கிறிஸ்துவானவர் பிரவேசியாமல் பரலோகத்திலேதானே இப்பொழுது நமக்காக தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார்

சாயல் **(patterns) - ὑπόδειγμα - hypodeigma** - 5262

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - மாதிரி, திருஷ்டாந்தம், சாயல் **(sign; token; copy; example; representation)** **"pattern"** (எபி 9:23), **"ensample"** (2பேதுரு 2:6), **"example"** (யோவான் 13:15 எபி 4:11 எபி 8:5 யாக் 5:10 ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள காரியங்களை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. (எபி 8:5) இவை மிருகங்களின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்பட்டன எபி 9:18-23 பரலோகத்திலுள்ளவைகள் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்பட வேண்டியவை. (எபி 9:12-15,23)

9 அதிகாரம்

"கையினால் செய்யப்பட்டதாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்திலே கிறிஸ்து வானவர் பிரவேசியாமல்" - பூமியிலுள்ள பரிசுத்த ஸ்தலம் கையினால் செய்யப்பட்டது இயேசுகிறிஸ்து இதில பிரவேசிக்கவில்லை அவர் பரலோகத்திலுள்ள மெய்யான பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்திருக்கிறார் (எபி 8:1-6)

அடையாளம் (figures) - ἀντίτυπος - antitypos - 499

பெயரடை - அடையாளமான ஒப்பனையான (an antitype; exact representation) (எபி 9:24 பேதுரு 3:21) - பூமியிலுள்ள பரிசுத்த ஸ்தலங்கள் பரலோகத்திலுள்ள மெய்யான பரிசுத்த ஸ்தலத்திற்கு அடையாளங்களாகும். (எபி 9:24)

பிரவேசி (appear) - ἐμφανίζω - emphanizoo - 1718

வினைச்சொல் - வெளிப்படுத்து காண்பி, அறிவு, தெரியப்படுத்து பிரவேசி. பிரசன்னமாகு (to show forth; make clear and plain) "appear" (எபி 9:24; மத் 27:53); "manifest" (யோவான் 14:21-22); "show" (அப் 23:22); "declare plainly" (எபி 11:14); "inform" (அப் 24:1, அப் 25:2,15); "signify" (அப் 23:15) - கிறிஸ்து நமக்காக பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார் (1யோவான் 2:1-2)

11. பழைய உடன்படிக்கையில் பல பலிகள் இருந்தன - புதிய உடன்படிக்கையில் கிறிஸ்து ஒரேதரம் பலியிடப்பட்டார் - (10:10,14)

எபி 9:25 பிரதான ஆசாரியன் அந்நிய இரத்தத்தோடே வருஷந்தோறும் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்கிறதுபோல, அவர் அநேகந்தரம் தம்மைப் பலியிடும்படிக்குப் பிரவேசிக்கவில்லை

எபி 9:26 அப்படியிருந்ததானால், உலகமுண்டானது முதற்கொண்டு அவர் அநேகந்தரம் பாடுபடவேண்டியதாயிருக்குமே; அப்படியல்ல, அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும்பொருட்டாக இந்தக் கடைசிக்காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார்

எபி 9:27 அன்றியும், ஒரேதரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே,

எபி 9:28 கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்

"அவர் அநேகந்தரம் தம்மைப் பலியிடும்படிக்குப் பிரவேசிக்கவில்லை" - நியாயப்பிரமாணத்தின் பிரகாரம் இயேசுகிறிஸ்து தம்மைத்தாமே அநேகந்தரம் ஒப்புக்கொடுக்க வேண்டியதில்லை அவர் அநேகந்தரம் மரிக்க வேண்டியதில்லை. (லேவி 16) அவர் மனுஷருடைய பாவங்களை நீக்கும்பொருட்டாக தம்மைத்தாமே ஒரே தரம் பலியிட்டார் எபி 9:25-28 எபி 10:1-18

உலகமுண்டானது (foundation of the world) - καταβολή - katabolee - 2602

பெண்பால் பெயர்ச்சொல் - தோற்றம், உண்டாதல், அஸ்திபாரம் - ஆதாமிற்கு முன்பாக லூசிபர் இந்த உலகத்தை ஆளுகை செய்தான் (மத் 13:35)

கடைசிக்காலம் (end) - συντέλεια - synteleia - 4930

பெண்பால் பெயர்ச்சொல் - முடிவு, கடைசிக்காலம் - ஒரு காலத்தின் முடிவும், மற்றொரு காலத்தின் துவக்கமும். (எபி 9:26 மத் 13:39,40,49; மத் 24:3 மத் 28:20

9 அதிகாரம்

"அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே" - இந்தக் கடைசி காலத்தில் மனுஷருடைய பாவங்களை நீக்கும்பொருட்டாக இயேசு கிறிஸ்து தம்மைத்தாமே ஒரேதரம் பலியிட்டார் மோசேயின் பிரமாணத்தின் பிரகாரமாக இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு உண்டாகாது. இயேசு கிறிஸ்து மனுக்குலத்தின் பாவத்தை மன்னிப்பதற்காக தம்முடைய இரத்தத்தையே சிந்தினார் கிறிஸ்து கல்வாரி சிலுவையில் மரித்த பின்பு மோசேயின் பாவநிவாரண பிரமாணம் ஒழிந்து போயிற்று. யூதர்கள் கடந்த 2000 வருஷங்களாக தங்களுடைய பாவங்களுக்காக மோசேயின் பிரமாணத்தின் பிரகாரம் எந்த பலியும் செலுத்தவில்லை (ஓசி 3:4-5)

காலம் (world) - αἰών - aioon - 165

ஆண்பால் பெயர்ச்சொல் - காலம் உலகம், பிரபஞ்சம் அநாதி, சதாகாலங்கள்

அ என்றென்றைக்கும் அதாவது கடந்த காலத்தில் - யோவான் 6:5; 80:32

ஆ ஒரு குறிப்பிட்ட காலம் அதாவது இம்மை அல்லது மறுமை - மத். 12:32, மாற். 10:30

பாவம் (sin) - ἁμαρτία - hamartia - 266

பெண்பால் பெயர்ச்சொல் - பாவம் தோல்வி (எபி 9:26; எபி 10:6,8,18, எபி 13:11

(அ) பாவச் செயல் (1கொரி 15:17)

(ஆ) பாவத்தில் மூழ்கியிருத்தல் எப்பொழுதும் பாவத்தில் இருத்தல் யோவா 1:29), (ரோம 3:1)

"ஒரேதரம் மரிப்பது மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது" இது தெய்வீகப் பிரமாணம் "நீ மண்ணாய் இருக்கிறாய் மண்ணுக்குத் திரும்புவாய்" (ஆதி 3:19) இந்த மரணப் பிரமாணம் மனுக்குலத்தார் அனைவருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. சபை எடுத்துக் கொள்ளப்படும் போது உயிரோடு இருக்கும் பரிசுத்தவான்கள் மரணத்தை ருசி பார்க்காமலேயே இயேசு கிறிஸ்துவால் எடுத்துக் கொள்ளப்படுவார்கள் (1கொரி 15:51-58; 1தெச 4:13-16, பிலி 3:21 ஆயிரம் வருஷ அரசாட்சியின் கடைசியில் ஜீவிக்கிறவர்களும், தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணாதவர்களும் புதிய பூமியில் மரிக்காமல் நித்திய காலமாக ஜீவிப்பதற்கு அனுமதிக்கப் படுவார்கள் மரணம் அழிக்கப்படும். ஆதாம் பாவம் செய்வதற்கு முன்பாக இருந்ததுபோன்று எல்லாமே புதுப்பிக்கப்படும். (வெளி 20:7-10 வெளி 21:1-22; 1கொரி 15:24-28

நியமிக்கப்பட்டிருக்கிறது (appointed) - ἀπόκειμαι - apokeimai - 606

வினைச்சொல் - வைத்திரு, நியமி (be laid up in store; be in reserve) appoint (எபி 9:27 ; be laid up (லூக்கா 19:20 கொலோ 1:5; 2தீமோ 4:8

"பின்பு நியாயத்தீர்ப்படைவது மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது" - மரணத்திற்குப் பின்பு நியாயத்தீர்ப்பு உண்டு. மரித்த பின்பு மறுபடியும் பூமியில் ஜீவித்து இரட்சிப்படைவதற்கு வாய்ப்பில்லை மரணம் மனுஷனுடைய ஜீவனுக்கு ஒரு முடிவைக் கொடுத்து விடும் மனுஷன் மரிக்கும்போது நீதிமானாக இருந்தால் அவனுடைய ஆவியும் ஆத்துமாவும் பரலோகத்திற்குச் சென்று தன்னுடைய சரீர உயிர்த்தெழுதலுக்காக அங்கு காத்துக் கொண்டிருக்கும். (2கொரி 5:8, பிலி 1:21-24, எபி 12:23; வெளி 6:9-11) மனுஷன் மரிக்கும் போது துன்மார்க்கனாக இருந்தால் அவனுடைய ஆவியும் ஆத்துமாவும் நரகத்திற்குச் சென்று தன்னுடைய சரீர உயிர்த்தெழுதலுக்காக அங்கு காத்துக் கொண்டிருக்கும். (லூக்கா 16:19-31 ஏசா 14:9; வெளி 20:11-15)

சுமப்பது (bear) - ἀναφέρω - anapheroo - 399

வினைச்சொல் - கட்டிக்கொண்டு எடு, எடுத்துக்கொள் செலுத்து சுமா (எபி 7:27)

காத்திரு (look) - ἀπεκδέχομαι - apekdechomai 553

வினைச்சொல் - காத்திரு, எதிர்பார் (ரோம 8:19)

9 அதிகாரம்

"இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்" - இந்த வாக்கியம் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிக்கிறது. தமது இரண்டாம் வருகையின் போது இயேசு கிறிஸ்து பாவிகளை இரட்சிப்பதற்காகத் தம்மை பாவநிவாரண பலியாக ஒப்புக்கொடுக்கமாட்டார் தம்முடைய சத்துருக்களையெல்லாம் தமது பாதபடியாக்கிப் போட்டு, இந்தப் பூமியை ஆளுகை செய்வதற்காக இயேசு கிறிஸ்து வருவார் (2தெச 1 7

10 அதிகாரம்

12. நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல் அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறது - (கொலோ 2:14-17)

எபி 10:1 இப்படியிருக்க, நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல் அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறபடியால், வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டுவருகிற ஒரேவிதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது.

எபி 10:2 பூரணப்படுத்துமானால், ஆராதனை செய்கிறவர்கள் ஒருதரம் சுத்தமாக்கப்பட்டபின்பு, இன்னும் பாவங்களுண்டென்று உணர்த்தும் மனச்சாட்சி அவர்களுக்கு இல்லாதிருப்பதினால், அந்தப் பலிகளைச் செலுத்துகிறது நிறுத்தப்படுமல்லவா?

எபி 10:3 அப்படி நிறுத்தப்படாதபடியால், பாவங்கள் உண்டென்று அவைகளினாலே வருஷந்தோறும் நினைவுகூருதல் உண்டாயிருக்கிறது.

எபி 10:4 அல்லாமலும், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்திசெய்யமாட்டாதே.

"வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல் அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறது" நியாயப்பிரமாணம் வரப்போகிற நன்மைகளின் நிழலாய் இருக்கிறது. நியாயப்பிரமாணத்தினால் ஒரு நன்மையும் இல்லை. இது ஒருவரையும் ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது. (எபி 8:5, கொலோ 2:14-17)

நிழல் (image)- εἰκών - eikoon 1504

பெண்பால் பெயர்ச்சொல் - சுரூபம், சாயல், நிழல், சொரூபம், ரூபம் (form) (கொலோ 1:15)

"அல்லாமலும், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்திசெய்யமாட்டாதே" - நியாயப்பிரமாணம் பாவங்களை அகற்றாது. யாரையும் பரிபூரணப்படுத்தாது. இருதயத்தைச் சுத்திகரிக்காது (2கொரி 4:4, 2கொரி 11:14-15 2தீமோ 4:1-4; 2தெச 2:8-12)

13. கிறிஸ்து பழைய உடன்படிக்கையை அகற்றிப்போட்டார் (10:5-9) - (கலா 4:2)

எபி 10:5 ஆகையால் அவர் உலகத்தில் பிரவேசிக்கும்போது: பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை, ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர்;

எபி 10:6 சர்வாங்க தகனபலிகளும் பாவநிவாரணபலிகளும் உமக்குப் பிரியமானதல்ல என்றீர்.

எபி 10:7 அப்பொழுது நான்: தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார்.

எபி 10:8 நியாயப்பிரமாணத்தின்படி செலுத்தப்பட்டுவருகிற பலிகளைக்குறித்து மேற்சொல்லியபடி பலியையும் காணிக்கையையும் சர்வாங்க தகனபலிகளையும் பாவநிவாரணபலிகளையும் நீர் விரும்பவில்லை, அவைகள் உமக்குப் பிரியமானதல்ல என்று சொன்னபின்பு:

எபி 10:9 தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன் என்று சொன்னார். இரண்டாவதை நிலைநிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப்போடுகிறார்.

எபிரெயர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 20

"பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை, ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர்; சர்வாங்க தகனபலிகளும் பாவநிவாரணபலிகளும் உமக்குப் பிரியமானதல்ல." (எபி 10:5-9 சங் 40:6-8)

எபிரெயர்- தொகுப்புரை

10 அதிகாரம்

"ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர்" - (2கொரி 13:5)

புஸ்தகச்சுருள் (roll of the book) - κεφαλίς - kephalis - 2777

பெண்பால் பெயர்ச்சொல் - சுருள் (roll) of the book) - தோல்சுருள்களில் பூர்வகாலத்தில் எழுதினார்கள். அந்தச் சுருள்களை மரத்தினால் செய்த உருளைகளில் சுருட்டி வைப்பார்கள். யூதருடைய ஜெபாலயங்களில் இன்றும் பரிசுத்த புஸ்தகம் தோல்சுருள்களில் எழுதப்பட்டு வருகிறது.

"அவைகள் உமக்குப் பிரியமானதல்ல" - பலியையும், காணிக்கையையும் சர்வாங்க தகனபலிகளையும், பாவநிவாரணபலிகளையும் தேவன் விரும்பவில்லை. இவற்றின் மூலமாக மனுஷரை இரட்சிப்பது தேவனுடைய சித்தமல்ல. மனுஷருக்கு நித்திய மீட்பை உண்டு பண்ணுவதற்காக தேவன் இயேசு கிறிஸ்துவை ஆயத்தம் பண்ணினார். உலகத்தின் பாவங்களுக்கு மரிப்பதற்காகவும் தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்காகவும் இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார் (எபி 10:7-9; கலா 1:4; 1பேதுரு 2:24)

"இரண்டாவதை நிலைநிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப்போடுகிறார்" இதற்கு இரண்டு விதமாகப் பொருள் கூறலாம். அவையாவன

1 இயேசு கிறிஸ்துவின் பலியை நிலைநிறுத்துவதற்காகத் தேவன் முதலாவது பலிகளை அகற்றிப் போடுகிறார் (எபி 10:12)

2 புதிய உடன்படிக்கையை நிலை நிறுத்துவதற்காகத் தேவன் பழைய உடன் படிக்கையை அகற்றிப்போடுகிறார்

14. பழையஉடன் படிக்கையிலல்லாதது புதிய உடன்படிக்கை நம்மை நித்திய ஜீவனுக்கு அழைத்துச் செல்லும் வல்லமையுடையது
(கொலோ 2:14-17; 1பேதுரு 2:24)

எபி 10:10 இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப் பட்டிருக்கிறோம்.

எபி 10:11 அன்றியும், எந்த ஆசாரியனும் நாடோறும் ஆராதனை செய்கிறவனாயும் பாவங்களை ஒருக்காலும் நிவிர்த்தி செய்யக்கூடாத ஒரேவித பலிகளை அநேகந்தரம் செலுத்திவருகிறவனாயும் நிற்பான்

எபி 10:12 இவரோ, பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி, என்றென்றைக்கும் தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்து

எபி 10:13 இனித் தம்முடைய சத்துருக்களைத் தமது பாதபடியாக்கிப் போடுமளவுக்கும் காத்துக் கொண்டிருக்கிறார்

எபி 10:14 ஏனெனில் பரிசுத்தமாக்கப் படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப் படுத்தியிருக்கிறார்

எபி 10:15 இதைக்குறித்துப் பரிசுத்த ஆவியானவரும் நமக்குச் சாட்சி சொல்லுகிறார் எப்படியெனில்.

எபி 10:16 அந்த நாட்களுக்குப்பின்பு நான் அவர்களோடே பண்ணும் உடன்படிக்கையாவது: நான் என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய இருதயங்களில் வைத்து, அவைகளை அவர்களுடைய மனதில் எழுதுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்பதை உரைத்தபின்பு,

எபி 10:17 அவர்களுடைய பாவங்களையும் அவர்களுடைய அக்கிரமங்களையும் நான் இனி நினைப்பதில்லை என்பதைச் சொல்லுகிறார்

எபி 10:18 இவைகள் மன்னிக்கப் பட்ட துண்டானால் இனிப் பாவத்தினிமித்தம் பலி செலுத்தப் படுவதில்லையே

"அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்த மாக்கப் பட்டிருக்கிறோம்" மனுஷருடைய பாவங்களை மன்னிப்பதற்கு இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் தமது திருஇரத்தத்தைச் சிந்தி மரிக்க வேண்டுமென்பது தேவனுடைய சித்தம். அந்தச் சித்தத்தின் பிரகாரம் நாம் பரிசுத்தமாக்கப்பட்டு, பரிபூரணப்படுத்தப் பட்டிருக்கிறோம். (எபி 10:10,14; 1தெச 4:3,7; 2தெச 2:13)

10 அதிகாரம்

"எந்த ஆசாரியனும் நாடோறும் ஆராதனை செய்கிறவனாயும் பாவங்களை ஒருக்காலும் நிவிர்த்திசெய்யக்கூடாத ஒரேவித பலிகளை அநேகந்தரம் செலுத்திவருகிறவனாயும் நிற்பான்" - இந்த வசனத்தின் மூலமாகப் பவுல் இரண்டு காரியங்களை வலியுறுத்திக் கூறுகிறார். அவையாவன

1. பூமிக்குரிய ஆசாரியர்கள் வெறுமையானவர்கள். உதவி செய்ய முடியாதவர்கள். இவர்கள் தினமும் பலிகளைச் செலுத்துகிறார்கள். ஆயினும் அந்தப் பலிகள் மனுஷருடைய பாவங்களை நிவிர்த்தி செய்ய மாட்டாது.

2. இயேசு கிறிஸ்துவின் பலியானது சர்வ வல்லமையுள்ளது. இயேசு கிறிஸ்துவின் பாவ நிவாரண பலி மனுஷருடைய எல்லாப் பாவங்களையும் நீக்குகிறது. தேவனுடைய விரோதிகளை அழிக்கிறது. எல்லா விசுவாசிகளையும் நித்தியமாகப் பரிசுத்தப்படுத்துகிறது. (எபி 10:12-14)

"இவரோ பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி என்றென்றைக்கும் தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்து" - இயேசு கிறிஸ்து தமது பாவநிவாரண பலியை நிறைவேற்றிய பின்பு, பாவத்திற்கான அவருடைய பலி நிறைவேறி முடிந்தது. இப்பொழுது அவர் தேவனுடைய வலதுபாரிசத்தில் அமர்ந்திருக்கிறார். தம்முடைய பாவநிவாரண பலி விசுவாசிகளுடைய ஜீவியத்தில் எவ்வாறு கிரியை செய்து கொண்டிருக்கிறது என்பதைக் காண்பதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார். பாவத்திலிருந்து விடுதலை பெற்று, சத்துருக்களிடமிருந்து மீட்கப்பட்டிருக்கும் விசுவாசிகளுடைய ஜீவியத்தில் தமது இரட்சிப்பின் கிரியை நிறைவு பெறுவதைக் காண்பதற்கு இயேசு கிறிஸ்து காத்துக் கொண்டிருக்கிறார். (எபி 10:12-14; எபி 1:3; எபி 12:2; சங் 110:4) பழைய ஏற்பாட்டு ஆசாரியர்கள் அனுதினமும் பலிகளைச் செலுத்தினார்கள். இதனால் அவர்கள் செலுத்திய பலிகள் குறைவுடையது என்பது தெளிவாகிறது. இயேசு கிறிஸ்து ஒரேதரம் தம்மையே பலியாகச் செலுத்தினார். இது நிறைவானது. ஆகையினால் கிறிஸ்து இயேசு இனிமேல் அனுதினமும் தம்மைப் பலியாகச் செலுத்தாமல் ஒரேதரம் தம்மைப் பலியாகச் செலுத்திவிட்டு இப்பொழுது தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார். (எபி 10:12-14)

"இனித் தம்முடைய சத்துருக்களைத் தமது பாதப்படியாக்கிப்போடும்வரைக்கும் காத்துக் கொண்டிருக்கிறார்" - இயேசு கிறிஸ்து தமது பலியினாலே சாத்தானுடைய சகல அந்தகாரச் சக்திகளையும் தோற்கச்செய்தார். (கொலோ 2:14-17) இப்பொழுது அந்தகாரச் சக்திகளைத் தமது பாதப்படியாக்கிப்போடும் வரைக்கும் காத்துக்கொண்டிருக்கிறார். அவர்களுக்குத் தண்டனை கொடுக்கப்படும் நாளுக்காகவும் இயேசு கிறிஸ்து காத்துக் கொண்டிருக்கிறார். (1கொரி 15:24-28; எபி 2:5-15; எபே 1:10) இதற்கு இடைப்பட்ட காலத்தில் தம்முடைய பிள்ளைகளை ராஜாக்களாகவும் ஆசாரியர்களாகவும் ஆக்கி, ஆயிரம் வருஷ அரசாட்சியில் தம்மோடு ஆட்சி புரிவதற்காக அவர்களை அன்போடு அழைக்கிறார். தேவனுடைய பிள்ளைகள் தேவனோடு புதிய நித்திய பூமியில் ஆளுகை செய்வார்கள். (அப் 15:13-18; வெளி 1:5-6; வெளி 5:8-10; வெளி 20:4-6; வெளி 22:4-5)

எபிரெயர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 21

"நான் என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய இருதயங்களில் வைத்து அவைகளை அவர்களுடைய மனதில் எழுதுவேன்" (எபி 8:10; எபி 10:16-17; எரே 31:33-34)

"இவைகள் மன்னிக்கப்பட்டதுண்டானால் இனிப் பாவத்தினிமித்தம் பலி செலுத்தப்படுவதில்லையே" - பாவங்கள் மன்னிக்கப்பட்ட பின்பு மறுபடியும் பாவங்களுக்குப் பலியிட வேண்டிய அவசியமில்லை. இயேசு கிறிஸ்துவின் ஆசாரியத்துவத்தைப் பற்றி எபி 5:1 ஆவது வசனத்தில் எழுத ஆரம்பித்த பவுல் இங்கு தமது விவாதத்தை முடிக்கிறார். மனுஷருடைய கடந்த கால, நிகழ்கால, வருங்கால பாவங்களுக்கு இயேசு கிறிஸ்துவின் பாவநிவாரண பலி போதுமானதாக இருக்கிறது. (1யோவான் 1:9; ரோமர் 10:9-10)

எபிரெயர்- தொகுப்புரை

10 அதிகாரம்

இயேசு கிறிஸ்து பழைய ஏற்பாட்டுப் பலிகளைவிட மேன்மையானவர்

விசேஷித்த வாக்குத்தத்தங்களின் பேரில் ஸ்தாபிக்கப்பட்ட புதிய உடன்படிக்கையை இயேசு கிறிஸ்துவின் பலி உறுதி பண்ணுகிறது. (எபி 8:6-13 எபி 9:15-22; எபி 10:16)

2 தேவனிடத்தில தனிப்பட்ட முறையில சேரும் வழியை கிறிஸ்து உண்டு பண்ணியிருக்கிறார் (எபி 9:8 எபி 10:19-23)

3 கிறிஸ்து பரிபூரணபடுத்துகிறார் (எபி 9:9 எபி 10:1-14)

4 கிறிஸ்து மெய்யான காரியங்களுக்கு ஊழியம் செய்கிறார் (எபி 9:11 எபி 8:5 எபி 10:1)

5 கிறிஸ்து பரலோகத்திற்கு வழியை உண்டுபண்ணுகிறார் (எபி 9:12)

6 கிறிஸ்து நித்திய மீட்பை உண்டு பண்ணுகிறார் (எபி 9:12-15)

7 கிறிஸ்து ஆத்துமாவைச் சுத்திகரிக்கிறார் (எபி 9:12-14)

8 கிறிஸ்து நித்திய சுதந்தரத்தைத் தருகிறார் (எபி 9:15)

9 கிறிஸ்து பரலோக ஊழியத்தை பிரத்தியட்சபடுத்தியிருக்கிறார் எபி 9:24

10 கிறிஸ்து பழைய பலிகளை முடிவுக்குக் கொண்டு வந்திருக்கிறார் (எபி 9:25 28

11 கிறிஸ்து நீதியை உறுதிபண்ணுகிறார (எபி 9:27, எபி 10:26-31)

12 கிறிஸ்து மோசேயின் பிரமாணத்தை நீக்கிபோடுகிறார் (எபி 10:9 கொலோ 2:14

13 கிறிஸ்து எல்லாவிசுவாசிகளையும் பரிசுத்தமாக்குகிறார் (எபி 10:14)

14 கிறிஸ்து பாவத்தை அகற்றிப்போடுகிறார் (எபி 10:10-18

15 கிறிஸ்து பாவநிவாரணத்தைப் பூரணப் படுத்துகிறார் (எபி 10:12-14

16 கிறிஸ்து தமது சத்துருக்களைத் தமக்குப் பாதபடியாக்கிப் போடுகிறார் (எபி 10:13 கொலோ 2:14-17

17 கிறிஸ்து மன்னிக்கப்பட்ட பாவங்களை மறந்து விடுகிறார் (எபி 10:17)

18 கிறிஸ்து அறிக்கை செய்யப்பட்ட பாவங்களை மறந்து விடுகிறார் (எபி 10:18)

19 கிறிஸ்து தேவனிடத்தில சேருவதற்குத் தைரியம் கொடுக்கிறார் (எபி 10:19-23; எபி 4:14-16

20 கிறிஸ்து மனுஷருக்கு நித்திய பிரதான ஆசாரியனாக [illegible]டுத்திருக்கிறார் (எபி 10:25-39 எபி 6:20 எபி 7:11-21)

XI. எச்சரிப்புக்களும் புத்திமதிகளும் - (10:19-39)

1. ஒவ்வொரு விசுவாசியும் ஆசாரியராயிருக்கிறார் - பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க வேண்டும் - (4:14-16, எபே 1:3,14; 2:14-22)

எபி 10:19 ஆகையால் சகோதரரே நாம் பரிசுத்தஸ்தலத்தில பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டு பண்ணின படியால்

எபி 10:20 அந்த மார்க்கத்தின்வழியாய் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும்,

எபி 10:21 தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும்

எபி 10:22 துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர் களாயும் சுத்த ஜலத்தால கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும் உண்மையுள்ள இருதயத்தோடும்விசுவாசத்தின பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்.

10 அதிகாரம்

எபி 10:23 அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில அசைவில்லாமல உறுதியாயிருக்கக் கடவோம். வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே

தைரியம் (boldness) - παρρησία - parreesia - 3954

பெண்பால் பெயர்ச்சொல் - வினையடையாகவும் பயன்படும் தாராளம், வெளிப்படுத்துதல் தெளிவு வெளியடை, தைரியம் (liberty; full access to heaven) (அப 4:13)

"ஆகையால், சகோதரரே" - பவுலின் நடைமுறை உபதேசம் இந்த வசனத்திலிருந்து துவங்குகிறது. (எபி 10:19- 13:25) உபதேச விளக்கவுரையை பவுல இந்த வசனத்தோடு முடிவு பண்ணுகிறார் (எபி 1:1-10:18)

"நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு" - பிரதான ஆசாரியர் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் வருஷத்திற்கு ஒரேஒரு தரம் மட்டுமே பிரவேசிக்க முடியும் ஆனால விசுவாசிகளாகிய நமக்கோ இயேசு கிறிஸ்துவின இரத்தத்தினாலே பரலோகத்திலுள்ள மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் அநுதினமும் பிரவேசிக்கும் சிலாக்கியம் கிடைத்திருக்கிறது.

"புதிதும் ஜீவனுமான மார்க்கம்" - இயேசு கிறிஸ்துவின மார்க்கம் புதியது ஜீவனுள்ளது இயேசு கிறிஸ்து புதிதாக பலியிடப்பட்டிருக்கிறார் தேவனுக்கு வழியாக இருக்கும் அவர நித்திய காலமாக ஜீவிக்கிறார் (யோவான் 14:6; வெளி 1:18) திரைக்குள் அவர ஜீவிக்கிறவராயிருக்கிறார (எபி 7:25)

விசுவாசிகளுக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. தேவனிடத்தில நெருங்கிச் சேரவேண்டும் (எபி 10:22)
2. சுத்த மனச்சாட்சியுடையவர்களாக இருக்க வேண்டும் (எபி 10:22)
3. சுத்த சரீரங்களை உடையவர்களாக இருக்க வேண்டும் (எபி 10:22)
4. அசைவில்லாத விசுவாசம் வேண்டும். (எபி 10:23)
5. நற்கிரியைகளைச் செய்வதற்கு மற்றவர்களை ஏவ வேண்டும் (எபி 10:24)
6. சபை கூடுதலை விட்டுவிடக்கூடாது (எபி 10:25)
7. ஒருவருக்கொருவர் தினமும் புத்தி சொல்ல வேண்டும். (எபி 10:25; எபி 3:13)

தேவனிடத்தில் சேரும் வழிகள்

1. தைரியத்தோடு (எபி 10:20; எபி 4:14-16)
2. இயேசு கிறிஸ்துவின இரத்தத்தினாலே (எபி 10:20)
3. புதிதும் ஜீவனுமான மார்க்கத்தினால (எபி 10:19)
4. கிறிஸ்து என்னும் மகா பிரதான ஆசாரியர் மூலமாக (எபி 10:21)

பூரணநிச்சயம் (full assurance) - πληροφορία - pleerophoria - 4136

பெண்பால் பெயர்ச்சொல - முழுநிச்சயம், பூரணநிச்சயம் (full conviction; certain) (எபி 10:22; எபி 6:11 கொலோ 2:2 1தெச 1:5)

"தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்கள்" - நியாய பிரமாணத்தின பிரகாரம் சரீரத்தில தண்ணீர் தெளிக்கப்படுகிறது (எண 19:2-10) நம்முடைய இருதயமாகிய உள்ளான மனுஷனிமீது இயேசு கிறிஸ்துவின் திருஇரத்தம் தெளிக்கப்படுகிறது. (எபி 10:22, எபி 12:24 1பேதுரு 1:2) இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தில் வைக்கும விசுவாசத்தினால் இது சாத்தியமாகிறது. (ரோமர் 3:24-25)

10 அதிகாரம்

"சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்கள்" - இந்த வாக்கியம் ஞானஸ்நானத்தைக் குறிப்பிடாமல் சரீரத்தின் ஸ்நானத்தையே குறிக்கிறது. லேவி 15:8-27 லேவி 17:15-16.

"நம்பிக்கையை அறிக்கையிடுகிறது" - எபி 3:1

"அசைவில்லாமல்" - (யாக் 1:4-8 ரோமர் 4:17; மாற்கு 11:22-24)

2. ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம்

எபி 10:24 மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து,

எபி 10:25 சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்.

கவனி (consider) -κατανοέω - katanoeoo - 2657

வினைச்சொல் - உணர், கவனி, அறி உற்றுப்பார் "consider" (எபி 10:24, எபி 3:1, மத் 7:3; லூக்கா 12:24,27, அப் 11:6, ரோமர் 4:19); "perceive" (லூக்கா 6:41; லூக்கா 20:23); "discover" (அப் 27:39); "behold" (அப் 7:31-32; யாக் 1:23-24)

ஏவப்படுதல் (provoke) - παροξυσμός - paroxysmos - 3948

ஆண்பால் பெயர்ச்சொல் - கடுங்கோபம், ஏவப்படுதல் (to make keen, urge, prick; provoke) (எபி 10:24) (contention) (அப் 15:39)

சபை கூடிவருதல் (assembling) ἐπισυν αγωγή episynagoogee - 1997

பெண்பால் பெயர்ச்சொல் - கூடிவருதல் (2தெச 2:1)

"சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல" - எபி 10:32-33 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் உபத்திரவங்களின் நிமித்தம் ஒருசில விசுவாசிகள் சபை கூடிவருவதில் பங்கு பெறாமல் இருக்கிறார்கள். விசுவாசிகள் சபை கூடிவருதலை விட்டுவிடக்கூடாது.

"நாளானது சமீபித்துவருகிறது" - கிறிஸ்துவின் நாள் சமீபித்து வருகிறது. விசுவாசிகள் அநுதினமும் இதைக் குறித்து சிந்தனையுடையவர்களாக இருக்க வேண்டும். மற்ற விசுவாசிகளுக்கு இதைக் குறித்து விசுவாசத்தோடு புத்தி சொல்ல வேண்டும் (1கொரி 1:8)

3. மறுதலித்துப்போனவர்களின்மீது நித்திய ஆக்கினைத்தீர்ப்பு வரும்

- (1:6-9; 2பேதுரு 2:20)

எபி 10:26 சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ் செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களின்நிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல்,

எபி 10:27 நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்.

எபி 10:28 மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம்பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே;

எபி 10:29 தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்த மென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்.

10 அதிகாரம்

எபி 10:30 பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றும், கர்த்தர் தமமுடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார் என்றும் சொன்னவர் இன்னாரென்று அறிவோம்

எபி 10:31 ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே

நாம் செய்வதற்கு வாய்ப்புள்ள காரியங்கள்

1 சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு ஒருசிலர் மனப்பூர்வமாய் பாவஞ் செய்கிறவர்களாக இருக்க முடியும். எபி 10:26

2 இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட பின்பு ஒருசிலரால அவருடைய பாவநிவாரண பலியை மறுதலிக்கிறவர்களாக இருக்க முடியும். (எபி 10:26

3 சத்தியத்தின் அறிவை அடைந்த பின்பு ஒருசிலரால கவிசேஷத்தைவிட்டு விலகுகிறவர்களாக இருக்க முடியும். (எபி 10:26,28

4 இயேசு கிறிஸ்துவைத் தெரிந்து கொண்ட பின்பு ஒருசிலரால தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்துப் போடுகிறவர்களாக இருக்க முடியும் எபி 10:29)

5 தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின இரத்தத்தை ஒருசிலரால அசுத்தமென்று எண்ண முடியும். (எபி 10:29)

6 தான பெற்றுக் கொண்ட கிருபையின ஆவியை ஒருசிலரால் நிந்திக்க முடியும் எபி 10:29)

7 சத்தியத்தை அறிந்து கொண்ட பின்பு ஒருசிலரால தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ண முடியும். (எபி 10:26-27)

மனப்பூர்வமாய் (wilfully) - ἑκουσίως hekousioos 1596

வினையடை - மனப்பூர்வமாய **"willingly"** (1பேதுரு 5:2)

"சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு" - இதற்கு தேவனுடைய நலவார்த்தையை ருசிபார்த்த பின்பு (எபி 6:5) என்று பொருள் கூறலாம்.

தீர்க்கதரிசன எண் - 1

"பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல்,........" (எபி 10:26-31 மனுஷருடைய பாவங்களுக்காக இயேசு கிறிஸ்து பாவநிவாரண பலியானார் பாவங்களின் நிமித்தம் செலுத்தத்தக்க ஒரே பலி இயேசு கிறிஸ்துவின் பலி மட்டுமே வேறொரு பலி இனியில்லை. இயேசுகிறிஸ்துவின் பாவநிவாரண பலியை ஏற்றுக் கொள்ள விலலையென்றால அந்த நபர் பாவிகளுக்குரிய தண்டனையை ஏற்றுக் கொள்ள வேண்டிவரும் இப்படிப்பட்டவர்கள் சாதாரணமாகப் பினவாங்கிப் போனவர்கள அலல தேவனையும் அவருடைய சுவிசேஷத்தையும் மனப்பூர்வமாக மறுதலிக்கிறவர்கள (எபி 6:4-9 பினவாங்கிப் போனவர்கள இயேசு கிறிஸ்துவை மறுபடியும் விசுவாசித்து மறுபடியும் பாவஅறிக்கை செய்து தேவனிடமிருந்து இரட்சிப்பை பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்புள்ளது. ஆனால் ஒரு நபர் இயேசு கிறிஸ்துவையும் அவருடைய சுவிசேஷத்தையும் வேண்டுமென்றே மறுதலித்தால அவருக்கு வேறொரு நம்பிக்கை இல்லை

கிறிஸ்துவை மறுதலிக்கிறவர்கள்மீது வரும் நியாயத்தீர்ப்புக்கள்

1. அவர்களுடைய பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியில்லை

2 பயத்தோடு எதிர்பார்க்கும் நியாயத்தீர்ப்பு வரும். (எபி 10:27

3. விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினை இருக்கும். (எபி 10:27

எபிரெயர்- தொகுப்புரை

10 அதிகாரம்

4 நியாயப்பிரமாணத்தின்படி கலலெறிந்து கொல்லப்படுவதைவிட அதிகக் கடுமையான தண்டனை கிடைக்கும். எபி 10 28-29

5. தேவன் பழிவாங்குவார் (எபி 10.30)

6 செயத பாவங்களுக்குத் தேவன் முழுமையாக நியாயந்தீர்ப்பார் எபி 10 30-31)

7 ஜீவனுள்ள தேவனுடைய கைகளில விழுகிறது பயங்கரமாயிருக்கும் எபி 10 31

பயம் (fearful) - φοβερός - phoberos - 5398

பெயரடை - பயங்கரமாயிருக்கிற (எபி 10.27, 31; எபி 12:21)

"கோபாக்கினை (fiery indignation, Jealousy; fervour of fire; zeal of God in punishing apostates) - தமமை மறுதலிக்கிறவாகளமீது தேவனுடைய கோபாக்கினை வைராக்கியமாக இருக்கும இது ஒரு எபிரெய மாாகக வழககுச சொல (சங் 79:5; எசே 36:5; எசே 38:19 செப 1:18 செப 3:8

பட்சித்தல் (devour) - ἐσθίω - esthioo - 2068

வினைசசொல - போஜனம் பணணு, சாபபிடு, தினனு, புசி, பட்சி (to consume like an eating disease; to vex) "devour" (எபி 10:27); "live of" (1கொரி 9:13); "be eating" மத் 26:26); "eat". தேவனுக்கு எதிராகக் கலகம் பணணுவோருக்கு நித்திய தீாபபு உணடாயிருக்கும்

பயத்துடன் எதிர்பாாத்தல் (adversaries) - ὑπεναντίος - hypenantios 5227

பெயரடை-எதிரிடையான எதிர்பாாத்தல (hostile, opposers) "contrary" (கொலோ 2:14)

"மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம்பெறாமல்_சாகிறானே" - நியாயபபிரமாணத்தின தெயவீக அதிகாரத்தை அங்கிகரியாமல தள்ளிவிடுகிறவனுக்கு இரக்கம் காணபிக்கப்படமாட்டாது. அவன் இரணடு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாக வேணடும் (எண் 15.30; உபா 17 2-6

"கொடிதான ஆக்கினை" (sorer punishment) - நியாயப்பிரமாணத்தை மீறுவதறகுக் கொடுக்கபபடும் தணடனையை விட கிருபையின் ஆவியை நிந்திக்கிறவர்களுக்கும், தேவனுடைய திருஇரத்தத்தை அசுத்தமென்று எணணுகிறவர்களுக்கும் கொடிதான ஆக்கினை கொடுக்கபபடும். (எபி 10.26

காலின்கீழ மிதித்தல (trodden underfoot) - καταπατέω - katapateoo - 2662

வினைச்சொல - மிதி "tread underfoot" (எபி 10:29; மத் 5:13; லூக்கா 8:5; லூக்கா 12:1; "trample" (மத் 7:6)

யோசிதது பாாததல (counted) - ἡγέομαι - heegeomai - 2233

வினைசசொல ஆளுநடத்து "count" (எபி 10:29; பிலி 3:7-8; 2தெச 3:15 1தீமோ 1:12; 1தீமோ 6:1; யாக் 1:2 2பேதுரு 2:13; 2பேதுரு 3:9; "account" (2பேதுரு 3:15; "esteem" (பிலி 2.3; 1தெச 5:13, எபி 11:26); "think" (அப் 26:2, 2கொரி 9:5; பிலி 2:6, 2பேதுரு 1:13; "suppose" (பிலி 2:25)

"தன்னைப் பரிசுத்தஞ்செயத இயேசு கிறிஸதுவினுடைய உடனபடிக்கையின இரததம் மனுஷரைப பரிசுத்தஞ்செயகிறது (எபி 13:12 20; 1யோவான 1:7, எபே 1:7 வெளி 1:5)இவ்வாறு பரிசுத்தமாக்கப பட்டவாகளகூட தனனைப் பரிசுத்தஞ்செயத கிறிஸ்துவின திருஇரத்தத்தை அசுததமெனறெணணுவதற்கு வாயப்புளளது.

அசுத்தம் (unholy thing) - κοινός koinos 2839

10 அதிகாரம்

பொது - அசுத்த தீட்டுள்ள (to make common, unclean) "an unholy thing" எபி 10:29; "common" (அப் 2:44; அப் 4:32; அப் 10:14,28; அப் 11:8; தீத்து 1:4; யூதா 1:3); "unclean" (ரோமர் 14:14); "defiled" (மாற்கு 7:2)

"உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்த மென்றெண்ணி" - இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சர்வ வல்லமையுள்ளது. மனுஷருக்குப் பாவநிவாரணத்தைத் தரக்கூடியது. இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் விசுவாசிகள் ஒருகாலத்தில் கிறிஸ்துவின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்பட்டவர்கள். இதன் பின்பு இவர்கள் கிறிஸ்துவின் இரத்தம் சாதாரண இரத்தமே என்று இறுமாப்போடு நினைக்கிறார்கள். இவர்கள் கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரராய் இருப்பார்கள்.

நிந்தி (done despite) - ἐνυβρίζω - enybrizoo - 1796

வினைச்சொல் - நிந்தி (insulted)

எபிரெயர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 22

"பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எபி 10:30; உபா 32:35)

எபிரெயர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 23

"கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார்" எபி 10:30; உபா 32:36)

"ஜீவனுள்ள தேவன்" (living God) - தமக்கு எதிராகக் கலகம் செய்கிறவர்களைக் கர்த்தர் தண்டிப்பார். அந்தத் தண்டனை நித்திய தண்டனையாக இருக்கும்.

4. பொறுமையுடன் போராட்டத்தைச் சகித்து விசுவாசத்தில் தொடர்ந்து ஜீவிக்க வேண்டும் - (3:14)

எபி 10:32 முந்தின நாட்களை நினைத்துக் கொள்ளுங்கள்; நீங்கள் பிரகாசமாக்கப்பட்டிருந்த அந்த நாட்களில் உபத்திரவங்களாகிய மிகுந்த போராட்டத்தைச் சகித்தீர்களே

எபி 10:33 நிந்தைகளாலும் உபத்திரவங்களாலும் நீங்கள் வேடிக்கையாக்கப்பட்டதுமல்லாமல் அப்படி நடத்தப்பட்டவர்களுக்குப் பங்காளிகளுமானீர்கள்

எபி 10:34 நான் கட்டப்பட்டிருக்கையில் நீங்கள் என்னைக்குறித்துப் பரிதபித்ததுமன்றி பரலோகத்தில் அதிக மேன்மையும் நிலையுள்ளதுமான சுதந்தரம் உங்களுக்கு உண்டென்று அறிந்து உங்கள் ஆஸ்திகளையும் சந்தோஷமாய்க் கொள்ளையிடக் கொடுத்தீர்கள்

எபி 10:35 ஆகையால் மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள்

எபி 10:36 நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது.

எபி 10:37 வருகிறவர் இன்னுங் கொஞ்சக்காலத்தில் வருவார் தாமதம்பண்ணார்

முந்தின நாட்களின் நினைவு

1. அவர்கள் பிரகாசமாக்கப்பட்டிருந்தார்கள் (எபி 10:32)
2. உபத்திரவங்களாகிய மிகுந்த போராட்டத்தைச் சகித்தார்கள் (எபி 10:32; அப் 8:1; அப் 9:1; அப் 12:1)
3. அவர்கள் வேடிக்கையாக்கப்பட்டார்கள் (அப் 10:33)
4. உபத்திரவங்களை அனுபவித்தவர்களோடு பங்காளிகளாக இருந்தார்கள் (எபி 10:33)

10 அதிகாரம்

5 பயலுக்காகப் பரிதபித்தார்கள் (எபி 10:34)

6 கலிசேஷத்தின் நிமித்தம் தங்கள் ஆஸ்திகளையும் சந்தோஷமாய் கொள்ளையிடக் கொடுத்தார்கள் (எபி 10:34)

7 பரலோகத்தில் அதிக மேன்மையும் நிலையுள்ளதுமான சுதந்தரம் தங்களுக்கு உண்டென்று அறிந்திருந்தார்கள் (எபி 10:34)

வேடிக்கையாக்கப்படுதல (to be exhibited) - θεατρίζω - theatrizoo - 2301

வினைச்சொல் - வேடிக்கை யாக்கப்படுதல (to be exhibited in theatres) (1கொரி 4:9)

பங்காளி (companion) - κοινωνός - koinoonos - 2844

ஆண்பால் பெயர்ச்சொல் - உடன்பட்டவர், கூட்டாளி, பங்காளி ஐக்கியமானவர் (2கொரி 1:7)

பரிதபி (touched with feeling) - συμπαθέω -sympatheoo - 4834

வினைச்சொல - பரிதபி "touched with feeling" (எபி 4:15)

"உபத்திரவங்கள" (afflictions) (ரோமர் 7:5)

"நாம் மாம்சத்திற்கு உட்பட்டிருந்த காலத்தில்" நாம் ஒரு காலத்தில மாம்சத்திற்கு உட்பட்டிருந்தோம். நியாயப்பிரமாணத்தின் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டவர்களாக இருந்தோம் (எபி 9:10) நம்முடைய சரீரத்தின் அவயவங்களில பாவ இச்சைகள நியாயப் பிரமாணத்தினால கிரியை செய்தது. இதனால் மரணத்திற்கேதுவான கனிகளைக் கொடுத்தோம். நியாயப்பிரமாணத்தை மரண ஆக்கினைக்குத் தீர்க்க வேண்டும்.

ரோமர் 7:7-25 ஆகிய வசனங்களில் இந்தச் சத்தியம் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது.

"மாம்சத்திற்கு உட்பட்டிருந்த காலம்" - பாவத்தில ஜீவிக்கும் காலம். (ரோமர் 8:8-9)

இச்சைகள் (motions) - πάθημα - patheema - 3804

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - இச்சை பாடு, உபத்திரவம் "suffering" ரோமர்8:18 2கொரி 1:5-7 பிலி 3:10 கொலோ 1:24; எபி 2:9-10 1பேதுரு 1:11; 1பேதுரு 4:13 1பேதுரு 5:1;"affliction"(2தீமோ 3:11 எபி 10:32; 1பேதுரு 5:9;) "affections" (கலா 5:24) "motions" (ரோமர் 7:5)

"நியாயப்பிரமாணத்தினாலே" (by the law) - பாவஇச்சைகள் நியாயப்பிரமாணத்திற்கு எதிராகக் கிரியை செய்தது. நியாய பிரமாணத்தினால பாவம் பெருகிறது நியாய பிரமாணத்தினாலே பாவம் மிகுந்த பாவமுள்ளதாயிறது (ரோமர் 7:13) நாம எவ்வளவு பெரிய பாவியாக இருக்கிறோம் என்பதை நியாயப்பிரமாணம் வெளிப்படுத்துகிறது.

நிந்தைகள் (reproaches) - ὀνειδισμός-oneidismos - 3680

ஆண்பால் பெயர்ச்சொல - நிந்தை, நிந்தனை (எபி 10:33; 11:26;எபி 13:13 ரோமர் 15:3 1தீமோ 3:7

"உபத்திரவங்கள" (afflictions) (2கொரி 1:4)

இயேசு கிறிஸ்துவால் வரும் காரியங்கள்

1. நீதி (Righteousness) (ரோமர் 3:22)
2. தேவகிருபை (The grace of God) (ரோமர் 5:15)
3. நீதியின ஆளுகை (Reign of righteousness) (ரோமர் 5:21)
4. கிருபையும், சத்தியமும் (Grace and truth) (1கொரி 1:4, யோவான் 1:17

10 அதிகாரம்

5 சமாதானம் (Peace) (அப் 10:36)

6 சிருஷ்டிப்பு (Creation) (எபே 3:9 கொலோ 1:16-18)

7 ஒப்புரவாதல் (Reconciliation) 2கொரி 5:18

8 வெளிப்படுத்தப்படுதல் (Revelation) (கலா 1:12

9 நீதிமானாக்கப்படுதல் (Justification) (கலா 2:16-17

10 புத்திரசுவிகாரம் (Adoption) எபே 1:6

11 கிருபையின் ஐசுவரியங்கள் (Exceeding riches of grace) எபே 2

12 எல்லாத் தேவைகளும் சந்திக்கப்படுதல் (All needs supplied) (பிலி 4:19)

13 இரட்சிப்பு (Salvation) (1தெச 5:9)

14 ஆவிக்கேற்ற பலிகள் (Spiritual sacrifices) (1பேதுரு 2:5)

15 நல்மனசாட்சி (A good conscience) (1பேதுரு 3:21)

16 நித்திய மகிமைக்கு அழைப்பு (Calling to glory) (1பேதுரு 5:10)

17 உபதேசமும், அறிவும் (Utterance and knowledge) (1கொரி 1:5)

"பரலோகத்தில் அதிக மேன்மையும் நிலையுள்ளது மான சுதந்தரம்" – நித்திய சுதந்தரம் (எபி 9:15; 1பேதுரு 1:4; ரோமர் 8:17-18

விட்டுவிடு (Cast ... away) - ἀποβάλλω - apoballoo 577

வினைச்சொல் – நோக்கமாயிரு (to throw away; lose) (மாற்கு 10:50 கோழை எபி 10:35) – யுத்தத்திற்குச் செல்லும் தன்னிடத்தில் கொடுக்கப் பட்டிருக்கும் ஆயுதங்களையெல்லாம் கீழே போட்டுவிட்டு ஓடிவிடுவான். கர்த்தர் மீது நாம் வைத்திருக்கும் விசுவாசம் நமக்கு ஒரு மார்க்கவசத்தைப் போன்றது. அதைப் பற்றிக் கொண்டு பயன்படுத்த வேண்டும். (எபே 6:10-18

தைரியம் (confidence) - παρρησία - parreesia - 3954

பெண்பால் பெயர்ச்சொல் - வினையடையாகவும் பயன்படும் - தாராளமாய் வெளிப்படுத்துதல் தெரிவு. வெளிப்படை தைரியம் அப 4:13

எபிரெயர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 24

"வருகிறவர் இன்னுங் கொஞ்சக்காலத்தில் வருவார், தாமதம்பண்ணார்" (எபி 10:37 ஆப 2:3) இது இயேசு கிறிஸ்துவின் வருகையைக் குறிக்கும் வாக்கியம் (எபி 9:28; தானி 7:13-14, சக 14:1-5 வெளி 19:11-21)

5. பின்வாங்கிப்போவதற்கும் கெட்டுப் போவதற்கும் எதிரான எச்சரிப்பு - (4:14 9 10:26-29

எபி 10:38 விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் பின்வாங்கிப்போவானானால் அவன் மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார்

எபி 10:39 நாமோ கெட்டுப்போகப் பின் வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களா யிருக்கிறோம்.

11 அதிகாரம்

XII. பழைய ஏற்பாட்டு விசுவாச வீரர்களைப் பார்க்கிலும் கிறிஸ்து விசேஷித்தவர் - (11:1-12:4)

1. விசுவாசம் என்றால் என்ன? - ரோமர் 4:17)

எபி 11:1 விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது.

எபி 11:2 அதினாலே முன்னோர்கள் நற்சாட்சி பெற்றார்கள்

விசுவாசம் (faith) - **πίστις** - **pistis** - 4102

பெண்பால பெயர்ச்சொல - விசுவாசம், நிசயம், உண்மை (2தெச 3:2

விசுவாசத்திற்கு விளக்கங்கள்

1 நம்பப்படுகிறவைகளின உறுதி (எபி 11:1

2 காணப்படாதவைகளின நிசசயம் எபி 11:1,7

3 முனனோரகள நற்சாட்சி பெற்றது (எபி 11:2

4 தெய்வீகக் கிரியைகளின் சிருஷ்டிக்கும் வல்லமை (எபி 11:3)

5 தெய்வீக நற்சாட்சி (எபி 11:4)

6 இயற்கையினுடைய பிரமாணஙகளின் நீக்கம் (எபி 11:5)

7 தேவனுக்குப் பிரியமாக இருப்பதன ஆதாரம் எபி 11:6

8 தேவனுடைய வார்த்தையைச் சார்ந்திருப்பது (எபி 11:7)

9 தெரியாத வருங்காலத்தில் நம்பிக்கையாயிருப்பது எபி 11:8-10)

10. இல்லாதவைகளை இருப்பது போன்று நினைப்பது (எபி 11:11-12; ரோமர் 4:17

11 காணக்கூடாதவைகளைக் காண்பது (எபி 11:13-16)

12 தேவனுடைய உண்மையின் நிச்சயம் (எபி 11:17-19; எபி 10:23

13 வருங்காரியங்களைக் குறித்த நம்பிக்கை (எபி 11:20-31 எபி 3:6,14 எபி 10:35; எபே 3:12 (யோவான் 3:21)

14 கிறிஸ்தவ விசுவாசத்தை ஊக்குவிப்பது (எபி 11:32-12:2)

15 நீதிமானைப பிழைக்க வைப்பது (எபி 10:38)

16. விசுவாசிக்குக் கேடகமாக இருப்பது (எபே 6:16)

17 விரும்புகிற காரியங்களின் அச்சாரம் (எபி 3:6,12-14; எபி 6:11-12 எபி 10:22-23,35-39)

18 ஜெபத்திற்குப் பதில் கிடைக்கும் என்னும நிச்சயம் (மத் 21:22; மாற்கு 11:22-24; எபி 11:6, யாக் 1

நிச்சயம் (substance) - **ὑπόστασις** - **hypostasis** - 5287

பெண்பால பெயர்சசொல - நிச்சயம், தைரியம், தன்மை, நம்பிக்கை (**a support; ground work; confidence, subsistence; reality; essence**) எபி 11:1

விசுவாசிகள் நம்பும் காரியங்கள்

1. இரட்சிப்பு (ரோமர் 8:24-25, 1தெச 5:8

2 நீதி (கலா 5:5)

3 அழைப்பு (எபே 1:18, எபே 4:4

4 தங்களுக்குள் கிறிஸ்து இருக்கிறார் (கொலோ 1:27; 1தீமோ 1:1

5 புதிய ஏற்பாட்டின் மகா மேன்மை (2கொரி 3:7-12

11 அதிகாரம்

6. வருங்கால ஜீவியம் (1கொரி 15:19, நீதி 14:32)

7. உயிர்த்தெழுதல (அப 23:6, அப 24:15; அப 26:6-7)

8. இறுதி வெகுமதிகள் (1தெச 2:19)

9. கிருபை (1பேதுரு 1:13)

10. கர்த்தரின் வருகை (தீத்து 2:13)

11. கிறிஸ்துவைப் போல இருப்பது (1யோவான் 3:1-3)

12. நித்திய ஜீவன் (தீத்து 1:2, தீத்து 3:7, எபி 3:6; எபி 6:11,18-19; 1பேதுரு 1:3)

உறுதி (evidence) - ἔλεγχος - elegmos - 1650

ஆண்பால பெயர்ச்சொல - கடிந்துகொள்தல, நிச்சயம் (proof) 2தீமோ 3:16, எபி 11:2

இன்னும் காணப்படாத காரியங்கள்

1. தீர்க்கதரிசிகள மூலமாக உரைத்தவைகள நிறைவேறித் தீரும காலங்கள அப 3:21)

2. காணப்படாதவைகள (ரோமர் 1:20)

3. ஆவிக்குரியவைகள் (ரோமர் 8:5)

4. வருங்காரியங்கள் (ரோமர 8:38)

5. நமக்கு ஆயத்தம் பண்ணினவைகள (1கொரி 2:9)

6. நித்தியமானவைகள் (2கொரி 4:18)

7. வானோர் (பிலி 2:10)

8. பூமியின் கீழானோர் (பிலி 2:10)

9. முன்னானவைகள் (பிலி 3:13)

10. மேலானவைகள் (கொலோ 3:1-2)

11. கர்த்தர் (1பேதுரு 1:8; 1தீமோ 6:16

12. இறுதி இரட்சிப்பு (ரோமர் 8:24-25 1பேதுரு 1:5,9,13)

முன்னோர்கள் (elders) - πρεσβύτεροι - presbyteros - 4245

பெயரடை - முன்னோரான, மூப்பரான, முதிர் வயதுள்ள (அப 14:23) - எபி 11:4 ஆவது வசனத்திலிருந்து விசுவாச வீரர்களின் அட்டவணை கொடுக்கப் பட்டிருக்கிறது. இதில் ஆதாம், ஏவாளைப் பற்றி ஒன்றும் கூறப்படவில்லை அவர்களுடைய விசுவாசம மனந்திரும்புதல பரிசுத்த ஜீவியம ஆகியவை எதுவும் நமக்கு அறிவிக்கப்படவில்லை. அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியமும், நித்திய முடிவும் நமக்கு முழுவதுமாக மறைக்கப் பட்டிருக்கிறது

2. **தேவனுடைய சிருஷ்டிக்கும் விசுவாசம்** - (ரோமர் 4:17 1கொரி 13:13; 2பேதுரு 3:5

எபி 11:3 விசுவாசத்தினாலே நாம் உலகங்கள தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்ட தென்றும், இவ்விதமாய், காணப்படுகிற வைகள் தோன்றுபடுகிறவைகளால உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம்.

உலகங்கள (worlds) - αἰών - aioon - 165

ஆண்பால் பெயர்ச்சொல் - காலம், உலகம்,பிரபஞ்சம்,அநாதி,சதாகாலங்கள (எபி 1:2; மத் 12:32; மத் 13:39

(அ) என்றென்றைக்கும் அதாவது கடந்த காலத்தில் - யோவான் 6:5, 80:32

(ஆ) ஒரு குறிப்பிட்ட காலம் அதாவது இம்மை அல்லது மறுமை - மத் 12:32, மாற் 10:30

11 அதிகாரம்

உண்டாக்கப்பட்டது (framed) - καταρτίζω - katartizoo - 2675

வினைச்சொல் - பழுதுபார் உண்டாகும்படி செய், தேறிப்பிரு, சீர்பொருந்திப்பிரு, நிறைவாக்கு, ஆயத்தம்பண்ணு, சீர்படுத்து (2கொரி 13:9) - காலங்கள் தேவனுடைய வார்த்தையினால் திட்டமிடப்பட்டது. உலகங்களும் காலங்களும், சர்வ சிருஷ்டிகளும் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டது. (ஆதி 1:1 எபி 1:2

3. ஆபேல் - பாவநிவாரண பலியும் காணிக்கைகளும் - (ஆதி 4:4; எபி 12:24

எபி 11:4 விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமானென்று சாட்சி பெற்றான், அவனுடைய காணிக்கைகளைக் குறித்து தேவனே சாட்சிகொடுத்தார்; அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்

ஆபேலின் விசுவாசம்

1 ஆபேல் பாவநிவாரண பலியைச் செலுத்தினான் தான் ஒரு பாவி என்பதையும், தனக்குத் தேவனுடைய கிருபை தேவை என்பதையும் அங்கிகரித்தான்

2 காயீன் பூமியிலிருந்து விளைந்த கனிகளைப் பலியாகச் செலுத்தினான் தன்னுடைய பாவத்தையும், தனக்குத் தேவன் தேவைப்படுவதையும் அவன் அங்கிகரிக்கவில்லை

3 ஆபேல் தன் விசுவாசத்தினால் நீதிமான் என்று சாட்சி பெற்றான்

4 ஆபேலின் காணிக்கைகளைக் குறித்து தேவன் சாட்சி கொடுத்தார் (ஆதி 4:4)

5 இரத்தத்தினால் பாவநிவாரணம் உண்டாகும் என்று அவன் நம்பினான் அவனுடைய நம்பிக்கை இன்றும் மனுஷர் மத்தியிலே பிரசங்கிக்கப்படுகிறது. மனுஷருடைய பாவங்களை இரட்சிப்பதற்கு இயேசு கிறிஸ்துவின் இரத்தம் தேவை.

6 "காணிக்கைகள்" என்று பன்மையில் கூறப்பட்டிருப்பதினால் அவன் ஒன்றுக்கும் மேற்பட்ட பலி செலுத்தினான் என்று தெரிய வருகிறது. தன்னுடைய பாவங்களை மன்னிப்பதற்கு தான் செலுத்தும் பலிகள் போதாது என்பதை ஆபேல் உணர்ந்திருந்தான் இயேசு கிறிஸ்துவின் பாவநிவாரண பலி மட்டுமே மனுஷருடைய பாவங்களை முழுவதுமாகப் போக்குவதற்குப் போதுமானதாக இருக்கிறது.

4. ஏனோக்கு - எடுத்துக் கொள்ளப்படும் விசுவாசம் - (ஆதி 5:21-24; யூதா 14)

எபி 11:5 விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டபடியினாலே, அவன் காணப்படாமற்போனான்; அவன் தேவனுக்குப் பிரியமானவனென்று அவன் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னமே சாட்சி பெற்றான்

ஏனோக்கின் விசுவாசம்

1 தேவனோடு 300 வருஷங்கள் நடந்தான்

2 ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டான்,

3 தேவன் அவனை எடுத்துக்கொண்டபடியினாலே அவன் காணப்படாமற்போனான் (ஆதி 5:21-24

4 அவன் தேவனுக்குப் பிரியமானவனென்று அவன் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னமே சாட்சிபெற்றான் (எபி 11:5-6)

5 சுமார் 5,200 வருஷங்களுக்கு மேலாக ஏனோக்கு பரலோகத்தில் ஜீவித்து வருகிறான் (ஆதி 5:23; சக 4:11-14, வெளி 11:4)

6 ஏனோக்கு திரும்பவும் வந்து, இரண்டு சாட்சிகளில் ஒருவனாக மரிப்பான் (வெளி 11:3-11)

11 அதிகாரம்

5. விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம் - (மத் 17:20; 21:21-22 மாற்கு 9:23; 11:22-24; யோவான் 14:12-15; யாக் 1:5-8)

எபி 11:6 விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம். ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலனளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்

நமது ஜெபத்திற்குப் பதில் கிடைப்பதற்கு நாம் செய்ய வேண்டிய காரியங்கள்

1 தேவனுக்குப் பிரியமாயிருக்க வேண்டும். (1யோவான் 3:21-22; யோவான் 5:14-15)

2 சரியான மனப்பாங்குடன் தேவனிடத்தில் வரவேண்டும் (மத் 6:5-15 மத் 7:7-11; பிலி 4:5-6)

3 தேவன் இருக்கிறார் என்பதை விசுவாசிக்க வேண்டும். (யோவான் 16:23)

4 தேவனிடத்தில் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்க வேண்டும் (யாக் 1:4-8)

தேடு (diligently) - ἐκζητέω - ekzeeteoo - 1567

வினைச்சொல் - தேடு.

பரிசோதனை பண்ணு diligently seek (எபி 11:6); seek after (அப் 15:17; ரோமர் 3:11); seek carefully (எபி 12:17); require (லூக்கா 11:50 51); enquire (1பேதுரு 1:10)

6. நோவா உண்டுபண்ணும் விசுவாசம் ஆதி 6:8 9:29 2பேதுரு 2:5

எபி 11:7 விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக் குறித்து தேவ எச்சரிப்புபெற்று, பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டு பண்ணினான்; அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்து விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்தரவாளியானான்

நோவாவின் விசுவாசம்

1 காணாதவைகளைக்குறித்து தேவ எச்சரிப்புப் பெற்றான்

2 பயபக்தியுள்ளவனான்

3 தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான்

4 உலகம் ஆக்கினைக் குள்ளானதென்று தீர்த்தான் (ஆதி 6:8-8:19; 1பேதுரு 3:20)

5 விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்தரவாளியானான் (ரோமர் 3:21-31 ரோமர் 4:1-25)

7. ஆபிரகாம் - கீழ்ப்படியும் விசுவாசம் - (ஆதி 12:1-25:11; ரோமர் 4:1-25)

எபி 11:8 விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்ட போது, கீழ்ப்படிந்து தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனான்

எபி 11:9 விசுவாசத்தினாலே அவன் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திலே பரதேசியைப்போலச் சஞ்சரித்து, அந்த வாக்குத்தத்தத்திற்கு உடன் சுதந்தரராகிய ஈசாக்கோடும் யாக்கோபோடும் கூடாரங்களிலே குடியிருந்தான்

எபி 11:10 ஏனெனில், தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான்

11 அதிகாரம்

ஆபிரகாமின் விசுவாசம்

1 தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப் பட்டான் (ஆதி 12:1-4)

2 புதிய தேசத்தை வாக்குத்தத்தமாகப் பெற்றான் (ஆதி 15:18)

3 கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனான்

4 விசுவாசத்தினாலே அவன் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலே ஈசாக்கோடும் யாக்கோபோடும் பரதேசியைப்போலச் சஞ்சரித்தான் (எபி 11:9) ஆபிரகாம் மரித்த போது யாக்கோபிற்கு 15 வயது.

5 அந்த வாக்குத்தத்தத்திற்கு உடன் சுதந்தரராகிய ஈசாக்கோடும் யாக்கோபோடும் கூடாரங்களிலே குடியிருந்தான்

6 தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்குக் காத்திருந்தான் (எபி 11:10,13-16)

"நகரம்" - புதிய எருசலேம் உலகத்தின்மீது தேவனுடைய தலைநகரம் (எபி 11:10,13-16; எபி 12:22-23; எபி 13:14; வெளி 3:12; வெளி 21:1-22:5)

"அஸ்திபாரங்கள்" (foundations) - (வெளி 21:14-20)

"தேவன் தாமே கட்டி உண்டாக்கினார்" இயேசு கிறிஸ்து தச்சனுடைய குமாரனாக இவ்வுலகில் ஜீவித்தார். தாவீது ஆடுகளை மேய்க்கும் தொழிலைச் செய்து வந்தார். இயேசு கிறிஸ்து தச்சு வேலை செய்தார். எல்லாக் காரியங்களையும் கிறிஸ்து நேர்த்தியாகக் கட்டக் கூடியவர் (எபி 11:10; யோவான் 1:3; எபே 3:9; கொலோ 1:15-18) எல்லாக் காலங்களையும் இயேசு கிறிஸ்து திட்டமிடுகிறார் (எபி 1:2; எபி 11:3; ஏசா 9:6) தேவன் இயேசு கிறிஸ்து மூலமாக, பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையினால் கிரியை நடப்பித்தார் (ஆதி 1:2; சங் 104:30)

கட்டுகிறவர் (builder) - τεχνίτης - technitees - 5079

ஆண்பால் பெயர்ச்சொல் - தொழிலாளி கட்டுதல் (an architect, one who plans, calculates, and constructs a building) builder (எபி 11:10) craftsman (அப் 19:24,38; வெளி 18:22)

தச்சன் (carpenter) - τέκτων - tektoon - 5045

ஆண்பால் பெயர்ச்சொல் - தச்சன் (carpenter, one who is a builder, constructor) (மத் 13:55; மாற்கு 6:3)

உண்டாக்குகிறவர் (maker) - δημιουργός - deemiourgos - 1217

ஆண்பால் பெயர்ச்சொல் - உண்டாக்குகிறவர் (a maker; author; magistrate; one who calls men to work)

8. சாராள் - ஜீவனைக் கொடுக்கும் விசுவாசம் - (ஆதி 17:15; 18:9; 21:1; ரோமர் 4:17)

எபி 11:11 விசுவாசத்தினாலே சாராளும் வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவரென்றெண்ணி, கர்ப்பந்தரிக்கப் பெலனடைந்து, வயதுசென்றவளாயிருந்தும் பிள்ளை பெற்றாள்.

எபி 11:12 ஆனபடியால், சரீரம் செத்தவனென்று எண்ணத்தகும் ஒருவனாலே வானத்திலுள்ள பெருக்கமான நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரையிலுள்ள எண்ணிறந்த மணலைப்போலவும், மிகுந்த ஜனங்கள் பிறந்தார்கள்.

சாராளின் விசுவாசம்

1. கர்ப்பந்தரிக்கப் பெலனடைந்தாள்

2 வயதுசென்றவளாயிருந்தும் பிள்ளை பெற்றாள் (எபி 11:11; ஆதி 17:19; ஆதி 21:1-8)

11 அதிகாரம்

3. வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவரென்றெண்ணினாள் (எபி 11:17 ரோமர் 4:19)

4. பிள்ளை பெறுவதற்குச் சரீரம் செத்தவனாக இருந்தான் (எபி 11:12)

5. சாராளின் விசுவாசத்தினாலும் தேவனுடைய வல்லமையினாலும் அவனுக்கு ஏராளமான பிள்ளைகள் பிறந்தன (எபி 11:11-12

கர்ப்பந்தரித்தல (to conceive) - **καταβολή - katabolee - 2602**

பெண்பால் பெயர்ச்சொல் - தோற்றம் உண்டாதல், அஸ்திபாரம் (casting down) - கர்ப்பந்தரித்தலும், பிள்ளை பெறுதலும்

பிறந்தது (sprang) - **γεννάω - gennaoo - 1080**

வினைச்சொல் - பெறு, பிறந்திரு, உண்டாயிரு, எழும்பு, ஜநித்திரு (ஜெனம்), ஜெநிப்பி **"sprang"** (எபி 11:12); **"gender"** (கலா 4:24 2தீமோ 2:23); **"conceive"** (மத் 1:20); **"bedeliveredof"** (யோவான் 16:21); **"bring forth"** (லூக்கா 1:57); **"beget"** (மத் 1:2-16, அப 7:8,29, அப 13:33; 1கொரி 4:15 பிலே 1:10 எபி 1:5; எபி 5:5 1யோவான் 5:1,18); **"bear"** (லூக்கா 1:13, லூக்கா 23:29); **"be made"** (2பேதுரு 2:12); **"be born"** (மத் 2:1,4, மத் 2:4, மத் 19:12; மத் 26:24; மாற்கு 14:21, லூக்கா 1:35; யோவான் 1:13, யோவான் 3:3-8; யோவான் 8:41, யோவான் 9:2,19, 20,32, 34; யோவான் 16:21; யோவான் 18:37; அப 2:8; அப 7:20; அப 22:3,28; ரோமர் 9:11, கலா 4:23,29; எபி 11:23; 1யோவான் 2:29; 1யோவான் 3:9 1யோவான் 4:7; 1யோவான் 5:1,4,18)

"வானத்திலுள்ள பெருக்கமான நட்சத்திரங்களைப்போலவும்கடற்கரையிலுள்ள எண்ணிறந்த மணலைப் போலவும்" - (ஆதி 15:5; ஆதி 22:17; ஆதி 26:4, யாத் 32:13)

9. **ஆபேலிலிருந்து ஆபிரகாம், சாராள் வரையிலும் - பொறுமையும் நம்பிக்கையுமுள்ள விசுவாசம்** - (ரோமர் 8:24)

எபி 11:13 இவர்களெல்லாரும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல் தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக்கொண்டு, பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள்

எபி 11:14 இப்படி அறிக்கையிடுகிறவர்கள் சுயதேசத்தை நாடிப்போகிறோம் என்று தெரியப்படுத்துகிறார்கள்

எபி 11:15 தாங்கள் விட்டுவந்த தேசத்தை நினைத்தார்களானால் அதற்குத் திரும்பிப் போவதற்கு அவர்களுக்குச் சமயம் கிடைத்திருக்குமே.

எபி 11:16 அதையல்ல, அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள், ஆகையால் தேவன் அவர்களுடைய தேவனென்னப்பட வெட்கப்படுகிறதில்லை அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம் பண்ணினாரே

அடைந்த வாக்குத்தத்தங்கள்

1. பெரிய ஜாதியாவது (ஆதி 12:2)

2. பேரைப் பெருமைப்படுத்துவது (ஆதி 12:2)

3. ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பது (ஆதி 12:3)

4. சபிக்கிறவனைச் சபிப்பது (ஆதி 12:3

5. பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் அவர்களுக்குள் ஆசீர்வதிக்கப்படுவது (ஆதி 12:3; ஆதி 18:18)

11 அதிகாரம்

6. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம் (எபி 11:8; ஆதி 12:1; ஆதி 13:15; ஆதி 15:18; அப் 7:5)

7. எண்ணிறந்த பிள்ளைகள் (எபி 11:12; ஆதி 13:16)

8. அவர்கள் மூலமாக ஜாதிகள் உண்டாவது (ஆதி 17:6,16)

9. அவர்கள் மூலமாக ராஜாக்கள் தோன்றுவது (ஆதி 17:6,16)

10. அவர்கள் பிள்ளைகளோடு உடன்படிக்கை பண்ணப்படுவது (ஆதி 17:7)

11. இஸ்மவேலைப் பெரிய ஜாதியாக்குவது (ஆதி 17:20)

12. அவர்களுடைய சந்ததியார் தேவனை நீதியோடு சேவிப்பது (ஆதி 18:18-19; லூக்கா 1:70-75)

13. அவர்களுடைய சந்ததியார் தேவனைக் கானானில் சேவிப்பது (ஆதி 15:13-14; அப் 7:6-7)

14. ஆபிரகாமின் உடன்படிக்கை முழுவதுமாக நிறைவேறுவது (ஆதி 18:19)

15. அவர்களுடைய சந்ததியார் சத்துருக்களை மேற்கொள்வது (ஆதி 22:17-18; லூக்கா 1:71-74)

16. பரலோக நகரம் (எபி 11:10,16)

17. பரமதேசம் (எபி 11:14-16)

18. புறஜாதியாரின் இரட்சிப்பு (கலா 3:8)

19. ஆவிக்குரிய வித்து (ரோமர் 4:16; ரோமர் 9:8)

20. மேசியாவின் முதலாம் வருகை (கலா 3:16; லூக்கா 1:68-75)

21. மேசியாவின் மரணமும், சாத்தானின் தோல்வியும் (எபி 11:4,17-18; ஆதி 3:15; கலா 3:13-14)

22. மேசியாவின் இரண்டாம் வருகை (எபி 11:5; யூதா 1:14-15)

23. உயிர்த்தெழுதல் (எபி 11:10,16,19; ஏசா 26:19; தானி 12:2)

24. வரப்போகிற நித்திய ஜீவன் (ஆதி 17:8; மத் 8:11; மத் 22:32; லூக்கா 1:55; எபி 11:10-16)

25. நித்திய சுதந்தரம் (கலா 3:17-18,29; எபி 11:10-16; லூக்கா 1:68-75)

தூரத்தில் (afar off) - πόρρωθεν - porrootheen - 4207

வினையடை - தூரத்தில் (from afar) (லூக்கா 17:12)

அணைத்துக்கொள் (embraced) - ἀσπάζομαι - aspazomai - 782

வினைச்சொல் - கரங்களில் அணைத்துக் கொள்ளுதல், வாழ்த்து வந்தனம் செய், விடைபெற்று, உத்தரவு பெறு, கண்டுகொள், சந்தி. அணைத்துக்கொள் "embrace" (எபி 11:13; அப் 20:1); "take leave of" (அப் 21:6); "greet" (ரோமர் 16:3-11; 1கொரி 16:20) "salute (மத் 5:47; மத் 10:12; ரோமர் 16:5-23)

அந்நியர் (stranger) - ξένος - xenos - 3581

பெயரடை - அந்நியமான, புதுமையான, சுயமான "stranger" (எபி 11:13; மத் 25:35-44; மத் 27:7; அப் 17:21; எபே 2:12,19; 3யோவான் 1:5); "strange" (அப் 17:18; எபி 13:9; 1பேதுரு 4:12); "host" (ரோமர் 16:23) - தங்கள் சொந்த தேசத்திற்கு வெளியிலுள்ள ஜனங்கள், பறதேசத்தார்

பரதேசிகள் (pilgrims) παρεπίδημος parepideemos 3927

பெயரடை - பரதேசிகளான, சிதறியிருக்கிற (sojourners, not permanent dwellers, not naturalized) (1பேதுரு 1:1; 1பேதுரு 2:11)

எபிரெயர் - தொகுப்புரை

11 அதிகாரம்

"அறிக்கையிடுகிறவர்கள்" - (எபி 9:24)

சுயதேசம் (native city) πατρίς patris - 3968

பெண்பால் பெயர்ச்சொல் - வளர்ந்த ஊர், தன்னூர், சொந்த ஊர், சுயதேசம் (fatherland; native city) எபி 11:14; மத் 13:54,57; மாற்கு 6:1,4; லூக்கா 4:23-24; யோவான் 4:44

நினைத்துக்கொள் (mindful) - μνημονεύω - mneemoneuoo - 3421

வினைச்சொல் - நினைவுக்கூறு, நினைத்துக்கொள் (to remember; to call to mind) "be mindful of" எபி 11:15; "make mention" எபி 11:22; "remember" (எபி 13:7; யோவான் 15:20; வெளி 2:5; வெளி 3:3)

"தாங்கள் விட்டுவந்த தேசத்தை நினைத்தார்களானால்" - அவர்கள் அந்நியர்களாகவும், பரதேசிகளாகவும் இருக்குமாறு கட்டாயப்படுத்தப்படவில்லை. பரம நகரத்தையோ அல்லது பரம தேசத்தையோ பெறுவதற்குத் தங்களுடைய சுயதேசத்தை விட்டு வெளியேறுமாறும் கட்டாயப்படுத்தப்படவில்லை. அவர்களுக்குச் சுவிசேஷம் இருந்தது. (கலா 3:8) உலகத்தை வெறுத்து, இந்த உலகத்தின் வழிபாடுகளுக்கு விலகியிருந்து, தங்களோடு வாக்குத்தத்தம் பண்ணியிருக்கும் மெய்யான தேவனுக்குக் கீழ்ப்படிந்தால் மட்டுமே தேவனுடைய வாக்குத்தத்தத்தைப் பெற்றுக் கொள்ளும் சிலாக்கியம் அவர்களுக்குக் கிட்டும்.

"அதற்குத் திரும்பிப் போவதற்கு அவர்களுக்குச் சமயங்கிடைத்திருக்குமே" தேவன் எந்தத் தேசத்திலிருந்து அவர்களை வெளியே வருமாறு அழைத்தாரோ அந்தத் தேசத்திற்கு அவர்கள் திரும்பிப் போயிருந்திருக்கலாம். ஆனால் அவர்கள் அவ்வாறு போகாமல் தேவனிடத்தில் உண்மையுள்ளவர்களாக இருந்தார்கள். ஆவிக்குரிய காரியங்களிலும், நித்திய காரியங்களிலும் அவர்கள் விசுவாசம் வைத்திருந்தார்கள். தங்கள் சுயதேசத்தைவிட பரமதேசத்தையே விரும்பினார்கள். (எபி 11:8-16)

விரும்பு (desire) ὀρέγω oregoo 3713

வினைச்சொல் - விரும்பு, இச்சைசெய் (desire) (1தீமோ 3:1; 1தீமோ 6:10)

விசுவாசிகளைக் குறித்த சத்தியங்கள் (எபி 11:13-16)

1 தங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட அனைத்தையும் அவர்கள் பெற்றுக் கொள்ளவில்லை.

2 வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதங்களை அவர்கள் தெளிவாகத் தரிசித்தார்கள்.

3 தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வாக்குத்தத்தம் உண்மையானவை என்று நம்பினார்கள்.

4 எல்லா வாக்குத்தத்தங்களையும் அவர்கள் பற்றிக் கொண்டார்கள்.

5 இந்த உலகத்தில் தாங்கள் பரதேசிகள் என்று அறிக்கையிட்டார்கள்.

6 இந்தப் பூமியில் தாங்கள் அந்நியர் என்று அறிக்கையிட்டார்கள்.

7 தாங்கள் பரமதேசத்தைத் தேடுவதாக அறிவித்தார்கள்.

8 அவர்கள் பூமிக்குரிய காரியங்களில் கவனம் செலுத்தவில்லை.

9 இந்த உலகத்திற்குத் திரும்பிச் செல்ல அவர்களுக்கு விருப்பமில்லை.

10 பரமதேசத்தை விரும்பினார்கள்.

பரம (heavenly) - ἐπουράνιος epouranios 2032

பெயரடை - பரம, வானத்துக்குரிய, உன்னதத்திலுள்ள (எபே 1:3)

11 அதிகாரம்

10. ஆபிரகாம் - சோதிக்கப்பட்ட விசுவாசம் - (ஆதி 22; 1பேதுரு 1:7, யாக் 1:12)

எபி 11:17 மேலும் விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சோதிக்கப்பட்டபோது ஈசாக்கைப் பலியாக ஒப்புக் கொடுத்தான்.

எபி 11:18 ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் என்று அவனோடே சொல்லப்பட்டிருந்ததே. இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்களைப் பெற்றவன் மரித்தோரிலிருந்துமெழுப்ப தேவன் வல்லவராயிருக்கிறாரென்றெண்ணி

எபி 11:19 தனக்கு ஒரேபேறானவனையே பலியாக ஒப்புக்கொடுத்தான்; மரித்தோரிலிருந்து அவனை பாவனையாகத் திரும்பவும் பெற்றுக்கொண்டான்.

ஆபிரகாமின் விசுவாசம்

1 தேவனிடமிருந்து வாக்குத்தத்தங்களைப் பெற்றிருந்தான்

2 தனக்கு ஒரேபேறானவனையே பலியாக ஒப்புக்கொடுத்தான் (எபி 11:19 ஆதி 21:12)

3 மரித்தோரிலிருந்துமெழுப்ப தேவன் வல்லவராயிருக்கிறாரென்றெண்ணினான் (எபி 11:18)

4 மரித்தோரிலிருந்து அவனைப் பாவனையாகத் திரும்பவும் பெற்றுக் கொண்டான் (எபி 11:19)

எபிரெயர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 20

"ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும்" - (எபி 11:18 ஆதி 21:12) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேற்றுு.

"ஒரேபேறானவன்" - தன் மனைவியாகிய சாராள் மூலமாகப் பிறந்தவன் வாக்குத்தத்தத்தின் குமாரன் தன்னுடைய ஆஸ்திக்குச் சுதந்தரவாளி.

"மரித்தோரிலிருந்து அவனைப் பாவனையாகத் திரும்பவும் பெற்றுக் கொண்டான்" - ஆபிரகாமைப் பொறுத்தளவில ஈசாக்கு மரித்துப் போனவன். அவனை மரித்தோரிலிருந்து திரும்பவும் பாவனையாகப் பெற்றுக் கொண்டான்.

பாவனை (figure) - παραβολή - **parabolee** - 3850

பொபால பொச்சொல் - உவமை ஒப்பனை பழமொழி பாவனை (எபி 9:9)

11. ஈசாக்கு - வருங்காரியங்களைக் குறித்த விசுவாசம் - (ஆதி 27:1-40; எபி 11:10, 13-16)

எபி 11:20 விசுவாசத்தினாலே ஈசாக்கு வருங்காரியங்களைக் குறித்து யாக்கோபையும் ஏசாவையும் ஆசீர்வதித்தான்.

"ஈசாக்கு வருங்காரியங்களைக்குறித்து யாக்கோபையும் ஏசாவையும் ஆசீர்வதித்தான்" - பூமிக்குரிய ஆசீர்வாதங்கள் (ஆதி 27:1-40)

12. யாக்கோபு - தீர்க்கதரிசன விசுவாசம் - (ஆதி 48:1-22, 49:1 28)

எபி 11:21 விசுவாசத்தினாலே யாக்கோபு தன் மரணகாலத்தில் யோசேப்பினுடைய குமாரர் இருவரையும் ஆசீர்வதித்து, தன்கோலின் முனையிலே சாய்ந்து தொழுதுகொண்டான்.

"யாக்கோபு தன் மரணகாலத்தில் யோசேப்பினுடைய குமாரர் இருவரையும் ஆசீர்வதித்தான்" சந்ததியின் ஆசீர்வாதம். (ஆதி 48:1 22)

11 அதிகாரம்

13. யோசேப்பு - கட்டளைக் கொடுக்கும் விசுவாசம் - (ஆதி 50:22-26)

எபி 11:22 விசுவாசத்தினாலே யோசேப்பு இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தை விட்டுப் புறப்படுவார்களென்பதைப்பற்றித் தன் அந்தியகாலத்தில் பேசி, தன் எலும்புகளைக்குறித்துக் கட்டளை கொடுத்தான்

"யோசேப்பு......தன் எலும்புகளைக்குறித்துக் கட்டளைகொடுத்தான்" - அதிகாரம். (ஆதி 50:22-26)

14. அம்ராம், யோகெபேத் - பயமில்லாத விசுவாசம் - (யாத் 2:2, 6:20)

எபி 11:23 மோசே பிறந்தபோது அவனுடைய தாய்தகப்பனமார் அவனை அழகுள்ள பிள்ளையென்று கண்டு, விசுவாசத்தினாலே ராஜாவினுடைய கட்டளைக்குப் பயப்படாமல் அவனை மூன்றுமாதம் ஒளித்துவைத்தார்கள்

"மோசே பிறந்தபோது, அவனை மூன்றுமாதம் ஒளித்துவைத்தார்கள்" (யாத் 2:2, யாத் 6:20, அப் 7:20)

அழகுள்ளது (proper) - ἀστεῖος
asteios - 791

பெரண - சவுந்தரிய, அழகுள்ள (pretty) "proper" (எபி 11:23) "fair" (அப் 7:20)

"ராஜாவினுடைய கட்டளைக்குப் பயப்படாமல்" விசுவாசம் தேவனுடைய வார்த்தையினாலே வரும் இவர்கள் தங்களுடைய விசுவாசத்திற்குத் தேவனுடைய வெளிப்பாட்டைப் பெற்றிருக்க வேண்டும். (ரோமர் 10:17)

15. மோசே - தியாகமுள்ள பாடுகளை அனுபவித்து நீடிய பொறுமையோடு இருக்கும் விசுவாசம் - (யாத் 2:11-20 அப் 7:20-34)

எபி 11:24 விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து

எபி 11:25 அநித்தியமான பாவ சந்தோஷங்களை அநுபவிப்பதைப் பார்க்கிலும்தேவனுடையஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டு,

எபி 11:26 இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்து நிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்

எபி 11:27 விசுவாசத்தினாலே அவன் அதரிசனமானவரைத் தரிசிக்கிறதுபோல உறுதியாயிருந்து ராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல் எகிப்தை விட்டுப் போனான்

விசுவாசத்தினாலே மோசே செய்த காரியங்கள்

1. பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்தான்
2. அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டான் (எபி 11:25)
3. எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான் (எபி 11:26)
4. இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்தான் (எபி 11:26)

வெறுத்தல் (refused) - ἀρνέομαι
arneomai - 720

11 அதிகாரம்

வினைச்சொல்-மறுதலி,இல்லையென்று சொல், தெரியாதென்று சொல், வெறு (எபி 11:24; அப் 7:35) deny (மத் 10:33; மத் 27:70-72; 1தீமோ 5:8 2தீமோ 2:12) - பூமியில ராஜாவாக இருப்பதையும் ராஜாவின் குமாரனாக இருப்பதையும் வெறுத்தான பரலோகத்தில அவைகளைப் பெறறுக் கொள்ளலாம் என்று நினைத்தான்

துன்பத்தை அநுபவி (suffer affliction) - συγκακουχέομαι - synkakoucheomai - 4778

வினைச்சொல - துன்பத்தை அநுபவி (to endure ill-treatment, wrong, hurt, injury with another)

"எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்" - வரப்போகிற மேசியாவைப் பற்றி மோசேயிடம ஒரு வெளிப்பாடு இருந்தது. ஆபிரகாமைப போல மோசேயும், மேசியாவின் நாளை நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தான (யோவான 8:56

"ராஜாவின கோபத்துக்குப் பயப்படாமல எகிப்தைவிட்டுப் போனான விசுவாசத்தினாலே மோசே அதரிசன மானவரைத் தரிசிக்கிறது போல உறுதியாயிருந்தான பார்வோனிடத்தில் தேவ வல்லமையைவெளிப்படுத்தி தேவஜனங்களை விடுவித்து எகிப்தை விட்டுப் புறப்பட்டுப் போனான் (யாத் 5:1-14:31) மோசே அதரிசனமான ராஜாவைக் கண்டதினால காணக்கூடிய ராஜாவிற்கு அவன பயப்படவில்லை

16. மோசேயும் இஸ்ரவேலும் பாதுகாக்கும் விசுவாசம் (யாத் 12-14)

எபி 11:28 விசுவாசத்தினாலே முதற்பேறானவைகளைச் சங்கரிக்கிறவன் இஸ்ரவேலரைத் தொடாதபடிக்கு, அவன் பஸ்காவையும் இரத்தம் பூசுதலாகிய நியமத்தையும் ஆசரித்தான்

எபி 11:29 விசுவாசத்தினாலே அவர்கள் சிவந்த சமுத்திரத்தை உலர்ந்த தரையைக் கடந்துபோவதுபோலக் கடந்து போனார்கள் எகிப்தியர் அப்படிச் செய்யத் துணிந்து அமிழ்ந்துபோனார்கள்

"அவன் பஸ்காவையும் இரத்தம் பூசுதலாகிய நியமத்தையும் ஆசரித்தான்" - (யாத் 12)

"அவர்கள் சிவந்த சமுத்திரத்தை உலர்ந்த தரையைக் கடந்துபோவதுபோலக் கடந்து போனார்கள்" - (யாத் 14:15-31 யாத் 15:1-27)

17. யோசுவாவும் இஸ்ரவேலும் - வெற்றி பெறும் விசுவாசம் - (யோசுவா 5:13-6:27)

எபி 11:30 விசுவாசத்தினாலே எரிகோ பட்டணத்தின் மதில்கள் ஏழுநாள் சுற்றிவரப்பட்டு விழுந்தது

"விசுவாசத்தினாலே எரிகோ பட்டணத்தின் மதில்கள் ஏழுநாள் சுற்றிவரப்பட்டு விழுந்தது" - (யோசு 6)

18. ராகாப் - விடுதலை பண்ணும் விசுவாசம் - (யோசுவா 2:12-20 6:25)

எபி 11:31 விசுவாசத்தினாலே ராகாப என்னும் வேசி வேவுகாரரைச் சமாதானத்தோடே ஏற்றுக்கொண்டு, கீழ்ப்படியாதவர்களோடேகூடச் சேதமாகாதிருந்தாள

வேசி (harlot) - πόρνη - pornee - 4204

பெண்பால் பெயர்ச்சொல் - வேசி "harlot" (எபி 11:31, மத் 21:31-32, லூக்கா 15:30; 1கொரி 6:15-16, யாக் 2:25) வெளி 17:5 "whore" (வெளி 17:1,15-16; வெளி 19:2

"விசுவாசத்தினாலே ராகாப் என்னும் வேசி" - (யோசு 2:1,9,11; யோசு 6:23, மத் 1:5, யாக் 2:25)

11 அதிகாரம்

19. விசுவாசத்தினாலே பழைய ஏற்பாட்டு வீரர்கள் செய்த காரியங்கள்

எபி 11:32 பின்னும் நான் என்ன சொல்லுவேன்? கிதியோன், பாராக், சிம்சோன், யெப்தா, தாவீது, சாமுவேல் என்பவர்களையும் தீர்க்கதரிசிகளையுங்குறித்து நான் விவரஞ்சொல்ல வேண்டுமானால் காலம் போதாது.

எபி 11:33 விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள்,

எபி 11:34 அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலன் கொண்டார்கள், யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள்.

எபி 11:35 ஸ்திரீகள் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடே எழுந்திருக்கப்பெற்றார்கள்; வேறுசிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலைபெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள்;

எபி 11:36 வேறு சிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அனுபவித்தார்கள்;

எபி 11:37 கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரிட்சை பார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத்தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அனுபவித்தார்கள்;

எபி 11:38 உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை; அவர்கள் வனாந்தரங்களிலேயும் மலைகளிலேயும் குகைகளிலேயும் பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள்.

"கிதியோன்" - (நியா 6:1-8:35)

"பாராக்" - (நியா 4-5)

"சிம்சோன்" - (நியா 13:1-16:31)

"யெப்தா" - (நியா 11:1-12:7)

"தாவீது" - (1சாமு 17:32-51; 1சாமு 23:2-11)

"சாமுவேல்" - (1சாமு 3:18; 1சாமு 7:3-17; 1சாமு 8:1-3; 1சாமு 12:16-24)

விசுவாசத்தின் கிரியைகள் (எபி 11:33-38)

1 ராஜ்யங்களை ஜெயித்தது (யோசு 12; 2சாமு 8)

2 நீதியை நடப்பித்தது (ஆதி 15:6)

3 வாக்குத்தத்தங்களைப் பெற்றது (எண் 14:30)

4 சிங்கங்களின் வாய்களை அடைத்தது (தானி 6)

5 அக்கினியின் உக்கிரத்தை அவித்தது (தானி 3)

6 பட்டயக்கருக்குக்குத் தப்பித்தது (1சாமு 17; யாத் 18:4)

7 பலவீனத்தில் பலன்கொண்டது (எபி 11:11; ரோமர் 4:19)

8 யுத்தத்தில் வல்லவர்களானார்கள் (2சாமு 23:8-23; 1சாமு 14:13-15; நியா 7)

9 அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள் (1சாமு 17:51)

10 ஸ்திரீகள் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடே எழுந்திருக்கப் பெற்றார்கள் (1இராஜா 17:17-24; 2இராஜா 4:18-37)

11 வாதிக்கப்பட்டார்கள் (ஆதி 39:20; நியா 16:21-31)

12 நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அனுபவித்தார்கள் (எபி 11:36; ஆதி 39:20; எரே 37:16; எரே 38:6; 1இராஜா 22:27)

11 அதிகாரம்

13. கல்லெறியுண்டார்கள் (2நாளா 24.21)

14. வாளால் அறுப்புண்டார்கள் (எபி 11.37

15. பரீட்சைபார்க்கப்பட்டார்கள் (ஆதி 39.1-17)

16. பட்டயத்ினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள் (சாமு 22.18, இராஜா 19.10

17. செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அநுபவித்தா எபி 11.37-38; 2இராஜா 2.8,13)

20. எல்லா பரிசுத்தவான்களும் பூரணராக்கப்படவேண்டும் - 9.15 11.10-16, 13.14

எபி 11.39 இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சிபெற்றும் வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதை அடையாமற்போனார்கள்

எபி 11:40 அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றை தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்

"வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற்போனார்கள்" - இந்த வாக்கியத்தில் வாக்குத்தத்தம் என்பது மேசியாவின் வருகையைக் குறிக்கும் பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டிருக்கும் எல்லா வாக்குத்தத்தங்களின் மொத்தக் கருத்தே மேசியாவின் வருகைதான் (எபி 10.36-37 லூக்கா 1.67-79; ரோமர் 1.2-5) மேசியாவின் வாக்குத்தத்தத்தை பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் சார்ந்திருந்தார்கள் ஆனால் அந்த மேசியா மாம்சத்தில் வந்ததை அவர்களால் காணமுடியவில்லை மீட்பின் கிரியையை மேசியா நிறைவேற்றியதையும் அவர் புதிய உடன்படிக்கையை உண்டாக்கியதையும் அவர் சபையை ஸ்தாபித்ததையும் பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் காணவில்லை

"விசேஷித்த நன்மையான தொன்றை தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்" விசேஷித்த நன்மையானது என்பது புதிய உடன்படிக்கையையும் அதன் மகத்துவத்தையும் குறிக்கும் ஆபேல் நோவா ஆபிரகாம் ஆகியோர் செலுத்திய பலிகள் மெய்யான காரியங்களுக்கு நிழலாயிருப்பவை.

பூரணம் (perfect) - τελειόω - teleiooo - 5048

விணைச்சொல் - முடி, தேறு, நிறைவேற்று பூரணப்படுத்து (பிலி 3.12)

12 அதிகாரம்

21. கிறிஸ்து நமது விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவரு மாயிருக்கிறார்

எபி 12:1 ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும் நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்.

எபி 12:2 அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்.

எபி 12:3 ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்.

எபி 12:4 பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே.

நாம் செய்ய வேண்டிய காரியங்கள்

1 பாரமான யாவற்றையும் தள்ளிவிட வேண்டும் (எபி 12:1)

2 நம்மைச் சுற்றி நெருங்கிநிற்கிற பாவத்தைத் தள்ளிவிட வேண்டும். (எபி 12:1)

3 நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓட வேண்டும். (எபி 12:1)

4 இயேசுவை நோக்கிப் பார்க்க வேண்டும். (எபி 12:1) விசுவாசத்தைத் துவக்குகிறவரும், பரிபூரணப்படுத்துகிறவரும் இயேசு கிறிஸ்துவே. இவரே விசுவாச வீரர்களுக்குத் தலைவராக இருக்கிறவர்

5 இயேசுவை நினைத்துக் கொள்ள வேண்டும். (எபி 12:3) இயேசு கிறிஸ்துவின் ஜீவியம், நடத்தை, பாடுகளை அவர் நீடிய பொறுமையோடு சகித்தது ஆகிய காரியங்களை நினைத்துக் கொள்ள வேண்டும்.

பாரம் (weight) - ογκος - onkos - 3591

ஆண்பால் பெயர்ச்சொல் - பாரம் (bulk; mass; heap; weight) - முரட்டுக் குணம், துன்மார்க்கம், எமாற்றுத்தனம் ஆகிய துர்குணங்களையும் இந்த வாக்கியம் குறிக்கும் ஆவிக்குரிய முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கும் பாரமான எந்தக் காரியத்தையும் தள்ளிவிட வேண்டுமென்பது பவுலின் கருத்து

பாவம் (sin) - ἁμαρτία - hamartia - 266

பெண்பால் வினைப்பெயர் - பாவம், தோல்வி missing the mark in a moral sense (யோவான் 1:29)

(அ) பாவம் செய்தல் (1கொரி 15:17)

(ஆ) பாவத்தில் மூழ்கியிருத்தல், எப்பொழுதும் பாவத்தில் இருத்தல் (யோவா 1:21), (ரோம 3:9)

ஓட்டம் (race) - ἀγών - agoon - 73

ஆண்பால் பெயர்ச்சொல் (fight, conflict) (பிலி 1:30) "race" (எபி 12:1); "fight" (1தீமோ 6:12, 2தீமோ 4:7); "contention" (1தெச 2:2); "conflict" (பிலி 1:30; கொலோ 2:1)

12 அதிகாரம்

(அ) விளையாட்டுப்போட்டி, ஓட்டம்

ஆ) கிறிஸ்தவ வாழ்க்கையின் போராட்டம் பிலி 1:30

(இ) ஆர்வத்தினால் ஏற்படும் மனப்போராட்டம் 2 கொலோ 2:1

பழைய ஏற்பாட்டு விசுவாச வீரர்களைவிட கிறிஸ்து மேலானவர்

1 சர்வத்தையும் சிருஷ்டித்தவர் (எபி 1:2 எபி 11:3

2 விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாக இருக்கிறார் (எபி 12:1-2

3 அவர்களுடைய இரட்சகர் (எபி 12:2 எபி 10:1-18

4 அவர்கள் நோக்கிப் பார்த்து விசுவாசித்தவர் (எபி 11:4-40)

"அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தினிமித்தம்" பிதாவின் சித்தத்தின்படி இயேசு கிறிஸ்து கிரியை செய்தார் இதனால் மனுக்குலத்திற்கு இரட்சிப்பு உண்டாகும் இந்த சந்தோஷத்தை இயேசு நோக்கிப் பார்த்தார் (சங் 40:6)

"தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்" - (மாற்கு 16:19; அப் 2:34; ரோமர் 8:34 எபே 1:20, கொலோ 3:1 எபி 1:3; எபி 8:1 பேதுரு 3:22)

"பாவத்திற்குவிரோதமாயப்போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக" பாவத்திற்கு விரோதமான போராட்டத்தில் இரத்தஞ் சிந்துவதற்கு அவர்கள் அழைக்கப்படவில்லை

XIII. எச்சரிப்புக்களும் புத்திமதிகளும் - 12:5-13:23

1. தகப்பனுடைய சிட்சை - கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணக் கூடாது - (நீதி 3:11)

எபி 12:5 அன்றியும்: என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்துகொள்ளப்படும் போது சோர்ந்துபோகாதே.

எபி 12:6 கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள்

"என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்து கொள்ளப்படும் போது சோர்ந்து போகாதே - நீதி 3:11-12 ஆவது வசனங்கள் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

சிட்சை (chastening) - παιδεία - paideia - 3809

பெண்பால் பெயர்ச்சொல் - போதனை, பயிற்சிகுதல், சிட்சை (child training) (எபே 6:4

கடிந்துகொள்ளப்படுதல் (rebuked) - ἐλέγχω - elenchoo - (65)

வினைச்சொல் - குற்றத்தையுணர்த்து, கடிந்துகொள், கண்டி, கண்டனம் பண்ணுதல்கூடம் உண்டாக்கு, தீர்க்கப்படு(convict) (யோவான் 16:8

"சிட்சிப்பு" (chastening) தேவன் வியாதியின் மூலமாகத்தான் சிட்சிப்பார் என்று ஒருசில விசுவாசிகள் நினைக்கிறார்கள் தங்களுக்கு வியாதி வரும்போது தங்களைத் தேவன் சிட்சிக்கிறார் என்று நினைக்கிறார்கள் ஆனாலும் தாங்கள் செய்த தவறு என்ன என்பது அவர்களுக்குத் தெரிவதில்லை தேவன் ஒரு தனி நபருக்கோ அல்லது ஒரு தேசத்திற்கோ ஒரு வாதையை அனுப்பி, சிட்சிக்கிறார் வாதையை அனுப்புவதற்கு முன்பாக மனுஷரைத் தண்டிக்காமலேயே சிட்சிக்கும் உபாயங்களை முதலாவது பயன்படுத்துவார் இதில் ஒன்றும் பலனளிக்கவில்லையென்றால், தேவன் மனுஷரைச் சிட்சித்துத் திருத்துகிறார் (லேவி 26, உபா 28 யோபுவின் புஸ்தகத்தில் வியாதிக்குப் பல காரணங்களை நாம் வாசிக்கிறோம். (யோபு 33:14-29)

எபிரெயர் - தொகுப்புரை

12 அதிகாரம்

தன்னைத் தேவன் சிட்சிக்கிறார் என்று ஒரு விசுவாசி கூறும்போது தன்னை அவர் பலமுறை எச்சரித்தார் நான் அவருக்குக் கீழ்ப்படியவே இல்லையென்பதை அந்த விசுவாசி அங்கீகரிக்க வேண்டும் (யோபு 33) சிட்சிக்கப்படுகிறவன் தன்னுடைய பாவத்தை முதலாவது அங்கீகரிக்க வேண்டும் கீழ்ப்படிகிற பிள்ளைகளின்மீது தேவன் வாதையை அனுப்புவதில்லை சுகமாகும் வாக்குத் தத்தங்களும் வாதையிலிருந்து பாதுகாப்பும் தேவனிடமிருந்து வருகிறது. (யாத் 15:26; சங் 91, சங் 103:3; மத் 7:9-11; மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24, யோவான் 14:12-15; யோவான் 15:7,16 1பேதுரு 2:24; 2யோவான் 1:2; யாக் 5:14-16) பாவத்தை விதைக்கிறவர்கள் அநியாயத்தை அறுப்பார்கள் தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணுகிறவர்கள் சபிக்கப்படுவார்கள் (கலா 6:7-8; யோபு 33:14-29; லேவி 26, உபா 28)

விசுவாசிகள் தங்களுடைய சரீரங்களைச் சரியாகப் பராமரிக்கவில்லையென்றால் அவர்களுக்கு வியாதிகள் வருவதற்கு வாய்ப்புகள் உள்ளது. தேவனுடைய வாக்குத்தத்தங்களைப் பற்றிக் கொண்டு சாத்தானுக்கு எதிர்த்து நிற்கவில்லையென்றால், சாத்தானின் சோதனை வருவதற்கு வாய்ப்புள்ளது. (யாக் 4:7 1பேதுரு 5:7-9, எபே 4:27; எபே 6:10-18)

தமக்குக் கீழ்ப்படிகிற பிள்ளைகளின்மீது தேவன் வியாதியை அனுப்பமாட்டார் (யோவான் 10:10, யோவான் 13:16; அப் 10:38) யோபுவைப் போல வியாதி வரும்போது கடைசி வரையிலும் தேவனை விசுவாசத்தோடு பற்றிக் கொண்டு சுகமாதலையும். தேவஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டும். (யோபு 42:10; யாக் 5:10-11)

நம்முடைய உலகப் பிரகாரமான பெற்றோர் நம்மைச் சிட்சிப்பதற்காக நமக்குப் புற்றுநோயையும், கொள்ளைநோயையும் தீராத வியாதிகளையும் தருவார்களா? அப்படி தந்தால், அவர்களுக்குத் தங்கள் பிள்ளைகளின்மீது அன்புள்ளது என்று யாராவது கூறமுடியுமா? தேவன் நம்மிடத்தில் அன்பாக இருக்கிறார் அவர் நம்மைச் சிட்சித்தாலும், அது அன்பு கலந்த சிட்சையாகவே இருக்கும். (மத் 7:7-11 லூக்கா 11:9-13)

தேவன் ஏன் எப்போது சிட்சிக்கிறார்

1 தேவனுடைய சப்தத்திற்குச் செவிகொடுக்க ஜனங்கள் மறுக்கும்போது (யோபு 33)

2 மனுஷர் அக்கிரமம் செய்யும்போது (2சாமு 7:14)

3 மனுஷர் தேவனைக் கோபப்படுத்தும்போது (சங் 6:1; சங் 38:1)

4 மனுஷர் தேவனை மறுதலிக்கும்போது (சங் 89:30-32)

5 ஜனங்கள் தங்களை நிதானித்தறியாமல் இருக்கும்போது (1கொரி 11:32)

6 மனுஷர் தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணும்போது (உபா 28; லேவி 26:14-39; எண் 14)

7 மனுஷர் தங்கள் மாம்சத்திற்கேதுவாக விதைக்கும்போது (கலா 6:7-8)

8 தம்முடைய பிள்ளைகளுக்குச் சிட்சையும், படிப்பும் தேவைப்படும்போது (எபி 12:5-10; வெளி 3:19)

இரண்டு விதமான சிட்சிப்புக்கள்

1 பிள்ளைகளைத் தண்டித்து பயிற்சி கொடுத்தல்

2 கலகக்காரர்களைமீது தண்டனை

பிள்ளைகளைச் சிட்சிப்பது

1 எதிர்பேசுகிறவர்களுக்கு உபதேசம் (2தீமோ 2:25)

2 சாத்தானிடம் ஒப்புக்கொடுக்கப் படுவதினால் தேவனைத் தூஷியாமலிருக்க கற்றுக் கொள்கிறார்கள் (1தீமோ 1:20, 1கொரி 5:5)

3 கல்விசாலையில் அல்லது தனியாக ஓர் உபாத்தியின் மூலமாகக் கல்வி பயிற்றுவிப்பது. (அப் 7:22 அப் 22:3)

4 கிருபை ஜனங்களுக்குப் போதிக்கிறது. (தீத்து 2:12)

எபிரெயர் – தொகுப்புரை

12 அதிகாரம்

5. நீதியின் வழிகளில் விசுவாசிகள் பயிற்றுவிக்கப்படுகிறார்கள் (எபி 12:5-11; 1கொரி 11:32; வெளி 3:19)

6. சுவிசேஷத்தினிமித்தமாக வரும் உபத்திரவங்களினால் விசுவாசிகள் அதிகமாகக் கற்றுக் கொள்கிறார்கள் (2கொரி 6:9)

7. இயேசு கிறிஸ்து பாவிகளில் ஒருவராக எண்ணப்பட்டு தண்டிக்கப்பட்டார் (லூக்கா 23:16,22)

கலகக்காரர்கள்மீது தண்டனை

மனுஷன் விதைத்ததை அறுப்பான். தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணுகிறவர்களுக்குச் சாபம் வரும். தேவன் கலகக்காரர்கள் மத்தியில் வாதைகளை அனுப்புவார் (லேவி 26)

1. பயங்கரம், இழப்பு, வேதனை (எபி 2:16)
2. மரணம், பயம், ஒடுக்கப்படுதல் (எபி 12:17)
3. தாழ்த்தப்படுவதும், ஏழ்மையும் (எபி 12:18)
4. பலவீனமும், விளைச்சல் இல்லாமையும் (எபி 12:20)
5. மிருகங்கள் மனுஷனையும் கால்நடைகளையும் கொன்றுபோடுதல் (எபி 12:22)
6. யுத்தங்கள், கொள்ளைநோய்கள், யுத்தத்தில் தோல்வி, பஞ்சங்கள் முதலியவை (எபி 12:25,26)
7. நரமாம்சம் உண்பதும், பட்டணங்களின் அழிவும் (எபி 12:29-31; உபா 11:2-6; உபா 28:1-64)

தண்டித்தல் (correction) - παιδεύω - paideuoo - 3811

வினைச்சொல் - தண்டி, கற்பிக்கப்படு, போதிக்கப்படு, உபதேசி (child training)

சிட்சிக்கும் வழிகள்

1. யுத்தங்கள் (Wars) (2சாமு 7:14; லேவி 26:28-40; ஓசி 10:10; எரே 30:14)
2. அடித்தல் (Whipping) (உபா 8:5; உபா 21:18; நீதி 13:24; நீதி 19:18)
3. உபவாசித்தல் (Fasting) (சங் 69:10; தானி 10:2-12)
4. உபத்திரவங்கள் (Persecutions) (2கொரி 6:9; 2கொரி 11:23-30)
5. பஞ்சம் (Famine) (லேவி 26:28-29)
6. அபராதங்கள் (Fines) (உபா 22:18-19)
7. சிறையிருப்பு (Captivity) (ஓசி 7:12)
8. தண்டித்தல் (Scourging) (லூக்கா 23:16,22; 1இராஜா 12:11,14; 2நாளா 10:11,14)
9. நியாயத்தீர்ப்புகள் (Judgments) (உபா 11:2; ஏசா 53:5)
10. பாவிகள்மீது வியாதி (Sickness on sinners) (யோபு 33:14-30)

தண்டித்தல் (scourgeth) - μαστιγόω - mastigooo - 3146

வினைச்சொல் - வாரினால் அடி, தண்டி (to whip; flog; beat) "scourge" (மத் 10:17; மத் 20:19; மத் 23:34; மாற்கு 10:34; லூக்கா 18:33; யோவான் 19:1; எபி 12:6)

2. தகப்பன் சிட்சிக்கும்போது நாம் புத்திரர் என்பது உறுதியாயிருக்கிறது - (1கொரி 11:31,32; வெளி 3:19)

எபி 12:7 நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ?

12 அதிகாரம்

எபி 12:8 எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப் பிள்ளைகளாயிருப்பீர்களே

"எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை" - வியாதி மட்டுமே சிட்சை என்று முடிவு பண்ணி விடக்கூடாது.

3. தேவனுக்கு கீழ்ப்படிவதின் ஞானம்

எபி 12:9 அன்றியும், நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும் போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்கவேண்டுமல்லவா?

"நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்கவேண்டுமல்லவா?" சிட்சிக்கப்படுவதன் உண்மையான நோக்கம் தேவனுடைய சித்தத்தைத் தேவனுடைய வார்த்தையின் மூலமாகவும் பரிசுத்த ஆவியானவர் மூலமாகவும் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதுதான் நாம் ஆவியில் ஜீவித்து ஆவியானவரால் உபதேசிக்கப்பட்டு அனுதினமும் வழிநடத்தப்பட வேண்டும் நாம் தேவனுடைய சித்தத்திற்கு ஏற்ற பிரகாரமாக ஜீவிக்க வேண்டும். (யோவான் 14:16-17,26 யோவான் 15:26, யோவான் 16:7-15; ரோமர் 6:16-23; ரோமர் 8:1-26; 1யோவான் 1:7 கலா 6:7 8

"ஆவிகளின் பிதா" (the Father of spirits) - (எண் 16:22; யோபு 33:4; பிர 12:7, ஏசா 42:5, சக 12:1, எபி 12:23)

4. தற்காலத்திலும் பிற்காலத்திலும் சிட்சையினால் ஏற்படும் விளைவு - (பிலி 2:13

எபி 12:10 அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சக் காலம் சிட்சித்தார்கள்; இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார்

எபி 12:11 எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாயக் காணாமல் துக்கமாயக் காணும் ஆகிலும் பிறகாலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்.

"அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சக் காலம் சிட்சித்தார்கள்" - ஆனால் தேவனோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார் சிட்சிப்பதினால தேவன் நம்மீது அன்பாக இல்லை என்று பொருள் கூறக்கூடாது. (மத் 7:7-11) சிட்சிக்கும் காரியத்தில் தேவன் மனுஷரைவிட நியாயமாக நடந்து கொள்கிறவர்

சரீரத்தின் தகப்பன்மார்களைவிட கிறிஸ்து மேலானவர்

1 மனுஷரைவிட கிறிஸ்து அவமானத்தை எண்ணாமல சகித்தார் (எபி 12:3)

2 நமக்கு நன்மை வரவேண்டு மென்பதற்காக கிறிஸ்து சிட்சிக்கிறார் (எபி 12:10)

3 ஏசாவைப் போல தேவன சீர்கெட்டவர் அல்ல. (எபி 12:16-17)

4 தேவனிடத்தில சேரும் நல்ல வழியை உண்டுபண்ணியிருக்கிறார் (எபி 12:18 24)

5 நல்ல உடன்படிக்கையை உண்டு பண்ணியிருக்கிறார் (எபி 12:24

6 நல்ல பாவநிவாரண பலியைச் செலுத்தியிருக்கிறார் எபி 12:24

7 பரலோகத்திலிருந்து பேசுகிறார் (எபி 12:25-29)

8 நமக்கு ஒரு ராஜ்யத்தைத் தருகிறார் (எபி 12:28)

9 இயேசு கிறிஸ்து மாறாதவராய் இருக்கிறார் (எபி 13:8)

10 நம்மைப் பரிசுத்தப்படுத்துகிறார் (எபி 13:12 13)

12 அதிகாரம்

11 நன்மைக்கும், துதிக்கும் வழியாக இருக்கிறார் (எபி 13:15-16)

12 நல்ல மேய்ப்பராகவும், பரிபூரணத்தின் ஆதாரமாகவும் இருக்கிறார் (எபி 13:20-21)

"தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு" - தேவன் தம்முடைய பிள்ளைகளைச் சிட்சிப்பதன் நோக்கம் இதுதான்

"தம்முடைய பரிசுத்தம்" - இது மனுஷருடைய பரிசுத்தத்தைப் போன்றதல்ல. மனுஷன் தன்னை அழகுபடுத்தி தன்னுடைய வெளித் தோற்றத்தினால் பெருமையையும் மாயமான தாழ்மையையும் வெளிப்படுத்தி விசுவாசிகள் மத்தியிலே பிரிவினையை ஏற்படுத்துகிறான். தேவன் உள்ளான பரிசுத்தத்தை வலியுறுத்துகிறார். மனுஷனோ வெளி வேஷத்திற்கு முக்கியத்துவம் தருகிறான் (1சாமு 16:7)

"எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாயக் காணாமல் துக்கமாயக் காணும்" - சிட்சை ஒருபோதும் சந்தோஷமானதல்ல. ஆனாலும் சிட்சையின் மூலமாகத்தான் கீழ்ப்படிகிற ஒழுக்கமான பிள்ளைகள் உருவாக்கப்படுகிறார்கள்

5. தேவனை விட்டு விலகுவதால் ஏற்படும் மாற்றங்கள் - (6:4-6, 10:26-29)

எபி 12:12 ஆகையினால் நெகிழ்ந்த கைகளையும் தளர்ந்த முழங்கால்களையும் நீங்கள் திரும்ப நிமிர்த்தி,

எபி 12:13 முடமாயிருக்கிறது பிசகிப் போகாமல் சொஸ்தமாகும்படிக்கு உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப்படுத்துங்கள்.

எபி 12:14 யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்த முள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே.

எபி 12:15 ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்துபோகாதபடிக்கும், யாதொரு கசப்பான வேர் முளைத்துத் தொடுமயிக் கலக்க முண்டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்படாதபடிக்கும்

விசுவாசிகளுக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1 நெகிழ்ந்த கைகளைத் திரும்ப நிமிர்த்துங்கள் (எபி 12:12)

2 தளர்ந்த முழங்கால்களைத் திரும்ப நிமிர்த்துங்கள்

3 உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப்படுத்துங்கள் (எபி 12:13)

4 முடமாயிருக்கிறது பிசகிப்போகாமல் சொஸ்தப்படுத்துங்கள்

5 யாவரோடும் சமாதானமாயிருக்க நாடுங்கள் (எபி 12:14)

6 பரிசுத்தமுள்ளவர்களாயிருக்க நாடுங்கள்

7 ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்து போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் (எபி 12:15, கலா 5:4)

8 யாதொரு கசப்பான வேர் முளைத்துத் தொடுமயிக் கலக்கமுண்டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் (எபி 12:15)

9 ஏசாவைப் போலச் சீர்கெட்டவனாக இராதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் (எபி 12:16)

10 ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ள விரும்பியும் ஆகாதவனென்று தள்ளப் படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் (எபி 12:16-17)

நிமிர்த்துதல் (lift up) - ἀνορθόω - anorthooo (461)

வினைச்சொல் - நிமிர், எடுப்பி (to set upright again; restore, to set straight again) "lift up" (எபி 12:12); "set up" (அப் 15:16), "make straight" (லூக்கா 13:13)

12 அதிகாரம்

"நெகிழ்ந்த கைகளையும் தளர்ந்த முழங்கால்களையும் நீங்கள் திரும்ப நிமிர்த்தி........" ஏசா 35:3 ஆவது வசனம் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

தளர்ந்தது (feeble) - παραλύω paralyoo - 3886

வினைச்சொல் - திமிர்வாதக்காரனாயிரு (palsied, elsewhere) (லூக்கா 5:18,24; அப் 8:7; அப் 9:33) - தைரியமாக இருந்து இறுதி வரையில் நம்முடைய இரட்சிப்பைக் காத்துக் கொள்ள வேண்டும். (எபி 12:12-15)

"உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப்படுத்துங்கள் - முடமாயிருக்கிறது பிசகிப்போகாமல் சொஸ்தமாக வேண்டும். கரடுமுரடான வழிகளில் சென்று காலபிசகி முடமாகிவிடக்கூடாது. நமது இலக்கை அடைவதற்காக நாம் செல்ல வேண்டிய வழிகளைச் செவ்வை பண்ண வேண்டும். நாம் சரியான பாதையில் சென்று காலபிசகினால் கர்த்தர் நம்மை நிச்சயமாகக் குணப்படுத்துவார்

நாடுதல் (to pursue) - διώκω - diookoo - 1377

வினைச்சொல் - துன்பப்படுத்து (to pursue; chase; seek after; follow closely) (பிலி 3:12)

"பரிசுத்தம்" (holiness) - (1தெச 4:3)

இழந்துபோதல் (fail) - ὑστερέω - hystereoo - 5302

வினைச்சொல் - குறைவாயிரு, அற்றவர்களாயிரு, இழந்துபோ (to come late for) "fail", "fall from" (எபி 12:15); "be behind" (2கொரி 11:5, 2கொரி 12:11); "come short of" (எபி 4:1); "lack" (மத் 19:20, மாற்கு 10:21; லூக்கா 22:35); "want" (யோவான் 2:3); "part which lacked" (1கொரி 12:24); "comebehind" (1கொரி 1:7; "come short of" (ரோமர் 3:23) "be destitute" (எபி 11:37); "be in want" (லூக்கா 15:14; 2கொரி 11:9); "suffer need" (பிலி 4:12) "be the worse" (1கொரி 8:8)

பவுல் விசுவாசிகளையே எச்சரிக்கிறார் என்பதற்குச் சான்றுகள்

1 மேகம்போன்ற விசுவாச வீரர்களின் சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்கிறது அவர்களுடைய விசுவாசத்தை நாம் பின்பற்றி ஜீவிக்க வேண்டும். (எபி 12:1)

2 பாரமான யாவற்றையும் தள்ளிவிட வேண்டும். (எபி 12:1)

3 நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தைத் தள்ளிவிட வேண்டும் (எபி 12:1)

4 நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிற விசுவாச ஓட்டத்தில் பொறுமையோடு ஓட வேண்டும்.

5 நமதுவிசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கிப் பார்க்க வேண்டும் (எபி 12:2-4)

6 கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணக்கூடாது. தம்முடைய பரிசுத்தத்திற்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்திற்காகவே தேவன் தம்முடைய சொந்த பிள்ளைகளைச் சிட்சிப்பதுபோல நம்மைச் சிட்சிக்கிறார் (எபி 12:5-11)

7 தேவனுடைய கிருபையை இழந்து போகாதபடிக்கு நாம் சமாதானத்தோடும், பரிசுத்தத்தோடும் ஜீவிக்க வேண்டும். (எபி 12:12-17)

8 எபிரெயர் நிருபம் முழுவதும் விசுவாசிகளுக்கேஎழுதப்பட்டிருக்கிறது.

12 அதிகாரம்

எபிரெயர் நிருபம் விசுவாசிகளுக்கு எழுதப்பட்டிருக்கிறது என்பதற்குச் சான்றுகள்

1 நாம் - விசுவாசிகள் (எபி 2:3; எபி 3:6,14; எபி 4:14; எபி 6:9,19; எபி 10:10,26; எபி 12:1; எபி 13:10,24)

2 கூடவோம் (Let us) - விசுவாசிகளாகிய நாம் (எபி 4:1,11,14,16; எபி 6:1; எபி 10:22,23,24; எபி 12:1,28; எபி 13:13,15)

3 அவர்களுடைய இரட்சிப்பு (எபி 2:10)

4 பரிசுத்தம் செய்யப்படுகிறவர்கள் (எபி 2:11; எபி 10:10,29)

5 பரிசுத்த சகோதரர் (எபி 2:11-12; எபி 3:1,12; எபி 10:19)

6 யாவரையும் - பரிசுத்தவான்கள் (எபி 2:15,18)

7 எபிரெயர் நிருபத்தில் கூறப்பட்டிருக்கும் உபதேசங்கள் விசுவாசிகளுக்கே உரியவை. அவர்கள் பூதமார்க்கத்திலிருந்தோ புறஜாதி மார்க்கத்திலிருந்தோ இரட்சிக்கப் பட்டிருக்கலாம்

கசப்பு (bitterness) - πικρία - tiktoo - 5088

வினைச்சொல் - பெறு, பிறந்திரு பிரசவகாலம் நேரிடு (எபி 12:15; அப் 8:23; ரோமர் 3:14; எபே 4:31)

6. ஏசாவைக் குறித்த எச்சரிப்பு - (ஆதி 25:27-34; 27:1-46; மல் 1:1-5)

எபி 12:16 ஒருவனும் வேசிக்கள்ளனாகவும், ஒருவேளை போஜனத்துக்காகத் தன் சேஷ்டபுத்திர பாகத்தை விற்றுப்போட்ட ஏசாவைப் போலச் சீர்கெட்டவனாகவும் இராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்

எபி 12:17 ஏனென்றால், பிற்பாடு அவன் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ள விரும்பியும் ஆகாதவனென்று தள்ளப் பட்டதை அறிவீர்கள்; அவன் கண்ணீர்விட்டு, கவலையோடே தேடியும் மனம் மாறுதலைக் காணாமற்போனான்

எச்சரிக்கையாயிருத்தல் (Looking) - ἐπισκοπέω - episkopeoo - 1983

வினைச்சொல் - எச்சரிக்கையாயிரு, மேய் (to look at; inspect; examine; pay regard to) (1பேதுரு 5:2)

வேசிக்கள்ளன் (fornicator) - πόρνος - pornos - 4205

ஆண்பால் பெயர்ச்சொல் - விபசாரக்காரர், வேசிக்கள்ளர் (male prostitute)

சீர்கெட்டவன் (profane) - βέβηλος - bebeelos - 952

பெயரடை - சீர்கெட்ட, சீர்கேடான (a despiser of sacred things; an irreligious man) (எபி 12:16; 1தீமோ 1:9; 1தீமோ 4:7; 1தீமோ 6:20; 2தீமோ 2:16)

"சேஷ்டபுத்திர பாகம்" (birthright) - (ஆதி 25:33)

"அவன் கண்ணீர்விட்டு, கவலையோடே தேடியும் மனம் மாறுதலைக் காணாமற் போனான்" தன்னுடைய தகப்பனின் மனதை மாற்றுவதற்கு முயற்சி பண்ணினான் ஆனால் முடியவில்லை

7. விசுவாசிகள் சீனாய்மலைக்கும் அடிமைப்பிரமாணத்திற்கும் வந்து சேரவில்லை

எபி 12:18 அன்றியும், தொடக்கூடியதும், அக்கினி பற்றி எரிகிறதுமான மலையினிடத்திற்கும், மந்தாரம் இருள் பெருங்காற்று ஆகிய இவைகளினிடத்திற்கும்,

12 அதிகாரம்

எபி 12:19 எக்காள முழக்கத்தினிடத்திற்கும், வார்த்தைகளுடைய சத்தத்தினிடத்திற்கும் நீங்கள் வந்து சேரவில்லை; அந்தச் சத்தத்தைக் கேட்டவர்கள் பின்னும் தங்களுக்கு வார்த்தை சொல்லப்படாதபடிக்கு வேண்டிக் கொண்டார்கள்

எபி 12:20 ஏனெனில் ஒரு மிருகமாகிலும் மலையைத் தொட்டால் அது கல்லெறியுண்டு, அல்லது அம்பினால் எய்யுண்டு சாகவேண்டுமென்று சொல்லப்பட்ட கட்டளையைச் சகிக்க மாட்டாதிருந்தார்கள்

எபி 12:21 மோசேயும், நான் மிகவும் பயந்து நடுங்குகிறேன் என்று சொல்லத்தக்கதாக அந்தக் காட்சி அவ்வளவு பயங்கரமாயிருந்தது.

சீனாய் மலையைப் பற்றிய காரியங்கள்

1 தொடக்கூடாதது (எபி 12:18; யாத் 19:12)

2 அக்கினி பற்றியெரிகிறது (எபி 12:18; யாத் 19:18)

3 மந்தாரம் நிறைந்தது

4 இருள் நிறைந்தது (எபி 12:18; உபா 4:11)

5 பெருங்காற்று நிறைந்தது (எபி 12:18 யாத் 19:16)

6 எக்காளமுழக்கம் நிறைந்தது (எபி 12:19, யாத் 19:19)

7 தேவனுடைய வார்த்தைகள் நிறைந்தது எபி 12:19, உபா 4:12; உபா 5:4

8 சீனாய் மலையைப் பற்றிக் கூறப்பட்ட கட்டளைகளை இஸ்ரவேலர்கள் சகிக்க மாட்டாதிருந்தார்கள் (எபி 12:19-20 உபா 5:23-26)

9 சீனாய் மலையை யார் தொட்டாலும் அவர்கள் சாகவேண்டும். (எபி 12:20; யாத் 19:12-21)

10 சீனாய் மலையைப் பற்றிய காட்சி மிகவும் பயங்கரமாக இருந்தது (எபி 12:21)

8. விசுவாசிகள் தேவனுடைய திருச்சபையினிடத்தில் வந்து சேர்ந்திருக்கிறார்கள்

எபி 12:22 நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும் ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும்

எபி 12:23 பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும் பூரணமாக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும்

எபி 12:24 புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும் ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப் பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்

பரலோகத்திலுள்ள காரியங்கள்

1 பரலோக சீயோன் மலை (எபி 12:22, ரோமர் 11:26; வெளி 14:1)

2 தேவனுடைய நகரம் (எபி 12:22, எபி 11:10,16; எபி 13:14 வெளி 3:12 வெளி 21:1-27; வெளி 22:1-5 யோவான் 14:)

3 ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்கள் (எபி 12:22, எபி 1:5-14; வெளி 5:11-14)

4 பரலோகத்திலே பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபை (எபி 12:23 கொலோ 1:18)

5 யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவன் (எபி 12:23)

6 பூரணமாக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகள் (எபி 12:23; வெளி 6:9-11)

12 அதிகாரம்

7 புது உடன்படிக்கையின் மத்தியஸ்தரான இயேசு. (எபி 12:24, மத் 26:28; எபி 9:15)

8 இயேசு கிறிஸ்துவின் இரத்தம் (எபி 12:24; மத் 26:28; கொலோ 1:20; 1பேதுரு 1:18-23)

"பூரணமாக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகள்" - மனுஷருடைய ஆத்துமா மரிப்பதில்லை என்பதற்கு இந்த வசனமும் ஒரு சான்றாகும். (1பேதுரு 3:4)

"ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப் பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தம்" - பேதுரு 1:2 ஆபேலின் இரத்தத்தைவிட இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நன்மையானவைகளைப் பேசும். (எபி 11:4)

9. கலகம் பண்ணுவதற்கெதிரான எச்சரிப்பு (12:25)

எபி 12:25 பேசுகிறவருக்கு நீங்கள் செவிகொடுக்கமாட்டோமென்று விலகாதபடி எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில், பூமியிலே பேசினவருக்குச் செவிகொடுக்கமாட்டோமென்று விலகினவர்கள் தப்பிப்போகாமலிருக்க, பரலோகத்திலிருந்து பேசுகிறவரை நாம் விட்டுவிலகினால் எப்படித் தப்பிப்போவோம்?

எச்சரிக்கையாயிருத்தல் (See) **βλέπω** - **blepoo** 991

விளைச்சொல் - பார், பார்வையளி, காண், தரிசி, அறிந்திரு, எச்சரிக்கையாயிரு, நோக்கு, தரிசனங் காண் (take heed) - பரலோகத்திலிருந்து பேசும் இயேசு கிறிஸ்துவின் சத்தத்திற்குச் செவி கொடுப்பதில் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். (எபி 12:24-25; எபி 1:1-2)

விலகுதல் (turn away) **ἀποστρέφω** **apostrephoo** 654

விளைச்சொல் - முகங்கோணு, திரும்ப, தூண்டிவிடு, விலக்கு (to turn back; to turn oneself away) **"turn away from"** (எபி 12:25; மத் 5:42; அப 3:26; ரோமர் 11:26 2தீமோ 1:15; 2தீமோ 4:4; தீத்து 1:14 ; **"pervert"** (லூக்கா 23:14); **"put up again"** (மத் 26:52); **"bring again"** (மத் 27:3)

10. வானங்களும் பூமியும் வருங் காலத்தில் புதுப்பிக்கப்படும் - (2பேதுரு 3:10-13; எபி 1:10-12 ரோமர் 8:21; வெளி 21)

எபி 12:26 அவருடைய சத்தம் அப்பொழுது பூமியை அசையப்பண்ணிற்று; இன்னும் ஒருதரம் நான் பூமியைமாத்திரமல்ல, வானத்தையும் அசையப்பண்ணுவேன் என்று இப்பொழுது வாக்குத்தத்தஞ் செய்திருக்கிறார்.

எபி 12:27 இன்னும் ஒருதரம் என்கிற சொல்லானது, அசையாதவைகள் நிலைத்திருக்கத்தக்கதாக, அசைவுள்ளவைகள் உண்டாக்கப்பட்டவைகள் போல மாறிப்போம் என்பதைக் குறிக்கிறது.

எபி 12:28 ஆதலால், அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக்கொள்ளக்கடவோம்.

எபி 12:29 நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே.

"அவருடைய சத்தம் அப்பொழுது பூமியை அசையப்பண்ணிற்று" - சீனாய் மலையில் நியாயப் பிரமாணத்தைக் குறித்து பேசிய தேவனுடைய சத்தம். (எபி 1:1-2

எபிரெயர் நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 27

"இன்னும் ஒருதரம் நான் பூமியை மாத்திரமல்ல வானத்தையும் அசையப் பண்ணுவேன்" (எபி 12:26 ஆகாய 2:6) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

12 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 2

"இன்னும் ஒருதரம் என்கிற சொல்லானது அசையாதவைகள் நிலைத்திருக்கத்தக்கதாக அசைவுள்ளவைகள் உண்டாக்கப்பட்டவைகள் போல மாறிப்போம் என்பதைக் குறிக்கிறது......." (எபி 12:27-29) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. 2பேதுரு 3:10-13 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகும் காலத்தை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது.

"அசைவுள்ளவைகள் உண்டாக்கப்பட்டவைகள் போல மாறிப்போம்" - ஆயிரம் வருஷ அரசாட்சியின் முடிவில் புதிய வானமும், புதிய பூமியும் உண்டாகும். இதனால் பூமியிலுள்ள சாபங்களெல்லாம் அகற்றப்படும். தேவனுடைய காரியங்கள் பூமியில் நித்தியமாக நிலைத்திருக்கும். (எபி 12:27-29)

"அசையாதவைகள் நிலைத்திருக்கத் தக்கதாக" ஒருசில காரியங்கள் அசையாதிருக்கும். இவை நிலைத்திருக்கக் கூடியவை. (ஏசா 9:6-7; தானி 2:44-45; தானி 7:13-27; சக 14; லூக்கா 1:32-33; வெளி 22:5

"அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம்" - பூமியின் நித்திய ராஜ்யத்தில் நாம் ராஜாக்களாகவும் ஆசாரியர்களாகவும் இருப்போம். தானி 7:18,27; சக 14:5; ரோமர் 8:17-18; 1கொரி 6:2-3; 2தீமோ 2:12; யூதா 1:14; வெளி 1:6; வெளி 5:10; வெளி 22:5

பக்தி (reverence) - αἰδώς - aidoos - 127

பெண்பால் பெயர்ச்சொல் - நாணம். பக்தி (1தீமோ 2:9)

பயபக்தி (godly fear) - εὐλάβεια - eulabeia - 2124

பெண்பால் பெயர்ச்சொல் - பயம், பயபக்தி **(fear of the gods, piety; caution; discretion)** (எபி 5:7; 12:28)

"நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே" உபா 4:24 ஆவது வசனம் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

13 அதிகாரம்

11. கிறிஸ்தவ ஜீவியத்தைக் குறித்து ஏழு கட்டளைகள்

எபி 13:1 சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது.

எபி 13:2 அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்; அதினாலே சிலர் அறியாமல் தேவ தூதரையும் உபசரித்ததுண்டு.

எபி 13:3 கட்டப்பட்டிருக்கிறவர்களோடே நீங்களும் கட்டப்பட்டவர்கள்போல அவர்களை நினைத்துக்கொள்ளுங்கள். நீங்களும் சரீரத்தோடிருக்கிறவர்களென்று அறிந்து, தீங்கநுபவிக்கிறவர்களை நினைத்துக் கொள்ளுங்கள்.

எபி 13:4 விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக; வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்.

எபி 13:5 நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள். நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே.

எபி 13:6 அதினாலே நாம் தைரியங் கொண்டு: கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்னசெய்வானென்று சொல்லலாமே.

விசுவாசிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டளைகள்

1 சகோதர சிநேகம் நிலைத்திருக்கக் கடவது (எபி 13:1)

2 அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்

3 கட்டப்பட்டிருக்கிறவர்களோடே நீங்களும் கட்டப்பட்டவர்கள்போல அவர்களை நினைத்துக்கொள்ளுங்கள் (எபி 13:3)

4 தீங்கநுபவிக்கிறவர்களை நினைத்துக் கொள்ளுங்கள்

5 பண ஆசையில்லாதவர்களாய் நடந்து கொள்ளுங்கள்

6 உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்

7 தேவவசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்துக் கொள்ளுங்கள் (எபி 13:7)

8 பலவிதமான அந்நிய போதனைகளால் அலைப்புண்டு திரியாதிருங்கள் (எபி 13:9)

9 கிறிஸ்துவின் முன்மாதிரியை பின்பற்றுங்கள் (எபி 13:13)

10 அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம் (எபி 13:15)

11 நன்மைசெய்ய மறவாதிருங்கள் (எபி 13:16)

12 தானதர்மம்பண்ண மறவாதிருங்கள் (எபி 13:16)

13 உங்களை நடத்துகிறவர்களுக்கு கீழ்ப்படிந்து அடங்குங்கள் (எபி 13:17)

14 உங்களை நடத்துகிறவர்களையும், பரிசுத்தவான்கள் யாவரையும் வாழ்த்துங்கள் (எபி 13:24)

தேவதூதனைத் தரிசித்த மனுஷர்கள்

1 ஆகார் (Hagar) (ஆதி 16:7-11, ஆதி 21:17)

2 ஆபிரகாம் (Abraham) (ஆதி 18:2, ஆதி 22:11,15)

13 அதிகாரம்

3. லோத்தும், சோதோமியரும் (Lot and Sodomites) (ஆதி 19:1-22)

4. யாக்கோபு (Jacob) (ஆதி 28:12 ஆதி 31:11; ஆதி 32:1)

5. மோசே (Moses) (யாத் 3:2)

6. பிலேயாம் (Balaam) (எண் 22:22-35)

7. யோசுவா (Joshua) (எபி 5:15 யாத் 23:20-23; யாத் 32:34)

8. இஸ்ரவேல் (Israel) (நியா 2:1-5)

9. கிதியோன் (Gideon) (நியா 6:11-22)

10. மனோவாவின் மனைவி (Manoah's wife) (நியா 13:3-5)

11. மனோவாவும், அவனுடைய மனைவியும் (Manoah and his wife) (நியா 13:9-21)

12. தாவீது (David) (2சாமு 24 1நாளா 21)

13. எலியா (Elijah) (1இராஜா 19:5-7 2இராஜா 1:3,15)

14. எலிசாவும், அவனுடைய வேலைக்காரனும் (Elisha and servant) (2இராஜா 6:16-17)

15. அசீரியர்கள் (Assyrians) (2இராஜா 19:35; ஏசா 37:36)

16. எபிரெய பிள்ளைகள் (Hebrew children) (தானி 3:25-28)

17. நேபுகாத்நேச்சார் (Nebuchadnezzar) தானி 3:24-25

18. தானியேல் (Daniel) (எபி 6:22; தானி 8:16; தானி 9:21; தானி 10:5-21, தானி 12:5-7)

19. சகரியா (Zechariah) (எபி 1:8-19 சக 2:3; சக 3:1-6, சக 4:1-5, சக 5:5-10; சக 6:4-5; சக 12:8)

20. யோசேப்பு (Joseph) (மத் 1:20 மத் 2:13,19)

21. மரியாள் (Mary) (லூக்கா 1:26-38)

22. சகரியா (Zacharias) (லூக்கா 1:20-38)

23. மேய்ப்பர்கள் (Shepherds) (லூக்கா 2:9-14)

24. இயேசு (Jesus) (மத் 4:11 லூக்கா 22:43)

25. சில ஸ்திரீகள் (Some women) (மத் 28:1-5)

26. சீஷர்கள் (The disciples) (அப 1:11)

27. பேதுருவும் யோவானும் (Peter and John) (அப் 5:19)

28. பிலிப்பு (Philip) (அப் 8:26)

29. கொர்நேலியு (Cornelius) (அப 10:3,30-32)

30. பேதுரு (Peter) (அப 12:7-11)

31. பவுல் (Paul) (அப் 27:23)

32. யோவான் (John)

"சரீரம்" - இயேசு கிறிஸ்துவின் சரீரம் (1கொரி 12:13-30)

விபச்சாரக்காரர் (adulterers) - μοιχός - moichos - 3432

ஆண்பால் பெயர்ச்சொல் - விபச்சாரக் காரர் (எபி 13:4; லூக்கா 18:11, 1கொரி 6:9; யாக் 4:4; மத் 5:32)

நடக்கை (conversation) τρόπος tropos 5158

13 அதிகாரம்

ஆண்பால் பெயர்ச்சொல் - ஜீவிக்கும் விதம், ஜீவியத்தின் நடத்தை சேர்த்துக் கொள்ளும் வண்ணம் அப்படியே, பிரகாரம் manner of life
யூதா 1:7 அப 1:10 way ரோமர் 3:2; பிலி 1:18)

"பண ஆசை" (covetousness) - (லூக்கா 12:15

"நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை உன்னைக் கைவிடுவதுமில்லை" - யோசு 1:5 நாளா 28:20 ஆகிய வசனங்கள் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"கர்த்தர் எனக்குச் சகாயர் [illegible] பயப்படேன், மனுஷன் எனக்கு என்னசெய்வான்" - சங் 118:6 ஆவது வசனம் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

12. வழிநடத்துகிறவர்களை மதிக்க வேண்டும் - (1தெச 5:12)

எபி 13:7 தேவவசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்

13. இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்

எபி 13:8 இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்

14. கள்ள உபதேசங்களுக்கு எதிரான எச்சரிப்பு - (எபே 4:14; 1தீமோ 4:1-8; 2தீமோ 4:15, பிலி 3:17-19

எபி 13:9 பலவிதமான அந்நிய போதனைகளால் அலைப்பட்டுத் திரியாதிருங்கள். போஜன பதார்த்தங்களினாலல்ல, கிருபையினாலே இருதயம் ஸ்திரப்படுகிறது நல்லது. போஜனபதார்த்தங்களில் முயற்சி செய்கிறவர்கள் பயனடையவில்லையே.

அலைப்பட்டுத் திரிதல் (carried about) - παραφέρω - parapheroo - 3911

வினைச்சொல் - தீக்கு (to whirl about; revolve) 2கொரி 4:10

15. இரண்டு பலிபீடங்கள்

எபி 13:10 நமக்கு ஒரு பலிபீடமுண்டு, அதற்குரியவைகளைப் புசிக்கிறதற்குக் கூடாரத்தில் ஆராதனை செய்கிறவர்களுக்கு அதிகாரமில்லை.

எபி 13:11 ஏனென்றால் எந்த மிருகங்களுடைய இரத்தம் பாவங்களினிமித்தமாகப் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரதான ஆசாரியனாலே கொண்டுவரப்படுகிறதோ, அந்த மிருகங்களின் உடல்கள் பாளயத்துக்குப் புறம்பே சுட்டெரிக்கப்படும்.

எபி 13:12 அந்தப்படியே, இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ் செய்யும்படியாக நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்

எபி 13:13 ஆகையால் நாம் அவருடைய நிந்தையைச் சுமந்து பாளயத்துக்குப் புறம்பே அவரிடத்திற்குப் புறப்பட்டுப் போகக்கடவோம்.

"பலிபீடம்" (altar) தேவனுக்கு முன்பாக மனுஷன் பலிகளைச் செலுத்துமிடம் தேவனைச் சந்திக்கும் இடம்.

"அந்த மிருகங்களின் உடல்கள் பாளயத்துக்குப் புறம்பே சுட்டெரிக்கப்படும்" மிருகங்களின் பலியும் இயேசு கிறிஸ்துவின் பலியும் இங்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டிருக்கிறது மிருகங்களின் உடல்கள் பாளயத்துக்குப் புறம்பே சுட்டெரிக்கப்பட்டது. அதுபோல இயேசு கிறிஸ்து எருசலேமின் வாயில்களுக்கு வெளியே சிலுவையில் அறையப்பட்டார்

"நாம் அவருடைய நிந்தையைச் சுமந்து, பாளயத்துக்குப் புறம்பே அவரிடத்திற்குப் புறப்பட்டுப்போகக்கடவோம்" - எருசலேமிற்கு வெளியே ஒரு பாவியைப் போல இயேசு கிறிஸ்து நிந்தைகளைச் சுமந்து மரித்தார் அதுபோல நாமும் இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் வரும் பாடுகளையும், உபத்திரவங்களையும் சுமப்பதற்கு ஆயத்தமாயிருக்க வேண்டும். (2தீமோ 3:12

13 அதிகாரம்

16. நமது வருங்கால வீடு – (வெளி 21)

எபி 13:14 நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை; வரப்போகிறதையே நாடித்தேடுகிறோம்

தீர்க்கதரிசன எண் - 3

"நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை" (எபி 13:14; எபி 11:10,16; வெளி 2

17. விசுவாசியின் ஸ்தோத்திரபலி

எபி 13:15 ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்.

எபி 13:16 அன்றியும் நன்மை செய்யவும், தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள்; இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்

"அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலி" நமது உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை நாம் தேவனுக்கு எப்போதும் ஏறெடுக்க வேண்டும். பழைய ஏற்பாட்டுக் கால ஆசாரியர் அநுதினமும் பாவநிவாரண பலிகளைச் செலுத்தி வந்தார்கள் ஆயினும் அந்தப் பலிகள் அவர்களுடைய பாவங்களைப் போக்கவில்லை இயேசு கிறிஸ்துவோ தம்மை ஒரேதரம் பலியாக ஒப்புக்கொடுத்தார் அவருடைய திரு இரத்தத்தினாலே நமக்கு பாவமன்னிப்பு உண்டாயிருக்கிறது. ஆகையினால் அவரை எப்போதும் ஸ்தோத்திரிக்க வேண்டும் (எபி 10:1-18)

ஐக்கியம் (communicate) - κοινωνία **koinonia** 2842

பெண்பால் பெயர்ச்சொல் - அந்நியோந்நியம், ஐக்கியம், பங்கை ஏற்றுக்கொள்தல், பொருள், சகாயம் தர்மம், உடன்படு **(fellowship** (2கொரி 13:14; 2கொரி 1:7)

தேவனுக்குப் பிரியமான காரியங்கள்

1 இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம். (எண் 24:1)

2 கர்த்தர் இஸ்ரவேலைத் தமக்கு ஜனமாக்கிக் கொள்ள பிரியமாயிருக்கிறார் (1சாமு 12:22)

3 சுயநலமில்லாத விண்ணப்பம் ஆண்டவருடைய பார்வைக்கு உகந்த விண்ணப்பமாயிருக்கிறது. (1இராஜா 3:10)

4 கர்த்தரோ இயேசு கிறிஸ்துவை நொறுக்க சித்தமானார் (ஏசா 53:10)

5 தேவன் இயேசு கிறிஸ்துவில் பிரியமாயிருக்கிறார் (மத் 3:17, மத் 12:18)

6 பைத்தியமாகத் தோன்றும் பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்க தேவனுக்குப் பிரியமாயிற்று (1கொரி 1:21)

7 கிறிஸ்துவின் சரீரத்தில் தமது சித்தத்தின்படி ஒவ்வொரு அவயவத்தையும் வைப்பது அவருக்குப் பிரியமாயிற்று. (1கொரி 12:18

8 உயிர்த்தெழுதலைப் பற்றிய தமது திட்டம். (1கொரி 15:28

9 சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாய் இருக்கவும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று. (கொலோ 1:19)

10 கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்காக ஊழியக்காரர்களை வேறுபிரிப்பது. (கலா 1:15)

11 விசுவாசமுள்ள மனுஷர்கள் (எபி 11:5-6)

12 தொடர்ந்து ஸ்தோத்திர பலிகளை ஏறெடுத்தல் (எபி 13:15-16

எபிரெயர் - தொகுப்புரை

13 அதிகாரம்

18. ஊழியக்காரர்களுக்குக் கீழ்ப்படியுங்கள் - (வசனம் 7)

எபி 13:17 உங்களை நடத்துகிறவர்கள் உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே.

"உங்களை நடத்துகிறவர்கள் உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால்" - ஒவ்வொரு ஊழியக்காரரும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் ஆத்துமாக்களைப் பரலோகத்திற்குப் பாதுகாப்பாக வழிநடத்த வேண்டும். இதற்காக அவர்கள் விழித்திருந்து ஜெபம் பண்ண வேண்டும். ஆத்துமாக்களுக்கு உத்தரவாதம் பண்ணாமல் ஜனங்களை ஆளுகை செய்து ஆதாயம் பெறுவதற்கு முயற்சி பண்ணக்கூடாது.

19. ஜெபத்திற்காக வேண்டுதல்கள்

எபி 13:18 எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்; நாங்கள் நல்மனச்சாட்சியுள்ளவர்களாய் எல்லாவற்றிலும் யோக்கியமாய் நடக்க விரும்புகிறோமென்று நிச்சயித்திருக்கிறோம்.

எபி 13:19 நான் அதிசீக்கிரமாய் உங்களிடத்தில் வரும்படிக்கு நீங்கள் இப்படி வேண்டிக்கொள்ளும்படி அதிகமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்" - புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களில் பவுல் மட்டுமே தனக்காக ஜெபம் பண்ணுமாறு கேட்டுக்கொள்கிறார் (எபி 13:18; 2 தெச 3:1)

20. அப்போஸ்தல ஆசீர்வாதம்

எபி 13:20 நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினாலே ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து ஏறிவரப் பண்ணின சமாதானத்தின் தேவன்,

எபி 13:21 இயேசுகிறிஸ்துவைக்கொண்டு தமக்கு முன்பாகப் பிரியமானதை உங்களில் நடப்பித்து நீங்கள் தம்முடைய சித்தத்தின்படி செய்ய உங்களைச் சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்களாக்குவாராக. அவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

கிறிஸ்துவின் திருநாமங்கள்

1 மேய்ப்பன் (The shepherd) (ஆதி 49:24; சக 13:7, மத் 26:31 மாற்கு 14:27)

2 என் மேய்ப்பர் (My shepherd) (சங் 23:1)

3 இஸ்ரவேலின் மேய்ப்பரே (O shepherd of Israel) (சங் 80:1, ஏசா 40:11 ஏசா 63:11)

4. ஒரே மேய்ப்பன் (One shepherd) (எசே 34:23 எசே 37:24)

5 என் மேய்ப்பன் (My shepherd) (God's, சக 13:7)

6 ஆடுகளின் மேய்ப்பன் (The shepherd of the sheep) (யோவான் 10:2)

7 நல்ல மேய்ப்பன் (The good shepherd) (யோவான் 10:11,14)

8 ஆடுகளுடைய பெரிய மேய்ப்பர் (Great shepherd of the sheep) (எபி 13:20)

13 அதிகாரம்

9 உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும், கண்காணியுமானவர் **(The Shepherd and Bishop of your souls)** (1பேதுரு 2:25)

10 பிரதான மேய்ப்பர் **(The chief Shepherd)** (1பேதுரு 5:4)

"நித்திய உடன்படிக்கை **(everlasting covenant)** - புதிய ஏற்பாட்டில் கொடுக்கப் பட்டிருக்கும் புதிய உடன்படிக்கை நித்தியமானது. மோசேயின் பழைய உடன்படிக்கையோ தற்காலிகமானது.

விசுவாசிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஆசீர்வாதங்கள்

1 தேவன் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு தமக்கு முன்பாகப் பிரியமானதை உங்களில் நடப்பிப்பாராக.

2 நீங்கள் தம்முடைய சித்தத்தின்படி செய்ய உங்களைச் சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்களாக்குவாராக.

21. ஆலோசனையும் ஆசீர்வாதமும்

எபி 13:22 சகோதரரே, நான் சுருக்கமாய் உங்களுக்கு எழுதின இந்தப் புத்திமதியான வார்த்தைகளை நீங்கள் பொறுமையாய் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

எபி 13:23 சகோதரனாகிய தீமோத்தேயு விடுதலையாக்கப் பட்டானென்று அறிவீர்களாக. அவன் சீக்கிரமாய் வந்தால் அவனுடனேகூட நான் வந்து உங்களைக் காண்பேன்.

எபி 13:24 உங்களை நடத்துகிறவர்கள் எல்லாரையும், பரிசுத்தவான்கள் யாவரையும் வாழ்த்துங்கள். இத்தாலியா தேசத்தார் யாவரும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்.

எபி 13:25 கிருபையானது உங்களனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.

"தீமோத்தேயு விடுதலையாக்கப்பட்டான்" - சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப் படவில்லை. ஒரு குறிப்பிட்ட வேலைக்காக அனுப்பப்பட்டான் (1கொரி 4:17)

யாக்கோபு - முன்னுரை

காலமும் இடமும்

கி.பி. 45 ஆம் ஆண்டில் முதலாம் கிறிஸ்தவ ஆலோசனைச் சங்கத்திற்கு (கி.பி 50) முன்பாக எருசலேமிலிருந்து இந்த நிருபம் எழுதப்பட்டது.

ஆசிரியர்

யாக்கோபு - இயேசு கிறிஸ்துவின் சகோதரர்

மையக்கருத்து

1 யூதமார்க்கத்திலிருந்து இயேசு கிறிஸ்துவின் விசுவாசிகளாகி சிதறிப் போனவர்கள் ஆத்தித்திருச [redacted] ஆரம்பித்தார்கள் அவர்களுக்காக எழுதப்பட்டிருக்கும் கிறிஸ்தவ உபதேசம். யாக் 1:1 அப் 2:5 11

2 யாக்கோபு எழுதின நிருபம் யூதமார்க்கத்தாருக்கே விசேஷமாக எழுதப்பட்டிருக்கிறது. மத்தேயு எழுதின சுவிசேஷம் யூதருடைய சுவிசேஷம் என்று அழைக்கப்பட்ட போதிலும் யாக்கோபு நிருபமே யூதமார்க்கத்தாருக்கு விசேஷித்த செய்திகளைச் சுமந்து செல்கிறது. யூதா எழுதின நிருபம், வெளிப்படுத்தின விசேஷம், எபிரெயருக்கு எழுதின நிருபம் ஆகிய புஸ்தகங்களைவிட யாக்கோபு எழுதின நிருபம் யூதமார்க்கத்தாருக்கு விசேஷமாக எழுதப்பட்டதாகும்

3 இயேசு கிறிஸ்துவைப் பற்றி இந்த நிருபத்தில் இரண்டு குறிப்புகள் மட்டுமே உள்ளன (யாக் 1:1 யாக் 2:1

4 யாக்கோபு எழுதின நிருபத்தை உபதேசத்தின் பிரகாரம் பழைய ஏற்பாட்டில் ஒரு புஸ்தகமாகச் சேர்க்கலாம்.

5 சுவிசேஷம், இயேசு கிறிஸ்து மனுஷரூபம் எடுத்தது, அவருடைய ஜீவியம் மரணம் உயிர்த்தெழுதல் ஆகிய எந்த நிகழ்ச்சியும் இந்த நிருபத்தில் காணப்படவில்லை.

6 மேசியா வருவார் என்னும் சத்தியமோ அல்லது அவர் மூலமாக வரும் இரட்சிப்பு பற்றிய சத்தியமோ இந்த நிருபத்தில் காணப்படவில்லை

7 ஆதித்திருச்சபையில் காணப்பட்ட உபதேச முரண்பாடுகளைப் பற்றிய எந்தக் குறிப்பும் இந்த நிருபத்தில் காணப்படவில்லை

8 யாக்கோபு தான் எழுதின நிருபத்தில் இயேசு கிறிஸ்துவின் உபதேசங்களைப் பல இடங்களில் தழுவி எழுதியிருக்கிறார் (யாக் 1:4=மத் 5:48, யாக் 1:5=மத் 7.7; யாக் 1:6= மாற்கு 2? யாக் 1:22= மத் 7.24 26 யாக் 1:25= யோவான் 13:17 யாக் 2:5=லூக்கா 6:20 யாக் 2:13=மத் 6:14-15; யாக் 3:12= மத் 7. 16-20, யாக் 4:8-9= லூக்கா 6.24-25; யாக் 4:10=மத் 23:12 யாக் 4:11 12=மத் 7:1 யாக் 5:12= மத் 5:34 37 யாக் 5:1= லூக்கா 6:24 யாக் 5:9= லூக்கா 24.33

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் 5

வசனங்கள் 108

கேள்விகள் 24

புதிய தீர்க்கதரிசனம் 1

வரலாற்றைக் குறிக்கும் வசனங்கள் - 100

யாக்கோபு - முன்னுரை

பொருளடக்கம்

I. ஆசிரியரும் வாழ்த்துரையும் (1:1)

II. கிறிஸ்தவ பரீட்சைகள்

1 பரீட்சையின் நோக்கம் (1:2-4)

2 விசுவாசத்தின் பரீட்சை - ஜெபத்திற்கு பதில்பெறுவதன் இரகசியம் (1:5-8)

3. தாழ்மையின் பரீட்சை (1:9-11)

4 சகிக்கிறதின் பரீட்சை (1:12)

5. சோதிக்கப்படுவதின் பரீட்சை (1:13-16)

6 நன்றி கூறுவதன் பரீட்சை - எல்லா நல்ல ஈவுகளின் ஆதாரம் (1:17)

7 கிறிஸ்தவ அனுபவத்தின் பரீட்சை - புதிய பிறப்பு (1:18)

8 கிறிஸ்தவ ஜீவியத்தின் பரீட்சை (1:19-21)

9 கீழ்ப்படிதலின் பரீட்சை (1:22-25)

10 மாசில்லாத சுத்தமான பக்தியின் பரீட்சை (1:26-27)

11 சகோதர சிநேகத்தின் பரீட்சை (2:1-9)

12 பரிபூரணத்தின் பரீட்சை (2:10-13)

13 விசுவாசத்தின் பரீட்சை (2:14-19)

14. விசுவாசமும் கிரியைகளும் இரண்டு விளக்கங்கள் (2:20-26)

III. கிறிஸ்தவரும் நாவும்

1 பரிபூரணத்தின் அடையாளம் (3:1-2)

2 நாவின் சுபாவம் (3:3-6)

3 நாவை அடக்க முடியாது (3:7-8)

4. தேவபக்தியற்ற காரியங்களில் நாவை பயன்படுத்துதல் (3:9-12)

5 கிறிஸ்தவர்களால் நாவை அடக்க முடியும் (3:13)

6 மானிட ஞானத்தின் நான்கு அடையாளங்கள் (3:14-16)

7 தெய்வீக ஞானத்தின் ஒன்பது அடையாளங்கள் (3:17-18)

IV. கடிந்துரைகளும் கட்டளைகளும்

1 பிரிவினைக்கு காரணம் (4:1)

2 பின்வாங்கிப்போனவர்களின் ஜெபங்களுக்கு பதில் கிடைக்காமல் இருப்பதற்கு ஐந்து காரணங்கள் (4:2-3)

3 உலகத்திற்கு சிநேகிதனாய் இருக்க விரும்புகிறவன் தேவனுக்கு பகைஞனாயிருக்கிறான் (4:4-6)

4 ஜெபத்திற்கு பதில் கிடைப்பதற்கு பதினொரு நிபந்தனைகள் (4:7-10)

5 தன்னைத்தான் நியாயாதிபதியாக்கிக் கொள்கிறவன்மீது கடிந்துரை (4:11-12)

6. மனுஷ சித்தமும் ஆண்டவருடைய சித்தமும் (4:13-16)

7 நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும் அதைச் செய்யாமல் போனால் அது அவனுக்கு பாவமாயிருக்கும் (4:17)

8 துன்மார்க்கமான ஐசுவரியவான்கள்மீது கடிந்துரை - ஏழு பாவங்களுக்கு ஏழு அம்ச நியாயத்தீர்ப்பு (5:1-6)

9 கர்த்தரின் வருகையைக் குறித்த ஆலோசனை (5:7-9)

10 யோபின் பொறுமை (5:10-11)

11 சத்தியம் பண்ணுதல் (5:12)

12 துன்பப்படுகிறவனும் வியாதிப்பட்டவனும் செய்ய வேண்டிய காரியம் (5:13-14)

13 விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும் (5:15-16)

14 ஜெபத்திற்கு பதில் கிடைக்கும் (5:17-18)

15 சத்தியத்தை விட்டு விலகி மோசம்போவதும் இரட்சிக்கப்படுவதும் (5:19-20)

யாக்கோபு - தொகுப்புரை

1 அதிகாரம்

I. ஆசிரியரும் வாழ்த்துரையும்

யாக் 1:1 தேவனுக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும் ஊழியக்காரனாகிய யாக்கோபு, சிதறியிருக்கிற பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் வாழ்த்துதல்சொல்லி எழுதுகிறதாவது.

"யாக்கோபு" (James) - புதிய ஏற்பாட்டில யாக்கோபு என்னும் பெயர் மூவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. செபெதேயுவின் குமாரன் (மத் 4:21) அல்பேயுவின் குமாரன் (லூக்கா 24:10) இந்த நிருபத்தை எழுதிய யாக்கோபு. இவர் இயேசு கிறிஸ்துவின் சகோதரர் (மத் 13:55; மாற்கு 6:3; கலா 1:19) மரியாள் இயேசு கிறிஸ்துவை பெற்றெடுத்த பின்பு அவள் மேலும் சில குழந்தைகளையும் பெற்றெடுத்தாள் (லூக்கா 8:19) இயேசு கிறிஸ்து உயிர்த்தெழும் வரையிலும் அவருடைய சகோதரர்கள் அவரைத் தேவகுமாரனாக அங்கீகரிக்கவில்லை (யோவான் 7:5) ஆனால் மற்ற இரு யாக்கோபுகளும் இயேசுவைத் தேவகுமாரனென்று அங்கீகரித்தார்கள்.

கிறிஸ்துவின் விசேஷித்த தரிசனத்தை இந்த யாக்கோபு பெற்றிருக்கிறார். ஆயினும் அப்போஸ்தலர்களில் ஒருவராக இவர் சேர்க்கப்படவில்லை (1கொரி 15:7). மற்ற இரண்டு யாக்கோபுகளும் அப்போஸ்தலர்களாக அங்கீகரிக்கப்பட்டிருந்தார்கள் (மத் 10:2-3)

வேதாகமத்தில் ஒரே பெயரில் ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் வரும்போது வேதவசனம் எந்தவித குழப்பத்திற்கும் இடமில்லாமல் அவர்களைத் தெளிவாகப் பிரித்துக் கூறும். கனனி மரியாளுக்கு ஒரு சகோதரி இருந்தாள். அவள் பெயரும் மரியாள். அவளுக்கு இரண்டு குமாரரும், ஒரு குமாரத்தியும் பிறந்தார்கள். (மத் 27:56, மாற்கு 15:40; மாற்கு 16:1, லூக்கா 24:10) கனனி மரியாளுக்குத் தன் சகோதரி மரியாளைவிட அதிகமான பிள்ளைகள் பிறந்தார்கள். (மத் 13:55; மாற்கு 6:3)

இயேசுவின் சகோதரராகிய யாக்கோபும் மற்ற இரண்டு யாக்கோபுகளும் வேதவசனங்களில் வேறுபிரித்து கூறப்பட்டிருக்கிறார்கள் (அப் 1:13-14)

யூதா இந்த நூலாசிரியராகிய யாக்கோபுவின் சகோதரன் (யூதா 1:1) வேதவசனங்களில யோவானின் சகோதரன் செபெதேயுவின் குமாரன், அல்பேயுவின் குமாரன் என்று தெளிவுபடுத்தப்படாமல், "யாக்கோபு" என்று மட்டும் கூறப்பட்டிருக்குமானால் இந்தப் பெயர் இயேசுவின் சகோதரனாகிய யாக் கோபுவை மட்டுமே குறிக்கும். (அப் 12:2,17; அப் 15:13; அப 21:18; 1கொரி 15:7; கலா 1:19; கலா 2:9,12 யாக் 1:1; யூதா 1:1) யாக்கோபு கிபி 62 ஆம் வருஷம் இரத்தச்சாட்சியாக மரித்தார்

ஊழியக்காரன் (servant) - δοῦλος - doulos - 1401

பொருள் - வேலைக்காரனாகிய, ஊழியக்காரனாகிய, அடிமையாயிருக்கிற (bondman) (மத் 20:27)

"தேவனுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும்" - பிதாவாகிய தேவனும் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் தனித்தனியாக வெவ்வேறு ஆள்தத்துவப பண்புடையவர்கள் என்பதை விளக்கும் வாக்கியம். 1யோவான் 5:7

"பன்னிரண்டு கோத்திரங்கள்" - இஸ்ரவேலரின் பன்னிரண்டு கோத்திரங்களில் பத்து கோத்திரங்கள் காணாமல் போய்விட்டதாக ஒருசில வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள் ஆனால் யாக்கோபு இந்த நிருபத்தை எழுதிய போது பன்னிரண்டு கோத்திரங்களும் இருந்தது தெரிய வருகிறது.

"சிதறியிருக்கிற" - யூதர்கள் எல்லாத் தேசங்களுக்கும் சிதறிப்போனார்கள் ஐரோப்பா ஆசியா ஆப்பிரிக்கா ஆகிய கண்டங்களிலுள்ள பல நகரங்களுக்கும் சென்று குடியேறினார்கள் (அப 2:5-9, அப 26:6). அவர்கள் எங்கு சென்றாலும் தங்களுடைய யூதமார்க்கத்து முறைமைகளைக் கைவிடாமல் கடைப்பிடித்து வந்தார்கள் தாங்கள் குடியிருக்கும் பகுதிகளில் ஜெபாலயங்களைக் கட்டினார்கள் மற்ற ஜனங்களோடு எவ்வித கலப்புமில்லாமல் வேறுபிரிந்தே வாழ்ந்தார்கள்

வாழ்த்துதல் (greeting) - χαίρω chairoo 5463

1 அதிகாரம்

வினைச்சொல் - சந்தோஷமடை, சந்தோஷப்படு, களிகூர், மகிழ், வாழ்த்து (rejoice; joy; hail) An ancient greeting of health and prosperity. greeting (யாக் 1:1; அப் 15:23; அப் 23:26); Godspeed (2யோவான் 10-11); farewell (2கொரி 13:11); joyfully (லூக்கா 19:6); joy (2கொரி 7:13; பிலி 2:17-18; கொலோ 2:5; 1தெச 3:9)

II. கிறிஸ்தவ பரீட்சைகள் - (1:2-2:26; 1பேதுரு 1:7; 4:1-9; 1கொரி 4:9-13; 2கொரி 6:3-10; 11:23-33; 12:7)

1. பரீட்சையின் நோக்கம் - (ரோமர் 5:3)

யாக் 1:2 என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும் போது,

யாக் 1:3 உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்.

யாக் 1:4 நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது.

அகப்படுதல் (fall into) περιπίπτω peripiptoo 4045

வினைச்சொல் - அகப்படு, தட்டலை (to fall into; to be caught by) (லூக்கா 10:30, அப் 27:41, யாக் 1:2)

பலவிதமான சோதனைகள் (divers temptations) πειρασμός peirasmos 3986

ஆண்பால் பெயர்ச்சொல் - சோதனை, சோதித்தல் (trial; attack, put to proof; examine, question) (கலா 4:14) - சோதனை என்பது எப்போதுமே பாவம்செய்யும் சோதனை என்று பொருள்கூற முடியாது. இந்த வாக்கியம் எந்தவிதமான சோதனையையும் குறிப்பிடுகிறது (யாக் 1:2-4:12; 1பேதுரு 1:7)

"உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்கும்" - ஒரு மனுஷன் சோதிக்கப்படும்போது அவனுடைய விசுவாசம் உறுதிப்படுகிறது. பரீட்சை பொறுமையை உண்டுபண்ணுகிறது. பொறுமை பரிபூரணத்தை அடையச் செய்கிறது. (யாக் 1:3-4:12; ரோமர் 5:3-5; 1பேதுரு 1:7)

யாக்கோபு கூறியிருக்கும் பூரணமான [redacted]

1 பொறுமையின் பரிபூரணக் கிரியை (யாக் 1:4)

2 குறைவில்லாத ஞானம் (பிலி 3:15)

3 பூரண வரங்கள் (யாக் 1:17)

4 பூரணப் பிரமாணம் (யாக் 1:25)

5 கிரியையினால் உண்டாகும் பூரண விசுவாசம் (யாக் 2:22)

6 சொல்தவறாமல் இருக்கும் பூரண புருஷன் (யாக் 3:2)

பூரண பொறுமையின் ஆசீர்வாதங்கள்

1 பூரணர்

2 நிறைவுள்ளவர்

பூரணர் (Perfect) - τέλειος - teleios - 5046

பெயரடை - பூரண, பரிபூரணமான, நிறைவான, தேறின, உத்தமமான (பிலி 3:15) - தேவனுடைய சித்தத்தைப் பற்றியும், கல்விசேஷத்தைப் பற்றியஅறிவிலும் தனிப்பட்ட முறையில் பூரணமுள்ளவராக இருப்பது.

1 அதிகாரம்

நிறைவுள்ளவர் (Entire) 'ολόκληρος - holokleeros - 3648

பெயரடை - முழுவதுமான, நிறைவுள்ள (complete in all parts, whole) (1தெச 5:23) - தேவனுடைய வரங்களிலும் எல்லாக் கிருபைகளிலும் நிறைவுள்ளவராக இருப்பது.

2. விசுவாசத்தின் பரீட்சை - ஜெபத்திற்கு பதில்பெறுவதன் இரகசியம் - (மத் 17:20; 21:22 மாற்கு 9:23; 11:22-24)

யாக் 1:5 உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவனையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்.

யாக் 1:6 ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான்.

யாக் 1:7 அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக.

யாக் 1:8 இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்.

குறைவுள்ளது (lack) - λείπω - leipoo - 3007

வினைச்சொல் - குறைவாகு, குறைவாயிரு, இல்லாமலிரு (come short of) lack (யாக் 1:5; லூக்கா 18:22), wanting (யாக் 1:4; தீத்து 1:5; தீத்து 3:13); destitute (யாக் 2:15)

ஞானம் (wisdom) - σοφία sophia 4678

பெண்பால் பெயர்ச்சொல் - ஞானம், சாஸ்திரம் (cleverness; skill, scientific knowledge, wisdom)

விண்ணப்பத்திற்குப் பதில் பெறும்படி ஜெபிக்க வேண்டிய வழிகள்

1 பிதாவிடம் ஜெபிக்க வேண்டும். (யோவான் 16:23)

2 இயேசுவின் நாமத்தில் ஜெபிக்க வேண்டும். (யோவான் 14:12-15)

3 பரிசுத்த ஆவியினால் ஜெபிக்க வேண்டும். (ரோமர் 8:26)

4 நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சிலாக்கியங்களையும் உரிமைகளையும் முழுவதுமாகப் புரிந்து ஜெபிக்க வேண்டும் (1கொரி 14:14-15)

5 வேதவசனத்திற்கு ஏற்ற பிரகாரம் ஜெபிக்க வேண்டும். (யோவான் 15:7)

6. சந்தேகப்படாமல் விசுவாசத்தோடு ஜெபிக்க வேண்டும். (யாக் 1:6)

7 ஜெபத்திற்குக் கிடைக்கும் பதிலுக்காகத் துதித்து ஜெபிக்க வேண்டும் (பிலி 4:6)

சந்தேகப்படுதல் (wavering) - διακρίνω - diakrinoo - 1252

வினைச்சொல் - நிதானி, சந்தேகப்படு, வாக்குவாதம் பண்ணு, விரோதமாய் இரு, செய், வழக்கைத் தீர்த்து வைத்துப் பேசு, போதகம் பண்ணு, இழுத்துவிடு (doubting; staggering) (1கொரி 11:29)

"சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான்" - கடலின் அலை ஓரிடத்தில் உயர்வாகவும் மற்றோரிடத்தில் தாழ்வாகவும் இருக்கும். அதுபோலவே சந்தேகப்படுகிறவன் [illegible] சமயம் தேவனை விசுவாசிக்கிறான் வேறொரு சமயத்தில் தேவனை விசுவாசியாமல் போகிறான் தேவனுடைய வாக்குத்தத்தம் உண்மையானவை என்று ஒரு சமயம் கூறுகிறான் வேறொரு சமயத்தில் தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேறாது என்று கூறி, அதை மறுதலிக்கிறான் தன்னுடைய மனதில் நிலையில்லாமல் இருக்கிறான்

யாக்கோபு - தொகுப்புரை

1 அதிகாரம்

"கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக" - சந்தேகப்படாதவனுடைய ஜெபமே கேட்கப்படும். அவனுக்கே தேவன் பதில் கொடுப்பார். சந்தேகப்படுகிறவன் கர்த்தரிடத்தில் ஒன்றும் பெற்றுக் கொள்ளமாட்டான் (யாக் 1:5-7)

"இருமனமுள்ளவன்" - யூதருடைய வழக்குச் சொல். ஒருவன் ஒரு சமயத்தில் மெய்யான தேவனை ஆராதித்து, வேறொரு சமயத்தில் சிருஷ்டிகரை ஆராதியாமல் சிருஷ்டியை ஆராதிக்கும்போது யூதர்கள் அவனைக் குறிப்பதற்கு இந்தச் சொல்லைப் பயன் படுத்துவார்கள். இம்மையிலும் ஆசை வைத்து, மறுமையிலும் ஆசை வைக்கிறவனை இருமனமுள்ளவன் என்று குறிப்பிடும் வழக்கம் உள்ளது. இப்படிப்பட்டவன் தனக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் வேண்டும், தன்னுடைய மாம்ச இச்சைகளும் நிறைவேற வேண்டுமென்று விரும்புவான்.

3. தாழ்மையின் பரீட்சை - (1பேதுரு 5:5)

யாக் 1:9 தாழ்ந்த சகோதரன் தான் உயர்த்தப்பட்டதைக்குறித்து மேன்மை பாராட்டக்கடவன்.

யாக் 1:10 ஐசுவரியவான் தான் தாழ்த்தப்பட்டதைக்குறித்து மேன்மை பாராட்டக்கடவன்; ஏனெனில் அவன் புல்லின் பூவைப்போல ஒழிந்து போவான்.

யாக் 1:11 சூரியன் கடும் வெயிலுடன் உதித்து, புல்லை உலர்த்தும்போது, அதின் பூ உதிர்ந்து, அதின் அழகான வடிவு அழிந்துபோம்; ஐசுவரியவானும் அப்படியே தன் வழிகளில் வாடிப் போவான்.

"தாழ்ந்த சகோதரன் தான் உயர்த்தப்பட்டதைக் குறித்து மேன்மைபாராட்டக் கடவன்" - தாழ்ந்த சகோதரன் பூமியில் ஏழையாக இருந்தாலும், அவனுக்குப் பரலோகத்தைக் குறித்து நம்பிக்கை உள்ளது. ஐசுவரியவான் தாழ்ந்துபோனால் தான் தாழ்த்தப்பட்டதைக் குறித்து மேன்மை பாராட்டக்கடவன். ஏனெனில் அவனுடைய ஐசுவரியமும், அவனுடைய தாழ்மையும் இந்தப் பூமியில் தற்காலிகமானவையே. நமக்கு நித்தியமான ஐசுவரியம் பரலோகத்தில் இருக்கிறது. (யாக் 1:9-11)

பூ (flower) - ἄνθος - anthos - 438

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பூ (யாக் 1:10; 1பேதுரு 1:24)

கடுமையெயில் (burning) καύσων - kausoon - 2742

ஆண்பால் பெயர்ச்சொல் - உஷ்ணம், கடுமையெயில் (மத் 20:12; லூக்கா 12:55; யாக் 1:11)

"ஐசுவரியவானும் அப்படியே தன் வழிகளில் வாடிப்போவான்" - இயேசு கிறிஸ்துவைத் தன் உள்ளத்தில் ஏற்றுக் கொள்ளாமல் தேவனுடைய காணியாட்சிக்குப் புறம்பாக இருக்கும் ஐசுவரியவான் ஒரு பூவைப்போல வாடிப் போவான் (1தீமோ 6:9-18)

4. சகிக்கிறதின் பரீட்சை - (5:10; 1பேதுரு 1:7; 4:12)

யாக் 1:12 சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவ கிரீடத்தைப் பெறுவான்.

பாக்கியவான் (Blessed) - μακάριος - makarios - 3107

ஆண்பால் பெயர்ச்சொல் - பாக்கியம் (happy, blessed) (1தீமோ 5:3-11)

"ஜீவகிரீடம்" (the crown of life) - (2தீமோ 4:8)

5. சோதிக்கப்படுவதின் பரீட்சை - (மாற்கு 7:21; 1கொரி 10:9-13; எபி 4:14)

யாக் 1:13 சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக; தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல.

யாக்கோபு - தொகுப்புரை

1 அதிகாரம்

யாக் 1:14 அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்

யாக் 1:15 பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது மரணத்தைப் பிறப்பிக்கும்

யாக் 1:16 என் பிரியமான சகோதரரே மோசம்போகாதிருங்கள்

"தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப் படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல" - சோதிக்கப்படுகிற எவனும் நான் தேவனால் சோதிக்கப் படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக. பொல்லாங்கினால் வரும் சோதனை பிசாசினிடமிருந்து வருகிறது.

சோதிக்கப்படுவதில் காணப்படும் நிலைகள்

1 சோதிக்கப்படுதல் - தீமையைப் பற்றிய எண்ணம் (யாக் 1:14)

2 இழுக்கப்படுதல் - எண்ணம் வலுவடைதல் (யாக் 1:14)

3 இச்சை - பாவத்தில் சந்தோஷப்படுதல் (யாக் 1:14)

4 சிக்குண்டுபோதல் - தன்னுடைய சித்தத்தில் பலவீனமாக இருத்தல் (யாக் 1:14)

5 இச்சையானது கர்ப்பந்தரித்தல் பாவத்திற்குத் தன்னை ஒப்புக் கொடுத்தல் (யாக் 1:15)

6 பாவம் - பாவம் செய்தல் (யாக் 1:15)

7 மரணம் - பாவத்தின் சம்பளம். (யாக் 1:15)

இச்சைகளின் வகைகள்

1 மனுஷனுடைய சுய இச்சைகள் (யாக் 1:14, யாக் 4:2; கலா 5:16)

2 சாத்தானின் இச்சைகள் (யோவான் 8:44; எபே 2:2-3; ரோமர் 6:12 1யோவான் 2:17, 1யோவான் 3:8

3 தேவனுடைய ஆவல்கள் (கலா 5:17, 22-23; சங் 51:6

இழுக்கப்படுதல் (enticed) **δελεάζω deleazoo** 1185

வினைச்சொல் - இழு, தந்திரமாய் பிடி **entice** (யாக் 1:14); **beguile** (2பேதுரு 2:14); **allure** (2பேதுரு 2:18)

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் மூன்றுவிதமான மரணங்கள்

1 சரீர மரணம் - சரீரத்திலிருந்து உள்ளான மனுஷன் பிரிக்கப்படுவது (யாக் 2:26)

2 ஆவிக்குரிய மரணம் - பாவத்தின் நிமித்தமாக ஒரு மனுஷன் தேவனிடமிருந்து பிரிக்கப்படுவது (எபே 2:1,5; ஏசா 59:2, மத் 8:22 கொலோ 2:13; 1தீமோ 5:6

3 நித்திய மரணம் - மனுஷன் பாவத்தில் ஜீவித்து தேவனிடமிருந்து பிரிந்து வாழவேண்டுமென்று தீர்மானம் பண்ணுவதினால் தேவனிடத்திலிருந்து நித்திய காலமாகப் பிரிக்கப்படுவது (மத் 10:28; மத் 25:41,46, வெளி 2:11 வெளி 14:9-11; வெளி 20:11-15 வெளி 21:8 வெளி 22:15 ஏசா 66:22-24) இந்த மரணம் இரண்டாம் மரணம் அல்லது தேவனிடமிருந்து இரண்டாம் முறையாகப் பிரிக்கப்படுதல் என்று அழைக்கப்படுகிறது. வெளி 2:11, வெளி 20:14; வெளி 21:8

மனுஷன் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான் அந்த நோக்கத்திலிருந்து பிரிக்கப் படுவதே மரணம் என்னப்படுகிறது. சரீர மரணத்தில் மனுஷனுடைய சரீரம் மரித்து மண்ணுக்குத் திரும்புகிறது. ஆதி 3:19 யாக் 2:26) ஆவியும் ஆத்துமாவும் அழியாதவை. சரீரம் மரித்தாலும் ஆவியும், ஆத்துமாவும் பரலோகத்திலோ அல்லது நரகத்திலோ மரிக்காமல் உயிரோடு இருக்கும். (1பேதுரு 3:4; லூக்கா 12:5; லூக்கா 16:23)

யாக்கோபு – தொகுப்புரை

1 அதிகாரம்

"மோசம்போகாதிருங்கள்" - தேவன் ஒரு மனுஷனை பாவம் செய்ய வற்புறுத்துகிறார் என்றோ, அல்லது தேவனே பாவத்தின் காரணர் என்றோ யாராவது கூறினால் அதை நம்பி ஏமாந்து மோசம்போய் விடக்கூடாது. (யாக் 1:13)

6. நன்றி கூறுவதன் பரீட்சை - எல்லா நல்ல ஈவுகளின் ஆதாரம் - (பிலி 1:6; 1தெச 5:18)

யாக் 1:17 நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை.

"சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது" - நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி தேவனிடமிருந்து வருகிறது. தீமையான எந்தக் காரியமும் சாத்தானிடமிருந்து வருகிறது. தேவன் வாக்கு மாறாதவர். அவரும் மாறாதவர். ஆனால் சாத்தானோ தன்னுடைய சுய இச்சைக்காக நேரத்திற்கு நேரம் மாறுகிறவன். மனுஷரை எப்படி விழுங்கலாம் என்று கெர்ச்சிக்கிற சிங்கம்போல சுற்றித் திரிகிறவன்.

மாறுதல் (change) - παραλλαγή - parallagee - 3883

பெண்பால் பெயர்ச்சொல் - மாறுதல் (change; variation, variableness) - இது வானவியல் சம்பந்தமான வார்த்தையாகும். வானத்திலுள்ள கிரகங்கள் இடம் மாறுவதினால் ஒவ்வொரு வருஷமும் சீதோஷ்ண நிலைகளில் மாற்றம் உண்டாகிறது. தேவன் இதுபோல மாறுகிறவர் அல்ல. எல்லாக் காலத்திலும் அவர் ஒன்றுபோல இருக்கிறவர். அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை. (எபி 13:8)

7. கிறிஸ்தவ அனுபவத்தின் பரீட்சை - புதிய பிறப்பு - (யோவான் 3:5; 1பேதுரு 1:23; 1யோவான் 5:1)

யாக் 1:18 அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்தியவசனத்தினாலே ஜெநிப்பித்தார்.

"அவர் சித்தங்கொண்டு" - எல்லா ஜனங்களும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதும் தேவனுடைய வார்த்தையினால் மறுபடியும் ஜெநிப்பிக்கப்படவேண்டும் என்பதும் தேவனுடைய சித்தமாகும். (யோவான் 3:16; 1தீமோ 2:4; 2பேதுரு 3:9; வெளி 22:17)

"நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார்" - மனுஷரைப் புது சிருஷ்டியாக்கும் பிரதிஷ்டிகளில் தேவனுடைய சத்திய வசனமும் முக்கிய பங்கு வகிக்கிறது. (யோவான் 3:5; 1பேதுரு 1:23; எபே 5:26)

"முதற்பலன்கள்" (firstfruits) - (ரோமர் 8:23)

8. கிறிஸ்தவ ஜீவியத்தின் பரீட்சை - (எபே 4:1)

யாக் 1:19 ஆகையால், என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்;

யாக் 1:20 மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாதே.

யாக் 1:21 ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்.

யாக்கோபு விசுவாசிகளுக்குக் கூறியிருக்கும் கட்டளைகள்

1. கேட்கிறதற்குத் தீவிரமாயிருக்க வேண்டும். (யாக் 1:19)

யாக்கோபு - தொகுப்புரை

1 அதிகாரம்

2 பேசுகிறதற்குப் பொறுமையாயிருக்க வேண்டும். (யாக் 1:19)

3 கோபிக்கிறதற்குத் தாமதமாயிருக்க வேண்டும். (யாக் 1:19)

4 எல்லாவித அழுக்கையும் ஒழித்துவிட வேண்டும். (யாக் 1:21)

5. எல்லாவிதமான கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிடவேண்டும் (யாக் 1:21)

6 வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக் கொள்ள வேண்டும். (யாக் 1:22)

7 திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருக்க வேண்டும்.

பலவேறுவிதமான மனநிலைகள்

1 எளிதில் கோபப்பட்டு எளிதில் சாந்தமடைகிறவர்கள்

2 எளிதில் கோபப்படுகிறவர்கள் இவர்களைச் சாந்தப்படுத்துவது கடினம்

3 எளிதில் கோபப்படாதவர்கள் இவர்களைச் சாந்தப்படுத்துவது எளிது.

4 எளிதில் கோபப்படாதவர்களும் எளிதில் சாந்தமடையாதவர்களும்

"மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாதே" - மனுஷன் கேட்பதற்குத் தீவிரமாய் இருக்க வேண்டும். பேசுவதற்கும் கோபிக்கிறதற்கும் பொறுமையாயும், தாமதமாயும் இருக்க வேண்டும். மனுஷனுடைய கோபம் தேவன் எதிர்பார்க்கும் நீதியை நடப்பிக்காது. இஸ்ரவேல் ஜனங்கள் பக்தி வைராக்கியம் கொண்டு, தீர்க்கதரிசிகளையும், அவர்களுடைய சொந்த மேசியாவையும் மேசியாவை பின்பற்றுகிறவர்களையும் கோபத்தோடு கொலைசெய்தார்கள் ஆனால் அவர்களுடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கவில்லை.

அழுக்கு (filthiness) - ῥυπαρία rhyparia - 4507

பெண்பால் பெயர்ச்சொல் - அழுக்கு (moral filthiness, impure and unholy affections, baseness, vileness; depravity)

அழுக்கு (dirty) - ῥυπαρός - rhyparos - 4508

பெயரடை - கந்தையான (cheap, shabby; foul; dirty; moral wickedness; sordid; mean) vile (யாக் 2:2)

அழுக்கு (filth) - ῥύπος - rhypos - 4509

ஆண்பால் பெயர்ச்சொல் - அழுக்கு (filth) (1பேதுரு 3:21)

அசுத்தம் (filth) - ῥυπαίνω - rhypainoo - 4510

வினைச்சொல் - அசுத்தமாயிரு (moral filth) (வெளி 22:11)

கொடிய (superfluity) - περισσεία - perisseia - 4050

பெண்பால் பெயர்ச்சொல் - பரிபூரணம், அதிகம் superfluity (யாக் 1:21) abundance (ரோமர் 5:17; 2கொரி 8:2; 2கொரி 10:15)

துர்க்குணம் (wickedness) κακία - kakia - 2549

பெண்பால் பெயர்ச்சொல் - துர்க்குணம், குரோதம், பொறாமை (எபே 4:31)

சாந்தம் (meekness) - πραΰτης - prautees - 4240

பெண்பால் பெயர்ச்சொல் - சாந்தம் (mildness; gentleness) (யாக் 1:21; 3:13; 1பேதுரு 3:15)

1 அதிகாரம்

நாட்டப்படுதல் (engrafted) ἔμφυτος - emphytos - 1721

பெயரடை – நாட்டப்பட்ட (inborn; innate) – தேவனுடைய சத்திய வசனம் ஒருவருடைய ஆத்துமாவில நாட்டப்படுவதினால் அந்த ஆத்துமா இரட்சிக்கப்பட்டு மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுகிறது. (யாக் 1:18 எபே 5:26) ஆகையினால் தேவ வசனம் விதையாக

வர்ணிக்கப்படுகிறது. (1பேதுரு 1:23, 1யோவான் 3:9) தேவவசனம் ஆத்துமாவில் நாட்டப்படும்போது அது முளைத்து, நித்திய ஜீவனாக வளர்கிறது. நன்றாகப் பண்படுத்தப் பட்ட நல்ல நிலத்தில நாட்டப்படும் விதை மட்டுமே நன்றாக முளைத்துப் பலன் தரும். (மத் 13:3-30)

9. **கீழ்ப்படிதலின் பரீட்சை** - (எபி 11:8-10, 17-19, ரோமர் 1:5)

யாக் 1:22 அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர் களாயும் இருங்கள்

யாக் 1:23 என்னத்தினாலெனில் ஒருவன் திருவசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாதவனானால் கண்ணாடியிலே தன் சுபாவமுகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப் பான்

யாக் 1:24 அவன் தன்னைத்தானே பார்த்து, அவ்விடம்விட்டுப் போன வுடனே, தன்சாயல் இன்னதென்பதை மறந்து விடுவான்

யாக் 1:25 சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை உற்றுப்பார்த்து அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கி றதை மறக்கிறவனாயிராமல அதற் கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து தன் செய்கையில பாக்கியவானா யிருப்பான்

செய்கிறவர் (doers) - ποιητής - poieetees - 4163

ஆண்பால் பெயர்ச்சொல் – புலவர் செய்கிறவர் (a performer) doer (யாக் 1:22,23,25; யாக் 4:11 ரோமர் 2:13) poet (அப் 17:28)

கேட்கிறவர் (hearers) ἀκροατής - akroatees - 202

ஆண்பால பெயர்ச்சொல் - கேட்கிறவர்கள் (யாக் 1:22,23,25 ரோமர் 2:13)

வஞ்சித்தல (deceiving) - παραλογίζομαι - paralogizomai - 3884

வினைச்சொல் - வஞ்சி (to deceive by false reasoning) (கொலோ 2:4, யாக் 1:22)

"கண்ணாடியிலே தன சுபாவமுகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான்" - நாம திருவசனத்தைக் கேட்டு, அதன்படி செய்கிறவர்களாகவும் இருக்க வேண்டும் கண்ணாடியில தன் முகத்தைப் பார்க்கிறவன அதிலுள்ள அசுத்தங்களைப் பார்க்கும்போது வருத்தப்படுவான அவனுடைய வருத்தம் அவன கண்ணாடிக்கு முன்நின்று பார்க்கும் வரையிலதான இருக்கும் அவன கண்ணாடியை விட்டுத் தூரத்தில போய விட்டால அவனுடைய முகத்தின அசுத்தம் அவனுக்கு நினைவில இருப்பதில்லை விசுவாசிகளும் இப்படித்தான இருக்கி றார்கள தேவவசனங்களை வாசிக்கும போது அதன சத்தியத்திற்குக் கீழ்ப்படிய வேண்டு மென்று விரும்புகிறார்கள வேத வசனத்தை வாசிப்பதை விட்டுவிட்டால அவர்களுக்குள சத்தியம் நினைவில இருப்பதில்லை தன்சாயல் இன்னதென்பதை மறந்துவிடு கிறார்கள (யாக் 1:24)

கண்ணாடி (glass) ἔσοπτρον - esoptron 2072

பால்வேறுபாடற்ற பெயர்ச்சொல் கண்ணாடி (mirror) (1கொரி 13:12, யாக் 1:23)

யாக்கோபு - தொகுப்புரை

1 அதிகாரம்

உற்றுப்பார்த்தல் (looketh into) - **παρακύπτω** - **parakyptoo** - 3879

வினைச்சொல் - பார், உற்றுப்பார் (to **bend over for a better look) look into** (யாக் 1:25) **stoop down** (லூக்கா 24:12; யோவான் 20:5,11)

"சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப பிரமாணம்" (the perfect law of liberty) - இது மோசேயின் பிரமாணமல்ல பூரணப பிரமாணமாகிய புதிய பிரமாணத்தை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. (எபி 8:6) மோசேயின் பிரமாணம் குறைவுடையது. தவறானது. (சங் 19:7, எபி 7:12,18-19,22; எபி 8:6-7

நிலைத்திருத்தல் (continueth) - **παραμένω** - **paramenoo** - 3887

வினைச்சொல் - தங்கு, நிலைத்திரு **(to stay beside; stand by; stand fast) continue** (யாக் 1:25; எபி 7:23; பிலி 1:25) **abide** (1கொரி 16:6) - சத்திய வசனத்தை வாசித்து தனக்கு அளிக்கப்படும் ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்தி ஒவ்வொருவரும் தங்களுடைய பரிசுத்த ஜீவியத்தில் முன்னேறிச் செல்ல வேண்டும் இப்படிப்பட்டவர்கள் மட்டுமே தங்கள் செய்கைகளில் பாக்கியவான்களாக இருப்பார்கள்

10. மாசில்லாத சுத்தமான பக்தியின் பரீட்சை - (ரோமர் 8:1 13; 2கொரி 5:17, கொலோ 3:5 10)

யாக் 1:26 உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னை தேவபக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவபக்தி வீணாயிருக்கும்

யாக் 1:27 திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும். உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்குமுன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது.

தேவபக்தி (religious) - **θρῆσκος** - **threeskos** - 2357

பெயரடை - தேவபக்தி **(a careful follower of his belief)**

அடக்குதல் (bridleth) - **χαλιναγωγέω** - **chalinagoogeoo** - 5468

வினைச்சொல் - அடக்கு (யாக் 1:26, 3:2)

வஞ்சித்தல் (deceiveth) - **ἀπατάω** - **apataoo** - 538

வினைச்சொல் - மோசம் போக்கு வஞ்சி **(to cheat; outwit; to be deceived)** (எபே 5:6; 1தீமோ 2:14 யாக் 1:26)

தேவபக்தி (religion) - **θρησκεία** - **threeskeia** - 2356

பெண்பால் பெயர்ச்சொல் - சமயம் ஆராதனை, தேவபக்தி, பக்தி **religion** (யாக் 1:26-27, அப் 26:5) **worshiping** (கொலோ 2:18

வீண் (vain) - **μάταιος** - **mataios** - 3152

பெயரடை - வீணான **vain** (யாக் 1:26; 1கொரி 3:20; 1கொரி 15:17, தீத்து 3:9) **vanity** (அப் 14:15

மாசில்லாத சுத்தமான பக்தியின் அம்சங்கள்

1 திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறது (யாக் 1:27)

2 உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறது (மத் 5:16,44 2கொரி 9:8 கொலோ 1:10; 1தீமோ 1:5, தீத்து 2:7,14, தீத்து 3:1,8; எபி 12:14, யாக் 1:27, யாக் 3:13,17; 1பேதுரு 2:12; 1யோவான் 3:17

2 அதிகாரம்

11. **சகோதர சிநேகத்தின் பரீட்சை** - யோவான் 13:34-35, 1கொரி 13, 1யோவான் 3:11-17.

யாக் 2:1 என் சகோதரரே, மகிமையுள்ள நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மேலுள்ள விசுவாசத்தைப் பட்சபாதத்தோடே பற்றிக்கொள்ளாதிருப்பீர்களாக.

யாக் 2:2 ஏனெனில், பொன் மோதிரமும் மினுக்கான வஸ்திரமும் தரித்திருக்கிற ஒரு மனுஷனும், கந்தையான வஸ்திரம் தரித்திருக்கிற ஒரு தரித்திரனும் உங்கள் ஆலயத்தில் வரும்போது,

யாக் 2:3 மினுக்கான வஸ்திரந்தரித்தவனை நீங்கள் நோக்கி: நீர் இந்த நல்ல இடத்தில் உட்காரும் என்றும், தரித்திரனைப் பார்த்து: நீ அங்கே நில்லு, அல்லது இங்கே என் பாதபடியண்டையிலே உட்காரு என்றும் நீங்கள் சொன்னால்,

யாக் 2:4 உங்களுக்குள்ளே பேதகம்பண்ணி, தகாத சிந்தனைகளோடே நியாயந்தீர்க்கிறவர்களாயிருப்பீர்களல்லவா?

யாக் 2:5 என் பிரியமான சகோதரரே, கேளுங்கள், தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம்பண்ணின ராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்துகொள்ளவில்லையா?

யாக் 2:6 நீங்களோ தரித்திரரைக் கனவீனம் பண்ணுகிறீர்கள். ஐசுவரியவான்களல்லவோ உங்களை ஒடுக்குகிறார்கள்? அவர்களல்லவோ உங்களை நியாயாசனங்களுக்கு முன்பாக இழுக்கிறார்கள்?

யாக் 2:7 உங்களுக்குத் தரிக்கப்பட்ட நல்ல நாமத்தை அவர்களல்லவோ தூஷிக்கிறார்கள்?

யாக் 2:8 உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று வேத வாக்கியம் சொல்லுகிற ராஜரிக பிரமாணத்தை நீங்கள் நிறைவேற்றினால் நன்மை செய்வீர்கள்.

யாக் 2:9 பட்சபாதமுள்ளவர்களாயிருப்பீர்களானால் பாவஞ்செய்து, மீறினவர்களென்று நியாயப் பிரமாணத்தால் தீர்க்கப்படுவீர்கள்.

"இயேசுகிறிஸ்துவின்மேலுள்ள விசுவாசத்தைப் பட்சபாதத்தோடே பற்றிக் கொள்ளாதிருப்பீர்களாக" - கிறிஸ்துவின்மேல் பரிபூரண விசுவாசம் வைக்க வேண்டும். தவறான ஆதாயத்தின்மேல் பிரியப்பட்டு, இயேசு கிறிஸ்துவின்மீது விசுவாசம் வைக்கக் கூடாது. ஐசுவரியவானாக வேண்டுமென்று ஆசைப்பட்டு, தேவனிடத்தில் ஐசுவரியம் வேண்டுமென்று கேட்கக்கூடாது. சமுதாயத் தேவைகளையும் ஆவிக்குரிய தேவைகளையும் சந்திப்பதற்குத் தேவையான பொருளாதார ஆதாரம் வேண்டுமென்றே தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ண வேண்டும். (யாக் 2:1-4)

ஆலயம் (assembly) - **συναγωγή** - synagoogee - 4864

பெண்பால் பெயர்சொல் - ஜெபஆலயம், ஆலயம், கூட்டம் **assembly** (யாக் 2:2), **congregation** (அப் 13:43), **synagogue** (மாற்கு 1:21)

பொன் மோதிரம் (gold ring) - **χρυσοδακτύλιος** - chrysodaktylios - 5554

பெயரடை - பொன் மோதிரமான - பொன் மோதிரம் பாவமல்ல. புருஷரும், ஸ்திரீகளும் பொன்மோதிரங்களை அணியும் வழக்கம் பழைய ஏற்பாட்டுக் காலத்திலிருந்தே இருக்கிறது. ஆனாலும் பொன்மோதிரத்தைக் கண்டித்தக் கூடாது.

மினுக்கானது (shining) **λαμπρός** lampros 2986

யாக்கோபு - தொகுப்புரை

2 அதிகாரம்

பெரான - மினுக்கான, பிரகாசமான தெளிவான (bright; brilliant; radiant; shining) **goodly** (யாக் 2:2; வெளி 18:14); **bright** (அப் 10:30; வெளி 22:16); **white** (வெளி 15:6; வெளி 19:8); **clear** (வெளி 22:1); **gay** (யாக் 2:3); **gorgeous** (லூக்கா 23:11) - மோதிரத்தைப் போலவே மினுக்குள்ள வஸ்திரமும் பாவமல்ல. ஆயினும் மோதிரமும் மினுக்குள்ள வஸ்திரமும் அணிந்திருப்போருக்கு ஆலயத்தில் விசேஷித்த அந்தஸ்தும், மரியாதையும் கொடுத்து ஒன்றுமில்லாத ஏழைகளை அவமதிப்பது சரியானதல்ல

வஸ்திரம் (apparel) - ἐσθής - esthees - 2066

பெண்பால் பெயர்ச்சொல் - வஸ்திரம் **apparel** (யாக் 2:2; அப் 1:10; அப் 12:21); **raiment** (யாக் 2:2); **clothing** (யாக் 2:3; அப் 10:30); **robe** லூக்கா 23:11

"அழுக்கான வஸ்திரம் தரித்திருக்கிற ஒரு தரித்திரனும் உங்கள் ஆலயத்தில் வரும்போது" - ஜெபாலயங்களில் சிறு வழக்குகளை விசாரிப்பதற்கு நீதிமன்றங்களை செயல்படுவது வழக்கம் (மாற்கு 1:21) இந்த வசனத்தில் இங்குக் கூறப்பட்டிருப்பது ஜெபாலயத்தில் ஆராதனை நடைபெறும் காரியமல்ல. நீதிமன்றத்திற்காக ஜனங்கள் கூடிவருவதை இந்த வசனம் குறிப்பிடுகிறது. நீதிமன்றத்தில் ஐசுவரியவானுக்கு ஒரு நீதியும், தரித்திரனுக்கு வேறொரு நீதியும் என்று பட்சபாதம் காட்டுவதே தவறு. நீதிக்கு முன்பாக ஐசுவரியவானையும் தரித்திரனையும் ஒன்றுபோல நடத்த வேண்டும்.

தகாத சிந்தனைகளோடே நிதானிக்கிறவர்களுடைய அடையாளங்களும், கிரியைகளும்

1 பட்சபாதத்தோடு செயல்படும் நீதிபதி (யாக் 2:4)

2 தகாத சிந்தனைகளோடு நிதானிக்கும் நீதிபதி (யாக் 2:4)

3 தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம் பண்ணின ராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்துகொண்டிருக்கிறார் (யாக் 2:5)

4 நீதிபதி தரித்திரரைக் கனவீனம் பண்ணுகிறார் (யாக் 2:6)

5. துன்மார்க்கர் தரித்திரரை ஒடுக்குகிறார்கள் (யாக் 2:6)

6 தங்களுக்குச் சாதகமாக நீதி வழங்குமாறு ஐசுவரியவான்கள் நீதிபதிகளை வற்புறுத்துகிறார்கள்

7 அவர்கள் தேவனுடைய நாமத்தைத் தூஷிக்கிறார்கள் (யாக் 2:7)

"ராஜரிக பிரமாணம்" - பழைய ஏற்பாட்டு உடன்படிக்கையும் புதிய ஏற்பாட்டு உடன்படிக்கையும் "நாம் நம்மிடத்தில் அன்புகூருகிறதுபோல பிறனிடத்திலும் அன்புகூரவேண்டும்" என்று வலியுறுத்துகிறது (லேவி 19:18; மத் 22:39; ரோமர் 13:8-9; கலா 5:14; எபே 5:2) யாக்கோபு இந்த நிருபத்தை விசுவாசிகளுக்கு எழுதுகிறார். கிரேக்க மதத்தில் ஒரு காரியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும்போது அதை "ராஜரிகமானது" என்று கூறுவது வழக்கம். இதே பயன்பாடே இங்கு பிரமாணத்திற்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. யாக் 2:8

"மீறினவர்களென்று நியாயப்பிரமாணத்தால் தீர்க்கப்படுவீர்கள்" - பட்சபாதமுள்ளவர்கள் தேவனுடைய பிரமாணத்தை மீறுகிறார்கள் (1யோவான் 3:4)

12. பரிபூரணத்தின் பரீட்சை - (மத் 5:44-48; 2கொரி 10:4-6)

யாக் 2:10 எப்படியெனில், ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும் ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்

யாக் 2:11 ஏனென்றால், விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்று சொன்னவர் கொலை செய்யாதிருப்பாயாக என்றும் சொன்னார்; ஆதலால், நீ விபசாரஞ் செய்யாமலிருந்தும் கொலை செய்தாயானால் நியாயப்பிரமாணத்தை மீறினவனாவாய்.

யாக்கோபு – தொகுப்புரை

2 அதிகாரம்

யாக் 2:12 சுயாதீனப்பிரமாணத்தினால் நியாயத்தீர்ப்படையப்போகிறவர்களாய் அதற்கேற்றபடி பேசி, அதற்கேற்றபடி செய்யுங்கள்

யாக் 2:13 ஏனென்றால், இரக்கஞ்செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும்; நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மைபாராட்டும்

"எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்" - ஒரு ஆத்துமாவை அழிப்பதற்கு ஒரு பாவமே போதுமானது. (ஆதி 2:17; ரோமர் 5:12-21). நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுகிறவர்கள் அதை முழுவதுமாகக் கைக்கொள்ள வேண்டும். (உபா 27:26 கலா 3:10) நியாயப்பிரமாணத்தில் ஒரு பிரமாணத்தை மீறினாலும் மீறுகிறவர்களுக்கு மரணம் தண்டனையாகக் கொடுக்கப்படும் (யாக் 2:11, ரோமர் 1:32; 1கொரி 6:9-11; கலா 5:19-21). ஆகையினால் ஒருவன் நியாயப் பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் அவன் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்

"விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்று சொன்னவர் கொலை செய்யாதிருப்பாயாக என்றும் சொன்னார்" - இந்தக் கட்டளை புதிய கற்பனையிலும், பழைய கற்பனையிலும் உள்ளது. (யாத் 20:13-14; மத் 5:21-32, ரோமர் 13:9) இது பழைய கற்பனையில் உள்ளதினால் நாம் இதற்குக் கீழ்ப்படிய வேண்டிய அவசியமில்லை. ஆனால் இந்தக் கட்டளை புதிய கற்பனையிலும் உள்ளது. ஆகையினால் இதற்குக் கீழ்ப்படிய வேண்டும். அப் 15:24

"சுயாதீனப்பிரமாணம்" (the law of liberty) - இந்த வாக்கியம் புதிய கற்பனையைக் குறிக்கும் (யாக் 1:25) இந்தச் சுவிசேஷத்தினால் இக்காலத்து மனுஷர் நியாயந்தீர்க்கப்படுவார்கள் (ரோமர் 2:16)

பிரமாணங்களின் வகைகள்

1. இரக்கத்தின் பிரமாணம் (The law of mercy) (மத் 5:7)
2. மன்னிப்பின் பிரமாணம் (Law of forgiveness) (மத் 6:14-15)
3. விதைப்பு, அறுப்பு ஆகியவற்றின் பிரமாணம் (Law of sowing and reaping) (கலா 6:7-8)

"இரக்கம்" - இரக்கம் பெறுகிறவனும், இரக்கம் செய்கிறவனும் மகிழ்ந்து களிகூரலாம். அவர்கள் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதினால் நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பித்துக் கொள்வார்கள். நியாயத்தீர்ப்புக்கு மேலாக இரக்கத்தினால் அவர்கள் உயர்த்தப்படுவார்கள். நியாய பிரமாணத்தில் இரக்கம் இல்லை. கிருபையின் மூலமாக வரும் இரக்கம் நியாய பிரமாணத்தை விட மேலானது. நியாயப்பிரமாணத்தின் நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டுமென்றால் நாம் தேவனுடைய இரக்கத்தைப் பெற்று மனுஷருக்கு இரக்கம் செய்ய வேண்டும். நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மைபாராட்டும் (யோவான் 3:16; யோவான் 5:24)

13. விசுவாசத்தின் பரீட்சை - (5:10; 1பேதுரு 1:7; எபி 11:17-19)

யாக் 2:14 என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும் கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா?

யாக் 2:15 ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது

யாக் 2:16 உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன?

யாக் 2:17 அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலே தானே செத்ததாயிருக்கும்.

2 அதிகாரம்

யாக் 2:18 ஒருவன்: உனக்கு விசுவாசமுண்டு, எனக்குக் கிரியைகளுண்டு; கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தை எனக்குக் காண்பி, நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன் என்பானே.

யாக் 2:19 தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய், அப்படிச் செய்கிறது நல்லது; பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின்றன.

"ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவன்" - கிறிஸ்தவ ஜீவியத்திற்கு விசுவாசம் மட்டுமே போதுமானது, கிரியை தேவையற்றது என்று ஒருசிலர் கூறுகிறார்கள். கிரியைகளில்லாத விசுவாசம் செத்தது. (யாக் 2:17-18, 20-26) நாம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுகிறோம். அதே சமயத்தில் தேவன் மீது நாம் வைத்திருக்கும் விசுவாசத்தை மனுஷர் முன்பாக வெளிப்படுத்திக் காண்பிக்க வேண்டும். எல்லா மனுஷருக்கும் முன்பாக நன்மையான காரியங்களையே செய்ய வேண்டும். (மத் 5:16, மத் 16:27; எபே 2:10; 1தீமோ 6:18; 2தீமோ 3:17; தீத்து 1:16; தீத்து 2:7,14; தீத்து 3:8) யாரும் கிரியையினால் நீதிமானாக்கப்படுவதில்லை. (ரோமர் 3:25-31; ரோமர் 4:4-6; ரோமர் 9:11; ரோமர் 11:6; கலா 2:16; எபே 2:8-9; தீத்து 3:5) ஆனாலும் நீதிமானாக்கப்பட்டவர்கள் தங்களை தேவனுக்குரியவர்கள் என்பதைத் தங்களுடைய கிரியைகளின் மூலமாக நிரூபிக்க வேண்டும். (யாக் 2:14-18, 20-26)

"விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்" - கிரியைகளில்லாத விசுவாசம் செத்தது. அதுபோலவே விசுவாசமில்லாத கிரியையும் செத்ததுதான். (யாக் 2:17,20,26) கிரியையும் விசுவாசமும் இணைந்து செயல்பட வேண்டும். ஒன்றில்லாமல் மற்றொன்றினால் பிரயோஜனமில்லை.

"பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின்றன" - தேவன்மீது விசுவாசம் வைப்பதினால் ஒருவர் நீதிமானாக்கப்பட்டிருக்கிறார் என்று நிரூபிக்க முடியாது. ஏனெனில் பிசாசுகளும் தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசித்து நடுங்குகின்றன. பிசாசுகள் தங்களுடைய விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படவில்லை.

14. விசுவாசமும் கிரியைகளும் - இரண்டு விளக்கங்கள் - (ஆதி 22; யோசுவா 2)

யாக் 2:20 வீணான மனுஷனே, கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததென்று நீ அறிய வேண்டுமோ?

யாக் 2:21 நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலிபீடத்தின் மேல் செலுத்தினபோது கிரியைகளினாலே அல்லவோ, நீதிமானாக்கப்பட்டான்?

யாக் 2:22 விசுவாசம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சிசெய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே.

யாக் 2:23 அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான்; அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்கிற வேதவாக்கியம் நிறைவேறிற்று; அவன் தேவனுடைய சிநேகிதனென்னப்பட்டான்.

யாக் 2:24 ஆதலால், மனுஷன் விசுவாசத்தினாலேமாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறானென்று நீங்கள் காண்கிறீர்களே.

யாக் 2:25 அந்தப்படி ராகாப் என்னும் வேசியும் தூதர்களை ஏற்றுக்கொண்டு வேறுவழியாய் அனுப்பிவிட்டபோது கிரியைகளினாலே அல்லவோ நீதியுள்ளவளாக்கப்பட்டாள்?

யாக் 2:26 அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது.

கிரியைகளினால் மட்டும் என்றல்லாமல் கிரியைகளினாலும் விசுவாசத்தினாலும் நீதிமானாக்கப்பட்டவர்களுக்கு எடுத்துக்காட்டுக்கள் (யாக் 2:21-26)

1. ஆபிரகாம் (Abraham) (யாக் 2:21-24, ஆதி 22)

2. ராகாப் (Rahab) (யாக் 2:25, யோசு 2, யோசு 6)

யாக்கோபு - தொகுப்புரை

2 அதிகாரம்

"ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கை பலிபீடத்தின் மேல் செலுத்தினபோது" - ஆதியாகமம் 22 ஆம் அதிகாரத்தின் பிரகாரம் ஆபிரகாம் தேவனிடத்தில் தான் வைத்திருந்த விசுவாசத்தை வெளிப்படுத்தினான். தன்னுடைய குமாரன் ஈசாக்கை பலியிடுமாறு தேவன் ஆபிரகாமிடத்தில் கூறினார். ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான். அந்த விசுவாசத்தினால் அவன் தன் குமாரன் ஈசாக்கை பலிபீடத்தின்மீது செலுத்தினான் (யாக் 2:21). இந்தக் காரியத்தினால் ஆபிரகாம் நீதிமானாக்கப்படவில்லை. இந்த நிகழ்ச்சிக்கு 40 அல்லது 50 வருஷத்திற்கு முன்பாகவே ஆபிரகாம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டான் (ஆதி 12:1-4; ஆதி 15:6; ரோமர் 4:1-6).

"ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது" - ஆதி 15:6 ஆவது வசனம் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆதியாகமம் 22 ஆவது அதிகாரத்தில் ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கை பலிபீடத்தின்மீது செலுத்துவதற்குப் பல வருஷங்களுக்கு முன்பாக ஆதி 15:6 ஆம் வசனம் நிறைவேறிற்று. கீழ்ப்படிதலோடு செய்யும் ஒவ்வொரு கிரியையும் விசுவாசத்தின் செயலாகும்.

"தேவனுடைய சிநேகிதனெனப்பட்டான்" - ஒரு மனுஷனுக்குக் கிடைக்கும் மிகப்பெரிய ஆசீர்வாதம் அவன் தேவனுடைய சிநேகிதன் என்று அழைக்கப்படுவதாகும்.

"மனுஷன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறான்" - யாக்கோபு இந்த நிருபத்தில் மனுஷன் எவ்வாறு நீதிமானாக்கப்படுகிறான் என்பதை விளக்கிக் கூறுகிறார். மனுஷருக்கு விசுவாசமும் வேண்டும், கிரியையும் வேண்டும். பவுலும் இந்தக் கருத்தை வலியுறுத்தியிருக்கிறார். விசுவாசிகள் தங்களுடைய விசுவாசத்தைக் கிரியைகளினால் வெளிப்படுத்திக் காண்பிக்க வேண்டும் (யாக் 2:14).

"ராகாப் என்னும் வேசி" - இவள் தன் கிரியைகளினாலும் விசுவாசத்தினாலும் நீதியுள்ளவளாக்கப்பட்டாள் (யோசு 2; எபி 11:31).

"ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறது" - மனுஷருடைய மரணத்தின்போது சரீரம் மட்டுமே மரிக்கிறது. சரீரத்தை விட்டு ஆவியும் ஆத்துமாவும் வெளியேறிச் செல்வதினால் சரீரத்திற்கு மரணம் உண்டாகிறது. சரீரம் மண்ணுக்குத் திரும்புகிறது. மரித்த பின்பு, நீதிமானுடைய ஆவியும் ஆத்துமாவும் பரலோகத்திற்குச் சென்று தங்களுடைய உயிர்த்தெழுதலுக்காகக் காத்துக் கொண்டிருக்கும் (2 கொரி 5:8; பிலி 1:21-24; எபி 12:23; வெளி 6:9-11). மரித்த துன்மார்க்கருடைய ஆவியும் ஆத்துமாவும் நரகத்திற்குச் சென்று தங்களுடைய உயிர்த்தெழுதலுக்காகக் காத்துக் கொண்டிருக்கும் (லூக்கா 16:19-31; ஏசா 14:9; வெளி 20:11-15). ஆவியும் ஆத்துமாவும் அழிவுக்குரியவை. அவை ஒருபோதும் மரிப்பதில்லை. அவை மண்ணுக்குத் திரும்பாது.

"கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது" - உள்ளான மனுஷன் சரீரத்தைவிட்டு வெளியேறியவுடன் சரீர மரணம் உண்டாகிறது. அதுபோல கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது. செத்த விசுவாசத்தினால் பயன் ஒன்றுமில்லை.

யாக்கோபு – தொகுப்புரை

3 அதிகாரம்

III. கிறிஸ்தவரும் நாவும் – (1.26; 3.1-12 நீதி 12:18; 13.3; 15:4; 18:8,21 லூக்கா 6.45; 1பேதுரு 3:10; ரோமர் 3:13,)

1. பரிபூரணத்தின் அடையாளம்

யாக் 3:1 என் சகோதரரே, அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதக [illegible].

யாக் 3.2 நாம் எல்லோரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்; ஒருவன் சொல்தவறாதவனானால் அவன் பூரணபுருஷனும், தன் சரீர முழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக்கொள்ளக் கூடியவனு மாயிருக்கிறான்

போதகர் (master) - διδάσκαλος - didaskalos - 1320

ஆண்பால் பெயர்சொல் - வேதபாரகன், வேதகர், போதகர், குரு (teachers) (லூக்கா 12:48, அப 13.1

"அநேக விஷயங்களில் தவறுகிறோம்" - நாம் எல்லோரும் பல காரியங்களில் இடறல் அடைகிறோம்

2. நாவின் சுபாவம்

யாக் 3.3 பாருங்கள், குதிரைகள் நமக்குக் கீழ்ப்படியும்படிக்கு அவை களின் வாய்களில் கடிவாளம் போட்டு அவைகளுடைய முழுச்சரீரத்தையும் திருப்பி நடத்துகிறோம்

யாக் 3.4 கப்பல்களையும் பாருங்கள் அவைகள் மகா பெரியவைகளா யிருந்தாலும், கடுங்காற்றுகளால் அடிபட்டாலும், அவைகளை நடத்துகிறவன் போகும்படி யோசிக்கும் இடம் எதுவோ அவ்விடத்திற்கு நேராகமிகவும் சிறிதான சுக்கானாலே திருப்பப்படும்.

யாக் 3.5 அப்படியே நாவானதும் சிறிய அவயவமாயிருந்தும் பெருமையான வைகளைப் பேசும். பாருங்கள் சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்தி விடுகிறது.

யாக் 3.6 நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச் சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும் நரக அக்கினியினால் கொளுத்தப் படுகிறதாயும் இருக்கிறது

பெரிய காரியங்களைச் செய்யும் சிறிய பொருட்கள்

1 குதிரைகளை வழிநடத்தும் கடிவாளம் (யாக் 3.3)

2 கப்பல்களை வழிநடத்தும் சுக்கான் (யாக் 3:4)

3 பெரிய காட்டைக் கொளுத்தும் சிறிய நெருப்பு

4 முழு சரீரத்தையும் கறைப்படுத்தும் நாவு (யாக் 3:5-8

"ஆயுள் சக்கரம்" (course of nature) மனுஷருடைய ஆயுள் மனுஷனுடைய நாவு பரிசுத்தப்பட வேண்டும் துன்மார்க்கனுடைய நாவு பலருடைய ஆயுள் சக்கரமாகிய ஜீவிப்பதையே அழித்துப்போடும்

சக்கரம் (wheel) - τροχός - trochos - 5164

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - சக்கரம்

"நரக அக்கினியினால் கொளுத்தப் படுகிறது" துன்மார்க்கருடைய ஆயுள் சக்கரம் நரகத்திற்குச் சென்று அங்கு நரக அக்கினியினால் கொளுத்தப்படும்.

நரகம் (hell) - γέεννα - geenna 1067

பெண்பால் பெயர்சொல் - நரகம் (லூக்கா 12:5)

3 அதிகாரம்

3. நாவை அடக்க முடியாது

யாக் 3:7 சகலவிதமான மிருகங்கள் பறவைகள் ஊரும்பிராணிகள் நீர்வாழும் ஜெந்துக்கள் ஆகிய இவைகளின் சுபாவம் மனுஷ சுபாவத்தால் அடக்கப்படும், அடக்கப் பட்டதுமுண்டு

யாக் 3:8 நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது, அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்தது மாயிருக்கிறது.

"நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது" - மனுஷர் எல்லா விலங்குகளையும் அடக்கிப் பழக்குகிறார்கள் ஆனால் மனுஷனால் தன் நாவை அடக்க முடிய வில்லை மனுஷனுடைய இரட்சிப்பு மட்டுமே அவனுடைய நாவின் பேச்சு வழக்குகளைக் கட்டுப்படுத்தும். (2கொரி 5:17-18)

நாவைப் பற்றிய காரியங்கள்

1 சிறிய அவயவம் (யாக் 3:5)

2 பெருமைகளைப் பேசும் (யாக் 3:5)

3 நெருப்பைப் போன்றது (யாக் 3:6)

4. அநீதி நிறைந்த உலகம் (யாக் 3:6)

5 முழுச்சரீரத்தையும் கறைப்படுத்துகிறது. யாக் 3:6

6 ஆயுள் சக்கரத்தைக் கொளுத்தி விடுகிறது. (யாக் 3:6)

7 நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது (யாக் 3:7 8)

8 நாவு அடங்காத பொல்லாங்குள்ளது. (யாக் 3:8

9 சாவுக்கேதுவான விஷம் நிறைந்தது (யாக் 3:8

10 தேவனைத் துதிக்கிறது, மனுஷனைச் சபிக்கிறது (யாக் 3:9)

11 ஞானத்திற்குரிய சாந்தத்தோடே பேசும் ஆற்றல் உள்ளது (யாக் 3:13

12 கசப்பான வைராக்கியத்தையும், விரோதத்தையும் உண்டுபண்ணக் கூடியது. (யாக் 3:14

நாவுகளின் வகைகள்

1 விரியன் பாம்பின் நாக்கு (Viper's tongues) (யோபு 20:16)

2 இச்சகம் பேசும் நாக்கு (Flattering tongue) (சங் 5:9)

3 பெருமைகளைப் பேசுகிற நாவு (Proud tongue) (சங் 12:3)

4 கள்ள நாவு (Lying tongue) (சங் 109:2; நீதி 6:17)

5 கபட நாவு (Deceitful tongue) (சங் 120:2)

6. கபடநாவு (False tongue) (சங் 120:3

7 மாறுபாடுள்ள நாவு (Froward tongue) (நீதி 10:31)

8 மாறுபாடுள்ள நாவு (Wholesome tongue) (நீதி 10:31

9 ஒளஷதம் போன்ற நாவு (Healthy tongue) (நீதி 12:18)

10 கேடுள்ள நாவு (Naughty tongue) (நீதி 17:4)

11 புரட்டு நாவு (Perverse tongue) (நீதி 17:20)

12 இனிய நாவு (Soft tongue) (நீதி 25:15)

13 பரியாச உதடு (Stammering tongue) (ஏசா 28:11; ஏசா 33:19

14 புறங்கூறுகிற நாவு (Backbiting tongue) (நீதி 25:23)

3 அதிகாரம்

3. சாவுக்கேதுவான விஷம் நிறைந்த நாவு (Poison tongue) (யாக் 3:8)

4. தேவபக்தியற்ற காரியங்களில் நாவை பயன்படுத்துதல்

யாக் 3:9 அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம். தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம்.

யாக் 3:10 துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது.

யாக் 3:11 ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா?

யாக் 3:12 என் சகோதரரே, அத்திமரம் ஒலிவப்பழங்களையும், திராட்சச்செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா? அப்படியே உவர்ப்பான நீரூற்று தித்திப்பான ஜலத்தைக் கொடுக்க மாட்டாது.

சாயல் (similitude) - ὁμοίωσις - homoioosis - 3669

பெண்பால் பெயர்ச்சொல் - சாயல் (making like; image) (ஆதி 1:26, எசே 1:10; தானி 10:16)

யாக் 3:11-12 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் ஒப்புமைகள்

1 ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்காது.

2 அத்திமரம் ஒலிவப்பழங்களைக் கொடுக்காது.

3 திராட்சச்செடி அத்திப்பழங்களைக் கொடுக்காது.

4 உவர்ப்பான நீரூற்று தித்திப்பான ஜலத்தைக் கொடுக்கமாட்டாது.

5. ஞானிகள் தங்கள் நாவை அடக்க முடியும் - (கலா 5:22-23; 1பேதுரு 3:10)

யாக் 3:13 உங்களில் ஞானியும் விவேகியுமாயிருக்கிறவன் எவனோ, அவன் ஞானத்திற்குரிய சாந்தத்தோடே தன் கிரியைகளை நல்ல நடக்கையினாலே காண்பிக்கக்கடவன்.

"ஞானி" (wise man) - தன் நாவை அடக்கி, மற்றவர்களுக்கு நலமான காரியங்களை உபதேசம் பண்ணுகிறவன்.

நடக்கை (conversation) - ἀναστροφή - anastrophee - 391

பெண்பால் பெயர்ச்சொல் - நடக்கை, நடத்தை, நடந்துகொள்ளுதல் (conduct; behavior)

"ஞானத்திற்குரிய சாந்தம்" - உண்மையான ஞானம் சாந்தமுள்ளது. பெருமைபடுகிறவன் ஞானியல்ல. பெருமைபடுகிற ஞானியிடம் கல்வி இருக்கும். ஆனால் அவனிடம் மெய்யான ஞானம் இருக்காது.

6. மானிட ஞானத்தின் நான்கு அடையாளங்கள்

யாக் 3:14 உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும் விரோதத்தையும் வைத்தீர்களானால், நீங்கள் பெருமை பாராட்டாதிருங்கள்; சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய் சொல்லாமலுமிருங்கள்.

யாக் 3:15 இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கிவருகிற ஞானமாயிராமல், லௌகிக சம்பந்தமானதும், ஜென்ம சுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது.

யாக் 3:16 வைராக்கியமும் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச்செய்கைகளுமுண்டு.

3 அதிகாரம்

"உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும் விரோதத்தையும் வைத்தீர்களானால்" - கசப்பான வைராக்கியமும் விரோதமும் ஒருவனுடைய உள்ளத்தில் இருக்குமானால் அவனிடம் மெய்யான ஞானம் இராது. இப்பேர்ப்பட்டவர்கள் சத்தியத்தைப் பேசினாலும் சத்தியம் அவர்களுக்குள் இராது.

பொய்யான ஞானத்தின் தன்மைகள்

1 இருதயத்திலே கசப்பான வைராக்கியம் யாக் 3:14,16

2 இருதயத்திலே விரோதம் (யாக் 3:14,16)

3 பெருமைபாராட்டக்கூடியது. (யாக் 3:14)

4 லௌகிக சம்பந்தமானது (யாக் 3:15)

5 ஜென்மசுபாவத்துக்குரியது (யாக் 3:15) (யாக் 3:15)

6 கலகமும், குழப்பமுமுடையது. (யாக் 3:16)

7 துர்செயல்கள் உடையது (யாக் 3:16)

கசப்பான வைராக்கியம் (Bitter envying) - ζῆλος - zeelos - 2205

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் அல்லது ஆண்பால் பெயர்ச்சொல் - வைராக்கியம், பொறாமை, ஜாக்கிரதை, கோபாக்கினை, வெறுப்பு

7. தெய்வீக ஞானத்தின் ஒன்பது அடையாளங்கள்

யாக் 3:17 பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது.

யாக் 3:18 நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது.

பரத்திலிருந்து வருகிற ஞானத்தின் தன்மைகள்

1 சுத்தமுள்ளது

2 சமாதானமுள்ளது (எபி 12:14)

3 சாந்தமுள்ளது

4 இணக்கமுள்ளது.

5 இரக்கத்தினால் நிறைந்தது.

6 நற்கனிகளால் நிறைந்தது (கலா 5:22-23)

7 பட்சபாதம் இல்லாதது (யாக் 2:1-10)

8 மாயமற்றது.

4 அதிகாரம்

IV கடிந்துரைகளும் கட்டளைகளும் - 4:1-5:20

1. பிரிவினைக்கு காரணம்

யாக் 4:1 உங்களுக்குள்ளே யுத்தங்களும் சண்டைகளும் எதினாலே வருகிறது; உங்கள் அவயவங்களில் போர்செய்கிற இச்சைகளினாலல்லவா?

"உங்களுக்குள்ளே யுத்தங்களும் சண்டைகளும்" - யாக்கோபு இந்த நிருபத்தை எழுதிய காலத்தில் யூதேயாவில் இருந்த யூதர்கள் ரோமபேரரசிற்கு எதிராகக் கலகம் பண்ணினார்கள். தங்களுடைய மார்க்கத்தையும், பாரம்பரிய பழக்க வழக்கங்களையும் பாதுகாத்துக் கொள்ளவதாக ரோமபேரரசோடு எதிர்த்து நின்றார்கள். யூதமார்க்கத்தாரில் ஒரு பிரிவினர் ரோமபேரரசிற்கு எதிராக முரட்டுத்தனமாக நடந்து கொண்டார்கள். ஒருசில பிரதேசங்களில் யூதர்கள் புறஜாதியாரில் திரளான ஜனங்களைக் கொன்று தங்களுக்கு அழிவை வருவித்துக் கொண்டார்கள். பேராசையினாலும் வைராக்கியத்தினாலும் யுத்தங்களும் சண்டைகளும் உண்டாயிற்று. தங்களுடைய யூதமார்க்கத்தைப் புறஜாதியார் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்னும் வைராக்கியத்தில் அவர்களோடு சண்டையிட்டு, யுத்தம்பண்ணி அவர்களுடைய விக்கிரகாராதனைகளை அழிக்க முயற்சி பண்ணினார்கள்.

2. பின்வாங்கிப்போனவர்களின் ஜெபங்களுக்கு பதில் கிடைக்காமல் இருப்பதற்கு ஐந்து காரணங்கள்

யாக் 4:2 நீங்கள் இச்சித்தும் உங்களுக்குக் கிடைக்கவில்லை; நீங்கள் கொலைசெய்தும், பொறாமையுள்ளவர்களாயிருந்தும், அடையக்கூடாமற் போகிறீர்கள்; நீங்கள் சண்டையும் யுத்தமும் பண்ணியும் நீங்கள் விண்ணப்பம்பண்ணாமலிருக்கிறதினாலே உங்களுக்குச் சித்திக்கிறதில்லை.

யாக் 4:3 நீங்கள் விண்ணப்பம் பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று தகாத விதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்.

விண்ணப்பம் பண்ணியும் பெற்றுக் கொள்ளாமல் இருப்பதற்குக் காரணங்கள்

1. இச்சைகள் (Lusts) (யாக் 4:1, 2, 3, 5; யோவான் 8:44)
2. கொலைசெய்தல் (Murders) (யாக் 4:2)
3. பேராசை (Covetousness) (யாக் 4:2)
4. யுத்தங்களும், சண்டைகளும் (Fighting and war) (யாக் 4:2)
5. இச்சைகளை நிறைவேற்றும்படி விண்ணப்பம் பண்ணுதல் (Asking amiss to satisfy lusts) (யாக் 4:3 (யாக் 4:3)
6. விபச்சாரம் (Adulteries) (யாக் 4:4)
7. உலக சிநேகம் (Friendship)
8. பெருமை (Pride) (யாக் 4:6)
9. தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணுதல் (Rebellion against God) (யாக் 4:7)
10. மீறுதலும், பாவமும் (Backsliding and sin) (யாக் 4:8)
11. இருமனமுள்ளவர்களாகச் சந்தேகத்துடன் இருப்பது (Double mindedness, doubt) (யாக் 4:8)
12. நாவைத் தவறாகப் பயன்படுத்துவது (Misuse of the tongue) (யாக் 4:11-12)

4 அதிகாரம்

தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணும்போது தேவனுடைய சித்தத்தின் பிரகாரம் பெற்றுக் கொள்ளலாம் என்று விசுவாசிக்க வேண்டும். (யோவான் 15:7; மாற்கு 11:22-24; எபி 11:6; யாக் 1:5-8)

3. உலகத்திற்கு சிநேகிதனாய் இருக்க விரும்புகிறவன் தேவனுக்கு பகைஞனாயிருக்கிறான் - (1யோவான் 2:15 ரோமர் 12:2 யோவான் 15:18

யாக் 4:4 விபசாரரே, விபசாரிகளே உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்

யாக் 4:5 நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர் நம்மிடத்தில் வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறாரென்று வேதவாக்கியம் வீணாய்ச் சொல்லுகிறதென்று நினைக்கிறீர்களா?

யாக் 4:6 அவர் அதிகமான கிருபையை அளிக்கிறாரே ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார் தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது.

விசுவாசிகளிடம் காணப்பட வேண்டிய சுபாவங்கள்

1 இப்பிரபஞ்சத்தின் கவலைகளிலிருந்து விடுதலை பெற்றிருக்க வேண்டும். (மத் 13:22, லூக்கா 21:34-36)

2 தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தி உலக சந்தோஷத்தை நாடக்கூடாது. (மத் 16:26

3 மற்றவர்களை அவிசுவாசிகள் போல குற்றப்படுத்தக்கூடாது (மத் 18:7)

4 உலகத்திற்குரியவர்களாக இருக்கக் கூடாது. (யோவான் 15:19; யோவான் 17:14,16)

5 இந்த உலகத்தில் தன் ஜீவனை சிநேகிக்கக்கூடாது (யோவான் 12:25

6 இப்பிரபஞ்சத்தினின்று விடுவிக்கப் பட்டிருக்க வேண்டும். (கலா 1:4)

7 உலகம் சிலுவையில் அறையுண்டிருக்க வேண்டும். (கலா 6:14)

8 உலகத்திலே சுடர்களைப்போல பிரகாசிக்க வேண்டும். (பிலி 2:14)

9 லௌகீக இச்சைகளை வெறுத்து தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் [illegible] இவ்வுலகத்திலே ஜீவிக்க வேண்டும் (தீத்து 2:12)

10 உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும். (யாக் 1:27)

11 உலக சிநேகம் இருக்கக்கூடாது (யாக் 4:4)

12 உலகத்தில் உண்டான கேட்டுக்குத் தப்பியிருக்க வேண்டும். (2பேதுரு 1:4. 2பேதுரு 2:20

13. உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூரக்கூடாது (1யோவான் 2:15-17

14 உலகத்தில் இயேசு கிறிஸ்து இருக்கிற பிரகாரமாக இருக்க வேண்டும் (1யோவான் 4:17)

15 உலகத்தை ஜெயிக்க வேண்டும் (1யோவான் 5:4-5

16 உலகத்திலிருந்து தெரிந்து கொண்டவர்களாக இருக்க வேண்டும். (யோவான் 15:19 யோவான் 17:6

17 இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரிக்கக்கூடாது. (ரோமர் 12:2

18 உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்திருக்க வேண்டும். (கொலோ 2:20

4 அதிகாரம்

"நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர் நம்மிடத்தில் வைராக்கிய வாஞ்சையா யிருக்கிறார்" - என்று வேதவாக்கியம் சொல்வதாக யாக்கோபு எழுதியிருக்கிறார் இது எந்த வேதவாக்கியம் என்று தெளிவாகத் தெரியவில்லை இந்தக் கருத்து பல வசனங்களில் உள்ளது. (ஆதி 6:5 ஆதி 8:21 எண் 11:29 நீதி 21:10)

"தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார் தாழ்மையுள்ளவர் களுக்கோ கிருபை அளிக்கிறார்" - நீதி 3:34 ஆவது வசனம் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

4. ஜெபத்திற்கு பதில் கிடைப்பதற்கு பதினொரு நிபந்தனைகள் - வசனம் 2-3

யாக் 4:7 ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள் பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்

யாக் 4:8 தேவனிடத்தில் சேருங்கள் அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார் பாவிகளே உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள் இருமன முள்ளவர்களே உங்கள் இருதயங் களைப் பரிசுத்த மாக்குங்கள்

யாக் 4:9 நீங்கள் துயரப்பட்டுத் துக்கித்து அழுங்கள் உங்கள் நகைப்பு துக்கிப்பாகவும் உங்கள் சந்தோஷம் சஞ்சலமாகவும் மாறக் கடவது

யாக் 4:10 கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள் அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்

பின்மாற்றிப்போனவர்களுக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1 தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள் (யாக் 4:7)

2 பிசாசிற்கு எதிர்த்து நில்லுங்கள் (யாக் 4:7)

3 தேவனிடத்தில் சேருங்கள் (யாக் 4:8)

4 உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள் (யாக் 4:8)

5. உங்கள் இருதயங்களைப் பரிசுத்த மாக்குங்கள் (யாக் 4:8)

6 துயரப்பட்டு, துக்கித்து அழுங்கள் (யாக் 4:9)

7 உங்கள் நகைப்பு துக்கிப்பாக மாறக்கடவது. (யாக் 4:9)

8 உங்கள் சந்தோஷம் சஞ்சலமாக மாறக்கடவது. (யாக் 4:9)

9 கர்த்தருக்கு முன்பாக தாழ்மைப படுங்கள் (யாக் 4:10)

10 ஒருவருக்கொருவர் விரோதமாய் பேசா திருங்கள் (யாக் 4:11)

பின்மாற்றிப்போனவர்களுக்குக் கூறப்பட்டிருக்கும் வாக்குத்தத்தங்கள்

1 தாழ்மையுள்ளவருக்குத் தேவன் அதிகமான கிருபையை அளிக்கிறார்

2 பிசாசிற்கு எதிர்த்து நிற்கும்போது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்

3 தேவனிடத்தில் சேரும்போது அவர் உங்களிடத்தில் சேருவார்

4 கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படும் போது அவர் உங்களை உயர்த்துவார்

வாக்குத்தத்தங்கள் நம்முடைய ஜீவியத்தில் நிறைவேற வேண்டுமானால் நாம் அதற்குரிய நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

"உங்கள் கைகளைச் சுத்திகரி யுங்கள்" - பரிசுத்தம், குற்றமற்ற தன்மை ஆகியவற்றிற்குக் கைகளைக் கழுவுதல் ஓர் அடையாளமாகும். (மத் 27:24

பரிசுத்தமாக்குதல் (purify)

ἁγνίζω hagnizoo 48

4 அதிகாரம்

வினைச்சொல் - சுத்திகரிப்புச்செய், சுத்தமாக்கு, சுத்திகரி, சுத்திகரித்துக் கொள் **(to make pure)** (யாக் 4:8 யோவான் 11:55; அப் 21:24,26; அப் 24:18; 1பேதுரு 1:22 யோவான் 3:3) - உலகத்திலிருந்து வேறுபிரிந்து எல்லாப் பாவங்களையும் அறிக்கை செய்து அவைகளை விட்டு விட்டு தேவனிடத்திற்கு வருதல்

"இருமனமுள்ளவர்கள்" - தேவனைச் சந்தேகப்படுகிறவர்களைக் குறிக்கும் வாக்கியம் (யாக் 1:6-8)

"நீங்கள் துயரப்பட்டுத் துக்கித்து அழுங்கள்" - தேவனுடைய சமூகத்தில் நாம் செய்த பாவங்களுக்காகத் துயரப்பட்டு துக்கித்து அழும்போது தேவனுடைய இரக்கத்தைப் பெற்றுக் கொள்ளலாம். (யோவான் 17 எபி 9:27)

பாவம், பாவசந்தோஷம் ஆகியவற்றின் வகைகள்

1 யுத்தங்களும் சண்டைகளும் (யாக் 4:1-2)

2 பாவஇச்சைகள் (யாக் 4:1-5 எபே 2:1-3)

3 கொலைகள் யாக் 4:2

4. இச்சித்தல் (யாக் 4:2)

5 விபச்சாரம் (யாக் 4:4)

6 உலக மனுஷரோடு சிநேகம் (யாக் 4:4)

7 பொறாமைகள் (யாக் 4:5)

8 பெருமை (யாக் 4:6-10)

9 பாவத்தில் நகைத்தல் (யாக் 4:9)

10 பாவத்தில் சந்தோஷப்படுதல் (யாக் 4:9

"கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள் அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்" துக்கித்து, அழுகிறவர்களும், துயரப்படுகிறவர்களும் தரையில் படுத்து புழுதியில் உருண்டு தங்களுடைய பாவங்களுக்காக மனம்வருந்தி அழுவார்கள் அவர்கள் பாவம் மன்னிக்கப்படும்போது அவர்கள் தரையிலிருந்து எழும்பி, தூய்மையான வஸ்திரங்களைத் தரித்துக் கொள்வார்கள்

5. **தன்னைத்தான் நியாயாதிபதியாக்கிக்கொள்கிறவன் மீது கடிந்துரை** - (3:1; மத் 7:1-5)

யாக் 4:11 சகோதரரே, ஒருவருக்கொருவர் விரோதமாய்ப் பேசாதிருங்கள் சகோதரனுக்கு விரோதமாய்ப் பேசி, தன் சகோதரனைக் குற்றப்படுத்துகிறவன் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாய்ப் பேசி நியாயப்பிரமாணத்தைக் குற்றப்படுத்துகிறான் நியாயப்பிரமாணத்தைக் குற்றப்படுத்துவாயானால் நீ நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவனாயிராமல் அதற்கு நியாயாதிபதியாயிருப்பாய்.

யாக் 4:12 நியாயப்பிரமாணத்தைக் கட்டளையிடுகிறவர் ஒருவரே அவரே இரட்சிக்கவும் அழிக்கவும் வல்லவர் மற்றவனைக் குற்றப்படுத்துகிறதற்கு நீ யார்?

ஒருவருக்கு விரோதமாய்ப் பேசுதல் **(Speak) - καταλαλέω - katalaleoo** - 2635

வினைச்சொல் - விரோதமாய்ப்பேசு, விரோதமாய்ச்சொல் **(to speak against; backbite; rail at; slander)** (யாக் 4:11 1பேதுரு 2:12; 1பேதுரு 3:16) - யூதர்கள் மத்தியிலே காணப்பட்ட பல பிரிவினர்கள் ஒருவருக்கொருவர் விரோதமாகப் பேசிக் கொண்டார்கள் மேலும் யூதமார்க்கத்திலிருந்து இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டோருக்கு விரோதமாகவும் அவர்கள் பேசினார்கள்

"அவரே இரட்சிக்கவும் அழிக்கவும் வல்லவர்" தேவனே நியாயப்பிரமாணத்தைக் கட்டளையிடுகிறவர் அவரால் மட்டுமே இரட்சிக்கவோ அல்லது அழிக்கவோ முடியும். இந்த அதிகாரம் தனக்கு வேண்டுமென்று கேட்க மனுஷருக்கு உரிமையில்லை. (யாக் 4:11-12)

4 அதிகாரம்

6. மனுஷ சித்தமும் ஆண்டவருடைய சித்தமும்

யாக் 4:13 மேலும், நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்திற்குப் போய், அங்கே ஒரு வருஷம் தங்கி, வியாபாரஞ்செய்து, சம்பாத்தியம் பண்ணுவோமென்கிறவர்களே, கேளுங்கள்.

யாக் 4:14 நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக் காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப் போலிருக்கிறதே.

யாக் 4:15 ஆதலால், ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால் இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்லவேண்டும்.

யாக் 4:16 இப்பொழுது உங்கள் வீம்புகளில் மேன்மைபாராட்டுகிறீர்கள், இப்படிப்பட்ட மேன்மைபாராட்டல் யாவும் பொல்லாங்காயிருக்கிறது.

"வியாபாரஞ்செய்து, சம்பாத்தியம் பண்ணுவோமென்கிறவர்களே கேளுங்கள்" இந்த வாக்கியம் ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குப் பிரயாணம் செய்து வியாபாரம் செய்வோருக்குக் கூறப்பட்டிருக்கிறது. (ஆதி 37:25)

"கொஞ்சக்காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப்போலிருக்கிறதே" - இந்த வாக்கியம் யாக் 1:10-11 ஆகிய வசனங்களில் யாக்கோபு ஐசுவரியவானைப் பற்றிக் கூறியிருப்பதைப் போல் உள்ளது.

"இப்பொழுது உங்கள் வீம்புகளில் மேன்மைபாராட்டுகிறீர்கள்" - வியாபாரம் செய்கிறவர்கள் ஒவ்வொரு ஊராகச் சென்று தாங்கள் விற்றதையும், வாங்கியதையும் குறித்து மேன்மைபாராட்டுகிறார்கள். யாரும் மேன்மைபாராட்டக்கூடாது. நாம் ஒரு காரியத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது "ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால் இன்னின்னதைச் செய்வோம்" (யாக் 4:15) என்று சொல்லவேண்டும். இப்படிப்பட்ட வாக்கியம் தன்னுடைய பலத்தையும், பராக்கிரமத்தையும் நம்பாமல் தேவனிடத்திலும் அவருடைய பராமரிப்பிலும் விசுவாசம் வைப்பதைக் குறிப்பிடுகிறது. மேன்மைபாராட்டுவது எப்போதுமே தீய நோக்கமுடையது.

7. நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும் அதைச் செய்யாமல் போனால் அது அவனுக்கு பாவமாயிருக்கும் - (ரோமர் 3:20; 4:15; 14:23; 1யோவான் 3:4)

யாக் 4:17 ஆதலால், ஒருவன் நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்.

பாவம் (sin) - 'αμαρτία - hamartia - 266

பெண்பால் வினைப்பெயர் - பாவம் தோல்வி (missing the mark) sin (யாக் 4:16; மத் 1:21) sinful (ரோமர் 8:3); offence (2கொரி 11:7)

(அ) பாவம் செயல் (1கொரி 15:17)

(ஆ) பாவத்தில் மூழ்கியிருத்தல். எப்பொழுதும் பாவத்தில் இருத்தல் (யோவா 1:21) (ரோம. 3:9)

யாக்கோபு - தொகுப்புரை

5 அதிகாரம்

8. துன்மார்க்கமான ஐசுவரியவான்கள் மீது கடிந்துரை - ஏழு பாவங்களுக்கு ஏழு அம்ச நியாயத்தீர்ப்பு - (2:6-7; 1தீமோ 6:9-10; லூக்கா 12:15-21)

யாக் 5:1 ஐசுவரியவான்களே கேளுங்கள், உங்கள்மேல் வரும் நிர்ப்பந்தங்களினிமித்தம் அலறி அழுங்கள்

யாக் 5:2 உங்கள் ஐசுவரியம் அழிந்து உங்கள் வஸ்திரங்கள் பொட்டரித்துப் போயின

யாக் 5:3 உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்தது; அவைகளிலுள்ள துரு உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாயிருந்து, அக்கினியைப்போல உங்கள் மாம்சத்தைத் தின்னும் கடைசி நாட்களிலே பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள்

யாக் 5:4 இதோ, உங்கள் வயல்களை அறுத்த வேலைக்காரருடைய கூலி உங்களால் அநியாயமாய்ப் பிடிக்கப்பட்டுக் கூக்குரலிடுகிறது; அறுத்தவர்களுடைய கூக்குரல் சேனைகளுடைய கர்த்தரின் செவிகளில் பட்டது.

யாக் 5:5 பூமியிலே நீங்கள் சம்பிரமமாய் வாழ்ந்து, சுகபோகத்தில் உழன்றீர்கள்; கொழுத்தவைகளை அடிக்கும் நாளில் நடக்கிறதுபோல உங்கள் இருதயங்களைப் போஷித்தீர்கள்

யாக் 5:6 நீதிமானை நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துக் கொலைசெய்தீர்கள்; அவன் உங்களோடே எதிர்த்துநிற்கவில்லை

நிர்ப்பந்தம் (miseries) - ταλαιπωρία - talaipooria 5004

பெண்பால் பெயர்ச்சொல் - **நிர்ப்பந்தம் (bodily hardships; misery)** (ரோமர் 3:16)

நிர்ப்பந்தம் (misery) - ταλαίπωρος - talaipooros - 5005

பெயரடை - நிர்ப்பந்தமான, நிர்ப்பாக்கியமுள்ள **(wretched)** (ரோமர் 7:25; வெளி 3:17)

தீர்க்கதரிசன எண் - 1

"உங்கள்மேல் வரும் நிர்ப்பந்தங்களினிமித்தம் அலறி அழுங்கள் . . ." (யாக் 5:1-6) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

துன்மார்க்கமான ஐசுவரியவான்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் காரியங்கள்

1 அவர்கள்மேல் நிர்ப்பந்தங்கள் வரும் (யாக் 5:1)

2 ஐசுவரியங்கள் அழிந்துபோகும். (யாக் 5:2)

3 வஸ்திரங்கள் பொட்டரித்துப்போகும் (யாக் 5:2)

4 பொன்னும், வெள்ளியும் துருப்பிடிக்கும். (யாக் 5:3)

5 அவைகளிலுள்ள துரு அவர்களுக்கு விரோதமாகச் சாட்சியாயிருக்கும் (யாக் 5:3)

6 அவைகளிலுள்ள துரு அக்கினியைப் போல அவர்கள் மாம்சத்தைத் தின்னும். (யாக் 5:3)

"உங்கள் ஐசுவரியம் அழிந்து...போயின" பொன்னும் வெள்ளியும் துருப்பிடிக்கும். ஐசுவரியம் அழியும். ஐசுவரியம் என்பது தானியங்கள் மந்தைகள் எண்ணெய், திராட்சரசம் ஆகிய அனைத்தையும் குறிக்கும்.

அழிதல் (corrupt) - σήπω - seepoo 4595

வினைச்சொல் - அழி (to make rotten; putrid; to fester, mortify)

5 அதிகாரம்

துருப்பிடித்தல் (cankered) κατιόω - katiooo - 2728

வினைச்சொல் - மேற்கொள், பிடித்தல (rusted over)

துரு (rust) - ἰός - ios - 2447

ஆண்பால் பெயர்ச்சொல - விஷம் துரு rust (யாக் 5:3) poison (யாக் 3:8; ரோமர் 3:13) - மனுஷருடைய ஐசுவரியங்கள் அவர்களுடைய பேராசைக்கும், பண ஆசைக்கும் சான்றாகும். (லூக்கா 12:15)

"அக்கினியைப்போல உங்கள் மாம்சத்தைத் தின்னும்" - மனுஷனுடைய ஐசுவரியம் அவனுடைய துன்மார்க்கதற்குச் சான்று பகருகிறது. இது அக்கினியைப்போல அவர்களுடைய மாம்சத்தைத் தின்றுபோடுகிறது.

துன்மார்க்கமான ஐசுவரியவான்களின் பாவங்கள்

1 பூமியிலே ஐசுவரியத்தை சேர்க்கிறார்கள் (யாக் 5:3; மத் 6:19-21 லூக்கா 12:15-21

2 வேலைக்காரரை அநியாயமாய் வஞ்சிக்கிறார்கள் (யாக் 5:4; லேவி 19:13; உபா 24:14-15; எரே 22:13; மல 3:5

3 பூமியில் மற்றவர்களுடைய உழைப்பில சம்பிரமமாய் வாழ்கிறார்கள் (யாக் 5:5; மத் 23:14

4. சுகபோகத்தில் உழன்று ஜீவிக்கிறார்கள் (யாக் 5:5; ரோமர் 13:13; 1தீமோ 5:6, 2பேதுரு 2:18)

5 கொழுத்தவைகளை அடிக்கும் நாளிலே நடக்கிறதுபோல தங்கள் இருதயங்களைப் போஷிக்கிறார்கள் (யாக் 5:5)

6. நீதிமானை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறார்கள் யாக் 5:6, யாக் 2:6 10

7 நீதிமானைக் கொலைசெய்து, தங்கள் ஐசுவரியத்தைப் பெருக்கிக் கொள்கிறார்கள் (யாக் 5:6; 1இராஜா 21

"சேனைகளுடைய கர்த்தர்" (Lord of sabaoth) - பழைய ஏற்பாட்டில் கர்த்தருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பெயர்களில் ஒன்று. தேசங்களை ஆளுகை செய்யவும் துன்மார்க்கரைத் தண்டிக்கவும் தேவன் சர்வ வல்லவராக இருக்கிறார் (1சாமு 1:3, 1சாமு 4:4; 1சாமு 15:2)

சம்பிரமமாய் வாழுதல் (to live softly) - τρυφάω - tryphaoo - 5171

வினைச்சொல் - சம்பிரமமாய் வாழ (to live softly, delicately; fare sumptuously; live in luxury; to be effeminate; to be licentious; to revel)

சுகபோகம் (pleasure) - τρυφή - tryphee - 5172

பெண்பால் பெயர்ச்சொல - செல்வம் இன்பம் (லூக்கா 7:25; 2பேதுரு 2:13

சுகபோகமாய் வாழ (wanton) - σπαταλάω - spatalaoo - 4684

வினைச்சொல - சுகபோகமாய் வாழ (to live riotously, in pleasure) (யாக் 5:5; 1தீமோ 5:6

போஷித்தல் (nourished) - τρέφω - trephoo - 5142

வினைச்சொல் - போஜனங்கொடு, பிழைப்பூட்டு, போஷிக்கப்படு nourish (யாக் 5:5 அப் 12:20; வெளி 12:14); feed (மத் 6:26; மத் 25:37; லூக்கா 12:24, வெளி 12:6); bring up (லூக்கா 4:16 - பண்டிகை நாட்களில் ஏராளமான மிருகங்களைப் பலியிட்டு, அவைகளைப் புசித்து திருப்தியடைந்திருப்பார்கள் அதுபோன்று போஷிக்கப்படுதல

நிர்ப்பந்தம் (misery) ταλαίπωρος talaipooros 5005

5 அதிகாரம்

9. கர்த்தரின் வருகையைக் குறித்த ஆலோசனை

யாக் 5:7 இப்படியிருக்க, சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள் இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடைய வேண்டுமென்று, முன்மாரியும் பின்மாரியும் வருமளவும் நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான்

யாக் 5:8 நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள் கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே.

யாக் 5:9 சகோதரரே நீங்கள் நியாயந்தீர்க்கப்படாதபடிக்கு ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடாதிருங்கள் இதோ நியாயாதிபதி வாசற்படியிலே நிற்கிறார்

"கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள்" - சபையை எடுத்துக் கொள்வதற்காக இயேசு கிறிஸ்து மத்திய ஆகாயத்தில் வருவதை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை இந்த வாக்கியம் குறிப்பிடவில்லை (யாக் 5:7-8; யோவான் 14:1-3; லூக்கா 21:34-36; 1கொரி 15:23, 51-58; 2கொரி 5:1-8 எபே 5:27; பிலி 3:11, 20-21 1தெச 2:19 1தெச 3:13 1தெச 4:13-17 1தெச 5:9,23 2தெச 2:1,7வரை கொலோ 3:4, 1யோவான் 2:28, 1யோவான் 3:2, 1பேதுரு 5:4

"முன்மாரியும் பின்மாரியும்" - பாலஸ்தீன தேசத்தில் முன்மாரியும், பின்மாரியும் பெய்யும் விதைப்புக் காலத்தில் முன்மாரியும் அறுப்புக் காலத்தில் பின்மாரியும் பெய்யும். (உபா 11:14) இந்த வசனத்தில் இந்த வாக்கியம் ஆத்தும அறுவடையின் காலத்தை குறிப்பிடுகிறது சபை ஸ்தாபிக்கப்பட்டபோது ஆவிக்குரிய முன்மாரி பொழிந்தது. (அப 2:1-16) இந்தக் காலத்தின் முடிவில் ஆவிக்குரிய பின்மாரி பொழியும். சபை காலத்தின் முடிவில் ஆத்துமாக்கள் பரிபூரணமாக அறுவடை செய்யப்பட்டு, கூட்டிச் சேர்க்கப்படும் (அப 2:16-21; ஓசி 6:3, சக 10:1)

விரோதமாய் முறையிடுதல் (Grudge) - στενάζω - stenazoo - 4727

வினைச்சொல் - பெருமூச்சுவிடு, தவி, விரோதமாயிரு, துக்கத்தோடிரு (groan, murmur) (ரோமர் 8:23)

10. யோபின் பொறுமை

யாக் 5:10 என் சகோதரரே, கர்த்தருடைய நாமத்தினாலே பேசின தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுதலுக்கும் நீடிய பொறுமைக்கும் திருஷ்டாந்தமாக வைத்துக்கொள்ளுங்கள்

யாக் 5:11 இதோ பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோமே! யோபின் பொறுமையைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள் கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள் கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறாரே

துன்பப்படுதலுக்கும் நீடிய பொறுமைக்கும் எடுத்துக்காட்டானவர்கள்

1. யோசேப்பு (Joseph) (ஆதி 37:18-36, ஆதி 39:1-41:44)
2. மோசே (Moses) எண் 12:3 எண் 16:2-4)
3. தாவீது (David) (1சாமு 18:1-26:25, 2சாமு 15)
4. எலியா (Elijah) (1இராஜா 17:1-19:18
5. எரேமியா (Jeremiah) (எரே 11:21, எரே 37:15)
6. யோபு (Job) (யோபு 5:11, யோபு 1-2
7. மேலும் அநேகர் (Many others) (எபி 11:32-40)

5 அதிகாரம்

"கர்த்தருடைய செயலின் முடிவு" (end of the Lord) - சரீரத்தில நோயும் வியாதியும் வரும்போது நம்மில அநேகர் யோபுவை ஒரு முன்மாதிரியாகக் கூறுகிறோம. கர்த்தர் யோபுவை ஒருசில மாதஙகள் மட்டுமே சோதித்தார் தான் சோதிக்கப்பட்ட நாட்களிலெல்லாம் யோபு தன்னுடைய மீட்புக்காகப போராடினான் கர்த்தருடைய செயலின் முடிவே மிகவும் முக்கியமானது. ஏனெனில் கர்த்தர் மிகுந்த உருக்கமும இரக்கமுமுள்ளவராயிருக்கிறார் அவருடைய செயலின் முடிவு மிகுந்த உருக்கமுள்ளதாயும், இரக்கமுள்ளதாயும் நமது ஆத்துமாவிறகுப் பிரயோஜனமுள்ளதாயும் இருக்கும்.

11. சத்தியம் பண்ணுதல் - (மத் 5 33-37 சங் 15.6, 76 11

யாக் 5:12 விசேஷமாய, என் சகோதரரே, வானத்தினபேரிலாவது பூமியின பேரிலாவது, வேறெநத ஆணையினாலாவது சத்தியம பண்ணாதிருஙகள, நீஙகள ஆக்கினைக்குளளாகத் தீரககபபடாத படிக்கு உளளதை உளளதெனறும இலலாதை இலலதெனறும் சொலலக கடவீரகள

"சத்தியம் பணணாதிருங்கள்" - வானத்தின பேரிலாவது, பூமியினபேரிலாவது வேறெநத ஆணையினாலாவது நாம சத்தியம் பணணக் கூடாது. யூதரும அரபியரும் சத்தியம் பண்ணுவதில வலலவாகள் அவாகள வானத்தின பேரிலும் பூமியின பேரிலும், எருசலேமின பேரிலும் தேவாலயத்தின் பேரிலும், பலிபீடத்தின பேரிலும் சத்தியம் பணணுவாரகள சாதாரண காரியத்தைக் கூறும்போது கூட அதைச் சத்தியம் பணணி உறுதிபண்ணுவார்கள் அவர்களுக்கு இப்படிப்பட்ட துன்மார்க்கமான பழக்கம் இருந்ததினால்தான யாக்கோபு இநத வசனத்தில் "சத்தியம் பணணாதிருங்கள்" என்று அறிவுரை கூறுகிறார

கபடம் (hypocrisy) - ὑπόκρισις hypokrisis - 5272

பெண்பால் பெயர்சொல் - மாயம், கபடம் (கலா 2:13) - சத்தியம் பண்ணுகிறவர்கள் தங்கள் வாயினால் சத்தியம பண்ணுகிறார்கள் ஆனால் அவர்களுடைய இருதயமோ அவர்கள் சத்தியம பணணிய வார்த்தைக்கு வெகுதூரத்தில் உள்ளது. சத்தியத்தை மாயமானமாகவும், கபடமாகவும் செய்கிறார்கள்

12. துன்பப்படுகிறவனும் வியாதிப் பட்டவனும் செய்ய வேண்டிய காரியம்

யாக் 5:13 உங்களில ஒருவன் துன்பபபட்டால ஜெபமபணணக்கடவன் ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால சங்கீதம பாடக்கடவன்

யாக் 5:14 உங்களில ஒருவன் வியாதிப்பட்டால அவன் சபையின மூப்பர்களை வரவழைப்பானாக. அவாகள கர்த்தருடைய நாமத்தினாலே அவனுககு எணணெய்பூசி, அவனுக்காக ஜெபம் பணணககடவர்கள

துன்பபடுதல (afflicted) - κακοπαθέω - kakopatheoo - 2553

வினைசசொல தீவகுருபவி, துன்பததை அனுபவி, துன்பபபடு (endure hardness) (2தீமோ 2:3); suffer trouble (2தீமோ 2:9) endure afflictions (2தீமோ 4:5); to be afflicted (யாக் 5:13) - வியாதி மட்டும் என்றலலாமல இந்த வாாத்தை எந்தத் துன்பத்தையும் குறிப்பிடும்.

வியாதி (sick) - ἀσθενέω - astheneoo - 770

வினைச்சொல் - வியாதியாயிரு, வியாதிப்பட்ட வியாதிப்பட்டிரு, பிணியாளியாயிரு, பலவீனமாயிரு (weak, feeble, sick) (பிலி 2:26 27

5 அதிகாரம்

வியாதிப்பட்டவன் யாக் 5:14-15 ஆகிய வசனங்களின் பிரகாரம் செய்ய வேண்டிய காரியங்கள்

1. சபையின் மூப்பர்களை வரவழைக்க வேண்டும்
2. அவன் பாவம் செய்திருப்பானானால் தன் குற்றங்களை அறிக்கையிட்டு ஜெபிக்க வேண்டும்.

மூப்பர் (elders) - πρεσβύτερος - presbyteros - 4245

பெயரடை - முன்னோரான மூப்பரான, முதிர் வயதுள்ள (அப 14:23)

சபையின் மூப்பர்கள் வியாதிப் பட்டவனுக்குச் செய்ய வேண்டிய காரியங்கள்

1. வியாதிப்பட்டவனுக்காக ஜெபிக்க வேண்டும். (யாக் 5:14)
2. அவனுக்கு எண்ணெய் பூசவேண்டும் யாக் 5:14
3. கர்த்தருடைய நாமத்தை அழைக்க வேண்டும். (யாக் 5:14)
4. விசுவாசமுள்ள ஜெபத்தை ஏறெடுக்க வேண்டும். (யாக் 5:15)

எண்ணெய்பூசுதல் (anointing) ἀλείφω - aleiphoo - 218

வினைச்சொல் - எண்ணெய்பூசு பரிமளத்தைலம் பூசி, சுகந்த வாசுமிடு. பூசு (anoint) (யாக் 5:14, மத் 6:17; மாற்கு 6:13, மாற்கு 16:1; லூக்கா 7:38,46; யோவான் 11:2 யோவான் 12:3)

"எண்ணெய்" - யூதர்கள் தங்களுடைய பிரயாணத்தின்போது தங்களோடு ஒலிவ எண்ணெயை எடுத்துச் செல்வது வழக்கம். தங்களுடைய சரீரங்களில் பூசுவதற்காகவும் காயங்களிலும் தழும்புகளிலும் தடவுவதற்காகவும் யூதர்கள் ஒலிவ எண்ணெயை பயன்படுத்தினார்கள் (லூக்கா 10:34) தேவன் பரிசுத்த ஆவியானவரால் சொஸ்தமாக்குவார் என்பதற்கு ஒலிவ எண்ணெயை பூசுதல் ஓர் அடையாளமாகும் (மாற்கு 6:13) எல்லா வியாதிகளையும் ஒலிவ எண்ணெய் குணமாக்காது. கர்த்தருடைய கிருபையே நோய்களைக் குணமாக்கும்

13. விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும் - (மத் 8:17; 1பேதுரு 2:24; யாத் 15:26 சங் 91; 103:3; ஏசா 53:4-5; 58:8

யாக் 5:15 அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும், கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்

யாக் 5:16 நீங்கள் சொஸ்த மடையும்படிக்கு உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள் நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.

"விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்" ஒலிவ எண்ணெய் அல்ல விசுவாசமுள்ள ஜெபமே நோயாளியைக் குணப்படுத்துகிறது இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் விசுவாசமுள்ள ஜெபம் ஏறெடுக்கும்போது கர்த்தர் வியாதியஸ்தனை எழுப்புவார் அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். இந்த வாக்குத்தத்தமானது சபையின் மூப்பர்களுக்கு மட்டும் என்று கொடுக்கப்படாமல் எல்லா விசுவாசிகளுக்குமே கொடுக்கப்பட்டிருக்கிறது (மத் 17:20 மத் 21:22 மாற்கு 9:23; மாற்கு 11:22-24, மாற்கு 16:15-20 யோவான் 14:12-15; யோவான் 15:7,16; யோவான் 16:23-26)

"கர்த்தர் அவனை எழுப்புவார்" இது தான் தெய்வீக சுகமாதல் கர்த்தர்தான் வியாதிப்பஸ்தர்களை எழுப்புகிறவர் மனுஷர் கர்த்தரிடத்தில் ஜெபிக்க மட்டுமே முடியும்.

யாக்கோபு - தொகுப்புரை

5 அதிகாரம்

"அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்" - பாவமன்னிப்பும், சுகமாதலும் இணைந்து நடைபெறும் காரியங்களாகும் (மத் 9:5; மத் 13:15; அப் 3:16; அப் 4:12; அப் 28:27)

சரீரம் சொஸ்தமடையும்படிக்கும் செய்ய வேண்டிய காரியங்கள்

1 உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிடுங்கள்

2 ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள் (மத் 18:19; மத் 21:22; மாற்கு 11:24)

குற்றங்கள் (faults) - **παράπτωμα - paraptooma** - 3900

பால வேறுபாடற்ற பெயர்ச்சொல் - தப்பிதம், பாவம், தவறு, குற்றம், அக்கிரமம், மீறுதல் (**a falling aside when one should have stood upright; a transgression; a moral fall**) (ரோமர் 11:11)

வியாதியும் சொஸ்தமடைதலும்

1 மனுஷன் பாவம் செய்வதற்கு முன்பாக ஆரோக்கியம் இயற்கையாகவும் நித்தியமானதாகவும் இருந்தது. (ஆதி 1:26-31; ஆதி 2:17)

2 பாவத்தின் விளைவினாலே மரணமும் வியாதியும் உண்டாயிற்று. இது சாத்தானால் எல்லோருக்கும் பரப்பட்டு வருகிறது. (ரோமர் 5:12-21; யோபு 2:6-7; லூக்கா 13:16; யோவான் 10:10; அப் 10:38; 1யோவான் 3:8)

3 மீட்பைப் பற்றிய முதலாவது தீர்க்கதரிசனத்திலும், வாக்குத்தத்தத்திலும் சரீர சுகமாதல் அடங்கியிருக்கிறது. (ஆதி 3:15; ஏசா 53:5; மத் 8:16-17; 1பேதுரு 2:24)

4 வேதாகமத்தில் முதலாவது குறிப்பிடப்பட்டிருக்கும் வியாதி மனுஷனுடைய தவறான செய்கையின் விளைவினால் உண்டாயிற்று. (ஆதி 20:1-18)

5 வேதாகமத்தில் முதலாவது குறிப்பிடப்பட்டிருக்கும் சரீர சுகமாதல் ஒரு தீர்க்கதரிசியின் ஜெபத்தின் மூலமாக உண்டாயிற்று. (ஆதி 20:7-17)

6 தேவன் தம்முடைய ஜனங்களோடு அவர்களைக் குணப்படுத்துவதாக உடன்படிக்கைகளைச் செய்து கொண்டார் (யாத் 15:26; யாத் 23:23; லேவி 26; உபா 28; மத் 8:17; 1பேதுரு 2:24; யாக் 5:14)

7 தேவன் தம்முடைய உடன்படிக்கைகளை எப்பொழுதும் காத்துக் கொண்டிருக்கிறார். ஆவிக்குரிய உபாயங்கள் மூலமாகத் திரளான ஜனங்களைக் குணப்படுத்தியிருக்கிறார் (சங் 103:3; சங் 105:37; சங் 107:20; அப் 10:38)

8 ஆவிக்குரிய பிரகாரமாகக் குணப்படுத்துவது என்பது தேவன் வாக்குத்தத்தம் பண்ணிக் கட்டளையிட்டிருக்கும் அனைத்தையும் குறிப்பிடும். (யாத் 15:25; சங் 91; ஏசா 58; மத் 8:17; மத் 13:15; யாக் 5:14-16; 1பேதுரு 2:24)

9 ஆவிக்குரிய உபாயங்களை இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் பயன்படுத்தினார்கள் (யாத் 15:26; எண் 11:1-3; எண் 12:13-16; எண் 21:4-9; யோவான் 3:14)

10 கீழ்ப்படிதல் என்னும் நிபந்தனையிலேயே சரீர சுகமாதல் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. (லேவி 26; உபா 28; யாத் 15:26; சங் 91; ஏசா 58; யாக் 5:14-15)

11 பாவிகளுக்குத் தண்டனை கொடுத்து, அவர்களை மனந்திருந்த வைப்பதற்காகவும், தம்முடைய பிள்ளைகள் தம்மை விட்டு வழிவிலகிச் செல்லும் போது அவர்களைத் தம்மிடம் திரும்ப அழைத்து வருவதற்காகவும், மனுஷருக்கு வியாதியைக் கொடுக்க தேவன் சாத்தானுக்கு அனுமதி கொடுக்கிறார் (யோபு 33:12-30; சங் 38; சங் 103:3; எண் 12:13-16; எண் 21:9; 1கொரி 5:1-5; 2கொரி 2:6-11; கலா 6:7-8

யாக்கோபு - தொகுப்புரை

5 அதிகாரம்

12 மனுஷர் தாங்கள் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்களைப் படித்து மனந்திரும்பிய பின்பு தேவன் அவர்களைக் குணப்படுத்துகிறார் (ஆதி 20:7,17; எண் 11:2, எண் 12:13-16; எண் 21:1-9 யோபு 33:12-30; யோபு 42:1-12 சங் 103:3; யாக் 5:14-15)

13 தேவன் கூறியிருக்கும் நிபந்தனைகளை மனுஷர் கைக்கொள்ளும் போது சரீர ஆரோக்கியமும், சரீர சுகமாதலும் வாக்குப்பண்ணப்படுகிறது. (யாத் 15:26; லேவி 26; உபா 28; சங் 91 நீதி 3:1-8 நீதி 12:18 நீதி 13:3 நீதி 15:4 நீதி 18:8,21; ஏசா 58; யாக் 5:14 1பேதுரு 3:10-11 3யோவான் 1:2)

14 பாவத்திலிருந்தும் வியாதியிலிருந்தும் மனுஷனை இரட்சிக்க கிறிஸ்து இயேசு இந்த உலகத்திற்கு வந்தார் (ஏசா 53 ஏசா 61:1-2 மத் 8:17; மத் 9:5, கலா 3:13 ரோமர் 8:11; அப் 10:38, 1பேதுரு 2:24. 1யோவான் 3:8)

15 சரீர சுகமாதல் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாகும். (ஏசா 35; ஏசா 53 ஏசா 61:1-2 மத் 8:17; அப் 10:38, 1பேதுரு 2:24 மத் 13:15)

16 எல்லா வியாதியஸ்தரையும் சொஸ்தமாக்கி, தாம் தேவனுடைய குமாரன் என்பதை இயேசு கிறிஸ்து நிரூபித்தார் (மத் 4:23-24; மத் 11:3-6; லூக்கா 4:16-21; அப் 10:38 1யோவான் 3:8

17 இயேசு கிறிஸ்துவினால் அழைக்கப்பட்டு, அனுப்பப்பட்ட எல்லாச் சீஷர்களுக்கும் குணமாக்கும் வல்லமை கொடுக்கப்பட்டது. (மத் 10:1-8; மாற்கு 6:7-13 லூக்கா 10:1-21, அப் 1:8)

18 புறப்பட்டுப் போவதற்கு முன்பாகச் சுகமாக்கும் வல்லமையினால் நிரப்பப்பட வேண்டுமென்று இயேசு கிறிஸ்து தமது சீஷர்களுக்குக் கட்டளையிட்டார் லூக்கா 24:49 அப் 1:4-8

19 ஆதி சீஷர்களுக்கு இயேசு கிறிஸ்து கொடுத்த அதே கட்டளையை இக்காலம் வரையிலுள்ள எல்லா சீஷர்களுக்கும் கொடுக்கிறார் (மத் 28:20; அப் 1:4-8, மாற்கு 16:15-20

20 குணப்படுத்துதல் மூலமாக ஆதி சீஷர்கள் தேவனுடைய வார்த்தையை உறுதி பண்ணினார்கள் (மாற்கு 16:15-20; அப் 2:43; அப் 3:1-12; அப் 5:2-16; அப் 6:8; அப் 8:7-13 அப் 11:19-22; அப் 14:3,27; அப் 15:4,12 அப் 19:11-12; அப் 28:9; ரோமர் 15:18-19,29; 1கொரி 16:10; பிலி 1:7, 1தெச 2:13; எபி 2:3-4,

21 சுகமாக்கும் ஊழியத்தைச் செய்வதற்காகப் பரிசுத்த ஆவியானவர் இந்த உலகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறார் (அப் 1:1-8 அப் 2:33 1கொரி 12 எபி 2:3-4)

22 தாம் செய்த கிரியைகளைச் செய்வதற்கு ஊழியக்காரர்களுக்கு மட்டும் என்றல்லாமல், எல்லா விசுவாசிகளுக்கும் வல்லமை கொடுப்பதாக இயேசு கிறிஸ்து வாக்குப் பண்ணியிருக்கிறார் (மத் 17:20; மத் 21:22 மாற்கு 9:23; மாற்கு 11:22-24; மாற்கு 16:15-20; யோவான் 14:12-15 யோவான் 15:7,16 யோவான் 16:23-26; அப் 1:4-8

23. குணமாக்கும் வரங்களும், மற்ற வரங்களும் சபையின் ஆவிக்குரிய பக்திவிருத்திக்காக வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. (1கொரி 1:7, 1கொரி 12:1-11, ரோமர் 1:11 ரோமர் 12:6-8; ரோமர் 15:18-19,29 எபி 2:3-4)

24. வியாதியஸ்தரைச் சொஸ்தமாக்குவது சபையின் ஊழியத்தின் ஒரு பகுதியாகும். (மத் 10:1-8; லூக்கா 10:1-21, லூக்கா 24:49, அப் 1:1-8, 1கொரி 12 யாக் 5:14-16)

25 கிறிஸ்துவினுடைய பாவநிவாரண பலியினால் உண்டாகும் ஆசீர்வாதங்களின் ஒரு பாகமாக சரீர சுகமாதல் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏசா 53:4-5 மத் 8:16-17; மத் 13:14-15, யோவான் 3:14; யோவான் 10:10, ரோமர் 1:16 ரோமர் 8:11; 1கொரி 11:23-32; கலா 3:13 யாத் 5:14-16; 1பேதுரு 2:24. 3யோவான் 1:2; யாத் 15:26, சங் 91, சங் 103:3)

5 அதிகாரம்

26. சரீர சுகமாதல் பிள்ளைகளுடைய அப்பத்தின் ஒரு பகுதியாகும். மீட்பின் நீதியினால் தேவனுடைய பிள்ளைகளுக்கு இது வாக்குத்தத்த உரிமையாகக் கிடைத்திருக்கிறது. மத் 7:7-11; மத் 15:22-28 மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23 மாற்கு 11:22-24; லூக்கா 13:16, யோவான் 3:14-16 யோவான் 14:12-15 யோவான் 15:7,16; யோவான் 16:23-26; 1யோவான் 3:8, 20-22 யோவான் 5:14-15; 3யோவான் 1:2)

27 சரீர சுகமாதல் விசுவாசிகளால் நடக்கும் அடையாளங்களில் ஒன்று. மாற்கு 16:15-20

28 சரீர சுகமாதல் பழைய ஏற்பாட்டுக் காலத்திற்கு மட்டுமென்று ஏற்படுத்தப்பட வில்லை. (யாத் 15:26, சங் 91, சங் 103:3) அதுபோலவே ஆயிரம் வருஷ அரசாட்சிக்கு மட்டுமென்றும் ஏற்படுத்தப் படவில்லை. ஏசா 30:26; ஏசா 33:24; ஏசா 35:4-10 சரீர சுகமாதல் இக்காலத்திற்கும் உரியது. (மத் 8:17 மத் 21:22 மாற்கு 9:23 மாற்கு 11:22-24, மாற்கு 16:15 20, யோவான் 14:12 15; யோவான் 15:7,16; 2கொரி 3:6-15; 1கொரி 12:1-11; எபி 2:3-4)

29 தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மெய்யானவை என்பதைச் சரீர சுகமாதல் உறுதிப்பண்ணுகிறது. (2கொரி 1:20)

30 சரீர சுகமாதல் இரட்சிப்பின் ஒரு பகுதியாகும். இரட்சிப்பு என்னும் வார்த்தையைக் குறிக்கும் எபிரெய, கிரேக்க வார்த்தைகளில் மன்னிப்பு, சுகமாதல், ஆரோக்கியம் சாபத்திலிருந்து பரிபூரண விடுதலை ஆகிய கருத்துக்கள் அடங்கியுள்ளன (ரோமர் 1:16; கலா 3:13; 1பேதுரு 2:24

31 தேவன் தம்முடைய பிள்ளைகளைப் பராமரிப்பதன் ஒரு பகுதியாக சரீர சுகமாதல் இருக்கும் என்பதை விசுவாசிகள் எதிர்பார்க்கலாம். (மத் 6:10; மத் 7:7-11; மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23, மாற்கு 11:22-24, லூக்கா 11:1-13; லூக்கா 18:1-18, யோவான் 14:12-15; யோவான் 15:7,16 யோவான் 16:23-26 எபி 11:6 யாக் 1:4-8 யாக் 5:14-16

32 ஜெபத்தினாலும், விசுவாசத்தினாலும் பாவங்கள் மன்னிக்கப்படுவது போல இதே அடிப்படையிலேயே சரீர சுகமாதலும் உண்டாகிறது (மத் 9:1-7; மத் 13:15; மத் 21:22; அப் 28:27; யாக் 1:4-8, யாக் 5:14-16; எபி 11:6

33 இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரியையும் சரீர சுகமாதல் உறுதிப்பண்ணுகிறது (அப 1:4-8; அப 2:33; அப 3:16; அப 4:12; ரோமர் 8:11)

34 சாத்தானுடைய வல்லமையை பூரணமாகத் தோற்கடிப்பதற்காகவும், சரீர சுகமாதலைக் கொடுப்பதற்காகவும் தேவையான எல்லாக் காரியங்களையும் தேவன் ஏற்கெனவே பராமரிப்பாகக் கொடுத்திருக்கிறார் (2கொரி 10:4-5 எபே 6:10-18; மாற்கு 16:15-20 யோவான் 14:12-15; யாக் 4:7 யாக் 5:14-16; 1பேதுரு 2:24. (பேதுரு 5:7-9)

35. தம்முடைய பிள்ளைகளின் வியாதியைக் குணப்படுத்துவது தேவனுடைய சித்தம். கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வேத வசனங்கள் தம்முடைய பிள்ளைகளைத் தேவன் எவ்வாறு ஆசீர்வதிக்கிறார் என்பதை விளக்குகிறது. "நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" யோவான் 15:7 "நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளை யெல்லாம் பெறுவீர்கள்" (மத் 21:22, யோவான் 14:12-15; யோவான் 15:16 "என் நாமத்தினால் நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்" (யோவான் 14:14); "தான் சொன்னபடியே நடக்குமென்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால் அவன் சொன்னபடியே ஆகும்" (மாற்கு 11:22-24, "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்கிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா" (மத் 7:7-11)

5 அதிகாரம்

பழைய ஏற்பாட்டுக் காலத்திலும், புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் தேவன் வியாதிகளைக் குணப்படுத்தியிருக்கிறார். புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டை விட மேலான வாக்குத்தத்தங்களினால் உண்டானது. ஆகையினால் புதிய ஏற்பாட்டுக் காலத்து விசுவாசிகளாகிய நமக்கு வியாதிகள் வரும்போது தேவனிடத்தில் விசுவாசத்தோடு ஜெபித்தால் அவர் நம்மை நிச்சயமாகவே குணப்படுத்துவார் (எபி 8:6)

பெலனுள்ளது (effectual) - ένεργέω - energeoo - 1754

வினைச்சொல் - விளங்கச்செய், கையாளி, உண்டாக்கு, பலன் செய் (தெச 2:13)

14. ஜெபத்திற்கு பதில் கிடைக்கும் - (லூக்கா 11:1-13; 18:1-14, மத் 21:22)

யாக் 5:17 எலியா என்பவன் நம்மைப் போலப் பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான், அப்பொழுது மூன்று வருஷமும் ஆறு மாதமும் பூமியின் மேல் மழை பெய்யவில்லை

யாக் 5:18 மறுபடியும் ஜெபம் பண்ணினான், அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது, பூமி தன் பலனைத் தந்தது.

"எலியா" (Elias, Elijah) - மனுஷர்கள் எல்லோரும் ஒன்றுபோலவே இருக்கிறார்கள் என்பதை விளக்குவதற்காக யாக்கோபு எலியாவைப் பற்றி இங்கு கூறியிருக்கிறார். அற்புதங்கள் நடைபெறுவதற்காக நாம் ஜெபம் பண்ண வேண்டும். இதை வலியுறுத்துவதற்காகவே யாக்கோபு மழை பெய்த அற்புதத்தைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார் (யாக் 5:17-18; 1இராஜா 17:1; 1இராஜா 18:1,41-46)

15. சத்தியத்தை விட்டு விலகி மோசம் போவதும் இரட்சிக்கப் படுவதும் - (கலா 4:19; 6:1; 1யோவான் 1:9; 2:1-2, சங் 51; வெளி 3:5)

யாக் 5:19 சகோதரரே, உங்களில் ஒருவன் சத்தியத்தைவிட்டு விலகி மோசம் போகும்போது, மற்றொருவன் அவனைத் திருப்பினால்,

யாக் 5:20 தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன்

சத்தியத்தைவிட்டு விலகி மோசம் போனவனைப் பற்றிய காரியங்கள்

1. விசுவாசிகள் சத்தியத்தை விட்டு விலகிப்போவதற்கு வாய்ப்புள்ளது (யாக் 5:19; லூக் 22:32)

2 சத்தியத்தை விட்டு விலகிப் போனவர்கள் மறுபடியும் தேவனிடத்தில் திரும்பி வருவதற்கு வாய்ப்புள்ளது. (யாக் 5:19-20; லூக்கா 22:32)

3 சத்தியத்தை விட்டு விலகிப்போன விசுவாசி பாவம் செய்தால் அவன் மறுபடியும் பாவியாகிறான் (யாக் 5:20; ரோமர் 6:14-23)

4 சத்தியத்தை விட்டு விலகிப்போகிறவன் பாவம் செய்யும்போது மரணம் அவனுக்கு மறுபடியும் சம்பளமாகக் கொடுக்கப் படுகிறது. (யாக் 5:20; எசே 18:24; ரோமர் 8:12-13; கலா 5:19-21)

5 சத்தியத்தை விட்டுவிலகிப்போகிறவன் தன்னுடைய பாவத்திலிருந்து இரட்சிக்கப்படும் போது அவன் தன் ஆத்துமாவை மரணத்தினின்று மறுபடியும் இரட்சித்துக் கொள்கிறான் (யாக் 5:20; 1யோவான் 1:9, 1யோவான் 5:16; வெளி 2:5)

6 சத்தியத்தை விட்டு விலகி மோசம் போனவன் மனந்திரும்பி மறுபடியும் இரட்சிக்கப்படும்போது அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு மூடப் படுகிறது (யாக் 5:20, 1யோவான் 1:9, வெளி 2:5)

7 சத்தியத்தை விட்டு விலகி மோசம் போனவன் மனந்திரும்பவில்லையென்றால் பாவத்தின் சம்பளமாகிய மரணத்தை அவன் சந்திக்க வேண்டியது வரும் (யாக் 5:20; ரோமர் 6:14-23; ரோமர் 8:12-13, 2தீமோ 2:12; எசே 18:24; எபி 6:4-6, எபி 10:26-29, 2பேதுரு 2:20-21

I பேதுரு - முன்னுரை

காலமும் இடமும்

கி.பி. 60 ஆம் ஆண்டில் பாபிலோனிலிருந்து இந்த நிருபம் எழுதப்பட்டது.

ஆசிரியர்

பேதுரு, பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் ஒருவர் (1பேதுரு 1:1; மத் 10:2); சீமோன் (Simon) எனவும், கேபா (Cephas) எனவும் அழைக்கப்பட்டவர் (யோவான் 1:42). பெத்சாயிதா ஊர் (Bethsaida) மீனவன் (மத் 4:18; யோவான் 1:44). பேதுருவின் வரலாறு (மத் 4:18; மத் 8:14; மத் 10:2; மத் 14:28; மத் 15:15; மத் 16:16-23; மத் 17:1,24; மத் 18:21; மத் 19:27; மத் 26:33-75; யோவான் 13:6-37; யோவான் 18:10-27; யோவான் 20:2-6; யோவான் 21:2-21; அப் 1:13-15; அப் 2:14-38; அப் 3:1-12; அப் 4:8-19; அப் 5:3-29; அப் 8:14-20; அப் 9:32-40; அப் 10:5-46; அப் 11:2-13; அப் 12:3-18; அப் 15:7; கலா 1:18-2:14). பேதுரு திருமணமானவன் (மத் 8:14; 1கொரி 9:5). பேதுருவின் ஊழியம் பொதுவாக யூதர் மத்தியில் நடைபெற்றது (கலா 2:7).

ஆதித்திருச்சபைகளுக்குப் பேதுருவே தலைவர் என்று ஒருசிலர் குறிப்பிடுகிறார்கள். ஆனால் வேதத்தில் அதற்கான ஆதாரம் எதுவுமில்லை (அப் 15; 2கொரி 11:28; கலா 2:6-21). மற்ற மூப்பர்களைப் போல பேதுருவும் ஒரு மூப்பர் (1பேதுரு 5).

பேதுரு ரோமாபுரிக்குச் சென்றதாக சான்று எதுவுமில்லை. ரோமாபுரியில் பேதுரு ஊழியம் செய்ததாகப் பவுல் தன்னுடைய நிருபங்கள் எதிலும் குறிப்பிடவில்லை. மேற்கு திசையை நோக்கிப் பிரயாணம் பண்ணுவதற்குப் பதிலாக பேதுரு கிழக்கு திசையை நோக்கிப் பிரயாணம் பண்ணி பாபிலோனுக்குச் சென்றார். அங்கிருந்து இந்த நிருபத்தை எழுதியிருக்கிறார். யோவான் 21:18-19 ஆகிய வசனங்களில் காணப்படும் செய்தியைத் தவிர பேதுருவின் மரணத்தைப் பற்றி நமக்கு வேறு எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. 1பேதுரு, 2பேதுரு ஆகிய இரண்டு நிருபங்களையும் பேதுரு எழுதியிருக்கிறார்.

மையக்கருத்து

விசுவாசிகள் எல்லாவிதமான பாடுகளிலும் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக நடந்து கொள்ள வேண்டும். தேவனுடைய மெய்யான கிருபையில் நிலைகொண்டு நிற்க வேண்டும். (1பேதுரு 5:12) 1பேதுரு நிருபத்தில் உள்ள 5 அதிகாரங்களில் 16 இடங்களில் பேதுரு பாடுகளைப் பற்றி எழுதியிருக்கிறார்.

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 5

வசனங்கள் - 105

கேள்விகள் - 4

புதிய தீர்க்கதரிசனங்கள் - 6

வரலாற்றைக் குறிக்கும் வசனங்கள் - 92

பொருளடக்கம்

I. ஆசிரியரும் வாழ்த்துரையும் (1:1-2)

II. பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக

1. புதிய பிறப்பிற்காகவும் நான்கு அம்ச சுதந்தரத்திற்காகவும் (1:3-4)

2. இரட்சிப்பிற்கு ஏதுவாகக் காக்கப்படுவதற்காக (1:5)

3. பாடுகளின் மூலமாக விசுவாசத்தின் பரிபூரணத்திற்காக (1:6-7)

4. சொல்லி முடியாத சந்தோஷத்திற்காகவும் இரட்சிப்பிற்காகவும் (1:8-9)

5. தீர்க்கதரிசிகள் முன்னறிவித்த இரட்சிப்பின் பரிபூரணத்திற்காக - இதை உற்றுப்பார்க்க தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள் (1:10-12)

I பேதுரு - முன்னுரை

III. இரட்சிப்பின் பரிபூரணத்தைக் குறித்த புத்திமதிகள்

1 ஏழு கட்டளைகள் (1:13-17)

2 மனுஷர் எவ்வாறு மீட்கப்படாமல் இருக்கிறார்கள் (1:18)

3. மனுஷர் எவ்வாறு மீட்கப்படுகிறார்கள்

(1) இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தில் வைக்கும் விசுவாசத்தினால் (1:19-20)

(2) கிறிஸ்துவின் மூலமாக தேவனிடத்தில் வைக்கும் விசுவாசத்தினால் (1:21)

(3) பரிசுத்த ஆவியானவரால் (1:22)

(4) கர்த்தருடைய வசனத்தினால் (1:23)

4 சுவிசேஷம் என்றைக்கும் நிலைத்திருக்கும் (1:24-25)

5 ஆவிக்குரிய வளர்ச்சியை தடைபண்ணும் ஐந்து காரியங்கள் (2:1)

6 ஆவிக்குரிய ரீதியாக எவ்வாறு வளர்ச்சி பெறுவது (2:2)

7 கிறிஸ்துவும் விசுவாசிகளும் (2:3-4)

8 விசுவாசியும் தேவனும் (2:5)

9 கிறிஸ்துவும் விசுவாசியும் (2:6)

10 கிறிஸ்துவும் பாவிகளும் (2:7-8)

11 விசுவாசிகளும் தேவனும் (2:9-10)

IV. கிறிஸ்தவரின் உறவுகள்

1 கிறிஸ்தவரும் பாவிகளும் (2:11-12)

2 கிறிஸ்தவரும் அதிகாரிகளும் (2:13-17)

3 கிறிஸ்தவ வேலைக்காரரும் எஜமான்களும் (2:18-20)

4 பாடுபட்டதற்கு கிறிஸ்து நமக்கு முன்மாதிரி (2:21-25)

5 கிறிஸ்தவ மனைவிகளும் புருஷரும் (3:1-6)

6 கிறிஸ்தவ புருஷரும் மனைவிகளும் (3:7)

7 கிறிஸ்தவ சகோதரர்கள் - பதினான்கு கட்டளைகள் (3:8-13)

V. கிறிஸ்தவரின் பாடுகள்

1 நீதியின் நிமித்தமாக பாடுபடுதலும் அதன் விளைவும் (3:14-16)

2 தேவனுடைய சித்தமும் பாடு அனுபவிப்பதில் கிறிஸ்துவின் எடுத்துக்காட்டும் (3:17-18)

3 கிறிஸ்து காவலிலுள்ள ஆவிகளுக்கு பிரசங்கித்தார் (3:19-20)

4 ஞானஸ்நானமானது மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல் தேவனைப் பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருக்கிறது (3:21)

5 கிறிஸ்து தேவதூதர்களுக்கும் அவருடைய சத்துருக்களுக்கும் மேலாக உயர்த்தப்பட்டார் (3:22)

6 கிறிஸ்தவர்கள் பாவங்களை விட்டோய்ந்திருந்து பாடுகளை அனுபவிக்க வேண்டும் (4:1-2)

I பேதுரு - முன்னுரை

7 சென்ற வாழ்நாட்காலத்தின் ஏழு பாவங்கள் (4:3-4)

8 எல்லா மனுஷரும் கணக்கு ஒப்புவிப்பார்கள் (4:5-6)

9 நியாயத்தீர்ப்பின் நிமித்தம் நான்கு கட்டளைகள் (4:7-9)

10 ஆவிக்குரிய வரங்கள் (4:10-11)

11 கிறிஸ்தவர்கள் பாடு அனுபவிக்க வேண்டிய நான்கு காரியங்களும் பாடு அனுபவிக்க வேண்டாத காரியங்களும் பாடு அனுபவிக்கும்போது செய்ய வேண்டிய நான்கு காரியங்கள் (4:12-16)

12 தற்கால நியாயத்தீர்ப்பும் வருங்கால நியாயத்தீர்ப்பும் - தண்டனையிலிருந்து எவ்வாறு தப்பித்துக் கொள்வது (4:17-19)

VI. கிறிஸ்தவருக்கு பதினான்கு கட்டளைகள்

1 போதகருக்கு ஏழு கட்டளைகள் (5:1-4)

2 எல்லா கிறிஸ்தவருக்கும் ஏழு கட்டளைகள் (5:5-9)

VII. முடிவுரையும் ஆசீர்வாதமும் (5:10-14)

I பேதுரு – தொகுப்புரை

1 அதிகாரம்

I ஆசிரியரும் வாழ்த்துரையும்

1பேதுரு 1:1 இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பேதுரு, பொந்து கலாத்தியா கப்பத்தோக்கியா ஆசியா பித்தினியா தேசங்களிலே சிதறி யிருக்கிறவர்களில்

1பேதுரு 1:2 பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே, ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்ப்படிதலுக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தந் தெளிக்கப்படுதலுக்கும் தெரிந்து கொள்ளப்பட்ட பரதேசிகளுக்கு எழுதுகிறதாவது; கிருபையும் சமாதானமும் உங்களுக்குப் பெருகக்கடவது.

1பேதுரு 1:3 நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.

"இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலன்" (அப் 15:33)

சிதறியிருக்கிறவர்கள் (stranger) - παρεπίδημος - parepideemos - 3927

பொருள் - பரதேசிகளான சிதறியிருக்கிற "stranger" (1பேதுரு 1:1) "pilgrim" (எபி 11:13; 1பேதுரு 2:11) யாக்கோபு நிருபத்தில் கூறப்பட்டிருக்கிறவர்கள் யூத மார்க்கத்திலிருந்து சிதறடிக்கப்பட்டவர்கள் (யாக 1:1) பேதுரு நிருபத்தில் கூறப்பட்டிருக்கிறவர்கள் யூத மார்க்கத்திலிருந்து விசுவாசிகளான கிறிஸ்தவர்கள் (1பேதுரு 1:2)

"பொந்து" (Pontus) - ஆசியா மைனரிலுள்ள (Asia Minor) பழங்கால ராஜ்ஜியம். ஆரம்பத்தில் இது கப்பதோக்கியாவின் (Cappadocia) ஒரு பகுதியாய் இருந்தது. கருங்கடலுக்கும் (Black Sea) காஸ்பியன் கடலுக்கும் (Caspian Sea) இடையில் அர்மேனியாவிற்குத் (Armenia) தெற்கில் அமைந்துள்ளது. (அப் 2:9)

"கலாத்தியா" (Galatia) - ஆசியா மைனரிலுள்ள ஒரு பிரதேசம். கப்பதோக்கியாவிற்கு மேற்கிலும் கருங்கடலுக்குத் தெற்கிலும் அமைந்துள்ளது (அப் 2:9)

"கப்பத்தோக்கியா" (Cappadocia) - கலாத்தியாவிற்குக் கிழக்கிலும், கருங்கடலுக்குத் தெற்கிலும் அமைந்துள்ள பிரதேசம். (அப் 2:9)

"ஆசியா" (Asia) - ஆசியா என்பது ஆசியா மைனர் முழுவதையும் குறிக்கும். இந்த வசனத்தில் ஆசியா என்பது ஆசியா மைனர் என்னும் பிரதேசத்தையே குறிக்கிறது. இதன் தலைநகரம் எபேசு (Ephesus)

"பித்தினியா" (Bithynia) - ஆசியா மைனரில் இருந்த பழங்கால ராஜ்ஜியம். இது கருங்கடலுக்குத் தெற்கிலும் பொந்துவிற்கு மேற்கிலும் அமைந்துள்ளது. (அப் 16:7

"தெரிந்துகொள்ளப்பட்ட" - (லூக்கா 18:7

"தேவனுடைய முன்னறிவு" (God's Foreknowledge) - தேவன் வருங் காலத்தை நோக்கிப் பார்க்கிறார். மனுஷனுடைய வீழ்ச்சியிலிருந்து அவனை மீட்பதற்காக ஒரு இரட்சகரை அனுப்ப வேண்டும் என்று தேவன் முன்னறிந்தார் (ரோமர் 8:29-30) தேவன் எந்த ஒரு தனி நபரையும் இரட்சிக்கப்படுவதற்கோ அல்லது இரட்சிக்கப்படாமல் அவரை நரகத்திற்கு அனுப்புவதற்கோ தெரிந்தெடுக்கவில்லை. மனுக்குலத்தார் அனைவரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்பது தேவனுடைய சித்தம். தாங்கள் இரட்சிக்கப்பட வேண்டுமா அல்லது வேண்டாமா என்று ஒவ்வொரு தனிநபரும் தீர்மானம் பண்ணிக் கொள்ள வேண்டும்.

I பேதுரு – தொகுப்புரை

1 அதிகாரம்

யோவான் 3:16; 1தீமோ 2:4; 2பேதுரு 3:9 வெளி 22:17 தேவன் பட்சபாதமுள்ளவரல்ல ஒருவனை இரட்சிக்க வேண்டுமென்றும் மற்றவனை இரட்சிக்கக் கூடாதென்றும் தேவன் தெரிந்து கொள்ளவில்லை எல்லோரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்றே தேவன் விரும்புகிறார் தேவனுடைய அழைப்பை ஏற்றுக் கொள்கிறவன் இரட்சிக்கப்படுகிறான் இரட்சிப்பின் அழைப்பை ஏற்றுக் கொள்ளாதவன் தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்துகிறான் தேவன் எல்லோருக்குமே ஒரேவிதமான கிருபையையே கொடுத்திருக்கிறார் தேவனுடைய அழைப்புகள் வாக்குத்தத்தங்கள் பராமரிப்புகள் தண்டனையைப் பற்றிய எச்சரிப்புகள் ஆகியவை எல்லா மனுஷருக்கும் பொதுவானவை.

நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளுமாறு தேவன் எல்லோருக்கும் அழைப்பு கொடுக்கிறார் இந்த அழைப்பை ஏற்றுக் கொள்கிறவர்கள் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்கிறார்கள் இந்த அழைப்பை ஏற்றுக் கொள்ளாதவர்கள் நித்திய அழிவைப் பெற்றுக் கொள்கிறார்கள்

முன்னறிவு (Foreknowledge) - πρόγνωσις - prognoosis - 4268

பெண்பால் பெயர்சொல் முன்னறிவு (a perceiving beforehand) (அப 2:23 1பேதுரு 1:2

தேவனுடைய தெரிந்துகொள்ளப் பட்டவர்களாகும் வழிகள்

1. ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே
2. கீழ்ப்படிதலினாலே சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிதலினாலே
3. இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தந் தெளிக்கப்படுதலினாலே

நாம் இரட்சிக்கப்படும்போது இம்மூன்று காரியங்களும் ஒரே சமயத்தில் நடைபெறுகின்றன 2தெச 2:13)

"கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு" - தேவன் பிதாவாகவும் இயேசு கிறிஸ்துவின் தேவனாகவும் இருக்கிறார் பிதா இயேசு கிறிஸ்து அல்ல. திரித்துவத்தில் பிதா, குமாரன் பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் வெவ்வேறு தனித்தனியான ஆள்தத்துவம் உடையவர்கள்

II. பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக

1. புதிய பிறப்பிற்காகவும் நான்கு அம்ச சுதந்தரத்திற்காகவும் - (அப 26:18; ரோமர் 8:17; எபே 1:11)

1பேதுரு 1:4 அவர் இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்

"நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்" - தேவன் மனுஷனைச் சிருஷ்டிக்கும்போது தமது சாயலாகவே சிருஷ்டித்தார் தமது கிருபையையும் சிலாக்கியத்தையும் மனுஷனுக்குக் கொடுத்தார் மனுஷன் தன்னுடைய உன்னதமான ஸ்தானத்திலிருந்து தவறி விழுந்துவிட்டான் ஆகையினால் தேவனுடைய கிருபைக்குள் பிரவேசிப்பதற்கு மனுஷன் மறுபடியும் பிறக்க வேண்டியது அவசியமாயிற்று (யோவான் 3:3,7 மனுஷன் மறுபடியும் பிறந்த பின்பு, தான் ஏற்கெனவே விழுந்த பாவத்தில் மறுபடியும் விழுந்துவிடக்கூடாது என்று மனுஷனுக்கு வேதவசனம் எச்சரிப்பாகக் கூறுகிறது. (கலா 2:18 கலா 4:9 கலா 5:1 2பேதுரு 2:20 22 எபி 6:4 இந்த எச்சரிப்பையும் மீறி மனுஷன் மறுபடியும் பாவம்செய்து தேவனைவிட்டு பின்வாங்கிப்போய் விடுகிறான் இவன் ஏற்கெனவே மறுபடியும் பிறந்தவன் ஆயினும் இவன் இன்னும் ஒருமுறை மறுபடியும் பிறக்க வேண்டும். 1பேதுரு 1:4 ஆவது வசனத்தில் "நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்" என்றும், 1பேதுரு 1:23 ஆவது வசனத்தில் "மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்கள்" என்றும் கூறப்பட்டிருந்தினால் ஒன்றுக்கும் மேற்பட்ட முறை மறுபடியும் பிறப்பதற்கு வாய்ப்புள்ளது என்பது தெரிய வருகிறது.

I பேதுரு – தொகுப்புரை

1 அதிகாரம்

மனுஷர் பலதடவை மறுபடியும் பிறக்க முடியும்

1 ஆதாம் பாவம் செய்யும் வரையிலும் எல்லா ஜனங்களும் நித்திய ஜீவனைப் பெற்றிருந்தார்கள் ஆதாம் பாவம் செய்யாமல் இருந்திருந்தால் எல்லா ஜனங்களும் நித்திய காலமாக ஜீவித்திருப்பார்கள் (ஆதி 2:17 ரோமர் 5:12-21) யோவான் 3:1-8 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் புதிய பிறப்பானது மறுபடியும் பிறப்பதைக் குறிக்கும் மரண தண்டனையை அகற்றிவிட்டு தன்னுடைய ஜீவன் மீட்கப்படுவதைக் குறிக்கும் (ஏசா 59:2 மத் 1:21 யோவான் 3:16 எபே 2:1-9) இது ஒருமுறை நடைபெறும்போது பலமுறை நடப்பதற்கு வாய்ப்புள்ளது.

2 நமது சத்துருக்களை நாம் எழுபதுமுப்பது தரம் அதாவது 490 தரம் மன்னிக்க வேண்டுமென்று சுவிசேஷம் நமக்கு உபதேசிக்கிறது. (மத் 18:21-22) நமக்கு இதை உபதேசிக்கும் கர்த்தர் இந்தக் காரியத்தைத் தம்முடைய நடைமுறையிலும் செயல்படுத்தி நம்மை பலதரம் மன்னிப்பார்

3 ஒரு விசுவாசி பாவம் செய்யும்போது இயேசுகிறிஸ்து பிதாவிடத்தில் அந்த நபருக்காக பரிந்து பேசுகிறார் (யோவான் 2:1-2) பின்வாங்கிப் போனவர்களைத் தேவனிடத்தில் மறுபடியும் கூட்டிச்சேர்க்க வேண்டியதில்லை என்றால் நமக்காகப் பரிந்து பேசவேண்டிய அவசியமுமிராது.

4 நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார் (1 யோவான் 1:9

5 பேதுரு மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டான் இயேசுவை தேவனுடைய குமாரன் என்றும் கிறிஸ்து என்றும் அறிக்கையிட்டான் இதன் மூலமாக அவனுக்குப் புதிய பிறப்பு கிடைத்தது. (1 யோவான் 5:1 மத் 16:16). பரிசுத்த ஆவியானவர் அவனுக்குள் இருந்தார் சுவிசேஷ வசனங்களைப் பிரசங்கம் பண்ணினான் வியாதியஸ்தர்களைக் குணமாக்கினான் (மத் 10:1-20) இப்பேர்ப்பட்ட பேதுரு தம்மை மறுதலித்து பின்வாங்கிப்போவான் என்றும் மறுபடியும் இரட்சிக்கப்படுவான் என்றும் இயேசுகிறிஸ்து முன்னறிவித்தார் (லூக்கா 22:31-34) இரட்சிக்கப்பட்டவர்கள் பாவம்செய்யும்போது அவர்கள் தம்முடைய பாவங்களை மறுபடியும் அறிக்கையிட்டு பேதுருவைப் போல தேவனுடைய இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும் (மத் 26:69-75

6 ஒருவன் மறுபடியும் இரட்சிக்கப்படுவதைக் குறித்து யாக்கோபு இவ்வாறு உபதேசம் பண்ணுகிறான் "சகோதரரே உங்களில் ஒருவன் சத்தியத்தைவிட்டு விலகிமோசம் போகும்போது மற்றொருவன் அவனைத் திருப்பினால் தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து திரளான பாவங்களை மூடுவானென்று அறியக் கடவன்

7 தேவனால் மனுஷரை மறுபடியும் ஒட்ட வைக்க முடியும் என்று பவுல் உபதேசம் பண்ணியிருக்கிறார்

8 பிசாசானவனுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிபட்டிருக்கிற அவர்கள் மறுபடியும் மயக்கந்தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும் சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்க வேண்டும் என்று பவுல் உபதேசம் பண்ணுகிறார்

9 பின்வாங்கிப்போனவர்களும் (கலா 4:19 தேவனுடைய கிருபையிலிருந்து விழுந்தவர்களும் (கலா 1:6 8 கலா 3:1 5 கலா 4:19, கலா 5:4 மறுபடியும் பிறப்பதைக் குறித்து பவுல் உபதேசம் பண்ணியிருக்கிறார்

I பேதுரு - தொகுப்புரை

1 அதிகாரம்

10 ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், அவனைச் சீர்பொருந்த பண்ணவேண்டும் என்பது பவுலின் உபதேசம். (கலா 6:1)

11 தேவைப்பட்டால் மனந்திரும்புதலின் அஸ்திபாரத்தை மறுபடியும் போடலாம் (எபி 6:1) மார்க்கபேதம் உள்ளவர்கள் மனந்திரும்ப மாட்டார்கள் (எபி 6:4-9; எபி 10:26-29) பின்வாங்கிப்போனவர்கள் இயேசு கிறிஸ்துவின் மீது இன்னும் விசுவாசமாகவே இருப்பார்கள் தங்களுடைய பாவங்களில் எவ்வளவுதான் மூழ்கிப் போயிருந்தாலும் கிறிஸ்துவில் அவர்கள் வைத்திருக்கும் விசுவாசம் புதுப்பிக்கப்படுவதற்கு வாய்ப்பிருக்கிறது.

12 மறுபடியும் மனமாற்றமடைவதைக் குறித்து இயேசு கிறிஸ்து உபதேசம் பண்ணியிருக்கிறார்

13 காணாமல்போய் கண்டுபிடிக்கப்பட்ட ஆடு, வெள்ளிக்காசு, கெட்டகுமாரன் ஆகியோரைப் பற்றி இயேசு கிறிஸ்து லூக்கா 15 ஆவது அதிகாரத்தில் உவமையாகக் கூறியிருக்கிறார்

14 தாவீது பாவம் செய்து பின்பு மறுபடியும் புதுப்பிக்கப்பட்டான்

15 தம்முடைய நிபந்தனைகளைக் கைக்கொண்டால் தேவன் இஸ்ரவேலரை மீட்டுக் கொள்வதாகத் திரும்பத் திரும்ப வாக்குப் பண்ணியிருக்கிறார்

மறுபடியும் ஜெநிப்பித்தல் (begotten us again) - ἀναγεννάω - anagennaoo 313

வினைச்சொல் - மறுபடியும் ஜெநிப்பி (to beget anew) " begotten again" (1பேதுரு 1:3) "be born again" (1பேதுரு 1:23)

"ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி" - இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினால் மனுஷருக்கு ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாயிருக்கிறது.

தீர்க்கதரிசன எண் - 1

"அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி___" (1பேதுரு 1:4-5) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை

சுதந்தரம் (inheritance) - κληρονομία - kleeronomia - 2817

பெண்பால் பெயர்ச்சொல் - சுதந்தரம் (a possession) (1பேதுரு 1:4; மத் 21:38; மாற்கு 12:7 லூக்கா 12:13; லூக்கா 20:14 அப 7:5 அப 20:32; கலா 3:18)

அழிவில்லாதது (incorruptible) - ἄφθαρτος - aphthartos - 862

பெயரடை - அழிவில்லாத, அழியாத (immortal) (1பேதுரு 1:4)

மாசற்றது (undefiled) - ἀμίαντος - amiantos - 283

பெயரடை - மாசில்லாத, அசுசிப்படாத, மாசற்ற

வாடாதது (unfading) - ἀμάραντος - amarantos - 263

பெயரடை - வாடாத

காத்துக்கொள் (reserved) - τηρέω - teereoo - 5083

வினைச்சொல் - கைக்கொள் காத்துக்கொள், காவல் காத்திரு, வைத்திரு, ஜாக்கிரதையாயிரு (to guard from injury, loss) "reserve" (1பேதுரு 1:4; அப் 25:21; 2பேதுரு 2:4,9, 17; 2பேதுரு 3:7; யூதா 1:6,13); "preserve" (1தெச 5:23; யூதா 1:1); "hold fast" (வெளி 3:3); "keepers" (மத் 28:4); to watch (மத் 27:36,54); "observe" (மத் 23:3; மத் 28:20; அப் 21:25); "keep" (எபே 4:3; யாக் 2:10; 1யோவான் 2:3-5)

I பேதுரு - தொகுப்புரை

1 அதிகாரம்

2. இரட்சிப்பிற்கு ஏதுவாக காக்கப் படுவதற்காக - (மத் 10.22, ரோமர் 8.24

1பேதுரு 1.5 கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்தில வைக்கப் பட்டிருக்கிறது.

இரட்சிப்பின் அம்சங்கள்

1 இரட்சிக்கப்பட்டிருக்கிற விசுவாசி தன்னுடைய [redacted] பாவங்களிலிருந்தும் இரட்சிக்கப பட்டிருக்கிறார் லூக்கா 19.9, அப 4.12 ரோமர் 1.16, ரோமர் 10.9-10; 2கொரி 6.2 2தெச 2.13, 1யோவான 1.9 எபே 1.14

2 ஒரு விசுவாசி ஒளியில நடக்கும்போது பாவத்திலிருந்து பாதுகாக்கப்படுகிறார (பிலி 2.12, 2தீமோ 3.15; தீத்து 2.11-12 எபி 2.3- எபி 6.9 1யோவான 1.7

3 விசுவாசி எல்லாவிதமான வீழ்ச்சியிலிருந்தும் பாதுகாக்கப படுவார் (ரோமர் 13.11, 1தெச 5.9, எபி 5.9, எபி 9.28, 1பேதுரு 1.5,9,13)

இரட்சிப்பினால் உண்டாகும் வருங்கால ஆசீர்வாதங்கள்

1 சரீரத்தின் மீட்பு (ரோமர் 8.23)

2 எல்லா சிருஷ்டிகளின் மீட்பு (ரோமர் 8.19-24; அப 13.47- ஏசா 11.6-9)

3 நித்திய ஜீவன் (மத் 19.29; மாற்கு 10.30; லூக்கா 18.30; கலா 6.7 8)

4 சாத்தானின் இறுதித் தோல்வி (வெளி 12.10; வெளி 20.1-10 ஏசா 24.21 22; ஏசா 25.7-8

5 எல்லாக் கலகங்களும் ஒடுக்கப்படுவதும், சாபம் அகற்றப்படுவதும். (வெளி 22.3 1கொரி 15.24-28

6 வானமும், பூமியும் ஒன்றுசேர்க்கப்படுவது. (எபே 1.10

7 பாவம், வியாதி, மரணம் ஆகியவை பூரணமாக அகற்றப்படுவது (வெளி 21.3-5; 1கொரி 15.24-28

8 வானங்களும், பூமியும் பரிபூரண நிலைமையில இருக்கும்படி புதுப்பிக்கப படுவது. (வெளி 21-22; 2பேதுரு 3.10-13; ரோமர் 8.19-25, எபி 1.10-12; எபி 12.25-28

9 மனுஷன பாவம் செய்யாமல இருந்திருந்தால இந்த உலகம் எப்படியிருந்திருக்குமோ அதுபோல ஜனங்களும், விலங்குகளும், எல்லாக் காரியங்களும் இருப்பது. (ஆதி 8.22, ஆதி 9.12; ஏசா 11.6-9 ஏசா 65.20-25; ரோமர் 8. 20-25

10 கிறிஸ்துவின நித்திய இராஜ்யமும், அவர் பூமியில தேவனாக இருப்பதும். (ஏசா 9.6-7; தானி 2.44-45, தானி 7.13-14; லூக்கா 1.32 33 வெளி 11.15; வெளி 22.4-5)

3. பாடுகளின் மூலமாக விசுவாசத்தின் பரிபூரணத்திற்காக - (5.9-10

1பேதுரு 1.6 இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்; என்றாலும், துணப்பட வேண்டியது அவசியமானதால் இப்பொழுது கொஞ்சகாலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப் படுகிறீ[redacted]

I பேதுரு - தொகுப்புரை

1 அதிகாரம்

1பேதுரு 1:7 அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும். அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்.

"இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்" - விசுவாசிகள் இரட்சிப்பில் சந்தோஷப்படுகிறார்கள். அதேசமயத்தில் அவர்கள் துன்பப்படவேண்டியதும் அவசியமாயிருக்கிறது. அந்தத் துன்பம் நிரந்தரமானதல்ல. அது கொஞ்சக்காலத்திற்கு மட்டுமே இருக்கும். (1பேதுரு 1:6-7)

"சோதனைகள்" (temptations) - (யாக் 1:2,13)

தீர்க்கதரிசன எண் - 2

"அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும். அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்" (1பேதுரு 1:7). இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

"அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்" - பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்போது அதிலுள்ள அசுத்தங்கள் வேறுபிரிக்கப்படும். பொன் தன்னுடைய தன்மையை இழந்துபோகாது. பொன்னின் நிறமும், நிறையும் மாறாது. பொன்னைப் பலகாலம் வைத்திருந்தாலும் அதில் ஒரு மாற்றமும் காணப்படாது. உண்மையான விசுவாசம் உடையவர்களுக்கு எப்பேர்ப்பட்ட சோதனைகள் வந்தாலும் அவர்கள் தங்கள் விசுவாசத்திலிருந்து விலகிப்போகமாட்டார்கள்.

"இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது" - இக்காலத்தில் விசுவாசிகளுக்கு நித்திய ராஜ்யத்தில் வெகுமதிகள் கொடுக்கப்படும். (மத் 16:27; மத் 25:21,23)

4. சொல்லி முடியாத சந்தோஷத்திற்காகவும் இரட்சிப்பிற்காகவும் - (1:8-2:3)

1பேதுரு 1:8 அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள்; இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து, சொல்லிமுடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்க் களிகூர்ந்து,

1பேதுரு 1:9 உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்துமரட்சிப்பை அடைகிறீர்கள்.

"அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள்" - ஒருவர் இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதினால் அவர் புது சிருஷ்டியாகிறார். இயேசு கிறிஸ்துவைக் கண்ணால் கண்டவர்கள் அவரை விசுவாசித்து ஜீவித்ததுபோல அவரைக் காணாமலிருக்கிறவர்களும் அவரை விசுவாசித்து சுவிசேஷத்தின் உபதேசத்திற்கேற்ற பிரகாரம் ஜீவிக்கிறார்கள். (2கொரி 5:17-18; ரோமர் 5:5) விசுவாசத்தினால் சந்தோஷம் உண்டாகிறது. இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் சொல்லிமுடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்க் களிகூருகிறார்கள். (1பேதுரு 1:8-9)

I பேதுரு - தொகுப்புரை

1 அதிகாரம்

பலன் (end) - τέλος - telos - 5056

பால்வேறுபாடற்ற பெயர்ச்சொல் - முடிவு, அழிவு, அந்தம், தொந்தரவு விலக்கிப்போதல் (the end of a thing) "end" 1பேதுரு 1:9; 1பேதுரு 4:7,17; மத் 10:22; மத் 24:6,13,14; மத் 26:58; மாற்கு 3:26; மாற்கு 13:7,13; லூக்கா 1:33; லூக்கா 21:9; லூக்கா 22:37; யோவான் 13:1; யோவான் 6:21-22; யோவான் 10:4; 1கொரி 1:8; 1கொரி 10:11; 1கொரி 15:24; 2கொரி 1:13; 2கொரி 3:13; 2கொரி 11:15; பிலி 3:19; 1தீமோ 1:5; எபி 3:6,14; எபி 6:8,11; எபி 7:3; யாக் 5:11; வெளி 2:26; வெளி 21:6; வெளி 22:13 "ending" வெளி 1:8 "finally" 1பேதுரு 3:8 "to the uttermost" 1தெச 2:16 "continual" லூக்கா 18:5; "custom" மத் 17:25; ரோமர் 13:7; விசுவாசித்திற்கு முடிவில் கிடைக்கும் பலன் என்று இந்த வார்த்தைக்குப் பொருள் கூறலாம்

5. **தீர்க்கதரிசிகள் முன்னறிவித்த இரட்சிப்பின் பரிபூரணத்திற்காக - இதை உற்றுப்பார்க்க தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்**

1பேதுரு 1:10 உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கதரிசனஞ் சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனை பண்ணினார்கள்

1பேதுரு 1:11 தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும் அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது இன்ன காலத்தைக் குறித்தாரென்பதையும் அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள்

1பேதுரு 1:12 தங்கள் நிமித்தமல்ல நமது நிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டது. பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக் கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது. இவைகளை உற்றுப்பார்க்க தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்

பரிசோதனை பண்ணுதல் (enquired) - ἐκζητέω - ekzeeteoo - 1567

வினைச்சொல் - தேடு, பரிசோதனை பண்ணு (to search out)

கருத்தாய் ஆராய்தல் (searched) - ἐξεραυνάω - exeraunaoo - 1830

வினைச்சொல் - கருத்தாய் ஆராய்தல் (to search out, examine)

"உங்களுக்கு உண்டான கிருபை" விசுவாசிகளிடத்தில் இரட்சிப்பு, கிருபை, பரிசுத்த ஆவியானவரின் நிறைவும் வரங்களும் இருந்தன. இது கிருபையின் நிறைவு ஆகும். யோவான் 1:16,17

ஆராய்தல் (Searching) ἐραυνάω eraunaoo 2045

வினைச்சொல் ஆராய (to search for; examine) 1பேதுரு 1:11; யோவான் 5:39; யோவான் 7:52; ரோமர் 8:27; 1கொரி 2:10; வெளி 2:23)

I பேதுரு - தொகுப்புரை

1 அதிகாரம்

"பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக் கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது" - இந்தச் சுவிசேஷமே புதிய உடன்படிக்கை. தீர்க்கதரிசிகளும் இதையே முன்னறிவித்தார்கள் (யோவான் 1:16-17). பரிசுத்த ஆவியானவரின் நிறைவினால் விசுவாசிகள் அபிஷேகிக்கப்பட்டார்கள் (லூக்கா 24:49; யோவான் 7:37-39; அப் 1:4-8). அவர்கள் ஆவியின் கனியையும் வரங்களையும் பெற்றுக் கொண்டார்கள் (1கொரி 12:4-11; கலா 5:22-23). பழைய ஏற்பாட்டுப் பிரமாணம் புதிய பிரமாணத்திற்கு ஒரு நிழலாய் கொடுக்கப்பட்டிருந்ததைக் கண்டுகொண்டார்கள் (எபி 10:1). இவை அனைத்தையும் பழைய ஏற்பாட்டுக்கால தீர்க்கதரிசிகள் முன்னறிவித்தார்கள் (எபி 10:19). ஆயினும் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு நுழையும் சிலாக்கியம் விசுவாசிகளுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதையும் (எபி 10:19), இயேசு கிறிஸ்து செய்த கிரியைகளைப்போல கிரியை செய்வதற்கு எல்லா விசுவாசிகளுக்கும் அதிகாரமும் வல்லமையும் கொடுக்கப்பட்டிருப்பதையும் (யோவான் 14:12), இன்னும் அநேக புதிய ஏற்பாட்டு சத்தியங்களையும் அனுபவங்களையும் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் முன்னறிவிக்கவில்லை.

"இவைகளை உற்றுப்பார்க்க தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்." மீட்பின் திட்டத்தையும், மீட்கப்பட்டவர்கள் உயர்த்தப்படுவதையும் கண்டு தேவதூதர்களும் ஆச்சரியப்படுகிறார்கள். ஆகையினால் சுவிசேஷத்தின் அற்புதமான சத்தியங்களை உற்றுப்பார்ப்பதற்கு தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள். உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரிய வருகிறது (எபே 3:9-11). விசுவாசிகள் உலகத்துக்கும் தூதருக்கும் மனுஷருக்கும் வேடிக்கையாயிருக்கிறார்கள் (1கொரி 4:9).

III. இரட்சிப்பின் பரிபூரணத்தைக் குறித்த புத்திமதிகள் - (1:13-2:10)

1. ஏழு கட்டளைகள்

1பேதுரு 1:13 ஆகையால், நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படுங் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள்.

1பேதுரு 1:14 நீங்கள் முன்னே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படி இனி நடவாமல், கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்து,

1பேதுரு 1:15 உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்.

1பேதுரு 1:16 நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே.

1பேதுரு 1:17 அன்றியும், பட்சபாதமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின்படி நியாயந்தீர்க்கிறவரை நீங்கள் பிதாவாகத் தொழுதுகொண்டு வருகிறபடியால், இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும் பயத்துடனே நடந்துகொள்ளுங்கள்.

விசுவாசிகளுக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொள்ளுங்கள் (1பேதுரு 1:13)
2. தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள் (1பேதுரு 1:13)
3. இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படுங் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள் (1பேதுரு 1:13; ரோமர் 8:24-25)

I பேதுரு – தொகுப்புரை

1 அதிகாரம்

4 முன்னே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படி இனி நடவாமல் இருங்கள் (1 பேதுரு 1:14; எபே 2:1-3). இப்பொழுது கீழ்ப்படிகிற பிள்ளைகளாக இருக்கிறீர்கள். ஆகையினால் புதிய ஜீவியத்தை ஜீவிக்க வேண்டும் (2 கொரி 5:17-18).

5 உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள் (1 பேதுரு 1:15; 1 பேதுரு 1:16).

6 நீங்கள் பிதாவைத் தொழுது கொண்டு வருகிறபடியால், இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும் பயத்துடனே நடந்து கொள்ளுங்கள் (1 பேதுரு 1:17; 1 கொரி 10:12-13).

7 நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாயிருங்கள். சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள் (1 பேதுரு 1:22; யோவான் 13:34-35; யோவான் 15:12-13).

தெளிந்தவர்களாயிருத்தல் (Be sober) - νήφω - neephoo - 3525

வினைச்சொல் - தெளிந்தவர்களாயிரு, புத்தியுள்ளவர்களாயிரு, மனத்தெளிவுள்ளவனாயிரு (to live soberly, righteously) (தீத்து 2:11-12)

தீர்க்கதரிசன எண் - 3

"இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படுங் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள்" (1 பேதுரு 1:13). இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

"இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது" இந்த வாக்கியம் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிப்பிடும். இக்காலத்தில் கிருபையின் பூரண ஆசீர்வாதங்களையும், நித்திய மீட்பையும் பூமியிலுள்ள எல்லா மனுஷரும் புரிந்து கொள்ள ஆரம்பிப்பார்கள்.

"உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்" - உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறார். புறஜாதியாருடைய தெய்வங்கள் பரிசுத்தமானவையல்ல. அவர்களுடைய பெரிய தெய்வங்கள்கூட காமவிகாரங்கள் உள்ளவை, அசுத்தமானவை. ஆனால் மெய்யான தேவனோ பரிசுத்தராக இருக்கிறார். தம்மைப் பின்பற்றுகிறவர்களும் தம்மைப்போல பரிசுத்தராக இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார் (1 பேதுரு 1:15-16; எபி 12:14).

"நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்" - லேவி 11:44 ஆகிய வசனம் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"நீங்கள் பிதாவாகத் தொழுதுகொண்டு வருகிறபடியால்" - நீங்கள் தேவனை இயேசு கிறிஸ்துவின் மூலமாகத் தொழுதுகொண்டு, அவருக்குக் கீழ்ப்படிகிற பிள்ளைகளாக இருக்க வேண்டும். இந்தப் பூமியிலே நாம் பரதேசிகளாய் சஞ்சரிக்கிறோம். அதுவரையிலும் நாம் பயத்துடனே நடந்து கொள்ள வேண்டும்.

"பட்சபாதமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின்படி நியாயந்தீர்க்கிறவர்" தேவன் பட்சபாதமில்லாதவர். ஒருவரை நேசித்து மற்றவரைத் தேவன் வெறுக்கிறவர் அல்ல. எல்லோருக்கும் ஆசீர்வாதங்களையும், வாக்குத்தத்தங்களையும் வாக்குப் பண்ணியிருக்கிறார். அதற்குரிய நிபந்தனைகளையும் கொடுத்திருக்கிறார். நிபந்தனைகளைக் கைக்கொள்கிற மனுஷருக்கு ஆசீர்வாதம் உண்டு. நிபந்தனைகளைக் கைக்கொள்ளாதவனைத் தேவன் ஆசீர்வதிப்பதில்லை. ஆகையினால் ஒருசிலர் தேவ ஆசீர்வாதம் பெறுவதும், வேறுசிலர் தேவ ஆசீர்வாதம் பெறாமல் இருப்பதும் மனுஷருடைய செயலே. இதற்காகத் தேவனைப் பட்சபாதமுள்ளவர் என்று குறைகூற முடியாது. (1 பேதுரு 1:17; மத் 16:27)

I பேதுரு – தொகுப்புரை

1 அதிகாரம்

2. மனுஷர் எவ்வாறு மீட்கப்படாமல் இருக்கிறார்கள்

1பேதுரு 1:18 உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்துவந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல்

மீட்கப்படுதல் (redeemed) - λυτρόω - lytrooo - 3084

வினைச்சொல் - மீட்டு இரட்சி. மீட்டுக்கொள் (to procure the life of a captive or a slave by paying a price) (எபி 9:12) - மனுஷனை மீட்பதற்குப் பொன் வெள்ளி ஆகியவை பிரயோஜனமற்றவை. குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே நாம் மீட்கப்பட்டிருக்கிறோம் (1பேதுரு 1:18-19; மத் 26:28 எபே 1:14; கொலோ 1:20 அப 20:28)

"உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்துவந்த வீணான நடத்தை" - யூதமார்க்கத்தார் இரட்சிக்கப்படுவதற்காகப் பலவிதமான சடங்குகளை அநுசரிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வந்தார்கள் இவை முன்னோர்களுடைய பாரம்பரியத்தின் மூலமாய் வந்தவை பரிசுத்த ஆவியானவருடைய வெளிப்பாட்டின் படி தேவவசனத்தின் மூலமாக வந்தவையல்ல

3. மனுஷர் எவ்வாறு மீட்கப்படுகிறார்கள்

(1) இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தில் வைக்கும் விசுவாசத்தினால் - (மத் 26:28 ரோமர் 3:24 5:9 எபே 1:9; 2:13; எபி 9:14; 10:1-19 1யோவான் 1:7; வெளி 1:5)

1பேதுரு 1:19 குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே

1பேதுரு 1:20 அவர் உலகத்தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்து தமது மூலமாய்த் தேவன்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்காக இந்தக் கடைசிக் காலங்களில் வெளிப்பட்டார்

முன்னேகுறிக்கப்பட்டவர் (foreordained) - προγινώσκω - prginooskoo - 4267

வினைச்சொல் - முன்னறி. முன்னேகுறி (to know beforehand) (ரோமர் 8:29)

"உலகத்தோற்றத்திற்கு முன்னே" - ஆதாமின் காலத்திற்கு முன்னே (மத் 13:35)

(2) கிறிஸ்துவின் மூலமாக தேவனிடத்தில் வைக்கும் விசுவாசத்தினால் - (எபே 2:8-9; எபி 12:2)

1பேதுரு 1:21 உங்கள் விசுவாசமும் நம்பிக்கையும் தேவன்மேலிருக்கும்படி, அவரை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவருக்கு மகிமையைக் கொடுத்தார்

விசுவாசிகள் விசுவாசிக்கும் காரியங்கள்

1 இயேசு கிறிஸ்துவின் மூலமாகத் தேவனை விசுவாசிக்கிறார்கள்

2 இயேசு கிறிஸ்து சரீரத்தில் உயிர்த்தெழுந்ததை விசுவாசிக்கிறார்கள்

I பேதுரு - தொகுப்புரை

1 அதிகாரம்

3. இயேசு கிறிஸ்து பரமேறியதையும் பிதாவின் வலதுபாரிசத்திற்கு உயர்த்தப் பட்டதையும் விசுவாசிக்கிறார்கள்

4. விசுவாசிகளுடைய விசுவாசமும் நம்பிக்கையும் இயேசு கிறிஸ்துவின் கிரியைகளை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது.

(3) பரிசுத்த ஆவியானவரால் - (யோவான் 3:1-5; 16:7-11 ரோமர் 8:1-16; எபே 2:18)

I பேதுரு 1:22 ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால் சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்

விசுவாசிகளின் அனுபவங்கள்

1. சுத்தமான ஆத்துமா (I பேதுரு 1:22)

2. சத்தியத்திற்குக் கீழ்ப்படிதல் (I பேதுரு 1:22

3. பரிசுத்த ஆவியானவருக்கு ஒப்புக் கொடுத்தல் (I பேதுரு 1:22)

4. மாயமற்ற சகோதர சிநேகம் (I பேதுரு 1:22)

5. ஊக்கமாய் அன்புகூருதல் (I பேதுரு 1:22

6. சுத்த இருதயம் (I பேதுரு 1:22)

7. தேவவசனத்தினால் மறுபடியும் ஜெநிப்பிக்கப் பட்டிருப்பது. (I பேதுரு 1:23

(4) கர்த்தருடைய வசனத்தினால் - (யோவான் 3:5; 15:3; ரோமர் 1:16, எபே 5:26; யாக் 1:18

I பேதுரு 1:23 அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே

நாம் எவ்வாறு மறுபடியும் ஜெநிப்பிக்கப் படுகிறோம்

1. பரிசுத்த ஆவியானவரால் (யோவான் 3:3-5; I கொரி 6:11

2. தேவவசனத்தினால் (யோவான் 3:5

4. சுவிசேஷம் என்றைக்கும் நிலைத்திருக்கும் - (சங் 119:89 மத் 24:35)

I பேதுரு 1:24 மாம்சமெல்லாம் புல்லைப் போலவும் மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப்போலவுமிருக்கிறது புல் உலர்ந்தது அதின் பூவும் உதிர்ந்தது

I பேதுரு 1:25 கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும். உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனமிதுவே.

"மாம்சமெல்லாம் புல்லைப்போலவும்" - ஏசா 40:6-8 ஆகிய வசனங்கள் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது

தீர்க்கதரிசன எண் - 4

"மாம்சமெல்லாம் புல்லைப்போலவும், மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப்போலவுமிருக்கிறது புல் உலர்ந்தது, அதின் பூவும் உதிர்ந்தது___" (I பேதுரு 1:24-25 பூமியின் வித்துக்களும், அதன் பலன்களும் விரைவில் அழிந்துபோகும். தேவனுடைய வார்த்தை நித்தியமானது. அது ஒருபோதும் அழிந்துபோவதில்லை (I பேதுரு 1:24-25, யாக் 1:11; யாக் 4:14)

2 அதிகாரம்

5. ஆவிக்குரிய வளர்ச்சியைத் தடை பண்ணும் ஐந்து காரியங்கள் - (ரோமர் 8:13)

1பேதுரு 2:3 இப்படியிருக்க, கர்த்தர் தயையுள்ளவரென்பதை நீங்கள் ருசிபார்த்ததுண்டானால்

ருசிபார்க்க வேண்டிய பரலோகக் காரியங்கள்

1 கர்த்தர் (சங் 34:8; 1பேதுரு 2:3)

2 தேவனுடைய வார்த்தை (சங் 119:103, எபி 6:5)

3 பரமஈவு (எபி 6:4)

4 இனிவரும் உலகத்தின் பெலன்கள் எபி 6:5

ருசிபார்க்க வேண்டிய பூலோகக் காரியங்கள்

1 இயற்கையான போஜனம் (2சாமு 3:35 2சாமு 19:35

2 அப்பு (உன் 2:3

3 பூமிக்குரிய காரியங்கள் (கொலோ 2:21

4. மரணம் (யோவான் 8:52; எபி 2:9 மத் 16:28

கிறிஸ்துவைப் பற்றிய சத்தியங்கள்

1 தயையுள்ளவர் (1பேதுரு 2:3; யாத் 34:6; சங் 86:15; சங் 103:8; சங் 111:4; சங் 112:4; சங் 116:5 சங் 145:8

2 ஜீவனுள்ள கல் (1பேதுரு 2:4,6, ஏசா 28:16, 1கொரி 3:11 எபே 2:18-22)

3 தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர் (லூக்கா 18:7, 1பேதுரு 2:4

4 மனுஷரால் தள்ளப்பட்டவர் (சங் 118:22 ஏசா 53, 1பேதுரு 2:4)

5. விலையேறப்பெற்றவர்

6 பிரதான மூலைக்கல் (1பேதுரு 2:6-8 ஏசா 28:16)

7 இடறுதற்கேதுவான கல் (1பேதுரு 2:8 சங் 118:22)

8 விழுதற்கேதுவான கன்மலை (1பேதுரு 2:8 சங் 118:22)

விலையேறப்பெற்றது (precious) - ἔντιμος - entimos - 1784

பொருள் - விலையேறப்பெற்ற பிரியமான கனமுள்ள "precious" (1பேதுரு 2:4,6); "dear" (லூக்கா 7:2); "hold in reputation" (பிலி 2:29); "honorable" (லூக்கா 14:8

6. ஆவிக்குரிய ரீதியாக எவ்வாறு வளர்ச்சி பெறுவது - (ரோமர் 10:17; எபே 4:11-16 2பேதுரு 1:5-11)

1பேதுரு 2:2 சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும், வஞ்சகங்களையும் பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும், ஒழித்துவிட்டு

விசுவாசிகள் ஒழித்துவிட வேண்டிய காரியங்கள்

1 சகல துர்க்குணம்

2 சகலவிதகபடம்

3 வஞ்சகங்கள்

4 பொறாமைகள்

5 சகலவித புறங்கூறுதல் எபே 4:22-31

I பேதுரு - தொகுப்புரை

2 அதிகாரம்

7. கிறிஸ்துவும் விசுவாசிகளும் - (வசனம் 6; 1கொரி 1:30; எபே 2:14 5:25-33)

1பேதுரு 2:3 நீங்கள் வளரும்படி புதிதாய் பிறந்த குழந்தைகளைப் போல திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்.

1பேதுரு 2:4 மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டதும் விலையேறப் பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும்

"புதிதாய் பிறந்த குழந்தைகள்" - பேதுரு 1:23 ஆவது வசனத்தில் பேதுரு இந்த நிருபத்தை வாசிக்கிறவர்களை மறுபடியும் பிறந்தவர்களாகக் கூறுகிறார். இந்த வசனத்தில் கிறிஸ்துவில் புதிதாய் பிறந்த குழந்தைகளைப் போல எவ்வாறு வளர்ச்சி பெறுவது என்று அவர்களுக்கு எழுதுகிறார். திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப் பாலைப் பருகுவதன் மூலமாக ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெற முடியும். சுவிசேஷத்தின் சுத்தமான உபதேசமே களங்கமில்லாத ஞானப்பாலாகும்.

திருவசனம் (word) - λογικός - logikos - 3050

பொருள் - புத்தியுள்ள திருவசனம் (belonging to speech; belonging to reason; that which is rational, fit for reasoning; hence, logic) the word (1பேதுரு 2:2) reasonable (ரோமர் 12:1)

ஆவிக்குரிய வளர்ச்சியைப் பற்றிய காரியங்கள்

1. லீபனோனிலுள்ள கேதுருவைப்போல (சங் 92:12)
2. கொழுத்த கன்றுகளைப்போல (மல் 4:2)
3. பரிசுத்த ஆலயமாக (எபே 2:21)
4. கிருபையில் (2பேதுரு 3:18)
5. அவரை அறிகிற அறிவில் (2பேதுரு 3:18)
6. கிறிஸ்துவிற்குள் எல்லாவற்றிலேயும் (எபே 4:15)

8. விசுவாசியும் தேவனும் - (வசனம் 9; எபே 2:19-22; 2கொரி 6:16-18)

1பேதுரு 2:5 ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்.

விசுவாசிகளைப் பற்றிய காரியங்கள்

1. ஜீவனுள்ள கற்கள் (1பேதுரு 2:4-5; 2கொரி 5:17-18)
2. தேவனுடைய வீட்டார் (எபே 2:18-22; 1கொரி 12:13-28; ரோமர் 12:4-5)
3. பரிசுத்த ஆசாரிய கூட்டம் (1பேதுரு 2:5,9; வெளி 1:6; வெளி 5:10; வெளி 20:4-6)

"ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்கு" பரிசுத்த ஆசாரியக் கூட்டத்தார் ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்துகிறார்கள் (ரோமர் 7:14)

ஆவிக்கேற்ற பலிகள்

1. ஆவிக்குரிய ஜனங்கள் தங்களையே ஜீவபலியாகச் செலுத்துகிறார்கள் (ரோமர் 12:1-2; 1கொரி 2:15; 1கொரி 3:1; கலா 6:1)
2. ஆவிக்குரிய ஆராதனைகள் (1கொரி 2:4; 1கொரி 2:13; 1கொரி 14:12; 2கொரி 3:6)

I பேதுரு – தொகுப்புரை

2 அதிகாரம்

3. சங்கீதங்கள் (எபே 5:19 கொலோ 3:16)

4. துதிகள் (1பேதுரு 2:9; எபி 13:15-16)

5. நடத்தை (ரோமர் 8:1-13; கலா 5:16,25)

6. தனிப்பட்ட விசுவாசம் (2கொரி 4:13-18)

7. ஞானமும் அறிவும் (கொலோ 1:9)

8. தனிப்பட்ட அன்பு (கொலோ 1:8)

9. உண்மை (பிலி 1:27; ரோமர் 1:9)

10. ஜெபமும் விண்ணப்பங்களும் (எபே 6:18)

9. கிறிஸ்துவும் விசுவாசியும் - (வசனம் 3; எபி 4:14-16, 9:15; 12:2)

1பேதுரு 2:6 அந்தப்படியே: இதோ, தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப் பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லைச் சீயோனில் வைக்கிறேன்; அதின்மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப் படுவதில்லை என்று வேதத்திலே சொல்லியிருக்கிறது.

1பேதுரு திருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 1

"இதோ, தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப் பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லைச் சீயோனில் வைக்கிறேன்; அதின்மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லை" (1பேதுரு 2:6; ஏசா 28:16). சபையின் அஸ்திபாரம் எருசலேமில் போடப்பட்டது. முழு உலகத்தின் பாவங்களுக்கும் கிறிஸ்து அங்கு பாடுபட்டு மரித்தார் (மத் 23:37-39; லூக்கா 13:33) அங்கு சபையின்மீது பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளினார். இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்கு பின்பு எருசலேமில் ஆவிக்குரிய முதலாவது எழுப்புதல் உண்டாயிற்று. (அப் 1:8; அப் 2:1-8:1)

10. கிறிஸ்துவும் பாவிகளும் - (அப் 7:3; வெளி 20:11-15)

1பேதுரு 2:7 ஆகையால் விசுவாசிக்கிற உங்களுக்கு அது விலையேறப்பெற்றது; கீழ்ப்படியாமலிருக்கிறவர்களுக்கோ வீட்டைக் கட்டுகிறவர்களால், தள்ளப்பட்ட பிரதான மூலைக்கல்லாகிய அந்தக் கல் இடறுதற்கேதுவான கல்லும் விழுதற்கேதுவான கன்மலையுமாயிற்று.

1பேதுரு 2:8 அவர்கள் திருவசனத்திற்கு கீழ்ப்படியாதவர்களாயிருந்து இடறு கிறார்கள்; அதற்கென்றே நியமிக்கப் பட்டவர்களாயும் இருக்கிறார்கள்.

1பேதுரு திருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 2

"கீழ்ப்படியாமலிருக்கிறவர்களுக்கோ வீட்டைக் கட்டுகிறவர்களால், தள்ளப்பட்ட பிரதான மூலைக்கல்லாகிய அந்தக் கல் இடறுதற்கேதுவான கல்லும் விழுதற்கேதுவான கன்மலையுமாயிற்று" (1பேதுரு 2:7; சங் 118:22)

வெட்கப்படுதல் (confounded) - καταισχύνω - **kataischynoo** - 2617

வினைச்சொல் - வெட்கப்படு, வேதனைப்படு 1கொரி 11:4

விலையேறப்பெற்றது (precious) - τιμή - **timee** - 5092

பெயர்ச்சொல் - கிரயம், கனம், மரியாதை. பிரயோஜனம் **"precious"** (1பேதுரு 2:7), **"sum"** (அப் 7:16); **"price"** (மத் 27:6,9, அப் 4:34; அப் 5:2-3; அப் 19:19, 1கொரி 6:20; 1கொரி 7:23), **"honor"** (யோவான் 4:44, 1பேதுரு 1:7; 1பேதுரு 3:7, 2பேதுரு 1:17)

I பேதுரு - தொகுப்புரை

2 அதிகாரம்

1பேதுரு நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 3

"அவர்கள் திருவசனத்திற்கு கீழ்படியாதவர்களாயிருந்து இடறுகிறார்கள்" (1பேதுரு 2:8; ஏசா 8:14)

கிறிஸ்துவினிடத்தில் யூதர்கள் இடறுவதற்கான காரணங்கள்

1 இயேசு கிறிஸ்து யூதர்களை ரோமப் பேரரசிடமிருந்து மீட்பதற்காக உலகப் பிரகாரமான ராஜாவாக வரவில்லை (யோவான் 11:48; அப் 1:7)

2 அவர் ஒரு எளிய ஏழையாக வந்ததினால் உலக ஜனங்களை அவரால் கவர்ந்திழுக்க முடியவில்லை. (2கொரி 8:9; யோவான் 15:19-21; யோவான் 17:14-16

இயேசு கிறிஸ்துவை யூதர்கள் கொலை செய்ய விரும்பியதற்குக் காரணங்கள்

1 இயேசு கிறிஸ்துவின் ராஜரீகம் (மத் 2:2-3,16; யோவான் 18:33-40; யோவான் 19:12-22)

2 சத்தியத்தைக் கூறினார் (லூக்கா 4:21-29; யோவான் 8:40)

3 ஓய்வுநாளில் குணப்படுத்தினார் (மத் 12:9-14; மாற்கு 3:1-6; யோவான் 5:16; யோவான் 9:16)

4 பொறாமை (மத் 26:3-4; மத் 27:18; மாற்கு 14:1; மாற்கு 15:10; லூக்கா 22:2; யோவான் 11:48)

5 அறியாமை (மத் 26:64-66; மாற்கு 14:62-64; யோவான் 12:40; அப் 3:17

6 தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம். (லூக்கா 13:33-35; யோவான் 12:38-40; யோவான் 18:31-32; யோவான் 19:11,28,36-37; அப் 2:22-36; அப் 3:18)

7 தம்மைத் தேவனுடைய குமாரன் என்று கூறினார் (யோவான் 5:18; யோவான் 10:24-39; யோவான் 19:7

8 அவிசுவாசம் (யோவான் 5:38-47; யோவான் 6:36; யோவான் 9:40-41; யோவான் 12:36-38

9 தம்மைத் தேவன் என்று கூறினார் (யோவான் 8:53-59; யோவான் 10:33; யோவான் 1:1-2; எபி 1:5-14

10 தங்களுடைய அதிகாரம் போய்விடும் என்று பயந்தார்கள் (யோவான் 11:46-53; யோவான் 12:10-11,19

இடறுதல் (stumbling) - πρόσκομμα - proskomma - 4348

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - இடறுதல், தடுத்தல் "stumbling" (1பேதுரு 2:8); "stumblingblock" (ரோமர் 14:13; 1கொரி 8:9); "offence" (ரோமர் 14:20)

இடறல் (offence) - σκάνδαλον - skandalon - 4625

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - இடறல் "offence" (1பேதுரு 2:8; மத் 13:41; மத் 16:23; மத் 18:7; லூக்கா 17:1; ரோமர் 9:33; ரோமர் 16:17; கலா 5:11); "occasion of stumbling" (1யோவான் 2:10; ரோமர் 14:13); "stumbling-block" (ரோமர் 11:9; 1கொரி 1:23; வெளி 2:14

"அவர்கள் திருவசனத்திற்கு கீழ்படியாதவர்களாயிருந்து" இதுவே இடறுவதற்கான காரணம். தேவனுக்குக் கீழ்படிகிறவன் கிறிஸ்துவினிடத்தில் இடறலடைய மாட்டான்

"அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள்" - தேவனுக்குக் கீழ்ப்படியாதவர்கள் கிறிஸ்துவினிடத்தில் இடறுவதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். தேவன் யாரையும் இடறுவதற்கென்றோ கீழ்ப்படியாமல் இருப்பதற்கென்றோ தெரிந்தெடுக்கவில்லை. இவையெல்லாம் மனுஷருடைய சொந்த தெரிந்தெடுப்புகள் (மத் 13:15

I பேதுரு - தொகுப்புரை

2 அதிகாரம்

11. விசுவாசிகளும் தேவனும் - வசனம் 5; தீத்து 2:14; பிலி 2:15 வெளி 1:6

1பேதுரு 2:9 நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.

1பேதுரு 2:10 முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை, இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள்; முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள், இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள்.

பூலோகமார்க்கத்திலிருந்து இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளைப் பற்றிய காரியங்கள்

1. தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததி உபா 7:6
2. ராஜரீகமான ஆசாரியக்கூட்டம் யாத் 19:6
3. பரிசுத்த ஜாதி (யாத் 19:6)
4. தேவனுக்குச் சொந்தமான ஜனம்

சொந்தம் (peculiar people) - περιποίησις - peripoieesis - 4047

பெண்பால் பெயர்ச்சொல் - சொந்தம் அடைதல், ஈடேறுதல் (purchased, not peculiar as in dress, speech, manner of life) உபா 7:6)

புண்ணியம் (praises) ἀρετή - aretee 703

பெண்பால் பெயர்ச்சொல் - ஒழுக்கம், புண்ணியம், அறிவு, தைரியம் (பிலி 4:8; 2பேதுரு 1:3,5) virtuous thoughts, feelings, actions - தேவனுடைய குணாதிசயங்களை விசுவாசிகள் மனுஷர் மத்தியிலே தங்களுடைய வார்த்தையினாலும் கிரியையினாலும் வெளிப்படுத்திக் காண்பிக்க வேண்டும். (1பேதுரு 1:12 1கொரி 4:9; எபே 3:9-10)

1பேதுரு நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 4

"முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள் முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள் இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள்" (1பேதுரு 2:10 ஓசி 1:9-10; ஓசி 2:23) (ரோமர் 9:19-26)

IV. கிறிஸ்தவரின் உறவுகள் - (2:11 - 3:13)

1. கிறிஸ்தவரும் பாவிகளும் (2கொரி 6:14-18)

1பேதுரு 2:11 பிரியமானவர்களே, அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி,

1பேதுரு 2:12 புறஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய்ப் பேசும் விஷயத்தில், அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி, நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள் என்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.

"அந்நியர்களும் பரதேசிகளும்" (strangers and pilgrims) - (1பேதுரு 1:1

I பேதுரு - தொகுப்புரை

2 அதிகாரம்

"மாம்ச இச்சைகளை விட்டு விலகி" - மாற்கு 7:21; 2கொரி 6:9; கலா 5:19 எபே 5:5-6; ரோமர் 1:18-32)

அந்நியர்களும், பரதேசிகளுமாயிருக்கிற விசுவாசிகளுக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1 மாம்ச இச்சைகளை விட்டு விலக வேண்டும். (1பேதுரு 2:11)

2 மனுஷர்களுக்குள்ளே நல்நடக்கை யுள்ளவர்களாய் நடந்து கொள்ள வேண்டும். (1பேதுரு 2:12)

3 மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்படிய வேண்டும். (1பேதுரு 2:13-15)

4 சுயாதீனமுள்ளவர்களாய் இருக்க வேண்டும் அதேசமயத்தில் தேவனுக்கு அடிமைகளாகவும் இருக்க வேண்டும். (1பேதுரு 2:16)

5 எல்லோரையும் கனம்பண்ணுங்கள் (1பேதுரு 2:17)

6 சகோதரரிடத்தில் அன்புகூருங்கள் (1பேதுரு 2:17)

7 தேவனுக்குப் பயந்திருங்கள் (1பேதுரு 2:17)

8 ராஜாவைக் கனம்பண்ணுங்கள் (1பேதுரு 2:17)

ஆத்துமாவுக்கு விரோதமாய் போர் செய்தல் (war against the soul) - στρατεύομαι strateuomai 4754

வினைச்சொல் - சேவகம் பண்ணு, போர் செய், போராட்டம் பண்ணு "war" (1பேதுரு 2:11; 2கொரி 10:3 1தீமோ 1:18; 2தீமோ 2:4; யாக் 4:1), "soldier" (லூக்கா 3:14) "warfare" (1கொரி 9:7) - ஒரு போர்வீரனைப்போல போர்செய்தல். எதிரியைக் கொல்வதற்காக, அல்லது சிறை பிடிப்பதற்காக யுத்த களத்தில் போராடுதல். மாம்ச இச்சைகளை நாம் ஜெயிக்கவில்லையென்றால் அவை நம்மை ஜெயித்து தங்களுக்கு அடிமையாக்கிவிடும். (கலா 5:19-21 ரோமர் 1:29-32; 1கொரி 6:9)

நடக்கை (conversation) - ἀναστροφή - anastrophee - 391

பெண்பால் பெயர்ச்சொல் - நடக்கை, நடத்தை, நடந்துகொள்ளுதல் "conversation" (1பேதுரு 2:12 1பேதுரு 1:15,18; 1பேதுரு 3:1,2,16 கலா 1:13; எபே 4:22; 1தீமோ 4:12 எபி 13:7; யாக் 3:13; 2பேதுரு 2:7 2பேதுரு 3:11)

நடக்கவேண்டிய பிரகாரமாக நட (conversation) - ἀναστρέφω - anastrephoo - 390

வினைச்சொல் - சுற்றி, கவிழ்த்துப்போடு, திரும்பிவா நடக்கவேண்டிய பிரகாரமாக நட (2கொரி 1:12)

"அவர்களுக்குள்ளே" புறஜாதிகளுக்குள்ளே பேதுரு விசுவாசிகளுக்கு எழுதுவது யூதருக்கும், புறஜாதியாருக்கும் பொருந்தும்.

"அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு" - புறஜாதிகள் விசுவாசிகளிடத்தில் நற்கிரியைகளைக் காணவேண்டும். யூதருக்கும் கிறிஸ்தவருக்கும் நடுவில் புறஜாதியார் எவ்வித வேறுபாட்டையும் முதலில் காணமாட்டார். புறஜாதியார் யூதரை ஏற்கெனவே விரோதமாகப் பார்க்கிறார்கள். ஆகையினால் கிறிஸ்தவ விசுவாசிகள் தேவபக்தியோடு நடந்து தாங்கள் தேவன்மீது பக்தியுள்ளவர்களாகவும், மனுஷர்மீது அன்புள்ளவர்களாகவும் இருப்பதைத் தங்கள் நடக்கையின் மூலமாக நிரூபிக்க வேண்டும்.

2 அதிகாரம்

"சந்திக்கும் நாளிலே" (in the day of visitation) - விசுவாசிகளுடைய நற்கிரியைகளினாலும் பாடுகளைச் சகித்துக் கொள்ளும் ஜீவியத்தினாலும் புறஜாதி ஜனங்கள் கர்த்தருடைய சமூகத்திற்கு அழைத்து வரப்படும் நாளிலே

2. கிறிஸ்தவரும் அதிகாரிகளும் - ரோமர் 13; 1தீமோ 2:1-2)

1பேதுரு 2:13 நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள்

1பேதுரு 2:14 மேலான அதிகாரமுள்ள ராஜாவுக்கானாலுஞ்சரி தீமை செய்கிறவர்களுக்கு ஆக்கினையும் நன்மை செய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாகும்படி அவனால் அனுப்பப்பட்ட அதிகாரிகளுக்கானாலுஞ்சரி கீழ்ப்படியுங்கள்

1பேதுரு 2:15 நீங்கள் நன்மை செய்கிறதினாலே புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

1பேதுரு 2:16 சுயாதீனமுள்ளவர்களாயிருந்தும் சுயாதீனத்தைத் துர்க்குணத்திற்கு மூடலாகக் கொண்டிராமல் தேவனுக்கு அடிமைகளாயிருங்கள்

1பேதுரு 2:17 எல்லாரையும் கனம் பண்ணுங்கள் சகோதரரிடத்தில் அன்புகூருங்கள் தேவனுக்குப் பயந்திருங்கள் ராஜாவைக் கனம் பண்ணுங்கள்

"கீழ்ப்படியுங்கள்" - ரோமர் 13:1-7 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பிரகாரம் விசுவாசிகள் தங்களுக்கு மேலான அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். ஒரு ராஜ்யத்தின் பிரமாணம் தேவனுடைய பிரமாணத்தை மீறாத வரையிலும் அந்தப் பிரமாணத்திற்கு விசுவாசிகள் கீழ்ப்படிய வேண்டியது அவசியம்.

கட்டளை (ordinance) - κτίσις - **ktisis** - 2937

பெண்பால் பெயர்ச்சொல் - சிருஷ்டி உண்டாதல், கட்டளை "creature", "**creation**" (எபி 9:11 ரோமர் 8:19) - யூதரல்லாத ராஜாவிற்குக் கீழ்ப்படிய வேண்டியதில்லையென்று யூதர்கள் கருதினார்கள் ஆனால் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படிய வேண்டியது அவசியம் என்று பேதுரு வலியுறுத்திக் கூறுகிறார்

"தீமைசெய்கிறவர்களுக்கு ஆக்கினை - அதிகாரிகள் தீமைசெய்கிறவர்களுக்கு ஆக்கினையும் நன்மைசெய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாகும்படி செய்கிறார்கள் தேசத்திலே அக்கிரமத்தை அழிப்பதற்கு விசுவாசிகள் பாடுபட வேண்டும்

"நன்மைசெய்கிறதினாலே புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது" - விசுவாசிகள் நன்மை செய்ய வேண்டும் தேவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் தேவனுடைய சித்தம் அறிந்து செயல்பட வேண்டும். அப்போது புத்தியீன மனுஷருடைய அறியாமை அடக்கப்படும்.

அடக்குதல் (silence) - φιμόω - **fimooo, fimoo** - 5392

வினைச்சொல் - பேசாமலிரு, வாயடை, அமைதியாயிரு, வாய்கட்டு, அடக்கு "**put to silence**" (1பேதுரு 2:15; மத் 22:34); "**be speechless**" (மத் 22:12) "**hold one's peace**" (மாற்கு 1:25; லூக்கா 4:35 "**be still**" (மாற்கு 4:39), "**to muzzle**" (1கொரி 9:9, 1தீமோ 5:18

I பேதுரு - தொகுப்புரை

2 அதிகாரம்

அறியாமை (ignorance) - ἀγνωσία - agnoosia - 56

பெண்பால் பெயர்ச்சொல் - அறிவில்லாதது. தெய்வீக தன்மையை புரிந்து கொள்ளாதது. அறியாமை "ignorance" (1பேதுரு 2:15) "not knowledge" (1கொரி 15:34 சங் 14)

புத்தியீனம் (foolish) - ἄφρων - aphroon - 878

பெயரடை - மதிகேடான பேதை புத்தியீன புத்தியில்லாத மதியற்ற (senseless; witless; crazed; silly). "fool" (2கொரி 11:16,19 2கொரி 12:6,11 லூக்கா 11:40 லூக்கா 12:20, 1கொரி 15:36) "foolish" ரோமர் 2:20 1பேதுரு 2:15); "unwise" (எபே 5:17) (2கொரி 11:1)

"உங்கள் சுயாதீனத்தைத் துர்க்குணத்திற்கு மூடலாகக் கொண்டிராமல்" தாங்கள் தேவனுக்கு மட்டுமே கீழ்ப்படிய வேண்டும் வேறு யாருக்கும் கீழ்ப்படிய வேண்டியதில்லையென்று யூதர்கள் நினைத்தார்கள் இதனால் ரோமப்பேரரசிற்கு எதிராகத் தாங்கள் கலகம் பண்ணியது சரியான செயலே என்று யூதர்கள் எண்ணினார்கள் ஆனால் எல்லா அதிகாரங்களுக்கும் கீழ்ப்படிய வேண்டுமென்று பேதுரு வலியுறுத்திக் கூறுகிறார்

"எல்லாரையும் கனம்பண்ணுங்கள்" - (ரோமர் 13:7)

"சகோதரர்" (brotherhood) - எல்லா விசுவாசிகளும் தேவனுடைய பெரிய குடும்பத்தில் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள் (எபே 3:6, 14-15)

"தேவனுக்குப் பயந்திருங்கள்" - நமக்குக் கட்டளைகளைக் கொடுத்திருக்கும் தேவனுக்குப் பயப்பட வேண்டும். கீழ்ப்படியாதோருக்குத் தண்டனை நிச்சயம்.

"ராஜாவைக் கனம்பண்ணுங்கள்" - ராஜ்யமும் ஆளுகையும் தேவனிடமிருந்தே வருகிறது (1பேதுரு 2:13-17; ரோமர் 13:1-7)

3. கிறிஸ்தவ வேலைக்காரரும் எஜமான்களும் - (எபே 6:5)

1பேதுரு 2:18 வேலைக்காரரே, அதிக பயத்துடனே உங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள் நல்லவர்களுக்கும் சாந்தகுணமுள்ளவர்களுக்கும் மாத்திரம் அல்ல முரட்டுக்குணமுள்ளவர்களுக்கும் கீழ்ப்படிந்திருங்கள்

1பேதுரு 2:19 ஏனெனில், தேவன்மேல் பற்றுதலாயிருக்கிற மனச்சாட்சியினிமித்தம் ஒருவன் அநியாயமாய்ப் பாடுபட்டு உபத்திரவங்களைப் பொறுமையாய்ச் சகித்தால் அதுவே பிரீதியாயிருக்கும்

1பேதுரு 2:20 நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும்போது பொறுமையோடே சகித்தால் அதினால் என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாகப் பிரீதியாயிருக்கும்.

வேலைக்காரருக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1 அதிக பயத்துடனே உங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள் (1பேதுரு 2:18)

2 உபத்திரவங்களைப் பொறுமையாகச் சகித்துக் கொள்ளுங்கள் (1பேதுரு 2:19-20)

3 நீதியின் நிமித்தம் பாடுபடுவதற்கு கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுங்கள் (1பேதுரு 2:21)

2 அதிகாரம்

முரட்டுக்குணமுள்ளவன் (froward) - σκολιός - skolios - 4646

வளைந்த - கோணலான மாறுபாடுள்ள, முரட்டுக்குணமுள்ள froward (the contrary, 1பேதுரு 2:18); untoward (stubborn, அப் 2:40); crooked (லூக்கா 3:5; பிலி 2:15)

4. பாடுபட்டதற்கு கிறிஸ்து நமக்கு முன்மாதிரி - (3:17; மத் 5:38)

1பேதுரு 2:21 இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்; ஏனெனில் கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்.

1பேதுரு 2:22 அவர் பாவஞ்செய்யவில்லை; அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை.

1பேதுரு 2:23 அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்.

1பேதுரு 2:24 நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்.

1பேதுரு 2:25 சிதறுண்ட ஆடுகளைப்போலிருந்தீர்கள்; இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள்.

"இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்" - விசுவாசிகள் பாடுபடவும் பொறுமையோடே சகித்துக் கொள்ளவும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். இதன் மூலமாக விசுவாசிகள் இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறார்கள் (2தீமோ 3:12; யோவான் 15:18-21)

தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி, கிறிஸ்து விசுவாசிகளுக்குப் பின்வைத்துப்போன மாதிரி

1. பாடுகள் (1பேதுரு 2:21)

2. பாவம் செய்யாமை (1பேதுரு 2:22)

3. வஞ்சனை காணப்படாமை (1பேதுரு 2:22)

4. வையப்படும்போது அன்புகூருதல் (1பேதுரு 2:23)

5. பயமுறுத்தப்படும்போது பொறுமையாய் இருத்தல் (1பேதுரு 2:23)

6. தேவனிடத்தில் தம்மை ஒப்புக்கொடுத்தல் (1பேதுரு 2:23)

7. நீதி (1பேதுரு 2:24)

அடிச்சுவடு (steps) - ἴχνος - ichnos - 2487

பால் வேறுபாடற்ற சொல் - அடிச்சுவடு (track; footstep) - ஆபிரகாம் (ரோமர் 4:12), பவுலும், தீத்துவும் (2கொரி 12:18), இயேசுகிறிஸ்து (1பேதுரு 2:21).

"அவர் பாவஞ்செய்யவில்லை" - இந்தப் பூமியில் ஜீவித்த மனுஷரில் இயேசு கிறிஸ்து மட்டுமே பாவம் செய்யாதவர்.

இயேசு கிறிஸ்து மாம்சத்தில் பாவம் செய்யவில்லை

1. கிறிஸ்து பாவத்தில் விழவில்லை. ஆகையினால் அவரிடத்தில் பாவமில்லை.

I பேதுரு – தொகுப்புரை

2 அதிகாரம்

2 கிறிஸ்து தம்மைச் சாத்தானுக்கும் அவனுடைய ஆவிக்கும், அவனுடைய பாவ சுபாவத்திற்கும் ஒப்புக்கொடுக்கவில்லை

3 இயேசு கிறிஸ்து ஸ்திரீயின் வயிற்றிலிருந்து வந்தபோதிலும், அவர் மனுஷனுடைய வித்து அல்ல (ஆதி 3:15; ஏசா 7:14; ஏசா 9:6-7, மத் 1:18-23; லூக்கா 1:32-35 ரோமர் 8:3; கலா 4:4; பிலி 2:5-11 யோவான் 1:14; 1தீமோ 3:16 எபி 2:9-18). வேதவாக்கியங்களில் ஜாதிகளின் முற்பிதாவாக மனுஷனே கூறப்பட்டிருக்கிறான் (ஆதி 2:20-22, 2கொரி 11:3; ரோமர் 5:12-21) ஸ்திரீயின் பலவீனம் அல்ல மனுஷனுடைய பலவீனம் அவனுடைய பிள்ளைகள்மீது சாபமாகக் கடந்து வருகிறது. (யாத் 20:5, எசே 14:18; உபா 5:9; எரே 31:29-30, எசே 18:2-4

4 தமது ஒரேபேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை மானிட சரீரத்தில் இந்த உலகத்திற்கு அனுப்புவதற்குத் தேவன் தெரிந்துகொண்ட பாத்திரமே கன்னி மரியாள் இயேசுகிறிஸ்து பரிசுத்த ஆவியானவரால் உண்டானவர் இயேசு கிறிஸ்து மனுஷனால் உண்டானவர் அல்ல மனுஷனால் பாவமில்லாத சந்ததியை உண்டுபண்ண முடியாது. தேவன் பரிசுத்தமானவர் அவரால் பரிசுத்தமான சந்ததியை மட்டுமே உண்டாக்க முடியும் பாவமான சந்ததியைப் பரிசுத்தமான தேவனால் உண்டுபண்ண முடியாது. ஆதி 1:22 28 ஆகிய வசனங்களில் பலுகிப்பெருகும் பிரமாணம் கூறப்பட்டிருக்கிறது. இவ்வாறாக ஸ்திரீயின் மூலமாகத் தேவன் இயேசு கிறிஸ்துவை மாம்ச சாயலாக அனுப்பினார் அந்த மாம்சம் பாவத்தினால் ஆளுகை செய்யப்பட்டிருந்தது. இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்குட் பாவமாம்சத்தின் சாயலாகவே அனுப்பப்பட்டார் ஆனாலும் இயேசு கிறிஸ்துவின் மாம்சத்தைப் பாவமோ, சாத்தானோ ஆளுகை செய்யவில்லை. இயேசு கிறிஸ்து பாவமாம்சத்தின் சாயலைப் பெற்றிருந்தாலும் அவர் ஒருபாவமும் செய்யவில்லை. (1பேதுரு 2:22

1பேதுரு நிருபத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 5

"அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை" (1பேதுரு 2:22 ஏசா 53:9)

வைதல் (reviled) - λοιδορέω - loidoreoo - 3058

வினைச்சொல் - வைதல், வையப்படு (ஆதி 18:25 யோவான் 9:28 [illegible] 23:4 1கொரி 4:12, 1பேதுரு 2:23)

கிறிஸ்து செய்யாத காரியங்கள்

1 அவர் பாவம் செய்யவில்லை (1பேதுரு 2:22)

2 அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை (1பேதுரு 2:22

3 அவர் வையப்படும்போது பதில் வையவில்லை. (1பேதுரு 2:23)

4 தம்முடைய விரோதிகளைப் பயமுறுத்தவில்லை. (1பேதுரு 2:23)

கிறிஸ்து செய்த காரியங்கள்

1. கிறிஸ்து நமக்கு முன்மாதிரியாகப் பாடுபட்டார் (1பேதுரு 2:21)

2 நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவரிடத்தில் தம்முடைய வழக்குகளை ஒப்புவித்தார் (1பேதுரு 2:23)

3 அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார் (1பேதுரு 2:24

I பேதுரு – தொகுப்புரை

2 அதிகாரம்

4 மனுஷனைக் குணமாக்குவதற்காகத் தமது சரீரத்தில தழும்புகளை ஏற்றுக் கொண்டார் (1பேதுரு 2:24. ஏசா 53:4-6; மத் 8:16-17)

"அவர் தாமே" - இயேசு கிறிஸ்து தாமே. நம்முடைய பாவங்களுக்காக வேறு யாரும் சிலுவையில மரிக்கவில்லை இயேசு கிறிஸ்து மட்டுமே நம்முடைய பாவங்களுக்காக சிலுவையில மரித்தார் (1பேதுரு 2:24, 1கொரி 15:3; கலா 1:4; மத் 26:28 அப 20:28

"நம்முடைய பாவங்களைச் சிலுவையினமேல சுமந்தார்" - நம்முடைய பாவங்களுக்காக நமக்குக் கொடுக்கப்படவேண்டிய தண்டனையை இயேசு கிறிஸ்து தாமே ஏற்றுக் கொண்டார்

"தமது சரீரத்திலே" - தேவன் இயேசு கிறிஸ்துவிற்காக ஆயத்தமபண்ணி வைத்திருந்த மனுஷ சரீரத்திலே எபி 10:5)

"சிலுவையினமேல்" - (மத் 27:32 அப 5:30; அப 10:39; அப 13:29 கலா 3:13

கிறிஸ்துவின் மரணத்திற்கான காரணங்கள்

1 நாம் பாவங்களுக்குச் சாகும்படியாக (ரோமர் 6:6-7)

2 நாம் நீதிக்குப் பிழைத்திருக்கும்படிககு (ரோமர் 3:26

3 நாம் குணமாகும்படிக்கு

"நீதிக்குப பிழைத்திருக்கும்படிக்கு" - பரிசுத்தமிலலாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம். நாம் பாவத்தில வாழலாம் என்று வேதவாக்கியத்தில் எந்த வசனமும் நமக்கு அனுமதி அளிக்கவில்லை. (எபி 12:14

"அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்" - கிறிஸ்துவின் இரட்சிப்பின கிரியையில் ஆத்தும சுகமாதலும் சரீர சுகமாதலும் அடங்கியிருக்கிறது. (ஏசா 53:5; மத் 8:17

"சிதறுண்ட ஆடுகளைபபோலிருந்தீர்கள - ஏசா 53:5-6 ஆவது வசனங்கள் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது

"ஆடுகளைபபோல" - இரட்சிக்கப படுவதற்கு முன்பும் (ஏசா 53:6 லூக்கா 15:4-6) பினபும் (மத் 10:16 மனுஷர்கள ஆடுகளுக்கு ஒப்பிட்டு கூறப்பட்டிருக்கிறார்கள்

"மேய்ப்பர்" (Shepherd) - கிறிஸ்து நமது நலல மேய்ப்பரும் (Good Shepherd) நமது ஆத்துமாக்களுக்குக் கண்காணியுமாயிருக்கிறார் (Overseer) (யோவான் 10:6 எபி 13:20

கண்காணி (Bishop) - ἐπίσκοπος - episkopos 1985

ஆண்பால் பெயர்ச்சொல் - கண்காணிப்பவன், கண்காணி (அப 20:28)

3 அதிகாரம்

5. கிறிஸ்தவ மனைவிகளும் புருஷரும் - எபே 5:22

1பேதுரு 3:1 அந்தப்படி மனைவிகளே உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள் அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால் பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து,

1பேதுரு 3:2 போதனையின்றி மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக்கொள்ளப்படுவார்கள்

1பேதுரு 3:3 மயிரைப் பின்னி பொன்னாபரணங்களை அணிந்து உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல்,

1பேதுரு 3:4 அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது. அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றது.

1பேதுரு 3:5 இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள்

1பேதுரு 3:6 அந்தப்படியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள் நீங்கள் நன்மை செய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால் அவளுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள்

"அந்தப்படி மனைவிகளே, உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்" - விசுவாசிகள் அரசாங்க அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிந்திருப்பது போலவும் (1பேதுரு 2:13) வேலைக்காரர்கள் தங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்திருப்பதுபோலவும் (1பேதுரு 2:18) மனைவிகள் தங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்

"திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால்" - புருஷர்கள் சுவிசேஷத்தின் பிரசங்கத்தைக் கேட்க மனதற்றவர்களாக இருந்தாலும், தங்கள் மனைவிகளின் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்ப்பார்கள் மனைவி தேவனுக்குப் பயந்து தன்னுடைய கணவனை மதித்து கற்புடன் நடந்து கொள்ளும்போது அவள் தன்னுடைய புருஷனைக் கர்த்தருக்கென்று ஆதாயப்படுத்துவாள் (1பேதுரு 3:2-3)

புருஷரைத் தேவனுக்கு ஆதாயப்படுத்தும் வழிகள் (1பேதுரு 3:1-6)

1. புருஷனுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். (1பேதுரு 3:1,5-6)
2. திருவசனத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும் (1பேதுரு 3:1)
3. கற்புள்ள நடக்கையுடையவளாய் இருக்க வேண்டும். (1பேதுரு 3:2)
4. புறம்பான அலங்கரிப்பு அலங்காரமாய் இருக்கக்கூடாது. (1பேதுரு 3:3)
5. சாந்தமும், அமைதியும் உடையவளாக இருந்து உள்ளான அலங்கரிப்பு அலங்காரமாய் இருக்க வேண்டும். (1பேதுரு 3:3-4)
6. தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்க வேண்டும். (1பேதுரு 3:5)
7. நன்மை செய்ய வேண்டும். (1பேதுரு 3:6)
8. புருஷனுக்குக் கீழ்ப்படிந்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாமல் இருக்க வேண்டும். (1பேதுரு 3:6)

I பேதுரு - தொகுப்புரை

3 அதிகாரம்

நடக்கை (conversation)

ἀναστροφή - anastrophee - 391

பெண்பால் பெயர்ச்சொல் - நடக்கை, நடத்தை, நடந்துகொள்ளுதல் (1பேதுரு 2:12)

அலங்கரிப்பு (adorning) - κόσμος - kosmos - 2889

ஆண்பால் பெயர்ச்சொல் - உலகம், அலங்கரிப்பு, லௌகிகம் (behavior; fashion; ornament; decoration) எபே 2:2; 1தீமோ 2:9

"புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல்" - மயிரைப் பின்னுதல், பொன்னாபரணங்களை அணிதல், ஆடம்பரமான வஸ்திரங்களை உடுத்துதல் ஆகியவை புறம்பான அலங்காரங்களாகும். இவற்றை முழுவதுமாகக் கடிந்து கொள்வது பேதுருவின் நோக்கமல்ல. புறம்பான அலங்காரத்தைவிட உள்ளான அலங்காரமாகிய சாந்த [redacted] அமைதலுள்ள ஆவி ஆகியவை மேன்மையானவை என்பதை பேதுரு வலியுறுத்துகிறார்.

பொன் மோதிரங்கள், பொன் வளையல்கள் மற்ற பொன்னாபரணங்களை அணிவது ஆகியவை பாவம் என்று ஒருசிலர் கூறுகிறார்கள். இவை பாவமல்ல. ஆயினும் இவற்றில் நாம் நம்பிக்கை வைக்கக்கூடாது. கர்த்தரை நம்புவதைவிட பொன்னாபரணங்களை நம்புவது பாவமாகும்.

பொன்னாபரணமும், மயிரைப் பின்னுதலும் பாவமென்று கூறுவோமானால், உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்வதும் பாவமாகும். ஏனெனில் இம்மூன்று காரியங்களும் இந்நிருபத்தில் சேர்த்துக் கூறப்பட்டிருக்கிறது. ஒன்றை பாவமென்று கூறினால் மற்றதையும் பாவமென்றே கூறவேண்டும்.

ஆபிரகாமும், சாராளும் பொன், வெள்ளி ஆகியவற்றில் ஐசுவரியவான்களாக இருந்தார்கள் (ஆதி 24:22,30,47,53). பழைய ஏற்பாட்டுக் காலத்தில் புருஷர்களும், ஸ்திரீகளும் பொன்னாபரணங்களை அணிந்திருந்தார்கள் (யாத் 32:2; யாத் 35:22; நியா 8:24; ஏசா 3:18-24; யோபு 42:11)

"இருதயத்தில் மறைந்திருக்கிற குணம்" - இது உள்ளான மனுஷன் (ரோமர் 7:22; 2கொரி 4:16; எபே 3:16)

அழியாதது (not corruptible) - ἄφθαρτος - aphthartos - 862

பெயரடை - அழிவில்லாத, அழியாத "not corruptible" of man's soul and spirit (1பேதுரு 3:4); "incorruptible" of man's crown (1கொரி 9:25), of the future resurrected body (1கொரி 15:52), of our heavenly inheritance (1பேதுரு 1:4), of the Word of God (1பேதுரு 1:23); "uncorruptible" of God (ரோமர் 1:23); and "immortal" of God (1தீமோ 1:17) - உள்ளான மனுஷன் தேவனைப் போல அழியாத குணமுடையவன் (1கொரி 15:42; 1தீமோ 6:16; 1தீமோ 1:17)

ஆத்துமா அழியாதது என்பதற்கு ஆதாரங்கள்

1 இருதயத்தில் மறைந்திருக்கிற குணம் அழியாதது (1பேதுரு 3:4)

2 கீழே இருக்கிற பாதாளம் உன் நிமித்தம் அதிர்ந்து உன் வருகைக்கு எதிர்கொண்டு வருகிறது. (ஏசா 14:9-11)

3 அவர்களுக்கு நித்திய ஜீவன் உண்டு (யோவான் 3:15-16; யோவான் 6:54,58; யோவான் 17:2-3)

4 மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறார்கள் (யோவான் 5:24; யோவான் 6:40,47)

I பேதுரு – தொகுப்புரை

3 அதிகாரம்

5. என்றென்றைக்கும் பிழைப்பான் (யோவான் 6:51)

6. அவைகள் ஒருக்காலும் கெட்டுப் போவதில்லை. (யோவான் 10:28)

7. என்றென்றைக்கும் மரியாமல் இருப்பார்கள் (யோவான் 11:25-26)

8. மனுஷன் ஆத்துமாவைக் கொல்ல வல்லவன் அல்ல. (மத் 10:28, லூக்கா 12:5)

9. மோசேயும், எலியாவும் அவரோடே பேசுகிறவர்களாக அவர்களுக்குக் காணப்பட்டார்கள் (மத் 17:3 உபா 34:6)

10. அங்கே அவர்கள் புழு சாவாமல் இருக்கும். (மாற்கு 9:43-49)

11. பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிற போது தன் கண்களை ஏறெடுத்தான் (லூக்கா 16:19-31)

12. எல்லாரும் அவருக்குப் பிழைத்திருக்கிறார்கள் (லூக்கா 20:37-38)

13. எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது. (2கொரி 4:16-18)

14. இந்தத் தேகத்தை விட்டு குடிபோகவும், கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம் (2கொரி 5:8)

15. தேகத்தை விட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனே கூட இருக்க எனக்கு ஆசையுண்டு (யாக் 2:26 பிலி 1:21-24)

16. நாம் விழித்திருப்பவர்களானாலும் நித்திரையடைந்தவர்களானாலும் அவரோடேகூட ஏகமாய் பிழைத்திருப்போம். (1தெச 5:10)

17. பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளிடத்திற்கு வந்து சேர்ந்தீர்கள் (எபி 12:22-23)

18. இதற்காக மரித்தோரானவர்கள் தேவன் முன்பாக ஆவியிலே பிழைக்கும்படியாக (1பேதுரு 4:6)

19. தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான் (1யோவான் 2:17)

20. நாம் சகோதரரிடத்தில் அன்பு கூருகிறபடியால், மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோம் என்று அறிந்திருக்கிறோம் (1யோவான் 3:14-15)

21. தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார்கள் அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறது (1யோவான் 5:11)

22. குமாரனை யுடையவன ஜீவனையுடையவன (1யோவான் 5:12 1யோவான 2:24-25)

23. உங்கள் இருதயம் என்றென்றைக்கும் வாழும். (சங் 22:26)

24. நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரிய பிரகாசம் போலிருக்கும். (நீதி 4:18)

25. ஆத்துமாக்களைப் பலிபீடத்தின் கீழே கண்டேன் (வெளி 6:9-11)

"அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணம்" சாந்தம் மற்றவர்களைக் கோபப்படுத்தாது அமைதலுள்ள ஆவி மற்றவர்கள் கோபப்படுத்தினாலும் கோபமடையாது.

3 அதிகாரம்

"அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது" - பொன்னாபரணங்கள் விலையுயர்ந்த வஸ்திரங்கள் ஆகிய எல்லாவற்றையும் விட சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியும் விலையேறப்பெற்றது. பொன்னாபரணங்கள் இந்தப் பூமிக்குரியவை அது ஒழிந்துபோகும். சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியோ நித்தியத்திற்கும் நிலைத்து நிற்கும்

"நீங்கள் நன்மை செய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால் அவளுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள்" - விசுவாசிக்கிற எல்லோருக்கும் ஆபிரகாம் தகப்பனாக இருக்கிறார் (ரோமர் 4:12,16) அதுபோல நன்மை செய்து சாராளின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கிற ஸ்திரீகள் சாராளுக்குப் பிள்ளைகளாக இருப்பார்கள்

"ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால்" - நன்மை செய்கிறவர்கள் பயப்படமாட்டார்கள்

6. கிறிஸ்தவ புருஷரும் மனைவிகளும் - (எபே 5:25

பேதுரு 3:7 அந்தப்படி புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடைவராதபடிக்கு நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனேகூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக்கொள்கிறவர்களானபடியினால், அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள்

புருஷருக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1 நீங்கள் விவேகத்தோடு உங்கள் மனைவிகளோடே வாழுங்கள்

2 உங்கள் மனைவிகளுக்குச் செய்ய வேண்டிய கனத்தைச் செய்யுங்கள்

"பெலவீன பாண்டம்" அழகுள்ளது ஆனால் உடைந்துபோகக்கூடிய தன்மையுள்ளது.

"உங்கள் ஜெபங்களுக்குத் தடைவராதபடிக்கு" - புருஷர்களும் மனைவிகளும் ஒருவருக்கொருவர் உண்மையில்லாதவர்களாக இருந்தால் அவர்களால் ஒழுங்காக ஜெபம்பண்ண முடியாது.

7. கிறிஸ்தவ சகோதரர்கள் - பதினான்கு கட்டளைகள்

1பேதுரு 3:8 மேலும் நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும் இரக்கமுள்ளவர்களும் சகோதர சிநேகமுள்ளவர்களும் மனஉருக்கமுள்ளவர்களும் இணக்கமுள்ளவர்களுமாயிருந்து

1பேதுரு 3:9 தீமைக்குத் தீமையையும் உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள்

1பேதுரு 3:10 ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காணவேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக்காத்து

1பேதுரு 3:11 பொல்லாப்பைவிட்டு நீங்கி, நன்மை செய்து, சமாதானத்தைத் தேடி, அதைப் பின்தொடரக்கடவன்

1பேதுரு 3:12 கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது. தீமை செய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது.

1பேதுரு 3:13 நீங்கள் நன்மையைப் பின்பற்றுகிறவர்களானால், உங்களுக்குத் தீமைசெய்கிறவன் யார்

I பேதுரு - தொகுப்புரை

3 அதிகாரம்

விசுவாசிகளுக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1 ஒருமனப்பட்டவர்களாக இருங்கள் (பேதுரு 3:8; எபே 4:1-3)

2 இரக்கமுள்ளவர்களாக இருங்கள் (பேதுரு 3:8)

3 சகோதர சிநேகமுள்ளவர்களாக இருங்கள் (1பேதுரு 3:8; 1கொரி 13)

4 மனஉருக்கமுள்ளவர்களாக இருங்கள் (பேதுரு 3:8)

5 இணக்கமுள்ளவர்களாக இருங்கள் (பேதுரு 3:8)

6 தீமைக்குத் தீமையைச் சரிக்கட்டாமல இருங்கள் (1பேதுரு 3:9)

7 உதாசனத்துக்கு உதாசனத்தைச் சரிக்கட்டாமல இருங்கள (1பேதுரு 3:9)

8 மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருங்கள (1பேதுரு 3:9)

9 பொல்லாப்புக்குத் தன் நாவை விலக்கிக்காத்துக் கொள்ளுங்கள (1பேதுரு 3:10; யாக் 3)

10 கபடத்துக்குத் தன் உதடுகளை விலக்கிக் காத்துக் கொள்ளுங்கள (1பேதுரு 3:10)

11 பொல்லாப்பைவிட்டு நீங்கி, நன்மை செய்யுங்கள் (1பேதுரு 3:11)

12 சமாதானத்தைத் தேடி அதைப் பின்தொடருங்கள (1பேதுரு 3:11)

"ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காணவேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும் கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக்காத்து பொல்லாப்பைவிட்டு நீங்கி, நன்மை செய்து சமாதானத்தைத் தேடி அதைப் பின்தொடரக் கடவன்" - சங் 34:12-16 ஆகிய வசனங்கள் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

நீதிமான்களுக்கு வரும் ஆசீர்வாதங்கள்

1 கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது

2 கர்த்தருடைய செவிகள் நீதிமான்களின் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது

3 நீதிமான்களுக்குத் தீமை செய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது

பின்பற்றுகிறவர் (followers) - μιμηταίς - mumeetees - 3:13

ஆனால் பவுல் பின்பற்றுகிறவர் (imitator) (1கொரி 4:16)

V. கிறிஸ்தவரின் பாடுகள் - (3:14-4:19)

1. நீதியின் நிமித்தமாக பாடுபடுவதும் அதன் விளைவும்

1பேதுரு 3:14 நீதியினிமித்தமாக நீங்கள் பாடுபட்டால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; அவர்களுடைய பயமுறுத்தலுக்கு நீங்கள் பயப்படாமலும் கலங்காமலும் இருந்து,

1பேதுரு 3:15 கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள் உங்களிலிருக்கிற நம்பிக்கையைக்குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்

I பேதுரு – தொகுப்புரை

3 அதிகாரம்

1பேதுரு 3:16 கிறிஸ்துவுக்கேற்ற உங்கள் நல்ல நடக்கையைத் தூஷிக்கிறவர்கள் உங்களை அக்கிரமக்காரரென்று உங்களுக்கு விரோதமாய்ச் சொல்லுகிற விஷயத்தில் வெட்கப்படும்படிக்கு நல்மனச்சாட்சியுடையவர்களாயிருங்கள்

"நீதியினிமித்தமாக நீங்கள் பாடுபட்டால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்" - (மத் 5:10 லூக்கா 6:22-23, ரோமர் 8:28)

"அவர்களுடைய பயமுறுத்தலுக்கு நீங்கள் பயப்படாமலும் கலங்காமலும் இருந்து கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள்" - ஏசா 8:12-13 ஆகிய வசனங்கள் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"பரிசுத்தம் பண்ணுங்கள் - என்னும் வார்த்தைக்கு ஒரு பரிசுத்தமான காரியத்திற்காக ஒரு பொருளை அல்லது ஒரு நபரை வேறுபிரிப்பது என்று பொருள். நாம் தேவனுக்கு உரிய ஸ்தானத்தைக் கொடுக்க வேண்டும்.

"நல்மனச்சாட்சி" - ஒருவரிடத்தில் நல்ல நடத்தை இருக்கும்போது அவர் நல்மனச்சாட்சி உடையவராக இருப்பார்

நடக்கை (conversation) - ἀναστροφή - anastrophee - 391

பெண்பால் பெயர்ச்சொல் நடக்கை நடத்தை நடந்துகொள்ளுதல் (1பேதுரு 2:12

2. தேவனுடைய சித்தமும் பாடு அனுபவிப்பதில் கிறிஸ்துவின் எடுத்துக்காட்டும் - *(2:21 25)*

1பேதுரு 3:17 தீமைசெய்து பாடநுபவிப்பதிலும், தேவனுக்குச் சித்தமானால், நன்மைசெய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிருக்கும்.

1பேதுரு 3:18 ஏனெனில், கிறிஸ்துவும் நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்

பாடநுபவிப்பதைக் குறித்த உபதேசங்கள்

1 நீதியினிமித்தமாக நீங்கள் பாடுபட்டால் பாக்கியவான்களாயிருப்பீர்கள் (1பேதுரு 3:14; மத் 5:10)

2 மனுஷருடைய பயமுறுத்தலுக்கு நீங்கள் பயப்படாமல் இருங்கள் (1பேதுரு 3:14 மத் 10:28)

3 கலங்காமல் இருங்கள் (1பேதுரு 3:14

4 கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள் (1பேதுரு 3:15)

5 யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள் (1பேதுரு 3:15

6 நல்மனச்சாட்சியுடையவர்களாயிருங்கள் (1பேதுரு 3:16)

கிறிஸ்துவைப் பற்றிய சத்தியங்கள் (1பேதுரு 3:18-22)

1. பாடுபட்டார் (1பேதுரு 3:18)

2 மாம்சத்திலே கொலையுண்டார் (1பேதுரு 3:18)

3 ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார் (1பேதுரு 3:18)

4 பாதாளத்திற்குச் சென்றார் (சங் 16:10, அப 2:27)

5 பாதாளத்தில் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார் (1பேதுரு 3:19; 2பேதுரு 2:4 யூதா 1:6-7)

I பேதுரு – தொகுப்புரை

3 அதிகாரம்

6. பரலோகத்திற்குப் போனார் (1பேதுரு 3:22)

7. தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறார் (1பேதுரு 3:22 எபே 1:20; எபி 1:3; எபி 8:1 எபி 12:2)

8. எல்லோருக்கும் மேலாக உயர்த்தப்பட்டார் (1பேதுரு 3:22; எபே 1:20-23; பிலி 2:9-11 கொலோ 1:15-18)

கிறிஸ்து பாடுகளை அனுபவித்ததின் நோக்கம்

1. பாவங்களுக்காக பாடு அனுபவித்தார் (கலா 1:4; மத் 26:28; எபே 1:14. 1கொரி 15:3; 1பேதுரு 2:24)

2. அக்கிரமக்காரருக்காகப் பாடு அனுபவித்தார் (ரோமர் 5:6-8)

3. தேவனிடத்தில் நம்மைக் கொண்டு வரும்படியாகப் பாடு அனுபவித்தார் (கொலோ 1:20-22; கொலோ 2:14-17, 2கொரி 5:14-21)

"அவர் மாம்சத்திலே கொலையுண்டார்" இயேசு கிறிஸ்து மாம்சத்தில் மரித்தார் ஆனால் ஆவியில் உயிர்ப்பிக்கப்பட்டார் ஆவி ஒருபோதும் மரிப்பதில்லை (யாக 2:26 1பேதுரு 3:4)

"ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்" பரிசுத்த ஆவியானவரால் இயேசு கிறிஸ்துவின் மரித்த சரீரம் உயிர்ப்பிக்கப்பட்டது. (ரோமர் 8:11)

3. கிறிஸ்து காவலிலுள்ள ஆவிகளுக்கு பிரசங்கித்தார் – (2பேதுரு 2:4 யூதா 6-7, எபே 4:7-11; கொலோ 2:14-17, வெளி 1:18, சங் 16:10)

1பேதுரு 3:19 அந்த ஆவியிலே அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார்

1பேதுரு 3:20 அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது கீழ்ப்படியாமற் போனவைகள் அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர் மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள்

"அந்த ஆவியிலே அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார் - இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டிருந்த போது பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகத்தினால் இயேசு கிறிஸ்து தமது ஆவியிலே பாதாளத்திற்குச் சென்று அங்கு காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார் (2பேதுரு 2:4; யூதா 1:6-7, ஆதி 6:4)

காவலிலுள்ள ஆவிகள் தூதர்களே என்பதற்குச் சான்றுகள்

1. அவை நோவாவின் காலத்தில் கீழ்ப்படியாமல் பாவம் செய்தவை (ஆதி 6:4)

2. இவை மனுஷருடைய ஆவியாக இருக்குமானால் நோவாவின் காலத்தில் கீழ்ப்படியாமல் போனவை என்று மட்டும் குறிப்பிட்டிருக்காது

3. மனுஷர்களை ஆவிகள் என்று அழைப்பதில்லை. மனுஷருடைய ஆவிகளைப் பற்றிக் குறிப்பிடும்போது "மனுஷருடைய ஆவிகள்" "spirits of men" (எபி 12:23), "மாம்சமான யாவருடைய ஆவிகள்" " spirits of all flesh" (எண் 16:22; எண் 27:16) "தீர்க்கதரிசிகளுடைய ஆவிகள்" "spirits of the prophets" (1கொரி 14:32) என்றே கூறப்பட்டுள்ளன மனுஷருக்கு ஆவி உள்ளது ஆனால் மனுஷர்கள் ஆவிகள் அல்ல. ஆகையினால் இந்த வசனத்தில் ஆவிகள் என்று கூறப்பட்டிருப்பது தேவதூதர்களையே குறிக்கும். (சங் 104:4 எபி 1:7,14

I பேதுரு – தொகுப்புரை

3 அதிகாரம்

4 ஜலப்பிரளயத்திற்கு முற்பட்ட காலத்தில் பாவம் செய்த தூதர்கள் ஒரு விசேஷித்த காவலில் வைக்கப்பட்டிருந்தார்கள் (2பேதுரு 2:4; யூதா 1:6-7)

5 1பேதுரு 3:19 ஆவது வசனத்தில் "பிரசங்கித்தார்" என்பதன் கிரேக்க வார்த்தை "கெருசோ" (kerusso) என்பதாகும். இதற்கு ஒரு செய்தியை, அது நல்ல செய்தியோ அல்லது கெட்ட செய்தியோ அதை அறிவித்தல் என்று பொருள். நற்செய்தி அறிவித்தல் என்பதற்கான கிரேக்க வார்த்தை "எவாஞ்சலிஜோ" (euangelizoo) என்பதாகும். இந்த வார்த்தை 1பேதுரு 3:19 ஆவது வசனத்தில் பயன்படுத்தப் படவில்லை.

பிரசங்கம் பண்ணுதல் (preached) - κηρύσσω - keeryssoo - 2784

வினைச்சொல் - பிரசங்கி, பிரசங்கம் பண்ணு, பிரசித்தம் பண்ணு, கூறு (to proclaim as a public crier, to announce something whether it be good or bad)

சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல் (salvation) - εὐαγγελίζω - euangelizoo - 2097

வினைச்சொல் - சுவிசேஷம் பிரசங்கி, நற்செய்தி அறிவி, பிரசங்கி, சுவிசேஷம் அறிவி (glad tidings of salvation)

6 மனுஷர்கள் மரித்த பின்பு அவர்களுக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப் படுவதில்லை. நோவாவின் காலத்திலிருந்து சந்ததியாருக்கு தேவன் பட்சபாதமாக எதையும் செய்யவில்லை. ஒருதரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும் மனுஷருக்கு நியமிக்கப் பட்டிருக்கிறது. (எபி 9:27) மரித்த பின்பு நியாயத்தீர்ப்பிற்கு முன்பாக மனுஷருக்குச் சுவிசேஷம் அறிவிக்கப் படுவது நியமிக்கப் படவில்லை.

7 நோவாவின் நாட்களில் பாவம் செய்த மனுஷருக்குப் பாதாளத்தில் விசேஷித்த காவலும், மற்ற காலத்தில் பாவம் செய்த மனுஷருக்குப் பாதாளத்தில் வேறிடத்தில் காவலும் இல்லை. மரித்த பின்பு நியாயத்தீர்ப்பின் நாள் வரையிலும் எல்லோரும் பாதாளத்திற்குச் செல்ல வேண்டும். (வெளி 20:11-15)

8. பாதாளத்தில் இயேசு கிறிஸ்து மனுஷருடைய ஆத்துமாக்களுக்கு எந்தப் பிரசங்கமும் பண்ணவில்லை. "அவர் உன்னதத்தில் ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கினார்" (எபே 4:8) நியாயத்தீர்ப்பின் நாள் வரையிலும் அவர் தூதர்களைப் பாதாளத்தில் விட்டுச் சென்றுவிட்டார் (2பேதுரு 2:4; யூதா 1:6-7)

"சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி" - ஆபேலின் காலத்திலிருந்து இயேசு கிறிஸ்துவின் காலம் வரையிலும் மரித்துப்போன பரிசுத்தவான்களைச் சாத்தான் பூமியின் தாழ்விடமான பாதாளத்தில் சிறையில் வைத்திருந்தான். இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு, அவர் பூமியின் இருந்த் தாழ்விடத்திற்குச் சென்று சிறைப் பட்டிருந்தவர்களைத் தமக்குச் சிறையாக மீட்டுக்கொண்டு பரலோகத்திற்கு அழைத்துச் சென்றார். இதன்மூலமாக இயேசு கிறிஸ்து மரணத்தையும் நரகத்தையும் ஜெயித்து, தமது பரிசுத்தவான்களை விடுவித்தார் (எபி 2:14-15 லூக்கா 16:23) இவர்களை விடுவித்த இடம் பூமியின் தாழ்விடங்களாகும். (எபே 4:8-10 மத் 12:40) இந்தத் தாழ்விடங்களில் பரிசுத்தவான்கள் மரித்த பின்பு தங்களுடைய ஆத்துமாவிலும், ஆவியிலும் உயிரோடு இருந்தார்கள். இவர்களைச் சாத்தான் சிறைவைத்திருந்தான். இதன் வாயிலாக மரித்தோரின் ஆத்துமா மரிப்பதில்லை என்று தெரிய வருகிறது. மரித்துப்போன ஆத்துமாவைச் சாத்தானால் சிறைபிடித்து வைக்க முடியாது. பூமியின் தாழ்விடங்களில் இப்போது பரிசுத்தவான்களின் ஆத்துமாக்கள் எதுவும் இல்லை. அவர்கள் அனைவரையும் இயேசு கிறிஸ்து விடுவித்து தம்மோடு பரலோகத்திற்கு அழைத்துச் சென்றுவிட்டார். ஆகையினால் இப்போது கிறிஸ்தவ விசுவாசி மரிக்கும்போது அவருடைய ஆத்துமா பூமியின் தாழ்விடங்களுக்குச் செல்வதில்லை. அதற்குப் பதிலாக அந்த ஆத்துமா பரலோகத்திற்குச் சென்று ஜீவிக்கும். தன்னுடைய சரீரத்தின் உயிர்த்தெழுதலுக்காகக் காத்துக் கொண்டிருக்கும். (2கொரி 5:8, பிலி 1:21-24, எபி 12:22-23; வெளி 6:9-11)

I பேதுரு - தொகுப்புரை

3 அதிகாரம்

"சிறைப்பட்டவர்கள்" (captivity) - இந்த பூமியில் யுத்தம் பண்ணும் ராஜா ஜெயம் பெறும்போது எல்லோரையும் சிறைபிடித்துச் செல்வதுபோன்று இயேசு கிறிஸ்து பாதாளத்திலுள்ள பரிசுத்தவான்களின் ஆத்துமாக்களைச் சிறைபிடித்து தம்மோடு பரலோகத்திற்கு அழைத்துச் சென்றார் (2கொரி 2:14) இயேசு கிறிஸ்துவோடு சிறைபிடித்துச் செல்லப்பட்டவர்களில் சிலர் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு உயிர்த்தெழுந்தவர்கள் (மத் 27:52-53) மற்றவர்கள் பாதாளத்தில் சாத்தானால் சிறைபிடித்து வைக்கப் பட்டிருந்தவர்கள் (எபி 2:14-15; எபி 12:23)

9. 1பேதுரு 3:19 ஆவது வசனத்தில "அந்த ஆவியிலே அவர் போய்" என்று எழுதப்பட்டிருப்பதற்கு "இயேசு கிறிஸ்து தாமே போய்" என்று பொருள்படும். ஏனோக்கோ நோவாவோ அல்லது வேறு யாருமோ பாதாளத்திற்குப் போய் அங்கு காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கிக்கவில்லை. இயேசு கிறிஸ்து தாமே பாதாளத்திற்குப் போய் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார் (சங் 16:10; அப் 2:27)

10. இந்த ஆவிகள் யாராக இருந்தாலும் இயேசு கிறிஸ்து பிரசங்கம் பண்ணிய போது அவை பாதாளத்தில் காவலில இருந்தன (1பேதுரு 3:19)

"அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர் மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப் பட்டார்கள்" அவர்கள் பேழையில் இருந்ததினால் ஜலப்பிரளயத்தில் மூழ்கிப் போகாமல் காக்கப்பட்டார்கள் (ஆதி 6:9-10:18; ஆதி 7:7 ஆதி 8:18) ஜலம் அவர்களைக் காக்கவில்லை. பேழையே அவர்களைக் காத்தது.

ஆல், மூலமாக (through) διά - dia - 1223

முன்னிடைச்சொல் - மூலமாக

"ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள்" இவர்களுடைய ஆத்துமாக்கள் காக்கப்பட்டது என்னும் பொருளில இந்த வாக்கியம் எழுதப்படவில்லை இந்த வாக்கியத்திற்கு ஜலத்தில மூழ்கிவிடாமல் காக்கப்பட்டார்கள் என்று பொருள்

4. **ஞானஸ்நானமானது மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல் தேவனைப் பற்றும் நல்மனச்சாட்சியின் உடன் படிக்கையாயிருக்கிறது** - (கலா 5:19-21 2கொரி 7:1 கொலோ 2:11)

1பேதுரு 3:21 அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கை யாயிருந்து, இப்பொழுது [illegible] இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது.

"அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது ....இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது" - பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே ....அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர்மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள் (1பேதுரு 3:20) ஜலம் அவர்களைக் காக்கவில்லை. பேழையே அவர்களைக் காத்தது. ஞானஸ்நானமானது இதற்கு ஒப்பனையாய் இருக்கிறது. நாம் ஞானஸ்நானம் எடுக்கும்போது தண்ணீர் நம்முடைய ஆத்துமாவை இரட்சிப்பதில்லை இயேசு கிறிஸ்துவின் மரணம், அடக்கம் பண்ணப்படுதல் உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் நாம் வைக்கும் விசுவாசத்தின் மூலமாகவே நம்முடைய ஆத்துமா இரட்சிக்கப்படுகிறது. (ரோமர் 6:3-5 1கொரி 15:1-4 எபே 1:14 கொலோ 1:20-22

ஒப்பனை ஒருபோதும் மனுஷனை இரட்சிக்காது. மெய்யான காரியமே மனுஷனை இரட்சிக்கக்கூடியது. ஆகையினால் பேதுரு மிகவும் தெளிவாக ஞானஸ்நானம் மாம்ச அழுக்கை நீக்காது என்றும் தேவனைப் பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாக அது இருக்கிறது என்றும் கூறுகிறார் ஞானஸ்நானத்தினால் யாரும் நீதிமானாக்கப் படுவதில்லை. விசுவாசத்தினாலேயே நாம் நீதிமானாக்கப் படுகிறோம். (மத் 3:11, ரோமர் 1:16 ரோமர் 3:24-25; ரோமர் 10:9-10

I பேதுரு – தொகுப்புரை

3 அதிகாரம்

அழுக்கு (filth) - 'ρύπος - rhypos - 4509

ஆண்பால் பெயர்ச்சொல் - அழுக்கு

அழுக்கு (filth) - 'ρυπαρία - rhyparia - 4507

பெண்பால் பெயர்ச்சொல் அழுக்கு

அழுக்கு (filth) 'ρυπαρός rhyparos 4506

பெயரடை கந்தையான

அசுத்தம் (filth) - 'ρυπαίνω - rhypainoo 4510

வினைச்சொல் - அசுத்தமாயிரு (moral filth, depravity) (யாக் 1:21 யாக் 2:2; வெளி 22:11; யாக் 1:21

5. கிறிஸ்து தேவதூதர்களுக்கும் அவருடைய சத்துருக்களுக்கும் மேலாக உயர்த்தப்பட்டார் - எபே 1:20-23 பிலி 2:9-11 கொலோ 1:16-18

1பேதுரு 3:22 அவர் பரலோகத்திற்குப் போய், தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறார்; தேவதூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது.

"அவர் பரலோகத்திற்குப் போய், தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறார்" - (1பேதுரு 3:18, மத் 28:18

I பேதுரு - தொகுப்புரை

4 அதிகாரம்

6. கிறிஸ்தவர்கள் பாவங்களை விட்டோய்ந்திருந்து பாடுகளை அனுபவிக்க வேண்டும் - (ரோமர் 8:13; கலா 5:24; கொலோ 3:5-10)

1பேதுரு 4:1 இப்படியிருக்க கிறிஸ்து நமக்காக மாம்சத்திலே பாடுபட்டபடியால நீங்களும் அப்படிப்பட்ட சிந்தையை ஆயுதமாகத் தரித்துக்கொள்ளுங்கள்

1பேதுரு 4:2 ஏனென்றால மாம்சத்தில பாடுபடுகிறவன் இனி மாம்சத்திலிருக்கும் காலம் வரைக்கும் மனுஷருடைய இச்சைகளின்படி பிழைக்காமல தேவனுடைய சித்தத்தின்படியே பிழைக்கத் தக்கதாக பாவங்களை விட்டோய்ந்திருப்பான்

"நீங்களும் அப்படிப்பட்ட சிந்தையை ஆயுதமாகத் தரித்துக்கொள்ளுங்கள்" - இயேசு கிறிஸ்துவிடம் காணப்பட்ட சாந்தம் இச்சையடக்கம் மன்னிக்கும் சிந்தை ஆகிய சுபாவங்களை நாமும் ஆயுதமாகத் தரித்துக் கொள்ள வேண்டும்.

"மாம்சத்தில பாடுபடுகிறவன் தேவனுடைய சித்தத்தின்படியே பிழைக்கத்தக்கதாக பாவங்களை விட்டோய்ந்திருப்பான்" தன்னுடைய மாம்சத்தைச சிலுவையில அறைகிறவன பாவம் செய்யமாட்டான் (ரோமர் 8:12-13; கொலோ 3:5-10)

7. சென்ற வாழ்நாட்காலத்தின் ஏழு பாவங்கள் ரோமர் 1:29-32 (கொரி 6:9-11 கலா 5:19-21 எபே 2:1-3, கொலோ 3:5-10)

1பேதுரு 4:3 சென்ற வாழ்நாட் காலத்திலே நாம் புறஜாதிகளுடைய இஷ்டத்தின்படி நடந்துகொண்டது போதும். அப்பொழுது நாம் காமவிகாரத்தையும் துர் இச்சைகளையும் நடப்பித்து, மதுபானம் பண்ணி, களியாட்டுச்செய்து வெறிகொண்டு, அருவருப்பான விக்கிர காராதனையைச் செய்துவந்தோம்

1பேதுரு 4:4 அந்தத் துன்மார்க்க உளையிலே அவர்களோடேகூட நீங்கள் விழாமலிருக்கிறதினாலே அவர்கள் ஆச்சரியப்பட்டு, உங்களைத் தூஷிக்கிறார்கள்

"சென்ற வாழ்நாட்காலத்திலே நாம் புறஜாதிகளுடைய இஷ்டத்தின்படி நடந்து கொண்டதுபோதும்" - இது புறஜாதியாருடைய ஜீவிய பழக்கவழக்கங்களைக் குறிக்கிறது. பேதுரு இந்த நிருபத்தை யூதருக்கும் புறஜாதியாருக்கும் எழுதியிருக்கிறார் என்பது இதன் மூலமாகத் தெரிய வருகிறது.

யூதர், புறஜாதியார் ஆகியோருடைய பாவங்கள்

1 காமவிகாரம் (Lasciviousness)

2 இச்சைகள் (Lusts)

3 மதுபானம் பண்ணுதல (Excess of wine)

4 களியாட்டம் (Revellings)

5 வெறிகொள்ளுதல (Banquetings)

6 அருவருப்பான விக்கிரகாராதனை (Abominable idolatries) (எபே 5:12,17)

7 அடங்காதவர்களாக இருப்பது (Excess of riot)

8 தேவதூஷணம் சொல்லுதல் (Speaking evil of you)

காமவிகாரம் (Lasciviousness) ἀσέλγεια aselgeia 766

பெண்பால் பெயர்ச்சொல் காமவிகாரம் (every form of lewdness, impurity)

இச்சைகள் (Lusts) ἐπιθυμία epithymia 1939

பெண்பால பெயர்ச்சொல இச்சை ஆசை (strong, vehement desire) (கொலோ 3:5)

4 அதிகாரம்

மதுபானம் பண்ணுதல (Excess of wine)
οἰνοφλυγία - oinophlygia - 3632

பெண்பால் பெயர்சொல - மதுபானம் பண்ணுதல (to be hot, to boil; to be aflame with wine)

களியாட்டம் (Revellings) - κωμος - koomos - 2970

ஆண்பால் பெயர்சொல - களியாட்டம் (lascivious feasts, boisterous festivity, singing and drinking in honor of heathen gods)

வெறிகொள்ளுதல (Banquetings) - πότος - potos - 4224

ஆணபால பெயாசசொல மதுபானம் (winefeasts; drinking matches)

அடஙகாதது (Excess of riot) - ἀσωτία - asootia - 810

பெணபால் பெயாசசொல வெறிக்கொளளாதது, அடஙகாதது துனமாாககம (flood of profligacy, sweeping away all rule, order, and restraint before it) (எபே 5:18

தேவ தூஷணம் சொலலுதல (speak evil of) - βλασφημέω - blaspheemeoo 987

வினைச்சொல் - தூஷி, இகழு, தேவதூஷணம் சொல்லு (blaspheming God and man) "speak evil of" (1பேதுரு 4:4,14 ரோமர் 14:16; 1கொரி 10:30 தீத்து 3:2; 2பேதுரு 2:2, 10,12 யூதா 1:8,10); "revile" (மத் 27:39, "rail on" (மாற்கு 15:29, லூக்கா 23:39); "report slanderously" (ரோமர் 3:8 "defame" (1கொரி 4:13 "speak blashpemy" (மத் 26:65, "blasphemously" (லூக்கா 22:65, "blasphemer" (அப 19:37,); "blaspheme" (மத் 9:3, மாறகு 3:28-29; லூக்கா 12:10 யோவான் 10:36; அப 13:45 அப 18:6; அப் 26:11; ரோமா 2:24. 1தீமோ 1:20; 1தீமோ 6:1; தீத்து 2:5, யாக் 2:7; வெளி 13:6 வெளி 16:9,11,21

"அவாகள ஆசசரியபபட்டு. உஙகளைத் தூஷிக்கிறார்கள்" - விசுவாசிகள் துனமாாகக உளையிலே விழாமல பரிசுததமாக ஜீவிக்கிறாாகள இது துனமாாககருககு ஆசசரியமாக இருக்கிறது

8. எல்லா மனுஷரும் கணக்கு ஒப்புவிப்பார்கள் - (அப் 17:31 ரோமா 2:16; 14:10; 2கொரி 5:10, வெளி 20:11-15)

1பேதுரு 4:5 உயிரோடிருக்கிறவா களுககும் மரித்தோாகளுக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறவருக்கு அவாகள் கணககொப்புவிப்பாாகள

1பேதுரு 4:6 இதற்காக மரித்தோரானவாகள், மனுஷாமுனபாக மாமசத்திலே ஆக்கினைக்குள்ளாக்கப பட்டிருநதும் தேவனமுனபாக ஆவியிலே பிழைக்கும்படியாக, அவாகளுக்கும் சுவிசேஷம் அறிவிக்கபபட்டது.

I பேதுரு - தொகுப்புரை

4 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 5

"உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறவருக்கு அவர்கள் கணக்கொப்புவிப்பார்கள்" 1பேதுரு 4:5-7, 1பேதுரு 4:5-6 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை. 1பேதுரு 4:7 ஆவது வசனம் நிறைவேறிற்று. எல்லா ஜனங்களும் தேவனுக்குக் கணக்கொப்புவிக்க வேண்டும்.

"அவர்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது" - தேவன் எல்லா மனுஷரையும் நீதியாய் நியாயந்தீர்க்க வேண்டும். ஆகையினால் எல்லா மனுஷருக்கும் சுவிசேஷம் ஒன்றுபோல அறிவிக்கப்பட்டிருக்கிறது. உயிரோடே ஜீவிக்கிறவர்கள் இப்போது சுவிசேஷத்தைக் கேட்பதுபோல மரித்தவர்கள் ஏற்கெனவே கேட்டிருப்பார்கள். சுவிசேஷம் ஆபிரகாமிற்கும் (கலா 3:8) இஸ்ரவேல் ஜனத்தாருக்கும் (எபி 4:1-2) ஆபேல், ஏனோக்கு, நோவா மற்றும் அநேகருக்கும் (எபி 11) அறிவிக்கப்பட்டிருக்கிறது. நியாயப்பிரமாணம் இல்லாதவர்களையும், சுவிசேஷத்தைக் கேள்விப்படாதவர்களையும் அவர்களுடைய மனசாட்சி சாட்சியிடுகிறபடி தேவன் நியாயந்தீர்ப்பார் (ரோமர் 2:12-16)

"தேவனுக்குமுன்பாக ஆவியிலே பிழைக்கும்படியாக" எல்லா மனுஷரும் தங்களுடைய ஆவியிலே தேவனுக்கு முன்பாகப் பிழைத்திருப்பார்கள். மனுஷருடைய ஆவி ஒருபோதும் மரிப்பதில்லை (1பேதுரு 3:4)

9. நியாயத்தீர்ப்பின் நிமித்தம் நான்கு கட்டளைகள்

1பேதுரு 4:7 எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று, ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம் பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்

1பேதுரு 4:8 எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்; அன்பு திரளான பாவங்களை மூடும்.

1பேதுரு 4:9 முறுமுறுப்பில்லாமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள்.

"எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று" - இஸ்ரவேலுக்கு வரப்போகிற நியாயத்தீர்ப்பைக் குறித்து பேதுரு இங்கு எழுதுகிறார். இந்நிருபம் எழுதப்பட்டு பத்து வருஷங்களுக்குப் பின்பு இஸ்ரவேல்மீது நியாயத்தீர்ப்பு உண்டாயிற்று. எருசலேமும் தேவாலயமும் அழிக்கப்பட்டது. ஆசாரியத்துவமும் பலிகளும் முடிவுக்கு வந்தன. ஜலப்பிரளயத்தைக் குறித்து தேவன் நோவாவிற்கு இப்படிப்பட்ட காரியத்தையே வெளிப்படுத்திக் காண்பித்தார் (ஆதி 6:13)

நியாயத்தீர்ப்பு சமீபமாயிருப்பதினால் விசுவாசிகளுக்குக் கூறப்பட்டிருக்கும் [redacted]

1. தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள் (1பேதுரு 4:7)
2. ஜெபம் பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள் (1பேதுரு 4:7)
3. எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள் (1கொரி 13:4)
4. முறுமுறுப்பில்லாமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள் (1பேதுரு 4:9; ரோமர் 12:13; எபி 13:2)

தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருப்பது **(Be sober) - σωφρονέω - soophroneoo** - 4993

வினைச்சொல் - புத்தி தெளிந்திரு, தெளிந்த எண்ணம், தெளிந்த புத்தி, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிரு (தீத்து 2:6)

ஜாக்கிரதையுள்ளவர்களாயிருப்பது **(soberly)** **νήφω neephoo** 3525

I பேதுரு – தொகுப்புரை

4 அதிகாரம்

விணைச்சொல் - தெளிந்தவர் களாயிரு. புத்தியுள்ளவர்களாயிரு மனத்தெளிவுள்ளவனாயிரு (to live soberly)

ஊக்கமாய் (fervent) - ἐκτενής ektenees - 1618

பெயரடை - ஊக்கமாய் (earnest; zealous, abundant) fervent (1பேதுரு 4:8) without ceasing அப 12:5; 1தெச 2:13)

"அன்பு" (charity) - நாம் அன்புள்ளவர்களாக இருப்பதினால் தேவன் யாருடைய பாவத்தையும் மன்னிக்கப் போவதில்லை நாம் ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாக இருக்கும்போது மற்றவர்கள் நமக்கெதிராகச் செய்யும் தவறுகளைப் பெரிதுபடுத்தமாட்டோம். அவர்கள்மீது கோப வைராக்கியம் கொள்ளமாட்டோம்.

முறுமுறுப்பு (grudging) - γογγυσμός - gongysmos - 1112

ஆண்பால் பெயர்ச்சொல் முறுமுறுப்பு rudging (1பேதுரு 4:9) murmuring (யோவான் 7:12; அப் 6:1, பிலி 2:14

10. ஆவிக்குரிய வரங்கள் 1கொரி 12:1

1பேதுரு 4:10 அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்து கொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர் போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள்

1பேதுரு 4:11 ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன் ஒருவன் உதவி செய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன் எல்லாவற்றிலேயும் இயேசு கிறிஸ்து மூலமாய் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக; அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்

வரம் (gift) - χάρισμα - charisma - 5486

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - வரம், கிருபை, தயவு - (a gift, an ability given by the Holy Spirit through grace) (1தீமோ 4:14) - தேவனிடமிருந்து பெற்றுக் கொண்ட ஆற்றலின் பிரகாரம் நாம் ஒவ்வொருவரும் மற்றவருக்கு ஊழியம் செய்ய வேண்டும். (1பேதுரு 4:10-11 ரோமர் 12:3-8; 1கொரி 12:4-11)

பற்பல காரியங்கள்

1 கர்த்தருடைய கிரியைகள் திரளாய் இருக்கிறது (சங் 104:24)

2 மனுஷருடைய மீறுதல்கள் மிகுதியாய் இருக்கிறது (ஆமோ 5:12)

3 மனுஷர் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறார்கள் (1பேதுரு 1:6)

4 தேவனுடைய பற்பல கிருபை (1பேதுரு 4:10)

5 தேவனுடைய அநந்த ஞானம் (எபே 3:10)

6 தேவனுடைய மிகுந்த மனதுருக்கம் (நெகே 9:19,27)

7 மனுஷருடைய அதிகமான வெகுமதி (லூக்கா 18:30)

தேவனுடைய வாக்கியங்கள் (oracles) λόγιον logion - 3051

4 அதிகாரம்

பொருடை - வல்லவனுமான (a divine answer to a question. It always implies a speech purely celestial, in which man has no part) அப் 7:38 ரோமர் 3:2; எபி 5:12)

"தேவனுடைய வாக்கியங்கள்" - புறஜாதிப்பார் தங்களுடைய தெய்வங்களின் வாக்குக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பார்கள் அதைத் தெய்வீக வாக்கு அல்லது அருள்வாக்கு என்று கூறுவார்கள் தேவவாக்கை மீறுவது பாவம் என்று கருதுவார்கள் யுத்தம் பண்ணுதல் வியாபாரம் பிரயாணம் ஆகிய எல்லாக் காரியங்களிலுமே தேவனுடைய அருள்வாக்கைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று விரும்புவார்கள்

புறஜாதியார் தங்களுடைய தெய்வங்களின் வாக்குக்கு அதிக முக்கியத்துவம் தரும்போது விசுவாசிகளாகிய நாம் நம்முடைய மெய்யான தேவனுடைய வாக்கியங்களுக்கு அதிக முக்கியத்துவம் தரவேண்டும் தேவன் பரிசுத்த வேதாகமத்தில் கூறியிருக்கும் கற்பனைகளுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும்.

புறஜாதியார் தங்களுடைய தெய்வங்களின் வாக்கை அவர்களுடைய பூஜாசாரிகள் மூலமாகக் கேட்பார்கள் அருள்வாக்கு தருகிறவர்களுக்குப் பெரிய வெகுமதிகளையும் கொடுப்பார்கள் விசுவாசிகளாகிய நமக்கு தேவனுடைய வார்த்தை இலவசமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும் தேவனுடைய வார்த்தை ஒருபோதும் மாறுவதில்லை

"தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்" - ஊழியம் செய்வதற்கு நம் ஒவ்வொருவருக்கும் தேவன் பெலனளிக்கிறார் அவர் அளிக்கும் பெலத்தின்படி நாம் ஊழியம் செய்ய வேண்டும். மற்ற மனுஷரை முன்மாதிரியாக வைத்துக் கொண்டு, அவர்களைப்போல ஊழியம் செய்ய வேண்டுமென்று முயற்சி பண்ணக்கூடாது. தேவன் நமக்கு தந்தருளும் பெலத்தைவிட அதிகமாக ஊழியத்தில் ஈடுபட்டு அவஸ்தைப்படக் கூடாது. (2கொரி 10:11-18)

11. கிறிஸ்தவர்கள் பாடு அனுபவிக்க வேண்டிய நான்கு காரியங்களும் பாடு அனுபவிக்க வேண்டாத காரியங்களும் - பாடு அனுபவிக்கும் போது செய்ய வேண்டிய நான்கு காரியங்கள்

1பேதுரு 4:12 பிரியமானவர்களே உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்

1பேதுரு 4:13 கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும் போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப் படுங்கள்

1பேதுரு 4:14 நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால், பாக்கியவான்கள் ஏனென்றால்: தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள் மேல் தங்கியிருக்கிறார் அவர்களாலே தூஷிக்கப்படுகிறார் உங்களாலே மகிமைப்படுகிறார்

1பேதுரு 4:15 ஆதலால் உங்களில் ஒருவனும் கொலை பாதகனாயாவது, திருடனாயாவது பொல்லாங்கு செய்தவனாயாவது அந்நிய காரியங்களில் தலையிட்டுக் கொண்டவனாயாவது பாடு படுகிறவனாயிருக்கக்கூடாது.

I பேதுரு – தொகுப்புரை

4 அதிகாரம்

1பேதுரு 4:16 ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்

பற்றி எரிதல் (fiery) - πυρωσις
pyroosis - 4451

பெண்பால் பெயர்சொல் – எரிதல் வேகுதல் (burning) (1பேதுரு 4:12 வெளி 18:9,18

தீர்க்கதரிசன எண் - 6

"கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும் போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால சந்தோஷப்படுங்கள்" (பேதுரு 4:13 இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை

பாடுகளைப் பற்றிய கனியங்கள்

1 விசுவாசிகளுக்கு பாடுகள புதுமையானவை அலை (1பேதுரு 4:12, 2தீமோ 3:12)

2 விசுவாசிகள பாடுகள அனுபவிக்கும் போது இயேசு கிறிஸ்துவின பாடுகளுக்குப் பங்காளிகளாக இருப்பதினால மகிழ்ந்து களிகூரவேண்டும் 1பேதுரு 4:13 மத் 5:10

3 பாடுகள அதிகமாகும்போது மகிமையும், சந்தோஷமும் அதிகரிக்கும் 1பேதுரு 4:13 ரோமா 8:17 18)

4 விசுவாசிகள் பாடுகளை அனுபவிக்கும் போது தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் அவர்களமீது தங்கியிருக்கிறார (1பேதுரு 4:14; ரோமர் 8:26-27)

5 விசுவாசிகள் பாடுகளை அனுபவிக்கும் போது தேவன் அதனால் மகிமைப் படுகிறார் (1பேதுரு 4:14, ரோமர் 8:17 18)

6 ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து அதினிமித்தம் தேவனை மகிமைப படுத்தக்கடவன் (1பேதுரு 4:16

7 பாடுகள் விசுவாசிகளிடத்தில் முதலாவது துவங்குகிறது துன்மார்க்கருக்கு அவை அழிவில் முடியும். (1பேதுரு 4:17-18)

8 தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள் நன்மை செய்கிறவர்களாயத் தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டி கர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக் கொடுக்கக் கடவர்கள் (1பேதுரு 4:19; 1கொரி 10:13)

பாடநுபவிக்கும் விசுவாசிகளுக்கு வெகுமதிகள்

1 பரலோகத்தில அதிகமான நித்திய கனமகிமை (2கொரி 4:17

2 நித்திய ஆறுதல் (2கொரி 1:7)

3 இயேசுவினுடைய ஜீவன விளங்குகிறது (2கொரி 4:11)

4 மற்றவர்களுக்கு ஜீவன பெலனசெய்கிறது (2கொரி 4:12

5 தேவனுடைய மகிமை விளங்குகிறது (2கொரி 4:15)

6 தேவன நியாயமான தீர்ப்புச் செய்கிறவர் என்பதற்கு அத்தாட்சியாயிருக்கிறது (2தெச 1:5

7 கிறிஸ்துவோடு ஆளுகை செய்தல் (2தீமோ 2:12

8 தேவனுடைய ஆவியானவர் பாடநுபவிக்கும் விசுவாசிகள்மேல தங்கியிருப்பது (1பேதுரு 4:14

9 தேவன் மகிமைப்படுதல் (1பேதுரு 4:16

I பேதுரு – தொகுப்புரை

4 அதிகாரம்

10 களிகூர்ந்து மகிழுதல் (1பேதுரு 4:13-14)

விசுவாசிகள் அநுபவிக்கக்கூடாத பாடுகள்

1 கொலைபாதகனாக பாடுபடுதல் (1பேதுரு 4:15)

2 திருடனாகப் பாடுபடுதல் (1பேதுரு 4:15)

3 பொல்லாங்கு செய்தவனாகப் பாடுபடுதல்

4 அந்நியக் காரியங்களில் தலையிட்டுக் கொண்டவனாகப் பாடுபடுதல் (1பேதுரு 4:15)

5 ரோமர் 1:18-32; 1கொரி 6:9-11; கலா 5:19-21 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் துன்மார்க்கக் காரியங்களுக்காகப் பாடநுபவித்தல்

விசுவாசிகள் அநுபவிக்க வேண்டிய பாடுகள்

1 நீதியின் நிமித்தம் துன்பப்படுதல் (மத் 5:10, மத் 13:21; மாற்கு 10:30, யோவான் 15:20)

2 இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் நிந்தித்து துன்பப்படுத்தி பலவித தீமையான மொழிகளைப் பொய்யாய்ச் சொல்லுதல் (மத் 5:11-12; மத் 10:25 அப் 13:45, 1பேதுரு 4:4)

3 பொய்யான குற்றச்சாட்டுகள் (மத் 10:17-20)

4 கிறிஸ்துவின் நிமித்தம் வாரினால் அடிப்பது (மத் 10:17)

5 ஜனங்கள் ஏற்றுக் கொள்ளாமல் போவது (மத் 10:14)

6 உலகத்தாரால் வெறுக்கப்படுவது (மத் 10:22, யோவான் 15:18-21)

7 உற்றார் உறவினரால் பகைக்கப்படுவது (மத் 10:21-36)

8 இரத்தச்சாட்சியாக மரிப்பது (மத் 10:28; அப் 7:58)

9 சோதனைகள் (லூக்கா 8:13, யாக் 1:2-16)

10 இயேசுவின் நாமத்திற்காக அவமானம் அடைதல் (அப் 5:41)

11 சிறையிருப்புக்கள் (அப் 4:3; அப் 5:18 அப் 12:4)

12 உபத்திரவங்கள் (அப் 14:22 2தெச 1:4)

13 கல்லெறிபடுதல் (அப் 14:19; 2கொரி 11:25)

14 அடிக்கப்படுதல் (அப் 16:23; 2கொரி 11 24-25

15 ஜனங்களுக்கு வேடிக்கைப் பொருளாக இருப்பது (1கொரி 4:9)

16 ஜனங்களால் தவறாகப் புரிந்து கொள்ளப்படுதல் (1கொரி 4:10-13

17 கண்விழிப்புக்கள் உபவாசங்கள் தொந்தரவுகள் பிரயாசங்கள் (2கொரி 6:8-10 2கொரி 11:26-28

18 நிந்தனைகள் (எபி 13:13, 1பேதுரு 4:14

19 சோதிக்கப்படுதல் (1பேதுரு 1:7, 1பேதுரு 4:12)

20 சாத்தானின் எதிர்ப்புக்கள் (எபே 4:27, எபே 6:12)

21 சாபத்தின் நிமித்தமாக வாக்குக்கடங்காத பெருமூச்சுக்கள் (ரோமர் 8:17 26)

"அந்நிய காரியங்களில் தலையிட்டுக் கொண்டவன்" – தன்னுடைய சொந்த அலுவல்களைக் கவனியாமல், மற்றவர்களுடைய அலுவல்களில் தேவையில்லாமல் தலையிடுகிறவன் (லேவி 19:16; நீதி 20:3, 2தெச 3:11 12, 1தீமோ 5:13)

BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

I பேதுரு - தொகுப்புரை

4 அதிகாரம்

"கிறிஸ்தவன்" (Christian) - கிறிஸ்துவைப் போன்றவன் அப் 11:26; அப் 26:28

12. தற்கால நியாயத்தீர்ப்பும் வருங்கால நியாயத்தீர்ப்பும் - தண்டனையிலிருந்து எவ்வாறு தப்பித்துக் கொள்வது

1பேதுரு 4:17 நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவங்குங்காலமாயிருக்கிறது; முந்தி நம்மிடத்திலே அது துவக்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்.'

1பேதுரு 4:18 நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால் பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்?

1பேதுரு 4:19 ஆகையால் தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள் நன்மை செய்கிறவர்களாய்த் தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுக்கக்கடவர்கள்

"நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவங்குங்காலமாயிருக்கிறது" - நீதிமான் பாவம் செய்யும்போது தேவன் முதலாவதாக நீதிமானையே நியாயம் விசாரிப்பார் அவர்கள் நீதிமான்களாகக் காணப்பட்டால் நியாயத் தீர்ப்பிலிருந்து விடுவிக்கப்படுவார்கள் (ஆதி 18:23-32 ஆதி 19:22; யாத் 14:13-31; எசே 9:1-11; நீதிமான்கள் பாவம் செய்யும்போது தேவன் அவர்களைத் தண்டிப்பார் என்றால் துன்மார்க்கர் பாவம் செய்யும்போது அவர்கள் தேவனுடைய தண்டனையிலிருந்து நிச்சயமாகவே தப்பிக்கமாட்டார்கள்

நியாயத்தீர்ப்பு (judgment) - κρίμα - krima - 2917

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - தீர்ப்பு, ஆக்கினை, நியாயத்தீர்ப்பு (damnation, punishment)

"தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள்" இவர்கள் தாங்கள் அனுபவிக்கும் பாடுகளைத் தாங்கிக் கொண்டு, தங்களுடைய ஆத்துமாக்களைத் தேவனிடம் ஒப்புக்கொடுக்க வேண்டும். தேவன் தமது பிள்ளைகளைக் காத்துக் கொள்வதில் வாக்கு மாறாதவர், உண்மையுள்ளவர் (எபி 10:30-31)

I பேதுரு – தொகுப்புரை

5 அதிகாரம்

VI. கிறிஸ்தவருக்கு பதினான்கு கட்டளைகள் – (5:1-11)

1. போதகருக்கு ஏழு கட்டளைகள் - (1தீமோ 3; தீத்து 1)

1பேதுரு 5:1 உங்களிலுள்ள மூப்பருக்கு உடன் மூப்பனும், கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியும், இனி வெளிப்படும் மகிமைக்குப் பங்காளியுமாயிருக்கிற நான் புத்திசொல்லுகிறதென்னவென்றால்.

1பேதுரு 5:2 உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும்.

1பேதுரு 5:3 சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும் கண்காணிப்பு செய்யுங்கள்

1பேதுரு 5:4 அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்

மூப்பர் (elder) - πρεσβύτερος - presbyteros - 4245

பொருள் - முன்னோரான மூப்பரான, மூத்த வயதுள்ள (presbyters, bishops, pastors, overseers of the churches) (அப் 14:23)

உடன் மூப்பன் (fellow elder) συμπρεσβύτερος sympresbyteros 4850

ஆங்கிலச் சொல் - உடன் மூப்பன் - சம அந்தஸ்தில் உள்ளவர்கள்

பேதுரு தன்னைப் பற்றி கூறும் [redacted]

1 இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரன் (A servant of Jesus Christ) (2பேதுரு 1:1)

2 இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலன் (An apostle of Jesus Christ) (1பேதுரு 1:1)

3 உடன்மூப்பன் (A fellow elder) (1பேதுரு 5:1)

4 கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சி (A witness of the sufferings of Christ) (1பேதுரு 5:1; அப் 5:32)

5 மகிமைக்குப் பங்காளி (A partaker of the glory) (2பேதுரு 5:1)

மூப்பருக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள் (1பேதுரு 5:2-3)

1 தேவனுடைய மந்தையை மேய்க்க வேண்டும். விரட்டி விடக்கூடாது

2 தேவனுடைய மந்தையைக் கண்காணிப்பு செய்ய வேண்டும்

3 தேவனுக்கு ஊழியம் செய்து அவருடைய மந்தையை மனப்பூர்வமாய் மேய்க்க வேண்டும்.

4 அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடு ஊழியம் செய்ய வேண்டும்.

5 சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக இருக்கக்கூடாது

6 மந்தைக்கு மாதிரிகளாக இருக்க வேண்டும்.

அவலட்சணமான ஆதாயம் (filthy lucre) αἰσχροκερδῶς aischrokerdoos 147

விளக்கம் - அவலட்சணமான ஆதாயத்திற்காக (eagerness for base gain) (1தீமோ 3:3,8)

I பேதுரு - தொகுப்புரை

5 அதிகாரம்

"சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல" - தன்னிடம் பொறுப்பாக ஒப்படைக்கப்பட்டிருக்கும் தேவனுடைய மந்தையை இறுமாப்பாய் ஆளக்கூடாது. மந்தைக்கு மாதிரிகளாக நடந்து கொள்ள வேண்டும். தாழ்மையுடனும் சேவை மனப்பான்மையுடனும் ஊழியம் செய்ய வேண்டும்.

மாதிரிகள் (ensamples) - τυπικῶς - typikoos - 5179

ஆண்பால் பெயர்ச்சொல் - சொரூபம் மாதிரிநிருபம், திருஷ்டாந்தம் (pattern) (பிலி 3:17)

"பிரதான மேய்ப்பர்" (Shepherd) - எபி 13:20

"மகிமையுள்ள வாடாத கிரீடம்" - (2தீமோ 4:8)

2. எல்லா கிறிஸ்தவருக்கும் ஏழு கட்டளைகள்

1பேதுரு 5:5 அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள்; பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்.

1பேதுரு 5:6 ஆகையால் ஏற்றகாலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.

1பேதுரு 5:7 அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.

1பேதுரு 5:8 தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்.

1பேதுரு 5:9 விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்; உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே.

இளைஞருக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள் (1பேதுரு 5:5-9)

1. மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள் (1பேதுரு 5:5)
2. ஒருவருக்கொருவர் கீழ்ப்படியுங்கள் (1பேதுரு 5:5)
3. மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள் (1பேதுரு 5:5)
4. தேவனுடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள் (1பேதுரு 5:6)
5. உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்து விடுங்கள் (1பேதுரு 5:7)
6. தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள் (1பேதுரு 5:8)
7. விழித்திருங்கள் (1பேதுரு 5:8)
8. சாத்தானுக்கு எதிர்த்து நில்லுங்கள் (1பேதுரு 5:9)

தாழ்மை (humility) - ταπεινοφροσύνη - tapeinophrosynee - 5012

பெண்பால் பெயர்ச்சொல் தாழ்மை "humility" (1பேதுரு 5:5; கொலோ 2:18,23), "humility of mind" (அப் 20:19), "humbleness of mind" (கொலோ 3:12), "lowliness" (எபே 4:2), "lowiness of mind" (பிலி 2:3)

I பேதுரு – தொகுப்புரை

5 அதிகாரம்

தாழ்மையினால் வரும் ஆசீர்வாதங்கள்

1. சிருஷ்டியின் மகிமை (வெளி 4:11 லூக்கா 17:10
2. மீட்பு (பிலி 2:5-8
3. ஐசுவரியமும், கனமும் (நீதி 15:33 நீதி 22:4; மத் 5:3)
4. ஐக்கியம் ஏசா 57:15; ஏசா 66:2)
5. ஆத்துமாவின் இளைப்பாறுதல் மத் 11:29
6. இரட்சிப்பு (மத் 18:3; லூக்கா 18)
7. மேன்மை மத் 20:26-27 லூக்கா 22:26
8. உயர்த்தப்படுதல (மத் 23:12 லூக்கா 14:11
9. வெளிப்பாடு (மத் 11:25; லூக்கா 10:21)
10. ஒற்றுமை (எபே 4:1-3; எபே 5:21 1பேதுரு 5:5
11. ஜெயஜீவியம் (ரோமர் 12:10,16 1கொரி 13 கலா 5:26; பிலி 2:1-4 கொலோ 3:5-14, 1யோவான் 4:20 1தீமோ 1:15, தீத்து 2:11-14)
12. விசுவாசம் (மத் 8:8; மத் 15:28 யோவான 4:50)

தாழ்மையுள்ளவர்களுக்கு எடுத்துக்காட்டுக்கள்

1. ஆபிரகாம் (ஆதி 18:27,32)
2. யாக்கோபு (ஆதி 32:10-11)
3. மோசே (யாத் 4:10, எண 12)
4. தாவீது (2சாமு 7:18-19; 1நாளா 17:17)
5. யோபு (யோபு 42:4-6)
6. ஏசாயா (ஏசா 6:5
7. நூற்றுக்கதிபதி (மத் 8:8
8. யோவான் ஸ்நானன் (யோவான் 3:30)
9. இயேசு கிறிஸ்து
10. பவுல் (எபே 3:8; 1தீமோ 1:15

"பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார் தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்" - நீதி 3:34 ஆவது வசனம் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது

தெளிந்தபுத்தியுள்ளவர் (sober) - νήφω - neephoo - 3525

வினைச்சொல் - தெளிந்தவர்களாயிரு. புத்தியுள்ளவர்களாயிரு. மனத்தெளிவுள்ளவனாயிரு (sober, to live soberly)

விழித்திரு (vigilant) - γρηγορέω - greegoreoo - 1127

வினைச்சொல - விழித்திரு (to be awake) "vigilant" (1பேதுரு 5:8), "wake" (1தெச 5:10 " watchful" (வெளி 3:2 "watch" (மத் 24:42-43 மத் 25:13, அப 20:31 1கொரி 16:13, கொலோ 4:2 1தெச 5:6 வெளி 3:3 வெளி 16:15 - விசுவாசிகள தங்களுடைய சாவாயுத வாக்குகளை எப்போதும் தரித்துக் கொண்டு எந்த நேரத்திலும் பிசாசை எதிர்த்து நிற்பதற்கு விழித்திருந்து ஆயத்தத்துடன இருக்க வேண்டும். (1பேதுரு 5:9; யாக் 4:7, எபே 4:27

எதிராளி (adversary) - ἀντίδικος - antidikos - 476

ஆண்பால் பெயர்ச்சொல் - எதிராளி (an opponent in a suit) - ஒருவர்மீது வழக்குத் தொடருகிறவர் (மத் 5:25; லூக்கா 12:58 லூக்கா 18:3)

I பேதுரு – தொகுப்புரை

5 அதிகாரம்

பிசாசிற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பெயர்களும், பட்டங்களும்

1 பிசாசானவன் (Devil) (1பேதுரு 5:8 மத் 4:1-11; எபே 6:11)

2 எதிராளி (Adversary) (1பேதுரு 5:8 1தீமோ 5:14)

3 சாத்தான் (Satan) (வெளி 12:9 லூக்கா 10:18; லூக்கா 11:18)

4 பேலியாள் (Belial) (2கொரி 6:15 உபா 13:13)

5 லூசிபர் (Lucifer) (ஏசா 14:12-14)

6 வலுசர்ப்பம் (Dragon) வெளி 12:3-17 வெளி 13:2-11 வெளி 20:2

7 சர்ப்பம் (Serpent) (வெளி 12:9 2கொரி 11:3

8 சத்துரு (Enemy) (மத் 13:39 லூக்கா 10:19

9 சோதனைக்காரன் (Tempter) (மத் 4:3; 1தெச 3:5

10 பொல்லாங்கன் (Wicked one) (மத் 13:19; 1யோவான் 5:18)

11 பெயல்செபூல் (Beelzebub) (மத் 10:25; மத் 12:24)

12 இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் (The god of this world) (2கொரி 4:4

13 இந்த உலகத்தின் அதிபதி (Prince of this world) (யோவான் 12:31)

14 சகோதரர்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் (Accuser of the brethren) (வெளி 12:10

15 கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபு (Prince of the power of the air) (எபே 2:1-3 எபே 5:12)

16 அபிஷேகம் பண்ணப்பட்ட கேருப (The anointed cherub) (எசே 28:11-17)

17 ஒளியின் தூதன் (Angel of light) (2கொரி 11:14)

18 பிசாசுகளின் தலைவன் (Prince of devils) (மத் 12:24)

19 திருடன் (The thief) (யோவான் 10:10)

20 அகங்காரமுள்ள ஜீவன்களுக்கெல்லாம் ராஜா (King over all the children of pride) (யோபு 41:34)

21 லிவியாதான் (Leviathan) (யோபு 41:1; ஏசா 27:1)

சாத்தான் ஒப்பிடப்பட்டிருக்கும் [redacted]

1 கெர்ச்சிக்கிற சிங்கம் (1பேதுரு 5:8

2 வேடன் (சங் 91:3

3 பொல்லாங்கன் (மத் 13:4,19

4 ஓநாய் (யோவான் 10:12)

5 திருடன் (யோவான் 10:10

6 சர்ப்பம் (வெளி 12:9 வெளி 20:3

7 சிவப்பான பெரிய வலுசர்ப்பம் (வெளி 12:3-12)

"எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்" - (யோபு 1:6-12; யோபு 2:1-7)

விழுங்கு (devour) - καταπίνω katapinoo 2666

I பேதுரு - தொகுப்புரை

5 அதிகாரம்

விணைச்சொல் - விழுங்கு, அமிழ (to gulp down) "devour" 1பேதுரு 5:8); "drown" (எபி 11:29) "swallow" (மத் 23:24) "swallow up" (1கொரி 15:54 2கொரி 2:7; 2கொரி 5:7 வெளி 12:16) - சாத்தானால் எல்லோரையும் விழுங்க முடியாது. தேவனுடைய கரங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறவர்களைச் சாத்தானால் ஒன்றும் செய்ய முடியாது. (1பேதுரு 5:5)

"விசுவாசத்தில உறுதியாயிருந்து அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்" - விசுவாசிகள் சாத்தானுக்குப் பயப்படக்கூடாது. சாத்தானை ஜெயிப்பதற்கு விசுவாசத்தில் உறுதியாயிருந்து அவனை எதிர்த்து நிற்பதே சிறந்த வழியாகும். (யாக் 4:7)

"உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறது" உலகம் முழுவதிலுமுள்ள தேவனுடைய பிள்ளைகள் பாடுகளை அநுபவித்து வருகிறார்கள். பாடுகள் என்பது வியாதியை மட்டும் என்று குறிக்காமல் எல்லாவிதமான பாடுகளையும் குறிக்கிறது. (1பேதுரு 5:1, 1பேதுரு 5:10 ஆவது வசனத்தில கூறப்பட்டிருக்கும் ஆசீர்வாதங்களை அநுபவிப்பதற்கு விசுவாசிகள் நோயவாய்ப்பட்டிருக்க வேண்டும் என்றும் அவசியமில்லை

பாடு (sick) - πάθημα - patheema - 3804

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - இச்சை, பாடு, உபத்திரவம் (ரோமர் 7:5)

VII. முடிவுரையும் ஆசீர்வாதமும்

1பேதுரு 5:10 கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக் காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக.

1பேதுரு 5:11 அவருக்கு மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்

1பேதுரு 5:12 உங்களுக்குப் புத்திசொல்லவும் நீங்கள் நிலைகொண்டு நிற்கிற கிருபை தேவனுடைய மெய்யான கிருபைதானென்று சாட்சியிடும் படிக்கும் நான் சுருக்கமாய் உங்களுக்கு எழுதி, எனக்குத் தோன்றுகிறபடி உண்மையுள்ள சகோதரனாகிய சில்வானுவின் கையிலே கொடுத்து அனுப்பியிருக்கிறேன்

1பேதுரு 5:13 உங்களுடனேகூடத் தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிற பாபிலோனிலுள்ள சபையும், என் குமாரனாகிய மாற்கும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்

1பேதுரு 5:14 ஒருவரையொருவர் அன்பின் முத்தத்தோடே வாழ்த்துதல் செய்யுங்கள் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான உங்கள் அனைவருக்கும் சமாதானம் உண்டாவதாக. ஆமென்

பாடநுபவிக்கிறவர்களுக்கு வரும் ஆசீர்வாதங்கள்

1. பரிபூரணம் (2கொரி 13:5
2. விசுவாசத்தில உறுதிபெறுதல் (ரோமர் 1:11)
3. ஆவிக்குரிய பெலன்
4. விசுவாசத்தை நிலைநிறுத்துதல்

பலப்படுத்துதல் (strength) σθενόω sthenooo 4599

I பேதுரு – தொகுப்புரை

5 அதிகாரம்

வினைச்சொல் - பலப்படுத்து (to bind together) - பலப்படுத்தப்படுவதினால் கீழே சிந்தாது கட்டு அவிழ்ந்துபோகாது. கீழே விழாது.

நிலைநிறுத்துதல் (Settling) - θεμελιόω - themelioōo - 2311

வினைச்சொல் - அஸ்திபாரம் போடு. நிலைபெறு. நிலைநிறுத்து (good foundation)

"சில்வானு" (Silvanus) சீலாவின் (Silas) மறுபெயர் (1தெச 1:1; 2தெச 1:1, அப் 15:40, அப் 16:19)

"பாபிலோன்" (Babylon) - ஐபிராத்து நதியிலுள்ள (River Euphrates) பாபிலோன் பட்டணத்தை இந்த வார்த்தை குறிப்பிடுகிறது. பேதுரு இந்த நிருபத்தை எழுதியபோது பாபிலோன் பட்டணம் வரலாற்றுப் பிரகாரமாக நல்ல நிலையில் இருந்தது. அந்தப் பட்டணத்தில் ஏராளமான யூதர்கள் குடியிருந்தார்கள். இக்காலத்தில் யோசபுஸ் (Josephus) என்னும் வரலாற்று ஆசிரியர் பாபிலோன் பட்டணத்தைப் பற்றி எழுதியிருக்கிறார்.

"மாற்கு" (Marcus) - யோவான் என்னும் மறுபெயர் கொண்ட மாற்கு (John Mark) பேதுருவின் ஊழியத்தின் மூலமாக இரட்சிக்கப்பட்டவன். மாற்கு எழுதின சுவிசேஷத்தின் ஆசிரியர் அப் 12:12 மாற்கு சரீரப் பிரகாரமாக பேதுருவின் மகனல்ல. ஆவிக்குரிய குமாரன். தீமோத்தேயுவும், தீத்துவும் பவுலுக்கு ஆவிக்குரிய குமாரர்களாக இருந்ததுபோன்று, மாற்கு பேதுருவின் ஆவிக்குரிய குமாரனாக இருந்தான் (1தீமோ 1:2; தீத்து 1:4)

"ஒருவரையொருவர் அன்பின் முத்தத்தோடே வாழ்த்துதல் செய்யுங்கள்" ஆதித் திருச்சபைக் காலத்தில் கிழக்குத் தேசத்தில் இருந்த ஒரு வழக்கம்.

II பேதுரு – முன்னுரை

காலமும் இடமும்

கி.பி. 67-68 ஆம் ஆண்டில் பாபிலோனிலிருந்து இந்த நிருபம் எழுதப்பட்டது.

ஆசிரியர்

சீமோன் பேதுரு (2பேதுரு 1:1)

மையக்கருத்து

1. 1பேதுரு நிருபம் யாருக்கு எந்த நோக்கத்திற்காக எழுதப்பட்டதோ அவர்களுக்கே அந்த நோக்கத்திற்காக 2பேதுரு நிருபமும் எழுதப்பட்டிருக்கிறது. (2பேதுரு 3:1) விசுவாசிகள் தங்களுக்கு வரும் பாடுகளிலும் தேவனிடத்தில் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். தேவனுடைய கிருபையைப் பற்றிக் கொள்ள வேண்டும். (1பேதுரு 5:12)

2. கடைசி நாட்களில் நடைபெறப் போகிற சம்பவங்களை பேதுரு இந்த நிருபத்தில் முன்னறிவிக்கிறார். நோவாவின் காலத்தில் ஜலத்தினால் பூமி அழிக்கப்பட்டதுபோல இப்பொழுதுள்ள உலகம் அக்கினியினால் அழிக்கப்பட்டுப் போவதைப் பற்றி பேதுரு விளக்கிக் கூறுகிறார். (2பேதுரு 3:1-13)

3. இந்த நிருபமும், 2தெசலோனிக்கேயர், 1தீமோத்தேயு, 2தீமோத்தேயு, யூதா, வெளிப்படுத்தின விசேஷம் ஆகிய புஸ்தகங்களும் பல விஷயங்களில் ஒத்திருக்கிறது. கடைசி நாட்களில் காணப்படும் வேதபுரட்டை இவை விளக்குகின்றன. வெளிப்படுத்தின விசேஷத்தில் அந்திக்கிறிஸ்துவின் கீழ் சத்தியம் எவ்வாறு புரட்டப்படும் என்பது விளக்கப்பட்டிருக்கிறது. (வெளி 6:1-20:3; 2தெச 2:1-12; 1தீமோ 4:1-8; 2தீமோ 3:1-13; 2தீமோ 4:1-6; 2பேதுரு 2:1-3:9; யூதா 1:3-19)

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 3

வசனங்கள் - 61

கேள்விகள் - 2

புதிய தீர்க்கதரிசனங்கள் - 7

வரலாற்றைக் குறிக்கும் வசனங்கள் - 54

பொருளடக்கம்

I. ஆசிரியரும் வாழ்த்துரையும் (1:1-2)

II. கிறிஸ்தவ நீதிகள்

1. தேவனுடைய முழுமையான பராமரிப்பு (1:3)
2. கனிசேஷத்தின் அநுகூலங்கள் (1:4)
3. கூட்டி வழங்க வேண்டியவை - எட்டு கிறிஸ்தவ நீதிகள் (1:5-11)

III. பேதுருவின் மூன்று அம்ச சாட்சி

1. தன்னைப் பற்றி (1:12-15)
2. இயேசு கிறிஸ்துவைப் பற்றி (1:16-18)
3. வேதவாக்கியங்களைப் பற்றி (1:19-21)

IV. கள்ளத்தீர்க்கதரிசிகளும் கள்ளப் போதகர்களும்

1. அவர்களுடைய கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுக்கள் (2:1)
2. அவர்களைப் பின்பற்றுவோரின் நடக்கைகளும் நியாயத்தீர்ப்பும் (2:2-3)
3. வேதப்புரட்டர்களின் நியாயத்தீர்ப்பு - எடுத்துக்காட்டுக்கள் (2:4-6)
4. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நீதியானது (2:7-9)
5. கள்ளப்போதகர்களின் அடையாளங்கள்

II பேதுரு - முன்னுரை

1) அசுத்த இச்சைகளும் கர்த்தத்துவத்தை அசட்டை பண்ணுவதும் (2:10-11)

2) வஞ்சனையில உல்லாசமாய வாழுகிறவர்கள் (2:12-13)

3) பொருளாசையுடையவர்கள் - இரக்கமற்றவர்கள் (2:14)

(4) இவர்களுக்காக வைக்கப்பட்டிருக்கும் காரியம் 2:15-17

(5) மனுஷரின் தந்திரம் (2:18)

(6) நிலையில்லாத ஆத்துமாக்களை தந்திரமாய பிடிக்கிறார்கள் (2:19)

(7) கள்ளபோதகர்களுக்கு இரட்சிப்பின் நம்பிக்கையில்லை (2:20-22)

V. கர்த்தருடைய நாள்

1 நிருபத்தின் நோக்கம் (3:1-2)

2 கிறிஸ்துவின் வருகையை மறுதலிக்கும் பரியாசக்காரர் (3:3-4

3 பரியாசக்காரர் பூர்வகாலத்தை அறியாதிருக்கிறார்கள் (3:5-7)

4 கர்த்தருக்கு ஒரு நாளும் ஆயிரம் வருஷமும் (3:8-9)

5 அக்கினியினால புதுப்பிக்கப்படுதல (3:10-13)

6 கர்த்தருடைய நாளின நிமித்தமாக ஆலோசனைகள (3:14

7 சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது (3:15-16)

8 பின்வாங்கிப்போவதற்கு எதிராக இரண்டு கட்டளைகள் (3:17-18

II பேதுரு - தொகுப்புரை

1 அதிகாரம்

I. ஆசிரியரும் வாழ்த்துரையும்

2பேதுரு 1:1 நம்முடைய தேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய நீதியால எங்களைப் போல அருமையான விசுவாசத்தைப் பெற்றவர்களுக்கு இயேசுகிறிஸதுவின் ஊழியக்காரனும அப்போஸதலனுமாகிய சீமோன பேதுரு எழுதுகிறதாவது.

2பேதுரு 1:2 தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால உங்களுக்குக் கிருபையும சமாதானமும் பெருகக்கடவது.

"ஊழியக்காரன் - (பேதுரு 5:1)

"இயேசுகிறிஸதுவின அப்போஸ்தலன" - அப 5:13

அருமையான (precious) - ἰσότιμος - isotimos - 2472

பொரடை அருமையான (equal honor) - விசுவாசம் அருமையானது. விலையேறப் பெற்றது.

"தேவனுடைய நீதி" - அருமையான விசுவாசம் தேவனுடைய நீதியினாலும் அவருடைய மீட்பின திட்டத்தினாலும் வருகிறது (ரோமர் 10:17)

"இரட சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்து" கிரேக்க மொழியில "நம்முடைய தேவனும் இரட சகருமாயிருக்கிற இயேசுகிறிஸது" எனறுள்ளது. பிதாவும். பரிசுத்த ஆவியானவரும் திரித்துவத்தில தனித்தனியாகத் தேவத்துவப பணபுடையவர்களாக இருப்பதுபோலவே இயேசு கிறிஸ்துவும் தேவத்துவப பண்புடையவராக இருக்கிறார எனபதைப பேதுரு இங்கு வலியுறுத்திக் கூறுகிறார

இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சத்தியங்கள்

1 பேதுருவின் எஜமான் பேதுரு கிறிஸ்துவின் ஊழியக்காரன் (2பேதுரு 1:2

2 பேதுருவை அப்போஸ்தலனாக அழைத்தவர் (மாற்கு 3:14-19

3 அருமையான விசுவாசத்திற்கு ஆதாரமாக இருக்கிறவர் அப 3:16

4 நீதிக்கு ஆதாரமாக இருக்கிறார் (1கொரி 1:30)

5 தேவனாக இருக்கிறவர் (யோவான் 1:1-2

6 இரட்சகராக இருக்கிறவர் (யோவான் 4:42) அப் 5:31

7 கிருபைக்கு ஆதாரமாக இருக்கிறவர் (யோவான் 1:16-17)

8 சமாதானத்திற்கு ஆதாரமாக இருக்கிறவர் (ரோமர் 5:1 எபே 2:14

9 அறிவுக்கும ஞானத்திற்கும் பிதாவாகிய தேவனோடு ஆதாரமாக இருக்கிறவர் (எபே 1:17 எபே 4:13

10 பிதாவாகிய தேவனைபபோல தனியாக ஆளத்துவப பணபுடையவர் (2பேதுரு 1:2 (யோவான 5:7

II. கிறிஸ்தவ நீதிகள் (1:3)

1. **தேவனுடைய முழுமையான பராமரிப்பு** - (யோவான் 14:12, அப 1:8 ரோமர் 15:29 எபே 3

2பேதுரு 1:3 தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி

திவ்வியம் (divine) θειος theios 2304

II பேதுரு - தொகுப்புரை

1 அதிகாரம்

பெயரடை - தேவனுடைய சந்ததி, பரிசுத்தம், மாசற்றது (that which belongs to the Godhead) (2பேதுரு 1:4; அப் 17:29)

வல்லமை (power) - δύναμις dynamis - 1411

பெண்பால் பெயர்ச்சொல் - வல்லமை பலத்த செய்கைகள், அற்புதங்கள் திறமை, பலம், சத்துவம், சக்தி, கருத்து, உக்கிரம், மிகுதி (inherent power; power to reproduce itself, like a dynamo) "power" 2பேதுரு 1:3,16; மத் 6:13; மத் 22:29; மத் 24:29-30; மத் 26:64; மாற்கு 9:1; மாற்கு 12:24; மாற்கு 13:25-26; மாற்கு 14:62; லூக்கா 1:17,35; லூக்கா 4:14,36; லூக்கா 5:17; லூக்கா 9:1; லூக்கா 10:19; லூக்கா 21:26,27; லூக்கா 22:69; லூக்கா 24:49; அப் 1:8; அப் 3:12; அப் 4:7,33; அப் 6:8; அப் 8:10; அப் 10:38; ரோமர் 1:4,16,20; ரோமர் 8:38; ரோமர் 9:17; ரோமர் 15:13,19; 1கொரி 1:18,24; 1கொரி 2:4,5; 1கொரி 4:19-20; 1கொரி 5:4; 1கொரி 6:14; 1கொரி 15:24,43; 2கொரி 4:7; 2கொரி 6:7; 2கொரி 8:3; 2கொரி 12:9; 2கொரி 13:4; எபே 1:19; எபே 3:7,20; பிலி 3:10; 1தெச 1:5; 2தெச 1:11; 2தெச 2:9; 2தீமோ 1:7-8; 2தீமோ 3:5; எபி 1:3; எபி 6:5; எபி 7:16; 1பேதுரு 1:5; 1பேதுரு 3:22; வெளி 4:11; வெளி 5:12; வெளி 7:12; வெளி 11:17; வெளி 13:2; வெளி 15:8; வெளி 17:13; வெளி 19:1); "ability" (மத் 25:15); "strength" (1கொரி 15:56; 2கொரி 1:8; 2கொரி 12:9; எபி 11:11; வெளி 1:16; வெளி 3:8; வெளி 12:10); "might" (எபே 1:21; எபே 3:16; கொலோ 1:11; 2பேதுரு 2:11); "mighty" (ரோமர் 15:19; 2தெச 1:7); "mightily" (கொலோ 1:29); "mighty work" (மத் 11:20,21,23; மத் 13:54,58; மத் 14:2; மாற்கு 6:2,5,14; லூக்கா 10:13; லூக்கா 19:37); "mighty deed" (2கொரி 12:12); "wonderful work" (மத் 7:22); "miracle" (மாற்கு 9:39; அப் 2:22; அப் 8:13; அப் 19:11; 1கொரி 12:10,28; கலா 3:5; எபி 2:4); "worker of miracles" (1கொரி 12:29); "abundance" (வெளி 18:3); "violence" (எபி 11:34); "virtue" மாற்கு 5:30; லூக்கா 6:19; லூக்கா 8:46; "meaning" (1கொரி 14:11)

"ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும்" - இயேசு கிறிஸ்துவின் திவ்விய வல்லமையானது நமக்கு ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் தருகிறது. இது தேவனை அறிகிற அறிவினாலே உண்டாயிருக்கிறது.

"தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும்" - தேவன் தம்முடைய பிள்ளைகளைத் தமது மகிமையினாலும் காருணியத்தினாலும் அழைக்கிறார்.

2. சுவிசேஷத்தின் அநுகூலங்கள் (2கொரி 1:20; மத் 7:7-11, 17:20, 21:22; மாற்கு 9:23; 11)

2பேதுரு 1:4 இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

"மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" (2பேதுரு 1:3)

II பேதுரு – தொகுப்புரை

1 அதிகாரம்

வாக்குத்தத்தங்களின் ஆசீர்வாதங்கள்

1 அருமையான விசுவாசம் (2பேதுரு 1:1 ரோமர் 10:17

2 நீதி (2பேதுரு 1:1; 1கொரி 1:30)

3 கிருபையும், சமாதானமும் (2பேதுரு 1:2)

4 ஜீவனுக்கும், தேவபக்திக்கும் வேண்டிய யாவும் (2பேதுரு 1:3 தீத்து 2:11-12

5 மகிமையும், காருணியமும் (2பேதுரு 1:3)

6 திவ்விய சுபாவம் (2பேதுரு 1:4)

7 உலகத்திலுண்டான கேட்டுக்கும் இச்சைக்கும் தப்புதல் (2பேதுரு 1:4)

"இச்சையினால் உலகத்திலுண்டான கேடு" - (ரோமர் 8:21)

3. கூட்டி வழங்க வேண்டியவை - எட்டு கிறிஸ்தவ நீதிகள்

2பேதுரு 1:5 இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும்,

2பேதுரு 1:6 ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும்,

2பேதுரு 1:7 தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதரசிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள்.

2பேதுரு 1:8 இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது.

2பேதுரு 1:9 இவைகள் இல்லாதவன் எவனோ, அவன் முன்செய்த பாவங்களறத் தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண் சொருகிப்போன குருடனாயிருக்கிறான்.

2பேதுரு 1:10 ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை.

2பேதுரு 1:11 இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்.

"இப்படியிருக்க - அருமையான விசுவாசத்தைப் பெற்றதோடு. (2பேதுரு 1:5)

ஆவிக்குரிய முன்னேற்றம் பெறுவதற்கு நாம் கூட்ட வேண்டிய காரியங்கள்

1. விசுவாசத்தோடே தைரியத்தைக் கூட்ட வேண்டும்.

2. தைரியத்தோடே ஞானத்தைக் கூட்ட வேண்டும் (2பேதுரு 1:5)

3. ஞானத்தோடே இச்சையடக்கத்தைக் கூட்ட வேண்டும் (கலா 5:22

4. இச்சையடக்கத்தோடே பொறுமையைக் கூட்ட வேண்டும்

5. பொறுமையோடே தேவபக்தியைக் கூட்ட வேண்டும் (1தீமோ 3:16

6. தேவபக்தியோடே சகோதரசிநேகத்தைக் கூட்ட வேண்டும்

7. சகோதரசிநேகத்தோடே அன்பைக் கூட்ட வேண்டும் (1கொரி 13:4

II பேதுரு - தொகுப்புரை

1 அதிகாரம்

"உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்க வொட்டாது" - 2பேதுரு 1:5-7 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற காரியங்கள் நமக்கு உண்டாயிருந்து பெருகினால் நாம் இயேசு கிறிஸ்துவிற்குள் கனி தருகிற ஜீவியம் ஜீவிப்போம் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் பின்மாற்றம் காணப்படாது. (2பேதுரு 1:8-10)

"கண் சொருகிப்போன குருடனாயிருக்கிறான்" - 2பேதுரு 1:5-7 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற காரியங்கள் இல்லாதவன் தன்னுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் பின்வாங்கிப் போனவன் அவன் முன்செய்த பாவங்களறத் தான் சுத்திகரிக்கப் பட்டதை மறந்து விட்டவன் இந்த வாக்கியத்தின் மூலமாக 2பேதுரு 1:5-7 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் கிருபைகளையும் அநுபவங்களையும் பெற்றவர்களகூட தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் எச்சரிப்போடு இருக்க வில்லையென்றால் அவர்கள் பின்வாங்கிப் போவதற்கு வாய்ப்புள்ளது என்பது தெரியவருகிறது. தேவனுடைய அன்பை ருசிபார்த்தும் இப்போது தேவனைவிட்டு பின் வாங்கிப்போனவர்கள் கண் சொருகிப்போன குருடரைப்போல இருக்கிறார்கள்

"உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்" 2பேதுரு நிருபத்தில் ஆவிக்குரிய ஜீவியத்தில் விசுவாசிகள் ஜாக்கிரதையாக ஜீவிக்க வேண்டுமென்று பேதுரு இரண்டாம் முறையாக எச்சரித்துக் கூறுகிறார் விசுவாசிகள் தேவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணுகிறவர்கள் அவருடைய கிருபையை இழந்துபோவார்கள் 2பேதுரு 1:5,10

"இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை" - இவைகளைச் செய்யாவிட்டால் நீங்கள் இடறிவிழுவீர்கள் என்பது இதன் பொருளாகும்.

"இடறிவிழுதல்" - (ரோமர் 11:11)

இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் நமக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படுவதற்கு நாம் செய்ய வேண்டிய காரியங்கள்

1 அருமையான விசுவாசத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். (2பேதுரு 1:1)

2 கிருபையிலும் சமாதானத்திலும் பெருக வேண்டும். (2பேதுரு 1:2)

3 திவ்விய வல்லமையினால் தேவபக்தியோடு ஜீவிக்க வேண்டும் (2பேதுரு 1:3; 1பேதுரு 1:5-13)

4 திவ்விய சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாக இருக்கவேண்டும் (2பேதுரு 1:4)

5 இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்ப வேண்டும் (2பேதுரு 1:4)

6 2பேதுரு 1:5-7 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் கிருபைகளைக் கூட்ட வேண்டும்.

7 கிருபைகள் பெருக வேண்டும் (2பேதுரு 1:8)

8 தேவனை அறிகிற அறிவில் கனியுள்ளவர்களாக இருக்க வேண்டும். (2பேதுரு 1:8)

9 முன்செய்த பாவங்களிலிருந்து விலகி ஜீவிக்க வேண்டும். (2பேதுரு 1:9)

10 தேவனுடைய அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கிக் கொள்ள வேண்டும். 2பேதுரு 1:10

"பிரவேசம்" - ரோமபேரரசில் யுத்தத்தில் வெற்றி பெற்ற படைத் தளபதிகளை பாராட்டுவதற்கு அவர்களை வெற்றிப் பவனியாக அழைத்து வரும் வழக்கம் இருந்தது. அப்படிப்பட்ட பிரவேசம் இந்த வசனத்தில் ஒப்புமையாகக் கூறப்பட்டிருக்கிறது (2கொரி 2:14)

II பேதுரு – தொகுப்புரை

1 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 1

"இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யம்" (2பேதுரு 1:11) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை

கிறிஸ்துவின் ராஜ்யம் நித்தியமானதாக இருக்கும் (ஏசா 9:6-7; தானி 2:44-45; தானி 7:13-14,27; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 22:4-5) பூமியில் எல்லாக் கலகங்களையும் தமது பாதபடியாக்கிப் போட்ட பின்பு இயேசு கிறிஸ்து பூமியை ஆயிர வருஷம் ஆட்சி செய்வார். அதன் பின்பு புதுப்பிக்கப்பட்டு பூரணமாக இருக்கும் பூமியை இயேசு கிறிஸ்து நித்திய காலமாக ஆளுகை செய்வார் (1கொரி 15:24-28; எபே 1:10; வெளி 5:10; வெளி 20:4-10)

III. பேதுருவின் மூன்று அம்ச சாட்சி

1. தன்னைப் பற்றி

2பேதுரு 1:12 இதினிமித்தம், இவைகளை நீங்கள் அறிந்தும், நீங்கள் இப்பொழுது அறிந்திருக்கிற சத்தியத்தில் உறுதிப்பட்டிருந்தும், உங்களுக்கு இவைகளை எப்பொழுதும் நினைப்பூட்ட நான் அசதியாயிரேன்.

2பேதுரு 1:13 நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து எனக்கு அறிவித்தபடி, நான் என் கூடாரத்தைவிட்டுப்போவது சீக்கிரத்தில் நேரிடுமென்று அறிந்து,

2பேதுரு 1:14 இந்தக் கூடாரத்தில் நான் இருக்குமளவும் உங்களை நினைப்பூட்டி எழுப்பிவிடுவது நியாயமென்று எண்ணுகிறேன்.

2பேதுரு 1:15 மேலும் நான் சென்றுபோனபின்பு இவைகளை நீங்கள் எப்பொழுதும் நினைத்துக்கொள்ளஏதுவுண்டாயிருக்கும்படி பிரயத்தனம் பண்ணுவேன்.

"உங்களுக்கு இவைகளை எப்பொழுதும் நினைப்பூட்ட நான் அசதியாயிரேன்" - நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் நமக்குப் பூரணமாய் அளிக்கப்படவேண்டும். ஆகையினால் விசுவாசிகள் ஏற்கெனவே கேட்டும் அறிந்தும் இருக்கும் சத்தியத்தில் எப்பொழுதும் உறுதிப்பட்டிருக்க வேண்டும். ஆகையினால் பேதுரு இந்தச் சத்தியங்களை விசுவாசிகளுக்கு எப்பொழுதும் நினைப்பூட்டிக்கொண்டே இருக்கிறார். இதில் அவர் அசதிப்படவில்லை.

"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து எனக்கு அறிவித்தபடி" - யோவான் 21:18-19 ஆகிய வசனங்களில் இயேசு கிறிஸ்து பேதுருவைப் பற்றி முன்னறிவித்திருக்கும் காரியங்கள்.

"இந்தக் கூடாரத்தில் நான் இருக்குமளவும்" - விசுவாசிகளுக்கு சுவிசேஷத்தின் சத்தியத்தை நினைப்பூட்டுவதற்குப் பேதுரு தன்னுடைய சரீரத்தில் ஜீவனுள்ளவராக இருப்பது அவசியம். தான் உயிரோடு இருக்குமளவும் நித்திய ராஜ்யத்திற்குட்படும் பிரவேசத்தைக் குறித்து பேதுரு விசுவாசிகளுக்கு நினைப்பூட்டி எழுப்பிவிட்டுக் கொண்டிருப்பார் (2பேதுரு 1:11; யோவான் 6:27)

"கூடாரம்" (tabernacle) மனுஷனுடைய சரீரம் (2பேதுரு 1:13-14; 2கொரி 5:1-9)

பிரயத்தனம் பண்ணு (endeavour) - σπουδάζω - spoudazoo – 4704

பொருள் - கருத்தோடிரு, ஜாக்கிரதையாயிரு, பிரயத்தனம் பண்ணு (to be diligent, zealous, earnest) (எபே 4:3) "diligent" (2பேதுரு 1:10; 2பேதுரு 3:14) - நித்திய ஜீவனுக்காக நியமிக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளை விசுவாசிகள் எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருக்க வேண்டும். இதுவே பேதுருவின் பிரயத்தனம்.

II பேதுரு - தொகுப்புரை

1 அதிகாரம்

"நீங்கள் எப்பொழுதும் நினைத்துக்கொள்ள ஏதுவுண்டாயிருக்கும்படி" - நித்திய ஜீவனுக்குள் பிரவேசம் பண்ணுவதற்கு விதிக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளை விசுவாசிகள் எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருக்க வேண்டுமென்று பேதுரு இங்கு மூன்றாம் முறையாகக் கூறுகிறார் (2பேதுரு 1:12,13,15; 2பேதுரு 3:1; 2பேதுரு 1:11; யோவான் 6:27). ஒருவர் இயேசு கிறிஸ்துவைத் தன்னுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டால் போதும் மற்றதை தேவன் பார்த்துக் கொள்வார் நித்திய ஜீவனுக்குள் பிரவேசித்து விடலாம் என்று ஒருசிலர் கூறுகிறார்கள். நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பதற்குத் தேவன் விசுவாசிகளுக்கு ஒருசில நிபந்தனைகளைக் கொடுத்திருப்பதாகவும், விசுவாசிகள் அதற்கு அவசியம் கீழ்ப்படிய வேண்டுமென்றும் பேதுரு இந்த நிருபத்தில் வலியுறுத்திக் கூறுகிறார். இரட்சிக்கப்பட்ட ஒரு விசுவாசி தன்னுடைய துன்மார்க்கத்தினால் தேவனை விட்டு பின்வாங்கிப் போனதற்குத் தேவனைக் காரணம் சொல்லக்கூடாது. தன்னுடைய பின்மாற்றத்திற்குத் தானே பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

2. இயேசு கிறிஸ்துவைப் பற்றி

2பேதுரு 1:16 நாங்கள் தந்திரமான கட்டுக் கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல, அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம்.

2பேதுரு 1:17 இவர் என்னுடைய நேசகுமாரன், இவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லுகிற சத்தம் உன்னதமான மகிமையிலிருந்து அவருக்கு உண்டாகி, பிதாவாகிய தேவனால் அவர் கனத்தையும் மகிமையையும் பெற்றபோது,

2பேதுரு 1:18 அவரோடேகூட நாங்கள் பரிசுத்த பருவதத்திலிருக்கையில், வானத்திலிருந்து பிறந்த அந்தச் சத்தத்தைக் கேட்டோம்.

"தந்திரமான கட்டுக்கதைகள்" - புறஜாதியார் தங்களுடைய தெய்வங்களைக் குறித்து பலவிதமான கட்டுக்கதைகளைத் தந்திரமாகக் கூறுகிறார்கள். இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சத்தியம் கட்டுக்கதைகளல்ல. இயேசு கிறிஸ்துவையும் அவருடைய மறுரூபமாதலையும் பேதுருவும் மற்றவர்களும் கண்ணாரக் கண்டவர்கள் (2பேதுரு 1:16-18).

"அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம்" - இந்தப் பூமியில் தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கு இயேசு கிறிஸ்து தம்முடைய வல்லமையோடும் மகிமையோடும் வருவார். மறுரூப மலையில் இயேசு கிறிஸ்து மறுரூபமான நிகழ்ச்சி இதை உறுதிபண்ணுகிறது (மத் 16:27-28; மத் 17:1-8; மத் 24:29-31; மத் 25:31-46; வெளி 19:11-21).

"அவரோடேகூட நாங்கள் பரிசுத்த பருவதத்திலிருக்கையில் வானத்திலிருந்து பிறந்த அந்தச் சத்தத்தைக் கேட்டோம்" - மூன்று சீஷர்கள் தேவனுடைய சத்தத்தைக் கேட்டார்கள். அவருடைய மகிமையைக் கண்டார்கள். மோசே எலியா ஆகியோரையும் கண்டார்கள் (மத் 17:1-8).

3. வேதவாக்கியங்களைப் பற்றி

2பேதுரு 1:19 அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும், இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்.

2பேதுரு 1:20 வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது.

II பேதுரு – தொகுப்புரை

1 அதிகாரம்

2பேதுரு 1:21 தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்தஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள்

"அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனம் - புறஜாதியாருடைய தந்திரமான கட்டுக் கதைகளை விட உறுதியான தீர்க்கதரிசன வசனங்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களுக்கு உள்ளது (1பேதுரு 4:11)

தீர்க்கதரிசன எண் - 2

"பொழுது விடிந்து விடிவெளளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்" 2பேதுரு 1:19) இந்த தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. இந்த வாக்கியம் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிப்பிடுகிறது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம வருகை மறுரூப மலையில் நிழலாகப்பட்டது. (எண் 24:17 மல் 4:2

"நீங்கள் முந்தி அறியவேண்டியது" - வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராது. இதை ஒவ்வொரு விசுவாசியும் முதலாவது அறிந்திருக்க வேண்டும். எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளை உடையதல்ல. தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்தஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள் (2பேதுரு 1:20-21)

சுய (private) - ἴδιος - idios - 2398

பெயரடை - தம்முடைய, தன்னுடைய, சொந்த, அதனதனுடைய, சுய (one's own; personal; private)

தோற்றம் (interpretation) - ἐπίλυσις - epilysis - 1955

பெண்பால பெயர்ச்சொல் - தோற்றம் - தீர்க்கதரிசியினுடைய சொந்த எண்ணம

ஏவப்படுதல (moved by) - φέρω - pheroo - 5342

வினைச்சொல - கொண்டு வா, கொண்டுபோ, சுமந்து கொள், பலன் தா, கொடு, காட்டு, நீட்டு, அடி தாங்கு, பொறுமையாயிரு, உண்டாக்கு, அளி, ஏவு, சகி to bear along (யோவான் 21:18). தீர்க்கதரிசிகள் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு பேசினார்கள் இயேசு கிறிஸ்துவிற்கு உண்டான பாடுகளையும் அவைகளுக்குப் பின்பு அவருக்கு வரும் மகிமைகளையும் முன்னறிவித்தார்கள் அந்தக் காலத்தைக் குறித்தும் அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள் (1பேதுரு 1:10-12)

2 அதிகாரம்

IV. கள்ளத்தீர்க்கதரிசிகளும் கள்ளப் போதகர்களும்

1. அவர்களுடைய கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுக்கள்

2பேதுரு 2:1 கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப் போதகர்கள் இருப்பார்கள்; அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக்கொள்ளுவார்கள்.

தீர்க்கதரிசன எண் - 8

"கள்ளத் தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள் அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள் ...." 2பேதுரு 2:1-3 இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது

கள்ளத் தீர்க்கதரிசி (false prophets) - ψευδοπροφήτης - pseudopropheetees - 5578

ஆண்பால் பெயர்ச்சொல் - கள்ளத் தீர்க்கதரிசி (2பேதுரு 2:1; மத் 7:15 மத் 24:11,24, மாற்கு 13:22 லூக்கா 6:26, அப் 13:6; 1யோவான் 4:1; வெளி 16:13; வெளி 19:20 வெளி 20:10)

கள்ளப்போதகர் (false teachers) ψευδοδιδάσκαλος pseudodidaskalos 5572

ஆண்பால் பெயர்ச்சொல் - கள்ளப்போதகர் (2கொரி 11:26, கலா 2:4, 2பேதுரு 2:1)

"அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப் பண்ணி தங்களைக் கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலித்து" - கேட்டுக்கு ஏதுவான வேதப்புரட்டுக்கள் மனுஷருடைய ஆத்துமாவை அழித்துப்போடும் (அப 5:17)

"தங்களைக் கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவர்" - (அப 20:28; 1கொரி 6:19-20 1பேதுரு 1:18)

2. அவர்களைப் பின்பற்றுவோரின் நடக்கைகளும் நியாயத்தீர்ப்பும்

2பேதுரு 2:2 அவர்களுடைய கெட்ட நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள்; அவர்கள் நிமித்தம் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும்.

2பேதுரு 2:3 பொருளாசையுடையவர்களாய், தந்திரமான வார்த்தைகளால் உங்களைத் தங்களுக்கு ஆதாயமாக வசப்படுத்திக் கொள்ளுவார்கள்; பூர்வகாலமுதல் அவர்களுக்கு விதிக்கப்பட்ட ஆக்கினை அயர்ந்திராது, அவர்களுடைய அழிவு உறங்காது.

"கெட்ட நடக்கைகள்" (pernicious ways) - கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுக்கள் ஒருசில பதிப்புக்களில் அவர்களுடைய மாம்சத்தின் இச்சைகள் "follow their lasciviousness" என்னும் பொருளுடன் எழுதப்பட்டிருக்கிறது.

"அவர்கள் நிமித்தம் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும்" மாம்ச இச்சைகளும், வேதப்புரட்டுக்களும் திரளான ஜனங்களை அழித்துப்போடும்.

"பொருளாசை உடையவர்களாய், தந்திரமான வார்த்தைகளால் உங்களைத் தங்களுக்கு ஆதாயமாக வசப்படுத்திக் கொள்ளுவார்கள்" - தங்களுடைய ஆசை இச்சைகளை நிறைவேற்றுவதற்காகக் கெட்ட நடக்கைகளை உடையவர்கள் பொருளாசையுடையவர்களாக இருப்பார்கள் அவர்கள் தந்திரமான உபதேசங்களைப் பேசி, ஜனங்களை வசீகரிப்பார்கள்

II பேதுரு – தொகுப்புரை

2 அதிகாரம்

"பூர்வகாலமுதல் அவர்களுக்கு விதிக்கப்பட்ட ஆக்கினை அயர்ந்திராது. அவர்களுடைய அழிவு உறங்காது" - அவர்களுடைய அழிவைத் தேவன் ஏற்கெனவே முன்குறித்திருக்கிறார் அவர்களுக்கு அழிவு நிச்சயம்

3. வேதப்புரட்டர்களின் நியாயத் தீர்ப்பு - எடுத்துக்காட்டுகள்

2பேதுரு 2:4 பாவஞ்செய்த தூதர்களை தேவன் தப்பவிடாமல அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக் கொடுத்து,

2பேதுரு 2:5 பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல, நீதியைப் பிரசங்கித்தவனாகிய நோவா முதலான எட்டுப்பேரைக் காப்பாற்றி அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகத்தின்மேல ஜலப்பிரளயத்தை வரப்பண்ணி;

2பேதுரு 2:6 சோதோம் கொமோரா என்னும் பட்டணங்களையும் சாம்பலாக்கிக் கவிழ்த்துப் போட்டு ஆக்கினைக் குள்ளாகத் தீர்த்து பிறகாலத்திலே அவபக்தியாய் நடப்பவர்களுக்கு அவைகளைத் திருஷ்டாந்தமாக வைத்து.

நியாயத்தீர்ப்புக்கு முன்மாதிரிகள் (யூதா 1:5-7

1 பாவம் செய்த தூதர்கள் (**Fallen angels**) (2பேதுரு 2:4)

2 ஜலப்பிரளயத்திற்கு முந்தி ஜீவித்தவர்கள் (**The antedeluvians**) 2பேதுரு 2:5; ஆதி 6-8)

3 சோதோமும், கொமோராவும் (**Sodom and Gomorrah**) (2பேதுரு 2:6; ஆதி 19

லூசிபர் ஆதாமின் காலத்திற்கு முன்பு பூமியில ஆளுகை செய்தான் தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணினான் பாவம் செய்த தூதர்கள் லூசிபரோடு சேர்ந்து கலகம் பண்ணினார்கள் (ஆதி 1:1-2 ஏசா 14:12-14 எசே 28:11-17 எரே 4:23-26 2பேதுரு 3:5-8; மத் 13:35, லூக்கா 10:18

"பாவஞ்செய்த தூதர்கள்" - இந்தத் தூதர்கள் என்ன பாவம் செய்தார்கள் என்று இந்த வசனம் எதுவும் கூறவில்லை. யூதா 1:6-7, ஆதி 6:1-4 ஆகிய வசனங்கள் தூதர்களுடைய துன்மார்க்கமான ஜீவியத்தைப பற்றிக் கூறுகிறது. அவர்கள் தங்கள் சுபாவத்திற்கு விரோதமாக மனுஷருடைய குமாரத்திகளோடு விபச்சாரம் பண்ணினார்கள் ஆகையினால் தேவன் பாவஞ்செய்த தூதர்களைத் தப்பவிடாமல் அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக் கொடுத்தார் நரகத்தில தள்ளப்பட்டிருக்கும் தூதர்களை இரு வகையாகப பிரிக்கலாம ஒரு பிரிவினர் அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டப பட்டிருக்கிறார்கள் மற்றொரு பிரிவினர் இயேசு கிறிஸ்துவின இரண்டாம் வருகைக்கு முன்பாக தானியேலின் எழுபதாவது வாரத்தின மத்தியில தேவனோடு யுத்தம பண்ணுவதற்காக சாத்தானோடு வரக்கூடியவர்கள (வெளி 12:7-17

நரகம் (**hell**) - **ταρταρόω** - **tartarooo** - 5020

பெயர்சொல் - நரகம் (**a dark abyss; a place of punishment**)

நரகத்தைப் பற்றிய செய்திகள்

1 தேவதூதர்களுக்குச் சிறைச்சாலை (2பேதுரு 2:4)

2 பூமியின கீழுள்ளது. (2பேதுரு 2:4

3 நியாயத்தீர்ப்பு வரையிலும் பாவம் செய்த தூதர்கள சிறை வைக்கப்படும் இடம். (2பேதுரு 2:4 வெளி 20:1-3, யூதா 1:6

4 இயேசு கிறிஸ்து நரகத்திற்குச் சென்ற போது இந்த இடத்தைப பார்த்தார் (சங் 16:10 1பேதுரு 3:19

5 அந்தகாரமான இடம் (யூதா 1:6-7

II பேதுரு - தொகுப்புரை

2 அதிகாரம்

6. நித்திய அக்கினியுள்ள இடம் (யூதா 1:7)

7. ஆக்கினை அடையும் இடம் (யூதா 1:7)

சங்கிலி (chain) - **σειρά** - **seira** - 4577

பெண்பால் பெயர்ச்சொல் - சங்கிலி **(a cord; rope; chain, literal chains**

கட்டு (band) - **δεσμός** - **desmos** - 1199

ஆண்பால் பெயர்ச்சொல் - கட்டு விலங்கு **(a band; fetter; halter; imprisonment) "band"** (லூக்கா 8:29; அப 16:26; அப 22:30); **"string"** (மாற்கு 7:35), **"bond"** (லூக்கா 13:16; அப 20:23; அப 23:29; பிலி 1:7, 13, 14, 16; கொலோ 4:18; 2தீமோ 2:9; பிலே 10,13; எபி 10:34; எபி 11:36); **"chain"** (யூதா 1:6) சாத்தானால் கட்டப்படுதல் (மாற்கு 7:35; லூக்கா 13:16). பாவம் செய்த தூதர்கள் கட்டப்படுதல் (வெளி 9:14-2:14; வெளி 20:1-3,7,10)

அந்தகாரம் (darkness) - **ζόφος** **zophos** - 2217

ஆண்பால் பெயர்ச்சொல் அந்தகாரம், காரிருள் **(under darkness)** (2பேதுரு 2:17; யூதா 1:6, 13) இது ஆவிக்குரிய அந்தகாரத்தைக் குறிப்பிடாமல் பூமிக்குரிய அந்தகாரத்தைக் குறிப்பிடும்

"பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல்" - நோவா முதலான எட்டுபேரைத் தேவன் காப்பாற்றினார் ஆதி 6:1-8:22 ஆகிய வசனங்கள் இந்த நிகழ்ச்சியை விவரித்துக் கூறுகிறது.

"சோதோம் கொமோரா என்னும் பட்டணங்களையும் சாம்பலாக்கிக் கவிழ்த்துப் போட்டு" - ஆதியாகமம் 19 ஆவது அதிகாரம் இந்த நிகழ்ச்சியை விவரித்துக் கூறுகிறது.

"பிற்காலத்திலே அவபக்தியாய் நடப்பவர்களுக்கு அவைகளைத் திருஷ்டாந்தமாக வைத்து" - தேவன் தேவதூதர்களையும் ஜலப்பிரளயத்தின் காலத்திற்கு முந்தினவர்களையும் சோதோம் கொமோரா பட்டணத்தாரையும் தப்பவிடாமல் தம்முடைய நியாயத்தீர்ப்பிற்கு உட்படுத்தினார். அதே தேவன் நிகழ்காலத்திலும் துன்மார்க்கரைத் தப்பவிடாமல் தம்முடைய நியாயத்தீர்ப்பிற்குட்படுத்துவார் (2பேதுரு 2:9-22)

4. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நீதியானது

2பேதுரு 2:7 அக்கிரமக்காரருக்குள் வாசமாயிருக்கையில் அவர்களுடைய காமவிகார நடக்கையால் வருத்தப்பட்டு.

2பேதுரு 2:8 நாள்தோறும் அவர்களுடைய அக்கிரமக்கிரியைகளைக் கண்டு கேட்டு நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட நீதிமானாகிய லோத்தை அவர் இரட்சித்திருக்க

2பேதுரு 2:9 கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்

காமவிகாரம் (filthy) - **ἀσέλγεια** **aselgeia** - 766

பெண்பால் பெயர்ச்சொல் - காமவிகாரம் **(licentiousness, lustfulness)**

நடக்கை **(conversation)** **ἀναστροφή** **anastrophee** 391

II பேதுரு - தொகுப்புரை

2 அதிகாரம்

பெண்பால் பெயர்ச்சொல் - நடக்கை நடத்தை, நடந்துகொள்ளுதல (conduct) (1பேதுரு 2:12)

"கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும்" - தேவபக்தியுள்ளவருக்கும் சோதனை வரும். ஆயினும் அந்தச் சோதனையிலிருந்து கர்த்தர் அவர்களை இரட்சிப்பார் (1கொரி 10:13; யாக் 1:2,12-15 1பேதுரு 1:7; 1பேதுரு 4:12

தீர்க்கதரிசன எண் - 4

"அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார் (2பேதுரு 2:9) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை

5. கள்ளப் போதகர்களின் அடையாளங்கள்

(1) அசுத்த இச்சைகளும் கர்த்தத்துவத்தை அசட்டை பண்ணுவதும்

2பேதுரு 2:10 விசேஷமாக அசுத்த இச்சையோடே மாம்சத்திற்கேற்றபடி நடந்து, கர்த்தத்துவத்தை அசட்டை பண்ணுகிறவர்களை அப்படிச் செய்வார் இவர்கள் துணிகரக்காரர் அகங்காரிகள், மகத்துவங்களைத் தூஷிக்க அஞ்சாதவர்கள்

2பேதுரு 2:11 அதிக பெலனையும் வல்லமையையுமுடைய தேவதூதர்கள் முதலாய்க் கர்த்தருக்குமுன்பாக அவர்களைத் தூஷணமாய்க் குற்றப்படுத்தமாட்டார்களே

துன்புறுத்துகிறவர்களின் பாவங்கள்

1 அசுத்த இச்சையோடே மாம்சத்திற்கேற்றபடி நடந்து கொள்கிறார்கள் 2பேதுரு 2:10 ரோமர் 1:

2 கர்த்தத்துவத்தை அசட்டை பண்ணுகிறார்கள் (2பேதுரு 2:10)

3 இவர்கள் துணிகரக்காரராய் இருக்கிறார்கள் (2பேதுரு 2:10)

4 இவர்கள் அகங்காரிகளாய் இருக்கிறார்கள் (2பேதுரு 2:10)

5 மகத்துவங்களைத் தூஷிக்க அஞ்சாதவர்கள் (2பேதுரு 2:10)

6 மிருகஜீவன்களைப் போல ஜீவிக்கிறார்கள் (2பேதுரு 2:12)

7 தங்களுக்குத் தெரியாதவைகளைத் தூஷிக்கிறார்கள் (2பேதுரு 2:12)

8 ஒரு நாள் வாழ்வை இன்பமென்றெண்ணி, வெட்கப்படாமல் வெளியரங்கமாகப் பாவம் செய்கிறார்கள் (2பேதுரு 2:13)

9 தங்கள் வஞ்சனையில உல்லாசமாய் வாழ்கிறார்கள் (2பேதுரு 2:13)

10 விபச்சார மயக்கத்தால் மயங்கியிருக்கிறார்கள் (2பேதுரு 2:14

11 உறுதியில்லாத ஆத்துமாக்களைத் தந்திரமாய்ப் பிடிக்கிறார்கள் (2பேதுரு 2:14)

12 செம்மையான வழியை விட்டுத் தப்பி நடக்கிறார்கள் (2பேதுரு 2:15-22

13 பொருளாசையில் பழகினவர்கள் (2பேதுரு 2:14-15)

14 அகந்தையான வீண்வார்த்தைகளைப் பேசுகிறார்கள் (2பேதுரு 2:18

15 மாம்ச இச்சைகளினாலும், காம விகாரங்களினாலும் ஜனங்களைத் தந்திரமாய்ப் பிடிக்கிறார்கள் (2பேதுரு 2:18)

II பேதுரு – தொகுப்புரை

2 அதிகாரம்

16 தாங்களே கேட்டுக்கு அடிமைகளாயிருந்தும், அவர்களுக்குச் சுயாதீனத்தை வாக்குத்தத்தம் பண்ணுகிறார்கள் (2பேதுரு 2:19)

மேலே கூறப்பட்டிருக்கும் சுபாவங்களை உடைய அக்கிரமக்காரனைத் தேவன் நியாயத் தீர்ப்பு நாளில் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்க வேண்டுமென்று தீர்மானம் பண்ணியிருக்கிறார் (2பேதுரு 2:9)

"அசுத்த இச்சை" (lust of uncleanness) - ஓரினச்சேர்க்கை என்னும் ஆண்புணர்ச்சியை (homosexual) இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. ரோமர் 1:24)

"அவர்களைத் தூஷணமாய்க் குற்றப்படுத்த மாட்டார்களே" - தேவதூதர்கள் அதிக பெலனையும் வல்லமையையும் உடையவர்கள் துன்மார்க்கருடைய செயல்களைக் குறித்தும் பாவம் செய்த தூதர்களைக் குறித்தும் இந்தப் பரிசுத்தத் தூதர்கள் தேவனிடத்தில் கணக்கொப்புவிக்க வேண்டும். ஆனால் இந்தத் தூதர்கள் துன்மார்க்கரை அவசரப்பட்டு, தூஷணமாய்க் குற்றப்படுத்தமாட்டார்கள். அதற்குப் பதிலாகக் கிருபையுடன் தங்களுடைய அறிக்கையைத் தேவனிடம் சமர்ப்பிப்பார்கள் (சக 3:1; யூதா 1:9)

(2) வஞ்சனையில் உல்லாசமாய் வாழ்கிறவர்கள்

2பேதுரு 2:12 இவர்களோ பிடிபட்டழிக்கப்படுவதற்கு உண்டான புத்தியற்ற மிருகஜீவன்களைப்போலத் தங்களுக்குத் தெரியாதவைகளைத் தூஷித்து, தங்கள் கேட்டிலே கெட்டழிந்து, அநீதத்தின் பலனை அடைவார்கள்

2பேதுரு 2:13 இவர்கள் ஒருநாள் வாழ்வை இன்பமென்றெண்ணி, கறைகளும் இலச்சைகளுமாயிருந்து உங்களோடே விருந்துண்கையில் தங்கள் வஞ்சனைகளில் உல்லாசமாய் வாழ்கிறவர்கள்

"உங்களோடே விருந்துண்கையில்" - விசுவாசிகள் மத்தியில் துன்மார்க்கர்கள் தேவபக்தியுள்ளவர்களைப் போல நடித்து அவர்களோடே விருந்துகளில் கலந்து கொள்வார்கள்

(3) பொருளாசையுடையவர்கள் - இரக்கமற்றவர்கள்

2பேதுரு 2:14 விபசார மயக்கத்தால் நிறைந்தவைகளும் பாவத்தை விட்டோயாதவைகளுமாயிருக்கிற கண்களையுடையவர்கள் உறுதியில்லாத ஆத்துமாக்களைத் தந்திரமாய்ப் பிடித்து பொருளாசைகளில் பழக்கப்பட்ட இருதயத்தையுடைய சாபத்தின் பிள்ளைகள்

"விபசாரமயக்கத்தால் நிறைந்தவைகளும் பாவத்தைவிட்டோயாதவைகளுமாயிருக்கிற கண்களையுடையவர்கள்" - பாவமான செயல்கள் அவர்களுடைய கண்களுக்கு முன்பாக எப்பொழுதும் நிழல்போல தெரிந்து கொண்டேயிருக்கும். தங்களுடைய கற்பனைகளைப் பாவமான செயல்களாக மாற்றுவதற்கு இப்போபட்டவர்கள் வஞ்சனையோடு வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள்

"உறுதியில்லாத ஆத்துமாக்களைத் தந்திரமாய்ப் பிடித்து" உறுதியில்லாத கூட மற்ற புருஷர்களையும் ஸ்திரீகளையும் துன்மார்க்கர்கள் தந்திரமாகப் பிடித்து தங்களுடைய காமவிகாரத்திற்குப் பயன்படுத்திக் கொள்வார்கள்

(4) இவர்களுக்காக வைக்கப்பட்டிருக்கும் காரியம்

2பேதுரு 2:15 செம்மையான வழியைவிட்டுத் தப்பி நடந்து பேயோரின் குமாரனாகிய பிலேயாமின் வழியைப் பின்பற்றிப்போனவர்கள் அவன் அநீதத்தின் கூலியை விரும்பி,

II பேதுரு – தொகுப்புரை

2 அதிகாரம்

2பேதுரு 2:16 தன்னுடைய அக்கிரமத்தினிமித்தம் கடிந்துகொள்ளப்பட்டான்; பேசாத மிருகம் மனுஷர்பேச்சைப் பேசித் தீர்க்கதரிசியினுடைய மதிகேட்டைத் தடுத்தது.

2பேதுரு 2:17 இவர்கள் தண்ணீரில்லாத கிணறுகளும், சுழல்காற்றினால் அடியுண்டோடுகிற மேகங்களுமாயிருக்கிறார்கள்; என்றென்றைக்குமுள்ள காரிருளே இவர்களுக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

விட்டுவிடுதல் (forsaken) - καταλείπω - kataleipoo - 2641

வினைச்சொல் - விடு, போ, மீதியாக வை

பிலேயாமின் மூன்று பாவங்கள் எண் 22:1-24:25

1. பிலேயாமின் வழி (2பேதுரு 2:15) அநீதத்தின் கூலியை விரும்பினான் (2பேதுரு 2:15, எண் 22:7,17,37, எண் 24:11)

2. பிலேயாமின் வஞ்சம் (யூதா 1:11) அநீதத்தின் கூலியைப் பெற்றுக்கொண்டான் (யூதா 1:11, 2பேதுரு 2:15, எண் 31:8, 16)

3. பிலேயாமுடைய போதகம் (வெளி 2:14) - பாலாக் என்பவனுக்குப் பிலேயாம் செய்த தவறான போதகம் பண்ணினான் (எண் 25:1-9, எண் 31:8, 16)

"பேசாத மிருகம் மனுஷர்பேச்சைப் பேசித் தீர்க்கதரிசியினுடைய மதிகேட்டைத் தடுத்தது" (எண் 22:22-35)

கள்ளத்தீர்க்கதரிசிகளின் அடையாளங்கள்

1. தண்ணீரில்லாத கிணறுகள்
2. சுழல்காற்றினால் அடியுண்டோடுகிற மேகங்கள்

பாலைவனத்தில் தண்ணீரில்லாத கிணறுகளாலும் மழை பெய்யாத வறண்ட மேகங்களாலும் எவ்விதப் பயனும் இல்லை. அதுபோலவே கள்ளத்தீர்க்கதரிசிகளாலே சபையாருக்கு எவ்விதப் பயனும் இல்லை (மத் 7:15)

(5) மனுஷரின் தந்திரம்

2பேதுரு 2:18 வஞ்சகமாய் நடக்கிறவர்களிடத்திலிருந்து அரிதாய்த் தப்பினவர்களிடத்தில் இவர்கள் அகந்தையான வீண்வார்த்தைகளைப் பேசி, மாம்ச இச்சைகளினாலும் காமவிகாரங்களினாலும் அவர்களைத் தந்திரமாய்ப் பிடிக்கிறார்கள்.

"இவர்கள் அகந்தையான வீண்வார்த்தைகளைப் பேசி, மாம்ச இச்சைகளினாலும் காமவிகாரங்களினாலும் அவர்களைத் தந்திரமாய்ப் பிடிக்கிறார்கள்" கள்ளப்போதகர்களால் ஜீவத்தண்ணீரைக் கொடுக்க முடியாது. இவர்களால் ஆத்துமாக்களுக்கு ஜீவனைக் கொடுக்க முடியாது. அவற்றைக் கெடுக்கத்தான் முடியும். அகந்தையான வீண்வார்த்தைகளாலும் மாம்ச இச்சைகளினாலும், காமவிகாரங்களினாலும் கள்ளத்தீர்க்கதரிசிகள் ஜனங்களுடைய ஆத்துமாக்களைக் கெடுக்கப் போடுகிறார்கள்

காமவிகாரம் (wantonness) ἀσέλγεια aselgeia 766

பெண்பால் பெயர்ச்சொல் - காமவிகாரம் (licentiousness, lustfulness)

"மாம்ச இச்சைகளினாலும் காமவிகாரங்களினாலும்" ஒப்பிட்டுப் பார்க்கவும் (ரோமர் 1:27)

II பேதுரு - தொகுப்புரை

2 அதிகாரம்

(6) நிலைவரமில்லாத ஆத்துமாக்களை தந்திரமாய்ப் பிடிக்கிறார்கள்

2பேதுரு 2:19 தாங்களே கேட்டுக்கு அடிமைகளாயிருந்தும் அவர்களுக்குச் சுயாதீனத்தை வாக்குத்தத்தம் பண்ணுகிறார்கள்; எதினால் ஒருவன் ஜெயிக்கப்பட்டிருக்கிறானோ அதற்கு அவன் அடிமைப்பட்டிருக்கிறானே

"தாங்களே கேட்டுக்கு அடிமைகளாயிருந்தும் அவர்களுக்குச் சுயாதீனத்தை வாக்குத்தத்தம் பண்ணுகிறார்கள்" - கள்ளப்போதகர்கள் கேட்டுக்கு அடிமைகளாக இருக்கிறார்கள் ஆயினும் இவர்கள் மற்றவர்களுக்கு விடுதலையை அறிவிக்கிறார்கள்

(7) கள்ளப் போதகர்களுக்கு இரட்சிப்பின் நம்பிக்கையில்லை

2பேதுரு 2:20 கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக் கொண்டு ஜெயிக்கப்பட்டால் அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும்

2பேதுரு 2:21 அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்த பின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப் பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும்.

2பேதுரு 2:22 நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்குச் சம்பவித்தது.

"அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும்" - [illegible]றும வாக்கியம் பின் மாற்றுப்போனவர்களைக் குறிக்கும்

அசுத்தம் (pollutions) - **μίασμα - miasma** - 3393

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - அசுத்தம் (things that infect, pollute, and defile) (2பேதுரு 2:20; 2பேதுரு 1:4

சிக்கிக்கொள் (entangled) - **ἐμπλέκω - emplekoo** - 1707

வினைச்சொல் - சிக்கிக்கொள் (to plait, weave in; interweave; entangle) (2தீமோ 2:4

ஜெயிக்கப்படுதல் (overcome) **ἡττάω -heettaoo** - 2274

வினைச்சொல் குறைவாயிரு, பாடுபடு (to make worse, vanquish) "overcome" (2பேதுரு 2:19-20) "inferior" (2கொரி 12:13

"நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட, பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது" நீதி 26:11 ஆகிய வசனம் இங்கு மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

II பேதுரு – தொகுப்புரை

3 அதிகாரம்

V. கர்த்தருடைய நாள்

1. நிருபத்தின் நோக்கம்

2பேதுரு 3:1 பிரியமானவர்களே இந்த இரண்டாம் நிருபத்தை இப்பொழுது உங்களுக்கு எழுதுகிறேன்

2பேதுரு 3:2 பரிசுத்த தீர்க்கதரிசிகளால் முன் சொல்லப்பட்ட வார்த்தைகளையும் இரட்சகராயிருக்கிற கர்த்தருடைய அப்போஸ்தலராகிய எங்களுடைய கட்டளைகளையும் நீங்கள் நினைவுகூரும்படி இந்த நிருபங்களினால் உங்கள் உண்மையான மனதை நினைப்பூட்டி எழுப்புகிறேன்

“பரிசுத்த தீர்க்கதரிசிகள்” அப்போஸ்தலருடைய நிருபங்களைப் பரிசுத்த தீர்க்கதரிசிகளுடைய நிருபங்களுக்கு இணையாக பேதுரு ஒப்பிட்டுக் கூறுகிறார்

2. கிறிஸ்துவின் வருகையை மறுதலிக்கும் பரியாசக்காரர்

2பேதுரு 3:3 முதலாவது நீங்கள் அறியவேண்டியது என்னவென்றால், கடைசிநாட்களில் பரியாசக்காரர் வந்து, தங்கள் சுய இச்சைகளின்படியே நடந்து,

2பேதுரு 3:4 அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்தபின்பு சகலமும் சிருஷ்டியின்தோற்றமுதல் இருந்தவிதமாயிருக்கிறதே என்று சொல்லுவார்கள்

தீர்க்கதரிசன எண் - 5

“கடைசிநாட்களில் பரியாசக்காரர் வந்து தங்கள் சுய இச்சைகளின்படியே நடந்து அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே?” என்று சொல்லுவார்கள் (2பேதுரு 3:3-4) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

“அவர் வருவார்” - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிக்கும் வாக்கியம். (2தெச 1:7-8)

3. பரியாசக்காரர் பூர்வகாலத்தை அறியாதிருக்கிறார்கள்

2பேதுரு 3:5 பூர்வகாலத்தில் தேவனுடைய வார்த்தையினாலே வானங்களும் தோன்றி ஜலத்தினாலே நிலைகொண்டிருக்கிற பூமியும் உண்டாயின என்பதையும்

2பேதுரு 3:6 அப்பொழுது இருந்த உலகம் ஜலப்பிரளயத்தினாலே அழிந்ததென்பதையும் மனதார அறியாமலிருக்கிறார்கள்

2பேதுரு 3:7 இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது.

“பூர்வகாலத்தில் தேவனுடைய வார்த்தையினாலே வானங்களும்” ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் தமது வார்த்தையினாலே சிருஷ்டித்த நிகழ்ச்சியை பேதுரு இங்கு குறிப்பிடுகிறார் (எபி 1:10)

“ஜலத்தினின்று தோன்றி ஜலத்தினாலே நிலைகொண்டிருக்கிற பூமியும்” ஆதி 1:2 ஆவது வசனத்தில் பூமி சிருஷ்டிக்கப்படவில்லை என்பது ஒருசிலருடைய கருத்து. ஜலப்பிரளயமாக இருந்தது பின்பு வெட்டாந்தரையான பூமி பிறந்தது என்று இவர்கள் கருத்து கூறுகிறார்கள். ஆதி 1:9-10 ஆகிய வசனங்களை இவர்கள் தங்களுடைய விவாதத்திற்கு ஆதாரமாகக் கூறுகிறார்கள்

II பேதுரு - தொகுப்புரை

3 அதிகாரம்

அறியாமலிருப்பது (ignorant)
λανθάνω - lanthanoo - 2990

வினைச்சொல் - மறைவாயிரு மறைந்திரு, அறியாமல் (to be unseen, unnoticed) " ignorant of" (2பேதுரு 3:5,8) "unawares" (எபி 13:2); "be hid" மாற்கு 7:24; லூக்கா 8:47 அப 26:26

ஜனங்கள் மனதார அறியாமலிருக்கும் காரியங்கள்

1 பூர்வத்திலே தேவனுடைய வார்த்தையினாலே வானங்கள உண்டாயிற்று என்பது 2பேதுரு 3:5 சங் 68:33; சங் 93:2; சங் 102:25 மீகா 5:2

2 ஜலத்தினின்று தோன்றி ஜலத்தினாலே நிலைகொண்டிருக்கிற பூமியும உண்டாயிற்று என்பது (2பேதுரு 3:5 சங் 24:2; சங் 136:6

3 "அப்பொழுது இருந்த உலகம்" என்பது ஆதாமிற்கு முந்தி இருந்த உலகத்தைக் குறிக்கும். இந்த உலகம ஆதாமின காலத்திற்கு முன்பாக ஜலப பிரளயத்தினால அழிக்கப்பட்டது என்பது. (2பேதுரு 3:6; ஆதி 1:2 சங் 104:5 9, எரே 4:23-26, ஏசா 14:12-14, எசே 28:11 17)

4 இப்பொழுதிருக்கிற வானங்களும் பூமியும் நியாயத்தீர்ப்பிலிருந்து மீட்கப்பட்டது. (2பேதுரு 3:7 ஆதி 1:3-2:25)

5 வானங்களும், பூமியும் ஆதாமின மூலமாக நியாயந்தீர்க்கப்பட்டு, அழிந்து போவதற்காகக் காக்கப பட்டிருக்கிறது. (2பேதுரு 3:7,10-12; ரோமர் 8:18-25; எபி 1:10-12; எபி 12:25-28; வெளி 20:7-15)

6 கர்த்தருக்கு ஒருநாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம்வருஷம் ஒருநாள் போலவும் இருக்கிறது. (2பேதுரு 3:8-9 ஏசா 57:15; எபே 3:11

7 கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாய் இருக்கமாட்டார் (2பேதுரு 3:9; 1தீமோ 2:4 வெளி 22:17)

8 கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும் (2பேதுரு 3:10-13 ஏசா 65:17 ஏசா 66:22-24 வெளி 21-22

9 பூமியும், அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்து போகும் (2பேதுரு 3:10 1கொரி 15:24-28

10 தேவனுடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாய் இருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகும். (2பேதுரு 3:13 ஆதி 1:26-31; ஆதி 8:22, ஆதி 9:12, ஏசா 9:6-7; ஏசா 59:20 தானி 2:44 45 தானி 7:13-14,27, மத் 25:34 46, லூக்கா 1:32-33, வெளி 11:15, வெளி 21:1-22:5

11 தேவன் தமது பரிசுத்த நகரத்தை பரலோகத்திலிருந்து பூமிக்கு மாற்றி அமைப்பார் (2பேதுரு 3:13, வெளி 21:1 22 5)

12 உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள் தேவனுடைய சந்ததியாராயும், கிறிஸ்துவின உடன் சுதந்தரராயும் இருப்பார்கள் (2பேதுரு 3:13, சங் 149:5-9; தானி 7:18 27, மத் 19:28; ரோமர் 8:17, 1கொரி 4:8, 1கொரி 6:2; எபே 2:7, 2தீமோ 2:12; 2தெச 1:4-10, வெளி 1:6; வெளி 2:26-27, வெளி 5:9 10 வெளி 11:15, வெளி 12:5 வெளி 20:4-6, வெளி 22:5

II பேதுரு - தொகுப்புரை

3 அதிகாரம்

வேதத்தில் கூறப்பட்டிருக்கும் சத்தியங்கள் மனுஷருக்குத் தெளிவாக வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. ஆயினும் ஒருசிலர் வேதத்தைக் குறித்து அறியாமையில் இருக்க வேண்டுமென்று தாங்களாகவே தீர்மானம் பண்ணிக் கொள்கிறார்கள் சத்தியத்திற்குத் தங்களுடைய கண்களையும், செவிகளையும் மூடிக் கொள்கிறார்கள் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து நிச்சயமற்றவர்களாக இருக்கிறார்கள் (2பேதுரு 2:1-2; 2பேதுரு 3:5,8)

உலகம் (world) - κόσμος - kosmos - 2889

ஆண்பால் பெயர்ச்சொல் - உலகம் அலங்கரிப்பு, லௌகிகம் (social system) - அப்பொழுது இருந்த உலகம் என்பது ஆதாமின் காலத்திற்கு முந்தைய உலகத்தைக் குறிக்கும் இது வெள்ளத்தில் அழிந்துபோயிற்று. (ஆதி 1:2 சங் 104:5-9) இந்த வெள்ளத்தில் ஒன்றும் பிழைக்கவில்லை (எரே 4:23-26) இக்காலத்தில்தான் லூசிபர் தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணினான் (ஏசா 14:12-14 எசே 28:11-17, மத் 13:35)

வானங்கள், பூமி ஆகியவற்றின் வெவ்வேறு காலங்கள்

1 அப்பொழுது இருந்த உலகம். (2பேதுரு 3:6, ஆதி 1:1-2)

2 இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் (2பேதுரு 3:7; ஆதி 1:3-2:25)

3 புதிய வானங்களும், புதிய பூமியும் (2பேதுரு 3:13; ஏசா 65:17; ஏசா 66:22-24, வெளி 21-22)

ஆதாமிற்கு முன்பிருந்த உலகம்

1 பேதுரு இரண்டு விதமான உலகங்களைப் பற்றி இங்கு குறிப்பிடுகிறார் ஒன்று அப்பொழுது இருந்த உலகம். மற்றொன்று இப்பொழுது இருக்கிற வானங்களும், பூமியும். (2பேதுரு 3:6-7

2 அப்பொழுது இருந்த உலகம் ஜலத்தினால் அழிந்துபோயிற்று இப்பொழுது இருக்கும் உலகம் அக்கினியினால் அழிந்துபோகும் (2பேதுரு 3:6-7

3 அப்பொழுது இருந்த உலகம் "ஆதியிலே" சிருஷ்டிக்கப்பட்டது ஆதி 1:1-2 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் ஜலப்பிரளயம் அந்த உலகத்தை அழித்துப் போட்டது இந்த ஜலப்பிரளயத்திற்கு ஆறு நாட்களுக்குப் பின்பு இப்பொழுது இருக்கிற உலகம் சிருஷ்டிக்கப்பட்டது (ஆதி 1:3-2:25)

4 நோவாவின் காலத்தில் உண்டான ஜலப்பிரளயம் ஆதாமின் காலத்திலிருந்து நோவாவின் காலம் வரையிலுமுள்ள எல்லா ஜீவராசிகளையும் அழித்துப் போடவில்லை. ஜலப்பிரளயத்திற்குப் பின்பு தங்களுடைய இனத்தைப் பலுகிப் பெருகுவதற்காக நோவாவின் பேழையின் மூலமாக ஒருசில ஜீவராசிகள் தப்பிப் பிழைத்தார்கள் ஆனால் அப்பொழுது இருந்த உலகத்தில் உண்டான ஜலப்பிரளயத்தில் எந்த மனுஷரும் பறவைகளும் விலங்குகளும் ஜீவனோடு தப்பிக்கவில்லை. (2பேதுரு 3:6, ஆதி 1:2 எரே 4:23-26)

5 ஆதாமின் நாளில் வானங்களிலும், பூமியிலும் மாற்றம் உண்டானதைப் போன்று நோவாவின் நாளில் எந்த மாற்றமும் உண்டாகவில்லை. ஆகையினால் அப்பொழுது இருந்த உலகம் என்பது ஆதாமின் காலத்திற்கு முற்பட்ட உலகத்தைக் குறிக்கும். (ஆதி 1:3-2:25 இப்பொழுது இருக்கிற உலகம் என்பது நோவாவின் காலத்தில் உண்டாக்கப்பட்டதல்ல. இது ஆதாமின் காலத்தில் உண்டாக்கப்பட்டது.

II பேதுரு - தொகுப்புரை

3 அதிகாரம்

6. 2பேதுரு 3:6, ஆதி 1:2 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் ஜலப்பிரளயத்திற்குப் பின்பு எந்த ஜீவராசியும் தப்பி பிழைக்கவில்லை. ஆறு நாட்களில் அவை மறுபடியும் சிருஷ்டிக்கப்பட்டன (ஆதி 2:4-9). ஆதாமின் காலத்திற்கு முன்பாக ஜீவராசிகள் இருந்தது என்பது எரே 4:23-26 ஆகிய வசனங்களிலிருந்து தெளிவாகிறது.

7. பூமியில் மூன்று வெவ்வேறு காலங்கள் இருந்தன, இருக்கும். அவையாவன:

(1) ஆதாமின் காலத்திற்கு முந்திய உலகம் - இது அப்பொழுது இருந்த உலகம் எனப்படுகிறது. இந்த உலகம் இப்பொழுது இருக்கும் வானங்களுக்கும் பூமிக்கும் முந்தியது. (2பேதுரு 3:6)

(2) ஆதாமின் காலத்து பாவமான உலகம் - ஆதாமின் காலத்திலிருந்து புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகும் காலம் வரையிலும் உள்ளது. (2பேதுரு 3:7)

(3) ஆதாமின் பாவமில்லாத உலகம் - இது புதிய பூமியில் இருக்கும் (2பேதுரு 3:13; வெளி 21:1-22:5; ஏசா 66:22-24)

8. இரண்டு உலகங்களின் வெவ்வேறு முடிவுகளைப் பேதுரு தெளிவாகக் கூறுகிறார். அவையாவன:

(1) அப்பொழுது இருந்த உலகம் ஜலப்பிரளயத்தில் அழிந்தது. (2பேதுரு 3:6; ஆதி 1:2; எரே 4:23-26; ஏசா 34:12-14; எசே 28:11-17; மத் 13:35)

(2) இப்பொழுது இருக்கிற உலகம் அக்கினியினால் அழியும். ஆயிரம் வருஷ அரசாட்சியின் போது இதன் முடிவு உண்டாகும் (2பேதுரு 3:7,10-13; 1கொரி 15:24-28; வெளி 20:7-10)

9. பேதுரு நோவாவின் காலத்து ஜலப்பிரளயத்தைப் பற்றி குறிப்பிடும்போது நோவாவையும் தப்பித்த எட்டுப்பேரையும் குறிப்பிடுவது வழக்கம். (1பேதுரு 3:20; 2பேதுரு 2:5) மற்றவர்களும் நோவாவின் காலத்து ஜலப்பிரளயத்தை இவ்வாறு வேறுபடுத்திக் கூறினார்கள் (ஏசா 54:9; மத் 24:37-38; லூக்கா 17:26-27; எபி 11:7). ஆகையினால் 2பேதுரு 3:6 ஆகிய வசனம் நோவாவின் காலத்து ஜலப்பிரளயத்தைக் குறிப்பிடாமல் ஆதாமிற்கு முந்திய காலத்தில் ஏற்பட்ட ஜலப்பிரளயத்தையே குறிக்கிறது.

10. ஆதாமின் காலத்திற்கு முன்பு ஒரு ஜலப்பிரளயம் உண்டாயிற்று என்பது தெளிவான காரியம். (2பேதுரு 3:6; ஆதி 1:2; சங் 104:5-9). தேவன் தேவையில்லாமல் ஜலப்பிரளயத்தின் மூலமாக நியாயத்தீர்ப்பை அனுப்பமாட்டார். ஆதாமின் காலத்திற்கு முன்பு இருந்த உலகத்திற்குத் தேவனுடைய நியாயத்தீர்ப்பு தேவையாயிருந்தபடியினால் தேவன் அக்காலத்தில் மிகப்பெரிய ஜலப்பிரளயம் ஒன்றை அனுப்பி ஜீவராசிகள் அனைத்தையும் அழித்துப்போட்டார் (2பேதுரு 3:6; ஆதி 1:2; சங் 104:5-9)

"இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே காக்கப்பட்டிருக்கிறது" ஆதாமின் நாளிலிருந்து இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் தேவனுடைய வார்த்தையினாலே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது (ஆதி 1:3-2:25; யாத் 20:11

II பேதுரு - தொகுப்புரை

3 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 6

"இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு தேவ பக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது (2பேதுரு 3:7) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. 2பேதுரு 3:10-13 ஆகிய வசனங்களின் பிரகாரம் வானங்களும், பூமியும் அக்கினியினால் புதுப்பிக்கப்படும் காலம் ஆயிரம் வருஷ அரசாட்சியின் முடிவிலும் வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பின் போதும் நடைபெறும். (2பேதுரு 3:7, வெளி 20:11-15)

4. கர்த்தருக்கு ஒரு நாளும் ஆயிரம் வருஷமும்

2பேதுரு 3:8 பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒருநாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒருநாள்போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்கவேண்டாம்.

2பேதுரு 3:9 தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம் மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்.

"கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம் மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்"

கர்த்தருடைய வருகை தாமதமாவதற்குத் தெளிவான காரணம் இங்கு கூறப்பட்டிருக்கிறது.

5. அக்கினியினால் புதுப்பிக்கப்படுதல்

2பேதுரு 3:10 கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்.

2பேதுரு 3:11 இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்.

2பேதுரு 3:12 தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்; அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து பூதங்கள் எரிந்து உருகிப்போம்.

2பேதுரு 3:13 அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்.

தீர்க்கதரிசன எண் - 7

"கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்...." 2பேதுரு 3:10-13 இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

இரவிலே திருடன் வருகிறவிதமாய்" - (1தெச 5:2)

"அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம்" - கர்த்தருடைய நாளின் முடிவில் இது நடைபெறும். (2பேதுரு 3:7, வெளி 20:7-15)

அகன்றுபோதல் (pass away) - παρέρχομαι - parerchomai 3928

வினைச்சொல் - கடந்துபோ, ஒழிந்துபோ, நீங்கு, நீங்கிப்போ, விட்டுவிடு, அகன்றுபோ (pass away; pass from condition to another)

II பேதுரு - தொகுப்புரை

3 அதிகாரம்

அகன்றுபோகும் காரியங்களும், அகன்று போகாத காரியங்களும்

1 காலங்கள் அகன்றுபோகும். மத் 14:15; 1பேதுரு 4:3)

2 உபவாசநாள் கழிந்துபோகும். அப் 27:9

3 தேவனுடைய வார்த்தை அழிந்து போகாது. (மத் 5:18; மத் 24:34-35 மாற்கு 13:30-31; லூக்கா 16:17 லூக்கா 21:32-33

4 ஜனங்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரிடத்திற்குக் கடந்து போவார்கள் (மத் 8:28; மாற்கு 6:48, லூக்கா 18:37; அப 16:8)

5 பரிசேயர்கள தேவனுடைய அன்பையும நியாயத்தையும் விட்டுவிடுவார்கள லூக்கா 11:42

6 எஜமானுடைய போகையும், வருகையும லூக்கா 12:37; லூகக்கா 17:7 அப 24:7

7 தகப்பனுடைய கற்பனையை மீறாதிருப்பது. (லூக்கா 15:29)

8 ஆபத்து கடந்து போதல (மத் 26:39,42, மாற்கு 14:35)

9 பாவங்கள ஒழிந்துபோதல (2கொரி 5:17

10 மனுஷனுடைய ஜீவன புல்லின பூவைப போல ஒழிந்துபோதல் (யாக் 1:10)

11 வானங்களும், பூமியும் அழிந்துபோதல (2பேதுரு 3:10; வெளி 21:1)

பூமியும், அதிலுள்ள கிரியைகளும் அழிந்துபோகும் விதம்

1 அக்கினிக்கு இரையாக வைக்கபபடும். (2பேதுரு 3:7,10-12)

2 சிருஷ்டியானது அழிவிற்குரிய அடிமைத்தனத் தினின்று விடுதலையாக்கபபடும். தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக் கொள்ளும் (ரோமர் 8:20)

3. பூமி மாறிபபோகும். (எபி 1:10-12)

4. தேவன் பூமியை அசைப்பண்ணுவார் பூமி மாறிபபோகும். (எபி 12:25-28 ஏசா 65:17; ஏசா 66:22-24 1பேதுரு 3:13; வெளி 21:1)

5 பூமியில் இனி ஒரு சாபமும் இராது (வெளி 22:3)

மடமட என்னும் சபதம் (great noise) - ῥοιζηδόν - rhoizeedon - 4500

வினையடை - மடமட என்று (a **rushing sound; swish**) - பூமி விரைவாக மாற்றபபடும

பூதங்கள் (elements) - στοιχεῖον - stoicheion - 4747

பால வேறுபாடற்ற பெயர்சொல் - அடிபபடை சததியம். உபதேசம் **"element"** (2பேதுரு 3:10,12 கலா 4:3,9); **"rudiment"** (கொலோ 2:8,20) **"principle"** (எபி 5:12)

உருகுதல் (melt) - λύω - lyoo - 3089

வினைசசொல் - மீறு, கட்டவிழ், அவிழ விடுதலையாகு, களை, தளரு, உடை, தகர் (to loose) **"melt"** (2பேதுரு 3:10), **"dissolve"** (2பேதுரு 3:11,12), **"destroy"** யோவான 2:19 1யோவான 3:8 **"break up"** (அப 13:43) **"break"** மத் 5:19 யோவான் 5:18 யோவான 7:23 யோவான் 10:35 அப 27:41 எபே 2:14 **"put off"** (அப 7:33 **"unloose"** (மாற்கு 1:7 லூக்கா 3:16, யோவான் 1:27) **"be loosing"** (லூக்கா 19:33); **"to loose"** (மத் 16:19, மத் 18:18; மத் 21:2; மாற்கு 7:35, மாற்கு 11:2-5; லூக்கா 13:15-16,

3 அதிகாரம்

லூக்கா 19:40-43; யோவான் 11:44 அப 2:24; அப 13:25; அப 22:40 அப 24:26; 1கொரி 7:27 வெளி 5:2,5; வெளி 9:14-15 வெளி 20:3,7)

வெந்து உருகு (fervent heat) καυσόω - kausooo - 2741

வினைச்சொல் - வெந்து உருகு வெந்து அனி (burning heat) 2பேதுரு 3:10,12

பூமி (earth) - γῆ - gee - 1093

பெண்பால் பெயர்ச்சொல் - தேசம் நாடு, பூமி, நிலம், தரை, பூலோகம் கரை, மண் (the ground) (2பேதுரு 3:10)

கிரியைகள் (works) - ἔργον - ergon - 2041

பாலவேறுபாடற்ற பெயர்சொல் - கிரியை, வேலை, ஊழியம் வேலைப்பாடு (works, toil, deeds, labor, acts of man) - ஆவிக்குரிய கிரியைகளையும் உலகப்பிரகாரமான கிரியைகளையும் இந்த வார்த்தை குறிப்பிடுகிறது.

எரிந்து அழிந்து போதல் (burned up) - κατακαίω - katakaioo - 2618

வினைசொல் - சுட்டெரி, வெந்துபோ எரிந்துபோ to burn down to the ground, wholly consume with fire பூமியிலுள்ள காரியங்களும் மனுஷருடைய காரியங்களும் அக்கினியினால் பட்சிக்கப்படும். இதன் மூலமாகத் தேவையற்ற காரியங்கள் அகற்றப்படும். தேவையான காரியங்கள் நித்திய காலத்திற்கும் நிலைத்து நிற்கும். (எபி 12:25-28)

"இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால்" பூமியிலுள்ள காரியங்களும் மனுஷருடைய காரியங்களும் அழிந்துபோகக்கூடியவை.

"தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்" - அந்த நாளுக்கு முன்பாகப் பூமியில் பாவங்களும், கலகங்களும் அடக்கப்படும். கர்த்தர் புதிய பூமியிலே எல்லாவற்றுக்கும் எல்லாமாக இருப்பார் (1கொரி 15:24-28; வெளி 21:1-22:5)

"தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு" - இயேசு கிறிஸ்துவினுடைய வருகையை மனுஷரால் தாமதப்படுத்தவோ விரைவுபடுத்தவோ முடியாது. கர்த்தருடைய காரியங்கள் அவருடைய சித்தத்திற்கு ஏற்ற பிரகாரம் ஏற்ற வேளையில் நடைபெறும் (அப 1:7)

"தேவனுடைய நாள்" (day of God) - லூசிபர் ஆதாம் ஆகியோர் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் கலகம்பண்ணினார்கள் இதனால் பூமியில் சாபம் உண்டாயிற்று இவர்களுடைய கலகத்திற்கு முன்பாக பூமி ஒரு சாபமும் இல்லாமல் பரிபூரணமாய் இருந்தது. தேவனுடைய நாளில் ஒருவரும் தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ண மாட்டார்கள் (1கொரி 15:24-28; எபே 1:10; வெளி 21:1-22:5; ஏசா 65:17, ஏசா 66:22-24; 2பேதுரு 3:13)

"அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து பூதங்கள் எரிந்து உருகிப்போம்" இது கர்த்தருடைய நாளின் (the day of the Lord) முடிவும் தேவனுடைய நாளின் (the day of God) துவக்கமுமாகும் (2பேதுரு 3:7,10-13; 1கொரி 15:24-28; வெளி 20:7-15)

"வாக்குத்தத்தத்தின்படியே" - (ஏசா 65:17, ஏசா 66:22-24)

"புதிய வானங்களும் புதிய பூமியும்" - பூமி மூன்று தடவை புதிதாக்கப்பட்டது. அவையாவன

1. முதலாவது சிருஷ்டிப்பில் (ஆதி 1:1)

2. ஆறு நாட்களில் நடைபெற்ற மறுசிருஷ்டிப்பில் (ஆதி 1:3-2:25; யாத் 20:11; யாத் 31:15

II பேதுரு – தொகுப்புரை

3 அதிகாரம்

3 வானங்களும், பூமியும் அக்கினியினால புதிதாக்கப்படும் போது 2பேதுரு 3:7,12-13; ஏசா 65:17 ஏசா 66:22-24; வெளி 21:1-22:5)

"நீதி வாசமாயிருக்கும்" – மனுஷர் ஜீவிப்பதற்காகவே பூமி சிருஷ்டிக்கப்பட்டது. ஏசா 45:18 தேவனுடைய இந்த நோக்கம் ஆயிரம் வருஷ அரசாட்சியின் இறுதியில நிறைவேறும் (வெளி 20:7-10) அப்போது சாத்தானும் அவனுடைய தூதர்களும் ஒடுக்கப்பட்டு நரகத்திலே தள்ளப்படுவார்கள அக்கினியினால பூமி புதுப்பிக்கப்பட்டிருக்கும். இந்த பரிபூரண பூமியில நீதி வாசமாயிருக்கும். (ஆதி 1:26-31; ஆதி 8:22; ஆதி 9:12 ஏசா 9:6-7; ஏசா 59:20; தானி 2:44-45 தானி 7:13-27 லூக்கா 1:31-33 வெளி 11:15; வெளி 22:5

6. கர்த்தருடைய நாளின் நிமித்தமாக ஆலோசனைகள்

2பேதுரு 3:14 ஆகையால் பிரியமானவர்களே இவைகள வரக் காத்திருக்கிற நீங்கள கறையற்றவர்களும் பிழை இல்லாதவர்களுமாய சமாதானத்தோடே அவர் சந்நிதியில காணப்படும் படி ஜாக்கிரதையாயிருங்கள

விசுவாசிகளுக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1 நீங்கள் கறையற்றவர்களும் பிழை இல்லாதவர்களுமாய் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும் படி ஜாக்கிரதையாயிருங்கள (2பேதுரு 3:14

2 அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே நீங்கள் இழுப்புண்டு உங்கள் உறுதியிலிருந்து விலகி விழுந்து போகாத படிக்கு எச்சரிக்கையாயிருங்கள் (2பேதுரு 2:1-22)

3 நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள் (2பேதுரு 3:18

7. சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது

2பேதுரு 3:15 மேலும் நம்முடைய கர்த்தரின நீடிய பொறுமையை இரட்சிப்பென்று எண்ணுங்கள் நமக்குப் பிரியமான சகோதரனாகிய பவுலும் தனக்கு அருளப்பட்ட ஞானத்தினாலே இப்படியே உங்களுக்கு எழுதியிருக்கிறான்

2பேதுரு 3:16 எல்லா நிருபங்களிலும் இவைகளைக் குறித்துப் பேசியிருக்கிறான்; அவன் சொன்னவைகளில சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது கல்லாதவர்களும் உறுதி இல்லாதவர்களும மற்ற வேத வாக்கியங்களைப் புரட்டுகிறது போலத் தங்களுக்குக் கேடுவரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள

"உங்களுக்கு எழுதியிருக்கிறான" பவுலின எந்த நிருபத்தை பேதுரு இங்கு குறிப்பிடுகிறார் என்பது தெரியவில்லை ஒருவேளை பவுல எபிரெயருக்கு எழுதின நிருபத்தைப் பற்றி பேதுரு இங்குக் குறிப்பிட்டிருக்கலாம்.

"அவன சொன்னவைகளில் சில காரியங்கள அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது" பவுல சொன்ன எந்தக் காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது என்று பேதுரு இங்கு குறிப்பிடவில்லை பவுலின உபதேசங்கள புறஜாதியாருக்கு விசேஷமாக எழுதப்பட்டவை. பேதுருவின் நிருபம் யூதருக்கு விசேஷமாக எழுதப்பட்டது. மோசேயின நியாய பிரமாணத்தைக் குறித்த உபதேசம் யூதருக்கும் புறஜாதியாருக்கும் அவர்கள புரிந்து கொள்ளும் விதத்தில கூறப்பட வேண்டும். இல்லையெனில், இதை அறிந்து கொள்வதற்கு அரிதாயிருக்கும்.

II பேதுரு - தொகுப்புரை

3 அதிகாரம்

"கல்லாதவர்களும் உறுதி இல்லாதவர்களும் மற்ற வேத வாக்கியங்களைப் புரட்டுகிறது போலத் தங்களுக்குக் கேடுவரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள்" - பரிசுத்த வேதாகமத்திலுள்ள சத்தியங்கள் மிகவும் எளிமையானவை. யாரும் வாசித்து எளிதில் புரிந்து கொள்ளலாம். அது அறிகிறதற்கு அரிதானதல்ல. கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும் வேண்டுமென்றே சத்தியத்தைப் புரட்டுகிறார்கள். இதனால் தங்களுக்கும், மற்றவர்களுக்கும் கேடு வருவிக்கிறார்கள். (மத் 13:15 17; கொரி 2:14)

8. பின்வாங்கிப்போவதற்கு எதிராக இரண்டு கட்டளைகள்

2பேதுரு 3:17 ஆதலால் பிரியமானவர்களே, இவைகளை முன்னமே நீங்கள் அறிந்திருக்கிறபடியால், அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே நீங்கள் இழுப்புண்டு உங்கள் உறுதியிலிருந்து விலகி விழுந்து போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து,

2பேதுரு 3:18 நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள். அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்.

"ஆதலால்" - விசுவாசிகளும் தங்களுடைய உறுதியிலிருந்து விலகி விழுந்துபோவதற்கு வாய்ப்புள்ளது. ஆதலால்.. (2பேதுரு 3:17; கலா 1:6-9; கலா 5:4; எபி 12:15)

"நீங்கள் இழுப்புண்டு உங்கள் உறுதியிலிருந்து விலகி விழுந்துபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" - விசுவாசிகள் விழுந்துபோவதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் மிகுந்த எச்சரிக்கையோடு இருந்து தங்களுடைய உறுதியிலிருந்து விலகிப்போகாமல் ஜீவிக்கவேண்டும்.

"அக்கிரமக்காரருடைய வஞ்சகம்" - வேதவாக்கியத்தைப் புரட்டுவது அக்கிரமக்காரருடைய வஞ்சகமாகும். தங்களுடைய இச்சைகளையும் பாவ சந்தோஷங்களையும் நிறைவேற்றுவதற்காக அக்கிரமக்காரர் வேதவாக்கியங்களைப் புரட்டுகிறார்கள்.

"நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்" கிறிஸ்தவருடைய ஆவிக்குரிய ஜீவியம் வளரக்கூடியது. சுவிசேஷத்தின் கிருபையும் ஆசீர்வாதமும் தேவனுடைய பிள்ளைகளிடத்தில் வளருகிறது. (1பேதுரு 1:23; யாக் 1:18) பரலோகத்திலிருந்து இந்த விசுவாச வித்திற்கு ஜீவத்தண்ணீர் பாய்ச்சப்பட வேண்டும். பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை ஒவ்வொரு விசுவாசியும் பெற்றுக் கொள்ள வேண்டும். ஒளியில் நடந்து ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெற வேண்டும். (1யோவான் 1:7; 1பேதுரு 2:1 8)

I யோவான் - முன்னுரை

காலமும் இடமும்

திருச்சபை வரலாற்றின் பிரகாரம் யோவான் இந்த நிருபத்தை எபேசுவிலிருந்து கி.பி. 90 ஆம் ஆண்டில் எழுதினார்

ஆசிரியர்

அப்போஸ்தலர் யோவான் 1யோவான் நிருபத்திலும், யோவான் சுவிசேஷத்திலும் பல சத்தியங்கள் ஒன்றுபோல் உள்ளன
1யோவான் 2:8 யோவான் 15:9
யோவான் 13:34; 1யோவான் 2:10 யோவான் 11:10; 1யோவான் 2:13 யோவான் 17:3
1யோவான் 2:14=யோவான் 17:3
1யோவான் 3:1= யோவான் 1:12
1யோவான் 3:2=யோவான் 1:12
1யோவான் 3:2=யோவான் 17:24
1யோவான் 3:8=யோவான் 8:44
1யோவான் 3:8-9=யோவான் 3:3-5
1யோவான் 3:11= யோவான் 13:34
1யோவான் 3:13= யோவான் 15:20
1யோவான் 4:9=யோவான் 3:16
1யோவான் 4:12=யோவான் 1:18
1யோவான் 5:13=யோவான் 20:31
1யோவான் 5:14= யோவான் 14:14
1யோவான் 5:20= யோவான் 17:2-3)

மையக்கருத்து

தேவனுடைய அன்பு, கிறிஸ்தவ ஜீவியம், கிறிஸ்தவ நடத்தை ஆகியவற்றைப் பற்றிய நடைமுறை உபதேசம்

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 5

வசனங்கள் - 105

கேள்விகள் - 5

புதிய தீர்க்கதரிசனங்கள் - 5

வரலாற்றைக் குறிக்கும் வசனங்கள் - 100

பொருளடக்கம்

I. கிறிஸ்தவ ஐக்கியம்

1 கிறிஸ்துவின் ஜீவன் வெளிப்பட்டதால் ஐக்கியம் சாத்தியமாயிற்று (1:1-2)

2 ஐக்கியத்தின் ஐந்து நிபந்தனைகள்

(1) தேவ வாக்கியத்தின் ஒளியில் நடக்க வேண்டும் (1:3-7)

(2) நமது பாவங்களை அறிக்கையிட வேண்டும் (1:8)

(3) பாவங்களிலிருந்து மனந்திருந்தி தேவனோடு சமாதானமாக இருக்க வேண்டும் (1:9)

(4) தேவனுக்கு விரோதமாக நாம் பாவம் செய்ததை அங்கீகரிக்க வேண்டும் (1:10)

(5) பாவம் செய்யாமல் ஜீவித்து ஐக்கியத்தைக் காத்துக் கொள்ள வேண்டும் (2:1-2)

II. தேவனை அறிந்திருப்பதற்கு பதிமூன்று சான்றுகள்

1 கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும் (2:3-5)

2 கிறிஸ்து நடந்த படியே நாமும் தேவபக்தியுடன் நடக்க வேண்டும் (2:6)

3 சகோதரரிடத்தில் அன்புகூர வேண்டும் (2:7-11)

4 பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்க வேண்டும் (2:12)

5 இயேசு கிறிஸ்துவை அறிந்திருக்க வேண்டும், பொல்லாங்கனை ஜெயித்திருக்க வேண்டும் (2:13)

6 தேவ வசனம் நம்மில் நிலைத்திருக்க வேண்டும் (2:14)

7 உலகத்திலுள்ளவைகளில் அன்புகூராமல் தேவனுடைய சித்தத்தைச் செய்ய வேண்டும் (2:15-17)

I யோவான் - முன்னுரை

8 பரிசுத்தவான்களோடு நிலைத்திருக்க வேண்டும் (2:18-19)

9 பரிசுத்தராலே அபிஷேகம் பெற்று சத்தியத்தை அறிந்திருக்க வேண்டும் (2:20-21)

10 பிதாவையும் குமாரனையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் (2:22-23)

11 கிறிஸ்து நமக்குள் நிலைத்திருக்க வேண்டும் (2:24-25)

12 நாம் கிறிஸ்துவிற்குள் நிலைத்திருக்க வேண்டும் (2:26-28)

13 நீதியைச் செய்ய வேண்டும் (2:29)

III. தெய்வீக அன்பு

1 தேவனுடைய அன்பினால் நாம் அவருடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுகிறோம் (3:1-2)

2 தெய்வீக அன்பின் விளைவு

(1) கிறிஸ்தவரின் பரிசுத்தம் (3:3-4)

(2) கிறிஸ்தவரின் பாவமில்லாத தன்மை (3:5-10)

(3) நாம் ஒருவரிலொருவர் அன்பு கூரவேண்டும் (3:11-18)

(4) நாம் வேண்டிக் கொள்ளுகிறது எதுவோ அதை அவராலே பெற்றுக் கொள்கிறோம் (3:19-22)

(5) பரிசுத்த ஆவியானவரால் கிறிஸ்துவிற்குள் நிலைத்திருக்கிறோம் (3:23-24)

3 தேவனுடைய அன்பின் பாதுகாப்பு

(1) எல்லா ஆவிகளையும் சோதித்தறிய வேண்டும் (4:1)

(2) ஆவிகளைச் சோதித்தறியும் விதம் (4:2-3)

(3) பிசாசுகளை ஜெயிக்கும் விதம் (4:4)

(4) பிசாசுகளால் ஏற்பட்டிருக்கும் கள்ளப்போதகரின் அடையாளங்கள் (4:5)

(5) உண்மையான கிறிஸ்தவரின் அடையாளங்கள் (4:6)

4 மறுபடியும் பிறந்திருப்பதற்கு நிருபணம் (4:7-8)

5 மனுஷர்மீது தேவனுடைய அன்பு (4:9-10)

6 நாம் தேவனிடத்தில் வாசமாயிருப்பதும் நமக்குள் தேவனுடைய அன்பும் (4:11-17)

7 அன்பின் உண்மையான தன்மை (4:18)

8 சகோதரரிடத்தில் அன்பு (4:19-21)

IV. இயேசு கிறிஸ்துவைப் பற்றிய உபதேசம்

1 புதிய பிறப்பின் காலம் - தேவனால் பிறக்கும் விதம் (5:1)

2 புதிய பிறப்பின் நிருபணம் (5:2-5)

3 இயேசு கிறிஸ்துவின் ஐந்து சாட்சிகள் (5:6-9)

4 புதிய பிறப்பை உடையவன் அந்த சாட்சியை தனக்குள்ளே கொண்டிருக்கிறான் (5:10)

5 இயேசு கிறிஸ்துவில் மட்டுமே நித்திய ஜீவன் உண்டு (5:11-12)

6 தேவனிடத்தில் நாம் கேட்டவைகளை எவ்வாறு பெற்றுக் கொள்வது (5:13-15)

7 பின்மாற்றம்போனவர்களை இரட்சிக்கும் விதம் (5:16-17)

8 தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான் (5:18)

9 பரிசுத்தவான்களுக்கும் பாவிகளுக்கும் இடையிலுள்ள வேறுபாடு (5:19)

10 தேவனையும் இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன் (5:20-21)

1 அதிகாரம்

I. கிறிஸ்தவ ஐக்கியம் - (1:1-2:2)

1. கிறிஸ்துவின் ஜீவன் வெளிப்பட்டதால் ஐக்கியம் சாத்தியமாயிற்று - (1யோவான் 1:1-4)

1யோவான் 1:1 ஆதிமுதல் இருந்ததும் நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப்பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவவார்த்தையைக் குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம்.

1யோவான் 1:2 அந்த ஜீவன் வெளிப்பட்டது; பிதாவினிடத்திலிருந்ததும், எங்களுக்கு வெளிப்பட்டதுமான நித்தியமாயிருக்கிற அந்த ஜீவனை நாங்கள் கண்டு, அதைக் குறித்துச் சாட்சிகொடுத்து, அதை உங்களுக்கு அறிவிக்கிறோம்.

"ஆதிமுதல இருந்ததும்" - கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அற்புதமானவர், மகிமையானவர் (1யோவான் 1:1-4)

இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சத்தியங்கள்

1. ஆதிமுதல் இருந்தவர் (1யோவான் 1:1; யோவான் 1:1-2), நித்திய காலத்திலிருந்து இருக்கிறவர் (மீகா 5:2, எபி 1:8)
2. எங்கள் காதுகளால் நாங்கள் அவர் பேசியதைக் கேட்டோம். (1யோவான் 1:1)
3. எங்கள் கண்களினாலே நாங்கள் அவரைக் கண்டோம். (1யோவான் 1:1)
4. எங்கள் கைகளினாலே நாங்கள் அவரைத்தொட்டோம். (1யோவான் 1:1)
5. அவர் ஜீவவார்த்தையாக இருக்கிறார் (1யோவான் 1:1; யோவான் 14:6)
6. அந்த ஜீவனைக் குறித்து நாங்கள் சாட்சி கொடுக்கிறோம். (1யோவான் 1:2)
7. அவர் நித்திய ஜீவனாக இருக்கிறார் (1யோவான் 1:2)
8. அவர் பிதாவல்ல. பிதாவோடு நித்திய காலமாக இருக்கிறவர் (1யோவான் 1:2; யோவான் 1:1-2)
9. அவர் தம்மை எங்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார் (1யோவான் 1:2)

அப்போஸ்தலர்கள் இயேசு கிறிஸ்துவை அறிவிப்பதற்குக் காரணம்

1. நீங்கள் எங்களோடும், பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் ஐக்கியமுள்ளவர்களாய் இருக்கும்படி (1யோவான் 1:3)
2. உங்கள் சந்தோஷம் நிறைவாய் இருக்கும்படி. (1யோவான் 1:4)

"நாங்கள் கேட்டதும் எங்கள் கண்களினாலே கண்டதும் நாங்கள் நோக்கிப் பார்த்ததும்" - நாங்கள் அறிவிப்பதைக் குறித்து மிகவும் நிச்சயத்தோடு இருக்கிறோம். நாங்கள் இயேசு கிறிஸ்து பேசியிருப்பதைக் கேட்டிருக்கிறோம். அவரை எங்கள் சொந்தக் கண்களால் நோக்கிப் பார்த்திருக்கிறோம். எங்கள் சொந்தக் கைகளினாலே இயேசு கிறிஸ்துவை நாங்கள் தொட்டிருக்கிறோம். நாங்கள் அவரோடுகூட பல வருஷங்களாக ஜீவித்தோம். இயேசு கிறிஸ்துவின் உபதேசங்களை எங்கள் காதுகளாலே நாங்கள் கேட்டிருக்கிறோம். அவருடைய தெய்வீகக் கிரியைகளை நாங்கள் எங்கள் கண்களாலே கண்டிருக்கிறோம். (1யோவான் 1:1-3; 2பேதுரு 1:16; அப் 5:32; 1கொரி 15:1-8)

நோக்கிப்பார் (looked upon)
θεάομαι - theaomai 2300

வினைச்சொல் - காண், பார் **(gazing with a purpose, see with desire; regard with admiration)**

நோக்கு **θεωρέω** **theooreoo 2334**

I யோவான் - தொகுப்புரை

1 அதிகாரம்

வினைச்சொல் - பார், காண், நோக்கு (to gaze at, as a spectacle)

இவ்விரு கிரேக்க வார்த்தைகளும் ஒரு பொருளை உன்னிப்பாகக் கவனிப்பதைக் குறிப்பிடும் இல்லாத பொருளை நோக்கிப் பார்ப்பதற்கு இந்த வார்த்தை பயன்படுத்தப் படாமல் உண்மையாகவே இருக்கும் பொருளைப் பார்ப்பதற்கே இவ்வார்த்தை பயன்படுத்தப்படும்

"ஜீவவார்த்தை" (Word of life) - இயேசு கிறிஸ்துவே ஜீவவார்த்தை அந்த வார்த்தை மாம்சமாகி, மனுஷருக்குள்ளே வாசம் பண்ணினார் அப்போஸ்தலர்களுடைய காலத்தில் ஏராளமானோர் ஜீவித்தார்கள் அவர்கள் கற்பனைப் பாத்திரங்கள் அல்ல. மெய்யாகவே ஜீவித்தவர்கள் அதுபோலவே இயேசு கிறிஸ்துவும் ஒரு கற்பனைப் பாத்திரமல்ல அவர் மெய்யாகவே ஜீவவார்த்தையாக ஜீவித்தவர் (யோவான் 1:1-2,14, 1தீமோ 3:16)

நித்திய ஜீவனைப் பற்றி யோவான் கூறியுள்ள சத்தியங்கள்

1 ஜனங்கள் இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து நித்திய ஜீவனைப் பெறுக் கொள்ளலாம். (யோவான் 3:15-16,36, யோவான் 5:24, யோவான் 6:40,47

2 இயேசு கிறிஸ்து மனுஷருக்குக் கொடுக்கும் ஜீவத்தண்ணீர் அவர்களுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாய் இருக்கும். (யோவான் 4:14)

3 நித்திய ஜீவனுக்காக ஜனங்கள் பலனைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். (யோவான் 4:36)

4 வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்ப்பதினால் ஜனங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு யோவான் 5:39)

5 நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காக ஜனங்கள் கிரியை நடப்பிக்க வேண்டும். (யோவான் 6:27)

6 இயேசு கிறிஸ்துவின் மாம்சத்தைப் புசித்து அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவர்களுக்கு நித்திய ஜீவன் உண்டு யோவான் 6:54

7 இயேசு கிறிஸ்துவிடம் நித்திய ஜீவவசனங்கள் உண்டு (யோவான் 6:68

8 தம்முடைய நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படியும் ஜனங்களுக்கு இயேசு கிறிஸ்து நித்திய ஜீவனைக் கொடுக்கிறார் (யோவான் 6:27 யோவான் 10:27-29)

9 ஜனங்கள் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று தேவன் கட்டளையிட்டிருக்கிறார் (யோவான் 12:50)

10 இயேசு கிறிஸ்துவின் மூலமாகத் தேவனிடத்தில் வருகிறவர்கள் அனைவருக்கும் நித்திய ஜீவனைக் கொடுப்பதற்காகத் தேவன் இயேசு கிறிஸ்துவை அனுப்பினார் (யோவான் 17:2)

11 ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன் யோவான் (7:2-3

12 இயேசு கிறிஸ்து அந்த நித்திய ஜீவன் (1யோவான் 1:1-3)

13 அந்த நித்திய ஜீவனை அப்போஸ்தலர்கள் நோக்கிப் பார்த்தார்கள், கேட்டார்கள் தொட்டுப் பார்த்தார்கள் (1யோவான் 1:1-3)

14 நித்திய ஜீவனைப் பெற்றுக் கொண்ட பின்பு, விசுவாசிகளிடத்தில் அந்த ஜீவன் நிலைத்திருக்க வேண்டும் (யோவான் 6:27, 1யோவான் 2:24

15 ஜனங்களிடத்தில் நித்திய ஜீவன் நிலைத்திருந்தால் அவர்கள் குமாரனிலும் பிதாவிலும் நிலைத்திருப்பார்கள் (1யோவான் 2:24

16 எல்லா ஜனங்களுக்கும் நித்திய ஜீவனை அளிப்பதாக தேவன் வாக்கு பண்ணியிருக்கிறார் (1யோவான் 2:25 ஆயினும் இதைப் பெற்றுக் கொள்வதற்கு தேவன் நியமித்திருக்கும் நிபந்தனைகளைக் கைக் கொள்கிறவர்களுக்கு மட்டுமே நித்திய ஜீவன் அளிக்கப்படும். (யோவான் 6:27

1 அதிகாரம்

17 தன் சகோதரனைப் பகைக்கிறவனுக்குள் நித்திய ஜீவன் நிலைத்திராது. (1யோவான் 3:15)

18 தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார் (1யோவான் 5:11)

19 தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவில் நித்திய ஜீவன் இருக்கிறது. (1யோவான் 5:11)

20 நித்திய ஜீவனைப் பெற்றிருக்கிறவர்கள் தங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்பதை அறிந்து கொள்ளலாம். (1யோவான் 5:13,20; யோவான் 3:16; யோவான் 5:24; யோவான் 17:2-3)

2. ஐக்கியத்தின் ஐந்து நிபந்தனைகள்

(1) தேவ வாக்கியத்தின் ஒளியில் நடக்க வேண்டும்

1யோவான் 1:3 நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது.

1யோவான் 1:4 உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி இவைகளை உங்களுக்கு எழுதுகிறோம்.

1யோவான் 1:5 தேவன் ஒளியாயிருக்கிறார்; அவரில் எவ்வளவேனும் இருளில்லை; இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாயிருக்கிறது.

1யோவான் 1:6 நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம்.

1யோவான் 1:7 அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்.

நாம் ஐக்கியம் கொள்ளவேண்டியவர்கள்

1 பிதாவாகிய தேவன் (ஏசா 57:15; யோவான் 14:23; யோவான் 17:21-23; 1கொரி 6:13; 1யோவான் 1:3-7)

2 குமாரனாகிய இயேசு கிறிஸ்து (மத் 18:20; யோவான் 14:23; யோவான் 15:1-8; 1கொரி 1:9; 1கொரி 10:16; 1யோவான் 1:3-7)

3 பரிசுத்த ஆவியானவர் (ரோமர் 8:9; 1கொரி 3:16; 2கொரி 13:14; பிலி 2:1)

4 விசுவாசிகள் (அப் 1:14; அப் 2:1, 42-47; எபே 5:19; பிலி 2:1-2; 1யோவான் 1:3-7)

நாம் ஐக்கியம் கொள்ள வேண்டாதவர்கள்

1 துன்மார்க்கர் (The ungodly) (சங் 1)

2 பரியாசக்காரர் (Scorners) (சங் 1)

3 அக்கிரமக்காரர் (Workers of iniquity) (சங் 6:8)

4 வீணர் (Vain persons) (சங் 26:4)

5 பொல்லாதவர்கள் Evil workers (சங் 26:5)

6 பாவிகள் (Criminals) (நீதி 1:10-15)

7 புத்தியீனர் (The foolish) (நீதி 9:6; நீதி 14:7)

I யோவான் - தொகுப்புரை

1 அதிகாரம்

8 கோபக்காரன் (The angry man) நீதி 22:24

9 சபையிலிருந்து வெளியே அனுப்பப்பட்ட அஞ்ஞானி (An excommunicated church member) (மத் 18:17)

10 பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்கள் (Those causing divisions) (ரோமர் 16:17)

11 பின்வாங்கிப் போனவர்கள் (Backsliders) (2யோவான் 1:9-11)

12 வேற்றுமையான உபதேசங்களைப் போதிக்கிறவர்கள் (False teachers) 1தீமோ 6:3-5; 2யோவான் 1:10)

13 ஒழுங்கற்று நடக்கிறவன் (The disorderly) 2தெச 3:6)

14 கீழ்ப்படியாதவன் (The disobedient) 2தெச 3:14-15

15. அவிசுவாசிகள் (Unbelievers) (2கொரி 6:14

16 ஒழுக்கக்கேடானவர்கள் (Infidels) (2கொரி 6:15

17 விபச்சாரக்காரர் (Fornicators) (1கொரி 5:9

18 பொருளாசைக்காரர் (Covetous people) (1கொரி 5:10)

19 கொள்ளைக்காரர் (Extortioners) (1கொரி 5:10

20 விக்கிரகாராதனைக் காரர் (Idolaters) (1கொரி 5:10)

21 உதாசினர் (Railers) (1கொரி 5:11)

22 வெறியர் (Drunkards) (1கொரி 5:11)

23 தற்பிரியர் (Lovers of themselves) (2தீமோ 3:2)

24 வீம்புக்காரர் (Boasters) (2தீமோ 3:2

25 அகந்தையுள்ளவர்கள்(Proudpeople) (2தீமோ 3:2)

26 தூஷிக்கிறவர்கள் (Blasphemers) (2தீமோ 3:2)

27 தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்கள் (Those who are disobedient to parents (2தீமோ 3:2)

28 நன்றியறியாதவர்கள் (Unthankful people) (2தீமோ 3:2)

29 பரிசுத்தமில்லாதவர்கள் (Unholy people) (2தீமோ 3:2)

30 சுபாவ அன்பில்லாதவர்கள் (Those without natural affection) (2தீமோ 3:3)

31 இணங்காதவர்கள் (Trucebreakers) (2தீமோ 3:3)

32 அவதூறு செய்கிறவர்கள் (False accusers) (2தீமோ 3:3

33 இச்சையடக்கமில்லாதவர்கள் (Incontinent) (2தீமோ 3:3

34 கொடுமையுள்ளவர்கள் (Fierce people) (2தீமோ 3:3

35 நல்லோரைப் பகைக்கிறவர்கள் (Despisers of those who are good) (2தீமோ 3:3)

36 துரோகிகள் (Traitors) (2தீமோ 3:4

37 துணிகரமுள்ளவர்கள் (Heady people) (2தீமோ 3:4

38 இறுமாப்புள்ளவர்கள் (Highminded people) (2தீமோ 3:4

I யோவான் - தொகுப்புரை

1 அதிகாரம்

39 தேவப்பிரியராயிராமல் சுகபோகப் பிரியராயிருக்கிறவர்கள் (Those who love pleasure more than God) 2தீமோ 3:4

40 மாயமாலக்காரர் (Hypocrites) - தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்கள் those who have "a form of godliness, but deny the power thereof" (2தீமோ 3:5)

"உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி" - யோவான் இந்த வாக்கியத்தை நான்கு இடங்களில் எழுதியிருக்கிறார் (யோவான் 15:11 யோவான் 16:24; 1யோவான் 1:4; 2யோவான் 1:12 மற்ற புஸ்தகங்களில் இந்த வாக்கியம் ஒருதடவை மட்டுமே பயன்படுத்தப் பட்டிருக்கிறது (அப் 2:28)

"தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை" - இயேசு கிறிஸ்து அறிவிக்க வந்த பிரதான செய்தி இதுதான் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மோசேயோ அல்லது வேறு எந்த தீர்க்கதரிசிகளோ இந்தச் சத்தியத்தை இயேசு கிறிஸ்துவைப்போல முழுமையாக அறிவிக்கவில்லை (யோவான் 1:16-17) தேவனுடைய ஒளியை இயேசு கிறிஸ்து தாமே மனுஷருக்கு வெளிப்படுத்தக் காணப்பித்தார் (யோவான் 1:1-9 யோவான் 3:16-20 யோவான் 8:12 யோவான் 12:35-36

"தேவன் ஒளியாயிருக்கிறார்" - தேவனை ஆள்தத்துவம் பண்ணுகிறவர் அவர் ஒருவரே, சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக் கூடாதவருமாயிருக்கிறார் (1தீமோ 6:16) தேவன் ஒளியாய் இருக்கிறார் என்பது அவருடைய சுபாவத்தை வெளிப்படுத்துகிறது. இயேசு கிறிஸ்து வழியும், சத்தியமும் ஜீவனுமாய் இருப்பதுபோல (யோவான் 10:9 யோவான் 14:6) தேவன் ஒளியாயிருக்கிறார் (யோவான் 4:24)

"இருள்" - தேவன் ஞானம், அறிவு, பரிசுத்தம் சத்தியம் ஆகியவற்றின் ஆதாரமாக இருக்கிறவர் அவரிடத்தில் அறியாமை பாவம், இருள் ஆகிய எதுவும் காணப்படுவதில்லை. இந்த உலகத்திற்குச் சூரியன் ஒளியாக இருப்பதுபோல தேவன் மனுஷருக்கு ஒளியாய் இருக்கிறார்

"-ஆல்" "If" என்னும் வார்த்தை வேதத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிற விதம்

1 மாயமாலக்காரர் பயன்படுத்தும் விதம். - நாம் அவரோடே ஐக்கியப் பட்டவர்களென்று சொல்லியும் இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால் சத்தியத்தின்படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம் (1யோவான் 1:6)

2 விசுவாசிகள் பயன்படுத்தும் விதம் அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப் பட்டிருப்போம். (1யோவான் 1:7

3 தங்களைத்தாங்களே வஞ்சிக்கிறவர்கள் பயன்படுத்தும் விதம் - நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது (1யோவான் 1:8)

4 தன் பாவத்திற்காக மனம்வருந்துகிற பாவி பயன்படுத்தும் விதம் நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார் (1யோவான் 1:9)

5 தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணுகிறவர்கள் பயன்படுத்தும் விதம் நாம் பாவஞ்செய்யவில்லை யென்போமானால், நாம் அவரைப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம் அவருடைய வார்த்தை நமக்குள் இராது (1யோவான் 1:10)

ஐக்கியம் (fellowship) κοινωνία koinoonia 2842

I யோவான் தொகுப்புரை

1 அதிகாரம்

பெண்பால் பெயர்ச்சொல - அந்நியோந்நியம், ஐக்கியம், பங்கை ஏற்றுக்கொள்தல, பொருள், சகாயம் தர்மம், உடன்படு (2கொரி 13:14 (யோவான் 1:3, 6, 7)

"அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்" - நம்முடைய பாவங்களை நாம் அறிக்கை செய்யும்போது நம்முடைய சகல பாவங்களையும் இயேசு கிறிஸ்து நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கிறார் யோவான் 1:7 இயேசு கிறிஸ்து ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப் பட்டிருப்போம். (யோவான் 1:7)

(2) நமது பாவங்களை அறிக்கையிட வேண்டும் - (ரோமர் 3:23)

யோவான் 1:8 நமக்குப் பாவமில்லை யென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம் சத்தியம் நமக்குள் இராது.

(3) பாவங்களிலிருந்து மனந்திருந்தி தேவனோடு சமாதானமாக இருக்க வேண்டும் - (லூக்கா 13:1-5)

1யோவான் 1:9 நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் நம்மை இரட்சிப்பதற்குத் தேவன் செய்யும் காரியங்கள்

1 அவர் நமக்கு உண்மையுள்ளவராக இருக்கிறார்

2 அவர் நமக்கு நீதியுள்ளவராய் இருக்கிறார்

3 அவர் நம்முடைய பாவங்களை மன்னிக்கிறார்

4 எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கிறார்

(4) தேவனுக்கு விரோதமாக நாம் பாவம் செய்ததை அங்கீகரிக்க வேண்டும்

1யோவான் 1:10 நாம் பாவஞ்செய்ய வில்லையென்போமானால் நாம் அவரைப் பொய்யராக்குகிறவர் களாயிருப்போம், அவருடைய வார்த்தை நமக்குள் இராது.

2 அதிகாரம்

(5) பாவம் செய்யாமல் ஜீவித்து ஐக்கியத்தைக் காத்துக் கொள்ள வேண்டும் - (ரோமர் 6:1-23; 8:1-13; தீத்து 2:11-14; எபி 12:14)

1யோவான் 2:1 என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன். ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்.

1யோவான் 2:2 நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்.

"பிள்ளைகளே" (little children) - இந்த வார்த்தை இந்த நிருபத்தில் ஒன்பது இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (1யோவான் 2:1,12; 1:18,28; 1யோவான் 3:7,18; 1யோவான் 4:4,21). மற்ற புஸ்தகங்களில் இந்த வார்த்தையை நாம் இரண்டு வசனங்களில் காணலாம் (யோவான் 13:33; கலா 4:19).

"நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு" - நாம் பாவம் செய்யக்கூடாது என்பதற்காகவே சுவிசேஷம் எழுதப்பட்டிருக்கிறது. இந்தச் சத்தியத்தைச் சுவிசேஷம் வலியுறுத்திக் கூறுகிறது (மத் 1:21; ரோமர் 6:16-23; ரோமர் 8:1-13; கலா 5:16-26; கொலோ 3:5-10; தீத்து 2:11-12).

"ஒருவன் பாவஞ்செய்வானானால்" - நாம் ஒளியில் நடந்தால் பாவம் செய்யமாட்டோம் (1யோவான் 1:7,9). ஒருவர் பாவத்தில் விழுந்தாலும் பாவத்திலிருந்து மீள்வதற்கு அவருக்கு ஒரு நம்பிக்கை உள்ளது. தான் செய்த பாவங்களை அவர் இயேசு கிறிஸ்துவிடம் அறிக்கையிட்டு பாவமன்னிப்பைப் பெற்று சுத்திகரிக்கப்பட முடியும் (1யோவான் 1:9; கலா 4:19).

விசுவாசிகளுக்குக் கிறிஸ்துவின் ஊழியம்

1. பரிந்து பேசுகிறவர்
2. நீதிபரர்
3. நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி

பரிந்து பேசுகிறவர் (Advocate) - παράκλητος - parakleetos - 3875

ஆண்பால் பெயர்ச்சொல் - தேற்றரவாளன், நீதிபரர் (a Helper; Advocate) (யோவான் 14:26)

"நீதிபரர்" - நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நீதிபரராக இருக்கிறார். அநீதிமான்களுக்காக நீதிபரர் பாடுகளை அனுபவித்தார் (1யோவான் 2:1; 1பேதுரு 3:18; 1கொரி 1:30; 2கொரி 5:14-21)

நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி (the atoning sacrifice for sins) - ἱλασμός - hilasmos - 2434

ஆண்பால் பெயர்ச்சொல் - நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி (1யோவான் 2:2; 1யோவான் 4:10)

"நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல" - இயேசு கிறிஸ்து அப்போஸ்தலர்கள், யூதர்கள் ஆகியோருடைய பாவங்களை நிவிர்த்தி செய்வதோடு புறஜாதியாருடைய பாவங்களையும் நிவிர்த்தி செய்கிறார். இயேசு கிறிஸ்து சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார் (எபே 2:11-18; 2கொரி 5:14-21; யோவான் 3:16)

II. தேவனை அறிந்திருப்பதற்கு பதிமூன்று சான்றுகள் - (2:3-29)

1. கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும் - (யோவான் 14:21-24; 15:10)

1யோவான் 2:3 அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதினால் அறிவோம்.

I யோவான் - தொகுப்புரை

2 அதிகாரம்

1யோவான் 2:4 அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனா யிருக்கிறான் அவனுக்குள் சத்தியமில்லை.

1யோவான் 2:5 அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்; நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை அதினாலே அறிந்திருக்கிறோம்.

நாம் இயேசு கிறிஸ்துவை எவ்வாறு அறிந்து கொள்கிறோம்

1 தனிப்பட்ட ஐக்கியம். (1யோவான் 1:3-7, 1யோவான் 2:13)

2 இருதயத்தில் நிறைவான சந்தோஷம். (1யோவான் 1:4)

3 அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுதல் (1யோவான் 2:3, 1யோவான் 3:22)

4 இயேசு கிறிஸ்து நடந்த படியே நடப்பது. (1யோவான் 2:6)

5 பிறரிடத்தில் அன்புகூருதல் (1யோவான் 2:9-11, 1யோவான் 3:10-19,23, 1யோவான் 4:7-21, 1யோவான் 5:1)

6 உலகத்தையும் சாத்தானையும் மேற்கொள்ளுதல் (1யோவான் 2:13-14; 1யோவான் 5:4,18)

7 உலகத்திலும், உலகத்தில் உள்ளவைகளிலும் அன்பு கூராதிருப்பது. (1யோவான் 2:15-17)

8 சகவிசுவாசிகளோடு ஒன்றாயிருப்பது. (1யோவான் 2:19)

9 பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்வது (1யோவான் 2:20-27)

10 விடுதலையாக்கும் சத்தியத்தை அறிந்திருப்பது (1யோவான் 2:21, யோவான் 8:32-36)

11 தேவனையும், கிறிஸ்துவையும் அங்கிகரிப்பது. (1யோவான் 2:22-25)

12 நீதியைச் செய்வது. (1யோவான் 2:29, 1யோவான் 3:7-10; 1யோவான் 5:1-4,18)

13 நம்மைச் சுத்திகரித்துக் கொள்வது (1யோவான் 3:3)

14 மறுபடியும் பிறப்பது. (1யோவான் 2:29, 1யோவான் 3:9; 1யோவான் 5:1-18)

15 பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்படுவது (1யோவான் 1:7-9, 1யோவான் 3:5-6)

16 ஆக்கினையிலிருந்து விடுதலை பெற்றிருப்பது. (1யோவான் 3:20-24)

17 பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம்பண்ணுவது. (1யோவான் 3:24, 1யோவான் 4:4,13)

18 விசுவாசம் (1யோவான் 2:23, 1யோவான் 5:1-10)

19 கிறிஸ்துவை அறிக்கையிடுவது (1யோவான் 4:14-15)

20 கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வது (1யோவான் 5:10-13, யோவான் 1:12)

21 ஜெபத்திற்குப் பதில் பெறுவது (1யோவான் 3:21, 22; 1யோவான் 5:14-15)

"அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால்" - நாம் இரட்சிக்கப்படுவதற்குத் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வது அவசியம். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் தேவனுடைய கற்பனைகளைத் தொடர்ந்து கைக்கொள்ளும் போது தேவன் நம்மை ஆசீர்வதிக்கிறார் (ரோமர் 1:5, யாக் 1:22-25, 1பேதுரு 1:2)

I யோவான் - தொகுப்புரை

2 அதிகாரம்

"அவனுக்குள் சத்தியமில்லை" - இயேசு கிறிஸ்துவை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமிராது. 1யோவான் 2:4-5 ஒருசிலர் பாவத்தில ஜீவித்துக் கொண்டு தங்களுடைய பாவங்களையும், அக்கிரமங்களையும் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் மூடும் என்று கூறுகிறார்கள் இது தவறான உபதேசம் நம்முடைய பாவங்களிலிருந்து நாம விடுதலைபெற்று இரட்சிக்கப்பட வேண்டியது மிகவும் அவசியம்

2. கிறிஸ்து நடந்த படியே நாமும் தேவபக்தியுடன் நடக்க வேண்டும் - 2:29; 3:7; 4:17; 5:1-18)

1யோவான் 2:6 அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன் அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும்.

"அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும்" விசுவாசிகள் இயேசு கிறிஸ்து நடந்தபடியே தாங்களும் நடக்கவேண்டும் 1யோவான் 2:6 1யோவான் 3:7-10 1யோவான் 4:17 1பேதுரு 2:21 கிறிஸ்துவிற்குள் நிலைத்திருப்பது என்பதற்கு மாம்சத்தின் இச்சைகளைச் சிலுவையில் அறைந்து பாவத்திற்கு மரித்து புதிய சிருஷ்டியாயிருப்பது என்று பொருள் (2கொரி 5:17 [redacted] 5:16-26, ரோமர் 8:12-13, கொலோ 3:5-10)

கிறிஸ்துவிற்குள் நிலைத்திருக்கிறோம் என்பதற்குச் சான்றுகள்

1. கிறிஸ்துவைப்போல நடக்க வேண்டும். (1யோவான் 2:6)
2. மற்ற சகோதரரிடத்தில் அன்புகூர வேண்டும். (1யோவான் 2:10; 1யோவான் 3:14-15)
3. தேவனுடைய வார்த்தை நமக்குள் நிலைத்திருக்க வேண்டும். (1யோவான் 2:14)
4. தேவனுடைய சித்தத்தைச் செய்ய வேண்டும். (1யோவான் 2:17)
5. குமாரனிலும், பிதாவிலும் நிலைத்திருக்க வேண்டும். (1யோவான் 2:24-25)
6. இயேசு கிறிஸ்துவால் பெற்ற அபிஷேகம் நமக்குள் நிலைத்திருக்க வேண்டும். (1யோவான் 2:27)
7. பாவத்திலிருந்து விடுதலை பெற்றிருக்க வேண்டும். (1யோவான் 3:6)
8. கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும். (1யோவான் 3:24; யோவான் 15:10)
9. பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம் பண்ண வேண்டும். (1யோவான் 3:24)
10. ஆவியின் கனியை வெளிப்படுத்திக் காண்பிக்க வேண்டும். (யோவான் 15:4-7)

3. சகோதரரிடத்தில் அன்புகூரவேண்டும் - (யோவான் 13:34-35; 15:12-13; 1கொரி 13)

1யோவான் 2:7 சகோதரரே, நான் உங்களுக்குப் புதிய கற்பனையை அல்ல, ஆதிமுதல் நீங்கள் பெற்றிருக்கிற பழைய கற்பனையையே எழுதுகிறேன்; அந்தப் பழைய கற்பனை நீங்கள் ஆதிமுதல் கேட்டிருக்கிற வசனந்தானே.

1யோவான் 2:8 மேலும், நான் புதிய கற்பனையையும் உங்களுக்கு எழுதுகிறேன்; இது அவருக்குள்ளும் உங்களுக்குள்ளும் மெய்யாயிருக்கிறது. ஏனென்றால், இருள் நீங்கிப்போகிறது, மெய்யான ஒளி இப்பொழுது பிரகாசிக்கிறது.

1யோவான் 2:9 ஒளியிலே இருக்கிறேன் என்று சொல்லியும் தன் சகோதரனைப் பகைக்கிறவன் இதுவரைக்கும் இருளிலே இருக்கிறான்.

1யோவான் 2:10 தன் சகோதரனிடத்தில் அன்புகூருகிறவன் ஒளியிலே நிலைகொண்டிருக்கிறான்; அவனிடத்தில் இடறல் ஒன்றுமில்லை.

2 அதிகாரம்

1யோவான் 2:11 தன் சகோதரனைப் பகைக்கிறவன் இருளிலே இருந்து இருளிலே நடக்கிறான்; இருளானது அவன் கண்களைக் குருடாக்கினபடியால் தான் போகும் இடம் இன்னதென்று அறியாதிருக்கிறான்.

புதிய (new) - καινός - kainos - 2537

பெயரடை - புது, புதிய, நவமான, புதிதான (renewed; fresh) 2கொரி 5:17 - இந்தப் புதிய கற்பனையானது புதுப்பிக்கப்பட்ட பழைய கற்பனையாகும். இயேசு கிறிஸ்துவினால் கற்பனையின் பொருள் பூரணமாய் உள்ளது. 1யோவான் 2:7-8, லேவி 19:18= யோவான் 13:34

"தன் சகோதரனைப் பகைக்கிறவன் இதுவரைக்கும் இருளிலே இருக்கிறான்" - தன்னை விசுவாசி என்று கூறிக் கொள்கிறவர்கள் சகசகோதரர்களை நேசிக்க வேண்டும். (1யோவான் 2:9,11)

"அவனிடத்தில் இடறல் ஒன்றுமில்லை" சக சகோதரரிடத்தில் அன்புகூருகிறவன் ஆவியின் கனியைத் தன் ஜீவியத்தில் வெளிப் படுத்துகிறான். தன் சகோதரனிடத்தில் அன்புகூருகிறவன் ஒளியிலே நிலை கொண்டிருக்கிறான். தன் சகோதரன் நிமித்தமாக ஒருபோதும் இவன் இடறிப்போக மாட்டான்.

"இடறல்" (stumbling) - (1பேதுரு 2:8)

4. பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்க வேண்டும் - (எபே 1:7; 1யோவான் 1:9; வெளி 1:5; கொலோ 2:13)

1யோவான் 2:12 பிள்ளைகளே, அவருடைய நாமத்தினிமித்தம் உங்கள் பாவங்கள் மன்னிக்கப் பட்டிருக்கிறதினால் உங்களுக்கு எழுதுகிறேன்.

ஆவிக்குரிய அனுபவத்தின் நான்கு நிலைகள்

1. சிறுபிள்ளை
2. பாலகன்
3. வாலிபன்
4. தகப்பன்

சிறுபிள்ளை (little children) - τεκνίον - teknion - 5040

பாலவேறுபாடற்ற பெயர்ச்சொல் - பிள்ளை, சிறுபிள்ளை (infants; newborn) - பிறந்த குழந்தை (1யோவான் 2:12)

பாலகன் (little children) - παιδίον - paidion - 3813

பால வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பிள்ளை, பாலகன், சிறுபிள்ளை, குழந்தை நடக்கவும் பேசவும் அறிந்த பாலகன் (1யோவான் 2:13)

வாலிபன் (young men) - νεανίσκος - neaniskos - 3495

பெயர்சொல் - வாலிபன் - சிறுபிள்ளைகளுக்குரிய குழந்தைத்தனம் இல்லாமல் பொறுப்புள்ள வாலிபன் (1யோவான் 2:13-14)

தகப்பன் (father) - προπάτωρ - propatoor - 3962

ஆண்பால் பெயர்ச்சொல் - தகப்பன், பிதா, முன்னோர் - கர்த்தருக்குள் வளர்ந்து தேறினவர்கள் (1யோவான் 2:13-14)

"அவருடைய நாமத்தினிமித்தம்" - அவருடைய நாமத்தின் மூலமாக. (மத் 1:21, அப் 4:12)

I யோவான் - தொகுப்புரை

2 அதிகாரம்

5. **இயேசு கிறிஸ்துவை அறிந்திருக்க வேண்டும் - பொல்லாங்கனை ஜெயித்திருக்க வேண்டும்** - (1யோவான் 5:18)

1யோவான் 2:13 பிதாக்களே, ஆதிமுதலிருக்கிறவரை நீங்கள் அறிந்திருக்கிறதினால் உங்களுக்கு எழுதுகிறேன். வாலிபரே, பொல்லாங்கனை நீங்கள் ஜெயித்ததினால் உங்களுக்கு எழுதுகிறேன். பிள்ளைகளே, நீங்கள் பிதாவை அறிந்திருக்கிறதினால் உங்களுக்கு எழுதுகிறேன்.

"பொல்லாங்கன்" (the wicked one) - சாத்தான் (1யோவான் 2:13-14; 1யோவான் 5:18; மத் 13:19)

6. **தேவ வசனம் நம்மில் நிலைத்திருக்க வேண்டும்** - (யோவான் 8:31-32; 15:7; ரோமர் 1:16)

1யோவான் 2:14 பிதாக்களே, ஆதிமுதலிருக்கிறவரை நீங்கள் அறிந்திருக்கிறதினால் உங்களுக்கு எழுதியிருக்கிறேன். வாலிபரே, நீங்கள் பலவான்களாயிருக்கிறதினாலும், தேவவசனம் உங்களில் நிலைத்திருக்கிறதினாலும், நீங்கள் பொல்லாங்கனை ஜெயித்ததினாலும், உங்களுக்கு எழுதியிருக்கிறேன்.

"தேவவசனம் உங்களில் நிலைத்திருக்கிறதினாலும் நீங்கள் பொல்லாங்கனை ஜெயித்ததினாலும்" பாவத்திலிருந்து விலகி ஜெயஜீவியம் ஜீவிப்பதற்கு இதுதான் இரகசியம். தேவனுடைய வார்த்தையின் பிரகாரம் ஒருவர் ஜீவிக்கும்போது அவர் பாவத்திற்கு விலகி ஜீவிப்பார் (1யோவான் 3:9)

7. **உலகத்திலுள்ளவைகளில் அன்புகூராமல் தேவனுடைய சித்தத்தைச் செய்ய வேண்டும்** - (யோவான் 15:18; 17:16; ரோமர் 12:1-2; யாக் 4:4)

1யோவான் 2:15 உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள். ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை.

1யோவான் 2:16 ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினால் உண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினால் உண்டானவைகள்.

1யோவான் 2:17 உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்.

நாம் அன்புகூரக்கூடாத இரண்டு காரியங்கள்

1. உலகம்
2. உலகத்திலுள்ளவைகள்

உலகம் (fashion) - κόσμος - kosmos - 2889

ஆண்பால் பெயர்ச்சொல் - உலகம், அலங்கரிப்பு, லௌகிகம் (order, behavior, fashion, government of this world system) (மத் 4:8; மத் 13:22; எபே 2:1-3; யாக் 4:4; 2பேதுரு 1:4; 2பேதுரு 2:20)

"ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை" ஆகையினால் நாம் உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராமல் ஜீவிக்க வேண்டும். பிதாவின் அன்பும், உலகத்தில் அன்புகூருவதும் ஒன்றல்ல.

2 அதிகாரம்

உலகத்திலுள்ள மூன்று காரியங்கள்

1 மாம்சத்தின் இச்சை (The lust of the flesh) (1யோவான் 2:15)

2 கண்களின் இச்சை (The lust of the eyes)

3 ஜீவனத்தின் பெருமை (The pride of life)

கண்களின் இச்சை

1 ஸ்திரீகள்மீது இச்சை (மத் 5:28 யோபு 31:1)

2 விபசாரம் நிறைந்த கண்கள் (2பேதுரு 2:14; ரோமர் 1:18-28)

3 பேராசை (சங் 10:3, லூக்கா 12:15)

4 இச்சித்தவைகள் அனைத்தும் (பிர 2:10)

5 விக்கிரகாராதனை (எசே 6:9 எசே 18:6-15)

6 தீமையான எல்லாக் காரியங்களும் (மத் 6:23, மத் 7:22)

ஜீவனத்தின் பெருமை

1 சுயநீதி (யோபு 32:1)

2 ஸ்தானங்கள் (ஆதி 3:5, எசே 28:11-17; 1தீமோ 3:6; 3யோவான் 1:9)

3 அதிகாரம் (லேவி 26:19)

4 ஐசுவரியங்கள் (சங் 39:6; எசே 28:5)

5 அழகு (எசே 28:11,17)

6 யுத்தம் பண்ணும் வலிமை (2நாளா 26:16)

7 சுயபெருமை (1யோவான் 2:15, சங் 24:4; சங் 36:2, ஏசா 3:16

பெருமை (pride) - ἀλαζονεία - alazoneia - 212

பெண்பால் பெயர்ச்சொல் - மேன்மைப் பாராட்டுதல் பெருமை (vain-boastings) (யாக் 4:16 1யோவான் 2:16)

தீர்க்கதரிசன எண் - 1

"உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம் தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்" - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை (1யோவான் 2:17)

ஒழிந்துபோம் (passeth away) - παράγω - paragoo - 3855

வினைச்சொல் - புறப்பட்டுப்போ, போ, ஒழிந்துபோ, நீங்கிப்போ, கடந்துபோ "pass away" (யோவான் 2:17 1கொரி 7:31); "pass by" (மத் 20:30; மாற்கு 2:14; மாற்கு 15:21; யோவான் 8:59 யோவான் 9:1) "pass" (1யோவான் 2:8 "pass forth" (மத் 9:9); "depart" (மத் 9:27

தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவர்களுக்கு வரும் ஆசீர்வாதங்கள்

1 தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பார்கள் (மத் 7:21

2 பாவத்தில் விழுவதிலிருந்து காக்கப்படுவார்கள் (மத் 7:24-29

3 அவர்களுடைய கிரியைகள் தேவனுக்குப் பிரியமான கிரியைகள் என்று உறுதி பண்ணப்படும் (யோவான் 3:21)

4 ஜெபங்களுக்குப் பதில் கிடைக்கும் (யோவான் 9:31)

2 அதிகாரம்

5. ஆசீர்வதிக்கப் பட்டிருப்பார்கள் யாக் 1:22-25

6. அசைக்கப்படமாட்டார்கள் (சங் 15:1-5)

7. நித்தியமாக நிலைத்திருப்பார்கள் (1யோவான் 2:17)

8. புதிய பிறப்பு (1யோவான் 2:29)

9. கிறிஸ்துவைப் போன்ற நீதி 1யோவான் 3:7

10. தேவனுடைய பிள்ளையாக இருக்கிறார்கள் என்பதற்கு உத்தரவாதம் பெற்றிருப்பார்கள் 1யோவான் 1:9

8. பரிசுத்த வான்களோடு நிலைத்திருக்க வேண்டும் - யோவான்17:11,21 ரோமர் 16:17 எபே 4:1-3

1யோவான் 2:18 பிள்ளைகளே, இது கடைசிக்காலமாயிருக்கிறது; அந்திக் கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்டபடி இப்பொழுதும் அநேக அந்திக்கிறிஸ்துகள் இருக்கிறார்கள், அதினாலே இது கடைசிக் காலமென்று அறிகிறோம்

1யோவான் 2:19 அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்து போனார்கள் ஆகிலும் அவர்கள் நம்முடையவர் களாயிருக்கவில்லை. நம்முடையவர் களாயிருந்தார்களானால் நம்முடனே நிலைத்திருப்பார்களே, எல்லாரும் நம்முடையவர் களல்லவென்று வெளியாகும் படிக்கே பிரிந்துபோனார்கள்

தீர்க்கதரிசன எண் - 2

"பிள்ளைகளே, இது கடைசிக்காலமாயிருக்கிறது, அந்திக்கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்டபடி இப்பொழுதும் அநேக அந்திக்கிறிஸ்துகள் இருக்கிறார்கள் அதினாலே இது கடைசிக் காலமென்று அறிகிறோம்" (1யோவான் 2:18)

இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

"அந்திக்கிறிஸ்து" (antichrist) - கிறிஸ்துவிற்கு எதிரான அனைவருமே அந்திக்கிறிஸ்துதான் (1யோவான் 2:18, 22 1யோவான் 4:3 2யோவான் 1:7) ஆயினும் இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் அந்திக்கிறிஸ்து இன்னும் வரவில்லை.

அந்திக்கிறிஸ்துவின் மறுபெயர்கள்

1. அந்திக்கிறிஸ்து (Antichrist) 1யோவான் 2:18)
2. அசீரியன் (The Assyrian) (ஏசா 10:20-27; ஏசா 30:18-33 ஏசா 31:4-32:20; மீகா 5:3-15)
3. பாபிலோன் ராஜா (The King of Babylon) (ஏசா 14:4)
4. சங்கரிக்கிறவன் (The Spoiler) (ஏசா 16:4)
5. ஒடுக்குகிறவன் (The Extortioner) (ஏசா 16:4)
6. மேசேக் தூபால ஜாதிகளின் தலைமையான அதிபதியாகிய மாகோகு தேசத்தானான கோகுக்கு (Gog, the Chief Prince of Meshech and Tubal) (எசே 38:2-3)
7. சின்ன கொம்பு (The little horn) (தானி 7:8,24, தானி 8:9,23)
8. மூர்க்க முகமும் சூதான பேச்சுமுள்ள சாமர்த்தியமான ஒரு ராஜா (King of Fierce Countenance) (தானி 8:23)
9. வரப்போகிற அதிபதி (The Prince that Shall come) தானி 9:26-27
10. வடதிசை ராஜா (The King of the north) (தானி 11:5-45
11. பாவமனுஷன் (The Man of sin) (2தெச 2:1-12)
12. கேட்டின் மகன் (The Son of perdition) (2தெச 2:1-12

2 அதிகாரம்

13. துன்மார்க்கன் (The Wicked) ஏசா 11:4

14. அக்கிரமக்காரன் (That Wicked) 2தெச 2:8-12

15. மிருகம் (The Beast) (தானி 7:11 வெளி 13)

9. பரிசுத்தராலே அபிஷேகம் பெற்று சத்தியத்தை அறிந்திருக்க வேண்டும் - (14:4 யோவான் 7:37-39; 14:16-17,26; 15:26; 16:7-15

1யோவான் 2:20 நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்றுச் சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள்

1யோவான் 2:21 சத்தியத்தை நீங்கள் அறியாததினாலல்ல, நீங்கள் சத்தியத்தை அறிந்திருக்கிறதினாலும், சத்தியத்தினால் ஒரு பொய்யுமுண்டாயிராதென்பதை நீங்கள் அறிந்திருக்கிறதினாலும் உங்களுக்கு எழுதியிருக்கிறேன்

அபிஷேகம் (unction) - χρῖσμα - chrisma - 5545

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - அபிஷேகம் (anything smeared on, a scented unguent, ointment of thicker consistency than muron, sweet oil, perfume) "unction" (1யோவான் 2:20) "anointing" (1யோவான் 2:27) இந்த வசனத்தில அபிஷேகம் என்பது பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைக் குறிக்கும் பரிசுத்த ஆவியான வரிடமிருந்து எல்லா வரங்களும் கிருபைகளும் சபைக்கு வருகின்றன (யாத் 29:7, யாத் 30:23-25 சங் 45:7

அபிஷேகம் பண்ணு (anointing) χρίω - chrioo 5548

வினைச்சொல் - அபிஷேகம் பண்ணு (லூக்கா 4:18; அப 4:27; அப 10:38 2கொரி 1:21 எபி 1:9

"சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள்" - இரட்சிப்பிற்கும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கும் தேவையான எல்லாக் காரியங்களையும் அறிந்திருக்கிறீர்கள் ஆகையினால் உலகத்திற்குரிய ஞானம் நமது இரட்சிப்பிற்குத் தேவையில்லை உலக ஞானத்தினால் நாம் வஞ்சிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையோடு ஜீவிக்க வேண்டும் (1யோவான் 2:26-27

"சத்தியத்தினால் ஒரு பொய்யுமுண்டாயிராது" - விசுவாசிகளுக்கு ஏற்கெனவே தெரிந்திருக்கும் சத்தியத்தை யோவான் இங்கு உறுதி பண்ணுகிறார் ஆகையினால் உலகத்தாருடைய தவறான உபதேசங்களுக்கு நாம் சிக்கிக் கொள்ளாதவாறு மிகுந்த எச்சரிக்கையோடு இருக்க வேண்டும் (1யோவான் 2:26-27

10. பிதாவையும் குமாரனையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் - (தானி 7:9-14, யோவான் 1:1-2 14:21-28; அப் 7:55-59 1கொரி 11:3)

1யோவான் 2:22 இயேசுவைக் கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவனேயல்லாமல் வேறே யார் பொய்யன்? பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து.

1யோவான் 2:23 குமாரனை மறுதலிக்கிறவன் பிதாவையு முடையவனல்ல குமாரனை அறிக்கையிடுகிறவன் பிதாவையும் உடையவனாயிருக்கிறான்

இயேசு கிறிஸ்துவைப் பற்றிய தவறான உபதேசங்கள்

1. இயேசுவைக் கிறிஸ்து அல்ல என்று மறுதலிப்பது.

2. இயேசுவின் பிதா தேவனல்ல என்று கூறுவது.

I யோவான் - தொகுப்புரை

2 அதிகாரம்

3. இயேசுவைத் தேவனுடைய ஒரேபேறான குமாரனல்ல என்று கூறுவது.

இயேசு கிறிஸ்து கன்னி மரியாளுடைய வயிற்றில் பரிசுத்த ஆவியானவரால பிறந்தவர் என்பதை யூதர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. யோசேப்பிற்கும் மரியாளுக்கும் பிறந்த சாதாரண மனுஷன் என்றே அவர்கள் இயேசு கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றிக் கூறுகிறார் (மத் 13:55-57 மாற்கு 6:3)

"குமாரனை மறுதலிக்கிறவன் பிதாவையுடையவனல்ல" - இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய ஒரேபேறான குமாரன் என்று விசுவாசிக்காதவர்களுக்குப் பாவத்திலிருந்து இரட்சிப்பில்லை. அவர்கள் மறுபடியும் பிறக்க முடியாது. இப்படிப்பட்டவர்கள் தேவனையும் கிறிஸ்துவையும் அறிந்துகொள்ளவில்லை. (யோவான் 5:4 மத் 1:21 யோவான் 3:16 யோவான் 14:6 யோவான் 17:1-3)

மறுதலித்தல் (denieth) - ἀρνέομαι - arneomai - 720

வினைச்சொல் - மறுதலி, இல்லையென்று சொல், தெரியாதென்று சொல், வெறு (to deny) (எபி 11:24)

"குமாரனை அறிக்கையிடுகிறவன் பிதாவையும் உடையவனாயிருக்கிறான்" இந்த வாக்கியம் வேதாகமத்தின் மூலப்பிரதிகளில் காணப்படவில்லையென்று ஒருசிலர் கூறுகிறார்கள். ஆனால் அது தவறான கருத்து. மூலப்பிரதிகளில் இந்த வாக்கியம் இருந்தது என்பதற்கு பல ஆதாரங்கள் உள்ளன. அவையாவன

1. இந்த வசனத்தின் முதல் பகுதியோடு இந்த வாக்கியம் ஒத்திருக்கிறது.
2. வேதாகமத்தின் மற்ற வசனங்களோடு இந்த வாக்கியம் ஒத்திருக்கிறது. (யோவான் 3:16 யோவான் 6:37,44,53 யோவான் 8:19,24; யோவான் 14:6 1யோவான் 5:1,5 10-12)
3. இருபதிற்கும் மேற்பட்ட மூலபாஷைச் சுவடிகளில் இந்த வாக்கியம் காணப்படுகிறது.
4. பழைய பதிப்புகள் பலவற்றில் இந்த வாக்கியம் உள்ளது. (சீரியாக் (Syriac) அராபிக் (Arabic) காப்டிக் (Coptic) ஆகிய பதிப்புகள்)
5. ஆதித்திருச்சபையின் முன்னோர்கள் இந்த வாக்கியத்தை வேதாகமத்தில் ஒரு பகுதியாக அங்கீகரித்திருக்கிறார்கள் (ஓரிகன் (Origen), சிப்ரியன் (Cyprian) சிரில் (Cyril) ஆகியோர்)
6. புதிய ஏற்பாட்டின் கிரேக்க பதிப்புகள் பலவற்றிலும் இந்த வாக்கியம் உள்ளது. (Griesbach, Lachmann, Tischendorf, Tregalles, Alford, Wordsworth, Nestle ஆகிய கிரேக்க பதிப்புகள்)
7. தற்காலப் பதிப்புகள் பலவற்றிலும் இந்த வாக்கியம் இடம்பெற்றுள்ளது (Weymouth, Moffatt, Berkeley, Concordant, Centenary, Goodspeed, Rotherham, Fenton, Revised Standard Version ஆகிய பதிப்புகள்)

11. **கிறிஸ்து நமக்குள் நிலைத்திருக்க வேண்டும்** (யோவான் 15:4 கொலோ 2:6,7 யோவான் 15:3-6)

1யோவான் 2:24 ஆகையால் ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருக்கக்கடவது. ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருந்தால், நீங்களும் குமாரனிலும் பிதாவிலும் நிலைத்திருப்பீர்கள்

1யோவான் 2:25 நித்தியஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம்.

"ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருக்கக் கடவது" - இந்த வாக்கியம் இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது. (1யோவான் 1:1; 1யோவான் 2:13,14)

I யோவான் - தொகுப்புரை

2 அதிகாரம்

"நீங்களும் குமாரனிலும் பிதாவிலும் நிலைத்திருப்பீர்கள்" - ஜனங்கள் குமாரனிலும், பிதாவிலும் நிலைத்திருப்பதற்கு இயேசு கிறிஸ்து அவருடைய ஜீவியத்தில் நிலைத்திருக்க வேண்டும் (யோவான் 15:6)

நிலைத்திருத்தல் (remain) - μένω - menoo - 3306

வினைச்சொல் - தங்கியிரு, நிலைத்திரு, தரித்திரு, இரு, வாசம் பண்ணு, நிலைக்கொண்டிரு, நிலைநில (to abide; stand one's ground; continue) - மெனோ menoo என்னும் கிரேக்க வார்த்தை இந்த வசனத்தில் abide, remain, continue என்று மூன்று விதமாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்து நமக்குள் வாசம் செய்தால் (abide) கிறிஸ்து நமக்குள் நிலைத்திருந்தால் (remain) நாம் குமாரனிடத்திலும், பிதாவினிடத்திலும் தொடர்ந்து நிலைத்திருப்போம் (continue)

"நித்தியஜீவனை அளிப்பேன்" நித்திய ஜீவன் என்பது இயேசுகிறிஸ்துவைக் குறிக்கும் வாக்கியம் (1யோவான் 1:1-2) இயேசு கிறிஸ்துவிற்கு மட்டுமே நித்திய ஜீவன் உண்டு (1யோவான் 5:11-12) தேவனையும், கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன் (யோவான் 6:27; 17:2-3; 1யோவான் 1:1-2; 1யோவான் 5:20)

12. நாம் கிறிஸ்துவிற்குள் நிலைத்திருக்க வேண்டும் - யோவான் 15:4-6,9; கொலோ 1:23; 2:6-7; யூதா 24

1யோவான் 2:26 உங்களை வஞ்சிக்கிறவர்களைக் குறித்து இவைகளை உங்களுக்கு எழுதியிருக்கிறேன்.

1யோவான் 2:27 நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது; ஒருவரும் உங்களுக்குப் போதிக்க வேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல; அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக.

1யோவான் 2:28 இப்படியிருக்க, பிள்ளைகளே, அவர் வெளிப்படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப் போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருங்கள்.

வஞ்சித்தல் (seduce) - πλανάω - planaoo - 4105

வினைச்சொல் - சிதறிப்போ, தப்பான எண்ணங்கொண்டு, வஞ்சி, மோசம் போ, வழியைவிட்டு தப்பு

அபிஷேகம் (anointing) - χρῖσμα - chrisma - 5545

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - அபிஷேகம் (1யோவான் 2:20)

"ஒருவரும் உங்களுக்குப் போதிக்க வேண்டுவதில்லை" உங்களுக்குப் புதிய உபதேசமும் வஞ்சிக்கிறவர்களின் ஆலோசனைகளும் தேவையில்லை (1யோவான் 2:26) யோவான் இவ்வாறு கூறுவதினால் விசுவாசிகளுக்கு இனிமேல் உபதேசமே தேவையில்லை என்பது பொருளல்ல, ஏனெனில் விசுவாசிகளுக்கு உபதேசம் பண்ணுவதற்காக தேவன் தம்முடைய ஊழியக்காரர்களைச் சபைக்கு அனுப்பியிருக்கிறார் (எபே 4:11; எபி 13:7,17)

யோவான் விசுவாசிகளுக்குக் கூறும் இரண்டு கட்டளைகள்

1. அவரில் நிலைத்திருங்கள் (1யோவான் 2:28)
2. என்னில் நிலைத்திருங்கள் (யோவான் 15:4)

I யோவான் - தொகுப்புரை

2 அதிகாரம்

தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டால் மட்டுமே தேவனிடத்தில் தொடர்ந்து நிலைத்திருக்க முடியும் (யோவான் 15:10). தேவனிடத்தில் நிலைத்திருந்தால்தான் கனிதரும் ஜீவியம் ஜீவிக்க முடியும். (யோவான் 15:4,7) தேவனிடத்தில் நிலைத்திராதவன் ஒரு கிளையைப்போல அறுப்புண்டு போடப்படுவான் (யோவான் 15:6 யோவான் 2:6)

தீர்க்கதரிசன எண் - 8

"அவர் வெளிப்படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டு போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும் படிக்கு" (யோவான் 2:28 இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை இயேசு கிறிஸ்துவின் வருகையின்போது அவருக்கு முன்பாக இருக்க வேண்டுமென்றால் அவருக்குள் நாம் நிலைத்திருக்க வேண்டும். கிறிஸ்துவிற்காக பவுல் எல்லாவற்றையும் அற்பமும், குப்பையுமாக எண்ணினார் (பிலி 3:7 16)

"தைரியம்" (confidence) - (அப் 4:13)

வெட்கப்படுதல் (ashamed) - αἰσχύνομαι - aischynomai 153

வெட்கப்படுதல் - புதிய ஏற்பாட்டில் இது செயவினை வடிவத்தில் மட்டுமே வந்துள்ளது (confounded, disgraced; to be ashamed) (1யோவான் 2:28; லூக்கா 16:3 2கொரி 10:8; பிலி 1:20 1பேதுரு 4:16)

"அவர் வெளிப்படும்போது" - சபையை எடுத்துக் கொள்வதற்காக இயேசு கிறிஸ்து மத்திய ஆகாயத்தில் வருவதை இந்த வாக்கியம் குறிக்கும். அவர் வரும்போது மத்திய ஆகாயத்தில் அவரைச் சந்திப்பதற்காக பரிசுத்தவான்கள் மறுரூபமடைவார்கள் (1தெச 4:13-7 யோவான் 14:1-3 1கொரி 15:23,51-58 கொலோ 3:4; பிலி 3:20-21 2தெச 2:7-8

13. நீதியைச் செய்ய வேண்டும் - (2கொரி 5:17; யோவான் 8:31 15:10 ரோமர் 8:1-14)

1யோவான் 2:29
அவர் நீதியுள்ளவராயிருக்கிறாரென்று உங்களுக்குத் தெரிந்திருப்பதினால் நீதியைச் செய்கிறவனெவனும் அவரில் பிறந்தவனென்று அறிந்திருக்கிறீர்கள்

விசுவாசிகள் அறிந்திருக்கிற சத்தியங்கள்

1. கிறிஸ்து நீதியுள்ளவராயிருக்கிறார்
2. இரட்சிக்கப்பட்டவர்கள் நீதியுள்ளவராக இருக்கிறார்கள்
3. புதிய பிறப்பை பெற்றிருப்பதற்கு நீதியைச் செய்வது ஆதாரமாக இருக்கிறது. (1யோவான் 3:6-10 1யோவான் 5:1-4,18)

3 அதிகாரம்

III. தெய்வீக அன்பு - (3:1-4:21; 1கொரி 13)

1. தேவனுடைய அன்பினால் நாம் அவருடைய பிள்ளைகளென்று அழைக்கப் படுகிறோம் - (யோவான் 1:12; எபி 12:5)

1யோவான் 3:1 நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை

1யோவான் 3:2 பிரியமானவர்களே இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்

"பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்" - மனுஷருடைய தகுதியை எண்ணிப் பாராமல் பிதாவானவர் மனுக்குலத்தின்மீது அதிகமாக அன்பு பாராட்டியிருக்கிறார் (எபே 3:17-19; ரோமர் 8:35-39)

"தேவனுடைய பிள்ளைகள்" (sons of God) - புத்திரசுவிகாரத்தினால் நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம். (ரோமர் 8:15, கலா 4:5; எபே 1:5) இயேசு கிறிஸ்து தேவனுடைய ஒரேபேறான குமாரன் (யோவான் 1:14,18 யோவான் 3:16,18)

"உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை" - இயேசுகிறிஸ்துவைத் தேவனுடைய ஒரேபேறான குமாரனென்று உலகம் அங்கீகரிக்கவில்லை ஆகையினால் நம்மையும் தேவனுடைய பிள்ளைகள் என்று இந்த உலகம் அங்கீகரிக்காது.

"இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம்" - நீதியை நடப்பிக்கும் சுவிகாரபுத்திரர்களைக் குறித்து யோவான் இங்கு குறிப்பிடுகிறார் (1யோவான் 2:29)

தீர்க்கதரிசன எண் - 4

"இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால அவருக்கு ஒப்பாயிருப்போம்" (1யோவான் 3:2) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை இயேசுகிறிஸ்து சபையை எடுத்துக் கொள்ள வரும்போது நமக்கு மகிமையான சரீரம் கொடுக்கப்படும் (பிலி 3:20-21 1கொரி 15:51-54 கொலோ 3:4). அதன்பின்பு நாம் எப்படியிருப்போம் என்பது நமக்கு வெளிப்படுத்தப் படவில்லை (1கொரி 15:35-54)

2. தெய்வீக அன்பின் விளைவு

(1) கிறிஸ்தவரின் பரிசுத்தம் - (மத் 5:8 யோவான 15:3; 2தீமோ 1:3; தீத்து 1:15; 2பேதுரு 3:1; சங் 24:4

1யோவான 3:3 அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல, தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான்

1யோவான 3:4 பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான்; நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்.

"தன்னையும்சுத்திகரித்துக்கொள்ளுகிறான" - இயேசு கிறிஸ்து சபையை எடுத்துக் கொள்ளுவதற்காக வருவார் என்று நம்புகிறவர்கள கிறிஸ்து சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல தங்களையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறார்கள் (1யோவான 3:3 1யோவான் 1:7, 9, 1யோவான் 2:6 1யோவான் 3:5 10, 1யோவான் 5:1 4,18)

BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

I யோவான் - தொகுப்புரை

3 அதிகாரம்

நாம் இந்த ஜீவியத்தில் சுத்தமுள்ளவராய் இருக்க முடியும் என்பதற்குச் சான்றுகள்

1 கிறிஸ்து தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் (மத் 1:21)

2 இது பாவமன்னிப்பு உண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தமாயிருக்கிறது. (மத் 26:28)

3 பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம். (ரோமர் 6:2)

4 நாம் இனி பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். (ரோமர் 6:6)

5 நீங்கள் உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள் (ரோமர் 6:11)

6 நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக. (ரோமர் 6:12)

7 நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால் பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது. (ரோமர் 6:14-23)

8 பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள். (ரோமர் 6:18)

9 கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின்பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே (ரோமர் 8:1-4)

10 கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும், அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள் (கலா 5:16,24)

11 தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்த முள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார் (எபே 1:4)

12 நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணவேண்டும் (தீத்து 2:12)

13 நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம் (எபி 1:3 எபி 9:14)

14 நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் [illegible]று எழுதியிருக்கிறதே. (1பேதுரு 1:16)

15 அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். (1யோவான் 1:7,9)

16 இயேசு கிறிஸ்துவிற்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும். (1யோவான் 2:6)

17 இயேசு கிறிஸ்துவில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ்செய்கிறதில்லை. பாவஞ்செய்கிற எவனும் அவரைக் காணவுமில்லை அவரை அறியவுமில்லை. நீதியைச் செய்கிறவன் அவர் நீதியுள்ளவராயிருக்கிறதுபோலத் தானும் நீதியுள்ளவனாயிருக்கிறான் (1யோவான் 3:6-7)

18 பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான் (1யோவான் 3:8-10, யோவான் 8:44)

I யோவான் - தொகுப்புரை

3 அதிகாரம்

19 தேவனால் பிறந்த எவனும் பாவஞ் செய்யான் (1யோவான் 4:17 1யோவான் 5:4-5,18)

20 பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே (எபி 12:14-15)

"பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான்" - பாவம் செய்கிறவன் நியாயப்பிரமாணத்தை மீறுகிறபடியினால் அவனுக்கு மரண ஆக்கினை உண்டாயிருக்கிறது. எசே 18:4. ரோமர் 6:23; ரோமர் 8:12-13

மனுஷனிலுள்ள பாவத்தின் அம்சங்கள்

1 நியாயப்பிரமாணத்தை மீறுதல் 1யோவான் 3:4

2 பாவிகளிடத்தில் பிசாசானவனுடைய ஆவியும், சுபாவமும். (2கொரி 5:17)

(2) **கிறிஸ்துவின் பாவமில்லாத தன்மை** - (ரோமர் 6:1-23; 8:1-3 1கொரி 3:16-17 6:19-20 2கொரி 5:17; 7:1; 10:4-5; எபே 1:4. 4:24; கலா 5:16-26; 1தீமோ 4:12, தீத்து 2:11-14; எபி 12:14-15)

1யோவான் 3:5 அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள் அவரிடத்தில் பாவமில்லை

1யோவான் 3:6 அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ் செய்கிறதில்லை, பாவஞ்செய்கிற எவனும் அவரைக் காணவுமில்லை அவரை அறியவுமில்லை

1யோவான் 3:7 பிள்ளைகளே, நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதிருங்கள், நீதியைச் செய்கிறவன் அவர் நீதியுள்ளவராயிருக்கிறது போலத் தானும் நீதியுள்ளவனாயிருக்கிறான்

1யோவான் 3:8 பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான் ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான், பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்

1யோவான் 3:9 தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது, அவன் தேவனால் பிறந்தபடியினால பாவஞ் செய்யமாட்டான்

1யோவான் 3:10 இதினாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும் பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் வெளிப்படும்; நீதியைச் செய்யாமலும் தன் சகோதரனில் அன்புகூராமலும் இருக்கிற எவனும் தேவனால் உண்டானவனல்ல.

"அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டார்" - ஆகையினால நம்மிடத்தில இன்னும் பாவம் காணப்படுமானால நம்முடைய பாவங்களுக்காக நாம் இன்னும் மெய்யாக மனம் வருந்தி நம்முடைய பாவங்களை இயேசு கிறிஸ்துவினிடத்தில அறிக்கையிடவில்லை என்பதே பொருள

"பாவஞ்செய்கிற எவனும் அவரைக் காணவுமில்லை அவரை அறியவுமில்லை" பரிசுத்தவான்களுக்கும் பாவிகளுக்கும் இடையிலுள்ள வேறுபாடு இதுதான பரிசுத்தவான்கள் தேவனை அறிகிறார்கள் அவரைக் காண்கிறார்கள் பாவிகளுக்கு இது சித்திக்கவில்லை

சுவிசேஷத்தின் தெளிவான சத்தியங்கள்

1. இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களை சுமந்து தீர்க்க வெளிப்பட்டார் (1யோவான் 3:5 தீத்து 2:12)

2 இயேசு கிறிஸ்துவில நிலைத்திருக்கிறவன பாவம் செய்கிறதில்லை. அதாவது பாவம் செய்கிறவன் இயேசு கிறிஸ்துவில நிலைத்திருக்கவில்லை. (1யோவான் 3:5-6 2கொரி 5:17

I யோவான் - தொகுப்புரை

3 அதிகாரம்

3 இயேசு கிறிஸ்து நீதியுள்ளவராயிருக்கிறது போல மனுஷரும் இந்த ஜீவியத்தில நீதியுள்ளவராயிருக்க முடியும் (1யோவான் 3:7; 1யோவான் 4:17; தீத்து 2:12)

4 பாவம் செய்கிறவன் பிசாசினால உண்டாயிருக்கிறான் (1யோவான் 3:8; யோவான் 8:44)

5. பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கு இயேசு கிறிஸ்து வெளிப்பட்டார் (1யோவான் 3:8; மத் 8:17; அப் 10:38; யோவான் 10:10)

6 தேவனுடைய வித்து ஒருவனுக்குள் தரித்திருக்கிற வரையிலும் அவன் பாவம் செய்யமாட்டான (1யோவான் 3:9; ரோமர் 6:14-23; ரோமர் 8:1-13)

7 எலலோரும் தேவனுடைய பிள்ளைகளல்ல (1யோவான் 3:10)

அழித்தல (destroy) - λύω - lyoo - 3089

வினைசொல் - மீறு, கட்டவிழ அவிழ, விடுதலையாகு, கரை தளரு, உடை, தகர (to undo; loosen; release; set free; do away with) (2பேதுரு 3:10)

பிசாசினுடைய கிரியைகள்

1 பாவம் - கலகம்பண்ணுதல் (ஆதி 3; 2கொரி 11:3)

2 இருளின கிரியைகள் (எபே 5:11; எபே 6:12; அப் 16:18; ரோமர் 1)

3. துர்க்கிரியைகள் (கொலோ 1:21)

4. ஆவிக்குரிய குருட்டுத்தனமை (2கொரி 4:4)

5 தேவனுடைய வார்த்தையைத் திருடுதல் (மத் 13:19)

6 வஞ்சிப்பதும் கள்ளமார்க்கங்களும் (2கொரி 11:14; 1தீமோ 4; வெளி 12:9)

7 கொல்வதும், அழிப்பதும் (யோவான் 10:10)

8 களைகளை விதைப்பது, தேவனுடைய பரிசுத்தவான்களைச் சோதிப்பது (மத் 4:3; மத் 13:25; லூக்கா 22:31)

9 மாயமான ஆராதனை செய்வதும் மாயமான அற்புதங்கள் நடப்பிப்பதும் (2தெச 2:8-12; 1கொரி 10:2)

10 புயற்காற்றும் பெருங்காற்றும் அடிப்பதற்குக் காரணமாக இருப்பது (யோபு 1:18-19; எபே 2:2)

11 தேசங்களை ஆளுகை செய்வது (மத் 4:8-9; தானி 10)

12 மரணத்தை உண்டுபண்ணுவது (எபி 2:14-15)

13 சகோதரரைக் குற்றப்படுத்துவது (வெளி 12:10)

14 ஜெபத்தைத் தடைபண்ணுவது (தானி 10:12-21)

15. சுவிசேஷத்திற்கு எதிர்த்து நிற்பது (எபே 6:1-18)

16 பிசாசுகள் (demons) (யோவான் 12:31), விழுந்துபோன தூதர்கள் (fallen angels) (வெளி 12:7-12), விழுந்து போன மனுஷர்கள் (fallen man) (எபே 2:2; 1யோவான் 3:8; யோவான் 8:44) ஆகியோரை வழிநடத்துவது.

17 வியாதிகளையும் நோய்களையும் வருவிப்பது (மத் 4:23-24; மத் 9:32-33; மத் 15:22; அப் 10:38)

18 பலவீனங்களை உண்டாக்குவது (மத் 8:17; லூக்கா 13:16; யோவான் 10:10; அப் 10:38)

I யோவான் - தொகுப்புரை

3 அதிகாரம்

19 சந்திரரோகத்தை வருவிப்பது. மத் 4:23-24; மத் 17:14-21; மாற்கு 5:1-18

20 தற்கொலை பண்ணுவதற்கு தூண்டுவது. மத் 17:15 யோவான் 10:10

21 ஆசை இச்சைகளைக் கொடுப்பது. யோவான் 8:44, எபே 2:1-3)

22 பொய்சொல்வதும், கள்ளத் தீர்க்கதரிசனமும். (1இராஜா 22; மத் 24:10,24, 2கொரி 11:13-15)

23 தவறான உபதேசங்களைப் பரப்புவது. (1தீமோ 4; 2தீமோ 4; 2தெச 2; வெளி 13

24 மறுமைரை ஒடுக்குவது. (அப 10:38)

25 விசுவாசிகளைத் துன்புறுத்துவதும் விசுவாசிகளமீது ஆவிக்குரிய யுத்தங்களை வருவிப்பதும் (எபே 6:10-18 1பேதுரு 5:8-9)

சாத்தானுடைய சகல அருதகாரக கிரியைகளையும் அழித்து அவமாக்குவதற்காக இயேசு கிறிஸது கலவாரி சிலுவையில மரிதுதார தற்காலத்திலும் இயேசு கிறிஸதுவின திருஇரத்தத்தினால் விசுவாசிகள சாத்தானை மேற்கொணடு தஙகளுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில ஜெயம்பெற முடியும். (கொலோ 2:14-17; 1பேதுரு 2:24; லூக்கா 10:19, யோவான் 14:12; மாற்கு 16:17-18 ஆயிரம் வருஷ அரசாட்சியில சாத்தானுடைய பாவமான கிரியைகள முழுவதுமாக அழிக்கப்பட்டு விடும். (எபே 1:10 1கொரி 15:24-28 வெளி 21:1-8 வெளி 22:3

"தேவனால் பிறந்த எவனும்" - தேவனால் பிறப்பது எனபது புதிய பிறப்பைக் குறிக்கும். (கலா 4:19

புதிய பிறப்பு

1 ஆவிக்குரிய மாற்றம் - சரீர மாறறமலல (கலா 4:29 யோவான் 3:1-8

2 இருதயம் சித்தம் சிந்தனை ஆவலகள் ஜீவன் நடத்தை ஆகியவற்றில மாறறம் - சரீரத்தில் ஏறபடும மாறறமல்ல. (2கொரி 5:17-18

3 எஜமான்களை மாற்றுவது - சரீரம் ஆத்துமா ஆவியை மாறறுவதல்ல. (ரோமர் 6:11-23; ரோமர் 8:1-4)

4 சாத்தானின் குடும்பத்திலிருந்து தேவனுடைய குடும்பத்திறகுள் சுவிகார புத்திரராக அங்கீகரிக்கபபடுவது (ரோமர் 8:14-16; கலா 4:5; எபே 1:5)

5 சாத்தானுககும பாவத்திறகும் ஊழியம் செயவதறகுப பதிலாகத் தேவனுககும் பரிசுத்ததிறகும் ஊழியம் செய்யுமாறு தன்னைப் பிரதிஷ்டை பணணுவது (ரோமர் 6:16-22; ரோமர் 8:1-13 கொலோ 3:5-10; கலா 5:16-26

6 தனனுடைய நீதியிலும் பரிசுத்தத்திலும் புதுபபிததுக் கொளவது (எபே 4:23-24 கொலோ 3:10; சங் 51:10) புதிய பிறப்பு என்பது பரிசுத்த ஆவியினால பிறபபதைக குறிக்காது தேவனுடைய ஒரேபேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்து பரிசுத்த ஆவியினால் பிறந்தார (யோவான 1:14,18, யோவான 3:16

7 சுபாவததின மாறறம் (ரோமர் 3:24-25, 2கொரி 5:17; தீத்து 3:5)

8 ஆர்வத்தின மாற்றம் - தேவனுடைய சமுகத்திற்கு முன்பாகப் புதிய பிரதிஷ்டையோடு நிற்பது ரோமா 5:1-2 எபே 2:1-9, தீத்து 2:11-14; 2பேதுரு 3:18 1யோவான் 3:8-10

9 சுபாவம் ஊழியம், ஸ்தானம் ஆகியவற்றில மாற்றம. (கலா 5:22-23, 1கொரி 13 ரோமா 3:24-5 ரோமர் 5:1-11 2தீமோ 2:2 தீத்து 2:11-14

I யோவான் - தொகுப்புரை

3 அதிகாரம்

10 ஒருபாவி மனந்திரும்பி இரட்சிக்கப்படும்போது அவருடைய ஜீவியத்தில ஏற்படும் ஆவிக்குரிய மாற்றங்களும் அபாவங்களின் மாற்றங்களும் மாற்கு 1:15; 2கொரி 5:17-18 ரோமர் 1:16 ரோமர் 10:9-10 எபே 2:8-9 1யோவான் 1:9 இரட்சிக்கப்பட்ட நபர் மறுபடியும் பாவம் செய்யும்போது தேவனுடைய பிரமாணத்தை அவர் மீறுகிறார் அவருக்குப் பாவத்தின் சம்பளமாகிய மரணம் நியமிக்கப் படுகிறது. யாக் 1:13-15 யாக் 5:19-20 ரோமர் 6:1-23 ரோமர் 8:1-13 யோவான் 8:34 2பேதுரு 2:19-22 எபி 6:4-9 எபி 10:26-29 கலா 5:4 9-21 2கொரி 6:9-11 யோவான் 3:8-10 எசே 18:4

செய்தல (commit) - ποιέω - poieoo - 4160

வினைச்சொல் கட்டளையிடு. செவவைபண்ணு. கொடு. கைக்கொள் செய்யப்பண்ணு. உண்டாக்கு (to do; commit; practice; perform) 1யோவான் 3:4, 8, 9; லூக்கா 12:48 யோவான் 8:34

1யோவான் 3:9 ஆகாது வசனத்தைக் குறித்துக் கூறப்படும் தவறான கருத்துக்கள்

1 மறுபடியும் பிறந்து இரட்சிக்கப்பட்டிருக்கிறவரால பாவமே செய்ய முடியாது.

2 இரட்சிக்கப் பட்டவர்கள் செய்யும் பாவங்கள் உண்மையிலேயே பாவங்கள் அல்ல

3 இரட்சிக்கப்பட்டவர்கள் பாவம் செய்தாலும் அவர்கள் தங்கள் பாவங்களை அறிக்கையிடாமலேயே அவர்களுடைய பாவங்களைத் தேவன் தாமாகவே மன்னித்து விடுவார்

4 இரட்சிக்கப்பட்டவர்கள் செய்யும் பாவங்களைத் தேவனே நோக்கிப் பார்ப்பதில்லை. அவர்கள் நம்மும் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தை மட்டுமே தேவன் பார்ப்பார்

5 பாவங்கள் இரட்சிக்கப்பட்டவர்களை ஒன்றும் செய்யாது.

6 இரட்சிக்கப்பட்டவர்கள் பாவத்திற்கு அடிமையாக மாட்டார்கள் எப்போதாவது பாவம் செய்வார்கள்

7 இரட்சிக்கப் பட்டவர்களுடைய கடந்தகால நிகழ்கால வருங்கால பாவங்கள் அனைத்தையும் தேவன் ஏற்கெனவே மன்னித்து விட்டார்

ஒரு மனுஷன் தேவனால் மறுபடியும் பிறக்கிறான் 1பேதுரு 1:23 யாக் 1:18 அவன் தேவனுடைய வார்த்தையில் நிலைத்திருக்கும் வரையில பாவம் செய்யமாட்டான் தேவனுடைய கற்பனைகளை மீறமாட்டான் பாவத்திற்குத் தன்னை ஒப்புக்கொடுக்க மறுத்துவிடுவான் ஒருதரம் இரட்சிக்கப்பட்டவன் தேவனுடைய சமுகத்திலிருந்து விலகிசெல்லும்போது அவனுடைய ஆவிக்குரிய ஜீவியம் குளிர்ந்து விடுகிறது. தேவனிடத்தில ஜெபம் பண்ணுவதைக் குறைத்துவிடுகிறான் பாவம் அவனை மேற்கொள்கிறது. பாவத்திற்கு அடிமையாகிவிடுகிறான் 1யோவான் 2:1 2பேதுரு 1:5-10

ஜனங்களில் இருபிரிவினர் மத் 13:38

1 தேவனுடைய பிள்ளைகள

2 பிசாசின் பிள்ளைகள

பிசாசின் பிள்ளைகளுக்கு அடையாளங்கள்

1 இருளில நடக்கிறான் 1யோவான் 1:5-6 1யோவான் 2:11

2 தனனிடத்தில பாவம் இல்லை என்கிறான் 1யோவான் 1:8,10

3 தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாமலும், தேவனைப் பிரியப் படுத்தாமலும் ஜீவிக்கிறான் 1யோவான் 2:3-4, 1யோவான் 3:22-24 1யோவான் 5:14-15

I யோவான் - தொகுப்புரை

3 அதிகாரம்

4 கிறிஸ்து நடந்தபடியே நடக்காமல் இருக்கிறான் (1யோவான் 2:6)

5 தன் சகோதரனைப் பகைக்கிறான் (1யோவான் 2:9; 1யோவான் 3:10-19; 1யோவான் 4:20)

6 சாத்தானை ஜெயிக்காமல் இருக்கிறான் (1யோவான் 2:13-14)

7 உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூருகிறான் (1யோவான் 2:15-17; 1யோவான் 3:13; 1யோவான் 4:5)

8 கிறிஸ்தவ ஐக்கியத்தை விட்டுப் பிரிந்து விடுகிறான் (1யோவான் 2:19)

9 சத்தியத்தை அறியாதிருக்கிறான் (1யோவான் 2:20-27)

10 தேவனையும், இயேசுவையும் மறுதலிக்கிறான் (1யோவான் 2:22-23)

11 அநீதியைச் செய்கிறான் (1யோவான் 2:29; 1யோவான் 3:10)

12 தன்னைச் சுத்திகரித்துக் கொள்ள எந்த முயற்சியும் செய்யாமல் இருக்கிறான் (1யோவான் 3:3)

13 பாவம் செய்கிறான் (1யோவான் 3:8-10; 1யோவான் 5:18)

14. கொலை செய்கிறான் (1யோவான் 3:12,15)

15 தேவையுள்ளவர்களுக்கு இரங்காமல் தன் இருதயத்தை அடைத்துக் கொள்கிறான் (1யோவான் 3:17)

16 விசுவாசத்தில் குறைவுள்ளவனாய் இருக்கிறான் (1யோவான் 3:20-22; 1யோவான் 5:14-15)

17 பரிசுத்த ஆவியானவர் அவனுக்குள் வாசம்பண்ணவில்லை (1யோவான் 3:24; 1யோவான் 4:4,13)

18 உலகத்திற்குரியவனாகவும், உலகத்தோடு ஐக்கியமுள்ளவனாகவும் இருக்கிறான் (1யோவான் 4:5)

19 தேவனைப் பற்றியும், நித்திய ஜீவனைப் பற்றியும் எந்த ஞானமும் இல்லாதவனாய் இருக்கிறான் (1யோவான் 4:7-10; 1யோவான் 5:10-13, 20-21)

20 இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிக்கை செய்வதில்லை (1யோவான் 4:14-18)

21 உலகம் இவனை ஜெயிக்கிறது (1யோவான் 5:4-5)

(3) நாம் ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டும் (3:11-18) - (2,7)

1யோவான் 3:11 நாம் ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டுமென்பதே நீங்கள் ஆதிமுதல் கேள்விப்பட்ட விசேஷமாயிருக்கிறது.

1யோவான் 3:12 பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலைசெய்த காயீனைப்போலிருக்கவேண்டாம்; அவன் எதினிமித்தம் அவனைக் கொலைசெய்தான்? தன் கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்ததினிமித்தந்தானே.

1யோவான் 3:13 என் சகோதரரே, உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்படாதிருங்கள்.

1யோவான் 3:14 நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால், மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம்; சகோதரனிடத்தில் அன்புகூராதவன் மரணத்திலே நிலைகொண்டிருக்கிறான்.

1யோவான் 3:15 தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்; மனுஷ கொலைபாதகனெவனோ அவனுக்குள் நித்தியஜீவன் நிலைத்திராது என்று அறிவீர்கள்.

3 அதிகாரம்

1யோவான் 3:16 அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம். நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்.

1யோவான் 3:17 ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறதெப்படி?

1யோவான் 3:18 என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்.

விசேஷம் (message) - ἀγγελία - angelia - 31

பெண்பால் பெயர்ச்சொல் விசேஷம் (proclamation; commandment; order) 1யோவான் 3:11 1யோவான் 1:5)

"ஆதிமுதல்" - 1யோவான் 1:1, 1யோவான் 2:7,13,14,24, 1யோவான் 3:8, 2யோவான் 1:5-6

"ஒருவரிலொருவர் அன்புகூர வேண்டும்" - (மத் 22:39, யோவான் 13:34-35, யோவான் 15:12)

"காயீன்" (Cain) - சாத்தானால் உண்டாயிருந்தவன் (ஆதி 4, 1யோவான் 3:8)

"பொல்லாங்கன்" (wicked one) (மத் 13:19,38, 1யோவான் 5:18-19)

கொலை செய் (slew) σφάζω sphazoo 4969

வினைச்சொல் - அடி, கொலை செய், சாகப்படுத்து (put to death by violence) (வெளி 5:6, 9,12, வெளி 6:4,9; வெளி 13:3,8, வெளி 18:24)

"தன் கிரியைகள் பொல்லாதவைகளும் தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்ததினிமித்தந்தானே" - ஆபேல் காயீனைவிட நல்லவன், நீதியுள்ளவன் (எபி 11:4, ஆதி 4)

"உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்படாதிருங்கள்" - ஆபேலுக்குக் காயீன் செய்ததுபோலவே நமக்கு இந்த உலகம் செய்வதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் இந்த உலகம் நம்மைப் பகைக்கும்போது ஆச்சரியப்பட வேண்டாம்.

நாம் அறிந்திருக்கும் சத்தியங்கள்

1. நாம் அவரை அறிந்திருக்கிறோம் (1யோவான் 2:3)
2. நாம் அவருக்குள் இருக்கிறோம் (1யோவான் 2:5)
3. இது கடைசி காலமாயிருக்கிறது (1யோவான் 2:18)
4. சத்தியத்தின் சகலத்தையும் அறிந்திருக்கிறோம். (1யோவான் 2:20)
5. சத்தியத்தை அறிந்திருக்கிறோம் (1யோவான் 2:21)
6. சத்தியத்தினால் ஒரு பொய்யும் உண்டாயிராது. (1யோவான் 2:21)
7. நீதியைச் செய்கிறவன் எவனோ அவன் தேவனில் பிறந்தவன் (1யோவான் 2:29)
8. அவர் வெளிப்படும்போது நாம் அவருக்கு ஒப்பாயிருப்போம் (1யோவான் 3:2)
9. அவர் நம்முடைய பாவங்களை சுமந்து தீர்க்க வெளிப்பட்டார். அவரிடத்தில் பாவமில்லை (1யோவான் 3:5)
10. நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால் மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறோம் (1யோவான் 3:14)

I யோவான் - தொகுப்புரை

3 அதிகாரம்

11 மனுஷ கொலைபாதகனுக்குள் நித்திய ஜீவன் நிலைத்திராது. (1யோவான் 3:15)

12 நாம் சத்தியத்திற்குரியவர்கள் (1யோவான் 3:19)

13 கிறிஸ்து நம்மில் நிலைத்திருக்கிறார் (1யோவான் 3:24)

14 தேவனுடைய ஆவியை நாம் பெற்றிருக்கிறோம். (1யோவான் 4:2,13)

15. சத்திய ஆவி இன்னதென்றும் வஞ்சக ஆவி இன்னதென்றும் நாம் அறிந்திருக்கிறோம். (1யோவான் 4:6)

16 நாம் அவரில் நிலைத்திருக்கிறோம். அவர் நம்மில் நிலைத்திருக்கிறார் (1யோவான் 4:13)

17 தேவனுடைய பிள்ளைகளிடத்தில் அன்புகூருகிறோம். (1யோவான் 5:2)

18 நமக்கு நித்திய ஜீவன் உண்டு. (1யோவான் 5:13)

19 தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்யான் (1யோவான் 5:18)

20 நாம் தேவனால் உண்டாயிருக்கிறோம். (1யோவான் 5:19)

21 தேவனுடைய குமாரன் வந்து நமக்குப் புத்தியைத் தந்திருக்கிறார் (1யோவான் 5:20)

"நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால்" - (1யோவான் 2:3)

மனுஷகொலை பாதகன் (murderer) - ἀνθρωποκτόνος anthroopoktonos 443

பொருள் - மனுஷகொலை பாதகனான (manslayer) (யோவான் 8:44)

நித்திய ஜீவனும், இயேசு கிறிஸ்துவும் ஒருவரே

வேத வசனங்கள் சிலவற்றில் நித்திய ஜீவனும் இயேசு கிறிஸ்துவும் ஒரே பொருளையுடைய வார்த்தைகளாகவே (synonymous) பயன்படுத்தப்பட்டிருக்கிறது (1யோவான் 1:1-2; 1யோவான் 2:24-25; 1யோவான் 5:11-13,20; யோவான் 14:6; யோவான் 17:2-3) இந்த ஜீவன் இயேசு கிறிஸ்துவைப் போல நித்தியமானது. நம்முடைய ஜீவனை நாம் இழந்தாலும் அது நித்தியமானதுதான். ஆனால் பாவம் செய்து ஜீவ்போமானால் நம்முடைய ஜீவனை நாம் நரகத்தில்தான் நித்திய காலமாக செலவிட வேண்டும். தேவனுடைய இரட்சிப்பை பெற்றுக் கொண்டு ஜீவித்தால் பரலோகத்தில் தேவனோடு நித்திய காலமாக ஜீவிக்கலாம் (யோவான் 15:4-8; கலா 1:6-8; கலா 2:6-7; ரோமர் 6:14-23; ரோமர் 8:1-13; 2கொரி 13:5)

"அவனுக்குள் நித்தியஜீவன் நிலைத்திராது" - நித்திய ஜீவனும் கிறிஸ்துவும் தனி மனுஷரிடத்தில் வெவ்வேறாகவே இருப்பார்கள். பாவம் செய்கிறவனிடத்தில் நித்திய ஜீவன் நிலைத்திராது. தேவபக்தியுள்ளவர்களிடத்தில் நித்திய ஜீவன் நிலைத்திருக்கும்.

"அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்" இயேசு கிறிஸ்து தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்தார். ஆகையினால் நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். நாம் தேவனிடத்தில் அன்புகூரவேண்டும். மனுஷரிடத்திலும் அன்புகூர வேண்டும். (1யோவான் 3:16)

"அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறதெப்படி?" நம்முடைய சகோதரனுக்குக் குறைச்சல் உண்டென்று நாம் காணும்போது அவனுக்கு நம்மால் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும். பிறனைத் தன்னைப்போல நேசிக்கவேண்டும். இல்லையென்றால் தேவ அன்பு நம்மில் நிலைகொள்ளாது. (1யோவான் 3:16-18)

நாம் அன்புகூரக்கூடாத இரண்டு வழிகள்

1. வசனத்தினால் - உபதேசத்தினால்
2. நாவினால் - அறிக்கையிடுவதினால்

3 அதிகாரம்

நாம் அன்புகூரவேண்டிய இரண்டு வழிகள்

1 கிரியையினால் - செய்யும் செயல்களினால்

2 உண்மையினால் - உபதேசம் அறிக்கையிடுதல் ஆகியவற்றில் உண்மையாக இருப்பதினால்

(4) **நாம் வேண்டிக்கொள்ளுகிறது எதுவோ அதை அவராலே பெற்றுக் கொள்கிறோம்** - 5:14-15; மத் 7:7-11; 17:20; 21:22-22; மாற்கு 9:23; 11:22-24 யோவான் 14:12-15 15:7,16. 16:23-26 எபி 11:6 யாக் 1:5

1யோவான் 3:19 இதினாலே நாம் நம்மைச் சத்தியத்திற்குரியவர்களென்று அறிந்து நம்முடைய இருதயத்தை அவருக்கு முன்பாக நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்.

1யோவான் 3:20 நம்முடைய இருதயமே நம்மைக் குற்றவாளிகளாகத் தீர்க்குமானால், தேவன் நம்முடைய இருதயத்திலும் பெரியவராயிருந்து சகலத்தையும் அறிந்திருக்கிறார்

1யோவான் 3:21 பிரியமானவர்களே நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருந்தால் நாம் தேவனிடத்தில் தைரியங் கொண்டிருந்து,

1யோவான் 3:22 அவருடைய கற்பனைகளை நாம் கைக் கொண்டு அவருக்குமுன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக் கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம்.

நாம் மெய் அன்புகூருவதினால் நமக்கு வரும் ஆசீர்வாதங்கள்

1 நாம் சத்தியத்திற்குரியவர்கள் என்பது உறுதியாகிறது.

2 தேவனுக்கு முன்பாக நம்முடைய இருதயம் சுத்தமாயுள்ளது என்று உறுதியாகிறது.

3 நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளிகளென்று தீர்ப்பதிலிருந்து விடுதலை. (1யோவான் 3:20-21)

4 தேவனிடத்தில் நம்பிக்கையும் தைரியமும். (1யோவான் 3:21)

5 ஜெபத்திற்குப் பதில் கிடைத்தல் (1யோவான் 3:22)

இருதயம் (heart) - καρδία - kardia - 2588

பெண்பால் பெயர்ச்சொல் - இருதயம் மனம் உள்ளம்

"இருதயம்" என்னும் வார்த்தை வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் விதம்

1 சரீரத்தின் ஒரு உறுப்பு (2சாமு 18:14, 2இராஜா 9:24; பிர 12:6, நீதி 14:30)

2 ஒரு காரியத்தின் மையப்பகுதி (மத் 12:40)

3 ஆவியையும் ஆத்துமாவையும் உடைய உள்ளான மனுஷன் சங் 5:10, மத் 5:8; மத் 12:34-35; மத் 15:18-19, மத் 22:37 ரோமர் 6:17 1பேதுரு 3:4

4 மனச்சாட்சி மாற்கு 8:17 யோவான் 12:40; அப் 2:37, ரோமர் 2:5; 1யோவான் 3:20-21

5 சித்தம். (அப் 4:32; 1கொரி 7:37

6 சிந்தை

7 ஆத்துமா

8 ஆவி

I யோவான் - தொகுப்புரை

3 அதிகாரம்

சிந்தையில் அடங்கியுள்ள காரியங்கள்

1 எண்ணங்கள் (Thoughts) (ஆதி 6:5 யோவான் 12:40

2 கற்பனைகள் (Imaginations) (ஆதி 8:21

3 புரிந்து கொள்ளுதல் (Understanding) (Iஇராஜா 3:9,12)

4 ஞானம் (Wisdom) யாத் 35:35 நீதி 2:10

5 குருடு (Blindness) (உபா 28:28 ரோமர் 1:21

6 தியானம் (Meditation) (சங் 19:14 லூக்கா 2:19

7 ஏமாற்றுதல் (Deceit) (நீதி 12:20 எரே 17:9

8 துன்மார்க்கம் (Wickedness) எரே 17:9

9 சந்தேகம் (Doubt) (மாற்கு 9:23 யாக் 4:8

10 நோக்கங்கள் (Purposes) (அப் 11:23)

ஆத்துமாவில் அடங்கியுள்ள காரியங்கள்

1 துக்கம் (Grief) (ஆதி 6:6 உபா 15:10

2 சந்தோஷமும், மகிழ்ச்சியும் (Joy and gladness) (உபா 28:47)

3 ஆவல்கள் (Desires) (சங் 37:4)

4 வருத்தம் (Sorrow) (நீதி 14:10 நீதி 15:13, யோவான் 16:6)

5 சோர்வு (Discouragement) (உபா 1:28

6 பயம் (Fear) (உபா 28:65-67

7 ஆறுதல் (Comfort) (நியா 19:8)

8 வேதனை (Pain) (சங் 55:4

ஆவியில் அடங்கியுள்ள காரியங்கள்

1 வைராக்கியம் (Zeal) (யாத் 35:21,26 யாத் 36:2)

2 தாழ்மை (Humility) (சங் 34:18 மத் 11:29)

3 உண்மை (Faithfulness) (நெகே 9:8

4 விரோதம் (Hate) (லேவி 19:17)

5 பெருமை (Pride) (உபா 8:14; உபா 17:20)

6 புத்தியீனம் (Foolishness) (நீதி 22:15

7 உத்தமம் (Integrity) (ஆதி 20:5-6, Iஇராஜா 2:44 (இராஜா 1:4 யோனா 29:17)

8 அழிவில்லாமை (Immortality) (சங் 22:26 சங் 69:32; 1பேதுரு 3:4

ஜெபத்திற்குப் பதில் கிடைப்பதற்கு நாம் செய்ய வேண்டிய காரியங்கள்

1 ஆக்கினைத்தீர்ப்பிலிருந்து விடுதலை (ரோமர் 8:1)

2 தேவனிடத்தில் நம்பிக்கை (அப் 4:13

3 கேட்பது (மத் 7:7-11; லூக்கா 11:9-13

4 தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வது (1யோவான் 3:23-24

5 தேவனைப் பிரியப்படுத்துவது (எபி 11:6, யாக் 1:5-8)

3 அதிகாரம்

(5) **பரிசுத்த ஆவியானவரால் கிறிஸ்துவிற்குள் நிலைத்திருக்கிறோம்** - (யோவான் 3:5, 7:37-39, 14:12-17,26, 15:26, 16:7-15, ரோமர் 8:1-16; கலா 5:16-26, யூதா 20-24)

1யோவான் 3:23 நாம் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசுவாசமாயிருந்து அவர் நமக்குக் கட்டளையிட்டபடி ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே அவருடைய கற்பனையாயிருக்கிறது.

1யோவான் 3:24 அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரில் நிலைத்திருக்கிறான், அவரும் அவனில் நிலைத்திருக்கிறார், அவர் நம்மில் நிலைத்திருக்கிறதை அவர் நமக்குத் தந்தருளின ஆவியினாலே அறிந்திருக்கிறோம்

இரட்சிப்பின் கட்டளைகள்

1 இயேசுகிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்க வேண்டும் (மத் 1:21, அப் 2:38, அப் 3:16, அப் 4:12)

2 ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும் (1யோவான் 4:7-14, யோவான் 13:34)

"அவரில்" - (லூக்கா 22:3)

"அவர் நம்மில் நிலைத்திருக்கிறதை... அறிந்திருக்கிறோம்" - (1யோவான் 2:3)

"அவர் நமக்குத் தந்தருளின ஆவியினால்" - நாம் தேவனுடைய சுவிகார புத்திரராய் இருக்கிறோம் (1யோவான் 3:24; 1யோவான் 4:13, ரோமர் 8:15, கலா 4:6) தேவனுடைய பிள்ளைகளுக்குப் பரிசுத்த ஆவியானவர் அருளப்படுகிறார் (ரோமர் 8:9)

I யோவான் - தொகுப்புரை

4 அதிகாரம்

3. தேவனுடைய அன்பின் பாதுகாப்பு

(1) எல்லா ஆவிகளையும் சோதித்தறிய வேண்டும் - (1கொரி 12:3)

1யோவான் 4:1 பிரியமானவர்களே உலகத்தில் அநேகங் கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால் நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல் அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்

பிரியமான (Beloved) - **ἀγαπητός** - agapeetos - 27

பெயரடை - நேச, பிரியமான (dearly beloved: worthy of love) "beloved" 1யோவான் 4:1,7,11; மத் 3:17; மத் 12:18; மரோமர் 1:7, யூதா 1:3) "well-beloved" (மத் 12:6; ரோமர் 16:5 3யோவான் 1:1 "dearly beloved" (ரோமர் 12:19; 1கொரி 10:14) "dear" (எபே 5:1; கொலோ 1:7 1தெச 2:8

(அ) கிறிஸ்துவிற்கு பயன்படுத்தப்பட்ட பெயரடை - மத். 3:17

(ஆ) சக கிறிஸ்தவர்களுக்கு பயன்படுத்தப் பட்டுள்ள பெயர்கள் - கொரி 4:14

(இ) 1யோவா 4:7ல் பிரியமானவர்களே என்னும் உரிச்சொல்

ஆவி (spirit) - **πνεῦμα** - pneuma - 4151

பால் வேறுபாடற்ற பெயர் - ஆவி

ஆவி (spirit) רוּחַ - roo'-akh - 7307

பொதுப்பெயர்ச்சொல் - ஆவி, குளிர்ச்சி, சுவாசம், காற்று, மனநோவு, மனம், மனமடிவு, தைரியம், சோர்ந்து போதல், கோபம், உயிர், பிரமை, மூச்சு, கடுங்கொந்தளிப்பு, முற்கோபி, உள்ளம், கிறல, திசை, பக்கம், பெருங்காற்று, சாந்தி

"நாமா" "Pneuma" என்னும் கிரேக்க வார்த்தை புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப் பட்டிருக்கும் விதம்

1 தேவன் ஆவியாயிருக்கிறார் (God as Spirit) (யோவான் 4:24 2கொரி 3:17)

2 கிறிஸ்து (Christ) (1கொரி 6:17 1கொரி 15:45)

3 பரிசுத்த ஆவியானவர் (The Holy Spirit) (மத் 1:18,20; மத் 3:11,16

4 கிறிஸ்துவின் ஆவியானவர் (Christ's personal spirit) (மாற்கு 2:8 மாற்கு 8:12, லூக்கா 2:40, யோவான் 11:33, யோவான் 19:30

5 தேவதூதர்கள் (Angels) (எபி 1:7,14, சங் 104:4)

6 மனுஷருடைய ஆவிகள் (Spirits of men) (மத் 5:3, 1கொரி 2:11, 1கொரி 6:20; 1தெச 5:23, எபி 4:12, எபி 12:23)

7 அசுத்த ஆவிகள் (Evil spirits) (மத் 8:16; மத் 10:1, மத் 12:43, அப் 8:7; அப் 16:16, வெளி 16:13, வெளி 18:2)

8 உயிர்த்தெழுந்த சரீரம் (The resurrection body) (1கொரி 15:44

சோதித்தறிதல் (try) - **δοκιμάζω** dokimazoo - 1381

வினைச்சொல் - நிதானி, சோதித்துப்பார், வகையறு, பகுத்தறி, பரீட்சைபார்த்தகுதியைக்குறி, கண்டறி (test) (மத் 7:16,2கொரி 13:5

I யோவான் - தொகுப்புரை

4 அதிகாரம்

கள்ளத்தீர்க்கதரிசிகளைச் சோதித்தறியும் வழிகள்

1 மாம்சத்தில வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணாதவர்கள (1யோவான் 4:2-3

2 உலகத்திற் குரியவர்கள் (1யோவான் 4:5; 1யோவான் 2:15-17 யாக் 4:4

3 கிறிஸ்தவ உபதேசத்திற்குச் செவி கொடாதவர்கள் (1யோவான் 4:6)

4 தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்படியாதவர்கள் (1யோவான் 4:6, யோவான 3:20-24. யோவான் 14:15)

5 ஒருவரிலொருவர் அன்பாயிராதவர்கள (1யோவான்4:7-21 1யோவான் 3:11-16. யோவான்13:34-35 யோவான 15:12-15)

6 பரிசுத்த ஆவியானவர் தங்களுடைய உள்ளத்திலே வாசம்பண்ணாதவர்கள (1யோவான 4:4-6

7 தேவனுடைய வார்த்தைக்குச் செவி கொடுக்காதவர்கள (1யோவான 4:6 1யோவான் 5:10; 2தீமோ 3:16, 2கொரி 4:4

"உலகத்தில அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள தோன்றியிருப்பது" (மத் 7:16, 2பேதுரு 2:1

(2) ஆவிகளைச் சோதித்தறியும் விதம்

1யோவான் 4:2 தேவஆவியை நீங்கள எதினாலே அறியலாமென்றால, மாம்சத்தில வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது.

"மாம்சத்தில வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால உண்டாயிருக்கிறது" - மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணாத எந்த ஆவியும் தேவனால உண்டானதல்ல. தேவனால் உண்டாயிருக்கிற ஆவி இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, மரணம் சரீர உயிர்த்தெழுதல் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு தற்பொழுது பிதாவின் வலதுபாரிசத்தில் அமர்ந்திருப்பது ஆகிய காரியங்களை அறிக்கை பண்ணும். இந்தச் சத்தியங்களை அறிக்கை பண்ணாத ஆவி அந்திக்கிறிஸ்துவினுடைய ஆவியாகும். (1யோவான் 2:14, 1யோவான் 4:2-3)

(3) பிசாசுகளை ஜெயிக்கும் விதம்

1யோவான் 4:3 மாம்சத்தில வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல வருமென்று நீங்கள கேள்விப்பட்ட அந்திக் கிறிஸ்துவினுடைய ஆவி அதுவே அது இப்பொழுதும் உலகத்தில இருக்கிறது

1யோவான் 4:4 பிள்ளைகளே, நீங்கள் தேவனால உண்டாயிருந்து அவர்களை ஜெயித்தீர்கள ஏனென்றால உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலி ருக்கிறவர் பெரியவர்

"அது இப்பொழுதும் உலகத்தில இருக்கிறது" இந்த உலகத்தில வருங்கால அந்திக் கிறிஸ்துவைச் சாத்தான இப்பொழுதே உண்டுபண்ணிக்கொண்டிருக்கிறான (2தெச 2:1 12 1யோவான 2:18 22

"நீங்கள தேவனால் உண்டாயிருந்து அவர்களை ஜெயித்தீர்கள்" (1யோவான 2:13)

"உங்களிலிருக்கிறவர் பெரியவர்" - பரிசுத்த ஆவியானவர் (1யோவான் 4:4, 13, 1யோவான் 3:24)

"உலகத்திலிருக்கிறவன்" சாத்தான் (1யோவான் 4:4,6; 1யோவான் 2:13 14, 1யோவான 3:8 10; 1யோவான் 5:18 எபே 2:2; எபே 4:27 எபே 6:10-18

I யோவான் - தொகுப்புரை

4 அதிகாரம்

(4) பிசாசுகளால் ஏவப்பட்டிருக்கும் கள்ளப் போதகரின் அடையாளங்கள் - (1தீமோ 6:3 2தீமோ 3:2; 2பேதுரு 2:10-22)

1யோவான் 4:5 அவர்கள் உலகத்துக்குரியவர்கள், ஆகையால் உலகத்துக்குரியவைகளைப் பேசுகிறார்கள் உலகமும் அவர்களுக்குச் செவிகொடுக்கும்

"அவர்கள் உலகத்துக்குரியவர்கள்" - சாத்தானுடைய பிள்ளைகள் (1யோவான் 2:15-17; யாக் 4:4 யோவான் 15:18-19

(5) உண்மையான கிறிஸ்தவரின் அடையாளங்கள்

1யோவான் 4:6 நாங்கள் தேவனால் உண்டானவர்கள் தேவனை அறிந்தவன் எங்களுக்குச் செவிகொடுக்கிறான் தேவனால் உண்டாயிராதவன் எங்களுக்குச் செவிகொடுக்கிறதில்லை. இதினாலே சத்திய ஆவி இன்னதென்றும் வஞ்சக ஆவி இன்னதென்றும் அறிந்திருக்கிறோம்

"சத்திய ஆவி இன்னதென்றும் வஞ்சக ஆவி இன்னதென்றும் அறிந்திருக்கிறோம்" பரிசுத்த ஆவியானவரே சத்திய ஆவியானவர் (யோவான் 14:16 17, யோவான் 15:26 யோவான் 16:13 வஞ்சக ஆவி சாத்தானுடைய ஆவியாகும். (2கொரி 4:4 2கொரி 11:14-15, மத் 13:19, 1தீமோ 4:1-2)

4. மறுபடியும் பிறந்திருப்பதற்கு நிரூபணம் - 1யோவான் 3:15; யோவான் 13:34-35; 15:12 1கொரி 13

1யோவான் 4:7 பிரியமானவர்களே ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம், ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது. அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான்

1யோவான் 4:8 அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார்

நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டியதற்குக் காரணங்கள்

1 நாம் தேவனுக்குரியவர்கள் என்பதை நிரூபிக்கிறது. (1யோவான் 4:7)

2 நாம் தேவனால் பிறந்தவர்கள் என்பதை நிரூபிக்கிறது (1யோவான் 4:7 1யோவான் 5:1-2

3 தேவனை நாம் அறிந்திருக்கிறோம் என்பதை நிரூபிக்கிறது (1யோவான் 4:7-8)

4 தேவன் அன்பாகவே இருக்கிறார் தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் தேவனுடைய சுபாவங்களைப் பெற்றிருக்க வேண்டும் (1யோவான் 4:8,16

5 தேவன் நம்மேல் வைத்த அன்பை வெளிப்படுத்தியிருக்கிறார் (1யோவான் 4:9, ரோமர் 5:5

6 தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை நமக்காக அனுப்பியிருக்கிறார் (1யோவான் 4:9 1பேதுரு 2:21)

7 நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை அனுப்பியிருக்கிறார் (1யோவான் 4:9 10:14

8 தேவன் நம்மிடத்தில் முதலாவதாக அன்புகூர்ந்தார் (1யோவான் 4:10,19

9 தேவன் நம்மிடத்தில் அன்புகூர்ந்து நம்முடைய பாவங்களை மன்னித்திருக்கிறார் (1யோவான் 4:10 யோவான் 3:16)

10 நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம். (1யோவான் 4:11)

11 நாம் பெலனற்ற பாவிகளாக இருக்கும்போதே தேவன் நம்மீது அன்புகூர்ந்தார் (1யோவான் 4:11 ரோமர் 5:6-10

4 அதிகாரம்

12 தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார் (1யோவான் 4:12)

13 தேவனுடைய அன்பு நமக்குள் பூரணப்படும். (1யோவான் 4:12).

14 பரிசுத்த ஆவியானவர் நமக்குள் நிலைத்திருக்கிறார் (1யோவான் 4:13)

15 தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம் (1யோவான் 4:16)

16 நாம் தேவனில் நிலைத்திருக்கிறோம் (1யோவான் 4:16)

17 தேவன் இருக்கிற பிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம். (1யோவான் 4:17)

18 நாம் தேவனிடத்தில் அன்புகூருகிறோம் என்பதை இது நிரூபிக்கிறது. (1யோவான் 4:20)

19 இது தேவனுடைய கற்பனை (1யோவான் 4:21; 1யோவான் 5:2)

20 தேவனால் பிறந்திருக்கிற நமக்கு இது சுபாவமாக இருக்கிறது. (1யோவான் 5:1-2)

"தேவன் அன்பாகவே இருக்கிறார் (1யோவான் 1:5)

5. மனுஷர்மீது தேவனுடைய அன்பு

1யோவான் 4:9 தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது.

1யோவான் 4:10 நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது.

"தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது" - தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினார். இதன் மூலமாக நாம் தேவனுடைய கிருபையையும், இரக்கத்தையும் பெற்றுக் கொள்கிறோம். (1யோவான் 4:9-10; யோவான் 3:16)

"அன்பு உண்டாயிருக்கிறது" - நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்ததினால் மனுக்குலத்தின்மீது தேவனுடைய தெய்வீக அன்பு உண்டாயிருக்கிறது. இந்த அன்பினாலே நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார் (ரோமர் 5:5-11)

"நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி" **(propitiation for our sins)** - (1யோவான் 2:1)

6. நாம் தேவனிடத்தில் வாசமாயிருப்பதும் நமக்குள் தேவனுடைய அன்பும் - (யாக 2:14)

1யோவான் 4:11 பிரியமானவர்களே, தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்திருக்க, நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம்.

1யோவான் 4:12 தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை. நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால், தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்; அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும்.

1யோவான் 4:13 அவர் தம்முடைய ஆவியில் நமக்குத் தந்தருளினதினாலே நாம் அவரிலும் அவர் நம்மிலும் நிலைத்திருக்கிறதை அறிந்திருக்கிறோம்.

1யோவான் 4:14 பிதாவானவர் குமாரனை உலகரட்சகராக அனுப்பினாரென்று நாங்கள் கண்டு சாட்சியிடுகிறோம்.

4 அதிகாரம்

1யோவான் 4:15 இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று அறிக்கை பண்ணுகிறவன் எவனோ அவனில் தேவன் நிலைத்திருக்கிறார் அவனும் தேவனில் நிலைத்திருக்கிறான்

1யோவான் 4:16 தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான் தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்

1யோவான் 4:17 நியாயத்தீர்ப்புநாளிலே நமக்குத் தைரியமுண்டாயிருக்கத்தக்கதாக அன்பு நம்மிடத்தில் பூரணப்படுகிறது. ஏனென்றால், அவர் இருக்கிற பிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்.

"தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை" - ஒருவருடைய சொந்த கண்களினாலும், சொந்த மனதினாலும் காணப்படாது. தேவனைப் பலர் தங்கள் கண்களால் கண்டிருக்கிறார்கள் (ஆதி 18:2 33 ஆதி 32:24 30 யாத் 24:10 யாத் 33:11 யோசு 5:13 ஏசா 6 எசே 1:26-28, தானி 7:9-14, தானி 10:5 6 அப் 7:56-59, வெளி 4:2 5 வெளி 5:1 7) ஆனால் அவர்கள் தேவனை முழுமையாகப் புரிந்து கொள்ள வில்லை பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே தேவனை வெளிப்படுத்தினார் தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை என்பது தேவனை ஒருவனும் முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை என்று பொருள்படும் குமாரன் வெளிப்படுத்துவதை மட்டுமே விசுவாசிகள் காணமுடியும். இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியானவரின் நிறைவினால் தேவனை முழுமையாகப் புரிந்து கொண்டவர் (யோவான் 3:34 அப் 10:38, ஏசா 11:1-2; ஏசா 61:1 2 லூக்கா 4:16-18

"அவர் தம்முடைய ஆவியில் நமக்குத் தந்தருளினது" - (1யோவான் 3:24)

"நாங்கள் கண்டு சாட்சியிடுகிறோம்" - (1யோவான் 1:1)

"இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று அறிக்கைபண்ணுகிறவன்" - ஆதித்திருச்சபையில் இந்தச் சத்தியத்தை மிகவும் வலியுறுத்திக் கூறினார்கள் ஏனெனில் கள்ளத்தீர்க்கதரிசிகளும் யூதமார்க்கத்தாரும் இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரன் என்று அங்கிகரிக்கவில்லை. அக்காலத்தில் ஒருவர் இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு அவருடைய மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் விசுவாசித்தாலே அவர் இரட்சிக்கப்பட்டவராகக் கருதப்பட்டார் ஆனால் இக்காலத்தில் இந்தச் சத்தியத்தை அறிக்கையிடுவது ஒரு பாரம்பரிய பழக்கமாகி விட்டது ஒருவர் இந்தச் சத்தியத்தை அறிக்கையிடுவதினால் அவர் இரட்சிக்கப் படுவதில்லை இந்தச் சத்தியத்தை நமது வாயினால் அறிக்கை பண்ணுவதோடு நம்முடைய இருதயத்திலும் விசுவாசிக்க வேண்டும் "கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப் படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும். இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்" (ரோமர் 10:9-10) இதைச் செய்கிறவன் இயேசு கிறிஸ்துவில் புதிய சிருஷ்டியாக்கப்படுகிறான் (1யோவான் 5:1 2கொரி 5:17) தேவனுக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அவருடைய சித்தத்தைச் செய்கிறவன் தேவனுக்குரியவன் அவனில் தேவன் நிலைத்திருக்கிறார், அவனும் தேவனில் நிலைத்திருக்கிறான் (1யோவான் 1:7 9 2கொரி 7:10 ரோமர் 12:1 2)

"தேவன் அன்பாகவே இருக்கிறார்" அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான் தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார் (1யோவான் 1:5

I யோவான் - தொகுப்புரை

4 அதிகாரம்

"அன்பு நம்மிடத்தில் பூரணப்படுகிறது" - தேவனில் ஒருவன் நிலைத்திருப்பதினாலும் தேவன் அவனில் நிலைத்திருப்பதினாலும் அவனுடைய ஜீவியத்தில் அன்பு பூரணப்படுகிறது. நம்முடைய அநுதின ஜீவியத்தில் இந்த பூரணமான அன்பை வெளிப்படுத்துவதினால் நியாயத்தீர்ப்பு நாளிலே நமக்குத் தைரியமுண்டாயிருக்கும் (தீத்து 2:11-12)

தைரியம் (boldness) - παρρησία - parreesia - 3954

பெண்பால் பெயர்ச்சொல் - வினையடையாகவும் பயன்படும் தாராளம், வெளிப்படுத்துதல், தெளிவு வெளிப்படை, தைரியம் (அப் 4:13)

தீர்க்கதரிசன எண் - 6

"நியாயத் தீர்ப்புநாளிலே" - (யோவான் 4:17) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. இயேசு கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக விசுவாசிகள் நியாயந்தீர்க்கப்படுவார்கள் (கொரி 3:11-15) இந்த நியாய விசாரிப்பிற்கு ஆயிரம் வருஷங்களுக்குப் பின்பு பெரிய வெள்ளை சிங்காசனத்திற்கு முன்பாக பாவிகள் நியாயந் தீர்க்கப்படுவார்கள் (வெளி 20:11-15)

"அவர் இருக்கிறபிரகாரமாக" இந்த உலகத்தில் நாம் பாவத்தையும், சாத்தானின் அந்தகாரக் கிரியைகளையும் ஜெயித்து இயேசு கிறிஸ்துவைப் போல இருக்க முடியும். (மத் 5:48, ரோமர் 6:14-23)

"நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்" (யாக் 4:4)

7. அன்பின் உன்னதமான தன்மை - (1கொரி 13; கலா 5:22-23; ரோமர் 5:8

1யோவான் 4:18 அன்பிலே பயமில்லை, பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும், பயமானது வேதனையுள்ளது. பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல

"அன்பிலே பயமில்லை" - (1கொரி 13:4

"பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல" - நியாயத்தீர்ப்பைக் குறித்து பயப்படும் அன்பு பூரணமானதல்ல. 1யோவான் 1:7; 1யோவான் 3:1-10 1யோவான் 5:1-18 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற பிரகாரம் அவன் தன்னைச் சுத்திகரித்துக் கொள்ள வேண்டும் நம்மிடம் தேவனுக்குப் பயப்படும் பயம் காணப்பட வேண்டும். (சங் 2:11; சங் 15:4; சங் 19:9 சங் 34:7-11; சங் 85:9; சங் 103:11; நீதி 1:7, நீதி 3:7; நீதி 8:13; நீதி 14:27; 2கொரி 7:1, துன்மார்க்கர் தேவனுக்குப் பயப்படுகிறதில்லை (சங் 36:1; சங் 55:19; ரோமர் 3:18)

"பயப்படுகிறவன்" - (யோவா 10:12)

8. சகோதரரிடத்தில் அன்பு - (யோவான் 13:34-35; 1கொரி 13

1யோவான் 4:19 அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்

1யோவான் 4:20 தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்?

1யோவான் 4:21 தேவனிடத்தில் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூர வேண்டுமென்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம்.

1யோவான் நிருபத்தில் பொய்யரைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் காரியங்கள்

1. அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும் இருளிலே நடக்கிறவர்கள் (1யோவான் 1:6)
2. தங்களுக்குப் பாவமில்லையென்கிறவர்கள் (1யோவான் 1:8
3. பாவஞ்செய்யவில்லையென்கிறவர்கள் (1யோவான் 1:10)

I யோவான் - தொகுப்புரை

4 அதிகாரம்

4 அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவர்கள் (1யோவான் 2:4)

5 இயேசுவைக் கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவர்கள் (1யோவான் 2:22)

6 தேவனிடத்தில் அன்பு கூருகிறேனென்று சொல்லியும் தன் சகோதரனைப் பகைக்கிறவர்கள் (1யோவான் 4:20)

5 அதிகாரம்

IV. இயேசு கிறிஸ்துவைப் பற்றிய உபதேசம்

1. புதிய பிறப்பின் வலம் - தேவனால் பிறக்கும் விதம்

1யோவான் 5:1 இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான்; பிறப்பித்தவரிடத்தில் அன்புகூருகிற எவனும் அவரால் பிறப்பிக்கப்பட்டவனிடத்திலும் அன்புகூருகிறான்.

"இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான்" - இயேசு கிறிஸ்துவே மேசியா என்றும், அவருடைய பாவநிவாரண இரத்தத்திலும் விசுவாசம் வைத்திருக்கிறவர்கள் தேவனால் பிறந்திருக்கிறார்கள். தேவனால் பிறந்திருக்கிறவர்கள் தேவனிடத்திலும் மனுஷரிடத்திலும் அன்புகூருகிறார்கள். இதுவே இரட்சிப்பின் எளிமையான சத்தியமாகும். (யோவான் 3:16; ரோமர் 10:9-10; 1யோவான் 1:9; வெளி 22:17)

"பிறப்பித்தவரிடத்தில் அன்புகூருகிற எவனும் அவரால் பிறப்பிக்கப்பட்டவனிடத்திலும் அன்புகூருகிறான்" - (1யோவான் 2:3)

2. புதிய பிறப்பின் நிரூபணம்

1யோவான் 5:2 நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்து, அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும்போது, தேவனுடைய பிள்ளைகளிடத்தில் அன்புகூருகிறோமென்று அறிந்து கொள்ளுகிறோம்.

1யோவான் 5:3 நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல.

1யோவான் 5:4 தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.

1யோவான் 5:5 இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்?

"தேவனுடைய பிள்ளைகளிடத்தில் அன்புகூருகிறோம்" - தேவனிடத்தில் அன்புகூருவதும் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்வதும் நாம் தேவனுடைய பிள்ளைகளிடத்தில் அன்புகூருகிறோம் என்பதற்குச் சான்றுகளாகும். (1யோவான் 5:1-3; 1யோவான் 2:9-11; 1யோவான் 3:14-16) தேவனுடைய பிள்ளைகளிடத்தில் அன்புகூருவது நாம் தேவனிடத்தில் அன்புகூருகிறோம் என்பதற்குச் சான்றாகும். (1யோவான் 5:1-3; 1யோவான் 3:17-18; 1யோவான் 4:7-21)

1யோவான் நிருபத்தில் தேவனால் பிறப்பதைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் ஆசீர்வாதங்கள்

1. நீதியைச் செய்வதற்கு வல்லமை (1யோவான் 2:29)
2. தேவனுடைய பிள்ளையென்று அழைக்கப் படுவது. (1யோவான் 3:1-3; 1யோவான் 3:10)
3. பாவத்திலிருந்து விடுதலை (1யோவான் 2:9; 1யோவான் 5:18)
4. தேவனுடைய பிள்ளைகளிடத்தில் அன்புகூருதல் (1யோவான் 4:7-8; 1யோவான் 3:14-18; 1யோவான் 5:1)
5. தேவனிடத்தில் அன்புகூருதல் (1யோவான் 4:19; 1யோவான் 5:1-3)
6. புதிய ஏற்பாட்டுக் கற்பனைகளைக் கைக்கொள்வதற்கு வல்லமை. (1யோவான் 5:2-3; யோவான் 1:12; யோவான் 14:15; யோவான் 15:14)
7. உலகத்தை ஜெயிப்பதற்கு வல்லமை. (1யோவான் 5:4-5)
8. சாத்தானிடமிருந்து விடுதலை. (1யோவான் 5:18)

I யோவான் - தொகுப்புரை

5 அதிகாரம்

விசுவாசத்தினால் வரும் ஆசீர்வாதங்கள்

1 சரீர சுகமாதல் (மத் 8:10; அப 3:16)

2 பாதுகாப்பு (மத் 8:26; மத் 14:31)

3 அன்றன்றுள்ள ஆகாரம் (மத் 16:8-10)

4. மன்னிப்பு (லூக்கா 7:50; ரோமர் 3:25)

5. அற்புதங்கள் (அப 6:8; கலா 3:5)

6 இருதயத்தில் சுத்தம் (அப 15:9)

7 பரிசுத்தமாதல் (அப 26:18)

8 நீதி (ரோமர் 3:22; ரோமர் 9:30)

9 நீதிமானாக்கப்படுதல் (ரோமர் 3:28-31, ரோமர் 4:1-25 ரோமர் 5:1 கலா 2:16, கலா 3:8,24)

10 வாலிபம் புதுப்பிக்கப்படுதல் (ரோமர் 4:17-20

11 ஸ்திரத்தனமை (1கொரி 16:13, 2கொரி 1:24

12 கிறிஸ்தவ ஜீவியம் (2கொரி 5:7, எபி 10)

13 பரிசுத்த ஆவியானவர் (கலா 3:2,14)

14. தேவனுடைய பிள்ளை (கலா 3:26)

15. இரட்சிப்பு (அப 4:12, எபே 2:8-9)

16 கிறிஸ்து வாசம்பண்ணுவது (எபே 3:17

17 கிறிஸ்துவிற்குள் ஞானஸ்நானம் (கொலோ 2:12)

18 வல்லமையின் கிரியைகள் (1தெச 1:3; 2தெச 1:11

19 தெய்வீக பக்திவிருத்தி (1தீமோ 1:4)

20 தைரியம் (1தீமோ 3:13)

21 நிச்சயம் (எபி 10:22

22 நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுதல் (எபி 10:23

23. பொறுமை (யாக் 1:3; 1பேதுரு 1:7)

24 சுதந்தரம் (யாக் 2:5)

25 சாத்தானை எதிர்த்து நிற்கும் வல்லமை (1பேதுரு 5:9)

26. உலகத்தின்மீது ஜெயம் (1யோவான் 5:4

27. பக்திவிருத்தி (யூதா 1:20)

28 எபிரெயர் 11 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் ஆசீர்வாதங்கள்

விசுவாசத்தைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் வாக்குத்தத்தங்கள்

1 கூடாத காரியம் ஒன்றுமில்லை (மத் 17:20)

2 எல்லாம் கூடும் (மத் 21:21)

3 சொன்னபடியே ஆகும் (மாற்கு 11:22-24)

4. இரட்சிப்பு (அப 4:12; 1பேதுரு 1:5-13

5. அனுதினத் தேவைகள் (மத் 6, லூக்கா 12:28)

6 கிறிஸ்தவ ஜீவியத்தில் ஜெயம் (ரோமர் 1:17)

7 தேவனிடத்தில் கிட்டிச்சேருதல் (ரோமர் 5:2)

8 பரிசுத்த ஆவியானவர் (கலா 3:14

9 வாக்குத்தத்தங்கள் நிறைவேறுதல் (எபி 6:12)

10 சரீர சுகமாதல் (யாக் 5:14-16

5 அதிகாரம்

3. இயேசு கிறிஸ்துவின் ஐந்து சாட்சிகள்

(1யோவான் 5:6) இயேசுகிறிஸ்துவாகிய இவரே ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர்; ஜலத்தினாலே மாத்திரமல்ல, ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர். ஆவியானவர் சத்தியமாகையால், ஆவியானவரே சாட்சிகொடுக்கிறவர்.

(1யோவான் 5:7) பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர்; பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே; இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்.

(1யோவான் 5:8) பூலோகத்திலே சாட்சியிடுகிறவைகள் மூன்று; ஆவி, ஜலம், இரத்தம் என்பவைகளே; இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது.

(1யோவான் 5:9) நாம் மனுஷருடைய சாட்சியை ஏற்றுக்கொண்டால், அதைப் பார்க்கிலும் தேவனுடைய சாட்சி அதிகமாயிருக்கிறது; தேவன் தமது குமாரனைக்குறித்துக் கொடுத்த சாட்சி இதுவே.

"ஜலத்தினாலும் இரத்தத்தினாலும்" (1யோவான் 5:8)

இயேசுவைப் பற்றி ஆவியானவர் சாட்சி கொடுக்கும் வழிகள்

1 இயேசு குழந்தையாக இருந்தபொழுது அவரை மேசியா என்று அறிக்கையிடுவதற்காக பரிசுத்த ஆவியானவர் சிமியோனை இயேசுவிடம் வழிநடத்தினார் (லூக்கா 2:27-32)

2 இயேசு கிறிஸ்து சரீரப் பிரகாரமாக வளர்ச்சி பெற்றபோது ஆவியானவர் அவருக்குப் பயிற்சி கொடுத்தார் (லூக்கா 2:40-52; ஏசா 50:4-5)

3 இயேசுவே மேசியா என்பதை உறுதிபண்ணுவதற்காக ஆவியானவர் அவர்மீது வந்திறங்கினார் (மத் 3:16; யோவான் 1:31-33)

4 தீர்க்கதரிசிகள் முன்னறிவித்தவைகளை நிறைவேற்றுவதற்காக ஆவியானவர் இயேசு கிறிஸ்துவை அபிஷேகம் பண்ணினார் (மத் 12:18=ஏசா 11:2; ஏசா 42:1-7; லூக்கா 4:16-21; அப 10:38=ஏசா 61:1-2)

5 இயேசு கிறிஸ்துவின் பூமிக்குரிய ராஜரீகத்தை வெளிப்படுத்துவதற்காக ஆவியானவர் இயேசு கிறிஸ்துவை மறுரூபப்படுத்தினார் (மத் 16:28; மத் 17:1-9; 2பேதுரு 1:16-21)

6 எல்லோருடைய பாவங்களையும் மன்னிக்கும் பாவநிவாரண பலியாக தம்மை ஒப்புக் கொடுப்பதற்கு ஆவியானவர் இயேசு கிறிஸ்துவை வழிநடத்தினார் (எபி 9:14)

7 ஆவியானவர் இயேசு கிறிஸ்துவை உயிர்த்தெழச்செய்தார். இதனால் இயேசு கிறிஸ்து மரணம், பாதாளம், கல்லறை ஆகியவற்றின்மீது வெற்றி சிறந்தார் (1பேதுரு 3:18; அப 2:24-32; ரோமர் 1:4)

8 பெந்தெகொஸ்தே நாளில் ஆவியானவர் மேலறையில் ஒருமனப்பட்டு ஜெபம் பண்ணியவர்கள் மீது வந்திறங்கி, இயேசு கிறிஸ்து பரலோகத்திற்கு ஏறிப் போனதையும் அவர் உயர்த்தப்பட்டதையும் உறுதிபண்ணினார் (யோவான் 7:37-39; அப் 2:33-36)

9 இயேசு கிறிஸ்துவே மேசியா என்பதைக் குறித்துக் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனங்களைப் பரிசுத்த ஆவியானவர் நிறைவேற்றுகிறார் (யோவான் 14:16-17,26; யோவான் 15:26; யோவான் 16:7-15; அப 2; எபி 2:3-4; மாற்கு 16:15-20)

10 இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கிற ஒவ்வொருவரிடத்திலும் ஆவியானவர் சாட்சி பகருகிறார் (யோவான் 3:16; ரோமர் 8:9-16; கலா 4:6)

5 அதிகாரம்

11 ஒவ்வொரு விசுவாசியும் புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டிருக்கும் காரியங்களை நிறைவேற்றுவதற்கு ஆவியானவர் அவருக்குப் பெலனளிக்கிறார் (மத் 18:18 மாற்கு 16:15-20, யோவான் 14:12-15 1கொரி 12

12 இயேசு கிறிஸ்துவின் ஜீவியம் உபதேசங்கள், புதிய உடன்படிக்கை ஆகியவற்றை ஆவியானவர் ஏவி எழுத வைத்திருக்கிறார் (அப 1:1-2 1கொரி 2:10; 2தீமோ 3:16-17 2பேதுரு 3:16

"ஆவியானவர் சத்தியம்" (Spirit is truth) - (1யோவான் 4:6; யோவான் 14:17 யோவான் 15:26; யோவான் 16:13)

*(பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்தஆவி என்பவர்களே இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள் (பரலோகத்திலே) யோவான் 5:7,8 ஆகிய வசனத்தில் நாம் வாசிக்கும் இந்த வாக்கியம் பழங்கால மூலபாஷை சுவடிகளில் காணப்படவில்லை ஆகையினால் இதை வேதாகமத்திலிருந்து எடுத்துவிடலாம் என்று பொருளல்ல இந்த வாக்கியமும் வேதாகமத்தின் ஒரு பகுதியே இதற்கான காரணங்கள் ஆதிகத்திருச்சபைத் தலைவர்கள் இந்த வாக்கியத்தை மேற்கோளாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள் கார்த்தேஜின் பிஷப்பாகிய சிப்ரியன் (Cyprian, Bishop of Carthage) (200-258 A.D) என்பவர் இந்த வாக்கியத்தை யோவான் எழுதியிருப்பதாக உறுதிப்பண்ணுகிறார் தாப்சூசின் விகிலியஸ் (Vigilius of Thapsus) ஐந்தாம் நூற்றாண்டில் இந்த வசனத்தை மேற்கோளாகக் குறிப்பிட்டிருக்கிறார் மேலும் கோடக்ஸ் மான் போர்ட்டி (Codex Montfortu) வல்கேட் (Vulgate) ஆகிய சுவடிகளில் இந்த வாக்கியம் காணப்படுகிறது. திரித்துவத்தைக் குறித்த உபதேசத்திற்கு இந்த வாக்கியம் எவ்விதத்திலும் முரண்படாமல் ஒத்திருக்கிறது.

"இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்" பிதா வார்த்தை என்னும் இயேசு, பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள் (யோவான் 17:21-23 "ஒரு" என்னும் வார்த்தை வேதாகமத்தில் பலவிதமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (ஆதி 2:24; ஆதி 11:6; 1கொரி 3:6-8 1கொரி 12:13; எபே 2:14; எபி 2:11 எண்ணிக்கையைப் பொருத்தளவில் மூன்று என்பது ஒன்றாகாது. ஆயினும் ஒற்றுமையில் மூன்றும் ஒன்றாயிருக்கலாம்.

திரித்துவத்தைக் குறித்த நவநான [redacted]

1 தேவன் என்று ஒரே ஒரு நபர் மட்டுமே இருக்கிறார் அந்த நபரை மட்டுமே தேவனென்று அழைக்க முடியும்

2 மூன்று மனுஷ நபர்கள் என்பதற்கும் மூன்று தெய்வீக நபர்கள் என்பதற்கும் பொருளில் வேற்றுமை உள்ளது

3. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூன்றும் ஒரே நபருடைய மூன்று வெளிப்படுத்துதல்களைக் குறிக்கும்.

4 பிதாவாகிய தேவன் மட்டுமே தெய்வீக நபர் குமாரனைப் பிதா சிருஷ்டித்தார் குமாரன் பரிசுத்த ஆவியானவரைச் சிருஷ்டித்தார்

5. தேவன் மூன்று நபர்களாக ஒரே நபரில் இருக்கிறார் அதாவது ஒருவருக்குள் மூவர்

6 மனுஷனுக்குச் சரீரம், ஆத்துமா, ஆவி ஆகியவை இருப்பது போன்று, ஒரே நபருக்குள் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூன்றும் [redacted].

7 தேவன் ஒரு குழப்பமான ஆள்தத்துவப் பண்புடையவர் அவரைத் திரித்துவத்தின் மூலமாக விளக்குவது இயலாத காரியம்.

8 திரித்துவம் என்பது மனுஷனால் புரிந்து கொள்ள முடியாத ஒரு தத்துவம். அதிகக் கல்வி கற்ற கல்விமான்கள் கூட திரித்துவத்தின் தத்துவத்தைப் புரிந்து கொள்ள முடியாமல் திணறுகிறார்கள்

I யோவான் - தொகுப்புரை

5 அதிகாரம்

9 திரித்துவம் பழைய ஏற்பாட்டின் வெளிப்பாடு அல்ல

10 தேவன் ஆள்தத்துவம் பண்புடையவர் அல்ல

11 தேவனை பிரத்தியேட்சமாய கண்களால் யாரும் காணவில்லை

12 சிந்தை, மனம், அன்பு நன்மை வல்லமை ஆகியவற்றில் தேவன் உலகளாவிய பண்புடையவர் ஆகையினால் அவர் ஒரு நபர் அல்ல. முழு உலகத்தையும் நிறைத்திருக்கிறவர்

13 தேவனுக்கு ஒப்பான ஒருவர் இந்த பூமியில் இல்லை

14 தேவனை ஆத்துமாவில் மட்டுமே உணர முடியும்.

15 தேவனுடைய சாயல் என்பது ஆன்மீக சாயலை மட்டுமே குறிக்கும்

16 தேவன் ஆள்தத்துவ பண்புடையவர் என்பது ஒரு கற்பனையே.

17 இயேசு கிறிஸ்துவே பிதாவாகவும் குமாரனாகவும், பரிசுத்த ஆவியானவராகவும் இருக்கிறார்

18 இயேசு கிறிஸ்து ஒரு தேவன் யெகோவா பழைய ஏற்பாட்டின் தேவன்

மேலே கூறப்பட்டிருக்கிற எந்தக் கருத்திற்கும் வேதவசனங்களில் ஆதாரம் எதுவுமில்லை. தேவனை பற்றி இவ்வாறு பல தவறான கருத்துக்கள் காலாகாலமாகக் கூறப்பட்டு வருகிறது. தேவனை புரிந்து கொள்ள முடியாது என்றால் ரோமர் 1:20 இல் "காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்" என்று பவுல் ஏன் எழுதியிருக்க வேண்டும்.

திரித்துவ உபதேசம்

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் தனித்தனியாக ஆள்தத்துவ பண்புடையவர்கள் என்பதும், அவர்கள் ஒன்றாய் இருக்கிறார்கள் என்பதும் தெய்வீக திரித்துவ உபதேசமாகும். மனுஷருக்கும் தேவதூதருக்கும் சொந்தமாக சரீரமும், ஆத்துமாவும் ஆவியும் இருப்பதுபோலவே, பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவருக்கும் தனித்தனியாக சரீரமும், ஆத்துமாவும் ஆவியும் உள்ளது. தேவனுடைய சரீரம் என்று சொல்லும் போது அது லௌதீக சரீரமாகவோ அல்லது ஆன்மீக சரீரமாகவோ இருக்கலாம். சரீரம் என்பது ஆவி, ஆத்துமா ஆகியவற்றின் வாசஸ்தலம். ஆத்துமா உணருகிறது. ஆவி அறிகிறது.

திரித்துவ உபதேசத்தை உண்டாக்கப்பட்டிருக்கிற காணக்கூடிய காரியங்கள் மூலமாக தெளிவாக அறிந்து கொள்ளலாம் (ரோமர் 1:20) மனுஷன் இந்த பூமியில் தேவனுடைய சாயலாகவும், அவருடைய ரூபத்தின் பிரகாரமாகவும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான் (ஆதி 1:26-28) மனுஷன் ஆள்தத்துவ பண்புடையவன் ஆகையினால் தேவனுடைய சாயல் அல்லது ரூபம் என்பது ஆவிக்குரிய காரியங்களை மட்டும் குறிப்பிடாமல் ஆள்தத்துவக் காரியத்தையும் குறிப்பிடுகிறது. தேவனுக்குச் சரீரமில்லை என்று சொல்வோமானால், மனுஷருக்கும் சரீரம் இருக்க முடியாது. ஏனெனில் மனுஷன் தேவசாயலாகவும், அவருடைய ரூபத்தின் பிரகாரமாகவும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறவன்.

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் ஒரே நபர் என்னும் தத்துவத்தையும் ஏற்றுக் கொள்ள இயலாது. ஒருவரில் மூவர் உள்ளனர் என்று கூறுவோமானால் ஒரு மனுஷனுக்குள் பல மனுஷர்கள் இருக்க வேண்டும். சரீரம் என்று சொல்லும்போது அது மாம்சத்தினாலான சரீரமாகத்தான் இருக்க வேண்டும் என்னும் அவசியம் எதுமில்லை. ஏனெனில் வேதாகமத்தில் ஆவிக்குரிய சரீரங்களையும் பரலோகத்திற்குரிய சரீரங்களையும் குறித்து நாம் வாசிக்கிறோம். "வானத்துக்குரிய மேனிகளுமுண்டு, பூமிக்குரிய மேனிகளுமுண்டு; வானத்துக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே, பூமிக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே" (1கொரி 15:35-40)

5 அதிகாரம்

தேவனுக்கு சரீரம், ரூபம், சாயல், சரீர உறுப்புகள் ஆவி, ஆத்துமா ஆகியவை உள்ளதாக வேதாகமம் கூறுகிறது. ஒரு ஆள்தத்துவப் பண்புடையவருக்குச் சரீரம் ஆத்துமா, ஆவி ஆகியவை அவசியம் தேவை இம்மூன்றும் தேவனுடைய ஆள்தத்துவப் பண்பில உள்ளன

தேவனுடைய ஆள்தத்துவப் பண்புகள்

1 தனிப்பட்ட ஆவி (personal spirit) (சங் 143:10; ஏசா 30:1)

2 சிந்தை (mind) (ரோமர் 11:34)

3 ஞானம் (intelligence) (ஆதி 1:26. ரோமர் 11:33

4 சித்தம் (will) (ரோமர் 8:27 ரோமர் 9:19

5 வல்லமை (power) (எபே 1:19 எபே 3:7,20 எபி 1:3)

6 சத்தியம் (truth) (சங் 91:4)

7 விசுவாசமும், நம்பிக்கையும் (faith and hope) (ரோமர் 12:3 1கொரி 13:13

8 நீதி (righteousness) (சங் 45:4)

9 [redacted] (faithfulness) (1கொரி 10:13

10 அறிவும், ஞானமும் (knowledge and wisdom) (ஏசா 11:2; 1தீமோ 1:17

11 சிந்தனை (reason) (ஏசா 1:18)

12 பகுத்தறிவு (discernment) (எபி 4:12)

13 மாறாத தன்மை (immutability) (எபி 6:17

தேவன் தம்மைச் சரீரப்பிரகாரமாகப் பல இடங்களில வெளிப்படுத்தியிருக்கிறார் (ஆதி 18; ஆதி 32:24-30, யாத் 24:9-11 யோசு 5:13-15; ஏசா 6; தானி 7:9-13 எசே 1; அப் 7:56-59; வெளி 4-5, மனுஷன் தேவனுடைய ரூபமாகவும், தேவனுடைய சாயலாகவும் இருக்கிறான் தேவனைக் காணமுடியாது அவருடைய ரூபமாகவும், சாயலாகவும் இருக்கும் மனுஷன் மூலமாக தேவனை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். (ரோமர் 1:20,

வேதாகமத்தில் தேவனுடைய சரீர உறுப்புக்களாக நாம் வாசிக்கும் [redacted]

1 பின்பகுதிகள் (back parts) (யாத் 33:23)

2 இருதயம் (heart) (ஆதி 6:6, ஆதி 8:21)

3 கைகளும், விரல்களும் (hands and fingers) (சங் 8:3-6, எபி 1:10 வெளி 5:1-7)

4 வாய் (mouth) (ஏசா 1:20

5 உதடுகளும், நாவும் (lips and tongue) (ஏசா 30:27,

6 பாதங்கள் (feet) (எசே 1:27, யாத் 24:10)

7 கண்கள் (eyes) (சங் 11:4, சங் 18:24, சங் 33:18)

8 காதுகள் (ears) (சங் 18:6)

9 தலைமுடி, தலை, முகம், கைகள் (hair, head, face, arms) (தானி 7:9-14; தானி 10:5-19, வெளி 5:1-7; வெளி 22:4-6

10 இடுப்பு (loins) (எசே 1:26-28, எசே 8:1-4)

5 அதிகாரம்

தேவனுக்குச் சரீரப் பிரசன்னம் உள்ளது. (ஆதி 3:8; ஆதி 18:1-22) ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மற்ற நபர்கள் போவதுபோலவே போகிறார் (ஆதி 3:8 ஆதி 11:5; ஆதி 18:1-5,22,33; ஆதி 19:24, ஆதி 32:24-32; ஆதி 35:13; சக 14:5 தானி 7 9-14; தீத்து 2:13)

தேவனிடம் உள்ள காரியங்கள்

1. சத்தம் (voice) (சங் 29 வெளி 10:3-4
2. சுவாசம் (breath) (ஆதி 2:7)
3. முகரூபம் (countenance) (சங் 11:7)

தேவன் செய்யும் காரியங்கள்

1. வஸ்திரம் தரிக்கிறார் (He wears clothes) (தானி 7:9-14 தானி 10:5-19),
2. போஜனம் பண்ணுகிறார் (eats) (ஆதி 18:1-8; யாத் 24:11)
3. ஓய்வு எடுக்கிறார் (rests) (ஆதி 2:1-4; எபி 4:4)
4. பரலோகத்தில் வாசம்பண்ணுகிறார் (dwells in a mansion and in a city located on a material planet called Heaven) (யோவான் 14:1 3, எபி 11:10 16. எபி 13:14. வெளி 21)
5. சிங்காசனத்தில் அமர்ந்திருக்கிறார் (sits on a throne) (ஏசா 6; தானி 7:9-14. வெளி 4:1 5; வெளி 22:3-6)
6. நடக்கிறார் (walks) (ஆதி 3:8; ஆதி 18:1-8,22,33,
7. ஏறிப்போகிறார் (rides) (சங் 18:10; சங் 68:17, சங் 104:3; எசே1)

தேவனுடைய உணர்வுகள்

1. துக்கம் (grief) (ஆதி 6:6
2. கோபம் (anger) (1இராஜா 11:9,
3. மனம்வருந்துதல் (repentance) (ஆதி 6:6)
4. வைராக்கியம் (jealousy) (யாத் 20:5,
5. வெறுப்பு (hate) (நீதி 6:16,
6. அன்பு (love) (யோவான் 3:16,
7. பரிதாபம் (pity) (சங் 103:13,
8. ஐக்கியம் (fellowship) (1யோவான் 1:1-7)
9. சந்தோஷம் (pleasure and delight) (சங் 147:10)
10. உணர்வுகள் (other soul passions like other beings) (கலா 5:22-23

தேவதூதர்கள் கேருபீன்கள் சேராபீன்கள் ஆகியவற்றிற்கு ஆவிக்குரிய சரீரங்களும் ஆத்துமாக்களும் ஆவிகளும் உள்ளன. மனுஷர்கள் திருமறைத் தங்கள் சொந்தக் கண்களால் தரிசித்திருக்கிறார்கள் ஆவிக்குரிய சரீரமும் ஒரு சரீரமே என்பதுதான் வேதாகமத்தின் உபதேசம். தரிசிக்க முடியாத எந்தப் பொருளையும் தேவன் இந்த உலகத்தில் சிருஷ்டிக்கவில்லை. பரலோகமும், ஒரு பௌதீகப் பொருளே (ஆதி 1:1; எபி 11:10-16)

மனுஷர்கள் தங்களுடைய சொந்தக் கண்களால் தேவனைப் பலமுறை தரிசித்திருக்கிறார்கள் (ஆதி 18:1-33, ஆதி 19:24; ஆதி 32:24-30, யாத் 24:11, யாத் 33:11 33; யோசு 5:13-15, நியா 6:11 23 நியா 13:3-25; 1நாளா 21:16-17, யோபு 42:5, ஏசா 6 எசே 1:26-28; எசே 10:1, 20, எசே 40:3; தானி 7:9-14; தானி 10:5-10, அப் 7:56 59; வெளி 4:2-5, வெளி 5:1,5-7,11 14; வெளி 6:16, வெளி 7:9-17; வெளி 19:4; வெளி 21:3-5, வெளி 22:4)

I யோவான் - தொகுப்புரை

5 அதிகாரம்

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகியோரின் வெவ்வேறு தனித்தனியான ஆள்தத்துவப் பண்புகள்

"ஒன்று "one" என்னும் வார்த்தை ஒன்று என்னும் எண்ணையும் ஒற்றுமையையும் குறிக்கும் (1யோவான் 5:7, யோவான் 17:11, 21-23 ஆகிய வசனங்களில் ஒன்று என்பது ஒற்றுமையைக் குறிக்கிறது. ஆயினும் பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் வேதாகமத்தில் தனித் தனியாகவும் வர்ணிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரே தேவனாகிய பிதாவும், ஒரே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் ஒரே பரிசுத்த ஆவியானவரும் இருக்கிறார்கள் (1கொரி 8:6 எபே 4:3-6). இவ்வாறாக தெய்வீக ஒருமையிலும், தெய்வீக பன்மையிலும் மூன்று வெவ்வேறு ஆள்தத்துவ பண்புடையவர்கள் உள்ளனர். பிதா தேவனென்று அழைக்கப் படுகிறார் (1கொரி 8:6) குமாரன் தேவனென்று அழைக்கப் படுகிறார் (ஏசா 9:6,7, எபி 1:8, யோவான் 1:1-2; யோவான் 20:28) பரிசுத்த ஆவியானவர் தேவனென்று அழைக்கப் படுகிறார் (அப் 5:3-4) இம்மூன்று வெவ்வேறு தனித்தனி ஆள்தத்துவப் பண்புடையவர்களும் தேவன் என்று அழைக்கப்படும்போது இம்மூவரையும் மொத்தமாகக் குறிப்பிடும்போது "தேவர்கள்" என்று பன்மையில் குறிப்பிடாமல் "தேவன்" என்று ஒருமையிலேயே வேதாகமம் குறிப்பிடுகிறது. ஏனெனில் இவர்கள் மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள். தேவன் என்னும் வார்த்தையை ஒருமையாகவும், பன்மையாகவும் பயன்படுத்தலாம்.

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரைக் குறித்தும் மொத்தமாகக் கூறப்பட்டிருக்கிற கருத்துக்களை அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகவும் கூறலாம். அதே சமயத்தில் தேவத்துவத்தின் ஒவ்வொரு ஆள்தத்துவ பண்புடையவருக்கும் தனித்தனியாகக் கூறப்படும் காரியங்கள் தேவத்துவத்தின் மற்ற ஆள்தத்துவ பண்புடையவருக்குப் பொருந்தாது. பிதா கிறிஸ்துவின் தலையாக இருக்கிறார் (1கொரி 11:3) இயேசு கிறிஸ்து தேவனுடைய ஒரேபேறான குமாரன் (2யோவான் 1:3) பரிசுத்த ஆவியானவர் பிதாவினிடத்திலிருந்தும் குமாரனிடத்திலிருந்தும் வந்திருக்கிறவர் (யோவான் 14:16,26 யோவான் 15:26; யோவான் 16:7-15 அப் 2:34)

2 தேவனுடைய திருநாமங்கள் ஆள்தத்துவத்தின் பன்மைப் பண்பை உறுதிப்படுத்துகிறது. ஆதி 1:1 ஆகிய வசனத்திலும் மேலும் 2700க்கு மேற்பட்ட பழைய ஏற்பாட்டு வசனங்களிலும் ஏலோஹிம் **(Elohiym)** என்னும் சொல் தேவனைக் குறிக்கிறது. இது ஒரு ஒருமையும், பன்மையும் கலந்த பெயர்ச் சொல்லாகும். இதற்கு தேவன் என்றும் தேவர்கள் என்றும் ஒருமையிலும் பன்மையிலும் பொருள்கூறலாம். (ஆதி 1:5 யாத் 22:28; 1சாமு 4:8, தானி 2:11 தானி 4:6-9; தானி 5:11,14) சில வசனங்களில் இந்த வார்த்தையோடு பன்மை வினைச்சொல் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. "தேவன் என்னைத் தேசாந்தரியாய்த் திரியும்படி செய்தபோது" **"the Gods they caused me to wander"** (ஆதி 20:13) "அங்கே தனக்கு தேவன் தரிசனமான படியால்" **"there the Gods they appeared unto him"** (ஆதி 35:7) இவ்விரண்டு வாக்கியங்களிலும் "தேவன்" என்னும் சொல் பன்மையில் பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

தேவன் (God) אֱלֹהִים - el-o-heem' - 430

I யோவான் - தொகுப்புரை

5 அதிகாரம்

ஆ.பெசொ - தேவன், தேவர் தெய்வம், நியாயாதிபதி, சுவாமி தேவி, கர்த்தர்

3 தேவனுடைய பெயரைக் குறிப்பதற்குப் பன்மை பிரதிப்பெயர்ச்சொல் (Plural pronouns) பயன்படுத்தப்பட்டிருக்கிற படியினால், இது ஆள்தத்துவத்தின் பன்மைப் பண்பை விளக்குகிறது. ஆதி 1:26; ஆதி 3:22; ஆதி 11:7 ஏசா 6:8; யோவான் 14:23 யோவான் 17(11 22-23)

4 ஒன்றாம், இரண்டாம், மூன்றாம் பன்மை பிரதிப்பெயர்ச்சொற்கள் (First, second, and third personal pronouns) வேதாகமத்தில் தேவனைக் குறிப்பதற்கு நூற்றுக்கணக்கான வசனங்களில் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. மனுஷருக்குப் பயன்படுத்துவது போலவே தேவத்துவத்தின் மூன்று ஆள்தத்துவ நபர்களையும் குறிப்பதற்கு இந்தப் பிரதிப் பெயர்ச்சொற்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. சில வசனங்களில் தேவத்துவத்தின் வெவ்வேறு நபர்கள் தங்களுக்குள் ஒருவரையொருவர் குறிப்பிட்டு அழைப்பதற்கு இந்தப் பிரதிப்பெயர்ச் சொற்களைப் பயன் படுத்தியிருக்கிறார்கள். யோவான் சுவிசேஷத்தில் இயேசு கிறிஸ்து பிதாவைக் குறிப்பதற்குத் தன்மை பிரதிப்பெயர்ச் சொற்களைப் (personal pronouns) பயன்படுத்தியிருக்கிறார் (யோவான் 14:16-17,26, யோவான் 15:26; யோவான் 16:7-15) சில வசனங்களில் தேவத்துவத்தின் மூன்று நபர்களையும் மொத்தமாகக் குறிப்பதற்கு ஒருமை பிரதிப்பெயர்ச்சொல் (singular pronouns) பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

(யாத் 20:3; ஏசா 44:6, 8; ஏசா 45:5,21; ஏசா 46:9; ஓசி 13:4 சபையில் பல அங்கத்தினர்கள் இருந்த போதிலும் அந்தச் சபையை ஒரு மனுஷனாக வர்ணித்து, அதை "அவர்" என்னும் பிரதிப்பெயர்ச்சொல்லால் அழைக்கப் படுவதை நாம் வேதவசனங்களில் காணலாம். (எபே 2:14-15; எபே 4:13 எபே 5:25-27; 2தெச 2:7-8

5. "மனுஷன் நன்மை தீமை அறியத் தக்கவனாய் நம்மில் ஒருவரைப்போல் ஆனான்" "Man is become as one of us" என்னும் வாக்கியம் தேவத்துவத்தின் பன்மையை விளக்குகிறது. ஆதி 3:22

6. தேவத்துவத்தின் இரண்டு அல்லது மூன்று நபர்களும் ஒரே வசனத்தில் ஒரே காலத்தில் ஒரே இடத்தில் வெவ்வேறு நபர்களாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறார்கள் (தானி 7:9-14; மத் 3:16-17; யோவான் 1:31-34; அப் 7:54-60; வெளி 6:16 வெளி 7:9-17; வெளி 21:22 வெளி 22:3)

7 ஆதி 19:24 ஆம் வசனத்தில் இரண்டு கர்த்தர்களைப் பற்றிய குறிப்பு உள்ளது. ஒருவர் பூமியிலுள்ள கர்த்தர் மற்றொருவர் வானத்திலுள்ள

8 பழைய ஏற்பாட்டில் தேவத்துவத்தின் இரண்டு நபர்களும் குறிப்பிடப் பட்டிருக்கிறார்கள் (சங் 8:5-6=எபி 2:5-18; சங் 16:8-10=அப் 2:25-36 சங் 22:1 22=மத் 27:35, 39-43,45-46, எபி 9:14- எபி 10:5-12 சங் 40:6-10=எபி 10:5-7 சங் 45:6-7=எபி 1:8-9)

9 கர்த்தத்துவத்தின் இரண்டு நபர்கள் அருகருகே அமர்ந்திருப்பதாக வேதவாக்கியங்களில் குறிப்புகள் உள்ளன (சங் 110:1,5; மத் 22:44, மத் 26:64; அப் 2:33-34, அப் 7:54-56 ரோமர் 8:34, எபே 1:20; கொலோ 3:1- எபி 1:3,13 எபி 8:1; எபி 10:12; எபி 12:2, 1பேதுரு 3:22; வெளி 22:3)

5 அதிகாரம்

10 ஒரு பாஷையைச் சம்பாஷணை செய்வதற்கு இரண்டு நபர்கள் தேவை. தேவத்துவத்தின் இரு நபர்கள் ஒருவரோடொருவர் சம்பாஷணை பண்ணுவதாக வேதவாக்கியங்களில் குறிப்புகள் உள்ளன (சங் 2; சங் 9:19; சங் 132:17; நீதி 30:4; ஏசா 4:2; ஏசா 10:16-17; ஏசா 28:16; ஏசா 49:1-10; ஏசா 50:4-11; ஏசா 52:13-53:12; ஏசா 62:11; மீகா 5:1-5; எரே 23:4-8; எரே 33:14-26; சக 3:8-10; சக 6:12-13) இந்த வசனங்களில் ஒருவர் அபிஷேகம் பண்ணப்பட்டவர், ஒரேபேறான குமாரனாக இருக்கிறவர். ஒருவரை மற்றவர் அனுப்புகிறார். ஒருவருக்கு மற்றவர் கூறுக் கொடுத்திருக்கிறார். ஒருவருக்கு மற்றவர் ஊழியக்காரராக இருக்கிறார். இருவருமே கர்த்தர் என்று அழைக்கப்படுகிறார்.

11 தேவத்துவத்தின் மூன்று நபர்களும் கூட்டாகக் கிரியை செய்கிறவர்கள். கர்த்தராகிய தேவன், மேசியா, பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவருமே ஆசீர்வதிக்கிறவராகவும், அபிஷேகம் பண்ணுகிறவராகவும், அனுப்புகிறவராகவும், ஒருவருக்கொருவர் கிரியை செய்கிறவராகவும் இருக்கிறார்கள். (ஏசா 11:2; ஏசா 42:1-7; ஏசா 48:16; ஏசா 59:21; ஏசா 61:1-2; ஏசா 63:9-14; சக 12:10; 13:2)

12 சக 1:7-21 ஆகிய வசனங்களில் சேனைகளின் கர்த்தரும் (Lord of Hosts), கர்த்தருடைய தூதனும் (angel of the Lord) பேசிக்கொள்வதாக நாம் வாசிக்கிறோம். சேனைகளின் தூதனுக்கு கர்த்தர் Lord என்று மற்றொரு பெயரும் உள்ளது. (சக 1:19-20; சக 2:1-13) ஒருகர்த்தர் மற்றொரு கர்த்தரிடத்தில் அவர் இவரை இஸ்ரவேலிடத்தில் அனுப்பியதாகக் கூறுகிறார் (சக 2:8-13) ஒரு கர்த்தரை குறிப்பதற்கு "என்னை" என்னும் பிரதிப்பெயர்ச்சொல்லும் சேனைகளின் கர்த்தரைக் குறிப்பதற்கு "அவர்" என்னும் பிரதிப்பெயர்ச் சொல்லும் பயன்படுத்தப்பட்டுள்ளது. (சக 2:8-11; சக 13:6-7 ஆவது வசனம் வரையிலும் இவ்விருவரும் தொடர்ந்து சம்பாஷணை பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

13 இயேசு கிறிஸ்து ஆபிரகாமின் குமாரன், தாவீதின் குமாரன், மரியாளின் குமாரன், தேவனுடைய குமாரன் என்று அழைக்கப் படுகிறார் (மத் 1:1; மாற்கு 1:1; மாற்கு 6:3) இயேசு கிறிஸ்துவும் தேவனும் வெவ்வேறு ஆள்தத்துவம் உடையவர்கள்.

14 புதிய ஏற்பாட்டில் பல வசனங்களில் தேவத்துவத்தின் இரு நபர்களும் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள் (மத் 11:27; லூக்கா 23:46; யோவான் 1:1-2, 18; யோவான் 5:19-20; யோவான் 14:1-9; யோவான் 16:15; யோவான் 17:1-10; அப் 2:38-39; அப் 3:13-26; பிலி 2:5-11; எபே 3:5; கொலோ 1:15; 2தெச 2:16-17; தீத்து 2:13; எபி 1:1-3; வெளி 20:6; வெளி 22:3)

15 புதிய ஏற்பாட்டுப் புஸ்தகங்களின் முகவுரைகளில் தேவத்துவத்தின் இரண்டு நபர்களும் சில வசனங்களில் மூன்று நபர்களும் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள் (ரோமர் 1:1-4, 7; 1கொரி 1:3; யாக் 1:1; 1பேதுரு 1:1-3; 2யோவான் 1:3; வெளி 1:1-6)

16 தேவன் கிறிஸ்துவிற்குத் தலையாக இருக்கிறார். ஆகையினால் தமது ஸ்தானத்தில் தேவன் கிறிஸ்துவைவிட உயர்ந்தவர் (1கொரி 3:23; 1கொரி 11:3; 1நாளா 29:11; யோவான் 14:28)

17 தேவனுக்கும் மனுஷனுக்கும் முன்பாக கிறிஸ்து மத்தியஸ்தராக இருக்கிறார். அவர் தமக்கும் மனுஷனுக்கும் முன்பாக மத்தியஸ்தரல்ல. (1தீமோ 2:5)

I யோவான் - தொகுப்புரை

5 அதிகாரம்

18 தேவத்துவத்தின் இரண்டு நபர்களும் சில வசனங்களில் மூன்று நபர்களும் புதிய ஏற்பாட்டின் எல்லா புஸ்தகங்களிலும் குறிப்பிடப் பட்டிருக்கிறார்கள் (மத் 3:16-17 மத் 12:31-32 மத் 17:5 மத் 22:43-45 மத் 28:19 மாற்கு 1:9-2:10 மாற்கு 13:32 லூக்கா 1:32-35; லூக்கா 2:40,52 லூக்கா 3:22; லூக்கா 4:1, லூக்கா 4:18; லூக்கா 9:35 லூக்கா 23:46; லூக்கா 24:49; யோவான் 4:24; யோவான் 1:1-3,14,18 யோவான் 5:17-25 31-38 யோவான் 6:37 44-46 57 யோவான் 7:16-18,28 37-39 யோவான் 8:13-19, 26-38,42,54 யோவான் 10:15-18,24,29 36 யோவான் 12:26-31,44,49-50, யோவான் 14:1-26, 28-30 யோவான் 15:1-26; யோவான் 16:1-33 யோவான் 17:1-26, யோவான் 18:11 யோவான் 20:17,21, யோவான் 18:11 யோவான் 20:17,21; அப் 1:7-8 அப் 2:24-36; அப் 3:13 26 அப் 4:10,26-31; அப் 5:29-33 அப் 7:37,55-56; அப் 8:12 17 அப் 9:17, அப் 10:38-48; அப் 17:31 ரோமர் 1:3,7,9; ரோமர் 5:1 11 ரோமர் 8:9-13,26-39; 1கொரி 1:3-9 1கொரி 2:10; 1கொரி 3:23 1கொரி 8:6. 1கொரி 11:3, 1கொரி 12:3; 1கொரி 15:57; 2கொரி 1:2-3; 2கொரி 5:17-21 2கொரி 13:14, கலா 1:1 3; எபே 1:2 3, எபே 3:14, எபே 4:3-6 கொலோ 1:2-3,13 19 கொலோ 3:1, 1தெச 1:1 10; 1தெச 3:13; 2தெச 1:1 2; 2தெச 2:16; 1தீமோ 1:2; 1தீமோ 2:5; 1தீமோ 5:21; 1தீமோ 6:14-16; 2தீமோ 1:2; 2தீமோ 4:1; தீத்து 1:4; தீத்து 2:13 பிலே 1:3, வெளி 5:13) தேவத்துவத்தின் மூன்று நபர்களும் வெவ்வேறு ஆள்தத்துவப் பண்புடையவர்கள் ஆகையினால் மூவரையும் ஒருவராகக் கூற இயலாது. ஆயினும் மூவரும் ஒற்றுமையில் ஒருவராக இருக்கிறார்கள்

19 இயேசு கிறிஸ்துவைக் குறித்து தேவத்துவத்தின் மூவரும் தனித் தனியாகச் சாட்சி பகருகிறார்கள் (1யோவான் 5:5-11, 13, 20) ஒரு காரியத்தை உறுதிபண்ணுவதற்கு ஒன்றுக்கும் மேற்பட்ட சாட்சி அவசியமாயிருக்கிறது. (மத் 18:16, 2கொரி 13:1) 1யோவான் 5:8 ஆவது வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் தண்ணீரும் இரத்தமும் ஒரு கருத்தை உறுதிபண்ணும் ஆள்தத்துவப் பண்புடைய சாட்சிகள் என்று ஏற்றுக் கொள்ள முடியாது. (மத் 18:16 2கொரி 13:1) பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகியோரே 1யோவான் 5:8 ஆவது வசனத்தில் சாட்சி பகருகிறவர்கள் இம்மூவரும் ஒருவர் என்று நாம் ஏற்றுக் கொள்வோமானால், இங்கு இயேசு கிறிஸ்துவின் குமாரத்துவத்தை நிரூபிப்பதற்கு ஒன்றுக்கும் மேற்பட்ட சாட்சிகள் இல்லை. பிதா, குமாரன் பரிசுத்த ஆவியானவர் ஆகியோர் பகரும் சாட்சியை மூன்று தனித்தனி ஆள்தத்துவப் பண்புடையவர்களின் சாட்சிகள் என்று நாம் அங்கீகரிக்க வேண்டும்.

(1) பிதா **(The Father)** (எரே 29:23; மல 3:5 யோவான் 5:31-37, ரோமர் 1:9, எபி 1:1 2, எபி 2:3-4

(2) குமாரன் **(The Son)** (ஏசா 55:4; யோவான் 18:37, 1தீமோ 6:13; வெளி 1:5

(3) பரிசுத்த ஆவியானவர் **(The Holy Spirit)** (ரோமர் 8:16; யோவான் 15:26, எபி 10:15 1யோவான் 3:6

இம்மூவரும் சாட்சிகள் என்றால் இவர்கள் வெவ்வேறு ஆள்தத்துவப் பண்புடையவர்களே தண்ணீரும் இரத்தமும் இவர்களுடைய சாட்சியை உறுதிபண்ணுகிறது. இயேசுவின் குமாரத்துவத்திற்குத் தண்ணீரும் இரத்தமும் கூடுதலான ஆதாரத்தைத் தருகிறது.

I யோவான் - தொகுப்புரை

5 அதிகாரம்

20 இயேசு கிறிஸ்து, பரிசுத்த ஆவியானவர் ஆகியோரைப் பற்றி கூறும்போது "மூலமாக" (through) "ஆல்" (by) என்னும் வார்த்தைகள் அவர்களோடு பயன்படுத்தப் பட்டுள்ளன ஆனால் பிதாவாகிய தேவனோடு இந்த வார்த்தைகள் பயன்படுத்தப்படவில்லை. இவர்கள் மூலமாக நடைபெறும் அனைத்து கிரியைகளையும் இயக்குகிறவர் பிதாவாகிய தேவனே இவர் தனியாக ஆள்தத்துவம் பணபுடையவராகவும் தலையாகவும் இருக்கிறார் (1கொரி 3:23, 1கொரி 11:3 யோவான் 10:29; யோவான் 14:28 யோவான் 14:16-17,26; யோவான் 15:26 யோவான் 16:7-15, அப் 2:33-34)

(1) இயேசு கிறிஸ்துவின் மூலமாக (Through Jesus Christ) (அப் 4:2; ரோமர் 1:8 ரோமர் 5:1,9,11; ரோமர் 6:23 ரோமர் 7:25; ரோமர் 15:17, ரோமர் 16:27; 1கொரி 15:57 2கொரி 3:4; கலா 3:14, கலா 4:7; கலா 5:10, எபே 2:7,18; பிலி 4:7,13 தீத்து 3:6; எபி 13:21; 1பேதுரு 1:22; 1பேதுரு 4:11 1யோவான் 4:9

(2) இயேசு கிறிஸ்துவினால் (By Jesus Christ) யோவான் 1:3,10,17; யோவான் 10:9; அப் 4:10; அப் 10:36; ரோமர் 2:16; ரோமர் 3:22; ரோமர் 5:17,21; கலா 1:1; எபே 1:5; எபே 3:9 கொலோ 1:15-20; கொலோ 3:17; எபி 13-3; 1பேதுரு 2:5; 1பேதுரு 5:10)

(3) பரிசுத்த ஆவியானவர் மூலமாக (Through the Holy Spirit) (அப் 1:2; அப் 21:4, ரோமர் 8:13; ரோமர் 15:13,19, கலா 5:5; எபே 2:22; எபி 9:14

(4) பரிசுத்த ஆவியானவரால் (By the Holy Spirit) (எசே 11:24; மீகா 3:8 சக 4:6; மத் 12:28 லூக்கா 2:27; லூக்கா 4:1 அப் 11:28; ரோமர் 5:5, ரோமர் 15:19; 1கொரி 2:10 1கொரி 6:11; 1கொரி 12:3,13)

இயேசு கிறிஸ்து பிதாவானவர் அல்ல என்று கூறுவதற்குச் சான்றுகள்

1. இயேசு கிறிஸ்து பூமியில் இருந்த காலம் அனைத்திலும் பிதாவானவர் பரலோகத்தில் இருந்தார் (மத் 5:16,48)

2. இயேசு கிறிஸ்து இப்பொழுது பிதாவின் வலதுபாரிசத்தில் அமர்ந்திருக்கிறார்

3. என்னுடைய பிதாவிற்கு முன்பாக நான் மனுஷனைக் குறித்து அறிக்கையிடுவேன் என்று இயேசு கூறியிருப்பதினால் இவரும், பிதாவும் ஒருவரல்ல என்பது தெளிவாகிறது (மத் 10:32; வெளி 3:5)

4. இயேசு கிறிஸ்து எப்பொழுதும் பிதாவை ஒரு தனி ஆள்தத்துவம் பணபுடையவராகப் பாவித்து அவரிடத்தில் ஜெபம் பண்ணினார் (மத் 11:25; யோவான் 17)

5. இயேசு கிறிஸ்துவின் சரீரத்திற்கு வெளியே பிதாவானவர் இருந்தார் ஆகையினால் பிதாவானவர் இயேசுவாக இருக்க முடியாது. (மத் 2:12; மத் 3:17, மத் 17:5, யோவான் 12:27-30)

6. இயேசுவும், சாத்தானும் தேவனைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள் அந்தத் தேவன் இயேசு அல்ல. (மத் 4:6-10

7. தேவன் இயேசுவின் பிதாவாக இருக்கிறார் (எபே 1:3,17; எபே 3:14

I யோவான் · தொகுப்புரை

5 அதிகாரம்

8 இயேசு கிறிஸ்து தாம் கூறிய உவமைகளில் பிதாவோடு தமக்குள்ள ஐக்கியத்தைப் பற்றி கூறியிருக்கிறார் (மத் 21 33-46 யோவான் 15:1-8)

9 ஜனங்கள் பிதாவிடம் இயேசு கிறிஸ்துவின் மூலமாக ஜெபிக்க வேண்டும் என்பது வேதாகம உபதேசம். (யோவான் 14:12-15, யோவான் 15:16; யோவான் 16:23-26)

10 இயேசு கிறிஸ்துவிற்கு அறிந்திராத காரியங்கள் பிதாவிற்குத் தெரியும் (மாற்கு 13:32; அப் 1:7)

11 இயேசு கிறிஸ்துவை ஒரு தனிநபராக மற்றவர்கள் கண்டிருக்கிறார்கள் (தானி 7:9-14; அப் 7:56)

12 தம்முடைய ஆவியை இயேசு கிறிஸ்து தமக்குள்ளே ஒப்புக் கொடுக்காமல் பிதாவிடத்தில் ஒப்புக்கொடுத்தார் (லூக்கா 23:46)

13 தாம் தேவனிடத்திலிருந்து வந்ததாகவும், தேவனிடத்திற்குத் திரும்பிப் போவதாகவும் இயேசு கிறிஸ்து கூறியிருக்கிறார் (யோவான் 8:42; யோவான் 16:5; யோவான் 10:36, யோவான் 17:8)

14. தேவன் ஆவியாக இருக்கிறார் இயேசுவைப் போல மாம்சத்தினாலும் இரத்தத்தினாலும் ஆனவர் அல்ல (யோவான் 4:24; யோவான் 19:34 மத் 26:47, லூக்கா 24:39)

15 இயேசுவோடு இந்தப் பூமியிலிருந்த ஜனங்கள் வானத்திலிருந்து பிதாவானவர் தனி ஆளத்துவப் பண்புடையவராகப் பேசியதைக் கேட்டிருக்கிறார்கள். (மத் 3:17; மத் 17:5; 2பேதுரு 1:16-18)

16. இயேசு கிறிஸ்து தம்மைத் தேவனுடைய குமாரனாகக் கூறியிருக்கிறார் தம்மைப் பிதாவானவர் என்று அவர் ஒருபோதும் கூறியதில்லை. (யோவான் 5:17-35)

17 இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு கூட, பிதாவை "என் தேவனே" என்று அழைத்திருக்கிறார் (யோவான் 20:17; வெளி 3:12)

18 இயேசு கிறிஸ்து தேவனை "என் பிதாவானவர்" என்று 57 வசனங்களில் கூறியிருக்கிறார் (யோவான் 15:1 வெளி 2:27)

19 இயேசு கிறிஸ்து பூமியில் பிறந்த போது தேவதூதர்களும் ஜனங்களும் தேவன் வானத்தில் இருந்ததாக அங்கிகரித்திருக்கிறார்கள் (லூக்கா 2:7-16)

20 மரியாளும் யோசேப்பும் குழந்தை இயேசுவைக் காத்தருக்கென்று ஒப்புக்கொடுக்க எருசலேமிற்குக் கொண்டு போனார்கள் (லூக்கா 2:22-24). இயேசு வேறு கர்த்தர் வேறு என்று அவர்கள் நினைத்ததினால்தான் குழந்தை இயேசுவைத் தேவாலயத்திற்குக் கொண்டு போனார்கள்

21 சிமியோனுக்கு இயேசு கிறிஸ்துவைப் பற்றி பரிசுத்த ஆவியினால் அறிவிக்கப் பட்டிருந்தது தேவத்துவத்தில் இயேசு கிறிஸ்து ஒரு நபர் என்பதை சிமியோன் தெரிந்து கொண்டார் (லூக்கா 2:26-33)

22 யோவான் ஸ்நானன் பிதாவை அறிந்திருந்தார் ஆனால் அவர் குமாரனை அறிந்திருக்கவில்லை. (யோவான் 1:31-34)

23 சிலுவையில் பிதா மரிக்கவில்லை. குமாரனாகிய இயேசு கிறிஸ்துவே மரித்தார் (1கொரி 15:3 1பேதுரு 2:24)

24 இயேசு கிறிஸ்துவே பிதாவாகிய தேவனுடைய ஒரேபேறான குமாரன் ஆகையினால் இயேசு பிதாவாக இருக்க முடியாது. (யோவான் 1:14)

5 அதிகாரம்

25 இயேசு கிறிஸ்து தாமாக ஒரு கிரியையும் நடப்பிக்காமல பிதாவானவர் தம் மூலமாகக் கிரியை நடப்பிப்பதாக அங்கீகரித்திருக்கிறார் (யோவான் 5:19,30; யோவான் 6:38; யோவான் 8:28; யோவான் 12:49-50)

26 தம்முடைய சொந்த சித்தத்தை செய்வதற்கு வராமல், பிதாவின் சித்தத்தைச் செய்வதற்கு பிதாவானவர் தம்மை அனுப்பியிருப்பதாக இயேசு கிறிஸ்து அங்கீகரித்திருக்கிறார் (யோவான் 5:30; யோவான் 6:38)

27 இயேசு கிறிஸ்துவின் உபதேசம் அவருடையதல்ல பிதாவினுடையது. (யோவான் 7:16-17; யோவான் 8:26)

28 இயேசு கிறிஸ்து தாமாக ஒன்றும் பேசாமல் தம்மை அனுப்பின பிதாவுக்குரிய காரியங்களையே பேசினார் (யோவான் 7:16-18; யோவான் 8:26-40)

29 இயேசு கிறிஸ்து தம்மைத் தாமே பிரியப்படுத்தாமல், பிதாவானவரையே பிரியப்படுத்தினார் (யோவான் 8:29)

30 தேவனுடைய குடும்பத்தில் இயேசு கிறிஸ்து குமாரனாக இருக்கிறார் பிதாவாக இல்லை (யோவான் 8:35-36; எபி 3:6)

31 பிதாவானவர் இயேசு கிறிஸ்துவைக் குறித்து சாட்சி கொடுக்கிறார் (யோவான் 8:16-35-44; யோவான் 9:4)

32 இயேசு கிறிஸ்து பிதாவைக் கனம் பண்ணுகிறார் (யோவான் 8:49)

33 இயேசு கிறிஸ்து தம்முடைய சொந்த மகிமையைத் தேடாமல் பிதாவின் மகிமையைத் தேடுகிறார் (யோவான் 8:50-54; யோவான் 17:4)

34 இயேசு கிறிஸ்து பிதாவை அறிந்திருந்தார் ஆனால் இயேசு கிறிஸ்து பிதாவல்ல. (யோவான் 8:55; யோவான் 10:15)

35 பிதாவானவர் இயேசுவினிடத்தில் அன்பாயிருந்தார் (யோவான் 10:17-18)

36 இயேசு கிறிஸ்து பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டார் (யோவான் 12:49-50; யோவான் 15:10)

37 பிதாவானவர் இயேசு கிறிஸ்துவிற்கு அவருடைய சீஷர்களைக் கொடுத்தார் (யோவான் 10:29; யோவான் 17:1-25)

38 ஒருசில காரியங்களில் இயேசு கிறிஸ்து பிதாவோடு சமமாக இருந்தாலும் எல்லாக் காரியங்களிலும் சமமாக இல்லை. (மாற்கு 13:32; யோவான் 5:17-39; யோவான் 8:13-19, 29-42; யோவான் 19:18-29; அப் 7:7; 1கொரி 11:3; வெளி 1:1)

39 இயேசு கிறிஸ்துவும் பிதாவும் ஒருவருக்கொருவர் ஒற்றுமையாக இருந்தார்கள் விசுவாசிகளும் தேவனிடத்திலும் ஒருவருக்கொருவரும் ஒற்றுமையாய் இருக்க வேண்டும். (யோவான் 10:38; யோவான் 14:10-11,23; யோவான் 17:11,21-23)

40 பிதாவினிடத்திற்குச் செல்வதற்கு இயேசு கிறிஸ்து மட்டுமே ஒரே வழி (யோவான் 6:37; யோவான் 14:6)

41 தம்முடைய குமாரத்துவத்திற்குத் தாம் மட்டும் சாட்சி பகராமல் பிதாவானவரும் சாட்சி பகர்ந்திருப்பதாக இயேசு கிறிஸ்து கூறியிருக்கிறார் (யோவான் 5:36-38; யோவான் 8:13-19,54; யோவான் 12:49-50; யோவான் 14:10-11)

42 தாம் பிதாவல்ல என்றும், தேவத்துவத்தில் தாம் ஒரு ஆள்தத்துவ பண்புடையவர் என்றும் இயேசு கிறிஸ்து 87க்கும் மேற்பட்ட வசனங்களில் வலியுறுத்திக் கூறியிருக்கிறார் (மத் 7:21; மத் 11:27; மத் 18:10,35; லூக்கா 2:49; யோவான் 5:17-43; யோவான் 8:19-49; யோவான் 10:17-37; யோவான் 14:7-28; யோவான் 15:1-26; வெளி 1:1)

I யோவான் - தொகுப்புரை

5 அதிகாரம்

43 பிதாவைப்போல இயேசு கிறிஸ்து பெரியவரல்ல (யோவான் 10:29; யோவான் 14:28; 1கொரி 11:3)

44 பிதா (The Father) (மத் 3:17) இயேசு (Jesus) (யோவான் 10:36) தேவதூதர்கள் (angels) (லூக்கா 1:32-35), பிசாசுகள் (demons) (மாற்கு 3:11; மாற்கு 5:7) அப்போஸ்தலர்கள் (apostles) (மத் 16:16; யோவான் 1:14; ரோமர் 8:32; 2யோவான் 1:3) ஆகிய அனைவருமே இயேசு கிறிஸ்துவின் குமாரத்துவத்தைக் குறித்து சாட்சி பகர்ந்திருக்கிறார்கள். இவர்களில் யாருமே இயேசுவைப் பிதா என்று ஒருமுறை கூட சாட்சி கூறியதில்லை.

45 பிதாவும் குமாரனும் ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் ஒருவருக்கொருவர் சம்பாஷணை செய்திருக்கிறார்கள். இந்த சம்பாஷணையைப் பலர் தங்கள் காதுகளால் தெளிவாகக் கேட்டிருக்கிறார்கள் (மத் 3:16-17; மத் 17:5; யோவான் 12:27-30; 2பேதுரு 1:17)

46 பிதாவையும், குமாரனையும் குறிப்பதற்கு "இருவரும்" "both" என்னும் வார்த்தை பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இவ்விருவரும் வெவ்வேறு ஆள்தத்துவ பண்புடையவர்கள் என்பதை இந்த வார்த்தை நிரூபிக்கிறது. (யோவான் 15:24; 2யோவான் 1:9)

47 பிதாவையும், குமாரனையும் குறிப்பதற்கு "கூட" "also" என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்விருவரும் வெவ்வேறு ஆள்தத்துவ பண்புடையவர்கள் என்பதை இந்த வார்த்தை நிரூபிக்கிறது. (யோவான் 5:19,27; யோவான் 8:19; யோவான் 13:32; யோவான் 14:3)

48 "அவர்கள் பிதாவையும், என்னையும் அறியாதபடியினால்" என்னும் வாக்கியம் இவ்விருவரும் வெவ்வேறு ஆள்தத்துவ பண்புடையவர்கள் என்பதை நிரூபிக்கிறது. (யோவான் 16:3,5)

49 இயேசு கிறிஸ்து வானத்திலும் பூமியிலும் எல்லா அதிகாரத்தையும் பெற்றிருக்கிறார் (மத் 28:18). பிதாவானவர் இந்த அதிகாரத்தை இயேசு கிறிஸ்துவிற்குக் கொடுத்திருக்கிறபடியினால் அவர் இயேசுவைவிட அதிகாரத்தில் பெரியவராக இருக்க வேண்டும். (யோவான் 14:28)

50 பிதாவானவர் இயேசு கிறிஸ்துவை உயிர்த்தெழச் செய்தார். அவரை வானத்திற்கு உயரே எடுத்துக் கொண்டார். ஆகையினால் பிதாவும், குமாரனும் ஒருவரல்ல. (எபே 1:20-23; பிலி 2:9-11; எபி 12:2; 1பேதுரு 3:22)

51 தேவன் இயேசு கிறிஸ்துவைக் கர்த்தரும், கிறிஸ்துவுமாக்கினார் (அப் 2:33-36)

52 யோவான் தான் எழுதிய சுவிசேஷத்தில் ஆறு இடங்களில் இயேசு கிறிஸ்து பிதாவல்ல என்பதைத் தெளிவு படுத்தியிருக்கிறார் (யோவான் 14:1-9)

பரிசுத்த ஆவியானவர் இயேசுவோ அல்லது பிதாவோ அல்ல என்பதற்குச் சான்றுகள்

1 பரிசுத்த ஆவியானவர் ஒரு தனி ஆள்தத்துவப் பண்புடைய நபர். பிதா, குமாரன் ஆகிய இருவரிடமிருந்து வேறுபட்டிருக்கிறவர் (யோவான் 5:32; யோவான் 14:16,17,26; யோவான் 15:26; யோவான் 16:7,15)

2 பரிசுத்த ஆவியானவர் வருவதற்கு இயேசு கிறிஸ்து எடுத்துக் கொள்ளப்படுவது அவசியமாக இருந்தது. (யோவான் 16:5,15)

3 பிதா, குமாரன் ஆகியோரிடமிருந்து பரிசுத்த ஆவியானவர் வேறுபட்ட நபராக இருப்பதை இயற்கையான கண்களினால் காணமுடிந்திருக்கிறது. (மத் 3:16-17; யோவான் 1:31-34; வெளி 4:5; வெளி 5:6)

I யோவான் - தொகுப்புரை

5 அதிகாரம்

4. சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் பிதாவிற்கு முன்பாக பரிசுத்த ஆவியானவரும், இயேசு கிறிஸ்துவும் தனித்தனி ஆளத்துவப் பண்புடையவர்களாக இருப்பதை வேதம் விளக்கிக் கூறுகிறது. (வெளி 1:4-5; வெளி 3:1; வெளி 4:5; வெளி 5:6)

5. இயேசுகிறிஸ்து மகிமைபடையும் வரையிலும் தேவன் பரிசுத்த ஆவியானவரை அனுப்பவில்லை. அதன் பின்பு ஆவியானவரை பிதாவும், குமாரனும் அனுப்பினார்கள் (யோவான் 7:37-39; அப் 2:33-34)

6. இயேசு கிறிஸ்துவை வல்லமையினால் அபிஷேகம் பண்ணுவதற்கு பிதாவானவர் பரிசுத்த ஆவியானவரை அனுப்பினார். இந்த நிகழ்ச்சிக்கு மூன்று நபர்கள் தேவைப்படுகிறார்கள். ஒருவர் அனுப்புகிறவர், மற்றொருவர் அனுப்பப்படுகிறவர், மற்றும் ஒருவர் பெற்றுக் கொள்கிறவர். (அப் 10:38; ஏசா 11:2; ஏசா 42:1-7; ஏசா 61:1-2)

7. திரித்துவத்தின் மூன்று நபர்களுக்கும் வெவ்வேறு நாமங்கள் கொடுக்கப் பட்டிருக்கிறது. (மத் 28:19; 2கொரி 13:14; யோவான் 5:7)

8. ஜெபம் பண்ணும்பொழுது மூன்று நபர்களுக்கும் இடையிலுள்ள தனித் தன்மைகள் வெளிப்படுகிறது. குமாரன் ஜெபிக்கிறார். பிதாவினிடத்தில் ஜெபிக்கிறார். பரிசுத்த ஆவியானவருக்காக ஜெபிக்கிறார். (யோவான் 14:16)

9. தேவனுடைய வலதுபாரிசத்தில் குமாரன் அமர்ந்திருக்கிறார். ஆகையினால் குமாரனுடைய இடதுபாரிசத்தில் பிதா அமர்ந்திருக்கிறார். பிதாவும் குமாரனும் பரிசுத்த ஆவியானவரை அனுப்புகிறார்கள். (அப் 2:33-36; அப் 7:56; யோவான் 14:16-17,26; யோவான் 15:26; யோவான் 16:7-15)

10. பரிசுத்த ஆவியானவர் அனுப்பப்படுவதற்கு முன்பாகவே (யோவான் 7:39) பிதாவானவர் குமாரனை அனுப்பினார் (யோவான் 3:16)

11. இயேசு கிறிஸ்துவிற்கு எதிரான தூஷணம் மன்னிக்கப்படும். ஆனால் பரிசுத்த ஆவியானவருக்கு எதிரான தூஷணம் மன்னிக்கப்படாது (மத் 12:31-32; மாற்கு 3:29-30; லூக்கா 12:10)

12. பரிசுத்த ஆவியானவரைப் பெற்றிருக்காத சமாரியர்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டிருந்தார்கள் (அப் 8:5-25)

13. இயேசு தாமாகவே அற்புதங்கள் செய்யவில்லை. (யோவான் 5:19) பரிசுத்த ஆவியானவர் மூலமாக கிறிஸ்து அற்புதங்களைச் செய்தார் (யோவான் 2:11; அப் 10:38)

14. பரிசுத்த ஆவியானவர் தம்மைப் பற்றி அறிக்கையிடுவதற்கோ தம்மை மகிமைப்படுத்துவதற்கோ வராமல் இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிக்கையிடுவதற்கும் இயேசு கிறிஸ்துவை மகிமைப்படுத்துவதற்கும் வந்தார் (யோவான் 16:7-15)

15. பரிசுத்த ஆவியானவர் பூமிக்கு இறங்கி வந்ததினால் இயேசு கிறிஸ்து பரலோகத்திற்கு ஏறி பிதாவின் வலதுபாரிசத்தில் அமர்ந்திருப்பது நிரூபணமாகிறது. (அப் 2:33-34; யோவான் 7:39)

16. உயிர்த்தெழுந்த பின்புகூட இயேசுகிறிஸ்து தம்மை ஒரு ஆவியென்று அங்கீகரிக்க வில்லை. (லூக்கா 24:39; யோவான் 4:24; யோவான் 14:16-17,26; யோவான் 15:26; யோவான் 16:7-15)

17. வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகத்தில் திரித்துவத்தின் மூவரும் எல்லாக் காரியங்களிலும் இணைந்து கிரியைநடப்பிப்பது வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. (வெளி 1:4-6; வெளி 3:1; வெளி 4:5; வெளி 5:6; வெளி 21:10; வெளி 22:17)

I யோவான் - தொகுப்புரை

5 அதிகாரம்

இயேசுகிறிஸ்துவின் மனுஷத்துவம் குமாரத்துவம் ஆகியவற்றிற்கு மூன்று சாட்சிகள்

1 இயேசு கிறிஸ்து தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றபோது பரிசுத்த ஆவியானவர் அவர்மீது வந்திறங்கி சாட்சி பகர்ந்தார் (மத் 3:13-17)

2 ஜலம்

3 இரத்தம் - இயேசு கிறிஸ்துவின் இரத்தம் அவருடைய மனுஷத் துவத்தையும், குமாரத்துவத்தையும் குறித்து சாட்சிபகருவதோடு பாவத்திலிருந்து மனுக்குலத்திற்கு மீட்பையும் உறுதி பண்ணுகிறது. (மத் 26:28; அப் 20:28; எபே 1:14 கொலோ 1:20-22; எபி 9:14-26; எபி 10:9-23; Iயோவான் 1:7)

ஜலம் - சாட்சியிடுகிற விதம்

1 தண்ணீர் ஞானஸ்நானம் - இயேசு கிறிஸ்துவின் மரணம், அவர் அடக்கம் பண்ணப்படுதல் அவருடைய உயிர்த்தெழுதல் ஆகியவற்றிற்கு அடையாளம். (மத் 3:13-17)

2 ஜீவத்தண்ணீராகிய வார்த்தை - இயேசு கிறிஸ்துவின் மனுஷ அவதாரத்திற்குச் சாட்சி பகருகிறது. (ஏசா 7:14; ஏசா 9:6-7; மத் 1:23; லூக்கா 1:34-35; யோவான் 3:5)

3 இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப் படும்போது வடிந்த தண்ணீரும் இரத்தமும் அவருடைய மனுஷத்துவத்திற்குச் சாட்சி பகருகிறது. (யோவான் 19:34)

"இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது" - ஆவி, ஜலம், இரத்தம் ஆகிய மூன்று சாட்சிகளும் இயேசு கிறிஸ்துவின் குமாரத்துவத்தையும் மனுஷத்துவத்தையும் அங்கீகரித்து சாட்சி பகருவதில், ஒன்றுபட்டிருக்கிறது. (Iயோவான் 4:1-6 Iயோவான் 5:5-9)

"தேவன் தமது குமாரனைக்குறித்துக் கொடுத்த சாட்சி இதுவே" - மனுஷருடைய சாட்சியை விட தேவனுடைய சாட்சி உறுதியானது. மனுஷன் மனம் மாறக்கூடியவன் தேவனோ நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராக இருக்கிறார் ஆகையினால் தமது குமாரனைக் குறித்து பிதாவானவர் கொடுக்கும் சாட்சி மனுஷருடைய எல்லாச் சாட்சிகளையும் விட மேன்மையானது

4. புதிய பிறப்பை உடையவன் அந்த சாட்சியை தனக்குள்ளே கொண்டிருக்கிறான்

Iயோவான் 5:10 தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் அந்தச் சாட்சியைத் தனக்குள்ளே கொண்டிருக்கிறான் தேவனை விசுவாசியாதவனோ தேவன் தம்முடைய குமாரனைக்குறித்துக் கொடுத்த சாட்சியை விசுவாசியாததினால் அவரைப் பொய்யராக்குகிறான்

"தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் அந்தச் சாட்சியைத் தனக்குள்ளே கொண்டிருக்கிறான் ஒவ்வொரு விசுவாசியும் தன்னுடைய விசுவாசத்திற்கு தேவனிடமிருந்து தனிப்பட்ட சாட்சியை உடையவனாக இருக்கிறான் (ரோமர் 8:14-16; கலா 5:6, 2கொரி 5:17

"தேவனை விசுவாசியாதவனோ, தேவன் தம்முடைய குமாரனைக்குறித்துக் கொடுத்த சாட்சியை விசுவாசியாததினால், அவரைப் பொய்யராக்குகிறான்" - ஒவ்வொரு அவிசுவாசியும் தேவனை மறுதலிப்பதினால் உண்டாகும் பலனைப் பட்டனுபவிப்பார்கள் (யோவான் 3:36)

I யோவான் - தொகுப்புரை

5 அதிகாரம்

5. இயேசு கிறிஸ்துவில் மட்டுமே நித்திய ஜீவன் உண்டு

1யோவான் 5:11 தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார்; அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம்.

1யோவான் 5:12 குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்; தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்.

"தேவன் நமக்கு நித்தியஜீவனைத் தந்திருக்கிறார்" - இயேசு கிறிஸ்துவிலுள்ள நித்திய ஜீவன் ஒரு மிகப்பெரிய சத்தியமாகும். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகியோரும் தண்ணீர், இரத்தம் ஆகியவையும் இந்தச் சத்தியத்திற்குச் சாட்சி பகருகின்றன. (1யோவான் 5:11-12)

"அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறது" நித்திய ஜீவன் இயேசு கிறிஸ்துவில் மட்டுமே உள்ளது. இயேசு கிறிஸ்துவில் இருக்கிறவர்கள் மட்டுமே நித்திய ஜீவனை உடையவர்கள்.

இயேசு கிறிஸ்துவிலுள்ள ஆசீர்வாதங்கள்

1. ஆக்கினைத்தீர்ப்பில்லை. (ரோமர் 8:1)
2. பாவம், மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலை. (ரோமர் 8:2)
3. தேவனுடைய அன்பு (ரோமர் 8:39)
4. உண்மை (ரோமர் 9:2)
5. ஒரே சரீரத்தில் ஒற்றுமை. (ரோமர் 12:5)
6. ஞானம், நீதி, பரிசுத்தமாகுதல், மீட்பு (1கொரி 1:30, ரோமர் 3:24)
7. சரீர உயிர்த்தெழுதல். (1கொரி 15:22)
8. வெற்றி சிறக்கப்பண்ணுதல். (2கொரி 2:14)
9. நியாயப்பிரமாணம் ஒழிந்துபோதல்.
10. புதிய சிருஷ்டி (2கொரி 5:17)
11. எளிமை (2கொரி 11:3)
12. சுயாதீனம் (கலா 2:4)
13. குமாரத்துவம். (கலா 3:26)
14. தேவனுக்குச் சமீபமாதல். (எபே 2:13)
15. பரம அழைப்பு (பிலி 3:14)
16. விசுவாசமும், அன்பும் (1தீமோ 1:14, 1தீமோ 3:13)
17. கிருபை (2தீமோ 2:1)
18. இரட்சிப்பு (2தீமோ 2:10)
19. நித்திய ஜீவன் (1யோவான் 5:11, 2தீமோ 1:1)
20. காக்கப்படுதல். (யூதா 1:1)

6. தேவனிடத்தில் நாம் கேட்டவைகளை எவ்வாறு பெற்றுக் கொள்வது

1யோவான் 5:13 உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவ குமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்.

1யோவான் 5:14 நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்.

1யோவான் 5:15 நாம் எதைக் கேட்டாலும் அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்.

5 அதிகாரம்

யோவான் இவைகளை எழுதியிருப்பதற்குக் காரணங்கள்

1 நித்தியஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும். (யோவான் 2:3)

2 தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும்

தைரியம் (confidence) - παρρησία - parreesia - 3954

பெண்பால பெயர்ச்சொல் - வினையடையாகவும் பயன்படும் தாராளம், வெளிப்படுத்துதல் தெளிவு வெளிப்படை, தைரியம் (அப் 4:13)

"அவருடைய சித்தத்தின்படி கேட்டால அவர் நமக்குச் செவிகொடுக்கிறார்" - தேவனுடைய வார்த்தையின் பிரகாரம் கேட்பது என்று பொருள் (யோவான் 15:7, ரோமர் 10:17) தேவன் தம்மையோ தம்முடைய வார்த்தையையோ மறுதலிக்க மாட்டார் (ரோமர் 4:17; எபி 11:6, யாக் 1:5-8, மாற்கு 11:22 24)

7. மீண்மாறிப் போனவர்களை இரட்சிக்கும் விதம்

1யோவான் 5:16 மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைத் தன் சகோதரன் செய்ய ஒருவன் கண்டால் அவன் வேண்டுதல்செய்யக்கடவன் அப்பொழுது அவனுக்கு ஜீவனைக் கொடுப்பார் யாருக்கென்றால் மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைச் செய்தவர்களுக்கே, மரணத்துக்கு ஏதுவான பாவமுண்டு அதைக்குறித்து வேண்டுதல்செய்ய நான் சொல்லேன்

1யோவான் 5:17 அநீதியெல்லாம் பாவந்தான், என்றாலும் மரணத்துக்கு ஏதுவல்லாத பாவமுமுண்டு.

"மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைத் தன் சகோதரன் செய்ய ஒருவன் கண்டால்" - ஒருவிசுவாசி செய்யும் பாவத்தை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது.

"மரணத்துக்கு ஏதுவான பாவமுண்டு" - எல்லாப் பாவங்களும் மன்னிக்கப்படும் ஆனால பரிசுத்த ஆவியானவருக்கு எதிரான பாவம் மன்னிக்கப்படாது. (மத் 12:31-32) ஆகையினால பரிசுத்த ஆவியானவருக்கு எதிராகப் பேசப்படும் தூஷணவார்த்தை மரணத்திற்கு ஏதுவான பாவமாகும்

8. தேவனால் பிறந்த எவனும் பாவஞ் செய்யான்

1யோவான் 5:18 தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம் தேவனால பிறந்தவன் தன்னைக் காக்கிறான் பொல்லாங்கன் அவனைத் தொடான்

"தேவனால பிறந்த எவனும் பாவஞ்செய்யான்" - பாவக்கிரியைகளைச் செய்கிறதில்லை (யோவான் 2:29 1யோவான் 3:5-10)

"தேவனால பிறந்தவன தன்னைக் காக்கிறான்" - (யூதா 1:20-21)

"பொல்லாங்கன் அவனைத் தொடான்" - ஏனெனில தேவனால பிறந்தவன் பிசாசிற்குரியவன அல்ல (யோவான் 3:8 10)

9. பரிசுத்தவான்களுக்கும் பாவிகளுக்கும் இடையிலுள்ள வேறுபாடு

1யோவான் 5:19 நாம் தேவனால் உண்டாயிருக்கிறோமென்றும், உலக முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம்.

"பொல்லாங்கன்" (wickedness) - முழு உலகத்தையும் பிசாசானவன் தன் பிடியில் வைத்திருக்கிறான ஆகையினால உலகத்தார் தேவனுடைய கற்பனைக்கு மீறி பாவம் செய்கிறார்கள் (எபே 2:1 9)

5 அதிகாரம்

10. தேவனையும் இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்

1யோவான் 5:20 அன்றியும், நாம் சத்தியமுள்ளவரை அறிந்துகொள்வதற்கு தேவனுடைய குமாரன் வந்து நமக்குப் புத்தியைத் தந்திருக்கிறாரென்றும் அறிவோம். அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து என்னப்பட்ட சத்தியமுள்ளவருக்குள்ளும் இருக்கிறோம். இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார்.

1யோவான் 5:21 பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக்கொள்வீர்களாக. ஆமென்.

"தேவனுடைய குமாரன் வந்து" - இயேசு கிறிஸ்து மாம்சத்தில் வந்தார் (1யோவான் 4:2-3). தமது பாவநிவாரண பலியின் மூலமாக மனுஷருக்கு மீட்பை உண்டுபண்ணினார் (1பேதுரு 2:24; கொலோ 1:20-22).

"புத்தி" (understanding) - விசுவாசம், மீட்பு ஆகியவற்றிற்கு முன்பாகவே புத்தி வருகிறது. (ரோமர் 1:17; 1கொரி 1:30)

"சத்தியமுள்ளவரை அறிந்துகொள்வதற்கு" - (1யோவான் 2:3)

"அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து" - (லூக்கா 22:3; 2கொரி 5:17)

"இவரே மெய்யான தேவனும் நித்தியஜீவனுமாயிருக்கிறார்" - தேவனையும் இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன் (யோவான் 17:2-3)

"நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக்கொள்வீர்களாக" - விக்கிரகங்கள், பொய்யான தெய்வங்கள் ஆகியவற்றை மனுஷர் தங்களுடைய இருதயங்களிலிருந்தும் ஜீவியங்களிலிருந்தும் அகற்ற வேண்டும். மெய்யான தேவனையே முதலும் கடைசியுமாக முழுவதுமாக மனுஷர் தங்களுடைய இருதயங்களில் ஏற்றுக்கொண்டு அவரையே ஆராதிக்க வேண்டும். (மத் 22:37)

II யோவான் – முன்னுரை

காலமும் இடமும்

யோவான் இந்த நிருபத்தை எபேசுவிலிருந்து கி.பி. 90 ஆம் ஆண்டில் எழுதினார்

ஆசிரியர்

அப்போஸ்தலர் யோவான்

மையக்கருத்து

விசுவாசிகளின் நடத்தை, வஞ்சகர்களைப் பற்றிய காரியங்கள், அவர்கள் ஏமாற்றும் விதமும், நாம் எச்சரிப்போடு இருக்க வேண்டிய விதமும்

புள்ளிவிவரங்கள்

அதிகாரம் - 1

வசனங்கள் - 13

பொருளடக்கம்

I. ஆசிரியரும் தெரிந்துகொள்ளப்பட்டவளுமாகிய அம்மாளுக்கும் அவளுடைய பிள்ளைகளுக்கும் வாழ்த்துரை (1:1-3)

II. அம்மாளின் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறதற்காக சந்தோஷம் (1:4)

III. ஒருவரிலொருவர் அன்புகூர்ந்து கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும் (1:5-6)

IV. வஞ்சகர் அந்திக்கிறிஸ்து ஆகியோருக்கு எதிரான எச்சரிப்பு (1:7-8)

V. கிறிஸ்துவின் உபதேசத்தை மீறி நடக்கிறவனுக்கு எதிரான எச்சரிப்பு (1:9)

VI. கள்ளப்போதகர்களுக்கு என்ன செய்ய வேண்டும் (1:10-11)

VII. முடிவுரையும் வாழ்த்துரையும் (1:12-13)

II யோவான் – தொகுப்புரை

1 அதிகாரம்

I. **ஆசிரியரும் தெரிந்துகொள்ளப் பட்டவளுமாகிய அம்மாளுக்கும் அவளுடைய பிள்ளைகளுக்கும் வாழ்த்துரை**

2யோவான் 1:1 நமக்குள் நிலைநிற்கிறதும் என்றென்றைக்கும் நம்மோடிருப்பதுமாகிய சத்தியத்தினி மித்தம் நான் மாத்திரமல்ல சத்தியத்தை அறிந்திருக்கிற யாவரும் சத்தியத்தின்படி நேசித்திருக்கிறவளும்

2யோவான் 1:2 தெரிந்துகொள்ளப் பட்டவளுமாகிய அம்மாளுக்கும் அவளுடைய பிள்ளைகளுக்கும் மூப்பனாகிய நான் எழுதுகிறதாவது.

2யோவான் 1:3 பிதாவாகிய தேவனாலும் பிதாவின் குமாரனாயிருக்கிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும், கிருபையும் இரக்கமும் சமாதானமும் சத்தியத்தோடும் அன்போடுங்கூட உங்களோடிருப்பதாக.

"என்றென்றைக்கும் நம்மோடிருப்பதுமாகிய சத்தியம்" கிறிஸ்தவ உபதேசங்கள் நித்தியமானவை.

மூப்பன் (elder) யோவான் மூன்று வழிகளில் மூப்பனாக இருக்கிறார் அவையாவன

1 ஸ்தானத்தின் மூலமாக யோவான் அப்போஸ்தலராகவும் பிரசங்கம் செய்கிற மூப்பராகவும் இருக்கிறார்

2 அநுபவத்தினால் யோவான் ஒரு நல்ல கிறிஸ்தவ விசுவாசியாகவும் அப்போஸ்தலராகவும் இருக்கிறார் அப்போஸ்தலர்களில் வயதானவர் யோவானே அநேக வருஷங்கள் ஆவிக்குரிய அனுபவம் உடையவர் யோவான் மட்டுமே இயற்கையான மரணமடைந்தார் மற்ற அப்போஸ்தலர்கள் அனைவரும் இரத்தச்சாட்சியாக மரித்தார்கள்

3 அதிக வயதினால் மூப்பனாக இருக்கிறார் யோவான் இந்த நிருபத்தை எழுதியபோது அவருக்கு 90 வயதாயிற்று. (பிலே 1:9)

மூப்பன் (elder) - πρεσβύτερος - presbyteros - 4245

பொருள் - முன்னோரான, மூப்பரான, முதிர் வயதுள்ள (அப் 14:23)

தெரிந்துகொள்ளப்பட்டவள் (elect) - ἐκλεκτός - eklektos - 1588

பொருள் - தெரிந்துகொள்ளப்பட்ட (chosen, excellent, preeminent) (லூக்கா 18:7)

யோவான் நிருபத்தைக் கனம்பொருந்திய ஒரு ஸ்திரீக்கு எழுதியிருக்கிறார் அவளுடைய வீட்டில் ஒரு சபை ஆராதனை நடைபெற்றிருக்கலாம் இவள் திருமணமானவள் என்னில் யோவான் இவளுடைய பிள்ளைகளுக்கும் வாழ்த்துதல் கூறி எழுதியிருக்கிறார் இவளுடைய கணவரின் பெயர் குறிப்பிடப்படாததாகையால் இவள் ஒரு விதவையாக இருந்திருக்க வேண்டும். தன்னுடைய ஊர் வழியாக வரும் அப்போஸ்தலர்களை இவள் தன்னுடைய வீட்டில் ஏற்றுக் கொண்டு, விருந்து உபசரித்திருக்க வேண்டும்

அம்மாள் (lady) - κυρία - kyria - 2959

பெண்பால் பெயர்ச்சொல் - அம்மாள்

ஐயா (Lord) - κύριος - kyrios - 2962

ஆண்பால் பெயர்ச்சொல் - கர்த்தா, எஜமான், ஆண்டவர் ஐயா உடையவர், தேவரீர்

"பிதாவாகிய தேவனாலும் பிதாவின் குமாரனாயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும்" பிதாவும், குமாரனும் தனித்தன்மையாக வெவ்வேறு ஆள்தத்துவம் உடையவர்கள் என்பதை இந்த வாக்கியம் விளக்குகிறது.

II யோவான் – தொகுப்புரை

1 அதிகாரம்

"பிதாவின் குமாரன்" (Son of the Father) - இந்த வாக்கியம் இந்த வசனத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்து பிதாவானவர் அல்ல என்பதையும் அவர் பிதாவின் குமாரன் என்பதையும் இந்த வாக்கியம் வலியுறுத்துகிறது. (யோவான் 1:14, 18; யோவான் 3:16) இயேசு கிறிஸ்துவின் மனுஷ அவதாரம் கிறிஸ்தவ உபதேசத்தின் அஸ்திபாரமாகும்.

II. அம்மாளின் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறதற்காக சந்தோஷம்

2யோவான் 1:4 பிதாவினால் நாம் பெற்ற கற்பனையின்படியே உம்முடைய பிள்ளைகளில் சிலர் சத்தியத்திலே நடக்கிறதை நான் கண்டு மிகவும் சந்தோஷப்பட்டேன்.

III. ஒருவரிலொருவர் அன்புகூர்ந்து கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும்

2யோவான் 1:5 இப்பொழுதும் அம்மாளே, நாம் ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டுமென்று உமக்குப் புதிய கற்பனையாக எழுதாமல் ஆதிமுதல் நமக்கு உண்டாயிருக்கிற கற்பனையாக எழுதி உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்.

2யோவான் 1:6 நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே அன்பு; நீங்கள் ஆதிமுதல் கேட்டிருக்கிறபடி நடந்துகொள்ளவேண்டிய கற்பனை இதுவே.

"நாம் ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டும்" - யோவான் தன்னுடைய நிருபத்தில் அன்புகூருவதை வலியுறுத்திக் கூறுகிறார். புதிய ஏற்பாட்டில் அன்பு என்னும் வார்த்தை 116 தடவை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அவற்றில் யோவான் மட்டுமே அன்பு என்னும் வார்த்தையை 62 தடவைகள் பயன்படுத்தியிருக்கிறார்.

"நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே அன்பு" - புதிய ஏற்பாட்டிலுள்ள கற்பனைகளைக் கைக்கொள்வது நம்முடைய அன்பை நிரூபிக்கிறது.

IV. வஞ்சகர், அந்திக்கிறிஸ்து ஆகியோருக்கு எதிரான எச்சரிப்பு - (1யோவான் 2:18)

2யோவான் 1:7 மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணாத அநேக வஞ்சகர் உலகத்திலே தோன்றியிருக்கிறார்கள்; இப்படிப்பட்டவனே வஞ்சகனும் அந்திக்கிறிஸ்துவுமாயிருக்கிறான்.

2யோவான் 1:8 உங்கள் செய்கைகளின் பலனை இழந்துபோகாமல் பூரண பலனைப் பெறும்படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

"வஞ்சகர்" (deceivers) - வஞ்சகர்களும் அந்திக்கிறிஸ்துக்களும் இயேசு கிறிஸ்துவின் மனுஷ அவதாரத்தை மறுதலிக்கிறார்கள் (1யோவான் 4:1-6). இயேசு கிறிஸ்துவின் சரீர உயிர்த்தெழுதலை இவர்கள் நம்புவதில்லை. இயேசுகிறிஸ்து தமது சரீரத்தில் உயிர்த்தெழுந்தார். அதே சரீரத்தில் பூமிக்குத் திரும்பவும் வருவார் (சக 14:6; அப் 1:11; பிலி 3:21; 1கொரி 15:1-23; யோவான் 20:14).

வஞ்சகன் (deceiver) - πλάνος - planos - 4108

பொருள் - எத்தரென்னப்பட்ட, வஞ்சிக்கிற "deceiver" (2யோவான் 1:7; மத் 27:63; 2கொரி 6:8) "seducing" (1தீமோ 4:1)

"உங்கள் செய்கைகளின் பலனை இழந்துபோகாமல்" - நாம் பூரண பலனைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதற்குரிய நிபந்தனைகளுக்கு நாம் கீழ்ப்பட்டு ஜீவிக்க வேண்டும். (1கொரி 3:11-15)

V. கிறிஸ்துவின் உபதேசத்தை மீறி நடக்கிறவனுக்கு எதிரான எச்சரிப்பு - (1யோவான் 2:1-2, 24-25)

2யோவான் 1:9 கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன்.

II யோவான் - தொகுப்புரை

1 அதிகாரம்

"கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல" - சத்தியத்தில நிலைத்திராமல பாவம் செயகிறவன தேவனுக்குரியவனலல சத்தியத்தில நிலைத்திருந்து பாவம் செயயாதவன பிதாவையும். குமாரனையும் உடையவன விசுவாசி தனனுடைய வாழக்கையில பின்மாறிப போய. தனக்கு நியமிக்கபபட்டிருக்கிற ஆசீர்வாதஙகளைப பெறறுக கொளளாமல இழநதுபோவதறகு வாயபபுள்ளது. தேவனையும கிறிஸதுவையும விட்டு விலகிபபோவதறகும வாயபபுளளது. (2யோவான 1:8)

VI. கள்ளபபோதகர்களுக்கு என்ன செய்ய வேண்டும் - (2கொரி 11:12

2யோவான் 1:10 ஒருவன் உஙகளிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொணடு வராமலி ருந்தால், அவனை உங்கள வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுககு வாழத்துதல் சொலலாமலும் இருஙகள

2யோவான் 1:11 அவனுக்கு வாழத்துதல சொலலுகிறவன அவனுடைய துரக்கிரியை களுக்கும் பஙகுளளவனாகிறான

"அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக் கொள்ளாமலும், அவனுக்கு வாழத்துதல் சொலலாமலும் இருங்கள்" - இயேசுகிறிஸ்துவின் மனுஷ அவதாரம் அவருடைய மரணம் அடக்கம் பணணபபடுதல் சரீர உயிர்த்தெழுதல் ஆகிய உபதேசஙகளைப பிரசங்கம் பணணாமல் இந்த அஸ்திபார உபதேசத்திற்கு விரோதமாகப பேசுகிறவர்களை நம்முடைய வீடுகளில நாம் ஏறறுக் கொள்ள வேணடிய அவசியமிலலை. இபபோ்பபட்ட பாவிகளை ஏறறுக் கொளளும விசுவாசிகள் அவர்களுடைய பாவஙகளுக்கு உடநதையாகவும பஙகாளிகளாகவும் இருக்கிறார்கள 2யோவான 1:10-11

VII. முடிவுரையும் வாழ்த்துரையும்

2யோவான 1:12 உஙகளுக்கு எழுத வேணடிய காரியஙகள அநேகமுணடு, காகிதத்தினாலும மையினாலும அவைகளை எழுத எனக்கு மனதிலலை. உஙகளுடைய சநதோஷம் நிறைவாயிருககுமபடிக்கு உஙகளிடத்தில வந்து முகமுகமாயப பேசலாமெனறு நம்பியிருக்கிறேன

2யோவான் 1:13 தெரிந்துகொளளபபட்ட உம்முடைய சகோதரியின பிளளைகள் உமக்கு வாழத்துதல சொலலுகிறாரகள் ஆமென

"தெரிந்துகொளளபபட்ட உம்முடைய சகோதரி" தெரிந்துகொள்ளபபட்ட அம்மாளுடைய சகோதரியாக இருக்கலாம்.

III யோவான் - முன்னுரை

காலமும் இடமும்

யோவான் இந்த நிருபத்தை எபேசுவிலிருந்து கிபி ௯௦ ஆம் ஆண்டில் எழுதினார்

ஆசிரியர்

யோவான்

மையக்கருத்து

உண்மையான ஊழியக்காரரையும் பொய்யான ஊழியக்காரரையும் பற்றிய விளக்கங்கள்

புள்ளிவிவரங்கள்

அதிகாரம் - 1

வசனங்கள் - 14

கேள்விகள் - 2

பொருளடக்கம்

I. ஆசிரியரும் வாழ்த்துரையும் (1:1)

II. எல்லா பரிசுத்தவான்களைக் குறித்தும் தேவனுடைய சித்தம் (1:2)

III. காயுவு சத்தியத்தில் நடந்து கொள்வதற்காக சந்தோஷம் (1:3-4)

IV. ஊழியக்காரர்களை உபசரிக்க வேண்டும் (1:5-8)

V. தியோத்திரேப்பைக் குறித்து எச்சரிப்பு (1:9-10)

VI. பரிசுத்தவான்களையும் பாவிகளையும் தெரிந்து கொள்ளும் விதம் (1:11)

VII. தேமேத்திரியுவின் நற்சாட்சி (1:12)

VIII. முடிவுரையும் ஆசீர்வாதமும் (1:13-14)

III யோவான் – தொகுப்புரை

1 அதிகாரம்

I. ஆசிரியரும் வாழ்த்துரையும் - (அப் 19:29; 20:4; 1கொரி 1:14)

3யோவான் 1:1 மூப்பனாகிய நான் சத்தியத்தின்படி நேசிக்கிற பிரியமான காயுவுக்கு எழுதுகிறதாவது:

"மூப்பன்" (elder) - (2யோவான் 1:1)

"காயு" (Gaius) - இந்த காயு அப் 19:29; அப் 20:4; ரோமர் 16:23; 1கொரி 1:14 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறவரா அல்லது வேறொருவரா என்று தெளிவாகத் தெரியவில்லை.

II. எல்லா பரிசுத்தவான்களைக் குறித்தும் தேவனுடைய சித்தம்

3யோவான் 1:2 பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்.

தேவனுக்குச் சித்தமான ஆசீர்வாதங்கள்

1. பொருளாதார ஆசீர்வாதம் (Material prosperity) (3யோவான் 2; யோசு 1:5-9; 1சாமு 2:7-8; 1இராஜா 2:3-4; 1நாளா 29:12; எஸ்றா 8:22; யோபு 36:11; சங் 1:1-3; மத் 7:7-11; மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 15:7,16; 2கொரி 9:6-8; பிலி 4:19)

2. சரீர சுகமாகுதலும், ஆரோக்கியமும் (Physical healing and health) (3யோவான் 2; யாத் 15:26; சங் 91; சங் 103:3; ஏசா 53:4-5; ஏசா 58:8; மத் 8:17; 1பேதுரு 2:24; யாக் 5:14)

3. ஆத்தும இரட்சிப்பு (Soul salvation) (3யோவான் 2; மத் 1:21; ரோமர் 1:16; ரோமர் 10:9-10; எபே 1:7; எபே 2:8-9; எபி 7:25; 1யோவான் 1:7,9; வெளி 1:5)

III. காயுவு சத்தியத்தில் நடந்து கொள்வதற்காக சந்தோஷம்

3யோவான் 1:3 சகோதரர் வந்து நீ சத்தியத்தில் நடந்துகொள்ளுகிறாய் என்று உன்னுடைய உண்மையைக் குறித்துச் சாட்சி கொடுத்தபோது மிகவும் சந்தோஷப்பட்டேன்.

3யோவான் 1:4 என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை.

"சகோதரர் வந்து சாட்சி கொடுத்தபோது" - 3யோவான் 1:5-8 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற ஊழியக்காரர்களாக இருக்கலாம்.

"என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள்" - காயு யோவானுடைய ஊழியத்தின் மூலமாக இரட்சிக்கப்பட்டவன். "பிள்ளைகள்" என்னும் வார்த்தை யோவானுடைய பராமரிப்பின்கீழ் வளர்ந்து வரும் ஆவிக்குரிய பிள்ளைகளைக் குறிக்கும் வார்த்தையாக இருக்கலாம்.

IV. ஊழியக்காரர்களை உபசரிக்க வேண்டும்

3யோவான் 1:5 பிரியமானவனே, நீ சகோதரருக்கும் அந்நியருக்கும் செய்கிற யாவற்றையும் உண்மையாய்ச் செய்கிறாய்.

3யோவான் 1:6 அவர்கள் உன்னுடைய அன்பைக் குறித்துச் சபைக்கு முன்பாகச் சாட்சி சொன்னார்கள்; தேவனுக்கு முன்பாகப் பாத்திரமானபடி அவர்களை நீ வழிவிட்டனுப்பினால் நலமாயிருக்கும்.

3யோவான் 1:7 ஏனெனில் அவர்கள் புறஜாதியாரிடத்தில் ஒன்றும் வாங்காமல் அவருடைய நாமத்தினிமித்தம் புறப்பட்டுப்போனார்கள்.

3யோவான் 1:8 ஆகையால் நாம் சத்தியத்திற்கு உடன்வேலையாட்களாயிருக்கும்படி, அப்படிப்பட்டவர்களைச் சேர்த்துக்கொள்ளக் கடனாளிகளாயிருக்கிறோம்.

III யோவான் – தொகுப்புரை

1 அதிகாரம்

"அவர்கள் உன்னுடைய அன்பைக் குறித்துச் சபைக்குமுன்பாகச் சாட்சி சொன்னார்கள்" - காயு பல ஊழியக்காரர்களை உபசரித்திருக்கிறார். அந்நியரையும் உபசரித்திருக்கிறார். பல தர்மக்காரியங்களையும் செய்திருக்கிறார் (3யோவான் 1:5-8)

"அவர்கள் புறஜாதியாரிடத்தில் ஒன்றும் வாங்காமல்" - இந்த ஊழியக்காரர்கள் தங்களுடைய சொந்த ஆதாயத்திற்காக இயேசு கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கிக்கவில்லை. வருமானத்தில் தங்களுக்கு ஆர்வமில்லை என்பதை வெளிப்படுத்தியிருக்கிறார்கள் (3யோவான் 7-8)

V. தியோத்திரேப்பைக் குறித்து எச்சரிப்பு

3யோவான் 1:9 நான் சபைக்கு எழுதினேன்; ஆனாலும் அவர்களில் முதன்மையாயிருக்க விரும்புகிற தியோத்திரேப்பு எங்களை ஏற்றுக்கொள்ளவில்லை.

3யோவான் 1:10 ஆனபடியால் நான் வந்தால், அவன் எங்களுக்கு விரோதமாய்ப் பொல்லாத வார்த்தைகளை அலப்பி செய்துவருகிற கிரியைகளை நினைத்துக் கொள்வேன்; அவன் இப்படிச் செய்துவருவதும் போதாமல், தான் சகோதரரை ஏற்றுக்கொள்ளாமலிருக்கிறதுமன்றி, ஏற்றுக்கொள்ள மனதாயிருக்கிறவர்களையும் தடைசெய்து, சபைக்குப் புறம்பே தள்ளுகிறான்.

"தியோத்திரேப்பு" (Diotrephes) - இவனைப் பற்றி சரியான விளக்கம் எதுவுமில்லை. இவன் ஒரு பெருமைக்காரன். பொல்லாத வார்த்தைகளை அலப்புகிறவன். அப்போஸ்தலருடைய அதிகாரத்திற்குக் கீழ்ப்படியாமல், கலகம்பண்ணுகிறவன் (3யோவான் 1:9-10)

"அவன் எங்களுக்கு விரோதமாய்ப் பொல்லாத வார்த்தைகளை அலப்பி செய்துவருகிற கிரியைகளை நினைத்துக் கொள்வேன்" யோவானுக்கு அப்போஸ்தல அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பவுல் தன்னுடைய அப்போஸ்தல அதிகாரத்தைப் பயன்படுத்தி கொரிந்தியரைக் கடிந்துகொள்கிறார் (1கொரி 4:16-21). யோவான் இந்த வசனத்திலும், வெளிப்படுத்தின விசேஷத்தில் சில வசனங்களிலும் தன்னுடைய அப்போஸ்தல அதிகாரத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்.

VI. பரிசுத்தவான்களையும் பாவிகளையும் தெரிந்து கொள்ளும் விதம் - (மத் 7:15)

3யோவான் 1:11 பிரியமானவனே, நீ தீமையானதைப் பின்பற்றாமல் நன்மையானதைப் பின்பற்று. நன்மை செய்கிறவன் தேவனால் உண்டாயிருக்கிறான்; தீமைசெய்கிறவன் தேவனைக் காணவில்லை.

"நன்மைசெய்கிறவன் தேவனால் உண்டாயிருக்கிறான்" - தீமை செய்கிறவனை விசுவாசிகள் பின்பற்றக் கூடாது (3யோவான் 1:9-11). விசுவாசிகள் நன்மை செய்யும்போது அவர்கள் தேவனைக் காண்கிறார்கள்.

VII. தெமேத்திரியுவின் நற்சாட்சி

3யோவான் 1:12 தெமேத்திரியு எல்லாராலும் நற்சாட்சி பெற்றதுமல்லாமல், சத்தியத்தாலும் நற்சாட்சி பெற்றவன்; நாங்களும் சாட்சி கொடுக்கிறோம்; எங்கள் சாட்சி மெய்யென்று அறிவீர்கள்.

"தெமேத்திரியு" (Demetrius) - இந்த வசனத்தில் மட்டுமே இவனுடைய பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

VIII. முடிவுரையும் ஆசீர்வாதமும்

3யோவான் 1:13 எழுதவேண்டிய காரியங்கள் அநேகமுண்டு, ஆனால் மையினாலும் இறகினாலும் எழுத எனக்கு மனதில்லை.

3யோவான் 1:14 சீக்கிரமாய் உன்னைக் காணலாமென்று நம்பியிருக்கிறேன், அப்பொழுது முகமுகமாய்ப் பேசிக்கொள்ளுவோம். உனக்குச் சமாதானம் உண்டாவதாக. சிநேகிதர் உனக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள். சிநேகிதரைப் பேர்பேராக வாழ்த்துவாயாக.

"சீக்கிரமாய் உன்னைக் காணலாமென்று நம்பியிருக்கிறேன்" - 2யோவான், 3யோவான் ஆகிய இரண்டு நிருபங்களிலும் அப்போஸ்தலர் யோவான் இந்த நிருபங்களை யாருக்கு எழுதியிருக்கிறாரோ அவர்களைக் காணவேண்டுமென்று வாஞ்சையாக இருப்பதை வெளிப்படுத்தியிருக்கிறார் (2யோவான் 1:12

யூதா - முன்னுரை

காலமும் இடமும்

யூதா இந்த நிருபத்தை கிபி 66 ஆம் ஆண்டு எழுதினார் எழுதப்பட்ட இடம் தெரியவில்லை

ஆசிரியர்

யூதா (யூதா 1:1; லூக்கா 6:16)

மையக்கருத்து

விசுவாசத்திற்காகத் தைரியமாகப் போராட வேண்டும். (யூதா 1:3)

புள்ளிவிவரங்கள்

அதிகாரம் - 1

வசனங்கள் - 25

புதிய தீர்க்கதரிசனங்கள் - 2

வரலாற்றைக் குறிக்கும் வசனங்கள் - 22

பொருளடக்கம்

I. ஆசிரியரும் வாழ்த்துரையும் (1:1-2)

II. நிருபத்தின் நோக்கம் (1:3-4)

III. நியாயத்தீர்ப்பின் எடுத்துக்காட்டுக்கள் (1:5-7)

IV. பின்மாறிப் போனவர்களின் விபச்சாரமும் பாவங்களும் (1:8)

V. மிகாவேலின் தாழ்மை (1:9)

VI. பின்மாறிப் போனவர்களின் கூப்பாவங்கள் (1:10-13)

VII. ஏனோக்கின் தீர்க்கதரிசனம் (1:14-15)

VIII. பின்மாறிப் போனவர்கள் சுய பெருமைக்காரர்கள், இரக்கமற்றவர்கள் (1:16)

IX. பேதுருவின் தீர்க்கதரிசனம் (1:17-18)

X. பின்மாறிப் போனவர்கள் தேவபக்தியற்றவர்கள் (1:19)

XI. கிறிஸ்துவிற்குள் நமது பாதுகாப்பை உறுதிபண்ணும் ஏழு கிறிஸ்தவ நடத்தைகள் (1:20-25)

யூதா - தொகுப்புரை

1 அதிகாரம்

I. ஆசிரியரும் வாழ்த்துரையும்

யூதா 1:1 இயேசுகிறிஸ்துவினுடைய ஊழியக்காரனும், யாக்கோபினுடைய சகோதரனுமாயிருக்கிற யூதா பிதாவாகிய தேவனாலே பரிசுத்தமாக்கப் பட்டவர்களும் இயேசுகிறிஸ்துவினாலே [illegible] பட்டவர்களுமாகிய அழைக்கப் பட்டவர்களுக்கு எழுதுகிறதாவது.

யூதா 1:2 உங்களுக்கு இரக்கமும் சமாதானமும் அன்பும் பெருகக்கடவது.

"யூதா" (Jude) - இயேசு கிறிஸ்துவின சகோதரன் (லூக்கா 6:16)

ஊழியக்காரன் (servant) - δοῦλος - doulos - 1401

பெயர்ச்சொல் - வேலைக்காரனாகிய ஊழியக்காரனாகிய அடிமையாயிருக்கிற (மத் 20:27)

விசுவாசிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஆசீர்வாதங்கள்

1. பரிசுத்தமாக்கப்படுதல் (Sanctification)

2. காக்கப்படுதல் (Preservation) யூதா 1:1 1தெச 5:23

3. அழைக்கப்படுதல் (Calling) யூதா 1:2; ரோமா 8:28 2பேதுரு 1:10

காத்துக்கொள் (Preservation) τηρέω - teereoo - 5083

வினைச்சொல் - கைக்கொள் காத்துக்கொள், காவல் காத்திரு வைத்திரு, ஜாக்கிரதையாயிரு (1பேதுரு 1:4)

II. நிருபத்தின் நோக்கம்

யூதா 1:3 பிரியமானவர்களே, பொதுவான இரட்சிப்பைக்குறித்து உங்களுக்கு எழுதும்படி நான் மிகவும் கருத்துள்ளவனாயிருக்கையில், பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராடவேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது.

யூதா 1:4 ஏனெனில் நமது தேவனுடைய கிருபையைக் காமவிகாரத்துக்கு ஏதுவாகப் புரட்டி ஒன்றான ஆண்டவராகிய தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையும் மறுதலிக்கிற பக்தியற்றவர்களாகிய சிலர் பக்கவழியாய் நுழைந்திருக்கிறார்கள் அவர்கள் இந்த ஆக்கினைக் குள்ளானவர்களென்று பூர்வத்திலே எழுதியிருக்கிறது

"பொதுவான இரட்சிப்பு" (common salvation) - இரட்சிப்பு பொதுவானது என்று அழைக்கப்படுகிறது யூதருக்கும் புறஜாதியாருக்கும் இரட்சிப்பு ஒன்றுபோல உள்ளது. முழு உலகத்திலுள்ளவர்களுக்கும் இரட்சிப்பு பொதுவானது. (யோவான் 3:16)

போராடுதல் (contend) - ἐπαγωνίζομαι - epagoonizomai - 1864

வினைச்சொல் - போராடு (to contend against others) - கள்ளப்போதகர்கள் சுவிசேஷ சத்தியத்தை அழிக்க முற்படுகிறார்கள் ஆகையினால் கள்ளப்போதகர்களின் பொல்லாத உபதேசங்களுக்கு எதிராகப் போராட வேண்டும். (யூதா 1:3-4)

"சிலர் பக்கவழியாய் நுழைந்திருக்கிறார்கள்" மாயமான தோற்றத்தோடு ஒருசிலர் சபைக்குள் நுழைந்து இயேசு கிறிஸ்துவை மறுதலிக்கிறார்கள் (கலா 2:4 2பேதுரு 2:1)

பூர்வத்திலே எழுதியிருக்கிறது (ordained) προγράφω prographoo 4270

யூதா - தொகுப்புரை

1 அதிகாரம்

வினைச்சொல் - முன்பு எழுதியிரு, பூர்வத்திலே எழுதியிரு, முன் வெளிப்படுத்து "ordain before" யூதா 1:4, "write aforetime" ரோமர் 15:4; "write" ரோமர் 15:4; "write afore" எபே 3:3; "set forth evidently" (கலா 3:1; யூதா 1:5-7)

பக்தியில்லாதவர் (ungodly) - ἀσεβής - asebees - 765

பெயரடை - பாவி, அக்கிரமக்காரர் பக்தியில்லாதவர், அவபக்தியுள்ளவர் தேவபக்தியில்லாதவர் (irreligious) யூதா 1:4,15; 1தீமோ 1:9 பேதுரு 4:18 2பேதுரு 2:5 2பேதுரு 3:7

பக்தியற்றவர்களின் பாவங்கள்

1. தேவனுடைய கிருபையைக் காமவிகாரத்துக்கேதுவாகப் புரட்டுதல்.
2. ஒன்றான ஆண்டவராகிய தேவனை மறுதலிப்பது. (யூதா 1:4)
3. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை மறுதலிப்பது (யூதா 1:4; 2பேதுரு 2:1)

புரட்டு (turning) - μετατίθημι - metatitheemi - 3346

வினைச்சொல் - திரும்பு, மாற்றப்படு, புரட்டு (to place differently; to change for oneself; to change one's opinion to a new one; retract) "turning" (யூதா 1:4); "translate" (எபி 11:5); "carry over" (அப் 7:16); "remove" கலா 1:6; "change" (எபி 7:12) - பக்தியில்லாதவர்கள் தேவனுடைய கிருபையையும், இரக்கத்தையும் தங்களுடைய பாவங்களை மூடுவதற்குப் பயன்படுத்துகிறார்கள் மார்க்கத்தின் சடங்குகளுக்குள்புகுந்து கொண்டு தங்களுடைய மாம்சத்தின் இச்சைகளை நிறைவேற்றுகிறார்கள்

III. நியாயத்தீர்ப்பின் எடுத்துக் காட்டுக்கள்

யூதா 1:5 நீங்கள் முன்னமே அறிந்திருந்தாலும், நான் உங்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிற தென்னவெனில் கர்த்தர் தமது ஜனத்தை எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணி இரட்சித்து பின்பு விசுவாசியாதவர்களை அழித்தார்

யூதா 1:6 தங்களுடைய ஆதி மேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத் தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார்

யூதா 1:7 அப்படியே சோதோம் கொமோரா பட்டணத்தார்களும் அவைகளைச் சூழ்ந்த பட்டணத்தார்களும், அவர்களைப்போல விபசாரம்பண்ணி அந்நிய மாம்சத்தைத் தொடர்ந்து, நித்திய அக்கினியின் ஆக்கினையை அடைந்து, திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள்

தேவனுடைய கிருபையிலிருந்து விழுந்து போனவர்களுக்கு எடுத்துக்காட்டுக்கள்

1. லூசிபர் (Lucifer) - இவன் பாவம் செய்யும் வரையிலும் தேவனோடு பாவமில்லாதவனாக நடந்தவன் (எசே 28:1-17) தேவனுடைய கிருபையிலிருந்து விழுந்தவன் பரலோகத்திலிருந்து வெளியேற்றப் பட்டவன் ஏசா (14:12 4 லூக்கா 10:18) பாவ இச்சைகளுக்கு அவன் இடம் கொடுத்தான் (யோவான் 8:44) நித்திய நரகத்திற்கு நியமிக்கப்பட்டான் (மத் 25:41 வெளி 20:10)
2. பரிசுத்த தூதர்கள் (Holy angels) - தேவனுடைய பரிசுத்த தூதர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் லூசிபரோடு சேர்ந்து கலகம் பண்ணினார்கள் (வெளி 12:3,7-12) அவர்கள் சாத்தானோடு நரகத்திற்கு நியமிக்கப் பட்டார்கள் (மத் 25:41; ஏசா 24:21) இவர்களில் அநேகர் காமவிகாரம் கொண்டு இப்பொழுது நரகத்தில் இருக்கிறார்கள் (2பேதுரு 2:4, யூதா 1:6-7) தேவ தூதர்கள் தேவனுடைய குமாரர்கள்

1 அதிகாரம்

(ஆதி 6:1-4; யோபு 1:6; யோபு 2:1 யோபு 38:4-7) பாவம் செய்கிறவர்களுக்குப் பட்சபாதமில்லாமல் தண்டனை கொடுக்கப்படுகிறது.

3. பிசாசுகள் (Demons) - பிசாசுகளும் பாவமில்லாமல் சிருஷ்டிக்கப்பட்டவை. தேவனுடைய கிருபையிலும் சிலாக்கியத்திலும் இருந்தவை. அவை பாவம் செய்து நித்திய அழிவைத் தங்களுக்குத் தேடிக் கொண்டன (மத் 8:29; மாற்கு 5:7; லூக்கா 8:28-32; யாக் 2:19) பிசாசுகள் இப்பொழுது பாதாளத்தில் உள்ளன (வெளி 9)

4 ஆதாமிற்கு முந்திய சந்ததியார் (Pre-adamites) - ஆதாமிற்கு முன்பாகவே மனுஷ சந்ததி இருந்ததாக வேதபண்டிதர்களில் சிலர் வியாக்கியானம் கூறுகிறார்கள் (ஆதி 1:2; ஏசா 14:12-14; எரே 4:23-26, எசே 28:11-17; 2பேதுரு 3:5-8) ஆதாமிற்கு முன்பாக லூசிபர் பூமியை ஆளுகை செய்ததாகவும், எல்லா ஜனங்களையும் தேவனுக்கு எதிராக பாவம் செய்ய தூண்டியதாகவும் இதன் விளைவாக பூமியானது ஜலத்தினால் அழிக்கப்பட்டதாகவும் இவர்கள் கூறுகிறார்கள் (ஆதி 1:2; 2பேதுரு 3:5-8) இவர்களுடைய கருத்தின் பிரகாரம் இந்த ஜலப்பிரளயத்தில் மனுஷரோ விலங்குகளோ, நகரங்களோ தாவர வர்க்கங்களோ தப்பிப் பிழைக்கவில்லை (எரே 4:23-26)

5 ஆதாமும், ஏவாளும் தேவனுடைய கிருபையில் சிருஷ்டிக்கப்பட்டார்கள் (ஆதி 1:26-31) அவர்கள் பாவம் செய்து தேவகிருபையிலிருந்து விழுந்து போனார்கள். நித்திய ஜீவனை இழந்துவிட்டார்கள் (ஆதி 2:17; ஆதி 3:1-19; ரோமர் 5:12-21; 2கொரி 11:3) பாவத்திலிருந்து அவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள் என்று எந்த வேதவாக்கியமும் கூறவில்லை. பழைய ஏற்பாட்டின் விசுவாச வீரர்களின் பெயர் அட்டவணையில் இவர்களுடைய பெயர்கள் காணப்படவில்லை

(எபி 11) ஆதாம் தன்னுடைய 810 வயதிலும் பாவியாகவே இருந்தான் (ஆதி 6:3) அவன் தேவனுடைய பிள்ளை (லூக்கா 3:38) ஆனால் அவன் பாவம் செய்து தேவனுடைய கிருபையிலிருந்து விழுந்தான்

6 ஆதாமியர்கள் (Adamites) - ஆதாமின் சந்ததியாரை இந்த வாக்கியம் குறிக்கிறது. ஆதாமின் சந்ததியார் ஒரு காலத்தில் தேவனுடைய கிருபையில் இருந்தார்கள் பாவம் செய்து தேவகிருபையை இழந்து போனார்கள் இதனால் மனுக்குலத்திற்கு மரணம் வந்தது. (ரோமர் 5:12-21 1கொரி 15:21-22; 2கொரி 11:3

7 இஸ்ரவேலரில் அநேகர் (Many Israelites) - இஸ்ரவேலர்கள் யாத் 32 ஆவது அதிகாரத்திற்கு முன்பு பாவம் செய்யாமல் மறுபடியும் பிறந்தவர்களாக இருந்தார்கள் (உபா 32:18; கலா 4:28-29), மீட்கப்பட்டிருந்தார்கள் (யாத் 15:13 உபா 21:8), பரிசுத்தமாக்கப்பட்டிருந்தார்கள் (யாத் 31:13, லேவி 20:8), மனமாற்றியிருந்தார்கள் (சங் 19:7), கிருபையில் இருந்தார்கள் (யாத் 33:12-17; சங் 84:11) ஜீவபுஸ்தகத்தில் அவர்களுடைய பெயர்கள் எழுதப்பட்டிருந்தது (யாத் 32:32-33; யாத் 69:25-28) நமக்குள்ள சுவிசேஷம் அவர்களுக்கும் இருந்தது (கலா 3:6-14; எபி 4:2) அவர்கள் பாவம் செய்த போது தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டு தங்களுடைய நித்திய ஜீவனை இழந்து போனார்கள் (யாத் 32:32-33, 2கொரி 10:1-18; எபி 2:14, யூதா 1:5 பலமுறை அவர்கள் தேவனைப் பரீட்சை பார்த்து தேவனைவிட்டு விலகி சபிக்கப்பட்டார்கள் (உபா 17:3, உபா 29:26; நியா 2:11-23 நியா 3:5-14; நியா 4:1, நியா 5:31 நியா 6:1; நியா 8:28-35, நியா 10:6-11:33 நியா 12:7-13 நியா 20:13; 1சாமு 2:12-36, 1சாமு 3:11-14 1இராஜா 1:1-13,38-39 1இராஜா12:25-33 1இராஜா 13:33-34, 1இராஜா 14:16-31 1இராஜா 15:29 1இராஜா 16:2 2இராஜா 17:7-23

யூதா - தொகுப்புரை

1 அதிகாரம்

8 நாதாபும், அபியுவும் (Nadab and Abihu) - தேவனுடைய பரிசுத்த ஆசாரியர்கள் (யாத் 19:6; யாத் 22:31) பாவத்தில் விழுந்தார்கள் (லேவி 10:9-20, எண் 3:4)

9 கோராகு, தாத்தான், அபிராம் (Korah, Dathan, Abiram) - போன்ற தேவனுடைய மனுஷர்கள் பாவம் செய்து தேவனை விட்டுப் பிரிந்து பாதாளத்திற்குப் போனார்கள்

பாதாளம் - שְׁאוֹל - sheh-ole', sheh-ole' - 7585

பொதுப்பெயர்சொல் - பாதாளம் நரகம் (எண் 16:1-3,23-33)

10 சவுல் (Saul) - மனம்மாறி பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டவன் (1சாமு 10:9-13,21-24) அஞ்சனம் பார்த்து பாவம் செய்தான் (1சாமு 28; லேவி 19:31, லேவி 20:6) பரிசுத்த ஆவியை இழந்தான் (1சாமு 16:12-23) தேவனால் சபிக்கப்பட்டான் தன்னுடைய உயிரை மாய்த்துக் கொண்டான் (1சாமு 31:1-6; 1நாளா 10:13-14)

11 இயேசுவின் சீஷர்களில் அநேகர் இயேசுவையும் அவருடைய கிருபையையும் விட்டுப்பிரிந்து போய் அவரைப் பின்பற்றாமல் போனார்கள் (யோவான் 6:66) அவர்கள் சிறிதுகாலம் இயேசுவை விசுவாசித்தார்கள் (லூக்கா 8:13) கெட்டுப்போனார்கள் (எபி 10:26-39)

12 யூதாஸ் (Judas) - ஒரு காலத்தில் இரட்சிக்கப்பட்டவன் பின்பு இயேசுவைக் காட்டிக் கொடுத்து தன்னுடைய உயிரை மாய்த்துக் கொண்டான்

13 அனனியாவும் சப்பீராளும் (Ananias and Sapphira) இவர்கள் இரட்சிக்கப்பட்டு சபையில் ஒரே இருதயமாகவும், ஒரே ஆத்துமாவாகவும் இருந்தார்கள் (அப் 4:32-33) பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்கூறி உடனடியாக மரித்துப் போனார்கள் (அப் 5:1-11)

14 கலாத்தியர்கள் ஆவியில் ஆரம்பம் பண்ணி பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டவர்கள் (யூதா 3:2-4) இதன் பின்பு விரைவில் கிறிஸ்துவையும் அவருடைய கிருபையையும் விட்டு விலகிப் போனார்கள் (யூதா 1:6; யூதா 5:4)

15. தேமா (Demas) - ஆதித்திருச்சபையில் பிரசங்கித்தவன் (கொலோ 4:14; பிலே 1:24) பாவத்தில் விழுந்து இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசை வைத்து தேவனுடைய கிருபையை இழந்து போனான் (2தீமோ 4:10) ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை (1யோவான் 2:15-17)

16 இமெனேயும், அலெக்சந்தரும் (Hymenaeus and Alexander) - இவர்கள் இருவரும் ஒரு காலத்தில் விசுவாசிகளாக இருந்தார்கள் அதன் பின்பு விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தினார்கள் (1தீமோ 1:19-20)

17 ஏராளமானோர் பணத்தின்மீது ஆசை பாராட்டி விசுவாசத்தை விட்டு வழுவிப் போனார்கள் (1தீமோ 6:10,21)

18 இளவயதுள்ள விதவைகளில் அநேகர் கிறிஸ்துவுக்கு விரோதமாய் காமவிகாரம் கொண்டு முதலில் கொண்டிருந்த விசுவாசத்தை விட்டு விட்டு ஆக்கினைக்குட்பட்டார்கள் (1தீமோ 5:11-13)

19 இமெனேயும், பிலேத்தும் (Hymenaeus and Philetus) - இவர்கள் சத்தியத்தை விட்டுவிலகி மற்றவர்களுடைய விசுவாசத்தையும் கவிழ்த்துப் போட்டார்கள் (2தீமோ 2:17-19)

யூதா - தொகுப்புரை

1 அதிகாரம்

20 ஒரு காலத்தில் இரட்சிக்கப்பட்டு, பின்பு வழிவிலகிப் போகிறவர்கள் விசுவாசத்தை விலகிப்போகிறார்கள். அவர்களுடைய பின் நிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும் (ரோமர் 1:21-32; எபி 6:4-9 எபி10:26-29; 2பேதுரு 2:20-22)

21 சபைகளில் ஏராளமானோர் பின்பு பின்வாங்கிப் போய்விடுகிறார்கள் அவர்கள் மறுபடியும் மனந்திரும்பி கர்த்தரிடத்தில் வர வேண்டும் இல்லையென்றால் அழிவு அவர்களுக்கு நிச்சயம். (வெளி 2:5,10,16,20-23, வெளி 3:3,11,16)

ஒரு காலத்தில் தேவனுடைய கிருபையிலிருந்து விட்டு பின்பு தேவனுடைய கிருபையிலிருந்து விலகிப்போனவர்களுக்கு வேதாகமத்தில் ஏராளமான சான்றுகள் உள்ளன. அவர்கள் மனந்திரும்பி மறுபடியும் கிறிஸ்துவிடம் வர வேண்டும். தேவனுடைய நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்க வேண்டும்.

பிரமாணங்களும் எச்சரிப்புக்களும்

மோசேயின் காலத்திற்கு முன்பு

1 நீ சாகவே சாவாய். (ஆதி 2:17)

2 நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு. (ஆதி 17:1)

3 நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள். (ஆதி 18:19)

குணமாக்கும் உடன்படிக்கைக் குட்பட்டவர்கள்

4 நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால் நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன் (யாத் 15:26)

மோசேயின் பிரமாணத்திற்கு உட்பட்டவர்கள்

5. அவர்கள் என் நியாயப் பிரமாணத்தின்படி நடப்பார்களோ நடக்கமாட்டார்களோ என்று அவர்களைச் சோதிப்பேன் (யாத் 16:4)

6 நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால் சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள் (யாத் 19:5)

7 எனக்கு விரோதமாய்ப் பாவம் செய்தவன் எவனோ, அவன் பேரை என் புஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடுவேன் (யாத் 32:33)

8 குற்றவாளியைக் குற்றமற்றவனாக விடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும், பிள்ளைகளுடைய பிள்ளைகளிடத்திலும் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவர் (யாத் 34:6-7)

9 நீங்கள் என் கட்டளைகளின்படி நடந்து என் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்தால் நான் ஏற்ற காலத்தில் உங்களுக்கு மழையைப் பண்ணுவேன் லேவி 26:3-13 உபா 7:12-24 உபா 11:13-14, உபா 28:1-14

1 அதிகாரம்

10 நீங்கள் எனக்குச் செவிகொடாமலும் இந்தக் கற்பனைகள் எல்லாவற்றின்படி செய்யாமலும், என் உடன்படிக்கையை நீங்கள் மீறிப்போடுவீர்களாகில், நான் உங்களைச் சபிப்பேன் (லேவி 26:14-45 உபா 28:15-68)

8 உன் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்திற்கு நீங்கள் கீழ்ப்படியாமற் போவதினால் கர்த்தர் உங்களுக்கு முன்பாக அழித்த ஜாதிகளைப்போல நீங்களும் அழிவீர்கள் (உபா 8:11-20)

2 நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளிலெல்லாம் நடந்து, அவரிடத்தில் அன்புகூர்ந்து உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் தேவனாகிய கர்த்தரைச் சேவித்து, கர்த்தருடைய [illegible] அவருடைய [illegible] உனக்கு நன்மையுண்டாகும்படி கைக்கொள்ள வேண்டும் என்பதையே அல்லாமல், வேறே எதை உன் தேவனாகிய கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார் (உபா 10:12-13)

13 உங்கள் இருதயம் வஞ்சிக்கப்படாமலும் நீங்கள் வழிவிலகி அந்நிய தேவர்களைச் சேவித்து அவர்களை நமஸ்கரியாமலும் இருக்கும்படி எச்சரிக்கையாயிருங்கள். இல்லாவிடில் கர்த்தருடைய கோபம் உங்கள்மேல் மூண்டு, மழை பெய்யாமற்போகவும் தேசம் தன் பலனைக் கொடாமலிருக்கவும் வானத்தை அடைத்துப்போடுவார் (உபா 11:16-21)

14 இதோ, இன்று நான் உங்களுக்கு முன்பாக ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் வைக்கிறேன். தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்தீர்களானால் ஆசீர்வாதமும், தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படியாமல், நீங்கள் அறியாத வேறே தேவர்களைப் பின்பற்றுவீர்களானால் சாபமும் வரும். (உபா 11:26-28)

பாலஸ்தீன உடன்படிக்கைக்குட்பட்டவர்கள்

15 நீங்கள் செய்வதெல்லாம் உங்களுக்கு வாய்க்கும்படிக்கு இந்த உடன்படிக்கையின் வார்த்தைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்வீர்களாக (உபா 29:9,15-15)

16 இந்த ஆணையுறுதியின் வார்த்தைகளைக் கேட்டும் தாகத்தினிமித்தம் வெறிக்கக் குடித்து மன இஷ்டப்படி நடந்தாலும் எனக்குச் சமாதானமிருக்கும் என்று தன் உள்ளத்தைத் தேற்றிக்கொண்டால் கர்த்தர் அவனை மன்னிக்கச் சித்தமாயிரார் (உபா 29:19-28)

17 உன் தேவனாகிய கர்த்தரிடத்துக்கே திரும்பி, நீயும் உன் பிள்ளைகளும் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அவருடைய சத்தத்திற்குச் செவிகொடுத்தால் உன் தேவனாகிய கர்த்தர் உன் சிறையிருப்பைத் திருப்பி, உனக்கு இரங்கி, உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சிதற அடித்த எல்லா ஜனங்களிடத்திலும் இருக்கிற உன்னைத் திரும்பச் சேர்த்துக் கொள்ளுவார் (உபா 30:1-10)

18 ஜீவனையும் நன்மையையும், மரணத்தையும் தீமையையும் இன்று உனக்கு முன்னே வைத்தேன். நீ பிழைத்துப் பெருகும்படிக்கும், நீ சுதந்தரிக்கப்போகிற தேசத்தில் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கும்படிக்கும், நீ உன் தேவனாகிய கர்த்தரில் அன்புகூரவும், அவர் வழிகளில் நடக்கவும், அவர் கற்பனைகளையும் கட்டளைகளையும் நியாயங்களையும் கைக்கொள்ளவும் வேண்டும். (உபா 30:11-16)

1 அதிகாரம்

19 நீ கேளாதபடிக்கு, மனம் பேதித்து இழுப்புண்டுபோய் வேறே தேவர்களைப் பணிந்து, அவர்களைச் சேவிப்பாயானால்... நெடுநாள் வாழாமல் நிச்சயமாய் அழிந்து போவீர்கள் (உபா 30:17-20)

யோசுவா கூறிய பிரமாணங்களும், எச்சரிப்புகளும்

20 இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்து கொள்ளுவாய். (யோசு 1:7-8)

21 மோசேயின் நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிருக்கிறதை விட்டு, வலது புறமாகிலும் இடதுபுறமாகிலும் விலகிப் போகாமல் அதையெல்லாம் கைக்கொள்ளவும் செய்யவும் நிர்ணயம் பண்ணிக்கொள்ளுங்கள். நீங்கள் பின்வாங்கிப்போய், உங்களுக்குள்ளே மீதியாயிருக்கிற இந்த ஜாதிகளைச் சேர்ந்து, அவர்களோடே சம்பந்தங்கலந்து, நீங்கள் அவர்களிடத்திலும் அவர்கள் உங்களிடத்திலும் உறவாடினால், உங்கள் தேவனாகிய கர்த்தர் இனி இந்த ஜாதிகளை உங்களுக்கு முன்பாகத் துரத்தி விடமாட்டார்; உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கொடுத்த இந்த நல்ல தேசத்திலிருந்து அழிந்துபோகுமட்டும், அவர்கள் உங்களுக்குக் கண்ணியாகவும் வலையாகவும் உங்கள் விலாக்களுக்குச் சவுக்காகவும், உங்கள் கண்களுக்கு முள்ளுகளாகவும் இருப்பார்கள் (யோசு 23:6-14)

22 உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களோடே சொன்ன நல்ல காரியமெல்லாம் உங்களிடத்திலே எப்படி நிறைவேறிற்றோ, அப்படியே உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கட்டளையிட்ட அவருடைய உடன்படிக்கையை நீங்கள் மீறி, அந்நிய தேவர்களைச் சேவித்து அவைகளைப் பணிந்து கொள்ளுங்காலத்தில் உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கொடுத்த இந்த நல்ல தேசத்திலிருந்து உங்களை நிர்மூலமாக்குமட்டும் கர்த்தர் உங்கள்மேல் சகல தீமையான காரியங்களையும் வரப்பண்ணுவார் (யோசு 24:14-16)

23 கர்த்தர் உங்களுக்கு நன்மைசெய்திருக்க, நீங்கள் கர்த்தரைவிட்டு, அந்நிய தேவர்களைச் சேவித்தால் அவர் திரும்பி உங்களுக்குத் தீமை செய்து உங்களை நிர்மூலமாக்குவார் (யோசு 24:20)

சாமுவேல் கூறிய பிரமாணங்களும், எச்சரிப்புகளும்

24 நீங்கள் கர்த்தருடைய வாக்குக்கு விரோதமாய்க் கலகம்பண்ணாமல் கர்த்தருக்குப் பயந்து அவரைச் சேவித்து அவருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிந்தால், நீங்களும் உங்களை ஆளுகிற ராஜாவும் உங்கள் தேவனாகிய கர்த்தரைப் பின்பற்றுகிறவர்களாயிருப்பீர்கள் (1சாமு 12:14)

25 நீங்கள் இன்னும் பொல்லாப்பைச் செய்யவே செய்வீர்களானால், நீங்களும் உங்கள் ராஜாவும் நாசமடைவீர்கள் (1சாமு 12:24-25)

26. தேவனாகிய கர்த்தர் உமக்கு விதித்த கட்டளையைக் கைக்கொள்ளாமற்போனீர் உம்முடைய ராஜ்யபாரம் நிலைநிற்காது. (1சாமு 13:13-14)

யூதா - தொகுப்புரை

1 அதிகாரம்

தாவீது, சாலொமோன் ஆகியோர் கூறிய பிரமாணங்களும், எச்சரிப்புகளும்

27 தேவன் சொன்ன தம்முடைய வார்த்தையைத் திடப்படுத்துகிறதற்கு, நீ உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளையும் கற்பனைகளையும், நியாயங்களையும் சாட்சிகளையும் கைக்கொள்ள அவர் வழிகளில் நடக்கும்படிக்கு அவருடைய காவலைக் காப்பாயாக. (1 இராஜா 2:3-4)

28 உன் பிள்ளைகள் தங்கள் முழு இருதயத்தோடும், தங்கள் முழு ஆத்துமாவோடும் கர்த்தருக்கு முன்பாக உண்மையாய் நடக்கும்படிக்குத் தங்கள் வழியைக் காத்துக் கொண்டால், இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கத்தக்க புருஷன் உனக்கு இல்லாமற் போவதில்லை. (1 இராஜா 2:4)

29 நீயும் என் கட்டளைகளையும், என் நியமங்களையும் கைக்கொண்டு, என் வழிகளில் நடப்பாயாகில் உன் நாட்களையும் நீடிக்கப்பண்ணுவேன். (1 இராஜா 3:14)

30 நான் உனக்குக் கட்டளையிட்டதையெல்லாம் நீ கேட்டுக் கைக்கொண்டு, நீ என் வழிகளில் நடந்து, என் கட்டளைகளையும், என் கற்பனைகளையும் கைக்கொள்ளும்படிக்கு என் பார்வைக்குச் செம்மையானதைச் செய்கிறதுண்டானால், நான் உன்னோடிருந்து, உனக்கு நிலையான வீட்டைக் கட்டி இஸ்ரவேலை உனக்குத் தருவேன். (1 இராஜா 9:3-9; 1 இராஜா 11:38; 2 நாளா 7:19-22)

31 நான் அவர்களுக்குக் கற்பித்த எல்லாவற்றின்படியேயும், என் நியாயப்பிரமாணத்தின்படியேயும் செய்ய ஜாக்கிரதையாயிருந்தார்களேயானால். (2 இராஜா 21:7-8)

32 என் கற்பனைகளின்படியும் என் நியாயங்களின்படியும் செய்ய உறுதியாயிருப்பானானால். (1 நாளா 28:7-10)

33 என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன். (2 நாளா 7:14)

34 நீ அவரைத் தேடினால் உனக்குத் தென்படுவார்; நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார். (1 நாளா 28:9)

35 நீங்கள் வழிவிலகி, நான் உங்களுக்கு முன்வைத்த என் கட்டளைகளையும் என் கற்பனைகளையும் விட்டுப்போய், வேறே தேவர்களைச் சேவித்து, அவர்களைப் பணிந்துகொள்வீர்களேயாகில், நான் அவர்களுக்குக் கொடுத்த என் தேசத்தில் இருந்து அவர்களைப் பிடுங்கி, என் நாமத்திற்கென்று நான் பரிசுத்தப்படுத்தின இந்த ஆலயத்தை என் சமுகத்தினின்று தள்ளி, அதை எல்லா ஜனசதளங்களுக்குள்ளும் பழமொழியாகவும் வசைச்சொல்லாகவும் வைப்பேன். (2 நாளா 7:19-22)

பழைய ஏற்பாட்டுக்கால தீர்க்கதரிசிகள் கூறிய பிரமாணங்களும், எச்சரிப்புகளும்

36 நீங்கள் கர்த்தரோடிருந்தால், அவர் உங்களோடிருப்பார்; நீங்கள் அவரைத் தேடினால் உங்களுக்கு வெளிப்படுவார்; அவரை விட்டீர்களேயாகில் அவர் உங்களை விட்டு விடுவார். (2 நாளா 15:2)

37 நீங்கள் கர்த்தரை விட்டுவிட்டதினால், அவர் உங்களைக் கைவிடுவார். (2 நாளா 24:20)

யூதா - தொகுப்புரை

1 அதிகாரம்

38 அவர்கள் என்னைவிட்டு, தங்கள் கைகளின் [redacted]ள் எல்லாவற்றிலும் எனக்குக் கோபம் உண்டாக்க வேறே தேவர்களுக்குத்தூபங்காட்டினபடியினால், என் உக்கிரம் அவிந்துபோகாதபடி இந்த ஸ்தலத்தின்மேல் இறங்கும் 2நாளா 34.25

39 அடங்காதவர்களேயாகில பட்டயத்துக்கு இரையாகி, ஞானம் அடையாமல் மாண்டுபோவார்கள் (யோபு 36:12)

40 கர்த்தரை விட்டு, இஸ்ரவேலின் பரிசுத்தருக்குக் கோபமுண்டாக்கி பின்வாங்கிப்போனார்கள்__நீங்கள் மிகுதியாய் ஜெபம்பண்ணினாலும் கேளேன (ஏசா 1:4-15

41 நீங்கள் மனம்பொருந்திச் செவி கொடுத்தால், தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள் மாட்டோம் என்று எதிர்த்து நின்றீர்களாகில பட்டயத்துக்கு இரையாவீர்கள் (ஏசா 1:19-20; எரே 1:16 எரே 2:13,17,19; எரே 5:19; எரே 9:13 எரே 15:6; எரே 16:11; எரே 17:13, எரே 19:4, எரே 22:9)

42 கேளாதவர்களேயாகில நான அப்படிப்பட்ட ஜாதியை வேரோடே பிடுங்கிப்போட்டு அழித்துவிடுவேன எரே 12:17

43 நீதிமான் தன் நீதியை விட்டுத் திரும்பி, நீதிகேடு செய்யும்போதும் நான் அவன்முன் இடறலை வைக்கும்போதும், அவன் சாவான (எசே 3:20 21

44 பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும். (எசே 18.4

45 நீதிமான் தன் நீதியைவிட்டு விலகி, அநீதிசெய்து துன்மார்க்கன் செய்கிற சகல அருவருப்புகளின்படியும் செய்வானேயாகில அவன் பிழைப்பானோ? அவன் செய்த அவனுடைய எல்லா நீதிகளும் நினைக்கப்படுவதில்லை. அவன் செய்த தன் துரோகத்திலேயும் அவன் செய்த தன் பாவத்திலேயும் சாவான் (எசே 18.24-26

46 நீதிமான் துரோகம்பண்ணுகிற நாளிலே அவனுடைய நீதி அவனைத் தப்புவிப்பதில்லை. துன்மார்க்கன் தன் துன்மார்க்கத்தைவிட்டுத் திரும்புகிற நாளிலே அவன் தன் அக்கிரமத்தினால விழுந்து போவதுமில்லை நீதிமான் பாவஞ்செய்கிற நாளிலே தன் நீதியினால பிழைப்பதுமில்லை__அவன் செய்த தன் அநியாயத்திலே சாவான் (எசே 33:12-13)

47 நீங்கள் கேளாமலும், என் நாமத்துக்கு மகிமையைச் செலுத்தும்படி இதைச் சிந்தியாமலுமிருந்தால நான உங்களுக்குள்ளே சாபத்தை அனுப்பி, உங்கள் ஆசீர்வாதங்களையும் சபிப்பேன் (மல் 2:2)

புதிய உடன்படிக்கை - கிருபையின் காலம்

விதிக்கு உரிய பிரமாணங்களும் எச்சரிப்புகளும்

48 நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள் உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும் மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது. (மத் 5:13

49 முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான் (மத் 10:22

50 எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால அது அவனுக்கு மன்னிக்கப்படும் எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை. (மத் 12:32-33)

யூதா - தொகுப்புரை

1 அதிகாரம்

51 தங்களுக்குள்ளே வேர்கொள்ளாத படியினாலே, கொஞ்சக்கால மாத்திரம் விசுவாசித்து, சோதனை காலத்தில பின்வாங்கிப்போகிறார்கள் (மத் 13:21, லூக்கா 8:13)

52 ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன் (மத் 16:24)

53 அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல நித்திய ஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள் (யோவான் 6:27)

54 நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள் (யோவான் 8:31)

55 பாவஞ்செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான். அடிமையானவன் என்றைக்கும் வீட்டிலே நிலைத்திரான்; குமாரன் என்றைக்கும் நிலைத்திருக்கிறார் (யோவான் 8:34-35)

56 என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது. நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது. (யோவான் 10:26-27)

57 என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பா யிருக்கிறான் (யோவான் 14:21-23)

58 ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்; அப்படிப் பட்டவைகளைச் சேர்த்து அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோம். (யோவான் 15:6)

59 என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள் (யோவான் 15:9)

60 நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள் (யோவான் 15:10-13)

61 நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள் (யோவான் 15:14)

பவுல் கூறிய பிரமாணங்களும் எச்சரிப்புகளும்

62 தேவனுடைய கிருபையிலே நிலைகொண்டிருக்கும்படி அவர்களுக்குப் புத்தி சொன்னார்கள் (அப 13:43)

63 சீஷருடைய மனதைத் திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்திசொன்னார்கள் (அப 14:22)

64 அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப் படுத்தாமலும் ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்... தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார் (ரோமர் 1:21, 32)

65 இப்படிப் பட்டவைகளைச் செய்கிறவர்கள் மரணத்திற்குப் பாத்திரரா யிருக்கிறார்கள் (ரோமர் 1:32; ரோமர் 2:2-3)

66 சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார் (ரோமர் 2:7)

67 எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக் கொடுக்கிறீர்களோ அதற்கே கீழ்ப்படிகிற அடிமை களாயிருக்கிறீர்களென்று அறியீர்களா? (ரோமர் 6:16-23)

68 பாவத்தின் சம்பளம் மரணம் (ரோமர் 6:23)

யூதா - தொகுப்புரை

1 அதிகாரம்

69 மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை. (ரோமர் 8:1-4)

70 மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள். ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள் (ரோமர் 8:12-13)

71 அவர்கள் அவிசுவாசத்திலே நிலைத்திராதிருந்தால், அவர்களும் ஒட்டவைக்கப் படுவார்கள் (ரோமர் 11:20-23)

72 ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார் (1கொரி 3:17)

73. அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை. (1கொரி 6:9-10)

74 பலவீனமுள்ள சகோதரன் உன் அறிவினிமித்தம் கெட்டுப்போகலாமா? (1கொரி 8:11)

75 மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நானேதானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன் (1கொரி 9:27)

76 நான் உங்களுக்குப் பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால் அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றப்படி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே (1கொரி 15:2)

77 விசுவாசத்தினாலே நிலைநிற்கிறீர்களே (2கொரி 1:24)

78 நாம் சரீரத்தில் குடியிருந்தாலும் குடியிராமற்போனாலும் அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம் (2கொரி 5:10)

79 தேவனுடைய கிருபையை நீங்கள் விருதாவாய்ப் பெறாதபடிக்கு உடன் வேலையாட்களாகிய நாங்கள் உங்களுக்குப் புத்திசொல்லுகிறோம். (2கொரி 6:1)

80 சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததுபோல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப் பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன் (2கொரி 11:3)

81 இயேசு கிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களோ? நீங்கள் பரீட்சைக்கு நிலவாதவர்களாயிருந்தால் அறியீர்கள் (1கொரி 9:27, 2கொரி 13:5)

82 உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப்பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன் (கலா 1:6-9)

83 நான் இடித்துப்போட்டவைகளையே நான் மறுபடியும் கட்டினால் பிரமாணத்தை மீறுகிறவனென்று காணப்படுவேன் (கலா 2:18)

84 நான் தேவனுடைய கிருபையை விருதாவாக்குகிறதில்லை. (கலா 2:21)

85 சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போக உங்களுக்குத் தடைசெய்தவன் யார்? (கலா 3:1; கலா 5:7)

86 ஆவியினாலே ஆரம்பம்பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவுபெறப் போகிறீர்களோ? நீங்கள் இத்தனை புத்தியீனரா? (கலா 3:3; கலா 5:19-21)

87 விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் (கலா 3:11)

88 நீங்கள் தேவனை அறிந்திருக்க, அல்லது தேவனாலே அறியப்பட்டிருக்க, பெலனற்றதும் வெறுமையானதுமான அவ்வழிபாடுகளுக்கு நீங்கள் மறுபடியும் திரும்பி, மறுபடியும் அவைகளுக்கு அடிமைப்படும்படி விரும்புகிறதெப்படி? (கலா 4:9)

யூதா - தொகுப்புரை

1 அதிகாரம்

89 நான் உங்களுக்காகப் பிரயாசப்பட்டது வீணாய்ப்போயிற்றோ என்று உங்களைக் குறித்துப் பயந்திருக்கிறேன் (கலா 4:11)

90 கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறேன் உங்களைக்குறித்து நான் சந்தேகப்படுகிறேன் (கலா 4:19-20)

91 நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள் (கலா 5:1)

92 நீங்கள் யாவரும் கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள் (கலா 5:4)

93 புளிப்புள்ள கொஞ்சமாவானது பிசைந்த மாவனைத்தையும் உப்பப்பண்ணும். (கலா 5:9, 1 கொரி 5:7-8)

94 நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப் பட்சித்தீர்களானால் அழிவீர்கள் (கலா 5:15)

95 ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள் அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள் (கலா 5:16)

96 இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை (கலா 5:19-21)

97 மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான் தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான் ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான் (கலா 6:7-8)

98 கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாக நடந்துகொண்டீர்கள் (எபே 2:2)

99 கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வருவதால் ஒருவனும் உங்களை வீண் வார்த்தைகளினாலே மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் (எபே 5:6)

100 நீங்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமாயிருக்கவும் வேண்டுதல் செய்கிறேன் (பிலி 1:11)

101 அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள் (பிலி 2:12)

102 கர்த்தருக்குள் நிலைத்திருங்கள் (பிலி 4:1)

103. நீங்கள் கேட்ட சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையைவிட்டு அசையாமல் ஸ்திரமாயும் உறுதியாயும் விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால் அப்படியாகும் (கொலோ 1:22)

104. நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக (கொலோ 2:6-7)

105 லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளைகொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் அது மனுஷருடைய பாரம்பரிய நியாயத்தையும் உலகவழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல (கொலோ 2:8)

யூதா - தொகுப்புரை

1 அதிகாரம்

106 தேவவளர்ச்சியாய் வளர்ந்தேறுகிற சரீர முழுவதையும் ஆதரிக்கிற தலையைப் பற்றிக் கொள்ளாமல் மாயமான தாழ்மையிலும் தேவதூதர்களுக்குச் செய்யும் ஆராதனையிலும் விருப்பமுற்று காணாதவைகளிலே துணிவாய் நுழைந்து, தன் மாம்சசிந்தையினாலே வீணாய் இறுமாப்புக்கொண்டிருக்கிற எவனும் உங்கள் பந்தயப்பொருளை நீங்கள் இழந்துபோகும்படி உங்களை வஞ்சியாதிருக்கப் பாருங்கள் (கொலோ 2:18-19)

107 இவைகளைப் பூமியில் உண்டு பண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப் போடுங்கள் இவைகளினிமித்தமே கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வரும். (கொலோ 3:5-6)

108. அநியாயஞ்செய்கிறவன் தான் செய்த அநியாயத்துக்கேற்ற பலனை அடைவான் பட்சபாதமே இல்லை. (கொலோ 3:25)

109 நான் இனிப் பொறுத்திருக்கக்கூடாமல், எங்கள் வேலை வீணாய்ப் போகத் தக்கதாகச் சோதனைக்காரன் உங்களைச் சோதனைக்குட் படுத்தினதுண்டோவென்று, உங்கள் விசுவாசத்தை அறியும்படிக்கு அவனை அனுப்பினேன் (1தெச 3:5)

110 நீங்கள் கர்த்தருக்குள் நிலைத்திருந்தால் நாங்கள் பிழைத்திருப்போம் (1தெச 3:8)

111 சுவிசேஷத்திற்குக் கீழ்ப் படியாதவர்களுக்கு நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள் (2தெச 1:8-9)

112 எங்களிடத்தில் ஏற்றுக்கொண்ட முறைமையின்படி நடவாமல் ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும் நீங்கள் விட்டு விலகவேண்டும் (2தெச 3:6,14)

113 இவைகளைச் சிலர் நோக்காமல் வீண் பேச்சுக்கு இடங்கொடுத்து விலகிப் போனார்கள் (1தீமோ 1:5-6)

114 நீ விசுவாசமும் நல்மனச்சாட்சியும் உடையவனாயிரு. இந்த நல்மனச்சாட்சியைச் சிலர் தள்ளிவிட்டு, விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தினார்கள் (1தீமோ 1:18-20)

115 ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்டு பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள் (1தீமோ 4:1)

116 உன்னைக்குறித்தும் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு. இவைகளில் நிலைகொண்டிரு. இப்படிச் செய்வாயானால் உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக் கொள்ளுவாய். (1தீமோ 4:16)

117 ஒருவன் தன் சொந்த ஜனங்களையும் விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால் அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும் அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான் (1தீமோ 5:8)

118 அவர்கள் கிறிஸ்துவுக்கு விரோதமாய்க் காமவிகாரங்கொள்ளும்போது விவாகம் பண்ண மனதாகி, முதலில் கொண்டிருந்த விசுவாசத்தை விடுவதினாலே ஆக்கினைக்குட் படுவார்கள் (1தீமோ 5:11-12)

119 சிலர் சாத்தானைப் பின்பற்றி விலகிப்போனார்கள் (1தீமோ 5:15)

120 பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் இதை இச்சித்து விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக் கொண்டிருக்கிறார்கள் (1தீமோ 6:10)

121 விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்தியஜீவனைப் பற்றிக்கொள் (1தீமோ 6:12,19)

யூதா - தொகுப்புரை

1 அதிகாரம்

122 சிலர் அதைப் பாராட்டி விசுவாசத்தை விட்டு வழுவிப்போனார்கள். (1தீமோ 6:21)

123. நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம். 2தீமோ 2:11)

124.நாம் அவரை மறுதலித்தால், அவரும் நம்மை மறுதலிப்பார் (2தீமோ 2:12)

125. அவர்கள் சத்தியத்தை விட்டு விலகி, உயிர்த்தெழுதல் நடந்தாயிற்றென்று [illegible], சிலருடைய விசுவாசத்தைக் கவிழ்த்துப் போடுகிறார்கள் (2தீமோ 2:18

126. நீ கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் நிலைத்திரு. (2தீமோ 3:14-15

127 நாம் கேட்ட சத்தியங்களை விட்டு விலகாதபடிக்கு அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய் கவனிக்க வேண்டும் எபி 2:1

128 இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்குத் தப்பித்துக் கொள்ள முடியாது. எபி 2:4

129 கிறிஸ்துவினுடைய வீடாக இருக்கும் நாம் நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும், மேன்மை பாராட்டுதலையும் முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருக்க வேண்டும் எபி 3:6

130 சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள் எபி 3:12

131 உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள் (எபி 3:13)

132 நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருப்போமாகில், கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர் களாயிருப்போம் (எபி 3:14)

133. அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப் போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம (எபி 4:1-2)

134. அந்தத் திருஷ்டாந்தத்தின்படி ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்துபோகாதபடிக்கு, நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக் கடவோம் (எபி 4:11)

135. நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக் கடவோம். (எபி 4:14

136. மறுதலித்துப் போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப் படுத்துகிறபடியால் மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம். (எபி 6:4-9)

137 நீங்கள் அசதியாயிராமல், வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களைப் பின்பற்று கிறவர்களாயிருங்கள் (எபி 6:1)

138 உங்களுக்கு நம்பிக்கையின் பூரண நிச்சயமுண்டாகும்படி நீங்கள் யாவரும் முடிவுபரியந்தம் அப்படியே ஜாக்கிரதையைக் காண்பிக்கவேண்டும். (எபி 6:12)

1 அதிகாரம்

139 நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ள வேண்டும். (எபி 6:18-19)

140 நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில அசைவு இல்லாமல உறுதியாயிருக்கக் கடவோம். (எபி 10:23)

141 நாம் வேண்டுமென்றே பாவம் செய்தால் தேவனுடைய நியாயத்தீர்ப்பும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையும் நமக்கு நிச்சயமாய் வரும். (எபி 10:26-31)

142 மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள் எபி 10 35

143. விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான, பின்வாங்கிப் போவானானால அவன மேல தேவனுடைய ஆத்துமா பிரியமாயிராது. (எபி 10.38-39)

144. பாரமான யாவற்றையும், நம்மைச சுற்றி நெருங்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட வேணடும். (எபி 12:1)

145 முடமாயிருக்கிறது பிசகிப்போகாமல சொஸ்தமாகும்படிக்கு. உஙகள பாதங்களுக்கு வழிகளைச் செவவைபபடுத்துஙகள (எபி 12:13)

146. ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்துபோகாதபடிக்கும் யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பிக் கலக்கமுண்டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்படாத படிக்கும், ஒருவனும் வேசிக்கள்ளனாகவும். சிர கெட்டவனாகவும் இராதபடிக்கும் எச்சரிக்கையாயிருஙகள. (எபி 12:15-17)

147 பேசுகிறவருக்கு நீங்கள் செவி கொடுக்கமாட்டோமென்று விலகாதபடி எச்சரிக்கையாயிருங்கள், ஏனெனில், பூமியிலே பேசினவருக்குச் செவிகொடுக்க மாட்டோமென்று விலகினவர்கள் தப்பிப போகாமலி ருக்க, பரலோகத்திலிருந்து பேசுகிறவரை நாம் விட்டுவிலகினால் எப்படித் தப்பிப்போவோம்? (எபி 12:25)

148 அசைவில்லாத ராஜ்யத்தைப பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய ஆராதனை செய்யும்படி கிருபையைப பற்றிக்கொள்ளக் கடவோம். நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினி யாயிருக்கிறாரே (எபி 12.28-29

யாக்கோபு கூறிய பிரமாணங்களும், எச்சரிப்புக்களும்

149 அவனவன் தனதன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு. சிக்குண்டு. சோதிக்கப்படுகிறான பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து பாவததைப் பிறப்பிக்கும். பாவம் பூரணமாகும்போது மரணத்தைப பிறப்பிக்கும். (யாக் 1:13-15)

150 ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறது போல கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது. (யாக் 2:26

151 ஒருவன நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால, அது அவனுக்குப பாவமாயிருக்கும். (யாக் 4:17)

152 சகோதரரே, உஙகளில் ஒருவன சத்தியத்தைவிட்டு விலகி மோசம போகும்போது மற்றொருவன் அவனைத் திருப்பினால், தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன் (யாக் 5:19-20

யூதா - தொகுப்புரை

1 அதிகாரம்

பேதுரு கூறிய பிரமாணங்களும், எச்சரிப்புகளும்

153 எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் (அப் 10:35)

154 தீமை செய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது. (1பேதுரு 3:12)

155 நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்? (1பேதுரு 4:18)

156 இவைகளில்லாதவன் எவனோ அவன் முன்செய்த பாவங்களறத் தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண் சொருகிப்போன குருடனாயிருக்கிறான் (2பேதுரு 1:9)

157 உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள் இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை (2பேதுரு 1:10)

158 பாவஞ்செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல் [illegible] சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்தார் (2பேதுரு 2:4-9)

159 அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார் (2பேதுரு 2:9)

160 செம்மையான வழியைவிட்டுத் தப்பி நடந்து, பேயோரின் குமாரனாகிய பிலேயாமின் வழியைப் பின்பற்றிப் போனவர்கள் (2பேதுரு 2:15)

161 வஞ்சகமாய் நடக்கிறவர்களிடத்திலிருந்து அரிதாய்த் தப்பினவர்களிடத்தில் இவர்கள் அகந்தையான வீண்வார்த்தைகளைப் பேசி, மாம்ச இச்சைகளினாலும் காமவிகாரங்களினாலும் அவர்களைத் தந்திரமாய்ப் பிடிக்கிறார்கள் (2பேதுரு 2:18)

162 எதினால் ஒருவன் ஜெயிக்கப்பட்டிருக்கிறானோ அதற்கு அவன் அடிமைப்பட்டிருக்கிறானே (2பேதுரு 2:19)

163 கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக்கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும். அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்த பின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப் பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும் (2பேதுரு 2:20-22)

164 நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள் (2பேதுரு 3:14)

165. அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே நீங்கள் இழுப்புண்டு உங்கள் உறுதியிலிருந்து விலகி விழுந்துபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள் (2பேதுரு 3:17,18)

யோவான் கூறிய பிரமாணங்களும், எச்சரிப்புகளும்

166. நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய்சொல்லுகிறவர்களாயிருப்போம். (1யோவான் 1:6)

யூதா - தொகுப்புரை

1 அதிகாரம்

167 அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும் (1யோவான் 1:7)

168 அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதினால அறிவோம். (1யோவான் 2:3)

169 அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன பொய்யனாயிருக்கிறான அவனுக்குள சத்தியமில்லை (1யோவான் 2:4)

170 அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில தேவ அன்பு பூரணப்பட்டிருக்கும் நாம அவருக்குள இருக்கிறோமென்பதை அதினாலே அறிந்திருக்கிறோம (1யோவான 2:5)

171 ஒளியிலே இருக்கிறேன என்று சொல்லியும் தன சகோதரனைப் பகைக்கிறவன இதுவரைக்கும் இருளிலே இருக்கிறான (1யோவான 2:9)

172 ஒருவன உலகத்தில அன்புகூர்ந்தால அவனிடத்தில் பிதாவின அன்பில்லை (1யோவான் 2:15 17)

173 தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான (1யோவான 2:17)

174. நீங்கள் கேள்விப்பட்டது உங்களில நிலைத்திருந்தால். நீங்களும் குமாரனிலும் பிதாவிலும் நிலைத்திருப்பீர்கள நித்திய ஜீவனை அளிப்பேன என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம். (1யோவான் 2:24-25)

175 அவர் வெளிப்படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப் போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும் படிக்கு அவரில நிலைத்திருங்கள் (1யோவான் 2:28)

176. நீதியைச் செய்கிறவனெவனும் அவரில் பிறந்தவனென்று அறிந்திருக்கிறீர்கள்.(1யோவான் 2:29

177 அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும் அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான் (1யோவான் 3:3

178 பாவஞ்செய்கிற எவனும் நியாயப் பிரமாணத்தை மீறுகிறான் நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம். (1யோவான் 3:4; எசே 18:4. கலா 5.21)

179 அவரில நிலைத்திருக்கிற எவனும் பாவஞ்செய்கிறதில்லை பாவஞ்செய்கிற எவனும் அவரைக் காணவுமில்லை அவரை அறியவுமில்லை (1யோவான் 3:6

180 பாவஞ் செய்கிறவன பிசாசினாலுண்டாயிருக்கிறான (1யோவான 3:8

181 தேவனால பிறந்த எவனும் பாவஞ்செய்யான (1யோவான் 3:9

182 நீதியைச் செய்யாமல் இருக்கிற எவனும் தேவனால் உண்டானவனல்ல (1யோவான 3:10)

183 தன் சகோதரனில அன்புகூராமல் இருக்கிற எவனும் தேவனால் உண்டானவனல்ல(1யோவான் 3:10,15

184 சகோதரனிடத்தில அன்புகூராதவன் மரணத்திலே நிலை கொண்டிருக்கிறான (1யோவான் 3:14

185 தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான் மனுஷ கொலைபாதகனெவனோ அவனுக்குள் நித்தியஜீவன் நிலைத்திராது (1யோவான் 3:15)

யூதா - தொகுப்புரை

1 அதிகாரம்

186 ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால், அவனுக்குள் தேவஅன்பு நிலைகொள்ளுகிறதெப்படி? (1யோவான் 3:17)

187 அன்பில்லாதவன் தேவனை அறியான் (1யோவான் 4:7-8)

188 தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும். (1யோவான் 5:1-5)

189 மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைத் தன் சகோதரன் செய்யக் ஒருவன் கண்டால், அவன் வேண்டுதல் செய்யக்கடவன்; அப்பொழுது அவனுக்கு ஜீவனைக் கொடுப்பார் (1யோவான் 5:16) தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவான் (யாக் 5:19-20; எசே 18:4; கலா 5:21)

190 கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன் (2யோவான் 1:9)

191 நன்மைசெய்கிறவன் தேவனால் உண்டாயிருக்கிறான்; தீமை செய்கிறவன் தேவனைக் காணவில்லை (3யோவான் 1:11)

யூதா கூறிய பிரமாணங்களும், எச்சரிப்புக்களும்

192 நமது தேவனுடைய கிருபையைக் காமவிகாரத்துக்கேதுவாகப் புரட்டி ஒன்றான ஆண்டவராகிய தேவனையும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும் மறுதலிக்கிற பக்தியற்றவர்களாகிய சிலர் பக்கவழியாய் நுழைந்திருக்கிறார்கள் (யூதா 1:4)

193 கர்த்தர் தமது ஜனத்தை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணி இரட்சித்து பின்பு விசுவாசியாதவர்களை அழித்தார் (யூதா 1:5; 1கொரி 10)

194 தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக் கொள்ளாமல் தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும் மகாநாளின் நியாயத் தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார் (யூதா 1:6-7)

195 தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொள்ளுங்கள் (யூதா 1:21)

196 நித்தியஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக்காத்திருங்கள் (யூதா 1:21)

கிறிஸ்துவும், யோவானும் கூறிய பிரமாணங்களும், எச்சரிப்புக்களும்

197 நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு. ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக (வெளி 2:4-5)

198 நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன் (வெளி 2:10)

199 நீ மனந்திரும்பு, இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, என் வாயின் பட்டயத்தால் அவர்களோடே யுத்தம்பண்ணுவேன் (வெளி 2:16)

200 தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சிலர்பேர் பாத்திரவான்களானபடியால் வெண் வஸ்திரந்தரித்து என்னோடேகூட நடப்பார்கள். ஜெயங் கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும் (வெளி 3:4-5)

யூதா - தொகுப்புரை

1 அதிகாரம்

201 ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல் என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன் (வெளி 3:5, வெளி 22:18-19, யாத் 32:32-33, சங் 69:25-29)

202 சீக்கிரமாய் வருகிறேன்; ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக் கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு. (வெளி 3:11)

203 நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப்போடுவேன் (வெளி 3:15-16)

204 தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக் கொண்டு தன் வஸ்திரங்களைக் காத்துக் கொள்ளுகிறவனே பாக்கியவான் (வெளி 16:15)

205 பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் (வெளி 21:8)

206 தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் பரிசுத்த நகரத்தில் பிரவேசிப்பதில்லை (வெளி 21:27, வெளி 22:15,19)

207 அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ் செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும் (வெளி 22:11)

208 ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளைத் தேவன் அவன்மேல் கூட்டுவார் (வெளி 22:18)

209 ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுஸ்தகத்திலிருந்தும் பரிசுத்த நகரத்திலிருந்தும் அவனுடைய பங்கைத் தேவன் எடுத்துப்போடுவார் (வெளி 22:19)

210 இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும் அவனுடைய பங்கைத் தேவன் எடுத்துப்போடுவார் (வெளி 22:19)

நிச்சயத்தைப் பற்றிக் கூறும் வேதவசனங்கள்

1 என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல் மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் (யோவான் 3:15-16,36, யோவான் 5:24)

2 நான் அவைகளுக்கு நித்தியஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை; ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை (யோவான் 10:27-29)

3 மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன் (ரோமர் 8:35-39)

யூதா - தொகுப்புரை

1 அதிகாரம்

4 நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே (ரோமர் 5:8-9)

5 கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை (ரோமர் 8:1)

6 அவன் நின்றாலும் விழுந்தாலும்.....தேவன் அவனை நிலைநிறுத்த வல்லவராயிருக்கிறாரே (ரோமர் 14:4)

7 நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே நீங்கள் குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருக்கும்படி முடிவுபரியந்தம் அவர் உங்களை ஸ்திரப்படுத்துவார். தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர் (1கொரி 1:8-9)

8 தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் தெரிந்துகொண்டார் (எபே 1:4)

9 வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள் (எபே 1:13)

10 நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று தேவனுடைய பரிசுத்த ஆவியை முத்திரையாகப் பெற்றுக்கொண்டீர்கள் (எபே 4:30)

11 உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவார் (பிலி 1:6)

12 நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள்வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறார் (2தீமோ 1:12)

13 இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது (1பேதுரு 1:5)

14 நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார் (1யோவான் 2:1-2)

15 பிரியமானவர்களே இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் (1யோவான் 3:2)

16 வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவர் (யூதா 1:24)

தேவனுக்குக் கீழ்ப்படியும்போது நம்முடைய ஆத்துமாவிற்கு நித்திய பாதுகாப்பு உண்டாகிறது. (யோவான் 6:27, யோவான் 10:27-29, யோவான் 15:1-6, 1கொரி 9:27, எபி 6:4-9, எபி 10:26-29, 2பேதுரு 2:20-22) ஆகையினால் தனக்கு நித்திய பாதுகாப்பு உண்டாக வேண்டுமென்று ஒரு விசுவாசி விரும்பும்போது அவர் தேவனுடைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஜீவிக்க முன்வர வேண்டும். பாவம் செய்தே ஆகவேண்டுமென்று மனுஷருக்கு எந்தவிதமான நிர்பந்தமும் இல்லை. தேவனோடு ஒத்துழைத்து ஜீவித்தால் பாவம் செய்யாமல் தேவனுக்குப் பிரியமாக ஜீவிக்க முடியும். விசுவாசத்தினாலும், தேவனுக்குக் கீழ்ப்படிவதினாலும் தேவனுடைய கிருபையினாலும் நம்முடைய ஆத்துமாவிற்கு உத்தரவாதம் உண்டாகிறது.

காத்துக்கொள் (kept) - τηρέω - teereoo 5083

விளைச்சொல் - கைக்கொள், காத்துக்கொள், காவல் காத்திரு, வைத்திரு, ஜாக்கிரதையாயிரு (preserved) (யூதா 1:1, யூதா 1:6-7

யூதா - தொகுப்புரை

1 அதிகாரம்

"தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்கள்" - இந்தத் தூதர்கள் தங்களுடைய ஆதி மேன்மையைக் காத்துக் கொள்ளவில்லை. தங்களுடைய வாசஸ்தலத்தையும் இவர்கள் விட்டுவிட்டு, பூமிக்கு வந்து மனுஷருடைய குமாரத்திகளைத் திருமணம் செய்தார்கள். ஸ்திரீயின் வித்தில் தூதருடைய வித்து கலந்துவிட்டது. (ஆதி 6:1-4, 2பேதுரு 2:4) சோதோம், கொமோரா ஆகிய ஊரின் ஜனங்களைப் போல தேவதூதர்களும் விபச்சாரம்பண்ணி நித்திய அக்கினியின் ஆக்கினையை அடைந்தார்கள்.

வாசஸ்தலம் (habitation) - οἰκητήριον - oikeeteerion - 3613

பால வேறுபாடற்ற பெயர்சொல்

வாசஸ்தலம் (dwelling) - மற்ற வசனங்களில் உயிர்த்தெழுந்த சரீரம் வாசம்பண்ணும் ஸ்தலத்தைக் குறிக்கும் (2கொரி 5:2). தேவதூதர்கள் தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டு விட்டு மனுஷருடைய வாசஸ்தலத்திற்கு வந்து மனுஷரோடு பாவம் செய்தார்கள் (யூதா 1:7, ஆதி 6:1-4, 2பேதுரு 2:4)

"மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி அந்தகாரத்தில் அடைத்துவைத்திருக்கிறார்" தூதர்கள் விபச்சாரம்பண்ணியதினால் அவர்கள் இப்பொழுது நித்திய சங்கிலிகளினால் கட்டப்பட்டு, அந்தகாரத்தில் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். மகா நாளின் நியாயத்தீர்ப்பைத் தூதர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் (2பேதுரு 2:4, வெளி 20:11-15)

"அப்படியே" (in like manner) - இந்தத் தூதர்களைப் போல என்று பொருள். இந்தத் தூதர்களைப் போல சோதோம், கொமோரா பட்டணத்தாரும் விபச்சாரம் பண்ணினார்கள். அந்நிய மாம்சத்தைத் தொடர்ந்தார்கள். நித்திய ஆக்கினைக்குத் திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள் (யூதா 1:6-7, ஆதியாகமம் 19 ஆம் அதிகாரத்தில் சோதோம், கொமோரா பட்டணத்தாரின் பாவம் கூறப்பட்டிருக்கிறது. ஆண் புணர்ச்சிக்காரர்களாக இருந்தார்கள். இயற்கையின் சுபாவத்திற்கு விரோதமாகக் கிரியை செய்து தூதர்களும் பாவம் செய்தார்கள். பூமியிலுள்ள மனுஷருடைய குமாரத்திகளைத் திருமணம் செய்து இராட்சத சந்ததியை உண்டுபண்ணினார்கள் (ஆதி 6:1-4) மனுஷரும் தூதர்களும் தேவன் தங்களுக்கு நியமித்து வைத்திருந்த இயல்பான சுபாவங்களை விட்டுவிட்டு தேவனுடைய பிரமாணத்திற்கு மீறி ஜீவித்தார்கள்.

"விபசாரம்" (fornication) - இந்த வாக்கியத்தில் விபசாரம் என்பது ஆண்புணர்ச்சியை (homosexuality) குறிக்கும் (மத் 5:32)

அந்நிய (strange) - ἕτερος - heteros - 2087

பெயரடை - மற்ற, வேறொரு, வேறு மற்ற சில வெவ்வேறு பிறவினத்தியாசமான (another of a different kind) - மனுஷர் மனுஷரோடு விபசாரம் பண்ணுவது, தூதர் மனுஷ ஸ்திரீகளோடு விபசாரம்பண்ணுவது ஆகிய சுபாவத்திற்குப் புறம்பான காரியங்கள், ஸ்திரீகள் ஸ்திரீகளோடு விபசாரம் பண்ணுவதைப் பற்றிய குறிப்பு ரோமர் 1:24-32 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

"நித்திய அக்கினியின் ஆக்கினையை அடைந்து திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள்" சுபாவத்திற்கு விரோதமாக விபசாரம்பண்ணுகிறவர்களுக்கு நித்திய அக்கினியின் ஆக்கினை உண்டு என்பதற்கு இவர்கள் திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள் (ஏசா 66:24, மத் 25:46; மாற்கு 9:43-49, வெளி 14:9-11 வெளி 20:10-15)

1 அதிகாரம்

IV. பின்மாற்றிப்போனவர்களின் விபசாரமும் பாவங்களும் - 2பேதுரு 2:10-22

யூதா 1:8 அப்படிப்போலவே சொப்பனக்காரராகிய இவர்களும் மாம்சத்தை அசுசிப்படுத்திக்கொண்டு கர்த்தத்துவத்தை அசட்டைபண்ணி மகத்துவங்களைத் தூஷிக்கிறார்கள்

விபசாரக்காரரின் பாவங்கள்

1 மாம்சத்தை அசுசிப்படுத்திக் கொள்கிறார்கள் (யூதா 1:8; ரோமர் 1)

2 கர்த்தத்துவத்தையும் அவருடைய பிரமாணத்தையும் அசட்டை பண்ணுகிறார்கள் (யூதா 1:8)

3 கர்த்தரையும், ஆளுகை செய்கிறவர்களையும் அசட்டை பண்ணுகிறார்கள் (யூதா 1:8; 2பேதுரு 2)

4 தங்களுக்குத் தெரியாதவைகளைத் தூஷிக்கிறார்கள் (யூதா 1:10)

5 தங்களைக் கெடுத்துக் கொள்கிறார்கள் (யூதா 1:10; ரோமர் 1)

6 வஞ்சகத்திலே விரைந்தோடி பாவத்திற்குள்ளாகி கெட்டுப் போனார்கள் (யூதா 1:11; ஆதி 4)

7 கூலிக்காக வஞ்சகம் பண்ணுகிறார்கள் (யூதா 1:11; 2பேதுரு 2:15; எண் 31:8,16)

8 கோராவைப்போல எதிர்த்துப் பேசினார்கள் (யூதா 1:11; எண் 16)

9 மாயமாலமான சுபாவத்தைக் கொண்டிருக்கிறார்கள் (யூதா 1:12)

10 அவபக்தியான கிரியைகளைச் செய்கிறார்கள் (யூதா 1:14; ரோமர் 1)

11 தேவனுக்கு விரோதமாகக் கடின வார்த்தைகளைப் பேசுகிறார்கள் (யூதா 1:15)

12 முறுமுறுக்கிறவர்களும் முறையிடுகிறவர்களுமாக இருக்கிறார்கள் (யூதா 1:16)

13 தங்களுடைய இச்சைகளின்படி நடக்கிறார்கள் (யூதா 1:4,16,18)

14 இறுமாப்பானவைகளைப் பேசி, தற்பொழிவிற்காக முகஸ்துதி செய்கிறார்கள் (யூதா 1:16)

15 சத்தியத்தைப் பரியாசம் பண்ணுகிறார்கள் (யூதா 1:18; 2பேதுரு 3:3)

16 ஜென்மசுபாவத்தாராய் இருக்கிறார்கள் (யூதா 1:19)

V. மிகாவேலின் தாழ்மை

யூதா 1:9 பிரதான தூதனாகிய மிகாவேல் மோசேயினுடைய சரீரத்தைக்குறித்துப் பிசாசுடனே தர்க்கித்துப் பேசினபோது, அவனைத் தூஷணமாய்க் குற்றப்படுத்தத் துணியாமல்: கர்த்தர் உன்னைக் கடிந்து கொள்வாராக என்று சொன்னான்

"பிரதான தூதனாகிய மிகாவேல்" (Michael the archangel) - மிகாவேல் (தானி 10:13,21; தானி 12:1; வெளி 12:1; வெளி 12:7) மிகாவேலைத் தவிர வேறு எந்தத் தூதருக்கும் பிரதான தூதன் என்னும் பெயர் வழங்கப்படவில்லை. ஆயினும் மிகாவேலைப் போலவே மேலும் பல பிரதான தூதர்கள் இருந்ததாக வேதவசனம் கூறுகிறது (தானி 10:13)

"மோசேயினுடைய சரீரத்தைக்குறித்துப் பிசாசுடனே தர்க்கித்துப் பேசினபோது" - இந்தக் காரியம் மோசே மரித்த பின்பு நடைபெற்றது. கல்வாரி சிலுவையில் இயேசு கிறிஸ்து மரணத்தை ஜெயிக்கும் வரையிலும் பிசாசிற்கு மரணத்தின்மீது அதிகாரம் இருந்தது (கொலோ 2:14-17; எபி 2:14-15; வெளி 1:18) பிசாசானவன் மோசேயைத் தனக்கு வேண்டுமென்று கேட்டான் ஆனால் தேவனோ அங்கு இடைபட்டு, மோசேயின் சரீரத்தை எடுத்து மோவாபின் தேசத்தில் அடக்கம் பண்ணினார் (உபா 34:5-6) இயேசு கிறிஸ்துவே உயிர்த்தெழுதலின் முதலாவது கனியாக இருப்பவர் (1கொரி 15:20-23) அதாவது இயேசு கிறிஸ்துவே முதலாவது உயிர்த்தெழுந்தார். மோசே உயிர்த்தெழ வேண்டுமானால் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பே உயிர்த்தெழ வேண்டும். கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு மோசே தன்னுடைய கல்லறையிலிருந்து வெளிவந்தாரா என்று வேதவசனம் தெளிவுபடுத்தவில்லை. (மத் 27:52-53) ஆயினும் மோசே மத் 17:1-8 ஆகிய வசனங்களில் தன்னுடைய ஆவியில் இருந்தார் என்று வேதபண்டிதர்கள் கூறுகிறார்கள்

1 அதிகாரம்

"அவனைத் தூஷணமாய்க் குற்றப்படுத்தத் துணியாமல்: கர்த்தர் உன்னைக் கடிந்து கொள்வாராக என்று சொன்னான்" - பரிசுத்தவான்களுக்கு இந்த வாக்கியம் ஓர் எடுத்துக்காட்டாக இருக்கிறது. விசுவாசிகள் எல்லாக் காரியங்களுக்கும் சாத்தானையே குற்றப்படுத்தி அவன்மீது எல்லாப் பழிகளையும் போட்டுவிடுகிறார்கள். தாங்கள் செய்யும் தவறுகளுக்கும் சாத்தானையே பொறுப்பாளனாக்குகிறார்கள்.

VI. பின்மாறிப்போனவர்களின் சுபாவங்கள் - (2பேதுரு 2:10-22)

யூதா 1:10 இவர்கள் தங்களுக்குத் தெரியாதவைகளைத் தூஷிக்கிறார்கள்; புத்தியில்லாத மிருகங்களைப் போல சுபாவப்படி தங்களுக்குத் தெரிந்திருக்கிறவைகளாலே தங்களைக் கெடுத்துக் கொள்ளுகிறார்கள்.

யூதா 1:11 இவர்களுக்கு ஐயோ! இவர்கள் காயீனுடைய வழியிலே நடந்து, பிலேயாம் கூலிக்காகச் செய்த வஞ்சகத்திலே விரைந்தோடி, கோரா எதிர்த்துப்பேசின பாவத்திற்குள்ளாகி, கெட்டுப்போனார்கள்.

யூதா 1:12 இவர்கள் உங்கள் அன்பின் விருந்துகளில் கறைகளாயிருந்து, பயமின்றிக்கூட விருந்துண்டு, தங்களைத் தாங்களே மேய்த்துக் கொள்ளுகிறார்கள்; இவர்கள் காற்றுகளால் அடியுண்டோடுகிற தண்ணீரற்ற மேகங்களும், இலையுதிர்ந்து கனியற்று இரண்டுதரஞ் செத்து வேரற்றுப்போன மரங்களும்,

யூதா 1:13 தங்கள் அவமானங்களை நுரைதள்ளுகிற அமளியான கடலலைகளும், மார்க்கந்தப்பி அலைகிற நட்சத்திரங்களுமாயிருக்கிறார்கள்; இவர்களுக்காக என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிறது.

"புத்தியில்லாத மிருகங்கள்" (brute beasts) - இவை பண்பற்றவை. தங்களுடைய இனத்தின் சுபாவப்படி நடந்துகொள்ளும். இவற்றிடம் மிருககுணம் மட்டுமே காணப்படும்.

"கோரா" (Core, Korah) - (எண் 16)

"அன்பின் விருந்துகள்" (feasts of charity) - நான்காம் நூற்றாண்டு வரையிலும் கிறிஸ்தவ விசுவாசிகள் அன்பின் விருந்துகளை ஆசரித்து வந்தார்கள். அதன்பின்பு, சபைகளில் இவற்றை நடத்தக்கூடாது என்று தடைபண்ணப்பட்டது (1கொரி 11:20)

சொப்பனக்காரர்களுக்குக் கூறப்பட்டிருக்கும் உவமைகள்

1. கறை
2. காற்றுகளால் அடியுண்டோடுகிற தண்ணீரற்ற மேகங்கள் (உபா 32:2, 2பேதுரு 2:17)
3. இலையுதிர்ந்து கனியற்று இரண்டுதரஞ் செத்து வேரற்றுப்போன மரங்கள் (மத் 7:15)
4. தங்கள் அவமானங்களை நுரைதள்ளுகிற அமளியான கடலலைகள் (யூதா 1:13, ஏசா 57:20)
5. மார்க்கந்தப்பி அலைகிற நட்சத்திரங்கள் (யூதா 1:13, 2பேதுரு 2:14-17)

கறை (Spots) - σπιλάς - spilas - 4694

வேறுபாடான மொழிச்சொல் - கறை (hidden rocks) - தண்ணீரில் மூழ்கியிருக்கும் கற்பாறைகளைப் போன்றவர்கள். இவர்கள் விசுவாசம் என்னும் கப்பலைச் சேதப்படுத்தி விடுவார்கள் (1தீமோ 1:19)

"இரண்டுதரஞ் செத்துப் போனது" (twice dead) - இந்த வாக்கியம் மனமாற்றத்தையும் பாவத்தினாலும், மீறுதலினாலும் மறுபடியும் செத்துப்போனதையும் குறிக்கும் (லூக்கா 22:32; கலா 1:6-8; கலா 4:19 கலா 5:4; கலா 6:1; யாக் 5:19-20)

1 அதிகாரம்

"இவர்களுக்காக என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிறது" - சொப்பனக்காரருக்கு நித்திய நரகம் ஆயத்தப் படுத்தப்பட்டிருக்கிறது. (மத் 8:12; மத் 25:30,41,46)

VII. ஏனோக்கின் தீர்க்கதரிசனம்

யூதா 1:14 ஆதாமுக்கு ஏழாந்தலைமுறையான ஏனோக்கும் இவர்களைக் குறித்து: இதோ, எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்துவந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தும்,

யூதா 1:15 தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான்.

"ஆதாமுக்கு ஏழாந்தலைமுறை" (ஆதி 5:18-24; லூ 3:37)

தீர்க்கதரிசன எண் - 1

"இதோ, எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்துவந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தும், தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார்" (யூதா 1:14-15) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

இந்த வாக்கியம் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிக்கிறது. இயேசு கிறிஸ்து ஏற்கெனவே உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களோடு வருவார் (2தெச 2:7-8; சக 14:5; வெளி 19:4). பரலோகத்தின் தூதர்கள் இயேசு கிறிஸ்துவோடு பூமிக்கு வருவார்கள் (2தெச 1:7-10; மத் 16:27; மத் 24:29-31; மத் 25:31). யூதா இந்தத் தீர்க்கதரிசனத்தை எந்தப் புஸ்தகத்தின் மூலமாகக் கற்றுக் கொண்டார் என்று தெரியவில்லை. அவருடைய காலத்தில் ஏனோக்கின் புஸ்தகத்தை (the book of Enoch) ஜனங்கள் பயன்படுத்தினார்கள். ஆதித்திருச்சபை தலைவர்களான ஒரிகன் (Origen) தெர்த்துல்லியன் (Tertullian) ஆகியோர் இந்தப் புஸ்தகத்தின் பெயரைப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

"ஆயிரமாயிரம்" (ten thousands) - திரளான எண்ணிக்கையுடையவர்களைக் குறிக்கும் வாக்கியம் (தானி 7:10; வெளி 5:11)

VIII. பின்மாறிப்போனவர்கள் [illegible] பெருமைக்காரர்கள், இரக்கமற்றவர்கள் - (2பேதுரு 2)

யூதா 1:16 இவர்கள் முறுமுறுக்கிறவர்களும், முறையிடுகிறவர்களும், தங்கள் இச்சைகளின்படி நடக்கிறவர்களுமாயிருக்கிறார்கள்; இவர்களுடைய வாய் இறுமாப்பானவைகளைப் பேசும்; தற்பொழிவுக்காக முகஸ்துதி செய்வார்கள்.

IX. பேதுருவின் தீர்க்கதரிசனம்

யூதா 1:17 நீங்களோ, பிரியமானவர்களே, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலரால் முன் சொல்லப்பட்ட வார்த்தைகளை நினைவுகூருங்கள்.

யூதா 1:18 கடைசிக்காலத்திலே தங்கள் துன்மார்க்கமான இச்சைகளின்படி நடக்கிற பரியாசக்காரர் தோன்றுவார்கள் என்று உங்களுக்குச் சொன்னார்களே.

1 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 2

"கடைசிக்காலத்திலே தங்கள் துன்மார்க்கமான இச்சைகளின்படி நடக்கிற பரியாசக்காரர் தோன்றுவார்கள்" (யூதா 1:18) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. (2பேதுரு 3:3)

"தங்கள் துன்மார்க்கமான இச்சைகளின்படி நடக்கிறவர்கள்" - ஐசுவரியவான்களிடத்தில் பணத்திற்காகவும் சலுகைகளுக்காகவும் பக்தியுள்ளவர்களைபோல நடிப்பார்கள். இவர்கள் முறு முறுக்கிறவர்களும், முறையிடுகிறவர்களும் தங்கள் இச்சைகளின்படி நடக்கிறவர்களுமாயிருக்கிறார்கள் (யூதா 1:16,18)

X. பின்மாறிப் போனவர்கள் தேவபக்தியற்றவர்கள்

யூதா 1:19 இவர்கள் பிரிந்துபோகிறவர்களும், ஜென்மசுபாவத்தாரும் ஆவியில்லாதவர்களுமாமே.

"இவர்கள்" - இப்படிப்பட்ட பரியாசக்காரர்கள் உண்மையான சபையிலிருந்து பிரிந்து போகிறவர்களும் ஜென்மசுபாவத்தாரும், ஆவியில்லாதவர்களுமாமே. மெய்யான திருச்சபையில் பரிசுத்த ஜீவியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். ஆனால் இவர்களோ மாயமாலக்காரர்கள். பக்தியின் வேஷம் தரிக்கிறவர்கள். இவர்களால் மெய்யான திருச்சபையில் நிலைத்திருக்க முடியாது.

XI. கிறிஸ்துவிற்குள் நமது பாதுகாப்பை உறுதிபண்ணும் ஏழு கிறிஸ்தவ நடத்தைகள்

யூதா 1:20 நீங்களோ பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின் மேல் உங்களை உறுதிப்படுத்திக்கொண்டு, பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணி

யூதா 1:21 தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு, நித்தியஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக்காத்திருங்கள்.

யூதா 1:22 அல்லாமலும், நீங்கள் பகுத்தறிவுள்ளவர்களாயிருந்து, சிலருக்கு இரக்கம் பாராட்டி, சிலரை அக்கினியிலிருந்து இழுத்துவிட்டு, பயத்தோடே இரட்சித்து,

யூதா 1:23 மாம்சத்தால் கறைப்பட்டிருக்கிற வஸ்திரத்தையும் வெறுத்துத் தள்ளுங்கள்.

யூதா 1:24 வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும்,

யூதா 1:25 தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாகிய நம்முடைய இரட்சகரான தேவனுக்குக் கனமும் மகத்துவமும் வல்லமையும் அதிகாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக. ஆமென்.

யூதா விசுவாசிகளுக்குக் கூறியிருக்கும் கட்டளைகள்

1. உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் (யூதா 1:20, 1தீமோ 1:4)
2. பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணுங்கள் (யூதா 1:20, எபே 6:18, ரோமர் 8:26)
3. தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொள்ளுங்கள் (யூதா 1:21, 2தீமோ 1:14, ரோமர் 8:35-39)
4. நித்தியஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக்காத்திருங்கள் (யூதா 1:21; எபி 12:15)
5. இரக்கம் பாராட்டுங்கள் (யூதா 1:22

யூதா - தொகுப்புரை

1 அதிகாரம்

6 அக்கினியிலிருந்து இழுத்துவிட்டு பயத்தோடே இரட்சியுங்கள் (யூதா 1:22)

7 மாம்சத்தால் கறைபட்டிருக்கிற வஸ்திரத்தை வெறுத்துத் தள்ளுங்கள் (யூதா 1:23; யாக 1:27; எபே 5:27)

தேவன் செய்யக்கூடிய காரியங்கள்

1 வழுவாதபடி உங்களைக் காக்கக் கூடியவர் (1கொரி 10:13)

2 தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்த வல்லமையுள்ளவர் (எபே 5:27; எபி 7:25)

"மிகுந்த மகிழ்ச்சியோடே" - இது நம்முடைய நித்திய வெகுமதியாகும்

"இப்பொழுதும் எப்பொழுதும்" - நம்முடைய இரட்சகரான தேவனுக்குக் கனமும் மகத்துவமும் வல்லமையும் அதிகாரமும் சதா காலங்களிலும் உண்டாவதாக.

வெளிப்படுத்தின விசேஷம் - முன்னுரை

காலமும் இடமும்

கிபி 96 ஆம் ஆண்டில் பத்மு தீவிலிருந்து இந்த நிருபம் எழுதப்பட்டது. (வெளி 1:9)

ஆசிரியர்

அப்போஸ்தலர் யோவான் (வெளி 1:1)

மையக்கருத்து

இயேசு கிறிஸ்துவின் வெளிப்பாடு சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும் பொருட்டு, தேவன் இயேசு கிறிஸ்துவிற்கு ஒப்புவித்ததை அவர் வெளிப்படுத்திக் காண்பித்தார் (வெளி 1:1) "சம்பவிக்க வேண்டியவைகள்" என்பது யோவானுடைய நாளிலிருந்து புதிய வானம், புதிய பூமி உண்டாகும் நிகழ்ச்சி வரையிலும் சம்பவிக்கும் காரியங்களாகும்.

இந்த நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றாக தொடர்ந்து நடைபெறும் இந்த முக்கிய நிகழ்ச்சிகளுக்கு இடையில் வேறுசில இணை நிகழ்ச்சிகளும் கோர்க்கப்பட்டுள்ளன. இவை முக்கிய நிகழ்ச்சிகளோடு நடைபெறும் துணை நிகழ்ச்சிகளாகும்.

வெளிப்படுத்தின விசேஷத்தை மூன்று முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கலாம். (வெளி 1:19) ஒவ்வொரு பிரிவிலும் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு.

1. "நீ கண்டவைகள்" "The things which thou hast seen," ஏழு பொன்குத்துவிளக்குகளின் மத்தியிலே காணப்பட்ட இயேசு கிறிஸ்துவின் தரிசனம். (வெளி 1:12-20) இந்தத் தரிசனமும் இந்தப் புஸ்தகத்தின் முன்னுரையும் சேர்ந்து முதலாவது பிரிவாகும்.

2. "இருக்கிறவைகள்" "The things which are" ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கும் எழுதப்பட்டிருக்கும் ஏழு நிருபங்கள் இந்தப் புஸ்தகம் முழுவதும் அவர்களுக்கு எழுதப்பட்டிருக்கிறது. (வெளி 2:1-3:22) இந்தச் சபைகளுக்குக் கூறப்பட்டிருக்கும் செய்திகள் சபைக் காலத்திலுள்ள எல்லாச் சபைகளுக்கும் பொருந்தும். சபை எடுத்துக் கொள்ளப்படும் காலம் வரையிலும் இந்தச் செய்திகளை எல்லாச் சபைகளுக்கும் கூறலாம். வருங்கால உபத்திரவக் காலம் அந்திக்கிறிஸ்துவின் வருகை ஆகியவற்றிற்கு முன்பு வரையிலும் ஏழு சபைகளுக்கும் கூறப்பட்டிருக்கும் செய்திகளை எல்லாச் சபைகளுக்கும் கூறலாம். இக்காலத்தின் கடைசி ஏழு வருஷங்களில் அந்திக்கிறிஸ்து பூமியில் இருப்பான் (தானி 9:27 2தெச 2:7-12; வெளி 6:1-19:21).

3. "இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவைகள்" "The things which shall be hereafter" சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு நடைபெறும் நிகழ்ச்சிகள் (வெளி 4:1-22:5) பரலோகத்தில் காணும் காட்சிகள் (வெளி 4-5) ஏழு முத்திரைகளும் அவற்றோடு தொடர்புடைய வாக்கியங்களும் (வெளி 14:1-19:21), ஆயிரம் வருஷ அரசாட்சி (வெளி 20), புதிய வானமும் புதிய பூமியும் (வெளி 21:1-22:5), முடிவில் நடைபெறப் போகும் நிகழ்ச்சிகள் (வெளி 22:6-21) ஆகியவை இந்தப் பிரிவில் அடங்கும்.

வெளி 4:1 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் காரியங்கள் சபை காலத்திற்குப்பின்பு நடைபெறும். அதாவது வெளி 4-22 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு நிறைவேறும். தற்பொழுது நடைபெறும் காரியங்களோ, அல்லது வரலாற்று நிகழ்ச்சிகளோ வெளி 4-22 ஆகிய அதிகாரங்களில் கூறப்படவில்லை.

வெளிப்படுத்தின விசேஷம் - முன்னுரை

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 22

வசனங்கள் - 404

கேள்விகள் - 9

புதிய தீர்க்கதரிசனங்கள் - 15

வரலாற்றைக் குறிக்கும் வசனங்கள் - 53

பொருளடக்கம்

1 தலைப்பும் ஆசிரியரும் (1:1)

2 யோவான் கண்டவைகளையும் சாட்சியாக அறிவித்திருக்கிறான் (1:2)

3 பாக்கியவான்கள் (1:3)

4 ஏழு சபைகளுக்கும் வாழ்த்துக்கள் (1:4-6)

5 வெளிப்படுத்தின விசேஷத்தின் மையக்கருத்து (1:7)

6 ஆதியும் அந்தமுமாக இருக்கிற இயேசு கிறிஸ்து (1:8)

7 தீர்க்கதரிசி - யோவான் (1:9-10)

8 யோவான் காண்கிறதை ஒரு புஸ்தகத்தில் எழுதவேண்டும் என்னும் கட்டளை (1:11)

I. கண்ட காரியங்கள்

1 கிறிஸ்துவின் தரிசனம்

(1) கிறிஸ்துவின் எட்டு குணங்கள் (1:12-16)

(2) தரிசனத்தினால் யோவான்மீது ஏற்பட்ட விளைவு (1:17-18)

(3) வியாக்கியானத்தின் திறவுகோல் (1:19)

(4) அடையாளங்களின் வியாக்கியானம் (1:20)

II. இருக்கிறவைகள் - சபை எடுத்துக் கொள்ளப்படும் வரையிலும் சபைகளைக் குறித்த காரியங்கள்

1 எபேசு சபைக்கு எழுதின நிருபம் (2:1-7)

2 சிமிர்னா சபைக்கு எழுதின நிருபம் (2:8-11)

3 பெர்கமு சபைக்கு எழுதின நிருபம் (2:12-17)

4 தியத்தீரா சபைக்கு எழுதின நிருபம் (2:18-29)

5 சர்தை சபைக்கு எழுதின நிருபம் (3:1-6)

6 பிலதெல்பியா சபைக்கு எழுதின நிருபம் (3:7-13)

7 லவோதிக்கேயா சபைக்கு எழுதின நிருபம் (3:14-22)

III. இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவைகள் - சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு

1 பரலோகத்தின் தேவாலயம் - எடுத்துக் கொள்ளப்பட்ட விசுவாசிகள் தேவனோடு இருக்கிறார்கள்

(1) பரலோகத்தில் திறக்கப்பட்டிருந்த ஒரு வாசல் (4:1)

(2) பரலோகத்தில் ஒரு சிங்காசனம் (4:2-3)

(3) இருபத்தினான்கு மூப்பர்கள் (4:4)

(4) ஏழு ஆவிகள் (4:5)

(5) கண்ணாடிக் கடல் (4:6-8)

(6) பரலோகத்தில் ஆராதனை (4:9-11)

(7) பரலோகத்தில் ஒரு புஸ்தகம் (5:1-4)

(8) பரலோகத்தின் ஆட்டுக்குட்டி (5:5-7)

வெளிப்படுத்ின விசேஷம் - முன்னுரை

9 ஜீவன்களும் மூப்பர்களும் ஆட்டுக்குட்டியான வரை ஆராதிக்கிறார்கள் (5:8-10)

10 தேவனையும் ஆட்டுக் குட்டியானவரையும் எல்லோரும் ஆராதிக்கிறார்கள் (5:11-14)

2 தானியேலின் எழுபதாவது வாரமும் உபத்திரவக்காலமும்

(1) முதலாம் முத்திரை - அந்திக்கிறிஸ்து புறப்பட்டான் (6:1-2)

(2) இரண்டாம் முத்திரை - அந்திக் கிறிஸ்து புறப்பட்டதினால் ஏற்பட்ட யுத்தம் (6:3-4)

(3) மூன்றாம் முத்திரை - முதலாவது முத்திரைகளினால் ஏற்பட்ட பஞ்சம் (6:5-6)

(4) நான்காம் முத்திரை - முதல் மூன்று முத்திரைகளினால் ஏற்பட்ட மரணமும் பாதாளமும் (6:7-8)

(5) ஐந்தாம் முத்திரை - தானியேலின் எழுபதாவது வாரத்தின் உபத்திரவ காலத்தில் இரத்தசாட்சியாக மரித்தவர்கள் (6:9-11)

(6) ஆறாம் முத்திரை - தேவனுடைய கோபாக்கினை ஆரம்பமாகிறது (6:12-17)

மீட்கப்பட்டவர்கள்

1 முத்திரை போடப்பட்டவர்கள் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேர் (7:1-8)

2 மகா உபத்திரவக்காலம் (7:9-17)

(7) ஏழாம் முத்திரை - பரலோகத்தில் அமைதல் உண்டாயிற்று (8:1-6)

(8) முதலாம் எக்காளம் - பரலோகத்திலிருந்து இரத்தம் கலந்த கல்மழையும் அக்கினியும் உண்டாகி பூமியிலே கொட்டப்பட்டது (8:7)

(9) இரண்டாம் எக்காளம் - பரலோகத்திலிருந்து அக்கினியால் எரிகிற பெரிய மலை போன்றதொன்று சமுத்திரத்திலே போடப்பட்டது (8:8-9)

(10) மூன்றாம் எக்காளம் - பெரிய நட்சத்திரம் தண்ணீரை எட்டியைப்போல கசப்பாக்கிற்று (8:10-11)

(11) நான்காம் எக்காளம் - கிரகங்களில் மூன்றில் ஒரு பங்கு இருளடைந்தது (8:12)

மனுக்குலத்தின் மீது மூன்று ஐயோக்கள் - (8:13)

(12) ஐந்தாம் எக்காளம் - பாதாளத்தின் திறவுகோல் கொடுக்கப்பட்டது

(அ) பாதாளக்குழியை திறந்தான் - புகை எழும்பிற்று (9:1-3)

(ஆ) தங்கள் நெற்றிகளில் தேவனுடைய முத்திரையைத் தரித்திராத மனுஷரை சேதப்படுத்த அவர்களுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது (9:4-6)

(இ) பிசாசுகளின் விளக்கம் (9:7-10)

(ஈ) பிசாசுகளின் இராஜா (9:7-10)

மேலும் இரண்டு ஐயோக்கள் (9:12)

(13) ஆறாம் எக்காளம்

(அ) கட்டப்பட்டிருக்கிற நான்கு தூதர்கள் அவிழ்த்து விடப்படுகிறார்கள் (9:13-15)

(ஆ) அவர்களுடைய தொகை - இருபது கோடி (9:16-19)

(இ) மனுஷரின் கடின இருதயம் (9:20-21)

வெளிப்படுத்தின விசேஷம் - முன்னுரை

1 பலமுள்ள தூதன்

- 1 அவனுடைய வர்ணனையும் அவன் கையிலிருந்த திறக்கப்பட்ட ஒரு சிறு புஸ்தகமும் (10:1-2)
- 2 அவனுடைய ஆர்ப்பரிப்பும் ஏழு இடிகளின் சத்தமும் (10:3-4)
- 3 அவனுடைய ஆணையும் ஏழாம் எக்காளமும் (10:5-7)
- 4 சிறு புஸ்தகம் புசிக்கப்பட்டதும் அதனால் ஏற்பட்ட விளைவுகளும் (10:8-10)
- 5 சிறிய புஸ்தகத்தில் உள்ள காரியங்கள் (10:11-12)

2 தேவனுடைய ஆலயத்தையும் எருசலேமையும் அந்திக்கிறிஸ்து கைப்பற்றுகிறான் (11:1-2)

3 இரண்டு சாட்சிகள்

- (1) அவர்களுடைய தீர்க்கதரிசனத்தின் காலம் (11:3)
- 2 அவர்களுடைய அடையாளம் (11:4)
- (3 அவர்களுடைய அதிகாரம் (11:5-6)
- (4 அவர்களுடைய மரணம் (11:7-8)
- (5 அவர்களுடைய மரணத்தின் நிமித்தம் உண்டாகும் சந்தோஷம் (11:9-10)
- 6 மரணத்தின்மீது அவர்களுடைய வெற்றி (11:11-12)

4 பூமி அதிர்ச்சி (11:13)

5 மூன்றாம் ஆபத்து சீக்கிரமாய் வருகிறது (11:14)

(7) ஏழாம் எக்காளம்

- (அ) வானத்தில் உண்டான கெம்பீர சத்தங்கள் (11:15)
- (ஆ) இருபத்தினான்கு மூப்பர்களின் அறிக்கை (11:16-18)
- (இ) பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது (11:19)
- (ஈ) சூரியனை அணிந்திருந்த ஒரு ஸ்திரீ (12:1)
- (உ) இஸ்ரவேலின் வேதனை (12:2)
- (ஊ) சிவப்பான பெரிய வலுசர்ப்பம் (12:3)
- (எ) பிள்ளையின் மீது வலுசர்ப்பத்தின் யுத்தம் (12:4)
- (ஏ) சகல ஜாதிகளையும் இருப்புக் கோலால் ஆளுகைசெய்யும் ஆண்பிள்ளை (12:5)
- (ஐ) ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள் (12:6)
- (ஒ) வானத்திலே யுத்தம் உண்டாயிற்று (12:7-9)
- (ஓ) மூன்றாவது ஐயோ (12:10-12)
- (ஔ) ஸ்திரீயின் துன்பம் (12:13-14)
- (ஃ) சாத்தானின் அழிவு (12:15-16)
- (க) வலுசர்ப்பம் ஸ்திரீயின் சந்ததியுடன் யுத்தம் பண்ணப்போயிற்று (12:17)
- (ங) சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பி வந்தது (13:1)
- (ச) மிருகத்தின் இராஜ்ஜியம் (13:2-3)
- (ஞ) மிருகத்தின் அதிகாரம் (13:4)
- (ட) பெருமையானவைகளையும் தூஷணங்களையும் பேசும் மிருகத்தின் வாய் - அதன் காலம் (13:5-6)
- (ண) பரிசுத்தவான்களோடே மிருகத்தின் யுத்தம் (13:7)
- (த) மிருகத்தின் இராஜ்ஜியத்தின் விஸ்தாரம் (13:8-10)

வெளிப்படுத்தின விசேஷம் – முன்னுரை

ந. வேறொரு மிருகம் பூமியிலிருந்து எழும்புவது (13:11-13)

ப. மிருகத்தின் சொரூபம் (13:14-15)

ம. மிருகத்தின் முத்திரை, அதின் நாமம், அதின் நாமத்தின் இலக்கம் (13:16-17)

ய. மிருகமும் மிருகத்தின் இலக்கமும் (13:18)

ஆட்டுக்குட்டியானவரும் தங்கள் நெற்றிகளில் பிதாவின் நாமம் எழுதப்பட்டவர்களும் (14:1-5)

2 முதலாம் தூதனின் பிரசங்கம் (14:6-7)

3 இரண்டாம் தூதனின் பிரசங்கம் (14:8)

4 மூன்றாம் தூதனின் பிரசங்கம் (14:9-11)

5 கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் (14:12-13)

6 அறுப்புக்காலம் (14:14-16)

7 திராட்சப்பழங்களின் அறுவடை (14:17-20)

8 ஏழு வாதைகளையுடைய ஏழு தூதர்கள் (15:1)

9 கண்ணாடிக்கடல் (15:2-4)

10 பரலோகத்திலே சாட்சியின் கூடாரமாகிய ஆலயம் திறக்கப்பட்டது (15:5-8)

(15) முதலாவது கோபக்கலசம் மனுஷர்களுக்கு பொல்லாத கொடிய புண் உண்டாயிற்று (16:2)

(16) இரண்டாம் கோபக்கலசம் - சமுத்திரம் செத்தவனுடைய இரத்தம்போலாயிற்று (16:3)

(17) மூன்றாம் கோபக்கலசம் - ஆறுகளும் நீரூற்றுகளும் இரத்தமாயின (16:4-7)

(18) நான்காம் கோபக்கலசம் - சூரியன் தீயினால் மனுஷரை தகித்தது (16:8-9)

(19) ஐந்தாம் கோபக்கலசம் - மிருகத்தின் இராஜ்ஜியம் இருளடைந்தது (16:10-11)

(20) ஆறாம் கோபக்கலசம் - ஐப்பிராத்து நதியின் தண்ணீர் வற்றிப்போயிற்று (16:12)

மூன்று அசுத்த ஆவிகள் (16:13-16)

(21) ஏழாம் கோபக்கலசம் - சத்தங்களும் இடிமுழக்கங்களும் மின்னல்களும் உண்டாயின (16:17-21)

மகாவேசியும் மிருகமும்

1 மகா வேசி

(1) மகா வேசியின் ஆக்கினை (17:1)

(2) மகா வேசியின் பாவங்களும் அவளோடு வேசித்தனம் பண்ணினவர்களும் (17:2)

(3) மகா வேசியின் ஆளுகை (17:3)

(4) மகா வேசியின் சிங்காரமும் பாவங்களும் (17:4)

(5) மகா வேசியின் நாமம் (17:5)

(6) மகா வேசியின் குடிவெறி (17:6)

2 மகா வேசியின் இரகசியமும் மிருகத்தின் இரகசியமும் (17:7)

3 மிருகம்

(1) மிருகம் பாதாளத்திலிருந்து ஏறிவந்து நாசமடையப்போகிறது (17:8)

(2) மிருகத்தின் ஏழு தலைகளும் ஏழு இராஜாக்களாம் (17:9-10)

வெளிப்படுத்தின விசேஷம் - முன்னுரை

3) மிருகம் - எட்டாவதானவன் (17:11)

4 பத்துக் கொம்புகளும் பத்து இராஜாக்களாம் (17:12)

5 ஏழு இராஜாக்கள் தங்கள் வல்லமையையும் அதிகாரத்தையும் மிருகத்திற்குக் கொடுப்பார்கள் (17:13-14)

6 தண்ணீர்கள் - ஜனக் கூட்டங்களும் ஜாதிகளும் பாஷைக்காரரும் (17:15)

7 மிருகத்தின்மீது இருக்கும் பத்து கொம்புகளானவர்கள் (17:16-17)

4 ஸ்திரீ - மகா நகரம் (17:18)

ஏழாம் கோபக்கலசம்

1. மகா பாபிலோன் விழுந்தது (18:1-3)

2 பாபிலோன்மீது நியாயத்தீர்ப்பு (18:4-8)

3 பாபிலோனுக்காக அழுது புலம்புதல்

1 பூமியின் இராஜாக்கள் (18:9-10)

2 பூமியின் வர்த்தகர்கள் (18:11-16)

3 மாலுமிகள், கப்பல்களில் யாத்திரை பண்ணுகிறவர்கள் கப்பலோட்டிகள், சமுத்திரத்திலே தொழில் செய்கிறவர்கள் (18:17-19)

4 பாபிலோனின் அழிவுக்காக களிகூருதல் (18:20)

5 பாபிலோனின் அழிவும் அதன் காரணமும் (18:21-24)

கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக பரலோகத்தின் காட்சிகள்

1 பரலோகத்தில் திரளான ஜனக்கூட்டம் கர்த்தரைத் துதிக்கிறார்கள் (19:1-3)

2 இருபத்திநான்கு மூப்பர்களும் நான்கு ஜீவன்களும் தேவனைத் தொழுதுகொண்டார்கள் (19:4)

3 கர்த்தரைத் துதியுங்கள் என்று ஒரு சத்தம் சிங்காசனத்திலிருந்து பிறந்தது (19:5)

4 திரளான ஜனங்கள் இடும் ஆரவாரம் (19:6)

5 ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் (19:7-9)

6 யோவான் தூதனை வணங்கும்படி அவனுடைய பாதத்தில் விழுந்தான் (19:10)

தெய்வீக ஆளுகை - ஆயிர வருஷ அரசாட்சி

(1) கிறிஸ்துவின் இரண்டாம் வருகை (19:11-14)

(2) தேவன் ஆலையை மிதிக்கிறார் - அர்மகெதோன் யுத்தம்

(அ) உருவகம் - மதுபான ஆலை (19:15)

(ஆ) இராஜாதி இராஜா, கர்த்தாதி கர்த்தா (19:16)

(இ) மகா தேவன் கொடுக்கும் விருந்து (19:17)

(ஈ) விருந்துக்கு கூடிவாருங்கள் (19:18)

(உ) விருந்துக்கு கூடி வருகிறார்கள் (19:19)

(ஊ) பட்டயத்தால் கொல்லப்பட்டவர்களுடைய மாம்சத்தினால் பறவைகள் யாவும் திருப்தியடைந்தன (19:20-21)

(3) சாத்தானை ஒரு தூதன் பாதாளத்திலே தள்ளி அடைத்தான் (20:1-3)

(4) பூமியில் ஆயிர வருஷ அரசாட்சி (20:4-6)

வெளிப்படுத்தின விசேஷம் - முன்னுரை

5 ஆயிரம் வருஷம் முடிந்தபின்பு சாத்தானுடைய கிரியைகள் (20:7-9)

6 சாத்தான் அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான் (20:10)

7) இறுதி நியாயத்தீர்ப்பு (20:11-15)

9 வரப்போகிற காலங்கள்

(1) புதிய வானமும் புதிய பூமியும் (21:1)

2 புதிய எருசலேம் (21:2-3)

3 முந்தினவைகள் ஒழிந்து போகும் - கர்த்தர் சகலத்தையும் புதிதாக்குவார் (21:4-7)

4 இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவோர்கள் (21:8)

5 ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டி

அ மணவாட்டியின் அடையாளம் (21:9-10)

ஆ புதிய எருசலேமின் வெளித்தோற்றம் (21:11)

(இ) மதில், அஸ்திபாரக்கற்கள் (21:12-15)

(ஈ) நகரம் சதுரமாயிருந்தது (21:16-17)

(உ) புதிய எருசலேமில் பயன்படுத்தப்பட்டுள்ள பொருட்கள் (21:18-21)

(ஊ) தேவாலயம் (21:22)

(எ) புதிய எருசலேமின் வெளிச்சம் (21:23)

(ஏ) புதிய எருசலேமில் நடைபெறும் காரியங்கள் (21:24-27)

(ஐ) புதிய எருசலேமின் நதி, வீதி, கனி (22:1-2)

(ஒ) புதிய எருசலேமில் அரசாளுகிறவர்கள் (22:3-5)

முடிவுரை

1 வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகம் உண்மையும் சத்தியமுமானது (22:6)

2 இந்த புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கைக்கொள்கிறவன் பாக்கியவான் (22:7)

3 தூதனை தொழுதுகொள்ளக்கூடாது - தேவனை மட்டுமே தொழுதுகொள்ள வேண்டும் (22:8-9)

4 இந்த புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களை முத்திரை போடவேண்டாம் (22:10)

5 அநியாயம் செய்கிறவர்கள், நீதியுள்ளவர்கள் ஆகியோரின் நித்திய முடிவு (22:11)

6 இயேசு கிறிஸ்து சீக்கிரமாய் வருகிறார் (22:12-13)

7 இயேசு கிறிஸ்துவினுடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள் (22:13-14)

8 பாவத்தையும் நித்திய ஆக்கினையையும் குறித்த கடைசி எச்சரிப்பு (22:15)

9 வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகத்தின் உறுதி பண்ணப்பட்ட சாட்சி (22:16)

10 எல்லோரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்னும் அழைப்பு (22:17)

11 எல்லா மனுஷருக்கும் ஓர் எச்சரிப்பு (22:18-19)

12 முடிவுரையும் ஆசீர்வாதமும் (22:20-21)

1 அதிகாரம்

1. தலைப்பும் ஆசிரியரும் - (1:1-11)

வெளி 1:1 சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும் பொருட்டு, தேவன் இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம்.

வெளிப்படுத்தின விசேஷம் (Revelation) - ἀποκάλυψις - apokalypsis - 602

பெண்பால் பெயர்ச்சொல் - ஒளி வெளிப்படுதல், காண்பித்தல், தெளிவு **(to unveil, uncover)** - எல்லோரும் காணும்விதமாகத் திரையை விலக்குதல், மறைபொருளாக இருக்கும் இரகசியத்தை வெளிப்படுத்துதல் (எபே 3:3, கலா 1:12) அதரிசனமான நபரைத் தரிசிக்கக் கூடியவராக வெளிப்படுத்திக் காண்பித்தல் (வெளி 1:1, 2தெச 1:7, 1பேதுரு 1:7,13)

"தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புவித்தது" - சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டிய காரியங்களைத் தேவன் இயேசு கிறிஸ்துவிடம் ஒப்புவித்தார். இயேசு கிறிஸ்து மனுஷ அவதாரத்தில் இருந்தபோது மனுஷத்துவத்தின் வரையறைக்குட்பட்டிருந்த படியினால், தேவன் இவருக்கு இந்தக் காரியங்களை வெளிப்படுத்த வேண்டியது அவசியமாயிற்று (ஏசா 50:4, மத் 28:18, மாற்கு 13:32, லூக்கா 1:40,52)

"காண்பிக்கும் பொருட்டு" - யோவானின் நாளிலிருந்து நித்திய காலம்வரைக்கும் தேவன் தம்முடைய ஊழியக்காரருக்கு எதையும் மறைக்காமல், காண்பிக்க வேண்டுமென்று சித்தம் கொண்டிருந்தார் (வெளி 21-22)

ஊழியக்காரர் (servants) δοῦλος doulos 1401

பெயரடை - வேலைக்காரனாகிய, ஊழியக்காரனாகிய, அடிமையாயிருக்கிற - புதிய ஏற்பாட்டில் ஊழியக்காரர் என்னும் வாக்கியம் 16 தடவை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. வெளிப்படுத்தின விசேஷத்தில் மட்டும் இந்த வார்த்தை 14 தடவை பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

"சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகள்" - வெளிப்படுத்தின விசேஷத்தின் மையக்கருத்தே சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குத் தேவன் வெளிப்படுத்துவதுதான். இந்தப் புஸ்தகத்தில் தேவன் பல நிகழ்ச்சிகளை வெளிப்படுத்தியிருக்கிறார். அவையாவன:

1. சபைக்காலம் முழுவதற்கும் உரிய நிகழ்ச்சிகள் (வெளி 1-3)
2. பரலோகத்தின் நிகழ்ச்சிகள் (வெளி 4-5)
3. தானியேலின் எழுபதாவது வாரமாகிய வருங்கால உபத்திரவத்தைக்குறித்த நிகழ்ச்சிகள் (வெளி 6-19)
4. ஆயிரம் வருஷ அரசாட்சியின் நிகழ்ச்சிகள் (வெளி 20)
5. புதிய வானம், புதிய பூமி ஆகியவற்றின் நிகழ்ச்சிகள் (வெளி 21-22)

சீக்கிரம் (shortly) - τάχος - tachos - 5034

பால்வேறுபாடற்ற பெயர்ச்சொல் - சீக்கிரம் **(swiftness; speed, quickly) "shortly"** (வெளி 1:1, வெளி 22:6, அப் 25:4; ரோமர் 16:20); **"quickly"** (அப் 12:7; அப் 22:18; வெளி 2:5), **"speedily"** (லூக்கா 18:8)

"தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு" வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகம் தேவனிடமிருந்து கிறிஸ்துவிற்கும், தேவதூதருக்கும் யோவானுக்கும், சபைகளுக்கும் நமக்கும் கடந்து வந்திருக்கிறது. (வெளி 1:1,11)

1 அதிகாரம்

2. யோவான் கண்ட யாவற்றையும் சாட்சியாக அறிவித்திருக்கிறான் - (22:16

வெளி 1:2 இவன் தேவனுடைய வசனத்தைக் குறித்தும் இயேசுகிறிஸ்து வைப்பற்றிய சாட்சியைக்குறித்தும், தான் கண்ட யாவற்றையும் சாட்சியாக அறிவித்திருக்கிறான்

அறிவி (signified) - σημαίνω - seemainoo - 4591

வினைச்சொல் - குறி, அறிவி, எடுத்துக்காட்டு, வெளிப்படுத்து (to show, point out; announce; to make a note of) - எல்லாக் காரியங்களையும் வெளிப்படையாகப் புரிந்து கொள்ள முடியாது. ஆகையினால், அவற்றை அறிவிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. (வெளி 1:1 யோவான் 12:33; யோவான் 18:32; யோவான் 21:19 அப் 11:28; அப் 25:27)

3. பாக்கியவான்கள் - (14:13 16:15; 19:9 20:6 22:7,14; 22:7,10,18,19)

வெளி 1:3 இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும் கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக் கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்; காலம் சமீபமாயிருக்கிறது.

பாக்கியவான்கள்

1 இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவன்

2 இந்தத் தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிறவர்கள்

3 இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்கள்

தீர்க்கதரிசனம் (prophecy) - προφητεία - propheeteia - 4394

பெண்பால் பெயர்ச்சொல் - தீர்க்கதரிசனம் - இந்த வார்த்தை வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகத்தில் 7 தடவை பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இந்தப் புஸ்தகத்தின் தீர்க்கதரிசன பணியை இது வெளிப்படுத்துகிறது. (வெளி 1:3 வெளி 11:6 வெளி 19:10 வெளி 22:7,10,18,19

தீர்க்கதரிசனத்திற்கு வகுக்கப்பட்டிருக்கும் நியதிகள்

1 தீர்க்கதரிசனமானது ஏற்கெனவே முன்னறியப்பட்டு எழுதப்பட்டிருக்கும் வரலாறு என்று கருதவேண்டும்.

2 வரலாற்றின் வார்த்தைகளுக்கு எவ்வாறு பொருள்கூறுவோமோ அதுபோலவே தீர்க்கதரிசன வார்த்தைகளுக்கும் பொருள் கூறவேண்டும்.

3 மறைந்துள்ள அர்த்தங்களைத் தேடி சொந்த வியாக்கியானம் பண்ணக்கூடாது.

4 தீர்க்கதரிசனத்தை நாம் புரிந்து கொள்வதற்கு முன்பாகவே அது நிறைவேறவேண்டுமென்று நினைக்கக் கூடாது.

5 தீர்க்கதரிசனத்தில் தேவனுடைய வியாக்கியானத்திற்கு முரணாக நமது சுய வியாக்கியானத்தைக் கொடுக்கக் கூடாது.

6 தீர்க்கதரிசன வார்த்தைகளை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும். இதற்குத் தேவையில்லாமல் உவமானப்பொருளைக் கூறக்கூடாது.

7 தீர்க்கதரிசன வார்த்தைகளுக்கு வேதவசனங்களை வியாக்கியானமாகத் தரவேண்டும்.

1 அதிகாரம்

கைக்கொள் (keep) - τηρέω - teereoo - 5083

வினைச்சொல் - கைக்கொள் காத்துக்கொள், காவல் காத்திரு வைத்திரு, ஜாக்கிரதையாயிரு (to attend to carefully, guard, take care of) "keep" (வெளி 1:3; வெளி 2:26; வெளி 3:8,10; வெளி 12:17 வெளி 14:12; வெளி 16:15 வெளி 22:7,9); "hold fast" வெளி 3:3

4. ஏழு சபைகளுக்கும் வாழ்த்துக்கள்

வெளி 1:4 யோவான் ஆசியாவிலுள்ள ஏழுசபைகளுக்கும் எழுதுகிறதாவது. இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமானவராலும், அவருடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருக்கிற ஏழு ஆவிகளாலும்,

வெளி 1:5 உண்மையுள்ள சாட்சியும் மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவரும் பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக

வெளி 1:6 நம்மிடத்தில் அன்புகூர்ந்து தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென்

"ஆசியாவிலுள்ள ஏழுசபைகள்" – சின்ன ஆசியாவில் (Asia Minor) அமைந்துள்ள சபைகள் (வெளி 1:4)

"இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமானவர்" தெய்வீகத் திரித்துவத்திலிருந்து (வெளி 1:4-5)

"அவருடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருக்கிற ஏழு ஆவிகள்" - (வெளி 5:6

இயேசுகிறிஸ்துவைப் பற்றிய சத்தியங்கள்

1. உண்மையுள்ள சாட்சி
2. மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவர் (வெளி 1:5; 1கொரி 15:20-23)
3. பூமியின் ராஜாக்களுக்கு அதிபதி (வெளி 1:5)
4. நம்மிடத்தில் அன்புகூர்ந்தவர் (வெளி 1:5 யோவான் 3:16
5. தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவினவர் (வெளி 1:5; மத் 26:28; 1யோவான் 1:7)
6. தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினவர் (வெளி 1:6; வெளி 5:10; வெளி 20:4-6
7. அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருக்கும் (வெளி 1:6; ஏசா 9:6-7; தானி 7:13-14; லூக்கா 1:32-33 வெளி 11:15; வெளி 22:4-5
8. மேகங்களுடனே வரப்போகிறவர் மனுஷருடைய கண்கள் யாவும் அவரைக் காணும் (வெளி 1:7 தானி 7:13-14; மத் 24:29-31 அப் 1:11; வெளி 19)
9. அவரைக் குத்தினார்கள் (வெளி 1:7; யோவான் 19:34
10. அவர் சர்வ வல்லமையுள்ள கர்த்தா (வெளி 1:8; எபி 1:8; ஏசா 9:6-7; யோவான் 1:1-2; அப் 20:28

சாட்சி (witness) - μάρτυς - martys - 3144

ஆண்பால் பெயர்ச்சொல் - சாட்சி witness, martyr (வெளி 1:5; பிலி 1:8) Jesus was both a witness and a martyr (வெளி 3:4; 1பேதுரு 2:24; எபி 3:2)

1 அதிகாரம்

அதிபதி (prince) - ἄρχων - archoon - 758

ஆண்பால் பெயர்ச்சொல் - தலைவன் அதிகாரி, அதிபதி, பிரபு "prince" வெளி 1:5; மத் 9:34; மத் 12:24 மத் 20:25; மாற்கு 3:22 யோவான் 12:31; யோவான் 14:30 யோவான் 16:11; 1கொரி 2:6-8 எபே 2:2); "ruler" (மத் 9:18,23; லூக்கா 8:41; லூக்கா 18:18 லூக்கா 23:13,35; லூக்கா 24:20; யோவான் 3:1; யோவான் 7:26,48; அப 3:17; அப 4:5,8,26; அப 7:27,35; அப 13:27; அப 14:5; அப 16:19; அப 23:5; ரோமர் 13:3) "chief" (லூக்கா 11:15 லூக்கா 14:1), "chief ruler" (யோவான் 12:42) "magistrate" (லூக்கா 12:58)

தீர்க்கதரிசன எண் - 1

"தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினார்" (வெளி 1:6-7) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை

5. வெளிப்படுத்தின விசேஷத்தின் மையக்கருத்து - (1:15-18; 19:11-21; 22:20)

வெளி 1:7 இதோ, மேகங்களுடனே வருகிறார், கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்; பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். அப்படியே ஆகும், ஆமென்

"கண்கள் யாவும் அவரைக் காணும்" - இயேசு கிறிஸ்து எருசலேமில் வந்து இறங்கும்போது அங்குள்ள யாவருடைய கண்களும் அவரைக் காணும் (சக 14:1-5) பூமியின் மற்ற பகுதியிலுள்ளவர்கள் சிறிது காலத்திற்குப் பின்பு அவரைக் காண்பார்கள் (ஏசா 2:2-4; ஏசா 66:19-21; சக 8:23)

"அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்" இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டிருந்த போது அவரைக் குத்திய யூதருடைய சந்ததியார் (சக 12:10)

"பூமியின் கோத்திரத்தாரெல்லாரும்" - இயேசு கிறிஸ்து இந்தப் பூமிக்கு வரும்போது எருசலேமைச் சுற்றியிருக்கும் எல்லாத் தேசங்களின் சேனைகளும் அவரைக் காண்பார்கள் (சக 14:1-5; மத் 24:29-31)

6. ஆதியும் அந்தமுமாக இருக்கிற இயேசு கிறிஸ்து - (1:8,11,17; 2:8; 21:6; 22:13; மீகா 5:1-2; யோவான் 1:1-2)

வெளி 1:8 இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தர்: நான் அல்பாவும், ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் என்று திருவுளம்பற்றுகிறார்

"அல்பாவும் ஓமெகாவும்" (Alpha and Omega) - கிரேக்க மொழியின் முதல் எழுத்தும் கடைசி எழுத்தும் வெளிப்படுத்தின விசேஷ புஸ்தகத்தில் நான்கு முறை இந்த வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (வெளி 1:8,11; வெளி 21:6 வெளி 22:13 வெளி 1:17; வெளி 2:8). வெளி 21:6 மற்ற வசனங்களில் எல்லாம் இந்த வாக்கியம் இயேசு கிறிஸ்துவைக் குறிக்கும் வெளி 1:8 ஆவது வசனத்தில் இயேசு கிறிஸ்துவைக் குறிப்பதற்கு "சர்வவல்லமையுள்ள கர்த்தர்" (the Almighty) என்னும் வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (வெளி 4:8 வெளி 11:17; வெளி 15:3; வெளி 16:7,14; வெளி 19:15 வெளி 21:22)

7. தீர்க்கதரிசி - யோவான் - (1:1,4)

வெளி 1:9 உங்கள் சகோதரனும், இயேசுகிறிஸ்துவினிமித்தம் வருகிற உபத்திரவத்திலும் அவருடைய ராஜ்யத்திலும் அவருடைய பொறுமையிலும் உங்கள் உடன் பங்காளனுமாயிருக்கிற யோவானாகிய நான் தேவ வசனத்தினிமித்தமும், இயேசுகிறிஸ்து பற்றிய சாட்சியினிமித்தமும் பத்மு என்னும் தீவிலே இருந்தேன்

1 அதிகாரம்

வெளி 1:10 கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது எனக்குப் பின்னாலே எக்காளசத்தம் போன்ற பெரிதான ஒரு சத்தத்தைக் கேட்டேன்

உடன்பங்காளன் (companion) - συγκοινωνός - synkoinoonos - 4791

ஆண்பால் பெயர்ச்சொல் - உடன்பங்காளன் (partaker) பிலி 1:7

உபத்திரவம் (tribulation) - θλῖψις - thlipsis - 2347

பெண்பால் பெயர்ச்சொல் - உபத்திரவம் வருத்தம் - வெளிப்படுத்தின விசேஷத்தில் இந்த வார்த்தை ஐந்து தடவை பயன்படுத்தப் பட்டிருக்கிறது. யோவானின் நாளில் விசுவாசிகளுக்கு வரும் உபத்திரவத்தைக் குறித்து நான்கு இடங்களிலும் (வெளி 1:9; வெளி 2:9,10, 22) வருங்கால மகா உபத்திரவத்தைக் குறித்து ஒரு இடத்திலும் (வெளி 7:14) இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (2கொரி 1:4)

"அவருடைய ராஜ்யம்" இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகையின்போது பூமியில் ஸ்தாபிக்கப்போகும் ராஜ்யம் (வெளி 1:6,9; வெளி 5:10; வெளி 11:15; வெளி 12:10; வெளி 20:4-6; வெளி 22:5) (மத் 4:17; மத் 19:24)

பொறுமை (patience) - ὑπομονή - hypomonee - 5281

பெண்பால் பெயர்ச்சொல் - பொறுமை சகித்தல் endurance வெளிப்படுத்தினவிசேஷம் புஸ்தகத்தில் இந்த வார்த்தை ஏழு தடவை பயன்படுத்தப் பட்டிருக்கிறது. பாடுகளின்போது விசுவாசிகள் கடைப்பிடிக்கவேண்டிய பொறுமையை இந்த வார்த்தை குறிப்பிடுகிறது. (வெளி 1:9; வெளி 2:2-3,19; வெளி 3:10; வெளி 13:10; வெளி 14:12)

"பத்மு" (Patmos) - சாமோசிற்குத் (Samos) தென்மேற்கே 30 மைல் தூரத்தில் அமைந்துள்ள ஒரு தீவு. இந்தத் தீவு 6 மைல் நீளமும், 10 மைல் அகலமும் கொண்டது. இந்தத் தீவில் மரங்கள் இல்லை. இங்கு பாறைகளும், எரிமலைகளும் அதிகம். மிகவும் கொடிய குற்றவாளிகளை ரோமப்பேரரசினர் இந்தத் தீவிற்கு நாடுகடத்தி தண்டனை கொடுப்பது வழக்கம்.

யோவான் நாடு கடத்தப்பட்டதற்குக் காரணங்கள் (வெளி 1:2,9)

1. தேவவசனத்தைப் பிரசங்கம் பண்ணினார்
2. இயேசு கிறிஸ்துவிற்குச் சாட்சி பகர்ந்தார்

"ஆவிக்குள்ளானேன்" (in the Spirit) - ஒருவர் தன்னை பரிசுத்த ஆவியானவருக்கு முழுவதுமாக ஒப்புக்கொடுத்து அவரோடு பூரணமான ஐக்கியத்தில் இருப்பதை விளக்கும் வாக்கியம். (லூக்கா 22:3)

"கர்த்தருடைய நாள்" (the Lord's day) - ஆதித்திருச்சபையில் விசுவாசிகள் வாரத்தின் முதலாம் நாளைக் கர்த்தருடைய நாள் என்று அறிவித்தார்கள். இந்நாள் கர்த்தர் உயிர்த்தெழுந்த நாள். ரோமப்பேரரசரும் தங்களுடைய பேரரசரை வணங்குவதற்காக ஒரு குறிப்பிட்ட நாளை நியமித்து அதற்கு "அகஸ்துஸ்னுடைய நாள்" (the Augustean day) என்று அறிவித்தார்கள். ஞாயிற்றுக் கிழமையே கர்த்தரை ஆராதிக்கும் கர்த்தருடைய நாளாகும்.

"எக்காளசத்தம்போன்ற பெரிதான ஒரு சத்தம்" - கர்த்தர் சீனாய்மலையின்மேல் இறங்கியபோது எக்காள சத்தம் தொனித்தது. மோசே தேவனிடத்தில் பேசினார். தேவனும் தம்முடைய வாக்கினால் அவருக்கு மறுமொழி கொடுத்தார். (யாத் 19:16-19)

8. யோவான் காண்கிறதை ஒரு புஸ்தகத்தில் எழுதவேண்டும் என்னும் கட்டளை

வெளி 1:11 அது: நான் அல்பாவும் ஓமெகாவும் முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன். நீ காண்கிறதை ஒரு புஸ்தகத்தில் எழுதி, ஆசியாவிலிருக்கிற எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா என்னும் பட்டணங்களிலுள்ள ஏழு சபைகளுக்கும் அனுப்பு என்று விளம்பினது.

வெளிப்படுத்தின விசேஷம் – தொகுப்புரை

1 அதிகாரம்

"ஏழு சபைகளுக்கும் அனுப்பு என்று விளம்பினது" - யோவான் தான் காண்கிறதை ஒரு புஸ்தகத்தில் எழுதி, அதை ஏழு சபைகளுக்கும் அனுப்ப வேண்டும் (வெளி 1:10-11)

I. கண்ட காரியங்கள் - (1:12-20)

1. கிறிஸ்துவின் தரிசனம்

(1) கிறிஸ்துவின் எட்டு குணங்கள்

வெளி 1:12 அப்பொழுது என்னுடனே பேசின சத்தத்தைப் பார்க்கத் திரும்பினேன்; திரும்பினபோது, ஏழு பொன் குத்துவிளக்குகளையும்,

வெளி 1:13 அந்த ஏழு குத்து விளக்குகளின் மத்தியிலே நிலையங்கி தரித்து மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த [illegible] குமாரனுக்கு ஒப்பானவரையும் கண்டேன்.

வெளி 1:14 அவருடைய சிரசும் மயிரும் வெண்பஞ்சைப்போலவும் உறைந்த மழையைப் போலவும் வெண்மையாயிருந்தது; அவருடைய கண்கள் அக்கினிஜுவாலையைப் போலிருந்தது;

வெளி 1:15 அவருடைய பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம் போலிருந்தது; அவருடைய சத்தம் பெருவெள்ளத்து இரைச்சலைப் போலிருந்தது.

வெளி 1:16 தமது வலதுகரத்திலே ஏழு நட்சத்திரங்களை ஏந்திக் கொண்டிருந்தார்; அவர் வாயிலிருந்து இருபுறமும் கருக்குள்ள பட்டயம் புறப்பட்டது; அவருடைய முகம் வல்லமையாய்ப் பிரகாசிக்கிற சூரியனைப்போலிருந்தது.

"ஏழு பொன் குத்துவிளக்குகள்" (seven golden candlesticks) - வெளி 1:12-18 ஆகிய வசனங்களில் மகிமையடைந்த கிறிஸ்துவின் தரிசனத்தைக் காண்கிறோம். வெளி 1:19 ஆவது வசனம் வெளிப்படுத்தின விசேஷத்தின் முதலாவது பிரிவாகும். ஏழு பொன் குத்துவிளக்குகள் என்பது ஏழு சபைகளைக் குறிக்கிறது. (வெளி 1:20)

"மனுஷகுமாரனுக்கொப்பானவர்" - (தானி 7:13-14; தானி 10:5-10; வெளி 10)

கிறிஸ்துவைக் குறித்த வர்ணனை

1 நிலையங்கி தரித்து, மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்தவர் (வெளி 1:13; தானி 10:5)

2 அவருடைய சிரசும் மயிரும் வெண்பஞ்சைப்போலவும் உறைந்த மழையைப் போலவும் வெண்மையாயிருந்தது (வெளி 1:14; தானி 7:9)

3 அவருடைய கண்கள் அக்கினி ஜுவாலையைப் போலிருந்தது (வெளி 1:14; வெளி 19:12; தானி 10:6; எபி 4:12)

4 அவருடைய பாதங்கள் உலைக் களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம் போலிருந்தது (வெளி 1:15; வெளி 10:1; தானி 10:6)

5 அவருடைய சத்தம் பெருவெள்ளத்து இரைச்சலைப்போலிருந்தது. (வெளி 1:15; வெளி 8:5; வெளி 10:2-4; வெளி 11:15; வெளி 14:2; வெளி 16:17-18; வெளி 19:6; சங் 29; எபி 12:26; தானி 10:6)

6 அவர் தமது வலதுகரத்திலே ஏழு நட்சத்திரங்களை ஏந்திக் கொண்டிருந்தார். அந்த ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபைகளின் தூதர்களாம். (வெளி 1:16, 20)

7 அவர் வாயிலிருந்து இருபுறமும் கருக்குள்ள பட்டயம் புறப்பட்டது. (வெளி 1:16; வெளி 2:12,16; வெளி 19:15,21; எபே 6:17; எபி 4:12)

8 அவருடைய முகம் வல்லமையாய்ப் பிரகாசிக்கிற சூரியனைப் போலிருந்தது. (வெளி 1:16; வெளி 10:1; தானி 10:6)

1 அதிகாரம்

(2) தரிசனத்தினால் யோவான்மீது ஏற்பட்ட விளைவு - (ஏசா 6, எசே 1:28; 2:3; தானி 8:27; 10:5-18 அப் 9:3-8)

வெளி 1:17 நான் அவரைக் கண்டபோது செத்தவனைப்போல அவருடைய பாதத்தில் விழுந்தேன். அப்பொழுது அவர் தம்முடைய வலதுகரத்தை என்மேல் வைத்து என்னை நோக்கி: பயப்படாதே, நான் முந்தினவரும் பிந்தினவரும் உயிருள்ளவருமாயிருக்கிறேன்.

வெளி 1:18 மரித்தேன், ஆனாலும் இதோ சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்.

"செத்தவனைப்போல அவருடைய பாதத்தில் விழுந்தேன்" - தேவதரிசனம் பெற்றதினால் யோவானிடம் காணப்பட்ட விளைவு. (வெளி 1:17, 18)

"பயப்படாதே" (Fear not) - வேதாகமத்தில் இந்த வார்த்தை 80 தடவைகள் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. தம்முடைய பிரசன்னத்தினால் மனுஷருக்கு உண்டாகும் பயத்தை அகற்றுவதற்காக தேவன் இவ்வாறு கூறுகிறார்.

"மரித்தேன், ஆனாலும், இதோ சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்" இந்த வாக்கியத்தின் மூலமாக இதைப் பேசுகிறவர் இயேசு கிறிஸ்து என்பது தெளிவாகிறது. அப் 2:25-36; 1கொரி 15:1-23 கொலோ 2:14-17; எபே 2:14-15; யோவான் 2:14

"நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்" - திறவுகோல் என்பது வல்லமையையும், அதிகாரத்தையும் குறிக்கும் வார்த்தையாகும். (வெளி 3:7; மத் 16:19, மத் 28:18, ஏசா 22:22)

(3) வியாக்கியானத்தின் திறவுகோல் - (1:19 - 4:1)

வெளி 1:19 நீ கண்டவைகளையும், இருக்கிறவைகளையும் இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவைகளையும் எழுது.

"நீ கண்டவைகளை....எழுது" - வெளி 1:11 ஆவது வசனத்தில் யோவான் காணப்போகிறவைகளைக் குறித்து எழுத வேண்டும் என்று கட்டளை பெற்றிருந்தார். இப்பொழுது வெளி 1:16-18 ஆகிய வசனங்களில் யோவான் கண்ட தரிசனங்களைக் குறித்து எழுத வேண்டும் என்னும் கட்டளை பெற்றிருக்கிறார்.

"இவைகளுக்குப்பின்பு (hereafter) - வெளி 2-3 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் சபைகளுக்குப் பின்பு அல்லது இப்பொழுதிருக்கிற காரியங்களுக்குப் பின்பு.

(4) அடையாளங்களின் வியாக்கியானம்

வெளி 1:20 என் வலதுகரத்தில் நீ கண்ட ஏழு நட்சத்திரங்களின் இரகசியத்தையும், ஏழு பொன் குத்துவிளக்குகளின் இரகசியத்தையும் எழுது; அந்த ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபைகளின் தூதர்களாம்; நீ கண்ட ஏழு குத்துவிளக்குகளும் ஏழு [redacted].

இரகசியம் (mystery) - μυστήριον mysteerion 3466

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் இரகசியம் (வெளி 1:20; வெளி 10:7, வெளி 17:5,7)

குத்துவிளக்கு (candlestick) λυχνία - lychnia - 3087

பெண்பால் பெயர்ச்சொல் - விளக்குத்தண்டு, குத்துவிளக்கு (lampstand, portable lamps) (வெளி 1:12,13,20; வெளி 2:1,5, வெளி 11:4, மத் 5:15; மாற்கு 4:21; லூக்கா 8:16, லூக்கா 11:33; எபி 9:2)

வெளிப்படுத்தின விசேஷம் – தொகுப்புரை

1 அதிகாரம்

விளக்கு λύχνος - lychnos - 3088

ஆண்பால் பெயர்ச்சொல் – விளக்கு மத் 5:15; வெளி 18:23; வெளி 21:23; வெளி 22:5

தூதர்கள் (angels) - αγγελος - angelos - 32

ஆண்பால் பெயர்ச்சொல் – தூதன் தூதர் (messenger) - ஏழு சபைகளின்மேய்ப்பர்களைக் குறிக்கும் வெளி 1:1,20 வெளி 2:1,8,12,18 வெளி 3:1,7,14; வெளி 15:1,6,8; வெளி 16:3-17; வெளி 17:1; வெளி 21:9,17; வெளி 22:8-10; யூதா 1:13 ஆகிய வசனங்களில் மனுஷனைக் குறிப்பதற்கு இந்தச் சொல் பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

"ஏழு சபைகள் (seven churches) - கிறிஸ்துவின் தரிசனத்திற்குப் பின்பு உடனடியாக ஏழு சபைகளுக்கும் செய்திகள் கொடுக்கப் படுகிறது. வெளி 2-3 ஆகிய அதிகாரங்கள் வெளிப்படுத்தின விசேஷத்தின் இரண்டாம் பகுதியாகும். தற்போதுள்ள சபைகளின் காரியங்களை இந்தப் பகுதி விளக்குகிறது. சபை எடுத்துக் கொள்ளப்படும் வரையிலும் சபைகளுக்கு இந்தச் செய்தி பொருந்தும் (1கொரி 15:51-58; 1தெச 4:13-17; 2தெச 2:7)

"ஏழு சபைகள்" என்பதன் வியாக்கியானங்கள்

1 யோவானின் நாளில் இருந்த ஏழு ஸ்தல சபைகள் துருக்கி தேசத்தின் மேற்குக் கரைப்பகுதியில் சின்ன ஆசியா அமைந்துள்ளது. அதிலுள்ள ஏழு ஸ்தல சபைகளின் நிலைமைகள் இங்கு விவரிக்கப்பட்டிருக்கிறது. (வெளி 1:4,11,20)

2 தற்காலத்திலிருந்து சபை எடுத்துக் கொள்ளப்படும் காலம்வரையிலுமுள்ள எல்லா சபைகளுக்கும் கூறப்படும் தீர்க்கதரிசனச் செய்தி. ஸ்தல சபைகளின் ஆவிக்குரிய நிலைமைகளை ஏழு சபைகளுக்கும் கூறப்பட்டிருக்கும் செய்திகள் விவரித்துக் காண்பிக்கிறது.

3 ஒவ்வொரு சபையிலுமுள்ள தனி நபர்களை இந்த வாக்கியம் குறிக்கிறது. ஒவ்வொரு தனி நபருடைய ஆவிக்குரிய நிலைமை விளக்கப்பட்டு, அவர்களுக்கு எச்சரிப்பு கூறப்படுகிறது. வெளி 1:3; வெளி 2:7,11,17,26; வெளி 3:5,12,21

"ஏழு சபைகள்" என்னும் வார்த்தை எல்லாச் சபைகளையும் குறிக்கும் தீர்க்கதரிசன வார்த்தை என்பதற்கு ஆதாரங்கள்

1 வெளிப்படுத்தின விசேஷம் முழுவதுமே தீர்க்கதரிசனப் பண்புடையது (வெளி 1:3,19; வெளி 4:1; வெளி 22:18-19)

2 இயேசுகிறிஸ்துவைப் பற்றிய சாட்சி "testimony of Jesus" என்னும் வாக்கியமும் (வெளி 1:9; வெளி 12:17) இயேசு கிறிஸ்துவைப் பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது (வெளி 19:10) என்னும் வாக்கியமும் ஏழு சபைகள் என்னும் வார்த்தை தீர்க்கதரிசன வார்த்தை என்பதை உறுதிபண்ணுகிறது.

3 வெளி 4-22 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் இது தீர்க்கதரிசன வார்த்தையென்பதை உறுதிபண்ணுகிறது (வெளி 1:19; வெளி 4:1)

4 தேவனுடைய வார்த்தை (the word of God) என்னும் வார்த்தை இது ஒரு தீர்க்கதரிசன சம்பாஷணை என்பதை நிரூபிக்கிறது. (வெளி 1:3,9)

5 "சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகள்" (வெளி 1:1; வெளி 22:6-10) என்னும் வாக்கியமும் இது ஒரு தீர்க்கதரிசனம் என்பதை உறுதிபண்ணுகிறது.

6 வெளி 2-3 ஆகிய அதிகாரங்களில் எழுதப்பட்டிருக்கிற நிருபங்கள் மற்ற நிருபங்களுக்கும் புதிய ஏற்பாட்டின் எல்லாப் புஸ்தகங்களுக்கும் பொருந்தும். இது ஒரு தீர்க்கதரிசன வார்த்தை என்பதை இந்தக் காரியமும் நிரூபிக்கிறது. (2தீமோ 3:16-17)

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

1 அதிகாரம்

7 ஜெயங்கொள்ளுகிறவர்களுக்குக் கூறப்பட்டிருக்கும் வாக்குத்தத்தங்களும் இனிமேல் நடைபெறப்போகும் காரியங்களும் இக்காலத்திலுள்ள விசுவாசிகளுக்கும் பொருந்தும். (வெளி 1:3)

ஏழு சபைகளுக்கும் எழுதப்பட்டிருக்கும் நிருபங்களில் காணப்படும் ஒற்றுமைகள்

1 எல்லா நிருபங்களிலும் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய விளக்கம் உள்ளது. (வெளி 1:12-16)

2 ஒவ்வொரு நிருபமும் தூதனுக்கு அதாவது மேய்ப்பருக்கு எழுதப்பட்டதாகும்.

3 ஏழாவது சபையைத் தவிர மற்ற சபைகளின் கிரியைகள் போற்றப்பட்டுள்ளன.

4 இரண்டாவது, ஆறாவது சபைகளைத் தவிர மற்ற சபைகள் அனைத்தும் கடிந்து கொள்ளப்பட்டுள்ளன.

5 இரண்டு, நான்கு, ஆறு ஆவது சபைகளைத் தவிர மற்ற சபைகளுக்கு மனந்திரும்ப வேண்டும் என்னும் கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறது. நான்காவது சபையிலும் மனந்திரும்ப வேண்டிய பாவமுள்ளது. ஆயினும் மனந்திரும்ப வேண்டுமென்று அதற்கு கட்டளை கொடுக்கப்படவில்லை.

6 இரண்டு, ஆறு ஆகிய சபைகளைத் தவிர மற்ற சபைகளுக்கு நியாயத்தீர்ப்பின் எச்சரிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கிறது.

7 ஒன்று, இரண்டு, ஆறு ஆகிய சபைகளைத் தவிர மற்ற சபைகள் ஒன்றுக்கொன்று முந்திய சபையைவிட மோசமானதாயிருக்கிறது.

8 ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு எல்லா நிருபங்களிலும் வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

9 காதுள்ளவன் கேட்கக்கடவன் என்னும் புத்திமதி எல்லா நிருபங்களிலும் கூறப்பட்டிருக்கிறது.

10 இந்த நிருபத்தை எழுதவேண்டுமென்று தேவன் யோவானுக்குக் கட்டளை கொடுத்திருக்கிறார். ஒவ்வொரு நிருபத்தையும் எழுதி முடித்த பின்பு, இதை யாருக்கு எழுத வேண்டும், இதில் என்ன எழுதவேண்டும் என்பவற்றை அடுத்த நிருபத்தை முடிக்கும் முன்பு தேவன் யோவானுக்குக் கட்டளையிட்டிருக்கிறார். அதன்பின்பு, "இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவைகளைச் சபைகளுக்கு எழுது" என்னும் கட்டளையைத் தேவன் யோவானுக்குக் கொடுத்தார். (வெளி 1:19; வெளி 4:1)

2 அதிகாரம்

II. இருக்கிறவைகள் - சபை எடுத்துக் கொள்ளப்படும் வரையிலும் சபைகளைக் குறித்த காரியங்கள் - (2:1-3:22)

1. எபேசு சபைக்கு எழுதின நிருபம்

வெளி 2:1 எபேசு சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: ஏழு நட்சத்திரங்களைத் தம்முடைய வலதுகரத்தில் ஏந்திக்கொண்டு, ஏழு பொன்குத்துவிளக்குகளின் மத்தியிலே உலாவிக்கொண்டிருக்கிறவர் சொல்லுகிறதாவது:

வெளி 2:2 உன் கிரியைகளையும், உன் பிரயாசத்தையும், உன் பொறுமையையும், நீ பொல்லாதவர்களைச் சகிக்கக்கூடாமலிருக்கிறதையும், அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலரென்று சொல்லுகிறதை நீ சோதித்து அவர்களைப் பொய்யரென்று கண்டறிந்ததையும்,

வெளி 2:3 நீ சகித்துக்கொண்டிருக்கிறதையும், பொறுமையாயிருக்கிறதையும், என் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல் பிரயாசப்பட்டதையும் அறிந்திருக்கிறேன்.

வெளி 2:4 ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு.

வெளி 2:5 ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக; இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாதபட்சத்தில், உன் விளக்குத்தண்டை அதனிடத்திலிருந்து நீக்கிவிடுவேன்.

வெளி 2:6 நான் வெறுக்கிற நிக்கொலாய் மதஸ்தரின் கிரியைகளை நீயும் வெறுக்கிறாய், இது உன்னிடத்திலுண்டு.

வெளி 2:7 ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன். ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பேன் என்றெழுது.

"எபேசு" (Ephesus) - ஆசியா மைனரிலுள்ள முக்கியமான வணிக மையம். காய்ஸ்டர் நதி (Cayster River) ஆகியான் கடலில் கலக்கும் இடத்தில் கடற்கரையோரத்தில் அமைந்திருக்கும் முக்கியமான வியாபார மையம். சிமிர்னாவிலிருந்து (Smyrna) தெற்கே 50 மைல் தூரத்தில் இப்பட்டிணம் அமைந்திருக்கிறது. இங்கு தியானாளின் கோவில் உள்ளது. ஆதி காலத்து அற்புதங்களில் தியானாளின் கோவிலையும் ஒரு முக்கியமான அற்புதமாகக் கருதினார்கள். (அப் 19:27) தற்பொழுது இப்பட்டிணம் இடிந்து சிதைந்து காணப்படுகிறது. வெளி 2:5 ஆம் வசனம் இப்பட்டணத்துக்கு நிறைவேற்றுற்று.

"ஏழு நட்சத்திரங்களைத் தம்முடைய வலதுகரத்தில் ஏந்திக்கொண்டு, ஏழு பொன்குத்து விளக்குகளின் மத்தியிலே உலாவிக் கொண்டிருக்கிறவர்" - கிறிஸ்து சபைக்கும் ஊழியத்திற்கும் தலைவராக இருக்கிறார். இந்த வாக்கியம் அவருடைய சரியான ஸ்தானத்தை விவரிக்கிறது.

எபேசு சபையைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் காரியங்கள்

1. குறைவின் பத்து அம்சங்கள் (வெளி 2:2-6)
2. குறைவின் ஒரு அம்சம் (வெளி 2:4-5
3. ஆதியில் கொண்டிருந்த அன்பை அவர்கள் விட்டுவிட்டார்கள் (வெளி 2:4

2 அதிகாரம்

4 அவர்கள் இன்ன நிலைமையிலிருந்து விழுந்தார்கள் என்பதை நினைத்து மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்ய வேண்டும் (வெளி 2:5).

5 இல்லாவிட்டால் தேவன் சீக்கிரமாய் அவர்களிடத்தில் வந்து, அவர்கள் மனந்திரும்பாத பட்சத்தில், அவர்கள் விளக்குத்தண்டை அதனிடத்திலிருந்து நீக்கிவிடுவார் (வெளி 2:5).

6 தேவன் கூறியிருக்கும் நிபந்தனைகளுக்கு எபேசு சபை கீழ்ப்படியவில்லையென்றால் அந்த சபை முழுவதும் அழிக்கப்படும் (வெளி 2:5).

7 ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைத் தேவன் புசிக்கக்கொடுப்பார் (வெளி 2:7).

தீர்க்கதரிசன எண் - 2

"நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வருவேன்" (வெளி 2:5) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நீக்கி விடுதல் **(remove) - κινέω - kineoo** - 2795

வினைச்சொல் தொடு துலக்கு அசை நீக்கு **"remove"** (வெளி 2:5) **"wagging"** (மத் 27:39; மாற்கு 15:29); **"mover"** (அப் 24:5) **"move"** (மத் 23:4; அப் 17:28; அப் 21:30; வெளி 6:14)

"நிக்கொலாய் மதஸ்தர்" **(Nicolaitans)** - நிக்கோலாவை பின்பற்றுகிறவர்கள். இவன் ஒரு தேவபரட்டன். ஞானமார்க்கத்தில் **(Gnostics)** காணப்படும் அசுசியான பழக்கவழக்கங்களை இவர்களும் கடைபிடித்து வந்தார்கள். விபசாரம் வேசித்தனம் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதைப் புசிப்பது ஆகியவற்றை இவர்கள் பாவமாகக் கருதவில்லை. பிலேயாம் **(Balaam)** தியத்தீராவின் யேசபேல் **(Jezebel of Thyatira)** ஆகியோருடைய கொள்கைகளைப்போல நிக்கொலாய் மதஸ்தரின் கொள்கையும் அமைந்திருந்தது (வெளி 2:6,14-15,20).

தீர்க்கதரிசன எண் - 3

"ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பேன்" (வெளி 2:7) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. பரிசுத்தவான்கள் பரலோகத்தில் ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிப்பார்கள் (வெளி 2:7,17; லூக்கா 22:16,18).

"தேவனுடைய பரதீசு" **(paradise of God)** - (லூக்கா 16:22)

பரதீசு **(paradise) - παράδεισος - paradeisos** - 3857

ஆண்பால் பெயர்ச்சொல் - பரதீசு **(park, forest, orchard)** - ஏதேன் தோட்டத்தைக் குறிப்பதற்கு செப்துவஜிந்தில் இச்சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

2. சிமிர்னா சபைக்கு எழுதின நிருபம்

வெளி 2:8 சிமிர்னா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவென்றால், முந்தினவரும் பிந்தினவரும் மரித்திருந்து பிழைத்தவருமானவர் சொல்லுகிறதாவது.

2 அதிகாரம்

வெளி 2:9 உன் கிரியைகளையும் உன் உபத்திரவத்தையும் நீ ஐசுவரியமுள்ளவனாயிருந்தும் உனக்கிருக்கிற தரித்திரத்தையும் தங்களை யூதரென்று சொல்லியும் யூதராயிராமல் சாத்தானுடைய கூட்டமாயிருக்கிறவர்கள் செய்யும் தூஷணத்தையும் அறிந்திருக்கிறேன்.

வெளி 2:10 நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே. இதோ நீங்கள் சோதிக்கப்படும்பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்.

வெளி 2:11 ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை என்றெழுது.

"சிமிர்னா" (Smyrna) - துருக்கியில் உள்ள ஐசுவரியம் மிகுந்த பட்டணம். இதன் தற்காலத்து பெயர் இஸ்மிர் (Ismir) என்பதாகும். ஆசியான கடலில் எபேசுவிருந்து 50 மைல் வடமேற்காக இந்தப் பட்டணம் அமைந்திருக்கிறது.

சிமிர்னா சபையைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் காரியங்கள்

1 கிரியைகள்

2 உபத்திரவம்

3 ஐசுவரியமுள்ளவர்களாயிருந்தும் அவர்களுக்கு இருக்கும் தரித்திரம்.

"தங்களை யூதரென்று சொல்லியும் யூதராயிராமல் சாத்தானுடைய கூட்டமாயிருக்கிறவர்கள்" - சிமிர்னாவிலுள்ள ஒரு பிரிவினர் யூதமார்க்கத்தைப் பின்பற்றினார்கள். ஆனால் அவர்கள் தேவனைத் தூஷித்து சாத்தானைச் சேவித்தார்கள்.

தீர்க்கதரிசன எண் - 4

"இதோ, நீங்கள் சோதிக்கப்படும்பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்.... (வெளி 2:10-11) வெளி 2:10 ஆவது வசனம் நிறைவேறிற்று. வெளி 2:11 ஆவது வசனம் இன்னும் நிறைவேறவில்லை.

"பத்துநாள்" - பத்து வெவ்வேறு உபத்திரவங்களைக் குறிக்காமல் பத்துநாளையே குறிக்கிறது.

"ஜீவகிரீடம்" (crown of life) - (2தீமோ 4:8) "இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது; நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்." 2தீமோ 4:8 இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. 2தீமோ 4:6-7 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பவுலின் முயற்சிகளுக்கு நீதியின் கிரீடம் அவருக்கு வெகுமதியாக வைக்கப்பட்டிருக்கிறது.

"ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை" - ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு மட்டுமே நித்திய ஜீவன் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. (வெளி 2:7, 11)

2 அதிகாரம்

3. பெர்கமு சபைக்கு எழுதின நிருபம்

வெளி 2:12 பெர்கமு சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை உடையவர் சொல்லுகிறதாவது;

வெளி 2:13 உன் கிரியைகளையும், சாத்தானுடைய சிங்காசனமிருக்கிற இடத்தில் நீ குடியிருக்கிறதையும், நீ என் நாமத்தைப் பற்றிக்கொண்டிருக்கிறதையும், சாத்தான் குடிகொண்டிருக்கிற இடத்திலே உங்களுக்குள்ளே எனக்கு உண்மையுள்ள சாட்சியான அந்திபா என்பவன் கொல்லப்பட்ட நாட்களிலும் என்னைப் பற்றும் விசுவாசத்தை நீ மறுதலியாமலிருந்ததையும் அறிந்திருக்கிறேன்.

வெளி 2:14 ஆகிலும் சில காரியங்களைக் குறித்து உன்பேரில் எனக்குக் குறை உண்டு; விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிப்பதற்கும் வேசித்தனம் பண்ணுவதற்கும் ஏதுவான இடறலை இஸ்ரவேல் புத்திரர் முன்பாகப் போடும்படி பாலாக் என்பவனுக்குப் போதனை செய்த பிலேயாமுடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்கள் உன்னிடத்திலுண்டு.

வெளி 2:15 அப்படியே நிக்கொலாய் மதஸ்தருடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்களும் உன்னிடத்திலுண்டு; அதை நான் வெறுக்கிறேன்.

வெளி 2:16 நீ மனந்திரும்பு; இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, என் வாயின் பட்டயத்தால் அவர்களோடே யுத்தம்பண்ணுவேன்.

வெளி 2:17 ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன். ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக் கொடுத்து, அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும், அந்தக் கல்லின்மேல் எழுதப்பட்டதும் அதைப் பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமத்தையும் கொடுப்பேன் என்றெழுது.

"பெர்கமு" (Pergamos) - மீசியாவிலுள்ள (Mysia) ஒரு பட்டணம் காயகஸ (Caicus) நதிக்கரையில் அமைந்துள்ளது. சிமிர்னாவிற்கு வடக்கில் 50 மைல் தூரத்தில் அமைந்துள்ள பட்டணம்.

பெர்கமு சபையைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் காரியங்கள்

1. கிரியைகள்
2. கிறிஸ்துவின் நாமத்தைப் பற்றிக்கொண்டிருக்கிறது
3. விசுவாசத்தை மறுதலியாமலிருக்கிறது

"சாத்தான் குடிகொண்டிருக்கிற இடம்" **(Satan's seat)** பழங்கால பாபிலோனியாவின் மார்க்கப் பிரிவினர் **(Babylonian cult)** தங்களுடைய செயல்பாடுகளைப் பாபிலோனிலிருந்து பெர்கமுவிற்கு மாற்றிக் கொண்டார்கள். ஆகையினால் இந்தப் பட்டணம் சாத்தான் குடிகொண்டிருக்கும் இடம் என்று அழைக்கப்படுகிறது.

மறுதலித்தல் (denied) **ἀρνέομαι**
arneomai 720

வினைச்சொல் மறுதலி, இல்லையென்று சொல், தெரியாதென்று சொல், வெறு **(deny)** (எபி 11:24) விசுவாசிகள் தங்களுடைய ஜீவியகால முழுவதும் கர்த்தரையே நம்பி ஜீவிக்க வேண்டும். விசுவாசத்தை ஏராளமானோர் மறுதலித்திருக்கிறார்கள்

2 அதிகாரம்

"எனக்கு உண்மையுள்ள சாட்சியான அந்திப்பா" - அந்திப்பாவைப் (Antipas) பற்றி அதிகமாக எந்த நிகழ்ச்சியும் தெரியவில்லை. இவன் கிறிஸ்துவிற்காக இரத்தச்சாட்சியாக மரித்தான். ஆதித் திருச்சபையில் அந்திப்பாவின் நடபடிகள் (The Acts of Antipas) என்றொரு புத்தகம் இருந்தது. இவன் பெர்கமு சபையின் மூப்பனாக இருந்திருக்கலாம். வெண்கலத்தினால் ஒரு காளையைச் செய்து அதன் வயிற்றுக்குள் அந்திப்பாவை வைத்து அவனை உயிரோடு எரித்து போகக்கிவிட்டார்கள் என்று திருச்சபை வரலாறு கூறுகிறது.

பெர்கமு சபையைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் காரியங்கள் (வெளி 2:14-5)

1. பிலேயாமுடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்கள்
2. விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கிறவர்கள்
3. வேசித்தனம்பண்ணுகிறவர்கள்
4. நிக்கொலாய் மதஸ்தருடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்கள்

"பிலேயாமுடைய போதகம்" (doctrine of Balaam) - (2பேதுரு 2:15)

பிலேயாமின் மூன்று பாவங்கள் (எண் 22:5-24:25)

1. பிலேயாமின் வழி (2பேதுரு 2:15) - அநீதத்தின் கூலியை விரும்பினான் (2பேதுரு 2:15; எண் 22:7,17,37; எண் 24:11)
2. பிலேயாமின் வஞ்சகம் (யூதா 1:11) - அநீதத்தின் கூலியைப் பெற்றுக் கொண்டான் (யூதா 1:11; 2பேதுரு 2:15; எண் 31:8, 16)
3. பிலேயாமுடைய போதகம் (வெளி 2:14) - பாலாக் என்பவனுக்குப் பிலேயாம் தவறாகப் போதகம் பண்ணினான் (எண் 25:1-9; எண் 31:8, 16)

தீர்க்கதரிசன எண் - 5

"நீ மனந்திரும்பு; இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து என் வாயின் பட்டயத்தால் அவர்களோடே யுத்தம் பண்ணுவேன்......" (வெளி 2:16-17) வெளி 2:16 ஆவது வசனம் நிறைவேறிற்று. வெளி 2:17 ஆவது வசனம் இன்னும் நிறைவேறவில்லை. பிலேயாமைப்போன்றவர்கள் அனைவரும் மனந்திரும்ப வேண்டும். மனம் திரும்பவில்லை என்றால் அவர்கள் நியாயந்தீர்க்கப்படுவார்கள் (வெளி 2:5,16,21-22; வெளி 3:3,19)

"ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக் கொடுப்பேன்" ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு மட்டுமே பரலோகம் வாக்குப்பண்ணப் பட்டிருக்கிறது. (வெளி 2:7,11,17,26; வெளி 3:5,12,21)

மறைவானது (hidden) - κρύπτω - kryptoo - 2928

வினைச்சொல் - மறைத்திரு, புதைந்திரு, புதைத்துவை, மறைவாயிரு "hide" (வெளி 2:17; வெளி 6:15-16; மத் 5:14; மத் 13:44; மத் 25:25; லூக்கா 18:34; லூக்கா 19:42; யோவான் 8:59; யோவான் 12:36; கொலோ 3:3; 1தீமோ 5:25; எபி 11:23) "kept secret" (மத் 13:35); "secretly" (யோவான் 19:38)

புசிப்பதற்கு மன்னா கொடுக்கப்படும். அது எப்படிப்பட்ட மன்னா என்று வெளிப்படுத்தப்படவில்லை.

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

2 அதிகாரம்

"வெண்மையான குறிக்கல்" (white stone) - பழங்காலத்தில இவை வெற்றிக்கு அடையாளமான கற்களாக இருந்தது. அத்துடன் மன்னிப்பு, அதற்கான உறுதிமொழி ஆகியவற்றையும் வெண்மையான குறிக்கல் விளக்கிறது. நியாயாதிபதிகளிடம் வெள்ளை நிறக்கற்களும், கருப்புநிற கற்களும் இருந்தன. குற்றவாளியிடம் கருப்புக்கல் கொடுக்கப்பட்டால் அவன் தண்டிக்கப்படுவான் வெள்ளைக்கல் கொடுக்கப்பட்டால் அவன் விடுவிக்கப்படுவான். விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறுகிறவர்களுக்கு வெள்ளைக்கற்களில் அவர்களுடைய பெயர்களைப் பதித்து, பரிசாகக் கொடுப்பது வழக்கம். இப்படிப்பட்ட பரிசுகளைப் பெறுகிறவர்களை அரசாங்கமே தன்னுடைய சொந்த செலவில் பாதுகாத்து பராமரிக்கும். ஜெயம் பெறுகிறவனுக்கு வெண்மையான குறிக்கல் கொடுக்கப்படும் என்பதற்கு இந்தப் பகுதியில் கூறப்பட்டிருக்கும் அனைத்து வியாக்கியானங்களும் பொருந்தும்.

"புதிய நாமம்" - (வெளி 3:12; ஏசா 62:2 ஏசா 65:15

4. தியத்தீரா சபைக்கு எழுதின நிருபம்

வெளி 2:18 தியத்தீரா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில் அக்கினிஜுவாலை போன்ற கண்களும் பிரகாசமான வெண்கலம்போன்ற பாதங்களுமுள்ள தேவகுமாரன் சொல்லுகிறதாவது

வெளி 2:19 உன் கிரியைகளையும், உன் அன்பையும், உன் ஊழியத்தையும், உன் விசுவாசத்தையும், உன் பொறுமையையும், நீ முன்பு செய்த கிரியைகளிலும் பின்பு செய்த கிரியைகள் அதிகமாயிருக் கிறதையும் அறிந்திருக்கிறேன்

வெளி 2:20 ஆகிலும், உன்பேரில் எனக்குக் குறை உண்டு, என்னவெனில், தன்னைத் தீர்க்கதரிசியென்று சொல்லுகிற யேசபேல் என்னும் ஸ்திரீயானவள் என்னுடைய ஊழியக்காரர் வேசித்தனம் பண்ணவும் விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கவும் அவர்களுக்குப் போதித்து அவர்களை வஞ்சிக்கும்படி நீ அவளுக்கு இடங்கொடுக்கிறாய்.

வெளி 2:21 அவள் மனந்திரும்பும்படியாய் அவளுக்குத் தவணைகொடுத்தேன் தன் வேசிமார்க்கத்தை விட்டு மனந்திரும்ப அவளுக்கு விருப்பமில்லை.

வெளி 2:22 இதோ, நான் அவளைக் கட்டிலில் கிடையாக்கி, அவளுடனே விபசாரஞ்செய்தவர்கள் தங்களுடைய கிரியைகளைவிட்டு மனந்திரும்பாவிட்டால் அவர்களையும் மிகுந்த உபத்திரவத்திலே தள்ளி

வெளி 2:23 அவளுடைய பிள்ளைகளையும் கொல்லவே கொல்லுவேன் அப்பொழுது நானே உள்ளிந்திரியங்களையும் இருதயங்களையும் ஆராய்கிறவரென்று எல்லாச் சபைகளும் அறிந்துகொள்ளும் அன்றியும் உங்களில் ஒவ்வொருவனுக்கும் உங்கள் கிரியைகளின்படியே பலனளிப்பேன்

வெளி 2:24 தியத்தீராவிலே இந்தப் போதகத்தைப் பற்றிக்கொள்ளாமலும், சாத்தானுடைய ஆழங்கள் என்று அவர்கள் சொல்லுகிறார்களே அந்த ஆழங்களை அறிந்துகொள்ளாமலுமிருக்கிற மற்றவர்களாகிய உங்களுக்கு நான் சொல்லுகிறதாவது உங்கள்மேல் வேறொரு பாரத்தையும் சுமத்தமாட்டேன்

வெளி 2:25 உங்களுக்குள்ளதை நான் வருமளவும் பற்றிக்கொண்டிருங்கள்

வெளி 2:26 ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றதுபோல, ஜாதிகள் மேல் அதிகாரம் கொடுப்பேன்

2 அதிகாரம்

வெளி 2:27 அவன் இருப்புக்கோலால் அவர்களை ஆளுவான்; அவர்கள் மண்பாண்டங்களைப்போல நொறுக்கப் படுவார்கள்

வெளி 2:28 விடிவெள்ளி நட்சத்திரத்தையும் அவனுக்குக் கொடுப்பேன்

வெளி 2:29 ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றெழுது.

"தியத்தீரா (Thyatira) - துருக்கியின் மேற்கு பகுதியில் பெர்கமுவிற்கும் (Pergamos) சர்தையுவிற்கும் (Sardis) இடையில் அமைந்துள்ள பட்டணம்.

தியத்தீரா சபையைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் காரியங்கள்

1 கிரியைகள்

2 அன்பு

3 ஊழியம்

4 விசுவாசம்

5 பொறுமை

6 அதிகமான கிரியைகள்

"நீ முன்பு செய்த கிரியைகளிலும் பின்பு செய்த கிரியைகள் அதிகமாயிருக்கிறது" முன்பும் கிரியை செய்தார்கள் இப்பொழுதும் கிரியை செய்கிறார்கள். முன்னைவிட இப்பொழுது அதிகமாகக் கிரியை செய்கிறார்கள்

தியத்தீரா சபையில் காணப்படும் குறைபாடுகள் (வெளி 2:20-21)

1 யேசபேலைப் போதிக்கும்படி இடம் கொடுத்திருக்கிறார்கள்

2 தேவனுடைய ஊழியக்காரர் வேசித்தனம் பண்ண அவளுக்கு இடம் கொடுத்திருக்கிறார்கள்

3 விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசித்து தேவனுடைய ஊழியக்காரர்களை வஞ்சிக்க அவளுக்கு இடம் கொடுத்திருக்கிறார்கள்

4 தேவனுடைய ஊழியக்காரர்களை வஞ்சிக்கும்படி அவளுக்கு இடம் கொடுத்திருக்கிறார்கள்

"யேசபேல்" (Jezebel) - 1இராஜா 18-19 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் யேசபேலும் இந்த யேசபேலும் ஒரே நபரல்ல இவள் தியத்தீரா சபையிலுள்ள ஒரு ஸ்திரீ

"அவள் மனந்திரும்பும்படியாய் அவளுக்குத் தவணைகொடுத்தேன்" - தியத்தீரா சபையிலுள்ள ஸ்திரீக்கு மனந்திரும்புவதற்கு ஒரு வாய்ப்பு கொடுக்கப்பட்டது ஆனால் அவள் மனந்திரும்பவில்லை

"வேசித்தனம்" (fornication) (மத் 5:32) வேதாகமத்தில் வேசித்தனம் என்பது பல பொருளுடையது. அவையாவன

திருமணமானவர்கள் அல்லது திருமணமாகாதவர்கள் செய்யும் விபச்சாரம் (மத் 5:32; மத் 19:9, 1கொரி 7:2, 1கொரி 10:8; 1தெச 4:3, வெளி 9:21) விபசாரம் (1கொரி 5:1; 1கொரி 10:8) விக்கிரகாராதனையும் விக்கிரகாராதனையின் ஒரு பகுதியாக விபச்சாரம் பண்ணுவதும் (2நாளா 21:11; ஏசா 23:17; எசே 16:15,26,29, அப் 15:20,29; அப் 21:25; வெளி 2:14-21, வெளி 14:8; வெளி 17:2 4; வெளி 18:3 9 வெளி 19:2) சரீரபிரகாரமான வேசித்தனம் (யோவான் 8:41 1கொரி 6:13-18) ஆவிக்குரிய வேசித்தனம் எசே 16:15,26,29, வெளி 17:2-4; வெளி 18:3-9, வெளி19:2) ஆணுடனாச்சியும் ஆணபுணர்ச்சியும் (1கொரி 6:9-11; எபி 12:16; யூதா 1:6-7, ரோமர் 1:24-29; 2கொரி 12:21, கலா 5:19, எபே 5:3, கொலோ 3:5) ஒரு சிலர் வேசித்தனம் (fornication) என்பது திருமணமாகாதவர்கள் செய்யும் உடலுறவுப பாவம் என்று கூறுகிறார்கள்

2 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 6

"இதோ நான் அவளைக் கட்டில்கிடையாக்கி, அவளுடனே விபசாரஞ்செய்தவர்கள் தங்களுடைய கிரியைகளைவிட்டு மனந்திரும்பாவிட்டால் அவர்களையும் மிகுந்த உபத்திரவத்திலே தள்ளி..." (வெளி 2:22-23) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

யேசபேலின் நிமித்தம் கொடுக்கப்படும் நியாயத்தீர்ப்பின் மூன்று அம்சங்கள்

1. நான் அவளைக் கட்டில் கிடையாக்குவேன் (யோபு 33:19)
2. அவளுடனே விபசாரஞ்செய்தவர்களை மிகுந்த உபத்திரவத்திலே தள்ளுவேன்
3. அவளுடைய பிள்ளைகளைக் கொல்லவே கொல்லுவேன் (வெளி 2:23)

உள்ளிந்திரியங்கள் (reins) - νεφρός - nephros - 3510

ஆண்பால் பெயர்சொல் உள்ளிந்திரியங்கள் (the kidneys) - மனுஷனுடைய உள்ளான சுபாவத்தைக் குறிக்கும் உவமைச்சொல் உள்ளத்தின் எண்ணங்கள்

"உங்கள் கிரியைகளின்படியே" (1கொரி 3:8 15)

"சாத்தானுடைய ஆழங்கள்" (the depths of Satan) - ஞானமார்க்கத்தார் தங்களுடைய உபதேசங்களைத் தேவனுடைய ஆழங்கள் (the depths of God) என்று அழைத்துக் கொண்டார்கள். இயேசு கிறிஸ்து அந்த உபதேசத்தைச் சாத்தானுடைய ஆழங்கள் என்று அழைக்கிறார் (வெளி 2:24)

எல்லா விசுவாசிகளும் செய்ய வேண்டிய காரியங்கள்

1. நமக்குள்ளதை கிறிஸ்து வருமளவும் பற்றிக்கொண்டிருக்க வேண்டும். (வெளி 2:25; எபி 3:6)
2. ஜெயங்கொள்ள வேண்டும். (வெளி 2:26; வெளி 2:7,11,17; வெளி 3:5)
3. முடிவுபரியந்தம் கிறிஸ்துவின் கிரியைகளைக் கைக்கொள்ள வேண்டும். (வெளி 2:26)

ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு வாக்குப் பண்ணப்பட்டிருக்கிறவைகள்

1. ஜாதிகளின்மேல் அதிகாரம் (வெளி 2:26)
2. இருப்புக்கோலால் ஜாதிகளை ஆளுதல் (வெளி 2:27)
3. எதிர்க்கும் ஜாதிகளை மண்பாண்டங்களைப் போல நொறுக்குதல் (வெளி 2:27)
4. விடிவெள்ளி நட்சத்திரம். (வெளி 2:28)

எல்லாப் பரிசுத்தவான்களும் கிறிஸ்துவின்கீழ் ராஜாக்களாகவும் ஆசாரியர்களாகவும் இருந்து பூமியை நித்திய காலமாக ஆளுகை செய்வார்கள் (வெளி 2:26-27; வெளி 1:6; வெளி 5:10; வெளி 20:4-6; வெளி 22:4-5)

தீர்க்கதரிசன எண் - 7

"ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவனெவனோ..." (வெளி 2:26-28) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை

"விடிவெள்ளி நட்சத்திரம்" (the morning star) - இயேசுகிறிஸ்து. (வெளி 22:16; எண் 24:17)

3 அதிகாரம்

5. சர்தை சபைக்கு எழுதின நிருபம்

வெளி 3:1 சர்தை சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்; தேவனுடைய ஏழு ஆவிகளையும் ஏழு நட்சத்திரங்களையும் உடையவர் சொல்லுகிறதாவது; உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன். நீ உயிருள்ளவனென்று பேர்கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய்.

வெளி 3.2 நீ விழித்துக்கொண்டு சாகிறதற்கேதுவாயிருக்கிறவைகளை ஸ்திரப்படுத்து. உன் கிரியைகள் தேவனுக்குமுன் நிறைவுள்ளவைகளாக நான் காணவில்லை.

வெளி 3.3 ஆகையால் நீ கேட்டுப் பெற்றுக்கொண்ட வகையை நினைவுகூர்ந்து, அதைக் கைக்கொண்டு மனந்திரும்பு. நீ விழித்திராவிட்டால் திருடனைப்போல் உன்மேல் வருவேன்; நான் உன்மேல் வரும் வேளையை அறியாதிருப்பாய்.

வெளி 3:4 ஆனாலும் தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சிலபேர் சர்தையிலும் உனக்குண்டு. அவர்கள் பாத்திரவான்களானபடியால் வெண் வஸ்திரந்தரித்து என்னோடேகூட நடப்பார்கள்.

வெளி 3:5 ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண் வஸ்திரம் தரிப்பிக்கப்படும்; ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன்.

வெளி3:6ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றெழுது.

"சர்தை" (Sardis) - சிமிர்னாவிற்கு கிழக்கே 40 மைல் தூரத்திலுள்ள பட்டணம். பூர்வகால லீதியாவின் (Lydia) தலைநகரம்.

"தேவனுடைய ஏழு ஆவிகள்" - (வெளி 5:6)

"ஏழு நட்சத்திரங்கள்" - (வெளி 1:20)

சர்தை சபையைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் காரியங்கள்

1. கிரியைகள் (வெளி 3:1)
2. அவர்கள் உயிருள்ளவர்களென்று பேர் கொண்டிருந்தும் செத்தவர்களாயிருக்கிறார்கள் (வெளி 3:1)
3. அவர்களுடைய கிரியைகள் தேவனுக்கு முன் நிறைவுள்ளவைகளாக இல்லை (வெளி 3:2)
4. தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சிலபேர் மட்டுமே சர்தை சபையில் இருந்தார்கள் (வெளி 3:4)

சர்தை சபையாருக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. நீ விழித்துக்கொண்டிரு. (வெளி 3:2)
2. சாகிறதற்கேதுவாயிருக்கிறவைகளை ஸ்திரப்படுத்து.
3. நீ கேட்டுப் பெற்றுக்கொண்ட வகையை நினைவுகூரு. (வெளி 3.3)
4. அதைக் கைக்கொள் (வெளி 3:3; எபி 3:6)
5. மனந்திரும்பு (வெளி 3.3,19; வெளி 2:5,16,21,22)

தீர்க்கதரிசன எண் - 8

"ஆகையால் நீ கேட்டுப் பெற்றுக்கொண்ட வகையை நினைவுகூர்ந்து, அதைக் கைக் கொண்டு மனந்திரும்பு. நீ விழித்திராவிட்டால் திருடனைப்போல் உன்மேல் வருவேன் "(வெளி 3.3-4) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (வெளி 4.4; வெளி 6:11; வெளி 7:9,13; வெளி 19:8,14

3 அதிகாரம்

"திருடனைப்போல்" - இந்த வாக்கியம் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிக்கவில்லை. சர்தை சபையார் மனந்திரும்பவில்லையென்றால் அவர்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு திடீரென்று அனுப்பப்படும் என்று இந்த வாக்கியம் பொருள்தருகிறது. கர்த்தருடைய நாளும், "இரவிலே திருடன் வருகிறவிதமாய்" வரும் என்று கூறப்பட்டிருக்கிறது. - 1தெச 5.2-4; 2பேதுரு 3:10; வெளி 3:3; வெளி 16:15 ஆகிய வசனங்களில் கர்த்தருடைய நாள் எப்படி வருமென்று இவ்வாறு விளக்கப் பட்டிருக்கிறது. வெளி 3:3 ஆவது வசனத்தில் சர்தை சபையின் நியாயத் தீர்ப்பைக் குறித்து கூறப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் வருகையும் திருடன் வருகிற விதமாக இருக்கும். (மத் 24:43)

ஜெயங்கொள்ளுகிறவர்களுக்குக் கூறப்பட்டிருக்கும் ஆசீர்வாதங்கள்

1. வெண்வஸ்திரந்தரித்து தேவனோடே கூட நடப்பார்கள் (வெளி 3:4)
2. அவர்களுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும். (வெளி 3:5; வெளி 3:18; வெளி 4:4; வெளி 6:11; வெளி 7:9,13; வெளி 15:6; வெளி 19:8,14)
3. அவர்களுடைய நாமத்தைத் தேவன் கிறுக்கிப்போடமாட்டார் (வெளி 3:5; வெளி 22:18-19; யாத் 32:32-33; சங் 69:28)
4. தம் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவர்கள் நாமத்தைக் கிறிஸ்து அறிக்கையிடுவார் (வெளி 3:5)

"வெண்வஸ்திரம்" (white raiment - (வெளி 3:4-5,18; வெளி 4:4; வெளி 6:11; வெளி 7:9,13; வெளி 15:6; வெளி 19:14) பரிசுத்தவான்களின் நீதியை இந்த வார்த்தை உருவகமாகக் குறிப்பிடுகிறது. (வெளி 19:8)

"ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல்" - வெளி 3:2-3 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவோரின் நாமங்களை இயேசு கிறிஸ்து ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப் போடமாட்டார். அவருடைய கட்டளைகளுக்கு நாம் கீழ்ப்படியவில்லையென்றால், நமது நாமமும் ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப் போடப்படும். "எனக்கு விரோதமாய்ப் பாவம் செய்தவன் எவனோ, அவன் பேரை என் புஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடுவேன் (யாத் 32:32-33) என்று தேவன் மோசேயிடம் கூறியிருக்கிறார். "ஜீவபுஸ்தகத்திலிருந்து அவர்கள் பேர் கிறுக்கப்பட்டுப்போவதாக; நீதிமான்களின் பேரோடே அவர்கள் பேர் எழுதப்படாதிருப்பதாக" (சங் 69:25-28; அப் 1:20) என்று சங்கீதக்காரன் பரிசுத்த ஆவியினால் தேவனிடத்தில் ஜெபம் பண்ணுகிறான். "ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப் போட்டால், ஜீவபுஸ்தகத்திலிருந்தும் பரிசுத்த நகரத்திலிருந்தும் இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும் அவனுடைய பங்கைத் தேவன் எடுத்துப்போடுவார்" (வெளி 22:18-19) என்று இயேசு கிறிஸ்துவும் ஜனங்களை எச்சரித்துக் கூறுகிறார்.

"நாமத்தைக் கிறுக்கிப்போடு" - (கொலோ 2:14)

6. பிலதெல்பியா சபைக்கு எழுதின நிருபம்

வெளி 3:7 பிலதெல்பியா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில், பரிசுத்தமுள்ளவரும், சத்தியமுள்ளவரும், தாவீதின் திறவுகோலை உடையவரும், ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்குப் பூட்டுகிறவருமாயிருக்கிறவர் சொல்லுகிறதாவது

வெளி 3:8 உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன். உனக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டிபடியினாலே, இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்

வெளிப்படுத்தின விசேஷம் – தொகுப்புரை

3 அதிகாரம்

வெளி 3:9 இதோ, யூதரல்லாதிருந்தும் தங்களை யூதரென்று பொய் சொல்லுகிறவர்களாகிய சாத்தானுடைய கூட்டத்தாரில் சிலரை உனக்குக் கொடுப்பேன்; இதோ அவர்கள் உன் பாதங்களுக்கு முன்பாக வந்து பணிந்து, நான் உன்மேல் அன்பாயிருக்கிறதை அறிந்து கொள்ளும்படி செய்வேன்.

வெளி 3:10 என் பொறுமையைக் குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக் கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும் படியாகப் பூச்சக்கரத்தின்மேலெங்கும் வரப்போகிற சோதனைகாலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்.

வெளி 3:11 இதோ சீக்கிரமாய் வருகிறேன்; ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு.

வெளி 3:12 ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன்; அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை; என் தேவனுடைய நாமத்தையும், என் தேவனால் பரலோகத்திலிருந்திறங்கிவருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும், என் புதிய நாமத்தையும் அவன்மேல் எழுதுவேன்.

வெளி 3:13 ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றெழுது.

"பிலதெல்பியா" (Philadelphia) சர்திஸுக்கு தென்கிழக்கில் 30 மைல் தூரத்தில் உள்ள பட்டணம்.

"தாவீதின் திறவுகோல்" (the key of David) - (வெளி 1:18)

பிலதெல்பியா சபையைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் காரியங்கள்

1 கிரியைகள்

2 கொஞ்சம் பெலன்

3 தேவனுடைய வசனத்தைக் கைக் கொண்டார்கள்

4 தேவனுடைய நாமத்தை மறுதலிக்கவில்லை.

தீர்க்கதரிசன எண் - 9

"இதோ யூதரல்லாதிருந்தும் தங்களை யூதரென்று பொய் சொல்லுகிறவர்களாகிய சாத்தானுடைய கூட்டத்தாரில் சிலரை உனக்குக் கொடுப்பேன்; இதோ, அவர்கள் உன் பாதங்களுக்கு முன்பாக வந்து பணிந்து நான் உன்மேல் அன்பாயிருக்கிறதை அறிந்து கொள்ளும்படி செய்வேன்....." (வெளி 3:9-12) வெளி 3:9-10 ஆகிய வசனங்கள் நிறைவேறின. வெளி 3:11-12 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

பத்து முன்னறிவிப்புக்கள்

இந்தப் பத்து முன்னறிவிப்புக்களில் நான்கு ஏற்கெனவே நிறைவேறியுள்ளன. இன்னும் ஆறு வருங்காலத்தில் நிறைவேறப்போகின்றன.

நிறைவேறியுள்ள முன்னறிவிப்புக்கள்

1 பொய் சொல்லுகிற அனைவரையும் வெளிப்படுத்துவேன் (வெளி 3:9)

2 அவர்கள் உன் பாதங்களுக்கு முன்பாக வந்து பணியும்படி செய்வேன்

3 நான் உன்மேல் அன்பாயிருக்கிறதை அறிந்துகொள்ளும்படி செய்வேன்

4 சோதனைக்காலத்திற்குத் தப்பும்படி நான் உன்னைக் காப்பேன் (வெளி 3:10)

நிறைவேறப்போகிற முன்னறிவிப்புக்கள்

5 சீக்கிரமாய் வருகிறேன் (வெளி 3:11; வெளி 1:7; வெளி 19:11)

6. என் தேவனுடைய ஆலயத்திலே உன்னைத் தூணாக்குவேன் (வெளி 3:12; கலா 2:9)

3 அதிகாரம்

7 அந்த ஆலயத்திலிருந்து நீ ஒருக்காலும் நீங்குவதில்லை (வெளி 3:12)

8 என் தேவனுடைய நாமத்தை உன்மேல் எழுதுவேன் (வெளி 3:12)

9 புதிய எருசலேமின் நாமத்தை உன்மேல் எழுதுவேன் (வெளி 3:12; வெளி 21:2,9-10)

10 என் புதிய நாமத்தை உன்மேல் எழுதுவேன் (வெளி 3:12)

"சாத்தானுடைய கூட்டத்தார்" **(synagogue of Satan)** - (வெளி 2:9)

"என் பொறுமையைக்குறித்துச் சொல்லிய வசனம்" - இயேசு கிறிஸ்துவின் உபதேசத்திற்குக் கீழ்ப்படிந்ததினால் விசுவாசிகளுக்குப் பலபாடுகள் உண்டாயிற்று. அவற்றை அவர்கள் பொறுமையோடு சகித்துக் கொண்டார்கள்.

"சோதனைக்காலம்" **(the hour of temptation)** தானியேலின் எழுபதாவது வாரமாகிய வருங்கால உபத்திரவக்காலத்தை இந்த வாக்கியம் குறிக்கவில்லை. யோவானின் காலத்தில் சபைகளுக்கு நேரிட்ட சோதனைகளையும் உபத்திரவங்களையும் இந்த வாக்கியம் குறிக்கிறது.

"சீக்கிரமாய் வருகிறேன்" சபையை எடுத்துக் கொள்வதற்காக இயேசு கிறிஸ்துவின் வருகையை இந்த வாக்கியம் குறிக்கிறது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக அவர் தமது சபையை எடுத்துக் கொள்வதற்கு வருவார் (1தெச 4:13-17; 2தெச 2:7)

"ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு" கிரீடத்தைப் பெற்றிருக்கும் விசுவாசிகள் தங்களுடைய கிரீடங்களை இழந்து போவதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் விசுவாசிகள் தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் தேவனுக்குப் பயந்து மிகுந்த எச்சரிக்கையோடு ஜீவிக்க வேண்டும் (வெளி 2:10)

"தூண்" **(pillar)** - ஸ்திரத்தன்மை, அதிகாரம் ஆகியவற்றைக் குறிப்பிடும் சொல். (கலா 2:9; 1தீமோ 3:15)

"என் தேவனுடைய ஆலயம்" **(temple of my God)** - இரட்சிக்கப்பட்டவர்கள் நித்தியமாகத் தங்கும் வாசஸ்தலம். (எபே 2:19-22)

"அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை" - நித்திய காலமாக இரட்சிக்கப்பட்டவர்களுடன் அவன் இருப்பான்

ஜெயங்கொள்ளுகிறவர்கள்மேல் எழுதப்படும் நாமங்கள்

1 பிதாவாகிய தேவனுடைய நாமம்

2 புதிய எருசலேமாகிய தேவனுடைய நகரத்தின் நாமம். (வெளி 21:2,9)

3. கிறிஸ்துவின் புதிய நாமம்

வெளி 7:1-8; வெளி 14:1; வெளி 22:4 ஆகிய வசனங்களில் இந்த நாமங்களைப் பற்றி வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. வெளி 13:16; வெளி 14:11; வெளி 19:20; வெளி 20:4 ஆகிய வசனங்களில் மிருகத்தின் நாமம் எழுதப் படுவதைப் பற்றி வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது.

"பரலோகத்திலிருந்திறங்கிவருகிறது" (வெளி 21:2,9-10; 24-27; வெளி 22:1-5)

7. லவோதிக்கேயா சபைக்கு எழுதின நிருபம்

வெளி 3:14 லவோதிக்கேயா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில், உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியும், தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிற ஆமென் என்பவர் சொல்லுகிறதாவது.

வெளி 3:15 உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ குளிருமல்ல, அனலுமல்ல; நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும்.

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

3 அதிகாரம்

வெளி 3:16 இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்தி பண்ணிப்போடுவேன்.

வெளி 3:17 நீ நிர்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல், நான் ஐசுவரியவானென்றும், திரவியசம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும் சொல்லுகிறபடியால்,

வெளி 3:18 நான்: நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும், உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக்கொள்வதற்கு வெண்வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும், நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம் போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்.

வெளி 3:19 நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு.

வெளி 3:20 இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்.

வெளி 3:21 நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்.

வெளி 3:22 ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றெழுது என்றார்.

"லவோதிக்கேயா" (Laodiceans) - கொலோசெ (Colossae) பட்டணத்திற்கு மேற்கில் ஒரு சில மைல்கள் தூரத்தில் அமைந்துள்ளது. இந்தப் பட்டணம் பெர்கியாவில் (Phrygia) உள்ளது.

"ஆமென்" (Amen) - (யோவான் 1:51; 2கொரி 1:20)

"தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிறவர்" - ஆதியிலே எல்லாக் காரியங்களையும் சிருஷ்டித்தவர் (யோவான் 1:3; எபே 3:9; கொலோ 1:15-18; எபி 1:2; எபி 11:3). சிருஷ்டிகளில் இயேசு கிறிஸ்து முதலாவது சிருஷ்டிக்கப்பட்டவரென்று பொருள் கூறக்கூடாது. ஏனெனில் கிறிஸ்து நித்தியமானவர். அவர் சிருஷ்டிக்கப்படவில்லை. அவர் சிருஷ்டிகராக இருக்கிறவர் (ஏசா 9:6-7; மீகா 5:2; யோவான் 1:1-2; எபி 1:8; வெளி 1:8).

லவோதிக்கேயா சபையைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் காரியங்கள்

1. கிரியைகள் (வெளி 3:15)
2. குளிருமல்ல அனலுமல்ல (வெளி 3:15)
3. குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிற நிலைமை (வெளி 3:16)
4. பெருமையும் சுயதிருப்தியும் (வெளி 3:17)
5. [redacted] நிலைமையை அறியாமலிருப்பது (வெளி 3:17)

"குளிருமல்ல அனலுமல்ல" (cold nor hot) - இவர்கள் ஆவிக்குரிய ரீதியாக மரித்தவர்களும் அல்ல, உற்சாகமாய் ஜீவிப்பவர்களும் அல்ல. தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் அசட்டையாகவும், கவனக்குறைவாகவும், வித்தியாசமாகவும் இருக்கிறவர்கள்.

தீர்க்கதரிசன வசனம் - 10

"உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப்போடுவேன்" (வெளி 3:16) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

3 அதிகாரம்

வாந்திபண்ணு (to vomit) - ἐμέω - emeoo - 1692

வினைச்சொல் - வாந்திபண்ணு

லவோதிக்கேயா சபையார் தங்களைப் பற்றிச் சொல்லிக் கொள்ளும் காரியங்கள்

1 நான் ஐசுவரியவான்

2 நான் திரவியசம்பன்னன்

3 எனக்கு ஒரு குறைவுமில்லை

லவோதிக்கேயா சபையைப் பற்றி கிறிஸ்து கணித்துக்கூறும் காரியங்கள்

1 குளிருமல்ல அனலுமல்ல (வெளி 3:15)

2 குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிற நிலைமை. (வெளி 3:16)

3 நிர்ப்பாக்கியமுள்ளவன் (Wretched)

4 பரிதபிக்கப்படத்தக்கவன் (Miserable)

5 தரித்திரன் (Poor)

6 குருடன் (Blind)

7 நிர்வாணி (Naked)

நிர்பாக்கியமுள்ள (Wretched) ταλαίπωρος - talaipooros - 5005

பொருள் - நிர்ப்பந்தமான நிர்பாக்கியமுள்ள (enduring toil; suffering hardship, as the most abject slave) (வெளி 3:17 ரோமர் 7:24

பரிதபிக்கப்படத்தக்க (Miserable) - ἐλεεινός eleeinos 1652

பொருள் - பரிதபிக்கப்படத்தக்க (pitiable) (வெளி 3:17 1கொரி 15:19)

தரித்திரன் (Poor) - πτωχός - ptoochos - 4434

பொருள் - எளிமையுள்ள, தரித்திரரான, ஏழைகளான (one who crouches, cringes; a beggar) "poor" (வெளி 3:17; வெளி 13:16 மத் 5:3; மத் 11:5; மத் 19:21; மத் 26:9,11 மாற்கு 10:21; மாற்கு 12:42-43 மாற்கு 14:5-7; லூக்கா 4:18 லூக்கா 6:20; லூக்கா 7:22 லூக்கா 14:13,21; லூக்கா 18:22 லூக்கா 19:8; லூக்கா 21:3 யோவான் 12:5-8; யோவான் 13:29 ரோமர் 15:26; 2கொரி 6:10; கலா 2:10 யாக் 2:3-6 "poor man" (யாக் 2:2 "beggarly" (கலா 4:9) "beggar" (லூக்கா 16:20, 22)

குருடன் (Blind) - τυφλός - typhlos - 5185

பொருள் - குருடான (blind in ears, mind, eyes) ஆவிக்குரிய குருடு spiritual darkness (வெளி 3:17; ரோமர் 2:19; 2பேதுரு 1:9; மத் 15:14), சரீரபிரகாரமான குருடு physical blindness (யோவான் 9

நிர்வாணி (Naked) - γυμνός - gymnos - 1131

பொருள் - வஸ்திரமில்லாத, வெறும், நிர்வாணிகளாய் (naked; unclad; stripped of arms, defenseless) "naked" (வெளி 3:17; வெளி 16:15 வெளி 17:16; மத் 25:36-44, மாற்கு 14:51-52; யோவான் 21:7, அப் 19:16; 2கொரி 5:3, எபி 4:13, யாக் 2:15) "bare" (1கொரி 15:37

லவோதிக்கேயா சபையாருக்குச் சொல்லப்படும் ஆலோசனைகள்

1 நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னை என்னிடத்திலே வாங்கிக்கொள் (வெளி 3:18)

2 வெண் வஸ்திரங்களை என்னிடத்திலே வாங்கிக்கொள் (வெளி 3:18)

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

3 அதிகாரம்

3. உன் கண்களுக்குக் கலிக்கம்போடு

4. உன் ஆத்துமாவை இரட்சித்துக் கொள்ள ஜாக்கிரதையாயிரு. (வெளி 3:19)

5. மனந்திரும்பு (வெளி 3:19 [redacted] 2:5,16; வெளி 3:3

தேவனுடைய மீட்பின் வார்த்தையும், நிபந்தனையும்

"என்னிடத்தில் வாங்கிக்கொள்" (buy of me) என்பது ஒரு வணிக வாக்கியம். தேவனுடைய நிபந்தனைகளுக்குட்பட்டு நாம் அவரோடு வணிகம் செய்ய வேண்டும். மனுஷன் பாவத்திற்கும், சாத்தானுக்கும் தன்னை அடிமையாக விற்றுவிட்டான். மனுஷனை மீட்பதற்கான முழுக்கிரயத்தையும் தேவன் செலுத்தித் தீர்த்துவிட்டார். ஆகையினால் தேவனுடைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஜீவிக்க வேண்டியது மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கும் கடமையாயிருக்கிறது. விசுவாசம், மனந்திரும்புதல், தேவனை ஆராதித்தல் ஆகிய காரியங்களை மனுஷன் கைக்கொள்ள வேண்டும். "என்னிடத்தில் வாங்கிக்கொள்" என்னும் வாக்கியத்தினால் மனுஷன் தேவனிடத்தில் பொன், பொருள் ஆகியவற்றைக் கொடுத்து அவரிடமிருந்து எதையாவது வாங்கிக்கொள்ளலாம் என்பது பொருளல்ல. தன்னுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்பி தேவனிடத்தில் விசுவாசத்தோடு வரும்போது, தன்னுடைய இரட்சிப்பைத் தேவனிடத்திலிருந்து இலவசமாக வாங்கிக் கொள்ளலாம். கிறிஸ்துவிற்காக பாடுகள் அனுபவிக்கும் கிரயம் செலுத்த வேண்டியதிருந்தால் அதை விசுவாசிகள் செலுத்த முன்வரவேண்டும். (வெளி 3:19; 2தீமோ 3:12)

என்னிடத்திலே வாங்கிக் கொள் (buy of me) - ἀγοράζω - agorazoo - 59

வினைச்சொல் - முழுக்கிரயமும் செலுத்தி சந்தையில் ஒரு பொருளை வாங்குதல்

(அ) தமது இரத்தத்தைச் சிந்தி அதை முழுக்கிரயமாகச் செலுத்தி மனுக்குலம் அனைவருக்கும் இரட்சிப்பை கிரயத்திற்கு வாங்கியுள்ளது. மீட்டுக்கொள், கொள், வாங்கு, வாங்கிக் கொள்

"நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்" - உண்மையான விசுவாசத்தை இந்த வாக்கியம் குறிக்கிறது. (1பேதுரு 1:7)

"வெண் வஸ்திரம்" (white raiment) - நீதியைக் குறிக்கும் வாக்கியம். (வெளி 19:8)

"நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம்போடு" - தேவனுடைய வார்த்தையினாலும் பரிசுத்த ஆவியானவராலும் ஒளியூட்டம் (enlightenment) பெறுவதைக் குறிக்கும் வாக்கியம். (சங் 19:8; எபே 1:18; எபி 6:4; 1யோவான் 2:27)

தீர்க்கதரிசன எண் - 11

"இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்...." (வெளி 3:20-21) வெளி 3:20 ஆவது வசனம் தினமும் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. வெளி 3:21 ஆவது வசனம் இன்னும் நிறைவேறவில்லை.

இயேசு கிறிஸ்து மனுஷரை அழைக்கும் அழைப்பின் விபரங்கள்

1. வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்

2. ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசிப்பேன்

3. அவனோடே போஜனம்பண்ணுவேன்

இயேசு கிறிஸ்துவினுடைய அழைப்பின் நிபந்தனைகள்

1. ஒருவன் என் சத்தத்தைக் கேட்டால்

2. ஒருவன் கதவைத் திறந்தால்

3. ஒருவன் என்னோடே போஜனம் பண்ண விரும்பினால்

வெளிப்படுத்தின விசேஷம் – தொகுப்புரை

3 அதிகாரம்

ஜெயங்கொள்ளுகிறவனுக்கு வாக்குப் பண்ணப்பட்டிருக்கும் ஆசீர்வாதங்கள்

1 ஜீவவிருட்சம் (The tree of life) (வெளி 2:7)

2 ஜீவகிரீடம் (The crown of life) (வெளி 2:10; வெளி 3:11)

3 இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை (Escape the second death or lake of fire) (வெளி 2:11; வெளி 20:14)

4 மறைவான மன்னா (The hidden manna) (வெளி 2:17)

5 வெண்மையான குறிக்கல்லும், புதிய நாமமும் (A white stone and a new name) (வெளி 2:17)

6 சபை எடுத்துக் கொள்ளப்படும்போது எடுத்துக்கொள்ளப்படுதல் (Part in the rapture) (வெளி 2:25; வெளி 3:11; 1தெச 4:16; பிலி 3:21; கொலோ 3:4; 1கொரி 15:23, 51-58)

7 ஜாதிகளின்மேல் அதிகாரம் (Power over the nations) (வெளி 2:26-27)

8 கலகக்காரர்களை முழுமையாக நொறுக்கிப் போடுதல் (Complete defeat of rebels) (வெளி 2:27)

9 விடிவெள்ளி நட்சத்திரம் (The Morning Star) (வெளி 2:28)

10 வெண்வஸ்திரம் தரித்து கிறிஸ்துவோடே கூட நடப்பான் (Walk with Christ in white) (வெளி 3:4-5)

11 ஜீவபுஸ்தகத்தில் அவனுடைய நாமம் நித்தியமாக இருக்கும் (Name eternally in the book of life) (வெளி 3:5; வெளி 22:18-19)

12 பிதாவிற்கு முன்பாக அவனுடைய நாமத்தை கிறிஸ்து அறிக்கை பண்ணுவார் (Confession of name before God) (வெளி 3:5)

13 தேவனுடைய ஆலயத்தில் தூணாக இருப்பான் (A pillar in God's temple) (வெளி 3:12)

14 தேவனோடு நித்திய காலமாகத் தங்கியிருப்பான் (Eternal abiding with God) (வெளி 3:12)

15 தேவனுடைய நாமம் அவன்மீது எழுதப்படும் (God's name upon him) (வெளி 3:12)

16 புதிய எருசலேமின் நாமம் அவன்மீது எழுதப்படும் (Name of the New Jerusalem upon him) (வெளி 3:12)

17 கிறிஸ்துவின் புதிய நாமம் அவன்மீது எழுதப்படும் (New name of Christ upon him) (வெளி 3:12)

18 கிறிஸ்துவினுடைய சிங்காசனத்தில் அவரோடேகூட உட்காரும்படிக்கு அருள் செய்யப்படும் (Eternal throne and kingdom) (வெளி 3:21; வெளி 1:6; வெளி 5:10; வெளி 11:15; வெளி 22:4-5)

4 அதிகாரம்

III. இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவைகள் - சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு - (4:1-22:5)

1. பரலோகத்தின் தேவாலயம் – எடுத்துக் கொள்ளப்பட்ட விசுவாசிகள் தேவனோடு இருக்கிறார்கள் - (4:1-5:14)

(1) பரலோகத்தில் திறக்கப்பட்டிருந்த ஒரு வாசல் - (1:19; 14:15-18; 15:5-8; 16:17)

வெளி 4:1 இவைகளுக்குப்பின்பு, இதோ பரலோகத்தில் திறக்கப்பட்டிருந்த ஒரு வாசலைக் கண்டேன். முன்னே எக்காளசத்தம் போல என்னுடனே பேச நான் கேட்டிருந்த சத்தமானது: இங்கே ஏறிவா, இவைகளுக்குப்பின்பு சம்பவிக்க வேண்டியவைகளை உனக்குக் காண்பிப்பேன் என்று விளம்பினது.

"இவைகளுக்குப்பின்பு" - வெளி 2-3 ஆகிய அதிகாரங்களில் சபைகளைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் காரியங்களுக்குப் பின்பு என்று பொருள். இந்த வசனத்தில் "இவைகளுக்குப் பின்பு" என்று இரண்டு முறை குறிப்பிடப் பட்டிருக்கிறது. வெளி 4-22 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் காரியங்கள் அனைத்தும் சபைகளின் காலத்திற்குப் பின்பு நிகழப்போகிறவைகளாகும். அதாவது இந்த நிகழ்ச்சிகள் சபை எடுத்துக் கொள்ளப்பட்டபின்பு (after the rapture) நடைபெறும்.

பின்பு (After this) - μετά - meta - 3326

முன்னிடைச்சொல் - பின்பு, உடன் கூட, உம், உடைய

இவைகள் (these things) ταῦτα tauta - 5023

சுட்டுப் பெயர்ச்சொல் (?) - இவைகள், இதெல்லாம், அவைகள், அந்த, இந்த, இப்படி, அதன், எவைகள் இப்படிப்பட்டவர்கள், அதற்கு

வெளி 4:1 ஆவது வசனத்தில் சபை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதற்குச் சான்றுகள்

1. வெளி 4-22 ஆகிய அதிகாரங்களில் கூறப் பட்டிருக்கும் காரியங்கள் "இவைகளுக்குப் பின்பு சம்பவிக்க வேண்டியவைகள்" என்று இயேசு கிறிஸ்து வெளிப்படுத்தியிருக்கிறார். இவைகளுக்குப்பின்பு என்பது சபைகளுக்குப் பின்பு என்று பொருள்படும் (வெளி 4:1). வெளி 4-22 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு முன்பு சபை எடுத்துக் கொள்ளப்படும். வெளி 2-3 ஆகிய அதிகாரங்களில் கூறப் பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் நடைபெறும் பொழுது சபை இந்த உலகத்தில் இருந்தது. அதன்பின்பு சபை எடுத்துக் கொள்ளப் பட்டு, வெளி 4-22 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் காரியங்கள் நடைபெறும். அப்போது சபை இந்த உலகத்தில் இராது.

2. "சபை" என்னும் வார்த்தை வெளி 1-3 ஆகிய அதிகாரங்களில் 19 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தப் புஸ்தகத்தின் மூன்றாவது பகுதியான வெளி 4:1-22:5 ஆகிய வசனப்பகுதிகளில் "சபை" என்னும் வார்த்தை ஒரு தடவை கூடப் பயன்படுத்தப்படவில்லை. ஆகையினால் "இவைகளுக்குப் பின்பு சம்பவிக்க வேண்டியவைகள்" என்பது சபைக் காலத்திற்குப் பின்பு சம்பவிக்க வேண்டியவைகளாகும். வெளிப்படுத்தின விசேஷத்தின் முடிவுரையில் சபையைப் பற்றி மறுபடியும் கூறப்பட்டிருக்கிறது. (வெளி 22:6-21) நிறைவேற வேண்டியவைகள் பூரணமாக வெளிப்படுத்தப்பட்ட பின்பே சபையைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. வெளி 4-22 ஆகிய அதிகாரங்களில் காணப்படும் நிகழ்ச்சிகள் நிறைவேறும் போது சபை பூமியில் இருந்திருக்குமென்றால் இந்த அதிகாரங்களில் சபையைப் பற்றிய குறிப்பு நிச்சயமாகவே காணப்பட்டிருக்கும்.

வெளிப்படுத்தின விசேஷம் – தொகுப்புரை

4 அதிகாரம்

3 சிங்காசனங்களில் வீற்றிருக்கும் மூப்பர்கள் உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களின் பிரதிநிதிகளாவார்கள். வெளி 4:1 ஆவது வசனத்திற்குப் பின்பு அவர்கள் பரலோகத்தில் காணப்படுகிறார்கள் (வெளி 4:4)

4 தானியேலின் எழுபதாவது வாரம் இக்காலத்தின் கடைசி ஏழு வருஷமாக இருக்கும். இக்காலத்தில் வெளி 4-19 மத் 24-25 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் காரியங்கள் அனைத்தும் நிறைவேறும். வாரம் என்பது இஸ்ரவேலைக் குறிக்கும். சபையைக் குறிக்காது. ஆகையினால் வாரத்திற்கு முன்பாகவே சபை எடுத்துக் கொள்ளப்படும்.

5 வெளி 4:1 ஆவது வசனத்தைத் தவிர சபை எடுத்துக் கொள்ளப்படுவதற்கும் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் எடுத்துக் கொள்ளப்படுவதற்கும் வேறு வசன ஆதாரம் எதுவுமில்லை. தானியேலின் எழுபதாவது வாரத்தில் உபத்திரக்காலத்தின் பரிசுத்தவான்களும், ஆண்பிள்ளையும் (man-child) மட்டுமே இரட்சிக்கப்பட்டு, எடுத்துக் கொள்ளப்பட்டார்கள். இவர்கள் வேறு, பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களும் சபையும் வேறு. (வெளி 4:4) ஆகையினால் சபையானது வெளி 4:1 ஆவது வசனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். வெளி 2-3 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் நிறைவேறிய பின்பும் வெளி 4-22 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் நிறைவேறுவதற்கு முன்பும் சபை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும். சபை என்பது ஆண்பிள்ளையோ அல்லது உபத்திரவக் காலத்து பரிசுத்தவான்களோ அல்ல (வெளி 7; வெளி 12; வெளி 14)

6 லூக்கா 21:34-36 ஆகிய வசனங்களில் இயேசு கிறிஸ்து "இனி சம்பவிக்கப் போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப் படுவதற்கு எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள்" என்று கூறியிருக்கிறார். மத் 24:4-26, லூக்கா 21:4-19, வெளி 6-19 ஆகிய வசனங்களிலும், அதிகாரங்களிலும் கூறப்பட்டிருக்கும் காரியங்களிலிருந்து அவர்கள் தப்பித்துக் கொள்வார்கள்.

7 தேவனுடைய கோபாக்கினையிலிருந்து பரிசுத்தவான்கள் தப்பித்துக் கொள்வார்கள் என்று 1தெச 5:1-9 ஆகிய வசனங்களில் நமக்கு வேறொரு வாக்குத்தத்தமும் உள்ளது. (வெளி 6-19) "தேவன் நம்மைக் கோபாக்கினைக்கென்று நியமிக்காமல் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் இரட்சிப்படைவதற்கென்று நியமித்தார். நாம் விழித்திருப்பவர்களானாலும், நித்திரையடைந்தவர்களானாலும், நம்முடனேகூட நாம் ஏகமாய்ப் பிழைத்திருக்கும்படி அவர் நமக்காக மரித்தாரே. ஆகையால் நீங்கள் செய்து வருகிறபடியே, ஒருவரையொருவர் தேற்றி, ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்யுங்கள்" (1தெச 5:9-11) தேவன் நம்மைக் கோபாக்கினைக்கென்று நியமித்திருப்பாரென்றால், ஒருவரையொருவர் நம்மால் தேற்ற முடியாது (1தெச 4:16-17; தீத்து 2:13)

8 2தெச 2:6-8 ஆவது வசனத்தில் தானியேலின் எழுபதாவது வாரத்திற்கு முன்பும் அந்திக்கிறிஸ்து வெளிப்படுவதற்கு முன்பும் சபை எடுத்துக் கொள்ளப்படும் என்று வாசிக்கிறோம். வெளி 4-19 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் இந்த வாரத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளாகும். ஆகையினால் வெளி 4:1 ஆவது வசனத்தில் சபை எடுத்துக் கொள்ளப்படும் என்பது தெளிவாகிறது.

வெளிப்படுத்தின விசேஷம் – தொகுப்புரை

4 அதிகாரம்

9 வெளி 1-3 ஆகிய அதிகாரங்களில் மனுக்குலத்தின்மீது தேவனுடைய மனப்பான்மை கிருபையும் இரக்கமும் நிறைந்ததாய் உள்ளது. வெளி 4-19 ஆகிய அதிகாரங்களில் மனுக்குலத்தின் மீது தேவனுடைய மனப்பான்மை நியாயத் தீர்ப்பு வருவிக்கக்கூடியதாக இருக்கிறது. தானியேலின் எழுபதாவது வாரத்தில் நாம் வாசிக்கும் முத்திரைகள் எக்காளங்கள் கிண்ணங்கள் ஆகியவை தேவனுடைய நியாயத்தீர்ப்பை வெளிப்படுத்துகின்றன. சபை இவற்றின் மூலமாகச் செல்லவில்லையென்றால் வெளி 4:1 ஆவது வசனத்தில் சபையானது எடுத்துக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

10 வெளி 4:1 ஆவது வசனத்திற்குப் பின்பு இஸ்ரவேலைப் பற்றி விசேஷமாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்த வசனத்திற்கு முன்பு வரையிலும் சபையைப் பற்றியே விசேஷமாகக் கூறப்பட்டுள்ளது. வெளி 4-19 ஆகிய அதிகாரங்களில் பூமியில் சபை இருந்திருக்குமென்றால் அந்தச் சபையைப் பற்றி விசேஷமாகக் கூறப்பட்டிருக்கும். ஆனால் இந்த அதிகாரங்களில் சபையைப் பற்றி எதுவும் கூறப்படவில்லை. வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகத்தில் இரண்டு பகுதிகள் உள்ளன. முதலாவது பகுதி வெளி 4:1 ஆவது வசனத்திற்கு முற்பட்ட பகுதியாகும். இந்த அதிகாரங்களிலும் வசனங்களிலும் சபை எடுத்துக் கொள்ளப் படுவதற்கு முன்பாக நடைபெறும் நிகழ்ச்சிகளை வாசிக்கிறோம். இந்தப் புஸ்தகத்தின் இரண்டாவது பகுதி வெளி 4:1 ஆவது வசனத்திற்குப் பின்பு வெளி 19 ஆவது அதிகாரம் வரையிலுள்ள பகுதியாகும். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாகவும் சபை எடுத்துக் கொள்ளப்படுவதற்குப் பின்பாகவும் நடைபெறும் நிகழ்ச்சியை இந்த அதிகாரங்களும் வசனங்களும் விளக்குகின்றன.

வெளி 4:1 ஆவது வசனத்திற்குப் பின்பு இஸ்ரவேலைப் பற்றி விசேஷமாகக் கூறப்பட்டிருக்கும் காரியங்கள்

1 மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் பழைய ஏற்பாட்டைக் குறித்து 92 வசனங்களும் எபிரெய நிருபத்தில் 102 வசனங்களும் உள்ளன. வெளிப்படுத்தின விசேஷத்திலோ 285 வசனங்கள் பழைய ஏற்பாட்டைக் குறிப்பிடுகிறது. ஆகையினால் வெளி 4:1 ஆவது வசனத்திற்குப் பின்பு இந்தப் புஸ்தகத்தின் யூதஅம்சம் (Jewish character) நிரூபணமாகிறது.

2 வெளி 4-22 ஆகிய அதிகாரங்களில் "ஆட்டுக்குட்டி" "Lamb" என்னும் வார்த்தை 27 தடவைகள் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. ஆனால் வெளி 1-3 ஆகிய அதிகாரங்களிலும் ஆட்டுக்குட்டி என்னும் வார்த்தை ஒருதடவை கூடப் பயன்படுத்தப் படவில்லை. பவுலின் நிருபங்களில் சபைகளைக்குறிப்பதற்கு ஆட்டுக்குட்டி என்னும் வார்த்தை பயன்படுத்தப் படவேயில்லை. புதிய ஏற்பாட்டில் மொத்தம் 4 தடவைகள் மட்டுமே ஆட்டுக்குட்டி என்னும் வார்த்தை பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இந்த நான்கு இடங்களிலும் இந்த வார்த்தை இஸ்ரவேலோடு தொடர்பு படுத்தியே பயன்படுத்தப்பட்டுள்ளது. (யோவான் 1:29,36; அப் 8:32; 1பேதுரு 1:19)

3 "யூதாகோத்திரத்துச் சிங்கம்" "the Lion of Judah" "தாவீதின் வேருமானவர்" "the Root of David" ஆகிய வாக்கியங்கள் யூத அம்சத்தை வெளிப்படுத்துகின்றன. (வெளி 5:5)

4 வெளி 7:1-8; வெளி 14:1-5 ஆகிய வசனங்களில் காணப்படும் 144,000 என்னும் எண்ணிக்கை யூதஅம்சத்தை வெளிப்படுத்துகிறது. சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு, நடைபெற்ற நிகழ்ச்சிகளின் மூலமாக இவர்கள் இரட்சிக்கப்படுவார்கள்

வெளிப்படுத்தின விசேஷம் – தொகுப்புரை

4 அதிகாரம்

5 முத்திரைகள் எக்காளங்கள் பொற்கலசங்கள் ஆகிய நிகழ்ச்சிகள் எகிப்தின்மீது வருவிக்கப்பட்ட வாதைகளை மறுபடியும் நினைவூட்டுகிறது. எகிப்தின்மீது அனுப்பப்பட்ட வாதைகள் புறஜாதியார் இஸ்ரவேலைத் துன்புறுத்தியதற்காக அனுப்பப்பட்டதாகும். முத்திரைகள் எக்காளங்கள் பொற்கலசங்கள் ஆகியவையும் இதே காரணத்திற்காகவே நடைபெறும் நிகழ்ச்சிகளாகும். புறஜாதியார் இஸ்ரவேல ஜனங்களை ஒடுக்கி துன்புறுத்தியதற்காக அவர்கள்மீது ஆக்கினைத் தீர்ப்பு வரும் என்றும் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களை இவை நிறைவேற்றுகின்றன (ஏசா 24:21 ஏசா 26:20-21, ஏசா 29:6-8, எரே 30:6-9 எசே 38-39; தானி 12:1) இந்தத் தீர்க்கதரிசனங்களில் எதுவும் சபையைக் குறித்துக் கூறப்படவில்லை.

6 வெளி 6-19 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் உபத்திரவகாலம் இஸ்ரவேலுக்குரியது. (எரே 30:6-9 தானி 2:? மத் 24:15-22)

7 தானியேலின் எழுபதாவது வாரம் இஸ்ரவேலுக்கும் எருசலேமுக்கும் மட்டுமே உரியது (தானி 9:24-27)

8 தானியேலின் அறுபத்திதொன்பதாவது வாரத்திற்கும், எழுபதாவது வாரத்திற்கும் இடையில் சபையின் காலம் வருகிறது. ஆகையினால் தானியேலின் எழுபதாவது வாரத்தில் இஸ்ரவேலைக் குறித்த காரியங்களே நடைபெறுகின்றன (தானி 9:24-27)

9 வெளி 4-19 ஆகிய அதிகாரங்களில் இரட்சிக்கப்பட்டிருக்கும் புறஜாதியார்கள் உபத்திரவக் காலத்து பரிசுத்தவான்கள் ஆவார்கள் அவர்கள் சபையார் அல்ல (வெளி 6:9-11 வெளி 7:9-17; வெளி 15:2-4 வெளி 20:4-6 இந்த நிகழ்ச்சி வெளி 4-19 ஆகிய அதிகாரங்களின் யூதஅம்சத்தை உறுதிபண்ணுகிறது.

10. பலிபீடத்தைச் சுற்றிலும் நடைபெறும் தூதர்களுடைய ஊழியம் இஸ்ரவேலுக்கே உரியது. (வெளி 8:2-5

11 தீர்க்கதரிசிகளால் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிற தேவ ரகசியம் யூத அம்சமுடையது. (வெளி 10:7)

12 வெளி 11 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் தேவாலயம் பலிபீடம் தேவாலய ஆராதனை தேவாலயத்தின் பிரகாரம் பரிசுத்த நகரம் ஒலிவமரங்கள் உடன்படிக்கைப் பெட்டி ஆகியவை யாவும் யூதஅம்சமுடையவையே

13 உலகத்தின் ராஜ்ஜியங்கள் கிறிஸ்துவுக்குரிய ராஜ்ஜியங்களாயின என்னும் சத்தியம் யூதருடைய தீர்க்கதரிசிகள் கூறியவற்றின் நிறைவேறுதலாகும் (வெளி 11:15 ஏசா 9:6-7 தானி 7:13-14 சக 14:1-21; லூக்கா 1:32-33)

14 வெளி 12 ஆம் அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் ஸ்திரீ ஆண்பிள்ளை ஆகியவை யூதஅம்சமுடையவை

15 ஏழு தலைகளையும் 10 கொம்புகளையும் உடைய வலுசர்ப்பம் புறஜாதியாரின் காலங்களில் இஸ்ரவேலைத் துன்புறுத்திய ஜாதிகளின் ஆளுகை ஆகியவை இவற்றின் யூதமார்க்கத்துத் தொடர்பை உறுதிபண்ணுகிறது. (வெளி 12) இந்த அடையாளங்கள் சபையுடன் தொடர்புடையதல்ல

16 மிகாவேல் (Michael) (வெளி 12:7) எப்பொழுதும் இஸ்ரவேலோடு தொடர்புடையவன் (தானி 10:13-21, தானி 12:1)

17 "மற்றவர்கள்" (வெளி 12:17) என்னும் வார்த்தையும் "கொஞ்சம்பேர்" (The remnant) (ஏசா 1:9) என்னும் வார்த்தையும் யூதஅம்சமுடையவை.

18 பாபிலோனைப் பற்றிய நிகழ்ச்சிகள் (வெளி 16:17-21; வெளி 18:1-24 யூதரோடு தொடர்புடையவை (ஏசா 13-14; எரே 50-51) சபைக்கும், பாபிலோனுக்கும் தொடர்பில்லை.

4 அதிகாரம்

19 அர்மகெதோன் (Armageddon) இரண்டாம் வருகை (வெளி 16:13-16 வெளி 19:11-21) ஆகிய வார்த்தைகள் அதனுடைய தொடர்பை உறுதி பண்ணுகிறது.

20 ஆயிரம் வருஷ அரசாட்சி, புதிய பூமி ஆகியவை இஸ்ரவேலோடு தொடர்பு படுத்தி பழைய முன்னறிவிக்கப் பட்டிருக்கிறது. (வெளி 20–22; ஏசா 2 ஏசா 65, ஏசா 66)

"பரலோகத்தில் திறக்கப்பட்டிருந்த ஒரு வாசல்" - பரலோகத்தில் மெய்யாகவே ஒரு வாசல் திறக்கப்பட்டது.

கதவு (door) - θύρα - thyra - 2374

பெண்பால் பெயர்ச்சொல் - கதவு வாசல் (a portal or entrance; door; gate. door (மத் 6:6; மத் 25:10; மத் 28:2, etc.); gate (அப் 3:2)

"முன்னே எக்காளசத்தம் போல என்னுடனே பேச நான் கேட்டிருந்த சத்தம் (வெளி 1:10 12:17 20) ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் சத்தம்

தீர்க்கதரிசன எண் - 12

"இங்கே ஏறிவா, இவைகளுக்குப்பின்பு சம்பவிக்கவேண்டியவைகளை உனக்குக் காண்பிப்பேன்" (வெளி 4:1 22:7) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை

மனுஷர் ஆவிக்குள்ளானதற்கு எடுத்துக் காட்டுகள்

1 ஏனோக்கு (Enoch) (ஆதி 5:24 சக 4:14, எபி 11:5, வெளி 11)

2 எலியா (Elijah) (2இராஜா 2:11; சக 4:14, மல் 4:5-6; வெளி 11)

3 இயேசு (Jesus) (உயிர்த்தெழுந்த சரீரத்தில்) (in a resurrected body, மாற்கு 16:19; லூக்கா 24:39,51, அப் 1:11)

4 பவுல் (Paul) (2கொரி 12:1-8

5. யோவான் (John) (வெளி 4:1-5:14

6 பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் அநேகருடைய சரீரங்கள் (மத் 27:52-53; எபே 4:8-10)

7 உயிர்த்தெழுந்த சரீரம் கொடுக்கப்படாத இரட்சிக்கப்பட்ட எல்லா ஆத்துமாக்களும் ஆவிகளும் (எபே 4:8-10; 2கொரி 5:8 பிலி 1:21-24; எபி 12:23)

சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு நடைபெறப்போகும் நிகழ்ச்சிகள்

1 முதலாம் முத்திரை - அந்திக்கிறிஸ்துவின் எழுச்சி (The 1st seal: rise of Antichrist) (வெளி 6:1)

2 இரண்டாம் முத்திரை - யுத்தம் (The 2nd seal: war) (வெளி 6:3-4

3 மூன்றாம் முத்திரை - பஞ்சம் (The 3rd seal: famine) (வெளி 6:5-6

4 நான்காம் முத்திரை - மரணமும் பாதாளமும் (The 4th seal: death and hell) (வெளி 6:7-8

5 ஐந்தாம் முத்திரை - இரத்தச் சாட்சியாக மரித்தோருடைய ஆத்துமாக்கள் (The 5th seal. first martyrs) (வெளி 6:9-11)

6 ஆறாம் முத்திரை - தேவனுடைய கோபம் (The 6th seal. wrath of God) (வெளி 6:12-17)

7 இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் யூதர்கள் முத்திரை போடப்பட்டார்கள் (The 144,000 Jews sealed) (வெளி 7:1-8)

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

4 அதிகாரம்

8 மிகுந்த உபத்திரவத்தில் இரத்தச்சாட்சியாக மரித்தவர்களின் ஆராதனை (The Tribulation martyrs worship) (வெளி 7:9-17)

9 ஏழாம் முத்திரை - பரலோகத்தில அமைதல் உண்டாயிற்று. (The 7th seal: silence in heaven) (வெளி 8:1)

10 ஏழு தூதர்களுக்கு ஏழு எக்காளங்கள் கொடுக்கப்பட்டது. (The 7 angels given 7 trumpets) (வெளி 8:2)

11 ஆசாரிய தூதனுடைய ஆராதனை (Priestly angel ministers) (வெளி 8:3-5)

12 ஏழு தூதர்கள் எக்காளம் ஊதுகிறதற்கு தங்களை ஆயத்தப்படுத்தினார்கள். (The 7 angels prepare to sound) (வெளி 8:6)

13 முதலாம் எக்காளம் - இரத்தங்கலந்த கல்மழையும் அக்கினியும் உண்டாயிற்று. (The 1st trumpet: hail, fire, blood) (வெளி 8:7)

14 இரண்டாம் எக்காளம் - சமுத்திரத்தில் மூன்றிலொருபங்கு இரத்தமாயிற்று. (The 2nd trumpet: sea to blood) (வெளி 8:8-9)

15 மூன்றாம் எக்காளம் - தண்ணீரில மூன்றிலொருபங்கு எட்டியைப்போல கசப்பாயிற்று. (The 3rd trumpet: waters poisoned) (வெளி 8:10-11)

16 நான்காம் எக்காளம் - சூரியன் சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியவற்றில் மூன்றிலொரு பங்கு இருளடைந்தது. (The 4th trumpet: planets darkened) (வெளி 8:12)

17 ஒரு தூதன் ஐயோ, ஐயோ, ஐயோ (ஆபத்துவரும்) என்று சொன்னான் (Angel announces 3 woes) (வெளி 8:13)

18 ஐந்தாம் எக்காளம் - முதலாம் ஐயோ - ஜனங்களைச் சேதப்படுத்துவதற்குப் பிசாசுகள் விடுவிக்கப்பட்டன (The 5th trumpet: the first woe—loosing of demons to torment people) (வெளி 9:1-12)

19 ஆறாம் எக்காளம் - இரண்டாம் ஐயோ - மனுஷரில் மூன்றிலொருபங்கைக் கொல்லும் படிக்கு நான்கு தூதர்கள் அவிழ்த்து விடப்பட்டார்கள் அவர்களுடைய இராணுவங்களின் தொகை 20 கோடியாய் இருந்தது. (The 6th trumpet: the second woe—loosing of 200,000,000 demons to slay 1/3 of mankind) (வெளி 9:13-21)

20 தேவனுடைய ஆலயத்தையும் பரிசுத்த நகரத்தையும் அசுசிப்படுத்துதல (Temple and city defiled) (வெளி 11:1-2)

21 பூமியில இரண்டு சாட்சிகள் தோன்றுதல (The 2 witnesses appear on earth) (வெளி 11:3-12)

22 எருசலேமில மகாபெரிய பூமியதிர்ச்சி (Great earthquake in Jerusalem) (வெளி 11:13)

23 ஏழாம் எக்காளம் - அறிவிப்புகள் (The 7th trumpet: announcements) (வெளி 11:15-18)

24 பரலோகத்தில தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது. (Heavenly temple opened) (வெளி 11:19)

25. சூரியனை அணிந்திருந்த ஸ்திரீ வருத்தப்பட்டு அலறினாள் (Sun clothed woman travails) (வெளி 12:1-2)

வெளிப்படுத்தின விசேஷம் – தொகுப்புரை

4 அதிகாரம்

26. வலுசர்ப்பம் ஆண்பிள்ளையைப் பட்சித்துப் போடும்படிக்கு எதிர்த்து நின்றது. (Dragon attacks the man child) (வெளி 12:3-4)

27. ஆண்பிள்ளை பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. (Man-child caught up to heaven) வெளி 12:5

28. ஸ்திரீயானவள் மூன்றரை வருஷங்களுக்கு (ஆயிரத்திரு நூற்றறுபது நாள்) வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள் (The woman flees for 3 1/2 years) (வெளி 12:6)

29. வானத்திலே யுத்தம் உண்டாயிற்று. (War in heaven) (வெளி 12:7-12)

30. வலுசர்ப்பம் ஸ்திரீயைத் துன்பப்படுத்தினது. (Satan attacks the woman) (வெளி 12:13-16)

31. வலுசர்ப்பம் (சாத்தான்) ஸ்திரீயின் சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம் பண்ணப் போயிற்று. (Satan attacks the remnant) (வெளி 12:17)

32. சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பி வந்தது அந்திக்கிறிஸ்துவிற்கு ஜாதிகளின்மேல் அதிகாரம் கொடுக்கப்பட்டது. (Beast out of sea, Antichrist given power over nations) (வெளி 13:1 10,18

33. வேறொரு மிருகம் பூமியிலிருந்து எழும்பி வந்தது - கள்ளத்தீர்க்கதரிசி மிருகத்தை வணங்கும் ஆராதனையை ஆரம்பித்தான (Beast out of earth: false prophet begins beast worship) (வெளி 13:11-17)

34. 144,000 யூதர்கள், ஆண்பிள்ளை ஆகியோர் தேவனுக்கு முன்பாக நின்றார்கள் (The 144,000 Jews, the man child, presented to God) (வெளி14:1-5)

35. வேறொரு தூதன் நித்திய சுவிசேஷத்தை அறிவித்தான் (Everlasting gospel preached by an angel) (வெளி 14:6-7)

36. பாபிலோன் மகா நகரம் விழுந்தது என்று வேறொரு தூதன் அறிவித்தான் (Fall of Babylon announced by angel) (வெளி 14:8)

37. மிருகத்தை வணங்குகிறவர்கள் அக்கினியினாலும், கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவார்கள் என்று வேறொரு தூதன் அறிவித்தான் (Doom of beast worshipers announced by an angel) (வெளி 14:9-12)

38. கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் (இரத்தச்சாட்சிகள்) இதுமுதல் பாக்கியவான்கள் என்று எழுதப்பட்டார்கள் (Blessing to martyrs announced) (வெளி 14:13)

39. அறுவடை - அர்மகெதோன் (Harvest: Armageddon) (வெளி 14:14-16)

40. பழுத்த குலைகளின் அறுவடை - அர்மகெதோன் (Vintage: Armageddon) (வெளி 14:17-20)

41. தேவனுடைய கோபாக்கினையினால் நிறைந்த ஏழு பொற்கலசங்கள் (The 7 vial judgments prepared) (வெளி 15:1,6-7)

42. உபத்திரவக்காலத்தில் இரத்தச் சாட்சிகளாக மரித்தவர்களுடைய ஆராதனை (Tribulation martyrs worship) (வெளி 15:2-4)

43. பரலோகத்திலே சாட்சியின் கூடாரமாகிய ஆலயம் திறக்கப்பட்டது. (Heavenly tabernacle opened) (வெளி 15:5-16:1

44. முதலாம் கலசம் - மனுஷர்களுக்கு பொல்லாத கொடிய புண் உண்டாயிற்று. (The 1st vial: sores on people) (வெளி 16:2)

வெளிப்படுத்தின விசேஷம் – தொகுப்புரை

4 அதிகாரம்

45. இரண்டாம் கலசம் - சமுத்திரம் செத்தவனுடைய இரத்தம்போலாயிற்று. (The 2nd vial: sea to blood) வெளி 16:3

46. மூன்றாம் கலசம் - ஆறுகளும் நீரூற்றுகளும் இரத்தமாயின. (The 3rd vial: rivers to blood) வெளி 16:4-7

47. நான்காம் கலசம் - மிகுந்த உஷ்ணத்தினால் மனுஷர்கள் தகிக்கப்பட்டார்கள் (The 4th vial: great heat) (வெளி 16:8-9)

48. ஐந்தாம் கலசம் - இருள் (The 5th vial: darkness) (வெளி 16:10-11)

49. ஆறாம் கலசம் - ஐபிராத் நதியின் தண்ணீர் வற்றிப்போயிற்று. (The 6th vial: Euphrates dried up) வெளி 16:12

50. மூன்று அசுத்த ஆவிகள் ஜாதிகளை அர்மகெதோன் யுத்தத்திற்குக் கூட்டிச்சேர்த்தல். (The 3 unclean spirits: mobilization of nations to Armageddon) (வெளி 16:13-16

51. ஏழாம் கலசம் - பூமியதிர்ச்சி பாபிலோனும், மற்ற நகரங்களும் அழிந்தன (The 7th vial: great earthquake -literal Babylon and other cities destroyed) (வெளி 16:17-21, வெளி 18:1-24)

52. பூமியின் ராஜாக்கள் மகா வேசியோடே வேசித்தனம் பண்ணினார்கள் (Kings of earth commit fornication with the great whore) (வெளி 17:1-5)

53. மகாவேசி பரிசுத்தவான்களை இரத்தச்சாட்சிகளாக மரிக்கச் செய்தாள் (The great whore martyrs saints) (வெளி 17:6-7)

54. எட்டாவது ராஜ்யம் உண்டாயிற்று. (The 8th kingdom formed) (வெளி 17:8-13)

55. ஆட்டுக்குட்டியானவருடனே யுத்தம் (War on the Lamb) (வெளி 17:14

56. மகாவேசியோடு யுத்தம். (War on the great whore) (வெளி 17:15-18)

57. ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் (Marriage of the Lamb) (வெளி 19:1-10)

58. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை. (The 2nd coming of Christ) (வெளி 19:11-16)

59. ஒரு தூதன் பறவைகளை மகா தேவன் கொடுக்கும் விருந்துக்குக் கூடிவாருங்கள் என்று மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டான் (Angel invitation to birds) (வெளி 19:17-18)

60. அர்மகெதோனில் யுத்தம். (Battle of Armageddon) (வெளி 19:19-21)

61. சாத்தான் கட்டி வைக்கப்பட்டான் (Binding of Satan) (வெளி 20:1-3

62. முதலாம் உயிர்த்தெழுதல் நிறைவு பெறுகிறது - கிறிஸ்துவின் ஆயிரம் வருஷ அரசாட்சி ஆரம்பமாகிறது. (The first resurrection completed. Millennial reign of Christ begins) (வெளி 20:4-6

63. சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாகிறான் (Satan loosed on earth) (வெளி 20:7)

64. பூமியின்மீது நடைபெறும் கடைசிக் கலகம். (The last rebellion on earth) (வெளி 20:8-9)

65. சாத்தான் நரகத்தில் தள்ளப்பட்டான் (Satan sent to hell) (வெளி 20:10

4 அதிகாரம்

66. இரண்டாம் உயிர்த்தெழுதல் - மரித்துப்போன துன்மார்க்கருடைய நியாயத்தீர்ப்பு (**The 2nd resurrection judgment of the wicked dead**) (வெளி 20:11-15)

67. புதிய வானமும், புதிய பூமியும் - (**New heaven and earth**) (வெளி 21:1-22:5)

68. தேவனுடைய நகரம் - புதிய எருசலேம் பரலோகத்தை விட்டு இறங்கிவருகிறது. (**God's capital city, New Jerusalem, descends to earth**) (வெளி 21:2,9-23)

"இவைகளுக்குப்பின்பு" - வெளி 2-3 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகளுக்குப் பின்பு. யோவான் 5:1)

பின்பு (**hereafter**) - **μετά** - **meta** - 3326

முன்னிடைச்சொல் - உடன் கூட உம், உடைய

இவைகளுக்குப்பின்பு (**after these things**) - **ταῦτα** - **tauta** - 5023

பணமை விளக்கப் பிரதிபெயர்ச்சொல் - இவைகள், இதெல்லாம், அவைகள் அந்த, இந்த, இப்படி, அதன் எவைகள் இப்படிப்பட்டவர்கள் அதற்கு

(2) பரலோகத்தில் ஒரு சிங்காசனம்

(1:4; 3:21; 4:5,10; 5:1,13; 6:16; 7:9,17; 8:3; 12:5; 14:3,5; 16:17; 19:4,5; 20:11; 21:5; 22:1,3; ஏசா 6:1; தானி 7:9; எசே 1:26; 10:1; எபி 1:3; 12:2

வெளி 4:2 உடனே ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது, இதோ, வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது, அந்தச் சிங்காசனத்தின் மேல் ஒருவர் வீற்றிருந்தார்

வெளி 4:3 வீற்றிருந்தவர், பார்வைக்கு வச்சிரக்கல்லுக்கும் பதுமராகத்துக்கும் ஒப்பாயிருந்தார்; அந்தச் சிங்காசனத்தைச் சுற்றி ஒரு வானவில்லிருந்தது, அது பார்வைக்கு மரகதம்போல் தோன்றிற்று.

"ஆவிக்குள்ளானேன்" - (வெளி 1:10)

"வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது" - வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகத்தில் காணப்படும் நிகழ்ச்சிகளின் மையப்பகுதி இந்தச் சிங்காசனமே. இந்தப் புஸ்தகத்தில் 40 தடவைகள் இந்தச் சிங்காசனத்தைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது (வெளி 1:4; வெளி 3:21; வெளி 4:2-6,9-10; வெளி 5:1,6--7,11,13; வெளி 6:16; வெளி 7:9-11,15,17; வெளி 8:3; வெளி 12:5; வெளி 14:3,5; வெளி 16:17; வெளி 19:4-5; வெளி 20:4,11; வெளி 21:5; வெளி 22:1,3

"அந்தச் சிங்காசனத்தின்மேல் ஒருவர் வீற்றிருந்தார்" - தேவன் ஒரு ஆள்தத்துவம் உடையவர் ஆகையினால் அவர் சிங்காசனத்தின்மீது வீற்றிருக்கிறார். தேவன் ஆவியாக இருக்கிறார். ஆனாலும் அவர் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார். ஆவியில் இருக்கும் மனுஷர்கள் பாதாளத்திலும் (லூக்கா 16:19-31; வெளி 20:11-15), பரலோகத்தின் பலிபீடத்திலும் (வெளி 6:9) வஸ்திரம் தரித்திருக்கும்போது ஆவியாக இருக்கும் தேவனால் சிங்காசனத்தில் வீற்றிருக்க முடியும். ஆவிகள் நரகத்திலும் (**tartarus**) (2பேதுரு 2:4; யூதா 1:6-7), பாதாளத்திலும் (**abyss**) (வெளி 9:1-21; வெளி 20:1-3) இருக்கிறதை நாம் நம்பும்பொழுது ஆவியாக இருக்கும் தேவன் சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பதையும் நம்பலாம். (ஏசா 6; யோவான் 5:37; அப் 7:55; யோவான் 4:24

"பதுமராகம்" (**jasper**) - (யாத் 28:20; யாத் 39:13; எசே 28:13; வெளி 4:3; வெளி 21:11,18,19)

வச்சிரக்கல் (**sardine stone**) **σάρδιον** - **sardion** 4556

பெயரடை - பதுமராகம் (**red in color**) (வெளி 4:3; வெளி 21:20; யாத் 28:17; யாத் 39:10; எசே 28:13

4 அதிகாரம்

"மரகதம்" (emerald) - (வெளி 4:3 வெளி 21:19; யாத் 28:17-18; யாத் 39:11 எசே 27:16, எசே 28:13

(3) இருபத்தினான்கு மூப்பர்கள் - (4:10 5:5-14 7:11-13 11:16 14:3 19:4

வெளி 4:4 அந்தச் சிங்காசனத்தைச் சூழ இருபத்துநான்கு சிங்காசனங்களிருந்தன இருபத்துநான்குமூப்பர்கள் வெண் வஸ்திரந்தரித்து, தங்கள் சிரசுகளில் பொன் முடி சூடி, அந்தச் சிங்காசனங்களின் மேல் உட்கார்ந்திருக்கக்கண்டேன்

"சிங்காசனங்கள்" (seats) - வெளி 4:2 ஆவது வசனத்தில் இருந்த வார்த்தை "சிங்காசனம்" "throne" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய சிங்காசனத்தைச் சூழ இருபத்துநான்கு சிங்காசனங்களிருந்தன

"மூப்பர்கள்" (elders) என்னும் வார்த்தை உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களைக் குறிக்கும் என்பதற்குச் சான்றுகள்

1 மூப்பர்கள் என்பதற்கான கிரேக்க வார்த்தை "பிரஸ்பிட்டிரோஸ்" (presbyteros) என்பதாகும். இது மூப்பர்களை மட்டுமே குறிக்கும். தேவதூதர்களைக் குறிக்காது. (அப் 14:23)

2 மூப்பர்கள் வேறு, தேவதூதர்கள் வேறு. (வெளி 5:11 14

3 மீட்கப்பட்டவர்கள் ஜீவகிரீடம் தரித்து சிங்காசனங்களில் அமர்ந்திருப்பார்கள் என்று வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. (வெளி 2:10; வெளி 3:21; வெளி 20:4, மத் 19:28; 1கொரி 9:25-27; 2தீமோ 4:8) வெளிப்படுத்தின விசேஷத்தில் தூதர்கள் கிரீடம் தரித்துசிங்காசனத்தில் வீற்றிருப்பதாக வசன ஆதாரம் எதுவுமில்லை

ஏசா 14:12-14; கொலோ 1:16 ஆகிய வசனங்களில் மட்டும் தூதர்கள் கிரீடங்களைத் தரித்திருப்பதற்கான குறிப்புகள் உள்ளன

4 மூப்பர்கள் வெண்வஸ்திரம் தரித்திருந்தார்கள் வெளிப்படுத்தின விசேஷத்தில் கிறிஸ்துவும், பரிசுத்தவான்களும் மட்டுமே வெண்வஸ்திரம் தரித்திருந்தார்கள் (வெளி 3:5,18; வெளி 6:11; வெளி 7:9,13; வெளி 15:6; வெளி 19:8,14

5 யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷத்தைக் காண்பித்தவன் மூப்பர்களில் ஒருவன் இவன் மீட்கப்பட்டவன் (வெளி 1:1 வெளி 5: 5-7; வெளி 7:13- 15 வெளி 19:10; வெளி 22: 8-9. ஆகையினால் 24 மூப்பர்களும் மீட்கப்பட்ட மனுஷர்களாகவே இருக்க வேண்டும். அவர்கள் பரலோகத்தில் வெளி 4-22 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் நிறைவேறும் வரையிலும் சிங்காசனத்தில் அமர்ந்திருப்பதினால் அவர்கள் அதற்கு முன்பாகவே பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும்

மூப்பர் (elder) - πρεσβύτερος - presbyteros - 4245

பெயர்ச்சொல் - முன்னோரான, மூப்பரான, முதிர் வயதுள்ள (அப் 14:23)

மீட்கப்பட்டவர்களின் கூட்டத்தில் இருப்பவர்கள்

1. பழையஏற்பாட்டுக்காலபரிசுத்தவான்கள் (அப் 7:38; எபி 11:1-40, எபி 12:1

2 புதிய ஏற்பாட்டுக்கால சபையிலுள்ள பரிசுத்தவான்கள் (மத் 16:18, 1கொரி 12:27 28 எபே 1:20-23, எபே 2:14-22; எபே 4:12-16, எபே 5:21-32; கொலோ 1:18,24 கிறிஸ்து சபையின் ஸ்தாபகர் அவர் சபையை எடுத்துக் கொள்வதற்காக வருவார் (எபே 5:27; 1தெச 2:7, 1தெச 4:16)

4 அதிகாரம்

3 144,000 யூதர்கள் (வெளி 7:1-8 வெளி 14:1-5)

4 உபத்திரவக்காலத்து பரிசுத்தவான்கள் இவர்கள் சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு இரட்சிக்கப் பட்டவர்கள் வெளி 7:9-17 வெளி 14:13; வெளி 15:2-4; வெளி 20:4) 24 மூப்பர்களும் பழைய ஏற்பாட்டுக்கால பரிசுத்தவான்களாகவும். புதிய ஏற்பாட்டுக் கால சபையின் பரிசுத்தவான்களாகவும் இருக்க வேண்டும் ஏனெனில் இந்த மூப்பர்கள் பரலோகத்திற்கு வந்த பின்பு அல்லது வெளி 4-22 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் காரியங்கள் நிறைவேறும்போதே 144,000 யூதர்களும் உபத்திரவக் காலத்து பரிசுத்தவான்களும் மீட்கப் படுகிறார்கள் (வெளி 4:1 2தெச 2:7 1தெச 4:16)

இருபத்திநான்கு மூப்பர்களைப் பற்றிய குறிப்புகள்

1 பழையஏற்பாட்டுக்கால ஆசாரியத்துவம் முழுவதாகும் 24 மூப்பர்கள் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள் நாளா 24 1-9

2 இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரின் நாமங்களும் பன்னிரண்டு அப்போஸ்தலர்களுடைய நாமங்களும் பரிசுத்த நகரமாகிய புதிய எருசலேமின்மீது எழுதப்பட்டிருந்தன (வெளி 21:10-14)

இருபத்திநான்கு மூப்பர்களின் கிரியைகள்

1 சிங்காசனங்களின் மீது உட்காந்திருந்தார்கள் வெளி 4:4 வெளி 19:7 8

2 தேவனை ஆராதித்தார்கள் (வெளி 4:9 11 வெளி 5:8 10)

3 தங்கள் கிரீடங்களைத் தேவனுக்கு முன்பாக வைத்தார்கள் (வெளி 4:10)

4 தேவனுக்கு முன்பாக வணக்கமாய் விழுந்தார்கள் (வெளி 4:10 வெளி 5:8,14; வெளி 11:16; வெளி 19:4)

5 புதிய பாட்டைப்பாடி சுரமண்டலங்களை இசைத்தார்கள் (வெளி 5:8-10

6 ஆசாரியர்களாக ஆராதனை செய்தார்கள் (வெளி 5:8

7 யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷத்தைக் கொடுத்தார்கள் (வெளி 5:5 வெளி 7:13-14

(4) ஏழு ஆவிகள் - 1:4 3:1 5:6

வெளி 4:5 அந்தச் சிங்காசனத்திலிருந்துமின்னல்களும்இடிமுழக்கங்களும் சத்தங்களும் புறப்பட்டன தேவனுடைய ஏழு ஆவிகளாகிய ஏழு அக்கினி தீபங்கள் சிங்காசனத்திற்கு முன்பாக எரிந்து கொண்டிருந்தன

"தேவனுடைய ஏழு ஆவிகள் (வெளி 5:6)

(5) கண்ணாடிக் கடல் (5:8 14 6:1 8 7:11; 14:3; 15:7, 19 4

வெளி 4:6 அந்தச் சிங்காசனத்திற்கு முன்பாகப் பளிங்குக்கொப்பான கண்ணாடிக்கடலிருந்தது அந்தச் சிங்காசனத்தின் மத்தியிலும் அந்தச் சிங்காசனத்தைச் சுற்றிலும் நான்கு ஜீவன்களிருந்தன அவைகள் முன்புறத்திலும் பின்புறத்திலும் கண்களால் நிறைந்திருந்தன

வெளி 4:7 முதலாம் ஜீவன் சிங்கத்திற்கொப்பாகவும், இரண்டாம் ஜீவன் காளைக்கொப்பாகவும், மூன்றாம் ஜீவன் மனுஷமுகம் போன்ற முகமுள்ளதாகவும் நான்காம் ஜீவன் பறக்கிற கழுகுக்கு ஒப்பாகவுமிருந்தன

4 அதிகாரம்

வெளி 4:8 அந்த நான்கு ஜீவன்களிலும் ஒவ்வொன்று அவ்வாறு சிறகுகளுள்ளவைகளும் சுற்றிலும் உள்ளேயும் கண்களால் நிறைந்தவைகளுமாயிருந்தன. அவைகள்: இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று இரவும் பகலும் ஓய்வில்லாமல் சொல்லிக்கொண்டிருந்தன.

"பளிங்குக்கொப்பான கண்ணாடிக்கடல்" - தேவனுடைய சிங்காசனம் அமைந்திருந்த தரைப்பகுதி கண்ணாடிக் கடலைப்போன்று இருந்தது. (வெளி 4:6; வெளி 15:2-4; 1இராஜா 7:23-26; 2நாளா 4:2-15)

"ஜீவன்கள்" - இவை தேவதூதர்கள் (வெளி 4:6-8). இரட்சிக்கப்பட்ட மூப்பர்களுக்கும் (வெளி 4:4-11) சாதாரண தூதர்களுக்கும் (வெளி 5:1-12) சேராபீன்களுக்கும் (ஏசா 6:1-8) கேருபீன்களுக்கும் (எசே 1:4-28; எசே 10:1-22) இவர்களுக்கும் வேறுபாடு உண்டு.

ஜீவன்கள் (beasts) - ζῶον - zoon - 2226

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - மிருகம், ஜீவன், மிருகஜீவன் (living ones, creatures)

ஜீவன் (beast) - θηρίον - theerion - 2342

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல்- காட்டுமிருகம், விஷப்பூச்சி, பூச்சி. மிருகம் "beast" in வெளி 13:1-18; வெளி 14:9-11; வெளி 15:2; வெளி 16:10; வெளி 17:1-18; வெளி 19:19-20

ஜீவன்களுடைய கிரியைகள்

1 கர்த்தருடைய பரிசுத்தத்தை இரவும் பகலும் ஓய்வில்லாமல் சொல்லிக்கொண்டிருந்தன. (வெளி 4:4-8)

2 ஆராதனையின்போது தேவனுக்கு முன்பாக வணக்கமாய் விழுந்தன (வெளி 5:8-10)

3 சுரமண்டலங்களை மீட்டி புதிய பாட்டைப்பாடினார்கள் (வெளி 5:8-10)

4 பரிசுத்தவான்களின் ஜெபங்களைத் தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணினார்கள் (வெளி 5:8-10)

5 குதிரைகள்மீது ஏறியிருந்தவர்களைக் காண்பித்தார்கள் (வெளி 6:1-8)

6 தூதர்களுக்குப் பொற்கலசங்களைக் கொடுத்தார்கள் (வெளி 15:7)

7 மற்றவர்களுடைய ஆராதனையைக் கவனித்துக் கேட்டனர் (வெளி 14:3)

"இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர்" - வெளிப்படுத்தின விசேஷத்தில் பரலோகத்திலிருந்து 7 வாக்கியங்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் இதுவும் ஒன்று (வெளி 4:8,11; வெளி 5:2,5,9,12,13,14; வெளி 6:1,3,5,6,7,10; வெளி 7:3,10,12,13,14; வெளி 8:5,13; வெளி 9:14; வெளி 10:3,4,6,8,9,11; வெளி 11:1,12,15,17,19; வெளி 12:10; வெளி 14:2,7,8,9,13,15,18; வெளி 15:3; வெளி 16:1,5,7,17,18; வெளி 17:1,7,15; வெளி 18:2,4,21; வெளி 19:1,3,4,5,6,9,10,17; வெளி 21:3,5,6,9; வெளி 22:6,9,10,20)

(6) **பரலோகத்தில் ஆராதனை** - (4:5-6:17; 5:8-14; 7:9-17; 8:3; 11:15-19; 12:10-12; 14:1-5; 15:1-8; 19:1

வெளி 4:9 மேலும், சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்து சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவருக்கு அந்த ஜீவன்கள் மகிமையையும் கனத்தையும் ஸ்தோத்திரத்தையும் செலுத்தும்போது,

வெளி 4:10 இருபத்துநான்கு மூப்பர்களும் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுதுகொண்டு, தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்திற்கு முன்பாக வைத்து,

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

4 அதிகாரம்

வெளி 4:11 கர்த்தாவே தேவரீர் மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக் கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர் நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர் உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப் பட்டவைகளுமாயிருக்கிறது என்றார்கள்

"தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்திற்கு முன்பாக வைத்தார்கள்" - தேவனுடைய சர்வ வல்லமையை அவர்கள் அங்கீகரித்தார்கள் தேவனால் இவர்கள் இரட்சிக்கப் பட்டிருக்கிறார்கள் தேவனுடைய ஆசீர்வாதத்தினால் இவர்கள் கிரீடம் பெற்றவர்கள்

"நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர்" தேவனுடைய திட்டத்தினாலே சகலமும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய சந்தோஷத்திற்காக இவை சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறது. இதுவே சிருஷ்டிப்பின் நோக்கம்.

5 அதிகாரம்

(7) பரலோகத்தில் ஒரு புஸ்தகம் - (10:1-11)

வெளி 5:1 அன்றியும், உள்ளும் புறம்பும் எழுதப்பட்டு, ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருந்த ஒரு புஸ்தகத்தைச் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய வலதுகரத்திலே கண்டேன்.

வெளி 5:2 புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரவான் யார் என்று மிகுந்த சத்தமிட்டுக் கூறுகிற பலமுள்ள ஒரு தூதனையுங் கண்டேன்.

வெளி 5:3 வானத்திலாவது பூமியிலாவது, பூமியின்கீழாவது ஒருவனும் அந்தப் புஸ்தகத்தைத் திறக்கவும், அதைப் பார்க்கவும் கூடாதிருந்தது.

வெளி 5:4 ஒருவனும் அந்தப் புஸ்தகத்தைத் திறந்து வாசிக்கவும் அதைப் பார்க்கவும் பாத்திரவானாகக் காணப்படாததினால் நான் மிகவும் அழுதேன்.

"உள்ளும் புறம்பும் எழுதப்பட்டு, ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருந்த ஒரு புஸ்தகம்" - இந்தப் புஸ்தகம் திறக்கப்பட்டு அதிலுள்ள செய்திகள் வெளிப்படுத்தப்பட வேண்டுமென்றால் அதன் முத்திரைகள் உடைக்கப்பட வேண்டும். (வெளி 10:1-11)

"பலமுள்ள ஒரு தூதன் (strong angel) - வெளிப்படுத்தின விசேஷத்தில் பெயர் தெரியாத 26 தூதர்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. இவைகளைத்தவிர 15 தூதர்கள் மனுஷராகக் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். ஏராளமான தூதர்களும் (வெளி 3:5; வெளி 5:11; வெளி 7:11) கிறிஸ்துவும் (Christ) (வெளி 8:2-6; வெளி 10:1-11:3) லூசிபரும் (Lucifer) (வெளி 12:3-9), மிகாவேலும் (Michael) (வெளி 12:7-10) இந்தப் புஸ்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள்.

"மிகுந்த சத்தம்" (loud voice) - வெளிப்படுத்தின விசேஷத்தில் இந்த வாக்கியம் 13 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (வெளி 5:2,12; வெளி 6:10; வெளி 7:2,10; வெளி 8:13; வெளி 10:3; வெளி 12:10; வெளி 14:7,9,15,18; வெளி 19:17)

மனுஷர் உணர்வோடு இருக்கும் மூன்று லோகங்கள்

1. வானம். (வெளி 4:3,13; வெளி 6:9-11; வெளி 12:12; வெளி 13:6; எபி 12:23; 2கொரி 5:8)

2. பூமி (வெளி 4:3,13; வெளி 12:12; வெளி 13:14)

3. பூமியின்கீழ். (வெளி 4:3,13; வெளி 20:11-15; லூக்கா 16:19-31; ஏசா 14:9; உபா 32:22; சங் 9:17; சங் 18:5; சங் 116:3; நீதி 15:24)

கீழ் (Under) - ὑποκάτω - hypokatoo - 5270

வினையடை - கீழே, கீழ் (beneath; below; underneath) "under" (வெளி 4:3,13; வெளி 6:9; வெளி 12:1; மாற்கு 6:11; மாற்கு 7:28; லூக்கா 8:16; யோவான் 1:50; எபி 2:8)

துன்மார்க்கர் மரிக்கும்போது பூரண உணர்வோடு பூமியின் கீழேயுள்ள நரகத்திற்குச் செல்வார்கள்.

(8) பரலோகத்தின் ஆட்டுக்குட்டி. (5:5-13; 6:1,16; 7:9-10,14,17; 12:11; 14:1-4,10; 15:3; 17:14; 19:7-9; 21:9,14,22-27; 22:1-3; யோவான் 1:29,36)

வெளி 5:5 அப்பொழுது மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: நீ அழவேண்டாம்; இதோ, யூதா கோத்திரத்துச் சிங்கமும் தாவீதின் வேருமானவர் புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் ஏழு முத்திரைகளையும் உடைக்கவும் ஜெயங்கொண்டிருக்கிறார் என்றான்.

5 அதிகாரம்

வெளி 5:6 அப்பொழுது, இதோ அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஒருஆட்டுக்குட்டி சிங்காசனத்திற்கும் நான்கு ஜீவன்களுக்கும் மூப்பர்களுக்கும் மத்தியிலே நிற்கக்க கண்டேன்; அது ஏழு கொம்புகளையும் ஏழுகண்களையும் உடையதாயிருந்தது; அந்தக் கண்கள் பூமியெங்கும் அனுப்பப்படுகிற தேவனுடைய ஏழு ஆவிகளேயாம்.

வெளி 5:7 அந்த ஆட்டுக் குட்டியானவர் வந்து, சிங்காசனத்தின் மேல் உட்கார்ந்தவருடைய வலது கரத்திலிருந்துபுஸ்தகத்தைவாங்கினார்.

கிறிஸ்துவிற்கு வழங்கப்பட்டிருக்கிற நாமங்கள்

1 யூதா கோத்திரத்துச் சிங்கம். (The Lion of the tribe of Judah)

2 தாவீதின் வேருமானவர் (The Root of David) ஏசா 11:1

ஜெயங்கொள் (prevailed) - νικάω - nikaoo - 3528

வினைச்சொல் - மேற்கொள் ஜெயி வெற்றியடை வெல் ஜெயங்கொள் "prevail" வெளி 4:5) "conquer" (வெளி 6:2), "get the victory" (வெளி15:2) "overcome" (லூக்கா 11:22; யோவான் 16:33 ரோமர் 3:4; ரோமர் 12:21 1யோவான் 2:13-14, 1யோவான் 4:4 1யோவான் 5:4-5, வெளி 2:7,11,17,26, வெளி 3:5,12,21 வெளி 11:7 வெளி 12:11, வெளி 13:7, வெளி 17:14 வெளி 21:7). கிறிஸ்து கல்வாரி சிலுவையில் ஜெயம் கொண்டார் (கொலோ 2:14-17).

ஆட்டுக்குட்டி (Lamb) ἀρνίον arnion 721

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் ஆட்டுக்குட்டி, ஆட்டுக்குட்டியானவர் (a younglamb,lambkin (யோவான் 21:15) வெளிப்படுத்தின விசேஷத்தில் இந்த வார்த்தை 27 தடவைகள் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (வெளி 5:6,8,12,13 வெளி 6:1,16 வெளி 7:9,10,14,17 வெளி 12:11; வெளி 13:8,11; வெளி 14:1,4,10; வெளி 15:3; வெளி 17:14, வெளி19:7,9 வெளி21:9,14,22,23,27 வெளி 22:1,3

"அது ஏழு கொம்புகளையும் ஏழு கண்களையும் உடையதாயிருந்தது" - இவை பரிசுத்த ஆவியானவரின் நாமங்கள் அல்ல. பரிசுத்த ஆவியானவருக்கு வேறுபல நாமங்கள் உள்ளன. ஆட்டுக் குட்டியானவருக்கு ஏழு கொம்புகளும் ஏழு கண்களும் இருந்தன. ஆட்டுக்குட்டியானவர் இயேசு கிறிஸ்துவிற்கு அடையாளமாக இருக்கிறார் (வெளி 4:5). ஏழு கொம்புகளும் ஏழு கண்களும் பரிசுத்த ஆவியானவரின் நிறைவையும் வல்லமையையும் குறிக்கும் அடையாளங்களாகும். (யோவான் 3:34 ஏசா 11:2; ஏசா 42:1-7; ஏசா 61:1-2 அப் 10:38). ஆவியானவர் ஒருவரே (எபே 4:4-6

(9) ஜீவன்களும் மூப்பர்களும் ஆட்டுக் குட்டியானவரை ஆராதிக்கிறார்கள்

வெளி 5:8 அந்தப் புஸ்தகத்தை அவர் வாங்கினபோது, அந்த நான்கு ஜீவன்களும் இருபத்துநான்கு மூப்பர்களும் தங்கள் தங்கள் சுரமண்டலங்களையும், பரிசுத்தவான்களுடைய ஜெபங்களாகிய தூபவர்க்கத்தால் நிறைந்த பொற் கலசங்களையும் பிடித்துக்கொண்டு, ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து:

வெளி 5:9 தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர், ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு,

5 அதிகாரம்

வெளி 5:10 எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்று புதிய பாட்டைப் பாடினார்கள்

பரலோகத்தில் இசைக்கப்படும் வாத்தியங்கள்

1. 28 சுரமண்டலங்கள்
2. வெளி 14:2 ஆவது வசனத்தில 44,000 சுரமண்டலங்கள்
3. வெளி 15:2 ஆவது வசனத்தில் ஏராளமான சுரமண்டலங்கள்

பரலோகத்தில் இசைக்கருவிகளை இசைத்து, தமமை ஆராதிககும் முறைமையைத்தேவன அங்கிகரித்திருக்கிறார ஆகையினால தறகாலதது திருசசபைகளில இசைக்கருவிகளை இசைதது தேவனை ஆராதிப்பதில தவறொன்றும இல்லை

"தூபவர்க்கத்தால நிறைந்த பொற்கலசங்கள்" இவை பரிசுத்தவானகளுடைய ஜெபததைக குறிக்கும். (சங் 141:2, வெளி 8:4)

"நீர அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைககாரரிலும் ஜனங்களிலும ஜாதிகளிலுமிருநது எங்களைத் தேவனுக்கென்று உமமுடைய இரத்தத்தினாலே மீட்டுககொண்டீர" இந்த வசனபபகுதிகளில் வரும் நானகு ஜீவனகள இரட்சிக்கபபட்டவையென்று ஒருசிலர கூறுகிறாரகள் ஏனெனில இவை "எங்களை தேவனுக்கென்றுஉம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டீர" என்று கூறுகின்றன வெளி 4:6-8 ஆகிய வசனங்களில கூறப்பட்டிருக்கும் விளக்கத்தின மூலமாக இந்த நான்கு ஜீவனகளும் தூதர்கள்என்பதும், இவரகள தேவனுடைய பரிசுத்தத்தை அறிவிக்கிறவரகள என்பதும் தெரிய வருகிறது. ஆகையினால இந்த வசனத்தில் "எங்களை" "us" என்னும் பிரதிப பெயர்ச் சொல்லை "அவர்களை" "them" என்னும் பிரதிப்பெயர்ச் சொல வழங்கி வாசிக்க வேண்டும். "அவர்கள்" என்பது வெளி 5:8 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் பரிசுத்தவான்களைக் குறிக்கும்.

கிரேக்க வேதபண்டிதரான லக்மான் (Lachmann) திச்சன்டோர்ப் (Tischendorf), அலபோர்டு (Alford) வோர்ட்ஸ்வொர்த் (Wordsworth) ஆகியோர் வெளி 5:9 ஆவது வசனத்திலுள்ள "எங்களை" என்னும் பிரதிப் பெயர்சொல்லை நீக்கிவிட்டு அதற்குப பதிலாக "அவர்களை" என்னும் பிரதிப் பெயர்சொல்லைச் சேர்த்திருக்கிறார்கள்

மூப்பர்கள் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே மீட்கப்பட்டவர்கள் ஜீவனகள தூதர்கள் இவர்கள் அனைவருமே பரிசுத்தவான்களின் ஜெபத்தை ஜெபிக்கிறார்கள் ஆயினும் இவர்களில மூப்பர்கள் மட்டுமே மீட்கப்பட்டவர்கள்

"பூமியிலே" (on the earth) - கிறிஸதுவும் உயிர்ததெழுந்த பரிசுததவானகளும் ஆயிரம் வருஷ அரசாட்சியில இந்தப பூமியில ஆயிரம் வருஷங்களும், புதிய பூமியில நித்திய காலமாகவும் ஆளுகை செய்வாரகள (வெளி 5:10, வெளி 2:26-27, வெளி 3:21, வெளி 20:4-10; வெளி 22:5; தானி 7:18

(10) தேவனையும் ஆட்டுக் குட்டியானவரையும் எல்லோரும் ஆராதிக்கிறார்கள் - (5:11-10)

வெளி 5:11 பினனும் நான பாாததபோது சிங்காசனத்தையும் ஜீவனகளையும் மூப்பாகளையும் சூழநதிருநத அநேக தூதாகளுடைய சததததைக கேட்டேன, அவாகளுடைய இலக்கம் பதினாயிரம் பதினாயிரமாகவும் ஆயிரமாயிர மாகவுமிருநதது.

வெளி 5:12 அவர்களும் மகா சத்தமிட்டு: அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவா வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெறறுக் கொள்ளப பாத்திரராயிருக்கிறார் என்று சொன்னாாகள

5 அதிகாரம்

வெளி 5:13 அப்பொழுது வானத்திலும் பூமியிலும் பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகளெல்லாவும், சமுத்திரத்தி லுள்ளவைகளும், அவைகளுள்ளடங்கிய வஸ்துக்கள் யாவும், சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக் குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லக்கேட்டேன்

வெளி 5:14 அதற்கு நான்கு ஜீவன்களும், ஆமென் என்று சொல்லின இருபத்து நான்கு மூப்பர்களும் வணக்கமாய் விழுந்து சதாகாலங்களிலும் உயிரோடிருக் கிறவரைத் தொழுது கொண்டார்கள்

வெளி 5:11 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் மூன்று பிரிவினர்

1 தூதர்கள் (Angels) (வெளி 5:11 எபி 1:4-14; எபி 12:22)

2 ஜீவன்கள் (The zoa - living creatures) வெளி 4:6-8 வெளி 5:6-11

3 இருபத்தி நான்கு மூப்பர்கள் (The 24 elders) வெளி 4:4

"அவர்களுடைய இலக்கம் பதினாயிரம் பதினாயிரமாகவும், ஆயிரமாயிரமாகவு மிருந்தது" எபிரெய வழக்குச்சொல் எண்ணிலடங்காத, திரளான, ஏராளமான என்று பொருள்படும் (எபி 12:22 தானி 7:10

ஆட்டுக்குட்டியானவர் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கும் காரியங்கள்

1 வல்லமை (Power omnipotence) (வெளி 5:12

2 ஐசுவரியம் (Riches—possessions) (வெளி 5:12 யோவான் 17:5)

3 ஞானம் (Wisdom omniscience) (வெளி 5:12)

4 பெலம் (Strength—ability) (வெளி 5:12; எபி 7:25

5 கனம் (Honor reputation) (வெளி 5:12 எபி 1:4

6 மகிமை (Glory –praise) (வெளி 5:12 பிலி 2 9-11

7 ஸ்தோத்திரம் (Blessing—worship) (வெளி 5:12-13 வெளி 7:12)

தேவனுக்கும் கிறிஸ்துவிற்கும் சதா காலங்களிலும் உண்டாக வேண்டிய காரியங்கள்

1 ஸ்தோத்திரம் (Blessing—worship) (வெளி 5:13 வெளி 7:10

2 கனம் (Honor—reputation) (வெளி 5:13 1கொரி 10:33

3 மகிமை (Glory—praise) (வெளி 5:13; எபி 13:15)

4 வல்லமை (Power—Omnipotence) (வெளி 5:13 வெளி 19:6

"சிங்காசனத்தின்மேல்வீற்றிருக்கிறவருக்கு உண்டாவதாக" வெளிப்படுத்தின விசேஷத்தில் தேவனும் ஆட்டுக் குட்டியானவரும் பாத்திரராக இருக்கிறார்கள் என்னும் மையக்கருத்து பல வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. வெளி 4:5-6 வெளி 4:9-11 வெளி 5:8-14 வெளி 7:9-17 வெளி 11:15-18 வெளி 14:1-5 வெளி 15:2-4 வெளி 19:1-7)

"ஆட்டுக் குட்டியானவருக்கும் உண்டாவதாக" வெளிப்படுத்தின விசேஷத்தில் தேவத்துவத்தின் இரண்டு அல்லது மூன்று நபர்களைப் பற்றிய குறிப்பு 30 இடங்களில் கூறப்பட்டிருக்கிறது. (வெளி 1:1,2,4-5,6,9 வெளி 2:7,17,26-29 வெளி 3:5-6 12-13 20-22 வெளி 4:2,5 வெளி 5:1,6-7,13 வெளி6:16 வெளி 7:10 வெளி 10:5-6 வெளி 11:15 வெளி 12:10,17 வெளி 14:1-4 வெளி 14:10,12-13 வெளி 20:6, வெளி 21:22-23 வெளி 22:1,3

6 அதிகாரம்

2. தானியேலின் எழுபதாவது வாரமும் உபத்திரவக்காலமும் - (6:1-18:24 தானி 9:27; 6:1-9:21)

(1) முதலாம் முத்திரை - அந்திக்கிறிஸ்து புறப்பட்டான் - தானி 7:8,23-26; 8:8-10,20-25 11:35-45; 2தெச 2:1-12 வெளி 13:1-18; 17:10-16)

வெளி 6:1 ஆட்டுக்குட்டியானவர் முத்திரைகளில் ஒன்றை உடைக்கக் கண்டேன்; அப்பொழுது நான்கு ஜீவன்களில் ஒன்று என்னை நோக்கி: நீ வந்து பார் என்று இடிமுழக்கம்போன்ற சத்தமாய்ச் சொல்லக்கேட்டேன்.

வெளி 6:2 நான் பார்த்தபோது, இதோ, ஒரு வெள்ளைக்குதிரையைக் கண்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவன் வில்லைப் பிடித்திருந்தான்; அவனுக்கு ஒரு கிரீடம் கொடுக்கப்பட்டது. அவன் ஜெயிக்கிறவனாகவும் ஜெயிப்பவனாகவும் புறப்பட்டான்.

"கண்டேன்..." (And I saw ...) வெளி 6:1-20:3 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் 62 நிகழ்ச்சிகளும் தானியேலின் எழுபதாவது வாரத்தில் நிறைவேறும்.

"ஆட்டுக்குட்டியானவர் முத்திரைகளில் ஒன்றை உடைத்தார்" இயேசு கிறிஸ்து பிதாவின் வலதுகரத்திலிருந்து புஸ்தகத்தை வாங்கி ஏழு முத்திரைகளையும் ஒவ்வொன்றாக உடைத்தார். ஒவ்வொரு முத்திரையிலுமுள்ள காரியங்கள் வெளிப்பட்டன (வெளி 5:7; வெளி 6:1-17; வெளி 8:1) அதன்பின்பு தேவன் திறந்த புஸ்தகத்தை யோவானுக்குப் புசிக்கக் கொடுத்தார் (வெளி 10:1-11)

"கேட்டேன்" (heard) - வெளிப்படுத்தின விசேஷத்தில் இந்த வார்த்தை 33 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

வெள்ளைக்குதிரையின் மேல் ஏறியிருந்தவன்

இவன் அந்திக்கிறிஸ்து. வெளி 19:11-21 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் வெள்ளைக்குதிரையின் மீது ஏறியிருக்கிறவரும் இவனும் ஒன்றல்ல. இந்த வசனங்களில் கூறப்பட்டிருக்கும் நபர் இயேசு கிறிஸ்து. அந்திக்கிறிஸ்து பூமியில் பயங்கரமான காரியங்களை ஆரம்பிக்கிறான். வெளி 19:11-21 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் இயேசு கிறிஸ்து அந்த நிகழ்ச்சிகளை முடிவுக்குக் கொண்டு வருகிறார். ஒருசிலர் ஆப 3:8-9 ஆகிய வசனங்களை வியாக்கியானமாகக் கூறி, வெள்ளைக்குதிரையின்மேல் ஏறி வருகிறவர் தேவனுடைய வார்த்தையின் மிகப்பெரிய எழுப்புதலுக்கு அடையாளம் என்று கூறுகிறார்கள். ஆனால் ஆபகூக்கில் கூறப்பட்டிருப்பது கடந்த கால நிகழ்ச்சியாகும். எகிப்திலிருந்து தேவன் இஸ்ரவேல் ஜனங்களை விடுவித்து வழிநடத்திச் சென்றதை ஆபகூக் கூறுகிறார்.

வெள்ளைக்குதிரையின்மேல் ஏறியிருந்தவன் அந்திக்கிறிஸ்து என்பதற்குச் சான்றுகள்

1. இவன் ஒரு தனி நபர் (வெளி 6:2)
2. கிறிஸ்துவைப்போல வேஷம் தரித்து தன்னைக் கிறிஸ்து என்று கூறிக்கொண்டு, அவரைப்போலவே வெள்ளைக் குதிரையின்மீது ஏறி வருகிறான் (வெளி 6:2; மத் 24:4-5; யோவான் 5:43; தானி 9:27; தானி 11:37)
3. இவன் வில்லைப் (bow) பிடித்திருந்தான். தீமையான எண்ணங்களுக்கும் தீமையான வெற்றிகளுக்கும் வில் ஒரு அடையாளமாகும் (சங் 7:12; சங் 11:2; சங் 37:14; சங் 46:9; சங் 58:7; எரே 49:35) கிறிஸ்து எப்பொழுதும் பட்டயம் (sword) ஏந்தியவராகவே இருக்கிறார். அவர் வில்லை ஏந்தியிருப்பவர் அல்ல. (வெளி 1:16; வெளி 19:15,21)

6 அதிகாரம்

4 சாத்தான் அந்திக்கிறிஸ்துவிற்குக் கிரீடத்தைக் கொடுத்திருக்கிறான் என்று வேதவாக்கியம் தெளிவுபடுத்துகிறது. (தானி 8:24 தானி 11:38-39; 2தெச 2:8-12 வெளி 13:2,4

5. தானியேலின் 70 ஆவது வாரத்தின் ஆரம்பத்தில அந்திக்கிறிஸது ஜெயிக்கிற வனாகவும ஜெயிப்பவனாகவும் இருந்தான் தானி 7:7-8,20-21,23-24 தானி 8:23-25; தானி 9:27, தானி 11:36-45 வெளி 6:1) எழுபதாவது வாரத்தின முதல மூன்றரை வருஷங்களில வருங்கால பத்து ராஜ்ஜியங்கள் அதிகாரத்தைப பெற்றுக் கொணடான் முதலாவதாக அநதிககிறிஸது மூனறு ராஜாக்களைத தாழத்திப போட்டான தானி 7:23-24 அதனபினபு வாரத்தின மத்தியில பத்து ராஜாக்களும் யுத்தம் இல்லாமல தஙகளை அநதிக் கிறிஸ்துவிடம் ஒப்புக் கொடுப்பாரகள இதனபினபு மூனறரை வருஷங்களுககு அநதிக்கிறிஸது பத்து ராஜ்ஜியஙகளின மீது ஆளுகை செயவான அர்மகெதோனில கிறிஸதுவோடு யுத்தம் பணணுவான வெளி 13:1-5 வெளி 17:8-17; வெளி 19:11-21

6 வெள்ளைக்குதிரையின மேல ஏறியிருக்கிறவன மூனறு முத்திரைகளுக்குப பினபு. யுத்தஙகளையும் பஞசஙகளையும் கொள்ளைநோயையும், மரணத்தையும் நரகத்தையும் உணடாக்குவான (வெளி 6:3-8

7 வெள்ளைக் குதிரையின்மேல் ஏறியிருக்கிறவன் அந்திக்கிறிஸ்து அலலவென்றால், வாரத்தின் மத்திக்கு முன்பாக வெளிபபடுத்தின விசேஷத்தில் இவனைப் பற்றி கூறபபடடிருபபதற்கு வாயப்பில்லை. (வெளி 13 தானி 7:23-24 தானி 8:23-25 தானி 9:27 தானி 11:36-45 ஆகிய வசனங்களில் மூர்க்க முகமும் சூதான பேச்சுமுள்ள சாமர்த்தியமான ஒரு ராஜா எழுமபுவான் என்று கூறபபடடிருக்கிறது.

(2) இரண்டாம் முத்திரை – அந்திக் கிறிஸ்து புறப்பட்டதினால் ஏறபட்ட யுத்தம் - (தானி 7:23-24. 8:9,23 மத் 24:6-7)

வெளி 6:3 அவர் இரண்டாம் முத்திரையை உடைத்தபோது இரணடாம் ஜீவனானது, நீ வந்துபார் எனறு சொலலககேட்டேன்

வெளி 6:4 அபபொழுது சிவப்பான வேறொரு குதிரை புறப்பட்டது அதினமேல ஏறியிருநதவனுக்கு பூமியிலுள்ளவாகள் ஒருவரையொருவா கொலைசெய்யததககதாக சமாதா னத்தைப பூமியிலிருந்தெடுத்துப போடும்படியான அதிகாரம் கொடுக்கப்பட்டது. ஒரு பெரிய பட்டயமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டது.

"சிவப்பான வேறொரு குதிரை" சிவப்பு குதிரை யுத்தத்திற்கு அடையாளமாகும் இது பூமியிலிருந்து சமாதானத்தை எடுத்துப்போடும். பூமியிலுளளவாகள ஒருவரையொருவா கொலைசெய்யத்தக்கதாக இவனுடைய பட்டயம் கிரியை செய்யும். வெள்ளைக் குதிரையினமீது ஏறியிருக்கிறவனும் ஜனஙகளமீது இவவாறு தான வெற்றி பெறுவான இந்த யுத்தம மூனறு கணடஙகளுக்கு இடையே நடைபெறும் இரணடாம் யுத்தம் எனறு ஒருசில வேதபணடிதாகள கூறுகிறாாகள் பத்துராஜ்ஜியங்களிலிருந்து அந்திக்கிறிஸ்து எழும்பி வருவான என்றும் அப்பொழுது மூனறு கணடஙகளுக்கு இடையே முதலாம் யுத்தம் நடைபெறும் என்றும் ஒருசில வியாக்கியானம் கூறுகிறாாகள்

(தானி 7:7-8,23-24)

6 அதிகாரம்

(3) மூன்றாம் முத்திரை - முதலாவது முத்திரைகளினால் ஏற்பட்ட பஞ்சம் - (மத் 24:7)

வெளி 6:5 அவர் மூன்றாம் முத்திரையை உடைத்தபோது மூன்றாம் ஜீவனானது, நீ வந்துபார் என்று சொல்லக்கேட்டேன். நான் பார்த்தபோது, இதோ ஒரு கறுப்புக்குதிரையைக் கண்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவன் ஒரு தராசைத் தன் கையிலே பிடித்திருந்தான்.

வெளி 6:6 அப்பொழுது, ஒரு பணத்துக்கு ஒரு படி கோதுமையென்றும், ஒரு பணத்துக்கு மூன்றுபடி வாற்கோதுமையென்றும், எண்ணெயையும் திராட்சரசத்தையும் சேதப்படுத்தாதே என்றும், நான்கு ஜீவன்களின் மத்தியிலிருந்து உண்டான சத்தத்தைக் கேட்டேன்.

"ஒரு கறுப்புக்குதிரையைக் கண்டேன்" - அதின்மேல் ஏறியிருந்தவன் ஒரு தராசைத் தன் கையிலே பிடித்திருந்தான். இரண்டு முத்திரைகளின் விளைவினால் யுத்தங்கள் நடைபெற்றன. யுத்தங்களின் விளைவினால் தேசத்தில் கொடிய பஞ்சம் உண்டாகும். தராசு பஞ்சத்திற்கு அடையாளமாகும். (புல 4:4-8, மத் 24:7)

"ஒரு பணத்துக்கு ஒரு படி கோதுமையென்றும், ஒரு பணத்துக்கு மூன்றுபடி வாற்கோதுமையென்றும்" கோதுமையையும், வாற்கோதுமையையும் நிறுத்து, எண்ணி, விற்கும்காலம் பஞ்சகாலம். உணவுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டதினால், ஜனங்களுக்குத் தாராளமாக உணவு கிடைக்கவில்லை. ஆகையினால் வாற்கோதுமையை எண்ணி, நிறுத்து விற்கும்காலம் வருகிறது. (எசே 4:10-17)

பணம் (penny) - δηνάριον deenarion 1220

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பணம், காசு (மத் 20:2-16)

"ஒரு பணத்துக்கு மூன்றுபடி வாற்கோதுமை" - வரலாற்று ஆசிரியர்கள் இதைப் பற்றிக் கூறும்போது இக்காலத்தில் விலைவாசி சாதாரண காலத்தைவிட எட்டு மடங்கு அதிகரித்திருக்கும் என்று கூறுகிறார்கள்.

"எண்ணெயையும் திராட்சரசத்தையும் சேதப்படுத்தாதே" - பஞ்சகாலத்தில் ஒலிவ மரமும் திராட்சைக் கொடிகளும் சரியாகப் பலன் தராது. ஆகையினால் அவற்றைச் சேதப்படுத்துவது தடைபண்ணப்பட்டிருக்கிறது.

(4) நான்காம் முத்திரை - முதல் மூன்று முத்திரைகளினால் ஏற்பட்ட மரணமும் பாதாளமும் - (மத் 24:6-7)

வெளி 6:7 அவர் நாலாம் முத்திரையை உடைத்தபோது, நாலாம் ஜீவனானது, நீ வந்துபார் என்று சொல்லுகிற சத்தத்தைக் கேட்டேன்.

வெளி 6:8 நான் பார்த்தபோது, இதோ, மங்கின நிறமுள்ள ஒரு குதிரையைக் கண்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு மரணம் என்று பேர்; பாதாளம் அவன்பின் சென்றது. பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், சாவினாலும், பூமியின் துஷ்டமிருகங்களினாலும், பூமியின் காற்பங்கிலுள்ளவர்களைக் கொலைசெய்யும்படியான அதிகாரம் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டது.

"மங்கின நிறமுள்ள ஒரு குதிரையைக் கண்டேன்" அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு மரணம் என்று பேர்; பாதாளம் அவன்பின் சென்றது. இந்த வசனத்தில் மரணத்திற்கும் பாதாளத்திற்கும் ஆள்தத்துவப் பண்பு கொடுக்கப்படுகிறது. முதல் மூன்று முத்திரைகள் உடைக்கப்பட்டபோது குதிரைகளின்மீது ஏறி வந்தவர்களை அடையாளம் கண்டுபிடிப்பது கடினமாக இருக்கிறது. ஆனால் நாலாம் முத்திரை உடைக்கப்பட்ட பின்பு, வருகிறவர்களின் பெயர்கள் மரணம், பாதாளம் என்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

6 அதிகாரம்

மங்கின நிறம் (pale) χλωρός chlooros 5515

பொருள் - பசுமையான, மங்கின நிறமுள்ள - "green" (வெளி 8:7; வெளி 9:4; மாற்கு 6:39)

மகா உபத்திரவம் உலகம் முழுவதிலும் ஏற்படாமல் பூமியின் கால்பங்கில் மட்டும் உண்டாயிற்று

1 முதல் நான்கு முத்திரைகளும் பூமியின் கால்பங்கிலுள்ளவர்களுக்கே உரியது. (வெளி 6:8)

2 வெளி 6:9-11 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் இரத்தசாட்சியாக மரித்த பரிசுத்தவான்கள் ரோம பேரரசிற்கு உட்பட்டவர்கள். அங்கு வெளி 17 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் மகா வேசியானவள் பத்து ராஜாக்களை ஆளுகை செய்தாள்.

3 வெளி 7:1-8 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் 144,000 யூதர்கள் பாலஸ்தீனாவிலுள்ள இஸ்ரவேலிலிருந்து முத்திரையிடப்பட்டவர்கள். ஸ்திரீயானவள் என்பது இஸ்ரவேல் தேசத்தைக் குறிக்கும். இவள் ஆண்பிள்ளையைப் பெற்றாள் (வெளி 12). இந்தத் தீர்க்கதரிசனம் பாலஸ்தீன தேசத்தை மையமாகக் கொண்டிருக்கிறது.

4 வெளி 7:9-17 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் மகா உபத்திரவக் காலத்து பரிசுத்தவான்களின் இரத்தச் சாட்சி மரணம் மகா உபத்திரவம் உண்டாகும் தேசத்தில் மட்டுமே நடைபெறும். வெளி 13 ஆவது அதிகாரத்தை ஒருசில வேதபண்டிதர்கள் ஆராய்ந்து பார்த்து பழைய ரோமப்பேரரசின் பகுதியில் மகா உபத்திரவக்காலம் உண்டாகும் என்று வியாக்கியானம் கூறுகிறார்கள்

5 1,2,3,4 ஆகிய எக்காளங்கள் பூமியின் மூன்றிலொரு பங்கிற்கு உரியவை (வெளி 8:7-12)

6. மூன்றாவது எக்காளத்தினால் மனுஷரில் மூன்றிலொருபங்கு கொல்லப்பட்டார்கள் (வெளி 9:18)

7 வெளி 11:1-13 வெளி 12:1-17 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் உபத்திரவங்களில் எருசலேமும் இஸ்ரவேலும் பாதிக்கப்பட்டிருந்தன

8 அந்திக்கிறிஸ்துவின் ஆளுகை பத்து ராஜ்யங்களின் மீது மட்டுமே இருக்கும். இது பழைய ரோமப்பேரரசின் ஒரு பகுதியென்று ஒருசில வேதபண்டிதர்கள் கூறுகிறார்கள் (வெளி 13)

9 வெளி 14:8-20 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் பாபிலோன், மிருகத்தையும், அதன் சொரூபத்தையும் வணங்குகிறவர்கள், இரத்தசாட்சியாக மரித்தவர்கள், பாலஸ்தீனத்திலுள்ள அர்மகெதோன் ஆகியவற்றோடு தொடர்புடையவை.

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

6 அதிகாரம்

10 கலசத்தின் நியாயத்தீர்ப்புகள் அந்திக்கிறிஸ்துவின் ராஜ்ஜியத்திற்கு மட்டுமே உரியது. (வெளி 16:2,10,12; வெளி 18:1-24) இயேசு கிறிஸ்து ஒரு குறிப்பிட்ட ஸ்தலத்திற்கே தமது இரண்டாவது வருகையின்போது முதலாவது வருவார் (சக 14:1-5; வெளி 19:11-21). இயேசு கிறிஸ்து பூமியில் இருக்கிறார் என்பதை உலகத்தின் ஜாதிகள் தெரிந்து கொள்வதற்கு முன்பாகவே அவர் எருசலேமில் ஆட்சி செய்து கொண்டிருப்பார் (ஏசா 2:2-4; ஏசா 52:7; ஏசா 66:19-21; சக 8:23)

"பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், சாவினாலும்" இவைகளால் பூமியின் காற்பங்கிலுள்ளவர்களைக் கொலைசெய்யும்படியான அதிகாரம் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டது. முதல் இரண்டு முத்திரையில் யுத்தங்களும் மூன்றாவது முத்திரையில் பஞ்சமும் நான்காது முத்திரையில் மரணமும் பாதாளமும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. (வெளி 6:2-8)

"பூமியின் துஷ்டமிருகங்கள்" முதல் நான்கு முத்திரைகளினால் பூமியில் யுத்தங்களும், பஞ்சங்களும், கொள்ளைநோய்களும் உண்டாகும்போது ஏராளமானோர் மடிந்து போவார்கள். அவர்களுடைய சரீரங்களைப் புசிப்பதற்காக துஷ்டமிருகங்கள் அங்கு கூடிவரும். (மத் 24:28; லூக்கா 17:34-37; வெளி 17:17; எசே 39:17-21)

(5) **ஐந்தாம் முத்திரை - தானியேலின் எழுபதாவது வாரத்தின் உபத்திரவக்காலத்தில் இரத்தச் சாட்சியாக மரித்தவர்கள்** - (7:9-17; 15:2-4; 20:4; மத் 24:9-13)

வெளி 6:9 அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது, தேவவசனத்தினிமித்தமும், தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தின்கீழே கண்டேன்.

வெளி 6:10 அவர்கள்: பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்.

வெளி 6:11 அப்பொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது. அன்றியும், அவர்கள் தங்களைப்போலக் கொலைசெய்யப்படப் போகிறவர்களாகிய தங்கள் உடன்பணிவிடைக்காரரும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும் இன்னுங் கொஞ்சக்காலம் இளைப்பாற வேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது.

கீழ் (under) - ὑποκάτω - **hypokatoo** 5270

6 அதிகாரம்

விளைபடை – கீழே, கீழ

"பலிபீடம்" (altar) – (வெளி 8:3-5 வெளி 9:13; வெளி 14:18; வெளி 16:7)

"கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்கள்" – கிறிஸ்துவில் மரித்தவர்கள் உயிர்த்தெழுந்த பின்பு இந்த ஜனங்கள் இரட்சிக்கப்பட்டார்கள். ஆபேலின் காலத்திலிருந்து வெளி 4:1 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் சபை எடுத்துக் கொள்ளப்படும் காலம் வரையிலும் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். இவர்கள் இந்த நிகழ்ச்சிக்குப் பின்பு இரட்சிக்கப்பட்டவர்கள். சபை எடுத்துக் கொள்ளப்படும் காலம் தானியேலின் எழுபதாவது வாரத்தின் முதல் மூன்றரை வருஷத்தில் முத்திரை திறக்கப்பட்ட காலம் ஆகியவற்றிற்கு இடைப்பட்ட காலத்தில் இவர்கள் இரத்தச்சாட்சியாக மரித்தார்கள். எல்லா முத்திரைகளின் நிகழ்ச்சிகளும் முதல் ஆறு எக்காளங்களின் நிகழ்ச்சிகளும் இக்காலத்தில் நடைபெறும். வெளி 17:1-7 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் மகா வேசியினால் இவர்கள் இரத்தச்சாட்சியாக மரிப்பார்கள். இக்காலத்தில் இவள் பத்து ராஜாக்களை ஆளுகை செய்வாள். இவர்கள்மீது அந்திக்கிறிஸ்துவின் ஆளுகையும் வரும் (வெளி 17:8-18)

"தேவவசனத்தின்மித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியின்மித்தமும்" இவ்விரண்டு காரணங்களுக்காகத்தான் யோவானை பத்மு (Patmos) தீவிற்கு நாடு கடத்தினார்கள் (வெளி 1:9-10)

"மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்" மரணத்திற்கும், உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஆத்துமா உணர்வுடையதாக இருக்கும் என்பதும் ஆத்துமா மரிப்பதில்லை என்பதும் இதன் மூலமாக நிரூபணமாகிறது.

"அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது" – உள்ளான மனுஷனான ஆவி, ஆத்துமாவிற்கு ஒரு ரூபமும் சாயலும் உண்டு. புறம்பான மனுஷன் தன்னுடைய சரீர ரூபத்தில் இருப்பதுபோல உள்ளான மனுஷனாகிய ஆவியும் ஆத்துமாவும் ஒரு ரூபத்தில் இருக்கும். ஆத்துமா உணர்கிறது. ஆவி அறிகிறது. உள்ளான மனுஷன் புசிக்கிறான், குடிக்கிறான், ஓய்வெடுக்கிறான். மேலும் பல காரியங்களைச் செய்கிறான். அதுபோலவே இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் வெள்ளை அங்கிகளை அணிந்து கொள்கிறான் (வெளி 6:11 மத் 17:5 லூக்கா 16:19-31; எபி 12:23)

"இன்னுங்கொஞ்சக்காலம் இளைப்பாற வேண்டும்" – இவர்கள் தங்களைப் போலக் கொலைசெய்யப்பட்டுப் போகிறவர்களாகிய தங்கள் உடன்பணிவிடைக்காரரும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும் இளைப்பாற வேண்டும். உபத்திரவகாலத்து பரிசுத்தவான்கள் இரத்தச்சாட்சியாக மரிக்கும் வரையிலும் இவர்கள் இளைப்பாற வேண்டும். இதன்பின்பு இவர்கள் அனைவரும் ஒன்றாக உயிர்த்தெழுவார்கள். இவர்களைக் கொலை செய்தவர்கள்மீது நியாயத்தீர்ப்பு அனுப்பப்படும். (வெளி 7:9-17, வெளி 15:2-4; வெளி 20:4-6)

(6) ஆறாம் முத்திரை – தேவனுடைய கோபாக்கினை ஆரம்பமாகிறது – (8:1-9:21; 11:15-18; 15:1,7; 16:1-21, 18:1-24; 19:11-20:3, சக 14; எசே 38-39, யோவேல் 3, ஏசா 63:1-6; யூதா 14)

வெளி 6:12 அவர் ஆறாம் முத்திரையை உடைக்கக்கண்டேன்; இதோ, பூமி மிகவும் அதிர்ந்தது; சூரியன் கறுப்புக் கம்பளியைப் போலக் கறுத்தது; சந்திரன் இரத்தம் போலாயிற்று.

வெளி 6:13 அத்திமரமானது பெருங்காற்றினால் அசைக்கப்படும்போது அதின் காய்கள் உதிருகிறதுபோல வானத்தின் நட்சத்திரங்களும் பூமியிலே விழுந்தது.

6 அதிகாரம்

வெளி 6:14 வானமும் சுருட்டப்பட்ட புஸ்தகம் போலாகி விலகிப்போயிற்று, மலைகள் தீவுகள் யாவும் தங்கள் இடங்களைவிட்டு அகன்றுபோயின

வெளி 6:15 பூமியின் ராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும், சேனைத் தலைவர்களும், பலவான்களும், அடிமைகள் யாவரும், சுயாதீனர் யாவரும், பர்வதங்களின் குகைகளிலும் கன்மலைகளிலும் ஒளித்துக்கொண்டு,

வெளி 6:16 பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி: நீங்கள் எங்கள்மேல் விழுந்து சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும் ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக் கொள்ளுங்கள்.

வெளி 6:17 அவருடைய கோபாக்கினையின் மகாநாள் வந்துவிட்டது, யார் நிலைநிற்கக்கூடும் என்றார்கள்

பெரிய "Great" காரியங்கள்

1 சத்தம் (Voice) (வெளி 1:10; வெளி 11:12; வெளி 16:1,17; வெளி 19:1; வெளி 21:3)

2 உபத்திரவம் (Tribulation) (வெளி 2:22; வெளி 7:14)

3 பட்டயம் (Sword) (வெளி 6:4)

4 பூமியதிர்ச்சி (Earthquake) (வெளி 6:12; வெளி 11:13; வெளி 16:18)

5 ஜனங்கள் (People) (வெளி 6:15; வெளி 11:18; வெளி 13:16; வெளி 18:23; வெளி 19:5,18; வெளி 20:12)

6 நாள் (Day) (வெளி 6:17; வெளி 16:14)

7 திரளான கூட்டமாகிய ஜனங்கள் (Multitude) (வெளி 7:9; வெளி 19:6)

8 பர்வதம் (Mountain) (வெளி 8:8; வெளி 21:10)

9 நட்சத்திரம் (Star) (வெளி 8:10)

10 சூளை (Furnace) (வெளி 9:2)

11 நதி (River) (வெளி 9:14; வெளி 16:12)

12 நகரம் (City) (வெளி 11:8; வெளி 14:8; வெளி 16:19; வெளி 17:18; வெளி 18:16-21; வெளி 21:10)

13 பயம் (Fear) (வெளி 11:11)

14 சத்தங்கள் (Voices) (வெளி 11:15)

15. வல்லமை (Power) (வெளி 11:17; வெளி 18:1)

16 கல்மழை (Hail) (வெளி 11:19; வெளி 16:21)

17 அடையாளம் (Wonder) (வெளி 12:1)

18 சிவப்பான வலுசர்ப்பம் (Red dragon) (வெளி 12:3,9)

19 கோபம் (Wrath) (வெளி 12:12)

20 கழுகு (Eagle) (வெளி 12:14)

21 அதிகாரம் (Authority) (வெளி 13:2)

22 காரியங்கள் (Things) (வெளி 13:5)

23. அற்புதங்கள் (Wonders) (வெளி 13:13)

24 இடிமுழக்கம் (Thunder) (வெளி 14:2)

வெளிப்படுத்தின விசேஷம் – தொகுப்புரை

6 அதிகாரம்

25. ஆலை (Winepress) (வெளி 14:19)

26. அடையாளம் (Sign) (வெளி 15:1)

27. கிரியைகள் (Works) (வெளி 15:3)

28. உஷ்ணம் (Heat) (வெளி 16:9)

29. தேவனுடைய நாள் (Day of God) (வெளி 16:14)

30. பாபிலோன் (Babylon) (வெளி 16:19; வெளி 17:5; வெளி 18:2,10)

31. வாதை (Plague) (வெளி 16:21)

32. வேசி (Whore) (வெளி 17:1; வெளி 19:2)

33. ஆச்சரியப்படுதல் (Admiration) (வெளி 17:6)

34. ஐசுவரியங்கள் (Riches) (வெளி 18:16)

35. ஏந்திரக்கல் (Millstone) (வெளி 18:21)

36. தேவன் (God) (வெளி 19:15)

37. சங்கிலி (Chain) (வெளி 20:1)

38. வெள்ளைச் சிங்காசனம் (White throne) (வெளி 20:11)

39. வாசல் (Wall) (வெளி 21:12)

தானியேலின் எழுபதாவது வாரத்தில் கூறப்பட்டிருக்கும் நான்கு பூமியதிர்ச்சிகள்

1. ஆறாவது முத்திரையின்போது தானியேலின் எழுபதாவது வாரத்தில் முதல் மூன்றரை வருஷத்தில் (வெளி 6:12)

2. ஏழாவது முத்திரைக்கும், முதலாவது எக்காளத்திற்கும் இடைப்பட்ட காலம் - முதல் மூன்றரை வருஷத்தில். (வெளி 8:5)

3. ஏழாவது எக்காளத்தின்போது - எழுபதாவது வாரத்தின் நடுவில் (வெளி 11:19)

4. ஏழாவது கலசத்தின்போது - வாரத்தின் இறுதியில். (வெளி 11:13; வெளி 16:19; சக 14:4-8)

தம்முடைய இரண்டாம் வருகைக்கு அடையாளமாக இயேசு கிறிஸ்து கடைசி நாட்களில் பல பூமியதிர்ச்சிகள் உண்டாகும் என்று முன்னறிவித்திருக்கிறார் (மத் 24:7; மாற்கு 13:8; லூக்கா 21:11). வேதாகம வரலாற்றில் பல பூமியதிர்ச்சிகளைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது (ஆமோ 1:1; சக 14:5; மத் 8:24; மத் 27:51; மத் 28:2; அப 16:25). ஆயிரம் வருஷ அரசாட்சியின் இறுதியில் மிகப்பெரிய பூமியதிர்ச்சி உண்டாகும் (ஆகாய 2:6-7, 21-22; எபி 12:25-29; 2பேதுரு 3:10-13; வெளி 20:11). இதன் பின்பு புதிய வானங்களும், புதிய பூமியும் உண்டாகும். (வெளி 21-22; ஏசா 66:22-24)

தானியேலின் எழுபதாவது வாரத்தில் சூரியன் கறுப்பாக மாறிய [redacted] நிகழ்ச்சிகள்

1. ஆறாவது முத்திரையின்போது - வாரத்தின் ஆரம்பத்தில் (வெளி 6:12)

2. நான்காவது எக்காளத்தின்போது (வெளி 8:12)

3. ஐந்தாவது எக்காளத்தின்போது. (வெளி 9:2)

4. நான்காவது கலசத்தின் போது வாரத்தின் இறுதியில் (வெளி 16:10)

5. உபத்திரவக்காலம் முடிந்தவுடன் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது. (மத் 24:29, ஏசா 13:10, எசே 32:7-8; யோவே 2:31; யோவே 3:15; அப 2:16-21)

6 அதிகாரம்

"சந்திரன் இரத்தம் போலாயிற்று" - சூரியன் கறுப்பாக மாறியதுபோன்று சந்திரனும் ஐந்து தடவை இரத்தம்போலாயிற்று.

"வானத்தின் நட்சத்திரங்களும் பூமியிலே விழுந்தது" - சூரியனைப் போலவே நட்சத்திரங்களும் ஐந்து முறை பாதிக்கப்பட்டன. இரண்டு முறை மட்டுமே அவை பூமியில் விழுந்ததாக வாசிக்கிறோம். அவையாவன

1. ஆறாவது முத்திரையின்போது (வெளி 6:13)

2. உபத்திரவக்காலத்திற்குப் பின்பு இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது. (மத் 24:29-31)

இவ்விரண்டு நிகழ்ச்சிகளுக்கு இடையில் பல வருஷங்கள் இடைவெளி உள்ளன.

"வானமும் சுருட்டப்பட்ட புஸ்தகம் போலாகி விலகிப்போயிற்று" - வெளி 20:11; 21:1 ஆகிய வசனங்களில் கூறப்பட்டுள்ளது போன்று பூமியும், வானமும் அகன்றுபோகவுமில்லை ஒழிந்து போகவுமில்லை. ஏனெனில் வெளி 6:14 ஆவது வசனத்திற்குப் பின்பு பலதடவை வானத்தைப் பற்றிய குறிப்பு வருகிறது. (வெளி 8:7,10,13; வெளி 9:1)

"மலைகள் தீவுகள் யாவும் தங்கள் இடங்களைவிட்டு அகன்றுபோயின" - இவைகள் முழுவதுமாக ஒழிந்துபோகவில்லை. ஏனெனில் பல வருஷங்களுக்குப் பின்பு மிகப்பெரிய பூமியதிர்ச்சி உண்டாயிற்று. தீவுகள் அகன்றுபோயின என்றும் பர்வதங்கள் காணப்படாமற்போயின என்றும் வெளிப்படுத்தின விசேஷம் கூறுகிறது. (வெளி 16:20) பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது. (பிர 1:4; சங் 104:5)

தேவனுடைய கோபாக்கினை வெளிப்பட்டதை உணர்ந்த ஏழு பிரிவினர்

1. ராஜாக்கள்
2. பெரியோர்கள்
3. ஐசுவரியவான்கள்
4. சேனைத்தலைவர்கள்
5. பலவான்கள்
6. அடிமைகள்
7. சுயாதீனர்

"அவருடைய கோபாக்கினையின் மகாநாள் வந்துவிட்டது" - இந்த கோபாக்கினை ரோமர் 2:5,(4-5) வெளி 20:11-15 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் கோபாக்கினை அல்ல. வாரத்தின் முதல் மூன்றரை வருஷத்தில் ஆறாவது முத்திரை திறக்கப்பட்ட போது இந்தக் கோபாக்கினை ஆரம்பமாகிறது. வாரத்தின் இறுதியில் எக்காளம், கலசம் ஆகிய நியாயத்தீர்ப்புக்கள் நடைபெறும் வரையிலும் இந்தக் கோபாக்கினை தொடர்கிறது. (வெளி 6:17; வெளி 11:18; வெளி 15:1,7; வெளி 16:1,19) ஆறாம் முத்திரையும், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும் ஒரே நிகழ்ச்சிகள் அல்ல. இவ்விரண்டு நிகழ்ச்சிகளுக்கும் இடையில் வெளி 7:1-9:10 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் எல்லா நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

7 அதிகாரம்

மீட்கப்பட்டவர்கள் - *(7:1-17)*

1. **முத்திரைப் போடப்பட்டவர்கள் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்** - *(7:2-3; 8:7-12; 9:4)*

வெளி 7:1 இவைகளுக்குப்பின்பு, பூமியின் நான்கு திசைகளிலும் நான்கு தூதர்கள் நின்று, பூமியின்மேலாவது, சமுத்திரத்தின் மேலாவது, ஒரு மரத்தின் மேலாவது காற்று அடியாதபடிக்கு, பூமியின் நான்கு காற்றுகளையும் பிடித்திருக்கக்கண்டேன்.

வெளி 7:2 ஜீவனுள்ள தேவனுடைய முத்திரைக்கோலையுடைய வேறொரு தூதன் சூரியன் உதிக்குந்திசையிலிருந்து ஏறிவரக்கண்டேன்; அவன் பூமியையும் சமுத்திரத்தையும் சேதப்படுத்துகிறதற்கு அதிகாரம் பெற்ற அந்த நான்கு தூதரையும் நோக்கி:

வெளி 7:3 நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரை போட்டுத்தீருமளவும், பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டான்.

வெளி 7:4 முத்திரை போடப்பட்டவர்களின் தொகையைச் சொல்லக்கேட்டேன்; இஸ்ரவேல் புத்திரருடைய சகலகோத்திரங்களிலும் முத்திரை போடப்பட்டவர்கள் இலட்சத்துநாற்பத்து நாலாயிரம்பேர்.

வெளி 7:5 யூதா கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள் பன்னீராயிரம். ரூபன் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். காத் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம்.

வெளி 7:6 ஆசேர் கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள் பன்னீராயிரம். நப்தலி கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். மனாசே கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம்.

வெளி 7:7 சிமியோன் கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள் பன்னீராயிரம். லேவி கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். இசக்கார் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம்.

வெளி 7:8 செபுலோன் கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள் பன்னீராயிரம். யோசேப்பு கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். பென்யமீன் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம்.

"இவைகளுக்குப்பின்பு" - வெளி 7 ஆவது அதிகாரம் இடையில் சேர்க்கப்பட்டிருக்கும் பகுதிகளில் முதலாவதாக வருகிறது. ஆறாம் ஏழாம் முத்திரைகளுக்கு இடையில் இந்த அதிகாரம் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆறாவது முத்திரையைத் தொடர்ந்து வாரத்தின் இறுதி வரையிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளை இந்த அதிகாரம் விளக்குகிறது.

"நான்கு தூதர்கள்" எக்காள நியாயத்தீர்ப்பு தூதர்கள் **(trumpet judgment angels)** 144,000 யூதர்களுடைய நெற்றிகளில் முத்திரை போட்டுத் தீருமளவும் எக்காளங்களை ஊதவேண்டாம் என்று இவர்களுக்குக் கட்டளை கொடுக்கப்பட்டது. (வெளி 7:1-3) ஏழு எக்காள நியாயத்தீர்ப்பிற்கு முன்பாக 144,000 பேருடைய நெற்றிகளில் முத்திரை போடப்பட்டது.

"பூமியின் நான்கு திசைகள்" - பூமியின் நான்கு பக்கங்களிலிருந்தும் என்று பொருள் (வெளி 7:1; ஏசா 11:12; வெளி 20:8; மத் 24:31)

7 அதிகாரம்

"ஜீவனுள்ள தேவனுடைய முத்திரைக்கோல்" - தேவனுடைய நாமம் முத்திரையிடப்பட்டது அல்லது தேவனுடைய நாமம் எழுதப்பட்ட நெற்றி என்று பொருள் (வெளி 14:1). இதற்கும் ஓய்வுநாளை ஆசரிப்பதற்கும் சம்பந்தம் எதுவுமில்லை.

"பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள்" - பூமியின்மீது வரும் வாதைகள் (வெளி 8:7-11)

"நமது தேவனுடைய ஊழியக்காரர்" - வெளி 4:1 ஆவது வசனத்தில் சபை எடுத்துக் கொள்ளப்படும்போது 144,000 யூதர்கள் தேவனுடைய ஊழியக்காரர்களாக இல்லை. ஏனென்றால் சபை எடுத்துக் கொள்ளப்படும்போது, கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களும் கிறிஸ்துவுக்குள் உயிரோடிருக்கிறவர்களும் அனைவரும் எடுத்துக் கொள்ளப்பட்டார்கள் (1தெச 4:16; 1கொரி 15:23; அப் 2:16-21) ஆகிய வசனங்களில் முன்னறிவிக்கப்பட்ட எழுப்புதலில் சபை எடுத்துக் கொள்ளப்பட்ட காலத்திற்குப் பின்பு இவர்கள் இரட்சிக்கப்பட்டிருப்பார்கள். இவர்களுடைய நெற்றிகளில் முத்திரை இடப்பட்ட போது இவர்கள் இரட்சிக்கப்பட்டு தேவனுடைய ஊழியக்காரர்களாக இருந்தார்கள். இதனால்தான், இவர்கள்மீது தேவனுடைய நாமங்கள் எழுதப்பட்டன (வெளி 7:3; வெளி 14:1)

முத்திரைபோடுதல் ஓர் உண்மைச் சம்பவம் என்பதற்கு ஆதாரங்கள்

1. வெளி 7:3; வெளி 14:1 ஆகிய வசனங்களில் இந்தச் சத்தியம் தெளிவாகவும், வெளிப்படையாகவும் கூறப்பட்டிருக்கிறது.

2. அவர்களுடைய நெற்றிகளில் முத்திரையிடுவது எல்லோரும் காணக்கூடிய விதத்தில் இருந்தது. ஆகையினால் முதல் நான்கு எக்காள தூதர்கள் இவர்களுடைய நெற்றிகளில் முத்திரை போட்டுத் தீருமளவும், எக்காளம் ஊதவேண்டாம் என்று கூறினார்கள் (வெளி 7:3; வெளி 8:7-12)

3. தங்கள் நெற்றிகளில் தேவனுடைய முத்திரையைத் தரித்திருக்கும் மனுஷரைச் சேதப்படுத்தவேண்டாம் என்று ஐந்தாம், ஆறாம் எக்காள தூதர்களுக்குக் கட்டளையிடப்பட்டது. (வெளி 9:4)

4. மிருகத்தின் முத்திரை ஓர் உண்மை சம்பவம். (வெளி 13:16-18; வெளி 14:9; வெளி 20:4) அதுபோல தேவனுடைய முத்திரையும் ஓர் உண்மை சம்பவமே (வெளி 14:1)

5. தேவனுடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் எழுதப்பட்டிருந்தது (வெளி 7:3; வெளி 14:1)

6. ஜெயங்கொள்ளுகிறவர்கள் மீது நாமங்கள் எழுதப்படும். (வெளி 3:12; வெளி 22:4) அதுபோலவே ஜெயங்கொள்ளுகிற 144,000 பேர்மீது தேவனுடைய நாமம் எழுதப்பட்டது (வெளி 14:1)

"இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேர்" - எலியாவின் காலத்தில் தேவன் தமக்காக 7,000 பேரை மீதியாகத் தெரிந்து கொண்டார். அதுபோல தானியேலின் எழுபதாவது வாரத்தின் முதல் மூன்றரை வருஷத்தில் தேவன் தமக்காக 144,000 யூதர்களைத் தெரிந்துகொண்டார் (வெளி 7:1-8)

"இஸ்ரவேல் புத்திரருடைய சகலகோத்திரங்கள்" 144,000 பேர் இஸ்ரவேல் புத்திரரின் பன்னிரண்டு கோத்திரங்களிலிருந்து வந்தவர். இவர்களில் புறஜாதியார் யாருமில்லை. இவர்கள் சபையைச் சேர்ந்தவர்களுமல்ல. ஏனென்றால் இவர்கள் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாகவே சபை எடுத்துக்கொள்ளப்பட்டது. (வெளி 4:1) இவர்கள் சபை எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்பிருந்த யூதர்களோ அல்லது தானியேலின் எழுபதாவது வாரத்தின் முதல் மூன்றரை வருஷத்திற்கு அப்பாற்பட்ட காலத்தில் இருந்தவர்களோ அல்ல.

7 அதிகாரம்

தாண் கோத்திரத்தார் முத்திரை போடப்படவில்லை - இதற்குக் காரணம்

இந்த வசனப் பகுதியில் தாண் எப்பிராயீம் ஆகியோருடைய பெயர்கள் குறிப்பிடப்படவில்லை லேவியும் யோசேப்பும் இவர்களுடைய ஸ்தானங்களை எடுத்துக் கொண்டார்கள் தாணுடைய பெயர் விடுபட்டதற்கு ஒருசிலர் உபா 29:18-21 ஆகிய வசனங்களைக் காரணமாகக் கூறுகிறார்கள் இந்த வசனங்களில் தாண கோத்திரத்தார் புறஜாதி தெய்வங்களை ஆராதித்ததாகக் குறிப்பு உள்ளது. தாண கோத்திரத்தாருடைய பெயர் விடுபட்டதற்கு விக்கிரகாராதனை ஒரு காரணமாக இருக்க முடியாது ஏனென்றால் இஸ்ரவேல கோத்திரத்தார் அனைவருமே தங்களுடைய வரலாற்றின் ஏதாவது ஒரு காலத்தில விக்கிரகாராதனையில தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்களே தாண கோத்திரத்தாரின பெயர் இங்கு விடுபட்டதற்குக் காரணம் இந்தக் காலத்தில இந்தக் கோத்திரத்திலிருந்து ஒருவரும் தேவனுடைய ஊழியக்காரராக இல்லை (வெளி 7 3) ஆயிரம் வருஷ அரசாட்சியில மற்ற கோத்திரங்களோடு சேர்ந்து தாண கோத்திரமும் மீட்கப்படும். (எசே 48:30-35 வெளி 21:12)

"லேவி" (Levi) - இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரைப் பற்றிக்கூறும் போது, அதில லேவியின கோத்திரம் சேர்க்கப் படுவதில்லை ஏனென்றால லேவி கோத்திரத்தார இஸ்ரவேல தேசம் அனைத்திற்கும் ஊழியக்காரர்களாக இருந்தார்கள இங்கு தாண கோத்திரத்தாரின் பெயர் சேர்க்கப்படாமல விடுபட்டிருக்கிறது. 144,000 யூதர்கள எழும்புதலில இரட்சிக்கப்பட்ட போது. தாண கோத்திரத்தாரில் யாரும் தங்களைத் தேவனிடத்தில் ஒப்புக்கொடுக்க வில்லை (வெளி 7 3)

"பென்யமீன் கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள் பன்னிராயிரம்" - தானியேலின் எழுபதாவது வாரத்தின் முதல் மூன்றரை வருஷங்களில் முத்திரை போடப்பட்ட 144,000 பேர்களும் யூதர்களே இவர்களில புறஜாதியார் ஒருவருமில்லை. இந்த யூதர்கள் இந்தக் காலத்தில் இரட்சிக்கப்பட்டு. தேவனுடைய ஊழியக்காரர்களாகச் சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு, இந்த யூதர்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள் (வெளி 7:4-8 வெளி 14:1-5) எக்காள நியாயத்தீர்ப்புகளின் போது இவர்கள் பாதுகாக்கப்பட்டார்கள் (வெளி 7:2-3 வெளி 9:4) வெளி 12:5 ஆவது வசனம் ஆண்பிள்ளை தேவனுடைய சிங்காசனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது என்று கூறுகிறது சில வேதபண்டிதர்கள் 144,000 யூதர்களே இந்த ஆண்பிள்ளை என்று வியாக்கியானம் கூறுகிறார்கள்

2. **மகா உபத்திரவக்காலம்** - (6:8-11 13:7 15-18) 15:2-4 17:6) 20:4 தானி 7:21-27; 8:24; 9:27; 12:7 மத் 24:9 22)

வெளி 7:9 இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும் ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில குருத்தோலைகளைப் பிடித்து சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன

வெளி 7:10 அவர்கள மகா சத்தமிட்டு இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின மேல வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள்

வெளி 7:11 தூதர்கள் யாவரும் சிங்காசனத்தையும் மூப்பர்களையும் நான்கு ஜீவன்களையும் சூழநின்று, சிங்காசனத்திற்குமுன்பாக முகங்குப்புற விழுந்து தேவனைத் தொழுதுகொண்டு:

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

7 அதிகாரம்

வெளி 7:12 ஆமென் எங்கள் தேவனுக்குத் துதியும் மகிமையும் ஞானமும் ஸ்தோத்திரமும் கனமும் வல்லமையும் பெலனும் சதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமென் என்றார்கள்.

வெளி 7:13 அப்பொழுது, மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கேயிருந்து வந்தார்கள்? என்று கேட்டான்.

வெளி 7:14 அதற்கு நான்: ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன்: இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்.

வெளி 7:15 ஆனபடியால், இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்; சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார்.

வெளி 7:16 இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவதுமில்லை; வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள்மேல் படுவதுமில்லை.

வெளி 7:17 சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்; தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார் என்றான்.

"இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, திரளான கூட்டமாகிய ஜனங்கள்" - வெளிப்படுத்தின விசேஷத்தில் கடைசியாக மீட்கப்பட்டவர்களைப் பற்றிய விவரம் வெளி 7:9-17 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. உபத்திரவக்காலத்தில் 144,000 யூதர்கள் மரிக்காமல் உயிரோடு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள். இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் திரளான ஜனங்கள் உபத்திரவக்காலத்தில் இரத்தச் சாட்சியாக மரித்தவர்கள் (வெளி 12:5). இவர்கள் வெளி 4:1 ஆவது வசனத்தில் சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு இரத்தச் சாட்சியாக மரித்தவர்கள். வெளி 6:9-11 ஆகிய வசனங்களில் பலிபீடத்தின் கீழே இருந்த பரிசுத்தவான்களின் ஆத்துமாக்களும் இவர்களில் அடங்குவார்கள். இவர்களுடைய சகோதரர்களில் மீதியானவர்கள் உபத்திரவக்காலத்தில் இரத்தச்சாட்சியாக மரிப்பார்கள் (வெளி 14:13; வெளி 15:2-4; வெளி 20:4-6).

"ஒருவனும் எண்ணக்கூடாதது" - எபிரெய வழக்குச்சொல். திரளான எண்ணிக்கையுள்ள ஜனங்கள் என்று பொருள்.

"சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்தவர்கள்" - இவர்கள் புறஜாதியார். அல்லது இவர்களில் அநேகர் புறஜாதியார்.

"சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும்" - இவர்கள் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். இல்லையெனில் இவர்களால் பரலோகத்தில் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக நிற்க முடியாது. அவர்கள் இரத்தச்சாட்சியாக மரிக்கும் வரையிலும் அவர்களால் உயிர்த்தெழவோ பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவோ முடியாது. தானியேலின் எழுபதாவது வாரத்தின் இறுதியில் இவர்கள் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாண விருந்து நடைபெறும்போது அதில் கலந்து கொள்ளும் விதத்தில் அக்காலத்தில் இவர்கள் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும் (வெளி 19:1-10). இவர்கள் முதலாம் உயிர்த்தெழுதலை நிறைவு பெறச்செய்தார்கள் (வெளி 20:4-6).

வெளிப்படுத்தின விசேஷம் – தொகுப்புரை

7 அதிகாரம்

"வெள்ளை அங்கிகளைத் தரித்து" - (வெளி 6:9-11; வெளி 7:13-14; வெளி 19:8)

குருத்தோலை (palms) - φοῖνιξ1 - Phoinix1 - 5404

ஆண்பால் பெயர்ச்சொல் - குருத்தோலை – இது ஜெயம் பெற்றதற்கு அடையாளம். (யோவான் 12:13)

"இரட்சிப்பின் மகிமை" (Salvation to our God) - தேவனே மனுஷருடைய இரட்சிப்பின் காரண கர்த்தாவாக இருக்கிறவர் ஆட்டுக்குட்டியானவர் மனுஷருடைய இரட்சிப்பைத் தேவனிடத்திலிருந்து தமது திருஇரத்தத்தை முழுக்கிரயமாகச் செலுத்தி வாங்கியிருக்கிறார் (வெளி 5:8-10; கொலோ 1:20-22; கொலோ 2:14-17; 1கொரி 6:19-20; 1பேதுரு 1:18-23)

"ஆமென்" (Amen) - (யோவான் 1:51) "மெய்யாகவே மெய்யாகவே" - நிச்சயமாக என்றும் பொருள்படும். "ஆமென்" என்றும் இதற்குப் பொருள் கூறலாம். மெய்யாகவே மெய்யாகவே என்று யோவான் 25 இடங்களில் கூறியிருக்கிறார் (யோவான் 1:51; யோவான் 3:3,5,11; யோவான் 5:19,24,25; யோவான் 6:26,32,47,53; யோவான் 8:34,51,58; யோவான் 10:1,7; யோவான் 12:24; யோவான் 13:16,20,21,38; யோவான் 14:12; யோவான் 16:20,23; யோவான் 21:18) இயேசு கிறிஸ்து சத்தியத்தைக் கூறுகிறார். அவரால் மட்டுமே ஒரு காரியத்தை இவ்வாறு வலியுறுத்திக் கூறமுடியும். (யோவான் 14:6) மற்ற இடங்களிலெல்லாம் "மெய்யாகவே" என்று ஒரு தடவை மட்டுமே இந்த வார்த்தைப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் 36 தடவைகளும் மத்தேயுவில் 30 தடவைகளும் மாற்குவில் 15 தடவைகளும், லூக்காவில் 8 தடவைகளும் இந்த வாக்கியம் வந்திருக்கிறது. சுவிசேஷ புஸ்தகங்களில் இயேசு கிறிஸ்து மட்டுமே "மெய்யாகவே" என்னும் வாக்கியத்தைப் பயன்படுத்தியிருக்கிறார். சுவிசேஷப் புஸ்தகங்கள் தவிர புதிய ஏற்பாட்டில் 21 தடவைகள் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. சுவிசேஷப் புஸ்தகத்தில் இயேசு கிறிஸ்து "மெய்யாகவே" என்னும் வாக்கியத்தை 103 தடவைகள் பயன்படுத்தியிருக்கிறார். மற்ற 62 புஸ்தகங்களில் இதர ஆசிரியர்கள் இந்த வாக்கியத்தை 36 தடவைகள் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

தேவனுக்குச் சதா காலங்களிலும் உண்டாக வேண்டிய காரியங்கள்

1. துதி (Blessing worship) (வெளி 5:12)
2. மகிமை (Glory praise) (வெளி 5:12)
3. ஞானம் (Wisdom—omniscience) (வெளி 5:12)
4. ஸ்தோத்திரம் (Thanksgiving) (எபி 13:15-16)
5. கனம் (Honor—reputation) (வெளி 5:12)
6. வல்லமை (Power—omnipotence) (வெளி 19:6)
7. பெலன் (Might—strength) (வெளி 5:12)

"இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்" - ஆகையினால் இவர்கள் உபத்திரவங்களால் பரிசுத்தவான்கள் என்று அழைக்கப்படுகிறார்கள் (வெளி 4:4)

"மிகுந்த உபத்திரவம்" (great tribulation) தானியேலின் எழுபதாவது வாரத்தின் இறுதி மூன்றரை வருஷ காலத்தில் மிகுந்த உபத்திரவம் உண்டாகும் (மத் 24:15-22; தானி 12:1; எரே 30:6-9). இக்காலத்தில் வெளி 11:15-19:21 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் நடைபெறும்.

"இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்" யூதராக இருந்தாலும் புறஜாதியாராக இருந்தாலும் தேவனுடைய இரக்கத்தின் கதவு எப்பொழுதுமே அடைக்கப்படுவதில்லை. தேவனுடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் (அப் 2:16-21; ரோமர் 1:16; ரோமர் 10:9-17; 1கொரி 6:11; 1யோவான் 1:7; வெளி 1:5; வெளி 12:17; வெளி 22:17)

BELLWETHER INTERNATIONAL

பரிசுத்த வேதாகமம் - தொகுப்புரை

THE HOLY BIBLE - EDITORIAL COLLECTION

GOOD NEWS PUBLISHERS

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

7 அதிகாரம்

இரட்சிக்கப்பட்டவர்களுக்கு ஆசீர்வாதங்கள்

1 தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருக்கிறார்கள் (வெளி 7:15)

2 இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே [redacted] சேவிக்கிறார்கள் (வெளி 7:15)

3 சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார் (வெளி 7:15)

4 இவர்கள் இனி பசியடைவதுமில்லை (வெளி 7:16)

5 இனி தாகமடைவதுமில்லை (வெளி 7:16)

6 வெயில் இவர்கள் மேல் படுவதுமில்லை (வெளி 7:16)

7 உஷ்ணம் இவர்கள் மேல் படுவதுமில்லை (வெளி 7:16)

8 சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்ப்பார் (வெளி 7:17)

9 இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார் (வெளி 7:17)

10 தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார் (வெளி 7:17) வெளி [illegible]

"ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகள்" (**living fountains of waters**) நித்திய காலமாக ஊறுகிற ஜீவ ஊற்றுக்கள்

8 அதிகாரம்

(7) ஏழாம் முத்திரை - பரலோகத்தில் அமைதல் உண்டாயிற்று - (8:7)

வெளி 8:1 அவர் ஏழாம் முத்திரையை உடைத்தபோது, பரலோகத்தில் ஏறக்குறைய அரைமணிநேரமளவும் அமைதல் உண்டாயிற்று.

வெளி 8:2 பின்பு தேவனுக்குமுன்பாக நிற்கிற ஏழு தூதர்களையுங் கண்டேன்; அவர்களுக்கு ஏழு எக்காளங்கள் கொடுக்கப்பட்டது.

வெளி 8:3 வேறொரு தூதனும் வந்து தூபங்காட்டும் பொற்கலசத்தைப் பிடித்துப் பலிபீடத்தின் படியிலே நின்றான்; சிங்காசனத்திற்குமுன்பாக இருந்த பொற்பீடத்தின்மேல் சகல பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடும் செலுத்தும்படி மிகுந்த தூபவர்க்கம் அவனுக்குக் கொடுக்கப்பட்டது.

வெளி 8:4 அப்படியே பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடும் செலுத்தப்பட்ட தூபவர்க்கத்தின் புகையானது தூதனுடைய கையிலிருந்து தேவனுக்கு முன்பாக எழும்பிற்று.

வெளி 8:5 பின்பு, அந்தத் தூதன் தூபகலசத்தை எடுத்து, அதைப் பலிபீடத்து நெருப்பினால் நிரப்பி, பூமியிலே கொட்டினான்; உடனே சத்தங்களும், இடிமுழக்கங்களும், மின்னல்களும், பூமியதிர்ச்சியும் உண்டாயின.

வெளி 8:6 அப்பொழுது ஏழு எக்காளங்களையுடைய ஏழு தூதர்கள் எக்காளம் ஊதுகிறதற்குத் தங்களை ஆயத்தப்படுத்தினார்கள்.

"பரலோகத்தில் ஏறக்குறைய அரைமணிநேரமளவும் அமைதல் உண்டாயிற்று" - இந்த அமைதலுக்கான காரணம் என்னவென்று கூறப்படவில்லை.

"தேவனுக்குமுன்பாக நிற்கிற ஏழு தூதர்கள்" - ஏழாவது முத்திரைக்கும், முதலாவது எக்காளத்திற்கும் இடையில் பரலோகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை வெளி 8:2-6 ஆகிய வசனங்கள் விவரிக்கின்றன. இந்த வசனப்பகுதி ஓர் இணைப்பகுதியாகும் (parenthetical passage). தானியேலின் எழுபதாவது வாரத்தின் முதலாவது மூன்றரை வருஷம் முடிவு பெறும்போது ஏழாவது எக்காளம் ஊதப்படும். வெளி 8:2-6 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் ஏழாவது எக்காளத்திற்கு ஆயத்தப்படுத்தும் காரியங்களாகும். (வெளி 11:15)

"அவர்களுக்கு ஏழு எக்காளங்கள் கொடுக்கப்பட்டது" - இவர்களுக்கு எக்காளங்களைக் கொடுத்தது யாரென்று கூறப்படவில்லை. வெளி 15:7 ஆவது வசனத்தில் நான்கு ஜீவன்களில் ஒன்று பொற்கலசங்களை ஏழு தூதர்களுக்குக் கொடுத்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. அதுபோன்று இந்த எக்காளங்களையும் மூப்பர்களில் ஒருவர் கொடுத்திருக்கலாம். இந்த ஏழு எக்காளங்களும் முத்திரைகளுக்கும் பொற்கலசங்களுக்கும் இடையில் ஒவ்வொன்றாக ஊதப்படும். முதலாவது எக்காளம் ஏழாம் முத்திரை உடைக்கப்பட்ட பின்பும் கடைசி எக்காளம் வாரத்தின் நடுவிலும் ஊதப்படும். (வெளி 11:15)

"வேறொரு தூதனும் வந்து தூபங்காட்டும் பொற்கலசத்தைப் பிடித்துப் பலிபீடத்தின் படியிலே நின்றான்" - இந்தத் தூதன் இயேசு கிறிஸ்துவாக இருக்கலாம். இது அவருடைய பிரதான ஆசாரிய ஊழிய நிகழ்ச்சியாக இருக்கலாம். (எபி 4:14-16, எபி 6:20-7:28, எபி 13:15) தூபங்காட்டும் பொற்கலசம் பொதுவாகப் பிரதான ஆசாரியர்களிடத்தில் இருக்கும். (லேவி 16:12, எபி 9:4) பிரதான ஆசாரிய ஊழியத்தைப் பற்றி லேவி 10:1; எண் 16:1-19, 2நாளா 26:19, எசே 8:11 ஆகிய வசனங்கள் விளக்குகின்றன.

"தூபவர்க்கம்" (incense) (வெளி 5:8-10)

8 அதிகாரம்

"எக்காளம் ஊதுகிறதற்குத் தங்களை ஆயத்தப்படுத்தினார்கள்" - பலிபீடத்தில தூதனுடைய ஊழியம் முடிந்த பிறகு (வெளி 8:3-5) எக்காளம் ஊதும் ஏழு தூதர்களும் எக்காளம் ஊதுவதற்குத் தங்களை ஆயத்தப்படுத்தினார்கள (வெளி 8:6) ஒவ்வொரு தூதராக முத்திரைகளுக்கும். பொறகலசங்களுக்கும் இடையே ஒவ்வொரு எக்காளமாக ஊதினார்கள்

(8) முதலாம் எக்காளம் - பரலோகத்திலிருந்து இரத்தம் கலந்த கல்மழையும் அக்கினியும் உண்டாகி பூமியிலே கொட்டப் பட்டது - (யாத் 9:22-26, எசே 38:16-23

வெளி 8.7 முதலாம் தூதன எக்காளம் ஊதினான், அப்பொழுது இரத்தங்கலந்த கல்மழையும அக்கினியும் உண்டாகி, பூமியிலே கொட்டப்பட்டது, அதினால் மரங்களில மூன்றிலொருபங்கு வெந்து போயிற்று பசும்புல்லெல்லாம எரிந்து போயிற்று.

"இரத்தங்கலந்த கல்மழையும் அக்கினியும் உண்டாகி, பூமியிலே கொட்டப்பட்டது" இதுபோன்ற நிகழ்ச்சி ஏற்கெனவே எகிப்திலும் நடை பெற்றிருக்கிறது. (யாத் 9:22-26

(9) இரண்டாம் எக்காளம் - பரலோகத் திலிருந்து அக்கினியால் எரிகிற பெரிய மலை போன்றதொன்று சமுத்திரத்திலே போடப்பட்டது - (76.3-4, யாத் 9:14-21, சங் 78:44, 105:29)

வெளி 8:8 இரண்டாம் தூதன எக்காளம் ஊதினான அப்பொழுது அக்கினியால் எரிகிற பெரிய மலைபோன்றதொன்று சமுத்திரத்திலே போடப்பட்டது, அதினால சமுத்திரத்தில் மூன்றிலொருபங்கு இரத்தமாயிற்று.

வெளி 8:9 சமுத்திரத்திலிருந்த ஜீவனுள்ள சிருஷ்டிகளில் மூன்றிலொருபங்கு செத்துப்போயிற்று கப்பல்களில மூன்றிலொருபங்கு சேதமாயிற்று.

"சமுத்திரத்தில மூன்றிலொருபங்கு இரத்தமாயிற்று" - இதுபோன்ற நிகழ்ச்சி ஏற்கெனவே எகிப்திலும் நடைபெற்றிருக்கிறது. (யாத் 9:14-21 சங் 78:44; சங் 105:29

(10) மூன்றாம் எக்காளம் - பெரிய நட்சத்திரம் தண்ணீரை எட்டியைப் போல் கசப்பாக்கிற்று

வெளி 8:10 மூன்றாம் தூதன் எக்காளம ஊதினான்; அப்பொழுது ஒரு பெரிய நட்சத்திரம் தீவட்டியைப்போல எரிந்து, வானத்திலி ருந்து விழுந்தது அது ஆறுகளில் மூன்றிலொருபங்கின் மேலும் நீரூற்றுகளின்மேலும் விழுந்தது

வெளி 8:11 அந்த நட்சத்திரத்திற்கு எட்டியென்று பெயர்; அதினால் தண்ணீரில மூன்றிலொருபங்கு எட்டியைப் போலக் கசப்பாயிற்று இப்படிக் கசப்பான தண்ணீரினால மனுஷரில் அநேகர் செத்தார்கள

"ஒரு பெரிய நட்சத்திரம் தீவட்டியைப்போல எரிந்து வானத்திலிருந்து விழுந்தது" அது ஆறுகளில மூன்றிலொரு பங்கின்மேலும் நீரூற்றுகளின்மேலும் விழுந்தது. தேவனால எல்லாம் கூடும். கசந்த மாராவை அவரால மதுரமாகவும் முடியும். மதுரமான தண்ணீரை அவரால எட்டியைப்போல கசப்பாகவும் அவரால முடியும். (யாத் 15:26-27)

(11) நான்காம் எக்காளம் - கிரகங்களில் மூன்றில் ஒரு பங்கு இருளடைந்தது - (யாத் 10:21-23, வெளி 16:10)

வெளி 8:12 நான்காம் தூதன் எக்காளம் ஊதினான அப்பொழுது சூரியனில மூன்றிலொருபங்கும், நட்சத்திரங்களில மூன்றிலொருபங்கும் சேதப்பட்டது அவற்றவற்றில மூன்றிலொருபங்கு இருளடைந்தது, பகலிலும் மூன்றி லொருபங்கு பிரகாசமில்லாமற்போயிற்று, இரவிலும் அப்படியேயாயிற்று.

8 அதிகாரம்

"சூரியனில் மூன்றிலொருபங்கும் நட்சத்திரங்களில் மூன்றிலொருபங்கும் சேதப்பட்டது" - பகலிலும் மூன்றிலொருபங்கு பிரகாசமில்லாமற்போயிற்று. இரவிலும் அப்படியேயாயிற்று. எகிப்தில் இதே போன்று ஒரு காரியம் நடைபெற்றிருக்கிறது. (யாத் 10:21-23) முதல் நான்கு எக்காளங்களும் ஊதப்பட்டபோது தாவரங்கள், கடல்கள், ஆறுகள், நட்சத்திரங்கள் ஆகியவை பாதிப்படைந்தன. (வெளி 8:7-10)

மனுக்குலத்தின்மீது மூன்று ஐயோக்கள்

> வெளி 8:13 பின்பு, ஒரு தூதன் வானத்தின் மத்தியிலே பறந்துவரக் கண்டேன்; அவன் மகா சத்தமிட்டு: இனி எக்காளம் ஊதப்போகிற மற்ற மூன்று தூதருடைய எக்காள சத்தங்களினால் பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு ஐயோ, ஐயோ, ஐயோ, (ஆபத்துவரும்) என்று சொல்லக்கேட்டேன்.

"ஒரு தூதன் வானத்தின் மத்தியிலே பறந்துவந்தான்" - தூதர்களுக்கு இறக்கைகள் இல்லை. ஆயினும் வானங்களில் அவைகளால் பறக்க முடியும். (வெளி 8:13, வெளி 14:6-20)

"இனி எக்காளம் ஊதப்போகிற மற்ற மூன்று தூதருடைய எக்காளசத்தங்களினால் பூமியிலேகுடியிருக்கிறவர்களுக்கு ஐயோ, ஐயோ, ஐயோ, (ஆபத்துவரும்) என்று சொல்லக்கேட்டேன்" - இந்த வாக்கியம் வெளிப்படுத்தின விசேஷத்தில் காணப்படும் மூன்றாவது இணைப்பகுதியாகும். கடைசி மூன்று எக்காளங்களும் ஊதப்படும்போது மனுஷருக்கு வரும் ஆபத்தை இது விளக்கிக் கூறுகிறது.

பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு வரும் மூன்று ஐயோக்கள்

1. பாதாளக் குழியிலிருந்து எழும்பின பிசாசுகளினால் உண்டாகும் வாதை. ஐந்து மாதமளவும் இவை மனுஷரை வேதனைப்படுத்திற்று. (வெளி 9:1-12)

2. பாதாளக் குழியிலிருந்து எழும்பின பிசாசுகள் பூமியிலுள்ள மனுஷரில் மூன்றிலொருபங்கைக் கொன்றுபோட்டன. (வெளி 9:13-21)

3. மூன்றரை வருஷங்களுக்கு மனுஷரை அழிப்பதற்காக சாத்தான் பூமிக்குத் தள்ளப்படுவான். (வெளி 11:14-13:18)

9 அதிகாரம்

(12) ஐந்தாம் எக்காளம் - பாதாளத்தின் திறவுகோல் கொடுக்கப்பட்டது

(அ) பாதாளக்குழியைத் திறந்தான் - புகை எழும்பிற்று

வெளி 9:1 ஐந்தாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது வானத்திலிருந்து பூமியின்மேல் விழுந்த ஒரு நட்சத்திரத்தைக் கண்டேன்; அவனுக்குப் பாதாளக்குழியின் திறவுகோல் கொடுக்கப்பட்டது.

வெளி 9:2 அவன் பாதாளக்குழியைத் திறந்தான்; உடனே பெருங்சூளையின் புகையைப்போல அந்தக் குழியிலிருந்து புகை எழும்பிற்று; அந்தக் குழியின் புகையினால் சூரியனும் ஆகாயமும் அந்தகாரப்பட்டது.

வெளி 9:3 அந்தப் புகையிலிருந்து வெட்டுக்கிளிகள் புறப்பட்டுப் பூமியின்மேல் வந்தது; அவைகளுக்குப் பூமியிலுள்ள தேள்களின் வல்லமைக்கொப்பான வல்லமை கொடுக்கப்பட்டது.

"வானத்திலிருந்து பூமியின்மேல் விழுந்த ஒரு நட்சத்திரம்" - இது ஒரு உண்மையில் ஒரு நட்சத்திரம் அல்ல. இது ஒரு நபர். இந்த நட்சத்திரத்திற்கு "இவன்" என்று சுட்டுப்பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. சாத்தானுடைய தூதர்களும் நட்சத்திரங்களாகக் கூறப்பட்டிருக்கிறார்கள் (வெளி 9:1-2). வானத்திலிருந்து விழுந்த நட்சத்திரம் விழுந்து போன தூதனல்ல. இவன் வானத்திலிருந்து பாதாளக்குழியைத் திறப்பதற்காக இறங்கி வருவான். வெளி 9 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் தரிசனத்தை நிறைவேற்றுவதற்காக பாதாளக்குழியிலுள்ள சிருஷ்டிகளை விடுதலை பண்ணுவான். இவனிடத்தில் பாதாளக்குழியின் திறவுகோல் கொடுக்கப்பட்டது. ஆகையினால் இவன் பரிசுத்தமுள்ளவனாகவும், நம்பிக்கைக்குரியவனாகவும் இருக்க வேண்டும். இவன் விழுந்துபோன தூதனாக இருந்தால் தன்னுடைய இஷ்டத்தின்படி பாதாளத்திலுள்ள எல்லோரையும் விடுதலை பண்ணிவிடுவான். இவன் பாதாளத்தின் தூதனுமல்ல. (வெளி 9:11) பாதாளத்தின் தூதனை நம்பி பாதாளக்குழியின் திறவுகோலை யாரும் கொடுக்கமாட்டார்கள்.

"பெருங்சூளையின் புகையைப்போல அந்தக் குழியிலிருந்து புகை எழும்பிற்று" - பாதாளக்குழி அக்கினியால் சூழப்பட்டிருக்கும் இடமாகும். வேதத்தில் கூறப்பட்டிருக்கும் Sheol, Hades, Tartarus, Gehenna, the Lake of Fire ஆகிய இடங்களுக்கும் பாதாளத்தின் குழிக்கும் வேறுபாடு உண்டு.

வெட்டுக்கிளிகள் (locusts) - ἀκρίς - **akris** - 200

பெண்பால் பெயர்ச்சொல் - வெட்டுக்கிளி (வெளி 9:3,7; மத் 3:4; மாற்கு 1:6) - சாதாரண வெட்டுக்கிளிகள் சுத்தமானவை. யோவான் ஸ்நானனுக்கு அவை உணவாகப் பயன்பட்டன (மத் 3:4; லேவி 11:22; பிர 12:5)

பாதாளத்தின் குழியிலிருந்து புறப்பட்ட வெட்டுக்கிளிகள் சாதாரண வெட்டுக்கிளிகள் அல்ல என்பதற்குச் சான்றுகள்

1. சாதாரண வெட்டுக்கிளிகளைப்போன்று இவை பூமியின் புல்லையும் பசுமையான எந்தப் பூண்டையும் எந்த மரத்தையும் சேதப்படுத்தாது (வெளி 9:4). எகிப்தின்மீது வரவழைக்கப்பட்ட எட்டாவது வாதையில் வெட்டுக்கிளிகள் எகிப்தின் பசுமையானவை யாவற்றையும் அழித்து விட்டன (யாத் 10:3-20).

2. இந்த வெட்டுக்கிளிகளுக்கு ஒரு ராஜா உண்டு (வெளி 9:11). சாதாரண வெட்டுக்கிளிகளுக்கு ராஜா இல்லை (நீதி 30:27).

3. இந்த வெட்டுக்கிளிகள் பெருங்சூளையின் புகையினாலோ பாதாளத்தின் குழியில் காணப்பட்ட அக்கினியினாலோ அழிந்து போவதில்லை. ஆனால் சாதாரண வெட்டுக்கிளிகளோ அக்கினியில் பொசுங்கி விடும். (வெளி 9:2-3)

9 அதிகாரம்

4 இந்த வெட்டுக்கிளிகள் தங்களுடைய பாவங்களினால் பாதாளத்தின் குழிகளில் அடைத்து வைக்கப்பட்டிருந்தன (வெளி 9:1-11 லூக்கா 8:28-31) சாதாரண வெட்டுக்கிளிகள் பாதாளத்தில் அடைத்து வைக்கப்படுவதில்லை

5 இந்த வெட்டுக்கிளிகள் ஆவிக்குரிய பண்புடையவை. மனுஷரால் இவற்றை அழிக்க முடியாது. சாதாரண வெட்டுக்கிளிகளை மனுஷர் அழித்து விடுவார்கள் இந்த வசனத்தில கூறப்பட்டிருக்கும் வெட்டுக்கிளிகளுக்கு ஜனங்கள் பயப்பட்டார்கள் (வெளி 9:5-6,11)

6 இந்த வெட்டுக்கிளிகள் ஞானமுள்ளவை. இவைகள் கட்டளையிடும். தங்கள் ராஜனைப் பின்பற்றிச் செல்லும். (வெளி 9:4-6,11)

7 இந்த வெட்டுக்கிளிகள் மனுஷனைத் தேள்களைப்போல வாதித்துக் கொட்டும் (வெளி 9:3-10) சாதாரண வெட்டுக்கிளிகளுக்கு இப்படிப்பட்ட வல்லமையில்லை

வெளி 9 ஆவது அதிகாரத்தில் கூறப் பட்டிருக்கும் வெட்டுக்கிளிகளின் விசேஷித்த அம்சங்கள்

1 வெட்டுக்கிளிகளின் உருவம் யுத்தத்திற்கு ஆயத்தம்பண்ணப்பட்ட குதிரைகளுக்கு ஒப்பாயிருந்தது. (வெளி 9:7)

2 அவைகளுடைய தலைகளின்மேல் பொன்மயமான கிரீடம் போன்றவைகளிருந்தன (வெளி 9:7)

3 அவைகளின் முகங்கள் மனுஷருடைய முகங்கள்போலிருந்தன (வெளி 9:7)

4 அவைகளுடைய கூந்தல் ஸ்திரீகளுடைய கூந்தலபோலிருந்தது (வெளி 9:8)

5 அவைகளின் பற்கள் சிங்கங்களின் பற்கள்போலிருந்தன (வெளி 9:8)

6 இருப்புக் கவசங்களைப்போல மார்க்கவசங்கள் அவைகளுக்கு இருந்தன (வெளி 9:9)

7 அவைகளுக்குச் சிறகுகள் இருந்தன (வெளி 9:9)

8 அவைகள் தேள்களின் வால்களுக்கு ஒப்பான வால்களையும் அந்த வால்களில் கொடுக்குகளையும் உடையவை களாயிருந்தன (வெளி 9:10)

இந்த வெட்டுக்கிளிகள் பிரதத்தியட்சமானவை. மனுஷர் இவற்றைக் கண்டு பயந்து ஓடினார்கள் இவை பறக்கும்போது உண்டாகும் இரைச்சல் யுத்தத்திற்கு ஓடுகிற அநேகங் குதிரைகள் பூண்ட இரதங்களின் இரைச்சலுக்கு ஒப்பாயிருந்தன (வெளி 9:9)

தேள் (scorpions) - σκορπίος - skorpios - 4651

ஆண்பால பெயர்சொல தேள் (வெளி 9:5,10 லூக்கா 10:19 லூக்கா 11:12)

(ஆ) தங்கள் நெற்றிகளில் தேவனுடைய முத்திரையைத் தரித்திராத மனுஷரை சேதப்படுத்த அவர்களுக்கு உத்தரவு கொடுக்கப் பட்டது - (7:1-8)

வெளி 9:4 பூமியின் புல்லையும் பசுமையான எந்தப் பூண்டையும் எந்த மரத்தையும் சேதப்படுத்தாமல தங்கள் நெற்றிகளில் தேவனுடைய முத்திரையைத் தரித்திராத மனுஷரைமாத்திரம் சேதப்படுத்த அவைகளுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது.

வெளிப்படுத்தின விசேஷம் – தொகுப்புரை

9 அதிகாரம்

வெளி 9:5 மேலும் அவர்களைக் கொலைசெய்யும்படிக்கு அவைகளுக்கு உத்தரவு கொடுக்கப்படாமல், ஐந்து மாதமளவும் அவர்களை வேதனைப் படுத்தும்படிக்கு உத்தரவு கொடுக்கப் பட்டது; அவைகள் செய்யும் வேதனை தேளானது மனுஷனைக் கொட்டும்போது உண்டாகும் வேதனையைப் போலிருக்கும்.

வெளி 9:6 அந்நாட்களில் மனுஷர்கள் சாவைத் தேடியும் அதைக் காணாதிருப்பார்கள்; சாகவேண்டுமென்று ஆசைப்படுவார்கள், சாவோ அவர்களுக்கு விலகி ஓடிப்போம்.

"தங்கள் நெற்றிகள்" – 144,000 யூதர்களுடைய நெற்றிகள் (வெளி 7:1-8 வெளி 14:1-5 ஐந்தாம், ஆறாம் எக்காளத் தூதர்களுக்கு நெற்றிகளில் முத்திரையிடப் பட்டிருக்கும் 144,000 யூதர்களை வாதிப்பதற்கு அனுமதி கொடுக்கப்படவில்லை. அவர்கள் முத்திரையிடப்படும் வரையிலும் தங்களுடைய [redacted] சேதப்படுத்தக்கூடாது என்று அவர்களுக்குக் கட்டளை கொடுக்கப்பட்டிருந்தது. தங்கள் நெற்றிகளில் முத்திரையிடப் பட்டவர்கள் எல்லா வாதைகளிலிருந்தும் பாதுகாக்கப் பட்டார்கள். இந்த நியாயத்தீர்ப்புகள் உண்டாகும் காலங்களில் அவர்கள் உயிரோடு இருந்தார்கள் என்பது இதன் மூலமாக நிரூபணமாகிறது.

(இ) பிசாசுகளின் விளக்கம்

வெளி 9:7 அந்த வெட்டுக்கிளிகளின் உருவம் யுத்தத்திற்கு ஆயத்தம் பண்ணப்பட்ட குதிரைகளுக்கு ஒப்பாயிருந்தது; அவைகளுடைய தலைகளின்மேல் பொன்மயமான கிரீடம் போன்றவைகளிருந்தன; அவைகளின் முகங்கள் மனுஷருடைய முகங்களைப்போலிருந்தன.

வெளி 9:8 அவைகளுடைய கூந்தல் ஸ்திரீகளுடைய கூந்தலைப்போலிருந்தது; அவைகளின் பற்கள் சிங்கங்களின் பற்களைப்போலிருந்தன.

வெளி 9:9 இருப்புக் கவசங்களைப்போல மார்க்கவசங்கள் அவைகளுக்கு இருந்தன; அவைகளுடைய சிறகுகளின் இரைச்சல் யுத்தத்திற்கு ஓடுகிற அநேகங் குதிரைகள் பூண்ட இரதங்களின் இரைச்சலுக்கு ஒப்பாயிருந்தது.

வெளி 9:10 அவைகள் தேள்களின் வால்களுக்கு ஒப்பான வால்களையும், அந்த வால்களில் கொடுக்குகளையும் உடையவைகளாயிருந்தன; அவைகள் ஐந்து மாதமளவும் மனுஷரைச் சேதப்படுத்துவதற்கு அதிகாரம் உடையவைகளாயிருந்தன.

(ஈ) பிசாசுகளின் இராஜா

வெளி 9:11 அவைகளுக்கு ஒரு ராஜன் உண்டு, அவன் பாதாளத்தின் தூதன்; எபிரெயு பாஷையிலே அபெத்தோன் என்றும், கிரேக்கு பாஷையிலே அப்பொல்லியோன் என்றும் அவனுக்குப் பேர்.

வெட்டுக்கிளியின் ராஜன் வெட்டுக்கிளிகளுக்குக் கொடுத்த கட்டளைகள்

1. பூமியின் புல்லைச் சேதப்படுத்தக்கூடாது. (வெளி 9:4)
2. பசுமையான எந்தப் பூண்டையும் சேதப்படுத்தக்கூடாது. (வெளி 9:4)
3. எந்த மரத்தையும் சேதப்படுத்தக்கூடாது. (வெளி 9:4)
4. 144,000 யூதர்களைச் சேதப்படுத்தக் கூடாது. (வெளி 9:4)
5. தேவனுடைய முத்திரையைத் தரித்திராத மனுஷரைச் சேதப்படுத்த வேண்டும். (வெளி 9:4)

வெளிப்படுத்தின விசேஷம் – தொகுப்புரை

9 அதிகாரம்

6. மனுஷரைக் கொலை செய்யக்கூடாது. வெளி 9:5

7. ஐந்து மாதமளவும் மனுஷரைச் சேதப்படுத்த வேண்டும். வெளி 9:5-10

"அவன் பாதாளத்தின் தூதன்" - வெட்டுக்கிளிகளின் ராஜனுக்கு இந்தப் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. எபிரெயு பாஷையிலே அபெத்தோன் என்றும் கிரேக்கு பாஷையிலே அப்பொல்லியோன் என்றும் அவனுக்குப் பெயர். இந்தத் தூதன் விழுந்துபோனவன். மற்ற பிசாசுகளோடு இவன் பாதாளத்தில் அடைத்து வைக்கப்பட்டிருந்தான். இந்தப் பிசாசுகள் சிருஷ்டிக்கப்பட்ட பொழுது இவைகளுக்கு ஆரம்பத்தில் கொடுக்கப்பட்டிருந்த பொறுப்புக்கள் என்ன என்பதும் இவைகள் செய்த பாவங்கள் என்ன என்பதும் தெரியவில்லை. இவை பாவமற்றவையாகத்தான் சிருஷ்டிக்கப்பட்டன. ஆனால் இவை பாவம் செய்து, தங்களுக்கு அழிவைத் தேடிக் கொண்டன.

மேலும் இரண்டு ஐயோக்கள் - (8:13; 12:12)

வெளி 9:12 முதலாம் ஆபத்து கடந்துபோயிற்று. இவைகளுக்குப் பின்பு இன்னும் இரண்டு ஆபத்துகள் இதோ வருகிறது.

(13) ஆறாம் எக்காளம்

(அ) கட்டப்பட்டிருக்கிற நான்கு தூதர்கள் அவிழ்த்து விடப்படுகிறார்கள்

வெளி 9:13 ஆறாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது தேவனுக்கு முன்பாக இருந்த பொற்பீடத்தின் நான்கு கொம்புகளிலுமிருந்து ஒரு சத்தந்தோன்றி,

வெளி 9:14 எக்காளத்தைப் பிடித்திருந்த ஆறாம் தூதனை நோக்கி: ஐபிராத்தென்னும் பெரிய நதியண்டையிலே கட்டப்பட்டிருக்கிற நான்கு தூதர்களையும் அவிழ்த்துவிடு என்று சொல்லக்கேட்டேன்.

வெளி 9:15 அப்பொழுது மனுஷரில் மூன்றிலொருபங்கைக் கொலைசெய்யும்படிக்கு ஒருமணி நேரத்திற்கும் ஒரு நாளுக்கும் ஒரு மாதத்திற்கும் ஒரு வருஷத்திற்கும் ஆயத்தமாக்கப்பட்டிருந்த அந்த நான்கு தூதர்களும் அவிழ்த்துவிடப்பட்டார்கள்.

"நான்கு கொம்புகளிலுமிருந்து ஒரு சத்தந்தோன்றிற்று" - வெளிப்படுத்தின விசேஷ புஸ்தகத்தில் இது போன்று பல சத்தங்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது (வெளி 5:2; வெளி 6:6; வெளி 7:2; வெளி 8:13; வெளி 10:4,8; வெளி 11:12; வெளி 12:10; வெளி 14:7,8,9,13,15; வெளி 16:1,17; வெளி 18:2,4,17; வெளி 19:5; வெளி 21:3). கீழே கொடுக்கப்பட்டிருக்கும் சத்தங்கள் இயேசு கிறிஸ்துவினுடையவை: வெளி 1:10-15; வெளி 3:20; வெளி 4:1; வெளி 5:11,12; வெளி 6:7,10; வெளி 7:10; வெளி 10:3; வெளி 11:3; வெளி 14:2-5; வெளி 19:1-6.

"தேவனுக்கு முன்பாக இருந்த பொற்பீடம்" - ஆசரிப்புக் கூடாரத்திற்காக மோசே உண்டுபண்ணின பொற்பீடம் இதை மாதிரியாகக் கொண்டிருந்தது (எபி 8:5; எபி 9:23; யாத் 30:1-18; யாத் 37:25-28).

"ஐபிராத்தென்னும் பெரிய நதியண்டையிலே கட்டப்பட்டிருக்கிற நான்கு தூதர்களையும் அவிழ்த்துவிடு" - ஐபிராத்து நதியண்டையில் கட்டப்பட்டிருக்கிற நான்கு தூதர்களும் விழுந்த தூதர்களாகும். நல்ல தூதர்கள் ஒருபோதும் கட்டப்படுவதில்லை. பாதாளத்தில் கட்டப்பட்டிருந்த இருபது கோடி பிசாசுகளுக்கு இவை தலைவர்கள். ஆறாம் எக்காள சத்தத்தின் போது இவை கட்டவிழ்த்து விடப்படும். வெளி 8:13 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் இரண்டாவது ஐயோவை இவை வருவிக்கும் (வெளி 9:12; வெளி 11:14; வெளி 12:12). இவை ஒவ்வொன்றிற்கும் ஐந்து கோடி குதிரைச் சேனைகளாகிய இராணுவங்களின் தொகை இருந்தது. இவை பூமியின் நான்கு திசைகளுக்கும் சென்று மனுஷரில் மூன்றிலொருபங்கைக் கொன்றுபோடும். இந்த வசனத்தில் ஐபிராத்து உபத்திரவக்கால நியாயத்தீர்ப்போடு தொடர்புபடுத்தப்பட்டிருக்கிறது (வெளி 9:14; வெளி 16:13-16; எரே 46:4-10).

9 அதிகாரம்

"ஒருமணிநேரத்திற்கும், ஒருநாளுக்கும் ஒருமாதத்திற்கும், ஒரு வருஷத்திற்கும் ஆயத்தமாக்கப்பட்டிருந்த அந்த நான்கு தூதர்கள்" - மனுஷரில் மூன்றிலொருபங்கைக் கொல்லும்படிக்கு அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. எகிப்து தேசத்தில் தலைச்சன் பிள்ளைகளெல்லாம் ஒரே இரவில் கொல்லப்பட்டதுபோல இங்கும் ஒரு காலம் நிர்ணயம் பண்ணப்பட்டிருக்கிறது. இந்தச் சம்பவத்தில் ரோமப்பேரரசின் எல்லைக்குட்பட்ட தேசங்களிலுள்ளவர்கள் கொல்லப்பட்டிருப்பார்களென்றால் பத்துக்கோடி பேர்களை இந்த நான்கு தூதர்களும் அவர்களுடைய சேனைகளும் கொன்று போட்டிருப்பார்கள். இந்த வசனம் இந்த முழு உலகத்தையும் குறிக்குமென்றால் முப்பது கோடி ஜனங்களுக்குமேல் கொல்லப்பட்டிருப்பார்கள். ஐபிராத்து நதியின் அருகிலிருந்து குதிரைகளில் ஏறியிருந்தவர்கள் புறப்பட்டுச் சென்றபடியினால், அவர்கள் அந்த ஆற்றுக்கு சுற்றிலுமுள்ள தேசங்களில் தங்களுடைய கிரியைகளை மேற்கொண்டிருக்க வேண்டும்.

(ஆ) அவர்களுடைய தொகை - இருபது கோடி.

வெளி 9:16 குதிரைச்சேனைகளாகிய இராணுவங்களின் தொகை இருபது கோடியாயிருந்தது; அவைகளின் தொகையைச் சொல்லக்கேட்டேன்.

வெளி 9:17 குதிரைகளையும் அவைகளின் மேல் ஏறியிருந்தவர்களையும் நான் தரிசனத்திலே கண்டவிதமாவது: அவர்கள் அக்கினிநிறமும் நீலநிறமும் கந்தகநிறமுமான மார்க்கவசங்களை யுடையவர்களாயிருந்தார்கள்; குதிரைகளுடைய தலைகள் சிங்கங்களின் தலைகளைப்போலிருந்தன, அவைகளுடைய வாய்களிலிருந்து அக்கினியும் புகையும் கந்தகமும் புறப்பட்டன.

வெளி 9:18 அவைகளுடைய வாய்களிலிருந்து புறப்பட்ட அக்கினி புகை கந்தகம் என்னும் இம்மூன்றினாலும் மனுஷரில் மூன்றிலொருபங்கு கொல்லப்பட்டார்கள்.

வெளி 9:19 அந்தக் குதிரைகளின் வல்லமை அவைகளுடைய வாயிலேயும் வால்களிலேயும் இருக்கிறது; அவைகளுடைய வால்கள் பாம்புகளுக்கு ஒப்பானவைகளாயும் தலைகளுள்ளவைகளாயுமிருக்கிறது, அவைகளாலே சேதப்படுத்துகிறது.

"குதிரைச் சேனைகளாகிய இராணுவங்களின் தொகை இருபது கோடியாயிருந்தது" - இருபது கோடி இராணுவ வீரர்களைப் பற்றி பலவிதமாக வியாக்கியானம் பண்ணுகிறார்கள். கடந்த காலங்களில் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் இருபது கோடி இராணுவ வீரர்கள் இருந்ததாக ஒருசிலர் கூறுகிறார்கள். ஆனால் இவர்கள் எல்லோரும் பாதாளத்தில் வாசலிலிருந்து ஒரே நேரத்தில் புறப்பட்டு வந்தவர்கள். எல்லோரும் ஒரு குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் மனுஷரில் மூன்றிலொருபங்கினரைக் கொலை செய்யப்போகிறவர்கள் (வெளி 9:14-15). அர்மகெதோனில் நடைபெறும் யுத்தத்தில் அந்திக்கிறிஸ்துவினிடம் 20 கோடி ஜனங்கள் இருப்பார்கள் என்று ஒருசிலர் கூறுகிறார்கள். ஆனால் வெளி 9:17-19 ஆகிய வசனங்கள் இவர்களைப் பற்றி விவரிக்கும்போது இவர்கள் சாதாரண மனுஷர்கள் அல்ல என்பது தெரிய வருகிறது. மனுஷருடைய குதிரைச்சேனைகள் இவர்களைப்போல இருந்ததுமில்லை இருக்கப்போவதுமில்லை.

குதிரைகளின்மேல் ஏறியிருந்தவர்களைப் பற்றிய விவரங்கள்

1. இவர்களுக்குத் தூதர்கள் தலைவர்களாக இருக்கிறார்கள். ஆகையினால் இவர்களும் தூதர்களாகவே இருக்கிறார்கள் (வெளி 9:14-15).

2. இவர்களுடைய சரியான எண்ணிக்கையும் இவர்களைப் பற்றிய விளக்கமும் இவர்கள் பல தனிநபர்கள் என்பதை நிரூபிக்கிறது. (வெளி 9:16)

வெளிப்படுத்தின விசேஷம் – தொகுப்புரை

9 அதிகாரம்

3 இவர்கள் மனுஷரில் மூன்றிலொரு பகுதியினரைக் கொன்றுபோடுகிறபடியால், மனுஷரோடு இவர்களுக்குத் தொடர்பு இருப்பது நிரூபணமாகிறது. (வெளி 9:15)

4 இவர்கள் அறிவுள்ள சிருஷ்டிகள் ஆகையினால் இவை கட்டளைகளைப் பின்பற்றி தலைவர்களை அங்கீகரிக்கின்றன (வெளி 9:14-15)

5. இவர்கள் ஏறிச்செல்வதற்கு குதிரைகள் இருந்தபடியினால் இவர்கள் உண்மையான சிருஷ்டிகள் என்பது நிரூபணமாகிறது. (வெளி 9:17

6 அக்கினியினாலோ, பாதாளத்தின் புகையினாலோ இவர்களைக் கொல்ல முடியவில்லை ஆகையினால் இவர்கள் ஆவிக்குரிய சிருஷ்டிகள் என்பது நிரூபணமாகிறது. (வெளி 9:1-2,17-18)

7 தற்பொழுது இவர்கள் பாதாளத்தில் அடைப்பட்டிருக்கிறார்கள் ஆகையினால் இவர்கள் பாவம்செய்து விழுந்து போனவர்கள் என்பது தெரியவருகிறது. (வெளி 9:1-2)

8 மனுஷரால் இவர்களை அழிக்க முடியவில்லை. (வெளி 9:17)

9 இவர்களுக்கு மார்க்கவசங்கள் இருந்தபடியினால் அவற்றை அணிந்து கொள்வதற்கு சரீரங்களும் இருந்திருக்க வேண்டும். (வெளி 9:17

10 இவர்களுக்குக் குதிரைகளின் சரீரங்களைப்போன்ற சரீரங்களும் சிங்கங்களின் தலைகளைப்போன்ற தலைகளும் உள்ளன (வெளி 9:17)

11 இவைகளுடைய வாய்களிலிருந்து அக்கினியும், புகையும் கந்தகமும் புறப்பட்டபடியினால் இவைகளுக்கு உண்மையான வாய்கள் இருந்திருக்க வேண்டும். (வெளி 9:17-18)

12 அவைகளுடைய வால்கள் பாம்புகளின் தலைகளைப்போன்று இருந்தன இவற்றால் அவை மனுஷரைச் சேதப்படுத்துகின்றன (வெளி 9:19

"நீலநிறம்" (jacinth) - ஒரு விதமான கல்.

மனுஷரில் மூன்றிலொருபங்கு கொல்லப்பட்ட விதம்

1 அவைகளுடைய வாய்களிலிருந்து புறப்பட்ட அக்கினி

2 அவைகளுடைய வாய்களிலிருந்து புறப்பட்ட புகை

3. அவைகளுடைய வாய்களிலிருந்து புறப்பட்ட கந்தகம்

(இ) மனுஷரின் கடின இருதயம் - (6:1-18:24; தானி 9:27; 10:1-18:24

வெளி 9:20 அப்படியிருந்தும், அந்த வாதைகளால் கொல்லப்படாத மற்ற மனுஷர்கள் பேய்களையும் பொன் வெள்ளி செம்பு கல்மரம் என்பவைகளால் செய்யப்பட்டவைகளாயும் காணவும் கேட்கவும் நடக்கவும் மாட்டாதவைகளாயுமிருக்கிற விக்கிரகங்களையும் வணங்காதபடிக்குத் தங்கள் கைகளின் கிரியைகளைவிட்டு மனந்திரும்பவுமில்லை

வெளி 9:21 தங்கள் கொலை பாதகங்களையும் தங்கள் சூனியங்களையும் தங்கள் வேசித்தனங்களையும் தங்கள் களவுகளையும் விட்டு மனந்திரும்பவுமில்லை

"அந்த வாதைகளால் கொல்லப்படாத மற்ற மனுஷர்கள்" இவர்கள் இன்னும் மனந்திரும்பவில்லை பேய்களையும் பொன் வெள்ளி செம்பு கல்மரம் என்பவைகளால் செய்யப்பட்டவைகளையும் வணங்கினார்கள் காணவும் கேட்கவும் நடக்கவு மாட்டாதவைகளாயுமிருக்கிற விக்கிரகங்களையும் வணங்கினார்கள் தேவனுக்கு எதிராகத் தங்களுடைய இருதயங்களைக் கடினப்படுத்தினார்கள் விக்கிரகாராதனைகளிலும் பேய்களின் ஆராதனைகளிலும் தொடர்ந்து ஈடுபட்டார்கள் (வெளி 9:20-21

10 அதிகாரம்

1. பலமுள்ள தூதன் - (10:1-11)

(1) அவனுடைய வர்ணனையும் அவன் கையிலிருந்த திறக்கப்பட்ட ஒரு சிறு புஸ்தகமும் - (5:1)

வெளி 10:1 பின்பு, பலமுள்ள வேறொரு தூதன் வானத்திலிருந்து இறங்கிவரக் கண்டேன்; மேகம் அவனைச் சூழ்ந்திருந்தது, அவனுடைய சிரசின்மேல் வானவில்லிருந்தது, அவனுடைய முகம் சூரியனைப்போலவும், அவனுடைய கால்கள் அக்கினி ஸ்தம்பங்களைப் போலவும் இருந்தது.

வெளி 10:2 திறக்கப்பட்ட ஒரு சிறு புஸ்தகம் அவன் கையில் இருந்தது. தன் வலது பாதத்தைச் சமுத்திரத்தின்மேலும், தன் இடதுபாதத்தைப் பூமியின் மேலும் வைத்து,

"பின்பு" - வெளி 10:1-11:14 ஆகிய வசனங்கள் வெளிப்படுத்தின விசேஷத்தில் காணப்படும் நான்காவது இணைப்புப் பகுதியாகும். முத்திரைகள், எக்காளங்கள், பொற்கலசங்கள் ஆகியவற்றோடு தொடர்பில்லாத வேறுசில நிகழ்ச்சிகளை இந்த இணைப்புப்பகுதி விளக்குகிறது. எக்காளங்களைப் பற்றிய தரிசனத்திலிருந்து இந்த நிகழ்ச்சி சற்று வேறுபட்டுள்ளது. ஆயினும் ஆறாவது எக்காளத்திற்கும் ஏழாவது எக்காளத்திற்கும் இடையில் இந்த இணைப்பு நிகழ்ச்சி இணைக்கப்பட்டிருக்கிறது. ஆறாவது முத்திரைக்கும், ஏழாவது முத்திரைக்கும் இடையில் முதலாவது இணைப்பு நிகழ்ச்சி இணைக்கப்பட்டது போன்று, இங்கும் இணைக்கப்பட்டிருக்கிறது. (வெளி 7: 1-17)

வெளி 10:1-11:14 ஆகிய வசனங்களிலுள்ள நான்கு பிரிவுகள்

1. வெளி 10 ஆவது அதிகாரம். சிறு புஸ்தகத்திலுள்ள தேவஇரகசியம் (வெளி 5:5-7, வெளி 6: 1-8:1)
2. வெளி 11:1-2 அந்திக்கிறிஸ்து எருசலேமைக் கைப்பற்றுவது பற்றிய தரிசனம். (தானி 11:40-45, 2தெச 2:3-4)
3. வெளி 11:3-12 இரண்டு சாட்சிகளின் ஊழியம். தானியேலின் எழுபதாவது வாரத்தின் கடைசி மூன்றரை வருஷங்களில் இரண்டு சாட்சிகளும் அந்திக் கிறிஸ்துவிற்கு எதிர்த்து நிற்பார்கள்.
4. வெளி 11:13-14. மகாபெரிய பூமியதிர்ச்சி. இரண்டு சாட்சிகளும் மேகத்திற்கு ஏறி, வானத்திற்குப் போனபோது நடைபெறுவது தானியேலின் எழுபதாவது வாரத்தின் இறுதியில் ஏழாவது பொற்கலசத்தின் போது ஏற்பட்ட பூமியதிர்ச்சி போன்று இருக்கிறது. (வெளி 16:17-21)

"பலமுள்ள தூதன்" **(mighty angel)** - எல்லாத் தூதர்களும் பலமுள்ளவர்கள் ஆயினும் அவர்களில் சிலர் மற்றவர்களைவிட அதிகாரத்தில் பலமுள்ளவர்கள் (வெளி 18:1, 2தெச 1:7, யூதா 1:9)

பலமுள்ள வேறொரு தூதன் என்பது இயேசு கிறிஸ்துவைக் குறிக்கும்

1. வெளி 10:1 ஆவது வசனத்தில் பலமுள்ள தூதனைப் பற்றிய விளக்கம் அவர் இயேசு கிறிஸ்து என்பதை உறுதிப்பண்ணுகிறது. (வெளி 1:12-16, தானி 10:5-6)
2. அவருடைய கரத்தில் திறந்த புஸ்தகம் இருக்கிறது. வெளி 5:5-7 ஆகிய வசனங்களில் கிறிஸ்து பிதாவின் வலதுகரத்திலிருந்து முத்திரையிடப்பட்ட புஸ்தகத்தைப் பெற்றுக் கொண்டார் என்று கூறப்பட்டிருக்கிறது. வெளி 6:1-8:1 ஆகிய வசனங்களில் அந்தப் புஸ்தகத்தைக் கட்டியிருந்த முத்திரைகளை இயேசு கிறிஸ்து உடைக்கிறார். அதே சிறிய புஸ்தகமே இங்கு திறக்கப்படுகிறது. (வெளி 10:2, 8-11)

10 அதிகாரம்

3. இயேசுகிறிஸ்துவே யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷத்தைக் கொடுக்கிறவர் (வெளி 1:1 வெளி 10:4, 8-11

4. அவருடைய சத்தம் சிங்கம் கெர்ச்சிக்கிறதுபோல இருக்கிறது. (வெளி 10:3) இயேசு கிறிஸ்து யூதாவின் ராஜசிங்கம். (வெளி 5:5, ஏசா 31:4-5; எரே 25:29-36 ஓசி 11:10-11; யோவே 3:16 ஆமோ 3:8). கர்த்தருடைய நாளில் ஒரு சிங்கம் கெர்ச்சிப்பது போன்று கர்த்தர் பேசுகிறார்

5. தேவதூதனுடைய ஆணை (வெளி 10:6,7) அவர் ஒரு தெய்வீக நபர் என்பதை உறுதிபண்ணுகிறது. வேதவாக்கியத்தில் ஒரு தூதன் தேவனிடத்திலோ அல்லது மனுஷரிடத்திலோ ஆணையிட்டதாக சான்று ஏதுமில்லை 50 வசனங்களில் தேவன் ஆணையிட்டதாக வேதாகமத்தில் வாசிக்கிறோம். 10 வசனங்களில் மனுஷர் தேவனிடத்திலும் மற்ற மனுஷரிடத்திலும் ஆணையிட்டதாக வேதாகமத்தில் வாசிக்கிறோம். (தானி 12:7

6. எதை எழுத வேண்டும், எதை எழுத வேண்டாமென்று தேவன் யோவானை வழிநடத்துகிறார் (வெளி 1:11,19 வெளி 2:1,8,12,18; வெளி 3:1,7,12,14 வெளி 10:4, வெளி 14:13-14 வெளி 19:9 வெளி 21:5)

7. வெளி 11:3 ஆவது வசனம் இந்தத் தூதன் இயேசு கிறிஸ்துவே என்பதை உறுதி பண்ணுகிறது. "தீர்க்கதரிசனம் சொல்லும் படி இரண்டு சாட்சிகளுக்கு அதிகாரம் கொடுப்பேன்" என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார் இது அவருடைய தெய்வத்துவத்தை நிரூபிக்கிறது.

(2) அவருடைய ஆர்ப்பரிப்பும் ஏழு இடிகளின் சத்தமும்

வெளி 10:3 சிங்கம் கெர்ச்சிக்கிறதுபோல மகாசத்தமாய் ஆர்ப்பரித்தான் அவன் ஆர்ப்பரித்தபோது ஏழு இடிகளும் தங்கள் சத்தங்களை முழங்கின

வெளி 10:4 அவ்வேழு இடிகளும் தங்கள் சத்தங்களை முழங்கினபோது நான் எழுத வேண்டுமென்றிருந்தேன் அப்பொழுது ஏழு இடிமுழக்கங்கள் சொன்னவைகளை நீ எழுதாமல் முத்திரைபோடு என்று வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்

"முத்திரைபோடு என்று வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று" - ஏழு இடிகளும் முழங்கிய சத்தங்கள் இரகசியமாக உள்ளன அவை கூறியது என்னவென்பது வெளிப்படுத்தப்படவில்லை. (உபா 29:29

(3) அவருடைய ஆணையும் ஏழாம் எக்காளமும்

வெளி 10:5 சமுத்திரத்தின்மேலும் பூமியின்மேலும் நிற்கிறதாக நான் கண்ட தூதன் தன் கையை வானத்திற்கு நேராக உயர்த்தி,

வெளி 10:6 இனி காலம் செல்லாது ஆனாலும் தேவன் தம்முடைய ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளுக்குச் சுவிசேஷமாய் அறிவித்தபடி ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே அவன் எக்காளம் ஊதப்போகிறது தேவரகசியம் நிறைவேறும் என்று

வெளி 10:7 வானத்தையும் அதிலுள்ளவைகளையும் பூமியையும் அதிலுள்ளவைகளையும், சமுத்திரத்தையும் அதிலுள்ளவைகளையும் சிருஷ்டித்தவரும், சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவருமானவர்மேல் ஆணையிட்டுச் சொன்னான்

வெளிப்படுத்தின விசேஷம் – தொகுப்புரை

10 அதிகாரம்

காலம் (time) - χρόνος - chronos - 5550

ஆண்பால் பெயர்ச்சொல் – காலம் - (வெளி 10:6; மத் 2:7,16; மத் 25:19; லூக்கா 1:57; லூக்கா 4:5; யோவான் 5:6; யோவான் 14:9 அப 1:6-7; அப 3:21)

"தேவரகசியம் நிறைவேறும்" – தேவ இரகசியம் நிறைவேறுவதில் இனிமேல் காலதாமதம் இராது. (ஆதி 1:14,18 ஆதி 8:22; சங் 72:5,17; சங் 89:36-37 எரே 31:35-36) வெளிப்படுத்தின விசேஷத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் காரியங்களும் தாமதமில்லாமல் ஏற்ற காலங்களில் நிறைவேறும். (வெளி 11:1-3 வெளி 12:6,14; வெளி 13:5; வெளி 20:4-7)

"தேவரகசியம்" – என்பது சாத்தான் அக்கினிக் கடலுக்குள் தள்ளப்படுவதைக் குறிக்கும்.

1 ஏழாவது எக்காளத்தின் நாட்களில் இது நிறைவேறும். (வெளி 10:7)

2 இது நிறைவேற இதுவரையிலும் காலதாமதமாயிற்று. (வெளி 10:6-7)

3 இனிமேல் காலதாமதமாகாது. (வெளி 10:7)

4 ஆதாமின் நாளிலிருந்தே சாத்தான் அக்கினிக் கடலுக்குள் தள்ளப்படுவது முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. (வெளி 10:7; வெளி 12:7-12; ஆதி 3:15; ஏசா 24:21; ஏசா 25:7; ஏசா 27:1)

5 வெளி 8:13 ஆவது வசனத்தில் தூதன் கூறிய மூன்று ஐயோக்களில் இதுவும் ஒன்று. (வெளி 12:12)

6 ஏழாவது எக்காளம் ஊதப்படும்போது சாத்தான் அக்கினிக்கடலுக்குள் தள்ளப்படும் நிகழ்ச்சி மட்டுமே நடைபெறும். இந்தப் பூமியிலுள்ள ராஜ்யங்கள் தேவனுடைய ராஜ்யங்களாவதற்கு சாத்தான் அக்கினிக்கடலில் தள்ளப்படுவது அவசியம். (வெளி 11:15)

(4) சிறு புஸ்தகம் புசிக்கப்பட்டதும் அதனால் ஏற்பட்ட விளைவுகளும் - (எசே 2:8-3:3)

வெளி 10:8 நான் வானத்திலிருந்து பிறக்கக்கேட்ட சத்தம் மறுபடியும் என்னுடனே பேசி: சமுத்திரத்தின்மேலும் பூமியின் மேலும் நிற்கிற தூதனுடைய கையிலிருக்கும் திறக்கப்பட்ட சிறு புஸ்தகத்தை நீ போய் வாங்கிக்கொள் என்று சொல்ல

வெளி 10:9 நான் தூதனிடத்தில் போய்: அந்தச் சிறு புஸ்தகத்தை எனக்குத் தாரும் என்றேன். அதற்கு அவன்: நீ இதை வாங்கிப் புசி; இது உன் வயிற்றுக்குக் கசப்பாயிருக்கும், ஆகிலும் உன் வாய்க்கு இது தேனைப்போல மதுரமாயிருக்கும் என்றான்.

வெளி 10:10 நான் அந்தச் சிறு புஸ்தகத்தைத் தூதனுடைய கையிலிருந்து வாங்கி, அதைப் புசித்தேன்; என் வாய்க்கு அது தேனைப்போல மதுரமாயிருந்தது; நான் அதைப் புசித்தவுடனே என் வயிறு கசப்பாயிற்று.

வெளி 5, வெளி 10 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் சிறு புஸ்தகத்தைப் பற்றிய செய்திகள்

1. இரண்டு அதிகாரங்களிலும் பயன்படுத்தப் பட்டிருக்கும் மொழி. வார்த்தைகள் இவ்விரண்டு புஸ்தகங்களும் ஒரே புஸ்தகம் என்பதை நிரூபிக்கிறது.

2 இயேசு கிறிஸ்து புஸ்தகத்தைத் திறக்க ஜெயம் கொண்டிருக்கிறார் (வெளி 5:5) என்னும் அறிவிப்பு அந்தப் புஸ்தகம் திறக்கப்பட வேண்டும் அதின் முத்திரைகள் உடைக்கப்பட வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

10 அதிகாரம்

3. சிறிய புஸ்தகத்தைக் கட்டியிருந்த முத்திரைகளை வெளி 6:1-8:1 ஆகிய வசனங்களில் இயேசு கிறிஸ்து உடைக்கிறார் இப்பொழுது இந்தப் புஸ்தகம் திறக்கப் பட்டிருக்கிறது. இதில் எழுதப்பட்டிருக்கிற காரியங்கள் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. வெளி 10:8-11

4 வெளி 10 வெளி 5 ஆகிய வசனங்களில கூறப்பட்டிருக்கும் இரண்டு புஸ்தகங்களும் ஒரே புஸ்தகம் அல்லவென்றால வெளிப்படுத்துதல பூரணமாயிராது. ஏனென்ல அதில எழுதப்பட்டிருக்கிற காரியங்கள வெளிப்படுத்தப் படமாட்டாது.

5 வெளி 5 ஆவது அதிகாரத்திலுள்ள சிறிய புஸ்தகம் மிகவும் முக்கியமானது. இயேசு கிறிஸ்துவைத தவிர ஒருவரும் அந்தப் புஸ்தகத்தைத் திறக்கவும் பார்க்கவும் கூடாதிருந்தது. இயேசு கிறிஸது அதைத திறந்து அதில எழுதப்பட்டுள்ள இரகசியங்களை வெளிப் படுத்தியிருக்கிறார் இயேசு கிறிஸது அந்த இரகசியங்களை வெளிப்படுத்த வில்லையென்றால அது வெளிப்படுத்தப் படாத இரகசியமாகவே இருந்திருக்கும்

6 வெளி 10:11 ஆவது வசனம் சிறிய புஸ்தகத்திலுள்ள செய்தியின மையப பகுதியாகும். பல தேசங்களின்மீது வரப்போகும் நியாயத் தீர்ப்புகள இந்தப் புஸ்தகத்தில் கூறப் பட்டிருக்கிறது. வெளி 5 ஆவது அதிகாரத்தில கூறப்பட்டிருக்கும் புஸ்தகத்திலும் இதே செய்தியே உள்ளது.

7 சிறு புஸ்தகத்தைப் புசிக்கும்போது அது வயிற்றுக்குக் கசப்பாகவும் வாய்க்கு தேனைப்போல மதுரமாக இருந்தது. வெளி 10:9-10 வெளி 5 ஆவது அதிகாரத்தில் புஸ்தகத்தைக் கட்டியிருந்த ஏழு முத்திரைகள் உடைக்கப்படும்போது இதேபோன்ற விளைவே ஏற்பட்டது. யோவானுக்கு ஏற்பட்ட விளைவே எசேக்கியேல், எரேமியா ஆகியோருக்கும் ஏற்பட்டது இந்தப் புஸ்தகத்தில் வரப்போகும் நியாயத்தீர்ப்புகளைப் பற்றிக் கூறப் பட்டிருக்கிறது. (எசே 2:3-3:14 எரே 15:16; எரே 20:7-9

8 இந்தச் சிறிய புஸ்தகத்தில் மீட்பின் செய்தி கூறப்படவில்லை இதில் மனுஷருக்கு நியாயத்தீர்ப்பு கூறப்பட்டிருக்கிறது வெளி 6:17

"சமுத்திரத்தின்மேலும் பூமியின் மேலும் நிற்கிற தூதன்" - தானியேலின் எழுபதாவது வாரத்தின் கடைசி மூன்றரை வருஷம் முடியும வரையிலும் இந்த நிகழ்ச்சி நடைபெறாது இந்த வாக்கியம் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிப்பிடுகிறது. (வெளி 10 11-21 தானி 7:13-14; சக 14)

"நான் அதைப் புசித்தவுடனே என வயிறு கசப்பாயிற்று" இது எபிரெய வழக்குச்சொல தேவன வெளிப்படுத்தும் சத்தியம மனுஷருக்கு மதுரமாக இருக்கும் ஆனால தேவனுடைய சத்தியத்திற்குக் கீழ்ப்படியாதோருக்கு அது கசப்பாக இருக்கும். தானியேலின எழுபதாவது வாரத்தின கடைசி மூன்றரை வருஷத்தில் மகா உபத்திரவக்காலம் உண்டாகும். அது மனுஷருக்கு மிகுந்த கசப்பாக இருக்கும். (வெளி 12; மத் 24:15-21; எரே 30:4-7

(5) **சிறிய புஸ்தகத்தில் உள்ள காரியங்கள்** - (எசே 2:8-3:3

வெளி 10:11 அப்பொழுது அவன் என்னை நோக்கி: நீ மறுபடியும் அநேக ஜனங்களையும் ஜாதிகளையும் பாஷைக் காரரையும் ராஜாக்களையுங் குறித்துத் தீர்க்கதரிசனஞ் சொல்லவேண்டும் என்றான்

10 அதிகாரம்

மறுபடியும் (again) - ἐπί - epi - 1909

இடைச்சொல் - இல, ஆல் (against, of, concerning) - வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகத்தில யோவான இதைத்தான மறுபடியும் செய்கிறார ஏழாவது எக்காளத்திலிருந்து இயேசு கிறிஸ்துவின இரண்டாம வருகை வரையிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளி 11:15-19:21 ஆகிய வசனங்களில மறுபடியும் கூறுகிறார

11 அதிகாரம்

2. தேவனுடைய ஆலயத்தையும் எருசலேமையும் அந்திக்கிறிஸ்து கைப்பற்றுகிறான் - (தானி 8:9-14; 23-26; 9:27; 11:40-45; 12:7,11; மத் 24:15; 2தெச 2:1-12; வெளி 13:1-18)

வெளி 11:1 பின்பு கைக்கோலுக்கு ஒப்பான ஒரு அளவுகோல் என்னிடத்தில் கொடுக்கப்பட்டது. அப்பொழுது தேவதூதன் நின்று என்னை நோக்கி: நீ எழுந்து தேவனுடைய ஆலயத்தையும் பலிபீடத்தையும், அதில் தொழுதுகொள்ளுகிறவர்களையும் அளந்துபார்.

வெளி 11:2 ஆலயத்திற்குப் புறம்பே இருக்கிற பிராகாரம் புறஜாதியாருக்குக் கொடுக்கப்பட்டபடியால் அதை அளவாமல் புறம்பாக்கிப்போடு; பரிசுத்த நகரத்தை அவர்கள் நாற்பத்திரண்டு மாதமளவும் மிதிப்பார்கள்.

"கைக்கோலுக்கு ஒப்பான ஒரு அளவுகோல்" - பன்னிரண்டடி நீளமுள்ள அளவுகோல். (வெளி 21:15-16) இது செங்கோலைப்போல (sceptre) இருந்தது. (வெளி 2:27; வெளி 12:5; வெளி 19:15)

"நீ எழுந்து, தேவனுடைய ஆலயத்தையும் பலிபீடத்தையும், அதில் தொழுதுகொள்ளுகிறவர்களையும் அளந்துபார்" - கட்டுவதற்காக இங்கு அளந்துபார்க்கச் சொல்லவில்லை. சிட்சிப்பதற்காகவே அளந்து பார்க்கச் சொல்லப்பட்டிருக்கிறது. (2சாமு 7:14; சங் 2:9; சங் 89:32; ஏசா 11:4; ஏசா 2:8; எசே 20:37; 1கொரி 4:21)

வரலாற்றிலும், தீர்க்கதரிசனத்திலும் காணப்படுகிற ஐந்து ஆலயங்கள்

1. சாலொமோனுடைய தேவாலயம் **(Solomon's temple)** (1இராஜா 5-8)
2. செருபாபேலுடைய தேவாலயம் **(Zerubbabel's temple)** (ஆகாய் 1-2; எஸ்றா 3:4-13; எஸ்றா 6:1-22)
3. ஏரோதின் தேவாலயம் **(Herod's temple)** (யோவான் 2:19-20; மத் 24)
4. அந்திக்கிறிஸ்துவின் நாட்களில் வருங்கால யூதருடைய தேவாலயம் **(The future Jewish temple in the days of Antichrist)** (தானி 9:27; தானி 11:45; தானி 12:7; மத் 24:15; 2தெச 2:3-4; வெளி 11:1-2)
5. ஆயிரம் வருஷ ஆட்சியிலுள்ள தேவாலயம். **(The millennial temple)** (எசே 40-48; சக 6:12-13; see எசே 45:7)

"அதை அளவாமல் புறம்பாக்கிப்போடு" ஆலயத்திற்குப் புறம்பே இருக்கிற பிராகாரம் புறஜாதியாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது ஏற்கெனவே அவர்களுடைய பங்காக இருக்கிறபடியினால் இதை அளக்க வேண்டியதில்லை. தேவாலயத்தின் மீதமுள்ள பகுதியையும் பரிசுத்த நகரமாகிய எருசலேமையும் அந்திக்கிறிஸ்து நாற்பத்திரண்டு மாதமளவும் பிடித்துக் கொள்வான். (வெளி 11:2; வெளி 13:1,18; 2தெச 2:2-4; தானி 11:40-45; தானி 12:7; மத் 24:15)

"ஆலயத்திற்குப் புறம்பே இருக்கிற பிராகாரம் புறஜாதியாருக்குக் கொடுக்கப்பட்டபடியால்" - என்னும் வாக்கியத்தின் ஆவிக்குரிய நிறைவேறுதலாகும் காரியங்கள்

1. புறஜாதியாரின் காலங்கள் மனுஷர் இதுவரையிலும் நியமித்தபடி முடிவடையவில்லை

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

11 அதிகாரம்

2 நாற்பத்திரண்டு மாதங்கள் முடிவடையும் வரையிலும் புறஜாதியாரின் காலங்கள் முடிவு பெறாது. (வெளி 11:2-3; வெளி 12:6,14; வெளி 13:5; வெளி 19:11-21; லூக்கா 21:24; சக 14; ரோமர் 11:25-29)

3 எருசலேமை மறுபடியும் தங்கள் வசப்படுத்திக் கொள்வதற்காக யூதர்கள் அரபியரை ஜெயிக்க வேண்டும். இதனால் நாற்பத்திரண்டு மாதங்களுக்குப் புறஜாதியாரின் கைகளில் இது மறுபடியும் கொடுக்கப்படும். (வெளி 11:1-2)

4 அந்திக் கிறிஸ்து எருசலேம் பட்டணத்தை நாற்பத்திரண்டு மாதங்களுக்கு பிடிக்கும்போது யூதர்கள் அந்திக் கிறிஸ்துவிடம் தோற்றுப் போவார்கள் (வெளி 11:1-2, தானி 11:40-45, தானி 2:2-4)

5 நாற்பத்திரண்டு மாதங்களின் முடிவில் யூதர்கள் அந்திக்கிறிஸ்துவையும் புறஜாதியாரையும் ஜெயித்து எருசலேமை நித்தியகாலமாக தங்கள் வசப்படுத்திக் கொள்வார்கள் (வெளி 11:1-2, சக 14, வெளி 19:11-21)

மிதித்தல் (tread) πατέω - pateoo - (3961)

வினைச்சொல் - மிதி, மிதிக்கப்படு (வெளி 14:20; வெளி 19:15; லூக்கா 10:19, லூக்கா 21:24)

3. இரண்டு சாட்சிகள் - (11:3-12)

(1) அவர்களுடைய தீர்க்கதரிசனத்தின் காலம் - (11:2; 12:6,14; 13:5; தானி 7:25, 9:27; 12:7,11-12)

வெளி 11:3 என்னுடைய இரண்டு சாட்சிகளும் இரட்டு வஸ்திரம் உடுத்திக் கொண்டிருக்கிறவர்களாய் ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும் தீர்க்கதரிசனஞ் சொல்லும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுப்பேன்

இரண்டு சாட்சிகளைப் பற்றிய செய்திகள்

1 இரண்டு சாட்சிகள் என்பது உடன்படிக்கைகளோ, காலங்களோ அல்ல. இவை இரண்டு நபர்களைக் குறிக்கும். (வெளி 11:3,7-12)

2 இவர்கள் கிறிஸ்துவின் சாட்சிகள் (வெளி 11:3)

3 அவர்கள் பூமிக்கு வரும்பொழுது அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படும். (வெளி 11:3)

4 அவர்கள் தீர்க்கதரிசிகளாக இருப்பார்கள் (வெளி 11:3,10)

5 அவர்கள் நாற்பத்திரண்டு மாதங்கள் அதாவது 1260 நாட்கள் தீர்க்கதரிசனம் கூறுவார்கள் (வெளி 11:2-3, வெளி 12:6,14, வெளி 13:5; தானி 7:25; தானி 12:7

6. அவர்கள் இரட்டு வஸ்திரம் உடுத்திக் கொண்டிருப்பார்கள் (வெளி 11:3)

7 ஆண்டவருக்கு முன்பாக நிற்கிற இரண்டு ஒலிவமரங்களும் இரண்டு விளக்குத் தண்டுகளும் இவர்களுக்கு அடையாளமாக இருக்கிறது (வெளி 11:4; சக 4:11-14

8 இயேசு கிறிஸ்துவிற்கு ஐந்நூறு வருஷங்களுக்கு முன்பு சகரியா தீர்க்கதரிசனம் உரைத்தபோது இவர்கள் ஏற்கெனவே பரலோகத்தில் இருந்தார்கள் (சக 4:11-14

9 கி.பி. 96 ஆம் ஆண்டு யோவான் தன்னுடைய தரிசனத்தில் இவர்களைப் பரலோகத்தில் கண்டார். இவ்விரண்டு சாட்சிகளும் இயேசு கிறிஸ்துவிற்கு ஐந்நூறு வருஷங்களுக்கு முன்பாகவே பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அங்கு வாசம் பண்ணுகிறார்கள் (வெளி 11:4, சக 4:11-14; மல் 4:5-6) இவ்விரண்டு சாட்சிகளும் யோவான் ஸ்நானனோ, அப்போஸ்தலன் யோவானோ அல்லது கி.மு. 500 ஆம் வருஷத்திற்குப் பின்பு வாழ்ந்த எந்த மனுஷருமோ அல்ல.

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

11 அதிகாரம்

10 தங்களுடைய ஊழியத்தில இவர்கள் மூன்றரை வருஷங்களுக்குக் காணப்படாமல் இருப்பார்கள் (வெளி 11:5-7)

11 தங்களை யாராவது சேதப்படுத்த மனதாயிருந்தால் அவர்களைச் சேதப்படுத்தும் வல்லமை அவர்களுக்கு இருக்கும் (வெளி 11:5)

12 அவர்களுடைய வாயிலிருந்து அக்கினி புறப்பட்டு அவர்களைப் பட்சிக்கும் (வெளி 11:5)

13 அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லி வருகிற நாட்களிலே மழைபெய்யாதபடிக்கு வானத்தை அடைக்க அவர்களுக்கு அதிகாரமுண்டு (வெளி 11:6)

14 அவர்கள் தண்ணீர்களை இரத்தமாக மாற்றவும், தங்களுக்கு வேண்டும்போதெல்லாம் பூமியைச் சகலவித வாதைகளால் வாதிக்கவும் அவர்களுக்கு அதிகாரமுண்டு (வெளி 11:6)

15 அவர்கள் 1260 நாள் ஊழியத்தை முடித்த பின்பு பாதாளத்திலிருந்தேறுகிற மிருகம் அவர்களோடே யுத்தம்பண்ணி, அவர்களை ஜெயித்து அவர்களைக் கொன்றுபோடும். இவர்களைக் கொல்வதற்கு அந்த மிருகம் அந்திக் கிறிஸ்துவைப் பயன்படுத்தும் (வெளி 11:7)

16 ஒரே தரம் மரிப்பது மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. (எபி 9:27) இவ்விரண்டு மனுஷரும் இதுவரையிலும் மரிக்கவில்லை ஆகையினால் வருங்காலத்தில் அந்திக்கிறிஸ்துவின் கைகளினால் இவர்கள் கொலைபடுவார்கள் இவ்விரண்டு சாட்சிகளும் மோசேயோ, அல்லது வேறு ஊழியக்காரர்களோ அல்ல ஏனெனில் மோசேயும், மற்ற ஊழியக்காரர்களும் ஏற்கெனவே மரித்துப் போனவர்கள்

17 இவர்கள் மூன்றரை நாட்கள் வரைக்கும் மரித்தவர்களாக இருப்பார்கள் இவர்களுடைய உடல்கள் மகா நகரத்தின் விசாலமான வீதியிலே கிடக்கும். (வெளி 11:8-11) இந்த நிகழ்ச்சியின் வாயிலாக இவ்விரண்டு சாட்சிகளும், பூமியில் மரிக்காமலேயே பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டவர்கள் என்பது தெரிய வருகிறது.

18 மரணத்தைக் காணாமல் பரலோகத்திற்கு இரண்டுபேர் எடுத்துக் கொள்ளப் பட்டார்கள் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. ஏனோக்கும் **(Enoch)**, எலியாவுமே **(Elijah)** அவர்கள்

மல் 4:5-6 ஆகிய வசனங்களில் இவ்விரண்டு சாட்சிகளில் எலியாவும் ஒருவனென்று ஏற்கெனவே முன்னறிவிக்கப் பட்டிருக்கிறது. யோவான் ஸ்நானன் எலியா அல்ல (யோவான் 1:21) இவன் எலியாவின் ஆவியோடும் எலியாவின் வல்லமையோடும் இயேசு கிறிஸ்துவிற்குப் பாதையைச் செம்மைப்படுத்த வந்தவன் மேசியாவின் இரண்டாம் வருகைக்கு எலியா ஜனங்களுடைய இருதயங்களை ஆயத்தப்படுத்துவான் (லூக்கா 1:17

எலியாவைத் தவிர மரணத்தைக் காணாமல் வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட மற்றொருவர் ஏனோக்கு ஆவார் (ஆதி 5:21-24 எபி 11:5 2இராஜா 2) இவ்விருவருமே நியாயத்தீர்ப்பை அறிவித்த தீர்க்கதரிசிகள் (யூதா 1:14,15 1இராஜா 17,18) இவ்விருவரும் தங்களுக்கு நியமிக்கப்பட்ட காலத்தில் மரிக்க வேண்டும் (எபி 9:27; 1கொரி 15:51-58

இயேசு கிறிஸ்துவே உயிர்த்தெழுதலின் முதற்பலனாக இருக்கிறவர் ஏனோக்கும் எலியாவும் ஏற்கெனவே இயேசுவிற்கு முன்பு உயிர்த்தெழுந்து விட்டார்களென்றால் இவர்களே உயிர்த்தெழுதலின் முதற்பலனாக இருப்பார்கள் (1கொரி 15:20-23) ஆனால் எலியாவும் ஏனோக்கும் பரலோகத்தில் மரணத்தைக் காணாமல் உயிருள்ளவர்களாகவே இருக்கிறார்கள் வெளி 11 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கிற நிகழ்ச்சிகள் நிறைவேறும் வரையிலும் அவர்கள் உயிரோடிருந்து பின்பு மரிப்பார்கள் ஆகையினால் இவ்விருவரும் இயேசு கிறிஸ்துவிற்கு முன்பாக உயிர்த்தெழவில்லை இயேசு கிறிஸ்துவே உயிர்த்தெழுதலின் முதற்பலனாக இருக்கிறவர்

11 அதிகாரம்

(2) அவர்களுடைய அடையாளம் - சக 4:11-14; மல் 4:5-6; ஆதி 5:24 எபி 11:5

வெளி 11:4 பூலோகத்தின் ஆண்டவருக்கு முன்பாக நிற்கிற இரண்டு ஒலிவமரங்களும் இரண்டு விளக்குத் தண்டுகளும் இவர்களே

(3) அவர்களுடைய அதிகாரம் - (11:3,10)

வெளி 11:5 ஒருவன் அவர்களைச் சேதப்படுத்த மனதாயிருந்தால் அவர்களுடைய வாயிலிருந்து அக்கினி புறப்பட்டு, அவர்களுடைய சத்துருக்களைப் பட்சிக்கும்; அவர்களைச் சேதப்படுத்த மனதாயிருக்கிறவன் எவனோ அவன் அப்படியே கொல்லப்படவேண்டும்.

வெளி 11:6 அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லிவருகிற நாட்களிலே மழை பெய்யாதபடிக்கு வானத்தை அடைக்க அவர்களுக்கு அதிகாரமுண்டு; அவர்கள் தண்ணீர்களை இரத்தமாக மாற்றவும், தங்களுக்கு வேண்டும்போதெல்லாம் பூமியைச் சகலவித வாதைகளாலும் வாதிக்கவும் அவர்களுக்கு அதிகாரமுண்டு.

(4) அவர்களுடைய மரணம் (எபி 9:27, 1கொரி 15:20-23; வெளி 11:9

வெளி 11:7 அவர்கள் தங்கள் சாட்சியைச் சொல்லி முடித்திருக்கும்போது, பாதாளத்திலிருந்தேறுகிற மிருகம் அவர்களோடே யுத்தம்பண்ணி, அவர்களை ஜெயித்து அவர்களைக் கொன்றுபோடும்.

வெளி 11:8 அவர்களுடைய உடல்கள் மகா நகரத்தின் விசாலமான வீதியிலே கிடக்கும். அந்த நகரம் சோதோம் என்றும் எகிப்து என்றும் ஞானார்த்தமாய்ச் சொல்லப்படும்; அதிலே நம்முடைய கர்த்தரும் சிலுவையிலே அறையப்பட்டார்.

"அந்த நகரம் சோதோம் என்றும் எகிப்து என்றும் ஞானார்த்தமாய்ச் சொல்லப்படும்; அதிலே நம்முடைய கர்த்தரும் சிலுவையிலே அறையப்பட்டார்" - எருசலேம் இவ்வாறு அழைக்கப்படுகிறது. எருசலேமை புறஜாதியார் ஆளுகை செய்யும் மூன்றரை வருஷத்தின் இறுதிக்காலத்தில் ஆண்புணர்ச்சிக்காரர்கள் **(sodomites) (homosexuals** ஏசா 19-20 எசே 16:46,53) வேசிமார்க்கத்தார் **(whoredoms)** மார்க்கபேதமுடையோர் **(religious perversions)** (எசே 23:3, 8, 19, 27) ஆகியோர் அதிகமாக இருப்பார்கள் (வெளி 11:1-2) இக்காலத்தின் முடிவில் விபசாரமும் வேசித்தனமும் மார்க்கபேதமும் நிறைந்திருக்கும். (மத் 24:37-39 லூக்கா 17:26-30)

(5) அவர்களுடைய மரணத்தின் நிமித்தம் உண்டாகும் சந்தோஷம் - (வசனம் 7)

வெளி 11:9 ஜனங்களிலும் கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜாதிகளிலுமுள்ளவர்கள் அவர்களுடைய உடல்களை மூன்றரை நாள் வரைக்கும் பார்ப்பார்கள்; அவர்களுடைய உடல்களைக் கல்லறைகளில் வைக்கவொட்டார்கள்.

வெளி 11:10 அவ்விரண்டு தீர்க்கதரிசிகளும் பூமியின் குடிகளை வேதனைப்படுத்தினபடியால் அவர்கள் நிமித்தம் பூமியில் குடியிருக்கிறவர்கள் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து ஒருவருக்கொருவர் வெகுமதிகளை அனுப்புவார்கள்.

"அவ்விரண்டு தீர்க்கதரிசிகளும் பூமியின் குடிகளை வேதனைப்படுத்தினபடியால்" - இவ்விருவருக்கும் எதிராக மூன்றரை வருஷ காலங்களுக்கு யுத்தம் நடைபெறுகிறது.

(6) மரணத்தின்மீது அவர்களுடைய வெற்றி - (கொலோ 2:14-17

வெளி 11:11 மூன்றரை நாளைக்குப்பின்பு தேவனிடத்திலிருந்து ஜீவஆவி அவர்களுக்குள் பிரவேசித்தது; அப்பொழுது அவர்கள் காலூன்றி நின்றார்கள்; அவர்களைப் பார்த்தவர்களுக்கு மிகுந்த பயமுண்டாயிற்று.

வெளிப்படுத்தின விசேஷம் – தொகுப்புரை

11 அதிகாரம்

வெளி 11:12 இங்கே ஏறிவாருங்கள் என்று வானத்திலிருந்து தங்களுக்கு உண்டான பெரிய சத்தத்தை அவர்கள் கேட்டு, மேகத்தில் ஏறி வானத்திற்குப் போனார்கள் அவர்களுடைய சத்துருக்கள் அவர்களைப் பார்த்தார்கள்

ஆவி (Spirit) πνεῦμα - pneuma - 4151

பால் வேறுபாடற்ற பெயர் - ஆவி

ஜீவன் (life) ζωή - zooee - 2222

பெண்பால் பெயர்ச்சொல் - ஜீவன் இம்மை

"தேவனிடத்திலிருந்து ஜீவஆவி அவர்களுக்குள் பிரவேசித்தது. அப்பொழுது அவர்கள் காலூன்றி நின்றார்கள்" - ஜீவஆவி ஒரு சரீரத்தை ஜீவனுள்ளதாக ஆக்குகிறது. ஒரு சரீரத்தைவிட்டு ஆவி பிரிந்துவிட்டால் அந்த சரீரம் மரித்துவிடுகிறது. (யாக் 2:26) இதன் மூலமாக மனுஷருடைய இரண்டு சுபாவங்கள் வெளிப்படுகின்றன. ஒன்று சரீரப்பிரகாரமான சுபாவம், மற்றொன்று ஆவிக்குரிய சுபாவம். (வெளி 6:9-11 ஆதி 2:7, நீதி 20:27; யோபு 14:22 யோபு 32:8, சக 12:1; மத் 10:28 மத் 26:38-41, 1கொரி 2:11; 1கொரி 6:20 2கொரி 5:8 பிலி 1:21-24. 1தெச 5:23 எபி 4:12 எபி 12:23

"இங்கே ஏறிவாருங்கள்" யோவானுக்கும், இதே வார்த்தை கூறப்பட்டது. யோவான் 4:1 இவ்விருவரும் வானத்திற்கு ஏறிப்போனார்கள் இத்துடன் முதலாவது உயிர்த்தெழுதல் நிறைவுபெறுகிறது. ஆயிரம் வருஷ அரசாட்சிக்கு முன்பு மரித்த நீதிமான்கள் அனைவரும் உயிர்த்தெழுவார்கள் இது ஐந்தாவது எடுத்துக்கொள்ளப்படுதலாகும். (1கொரி 15:23

உயிர்த்தெழுதல்கள்

1 கிறிஸ்துவும் அநேக பரிசுத்தவான்களும் - கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு அவர்கள் உயிர்த்தெழுவார்கள் (1கொரி 15:20,23 மத் 27:52-53; எபே 4:8-10

2 அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப் படுவார்கள் (1கொரி 15:23,51-54 யோவான் 14:1-3 லூக்கா 21:34-36; 2கொரி 5:1-8, எபே 5:27; பிலி 3:11,20-21 1தெச 2:19; 1தெச 3:13 1தெச 4:13-17; 1தெச 5:9,23; 2தெச 2:1,7, கொலோ 3:4 யாக் 5:7-8; 1யோவான் 2:28 1யோவான் 3:2, 1பேதுரு 5:4 கிறிஸ்துவில் இருக்கிறவர்கள் மரித்தவர்களாக இருந்தாலும் ஜீவனுள்ளவர்களாக இருந்தாலும் எடுத்துக் கொள்ளப் படுவார்கள் கிறிஸ்துவில் இருக்கிற யாரும் இந்தப் பூமியில் கைவிடப்பட மாட்டார்கள் (1தெச 4:16-17

3 தானியேலின் எழுபதாவது வாரத்தின் முதலாவது மூன்றரை வருஷத்தில் இரட்சிக்கப்பட்ட 144,000 யூதர்கள் (வெளி 7:1-8) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பு மூன்றரை வருஷத்தில் இது நிறைவேறும். (வெளி 12:5, வெளி 14:1-5 ஏசா 66:7-8 தானி 12:1)

4 சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு உபத்திரவக் காலத்தில் இரட்சிக்கப்பட்ட பரிசுத்தவான்கள் தானியேலின் எழுபதாவது வாரம் முழுவதிலும் இரட்சிக்கப்பட்டவர்கள் (வெளி 6:1-19:21) இரத்தச்சாட்சியாக முதலாவது மரித்தவர்கள் (வெளி 6:9-11 சபை எடுத்துக் கொள்ளப்படும்போது தேவன் தம்முடைய பரிசுத்தவான்களை மத்திய ஆகாயத்திற்கு அழைத்துச் சென்று, ஆட்டுக்குட்டியானவருடைய கலியாண விருந்தில் பங்குபெறச் செய்வார் (வெளி 7:9-17, வெளி 15:2-4 வெளி 19:1-21, வெளி 20:4-6 யூதா 1:14; சக 14:5)

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

11 அதிகாரம்

4. பூமி அதிர்ச்சி - வெளி 16:17-21 18:9-24

வெளி 11:13 அந்நேரத்திலே பூமி மிகவும் அதிர்ந்தது, உடனே அந்த நகரத்தில் பத்திலொருபங்கு இடிந்து விழுந்தது; மனுஷரில் ஏழாயிரம்பேர் பூமியதிர்ச்சியினால் அழிந்தார்கள் மீதியானவர்கள் பயமடைந்து பரலோகத்தின் தேவனை மகிமைப்படுத்தினார்கள்

"அந்நேரத்திலே" - தானியேலின் எழுபதாவது வாரத்தின் முடிவில இரண்டு சாட்சிகளும் மேகத்தில ஏறி வானத்திற்குப்போன அந்த நேரத்திலே. (வெளி 16:17-21)

"பூமி மிகவும் அதிர்ந்தது" - ஏழாவது கலசத்தின போது உண்டான பூமியதிர்ச்சி. (வெளி 16:17-21)

"ஏழாயிரம்பேர்" - எலியாவின நாட்களில் தேவனுக்காக ஏழாயிரமபேர் மீதியாக வைக்கப்பட்டிருந்தார்கள் இதே எண்ணிக்கையில உள்ளவர்கள் எலியாவும ஏனோக்கும் மேகத்திலேறி வானத்திற்குப போகும்போது பூமியதிர்ச்சியினால அழிந்து போவார்கள் (ரோமர் 11:4, 1இராஜா 19:18)

5. மூன்றாம் ஆபத்து சீக்கிரமாய் வருகிறது - (8:13, 9:12; 12:12)

வெளி 11:14 இரண்டாம் ஆபத்து கடந்துபோயிற்று, இதோ மூன்றாம் ஆபத்து சீக்கிரமாய் வருகிறது.

"இரண்டாம் ஆபத்து கடந்துபோயிற்று. இதோ, மூன்றாம் ஆபத்து சீக்கிரமாய் வருகிறது" இந்த வாக்கியம் வெளி 9:12-21 ஆகிய வசனங்களில கூறப்பட்டிருக்கும் ஆபத்துக்களைக் குறிக்கும் மனுஷர்மீது வரும் மூன்றாவது ஆபத்தும் இங்கு அறிமுகப்படுத்தப் படுகிறது. (வெளி 8:13) மூன்றாம் ஆபத்து பூமியதிர்ச்சி அல்ல. (வெளி 11:13) ஏழாம் எக்காளம் ஊதப்படும்போது சாத்தான் பூமிக்குத் தள்ளப்படுவதே மூன்றாம் ஆபத்தாகும். (வெளி 12:13)

(14) ஏழாம் எக்காளம் - (11:15-13:18)

(அ) வானத்தில் உண்டான கெம்பீர சத்தங்கள்

வெளி 11:15 ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான் அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நமமுடைய கர்த்தருக்கும் அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில உண்டாயின

"ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான்" - ஏழாம் எக்காளம் ஒரு குறிப்பிட்ட காலம் ஊதப்படும். (வெளி 10:6,7) இந்தக் காலத்தில வெளி 11:15-13:18 ஆகிய வசனங்களில கூறப்பட்டிருக்கும் 2 நிகழ்ச்சிகள் நிறைவேறும்

ஏழாம் தூதன் எக்காளம் ஊதியபோது நடைபெற்ற நிகழ்ச்சிகள்

1. வானத்தில கெம்பீர சத்தங்கள் மூலமாக அறிவிப்பு (வெளி 11:15)
2. இருபத்திநான்கு மூப்பர்களும் சொன்ன ஆறு காரியங்கள் (வெளி 11:16-18)
3. பரலோகத்தில தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது (வெளி 11:19)
4. சூரியனை அணிந்திருந்த ஸ்திரீ வேதனையடைந்து வருத்தப்பட்டு அலறினாள் வெளி 12:1 2
5. பெரிய வலுசாபம் ஆணபிள்ளையைப பட்சிக்கும்படிக்கு வந்தது. (வெளி 12:3 4
6. ஆண் பிள்ளை தேவனிடத்திற்கும் அவருடைய சிங்காசனத்தினிடத்திற்கும் எடுத்துக் கொள்ளப்பட்டது. வெளி 12:5
7. ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள் (வெளி 12:6,14
8. வானத்திலே யுத்தம் உண்டாயிற்று. சாத்தான பூமிக்குத் தாழத்தள்ளப்பட்டுப் போனான் (வெளி 12:7-12)

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

11 அதிகாரம்

9 வலுசர்ப்பம் ஸ்திரீயைத் துன்பப்படுத்தினது. (வெளி 12:13-16)

10 வலுசர்ப்பம் ஸ்திரீயின் சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம்பண்ணப் போயிற்று. (வெளி 12:17)

11 சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பி வந்தது. (வெளி 13:1-10)

12 வேறொரு மிருகம் பூமியிலிருந்து எழும்பி வந்தது. (வெளி 13:11-18)

தானியேலின் எழுபதாவது வாரத்தின் நடுவில் ஏழாவது எக்காளம் ஊதப்படும். நாற்பத்திரண்டு மாதங்கள் (வெளி 11:2; வெளி 13:5), 1260 நாட்கள் (வெளி 11:3 வெளி 12:6) அல்லது மூன்றரை வருஷங்கள் ஏழாவது எக்காளத்திற்கும், கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கும் இடையில் உள்ளது. (வெளி 12:14; தானி 7:25; தானி 9:27 தானி 12:7

ஏழாவது எக்காளம் ஊதப்படும்பொழுது ஏற்கெனவே முதல் ஆறு எக்காளங்கள் ஊதப்பட்டு விட்டன. ஏழு முத்திரைகளும் உடைக்கப்பட்டு விட்டன. ஏழாம் எக்காளம் ஊதப்படுவதற்கு முன்பாக நிறைவேற வேண்டிய எல்லாக் காரியங்களும் நிறைவேறிவிட்டன. ஆகையினால் ஏழு முத்திரைகளும் முதல் ஆறு எக்காளங்களும் தானியேலின் எழுபதாவது வாரத்தின் முதல் மூன்றரை வருஷத்தில் நிறைவேறும். (வெளி 6:1-9:21)

"அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார்" உலகத்தின் ராஜ்யங்கள் நமமுடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாகும். இந்த வேளையில் வானத்தில் இவ்வாறு கெம்பீர சத்தங்கள் உண்டான போதும் இந்த நிகழ்ச்சி இதிலிருந்து மூன்றரை வருஷங்களுக்குப்பின்பே நிறைவேறும். (வெளி 19:11-21) ஏழாம் எக்காளம் ஊதப்படும்போது சாத்தான் வானத்திலிருந்து பூமிக்குத் தள்ளப்படுவான். தேவன் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரம் தமது இரண்டாம் வருகையின் போது பூமியிலுள்ள ராஜ்யங்களை ஆளுகை செய்வார்

(வெளி 19:11-21) இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகையின்போது பூமிக்கு வந்தபின்பு, பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களையும் நித்திய காலமாக ஆட்சி புரிவார் (வெளி 11:15 வெளி 22:4-5 ஏசா 9:6-7 தானி 2:44-45 தானி 7:13-14, 18, 27; லூக்கா 1:32-33 2சாமு 7)

"நமமுடைய கர்த்தருக்கும் அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய" - தேவத்துவத்தில் பிதாவும் குமாரனும் தனித்தனியாக வெவ்வேறு ஆள்தத்துவமுடையவர்கள் என்பதை விளக்கும் வாக்கியம்.

(ஆ) இருபத்தினான்கு மூப்பர்களின் அறிக்கை - (1:4)

வெளி 11:16 அப்பொழுது தேவனுக்கு முன்பாகத் தங்கள் சிங்காசனங்கள் மேல் உட்கார்ந்திருந்த இருபத்து நான்கு மூப்பர்களும் முகங்குப்புற விழுந்து,

வெளி 11:17 இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தராகிய தேவனே உம்மை ஸ்தோத்திரிக்கிறோம் தேவரீர் உமது மகா வல்லமையைக் கொண்டு ராஜ்யபாரம் பண்ணுகிறீர்

வெளி 11:18 ஜாதிகள் கோபித்தார்கள் அப்பொழுது உம்முடைய கோபம் மூண்டது மரித்தோர் நியாயத்தீர்ப்படைகிறதற்கும் தீர்க்கதரிசிகளாகிய உம்முடைய ஊழியக்காரருக்கும் பரிசுத்தவான்களுக்கும் உமது நாமத்தின்மேல் பயபக்தியாயிருந்த சிறியோர் பெரியோருக்கும் பலனளிக்கிறதற்கும் பூமியைக் கெடுத்தவர்களைக் கெடுக்கிறதற்கும், காலம் வந்தது என்று சொல்லி, தேவனைத் தொழுதுகொண்டார்கள்

"முகங்குப்புற விழுந்து தேவனைத் தொழுது கொண்டார்கள்" (வெளி 4:4,10,14; வெளி 14:3, வெளி 19:4

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

11 அதிகாரம்

மூப்பர்கள் கூறிய காரியங்கள் (வெளி 11:17-18)

1. சர்வவல்லமையுள்ள கர்த்தராகிய தேவனே உம்மை ஸ்தோத்திரிக்கிறோம்.

2. ஜாதிகள் கோபித்தார்கள்

3. உம்முடைய கோபம் மூண்டது (வெளி 6:16)

4. மரித்தோர் நியாயத்தீர்ப்படைகிறதற்கு—— காலம் வந்தது. (1கொரி 3:9-15)

5. தீர்க்கதரிசிகளாகிய உம்முடைய ஊழியக்காரருக்கும் பரிசுத்தவான்களுக்கும் உமது நாமத்தின்மேல் பயபக்தியாயிருந்த சிறியோர் பெரியோருக்கும் பலனளிக்கிறதற்கு காலம் வந்தது. (மத் 16:27, 1கொரி 3:11-15)

6. பூமியைக் கெடுத்தவர்களைக் கெடுக்கிறதற்கு காலம் வந்தது (மத் 25:31-46, 2தெச 1:7-10)

(இ) பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது - 4:1

வெளி 11:19 அப்பொழுது பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது அவருடைய ஆலயத்திலே அவருடைய உடன்படிக்கையின் பெட்டி காணப்பட்டது அப்பொழுது மின்னல்களும் சத்தங்களும், இடிமுழக்கங்களும் பூமியதிர்ச்சியும், பெருங்கல்மழையும் உண்டாயின

"அவருடைய உடன்படிக்கையின் பெட்டி" - இந்த உடன்படிக்கை பெட்டியைப்போல மோசே தன்னுடைய உடன்படிக்கை பெட்டியைச் செய்தார் (எபி 8:5, எபி 9:23)

வெளிப்படுத்தின விசேஷம் – தொகுப்புரை

12 அதிகாரம்

(அ) சூரியனை அணிந்திருந்த ஒரு ஸ்திரீ - (ஆதி 37:9-11; ஏசா 54:5-10; எரே 3:1-14; ஓசி 2:14-23; 3:4-5)

வெளி 12:1 அன்றியும் ஒரு பெரிய அடையாளம் வானத்திலே காணப்பட்டது; ஒரு ஸ்திரீ சூரியனை அணிந்திருந்தாள்; அவள் பாதங்களின் கீழே சந்திரனும், அவள் சிரசின் மேல் பன்னிரண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடமும் இருந்தன.

அடையாளம் (wonder) - σημεῖον - **seemeion** - 4592

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - அடையாளம், அற்புதம், அதிசயம் (sign) (யோவான் 2:11)

"வானத்திலே" - அடையாளம் வானத்திலே காணப்பட்டது. ஆனால் இது தொடர்பான காரியங்கள் பூமியில் நடைபெறுகிறது. (வெளி 12:6,13,15-16)

சூரியனை அணிந்திருந்த ஸ்திரீ

இதற்கு வேதபண்டிதர்கள் பலவிதமாக விளக்கம் தருகிறார்கள். சூரியனை அணிந்திருந்த ஸ்திரீ என்பது இஸ்ரவேல் தேசத்தைக் குறிக்கும் என்பதும், சபையைக் குறிக்காது என்பதும் பலரும் ஏற்றுக்கொள்ளும் பொதுவான வியாக்கியானம் ஆகும்.

1 பழைய உடன்படிக்கையின் பிரகாரம் இஸ்ரவேல் தேசம் தேவனுடைய மணவாட்டியாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. (ஏசா 54:1-6; எரே 3:1-14; ஓசி 2:14-23)

2 சபையானது கிறிஸ்துவின் சரீரமாக வர்ணிக்கப்படுகிறது. இதற்கு ஆண்பால பிரதிப்பெயர்ச்சொல் கொடுக்கப்படுகிறது. மேலும் இக்காலத்தில் சபை ஏற்கெனவே எடுத்துக் கொள்ளப்பட்டுவிடும் (வெளி 4:1) ஆகையினால் சூரியனை அணிந்திருந்த ஸ்திரீ என்பது சபையைக் குறிக்காது. (வெளி 12)

3 கள்ளச் சபைகளுக்கு மகா வேசி என்று பெயரிடப்பட்டு அது ஒரு ஸ்திரீயாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது (வெளி 17) ஆயினும் கள்ளச் சபையும் சூரியனை அணிந்திருந்த ஸ்திரீ ஆகாது.

4 பரிசுத்த வேதாகமம் மூன்று விதமான ஜனங்களைப் பற்றிக் கூறுகிறது. யூதர்கள், புறஜாதியார், சபையார் என்போரே அவர்கள் (1 கொரி 10:32)

தானியேலின் எழுபதாவது வாரத்தில ஸ்திரீயானவள் கர்ப்பவேதனைப்பட்டு ஒரு ஆண் பிள்ளையைப் பெற்றெடுப்பாள். இந்த நிகழ்ச்சிக்குக் குறைந்தது மூன்றரை வருடங்களுக்கு முன்பாகவே சபையானது எடுத்துக் கொள்ளப்பட்டு விட்டது. (வெளி 4:1)

ஜனங்களிலுள்ள மூன்று பிரிவினரில் இன்னும் இரண்டு பிரிவினர் உள்ளனர். யூதரும், புறஜாதியாருமே அவர்கள். ஸ்திரீயானவள் புறஜாதியாராக இருக்க முடியாது. ஏனெனில் புறஜாதியார் இந்த ஸ்திரீயைத் துன்புறுத்தினார்கள். ஆகையினால், இந்த ஸ்திரீயானவள் யூதராகவே, அதாவது இஸ்ரவேல் தேசமாகவோ இருக்க வேண்டும் என்பதே பலருடைய வியாக்கியானமாகும்.

இஸ்ரவேல் தேசம் என்பது சிதறியிருக்கும் யூதர்களைக் குறிப்பிடாமல் ஒன்றுசேர்ந்த இஸ்ரவேல் தேசத்தையே குறிக்கும். 1948 ஆம் ஆண்டில் இஸ்ரவேல் ஒரு தேசமாயிற்று. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரையிலும் யூதர்கள் உலகமெங்கிலும் சிதறியிருப்பார்கள். அவருடைய வருகையின்போதுதான் யூதர்கள் அனைவரும் இஸ்ரவேல் தேசத்திற்கு ஒன்றுகூடி வருவார்கள். மத் 24:29-31; ஏசா 11:11-12; எசே 37

12 அதிகாரம்

5. வெளி 4-19 ஆகிய அதிகாரங்களில் இஸ்ரவேல் தேசத்தைப் பற்றியே பிரதானமாகக் கூறப்பட்டிருக்கிறது. சபையைப் பற்றி அதிகமாகக் கூறப்படவில்லை

6 சூரியன், சந்திரன், 12 நட்சத்திரங்கள் ஆகியவை ஆதி 37:9-11 ஆகிய வசனங்களில் நிரூபிக்கப்பட்டிருக்கிற பிரகாரம் இஸ்ரவேல் தேசத்தையே குறிக்கும்

7 கடைசி நாட்களில் யூதர்கள் உபத்திரவக் காலத்தின் வழியாகச் செல்வார்கள் என்று வேதவாக்கியம் கூறுகிறது. (வெளி 12:2-5; மத் 24:8, மாற்கு 13:8 ஏசா 66:7-8 எரே 30:6-9 மீகா 5:3, சக 12:10-13)

8 தனக்கும், தன்னுடைய வித்துக்கும் எதிராக யுத்தம் பண்ணும் ஸ்திரீயாக இஸ்ரவேல் தேசம் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இஸ்ரவேல் தேசத்தோடு தொடர்புபடுத்தி இந்த ஸ்திரீயானவள் இவ்வாறு முன்னறிவிக்கப்பட்டிருக்கிறாள் தானி 7:21 தானி 8:9-14,24-25; தானி 9:27, தானி 11:40-45; தானி 12:1,7, யோவே 3, சக 12:1-9; சக 13:8-9 சக 14:1-21

9 தானி 9:27 ஆவது வசனத்தின் எழுபதாவது வாரம் முழுவதும் மற்ற 69 வாரங்களைப் போலவே இஸ்ரவேலையும் எருசலேமையும் தொடர்புபடுத்தியே இருக்கிறது. தானி 9:24-27 கடைசி கால நிகழ்ச்சிகளோடு தொடர்புபடுத்தி சபை எங்கும் கூறப்படவில்லை

10 ஸ்திரீயின் உபத்திரவம் ஸ்திரீ வனாந்தரத்திற்கு ஓடிப்போதல் ஸ்திரீக்குக் கொடுக்கப்படும் பாதுகாப்பு ஆகியவை இது இஸ்ரவேல் தேசத்தையே குறிக்கும் என்பதை நிரூபிக்கிறது. (வெளி 12:6,13-16)

இஸ்ரவேல் தேசத்தைப்பற்றிய தீர்க்கதரிசனங்கள்

1 இஸ்ரவேல் மோவாபிற்கும், ஏதோமிற்கும் ஓடிப்போகும் என்று ஏசாயா முன்னறிவித்திருக்கிறார் (ஏசா 16:1-5) சேலா பட்டணத்தைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார் சேலா பழங்கால ஏதோமின் தலைநகராமாகும் உபத்திரவக் காலத்திலும் சேலாவே ஏதோமின் தலைநகரமாக இருக்கும். ஏசாயா இந்தத் தீர்க்கதரிசனத்தில் சபையைப் பற்றி ஒன்றும் கூறவில்லை

2 சினம் கடந்துபோகுமட்டும் இஸ்ரவேல் தேசம் பாதுகாக்கப்படுமென்று ஏசாயா முன்னறிவித்திருக்கிறார் (ஏசா 26:20-21)

3 இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகையின்போது பரலோகத்திலிருந்து ஏதோமின் திசையை நோக்கி இறங்கி வருவார் என்று ஏசாயா றியிருக்கிறார் (ஏசா 63:1-5 ஏதோமிலேதான இஸ்ரவேலர்கள் பாதுகாக்கப்பட்டிருப்பார்கள் (மத் 24:27)

4 கர்த்தர் தம்முடைய சத்துருக்களை மேற்கொள்வதற்கு பூமிக்கு வருவார் என்றும் வனாந்தரத்திலும் கன்மலைகளிலும் குடியிருக்கும் யூதர்கள் கெம்பீரித்து ஆர்ப்பரிப்பார்களென்றும் ஏசாயா கூறியிருக்கிறார் (ஏசா 42:11-13

5 அந்திக்கிறிஸ்துவிடமிருந்து தேவன் ஏதோமைப் பாதுகாப்பார் என்று சங்கீதங்கள் முன்னறிவிக்கின்றன (சங் 60:6-12; சங் 108:8-13 மேலும் இஸ்ரவேல் தேசம் அரண் பொருந்திய நகரத்தை நோக்கிப்போகும்.

6 கடைசி நாட்களில் தேசங்களிலிருந்து இஸ்ரவேல் கூட்டிச் சேர்க்கப்படும் என்று எசேக்கியேல் முன்னறிவித்திருக்கிறார் (எசே 20:33-44) மேலும் எகிப்து தேசத்தின் வனாந்தரத்தில் உங்கள் பிதாக்களோடு வழக்காடினதுபோல உங்களோடும் வழக்காடுவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்

12 அதிகாரம்

7 அந்திக்கிறிஸ்து பல தேசங்களை ஜெயிப்பான் அதில் பாலஸ்தீனமும் அடங்கும் என்று தானியேல் முன்னறிவித்திருக்கிறார் (தானி 11:36) ஆயினும் ஏதோம், மோவாப், அம்மோன் ஆகியவை அந்திக்கிறிஸ்துவின் கைக்குத் தப்பும் என்று தானியேல் முன்னறிவித்திருக்கிறார் வனாந்தரத்தில் மூன்றரை வருஷங்களுக்கு இஸ்ரவேலை பாதுகாப்பதற்காக தேவன் இந்த ஸ்தலத்தை ஆயத்தப்படுத்தியிருக்கிறார் (வெளி 12:6,14)

8 இஸ்ரவேல் ஜனங்கள் அந்திக்கிறிஸ்துவிடமிருந்து தப்பி வனாந்தரத்திற்கு ஓடிப்போவார்கள் என்று ஓசியா கூறியிருக்கிறார் (ஓசி 2:14-23)

9 அந்திக்கிறிஸ்து இஸ்ரவேலோடு செய்த ஏழு வருஷ உடன்படிக்கையை முறித்துப் போடுவான் என்று மத்தேயுவில் முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. (மத் 24:15-22 தானி 9:27) மகா உபத்திரவக்காலத்தில் எருசலேம் தேவாலயத்தில் பாழாக்குகிற அருவருப்பு உண்டாயிருக்கும். இஸ்ரவேல் ஜனங்கள் இக்காலத்தில் யூதேயாவிலிருந்து மலைகளுக்குத் தப்பி ஓடிப்போவார்கள்

10 அந்திக்கிறிஸ்துவிடமிருந்து மூன்றரை வருஷங்கள் பாதுகாக்கப்படுவதற்கு இஸ்ரவேல் வனாந்தரத்திற்கு ஓடிப் போகுமென்று வெளிப்படுத்தின விசேஷமும் முன்னறிவிக்கிறது. (வெளி 12:6,13-16)

(உ) இஸ்ரவேலின் வேதனை - (ஏசா 66:7-8; எரே 30:1-11 தானி 7:23-27; 8:9-14,23-26, 9:27 11:40-45; 12:1,7; மீகா 5:3 சக 12:10-14:21; ரோமர் 11:25-27 மத் 24:15-22)

வெளி 12:2 அவள் கர்ப்பவதியாயிருந்து பிரசவ வேதனையடைந்து பிள்ளை பெறும்படி வருத்தப்பட்டு அலறினாள்

(ஊ) சிவப்பான பெரிய வலுசர்ப்பம் - (12:9; 13:2; 16:13-16; 20:1-10)

வெளி 12:3 அப்பொழுது வேறொரு அடையாளம் வானத்திலே காணப்பட்டது ஏழு தலைகளையும் பத்துக் கொம்புகளையும் தன் தலைகளின்மேல் ஏழு முடிகளையுமுடைய சிவப்பான பெரிய வலுசர்ப்பமிருந்தது

"வலுசர்ப்பம்" (dragon) - சாத்தானுக்கு அடையாளமாக வெளிப்படுத்தின விசேஷத்தில் இந்த வார்த்தை 13 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (வெளி 12:3-17, வெளி 13:2-4,11 யோபு 41)

"ஏழு தலைகள்" அந்திக்கிறிஸ்துவின் ராஜ்யத்திற்கு முன்பாக உலகில் ஆளுகை செய்யும் ஏழு ராஜ்யங்களுக்கு அடையாளம்

"பத்துக் கொம்புகளையும் தன் தலைகளின்மேல் ஏழு முடிகளையும்" பத்துக் கொம்புகளின்மேல் கிரீடங்கள் இல்லை மிருகத்தின் கொம்புகளின்மேல் பத்து முடிகள் இருந்தன (வெளி 13:1) பத்து ராஜ்யங்கள் மேல் அவனுடைய அதிகாரம் மிருகத்திற்குக் கொடுக்கப்படும் என்பது இதன் பொருள் வலுசர்ப்பத்தின் ஏழு தலைகளின்மேல் ஏழு முடிகள் இருந்தன (வெளி 12:3) அந்திக்கிறிஸ்துவின் ராஜ்யத்திற்கு முன்பாக வலுசர்ப்பம் ஏழு ராஜ்யங்களை ஆளுகை செய்வான் என்பது இதன் அடையாளம். மிருகத்தின்மீதுள்ள ஏழு தலைகளின்மீது முடிகள் இல்லை. (வெளி 13:1) இவனுக்கு முன்பாக அந்திக்கிறிஸ்து ஏழு ராஜ்யங்களை ஆளுகை செய்யவில்லை என்பது இதன் பொருள் (வெளி 17:8-11)

வெளிப்படுத்ின விசேஷம் – தொகுப்புரை

12 அதிகாரம்

(எ) பிள்ளையின்மீது வலுசர்ப்பத்தின் யுத்தம்

வெளி 12:4 அதின் வால் வானத்தின் நட்சத்திரங்களில் மூன்றிலொருபங்கை இழுத்து, அவைகளைப் பூமியில் விழத் தள்ளிற்று; பிரசவவேதனைப்படுகிற அந்த ஸ்திரீ பிள்ளை பெற்றவுடனே அவளுடைய பிள்ளையைப் பட்சித்துப்போடும்படிக்கு அந்த வலுசர்ப்பம் அவளுக்கு முன்பாக நின்றது.

"வானத்தின் நட்சத்திரங்களில் மூன்றிலொருபங்கு" - தேவனுடைய தூதர்களில் மூன்றிலொருபங்கு லூசிபரோடு சேர்ந்து தேவனுக்கெதிராகக் கலகம் பண்ணுவார்கள். ஏழாவது எக்காளம் ஊதப்படும்போது பரலோகத்தில் உண்டாகும் யுத்தத்தில் எத்தனை தூதர்கள் இருப்பார்கள் என்பதை இது வெளிப்படுத்துகிறது. (வெளி 12:4,7-12)

"பிரசவவேதனைப் படுகிற அந்த ஸ்திரீ பிள்ளை பெற்றவுடனே, அவளுடைய பிள்ளையைப் பட்சித்துப்போடும்படிக்கு அந்த வலுசர்ப்பம் அவளுக்கு முன்பாக நின்றது" - ஆண்பிள்ளை பிறந்தவுடன் அதை அழிக்க வேண்டுமென்பதே வலுசர்ப்பத்தின் நோக்கம். ஆனால் தேவனோ ஆண்பிள்ளையைப் பரலோகத்திற்கு எடுத்துச் சென்றுவிட்டார். ஆகையினால் வலுசர்ப்பத்தினால் ஆண்பிள்ளையை ஒன்றும் செய்ய முடியவில்லை. (வெளி 12:5)

(ஏ) சகல ஜாதிகளையும் இருப்புக்கோலால் ஆளுகை செய்யும் ஆண்பிள்ளை (7:1-8, 9:4, தானி 9:27, 11:40-45, 12:1, ஏசா 66:7-8, மத் 24:15-22, வெளி 14:5)

வெளி 12:5 சகல ஜாதிகளையும் இருப்புக்கோலால் ஆளுகைசெய்யும் ஆண்பிள்ளையை அவள் பெற்றாள்; அவளுடைய பிள்ளை தேவனிடத்திற்கும் அவருடைய சிங்காசனத்தினிடத்திற்கும் எடுத்துக் கொள்ளப்பட்டது.

"ஆண்பிள்ளை" என்பது 144,000 யூதர்கள் என்னும் உபதேச விளக்கம்

1. சூரியனை அணிந்திருக்கும் ஸ்திரீயானவள் இஸ்ரவேல் தேசத்தைக் குறிக்கும். ஆகையினால் ஆண்பிள்ளை என்பது புறஜாதியாரையோ அல்லது சபையையோ குறிக்காது. ஏனென்றால் சபையில் புறஜாதியாரே அதிகமானோர் இருந்தனர் (அப் 15:13-18). தங்கள் தங்கள் ஜாதியின்படியே பலுகிப்பெருகுங்கள் என்பது தேவனுடைய பிரமாணம் (ஆதி 1:21-28). இதன் பிரகாரம் ஸ்திரீயானவள் தன்னுடைய இனத்தையே உற்பத்தி பண்ணுவாள். ஸ்திரீயானவள் யூதஸ்திரீயாக இருக்கிறபடியினால் ஆண்பிள்ளையும் யூதனாகவே இருக்க வேண்டும். ஸ்திரீயானவள் திரளான ஜனங்களுக்குப் பிரதிநிதியாக இருக்கிறவள். அதுபோல ஆண்பிள்ளையும் திரளான ஜனங்களுக்குப் பிரதிநிதியாக இருக்க வேண்டும். வெளி 4-19 ஆகிய அதிகாரங்களில் 144,000 யூதர்களைத் தவிர வேறு திரளான ஜனங்கள் எங்கும் கூறப்படவில்லை.

2. ஆண்பிள்ளை என்பது இயேசு கிறிஸ்துவாக இருக்க முடியாது. ஏனெனில் வெளி 4:1 ஆவது வசனத்திற்குப்பின்பு நடைபெறும் காரியங்களெல்லாம் வெளி 2:1-4:22 ஆகிய வசனங்களில் விவரிக்கப்பட்டிருக்கும் சபைக் காலத்திற்குப் பின்பு நடைபெறுபவையாகும்.

3. வேதபண்டிதர்களில் சிலர் ஆண்பிள்ளை என்பது முழு சபையையோ அல்லது சபையின் ஒரு பகுதியையோ குறிக்குமென்று வியாக்கியானம் கூறுகிறார்கள். ஆனால் வெளி 4:1 ஆவது வசனத்தில் சபை எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஆகையினால் வெளி 4-22 ஆகிய அதிகாரங்களில் நடைபெறும் காரியங்கள் சபைக் காலத்திற்கு பின்பு நடைபெறுபவையாகும்.

12 அதிகாரம்

4. ஆண்பிள்ளை என்பது மரணத்தைக் காணாமல், எடுத்துக்கொள்ளப்பட்ட ஜனங்களைக் குறிக்கும். ஸ்திரீயானவள் உயிருள்ள பிள்ளையைப் பெற்றெடுத்தாள். அந்தப் பிள்ளையை வலுசர்பத்தினால் கொல்ல முடியவில்லை (வெளி 12:4) அந்த ஆண்பிள்ளை பிறந்தவுடன் தேவன் அதைப் பரலோகத்திற்கு எடுத்துக் கொண்டார் (வெளி 12:4-5) வெளி 4-22 ஆகிய அதிகாரங்களில் 44,000 யூதர்களைப் பற்றியே அதிகமாகக் கூறப்பட்டிருக்கிறது. இவர்களுடைய ஜீவனையே வலுசர்ப்பம் பறித்துக்கொள்ள முயற்சி பண்ணினான் (வெளி 7:1-8 வெளி 14:1-5) இக்காலத்திற்கு முன்பாகவே, பழைய ஏற்பாட்டுக்கால பரிசுத்தவான்களும், திருச்சபையின் பரிசுத்தவான்களும் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு விட்டார்கள். ஆகையினால் வலுசர்ப்பத்தினால் அவர்களை மறுபடியும் கொல்ல முடியாது.

5. வெளி 7:1-8 வெளி 9:4; வெளி 12:5 வெளி 14:1-5 ஆகிய வசனங்கள் 144,000 யூதர்களைப் பற்றி முழுமையாக வெளிப்படுத்துகிறது. அவர்களுடைய எண்ணிக்கை, இரட்சிப்பு, நெற்றியில் முத்திரையிடப்படுதல், ஏழு எக்காளங்களில் அவர்கள் பாதுகாக்கப்படுவது, ஏழாவது எக்காளத்தில் அவர்கள் ஆண்பிள்ளையாக எடுத்துக் கொள்ளப்படுவது, பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டபின்பு அங்கு அவர்களுடைய ஸ்தானமும், முடிவும் ஆகிய அனைத்தும் இந்த வசனங்களில் முழுமையாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. முதல் ஏழு எக்காளங்கள் ஊதப்படும் வரையிலும் இவர்கள் பூமியில் இருந்தார்கள் (வெளி 7:1-3 வெளி 9:4) ஏழாவது எக்காளம் ஊதப்படும்பொழுது இவர்கள் ஆண்பிள்ளையாக பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள் (வெளி 11:15 வெளி 14:1-5) ஆகிய [illegible] பரலோகத்தில் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக 144,000 பேர் இருந்தார்கள் என்று கூறுகிறது. இவர்கள் பூமியில் மனுஷர் மத்தியில் மீட்கப்பட்டவர்கள். உபத்திரவக் காலத்தின் கடைசி மூன்றரை வருஷங்களில் பூமியில் இருந்தவர்கள்.

6. 144,000 பேர் எடுத்துக்கொள்ளப்படும் காலம் அவர்களே ஆண்பிள்ளை என்பதை உறுதிபண்ணுகிறது. இவர்கள் எடுத்துக் கொள்ளப்படும் காலமும் ஆண்பிள்ளை எடுத்துக் கொள்ளப்படும் காலமும் ஒன்றாயிருக்கிறது. (வெளி 12:5 வெளி 14:1-5)

7. திருச்சபையின் பரிசுத்தவான்களும் பழைய ஏற்பாட்டுக்காலத்து பரிசுத்தவான்களும் தானியேலின் எழுபதாவது வாரத்திற்கு முன்பாகவும் உபத்திரவக்காலத்திற்கு முன்பாகவும் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள் (2 தெச 2:7 வெளி 4:1)

உபத்திரவக்காலத்து பரிசுத்தவான்கள் இரத்தசாட்சியாக மரித்து பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள். 144,000 பேர் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பே, இரத்தச் சாட்சிகள் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள் (வெளி 6:9-11 வெளி 7:9-17)

இவர்களைத் தவிர இக்காலத்தில் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டவர்கள் 144,000 பேரும் இந்த ஆண்பிள்ளையும் மட்டுமே. (வெளி 12:5) ஆகையினால் 144,000 பேரே இந்த ஆண்பிள்ளை என்று வேதபண்டிதர்கள் வியாக்கியானம் கூறுகிறார்கள்.

8. வெளி 14:1-5 ஆகிய வசனங்களில் 144,000 பேர் இருக்கும் இடம் கூறப்பட்டிருக்கிறது. உபத்திரவக் காலத்தின் கடைசி மூன்றரை வருஷங்களில் இவர்கள் பரலோகத்தில் இருப்பார்கள். சீயோன் மலை என்பது தேவனுடைய பரிசுத்த ஸ்தலமாகும். (எபி 12:22-24. வெளி 14:1)

12 அதிகாரம்

9 வெளி 4:1 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் சபை எடுத்துக் கொள்ளப்படும் நிகழ்ச்சிக்குப்பின்பு, 144,000 யூதர்களே தேவனுக்கு இஸ்ரவேலிலிருந்து வரும் முதற்பலனாக இருப்பார்கள். சபை எடுத்துக் கொள்ளப் பட்டபோது 144,000 யூதர்கள் இரட்சிக்கப் படவில்லை. அவர்கள் இரட்சிக்கப் பட்டிருந்தால் சபை எடுத்துக் கொள்ளப் பட்ட காலத்திலேயே அவர்களும் எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பார்கள் (1தெச 4:16, 1கொரி 15:23)

சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு, 144,000 யூதர்களும் உபத்திரவக் காலத்தின் முதல் மூன்றரை வருஷக் காலத்தில் இரட்சிக்கப்பட்டு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப் படுகிறார்கள். உபத்திரவக்காலத்தின் கடைசி மூன்றரை வருஷங்களில் இவர்கள் பரலோகத்தில் இருப்பார்கள் (வெளி 12:5) 144,000 யூதர்களும் இந்த ஆண்பிள்ளையும் உபத்திரவக்காலத்தின் மத்தியில் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்த ஆண்பிள்ளை 144,000 யூதர்களுக்கு முன்பாகவே இரட்சிக்கப் பட்டு, பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றால் இந்த ஆண்பிள்ளையே இஸ்ரவேலிலிருந்து வரும் தேவனுடைய முதற்பலனாக இருக்கும். 144,000 யூதர்கள் தேவனுக்கு முதற்பலனாக இருக்கமாட்டார்கள். 144,000 யூதர்கள் முதற்பலனாக இருப்பதினால் ஏழு வருஷ உபத்திரவக் காலத்தில் இந்த யூதர்களே முதலாவதாக இரட்சிக்கப்பட்டு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். இவர்கள் எடுத்துக் கொள்ளப்படுவது சபை எடுத்துக் கொள்ளப்படும் காலத்திற்கும் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கும் நடுவில் நடைபெறும்.

10. தானியேலின் எழுபதாவது வாரத்தின் ஆரம்பத்திற்கும், சபை எடுத்துக் கொள்ளப்பட்ட காலத்திற்கும் இடையில் 144,000 யூதர்கள் மட்டுமே பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப் பட்டவர்கள். உபத்திரவக்காலத்து பரிசுத்தவான்கள் தானியேலின் எழுபதாவது வாரத்தின் இறுதியில் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப் படுவார்கள். ஆகையினால் பரலோகத்திற்கு ஒரே காலத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட ஆண்பிள்ளையும் 144,000 யூதர்களும் ஒன்றே என்பது சிலருடைய வியாக்கியானமாகும். (வெளி 7:4-8, வெளி 9:4, வெளி 12:5, வெளி 14:1-5)

11. எக்காள நியாயத்தீர்ப்புக்களின் போது சேதமடையாமல் பாதுகாக்கப்படுவதற்காக 144,000 யூதர்களுக்கும் முத்திரை போடப்பட்டது (வெளி 7:1-3, வெளி 9:4). ஏழாவது எக்காளம் ஊதப்பட்டவுடன் (வெளி 11:15-11:18) 144,000 யூதர்களும் பரலோகத்தில் இருக்கிறார்கள் (வெளி 4:1-5). ஏழாவது எக்காளத்தின் போது சாத்தானுடைய கோபத்திலிருந்து தேவன் இவர்களைப் பரலோகத்திற்கு எடுத்துக் கொண்டு பாதுகாக்கிறார் (வெளி 12:4-5). மேலும் தேவன் சாத்தானைப் பரலோகத்திலிருந்து பூமிக்குத் தள்ளிவிடுகிறார் (வெளி 12:7-12). முதல் ஆறு எக்காளங்களிலும் இவர்கள் பாதுகாக்கப் பட்டதினால் சாத்தான் இவர்களைப் பட்சித்துப்போட மிகுந்த கோபத்துடன் இருக்கிறான். ஏழாவது எக்காளத்தின் போது அவர்களைப் பட்சித்துப் போடுவதற்குச் சாத்தான் வகை தேடுகிறான். ஆனால் தேவனோ அவர்களைப் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்கிறார் (வெளி 12:4-5). இதன் பின்பு, வலுசர்ப்பம் ஸ்திரீயைத் துன்பப்படுத்த விரும்புகிறான் (வெளி 12:13-16). ஆனால் அவளையும் அழிக்க முடியவில்லை. இதனால் வலுசர்ப்பமானது ஸ்திரீயின்மீது கோபம் கொண்டு, அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம் பண்ணப் போயிற்று.

12 அதிகாரம்

(வெளி 12:17). இரண்டு சாட்சிகளினால் இவர்கள் வலுசர்ப்பத்திடமிருந்து பாதுகாக்கப் படுகிறார்கள். (வெளி 11:3-12) பத்து ராஜ்ஜியங்களில் வடக்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் அந்திக் கிறிஸ்துவிற்கு எதிராக யுத்தம் ஆரம்பமாயிற்று. (தானி 11:44)

2 ஸ்திரீ, ஆண்பிள்ளை, ஸ்திரீயின் சந்ததியான மற்றவர்கள் ஆகியோர்கள் மட்டுமே வெளிப்படுத்தின விசேஷத்தில கூறப்பட்டிருக்கும் யூதமார்க்கத்தார்கள் ஆவார்கள் (வெளி 12:1-2, 5, 17) இந்த மூன்று குழுவினருடன் 144,000 பேரும் ஒரு குழுவாக இருக்க வேண்டும் ஏனென்றல இவர்கள இஸ்ரவேல புத்திரருடைய சகல கோத்திரங்களிலிருந்தும் முத்திரை போடப்பட்டவர்கள (வெளி 7:1-8) இந்த மூன்று குழுவினரோடு நான்காவது குழு என்று வெளிப்படுத்தின விசேஷத்தில எங்கும கூறப்படவில்லை ஆகையினால ஆண்பிள்ளையும், 144,000 யூதர்களும் ஒன்றே என்று வேதபண்டிதர்கள வியாக்கியானம் கூறுகிறார்கள (வெளி 14:1-5)

13 வெளி 12 ஆவது அதிகாரத்தில ஆண்பிள்ளையைப் பற்றிக்கூறப் பட்டிருக்கும் விளக்கங்கள அனைத்தும் 144,000 யூதர்களுக்கே பொருந்தும் ஆண்பிள்ளையும் 144,000 யூதர்களும் ஒரே குழுவைச் சேர்ந்தவர்கள (வெளி 7:1-9) இவர்கள இருவருமே தேவனிடத்திற்கும், அவருடைய சிங்காசனத்திற்கும் எடுத்துக் கொள்ளப் பட்டவர்கள (வெளி 12:5 வெளி 14:1-5) இவர்கள இருவரும் வலுசர்ப்பத்தின் கோபத்திலிருந்து மீட்கப்பட்டவர்கள (வெளி 12:4-5 வெளி 7:1-8 வெளி 9:4 வெளி 14:1-5) இவர்கள இருவருமே பரலோகத்தில ஒரேவேளையில இருக்கிறவர்கள (வெளி 12:5 வெளி 14:1-5)

14. ஏசாயா ஆண்பிள்ளையைப் பற்றி தீர்க்கதரிசனம் கூறியிருக்கிறார் "பிரசவ வேதனைப்படுமுன் பெற்றாள் கர்ப்பவேதனை வருமுன் ஆண் பிள்ளையைப் பெற்றாள்" (ஏசா 66:7-8) மகா உபத்திரவக்காலத்திற்கு முன்பாகவே ஆண்பிள்ளை இரட்சிக்கப்படும். (சக 12:10-13:1 ரோமர் 11:25-29) மகா உபத்திரவக்காலத்திற்கு முன்பாக 144,000 யூதர்களே இரட்சிக்கப்பட்டவர்கள் இவர்களே அந்த ஆண்பிள்ளை (வெளி 7:1-8 வெளி 14:1-5)

15 ஆபத்துக்காலத்தில ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள் என்று தானியேல தீர்க்கதரிசனம் கூறியிருக்கிறார் "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக் காலம் வரும் அக்காலத்திலே புஸ்தகத்தில எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப் படுவார்கள" (தானி 12:1) இஸ்ரவேலுக்கு மகா உபத்திரவக்காலம் வருவதற்கு முன்பாகவே இவர்கள எடுத்துக் கொள்ளப்படுவார்கள (மத் 24:15-22 வெளி 6:1-3 வெளி 12:5-6, 13-17 வெளி 13:1-8 எரே 30:5-9) மகா உபத்திரவ காலத்திலிருந்து புஸ்தகத்தில எழுதியிருக்கிறவர்களாகக் காணப் படுகிறவர்கள் எடுத்துக் கொள்ளப் படுவார்கள (தானி 12:1 வெளி 7:1-8 வெளி 14:1-5 ஆகிய வசனங்களில புஸ்தகத்தில பேரெழுதப் பட்டிருக்கிறவர்களுடைய எண்ணிக்கை கூறப்பட்டிருக்கிறது) இவர்கள பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப் படுவதின மூலமாக மீட்கப்படுகிறார்கள (வெளி 12:5, வெளி 14:1-5) பக்தியுள்ள இந்த யூதர்கள பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்போது ஸ்திரீயும், அவளுடைய சந்ததியான மற்றவர்களும் இரட்சிக்கப் பட்டிருந்தால அவர்களும் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப் பட்டிருப்பார்கள ஆனால ஸ்திரீயும், தேசமும் இன்னும் மூன்றரை வருஷங்களாக இரட்சிக்கப் படவில்லை.

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

12 அதிகாரம்

(ஏசா 66:7-8; ரோமர் 11:25-29) ஆண்பிள்ளை பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு, ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்குப் பறந்துபோனபின்பு, ஸ்திரீயின் சந்ததியான மற்றவர்கள் தேவனிடத்தில் மனந்திரும்பி வருகிறார்கள் (வெளி 12:17)

மேலே கூறப்பட்டிருக்கிற காரணங்களைக் கூறி ஆண்பிள்ளை என்பது 144,000 யூதர்களையே குறிக்கும் என்று வேதபண்டிதர்கள் வியாக்கியானம் கூறுகிறார்கள்

"சகல ஜாதிகளையும் இருப்புக்கோலால் ஆளுகைசெய்யும் ஆண்பிள்ளை" - இருப்புக்கோலால் சகல ஜாதிகளையும் ஆளுகை செய்தவர்கள் கிறிஸ்து (Christ) (சங் 2; வெளி 19:15), பழைய ஏற்பாட்டுக்கால பரிசுத்தவான்கள் (the Old Testament saints) (எரே 30:9, எசே 34:24, எசே 37:24-25; தானி 7:18,27 ஓசி 3:5 மத் 8:11 12) திருச்சபைக்காலத்துப் பரிசுத்தவான்கள் (the church saints) (மத் 19:28, ரோமர் 8:17; 1கொரி 4:8, 1கொரி 6:2; 2தீமோ 2:12; வெளி 1:5-6, வெளி 2:26-27 வெளி 5:10 வெளி 22:4-5), உபத்திரவக்காலத்துப் பரிசுத்தவான்கள் the (tribulation saints) (வெளி 20:4-6), "இந்தக்கனம் அவருடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும் உண்டாகும்" "This honour have all His saints" (சங் 149:6-9), இவர்களைப்போன்று ஆண்பிள்ளையும் சகல ஜாதிகளையும் இருப்புக்கோலால் ஆளுகை செய்யும்

"தேவனிடத்திற்கும் அவருடைய சிங்காசனத்தினிடத்திற்கும் எடுத்துக் கொள்ளப்பட்டது" - ஆண்பிள்ளை அல்லது 144,000 யூதர்கள் எடுத்துக் கொள்ளப் படுவார்கள் (வெளி 12:5; வெளி 14:1-5) கிறிஸ்துவிற்குள் மரித்தவர்களும் உயிரோடிருப்பவர்களும் சபை எடுத்துக் கொள்ளப்படும்போது எடுத்துக் கொள்ளப் படுவார்கள் (வெளி 4:1; 1தெச 4:16) உபத்திரவக்காலத்துப் பரிசுத்தவான்களும் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள் (வெளி 6:9- வெளி 7:9-17 வெளி 15:2-4 வெளி 20:4-6) இரண்டு சாட்சிகளும் எடுத்துக் கொள்ளப்படுவார்கள் (வெளி 11:12)

(ஐ) ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள் - (வசனம் 14 ஏசா 16:1-5; 26:20-21; 63:1-6 சங் 60:6-12; எசே 20:33-44 தானி 11:40-45; ஓசி 2:14-23 மத் 24:15-22)

வெளி 12:6 ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள்; அங்கே ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும் அவளைப் போஷிப்பதற்காக தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட இடம் அவளுக்கு உண்டாயிருந்தது

"ஆயிரத்திருநூற்றறுபது நாள்" - ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு இத்தனை நாட்களுக்கு ஓடிப்போவாள் ஆண்பிள்ளை அல்லது 144,000 யூதர்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக பரலோகத்தில் இருப்பார்கள் (வெளி 11:1-3 வெளி 12:6,14 வெளி 13:5 தானி 7:25 தானி 12:7)

(ஒ) வானத்திலே யுத்தம் உண்டாயிற்று - (தானி 11:45-12:1, எரே 24:21-22; 25:7-8 27:1

வெளி 12:7 வானத்திலே யுத்தமுண்டாயிற்று; மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம்பண்ணினார்கள், வலுசர்ப்பமும் அதைச்சேர்ந்த தூதரும் யுத்தம் பண்ணியும் ஜெயங்கொள்ளவில்லை.

வெளி 12:8 வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப்படாமற் போயிற்று.

வெளி 12:9 உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது அதனோடே கூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப் பட்டார்கள்

12 அதிகாரம்

"வானத்திலே யுத்தமுண்டாயிற்று" - சாத்தான் ஆகாயத்துப் பிரபுவாக இருக்கிறான். வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனை சாத்தானோடு இருக்கிறது. வானத்தில உண்டாகும் யுத்தம் தேவனுக்கும் சாத்தானுக்கும் ஆகாயத்தில் நடைபெறும் கடைசி யுத்தமாகும். (எபே 2:2; எபே 6:12) இந்த யுத்தம் வரையிலும் சாத்தான் வானத்திலிருந்து தேவனுடைய பிள்ளைகளை உபத்திரவப்படுத்திக் கொண்டு இருப்பான். இந்த யுத்தத்திற்குப் பின்பு அவன் பூமிக்குத் தள்ளப்படுவான். மறுபடியும் அவனால் வானத்திற்கு ஏறிச் செல்ல முடியாது. (யோபு 1:6; யோபு 2:1; வெளி 12:7-12; சக 3:1)

வானத்திலே உண்டான யுத்தத்தைப் பற்றிய செய்திகள்

1. இந்த யுத்தம் வானத்தில் உண்மையாகவே நடைபெறும். (வெளி 12:7)

2. தானியேலின் எழுபதாவது வாரத்தின் மத்தியில் இந்த யுத்தம் நடைபெறும் (வெளி 12:6,14; வெளி 13:1-5)

3. வானமண்டலங்களில் இந்த யுத்தம் நடைபெறும். (வெளி 12:7; எபே 2:2; எபே 6:12)

4. இந்த யுத்தத்தில் மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் ஒரு பக்கத்திலும், வலுசர்ப்பமும் அதைச் சேர்ந்த தூதர்களும் மறுபக்கத்திலும் நின்று யுத்தம் பண்ணுவார்கள். (வெளி 12:7)

5. இந்த யுத்தத்தின் முடிவில் வலுசர்ப்பமும், அதனுடைய தூதரும் ஜெயங்கொள்ள மாட்டாது. வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப்படாமல் போகும். உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்படும். அது பூமியிலே விழத்தள்ளப்படும். அதனோடேகூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப் படுவார்கள் (வெளி 12:8-12)

"மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம்பண்ணினார்கள்" - (தானி 10:13, 21; தானி 12:1; யூதா 1:9) மனுஷரைப்போலவே தூதர்களும் யுத்தம் பண்ணக்கூடியவர்கள். மனுஷரைப்போலவே தூதர்களையும் பிடித்து சங்கிலிகளினால் கட்டி காவலில் அடைக்க முடியும். (தானி 10:13-21; 2பேதுரு 2:4; யூதா 1:6-7; வெளி 9:1,14; வெளி 20:1-10) வானத்தில இரண்டு விதமான தூதர்கள் யுத்தம் பண்ணுகிறார்கள். தோற்றுப்போன சாத்தானும் அதைச்சேர்ந்த தூதர்களும் பூமியிலே விழத்தள்ளப்படுவார்கள் (வெளி 12:7-12). விழுந்த தூதர்கள் எல்லோருமே நித்திய காலமாக நரகத்திற்கு அனுப்பப்படுவார்கள் (மத் 24:41; வெளி 20:10)

ஜெயங்கொள் (prevailed) - ἰσχύω - **ischyoo** - 2480

வினைச்சொல் - நன்றாகயிரு. வசப்படுத்து. மேற்கோள் **"prevail"** (வெளி 12:8; அப் 19:16,20), **"be able"** (லூக்கா 13:24, லூக்கா 14:29-30, யோவான் 21:6; அப் 6:10; அப் 15:10); **"be of strength"** (எபி 9:17); **"avail"** (கலா 5:6; கலா 6:15; யாக் 5:16).

"உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு" இதுவே சாத்தானுடைய பிரதான கிரியை (மத் 13:19, 2கொரி 4:4, 2கொரி 11:14-15; 2தெச 2:8-12)

(ஓ) மூன்றாவது ஐயோ - (8:13; 9:12; 11:14; 12:7-9)

வெளி 12:10 அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி: இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும்; உண்டாயிருக்கிறது. இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ்சுமத்தும் பொருட்டு அவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத் தள்ளப்பட்டுப்போனான்

12 அதிகாரம்

வெளி 12:11 மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்

வெளி 12:12 ஆகையால் பரலோகங்களே! அவைகளின் வாசமாயிருக்கிறவர்களே! களிகூருங்கள் பூமியிலும் சமுத்திரத்திலும் குடியிருக்கிறவர்களே! ஐயோ பிசாசானவன் தனக்குக் கொஞ்சக் காலமாத்திரம் உண்டென்று அறிந்து மிகுந்த கோபங்கொண்டு உங்களிடத்தில் இறங்கினபடியால் உங்களுக்கு ஆபத்துவரும் என்று சொல்லக்கேட்டேன்

வானத்திலே ஒரு பெரிய சத்தம் உண்டாகி அறிவித்த காரியங்கள்

இந்தச் சத்தம் நான்கு பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டது. அவர்களுடைய விவரம்

1. எல்லோருக்கும்
2. பரிசுத்தவான்களுக்கு
3. பரலோகத்தில் வாசமாயிருக்கிறவர்களுக்கு
4. பூமியில் வாசமாயிருக்கிறவர்களுக்கு

எல்லோருக்கும் அறிவிக்கப்பட்ட செய்தி

1. இரட்சிப்பு (Salvation)
2. வல்லமை (Strength)
3. தேவனுடைய ராஜ்யம் (The kingdom of God)
4. கிறிஸ்துவின் அதிகாரம் (The power of Christ)

தேவனும், கிறிஸ்துவும் தங்களுடைய வல்லமையையும் அதிகாரத்தையும் சாத்தான் மீதும் கலகம்பண்ணுவோர்மீதும் பிரயோகித்தார்கள் இது தேவனுடைய சித்தத்தின் பிரகாரம் நடைபெறுகிறது. இது வரையிலும் கிரியை செய்வதற்குத் தேவன் சாத்தானை அனுமதித்திருந்தார் இனி காலம் செல்லாது (வெளி 10:6-7). சாத்தானின் கிரியைகளுக்கு முடிவு காலம் வந்துவிட்டது

பரிசுத்தவான்களுக்கு அறிவிக்கப்பட்ட செய்தி

தேவனுடைய பிள்ளைகளைக் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத்தள்ளப்பட்டுப் போனான் பரலோகத்தின் வாசல்கள் அவனுக்கு அடைக்கப்பட்டுவிட்டது பரிசுத்தவான்களை உபத்திரவப்படுத்திய சாத்தான் பரலோகத்திலிருந்து தாழத்தள்ளப்பட்டுவிட்டான் ஆகையினால் தேவனுடைய பரிசுத்தவான்கள்மீது அவன் இனிமேல் குற்றம் சாட்டமாட்டான் (வெளி 12:10)

பரலோகத்தில் வாசமாயிருக்கிறவர்களுக்கு அறிவிக்கப்பட்ட செய்தி

களிகூருங்கள் சாத்தானால் இனிமேல் பரலோகத்திற்கு ஏறி வர முடியாது (வெளி 12:12)

பூமியில் வாசமாயிருக்கிறவர்களுக்கு அறிவிக்கப்பட்ட செய்தி

பூமியிலும் சமுத்திரத்திலும் குடியிருக்கிறவர்களே! ஐயோ பிசாசானவன் தனக்குக் கொஞ்சக்காலமாத்திரம் உண்டென்று அறிந்து, மிகுந்த கோபங்கொண்டு, உங்களிடத்தில் இறங்கினபடியால் உங்களுக்கு ஆபத்துவரும் பூமியில் மனுஷரை உபத்திரவப்படுத்துகிறதற்குச் சாத்தானுக்கு இன்னும் 1260 நாட்கள் அதாவது மூன்றரை வருஷங்கள் மட்டுமே உள்ளது. அதன்பின்பு அவன் நித்திய அக்கினியில் தள்ளப்படுவான் (வெளி 20:1-3)

வெளி 8:13 ஆவது வசனத்தில் தூதன் கூறிய மூன்று ஐயோக்களில் இது மூன்றாவது ஐயோ ஆகும் (வெளி 9:12 வெளி 11:14) மற்ற உபத்திரவங்களைவிட இந்த ஐயோ மிகவும் கொடியது

12 அதிகாரம்

ஐந்து மாதமளவும் ஜனங்களுக்கு வேதனை (வெளி 9:1-12) மனுஷரில் மூன்றிலொருபங்கு கொலைபடுதல் (வெளி 9:13-21) ஆகியவற்றைவிட மூன்றாவது ஐயோ கொடியது. ஆகையினால் (வெளி 12:12) ஆவது வசனத்தில் இதைப்பற்றி ஒரு விசேஷித்த அறிக்கை அறிவிக்கப்படுகிறது.

மூன்றாவது ஐயோவில் அடங்கியுள்ள காரியங்கள்

1 மகா உபத்திரவம் (Great tribulation) (மத் 24:15-22; தானி 12:1; வெளி 7:9-17; வெளி 11:15-19, 21)

2 இஸ்ரவேல் மீது யுத்தம் (வெளி 12:13-15; தானி 8:24; தானி 11:40-45; தானி 12:1; மத் 24:15-22)

3 ஸ்திரீயின் சந்ததியான மற்றவர்களுடனே (remnant) யுத்தம். (வெளி 12:17)

4 சாத்தானையும், அந்திக்கிறிஸ்துவையும் வணங்குவதற்கு கட்டாயம் பண்ணப்படுதல் (வெளி 13:4-18; வெளி 14:9-11; வெளி 15:2-4; வெளி 20:4-6)

5 கிறிஸ்தவ விசுவாசிகள்மீது யுத்தம். (வெளி 12:11; வெளி 7:9-17; வெளி 13:7-10; வெளி 14:13; வெளி 15:2-4; வெளி 20:4-6)

6 அற்புதங்கள் மூலமாக வஞ்சிக்கப்படுதல் (வெளி 13:13-17; வெளி 16:13-16; வெளி 19:20; 2தெச 2:8-12; மத் 24:24)

7 ஜனங்கள்மீது மிருகத்தின் முத்திரை போடுவது சட்டத்தின்படி கட்டாயமாக்கப்படுதல்; முத்திரை போடாதவர்களுக்கு மரணதண்டனை (வெளி 13:16-18; வெளி 14:9-11)

8 தேவனையும் கிறிஸ்துவையும் பரிசுத்த ஆவியானவரையும் மறுதலிக்குமாறு கட்டாயம் பண்ணப்படுதல் (வெளி 13:1-5; வெளி 14:9-11)

9 உலக யுத்தங்கள் (தானி 11:40-45)

10 எல்லா தேசங்களும் அர்மகெதோனில் ஒன்றுகூடி வந்து யுத்தம் பண்ணுதல் (வெளி 14:17-20; வெளி 16:13-16; வெளி 19:19-21; எசே 39:2; யோவே 3; சக 14)

(ஏ) ஸ்திரீயின் துன்பம் - (வசனம் 6)

வெளி 12:13 வலுசர்ப்பமானது தான் பூமியிலே தள்ளப்பட்டதை அறிந்து, அந்த ஆண்பிள்ளையைப்பெற்ற ஸ்திரீயைத் துன்பப்படுத்தினது.

வெளி 12:14 ஸ்திரீயானவள் அந்தப் பாம்பின் முகத்திற்கு விலகி, ஒரு காலமும் காலங்களும் அரைக்காலமுமாகப் போஷிக்கப்படத்தக்கதாய் வனாந்தரத்திலுள்ள தன் இடத்திற்குப் பறந்து போகும்படி, பெருங்கழுகின் இரண்டு சிறகுகள் அவளுக்குக் கொடுக்கப்பட்டது.

"அந்த ஆண்பிள்ளையைப்பெற்ற ஸ்திரீயைத் துன்பப்படுத்தினது" வலுசர்ப்பமானது தான் பூமியிலே தள்ளப்பட்டதை அறிந்து ஆண்பிள்ளையைத் துன்பப்படுத்த விரும்பிற்று. வலுசர்ப்பத்தினால் 144,000 யூதர்களை அல்லது ஆண்பிள்ளையைத் துன்பப்படுத்த முடியவில்லை. ஆகையினால் அந்தப் பிள்ளையை பெற்றெடுத்த ஸ்திரீயை அல்லது இஸ்ரவேல் தேசத்தைத் துன்பப்படுத்திற்று.

(பி) சாத்தானின் அழிவு (எரே 46:7, 8; 47:2-3; தானி 9:26-27; எண் 16:28-33)

வெளி 12:15 அப்பொழுது அந்த ஸ்திரீயை வெள்ளங்கொண்டு போகும்படிக்குப் பாம்பானது தன் வாயிலிருந்து ஒரு நதிபோன்ற வெள்ளத்தை அவளுக்குப் பின்னாக ஊற்றிவிட்டது.

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

12 அதிகாரம்

வெளி 12:16 பூமியானது ஸ்திரீக்கு உதவியாகத் தன் வாயைத் திறந்து வலுசர்ப்பம் தன் வாயிலிருந்து ஊற்றின வெள்ளத்தை விழுங்கினது.

"பாம்பானது தன் வாயிலிருந்து ஒரு நதிபோன்ற வெள்ளத்தை அவளுக்குப் பின்னாக ஊற்றிவிட்டது" - அந்திக்கிறிஸ்துவின் சேனைகள் தோற்றுப்போன இஸ்ரவேல் தேசத்தைத் துரத்திக்கொண்டு ஓடுவார்கள் என்று தெரியவருகிறது. (தானி 9:26-27; தானி 11:21-26; எரே 46:7-8)

"வலுசர்ப்பம் தன் வாயிலிருந்து ஊற்றின வெள்ளத்தைப் பூமியானது விழுங்கினது" - பூமி தன் வாயைத் திறந்து வெள்ளத்தை விழுங்கினது. பழைய ஏற்பாட்டுக்காலத்தில் கோராகுவையும் அவனுக்குரிய எல்லா மனிதரையும் பூமி விழுங்கிப்போட்டதுபோன்று இந்த நிகழ்ச்சி நடைபெறும். (எண் 16:29-35)

(க) வலுசர்ப்பம் ஸ்திரீயின் சந்ததியுடன் யுத்தம் பண்ணப்போயிற்று - (ஏசா 1:9)

வெளி 12:17 அப்பொழுது வலுசர்ப்பமானது ஸ்திரீயின்மேல் கோபங் கொண்டு, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசுகிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம்பண்ணப்போயிற்று.

"அவளுடைய சந்ததியான மற்றவர்கள்" (remnant of her seed) - இஸ்ரவேல் ஜனத்தாரில் யூதேயாவிலிருந்து ஓடிப்போகாத மீதமுள்ளவர்கள். சபைக்கோ அல்லது புறஜாதியாருக்கோ மற்றவர்கள் மீதமுள்ளவர்கள் (remnant) என்னும் வாக்கியம் பயன்படுத்தப்படவில்லை. (ஏசா 1:9)

"தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்கள்" - 144,000 யூதர்கள் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு இவர்கள் தேவனிடத்திற்குத் திரும்பி இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பார்கள். இஸ்ரவேல்மீது நடைபெறும் இந்த யுத்தத்திற்கு முன்பாக இவர்கள் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள். அக்காலத்தில் இஸ்ரவேலில் மீதியானவர்கள் இரட்சிக்கப்படவில்லை. (வெளி 12:5; வெளி 14:1-5)

"இயேசுகிறிஸ்துவைக்குறித்துச் சாட்சி" (testimony of Jesus Christ) - தீர்க்கதரிசனத்தின் ஆவி (the spirit of prophecy) என்று பொருள். தேவனிடத்திற்குத் திரும்பி இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்வார்கள் (வெளி 19:10). இந்தப் பூமியிலிருந்து பரிசுத்த ஆவியானவர் ஒருபோதும் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. (யோவான் 14:16; அப் 2:16-21; சக 12:10-13:1)

13 அதிகாரம்

(ஊ) சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பி வந்தது - (17:8-17 தானி 7:23-24)

வெளி 13:1 பின்பு நான் கடற்கரை மணலின்மேல் நின்றேன் அப்பொழுது சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பிவரக் கண்டேன் அதற்கு ஏழு தலைகளும் பத்துக்கொம்புகளும் இருந்தன அதின் கொம்புகளின்மேல் பத்து முடிகளும், அதின் தலைகளின் மேல் தூஷணமான நாமமும் இருந்தன

"நான்" - யோவானாகிய நான் இவைகளைக் கண்டேன் (வெளி 22:8) வெளிப்படுத்தின விசேஷத்தில் "நான்" என்னும் பிரதிப்பெயர்ச் சொல் 165 தடவைகள் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. மேலும் இந்தப் புஸ்தகத்தில் பிரதிப்பெயர்ச்சொற்கள் (pronouns) மட்டும் 2074 தடவைகள் பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

"சமுத்திரம்" - மத்தியதரைக்கடல் அந்திக்கிறிஸ்துவின் கீழுள்ள ராஜ்ஜியங்கள் இந்தக் கடலைச்சுற்றி மூன்று பக்கங்களிலும் உள்ளன சமுத்திரம் என்பது ஜனங்களைக் குறிக்கும் குறியீட்டு வார்த்தையாகும் (வெளி 13:8, வெளி 17:1,15; தானி 7:2-3,17)

வெளி 13 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் முதலாவது மிருகம்

1 அவன் ஒரு மனுஷனாக இருப்பான (வெளி 13:18)

2 மனுஷ சமுத்திரத்திலிருந்து மிருகம் எழும்பி வரும் (வெளி 13:1 தானி 7:24 தானி 9:27 தானி 11:36-45)

3 ஏழு தலைகளுக்கு அடையாளமாக இருக்கும் ஏழு ராஜ்ஜியங்களை அவன் ஆளுகை செய்வான (வெளி 13:1 வெளி 17:8-17)

4 ரோமப்பேரரசிற்குள் வருங்காலத்தில் உருவாகும் பத்து ராஜ்ஜியங்களை அவன் ஆளுகை செய்வான் (வெளி 13:1, வெளி 17:8-17 தானி 7:23-24)

5 தூஷணங்களைப் பேசுவான் (வெளி 13:1,5; வெளி 17:3)

6 பழைய கிரேக்கு தேசத்தைப் புதுப்பிப்பான் அந்த மிருகம் சிறுத்தையைப் போலிருக்கும் தானியேலின் புஸ்தகத்தில் சிறுத்தை கிரேக்கு தேசத்திற்கு அடையாளமாகும் (தானி 7:6 தானி 8:20-23, வெளி 17:8-17)

7 அவன் மேதிய-பெர்சிய தேசத்தைப் போலவும் (கரடி) (வெளி 13:3 தானி 7:5) பாபிலோன் தேசத்தைப் போலவும் (சிங்கம்) (வெளி 13:3 தானி 7:4) இருப்பான்

8 சாத்தானிடமிருந்து தன் பலத்தையும் தன் சிங்காசனத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் பெறுவான் (வெளி 13:2; வெளி 16:13-16 2தெச 2:8-12; தானி 8:24-25 தானி 11:38-39)

9 இவனுடைய தலைகளில் ஒன்று சாவுக்கேதுவாய் காயப்படும் பின்பு அந்தக் காயம் சொஸ்தமாக்கப்படும் (வெளி 13:3)

10 பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே அந்த மிருகத்தைப் பின்பற்றுவார்கள் (வெளி 13:2 4,8 8)

11 ஜனங்கள் மிருகத்தை வணங்குவார்கள் (வெளி 13:4,4 8 வெளி 14:9-11, வெளி 15:2 வெளி 16:2; வெளி 20:4-6

12 பெருமையான வைகளையும் தூஷணங்களையும் பேசும்வாய் இந்த மிருகத்திற்குக் கொடுக்கப்படும். (வெளி 13:5-6; தானி 7:8,11,20,25, தானி 8:23; தானி 11:36

13 42 மாதங்களுக்கு அந்த மிருகத்திற்கு அதிகாரமும், வல்லமையும், வெற்றியும் கொடுக்கப்படும். (வெளி 13:4,5, வெளி 11:1-3, வெளி 12:6,14, தானி 7:25; தானி 12:7)

வெளிப்படுத்தின விசேஷம் – தொகுப்புரை

13 அதிகாரம்

14. அவன் தேவனைத் தூஷித்து தன்னையே தேவன் என்பான் (வெளி 13:6; 2தெச 2:3-4 தானி 7:25; தானி 8:25 தானி 11:36-39)

15. யூதர்கள் மீதும், கிறிஸ்தவ விசுவாசிகள் மீதும் யுத்தம் பண்ணுவான் திரளான ஜனங்களைக் கொன்று போடுவான் (வெளி 13:7,15, வெளி 7:9-17; வெளி 14:13, வெளி 15:2-4, வெளி 20:4-6, தானி 7:21, தானி 8:23-25)

16. பழைய ரோமப்பேரரசிலுள்ள பத்து ராஜ்ஜியங்களின்மீதும் அதற்கு அதிகாரம் கொடுக்கப்படும். (வெளி 13:7 தானி 7:23-24 தானி 8:23-25; தானி 11:36-45)

17. ஜனங்கள் மிருகத்தைத் தேவனாக வணங்குவார்கள் (வெளி 13:8,14-18 வெளி 14:9-11; வெளி 20:4-6)

18. மிருகத்திற்கு கள்ளத் தீர்க்கதரிசியாகிய ஒரு மார்க்கத்தலைவன் இருப்பான (வெளி 13:11-17; வெளி 16:13-16, வெளி 19:20 வெளி 20:10)

19. தன்னுடைய சொரூபத்தை வணங்க வேண்டுமென்று சொல்லுவான (வெளி 13:14-17; வெளி 14:9 வெளி 15:2, வெளி 20:4-6)

20. தன்னுடைய முத்திரையை அல்லது தன்னுடைய நாமத்தை அல்லது தன் நாமத்தின் இலக்கத்தைத் தன்னைப் பின்பற்றுகிறவர்கள் தங்கள் வலது கைகளிலோ அல்லது நெற்றிகளிலோ முத்திரையாகப் பெற்றிருக்க வேண்டுமென்பான் (வெளி 13:16-18; வெளி 14:9-11; வெளி 15:2; வெளி 16:2, வெளி 20:4-6)

(ச) மிருகத்தின் இராஜ்ஜியம் - (17:8-11) தானி 7:8,23-24; 8:20-26; 11:40-45, சக 9:17, வெளி 17:8-17

வெளி 13:2 நான் கண்ட மிருகம் சிறுத்தையைப்போலிருந்தது. அதின் கால்கள் கரடியின் கால்களைப் போலவும், அதின் வாய் சிங்கத்தின் வாயைப் போலவும் இருந்தன. வலுசர்ப்பமானது தன் பலத்தையும் தன் சிங்காசனத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் அதற்குக் கொடுத்தது.

வெளி 13:3 அதின் தலைகளிலொன்று சாவுக்கேதுவாய்க் காயப்பட்டிருக்கக் கண்டேன்; ஆனாலும் சாவுக்கேதுவான அந்தக் காயம் சொஸ்தமாக்கப்பட்டது; பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே அந்த மிருகத்தைப் பின்பற்றி,

அந்திக்கிறிஸ்துவின் அதிகாரம்

1. தேவதூஷணம் சொல்வது (வெளி 13:5-6; தானி 7:8-25 தானி 11:36)

2. தேவனுடைய பரிசுத்தவான்களை ஜெயிப்பது (வெளி 13:7 வெளி 7:9-17; வெளி 20:4)

3. யூதர்களை ஜெயிப்பது (வெளி 12:13-17; தானி 7:21)

4. பல தேசங்களை ஜெயிப்பது (வெளி 13:7; தானி 7:8,23-24, தானி 11:40-45; எசே 38-39

5. இரகசிய பாபிலோனை அழிப்பது. (வெளி 17:12-17)

6. இரண்டு சாட்சிகளைக் கொல்வது (வெளி 11:7-12)

7. காலங்களையும், பிரமாணங்களையும் மாற்றுவது (தானி 7:25)

8. இரகசியங்களை அறிந்து கொள்வது. (தானி 8:23)

9. தன்னுடைய சித்தத்தின் பிரகாரம் சில காலத்திற்குச் செயல்படுவது. (தானி 11:36; 2தெச 2:3-4, வெளி 13

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

13 அதிகாரம்

10 அற்புதங்களைச் செய்வது. (வெளி 13:13-18; வெளி 19:20; தானி 8:24; 2தெச 2:8-12)

11 தன் உபாயத்தினால் வஞ்சகத்தைக் கைக்கூடி வரப்பண்ணுவான் (தானி 8:25)

12 பணத்தையும் வியாபாரத்தையும் கட்டுப்படுத்துவான் (தானி 11:38-43; வெளி 13:17; வெளி 18:1-24)

13 பூமியின் குடிகளை மோசம்போக்குவான் (வெளி 13:13-18; 2தெச 2:8-12; யோவான் 5:43; தானி 8:25)

14 மார்க்கங்களைக் கட்டுப்படுத்துவான் (வெளி 13:9-18; வெளி 14:9-11; வெளி 15:2; வெளி 16:2; வெளி 20:4-6; தானி 11:36)

15. தன்னுடைய ஆளுகையில் எல்லா ஜீவன்களையும் கட்டுப்படுத்துவான் (வெளி 13:15)

16 ராஜாக்களைக் கட்டுப்படுத்துவான் (வெளி 13:7; வெளி 17:12-17)

17 எல்லாத் தேசங்களையும் தனக்குப் பயப்பட வைப்பான் (வெளி 13:4)

18 42 மாதங்களுக்கு ஆளுகை செய்வான் (வெளி 13:4,5)

19 அர்மகெதோனில் நடைபெறும் யுத்தத்திற்குத் தேசங்களை வழிநடத்திச் செல்லுவான் (வெளி 16:13-16; வெளி 19:19-21; எசே 38-39)

20 கிறிஸ்துவோடு யுத்தம் பண்ணுவான் (வெளி 17:14; வெளி 19:11-21; தானி 8:25; சக 14:1-5)

(ஞ) மிருகத்தின் அதிகாரம் - தானி 8:21; 11:36-39; 2தெச 2:8-12

வெளி 13:4 அந்த மிருகத்திற்கு அப்படிப்பட்ட அதிகாரங் கொடுத்த வலுசர்ப்பத்தை வணங்கினார்கள் அல்லாமலும், மிருகத்திற்கு ஒப்பானவன் யார்? அதினோடே யுத்தம்பண்ணத் தக்கவன் யார்? என்று சொல்லி, மிருகத்தையும் வணங்கினார்கள்.

(ட) பெருமையானவைகளையும் தூஷணங்களையும் பேசும் மிருகத்தின் வாய் - அதன் காலம் - (தானி 7:8,11,20-25; 11:36-45; 12:7; வெளி 11:1-3; 12:6,14; 17:8-17)

வெளி 13:5 பெருமையானவைகளையும் தூஷணங்களையும் பேசும் வாய் அதற்குக் கொடுக்கப்பட்டது. அல்லாமலும், நாற்பத்திரண்டு மாதம் யுத்தம்பண்ண அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது.

வெளி 13:6 அது தேவனைத் தூஷிக்கும்படி தன் வாயைத் திறந்து, அவருடைய நாமத்தையும், அவருடைய வாசஸ்தலத்தையும், பரலோகத்தில் வாசமாயிருக்கிறவர்களையும் தூஷித்தது.

"பரலோகத்தில் வாசமாயிருக்கிறவர்கள்" - இப்பொழுது பரலோகத்தில் தேவனுடைய பரிசுத்தவான்கள் வாசமாயிருக்கிறார்கள் (வெளி 13:6; வெளி 5:13; வெளி 12:12; கொலோ 1:15-18; எபி 12:22-23)

(ண) பரிசுத்தவான்களோடே மிருகத்தின் யுத்தம் - (வசனம் 15-16; 15:2-4; 20:4; தானி 7:21; 8:24; 11:35-45; 12:1,7; மத் 24:15-22)

வெளி 13:7 மேலும், பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி அவர்களை ஜெயிக்கும்படிக்கு அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டதுமல்லாமல், ஒவ்வொரு கோத்திரத்தின்மேலும் பாஷைக்காரர்மேலும் ஜாதிகள்மேலும் அதற்கு அதிகாரங்கொடுக்கப்பட்டது.

வெளிப்படுத்தின விசேஷம் – தொகுப்புரை

13 அதிகாரம்

(க) மிருகத்தின் இராஜ்ஜியத்தின் விஸ்தாரம் – (வசனம் 1-5, 17:8-17; தானி 2:44-45; 7:8,23-24; 11:40-45; சக 14:1-21; மத் 25:31-46; வெளி 14:9-11; 16:13-16)

வெளி 13:8 உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரும் அதை வணங்குவார்கள்

வெளி 13:9 காதுள்ளவனெவனோ அவன் கேட்கக் கடவன்

வெளி 13:10 சிறைப்படுத்திக்கொண்டு போகிறவன் சிறைப்பட்டுப்போவான்; பட்டயத்தினாலே கொல்லுகிறவன் பட்டயத்தினாலே கொல்லப்பட வேண்டும் பரிசுத்தவான்களுடைய பொறுமையும் விசுவாசமும் இதிலே விளங்கும்

"ஆட்டுக்குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள்" உலகத்தோற்றமுதல் ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிருக்கும் என்று இந்த வசனம் கூறவில்லை. இக்காலத்திற்காக ஆட்டுக்குட்டியானவர் அடிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தார் என்று இவ்வசனம் கூறுகிறது. (வெளி 17:8)

தோற்றம் (foundation) - καταβολή katabolee 2602

பெண்பால் பெயர்ச்சொல். தோற்றம் உண்டாதல். அஸ்திபாரம் (overthrown, disruption of the pre Adamite world) (மத் 13:35)

"சிறைப்படுத்திக் கொண்டு போகிறவன் சிறைப்பட்டுப்போவான்" ஒருசில மூலபாஷைப் பதிப்புகளில் இந்த வசனம் இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது. "சிறையிருப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கிறவன் சிறைப்பட்டுப் போவான். பட்டயத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கிறவன் பட்டயத்தினாலே கொல்லப்படுவான்" "He that is destined to captivity will go into captivity; he that is destined to the sword will be killed by the sword".

(ங) வேறொரு மிருகம் பூமியிலிருந்து எழும்பியது - (16:13-16; 19:20; 20:10)

வெளி 13:11 பின்பு, வேறொரு மிருகம் பூமியிலிருந்து எழும்பக் கண்டேன். அது ஒரு ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக இரண்டு கொம்புகளையுடையதாயிருந்து வலுசர்ப்பத்தைப்போலப் பேசினது.

வெளி 13:12 அது முந்தின மிருகத்தின் அதிகாரம் முழுவதையும் அதின் முன்பாக நடப்பித்து, சாவுக்கேதுவான காயம் ஆறச் சொஸ்தமடைந்த முந்தின மிருகத்தைப் பூமியும் அதின் குடிகளும் வணங்கும்படி செய்தது.

வெளி 13:13 அன்றியும் அது மனுஷருக்கு முன்பாக வானத்திலிருந்து பூமியின்மேல் அக்கினியை இறங்கப் பண்ணத்தக்கதாகப் பெரிய அற்புதங்களை நடப்பித்து

வெளி 13 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் இரண்டாவது மிருகம்

1 இவனும் மனுஷனாக இருப்பான். முதலாவது மிருகம் ஒரு மனுஷனாக இருக்கிறான் (வெளி 13:18). ஆகையினால் இரண்டாவது மிருகமும் மனுஷனாக இருப்பான் (வெளி 13:11, வெளி 16:13; வெளி 19:20, வெளி 20:10). இவர்களுக்கு மனுஷருக்குரிய பிரதிப்பெயர்ச் சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

13 அதிகாரம்

2 இவன் பூமியிலிருந்து எழும்பி வருவான் (வெளி 13:11) முதலாவது மிருகம் சமுத்திரத்திலிருந்து எழும்பி வரும். (தானி 7:3; தானி 7:17) பாதாளத்திலிருந்து விழுந்துபோன ஆவிகள் எழும்பி வந்ததாகவோ அல்லது மரித்துப்போன மனுஷன் உயிர்த்தெழுந்ததாகவோ இந்த மிருகத்தைப் பற்றிக் கூறப்படவில்லை. இவ்விரண்டு மிருகங்களும் இயற்கையான மனுஷர்களே. இவர்கள் கடைசி நாட்களில் பிறப்பார்கள். முன்னறிவிக்கப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றி விட்டு, அர்மகெதோனில் நடைபெறும் யுத்தத்தில் இவ்விரண்டு மிருகங்களும் மரித்துப் போகும். (வெளி 19:20; தானி 7:9; ஏசா 11:4; 2தெச 2:8)

3 இரண்டாவது மிருகம் முதலாவது மிருகத்திற்குப் பின்பு எழும்பிவரும். இந்த மிருகம் முதலாவது மிருகத்தின் தீர்க்கதரிசியாக இருக்கும். (வெளி 13:13; வெளி 19:20; வெளி 20:10)

4 இரண்டாவது மிருகம் ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக இரண்டு கொம்புகளையுடையதாக இருக்கும். வலுசர்ப்பத்தைப்போல பேசும். (வெளி 13:11)

5 முந்தின மிருகத்தின் அதிகாரம் முழுவதையும் இரண்டாவது மிருகம் நடப்பிக்கும். (வெளி 13:2,12; வெளி 19:20; 2தெச 2:8-12)

6 இரண்டாவது மிருகம் முதலாவது மிருகத்தை வணங்கும்படி ஜனங்களை வழிநடத்தும். (வெளி 13:12; வெளி 17:8 11)

7 மனுஷருக்கு முன்பாக வானத்திலிருந்து பூமியின்மேல் அக்கினியை இறங்கிவரப் பண்ணி பல அற்புதங்களைச் செய்யும். தேவனைப்போல நடந்து கொண்டு தேவனுடைய கிரியைகளை மாயையாக செய்யும். (வெளி 13:13; வெளி 19:20; எண் 11:1-3; எண் 26:10)

8 பழைய மிருகத்திற்கு முன்பாக அற்புதங்களைச் செய்து, பூமியின் குடிகளை மோசம்போக்கும் (வெளி 13:14; வெளி 19:20)

9 பழைய மிருகத்திற்கு ஒரு சொரூபம் பண்ணி அதை வணங்க வேண்டுமென்று பூமியின் குடிகளுக்குச் சொல்லும் (வெளி 13:14; வெளி 14:9-11; வெளி 15:2; வெளி 16:2; வெளி 20:4-6)

10 அந்த மிருகத்தின் சொரூபத்திற்கு ஆவியைக் கொடுத்து அதைப் பேசத்தக்கதாக ஆக்கும் (வெளி 13:15; யாத் 7:10-12)

11 அந்திக்கிறிஸ்துவை வணங்காத யாவரையும் கொலைசெய்யத்தக்கதாக மிருகத்திற்குச் சத்துவம் கொடுக்கப்படும் (வெளி 13:15; வெளி 7:9-17; வெளி 15:2; வெளி 20:4-6)

12 அந்திக் கிறிஸ்துவின் ராஜ்யத்திலுள்ள ஜனங்கள் முத்திரையையோ அல்லது அந்திக்கிறிஸ்துவின் நாமத்தையோ அல்லது அவனுடைய இலக்கத்தையோ வலது கைகளிலாவது நெற்றிகளிலாவது தரித்துக் கொள்ள வைக்கும். (வெளி 13:16; வெளி 14:9-11; வெளி 15:2; வெளி 16:2; வெளி 20:4-6)

13 அந்த மிருகத்தின் முத்திரையையாவது அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக் கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவுங் கூடாதபடிக்குச் செய்யும். (வெளி 13:17)

14 அசுத்த ஆவிகளை அனுப்புதல், பூலோகமெங்குமுள்ள ராஜாக்களை அர்மகெதோனில் நடைபெறும் யுத்தத்திற்கு அழைத்து வருதல் ஆகிய காரியங்களை இரண்டாம் மிருகம் முதலாவது மிருகத்திற்குச் சமமாகச் செய்யும். (வெளி 16:13-16; வெளி 19:19-21)

13 அதிகாரம்

15 இரண்டாம் மிருகம் அந்திக் கிறிஸ்துவோடு அர்மகெதோனில் பிடிக்கப்பட்டு, இருவரும் கந்தகம் எரிகிற அக்கினிக்கடலிலே உயிரோடே தள்ளப்படுவார்கள் (வெளி 19:20)

16 அக்கினிக்கடலிலே ஆயிரம் வருஷங்களுக்கு இரவும் பகலும் சதா காலங்களிலும் வாதிக்கப்படும். (வெளி 20:10)

வேறொரு (other) - ἄλλος - allos - 243

பொருள் - வேறு, வேறொரு, மறு சில, மற்றொரு, வேறே (another of the same kind)

(ப) மிருகத்தின் சொரூபம் - (14:9-11; 19:20; 20:4, தானி 9:27; மத் 24:15, 2தெச 2:4

வெளி 13:14 மிருகத்தின்முன்பாக அந்த அற்புதங்களைச் செய்யும்படி தனக்குக் கொடுக்கப்பட்ட சத்துவத்தினாலே பூமியின் குடிகளை மோசம்போக்கி, பட்டயத்தினாலே காயப்பட்டுப் பிழைத்த மிருகத்திற்கு ஒரு சொரூபம் பண்ண வேண்டுமென்று பூமியின் குடிகளுக்குச் சொல்லிற்று.

வெளி 13:15 மேலும் அம்மிருகத்தின் சொரூபம் பேசத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்தை வணங்காத யாவரையும் கொலை செய்யத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்திற்கு ஆவியைக் கொடுக்கும்படி அதற்குச் சத்துவங் கொடுக்கப்பட்டது.

(ம) மிருகத்தின் முத்திரை, அதின் நாமம், அதின் நாமத்தின் இலக்கம் - (14:9-11; 15:2-4; 20:4

வெளி 13:16 அது சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள், இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலதுகைகளிலாவது நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும்படிக்கும்,

வெளி 13:17 அந்த மிருகத்தின் முத்திரையையாவது அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக் கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவுங் கூடாதபடிக்கும் செய்தது.

அந்திக்கிறிஸ்துவின் ஆளுகை

1 வெளி 13 ஆவது அதிகாரத்தில் அந்திக் கிறிஸ்துவின் ஆளுகையைப் பற்றி நான்கு செய்திகள் கூறப்பட்டிருக்கிறது. இவன் முழு உலகத்தையும் ஆளுகை செய்வான். பூமியிலுள்ள எல்லா மனுஷரையும் தன்னுடைய முத்திரையைத் தரித்துக் கொள்ளுமாறு கட்டாயப்படுத்துவான். முத்திரை தரித்துக் கொள்ளாதோரைக் கொன்றுபோடுவான். இவ்வாறு அந்திக் கிறிஸ்துவின் ஆளுகைக்கு வியாக்கியானம் கூறுகிறார்கள். இதற்கு அவர்கள் கூறும் வேதவசன ஆதாரங்கள்

(1) ஒவ்வொரு கோத்திரத்தின் மேலும் பாஷைக்காரர்மேலும் ஜாதிகளின் மேலும் அந்திக்கிறிஸ்துவிற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது (வெளி 13:7

(2) பூமியின் குடிகள் யாவரும் அந்திக் கிறிஸ்துவை வணங்குவார்கள் (வெளி 13:8

(3) சிறியோர் பெரியோர் ஐசுவரியவான்கள் தரித்திரர், சுயாதீனர், அடிமைகள் இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலது கைகளிலாவது நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும்படிக்குச் செய்யும். (வெளி 13:16

13 அதிகாரம்

(4 அந்திக் கிறிஸ்துவின் முத்திரையையாவது அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக் கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவுங் கூடாதபடிக்குச் செய்யும் (வெளி 13:17)

மேலே கூறப்பட்டிருக்கும் வசனங்களை வாசிக்கும்பொழுது, அந்திக்கிறிஸ்தானவன் உலகத்தின் சர்வாதிகாரிபோல தோற்றமளிக்கிறான் தன்னுடைய முத்திரையை அல்லது தன்னுடைய நாமத்தை அல்லது தன்னுடைய இலக்கத்தைத் தரித்துக் கொள்ளாதவர்களைக் கொன்றுபோடுவான் ஆனால் அந்த அதிகாரத்தில் ஒவ்வொரு கோத்திரத்தின் மேலும், பாஷைக்காரர்மேலும் ஜாதிகள்மேலும், அந்திக்கிறிஸ்துவிற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. "யாவரும்" என்பது உலகிலுள்ள யாவரும் என்று பொருள்படாமல் ஒரு குறிப்பிட்ட ராஜ்ஜியத்திலுள்ள யாவரும் என்று பொருள்படும் அந்திக்கிறிஸ்துவின் ராஜ்ஜியத்திலுள்ள யாவரும் என்று இதற்குப் பொருள்கூறவேண்டும் (ஆதி 6:17 யோசு 6:21-25 2சாமு 6:5,15 1ராஜா 11:16-17; மத் 3:5-6; லூக்கா 2:1-3 ரோமர் 1:8 ரோமர் 10:18 கொலோ 1:23)

2 "சகல இடங்களிலுமுள்ள மனுபுத்திரரை... உமது கைகளில் ஒப்புக்கொடுத்து உம்மை அவைகளையெல்லாம் ஆளும்படி செய்தார்" (தானி 2:38) என்று நேபுகாத்நேச்சாரைப் பற்றியும் "பூமியையெல்லாம் ஆண்டு கொள்ளும்." (தானி 2:39) என்று கிரேக்கு தேசத்தைப் பற்றியும், "எல்லா ராஜ்ஜியங்களைப் பார்க்கிலும் வேறாயிருந்து பூமியை எல்லாம் பட்சித்து" (தானி 7:23,24) என்று ரோமராஜ்ஜியத்தைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. இவர்களில் யாரும் முழு உலகத்தையும் ஆளுகை செய்யவில்லை அதுபோலவே அந்திக்கிறிஸ்துவும் முழு உலகத்தையும் ஆளுகை செய்ய மாட்டான் என்றும் பத்து ராஜ்ஜியங்களை மட்டுமே அவன் ஆளுகை செய்வான் என்றும் வேதபண்டிதர்களில் சிலர் வியாக்கியானம் கூறுகிறார்கள்

3. பழைய ரோமப்பேரரசிற்குள் உருவாகும் பத்து ராஜ்ஜியங்களை மட்டுமே அந்திக்கிறிஸ்து ஆளுகை செய்வான் என்று வெளி 13 ஆவது அதிகாரம் கூறுகிறது (தானி 7:23-24) மிருகத்திற்குப் பத்து கொம்புகள் மட்டுமே இருந்தது ஆகையினால் இந்தப் பூமியில் அந்திக்கிறிஸ்துவின் ஆளுகையும் ஒரு குறிப்பிட்ட தேசங்களில் மட்டுமே இருக்கும் (வெளி 13:1 வெளி 17:12-17

4 வெளி 17:8-17 ஆகிய வசனங்கள் அந்திக்கிறிஸ்துவின் ராஜ்ஜியம் பத்து ராஜ்ஜியங்களில் மட்டும் இருக்கும் என்று வரையறுக்கிறது பத்து கொம்புகள் என்பது பத்து ராஜாக்களாகும் இவர்கள் இன்னும் தங்களுடைய ராஜ்ஜியங்களைப் பெற்றுக் கொள்ளவில்லை இந்த ராஜாக்கள் மிருகத்தோடு தங்களுடைய ராஜ்ஜியங்களைப் பெற்றுக் கொள்வார்கள் தங்களுடைய ராஜ்ஜியங்களை இந்த ராஜாக்கள் மிருகமாகிய அந்திக் கிறிஸ்துவிற்குக் கொடுப்பார்கள்

5 வருங்காலத்தில் அந்திக்கிறிஸ்து ஆளுகை செய்யும் பத்து ராஜ்ஜியங்களும் பூமியில் எங்குள்ளது என்பதை தானி 7:7,8, 23,24 ஆகிய வசனங்கள் விளக்கிக் கூறுகிறது இவை பழைய ரோமப்பேரரசிற்கு வெளியிலிராமல் உள்ளேயிருக்கும். இந்த பத்து ராஜ்ஜியங்களுக்கு வெளியேயிருக்கும் எந்த ராஜ்ஜியத்தையும் அந்திக்கிறிஸ்து ஆளுகை செய்யமாட்டான் இந்த ராஜ்ஜியத்திற்கு வெளியில் இருப்பவர்கள் அந்திக்கிறிஸ்துவின் முத்திரை அல்லது நாமம் அல்லது இலக்கம் தரிக்கும்படி கட்டாயப்படுத்தப் படமாட்டார்கள்

வெளிப்படுத்தின விசேஷம் – தொகுப்புரை

13 அதிகாரம்

6 அந்திக்கிறிஸ்து இஸ்ரவேலோடு செய்து கொண்ட ஏழு வருஷ உடன்படிக்கையை முறித்துப்போட்டு, பாலஸ்தீனத்தையும், மற்றும் பல தேசங்களையும் பிடித்துக் கொள்வான் (தானி 9:27; தானி 11:40-45) "ஆனாலும் ஏதோமும், மோவாபும் அம்மோன் புத்திரரில் பிரதானமானவர்களும் அவன் கைக்குத் தப்பிப்போவார்கள்" இது தற்காலத்து ஜோர்டானையும் (Jordan) அரேபியாவையும் (Arabia) குறிக்கும். இந்தத் தேசங்கள் அந்திக் கிறிஸ்துவினிடமிருந்து தப்பித்துக் கொள்ளும். ஆனாலும் பாலஸ்தீன தேசம் அந்திக்கிறிஸ்துவின் கைக்குத் தப்பிக்காது. அந்தச் சமுத்திரப்பகுதியைச் சுற்றிலுமுள்ள பல தேசங்கள் அந்திக்கிறிஸ்துவின் கைக்குத் தப்பிக்கும்

7 இஸ்ரவேல தேசம் அந்திக்கிறிஸ்துவின் கைக்குத் தப்பி ஏதோம், மோவாப் ஆகிய வனாந்தரங்களுக்கு ஓடிப்போகும். அங்கு மூன்றரை வருஷங்களுக்குத் தேவன் அவர்களைப் பாதுகாப்பார். ஒருவேளை இந்தக் காலத்தில் முழு உலகத்தாரும் மிருகத்தின் முத்திரையைத் தரித்துக் கொள்ளலாம்.

8 அந்திக் கிறிஸ்துவின் ஆளுகைக்குட்பட்ட பத்து ராஜ்யங்களின் வடக்கிலுள்ள தேசங்களும், கிழக்கிலுள்ள தேசங்களும் இவன் மீது யுத்தம் பண்ணுவார்கள் இந்தத் தேசங்கள் அந்திக் கிறிஸ்துவின் ஆளுகைக்குட்பட்டவை அல்ல (தானி 11:44-45)

9 வெளி 16:13-16 ஆகிய வசனங்களில் தவளைகளுக்கொப்பான மூன்று அசுத்த ஆவிகளைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. அடையாளங்கள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள் இந்த மூன்று ஆவிகளும் பூலோகமெங்கும் சென்று, இயேசு கிறிஸ்துவிற்கு எதிராக நடைபெறும் யுத்தத்தில் அந்திக் கிறிஸ்துவிற்கு ஆதரவாகப் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களைக் கூட்டிச்சேர்க்கும். இந்த ராஜாக்களும் அந்திக்கிறிஸ்துவின் ஆளுகைக்குட்பட்டவர்கள் அல்ல ஆகையினால்தான் இவர்களைக் கூட்டிச் சேர்க்க வேண்டியதாயிருக்கிறது

10 வெளி 13:4 ஆவது வசனம் "அதினோடே யுத்தம்பண்ணத்தக்கவன் யார்" என்று கூறுகிறது ஆகையினால் அந்திக்கிறிஸ்துவின் ஆளுகைக்குட்படாத தேசங்கள் இருந்தன என்பதை இது உறுதிப்பண்ணுகிறது

11 மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் வணங்கி, தன் நெற்றியிலாவது, தன் கையிலாவது அதின் முத்திரையைத் தரித்துக் கொள்ளுகிறவன் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான் (வெளி 14:9-11) தன்னுடைய முத்திரையைத் தரித்துக் கொள்ளாததற்காக உலகத்திலுள்ள யாவரையும் அந்திக்கிறிஸ்து கொன்று போட்டால், இந்த வசனத்தில் அக்கினியினாலும், கந்தகத்தினாலும் பூமியிலுள்ள அனைவருமே வாதிக்கப்படுவார்கள் ஆயிரம் வருஷ அரசாட்சியிலும், புதிய பூமியிலும் ஒருவர்கூட இருக்கமாட்டார்கள்

12 அந்திக்கிறிஸ்து தன்னுடைய பத்து ராஜ்யங்களில் உள்ளவர்கள் தன்னை வணங்க வேண்டும், தன்னுடைய முத்திரையைத் தரித்துக் கொள்ள வேண்டுமென்று கட்டாயம் பண்ணுவான் மூன்றரை வருஷங்களில் அவனால் உலகத்திலுள்ள எல்லா ஜனங்களையும் தன்னுடைய ஆளுகையின்கீழ் கொண்டு வர முடியாது. அனைவரையும் தன்னை வணங்க வைக்கவோ, தன்னுடைய முத்திரையைத் தரித்துக் கொள்ள வைக்கவோ அவனால் முடியாது.

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

13 அதிகாரம்

அந்திக்கிறிஸ்து ஒரு மனுஷன் மூன்றரை வருஷங்களில் ஒரு மனுஷனால் அதிக பட்சமாகச் செய்ய முடியும் காரியங்களை மட்டுமே அந்திக்கிறிஸ்துவால் செய்ய முடியும்.

இந்த மூன்றரை வருஷங்களில் ரோமப்பேரரசில் கூட அந்திக் கிறிஸ்துவால் தன்னுடைய ஆளுகையைப் பூரணமாக நிலை நிறுத்த முடியாது. ஏனெனில் பத்து ராஜ்யங்களும் தங்களுக்குள் யுத்தம் பண்ணும் வடக்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் பல ராஜ்யங்கள் அந்திக் கிறிஸ்துவின் ராஜ்யத்தின் மீது யுத்தம்பண்ண வருவார்கள் (தானி 11:44) இந்த யுத்தங்களில் அந்திக்கிறிஸ்து முழுமையாகக் கவனம் செலுத்தும்போது அவனால மாரககக்காரியங்களில் அதிகமாகக் கவனம் செலுத்த முடியாது.

அந்திக்கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்ததையும், இந்த உலகத்தைவிட்டுப் போனதையும் இவ்வுலகத்தின் பல பகுதிகளிலுள்ள ஜனங்கள் உணராமலேயே இருப்பார்கள் இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்ததை இன்னும் ஏராளமான ஜனங்கள் தெரிந்து கொள்ளவில்லை அதுபோலவே அந்திக்கிறிஸ்துவும் பலருக்குத் தெரியாமலேயே வருவான் அநேகருக்குத் தெரியாமலேயே இந்த உலகத்தை விட்டுப்போய்விடுவான்

ஆயிரம் வருஷ அரசாட்சியில் இயேசு கிறிஸ்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு எருசலேமில் ஆளுகை செய்வார் இயேசு கிறிஸ்துவின் பிரதிநிதிகள் இந்தப் பூமியிலுள்ள ஜனங்களைச் சந்தித்து, அவர்களை இயேசு கிறிஸ்துவின் ராஜ்யத்திற்கு அழைத்து வருவார்கள் (ஏசா 2:2-4 ஏசா 40:9, ஏசா 52:7 ஏசா 61:6, ஏசா 66:18-21, சக 8:23 சக 14:16-21) அந்திக்கிறிஸ்துவின் நாளிலும் அவனுடைய ஆளுகையைப் பற்றித் தெரியாதவர்கள் இவ்வுலகில் நிச்சயமாகவே இருப்பார்கள்

13 அந்திக்கிறிஸ்துவின் ஆளுகையில் இருந்தவர்களில் அநேகர் ஆயிரம் வருஷ அரசாட்சியில் பூமியில் உயிரோடு இருப்பார்கள் இவர்கள் மிருகத்தின் முத்திரையைத் தரித்துக் கொள்ளாதவர்கள் (சக 14:16-21) மிருகத்தின் முத்திரை தரித்தவர்களை இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகையின்போது நரகத்திற்கு அனுப்பிவிடுவார் ஆகையினால், ஆயிரம் வருஷ அரசாட்சிக்குள் வருகிற அனைவரும் மிருகத்தின் முத்திரையைத் தரித்துக் கொள்ளாதவர்களே எகிப்தியர்கள் அந்திக் கிறிஸ்துவிடமிருந்து தப்புவதில்லை. (தானி 11:40-45) ஆயினும் ஆயிரம் வருஷ அரசாட்சியில் எகிப்தியர்களும் வருகிறார்கள் (சக 14:16-21) இதுபோலவே அந்திக் கிறிஸ்துவின் காலத்தில் பூமியிலுள்ள எல்லா ஜனங்களிலும் இருக்கும் பலர் மிருகத்தின் முத்திரையைத் தரித்துக் கொள்ள மாட்டார்கள் ஆயினும் அந்திக் கிறிஸ்துவிடமிருந்து அவர்கள் தப்பித்துக் கொள்வார்கள் அந்திக்கிறிஸ்து திரளான ஜனங்களைக் கொன்றுபோடுவான் ஆயினும் அவனால் எல்லோரையும் கொல்ல முடியாது. (வெளி 7:9-11 வெளி 14:13; வெளி 15:2-4, வெளி 16:2; வெளி 20:4-6

14 மத் 25:31-46 ஆகிய வசனங்களில் பிதாவினால் ஆசீர்வதிக்கப் பட்டவர்களைப் பற்றி இயேசு கிறிஸ்து குறிப்பிடுகிறார் அவர்கள் ஆயிரம் வருஷ அரசாட்சியையும் நித்திய ராஜ்யத்தையும் சுதந்தரித்துக் கொள்வார்கள் இவர்கள் மிருகத்தின் முத்திரையைத் தரித்துக் கொள்ள மாட்டார்கள் வெளி 14:9-11 ஆகிய வசனத்தின் படி மிருகத்தின் முத்திரையைத் தரித்தவர்கள் நரகத்திற்கு அனுப்பப்படுவார்கள் இஸ்ரவேல தேசத்தை மற்ற தேசங்கள் எவ்வாறு நடத்துகிறார்கள் என்பதை வைத்தே தேவன் அந்த தேசங்களை நியாயந்தீர்க்கிறார்

15. வெளி 12:17 ஆகிய வசனத்தில் கூறப்பட்டிருக்கும் ஸ்திரீயின் சந்ததியான மற்றவர்கள் மிருகத்தின் முத்திரைக்கும், அந்திக்கிறிஸ்துவின் வழிபாட்டிற்கும் தப்பித்துக் கொண்டவர்கள்

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

13 அதிகாரம்

அந்திக்கிறிஸ்துவின் ஆன்று
[redacted]

1 மிருகத்தின் முத்திரை

2 மிருகத்தின் நாமம்

3 அதின் நாமத்தின் இலக்கம்

மிருகத்தின் முத்திரை (A mark) (வெளி 13:16-17; வெளி 14:9-11; வெளி 15:2 வெளி 16:2; வெளி 20:4-6

மிருகத்தின் முத்திரை என்பது வேறு. அந்த மிருகத்தின் நாமம் அல்லது நாமத்தின் இலக்கம் என்பது வேறு. இந்த மிருகத்தின் முத்திரை எப்படியிருக்குமென்று வேதாகமம் தெளிவாகக் கூறவில்லை. இந்த முத்திரை வலது கையிலோ அல்லது நெற்றியிலோ தரிக்கப்படும். (வெளி 13:16, வெளி 14:9)

மிருகத்தின் நாமம் (The name of the beast) (வெளி 13:17; வெளி 14:11)

மிருகத்தின் நாமம் என்ன என்பதையும் வேதாகமம் கூறவில்லை. அந்திக்கிறிஸ்துவிற்கு 35 பெயர்களுக்கும் அதிகமான பெயர்களை ஜனங்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். வரலாற்றிலுள்ள பலரை இந்த மிருகத்தோடு தொடர்புபடுத்துகிறார்கள். கிரேக்க மொழியில் அவர்களுடைய பெயர்களின் எண்ணிக்கை 666 ஆக இருப்பதே இதன் அடிப்படைக் காரணமாகும். இந்த அடிப்படையில் பார்த்தால் ஏராளமான பெயர்களை மிருகத்திற்குக் கூறமுடியும். இவையெல்லாம் மனுஷருடைய கற்பனையே. மிருகத்தின் உண்மையான பெயர் என்ன என்பதை வேதாகமம் கூறவில்லை.

மிருகத்ினுடைய நாமத்தின் இலக்கம் (The the number of his name) - 666 (வெளி 13:17-18; வெளி 15:2

இது ஒரு மனுஷனுடைய இலக்கம். மூன்று முத்திரைகளில் இந்த இலக்கமும் ஒன்று. (வெளி 13:18) எபிரெய மொழியிலும், கிரேக்க மொழியிலும் பல பெயர்கள் 666 இலக்க மதிப்புடையவை. ஒன்று இரண்டு என்று பல மொழிகளில் எண்களுக்குப் பெயர் இருப்பது போன்று கிரேக்க மொழியிலும் எபிரெய மொழியிலும் எண்களுக்குத் தனியாகப் பெயர்கள் இல்லை. இந்த மொழிகளின் எழுத்துக்களே எண்களாகப் பயன்படுத்தப்படும். ஆல்பா என்பது ஒன்று என்னும் இலக்கத்தைக் குறிக்கும். வருங்கால அந்திக்கிறிஸ்துவினுடைய நாமத்தின் இலக்கம் 666 ஆக இருக்கும். அந்திக்கிறிஸ்துவின் முத்திரை என்ன என்பதும் அவனுடைய நாமம் என்ன என்பதும் வெளிப்படுத்தப்படவில்லை. ஆனால் அவனுடைய நாமத்தின் இலக்கம் 666 என்பது மட்டும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. சபை எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்பாகவும் பழைய ரோமப்பேரரசில் பத்து ராஜ்ஜியங்கள் உருவாவதற்கு முன்பாகவும் அந்திக்கிறிஸ்து வரமாட்டான். (தானி 7:24, 2தெச 2:7) தானியேலின் எழுபதாவது வாரத்தின் ஆரம்பத்தில்தான் அந்திக்கிறிஸ்து வருகிறான். (தானி 9:27) உபத்திரவகாலத்தில் கடைசி மூன்றரை வருஷத்திற்கு முன்பாக இவனுடைய முத்திரையையோ நாமத்தையோ நாமத்தின் இலக்கத்தையோ எந்த மனுஷனும் பெற்றுக் கொள்ள முடியாது. (வெளி 11:3; வெளி 12:6,14; வெளி 13:5)

(ய) மிருகமும் மிருகத்தின் இலக்கமும்
(17:8-17; தானி 7:11,23-27, 9:9-74, 23-25 11:26-27 11:35-45, 2தெச 2:3-12)

வெளி 13:18 இதிலே ஞானம் விளங்கும். அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுடையவன் கணக்குப் பார்க்கக்கடவன். அது மனுஷனுடைய இலக்கமாயிருக்கிறது. அதினுடைய இலக்கம் அறுநூற்றறுபத்தாறு.

வெளிப்படுத்தின விசேஷம் – தொகுப்புரை

14 அதிகாரம்

1. ஆட்டுக்குட்டியானவரும் தங்கள் நெற்றிகளில் பிதாவின் நாமம் எழுதப்பட்டவர்களும் – (14:1-16:1 2:5

வெளி 14:1 பின்பு நான் பார்த்தபோது இதோ சீயோன் மலையின்மேல ஆட்டுக் குட்டியானவரையும் அவரோடே கூட அவருடைய பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில எழுதப்பட்டிருந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேரையும் நிற்கக் கண்டேன

வெளி 14:2 அல்லாமலும் பெருவெள்ள இரைச்சலபோலவும் பலத்த இடிமுழக்கம் போலவும் ஒரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன், நான கேட்ட சத்தம் சுரமண்டலக்காரா தங்கள் சுரமண்டலங்களை வாசிக்கிற ஓசையைப் போலிருந்தது.

வெளி 14:3 அவர்கள் சிங்காசனத்திற்கு முன்பாகவும் நான்கு ஜீவனகளுக்கு முனபாகவும் மூப்பாகளுக்கு முனபாகவும் புதுப்பாட்டைப் பாடினாாகள்; அந்தப் பாட்டு பூமியிலிருந்து மீட்டுக்கொள்ளப் பட்ட இலட்சத்து நாற்பத்துநாலாயிரம் பேரேயல்லாமல வேறொருவரும் கற்றுக்கொள்ளக் கூடாதிருந்தது.

வெளி 14:4 ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தாதவாகள் இவாகளே; கற்புள்ளவாகள் இவாகளே; ஆட்டுக் குட்டியானவா எங்கே போனாலும் அவரைப பினபற்றுகிறவாகள இவாகளே இவாகள் மனுஷரிலிருந்து தேவனுக்கும் ஆட்டுக் குட்டியானவருக்கும் முதற் பலனாக மீட்டுக்கொள்ளப்பட்டவாகள்

வெளி 14:5 இவர்களுடைய வாயிலே கபடம் காணப்படவில்லை; இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக மாசில்லாதவர் களாயிருக்கிறார்கள்

"பின்பு நான் பார்த்தபோது, இதோ, சீயோன் மலையின்மேல்..." – வெளி 14 ஆவது அதிகாரம் வெளிப்படுத்தின விசேஷத்தில காணப்படும் ஐந்தாவது இணைப்புப்பகுதியாகும.

வெளி 14 ஆவது அதிகாரத்தில் கூறப் பட்டிருக்கும் இணைப்புச் செய்தி

1. 144,000 பேர் (அல்லது ஆண்பிள்ளை பரலோகத்தில இருக்கிறார்கள் (வெளி 14:1-5)
2. முதலாவது தூதன - சகல ஜாதிகளுக்கும கோத்திரத்தாருக்கும் பாஷைக்காரருக்கும ஜனக் கூட்டத்தாருக்கும் நித்திய சுவிசேஷத்தை அறிவிக்கிறான (வெளி 14:6-7)
3. இரண்டாவது தூதன - பாபிலோன மகா நகரம் விழுந்தது என்று அறிவிக்கிறான (வெளி 14:8
4. மூன்றாவது தூதன மிருகத்தை வணஙகுகிறவாகள அக்கினியினாலும், கநதகத்தினாலும் வாதிக்கப படுவாகள என்று அறிவிக்கிறான (வெளி 14:9-11)
5. காத்தருக்குள மரிக்கிறவாகள் பாக்கியவான்கள (வெளி 14:13
6. அறுவடை - அர்மகெதோன (வெளி 14:14-20)
7. பழக்குலைகளை அறுப்பது அர்மகெதோன் (வெளி 14:17-20

பரலோக சீயோன் மலையைப் பற்றிய செய்திகள்

1. இது பரலோகத்திலுள்ள காட்சி (வெளி 14:1-5)

வெளிப்படுத்தின விசேஷம் – தொகுப்புரை

14 அதிகாரம்

2 ஆண்பிள்ளை அல்லது 144,000 பேர் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப் படுவார்கள் (வெளி 12:5)

3 பூலோகத்திலுள்ள சீயோன் மலை வெளிப்படுத்தின விசேஷத்தில கூறப்படவில்லை

4 வெளிப்படுத்தின விசேஷத்தில பூமியின் மீது ஆட்டுக்குட்டியானவர் இருப்பதைப் பற்றிக் கூறப்படவில்லை (வெளி 5:6)

5 உயிர்த்தெழுந்தவர்கள் அனைவரும் பரலோக சீயோனுக்குப் போவார்கள் (எபி 11:10,13-16; யோவான் 14:1-3; வெளி 21-22)

6 பரலோகத்தில ஒரு சீயோன் மலை உள்ளது என்பதை வேதவசனங்கள தெளிவுபடுத்துகிறது. (ரோமர் 11:26, எபி 12:22-23)

7 இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகையினபோது சீயோன மலையிலிருந்து பூமிககு வருவார (ரோமர 11:26)

"இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேர்" - வெளி 7:1-8 ஆகிய வசனங்களில முத்திரை தரிக்கப்பட்டவர்கள் இவர்களே எதிகால நியாயத்தீர்ப்புகளிலிருந்து இவாகள பாதுகாக்கப்படுவாாகள (வெளி 7:1-3; வெளி 9:4) ஆணபிள்ளையாகப பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவாாகள (வெளி 12:5) இவாகள் பரலோகத்தில தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாகவும், நானகு ஜீவனகளுக்கு முனபாகவும். மூப்பாகளுககு முன்பாகவும் புதுப்பாட்டைப் பாடுவாாகள இவாகள் முதற்பலனாக மீட்டுக் கொள்ளப்பட்டவாகள் (வெளி 14:1-5)

"பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்தது" - வெளி 7:1-3 ஆகிய வசனங்களில கூறப்பட்டிருக்கும் ஜீவனுள்ள தேவனுடைய முத்திரை இந்த முத்திரை இவர்களுடைய நெற்றிகளில் எழுதப்பட்டது (வெளி 3:12; வெளி 22:4)

"ஒரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன்" - இந்தச் சத்தம் பெருவெள்ள இரைச்சல போலவும், பலத்த இடிமுழக்கம் போலவும இருந்தது. இந்தச் சத்தம் 144,000 பேர் புதுப்பாட்டைப் பாடி சுரமண்டலங்களை வாசிக்கிற ஓசையாகும். ஆட்டுக்குட்டியானவருடைய கல்யாணத்தின் போது மீட்கப்பட்டவர்கள் சந்தோஷத்தோடு சொன்ன சத்தம்போன்று இருக்கும (வெளி 19:6)

"சுரமண்டலக்காரர் தங்கள் சுரமண்டலங்களை வாசிக்கிற ஓசை" - மீட்கப் பட்டவர்கள் அனைவருமே சுரமண்டலங்களை வாசித்துப் புதுப்பாட்டைப பாடுவார்கள (வெளி 14:2; வெளி 5:8; வெளி 15:2)

144,000 பேரும், அவர்களுடைய புதுப்பாட்டும்

இந்தப் பாட்டு அவாகளுக்குப புதியதாக இருக்கும் (வெளி 5:9; வெளி 15:3) 144,000 பேரேயல்லாமல், வேறொருவரும இந்தப் பாட்டைக் கற்றுக்கொள்ள கூடாதிருக்கும் வேதாகமத்தில பாடலகள் பாடுவோரின விசேஷித்த அனுபவங்களைப பிரதிபலிக்கும் (வெளி 5:9; வெளி 15:2-4) மோசே மிரியாம் இஸ்ரேல் (யாத் 15:1,20-21), தெபோராள், பாராக், (நியா 5), சங்கீதக்காரருடைய பாட்டுகள ஆகியவை அவாகளுடைய பலவேறு அனுபவங்களைப பிரதிபலிக்கின்றன இதுபோலவே வருங்கால உபத்திரவத்தில இஸ்ரவேலருடைய பாட்டுக்கள் (ஏசா 14:4-17), உபத்திரவக்காலத்து பரிசுத்தவான்கள் (வெளி 15:2-4); பரிசுத்தவானகள் (வெளி 5:8-10) ஆகியோருடைய பாட்டுக்கள் அவாகளுடைய அனுபவங்களைப் பிரதிபலிக்கின்றன இவையெல்லாமே மீட்பின் பாடலகளாக இருக்கும். பாபிலோனில மீட்கப்படாமல் சிறையிருப்பில் இருந்த இஸ்ரவேலாகள் தங்களுடைய கின்னரங்களை அலரிச்செடிகளின்மேல் தூக்கிவைத்தார்கள். (சங் 137; வெளி 18:22

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

14 அதிகாரம்

புதிய (new) - καινός - kainos - 2537

பொருள் - புது, புதிய, நவமான, புதிதான (renewed; fresh; newly introduced)

144,000 பேரின் விசேஷங்கள்

1 இவர்களுடைய எண்ணிக்கை விசேஷமானது. வெளி 7:4; வெளி 14:1

2 தானியேலின் எழுபதாவது வாரத்தின் முதல் மூன்றரை வருஷக்காலத்தில் மகா வேசியின் உபத்திரவத்தினால் இரத்தச் சாட்சியாக மரிக்காமல் பாதுகாக்கப் பட்டவர்கள் இவர்கள் மட்டுமே. (வெளி 6:9-11; வெளி 17:6)

[illegible] சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு, முதலாவதாக இரட்சிக்கப்பட்ட யூதர்கள் (வெளி 4:1; வெளி 7:3; வெளி 14:3-4)

4 தூதனால் முத்திரை தரிப்பிக்கப்பட்ட கூட்டத்தார் (வெளி 7:1-8)

5 பூமியில் இருந்தபோது, பிதாவின் நாமத்தை தங்கள் நெற்றிகளில் எழுதப் பட்டிருந்தவர்கள் இந்தக் கூட்டத்தார் மட்டுமே. (வெளி 7:1-3; வெளி 14:1)

6 எக்காள நியாயத்தீர்ப்புக்களிலிருந்து இவர்கள் மட்டுமே பாதுகாக்கப்பட்டார்கள். (வெளி 7:1-3; வெளி 9:4; வெளி 12:5)

7 உயிரோடிருந்து இரட்சிக்கப்பட்ட ஒரே சந்ததியான விசுவாசிகள் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப் பட்டவர்கள் (வெளி 7:1-8; வெளி 12:5; வெளி 14:1-5)

8 இரட்சிக்கப்பட்டவர்களில் இவர்கள் மட்டுமே இஸ்ரவேல் புத்திரர் (வெளி 7:1-8; வெளி 14:1-5)

9 தாங்கள் பாதுகாக்கப்பட்டபோது, மற்றவர்கள் அனுபவித்த நியாயத் தீர்ப்புக்களின் பயங்கரத்தைத் தங்கள் கண்களால் கண்டவர்கள் (வெளி 7:1-3; வெளி 9:4; வெளி 12:5; வெளி 14:1-5

10 மகா உபத்திரவத்திலிருந்து பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட யூதர்கள் தானியேலின் எழுபதாவது வாரத்தின் கடைசி மூன்றரை வருஷத்தில் மகா உபத்திரவக் காலம் வரும். (வெளி 7:1-3; வெளி 12:5; வெளி 14:1-5)

"பாட்டு" - இந்தப் பாட்டிலுள்ள வார்த்தைகள் இதன் கருத்துக்கள் எதுவும் வேதவாக்கியங்களில் அறிவிக்கப்படவில்லை. புதிய ஜனங்கள் புதிய கருத்தோடு பாடிய புதிய பாட்டு.

"பூமியிலிருந்து மீட்டுக் கொள்ளப்பட்டவர்கள்" - இவர்கள் பூமியிலிருந்து மீட்டுக் கொள்ளப்பட்டபடியினால் இனிமேல் பூமியில் இருக்கமாட்டார்கள்.

"ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள் இவர்களே, கற்புள்ளவர்கள் இவர்களே" இந்த வாக்கியத்தின் முன்பகுதியை ஒருசிலர் விளக்கிக்கூறி [illegible] பேரும் புருஷர்களே என்று கூறுகிறார்கள். ஒருசிலர் இந்த வாக்கியத்தின் பின்பகுதியை விளக்கிக்கூறி 144,000 பேரும் ஸ்திரீகளே என்று கூறுகிறார்கள். ஆனால் இந்த வாக்கியம் அவர்களுடைய பரிசுத்தத்தைக் காண்பிக்கிறது. இவர்கள் மீட்டுக் கொள்ளப்பட்ட புருஷர்களும் ஸ்திரீகளுமானவர்கள். வெளி 17 ஆம் அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் மகா வேசியின் கள்ளமார்க்கத்தினால் இவர்கள் தங்களைக் கறைப்படுத்திக் கொள்ளாதவர்கள் (2 கொரி 11:2

"ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள்" - இவர்கள் கிறிஸ்துவைப்போல உயிர்த்தெழுந்து மகிமையடைந்தவர்கள். ஆகையினால் அவர் செல்லும் இடங்களுக்கு இவர்களாலும் செல்ல முடியும். ஆனாலும் நித்திய காலம் முழுவதும் கிறிஸ்துவும், இவர்களும் பிரிக்க முடியாமல் இணைக்கப்பட்டிருக்கிறவர்கள் என்பது பொருளல்ல.

14 அதிகாரம்

"முதற்பலன்" (firstfruits) – சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு, முதலாவதாக இரட்சிக்கப் பட்ட யூதர்கள் சபை எடுத்துக் கொள்ளப் படும்போது அதில் இரட்சிக்கப்பட்ட யூதரும், புறஜாதியாரும் இருப்பார்கள் (வெளி 4)

"மாசில்லாதவர்கள்" – இவர்கள் வாயில் கபடம் காணப்படாது. தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக நித்திய காலமாக மாசில்லாதவர்களாக இருப்பார்கள் இவர்கள் ஆண்பிள்ளையாகப் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டவர்கள் (வெளி 12:5)

2. முதலாம் தூதனின் பிரசங்கம்

வெளி 14:6 பின்பு, வேறொரு தூதன் வானத்தின் மத்தியிலே பறக்கக் கண்டேன்; அவன் பூமியில் வாசம் பண்ணுகிற சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும் பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத் தாருக்கும் அறிவிக்கத்தக்கதாக நித்திய சுவிசேஷத்தை உடையவனாயிருந்து,

வெளி 14:7 மிகுந்த சத்தமிட்டு: தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப் படுத்துங்கள், அவர் நியாயத் தீர்ப்புக்கொடுக்கும் வேளைவந்தது; வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுது கொள்ளுங்கள் என்று கூறினான்.

வானத்தின் மத்தியிலே பறந்த தூதர்கள்

1 வானத்தின் மத்தியில் பறந்த முதலாவது தூதன் பூமிக்கு அருகாமையில் வருவான். மனுஷர்கள் இவனைக் காண்பார்கள். இதனுடைய சத்தத்தைக் கேட்பார்கள். தானியேலின் எழுபதாவது வாரத்தின் கடைசி மூன்றரை வருஷங்களில் இவன் பூமியிலுள்ள ஜனங்கள் எல்லோருக்கும் நித்திய சுவிசேஷத்தை அறிவிப்பான். தேவனுடைய நியாயத்தீர்ப்பின் வேளையை நம்மால் அறிவிக்க முடியாது. ஆனால் இந்தத் தூதன் அந்த வேளையை அறிவிப்பான் (வெளி 6-7)

2 வானத்தின் மத்தியிலே பறந்த இரண்டாவது தூதன் பாபிலோன் மகா நகரம் விழுந்தது என்று அறிவிப்பான். ஏழாவது கலசத்தின்போது பாபிலோன் மகா நகரம் அழிக்கப்படும். (வெளி 14:8; வெளி 16:17-21; வெளி 18:1-24

3 வானத்தில் பறந்த மூன்றாம் தூதன் அந்திக்கிறிஸ்துவின் இராஜ்ஜியத்தைக் குறித்து ஜனங்களை எச்சரிப்பான். மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்கி, தன் நெற்றியிலாவது தன் கையிலாவது அதின் முத்திரையைத் தரித்துக் கொள்ளுகிறவன் எவனோ அவன் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான் என்று ஜனங்களை எச்சரிப்பான் (வெளி 14:9-11)

3. இரண்டாம் தூதனின் பிரசங்கம் – (16:17-21; 18:1-24

வெளி 14:8 வேறொரு தூதன் பின்சென்று: பாபிலோன் மகா நகரம் விழுந்தது! விழுந்தது! தன் வேசித்தனமாகிய உக்கிரமான மதுவைச் சகல ஜாதிகளுக்கும் குடிக்கக் கொடுத்தாளே என்றான்.

4. மூன்றாம் தூதனின் பிரசங்கம் – (ஏசா 66:22-24; மத் 25:41,46; 19:20; 20:10-15; 21:8

வெளி 14:9 அவர்களுக்குப் பின்னே மூன்றாம் தூதன் வந்து, மிகுந்த சத்தமிட்டு: மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்கித் தன் நெற்றியிலாவது தன் கையிலாவது அதின் முத்திரையைத் தரித்துக் கொள்ளுகிறவனெவனோ

14 அதிகாரம்

வெளி 14:10 அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து, பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான்

வெளி 14:11 அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும். மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்குகிறவர்களுக்கும் அதினுடைய நாமத்தின் முத்திரையைத் தரித்துக் கொள்ளுகிற எவனுக்கும் இரவும் பகலும் இளைப்பாறுதலிராது.

"கோபாக்கினை (indignation) - தம்முடைய வார்த்தையைப் புறக்கணித்து விட்டு, மனந்திரும்ப மறுக்கும் ஜனங்கள்மீது தேவனுடைய கோபாக்கினை இருக்கும். அவர்கள்மீது நியாயத்தீர்ப்புகள் அனுப்பப்படும்போது அவர்கள் தேவவார்த்தையை ஏற்றுக்கொள்ளாமலும் மனந்திரும்பாமலும் இருக்கும்போதும் (வெளி 9:20-21; வெளி 16:9-11) வானத்தின் மத்தியில் தூதர்கள் எச்சரித்துக் கூறிய செய்தியை ஏற்றுக் கொள்ளாமல் இருக்கும்போது (வெளி 14:6-11) இரண்டு சாட்சிகளுடைய உபதேசங்களையும் அற்புதங்களையும் அவர்கள் புறக்கணிக்கும் போதும் அவர்கள்மீது தேவகோபாக்கினை வரும். (அப் 2:16-21; வெளி 11:3-12; வெளி 12:17; வெளி 19:10)

"அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான்" - துன்மார்க்கருடைய நித்திய ஆக்கினையைப் பற்றி கூறும் பல வசனங்களில் இதுவும் ஒன்று. (வெளி 14:10-11; வெளி 20:10-15; வெளி 21:8; வெளி 22:15; ஏசா 66:22-24; மத் 8:12; மத் 13:39-50; மத் 25:41,46; மாற்கு 9:43-49; லூக்கா 12:5; லூக்கா 16:19-31)

"பரிசுத்த தூதர்களுக்குமுன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்குமுன்பாகவும்" - புதிய பூமியில் இருக்கும் ஜனங்கள் வெளியே போய், தேவனுக்கு விரோதமாய் பாதகஞ்செய்த மனுஷருடைய பிரேதங்களைப் பார்ப்பார்கள். பிசாசோடும், அவனுடைய தூதரோடும் பாடுகளை அனுபவிக்கும் மனுஷரைக் காணுவார்கள். பாவத்தின் நிமித்தமாக தேவனுடைய கோபாக்கினையினால் உபத்திரவங்களை அனுபவிக்கும் ஜனங்களைப் பார்ப்பார்கள் (வெளி 14:10; ஏசா 13:19-22; ஏசா 34:8-15; ஏசா 66:22-24)

5. கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் - (13:5-10; 15:2-4; 20:4; 6:9-11)

வெளி 14:12 தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்களாகிய பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும் என்று கூறினான்

வெளி 14:13 பின்பு, பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்; அது: கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்றெழுது. அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போகும்; ஆவியானவரும் ஆம் என்று திருவுளம் பற்றுகிறார் என்று சொல்லிற்று.

"பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும்" - வரப்போகிற உபத்திரவகாலத்தில் இரத்தசாட்சியாக மரிக்கப்போகும் பரிசுத்தவான்களுக்கு இது ஆறுதலான வாக்கியமாகும். (வெளி 14:12-13; வெளி 6:9-11; வெளி 7:9-17; வெளி 15:2-4; வெளி 20:4-6)

பரிசுத்தவான்களின் சுபாவங்கள்

1. பாடுகளில் பொறுமை
2. கற்பனைகளைக் காத்துக்கொள்ளுதல்
3. இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தைக் காத்துக்கொள்ளுதல்

வெளிப்படுத்தின விசேஷம் – தொகுப்புரை

14 அதிகாரம்

"எழுது" - வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகத்தில் இந்த வார்த்தை 16 இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. யோவான் வெளிப்படுத்தின விசேஷத்தைப் பெற்றுக் கொண்ட போது அவற்றை எழுதுமாறு அவனுக்குக் கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறது. (வெளி 1:11,19 வெளி 2:1,8,12,18; வெளி 3:1,7,12,14. வெளி 10:4; வெளி 14:13; வெளி 19:9 வெளி 21:5 (வெளி 1:3; வெளி 22:18-19)

"இதுமுதல" - மிருகத்தின் முத்திரையைத் தரித்துக் கொள்ளாதவர்கள் இரத்தசாட்சியாக மரித்துப் போவார்கள். இதுமுதல என்பது இரத்தசாட்சியாக ஜனங்கள் சாக ஆரம்பிக்கும் காலமுதல என்று பொருள்படும். உபத்திரவக் காலத்தில இரத்தச்சாட்சியாக மரிப்போருக்கு உண்டாகும் விசேஷித்த ஆசீர்வாதம் இந்த வசனத்தில கூறப்பட்டிருக்கிறது. (வெளி 6:9-11 வெளி 7:9-17; வெளி 14:13 வெளி 15:2-4 வெளி 20:4-6)

"ஆவியானவர்...திருவுளம் பற்றுகிறார்" வெளிப்படுத்தின விசேஷத்தில ஆவியானவர 12 இடங்களில பேசியிருக்கிறார (வெளி 1:10 வெளி 2:7, 11, 17, 29 வெளி 3:6, 13, 22 வெளி 4:2 வெளி 17:3; வெளி 21:10, வெளி 22:17

கர்த்தருக்குள் மரிக்கிறவர்களுக்கு ஆசீர்வாதங்கள்

1. கிறிஸ்துவிற்காக இரத்தசாட்சியாக மரிக்கிறவர்கள் பாக்கியவான்களாக இருப்பார்கள்
2. தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்
3. அவர்களுடைய [redacted] அவர்களோடே கூடப்போம்.

8. **அறுவடைக்காலம்** - (யோவேல் 3:13; மத் 13:3,38-43,47-50; 24:29-31 2தெச 1:7-10; 2:8-12; ஏசா 11:4, 34:1-8; எரே 51:33; எசே 38-39 சக 14; வெளி 19:11-21; யூதா 14)

வெளி 14:14 பின்பு நான் பார்த்தபோது, இதோ, வெண்மையான மேகத்தையும், அந்த மேகத்தின்மேல் மனுஷகுமாரனுக்கொப்பானவராய்த் தமது சிரசின்மேல் பொற் கிரீடத்தையும் தமது கையிலே கருக்குள்ள அரிவாளையுமுடைய ஒருவர் உட்கார்ந்திருக்கிறதையும் கண்டேன்

வெளி 14:15 அப்பொழுது வேறொரு தூதன் தேவாலயத்திலிருந்து புறப்பட்டு, மேகத்தின்மேல உட்கார்ந்திருக்கிறவரை நோக்கி, பூமியின பயிர் முதிர்ந்தது அறுக்கிறதற்குக் காலம் வந்தது ஆகையால உம்முடைய அரிவாளை நீட்டி அறுத்தெடும் என்று மிகுந்த சத்தமிட்டுச சொன்னான

வெளி 14:16 அப்பொழுது மேகத்தின்மேல உட்கார்ந்தவர் தமது அரிவாளைப் பூமியின்மேல நீட்டினார், பூமியின விளைவு அறுப்புண்டது

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் பலவிதமான மேகங்கள்

1. வெள்ளை (White) (வெளி 14:14
2. கருத்த மேகம் (Black) (1இராஜா 18:45)
3. அந்தகாரம். (Dark) (யோபு 22:13
4. ஒளிபுள்ளமேகம் (Bright) (மத் 17:5
5. கார்மேகம் (Thick) (யாத் 19:9
6. பெரிய மேகம். (Great) (எசே 1:4
7. வேகமான மேகம். (Swift) (ஏசா 19:1

14 அதிகாரம்

"மனுஷகுமாரனுக்கொப்பானவராய்த் தமது சிரசின்மேல்பொற் கிரீடத்தையும் தமது கையிலே கருக்குள்ள அரிவாளையுமுடைய ஒருவர் - சங் 8:4 தானி 7:13-14 யோவான் 1:51

"தேவாலயம் (temple) - பரலோகத்திலுள்ள தேவாலயம் (வெளி 14:15,17; வெளி 3:12; வெளி 7:15 வெளி 11:19; வெளி 15:5-8; வெளி 16:1,17 ஏசா 6:1; வெளி 21:22-23)

"பூமியின் பயிர் முதிர்ந்தது அறுக்கிறதற்குக் காலம் வந்தது. ஆகையால் உம்முடைய அரிவாளை நீட்டி அறுத்துவிடும் - அர்மகெதோனில் நடைபெறும் யுத்தத்தை விளக்கும் வாக்கியம். (வெளி 14:15-16, யோவே 3:12-16, வெளி 19:21; மத் 13:30,39, ஏசா 11:4, எரே 51:33; ஓசி 6:11; 2தெச 2:8)

7. **திராட்சப் பழங்களின் அறுவடை** - (யோவேல் 3:13; ஏசா 63:1-6 வெளி 14:14. 19:15)

வெளி 14:17 பின்பு வேறொரு தூதனும் கருக்குள்ள அரிவாளைப் பிடித்துக் கொண்டு பரலோகத்திலுள்ள தேவாலயத் திலிருந்து புறப்பட்டுவந்தான்

வெளி 14:18 அக்கினியின்மேல் அதிகாரமுள்ளவேறொரு தூதனும் பலி பீடத்திலிருந்து புறப்பட்டுவந்து கருக்குள்ள அரிவாளைப் பிடித்திருக்கிறவனை நோக்கி: பூமியின் திராட்சப்பழங்கள் பழுத்திருக்கிறது, கருக்குள்ள உமது அரிவாளை நீட்டி அதின் குலைகளை அறுத்துவிடும் என்று மிகுந்த சத்தத்தோடே சொன்னான்

வெளி 14:19 அப்பொழுது அந்தத் தூதன் தன் அரிவாளைப் பூமியின்மேலே நீட்டி, பூமியின் திராட்சப்பழங்களை அறுத்து தேவனுடைய கோபாக்கினையென்னும் பெரிய ஆலையிலே போட்டான்

வெளி 14:20 நகரத்திற்குப் புறம்பேயுள்ள அந்த ஆலையிலே அது மிதிக்கப்பட்டது; அந்த ஆலையிலி ருந்து ஆயிரத்தறுநூறு ஸ்தாதி தூரத்திற்கு இரத்தம் புறப்பட்டுக் குதிரைகளின் கடிவாளங்கள்மட்டும் பெருகிவந்தது

"பலிபீடம்" - இந்தப் பலிபீடத்தை மாதிரியாக வைத்துத்தான் மோசே ஆசரிப்புக்கூடாரத்தின் பலிபீடத்தை உண்டுபண்ணினான் (வெளி 14:18 வெளி 6:9; வெளி 8:3-5; வெளி 9:13 வெளி 16:7; எபி 8:5 எபி 9:23

"அக்கினியின்மேல" பலிபீடத்தின்மீது காணப்படும் அக்கினி. வெளி 8:3-5 வெளி 9:13)

"பூமியின் திராட்சப்பழங்கள் பழுத்திருக்கிறது கருக்குள்ள உமது அரிவாளை நீட்டி அதின் குலைகளை அறுத்துவிடும்" - அர்மகெதோனில் நடைபெறும் யுத்தத்தைப் பற்றி இந்த அதிகாரத்தில் இரண்டாம் முறையாக இங்கு கூறப்பட்டிருக்கிறது (வெளி 14:18-20, வெளி 19:15; ஏசா 63:1-6, யோவே 3:12-16 இந்த யுத்தத்தில் கொலைபடுகிறவர்களுடைய இரத்தம் ஆயிரத்தறுநூறு ஸ்தாதி அதாவது சுமார் 184 மைல்கள் பாய்ந்து, குதிரைகளின் கடிவாளங்கள் மட்டும் பெருகிவரும். (வெளி 14:20) எசேக்கியேல் அர்மகெதோன் யுத்தத்தில் உண்டாகும் அழிவைப் பற்றி முன்னறிவித்திருக்கிறார் (எசே 38:21-23

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

15 அதிகாரம்

8. ஏழு வாதைகளையுடைய ஏழு தூதர்கள் - (வெளி 6:12)

வெளி 15:1 பின்பு வானத்திலே பெரிதும் ஆச்சரியமுமான வேறொரு அடையாள மாகிய கடைசியான ஏழு வாதைகளை யுடைய ஏழு தூதரைக் கண்டேன், அவைகளால் தேவனுடைய கோபம் முடிகிறது.

"வானத்திலே பெரிதும் ஆச்சரியமுமான வேறொரு அடையாளம்" - (யோவான் 2:11)

"கடைசியான ஏழு வாதைகளையுடைய ஏழு தூதர்" - வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகத்தில் "ஏழு" என்னும் வார்த்தை 54 தடவைகள் பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் "ஏழு" காரியங்கள்

1 சபைகள் **(Churches)** (வெளி 1:4,11,20)

2 ஆவிகள் **(Spirits)** (வெளி 1:4, வெளி 3:1 வெளி 4:5 வெளி 5:6)

3 பொன்குத்துவிளக்குகள் **(Golden candlesticks)** (வெளி 1:12,13,20; வெளி 2:1)

4 நட்சத்திரங்கள் **(Stars)** (வெளி 1:16,20 வெளி 2:1, வெளி 3:1)

5 அக்கினி தீபங்கள் **(Lamps)** (வெளி 4:5)

6 முத்திரைகள் **(Seals)** (வெளி 5:1,5)

7 கொம்புகள் **(Horns)** (வெளி 5:6)

8 கண்கள் **(Eyes)** (வெளி 5:6)

9 தூதர்கள் **(Angels)** (வெளி 8:2,6; வெளி 15:1,6-8; வெளி 16:1 வெளி 17:1; வெளி 21:9

10 எக்காளங்கள் **(Trumpets)** (வெளி 8:2,6)

11 இடிகள் **(Thunders)** (வெளி 10:3-4

12 ஆயிரம் பேர் **(Thousand men)** (வெளி 11:13)

13 தலைகள் **(Heads)** (வெளி 12:3 வெளி 13:1; வெளி 17:3-8

14 முடிகள் **(Crowns)** (வெளி 12:3)

15 வாதைகள் **(Last plagues)** (வெளி 15:1,6,8)

16 பொற்கலசங்கள் **(Golden vials)** (வெளி 15:7 வெளி 17:1 வெளி 21:9)

17 மலைகள் **(Mountains)** (வெளி 17:9

18 ராஜாக்கள் அல்லது ராஜ்ஜியங்கள் **(Kings or kingdoms)** (வெளி 17:10,11

முடிகிறது (filled up) - τελέω - teleoo 5055

வினைச்சொல் - முடிபோ, நிறைவேற்று **(to complete; bring to an end) "fill up"** (வெளி 15:1); **"make an end"** (மத் 11:1); **"expire"** (வெளி 20:7); **"go over"** (மத் 10:23), **"perform"** (லூக்கா 2:39); **"pay"** (மத் 17:24 ரோமர் 13:6); **"accomplish"** (லூக்கா 12:50; லூக்கா 18:31 லூக்கா 22:37; யோவான் 19:28), **"fulfill"** (அப் 13:29; ரோமர் 2:27, கலா 5:16; யாக் 2:8 வெளி 15:8 வெளி 17:17; வெளி 20:3); **"finish"** (மத் 13:53; மத் 19:1, மத் 26:1, யோவான் 19:30; 2தீமோ 4:7, வெளி 10:7; வெளி 11:7; வெளி 20:5

15 அதிகாரம்

9. கண்ணாடிக்கடல் - (4:6)

வெளி 15:2 அன்றியும், அக்கினி கலந்த கண்ணாடிக் கடல் போன்ற ஒரு கடலையும், மிருகத்திற்கும் அதின் சொருபத்திற்கும் அதின் முத்திரைக்கும் அதின் நாமத்தின் இலக்கத்திற்கும் உள்ளாகாமல் ஜெயங்கொண்டவர்கள் தேவ சுரமண்டலங்களைப் பிடித்துக் கொண்டு அந்தக் கண்ணாடிக் கடலருகே நிற்கிறதையும் கண்டேன்.

வெளி 15:3 அவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக் குட்டியானவருடைய பாட்டையும் பாடி: சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்.

வெளி 15:4 கர்த்தாவே, யார் உமக்குப் பயப்படாமலும், உமது நாமத்தை மகிமைப்படுத்தாமலும் இருக்கலாம்? தேவரீர் ஒருவரே பரிசுத்தர், எல்லா ஜாதிகளும் வந்து உமக்கு முன்பாகத் தொழுதுகொள்வார்கள்; உம்முடைய நீதியான செயல்கள் வெளியரங்கமாயின என்றார்கள்.

"அக்கினிகலந்த கண்ணாடிக் கடல்போன்ற ஒரு கடல்" - வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஆறாவது இணைப்பகுதி. உபத்திரவக்காலத்தில் இயேசு கிறிஸ்துவிற்காக இரத்தசாட்சியாக மரித்தவர்களுடைய முடிவை இந்த வாக்கியம் விளக்குகிறது. (வெளி 15:2-4)

கலந்த (mingled) **μείγνυμι** meignymi 3396

விளைச்சொல் - கல (mixed, mingled) (வெளி 15:2; வெளி 8:7; மத் 27:34; லூக்கா 13:1)

"அக்கினிகலந்த கண்ணாடிக்கடல்" - பரலோகத்தில் தேவனுடைய சிங்காசனம் இருக்குமிடம் அக்கினிகலந்த கண்ணாடிக்கடல் போன்று இருக்கும். தேவனுடைய மகிமையினால் வெளிப்படும் அக்கினி அந்தக் கண்ணாடிக்கடலில் பிரதிபலிக்கும். தேவனுடைய மகிமை ஒளியாகப் பிரதிபலிப்பது அந்த நகரம் முழுவதற்கும் வெளிச்சத்தைத் தரும். நகரத்திற்கு வெளிச்சம் கொடுக்க சூரியனும் சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை. தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசிப்பிக்கும். (வெளி 21:23; 1தீமோ 6:16)

"தேவ சுரமண்டலங்கள்" (harps of God) - ஜெயங்கொண்டவர்கள் அனைவரும் சுரமண்டலங்களைப் பிடித்துக் கொண்டு பாட்டுப்பாடுவார்கள். (வெளி 15:2; வெளி 5:8; வெளி 14:2)

"மோசேயின் பாட்டு" - பார்வோன்மீதும், அவனுடைய சேனையின்மீதும் மோசே வெற்றி பெற்றபோது பாடிய பாட்டுக்களில் ஒன்று. (யாத் 15:1-9; உபா 32)

"ஆட்டுக்குட்டியானவருடைய பாட்டு" (song of the Lamb) - இதுவும் வெற்றிப் பாடல்களில் ஒன்று. சாத்தானமீது வெற்றி பெற்றதற்காக பாடும் பாட்டு. (வெளி 15:3-4; கொலோ 2:14-17)

"பரிசுத்தவான்கள்" (saints) - சில பதிப்புகளில் இந்த வார்த்தை தேசங்கள் ஜாதிகள் "nations" என்று கூறப்பட்டிருக்கிறது. தேவன் பரிசுத்தவான்களின் ராஜாவாகவும், ஜாதிகளின் ராஜாவாகவும் இருக்கிறார்.

"எல்லா ஜாதிகளும் வந்து உமக்கு முன்பாகத் தொழுதுகொள்வார்கள்" - ஆயிரம் வருஷ அரசாட்சி (ஏசா 2:2-4; ஏசா 14:16-21) புதிய பூமி (ஏசா 66:22-24; வெளி 21:24-27; வெளி 22:2-5) ஆகியவற்றை இந்த வாக்கியம் எதிர்பார்த்துக் கூறுகிறது.

வெளிப்படுத்தின விசேஷம் – தொகுப்புரை

15 அதிகாரம்

10. பரலோகத்திலே சாட்சியின் கூடாரமாகிய ஆலயம் திறக்கப்பட்டது - வெளி 4:1

வெளி 15:5 இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, பரலோகத்திலே சாட்சியின் கூடாரமாகிய ஆலயம் திறக்கப்பட்டது.

வெளி 15:6 அந்த ஆலயத்திலிருந்து ஏழு வாதைகளையுடைய அவ்வேழு தூதர்களும் சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரந்தரித்து, மார்பருகே பொற்கச்சைகளைக் கட்டிக்கொண்டு புறப்பட்டார்கள்.

வெளி 15:7 அப்பொழுது அந்த நான்கு ஜீவன்களில் ஒன்று சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிற தேவனுடைய கோபாக்கினையால் நிறைந்த பொற்கலசங்கள் ஏழையும் அந்த ஏழு தூதர்களுக்குங் கொடுத்தது.

வெளி 15:8 அப்பொழுது, தேவனுடைய மகிமையினாலும் அவருடைய வல்லமையினாலும் உண்டான புகையினாலே தேவாலயம் நிறைந்தது; ஏழு தூதர்களுடைய ஏழு வாதைகளும் முடியும் வரைக்கும் ஒருவரும் தேவாலயத்திற்குள் பிரவேசிக்கக் கூடாதிருந்தது.

"பரலோகத்திலே சாட்சியின் கூடாரமாகிய ஆலயம் திறக்கப்பட்டது" - இரண்டாம் முறையாகப் பரலோகத்திலுள்ள தேவாலயம் திறக்கப்படுகிறது. (வெளி 15:5; வெளி 11:19)

"ஏழு தூதர்கள்" - இவ்வேழு தூதர்களும் மனுஷர்கள். வெளி 17:1 ஆவது வசனத்தில் இவர்களில் ஒருவன் யோவானுக்கு மகா வேசியைப் பற்றிய இரகசியத்தையும் மிருகத்தைப் பற்றிய இரகசியத்தையும் வெளி 21:9 ஆவது வசனத்தில் பரிசுத்த நகரத்தையும் யோவானுக்குக் காண்பித்தது. இவர்களைப் பார்த்த பின்பு, யோவான் அவனை வணங்கும்படி அந்தத் தூதனுடைய பாதத்தில் விழுந்தான். நானும் ஒரு ஊழியக்காரன்; தீர்க்கதரிசிகளில் ஒருவன் என்று அந்தத் தூதன் அறிவித்தான். (வெளி 19:9,10; வெளி 22:8,9) வெளி 21:17 ஆவது வசனத்தில் இவன் மனுஷனென்றே அழைக்கப்படுகிறான்.

"சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம்" (வெளி 19:8)

"ஏழு வாதைகளும் முடியும்வரைக்கும் ஒருவரும் தேவாலயத்திற்குள் பிரவேசிக்கக் கூடாதிருந்தது" - இந்த வேளையைத் தவிர மற்ற வேளைகளில் பரலோகத்திலுள்ளவர்கள் தேவாலயத்திற்குள் பிரவேசித்துக் கொண்டிருப்பார்கள்.

16 அதிகாரம்

வெளி 16:1 அப்பொழுது தேவாலயத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தம் அந்த ஏழு தூதருடனே: நீங்கள் போய் தேவனுடைய கோபகலசங்களைப் பூமியின் மேலே ஊற்றுங்கள் என்று சொல்லக் கேட்டேன்.

"தேவனுடைய கோபகலசங்களைப் பூமியின் மேல் ஊற்றுங்கள்" - கலசங்கள் தேவனுடைய கோபாக்கினையை வெளிப்படுத்துகிறது. கோபக்கலசங்களின் நியாயத்தீர்ப்புக்கள் வாரத்தின் கடைசி மூன்றரை வருஷங்களில் நடைபெறும். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது அவை நிறைவேறும்.

கடைசி நாட்களில் இஸ்ரவேலின் விரோதிகள்மீது இப்படிப்பட்ட வாதைகள் முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. (உபா 30:1-10; ஏசா 5:2). எகிப்தின்மீது இதைப்போன்ற நான்கு வாதைகள் ஏற்கெனவே ஊற்றப்பட்டிருக்கிறது. இந்த வாதைகள் இந்த அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கிற பிரகாரம் ஒவ்வொன்றாக வரிசைப்படி ஊற்றப்படும். ஒவ்வொரு வாதையும் எவ்வளவு காலம் நீடிக்கும் என்று வெளிப்படுத்தப்படவில்லை. மிருகத்தையும், அதன் சொரூபத்தையும் வணங்கியவர்களையும், மிருகத்தின் முத்திரையைத் தரித்திருக்கிறவர்களையும் தண்டிப்பதே இந்த வாதைகளின் நோக்கமாகும்.

(15) முதலாவது கோபக்கலசம் - மனுஷர்களுக்கு பொல்லாத கொடிய புண் உண்டாயிற்று - (யாத் 9:8-12)

வெளி 16:2 முதலாம் தூதன் போய், தன் கலசத்திலுள்ளதைப் பூமியின்மேல் ஊற்றினான்; உடனே மிருகத்தின் முத்திரையைத் தரித்தவர்களும் அதின் சொரூபத்தை வணங்குகிறவர்களுமாகிய மனுஷர்களுக்குப் பொல்லாத கொடிய புண்ணுண்டாயிற்று.

"மனுஷர்களுக்குப் பொல்லாத கொடிய புண்ணுண்டாயிற்று" - முதலாம் தூதன் போய், தன் கலசத்திலுள்ளதைப் பூமியின்மேல் ஊற்றினான். உடனே மிருகத்தின் முத்திரையைத் தரித்தவர்களுக்கும் அதின் சொரூபத்தை வணங்குகிறவர்களுக்கும் பொல்லாத கொடிய புண்ணுண்டாயிற்று. எகிப்தில் இதே போன்ற வாதை ஏற்கெனவே ஊற்றப்பட்டிருக்கிறது. (யாத் 9:8-12). அந்திக்கிறிஸ்து உலகம் முழுவதையும் ஆளுகை செய்யமாட்டான். அவனுடைய ராஜ்யம் பழைய ரோமப்பேரரசிற்குள் மட்டுப்பட்டிருக்கும்.

புண் (sore) - ἕλκος - helkos - 1668

பாலவேறுபாடற்ற பெயர்ச்சொல் - பரு, புண் (ulcer) (வெளி 16:2, 11; லூக்கா 16:21). எப்படிப்பட்ட புண் என்று வேதவாக்கியம் வெளிப்படுத்தவில்லை. ஆனால் அது மிகவும் கொடியதாக இருக்கும்.

கொடிய (grievous) - πονηρός - poneeros - 4190

பொருள் - தீமையான, துன்பமான (evil, wicked).

(16) இரண்டாம் கோபக்கலசம் - சமுத்திரம் செத்தவனுடைய இரத்தம் போலாயிற்று (வெளி 8:8-9)

வெளி 16:3 இரண்டாம் தூதன் தன் கலசத்திலுள்ளதைச் சமுத்திரத்திலே ஊற்றினான்; உடனே அது செத்தவனுடைய இரத்தம் போலாயிற்று; சமுத்திரத்திலுள்ள பிராணிகள் யாவும் மாண்டுபோயின.

(17) மூன்றாம் கோபக்கலசம் - ஆறுகளும் நீரூற்றுகளும் இரத்தமாயின - (யாத் 7:19-24)

வெளி 16:4 மூன்றாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஆறுகளிலும், நீரூற்றுகளிலும் ஊற்றினான்; உடனே அவைகள் இரத்தமாயின.

16 அதிகாரம்

வெளி 16:5 அப்பொழுது தண்ணீர்களின் தூதன்: இருக்கிறவரும் இருந்தவரும் பரிசுத்தருமாகிய தேவரீர் இப்படி நியாயந்தீர்க்க நீதியுள்ளவராயிருக்கிறீர்.

வெளி 16:6 அவர்கள் பரிசுத்தவான்களுடைய இரத்தத்தையும் தீர்க்கதரிசிகளுடைய இரத்தத்தையும் சிந்தின படியினால், இரத்தத்தையே அவர்களுக்குக் குடிக்கக் கொடுத்தீர்; அதற்கு பாத்திரராயிருக்கிறார்கள் என்று சொல்லக்கேட்டேன்.

வெளி 16:7 பலிபீடத்திலிருந்து வேறொருவன்: ஆம், சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள் என்று சொல்லக் கேட்டேன்.

(18) நான்காகம் கோபக்கலசம் - சூரியன் தீயினால் மனுஷரை தகித்தது

வெளி 16:8 நான்காம் தூதன் தன் கலசத்திலுள்ளதைச் சூரியன்மேல் ஊற்றினான்; தீயினால் மனுஷரைத் தகிக்கும்படி அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது.

வெளி 16:9 அப்பொழுது மனுஷர்கள் மிகுந்த உஷ்ணத்தினால் தகிக்கப்பட்டு, இந்த வாதைகளைச் செய்ய அதிகாரமுள்ள தேவனுடைய நாமத்தைத் தூஷித்தார்களேயல்லாமல் அவரை மகிமைப்படுத்த மனந்திரும்பவில்லை.

(19) ஐந்தாம் கோபக்கலசம் - மிருகத்தின் இராஜ்ஜியம் இருளடைந்தது

வெளி 16:10 ஐந்தாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை மிருகத்தினுடைய சிங்காசனத்தின்மேல் ஊற்றினான்; அப்பொழுது அதின் ராஜ்யம் இருளடைந்தது; அவர்கள் வருத்தத்தினாலே தங்கள் நாவுகளைக் கடித்துக்கொண்டு,

வெளி 16:11 தங்கள் வருத்தங்களாலும், தங்கள் புண்களாலும், பரலோகத்தின் தேவனைத் தூஷித்தார்களேயல்லாமல் தங்கள் கிரியைகளை விட்டு மனந்திரும்பவில்லை.

(20) ஆறாம் கோபக்கலசம் - ஐபிராத்து நதியின் தண்ணீர் வற்றிப்போயிற்று

வெளி 16:12 ஆறாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஐபிராத் என்னும் பெரிய நதியின்மேல் ஊற்றினான்; அப்பொழுது சூரியன் உதிக்குந் திசையிலிருந்துவரும் ராஜாக்களுக்கு வழி ஆயத்தமாகும்படி அந்த நதியின் தண்ணீர் வற்றிப்போயிற்று.

மூன்று அசுத்த ஆவிகள்

(2 நாளா 18:18-22)

வெளி 16:13 அப்பொழுது வலுசர்ப்பத்தின் வாயிலும் மிருகத்தின் வாயிலும் கள்ளத் தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டுவரக் கண்டேன்.

வெளி 16:14 அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள்; அவைகள் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களைச் சர்வவல்லமையுள்ள தேவனுடைய மகா நாளில் நடக்கும் யுத்தத்திற்குக் கூட்டிச் சேர்க்கும்படிக்குப் புறப்பட்டுப் போகிறது.

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

16 அதிகாரம்

வெளி 16:15 இதோ, திருடனைப்போல் வருகிறேன்; தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு, விழித்துக்கொண்டு, தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்.

வெளி 16:16 அப்பொழுது எபிரெயு பாஷையிலே அர்மகெதோன் என்னப்பட்ட இடத்திலே அவர்களைக் கூட்டிச் சேர்த்தான்.

(21) ஏழாம் கோபக்கலசம் - சத்தங்களும் இடிமுழக்கங்களும் மின்னல்களும் உண்டாயின
(1193 வெளி 16:1 24)

வெளி 16:17 ஏழாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஆகாயத்தில் ஊற்றினான்; அப்பொழுது பரலோகத்தின் ஆலயத்திலுள்ள சிங்காசனத்திலிருந்து: ஆயிற்று என்று சொல்லிய பெருஞ்சத்தம் பிறந்தது.

வெளி 16:18 சத்தங்களும் இடிமுழக்கங்களும் மின்னல்களும் உண்டாயின; பூமி மிகவும் அதிர்ந்தது; பூமியின்மேல் மனுஷர்கள் உண்டான நாள்முதற்கொண்டு அப்படிப்பட்ட பெரிய அதிர்ச்சியுண்டானதில்லை.

வெளி 16:19 அப்பொழுது மகா நகரம் மூன்று பங்காகப் பிரிக்கப்பட்டது; புறஜாதிகளுடைய பட்டணங்கள் விழுந்தன; மகா பாபிலோனுக்கு தேவனுடைய உக்கிரமான கோபாக்கினையாகிய மதுவுள்ள பாத்திரத்தைக் கொடுக்கும்படி அது அவருக்கு முன்பாக நினைப்பூட்டப்பட்டது.

வெளி 16:20 தீவுகள் யாவும் அகன்றுபோயின; பர்வதங்கள் காணப்படாமற்போயின.

வெளி 16:21 தாலந்து நிறையான பெரிய கல்மழையும் வானத்திலிருந்து மனுஷர்மேல் விழுந்தது; அந்தக் கல்மழையினால் உண்டான வாதையினிமித்தம் மனுஷர்கள் தேவனைத் தூஷித்தார்கள்; அந்த வாதை மகா கொடியதாயிருந்தது.

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

17 அதிகாரம்

மகாவேசியும் மிருகமும் - (17:1-17)

1. மகா வேசி - (17:1-6)

(1) மகா வேசியின் ஆக்கினை - வசனம் 1,2,15

வெளி 17:1 ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில ஒருவவன் வந்து என்னோடே பேசி: நீ வா, திரளான தண்ணீர்களமேல உட்கார்ந்திருக்கிற மகா வேசியோடே பூமியின ராஜாக்கள் வேசித்தனம பண்ணினார்களே அவளுடைய வேசித்தனமாகிய மதுவால பூமியின் குடிகளும் வெறிகொண்டிருந்தார்களே

"ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன வந்து என்னோடே பேசி" - இது எட்டாவது இணைப்பு பகுதியாகும். பாபிலோனின அழிவு (வெளி 17:17-21) பாபிலோனின அழிவைப் பற்றிய விளக்கம் (வெளி 18:1-24) ஆகிய செய்திகளோடு இந்த இணைப்புபகுதி சேர்க்கப்பட்டிருக்கிறது. ஏழாவது கலச நியாயத்தீர்ப்பின்போது பாபிலோன அழியும்

இரண்டுவிதமான பாபிலோனைப் பற்றி வேதாகமத்தில கூறப்பட்டிருக்கிறது. ஒன்று இரகசிய பாபிலோன (mystical) மற்றொன்று பிரத்தியட்ச பாபிலோன (literal) இவ்விரண்டிற்கும் இடையிலுள்ள வேற்றுமையை வெளிப்படுத்திக் காண்பிப்பதற்காக இந்த இணைப்பு பகுதி சேர்க்கப்பட்டிருக்கிறது.

மகா வேசியைப் பற்றியும் அவளைச் சுமக்கிற மிருகத்தைப் பற்றியும் உள்ள இரகசியங்களை இந்த இணைப்பு பகுதி விளக்குகிறது (வெளி 17:1-18)

தானியேலின் எழுபதாவது வாரத்தின் நடுவில இந்த நிகழ்ச்சி நிறைவேறும் பத்து ராஜாக்கள் இக்காலத்தில தங்களுடைய வல்லமையை மிருகத்திற்குக் கொடுப்பார்கள அதன்பின்பு மகா வேசியை அழிப்பதற்காக அவளுக்கு எதிராகப் புறப்படுவார்கள

வெளி 13 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் மிருகத்தை வணங்கும் காரியங்கள் அதன் பின்பு ஆரம்பமாகும். (வெளி 17:8-17)

"நீ வா" - இந்த வாக்கியத்தைப் பேசுகிறவன் ஒரு இரட்சிக்கப்பட்ட மனுஷன் (வெளி 1:1) இவனைத் தூதனென்று வேதவசனம் கூறுகிறது. யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷத்தைக் காண்பித்த போது யோவான் அவனை வணங்கும்படி அவனுடைய பாதத்தில விழுந்தான் ஆனால் அவனோ "இப்படிச் செய்யாதபடிக்குப்பார்" என்று கூறி உன் சகோதரரோடும்கூட நானும் ஒரு ஊழியக்காரன் என்று அறிவிக்கிறான் ஆகையினால் இந்தத் தூதனை ஒரு மனுஷன் என்று வேத பண்டிதர்கள் வியாக்கியானம் கூறுகிறார்கள் (வெளி 17:17; வெளி 19:10; வெளி 21:9; வெளி 22:8-9)

(2) மகா வேசியின் பாவங்களும் அவளோடு வேசித்தனம் பண்ணினவர்களும்

வெளி 17:2 அவளுக்கு வருகிற ஆக்கினையை உனக்குக் காண்பிப்பேன் என்று சொல்லி,

(3) மகா வேசியின் ஆளுகை

வெளி 17:3 ஆவிக்குள் என்னை வனாந்தரத்திற்குக் கொண்டு போனான அப்பொழுது ஏழு தலைகளையும்பத்துக் கொம்புகளையும் உடையதும தூஷணமான நாமங்களால நிறைந்தது மான சிவப்புநிறமுள்ள மிருகத்தின்மேல் ஒரு ஸ்திரீ ஏறியிருக்கக் கண்டேன

(4) மகா வேசியின் சிங்காரமும் பாவங்களும்

வெளி 17:4 அந்த ஸ்திரீ இரத்தாம்பரமும் சிவப்பான ஆடையுந்தரித்து பொன்னி னாலும் இரத்தினங்களினாலும் முத்துக் களினாலும் சிங்காரிக்கப்பட்டு, தன வேசித்தனமாகிய அருவருப்புகளாலும் அசுத்தத்தாலும் நிறைந்த பொற் பாத்திரத்தைத் தன் கையிலே பிடித்திருந்தாள்

17 அதிகாரம்

(5) மகா வேசியின் நாமம்

வெளி 17:5 மேலும் இரகசியம், மகா பாபிலோன் வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் என்னும் நாமம் அவள் நெற்றியில் எழுதியிருந்தது.

(6) மகா வேசியின் குடிவெறி

வெளி 17:6 அந்த ஸ்திரீ பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும் இயேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத் தினாலும் வெறி கொண்டிருக்கிறதைக் கண்டேன் அவளைக் கண்டு நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன்

2. மகா வேசியின் இரகசியமும் மிருகத்தின் இரகசியமும்

வெளி 17:7 அப்பொழுது தூதனானவன் என்னை நோக்கி: ஏன் ஆச்சரியப் படுகிறாய்? இந்த ஸ்திரீயினுடைய இரகசியத்தையும் ஏழு தலைகளையும் பத்துக் கொம்புகளையுமுடையதாய் இவளைச் சுமக்கிற மிருகத்தினுடைய இரகசியத்தையும் உனக்குச் சொல்லுகிறேன்

"இவளைச் சுமக்கிற மிருகம்" மிருகம் இவளைச் சுமப்பதினால் இவ்விருவரும் வெவ்வேறானவர்கள் என்பது தெரிய வருகிறது. ஒன்று மார்க்க சம்பந்தமானது. மற்றொன்று அரசியல் சம்பந்தமானது.

"ஏழு தலைகளையும் பத்துக் கொம்புகளையு முடையதாய்" மிருகத்திற்கு ஏழு தலைகளும், பத்துக் கொம்புகளும் உள்ளன. இந்த மிருகம் இந்த தலைகளில் ஒன்றோ அல்லது கொம்புகளில் ஒன்றோ அல்ல. மிருகம் ஏதோ ஒரு காரியத்திற்கு அடையாளமாக இருக்கிறது. (வெளி 17:11) தலைகளும், கொம்புகளும் வேறொரு காரியத்திற்கு அடையாளமாக இருக்கின்றன

(வெளி 17:12-17) இந்த மிருகத்திற்குச் சரியாக வியாக்கியானம் கூறவேண்டுமென்றால் இந்த மிருகம் வேறு, இதன் தலைகளும், கொம்புகளும் வேறு என்று வேறுபிரித்து வியாக்கியானம் கூற வேண்டுமென்று வேதபண்டிதர்கள் கூறுகிறார்கள்

3. மிருகம்

(1) மிருகம் பாதாளத்திலிருந்து ஏறிவந்து நாசமடையப்போகிறது - (17:8-17; 11:7; தானி 10:12-2 வெளி 13:2; 17:8-11

வெளி 17:8 நீ கண்ட மிருகம் முன்னே இருந்தது, இப்பொழுது இல்லை; அது பாதாளத்திலிருந்து ஏறிவந்து, நாசமடையப் போகிறது. உலகத்தோற்றமுதல் ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்படாத பூமியின் குடிகள் இருந்ததும் இராமற்போனதும், இனி இருப்பதுமாயிருக்கிற மிருகத்தைப் பார்த்து ஆச்சரியப்படுவார்கள்

ஏழு தலைகளையும், பத்துக் கொம்புகளையும் உடைய மிருகம்

இந்த மிருகம் மூன்று காரியங்களுக்கு அடையாளமாக இருக்கிறது. அவையாவன.

1. பாதாளத்திலிருந்து வெளியேறி வந்த தூதன்
2. சாதாரண மனுஷன்
3. ஒரு ராஜ்யம்.

பாதாளத்திலிருந்து ஏறி வந்த மிருகம்

1. இது பாதாளத்திலிருந்து ஏறி வரும். (வெளி 11:7; வெளி 17:8)
2. இரண்டு சாட்சிகளோடு யுத்தம் பண்ணும். (வெளி 11:7)
3. இரண்டு சாட்சிகளைக் கொன்றுபோடும். (வெளி 11:7)
4. முன்னே பாதாளத்திற்கு வெளியே இருந்தது (வெளி 17:8

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

17 அதிகாரம்

5. யோவானின் நாளில பாதாளத்தில இருந்தது. (வெளி 17:8)

6. அது நாசமடையப்போகிறது. (வெளி 17:8)

சமுத்திரத்திலிருந்து எழும்பிவந்த மிருகம்

1 இவன் ஒரு மனுஷனாக இருப்பான் (வெளி 13:18)

2 அதற்கு ஏழு தலைகள் இருக்கும். (வெளி 13:1; வெளி 17:3-11)

3 அதின் தலைகளின்மேல் தூஷணமான நாமம் இருக்கும். (வெளி 13:1; வெளி 17:3)

4 அதற்கு பத்துக் கொம்புகளும் பத்து முடிகளும் இருக்கும். (வெளி 13:1; வெளி 17:3)

5 சிறுத்தையைப்போல இருக்கும். இது கிரேக்கு ராஜ்யத்திற்கு அடையாளம் (வெளி 13:2; வெளி 17:3; தானி 7:6)

6 அதன் கால்கள் கரடியின் கால்களைப்போல இருக்கும். இது மேதிய பெர்சிய ராஜ்யத்திற்கு அடையாளம். (வெளி 13:2; தானி 7:5)

7 அதின் வாய் சிங்கத்தின் வாயைப்போல இருக்கும். இது பாபிலோன ராஜ்யத்தின அடையாளம். (வெளி 13:2; தானி 7:4)

8 வலுசர்ப்பமாகிய சாத்தானிடமிருந்து பலத்தையும், அதிகாரத்தையும் பெற்றுக் கொள்ளும். (வெளி 13:2; 2தெச 2:8-12; தானி 8:24; தானி 11:38)

9 பத்து ராஜாக்கள் தங்கள அதிகாரத்தை இதற்குக் கொடுப்பார்கள். (வெளி 17:12-17)

10 அவர்களில் மூன்றுபேரை மிருகம் அகற்றிய பின்பு தங்களுடைய அதிகாரத்தை மிருகத்திற்குக் கொடுப்பதாக பத்து ராஜாக்களும் சம்மதிப்பார்கள் (வெளி 17:12-17; தானி 7:23-24)

11 அர்மகெதோனில நடைபெறும் யுத்தத்தில் கிறிஸ்துவிற்கு எதிராக பத்து ராஜாக்களையும் இந்த மிருகம் வழிநடத்தும். (வெளி 17:14 வெளி 19:19-21)

12 மகா வேசியை அழித்துப்போடும் (வெளி 17:16)

13 அர்மகெதோனில நடைபெறும் யுத்தத்தில பூமியின் சேனைகளுக்குத் தலைவனாக இருக்கும் (வெளி 19:19)

14 அர்மகெதோனில பிடிக்கப்பட்டு, கந்தகம் எரிகிற அக்கினிக்கடலிலே உயிரோடே தள்ளப்படும். (வெளி 19:20; தானி 7:11; ஏசா 11:4; 2தெச 2:8-12)

15 கிறிஸ்து இந்த மிருகத்தை ஜெயிப்பார் (வெளி 19:20)

16 கந்தகம் எரிகிற அக்கினிக்கடலாகிய நரகத்தில தள்ளப்படும். (வெளி 19:20)

17 ஆயிரம வருஷங்களுக்கு நரகத்தில வாதிக்கப்படும். (வெளி 20:10)

18 உலகத்தில உள்ளவர்கள மிருகத்தைப பார்த்து ஆச்சரியப்படுவார்கள் (வெளி 13:3; வெளி 17:8)

19 ஜனங்கள மிருகத்தை வணங்குவார்கள (வெளி 13:3,8,16-18; வெளி 14:9-11; வெளி16:2; வெளி 20:4)

20 பெருமையானவைகளையும், தூஷணங்களையும் பேசும். (வெளி 13:5-6; தானி 7:20,25; தானி 11:36)

21 நாற்பத்திரண்டு மாதம் யுத்தம் பண்ண அதற்கு அதிகாரம் கொடுக்கப்படும். இது தானியேலின் எழுபதாவது வாரத்தின் கடைசி மூன்றரை வருஷம். (வெளி 13:5; வெளி 19:11-21; தானி 7:25-27; தானி 9:27; தானி 12:7)

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

17 அதிகாரம்

22 பரிசுத்தவான்களோடே யுத்தம் பண்ணும் (வெளி 13:6,7 வெளி 14:9-11 வெளி 15:2-4 வெளி 20:4-6 தானி 7:21 தானி 8:25)

23 பரிசுத்தவான்களை ஜெயித்து அவர்களைக் கொன்றுபோடும் (வெளி 13:7 வெளி 14:9-11 வெளி 15:2-4 வெளி 20:4-6. தானி 7:21)

24 பல ராஜ்ஜியங்களை ஆளுகை செய்யும். (வெளி 13:7; வெளி 17:12-17, தானி 7:23-24; தானி 11:40-45)

25 மிருகத்தோடு சேர்ந்து, கள்ளத் தீர்க்கதரிசியும் கிரியை நடப்பிப்பான் (வெளி 13:11-18; வெளி 16:13-16 வெளி 19:20)

26 அற்புதங்களைச் செய்யும் சக்தி இருக்கும். (வெளி 13:2 14 வெளி 16:13-16 வெளி 19:20 2தெச 2:8-12

27 இந்த மிருகத்திற்கு ஒரு சொரூபம் பண்ணப்படும். (வெளி 13:2,12-14 வெளி 14:9-11 வெளி 15:2-4 வெளி 20:4-6

28 இந்த சொரூபத்திற்கு ஆவி கொடுக்கப்படும். (வெளி 13:15)

29 இந்த மிருகத்தின் சொரூபம் கிரியைகளை நடப்பிக்கும். (வெளி 13:15

30 ஜனங்களுக்கு ஒரு முத்திரையைத் தரிக்கும். (வெளி 13:16)

31 அல்லது அதின் நாமத்தைத் தரிக்கும். (வெளி 13:17-18 வெளி 15:2

32 அல்லது அதின் நாமத்தின் இலக்கத்தைத் தரிக்கும். வெளி 13:18

33 சொரூபத்தை வணங்காதவர்களையும், முத்திரை தரிக்காதவர்களையும் கொலைசெய்யும். (வெளி 13:15 வெளி 20:4)

34 முத்திரை தரித்துக் கொள்ளாதவர்களை கொல்லவும் விற்கவும் கூடாதபடிக்குச் செய்யும் (வெளி 14:9-11)

35 தூதர்கள் மிருகத்தை எதிர்பார்ப்பார்கள் (வெளி 14:9-11)

36 ஜனங்களை வாதிக்கப்படுவதற்கு வழிநடத்தும். (வெளி 14:9-11)

37 ஜனங்கள் இந்த மிருகத்தை எதிர்பார்ப்பார்கள் (வெளி 15:2)

38 மிருகத்திற்கு வாதைகள் வரும் (வெளி 16:2,10)

39 மிருகத்திற்கு ஒரு சிங்காசனமும், ராஜ்ஜியமும் இருக்கும் (வெளி 16:10

40 சாத்தானோடும், பிசாசுகளோடும் சேர்ந்து தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்கு பூலோகமெங்குமுள்ள ராஜாக்களைக் கூட்டிச்சேர்க்கும் (வெளி 16:13-16)

மிருகம் ஓர் ராஜ்ஜியம்

1 எட்டாவது ராஜ்ஜியம். (வெளி 17:11)

2 பத்து ராஜ்ஜியங்களிலும் அந்திக்கிறிஸ்து ஆளுகை செய்ய வருமவரையிலும் மகாவேசி இந்த மிருகத்தைக் கட்டுப்படுத்தும் (வெளி 17:1 7,12 17

3 யோவானின் நாளுக்கு முன்பாக இந்த மிருகம் இருந்தது (வெளி 17:8 11

4 யோவானின் நாளில் இந்த மிருகம் இல்லை. (வெளி 17:8 11)

5 இந்த மிருகத்தின் தலைகளில் ஒன்று சாவுக்கேதுவாக காயப்பட்டிருந்தது. (வெளி 13:3

6 சாவுக்கேதுவான அந்தக் காயம் சொஸ்தமாக்கப்பட்டது. (வெளி 13:3-14

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

17 அதிகாரம்

7 கடைசி நாட்களில் அந்திக்கிறிஸ்து இந்த மிருகத்தை மறுபடியும் உயிர்ப்பிப்பான் (வெளி 17:10-17 தானி 7:24

8 ஏழு உலக ராஜ்ஜியங்களை ஜெயிக்கும். (வெளி 17:9-11)

9 யோவானின் நாளுக்கு முன்பாக ஐந்து ராஜ்ஜியங்கள் விழும். அவை எகிப்து அசீரியா பாபிலோன மேதிய-பெர்சியா கிரேக்கு ஆகிய தேசங்களாகும். (வெளி 17:10)

10 யோவானின் நாளில ஆறாவது ராஜ்ஜியம் (ரோமபேரரசு) இருந்தது. (வெளி 17:10)

11 ஏழாவது ராஜ்ஜியம் இன்னும வரவில்லை (ரோமபேரரசிறகுள உருவாகும் பத்து ராஜ்ஜியங்கள வெளி 17:10-17; தானி 7:23-24)

12 ஏழாவது ராஜ்ஜியம் அந்திக்கிறிஸ்து வருவதற்கு முன்பாக கொஞ்சககாலம் தரித்திருக்க வேண்டும். (வெளி 17:10)

13 பத்து ராஜ்ஜியங்களின்மீது அந்திக கிறிஸ்து முழு அதிகாரத்தையும் பெறும்போது ஏழாவது ராஜ்ஜியம் எட்டாவது ராஜ்ஜியமாக ஆகிறது. (வெளி 17:9 17

14 எட்டாவது ராஜ்ஜியம் ஏழு ராஜ்ஜியங்களில் ஒன்று. யோவானின நாளுக்கு முன்பாக ஐந்தாவது ராஜ்ஜியம் விழுந்தது. ஆறாவது ஏழாவது ராஜ்ஜியத்திற்கு முன்பாக மிருகம் இருந்தது. ஆறாவது ஏழாவது ராஜ்ஜிய காலத்தில் மிருகம் இல்லை ஆறாவது ஏழாவது ராஜ்ஜியத்திற்குப் பின்பு மிருகம் எட்டாவது ராஜ்ஜியமாகிறது. (வெளி 17:8 11

அந்திக்கிறிஸ்து பாதாளத்திலிருந்து ஏறி வரவில்லை என்னும் உபதேச விளக்கம்

1. பாதாளத்திலிருந்து ஒரு மிருகம் ஏறி வரும் ஒரு நபர் மட்டுமே ஏறி வருவார் ஒரு ராஜ்ஜியம் பாதாளத்திலிருந்து ஏறி வருவதற்கு வாய்ப்பில்லை. ஒரு ராஜ்ஜியம் முழுவதும் பாதாளத்திலிருந்து ஏறி வந்தால அந்த ராஜ்ஜியத்திலுள்ள அனைவரும் மறுபடியும் பூமிக்கு வந்து ஜீவிக்க வேண்டும். வேதாகமம் இப்படிப்பட்ட சத்தியத்தை எந்த வசனத்திலும் கூறவில்லை பாதாளத்திலிருந்து ஏறி வந்தவன் ஒரு தூதனாகவோ அல்லது ஒரு மனுஷனாகவோ இருக்க வேண்டும் இவன் இப்பொழுது பாதாளத்தில அடைக்கப்பட்டிருக்கிறான் தீர்க்க தரிசனத்தை நிறைவேற்றுவதற்காக பாதாளத்திலிருந்து இவன் ஏறி வருகிறான் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றுவதற்கு பாதாளத்திலிருந்து ஏறி வந்த மிருகம் மனுஷனாக இருக்க வேண்டுமென்னும் அவசியமில்லை அதைப்போலவே பாதாளத்திலிருந்து ஏறிவந்த மிருகமும் சமுத்திரத்திலிருந்து எழும்பி வந்த மிருகமும் ஒன்றாயிருக்க வேண்டுமென்னும் அவசியமுமில்லை

2 அந்திக்கிறிஸ்து என்பவன சமுத்திரத்திலிருந்து எழும்பி வந்தவன சமுத்திரம் என்பது திரளான மனுஷரைக் குறிக்கும். அந்திக்கிறிஸ்து ஒரு மனுஷன என்னில அர்மகெதோனில நடைபெறும் யுத்தத்தில் இவன மரித்துப்போவான (தானி 7:11; தானி 8:8,22,25, 2தெச 2:8-9, வெளி 19:20 பாதாளத்திலிருந்து எழும்பி வந்தவன் அந்திக்கிறிஸ்துவாக இருந்தால் இவன ஏற்கெனவே மரித்து உயிர்த்தெழுந்தவனாக இருப்பான் பூமிக்கு வந்த இவன் மரிக்காமல் நித்திய காலமாக ஜீவிப்பான் ஆனால் அந்திக்கிறிஸ்து சாதாரண மனுஷனாக இருக்கிறபடியினால் மரித்துப்போகிறான்

17 அதிகாரம்

3 மரித்துப்போனவன் மறுபடியும் உயிர் பெற்று, பூமிக்கு வந்து வாழ்ந்து மறுபடியும் மரித்துப்போவதாக வேதாகமம் எந்த வசனத்திலும் கூறவில்லை. இரண்டாவது ஜீவியம் என்று எந்த மனுஷருக்கும் கொடுக்கப்படவில்லை. ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. (எபி 9:27)

4 மனுஷர் மறுபிறவி எடுத்து, பூமியில வாழ்ந்ததாக வேதவசனம் எதுவும் கூறவில்லை. (எபி 9:27; வெளி 20:11-15) வேதாகமத்தில மறுபடியும் பிறப்பது என்பது இரட்சிக்கப்பட்டு ஜீவிப்பதைக் குறிக்கும். மறுபிறவி என்பது வேறு. மறுபடியும் பிறப்பது என்பது வேறு. மறுபிறவி என்றால மரித்த ஒருவர் ஒரு குழந்தையாக இந்த உலகத்தில மறுபடியும் பிறந்து, வளர்ந்து மறுபடியும் மரிப்பதாகும். மறுபிறவி வேதாகமஉபதேசத்திற்கு முரணானது. மரித்த நாம் அனைவரும் உயிர்த்தெழுவோம் என்று வேதவசனம் கூறுகிறது. நாம் மறுபடியும் சிறுகுழந்தையாகப் பிறக்கப் போவதில்லை. நமக்கு உயிர்த்தெழுந்த சரீரம் கொடுக்கப்படும். (தானி 12:2; யோவான்5:28-29; 1கொரி 15:20-58; 1தெச4:16; பிலி 3:21; வெளி 20:11-15)

5 பாதாளம் என்பது மனுஷனைப் பிடித்து வைப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் இடமல்ல. பிசாசுகளுக்கும், விழுந்த தூதர்களுக்கும் நியமிக்கப்பட்டிருக்கும் இடமே பாதாளமாகும்.

(லூக்கா8:31; வெளி9:1-21; வெளி 11:7; வெளி 17:8; வெளி20:3,7) நீதிமான்கள் மரிக்கும் போது அவர்களுடைய ஆத்துமாக்கள் பரலோகத்திற்குச் செல்லும் (2கொரி5:8; பிலி 1:21-24; எபி 12:23; வெளி 6:9-11) துன்மார்க்கர் மரிக்கும் போது அவர்களுடைய ஆத்துமாக்கள் நரகத்திற்குச் செல்லும் (லூக்கா 16:19-31; வெளி 20:11-15) ஆகையினால் பாதாளத்திலிருந்து எந்த மனுஷனும் அந்திக்கிறிஸ்துவாக வெளியே வருவதற்கு வாய்ப்பில்லை

6 பிறப்பு, மரணம் ஆகியவற்றில் அந்திக்கிறிஸ்து ஒரு சாதாரண மனுஷனாகவே இருக்கிறான் இவன் மனுஷரிலிருந்து வித்தியாசமானவன் என்பதற்கு வேதவசனங்களில ஆதாரம் எதுவுமில்லை. கடைசி நாட்களில சாத்தான் இந்த அந்தகாரச் சக்திகள் அந்திக்கிறிஸ்துவைப் பயன்படுத்திக் கொள்ளும். பூமியில ஒருகாரியத்தை நிறைவேற்றுவதற்காக ஏற்கெனவே மரித்துப்போன ஒருவனை மறுபடியும் உயிரோடு எழுப்பி பூமிக்குக் கொண்டு வந்து, அவன் மூலமாக கிரியை செய்ய வேண்டும் என்னும் அவசியம் தேவனுக்கோ சாத்தானுக்கோ இல்லை. வரலாற்றிலுள்ள ஒரு மனுஷனே தீர்க்க தரிசனங்களை நிறைவேற்றுவதற்குக் கருவியாகப் பயன்பட முடியுமென்றால அவன் மூலமாகவே கிரியை செய்வது தேவனுக்கும் சாத்தானுக்கும் சித்தமான காரியமாக இருக்கும். அந்திக்கிறிஸ்து ஒரு மனுஷன் இவன் சாத்தானுடைய அதிகாரத்திற்குத் தன்னை முழுவதுமாக ஒப்புக் கொடுத்ததினால இவன் அந்திக் கிறிஸ்துவாகக் கிரியை செய்கிறான்

17 அதிகாரம்

7 தானியேலின் எழுபதாவது வாரத்தின் நடுவில் அந்திக்கிறிஸ்து கொல்லப்படுவான் என்றும், இவன் மறுபடியும் உயிர்த்தெழுவான் என்றும் சாத்தானே இவன் என்றும் கூறுவதற்கு வேத வாக்கியங்களின் பிரகாரம் ஆதாரம் எதுவுமில்லை. மிருகத்தின் தலைகளில் ஒன்று சாவுக்கேதுவாய் காயப்பட்டிருந்தது. அந்தக்காயம் சொஸ்தமாக்கப்பட்டது. (வெளி 13:3) இந்த வாக்கியம் அந்திக்கிறிஸ்துவைக் குறிக்கவில்லை. மிருகத்தின் தலைகளில் ஒன்றைக் குறிக்கிறது. இந்தத் தலைகள் ராஜ்ஜியங்களாகும். இவை மனுஷரல்ல. (வெளி 17:9-11) அந்திக்கிறிஸ்து என்பவன் எட்டாவது ராஜ்ஜியத்திலுள்ள சாதாரண மனுஷ தலைவன். இவன் ஏழு தலைகளில் ஒருவனோ அல்லது பத்துக் கொம்புகளில் ஒருவனோ அல்ல. அந்திக்கிறிஸ்து வருவதற்கு முன்பாகவே தலைகளும் கொம்புகளும் பல காரியங்களுக்கு அடையாளமாய் உள்ளன. (தானி 7:23, 24; வெளி 17:9-11) அந்திக்கிறிஸ்து சாத்தானின் அவதாரமும் அல்ல; வலுசர்ப்பமும் மிருகமும் வெவ்வேறானவை என்று வேதவாக்கியம் விளக்கிக் கூறுகிறது. (2தெச 2:8, 9; வெளி 13:1-18; வெளி 16:13-16; வெளி 20:10) சாத்தான் ஒரு தூதன். இவனுக்கென்று ஆவியின் சரீரமுண்டு. மனுஷனுடைய சரீரத்திற்குள் நுழைந்து இவன் கிரியை செய்ய வேண்டிய அவசியமில்லை. (லூக்கா 22:3)

பாதாளத்திலிருந்து ஏறி வருகிற மிருகம்

பாதாளத்திலிருந்து ஏறி வருகிற மிருகம் சாத்தானின் தூதனாகும். இது மரித்துப்போன மனுஷருடைய ஆவியல்ல. இந்த மிருகம் சாத்தானுடைய மனுஷ அவதாரமுமல்ல. சமுத்திரத்திலிருந்து வெளிவந்த மிருகத்தின் அவதாரமும் அல்ல. புறஜாதியாரின் காலங்களில் ஐந்தாவது ராஜ்ஜியத்தை எட்டாவது ராஜ்ஜியமாக அதாவது கிரேக்கு தேசமாக ஆக்குவதற்கு சாத்தான் இந்த மிருகத்தைப் பலப்படுத்துவான். இந்த மிருகம் பழைய கிரேக்கு தேசத்தை ஆளுகை செய்தது. இது ஐந்து ராஜ்ஜியங்களில் ஐந்தாவது ராஜ்ஜியமாகும். யோவானின் நாளுக்கு முன்பாக இது விழுந்துபோயிற்று. (வெளி 17:10)

இவனுடைய ராஜ்ஜியம் விழுந்த பின்பு இந்த ஆவி பாதாளத்தில் அடைக்கி வைக்கப்பட்டது. ஆறாவது ராஜ்ஜியத்தின் போது இந்த ஆவி பாதாளத்திலேயே இருந்தது. ஆறாவது ராஜ்ஜியம் என்பது யோவானின் நாளில் இருந்த ரோமப் பேரரசைக் குறிக்கும். பாதாளத்திற்குத் தள்ளப்பட்ட இந்த ஆவி ஏழாவது ராஜ்ஜியம் ஆரம்பமாகும் வரையிலும் அங்கேயே இருக்கும். ஏழாவது ராஜ்ஜியம் என்பது ரோமப்பேரரசிற்குள் உருவாகும் பத்து ராஜ்ஜியங்களைக் குறிக்கும். (வெளி 17:10)

இதன் பின்பு இந்த ஆவி பாதாளத்திலிருந்து ஏறி வரும். பழைய கிரேக்கு தேசத்தை எட்டாவது ராஜ்ஜியமாக உருவாக்கும் காரியங்களில் இந்த மிருகம் அந்திக்கிறிஸ்துவைப் பயன்படுத்தும். (வெளி 17:11) நீ கண்ட மிருகம் முன்னே இருந்தது, இப்பொழுதில்லை. (வெளி 17:8) இந்த மிருகம் யோவானின் காலத்திற்கு முன்பு இருந்தது. இப்பொழுது யோவானின் காலத்தில் இந்த மிருகம் இல்லை. பாதாளத்திலிருந்து இந்த மிருகம் ஏறி வந்து நாசமடையப்போகிறது.

உலகத்தின் ராஜ்ஜியங்களைத் தேவனுடைய தூதர்களும், சாத்தானின் தூதர்களும் எப்பொழுதும் ஆளுகை செய்துகொண்டே இருப்பார்கள். வானத்தில் தேவனுடைய தூதர்களுக்கும் சாத்தானின் தூதர்களுக்கும் இடையில் நடைபெறும் யுத்தங்களின் நிழலாக பூமியிலும் யுத்தங்களும், அவற்றில் வெற்றி தோல்விகளும் உண்டாகும். சில ராஜ்ஜியங்களை எழும்ப வேண்டுமென்றும், விழுத்த வேண்டுமென்றும் தேவன் திட்டமிடுகிறார். தேவனுடைய சித்தத்தின் பிரகாரமே சாத்தானும் கிரியை செய்து தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றுகிறான். (ஏசா 24:21-23; ஏசா 25:7; தானி 10:13-21; தானி 11:1; தானி 12:1; எபே 6:12; வெளி 12:7-12; வெளி 16:13-16) பெர்சிய தேசத்தின் அதிபதி, கிரேக்கு தேசத்தின் அதிபதி, மிகாவேல் இஸ்ரவேல் தேசத்தின் அதிபதி, ஆகியோரைப் பற்றி வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிறது. (தானி 10:12-21; தானி 12:1)

17 அதிகாரம்

அந்திக்கிறிஸ்து கிரேக்கு தேசத்தின் அதிபதி

1 தானியேலின் கடைசி தரிசனங்கள் கிரேக்கு தேசத்தைப் பற்றியதாகும் இதன் நான்கு பிரிவுகள் அவற்றில் ஒன்றிலிருந்து அந்திக்கிறிஸ்து வெளிவருதல் ஆகியவை தானியேலின் தரிசனங்களில் இடம் பெற்றிருக்கிறது. வெளி 8 9,20-25 வெளி 11.9-45

2 பூமியிலுள்ள எட்டாவது ராஜ்ஜியத்தின் ராஜாவாக அந்திக்கிறிஸ்து வருகிறான் ஐந்தாவது ராஜ்ஜியம் யோவானின் நாளுக்கு முன்பாக விழுந்துவிட்டது. (வெளி 17.10) இந்த ஐந்தாவது ராஜ்ஜியமே எட்டாவது ராஜ்ஜியமாக உயிர்ப்பிக்கப்படுகிறது. இந்த ராஜ்ஜியம் பழைய கிரேக்கு தேசத்தின் சீரியப்பிரிவாக வருகிறது. (தானி 8 9,20-25; தானி 11.36-45) மிருகம் பழைய கிரேக்கு தேசத்திலிருந்து வந்து, அதை உயிர்ப்பிக்கிறான் ஆகையினால் பாதாளத்திலிருந்து ஏறி வந்தவன் கிரேக்கு தேசத்தின் அதிபதியாக இருக்கலாம் என்று வேதபண்டிதர்கள் வியாக்கியானம் கூறுகிறார்கள் (தானி 10 20

3 அந்திக்கிறிஸ்து பத்து ராஜ்ஜியங்களில் ஒன்றான சீரிய ராஜ்ஜியத்தைப் பயன்படுத்தி மற்ற மூன்று ராஜ்ஜியங்களை அகற்றிப் போடுகிறான் தானி 7.24-24) பழைய கிரேக்கு தேசத்திலுள்ள மூன்று பிரிவுகள் அகற்றப்படும். (தானி 8.9,20-25) இதனால் கிரேக்கு தேசத்தின் அதிபதி பாதாளத்திலிருந்து ஏறிவந்த தூதன் என்பது தெரிய வருகிறது.

4 வெளிப்படுத்தின விசேஷத்தில் கூறப்பட்டிருக்கும் மிருகம் சிறுத்தையைப் போல் இருந்தது. (வெளி 13.2) சிறுத்தை தானி 7:6 ஆவது வசனத்தில் பழைய கிரேக்கு தேசத்தைக் குறிக்கிறது. இதன் மூலமாக அந்திக் கிறிஸ்துவின் ராஜ்ஜியம் பிரதானமாகக் கிரேக்கு தேசத்தின் பண்புடையதாகவும் திட்டங்கள் உடையதாகவும் இருக்கும் தானி 8 9-14,20-25; தானி 11.21-45 ஆகிய வசனங்களில் காணப்படும் சீரிய பிரிவாக இருக்கும். இதன் மூலமாகவும் பாதாளத்திலிருந்து ஏறி வந்த தூதன் கிரேக்கு தேசத்தின் அதிபதி என்று தெரிய வருகிறது

5 யோவேல் 3,சகரி 9.13 ஆகிய வசனங்களில் கடைசி நாட்களில் அந்திக்கிறிஸ்துவின் கீழிருக்கும் கிரேக்கு தேசத்தைப் பற்றி தீர்க்கதரிசனம் கூறப்பட்டிருக்கிறது இதன் மூலமாக கிரேக்கு தேசத்தின் அதிபதி பாதாளத்தின் ஆவி என்பது தெரிய வருகிறது. கிரேக்கு தேசம் புதுப்பிக்கப்படுவது என்பது சாவுக்கேதுவான காயம்பட்டிருந்த தலை சொஸ்தமாக்கப்படுவதைக் குறிக்கும். (வெளி 13 2,4 எட்டாவது ராஜ்ஜியம் புதுப்பிக்கப்பட்ட கிரேக்கு தேசமாகும். இது புதுப்பிக்கப்பட்ட ரோமப்பேரரசாகாது ரோமப்பேரரசு மிருகத்தின்மீதுள்ள ஏழாவது தலையாகும்.

சமுத்திரத்திலிருந்து எழும்பி வந்த மிருகம்

1 இவன் ஒரு மனுஷன் (வெளி 13.18, 2தெச 2.3)

2 இவன் யாரென்பது இதுவரையிலும் தெளிவாகத் தெரியவில்லை. உலகக் காரியங்களில் இந்த அளவிற்குச் செல்வாக்குடையவன் எவனும் தற்காலத்தில் இல்லை

17 அதிகாரம்

3 இவன் எப்பொழுது வருவான்? பழைய ரோமப்பேரரசில் பத்து ராஜ்ஜியங்கள் உருவான பின்பே வருவான் (தானி 7:23-24) சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பே வருவான் (2தெச 2:7-8) தானியேலின் எழுபதாவது வாரத்தின் ஆரம்பத்தில் வருவான் (தானி 9:27; வெளி 6:1-2)

4 இவன் எங்கிருந்து வருவான்? சீரிய தேசத்திலிருந்து வருவான் என்று வேதபண்டிதர்கள் கூறுகிறார்கள் (தானி 7:23-24; தானி 8:9,20-25; தானி 11:36-45)

5 இவனை எவ்வாறு அழைப்பார்கள்? அந்திக்கிறிஸ்து என்று அழைப்பார்கள்

6 பூமியில் இவன் எவ்வளவு காலம் இருப்பான்? ஏழு வருஷங்களுக்கு இருப்பான் முதல் மூன்றரை வருஷங்களில் ரோமப்பேரரசிற்குள் இருக்கும் பத்து ராஜ்ஜியங்களின் அதிகாரங்களையும் வல்லமைகளையும் பற்றிக் கொள்வான் (தானி 7:23-24, தானி 11:36-45) மீதி மூன்றரை வருஷங்களில் அந்த பத்து ராஜ்ஜியங்களை ஆளுகை செய்வான் (வெளி 13:5)

7 இவன் எங்கிருந்து ஆளுகை செய்வான்? முதல் மூன்றரை வருஷங்களில் இவன் பாபிலோனிலிருந்து ஆளுகை செய்வான் இக்காலத்தில் இவன் ஆளுகையைக் கைப்பற்றிக் கொள்வான் (ஏசா 14:4-17) கடைசி மூன்றரை வருஷங்களில் இவன் எருசலேமிலிருந்து ஆளுகை செய்வான் (தானி 9:27 தானி 11:45; மத் 24:15; 2தெச 2:3 4; வெளி 11:1-2)

8 இவனிடம் இருக்கும் அதிகாரம் எது? சாத்தானிடமிருந்து இவன் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வான் (தானி 8:24; தானி 11:38-39, 2தெச 2:8-12; வெளி 13:1,4 வெளி 17:12-17) பாதாளத்திலிருந்து வெளியேறிய ஆவி சாத்தானுடைய பிரதிநிதியாக இருந்து, அந்திக்கிறிஸ்துவை ஆளுகை செய்வான் (வெளி 11:7; வெளி 17:8)

அந்திக்கிறிஸ்து பெற்றிருக்கும் அதிகாரங்கள்

1 தேவனைத் தூஷிப்பான் (வெளி 13:5-6 தானி 7:8,20,25; தானி 11:36)

2 பரிசுத்தவான்களை மேற்கொள்ளுவான் (வெளி 15:2-4; வெளி 20:4-6)

3 யூதர்களை மேற்கொள்ளுவான் (வெளி 13:7; தானி 7:21, தானி 12:7)

4 தேசங்களை ஜெயிப்பான் (வெளி 13:7, தானி 7:7-8,19-24; தானி 11:40-45)

5 இரகசிய பாபிலோனை அழிப்பான் (வெளி 17:12-17)

6 இரண்டு சாட்சிகளைக் கொலைசெய்வான் (வெளி 11:7)

7 காலங்களையும், பிரமாணங்களையும் மாற்றுவான் (தானி 7:25)

8 இரகசியங்களைப் புரிந்து கொள்வான் (தானி 8:23)

9 தன்னுடைய இஷ்டம்போல செயல்படுவான் (தானி 11:36)

10 அற்புதங்களைச் செய்வான் (வெளி 13:13; 2தெச 2:9)

17 அதிகாரம்

11 தன் உபாயத்தினால் வஞ்சகத்தைக் கைக்கூடி வரபண்ணுவான் தானி 8:25

12 பொருளாதாரத்தைத் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பான் தானி 11:38-43

13 பலரை வஞ்சிப்பான் (வெளி 13:1-18 2தெச 2:10

14 இஸ்ரவேலரோடு ஒப்பந்தம் செய்வான் தானி 9:27

15 மார்க்கங்களைக் கட்டுப்படுத்துவான் வெளி 13:1-18; தானி 11:36)

16 ஜனங்களுடைய ஜீவனகளைக் கட்டுப் படுத்துவான் (வெளி 13:12-18)

17 ராஜாக்களைக் கட்டுப்படுத்துவான் (வெளி 17:12-17

18 தேசங்களுக்குப் பயத்தை உண்டு பண்ணுவான் (வெளி 13:4)

19 கிறிஸ்துவிற்கு எதிராக யுத்தம் பண்ணுவான் (வெளி 19:19-21)

20 42 மாதங்களுக்கு ஆளுகை செய்வான் (வெளி 13:5)

"உலகத்தோற்றமுதல" - (வெளி 13:8)

(2) **மிருகத்தின் ஏழு தலைகளும் ஏழு இராஜாக்களாம்**

வெளி 17:9 ஞானமுள்ள மனம் இதிலே விளங்கும். அந்த ஏழு தலைகளும் அந்த ஸ்திரீ உட்கார்ந்திருக்கிற ஏழு மலைகளாம்.

வெளி 17:10 அவைகள் ஏழு ராஜாக்களாம் இவர்களில் ஐந்துபேர் விழுந்தார்கள் ஒருவன் இருக்கிறான், மற்றவன் இன்னும் வரவில்லை வரும் போது அவன் கொஞ்சக் காலம் தரித்திருக்கவேண்டும்.

"ஏழு தலைகளும் அந்த ஸ்திரீ உட்கார்ந்திருக்கிற ஏழு மலைகளாம் - ஏழு மலைகள் ஏழு ராஜாக்கள் அல்லது ஏழு ராஜ்ஜியங்களாகும். இவை இஸ்ரவேலின் ஆரம்பத்திலிருந்து எட்டாவது ராஜ்ஜியம் வரையிலும் கூட இருக்கும் (வெளி 17:9-11) புறஜாதியாரின் காலங்களில் இந்த ராஜ்ஜியங்கள் இஸ்ரவேலைத் துன்புறுத்தும் (லூக்கா 21:24; ரோமர் 11:25)

ஏழு ராஜ்ஜியங்களில ஐந்து ராஜ்ஜியங்கள் விழுந்தன அவை எகிப்து அசீரியா பாபிலோன் மேதிய-பெர்சியா, கிரேக்கு ஆகிய தேசங்களாகும். ஆறாவது ராஜ்ஜியம் பழைய ரோமப்பேரரசு ஏழாவது ராஜ்ஜியம் இன்னும் வரவில்லை ரோமப்பேரரசிலிருந்து பத்து ராஜ்ஜியங்களாக உருவாகும் ராஜ்ஜியமே ஏழாவது ராஜ்ஜியம். (தானி 7:23-24) ஏழாவது ராஜ்ஜியம் வரும்போது அது மூன்றரை வருஷக் காலம் தரித்திருக்க வேண்டும் (வெளி 12:12-14) இருந்ததும், இராமற்போனதும் இனி இருப்பதுமாயிருக்கிற மிருகம் நாசமடையும். (வெளி 17:9-11)

(3) **மிருகம் - எட்டாவதானவன்** - (வெளி 13:1-18; தானி 7:24, 8:23, 9:27; 11:40-45

வெளி 17:11 இருந்ததும் இராததுமாகிய மிருகமே எட்டாவதானவனும், அவ்வேழிலிருந்து தோன்றுகிறவனும் நாசமடையப் போகிறவனுமாயிருக்கிறான

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

17 அதிகாரம்

எட்டு மலை ராஜ்ஜியங்களும் இஸ்ரவேலும்

1 புறஜாதியாரின் காலத்தில் இஸ்ரவேலை ஒடுக்கிய முதலாவது தேசம் எகிப்து தேசமாகும். (லூக்கா 21:24; ரோமர் 11:25; வெளி 11:1-2) வேதாகமத்தில் எகிப்து அல்லது எகிப்தியர் என்னும் வார்த்தை 741 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ரோமப்பேரரசின் நாட்களில் கூட எகிப்து தேசம் இஸ்ரவேலின் விரோதியாய் இருந்தது. எகிப்து தேசத்தில் தான் இஸ்ரவேல் ஒரு தேசமாயிற்று. அவர்களுடைய அடிமைத்தனத்திலிருந்து மோசே அவர்களை விடுவிப்பதற்கு முன்பாக அவர்கள் அங்கு 80 வருஷங்கள் ஒடுக்கப்பட்டார்கள் (ஆதி 15:13-14; ஆதி 47 யாத் 15) எகிப்து தேசம் இஸ்ரவேலை ஒடுக்குகிற தேசமாகவே வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிறது. (1இராஜா 14 2இராஜா 17 2இராஜா 18:21 19:18 2இராஜா23:28 37 2இராஜா25:25 26. 2நாளா 14:9 12 2நாளா 16:7 9 ஏசா 30 31 எசே 29 32) சுமார் 3,750 வருஷங்கள் எகிப்து தேசம் இஸ்ரவேல் தேசத்தைத் தொடர்ந்து ஒடுக்கிற்று. இதன் பின்பு எகிப்து தேசம் அந்திக்கிறிஸ்துவின் கீழ் செயல்பட்டு எட்டாவது ராஜ்ஜியத்தின்போது மறுபடியும் இஸ்ரவேலை ஒடுக்கும். (தானி 8:21-25; தானி 11:40 45) எகிப்து தேசம் அதன் பின்பு பெரிய வல்லரசாக திரும்பவும் எழும்பாது. (எசே 29:15 தேவனுடைய நித்திய ராஜ்ஜியத்தில் எகிப்து தேசம் இஸ்ரவேல் தேசத்தோடு சேர்ந்து கர்த்தரைச் சேவிக்கும் (சங் 80:13 ஏசா 11:16; ஏசா 19:23-25 ஏசா 27:12-13; சக 10:10 11 சக 14:16 21

2 புறஜாதியாரின் காலத்தில் இஸ்ரவேலை ஒடுக்கிய இரண்டாவது பேரரசு அசீரிய பேரரசாகும். இதை ஸ்தாபித்தவர் நிம்ரோத் (Nimrod) (ஆதி 10:8-12) 1,300 வருஷங்களாக அசீரியா எகிப்தின்கீழ் இருந்தது. இஸ்ரவேலைச் சிட்சிப்பதற்கு தேவன் அசீரியாவிற்கு அனுமதி கொடுத்தார் (2இராஜா 15-16 2இராஜா 17-19 2இராஜா 23-24 வேதாகமத்தில் அசீரியா அல்லது அசீரியர் என்னும் வார்த்தை 175 தடவைகளுக்கு மேல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எல்லா இடங்களிலும் இஸ்ரவேலோடு தொடர்புபடுத்தியே வருகிறது. அசீரிய பேரரசு இஸ்ரவேல் தேசத்தை 75 வருஷங்களாக ஒடுக்கிற்று. புறஜாதியாரின் நாட்களில் இஸ்ரவேலை ஒடுக்கும் கடைசி அசீரியன் அந்திக் கிறிஸ்துவாக இருப்பான் (ஏசா 10:20-27 ஏசா 14:25 ஏசா 31:4-9 மீகா 5:5,6) தேவனுடைய நித்திய ராஜ்ஜியத்தில் இஸ்ரவேலோடு சேர்ந்து அசீரியாவும் ஆசீர்வதிக்கப்படும். (சங் 80:13 ஏசா 11:16 ஏசா 19:23-25

3 புறஜாதியாரின் காலங்களில் இஸ்ரவேல் தேசத்தை ஒடுக்கிய மூன்றாவது பேரரசு பாபிலோனிய பேரரசாகும். தானியேல் புஸ்தகத்தில் பாபிலோனிய பேரரசே முதலாவதாக கூறப்படுகிறது. இதன் அடிப்படையில் புறஜாதியாரின் காலத்தை வேதபண்டிதர்களில் சிலர் பாபிலோன் பேரரசிலிருந்து ஆரம்பிக்கிறார்கள். ஆனால் எகிப்தும், அசீரியாவும் பாபிலோனுக்கு முன்பாகவே இஸ்ரவேல் தேசத்தை ஒடுக்கிக் கொண்டிருந்தது. எனவே புறஜாதியாரின் காலத்தை எகிப்து தேசத்திலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். தானியேல் தன்னுடைய காலத்திலிருந்து இனிமேல் வரப்போகிற காலத்தைத் தரிசித்தான். ஆனால் யோவானோ புறஜாதியாரின் காலத்தை எகிப்திலிருந்து துவக்கி ரோமப்பேரரசு வரையிலும் பார்த்தான். எட்டாவது ராஜ்ஜியம் புறஜாதியாரின் காலத்தை நிறைவாக்கும்.

17 அதிகாரம்

அசீரியாவைவிட பாபிலோன் வலிமையில் குறைந்திருந்தது. இஸ்ரவேலுக்கு எதிராக பாபிலோன் அசீரியாவிற்கு உதவி புரிந்தது. (2இராஜா 17:24-30; 2நாளா 33:11) யூதாவை 70 வருஷங்களுக்கு சிறையிருப்பில் வைத்திருப்பதற்கு தேவன் பாபிலோனைத் தெரிந்தெடுத்தார் (2இராஜா 20 நாளா 29; எரே 24). தானியேலின் தரிசனத்தில் பாபிலோன் பொன்னாலாகிய தலையாகவும் (வெளி 2:37-38) சிங்கமாகவும் (வெளி 7:4) வர்ணிக்கப்படுகிறது. வேதாகமத்தில் பாபிலோன் என்னும் வார்த்தை 284 இடங்களில் பயன் படுத்தப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலோடு தொடர்புபடுத்தியே இந்த வார்த்தை வருகிறது. வருங்காலத்தில் இஸ்ரவேலை ஒடுக்கும் தேசங்களில் பாபிலோனும் ஒன்றாகும். (ஏசா 13-14, எரே 50-51

4 புறஜாதியாரின் காலங்களில் இஸ்ரவேலை ஒடுக்கும் நான்காவது தேசம் மேதிய-பெர்சியா தேசமாகும். தானியேலில் கூறப்பட்டிருக்கும் இரண்டாவது மிருகம். இதற்கு வெள்ளியிலான மார்பும், புயமும் இருந்தது (தானி 2:32,39 கரடி தானி 7:5 ஆட்டுக்கடா (தானி 8:20) என்றும் இது வர்ணிக்கப்படுகிறது. வேதாகமத்தில் 58 தடவை மேதிய- பெர்சியா என்னும் வார்த்தை பயன படுத்தப்பட்டிருக்கிறது. வேதாகமத்தில் இந்தத் தேசத்திற்கு மிகவும் முக்கியமான பங்குண்டு (2இராஜா 17:6, 2இராஜா 18:11; ஏசா 13:17 தானி 5, தானி 10:13 21 தானி 11:1 2; எஸ்றா 1:1 8 எஸ்றா 4:1-9:9; நெகே 1 1:1) அந்திக்கிறிஸ்துவின் கடைசி நாட்களில் அந்திக்கிறிஸ்துவின்கீழ் மேதிய- பெர்சிய தேசம் தீர்க்க தரிசனத்தைநிறைவேற்றும்.(எசே 38 39) மேதிய- பெர்சிய தேசம் இஸ்ரவேல் தேசத்தை 100 வருஷங்களுக்கு மேலாகத் துன்புறுத்திற்று. சங் 80:13)

5 புறஜாதியாரின் காலங்களில் இஸ்ரவேலை ஒடுக்கிய ஐந்தாவது தேசம் கிரேக்கு தேசமாகும். தானியேலில் இது மூன்றாவதாக கூறப்படுகிறது. வெண்கலத்தாலாகிய வயிறும், தொடையும் (தானி 2:32,39 சிறுத்தை (தானி 7:6), வெள்ளாட்டுக் கடா(தானி 8:5-9,20-25) என்றும் கிரேக்கு தேசம் வர்ணிக்கப் பட்டிருக்கிறது. 9 இடங்களில் மட்டுமே இந்தத் தேசத்தைப் பற்றிய குறிப்பு வேதாகமத்தில் உள்ளது. பழைய ஏற்பாட்டிற்கும், புதிய ஏற்பாட்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் இந்தத் தேசம் இருந்ததினால் இதைப் பற்றிய குறிப்பு குறைவாக உள்ளது. தள்ளுபடி ஆகமமான(Apocrypha)மக்கபியரில் (Maccabees) கிரேக்கு தேசத்தைப் பற்றியகுறிப்புக்கள்உள்ளன தானி 8; தானி 11, தானி 12; வெளி 6:1-8 வெளி 13:1-18; வெளி 17:9-17 வெளி 19:19-21 ஆகிய வசனங்கள் எல்லாவற்றையும் கிரேக்கு தேசத்தோடு தொடர்புபடுத்தியே வியாக்கியானம் பண்ண வேண்டும் கிரேக்கு தேசம் எட்டாவது ராஜ்யமாக புதுப்பிக்கப்படும் கிரேக்கு, சீரியா, எகிப்து ஆகிய தேசங்கள் இஸ்ரவேல தேசத்தை 250 வருஷங்களுக்கு மேலாகத் துன்புறுத்தினார்கள் மிருகத்தின் மேலுள்ள ஐந்தாவது தலை கிரேக்கு தேசமாகும். (வெளி 17:9-11 இருந்ததும், இராததுமாகிய மிருகமே எட்டாவதானவன் இந்தத் தலை காயப்பட்டு பின்பு சொஸ்த மாக்கப்பட்டது. (வெளி 13:3,12

6 புறஜாதியாரின் காலங்களில் இஸ்ரவேல தேசத்தைத் துன்புறுத்திய ஆறாவது தேசம் ரோமப்பேரரசாகும். தானியேலில் இது நான்காவதாகக் கூறப்பட்டிருக்கிறது. இரும்புக்கால்கள் (தானி 2:33,40), முன்னிருந்த எல்லா மிருகங்களையாகிலும்வேற்றுருவம் (தானி 7:7-8,23-24), மிருகத்தின் மீதுள்ள ஆறாவது தலை (வெளி 17:9-17) ஆகியவை ரோமப்பேரரசின் அடையாளமாகும். ரோமப் பேரரசு இஸ்ரவேல் தேசத்தை 200 வருஷங்களுக்கு ஒடுக்கிற்று.

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

17 அதிகாரம்

கி.பி. 70 ஆம் வருஷத்தில இஸ்ரவேல ஜனங்கள் ரோமப பேரரசின் உபத்திரவத்தினால் சிதறிப போனார்கள். (தானி 9:26-27 மத் 24:1-3; லூக்கா 21:20-24) இந்தப் பிரதேசத்திலிருந்து அடுத்த இரண்டு ராஜ்ஜியங்கள் எழும்பும்

7 புறஜாதியாரின் காலங்களில் இஸ்ரவேலை ஒடுக்கும் மற்றொரு சாமராஜ்யம் புதுப்பிக்கப்பட்ட ரோமப்பேரரசாகும். கடைசி நாட்களில ரோமப்பேரரசிற்குள் பத்து ராஜ்ஜியங்கள் ஒன்றுசேர்ந்து இந்த ராஜ்ஜியத்தை உண்டு பண்ணும். இது திருத்தி அமைக்கப்பட்ட (Revised) ரோமப்பேரரசு. திரும்பவும் உயிர்ப்பிக்கப்பட்ட (Revived) பேரரசு அல்ல. ரோமப்பேரரசு திரும்பவும் உயிர்ப்பிக்கப் பட்டிருந்தால இந்தப் பேரரசை ரோமாபுரியிலிருந்து ஒரு பேரரசன் ஆளுகை செய்வான். ஆனால இங்கு பத்து ராஜ்ஜியங்கள் உள்ளன அவற்றை பத்து ராஜாக்கள் ஆளுகை செய்வார்கள் இவர்களுக்கு பத்து வெவ்வேறு தலைநகரங்கள் இருக்கும் இவையெல்லாமே ரோமப்பேரரசிற்குள் இருக்கும். பத்து கால்விரல்கள் (தானி 2:40-45) பத்துக்கொம்புகள் (தானி 7:7-8,19-24) பத்துக்கொம்புகள் (வெளி 12:3 வெளி 13:1, வெளி 17:9-17) என்று இந்த ராஜ்ஜியம் வர்ணிக்கப் படுகிறது.

8 புறஜாதியாரின் காலங்களில இஸ்ரவேல தேசத்தை ஒடுக்கும் வருங்கால பேரரசுகளில புதுப்பிக்கப்பட்ட கிரேக்கு தேசம் இரண்டாவதாக வருகிறது. இதுவே உலகத்தின் கடைசி வல்லரசு ஆகும். அந்திக்கிறிஸ்து பத்து ராஜ்ஜியங்களிலிருந்து வருவான அவற்றில மூன்று ராஜ்ஜியங்களை அகற்றுவான் மற்ற ராஜ்ஜியங்கள் அந்திக்கிறிஸ்துவிற்குக் கீழ்ப்படிந்து எட்டாவது ராஜ்ஜியமாக உருவாகும். (தானி 7:23-24, வெளி 17:8-17 இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகையின் போது எட்டாவது ராஜ்ஜியத்தை ஜெயிப்பார் இதன் மூலமாகப புறஜாதியாரின் காலங்கள் முடிவு பெறும்.

கால்விரல்களும், கொம்புகளும் - உபதேச [redacted]

1 இவ்விரண்டும் ஒரே எண்ணிக்கையில் உள்ளன (வெளி 12:3; வெளி 13:1 வெளி 17:12; தானி 2:40-45, தானி 7:7-27)

2 இவை ஒன்றுசேர்ந்து அர்மகெதோனில் கிறிஸ்துவிற்கு எதிராக யுத்தம் பண்ணும் (வெளி 17:14 வெளி 19:11-21; தானி 2:34-35,44-45 தானி 7:8-14, 21-27)

3 இவை ரோமப்பேரரசிற்குப் பின்பு வரும் (வெளி 17:12-17; தானி 2:44-45 தானி 7:7-8,23-24)

4 ஒரே காலத்தில ஒரே மிருகத்தோடு இவை தொடர்புடையவை (வெளி 17:12-17; வெளி 19:19-21 தானி 7:8,11,21-27)

5 தானி 7:7-8,19-24 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் சின்ன கொம்பும் வெளி 17:9-17 ஆகிய வசனங்களில கூறப்பட்டிருக்கும் மிருகமும் ஒன்றே. இவை பத்து ராஜாக்களுக்குப்பின்பு எழும்பும் தங்களுக்குள் எழும்பும் (வெளி 17:12-17; தானி 7:7-8,23-24

6 இவை ஒரே காலத்தில் ஒரே மனுஷனுக்குக் கீழ் இருக்கும் (வெளி 13:1-8 வெளி 17:12-17 தானி 7:23-24)

7 இவை இருக்கும் காலத்தில் தேவனுடைய ராஜ்ஜியமும், கிறிஸ்துவின் ராஜ்ஜியமும் ஸ்தாபிக்கப்படும். (வெளி 17:14 வெளி 19:11-21 தானி 2:44-45, தானி 7:7-27)

17 அதிகாரம்

8 இவை தங்களுடைய பெலனையும் வல்லமையையும், அதிகாரத்தையும் ஒரே மனுஷனுக்கு ஒரே காலளவுக்கு கொடுக்கும் வெளி 13:5 வெளி 17:8-17 தானி 7:23-25 தானி 12:7

9 வெளி 17:8-17 ஆவது வசனத்தில ஏழாவது ராஜ்ஜியமும், பத்து கொம்புகளும் ஒன்றே. ஆறாவது ராஜ்ஜியம் ரோமப் பேரரசு எட்டாவது ராஜ்ஜியம் அந்திக் கிறிஸ்துவின ராஜ்ஜியம் (வெளி 17:8-17) பத்துக் கொம்புகளாகிய ஏழாவது ராஜ்ஜியம் ஆறாவது ராஜ்ஜியத்திறகுப் பினபும் எட்டாவது ராஜ்ஜியத்திறகு முனபும் வரும் தானி 2:40-45 தானி 7:7-8,23-24 ஆகிய வசனங்களில கூறபபட்டிருககும பததுககாலவிரலகளும பததுக் கொமபுகளும ரோமப பேரரசிலிருநது வரும இது சினனக் கொமபாகிய அநதிக்கிறிஸதுவின ராஜ்ஜியததிறகு முனபு வரும. ஆகையினால பததுக காலவிரலகளும் பததுக கொம்புகளும ஒனறே எனறு வேதபணடிதாகள வியாககியானம கூறுகிறார்கள

10 தானியேல புஸ்தகத்திலும் வெளிப்படுத்தின விசேஷம புஸ்தகத்திலும கூறபபட்டிருககும பத்துக் கொம்புகள மிருகம அலலது சினனக்கொம்பிறகு முனபாகவும், பினபாகவும் ஆளுகை செயயும். முந்திய ஆளுகைக்கும், பிந்திய ஆளுகைக்கும் வேறுபாடு இருககும் மிருகத்திற்கு முனபாக ஆளுகை செயயுமபோது, அவை சுயாதீனமாக இருக்கும் மிருகத்திற்குபபினபு அவை அநத மிருகத்திறகுக் கட்டுப்பட்டிருக்கும் பத்துக் கொமபுகள ஏழாவது ராஜ்ஜியத்தை ஆளுகை செயயும் மிருகம் எட்டாவது ராஜ்ஜியத்தை ஆளுகை செயயும். இதன காரணமாகவும் காலவிரலகளும், கொம்புகளும் ஒனறே எனறு வேதபணடிதாகள வியாக்கியானம் கூறுகிறாாகள

(4) பத்துக் கொம்புகளும் பத்து இராஜாக்களாம் - (தானி 7:8,23-24; வெளி 13:1-3

வெளி 17:12 நீ கண்ட பத்துக் கொமபுகளும் பத்து ராஜாக்களாம் இவர்கள் இன்னும் ராஜ்யம் பெறவிலலை இவர்கள் மிருகத்துடனேகூட ஒருமணி நேரமளவும் ராஜாக்கள்போல அதிகாரம பெறறுக்கொள்ளுகிறார்கள்

"இவர்கள் இன்னும் ராஜ்யம் பெறவில்லை" - யோவானின் காலத்தில ஒரு ராஜ்யமும் இலலை. கடைசி நாட்களில் ரோமபபேரரசிறகுள் பத்து ராஜ்ஜியங்கள் உருவாகும. இநத ராஜ்ஜியங்களை இவர்கள் பெறறுக் கொளவார்கள இவர்கள் ஒரே யோசனை உளளவர்கள முதல மூன்றரை வருஷங்களில இவர்கள் சுயாதீனமாக ஆளுகை செயவாாகள கடைசி மூனறரை வருஷங்களில இவர்கள் தஙகள வலலமையையும அதிகாரத்தை யும் மிருகததிறகுக கொடுபபார்கள (வெளி 17:10-17; வெளி 13:5

(5) ஏழு இராஜாக்கள் தங்கள் வல்லமையையும் அதிகாரத்தையும் மிருகத்திற்குக் கொடுப்பார்கள் - (19:19-21, தானி 8:25)

வெளி 17:13 இவாகள ஒரே யோசனை யுளளவாகள; இவாகள தஙகள் வலலமையையும் அதிகாரத்தையும் மிருகததிறகுக் கொடுபபாாகள்

வெளி 17:14 இவர்கள் ஆட்டுக் குட்டியானவருடனே யுத்தம் பணணுவாாகள ஆட்டுக்குட்டியானவா காததாதி காத்தரும் ராஜாதி ராஜாவுமாயிருக்கிறபடியால அவாகளை ஜெயிபபார், அவரோடுகூட இருக்கிறவாகள் அழைக்கபபட்டவாகளும் தெரிந்து கொளளப பட்டவாகளும் உணமையுளளவா களுமாயிருக் கிறாாகள எனறான

17 அதிகாரம்

"இவர்கள் ஆட்டுக்குட்டியானவருடனே யுத்தம்பண்ணுவார்கள்" - பத்து ராஜாக்கள் இன்னும் வரவில்லை. இவர்கள் இனிமேல் வந்து அர்மகெதோனில் இயேசு கிறிஸ்துவோடு யுத்தம் பண்ணுவார்கள் (வெளி 17:14; வெளி 19:19-21; தானி 2:44-45; தானி 7:23-27; தானி 8:20-25; தானி 11:45; தானி 12:7)

(6) தண்ணீர்கள் - ஜனக் கூட்டங்களும் ஜாதிகளும் பாஷைக்காரரும் (வசனம் 15; 13:1; தானி 7:2,17)

வெளி 17:15 பின்னும் அவன் என்னை நோக்கி: அந்த வேசி உட்கார்ந்திருக்கிற தண்ணீர்களைக் கண்டாயே; அவைகள் ஜனங்களும் கூட்டங்களும் ஜாதிகளும் பாஷைக்காரருமாம்.

(7) மிருகத்தின்மீது இருக்கும் பத்து கொம்புகளானவர்கள் (13:8,16,18; 14:9,11; 15:2; 16:2; 19:20; 20:4)

வெளி 17:16 நீ மிருகத்தின்மேல் கண்ட பத்துக் கொம்புகளானவைகள் அந்த வேசியைப் பகைத்து, அவளைப் பாழும் நிர்வாணமுமாக்கி, அவளுடைய மாம்சத்தைப் பட்சித்து, அவளை நெருப்பினால் சுட்டெரித்துப்போடுவார்கள்.

வெளி 17:17 தேவன் தம்முடைய வார்த்தைகள் நிறைவேறுமளவும் அவர்கள் தமது யோசனையை நிறைவேற்றுகிறதற்கும், ஒரே யோசனையுள்ளவர்களாயிருந்து தங்கள் ராஜ்யத்தை மிருகத்திற்குக் கொடுக்கிறதற்கும் அவர்களுடைய இருதயங்களை ஏவினார்.

"அந்த வேசியைப் பகைத்து, அவளைப் பாழும் நிர்வாணமுமாக்கி, அவளுடைய மாம்சத்தைப் பட்சித்து, அவளை நெருப்பினால் சுட்டெரித்துப் போடுவார்கள்" மகா வேசி அழிக்கப்படுகிறாள். அந்திக் கிறிஸ்துவின் காலத்தில் பத்து ராஜ்யங்களிலும், மார்க்கபேதம் பிரதானமாக இருக்கும். இந்தத் துன்மார்க்க மார்க்கம் அவர்களை ஆளுகை செய்யும் (வெளி 17:16-17). தானியேலின் எழுபதாவது வாரத்தின் நடுவில் இந்த நிகழ்ச்சி நடைபெறும். இக்காலத்தில் பத்து ராஜாக்கள் தங்கள் வல்லமையையும் அதிகாரத்தையும் அந்திக் கிறிஸ்துவிற்குக் கொடுப்பார்கள் (வெளி 17:17; வெளி 13:5)

4. ஸ்திரீ - மகா நகரம்

வெளி 17:18 நீ கண்ட ஸ்திரீயானவள் பூமியின் ராஜாக்கள்மேல் ராஜ்யபாரம் பண்ணுகிற மகா நகரமேயாம் என்றான்.

மகா வேசி ஒரு மார்க்க அமைப்பு - உபதேச விளக்கம்

1. வேசித்தனம் பண்ணுவது விக்கிரகாராதனைக்கும் மார்க்க வேசித்தனத்திற்கும் அடையாளமாகக் கூறப்படும் வார்த்தையாகும் (வெளி 17:1-4; ஏசா 23:17; ஏசா 57:3-7; எரே 3:2-9; எசே 16:1-63; எசே 20:30-32; எசே 23:7-49; ஓசி 4:12-19; நாகூம் 3:4). இந்த வசனங்களில் சிலவற்றை பிரத்தியட்ச வேசித்தனத்திற்குப் பயன்படுத்தலாம்.

2. பல தேசங்களோடு மகா வேசி வேசித்தனம் பண்ணுவாள். தேசங்களுடைய விக்கிரகாராதனையை வேசித்தனம் குறிப்பிடுகிறது.

3. மகா வேசி அரசியல் அதிகாரம் உடையவளல்ல. இவள் பூமியின் ராஜாக்களில் ஒருவருமல்ல. அவளுடைய வேசித்தனமாகிய மதுவால் பூமியின் ராஜாக்களும், குடிகளும் வெறிகொண்டிருந்தார்கள் (வெளி 17:2,4). வேசித்தனம் என்பது மார்க்க வேசித்தனத்தைக் குறிப்பிடுகிறது. தன்னுடைய மார்க்கத்தின் மூலமாகத் தேசங்களின் மார்க்கக் காரியங்களில் மகாவேசி தலையிட்டு, தன்னுடைய மார்க்கத்தைப் பின்பற்றுமாறு ராஜாக்களையும் குடிகளையும் வழிநடத்துவாள்.

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

17 அதிகாரம்

4 ஒரு ஸ்திரீ சிவப்பு நிறமுள்ள மிருகத்தின் மேல் ஏறியிருந்தாள் அந்த மிருகம் எட்டாவது ராஜ்ஜியமாகும். அந்த மகா வேசி தண்ணீர்கள் மேல் உட்கார்ந்திருக்கிறாள். தண்ணீர்கள் என்பது பழைய ரோம பேரரசிற்குள் இருந்த ஜனங்களைக் குறிக்கும் (வெளி 17:1,3,11,15) மிருகம் என்பது ராஜ்ஜியம் ஸ்திரீயானவள் ஒரு மார்க்கம். அந்த ராஜ்ஜியம் அந்த ஸ்திரீயை அழிக்கும் வரையிலும். அவள் அந்த ராஜ்ஜியத்தின்மீது மார்க்க ரீதியாக அதிகாரம் செலுத்துவாள் (வெளி 17:12-17)

5 மகாவேசி என்பது ஒரு உவமைச் சொல் இது ஒரு மார்க்கத்தைக் குறிக்கும் இந்த மார்க்கம் ஆவிக்குரிய ரீதியாக வேசித்தனம் பண்ணுகிறது. தன்னுடைய அருவருப்புகளாலும் அசுத்தங்களாலும் தனக்கு அரசியல் அதிகாரம் இருப்பது போன்று ஒரு மாயையான தோற்றத்தை உண்டு பண்ணுகிறாள் இரத்தாம்பரமும் சிவப்பான ஆடையும் தரித்து, பொன்னினாலும் இரத்தினங்களினாலும் முத்துக்களினாலும் அந்த மகாவேசி சிங்காரிக்கப்பட்டிருக்கிறாள் (வெளி 17:4) இது அவளுடைய ஐசுவரியத்தைக் காண்பிக்கிறது. (எசே 23:40-41)

6 அந்த வேசி தன் கையிலே தன் வேசித்தனமாகிய அருவருப்புகளாலும் அசுத்தத்தாலும் நிறைந்த பொற்பாத்திரத்தைப் பிடித்திருக்கிறாள் இது அவளுடைய மாயையான அரசியல் செல்வாக்கைக் குறிப்பிடுகிறது. மகா வேசி என்பது மார்க்க வல்லமை என்பதை இதுவும் தெளிவுபடுத்துகிறது. (எசே 23:29-31)

7 இந்த மகா வேசியின் பெயர் "இரகசியம் மகாபாபிலோன்" "MYSTERY BABYLON," ஆகையினால் இவள் பிரத்தியட்சமான பாபிலோன் (literal Babylon) அல்ல.

8 மகா வேசியின் பெயரில் "வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய" "MOTHER OF HARLOTS," என்றும் இருக்கிறது. (வெளி 17:5) இதனால் மகாவேசி என்பவள் ஒரு மார்க்க அமைப்பையே குறிப்பது தெரிய வருகிறது. வேசிகள் என்பது மகாவேசியின் கிளைகளாகும். ஆகையினால் இந்த வேசியானவள் வேரூன்றி, பல கிளைகளாக வளர்ந்து மகாவேசியாக இருக்கிறாள் சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு புதுபிக்கப்பட்ட ரோமப்பேரரசில் பத்து ராஜ்ஜியங்களைப் பத்து ராஜாக்கள் ஆளுகை செய்வார்கள் இந்த ராஜ்ஜியங்களிலுள்ள மார்க்க பேதங்களெல்லாம் வேசிகள் என்று அழைக்கப்படுகிறது மகாவேசியானவள் இந்த வேசிகளுக்கெல்லாம் தாயாக இருக்கிறவள் எல்லா மார்க்க பேதங்களும் அதாவது எல்லா வேசிகளும் பூமியிலுள்ள எல்லா அருவருப்புகளும் ஒன்று சேர்ந்து மகா வேசியாக உருவெடுக்கும் இந்த மகா வேசி பத்து ராஜாக்களையும் ஆளுகை செய்யும். இதன் பின்பு அந்திக்கிறிஸ்துவின் ஆளுகை வரும் தானியேலின் எழுபதாவது வாரத்தின் மத்தியில பத்து ராஜாக்களும் தங்களுடைய அதிகாரத்தை அந்திக்கிறிஸ்துவிடம் கொடுத் விடுவார்கள் (வெளி 17:1,3,9-17) அதுவரையிலும் மகாவேசியானவள் அவளுடைய வேசித்தனமாகிய மதுவை பூமியின் ராஜாக்களுக்கும், குடிகளுக்கும் குடிக்கக் கொடுப்பாள் அவர்களும் அவளுடைய வேசித்தனத்தினால வெறி கொண்டிருப்பார்கள்

9 மகா வேசியின் பெயரில "பூமியிலுள்ள அருவருப்புக்களுக்கு தாய்" "MOTHER OF ABOMINATIONS OF THE EARTH," என்றிருக்கிறது.

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

17 அதிகாரம்

பூமியிலுள்ள எல்லா அருவருப்புக்களையும் மகா வேசி தாங்கிக் கொள்வாள். விக்கிரகாராதனையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு ஆவிக்குரிய வேசித்தனத்தில் பங்குபெறுவாள். அருவருப்பு (abominations) என்னும் வார்த்தை புறஜாதியாரின் விக்கிரகாராதனையோடும், வேசித்தனத்தோடும் தொடர்புபடுத்தி பல வசனங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (உபா 18:9-12; உபா 29:17-18; உபா 32:16-17; இராஜா 14:24; 2இராஜா 16:1-4; 2இராஜா 21:2-11; எசே 16:22-58) வருங்கால உபத்திரவக் காலத்தில் வரும் மகா வேசியானவள் தேவனுடைய பார்வையில் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கெல்லாம் தாயாக இருப்பாள். ஏனெனில் இவள் தன்னுடைய துன்மார்க்கத்தினால் எல்லோரையும் மிஞ்சிவிடுவாள்.

10 ஸ்திரீயானவள் பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும் இயேசு கிறிஸ்துவினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும் வெறி கொண்டிருப்பாள். இவள் ஒரு மார்க்க அமைப்பு. இயேசு கிறிஸ்துவின் பரிசுத்தவான்களை மார்க்க அமைப்பினரே இதுவரை கடந்து வந்த வரலாற்றுக் காலங்களில் கொன்று போட்டிருக்கிறார்கள். மார்க்கத் தலைவர்களின் பேச்சைக்கேட்டு, அவர்களுக்கு சாதகமாக அரசாங்கங்களும் செயல்பட்டிருக்கின்றன. மார்க்கத்தின் அடிப்படையிலேயே தேவனுடைய பரிசுத்தவான்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். வெளி 17:6 ஆவது வசனம் சடை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு, வருங்காலத்தில் நடைபெறப் போகிற காரியத்தை முன்னறிவிக்கிறது. இரகசிய பாபிலோனியாகிய மார்க்க அமைப்பு தேவனுடைய பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும், இயேசு கிறிஸ்துவினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும் வெறி கொண்டிருக்கும்.

11 தானியேலின் எழுபதாவது வாரத்தின் முதல் மூன்றரை வருஷங்களில் மகாவேசி பத்து ராஜாக்களைத் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருப்பாள். அவளுடைய மார்க்கச் செல்வாக்கு மிகுந்திருக்கும். அதன் பின்பு, பத்து ராஜாக்களும் அவளை வெறுத்து விடுவார்கள். தங்களுடைய அதிகாரத்தையும், வல்லமையையும் அந்திக்கிறிஸ்துவிடம் கொடுத்து விடுவார்கள். பத்து ராஜாக்களும் அந்த வேசியைப் பகைத்து, அவளைப் பாழும் நிர்வாணமுமாக்கி, அவளுடைய மாமசத்தைப் பட்சித்து, அவளை நெருப்பினால் சுட்டெரித்துப் போடுவார்கள். இதன் பின்பு அந்திக்கிறிஸ்து கடைசி மூன்றரை வருஷங்களில் மிருகத்தை வணங்கும் மார்க்கத்தை ஸ்தாபிப்பான். (வெளி 17:12-17)

12 மகாவேசியானவள் மிருகத்தின்மேல் ஏறி இருக்கிறாள். அதன் தலைகளின்மீதோ கொம்புகளின்மீதோ ஏறியிருக்கவில்லை. (வெளி 17:3; 17:5) மிருகத்தின் மீதுள்ள ஏழு தலைகளும் பத்துக் கொம்புகளும் அந்த மிருகத்தின் ஒரு பகுதியாகும். இந்த அடிப்படையில்தான் அந்த ஏழு தலைகளைப் பற்றி வேதவாக்கியம் கூறும்போது "அந்த ஏழு தலைகளும் அந்த ஸ்திரீ உட்கார்ந்திருக்கிற ஏழு மலைகளாம்" (வெளி 17:9) என்று கூறுகிறது. மிருகம் எட்டாவது ராஜ்யமாகும். (வெளி 17:11) ஸ்திரீயானவள் இந்த ராஜ்யத்திலிருந்து வேறுபட்டவள். அந்த ராஜ்யத்திலுள்ள ராஜாக்கள் மீதும் ஜனங்கள்மீதும் ஏறியிருக்கிறவள். அதாவது அவர்களை ஆளுகை செய்கிறவள். ஆகையினால் மகா வேசி என்பது ஒரு மார்க்க அமைப்பு என்று வேதபண்டிதர்கள் வியாக்கியானம் கூறுகிறார்கள்.

17 அதிகாரம்

13 மகாவேசி ராஜாக்களை ஆவிக்குரிய ரீதியாக ஆளுகை செய்கிறாள். வெளி 17:18 ஆவது வசனத்தின் கிரேக்க மூலபாஷை பதிப்பு இவ்வாறு கூறுகிறது. "நீ கண்ட ஸ்திரீயானவள் பூமியின் ராஜாக்கள்மேல் ராஜ்யபாரம் பண்ணுகிற மகா நகரமேயாம்" "And the woman whom thou sawest is the city the great, which has a kingdom over the kings of the earth" மகா வேசிக்கு ராஜ்யங்களுக்குள் ஒரு ராஜ்யம் இருக்கிறது. இவள் பூமியின் ராஜாக்கள்மேல் ராஜ்யபாரம் பண்ணுகிறாள். பழைய ரோமப்பேரரசின் பகுதியிலுள்ள பத்து ராஜ்யங்களில் மகா வேசி ஒரு மார்க்க அமைப்பாக ஆளுகை செய்கிறாள். இவளுடைய தலைநகரம் மகா நகரம். இவள் பூமியின் ராஜாக்கள்மேல் ராஜ்யபாரம் பண்ணுகிறாள். தன்னுடைய வல்லமையினால் மகாவேசி ராஜாக்களை ராஜ்யபாரம் பண்ணமாட்டாள். அவளால் அவ்வாறு செய்யவும் முடியாது. தன்னுடைய பெருசகத்தினாலும், ஏமாற்றுக்களினாலும், அருவருப்புகளினாலும், ஆவிக்குரிய வேசித்தனங்களினாலும் இவள் ராஜாக்களை வெற்கொள்ளச் செய்து, அவர்கள்மீது ராஜ்யபாரம் பண்ணுகிறாள்.

மகாநகரம் - பிரத்தியட்ச பாபிலோன்

வெளி 17 ஆவது அதிகாரத்தில் இரண்டு விதமான பாபிலோன்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. ஒன்று இரகசிய பாபிலோன் மற்றொன்று பிரத்தியட்ச பாபிலோன். இரகசிய பாபிலோன் என்பது மகாவேசியாகும். இது ஒரு மார்க்க அமைப்பு. பிரத்தியட்ச பாபிலோன் என்பது மகாநகரம். இது ஒரு தேசத்தின் தலைநகரம்.

1 வெளி 16:17-21, வெளி 18:1-24 ஆகிய வசனங்களில் பிரத்தியட்ச பாபிலோனைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

2 இவ்விரண்டு வசனப் பகுதிகளுக்கும் இடையில் இரகசிய பாபிலோன் ஒரு இணைப்புப் பகுதியாக இணைக்கப்பட்டிருக்கிறது. பாபிலோனின் மார்க்க அம்சத்தை விளக்குவதற்காக இந்தப் பகுதி இணைக்கப்பட்டிருக்கிறது (வெளி 18:2).

3 மகாவேசியின் நாமம் "இரகசியம் மகா பாபிலோன்" என்பதாகும். பிரத்தியட்ச பாபிலோனோடு இதற்குரிய தொடர்பை இந்த நாமம் வெளிப்படுத்துகிறது (வெளி 17:5).

4 நோவாவின் காலத்தில் ஏற்பட்ட ஜலப்பிரளயத்திற்குப் பின்பு தேவனுக்கு எதிராக முதலாவது கலகம் நடைபெற்ற இடம் பாபிலோனாகும் (ஆதி 11). கடைசி காலத்தில் தேவனுக்கு எதிராக பெரிய கலகம் நடைபெறப்போகும் இடமும் மகாநகரமாகிய பாபிலோனேயாகும் (வெளி 14:8; வெளி 16:17-21; வெளி 18:1-24).

5 பிரத்தியட்ச பாபிலோன் வேதாகமத்தில் எப்பொழுதும் பிசாசுகளின் மார்க்கங்களோடும் விக்கிரகாராதனையோடும் தொடர்புபடுத்தியே பயன்படுத்தப்பட்டிருக்கிறது (ஏசா 21:9; ஏசா 47:9-13; வெளி 18:2-3,23).

6 பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் பிரத்தியட்ச பாபிலோனைப் பற்றி கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனங்களில் பல இன்னும் நிறைவேறவில்லை. (ஏசா 13:1-22; ஏசா 14:1-27; ஏசா 43:14; ஏசா 47:1-15; ஏசா 48:20; எரே 50:51; சக 5:5-11; வெளி 14:8; வெளி 16:17-21; வெளி 18:1-24). ரோமாபுரி நகரத்தைப் பற்றி ஒரு தீர்க்கதரிசனமும் கூறப்படவில்லை.

7 புறஜாதியாரின் காலங்களில் எட்டு ராஜ்யங்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. அவையாவன: எகிப்து, அசீரியா, பாபிலோன், மேதிய-பெர்சியா, கிரேக்கு, ரோமப்பேரரசு, புதுப்பிக்கப்பட்ட ரோமப்பேரரசு, புதுப்பிக்கப்பட்ட கிரேக்கு தேசம் என்பனவாகும்.

17 அதிகாரம்

இந்தத் தேசங்களில் பாபிலோன் நகரத்தின் பெயர் மட்டுமே தீர்க்கதரிசனமாகக் கூறப்பட்டிருக்கிறது. மெம்பீஸ் நினிவே சூசான் ரோமாபுரி ஆகிய பட்டணங்களைப் பற்றி தீர்க்கதரிசனங்களில் எதுவும் கூறப்படவில்லை பாபிலோன் நகரத்தைப் பற்றி மட்டுமே பல தீர்க்கதரிசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

8 பாபிலோனைப் பற்றி தீர்க்கதரிசனமாகக் கூறப்பட்டிருக்கும்போது இந்த பெயருக்கு வேறு ஏதாவது பொருள்கூற வேண்டுமென்னும் அவசியம் ஏற்படவில்லை. சோதோம் கொமோரா, நினிவே, தீரு, சீதோன் ஆகிய பட்டணங்கள் மீது கூறப்பட்ட தீர்க்கதரிசனங்கள் அவற்றின்மீதே நிறைவேறிற்று. அதுபோலவே பாபிலோனைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனமும் அந்த நகரத்தின்மீதே நிறைவேறும். வெளி 11:8 ஆவது வசனத்தில் எருசலேம் நகரம் சோதோம் என்றும் எகிப்து என்றும் ஞானார்த்தமாய் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையினால் எருசலேம் நகரம் சோதோமோ எகிப்தோ அல்ல. பாபிலோனுக்கு ஞானார்த்தமாய் எதுவும் சொல்லப்படாததினால் பாபிலோன் பிரத்தியட்சமான பாபிலோன் நகரத்தையே குறிக்கும்

9 பிரத்தியட்சமான பாபிலோன் நகரம் ராஜ்யங்களின் நாயகி (the lady of kingdoms) என்று கூறப்பட்டிருக்கிறது. (ஏசா 47:5,7)

10 கடைசி நாட்களில் பாபிலோன் நகரம் எல்லாப் பிசாசுகளுக்கும், அசுத்த ஆவிகளுக்கும் தலைநகரமாக இருக்கும் (வெளி 18:2)

11 பாபிலோன் நகரத்தினுடைய வேசித்தனத்தின் உக்கிரமான மதுவை எல்லா ஜாதிகளும் குடித்தார்கள் (வெளி 18:3) மகாவேசியாகிய இரகசிய பாபிலோனுடைய வேசித்தனமாகிய மதுவால் பூமியின் ராஜாக்களும், குடிகளும் வெறி கொண்டிருப்பார்கள் (வெளி 17:1,2)

12 கடைசி நாட்களில் பாபிலோன் பட்டணம் சூனியங்கள் மந்திரவாதங்கள் ஆகியவற்றின் மையப்பகுதியாக இருக்கும் (வெளி 18:23; ஏசா 47:9-10,12-13)

13 பாபிலோன் நகரத்தின்மீது தேவனுடைய கோபாக்கினையும் வாதைகளும் வரும். (வெளி 16:19 வெளி 18:4,6)

14 கடைசி நாட்களில் பாபிலோன் நகரத்தை விட்டு, தம்முடைய ஜனங்களை வெளியே வருமாறு தேவன் கட்டளையிடுவார் (வெளி 18:4 எரே 50:4-9 எரே 51:4-8,45)

15 பாபிலோன் நகரம் அழிந்து போனதினால் பரலோகம் களிகூர வேண்டுமென்று தேவன் கட்டளையிடுகிறார் தேவன் பாபிலோனை நியாயந்தீர்த்தார் (வெளி 18:20). வெளி 17 ஆவது அதிகாரத்தில் மகாவேசியின்மீது வரும் நியாயத்தீர்ப்பைப்போன்று இது இருக்கிறது. மகாவேசியும், இரகசிய பாபிலோனும் ஒன்றே. மகா நகரம் என்பது மகா பாபிலோன் நகரத்தைக் குறிக்கும். (வெளி 19:2). மகாவேசி என்பவள் மகா பாபிலோன் நகரத்தில் ஆவிக்குரிய வேசித்தனம் செய்தவள்

16 தேவனுடைய பரிசுத்தவான்களைக் கொன்றதற்காக பாபிலோன் நகரம் நியாயந்தீர்க்கப்படும். (வெளி 18:24) இரகசிய பாபிலோனும், பிரத்தியட்ச பாபிலோனும் தேவனுடைய பரிசுத்தவான்களைக் கொன்று போட்டன

17 இரகசிய பாபிலோன் என்பது ஒரு மார்க்க அமைப்பு பிரத்தியட்சமான பாபிலோன் நகரத்தை இரகசிய பாபிலோன் என்னும் மார்க்க அமைப்பு தலைநகரமாகக் கொண்டு செயல்படும்.

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

17 அதிகாரம்

18 அந்திக்கிறிஸ்து
ராஜாவாக இருப்பான் பாபிலோன் அவனுடைய தலைநகரமாக இருக்கும் (ஏசா 14:4) இது தானி 8:8-9,10-25 தானி 11:35-45 ஆகிய வசனங்களை நிறைவேற்றுகிறது. மகாவேசி மிருகத்தின்மேல் ஏறியிருப்பாள் அந்த மிருகம் அந்திக்கிறிஸ்துவின் ராஜ்ஜியம் (வெளி 17:7) பத்து ராஜ்ஜியங்களின்மீது ராஜ்யபாரம் பண்ணுவதற்கு முன்பாகவே மகாவேசி பாபிலோன் நகரத்தைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி புரிவாள் (வெளி 17:12-17)

பூமிக்குத் தாம் வருவதற்கு முன்பாக கள்ளக் கிறிஸ்துகளும், கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள் என்று இயேசு கிறிஸ்து முன்னறிவித்திருக்கிறார் (மத் 24:24) அந்திக் கிறிஸ்துவினுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும், அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும் இருக்குமென்று பவுல் முன்னறிவித்திருக்கிறார் (2தெச 2:8-12, வெளி 13:1-18 வெளி 19:20) பாபிலோன் பட்டணத்தில் எல்லா தேசங்களும் சூனியங்களினாலும் மந்திர வித்தைகளினாலும், பிசாசின் தந்திரங்களினாலும் வஞ்சிக்கப்படும். (வெளி 9:20, வெளி 14:8; வெளி 16:13-16,19 வெளி 18:23, ஏசா 47:9-10,12-13)

இரகசிய பாபிலோன், பிரத்தியட்ச பாபிலோன் ஆகிய இரண்டுமே வருங்காலத்தில் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றப்போகிற காரியங்கள் இரகசிய பாபிலோன் என்பது ஒரு மார்க்க அமைப்பு இதன் தலைநகரம் பிரத்தியட்ச பாபிலோன் தானியேலின் எழுபதாவது வாரத்தின் மத்தியில அந்திக்கிறிஸ்து பத்து ராஜ்ஜியங்களை ராஜ்யபாரம் பண்ணும் வரையிலும் இரகசிய பாபிலோன் வெளி 17 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கிற காரியங்களை நிறைவேற்றும் இதன் பின்பு அந்திக்கிறிஸ்து இரகசிய பாபிலோன் என்னும் மார்க்க அமைப்பை அழித்துப்போடுவான் இக்காலத்தின் கடைசி மூன்றரை வருஷங்களில் தன்னை வணங்கும் மார்க்கத்தை ஆரம்பிப்பான் (வெளி 13:1-8 வெளி 14:8-11; வெளி 15:2-4, வெளி 16:2,6 வெளி 17:12-17; வெளி 20:4-6 அந்திக்கிறிஸ்து பாபிலோனின் ராஜாவாகவும் (ஏசா 14:4) அசீரியாவின் ராஜாவாகவும் (ஏசா 10:20-27; ஏசா 30:18-33 ஏசா 31:4-32:20; மீகா 5:3-15) இருப்பான்

மேலே கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் அனைத்தும் சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு நடைபெறப்போகும் காரியங்களாகும் ஆகையினால் இரகசிய பாபிலோனுக்கும் ரோமப்பேரரசில தற்பொழுது இருக்கும் பிரதான மார்க்கத்திற்கும் சம்பந்தம் எதுவும் இருக்க முடியாது என்று வேதபண்டிதர்கள் வியாக்கியானம் கூறுகிறார்கள் சபை எடுத்துக் கொள்ளப்பட்ட நாளிலிருந்து இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரையிலும் இரண்டு மார்க்கங்கள் தேவனுடைய பரிசுத்தவான்களில் திரளானோரைக் கொலைபண்ணுவார்கள் அவைகளில் ஒன்று இரகசிய பாபிலோன் என்னும் மார்க்கம். மற்றொன்று அந்திக்கிறிஸ்துவின் மார்க்கம்.

வெளிப்படுத்தின விசேஷம் – தொகுப்புரை

18 அதிகாரம்

ஏழாம் கோபக்கலசம் – (வெளி 16:17-21; 18:1-24; 14:8; ஏசா 13:6,9,19-22; 14:1-27; எரே 50:1-3,19-20,39-40; 51:5-8,36-37,62-64; சக 5:6-11)

1. மகா பாபிலோன் விழுந்தது

வெளி 18:1 இவைகளுக்குப்பின்பு, வேறொரு தூதன் மிகுந்த அதிகாரமுடையவனாய் வானத்திலிருந்து இறங்கிவரக் கண்டேன்; அவனுடைய மகிமையினால் பூமி பிரகாசமாயிற்று.

வெளி 18:2 அவன் பலத்த சத்தமிட்டு: மகா பாபிலோன் விழுந்தது! விழுந்தது! அது பேய்களுடைய குடியிருப்பும், சகலவித அசுத்த ஆவிகளுடைய காவல்வீடும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிற்று.

வெளி 18:3 அவளுடைய வேசித்தனத்தின் உக்கிரமான மதுவை எல்லா ஜாதிகளும் குடித்தார்கள்; பூமியின் ராஜாக்கள் அவளோடே வேசித்தனம் பண்ணினார்கள்; பூமியின் வர்த்தகர் அவளுடைய செல்வச்செருக்கின் மிகுதியினால் ஐசுவரியவான்களானார்கள் என்று விளம்பினான்.

"இவைகளுக்குப்பின்பு" – வெளி 18:1-24 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் வெளி 17:1-18 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகளுக்குப் பின்பு நடைபெறுகிறது. வெளி 17:1-18 ஆகிய வசனங்கள் இணைப்புப் பகுதியாகும். ஏழாவது கலசத்திற்கு முன்பாகவும், பிரத்தியட்ச பாபிலோனின் அழிவிற்கு முன்பாகவும் இந்த இணைப்புப் பகுதி முதல் மூன்றரை வருஷத்தில் நிறைவேறுகிறது. (வெளி 17:16; வெளி 4:1; யோவான் 5:1)

இரண்டு பாபிலோன்களுக்கு இடையேயுள்ள வேற்றுமைகள்

1 வெளி 17 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் இரகசிய பாபிலோன் அடையாளமானது (symbolic). வெளி 16:17-21; வெளி 18:1-24 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பாபிலோன் பிரத்தியட்சமானது (literal).

2 ஒரு பாபிலோன் இரகசியமானது (வெளி 17:7) மற்றொரு பாபிலோன் இரகசியமானதல்ல. (வெளி 16:19; வெளி 18:1-24)

3 வெளி 17 ஆவது அதிகாரத்தில் எல்லாம் விவரிக்கப்பட்டிருக்கிறது. எல்லாம் தெளிவாக இருப்பதினால் வெளி 16:19; வெளி 18:1-24 ஆகிய வசனங்களில் ஒன்றும் விளக்க வேண்டியதில்லை.

4 ஒரு பாபிலோனைப் பார்த்து யோவான் ஆச்சரியப்பட்டான் (வெளி 17:6). மற்றொன்றைப் பார்த்து யோவான் ஆச்சரியப்படவில்லை. (வெளி 18:1-24)

5 ஒரு பாபிலோன் மிருகத்தின்மீது ஏறியிருந்தது. (வெளி 17:3-7) மற்றொரு பாபிலோன் மிருகத்தின்மீது ஏறியிருக்கவில்லை. (வெளி 18:1-24)

6 ஒரு தூதன் பாபிலோனின் இரகசியத்தை யோவானுக்குச் சொல்லுவதாகக் கூறினான் (வெளி 17:7). பிரத்தியட்ச பாபிலோனைப் பற்றி பல தூதர்கள் சொல்லுகிறார்கள் (வெளி 18:1-20).

7 ஒரு பாபிலோன் ஸ்திரீ என்றும், மகா வேசி என்றும் அழைக்கப்படுகிறது. மற்றொன்று அவ்வாறு அழைக்கப்படவில்லை.

8 ஒரு பாபிலோனின் நெற்றியில் அதன் நாமங்கள் எழுதப்பட்டிருக்கிறது. (வெளி 17:5) மற்றொன்றின்மீது நாமங்கள் எழுதப்படவில்லை.

9 இரகசிய பாபிலோன் யோவானுக்குப் புதியது. (வெளி 17:1-7) பிரத்தியட்ச பாபிலோன் அவனுக்குப் புதியதல்ல.

வெளிப்படுத்தின விசேஷம் – தொகுப்புரை

18 அதிகாரம்

10 இரகசிய பாபிலோனைப் பற்றி தீர்க்கதரிசிகள் ஒன்றும் கூறப்படவில்லை பிரத்தியட்ச பாபிலோனைப் பற்றி பல தீர்க்கதரிசிகள் பல வசனங்களில் கூறியிருக்கிறார்கள்

11 ஜனங்களுக்கு மாயையான தோற்றத்தை உண்டுபண்ணி இரகசிய பாபிலோன் தன்னை ஐசுவரிய ஸ்திரீயாகக் காண்பிக்கிறது. (வெளி 17:4) பிரத்தியட்ச பாபிலோன் மற்றவர்களை ஐசுவரியவான்களாக்குகிறது. (வெளி 18:3,9-19)

12 இரகசிய பாபிலோனை அந்திக்கிறிஸ்து அழித்தான் (வெளி 17:12-17) பிரத்தியட்ச பாபிலோனை தேவன் அழித்தார் (வெளி 18:5-20)

13 இரகசிய பாபிலோன் அழிந்ததற்காக ஜனங்கள் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்தார்கள் (வெளி 17:16-17) பிரத்தியட்ச பாபிலோன் அழிந்ததற்காக ஜனங்கள் அழுது புலம்பினார்கள் (வெளி 18:9-19)

14 இரகசிய பாபிலோனை அழிக்குமாறு ஜனங்களுடைய இருதயங்களைத் தேவன் ஏவினார் (வெளி 17:15-17) பிரத்தியட்ச பாபிலோனை அழிக்குமாறு தேவன் மற்றவர்களை ஏவவில்லை.

15 இரகசிய பாபிலோனை ஜனங்களால் ஒரே நாழிகையில் அழிக்க முடியவில்லை. பிரத்தியட்ச பாபிலோன் ஒரே நாழிகையில் அழிந்தது. (வெளி 18:8,10,17)

16 பிரத்தியட்ச பாபிலோனில் முப்பது வியாபாரப் பொருட்களைப் பற்றிய குறிப்பு உள்ளது (வெளி 18:11-14) இரகசிய பாபிலோனில் ஒரு பொருளும் கூறப்படவில்லை

இரண்டு பாபிலோனுக்கு இடையேயுள்ள [redacted]

1 இரண்டு பாபிலோன்களும் ராஜாக்களோடும், ஜனங்களோடும் வேசித்தனம் பண்ணும். (வெளி 17:2; வெளி 18:3-14)

2 இரண்டு பாபிலோன்களும் பரிசுத்தவான்களின் இரத்தத்தைச் சிந்தும். (வெளி 17:6; வெளி 18:24)

3 இரண்டு பாபிலோன்களிடமும் பாவமான பாத்திரங்கள் இருக்கும் (வெளி 17:4; வெளி 18:6)

4 இரண்டும் நகரம். (வெளி 17:18; வெளி 18:10-21)

5 இரண்டும் அழியும் (வெளி 17:16; வெளி 18:19)

6 இரண்டும் மகாபாபிலோன் என்று அழைக்கப்படும் (வெளி 17:5; வெளி 14:8; வெளி 16:19; வெளி 18:2)

7 இரண்டு பாபிலோன்களும் இரத்தாம்பரமும் சிவப்புமான ஆடையைத் தரிக்கும் பொன்னினாலும் இரத்தினங்களினாலும் முத்துக்களினாலும் சிங்காரிக்கப்படும். (வெளி 17:4; வெளி 18:16)

பிரத்தியட்ச பாபிலோனைப் பற்றிய செய்திகள்

பாபிலோன் மறுபடியும் கட்டப்படுதல்

1 பாபிலோன் ஒரு பிரத்தியட்சமான நகரம். சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு பல தீர்க்கதரிசனங்கள் இந்த நகரத்திற்கு நிறைவேறும் (வெளி 14:8; வெளி 16:19; வெளி 18:19; வெளி 18:1-24)

2 பாபிலோன் திரும்பக் கட்டப்படுவதைப் பற்றி சகரியா முன்னறிவித்திருக்கிறார் (சக 5:5-11)

3 பாபிலோன் மறுபடியும் பெரிய வணிக மையமாகும். (வெளி 18:3-10)

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

18 அதிகாரம்

4 பாபிலோன் மறுபடியும் பெரிய மார்க்க மையமாகும் (வெளி 18:2-10,23-24)

5. சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு, அவளுடைய சூனியத்தால் எல்லா ஜாதிகளும் மோசம்போவார்கள் (வெளி 18:23; 2தெச 2:10)

6 பரிசுத்தவான்களைக் கொலை செய்ய வேண்டுமென்ற கட்டளை பாபிலோனிலிருந்து புறப்பட்டுபோகும். (வெளி 18:24)

7 நிகழ்காலத்தின் முடிவில பாபிலோன் அழிக்கப்படும். வெளி 16:19 வெளி 18:1-24; ஏசா 13:19 எரே 50:40

பாபிலோன் அழிக்கப்படும் காலம்

1 இஸ்ரவேல இறுதியாகக் கூட்டிச் சேர்க்கப்படும காலதத்தில (வெளி 16:17-20:6; ஏசா 13:6-13 ஏசா 14:1-7; எரே 50:4-35)

2 கர்த்தருடைய நாளில். (வெளி 16:19 வெளி 18:1-24, ஏசா 13:6-13)

3 மகா உபத்திரவக்காலத்தின் முடிவில (வெளி 16:17-21; வெளி 18:1-24)

4 ஏழாவது கலசத்தின் போது. (வெளி 16:17-21)

5 வானமண்டலங்கள பாதிக்கப்படும் போது. வெளி 16:17-21 மத் 24:29-31, ஏசா 13:10-11)

6 இதன் பாவங்களுக்காக உலகம் தண்டிக்கப்படும்போது. (வெளி 18:1-24; ஏசா 13:11)

7 இஸ்ரவேல் தங்களை ஒடுக்கினவர்களை ஆளுகை செய்யும்போது. (ஏசா 14:1-4)

8 இஸ்ரவேல் தன்னுடைய வெற்றிப் பாடலைப் பாடும்போது. (ஏசா 14:3-17

9 இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது. (வெளி 16:17-21

10. ஆயிரம் வருஷ அரசாட்சியின் ஆரம்பத்தில். (வெளி 16:17-21, வெளி 18:1-20:10)

பாபிலோன் அழிக்கப்படும் விதம்

1 பூமி அதிர்ச்சியின் மூலமாக (வெளி 16:17-21)

2 தெய்வீக அழிவின் மூலமாக (வெளி 16:17-21, வெளி 18:8,10,17,19,21; ஏசா 13:6-13 எரே 50:20,40; எரே 51:8

3 திடீரென்று ஒரே நாழிகையில அழியும் (வெளி 18:8-19; ஏசா 13:19; எரே 50:40; எரே 51:8

4 வானத்திலிருந்து வரும் அக்கினியினால சுட்டெரிக்கப்படும் (வெளி 18:8-18 ஏசா 13:19 எரே 50:40)

5 வேகமாய தள்ளுண்டுபோகும். (வெளி 18:21)

6 இனி ஒரு போதும் காணப்படாமற் போகும். (வெளி 18:21, எரே 51:62-64

7 தேவனால அழிக்கப்படும். (வெளி 18:8,20 சோதோமைப போனறு அழிவு. ஏசா 13:19 எரே 50:40)

பாபிலோனுடைய அழிவின் விஸ்தீரணம்

1 இனி ஒருபோதும் அதில் குடியேறுவதில்லை (ஏசா 13:20, எரே 50:3,39-40 எரே 51:2,37,43

2 அங்கே அரபியன கூடாரம் போடுவதிலலை அங்கே மேய்ப்பர் மந்தையை மறிப்பதில்லை. (ஏசா 13:20

3 முழுவதுமாக அழியும். (வெளி 18:21, ஏசா 13:9-22; எரே 50:3,40 எரே 51:26-43)

18 அதிகாரம்

4 மறுபடியும் காணப்படாமற்போகும். (வெளி 18:21)

5 அது இருந்த இடம் பாதாளத்தின் திறப்புகளில் ஒன்றாக இருக்கும் (வெளி 19:3; ஏசா 14:9-17; ஏசா 66:22-24)

6 காட்டு மிருகங்கள் அங்கே படுத்துக் கொள்ளும். (ஏசா 13:21-22)

7 பாபிலோனுக்கு வரும் வாதைகளின் நிமித்தம் ஜனங்கள் பிரமிப்பார்கள் (எரே 50:13)

மேலே கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகளில் எதுவும் இன்னும் நிறைவேறவில்லை. பாபிலோனின் ஐசுவரியமும் அழிவும் இனிமேல் வரப்போகிற காலத்தில் நிறைவேறும். மகா நகரம் மூன்று பங்காகப் பிரிக்கப்படும். புறஜாதிகளுடைய பட்டணங்கள் விழும். (வெளி 16:19)

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் பாபிலோன் நகரத்தில் ஒரு சபை இருந்தது. (1 பேதுரு 5:13) இங்கு பாபிலோனிய தால்மூத் **(Babylonian Talmud)** எழுதப்பட்டது. பாபிலோன் பட்டணத்தின் தற்காலத்து பெயர் ஹில்லா **(Hillah)** என்பதாகும். இங்கு மூன்று இலட்சம் ஜனங்கள் வசிக்கிறார்கள். பழைய பாபிலோனின் தென் பகுதியில் இந்தப் பட்டணம் கட்டப்பட்டிருக்கிறது. ஐபிராத்து நதியும் டைகிரீஸ் நதியும் இங்கு பாய்வதால், இது வளமான தேசமாக இருக்கிறது. எண்ணெய் வளமும் கனிவளமும் மிகுந்த பட்டணம். பாபிலோன் என்று அழைக்கப்படும் வியாபார நகரம் இந்த இடத்தில் அதிசீக்கிரத்தில் தோன்றலாம்.

தானியேலின் எழுபதாவது வாரத்தில் கடைசி மூன்றரை வருஷங்களில் அந்திக் கிறிஸ்து பாலஸ்தீன தேசத்திற்கு வந்து யூதருடைய தேவாலயத்தைத் தன்னுடைய தலைநகரமாக்கிக் கொள்வான். இக்காலத்திற்கு முன்பாக மகா பாபிலோன் அந்திக்கிறிஸ்துவின் தலைநகரமாக இருக்கும். (தானி 11:40-45; 2தெச 2:3-4; வெளி 11:1-2; வெளி 13:1-18) பிரத்தியட்ச பாபிலோன் மூலமாக வெளி 14:8; வெளி 16:17-21; வெளி 18:1-24 ஆகிய வசனங்கள் நிறைவேறும்.

"பேய்களுடைய குடியிருப்பு ஆயிற்று" - சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு பாபிலோன் நகரம் பேய்களின் கிரியைகளுக்கு மையமான ஸ்தலமாக இருக்கும். பாபிலோன் விழுந்ததற்கு இதுவே பிரதான காரணம். (வெளி 18:2)

குடியிருப்பு **(habitation) - κατοικητήριον - katoikeeteerion** - 2732

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - வாசஸ்தலம், குடியிருப்பு (எபே 2:22)

காவல் வீடு **(hold) - φυλακή - phylakee** - 5438

பெண்பால் பெயர்ச்சொல் - காவல்வீடு, சிறைச்சாலை, காவற்கூடம், ஜாமம், காவல் கூடு, காவலறை **(a garrison; keep in custody) "hold", "cage"** (வெளி 18:2); **"ward"** (அப் 12:10); **"imprisonment"** (2கொரி 6:5, எபி 11:36); **"watch"** (மத் 14:25, மத் 24:43; மாற்கு 6:48, லூக்கா 2:8, லூக்கா 12:38); **"prison"** (மத் 5:25, மத் 14:3,10; மத் 18:30, மத் 25:36-44)

"அருவருப்புள்ள சகலவித பறவைகள்" **(hateful bird)** - பிசாசின் வல்லமைகள் (மத் 13:4,19)

"அவளுடைய வேசித்தனத்தின் உக்கிரமான மதுவை எல்லா ஜாதிகளும் குடித்தார்கள்" - பிரத்தியட்ச பாபிலோனும் ஜனங்களை ஆவிக்குரிய வேசித்தனம் பண்ண வைக்கும். (எரே 51:7)

"செல்வச்செருக்கின் மிகுதி" **(delicacies)** - வியாபார மையம். (வெளி 18:11-15)

18 அதிகாரம்

2. பாபிலோன்மீது நியாயத்தீர்ப்பு

வெளி 18:4 பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன்; அது: என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்.

வெளி 18:5 அவளுடைய பாவம் வானபரியந்தம் எட்டினது, அவளுடைய அநியாயங்களை தேவன் நினைவுகூர்ந்தார்.

வெளி 18:6 அவள் உங்களுக்குப் பலனளித்ததுபோல நீங்களும் அவளுக்குப் பலனளியுங்கள்; அவளுடைய கிரியைகளுக்குத்தக்கதாக அவளுக்கு இரட்டிப்பாகக் கொடுத்துத் தீருங்கள்; அவள் உங்களுக்குக் கலந்துகொடுத்த பாத்திரத்திலே இரட்டிப்பாக அவளுக்குக் கலந்துகொடுங்கள்.

வெளி 18:7 அவள் தன்னை மகிமைப்படுத்தி, செல்வச்செருக்காய் வாழ்ந்ததெவ்வளவோ அவ்வளவாய் வாதையையும் துக்கத்தையும் அவளுக்குக் கொடுங்கள். நான் ராஜஸ்திரீயாய் வீற்றிருக்கிறேன், நான் கைம்பெண்ணல்ல, நான் துக்கத்தைக் காணபதில்லையென்று அவள் தன் இருதயத்திலே எண்ணினாள்.

வெளி 18:8 ஆகையால் அவளுக்கு வரும் வாதைகளாகிய சாவும் துக்கமும் பஞ்சமும் ஒரே நாளிலே வரும்; அவள் அக்கினியினாலே சுட்டெரிக்கப்படுவாள்; அவளுக்கு நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் தேவனாகிய கர்த்தர் வல்லமையுள்ளவர்.

"என் ஜனங்களே, அவளைவிட்டு வெளியே வாருங்கள்" - கிறிஸ்துவின் சத்தத்தைப்போல இருக்கிறது. அவளைவிட்டு என்பது பாபிலோன் நகரத்தை விட்டு என்று பொருள்படும். (வெளி 18:4; வெளி 1:12-16; வெளி 10:1-11; தானி 7:13-14; தானி 10:5-10) இந்தக் கட்டளை எரே 50:4-9; எரே 51:5-8,45 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் கட்டளைகளைப் போலிருக்கிறது.

"நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு" - தேவனுடைய ஜனங்கள் இந்தக் காரணத்திற்காக பாபிலோனை விட்டு வெளியே வரவேண்டும். அப்பொழுது அவர்கள் பாபிலோனின் பாவங்களுக்கு உடன்படாமலிருப்பார்கள். பாபிலோனுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலிருப்பார்கள். தேவனுடைய ஜனங்களும் பாவத்தில் விழ முடியும் என்பதையும், அவர்கள் பாவம் செய்தால் துன்மார்க்கருக்கு வரும் தண்டனைகளில் அவர்களும் பங்குபெறுவார்கள் என்பதும் இதன் மூலமாகத் தெரிய வருகிறது. (வெளி 18:4-5)

"அவள் உங்களுக்குப் பலனளித்ததுபோல நீங்களும் அவளுக்குப் பலனளியுங்கள்" பின் வாங்கிப்போனவர்கள் பாவம் செய்யும்போது பாவிகளைப் போலவே அவர்களும் தண்டிக்கப் படுவார்கள். தேவன் பாவிகளைத் தண்டிக்க வில்லையென்றால் தம்முடைய வார்த்தைக்கு அவர் நீதிபரராயிருக்க முடியாது. (வெளி 18:6; கலா 6:7-8; ரோமர் 6:23; ரோமர் 8:12-13; கலா 5:19-21)

"நான் ராஜஸ்திரீயாய் வீற்றிருக்கிறேன்" பாபிலோன் நகரம் எல்லாப் பட்டணங்களுக்கும் ராஜஸ்திரீயாகவும், தலைவியாகவும் இங்கு வர்ணிக்கப்படுகிறது. (வெளி 18:7; ஏசா 47:5,7)

பாபிலோன்மீது வரும் வாதைகள்

1. சாவு
2. துக்கம்
3. பஞ்சம்
4. அக்கினியினாலே சுட்டெரிக்கப்படுவது.

18 அதிகாரம்

"அவளுக்கு நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் தேவனாகிய கர்த்தர்" - பாபிலோன் நகரம் சடுதியிலும் முழுமையாகவும் அழியும் இந்த நியாயத்தீர்ப்பு இனிமேல் வரப்போகிறது. (வெளி 18:8,10,17,19-21; ஏசா 13:20; எரே 50:13,23,39-40; எரே 51:29-43)

3. பாபிலோனுக்காக அழுது புலம்புதல்

(1) பூமியின் இராஜாக்கள்

வெளி 18:9 அவளுடனே வேசித்தனஞ்செய்து செல்வச்செருக்காய் வாழ்ந்த பூமியின் ராஜாக்களும் அவள் வேகிறதினால் உண்டான புகையைக் காணும்போது அவளுக்காக அழுது புலம்பி,

வெளி 18:10 அவளுக்கு உண்டான வாதையினால் பயந்து, தூரத்திலே நின்று: ஐயையோ! பாபிலோன், மகா நகரமே! பலமான பட்டணமே! ஒரே நாழிகையில் உனக்கு ஆக்கினை வந்ததே! என்பார்கள்.

"அவளுக்காக அழுது புலம்பி" பிரத்தியட்ச பாபிலோன் அழிவதற்காக ஜனங்கள் அழுது புலம்புவார்கள். பூமியின் ராஜாக்கள் இரகசிய பாபிலோனை மனப்பூர்வமாக அழித்தார்கள் (வெளி 17:12-17). ஆனால் இங்கோ பிரத்தியட்ச பாபிலோன் அழிந்ததற்காக ஜனங்கள் அழுது புலம்புகிறார்கள் (வெளி 18:9-10).

(2) பூமியின் வர்த்தகர்கள்

வெளி 18:11 பூமியின் வர்த்தகர்களும் தங்கள் தங்கள் சரக்குகளாகிய பொன்னையும், வெள்ளியையும், இரத்தினங்களையும், முத்துக்களையும், சல்லாவையும், இரத்தாம்பரத்தையும், பட்டாடைகளையும், சிவப்பாடைகளையும்,

வெளி 18:12 சகலவித வாசனைக் கட்டைகளையும், தந்தத்தினால் செய்திருக்கிற சகலவித வஸ்துக்களையும், விலையுயர்ந்த மரத்தினாலும் வெண்கலத்தினாலும் இரும்பினாலும் வெள்ளைக் கல்லினாலும் செய்திருக்கிற சகலவித வஸ்துக்களையும்,

வெளி 18:13 இலவங்கப்பட்டையையும், தூபவர்க்கங்களையும், தைலங்களையும், சாம்பிராணியையும், திராட்சரசத்தையும், எண்ணெயையும், மெல்லிய மாவையும், கோதுமையையும், மாடுகளையும், ஆடுகளையும், குதிரைகளையும், இரதங்களையும், அடிமைகளையும், மனுஷருடைய ஆத்துமாக்களையும் இனிக் கொள்வாரில்லாதபடியால் அவளுக்காக அழுது புலம்புவார்கள்.

வெளி 18:14 உன் ஆத்துமா இச்சித்த பழவர்க்கங்கள் உன்னைவிட்டு நீங்கிப்போயின; கொழுமையானவைகளும் சம்பிரமமானவைகளும் உன்னைவிட்டு நீங்கிப்போயின; நீ அவைகளை இனிக் காண்பதில்லை.

வெளி 18:15 இப்படிப்பட்டவைகளைக் கொண்டு வர்த்தகம்பண்ணி, அவளால் ஐசுவரியவான்களானவர்கள் அவளுக்கு உண்டான வாதையினால் பயந்து தூரத்திலே நின்று,

வெளி 18:16 ஐயையோ! சல்லாவும் இரத்தாம்பரமும் சிவப்பாடையும் தரித்து, பொன்னினாலும் இரத்தினங்களினாலும் முத்துக்களினாலும் சிங்காரிக்கப்பட்டிருந்த மகா நகரமே! ஒரு நாழிகையிலே இவ்வளவு ஐசுவரியமும் அழிந்து போயிற்றே, என்று சொல்லி, அழுது துக்கிப்பார்கள்.

பாபிலோனின் வர்த்தகப்பொருட்கள்

1. பொன் (Gold)
2. வெள்ளி (Silver)
3. முத்துக்கள் (Pearls)

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

18 அதிகாரம்

4. இரத்தாம்பரம் (Purple)

5. சிவப்பாடை (Scarlet)

6. தூபவர்க்கங்கள் (Odours)

7. திராட்சரசம் (Wine)

8. தைலம் (Oil)

9. கோதுமை (Wheat)

10. மாடுகள் (Beasts)

11. ஆடுகள் (Sheep)

12. குதிரைகள் (Horses)

13. இரதங்கள் (Chariots)

14. அடிமைகள் (Slaves)

15. பழவர்க்கங்கள் (Fruits)

16. பட்டாடை (Silk)

17. இரத்தினங்கள் (Precious stones)

18. சல்லா (Fine linen)

19. வாசனைக்கட்டைகள் (Thyine wood)

20. வஸ்துக்கள் (Vessels of ivory)

21. விலையுயர்ந்த மரங்கள் (Vessels of wood)

22. வெண்கலம் (Vessels of brass)

23. இரும்பு (Vessels of iron)

24. வெள்ளைக்கல் (Vessels of marble)

25. இலவங்கப்பட்டை (Cinnamon)

26. தைலங்கள் (Ointments)

27. தூபவர்க்கங்கள் (Frankincense)

28. கொழுமையானவைகள் (Dainty things)

29. சம்பிரமமானவைகள் (Goodly things)

30. மெல்லிய மாவு (Fine flour)

(3) மாலுமிகள், கப்பல்களில் யாத்திரை பண்ணுகிறவர்கள், கப்பலோட்டிகள், சமுத்திரத்திலே தொழில் செய்கிறவர்கள்

வெளி 18:17 மாலுமிகள் யாவரும், கப்பல்களில் யாத்திரை பண்ணுகிறவர்கள் யாவரும், கப்பலோட்டிகளும், சமுத்திரத்திலே தொழில்செய்கிற யாவரும் தூரத்திலே நின்று

வெளி 18:18 அவள் வேகிறதினால் உண்டான புகையைப் பார்த்து: இந்த மகா நகரத்திற்கொப்பான நகரம் உண்டோ என்று சத்தமிட்டு,

வெளி 18:19 தங்கள் தலைகள்மேல் புழுதியைப் போட்டுக்கொண்டு: ஐயையோ, மகா நகரமே, சமுத்திரத்திலே கப்பல்களையுடைய அனைவரும் இவளுடைய உச்சிதமான சம்பூரணத்தினால் ஐசுவரியவான்களானார்களே! ஒரு நாழிகையிலே இவள் பாழாய்ப்போனாளே! என்று துக்கித்து, ஓலமிடுவார்கள்.

"மாலுமிகள் யாவரும் கப்பல்களில் யாத்திரை பண்ணுகிறவர்கள் யாவரும்" உலக வணிகர்களையும் பிரயாணம் பண்ணுகிறவர்களையும் இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. (தானி 12:4) வியாபாரிகள் மார்க்க அமைப்புகள் மூலமாக செல்வம் சேர்ப்பதில்லை. மார்க்க அமைப்புக்கள் வியாபார அமைப்புக்கள் மூலமாகவும், ஏழைகளின் காணிக்கைகள் மூலமாகவும் ஐசுவரியமாகும். பிரத்தியட்ச பாபிலோன் ஐசுவரியமாக இருக்கிறது. கடைசி நாட்களில் அந்திக் கிறிஸ்து கிழக்கின் ஐசுவரியங்களையெல்லாம் ஆளுகை செய்வான் (தானி 8:25; தானி 11:38-43; வெளி 13:17; வெளி 19:11-19)

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

18 அதிகாரம்

பாபிலோனால் இலாபமடைந்தவர்கள்

1. பூமியின் ராஜாக்கள் (வெளி 18:9-10)
2. பூமியின் வர்த்தகர் (வெளி 18:11-16)
3. சமுத்திரத்திலே கப்பல்களை உடையவர்கள் (வெளி 18:17-19)

4. பாபிலோனின் அழிவுக்காக களிகூருதல்

வெளி 18:20 பரலோகமே! பரிசுத்தவான்களாகிய அப்போஸ்தலர்களே! தீர்க்கதரிசிகளே! அவளைக்குறித்துக் களிகூருங்கள்; உங்கள் நிமித்தம் தேவன் அவளை நியாயந்தீர்த்தாரே என்று தூதன் சொன்னான்.

"களிகூருங்கள்" என்று பரலோகத்திற்குக் கூறப்பட்டிருக்கிற வேளைகள்

1. சாத்தான் தாழத்தள்ளப்பட்டுப் போகும் போது (வெளி 12:12)
2. பிரத்தியட்ச பாபிலோன் அழிக்கப்படும் போது (வெளி 18:20)
3. ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வரும்போதும், அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணின போதும் (வெளி 19:7)

5. பாபிலோனின் அழிவும் அதன் காரணமும் - (வெளி 6:1-18:24; 7:1-17, 8:2-6:13, 10:1-11:13; 14:1-20 15:2-4, 16:13-16, 17:1-18)

வெளி 18:21 அப்பொழுது, பலமுள்ள தூதனொருவன் பெரிய ஏந்திரக்கல்லையொத்த ஒரு கல்லை எடுத்துச் சமுத்திரத்திலே எறிந்து, இப்படியே பாபிலோன் மகா நகரம் வேகமாய்த் தள்ளுண்டு, இனி ஒருபோதும் காணப்படாமற்போகும்.

வெளி 18:22 சுரமண்டலக்காரரும், கீதவாத்தியக்காரரும், நாகசுரக்காரரும், எக்காளக்காரருமானவர்களுடைய சத்தம் இனி உன்னிடத்தில் கேட்கப்படுவதுமில்லை; எந்தத் தொழிலாளியும் இனி உன்னிடத்தில் காணப்படுவதுமில்லை; ஏந்திரசத்தம் இனி உன்னிடத்தில் கேட்கப்படுவதுமில்லை.

வெளி 18:23 விளக்குவெளிச்சம் இனி உன்னிடத்தில் பிரகாசிப்பதுமில்லை; மணவாளனும் மணவாட்டியுமானவர்களுடைய சத்தம் இனி உன்னிடத்தில் கேட்கப்படுவதுமில்லை. உன் வர்த்தகர் பூமியில் பெரியோர்களாயிருந்தார்களே; உன் சூனியத்தால் எல்லா ஜாதிகளும் மோசம் போனார்களே.

வெளி 18:24 தீர்க்கதரிசிகளுடைய இரத்தமும் பரிசுத்தவான்களுடைய இரத்தமும் பூமியில் கொல்லப்பட்ட அனைவருடைய இரத்தமும் அவளிடத்தில் காணப்பட்டது என்று விளம்பினான்.

"பாபிலோன் மகா நகரம் வேகமாய்த் தள்ளுண்டு, இனி ஒருபோதும் காணப்படாமற் போகும்" - பாபிலோன் நகரத்தின் மீது வரும் சடிதியான முழுமையான அழிவைப் பற்றி இந்த வாக்கியம் கூறுகிறது. அவள் தள்ளப்பட்டுப் போவாள்; காணப்படாமல் போவாள். இப்பொழுது பாபிலோனின் சிதைவுகள் இன்னும் உள்ளன. இந்த இடத்தில் ஹில்லா என்னும் பட்டணத்தைக் கட்டியிருக்கிறார்கள். ஆனால் இனிமேல் பாபிலோன் அழியும்போது அது பூரணமாக அழிந்து போகும். காணப்படாமற் போய் விடும். வரலாற்றுக் காலத்தில் பாபிலோன் பலமுறை அழிக்கப்பட்டு, திரும்பக் கட்டப்பட்டிருக்கிறது. கடைசி காலத்தில் மகா பாபிலோன் அழியும்போது அது திரும்பக் கட்டப்படமாட்டாது. காணப்படாமற்போய்விடும்.

"சுரமண்டலக்காரரும், கீதவாத்தியக்காரரும், நாகசுரக்காரரும்___" ஆகிய வாத்தியங்களின் சத்தம் இனிமேல் பாபிலோனில் கேட்கப்படாது. வெளி 18:22-23 ஆகிய வசனங்கள் பாபிலோன் முழுமையாக அழிக்கப்படும் என்று கூறுகிறது. இது வருங்காலத்தில் நிறைவேறும். (வெளி 16:17-21; வெளி 18:1-24)

வெளிப்படுத்தின விசேஷம் – தொகுப்புரை

18 அதிகாரம்

பாபிலோனின் அழிவிற்குக் காரணங்கள்

1 பெருமை (Pride) ஏசா 13:19 ஏசா 14:4 எரே 50:29-34, வெளி 18:7-8

2 இஸ்ரவேலை ஒடுக்குதல் (Oppression of Israel) (ஏசா 13:1 ஏசா 14:2-22; எரே 51:24-25, வெளி 18:24

3 பாவ சந்தோஷங்கள் (Pleasures, sins, and luxuries) (ஏசா 47:8-11, வெளி 18:3-19

4 விக்கிரகாராதனை (Idol worship) எரே 50:2; எரே 51:47, வெளி 9:20-21; வெளி 13:14, வெளி 14:9-10, வெளி 16:2)

5 வேசித்தனம் (Fornication) (வெளி 14:8, வெளி 18:3, 9)

6 அசுத்த ஆவிகளுடைய காவலவீடு (Spiritism) (வெளி 18:2)

7 சூனியம் (Sorceries) (ஏசா 47:12-13 வெளி 18:23

8 பரிசுத்தவான்களைக் கொலை பண்ணுதல் (Martyrdom of saints (வெளி 18:6,24)

"பூமியில் கொல்லப்பட்ட அனைவருடைய இரத்தமும் அவளிடத்தில் காணப்பட்டது" - பாபிலோன் உருவாவதற்கு முன்பாகவே ஆபேலும் ஜலப்பிரளயத்திற்கு முன்பிருந்த பரிசுத்தவான்களும் இரத்தச்சாட்சியாகக் கொலலப்பட்டார்கள் வரலாறுக் காலங்களில பாபிலோனுக்கு வெளியே ஏராளமான பரிசுத்தவான்கள் கொலை செய்யப் பட்டிருக்கிறார்கள் ஏராளமான பரிசுத்தவான்கள் பாபிலோனில் கொலைசெய்யப்படுவார்கள் என்பதை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது "நீதிமானாகிய ஆபேலின் இரத்தம் முதல தேவாலயத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே நீஙகள் கொலைசெய்த பரகியாவின குமாரனாகிய சகரியாவின இரத்தம் வரைக்கும் பூமியினமேல சிந்தப்பட்ட நீதிமான்களின இரததபபழியெலலாம உங்களமேல வருமபடியாக இப்படிச செயவீர்கள இவைகளெலலாம் இந்தச சநததியினமேல வருமெனறு மெய்யாகவே உஙகளுக்குச் சொலலுகிறேன" (மத் 23:35-36) மனுஷருடைய பாவஙகள் பெருகும்போது தேவனுடைய கோபாக்கினையும் பெருகும் தேவன பாபிலோனை அழித்து தண்டிப்பார் ஏராளமான பரிசுததவானகள் பாபிலோனில கொலைசெய்யப்பட்டதினால அந்தப் பட்டணத்தினமீது தேவனுடைய கோபாக்கினை மிகவும் அதிகமாக இருக்கும் தானியேலின முதல மூனறரை வருஷத்தில ஆறாவது முத்திரையினபோது பாபிலோன் பட்டணத்தின மீது தேவனுடைய கோபாக்கினை ஆரம்பமாயிற்று (வெளி 6:12-17)

19 அதிகாரம்

கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக பரலோகத்தின் காட்சிகள்

1. பரலோகத்தில் திரளான ஜனக்கூட்டம் கர்த்தரைத் துதிக்கிறார்கள்

வெளி 19:1 இவைகளுக்குப்பின்பு, பரலோகத்தில் திரளான ஜனக்கூட்டம் இடுகிற ஆரவாரத்தைக் கேட்டேன். அவர்கள்: அல்லேலூயா, இரட்சணியமும் மகிமையும் கனமும் வல்லமையும் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியது. அவருடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள்.

வெளி 19:2 தன் வேசித்தனத்தினால் பூமியைக் கெடுத்த மகா வேசிக்கு அவர் நியாயத்தீர்ப்புக்கொடுத்து, தம்முடைய ஊழியக்காரரின் இரத்தத்திற்காக அவளிடத்தில் பழிவாங்கினாரே என்றார்கள்.

வெளி 19:3 மறுபடியும் அவர்கள்: அல்லேலூயா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள். அவளுடைய புகை என்றென்றைக்கும் எழும்புகிறது என்றார்கள்.

"இவைகளுக்குப் பின்பு" - வெளி 19:1-10 ஆகிய வசனங்கள் ஒன்பதாவது இணைப்பு பகுதியாகும். இணைப்பு பகுதிகளில் இது இறுதியானது. ஏழாவது கலசத்தின் வெளிப்பாட்டிற்கும் (வெளி 16:17-21; வெளி 18:1-24) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கும் (வெளி 19:11-21) இடையே இந்த இணைப்பு பகுதி சேர்க்கப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக பரலோகத்தில் நடைபெறும் காரியங்களை இந்த இணைப்பு பகுதி விளக்குகிறது. "இவைகளுக்குப் பின்பு" என்பது வெளி 17, 18 ஆகிய அதிகாரங்களில் இரகசிய பாபிலோன், பிரத்தியட்ச பாபிலோன் ஆகியவற்றின் அழிவைப் பற்றிய வெளிப்பாட்டைப் பெற்றுக் கொண்ட பின்பு என்று பொருள்படும்.

இந்த அதிகாரத்தில் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக பரலோகத்தில் நடைபெறும் ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணத்தை யோவான் தரிசிக்கிறார் (வெளி 19:1-2).

"பரலோகத்தில்" - பரலோகத்தில் திரளான ஜனக்கூட்டம் இருப்பதாக இந்த வாக்கியம் கூறுகிறது. ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணத்திற்காக இவர்கள் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறவர்கள். பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பரிசுத்தவான்கள் அனைவரும் உடனடியாக பரலோகத்திற்குச் சென்று அங்கு உபத்திரவக் காலமாகிய ஏழு வருஷங்களுக்குத் தங்கியிருப்பார்கள்.

சபை எடுத்துக் கொள்ளப்படும்போது பரிசுத்தவான்கள் பரலோகத்திற்குப் போகமாட்டார்கள் என்றும், ஆட்டுக்குட்டியானவருடைய கலியாண விருந்து மத்திய ஆகாயத்தில் நடைபெறும் என்றும் வேதபண்டிதர்களில் சிலர் கூறுகிறார்கள் (1தெச 4:16-17). ஆனால் வெளி 19 ஆவது அதிகாரத்தில் பரலோகத்தில் திரளான ஜனக்கூட்டம் இருப்பார்கள் எனவும், ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் பரலோகத்தில் நடைபெறும் எனவும் கூறப்பட்டிருக்கிறது (எபே 5:27; கொலோ 3:4; 1தெச 3:13; வெளி 4:1; 2தெச 2:7-8).

சபை எடுத்துக் கொள்ளப்படுவதற்கும், இரண்டாம் வருகைக்கும் இடையில் நடைபெறும் சம்பவங்கள்

1. தேவனுக்கு முன்பாக நிறுத்தப்படுவார்கள் (எபே 5:27; கொலோ 3:4; 1தெச 3:13)

2. பரிசுத்தவான்கள் பிழையற்றவர்கள் என்று அறிவிக்கப்படுவார்கள் (1தெச 3:13; 1தெச 5:23)

3. வாசஸ்தலங்களில் தங்க வைக்கப்படுவார்கள் (யோவான் 14:1-3; எபி 11:10-16; எபி 13:14; வெளி 3:12)

4. பரிசுத்தவான்களின் நியாயத்தீர்ப்பு (ரோமர் 14:10; 2கொரி 3:11-15; 2கொரி 5:10-11)

5. கிரமமான ஆராதனை (வெளி 19:1-4; லூக்கா 22:16)

வெளிப்படுத்தின விசேஷம் – தொகுப்புரை

19 அதிகாரம்

6. அன்றாட ஜீவியம் (லூக்கா 22:29-30 யோவான் 14:1-3; வெளி 1:6. 2கொரி 2:9

7. ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் (வெளி 19:1-9)

8. இரண்டாம் வருகைக்கு ஆயத்தம். அர்மகெதோனில் யுத்தம். பூமியில் நித்திய ராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்படுவது. வெளி 19:11-21; வெளி 20:1-10 சக 14

"என்றென்றைக்கும்" என்னும் வார்த்தை வெளிப்படுத்தின விசேஷத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் இடங்கள்

1. தேவனுக்கும், ஆட்டுக்குட்டியானவருக்கும் ஆராதனை (வெளி 1:6 வெளி 5:13; வெளி 7:12)

2. தேவன் சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவர் (வெளி 4:9-10 வெளி 5:14; வெளி 10:6, வெளி 15:7

3. தேவனும், கிறிஸ்துவும சதாகாலங்களிலும் ராஜ்யபாரம பண்ணுகிறார்கள் (வெளி 11:15)

4. வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும். (வெளி 14:9-11; வெளி 19:3)

5. துன்மார்க்கர் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள் (வெளி 20:10)

6. பரிசுத்தவான்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள். (வெளி 22:5)

2. இருபத்தினான்கு மூப்பர்களும் நான்கு ஜீவன்களும் தேவனைத் தொழுது கொண்டார்கள் - (4:4,6,9 5:8,11)

வெளி 19:4 இருபத்துநான்கு மூப்பர்களும், நான்கு ஜீவன்களும் வணக்கமாய் விழுந்து: ஆமென் அல்லேலூயா, என்று சொல்லி, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் தேவனைத் தொழுது கொண்டார்கள்

வெளி 19:1-7 ஆகிய வசனங்களில் தேவனைத் தொழுதுகொள்ளும் நிகழ்ச்சிகள்

1. தூதர்கள், மீட்கப்பட்டோர் ஆகியோரின் ஆராதனை (வெளி 19:1-3)

2. நான்கு ஜீவன்கள், இருபத்துநான்கு மூப்பர்கள் ஆகியோரின் ஆராதனை (வெளி 19:4)

3. தூதர்களும் மீட்கப்பட்டவர்களும் தேவனை ஆராதிக்க வேண்டுமென்னும் கட்டளை (வெளி 19:5

4. தூதர்கள மீட்கப்பட்டோர் ஆகியோரின ஆராதனை (வெளி 19:6-7)

3. கர்த்தரைத் துதியுங்கள் என்று ஒரு சத்தம் சிங்காசனத்திலிருந்து பிறந்தது

வெளி 19:5 மேலும், நமது தேவனுடைய ஊழியக்காரரே அவருக்குப் பயப்படுகிற சிறியோரும் பெரியோருமானவர்களே நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள் என்று ஒரு சத்தம் சிங்காசனத்திலிருந்து பிறந்தது.

4. திரளான ஜனங்கள் [redacted] ஆரவாரம் - (5:11-14)

வெளி 19:6 அப்பொழுது திரளான ஜனங்கள் இடும் ஆரவாரம்போலவும், பெருவெள்ள இரைச்சலபோலவும், பலத்த இடிமுழக்கம்போலவும், ஒரு சத்தமுண்டாகி: அல்லேலூயா, சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜ்யபாரம் பண்ணுகிறார்

19 அதிகாரம்

5. **ஆட்டுக் குட்டியானவருடைய கலியாணம்** - 13:12; 20:4-6; 21:2,9-10; எபி 11:10,13-16; 13:14 யோவான் 14:1-3

வெளி 19:7 நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம் ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது. அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள் என்று சொல்லக்கேட்டேன்

வெளி 19:8 சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக் கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது. அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே

வெளி 19:9 பின்னும், அவன் என்னை நோக்கி: ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள் என்றெழுது என்றான். மேலும், இவைகள் தேவனுடைய சத்தியமான வசனங்கள் என்று என்னுடனே சொன்னான்

பரலோகத்தில் உண்டான சத்தம்

1 சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜ்யபாரம்பண்ணுகிறார்

2 நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம். ஆட்டுக் குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள் (வெளி 19:6-7)

கலியாணம் (marriage) γάμος gamos 1062

ஆங்கில பெயர்ச்சொல் - கலியாணம், விவாகம், கலியாண விருந்து (marriage feast) "marriage" (வெளி 19:7-9; மத் 22:3-9 மத் 25:10; யோவான் 2:1-2; எபி 13:4) "wedding" (மத் 22:3-12 லூக்கா 12:36; லூக்கா 14:8)

"அவருடைய மனைவி" - ஆட்டுக்குட்டியானவருடைய மனைவி புதிய எருசலேம் ஆகும்.

"அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே" - ஆட்டுக்குட்டியானவருடைய மனைவி என்பது தேவனுடைய பரிசுத்தவான்களைக் குறிக்கும் ஆபேலின் காலத்திலிருந்து முதலாவது உயிர்த்தெழுதலில் பங்குபெறும் பரிசுத்தவான்கள் அனைவரும் இதில் இடம் பெறுவார்கள் இவர்கள் புதிய எருசலேமில் ஜீவிப்பதற்காகப் போவார்கள் எபி 11:10-16 எபி 12:22-23; எபி 13:14, வெளி 21:2,9-10

"எழுது" - (வெளி 14:13)

"அழைக்கப்பட்டவர்கள்" (called) - மீட்கப்பட்டவர்களில் பல பிரிவினர்கள் இருப்பார்கள் என்று கூறுவதற்கு ஒருசிலர் இந்த வாக்கியத்தைப் பயன்படுத்துகிறார்கள் இவர்களுடைய கருத்தின்படி மீட்கப்பட்டவர்களில் சிலர் மணவாட்டியின் ஒரு பகுதியாகவும் சிலர் விருந்தினராகவும், சிலர் வேலைக்காரர்களாகவும் இருப்பார்கள் ஆனால் ஆட்டுக் குட்டியானவரின் கலியாண விருந்திற்கு மீட்கப்பட்டவர்கள் அனைவருமே அழைக்கப்பட்டிருக்கிறார்கள் இவர்கள் எல்லோருமே புதிய எருசலேமில் வாசம்பண்ணுவார்கள் மீட்கப்பட்டவர்களில் ஒருசிலர் மட்டுமே புதிய எருசலேமில் வாசம்பண்ணுவார்கள் என்று கூறுவது தவறான வியாக்கியானம் ஆகும் என்று வேதபண்டிதர்களில் பலர் கருத்துக் கூறுகிறார்கள் இந்த உபதேசத்தின் அடிப்படையில் இரட்சிக்கப்பட்டவர்கள் அனைவருமே மணவாட்டியாக, அதாவது ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாக இருப்பார்கள் (வெளி 21:2,9-10

வெளிப்படுத்தின விசேஷம் – தொகுப்புரை

19 அதிகாரம்

"ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்து" – வெளி 19:7-9 ஆகிய வசனங்களில் மட்டுமே இந்த விருந்தைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. இந்த விருந்தை விளக்குவதற்கு சங் 45, மத் 22;மத் 25:1-13 ஆகிய வசனங்களையும் ஒருசிலர் பயன்படுத்துகிறார்கள். இந்த வசனங்களுக்கும் வெளி 19:7-9 ஆகிய வசனங்களுக்கும் உறுதியான தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை.

6. யோவான் தூதனை வணங்கும்படி அவனுடைய பாதத்தில் விழுந்தான் – (1:17; 22:8-9)

வெளி 19:10 அப்பொழுது அவனை வணங்கும்படி அவனுடைய பாதத்தில் விழுந்தேன். அவன் என்னை நோக்கி: இப்படிச் செய்யாதபடிக்குப் பார், உன்னோடும் இயேசுவைக்குறித்துச் சாட்சியிட்ட உன் சகோதரரோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன்; தேவனை தொழுதுகொள். இயேசுவைப்பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது என்றான்.

"உன்னோடும் இயேசுவைக்குறித்துச் சாட்சியிட்ட உன் சகோதரரோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன்" யோவானுக்கு இந்தக் காரியங்களைக் காண்பித்தவன் இரட்சிக்கப்பட்ட ஒரு மனுஷன் என்பது இந்த வசனத்தின் மூலமாகத் தெரியவருகிறது. (வெளி 19:10, வெளி 22:8-9)

"இயேசுவைப்பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது" வெளி 12:17 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் இஸ்ரவேலின் மீதியானவர்களிடத்தில் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சாட்சி இருக்கிறது. இது பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கும். பரிசுத்த ஆவியானவர் இந்த உலகத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்படமாட்டார்.

7. தெய்வீக ஆளுகை – ஆயிர வருஷ அரசாட்சி – (19:11-20:15; ஆதி 3:1, 4:1; 8:15; 12:1; யாத் 12:37; மத் 3:1.)

(1) கிறிஸ்துவின் இரண்டாம் வருகை – (ஆதி 49:10; எண் 24:7-19 ஏசா 63:1-6; தானி 2:44-45; 7:13-14 சக 14:1-15; மத் 24:29-31; 25:31-46 2தெச 1:7-10; யூதா 14:15)

வெளி 19:11 பின்பு, பரலோகம் திறந்திருக்கக்கண்டேன்; இதோ, ஒரு வெள்ளைக்குதிரை காணப்பட்டது, அதின்மேல் ஏறியிருந்தவர் உண்மையும் சத்தியமுமுள்ளவரென்னப்பட்டவர்; அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுகிறார்.

வெளி 19:12 அவருடைய கண்கள் அக்கினிஜுவாலையைப் போலிருந்தன; அவருடைய சிரசின்மேல் அநேக கிரீடங்கள் இருந்தன; அவருக்கேயன்றி வேறொருவருக்குந் தெரியாத ஒரு நாமமும் எழுதியிருந்தது.

வெளி 19:13 இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருந்தார்; அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே.

வெளி 19:14 பரலோகத்திலுள்ள சேனைகள் வெண்மையும் சுத்தமுமான மெல்லிய வஸ்திரந் தரித்தவர்களாய், வெள்ளைக் குதிரைகளின்மேல் ஏறி, அவருக்குப் பின் சென்றார்கள்.

"பரலோகம் திறந்திருக்கக்கண்டேன்" உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள் மத்திய ஆகாயத்தில் இயேசு கிறிஸ்துவைச் சந்தித்த பின்பு, அவர்கள் பரலோகத்திற்குப் போவார்கள். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாண விருந்து பரலோகத்தில் நடைபெறும். மத்திய ஆகாயத்தில் நடைபெறாது.

வெளிப்படுத்தின விசேஷம் – தொகுப்புரை

19 அதிகாரம்

பரலோகத்தின் குதிரைகள் (Heavenly Horses)

1 இயேசு கிறிஸ்து ஏறியிருந்த குதிரை (வெளி 19:11,19,21) இந்தக் குதிரையும், வெளி 6:1-2 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் வெள்ளைக்குதிரையும் ஒன்றல்ல. இது அந்திக் கிறிஸ்துவின் குதிரை

2 பரலோகத்திலுள்ள சேனைகள் ஏறிச்செல்லும் வெள்ளைக்குதிரைகள் (வெளி 19:14)

3 அக்கினி ரதமும், அக்கினிக் குதிரைகளும் வந்து எலியாவையும் எலிசாவையும் பிரித்தது. எலியா சுழல்காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனான் (2 இராஜா 2:11-12)

4 அக்கினி மயமான குதிரைகளாலும் இரதங்களாலும் தேவன் எலிசாவை பாதுகாத்தார் (2 இராஜா 6:17)

5 சகரியா பல குதிரைகளைப் பார்த்தார். சிவப்பு, மங்கின நிறம், வெண்மை ஆகிய நிறங்களையுடைய குதிரைகள். பூமியெங்கும் சுற்றிப்பார்க்க கர்த்தர் அனுப்பினவர்கள் இந்தக் குதிரைகளின் மேல் ஏறியிருந்தார்கள் (சக 1:8 11)

6 சகரியா பல குதிரைகளைப் பார்த்தார். சிவப்பு, கருப்பு, வெள்ளை, புள்ளி புள்ளியான சிவப்பு ஆகிய குதிரைகள். இவை சர்வலோகத்திற்கும் ஆண்டவராக இருக்கிறவருடைய சமுகத்தில் நின்று புறப்படுகிற வானத்தினுடைய நாலு ஆவிகள் (சக 6:1 8)

[redacted] பற்றிய சத்தியங்கள் (வெளி 19:11-22:5)

1 இயேசு கிறிஸ்து வெள்ளைக் குதிரையின்மீது ஏறிவருகிறார் (வெளி 19:11,19-21)

2 பரலோகத்திலிருந்து வருகிறார் (வெளி 19:11 சக 14:4 2 தெச 1:7-10)

3 அவர் உண்மையுள்ளவர் என்னப்பட்டவர் (வெளி 19:11)

4 அவர் சத்தியமுள்ளவர் என்னப்பட்டவர் (வெளி 19:11)

5 அவர் நீதியாய் யுத்தம் பண்ணுகிறார் (வெளி 19:11)

6 அவர் நீதியாய் நியாயந்தீர்க்கிறார் (வெளி 19:11)

7 அவருடைய கண்கள் அக்கினி ஜுவாலையைப் போல இருக்கின்றன (வெளி 19:12)

8 அவருடைய சிரசின்மேல் அநேகக் கிரீடங்கள் இருக்கின்றன (வெளி 19:12)

9 இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருக்கிறார் (வெளி 19:13)

10 அவருக்கு மூன்று நாமங்கள் உள்ளன

(1) அவருக்கேயன்றி வேறொருவருக்கும் தெரியாத ஒரு நாமம். (வெளி 19:12)

(2) தேவனுடைய வார்த்தை (The Word of God) (வெளி 19:13)

(3) ராஜாதிராஜா, கர்த்தாதி கர்த்தா (KING OF KINGS AND LORD OF LORDS) (வெளி 19:16; மத் 1:21, வெளி 5:5

19 அதிகாரம்

11 பரலோகத்திலுள்ள சேனைகளுக்கு அதிபதி வெளி 19:14,19-21 யூதா 1:14 சக 14:5

12 அவருடைய வாயிலிருந்து புறஜாதிகளை வெட்டும்படிக்கு கூர்மையான பட்டயம் புறப்படுகிறது. (வெளி 19:15,21 வெளி 1:12-16; வெளி 10:1-2 வெளி 14:14-20)

13 அவர் இருப்புக்கோலால் புறஜாதிகளை அரசாளுவார் (வெளி 19:15; சங் 2 வெளி 2:26-27 வெளி 12:5)

14 அவர் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய உக்கிர கோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார் (வெளி 19:15,21 வெளி 14:14-20 ஏசா 63:1-7 யோவே 3:13)

15 அர்மகெதோனில் அந்திகிறிஸ்துவை ஜெயிப்பார் வெளி 19:19-21 2தெச 2:8-9 சக 14 யோவே 3)

16 பூமியில் ஆயிரம் வருஷம் அரசாளுவார் (வெளி 20:1-10 1கொரி 15:24-28 எபே 1:10)

17 சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரும், ஆட்டுக்குட்டியானவராகிய இயேசு கிறிஸ்துவும் நித்திய ஆலயமாக இருப்பார்கள் (வெளி 21:22)

18 தேவனுடைய மகிமை புதிய எருசலேமில் பிரகாசிக்கும். இயேசு கிறிஸ்து அதற்கு விளக்காக இருப்பார் (வெளி 21:23)

19 பிதாவின் வலதுபாரிசத்தில் இயேசு கிறிஸ்துவின் சிங்காசனம் நித்திய காலமாக இருக்கும் (வெளி 22:1; எபி 1:3

20 எல்லா சத்துருக்களையும் ஒடுக்கிய பின்பு, பூமியில் இயேசு கிறிஸ்து நித்திய காலமாக ஆளுகை செய்வார் (வெளி 22:5; வெளி 11:15, ஏசா 9:6-7; தானி 7:13-14 லூக்கா 1:32-33)

தோய்க்கப்படுதல் (dipped) - βάπτω - baptoo 911

ஆண்பால பெயர்ச்சொல் - குமாரன் (to dip) (வெளி 19:13; லூக்கா 16:24 யோவான் 13:26 - இந்த வார்த்தையிலிருந்து தான் ஞானஸ்நானம் கொடு என்னும் அர்த்தமுடைய baptizo, to baptize என்னும் வார்த்தைகள் வந்துள்ளன (மத் 3:6)

"பரலோகத்திலுள்ள சேனைகள் - எல்லாக் காலங்களிலும் இரட்சிக்கப்பட்டு, உயிர்த்தெழுந்த எல்லாப் பரிசுத்தவான்களையும் பரலோகத்தின் எல்லா தூதரையும் இந்த வாக்கியம் குறிக்கும் (வெளி 19:14 மத் 24:29-31 2தெச 2:7-10 யூதா 1:14-15; சக 14:5; யோவே 2:1-11

(2) தேவன் ஆலையை மிதிக்கிறார் - அர்மகெதோன் யுத்தம்

(அ) உருவகம் - மதுவுள்ள ஆலை

(14:17-20 ஏசா 63:1-6 யோவேல 3:13

வெளி 19:15 புறஜாதிகளை வெட்டும் படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது. இருப்புக்கோலால அவர்களை அரசாளுவார் அவர் சர்வவல்லமையுள்ள தேவனுடைய உக்கிர கோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார்

"இருப்புக்கோலால அவர்களை அரசாளுவார்" (சங் 2 வெளி 2:26-27 வெளி 12:5)

"அவர் சர்வவல்லமையுள்ள தேவனுடைய உக்கிரகோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார்" ஏசா 63:1-7 வெளி 14:14-20; யோவே 3:13

19 அதிகாரம்

(ஆ) இராஜாதி இராஜா, கர்த்தாதி கர்த்தா - (வெளி 19:11-14; 1தெச 1:7; மத் 24:29-31; 25:31-46; ஏசா 63:1-6; தானி 7:13-14; சக 14:1-5; யூதா 14)

வெளி 19:16 ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா என்னும் நாமம் அவருடைய வஸ்திரத்தின் மேலும் அவருடைய தொடையின் மேலும் எழுதப்பட்டிருந்தது.

(இ) மகா தேவன் கொடுக்கும் விருந்து - (எசே 39:4,17-21; மத் 24:38,40-42; லூக் 17:34-37)

வெளி 19:17 பின்பு ஒரு தூதன் சூரியனில் நிற்கக்கண்டேன்; அவன் வானத்தின் மத்தியில் பறக்கிற சகல பறவைகளையும் பார்த்து,

மகா தேவன் கொடுக்கும் விருந்து

1 விருந்துக்கு அழைக்கப்பட்டிருக்கிறவர்கள் (வெளி 19:17; மத் 24:28; லூக்கா 17:34-37; எசே 39:17-21)

2 விருந்தைப் பற்றிய முன்னறிவிப்பு (வெளி 19:18; மத் 24:28; லூக்கா 17:37; ஏசா 34:3; எசே 39:17)

3 விருந்துக்குக் கூடி வந்திருக்கிறவர்கள் (வெளி 19:19; வெளி 14:14-20; வெளி 16:13-16; வெளி 17:14; எசே 38-39; சக 14:2)

4 விருந்தை ஆயத்தம்பண்ணுதல் (வெளி 19:20-21; வெளி 14:14-20; ஏசா 34:9-17; ஏசா 63:1-7; எசே 38-39; யோவே 3; சக 14)

5 விருந்தைப் புசித்து திருப்தியடைதல் (வெளி 19:21; மத் 24:28; லூக்கா 17:37; எசே 39:17-21)

(ஈ) விருந்துக்கு கூடிவாருங்கள் - (எசே 38:17-23; மத் 24:28; லூக்கா 17:34-37; ஏசா 34:1-8; யோவேல் 3:13-14; வெளி 14:20)

வெளி 19:18 நீங்கள் ராஜாக்களின் மாம்சத்தையும் சேனைத் தலைவர்களின் மாம்சத்தையும் பலவான்களின் மாம்சத்தையும் குதிரைகளின் மாம்சத்தையும் அவைகளின் மேல் ஏறியிருக்கிறவர்களின் மாம்சத்தையும் சுயாதீனர் அடிமைகள் சிறியோர் பெரியோர் இவர்களெல்லாருடைய மாம்சத்தையும் பட்சிக்கும்படிக்கு மகா தேவன் கொடுக்கும் விருந்துக்குக் கூடி வாருங்கள் என்று மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டான்.

(உ) விருந்துக்கு கூடி வருகிறார்கள் - (14:14-20; 16:13-16; 17:14; எசே 38:4-16; யோவேல் 3:2; சக 14:1-5; மத் 24:40-42)

வெளி 19:19 பின்பு, மிருகமும் பூமியின் ராஜாக்களும் அவர்களுடைய சேனைகளும் குதிரையின்மேல் ஏறியிருக்கிறவரோடும் அவருடைய சேனையோடும் யுத்தம் பண்ணும்படிக்குக் கூடிவரக்கண்டேன்.

"யுத்தம்பண்ணும்படிக்குக் கூடிவரக் கண்டேன்" அர்மகெதோனில் நடைபெறப் போகும் யுத்தம். (வெளி 16:13-16; யோவே 3; சக 14:1-15; எசே 38-39) இந்த யுத்தம் ஒரு நாள் மட்டுமே நடைபெறும். (சக 14:7)

அர்மகெதோன் யுத்தம் நடைபெறும் காலம்

1 அந்திக் கிறிஸ்து தேசங்களை எருசலேமிற்கு எதிராக அர்மகெதோனில் கூடிவரச் செய்யும்போது. (வெளி 19:19-21; தானி 11:44; எசே 38-39; சக 14:1-5)

2 அந்திக்கிறிஸ்துவிடமிருந்து யூதர்களை மீட்கும் இரண்டாம் வருகையின்போது. (வெளி 19:11-21; யோவே 3; சக 14:1-5; ஏசா 63:1-7; யூதா 1:14; 2தெச 1:7)

19 அதிகாரம்

3 மகா உபத்திரவக்காலம் முடிந்தவுடன் (வெளி 19:11-21; மத் 24:29-31 மத் 25:31-46)

4 ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்குப் பின்பு (வெளி 19:1-21)

5 அந்திக்கிறிஸ்துவின் கீழ் தேசங்களின் எல்லா சேனைகளும் எருசலேமைச் சுற்றி வளைக்கும்போது. (வெளி 19:19-21; சக 14:1-15)

6 ஆயிரம் வருஷ அரசாட்சிக்கு முன்பு (வெளி 19:11-21; வெளி 20:1-10)

7 இருளையின காலத்தின் முடிவில். (வெளி 19:11-21; மத் 13:40-50 மத் 24:29-31, மத் 25:31-46, அப் 15:13-18)

8 தேவன் தம்முடைய ராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கும்போது. (வெளி 11:15 வெளி 17:14, வெளி 19:11-21 தானி 2:44-45, தானி 7:13-14,18-27)

9 முதலாவது உயிர்த்தெழுதல் முடிவு பெறும்போது. (தானி 19:19-20:6)

10 தானியேலின் எழுபதாவது வாரத்தின் முடிவில (வெளி 11:1-3 வெளி 12:6,14 வெளி 13:5, தானி 9:27)

11 கர்த்தருடைய நாளின் ஆரம்பத்தில (வெளி 19:11-20:7; 1தெச 5:3; 2தெச 2)

12 அந்திக்கிறிஸ்து நாற்பத்திரண்டு மாதங்களுக்கு ஆளுகை செய்த போது. (வெளி 13:5; வெளி 19:19-21 2தெச 2:9)

13 கோதுமையும், களையும் வேறு பிரிக்கப்பட்ட போது. (மத் 13:40-50; மத் 25:31-46)

14 நோவா, லோத்து ஆகியோருடைய நாட்களில் நடைபெற்றது போன்ற சூழ்நிலை ஏற்படும்போது (வெளி 19:11-21 மத் 24:37-39, லூக்கா 17:22-37 1தீமோ 4 2தீமோ 3:1-13 2தீமோ 4:1-4 2பேதுரு 2)

15 எல்லா தேசங்களிலிருந்தும் இஸ்ரவேல் இறுதியாகக் கூட்டிச் சேர்க்கப்படும் போது (மத் 24:29-31; ஏசா 11:10-12 எசே 37)

16 சாத்தான் கட்டப்பட்டிருக்கும்போது (வெளி 19:11-20:7 ஏசா 24:22-23 ஏசா 25:7)

17 இரண்டு சாட்சிகள் தங்களுடைய ஊழியத்தை முடிக்கும்போது

18 இஸ்ரவேல மூன்றரை வருஷங்களுக்கு வனாந்தரத்தில இருந்தபோது (வெளி 11:1-3; வெளி 12:6,14; வெளி 13:5)

19 முத்திரைகள் எக்காளங்கள் கலசங்கள் ஆகியவை நிறைவேறிய போது (வெளி 16:17-21 வெளி 19:1-21)

20 புதிய வானங்கள், புதிய பூமி ஆகியவற்றுக்கு ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு (வெளி 19:11-20:10 வெளி 21:1)

அர்மெகெதோன் யுத்தத்தில் பங்கு பெறுகிறவர்கள்

இந்த யுத்தம் சாதாரணமாக உலகத்திலுள்ள தேசங்களுக்கு இடையே நடைபெறும் யுத்தத்தைப் போல இராது. கிறிஸ்துவும் பரலோகத்திலுள்ள அவருடைய சேனைகளும் இஸ்ரவேல தேசமும் (சக 14:14) ஒரு பக்கத்தில இருந்து யுத்தம் பண்ணுவார்கள் (வெளி 19:1-14 2தெச 1:7-10 சக 14:5 யூதா 1:14) சாத்தானும் அவனுடைய தூதர்களும் (வெளி 12:7-12 வெளி 20:1-5) அந்திக்கிறிஸ்துவோடு சேர்ந்து, மறு பக்கத்தில் இருந்து யுத்தம் பண்ணுவார்கள் (தானி 2:44-45 தானி 7:13-27 எசே 38-39; சக 14:1-5; வெளி 16:13-16, வெளி 19:19-21)

வெளிப்படுத்தின விசேஷம் – தொகுப்புரை

19 அதிகாரம்

அர்மகெதோன் யுத்தத்தின் நோக்கம்

இயேசு கிறிஸ்து பூமியை நித்திய காலமாக ஆளுகை செய்யப்போகிறார் இதைத் தடுப்பதற்காக சாத்தான் அர்மகெதோனில் கிறிஸ்துவோடு யுத்தம் பண்ணுகிறான் இந்த யுத்தத்தினால சாத்தான் தன்னுடைய நித்திய அழிவைத் தேடிக் கொள்கிறான் (வெளி 12:12, வெளி 19:19-21; வெளி 20:1-10; சக 14:1-5) அர்மகெதோன் யுத்தத்திற்குத் தேவனுடைய நோக்கம் வேறுபட்டிருக்கிறது. அவையாவன

1. இஸ்ரவேலை விடுவித்து புறஜாதியாரின் காலங்களை முடிவுபெறச் செய்ய வேண்டும் (ஏசா 63:1-7; சக 14:1-5, லூக்கா 21:24, வெளி 11:1-2)

2. இஸ்ரவேலைத் துன்புறுத்திய தேசங்களுக்குத் தண்டனை கொடுக்க வேண்டும். (மத் 25:31-46)

3. பூமியிலுள்ள தேசங்களின்மீது தமது தெய்வீக ராஜ்ஜியத்தை ஸ்தாபிக்க வேண்டும். (தானி 2:44-45 தானி 7:13-27, சக 14; வெளி 11:15)

4. வாக்குத்தத்தம் பண்ணியதுபோன்று தாவீதின் சிங்காசனத்தை மறுபடியும் ஸ்தாபிக்க வேண்டும். (2சாமு 7 ஏசா 9:6-7, லூக்கா 1:32-33 அப 15:13-18)

5. பூமியிலிருந்து எல்லாக் கலகக்காரர்களையும் ஒழிக்க வேண்டும். (1கொரி 15:24-28; வெளி 20:7-10)

6. பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலுமிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்பட வேண்டும். (எபே 1:9-10)

அர்மகெதோன் யுத்தத்தினால் ஏற்படும் விளைவுகள்

1. சாத்தானோடும், அந்திக் கிறிஸ்துவோடும் சேர்ந்து யுத்தம் பண்ணிய சாத்தானின் அந்தகாரச் சக்திகள் அனைத்தும் முழுவதுமாகத் தோற்கடிக்கப்படும். (வெளி 19:11-20:3 ஏசா 63 எசே 38-39 சக 14 யோவே 3)

2. பூமியிலுள்ள சேனைகளில் ஆறில் ஒரு பங்கைத் தவிர மற்றவைகள் அழிக்கப்படும். (எசே 39:2)

3. சாத்தானின் சேனைகளுடைய மாமசத்தை பறவைகளும் மிருகங்களும் ஏழு மாதங்களுக்குப் புசிக்கும். (வெளி 19:17-21 எசே 39:4-24; மத் 24:28 லூக்கா 17:34-37; யோபு 39:27-30)

4. மிருகமும், கள்ளத்தீர்க்கதரிசியும் கந்தகம் எரிகிற அக்கினிக்கடலிலே உயிரோடே தள்ளப்படுவார்கள் (வெளி 19:20; வெளி 20:10 தானி 7:11; தானி 8:25; தானி 11:45 2தெச 2:8-9)

5. சாத்தானும், அவனுடைய தூதர்களும் பிசாசுகளும் அக்கினியும் கந்தகமுமாகிய கடலிலே ஆயிரம் வருஷங்களுக்கு வாதிக்கப்படுவார்கள் (வெளி 20:1-7; ஏசா 24:22-23 ஏசா 25:7)

6. யுத்தத்தில் மரித்துப் போகிறவர்களுடைய ரத்தம் 184 மைல்களுக்கு ஓடி, குதிரைகளின் கடிவாளங்கள் மட்டும் பெருகி வரும். (வெளி 14:14-20 எசே 39:17-24 ஏசா 63:1-7)

7. இஸ்ரவேல் மீட்கப்படும். தேவனுடைய நித்திய ராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்படும். (வெளி 19:11-20:10; வெளி 22:4-5 வெளி 11:15 மத் 25:31-46, தானி 2:44-45 தானி 7:13-27, ஏசா 9:6-7; லூக்கா 1:32-33

19 அதிகாரம்

(ஊ) பட்டயத்தால் கொல்லப்பட்டவர்களுடைய மாம்சத்தினால் பறவைகள் யாவும் திருப்தியடைந்தன - (ஏசா 34:1-8; 63:1-6; எசே 38:17-23; 39:4,17-23; சக 14:1-15; மத் 24:28; லூக் 17:34-37; 2தெச 1:7-10; 2:8; யூதா 14; வெளி 14:14-20)

வெளி 19:20 அப்பொழுது மிருகம் பிடிக்கப்பட்டது; மிருகத்தின் முன்பாகச் செய்த அற்புதங்களால் அதின் முத்திரையைத் தரித்தவர்களையும் அதின் சொரூபத்தை வணங்கினவர்களையும் மோசம்போக்கின கள்ளத்தீர்க்கதரிசியுங்கூடப் பிடிக்கப்பட்டான்; இருவரும் கந்தகம் எரிகிற அக்கினிக்கடலிலே உயிரோடே தள்ளப்பட்டார்கள்.

வெளி 19:21 மற்றவர்கள் குதிரையின்மேல் ஏறினவருடைய வாயிலிருந்து புறப்படுகிற பட்டயத்தால் கொல்லப்பட்டார்கள்; அவர்களுடைய மாம்சத்தினால் பறவைகள் யாவும் திருப்தியடைந்தன.

"இருவரும் கந்தகம் எரிகிற அக்கினிக்கடலிலே உயிரோடே தள்ளப்பட்டார்கள்" - அர்மகெதோனில் அந்திக்கிறிஸ்துவும் கள்ளத்தீர்க்கதரிசியும் கொல்லப்படுவார்கள். இவர்கள் இருவரும் மனுஷர்கள் (வெளி 19:20; தானி 7:11; ஏசா 11:4; 2தெச 2:8-9) இவர்களுடைய சரீரங்கள் உயிர்த்தெழுந்து, நித்திய நரகத்தில் தள்ளப்படும் (வெளி 19:20; வெளி 20:10; தானி 7:11) இவர்களும், வலது பக்கத்தில் நிற்பவர்களும் goat nations (மத் 25:41-46) இரண்டாவது உயிர்த்தெழுதலில் பங்கு பெறுவார்கள். இது ஆயிரம்வருஷ அரசாட்சிக்கு முன்பு இரண்டாவது உயிர்த்தெழுதலின் முதலாவது பகுதி. மரித்த மற்றவர்கள் ஆயிரம் வருஷ அரசாட்சிக்குப் பின்பு இரண்டாம் உயிர்த்தெழுதலை நிறைவுபெறச் செய்வார்கள் (வெளி 20)

அந்திக்கிறிஸ்துவின் சேனைகள் அழிக்கப்பட்ட விதம்

1 கிறிஸ்து தமது வருகையின் பிரசன்னத்தினால் அவர்களை நாசம்பண்ணுவார் (2தெச 2:8-9)

2 இயேசு கிறிஸ்து வல்லமையின் தூதர்களினால் அவர்களை அழிப்பார் (2தெச 1:7-10)

3 பரிசுத்தவான்கள் மூலமாக (வெளி 19:14; யூதா 1:14; சக 14:5)

4 வெள்ளமாய் அடிக்கும் மழை மூலமாக. (எசே 38:22)

5 பெருங்கல்மழை (வெளி 16:21; எசே 38:22)

6. அக்கினியும், கந்தகமும் (எசே 38:22)

7 கொள்ளைநோயும் இரத்தமும் (எசே 38:22)

8 யூதருடைய சேனை (சக 14:14)

9 தங்களுக்குத்தாங்களே அழிவை வருவித்துக் கொள்ளுதல் (சக 14:13)

10 கர்த்தருடைய பட்டயம். (வெளி 19:15,21; ஏசா 11:4)

"அவர்களுடைய மாம்சத்தினால் பறவைகள் யாவும் திருப்தியடைந்தன" (வெளி 19:17-18; மத் 24:28, லூக்கா 17:37, எசே 39:4,17-21)

20 அதிகாரம்

(3) சாத்தானை ஒரு தூதன் பாதாளத்திலே தள்ளி அடைத்தான்-(ஏசா 24:21-23; 25:7)

வெளி 20:1 ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும் பெரிய சங்கிலியையும் தன் கையிலே பிடித்துக் கொண்டு வானத்திலிருந்திறங்கிவரக்கண்டேன்

வெளி 20.2 பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டி வைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும் வரைக்கும் அது ஜனங்களை மோசம்போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின் மேல முத்திரைபோட்டான்

வெளி 20.3 அதற்குப் பின்பு அது கொஞ்சக் காலம் விடுதலையாகவேண்டும்.

"பாதாளத்தின் திறவுகோல" -(வெளி 1:18 வெளி 9:1, வெளி 3.7, ஏசா 22:22)

"அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து" - (2பேதுரு 2:4

பிடி (laid hold) - **κρατέω** - krateoo - 2902

வினைச்சொல் - பிடி, தழுவு கைக்கொள் மறைக்கப்படு, மனனியாதிரு பற்றிக்கொள், ஏந்திக்கொள் **(to be strong and mighty; to rule; hold sway; to lay hold of, become master of; subdue) "lay hold upon"** (வெளி 20:2 மத் 12:11, மத் 14:3; மத் 26:55-57 மாற்கு 3:21, மாற்கு 6:17; மாற்கு 12:12, மாற்கு 14:51; எபி 6:18); **"lay hands on"** (மத் 18:28; மத் 21:46); **"hold fast"** (மத் 26:48; எபி 4:14; வெளி 2:13,25; வெளி3:11 ; **"obtain"** (அப 27:13); **"take"** (மத் 22:6 மத் 26:4,50, மாற்கு 14:1, 44-49; அப் 24:6, **"take by"** (மத் 9:25; மாற்கு 1:31 மாற்கு 5:41; மாற்கு 9:27, லூக்கா 8:54, **"hold by"** (மத் 28:9); **"keep"** (மாற்கு 9:10 ; **"retain"** (யோவான் 20:23, **"hold"**(மாற்கு7:3-8; லூக்கா 24:16, அப 2:24; அப 3:11; கொலோ 2:19 2தெச 2:15; வெளி 2:14-15 வெளி 7:1)

தூதர்களுடைய சரீரங்களை ஒருவருக்கொருவர் பிடித்துக் கட்டி வைத்து முத்திரை போட முடியும். (வெளி 20:2 வெளி 9:1,14; வெளி 12:7-12; 2பேதுரு 2:4 யூதா 1:6-7; ஏசா 24:22-23 ஜனங்களுடைய சரீரங்களையும் தூதர்களால் பிடிக்க முடியும். (ஆதி 19:10,16, ஆதி 32:24-32)

பாதாளம் (bottomless pit) - **ἄβυσσος** - Abussos - 12

பெயரடை பெயர்ச்சொல் - ஆழம் காண முடியாத பாதாளம் **(bottomless; unfathomed; enormous; abyss; unbounded; immeasurable depth). "bottomless pit"** (வெளி 20:1,3 வெளி 9:1-2,11; வெளி 11:7, வெளி 17:8) **deep** (லூக்கா 8:31 ரோமர் 10:7)

(அ) மரித்தவர்களின் இருப்பிடம் ரோம. 10:7

(ஆ) பிசாசுகளின் சிறைச்சாலை லூக். 8:31; வெளி. 20:3

தூதன் சாத்தானுக்குச் செய்யும் காரியங்கள் (வெளி 20:2-3)

1. அவனைப் பிடிப்பான் (வெளி 20:2
2. சங்கிலியால் கட்டி வைப்பான்
3. அவனைப் பாதாளத்தில தள்ளுவான்
4. அவனைச் சிறைச்சாலையில அடைத்துப் போடுவான்

20 அதிகாரம்

5 ஆயிரம்வருஷங்களுக்கு அவன்மேல் முத்திரை போடுவான்

6 கொஞ்சக்காலம் அவனை விடுவிப்பான்

"அது ஜனங்களை மோசம் போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரை போட்டான்" - ஆயிரம் வருஷங்களுக்குச் சாத்தான் ஜனங்களை வஞ்சிக்காதபடிக்கு அவன் பாதாளத்தில் தள்ளப்பட்டு, அங்கு அடைக்கப்பட்டு, முத்திரை போடப்பட்டிருக்கிறான். ஆயிரம் வருஷங்களுக்குச் சாத்தானால் ஜனங்கள்மீது கிரியை நடப்பிக்க முடியாது.

"கொஞ்சக்காலம்" (little season) - வெளி 12:12 ஆவது வசனத்தில் "கொஞ்சக்காலம்" (short time) என்று கூறப்பட்டிருப்பதும், வெளி 17:10 ஆவது வசனத்தில் "கொஞ்சக்காலம்" (short space) என்று கூறப்பட்டிருப்பதும் இந்த வசனத்தில் கொஞ்சக்காலம் என்பதும் மூன்றரை வருஷங்களைக் குறிக்கும் (வெளி 12:12-14; வெளி 13:5)

(4) பூமியில் ஆயிர வருஷ அரசாட்சி

- (5:10, 11:15; சக 14:9; எபே 1:10; லூக் 1:32-33; 1கொரி 15:24-28; ஏசா 9:6-7; தானி 2:44-45; 7:13-14,18,27; எசே 45:7; மத் 13:40-43; 25:31-46; அப் 15:13-18; ரோமர் 11:25-27; வெளி 1:5; 5:10; 11:15; 20:1-10)

வெளி 20:4 அன்றியும், நான் சிங்காசனங்களைக் கண்டேன்; அவைகளின்மேல் உட்கார்ந்தார்கள்; நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்படி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது; இயேசுவைப்பற்றிய சாட்சியினிமித்தமும் தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம் பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும், மிருகத்தையாவது அதின் சொரூபத்தையாவது வணங்காமலும் தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளாமலும் இருந்தவர்களையும் கண்டேன்; அவர்கள் உயிர்த்து கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள்.

வெளி 20:5 மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை. இதுவே முதலாம் உயிர்த்தெழுதல்.

வெளி 20:6 முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்.

"நான் சிங்காசனங்களைக் கண்டேன்; அவைகளின்மேல் உட்கார்ந்தார்கள்; நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்படி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது" - இந்தச் சிங்காசனங்கள் தேவனுடைய பரிசுத்தவான்களுக்குரியவை. ராஜாக்களையும் ஆசாரியர்களையும்போல எல்லாப் பரிசுத்தவான்களும் கிறிஸ்துவோடுகூட ஆளுகை செய்வார்கள் (வெளி 1:6; வெளி 2:26-27; வெளி 3:21; வெளி 5:10; வெளி 12:5; வெளி 20:4-6; வெளி 22:4-5; லூக்கா 22:30; ரோமர் 8:17; 1கொரி 6:2-4; 2தீமோ 2:12; எபி 12:28; சங் 149:6-9; தானி 7:18,27)

நித்திய ஜனங்களில் இரு பிரிவினர்

நித்திய ஜனங்களை இரு பிரிவாகப் பிரித்துப் பார்க்கும்போது, பூமியின்மீதுள்ள நித்தியமான சூழ்நிலைகளைப் புரிந்து கொள்வதற்கு எளிதாக இருக்கும். இரண்டு பிரிவினர்களின் விளக்கம்.

20 அதிகாரம்

1 வருங்கால உபத்திரவக் காலத்திலிருந்து ஆயிரம் வருஷ அரசாட்சி வழியாக ஜீவித்து அதன்பின்பு புதிய பூமியில் நித்தியமாக இருக்கிறவர்கள் ஆயிரம் வருஷ அரசாட்சியின் முடிவில் சாத்தானோடு சேர்ந்து இவர்கள் கலகம் பண்ணாதவர்கள் பாவம் செய்யாதவர்கள் (வெளி 20:7-10, மத் 13:39-50;25:46) இவர்கள் இயற்கையான ஜனங்கள் **(Natural people)** என்று அழைக்கப்படுகிறார்கள்

2 உயிர்த்தெழுந்தவர்கள் முதலாவது உயிர்த்தெழுதலில் பங்கு பெற்றிருக்கிறவர்கள் இயற்கையான ஜனங்களின் நித்திய சந்ததிகளை நித்திய காலமாக ஆளுகை செய்கிறவர்கள் (வெளி 20:4) உயிர்த்தெழுந்த ஜனங்கள் திருமணம் செய்து கொள்வதில்லை (மத் 22:30) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது உயிரோடு இருக்கும் இயற்கையான ஜனங்கள் திருமணம் செய்து கொள்வார்கள் தேவன் ஆதாமை பலுகிப் பெருகுங்கள் என்று கூறியது போன்று இவர்களும் பலுகிப் பெருகுவார்கள் ஜீவவிருட்சத்தினால் இவர்கள் நித்திய காலமாக ஜீவிப்பார்கள் (வெளி 22:1-2) உயிர்த்தெழுவதினால் இவர்கள் நித்திய காலமாக ஜீவிப்பதில்லை (1கொரி 15:51-58, பிலி 3:21)

சிரச்சேதம் பண்ணப்பட்டதற்குக் காரணங்கள்

1 இயேசுவைப் பற்றிய சாட்சியின் நிமித்தம்

2 தேவனுடைய வார்த்தையின் நிமித்தம்

3 மிருகத்தை வணங்காததின் நிமித்தம்

4 மிருகத்தின் சொரூபத்தை வணங்காததின் நிமித்தம்.

5 தங்கள் நெற்றியில் மிருகத்தின் முத்திரையைத் தரித்துக் கொள்ளாததின் நிமித்தம்.

6 தங்கள் கைகளில் மிருகத்தின் முத்திரையைத் தரித்துக் கொள்ளாததின் நிமித்தம்.

உபத்திரவக்காலத்து பரிசுத்தவான்கள் இரத்தச்சாட்சியாக மரித்து பின்பு உயிர்த்தெழுந்து கிறிஸ்துவோடு ஆயிரம் வருஷம் ஆளுகை செய்வார்கள்

"மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை" - மரித்த துன்மார்க்கர்கள் பாக்கியவான்களல்ல அவர்கள் பரிசுத்தவான்களும் அல்ல முதலாவது உயிர்த்தெழுதலில் அவர்களுக்குப் பங்கில்லை. (வெளி 20:4-5) இவ்விரண்டு உயிர்த்தெழுதல்களுக்கும் இடையில் ஆயிரம் வருஷம் இடைவெளி உள்ளது. முதலாவது உயிர்த்தெழுதல் நீதிமான்களின் உயிர்த்தெழுதல் ஆகும் இரண்டாவது உயிர்த்தெழுதல் துன்மார்க்கரின் உயிர்த்தெழுதலாகும் (வெளி 20:4-6,7-15)

"இதுவே முதலாம் உயிர்த்தெழுதல்" உபத்திரவக்காலத்து பரிசுத்தவான்கள் இரண்டு சாட்சிகள் ஆகியோருடைய உயிர்த்தெழுதலோடு (வெளி 6:9-11 வெளி 7:9-17 வெளி 11:12 வெளி 15:2-4 வெளி 20:4-6) முதலாவது உயிர்த்தெழுதல் நிறைவு பெறுகிறது.

ஆயிரம் வருஷ அரசாட்சி

1 மில்லி **(mille)** என்றால் ஆயிரம். அன்னஸ் **(annus)** என்றால் வருஷம் என்று பொருள் இவை லத்தீன் மொழி வார்த்தைகளாகும். ஆங்கிலத்தில் ஆயிரம் வருஷம் என்பது மில்லினியம் **(Millennium)** என்றழைக்கப்படுகிறது. வெளி 20:1-7 ஆகிய வசனங்களில் இந்த வாக்கியம் 6 தடவை பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

20 அதிகாரம்

2 சாபம் பூரணமாக அகற்றப்படுவதற்கு முன்பாக இதுவே மனுஷனுடைய கடைசிக் காலமாகும். (வெளி 22:3)

3 சாத்தான் கட்டப்பட்டிருப்பான் (வெளி 20:1-10)

4 இரண்டாம் வருகைக்கும், புதிய வானம், புதிய பூமி ஆகியவற்றிற்கும் இடையில ஆயிரம் வருஷ அரசாட்சி வரும் (வெளி 19-19)

5 ஆயிரம் வருஷ அரசாட்சி பூமியில நடைபெறும். அது பிரத்தியட்சமாக இருக்கும் (ஏசா 9:6-7 தானி 2:44-45; தானி 7:13-27, சக 14; லூக்கா 1:32-33; வெளி 5:10 வெளி 11:15; வெளி 20:1-10 வெளி 22:4-5

6 ஆயிரம் வருஷ அரசாட்சி தெய்வீக ஆளுகையாக (theocratic government) இருக்கும். ஏசா 2:2-4 ஏசா 52:7; எசே 43:7 தானி 2:44-45 தானி 7:13-14 சக 14:1-21; மத் 25:31-46 லூக்கா 1:32-33; வெளி 11:15, வெளி 20:1-10

7 தேவனுக்குக்கீழ் கிறிஸ்து ஆளுகை செய்வார் (ஏசா 9:6-7, தானி 7:13-14; லூக்கா 1:32-33)

8 கிறிஸ்துவிற்குக் கீழ் தாவீது சமஸ்த இஸ்ரவேலை ஆளுகை செய்வார் (எரே 30:9; எசே 34:24; எசே 37:24-28, ஓசி 3:4-5)

9 ஒவ்வொரு அப்போஸ்தலரும் ஒவ்வொரு கோத்திரத்தானை ஆளுகை செய்வார்கள் (மத் 19:28 லூக்கா 22:30)

10 எல்லாப் பரிசுத்தவான்களும் ராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும் ஆளுகையில பங்குபெற்றிருப்பார்கள் (வெளி 20:4

11 உலகத்தின் தலைநகரம் எருசலேமாக இருக்கும். (ஏசா 2:2-4, எசே 48, சக 14)

12 ஆயிரம் வருஷ ராஜ்ஜியம் உலகம் முழுவதும் வியாபித்திருக்கும். (வெளி 11:15; தானி 2:44-45 தானி 7:13-27; சக 14)

13 ஜனங்களில் ஒருசில பிரிவினர் தேவனுடைய ராஜ்ஜியத்தைச் சுதந்தரித்துக் கொள்ளமாட்டார்கள் (1கொரி 6:9; கலா 5:19-21)

14 ஜனங்களில் ஒருசில பிரிவினர் தேவனுடைய ராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க மாட்டார்கள் (மத் 5:20 மத் 13:39-50; மத் 24:45-51 மத் 25:31-46, வெளி 14:9-11

15 இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது ஜாதிகளின்மீது நியாயத்தீர்ப்பு வழங்கப்படும். அதன் அடிப்படையில தேவனுடைய ராஜ்ஜியத்திற்குள் பிரவேசிப்பதற்குப் பாத்திரவான்கள் யார் என்பது முடிவு பண்ணப்படும். (மத் 25:31-46

16 எல்லாத் தேசங்களும் வருஷத்திற்கு ஒருமுறை கிறிஸ்துவை தரிசிக்காரம் பண்ணுவதற்காகத் தங்களுடைய பிரதிநிதிகளை எருசலேமிற்கு அனுப்ப வேண்டும். (சக 14:16-21, ஏசா 2:1-4 ஏசா 35:8-9)

17 மரித்த துன்மார்க்கர்கள் ஆயிரம் வருஷ அரசாட்சியில ஜீவிப்பதற்கு உயிர்த்தெழுந்திருக்க மாட்டார்கள் அவர்களுக்கு இரண்டாம் வாய்ப்பு கொடுக்கப்பட மாட்டாது (வெளி 20:4-6 11:15; எபி 9:27

18 ஆயிரம் வருஷ அரசாட்சியில பூமி பாழாய்ப்போகாது. (ஏசா 2:2-4 சக 14:16-21; 1கொரி 15:24-28 வெளி 20:1-10)

19 எல்லாத் தேசங்களுக்கும் தேசிய பிரமாணங்களும் (civil laws), மார்க்க பிரமாணங்களும் (religious laws) இருக்கும். (ஏசா 2:2-4; ஏசா 9:6-7, ஏசா 11:3-5; ஏசா 65:20, சக 14:16-21; 1கொரி 15:24-28

20 அதிகாரம்

20 புறஜாதி தேசங்கள் தேவனுடைய சித்தத்தின் பிரகாரம் பூமியின் வெவ்வேறு பகுதிகளில் அமைந்திருக்கும். (உபா 32:8 அப 17:26)

21 ஆதியிலே வாக்குபண்ணப்பட்ட பூமி அனைத்தும் இஸ்ரவேலுக்குக் கொடுக்கபடும் (ஆதி 15:14-18 ஆதி 17:6-19 ஏசா 60:20 எசே 47:13-48:35

22 எருசலேமிலுள்ள வருங்கால யூதருடைய தேவாலயம் உலகத்தின் தலைநகரமாக இருக்கும். (எசே 43:7 சக 6:12-13

23 தேவாலயத்திலிருந்து தெற்கு முகமாக ஒரு நதி பாயநதோடும். அது இரண்டு பிரிவுகளாகப பிரியும். ஒரு பிரிவு மத்திய தரைக்கடலுக்கும் மறறொன்று சவக்கடலுக்கும் போகும். அவறறின தணணீர் குணப்படுத்தப பட்டிருக்கும். அதில திரளான மச்சங்கள் (fish) இருக்கும் (எசே 47 சக 14:8)

24 வருங்கால தேவாலயத்தில பூமிக்குரிய ஆசாரியர்களும், லேவியர்களும் ஆராதனை செய்வார்கள் ஏசா 66:19-24; எசே 43:19-27, எசே 44:9 31

25 முன்பிருந்த பலிகள், பண்டிகைகள் தேவாலயத்து ஆராதனை சடங்குகள ஆகியவை தொடரும். கிறிஸ்து அவற்றை நிறைவேற்றுவதற்கு முன்பாக அவை அடையாளமாக இருந்தது. இனிமேல அது நிந்திய அடையாளமாக இருக்கும். (எசே 43:19 27; எசே 44:5 30 எசே 45:17-25 எசே 46:1 24 சக 14:16 21; ஏசா 66:19-24)

26 மாம்சமான யாவர்மீதும் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படுவார (ஏசா 32:5; எசே 36:25-27; யோவே 2:28 32)

27 கர்த்தரைப் பற்றிய அறிவு உலகம் முழுவதும் விளங்கும். (ஏசா 11:9 சக 8:22-23)

28 தேசங்களுக்கு சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு யூதர்கள் மறுபடியும் ஊழியக்காரர்களாக இருப்பார்கள் (ஏசா 2:2-4; ஏசா 40:9; ஏசா 52:7 ஏசா 61:6; ஏசா 66:18-21; சக 8:23)

29 உலகம் முழுவதும் ஒரே ஒரு மார்க்கம் மட்டுமே இருக்கும். (மல் 1:11 சக 14:16-21; ஏசா 2:2-4, யோவே 2:28-31; எரே 31:31-36

30 தேவனுடைய மகிமை தொடர்ந்து வெளிப்படும் (ஏசா 4:4-6; எசே 43:1-5

31 எலலோருக்கும் இரட்சிப்பு பூரணமாகக் கிடைக்கும். (யோவே 2:28-32 அப் 2:16-21; ஏசா 2:2-4; ஏசா 11:9 ஏசா 52:7; எபி 8-10)

32 எலலோரும தெய்வீக சுகமாதலை அனுபவிப்பார்கள (ஏசா 32:1-5 ஏசா 33:24; ஏசா 35:3-6, ஏசா 53:5 மத் 8:17; 1பேதுரு 2:24)

33 உலகம் முழுவதிலும் சமாதானம் இருக்கும். (ஏசா 2:4 ஏசா 9:6 7 மீகா 4:3-4 மல 1:11

34 உலகம் முழுவதும் செழித்து வளமாய இருக்கும். (ஏசா 2:2-4, ஏசா 65:20-25, மீகா 4:4-5

35 இஸ்ரவேலில இருப்பதைப போன்று பொருளாதார அமைப்பு இருக்கும். (ஆதி 14:20; ஆதி 28:22=எபி 6:20, எபி 7:1-10 மத் 23:23 ரோமர் 2:22 1கொரி 9:7-18; 1கொரி 16:1-3, மல 3:10 12)

36 எலலோருக்கும் பூரண நீதி செலுத்தப்படும். ஏசா 9:6 7 ஏசா 11:3-5 ஏசா 65:20 25 ஏசா 66:1 2 மத் 5:1 7:29

37 மனுஷருடைய ஆயுசு காலம் நீட்டிக் கொடுக்கபடும். (ஏசா 65:20-25, சக 8:4)

20 அதிகாரம்

38 வான மண்டலங்களிலுள்ள கிரகங்களின் ஒளி ஏழு மடங்கு அதிகரிக்கும். (ஏசா 30:26. ஏசா 60:18-22)

39 மிருகங்களின் சுபாவங்கள் மாறுமடையும் ஏசா 11:6-8 ஏசா 65:17-25; ரோமர் 8:18-23)

40 பாலைவனங்கள் பசுமையாகும் (ஏசா 35:1-10; ஏசா 55:12-13, எசே 36:8-12; யோவே 2:18-27 யோவே 3:17-21; ஆமோ 9:13-15)

41 அன்பும், நீதியும் ஜெயம் பெறும். (ஏசா 9:6-7; ஏசா 11:5; ஏசா 32:1-5, ஏசா 65:17-25

42 மேசியாவின்கீழ் யூதர்கள் எல்லா தேசங்களுக்கும் தலைவராக இருப்பார்கள் (உபா 28:1-14)

43 மறுஷர்கள் கிறிஸ்துவிருக்கும் உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களுக்கும் பிரமாணங்களுக்கும் கீழ்ப்படிய வேண்டும். (சங் 2; வெளி 2:26-27, வெளி 5:10 வெளி 11:15 வெளி 12:5. வெளி 20:4-10

44 கனிதரும் காலங்கள் தடையில்லாமல் வரும். (ஏசா 30:23-25 ஏசா 33:20-21; ஏசா 35:6-7 ஏசா 41:17-18, ஏசா 49:10 எசே 34:26, எசே 47:1-12 சக 14:8)

45 பௌதீக ஆசீர்வாதங்கள் பூமியை நிரப்பும். (ஏசா 29:17; ஏசா 30:23-24; ஏசா 32:15, ஏசா 35:1-7 ஏசா 41:19 ஏசா 49:9-10, ஏசா 51:3; ஏசா 55:13 ஏசா 60:5-17; ஏசா 62:8-9, எரே 31:27-28; எசே 34:27; எசே 36:25-35 யோவே 3:18, ஆமோ 9:13

46 பாழான ஸ்தலங்கள் பயனுள்ள பொருட்களைச் சேமித்து வைப்பதற்குப் புதுப்பிக்கப்படும் ஏசா 42:16-18 ஏசா 49:19; ஏசா 52:9; ஏசா 61:4-5 எசே 36:8-38; ஆமோ 9:14-15 அப் 15:13-18

47 பூமி முழுவதிலும் அகன்ற பாதைகள் இருக்கும். (ஏசா 11:16, ஏசா 19:23-25 ஏசா 35:7-8)

48 மனுஷர் எல்லாக் காரியங்களிலும் விருத்தியடைவார்கள் (ஆதி 1:26-28 ஆதி 9:12; ஏசா 9:6-7; ஏசா 59:20 ஏசா 65:20-25; எரே 30:19 எரே 33:22; ஓசி 1:10)

49 இயேசு கிறிஸ்து இந்தப் பூமியை ஆயிரம் வருஷம் அரசாட்சி செய்யும்போது தேவனுக்கு இது பற்றி ஒரு விசேஷித்த நோக்கம் இருக்கும்

50 ஒரு குறுகிய கால கலகத்தில் ஆயிரம் வருஷ அரசாட்சி நிறைவு பெறும் கலகம் பண்ணிய அனைவரும் அழிவடைவார்கள் பரிசுத்தவான்களும் இயற்கையான ஜனங்களும் உயிர்த்தெழுந்த ஜனங்களும் நித்திய பரிபூரண பூமியில் ஜீவிப்பார்கள் (வெளி 20:7-10 வெளி 21:1-22:5 2பேதுரு 3:1-13 ஏசா 66:22-24

வேதாகமத்தில் ஆயிரம் வருஷ அரசாட்சிக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பெயர்கள்

1 கிறிஸ்துவின் ஆயிரம் வருஷ அரசாட்சி. (The thousand years reign of Christ) (வெளி 20:2,4,5,6,7

2 நிறைவேறும் காலங்கள் (The dispensation of the fullness of times) (எபே 1:9,10)

3 கர்த்தருடைய நாள் (The day of the Lord) (ஏசா 2:11, ஏசா 4:1, ஏசா 19:21; ஏசா 24:21, ஏசா 26:1, எசே 39:22; எசே 48:35

4 மறுமை (The world (age) to come) (மத் 12:32; மாற்கு 10:30, எபே 1:21, எபே 2:7; எபே 3:21)

5 கிறிஸ்துவின் ராஜ்ஜியமும், தேவனுடைய ராஜ்ஜியமும். (The kingdom of Christ and of God) (எபே 5:5; 2தீமோ 4:1; வெளி 11:15

20 அதிகாரம்

6 தேவனுடைய ராஜ்ஜியம். (The kingdom of God) (மாற்கு 14:25, லூக்கா 19:11; லூக்கா 22:14-18)

7 பரலோக ராஜ்ஜியம். (The kingdom of heaven) (மத் 3:2; மத் 4:17 மத் 7:21,மத்8:11,மத் 10:7; மத் 18:1-4)

8 மறுஜென்மகாலம். (The regeneration) (மத் 19:28)

9 எல்லாம் நிறைவேறி தீரும் காலங்கள் (The times of the restitution (restoration) of all things) (அப 3:20-21)

10 இஸ்ரவேலின் ஆறுதல் (The consolation of Israel) லூக்கா 2:25

11 எருசலேமின் மீட்பு (The redemption of Jerusalem) லூக்கா 2:38

12 தமது அன்பின் குமாரனுடைய ராஜ்ஜியம். (The kingdom of His dear Son) (கொலோ 1:13 2பேதுரு 1:11

இயேசு கிறிஸ்துவின் ஆயிரம் வருஷ அரசாட்சியில் தேவனுடைய நோக்கம்

1 பூமியில கலகத்தை அடக்குதல இதனால் தேவன் எல்லாவற்றிற்கும் எல்லாமுமாக இருப்பார (1கொரி 15:24-28, எபி 2:7-9, எபே 1:10

2 தேவன் தம்முடைய பிள்ளைகளோடு செய்த நித்திய உடன்படிக்கைகளை நிறைவேற்றுவது ஆபிரகாம் (ஆதி 12 ஆதி 13, ஆதி 15 ஆதி 17) ஈசாக்கு ஆதி26, யாக்கோபு (ஆதி28 தாவீது (2சாமு 7) மற்றவர்கள் மத் 26:28 2கொரி 3:6-15 எபி 7 எபி 8 எபி 9, எபி 10,

3 கிறிஸ்துவிற்காகவும், அவருடைய பரிசுத்தவான்களுக்காகவும் நீதியைச் சரிக்கட்டுதல். (மத் 26:63-66 ரோமர் 12:19; சங் 2; ஏசா 63, வெளி 1:7; வெளி 6:9-11 வெளி 19:1-10; 1பேதுரு 1:10-12, 2தீமோ 4:7-8; ரோமர் 8:17-21,

4 இஸ்ரவேலைப் புதுப்பித்தல் தேசங்களிலிருந்து அதைப் பாதுகாத்தல். எல்லா தேசங்களுக்கும் இஸ்ரவேலை நித்திய தலைமையாக ஆக்குதல். (அப் 15:13-18; மத் 24:31 ஏசா 11:10-12; எசே 20:33-44 உபா 28)

5 எல்லாக் காலங்களிலுமுள்ள எல்லாப பரிசுத்தவான்களையும் அவர்களுடைய கிரியைகளின்படி அவர்களை ராஜாக்களாகவும் ஆசாரியர்களாகவும் உயர்த்துதல. (ரோமர் 8:17-21 ரோமர் 14:10; 2கொரி 5:10-11 பிலி 3:20-21; கொலோ 3:4 1பேதுரு 1:10-13; 1பேதுரு 5:1-4 வெளி 1:5; வெளி 2:26-27 வெளி 5:10; வெளி 11:15-18 வெளி 12:5; வெளி 20:4-6

6 பரலோகத்திலும பூமியிலுமுள்ள எல்லாக் காரியங்களையும் ஒன்றாகக் கூட்டிச் சேர்ப்பது. (எபே 1:10)

7 தேசங்களை நீதியில நியாயந்தீர்ப்பதும் பூமியைப் புதுப்பிப்பதும். (ஏசா 2:2-4, ஏசா 11:1-11; மத் 25:31-46 தானி 7:9-27)

8 பூமியில நீதியான நிலையான ராஜ்ஜியத்தை மறுபடியும் உண்டு பண்ணுவது. (ஏசா 9:6-7, ஏசா 11:1-9, ஏசா 42:1-5; தானி 2:44-45 தானி 7:13-27; லூக்கா 1:32-33 வெளி 11:15. வெளி 20:4-6 வெளி 22:4-5

9 மேசியாவின் நித்திய ஆளுகையைப பற்றிய நூற்றுக்கணக்கான தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றுவது (தானி9:24 1பேதுரு1:10 (3 அப 3 2) 21

10 உலகத்தில் பாவம் வருவதற்கு முன்பாக இருந்ததுபோன்று பூமியைப் புதுப்பிப்பது (அப 3:20-21, ஏசா 66:22-24; 2பேதுரு 3:10-13, வெளி 21 22)

20 அதிகாரம்

(5) ஆயிரம் வருஷம் முடிந்தபின்பு சாத்தானுடைய கிரியைகள் - (ஏசா 24:21-22; 2பேதுரு 3:7-13 எபி 1:10-12; 12:25-28; ரோமர் 8:21)

வெளி 20:7 அந்த ஆயிரம் வருஷம் முடியும்போது சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாகி

வெளி 20:8 பூமியின் நான்கு திசை களிலுமுள்ள ஜாதிகளாகிய கோகையும் மாகோகையும் மோசம்போக்கும்படிக்கும், அவர்களை யுத்தத்திற்குக் கூட்டிக் கொள்ளும்படிக்கும் புறப்படுவான் அவர்களுடைய தொகை கடற்கரை மணலத்தனையாயிருக்கும்.

வெளி 20:9 அவர்கள் பூமியெங்கும் பரம்பி, பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும், பிரியமான நகரத்தையும் வளைந்து கொண்டார்கள் அப்பொழுது தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப்போட்டது.

ஆயிரம் வருஷ அரசாட்சிக்குப்பின்பு சாத்தானின் அழிவு

1. ஆயிரம் வருஷ அரசாட்சி முடிந்த பின்பு கலகக்காரர்கள் அனைவரும் வேறுபிரிக்கப்பட்டு அழிக்கப் படுவார்கள் இதில் சாத்தானும் அழிக்கப்படுவான் வானங்களும் பூமியும் அக்கினியினால் புதுப்பிக்கப்பட்டு, புதிய வானமும் புதிய பூமியும் உண்டாகும். (2பேதுரு 3:10-13; வெளி 20:7-10; வெளி 21:1 22:5)

2. சாத்தானும், அவனுடைய தூதர்களும், பிசாசுகளும் பாதாளத்திலுள்ள காவலிலிருந்து விடுவிக்கப்படுவார்கள் (வெளி 20:7 ஏசா 24:22

3. சாத்தானும், அவனுடைய சேனையும் பூமியின் நான்கு திசைகளுக்கும் சென்று, ஜாதிகளை வஞ்சிப்பார்கள் கிறிஸ்துவின் ஆளுகையைத் தங்கள் இருதயத்தில் ஏற்றுக் கொள்ளாத ஜனங்களையும் தேவனுடைய பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிய விரும்பாத ஜனங்களையும் தங்களுடைய ஆசை இச்சைகளையும் நிறைவேற்ற விரும்பும் ஜனங்களையும் சாத்தான் வஞ்சிப்பான் (வெளி 20:8 எபே 2:1-3)

4. கலகக்காரர்கள் கோகு (Gog) மாகோகு (Magog), ஆகிய தேசங்களில் ஒன்று கூடுவார்கள் இது பாலஸ்தீனத்தின் வடக்குப் பகுதியில் உள்ளது. வடக்கிலிருந்து எருசலேமை நோக்கி இவர்கள் கூடிவருவார்கள் (வெளி 20:8; எசே 38-39)

5. கலகக்காரர்கள் பூமியெங்கும் பரம்பி, பரிசுத்த வான்களுடைய பாளையத்தையும், பிரியமான நகரமாகிய எருசலேமையும் வளைந்து கொள்வார்கள் (வெளி 20:9)

6. தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி, அவர்களைப் பட்சித்துப் போடும். (வெளி 20:9, 2பேதுரு 3:10-13)

7. பிசாசானவன் அக்கினியும், கந்தகமுமான கடலிலே தள்ளப்படுவான் அங்கு அவன் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவான் (வெளி 20:10)

(6) சாத்தான் அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான் - (மத் 25:41)

வெளி 20:10 மேலும் அவர்களை மோசம் போக்கின பிசாசானவன் மிருகமும் கள்ளத் தீர்க்க தரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான் அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்

20 அதிகாரம்

"அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்" - இந்த நிகழ்ச்சிக்கு ஆயிரம் வருஷங்களுக்கு முன்பாகவே மிருகமும், கள்ளத் தீர்க்கதரிசியும் அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டன (வெளி 19:20) ஆயிரம் வருஷங்களுக்குப் பின்பும் அவை அங்கேயே வாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன வெளி 14:9-11 மத் 25:46; ஏசா 66:22-24

(7) இறுதி நியாயத்தீர்ப்பு - (20:4-5 யோவான் 5:28-29; தானி 12:2, அப 17:31, ரோமர் 2:16; 2பேதுரு 2:4; யூதா 6-7; மத் 5:22-30; 10:28, 18:42-50;25:30-46; மாற்கு 9:42-48, எபி 6:2 10:26-31; வெளி 14:9-11 19:20; 20:10-15

வெளி 20:11 பின்பு, நான் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தையும் அதின்மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன் அவருடைய சமுகத்திலிருந்து பூமியும் வானமும் அகன்று போயின அவைகளுக்கு இடங்காணப்படவில்லை

வெளி 20:12 மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்குமுன்பாக நிற்கக்கண்டேன், அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன, ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது. அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவை களின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத் தீர்ப்படைந்தார்கள்

வெளி 20:13 சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது; மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள்

வெளி 20:14 அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப் பட்டன இது இரண்டாம் மரணம்.

வெளி 20:15 ஜீவபுஸ்தகத்திலே எழுதப் பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான்

"பூமியும் வானமும் அகன்றுபோயின" - வெளி 12:6 வெளி 16:20 ஆகிய வசனங்கள் போல இங்கும் இந்த வார்த்தை அடையாளப் பொருளில் கூறப்பட்டிருக்கிறது இதைப் பிரத்தியட்சமான பொருளில் எடுத்துக் கொண்டால் உபத்திரவக்காலத்தில் இவை இரண்டு முறை ஏறகெனவே அகன்று போயிருக்கும். (வெளி 6:14; வெளி 16:20). வானமும் பூமியும் நித்தியமானது (சங் 72:8-10, 17; சங் 78:69; சங் 89:36 சங் 97:1-6; சங் 104:5; பிர 1:4). அகன்றுபோயின என்பது வானங்களும், பூமியும் அசைக்கப்பட்டதைக் குறியிடும் (சங் 18:7; சங் 60:2; சங் 68:8; ஏசா 44:23 ஏசா 54:10; ஏசா 55:12; ஏசா 64:1-3

அகன்றுபோயின (fled) - φεύγω - **pheugoo** - 5343

வினைச்சொல் - ஓடிப்போ, தப்பித்துக்கொள், அகன்று போ (to flee). **"flee"** (மத் 3:7; மத் 10:23, யோவான் 10:5) **"escape"** (எபி 11:34, எபி 12:25)

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் நியாயத்தீர்ப்புக்கள்

1. விசுவாசிகளுடைய பாவங்களுக்காக நியாயத்தீர்ப்பு (யோவான் 12:31-32
2. விசுவாசிகளுடைய சுயநியாயத்தீர்ப்பு (1கொரி 11:31-32
3. இஸ்ரவேல் மீது நியாயத்தீர்ப்பு (எசே 20:33-44
4. தூதாகள்மீது நியாயத்தீர்ப்பு (2பேதுரு 2:4; யூதா 1:6-7)
5. விசுவாசிகளுடைய கிரியைகளின் நியாயத்தீர்ப்பு ரோமர் 14:10, 1கொரி 3:10-11 2கொரி 3:11-15

20 அதிகாரம்

6. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது ஜீவிக்கும் ஜாதிகள்மீது நியாயத்தீர்ப்பு (மத் 25:31-46)

7. மரித்த துன்மார்க்கர்மீது நியாயத்தீர்ப்பு (வெளி 20:11-15, அப் 17:21; ரோமர் 2:16)

விசுவாசிகளுடைய நியாயத்தீர்ப்பு

1. நியாயந்தீர்க்கப்படுகிறவர்கள்: பாவம் செய்த விசுவாசிகள் (ரோமர் 6:10; எபி 9:25-28)

2. காலம்: இயேசு கிறிஸ்து சிலுவையில் தொங்கிய போது. (யோவான் 3:14; 1பேதுரு 2:24; யோவான் 17:4)

3. இடம்: கல்வாரி (லூக்கா 23:33; யோவான் 19)

4. ஆதாரம்: கிறிஸ்துவின் பரிபூரண கிரியை. (யோவான் 3:16; யோவான் 5:24; ரோமர் 6:8)

5. முடிவு: கிறிஸ்துவிற்கு மரணம், விசுவாசிகளுக்கு ஜீவன் (ரோமர் 4:1-24; ரோமர் 5:1-21; ரோமர் 8:1-16)

விசுவாசிகளுடைய சுயநியாயத்தீர்ப்பு

1. நியாயந்தீர்க்கப்படுகிறவர்கள்: ஒளியில் நடக்கும் விசுவாசிகள் (1யோவான் 1:7)

2. காலம்: அன்றாடம். (ரோமர் 6:16-23; ரோமர் 8:1-13; எபே 4:22-32; கொலோ 3:5-17)

3. இடம்: பூமியில் (ரோமர் 8:1-16; எபி 12:5-11)

4. ஆதாரம்: தேவனுக்கும், அவருடைய வார்த்தைக்கும் கீழ்ப்படிதல் (யாக் 1:22-25)

5. முடிவு: சிட்சை அல்லது தேவனுடைய அங்கீகரிப்பு (எபி 12:5-11)

இஸ்ரவேல் மீது நியாயத்தீர்ப்பு

1. நியாயந் தீர்க்கப்படுகிறவர்கள்: உபத்திரவக் காலத்தில் ஜீவிக்கும் யூதர்கள் (சக 12:10-13:1)

2. காலம்: மகா உபத்திரவக் காலத்தின்போது (எரே 30:3-11; மத் 24:4-15; தானி 9:27; தானி 12)

3. இடம்: பாலஸ்தீனம், ஏதோம், மோவாப் (சக 12:1-14:21; தானி 11:40-45; ஏசா 16:1-5; எசே 20:33-44; ஓசி 2:14-17; மத் 24:15-31; வெளி 12:6,14)

4. ஆதாரம்: தேவனுக்கும் அவருடைய வார்த்தைக்கும் கீழ்ப்படிதல் (யாக் 1:22-25)

5. முடிவு: கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இஸ்ரவேல் ஒரு தேசமாகக் கூட்டிச்சேர்க்கப்படுவது (ஏசா 1:27; ஏசா 66:7-8; எசே 30:3-11; எசே 22:19-22; சக 12:10-13:1; மத் 23:37-39; மத் 24:31; ரோமர் 11:25-29)

தூதர்கள்மீது நியாயத்தீர்ப்பு

1. நியாயந்தீர்க்கப்படுகிறவர்கள்: விழுந்துபோன தூதர்கள் (2பேதுரு 2:4; 2பேதுரு 4; யூதா 1:6-7; வெளி 12:7-12; 1கொரி 6:3)

2. காலம்: ஆயிரம் வருஷ அரசாட்சிக்குப் பின்பு பெரிய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பின்போது: (2பேதுரு 2:4; யூதா 1:6-7; வெளி 20:11-15)

3. இடம்: பரலோகத்தில் பெரிய வெள்ளைச் சிங்காசனத்திற்கு முன்பாக (வெளி 20:11-15)

4. ஆதாரம்: தேவனுக்குக் கீழ்ப்படிதல். (2பேதுரு 2:4; யூதா 1:6-7; எசே 28:11-17)

5. முடிவு: அக்கினிக்கடலில் நித்திய அழிவு (வெளி 20:10; மத் 25:41,46)

20 அதிகாரம்

மரித்த துன்மார்க்கர்மீது நியாயத்தீர்ப்பு

1 நியாயந்தீர்க்கப்படுகிறவர்கள்: மரித்த துன்மார்க்கர் (வெளி 20:5-6,12-15) ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு தேசங்கள் நியாயந்தீர்க்கப்படும்போது நியாயந்தீர்க்கப் படாதவர்கள் மத் 13:30,39-50; மத் 24:51 மத் 25:3-46; வெளி 14:9-11 வெளி 19:20 ஆதாமின் காலத்திலிருந்து ஆயிரம் வருஷ அரசாட்சியின் இறுதி காலம் வரையிலுமுள்ள துன்மார்க்கர் அனைவரும்.

2 காலம்: ஆயிரம் வருஷ அரசாட்சியின் முடிவில் (வெளி 20:7-15) வானங்களும், பூமியும் அக்கினியால் புதுப்பிக்கப் படும்போது. (வெளி 20:11, 2பேதுரு 3:7-13; எபி 1:10-12, எபி 12:25-28 ரோமர் 1:21-23)

3 இடம்: பெரிய வெள்ளைச் சிங்காசனத்திற்கு முன்பாக (வெளி 20:11; சங் 9:7-8) வெள்ளை சிங்காசனம் நீதியான நியாயத்தீர்ப்பு வழங்கப்படும் இடம் (சங் 45:6-7; சங் 96:10-13 யோவான் 7:24; அப் 17:31, 2தீமோ 4:8) வெள்ளை அங்கி பரிசுத்தவான்களின் நீதிக்கு அடையாளம். (வெளி 19:8)

4 ஆதாரம்: மனச்சாட்சியின் பிரமாணம். (Law of conscience) (ரோமர் 2:12-16) ஞாபக பிரமாணம். (Law of memory) (லூக்கா 16:25) மோசேயின் பிரமாணம் (Law of Moses) (ரோமர் 2:12-16) சுபாவப்பிரமாணம் (Law of character) எபி 3:8-10 எபே 4:19) சுவிசேஷம் (Gospel) (ரோமர் 2:12-16) தனிநபர் கிரியைகள் (Records of personal acts) (மத் 12:36; லூக்கா 12:2-9 யோவான் 3:18; வெளி 20:12 ஜீவபுஸ்தகம் (The book of life) (வெளி 3:5; வெளி 13:8, வெளி 17:8 வெளி 20:12,15; வெளி 21:27 வெளி 22:18-19; யாத் 32:32-33, சங் 69:28 தானி 12:1; லூக்கா 10:20 பிலி 4:3) தேவனுடைய வார்த்தை (TheWordofGod) யோவான் 12:48

5 நியாயாதிபதிகள்: பிதாவாகிய தேவன் (God the Father) (வெளி 20:12 எபி 12:23-24; எபி 13:4 வெளி 6:10; ரோமர் 2:12-16) குமாரனாகிய தேவன் (God the son) (யோவான் 5:19-27; அப 10:42; 2தீமோ 4:8; வெளி 19:11 பிதா குமாரன் மூலமாக நியாயந்தீர்ப்பார் பிதா தீர்ப்புச் சொல்லுவார் குமாரன் அதை நிறைவேற்றுவார் (அப 10:42 அப 17:31; ரோமர் 2:16)

6. தன்மை: இது ஆவிக்குரிய நியாயந் தீர்ப்போ, அதரிசனமான நியாயத் தீர்ப்போ அல்ல. பிரத்தியட்சமானது பூமியில நீதிமன்றங்களில வழக்கு விசாரிக்கப படுவது போன்று தேவனுடைய சமூகத்திலும் விசாரிக்கப்படும். (வெளி 20:11-15, சங் 9:8; மத் 7:2,21, அப 17:31 ரோமர் 2:12-16; எபி 9:27)

7 விஸ்தீரணம்: சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவிக்கும் (வெளி 20:13, லூக்கா 16:19-31; ஏசா 14:9) மரணம், தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவிக்கும். (யாக் 2:26 மத் 8:22 எபே 2:1-9 1தீமோ 5:6) பாதாளம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவிக்கும். (லூக்கா 16:19-31, வெளி 20:13

8 நோக்கம்: ஒவ்வொரு துன்மார்க்கனும் தன்னுடைய நித்திய தண்டனையை அனுபவிக்கும் முன்பாக நியாயமாக விசாரிக்கப்படுவது. (அப 17:31, சங் 9:8) ஜனங்களுடைய இரகசியங்களை நியாயந்தீர்ப்பது. (ரோமர் 2:16) வீண்வார்த்தைகளை நியாயந்தீர்ப்பது (மத் 12:36

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

20 அதிகாரம்

மனுஷருடைய எல்லாக் கிரியைகள் சிந்தனைகள் செயல்கள் பாவங்கள் ஆகியவற்றை நியாயந்தீர்ப்பது. (1 தீமோ 5:24; 1 பேதுரு 1:17; வெளி 20:12-13; வெளி 22:12; ரோமர் 2:5-6, 12-16) துணமாக அவருடைய கிரியைகளுக்குத் தகுந்தபடி தண்டனை கொடுப்பது. (மத் 7:2; மத் 10:15; மத் 11:22-24; மத் 12:41-45; மத் 23:12-14, 33; மாற்கு 6:11; லூக்கா 10:14; லூக்கா 11:31-32; வெளி 20:11-15; வெளி 22:12)

9 தண்டனைக்காலம், நித்திய காலத் தண்டனை (மத் 5:29-30; மத் 10:28; மத் 13:42-50; மத் 18:9; மத் 23:15, 33; மத் 24:51; மத் 25:41, 46; மாற்கு 9:42-48; லூக்கா 12:5; எபி 6:2; எபி 10:26-31; வெளி 2:11; வெளி 14:9-11; வெளி 19:20; வெளி 20:10-15; வெளி 21:8; வெளி 22:15; ஏசா 66:22-24)

10 முடிவு. மரணத்திலும் பாதாளத்திலும் உள்ளவர்கள் அனைவரும் அக்கினிக்கடலிலே தள்ளப்படுவார்கள் (வெளி 20:14-15)

21 அதிகாரம்

9. வரப்போகிற காரியங்கள் - 21:1-22:5

(1) புதிய வானமும் புதிய பூமியும் - (ஏசா 65:17; 66:22-24; 2பேதுரு 3:13)

வெளி 21:1 பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று.

"புதிய வானத்தையும் புதிய பூமியையும்" - அக்கினியினால் வானங்களும் பூமியும் புதிதாக்கப்பட்டதினால் ஏற்பட்டிருக்கிற விளைவு. (2பேதுரு 3:10-13) புதிய வானங்களும், புதிய பூமியும் வெளி 21:1; 2பேதுரு 3:13; ஏசா 65:17; ஏசா 66:22-24 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

ஒழிந்துபோயின (passed away) - ἀπέρχομαι - aperchomai - 565

வினைச்சொல் - போ, ஏறு, சேர், தொடர்ந்து (pass from one condition to another) ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்குக் கடந்து போதல். (2பேதுரு 3:10)

"சமுத்திரமும் இல்லாமற்போயிற்று" - பூமியில் நான்கில் மூன்று பகுதியை பெரிய சமுத்திரங்கள் மூடியிருக்கிறது. அது இனிமேல் இராது. ஆனாலும் நதிகள், சிறிய கடல்கள் ஆகியவை பூமியின்மீது நித்திய காலமாக இருக்கும். (சங் 72:8-17; சங் 97:1-6, சங் 146:6; ஏசா 42:10; ஏசா 60:5, ஏசா 66:19; எசே 47; சக 14:8; எரே 5:22, எரே 31:35; எரே 33:22)

(2) புதிய எருசலேம் - (21:9-22:5, 3:12; யோவான் 14:1-3; எபி 11:10,13-16; 12:22; 13:14; கலா 4:26)

வெளி 21:2 யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தை தேவனிடத்திலிருந்து பரலோகத்தை விட்டு இறங்கிவரக் கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப்போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது.

வெளி 21:3 மேலும் பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்.

தேவனுடைய நகரத்தின் பெயர்கள்

1. பரிசுத்த நகரம். (The Holy City) (வெளி 21:2, வெளி 22:19) தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை. (வெளி 21:27)

2. புதிய எருசலேம் (New Jerusalem) (வெளி 3:12, வெளி 21:2) பரலோகத்தைப் போல இதுவும் பழமையானது. ஆயினும் நித்திய புதுமை இதற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. பூமியிலுள்ள பரிசுத்தவான்களுக்காகப் புதிய எருசலேம் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. (எபி 11:10-16, சங் 93:2; சங் 103:19)

3. தேவனுடைய வாசஸ்தலம் அல்லது சாட்சியின் கூடாரம் (The Tabernacle of God) (வெளி 13:6; வெளி 15:5; வெளி 21:3)

21 அதிகாரம்

4. மணவாட்டி, ஆட்டுக்குட்டியானவருடைய மனைவி **(The Bride, the Lamb's Wife)** (வெளி 21:2,9) மீட்கப்பட்டவர்களுடைய நித்திய குடியிருப்பு (வெளி 21:9; எபி 11:10-16; எபி 13:14; யோவான் 14:1-3)

5. பரிசுத்த எருசலேம் **(The Holy Jerusalem)** (வெளி 21:10)

6. பரம எருசலேம் **(The Heavenly Jerusalem)** (எபி 12:22). இது பூமியில் இல்லை பரலோகத்தில் இருக்கிறது.

7. பிதாவின் வீடு **(The Father's House)** (யோவான் 14:2) தேவனும் அவருடைய பரலோகத்தின் குடும்பத்தாரும் வசிக்கும் இடம். (யோவான் 14:1-3)

"தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கிவரக் கண்டேன்" பரலோகத்திலிருந்து புதிய எருசலேம் இறங்கி வந்தது. அது பூமியின்மீது தேவனுடைய தலைநகரமாக இருக்கும் (வெளி 21:2-3,9; 22:5)

"அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப்போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது" - சகலவித இரத்தினங்களினாலும், ஒரு மணவாட்டி அலங்கரிக்கப்படுவதைப் போன்று, புதிய எருசலேம் அலங்கரிக்கப்பட்டிருக்கும். (வெளி 21:19)

"மனுஷர்களிடத்திலே" - தேவனும் அவருடைய பரிசுத்த நகரமும் [illegible] மத்தியிலே நித்திய காலமாக இருக்கும். (வெளி 21:3,7, 24-27)

"அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்" நித்திய தேவன் மனுஷர் மத்தியிலே நித்திய காலமாக வாசமாயிருப்பார் (சக 2:10-11; சக 8:3; ஏசா 52:7; எசே 43:7)

புதிய பூமியில் மனுஷர் அனுபவிக்கும் ஆசீர்வாதங்கள்

1. தேவன் மனுஷர்களிடத்திலே வாசமாயிருப்பார் (வெளி 21:3,7)

2. தேவன் அவர்களுடைய தேவனாயிருப்பார் (வெளி 21:3,7)

3. அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார் (வெளி 21:4; வெளி 7:17; ஏசா 25:8)

4. இனி மரணம் இல்லை. (வெளி 21:4; 1கொரி 15:24-29)

5. இனி துக்கம் இல்லை. (வெளி 21:4; வெளி 22:3)

6. இனி அலறுதலும் வருத்தமும் இல்லை (வெளி 21:4; ஆதி 3:14-19)

7. சகலமும் புதிதாக்கப்பட்டிருக்கிறது (வெளி 21:5)

8. தாகமாயிருக்கிறவனுக்குத் தேவன் ஜீவத்தண்ணீர் ஊற்றில் இலவசமாய் கொடுப்பார் (வெளி 21:6; வெளி 22:17)

9. ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான் (வெளி 21:7; ரோமர் 8:17)

10. அவன் தேவனுடைய குமாரனாயிருப்பான் (வெளி 21:7; 1யோவான் 3:1-2)

11. இனி ஒரு சாபமுமிராது. (வெளி 22:3)

12. நாய்களும் ... புறம்பே இருப்பார்கள் (வெளி 21:8; வெளி 22:15)

(3) முந்தினவைகள் ஒழிந்து போகும் - கர்த்தர் சகலத்தையும் புதிதாக்குவார் - (ஆதி 8:22; 9:12,16; 17:7,19; 2சாமு 7:24-26; ஏசா 9:6-7; 51:8; 59:21; எரே 31:35-36; 32:38-40; எசே 37:24-28; 43:7; 48:35; தானி 2:44-45; 4:3,34; 7:13-14,18,27; யோவேல் 3:20; மீகா 4:7; லூக்கா 1:32-33; எபி 1:8; 12:28; வெளி 11:15; 22:5)

21 அதிகாரம்

வெளி 21:4 அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது.

வெளி 21:5 சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர்: இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார். பின்னும், அவர்: இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள், இவைகளை எழுது என்றார்.

வெளி 21:6 அன்றியும், அவர் என்னை நோக்கி: ஆயிற்று, நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன்; தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத்தண்ணீருற்றில் இலவசமாய்க் கொடுப்பேன்.

வெளி 21:7 ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்.

"இனி மரணமுமில்லை" ஆயிரம் வருஷ அரசாட்சியின் முடிவில் மரணம் அழிக்கப்படும். (1கொரி 15:24-28)

"முந்தினவைகள் ஒழிந்துபோயின" சாபத்தினால் பூமியில் சபிக்கப்பட்டிருந்த சிருஷ்டிகளை இந்த வாக்கியம் குறிக்கும் என்று வேதபண்டிதர்களில் சில வியாக்கியானம் கூறுகிறார்கள் (வெளி 22:3; ஆதி 3:17-19)

வெளிப்படுத்தின விசேஷத்தில் கூறப்பட்டிருக்கும் "புதிய" "New" காரியங்கள்

1 ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு புதிய நாமம் (New name for overcomers) (வெளி 2:17; வெளி 3:12)

2 கிறிஸ்துவிற்கு புதிய நாமம் (New name for Christ) (வெளி 3:12)

3 புதிய எருசலேம் (New Jerusalem) (வெளி 3:12; வெளி 21:2)

4 புதுப்பாட்டு (New songs) (வெளி 5:9; வெளி 14:3)

5 புதிய வானம் (New Heaven) (வெளி 21:1; 2பேதுரு 3:13)

6 புதிய பூமி (New Earth) (வெளி 21:1; ஏசா 65:17; ஏசா 66:22)

7 சகலமும் புதிதாக்கப்பட்டிருக்கும் (All things new) (வெளி 21:1-22:5)

வெளி 21-22 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் புதிய காரியங்கள்

1 பூமியின்மீது புதிய நகரம் (வெளி 21:2-3,10-27)

2 பூமியின்மீது பிதாவாகிய தேவனுடைய புதிய, பிரத்தியட்ச பிரசன்னம் (வெளி 21:3-7; வெளி 22:3-5)

3 பூமியின் புதிய தன்மைகள் (வெளி 21:4-7)

4 பூமியிலுள்ள எல்லா ஜனங்களுக்கும் புதிய ஜீவத்தண்ணீர் (வெளி 21:6; வெளி 22:1,17)

5 ஜெயங்கொள்ளுகிறவர்கள் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்வதைப் புதிதாக உணருதல் (வெளி 21:7)

6 தேவபக்தியுடையோருக்கும், துன்மார்க்கருக்கும் இடையே புதிய பிரிவினை (வெளி 21:8,27; வெளி 22:15; ஏசா 66:22)

7 புதிய நித்திய உறவு (வெளி 21:3-10,24-27; வெளி 22:1-5)

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

21 அதிகாரம்

8 இயற்கையான ஜனங்களுடைய புதிய, நித்திய சந்ததிகள் (வெளி 21:3-7,24-27 வெளி 11:15 வெளி 22:4-5 ஆதி 8:22 ஆதி 9:12 ஆதி 13:15 ஆதி 17:7,19 யாத் 3:15; உபா 5:29; உபா 29:29 2சாமு 7:24-26; 1நாளா 23:25 சங் 45:17; சங் 72:5; சங் 89:4, சங் 102:12,24; சங் 106:31 சங் 145:13; சங் 146:10; ஏசா 9:6-7 ஏசா 51:8; ஏசா 59:21 எரே 31:35-36. எரே 32:38-40; எசே 37:24-28 எசே 43:7; தானி 2:44-45, தானி 7:13-14,18,27; லூக்கா 1:32-33,55; எபி 12:28)

9 புதிய நகரத்தின் புதிய பாதைகள் (வெளி 21:24-27

10 புதிய பூமியில் புதிய நதி. (வெளி 22:1)

11 புதிய இயற்கையான ஜனங்களுக்கு புதிய ஆகாரம். (வெளி 22:1-2,14)

12 புதிய, நித்திய ஆரோக்கியம் (வெளி 22:1-14

13 புதிதாக பூமியில் குடியிருக்கிறவர்கள் புதிய எருசலேமில் உயிர்த்தெழுந்த ஜனங்கள் வாசம்பண்ணுவார்கள் (வெளி 21:2,9,10 வெளி 22:1-5)

14 உலகத்தின் தலைநகருக்குட புதிய இடம். (வெளி 21:2,9-10,24-27, வெளி 22:4-5

15 ஜீவிப்பதற்குப் புதிய முறை. (வெளி 22:2)

16 கனியின் புதிய வகைகள் (வெளி 22:2

17 புதிய, நித்திய ராஜ்ஜியமும் பூமியின்மீது ராஜ்ஜியமும். (வெளி 21:3-7, 24-27; வெளி 22:3 எபே 1:10

18 வானத்திற்கும், பூமிக்கும் இடையில் நித்திய ஒற்றுமை. (வெளி 21:3-7,24-27; வெளி 22:3; எபே 1:10)

19 தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றுவதில் மனுஷருடைய புதிய, நித்திய பொறுப்பு (வெளி 21:3-7,24-27; வெளி 22:3-5 ஏசா 45:18; ஆதி 1:26-28

20 இயற்கையான ஜனங்களுக்கும், உயிர்த்தெழுந்த ஜனங்களுக்கும் புதிய வருங்காலம். (வெளி 21:3-7,24-27 வெளி 22:3-5; எபே 2:7

21 மனுஷனைக் குறித்து தேவனுடைய திட்டம் புதியதாகவும் நித்தியமானதாகவும் நிறைவேறுதல் (வெளி 21:2-7,24-27; வெளி 22:3-5

தேவனுடைய திட்டம் நிறைவேறிற்று

1 வானங்களிலும், பூமியிலுமுள்ள பாவமான கிரியைகள் முடிவு பெறும் (வெளி 21:3-7; வெளி 22:3

2 வானங்களும் பூமியும் புதுப்பிக்கப்படும் (2பேதுரு 3:5-13 எபி 1:10-12 எபி 12:25-28

3 [illegible] காரியங்களும் புதுப்பிக்கப்படும். வெளி 21:5

4 கலகக்காரர்கள் அனைவரும் ஒடுக்கப்படுவார்கள் (1கொரி 15:24-28

5 கலகத்திற்கான எல்லாக் காரணங்களும் அழிக்கப்படும் (வெளி 21:3-8 எபே 1:10, எபே 2:7 எபே 3:11)

6 சாபம் அகற்றப்படும். (வெளி 21:3-8, வெளி 22:3; 1கொரி 15:24-28

7 பூமி தேவனிடத்திற்குத் திரும்பும். (அப் 3:21-22; 1கொரி 15:24-28, எபே 1:10; ஏசா 66:22-24

8 கலகக்காரர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு, நரகத்திற்குத் தள்ளப்படுவார்கள் (வெளி 20:11-15; மத் 25:41,46, ஏசா 66:22-24

9 தேவன் கர்த்தாதி கர்த்தராகவும், ராஜாதி ராஜாவாகவும் அங்கிகரிக்கப்படுவார் (வெளி 21:3-8 1கொரி 15:24-28 எபே 1:10, எபே 3:11

21 அதிகாரம்

10 சுயாதீன சித்தத்தை பற்றிய தேவனுடைய பூர்வகாலத்துத் திட்டங்கள் நிறைவேறும் (எபே 3:9-11)

11 தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் (எபே 3:9-11; 2பேதுரு 3:9)

12 தேவனுடைய சிங்காசனமும் தலைநகரமும் மூன்றாம வானத்திலிருந்து பூமியில ஸ்தாபிக்கப்படும். வெளி 21:1-22:5)

(4) இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் - எரிகிற கடலிலே பங்கடைவோர்கள் - ஏசா 66:22-24; வெளி 14:9-11 19:20 20:10-15 மத் 5:22-30 10:28 13:42,50, 18:9; 23:15,33; 24:51; 25:30,41,46; மாறுகு 9:43-47 லூக்கா 12:5 எபி 6:2 10:26-31)

வெளி 21:8 பயப்படுகிறவர்களும அவிசுவாசிகளும், அருவருப பானவர்களும கொலைபாதகரும விபசாரக்காரரும், சூனியக்காரரும் விக்கிரகாராதனைக்காரரும பொய்யர அனைவரும இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார

நித்திய நரகத்தில் பங்கடையப் போகிறவர்கள்

1 பயப்படுகிறவர்கள் (The fearful)

2 அவிசுவாசிகள் (Unbelieving)

3 அருவருப்பானவர்கள் (Abominable)

4 கொலைபாதகர் (Murderers)

5 விபசாரக்காரர் (Whoremongers)

6 சூனியக்காரர் (Sorcerers)

7 விக்கிரகாராதனைக்காரர் (Idolaters)

8 நாய்கள் (Dogs) (உபா 23:18 ஏசா 56:10-11; பிலி 3:2, வெளி 22:15)

9 பொய்யர் (Liars) (வெளி 21:8 வெளி 22:15)

10 பொய்யை விரும்புகிறவர்கள் (Lovers of lies) (வெளி 22:15)

பயப்படுகிறவர்கள் (fearful) - **δειλός - deilos** - 1169

பொருள் - பயப்படுகிற பயந்த (cowardly; craven; vile; worthless; miserable; wretched; and unhappy) (வெளி 21:8 மத் 8:26 மாறுகு 4:40)

அவிசுவாசி (Unbelieving) - **ἄπιστος - apistos** - 571

பொருள் - அவிசுவாசி, விசுவாசமில்லாத, உண்மையில்லாத, நம்பப்படாத (infidel, faithless) (1தீமோ 5:8)

அருவருப்பு (Abominable) - **βδελύσσομαι - bdelyssomai** - 948

வினைச்சொல் அருவரு (to cause to stink; make loathesome, feel disgust; detest; have horror of, to be abominated. It refers to those polluted with unnatural lust) "abominable" (வெளி 21:8) "abhor" (ரோமர் 2:22)

கொலைபாதகள் (Murderer) - **φονεύς phoneus** 5406

ஆண்பால் பெயர்ச்சொல் கொலைபாதகன் "murderer" (வெளி 21:8; வெளி 22:15, மத் 22:7, அப 3:14 அப 7:52 அப 28:4 1பேதுரு 4:15)

21 அதிகாரம்

விபசாரக்காரர் (Whoremonger)

πόρνος - pornos - 4205

ஆண்பால் பெயர்ச்சொல் - விபசாரக்காரர் வேசிக்கள்ளர் (fornicators)

சூனியக்காரர் (Sorcerer) - φαρμακεύς - pharmakeus - 5332

ஆண்பால் பெயர்ச்சொல் - சூனியக்காரர்

"அக்கினியும் கந்தகமும் எரிகிற கடல்" - லூக்கா 12:5

"இரண்டாம் மரணம்" - இரண்டாம் மரணம் என்பது அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலாகும். தேவனிடமிருந்து இரண்டாம் முறையாகப் பிரிக்கப்பட்டு நரகத்தில் தள்ளப்படுதல் (வெளி 2:11 வெளி 20:14 வெளி 21:8)

(5) ஆட்டுக் குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டி. - 21:2, 9-22:5

(அ) மணவாட்டியின் அஸ்திபாரம் 19:7, 21:2

வெளி 21:9 பின்பு கடைசியான ஏழு வாதைகளால் நிறைந்த ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன் என்னிடத்தில் வந்து: நீ இங்கே வா ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டியை உனக்குக் காண்பிக்கிறேன் என்று சொல்லி,

வெளி 21:10 பெரிதும் உயரமுமான ஒரு பர்வதத்தின்மேல் என்னை ஆவியில் கொண்டுபோய், தேவனுடைய மகிமையை அடைந்த எருசலேமாகிய பரிசுத்த நகரம் பரலோகத்தைவிட்டு தேவனிடத்திலிருந்து இறங்கிவருகிறதை எனக்குக் காண்பித்தான்

"ஏழு தூதர்" - இவர்கள் மீட்கப்பட்ட ஜனங்கள் இவர்களில் ஒருவன் யோவானிடம் தான் ஒரு தீர்க்கதரிசி என்று கூறுகிறார் (வெளி 1:1; வெளி 19:10; வெளி 22:8-9 இவன் ஒரு மனுஷன் (வெளி 21:17)

கிறிஸ்துவின் மணவாட்டி. (The Bride of Christ) (வெளி 21:9-10)

1 இது பழைய ஏற்பாட்டுக்கால இஸ்ரவேல் அல்ல.

2 இது புதிய ஏற்பாட்டுக்காலத்துச் சபையின் ஒரு பகுதி அல்ல.

3 இது புதிய ஏற்பாட்டுக் காலத்துச் சபையின் முழுமையுமல்ல.

4 இது 144,000 யூதர்கள் அல்ல

5 இது உபத்திரவக்காலத்து பரிசுத்தவான்கள் அல்ல

6 இது ஒரு தனிநபரோ அல்லது மீட்கப்பட்டவர்களில் ஒரு விசேஷித்த ஒரு பிரிவினரோ அல்ல

7 இது ஒரு சபைப் பிரிவோ அல்லது பல சபைப் பிரிவுகளின் கூட்டமைப்போ அல்ல.

கிறிஸ்துவின் மணவாட்டியைப் பற்றிய மெய்யான உபதேசம்

இது புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரம் (வெளி 21:2,9-10) ஏழு தூதரில் ஒருவன் யோவானிடத்தில் வந்து உனக்கு ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டியைக் காண்பிக்கிறேன் என்று கூறி புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைக் காண்பித்தான் ஆகையினால் புதிய எருசலேமே தேவனுடைய மனைவியாகிய மணவாட்டி என்று வேதபண்டிதர்களில் பலர் வியாக்கியானம் கூறுகிறார்கள் இந்தப் புதிய எருசலேமில் வாசம் பண்ணப்போகிறவர்கள் அனைவருமே கிறிஸ்துவின் மணவாட்டியாக இருப்பார்கள்

21 அதிகாரம்

புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தில் வாசம்பண்ணுவோர்

1 பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களுக்கு புதிய எருசலேம் வாக்குப்பண்ணப் பட்டிருக்கிறது. (எபி 11:10-16)

2 ஆதித்திருச்சபைக்குப் புதிய நகரம் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. (யோவான் 14:1-3; எபி 13:14)

3 ஒவ்வொரு கிறிஸ்தவ விசுவாசிக்கும் புதிய எருசலேம் வாக்குப் பண்ணப்பட்டிருக்கிறது. (வெளி 3:12, யோவான் 14:1-3, எபி 12:23)

4 144,000 யூதர்களும் புதிய எருசலேமில் இருப்பார்கள் (வெளி 7:4-8, வெளி 11:25, வெளி 14:1-5)

5 உபத்திரவகாலத்து பரிசுத்தவான்கள் புதிய எருசலேமிற்குப் போவார்கள் (வெளி 6:9-11, வெளி 7:9-17, வெளி 15:2-4, வெளி 20:4-6)

முதலாவது உயிர்த்தெழுதலில் பங்குபெறும் பரிசுத்தவான்கள் அனைவருமே புதிய எருசலேமிற்குப் போவார்கள். ஆபேலிலிருந்து வருங்கால உபத்திரவக்காலத்தில் இரட்சிக்கப்படுகிற கடைசி நபர் வரையிலும் புதிய எருசலேமிற்குப் போவார்கள். இந்தப் பரிசுத்தவான்கள் எல்லோருமே ஆட்டுக்குட்டியானவருடைய மணவாட்டியாக இருப்பார்கள். புதிய எருசலேம் நகரம் முழுவதுமே மணவாட்டியாக இருக்கும். ஆகையினால் அந்த நகரத்தின் ஒரு பகுதி மட்டும் மணவாட்டியாக இருக்குமென்று பிரித்துக்கூற முடியாது.

புதிய உடன்படிக்கையின் பிரகாரம் இரட்சிக்கப்பட்டிருக்கிறவர்கள் தங்களைக் கிறிஸ்துவோடு மணம் முடித்துக் கொண்டவர்கள் என்று கூறும் உபதேசமும் ஏற்றுக் கொள்ளக்கூடியதே. இவர்கள் பரலோகத்தின் பிரஜைகள். புதிய எருசலேமில் போய் வாசம்பண்ணும் நம்பிக்கையுடையவர்கள். இந்த நம்பிக்கையின் பிரகாரமாக இவர்கள் புதிய எருசலேமில் கிறிஸ்துவின் மணவாட்டியாக இருப்பார்கள். ஒரு விசுவாசி புதிய எருசலேமில் வாசம்பண்ண ஆரம்பித்த பின்பு தான் அவர் கிறிஸ்துவின் மணவாட்டியாக இருப்பார். புதிய எருசலேமிற்குப் போகும் வரையிலும் எந்தவிசுவாசியும் ஆட்டுக்குட்டியானவருடைய மணவாட்டியாக ஆவதில்லை (வெளி 21:9-10) என்று வேதபண்டிதர்கள் இதுபற்றி வியாக்கியானம் பண்ணுகிறார்கள்.

தற்பொழுதுள்ள சபையைக் கிறிஸ்துவின் மணவாட்டியென்று அழைப்பதற்குக்கூட வேதவசனங்களில் ஆதாரம் இல்லை என்று சில வேதபண்டிதர்கள் கூறுகிறார்கள். புதிய எருசலேமிற்குப் போனபின்பு தான் அந்த சபை ஆட்டுக்குட்டியானவருடைய மணவாட்டியின் ஒரு பகுதியாக இருக்க முடியும். எல்லாக் காலங்களிலும் இரட்சிக்கப்பட்டிருக்கும் அனைவருமே ஆட்டுக்குட்டியானவரின் மணவாட்டியின் பகுதிகளாக இருப்பார்கள் என்பது இவர்களுடைய உபதேசமாகும். (வெளி 21:9-10)

"மணவாட்டி" (bride) - விசுவாசிகளோடு தொடர்புபடுத்தி இந்த வசனம் ஐந்து தடவை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (யோவான் 3:29, வெளி 21:2,9; வெளி 22:17) மணவாளன் என்னும் வார்த்தை விசுவாசிகளோடு தொடர்புபடுத்தி 10 தடவை பயன்படுத்தப் பட்டிருக்கிறது (மத் 9:15; மாற்கு 2:19-20, லூக்கா 5:34-35; யோவான் 3:29) இந்த வசனங்கள் அனைத்துமே புதிய எருசலேமில் வாசம்பண்ணப்போகும் விசுவாசிகளைக் குறிக்கும். ஏனெனில் புதிய எருசலேமே மணவாட்டி, ஆட்டுக்குட்டியானவருடைய மனைவி (the Lamb's wife) (வெளி 21:2, 9-10)

மணவாட்டி (bride) - νύμφη nymphee 3565

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

21 அதிகாரம்

பெண்பால் பெயர்ச்சொல் - மருமகள் மணவாட்டி **"bride"** (யோவான் 3:29; வெளி 18:23; வெளி 21:2,9, வெளி 22:17) **daughter-in-law** (மத் 10:35; லூக்கா 12:53)

மனைவி (wife) - **γυνή** - gynee - 1135

பெண்பால் பெயர்ச்சொல் - மனைவி ஸ்திரீ, பெண் ஜாதி **(a woman, married or unmarried; a wife)** இந்த வார்த்தை ஒரு ஸ்திரீயையோ திருமணமான ஸ்திரீயையோ விதவையையோ குறிக்கலாம். கிரேக்க மொழியில் மனைவி என்பதற்கு ஒரு வார்த்தையும், மணவாட்டி என்பதற்கு வேறொரு வார்த்தையும் உள்ளது. (லூக்கா 4:26; லூக்கா 10:38, யோவான் 19:26, யோவான் 20:11-15 தீமோ 5:2,14

"மணவாட்டி ஆட்டுக்குட்டியானவருடைய மனைவி" இந்த வாக்கியத்தில் மணவாட்டி அல்லது மனைவி என்னும் வார்த்தை பரிசுத்த நகரமாகிய புதிய எருசலேமைக் குறிக்கும் (வெளி 19:7) முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறுகிற எல்லாப் பரிசுத்தவான்களும் புதிய எருசலேமிற்குப்போய், அங்கு நித்திய காலமாக ஜீவிப்பார்கள் வெளி 19:7 ஆவது வசனத்தில் "ஆட்டுக்குட்டியானவருடைய மனைவி" என்னும் வாக்கியம் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இங்கு "மணவாட்டி" என்னும் வார்த்தை பயன்படுத்தப்படவில்லை இதனால் இந்த மனைவி மணவாட்டி அல்ல என்று வியாக்கியானம் பண்ணக்கூடாது. இஸ்ரவேல் தேசத்திற்குத் தேவன் மணவாளனாக இருக்கிறார் ஆனாலும் அந்தத் தேசம் வெளி 19:7; வெளி 21:2,9 வெளி 22:17 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் மனைவி அல்லது மணவாட்டி ஆகாது.

திருச்சபைக்கு இப்பொழுது கலியாணமாயிற்று என்னும் உபதேச விளக்கம்

1 இயேசு கிறிஸ்து தம்மை கிறிஸ்தவ விசுவாசிகளின் மணவாளன் என்று அழைக்கிறார் (மத் 9:15 மாற்கு 2:19-20; லூக்கா 5:34-35)

2 யோவான் இயேசு கிறிஸ்துவை மணவாளன் என்று அழைக்கிறான் (யோவான் 3:29

மணவாளன் **(bridegroom)** - **νυμφίος** - **nymphios** - 3566

ஆண்பால் பெயர்ச்சொல் - மணவாளன்

3. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இஸ்ரவேல் தேசத்திற்குத் தேவனோடு கலியாண உடன்படிக்கை உண்டானதுபோன்று புதிய ஏற்பாட்டுக்காலத்தில் எல்லாக் கிறிஸ்தவ விசுவாசிகளுக்கும் தேவனோடும் கிறிஸ்துவோடும் கலியாண உடன்படிக்கை உண்டாயிருக்கிறது. (மத் 26:28 லூக்கா 22:20; 2கொரி 3, எபி 12:24)

4 புதிய உடன்படிக்கையின்பிரகாரம் கிறிஸ்தவ விசுவாசிகளுக்குக் கிறிஸ்துவோடு கலியாணமாயிற்று என்று அப்போஸ்தலர் பவுல் உபதேசம் பண்ணுகிறார் (ரோமர் 7:1-6)

5. புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களையல்லாமல், பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் பூரணராக்கப்படவில்லை என்று பவுல் உபதேசம் பண்ணுகிறார் (எபி 11:40 எல்லோரும் பூரணராக்கப்பட்டு, மணவாட்டியாகிய புதிய எருசலேமில் வாசம்பண்ணுவோம் என்பது பவுலின் உபதேசமாகும்.

6 இயேசுகிறிஸ்து பரமேறிய பின்பு, வெளி 22:16-17 ஆகிய வசனங்களில் பூமியிலுள்ள எல்லா விசுவாசிகளும் ஏற்கெனவே தம்முடைய மணவாட்டி அல்லது தம்முடைய மணவாட்டியாக இருக்கப்போகிறவர்கள் என்று அங்கிகாரம் பண்ணுகிறான்

21 அதிகாரம்

7 கிறிஸ்துவுக்கும் சபைக்கும் இடையேயுள்ள உறவை விளக்குவதற்கு பவுல் (2 கொரி 11:3; 1 கொரி 12:12-28; எபே 4:12-16; எபே 5:25-33) ஆகிய வசனங்களில் திருமண உறவை எடுத்துக் காட்டாகப் பயன்படுத்தி விளக்குகிறார்.

8 பழைய ஏற்பாட்டுக் காலத்தில இஸ்ரவேலைப் போன்று புதிய ஏற்பாட்டுக் காலத்து விசுவாசிகள் ஒரே ஆவியினால கர்த்தரோடு இணைக்கப்பட்டிருப்பதாக அல்லது கிறிஸ்துவோடு திருமணம் செய்யப்பட்டிருப்பதாக பவுல் உபதேசம் பண்ணுகிறார் (ஏசா 56:5; எரே 50:5)

கிறிஸ்துவின் கலியாணம் முடிவு பெற்றது என்னும் உபதேச விளக்கம்

மேலே கூறப்பட்டிருக்கும் விளக்கங்களின் அடிப்படையில கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு கிறிஸ்துவோடு ஏற்கெனவே திருமணமாயிற்று என்று தெளிவாகிறது. வெளி 19:1-10 ஆகிய வசனங்கள் வாயிலாக கலியாணத்தின் முடிவான சடங்குகள் இனிமேல் நடைபெறும் என்பதும் தெளிவாகிறது. எபிரெயருடைய பாரம்பரிய பழக்கவழக்கங்கள் மூலமாக இவ்விரண்டிற்கும் இடையிலுள்ள வேறுபாட்டை விளக்கலாம். (மத் 1:18) திருமணத்திற்காக நிச்சயம் பண்ணப்பட்டிருக்கிறவர்கள் யூதமார்க்கத்துப் பிரமாணத்தின் பிரகாரம் அவர்கள் இருவரும் திருமணமான தம்பதியரைப்போலவே இருப்பார்கள். திருமணத்திற்கு முன், நிச்சயம் செய்யப்பட்ட காலத்திலிருந்தே தங்களுடைய திருமண நிச்சய ஒப்பந்தத்தில் உண்மையற்றவர்களாக இருப்பது விபசாரம் செய்த குற்றத்திற்குச் சமமாகும். (உபா 22:23; மத் 1:19) இந்தக் கலியாணத்தின் முடிவான சடங்கு கலியாண விருந்தின்போது நிறைவு பெறும். அந்த விருந்தில் கணவனும் மனைவியுமாக நிச்சயம் பண்ணிக் கொண்டவர்கள் இணைவார்கள். கலியாண அறைக்குள் பிரவேசிப்பது இந்தக் கலியாணத்தின் நிறைவான நிகழ்ச்சி. வெளி 19 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் கலியாண விருந்து கலியாணத்தின் நிறைவைக் குறிப்பிடுகிறது. இது திருமண நிச்சயதார்த்த விருந்தல்ல. திருமணம் நடைபெற்று முடிந்ததற்கான விருந்து.

"பெரிதும் உயரமுமான ஒரு பர்வதம்" - புதிய எருசலேம் ஒரு பெட்டியைப் போன்று இராது. இந்த நகரம் மலைகளின் தொடர்ச்சியாக இருக்கும். மலை அடிவாரமும், மலை உச்சியும் இந்தப் பட்டணத்தில் உள்ளது. இதன் மலை உச்சியில் வெளி 4-5 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் தேவாலயம் சம்பந்தமான காரியங்கள் உள்ளன. உயரமான பர்வதத்திலிருந்து யோவான் நகரத்தையும் வீதிகளையும் நதிகளையும் (வெளி 21:9-27; வெளி 22:1-5) ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற பிரகாரம் தரிசிக்கிறார். இது சீயோன் மலை என்று அழைக்கப்படுகிறது (வெளி 14:1; எபி 12:22-23). வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதம் (ஏசா 14:12-14) என்றும் அவருடைய பரிசுத்த பர்வதம் என்றும் (சங் 48:1; சக 8:3; சங் 24:3) இந்த பர்வதம் அழைக்கப்படுகிறது.

புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைப் பற்றிய செய்திகள்

1 இதன் பெயர்கள் (வெளி 21:2)

2 இதன் ஆதாரம். (வெளி 3:12; வெளி 21:2,10; யோவான் 14:1-3; கலா 4:26; எபி 9:11; எபி 11:10-16; எபி 12:22; எபி 13:14)

3 இதன் ஆயத்தம். (வெளி 21:2; யோவான் 14:1-3; எபி 11:10-16; எபி 13:14)

4 இதன் நித்திய இருப்பிடம் (வெளி 3:12; வெளி 21:2,9-10,24-26; வெளி 22:1-5)

5 இதன் வெளித்தோற்றம். (வெளி 21:11-25)

6 இதன் மதில்களும் வாயில்களும், ஊற்றுக்களும் (வெளி 21:12-14; எபி 11:10-16)

21 அதிகாரம்

7 இதன் அளவுகள் (வெளி 21:15-17)

8 இதிலுள்ள பொருட்கள் (வெளி 21:10-21)

9 இதன் காலம் (வெளி 21:2)

10 இதன் வீதிகள் (வெளி 21:21)

11 இதன் கட்டடங்கள் (வெளி 21:12; வெளி 7:15; வெளி 11:19; வெளி 14:15,17; வெளி 15:1-8; வெளி 16:17; யோவான் 14:1-3)

12 இதிலுள்ள ஒளி (வெளி 21:23,25; வெளி 22:5)

13 இதிலுள்ள தண்ணீர் (வெளி 22:1; வெளி 7:17; வெளி 14:7)

14 இதில் வாசம்பண்ணுகிறவர்கள் (வெளி 3:12; வெளி 12:12; வெளி 13:6; வெளி 21:2-5,9; வெளி 22:3-4; யோவான் 14:1-3; எபி 11:11-16; எபி 12:22-24; எபி 13:14)

15 இதன் போக்குவரத்து (வெளி 21:24-27)

16 இதிலுள்ள போஜனம் (வெளி 2:7,17; வெளி 19:9,10; வெளி 22:2; சங் 78:25; லூக்கா 22:15-18,28-30)

17 இதன் வரையறைகள் (வெளி 21:8,27; வெளி 22:8-15)

18 இதை ஆளுகிறவர்கள் (வெளி 22:3-5)

(ஆ) புதிய எருசலேமின் வெளித்தோற்றம் (21:2)

வெளி 21:11 அதின் பிரகாசம் மிகவும் விலையுயர்ந்த இரத்தினக்கல்லைப் போலவும், பளிங்கினொளியுள்ள வச்சிரக் கல்லைப்போலவும் இருந்தது.

"இரத்தினக்கல்" (jasper) - (வெளி 4:3)

(இ) மதில், வாசல்கள், அஸ்திபாரக் கற்கள் - (எபி 11:10, 13-16; யோவான் 14:2)

வெளி 21:12 அதற்குப் பெரிதும் உயரமுமான மதிலும் கிழக்கே மூன்று வாசல்கள், வடக்கே மூன்று வாசல்கள், தெற்கே மூன்று வாசல்கள், மேற்கே மூன்று வாசல்கள் ஆகப் பன்னிரண்டு வாசல்களும் இருந்தன.

வெளி 21:13 வாசல்களின் அருகே பன்னிரண்டு தூதர்களிருந்தார்கள்; அந்த வாசல்களின்மேல் இஸ்ரவேல் சந்ததியாராகிய பன்னிரண்டு கோத்திரத்தாருடைய நாமங்களும் எழுதப்பட்டிருந்தன.

வெளி 21:14 நகரத்தின் மதிலுக்குப் பன்னிரண்டு அஸ்திபாரக் கற்களிருந்தன; அவைகளின்மேல் ஆட்டுக்குட்டியானவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலரின் பன்னிரண்டு நாமங்களும் பதிந்திருந்தன.

வெளி 21:15 என்னுடனே பேசினவன் நகரத்தையும் அதின் வாசல்களையும் அதின் மதிலையும் அளக்கிறதற்கு ஒரு பொற்கோலைப் பிடித்திருந்தான்.

"ஆட்டுக்குட்டியானவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலர்" பன்னிரண்டாவது அப்போஸ்தலரின் பெயர் மத்தியா (Matthias). (அப் 1:26)

"பொற்கோல்" (golden reed) பன்னிரண்டடி நீளமுள்ளது (வெளி 11:1)

(ஈ) நகரம் சதுரமாயிருந்தது (எசே 48:30-35; யோவேல் 3:20)

வெளி 21:16 அந்த நகரம் சதுரமாயிருந்தது, அதின் அகலமும் நீளமும் சமமாயிருந்தது. அவன் அந்தக் கோலினால் நகரத்தை அளந்தான், அது பன்னீராயிரம் ஸ்தாதி அளவாயிருந்தது; அதின் நீளமும் அகலமும் உயரமும் சமமாயிருந்தது.

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

21 அதிகாரம்

வெளி 21:17 அவன் அதின் மதிலை அளந்தபோது, அது தூதனுடைய அளவாகிய மனுஷ அளவின்படியே நூற்றுநாற்பத்துநான்கு முழமாயிருந்தது.

"அது பன்னீராயிரம் ஸ்நாதி அளவாயிருந்தது" - 1,500 சதுரமைல்கள்

"நூற்றுநாற்பத்துநான்கு முழம்" - 300 அடி. ஒரு முழம் என்பது 25 அங்குலங்களாகும்

(உ) புதிய எருசலேமில் பயன்படுத்தப் பட்டுள்ள பொருட்கள்

வெளி 21:18 அதின் மதில் வச்சிரக் கல்லால் கட்டப்பட்டிருந்தது. நகரம் தெளிந்த பளிங்குக்கு ஒப்பான சுத்தப்பொன்னாயிருந்தது.

வெளி 21:19 நகரத்து மதில்களின் அஸ்திபாரங்கள் சகலவித இரத்தினங் களினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. முதலாம் அஸ்திபாரம் வச்சிரக்கல், இரண்டாவது இந்திரநீலம், மூன்றாவது சந்திரகாந்தம், நான்காவது மரகதம்.

வெளி 21:20 ஐந்தாவது கோமேதகம், ஆறாவது பதுமராகம், ஏழாவது சுவர்ணரத்தினம், எட்டாவது படிகப்பச்சை, ஒன்பதாவது புஷ்பராகம், பத்தாவது வைடூரியம், பதினோராவது சுநீரம், பன்னிரண்டாவது சுகந்தி இவைகளே.

வெளி 21:21 பன்னிரண்டு வாசல்களும், பன்னிரண்டு முத்துக்களாயிருந்தன, ஒவ்வொரு வாசலும் ஒவ்வொரு முத்தாயிருந்தது. நகரத்தின் வீதி தெளிவுள்ள பளிங்குபோலச் சுத்தப் பொன்னாயிருந்தது.

"பன்னிரண்டு வாசல்களும், பன்னிரண்டு முத்துக்களாயிருந்தன, ஒவ்வொரு வாசலும் ஒவ்வொரு முத்தாயிருந்தது" - இயற்கையான எந்த முத்தும் இவ்வளவு பெரிதாக இராது. ஆயினும் தேவனால் எல்லாம்கூடும். தமது சித்தத்தின் பிரகாரம் அவரால் எவ்வளவு பெரிய முத்தையும் உண்டு பண்ண முடியும்.

"நகரத்தின் வீதி" - வீதி என்று ஒருமையில் கூறப்பட்டிருப்பதினால் பரிசுத்த நகரத்தில் ஒரே ஒரு வீதி மட்டுமே உள்ளது என்று பொருள் கூறக்கூடாது. வெளி 21:8 ஆவது வசனத்தில் விசாலமான வீதிகளைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. 12 வாயில்களிலிருந்து 12 பிரதான வீதிகள் புறப்படும். அவைகளில் ஒன்று வெளி 22:1-2 ஆகிய வசனங்களில் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

(ஊ) தேவாலயம் - (4)

வெளி 21:22 அதிலே தேவாலயத்தை நான் காணவில்லை; சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரும் ஆட்டுக்குட்டியான வருமே அதற்கு ஆலயம்.

"அதிலே தேவாலயத்தை நான் காணவில்லை" - சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரும் ஆட்டுக் குட்டியானவருமே அதற்கு ஆலயம். புதிய எருசலேமில் பிரதிஷ்டைசமான ஒரு தேவாலயம் இருக்கும். (வெளி 3:12; வெளி 7:15; வெளி 11:19; வெளி 14:15,17; வெளி 15:1-8; வெளி 16:1,17) பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஜனங்கள் எருசலேமிலுள்ள தேவாலயத்திற்குச் சென்று கர்த்தரை ஆராதித்தார்கள். புதிய எருசலேமில் இதுபோன்ற ஒரு கட்டிடத்திற்கு யாரும் போக வேண்டியதில்லை. ஆட்டுக்குட்டியானவர் புதிய எருசலேமில் எல்லா இடங்களிலும் மனுஷர் மத்தியிலே வாசம் பண்ணுவார் (வெளி 21:3,7,22; வெளி 22:3-5)

(எ) புதிய எருசலேமின் வெளிச்சம்

வெளி 21:23 நகரத்திற்கு வெளிச்சங் கொடுக்கச் சூரியனும் சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை; தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசிப்பித்தது, ஆட்டுக் குட்டியானவரே அதற்கு விளக்கு.

வெளிப்படுத்தின விசேஷம் - தொகுப்புரை

21 அதிகாரம்

"நகரத்திற்கு வெளிச்சங்கொடுக்கச் சூரியனும் சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை" - தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசிப்பித்தது, ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு. பரிசுத்த நரகத்தைப் பற்றி மட்டுமே இங்கு கூறப்பட்டிருக்கிறது. ஆயினும் நகரத்திற்கு வெளியே புதிய பூமியில் சூரியன் நட்சத்திரங்களிலிருந்துஒளியுண்டாயிருக்கும் (ஆதி 8:22; சங் 89:2-4,29,35-37; எரே 31:35-36; ஏசா 30:26)

(ஏ) தூய எருசலேமில் நடைபெறும் காரியங்கள் - (22:14; சக 14:16; ஏசா 2:2)

வெளி 21:24 இரட்சிக்கப்படுகிற ஜனங்கள் அதின் வெளிச்சத்திலே நடப்பார்கள்; பூமியின் ராஜாக்கள் தங்கள் மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டுவருவார்கள்.

வெளி 21:25 அங்கே இராக்காலம் இல்லாதபடியால் அதின் வாசல்கள் பகலில் அடைக்கப்படுவதே இல்லை.

வெளி 21:26 உலகத்தாருடைய மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டுவருவார்கள்.

வெளி 21:27 தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை; ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள்.

"இரட்சிக்கப்படுகிற ஜனங்கள்" - பூமியிலுள்ள இயற்கையான தேசங்கள் உபத்திரவக்காலத்திலிருந்து ஆயிரம் வருஷ அரசாட்சி வரையிலும் ஜீவித்த ஜனங்கள் பூமியில் பலுகிப்பெருகுவார்கள். ஆதாமும் மற்றவர்களும் பாவம் செய்யாதிருப்பார்களென்றால், தேவன் தம்முடைய பூர்வகாலத்து திட்டத்தைப் பூமியின்மீது எவ்வாறு நிறைவேற்றுவாரோ அவ்வாறு இவர்கள் மூலமாக நிறைவேற்றுவார் என்று வேதபண்டிதர்களில் சிலர் வியாக்கியானம் கூறுகிறார்கள் (ஆதி 1:26-28; ஆதி 8:22; ஆதி 9:12,16; ஆதி 17:1-9,19). இவர்கள் வலதுபக்கத்தில் நிற்கும் செம்மறியாட்டுத் தேசம் **(sheep nations)** (மத் 25:31-46)

"இரட்சிக்கப்படுகிற ஜனங்கள் அதின் வெளிச்சத்திலே நடப்பார்கள்" - புதிய பூமியிலுள்ள எல்லா ஜனங்களுமே இரட்சிக்கப்பட்டிருப்பார்கள். தங்கள் பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட்டு, நித்திய நீதி உடையவர்களாக இருப்பார்கள். கலகக்காரர்கள் அழிக்கப்பட்டிருப்பார்கள். பரிசுத்தவான்கள் மட்டுமே புதிய பூமியில் இருப்பார்கள் (வெளி 20:7-10)

"பூமியின் ராஜாக்கள் தங்கள் மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டு வருவார்கள்" - எல்லா தேசங்களின் ராஜாக்களும் இந்த நகரத்திற்கு நித்திய காலமாக வெகுமதிகளைக் கொண்டு வருவார்கள் (வெளி 21:24-26)

"அங்கே இராக்காலம் இல்லாதபடியால்" - பரிசுத்த நகரத்திற்கு இராக்காலம் இராது. பரிசுத்த நகரத்திற்கு வெளியே இரவும் பகலும் நித்திய காலமாக இருக்கும் (ஆதி 1:14-18; ஆதி 8:22; சங் 89:2,4,29,37; எரே 31:35-36)

"ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள்" - புதிய பூமியில் இருக்கும் அனைவருடைய நாமங்களும் ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கும். அவர்கள் அனைவருமே இரட்சிக்கப்பட்டிருப்பார்கள் (வெளி 21:24-27)

22 அதிகாரம்

(ஜ) புதிய எருசலேமின் நதி, வீதி, கனி

வெளி 22:1 பின்பு, பளிங்கைப்போல தெளிவான ஜீவதண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிறதை எனக்குக் காண்பித்தான்

வெளி 22:2 நகரத்து வீதியின மத்தியிலும். நதியின் இருகரையிலும் பன்னிரண்டு விதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது. அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும். அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கிய மடைகிறதற்கு ஏதுவானவைகள்

"ஜீவதண்ணீருள்ள சுத்தமான நதி" - தேவனுடைய பரிசுத்த நகரத்து வீதியின மத்தியிலிருந்து புறப்பட்டு வரும் நதி. பன்னிரண்டு வீதிகளில பன்னிரண்டு நதிகள புறப்பட்டு வரும் பன்னிரண்டு வாயில்கள வழியாக பாயுந்தோறும் பன்னிரண்டு பெரிய நதிகள தவிர புதிய பூமியில பல கடல்களும் பல நதிகளும் இருக்கும். (வெளி 22:1-2; வெளி 7:17, வெளி 14:7 வெளி 21:1)

"நகரத்து வீதியின மத்தியில" பன்னிரண்டு வீதிகள் வழியாக நதிகள புறப்பட்டு வரும் அவைகளில ஒன்று இங்கு விளக்கப் பட்டிருக்கிறது. (வெளி 21:21; வெளி 22:1 2

"நதியின் இருகரையிலும்" - பன்னிரண்டு நதிகளும் 1,500 மைல்கள தூரத்திற்கு ஓடும். (வெளி 22:2) நதியின் இருகரையிலும் ஜீவவிருட்சங்கள் இருக்கும்

"அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள்" - இயற்கையான ஜனங்கள், பூமிக்குரிய தேசங்கள உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள் ஆகியோர் ஆரோக்கியமடைவதற்கு இலைகள் ஏதுவானவை. (வெளி 2:7 வெளி 22:2) அங்கு வியாதி இராது. வியாதியிலிருந்து குணமாதலும் தேவைப்படாது. ஜீவவிருட்சத்தின் இலைகள் மூலமாக ஜனங்கள் ஆரோக்கியமாக இருப்பார்கள் (வெளி 21:4 வெளி 22:2-3 ஆதி 3:22-24)

(ஒ) புதிய எருசலேமில அரசாளுகிறவர்கள்

வெளி 22:3 இனி ஒரு சாபமுமிராது தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம அதிலிருக்கும்

வெளி 22:4 அவருடைய ஊழியக்காரர் அவரைச்சேவித்து அவருடைய சமுகத்தைத்தரிசிப்பார்கள்; அவருடைய நாமம அவர்களுடைய நெற்றிகளில இருக்கும்.

வெளி 22:5 அங்கே இராக்காலமிராது. விளக்கும சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை. தேவனாகிய கர்த்தரே அவர்களமேல பிரகாசிப்பார் அவர்கள சதாகாலங்களிலும் அரசாளுவார்கள

"இனி ஒரு சாபமுமிராது" - ஆசிய ஆதாம் ஆகியோருடைய கீழ்ப்படியாமையினால பூமிக்கு சாபம் வந்தது. பூமியில சாபம் வராவிட்டால், பூமியானது எப்படியிருக்குமோ அதுபோன்று இனி ஒரு சாபமும் இராது. எல்லாக் கலகக் காரர்களும், நித்திய அக்கினியிலே தள்ளப்படுவார்கள் (வெளி 21:5- வெளி 22:3,

"அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவிப்பார்கள" ஊழியக்காரர் என்பது உண்மையுள்ள தூதர்கள், மீட்கப்பட்ட ஜனங்கள கலகம் பண்ணாத சிருஷ்டிகள் அல்லது நித்திய காலத்திலும மீட்கப்பட்ட அனைவர் என்று பொருள்படும். (எபே 1:10 1கொரி 15:24-28

22 அதிகாரம்

"அவருடைய சமுகத்தைத்தரிசிப்பார்கள்" - புதிய வானத்திலும், புதிய பூமியிலும் இருப்பவர்கள் தேவனுடைய முகத்தைத் தரிசிப்பார்கள். தேவனுடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும். (வெளி 3:12; வெளி 7:1-8; வெளி 9:4; வெளி 14:1) அவர்கள் தேவனோடு சேர்ந்து சதா காலங்களிலும் அரசாளுவார்கள். (வெளி 22:5; வெளி 1:6; வெளி 5:10; தானி 7:18,27; சக 14:5; 1கொரி 6:1-2; 2தீமோ 2:12)

முடிவுரை

1. வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகம் உண்மையும் சத்தியமுமானது

> வெளி 22:6 பின்பு, அவர் என்னை நோக்கி: இந்த வசனங்கள் உண்மையும் சத்தியமுமானவைகள். சீக்கிரமாய்ச் சம்பவிக்க வேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, பரிசுத்த தீர்க்கதரிசிகளின் கர்த்தராகிய தேவனானவர் தம்முடைய தூதனை அனுப்பினார்.

"தம்முடைய தூதன்" - (வெளி 1:1-2; வெளி 19:9-10; வெளி 22:6-8).

"சீக்கிரமாய்ச் சம்பவிக்க வேண்டியவைகள்" - (வெளி 1:1)

2. இந்த புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கைக்கொள்கிறவன் பாக்கியவான் - (1:3)

> வெளி 22:7 இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கைக்கொள்ளுகிறவன் பாக்கியவான் என்றார்.

"சீக்கிரமாய் வருகிறேன்" - இயேசு கிறிஸ்து தாம் பூமிக்கு மறுபடியும் வரப்போவதைப் பலமுறை அறிவித்திருக்கிறார். (வெளி 22:7,12,20; வெளி 1:7; மத் 24:29-31; மத் 25:31-46; லூக்கா 17).

"இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கைக்கொள்ளுகிறவன் பாக்கியவான்" - இந்தத் தீர்க்கதரிசனத்தின் சத்தியத்தைக் கேட்டு வாசித்து, கைக்கொள்ளுகிறவர்கள் பாக்கியவான்கள் என்னும் ஆசீர்வாதத்தோடு இந்தப் புஸ்தகம் நிறைவு பெறுகிறது. (வெளி 1:1-3; வெளி 22:7).

3. தூதனை தொழுதுகொள்ளக் கூடாது - தேவனை மட்டுமே தொழுது கொள்ள வேண்டும் - (1:17; 19:10; அப் 10:25-26)

> வெளி 22:8 யோவானாகிய நானே இவைகளைக்கண்டும் கேட்டும் இருந்தேன்; நான் கேட்டுக் கண்டபோது, இவைகளை எனக்குக் காண்பித்த தூதனை வணங்கும்படி அவன் பாதத்தில் விழுந்தேன்.
>
> வெளி 22:9 அதற்கு அவன்: நீ இப்படிச் செய்யாதபடிக்குப் பார்; உன்னோடும் உன் சகோதரரோடும் தீர்க்கதரிசிகளோடும், இந்தப் புஸ்தகத்தின் வசனங்களைக் கைக்கொள்ளுகிறவர்களோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன்; தேவனைத் தொழுதுகொள் என்றான்.

"நானும் ஒரு ஊழியக்காரன்" - வெளி 1:1; வெளி 19:9-10; வெளி 22:6-10 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் தூதன் ஒரு மீட்கப்பட்ட மனுஷன் என்பது தெரிய வருகிறது.

4. இந்த புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களை முத்திரை போட வேண்டாம் - (தானி 12:4)

> வெளி 22:10 பின்னும், அவர் என்னை நோக்கி: இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்தரிசன வசனங்களை முத்திரை போடவேண்டாம்; காலம் சமீபமாயிருக்கிறது.

22 அதிகாரம்

"இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களை முத்திரைபோடவேண்டாம்" - இது மறைக்கப்பட்டிருக்கும் இரகசியமான சத்தியங்கள் அல்ல. எல்லோரும் இந்தச் சத்தியத்தைப் புரிந்து கொண்டு கைக்கொள்ள வேண்டும். விசுவாசிக்கிறவர்களுக்கு இந்தச் சத்தியங்கள் எளிமையானவை. தெளிவானவை. விசுவாசிக்க மறுக்கிறவர்களுக்கு இவை மறைவாக இருக்கும். (2கொரி 4:4).

"காலம் சமீபமாயிருக்கிறது" - வெளிப்படுத்தின விசேஷத்தில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் யோவானின் காலத்திலிருந்து நித்திய காலம் வரையிலும் வரிசைக்கிரமமாக ஒவ்வொன்றாக நிறைவேறும். முதலாவது. சபைக் காலங்களிலிருந்து சபை எடுத்துக் கொள்ளப்படும் காலம் வரையிலும் உள்ள நிகழ்ச்சிகள். (வெளி 1-3). இரண்டாவது. சபை எடுத்துக் கொள்ளப்படும் காலத்திலிருந்து இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரையிலுமுள்ள நிகழ்ச்சிகள். (வெளி 4-19). மூன்றாவது. ஆயிரம் வருஷ அரசாட்சியிலிருந்து புதிய பூமியில் நித்திய காலமாக நடைபெறும் நிகழ்ச்சிகள். (வெளி 20-22).

5. அநியாயம் செய்கிறவர்கள், நீதியுள்ளவர்கள் ஆகியோரின் நித்திய முடிவு

வெளி 22:11 அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும்; அசுத்த மாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமா யிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்.

தீர்க்கதரிசன எண் - 13

"அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும்...." (வெளி 22:10-12) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. பாவியான ஒரு மனுஷன் மரிக்கும்போது அவன் மறுபடியும் பிறந்து மனந் திரும்புவதற்கு அவனுக்கு மற்றொரு வாய்ப்பு கொடுக்கப்படாது. (எபி 9:27. வெளி 22:11)

6. இயேசு கிறிஸ்து சீக்கிரமாய் வருகிறார்

வெளி 22:12 இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின் படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது.

வெளி 22:13 நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமும், முந்தினவரும் பிந்தின வருமாயிருக்கிறேன்.

"சீக்கிரமாய் வருகிறேன்" - (வெளி 22:7)

"நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது" - (1கொரி 3:11-15)

"நான் அல்பாவும் ஓமெகாவும்" - (வெளி 1:8)

7. இயேசு கிறிஸ்துவினுடைய கற்பனைகளின் படி செய்கிறவர்கள் பாக்கிய வான்கள் - (1:3)

வெளி 22:14 ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ள வர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்.

22 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 14

"ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின் படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்......" (வெளி 22:14-15) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. தேவனுக்கும் அவருடைய கற்பனைகளுக்கும் கீழ்ப்படிகிறவர்களுக்கு மட்டுமேநித்திய ஜீவன் வாக்குப் பண்ணப்பட்டிருக்கிறது. கீழ்ப்படியாமலிருந்து தேவனை அறிக்கையிடுகிறவர்களாக மட்டும் இருப்போருக்கு நித்திய ஜீவன் வாக்குப்பண்ணப் படவில்லை. (யோவான் 6:27).

மீட்கப்பட்டோருக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் அதிகாரங்கள்

1. ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரம்
2. வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கு அதிகாரம்.

8. பாவத்தையும், நித்திய ஆக்கினையையும் குறித்த கடைசி எச்சரிப்பு

வெளி 22:15 நாய்களும், சூனியக்காரரும், விபசாரக்காரரும், கொலை பாதகரும், விக்கிரகாராதனைக் காரரும், பொய்யை விரும்பி அதின்படி செய்கிற யாவரும் புறம்பே இருப்பார்கள்.

"புறம்பே இருப்பார்கள்" - துன்மார்க்கர் நித்திய ஜீவனில் பங்குபெறமாட்டார்கள். (வெளி 21:8)

9. வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகத்தின் உறுதி பண்ணப்பட்ட சாட்சி - (1:2)

வெளி 22:16 சபைகளில் இவைகளை உங்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும்படிக்கு இயேசுவாகிய நான் என் தூதனை அனுப்பினேன். நான் தாவீதின் வேரும் சந்ததியும், பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமுமாயிருக்கிறேன் என்றார்.

"இயேசுவாகிய நான் என் தூதனை அனுப்பினேன்" - சபைகளில் இவைகளை ஜனங்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும்படிக்கு இயேசுகிறிஸ்து தமது தூதனை அனுப்பினார். (வெளி 1:1)

"நான் தாவீதின் வேரும் சந்ததியுமாய் இருக்கிறேன்" - (வெளி 5:6-7)

"பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரம்" - (வெளி 2:28; எண் 24:17)

10. எல்லோரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்னும் அழைப்பு - (யோவான் 3:16)

வெளி 22:17 ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன்.

மனந்திரும்புமாறு அழைக்கிறவர்கள்

1. பரிசுத்த ஆவியானவர் (The Holy Spirit) (யோவான் 16:7-11)
2. மணவாட்டி (The bride) (வெளி 21:2, 9-10) - புதிய எருசலேம் மணவாட்டியாகிய ஆட்டுக்குட்டியானவரின் மனைவி.

வருமாறு அழைக்கப்படுகிறவர்கள்

1. கேட்கிறவர்கள்
2. தாகமாயிருக்கிறவர்கள்
3. விருப்பமுள்ளவர்கள்

22 அதிகாரம்

11. எல்லா மனுஷருக்கும் ஓர் எச்சரிப்பு

வெளி 22:18 இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன்மேல் கூட்டுவார்.

வெளி 22:19 ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார்.

தீர்க்கதரிசன எண் - 15

"ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன்மேல் கூட்டுவார்___" (வெளி 22:18-20) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. இது தெய்வீக எச்சரிப்பு. வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகத்திற்கு மட்டுமல்லாமல், முழு வேதாகமத்திலும் யாரும், எதையும் கூட்டவோ குறைக்கவோ கூடாது.

"வாதைகள்" (plagues) - நித்திய நரகத்தையும் வெளி 9:20; வெளி 15:1,6,8; வெளி 16:21; வெளி 21:9 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் இதர வாதைகளையும் குறிக்கும்.

வாதை (stripe) - πληγή - pleegee - 4127

பெண்பால் பெயர்ச்சொல் - காயம், அடி, வாதை "stripe" (லூக்கா 12:48; (லூக்கா 12:48; அப் 16:23,33; 2கொரி 6:5; 2கொரி 11:23); "wound" (லூக்கா 10:30; தங்ஸ். 13:3,12,14); "plague" (வெளி 9:18,20; வெளி 11:6; வெளி 15:1,6,8; வெளி 16:9,21; வெளி 18:4,8; வெளி 21:9; வெளி 22:18).

தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப் போடுகிறவனுக்குத் தண்டனைகள்

1. ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார் (யாத் 32:32-33; சங் 69:20-29; வெளி 3:5)
2. பரிசுத்த நகரத்திலிருந்து அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார்
3. வேதாகமப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்து அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார்

12. முடிவுரையும் ஆசீர்வாதமும்

வெளி 22:20 இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர்: மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்.

வெளி 22:21 நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.

"மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன்" - வேதாகமத்தின் கடைசி வாக்குத்தத்தம் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிக்கிறது.